பெரியார்

ஈ.வெ.ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E.V.R.

1

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

பொறிஞர் கு. ம. சுப்பிரமணியன்,
தலைவர்,
சிந்தனையாளர் கழகம்.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;r erd; (09-06-2011)
jkHk; t i y (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்
வே. ஆனைமுத்து

வெளியீடு :
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (முதல் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME I

Compiled and Edited by
V. ANAIMUTHU

திரு பொன்னாச்சி ராசன்
அவர்களுக்கு [illegible]
[illegible] அளிக்கின்றோம்.
[illegible]
5-6-2011.
தலைவர்.

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume I
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

சென்னையில் அரசாங்க தலைமை மருத்துவமனையில்
23–4–1968 ல் தந்தை பெரியார்



திருச்சியில், 6–9–1972-ல் " பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் "
நூலுக்குரிய கையேட்டுப்படி (Manuscript)யைப் பார்வையிட்டு
பெரியார் ஈ. வெ. ரா. கையொப்பமிடுகிறார்.



ஈரோட்டில், 17-9-1879-ல் பெரியார் ஈ. வெ. ரா. பிறந்த இல்லம்



நான் யார்?

ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.



அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும்,



பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், நான் அத் தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.

பதிப்பாசிரியர்

முன்னுரை

பதிப்பாசிரியர் முன்னுரை

திருச்சி சிந்தனையாளர் கழகம் மேற்கொண்டுள்ள பணிகள் பலவாம்.

உலக நாத்திக அறிஞர்களின் சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் தொகுத்து வெளியிடுவது அவற்றுள் ஒன்றாகும். இதற்கேற்ப 'புத்த நெறி' என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுத் தொகுப்பு 1970ஆம் ஆண்டு மே திங்களில் வெளியிடப்பெற்றது. அது மிகச் சிறு நூல்.

அடுத்து, 1970 முதல் தந்தை பெரியார் அவர்கள் சிந்தனையாளர் கழகச் சார்பில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து 500 பக்க அளவில் ஒரு நூல் வெளியிடுவதென 17-12-1971இல் நடைபெற்ற செயற் குழுவில் முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 7-1-1972இல் கூடிய சிந்தனையாளர் கழகப் பொதுக் குழு மேலும் தீவிரமான திட்டத்தை அறிவித்தது. இதன்படி, பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துக்களையும்—கிடைக்கின்ற எல்லா ஆதாரங்களிலிருந்தும் தொகுத்து, 50 அல்லது 60 தலைப்புகளில் ஒரே தொகுதியாக (In one volume) வெளியிடுவது என்றும், இவ்வாறு வெளியிட சிந்தனையாளர் கழகம் பெரியார் அவர்களிடம் பதிப்புரிமை பெறுவது என்றும், இவ்வெளியீட்டுப் பணிக்குச் சுமார் முப்பதினாயிரம் ரூபாய் செலவாகலாம் என்றும் விவாதித்து முடிவெடுத்தது.

இதனையொட்டி பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துக்களையும் தொகுக்கும் பணியினைச் சிந்தனையாளர் கழகத்தார் அன்புடன் என்பால் ஒப்புவித்தனர். இந்த ஏற்பாடுகள் அனைத்துக்கும் பெரியார் அவர்கள் மனமுவந்து 9-1-1972இல் முழு ஒப்புதல் அளித்தார்கள்.

நூல் தொகுப்புக்கு வேண்டிய ஆதாரத் தொகுதிகளான குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை, திராவிடநாடு, தோழன், தனி அரசு முதலான ஏடுகளின் தொகுதிகளையும்; ஈரோடு குடி அரசுப் பதிப்பகத்தாராலும், பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தாராலும், மற்றும் பல்வேறு நிறுவனத்தினராலும் வெளியிடப்பட்ட சிறு சிறு நூல்கள் சிலவற்றையும் தந்தை பெரியார் அவர்களிடமிருந்து 26-1-1972இல் பெற்று வந்தேன். 27-1-1972 முதல் தொடர்ந்து பல மாதங்கள் பகலும் இரவுமாக இவ் வேடுகளையும் நூல்களையும் ஆழ்ந்து படித்தேன். இவ்வாறு படித்துக் கொண்டே செல்லுங்கால், 'கூறியது கூறல்' என்றபடி ஒரே கருத்து விளக்கம் பலவிடங்களிலும் வரும்போது அவற்றைத் தவிர்க்க வேண்டி நேரிட்டது. இதனை முன் வைத்து, தொகுப்புக்கு வேண்டிய பகுதிகளை மட்டும் அடைப்புக் குறி செய்து தனிப்படுத்தினேன். இவ்வாறு குறிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமான தலைப்பையும், அத் தலைப்பு எந்தப் பெரும் பாகத்தின் (Part) கீழ் வரக் கூடுமோ அதன் பெயரையும் எழுதி வரலானேன். இத்துடன், இவ்வாறு அடைப்புக் குறி செய்யப்பட்ட பகுதி வெளியாகியுள்ள ஆதாரத்தின் (Source) பெயர், நாள், பக்க எண், பத்தி எண் (Column) இவற்றையும் குறிப்பிட்டு வந்தேன்.

இதற்கிடையில் இத் தொகுப்புப் பணியினைச் சுயமரியாதை இயக்க அறிஞர்கள், தோழர்கள் பலருடைய ஆலோசனைகளையும் திட்டங்களையும் கேட்டறிந்து செயல் படுத்தினால், அதிகப் பயன் விளையும் என மனமாற கழகக் குழுவினர் கருதலாயினர். இதற்கொப்பத் தமிழகத்திலும், கருநாடகத்திலும் உள்ள சுயமரியாதை இயக்க அறிஞர்கள், தோழர்கள் ஆகியோருக்கு இதுபற்றி விளக்கமான மடல் விடுத்தோம். 2-2-1972 முதல் 15-2-1972 முடிய பல நாட்களில் 87 பேர்கட்கு இவ்வாறு மடல்கள் விடுக்கப்பட்டன.

கீழ்க்கண்ட அறிஞர்கள், தோழர்களிடமிருந்து அரிய ஆலோசனைகளையும் திட்டங் களையும் கொண்ட பதில் மடல்கள் கிடைத்தன.

தமிழகத்தில் திருவாளர்கள், திருச்சி புலவர் து. தயாளசாமி, கோ. கலியராசனு எம். ஏ., பி. இடி., கரூர், பி. ஆர். குப்புசாமி பி. ஏ., பி. எல்., முசிறி மா. சிவசங்கரன் பி. எஸ்ஸி., பி.டி., சென்னை ஏ. பி. சனார்த்தனம் எம். ஏ., திருச்செங்கோடு பி. பூவராகன் பி. எஸ்ஸி., பி. இடி., திருத்துறைப்பூண்டி வி. பொ. பழனி வேலன் பி. ஓ. எல்., வி. கணபதி பி. ஏ., கண்ணியம் கு. செயராமன், தருமபுரி புலவர் துரை-கணேசன், கீழமாளிகை—தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார், பவானி புலவர் குழந்தை, கரந்தை சிவ-சண்முகசுந்தரம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், சேலம் தி. வை. சொக்கப்பா எம். ஏ., எல். டி., ஈரோடு எம். கே. சுப்பிரமணியம் எம். ஏ., தஞ்சை புலவர் தி. பால சுப்பிரமணியம், மதுரை ஓ. வி. கே. நீர்காத்தலிங்கம் ஆகியோர்களிடமிருந்தும்; கருநாடகத்தில் பெங்களூரிலுள்ள திரு வாளர்கள், ஏ. எம். தருமலிங்கம் எம். ஏ., எல்எல். எம்., பூ. அ. கொடையரசன், வி. நாரா யணசாமி, வி. சி. வேலாயுதம், திருமதி சி. ஆர். விசாலக்குமி-சிவலிங்கம் ஆகியோர்களிட மிருந்தும் பதில் மடல்கள் வரப்பெற்றன.

இந்த அறிஞர்கள் அளித்த ஆலோசனைகள் அனைத்தையும் ஏற்ற வகையில் பயன் படுத்திக் கொண்டேன். கழகச் சார்பில் இவர்கட்கு நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

இவ்வகைகளில் தொகுக்கப்பெற்ற 341 தலைப்புகளின் பெயர்களைமட்டும் பட்டியல் எடுத்துப் பெரியார் அவர்களிடம் கழகக் குழுவினர் காண்பித்தனர். இப் பட்டியல் முழுவதை யும் பார்வையிட்ட அய்யா அவர்கள் 'இத்தனைத் தலைப்புகளிலேயே எல்லாம் அடங்கி விடுமா?' என்று பொருள் பொதிந்ததும், சிந்தனை நிறைந்ததுமான ஒரு வினாவை மட்டும் எழுப்பிவிட்டு, இரண்டு முக்கிய எச்சரிக்கைகளைத் தம் விருப்பங்களாகச் சொன்னார்கள்.

1. 'என்னால் ஒரு தடவை பேசப்பட்டவை, எழுதப்பட்டவை திரும்பத் திரும்ப வந்திருக்கும் இடங்களைக் கவனமாகப் பார்த்து Repetition னைத் தவிர்க்கவேண்டும்.'

2. 'கருத்து முரண்பாடுகள் உள்ளதுபோல் தோன்றும் இடங்களைக்கண்டு, அவற்றுக்குத் தெளிவான விளக்கம் அமையும்படி தொகுப்பு அமையவேண்டும்'.

மேற்கண்டவாறு அன்னார் தொடுத்த வினாவும், விடுத்த எச்சரிக்கைக் கட்டளை களும் தொகுப்புப் பணி மேலும் விரிவானதாக ஆகுமாறு செய்தன. அத்துடன், தொகுப்புப் பணியில் நேரக்கூடிய குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் இவை வழிகாட்டிகளாக அமைந்தன.

பெரியார் அவர்களின் விருப்பத்தை முழு அளவில் நிறைவேற்ற வேண்டுமாயின் அனைத்து ஆதாரங்களையும் ஒருவரே தொடர்ந்து படித்து, எல்லாவற்றையும் உள்ளத்தில் வாங்கி நிரல்படுத்திப் பார்த்தால்தான் இது இயலுவதாகும் எனத்தென்பட்டது. அவ்வாறே தொடர்ந்து பணியாற்றத் தொடங்கினேன்; அச்சடிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள்—கிடைத்த அளவுக்கு, அனைத்தையும் முறையாகப் படித்துக் குறியிட்டேன்.

இவ்வாறு தனிப்படுத்தப்பட்ட பகுதிகளை எடுத்தெழுதும் பணி ஒரே அமயத்தில் நான்கு, அய்ந்து நண்பர்களைக் கொண்டு 6-2-1972 முதலே தொடங்கப்பட்டிருந்தது; இப் பணி 1972 மே திங்களில் பெரும் அளவுக்கு முடிந்திருந்தது. இவ்வாறு எடுத்தெழுதப்பட்ட 2000 இரட்டை முழுத் தாட்களையும் (Double Cap) ஒருமுறை படித்துப் பார்த்தேன். அக் கைப்படியை அச்சிட்ட மூல ஆதாரங்களுடன் சரி பார்த்தல், அவற்றில் காணப்பட்ட இலக்கணப் பிழைகளைத் திருத்தம் செய்தல் ஆகியவற்றையும் தொடர்ந்து செய்தேன்; 1972 சூன் திங்களில் சரி பார்க்கும் பணி முடிவடைந்தது. இவ்வாறு சரி பார்க்கப்பட்ட வற்றை மீண்டும் திருத்தக் கையெழுத்துப்படி (Fair copy of manuscript) யெடுக்கும் பணி நான்கு, அய்ந்து நண்பர்களைக் கொண்டு 1972 ஆகஸ்டில் முடிக்கப்பெற்றது.

இந் நிலையில் மேலும் புதிதாக 1000 இரட்டை முழுத் தாட்கள் அளவுக்கு, பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் எடுத்தெழுதப்படுவது இன்றியமையாதது என 1972 ஆகஸ்டில் உணரப்பட்டது; என்னால் ஏற்கனவே குறியிடப்பட்ட பகுதிகள் அந்த அளவுக்குக் கைவசமிருந்தன. எனவே, 1972 செப்டம்பரில் தொடர்ந்து எழுதத் தொடங்கி 1973 பிப்ரவரியில் இப்பணி முடிக்கப்பட்டது.

தொகுப்புப் பணியும் (Compilation work), கையெழுத்துப் படி தயாரிக்கும் பணியும் (Preparation of manuscript) இவ்வாறாக இரண்டு கட்டங்களில் முடிவுற்றன. முதல் கட்டத்தில் 2000 தாட்களும், இரண்டாம் கட்டத்தில் 1222 தாட்களும்—ஆக 3222 இரட்டை முழுத் தாட்களில் கையெழுத்துப் படி தயாரிக்கப்பட்டது.

கையெழுத்துப் படியின் முதல் 2000 பக்கங்கள் தயாரான நிலையில் 6-9-1972இல் தொடங்கி சமயம் நேர்ந்தபோதெல்லாம் தந்தை பெரியார் அவர்களிடம் அவற்றைத் தந்து படிக்கச் செய்தும், படித்துக் காட்டியும் கையொப்பம் பெற்றோம். கழகக் குழுவினர் இவ்வாறு 3222 பக்கங்களில் பல இடங்களில் அவர்தம் கையொப்பமும், கடைசிப் பக்கத்தில் அவரால் பதிப்புரிமை வழங்கப்பட்ட ஒப்புதல் கையொப்பமும் பெறலானோம்.

அவ்வாறு கையொப்பமிட்ட பல சமயங்களில் அன்னார் பழைய நினைவுகளைக் கூர்ந்து—குறிப்பிட்ட பல தலைப்புகளை எங்களையே படித்துக் காண்பிக்கும்படி மிக ஆவலுடன் பணித்தார்கள். வருத்தம் பாராது பலநாட்கள் அப் பணியை மேற்கொண்ட அய்யா அவர்கள் நாளொன்றுக்குச் சுமார் 100 பக்கங்களைப் படிக்கக் கேட்டும்—படித்துப் பார்த்தும் ஒப்புதல் தந்தார்கள்.

அவ்வாறு படித்துக் காண்பிக்க நேர்ந்த பல தலைப்புகளுள் 'மொழி'; 'நாகம்மாள் மறைவு'; 'ஈ. வெ. கி. மறைவு' போன்ற தலைப்புகளைப் படித்துக் காண்பித்தபோது—அவற்றில் 20, 30, 40 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் கையாண்டிருந்த சொற்களைத் தாமே நினைவுகூர்ந்து,நான் படிக்கும் முன்னரே முன்னோடியாக அச் சொற்களைக் குறிப்பிட்டுக் கூறி, சில வரிகளை அப்படியே நினைவு கூர்ந்து சொன்ன பாங்கு கழகக் குழுவினரை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது; எங்கள் நெஞ்சங்களில் பெரும் நெகிழ்ச்சியையும் உண்டு பண்ணியது.

அவ்வமயம் பெரியார் காட்டிய மகிழ்ச்சி நிறைந்த சுறுசுறுப்புக்கும், வேகத்துக்கும் அவருக்குத் துணைபுரிந்த கழகக் குழுவினர் திருவாளர்கள் நோபின் கு. கோவிந்தராசலு, கு. ம. சுப்பிரமணியன் பி. இ., ச. சோமு ஆகியோராலும் என்னாலும் ஈடுகொடுக்க இயலவில்லை.

அத்துடன் இத் தொகுப்புப் பணி குறித்தும், இந் நூலை வெளியிட இக் கழகம் மேற் கொண்டுள்ள அரிய முயற்சி குறித்தும் அவ்வமயங்களில் அவர் பொழிந்த முழுமன நிறைவான பாராட்டுச் சொற்கள் எங்களின் உடலங்களைப் புல்லரிக்கச் செய்தன.

நாற்பதாண்டுக் கால நெடிய இடைவெளி; ஆண்டில் சுமார் 200 நாட்கள் சுற்றுப் பயணம்; ஓய்வறியாத பேச்சு, எழுத்து; கிளர்ச்சிகள், சிறைவாசம், உடல்நலக் குறைவு ஆகிய இத்துணைத் தடைகளையும் தாண்டிவந்து முதிர்ந்த வயதில்—கட்டிளங் காளைக்குரிய முறுக்குடனும் ஆர்வத்துடனும் கையெழுத்துப் படி முழுவதையும் படித்தும், படிக்கக் கேட்டும் ஒப்புதலளித்த தன்னிகரற்ற பெரியார் அவர்களின் திறனை எண்ணி வியந்து பல நாட்கள் நாங்கள் உரையாடினோம். தம் பழைய எழுத்துக்களை நன்கு நினைவு கூர்ந்தது போன்றே, 1915 முதல் நிகழ்ந்த மிகப் பல சம்பவங்கள் தொடர்பான நபர்கள், இடங்கள், காலம் இவற்றை நினைவு கூர்ந்து பேசி விளக்கமளித்த அவர்தம் திறம் அரிதினும் அரிதான ஒன்றாகும்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற நூல் இருதொகுதிகளாக 1972 செப்டம்பரில் வெளியிடப் படவேண்டும் என்பது கழகத்தின் திட்டமாகும். ஆயினும், தொகுப்புப் பணியின் ஒரு பகுதி முடியவே அவ்வளவு காலம் நீடித்துவிட்டது. இதற்குக் காரணம் தொகுப்புப் பணியால் விளைந்த கடும் வேலைச் சுமை மட்டுமன்று. வேறென்ன வெனில், தொகுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டிருந்த அதேசமயத்தில் திருவாளர்கள் கழகத் தலைவர் கு. ம. சுப்பிரமணியன் பி. இ., கழகப் பொருளாளர் நோபிள் கு. கோவிந்தராசலு, ச. சோமு ஆகியோரும், நானும் 25-4-1972 முதல் பெரும்பகுதி ஓய்வு நேரத்தைப் பொருள் திரட்டும் பணியில் ஈடுபடுத்தவேண்டிய இடர்ப்பாடான நிலைக்கு ஆளாக நேர்ந்ததேயாகும்.

அன்றியும், நூல் வெளியீட்டுப் பணிக்கு ஆகும் செலவு முப்பதினாயிரம் ரூபாய் என்கிற நிலைமாறி, சுமார் ஒன்றேமுக்கால் இலட்ச ரூபாய் ஆகும் என்ற புதுநிலை தோன்றியமையால், எங்களின் வேலைச் சுமை மிகப் பெரிதாயிற்று. நூலின் மொத்த அச்சுப் பக்கங்கள் சுமார் 2000 ஆகவும், தொகுதிகள் இரண்டாகவும் (Two volumes) கெட்டியான அழகிய ரெக்சைன் துணி போர்த்த கட்டடம் உள்ளதாகவும் அமைக்கப்பட வேண்டி நேர்ந்தமையால் அச்சுமையான பணியைப் பல இன்னல்களுக்கிடையே ஏற்றுச் செயல்பட வேண்டியதாயிற்று.

இக் கழகத்தினர் எடுத்துக்கொண்ட இம் மாபெரும் பணி துவண்டுவிடாமல்—அவ்வப் போது எங்களை உசாவியும், ஊக்குவித்தும், விரைவில் வெளியிடத் தூண்டியும் ஆக்க மளித்தவர் பெருந்தகை தந்தை பெரியார் அவர்களே ஆவார். அவ்வப்போது திருமதி ஈ. வெ. ரா. மணியம்மையார் அளித்த ஊக்கம் எங்கட்கு நற்றுணையாக நின்றது.

அடுத்து, கழகப் புரவலர் அமைச்சர் திரு. அன்பில் பெ. தருமலிங்கம், அமைச்சர் திரு. என். வி. நடராசன் ஆகியோர் கழகத்தினரைக் காட்டிலும் மிகுந்த ஆக்கமும் ஊக்கமும் அளித்து இப் பணி இடையீடு இன்றித் தொடர்ந்து நடைபெற இரு பெருந் தூண்களாக நின்று உதவினர்.

சிந்தனையாளர் கழகம் மேற்கொண்ட இப் பணிக்குக் கழக உறுப்பினர்களும், பல் வேறு மாவட்டங்களிலுமுள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள் சிலரும் உறுதுணை புரிந்தனர்.

எனினும், ஒரு கட்டத்தில், இப் பணி, கையெழுத்துப் படியாகவே கிடந்துவிடும் நிலைக்கு இலக்காகிவிடுமோ என நாங்கள் எண்ணி எண்ணி வருந்தும் நிலை ஏற்பட்டது. இத்தன்மையானது, இம்முயற்சியில் ஈடுபட்டிருந்த எங்கட்கு ஓயாத அலைச்சலையும், மன உளைச்சலையும், தூக்கம்பிடிக்காத அளவுக்குக் கவலைகளையும் பெருக்கிவிட்டன.

ஆயினும், இந் நிலைமைகள் அனைத்தையும் நன்குணர்ந்த நிலையில்—இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த உலகப் பெருஞ் சிந்தனையாளராகத் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைக் கடலில் விளைந்த எண்ணற்ற முத்துக்களைத் தொகுத்து உலகுக்கு ஒருசேர வழங்கும் இப் பெரும் பணியை—திருச்சி சிந்தனையாளர் கழகத்தார் நிறைவேற்றுதல் மிகப் பொருத்தமானது என முடிவுசெய்து, அய்யா அவர்களே இப் பணியினை எங்களிடம் ஒப்படைத்தமையைக் கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதிச் செயல்பட்டோம்; அய்யா அவர்கள் அளித்த பேருக்கம் எங்கட்கு மாமருந்தென அமைந்தது.

சுயமரியாதைக் கொள்கையின் கர்த்தாவான பெரியார் அவர்களையும் அவர்தம் கொள்கைகளையும் நன்கு புரிந்துகொண்டு இக் கழகத்தினராகிய நாங்கள் முயன்று இப் பணியினைச் செய்துமுடித்திருப்பது—'நம் நன்றிக் கடனை ஆற்றுவதற்குக் கிடைத்த மிகப் பெரும் வாய்ப்பினைப் பயனுறச் செய்தோம்' என்கிற அந்த அளவிலேயே சிறப்பினைப் பெறத்தக்கதாகும்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' அச்சிடுவதற்கான முழு ஆயத்தம் 1973 செப்டம்பரில் செய்யப்பட்டது; அச்சிடும் வேலையும் அப்போதே விரைந்து மேற்கொள்ளப் பட்டது. 9-12-1973 வரையில் சுமார் 400 பக்கங்கள் அச்சிடப் பெற்று தந்தை பெரியார் அவர்களின் பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.

எதிர்பாராத வகையில் தந்தை பெரியார் அவர்கள் மறைந்து விட்டதன் காரணமாக, சில நாட்கள், அச்சிடும் வேலை தேக்கமுற்றது. இடைப்பட்ட இக் காலத்தில் வேறு சிக்கல்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று அச்சிடும் காகிதத்தின் விலை திடுமென இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்து விட்டதாகும்.

அன்றியும், 1973 டிசம்பர் வரையில் இரண்டு தொகுதிகளில் இந்நூலை வெளியிடத் திட்டமிட்டது மாற்றப்படவேண்டியதாகி, மூன்று தொகுதிகளாக—ரெக்சைன் கட்டடத் துடனே வெளியிட வேண்டி ஏற்பட்டது. நூலினைக் கையாள்வதற்கு வசதியாகவே, இந்த மாற்றம் செய்ய நேர்ந்தது.

இத்துணை இடர்ப்பாடுகளையும் கடந்துவர நேரிட்டமையின் இந்நூல் வெளியீடு தாமதப்பட்டு 1974 மே திங்களில் நிகழவேண்டியதாயிற்று.

இனி இத் தொகுப்புப் பணி பற்றிப் பேசப்பட்ட பல கருத்துகளைக் குறித்தும் சில காண்போம்.

(1) பல அறிஞர்கள் சில குழுவினராக அமர்ந்து பல ஆண்டுகள் முயற்சித்து இப் பணியை மேற் கொண்டிருத்தல் வேண்டும் என்பது ஒரு சாரார் கருத்தாகும். இதற்கு ஓர் இயற்கைத் தடை இருந்தது.

அதாவது, பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துக்களையும் அச்சிடப்பட்ட ஆதாரங்களிலிருந்து அவற்றில் வெளிவந்துள்ளவாறே தொகுத்து, பொருள் வாரியாக வகைப்படுத்திப் பதிப்பிக்கும் பணி ஒன்றே, என்பால் கழகத்தாரும், தந்தை பெரியார் அவர்களும் ஒப்படைத்ததாகும். இவ்வகைப் பணி ஓர் ஆராய்ச்சிப் பணியன்று. ஆதலின் வருத்தம் பாராது ஒருவரே இப் பணியைச் செய்தாலன்றி 'கூறியது கூறல்' என்ற குறைபாடு இல்லாமல் தொகுக்க இயலாது என்று கொண்டு இதனை என்பால் ஒப் படைத்தனர்.

அன்றியும், திறனாய்வு (Criticism); ஆராய்ச்சி (Research); ஒப்பியல் ஆய்வு (Comparative study) முதலான வகைகளைச் சார்ந்த பணியாக இதனைக் கழகம் மேற் கொண்டிருப்பின்—பல குழுக்கள் தேவை; பல ஆண்டுகள் தேவை. நாங்கள் மேற்கொண்ட பணி அவ்வகையினதன்று. வேறென்னவெனின், ஆராய்ச்சி மேற்கொள்ளவும், படித் துணரவும் விரும்பும் அனைவர்க்கும் பெரியார் அவர்களின் கருத்துகளை ஒருசேரத் திரட்டி அளிப்பதே நாம் மேற்கொண்ட பணியாகும்.

எனினும் மேற்கண்ட ஆராய்ச்சிப் பணிகளின் அளவில் முக்காற் பகுதிக்குக் குறை வில்லாத தன்மையுடைய இப் பெருஞ்செயலை நானே பொறுப்பேற்றுச் செய்ய வேண்டு மென்று தந்தை பெரியார் அவர்களும் கழகத்தினரும் விரும்பினமையின்—மனமார்ந்த பூரிப்புடன் இதனை நான் மேற்கொண்டேன்.

(2) அடுத்து, பெரியாரின் கொள்கைகளை விளக்கும் நூல்கள் மிக எளிய விலையில் 45 ஆண்டுகளாக வெளிவந்து பரவியுள்ள போது, அதிக விலை கொண்ட உயரிய பதிப்புகள் வேண்டுமா? என்பது இன்னொரு சாரார் கருத்தாகும்.

இவ்வாறு எளிய விலையில் வெளியிடப்பட்ட நூல்கள் சுமார் 100-க்கு மேல் உள்ளன; இவை பொருள் வாரியாக அவ்வப்போது வெளிவந்துள்ளன என்பது உண்மையே. ஆனால், இவற்றுள் எந்த ஒரு நூலும் அல்லது சில நூல்களும் பெரியாரின்

கொள்கைகளை, 'ஏறக்குறைய முழுவதுமாக' என்கின்ற அளவில் உணர்த்துவதற்குக் கூடப் போதுமானவையல்ல. இது அந் நூல்களின் குறைபாடன்று; சிறு நூல்களில் அவ்வளவே தொகுத்து அளிக்க இயலும்.

கிடைக்க வாய்ப்புள்ள எல்லா ஏடுகளையும் தேடிப்பெற்று அவற்றுள் வெளிவந்துள்ள கருத்துகளுள், 'ஏறத்தாழ முழுவதையும்' தொகுத்து வெளியிட்டால் வருங்காலத் தலை முறையினர் பெரியாரவர்களின் கருத்துகளை ஒருசேரப் படித்தறிய ஏதுவாக இருக்கும் என்பதே, இப் பெருந் தொகுப்பினை இக் கழகம் வெளியிட முனைந்ததற்கான முக்கிய காரணமாகும்.

இன்னொன்றும் கவனிக்கற்பாலது. அச்சுக் கலை, புத்தகக் கட்டடக் கலை (Binding) இவை சிறந்த முன்னேற்றம் பெற்றிருந்த கால கட்டத்தில்—பாதுகாப்பாக வைத்துக்காக்கப் போதிய இடவசதியும், நிலைப் பேழைகளும் மற்றும் பல வசதிகளும் நிறைந்திருந்த கால கட்டத்தில் வெளியிடப்பட்ட 'குடி அரசு', 'புரட்சி', 'பகுத்தறிவு', 'ரிவோல்ட்', 'விடுதலை' ஆகிய ஏடுகளின் பழைய தொகுதிகள் முறையாகவும், முழுமையாகவும், செம்மையாகவும் எவராலும் பாதுகாக்கப் பெறாது போயின.

தற்போது வெகுசிலரிடம் உள்ள அப் பழைய ஏடுகள் முழுமையாகவும், முறையாகவும் அமையவில்லை. அந்த ஏடுகளும் இன்னுஞ் சில ஆண்டுகளில் மக்கியும், மடிப்புற்றும், சிதைந்தும் போக வாய்ப்பு உண்டு.

இந்த ஏடுகளைப் பாதுகாக்க வேறு வழிகள் இல்லையா எனின், உண்டு. இவற்றை உருச் சுருக்கிப் படம் (Microfilm) எடுத்து அப்படியே காத்தல் இயலும். ஆனால் அவ்வாறு செய்தல் இரண்டொருவர்க்கே இயலும்; இயன்றாலும் அந்த ஏற்பாட்டை மிகச் சிலரே பயன் படுத்த முடியும்.

பழைய தொகுதிகள் ஆராய்ச்சி மாணவர்கட்கும் (Research Scholars), அறிஞர் கட்கும் மிக இன்றியமையாது வேண்டியவையாம். அவை சிலரிடமிருந்து கிடைப்பினும் அவற்றைப் பயன்படுத்துவது என்பதில் அவர்கட்குப் பேரிடர்ப்பாடு உள்ளது.

அஃதென்னவெனில், பெரியார் அவர்கள் துவக்க காலம் முதல் 19-12-1973 வரை ஆற்றிய சொற்பொழிவுகளிலும்; எழுதிய கட்டுரைகளிலும், தலையங்கங்களிலும், அறிக்கை களிலும் பெரிதும் எல்லாத் துறை பற்றிய தம் கருத்துகளையும் இடையிடையே இணைத்தே பேசியும், எழுதியும் வந்துள்ளார். இத்தன்மைக்கு விலக்காக அமைந்த சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் மிகச் சிலவேயாம்.

அவர் கட்டற்ற சிந்தனையாளராகவும், இணையற்ற கருத்தாளராகவும் (Opinionist), சுழன்றுலவும் பிரசாரகராகவும் (Roving Propagandist), கருத்துப் புரட்சியாளராகவும், முழுநேரப் பொதுத் தொண்டராகவும் தம்மை ஆக்கிக் கொண்ட மையால்–குறிப்பிட்ட ஒரு தலைப்பில் நின்று பேசுவது, எழுதுவது என்கிற கட்டுப்பாட்டை உடைத்தெறிய வேண்டியவராக ஒவ்வொரு நேரத்திலும் விளங்கினார்.

இத் தன்மையில் அமைந்துவிட்ட அன்னாரின் சொற்பொழிவுகளையும், எழுத்துக் களையும் பொருள் வாரியாகவும், காலவரன் முறையிலும் தொகுத்துப் பதிப்பித்து வெளி யிடுவதானது–பெரியாரை முழுமையாக அறிய விரும்பிக் கற்கும் ஒவ்வொருவருக்கும் பெரும் பயன் தருவதாகும்; குறிப்பாக, ஆராய்ச்சி மாணவர்களுக்கும், அறிஞர்களுக்கும் மிகப் பெரும் பயன் விளைப்பதாகும்.

சிறு சிறு நூல்களாக உள்ள எவையும் இக் கண்ணோட்டத்தில் போதிய பயன் விளைப்பன ஆகா.

அன்றியும் அச்சுக்கலை வளரத் தலைப்பட்டபின் அரசியல் கொள்கைகளும், பொருளியல் கொள்கைகளும், அறிவியல் கொள்கைகளும் மக்களிடையே விரைந்து பரவப்

பெருவாய்ப்பு ஏற்பட்டது. அதேபோல் அறிவியக்கக் கொள்கைகளும், மதக் கொள்கைகளும் பரவவும் இது பெருங் கருவியாயிற்று.

அறிவியக்கப் பிரசாரத்தினாலும், அறிவியல் வளர்ச்சியினாலும் மதக் கட்டுக்கோப்பை உடைத்துவரும் மக்களிடையே, நாடோறும் மிகப் பல மொழிகளில் நூல் வாயிலாக மதக் கோட்பாடுகளைத் திணிக்கும் பணியைச் சமய நிறுவனத்தினர் திட்டமிட்டுச் செய்து வருகின்றனர்.

காட்டாக, பைபிள் கொள்கைகள் பற்றி இலவச வெளியீடுகள், எளிய விலை வெளியீடுகள் எனச் சிறு நூல்களாக ஏராளமான நூல்கள் நாடோறும் ஆயிரக்கணக்கான அமைப்புகள் மூலம் உலகெங்கும் பரப்பப்படுகின்றன. ஆயினும், கிறித்துவக் கொள்கைகள் முழுவதையும் கொண்ட பழைய ஏற்பாடு (Old Testament), புதிய ஏற்பாடு (New Testament) எனப்படும் முழுமையான பெரிய தொகுதிகள்—அதிக விலையில், உயர்ந்த பரிசுப் பதிப்பாகவும் இடையறாது தொடர்ந்து வெளியிடப்பட்டு, பல இலட்சக்கணக்கில் விற்கப்படுகின்றன என்பது ஒவ்வொருவரும் அறியற்பாலது. பிற சமயத்தினரும் இத்தன்மையில் பணிபுரிவதை அனைவரும் அறிவர்.

இவ்வகையில், 'பெரியாரின் சிந்தனைகள்' இலவச அறிக்கைகளாகவும், எளியவிலை நூல்களாகவும் கடந்த 45 ஆண்டுகளாகப் பரப்பப்படுகின்றன எனினும்—'ஏறக்குறைய எல்லாவற்றையும் அடக்கிய' தொகுதிகளாக, 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' இக் கழகத்தினரால் வெளியிடப்படுவது என்பது—அறிவியக்கத்தின் மதிப்பிட முடியாத கருவூலத்தை ஒரு பேழையில் வைத்து உலகுக்கு வழங்குவதான அருஞ்செயலாகும். இதனை எண்ணி அறிவியக்கத் தொண்டர்கள் அனைவரும் பெருமை கொள்வர் என நம்புகிறோம்.

அடுத்து இத் தொகுப்பின் தன்மை பற்றிச் சில கூறுவோம்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்னும் இந் நூலின் மூன்று தொகுதிகளிலும் பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் நூற்றுக்கு நூறும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன எனக்கூற இயலாது; அவர்தம் கருத்துகள் 'ஏறத்தாழ முழுவதும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன' எனக் கொள்ளலே சாலப்பொருத்தம் ஆகும்.

அஃதே போன்று குறிப்பிடத்தக்க சொற்பொழிவுகள்; அறிக்கைகள், கட்டுரைகள், தலையங்கங்கள் சில, இத் தொகுப்பில் விடுபட்டிருக்கலாம்.

இவ்வாறு நேர வாய்ப்புள்ள எல்லாக் குறைபாடுகளையும் களைந்து, வருங்காலத்தில் சமயம் நேரும்போது இன்னும் ஒரு தொகுதி அல்லது இரு தொகுதிகள் வெளியிடுவதன் மூலம்—நூற்றுக்கு நூறுமாக நிறைவேற்றி வைக்க இக் கழகம் பெரிதும் விருப்பங் கொண்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத் தன்மையில் குறிப்பிடத்தக்கவை விடுபட்டுள்ளதாகக் காணப்படும்போது, அறிஞர்களும் தோழர்களும் அவற்றைக் குறிப்பிட்டு எழுதினாலும், அல்லது தொகுத்து அனுப்பி வைத்தாலும்; அத்துடன் இதில் காணப்படும் வேறு எவ்வகையான குறை பாட்டினையும் சுட்டிக்காட்டினாலும் அவற்றை, இக் கழகம், மனமுவந்த நன்றியுடன் ஏற்றுத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' நூல் மூன்று பெருந் தொகுதிகளாக அமைக்கப் பட்டுள்ளது.

இத் தொகுதிகளுள் அய்யா அவர்களின் சொற்பொழிவுகளும், உரையாடல்களும், தலைவர்களோடு சந்திப்பு நிகழ்ந்த காலை நடந்த விவாதங்களின் குறிப்புகளும்; மிகப் பல

நாட்கள் தலையங்கம், கட்டுரை, வேண்டுகோள் அறிக்கை, ஆராய்ச்சிக் கட்டுரை என்ற தன்மைகளில் அன்னார் வெளிப்படுத்திய எழுத்துக்களும் ஒருவாறு தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

தமிழ் ஏடுகளில் 'சித்திரபுத்திரன்' என்ற பெயரிலும், 1925 முதலே அன்னார் எழுதியுள்ளார்; 'ரிவோல்ட்' என்ற ஆங்கில ஏட்டில், 'Eaviyar' என்ற பெயரில் எழுதி வந்துள்ளார்; மற்றவையனைத்தும் சொந்தப் பெயரில் அன்னார் வெளிப்படுத்தியவையாம்.

அவர்தம் எழுத்துக்கள் 1924ஆம் ஆண்டு முதலே பல ஏடுகளில் வெளிவந்துள்ளன என்றும், அவ்வாறே சொற்பொழிவுகளும் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அறிகிறோம். அவை 1924-ல் வெளியாகிக்கொண்டிருந்த 'நவசக்தி' போன்ற ஏடுகளில் வெளி வந்திருப்பதாக அறிய முடிகிறது, ('தமிழர் தலைவர்', 1971 பதிப்பு, பக்கம் 64, 84). வேறு ஆதாரங்கள் கிடைத்தில.

'குடி அரசு' ஏடு துவக்கப்பட்ட 1925 மே முதல் அவர்தம் சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் அவ் ஏட்டில் வெளி வந்துள்ளன. 7-11-1928-இல் துவக்கப்பட்ட Revolt—'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வார ஏடு சுமார் 55 இதழ்களோடு 19-1-1930-இல் (Volume II, No. 3—தொகுதி II, இதழ் 3) நின்றுவிட்டதாகத் தெரிகிறது. அவ் ஏட்டிலும் அவர்தம் சொற்பொழிவுகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன; சில கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

'புரட்சி' என்ற வார ஏடு 20-11-1933-இல் (மாலை 1, மலர் 1) வெளியிடப்பட்டு அதிலும் அவர்தம் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் வெளிவந்துள்ளன.

15-3-1934-இல் துவக்கப்பட்ட 'பகுத்தறிவு' என்ற தினசரி ஏடு சுமார் இரண்டு மாத காலம் வெளிவந்து 1934 மே மாதம் நின்றுவிட்டதாக அறிய முடிகிறது. பின்னர் 26-8-1934-இல் (மாலை 1, மலர் 1) 'பகுத்தறிவு' என்ற பெயரில் துவக்கப்பட்ட வார ஏடு கொஞ்ச காலம் வெளிவந்து 6-1-1935-இல் (மாலை 1, மலர் 20) நிறுத்தப்பட்டதாக அறிய முடிகிறது.

'பகுத்தறிவு' என்ற பெயரில் 1-5-1935-ல் துவக்கப்பட்ட மாத வெளியீடு சுமார் நான்காண்டுகள் வெளிவந்ததாகக் காணப்படுகிறது. இங்கு குறிக்கப்பட்ட ஏடுகள் அனைத்திலும் அவர்தம் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

'விடுதலை' ஏடு தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் நீதிக் கட்சியின் சார்பாக வாரம் இருமுறை ஏடாக, அரையணா விலையில் 1-6-1935-ல் துவக்கப்பட்டது. பின்னர் இரண்டாண்டுகள் கழித்து நாளேடாக மாற்றப்பெற்று, காலணா விலையில் வெளியிடப்பட்டது ('குடி அரசு' 15-8-1937). இன்றும் நாளேடாக 'விடுதலை' வெளிவருவதாகும்.

மிகப் பிற்காலத்தில் 1970 சனவரியில் (14-1-1970) துவக்கப்பட்ட 'உண்மை' தமிழ் மாத ஏடும், 1971 செப்டம்பரில் துவக்கப்பட்ட 'The Modern Rationalist' என்ற ஆங்கில மாத ஏடும் அவர்தம் முற்காலத்திய கட்டுரைகள், அவ்வப்போது எழுதிய கட்டுரைகள், சொற்பொழிவுகள் இவற்றைத் தாங்கி இன்றும் வெளிவருவனவாம். இவை அத்துணை ஏடுகளும் அவர்தம் கண்காணிப்பில் இயக்க ஏடுகளாக வெளிவந்தவையாம்.

இத்துணை ஏடுகளிலும் 1925 முதல் 19-12-1973 வரை 48 ஆண்டுகாலம் அன்னார் ஆற்றிய சொற்பொழிவுகள் வெளியாகியுள்ளன. ஆயினும் தம் சொற்பொழிவினை அப்படியே வெளியிட அவர் ஏற்பாடு செய்திருந்ததாக அறிய முடியவில்லை. அவ்வப்போது அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்ட உதவியாளர்கள் அவர்தம் சொற்பொழிவினை எழுதி அவருடைய பார்வைக்கு உட்படுத்திய பின்னர் ஏடுகளில் வெளிவந்தவையே

அவையாம். இந்த ஏற்பாடுகூட இல்லாமலிருந்திருந்தால் அவர்தம் சொற்பொழிவுகள் நமக்குக் கிடைத்திருக்க இயலாது. மாநாட்டுத் தலைமையுரைகள் சில, இத்தன்மைக்கு விதிவிலக்காக, முழுமையாக உள்ளன என்பதும் அறியத்தக்கது.

நீதிக் கட்சியினரால் வெளியிடப்பட்ட, 'திராவிடன்' என்ற தமிழ் நாளேடு; Justice–'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏடு இவற்றிலும்; மிகப் பிற்காலத்தில் சுயமரியாதை இயக்கத் தோழர்கள் பலரால் வெளியிடப்பட்ட 'சண்டமாருதம்', 'புதுவை முரசு', 'நகர தூதன்', 'திராவிட நாடு', 'தனி அரசு' 'பொன்னி' முதலான ஏடுகளிலும் அவர்தம் பேச்சும் எழுத்தும் வெளிவந்துள்ளன. 1927 செப்டம்பர் முதல் 'திராவிடன்' தினசரியின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் சிறிதுகாலம் பணியாற்றினார், பெரியார்.

இவ் ஆதாரங்கள் எல்லாம் நமக்குக் கிடைத்தில; ஒரு சில கிடைத்துள்ளன. அவற்றுள், 'குடி அரசு', 'புரட்சி', 'பகுத்தறிவு', 'விடுதலை', 'ரிவோல்ட்' இவை குறிக்கத்தக்க அளவு கிடைத்தவையாம். அவ்வாறு கிடைத்த ஆதாரங்களை நன்கு பயன் படுத்தி இத் தொகுப்புப் பணியினைச் செய்துள்ளோம்.

அவர்தம் சொற்பொழிவுகள் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும்; பாமரரும் புரிந்து கொள்ளும் தன்மையில் எளிய நடையில் இலங்கும்; தம் நீண்டகால அனுபவத்தைக் கொண்டு அவர் தரும் ஆதாரங்கள் மிக்க உரைகள் எல்லோரையும் வாயடைக்கச் செய்யும்; உவமைகள், சிறு கதைகள், பழமொழிகள் விரவியதாக அமையும்; தங்குதடையின்றிக் கடல்மடை திறந்தாலன்ன கருத்துமழை சொரிவதாக அமையும்.

கேட்போர் சலிப்படையாவண்ணம் பல மணிநேரம் சொற்பொழிவாற்றி மக்களைக் கவரும் தன்மையில் அவர்தம் பேச்சு எப்போதும் அமையும். இது அவர் ஒருவருக்கே வாய்த்த தனிச் சிறப்பாகும்.

அவர்தம் எழுத்து நீரோட்டமான நடையுடையது. அவர் கையாளும் சொற்கள் பசுமரத்து ஆணிபோல் படிப்போர் உள்ளத்தில் பதியும் தன்மை வாய்ந்தவை; எளிய படிப் புள்ளவரும் வாழ்க்கைத் தத்துவங்களை எளிதில் அறியக்கூடிய தன்மையில் விளக்கம் கொண்டவை; அனுபவம், பிரத்தியட்ச நோக்கு, சிந்தனைத் தெளிவு விரவியவை.

அன்னார் இனநலக் கண்ணோட்டத்துடன் கருத்துகளை வெளியிடுங்கால் சிறிது தாட்சண்யம் தொனிக்கும்; அத் தாட்சண்யம் கருத்தளவில் இராது—ஆளப்படும் சொல் லளவிலேயே நிற்கும். தமக்கு எதிரான நோக்குள்ளவர்களும் விடை சொல்ல அஞ்சும் தன்மையில் அவர்தம் பேச்சும் எழுத்தும் அமைந்தன.

'குடி அரசு' துவக்கப்பட்ட பின்னர் கடவுள், மதம், ஆத்மா, மறு பிறவி முதலான மூட நம்பிக்கைகளை வன்மையாகப் பெரியார் அவர்கள் கண்டித்துள்ள அதே நேரத்தில்— 'குடி அரசு' ஏட்டில் 'ஆத்மா', 'புனிதம்', 'ஆசீர்வாதம்' போன்ற சொற்கள் சில சமயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு பயன்படுத்தப்பட்டதில் அவருடைய லட்சியத்திற்கு எதிரான தன்மை ஏதும் கொள்ளப்படவில்லை என்பதை நாம் அறிய முடிகிறது.

சான்றாக, 1-5-1927 இதழில் பக்கம் 8-ல், 'குடி அரசு தனது ஆத்மாவை வெளிப் படுத்தும் (தத்துவத்தை விளக்கும்)போது' என ஒரு தொடரின் பகுதி வந்துள்ளது. இக் குறிப்பில் 'ஆத்மா' என்ற சொல்லுக்கு உலகில் வழங்கப்படும் சமயச் சார்பான ஆன்மீகக் கருத்து அவரால் கொள்ளப்படவில்லை என்பதை விளக்கும் வகையில், 'ஆத்மா' என்பதற்குத் தத்துவம் எனத் தாம் பொருள் கொண்டதைத் துல்லியமாக விளக்கும் தன்மையில் அடைப்புக் குறிக்குள் அமைத்து அவரே வெளியிட்டுள்ளார்.

துவக்கத்தில் எல்லாத் துறைகளிலும் விரவியிருந்த பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதை மிக முக்கியமாகக் கொண்ட பெரியார் அவர்கள், உலக வழக்கிலுள்ள சமயச்

சார்புடைய மேற்கண்ட சொற்களைச் சம்பிரதாய அளவிலேயே பயன்படுத்தினார் என்பதையும் நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

அடுத்து அவர் கையாண்டுள்ள வேறு சொற்கள் குறித்தும் இங்குக் காணலாம்.

'குடி அரசு' துவக்கத்தில் ஒருவருடைய பெயரின் முன்னால் மரியாதை அடைமொழியாக 'ஸ்ரீமான்' என்று சில ஆண்டுகள் குறிப்பிட்டு வந்தவர், 1927-க்குப் பிறகு திரு, திருமதி, செல்வி, தோழர் போன்ற சொற்களை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். 20-11-1932-க்குப் பின் பெரிதும் தோழர், தோழியர் என்றே எழுதலானார்.

அவ்வாறே துவக்கத்தில் பார்ப்பனரைக் குறிக்க 'பிராமணர்' என்ற சொல்லைக் கையாண்ட அவர், 1928-க்குப் பின்னர் பெரிதும் 'பார்ப்பனர்' என்ற சொல்லையே கையாளலானார்.

அவர்தம் சொற்பொழிவுகளைக் கூர்ந்து கவனிப்போர் இன்னொரு உண்மையை அறியலாம்.

அவர் சொற்பொழிவு ஆற்றத் துவங்கும்போது நிகழ்ச்சித் தலைவரையும், அவையோரையும் நோக்கி, 'அக்கிராசனர் அவர்களே!; அக்கிராசனாதிபதி அவர்களே!; சகோதரிகளே!; சகோதரர்களே!' என விளித்துப் பேசுவது என்பதே 1932 அக்டோபர் வரையில் அவர்தம் பழக்கமாகவிருந்தது.

இத் தன்மையினை அடியோடு கைவிட்டு, இலங்கையில் அவர் சுற்றுப்பயணம் செய்த காலையில், 17-10-1932 முதல், 'தலைவர் அவர்களே!; தோழர்களே!' என விளித்துப் பேசத் தொடங்கினார் ; இறுதி வரையில் அவ்வாறே கூறி வந்தார்.

இத் தொகுப்பின்கண் மேற்கண்ட அவர்தம் சொல்லாட்சிகளை அவ்வண்ணமே வெளியிடுதல் நமது இன்றியமையாத கடமையாகும் எனக் கருதி—சொற்பொழிவுகளிலும், எழுத்துக்களிலும் அவற்றை அப்படியே வெளியிட்டுள்ளோம்.

இனி இத் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ள தன்மை பற்றிக் காண்போம்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்னும் இத் தொகுப்பு நூல் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டிருப்பதில், ஒவ்வொரு தொகுதியிலும் (Volume) சில பகுதிகளை (Parts) அடக்கி வெளியிடப்பட்டுள்ளது.

தொகுப்புப் பணியினை முடித்த பின்னர், திருத்தக் கைப் படி முழுவதையும் மீண்டும் படித்துத் தனித் தனிக் கட்டுரையும், சொற்பொழிவும் அமைந்துள்ள தன்மையை மனதிற் கொண்டு, அவற்றுள் ஒரே பொருள் பற்றியவையாகக் காணப்பட்ட சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, குறிப்பிட்ட ஒரு பகுதியின் கீழ் என்னால் வைக்கப் பட்டுள்ளன. இதனைப் பிறிதோரிடத்திலும் சுட்டியுள்ளேன்.

பெரும்பாலான கட்டுரைகள் மூல ஆதாரங்களிலுள்ள அதே தலைப்புகளுடன் இங்கு வெளியிடப்பட்டுள்ளன ; சில கட்டுரைகளுக்கு மூல ஆதாரத்திலிருந்த தலைப்பு மாற்றப் பட்டு வேறு தலைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சொற்பொழிவுகளுள் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் ஆற்றப்பட்டவையாக, சிலவே அமைந்துள்ளன. பெரும்பாலான சொற்பொழிவுகள் அய்யா அவர்களின் அறிவுரைகள் என்ற தன்மையில் உள்ளவையாம். ஆதலின், ஒரு சொற்பொழிவினைப் படித்த பின்னர் அதற்கு எந்தத் தலைப்பு அளிக்கப்பட்டால் அதில் அடங்கியுள்ள பொருளுக்குப் பொருத்தமாக இருக்கக்கூடும் எனத் தோன்றியதோ, அதற்கேற்ப அதற்குத் தலைப்பு தரப்பட்டுள்ளது. ஒரே சொற்பொழிவு, பல்வேறு பகுதிகளின்கீழ் பிரித்தமைக்கப்பட நேர்ந்துள்ளதும் குறிக்கத்தக்கது.

ஒரு ‘பகுதி’—Part என்பதில் உள்ள பிரிவுகள், ‘உட்பிரிவுகள்’—Chapters என்ற தன்மையில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ‘உட்பிரிவு’ என்பதன் கீழ் வைக்கப்பட்டுள்ள சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் முறையே அவை பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட காலவரன் முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. மிகச் சில இடங்களில் இக் காலவரன் முறை மாறியும் அமைந்துள்ளது. அப்படி அமைப்பதனால், பொருள் விளக்கம் முறையாக அமைய உதவியாகும் எனக் கருதப்பட்டது; ‘கடவுள்’ என்ற பகுதி இதற்குக் காட்டாகும்.

இவற்றைப் பின்வரும் முறையில், முதல் தொகுதியினை அமைத்துள்ள தன்மையை விளக்குவதன் மூலம் அறியலாம்.

முதல் தொகுதியில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. அவை ‘சமுதாயம்’; ‘இயக்கங்கள்’; Social Reform or Social Revolution? என்பவையாம். ‘சமுதாயம்’ முதல் பகுதி (பகுதி I) எனவும், ‘இயக்கங்கள்’ இரண்டாம் பகுதி (பகுதி II) எனவும் அமைக்கப்பட்டுள்ளன.

‘சமுதாயம்’ என்ற பகுதியில் உள்ள ‘உட்பிரிவுகள்—Chapters’ எட்டு ஆகும்.

அவையாவன :

1. சமுதாயம்
2. ஆதித் திராவிடர்
3. பெண்ணுரிமை
4. வாழ்க்கை ஒப்பந்தம்
5. மக்கள் பிரிவினை
6. விழாக்கள்
7. வாழ்க்கை நெறி
8. சீர்திருத்தம்

இவற்றைக் கொண்டு தொகுதி I-ன் பகுதி I-ல் அடங்கியுள்ள உட்பிரிவுகள் எட்டு என அறியலாம்.

இங்கு 8-ஆவது உட்பிரிவாக உள்ளது, ‘சீர்திருத்தம்’. இந்த உட்பிரிவின் கீழ் 5 கட்டுரைகள் உள்ளன.

அவை,

1. சீர்திருத்தம்
2. சீர்திருத்தக்காரர்களுக்கு
3. எது ஆக்க வேலை?
4. சீர்திருத்தமா? அழிவு வேலையா?
5. மாறுதலுக்கு எதிர்ப்பு

என்பனவாம்.

இவற்றுள் எண் 1, 2 இவை எழுத்துக்களாகவும் (Writings); எண் 3, 4, 5 இவை சொற்பொழிவுகளாகவும் (Speeches) உள்ளன. வசதி கருதி இவ் அய்ந்தையும் ‘கட்டுரைகள்—Articles’ எனக் கொண்டுள்ளோம். அதாவது, ‘கட்டுரை’ என்ற சொல் எழுத்துக்கள், சொற்பொழிவுகள் ஆகிய இரண்டு வகையினையுமே குறிப்பதற்கான பொதுச் சொல்லாக இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக, இந் நூலானது, தொகுதி—பகுதி—உட்பிரிவு—கட்டுரைகள் என்ற தன்மையில் அமைக்கப்பட்டுள்ளது என்பது அறியத்தக்கது.

அடுத்து, ஒரு தொகுதியில் குறிப்பிட்ட சில பகுதிகளை அடக்கியுள்ளதற்குத் தனியான காரணம் அல்லது பொருத்தம் ஏதும் கொள்ளப்படவில்லை.

தந்தை பெரியார் அவர்கள் கட்டற்ற சிந்தனையாளராகவும், மானிடத்தின் வாழ்வுத் தொடர்பான எல்லாத் துறைகளைப் பற்றியும் உயர் எண்ணங்களை உலகுக்கு அளித்தவராகவும் திகழ்ந்தவர் என்பதை நாம் அறிந்துள்ளோம். எனினும், அவர்தம் சிந்தனையிலும், செயல் முறைகளிலும் மேலாடி நின்றது 'சமுதாயம்' என்ற துறையேயாகும். இந்த ஒரு காரணம் பற்றி முதல் தொகுதியில், முதல் பகுதியாக, 'சமுதாயம்' என்பது வைக்கப்படலாயிற்று.

அடுத்து, நூலின் பக்க எண்கள், ஒவ்வொரு தொகுதியிலும் தனித்தனியாக பக்கம் 1 முதல்—எனத் தொடங்கி முடிக்கப்படவில்லை; அதற்கு மாறாக மூன்று தொகுதிகளுக்கும் சேர்ந்தாற்போல் பக்க எண் 1 முதல் தொடங்கி, தொடர் எண்களாக, பக்க எண்கள் தரப்பட்டுள்ளன. அதாவது, 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்'—'பக்கம் எண் 100' எனக் குறிப்பிடப்படுங்கால், அவ்வாறு ஒரே தடவைதான் குறிப்பிட முடியும். ஏனெனில் மூன்று தொகுதிகளுக்கும் பக்கம் 2076 முடிய மொத்தமாகத் தொடர் பக்க எண்கள்தான் தரப்பட்டுள்ளன; ஒவ்வொரு தொகுதியிலும், 'பக்கம் எண் 100' என்பதாக ஏதும் இல்லை.

ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் பெரியாரின் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் ஆங்கிலத்தில் உள்ளவை சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் பக்க எண் i, ii என்று ரோமன் முறையில் அமைக்கப்பட்டுள்ளது; அந்த எண் முறை ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக i முதல் தொடங்கி அந்தத் தொகுதியிலேயே முடிந்துவிடுகிறது; மூன்று தொகுதிகளுக்கும் தொடர் எண் என்பதாக இல்லை. ஆங்கிலத்தில் உள்ளது, தனியாக ஒரு 'பகுதி' எனக் கொள்ளப்பட்டு, அது வைக்கப்பட்டுள்ள தொகுதியில் அடங்கியுள்ள பகுதிகள் எவை பற்றிக் கூறுகின்றனவோ, அவற்றுள் அதற்குத் தொடர்புடைய பகுதியின் பெயர் அளிக்கப்பட்டு, அவ்வத் தொகுதியின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

இப்போது, சிந்தனையாளர் கழகம் வெளியிட்டுள்ள மூன்று தொகுதிகளிலும் மொத்தம் இருபத்தோரு பகுதிகள் உள்ளன. இந்த இருபத்தோரு பகுதிகளும் தொகுதி வாரியாகப் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்'

முதல் தொகுதி—Volume I-யில், பகுதி I—சமுதாயம், பகுதி II—இயக்கங்கள், பகுதி III (ஆங்கிலப் பகுதி) (Social Reform or Social Revolution?) என மூன்று பகுதிகள் மட்டும் அடங்கியுள்ளன.

இரண்டாம் தொகுதி—Volume II-யில், பகுதி I—நாட்டுப் பிரிவினை, பகுதி II—அரசியல், பகுதி III—வகுப்புரிமை, பகுதி IV—மொழி, பகுதி V—தலைவர்கள், பகுதி VI—தத்துவம், பகுதி VII—அறிவு வளர்ச்சி, பகுதி VIII—கலைகள், பகுதி IX (ஆங்கிலப் பகுதி) (Dravidasthan Separation) முதலான ஒன்பது பகுதிகள் மட்டும் அடங்கியுள்ளன.

மூன்றாம் தொகுதி—Volume III-யில் பகுதி I—கடவுள், பகுதி II மதம், பகுதி III —பொருளாதாரம், பகுதி IV—கிளர்ச்சிகள், பகுதி V—செய்திகள், பகுதி VI—உலகம், பகுதி VII தன்னைப்பற்றி, பகுதி VIII—இறுதிச் சொற்பொழிவுகள், பகுதி IX (ஆங்கிலப் பகுதி) Religion ஆகிய ஒன்பது பகுதிகள் மட்டும் வைக்கப்பட்டுள்ளன.

இந் நூலின் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் முன்னுரைக்கு அடுத்துப் பொருளடக்கம் வைக்கப்பட்டுள்ளது. நூலுக்கு உரிய முழு முன்னுரை முதல் தொகுதியில் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் தொகுதி, மூன்றாம் தொகுதிகளில் மிகச் சுருக்கமான முன்னுரைகள் உள்ளன. முன்னுரைக்கு ரோமன் முறையில் தனியாக பக்க எண் தரப்பட்டுளது.

அடுத்து, இத் தொகுதிகளைப் படிப்போர் எளிதில் பயன்பெறுவதற்குத் துணையாக, 'பெயர்க் குறிப்பு அகராதி' என ஒன்றும்; 'பொருட் குறிப்பு அகராதி' என இன்னொன்றும் மூன்றாம் தொகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

'பெயர்க் குறிப்பு அகராதி'யில் தலைவர்கள், முக்கிய நபர்கள், கடவுள்கள் பெயர்கள் முதலான சிறப்புப் பெயர்கள் ஒருவாறு தொகுத்தளிக்கப்பட்டு, அவற்றுள் ஒவ்வொரு பெயரும் முக்கியமாகப் பயிலப்படும் பக்கங்களின் எண்கள் தரப்பட்டுள்ளன.

'பொருட் குறிப்பு அகராதி'யில் இந் நூலின்மூன்று தொகுதிகளிலும் அடங்கியுள்ள எல்லாக் கட்டுரைகளின் (Articles) பெயர்களும் தொகுக்கப்பட்டு, அகர வரிசையில் அமைக்கப்பெற்று, மூன்றாம் தொகுதியில் 'பெயர்க் குறிப்பு' அகராதிக்குப் பின்னர் வைக்கப்பட்டுள்ளது.

இவை இரண்டும் இவ்வாறு மூன்றாம் தொகுதியில் வைக்கப்பட்டதானது பின் வரும் காரணங்கள் கொண்டேயாம் :—

1. ஒரு குறிப்பிட்ட செய்தியைத் தேடும்போது பொருட்குறிப்பகராதி ஒரே இடத்தில் அமைந்திருந்தால் மூன்று தொகுதிகளிலும் தேடாமல் சரியாக எந்தத் தொகுதியில் எந்தப் பக்கத்தில் நாம் தேடும் செய்தி உள்ளதென்று கண்டு கொள்ளலாம்.

2. ஒரே செய்தி மூன்று தொகுதிகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருந்தால் அவற்றை முழுமையாகத் திரட்டிக்கொள்ள இது சரியான வாய்ப்பாகும்.

3. இவ் அகராதிகள் ஒவ்வொரு தொகுதியிலும் அததற்கு உரியவை தனியாக வைக்கப்பட்டாலும், மூன்றாம் தொகுதியில், மூன்று தொகுதிகளுக்கும் உரிய அகராதிகள் வைக்கப்படவேண்டும் என்பதே இன்று உள்ள நடைமுறையாகும். அது இரட்டிப்பு வேலை எனக் கருதி விடப்பட்டது.

ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் அத் தொகுதியிலுள்ள பிழைகளுக்கான திருத்தப் பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு பட்டியல் தர நேர்ந்தமைக்கு மிகவும் வருந்துவதுடன், எதிர்காலத்தில் வரும் பதிப்புக்களில் இவை தவிர்க்கப்படும் என உறுதி கூறுகிறேன்.

இவ்வனைத்தையும் அறிஞர்கள் ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்வார்களாக.

அடுத்து,

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' நூல் பயன்படக்கூடிய தன்மைபற்றிச் சிறிது காண்போம்.

1. சுயமரியாதைக் கொள்கைகளை நெடுங்காலமாகக் கைக்கொண்டு பரப்பிவரும் எண்ணற்ற தோழர்கள் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும், உலகின் பிற பகுதிகளிலும் உள்ளனர். அவர்களுள் பொருள் வசதியும் நல்ல வாய்ப்பும் உள்ளவர்களும் முயன்றாலுங் கூட, 'குடிஅரசு', 'புரட்சி', 'பகுத்தறிவு', 'விடுதலை' இவற்றின் பழைய ஏடுகளைப் பெற்று, முழுமையாகப் பெரியார் கருத்துகளை அறிதல் என்பது இயலாததாகும். ஏனெனில் அவை எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் அப்படியே புதிதாக அச்சிட்டுத் தரப்பட முடியாது.

இந் நூலின் மூன்று தொகுதிகளும் ஓரளவு வசதியுள்ளவர்கள் பெற்றுக்கொள்ளத்தக்க வகையிலும், 'ஏறக்குறைய முழுமையாக' பெரியார் கருத்துகளைத் தரக்கூடியவையாகவும் அமைத்து அளிக்கப்பட்டுள்ளன.

2. தமிழகத்திலுள்ள சுமார் 12,500 ஊராட்சிகளிலும் இம் மூன்று தொகுதிகளும் ஊருக்கு ஒரு கொத்து (Set) வீதம் பரவுவதற்கு ஏற்ற தன்மையில் நல்ல அழகிய கட்டடத் துடன் அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நான்கு கோடித் தமிழர்

களையும், பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வாழும் ஒரு கோடித் தமிழ் மக்களையும் பெரியாரின் கொள்கைகளை முழுமையாக உணரச் செய்ய இதனினும் சிறந்த வேறு வகையான முயற்சி எங்கட்குத் தோன்றவில்லை.

3. அன்றியும் தமிழகத்தின் பல பகுதிகளிலுமுள்ள அரசாங்க நூல் நிலையங்களிலும் தனியார் நூல் நிலையங்களிலும்; கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள நூல் நிலையங்களிலும் பொதுமக்களும், மாணவர்களும் படித்துணர வாய்ப்பளிக்கும் தன்மையில் வாங்கிவைக்க இத் தொகுதிகள் சாலப் பொருத்தமானவையாம்.

4. பெரியார் அவர்களின் கருத்துகள் உலக மானிடத்தைத் தழுவியவை. ஆதலின் இந்தியாவிலும், பிற நாடுகளிலுமுள்ள நூறு கோடிக்கணக்கான மக்கள் அன்னாரின் கருத்துகளை உணர ஏதுவாக இந்தி மொழியிலும், ஆங்கில மொழியிலும் பிற மொழிகளிலும் இந் நூல் முழுவதையுமோ அன்றி இதன் சுருக்கத்தையோ மொழிபெயர்த்து வெளியிட்டு உலகெங்கும் பரப்பத் தமிழ் மக்கள் முனைதல் நன்றாகும். அதனை இக் கழகம் உரியவாறு வரவேற்கும். இப் பணிக்கு, இந் நூலின் தொகுதிகள் உற்ற துணையாக விளங்க ஏற்றவையாம். கிட்டும் வாய்ப்பினைப் பயன்படுத்தி, இம் மொழிபெயர்ப்பு வெளியீட்டுப் பணியையும், திருச்சி சிந்தனையாளர் கழகம் மேற்கொள்ளல் சாலச் சிறந்ததாகும்.

5. தமிழ்நாட்டு அரசினரும், பல்கலைக் கழகத்தினரும், அறிஞர்களும் 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' ஒரு படிப்புத் துறையாக, தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் அமைக்கப்பெற முயற்சித்தல் நலந்தருவதாகும்.

இத்தன்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்தார், 'காந்திய சிந்தனை' என ஒரு படிப்புத் துறையினை ஏற்படுத்தி, 'சான்றிதழ் வழங்கும் பயிற்சி–Certificate Course'; 'டிப்ளமா வழங்கும் பயிற்சி–Diploma Course' வகுப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். இத் தேர்வுகட்குப் பாடங்கள் கற்பிப்பதற்கென்று, 'காந்தி நினைவு நிதி'யினர், மதுரையில், 'காந்தி சிந்தனைக் கல்லூரி' ஒன்றை நிறுவி நடாத்துகின்றனர். இப் பாடப் பயிற்சிகட்கு, 'காந்தியின் சிந்தனைகள்' பல தொகுதிகளாக (Volumes) உள்ள நூல்கள் பயன்படுகின்றன. அன்றியும் அங்கு மார்க்சீய சிந்தனையையும் ஒரு படிப்புத் துறையாக அமைக்க உறுதி செய்துள்ளனர்.

இதே தன்மையில் 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' தேர்வுப் பாடப் பயிற்சிக்குப் பயன்படும் தன்மையில் மூன்று பெருந் தொகுதிகளை உருவாக்கித் தந்துள்ள அடக்கமான பெரும் பணியினை திருச்சி சிந்தனையாளர் கழகம் ஆற்றியுள்ளது.

6. இங்கு இன்னொன்றும் குறிக்கத்தகும். திரு. ஜவஹர்லால் நேரு அவர்களின் உயிர்க் கொள்கைகளான சோஷலிசம், அறிவியல் உணர்வு, தொழில் நுட்பவியல் (Technology), உலக அமைதி, மதச் சார்பற்ற கோட்பாடு முதலான கொள்கைகளைப் பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்டு, 1972ஆம் ஆண்டில், மத்திய பம்பாயில், 'நேரு மையம்' என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அம் மையத்தில் இந்தியரும், அயல்நாட்டினரும் நேருவின் கொள்கைகளை ஆராய்வதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது ('The Hindu' Madras, 4–11–1972).

இத் தன்மையில் 'பெரியார் கொள்கைகள்' பற்றி இனியும் ஆராய்ச்சி மேற்கொள்வோரின் முயற்சிக்கும் இந் நூலின் தொகுதிகள் உதவியாக அமையும்.

இவ் வகைகளில், சிந்தனையாளர் கழகம் மேற்கொண்டு முடித்துள்ள இந்த எளிய முயற்சியானது, சுயமரியாதை இயக்கத்தின் கடந்த 49 ஆண்டுகால வரலாற்றிலும், தமிழ் நாட்டின் சென்ற 2000 ஆண்டுகால வரலாற்றிலும் தலையான இடத்தைப் பெறுவதாகும் எனக் கருதுகிறோம்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' நூல் தொகுப்புப் பணியினை நான் மேற்கொண்டதற்குப்பின், 3–9–1973 முடிய உள்ள காலத்தில், தந்தை பெரியார் அவர்களை

திரு. நோபிள் கு. கோவிந்தராசலு அவர்களும் நானும் பல தடவைகள் நேரில் கண்டு உரையாடி பல நிகழ்ச்சிகளைக் குறித்த உண்மையான விளக்கங்களைப் பெற்றோம். அத்துடன், பெரியாரவர்களோடு பலதடவைகள் நான் சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள நேர்ந்த சமயங்களில் பல விவரங்களை அன்னாரிடம் கேட்டறிந்தேன். அவ்வாறெல்லாம் கேட்டறிந்த விவரங்களும், நான் எழுதி வைத்த கைக் குறிப்புகளும் நல்ல விளக்கம் தருவனவாக அமைந்தன. அவையெல்லாம் இம் முன்னுரையிலும், 'தந்தை பெரியார் அவர்களைப்பற்றி' என நான் எழுதியுள்ள முன்னுரைப் பகுதியிலும் ஆங்காங்கே விரவி உள்ளன.

உலக மானிடத்திற்கு உற்ற நெறி காட்டவல்ல தனி நூலாகவும், திராவிட மக்களின் வருங்கால வாழ்வுக்குக் கலங்கரை விளக்கமாகவும் நின்றிலங்கவிருக்கும் தன்மை வாய்ந்த, 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்னும் இப் பெரு நூலைத் தொகுத்து, பதிப்பித்துத் தரும் வரலாற்றுச் சிறப்புக்கு உரிய அரும் பணியினை என்பால் ஒப்புவித்து, என் எளிய–34 ஆண்டுகால சுயமரியாதைத் தொண்டுக்கு ஓர் சிறப்பினை உண்டாக்கித் தந்த தலைவர் தந்தை பெரியார் அவர்கட்கும்; திருச்சி சிந்தனையாளர் கழகப் பொறுப் பாளர்கள், செயற் குழுவினர், மற்றும் அனைத்து உறுப்பினர்கட்கும்; இப் பணிக்கு எனக்கு உறுதுணையாக அமைந்த மற்ற அருமை நண்பர்கள் அனைவர்க்கும் என் உளங் கனிந்த நன்றியினை வணக்கத்துடன் உரித்தாக்குகின்றேன்.

வாழ்க தந்தை பெரியார் புகழ்! வெல்க அவர்தம் கொள்கைகள்!

திருச்சிராப்பள்ளி,
1–5–1974

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்

தந்தை பெரியார் அவர்களைப்பற்றி

தந்தை பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளும், எழுத்துக்களும் 1925 முதல் கடந்த 48 ஆண்டுகளாகத் தமிழ் மக்களாலும், பிறராலும் கேட்கப்பட்டும், படிக்கப்பட்டும், பின்பற்றப்பட்டும், ஆராய்ச்சிக்கு உரியவையாகக் கொள்ளப்பட்டும் வருபவையாம்.

எனவே இங்கு, தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகள், இயக்கங்கள், கிளர்ச்சிகள், சாதனைகள் முதலானவற்றைச் சுருக்கமாகக் காண்டல் இன்றியமை யாததாகும்.

அன்னாரின் பள்ளிப் படிப்பு மூன்றாண்டு காலத் திண்ணைப் பள்ளிக் கல்வி யோடும், இரண்டாண்டு கால பிரைமரி பள்ளிக் கல்வியோடும் 11 வயதில் முடிவுற்றது.

அக் காலத்தில் நம் சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் கடவுள், மத, சாஸ்திர, புராண நம்பிக்கைகட்குப் பெரிதும் அடிமைப்பட்டிருந்தனர். இந்து வைதிகக் கொள்கை களைப் போற்றுவதும் பின்பற்றுவதும் தங்களை உயர்ந்த மனிதர்களாக்கிக் கொள்வதற்குச் சரியான வழி யென்று 'பெரிய மனிதர்கள்' என்பவர்களும், 'படிப்பாளிகள்' எனப் பட்டோரும், 'மேல் சாதி மக்கள்' எனக் கூறிக்கொண்டோரும் அக் காலத்தில் கருதினர். மதம் என்பதன் பேராலும், சமுதாயப் பழக்க வழக்கம் என்பதன்பேராலும் பார்ப்பனர்—திராவிடரின் மத குருவாகவும், மதத் தலைவராகவும் ஆதிக்கம் கொண்டு விளங்கினர்.

நம் சமுதாயத்தினருள் பெரும்பாலோர் கல்வியறிவு அற்றவராயிருந்தனர். நூற்றுக்கு ஏழு பேரே படிப்பறிவு பெற்றிருந்தனர் எனின் அவர்களுள் பார்ப்பனர் மூவர்; கிறிஸ்தவர் ஒருவர்; சாதி இந்துக்கள் இருவர்; பிறர் ஒருவர் என்கிற அளவில் இருந்தது.

'சூத்திரனுக்கு அறிவு கொடுக்கப்படக்கூடாது' என்பதே ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாகத் தென்னாட்டில் ஆட்சி புரிந்தவர்களின் கல்விக் கொள்கையாக இருந்தது. வெள்ளையர் ஆட்சியிலும், கி. பி. 1800-க்குப் பின்னர் 'படித்தவர்கள் என்றால், பார்ப்பனர்' என்ற நிலைமை மட்டுமே இருந்தமையின், அரசு அலுவல் துறைகள் அனைத்திலும் பார்ப்பனரே ஆதிக்கம் பெற்றிருந்தனர். 'படிப்புத் தகுதி' ஒன்றே கருதி அலுவலர்கள் அமர்த்தப்பட நேர்ந்தவுடன் 'படிப்புத் தகுதி' பெற வாய்ப்பில்லாதவர்களாக ஆக்கப் பட்டிருந்த அனைத்துச் சமுதாயத்தினரும் ஒதுக்கப்பட்டனர்.

சமுதாயத்தில் பெரும்பான்மையினராக இருந்த 'சூத்திரர்' எனப்படுவோர்—பார்ப்பனர்களால் தீண்டத் தகாதவர் எனக் கருதப்பட்டனர். பார்ப்பனர் புழங்கும் பொது இடங்களில்—உணவு விடுதிகள், குளிக்கும் துறைகள், கோவில்கள் போன்ற அனைத்திலும் 'சூத்திரர்' புழங்கக் கூடாதவராகக் கருதப்பட்டனர். பார்ப்பனர் அனுபவித்த உரிமைகள் எதனையும், எந்தத் துறையிலும் சூத்திரர் அனுபவிக்க இயலாது என ஆக்கப்பட்டிருந்தது.

கோவில்களைக் கட்டி முடிப்பவர்—சூத்திரர்; ஆனால் கோவில் குடமுழுக்குக்கு நீர் ஊற்றுபவர், கோவிலில் அர்ச்சனை செய்பவர், இரதத்தில் சிலையோடு அமர்ந்து ஊர்வலம் வருபவர்—பார்ப்பனர் என்ற நிலைமை நிலவியது.

எந்த நிலையுடைய அல்லது சாதிக்கு உரிய திராவிடரையும், 'வா, போ, நீ'; என்றும்; 'வாடா, போடா' என்றும் பார்ப்பனர் ஏகமாக அழைக்கும் நிலைக்கு, நம் மக்கள் இழி நிலையில் துன்புற்றனர். தமிழர் வீட்டு நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பார்ப்பனரே குரு—தலைவர் என்பது நிலவியது.

தீண்டப்படாதவர் எனப்படும் பள்ளர், பறையர் முதலானோர் வேறு எந்த வகுப்பாராலும் தீண்டப்படாதவராகவே நடத்தப்பட்டனர். பார்ப்பனரும் பார்ப்பனரல்லாத மேல் சாதி மக்களும் புழங்கும் எந்தப் பொது இடத்திலும் பள்ளரும் பறையரும் புழங்கக்கூடாது; சில தெருக்களில் நடக்கக்கூடாது—மாட்டு வண்டிகளில் உட்கார்ந்து செல்லுவதோ, செருப்புகள் அணிந்து போவதோ, குடை பிடித்துச் செல்வதோ, பொதுக் கிணற்றிலும்—குளத்திலும் குளிப்பதோ, நீர் அருந்துவதோ கூடாது; எங்கோ அரிதாகக் காணப்படும் தண்ணீர்ப் பந்தல்கள், காப்பிக் கடைகளில்கூட மூங்கில் குழாயில் ஊற்றப்படும் காபி, மோர், நீர் இவற்றைக் கொட்டங்கச்சிகளில் வாங்கிக் குடித்துச் செல்ல வேண்டும் என்பதே எல்லா ஊரினரும் கொண்டிருந்த சமுதாய நெறியாக இருந்தது.

பறையரும் பள்ளரும்—பார்ப்பனர்களால் காணத் தகாதவர்களாக, அண்டத் தகாதவர்களாக, தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்டனர். ஒற்றையடிப் பாதைகள், வண்டிப் பாட்டைகளில் பார்ப்பனரை எதிர்ப்படும் பறையர் முதலானோர் கூப்பிடு தூரம் ஒதுங்கியோடி, மறைந்து நடத்தல் வேண்டும்; பறையர் எனப்படுவோர் முழங்காலுக்குக் கீழ் தொங்கும்படி துணி அணியக் கூடாது; தோளில் துணி போடக் கூடாது; உலோகப் பாத்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது; தங்க நகைகளை விரும்பிப் பெறல் கூடாது; மண் சுவரும், ஓலைக் குடிசையும் தவிர வேறு வகையான வீடு பெற விரும்பக் கூடாது. மொத்தத்தில் எந்தச் சுதந்தரமும் உரிமையும் பெறக்கூடாதவராய் அடிமை வேலை செய்தே வாழவேண்டும் என்ற இழிவுக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

சில சூத்திர சாதிப் பெண்டிரும், ஆதித் திராவிடப் பெண்டிரும் மாராப்புத் துணி போடுவதும், சட்டை போடுவதும் மேல் சாதியினர் என்பவர்களை அவமரியாதை செய்வதாகக் கருதப்பட்டு, அனுமதிக்கப்படாமல் இருந்தது. மனிதப் பிறவியில் பெண்கள் இழி பிறவிகள் எனவும், ஆண்களோடு சம உரிமை பெற அருகதையற்றவர்கள் எனவும் அனைவரும் கருதினர்.

கேட்கவும் படிக்கவும் நெஞ்சு பொறுக்காத இந்த இழிநிலை சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், நாயக்கர், நவாபுகள் ஆகிய அனைவரின் ஆட்சிக் காலங்களிலும் இருந்தது. இந்தக் கோர நிலைக்குப் பரிகாரம் தேட முயன்ற வெள்ளையரை, பார்ப்பனர் எதிர்த்தனர்; பணக்காரர் எதிர்த்தனர். 'இத்தகைய அமைப்பு எதையும் மாற்றக் கூடாது; இத் துறைகளில் பிரிட்டிஷார் தலையிடக் கூடாது' என்ற உறுதி மொழியினை கி.பி. 1773, 1857 ஆண்டுகளில்—அதிகாரபூர்வமாகப் பெற்றனர்—பார்ப்பனர்.

இத் தன்மையில், இருண்டு கிடந்த—அறியாமை ஆட்சி புரிந்த—சமூக இழிவுகாப்பதே வாழ்க்கை நியதியாக இருந்த தென்னாட்டில் அறியாமை இருளையும், சமூக இழிவு இருட்டினையும் சுட்டெரிக்கும் தன்மையினராகத் தோன்றிய பெரியார், தமிழகத்தில் ஈரோடு பெருநகரில் 1879 செப்டம்பர் 17-ல் உதித்தவராவார். இவருடன் பிறந்தவர் மூவர். தமையனார் திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி, 28-9-1877-ல் உதித்தவர்; தங்கைகள் இருவர்—பொன்னுத்தாய், கண்ணம்மாள் ஆகியோர்.

முன்னர் குறிக்கப்பட்ட இழி நிலைகள் மனிதாபிமான உணர்வுக்கும், பிரத்யட்ச அனுபவத்திற்கும், தன்மான உணர்வுக்கும் நேர்மாறான நிலையாகும் எனப் பெரியார் அவர்கள் 1891 முதலே உணரத் தலைப்பட்டார்.

மிக இளம் பிள்ளைப் பருவத்தில் தனது சிறிய பாட்டியின் கண்காணிப்பில் வளர்ந்து வந்த அவர் கட்டுக்கடங்காத முரட்டுப் பிள்ளையாகத் திரிந்தார்; சமுதாய மக்கள் பலரும் அனுசரித்து வந்த சாதி அனுஷ்டானங்களை நாடோறும் மீறிவந்தார்; சமுதாயத்தில் தாழ்ந்தவர்களெனக் கருதப்பட்ட வாணியர், பணிக்கர், குறவர் முதலானோர் வீடுகளிலும்; முஸ்லிம்கள் வீடுகளிலும் நீர் பருகுவதும், பண்டங்களை உண்பதும் அவரது பிள்ளைக் குறும்புகளாக இருந்தன. அத் தன்மை வளர வளர—மனிதரிடையே உயர்வு தாழ்வு

கற்பிக்கப்பட்டிருப்பது தவறு எனவும்; சுயநல வாழ்வுக்காரர்களின் சூழ்ச்சியினாலேயே—செயற்கை முறையில் மனித இனம் பிரிந்து கிடக்கிறது எனவும் உணரத் தலைப்பட்டார்.

மத நம்பிக்கையின் பேரால் பொருளற்ற முறையில் சடங்குகள் செய்து பேய் ஓட்டுதல், கண்ணெறி கழித்தல், காக்கைக்குச் சோறு எறிதல் முதலான சடங்குகளைச் செய்து மக்களால் தெருவிலும் முச்சந்தியிலும் எறியப்பட்ட தேங்காய், பழம் போன்ற பண்டங்களை எடுத்துத் துடைத்துவிட்டும், கழுவாமலும்—சிறிதும் அச்சமின்றிச் சிறு பிள்ளைப் பருவத்தில் உண்டார்.

பள்ளிப் படிப்பு நிறுத்தப்பட்டவுடன் மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்ட அவர், செல்வமும் வைதிகமும் ஒருங்கே நிறைந்த தமது இல்லத்தை நாடி வந்த சன்னியாசிகள், சாமியார்கள், பாகவதர்கள், பார்ப்பனர்கள், வித்துவான்கள் முதலான பக்திப் பிரசாரகர்களிடம் புராணங்கள், சாஸ்திரங்களில் இருக்கும் அருவருப்பான—அறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளையும் கதைகளையும் கிண்டல் செய்து அவர்களோடு வாதமிடுவதை அன்றாட வேலையாக மேற்கொண்டார்.

புராணங்கள், சாஸ்திரங்கள், கடவுளர் கதைகள் முதலானவற்றை முறையாகப் படிக்க வேண்டிய தொல்லையான பணியைவிட, அவ்வாறு வாதமிட்டு அவற்றின் தன்மைகளை உணருவது அவரது இளமைப் பருவத்திற்கு ஏற்றதாகவும் உற்சாகம் தருவதாகவும் அமைந்தது.

இவற்றின் விளைவாக 1891 முதலே கடவுள், மதம், சாதி இவற்றில் நம்பிக்கையற்றவராக உருவானார். முன்னர் குறிப்பிட்ட சமுதாய இழிவுப் பழக்கங்கள் ஏறக்குறைய 1942-ஆம் ஆண்டு வரையில் கொடிய ஆதிக்கம் செலுத்திய இந்த நாட்டில்—1900 முதலே அவற்றை வெளிப்படையாகக் கண்டித்துப் பேசியும், தாமே அவற்றை மீறியும் செயல்பட்டார். அன்னார் பிற்காலத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளில், இந்நிலைமையை அவரே விளக்கியுள்ளார். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதியைக் காணலாம்.

'எனக்குச் சிறுவயது முதற்கொண்டு சாதியோ, மதமோ கிடையாது; அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால், நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அதுபோலவே, கடவுளைப்பற்றியும், மனத்தில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்யவேண்டுமென்று கருதிய எதையும்—கடவுள் கோபிப்பாரே என்றோ, தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்கமாட்டேன். கடவுள் மகிழ்ச்சியடைவாரென்று கருதியோ, சன்மானம் அளிப்பார் என்று கருதியோ எந்தக் காரியத்தையும் செய்திருக்கவும் மாட்டேன்.'

'எனது வாழ்நாளில் என்றைக்காவது சாதி—மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பியிருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன், இதற்கு முன்பும் பலதடவை யோசித்திருக்கிறேன். எப்பொழுதிலிருந்து எனக்கு இவற்றில் நம்பிக்கையில்லை என்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன்; கண்டுபிடிக்கவே முடியவில்லை.'

('நவமணி' 1937, ஆண்டு மலரிலிருந்து, 'தமிழர் தலைவர்' நூல் பக்கம் 7, 8-ல் காட்டப்பட்டுள்ளது; 1971, பதிப்பு)

அவர்தம் 19-ஆம் வயதில், அவரது விருப்பத்தை நன்குணர்ந்து, நாகம்மை என்னும் பெண்மணியை அவருக்கு மணம் புரிவித்தனர், அவர்தம் பெற்றோர்கள். அவ்வம்மையார் கணவரின் இயல்பறிந்து நடந்து அவருக்கு உற்ற துணையாக விளங்கினார்.

அக் காலத்தில் பொது வாழ்வெனக் கருதப்பட்டது, கவுரவப் பதவிகளை வகிப்பதும், உள்ளாட்சித் துறைப் பதவிகளைப் பெறுவதுமேயாகும். மக்கட்குப் 'பொதுத் தொண்டு' ஆற்றுவது என்பது 'தேசிய சேவை' புரிவதேயாகும்.

இவ்வகையில் 1907 முதல் 1919 வரையில் சுமார் 29 பதவிகளை வகித்த அவர், 1907 முதல் காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங்கொண்டார். காங்கிரசில் மிதவாதிகள், தீவிர வாதிகள் என்ற பிரிவினரிடையே 1907இல் அடிதடி நடந்தது. அந்தப் பிரபல நிகழ்ச்சிக்குப் பின்னர்—1908 முதல் அவர் காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்று வந்தார்; காங்கிரஸ் மாநாடுகள் பலவற்றை நடத்தக் காரணமாக இருந்தார்; டாக்டர் டி. எம். நாயர் தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டை அவரே முன்னின்று நடத்தினார். ஆயினும், 1919-இல் தான் காங்கிரசில் உறுப்பினரானார்.

அக் காலகட்டத்தில் சென்னை மாகாணத்தில் நிலவிய அரசியல், சமுதாயச் சூழ் நிலைகளைக் காண்டல் இங்குப் பொருத்தமாக அமையும்.

1912 இல் 'சென்னை மாகாண திராவிடர் சங்கம்' என்ற அமைப்புத் தோன்றித் 'திராவிடர்' என்ற இன உணர்வுக்குக் கால்கோள் அமைத்தது. இவ் வுணர்ச்சி காலூன்றத் தலைப்பட்ட பின்னர் 20-11-1916-இல் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' (South Indian Liberal Federation) என்ற பெயரில் பார்ப்பனரல்லாதார் அமைப்பு சென்னையில் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் மூலநோக்கம் பார்ப்பனரல்லாத மக்களுக்குக் கல்வித் துறையிலும்; அரசியல் உத்தியோகம், பதவிகளிலும் உரிமைகளையும் பதவிகளையும் பெற்றுத் தருவதாகும்.

அவ்வமைப்பு தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதாரிடையே ஒரு பெரும் விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும் உண்டாக்கிற்று. அவ்வமைப்பின் நிறுவனர்களாக விளங்கியவர்கள் அதுகாறும் தேசிய காங்கிரசில் முன்னணியில் நின்ற சர். பி. தியாகராயச் செட்டியார், டாக்டர் டி. எம். நாயர் (தர்வாடு, மாதவன் நாயர்) ஆகிய பெருமக்களேயாவர்.

அவ் வியக்கம் படித்த பார்ப்பனரல்லாதாரிடையே பெருமளவில் செல்வாக்குப் பெற்றது; தென்னாட்டு மேடைகள் தோறும் காங்கிரஸ் கொள்கைகளும், பார்ப்பனர் ஆதிக்கமும் வலிமையாகத் தாக்கப்படும் அளவுக்குப் பெருஞ் செல்வாக்குடன் வளர்ந்தது. காங்கிரஸ் மேடைகளில் எத்துணைப் பெரிய செல்வாக்குப்பெற்ற பார்ப்பனரையும் கொள்கை விளக்கம் கூறுவதற்கு மக்கள் அனுமதிக்க முடியாத அளவுக்குப் பலமான காங்கிரஸ் எதிர்ப்பு உணர்ச்சி தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

இக்கட்டான இந் நிலைக்கு ஆளாக்கப்பட்ட காங்கிரசினைக் காப்பாற்ற, பெரியார் அவர்களைப் போன்ற—செல்வாக்கும், நாவன்மையும், வாதத்திறனும், தியாக உள்ளமும், நாணயமான ஒழுக்கமும், ஓயாத உழைப்பும் படைத்த பார்ப்பனரல்லாதார் ஒருவரின் தலைமை காங்கிரசுக்கு இன்றியமையாது வேண்டியதாயிற்று.

அச் சூழ்நிலையில்தான் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் பெரியார் அவர்களைக் கொண்டு காங்கிரஸ் இயக்கத்தின் பலத்தைப் பெருக்க வேண்டி, காங்கிரஸ் இயக்கத்தில் அவரை உறுப்பினராக்கினார்.

அவ்வாறு காங்கிரசில் உறுப்பினராக நேர்ந்தபோது—பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் உயிர்க் கொள்கையான வகுப்புரிமையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும்; பதவி—உத்தியோகங்களில் 100-க்கு 50 வீதம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கி அளிக்கப்படும் எனவும்; பொதுத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் காங்கிரசுக்கு இல்லை எனவும் பெரியாரவர்களிடம் காங்கிரசார் கூறினர்.

அவ் உறுதிப்பாட்டினை மனமார நம்பிய நிலையில்—காங்கிரசிலிருந்து கொண்டே 1919 முதல் 1925 வரை தொடர்ந்து காங்கிரஸ் மாநாடுகளிலும், கமிட்டிக் கூட்டங்களிலும் வகுப்புரிமைக்காகப் போராடி வந்தார். தமிழ்நாடு காங்கிரசின் தலைவராகவும், செயலாளராகவும், தீவிர பிரசாரகராகவும் திகழ்ந்த அன்னாரின் வகுப்புரிமைக் கோரிக்கையை

1919 (திருச்சி), 1920 (திருநெல்வேலி), 1921 (தஞ்சை), 1922 (திருப்பூர்), 1923 (மதுரை, திருச்சி, சேலம்), 1924 (திருவண்ணாமலை) ஆண்டுகளில் காங்கிரஸ் புறக்கணித்தது.

பின்னர் 22-11-1925-இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற, 'தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் மாநாட்டில்' வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொணர்ந்தார். அத் தீர்மானம், 'வகுப்பு வாதத் தீர்மானம்' எனப் பெயர் சூட்டப்பட்டு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலே (disallowed) ஒதுக்கப்பட்டது. இதனால், அம் மாநாட்டில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி குமுறி எழுந்தது. மாநாட்டுப் பந்தலிலேயே, 'காங்கிரசால் பார்ப்பனரல்லாதார் நன்மை பெற முடியாது; காங்கிரசை ஒழிப்பதே இனி என் வேலை' எனச் சூளுரைத்து அன்றே காங்கிரசிலிருந்து நண்பர்கள் பலருடன் வெளியேறினார்.

இந் நிகழ்ச்சிக்கு முன்னர் 1924 ஏப்ரலில் மலையாள நாட்டில் ஈழவர் எனப்படும் நாடார், தீயர், புலையர் முதலானோர்க்கு இழைக்கப்பட்ட தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க, வைக்கம் என்ற இடத்தில் மகாதேவர் கோவில் முன் நடந்த இழிவு ஒழிப்புப் போருக்குத் தலைமை தாங்கி, தம் துணைவியாரையும் தங்கையையும் போரில் ஈடுபடச் செய்து, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தீண்டாமை ஒழிப்புக் கிளர்ச்சி வெற்றி பெறச் செய்தார். பெரியார் அத்தகைய புரட்சிப் போரில் ஈடுபட்டு மத அனுஷ்டானத்தை உடைத்து வெற்றி கண்டதை அறிந்து அஞ்சிய தமிழ்நாட்டுப் பார்ப்பனர், அக் கிளர்ச்சியைப் பற்றிய உண்மைகளை இருட்டடிப்புச் செய்து, தமிழகத்திலும் அந்நிலைமை தோன்றிவிடாமலிருக்க முயற்சித்தனர். ஆயினும், இருளைக் கிழித்து எழும் காலைப் பரிதி போல்—பெரியாரின் சமுதாய இழிவு ஒழிப்புக் கிளர்ச்சி தென்னாடெங்கும் உள்ள பல கோவில்களில் விரைந்து பரவி இழிவெனும் இருளை அகற்றத் தொடங்கிற்று. சுசீந்திரம் போன்ற இடங்களில் 4-2-1926-இல் தீண்டப்படாதார் கோவிலில் நுழையும் கிளர்ச்சி நடைபெற்றது ('குடிஅரசு' 14-2-1926).

அதேபோல், 1924–1925-இல், காங்கிரஸ் கொள்கையான தேசியத்தினைப் பரப்ப வேண்டி, சேரமாதேவி என்ற இடத்தில்—பால பாரதி, தமிழ்க் குருகுலம், பரத்துவாஜ ஆசிரமம் என்ற பெயர்களில்—'தேசீய வீரர்கள் பயிற்சிக் கூடம்' ஒன்றை வ. வெ. சு. அய்யர் நடத்திவந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் நிதியும், தமிழ் மக்களின் நன்கொடையும் இந்தக் குருகுல நடப்புக்குப் பயன்பட்டன. அங்கு பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளை இழிவாக நடத்தி, உணவில் பேதமும்; உணவு உண்ணும் இடத்திலும், பாத்திரங்களிலும் பேதமும் காட்டியதால்—பார்ப்பனரல்லாதாரிடையே பெருங் கொதிப்பை ஊட்ட ஒரு முக்கிய களனாக அது அமைந்தது.

அந் நிகழ்ச்சி, 'பார்ப்பனர்கள், தீண்டாமை விலக்குப்பற்றிப் பேசுவது போலிப் பேச்சு; அவர்கள் தேசீயத்தைப் பற்றிப் பேசுவது பார்ப்பனீயத்தை வளர்ப்பதன்றி வேறல்ல' என்ற எண்ணத்தைப் பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் உண்டாக்கிவிட்டது.

காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கம் ஓங்கி, பார்ப்பனரல்லாதார் நலன் புறக்கணிக்கப் படுவதை மேற்கண்ட நிகழ்ச்சிகள் பளிச்சென எடுத்துக் காட்டின. இவை நிற்க.

1891 முதல் தம் உள்ளத்தில் தலை தூக்கி நின்ற நாத்திகக் கொள்கைகளையும், இராமாயண, பாரத, மனுநீதி ஒழிப்புக் கோட்பாடுகளையும் காங்கிரஸ் மேடைகளிலேயே எடுத்தியம்பி வந்த பெரியார்—அக் கொள்கைகளுக்கு ஓர் உருவம் கொடுத்து அவற்றை மக்களிடையே பரப்ப வலிவான பிரசார முறையையும் மேற்கொள்ள விரும்பினார்.

அன்றியும், 1900–'20 காலக் கட்டத்தில் தமிழகமெங்கும் வருணாசிரம பாதுகாப்புச் சங்கம், சனாதன தர்ம சங்கம், சனாதன சங்கம் என்ற பெயர்களில் கிராமங்கள் மட்டத்தில் இந்து மதச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்து மதத்தின் பெயரால் நிலைபெற்றுள்ள பார்ப்பனர், சூத்திரர், பஞ்சமர் என்ற உயர்வு—தாழ்வுப் பிரிவுகளைக் காப்பதும், வேத, ஆகம, இதிகாச, புராணங்களின் பேரால் மூடப் பழக்கங்களையும், விழாக்களையும், பண்டிகைகள், சடங்குகள், விரதங்கள் ஆகிய அனைத்தையும் தொடர்ந்து இருக்கச் செய்யும் வகையில் பக்திப் பிரசாரம் செய்வதும் இச் சங்கங்களின் நோக்கங்களாகும்.

இந்தப் பழைய ஏற்பாடுகளை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் அரசியல் இயக்கத்தார் எவருக்கும் தோன்றவில்லை.

பெரியார் அவர்கள் இந்தப் பழைய ஏற்பாடுகளை அழிப்பதையே தலையான கொள்கையாகக் கொண்ட விளக்க ஏடு ஒன்றைத் தொடங்க வேண்டுமென அவர் காங்கிரசிலிருந்தபோதே விருப்புற்றார்.

1922-ல் காங்கிரஸ் கிளர்ச்சியில் ஈடுபட்ட அவர், கோவைச் சிறையில் வைக்கப் பட்டார். அவருடன் சிறையிலிருந்த அவரது நண்பர் தங்கப்பெருமாள் பிள்ளையுடன் அங்கேயே கலந்து பேசி, 'குடி அரசு' என்ற பெயரில் ஒரு ஏட்டைத் துவக்க முடிவு செய்தார். இதுபற்றி அவரே குறிப்பிட்டுள்ள பின்வரும் செய்தி அதனைப் புலப்படுத்தும்.

'நமது நாட்டு மக்களுக்குள் சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சகோதரத் துவத்தையும் உண்டாக்க 'குடி அரசு' என்னும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதல் முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளையும் 1922-ல் கோயமுத்தூர் ஜெயிலில் சிறைவாசம் செய்யும்போதே நினைத்தோம்.'

'அதுபோலவே வெளியில் வந்த கொஞ்ச நாட்களுக்குள், 'குடி அரசு' என்று ஒரு வாரப் பத்திரிகையும்; 'கொங்கு நாடு' என்று ஒரு மாதாந்திரமும் நடத்தப் போவதாய் 19-1-1923 தேதியில் சர்க்காரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.' ['குடிஅரசு' —தலையங்கம்—1-5-1927]

'குடி அரசு' ஏட்டின் கொள்கைக் குறிப்பாகத் தலையங்கப் பகுதியின் தலைப்பில்,

'அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம், பொய், களவு, சூது
சினத்தையும் தவிர்ப்பா யாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக் கிது உறுதியான
உபதேசம் ஆகுந் தானே'

என்ற பாடலை வெளியிட்டார்.

இப் பாடல் சமயச் சார்புள்ளது போலத் தோன்றினும், 'மக்கள் அனைவரும் சமம்' என்ற அவரது கோட்பாட்டை ஓரளவு வலியுறுத்துகின்ற அளவுக்கே இது அவருக்குப் பயன்பட்டது. பிற்காலத்தில் 8-5-1927 'குடி அரசு' இதழிலிருந்து சிறிது காலம் இப் பாடல் வெளியிடப்பெறவில்லை; 1925 முதல் மேற்கண்ட பாடலுக்கு மேல் (தலைப்பில்), ராட்டினத்தின் படம் வெளியிடப்பட்டு வந்தது. 1927 முதல் இவற்றை நீக்குவதும், பின்னர் வெளியிடுவதுமாகச் செய்தார்; 1931 முற்பகுதியில் இரண்டினையும் அகற்றி விட்டார். முகப்பு அட்டையின் தலைப்பில் 1925 முதல் 18-12-1927 வரை பாரத மாதா, காந்தி நெசவு நெய்வது, தொழிலாளர் தொழில் புரிவது முதலான படங்கள் வெளியிடப்பட்டன.

அவர் மேற்கொண்ட கொள்கைகளை, 'குடிஅரசு' மாலை 1, மலர் 1-ல் தலையங்கப் பகுதியில் வெளியிடப்பட்டவாறு, பிற்காலத்தில் 9-4-1933 தேதியிட்ட மலரில் பிறரால் எடுத்தாளப் பட்டுள்ள பின்வரும் பகுதியைக் கொண்டு நன்கு உணரலாம்.

'இந்த இயக்கத்தின் கருத்துகளைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் 'குடி அரசு' முதலாவது தொகுதியின் தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:– 'மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும், சகோதரத்துவமும் தோன்றவேண்டும். ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகலவேண்டும். உலகுயிர் அனைத்தும் ஒன்றெனும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். மேற்சொன்ன கொள்கைகளைப் பரவச் செய்வதற்காக நாம் உழைக்குங் காலத்தில், நம்மைத் தாக்குபவர்களுடைய வார்த்தைகளையாவது, செய்கைகளையாவது நாம் சிறிதளவும் பயமின்றி—சிநேகிதர், விரோதி என்ற வித்தியாசமில்லாமல் யாவரையும் கண்டிக்க நாம் பயப்படப்போவதில்லை.'

மேற்கண்ட பகுதியில் 1925-ல் அவர் உலகுக்கு அறிவித்த கொள்கைகள் உலக மானிட சமூகத்தைத் தழுவியவை. அக் கொள்கைகளைத் தம் வாழ்நாள் முழுதும், எந்த அச்சத்திற்கும் ஆளாகாமல் நாடெங்கும் பரப்பினார்.

அடுத்தடுத்து வந்த 'குடி அரசு' மலர்களில் முற்றிலும் நாத்திகக் கருத்துகளை வலியுறுத்தியே கட்டுரைகளும், தலையங்கங்களும் எழுதி வரலானார். அவரது சொற் பொழிவுகளிலும் பெரும் பகுதி நேரத்தை நாத்திகக் கொள்கை விளக்கத்திற்கே பயன் படுத்தினார்.

இவ்வாறாக, தம்முடைய முழுமுயற்சியையும் சுயமரியாதைக் கொள்கைப் பிரசாரத் திற்கே செலவிட்டாரெனினும், அய்யா அவர்கள் 1927 வரை காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களில் ஓரளவு மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

இங்கு மனித இயல்பு பற்றிய ஓர் பொது உண்மையை நாம் அறிதல் தகும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட ஓர் இயல்பு (Nature) நிலைத்து விடுவதை நாம் அறிவோம். இதனை ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள பலவீனம்–(Weakness) என்பதாக அய்யா அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் தம்முடைய இலட்சியத்தை நிறைவேற்ற ஏற்ற வழி என்பதாக மனமார எந்த ஒன்றை ஏற்றுக்கொண்டாலும் அந்த நெறிக்குத் தன்னை முழுவதுமாக ஒப்படைத்துக்கொள்ளும் சிறந்த இயல்பை உடையவர்— பெரியார். பணத்தைச் சேர்த்துவைக்கும் பழக்கம் தம்மிடம் இருந்ததைக் குறிப்பிட்டு, அது தமது மனத்தின் பலவீனம் எனக்கொண்டு இந்த பலவீனம் (Weakness) என்பது பற்றி அடிக்கடி அவர் கூறிவந்ததும் உண்டு. நிற்க.

மேலே குறிப்பிட்ட மன இயல்பு காரணமாகத்தான் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் கதர்மூட்டையைச் சுமந்து விற்றுப் பாமர மக்களும் கதர்ப்பற்று உள்ளவர்களாக ஆகும் அளவுக்குக் கால் நடையாகவும் கட்டை வண்டியிலும் பயணம் மேற்கொண்டார்.

அதேபோல், பழங்காலந்தொட்டு மனிதன் கைக் கொண்டிருந்த மதுக் குடியை எதிர்த்து 1921-ல் கள்ளுக்கடை மறியல் செய்து சிறைப்பட்டார்; சேலம் தாதம்பட்டியில் தமக்குச் சொந்தமாக இருந்த 500 தென்னைகளை வெட்டி வீழ்த்தினார்.

அவர் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு 1925-லேயே வெளியேறி விட்டாலும் 1927 வரையில் காங்கிரஸ் இயக்கம் தனி என்றும், காந்தியாரின் நிர்மாணத் திட்டங்கள், தனி என்றும் கருதிவந்தார். 6-2-1927-இல் அவர் எழுதியுள்ள 'குடி அரசு' தலையங்கப் பகுதி இதனை நமக்கு உணர்த்துகிறது. அப் பகுதியாவது : 'நாம் மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக் கிறோம்' என்பதாகும்.

மேலும், 18-4-1926 மலரிலிருந்து, 'குடி அரசு' முதற் பக்கத் தலைப்பில், 'மகாத்மா காந்தி வாழ்க!' என்றும்; 20-11-1927 மலரிலிருந்து, 'குடி அரசு' தலைப்பில் 'கதர் வாழ்க!' என்றும் பெரியார் குறித்துவந்துள்ளார்; 25-12-1927 மலரிலிருந்து இவ்விரண்டனுள் எந்த ஒன்றும் குறிக்கப்படாமலே வெளியிட்டுள்ளார். இதுவும் மேற்குறித்த உண்மையைப் புலப்படுத்தும்.

அன்றியும், சுயமரியாதை இயக்கத் துவக்க காலத்தில் கொடியேற்றத்தின் போதும், ஊர்வலத்தின் போதும் எழுப்பப்பட்ட கொள்கை முழக்க ஒலிகள்—பெரியாரின் கொள்கைப் பிரசாரம் பரிணமித்த முறையை ஓரளவு விளக்குந் தன்மையவாம்.

1927இல் முழக்கப்பட்ட ஒலிகள் (கோஷங்கள்)–'மகாத்மா வாழ்க!'; 'ஈ.வெ. ராமசாமி நாயக்கர் வாழ்க!'; 'பனகால் ராஜா வாழ்க!'; 'சுயமரியாதைக்கு ஜே!'; 'குடி அரசுக்கு ஜே!' என்பனவாம் ('குடி அரசு' 30-1-1927).

1927-க்குப் பின்னர் காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களைப் பெரியார் படிப்படியாக எதிர்க்கத் தொடங்கினார். அதனைப் பிரதிபலிக்கும் தன்மையில், 1929-ல், 'சுயமரியாதைக்கு ஜே!'; 'வைக்கம் வீரருக்கு ஜே!' என்ற தன்மையில் மட்டும் முழக்கங்கள் அமைந்தன. ('குடி அரசு', 20-7-1929).

அவ்வாறெல்லாம் காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களில் 1927 வரை பெரும் அளவுக்கு மதிப்பு வைத்திருந்தாலும், 1926 முதலே காந்தியாரின் சமுதாயக் கொள்கைகளை அவர் வன்மையாக எதிர்த்து வந்தார்.

வருணாசிரமக் கொள்கையை ஆதரிப்பதே தமது இலட்சியமென்றும்; தீண்டாமை ஒழிப்பே தமது கொள்கையாகுமென்றும், சாதி ஒழிப்பு அல்லவென்றும்; வகுப்புவாரி உரிமைக் கொள்கை தமக்கு முற்றிலும் எதிரானது என்றும் 1925-க்குப் பின்னர், காந்தியார் வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் வரலானார்.

சாதி ஒழிய வேண்டுமானால் சாதிக்கு ஆதாரமான வருணாசிரம அமைப்பும், சாதியை நிலைநாட்டும் சாதித் தொழிலும் ஒழியவேண்டும் என்பதோடு—வகுப்புரிமை மக்கள் எண்ணிக்கையின் விகிதாசாரப்படி அளிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியும் பிடிப்பும் கொண்டிருந்த பெரியார் அவர்கள்—1928 முதல் காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களின் போலித் தன்மையை எடுத்துக் காட்டி வன்மையாகக் கண்டித்தார்.

மேற்கண்ட நிலை உருவாவதற்கு உடனடிக் காரணங்களாக சில நிகழ்ச்சிகள் அமைந்தன.

காந்தியார் தமது 'யங்–இந்தியா–Young India' ஏட்டில் எழுதிய (22-1-1925 இதழ், 5-2-1925 இதழ்) வருணாசிரம ஆதரிப்பு—வகுப்பு வாரி உரிமை எதிர்ப்புக் கட்டுரைகளும்; 1927 இறுதியில் பெங்களூரில் நடைபெற்ற காந்தியார்—பெரியார் சந்திப்பும் ஆகிய இவை போன்றவை அம் முக்கிய நிகழ்ச்சிகளுள் சிலவாம்.

மேலும், காந்தியார் தென்னாட்டுப் பார்ப்பனரின் வழிப்பட்டார் என்பது அவருடைய செயல்கள் பலவற்றின் மூலம் வெளிப்பட்டது. எடுத்துக்காட்டாக, பெரியார் வைக்கத்தில் மேற்கொண்ட தீண்டாமை ஒழிப்புக் கிளர்ச்சியினை, பார்ப்பனரைப் போன்றே—காந்தியாரும் இருட்டடிப்புச் செய்ததோடு, அக் கிளர்ச்சியில் பெரியார் ஏற்றிருந்த பங்கினைக் குறித்து எங்கும் ஏதும் குறிப்பிடாது மறைத்துவிட்டார். இதனைப் பின்வரும் ஆதாரங்கள் எண்பிக்கும். அவை யாவன:

1. வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றிக் குறிப்பிட்டு 24-4-1924 முதல் 11-1-1926 வரை தமது, '(Young India)' பத்திரிகையில் சுமார் 48 பக்கங்களில் பல கட்டுரைகள் எழுதி, அங்கு நடந்த பல நிகழ்ச்சிகளை விவரித்துள்ள காந்தியார், 'ஈ. வெ. ராமசாமி' என்ற பெயர் எந்த இடத்திலும் குறிக்கப்படாமலே இருக்கும்படி விழிப்போடு மறைத்துள்ளார்.

வைக்கம் சத்தியாக்கிரக வரலாற்றின் நாயகராக விளங்கி இருமுறை சிறைப்பட்ட பெரியாரின் பங்கு குறித்து ஒரு சொல்லைக்கூட அவர் பயன்படுத்தவில்லை.

2. கோவில் பிரகாரத்தில் மட்டும் தீண்டப்படாதாரை அனுமதிப்பது என்ற முடிவை அறிவிக்க திருவாங்கூர் ராணியார் விரும்பினார். அவ்வாறு அறிவித்த பின்னர் கோவில் நுழைவுக்கும் ஈ. வெ. ரா. போராடுவார் என்பதாக எண்ணிய ராணியார்—தம் அறிவிப்பிற்கு, ஈ. வெ. ரா. வின் ஒப்புதலைப் பெற விரும்பினார். அதற்கென்று காந்தி யாரைத் தூது அனுப்பி ஈ. வெ. ரா. வின் ஒப்புதலைப் பெற, ராணியார் முயன்றார். காந்தியார், பயணர் விடுதியில் தங்கியிருந்த ஈ. வெ. ரா. வைச் சந்தித்தார். (இந்நூல் பக்கம் 92) இந்த உண்மையைக் காந்தியார் எதிலும் வெளிப்படுத்தவே இல்லை.

3. 1927 இறுதியில் பெங்களூரில் காந்தியாரோடு பெரியார் மேற்கொண்ட விவாதத்தின் மூலம்—தாம் ஒரு பார்ப்பன ஆதரவாளர் என்பதையும், வருணாசிரமக் கொள்கைக்காரர் என்பதையும் காந்தியார் வெளிப்படையாகக் காட்டிக்கொண்டார். (இந்நூல் பக்கம் 1005–1008.)

துவக்கத்தில்—தம்மைப் போன்றே சமுதாய சமத்துவ உணர்வு உள்ளவராகவும், பார்ப்பனரின் சூழ்ச்சிக்கு ஆட்படாத பார்ப்பனரல்லாதார் தலைவராகவும் விளங்குவார் என்று காந்தியாரைப் பற்றிப் பெரியார் எண்ணியிருந்தார். ஆனால், முன்னர்க் காட்டப் பட்டவாறு இந்த நம்பிக்கைக்கு நேர் மாறான தன்மையினராகச் செயல்பட்டு—காந்தியார் தமது போலித் தன்மையை வெளிப் படுத்திவிட்டார். எனவே அவருடைய நிர்மாணத் திட்டங்களைப் படிப்படியாகப் பெரியார் எதிர்த்தார்.

பெரியார் அவர்களிடத்துக் காணப்படும் 'நிர்மாணத் திட்ட ஆதரிப்பும்—எதிர்ப்பும்' என்கிற முரண்பாட்டுத் தோற்றத்திற்கு மேற்கண்ட விவரங்கள் நல்ல விளக்கம் அளிக்கப் போதியவையாம்.

அடுத்து, பெரியார் மேற்கொண்ட காங்கிரஸ் எதிர்ப்பு பற்றி அறிதல் நன்றாகும்.

1920இலும், 1923இலும் நடந்த இந்தியப் பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் ஈடுபட வில்லை; ஆயினும் 1926இல் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் ஈடுபடுவதென 1925இல் காங்கிரஸ் தீர்மானித்தது.

தேர்தலில் ஈடுபடுவதில்லை என்பதே காங்கிரசின் கொள்கை என்றும்; பதவிக்கு வர நேரிட்டால் வகுப்புரிமை வழங்குவதாகவும் 1919இல் பெரியாரிடம் வாக்குறுதி தந்தே, அவரைக் காங்கிரசில் உறுப்பினராக்கினர்.

எனவே 1926 தேர்தலில் வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தால் வகுப்புரிமையைச் செயற்படுத்த வேண்டுமெனக் கோரி—25-11-1925 காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் தீர்மானம் கொண்டு சென்றார். அது புறக்கணிக்கப்பட்டதை ஏற்கனவே கண்டுள்ளோம்.

ஆதலின் காங்கிரசை எதிர்த்து ஒழிக்கத் தலைப்பட்டார்; காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களின் பொருந்தாமையை விளக்கிக் காட்டினார். 5-6-1927 'குடி அரசு' தலையங்கத் திலும்; 19-6-1927-ல் நடைபெற்ற கோவில்பட்டி திராவிடர் கழக 18-ஆவது ஆண்டுவிழா தலைமை உரையிலும்; 7-8-1927 'குடி அரசு' தலையங்கத்திலும்; 1927 ஆகஸ்டில் விருதுப்பட்டியில் நிகழ்த்திய சொற்பொழிவிலும் ('குடி அரசு' 28-8-1927) இதற்கான காரணங்களைத் தெளிவுபட விளக்கியுள்ளார். இங்கு கோவில்பட்டியில் 'திராவிடர் கழகம்' என்ற பெயரில் அக் காலத்திலேயே ஓர் அமைப்பு இருந்திருப்பது நோக்கத் தக்கது. இதேபோல் திருவாரூரில் 'திராவிட சங்கம்' என்ற ஓர் அமைப்பு 1927-இல் செயல்பட்டது. ('குடி அரசு' 22-5-1927) நிற்க.

எனவேதான் இந்தி கற்பிக்கப்படுவதற்கென 1922-இல் தமது கட்டடத்தில் இந்திப் பாடசாலையை நிறுவிய பெரியார், 1926 முதல் இந்தியை வன்மையாக எதிர்த்தார்.

தமிழ்நாட்டில் முதன்முதலாக திருச்செங்கோடு புதுப்பாளையத்தில் கதர் ஆசிரமத்தைத் (இதனை, 1945-இல் நான் பார்த்து வர நேர்ந்தது) திறந்துவைத்த பெரியார், 1931 முதல் கதர்த் திட்டத்தின் பொருந்தாத் தன்மையை ஆதாரங்களுடன்—பொருளாதாரக் கண்ணோட்டத்தில் விளக்கிக் காட்டினார். 8-6-1931, 14-6-1931, 28-6-1931 'குடி அரசு' மலர்களிலுள்ள விவரங்கள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

பின்னர் 1937–38-இல் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் மது ஒழிக்கப்பட்ட போது, மது ஒழிப்பினால் மாகாண அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஒரு சாக்காகக் காட்டி, அவ் இழப்பை ஈடு செய்வதற்காகவென்று கூறிக் கல்வித்துறை மானியத்தைக் குறைத்து, சுமார் 2200 துவக்கப் பள்ளிகளை மூடிவிட திரு. சி. இராசகோபாலாச்சாரியார் ஆணையிட்டார். அதிலுள்ள சூழ்ச்சியினைப் புரிந்துகொண்ட பெரியார்—1920 முதல் 1936 வரை ஆட்சிபுரிந்த நீதிக் கட்சியினர் கிராமப்புற மக்கள் கல்விபெறுவதற்காகச் செய்திருந்த புதிய வாய்ப்புகளை ஒழிப்பதற்காகவே—மேற்கண்ட மதுவிலக்கைக் காங்கிரசார் அமுல்படுத்தினர் என்பதை மக்கட்கு உணர்த்தினார்.

மேலே குறிப்பிட்டவைகளைக் கொண்டு, பெரியாரிடத்தே கொள்கை முரண்பாடுகள் இருந்தன எனக் கருதத் தோன்றலாம்; அவர் நிலைத்து ஒரு கொள்கையைப் பின்பற்றிச் செல்லாதவர் எனச் சிலர் கருதவும் இடமேற்படலாம். ஆனால், உண்மையோ அவ்வாறு கொள்வதற்கு நேர்மாறானதாகும்.

எந்த ஒரு நிலையை (stand) அவர் மேற்கொள்ள விரும்பினாலும் அதற்கு அவர் கொண்டிருந்த உரைகல் ஒன்றேயாகும்.

அதாவது, சுயமரியாதைக் கொள்கைக்கு ஆக்கமும்; பார்ப்பனரல்லாத மக்களின் சமுதாய இழிவு ஒழிப்புக்கும், நல்வாழ்வுக்கும் ஆதரவும் ஒரு இம்மி அளவு அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு இருப்பதாக அவருக்கு எப்போது தோன்றினாலும்—அதற்கு முன்னிடம் (Top Priority) கொடுத்து எந்த நிலையையும் மாற்றிக்கொள்வார்; எந்தப் புதிய நிலையையும் மேற்கொள்வார். நிற்க.

1920-ல் சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்புக்கு வந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தவரான நீதிக் கட்சியினரின் ஆட்சியானது, திராவிட இனமக்களுக்கு நலன் விளைக்கும் பல அருஞ் செயல்களைச் செய்தது. 1921 முதல் 1930 வரை அவர்கள் செய்த சட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் திராவிடரின் அறியாமையையும், சமூக இழிவையும் ஒழிக்க நேரிடையாக உதவுபவையாக அமைந்தன. எடுத்துக்காட்டாக:—

1. கிராமப் புறங்களில் ஆயிரக்கணக்கில் துவக்கப் பள்ளிகளை நிறுவியமை;

2. ஆதித் திராவிடரின் குழந்தைகளைக் கட்டடத்திற்குள் அனுமதிக்காத பொதுப் பள்ளிகளுக்கு அரசு மானியம் அளிக்காது என 1923-ல் ஆணை பிறப்பித்தமை (G. O. 87—Education, dated 16-1-1923);

3. வகுப்புவாரி உரிமையை அரசின் கொள்கையாக ஏற்று, 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் நாள் (M. R. O.—Public Ordinary Service G. O. 613) என்ற முதல் கம்யூனல் ஜி. ஓ., பிறப்பித்தமை; 1922 ஆகஸ்டு 15-ஆம் நாள் (M. R. O.—Public Ordinary Service G. O. 658) என்ற இரண்டாவது கம்யூனல் ஜி. ஓ. பிறப்பித்தமை; 1924 பிப்ரவரி 6-ஆம் நாள் (M. R. O.—Public Ordinary Service G. O. 761) என்ற மூன்றாவது கம்யூனல் ஜி. ஓ. பிறப்பித்தமை.

4. இந்துக் கோவில் நிர்வாகங்களின்பேரில் அரசு கண்காணிப்பு மேற்கொள்ள ஏற்ற வகையில், இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் இயற்றியமை (Hindu Religious Endowments Act, 1924);

5. இன இழிவை அகற்றும் தன்மையில், தேவதாசிகள் ஒழிப்புச் சட்டம் (1930) உருவாக்கியமை ஆகிய அரிய செயல்களைக் குறிப்பிடலாம்.

இச் செயல்கள் நேரடியாகத் திராவிட மக்கட்கு நலன் விளைவிப்பனவாகவும்; சாதி ஆதிக்கத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் தகர்க்க ஏற்றனவாகவும் திகழ்ந்தன.

அக் காரணங்கொண்டு வைதிகப் பார்ப்பனர்களும், அரசியல் பார்ப்பனர்களும், காங்கிரசில் ஆதிக்கங் கொண்டிருந்த பார்ப்பனர்களும் மேற்சொன்ன சட்ட ஏற்பாடுகளை வன்மையாக எதிர்த்தனர்.

இனநலனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்ட பெரியார் அவர்கள் நீதிக் கட்சியினரின் அருஞ் செயல்களைப் பத்திரிகைகள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் வலியச் சென்று ஆதரித்தார். அன்னாரது பேராதரவின் காரணமாக—1936 வரை நீதிக்கட்சி அமைச்சு என்ற பேராலும், சுயேச்சை அமைச்சு என்ற பேராலும் ஆட்சி புரிந்த பார்ப்பனரல்லாதார், திராவிட மக்கட்குத் தொடர்ந்து மிகப் பல நலன்களைச் செய்தனர்.

சுயமரியாதை இயக்கப் பணியினையும், பார்ப்பனரல்லாதார் ஆட்சிப் பாது காப்பினையும் இரு கண்களெனக் கொண்டு பெரியார் அவர்களும், சுயமரியாதை இயக்கத் தோழர்கள் பலரும் அரும்பணியாற்றினர். சுயமரியாதை இயக்கத்தின் செயல்முறைகளும், நீதிக் கட்சியினரின் அரசுக் கொள்கைகளும் மிக நெருக்கமாக அமைந்த நிலையில், 17-2-1929, 18-2-1929 தேதிகளில், செங்கற்பட்டில், 'சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு' என்ற பெயரால் வரலாற்றுச் சிறப்புமிக்க நம் இயக்க முதல் மாநாடு நடைபெற்றது.

அம் மாநாட்டில் சுயமரியாதை இயக்கத் தோழர்களும், நீதிக் கட்சித் தலைவர்களும் இரண்டறக் கலந்து, திராவிட மக்களின் எதிர்கால நல் வாழ்வுக்கான அரிய முடிவுகளை எடுத்தனர். அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் திராவிடருக்குச் சமுதாய சமத்துவத்தையும், பொருளாதார சமதர்மத்தையும் அமைத்தளிக்கவல்ல சாசனத் தன்மை உடையனவாம்.

அம் மாகாண மாநாடு, நம் 'சுயமரியாதை இயக்க வரலாற்றுக்குத் தோற்றுவாய்' அளித்த மாநாடாகும்.

அம் மாநாட்டில்தான், (1) 'சுயமரியாதை இயக்கம் 1925-ல் தோன்றியது' என்பதும்; (2) '1925 முதல் ஈ. வெ. ராமசாமி சகாப்தம் பிறந்தது' என்பதும்; (3) 'நம் தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார்' என்பதும்; (4) 'சுயமரியாதை இயக்கத் தந்தை ஈ. வெ. ராமசாமிப் பெரியார்' என்பதும் வரலாற்றுக்குட்பட்ட பேருண்மைகளாகப் பலராலும் அறிவிக்கப்பட்டன. இவற்றுக்குரிய ஆதாரங்கள் சென்னையிலிருந்து வெளிவந்த 'திராவிடன்' என்ற தமிழ் நாளேட்டின் 21-2-1929, 22-2-1929 இதழ்களிலும்; 28-7-1929, 16-2-1930 'குடிஅரசு' மலர்களிலும் தெளிவாகக் கிடைக்கின்றன.

இங்கு ஈ. வெ. ரா. அவர்கள் 'பெரியார்' என வழங்கப்படுவதுபற்றிச் சிறிது விளக்கம் காண்டல் பொருந்தும்.

'ஈ. வெ. ராமசாமி அவர்கள் 1938 முதல், 'பெரியார்' என அன்புடன் அழைக்கப் பட்டார்' என்பதாக இதுகாறும் வெளிவந்துள்ள வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. ஆயினும் இது குறித்த உண்மை வேறாகும்.

தமிழகத்தில், ஒருவரின் சொந்தப் பெயரின் பின்னால் அவரது சாதிப் பெயரைக் குறிக்கும் பட்டச் சொல் (Caste title) இணைக்கப்பட்டே அழைக்கப்படுவது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக உள்ள பழக்கமாகும். இது அப் பெயரை உடையவருக்கு உரிமையாகவும், பிறருக்கு நீங்காக் கடமையாகவும்; சாதி வழக்கச் சம்பிரதாயங்களின்படிப் பெருமை சேர்ப்பதாகவும் இன்றும் கருதப்பட்டு வருகிறது.

இச் சம்பிரதாயத்தை உடைத்து வழிகாட்ட விரும்பிய ஈ. வெ. ரா., 18-12-1927 'குடிஅரசு' மலர் வரையில், 'ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்' எனக் குறிப்பிட்டு வந்ததை மாற்றி, 25-12-1927 'குடிஅரசு' மலர் முதல், 'ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி' என்று மட்டும் குறிப்பிட்டு, 'நாயக்கர்' என்பதை நறுக்கிவிட்டார்.

அவ்வாறாக, 'நாயக்கர்' என்ற பட்டச் சொல்லை அவருடைய பெயருக்குப் பின்னால் இருந்து நீக்கிவிட்ட நிலையில், 'நாயக்கர்' என்ற பட்டச் சொல் இல்லாமல் அவரது பெயரைக் குறிப்பிடுவதானது, அவருக்கு உரிய பெருமையைக் குறைத்துவிடுமோ என நம் இனப் பெருமக்கள் பலர் அஞ்சினர்.

அங்ஙனம் அஞ்சிய பலருள் 'நாயக்கர்' என்ற சொல் இருந்த இடத்தில் 'பெரியார்' என்ற சொல்லை முதன் முதலாகச் சேர்த்து—'ஈ. வெ. ராமசாமிப் பெரியார்' என அழைத்தவர் நாகர்கோவில் வழக்கறிஞர் திரு. பி. சிதம்பரம் பிள்ளையே ஆவார்.

இந்த விளக்கத்தினை 21-5-1973-ல் திருச்சியில் தந்தை பெரியார் அவர்கள் எங்கட்கு உணர்த்தினார்.

மற்றும், இராமநாதபுரம் மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் நம் அறிஞர்கள் பலரும், 'ஈ. வெ. ரா. பெரியார்' என்றே குறிக்கலாயினர்.

20, 21-7-1929-ல் நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் திருவாளர்கள் எஸ். குமாரசாமி ரெட்டியார், நீதிபதி எம். கோவிந்தன், டி. கே. சிதம்பரநாத முதலியார் ஆகியோரும் 'பெரியார்' எனக் குறிக்கலாயினர்.

1930-ல் திருச்சி மருத்துவ குல சங்கத்தார் அளித்த உபசாரத்தில் 'பெரியார் ஈ. வெ. ராமசாமி' என்றும் (சென்னை, 'திராவிடன்', 5-9-1930); 22-10-1932-ல் கொழும்பு நகரில் ஆதித் திராவிட சங்கத்தார் அளித்த வரவேற்பில், 'பெரியார் இராமசாமி' ('குடிஅரசு' 6-11-1932) என்றும் நெஞ்சாரப் போற்றிப் 'பெரியார்' என அழைக்கலாயினர்.

இவ்வாறாக, 1928 முதல் 'பெரியார்' என அன்புடன் அழைக்கப்பட்ட அன்னார், 1938 முதல் பெருவழக்காக அவ்வாறு அழைக்கப்பட்டார்.

12, 13-11-1938-ல், 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு', சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடைபெற்றது. தமிழ்நாட்டுப் பெண்கள் விடுதலைக்குப் பெரியார் ஆற்றியுள்ள தொண்டுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை, முதல் தீர்மானமாக அம் மாநாட்டில் நிறைவேற்றினர். அத் தீர்மானமாவது:

'இந்தியாவில் இதுவரையும் தோன்றின சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய வியலாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் செய்துவருவதாலும்; தென்னாட்டில் அவருக்கு மேலாகவும் சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையாலும்—அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும்போதெல்லாம், 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம் மாநாடு எல்லோரையும் கேட்டுக்கொள்கிறது.' ['விடுதலை'—16-11-1938]

அந்த அறிவிப்பு சம்பிரதாயப்படி வேண்டுகோள் தன்மையிலும், ஏற்கனவே வழக்கத்தில் இருந்த பெயரை விளம்பரப்படுத்தும் தன்மையிலும் அமைந்தது.

அடுத்து, 'குடிஅரசு' தோற்றம் பற்றிய விவரமும் இங்குக் குறிக்கப்படுதல் பொருந்தும்.

இன்று வரை நமக்குக் கிடைத்துள்ள 'குடிஅரசு' ஏடுகளுள் மிகப் பழமையானது 11-10-1925, ஞாயிறு என நாளிடப்பட்ட மலரேயாகும். இது 'குடிஅரசு' மாலை 1-ன் 23ஆவது மலர் எனக் கண்டுள்ளது. 'குடிஅரசு' 23ஆவது மலர் 11-10-1925-ல் வெளியிடப் பட்டிருப்பதைக் கொண்டு பின்னோக்கிக் கணித்துச் சென்றால், 'குடி அரசு' முதல் மலர் 3-5-1925 அன்று வெளிவந்திருக்க வேண்டுமென ஆகிறது.

'குடிஅரசு' முதல் மாலையின் 22 மலர்கள் கிடைத்தில. இப் பழைய ஏடுகள் இல்லாத நிலையில் பிற்காலத்தில் 'தமிழர் தலைவர்' (பதிப்பு, 1971) என்ற நூலில், பக்கம் 77-ல், '2-5-1925-ல், குடிஅரசு' என்னும் பேரால் ஈ. வெ. ரா. ஒரு வாரப் பத்திரிகையை ஈரோட்டில் தொடங்கினார்' எனக் குறிக்கப்பட்டுள்ளது; அன்றியும் 1939-ல் இந்த நூல் வெளிவருவதற்கு முன்னரே தொடங்கி—21-4-1935 'குடிஅரசு' மலரிலிருந்து, அதன் முகப்பில் '1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது'; 'Established 1924' என்பதாக—சுமார் 1946 வரை குறிக்கப்படலாயிற்று. ['குடிஅரசு'—8-6-1946]

ஆனால், 'குடிஅரசு' மாலை 2, மலர் 1-ன் தலையங்கத்தில் 2-5-1926-ல், பெரியார் அவர்கள், 'குடிஅரசு ஆரம்பமாகி ஒரு வருஷம் முடிந்து, இரண்டாம் வருஷம் ஆரம்பமாகி விட்டது' எனக் குறித்துள்ளார். இதைக்கொண்டு 2-5-1925 என்ற தேதி நிலை பெற்றாலும் இன்னொரு சிக்கல் உள்ளது. 2-5-1925 என்பது சனிக்கிழமை ஆவதாலும், 'குடிஅரசு' ஞாயிறுதோறும் வெளிவந்ததாக உறுதிப்படுவதாலும் 2-5-1925 என்பது தவறு என ஆகிறது.

எனவே, இத்துணை விவரங்களையும் கொண்டு பார்க்குமிடத்து, திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் என்னும் பெரியவரைக் கொண்டு, 2-5-1925 சனி அன்று, 'குடிஅரசு' வெளியீட்டு விழா நடந்திருக்கவேண்டும் என்பதும்; 'குடிஅரசு' முதல் மலர் 3-5-1925 ஞாயிறு தேதியிட்டு, அதற்கு முதல் நாளே வெளியிடப்பட்டது என்பதும் முடிந்த முடிபாம். 1928-ல் துவக்கப்பட்ட 'ரிவோல்ட்' ஏட்டின் துவக்க விழா 6-11-1928-ல் நடத்தப்பட்டதும், முதல் இதழ் 7-11-1928 தேதியிட்டு வெளியாகியுள்ளதும் இங்கு அறியத் தக்கது. இந்த முறையானது பத்திரிகைத் துறையில் கையாளப்படுவதை இன்றும் நாம் பார்க்கிறோம்.

அடுத்து, சுயமரியாதை இயக்கத் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ள பல அறிஞர் களும்—1924, 1925, 1926 என வெவ்வேறு ஆண்டினைக் குறிக்கும் தன்மையில் கருத்து வெளியிட்டுள்ளனர். சான்றாக, 16-2-1930, 1-5-1932, 9-4-1933 'குடிஅரசு' மலர்களில் அவ்வாறு பலராலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் நம் இயக்கத் தந்தை பெரியார் அவர்கள் தந்துள்ள குறிப்பே பொருத்தமானதாக அமைந்துள்ளது.

அஃதாவது: 'சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி 4, 5 வருஷ கால மானாலும், அது ஒருவிதமாக அதாவது சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ எப்படியோ ஒருவிதத்தில் பொதுமக்களின் கவனத்தை இழுத்து எங்குப் பார்த்தாலும் இயக் கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்படியான நிலையைப் பெற்றுவிட்டது' (குடிஅரசு' 16-2-1930) என்பதாகும்.

1930இல் அவ்வாறு அவர் குறித்துள்ளதால், சுயமரியாதை இயக்கம் அதற்கு 5 ஆண்டுகட்கு முன்னர்—1925ல் தோன்றியதாக ஆகிறது. எனவே, 'குடி அரசு தோன்றிய நாளே—சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள்' என நாம் உறுதிப்படுத்த வேண்டியவர்களாயுள்ளோம்.

மேற்கண்ட முறைகளில், 'பெரியார்'; 'குடி அரசு'; 'சுயமரியாதை இயக்கம்' இவைபற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டதற்குச் சில காரணங்கள் உண்டு.

தந்தை பெரியார் அவர்களின் அரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப் புள்ள காலத்திலேயே இவ்வாறு உறுதி செய்து கொள்வதானது, பிற்காலத்தில் நம் இயக்கம் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வோருக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பது ஒன்று.

அடுத்து இன்னொன்று; சுயமரியாதை இயக்கமானது—காங்கிரஸ் இயக்கம், சென்னைமாகாண திராவிடர் சங்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் முதலானவை தோற்றுவிக்கப்பட்ட முறையில், குறிப்பிட்ட ஓரிடத்தில், சிலரைக் கூடச் செய்து—தோற்று விக்கப்பட்ட ஒன்றன்று.

அதற்கு மாறாக, 'மானிடத்தின் கவலையற்ற நல்வாழ்வுக்கும், திராவிடரின் தன்மான வாழ்வுக்கும் சுயமரியாதைக் கொள்கை இன்றியமையாதது' என்ற எண்ணத்தின் கர்த்தாவும், அதனை உலகுக்கு அறிவித்தவரும் அதற்கென ஓர் இயக்கத்தைத் தோற்று வித்தவரும் தனியொரு மாந்தரான பெரியார் அவர்களே ஆவார். ஆதலின் அன்னாரின் விளக்கங்களைப் பெற்று இவ்வாறு உறுதிசெய்து கொள்வது நமது நீங்காக் கடமையாயிற்று.

இங்கு, முன்னர்க் குறிக்கப்பட்டுள்ள செங்கற்பட்டு, 'சென்னை மாகாண சுயமரியாதை இயக்கக் கமிட்டிக்கு'த் தேர்தல் நடைபெற்ற பின்னர், அக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும், அவை பற்றிய செய்திக் குறிப்பும் நம் கவனத்திற்கு உரியவையாம்.

அவையாவன : பிறகு, சுயமரியாதை இயக்கத் தந்தை திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாருக்கு நன்றி பாராட்டுவதற்கும், மத விஷயத்தில் சர்க்கார் தலையிடுவதில்லை என்ற கொள்கையினால் சமூக முன்னேற்றம் தடைப்படுவதை எடுத்துக்காட்டிக் கண்டிப் பதற்கும் கீழ்க்கண்ட இரு தீர்மானங்களும் மாநாட்டுத் தலைவர் திரு. சவுந்தரபாண்டியன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேறின' :—

(1) 'சமூக முன்னேற்றத்திற்கும், சமூக விடுதலைக்கும் சுயமரியாதை இயக்கக் கர்த்தாவாகிய திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் ஆற்றியுள்ள பெரும் பணிக்கு நன்றி பாராட்டுவதுடன், அவர்கள் இவ்வியக்கத்தில் தலைமை வகித்து நடத்துவதில் அவர்கள்பால் தங்களுக்குப் பூர்ண நம்பிக்கை உண்டென்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது'.

(2) 'மத விஷயத்தில் அரசாங்கத்தார் தலையிடக்கூடாதென்று நடுநிலைமை வகிப் பதினால் பெரும்பான்மையான மக்களின் சமூகச் சம உரிமை பாதிக்கப்பட்டு முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதால், அரசாங்கத்தாரே மக்களின் சமூகச் சம உரிமைக்கும் முன்னேற்றத் திற்குமான சட்டங்களைச் செய்யவேண்டுமென்று இம் மாநாடு கேட்டுக்கொள்கின்றது'

['திராவிடன்' 21-2-1929]

அதே போன்று, அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதாக முன்னர்க் குறிக்கப்பட்ட தீர்மானங்களுள் சிலவும் காணத்தகும்.

(1) தீண்டாமை என்பதை ஒழித்து, எல்லாப் பொது ரஸ்தாக்கள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், முதலிய பொது ஸ்தாபனங் களைத் தட்டுத் தடங்கலின்றி எல்லோரும் அனுபவிக்க சம உரிமை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறது. —தீர்மானம் எண் 7.

(2) மேலே காணப்பட்ட சம உரிமைக்கொள்கைகளுக்கான பிரசாரம் இருப்பது மட்டுமல்லாமல், ஆட்சியாளரும் சட்டம் செய்து அமுல் நடத்த வேண்டும்.

—தீர்மானம் எண் 8.

(3) பதினாறு வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கே மணம் செய்விக்கப்படவேண்டும்; பெண்களுக்கு மண விலக்கு உரிமை, விதவைகளுக்கு மறுமண உரிமை தேவை.
—தீர்மானம் எண் 11.

(4) பள்ளிக்குப் போகத்தக்க சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பக் கட்டாயக் கல்வி கண்டிப்பாகத் தரப்படவேண்டும்.
—தீர்மானம் எண் 13.

(5) ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகம், உடை, உணவு இலவசமாக அளிக்க வேண்டும்.
—தீர்மானம் எண் 15.

(6) சர்க்கார் புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் நிலமில்லாத ஏழை விவசாய மக்களுக்கும் கொடுத்துப் பயிர் செய்வதற்கான பண உதவியும் செய்யவேண்டும்.
—தீர்மானம் எண் 20.

(7) தீண்டாதார் எனப்படுவோருக்கு சர்க்காரில் காலியாகும் உத்தியோகங்களில் முதல் உரிமை கொடுக்கவேண்டும்.
—தீர்மானம் எண் 21.

(8) பெண்களுக்கும் ஆண்களைப்போலவே சொத்துரிமை—வாரிசு உரிமை; ஆண் களைப் போலவே எந்தத் தொழிலையும் மேற்கொண்டு நடத்துவதற்கான சம உரிமைகள் அனைத்தும் தரப்படவேண்டும்.
—தீர்மானம் எண் 24.

(9) பள்ளியாசிரியர்கள் வேலைக்குப் பெண்களை அதிகமாக நியமிக்க வேண்டு வதோடு, ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வேலை முழுமைக்கும் பெண்களையே நியமிக்க வேண்டும்.
—தீர்மானம் எண் 25.

(10) இரயில்வே உணவு விடுதிகளில் எவ்விதமான சாதிப் பாகுபாடுகளும் தலைநீட்டக் கூடாது.
—தீர்மானம் எண் 28.

வரலாற்றுச் சிறப்புக்குரிய இத் தீர்மானங்கள்—'சுயமரியாதை இயக்கக் கர்த்தா பெரியார்' என்பதையும், 'சுயமரியாதை இயக்கம் சமூக விடுதலை இயக்கம்' என்பதையும், திராவிடப் பெருந் தலைவர்கள் ஒன்றுகூடி உலகுக்கு அறிவிக்கக் கருவியாக அமைந்தன.

தமிழகத்தில் சுயமரியாதைக் கொள்கைகளை இடையறாது பரப்பி வந்த பெரியார் அவர்கள், 1929 இறுதியில் மலேயா நாட்டில் ஈப்போ நகரில் நடைபெற்ற, 'தமிழர் சீர் திருத்தச் சங்க மாநாட்டிற்கு' அழைக்கப்பட்டார். 15-12-1929-ல் ஈ. வெ. ரா. நாகம்மையா ருடனும் மற்றும் தோழர்களுடனும் மலேயா நாட்டுக்குப் பயணமானார்.

மலேயாவில், 'தமிழர் சீர்திருத்தச் சங்க மாநாடு' (ஈப்போ); 'மலேயா இந்திய சங்க மாநாடு' (சிங்கப்பூர்) இவற்றில் பேருரைகள் ஆற்றி அங்கு வதிந்த தமிழர்கள், முஸ்லிம்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆகியோரைத் தன்மான உணர்வு பெறச்செய்தார்.

மலேயாவில் 20-12-1929 முதல் 11-1-1930 முடிய உள்ள காலத்தில் பினாங்கு, கோலா லம்பூர், தைப்பிங், மூவார், ஜோகூர்பார், பத்துபகார், மலாக்கா, தம்பின், கோலப்பிறை, கோலாகுபு, தஞ்சமாலிம், சுங்கை குருட், தெலுக்கான்சர், கம்மார், கோலாகஞ்சார், சுங்கப் பட்டாணி முதலான சுமார் 71 இடங்களில் சுமார் 39 சொற்பொழிவுகளும், 34 வரவேற்பு நிகழ்ச்சிகளில் உரைகளும் ஆற்றி மிகப்பெரிய விழிப்பினை அவர் உண்டாக்கினார்.

பினாங்கிலிருந்து 11-1-1930-ல் கப்பலேறிய அவர் 16-1-1930-ல் நாகையை வந்தடைந் தார்; மிகச் சிறப்புடன் வரவேற்கப்பட்டார். அக் கப்பல் பயணத்தின்போதுதான், எதிர்பாராதவிதமாக, அவர் தாடி வளர்க்க நேரிட்டது. அது வேடிக்கையானதோர் நிகழ்ச்சியாகும்.

கப்பல் பயணத்தின்போது அவர் முகச் சவரம் செய்துகொள்ள விரும்பினார்; தாம் இருந்த அறையில் பயணிகளுக்குச் சவரம் செய்து கொண்டிருந்த தொழிலாளியை இரண்டு,

மூன்று தடவைகள் அழைத்தார்; அத் தொழிலாளி வேறு இரண்டு, மூன்று பெயர்கட்கு முடி திருத்திய பிறகு மிகவும் தாமதித்துத் தம்மிடம் வந்தார். அச் சமயம் வேறு சிந்தனையில் ஈடுபட்டிருந்த பெரியார், தாமதித்துத் தம்மிடம் வந்த தொழிலாளியிடம், 'நீ எனக்குச் சவரம் செய்யவேண்டாம், போ' எனச் சிறிது கடிந்துகூறி, முகச் சவரம் செய்துகொள்ளாமலே விட்டுவிட்டார். கப்பல் பயணத்தின்போது முகத்தில் முளைத்த மயிர் அப்படியே விடப்பட்டு வளர்ந்து வெண் தாடியாக மாறி—தங்கமேனி படைத்த அவருக்குச் சிங்கத் தோற்றத்தை அளித்துக் கொண்டிருந்தது.

தாடி இல்லாத நிலையில் இருந்து மலேயாவில், அன்னார், ஒரு பெருங் கூட்டத்தில் சொற்பொழிவாற்றியதைக் காட்டும் நிழற்படம் ஒன்றைக் கழகக் குழுவினர் 17-5-1973-ல் அவரிடம் நேரில் பெற்றபோது மேற்கண்ட விவரங்களைத் தாமே கூறினார். இவை இவ்வாறிருக்க.

ஈரோட்டினின்று வெளிவந்து கொண்டிருந்த 'குடி அரசு', 'ரிவோல்ட்' வார ஏடுகள் 16-6-1929 முதல் சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடு செய்திருந்த அவர், மலேயாவிலிருந்து திரும்பியவுடன் மீண்டும் அவற்றை ஈரோட்டிலிருந்தே வெளியிடலானார்.

நாடெங்கும் சுயமரியாதைக் கொள்கைகளை முழக்கிய அவர் 1927 முதல் புத்தர் கொள்கைப் பிரசாரத்திலும், திருக்குறள் பிரசாரத்திலும் நாட்டம் கொண்டார்.

['குடி அரசு'—3-7-1927, 25-9-1927]

1930 முதல், இவற்றை மக்கட்கு நன்கு விளக்க முற்பட்டார்.

['குடி அரசு'—20-4-1930]

பெண்ணுரிமை கோருவதில் உலகத்திலேயே தலை சிறந்த முன்னோடியாக விளங்கிய அவர் பெண்களை அடிமைப்படுத்த ஏதுவாக இருந்த பிள்ளைப் பேற்றினைக் கட்டுப்படுத்தும் கொள்கையை 1928 முதலே எடுத்தியம்பினார். பின்வரும் அவர்தம் விளக்கம் இதனை நன்கு உணர்த்தும்.

'கர்ப்பத் தடை என்பதுபற்றிச் சுமார் 2 வருஷங்களுக்குமுன் நாம் எழுதியது அனேகருக்குத் திடுக்கிடும்படியான சேதியாயிருந்தது' என்பதே அப் பகுதியாம்.

['குடி அரசு'—6-4-1930]

இவ்வாறாக, தமிழகத்திலும், அண்டைய அயல்நாடுகளிலும் சுயமரியாதைக் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பிய பெரியார், 1931 முதல் சமயம் நேர்ந்தபோதெல்லாம், பொருளாதார சமதர்மக் கொள்கைகளையும் எடுத்துச் சொன்னார். சோவியத்து நாட்டில் புதியதாக மலர்ந்திருந்த பொதுவுடைமை ஆட்சிக்கொள்கையும் அன்னாரது சிந்தனைக்கு விருந்தாக அமைந்தது.

எனவே, சமதர்மக் கொள்கைகள் ரஷ்யாவில் ஆட்சிமூலம் செயல்படுத்தப்படுவதை நேரிற்கண்டறியவும், வாய்ப்பு நேர்ந்தால் அங்கேயே தங்கிவிடவும் பெரிதும் விருப்பங் கொண்ட அவர், 1931 டிசம்பர் 13-ல், மேலைநாடுகட்குப் பயணமானார்.

அவர் பயணம் சென்ற வழியில் எகிப்து நாட்டிலிருந்து 'குடி அரசு'க்கு எழுதி அனுப்பிய பயண வருணனைக் கட்டுரைகள் அவர்தம் கூர்த்த மதியையும், சொல்லாற்றலையும் நன்கு புலப்படுத்துவனவாக உள்ளன.

[இந்நூல் பக்கம் 1180-1186]

சோவியத்து நாட்டில் மிகப் பல இடங்களில் நாத்திகச் சங்கங்களாலும், இளைஞர் சங்கங்களாலும், தொழிற்சாலை நிர்வாகத்தினராலும் அவரும், அவர்தம் குழுவினரும் பெருமதிப்புடன் வரவேற்கப்பட்டனர்.

13-2-1932 முதல் 19-5-1932 வரை அவர் சோவியத்து நாட்டில் தங்கிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, ரஷ்ய நாத்திகச் சங்கங்களின் தலைவர்களும், செயலாளர்

களும், மொழிபெயர்ப்பாளர்களும் அவருடன் இருந்து பேருதவி புரிந்தனர். அங்குப் பயணம் மேற்கொண்ட மூன்று மாதத்தில் சோவியத்தின் பெரிய தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், நூல் நிலையங்கள், படிப்பகங்கள், நாடக அரங்குகள், விவசாயப் பண்ணைகள், பொது உண்டிச்சாலைகள், தொழிலாளர் சங்கங்கள் முதலான பல அமைப்பு களையும்; லெனின் சவம், லெனின் மியூசியம் முதலானவற்றையும் நேரில் பார்வை யிட்டார். பலவிடங்களில் சங்கங்களின் சார்பிலும், பொதுக்கூட்டங்களிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டார்.

அவ்வமயம் ஸ்டாலின் முன்னிலையில் அங்கு நடந்த மே தின விழாவில், பெரியார் கலந்துகொண்டார்; 'இந்தியாவிலிருந்து வந்துள்ள நாத்திகத் தலைவர்' என அவர் அவையினருக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, ஸ்டாலின் அளித்த மரியாதையையும் பெற்றார்.

ஸ்டாலின் அவர்களை 29-5-1932-ல் பேட்டி காணப் பெரியார் ஒப்புதல் பெற்றிருந்தார். ஆயினும் அன்னாருடன் சென்றிருந்த திரு. எஸ். இராமநாதன் எம்.ஏ., பி.எல்., அவர் களின் நடவடிக்கைகள் சோவியத்து அரசின் கண்காணிப்புக்கு உள்ளாக வேண்டிய நிலைமைக்கு ஆளானபடியால், அதைக் காரணங்காட்டி, '19-5-1932-ல் சோவியத்து நாட்டை விட்டு, பெரியார் குழுவினர் வெளியேறிவிட வேண்டும்' என ஆணையிடப் பட்டது. அதன் விளைவாக, ஸ்டாலின் சந்திப்புக்கு வாய்ப்பு நேராமலேயே சோவியத்து நாட்டினின்று திரும்பினார்.

அப் பயணத்தில் ஆப்பிரிக்கா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுகல், இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கும் சென்று பல இடங்களையும், பல நாட்கள் சுற்றிப் பார்த்தார். ஜெர்மனியில் பெர்லின் நகரத்திலும், ஸ்பெயினில் மாட்ரிட் நகரத்திலும், பிரான்சில் பாரிசிலும் பல நாட்கள் தங்கியிருந்து, ஆங்காங்கிருந்த தொழிற்சாலைகளையும், சங்கங்களையும் பார்வையிட்டார். ஜெர்மனியில் பல இடங்களில் இருந்த நிர்வாணச் சங்கங்களுக்கும் (Nude Societies) சென்றார்.

இங்கிலாந்து நாட்டில் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. சக்லத்வாலாவைக் கண்டு பேசினார்; பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு. லான்ஸ்பரியைக் கண்டு பேசினார்.

அயல் நாடுகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் இங்கிலாந்தில் மேக்ஸ்பரோ— 'லேக் பார்க்' என்ற இடத்தில் 20-6-1932-ல் ஆற்றிய பேருரை அன்னாரின் சுய சிந்தனைப் போக்குக்கும், அஞ்சா நெஞ்சத்துக்கும் பொருத்தமான காட்டாக விளங்குகிறது. (இந் நூல் பக்கம் 1191–1192). அக் கூட்டத்திலிருந்த சுமார் 50 ஆயிரம் மக்களும் அவருடைய நேரியமதியைப் பாராட்டினர்.

அப் பயணம் பற்றிக் கிடைத்துள்ள குறிப்புகளிலிருந்து அவர்தம் பயணம் பின்வரும் தன்மையில் அமைந்ததாகக் கொள்ளலாம்.

24-12-1931 முதல் 29-12-1931 வரை ஆப்பிரிக்காவிலும்; 1932 ஜனவரி 6 முதல் 16 வரை எகிப்திலும்; 1932 ஜனவரி 19 முதல் பிப்ரவரி 7 வரை கிரீஸ், துருக்கி நாடு களிலும்; 1932 பிப்ரவரி 13 முதல் மே 19 வரை சோவியத்திலும்; 1932 ஜூன் முதல் 1932 அக்டோபர் முதல் வாரம் வரை இங்கிலாந்து, ஸ்பெயின், ஜெர்மனி, போர்ச்சுகல், பிரான்சு முதலான நாடுகளிலும்; 17-10-1932 முதல் 6-11-1932 வரை இலங்கையிலும் அவர் தங்கியிருந்ததாகக் கொள்ளலாம்; இடைப்பட்ட நாட்கள் பயணம் செய்த நாட்களாகும்.

இவ்வாறு ரஷ்ய – ஐரோப்பிய – இலங்கைச் சுற்றுப் பயணத்தை 11 மாத காலம் மேற்கொண்ட அவர், இலங்கையில் பல இடங்களில் சொற்பெருக்காற்றினார். அவர்தம் இலங்கைச் சொற்பொழிவுகள் சுயமரியாதைக் கொள்கைக்குத் தெளிவான விளக்கங்க ளாகவும், சமதர்மக் கொள்கைக்குச் சிறந்த பால பாடங்களாகவும் திகழ்வனவாம். அச் சொற்பொழிவுகள், 'ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்' என்ற பெயரில் சிறு தொகுப்பாக

வெளிவந்தபோது, தமிழ் மக்களும் கடல்கடந்த தமிழரும் அதனை விரும்பி ஏற்றுப் பாராட்டினர். இலங்கைச் செலவு முடிந்தபின் 8-11-1932-ல் தூத்துக்குடி சேர்ந்து, 11-11-1932-ல் ஈரோட்டை அடைந்தார்.

அயல்நாடுகள் பயணத்திற்குப் பின்னர் அவர் முதன்முதலாக விடுத்த வேண்டுகோள் குறிப்பில், 'தோழர் என விளியுங்கள்' என அனைத்து மக்களையும் கேட்டுக்கொண்டார். ('குடி அரசு' 13-11-1932). அத் தேதிக்கு முன்னரே 'குடி அரசு' ஏட்டில் 'தோழர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், அவ் வேண்டுகோளுக்குப் பின்னர் தான், 'தோழர் ஈ. வெ. ராமசாமி'; 'தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள்' என இருபாலாரையும் அழைப்பது பெருவழக்கில் வந்தது. பின்னர், பெண்களைத் 'தோழியர்' எனக் குறிக்கலாயினர்.

அடுத்து, இலண்டனில் அவருக்கு அன்பளிப்பாகக் கிடைத்த சோவியத்தின் ஐந்தாண்டுத் திட்ட ஆங்கிலநூலைத் தமிழில் முதன் முதலாக மொழி பெயர்த்து வெளியிட்டார்.

தொடர்ந்து ஈரோட்டில் சென்னை மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் பலரையும் அழைத்து—28, 29-12-1932-ல் அன்னாரின் புதிய சமதர்மத் திட்டத்தினை விளக்கினார்; மறைந்த திரு. எம். சிங்காரவேலு பி.ஏ., பி.எல்., அவருடனிருந்து விளக்கம் தந்தார். அத் திட்டத்தினை விளக்கி மாவட்ட மாநாடுகள் பல நடைபெற்றன. எழுத்திலும் பேச்சிலும் அதி தீவிரப் பொருளாதாரப் புரட்சிக் கருத்துகளைப் பெரியார் வெளியிடலானார்.

அது சமயம் காங்கிரசார், பெரியாரின் பிரசாரத்தைக் குறித்துத் தவறான செய்திகளைப் பொதுமக்களிடம் பரப்பினர். 'சுயமரியாதை இயக்கம், பொதுவுடைமை இயக்கமாகிவிட்டது; ரஷ்ய அரசாங்கத்தின் தூண்டுதலினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது' என்பதே காங்கிரசாரின் தவறான பிரசாரமாகும். இது சிறிதும் பொருந்தாக் குற்றச்சாட்டாகும்.

ஏனெனில், பெரியார் அவர்கள் ரஷ்யப் புரட்சி வெடிப்பதற்கு (1917) முன்னரே தொழிலாளர் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு தமக்கென ஒரு நெறியை வகுத்திருந்தவர் ஆவார். அதன்படி, 'தொழிலாளர்கள் என்பவர்கள்—தொழிலில் பங்குதாரர்களாக ஆக்கப்படவேண்டும்' என்பதை அவரே செயற்படுத்திக் காட்டியுள்ளார். இவ் விவரத்தைப் பின்வரும் அவர்தம் சொற்பொழிவு நமக்கு நன்கு உணர்த்தும்.

'தொழிலாளர்களைத் தொழிலில் பங்குதாரராக ஆக்க வேண்டும் என்ற கொள்கையை என் வியாபாரத்தில் 1900-ல்—அதாவது 73 ஆண்டுகளுக்கு முன் அனுசரித்தேன். என் கடையில் இருந்த மூன்று பேர்களைக் கஷ்டக் கூட்டாளிகளாக ஆக்கினேன். அவர்களுக்கு மாதம் தலா ரூ. 10, 8, 7 சம்பளமாகும். வியாபாரத்திற்கு முதல் ரூபாய் பத்தாயிரம்'.

'இலாபத்தில் முதலாளி என்கிற எனக்கு ஒரு பாகம்; என் முதலுக்கு ஒரு பாகம்; கஷ்டக் கூட்டாளிகள் மூவருக்கும் ஒரு பாகம் என்று அமுல் படுத்தினேன். அதாவது, என் கடையில் வரும் லாபத்தை 49 பாகமாகப் போட்டு ஒரு பாகம் சாமி கணக்குக்கும்; 16 பாகம் எனக்கு—பணப் பொறுப்புக்காகவும்; 16 பாகம் முதலீட்டுப் பணத்திற்காகவும்; மீதி 16 பாகம் கஷ்டக் கூட்டாளிகளுக்கு என்றும் பிரித்துக் கொடுத்தேன். தொழிலாளர் பிரச்சினை தீர இதுவே சிறந்த வழி என அப்போது முதல் கூறி வருகிறேன்'.

[உடையார்பாளையம் பருக்கலில், 3-6-1973-ல் சொற்பொழிவு, என் கைக் குறிப்பு]

அன்றியும் அவர் தொழிலாளர் நலனில் ஆர்வம் கொண்டு, 20-6-1926-ல் ஆலப்புழையில், தொழிலாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கியும் ('குடி அரசு' 23-6-1926); 25-6-1926-ல் நாகையில் தொழிலாளர் சங்க மாநாட்டில் பங்கு கொண்டும்;

அடுத்து நாகையில் 1927-ல் நடந்த இரயில்வே தொழிலாளர் கிளர்ச்சியில் பங்கேற்றும்—தொழிலாளர் உரிமைக்குப் போராடியவர் ஆவார்.

ஆதலின், அவர் மேற்கொண்ட தீவிர சமதர்மப் பிரசாரத்திற்கு ரஷ்யாவின் தூண்டுதல் காரணம் அல்ல என்பது அறியக் கிடக்கிறது.

அவர்தம் தீவிர சமதர்மப் பிரசாரத்தின் விளைவாக 1933-ல் தமிழ் நாட்டில் சுமார் 460 சமதர்மச் சங்கங்கள் செயல்பட்டு அவரை ஆதரித்து நின்றன.

அன்னார் தீவிர சமதர்மப் பிரசாரம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, 30-12-1933-ல் கைது செய்யப்பட்டார். 'இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழியவேண்டும்?' என்ற தலைப்பில் 'குடி அரசு' ஏட்டில் தலையங்கம் வெளிப்படுத்தியது ராஜ துவேஷம் என்பதே அவர்பேரில் சாட்டப்பட்ட குற்றமாகும். அக் குற்றச்சாட்டின் பேரில் தண்டிக்கப்பட்டு, கோவைச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அப்போது அச் சிறையில் திரு. இராசகோபாலாச்சாரியாரும் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவர் எவ்வகையிலேனும் மீண்டும், பெரியாரைக் காங்கிரசுக்கு அழைத்துக்கொள்ள வேண்டுமெனத் திட்டமிட்டு ராஜி பேசலானார்; ராஜியின்படி, சில நிபந்தனைகளைப் பெரியாரிடம் எழுதி வாங்கினார்.

அவற்றுள் மிக முக்கியமானவை :

1. கடவுள்—மத எதிர்ப்பு விஷயங்களை அவரவர் தனிப்பட்ட விஷயமாக வைத்துக் கொள்ளவேண்டும்; பொது மேடையில் பிரசாரம் செய்வதில்லை.

2. அரசாங்கப் பதவி, உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அமுல்படுத்த வேண்டும் என்பவையாம்.

இந்த நிபந்தனைகளுக்குக் காந்தியாரிடம் ஒப்புதல் பெறுவதாகப் பெரியாரிடம் ஆச்சாரியார் உறுதி கூறினார்.

அது சமயம் 1934-ல் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த காந்தியார் கோவையில் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார். அவரிடம் பெரியாருடைய ராஜி நிபந்தனைகளைக் காட்டிய ஆச்சாரியார்—'வகுப்புரிமையை ஒப்புக்கொள்ளக் கூடாது' என காந்தியாருக்கு துர்போதனை செய்து அவர் ஒப்புக் கொள்ளாதபடிச் செய்து விட்டார். காந்தியார் ஒப்புக் கொள்ளாததால்—காங்கிரஸ் ஒப்புக் கொள்ளவில்லை என ஆகிவிட்டது. அத்துடன், 'காங்கிரஸ்–பெரியார் ராஜி பிரச்சினை' தீர்ந்து போயிற்று.

அது சமயம் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது. கோவை சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரிடம் அவர்தம் வீட்டில், காந்தியார் ஒரு வினாவை எழுப்பினார். 'நீங்கள் கூறும் சுயமரியாதைக் கொள்கைக்கு உங்களின் ஞானப்பிதா யார்? (Who is your god-father?) என்பதே அவ் வினாவாகும். அதற்கு, சர். ஆர். கே. சண்முகம், 'இந்தக் கொள்கைகள் என் மனதிற்குத் தோன்றியவை; இதில் முறைக்காக எனக்கு ஒரு தலைவர் உண்டு என்றால், அவர் ஈ. வெ. ராமசாமிதான்' எனப் பதில் மொழிந்தார். இந் நிலையில் தமிழகத்தில் பலவிடங்களுக்கும் சென்ற காந்தியாரை, ஆங்காங்கு சுயமரியாதைத் தொண்டர்கள் சந்தித்து வினாத்தொடுத்து உரையாடினர். காந்தியார் சுயமரியாதைக் கொள்கைகளைத் தாம் ஒப்புக் கொள்வதாகவும் கூற நேரிட்டது.

முன்னர் குறிக்கப்பட்ட, 'பெரியார்—ஆச்சாரியார் ராஜி நிபந்தனை'களை காங்கிரஸ் ஒப்பவில்லை எனக் கண்டோம். அதே சமயத்தில் நீதிக் கட்சிக்குப் பெரியார் அனுப்பிய வேலைத் திட்டம், 1934-ல் சென்னையில் நடந்த நீதிக் கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்டு, அவற்றைச் செயற்படுத்த ஒரு குழுவும் அமைக்கப்பட்டது; அவர் தந்த 15 திட்டங்களை, 14-11-1935-ல் நீதிக் கட்சி ஏற்றுக்கொண்டது. பெரியார் மிகத் தீவிரமாக நீதிக் கட்சியை ஆதரித்து வந்தார். நிற்க.

அவர் அயல்நாடுகள் பயணம் முடிந்து திரும்பிய ஆறு மாத காலத்தில், 11-5-1933-ல் துணைவியார் நாகம்மையார் மறைந்தார். சுயமரியாதைத் தொண்டர் உலகம் கண்ணீர் வடித்தது; பெரியார் எழுதிய, 'நாகம்மாள் மறைவு' என்ற இரங்கல் தலையங்கம் சாகா இலக்கியமாக அமைந்தது. (இந்நூல் பக்கம் 1917–1918)

இதற்கிடையில் சுயமரியாதைக் கொள்கைகளையும் சமதர்மக் கொள்கைகளையும் அதி தீவிரமாகப் பிரசாரம் செய்ய விரும்பிய அவர், Revolt—ரிவோல்ட் ஆங்கில வார ஏடு (1928—30), 'புரட்சி' வார ஏடு (1933), 'பகுத்தறிவு' வார ஏடு (1934), 'பகுத்தறிவு' நாள் ஏடு (1934), 'பகுத்தறிவு' மாத ஏடு (1935) என மிகப் பல ஏடுகளைத் துவக்கி நடத்தினார்.

அவர்தம் தீவிர எண்ணத்தை மொழித் துறையிலும் புகுத்தினார். தம் வாழ்நாள் முழுதும் 'உயர் எண்ணங்கள் மலரும் சோலை' என்த் திகழ்ந்த பெரியார், தமிழ் நெடுங் கணக்கில் கையாளப்பட்டுவந்த எழுத்து முறைகளில் பலவற்றை மாற்றி அமைத்து, அதனை உலகுக்கு அறிவித்தார் ('பகுத்தறிவு' 30-12-1934).

அவ்வாறு செய்யப்பட்ட மாற்றங்கள் ஹ, ரு, ஞ என்ற எழுத்துக்களை ணா, றா, னா, எனவும்; ஊ, லை, ளை, னை என்பவற்றை ணை, லை, ளை, னை எனவும்; பின்னர் ணொ, றொ, னொ என்பவற்றை ணொ, றொ, னொ எனவும் மாற்றி எழுதத் தொடங்கிய வையேயாம்.

தமிழ் எழுத்து முறை பல்வேறு காலங்களில் பல மாற்றங்களை அடைந்துள்ளது. எனினும், அச்சுக் கலையும், தட்டச்சுக் கலையும் வளரத் தலைப்பட்டபின்—அத் துறையில் முதன் முதல் மாற்றத்தை விளைத்தவர் பெரியாரே ஆவார். தமிழ் எழுத்துக் களின் மொத்த எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் அம்மொழியை எளிதில் கற்றுக் கொள்ளவும்; அச்சுக் கோப்பதிலும், தட்டச்சு (Typewriting) செய்வதிலும் எளிமையைப் புகுத்தவும் முடியும் என்பதை விளக்கிக் கூறினார். இம் மாற்றத்தை 13-1-1935 முதல் 'குடி அரசு' ஏட்டிலும் அறிவிப்புச் செய்து கையாண்ட அவர், தம் காலம் முழுதும் அப் புது முறையையே கையாண்டுவந்தார். அவர்தம் இயக்க ஏடுகள், நூல்கள் அனைத்தும் இன்றும் அம் முறையையே கைக்கொண்டுள்ளன; இயக்கத் தோழர்கள் பலரும் அவ்வாறு எழுதுவதையே பழக்கமாகக் கொண்டுள்ளனர். சமுதாய இழிவு ஒழிப்பின் ஒரு பகுதியாக, இரயில்வே நிலைய உணவு விடுதிகளில் 'பிராமணாள்'; 'இதராள்' எனப் பிரித்து உண்ணுமிடம் இருப்பதை எதிர்த்து 1938-ல் போராடி வெற்றி பெற்றார். இவை இருக்க.

1936–37 பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி படுதோல்வி அடைந்தது. அத் தேர்தலில் பல மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்று, பல மாதங்கள் கழித்துப் பதவியேற்றது.

சென்னை மாகாணத்தில் ஆச்சாரியார் தலைமையில் அமைச்சரவை அமைக்கப் பெற்றது. அவரது அமைச்சரவையின் சாதனைகள் திராவிட மக்கட்கு வேதனை விளைவிப்பனவாக இருந்தன. அவ் வேதனை தரும் திட்டங்களைச் சாடி நாடெங்கும் எதிர்ப்புக் குரல் எழுப்பினார் பெரியார்.

அவர் 1940 வரை இடையறாது எதிர்த்துப் போராடிய அக் கொடுமைகள் யாவை என்பதைப் பின்வரும் அவரது பம்பாய்ச் சொற்பொழிவு நன்கு உணர்த்தும். அக் கொடுமை களாவன: (1) எட்டு அமைச்சர்கள், ஒரு மேலவைத் தலைவர், ஒரு சட்டமன்றத் தலைவர் ஆக பத்து அமைச்சுப் பதவிகளில் நூற்றுக்கு மூன்றுபேருள்ள பார்ப்பனருக்கு ஆறு இடங்கள் அளிக்கப்பட்டன; பார்ப்பனரல்லாதாருக்கு 4 இடங்களே தரப்பட்டன. (2) நீதிக் கட்சியினரால் கிராமப் புறங்களில் தோற்றுவிக்கப்பட்டிருந்த பள்ளிகளில் 2200-யை, போதிய பணவசதியில்லை என்ற போலிக் காரணம் காட்டி மூடிவிட்டனர்; ஆனால், அதே சமயம் பார்ப்பனர்களுக்காக 12 இலட்ச ரூபாய் செலவில் வேதபாடசாலை ஒன்றைப் புதிதாகத்

துவக்கினர்; அப் பாடசாலையிலிருந்த பெரிதும் பார்ப்பனரான ஆசிரியர்கட்கு மாதம் ரூபாய் 200 முதல் 600 வரை சம்பளம் அளித்தனர். (3) பொற்கொல்லர், கருமார் போன்றோர் அரசாங்கத்தில் பத்திரப் பதிவுக்கு வரும்போது, அவர்கள் 'ஆச்சாரி' எனக் கையொப்பமிட்டால், பதிவு செய்யக்கூடாது எனத் தனி அரசாங்க அறிவிப்பைச் செய்தனர்.

இவையன்றி, உயர்ந்த உத்தியோகங்களில் பார்ப்பனருக்குப் பெருவாரியாக இடங்கள் அளிக்கப்பட்டன. அப்போது சென்னை மாகாணத்திலிருந்த சுமார் 81 நகராட்சி களில் 24 ஊர்களில் தலைவர்களாகவும், 16 நகரங்களில் துணைத் தலைவர்களாகவும் பார்ப்பனர் பதவி வகித்தனர்.

(Caste and Outcaste—by J. E. Sanjana, Bombay, 1946, pp 52–53.)

சமுதாயத்திலும், அரசியலிலும் காங்கிரஸ் ஆட்சியினால் இழைக்கப்பட்ட இக் கொடுமைகளை எதிர்த்து எவரும் போர்தொடுத்தாரல்லர்; பெரியாரவர்களே வன்மையாக எதிர்த்தார். அவற்றுள் தென்னாட்டிடையே கலக்கியதும், தமிழரிடையே ஒற்றுமை உணர்வையும் தமிழ் உணர்வையும் ஊட்டியதும் ஆகிய ஒன்று இந்தித் திணிப்பை எதிர்த்து பெரியார் தலைமையில் நடந்த மொழிப் போரேயாகும்.

ஆச்சாரியார், இந்தியாவிலேயே முதன் முதலாக, தென்னாட்டில் குறிப்பிட்ட சில பள்ளிகளில் இந்திமொழி கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என ஆணையிட்டார்.

இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பது இந்துமதக் கலாசாரத்திற்குத் தொடர்ந்து ஆக்கம் தரும் என்றும்; வடவரின் அரசியல் ஆதிக்கம் இங்கு நிலைபெற வழிவகுக்கும் என்றும் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி இந்தியைப் பெரியார் எதிர்த்தார்.

அன்னாரின் தலைமையை ஏற்றுப் பேராசிரியர்கள், புலவர்கள், மக்கள் தலைவர்கள், அரசியல் விழிப்புள்ளவர்கள், தமிழ்ப் பெருமக்கள், மாணவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் அணிவகுத்து இந்தியை எதிர்த்துக் களம் புகுந்தனர். அனைத்துத் தமிழரும் ஈடுபட்ட அப் பெருங் கிளர்ச்சியில் 3-6-1938 முதல் தொடர்ந்து பலர் கைதாயினர்; தாய் மார்கள், குழந்தைகள் உட்பட 1269 பேர் சிறைப்படுத்தப்பட்டனர். சிறைக் கொடுமையின் விளைவாகச் சிறையிலேயே 1939 சனவரியில் தாளமுத்து, நடராசன் ஆகிய இளைஞர்கள் உயிர்நீத்தனர்; தமிழகமே கொந்தளித்தது.

இந்தியை எதிர்த்துப் புறப்பட்ட தமிழர் பெரும்படை, தமிழகத்தில் எங்கும் உணர்ச்சித் தீயை மூட்டிக்கொண்டே சென்றது; 11-9-1938-ல் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையை முட்டிற்று. அப் பெரும் படையை அங்கு வரவேற்ற தமிழ்மக்கள் கடல் அலையோசையைப் புறங்காணும் தன்மையில், 'தமிழ் வாழ்க!'; 'இந்தி ஒழிக!' என முழக்கினர். அங்கேதான், முதன் முதலாகத் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற தனித் தமிழ்நாடு உரிமைக் குரலைப் பெரியார் எழுப்பினார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் தனிச் சுதந்தர நாடு கோரி முதலில் குரல் கொடுத்தவர் பெரியாரே ஆவார். இந்த முழக்கத்தின் தோற்றுவாய் அவரைப் பொறுத்த வரையில் 1930-லேயே அமைந்ததாகும். 1930 மே திங்களில் சேலத்தில் நடைபெற்ற 'வன்னியர் மாநாடு' என்ற நிகழ்ச்சியில், 'இந்தியா ஒரு நாடா?' என்ற வினாவைத் தொடுத்தார் (இந்நூல் பக்கம் 649). அப்போது கருக்கொண்ட எண்ணம்தான் படிப்படியாக வளர்ந்து 1938-ல் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என முகிழ்த்தது.

இது கண்டு அஞ்சிய பார்ப்பனர் இக் கோரிக்கையை எதிர்க்க முடியாத நிலையில்—இதனை இழித்துப் பேசமுந்தி, 'தமிழ்நாடு தமிழருக்கே'—'எலிவளை எலிகளுக்கே!' என எழுதத் தலைப்பட்டனர். இது தமிழர் நெஞ்சங்களில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல் ஆயிற்று.

வெந்த புண்ணில் வேல் பாய்ந்த சூழலில், 6-12-1938-ல் தந்தை பெரியார் இந்தி எதிர்ப்புக் காரணமாய் 2 ஆண்டு தண்டனையும் 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். பெரியார் பெல்லாரியில் சிறைவைக்கப்பட்டு, அச் சிறையில் நோய்ப்பட்டுத் துன்புறுவதை அறிந்த அனைத்துத் தமிழரும் உணர்ச்சிப் பிழம்புகளாயினர்.

பெரியார் சிறைக் காவலில் இருந்தபோதே 29-12-1938-ல் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 29, 30-12-1938 தேதிகளில் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டுக்கு அவர் தலைவராவார். சிறையிலிருந்த வண்ணம் அவர் அனுப்பி வைத்த தலைமை உரையினை சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் பார்-அட்-லா அவர்கள் உணர்ச்சி ததும்ப மாநாட்டினர் முன் வைத்தார். அந்தத் தலைமை உரையிலும் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற உரிமை முழக்கத்தினைப் பெரியார் கிளத்தினார்.

சிறையினின்று மீண்ட அவர், தென்னாட்டுத் திராவிடர் (தமிழர், கன்னடர், தெலுங்கர், கேரளர்) அனைவர்க்கும் சமுதாய விடுதலையும் அரசியல் உரிமையும் அளிக்கும் தன்மையில் 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற முழக்கத்தை இன அடிப்படையில் 1939-ல் எழுப்பினார் ('குடிஅரசு' 17-12-1939). இம் முழக்கம் வடவர் ஆதிக்கம் அடியோடு தகர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தைத் திராவிடர் நெஞ்சங்களில்—குறிப்பாகத் தமிழர் நெஞ்சங்களில் நிலைநாட்டிற்று.

இச் சூழ்நிலையில் 5-1-1940-ல் வடநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட பெரியார், 8-1-1940-ல் பம்பாயில் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப். முகமது அலி ஜின்னா அவர்களை அன்னாரது இல்லத்தில் சந்தித்தார்; அவரிடம் தாம் மேற்கொண்டுள்ள தனிநாடு தத்துவம் பற்றி விளக்கிக் கூறினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அச் சந்திப்பின்போது டாக்டர் பி. ஆர். அம்பேத்கார், பி. பாலசுப்ரமணியம், டி. ஏ. வி. நாதன் ஆகியோரும் உடனிருந்தனர். அச் சந்திப்புதான் 'அனைத்து இந்தியா—அல்லது ஒரே இந்தியா' என்ற தத்துவம் நொறுங்குவதற்கு மூலகாரணமாக அமைந்தது.

எவ்வாறெனின், 1940 பிப்ரவரி வரையில் இஸ்லாமிய கலாசாரப் பாதுகாப்பு இயக்கமாகவும்; இஸ்லாமியருக்கு அரசியல் பதவிகளிலும் உத்தியோகங்களிலும் விகிதாசாரப் பங்கு பெறும் அரசியல் கட்சியாகவும் விளங்கிய முஸ்லிம் லீக், 1940 மார்ச்சுத் திங்களில்தான், 'இஸ்லாமியர்களுக்குத் தனிநாடு வேண்டும்' எனக் கோரத் தீர்மானித்தது.

பிற்காலத்தில் இந்திய அரசியல் நிர்ணய சபையில் கூறப்பட்ட, இது தொடர்பான கீழ்க்கண்ட விவரம், இதனை ஒருவாறாக நமக்குப் புலப்படுத்துகிறது.

அதாவது: 'பாகிஸ்தான் என்பது குறித்து 1940 மார்ச்சில், முஸ்லிம் லீக் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்படுகிற வரையில், அந்த அரசியல் ஸ்தாபனமானது—இந்த நாட்டுக்கு ஒரு அரசியல் நிர்ணயசபை அமைக்கப் படுவதானது பொருத்தமானதும் தக்கதுமான ஒரு நடைமுறையாகும் என ஒப்புக் கொள்ளவில்லை. அவ்வாறு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், ஒருவகையில், முஸ்லிம் லீகின் போக்கில் ஒரு மாற்றம் விளைந்தது. அம் மாற்றம் அரசியல் நிர்ணயசபை வேண்டும் என்பதற்கு ஆதரவாக அமைந்தது; ஆயினும் தனி முஸ்லிம் நாடு என்பதாக—முஸ்லிம் லீகினர் கோரிய பிரதேசத்தைக் கொண்ட பகுதிக்கு ஒரு அரசியல் நிர்ணய சபையும், மீதிப் பிரதேசத்தைக் கொண்ட இந்தியாவுக்கு வேறொரு அரசியல் நிர்ணய சபையும் வேண்டும் என்றே முஸ்லிம் லீக் கோரியது' என்பதேயாம். [இந்திய அரசியல் நிர்ணயசபைத் தலைவர் டாக்டர் எஸ். சின்ஹாவின் துவக்க உரை, 9-12-1946; 'இந்திய அரசியல் சட்ட ஆவணங்கள்'—முன்ஷி தொகுப்பு, தொகுதி 2, பக்கம் 84; முதற் பதிப்பு (ஆங்கிலம்) 1967].

'But until the adoption of the resolution on Pakistan, in March 1940, by the Muslim League, that political organization had not favoured the

idea of a Constituent Assembly as a proper and suitable method for framing a Constitution for this country. After the adoption of that resolution, however, the attitude of the Muslim League seems to have undergone a change in favour of the idea of a Constituent Assembly, one for the areas claimed by the League for a separate Muslim State, and the other for the rest of India' (Inaugural address of the Chairman Dr. S. Sinha, on 9-12-1946, Indian Constituent Assembly—'Indian Constitutional Documents, Munshi Papers, Volume II, page 84, Edition 1967).

இதுகாறும் கண்டவாறு, 1925 முதல் 1938 வரையில் தமிழகமெங்கும் சுயமரியாதைச் சங்கம், சுயமரியாதை வாலிபர் சங்கம், பார்ப்பனரல்லாதார் சங்கம், பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் என்ற பெயர்களிலும்; சமதர்மச் சங்கம், உண்மை நாடுவோர் சங்கம், தாராள சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம், தமிழர் கழகம் என்ற பெயர்களிலும் ஆயிரக்கணக்கான சங்கங்கள் தோன்ற மூல காரணராக இருந்த பெரியார், 1939-க்குப் பின்னர், 'பார்ப்பனரல்லாதார்' என்ற பேரால் திராவிட இன மக்களைக் குறிப்பது பொருந்தாதது என்பதை எடுத்துக் காட்டினார்.

மிகச் சிறுபான்மையினராக உள்ள பார்ப்பனரைக் குறிப்பிட்டு, அவர்களை முன் வைத்து—மிகப் பெரும்பான்மையினராக உள்ள நம் இன மக்கட்குப் பெயரிடுவது அவமானம் என்பதை விளக்கினார்.

பார்ப்பனரல்லாதார் அமைப்புக்கு, 'திராவிடர் கழகம்' என்று பெயரிடுதல் இன உணர்வினை ஊட்டவல்லது என எடுத்தியம்பினார். ஆரியர்–திராவிடர்; பார்ப்பனர்–திராவிடர் என்ற தன்மையில் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் நோக்கும் பான்மையை வலியுறுத்தினார்.

இதன் விளைவாக 'திராவிடர்' என்ற இன உணர்வு முன்னிலும் தீவிரமாக சென்னை மாகாணம் முழுவதிலும் பரவலாயிற்று. 1941 முதல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பது போன்ற பெயர்களிலிருந்த அமைப்புகள், 'திராவிடர் கழகம்' எனப் பெயர்களை மாற்றி அமைக்கத் தலைப்பட்டன.

அதுசமயம், 13-2-1944-ல் சென்னையில் திரு. சி. என். அண்ணாதுரை தலைமையில் நீதிக் கட்சி மாநாடு நடந்தது. அம் மாநாட்டில், 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பதை—'சென்னை மாகாண திராவிடர் கட்சி' என்று மாற்றுமாறு, சேலத்தில் நடைபெறப்போகும் மாகாண மாநாட்டிற்கு இம் மாநாடு தெரிவித்துக்கொள்கிறது' என ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [தீர்மானம் 1; 'குடிஅரசு'—26-2-1944]

சேலத்தில் நடைபெறவிருந்த மாநாட்டின் மூலம் பெரியார் அவர்களின் தலைமையை மாற்றிவிடவேண்டும் என முக்கிய தலைவர்கள் பலரும் முயன்றனர். ஆயினும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சார்ந்த சுயமரியாதைத் தொண்டர்களும், மாகாணம் முழுவதிலுமிருந்து சென்ற இயக்கத்தினரும் சேலத்தில் பெரியாருக்குத் தோற்றுவிக்கப்பட இருந்த எதிர்ப்பைத் தூசாக ஊதிவிட்டனர்.

27-8-1944-ல் சேலத்தில் நடைபெற்ற அம் மாநாட்டில், 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயர் அதிகார பூர்வமாக, 'திராவிடர் கழகம்' என மாற்றப்பெற்றது. அத் தீர்மானம் 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயரிடப்பட்டது.

அச் சமயம் 27-12-1944-ல் கல்கத்தாவில் நடைபெற்ற திரு. எம். என். ராயின் ரேடிகல் டெமாக்ரடிக் கட்சி மாநாட்டிலும், 29-12-1944-ல் கான்பூரில் நடைபெற்ற பார்ப்பனரல்லாத பிற்பட்ட வகுப்பினர் மாநாட்டிலும் கலந்துகொண்டு வடநாட்டிலும் பிரசாரப் பணி புரிந்து, 1-1-1945-ல் தமிழகம் வந்தடைந்தார், பெரியார்.

29, 30-9-1945-ல் திருச்சியில் நடைபெற்ற மாகாண மாநாட்டில், சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் ஏற்கப்பட்டதுடன், மாகாண திராவிட விடுதலைப் படையாகக் 'கறுப்புச் சட்டைத் தொண்டர் படை' ஒன்று அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

அம் மாநாட்டிற்குப் பின்னர்தான் கறுப்பு—மையத்தில் சிவப்பு வட்டம் உள்ள கொடி உருவாக்கப்பட்டது. 'கொடி' பற்றிய விளக்கம் இங்குக் காணப்படுதல் நலந்தரும்.

சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் பல மாநாடுகளில் கொடி ஏற்றம் நடைபெற்றுள்ளது. ஆனால், அக் கொடியின் அமைப்பு குறித்து ஏதும் அறிய முடியவில்லை. இது வருந்தத்தக்கதேயாகும்.

17-2-1929-ல் செங்கற்பட்டு மாநாட்டில் 'சுயமரியாதைக் கொடி' என்ற பெயரால் ஏற்றப்பட்ட கொடி பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை இலட்சியமாகக் கொண்டதன்று; அது திரு. ஜெ. எஸ். கண்ணப்பரால் உருவகப்படுத்தப்பட்டது; ஆயினும் அந் நிகழ்ச்சியில் அது இடம் பெற்றது. இதனைப் பெரியார் எனக்கு உணர்த்தினார்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தராசுக் கொடி சமநீதிக் கோரிக்கையைக் குறிப்பதாகும். பெரியார் அவர்கள் 1938-ல் நீதிக் கட்சியின் தலைவரானவுடன் அதுவே நம் இயக்கக் கொடி ஆயிற்று.

'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்', திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்ற பின்னர் 1946-ல் உருவாக்கப்பட்டதே இன்றைய திராவிடர் கழகக் கொடியாகும். இக் கொடியின் அளவு மூன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் அமைந்தது; நடுவில் வட்டமான சிவப்பும், மீதிப் பாகம் முழுவதும் கறுப்புமாக அமைந்தது.

கறுப்பு—திராவிடரைக் கவ்வியுள்ள இழிவினைக் குறிப்பது; சிவப்பு—இழிவு நீங்கிப் புரட்சி மலருவதைக் குறிப்பது.

உலகப் புரட்சி இயக்கங்களுக்கு ஒப்பாகக் கொள்கைகள்—கொடி—தொண்டர் உடை முதலானவற்றை அமைத்து எழுச்சியுடன் திராவிடர் கழகம் செயல்பட முனைந்தது. தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் திராவிடர் கழக மாநாடுகள் நடத்தப்பெற்றன. திராவிட மாணவர் கழகம், திராவிட இளைஞர் கழகம், திராவிட நடிகர் கழகம் என்ற இனக் குறி கொண்ட பெயர்களில் நாடோறும் கிளைகள் முகிழ்த்தன.

அன்றியும், பெரியார் அவர்களின் இந்தி எதிர்ப்பின் பயனாக விளைந்த தமிழ் மொழி உணர்வு—ஆரிய மொழி, ஆரியர் எதிர்ப்பு உணர்வாகவும்; ஆரிய கலாச்சார எதிர்ப்பு, வட மொழி இசை எதிர்ப்பு, ஆரியக் கலைஞர்கள் எதிர்ப்பு உணர்வாகவும் பரிணமித்தது. ஆங்காங்கு தமிழர் கழகம், தமிழ் இசைச் சங்கம், தமிழர் ஆராய்ச்சிக் கழகம், தமிழர் நல்வாழ்க்கைக் கழகம் முதலியன விரைந்து தோன்றிச் செயல்பட்டன.

இத்துணை எழுச்சிக்கும் அடித்தளமாக அமைந்தது, சுமார் 20 ஆண்டு காலம் பெரியார் மேற்கொண்ட சுயமரியாதைப் பிரசாரத்தால் விளைந்த—ஆரிய எதிர்ப்பு, ஆரிய கலாச்சார அழிப்பு; மூடநம்பிக்கை ஒழிப்பு, சமுதாய இழிவுக்குக் காரணமான இழி வழக்கங்கள் ஆகியவற்றை அழித்தல்—முதலான தன்மான உணர்வு வளர்ச்சி எனும் செயற்கரும் செயலே ஆகும்.

இங்கு 1940-க்குப் பின் உருவான அரசியல் நிலையும் கருதத் தக்கதாகும்.

இரண்டாம் உலகப் போர் 1939 செப்டம்பர் 3-ல் மூண்டது. உலக நாடுகள் அச்சு நாடுகள், நேச நாடுகள் என இரு கூறாகப் பிரிந்தன. இந்தியாவில், பார்ப்பனரும்—இந்தியக் காங்கிரசாரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்து ஜப்பான் ஆட்சியையோ, ஜெர்மன் ஆட்சியையோ கொணர அல்லும் பகலும் முயன்றனர்.

6

சென்னை மாகாணத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சட்டம், சமூக இழிவு நீக்கச் சட்டங்கள் ஆகியவற்றைத் துணிவுடன் இயற்றிய நீதிக் கட்சியின் வலிவு ஓய்ந்து, திராவிடர் கழகமாக உருவாகிக்கொண்டிருந்த சமயம். இச் சமயத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பும், காங்கிரசின் சாதனைகள் கண்டனமும் பெரியாரின் இயக்கத்திற்கும், தலைமைக்கும் மகத்தான வலிவையும் பொலிவையும் ஊட்டின. ஆச்சாரியார் செல்லும் இடங்களில் வெளியில் அவர் தைரியமாக நடமாட முடியாத நிலையைத் தமிழ் மக்கள் உருவாக்கினர்.

ஏற்கனவே, நீதிக் கட்சியின் சாதனைகட்குப் பிரிட்டிஷ் ஆட்சி பெரிதும் துணை நின்றது. இதனைக் குறிப்பிட்டு, நீதிக் கட்சியினர் பிரிட்டிஷாரின் வால்பிடிப்பவர்கள் என்றும், காங்கிரஸ் கோரிய சுதந்தரத்திற்கு எதிர்ப்பானவர்கள் என்றும் கூறி வெறுப் பூட்டும் பிரசாரத்தில் காங்கிரஸ் ஈடுபட்டது.

இத்தகைய சூழல்களில் கணமேனும் ஆட்சியில் நீடிக்க இயலாத நிலைக்கு ஆச்சாரியார் ஆளானார்.

'உலகப் போரில், இந்திய மக்களின் அபிப்பிராயத்தைப் பெறாமலே இந்தியரை ஈடுபடுத்தியதாகக்' கூறி, காங்கிரஸ், இந்தியா முழுவதிலும் ஆட்சியைக் கைவிட்டு வெளியேறியது. இங்கும் ஆச்சாரியார், 27-10-1939-ல் பதவியை விட்டு விலகினார்.

'இனி இந்திப் போரை நிறுத்தி வையுங்கள்' என, 31-10-1939-ல் தமிழ்ப்பெரு மக்கட்குப் பெரியார் வேண்டுகோள் விடுத்தார்; போர் அன்றே நிறுத்திவைக்கப்பட்டது.

அன்றையப் பிரதான எதிர்க் கட்சித் தலைவர் பெரியார் அவர்களே ஆவார். அவரது வடநாட்டுப் பயணம் 1940 சனவரியில் முடிந்து திரும்பியவுடன், இந்தியை அகற்றக் கோரி அரசுக்குப் பல எச்சரிக்கைகள் விடுத்தார். 21-2-1940-ல், கவர்னர் ஆணையினால் கட்டாய இந்தி அகற்றப்பட்டது.

திராவிடர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். திரு. ஜின்னா போன்றோரும் பெரியாரைப் பாராட்டினர்.

பெரியாரவர்களின் பெருஞ் செல்வாக்கைக் கண்ட பிரிட்டிஷ் அரசு 1940-லும், 1942-லும்—இருமுறை கவர்னர் ஜெனரல்களையும், கவர்னர்களையும் அனுப்பி சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி அவரை வேண்டிற்று. ஆச்சாரியாரே நேரில் வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு பெரியாரைக் கேட்டுக் கொண்டார்.

எனினும், தாம் மேற்கொண்டுள்ள சமூக இழிவு ஒழிப்புப் பணிக்கு—பதவி ஏற்பு என்பது இடையூறாக அமையும் என்பதைக்கூறி, பதவியைப் பெரியார் புறக்கணித்து விட்டார்.

இந்தியாவெங்கும், காங்கிரஸ், பிரிட்டிஷாருக்குப் போருக்கான உதவிகள் செய்யக் கூடாது எனக்கூறிச் செயல்பட்டது. தென்னாட்டில் நீதிக் கட்சித் தலைவர் பெரியாரும், வடநாட்டில் ரேடிகல் டெமாக்ரடிக் கட்சித் தலைவர் அறிஞர் எம். என். ராய் ஆகியோரும் போர் ஆயத்தங்களில் பிரிட்டிஷாருக்கு மிக உதவியாக நின்றனர். திரு. எம். என். ராய் 1941 பிப்ரவரியில் சென்னையில் பெரியாரைச் சந்தித்து அகில இந்திய அளவில் காங்கிரசல்லாத கட்சிகளை ஒன்று திரட்ட முயற்சித்தார்.

இரண்டாம் உலகப் போரில் நாசிச இயக்கம் தோல்வி கண்டது.

உலகப் போர் துவக்கத்தில் பிரிட்டிஷார் தங்கள் காலனி நாடுகளுக்கு அளித்த வாக்குறுதியை மதித்து, காலனி நாடுகளை விட்டு வெளியேறுவதென, போர் முடிந்த பின்னர் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீர்மானித்தது; இந்தியாவை விட்டு வெளியேறவும் முடிவு செய்தது. அது சமயம் இந்தியப் பொதுத் தேர்தல், 1946-ல் நடந்து முடிந்திருந்தது.

அவ்வாறு பிரிட்டிஷார் வெளியேறுங்கால் தங்கள் தங்கள் நாடுகளை அவரவர் வசம் ஒப்படைக்க வேண்டுமெனக் காங்கிரசாரும், முஸ்லிம் லீக்கினரும், சீக்கியரும், பெரியாரும் கோரியிருந்தனர். ஏற்கனவே 1939-ல் பெரியார் அவர்கள் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை நேரில் சந்தித்து, திராவிட நாடு பிரிவினையை வலியுறுத்தி யிருந்தார்.

ஆயினும், பிரிட்டிஷார் 1935ஆம் ஆண்டைய இந்திய அரசு ஆக்ட்டின் அடிப் படையில் இந்திய மக்களை: (1) சாதி இந்துக்கள் (2) இஸ்லாமியர்கள் (3) சீக்கியர்கள் (4) தாழ்த்தப்பட்டவர்கள் (5) அய்ரோப்பியர் என்ற பிரிவுகளின்படியே அரசியல் காரியங் களுக்கு ஒப்புக்கொள்வதாக அறிவித்தனர். இதனை லார்ட் வேவல் 14-6-1945-ல் வானொலிப் பேச்சில் வெளிப்படையாக அறிவித்தார்.

இறுதியில், இந்தியாவை மத அடிப்படையில் இந்துக்கள் நாடு, முஸ்லிம்கள் நாடு எனக்கொண்டு—இந்தியாவின் பெரும்பகுதியை, 'இந்துக்கள் நாடு' எனக் கொள்ளத்தக்க வண்ணம் காங்கிரசார் வசம் ஒப்படைத்துவிட்டு வெள்ளையர் வெளியேறினர். இங்கு பெரியாருக்கு வெள்ளையர் அளித்திருந்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறிவிட்டனர் என்பது கண்கூடு.

வெள்ளையர் 15-8-1947-ல் வெளியேறினர். ஆயினும் அவர்கள் விடுதலைப் பிரகடனம் அளிப்பதற்கு வெகு நாட்கட்கு முன்னரே, 1946 டிசம்பர் 9 அன்றே—'இந்திய அரசியல் நிர்ணயசபை' என்ற பேரால்—ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டு பொறுக்கி எடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு, அரசியல் சட்டம் இயற்றக் காங்கிரசார் தலைப்பட்டனர்.

அந்த ஏற்பாடு மோசடியானது என உணர்ந்த பெரியார் 1946 முதலே அதனை வன்மையாக எதிர்த்து வந்தார். அன்றியும், 'வெள்ளையர் வெளியேறிய நாள்—திராவிட ருக்கு விடுதலை நாள் அல்லவென்றும், துக்கநாளே ஆகும் என்றும்; வெள்ளிப் பூண் பூட்டிய பழைய அடிமை விலங்கு மாற்றப்பட்டு, தங்கப் பூண் பூட்டிய புது விலங்கு பூட்டப் பட்ட நாளே அதுவாகும்' என்றும் விளக்கிக் கூறி, '15-8-1947—திராவிடருக்குத் துக்க நாள்' என அறிக்கை விடுத்தார்.

இதன் விளைவாக, திராவிடர் இயக்கத்தில் ஒரு சலசலப்புத் தோன்றியது. இதன் பின்னணியைச் சிறிது காண்பது நலம்.

திராவிடர் இயக்கம் 1940 ஆகஸ்டில் திருவாரூரில் நடைபெற்ற மாகாண 15-வது ஜஸ்டிஸ் மாநாட்டுக்குப் பின்னர், 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற கோரிக்கையை மிகத் தீவிரமாகப் பரப்பி வந்தது.

1944 சேலம் மாநாடு, 1945 திருச்சி மாநாடுகளுக்குப் பின்னர் 'திராவிடர் கழகம்'; 'கறுஞ் சட்டைத் தொண்டர் படை' இவை அபரிமிதமான செல்வாக்குப் பெற்றன.

11-5-1946-ல் மதுரையில் நடைபெற்ற கறுஞ் சட்டைப் படை மாநாட்டின் பந்தல் எதிரிகளின் தீயிடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது; அக் கோர நிகழ்ச்சி திராவிடர் கழகத் தாரிடையே ஒரு புத்துணர்ச்சியைத் தோற்றுவித்தது.

அடுத்து, கடலூரில் நடைபெற்ற 'திராவிடர் மாநாடு' அனைத்துத் திராவிடர்க்கும் நாட்டுப் பிரிவினையில் ஒரு பேரார்வத்தை ஊட்டியது.

இத் தகைய பெருஞ் செல்வாக்குடன் இயக்கம் வளர்ந்த நிலையில், 1944 முதல் பெரியா ரிடம் கருத்து வேறுபாடு கொண்ட திரு. சி. என். அண்ணாதுரை, 1947 ஆகஸ்டில் வெள்ளையர் வெளியேறிய பிரச்சினை குறித்து—பெரியார் தலைவர் என்ற முறையில் எடுத்த முடிவுக்கு மாறாகக் கருத்து வெளியிட்டார். இதனால் கழகத்தவரிடையே தோன்றிய சலசலப்பு பெரியாரின் நிலைக்கு எந்தக் கேட்டையும் விளைக்கவில்லை.

பின்னர் 8, 9-5-1948-ல் தூத்துக்குடியில் நடைபெற்ற மாகாண மாநாடு இயக்க வரலாற்றில் என்றுமே நடந்திராத—மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்த மாபெரும் நிகழ்ச்சியாகத் திகழ்ந்து, காங்கிரஸ் திராவிடரிடையே ஒரு கலக்கத்தையும், பொது மக்களிடையே பெருவிழிப்பையும் உண்டாக்கியது.

இம் மாநாட்டுக்கு முன்னர் 2-3-1948-ல் கறுஞ் சட்டைத் தொண்டர் படையை அரசு தடைசெய்தது; நூற்றுக்கணக்கான ஊர்களில் கழகப் பணிமனைகள் சோதனையிடப் பட்டன; கழகப் பொறுப்பாளர்கள் வீடுகள் சோதனைக்குள்ளாயின.

'சுதந்தரம் வந்தது' என்ற பேரால், 1948-ல் காங்கிரஸ் ஆட்சி இந்தியை மீண்டும் திணித்தது. இதனை எதிர்க்கும் வகையில், 144 தடை உத்தரவைமீறி, கும்பகோணத்தில், திரு. சி. என். அண்ணாதுரையை முதல் தளபதியாகக் கொண்டு பெருங் கிளர்ச்சியைப் பெரியார் நடத்தினார்.

ஈரோட்டில் 1949-ல் நடைபெற்ற மாநாடு, திரு. சி. என். அண்ணாதுரை கலந்து கொண்ட முக்கிய மாநாடாகும்.

மேற்கண்ட மாநாட்டு நிகழ்ச்சிகள், அரசின் அடக்கு முறைகள், எதிரிகளின் நாச வேலைகள் இவை அத்துணையும் திராவிடரிடையே—குறிப்பாகக் கழகத்தாரிடையே வலுவான இன உணர்ச்சியையும், நாட்டுப் பிரிவினை எண்ணத்தையும், காங்கிரஸ் எதிர்ப்பு உணர்ச்சியையும் நிலைப்படுத்தி உச்சக் கட்டத்தில் கொண்டு நிறுத்தியிருந்தன.

இன உணர்வினை முழு அளவில் ஊட்டவிரும்பிய பெரியார்—அவ்வக் காலக் கட்டங்களில் அதற்கெனச் சில உத்திகளைக் கையாண்டார்.

சங்க காலந்தொட்டுப் புலவர்களின் சொத்தாக இருந்த திருக்குறள் நூலைப் பாமர மக்கள் பார்வையில் கொணர்ந்து நிறுத்தினார்.

இராமாயணம், பாரதம், கீதை முதலிய இதிகாசங்களைப் போற்றிய தமிழ்மக்கள் அவற்றைப் புறக்கணிக்க ஏதுவாக—1927 முதலே எழுத்து வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் புத்தர் கொள்கைகளையும், திருக்குறளையும் மக்கள் முன் வைத்த அவர், 1948-ல் திருக்குறள் மாநாடு கூட்டினார்; 'திருக்குறள் நாள்' கொண்டாடச் செய்தார். தமிழ் மக்களை ஆரியப் பிடிப்பிலிருந்து விடுவிக்க அவர் கையாண்ட உத்திகள் பலவாம்; அவற்றுள் இதுவும் ஒன்றாகும்.

இதன் விளைவாகத் தமிழகப் பள்ளிகளிலும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும், நூல்களிலும் 'திருக்குறள்' சிறந்த செல்வாக்குப் பெற்றது; ஆரிய இதிகாச நூல்கள் ஓரளவு வெறுத்து ஒதுக்கப்பட்டன.

இவ்வாறாக, 1938-க்கும் 1948-க்கும் இடைப்பட்ட அந்தப் பத்தாண்டுகளில் ஓங்கி வளர்ந்த இன உணர்ச்சி—நாட்டுப் பிரிவினை உணர்ச்சி—ஆரிய எதிர்ப்புணர்வு—வடமொழி எதிர்ப்புணர்ச்சி—வடவர் ஆதிக்க எதிர்ப்பு உணர்வு முதலான இவை திராவிட இளைஞர்களிடையே நன்கு வேரூன்றி நின்றன.

இந்நிலையில், இயக்கப் பாதுகாப்புக்கு ஒரு ஏற்பாடு செய்கிற முறையில், 9-7-1949-ல், திரு. மணியம்மையை, பெரியார் திருமணம் செய்து கொண்டார். இச் சம்பவத்தை முன்னிறுத்தி இயக்கத்தின் முன்னணித் தோழர்களைத் துணையாகக்கொண்டு, திரு. சி. என். அண்ணாதுரை 17-9-1949-ல், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற ஓர் தனி அமைப்பை ஏற்படுத்தினார். அவ் அமைப்பு பிற்காலத்தில் தேர்தலில் ஈடுபாடு கொண்டு, தமிழக ஆட்சியைக் கைக்கொண்டது; இன்று ஆட்சிப் பொறுப்பில் உள்ளது.

பெரியார் அவர்கள் தம் திருமணம் பற்றிய நிலையை விளக்கி 19-6-1949, 28-6-1949 தேதிகளிலும்; பின்னர் 2-7-1949, 31-7-1949, 1-8-1949, 5-8-1949, 18-9-1949 தேதிகளிலும்

'விடுதலை', 'குடிஅரசு' ஏடுகளில் அறிக்கைகளிட்டார்; இயக்கம் பாதுகாப்புடன் தொடர்ந்து பணியாற்றியது. தம்மால் நிறுவப்பட்ட சுயமரியாதை இயக்கத்தைப் பதிவு செய்யப் பல தடவைகள் விரும்பி முயற்சித்த பெரியார், 27-1-1945 'குடிஅரசு' மலரில் அதற்கான விவரங்களை அறிவித்தார். பின்னர் 23-9-1952-ல், 'பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம்' (Periyar Self-respect Propaganda Institution) எனப் பெயர் தந்து, அந் நிறுவனத்திற்கு முறைப்படி பொதுக் குழு, நிர்வாக சபை அங்கத்தினர்கள், டிரஸ்டிகள் என்ற அங்கங்களை அமைத்து, திருச்சியில் பதிவு செய்தார். இவை நிற்க.

இனி முன்னர்ச் சுட்டப்பட்ட இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் பற்றியும், அதற்குத் தந்தை பெரியாரின் எதிர்ப்பு குறித்தும் தொடர்ந்து காண்போம். 1946-ல் செயல்படத் துவங்கிய அரசியல் நிர்ணய சபை அமைப்பையும், அதனால் உருவாக்கப்பட்ட சட்டங் களையும் நியாய பூர்வமான பல காரணங்களைக் காட்டிப் பெரியார் எதிர்த்தார். அவற்றுள் மிக முதன்மையான காரணம் ஒன்றுண்டு.

அதாவது, 'இந்தியா சுதந்தரம் பெற்றவுடன், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளித்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டு—வெளியார் தலையீடின்றி, சுதந்தர இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கப் படும்' என இந்திய காங்கிரஸ் 1936 முதல் அதிகார பூர்வமாகக் கூறி வந்தது. திரு. ஜவஹர்லால் நேரு இந்த உறுதி மொழியைப் பல தடவைகள் கூறியுள்ளார்.

இதனைப் பின்வரும் சான்று உறுதிப்படுத்தும். அரசியல் நிர்ணயசபையைத் துவக்கிவைத்து 9-12-1946-ல் உரையாற்றிய சபைத் தலைவர் டாக்டர் எஸ். சின்ஹா குறிப்பிட்டுள்ளவாறு அதனை இங்குக் காண்போம்.

அச் சான்றாவது: 'முன்னர் நான் எடுத்துக்காட்டியுள்ள அத் தீர்மானங்களில், (1939 நவம்பரில் காங்கிரஸ் செயற்குழு நிறைவேற்றியதும், 1936-ல் பைஸ்பூர் காங்கிரஸ் மாநாடு நிறைவேற்றியதும்)—அரசியல் நிர்ணய சபையானது, வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளித்து அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் என (காங்கிரஸ்) பிரகடனம் செய்துள்ளது.' என்பதாகும்.

'I may add that in the resolutions from which I have quoted above (those adopted at the Congress Working Committee of November 1939, and at the Faizpur Session of the Congress of 1936) it was declared that the Constituent Assembly should be elected on the basis of adult suffrage.'

(Inaugural address of the Chairman Dr. S. Sinha, in the Constituent Assembly—Indian Constitutional Documents, Volume II, Page 84).

அவ்வாறு ஏற்கனவே காங்கிரசினால் அளிக்கப்பட்டிருந்த வாக்குறுதி முதல் கட்டத்தி லேயே மீறப்பட்டது. அன்றியும், இந்தியாவில் 100-க்கு 10 பேர்களுக்கே வாக்களிக்கப்பட் டிருந்த காலத்தில்—1945-46-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு, 1946 டிசம்பரி லேயே அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியது பெரிய அரசியல் மோசடியாகும் என்பதைப் பெரியார் எடுத்துக் காட்டினார்.

'அத் தன்மையில் உருவாக்கப்படும் அரசியல் சட்டம் திராவிட மக்களைக் கட்டுப் படுத்தாது' என அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார், பெரியார்.

மேற்காட்டிய தன்மையில் சுமார் 1082 நாட்களில் உருவாக்கப்பட்ட அச் சட்டத்தை ஒவ்வொரு நாளும் எதிர்த்தவர்—இந்தியா முழுவதிலும் பெரியார் ஒருவரேயாவார்.

அச் சட்டம் செய்து முடிக்கப்பட்டு 26-11-1949-ல் நிறைவேற்றப்பட்டது; 26-1-1950-ல் அது அமுலுக்கு வந்தது. அச் சட்டம் மோசடியானது எனவும், திராவிடர்க்குக் கேடு

சூழ்வது எனவும் பெரியார் 1946-லேயே எடுத்துக் காட்டியவண்ணம்—1950 ஜூனிலேயே அம் மோசடித்தன்மை தானே வெளிப்பட்டது.

1950 ஜூனில் சென்னை மாகாணத்தில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிச் சேர்க்கைகளில் இடம் பெறாத இருவர், சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். சென்னை உயர் நீதி மன்றம், 'சென்னை மாகாண அரசு அமுல்படுத்தி வரும் வகுப்புவாரி உத்தரவு இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது' என 1950 ஜூலையில் தீர்ப்பு வழங்கியது.

1921-ல் உருவாக்கப்பட்டு, 1922, 1924-ல் உறுதி செய்யப்பட்டு, 1929 முதல் சென்னை மாகாணக் கல்வித் துறையிலும், உத்தியோகத் துறையிலும் அமுலில் இருந்த வகுப்புவாரி உத்தரவு—அந்த ஒரு தீர்ப்பின் மூலம் செல்லாததாக ஆக்கப்பட்டது.

திராவிடரின் உரிமைச் சாசனமான கம்யூனல் ஜி. ஓ. செல்லாது என்ற அத் தீர்ப்பை, பெரியார் வன்மையாக எதிர்த்தார்; சென்னை மாகாண ஆட்சியும் எதிர்த்தது. அத் தீர்ப்பை எதிர்த்து ஆட்சித் தரப்பில், டில்லி சுப்ரீம் கோர்ட்டுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான வழக்கில்—அரசியல் சட்ட வரைவுக் குழுவினருள் ஒருவராக இருந்த சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்ற தென்னாட்டுப் பார்ப்பனர், சென்னை மாகாண அரசுத் தரப்புக்கு எதிராக, மனுதார் சார்பில் நின்று, அரசியல் சட்டப்படி வகுப்புரிமை உத்தரவு செல்லாது என வாதாடினார். அன்றியும், அவரால் பாதுகாக்கப் பட்ட இருவருள் ஒருவர், எழுத்து மூலமாக சென்னை அய்க்கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய வில்லை என்ற பெரிய மோசடி, பின்னர் சுப்ரீம் கோர்ட்டில், மாகாண ஆட்சித் தரப்பினரால் எடுத்துக் காட்டப்பட்டது.

பார்ப்பனரின் சூது மதியை விளக்க இவை போதிய சான்றுகளாம்.

எனவே, இக் கேடுகள் அத்துணையையும் எதிர்த்து, '14-8-1950-ல் நாடெங்கும் வகுப்புரிமை நாள் கொண்டாடுக!' என 8-8-1950-ல் வேண்டுகோள் விடுத்தார், பெரியார்.

பெரியாரின் வேண்டுகோளை ஏற்றுத் தமிழகமே திரண்டெழுந்தது. மாணவர்களும், பொது மக்களும்—கட்சிச் சார்பின்றி, 'அரசியல் சட்டம் ஒழிக'!; 'வகுப்புரிமை வேண்டும்!' என நாடெங்கும்—ஊர்தோறும் முழங்கினர்.

டில்லி சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பும் வகுப்புரிமைக்கு எதிராக அமைந்தது. அதனைத் துணையாகக் கொண்டு, 'வகுப்புவாரி உத்தரவை அமுல்படுத்துவது அரசியல் சட்டத்திற்கு முரணானது ஆதலின், அதனை நடைமுறைப் படுத்தக்கூடாது' என, மத்திய அரசு, 1950 செப்டம்பரில், மாகாண அரசுகளுக்குச் சுற்றறிக்கை விடுத்தது.

இப் பெருங் கேடு இழைக்கப்பட்ட நிலையில் பெரியார் மேலும் வீறுகொண்டு, '14-12-1950 அன்று வகுப்புரிமை நாள் கொண்டாடுக!' என 14-11-1950-ல் வேண்டுகோள் விடுத்தார். பார்ப்பனரல்லாதார் அனைவரும்—குறிப்பாக இளைஞர்கள் பெரியாருக்கு ஆதரவாகப் போர்க் கொடி உயர்த்தினர்.

அனைத்துக் கட்சித் திராவிடர்களையும் அழைத்து, திருச்சியில், 3-12-1950-ல் 'வகுப்புரிமை மாநாடு' ஒன்றைப் பெரிய அளவில் நடத்திப் பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினார்.

வடநாட்டார் ஆதிக்கத்தை வீழ்த்தும் வகையில் வடநாட்டார் உணவுக் கடை, துணிக் கடை முன் மறியல் நடத்தி, வடநாட்டார் சுரண்டலைத் தடுக்க வேண்டுமென 1950 அக்டோபரில் அறிவித்தார். மத்திய அமைச்சர்கள் சென்னை மாகாணத்திற்கு வரும்போது கறுப்புக் கொடி காட்டி நம் வெறுப்பை உணர்த்தவேண்டும் எனக் கோரினார்.

அதுசமயம் தென்னாட்டுக்கு வந்த திரு. சர்தார் வல்லபாய் படேல் இங்கிருந்த கொந்தளிப்பைக் குறித்துத் தக்கார் மூலம் அறிந்து, தாமும் ஒரு பார்ப்பனரல்லாதார் என்பதை நினைவு கூர்ந்து, மத்திய அமைச்சரவையிலும், பாராளுமன்றத்திலும் பெரியாரின் கோரிக்கைக்கு வலுவுண்டாக்கி, இந்திய அரசியல் சட்டத்தின் விதி 15-ல், 4-வது உட்பிரிவாக ஒரு புதுப் பிரிவைத் திருத்தமாகக் கொணரச் செய்தார்.

அத் திருத்தமாவது :

விதி (15) (4) : 'குடி மக்களுள் சமூகத்திலும் கல்வியிலும் பின் தங்கியுள்ள எந்த வகுப்பினருக்கும்; அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங் குடியினருக்கும் அவர்களின் முன்னேற்றங் கருதி அரசு எந்தத் தனி ஏற்பாட்டினைச் செய்வதையும் இந்த விதியின் ஒரு பிரிவோ அல்லது விதி 29-ன் 2ஆவது உட்பிரிவோ தடை செய்யாது' என்பதாகும்.

Article (15) (4): Nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled castes and the Scheduled tribes.

(Added by the Constitution First Amendment Act, 1951, s. 2; The Constitution of India, page 8, 1-3-1963 Edition)

இந்திய அரசியல் சட்டம் அமுல் செய்யப்பட்ட ஓராண்டு காலத்தில், 1951 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திருத்தமே—அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட முதல் திருத்தம் ஆகும் என்பது இங்கு நினைவில் வைக்கத்தக்கது.

பெரியார் குவித்த இப் பெரு வெற்றிக்குப் பின்னர், வயது வந்தோருக்கு வாக்களித்து நடந்த முதல் பொதுத் தேர்தல், இந்தியாவில், 1952-ல் நடைபெற்றது.

தென்னாடு முழுதும் தந்தை பெரியாரின் அணியில் நின்று காங்கிரசை எதிர்த்தது. காங்கிரசை எதிர்த்த கட்சிகள், அய்க்கிய முன்னணி என்ற ஓர் அமைப்பை 21-10-1951-ல் தோற்றுவித்துச் செயல்பட்டன. சென்னை மாகாணத்திற்குரிய 375 சட்டசபை இடங்களில், காங்கிரசல்லாதார் 223 இடங்களையும், காங்கிரசார் 152 இடங்களையும் பெற்றனர்.

எனினும், பெரியாரின் வகுப்புரிமைக் கொள்கையை அமுல் படுத்துவது பற்றி, அய்க்கிய முன்னணியினரிடையே கருத்து வேறுபாடு உண்டானமையால், காங்கிரசல்லாதார் பிரிவினைப்பட்டனர். இப் பிரச்சினையில் இந்த நாட்டுப் பொதுவுடைமைக் கட்சியினரே பெருங்கேடு சூழ்ந்தனர்; அவர்கள் வேளாண்மைத் தொழிலாளரிடையேயும் தவறான செயல்முறைகளைப் புகுத்தி நாட்டின் அமைதிக்குக் கேடு தேடினர்.

இச் சூழ்நிலையில் ஆச்சாரியார் தலைமையில் சிறுபான்மையான காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தது.

1952-ல் ஆட்சிக்கு வந்த ஆச்சாரியார்—1938-ல் செய்தது போன்றே, திராவிடரின் கல்வித்துறை வளர்ச்சியைப் பாழ்படுத்தும் வண்ணம் 6000 கிராமப் புறப் பள்ளிகளை மூடினார். மீதியிருந்த பள்ளிகளில் அரைநேரம் படிப்பு கற்பிக்கவேண்டுமெனவும்; மீதி அரைநேரம் அவரவர் சாதித் தொழிலைச் செய்யும் வண்ணம் ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டுமெனவும் ஆணையிட்டார்.

தமிழகமெங்கும்—கட்சி வேறுபாடு கருதாமல் மக்கள் தலைவர்களும், ஆடவரும், பெண்டிரும் அந்த அரைநேர—குலக் கல்வித் திட்டத்தை ஒழிக்கக் கொதித்தெழுமாறு செய்தார், பெரியார். அக் கல்வித் திட்டத்தைக் காமராசரும் எதிர்த்தார்; பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் ஏடுகளும் எதிர்த்தன.

ஊர்தோறும் கண்டனக் கூட்டங்கள் ; வட்டந்தோறும் எதிர்ப்பு மாநாடுகள் ; ஏடுகள் அனைத்திலும் கண்டனக் கணைகள் என நாடே ஒரு முகமாக ஆச்சாரியார் ஆட்சியை எதிர்த்து நின்றது ; அவரது கல்வித் திட்டத்தைக் கைவிடக் கோரி சட்டமன்றம் தீர்மானித்தது ; ஆச்சாரியார் எதற்கும் அசைந்தாரல்லர்.

சேலம் ஆத்தூரில் 10-10-1953, 11-10-1953-ல் நடைபெற்ற கழக மாநாடுகளில், 'கழக ஆண், பெண் அனைவரும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள்!' என வேண்டுகோள் விடுத்து, தீர்மானம் அறிவித்தார், பெரியார்.

எதற்கும் அஞ்சாத பார்ப்பனர் அம்முடிவு கண்டு அஞ்சினர்; ஆச்சாரியாரைத் தஞ்சம் புகுந்தனர்; அரைநேரக் குலக் கல்வியை ஒழித்தாவது தங்களை அபயம் காக்கும்படி அவரை வேண்டினர்.

தம் இன மக்கள் கலங்கி நின்றதைக் கண்ட ஆச்சாரியார், 1939-ல் வெளியேறியது போன்றே, 'உடல் நலமில்லை' எனப் போலிக் காரணங்காட்டி 1954 மார்ச்சில் வெளியேறினார். பார்ப்பனர் தோற்றனர்; திராவிடர் வென்றனர். திராவிடர் பெற்ற வெற்றி நிலைத்த வெற்றியாக ஆக்கப்பட வேண்டுமெனப் பெரியார் முடிவெடுத்தார்.

ஆச்சாரியார் தம் சார்புள்ளவரையே முதலமைச்சராக்க முயன்றார். அதை அனுமதிக்க விரும்பாத திரு. கு. காமராசர், பெரியாரை அணுகினார் ; தம் விருப்பத்தைத் தெரிவித்தார் ; கல்வியிலும், அரசியல் பதவிகள் உத்தியோகங்களிலும் வகுப்புரிமையை அமுல்படுத்தத் தாம் விருப்பப்படுவதாகக் கூறினார்; சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக அவர் ஆவதற்கு முன்னரே இந்த நிலைமை ஏற்பட்டது.

எனவே, தம் வாழ்நாளில் 25-11-1925 முதல் 12-4-1954 வரை சுமார் 29 ஆண்டு காலம் முழு மூச்சாகக் காங்கிரசை எதிர்த்த தந்தை பெரியார், காமராசரின் விருப்பத்தை மதித்து, அவருடைய ஆட்சிக்கு ஆதரவு அளிப்பதாக, அவர் பதவியேற்ற 13-4-1954-ல் பேரம்ப லூரில், (என் தலைமையில் நடைபெற்ற) கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாட்டில் முதன் முதலாக அறிவித்தார்.

காஞ்சிபுரத்தில் 1925-ல் புறக்கணிக்கப்பட்ட பெரியாரின் தீர்மானம்—13-4-1954-ல் காங்கிரசினால் வலுவில் ஏற்றுக் கொள்ளப்படலாயிற்று. வகுப்புரிமைக் கோரிக்கையில் பெரியார் வென்றார் ; காங்கிரஸ் பணிந்தது.

இங்கு இன்னொரு விவரம் காணப்படவேண்டியதாகும்.

1952 பொதுத் தேர்தலில் அபரிமிதமான செல்வாக்குப்பெற்று மத்திய ஆட்சியை அமைத்த காங்கிரஸ், இந்தி மொழியைத் தென்னாட்டில் பரப்புவதில் முனைப்புக் காட்டியது. இரயில்வே நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள் போன்ற மத்திய அரசு அலுவலகங்களில் பெயர்ப் பலகைகளில் இந்திக்கு முதலிடம் தரப்பட்டது.

இக் கேட்டினை, மக்கட்கு விளக்கும் வண்ணம் 1952 ஆகஸ்டு 1, 1953 ஆகஸ்டு 1, 1954 ஆகஸ்டு 1 ஆகிய மூன்று தடவைகளிலும் தமிழகமெங்கும் உள்ள இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில் உள்ள இந்திப் பெயரைத் தார்கொண்டு அழிக்கும் கிளர்ச்சியினைப் பெரியார் நடத்தினார். ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான கறுஞ்சட்டை வீரர்கள் அமைதியான முறையில் இக் கிளர்ச்சியினை மேற்கொண்டு, தென்னாட்டு.மக்கட்கு இந்தி ஆதிக்கத்தின் கொடுமையை விளக்கினர். இக் கிளர்ச்சியினைப் பலம் பெறாமல் தடுக்கும் வண்ணம்—1952, 1953-ல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆச்சாரியார் விடலானார் ; 1954-ல் காமராசரும் அவ்வாறே விடுத்தார்.

1953இல் தமிழகத்தின் முக்கிய தலைநகரங்களில் பிள்ளையார் உருவப் பொம்மை உடைப்புக் கிளர்ச்சியினையும் பெரியார் மேற்கொண்டார். இக் கிளர்ச்சிக்கு விளம்பரம்

வரக்கூடாது எனக் கருதி, அப்போதும் நடவடிக்கை ஏதும் தேவை இல்லை எனக் கூறி விட்டு, வாளாவிருந்தார் ஆச்சாரியார்.

இப் பெருங் கிளர்ச்சிகளுக்கிடையே—இந்தி ஆதிக்கத்தையும், வடவரின் ஆதிக்கத் தையும் ஒருசேர எதிர்க்கும் தன்மையில்—இந்த ஆதிக்கங்களுக்கு ஆதாரமான 'இந்திய அரசியல் சட்டத்தை எரிப்பேன்' என 1952-லேயே பெரியார் அறிவித்தார் ('விடுதலை' 7–8–1952, 10–8–1952). கல்லூரி காணாத அப் பெருந்தகை முழக்கிய அக் கோட்பாட்டை— அதே தன்மையில் 1953-ல் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் முழங்கினார்.

'அரசியல் சட்டத்தைக் கொளுத்தவும், நான் முதன்மையானவனாக இருப்பேன்' என 3–9–1953-ல், டில்லி ராஜ்ய சபையில் டாக்டர் அம்பேத்கார் அறிவித்தார். இந்திய அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்து, அரசியல் சட்டத்தை உருவாக்கிய முக்கிய கர்த்தாவான டாக்டர் அம்பேத்கார் போன்ற மேதைகட்கும் முன்னோடியாக இத் துறையில் தந்தை பெரியார் விளங்கினார் எனின்—அவர்தம் சிந்தனை எத்துணைத் தூர நோக்கம் வாய்ந்தது என்பது நாம் அறியத்தக்கது. இவை இருக்க.

1954-ல் ஆட்சிக்கு வந்த காமராசர் 18–5–1954-ல் அரை நேரக் குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தார். தமிழர்கட்குக் கல்வித் துறையிலும் உத்தியோகத் துறையிலும் வகுப்புரிமை செம்மையாக அமுல்படுமாறு காத்து வந்தார். தமிழகம், கல்வித் துறையில் என்றுமில்லாத வேகத்தில் முன்னேற்றம் கண்டது.

முன்னர்ச் சுட்டப்பட்டவாறு, இந் நாட்டுப் பொதுவுடைமைக்காரர்களின் தவறான போக்கினால் இங்கு விளையக்கூடிய கேடுகளைக் களைய இரண்டு முக்கிய முடிவுகளைப் பெரியார் மேற்கொண்டார்.

இங்கு தொழிலாளர்கள்—விவசாயிகள் எனப்படுவோர் திராவிடரே என்பதை எடுத்துக்காட்டி—ஆதலின் எல்லாத் துறைகளிலும் 'திராவிட ஸ்தாபனங்களே' அமைய வேண்டும் என அறிவித்தார். 1952-ல் தமிழக மெங்கணும் திராவிட விவசாயிகள் சங்கம், திராவிட விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் எனஅமைத்தார். இவை வெறும் போட்டி அமைப்புகளாக இல்லாமல் உரிமை கோரும் அமைப்புகளாகச் செயல்பட்டன.

அவர்தம் இலட்சியமான, 'தொழிலாளிகட்குக் கூலி உயர்வு என்பது, தொழிலாளி என்ற இழிவை நிலைக்கச் செய்வதே ஆகும். விவசாயத் தொழிலாளிகள்—விவசாயத்தில் பங்குதாரர்களாக ஆக்கப்பட வேண்டும்' என்பதைக் கொள்கையாக அறிவித்தார். அவ் வாறு உரிமை வழங்கிச் சட்டங்களை இயற்றுமாறு அரசை வற்புறுத்தினார். அதன் விளைவாக, 'விவசாயத்தில், கண்டுமுதலில் விவசாயத் தொழிலாளிக்கு 60 பங்கும், நில உரிமையாளருக்கு 40 பங்கும் உரிமையாகும் எனவும்; விவசாயத் தொழிலாளியைக் காரணமின்றி நில உடைமையாளர் வெளியேற்றல்கூடாது' எனவும் சட்டம் இயற்றப்படக் காரணராக விளங்கினார்.

அதேபோல், மத்திய அரசுத் துறையிலும், இரயில்வே தொழிலாளர்களை இன அடிப்படையில் ஒன்று திரட்டி, 'தென் பகுதி இரயில்வே மென் யூனியன்' (Southern Railway Men Union) என்ற அமைப்பை உருவாக்கி, அத் துறையிலிருந்த சுய மரியாதைக்காரர்களும், ஏனையத் திராவிடரும் ஒன்றுபட வழிவகுத்தார். இந்த இரு அமைப்புகளின் மூலம், தமிழகத்தில் தொழிலாளரிடையே பொதுவுடைமைக்காரருக்கு இருந்த செல்வாக்கு இடுப்பொடியும் அளவுக்குச் சரிந்தது.

இரண்டாவதாக 1954-ல் நடைபெற்ற மாவட்ட மன்றத் தேர்தலில், 'வகுப்புரிமைக்கு எதிரானவர்களை திராவிடர் கழகம் ஆதரிக்காது' என்ற தீர்மானத்தைக் கழகத்தினருக்கு அறிவுரையாக விதித்து (பெரம்பலூர் மாநாடு 13–4–1954), அதனால் பொதுவுடைமையினர் புறக்கணிக்கப்பட வழிகண்டார்.

7

தமிழகத்தில் என்றும் இருந்திராத அளவுக்கு அமைதிச் சூழ்நிலையைப் பெரியார் உருவாக்கினார்.

இந் நிலையில் தூங்கும் புலியை இடறுவது போல், 1954-க்குப் பின், வடவர், இந்தி ஆதிக்க உணர்வினராய்ச் செயல்பட்டனர்; இந்தித் திணிப்புக்கு உரிய ஆணைகளைப் பிறப்பித்தனர். இதனைத் தடுத்து நிறுத்த காமராசராலோ, காங்கிரசாலோ இயலாது என்பது கண்கூடாயிற்று.

எனவே, வடவரின் முயற்சிக்குச் சம்மட்டி அடிதர விரும்பிய பெரியார், '1-8-1955-இல் இந்திய (அரசாங்க) தேசியக் கொடியை எரியுங்கள்' எனக் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தார். ஏறத்தாழப் பத்தாயிரம் கழகத்தினர் இடமும் காலமும் குறித்து—கொடி எரிப்புப் போருக்குப் பெயர்தந்து போராட்டத்துக்கு முன்வந்தனர்.

30-7-1955 வரையில், கொடி கொளுத்தும் தொண்டர்கள் ஊர் ஊராகச் சென்று மக்கள் ஆதரவைத் திரட்டி நின்றனர்.

எனினும், 'மத்திய—மாநில அரசுகளின் சார்பில்—இந்தி, தேர்வுக்குரிய பாடமாக இனி இராது' என, திரு. காமராசர் உறுதி அளித்ததன் பேரில், கொடி எரிப்புப் போராட்டத்தினைத் தற்காலிகமாக ஒத்திவைத்தார், பெரியார். களத்தில் நின்ற கறுஞ் சட்டை வீரர்கள் தலைவரின் ஆணைக்குத் தலைவணங்கி, களத்தினின்று அமைதியாக மீண்டனர். 'இந்தி'யைப் பொறுத்து 1967 மார்ச்சு வரையில் இந்த நிலையே தமிழகத்தில் நீடித்தது.

இதற்கிடையில் அறிவுப் பிரசாரத்துறையில் மேலும் ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்க விரும்பிய பெரியார், 1927 முதல் 'குடிஅரசு' மூலம் (3-7-1927) பரப்பிவந்த புத்தர் அறிவுக் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை மக்களிடையே பிரசாரம் செய்யத் திட்டமிட்டார்.

23-1-1954-ல் ஈரோட்டில் மிகப் பெரிய அளவில் புத்தர் கொள்கைப் பிரசார மாநாட்டினை நடத்தினார்; உலக பவுத்த சங்கத் தலைவரான டாக்டர் மல்லல சேகரா போன்றோரையும், பிற அறிஞர்களையும் அழைத்து, அறிவுக்கொள்கைப் பிரசாரத்துக்கு மேலும் புது முறுக்கு ஊட்டினார்.

இந்திய மண்ணில் அதுவரை மங்கிக் கிடந்த புத்தர்கொள்கைக்கு, அதன்பின்னரே, இந்திய அரசு ஏற்றங் கொடுத்தது; புத்தரின் 2500-ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படச் செய்தது.

புத்தர் கொள்கைக்கு இந்திய மண்ணில் செல்வாக்கு உண்டாக்கிய தந்தை பெரியார், மலேயாவுக்கு வருகைதருமாறு 1954 நவம்பரில் அழைக்கப்பட்டார்.

இரண்டாம் முறையாக மலேயாவுக்குச் சென்ற அவர், 3-12-1954-ல் பர்மாவில், ரங்கூனில் நடைபெற்ற உலக பவுத்த மாநாட்டில் சொற்பெருக்காற்றினார்; பல நாடுகளிலிருந்து வந்திருந்த பவுத்தத் தலைவர்களுடன் உரையாடினார்.

அங்கு 5-12-1954-ல் டாக்டர் அம்பேத்கார்—மதமாற்றம் செய்தாவது சமூக இழிவை ஒழித்துக்கொள்ள விரும்புவதாகவும்; தாம் பவுத்தராக மாறிவிட விரும்புவதாகவும்; பெரியாரும் பவுத்தராகவேண்டும் எனவும் தம் விருப்பத்தினைப் பெரியாரிடம் தெரிவித்தார்.

எனினும், பெரியார் மதமாற்றத்திற்கு உடன்பட்டாரல்லர். ஆயினும், டாக்டர் அம்பேத்காரிடம், 'நீங்கள் பவுத்த மதத்திற்கு மாறுவதானால், கணிசமான எண்ணிக்கையில் மக்களை உங்கள் வழியில் திருப்பி, பின்னர் சேருங்கள்' எனப் பெரியார் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறாக, தமிழகத்திலும், இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் அறிவியக்கம் வளர அவர் தொடர்ந்து அருந்தொண்டாற்றினார்.

அன்றியும், 1953-ல் தமிழர்க்கு நலன் தருவதான இன்னொரு பெரும் பணியினை ஆற்றினார்.

1953-ல் சென்னை மாகாணத்திலிருந்து, மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலம் பிரிந்தது. சென்னை நகரம் தமிழரிடத்திலிருந்து பறிபோகும் நிலை ஏற்பட்டது. பெரியாரின் துணிவான பணியும், மற்றப் பெருந் தலைவர்களின் முயற்சியும் தமிழர்க்கு சென்னை நகரம் தொடர்ந்து தக்கும் வாய்ப்பு ஏற்படச் செய்தன.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படுவதைப் பெரியார் ஆதரித்தார். மொழிவாரி மாநிலங்கள் பிரிவினைக்குப் பின், 'திராவிடநாடு,' கோரிக்கையைப் புறக்கணித்து 'தனித் தமிழ்நாடு' கோரிக்கையை வற்புறுத்தினார்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையால் பிரதேச உணர்ச்சி வளருவதாகக் கருதி, தென் மாநிலங்கள் நான்கினையும் இணைத்து, 'தட்சணப் பிரதேசம்' என ஒரு அமைப்பை ஏற்படுத்த மத்திய அரசு முயற்சி செய்தது. இந்த ஏற்பாடு காரணமாக ஆந்திரர், கன்னடர், கேரளர் ஆகியோரின் ஆதிக்கத்துக்குத் தமிழகம் அடிமைப்படும் என எடுத்துக் காட்டி இதனை வன்மையாக எதிர்த்தார், பெரியார்.

தட்சணப் பிரதேசம் குறித்து, இறுதி முடிவெடுக்க நடந்த மேல் மட்டக் காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம் பெங்களூரில் 1956 பிப்ரவரியில் நடந்துகொண்டிருந்தபோது, பின்வரும் தந்திச் செய்தியை திரு. காமராசருக்கும், திரு. நேருவுக்கும் அனுப்பினார், பெரியார்.

'தட்சணப் பிரதேச அமைப்பைத் தமிழர்கள்பேரில் சுமத்துவதானது—தமிழர்க்கும், தமிழ்நாட்டுக்கும், தற்கொலைக்கு ஒப்பானதாகும்' என்பதே அத் தந்திச் செய்தியின் சாரமாகும்.

அத் தந்தியின் விளைவாக, அந்த ஆலோசனைக் கூட்டத்திலேயே 'தட்சணப் பிரதேசம்' அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது; தமிழர்க்கு நேர இருந்த பேரிடையூறு தவிர்க்கப்பட்டது.

அச் சமயம் முதற்கொண்டு 'தனித் தமிழ்நாடு' கோரிக்கையில் அதிகத் தீவிரம் கொண்டார், பெரியார்.

அன்றியும், இராமன் கடவுள் என்பதையும், இராமாயணம் நீதிநூல் என்பதையும் புரட்டுகள் என்பதைப் பல்லாண்டு காலம் கூறிவந்த அவர் 1956-ல் எல்லா முக்கிய ஊர்களிலும் இராமன் படத்தை எரிக்கச் செய்தார்.

அரசியல் உத்தியோகத் துறையில் பார்ப்பன அதிகாரிகளும் பார்ப்பன நீதிபதிகளும், பார்ப்பனப் பத்திரிகையாளர்களும் திராவிட மக்கட்கு இழைத்த கேடுகளைக் களைந்தார்.

இவ் வகையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் துச்சமென எண்ணி, மக்கள் மன்றத்தில் அதனை விமர்சித்து, பாதிக்கப்பட்டவர்க்குப் பாதுகாப்பாக நின்ற சிறப்பான செயல்—இந்திய வரலாற்றில், 1956-ல் பெரியார் அவர்களால்தான் நிகழ்த்தப்பட்டது.

திராவிட அய். ஏ. எஸ். அதிகாரி ஒருவரைப் பழிவாங்கத் துணிந்த பார்ப்பன நீதிபதிகளின் இன அடிப்படையிலான உள்நோக்கத்தைக் கண்டு, அதை எடுத்துப் பிரசாரம் செய்தமைக்காக கோர்ட்டு அவமதிப்புக் குற்றம் சுமத்தப்பட்டு 1957-ல் பெரியார் தண்டிக்கப்பட்டார். அது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த வாக்குமூலம்–இந்திய நீதித்துறை வரலாற்றில் முன்மாதிரி இருந்திராத ஒன்றாகும்; மேலும்,

சட்ட நுணுக்கம் நிறைந்ததும், பார்ப்பனரின் இனவெறியை வெளிப்படுத்துவதும், திராவிடரின் உரிமைகளைக் கோடிட்டுக் காட்டுவதும் ஆகும். [இந்நூல் பக்கம் 270–280]

அடுத்து 5-10-1957-ல் குளித்தலையிலும், 13-10-1957-ல் பசுபதிபாளையத்திலும், 20-10-1957-ல் திருச்சியிலும் பெரியார் ஆற்றிய சொற்பொழிவுகளில், 'பார்ப்பனரைக் குத்தச் சொன்னார்; வெட்டச் சொன்னார்' என மூன்று குற்றங்கள் சாட்டி ஒன்றரை ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டு, ஏககாலத்தில் 6 மாதம் அனுபவிக்கும்படி திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் 14-12-1957-ல் தீர்ப்பளிக்கப்பட்டது.

இத் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னால் 9-12-1957-ல் திருச்சிக்கு வந்த திரு. நேரு, பெரியாரவர்கள் 26-11-1957-ல் நிகழ்த்திய அரசியல் சட்ட எரிப்பைக் கண்டித்து, 'சட்டத்தை எரிப்பவர்கள் அறிவிலிகள் (Nonsense); சட்டம் பிடிக்கவில்லை என்பவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் நாட்டைவிட்டு வெளியேறட்டும்' என முழக்கி, மறைமுகமாக, பெரியார் தண்டிக்கப்படக் காரணரானார்.

திரு. நேரு சென்னைக்கு வந்தபோது, 'Nonsense Nehru, Go back!' 'முட்டாள் நேருவே, திரும்பிப் போ' என—தமிழ் மக்கள் திரண்டெழுந்து முழங்கி, அவரைத் திணற அடித்தனர்.

பெரியார் 13-5-1958-ல் விடுதலையானார்.

இத்துணைத் துன்பங்கட்கிடையேயும் சாதி ஒழிப்புக் கொள்கையினைத் தீவிரமாகச் செயற்படுத்த விரும்பினார் பெரியார்; சாதிக்குப் பாதுகாப்பாக உள்ள அடிப்படையையே பெயர்க்க விரும்பினார்; சாதிக்குப் பாதுகாப்பாக இந்திய அரசியல் சட்டம் உள்ளது என்பதை நாடெங்கும் எடுத்தியம்பினார்.

தமிழக வரலாற்றில் சிறப்புடையதாக—3-11-1957-ல் தஞ்சையில் பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அங்கு திரண்டிருந்த பல இலட்சம் திராவிட மக்களிடையே, சாதி ஒழிப்புக்கு அரியதொரு போராட்டத் திட்டத்தினைப் பெரியார் அறிவித்தார்.

'சாதிக்குப் பாதுகாப்பளிக்கும் இந்திய அரசியல் சட்டப் பகுதியை, அச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நவம்பர் 26-ல் எரிப்பது' என்பதே அப் போராட்டத் திட்டமாகும்.

அத் திட்டத்தினை ஏற்று, தமிழகம் முழுவதிலும் 26-11-1957-ல் சுமார் பத்தாயிரம் திராவிடர் கழகத்தினர்—ஆடவர், பெண்டிர், சிறுவர் உட்பட—அரசியல் சட்டத்தைக் கொளுத்தினர்.

அப் போராட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர், மாநில அரசு, 'தேசிய மரியாதை அவமதிப்புத் தடுப்புச் சட்டம்' (Prevention of Insult to National Honour Act, 1957) என்ற கொடுஞ் சட்டத்தை நிறைவேற்றி, கடுந் தண்டனை விதிக்க ஆயத்தம் செய்து கொண்டது. இந்தியாவில் குற்ற இயல் சட்டத்தில், இவ் வகையான காரியங்களுக்கு என்ன தண்டனை என்பது பற்றிய பேச்சுக்கே அன்றுவரை இடமில்லாதிருந்தது. அத்தன்மை கண்டு அரசே வெட்கப்பட்டது; 'தேசியத்தார்' தலை குனிந்தனர்.

இதனையெல்லாம் அறிந்த நிலையில்தான் 10 ஆயிரம் பேர் சட்டத்தைக் கொளுத்தினர். அவ்வாறு எரித்தவர்களுள் 2884 பேர் கைது செய்யப்பட்டதாக, டில்லி பாராளு மன்றத்தில் 4-12-1957-ல் அறிவிக்கப்பட்டது. ['விடுதலை'—5-12-1957]

இவர்கள் அனைவரும் இரண்டு மாதம் முதல் மூன்றாண்டுகள்வரை தண்டனை விதிக்கப்பட்டுச் சிறை ஏகினர். சிறையிலேயே இருவர் உயிர் துறந்தனர்; நோயுடன் விடுதலையான சின்னாட்கட்குள் சுமார் 20 பேர் உயிரிழந்தனர்; நீண்டகாலத் தண்டனைக்

குள்ளான பலர் வாழ்வில் நலிவுற்றனர். எனினும், எதற்கும் துவளாமல், தொடர்ந்து இயக்கப் பணிகளை மேற்கொண்டனர்.

இவ்வகையில், உலக வரலாற்றில், ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தை எரிப்பது என்கிற போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக முதன்முதல் நிகழ்த்தியவர்— பெரியார் ஒருவரேயாவார்.

தென்னாட்டுத் திராவிடரிடையே சாதி ஒழிப்பு உணர்வை ஊட்டிய பெரியார், 1959 துவக்கத்தில் வடநாட்டுக்குச் சென்று லக்னோ, கான்பூர் முதலான பல இடங்களிலும் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், கல்லூரி நிகழ்ச்சிகள் முதலானவற்றில் பேருரையாற்றி, இராமாயண எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு உணர்ச்சியை ஊட்டினார். அடுத்து நடைபெற விருந்த தேசப்பட எரிப்புபற்றியும், நாட்டுப் பிரிவினை பற்றியும், பார்ப்பனர் விலக்கம் (பகிஷ்காரம்) பற்றியும் அந் நாட்டு மக்களுக்கு இருந்த அய்யங்கட்கு விளக்கமளித்தார்.

[இந்நூல் பக்கம் 1616-1620]

தொடர்ந்து, 'சாதி ஒழிப்புக்கு ஒரேவழி நாட்டுப் பிரிவினைதான்' என அறிவித்து, அதனை மத்திய ஆட்சிக்கு உணர்த்தும் வண்ணம், 'தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்பட எரிப்பு'க் கிளர்ச்சியை 1960-ல் நடத்தினார். அக் கிளர்ச்சியில் சுமார் 2000 தோழர்கள் பங்கு கொண்டனர்.

1961-க்குப் பின்னர் சமதர்மப் பிரசாரத்திற்கு முதலிடம் கொடுத்து, ஆங்காங்கே சமதர்ம மாநாடுகள் கூட்டி மக்கட்கு விளக்கம் தந்தார். இந்த நாட்டு மக்களில், நில மற்றோராக உள்ள திராவிடர்க்கு நில உடைமை கிடைக்கும் வகையில், 'நில உச்சவரம்புச் சட்டத்தை' காமராசர் ஆட்சி நிறைவேற்றிடத் தூண்டினார். காமராசர் ஆட்சி அதற்கான சட்டம் இயற்றியது.

அச் சட்டத்தினால் பயன்பெறுவோர் பெரிதும் ஆதித் திராவிட மக்களும், பிற்படுத்தப் பட்ட மக்களுமேயாவர்; அதனால் சிறிது உரிமை இழப்போர் பார்ப்பனரும், மேல் சாதித் திராவிடர் சிலரும், கோவில்—மடங்கள் முதலான நிறுவனங்களுமேயாம்.

எனவே, மேற்கண்டவர்கள் நில உச்சவரம்புச் சட்டத்தை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர். தமிழ்நாடு அரசு இயற்றிய அச் சட்டம் செல்லாதென 1964 துவக்கத்தில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது.

அதன் விளைவாக நிலமற்ற ஏழைகள் நிலம் பெறுவதற்கான வாய்ப்பு தடுக்கப்பட்ட தையும், இந்து அவிபக்த குடும்ப முறை காப்பாற்றப்பட்டதையும் மக்கட்கு எடுத்தியம்பி, '29-3-1964 சுப்ரீம் கோர்ட் கண்டன நாள்' எனப் பிரகடனம் செய்தார்; 15-3-1964 முதல் 5-4-1964 முடிய தமிழகத்தின் முக்கிய நகரங்களில் கண்டன முழக்கம் செய்தார்.

இதற்கிடையில் தமிழ் நாட்டு ஆட்சிப் பொறுப்பில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது.

1954-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திரு. காமராசர் 1963-ல் முதலமைச்சர் பொறுப்பைவிட்டு விலகத் தீர்மானித்தார். இதனை முன்கூட்டி உணர நேர்ந்த பெரியார், திரு. காமராசரின் தீர்மானம் சரியானதல்லவென்பதை உணர்த்திப் பின்வரும் அறிவுரை யைத் தந்திமூலம் அனுப்பினார்.

'தாங்களாகவோ பிறர் ஆலோசனையின் பேரிலோ தமிழ் நாட்டின் முதலமைச்சர் பதவியைத் தாங்கள் ராஜிநாமா செய்வதானது தமிழர்களுக்கும், தமிழ் நாட்டிற்கும், தங்களுக்கும் தற்கொலைக்கு ஒப்பானதாகும்'.

(Either of your own accord or on the advice of others, your resignation of Chief Ministership will be suicidal to Tamilians, Tamil Nadu and yourself) என்பதே அத் தந்திச் செய்தியாகும்.

1967-ல் இது நூற்றுக்கு நூறு உண்மையாக ஆனது.

'காமராசர் ஆதரிப்பு' என்பது இனநலக் கண்ணோட்டத்துடன் பெரியார் அவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும்; திரு. காமராசர் இன்றேல் இனநலம் தேக்கப்படும் என்று கருதியே மேற்கண்ட அனுபவரீதியான அறிவுரையை அவர் வழங்கினார். நிற்க.

1954 முதல் காமராசர் ஆட்சி ஆதரவுப் பிரசாரத்தைப் பெரிதாக மேற்கொண்ட காரணத்தால்—சுயமரியாதைக் கொள்கைப் பிரசாரம் சுணங்கி இருந்தது; 1962 தேர்தலுக்குப்பின்னர் இந்த நிலை சிறிது அதிகமாகியது.

அன்றியும், 1962, 1967 பொதுத் தேர்தல்கள் கழகத்தினரின் உழைப்பிலும் சிந்தனையிலும் பெரும் பகுதியைக் கொள்ளை கொண்டன.

இந் நிலையினை ஓர்ந்து சுயமரியாதைப் பிரசாரப் பயிற்சியினை ஆங்காங்கே உள்ளவர்கட்கு அளிக்க முனைந்தார்.

திருச்சி (1964 ஜூன்); திருச்சி மாவட்டத்தின் வட்டத் தலைநகர்கள் (1965 ஜூன், ஜூலை); விழுப்புரம் (1966 மே); விடயபுரம் (1967 மே); நாகையை அடுத்த வேளாங்கண்ணி (1972 மார்ச்சு); மத்தூர் தாதம்பட்டி (1972 மே) எனப் பலவிடங்களிலும், சுயமரியாதைக் கொள்கையில் ஆர்வமுள்ள இளைஞர்கட்குத் தாமே நேரில் கொள்கை விளக்கம் அளித்து அருந்தொண்டாற்றினார். அப் பயிற்சிக்கூடங்கள் அனைத்திலும் நானும் அவருக்கு முக்கிய உதவியாளனாக இருக்க நேர்ந்தது, பல விவரங்களை அறிந்துகொள்ளவும், இத் தகு சீரிய தொகுப்புப் பணியினைத் துணிந்து மேற்கொள்ளவும் பேருதவியாக அமைந்தது.

பெரியார் அவர்கள், தம் உள்ளத்தில் 1891 முதல் வளர்ந்திருந்த கடவுள் மறுப்புக் கொள்கைக்கு ஓர் இறுதி வடிவம் அமைத்து—கடவுள் மறுப்பு வாசகங்களை—விடயபுரம் பயிற்சிக்கூடத்தில்தான் உலகுக்கு அறிவித்தார். அவ் வாசகங்களைக் கழக நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் முழங்க வேண்டுமென 14-6-1967-ல் அறிவிப்புச் செய்தார். இவை நிற்க.

1964-க்குப் பின் தமிழ்நாட்டு ஆட்சி பார்ப்பனர் நலனுக்கு ஓரளவு அரணாக அமைந்தது. அந்த நிலையினைக் கண்டனம் செய்யும் வகையில், 'ஆட்சிக் கண்டன நாள்' எனத் தமிழக மெங்கும் கொண்டாடப்பட வேண்டுமென அறிவித்தார்.

மேலும், அன்னாரின் இராமாயண ஒழிப்புப் பிரசாரத்தினை முன்னிலும் தீவிரமாக்கினார்.

1965-ல், 'ராமநவமி அன்று கம்ப இராமாயணத்தைக் கொளுத்துக!' எனக் கழகத்தினருக்கு அறிவித்தார். 10-4-1965-ல் நாடெங்கும் இராமாயணம் எரிக்கப்பட்டது.

அதேபோல் சென்னையிலும் மற்ற இடங்களிலும் 11-8-1966-ல் இராமாயணம் கொளுத்தப்பட்டது.

'இந்தி எதிர்ப்பு' என்ற பேரால் 1965-ல் நடந்த கலவரங்களை ஒடுக்க அவர் ஒருவரே முன்வந்தார். தமிழக ஆட்சி பதுங்கியது! இராணுவம் செயலற்று நின்றது.

அக் கலவரத்தின் பின்னணி பார்ப்பனர் தூண்டுதலே எனக் கண்டு, 'பார்ப்பனர் வீடுகளை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்' எனக் கழகத்தினருக்கும், பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்; 'தற்காப்புக்குக் கத்தி வைத்துக் கொள்ளுங்கள்' என அறிவுறுத்தினார். கலவர சக்திகள் தாமே பெட்டிப் பாம்பென ஒடுங்கின.

எனினும் அக் கலவரம்—விவரமறியாதவர்கட்கு விளைத்த உற்சாகமும்; காங்கிரஸ் ஆட்சியின் ஆணவப் போக்கும், யார் தடுத்தும் தேக்க இயலாமல்—1967 தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி கவிழக் காரணமாயின.

1967 தேர்தலில் திரு. காமராசர் அணி படுதோல்வி கண்டது; திரு. அண்ணாதுரை அணி பெருவெற்றி குவித்தது.

எனினும் பெரியார் அவர்கள் இடைவிடாது கூறிவந்ததற்கொப்ப—திரு. அண்ணா துரை பெற்ற ஆட்சி வாய்ப்பைத் தம் வயப்படுத்த ஆச்சாரியார் முயன்றார்; பார்ப்பனர் காத்திருந்தனர்.

திராவிடரைச் சூழ இருந்த அந்தப் பெருங் கேட்டினைத் தவிர்க்க எண்ணிய அறிஞர் சி. என். அண்ணாதுரை தந்தை பெரியாரை 1967 மார்ச்சில் அணுகினார். இவ் அரிய சந்திப்பு திரு. அண்ணாதுரை அவர்களின் இனப் பற்றுக்கும், இராச தந்திரத் துக்கும் முத்தாய்ப்பு வைத்த பெரு நிகழ்ச்சியாகும்.

தம் வாழ்நாள் முழுதும் 'இனநலம்' என்ற அளவுகோலை வைத்தே அரசியல் நிலையினை (Political stand) மேற்கொண்டவர் பெரியார். ஆதலின் மேற்கண்ட நிலைமை வந்துசேரும் என்பதை அவர் 5 ஆண்டுகட்கு முன்னரே நமக்கு உணர்த்தி யிருந்தார்.

அதாவது, 'இனி, கண்ணீர்த் துளிக் கட்சி, தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவவேண்டுமானால், பார்ப்பன வெறுப்புச் சாதனத்தைத்தான் கைத் தடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள்! இந்தக் காரியத்துக்கு என்னை அணுகலாம்; நானும் ஆதரவளிக்கலாம்.' (இந்நூல் : பக்கம் 45)

இத்துணை முன்யோசனையுடன் பெரியார் குறித்துள்ளதுதான், எழுத்துக்கு எழுத்து உண்மையாக—1967-ல் நடந்த 'அண்ணாதுரை—பெரியார் சந்திப்பு' ஆகும்.

இச் சந்திப்பின் விளைவாக 1967 மார்ச்சு முதல் தம் வாழ்நாள் இறுதிவரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காத்து, திராவிடர்க்கு நலம் பெருக்குவதையே குறியாகக் கொண்டு விளங்கினார் பெரியார்.

அறிஞர் சி. என். அண்ணாதுரை ஆட்சிக் காலத்தில் திராவிடர் பெற்ற நலன்கள் பலவாம்.

1967-ஆம் ஆண்டில் அவரால் சட்டமாக்கப்பட்ட—1967-ஆம் ஆண்டைய இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (28-11-1967) திராவிடருக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கிட்டாதிருந்த பெரு வாய்ப்பை அளித்தது. அதாவது, சுயமரியாதைத் திருமணம் அனைத்தும் செல்லுபடியாவதற்கு அச் சட்டம் வழிவகுத்தது; அதனால், பார்ப் பனரின் மத குருதன்மை அகற்றப்படவும்; மூடச் சடங்குகளை எளிதில் கைவிடவும் சட்டப் படிக்கான உரிமையை அது வழங்கியது.

அடுத்து, தமிழர் வாழும் நாட்டுக்கு 'மதராஸ்', 'சென்னை' என வழங்கப்பட்ட பெயரைத் 'தமிழ் நாடு' என மாற்றிய அரிய செயலாகும்.

இவ்வாறு ஆட்சி ஆதரிப்புக் காரணமாகப் புதுநிலையை மேற்கொள்ள வேண்டி நேரிட்டபோதும், பெரியாரின் பணி நாட்டுப் பிரிவினையில் அதிக நாட்டம் கொண்டது. நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியையே முழுப் பொறுப்பாக்கிக் கொண்டு செயல்படத் தக்க வகையில், 'தமிழ் நாடு சுதந்தர ஸ்தாபனம்' என ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என 1967-ல் அறிவித்தார் ('விடுதலை' 23-9-1967). அக் கோரிக்கையைத் தீவிரப்படுத்தும் வகையில், கீழ்ச் சாதி என்ற இழிவினை ஒழிக்கப் பூரண சுதந்தரம் வேண்டும் என அறிக்கையிட்டு, தமிழகமெங்கும் 14-4-1968-ல் 'டில்லி ஆதிக்கக் கண்டன நாள்' அனுசரிக்கச் செய்தார்.

1968-ல் லக்னோவில் நடைபெற்ற மாநாடுகளுக்கு அழைக்கப்பட்டார். அங்கு 12, 13-10-1968 தேதிகளில் நடைபெற்ற மாநாடுகளில் பேருரையாற்றினார்.

அவர்தம் நெடிய வாழ்நாளில் 1969-க்கும் 1973-க்கும் இடைப்பட்ட நான்காண்டு காலம், இன இழிவின் கடைசிப் புகலிடமாக உள்ள கோவிலில்—கர்ப்பக் கிரகத்தில் (கருவறையில்) அனுசரிக்கப்படும் தீண்டாமையையும் சாதி இழிவினையும் நீக்குகின்ற சீரிய பணிக்கே செலவிடப்பட்டது.

சென்னையில் 20-4-1969-ல் நடைபெற்ற சமுதாய சீர்திருத்த மாநாடு, தமிழர்க்கு உள்ள சமூக இழிவினைக் கோடிட்டுக் காட்டியது.

கோவில் கர்ப்பக் கிரக இழிவுநீக்கம் பற்றிய கிளர்ச்சியினை அறிவித்து, 1969 அக்டோபரில் அறிக்கைகளிட்டார், பெரியார். அதைத் தொடர்ந்து திருச்சியில் 16-11-1969-ல் நடைபெற்ற மத்திய திராவிடர் கழகக் கமிட்டி, '26-1-1970 கர்ப்பக் கிரகக் கிளர்ச்சி நாள்' எனத் தீர்மானித்தது.

இத் தீர்மான நிறைவேற்றத்தையொட்டி கிளர்ச்சிக்கான செயல்கள் மேற்கொள்ளப் பட்டன. இதுசமயம் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அளித்த உறுதியின்படி, 18-1-1970-ல் கும்பகோணத்தில் நடந்த மாநாட்டில், கர்ப்பக் கிரகக் கிளர்ச்சியை ஒத்தி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் மாயூரத்தில் 11, 12-4-1970-ல் நடைபெற்ற மாநாடுகளில் கிளர்ச்சியின் அவசியம் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

இவற்றுக்கிடையில், படித்த இளைஞர்கட்கும், அரசு அலுவலர்கட்கும் சுயமரியாதை உணர்வு ஊட்டத்தக்க வகையிலும்—பல கட்சிகளிலுமுள்ள சுயமரியாதைக்காரர்களையும் ஒன்று திரட்டி நாத்திகப் பிரசாரத்தை வலுப்படுத்தும் வகையிலும்—1930–1939 காலக் கட்டத்தில் செய்தது போன்றே—பல பெயர்களில் தமிழ்நாடெங்கும் நாத்திகக் கழகங்களைத் துவக்கிவைத்தார், அய்யா அவர்கள்.

இவ்வகையில் முதலாவதாக 7-3-1970-ல் அன்னாரால் திருச்சியில் துவக்கிவைக்கப் பட்ட அமைப்பே, இப்பெரு நூலை வெளியிடும் அரிய பொறுப்பினை வகிக்கின்ற சிந்தனையாளர் கழகம் ஆகும். இதனைத் தொடர்ந்து நாடெங்கும் சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம், நாத்திகர் கழகம், கடவுளிலார் கழகம் என்ற பெயர்களால் நூற்றுக் கணக்கான தனித்தனி அமைப்புகள் தோன்றித் தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகின்றன.

அடுத்து, முன்னர்க் குறிப்பிட்ட மாயூரம் மாநாடுகளுக்குப் பின்னர், உணவு விடுதிகளில் பிராமணாள் பெயர் அழிப்புக் கிளர்ச்சியினை மேற்கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். தமிழகமெங்கும் 14-10-1970-ல் இக் கிளர்ச்சி பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டு வெற்றிகிட்டியது.

1970 நவம்பர் இறுதியில் வடநாட்டில் பம்பாய் முதலான இடங்கட்குச் சென்று சுயமரியாதைக் கொள்கைகளைப் பிரசாரம் செய்து, டிசம்பரில் மீண்டார்.

பெரியாரின் கோரிக்கையிலுள்ள மனித உரிமைக் கோட்பாட்டினை நன்கு புரிந்து கொண்ட தமிழக முதலமைச்சர் டாக்டர் திரு. மு. கருணாநிதி, பெரியாரின் இன இழிவு நீக்க இலட்சியம் நிறைவேறும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக ஆவதற்கேற்றவகை செய்து, 12-1-1971-ல் சட்டமன்றத்தில் மசோதா ஒன்றை நிறைவேற்றினார். சட்டமன்றத்தினரால் ஒருமனதாக இம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்த அரிய ஏற்பாடானது, கோவில்—கடவுள் வணக்கத் துறையில் திராவிட மக்களுக்கு நீண்டகாலமாக இருந்துவந்த இன இழிவினை நீக்குவதாக அமைந்தது.

இம் மசோதாவினால் தங்கள் சாதி உயர்வு அழிக்கப்படுவதாக எண்ணிய பார்ப்பனர் —இம் மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணானதென்றும், தங்கட்குள்ள அடிப்படை உரிமையைப் பாதிப்பது என்றும் கூறி, நேரே சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர்.

இடையில் இந்தியா முழுவதிலும் நாடாளுமன்றத் தேர்தலும், தமிழகத்தில் பொதுத் தேர்தலும், 1971-ல் நடைபெற்றன.

இத் தேர்தலுக்குச் சின்னாட்கள் முன்னர், 1971 சனவரி 23, 24 தேதிகளில் சேலத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில், இந்தியாவையே கலக்கிய புரட்சிச் செயல்கள் நிகழ்ந்தன.

அம் மாநாட்டு ஊர்வலத்தில் கடவுளர் பிறப்புப் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இராமன் உருவப் பொம்மைக்குச் செருப்புமாலை போடப்பட்டது; இராமன் உருவப் பொம்மை இலட்சக்கணக்கான மக்களறிய செருப்பாலும், துடைப்பத்தாலும் அடிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டது; இறுதியில் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டது.

1927-ல் மனுநீதியைக் கொளுத்திய அய்யா அவர்கள்—படிப்பறிவற்ற மக்கள் நிறைந்த இந்நாட்டில்—தொடர்ந்து, பிள்ளையார் உருவப் பொம்மை உடைப்பு, இராமன் பட எரிப்பு, இராமாயண எரிப்பு, இராமன் படத்திற்கு ஊர்தோறும் செருப்படி (1971)—எனப் பல்வேறு கடவுள் நம்பிக்கை ஒழிப்பு—சிலை உடைப்புக் கிளர்ச்சிகளை மேற்கொண்டு, இந்தியாவின் ஈடு இணையற்ற 'கடவுள் சிலை உடைப்பாளர்—(Iconoclast)' என்ற பெரும் போற்றுதலுக்கு உரியவராகவும், அஞ்சாத தீரராகவும் விளங்கினார்.

பிற உலகநாடுகளில் சிலைவணக்கம் என்பதன் கடைசி அடையாளங்கள் பெரிதும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டோடு ஒழிந்துவிட்டதை நாம் அறிந்தால், பெரியார் மேற்கொண்ட இக் கிளர்ச்சிகளின் அரிய அறிவு விளக்கத்தன்மை விளங்கும்.

சேலம் மாநாட்டுக்குப் பின்னர் தமிழகத்தில் தேர்தல் நடந்தது. சேலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை மக்களிடம் பெரிதுபடுத்தி, பார்ப்பனரும் காங்கிரசாரும்—திராவிடர்கழகத்தினருக்கும், திராவிடமுன்னேற்றக் கழகத்தினருக்கும், தேர்தலை ஒரு பெருஞ் சோதனையாக்கினர். அச் சோதனையில், மக்களின் பேராதரவுடன்—தி. மு. க. பெரு வெற்றி பெற்றது; திராவிடர் மனம் மகிழ்வுற்றது.

தேர்தலுக்குப் பின் 16, 17-5-1971-ல் திருவாரூரில் நடைபெற்ற மாநாடுகளில் மூட நம்பிக்கை ஒழிப்புப் பணியைத் தீவிரப்படுத்தவேண்டிய அவசியத்தைப் பெரியார் விளக்கினார். தொடர்ந்து இன இழிவுக் கிளர்ச்சியின் தன்மையினை விளக்கிப் பல இடங்களிலும் பெரியார் உரை நிகழ்த்தினார்.

1972 மார்ச்சு 13, 14, 15-ல் நாகையை அடுத்த வேளாங்கண்ணியில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. அது சமயம், சுப்ரீம் கோர்ட்டில், அர்ச்சகர் மசோதா பற்றித் தொடுத்திருந்த வழக்கில் 14-3-1972-ல், தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத் தீர்ப்பு திராவிடர்க்குப் பேரிடியாக வந்தது. அதிற்கண்டபடி (1) அர்ச்சகப் பார்ப்பனர் மகன் அர்ச்சகராகலாம் என்ற பரம்பரைப் பாத்திய முறை ஒழிக்கப்பட்டதாகவும் (2) தமிழக அரசு நிறைவேற்றிய மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும்; ஏனெனில் கோவில்—சாமி காரியங்களைப் பொறுத்தவரையில் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகராக உரிமை உண்டென ஆகம விதிகள் கூறுவதாகவும்; மற்ற சத்திரிய, வைசிய, சூத்திர வகுப்பினர் கர்ப்பக் கிரகத்திற்குள் நுழைவதால் சாமி தீட்டுப்பட்டுவிடுமென்றும்—எனவே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற—தமிழக அரசின் மசோதா செல்லாது என்றும் கூறப்பட்டுவிட்டது.

அத் தீர்ப்பு வெளிவந்த மறுநாள் நாகப்பட்டினத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பினை எதிர்த்துப் போர் முரசு கொட்டினார், பெரியார். அன்று முரசு முழக்கிய அப் பெருந்தகை—தம் இறுதிச் சொற்பொழிவாக அமைந்த 19-12-1973 சொற்பெருக்குவரை பொங்கி எழும் கடலென இழிவினை எதிர்த்து ஆர்ப்பரித்தார்.

மேற்கண்ட தீர்ப்பினை முறியடிக்க ஒரே வழி, 'இந்து மதத்தைவிட்டுத் திராவிடர் வெளியேறுவதேயாகும்' எனப் பறைசாற்றினார். இப் பிரச்சினைகளைப்பற்றி 1973 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் அன்னாருடன் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதை நான் என் வாழ்நாளில் என்றும் மறத்தல் இயலாது.

1973 செப்டம்பரில் இன இழிவு ஒழிப்புக்குத் தடையாக உள்ள சட்ட ஆதாரங்களை எடுத்தெழுதினார்; ஊர்தோறும் விளக்கிக் கூறினார்.

‘இன இழிவை–சூத்திரப் பட்டத்தை நிலைநாட்டும் தத்துவத்தைக் காக்கும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்; அச் சட்டம் திருத்தப்பட முடியாது என்றால்—இன இழிவு நீங்க—சாதி ஒழிய ஒரே பரிகாரம் நாட்டுப் பிரிவினையே’ என முழக்கினார்.

அப் பேரறிவாளர் தம் இறுதிக் காலத்தில் 19–8–1973 தஞ்சை ‘வேன்’ (van) அளிப்பு விழா; 16, 17–9–1973 சென்னை பிறந்த நாள் விழா; 30–9–1973 மதுரை கறுஞ்சட்டைப் படை மாநாடு, சிலை திறப்பு விழா; 4–11–1973 திருச்சி சிந்தனையாளர் கழக விருந்து—பிறந்த நாள் விழா; 18–11–1973 முதல் 28–11–1973 வரை இழிவு நீக்கக் கிளர்ச்சிக்கான தமிழகச் சுற்றுப் பயணம்; 8, 9–12–1973 சென்னை மாநாடுகள்; 19–12–1973 சென்னை தியாகராயநகர் கடைசிப் பொதுக் கூட்டம் என முக்கிய நிகழ்ச்சிகள் உட்பட சுமார் 42 நிகழ்ச்சிகளில் பங்கேற்று விரிவுரையும் அறிவுரையும் மாரி என வாரி வழங்கி—இறுதி வரை ஓய்வறியாத் தானைத் தலைவராய்த் திகழ்ந்து, 24–12–1973-இல் மீளா விடை பெற்றார்.

மானிட உரிமைக் காவலர்

உலக மானிடத்தை முன்வைத்துப் பல கருத்துகளை வழங்கியுள்ள பெரியார் அவர்கள் 'சாதி ஒழிய வேண்டும்' என்றும்—அதே நேரத்தில், 'வகுப்புவாரியாக உரிமை வேண்டும்' என்றும் கோரியுள்ளார்.

'பேதநிலை ஒழிய வேண்டும்' எனவும்—அதே சமயம், 'பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார்' என்ற கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகவேண்டும் எனவும்; 'தமிழ்நாடு தமிழருக்கே!' எனவும்—அதேபோது, 'உலக மானிடம் ஒன்றாக வேண்டும்' எனவும் முழக்கியுள்ளார்.

இவை ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவை எனத் தோற்றமளிக்கலாம்.

முதலாவதாக, சாதி ஒழிய வேண்டும் என்பது குறித்துக் காண்போம்.

இங்கு, சாதி அமைப்புக்கு இந்துமதம், சாஸ்திரம், ஆகமம் ஆகியவை அங்கீகாரம் அளித்துள்ளன; சாதி வழக்கம், பிரதேச வழக்கம் என்ற பேரால் இவை நிலைப்படுத்தப் பட்டுள்ளன. அம் மட்டோடு நில்லாமல், இந்த ஏற்பாட்டுக்கு இந்துச் சட்டம், இந்திய அரசியல் சட்டம் என்பவையும், இச் சட்டங்களை அமுல்படுத்தும் எல்லாக் கோர்ட்டுகளும் இன்றுவரை ஆதரவும் ஆக்கமும் அளித்து வருகின்றன. இந்துச் சட்டம், அரசியல் சட்டம் இவற்றில் 'சூத்திரன்' என்ற சொல் இன்று இல்லையே எனச் சட்ட நிபுணர்கள் கூறுவர். சுப்ரீம் கோர்ட்டு, 'பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வேறுபாடு உண்டு' என 1972 மார்ச்சில் தீர்ப்பு அளித்துள்ளது; எனவே, இதிலுள்ள தத்துவத்திற்கு இச் சட்டங்கள் இன்றும் பாதுகாப்பு அளிக்கின்றன என்பதை அன்னார் உணர்தல் நன்றாகும்.

இந்த இழிநிலை பிற மதத்தினருக்கோ, பிற நாட்டினருக்கோ இல்லை. அதாவது, பிற மதத்தினரிடையே தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களை 'இழி சாதி', 'கீழ்ச் சாதி' என்றும்; 'உயர் சாதி', 'மேல் சாதி' என்றும் பிறவி அடிப்படையில் பிரித்து வைக்கும் தன்மை இல்லை; அப்படிப்பட்ட தன்மைக்கு அவர்களின் மதநூல்களும், சாஸ்திரங்களும் வழிவகுக்கவும் இல்லை; ஆதலின், அங்கெல்லாம் அவ் அடிப்படையில் உரிமைகள் வழங்கப் பெறவும் இல்லை.

சான்றாக, நீக்ரோக்கள் வாழும் அமெரிக்க நாட்டிலும், ஆப்பிரிக்க நாட்டிலும் 'சமூகப் பழக்கம்' என்ற பெயரால் நிலைத்திருந்த 'இன ஒதுக்கல்' (Apartheid) கொள்கைக்கு கிறிஸ்துவ மதமோ, பைபிள் நூலோ அங்கீகாரம் அளிக்கவில்லை; அதனால், அங்குள்ள கோர்ட்டுகளும் 'சமூகப் பழக்கம்' என்ற பேரால் அங்கிருந்த அந்த இழிவுக்குத் தொடர்ந்து ஆக்கம் தர இயலவில்லை. இக் காரணங்களால் அங்கு கறுப்பர்–வெள்ளையர் என்ற இன வேறுபாடு கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திலேயே அடியற்றுப்போக வாய்ப்பு நேரிட்டது.

இங்குள்ள சாதி அமைப்பு அத் தன்மையில் இல்லை. மிகச் சிறுபான்மையினராக உள்ள (Microscopic minority) பார்ப்பனர்—மிகப் பெரும்பான்மையினராக உள்ள திராவிடரை மத அங்கீகாரம்—சாஸ்திர அனுமதி கொண்டு இழிசாதியினராய் ஆக்கிவைத் திருப்பதே இங்குள்ள மனிதத் தன்மைக்கு எதிரான நிலையாகும்.

இவ் வகையால், 'சமுதாய உயர்வு' பெற்ற பார்ப்பனர், இதே காரணத்தால் 'அரசியல் ஆதிக்கம்'; 'பொருளுடைமை ஆதிக்கம்' பெற்றவர்களாகவும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் திகழ்கின்றனர்.

ஆனால், மிகப் பெரும்பான்மையினரான திராவிட மக்கள் மேற்குறித்த எல்லாத் துறைகளிலும் கீழ்நிலையிலேயே நெடுங்காலமாக வைக்கப்பட்டுவிட்டனர்.

ஆதலின், இங்கு சாதி ஒழிக்கப்படும் வரையில்—மிகச் சிறுபான்மை மக்கள் மிகப் பெரும்பான்மையினர் பேரில் ஆதிக்கம் செலுத்துவது நிற்காது என, அதை அழிக்க வேண்டியே—பெரியார் 55 ஆண்டு காலம் வகுப்புரிமைக்குப் போராடலானார்.

சமுதாயக் கொள்கைகளைப் பொறுத்துத் தீவிரவாதம் பேசுவதாகக் கருதுகின்ற சிலர், 'வகுப்புரிமை கோருவது என்பது, சாதி எண்ணத்தை வளர்ப்பது ஆகும்' என உரத்துக் கூறுவர். இங்கு இந்துச் சட்ட பூர்வமாகவும், இந்திய அரசியல் சட்ட பூர்வமாகவும், 'சாதி அகற்றப்பட்டுவிட்டது' என்ற நிலை இனித் தோன்றிவிட்டாலுங்கூட, அதற்குப் பின்னரும் நீண்டகாலம் சிறுபான்மையினர் ஆதிக்கமே நீடிக்கக் கூடிய அந்த அளவுக்கு—பெரும் பான்மையினர் என்போர் உரிமை அற்றவர்களாக நெடுங்காலம் வைக்கப்பட்டுவிட்டனர் என்பதை அன்னார் அறிதல் வேண்டும்.

இங்கு சமூக அந்தஸ்து—உரிமை வசதி—உடைமை வசதி—அனுபவிப்பு வாய்ப்பு இவை அனைத்தும் 1974ஆம் ஆண்டிலும் சாதி அமைப்பின்படியே அமைந்துள்ளன என்பதையும் பிரத்தியட்ச உணர்வோடு நோக்கும் எவரும் அறிதல் கூடும்.

இங்கு, சமூகத்தில் பெரும்பான்மை கருதி நீதியும், உரிமையும் வழங்கப்படாமல்—சிறுபான்மையினரின் பாதுகாப்பையும், உயர்வையும் மையமாகவும் இலட்சியமாகவும் கொண்டு நீதியும் உரிமையும் அரண் செய்யப்பட்டிருப்பதானது, 'மானிட உரிமைகள்' (Human Rights) கோட்பாட்டுக்கு முற்றிலும் விரோதமானதாகும்; அதுவும், 'ஜனநாயகக் குடிஅரசு' அமைப்பில் அது இரட்டிப்புக் கேடுள்ளதாகவே அமையும் என்பது உணரத் தக்கது.

இவற்றை நடுநிலையிலிருந்து காண்போர், பெரியாரின் வகுப்புரிமைக் கொள்கை யிலுள்ள மானிட உரிமைக் கோட்பாட்டை நன்கு உணர இயலும்.

அடுத்து, 'பேதநிலை ஒழிய வேண்டும்' எனக் கோரிய அவர், 'பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்' எனப் பிரித்துக் காட்டியுள்ளது பற்றியும் காண்போம்.

இங்கு, பேதநிலை என்பது பிறவியோடு பிணைக்கப்பட்டுள்ளது; பிறந்தது முதல் சாகும் வரை—ஒருவர் பிறக்க நேர்ந்த இடத்தை அல்லது பிறப்பு வழியை (Womb) ஆதாரமாக வைத்துப் பேதம்நிலைக்க எல்லா வகைகளிலும் வழி செய்யப்பட்டுள்ளது; அதாவது, பார்ப்பனத்தியின் வயிற்றில் பிறந்தாலன்றி—வேறு எக் காரணங்கொண்டும்—எவரும் பார்ப்பனராக ஆக இயலாது என்பதே அதுவாகும்.

இது, 2000 ஆண்டு காலத்திற்கு முற்பட்ட மனுநீதியில் விதிக்கப்பட்டவாறு, 'பிராமண சாதி ஸ்திரீயினிடத்தில் பிறந்தவனே பிராமணன் ஆவான்' (மனுநீதி, அத்தி யாயம் 10, சுலோகம் 74) என்ற தத்துவம் இன்றும் சட்டங்களின்படியும், கோர்ட்டு நீதிப் படியும் நிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், நமக்கு வாழ்க்கை நியதியாகவே அது ஆக்கப்பட்டுவிட்டது என்பதையும் உணர்த்தும். இத் தன்மை உலகின் வேறு எப் பகுதி யிலும் என்றும் இருந்திராத இழிதன்மையதாகும்.

இவ்வாறு உள்ள இப் பேதநிலையினை இங்குக் கற்பித்தவர் பார்ப்பனர்; இதனை இன்றும் காத்து நிலைக்கச் செய்ய இமாலய முயற்சி செய்பவரும் பார்ப்பனர். இத் தன்மை யுடைய இவர்கள் தங்களை மாற்றிக்கொண்டு பேதம் பாராட்டாத மனிதராகக் கூடி வாழ விரும்பினால்—அதை என்றும் வெறுத்தவரல்லர் பெரியார்; அத் தன்மையை விருப்புடன் வரவேற்றுள்ளவரே அவர் என்பது அறியத்தகும்.

ஆயினும், வரலாற்றுக்குட்பட்ட கடந்த 2000 ஆண்டுகளில் அவ்வாறு முன்வந்த பார்ப்பனர் ஒருவருமிலர்.

எனவே, பார்ப்பனரின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பேதநிலையைச் சுமந்து வாழும் திராவிடர் அச் சூழ்ச்சிப் பிடியினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதால்—பார்ப்பனரை ஒதுக்கி, பேதநிலையை அகற்றிக்கொள்ள விரும்புகின்றனர்.

எத் துறையிலும் பேதநிலை இல்லாத இடமே மனித சமூகம் இன்பமாக வாழ ஏற்ற இடமாகும் என்பதே பெரியார்தம் உறுதியான கொள்கையாகும்.

எனவேதான், இங்கு பிறவி காரணமாக உள்ள பேதநிலையை அகற்ற அருந்தொண்டாற்றி, அதற்கெனவே இறுதி மூச்சுவரை உழைத்த அவர், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்ற உணர்வை வளர்த்து, பேதநிலை ஒழிய வழி வகுத்தார்.

பார்ப்பனருக்கு உள்ள இன உணர்வு திராவிடர்க்கும் உண்டாவதற்குத் தடையாக நிற்பது அவரிடையே உள்ள உட்சாதிப் பிரிவுகளாகும் (sub-castes); 1946-க்குப் பின்னர், சட்டத்தின் முன்னால் இவை இல்லை எனினும், கொள்வினை கொடுப்பினையில் இன்றும் நிலைபெற்றுள்ளவையாம். அன்றியும், திராவிடர், தம் சொந்த வாழ்வின் முன்னேற்றங் கருதி மட்டும் தத்தம் உட்சாதி உணர்வுள்ளவராக விளங்குகின்றனர்; பார்ப்பனரைப்போல் சமூக முன்னேற்றங் கருதி உட்சாதி உணர்வை உதறிவிட்டு, இன உணர்வு கொள்ள முன் வந்தாரிலர். இதனை, 'A Non-brahmin is individually communal and a Brahmin is communally communal' என இன்னொரு வகையிலும், ஆங்கிலத்தில் எடுத்துக் கூறுவார், பெரியார். மேலும், அரசியல் காரணம் கொண்டும் பிரிந்து கிடப்பவராவர், திராவிடர்.

இத் தன்மைகளை மறந்து திராவிடர் ஒன்றுபட வேண்டுமென அய்யா அவர்கள் அயராது பணியாற்றினார். அரசியல் தலைவர்களும், மக்கள் தலைவர்களும் இவற்றுக்கு ஆவன செய்யக் கடமைப்பட்டவராவர்.

அடுத்தது 'நாட்டுப் பிரிவினை' பற்றிய அவர்தம் கருத்தாகும்.

பெரியாரவர்களின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை, எவரையும் அடிமை கொண்டு ஆளவேண்டும் என்ற கருத்தைக் கொண்டதன்று.

இங்கு வாழும் நான்கு கோடித் திராவிடர்களும் தங்களுக்கு எத்துறையிலும் சிறிதும் உரிமை அளிக்காத நிலையில், நெடுந்தொலைவிலுள்ள மக்களுக்கு ஆட்பட்டு, 'ஒருமைப் பாடு காப்பதற்காக' உரிமைகளை இழந்து வாழ்வது, மனித சுதந்தரத்துக்கு நேர் மாறானது என்பதனாலேயே பெரியார் தனிநாடு கோரினார்.

சமுதாய உரிமையிலும், அரசியல் உரிமையிலும், அனுபவிப்பு வாய்ப்பிலும் சம சந்தர்ப்பம் பெற்றவர்களாக இருந்து—பல்வேறு மொழியினரும், நாட்டினரும் ஓர் குடைக் கீழ் வாழ வகையில்லாதபோது—உரிமை வேட்கையுடையோர் நாட்டுப் பிரிவினை கோருவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

ஒற்றுமை அல்லது ஒருமைப்பாடு என்பது எல்லா வகையிலும் சம நிலையிலுள்ள—தன்னாதிபத்யம் கொண்ட இரண்டு அல்லது பல அமைப்புக்களிடையேதான் அமைய முடியும்; சமநிலை பெற்றிராத—தன்னாதிபத்யம் (Sovereignty) இழந்த அமைப்புக்களிடையே ஒருமைப்பாடு தோன்றாது, வளராது; அதற்கு மாறாக வேறுபாடும் பகையுமே வளரும்.

'மானிட உரிமை நாள்' (Human Rights Day), 'உலக ஒருமைப்பாடு' இவை பற்றி நாள்தோறும் முயற்சி மேற்கொண்டு செயல்பட்டு வரும் அய்க்கிய நாடுகள் பெருமன்றம் (United Nations Organisation)—சில இலட்சக்கணக்கான மக்கள் தொகை உள்ள சின்னஞ்சிறு நாடுகளை, நூற்றுக்கணக்கில் உள்ளவற்றை—தன்னாதிபத்ய தனிச் சுதந்தர நாடுகளாக (Sovereign Independent Countries) ஏற்று மதித்து வருவது அனைவரும் உன்னற்பாலது.

ஏதேனும் ஒருவகையில் சுதந்தரம் பறிக்கப்படுவதை ஒருப்படாத நிலையில்தான்—தத்தம் சுதந்தரத்தைக் காத்துக்கொள்ள வேண்டி, அத் துணைச் சின்னஞ் சிறு நாடுகளும் சுதந்தரம் கோரிப் பெற்றனவேயன்றி, இன்னொரு சாராரின் சுதந்தரத்தைப் பறிப்பதற் கன்று. இது உலகம் அறிந்த உண்மை.

சின்னஞ் சிறு நாடுகளாயினும் சுதந்தர நாடுகளாக நின்று நிலவுவதனால்தான்—நெடுங்காலத்துக்கு முன்னரே மூன்றாம் உலகப் பெரும் போர் தோன்றி உலகம் அழிக்கப் படுவதினின்றும் தடுத்து நிறுத்த—சம நிலையுள்ளவராக உலக நாட்டினர் ஒன்றுகூடி உலக அமைதியைக் காத்திட இயன்றது. இது உலக ஒருமைப்பாட்டுக்கு ஒரு படிக்கட்டாக அமைந்துள்ளது காணத்தக்கது.

எனவே, பெரியார் அவர்கள் கிளத்திய தனி நாடு கோரிக்கை திராவிடரின் சுதந் தரத்தைக் காப்பதை—இங்கு மனித சுதந்தரம் காக்கப்பட வேண்டும் என்பதை இலட்சிய மாகக் கொண்டதேயன்றி, உலக மானிட ஒருமைப்பாட்டுக்கு எதிரானதன்று.

ஓய்வறியாத போர் வீரர்

உலக மக்களுள் பெரும்பாலோராலும், அறிஞர்கள் எனப்படுவோருள் பலராலும் வெறுக்கப்படும் கொள்கைகளையே தம் வாழ்நாள் முழுதும் பேசியும், எழுதியும், கிளர்ச்சி களின் மூலமும் பரப்பி—வெற்றிகள் பலவற்றைப் பெரியார் அவர்கள் குவிக்க முடிந்ததற்கு அநேக காரணங்கள் உள.

அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காணுதல் பயன் தருவதாகும்.

1. தாம் ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்குத் தம்மை முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்டார். கொள்கையின் கர்த்தாவாக விளங்கிய அவர் கொள்கையைப் பரப்புநராகவும் இயக்கத்தின் முழு நேரத் தொண்டராகவும் தம்மை ஆக்கிக்கொண்டார்.

2. தம் அறிவுக்குச் சரியென்று பட்ட கருத்துகளை இடம், பொருள், ஏவல் கருதாமல், தாம் உணர்ந்தவாறே—அக் கருத்தின் நிர்வாணத் தன்மையை அப்படியே எடுத்துக் கூறினார்.

3. தாம் ஒத்துக்கொண்ட எந்தச் சிறு பணியாயினும், நிகழ்ச்சியாயினும் ஒரு சிறிதும் காலந் தவறாது சென்று அதனை நிறைவேற்றி வைத்து, தமிழகத்திலேயே—ஏன் இந்தியாவிலேயே—இத் தன்மைக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

4. சமுதாயப் பொதுநலத் தொண்டு ஆற்ற முன்வரும் எவரும் மானம் கருதக் கூடாது என உலகுக்கு அறிவித்துத் தாமே அதற்குச் சான்றாக விளங்கினார்.

5. தாம் மேற்கொண்டிருப்பது நன்றிக் கடன் பாராட்டாத பணி (Thankless job) என்பதை விநாடிதோறும் எண்ணிச் செயல்பட்டார்.

6. கல்வியறிவு அற்ற மக்கள் நிரம்பிய நாட்டில் கசப்பான கொள்கைகளைப் பரப்ப முனைந்த அவர், பாமரர் மொழியில்—கவுதம புத்தரைப்போல், தம் கருத்துகளை எடுத்துச் சொல்லிப் பரப்பினார். தர்க்கரீதியாகத் தம் கருத்துகளைச் சொல்வதிலும், எழுதுவதிலும் நிகரற்றவராக விளங்கி—மாற்றுக் கருத்தினரையும் ஈர்க்கும் தன்மையில் அனைவர் நெஞ்சங்களையும் பிணித்துச் சிந்திக்க வைத்தார்.

7. மேடைச் சொற்பொழிவுகளில், உரையாடலில் அல்லது விவாதத்தில் அவர் முன்னால் வைக்கப்பட்ட வினாக்களுக்குச் சிறிதும் தயக்கமின்றி அனைத்துக்கும் பதிலுரைத்து அய்யம் போக்குவதில் அவருக்கு நிகர் அவராகவே விளங்கினார்.

8. கொள்கைகள் பற்றிய விவாதத்தை எவரிடத்து மேற்கொண்டாலும், தமது நிலை(Position)யைப் பற்றிய எண்ணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மனந் திறந்து விவாதித்து, அறிவுக்குச் சரியென்று பட்ட முடிவைத் தயங்காது ஏற்றுக்கொள்ளும் சான்றோராக விளங்கினார்.

9. ஆண்டு, அறிவு, கொள்கை என்ற தன்மைகளை அறவே மறந்து மனிதத் தன்மைக்கு மதிப்புக் கொடுத்து, எவரையும் எங்கும் மரியாதையாகவும் அன்பாகவும் அழைப்பது, நடத்துவது என்ற உயர்ந்த மனிதப் பண்புக்கு அவரே ஓர் உறைவிடமாகத் திகழ்ந்தார்.

10. முன்னோர்கள், பெரியோர்கள், ஞானிகள் ஆகியோர் சொன்னவை என்பதற்காக எல்லாக் காலத்துக்கும் அவை பொருந்தும் என நம்புவது மூடத்தனம் என ஓங்கி உரைத்த அவர்—அறிவு வளர வளரப் பழங்காலக் கருத்துகள் வீழும் எனவும்; தாம் சொல்லியுள்ள கருத்துகளுள் சிலவும் வருங்கால மக்களால் ஒதுக்கப்பட நேரிடலாம் எனவும், அது தவறல்ல எனவும் கூறி, கட்டற்ற சிந்தனையாளருக்குரிய தன்மைக்கு அவரே முழு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

11. தாமே பதவிகளைப்பெற முடியும் என்ற நிலை இருந்தபோதும்—அதிகார பூர்வமாகத் தம்பேரில் பதவி திணிக்கப்பட்டபோதும் பதவிகளைத் துச்சமென எண்ணிச் செயல்பட்டார்.

12. தம் முடிவுகளுக்கும் கருத்துகளுக்கும் எத் தன்மைவாய்ந்த ஒருவரையும் முன் மாதிரிக்காகவோ (Precedent), மேற்கோளுக்காகவோ எடுத்தாளாத சீரிய சுயசிந்தனை யாளராக இலங்கினார்.

13. அனுபவப் பழமாகத் திகழ்ந்த அவர் நெடுந்தூர நோக்குடன் வருங்கால வளர்ச்சிபற்றியவற்றைத் திட்டவட்டமாகக் கூறி—அறிவியக்க வளர்ச்சியின் கடைசி எல்லைக்கோட்டை உலகுக்கு அடையாளம் காட்டிய வல்லவராகத் திகழ்ந்தார்.

14. பெரியார் ஈ. வெ. ரா. என்றால் நாணயம் என்பது பொருள் என வழங்கும் தன்மையில் பொது வாழ்விலும், சொந்த வாழ்விலும் அவர் திகழ்ந்தார்.

இத்துணைத் தனிச் சிறப்பியல்புகளுக்கும், மற்றும் பல அரிய குணங்கட்கும் உறை விடமாகத் திகழ்ந்த அவர்; தமக்கு வினாத் தெரிந்த காலந்தொட்டு ஓய்வறியாத போர் வீரராகத் திகழ்ந்தார்.

1927-ல் பெரியாரின் வயது 48.

1925 முதல் பட்டிதொட்டியெல்லாம் சென்று தம்மையே நம்பிச் சூறாவளி வேகத்தில் சுயமரியாதைப் பிரசாரம் செய்துவந்த அவரை அன்றையக் கண்ணோட்டப்படி வயது முதிர்ந்தவர் எனக் கருதி, அவர் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென நேரிலும் கடிதம் வாயிலாகவும் பலர் வேண்டுகோள் விடுத்தனர்.

'ஓய்வு கொள்வது, துருவை ஏற்பது' (To rest is to rust) என மார்ட்டின் லூதர் என்ற சீர்திருத்தக்காரர் கூறியிருப்பதாக எனக்கு நினைவு. அன்னாரைக் காட்டிலும் மிகத் தீவிரமாக, 'ஓய்வு கொள்வது, காலத்தைக் கொல்வது' என்றே கருதித் தம் வாழ் நாளெல்லாம் செயல்பட்டார் பெரியார்.

ஓய்வு என்பதை ஒருபோதும் வேண்டாத அவர் மேற்கண்ட தன்மையுள்ள வேண்டு கோளை 1927 முதலே புறக்கணித்தார். பின்வரும் அவரது விளக்கம் இதனை நமக்கு உணர்த்துகிறது.

'முக்கிய நண்பர்களில் பலர் உடல் நிலையைக் கவனிக்கும்படிக்கும், ஓய்வெடுத்துக் கொள்ளும்படிக்கும் எழுதிவருகிறார்கள்.'

'ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டிய சமயம் நமக்குத் தெரியும். அதாவது, நமது தொண்டு நாட்டிற்கு உதவாது என்றாவது, நமது தொண்டை நாட்டார் ஏற்பதில்லை என்றாவது நமக்குத் தெரிந்தால் யாரிடமும் சொல்லாமல் நாமே ஓய்வெடுத்துக்கொள்வோம். அதுவரை எடுத்துக்கொள்ளும் ஓய்வு உண்மையான ஓய்வாகாது.'

['குடி அரசு'-தலையங்கம்—17-7-1927]

நாட்டார் அவர்தம் தொண்டை ஏற்காத நாளில்லை; ஏற்காத துறையில்லை; எனவே என்றும் அவருக்கு ஓய்வு கிட்டவில்லை.

ஓயாத உழைப்பே அவருக்கு ஓய்வை அளித்தது.

அன்னாரது நெடிய பொது வாழ்வில் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பேருரை ஆற்றாமலும்; சந்திக்கும் இயக்கத் தோழர்கள், முக்கிய நண்பர்கள், பொதுமக்களிடத்தில் உரையாடல் செய்யாமலும்; படிப்பது, ஆராய்ச்சி செய்வது, கட்டுரை தீட்டுவது என்பவற்றை மேற்கொள்ளாமலும் அவர் கழித்த நேரம் மிகக் கொஞ்சமேயாம்.

மருத்துவ மனைகளில் ஓய்வுபெற்ற காலத்தும் உரையாடல்-படிப்பு-கட்டுரை தீட்டுதல் அனைத்தையும் மேற்கொண்டே திகழ்ந்தார்.

தமிழகம், வடஇந்தியா, தூர அயல்நாடுகள் எனப் பல்வேறிடங்கட்கும் அவர் பயணம் மேற்கொள்ளாது ஓரிடத்தில் தங்கியிருந்த நாட்கள் சிலவேயாம்.

குறிப்பாக 31-7-1969-ல் வேலூர் C. M. C. மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டபோது சிலமணி நேரம் மருந்து மயக்கத்திற்கு ஆட்பட்டிருந்தார். 1973 டிசம்பர் 19 நள்ளிரவு முதல் 23 முன்னிரவுவரை கொள்கைபற்றி உரையாட இயலாத அளவுக்கு நோயால் துன்புற்றுக் கொண்டிருந்தார்; 23-12-1973 இரவு சுமார் 12 மணி முதல் 24-12-1973காலை 7-40 மணிக்கு அன்னாரின் மூச்சு அடங்கிய வரையில் மட்டுமே—உணர் விழந்து வாய் பேச முடியாத நிலையில் ஓய்ந்து இருந்தார்.

இச் சிலமணி நேரத்தோடு, உணவும் துயிலும் கொள்ள அவர் எடுத்துக்கொண்ட நேரமும் சேர்த்து அவ்வளவு காலம்தான்—பொது வாழ்வுக் காலம் முழுவதிலும், கொள்கை பற்றிப் பேசாத நிலையில் அவர் பெற்றிருந்த ஓய்வு நேரமாகும்.

மீதி நேரமெல்லாம் உரையாடல், சொற்பொழிவு; பயணம், கிளர்ச்சி, சிறைவாசம்; படிப்பு, ஆராய்ச்சி, எழுத்து என 95ஆம் வயதுவரை ஓய்வு என்பதை மருந்துக்கும் பெற்றிராத நெடும் பயணமாக அவர்தம் வாழ்க்கை அமைந்திருந்தது.

அவர் வாழ்வு 67ஆம் வயதில் முடிந்துவிடும் என அவரின் பெற்றோர்கள் கருதியிருந்தனர். அந்தக் கால நிலையில் 60 ஆண்டு வாழ்வதே முழு நிறைவான வாழ்வு எனவும், நூறாண்டு வாழ்வது பெறற்கரிய பேறு எனவும் கருதப்பட்டிருந்தது. அக் காலச் சோதிடர்களும் இதனை மனதிற்கொண்டே பெரியாரின் வயது 67 என அறுதியிட்டனர். இது குறித்து, அவர்தம் பேச்சின் பின்வரும் பகுதி சிந்தனைக்கு உரியதாகும்.

'என் சோதிடத்தில் எனக்கு 67 வயது என்று குறித்து என் பெற்றோர்கள் அச்சுப் போட்டிருக்கிறார்கள்; ஆனால் நான் இன்று 94 வயதில் சவுக்கியமாக இருக்கிறேன்; என் சோதிடம் இன்னமும் இருக்கிறது; ஆனால், அது பொய்யாகிவிட்டது. அந்தக் காலத்தில் 100 வயது இருப்பது என்பது அதிகம் என்று கருதி, எனக்கு 67 வயது என்று சோதிடன் கணித்தான். அப்போது சராசரி வயது 10—அதனால் 67 என்று எழுதினான்; இப்போது சராசரி வயது 52—இப்போது அப்படி எழுதமாட்டான்.'

[பெரம்பலூர் வட்டம், ஒகளூரில் சொற்பொழிவு—13-7-1973, என் கைக் குறிப்பு]

(ஒரு சமயம், அவர் சோதிடத்தில் 60 வயது குறித்துள்ளதாகவும் வெளியாகியுள்ளது.)

அன்னாரின் சுயமரியாதைக் கொள்கைகளுள் ஒன்றான சோதிட மூட நம்பிக்கை ஒழிப்புக்கு அவரே பெருஞ்சான்றாக விளங்கினார். இம் மூட நம்பிக்கை விதித்த வரம்பைத் தாண்டி மேலும் 28 ஆண்டுகள் வாழ்ந்த பெரியார், வருத்தும் நோய்கள் பலவற்றுக்கு இருப்பிடமாக இருந்தார்.

1945 பிப்ரவரியில் அவரது நாக்கில் கொப்புளங்கள் கண்டன; வாய் நாற்றமெடுத்தது; சித்த வைத்தியம்—நோயைக் குணப்படுத்தவில்லை. எனவே, சென்னை தலைமை மருத்துவ மனைக்குச் சென்றார். அவர் நாக்கில் புற்றுநோய் கண்டிருப்பது அங்குக் கண்டு பிடிக்கப் பட்டது. 16-3-1945 முதல் சில நாட்கள் கதிரியக்கச் சிகிச்சை அளித்தபின் குணமாயிற்று. ('குடி அரசு' 1945 பிப்ரவரி 24; மார்ச்சு 17, 24, 31). 'நாத்திகம் பேசி, நாப் புற்றுப் பெற்றார்' எனச் சமயக் கொள்கையினர் பிரசாரம் செய்து, நாத்திகத்தைச் சாட அவர்கட்கு வாய்ப்பில்லாது போயிற்று.

அன்னாரை வருத்திய நோய்களுள் வயதால் மூத்ததும் இறுதிவரை துன்பம் தந்ததும் குடலிறக்க (Hernia) நோயாகும். 95 வயது அடைந்த அவரை இக் குடலிறக்க

நோய் அவரது 11ஆம் வயதில் பற்றிற்று. இந் நோய் கண்ட பத்தாண்டுகளில் கும்பகோணத்தில் அறுவை செய்துகொள்ள விரும்பினார்; எனினும் அவ்வாறு செய்து கொள்ள வில்லை. சிறிது காலம் கச்சை (belt) கட்டிக்கொண்டிருந்தார்; பின்னர் அவ்வப்போது வைத்தியம் செய்துகொண்டு, முற்றிய இந் நோயுடனேயே பம்பரமெனச் சுழன்று பணி யாற்றினார். 1956-லும், பின்னர் 1967, 1969, 1972ஆம் ஆண்டுகளிலும் இந் நோய்த் தொல்லை அதிகமாகிப் பல நாட்கள் வைத்தியம் செய்துகொள்ள நேர்ந்தது.

இந் நோய் ஒருபக்கம் வருத்த, சிறு நீர்க்கால் அடைப்பு நோய் (urinal trouble) இன்னொரு பக்கம் மிகக் கொடுமையாக வருத்திற்று. இந் நோய், அண்மைக் காலமாக—ஒவ்வொரு நாளும் அவரை வருத்திற்று.

அன்னார் படித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும், உரையாடிக்கொண்டும், சொற்பொழிவாற்றிக்கொண்டும், பயணம் செய்து கொண்டும் இருக்கும்போது திடுமென இந் நோய் அவரைத் தாக்கும். நோய் தாக்கியவுடன் முணகுவார்; கால்களை மெத்தையின்மீது அடித்துக்கொள்வார்; தலையணைகளை அணைத்துக்கொண்டு துடிதுடிப்பார்; எல்லாம் 5 கன்னல்களில் மறைந்துவிடும்—உடனே அவர் செய்துகொண்டிருந்த பணியை விட்ட இடத்திலிருந்து முன்னினும் வேகமாகத் தொடருவார். அதைக் கண்ணுற்ற பின்னரே அன்னார் துடிப்பதைப் பார்த்து வருந்திய நெஞ்சங்கள் ஆறுதல் பெறும். நோயால் நலிவு தோன்றித் துன்பப்பட்டவராகத் தோற்றமளிக்காமல்—விட்ட பணியை வேகத்துடன் தொடரும் அந்த நெஞ்சுரம் அவரிடத்து மட்டுமே காணத்தகும் எனின் அது மிகையன்று.

இத்தகைய வருத்தும் நோய்கள் அவரைப் பல்லாண்டுகள் துன்புறுத்திக்கொண் டிருந்த நிலையிலும், அவர்தம் உறுப்புகள் சமீபகாலம் வரை சோர்வுறவில்லை. வலப்புறக் காது மட்டும் சிறிது மந்தப்பட்டிருந்தது. இது குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

'ஒரு சமயம் என் காதுகளில் அதிக வலி இருந்தது. நாட்டு வைத்திய முறையில், காய்ச்சிய நல்லெண்ணெயை என் காதுகளில் ஊற்றியவர்கள்—வலது காதில் கடுஞ்சூடான எண்ணெயை ஊற்றிவிட்டார்கள்; அந்தக் காதின் ஒலிப்பறை சேதப்பட்டது. அன்று முதல் அக் காது சிறிது மந்தமாகக் கேட்கும் தன்மை அடைந்தது. என்னுடைய மற்ற புலன்கள் வயதாலோ, உழைப்பாலோ சோர்வுறவில்லை.'

[அரியலூர் வட்டம், குமிளியத்தில் சொற்பொழிவு—17-10-1972, என் கைக் குறிப்பு]

அம் மேதையின் அன்றாடப் பழக்க வழக்கங்கள் மிகவும் எளிமையானவை.

இரவு எந்த நேரத்தில் படுத்தாலும் காலை 6 முதல் 7 மணிக்குள் எழுந்து விடுவார்; காலையில் ஒரு கிண்ணம் காஃபி அருந்துவார்; காலை 8 மணிக்குள் இரண்டு அல்லது மூன்று இட்டலி உண்பார்.

காலை 9 மணி வரையில் செய்தித் தாள்களைப் படிப்பார்; பின்னர் தம்மைச் சந்திப் போருடன் உரையாடல், விவாதம் மேற்கொள்வார்; நூல்களை ஆராய்வார்; கட்டுரைகள் தீட்டுவார்; கடிதங்களைப் படித்துப் பதில் எழுதுவார்—எழுதச் செய்வார்; மதிய உணவு நேரம் வரை இவை நடைபெறும்.

மதியம் 1 மணிக்குள் உணவு கொள்வார்—மதியத்தில் புலால் இல்லாத உணவைப் பெரிதும் விரும்பமாட்டார்; ஆனால், எல்லா இடங்களிலும் இதை அனுசரிக்கமாட்டார்; உணவுக்குப்பின் சர்க்கரை சேர்த்த ஒரு கிண்ணம் தயிர் சாப்பிடுவார்.

மதியம் உணவுக்குப்பின் சிறிது நேரம் கண்ணயர்வார்; இன்றேல் ஓய்வாக இருப்பார்; பிற்பகல் 4 மணிக்குள் ஒரு குவளை காஃபி அருந்துவார். பசிப்பதுபோல் தோன்றினால் பிஸ்கட் உண்பார்; எப்போதேனும் எள்ளுருண்டை, நெய் முறுக்கு, காட்பரீஸ் இனிப்பு, ஹார்லிக்ஸ் பானம், வடை சாப்பிடுவார். இரவு சுமார் 7 மணி வரை படிப்பு—எழுத்து—உரையாடல் இவற்றில் ஈடுபடுவார்.

மாலை நிகழ்ச்சி இல்லாத நாட்களில் இரவு 8 மணிக்குள் இரண்டு இட்டலி, ஒரு குவளை பால் சாப்பிடுவார்; 9-க்கு மேல் 10 மணிக்குள் உறக்கம் கொள்வார்.

மூன்று வேளைகளிலும் மலை வாழைப்பழம் அவருக்கு மிக விருப்பமான பண்டம்; ஒரு நாளைக்கு ஆறு, ஏழு பழம் உண்பார். நல்ல மாம்பழத்தை விரும்பித் தின்பார்; மாம்பழத்தை அவரே கத்தியினால் குடைந்து தின்னுவது அவருக்கே அமைந்த தனிப் பாங்கு.

நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது பேச்சின் இடையில் இரண்டொருதடவை சூடான காஃபி சிறிது அருந்துவார். கூட்டம் இரவு 11 மணிக்கு முடிந்தாலும் உடனே 'வேனி'ல் புறப்படுவார்; அவ் வண்டியிலேயே உண்பார்; அதிலேயே உறங்குவார்; பயணம் செல்லும் நாட்களில் 'வேன்' அவருடைய இல்லமாக இலங்கும். பயணத்தில் எங்குவேண்டுமானாலும் தங்கிவிடுவார்.

மாலை நிகழ்ச்சிக்குப் பகல் 2 மணிக்குப் புறப்பட்டால் போதும் என்றாலும், 1 மணிக்கே அனைவரையும் உசுப்பிவிட்டுப் புறப்படுவார்; நிகழ்ச்சி நடத்துவோர் எதிர் நோக்கும்படி வைக்காமல் பலமணி நேரம் முன்னதாகவே சென்றடைவார். இதில் அவர் தப்பியதே இல்லை.

மிகப் பல கிளர்ச்சிகளை நடத்திய அவர், கிளர்ச்சிகளுக்கு ஆதரவு திரட்ட, தமிழகம் முழுதும் புகைவண்டியிலேயே பயணம் மேற்கொண்டார். எல்லாத் தடவைகளிலும் மூன்றாம் வகுப்பிலேயே தொண்டர்குழாத்துடன் பயணம் செய்த எளிய தன்மையினர், அவர்.

மாநாடுகள் காலை 10 மணிக்குத் துவங்கி 2 மணிக்கும், மாலை 4 மணிக்குத் துவங்கி இரவு 10 மணிக்கும் முடியும்—இந்தப் பத்து மணி நேரமும் அயராது அமர்ந்து, சோர்வுறாது செயல்படுவார்.

1973 பிற்பகுதியில், உணவு, அளவில் மிகக் குறைந்தது. காலையில் ஒரு இட்டலி, பகலில் கஞ்சி, மோர் சோறு; ஒரு நாளைக்கு ஒரு மலைப்பழம் எனக் குறைவதும் —பின்னர் பழைய அளவுக்கு வருவதுமாக இருந்தது.

அன்னாரின் உடைகள் மிக எளிமையானவை. ஐந்து முழ வெள்ளை அல்லது வண்ணக் கைலி; ஒரு அரைக்கை பனியன்; முக்கால் கை கறுப்புச் சட்டை; துடைப்பதற்குப் பெரிய துண்டு. சட்டைப் பைகளில் நாட்குறிப்பு, முக்கிய கடிதங்கள், கண்ணாடிக் கூடு, மொத்தமான பேனா, படிக்கப் பயன்படும் லென்ஸ் இவை பிதுங்கிக்கொண்டு இருக்கும். பனியன் பையில் பணப் பை (Purse) கிடக்கும்—அதை நீண்ட ஊக்குகள் காக்கும். பணத்தை அடிக்கடி எண்ணிப் பார்த்து உற்சாகம் கொள்வார்; செலவைச் சுருக்கிச் சேமிப்புச் செய்வது அவருடன் பிறந்த ஒரு பழக்கம் (habit). குளிர் நாட்களில் ஒரு கம்பளிப் போர்வை; எப்போதும் நீண்ட கைத் தடி வைத்திருப்பார்.

குளிப்பது—அவருக்கு ஒரு பெரிய தொல்லை. உடலில் அழுக்கு வாடை தோன்றினாலன்றிக் குளிக்க விரும்பமாட்டார்; பெரிதும் வற்புறுத்தலின் பேரில்—வாரத்திற்கு ஒரு தடவை குளிப்பார். இது அவரால் மட்டுமே முடிந்தது. குளித்தவுடன்—பனியன் போடாத அவரது மேனியைப் பார்க்கப் பார்க்க ஆசையாக இருக்கும்; தங்க ரேக் எனப் பளிச்சிடும்.

நிழற்படம் எத்தனை தடவை எடுக்கப்பட்டாலும் தடவைக்கு ஒருவிதப் புன்னகை தவழும் அழகு முகம் அவருடையது.

தமக்குத் தெரிந்த பழைய நண்பர்கள்—இயக்கத்தினர் குடும்பத்தார் சந்திக்க நேர்ந்தால், குறிப்புத் தெரிந்தவுடனே அவர்களின் குடும்ப வரலாற்றையே மளமள வெனக்

கூறிச் சுவைபட உரையாடுவார். அத்தகு அனுபவமும், நினைவாற்றலும் ஒருங்கே அமையப் பெற்றவர் அவர். நண்பர்களிடமும் இயக்கப் பிரமுகர்களிடமும் உரையாடுங்கால் கிண்டல் பேசி—அதிலும் பகுத்தறிவு விளங்கச் செய்வதில் அவருக்கு நிகர் அவரே ஆவார்.

நிகழ்ச்சிகளுக்குச் செல்லுமிடங்களில் உணவு நேரங்களில் உடன் வந்த அனைவரும் உண்கின்றனரா என்பதை முதலில் கவனிப்பார்; உணவுப் பண்டம் வீணாக்கப்படுவதைப் பொறுக்கமாட்டார்; தம்முடன் வருவோர் தம் பார்வையை விட்டு அகலாது இருக்க வேண்டு மென விரும்புவார்.

சில வேளைகளில் முற்பகல் அல்லது பிற்பகல் ஓய்வில், அல்லது பயணத்தில்—தம் வாய்க்குள்ளேயே ஏதோ ராகத்துடன் அவர் பாடும் தமிழ்ப் பாட்டு காதுக்கு இனிமை தரும்.

அகன்ற நெற்றி—வெள்ளிக் கம்பியொத்த தலைமயிர்—மயிரடர்ந்த எடுப்பான புருவங்கள்—நீண்டு வளைந்த அகன்ற மூக்கு—கூர்த்த அறிவும் ஆளுமையும் கொண்ட பார்வை—புன்னகை தவழும் உதடுகள்—உதடுகளிடையே குத்தும் மீசை—பரந்து மடிந்த காதுகள்—அகன்ற தாடைகள்—பல்லினும் வலிய எயிறு—தூய வெண்ணிறத் தாடி—திமில் போன்ற பிடரி—குன்றனைய தோள்கள்—விரிந்த மார்பு—முன்னுக்குத் தள்ளிய வயிறு—திண்ணிய இடுப்பு—தொங்கும் குடலிறக்கத் தசைத் திரள்—சுமை தாங்காது தடுமாறும் கால்கள்—பெருவிரல் வளைந்த நீண்ட பாதங்கள்—இவை அவருடைய அங்க அழகுகள்.

இவர் தாம் பெரியார்!

இத்தகு உருவத்தில், உடையில், உடலழகுகளில்-பழக்கங்களில்—நாம் கண்ட அந்த அறிவுலக மேதை, குடலிறக்கத் தசைத் திரளையும் வேட்டியையும் மூத்திரக் குழாயையும் தொடைகளால் இடுக்கிக்கொண்டும், உதவியாளரின் தோளில் கை போட்டுக்கொண்டும்—கையைப் பற்றிக்கொண்டும் முக்கி முணகிக்கொண்டு 'வேனி'ல் ஏறுவதும், இறங்குவதும்; மேடைமீதேறி அரிமாவென அமர்ந்து வெண்கலக் குரலில்—வெஞ் சமரில் வாள் சுழற்றும் வீரனைப்போல் கையைச் சுழற்றியும், சுட்டியும்—அன்னார் ஆற்றும் வீர உரைகளை நாளெல்லாம், இரவெல்லாம், ஆண்டெல்லாம் அலுப்புச் சலிப்பின்றிக் கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

அத் தன்மையில் பல்லாண்டுகள் மேடைதோறும் அவரைப் பார்த்த நாம் இனி என்றும் காண்டல் இயலாது.

அத்தகு வீர உரைகளாலும், தர்க்கரீதியான எழுத்தாலும், தொல்லை விளைக்காத கிளர்ச்சி முறைகளாலும் அவர் பெற்றுத் தந்த பயன்கள் எண்ணிறந்தவை.

மதக் கோட்பாட்டுக்கு அடிமைப்பட்ட இப் பேருலகில் எந்த மாற்றம் காண விரும்பியவரும் கத்தியைக் காட்டி, இரத்தத்தைச் சிந்தியே மாற்றங்களை விளைத்துள்ளனர்.

1792-ல் பிரெஞ்சு நாட்டில் எழுந்த தொழிற் புரட்சியில் 4000 தலைகளுக்கு மேல் உருண்டன.

உலகப் புகழ் பெற்ற 1917 அக்டோபர் புரட்சியில்—ரஷ்யாவில், தொழிலாளர்களும்—ஆளும் வர்க்கத்தினரும் ஆயிரக்கணக்கில் உயிரிழந்தனர். சோவியத் மண்ணில் இரத்தத்தை நீராகப் பாய்ச்சித்தான் பொதுவுடைமை விதை தெளிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக அமெரிக்க அய்க்கிய நாட்டிலிருந்த ரஷ்யர் பலர் 1917-ல் கொல்லப்பட்டனர்.

அரசியல் சட்ட ரீதியாக சிறு மாற்றம் வேண்டிய அய்ரிஷ் மக்களைப்—பல்லாயிரவரைப் படுகொலை செய்தது, பிரிட்டிஷ் ஆட்சி—1920-ல்.

இத்தாலி நாட்டில் 1920-க்குப் பின்னர் வெடித்த தொழிற் புரட்சியின் பேரால் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' என அகிம்சை பேசிய இந்திய தேசிய வாதிகள் வெள்ளையரைச் சுட்டனர்; தண்டவாளத்தைப் பெயர்த்தனர்; பாலங்களைத் தகர்த்தனர்; அஞ்சலகங்களைக் கொளுத்தினர். வெள்ளையரும் பறவைகளைச் சுடுவது போல் இந்தியரைச் சுட்டனர். 'சுதந்தரப் போர்' என்ற பேரால் இவை நடந்தன.

மத உணர்ச்சிக்கும்-வெறிக்கும் ஆட்பட்ட இந்தியாவில்—இந்துக்களும், முஸ்லிம்களும்-தனி நாடு கோருவதன் பேரால்—இலட்சக்கணக்கானோர் 1947-ல் நவகாளியில் கோரக் கொலை புரிந்து கொண்டனர்.

மதத்தால் ஒருவரே எனினும்—இனத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள் எனக் கூறிச் சுதந்தரம் வேண்டிய வங்காள மக்கள்—பல இலட்சம் பேரைப் பலி கொடுத்துத்தான் 1970-ல் பங்களாதேஷ் கண்டனர்.

இந்தக் கோர சம்பவங்கள் உலக வரலாற்றின் பக்கங்களில் இரத்தக் கறையைப் படிய வைத்துள்ளன.

ஆனால், இரத்தம் சிந்தாமல்—கத்தியைப் பயன்படுத்தாமல்—பிறர் எவருக்கும் தீங்கு விளைவிக்காமல்—ஆட்சியைக் கைப்பற்றாமல்—தம் தொண்டர்கட்கு உடல் வருத்தம் மட்டுமே விளைவிப்பதன் மூலம்—49 ஆண்டு காலத்தில்—2000 ஆண்டு கால சமூக அடிமை நிலையை மவுனப் புரட்சி மூலம் (Silent Revolution) பெரிய அளவுக்கு மாற்றிய ஒரே தலைவர், உலக வரலாற்றில் பெரியார் அவர்களே ஆவார்.

உலகத் தலைவர்

பெரியார் ஓர் உலகத் தலைவர்.

மனித அறிவின் ஆற்றல் எல்லையற்றது; நாடோறும் புதுப் புது எண்ணங்களைத் தரவல்லது. அத்தகைய அறிவைத் தங்கு தடையின்றிப் பயன்படுத்திச் சிந்தித்தல் வேண்டும்; அவ்வாறு சிந்தித்துக் கண்ட முடிவைத் துணிந்து செயற்படுத்த வேண்டும்.

தாராள சிந்தனைக்குத் தடையாக உள்ள கடவுள், மதம் போன்ற அனைத்தும் மனிதனால் கற்பிக்கப்பட்டவை. அவற்றை அழித்தொழிப்பது மானிடத்தின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது. சுயமரியாதைக் கொள்கையின் அடிப்படை இதுவேயாம்.

இக் கொள்கையின் கர்த்தாவும், உரைகாரரும், விளக்குநரும், செயற்படுத்துநரும், பிரசாரகருமாகத் திகழ்ந்தவர்—கடந்த 2500 ஆண்டு கால உலக வரலாற்றில் பெரியார் ஒருவரேயாவார்.

கிரேக்க நாட்டில் தோன்றிய சாக்ரடீஸ், ‘ஏன்? எப்படி? எனக் கேளுங்கள்!’ என இளைஞர்கட்குப் போதித்தார். அதற்காக மதவாதிகளால் நஞ்சூட்டப்பட்டு மறைந்தார். வரலாறு தந்த ஆராய்ச்சியாளர் (Inquirer) அவர்.

இந்தியப் பெருங் கண்டத்தில் 2520 ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய புத்தர், ‘முன்னோர் சொன்னவை என்பதற்காக எதையும் நம்பி ஏற்காதீர்கள்; புத்தியைக் கொண்டு சிந்தியுங்கள்!’ எனக் கூறி அனைவரையும் சிந்திக்க வைத்தார். பல இடங்கட்கும் நேரில் சென்று மக்களைக் கண்டு பாமரருக்கும் புரியும் மொழியில் பேசித் தம் கொள்கைகளைப் பிரசாரம் செய்தார், புத்தர்.

உலகத்தில் நம்பிக்கை வாதத்தைத் தகர்த்த (Agnostic) முதல் பேரறிஞர் அவர்.

அவர் காலத்தில் இருளினும் இருண்ட காடுகள்—உயிரைக் குடிக்கும் விலங்குகளும் பிராணிகளும் அண்டிக் கிடந்த, போக்குவரவு வசதியற்ற பிரதேசங்கள்—அத்தகைய வசதிக் குறைவான நாளில் தம் அறிவுப் பிரசாரத்தைப் புத்தரால் எவ்வாறு ஆற்ற முடிந்தது எனப் பலரையும் நான் வினவ நேர்ந்த போது, பெரியார் ஒருவரே அதற்குப் பதிலளித்தார்.

‘எதற்கும் துணிந்த—விசுவாசமுள்ள சிலர் புத்தரின் தொண்டர்களாக இருந்து அவர் கொள்கையினைப் பரப்பக் கருவியாக அமைந்தனர். புத்தரின் வெற்றிக்கு அதுதான் காரணம்’ என—18-6-1965-ல், திருச்சி மாவட்டத்தில் சுயமரியாதைப் பயிற்சி அளிப்பதற்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டபோது எனக்குக் கூறினார்.

இத் தன்மையில் புத்தரும், பெரியாரும் ஈடு இணையற்ற உலக அறிவியக்கத் தலைவர்களாக—வரலாற்றுச் சான்றாகத் திகழ்கின்றனர்.

அண்மைக் காலத்தில் மேலை நாடுகளில் அறிஞர்கள் ஆர். ஜி. இங்கர்சால், சார்லஸ் பிராட்லா, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் முதலான நாத்திகவாதிகள் தலை சிறந்த அறிவியக்கப் பேராசிரியர்களாகத் திகழ்ந்தனர்.

அறிஞர் இங்கர்சால் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவையும், கானடாவையும், பிற மேலைநாடுகளையும் கலக்கிய மிகப்பெரு நாத்திகராவார்.

அவர் கிறித்துவ மதக் கொடுமைகளையும், அறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளையும் இளமை முதல் எதிர்த்தவராவார்.

1833-ல் பிறந்த அவர் 1856 முதல் மதக் கொடுமையை எதிர்த்துப் பிரசாரம் மேற்கொண்டார்; 1860-ல் இலினாய்ஸ் மாகாணத்தில் பீகின் (Pekin)னில் மூடநம்பிக்கையை எதிர்த்து, நம்பிக்கை வாதத்தைத் தகர்க்கும் (Agnostic) பிரசாரத்தை முதலாவதாகத் தொடங்கினார். அப்போது முதல் தொடர்ந்து கடவுள், பேய்கள், மூடநம்பிக்கை, வைதிக மனப்பான்மை, பைபிள், நம்பிக்கைவாதம் எனப் பலவற்றையும் வெகுண்டு எதிர்த்துத் தாக்கி—நம்பிக்கைவாதத் தகர்ப்பாளராகவும், நாத்திகராகவும் (Agnostic and Atheist) திகழ்ந்தார். அன்னாரின் கவர்ச்சி மிக்க சொற்பொழிவுகள் இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தன; அவர் வீசிய ஆற்றல்மிக்க தர்க்க ரீதியான வாதங்கள் நம்பிக்கைவாதிகளை வாயடைக்கச் செய்தன.

அவர் பேச்சு நிகழ்த்தப்படாத பெருநகரம் அமெரிக்காவில் இல்லை எனக் கூறத்தக்க அளவுக்கு, அவர் இறுதிக் காலமான 1899 வரையில் 39 ஆண்டுகாலம் பிரசாரப் பணியாற்றினார்.

அங்கு அவருடைய பிரசாரத்தைக் கேட்கப் படித்த இளைஞர்களும், பெண்களும் பேரார்வத்துடன் திரண்டனர்.

ஒரு சொற்பொழிவுக்கு அக் காலத்தில் குறைந்த பட்சம் 300 டாலர் அளித்து அவரை அழைக்கலாயினர். (The Life and Letters of Robert G. Ingersoll, By Eva Ingersoll Wakefield, Watts & Co., London 1952).

அங்கு அத்தகு மேதையின் உழைப்பால் விளைந்த பெரும் பயன்—படித்தவர்கள், பிரபுக்கள், பெரிய மனிதர்கள் எனப்படுவோர் இன்று நாத்திகர்களாகத் திகழ்கின்றனர் என்பதாம். அன்னாரின் ஆணித்தரமான நாத்திகக் கருத்துகள் உலகின் பல பகுதிகளிலும் படித்தவர்கள் மட்டத்தில் பரவி நிற்கின்றனவெனக் கொண்டால் அது தவறாகாது.

அண்மையில் 1970-ல் மறைந்த பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்—1883 முதல் நாத்திகம் பற்றிப் பேசியும், எழுதியும்–படித்தவர்களிடையே பெரும்புரட்சியை விளைவித்தவராவார்.

தலை சிறந்த கணிதமேதையான அவர் எழுதியுள்ள சுமார் 80 நூல்களுள் கணிதம் பவுதிகம் போன்ற விஞ்ஞான ஆராய்ச்சி நூல்கள் மிக அதிகம். நாத்திகம் பரவத் துணை புரியும் தத்துவ விளக்கங்கள் கொண்ட நூல்கள் சுமார் 25-க்கு மேற்பட்டவை. 1890-ல் நாத்திகம் பற்றிச் சொற்பெருக்காற்றத் தொடங்கிய அவர்—சுமார் 1955 வரையில் கணிதம், பவுதிகம், உலக அமைதி, நாத்திகம் இவைபற்றிச் சொற்பொழிவாற்றும் பணியை மேற்கொண்டும், பின்னர் வாழ்ந்த 15 ஆண்டுக் காலம் ஓர் இடத்திலிருந்தே எழுத்துப் பணியையே முக்கியமாகக் கொண்டும் தொண்டாற்றியவராவார்.

1899-ல் இலண்டனில் பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், (Rationalist Press Association) தோன்ற மூலகாரணராக விளங்கிய அவர், அங்கு பிரபுக்களும், பேராசிரியர்களும், படித்தவர்களும் பகுத்தறிவுக் கொள்கையாளர்களாக விளங்க வழிவகுத்துச் சென்றவராவார்.

97 ஆண்டு வாழ்ந்த அவர்தம் சிந்தனையைக் கொள்ளை கொண்டவை விஞ்ஞான ஆய்வு, நாத்திகப் பிரசாரம், உலக அமைதிக் காப்பு எனப் பல்வேறுபட்ட செயல் முறைகளாம்.

[செய்திக் குறிப்புகள், பிப்ரவரி, 1970]

தலைவர் தந்தை பெரியார் அவர்கள், 1891 முதல் நாத்திக எண்ணங்கொண்டு, 1900 முதல் நாத்திகம் பேசி, 1919 தொட்டு பொதுத் தொண்டினை—பிரசாரப் பணியினை ஏற்றவராவார்.

1920-க்குப் பிற்பட்ட காலத்தில்—பெரியார் மேற்கொண்ட தொழில் யாது? என்ற வினாவுக்கு—அவர் ஒரு வணிகர்; வேளாண்மைக்காரர்; ஆலை அதிபர்; இதழ் ஆசிரியர் என்ற தன்மையில் எந்த ஒன்றையும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்குத் தம்மை அவர் இலக்காக்கிக் கொள்ளவில்லை. ஆனால், அத் துணைக்கும் இலக்காகித் திகழ முழுத் தகுதியும் வாய்ப்பும் என்றும் அவருக்கு இருந்தது. ஆயினும், அவரைப்பற்றி இவற்றுள் எதைக் குறிப்பிட்டுச் சொல்ல இயலும்? எதையும் சொல்ல இயலாது.

'பெரியார் 1925 முதல் 48 ஆண்டுக் காலம் ஒரு முழுநேர அறிவியக்கப் பிரசாரத் தொண்டராகத் திகழ்ந்தார்' எனக் கூறுவதுமட்டுமே சாலப் பொருந்தும். சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த 1925ஆம் ஆண்டு முதல் அன்னாரின் இறுதி மூச்சு அடங்கும் வரை அவர்தம் சிந்தனையை—சொற்பொழிவை—எழுத்தை—செயல் திட்டங்களை ஆட்கொண்டு நிலவியது முற்றிலும் நாத்திகப் பிரசாரமேயாகும். அதன்மூலம் கோடிக்கணக்கான மக்கட்குத் தன்மான உணர்வையும், சிந்திக்கும் திறனையும் ஊட்டினார்.

இத் தன்மையினராக இயங்க அவரால் எங்ஙனம் முடிந்தது?

நாம் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, எந்தக் கொள்கையினை அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்கிறாரோ அக் கொள்கைக்கே தம்மை முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்டு, முழுநேரத்தையும் அப் பணிக்கே பயன்படுத்தும் இயல்பினர் பெரியார்.

'தம்மம் சரணம் கச்சாமி'—'கொள்கை வழி நடப்போம்' என்ற நெறிக்கு நிகரில்லாத எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் அவர்.

தாம் மேற்கொண்ட பணிக்குத் தம் பொருட் செலவிலேயே திட்டங்கள் தீட்டியும் செயற்படுத்தியும் சிலகாலம் பணியாற்றும் அளவுக்குப் பொருள்வசதி படைத்தவராகத் திகழ்ந்தார்.

கொஞ்ச காலத்திற்குப் பின்னர் பொது மக்கள் தாமே விரும்பி அழைத்துச் செயல் படும் அளவுக்குப் பாமர மக்கள் இயக்கமாக-சுயமரியாதை இயக்கத்தை வளர்த்தார்; நாடெங்கும் எண்ணற்ற தொண்டர்களையும், எதற்கும் துணிந்த இலட்சிய சகாக்களையும் கொண்டிலங்கினார்; அச் சூழலிலும் தாமே ஓயாது செயல்படுவதெனத் துணிந்து துடிக்கும் காளைப் பருவத்தினரும் நாணும் தன்மையில்—தம் உயிர் போமளவும் சுழன்று சுழன்று பணியாற்றினார்.

ஓர் ஆண்டின் பெரும்பகுதி நாட்கள்—நூற்றுக்கணக்கான மைல் தொலைவுக்கு அன்றாடம் பயணம் செய்து வெளியிடங்கட்குச் சென்று சொற்பொழிவு நிகழ்த்தியும்; எழுதியும், கிளர்ச்சியை மேற்கொண்டும் பிரசாரப் பணிபுரிந்த 95 வயது மனிதர், உலகத்தில் பெரியார் ஒருவரே ஆவார் எனின் அது மிகையன்று.

தம் 90ஆம் வயதில் அவர் பயணம் செய்த நாட்கள் 141—சொற்பொழிவாற்றிய நிகழ்ச்சிகள் 180; தம் 91ஆம் ஆண்டில் பயணம் புரிந்த நாட்கள் 131—பேசிய நிகழ்ச்சிகள் 150; 92ஆம் வயதில் பயணம் புரிந்த நாட்கள் 175—அறிவுரை வழங்கிய நிகழ்ச்சிகள் 244, 93ஆம் வயதில் பயண நாட்கள் 183—பேருரையாற்றிய நிகழ்ச்சிகள் 249; 94 ஆம் ஆண்டில் பயணம் செய்த நாட்கள் 177—உரை நிகழ்த்திய நிகழ்ச்சிகள் 229; 95ஆம் ஆண்டில் அவர் வாழ்ந்த 98 நாட்களில், பயணம் புரிந்த நாட்கள் 35; விளக்க உரை ஆற்றிய நிகழ்ச்சிகள் 42. அம்மம்ம! எழுதவே கை நடுங்கும் இந்தச் சூறாவளிப் பயணத்தை எந்த நாத்திகரும், அல்லது தலைவரும் என்றும் எங்கும் 90 வயதுக்குப் பின் மேற்கொண்டதாகச் சான்றே இல்லை; இன்றளவும் இல்லை.

தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில், தமது உயிர்க் கொள்கையான சமுதாய இழிவு ஒழிப்புக்கென மேற்கொண்ட புயல் வேகப் பயணத்தில் 18-11-1973 முதல் 28-11-1973 வரை திருச்சி, மதுரை, காரைக்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை, வேலூர் (வ. ஆ.),

கடலூர், தருமபுரி, சேலம், கோவை என நாள்தோறும் ஒவ்வொரு ஊராக, 200, 300 கல் தொலைவுக்கு—சிறியதான 'அம்பாசடர்' காரில்—ஓய்வு கொள்ளாது, உறக்கமின்றி—குளிரின் கொடுமையையும், மழையின் தொல்லையையும் துச்சமெனக் கொண்டு பயணம் மேற்கொண்ட நெஞ்சைக் குலுக்கும் அப் பதினோரு நாள் சுற்றுப் பயணத்தை அஞ்சாது நிகழ்த்திய ஆற்றல் மறவர் அவர்.

உலகின் பல பகுதிகளில் நூறு வயதுக்கு மேற்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறு வாழ்வோர் பரம்பரையாகத் தாங்கள் புரிந்த தொழில்களை மேற்கொண்டு ஓரிடத்திலேயே நிலையாக வாழ்ந்து வருபவர்களாவார்கள்.

இந்த நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த வயது முதிர்ந்த பெருந் தலைவர்களாகத் திகழ்ந்த காந்தியார், திரு. சி. இராசகோபாலாச்சாரியார் போன்றோர் பெரிதும் இருந்த இடத்திலிருந்தே, நீரோடும் போக்கில் செல்வதான தங்களின் கருத்துகளை எழுதிக் குவித்தவர்களாவர்—பயணம் மேற்கொண்டு கருத்துப் பிரசாரம் செய்வதை மிக அரிதாக மேற்கொண்டவர்களே ஆவர்.

தந்தை பெரியார் அவர்களோ மேற்சொன்ன இத் துணைத் தலைவர்களிடத்தும் அமைந்திருந்த சிறப்பியல்புகளை விஞ்சியவராக நின்று—முழுநேர நாத்திகப் பிரசாரகராக-நாத்திக இயக்கத்தைப் பாமர மக்கள் இயக்கமாக உருவாக்கித் தம் வாழ்நாளிலேயே வெற்றி குவித்தவராக—90 வயதுக்குப் பின்னும் சுழன்றுலவிப் புயல்வேக நாத்திகப் பிரசாரம் புரிந்தவராக—உலக வரலாற்றில் தனியொருவராக நிற்கும் சிறப்பிடத்தைப் பெற்றவராவார்.

இத் தன்மை வாய்ந்த சிறப்பியல்புகள் மட்டுமே அவரை 'உலகத் தலைவர்' என உயர்த்திவிடவில்லை. 1900 முதல் அவர் தம் சிந்தனையில் சுரந்த—உலக மானிடம் தழுவிய கருத்துகள் எண்ணிறந்தவை. அவற்றுள் சிலவற்றை நிரல்படுத்திக் காண்டல் அவர்தம் தனித் தன்மையைக் காணத் துணை நிற்கும்.

மானிடத்தின் கவலைக்கும் பேதநிலை வாழ்வுக்கும் கடவுள்—மத நம்பிக்கைகள் மூலகாரணமாக உள்ளனவாதலின், அவை ஒழிக்கப்பட்ட இடமே மானிடம் பேதநிலையற்று வாழத்தக்க இடமாகும் என்ற அவர்தம் சுயமரியாதைத் தத்துவத்தை 1900-லேயே அவர் ஊட்டமாக உணர்ந்தார்; உணர்ந்தவாறு உரைத்தார்.

அவ்வாறே உலகப் பெருஞ் சிந்தனையாளர் பலரைத் திகைக்க வைத்த மக்கள் பெருக்கக் கோட்பாடும், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் பிரச்சினையும் குறித்த அவர்தம் அறிவுரை உலக மானிடத்திற்கு உற்ற பெருங்கேட்டுக்குச் சிறந்த பரிகாரம் அளிப்பதாகும்.

இப் பிரச்சினையைக் குறித்து முதன் முதல் துணிவாகத் தம் கருத்துகளை உலகுக்கு அளித்தவர் அறிஞர் இராபர்ட் மால்தஸ் (Robert Malthus) என்பவராவார். அவர் 1798-ல், 'மக்கள் பெருக்கக் கோட்பாடும்—சமூகத்தின் வருங்கால முன்னேற்றத்தை அது பாதிக்கும் விதமும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதனையே மேலும் விரித்தெழுதி 1803-ல் வெளிப்படுத்தினார்.

மால்தசின் கொள்கைப்படி, மக்கள் தொகைப் பெருக்கம் பரப்பியல் விகிதத்தில் (Geometric Progression—1, 2, 4, 8, 16, 32) பெருகுவதாகவும்; உணவுப் பெருக்கம் கூட்டெண் விகிதத்தில் (Arithmetic Progression—1, 2, 3, 4, 5, 6) பெருகுவதாகவும் கருதப்பட்டது.

அவ்வாறு நேரிடுவதால் வருங்கால சமுதாயம் உணவுப் பற்றாக்குறையினால் மிகப் பெரிய பாதகம் அடையும் எனவும், எனவே மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டார். இந்நிலை குறித்து மிகப் பல வழிகளை அறிஞர்கள் குறிப்பிடுவாராயினர்.

10

1910-ல் எட்மண்ட் ரைகார்டு (Edmund Ricard) என்பவர், வயது முதிர்ந்தவர்களையும், சமூகத்திற்குப் பயன்படாதவர்களையும், அவர்களின் உறவினர்கள் கொன்று விடுவது இதற்கு ஒரு பரிகாரமாகலாம் எனக் கூறினார்.

வேறு பலர் இல்லற வாழ்வில் ஆணும் பெண்ணும் சம்போக உணர்வைக் கட்டுப் படுத்துவதன் மூலமோ, நீண்ட இடைவெளிக்குப் பின் சம்போகம் கொள்வதன் மூலமோ பிள்ளைப் பேற்றைக் குறைக்க முடியும் எனக் கருதினர்.

அறிவியல் துறையில் விரைந்து முன்னேறிய மேலை நாட்டினர் கருத்தடை முறைகளை மேற்கொள்வதன் மூலம், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்றனர்.

மேற்கண்ட கருத்துகள் பரவத் தொடங்கியவுடன் உலகெங்கிலுமுள்ள மதத் தலைவர்கள் வன்மையாக இவற்றை எதிர்த்தனர். 'மனிதனால் உயிரை ஆக்க முடியாது; ஆதலால் கருவைத் தடுப்பது அல்லது வளரும் கருவை மனிதன் சிதைப்பது கடவுள் கட்டளைக்கு எதிரானது' என அவர்கள் உரத்துக் கூறினர். இவ்வகையில் கிறிஸ்தவர், இஸ்லாமியர், இந்து முதலான எல்லா மதவாதிகளும்—மருத்துவர்கள் என்போரும் கூட ஒரே அணியில் நின்று எதிர்த்தனர்.

இந்தியாவில் இந்துமதம் விளைத்த கேடுகளுள் மிகவும் வெறுக்கத்தக்கது ஒன்றுண்டு. அதாவது, 'புத்' என்னும் நரகம் உண்டெனக் கற்பனை செய்து, அதில் விழாமல் தடுத்துக் கொள்ள, 'புத்திரன்' பெற்றெடுப்பது மதக் கடமை என விதிக்கப்பட்டதேயாம். இதனை நம்பிய ஒவ்வொருவரும் பல பெண் குழந்தைகள் பெற்றிருப்பினும்—ஒரு ஆண் குழந்தை பிறக்கும் வரையில் குழந்தை பெறுவதை நிறுத்துவது பாவம் எனக் கொண்டனர். மேலும், 'பிள்ளை என்பது ஆண்டவன் கொடுப்பது' எனவும் நம்பினர்.

அன்றியும், ஒரு மனைவிக்கு ஆண் குழந்தை இல்லையெனின், பல பெண்களை மணந்தேனும் ஆண்பிள்ளை பெறுவது தர்மம் எனக் கருதிச் செய்தனர். சில வகுப்பினரின் பெண்டிர், தன் கணவன் மூலம் ஆண் குழந்தை பெறமுடியாது என நம்பிவிட்டால், பிற ஆண்கள் மூலமாவது ஒரு ஆண் குழந்தையைப் பெறவேண்டும் எனக் கருதினர். இப் பழக்கங்களுள் பலதார மணம் என்பது 1955-க்குப் பின்னர் சட்டப்படித் தடுக்கப்பட்டது. இத்தகைய சட்டத்தினை ஆக்கவேண்டுமென 1909 முதல் பெரியார் போராடினார் என்பது நினைவு கூரத்தக்கது. நிற்க.

மேற்கண்ட மவுடகத் தன்மைகளைக் கூர்ந்து கவனித்த பெரியாரவர்கள், ஈரோட்டில் தமது 'குடிஅரசு' அலுவலகத்துக்கு எதிர் வீட்டுக் குடும்பத்தினரின் சண்டையைத் தீர்த்து வைக்க நேர்ந்த சம்பவம் முதற்கொண்டு, 'பிள்ளை என்பது—பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்குவது; ஆணுக்கும் பெண்ணுக்கும் தொல்லை தருவது; மனிதனைச் சமுதாயத் தொண்டுக்குப் பயன்படாதவனாக ஆக்குவது' என்ற முடிவுக்கு வந்தார்.

எனவே, 1928 முதல் கர்ப்பத் தடைபற்றி மிக ஓங்கிய குரலில், நாடெங்கும் எடுத்துரைத்தார். 1930-ல் 'கர்ப்ப ஆட்சி அல்லது கர்ப்பத் தடை' என்ற தொகுப்பு நூலை வெளிப்படுத்தினார்.

காந்தியார் இதுபற்றிக் குழப்பமான எண்ணங்களை 1928-ல் வெளியிடலானார். அவர், தம் 'Young India-யங் இந்தியா' ஏட்டில் 26-4-1928-ல் குறித்துள்ளதாவது:

'பிறப்பைக் கட்டுப்படுத்துவது குறித்து இருவிதக் கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், பழங்காலந்தொட்டுப் பாரம்பரியமாக அதற்கென உள்ள முறையானது, சம்போக உணர்வைக் கட்டுப்படுத்திக்கொள்வது அல்லது பிரம்மசரியத்தை அனுசரிப்பது என்பது தான். இது பிழைநேர முடியாத—மிகச் சக்திவாய்ந்த பரிகார முறையாகும்; இதனை அனுசரிப்பவர்களுக்கு நன்மை தர வல்லதாகும். சம்போகம் என்பது போக இன்பம் பெறுவ

தற்காக உள்ளதன்று; பிள்ளை பெறுவதற்காக மட்டுமே சம்போகம் கொள்ளத்தக்க தாகும்' என்பதாம்.

('There can be no two opinions about the necessity of birth control. But the only method handed down from ages past is self-control or brahmacharya. It is an infallible sovereign remedy doing good to them who practise it. The union is meant not for pleasure but for bringing forth progeny'—Population and Planned Parenthood in India, by Dr. S. Chandrasekar, 1955, pp, 50-51.)

காந்தியாரின் மேற்சொன்ன அறிவுரை எந்த மனிதனுக்கும் காரிய சாத்தியமானதல்ல எனவும், சமூகத்திற்குப் பொதுவிதியாக ஆக்கப்பட முடியாதது எனவும் அறிஞர்கள் அவ்வப்போது குறிப்பிட்டுள்ளனர்.

சான்றாக, திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள், தம் சுயசரிதையில், காந்தியாரின் மேற்கண்ட கருத்தைக் கண்டித்து, 1936-ல் எழுதினார். (An Auto-biography—London, 1936). இத் துறைபற்றி இதற்குமுன் திரு. நேரு சிந்தித்துக் கருத்து அறிவித்த தாகத் தெரியவில்லை.

பெரியார் அவர்கள் வருங் காலத்தை மிகவும் உன்னிப்பாகக் கணித்து, 6-4-1930 'குடி அரசு' தலையங்கத்தில் கிடைத்தற்கரிய—பின்கண்ட அறிவுரைகளை வழங்கினார்.

'மதுவிலக்குப் பிரசாரத்தைவிட, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரசாரத்தைவிட, இந்தக் கர்ப்பத் தடைப் பிரசாரம் மிகவும் முக்கியமானதென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால், இந்தக் கர்ப்பத் தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரசாரம் செய்யப் பொதுமக்களில் சிலராவது இது சமயம் முன்வர வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்' என்பது அவர்தம் அறிவுரையாகும். (இந் நூல் பக்கம் 156)

இவ்வாறு, கர்ப்பத் தடையே ஏற்ற பரிகாரம் என்பதை, இதிற் கண்டவாறே—1928 முதலே பெரியார் உலகுக்கு உணர்த்திவந்தார்.

இதனை ஏற்று அன்று தொடங்கிச் செயல்பட்டவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில், பெரியாரும் அவர்தம் இயக்கத் தொண்டர்களுமேயாவர். 'சுயமரியாதை ஸ்தாபனம் என்பது, கர்ப்பத் தடைப் பிரசார ஸ்தாபனம்' எனக் கருதப்படும் அளவுக்கு, தென்னகத்தில் பெரியார் இத் துறையில் ஆற்றியுள்ள பணி—இந்திய மக்களாலும், அரசினராலும், உலகத்தினராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

அகில இந்திய அளவில் மக்கள் தலைவர்கள் என்போர், 1951-ல்தான் பம்பாயில் முதன்முதலாக, 'அகில இந்திய மக்கள் தொகை—குடும்பநலத் திட்ட முதல் மாநாடு' எனக் கூட்டி இத் துறைபற்றிச் சிந்திக்கலாயினர் என்பதும் அறியத்தக்கது.

எனவே, இத் துறையில், பெரியார் அவர்களின் வேண்டுகோளை அவ்வண்ணமே ஏற்றுச் செயல்படுவது போல்—1951-க்குப் பின் செயல்படுத்தப்பட்ட நான்கு அய்ந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை இந்திய அரசும்—மாநில அரசுகளும் வாரி வழங்கிச் செயல்படுகின்றன. தென்னகத்தார் இதனை வரவேற்று ஏற்கத் தக்க பக்குவம் உள்ளவர்களாகத் திகழ மூலகாரணமானவர் பெரியார் ஒருவரே ஆவார்.

அன்றியும், அய்க்கிய நாடுகள் பெரு மன்றமும் (U. N. O.), உலக பாங்கு நிறுவனமும் உலக மக்கள் தொகை 1974-ல் 390 கோடியாக வளர்ந்துள்ளது கண்டு அஞ்சி, இப் பிரச்சினைக்குச் சரியான தீர்வுகாண முனைந்து செயல்படத் துவங்கியுள்ளதும் உலகோர் அறிந்த ஒன்றாகும்.

இவ்வாறாக, உலகத்தைச் சூழ்ந்துள்ள ஒரு பெருஞ் சவாலுக்கு—1928-லேயே சிறந்த பரிகாரம் கூறிய மேதையாவார், பெரியார். இத்துறை பற்றிய அவர்தம் இலட்சியம் பெண்ணடிமையை விலக்குவதும், மனித வாழ்வு துன்பமும் தொல்லையும் இன்றி அமைய வழி வகுப்பதுமேயாம்.

அடுத்து, பெண்ணுரிமை பற்றி அவரையொத்த தீவிர முற்போக்கு எண்ணம் கொண்டோர் உலக வரலாற்றில் பலருளர்; இந்திய வரலாற்றில் இல்லையென்றே சொல்லலாம்; பிற்காலத்தில் திரு. நேரு போன்றோர் இதுபற்றிச் சிந்திக்கலாயினர் என்பது கண்கூடு.

இந்திய மண்ணில் இராசாராம் மோகன்ராய், பெண்கட்கு இழைக்கப்பட்ட கோரக் கொடுமைகளை(cruelties)க் கண்டு மனம் வெதும்பி அவற்றை ஒழிக்க முயற்சித்து வெற்றி கண்டார். ஆனால், பெண்கள் மதத்தின் பேரால் உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டு—இழிபிறவிகளாக நடத்தப்படுவதைப்பற்றி இந்தியர் எவரும் பெரியாரையொப்பச் சிந்தித்திலர்.

பெண்ணுரிமையினை நிலைநாட்டும் செயலை 1909-லேயே அவர் மேற்கொண்டார்.

1909-ல் அவருடைய மூத்த தங்கையின் மகள் 10 வயதில் கைம் பெண்ணாக நேர்ந்தது. தம் சமுதாயத்தாரின் எதிர்ப்புக்கும், புறக்கணிப்புக்கும் அஞ்சாமல் அப் பெண்ணுக்கு உடனே மறுமணம் செய்வித்தார். மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்து கொள்ள உரிமை இருப்பது போன்றே—கணவனை இழந்த மனைவியும் மறுமணம் பெற உரிமையுண்டு என்பதை அதன் வாயிலாக நிலை நாட்டினார்.

பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக உள்ள நிலையினை மாற்ற—பெண்களுக்குச் சொத்துரிமை கோரினார்; பலதார மணத்தடை வேண்டினார். இவ்வுரிமைகள் அவரால் கோரப்பட்டு, செல்வாக்குப் பெற்று மக்கள் ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் வந்த நிலையில்—1956-ல் இவ்வுரிமைகளை வழங்கும் சட்டங்கள் வந்தன.

அஃதே போன்று இந்திய மண்ணில் அனைவருக்கும் முன்னோடியாக, பெண்ணுரிமை காக்கும் அரிய சுய சிந்தனைக் கருத்தொன்றை இந்திய அரசுக்கு வழங்கியவர், பெரியாரே ஆவார்.

'அரசியல் உத்தியோகங்களில் பெண்களுக்கு 50 சதவிகிதம், ஆண்களுக்கு 50 சத விகிதம் என ஒதுக்கப்படுவது—பெண்களுக்குச் சம உரிமை அளிப்பதாகவும், பெண்ணடிமையை ஒழிக்க உதவுவதாகவும் அமையும்' என்ற அவர்தம் சுய சிந்தனையில் விளைந்த யோசனையை (Original Suggestion)—இந்திய அரசின் துணை அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகரிடம், தம்மைப் பேட்டி கண்டபோது, 1970 மார்ச்சில் வெளியிட்டார். இப்பேட்டி 8-3-1970-ல் சென்னை வானொலியில் ஒலி பரப்பப்பட்டது.

இவ் அரிய யோசனையை அப்படியே வரவேற்கும் தன்மையில் இந்தியக் குடி அரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி—இதே யோசனையை 14-2-1974-ல் வெளியிடலானார்.

['தினமணி' மதுரை—16-2-1974]

அடுத்து, பெண்ணுரிமை கோரியுள்ள அறிஞர் ரஸ்கின் (1819–1900) என்பார் நாத்திகரல்லர்; சீர்திருத்தக்காரர். அவருடைய கருத்துகள் தந்தை பெரியாரவர்களின் கருத்துகளுக்கு ஓரளவு ஒப்புமை உடையவை.

1864-ல் அவர் கூறியுள்ளதாவது: 'பெண்களின் இலட்சியம் என்றும், உரிமை என்றும் பேசப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம். பெண்ணின் இலட்சியமும், உரிமையும் வேறு; ஆணின் இலட்சியமும் உரிமையும் வேறு என இருப்பது போல் கருதியே இவ்வாறு பேசப்படுகிறது. மற்றும், பெண்ணும் அவளது கணவனும் வெவ்வேறு வகை உயிரினங்கள்

என்றும், ஒரே விதமான உரிமைகளைப் பெற முடியாதவர்கள் என்றும் கருதியே இவ்வாறு பேசப்படுகிறது. இது தவறானதாகும்.'

(We hear of the mission and of the rights of Woman, as if these could be separate from the mission and the rights of Man; as if she and her lord were creatures of independent kind and of irreconcilable claim. This, at least, is wrong. John Ruskin's: Sesame and Lilies, Lecture II, Queens' Gardens—1864)

இவ்வாறாக ஆண், பெண் உரிமைகளில் வேறுபாடு இல்லை என ரஸ்கின் கருதினார்.

சமுதாயத்தில் முற்போக்கடைந்துள்ள நாடுகளில்கூட பெண்ணுரிமை பற்றி நீண்ட காலம் வரையில் பெரியாருக்கு ஒப்பாக எவரும் சிந்திக்கத் துணியவில்லை என்பதை இது நமக்கு உணர்த்துகிறது.

ஆண் பெண் உரிமைகள் பற்றித் தந்தை பெரியார் அவர்கள் 1928-ல் ஆற்றிய சொற்பொழிவில் தெளிவுபடத் தம் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

அதாவது: 'நாம் சுதந்தரமுள்ள மக்களாக வாழ வேண்டுமானால், நம் ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்துச் சுதந்தரத்தையும் சலுகைகளையும் நம் பெண் மக்களுக்கு வழங்கி அவர்கட்கு அவசியம் விடுதலை அளித்தல் வேண்டும்' என்பதே அதுவாம்.

(If we are to be free, we must free our women who must be allowed the same liberty and the privileges as our men—Periyar E. V. R's speech, on 26-11-1928, reported in 'Revolt' 12-12-1928)

பெண்ணுரிமை கோருவதில் ரஸ்கின் அவர்களை விஞ்சியவர்களாகவும்; பெரியாருக்கு ஒப்பானவர்களாகவும் அறிஞர்கள் இங்கர்சால், ரஸ்ஸல் முதலானோர் திகழ்ந்தது ஈண்டு நினைவில் நிறுத்தற்கு உரியது. விரிக்கிற் பெருகும்.

அடுத்து இன்னொரு பேருண்மை இங்குக் குறிக்கத் தகும்.

1943ஆம் ஆண்டில் பெரியார் அவர்கள் திருமண நிகழ்ச்சி யொன்றில் சொற்பொழிவாற்றினார். அந் நிகழ்ச்சியில் அவரோடு உரையாற்றிய திரு. சி. என். அண்ணாதுரை, பெரியாரின் சொற்பொழிவு முழுவதையும் குறிப்பெடுத்து, பின்னர் தெளிவுபட அதை எழுதிப் பெரியாரிடம் காண்பித்து, தமது 'திராவிட நாடு' ஏட்டில் 'இனிவரும் உலகம்' என்ற தலைப்பிட்டு, பெரியார் எழுதுவது என்ற குறிப்புடன், 21–3–1943, 28–3–1943 தேதிகளில் வெளியிட்டார்.

அன்றையச் சொற்பொழிவில் பெரியார் வெளியிட்ட கருத்துகள் அக் காலத்தில் அறிஞர் எவருக்கும் தட்டுப்படாதவையாகும்.

அவற்றுள் ஒன்றைப் பின்வரும் பகுதியில் காணலாம்.

அதாவது: 'மனிதனுடைய ஆயுள் நூறு வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம்; இன்னும் மேலே போனாலும் போகலாம். பிரஜா உற்பத்திக்கு ஆண் பெண் சேர்க்கை என்பது நீக்கப்பட்டுவிடும். நல்ல திரேக திடனும், புத்தி நுட்பமும், அழகும், காத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாகப் பொலி காளைகள்போல் பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்சக்ஷன் மூலம் பெண்கள் சரீரத்தில் விட்டு, நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்'.

இக் கருத்துகளை 1943-ல் வெளியிட்ட அவர் ஓர் உடலியல் அறிஞராகவோ (Physiologist), உயிர்நூல் வல்லுநராகவோ (Biologist), மானிட இயல் ஆராய்ச்சியாள

ராகவோ (Anthropologist) இருந்து—அத் தகுதி காரணமாக அவற்றை ஊகித்து உணர்ந்தவரல்லர். மனிதனின் அறிவுக்கு உள்ள ஆற்றல் எல்லையற்றது என எப்போதும் கருதிய அவர், அறிவின் வளர்ச்சி காரணமாக எப்படிப்பட்ட நிலைகள் உருவாகக்கூடும் என்பதைச் சுய சிந்தனையாளர் (Original Thinker) என்ற முறையில் தாமாகவே சிந்தித்துக் கண்ட முடிவையே அவர் உலகுக்கு அறிவித்தார்.

அக் கருத்துகளைத் திரட்டி, 'இனிவரும் உலகம்' என்ற பெயரில் சிறு நூலாக வெளியிட்ட அய்யா அவர்கள், அந் நூலின் மேலட்டையில் (Wrapper) இரசாயன சோதனைக் குழாயில் (test tube) மனிதக் குழந்தை வளருவதுபோல் ஓவியம் ஒன்றை அப்போதே வெளியிட்டு, பாமரரையும் சிந்திக்க வைத்தார்; அறிஞர் என்போரைத் திணறச் செய்தார்.

அதேபோல், விஞ்ஞான வளர்ச்சியால் நிகழப்போகும் மற்ற பல வியத்தகு சாதனங் களைப்பற்றியும் அடிக்கடி பேசினார்; எழுதினார்.

மேலே குறிப்பிட்ட கருத்தினைப் பொறுத்தவரையில், 1965-க்குப் பின்னர்தான், உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளிப்படுத்தி, பெரியார் 1943-ல் வெளியிட்டதேபோல்—'சோதனைக் குழாயில் வளரும் குழந்தை' (Test tube baby) பற்றிய அறிவியல் சாதனையை உலகுக்குப் பறை சாற்றினர்.

அறிவியல் சாதனைகளின் எல்லையையும்—தொலைதூர நோக்குடன் 30 ஆண்டு கட்கு முன்னரே உலகுக்கு உணர்த்திய—கட்டற்ற உலக சிந்தனையாளர் ஆவார் பெரியார்.

அடுத்து, தந்தை பெரியார் ஆற்றியுள்ள நாத்திகப் பணி, உலக நாத்திகர்களுக்கே வழி காட்டியாகத் திகழும் தன்மையது எனக் கொள்ளத்தக்க விதத்தில், உலகஞ் சுற்றிய நாத்திகப் பொதுவுடைமை அறிஞர் குறிப்பிட்டுள்ளது நாம் எண்ணி எண்ணிப் பெருமிதம் கொள்ளத் தக்கதாகும்.

1914-ல் இந்தியாவை விட்டு இரகசியமாகத் தப்பிய அறிஞர் எம்.என். ராய் ஜப்பான், சைனா, சுவிட்சர்லாந்து, பிரான்சு முதலிய நாடுகளில் தங்கி, உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார். 1920-ல் ரஷ்யாவில் அறிஞர் வி. இ. லெனினைக் கண்டு பேசினார்; அங்கேயே தங்கி மிகப்பெரிய கொள்கை விளக்க அறிஞராக (Theoretician) அவர் விளங்கினார்.

'காலனி நாடுகள் பிரச்சினை'யில் லெனினுடன் கருத்து வேறுபாடுற்று, 1931-ல் இந்தியாவுக்குத் திரும்பினார்; தேசிய காங்கிரசில் சேர்ந்து பணியாற்றினார். 1939ஆம் ஆண்டைய இரண்டாம் உலகப் போரின்போது, பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாக காங்கிரஸ் செயல்பட்டது; இதனை எதிர்த்துச் செயல்பட்டதால் காங்கிரசிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். ஆயினும், அரசுக்கு ஆதரவாக இந்தியாவெங்கிலும், தொடர்ந்து உதவி திரட்ட அவர் விரும்பினார்.

(M. N. Roy's Memoirs, Allied Publishers Private Ltd., Madras, 1964)

அதே சமயத்தில், தென்னாட்டில் நீதிக் கட்சித் தலைவராகத் திகழ்ந்த பெரியார், 'நாசிக் கொள்கை வெற்றி பெறாமலிருக்க வேண்டுமானால், பிரிட்டிஷார் வெற்றி பெறுவது அவசியம்' எனக் கூறி ஆட்சிக்கு ஆதரவு திரட்டுவதில் கட்சி ரீதியாகச் செயல்பட்டார்.

இதனை அறிந்த ராய் 'அகில இந்தியக் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணி' ஒன்றை உருவாக்கி—எல்லா மாகாணங்களிலும் காங்கிரசல்லாத கட்சிகளின் கூட்டுமந்திரிசபைகளை அமைக்கும் நோக்குடன் 1941 பிப்ரவரியில் சென்னைக்கு வந்தார்; அவரைப் பெரியார் வரவேற்றார்.

இதனை அடுத்து 1944-ல் கல்கத்தாவில் திரு. எம். என். ராய் நடத்திய மாநாட்டுக்குப் பெரியாரை அழைத்தார்.

பெரியார் 21-12-1944-ல் வடநாட்டுக்குப் பயணமானார்; கல்கத்தாவில் எம்.என். ராய் ஏற்பாடு செய்திருந்த ரேடிகல் டெமாக்ரடிக் கட்சி மாநாடு (Radical Democratic Party Conference) 27-12-1944-ல் நடைபெற்றது; அதில் பெரியார் பேருரையாற்றினார்.

[M. N. Roy's Memoirs, page 611-'குடி அரசு'—6-1-1945]

அம் மாநாட்டில் பெரியார் அவர்களை வரவேற்றுப் பாராட்டுரை வழங்கிப் பேசிய திரு. ராய் அவர்கள், 'எனது நாத்திக ஆசான் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைப் பாராட்டி வரவேற்கிறேன்' எனக் குறிப்பிட்டார்.

பெரியார், தம்மைப்பற்றி திரு. எம். என். ராய் அவ்வாறு குறிப்பிட்டமைக்குத் தாம் வெட்கப்படுவதாகத் தம் பேருரையில் குறிப்பிட்டார்.

உடனே, திரு. ராய் இடைமறித்து, 'நான் உண்மையைத்தான் சொன்னேன். உலகத்தில் நாத்திகத்தைப்பற்றி இத்தனை நூல்களை எழுதியும், வெளியிட்டும் உள்ள மேதை, யாரும் எனக்குத் தென்படவில்லை. இதற்கு ஆதாரமாக, இதோ அவரது குடி அரசுப் பதிப்பக நூல்களின் பட்டியலை நீங்களே பாருங்கள்!' என அவையோரை நோக்கிக் கூறி, தம் பாராட்டை உறுதிப்படுத்தினார். இவ் விவரத்தை 17-5-1973-ல் அய்யா அவர்கள் எனக்கு உணர்த்தினார்.

உலகஞ் சுற்றிய நாத்திகவாதியான திரு. ராய் போன்ற மேதையினால் 'ஆசான்' எனக் கொள்ளப்பட்ட தந்தை பெரியார்—நாம் முன்னர்க் குறிப்பிட்டவாறு, உலக வரலாற்றில் ஒப்பாரும் மிக்காருமில்லாத—உலக நாத்திக நாயகர் ஆவார்.

இத் துணைத் தனிச் சிறப்பியல்புகளுக்கும் ஓர் உறைவிடமாகவும், தாராள—சுய சிந்தனையாளராகவும், மானிடத்தின் கவலை போக்கவல்ல மாமருந்துகளை வழங்கிய வள்ளலாகவும்—கடந்த 95 ஆண்டுக்காலம் நம்மிடையே வாழ்ந்த தந்தை பெரியார்—ஓயாத உழைப்பால், இடையறாத சிந்தனையால், பழுது பார்க்கவும் முடியாத அளவுக்கு உறுப்பு வலு தேய்ந்து, உடலுரன் ஓய்ந்து, உயிர் மாய்ந்து சாய்ந்தனரெனின்—பேரிடி போன்ற அவ் இழப்பை எண்ணியெண்ணி நாம் கதறி அழுவதா? சிந்தை கலங்கிக் கவலுறுவதா? உளமுடைந்து உறுதி குலைவதா? உடல் சோர்ந்து உட்காருவதா? கூடாது; கூடாது; கூடவே கூடாது!

நாம் ஒவ்வொருவரும் உடலால்—உயிர்ப்பால்—உளத்தால் தந்தை பெரியார் அவர்களின் தன்மான—சுயசிந்தனை நெறி நாளும் வளர ஆவன செய்தலே கடமையாகும்.

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்.

திருச்சிராப்பள்ளி,
1–5–1974

வெல்க பெரியாரிசம்!

நன்றியுரை

திருச்சி சிந்தனையாளர் கழகத்தினரால், 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற இந்நூல் பல தொகுதிகளில் வெளியிடப்படப் பதிப்புரிமை நல்கி, ஒப்புதலளித்து, வருத்தம் பாராது கையெழுத்துப் படி முழுவதையும் படித்துப் பார்த்தும், படிக்கக் கேட்டும் இம் முயற்சியை விரைவுபடுத்தி ஊக்கம் அளித்தருளிய, மறைந்த பெருந்தகை—உலகப் பெருஞ் சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கட்கும்; இப் பணிக்கு ஆதரவளித்து நூல்களை விரைவில் வெளிக்கொணரத் தூண்டிய திராவிடர் கழகத் தலைவர் திருமதி ஈ. வெ. ரா. மணியம்மையார் அவர்கட்கும் சிந்தனையாளர் கழகம் மனங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றது.

இந்நூல் அச்சியற்றப்படுங் காலத்து இதன் தொகுதிகளைக் கண்ணுற்று, தங்கட்கு இருந்த பொறுப்புவாய்ந்த பணிகளினிடையேயும் எங்களின் தாளாண்மையை ஊக்குவித்து உதவிய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியன், எம். ஏ., ஆகியோர்க்கும் ஏனைய அமைச்சர் பெருமக்கட்கும்; முன்னாள் முதலமைச்சர் கு. காமராசர் ஆகியோர்க்கும் இக் கழகம் இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந் நூல் வெளியீட்டு முயற்சி முட்டின்றி முற்றுப் பெற நடுநாயகமாகத் திகழ்ந்த இக் கழகப் புரவலர் அமைச்சர் திரு. அன்பில் பெ. தருமலிங்கம், அமைச்சர் திரு. என். வி. நடராசன், கழகத் தலைவர் திரு. கு. ம. சுப்பிரமணியன், பி. இ., ஆகியோர்க்கும் இக் கழகம் அன்புநிறைந்த நன்றியினை உரித்தாக்குகின்றது.

ஈராட்டைப் பருவத்தில் சிந்தனையாளர் கழகத்தினரால் இப் பெரும்பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில், இப் பணி துவண்டுவிடாமல்—இளங் குழவியைக் கண்ணயராது காக்கும் தாய்போல் நின்று காத்த திருவாளர்கள் கழகப் பொருளாளர் திருச்சி நோபிள் கு. கோவிந்தராசலு, ச. சோமு, வீரானந்தபுரம் ஆசிரியர் ந. கணபதி ஆகியோர்க்கும்; மெய்வருத்தம் பாராது இந் நூலைத் தொகுத்துப் பதிப்பிக்கும் சீரிய பணியைச் செவ்வனே நிறைவேற்றித் தந்த கழகச் செயலாளர் திருச்சி திரு. வே. ஆனைமுத்து அவர்கட்கும் இக் கழகம் மனமார்ந்த நன்றியறிதலை உரித்தாக்குகின்றது.

இம் முயற்சியினைக் குறித்து அவ்வப்போது உசாவி ஊக்குவித்த திருவாளர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, எம். ஏ., எல். டி., சென்னை கா. திரவியம், ஐ. ஏ. எஸ்., எம். எம். சந்திரகாசன், பி.ஏ., பி. தங்கராசன் பி.ஏ., ஏ. பி. சனார்த்தனம், எம். ஏ., திருச்சி எல். சுப்பிரமணியம், கோ. முத்துக்கிருஷ்ணன், செயலாளர் து. மா. பெரியசாமி ஆகியோர்க்கும் இக் கழகம் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இந் நூலுக்கான கையெழுத்துப் படிகளைத் திருச்சியிலும், தில்லையிலும் பார்வையிட்டு நூலுக்கு உரிய பகுதிகளையும் (Parts), தொகுதிகளையும் (Volumes) பிரித்து அமைக்கவும், தொகுதிகளை அழகுற அமைக்கவும் தகுந்த ஆலோசனைகளை வழங்கி உதவிய திருவாளர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., பி. எச்டி., துணைப் பேராசிரியர் மறைந்த சு. இராமாநுசம் எம். ஓ. எல்., எம். லிட்., சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றும் டாக்டர் பொன். கோதண்டராமன், எம். ஏ., பி.எச்டி., ஆகியோர்க்கும்; இப் பணிக்கு உதவி நல்கிய திருவாளர்கள் செம்பியன் எம்.ஏ., மணியன் எம்.ஏ., வி. சுகுமார் எம்.ஏ., குழுவினர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

இப் பெருமுயற்சியில் எங்கட்கு உற்றுழி உதவிய திருவாளர்கள் திருச்சி டி. எம். டி. பஸ் அதிபர் பி. நாராயணசாமி, திருச்சி கீதா பிரஸ் அதிபர் வி. எஸ். மணி மறைந்த கே. பரமசாமி பி.ஏ., ஆகியோர்க்கும்; கையெழுத்துப் படிகளைத் தயாரிப்ப தற்கும் சரி பார்ப்பதற்கும் பல மாதங்கள் பதிப்பாசிரியருடன் தங்கிப் பணிபுரிந்த திருவாளர்கள் சின்னபுங்கனேரி ஆசிரியர் வே. காசிநாதன், ந. புகழூர் ஆசிரியர் கி. சுந்தர ராசன், திருச்சி புலவர் சீ. பாலு, ஏ. அரங்கராசன் ஆகியோர் குழுவினர்க்கும் இக் கழகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இந் நூலின் தொகுதிகளை அழகுற அச்சிட்டுத் தந்த சென்னை 'கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ்' நிறுவனத்தாருக்கும், அலுவலர்களுக்கும்; நூல் அச்சியற்றப்படுங் காலத்து முழுப் பொறுப்புடன் படி திருத்தும் பணியை மேற்கொண்டு உதவிய சென்னை திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கட்கும்; தொகுப்புக்கு இன்றியமையாது வேண்டப்பட்ட ஆதாரங்களை அன்புடன் அளித்து உதவிய தலைவர் தந்தை பெரியார் அவர்கட்கும், திருவாளர்கள் நாகூர் பொ. பழனியாண்டி மகன் பொன்னம்பலம், சென்னை 'The Hindu' பத்திரிகை நிறுவனத்தார், சென்னை கே. பரமசிவம் ஆகியோருக்கும்; நூலுக்கு உரிய பிளாக்குகளை அழகுறச் செய்து தந்த சென்னை Rayan & Co.,வினருக்கும்; மற்றும் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பெரு மக்கட்கும் திருச்சி சிந்தனையாளர் கழகம் நன்றி பாராட்டுகின்றது.

இக் கழகம் மேற்கொண்ட இந்த மாபெரும் பணிக்கு மனமுவந்து பெரும் பொருட் கொடை வழங்கியருளிய பெருஞ்செல்வர்கள், வணிகர்கள், பொதுமக்கள், இக் கழக உறுப் பினர்கள் ஆகியோர்க்கும்; பொருள் திரட்டித் தந்து உதவிய அறிஞர்கள், நண்பர்கள், இக் கழக உறுப்பினர்கள் ஆகியோர்க்கும்; இந் நூல் வெளியீட்டுத் தொடர்பான 'நூல் வெளி யீட்டு விழா மலர்' வெளியிட விளம்பரம் நல்கியதன் மூலம், நூல் வெளியீட்டு முயற்சியை ஊக்குவித்த ஆலை அதிபர்கள், தொழில் நிறுவனத்தினர், வணிகர்கள் ஆகியோருக்கும் இக் கழகம் பணிவார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் உரித்தாக்குகின்றது.

திருச்சிராப்பள்ளி,
1-5-1974

சிந்தனையாளர் கழகம்

தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின்

வாழ்க்கைக் குறிப்புகள்

17—9—1879 — ஈரோட்டில் மண்டி வெங்கட்டப்ப நாயக்கர்—சின்னத் தாயம்மை ஆகியோரின் நான்காவது மகவாகவும், இரண்டாவது மகனாகவும் தோன்றினார்.

6 ஆம் வயதில் — திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

9 ஆம் வயதில் — பிரைமரி பள்ளியில் பயில அனுப்பப்பட்டார்.

11 ஆம் வயதில் — பள்ளிப் படிப்பை விட்டு நிறுத்தப்பட்டார்.

12 ஆம் வயதில் — மண்டிக் கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

19 ஆம் வயதில் — 13 வயது நாகம்மையை (சேலம் தாதம்பட்டி)த் திருமணம் புரிந்தார்.

21 ஆம் வயதில் — ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார்; அக் குழந்தை 5 மாதத்தில் இறந்தது. பின்னர் குழந்தையே இல்லை.

— தம் வாணிபத்தில் தொழிலாளர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுத்து அவர்களைப் பங்குதாரர்களாக ஆக்கினார்.

25 ஆம் வயதில் — தந்தையார் கண்டிப்புக்கு அஞ்சித் துறவு பூண்டு, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச்சென்று, பின் தந்தையாரால் அழைத்து வரப்பட்டார்.

'வெங்கட்டப்ப நாயக்கர் மண்டி'—'ஈ. வெ. ராமசாமி நாயக்கர் மண்டி' ஆயிற்று.

1907 — காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங்கொண்டார்.

1908 — காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்றுவரத் தொடங்கினார்.

1911 — தந்தையாரை இழந்தார்.

1914—1918 — காங்கிரஸ் மாநாடுகளை முன்னின்று நடத்தத் தொடங்கினார். ஈரோடு நகரமன்றத் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்து ஈரோட்டில் குடிநீர், சுகாதார வசதிகளை அமைத்தார்; மற்றும் சுமார் 28 கவுரவப் பதவிகளை வகித்தார்; 1918-ல் சேலத்தில் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் நகர மன்றத் தலைவர்.

1919 — நகரமன்றத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, காங்கிரசில் உறுப்பினரானார்; திருச்சியில் காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டு சென்றார்.

1920 — கவுரவப் பதவிகள் அனைத்தையும் ராஜிநாமா செய்தார்; காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்; நெல்லையில் காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்வைத்தார்.

1921 — ஈரோட்டில் கள்ளுக் கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்தினார்; காந்தியின் நிர்மாணத் திட்டத்தை மேற்கொண்டு, தாதம்பட்டியிலிருந்த தமது தென்னைகள் ஐந்நூறை வெட்டினார்; தீவிரக் கதர் பிரசாரத்தில் ஈடுபட்டார். தஞ்சையில், காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு சென்றார்.

1922 — கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டு, கோவைச் சிறையில் காவல் வைக்கப் பட்டார்; 'குடி அரசு' இதழ் தொடங்கச் சிறையிலேயே திட்டமிட்டார். திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டு சென்றார்; அங்கேயே, 'மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமா யணத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்' என முழங்கினார் 'இந்தி' கற்பிக்கத் தன் கட்டடத்தில் பள்ளி துவக்கினார்.

1923 — 'குடி அரசு' துவக்க 19-1-1923-ல் அரசாங்கத்தில் பதிவு செய்தார்; மதுரை காங்கிரசில் வகுப்புரிமை கோரினார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பணியாற்றினார்.

1924 — தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பணிபுரிந்தார். இந்தியாவிலேயே முதன் முதலாகக் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோவில் முன் தீண்டாமை ஒழிப்புச் சத்தியாக்கிரகம் நடத்தி இரு தடவைகள் சிறைப் பட்டார்; தீண்டாமையை ஒழித்து வெற்றி கண்டார்—'வைக்கம் வீரர்' எனப் போற்றப்பட்டார். திருவண்ணாமலை காங்கிரசில் வகுப் புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார்; சேரமாதேவி குருகுலத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தார். நீதிக் கட்சி ஆட்சியின் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தார்.

1925 — 3-5-1925-ல் 'குடி அரசு' (மாலை 1, மலர் 1) வார இதழை ஈரோட்டில் துவக்கினார். காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் (25-11-1925) வகுப் புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார்; அது ஏற்கப்படாததால்— மாநாட்டுப் பந்தலிலேயே, 'இனிக் காங்கிரசை ஒழிப்பதே என் வேலை' எனச் சூளுரைத்துக் காங்கிரசிலிருந்து நண்பர்களுடன் வெளி யேறினார்; அப்போது அவர் தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர்.

1926 — 'இந்திக் கொள்கை'யைக் கண்டித்து எழுதினார். மதுரையில் டிசம்பரில் பார்ப்பனரல்லாதார் முதல் மாகாண மாநாட்டைக் கூட்டினார்.

1927 — காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களைக் கண்டிக்கலானார்; பெங்களூரில் காந்தியாரைச் சந்தித்துத் தம் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையின் நியாயத்தை விளக்கினார். நாகை இரயில்வே தொழிலாளர் கிளர்ச்சியில் சிறைப்பட்டார். சைமன் கமிஷனை வரவேற்கக் கோரினார். 'திராவிடன்' தினசரியின் ஆசிரியரானார். சூலையில், கோவையில், சர். ஏ. இராமசாமி முதலியாரால் 'தமிழ் நாட்டின் ரூசோ' என அழைக்கப்பட்டார். திருக்குறள், புத்தர் கொள்கைகளை 'குடி அரசு' மூலம் பரப்பலானார். தம் பெயருக்குப் பின்னால் இருந்த 'நாயக்கர்' என்ற சாதிப் பட்டத்தை விலக்கினார்.

1928 — 'ஈ. வெ. ரா. பெரியார்' எனத் திராவிட இனத் தலைவர்களாலும், மக்களாலும் அழைக்கப்படலானார். 'ரிவோல்ட்–Revolt' ஆங்கில வார ஏடு துவக்கினார்.

1929 — செங்கற்பட்டு – சென்னை மாகாண முதலாவது சுயமரியாதை மாநாடு (பிப்ரவரி 17, 18) நடைபெற அடிப்படையாக விளங்கினார். டிசம்பரில் நாகம்மையாருடன் மலேயா நாட்டில் முதலாவதாகச் சுற்றுப் பயணம் செய்து, தீவிர சுயமரியாதைப் பிரசாரம் புரிந்தார். வகுப்புரிமை

உத்தரவு செம்மையாக அமுல் நடத்தப்பட வழிகண்டு வென்றார். பனகால் அரசர் மறைவால் மனமுடைந்த திராவிடரைத் தேற்றினார்.

1930 — மலேயாவிலிருந்து ஜனவரி 11-ல் புறப்பட்டு, 16-ல் நாகை சேர்ந்தார்; அப் பயண நாட்களில் தாடி வளர்க்க நேர்ந்தது. நாடெங்கும் உண்மை நாடுவோர் சங்கம், தாராள சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் துவக்கினார்.
ஈரோட்டில் மாகாண இரண்டாவது சுயமரியாதை மாநாடு நடத்தினார்.
'ரிவோல்ட்' வார ஏடு நிறுத்தப்பட்டது.
காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களைப் புறக்கணித்தார். சமதர்ம அறிக்கையை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து வெளியிட்டார்.

1931 — விருதுநகரில் மாகாண மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடத்தினார். நாடெங்கும் சமதர்மச் சங்கங்கள் நிறுவத் தலைப்பட்டார்.
டிசம்பரில் அயல்நாடுகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

1932 — எகிப்து, ருஷியா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுகல், இங்கிலாந்து, இலங்கை முதலான அயல் நாடுகளில் 11 மாதம் பயணம் செய்தார்; நவம்பர் 11-ல் ஈரோடு திரும்பினார்; 'தோழர்' என விளியுங்கள் என வேண்டினார்; டிசம்பரில் சமதர்மத் திட்டம் தீட்டினார்.

1933 — 'புரட்சி' வார ஏட்டைத் துவக்கினார், தீவிர சமதர்மப் பிரசாரத்தை மேற்கொண்டார்; அதற்காக டிசம்பரில் தண்டிக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார்.
11-5-1933-ல் நாகம்மையார் இயற்கை எய்தினார்; எனினும் மறுநாள் திருச்சியில் 144 தடையை மீறித் திருமணம் ஒன்றை நடத்தினார்.
'மே தினம்' முதன்முதலாக, 21-5-1933-ல் கொண்டாடக் கோரினார்.

1934 — சமதர்ம வேலைத் திட்டத்தைக் காங்கிரசுக்கும், நீதிக் கட்சிக்கும் அனுப்பினார். கடனுக்குச் சிறைபிடிக்கும் சட்டத்தை எதிர்த்துச் சிறை சென்றார்.
'பகுத்தறிவு' வார ஏட்டைத் துவக்கினார்; 'பகுத்தறிவு' தினசரி ஏட்டைத் துவக்கிச் சிறிது காலம் வெளியிட்டார். 'பகுத்தறிவு' வார ஏட்டில் டிசம்பரில் முதன்முதலாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் புகுத்தினார். ஜெயப் பிரகாஷ் நாராயண், ஈரோட்டில் பெரியாரைக் கண்டு பேசினார்.

1935 — நீதிக் கட்சி தம்திட்டத்தை ஏற்றுக் கொண்டதால் அக் கட்சிக்குத் தீவிர ஆதரவு அளித்தார். 'பகுத்தறிவு' மாத ஏடு துவக்கினார்.

1936 — நீதிக் கட்சி 1937 தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென விரும்பி, தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார். தாயார் சின்னத் தாயம்மாள் 95-ஆம் வயதில் மறைவு.

1937 — தேர்தலில் நீதிக் கட்சி படுதோல்வி கண்டது; காங்கிரஸ் வென்றது.

1938 — இரயில்வே நிலையங்களிலுள்ள உணவு விடுதிகளில் 'பிராமணாள்—இதராள்' சாப்பிடுமிடம் என்றிருந்த இழிவை ஒழித்தார்.
ஆச்சாரியார் திணித்த கட்டாய இந்தியை எதிர்த்தார்; காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டிக் கிளர்ச்சித் திட்டம் வகுத்தார்;

கிளர்ச்சியில் 1269 பேர் சிறை சென்றனர்; இந்தியை எதிர்த்து, ஆகஸ்டில், தமிழர் பெரும்படை சென்னைநோக்கி அணிவகுத்துச் சென்று, 11-9-1938-ல் திருவல்லிக்கேணிக் கடற்கரையை அடைந்தது; அன்று அங்கு முதன் முதலாக, 'தமிழ்நாடு தமிழருக்கே!' எனக் குரல் கொடுத்தார் பெரியார்; கிளர்ச்சியில் 2 ஆண்டு தண்டனையும், 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப் பெற்று, பெல்லாரி சிறையில் வைக்கப் பட்டார்; சிறையில் இருந்தபோதே 29-12-1938-ல் நீதிக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'பெரியார்' என்ற சொல்லால் எப்போதும் அவரைக் குறிப்பிட வேண்டுமெனத் 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு' அறிவித்தது.

1939 — சிறையிலிருந்து மீண்டார். சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸை சந்தித்து 'திராவிடநாடு பிரிவினை'யை விளக்கி வலியுறுத்தினார்.

1940 — ஜனவரி 8-ல் பம்பாயில் எம். ஏ. ஜின்னாவின் இல்லத்தில் அவரைச் சந்தித்துத் தம் தனிநாடு பிரிவினைத் தத்துவத்தை விளக்கினார், டாக்டர் அம்பேத்கார் உடனிருந்தார். திருவாரூர் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினையை விளக்கினார். ஏப்ரலில் கவர்னர் ஜெனரலும், கவர்னரும், திரு. இராஜாஜியும் நேரில் வேண்டியும் மந்திரிசபைப் பதவியை ஏற்க மறுத்து விட்டார்.

1941 — 'பார்ப்பனர் அல்லாதார்' என்ற பெயரில் அமைப்புகள் இருப்பதைப் படிப்படியாக மாற்றி, 'திராவிடர் கழகம்' ஆக்கிவரலானார். திரு. எம். என். ராய் சென்னைக்கு வந்தபோது சந்தித்து உரையாடினார்.

1942 — திராவிடநாடு பிரிவினைக் கொள்கையைத் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். இரண்டாம் முறை கவர்னர் ஜெனரலும், கவர்னரும் வேண்டியும்கூட மந்திரிசபை அமைக்க மறுத்தார்.

1943 — 'சோதனைக் குழாயில் குழந்தை உருவாக்கப்படும்' (Test tube baby) என்ற சுயசிந்தனை முடிவை உலகுக்கு அறிவித்தார்.

1944 — சேலத்தில் ஆகஸ்டு 27-ல் கூடிய நீதிக் கட்சி மாநாட்டுக்குத் தலைமை ஏற்று, 'ஜஸ்டிஸ் கட்சி-தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயரை 'திராவிடர் கழகம்' என அதிகார பூர்வமாக மாற்றினார். திருச்சியில் இந்துமகாசபைத் தலைவர் மூஞ்சேயைச் சந்தித்தார். டிசம்பர் 27-ல் கல்கத்தாவில் திரு. எம். என். ராயின் 'ரேடிகல் டெமாக்ரடிக் கட்சி' மாநாட்டுக்கும், 29, 30, 31-ல் கான்பூரில் 'பார்ப்பனரல்லாத பிற்பட்டோர்' மாநாடுகளுக்கும் சென்று அறிவுரை வழங்கினார்.

1945 — செப்டம்பர் 29, 30-ல் திருச்சியில் திராவிடர் கழக மாகாண மாநாடு நடத்தினார்; 'கறுஞ் சட்டைத் தொண்டர் படை' என்ற அமைப்பை உருவாக்கினார்.

1946 — மே 11-ல் மதுரையில் கறுஞ் சட்டைப் படை மாநாடு நடந்தது; பார்ப்பனர் தூண்டுதலால் மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டு, தோழர்கள் தாக்கப்பட்டனர்—கொதித்தெழுந்த கறுஞ் சட்டையினரை அமைதிப் படுத்தினார், பெரியார். திராவிடர் கழகக் கொடி உருவாக்கப்பட்டது. அரசியல் நிர்ணயசபை உருவாக்கப்பட்ட முறையை வன்மையாக எதிர்த்தார்.

1947 — 'ஆகஸ்டு 15, சுதந்தர நாள்' என உலகமே கூறியபோது, 'ஆகஸ்டு 15, திராவிடருக்குத் துக்க நாள்' எனத் தெளிவாக அறிவித்தார்; வடநாட்டார் கவர்னராக நியமிக்கப்படுவதை எதிர்த்துக் கறுப்புக் கொடி பிடிக்கச் செய்தார். கடலூரில் 'திராவிடர் மாநாடு' கூட்டி, அனைத்துத் திராவிடருக்கும் நாட்டுப் பிரிவினை உணர்ச்சியை ஊட்டினார். 'சூலை 1 திராவிட நாடு பிரிவினை நாள்' என நாடெங்கும் கொண்டாடச் செய்தார்.

1948 — கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து, அனைத்துத் தலைவர்களையும் அழைத்து, சூலை 17-ல் சென்னையில் மாநாடு நடத்தினார்; இந்தியை எதிர்த்துப் பேச்சுரிமையை நிலைநாட்ட 144 தடையை மீறி குடந்தையில் போராட்டம் நடத்தி வெற்றிபெற்றார். கவர்னர்ஜெனரலாக திரு. சி. இராசகோபாலாச்சாரியார் சென்னைக்கு வந்தபோது அவரைப் பகிஷ்கரித்ததற்காகக் கழகத் தோழர்களுடன் சிறைப்பட்டார். மே 8, 9-ல் தூத்துக்குடியில் மாபெரும் மாகாண தி. க. மாநாடு நடத்தினார். 'திருக்குறள் மாநாடு' நடத்திப் பாமரர்க்கும் அந் நூலை அறிமுகப்படுத்தினார்.

1949 — இயக்கத்திற்குப் பாதுகாப்பு கருதி சூலை 9-ல் மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டார்; இந்த ஏற்பாட்டைக் காரணமாகக் கொண்டு திரு. சி. என். அண்ணாதுரை கழகத்திலிருந்து பிரிந்து, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற தனி அமைப்பை ஏற்படுத்தினார். அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டதனை வன்மையாக எதிர்த்தார், பெரியார். உடுமலைப்பேட்டையில் 144 தடையுத்தரவை மீறிக் கைதானார்.

1950 — 'சனவரி 26 குடி அரசு நாள்' என்பதைத் துக்கநாளாகக் கொண்டாடக் கோரினார். 'பொன் மொழிகள்' என்ற நூலுக்காக 6 மாதம் சிறைத் தண்டனை ஏற்றார். வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்கவும், கைத்தறியாளர் துயர் துடைக்கவும், வடநாட்டார் துணிக் கடை, உணவுக் கடை முன் மறியல் நடத்தி உணர்வூட்டினார். வகுப்புரிமை உத்தரவு செல்லாது என அய்க்கோர்ட்டும், சுப்ரீம்கோர்ட்டும் அளித்த தீர்ப்புகளை எதிர்த்து, பார்ப்பனரல்லாத தலைவர்களை அழைத்து, திருச்சியில் டிசம்பர் 3-ல் 'வகுப்புரிமை மாநாடு' நடத்தினார்; 'அரசியல் சட்டம் ஒழிக!' என நாடெங்கும் முழங்கச் செய்தார்; மத்திய அமைச்சர்கட்குக் கறுப்புக் கொடி பிடித்து எதிர்ப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்தார். தமையனார் ஈ. வெ. கிருஷ்ணசாமி மறைவு.

1951 — இந்திய அரசியல் சட்டத்தை வகுப்புரிமை வழங்கும் வகையில் திருத்தக் கோரினார்; அச் சட்டம் அமுலுக்குவந்த ஓராண்டில் 1951 பிப்ரவரியில் அதன் 15-வது விதியில் புதிதாக 4-வது உட்பிரிவு சேர்க்கப்பட்டு' பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் வகுப்புரிமை வழங்கப் பாதுகாப்புச் செய்யப்பட மூலகாரணரானார்.

1952 — வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்து முதலாவதாக நடந்த இந்தியப் பொதுத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் படுதோல்வி அடைய மூலகாரணராக விளங்கினார். இந்தியை எதிர்த்து ஆகஸ்டு 1-ல் இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில், இந்தியை

அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். 'திராவிட ஸ்தாபனங்களே வேண்டும்' என அறிவித்து, திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம், தென் பகுதி இரயில்வே மென் யூனியன் இவற்றைத் துவக்கினார்.

1953 — நாடெங்கும் 'விநாயகர் உருவப் பொம்மை உடைப்புக் கிளர்ச்சி' நடைபெறச் செய்து, உருவ வணக்கப் பித்தலாட்டத்தை அம்பலப் படுத்தினார். ஆகஸ்டு 1-ல் இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில், இந்தியை அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார்.

1954 — ஈரோட்டில் புத்தர் கொள்கை மாநாடு, குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு நடத்தினார். ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் கொதித்தெழச் செய்தார்; 1925 முதல் மேற்கொண்டு வந்த காங்கிரஸ் எதிர்ப்பைத் தளர்த்தி, ஏப்ரல் 13 முதல் காமராசரை ஆதரிப்பதாக அறிவித்தார்; குடியாத்தம் உபதேர்தலில் காமராசரை ஆதரித்தார்; அரை நேரக் குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தார். நாகையில் 76-வது பிறந்த நாளில் 76 பவுன் அளிக்கப் பெற்றார். ஆகஸ்டு 1-ல் இரயில் நிலைய போர்டுகளில் இந்தியை அழிக்கச் செய்தார். மணியம்மையாருடன் பர்மாவிற்குச் சென்று டிசம்பர் 3-ல் அங்கு உலக பவுத்தர் மாநாட்டில் கலந்துகொண்டார்; மலேயாவில் 2ஆம் தடவையாகச் சுயமரியாதைப் பிரசாரம் மேற்கொண்டார்.

1955 — இந்தித் திணிப்பை எதிர்த்து அரசாங்கத் தேசியக் கொடியை ஆகஸ்டு 1-ல் எரிப்பது எனத் தீர்மானித்தார். 'இந்தி, தேர்வுக்கான பாடமாக இராது' என மத்திய–மாநில அரசுகள் உறுதியளித்ததன்பேரில் கொடி எரிப்புக் கிளர்ச்சியைத் தற்காலிகமாக ஜூலை 31-ல் ஒத்தி வைத்தார்.

1956 — நாடெங்கும் இராமன் உருவப் படம் எரிக்கப்படச் செய்தார். 'தட்சணப் பிரதேசம்' என்ற கேடான அமைப்பை எதிர்த்து, அதனை இந்திய அரசு கைவிடச் செய்தார். மொழிவாரி பிரியும் தமிழ்நாடே, தாம் கோரும் 'தனித் திராவிடநாட்டின்' எல்லை என அறிவித்தார்.

1957 — திருச்சியில் வினோபா பாவேயைச் சந்தித்து இராமாயணம் பற்றிய தம் கருத்தை விளக்கினார். தமிழர்—கலெக்டர் திரு. மலையப்பன் விஷயமாகப் பார்ப்பன நீதிபதிகள் அளித்த அநியாயத் தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பினார். அதற்காக கோர்ட் அவமதிப்பு வழக்குக்கு ஆளாகித் தண்டனை ஏற்றார்; அவ் விசாரணையின்போது வரலாற்றுச் சிறப்புடையதான வாக்குமூலம் ஒன்றை அக்கோர்ட்டில் தாக்கல் செய்தார். தி. க. மத்திய கமிட்டியில் ஆகஸ்டில் காந்தி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினார். உணவு விடுதிகளில் 'பிராமணாள்' என்ற பெயரை நீக்கும் கிளர்ச்சி நடத்தி வெற்றி பெற்றார். தமிழகத்தில் எந்தத் தலைவருக்கும் நடந்திராத தன்மையில் அவர்தம் எடைக்கு எடை வெள்ளிருபாய் அன்பளிப்பாக தஞ்சையில் 3-11-1957-ல் அளிக்கப்பெற்றார்; அங்கு, சாதியை ஒழிக்க வேண்டி, 'சாதிக்குப் பாதுகாப்பாக உள்ள அரசியல் சட்டப் பகுதியை எரிப்பது' என முடிவெடுத்தார்; 26-11-1957-ல் நாடெங்கும் சுமார் 10,000 பேர் சட்டத்தைக் கொளுத்தினர், 3000 பேர் தண்டிக்கப் பட்டனர், இருவர் சிறையிலேயே மாண்டனர். 'பார்ப்பனர்களை வெட்டச் சொன்னார், குத்தச் சொன்னார்' எனக் குற்றஞ்சாட்டி

3 செக்ஷன்களின் கீழ் $1\frac{1}{2}$ ஆண்டு தண்டனை விதிக்கப்பெற்று, ஏக காலத்தில் 6 மாதம் அனுபவிக்கத் தீர்ப்பு அளிக்கப்பட்டார், பெரியார்; தமிழர்கள் கொதித்தெழுந்தனர்.

1958 — சிறையிலிருந்து விடுதலை அடைந்த அவர் மே 13-ல் சென்னையில் மாபெரும் வரவேற்பை ஏற்றார்.

1959 — வடநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பிப்ரவரியில் கான்பூர், லக்னோ, டில்லி, பம்பாய் முதலான இடங்களில் ரிபப்ளிகன் கட்சிக் கூட்டங்களிலும், கல்லூரிகளிலும் பேருரைகளாற்றினார். தமிழ் மக்கள் அளித்த ரூபாய் ஒன்றரை லட்சம் நிதியைக் கொண்டு சென்னையில் 'எழும்பூர் டிராம் ஷெட்' என்ற இடத்தைக் கழகத்திற்கு வாங்கினார்—அதுவே 'பெரியார் திடல்'—அங்கேதான் நடிகவேள் எம். ஆர். ராதா மன்றத்திற்கு வலப் புறமுள்ள இடத்தில் அய்யா அவர்கள் இன்று மீளாத் துயில் கொள்கிறார்.

1960 — நாடெங்கும், தமிழ்நாடு பிரிவினை கோரி, 'தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப் படத்தை' எரிக்கச் செய்தார்; தடுப்புக் காவல் சட்டப் பிரிவு 151-ன் படி கைது செய்யப்பட்டார்.

1961 — காங்கிரசில் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க காமராசர் கையைப் பலப் படுத்தும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டார்; சமதர்மப் பிரசாரம் புரிந்தார்.

1962 — பொதுத் தேர்தலில் காமராசருக்கு அபரிமிதமான வெற்றியைத் தேடித் தந்தார்.

1963 — காமராசர் பதவி விலகுவது தமிழருக்கும், தமிழ்நாட்டுக்கும், காமராச ருக்கும் தற்கொலையாக முடியும் என முன் கூட்டித் தந்திமூலம் அவருக்கு அறிவித்தார்.

1964 — 'தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டம் செல்லாது' என சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பினார். திருச்சியில் சுயமரியாதைப் பிரசாரப் பயிற்சி வகுப்பை நடத்தி விரிவுரைகளாற்றினார்.
காங்கிரஸ் ஆட்சி பார்ப்பன ஆதிக்கத்துக்கு இடந் தருவதைக் கண்டித் தார்.

1965 — 'இந்தி எதிர்ப்பு' என்ற பெயரால் பார்ப்பனர்கள், பத்திரிகைக்காரர்கள் தூண்டுதலின் பேரில் நடந்த கலவரத்தைக் கண்டனம் செய்து ஒடுக்கினார். நாடெங்கும் 6-4-1965-ல் 'இராமாயணம்' எரிக்கப்படச் செய்தார். திருச்சி மாவட்டத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்புகள் நடத்தினார்.

1966 — நாடெங்கும் 'இராமாயணம்' எரிக்கப்படச் செய்தார்.
விழுப்புரத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு நடத்தினார்.

1967 — பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பெற்ற தோல்வி தமது தோல்வி என அறிக்கை யிட்டார்; தம் 1963-ம் ஆண்டுத் 'தந்தி'யைச் சுட்டிக் காட்டி னார். தேர்தலில் பெரு வெற்றி குவித்த திரு. சி. என். அண்ணாதுரை பார்ப்பனரின் சூழ்ச்சித் திட்டத்துக்கு ஆட்பட விரும்பாமல், மார்ச்சு மாதம் தந்தை பெரியாரைச் சந்தித்தார்; பெரியார் ஆதரவு நல்கினார்.

தஞ்சை விடயபுரத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு நடத்தினார்; அங்கேதான் கடவுள் மறுப்பு வாசகங்களை உலகுக்கு அறிவித்தார். அச் சமயம் நாகர்கோவில் பயணத்தினால் அவரது உடல்நலம் பாதிப் புற்றது. திருச்சியில், நகர மக்கள் குழு சார்பில், 17-9-67-ல் பெரியார் சிலை தமிழகத்திலேயே முதன் முதலாகத் திறந்து வைக்கப் பெற்றது. அறிஞர் சி. என். அண்ணாதுரை ஆட்சியில் 28-11-1967-ல், சுயமரியா தைத் திருமணம் செல்லுபடியாகும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பெரியாருக்கு தி. மு. க. அளித்த முதல் வெற்றிக் கனி, அதுவாகும்.

1968 — தமிழ்நாட்டுக்குப் பூரண சுதந்தரம் கோரி 14-4-1968-ல் நாடெங்கும் 'டில்லி ஆதிக்கக் கண்டனநாள்' அனுசரிக்கச் செய்தார். லக்னோவில் அக்டோபரில் நடந்த மாநாடுகளில் அறிவுரையாற்றினார்.

1969 — இனஇழிவை நீக்க கோவில் கர்ப்பக் கிரகக் கிளர்ச்சிபற்றி அக்டோபரில் அறிக்கையிட்டார்; 16-11-1969-ல் மத்திய தி. க. கமிட்டியில், '26-1-1970-ல் கிளர்ச்சி நாள்' என அறிவித்தார்.

1970 — மார்ச்சு 7-ல் திருச்சி சிந்தனையாளர் கழகத்தையும், செப்டம்பரில் சென்னை பகுத்தறிவாளர் கழகத்தையும் துவக்கி, நாடெங்கும் இவ் வமைப்புகளை நூற்றுக்கணக்கில் தோற்றுவித்தார். குடந்தையில் 18-1-1970 மாநாட்டில் கர்ப்பக் கிரகக் கிளர்ச்சியை ஒத்திவைத்தார். அக்டோபரில் உணவு விடுதிகளில் 'பிராமணாள்' பெயர் அழிப்புக் கிளர்ச்சி நடத்தினார். நவம்பரில் பம்பாயில் சுற்றுப் பயணம் மேற் கொண்டார்.

1971 — கலைஞர் மு. கருணாநிதி ஆட்சியில், 12–1–1971-ல், 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்று சட்டம் நிறைவேற்றப் பட்டு, பெரியார் கோரிக்கை நிறைவேற வழி வகுக்கப்பட்டது. சனவரியில் சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு கூட்டினார்; அங்கு இராமன் உருவப் பொம்மை செருப்பாலும், விளக்குமாற்றாலும் அடித்து அவமானப் படுத்தப்பட்டு, தீயிடப்பட்டது. இராமன் படத்தை ஊர்தோறும் செருப்பால் அடிக்கச் செய்தார். இவற்றைக்கண்டு இந்தியாவே பரபரப்படைந்தது. தஞ்சை மன்னார்குடியில் திருச்சி– தஞ்சை தி. க. தொண்டர்கள் கருத்தரங்கில் அறிவுரை வழங்கினார்.

1972 — நாகை வேளாங்கண்ணியில் சுயமரியாதைப் பிரசாரப் பயிற்சி வகுப்பில் அறிவுரைகள் வழங்கினார்; தமிழ்நாடு அரசின் 'அனைத்துச் சாதி யினரும் அர்ச்சகர்' ஆக உரிமைதரும் சட்டம் செல்லாதென சுப்ரீம் கோர்ட், அச் சமயம், தீர்ப்பளித்தது; அத் தீர்ப்பின் மூலம் பார்ப்பான், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பேதம் நிலை நாட்டப்பட்டது. எனவே அத் தீர்ப்பை எதிர்த்து 15-3-1972-ல் நாகையில் போர்க் கொடி உயர்த்தினார்.

1973 — தம் 95ஆம் வயதில், அவர் வாழ்ந்த 98 நாட்களில், 35 நாட்கள் சூறாவளிப் பயணம் செய்தார். 16-9-1973, 17-9-1973 சென்னை பிறந்த நாள் விழா, 30-9-1973 மதுரை மாநாடு, 4-11-1973 திருச்சி சிந்தனை யாளர் கழகவிழா, 18-11-1973 முதல் 28-11-1973 வரை தமிழகச் சுற்றுப் பயணம்; 8, 9-12-1973 சென்னை மாநாடுகள் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைந்தன; இம் மாநாடுகள் அவர்தம் இன இழிவு நீக்கப் போரின்

கடைசிக் களமாகவும், அவர்தம் வாழ்நாளில் இறுதி மாநாடுகளாகவும் அமைந்து விட்டன. 19-12-1973-ல் சென்னை தியாகராய நகரில் சிந்தனையாளர் மன்றச் சார்பில்—மரண சாசனம் என அமைய நேரிட்ட பேருரையை நிகழ்த்தினார்; அதுவே இறுதிச் சொற்பொழிவாக அமைந்து விட்டது. 20-12-1973 பிற்பகல் 3 மணிக்கு சென்னை அரசினர் தலைமை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்; 21-12-1973 பிற்பகல் வேலூர் C.M.C. மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்; 23-12-1973 மாலை கவலைக்கிடமான நிலையை அடைந்து, இரவு 11 மணிக்குப் பின் நினைவிழந்தார்—நினைவு திரும்பாமலேயே, தமிழகத்தையும், உலகச் சிந்தனையாளர்களையும் தத்தளிக்க விட்டு—24-12-1973 காலை 7-40 மணிக்கு மீளா விடை பெற்றார், தந்தை பெரியார். அவர்தம் 95 ஆண்டைய நெடியவாழ்வு முடிவுற்றது; ஓய்வறியாத அப் பெருந்தகை ஓய்வு பெற்றார். உடல் சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டது; 24-12-1973 பிற்பகல் 4 மணி முதல் 25-12-1973 பிற்பகல் 3 மணி வரை சென்னை இராஜாஜி மண்டபத்தில் அவர்தம் உடல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது; அன்னாரின் உடலைக் கண்டு லட்சோப லட்சம் மக்கள் 'அய்யா' 'அய்யா!' எனக் கதறி அழுதனர்; 3-10 மணிக்கு அரசு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் துவங்கிற்று; 4-45 மணிக்குப் 'பெரியார் திடலை' அடைந்தது; அவரது தங்கமேனி தேக்கு மரப்பெட்டியில் வைத்து மூடப்பட்டு, மாலை 5-05 மணிக்குப் புதை குழியில் இறக்கப் பட்டது.

வாழ்க பெரியார் புகழ்!

தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின்

நூல்கள்

	நூலின் பெயர்	வெளிவந்த ஆண்டு	வெளியீட்டாளர்
1.	வைக்கம் வீரர் சொற்பொழிவு	1928	தென்னிந்திய நலஉரிமைச் சங்கம், காரைக்குடி ஜில்லா
2.	இராமாயண ஆபாசம் (முதற் பதிப்பு)	1929	திராவிடன் பதிப்பகம், சென்னை
3.	கர்ப்ப ஆட்சி	1930	குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு
4.	தர்ம பரீட்சை அல்லது புராண ஆபாசம்	1934	,, ,,
5.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	1934	,, ,,
6.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	1934	,, ,,
7.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மாநாட்டு'உபந்யாசம்	,,	,, ,,
8.	சமதர்ம உபந்யாசம்	,,	,, ,,
9.	சோஷியலிசம்	,,	,, ,,
10.	சோதிடப் புரட்டு	,,	,, ,,
11.	பொதுவுடைமைத் தத்துவங்கள்	,,	,, ,,
12.	பெண் ஏன் அடிமையானாள்?	,,	பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு
13.	பிரகிருதி வாதம்	,,	,, ,,
14.	மதம் என்றால் என்ன?	,,	,, ,,
15.	குடிஅரசுக் கலம்பகம் (முதற் பாகம்)	,,	,, ,,
16.	சோதிட ஆராய்ச்சி	1936	குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு
17.	தமிழ்நாடு தமிழருக்கே!	1939	,, ,,
18.	திருவாரூர் மாநாட்டுத் தலைமையுரை	1940	,, ,,
19.	பணம் பிடுங்கிப் பார்ப்பனர்	1942	,, ,,
20.	இனிவரும் உலகம்	1943	,, ,,
21.	இதிகாசங்களின் தன்மைகள்	,,	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
22.	இராமாயணப் பாத்திரங்கள்	1944	,, ,,
23.	தமிழ் இசை நடிப்புக் கலைகள்	,,	,, ,,
24.	கிராமச் சீர்திருத்தம்	,,	சிந்தனைப் பண்ணை, தஞ்சை
25.	உண்மைத் தொழிலாளி யார்? தொழிலாளியின் இலட்சியம் என்ன?	1946	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
26.	இன இழிவு நீங்க இஸ்லாமே நன் மருந்து	1947	,, ,,
27.	தத்துவ விளக்கம்	,,	நாதன் & கம்பெனி, ஈரோடு
28.	விழாவும் நாமும்	1948	ஞாயிறு நூற் பதிப்பகம், சென்னை
29.	தில்லையில் பெரியார்	,,	திராவிடமணி பதிப்பகம், திருச்சி

30.	திராவிடர் கழக இலட்சியம்	,,	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
31.	திராவிடர் ஆரியர் உண்மை	1948	,, ,,
32.	மொழி – எழுத்து	,,	,, ,,
33.	தூத்துக்குடி மாகாண மாநாட்டுத் தலைமை உரை	,,	,, ,,
34.	இந்திப் போர் முரசு (பெரியார் ஈ. வெ. ரா. மற்றும் தலைவர்கள்)	,,	விடுதலை வெளியீடு, சென்னை
35.	இந்து மதமும்–காந்தியாரும்–பெரியாரும்	,,	வள்ளுவர் பதிப்பகம், பவானி
36.	மொழியாராய்ச்சி	,,	,, ,,
37.	திருக்குறளும் திராவிடர் கழகமும்	1949	,, ,,
38.	மேல்நாடும் கீழ்நாடும்	—	— — —
39.	பொன்மொழிகள்	1949	திராவிடமணி பதிப்பகம், திருச்சி
40.	திருமணம்பற்றிப் பெரியார் பேருரை	1950	முல்லை—கி. விசுவநாதன், தம்மம்பட்டி
41.	தென்பகுதி இரயில்வே மென் யூனியன் திறப்புவிழாச் சொற்பொழிவுகள்	1952	— — —
42.	புரட்டு, இமாலயப் புரட்டு!	1953	பெரியார் தன்மானப் பிரசார நிலையத்தார், திருச்சி
43.	புரட்சிக்கு அழைப்பு	1954	தமிழன் அச்சகம், ஈரோடு
44.	ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் திறப்புவிழாச் சொற்பொழிவு	1955	
45.	முதலாளி தொழிலாளி ஒற்றுமைப் பிரச்சினை	1956	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
46.	யார் துரோகிகள்?	,,	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
47.	சிந்தனைத் திரட்டு	1957	சிந்தனைப் பண்ணை, தஞ்சை
48.	பெரியார் பொன்மொழிகள் பேச்சும் எழுத்தும்	1957	திராவிடர் கழகம், கல்கத்தா
49.	காந்தியார் படத்தை எரிப்பது ஏன்?	,,	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
50.	கடவுள்	,,	,, ,,
51.	புராண ஆபாசங்கள்	1957	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
52.	பெரியார் தஞ்சை மாநாட்டுத் தலைமை உரை	1957	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
53.	பெரியார் சிறைபுகுமுன் அறிக்கை	,,	விடுதலை வெளியீடு, சென்னை
54.	அய்க்கோர்ட் அவதூறு வழக்கில் பெரியார் ஸ்டேட்மெண்ட்டும் தீர்ப்பும்	,,	,, ,,
55.	சித்திரபுத்திரன் எழுதுகிறார்		பகுத்தறிவுப் பாசறை, சென்னை
56.	போர்ச் சங்கு	1958	விடுதலை வெளியீடு, சென்னை
57.	வெளியேறு!		கூத்தரசன் பதிப்பகம், G.T., சென்னை
58.	நாடகமும் சினிமாவும் நாட்டை நாசமாக்குகின்றன		விடுதலை வெளியீடு, சென்னை

59.	வாழ்க்கை ஒப்பந்தம்	—	— — —
60.	வாழ்க்கைத் துணைநலம் (முதல் பாகம்)	1958	கி. வீரமணி—மோகனா, கடலூர்
61.	நீதி கெட்டது யாரால்?	1959	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
62.	சித்திரபுத்திரன் கட்டுரைகள்	,,	,, ,,
63.	எந்த ஜாதி காப்பாற்றப்பட வேண்டும்?	—	— — —
64.	The Ramayana, A True Reading	,,	Rationalist Publication, Madras
65.	Philosophy	,,	Karnataka Dravidian Association, Bangalore.
66.	ஜனநாயகம்	,,	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
67.	கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே (2-ம் பதிப்பு)	1960	— — —
68.	பார்ப்பனர் தொல்லை	1960	குடிஅரசு வெளியீடு, ஈரோடு
69.	அறிவுச் சுடர்	,,	,, ,,
70.	சுதந்தரத் தமிழ்நாடு ஏன்?	,,	,, ,,
71.	வாழ்க்கைத் துணைநலம் (2-ம் பாகம்)	,,	பகுத்தறிவு வெளியீடு, சென்னை
72.	தாய்ப் பால் வைத்தியம்	—	— — —
73.	அய்க்கோர்ட்டின் நீதிப்போக்கு (இரு பாகங்கள்)	1961	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
74.	ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள்	1961	,, ,,
75.	காமராசர் ஆட்சியின் சாதனைகள்	,,	,, ,,
76.	தமிழ்நாடா? திராவிடநாடா?	,,	,, ,,
77.	மனுநீதி ஒருகுலத்துக்கு ஒருநீதி	—	— — —
78.	பார்ப்பனர்கள்	1961	தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் கழகம், சிதம்பரம்
79.	தீண்டாமையை ஒழித்தது யார்?	,,	,, ,,
80.	ஆச்சாரியார் ஆத்திரம்	,,	,, ,,
81.	நான் காங்கிரசில் சேர்ந்து விட்டேனா?	,,	,, ,,
82.	சமுதாய சீர்திருத்தம்—எனது தொண்டு	1962	விடுதலை வெளியீடு, சென்னை
83.	மொழியும் அறிவும் (2-ம் பதிப்பு)	,,	— — —
84.	கண்ணீர்த் துளிகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும்—எச்சரிக்கை	,,	அறிவுக் கடல் பதிப்பகம், மதுரை
85.	மறுத்தலும் பகுத்தறிவும்	—	— — —
86.	கழகமும் துரோகமும்	1963	பகுத்தறிவு வெளியீடு, ஈரோடு
87.	புராணம்	,,	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
88.	மதுவிலக்கின் இரகசியங்கள்	,,	பகுத்தறிவு வெளியீடு, ஈரோடு
89.	இந்தியும் ஆச்சாரியாரும் (பெரியார் ஈ. வெ. ரா. & கி. வீரமணி)	,,	குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு
90.	தமிழருக்குச் சோதனை காலம்	,,	— — —
91.	இராஜாஜி	—	— — —
92.	பார்ப்பன நீதி	1964	பகுத்தறிவு வெளியீடு, சென்னை

93.	ஏன் இல்லை—எல்லோருக்கும் கல்வி, உணவு, உடை, வீடு ?	—	— — —
94.	இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி	1965	உண்மை விளக்கம் பதிப்பகம் சென்னை
95.	Social Reform or Social Revolution ? (Translated by A. M. Dharmalingam)	1965	Viduthalai Publications, Madras.
96.	கிளர்ச்சிக்குத் தயாராவோம்	,,	விடுதலை வெளியீடு, சென்னை
97.	இன்றைய ஆட்சி நிலை	,,	,, ,,
98.	வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் (பெரியார் ஈ. வெ. ரா. & வே. ஆனைமுத்து	,,	,, ,,
99.	அறிவு விருந்து	1968	பெரியார் சுயமரியாதைப் பிரசார நிலையம், திருச்சி
100.	அறிவுச் சுடர்	,,	,, ,,
101.	மதச் சார்பின்மையும் நமது அரசும்	,,	,, ,,
102.	கடவுளும் மனிதனும்	1969	சி. பி. சர்வாதிகாரி—பட்டு, இரும்புலிக்குறிச்சி
103.	கடவுள் குழப்பம்	,,	— — —
104.	வானொலியில் பெரியார்	1970	— — —
105.	நமது இன்றைய நிலையும்—பரிகாரமும்	—	— — —
106.	புத்த நெறி (3-ம் பதிப்பு)	1970	சிந்தனையாளர் கழகம், திருச்சி-2
107.	சுயநலம் பிறநலம்	1971	— — —
108.	கடவுள் ஒரு கற்பனையே (முதற் பதிப்பு)	1971	பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம், திருச்சி-17
109.	பெரியார் பேசுகிறார்	1972	அண்ணா சிந்தனைப் பேரவை கோவை
110.	கோயில் பகிஷ்காரம் ஏன் ?	1972	பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம், திருச்சி-17
111.	உயர் எண்ணங்கள் I	,,	,, ,,
112.	உயர் எண்ணங்கள் II	1973	,, ,,
113.	நவமணிகள்	1974	,, ,,
114.	பெரியாரின் மரண சாசனம் (இறுதிச் சொற்பொழிவு)	1974	பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம், திருச்சி-17

தந்தை பெரியார் அவர்கள் வெளியிட்ட

பிற நூல்கள்

1. ஞான சூரியன்
2. இந்தியாவின் குறைபாடுகள்
3. Temple Entry (English)
4. லெனினும் மதமும்
5. கடவுளும் பிரபஞ்சமும்
6. கைவல்யம் அல்லது கலைக்கியானம்
7. இராமாயண ஆராய்ச்சி—பால காண்டம்
8. இராமாயண ஆராய்ச்சி—அயோத்தியா காண்டம்
9. இராமாயண ஆராய்ச்சி—ஆரண்ய காண்டம்
10. இராமாயண ஆராய்ச்சி—கிட்கிந்தா காண்டம்
11. பாரத ஆராய்ச்சி—ஆதிபர்வம்
12. மேயோ கூற்று மெய்யா, பொய்யா?
13. இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு
14. சுயமரியாதைப் பாடல்
15. சுயமரியாதைத் தாலாட்டு
16. பர்னாட்ஷா உபந்யாசம்
17. போல்ஷ்விக் முறை
18. கத்தோலிக்கர் வீண்கூச்சல்
19. முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை
20. மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?
21. பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்
22. Periyar E. V. Ramasami (English—A short biography)
23. மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
24. பிரபஞ்ச உற்பத்தி
25. நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
26. நான் சம்சயவாதி ஆனதேன்?
27. பகுத்தறிவு அல்லது கத்தோலிக்க குருவின் மரண சாசனம் (3 பாகங்கள்)
28. கைவல்ய சுவாமியார் கட்டுரைகள் (2 பாகங்கள்)
29. தமிழர் தலைவர் (பெரியார் வரலாறு)
30. சாதிக் குறி (தமிழ்)
31. Caste Mark 111 (ஆங்கிலம்)
32. Periyar—A Pen Portrait (English)
33. பிர்லா மாளிகை மர்மங்கள்
34. சாதியை ஒழிக்க வழி

35. பலசரக்கு மூட்டை (குத்தூசி தொகுப்பு நூல்கள்—இரு பாகங்கள்)
36. அகத்தியர் ஆராய்ச்சி
37. மெய்ஞானமுறையும் மூடநம்பிக்கையும் (2 பாகங்கள்)
38. பெரிய புராண ஆராய்ச்சி
39. கோயில்கள் தோன்றியது ஏன்?
40. திருக்குறளும்—பெரியாரும்
41. நரகம் எங்கே இருக்கிறது!
42. கடவுள் தோன்றியது எப்படி? (இரண்டு பாகங்கள்)
43. கடவுளர் கதைகள்
44. உண்மை இந்து மதம் எது?
45. பேய்—பூதம்—பிசாசு
46. இரண்டு வழிகள்
47. பெரியார் ராமசாமி அவர்களைப்பற்றி
48. மதப் புரட்சி
49. ஊழல் எங்கே? (நகர்வாலா மோசடி)
50. பகுத்தறிவு மணம்
51. கலியுக சமாதானம்
52. நமது குறிக்கோள்
53. இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம்
54. இந்தி எதிர்ப்புப் பாடல்கள்
55. கார்ல் மார்க்ஸ்
56. பஞ்சமா பாதகங்கள்
57. காந்தி கண்டனக் கீதம்
58. சமதர்மக் கீதங்கள்
59. வால்டையரின் வாழ்க்கைச் சரிதம்
60. விவாக விடுதலை
61. இந்திய மாதா
62. இங்கர்சால் பொன் மொழிகள்
63. புராண ஆபாசங்கள்
64. கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
65. The Superstition of Khadi
66. நமக்கு வேண்டியது எது? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? (மூன்று பாகங்கள்)
67. The Periyar Self Respect Propaganda Institution—Memorandum and Articles of Association
68. பெரியாரும்—இராமலிங்கரும்
69. சட்டசபையில் கண்ணீர்த் துளிகள் சாதித்தது என்ன?
70. பெரியார் ஒரு சகாப்தம்
71. தி. மு. க. ஆட்சியின் சாதனைகள்

[Established 7—3—1970]
Regd. No. 105/70

THINKERS' FORUM

MEMORANDUM OF ASSOCIATION

1. The name of the Association is "Thinkers' Forum".

2. The registered office of the Thinkers' Forum will be situate at Tiruchirappalli and the present address of the Forum is T. N. T. C. Building, 112, (Upstairs), Vanappattarai Street, Teppakulam, Tiruchirappalli-2.

3. The aims and objects of the Forum are:

(i) To propagate the Self-Respect principles propounded by Periyar E. V. Ramasami and to impart Atheism among the people.

(ii) To conduct monthly meetings and hold conferences on Free-thinking and allied subjects that will be conducive to diffuse knowledge to the people.

(iii) To arrange for special lectures in commemoration of world renowned atheists and to publish pamphlets and books on the same.

(iv) To influence the climate of educated opinion in favour of rationalism and rationalist principles.

(v) To conduct contests, seminars, exhibitions and symposiums that will help youngsters to imbibe sufficient knowledge on Atheism.

(vi) To establish a Library-cum-Auditorium-cum-Study Centre in the name of Periyar E. V. Ramasami at Tiruchirappalli and to maintain the same.

(vii) To undertake and execute any trusts of the like nature.

(viii) To train up propagandists to impart the principles of the Forum.

(ix) And to undertake such programmes of work that will be useful and helpful for the propagation of the objects and purposes of the Forum in a peaceful manner.

4. The Forum is purely a non-political, social organisation in character.

திருச்சி சிந்தனையாளர் கழகம்

கழகக் கொள்கை விளக்கம்

1. இக் கழகத்தின் பெயர் "சிந்தனையாளர் கழகம்" என்பதாகும்.

2. சிந்தனையாளர் கழகத்தின் பதிவு பெற்ற அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் இடம் பெறுவதாகும். இக் கழகத்தின் தற்போதைய முகவரி:—

T. N. T. C. கட்டடம்

112, (மாடி) வாணப்பட்டறைத் தெரு,

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி-2

என்பதாகும்.

3. இக் கழகத்தின் நோக்கங்களும், குறிக்கோள்களும் பின்வருமாறு. அவை:

(i) பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களால் வழங்கப்பெற்ற சுய மரியாதைக் கொள்கைகளையும், மற்றும் நாத்திகக் கருத்துகளையும் மக்களிடையே பரப்புதல்;

(ii) மக்களின் சிந்தனை அறிவைத் தூண்டும் வகையில் சுயசிந்தனை நெறி குறித்தும், அதனோடு தொடர்புடைய பிற பொருள்கள் பற்றியும் மாதந்தோறும் கூட்டம் நடத்துதல்; மாநாடுகள் நடத்துதல்;

(iii) உலகப் பெயர்பெற்ற நாத்திகர்களின் நினைவாகச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தல்; அச் சொற்பொழிவுகளைத் திரட்டிச் சிறு வெளியீடுகளாகவும், நூல்களாகவும் வெளியிடுதல்;

(iv) படித்தவர்களின் எண்ணப் போக்கைப் பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு உடன்பட்டதாக உருவாக்குதல்;

(v) இளைஞர்கள் நாத்திகக் கொள்கை பற்றிப் போதிய அறிவுவிளக்கம் பெறத் துணைபுரியும் வகையில் போட்டிகள், ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்துதல்;

(vi) திருச்சிராப்பள்ளியில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் பெயரில் நூல் நிலையம்-பேரரங்கம்-ஆராய்ச்சி மையம் ஆகியவை ஒருங்கிணைந்த ஒரு நிலையத்தை நிறுவுதல்; அதனைத் தொடர்ந்து நிருவகித்தல்;

(vii) இக் கழகத்தின் கொள்கைகளை ஒத்த தன்மை வாய்ந்த வேறு அமைப்புகளை மேற்கொள்ளுதல்; நடாத்துதல்;

(viii) இக் கழகத்தின் கொள்கைகளை மக்களிடையே பரப்புதற்கு உரிய பிரசாரகர்களைப் பயிற்றுவித்தல்;

(xi) மற்றும் இக் கழகத்தின் கொள்கைகளையும், நோக்கங்களையும் அமைதியான முறையில் பரப்புவதற்குத் துணையாகவும், பயன்படத் தக்கதாகவும் உள்ள வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

4. இக் கழகம் முற்றிலும் அரசியல் சார்பற்றதும், சமுதாயப் பணி புரிவதும் ஆன தன்மையதாகும்.



மிக்க மகிழ்ச்சியோடு இந்த சிந்தனையாளர் கழகத்தையும், செயல்முறை களையும், சட்டதிட்டங்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

ரூ. 100 நூறு நன்கொடை தருகிறேன்.

ஈ. வெ. ராமசாமி
2-4-70

ஈ. வெ. ரா

முதல் தொகுதி

பொருளடக்கம்

3. பெண்ணுரிமை

4. வாழ்க்கை ஒப்பந்தம்

பக்க எண்

3. காந்தியம்

4. பார்ப்பனரல்லாதார் இயக்கம்

5. சுயமரியாதை இயக்கம்

6. திராவிடர் கழகம்

7. நாமும் பிற இயக்கங்களும்

பக்க எண்

PART III

SOCIAL REFORM OR SOCIAL REVOLUTION

1. On Society

2. On Movements

3. Social Reform or Social Revolution

பகுதி I

சமுதாயம்

1. சமுதாயம்

1. பிறப்புரிமையும் தடைகளும்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று பெரியோர்கள் சொன்னதாகச் சொல்லுவார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளாததற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். "கொடுமை, கொடுமை; மனிதராகப் பிறப்பது மிகக் கொடுமை" என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

உலகில் உள்ள ஜீவகோடிகள் எல்லாவற்றினும் மனிதப் பிறப்பே மிகத் தாழ்ந்த பிறப்பு என்பதும், மனிதனைப் போல் அடிமை உலகில் வேறு ஜீவன்கள் இல்லை என்பதும் என் அபிப்பிராயம். மனிதனைத் தவிர மற்ற ஜீவகோடிகள் எவ்வளவோ சந்தோஷத்துடனும் அடிமை உணர்வில்லாமலும் சுதந்திரமாய் வாழ்வதை நாம் பார்க்கிறோம். அவைகளில் சிலவற்றிற்குக் கஷ்டமும், அன்னியரால் கஷ்டப்படுத்தத்தக்க நிலைமையும் ஏற்பட்டு இருந்தாலும், மனிதனைப்போல் உணர்ந்து துக்கிக்கிற சக்தியாகிய கொடுமை அவற்றிற்கு இல்லை.

ஏனெனில், பகுத்தறிவென்கிற ஒரு உபத்திரவம் கொடுக்கத்தக்க குணம், அவைகளுக்கு இல்லாததால்தான். உதாரணமாக, குதிரைகளை ஜட்கா வண்டியில் பூட்டி ஒரு முரட்டு நூல் கயிற்றை மடித்துக்கொண்டு—ஓட, ஓட, அதன் மிக மெல்லியதும், அதிக உபத்திரவம் கொடுக்கத் தக்க இடமுமாகிய மர்மஸ்தானத்தில் அடித்தாலும்; நல்ல வாலிபமுள்ள காளை மாடுகளைக் கட்டித் தள்ளி அதன் விதர்களை மரக்கட்டையின் மேல்வைத்து மரக் கொட்டாப்பிடியினால் தண்ணீர் போலக் கரையும்படி தட்டினாலும்—அவைகளுக்குக் கஷ்டம் மாத்திரம் தோன்றுமேயல்லாது, அதற்குத் தன் பிறப்புரிமை இழந்து இப்படிக் கஷ்டமனுபவிக்கிறோமே என்கிற உணர்ச்சி இருக்காது. தவிரவும், அதற்கு மானம் அவமானம் என்கிற உணர்ச்சியும் இல்லை. இதோடு, நாளைக்கு வேண்டுமே என்கிற கவலையும் இல்லை. எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை என்னும் அடிமைத் தன்மையும் இல்லை. ஆகவே, மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட மானம் அவமானம் என்கிற உணர்ச்சியும், நாளைக்கு என்ன செய்வது என்கிற தன்னம்பிக்கை அற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியடைய முடியாத ஆசை என்னும் அடிமைத் தன்மையும் உடைத்தாயிருப்பதால், மனிதத் தன்மையானது பிறவியிலேயே மிகுதியும் இழிவானதும், அடிமைத் தன்மை கொண்டதுமானதுமாய் இருக்கிறது என்பது நான் கொண்ட கருத்து.

இப்படிப்பட்ட மனித ஜீவனுக்கு, எல்லாவற்றையும் விட முக்கியமான உணர்ச்சியாக, மான—அவமானம் என்னும் தன்மானமாகிய சுயமரியாதையைத்தான் பிறப்புரிமையாகக் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏனெனில், 'மனிதன்', 'மானிடன்' என்ற பதங்களே மானத்தை அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்ட மொழிகள். ஆதலின், மனிதன் என்பவன் மானமுடையோன். எனவே, மனிதனுக்கு மனிதத் தன்மையைக் காட்டும் உரிமையுடையது மானம்தான். அத் தன்மையாகிய சுயமரியாதையைத்தான் மனிதன் சுயமரியாதையாகக் கொண்டிருக்கிறான்.

இது ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் உரிமையுடையது. திலகர் பெருமான், "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என்று சொன்னாரென்றால், அவரும் வருணாசிரம பார்ப்பனராதலால், பார்ப்பனர்களுக்குப் பிறரைத் தாழ்மையாகக் கருதுவதே பிறப்புரிமை என்று நினைக்கிற முறையில், பொருளில்லாததும், அனுபவத்தில் பெரிதும் ஏமாற்றமே

பொருளாகக் கொண்ட அரசியல் சம்பந்தமான சுயராஜ்யம் என்னும் வார்த்தையை அவர் பிறப்புரிமைக்கு உபயோகிக்க வேண்டியவரானார். நாம் யாரையும் ஏமாற்றிப்பிழைக்க வேண்டியவர்கள் அல்லோம். உண்மையான மானிடத் தன்மையை அறியவேண்டியவர் களாயிருக்கிறோம். ஆதலால், 'மனிதனுக்குப் பிறப்புரிமை தன்மானந்தான்.'

அதற்கு நம்முன் நிற்கும் தடைகள் என்ன என்பது இரண்டாவது விஷயம். தடைகள் இரண்டு விதம். ஒன்று, இயற்கையாய் ஏற்பட்ட தடை; மற்றொன்று, மற்றவர் களால் ஏற்பட்ட செயற்கைத் தடை.

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமை யாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள். இத் தடைகளை நீக்குவதென்பது முற்றுந் துறந்த துறவிகளுக்கே முடியக்கூடியது.

ஆதலால், நான் செயற்கைத் தடைகளைப்பற்றிப் பேசப் போகிறேன். இந்தச் செயற்கைத் தடை என்பது ஒவ்வொரு தேசத்திற்கு ஒவ்வொரு மாதிரியாகக் காணப்படு கிறது. நமது நாட்டில் நமது பிறப்புரிமையாகிய சுயமரியாதைக்கு முக்கியமாய் இரண்டு விதமான செயற்கைத் தடைகளைச் சொல்லலாம். ஒன்று, அரசியல் சம்பந்தமான பார்ப்பனர் என்னும் வகுப்பார் நம்மை ஏமாற்றி, நமது சுயமரியாதையைக் கெடுத்திருப்பது. மற்றொன்று, அதே வகுப்பார் பரமார்த்திகத்திற்கு என்று, மதம் என்கிற பெயரால் நம்மை ஏமாற்றி, நிரந்தர அடிமையாக்கி நமது சுயமரியாதையை அடியோடு களைந்து வருவது. ஆகிய இந்த இரண்டு விஷயங்களிலும் நமது மக்கள்—ஏறக்குறைய எல்லோருமே—சிலர் ஏதாவது ஒன்றில், சிலர் இரண்டிலும் மயங்கி, அவ்வகுப்பாருக்கு அடிமையாகி மொத்தத்தில் சுயமரியாதையற்று இருக்கிறோம். அன்றியும், அவ்வகுப்பாரைப் பின்பற்றி நம்மவருட் சிலரும் வயிறுவளர்ப்பதன் மூலம் நமது சுயமரியாதைகளுக்குத் தடையாக இருக்கிறார்கள். ஆயினும், இந்தச் சமயத்தில் அரசியல் என்பதின் மூலமாயுள்ள தடையை விட்டுப் 'பரமார்த்தம்' என்னும் பேரால் உண்டாக்கிய தடைகளைப் பற்றியே இங்கு பேச எண்ணுகிறேன்.

நமது ஆத்மார்த்தத்திற்கென்றும், பரமார்த்திகத்திற்கென்றும் இந்துமதம் என்பதாக ஒரு கற்பனையை இப் பார்ப்பனர்கள் நமது தலையில் சுமத்தியிருக்கிறார்கள். இந்து மதம் என்னும் வார்த்தைக்குப் பொருளே காண இயலவில்லை. இந்து என்பதே தமிழ் வார்த்தை இல்லை என்பதை நீங்கள் முதலில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இது பார்ப்பன பாஷை. பார்ப்பன பாஷையிலாவது இந்து என்பதற்குப் பொருளுண்டா என்று பார்த்தால் மதத்திற்குப் பொருத்தமானதாக ஒரு பொருளும் இல்லை. வேறு ஏதாவது பாஷையில் இருக்கிறதா என்று பார்த்தால், பார்சி பாஷையிலோ, அரபி பாஷையிலோ இந்து என்பதற்குத் திருடன் என்கிற பொருள்தான் இருக்கிறது. சிலர் சிந்து நதிக்கரையில் இருந்ததால் சிந்து என்பது இந்து என்பதாக மருவி, அது ஒரு கூட்டத்தினருக்குப் பெய ராகிப் பிறகு மதமாகிவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். அது எப்படியோ இருக்கட்டும். இந்து மதம் என்றால் என்ன என்பதையாவது கவனிப்போம்.

கிறிஸ்துமதம் என்றால் கிறிஸ்து மஹான் கட்டளையை அடிப்படையாகக் கொண்டது. முகமதியமதம் என்றால் முகமது நபியின் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டது. புத்தமதம் என்றால் புத்தருடைய கட்டளையை அடிப்படையாகக் கொண்டது. இதுபோல், 'மதம்' என்று சொல்லக் கூடியவை ஒவ்வொன்றுக்கும், மத கர்த்தா இன்னார்; அவரது கொள்கை-கட்டளை இன்னது; இன்ன காலத்தில் ஏற்பட்டது என்கிற உண்மைகள் உண்டு. அப்படி இந்து மதத்திற்கு யார் கர்த்தா? என்ன கொள்கை? எந்தக் காலம்? என்று சொல்வதற்கு என்ன ஆதாரமிருக்கிறது?

"அநாதிகாலம் தொட்டு இருப்பது வேதம்; அது கடவுள் சொன்னது" என்று சொல்லி ஏய்த்து விடுவதாயிருந்தால் அது பொருத்தமாயிருக்க வேண்டாமா? 'அநாதியாயும்' 'கடவுள் சொன்னதுமாயிருந்தால்' கடவுளால் உண்டாக்கப்பட்ட எல்லாத் தேசங்களுக்கும் எல்லாக் கண்டங்களுக்கும் இதுவே வேதமும் மதமுமாய் அல்லவா இருக்க வேண்டும்? பல்வேறு மதங்கள் இருப்பானேன்? இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக் குள்ளாகவே சிலர் இவ்வேதத்தைப் படித்தால் கண்ணைக் குத்த வேண்டியதும், சிலர் காதினால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டியதும் எதற்காக? கிறிஸ்த வருக்கும், முகமதியருக்கும் முறையே ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மத சம் பந்தமான விசேஷ நாட்களாயிருக்கும்போது, இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஒருவருக்கு திங்கட்கிழமை, ஒருவருக்கு சனிக்கிழமை, ஒருவருக்கு வெள்ளிக்கிழமை—இப்படி யாக ஒரு வாரத்திலுள்ள ஏழு நாட்களும் வெவ்வேறு மனிதர்களுக்காகவும், இன்னும் சிலருக்கு நாட்கள் போதாமலும் போவானேன்?

மதச் சின்னங்கள் விஷயத்தில் ஒருவர் நாமம், ஒருவர் விபூதி, ஒருவர் கருப்புப் பொட்டு, ஒருவர் சந்தனக் கீறல், ஒருவர் முத்திரை, ஒருவர் நெடுக்கு, ஒருவர் குறுக்கு— இப்படியாகப் பல மாறுதல்கள் ஏற்படுவானேன்? இந்த மாறுதல்களோடு இதற்குக் காரணங்கள் ஆளுக்கு ஒருவிதமாய்ச் சொல்லுவானேன்? இந்த வித்தியாசங்களைச் சாமி களுக்கும் புகுத்துவானேன்? நாமம் என்பது என்ன என்று கேட்டால், சிலர் சுவாமியின் பாதம் என்கிறார்கள். வெள்ளை நாமம் இரண்டும் பாதமானால் நடுவில் இருக்கும் சிவப்பு நாமத்திற்குப் பெயர் என்ன? அப்படியே சுவாமியின் பாதம் என்பதாகவே ஒப்புக்கொள்ளு வோமேயானால், சுவாமியின் பாதத்தையே சுவாமியின் நெற்றியில் கொண்டுபோய் வைப் பானேன்? இந்த நாமத்திற்கும், பாதம் வைத்த நாமம்—பாதமில்லாத நாமம் என்பதாக —'வடகலை' 'தென்கலை'—என்று ஒருவருக்கொருவர் உதைபோட்டுக் கொள்வானேன்? இவைகளில் ஒரு நாமம், மூன்று நாமம், பதினொரு நாமம் என்கிற கணக்குச் சண்டை எதற்கு? இந்துக்களிலேயே ஒரு சாரார் இந்த நாமத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசுவா னேன்? இது போலவே, விபூதி, பொட்டு, முத்திரை இவைகளுக்குப் பலப்பல மாதிரி வியாக்கியானங்கள் இருப்பானேன்? இதை மற்ற தேசத்தாரும் ஒப்புக்கொள்ளாததேன்?

லிங்கத்தையும், ஆவுடையாரைப் பற்றியும் பல விதமாகப் பேசுவானேன்? நமது சுவாமிகளுடைய பெயரெல்லாம்—குறிகளெல்லாம் நமது தமிழ்ப் பாஷையில் இல்லாமல் அன்னிய பாஷையாகிய ஆரிய பாஷையில் இருப்பானேன்? சுவாமியைப் பூசிப்பதற்கு நமக்கும் சுவாமிக்கும் மத்தியில் ஒரு அன்னியன் இருப்பானேன்? அன்னிய பாஷையில் தோத்திரங்களும், மந்திரங்களும் இருப்பானேன்? ஆளுக்கொருவிதமாகப் பூசை செய் வானேன்? அதற்காக நாம் பணம் கொடுப்பானேன்? ஒவ்வொரு சுவாமிக்கும் ஒவ்வொரு வாகனம், ஒவ்வொரு வித வாகனங்கள் ஏற்படுத்துவானேன்? சுவாமிக்குப் பெண்டு பிள்ளைகள், வைப்பாட்டிகள், தாசிகள், விபசாரத் தன்மைகள் ஆகியவைகளைக் கற்பிப் பானேன்? சிலர் சுவாமியைப் பார்த்தால், சுவாமி சக்தி ஓடிப்போவானேன்? சிலர் கோவிலுக்கு வந்தால் கோவிலும் சுவாமியும் தீட்டாய்ப் போவானேன்? சிலர் சுவாமியைத் தொட்டால் சுவாமி இறந்து போவானேன்? ஒரே பெயரும், ரூபமும் உள்ள சுவாமிகளுக்கு ஊருக்கு ஒருவிதமாய் சக்திகள் ஏற்பட்டிருப்பானேன்?

காசி, ஜகந்நாதம், பண்டரிபுரம் முதலிய ஊர்களில் உள்ள சாமிகள் யார் தொட்டா லும் சாவதில்லை. அங்கு கோவிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் தாங்களே நேரில் சாமி யைத் தொட்டுத் தலையில் தண்ணீர் விட்டு, புஷ்பம் போட்டுக் கும்பிடுகிறார்கள். அதே பெயருள்ள சாமி நமது நாட்டில் நாம் தொட்டால் செத்துப் போய்விடுகிறது. சீரங்கம், சிதம்பரம், பேரூர், பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, கரூர் முதலிய முக்கிய க்ஷேத்தி ரங்களிலுள்ள சாமிகள்—நாடார்கள் கோவிலுக்குப் போய்க் கும்பிட்டால்—அக் கோவில்

களும் சாமிகளும் சாவதில்லை. மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள சாமிகள் மாத்திரம் நாடார்கள் கும்பிட்டால் செத்துவிடுகின்றன. இப்படி, சாமிகளின் சக்தியும் உயிரும் கோயில்களின் யோக்கியதையும் ஊருக்கு ஒருவிதமாய் இருப்பானேன்? பிறகு, பார்ப்பனர்க்கு மாத்திரம் அந்தச் சாமியை உயிர்ப்பிக்கும் சக்தி இருப்பானேன்?

நமது வேதம், சாமி, பூசை, வணக்கம் முதலியன சம்பந்தமான விஷயங்கள் இப்படி இருக்கின்றனவென்றால், இந்த இலட்சணத்தில் இம்மாதிரி சாமியினாலும் கோவிலினாலும் நமது சுயமரியாதை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதோடு, நமது பணம் எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் கவனித்துப் பாருங்கள்! சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்து மத சம்பிரதாயப்படிக்கு ஏற்பட்ட கோவில்களுக்கும் மடங்களுக்கும் வருஷம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் வரை வரும்படி வருகிறது. 2 கோடி ரூபாய் வரும்படி வந்தால் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு ஆகும்?

சாதாரணமாக, திருப்பதிக்கு மாத்திரம்—சர்க்கார் கணக்குப்படி—வருஷம் ஒன்றுக்கு 20 இலட்சம் வரும்படி வருவதாக ஏற்படுகிறது. கணக்குக்கு வராமல், மகந்துகளுக்கும் கோவில் அதிகாரிகளுக்கும் பூசாரிகளுக்கும் போகும் பணங்களுக்கு அளவே இல்லை. யாத்திரைக்காரர்கள் காணிக்கையாகக் கொண்டுவரும் தொகைகளை அறிந்த மகந்து, கோவில் அதிகாரிகள் முதலியவர்கள் யாத்திரைக்காரர்களைக் கூப்பிட்டு, "கோவில் கூடாரத்தில் காணிக்கையைப் போட்டால் சர்க்கார் எடுத்து ஜர்மன் யுத்தத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டி கட்டிவிடுவார்கள்; மகந்துவிடம் கொடுத்தால்தான் சுவாமிக்குப் போய்ச் சேரும்; நீர் இவ்வளவு ரூபாய், இவ்வளவு நகை கொண்டு வருவதாகச் சாமி என்னிடத்தில் சொப்பனத்தில் சொல்லிற்று" என்று ஏமாற்றி, வழிப்பறி செய்வதில் கொள்ளை போகும் பணம் இந்த 20 இலட்சத்தில் சேர்ந்ததல்ல. இன்னமும், யாத்திரைக்காரன் இரயில் சார்ஜ், சில்லரைச் செலவு, மொனக்கேடு, தேங்காய் பழம் முதலிய செலவுகள் எத்தனை இலட்சம் ஆகும் என்று கணக்குப் பாருங்கள்!

இன்னும் உற்சவாதிகள் சுவாமிக்கும் அம்மனுக்கும் கலியாணம்; சுவாமி தாசி வீட்டுக்குப்போதல்; ஒரு காலைத் தூக்கி ஆடுதல்; நரியைக் குதிரையாக்குதல் முதலிய திருவிழாக்களுக்கு 10 மணு எடையுள்ள சுவாமியை 200 டன் எடையுள்ள தேரில் வைத்து 10,000 பேர் இழுப்பதும், அதனை 5000 பேர் வேடிக்கை பார்க்கப் பல இடங்களிலிருந்து வருவதும் ஆகிய காரியங்களுக்கு ஆகும் செலவுகளும்—சுவாமிகளுக்கு அபிஷேகம், பூசை, சதிர், பாட்டுக் கச்சேரி, நகைநட்டு, பாவாடை, புனுகு, சவ்வாது, பச்சைக் கற்பூரம், குங்குமப் பூ முதலிய செலவுகளுக்கெல்லாம் சேர்த்து, இந்துமத சாமிகளின் பூசைக்கும் உற்சவங்களுக்கும் மாத்திரம், தென் இந்தியாவில் வருஷத்திற்கு 25 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் செலவாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த 25 கோடி ரூபாயும் நாம் சுயமரியாதை அற்றுக் கிடக்கின்றோம் என்பதை உறுதிப் படுத்துவதற்கும், தினம் தினம் நமக்கு ஞாபகப்படுத்துவதற்கும் செய்யும் செலவே யல்லாமல் இதனால் வேறு என்ன பலனை அடைகிறோம்? இப்பேர்ப்பட்ட இந்து மதந்தான், சென்னை சட்ட சபையில் இந்தப் பணங்களுக்குக் கணக்குக் கேட்க ஏற்படுத்திய இந்துமத பரிபாலன மசோதாவினால் அடியோடு பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாம். இம்மாதிரி, நமது சுயமரியாதையை ஒழிக்கும் 'இந்துக்கள்' தான், "மதம் போச்சுது, மதம் போச்சுது" என்று மாயக்கண்ணீர் விடுகிறார்கள். சாமி, பூசை, உற்சவம் இவைகளில் நமது யோக்கியதையும் சுயமரியாதைக் கேடும் இப்படி இருப்பதோடு, இந்து மதச் சடங்கு என்னும் பேரால் நமது தலையில் எவ்வளவு பளுவைச் சுமத்தி, நமது பணத்தை எவ்வளவு கொள்ளை கொண்டு, நமது பிறப்புரிமையான சுயமரியாதையை எவ்வளவு தூரம் நசுக்கி இருக்கிறார்களென்பதைக் கவனிப்போம்.

இந்து மதம் என்பதாக ஒன்றை நாம் ஒப்புக் கொள்வதால் நமது நிலை பிறவியிலேயே இழிவானதாகவும், இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக் கொள்வோரிலேயே ஒரு வகுப்பாருக்கு நாம் அடிமைகளாகவும், வைப்பாட்டி மக்களாகவும், கடவுளாலேயே உண்டாக்கப்பட்டவர்கள் ஆகிறோம்; நம்மை இழிவாய்க் கருதுபவர்கள் காலிலே விழுந்து கும்பிடுபவர்களாகிறோம்.

இன்னும், நமது வாழ்நாள் முழுதும்—அதாவது தாய் வயிற்றில் கருத்தரித்த நிமிடம் முதற்கொண்டு—நமது மதச் சடங்குச் செலவைப் பாருங்கள்! சர்க்கார் நம்மிடம் வரி வசூல் செய்கிறார்கள். இதை அதிகமென்கிறோம். தவிர, நம்மிடம் வசூலிக்கும் வரியை நமக்காகச் செலவு செய்வதில்லை என்றும், இது நமது சுயமரியாதைக்கு ஈனம் என்றும் சொல்லி சர்க்காருடன் சண்டை செய்கிறோம். பாமர ஜனங்களை சர்க்காருக்கு விரோதமாய்க் கிளப்பிவிட்டு, பெரியபெரிய சர்க்கார் உத்தியோகங்களைப் பார்ப்பனர்கள் பெற்று, நமது சுயமரியாதைக்கும் இவ்வுத்தியோகங்கள் மூலமாய் இழிவை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

ஆனால், மதத்தின் பெயரால் பார்ப்பனர் நம்மிடம் வசூல் செய்யும் வரியைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை. சர்க்கார் வரிக்காவது ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். அதாவது–பூமி வரி, வருமான வரி, ஸ்டாம்பு வரி என்பதாகக் குறிப்பு இருக்கிறது. பூமி உள்ளவர்கள், இவ்வளவு ரூபாய் வரும்படி உள்ளவர்கள், பிராது உள்ளவர்கள் முதலியவர்கள்தான் சர்க்காருக்கு இந்த வரிகள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். வரி கொடுக்கக் கட்டுப்படாதவர்கள் 100க்கு 90 பேர் இருக்கிறார்கள். இந்த வரியை நமக்காகச் செலவு செய்ததாகக் கணக்கும் காட்டுகிறார்கள். ஆனால் மதச் சடங்குகள் பேரால் பார்ப்பனர் வசூல் செய்யும் வரிக்கு அளவேயில்லை. மனிதனாகப் பிறந்தவன் எல்லாம்—அதாவது எவனாவது தன்னை இந்து என்று சொல்லிக் கொண்டால் அவனை உடனே 'பார்ப்பன வரிச் சனியன்' பிடித்துக் கொண்டது என்பதுபோல்—காலவரையறை ஒன்றுமே இல்லாமல், கர்ப்பந் தரித்ததுமுதல் சாகும்வரை, செத்தும் விடாமல்–அதாவது கர்ப்ப தானவரி, சீமந்த வரி, பிள்ளைப்பேறு வரி, தீட்டுக் கழித்தல் வரி, தொட்டிலிடல் வரி, பேர் வைத்தல் வரி, ஆயுசு ஓம வரி, சோறூட்டல் வரி, கிரகதோஷ வரி, வித்தியாப்பியாச வரி, கலியாண வரி, சாந்தி முகூர்த்த வரி, சாவு வரி, சாக 10 நாழிகை வரி, செத்த பின்னும் வரி, செத்தவர் மக்களைப் பிடித்து வருஷா வருஷம் வரி–ஆகிய பலதுறைகளில், காலாவதி இல்லாமலும் ஒரு நபரைக்கூட விடாமல் 100க்கு 100 பேரிடமும்—பணக்காரன் ஏழை என்ற பாகுபாடே இல்லாமல், கொடுப்போர் முட்டாள்தனத்திற்கும் களிமண் மூளைக்கும் தகுந்தாற்போல், வரி கறந்து விடுகிறார்கள்.

இந்த வரி வசூலுக்கு ஏதாவது பலன் உண்டா என்று பார்த்தால், இதைவிட முட்டாள் தனமான காரியம் உலகில் வேறொன்று மில்லையென்று சொல்லத்தக்க மாதிரி அதாவது —"சுவாமிகளே! நான் கொஞ்சமாகச் செய்திருந்தாலும் என்னுடைய பக்தி சிரத்தையை மதித்து அதைப் பெரிதாக எண்ணி, காசி கங்கையில் செய்தது போலவும், பிரயாகை வடவாகை விருட்சத்தின்கீழ் செய்தது போலவும் ஆகும்படி செய்து, எனது பெற்றோர்களுக்கு மோட்சமும் திருப்தியும் உண்டாகும்படி அருளுவதுடன், என்னையும் சிரஞ்சீவியாக்கி, எனது பாவங்களை மன்னித்து, மோட்சம் லபிக்கும்படி கிருபை செய்ய வேண்டியது"—என்று சொல்லிப் பார்ப்பனர் காலில் நமது தலை முட்டும்படி விழுந்து, கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுவதுமாய் நடந்துவருகின்றோம். இவ்வித சடங்குக்குச் செலவாகும் பணம் எத்தனை கோடி? தங்கச்செம்பு, வெள்ளிச்செம்பு, வீடு, பூமி கன்னிகை முதலிய தானங்கள், சமாராதனைகள், சாந்திகள் முதலிய காரியங்களில் ஆகும் செலவுகளில் எத்தனை கோடி ஆகும் என்பதைக் கவனித்துப் பாருங்கள்! இதற்கு ஏதாவது பிரயோஜனமுண்டா என்பதை யோசியுங்கள்! இந்தச் செலவுகள் ஒருபுறம் நம்மைப் பிய்த்துப் பிடுங்கித் தின்னவும், இதன் மூலம் நமது பிறப்புரிமையாகிய சுய

மரியாதை எவ்வளவு பாதிக்கப்பட்டு அடிமையாகி வாழ்கிறோம் என்பதையும் யோசியுங்கள்! இப்படி எத்தனையோ விதமான தடைகள் செயற்கையிலேயே, அதாவது நமது அறிவீனத் தினாலேயே நம்மைச் சூழ்ந்துகொண்டு வாட்டுகின்றன. இவைகளைக் களைந்தெறிய வழி தேடுங்கள். பிறகு சுயராஜ்யம் தானாக வந்துவிடும். பார்ப்பானுக்குப் பணம் கொடுத்து அவன் காலில் விழுந்தால் நமது பெற்றோர்கள் மோட்சத்திற்குப் போவார்கள்; நமது பாவம் தீரும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஜன சமூகத்திற்கு சுயராஜ்யம் வேண்டு மென்பது யாராவது நம்பக்கூடிய காரியமா? வீணாக, அதாவது சில பார்ப்பனர்கள் பிழைக்க இந்துக்களாக இருப்பது போலவே, சில புரட்டுக்காரர்களும் பித்தலாட்டக்காரர் களும் அயோக்கியர்களும் பிழைக்க, 'சுயராஜ்யம்' 'சுயராஜ்யம்' என்று கத்தி ஏமாறாதீர்கள்!

சுயமரியாதை கண்டவிடம்தான் சுயராஜ்யமே தவிர, சுயராஜ்யம் என்பது ஒரு தனி வஸ்து இல்லை என்பதை உணர வேண்டும். ஆதலால், பிறப்புரிமை இன்னது என்பதும், அது இன்ன விஷயங்களால் தடைப்பட்டுள்ளது என்பதும், அத் தடைகளிலிருந்து விலக இன்னின்னது செய்ய வேண்டும் என்பதும், சுயராஜ்யம் என்பது இதுபோலவே மக்களை ஏமாற்றும் ஒரு புரட்டான மார்க்கம் என்பதும், 'சுயமரியாதை கண்டவிடத்தில் உண்மை யான சுயராஜ்யம் என்பது துலங்கும்' என்பதும் விளங்கியிருக்குமென்று நினைக்கிறோம்.

[சென்னிமலையில், 29-12-1926-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 9-1-1927]

2. பார்ப்பனீய எதிர்ப்பு

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

தற்காலம் இந்நாட்டிலுள்ள ராஜீய வேஷங்கொண்ட பல பார்ப்பனர்கள், என்னை வகுப்புத் துவேஷக்காரன் என்றும், வகுப்புக் கலவரங்களை மூட்டிவிடுகிறவன் என்றும், சொல்லியும் எழுதியும், ஆட்களைவிட்டுப் பிரச்சாரம் செய்தும் வருகிறார்கள். வகுப்புத் துவேஷமும் வகுப்பு வேற்றுமைகளும் என்னால் ஏற்பட்டவையா, அல்லது நம் நாட்டுப் பார்ப்பனர்களால் ஏற்பட்டவையா என்பதை நீங்களே சற்று யோசனை செய்துபாருங்கள்! தயவுசெய்து நீங்கள் என்னோடு எழுந்து வருவீர்களானால்—இவ்வூருக்குள் சுற்றிப்பார்த் தால்—பார்ப்பனர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு காப்பிக் கடையிலும், சாப்பாட்டுக் கடை யிலும், இரயில்வேக்களில் உள்ள காபி-சாப்பாட்டுக் கடைகளிலும், சத்திரம் சாவடிகளிலும், கோயில் குளங்களிலும், 'இது பிராமணர்களுக்கு'; 'இது சூத்திரருக்கு'; 'பஞ்சமர் களுக்கும், முகமதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இங்கு சாப்பாடு, பலகாரம், தண்ணீர் வகையறா முதலியன கொடுக்கப்படமாட்டாது'; 'இந்த இடத்தில் சூத்திரர்கள் தண்ணீர் மொள்ளக்கூடாது'; 'இந்த இடத்தில் சூத்திரர்கள் குளிக்கக்கூடாது'; 'இந்தப் பள்ளிக் கூடத்தில் சூத்திரர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது'; 'இன்னின்ன விஷயங்களைச் சூத்திரர்கள் படிக்கக்கூடாது'; 'பிராமணர்கள் மாத்திரம் இதுவரையில் செல்லலாம்—சூத்திரர்கள் இந்த இடத்திற்குமேல் போகக்கூடாது'; 'இந்த வீதியில் சூத்திரர்கள் குடி இருக்கக்கூடாது'; 'இன்ன தெருவில் பஞ்சமர் நடக்கக்கூடாது' என்றும், இன்னும் பல வாறாகவும் போர்டுகள் போட்டும், நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தியும், பிரித்து வைத்தும், துவேஷத்தையும் வெறுப்பையும் இழிவையும் உண்டாக்கி வருவது நானா? அல்லது பார்ப்பனர்களா? என்பதைக் கவனியுங்கள்.

அவர்களே நம் சாதிகளைப்பிரித்து—நம்மை இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்து விட்டு—"ஏனையா இப்படிச் செய்கிறீர்கள்? இது தர்மமா? நியாயமா?" என்று நாம்



தம் 25 ஆம் வயதில் தந்தையாரிடம் கோபித்துக் கொண்டு துறவுக்கோலம் பூண்டார், பெரியார்.

தம் 38 ஆம் வயதில் ஈரோடு நகரமன்றத் தலைவர் பதவி வகித்த பெரியார்.



காங்கிரஸ் தலைவர் ஈ. வெ. ரா. அவர்களுடன் திருச்சி டாக்டர்
டி. எஸ். எஸ். ராஜன், சி. இராசகோபாலாச்சாரி ஆகியோர் (1922)

கேட்டால்—நம்மை வகுப்புத் துவேஷக்காரன் என்றும், வகுப்புப் பிரிவினைக்காரன் என்றும், வகுப்புரிமைக்காரன் என்றும் சொல்லிக் கொன்றுவிடப் பார்த்தால், அதற்கு நான் பயந்து கொள்வேனா என்று கேட்கிறேன்.

இரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஓட்டல்களை எடுத்துக்கொள்ளுங்கள். இரயிலில் பெரும்பான்மையாகப் பிரயாணம் செய்பவர்கள் நாமாயிருக்கிறோம்; ஓட்டல்காரனுக்கு அதிக இலாபம் கொடுப்பவர்கள் நாமாக இருக்கிறோம். ஆனால், அந்த ஓட்டலுக்காக இரயில்வே அதிகாரிகள் கொடுத்த இடத்தில் முக்கால் பாகத்திற்கு மேலாகத் தாங்கள் எடுத்துக்கொண்டு, கொஞ்சம் இடத்தை நமக்கு ஒதுக்கிவைத்துவிட்டு, அந்த இடத்தில் எச்சிலை போடவும், சாணிச்சட்டி, விளக்குமாறு வகைகளை வைக்கவும் கைகழுவவும் செய்கிறார்கள்.

ஒரு பார்ப்பனன் குஷ்டரோகியானாலும் அவன் நேரே சமையலறைக்குப் போய் சுடச்சுட உள்ள பதார்த்தங்களில் தனக்கு வேண்டுமானதை அடுப்பிற்குப் பக்கத்திலிருந்தே எடுத்துச் சாப்பிட்டுவிடுகிறான். நம்மில் எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் வெளியில் நின்றுகொண்டு, நாலணாவைக் கையில் தூக்கிக் காட்டிக்கொண்டு—'இடைச்சி மார்க்கு கட்டிப்பால்' விளம்பரத்தில் பெண்கள் கூட்டம் பால்கேட்பது போல—ஒரு கையைத் தூக்கிக்கொண்டு 'சாமி, சாமி' என்று கத்த வேண்டியதாயிருக்கின்றது. ஆறின தையும், ஈ, பூச்சி, புழுக்கள் விழுந்ததையும், விற்காமல் தேங்கினதையும் நாம் வாங்கிச் சாப்பிட வேண்டியதாயிருக்கிறது. இந்த நிலையில், வகுப்பு வித்தியாசத்தையும், வகுப்புத் துவேஷத்தையும் வளர்ப்பவர்கள் நாமா, இந்தப் பார்ப்பனர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்!

நம்முடைய பணத்தைக்கொண்டு மத சம்பந்தமான கல்விகளுக்கென்றும், வேதபாட சாலை என்றும், பெரிய பெரிய பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொண்டு, அதில், பிராமணர்கள் தான் படிக்கலாம்-சூத்திரர்கள் படிக்கக்கூடாது, என்று சொல்லி, நம்மைத் தள்ளிவைத்து விடுகிறார்கள். சாதி வித்தியாசத்தையும், வகுப்புத் துவேஷத்தையும் வளர்ப்பவர்கள் நாமா, இல்லை அவர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்! நம்முடைய பணத்திலேயே பெரிய பெரிய கோயில்கள் கட்டப்பட்டு—நம்முடைய பணத்தைக்கொண்டே பூசைகள் செய்யப் பட்டுவரும் சுவாமிகளிடத்தில், நம்மைப் போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதனால் வகுப்புத் துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் நாமா, இல்லை அவர்களா?

ஆகவே, இப்போது சாதி வித்தியாசம் வளரக்கூடாது என்பதும், வகுப்புத் துவேஷங்கள் ஒழியவேண்டும் என்பதும்தான் நமது கொள்கை. அதற்காகத்தான் நான் பாடு படுகிறேன். சாதி வித்தியாசங்களான—மக்கள் உயர்வு, தாழ்வு என்பதை ஒழிப்பதற்கும், வகுப்புத் துவேஷங்கள் ஒழிவதற்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருபவர்கள் நாமா, அந்தப் பிராமணர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

சாதி வித்தியாசம் நிலைத்து இருப்பதற்கும், வகுப்புத் துவேஷங்கள் வளரு வதற்கும், நிரந்தரமான ஏற்பாட்டைப் பார்ப்பனர்களே செய்து வைத்துக்கொண்டு, நம்மீது குறைகூறுகிறார்கள். நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பது எல்லாம்—எங்களையும் சமமாகப் பாவியுங்கள்; எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவு படுத்தி, எங்களுடைய சுயமரியாதையைக் கொல்லாதீர்கள்—என்பதேயன்றி வேறில்லை. இதை அவர்கள் கொஞ்சமும் கவனியாமல், இந்தத் தேசத்தில் 100க்கு 97 பேர்களாக இருக்கிற நம்மைச் சூத்திரர்களென்றும் தாழ்ந்தவர்களென்றும் சொல்லுவதோடல்லாமல், நமக்கு இவர்கள் தர்மகர்த்தாக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு, சர்க்காருக்கு உள் உளவாயிருந்து, எல்லா உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் இவர்களே கைப்பற்றிக்கொண்டு, நமக்குக் கொடுமை செய்துவருகிறார்கள். நாம் நமது சுய

மரியாதைக்காகத்தான் இவ்வளவு பிரயத்தனப்படுகிறோமேயல்லாமல்—கேவலம், இந்த உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு அல்ல. ஆனால், நமது பார்ப்பனர்கள் இந்த உத்தியோகங்களைக் கைப்பற்றிக்கொண்டதன் பலனாகவே நம்மைத் தங்களுக்கும், சர்க்காருக்கும் நிரந்தரமான அடிமைகளாக்கி, நம்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவற்றிலிருந்து தப்பி நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே, இப்பார்ப்பனர்களை எப்படியாவது—எல்லாவித உத்தியோகங்களிலிருந்தும் ஒழிக்கவேண்டுமென்று கஷ்டப்படுகிறோம்.

நீங்கள் கூச்சலிடுவதற்காகவோ, கரகோஷம் செய்வதற்காகவோ நான் உங்கள் முன் பேசவரவில்லை. உத்தியோக விஷயத்தில் மாத்திரம் பார்ப்பனர்கள் விஷயத்தில் பொறாமையும் துவேஷமும் உங்களுக்கு இருக்கிறதேயல்லாமல்—வைதீகச் சடங்குகளில் நீங்கள், அவர்களை உங்களைவிட உயர்ந்தவர்கள் என்றே எண்ணியிருக்கின்றீர்கள். நீங்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும், எவ்வளவு பெரிய பதவியிலும் அதிகாரத்திலும் இருந்தாலும், இரண்டு காய்ந்த தர்ப்பைப் புல்லைக்கொண்டு, சாம்பலையோ, நாமத்தையோ அடித்துக்கொண்டு ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டிற்கு வருவானேயானால், 'சுவாமி' என்று அவன் காலில் விழத் தயாராக இருக்கின்றீர்கள். அவனுக்குப் பணத்தைக்கொடுத்தால் உங்கள் பெற்றோர்களுக்கு மோட்சம் கிடைக்கும் என்ற முட்டாள்தனமான எண்ணம் இன்னமும் உங்கள் இரத்தத்தில் கலந்துகொண்டிருக்கிறது. அவன் கைப்பட தாலி எடுத்துக்கொடுத்து, நீங்கள் அதைக் கும்பிட்டு வாங்கிப் பெண்களின் கழுத்தில் கட்டினால்தான் உண்மையான கலியாணம் என்று நினைக்கிறீர்கள். ஒரு பார்ப்பனன் உங்கள் வீட்டுப் பெண்ணையும் பிள்ளையையும் படுக்கை அறைக்குள் அனுப்பிக் கதவைச் சாத்தினால்தான், நல்ல பிள்ளை பெறமுடியும் என்று நினைக்கிறீர்கள்; ஒரு பார்ப்பனனுக்குப் பணத்தைக் கொட்டிக்கொடுத்து, அவன் காலைக் கழுவின தண்ணீரைச் சாப்பிட்டால்தான், உங்கள் பாவம் தொலையுமென்றும் நீங்கள் மோட்சத்திற்குப் போகமுடியுமென்றும் நினைக்கிறீர்கள். இவ்விதமான முட்டாள்தனமான மனப்பான்மையை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் உங்களுடைய சந்தோஷங்களுக்குப் பொருள் உண்டு. அப்படிக்கில்லாமல், வீண் ஆரவாரங்களினாலும், அற்ப சந்தோஷத்தினாலும் பலன் என்ன?

ஆதலால், நாம் இப்போது செய்யும் இந்தப் போராட்டம் சுயமரியாதைப் போராட்டமேயல்லாமல், உத்தியோகத்திற்காகவே செய்யும் உத்தியோகப் போராட்டம் அல்ல என்பதை நன்றாய் உணருங்கள். நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்கு இந்தவித உத்தியோகங்கள் சகாயமாயிருக்கும். மோட்சம் என்கிற வார்த்தையினாலும், சுயராஜ்யம் என்கிற வார்த்தையினாலும் சமூக வாழ்க்கையிலும், அரசியலிலும் முறையே நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள். இவ்விரண்டு விஷயங்களிலும் பார்ப்பனர்களுக்கு உள்ள ஆதிக்கத்தை விரட்டி அடித்தால்தான் நாம் சுயமரியாதையை அடைய முடியும். அந்த சுயமரியாதைக்காக நாம் இன்று, நேற்று மாத்திரம் போராடவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி என்று ஏற்பட்டும், நாயர்—செட்டியார் என்ற மகான்களின் இயக்கம் ஏற்பட்டும் சுமார் பத்தாண்டுகள் ஆகி இருக்கின்றன. இன்றைக்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னதாகவே இப் பார்ப்பனரின் கொடுமையை உணர்ந்த நம் தமிழ் மக்கள், அதிலிருந்து தப்பவேண்டுமென்று எவ்வளவோ பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். நமது சித்தர்களெல்லாம் எவ்வளவோ தெளிவாய்ப் பார்ப்பனர்களின் அக்கிரமங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான், நமது பார்ப்பனர்கள் சித்தர் நூல்களை ஒழித்து, சித்தர் உபதேசங்களையெல்லாம் மறைத்து, இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலான நூல்களைப் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக எழுதி, அவைகளுக்குச் செல்வாக்கு உண்டாக்கி, அவற்றைப் படித்தால்

மோட்சம் என்று சொல்லி நம்மை ஏமாற்றிவிட்டார்கள். கபிலர், பாய்ச்சலூரார், அவ்வையார், திருவள்ளுவர் முதலிய பெரியோர்கள் தாம் செய்திருக்கும் நூல்களினாலும், தங்களுடைய உபதேசங்களினாலும் இன்றைக்கு அய்யாயிரம் வருடங்களுக்கு முன்பே பார்ப்பனர்களின் கொடுமையை வெளிப்படுத்தி, அவைகளை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டிருக்கிறார்கள்.

சமீப காலத்தில் புத்தர், சமணர் முதலியோர்களும் பார்ப்பனர்களின் கொடுமையை ஒழித்து மக்கள் எல்லோரும் சமம் என்றும், அன்பும் சமரச உணர்ச்சியுந்தான் கடவுள் என்றும் உலகத்திற்கு உணர்த்த வந்ததை, இப் பார்ப்பனர்கள் சகிக்காமல் இவர்கள் பிரயத்தனத்தையெல்லாம் ஒழித்துவிட்டார்கள். பார்ப்பனர்கள் தங்களை உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக்கொண்ட காலத்தில் பலவான்களாக இருந்தவர்கள், அதை ஒப்புக் கொள்ளாமல் பலாத்காரத்தை உபயோகப்படுத்திவந்த சமயத்தில்—தந்திரமாய், "நீங்கள் க்ஷத்திரியர்களாக இருந்து அரசாட்சி செய்யுங்கள்; நாங்கள் உங்களுக்கு மந்திரிகளாக இருந்து யோசனை சொல்லுகிறோம்" என்று சொல்லி அவர்களை ஏமாற்றிக் கைக்குள் போட்டுக்கொண்டார்கள்.

கையில் செல்வமும் செல்வாக்குமுள்ள மற்றொரு கூட்டத்தார், "நீங்கள் எப்படி உயர்ந்த சாதியாகலாம்?" என்று விவாதிக்கையில், "நீங்கள் வைசியர்களாக இருங்கள்; உங்களுக்குக் கீழ் அனேகர்கள் இருக்கின்றார்கள்" என்று சொல்லியும், "உங்களுக்கும் எங்களைப்போல் பூணூல் போடுகிறோம்" என்று சொல்லியும் அவர்களையும் ஏமாற்றிக் கைக்குள் போட்டுக் கொண்டார்கள். பிறகு, பெரும்பான்மையாக இருந்த விவசாயக்காரர்களையும், கைத்தொழில்காரர்களையும் பார்ப்பனர்களுக்கும் முதல் மூன்று வகைப் பிரிவுக்காரர்களுக்கும் வேலை செய்கிறவர்கள் என்று ஏற்படுத்திவிட்டார்கள். அவர்களில் பலர் இதை ஒப்புக்கொள்ளாமல் வாதாடவே, "உங்களுக்குக் கீழாக ஒரு பிரிவினரை வைத்திருக்கிறோம்; அவர்களுக்கு நீங்கள்தான் எஜமானர்கள்; உங்கள் இஷ்டம்போல் அவர்களை நடத்திக் கொள்ளலாம்" என்று சொல்லி, சாந்தமே உருவாகவும் சூது வாது தெரியாத சாது ஜனங்களாகவும் இருந்தவர்களைப் 'பஞ்சமர்கள்' என்று பெயர் வைத்து, அவர்களை மேற்படி சூத்திரர் என்பவர்களுக்குக் காட்டிக்கொடுத்து, அவர்களையும் ஏமாற்றி விட்டார்கள். கடைசியாக, வாயில்லாப் பூச்சிகளாகிய ஒரு வகுப்பார்—தீண்டத்தகாதவர்களாகித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்விதக் கொடுமை செய்தவர்களைத்தான் நீங்கள் இன்றைய தினம் உங்கள் மதகுருவாய் நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். இவ்விதக் கொடுமை நம்மை விட்டு நீங்கவேண்டுமென்றால், மத விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நாம் ஆதிக்கம் பெற வேண்டும். ஆதிக்கம் பெற்று நமது சுயமரியாதையை அடைய முயற்சிக்க வேண்டும். ஒரு சமூகத்திற்கானாலும், ஒரு தேசத்திற்கானாலும்—சுயராஜ்யத்தைவிட, சுயமரியாதையே பிரதானமானது என்பது எனது தாழ்மையானதும் முடிவானதுமான கொள்கை. அச் சுயமரியாதைக்கு, மகாத்மாவின் நிர்மாணத் திட்டமும் மறைவுபட்ட இந்தச் சமயத்தில்—அரசியலிலுள்ள சகல பதவிகளையும், சகல ஸ்தானங்களையும், சகல அதிகாரங்களையும், சகல உத்தியோகங்களையும் எப்படியாவது நாம் கைப்பற்றியாக வேண்டும். ஆதலால், இப்போது நடக்கிற தேர்தல் ஸ்தானங்கள் எல்லாம் இக்கருத்து கொண்ட பார்ப்பனரல்லாதார்களே கைப்பற்றும்படி நாம் செய்யவேண்டும். அதன் மூலம் நமது கருத்தை நிறைவேற்றிக் கொள்ள எவ்வெவ்வழிகளில் சாத்தியப்படுமோ அவ்வழிகளிலெல்லாம் உழைக்க வேண்டும். இதுதான் நம்முடைய தேசிய வேலை. இதை விட்டுவிட்டு, காங்கிரஸ் என்றும் சுயராஜ்யம் என்றும் காங்கிரஸ் மூலம் சுயராஜ்யம் அடையலாமென்றும் சொல்லுவதெல்லாம், பார்ப்பனர் மூலம் மோட்சமடையலாமென்று சொல்லுவது போலத்தான் ஆகும்.

[சென்னை திருவல்லிக்கேணியில், 31–7–1926-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 15–8–1926]

3. புரோகித பகிஷ்காரம்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நான் இன்று பேசத் துணிந்த விஷயமாகிய பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்கார விஷயம் சாமான்யமானதல்ல. ஆயிரக்கணக்கான வருஷங்களாய், அநேக தலைமுறையாய், நம்மவர்கள் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டு, மதத்தின் பேரால் ஆத்மார்த்தம் என்றும், மோட்சம் என்றும், தர்மம் என்றும், புண்ணியம் என்றும், கடமை என்றும் கருதி சுயமரியாதை இழந்து நடந்து வந்திருக்கும் ஒரு அர்த்தமற்ற காரியத்தைப் பற்றி உங்கள் முன் பேசுவதென்பது சுலபமான காரியமென்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், அம்மூடநம்பிக்கையும் அர்த்தமற்ற நடவடிக்கைகளும் நமது மக்கள் இரத்தத்திலேயே கலந்துவிட்டன. இவைகளைப் பற்றி யோசிப்பதுவே மிகப் பாவம் என்பதாகக் கருதப் படுகிறது.

கொஞ்ச காலத்திற்குமுன் இம்மாதிரி விஷயங்களுக்கு ஒரு கூட்டம் கூட்டு வதென்றால், கூட்டத்திற்கு வந்து என்ன பேசுகிறார்கள் என்று கேட்பதற்குக் கூட மனிதர் களுக்குப் பொறுமை இருக்காது. ஒரேயடியாய், "காலம் கெட்டுவிட்டது; கலியின் உக்கிரம் இம்மாதிரி நாஸ்திகம் வளர்ந்துவிட்டது" என்று எவ்வளவோ வெறுப்பார்கள். ஆனால், இப்பொழுது இதைப்பற்றி என்ன சொல்லுகிறான் என்று கேட்பதற்காவது இத்தனை பேர்கள் வந்திருப்பதே—அதிலும் மதம், சமயம் முதலிய விஷயங்களிலும், சரித்திர ஆராய்ச்சி முதலிய விஷயங்களிலும் நிபுணர்கள் உட்பட அநேக மேதாவிகளும் அறிவாளி களும் இவ்விடம் வந்திருப்பது எனக்கே ஒரு ஆச்சரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக் கிறது. ஆனால், ஒரு விஷயத்தை முதலிலேயே சொல்லிவிடுகிறேன். நான் படித்தவன் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவனல்லன். ஏனெனில், எனது 10ஆவது வயதிலேயே எனக்குப் படிப்பு வராதென்றும், பள்ளியில் ஒழுங்காய்ப் படிக்க மாட்டேன் என்றும், மிகவும் துஷ்டப்பிள்ளை என்றும் எனது பெற்றோர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, என்னை என் தகப்பனார் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதை நிறுத்தி, தனது வியாபாரத் திற்கு அனுகூலமாய் இருக்கும்படி கடையிலேயே வைத்துக்கொண்டார்.

இப்போது எடுத்துக்கொண்ட விஷயமாய் எனக்கு உள்ள எண்ணம் ஏறக்குறைய அந்த வயது முதற்கொண்டே எனக்கு இருந்துவந்தாலும், பள்ளியில் படித்ததாலேயோ, ஆராய்ச்சியினாலேயோ அல்லாமல், பல பெரியோர்களிடம் பேசிப்பேசி அறிந்ததினாலும், உலகானுபவத்தினாலும், ஆலோசனைகளுக்கும் பகுத்தறிவுகளுக்கும் மதிப்புக் கொடுத்த தாலேயே ஆகும். மற்றும், இதுமாதிரி காரியங்களில் இகழ்ந்து பேசுவதும் உண்டு. இம்மாதிரி நான் பேசுங்கால் எனது வீட்டார்கள் உட்பட அநேகர் என்னை அக்காலம் முதற்கொண்டே பலமாய் நாஸ்திகன் என்றும், மதத் துவேஷி என்றும் வெறுப்பார்கள். என்ன வெறுத்தாலும் எனது எண்ணங்கள் இம்மாதிரி விஷயங்களில் ஆலோசிக்க ஒரு சிறிதும் மாறுபடாமல் இருந்துவந்ததோடு, இப்போதுதான் அவற்றை வெகு தாராளமாய் எடுத்துச் சொல்லவும், பலர் கூடிக் கேட்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்காரம் என்னும் இவ்விஷயம் இதன் பெயரைப் பார்க்கும்போதே பார்ப்பனப் புரோகிதத்தை மாத்திரம் விலக்கிவிட்டு—அந்த இடத்தில் பார்ப்பனரல்லாத புரோகிதரை வைத்து அச் சடங்குகளைச் செய்வது என்பதாகப் பலருக்குத் தோன்றலாம். இச்சங்கத்தின் கருத்து அதுவல்ல வென்றே நான் இதில் பேச ஒப்புக் கொண்டிருக்கிறேன். அப்படியில்லையானால் இச்சங்கமே அவசியமில்லை. இவ்விஷயத்தின் கருத்தே மூடநம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்பதும், மனிதன் தனக்குள்ளாகவே, தான் மற்றவனைவிடப் பிறவியில் தாழ்ந்தவன் என்கிற உயர்வு-தாழ்வு உணர்ச்சி போய்,

தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் ஏற்படவேண்டும் என்பதுந்தானே அல்லாமல் வேறல்ல. ஆனால், பார்ப்பனீயப் புரோகிதப் பகிஷ்காரம் என்பதில் அவ்வித அர்த்தம் காண்கிறதே என்று கேட்பார்களானால் அதற்கு நான் சொல்லும் பதில்: புரோகிதம் என்று சொல்லும் வார்த்தையும், அதில் பிறக்கும் அச்சடங்கு—அதாவது திவசம், திதி, சிரார்த்தம், பிண்டம், புண்ணியாவர்ச்சனம், சாந்தி, கருமம், சங்கல்பம், தானம், பிதிர் தேவதை, பிதிர்லோகம் முதலியவைகள்—பார்ப்பனர்களே ஏற்படுத்தியதாலும், இவைகளும் இவை போன்ற பல சடங்குகளும் பார்ப்பனீயத்திலிருந்தே தோன்றியதாலும், பார்ப்பனீயம்தான் இம்மாதிரி மூடநம்பிக்கைகளுக்குத் தாயகமாகவும், மக்கள் உயர்வு–தாழ்வு முதலிய கற்பனைகளுக்கும் ஆதாரமாகவும் இருப்பதால், பார்ப்பனீயமே முதலில் ஒழியவேண்டுமென்கிற கருத்தைக் கொண்டு அப்பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது என்றே சொல்லுகின்றேன்.

குருட்டு நம்பிக்கைகளும், மூட வழக்கங்களும் ஒழியவேண்டுமானால், முதலாவது பார்ப்பனீயம் ஒழிந்தாக வேண்டும். பார்ப்பனன் ஒழியவேண்டுமானால்—பார்ப்பான் உயர்ந்தவன், நாம் அவனைவிடத் தாழ்ந்தவன் என்கிற உணர்ச்சி ஒழியவேண்டும். ஆதலால்தான், முதற்படியாக—பார்ப்பான் உயர்ந்தவன் என்று எண்ணுவதற்கும், ஆதாரமாயிருப்பதற்கும் அனுகூலமான—பார்ப்பனனைக் கொண்டுதான் புரோகிதம் முதலிய சடங்குகள் செய்வது என்கிற வழக்கமும் உணர்ச்சியும் ஒழிந்துவிட்டால், அடுத்தபடியில் அப் புரோகிதம் என்கிற மூட வழக்கங்களின் தத்துவங்களை எடுத்துச்சொல்லி, அதிலிருந்து அர்த்தமற்ற தன்மையையும் எடுத்துக்காட்டி, அவற்றை ஒழிப்பதற்கும் அனுகூலமாயிருக்கும். இல்லாதவரை, பாமர ஜனங்களுக்குள் ஏதோ ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்துவதுபோல் நினைத்துப் பயப்பட இடமுண்டாகிவிடும். ஏனெனில், அம்மாதிரியான விஷம்தான் நான் முன் சொன்னதுபோல், பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமது மக்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கின்றது. அவ்விஷத்தைப் படிப்படியாகத்தான் கீழிறக்க வேண்டும். அவசரப்படுவதும் விதண்டாவாதம் பேசுவதும் காரியத்திற்கு உபயோகப்படாததாய்ப் போய்விடும். எனவே உயர்ந்த சாதி என்று எண்ணுகிற உணர்ச்சி ஒழிந்தவுடன், அதனால் ஏற்பட்ட மற்ற அசம்பாவிதங்களை ஒழிப்பது வெகு சுலபமாகிவிடும் என்கிற எண்ணந்தானேயல்லாமல், பார்ப்பனர் வரும்படியைக் கெடுத்து அதை மற்றவருக்குக் கொடுக்கவேண்டுமென்பதல்ல. தவிர, மேற்சொன்ன புரோகிதம் என்கிற சடங்குகள் நமக்கு எதன் மூலமாய்ப் புகுத்தப்பட்டது என்று பார்த்தால், மதம் என்பதை ஆதாரமாய் வைத்துப் புகுத்தப்பட்டிருக்கிறது.

அம்மதம் இந்துமதம் என்று சொல்லப்படுவது. அவ் இந்துமதம் என்ன என்று பார்க்கப்போனாலோ அது, "பிடிக்கப் பிடிக்க நமசிவாயா" என்பதுபோல் கொஞ்சங்கூடப் பொருள் இல்லாததும், முழுப் புரட்டானதும் என்றுதான் சொல்லவேண்டும். இந்த இந்துமதம் என்ற வார்த்தை எதில் இருக்கிறது? எப்போது ஏற்பட்டது? அதன் கொள்கைகள் என்ன என்கிற விஷயங்களை விசாரிக்கப்போனால் ஒன்றுக்குமே சமாதானம் கிடைக்காது. உலகத்தில் இந்த இந்துமதத்தைத் தவிர, வேறு எந்த மதமும் இம்மாதிரிப் புரட்டுகளையும் மோசத்தையும் கொண்டிருக்கவில்லை. வேறு எந்த மதஸ்தர்களும் தங்கள் மதத்தைப்பற்றி இவ்வளவு காட்டுமிராண்டித்தனமான மூடர்களாய் இருக்கவில்லை.

முகமதிய மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இன்ன காலத்தில் இன்னாரால் ஏற்பட்டது; அதன் கொள்கை இன்னது; அதற்கு மூல ஆதாரம் 'குர்ஆன்'; அதை எல்லோரும் படிக்கவேண்டும் என்கிற குறிப்புகள் உண்டு.

இதுபோலவே, கிறிஸ்துவ மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது இன்ன காலத்தில் இன்னாரால் ஏற்படுத்தப்பட்டது; அதன் கொள்கைகள் இன்னவை; அதற்கு மூல ஆதாரம் 'பைபிள்'; அதை யாவரும் படிக்கவேண்டியது என்கிற குறிப்புகள் உண்டு. அதுபோலவே புத்த மதம், சமண மதம், சீக்கிய மதம் என்பன போன்ற எத்தனையோ மதங்களுக்கு

இதுபோன்ற காலங்களும், கர்த்தாக்களும், கொள்கைகளும், ஆதாரங்களும், அவற்றை எல்லா மக்களும் அறியச் சுதந்திரங்களும் உண்டு. நாம் சொல்லும் இந்துமதத்திற்கு இவைகளில் ஏதாவது—எள்ளளவாவது இருக்கிறதாவென்று பார்த்தால், ஊற்றுக்கு நிற்கும் படியான ஒரு காரியத்தையும் காணோம்.

இந்துமதம் என்கிற பெயரே பூர்வ சரித்திரங்கள், சங்க இலக்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், ஸ்மிருதிகள், வேதங்கள் முதலான எந்தப் புத்தகங்களிலும் இருப்பதாகத் தெரியவில்லை. நான்தான் முன்னமேயே அதிகம் படிக்க வில்லை என்று சொல்லிவிட்டேன். ஆனாலும், படித்தவர்கள் என்று சொல்லக்கூடிய அநேகரையும் கேட்டால், ஒருவராவது இந்துமதம் என்ற பெயர் இந்த ஆதாரத்தில் இருக் கிறது என்பதாகச் சொல்லவே இல்லை. இங்கும் யாராவது சொன்னாலும் சரி என்றே சொல்லுகிறேன்.

பொதுவாக, இந்துமதம் என்றால் மக்கள் பிறவியில் உயர்வு—தாழ்வு என்பதைக் கற்பிப்பதும்; நெற்றியில் ஏதாவது குறி வைத்துக்கொள்ளுவதும்; பல சாமிகள் இருப்பதாக வணங்குவதும்; 'என் சாமி பெரியது, உன் சாமி சிறியது' என்று சண்டைபோடுவதும்; சாமிக்குப் பெண்டு பிள்ளைகள், கூத்தியாள் முதலியவைகள் கற்பிப்பதும் ஆகியவைகளைத் தவிர வேறொன்றும் இல்லை. இவைகளைப்பற்றி ஆராய்வோமென்றால் இவைகள், "வேதத்தில் உள்ளவை" என்றும், "வேதந்தான் இந்துமதம்" என்றும் சிலர் சொல்லி விடுகிறார்கள். சரி; அந்த வேதத்தையாவது பார்க்கலாம் என்றால், "அதை நீ கண்ணால் பார்த்தால் கண்ணைக் குத்தவேண்டும்; காதால் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்" என்று சொல்லிவிடுகிறார்கள்.

வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று தெரிந்துகொள்ளுவதற்குக்கூட நமக்கு இடமில்லையானால், நாம் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? எவனாவது நம்மிடம்வந்து, "உனக்குக் கொஞ்சம் ரூபாய் தருகிறேன்; பெற்றுக்கொண்டதற்காக இந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடு" என்று சொன்னால், அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்துத்தானே கையொப்பம் இடுவோம்? "அதை நீ பார்க்கக் கூடாது. நான் காட்டுகிற இடத்தில் கையெழுத்துப் போடவேண்டியதுதான் பணம் பெற்றுக்கொள்ளுகிறவன் கடமை" என்று யாராவது சொன்னால், பேசாமல் கையெழுத்துப் போட்டுவிடுவோமா? அதில் என்ன எழுதியிருக்கிறது? எத்தனை ரூபாய்க்கு எழுதி இருக் கிறது? என்பவைகளைத் தெரிந்துகொள்ளாமல் கையெழுத்துப் போடுவது முட்டாள்தனம் என்று உணரமாட்டோமா? நம்மைப் பார்த்து, "நீ இந்து மதஸ்தன்; இந்து மதம் என்பது வேதத்தை ஒப்புக்கொள்ளுவது; அதிலுள்ள சடங்குகளை நீ ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒப்புக்கொள்வது என்பது பார்ப்பனனுக்குப் பணம் கொடுப்பதும் அவர்கள் காலில் விழுவதும்தான். ஆதலால், எனக்குப் பணம் கொடு; என் காலில் விழுந்து கும்பிடு; என் காலைக் கழுவித் தண்ணீரைக் குடிப்பது உனக்கு மோட்சம் கிடைக்கச் செய்யும்" என்று ஒரு பார்ப்பனன் சொல்லுவானேயானால்—"சரி; நாம் அப்படியே செய்யலாம்; ஆட்சேபம் இல்லை. ஆனால், அந்த வேதத்தைக் கொஞ்சம் காட்டுங்களேன்; அதில் அப்படி எழுதியிருக்கிறதா என்பதைக் கொஞ்சம் கண்ணால் காண்போம்" என்றால்—"நீ அதைப் பார்க்கக்கூடாது; பார்த்தால் பாவம்" என்று சொல்லும்போது, நாம் எப்படி அம் மதத்தை ஒப்புக்கொள்ள முடியும்? முன் சொன்னது போல், படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போடக்கூடிய அவ்வளவு மூடர்களாய் நாம் இருந்தால்தானே, படித்துப் பார்க்காமல் இந்துமதத்தை ஒப்புக்கொள்ளுவதோ அல்லது அதில் இருக்கிறதாகச் சொல்லு கிறபடி நடப்பதோ முடியும்?

இந்து மதம் என்கிற ஒரு மதம் தவிர, வேறு மதக்காரன் எல்லோரும் தங்கள் தங்கள் மதங்களையும், கொள்கைகளையும் தங்கள் மதக்காரர்கள் எல்லோரையும் படிக்கச் செய்

வதுடன், வேறு மதக்காரர்களும் படிக்கும்படியாக அந்தந்த பாஷைகளில் தங்கள் சொந்தச் செலவில் அச்சிட்டு, இலவசமாக வழங்குகிறார்கள். பெண்களுக்கும் பெண்கள் மூலமாக வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள்; சம்பளம் கொடுத்துப் பாதிரிமாரையும் உபதேசியாரையும் நியமித்துப் பிரச்சாரம் செய்விக்கிறார்கள். இவர்கள் பெரும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று, சாணி உருண்டை அடியும் கல்லடியும் பட்டுக் கொண்டு, எல்லா ஜனங்களுக்கும் போதிக்கிறார்கள். ஆனால், நம்முடைய மதம் என்கிற இந்துமத சம்பந்தமான வேதம் என்பதையோ, பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் கண்ணில் கூடப் பார்க்கக் கூடாது; காதால்கூடக் கேட்கக் கூடாது; நெஞ்சினால் கூட நினைக்கக் கூடாது என்கிறார்கள்.

மற்ற மதக்காரர்களுக்கு—அதாவது கிறிஸ்தவர், முகமதியர்களுக்குக் கடவுளை வழிபடவும் தொழவும், நாட்களும் காலமும் முறைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஞாயிறு, வெள்ளி ஆகிய கிழமைகள் முறையே அவர்களுக்கு முக்கிய நாட்களாகும். நமக்கோ ஒருவர் சனி, ஒருவர் ஞாயிறு, ஒருவர் திங்கள், ஒருவர் செவ்வாய் முதலிய ஏழு நாட்களைப் பற்றியும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதல்லாமல் குறிப்புமில்லை. சர்க்காரிலும் நமது நாட்களுக்கு மரியாதை கொடுப்பதுமில்லை; அவர்கள் இதை ஒப்புக் கொள்வதுமில்லை. நமது இந்துமதம் என்பதையாவது சர்க்கார் ஒப்புக்கொண்டிருக் கிறார்களா அல்லது ஒப்புக்கொள்ளும்படி செய்திருக்கிறோமா என்று பார்த்தால், அதுவும் இல்லை.

எப்படியென்றால், அரசியல் சீர்திருத்தம் என்னும் பேரால் பல மதங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, சட்டசபை ஸ்தானங்களுக்கு—கிறிஸ்துவ மதத்தின் பேரால் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவத் தொகுதி என்று சில ஸ்தானங்களும்; முகமதிய மதத்தின் பேரால் முகமதியர்களுக்கு முகமதியத் தொகுதி என்று பல ஸ்தானங் களும் ஒதுக்கிவைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க, இந்துமதம் என்னும் ஒரு மதம் இருக்குமானால், அதற்கும் ஏதாவது சில ஸ்தானங்களை இந்துத் தொகுதி என்பதாக ஒதுக்கிவைத்திருப்பார்கள் இல்லையா? அப்படி ஏதாவது ஒதுக்கப்பட்டிருக் கின்றதா என்பதை யோசித்துப் பாருங்கள். அல்லாமலும், இந்துக்கள் என்கிற நாம் சட்டசபைக்கு நிற்கவேண்டுமானால், எந்தப் பேரால் நிற்கிறோம் என்பதைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். 'முகமதியர் அல்லாதார் தொகுதி' என்கிற பெயரால்தானே நிற்கி றோம்! 'முகமதியரல்லாதார்' என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியுமா? முகமதிய மதக் கோட்பாட்டின்படி 'காபிர்' என்றும் அல்லது 'மதம் இல்லாதவன்' என்றும்தான் பொருள்படும். நாம் மதமற்றவர்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? இந்தப் பெயரை வேறு ஒருவரும் நமக்குச் சூட்டவில்லை; நாமே தான் சூட்டிக்கொண்டு, "முகமதியரல்லாதார் தொகுதிக்கு நான் நிற்கிறேன்" என்கிறோம். நமது சட்டசபை மெம்பர்கள் எல்லாம் முகமதியரல்லாதாரே தவிர, இந்துக்களல்லர்.

இந்து மத பரிபாலனச் சட்டம் ஏற்படுத்தியதைப் பார்த்து சப்தம் போட்ட பெரிய பெரிய இந்துமத வருணாசிரம தர்மிகளும், இந்துமதத் தலைவர்களும், இந்துமதத்தைக் காப்பாற்றப் பிரச்சாரம் செய்த பத்திராதிபர்களும் இன்றைய தினம் இந்திய சட்டசபையில், 'முகமதியரல்லாதாராகத்தான்' அங்கம் பெற்றிருக்கின்றார்கள். காரணம் என்ன? 'முகமதியரல்லாதார்' ஆக வேண்டுமென்றா? அல்லவே அல்ல. பின் என்னவென்றால், இந்துமதம் என்று ஒரு மதம் இருக்கின்றதையும், அதன் கொள்கைகள் என்ன என்பதையும் ருஜுப்பிக்க முடியாததாலேயே அல்லாமல் வேறல்ல. இப்படிப்பட்டவர்கள் இந்துமத பரிபாலனச் சட்டத்தைப் பார்த்து, 'மதம் போச்சுது', 'மதம் போச்சுது' என்று சப்தம் போட்டார்கள் என்றால், நமது பணத்தைத் தின்று கொழுப்பதால் ஏற்படும் அந்த 'மதம்' போய்விடுமே என்கிற பயத்தினாலேயே அல்லாமல் வேறில்லை. மற்றபடி, அந்தச்

சட்டத்தினால் இப்பொழுது இருப்பதாய்ப் பாசாங்கு பண்ணும் மதத்திற்கு—என்ன குறைவு, எந்தப் பிரிவினால் ஏற்பட்டு விட்டது?

தவிரவும், "மதத்தில் சர்க்கார் புகுந்து விட்டார்கள்; சர்க்கார் புக நம் மந்திரிகள் இடம் கொடுத்துவிட்டார்கள்" என்று சப்தம் போட்டார்களே, சர்க்கார் எதில் புகுந்து விட்டார்கள்? எப்பொழுது புகுந்து விட்டார்கள்? இதற்கு முன்பு புகவில்லையா என்பதற்கு இவர்கள் பதில் சொல்ல முடியுமா? இந்துமத சாமியின் நெற்றியில் வைக்கும் நாமம் (குறி) வடகலையா, தென்கலையா? என்பதைக் கண்டுபிடிக்க, நமது மத ஆதாரங்களான நமது வேத சாஸ்திர நூல்களில் நமக்கு முடிவதில்லை; வெள்ளைக்கார ஜட்ஜு சொன்னால்தான் நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். நமது கோயில்களில் தேவார பாராயணம் செய்யலாமா, வேண்டாமா என்பதற்கு வெள்ளைக்கார கோர்ட்டால் முடிவு பெற வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும்போது, நமது மதத்திற்கு ஏதாவது பொதுக்கொள்கை உண்டா? சுயமரியாதை உண்டா? ஆகவே, நமது மத அஸ்திவாரமே—அதன் தத்துவமே—நமக்கு இன்னது என்று சொல்ல முடியாமலிருக்கும்போது, அதிலிருந்து ஏற்பட்ட ஆபாசக்கட்டுப் பாடுகளைப் பற்றியும், அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியும் கவலை செலுத்துவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மதச் சடங்குகளின் யோக்கியதையே இப்படி இருக்கும்போது, இச் சடங்குகளைப் பார்ப்பனர் களைக் கொண்டு செய்வதா அல்லது பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு செய்வதா என்கிற கேள்விகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா? ஒருவனைப் பந்தியிலே உட்கார வைக்க வேண்டாம் என்றால், "இலை கிழிந்திருக்கிறது!" என்று சொல்லுவதில் பிரயோஜன மென்ன? அந்தப் பழமொழிபோல் இருக்கிறது—யாரைக் கொண்டு புரோகிதம் செய்விக் கிறது என்கிற விஷயம்.

இம்மாதிரி, முழுவதும் மோசமான மதத்தின் பேரால் நமக்கு ஏற்பட்டிருக்கும் சடங்குகளும், அதனால் நமக்கு ஏற்படும் வரி (செலவு)களும், அதனால் நமது சுயமரியாதை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதும் சற்று யோசித்துப் பாருங்கள். நாம் ஒரு இந்து என்று சொல்லிக்கொள்ளுவதனால் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு வரி கொடுக்க வேண்டியிருக்கின்றது என்பதைச் சற்றுக் கவனியுங்கள். சர்க்கார் நம்மிடம் வாங்கும் வரியைப் பற்றி நமது அரசியல் பிழைப்புக்காரரான இதே பார்ப்பனர்கள், அதுவும் அந்த வரிப் பணங்களையெல்லாம் இவர்களே அநுபவித்துக்கொண்டு, எவ்வளவு சத்தம் போடு கிறார்கள்? சர்க்காராவது வாங்கும் பணத்திற்கு ஒரு திட்டமான வரவு–செலவுக் கணக்கு முதலியவைகளைக் காட்டுகிறார்கள். வீடு, பூமி, கடை, தொழில், வியாபாரம், விவகாரம் முதலியவைகள் உள்ளவர்களிடந்தான் வரி வசூலிக்கிறார்கள். இதைச் சரியாகவோ, தப்பாகவோ, எல்லோருக்கும் உபயோகப்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள்.

மதத்தின் பேரால் இப் பார்ப்பனர்கள் நம்மிடமிருந்து வாங்கும் வரிப்பணத்திற்கு ஏதாவது ஒழுங்குண்டா? முறையுண்டா? வரவு–செலவுக் கணக்குச் சொல்லுவதுண்டா? ஒன்றுமில்லாமல், ஒவ்வொரு மனிதனையும் விடாமல், அதுவும் அவன் கர்ப்பத்தில் தரிக்கும் முன்பே கர்ப்பதான முகூர்த்தம் என்பதாகவும், கர்ப்பம் தரித்தால் சீமந்த முகூர்த்தம் என்பதாகவும், பிறந்துவிட்டால் ஜாதகரணம், நாமகரணம், தொட்டிலில் போடுதல், பாலூட்டுதல், ஆயுசு ஓமம், முடிவாங்குதல், காதுகுத்துதல், பள்ளியில் வைத்தல், காயலா முதலியவைகளுக்குச் சாந்தி; பிறகு, அவனுக்குக் கலியாணம் என்றால் பெண் பார்த்தல், பொருத்தம் பார்த்தல், நாள் வைத்தல்; அதன்பின் விவாகம், அதன்பின் மேற்படி சடங்கு; அவன் பிள்ளைகுட்டி பெற்றால் அதற்கும்—அதன் காயலாவுக்குக் கிரகதோஷம் சாந்தி, கோவில், குளம் யாத்திரை ஆகியவைகள். இவ்வளவும் தவிர, கடைசி காலத்தில் சாவதா யிருந்தால்—அதாவது சாக 10 நிமிஷங்களிருக்கும்போதே—சுங்கக்காரனுக்குச் சுங்கம் கொடுத்து விட்டுத்தான் ஒரு ஊருக்குள் நுழைய வேண்டும் என்பது போல, பார்ப்பானுக்கு

மாடு வாங்கிக் கொடுத்தால்தான் (கோதானம்), இந்த ஜீவன் அந்த மாட்டின் வாலைப் பிடித்துக்கொண்டு மோட்சத்திற்குப் போகமுடியும். இல்லாவிட்டால், மேல் லோகத்திலுள்ள நெருப்பாறு, மயிர்ப் பாலம் தாண்டமுடியாது என்று சொல்லி, மாடு கொடுக்க வேண்டி யிருக்கிறது.

மாடு கொடுத்துவிட்டாலாவது விடுகிறானா? அப்போதும் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, இழவுக்கு வந்தவர்களைக்கூட விசாரிக்க நேரமில்லாமல் உபத்திரவித்து, வரிசை யாக வருஷம் முழுவதும் பிய்த்துப் பிடுங்கித் தின்கிறார்கள். இவ்வளவுடன் தீர்ந்து விடுகிறதா? இல்லவே இல்லை. ஒரு வருஷம் ஆனதும், "உன் தகப்பனார் இன்ன வருடம், இன்ன மாதம், இன்ன தினம், இன்ன திதி செத்துப்போனார்; வை பணம், அரிசி, பருப்பு, உப்பு, புளி, வகையறா சாமான்கள்" என்று கேட்பதோடு, சாப்பிட்டு அஜீர்ணம் ஏற்பட்டால் அதற்கு இஞ்சியும் சுக்கும் கேட்டு வாங்கி, "இவ்வளவும் கொடுத்து, நீயும் உன் பெண் சாதியும் என் காலில் விழுந்து கும்பிட்டு, கால்கழுவின தண்ணீரைக் குடியுங்கள்" என்றும் சொல்லி மூட்டை கட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். அம் மூட்டைகள் அனேகமாகத் தாசிகள் வீட்டிற்கே போய்ச் சேருகின்றன.

மதச் சடங்குகள் யோக்கியதைதான் இவ்வாறு இருக்கிறது என்றால், மத ஆச்சாரி யார்கள் யோக்கியதையையும் கொஞ்சம் பாருங்கள்! மதத்தைக் காப்பதற்காக என்றோ மதப்பிரச்சாரம் செய்வதற்காக என்றோ, சமயத்தைப் பரப்ப என்றோ நமது முன்னோர்கள் 100, 200, 500, 1000 கணக்கான வேலி பூமிகளும்; 10,000, 20,000, 50,000 கணக்கான வராகன் பொன்களும், இராஜ்யங்களும், ஜமீன், மிட்டா என்னும் ஆட்சிகளும், தானமாகவும் மானியமாகவும் விட்டிருக்கின்றார்கள். இவற்றை நிர்வகிக்கும் மடாதிபதிகளின் யோக்கி யதை எப்படி இருக்கிறது? அவர்களின் ஒழுக்க வழக்கங்கள் எப்படி இருக்கின்றன? இவ்வளவு சொத்துக்களின் வரும்படிகள் மதத்திற்கோ சமயத்திற்கோ என்ன பிரயோசனப் படுகின்றன?

[சென்னை சவுந்தரிய மகாலில், 23-3-1927-ல் சொற்பொழிவு— 'குடிஅரசு' 3-4-1927]

4. நமது முன்னேற்றம்

சகோதரர்களே! நான் உங்கள் ஊருக்கு இதற்குமுன் இரண்டொரு தடவைகள் வந்திருக்கின்றேன். ஒரு தடவை, ஒத்துழையாமையின்போது உங்கள் ஜில்லாவாகிய தென் ஆர்க்காடு ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில், இந்த மண்டபத்துக் கெதிரில் பேசியிருப்பதாக எனக்கு ஞாபகமிருக்கின்றது. இன்னொரு தடவை, காலஞ் சென்ற நமது நண்பர் திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் இருக்கின்றபோழ்து திரு. பிள்ளையவர்களால் அழைக்கப்பட்டு, உங்களூர் வாசிகளாகிய திரு. இலட்சுமணசாமி முதலியார், திரு. கிருஷ்ணசாமிப் பிள்ளை முதலியவர்களாலும் கடைவீதிக்காரர்களாலும் பெரிய ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டு, இவ்வூருக்கு வந்து இதேயிடத்தில் பேசியிருக் கிறேன். நான், இங்கு காலஞ்சென்ற எனது நண்பர் குமாரசாமி அவர்களின் குடும்பத் தாரைக் கண்டு எனது அனுதாபத்தைத் தெரிவித்து விட்டுப் போகலாமென வந்த இடத்தில், ஞானியார் ஆசிரமக் காரியஸ்தர் திரு. வடிவேல் செட்டியாரும் அவரது நண்பர்களும் இன்று இங்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டதால் நானும் சம்மதித்து ஏதோ சில வார்த்தைகள் இன்று இங்கு பேச வந்திருக்கின்றேன்.

நான் இன்று பேசவேண்டிய தலைப்பு விஷயம் "நமது முன்னேற்றம்" என்பதாகும். இந்தத் தலைப்பின் கீழ் எதைவேண்டுமானாலும் பேசலாம் என்றாலும், நான்

நமது நாட்டு மக்கள் முன்னேற்றம் என்பதைப் பற்றிச் சொல்லும் முறையில், மற்ற நாட்டிற்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் சொல்லி, பிறகு நாம் செய்யவேண்டியவைகள் என்று எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகின்றேன். நான் சொல்வது பெரும்பாலும் என்னுடைய சொந்தக் கருத்தும், நான் மனப்பூர்வமாய் சரி என்று உணர்ந்ததுமே சொல்லுகின்றேன். நமது நாட்டைப்பற்றி—முற்காலத்தில் இருந்த நிலை என்பதாக அதற்குப் பிரத்தியட்ச சாட்சியம் இல்லாத இக் காலத்தில்—எவ்வளவு பெருமையாகப் பேசிக் கொண்டாலும், இன்றையப் பிரத்தியட்ச நிலையை உணர்ந்து, இது நமது முற்போக்கா? பிற்போக்கா? என்பதை முதலில் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

நமது நாடு இன்றைய நிலைமையில் விளைபொருளிலும் வியாபாரத் தொழிலிலும் கைத்தொழில் வசதியிலும், இன்றைய தினம் நாமறிந்த எந்த நாட்டிற்கும் பிற்பட்டதல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். அதுபோலவே, மக்கள் வாழ்வில் செல்வத்திலும் அறிவிலும் ஆராய்ச்சியிலும் சமூக உரிமையிலும் அரசியல் உரிமையிலும் பிற்பட்டு அடிமைப்பட்டு இருக்கின்றோம் என்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள் என்று நினைக்கின்றேன். உதாரணமாக, செல்வத்தில் நாம் பிற்பட்டவர்கள் என்பதற்கு, மற்ற நாட்டுச் சாதாரணப் பெண்மணிகளிடம் இருக்கும் செல்வம் நமது நாட்டுப் பிரபுக்கள் என்பவர்களிடம் இல்லை. அது மாத்திரமல்லாமல், மற்ற நாட்டு ஒவ்வொரு தனிமனிதனுடைய சராசரி மாத வரும்படி 35 ரூபா வீதம் என்றால், நம்நாட்டு மனிதனின் சராசரி வரும்படி 3½ ரூபா ஆகின்றது. மற்றும் பிழைப்பு வசதியோ, நமது நாட்டில் வேலை கிடைக்காமல் வாரம் ஒன்றுக்குப் பதினாயிரக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்குக் கூலிகளாகக் கப்பலேறுகின்றார்கள். ஆனால், வெளிநாடுகளிலிருந்து நமக்கு முதலாளிகளாகவும் எஜமானர்களாகவும் அதிகாரிகளாகவும் பலர் தினம் இறங்கிக்கொண்டே இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டால் நாம் நடுங்குகின்றோம்.

மற்றபடி, அறிவிலும் நமது மக்களின் சராசரி அறிவு தெரியவேண்டுமானால், 100 க்கு 7 பேரே கையெழுத்துப்போடத் தெரிந்தவர்கள். பெண்களிலோ 1000-க்கு 1½ பேர் கையெழுத்துப் போடத்தெரிந்தவர்கள். அதிலும், சிறந்த மூடர்கள் என்பவர்கள் பண்டிதக் கூட்டங்களிலேயே பெரும்பான்மையோராக இருந்தால், மற்றவர்களைப்பற்றி நாம் யோசிக்கவும் வேண்டுமா? ஆராய்ச்சி விஷயத்திலோ எதுவும் இல்லை. ஆனால், வெளிநாட்டார்களின் ஆராய்ச்சியோ, மின்சாரத்தின் மூலமும் தண்ணீர் ஆவியின் மூலமும் எண்ணெயின் சூட்டின் மூலமும் அவர்கள் செய்கின்ற அற்புதங்களுக்கு அளவே இல்லை. ஒவ்வொரு துறையிலும் நாளுக்குநாள் முன்னேறுகின்றார்கள். செத்தவனைப் பிழைக்கவைக்க முயற்சித்துப் பலன் கண்டுகொண்டு வருகின்றார்கள். நட்சத்திர மண்டலத்திற்குப் போக முயற்சிக்கிறார்கள். மணிக்கு 500 மைல் வேகம் பறக்கப் பார்க்கிறார்கள். ஒரு வாரத்தில் 6000 மைல் தூரமுள்ள சீமைக்குப் போகிறார்கள். ஒரு மணி நேரத்தில் 10000 மைல்களுக்கு அப்பாலுள்ள செய்தியை அறிகின்றார்கள். ஒரு பீரங்கி வெடியில் பத்னாயிரக் கணக்கான மக்களை உயிர்வாங்கும்படியான யுத்த முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். கண்மூடித் திறப்பதற்குள் மின்னி மறையும் மின்னலிலிருந்து மின்சாரம் எடுக்கின்றார்கள். தண்ணீர் வீழ்ச்சியிலிருந்தும் சூரிய வெப்பத்திலிருந்தும் மின்சாரம் உண்டாக்குகின்றார்கள்.

எண்ணெய் இல்லாமல், நெருப்பில்லாமல், தண்ணீர் இல்லாமல்—கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தால் அது ஓடிக்கொண்டிருப்பதுபோல்—தானாகச் சாவி கொடுப்பதின் மூலம் ஓடும்படியான மாதிரியில் இயந்திரங்களையும் வண்டிகளையும் செய்ய முயற்சித்து வருகின்றார்கள். ஆனால், நமது நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களுக்கோ என்றால் புல்லிலும் பூண்டிலும் கல்லிலும் மண்ணிலும் கடவுளைத் தேடி, அவைகளுக்கு எப்படி பக்தி செலுத்துவது என்கின்ற வேலையே! இன்னமும் பலருக்கு ஆராய்ச்சி முடிவுபெறவில்லை.

கடவுளுடைய எண்ணிக்கைகளும் பெயர்களும் அவர்களுடைய லீலைகளும் பெண்டு பிள்ளை வைப்பாட்டிகளும் இன்னமும் கணக்கு கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டே இருக்க

வேண்டி இருக்கின்றது. நாமத்தின் நடுவிலிடும் மஞ்சள் திருச்சூரணத்திற்கும் சிவப்புத் திருச்சூரணத்திற்கும் உள்ள பெருமை-சிறுமை வித்தியாசங்களும், பாதம் வைத்து இடும் நாமத்திற்கும் வளைவாய் இடும் நாமத்திற்கும் உள்ள பிரதானங்களுக்கும் உள்ள வித்தியாசம் கண்டுபிடிக்க நமது ஆராய்ச்சியால் முடியாமல், வெளிநாட்டு ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. நம்மை மோட்சத்துக்கு அனுப்ப அவதாரம் செய்த சமயாச்சாரிகள் சரித்திரமும் எண்ணிக்கையும் எப்படி நமக்குக் கிடைத்தது என்னும் விஷயம், யாரோ ஒருவர் சொல்வதை நம்புவதன் மூலம்தான் அறியக்கூடும் என்கிற நிபந்தனைகளை ஒத்துக்கொண்டாலும், என்ன சொல்லுவது என்கிற விஷயம் இன்னும் ஆராய்ச்சியில் இருந்துவருகின்றது. எந்த எந்த பாஷை, எந்த எந்த புஸ்தகம், யார் யார் படிக்கலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த ஊரில், எந்த எந்த கடவுளை, யார் யார் எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கலாம், கும்பிடலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த வீதியில் யார் யார் நடக்கலாம், எந்த எந்த சாதியார், எந்த எந்த சாதியாருக்கு எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டும் என்கிற விஷயமும், எந்த எந்தமாதிரிக் குடுமி யார் யார் வைத்துக்கொள்ள வேண்டும், எந்த எந்தமாதிரி வேட்டி யார் யார் கட்டிக்கொள்ள வேண்டும், யார் யார் எங்கெங்கிருந்து சாப்பிட வேண்டும் என்கிற விஷயமும் இன்னமும் ஆராய்ச்சியிலும் தர்க்கத்திலுமே இருந்து வருகின்றது. மற்றும், ஒரு சாதி ஆணும் ஒரு சாதிப் பெண்ணும் கூடினால் என்ன சாதி மனிதன் பிறப்பான்? என்பது இன்னமும் ஆராய்ச்சியில் இருக்கின்றது. நம்மைப் போன்ற யாராவது "என்ன அய்யா! மற்ற நாட்டார்கள் எவ்வளவோ முற்போக்கடைந்திருக்கும்போது நாம் இன்னமும் இந்த ஆராய்ச்சியில் இருப்பது சரியா?" என்று கேட்டால் உடனே கோபம் வந்து, "அட போ! உனக்கென்ன தெரியும்? நீ எவ்வளவு படித்திருக்கின்றாய்? எங்களுக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாய்! மேனாட்டு ஆராய்ச்சி இரண்டு நாளைய வாழ்வு. அது இகத்தைப் பொறுத்தது. இன்றைக்கு இருப்பவர் நாளைக்கு இருக்கமாட்டார்கள். இதெல்லாம் வாவென்றால் வரும், போவென்றால் போகும். மனிதன் எதற்காகப் பிறந்தான்? அவன் வந்த வேலையை அல்லவா அவன் கவனிக்கவேண்டும்? அதுதான் ஆத்மார்த்தம்; மோட்ச சாதனம்" என்று சொல்லி ஏதோ ஒன்றைத் தனக்கும் புரியாமல் மற்றவர்களுக்கும் புரியாமல் பேசுகிறார்கள். யாராவது தட்டிப் பேசினால் உடனே "தோஷம் தோஷம்" என்று கன்னத்தில் அடித்துக்கொள்ளுகிறார்கள்.

எனவே, நமது நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கிறது, மற்ற நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பதை இதிலிருந்து யோசித்துப் பாருங்கள். பொதுவாக நமது மக்கள், முதலாவதாக 100க்கு ஏழு பேர்தான் படித்திருக்கின்றார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? இரண்டாவதாக, நமது மக்கள் சாப்பாட்டிற்கில்லாமல், வேலையும் கூலியும் கிடைக்காமல், வெளிநாட்டிற்குப் பதினாயிரக்கணக்கான குழந்தை குட்டி கற்ப ஸ்திரீகளுடன் கப்பலேறி, கண் காணாததும் முன்பின் அறியாததுமான நாட்டிற்குப் போய் கஷ்டப்பட்டு மடிகின்றார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? மூன்றாவது, மனிதனுக்கு மனிதன் இழிவாகவும் அவமானமாகவும் கருதத் தக்கபடி, கீழ்மேல் சாதி பிரித்து பஞ்சமன் என்றும் மிலேச்சன் என்றும் சூத்திரன் என்றும் அழைக்கப்படுவதும், சமூக வாழ்வில் சுயமரியாதைக்கு ஈனமான நிலையில் தாழ்த்தப்பட்டும் கொடுமைப்படுத்தப் பட்டும் இருக்கின்றார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா?

அப்படியானால், இந்த நிலைமை இப்படியே வைத்துக்கொண்டிருப்பதால், நமது நாடு முற்போக்கு அடைய முடியுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். இவைகளைத் திருத்தி, இந்த வழியில் வீணாகும் செலவுகளை மற்ற நாடுகளைப்போல் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் தொழிலுக்குஞ் செலவிட வேண்டுமென்று சொன்னால், அதை நாத்திகம், மத தர்ம விரோதம் என்று சொல்லுகின்றார்கள். இது நாத்திகமா மத விரோதமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

மற்ற நாட்டாரின் ஆத்திகமும் மத தர்மமும் அவர்கள் நாட்டில் 100க்கு 100 பேரையும் படிக்கவைத்து, அவர்கள் அத்தனை பேருக்கும் தாராளமாய்த் தொழில் சம்பாதித்துக் கொடுத்துப் பிச்சைக்காரர் என்பவர்களே தங்கள் நாட்டில் இல்லாமல் செய்து, ஆராய்ச்சியின் மூலம் நாம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாதமாதிரியில் அற்புதங்களைக் கண்டு பிடித்து, வெளிநாட்டுச் செல்வங்கள் எல்லாம் தங்கள் நாட்டிற்கே வரும்படி செய்து கொண்டு, மத தர்மமாக நமது நாட்டில் பள்ளிக்கூடமும், ஆஸ்பத்திரிகளும், மருத்துவ உதவிச்சாலையும், அனாதைப் பிள்ளைகள் பாதுகாப்பு நிலையமும் கட்டி, தீண்டாதார்கள் சட்டசபை மெம்பராகவும் மந்திரிகளாகவும் தக்க மாதிரியில் கல்வியும் உத்தியோகமும் கிடைக்கத்தக்க மதமாற்ற ஸ்தாபனங்களும் ஏற்படுத்தி, அதற்காகக் கோடிக்கணக்காகச் செலவு செய்து வருகின்றார்கள். இதை நீங்கள் தயவு செய்து நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். நாம் இப்படியே இருந்தால் முன்னேற முடியுமா? மற்ற நாட்டார்கள் முன்னிலையில் மானத்தோடு வாழ முடியுமா? நமது எதிரிகள் பழக்க வழக்கமென்பதையும் பெரியோர்கள் போனவழி என்பதையும் கடவுள் கட்டளை என்பதையும் ஆயுதமாக வைத்துக்கொண்டு, நம்மை முன்னேற விடாமல் தடுத்து,வருவதற்கு நீங்கள் இனியும் இடங் கொடுக்காதீர்கள். உங்கள் புத்திக்குச் சரி என்று பட்டதைத் தைரியமாகச் செய்யுங்கள். அது நாத்திகமானாலும், மகா பாதகமானாலும் கடைசியாய் ஒரு சிறிதுகூட அந்தப் பூச்சாண்டிகளுக்குப் பயப்படாதீர்கள்.

[திருக்கோவிலூர் மணம்பூண்டியில், 13–6–1929-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 16–6–1929]

5. வகுப்பு வாதம்

இந்திய மக்களின் முன்னேற்றமும் சீர்திருத்தமும் அதன் எதிரிகளுக்கு வகுப்பு வாதமாய் விளங்குகிறது.

மற்றொரு புறத்தில், "இந்தியாவின் முற்போக்குக்கும் சீர்திருத்தத்திற்கும் வகுப்புகளும் மதங்களும் முட்டுக்கட்டையாய் இருக்கின்றன" என்கிற விஷயம், இந்தியா மாத்திரமல்லாமல் உலக மக்களில் பெரும்பாலோரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

வகுப்புவாதத்தால் பல தடவைகளில் மாறிமாறி வெற்றி–தோல்விகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன என்று மாத்திரம்தான் சொல்லலாமே ஒழிய, வகுப்புவாதம் என்றாவது ஒழிந்திருந்ததாகக் கூறுவதற்கில்லை.

உதாரணமாக, இராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம் முதலிய வைணவ, சைவ மத ஆதாரங்களின் சரித்திரம் முழுவதும் வகுப்புவாதமாகவே இருந்து வருகின்றதைப் பார்க்கலாம்.

நாமறிய, சுமார் 50 வருஷ காலமாகவே இராமாயணக் கதை ஆரியர் - திராவிடர் வகுப்புக் கலவரங்களை எடுத்துக் காட்டுவது என்பதாக அனேக அறிஞர்கள் பல ஆதாரங்களுடன் எழுதியும், வாதப் பிரதிவாதங்கள் செய்தும் வந்திருக்கிறார்கள் என்றாலும், 20–வது நூற்றாண்டில் அது வெட்ட வெளிச்சமாய் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது.

நிற்க, தேவர்கள், இராட்சதர்கள், சுரர்கள், அசுரர்கள் என்கின்ற பெயருடையவர்கள் இந்தியாவில் இந்த லோகத்தில் இருந்து கொண்டுதான் வழக்காடியதாகச் சரித்திரங்கள் இருக்கின்றனவே ஒழிய, வேறு லோகங்களில் இருந்துகொண்டு வழக்காடியதாகக் கதை ஆதாரமில்லை.

ஆனால், இராம - இராவண யுத்தம் மாத்திரமல்லாமல், பாரத யுத்தம், இரணிய யுத்தம் முதலிய அனேக யுத்தங்கள் வகுப்புவாதம் காரணமாகவே ஏற்பட்டிருக்கின்றன.

பார்ப்பனர்கள்—பார்ப்பனரல்லாதார்கள், தீண்டப்படாதவர்—தீண்டப்படக்கூடியவர் என்கின்ற வகுப்பு பேதங்களும் வாதங்களும் தீர்ந்துவிட்டதினாலேயே, வகுப்புவாதம் ஒழிந்துவிடும் என்று நாம் கருதிவிட முடியாது.

இன்றைய அரசியலில் வெளிப்படையாகவும், உள் எண்ணமாகவும் வகுப்புவாதங்கள் தலைவிரித்து ஆடுவதை யார்தான் மறுக்க முடியும்? வெளிப்படையாக இந்தியர், பிரிட்டிஷார் என்கின்ற (உள் எண்ண) வகுப்புவாத உணர்ச்சி, சுயராஜ்யம் - அன்னிய ராஜ்யம் என்ற பெயரால் வெளிப்படையாயிருந்து வருகிறது. அதுபோலவே, இந்துக்கள் ஆதிக்கமோ, முஸ்லிம்கள் ஆதிக்கமோ என்கின்ற (உள் எண்ண) வகுப்புவாத உணர்ச்சி, இந்து—முஸ்லிம் என்ற பெயரால் வெளிப்படையாய் இருந்து வருகின்றது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், வகுப்புக்கு வகுப்பு அவநம்பிக்கை, துவேஷம் ஆகியவைகளாலும், வகுப்பை வகுப்பு அடக்கி ஆளவேண்டும் என்கின்ற எண்ணத்தாலும், ஏதோ ஒரு காலத்தில் எந்தக் காரணத்தாலோ கிடைத்துவிட்ட ஆதிக்கத்தையும் அதிக உரிமையையும் எப்படி விட்டுக்கொடுப்பது என்கின்ற கெட்ட எண்ணத்தாலும், முட்டாள் பிடிவாதத்தாலும் வகுப்புவாதம் நாளுக்கு நாள் வளர்ந்து உரம்பெற்று வருகின்றதைச் சென்ற 30 வருஷ காலமாக நேரில் பார்த்து வருகின்றோம்.

வகுப்பு உணர்ச்சியைக் குறை கூறி அதை அடக்கப் பார்க்கின்றவர்கள், மக்களைப் பழி சுமத்தி, பயப்படுத்தி, ஏமாற்றி அடக்கப் பார்க்கின்றார்களே ஒழிய, ஒருவராவது அதன் உள் தத்துவத்தை உணர்ந்து, அதை அடியோடு தலையெடுக்க வொட்டாமல் செய்வதற்கு யாரும் முயற்சிப்பதில்லை.

['குடிஅரசு'—தலையங்கம்—26-5-1935]

6. அவசியமான காரியங்கள்

இந்திய நாட்டில், பெரும்பாலும் உலகத்தின் வேறு எங்கும் இல்லாததும், மனிதத் தன்மைக்கும் நியாயத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும்—அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகள் அல்லரென்பதையும், மனிதத் தன்மையும் நாகரிகமுடையவுமான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்பட வேண்டியதற்குச் செய்யவேண்டியதும்—மற்றும் உலகத்திலுள்ள பெரும்பான்மையான நாட்டார்களைப் போலவே அன்னிய நாட்டினர்களின் உதவியின்றித் தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளவும், ஆட்சி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமானாலும்—முதலாவதாய்ச் செய்யப்படவேண்டிய காரியம் இரண்டு உண்டு என்று உறுதியாய்க் கூறுவோம். அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பலகோடி ஜனசங்கியை உள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களிலும் இழிவாகவும் நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும்.

இரண்டாவதானது எதுவென்றால், பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே—அடியோடு, பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்றும், 'ஆண்களுக்கு அடிமையாக இருக்கக் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றும் கற்பித்து, அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும். ஆகவே,

மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும்–எந்தக் காரணத்தை முன்னிட்டும்–இந்தியாவில் இனி அரை நிமிடம்கூட இருக்கவிடக் கூடாதவைகளாகும்.

இந்தக் காரணத்தாலேதான், நாம் மேற்கண்ட இரண்டு கொடுமைகளும் அழிக்கப் படாமல்—இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கேட்பதோ, இந்தியாவின் பாதுகாப்பையும் ஆட்சி நிர்வாகத்தையும் இந்திய மக்கள் "நாங்களே பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று சொல்லுவதோ, மற்றும் இந்தியாவுக்கு அன்னியருடைய சம்பந்தமே சிறிதும் வேண்டாம் என்று சொல்லுவதோ—ஆகிய காரியங்கள் முடியாதென்றும், அவை சுத்த அறியாமைத் தனமானதென்றும், இல்லாவிட்டால்—சுயநல சூழ்ச்சியே கொண்ட நாணயத்தவறான காரியமாகுமென்றும் சொல்லி வருகிறோம் என்பதோடு—இப்படிச் சொல்லும் விஷயத்தில் நமக்குப் பயமோ, சந்தேகமோ கிடையாது என்றும் சொல்லுவோம். ஆதலால்தான், இவ்வித முட்டாள்தனமானதும், சூழ்ச்சியானதுமான முயற்சிகளை நாம் எதிர்க்க வேண்டியவர் களாயுமிருக்கின்றோம்.

தீண்டாமை என்னும் விஷயத்திலிருக்கும் கொடுமையும் மூடத்தனமும் மூர்க்கத் தனமும் யோசித்துப் பார்த்தால், அதை மன்னிக்கவோ, அலட்சியமாய்க் கருதவோ, 'நாளை பார்த்துக்கொள்ளலாம்; இப்போது அதற்கென்ன அவசியம், அவசரம்' என்று காலந் தள்ளவோ சிறிதும் மனம் இடம் தருவதில்லை. ஒருவன், அதாவது பிறரைத் தீண்டாதார் எனக் கருதிக் கொடுமைப் படுத்துகின்றவர்களை அத் தீண்டாதார்களுக்கு இருக்கும் உண்மையான கஷ்டத்தை உணரச் செய்யவேண்டுமானால், இப்போதைய வெள்ளைக்கார அரசாங்கத்தின் கீழ் அனுபவிக்கும் கொடுமைகள் போதாது என்றும், சிறிதும் சுதந்திரமும் சமத்துவமும் அற்றதும், சதா இராணுவச் சட்டம் அமுலில் இருப்பதுமான ஏதாவது ஒரு கொடுங்கோல் ஆட்சி இருந்தால்தான், இம்மாதிரி கொடுமைப் படுத்துகின்ற மக்களுக்கு உணர்ச்சி வந்து, புத்தி வருமென்றும் நமக்குச் சிற்சில சமயங்களில் தோன்றுவதுமுண்டு.

ஆனால், இந்தியாவை இம்மாதிரி மூர்க்கத்தனமும் நாணயக் குறைவும் மாத்திரம் சூழ்ந்துகொண்டிருக்காமல், மூடத்தனமும் சேர்ந்து கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதால், இன்னமும் எவ்வளவு இழிவும் கொடுமையும் ஏற்பட்டாலும் இம்மாதிரியான மக்களுக்கு உண்மையான துன்பத்தை உணரத் தக்க நிலைமை வருவது கஷ்டமாக இருக்கும். என்றாலும், இந்நிலை மாறுதலடையக் கூடும் என்ற உறுதியை உண்டாக்கத் தக்க நம்பிக்கை கொள்வதற்கு இடமில்லாமல் போகவில்லை.

இனி, பெண்கள் விஷயத்தில் அவர்களுடைய சுதந்திரத்தையும் உணர்ச்சியையும் கட்டிப்போட்டிருக்கும் கொடுமையானது—இதுபோலவே, இந்தியர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியே இல்லை என்பதைக் காட்டவும், அவர்கள் அடிமைகளின் குழந்தைகள் என்பதை ஒப்புக்கொள்ளவும் ஆதாரமானதென்றுதான் சொல்லவேண்டும்.

எப்படியெனில், இவ்விரண்டைப்பற்றி இந்திய விடுதலைவாதிகள், சுதந்திரவாதிகள், சுயேச்சைவாதிகள், தேசியவாதிகள், மக்கள் நல உரிமைவாதிகள் என்கின்ற கூட்டத்தார் களுக்குச் சிறிதும் உண்மையான கவலை இல்லாவிட்டாலும், மேற்கண்ட கூட்டத்தார்களில் 100க்கு 90 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் சுயநலங் கொண்ட நாணயமற்றவர்களாகவே காணப்படினும்—இவர்களது முயற்சி இல்லாமலும் சிலசமயங்களில் மேற்கண்ட சுயநல சூழ்ச்சிவாதிகளின் எதிர்ப்பிற்கும் இடைஞ்சலுக்கும் இடையிலும் வேறு ஒரு வழியில் கொடுமைகள் அனுபவிக்கும் மேற்கண்ட இருவகையாருக்கும் விமோசனம் ஏற்படுவதற்கு அறிகுறிகள் ஆங்காங்கு காணப்படுகின்றதைப் பார்க்கச் சிறிது மகிழ்ச்சி அடைகின்றோம்.

['பகுத்தறிவு'—கட்டுரை—1938, இதழ் 10, மலர் 3]

7. ஆரியரும் திராவிடரும்

தலைவரவர்களே! தோழர்களே!

கத்தி இல்லாத—துப்பாக்கி இல்லாத—உடல்வலிகூட இல்லாத இந்த ஆரியர்களுக்கு அரசியல், சமூக இயல், சமய இயல், பொருளாதார இயல், ஞான இயல் முதலாகியவைகளுக் கெல்லாம் நாம் உரிமை இல்லாமல், அடிமைப்பட்டு உழல்வதற்குக் காரணம் கண்டுபிடிக்க வேண்டாமா?

சரித்திரத்தைப் பாருங்கள்! ஆராய்ச்சியாளர் கூறுவதின் உண்மையைப் பாருங்கள். உலகிலேயே முதன்முதல் தோன்றிய நாடு தமிழ் நாடு என்றும், உலகிலேயே மனித வர்க்கம் தோன்றிய இடம் நம் தென்னாடு என்றும் கூறப்படவில்லையா? இந்தமாதிரி பூர்வீகப் பெருமைகளால்—பழங் கதைகளால் நமக்கு ஆவது ஒன்றும் இல்லையென்றாலும், இப்படிப் பட்ட தமிழர்கள் ஏன் உலகில் இவ்வளவு கீழான நிலையிலும், இழிவான தன்மையிலும் இருக்கவேண்டும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டாமா என்பதற்காகவே இவற்றைக் கூறினேன்.

தமிழன் தன்னை இந்தியன் என்று கருதியதால், தமிழ்நாட்டையும் தமிழர் வீரத்தையும் கலையையும் நாகரிகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை 'இந்து' என்று கருதியதால், தனது மானத்தையும் ஞானத்தையும் பகுத்தறிவையும் உரிமையையும் இழந்தான்.

இப்போது தமிழன் 'இந்தியன்' என்பதையும், 'இந்து' என்பதையும் மறப்ப தாலேயே—அக் கட்டுகளிலிருந்தும் விடுபட்டு விலகுவதாலேயே—தன்னை ஒரு மனிதன் என்றும் ஞானத்துக்கும் வீரத்துக்கும் பகுத்தறிவுக்கும் மானத்துக்கும் உரிமை உடை யவன் என்றும்; இவைகளுக்கு ஒரு காலத்தில் உறைவிடமாக இருந்தவன் என்றும் உணருவானாவான்.

[சேலத்தில், 3-9-1939-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 17-9-1939]

8. யார் தமிழர்கள்?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

நாம் மைனாரிட்டி என்று சொன்னவுடன் பார்ப்பன காங்கிரஸ்காரர்கள், "நாங்கள் 100க்கு மூன்றுபேர்கள்தாமே; நீங்கள் 97 பேர் இருக்கிறீர்களே; நாங்கள்தாம் மைனாரிட்டிகள்" என்பார்கள். இந்த இரகசியம் உங்களுக்குத் தெரியாது. நாம், பேருக்கு வேண்டுமானால் 97 ஆவோம். ஆனால், நம்மைப் பல வகுப்புகளாகப் பிரித்திருக்கின்றனர். உடையார், செட்டியார், ரெட்டியார், பிள்ளை, நாயுடு, முதலியார், கவுண்டர், கள்ளர், மறவர், அகமுடையர், அம்பட்டர், வாணியர், ஆர்சுத்தியார், புற்றிலே கழிந்தார், பொரபொரத்தார் என்று முழுவதும் சொல்லலாம்; அவ்வளவு எண்ணற்ற பிரிவுகள்! இங்கே ஒருவனுடைய கவலையை மற்றவன் எடுத்துக்கொள்வதில்லை. அப்படி எடுத்துக்கொண்டாலும், அதுவும் பார்ப்பனர்களுக்குத்தான் அனுகூலம். ஒரு 'பிள்ளையை' அடித்தால், மற்றொரு 'முதலி' பார்த்துக்கொண்டு சந்தோஷப்படுவதல்லாமல், "வெள்ளாளப் பயலுக்கு நல்லா வேணும்" என்று காலாட்டிக்கொண்டிருக்கிறான். அதுமாதிரியே, ஒரு சாதியான் அடிபட்டால், மற்ற சாதியான் கவலைப்படுவதில்லை. ஒரு பார்ப்பான் உதைபடட்டும்—இமாலய மலையி லிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை—சத்தம் கேட்குதே! யார் மைனாரிட்டி என்று யோசித்துப் பாருங்கள்!

தமிழ்நாட்டில் இருப்பவரெல்லாம் தமிழர்தான். நான் கேள்விப்பட்டேன், நண்பர் சர். பன்னீர் செல்வம் அவர்கள் தங்களது விசேஷத்தில் இந்து மதபுராண சம்பிரதாயப்படி ஒரு சடங்கும், கிறிஸ்துவ குருக்கள் மூலமாக மற்றொன்றும் செய்ததாக! அவர் தமிழரல்லவா? இங்கேயுள்ள சாயபுமார்கள்தாம் யார்? அவர்களும் நாடாராகவோ, உடையாராகவோ, பிள்ளையாகவோ, சாம்பாராகவோ இருந்து இப்படி வந்தவர்கள் தாம். அவர்கள் ஆப்கனிஸ்தானத்திலிருந்து வந்தவர்களல்லர். அவர்களது கொடிவழிப்பட்டியை இழுத்துப் பார்த்தால், அவர்கள் ஏற்கனவே ஒரு குடும்பனாகவாவது இருந்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஆனால், பார்ப்பனர்கள் அப்படியல்லவே! பி. டி. சீனிவாசய்யங்கார் சரித்திரத்திலிருந்து உ. வே. மு. இராகவய்யங்கார் சரித்திரம் வரை, ஆரியர்கள் வெளிநாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்கள்தாமே! அவர்களுக்கும் நமக்கும், சட்டப்படிக்கல்லாத வழியில் இரத்தக் கலப்பு இருக்கலாமே தவிர, வேறு எந்த வகையிலும் அவர்களுக்கும் நமக்கும் இரத்த சம்மந்தமில்லையே! நாம் அவர்களோடு சண்டை பிடிக்கவில்லை—கொடுமையை ஒழியுங்கள் என்றுதான் சொல்லுகிறோம்.

[திருவாரூரில், 18-12-1939-ல் சொற்பொழிவு:—'குடிஅரசு' 31-12-1939]

9. நாம் இந்துக்களா?

நம்மை, 'இந்துக்கள்' என்று சொல்லிக்கொள்கிறோம் என்றாலும், அரசாங்க ஆதாரங்களில் நமக்கு 'முகமதியரல்லாதார்' என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இந்துக்கள் என்ற பெயர் கிடையாது.

இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால், நமக்குச் சமுதாயத்தின் பெயராலும் (அதாவது நேஷன் பெயராலும்), மதத்தின் பெயராலும், நாட்டின் பெயராலும் ஒரு குறிப்பிட்ட பெயர் கிடையாது என்பதாகும். இது தவிர, சமூகத்தின் பெயராலும், நமக்குப் 'பார்ப்பனரல்லாதார் சமூகம்' என்கின்ற பெயர்தான் இருந்து வருகிறதே தவிர—அந்தப்படியே நாமும் சொல்லி வருகிறோமே ஒழிய—வேறு நம்மைக் குறிப்பிட்டுக் காட்டிக்கொள்ளும்படியான "ஒரு எதிர்மறை அல்லாத பெயர்" கிடையாது. அப்படி இருந்தும் சமயத்தின் பெயராலும் சட்டத்தின் பெயராலும் இந்துக்களுக்குள்ளாகவே நாம் நாலாஞ் சாதியார், அய்ந்தாஞ் சாதியார் (சதுரன், பஞ்சமன்) என்பதாக—அதாவது சூத்திரன், கீழ் மகன் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படுகிறோம் என்பதோடு—அதற்கேற்றதான சட்ட உரிமையும் சமுதாய உரிமையும் நடப்பும்தான் பெற்று வருகிறோம்.

சூத்திரன் என்கின்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்பதை நம்மில் அனேகர் தெரியாதவர்கள் அல்லர். சூத்திரன், தஸ்யூ, தாசன் என்கின்றதான சொற்கள் இந்துக்களின் (ஆரியர்களின்) புராதன வேதங்களிலேயே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். அப்படிக் குறிப்பிட்டிருப்பதிலும், அவற்றில் மற்றொரு அநீதி என்னவென்றால்—இச் சூத்திரர்களையும், தஸ்யூக்களையும் எவ்வளவு வெறுக்க வேண்டுமோ, எவ்வளவு இழிவுபடுத்த வேண்டுமோ, எவ்வளவு கொடுமைப்படுத்த வேண்டுமோ அவ்வளவுக்கு மேலாகவே வெறுத்து இழிவுபடுத்திக் கொடுமை செய்ய ஏவுகின்றன.

வேதங்களுக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்களில்—சூத்திரன் என்றால் திருடன் என்றும், தஸ்யூ என்றால் கொள்ளை அடிக்கிற கூட்டத்தினன் என்றும், தாசன் என்றால் அடிமை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதுவும் தவிர, இந்துக்களின் தர்ம

சாஸ்திரங்கள் என்பவைகளான மனு தர்மம், பராசர ஸ்மிருதி, நாரதர் தர்மம், யக்ஞ வல்க்யர் தர்மம் போன்ற சாஸ்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும், இந்துமத புராண இதிகாசங்கள் என்பவைகளிலும் இந்தப்படியே நம்மை இழிவாகவும், வெறுக்கத் தகுந்த படியாகவும், தாராளமாய்க் கொடுமை செய்து நன்றாய்ச் சுரண்டத்தக்க விதமாகவும், கட்டுப்பாடு ஏற்படுத்தி வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன என்பதோடு, அவைகள் நமக்குள்ளாகவும் புகுத்தப்பட்டு விட்டன. நமது பண்டிதர்களுக்கு அவையே பரீட்சைப் பாடமாகவும், நமது பிள்ளைகளுக்கு அவையே பாடப் புத்தகங்களாகவும் ஆக்கப்பட்டு விட்டன. ஏனெனில், இந்த சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் ஆகியவைகள் எல்லாம் வேதத்தின் சாரங்களாக இருக்கின்றபடியாலும், வேதசாரத்தை வலியுறுத்திக் கூறவே கடவுள் வாக்குகள், கடவுள் சரித்திரங்கள், கடவுள் நடத்தைகள், கடவுள் கதைகள் என்கின்ற பெயர்களால் ஏற்படுத்தப்பட்டவைகள் இருக்கின்றன ஆதலாலும் அந்தப்படி எழுதவும் செய்யவும் இடம் தந்துவிட்டது.

அரசாங்கத்தாரால் நமக்கு நீதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 'இந்து லா' (அதாவது இந்துக்களின் சட்டம்) என்பது மேற்கண்ட வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி ஆகியவைகளை ஆதாரமாகக்கொண்டு, அவைகளில் தேர்ச்சி பெற்ற வைதிகப் பார்ப்பன சாஸ்திரிகளையும், பார்ப்பனப் பண்டிதர்களையும் கூட்டி வைத்து, அவர்களது கருத்துப்படி, பார்ப்பனப் பிரமுகர்களால் செய்யப்பட்டவையாகும் என்பதோடு—பிராமணன், சூத்திரன், க்ஷத்திரியன், வைசியன் அல்லாதவர்களை (அதாவது நம்மை) தாசி புத்திரர்கள் என்றும் 'இந்து லா' சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற விஷயமும் நம்மைவிட நமது வக்கீல்களுக்கு நன்றாய்த் தெரியும்.

வெகு காலமாகவே, கோர்ட்டுகளில் நடக்கும் சொத்து பாத்தியம் முதலிய விவகாரங்களிலும் வருண முறைப்படி பிராமணனுக்கு ஒரு மாதிரியும், சூத்திரனுக்கு ஒரு மாதிரியுமாகவே தீர்ப்புகள் செய்யப்பட்டு வருவதோடு—கோவில், குளம் (தீர்த்தம்) முதலிய பொது இடங்கள் பற்றிய உரிமைகளிலும் இந்த வருண முறையும், சூத்திர வருணத்தில் உள்சாதி முறையும்—அதாவது பறையர், சக்கிலி, பள்ளர், நாடார், வாணியர், நாயக்கர், சைவர் என்கின்ற பல வகுப்புக்களுக்குத் தனித்தனி உரிமை, பழக்க வழக்கம் முதலியவைகளை வைத்து நீதி செலுத்தப்படுகிறது. நம் பெண்கள் விஷயத்திலும், யாரை யார் மணந்து பிள்ளை பெற்றாலும், சாதி வருண முறைகளால் மனைவிக்கு ஜீவனாம்சமும் பிள்ளைகளுக்குச் சொத்துரிமையும் சரிவரக் கிடைக்காமல் போகின்றது.

நம்மில் அனேகர் தங்களைக் கீழ்ச் சாதி, இழிவான சாதி என்று கருதினாலும், நடத்தினாலும், கோர்ட்டுகளில் தீர்ப்புக் கூறினாலும், 'மானம் போனால் போகட்டும், சொத்தும் பதவியும் வந்தால் போதும்' என்று கருதி, இழிவை மறந்தும் மறைத்து வைக்கவும் பார்க்கிறார்கள். யாராவது ஞாபகப்படுத்தினால்—வெளிப்படுத்தினால், அவர்கள் மீது கோபிக்கிறார்களே ஒழிய—பழிவாங்கப் பார்க்கிறார்களே ஒழிய, தங்கள் மானக்கேட்டைப்பற்றிச் சரியானபடி இலட்சியம் செய்வதே இல்லை.

உலகம் 20-ஆவது நூற்றாண்டில் இருக்கிறது; தமிழர்களாகிய நாம் பல நூற்றாண்டுகளுக்கும் முந்திய நிலையில் இருக்கிறோம்; இன்னமும் சொல்ல வேண்டுமானால்—புராண காலத்திலும், பழைய தமிழ் இலக்கிய காலத்திலும் இருக்கிறோம். இவை சுருக்கமாகச் சொல்லப்பட வேண்டுமானால், காட்டுமிராண்டி காலத்தவர்களாக இருக்கிறோம். இதை மறந்துவிடாதீர்கள்!

['குடி அரசு' - கட்டுரை—6-11-1943]

10. நம் தாழ்மைக்குக் காரணம்

தமிழர் நிலை தாழ்ந்திருக்கிறது. தமிழர் சமுதாயத்தில் கீழான சாதி; கல்வியில் 100க்கு 80 தற்குறி; செல்வத்தில் 100க்கு 90 கூலி ஜீவனம்; தொழிலில் 100க்கு 75 சரீரப் பாடுபட்டு உழைக்கும் தொழில்; ஒற்றுமையில் 108 சாதிகள்; கட்டுப்பாட்டில் அவனவன் சுயநலமும் ஒருவனை ஒருவன் ஏய்ப்பதும்—ஒழிக்க சமயம் பார்ப்பதும்; சமயத்தில் (மதத்தில்) எதிரிக்கு அடிமையாய் இருந்து உழைத்துப் போடுவது; அரசியலில் வஞ்சக அயோக்கியருக்கு வால்பிடித்துக் கைதூக்குவது; மானத்தில் ஈனமும், மதிப்பில் காரி உமிழத் தக்கவராகவும் இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன?

"நன்றி, விசுவாசம் காட்டுவதும், நயவஞ்சகம் செய்யாமையும் தமிழனுக்கு நஞ்சு" என்று கூடச் சொல்லப்படுவதற்கும்—அவை அனேகமாய் உண்மையாய் இருப்பதற்கும் காரணம் என்ன என்பது இரண்டாவது கேள்வி.

இந்த நிலையும், குணங்களும் பார்ப்பனர்களுக்குள்ளும், முஸ்லிம்களுக்குள்ளும், ஏன்—சட்டைக்காரர்களுக்குள்ளும் கூடச் சாதாரணமாய்க் காண்பதற்கு முடிவதில்லை என்று சொல்லப்படுகிறதே, இதற்குக் காரணம் என்ன? இது மூன்றாவது கேள்வி. இந்த மூன்று கேள்விகளிலும் உள்ள விஷயங்கள் சிறிது அதிகப்படுத்திக் கூறியிருப்பதாகச் சிலர் கருதலாம். ஆனால் பெரும்பான்மை உண்மை என்பதைப் பெரும்பான்மையோர் ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஆதலால், இவைகளுக்குக் காரணம் என்ன என்று கவனிக்க வேண்டாமா?

சென்னை மாகாண மக்கள் தொகையில் 100க்கு 3 பேர்களே பார்ப்பனர்கள். 100க்கு 8 அல்லது 9 பேர்களே முஸ்லிம்கள்; 1000க்கு ஒருவராய் இருந்தாலும் இருக்கலாம் சட்டைக்காரர்கள். இப்படி மிகச் சிறிய தொகையினராக இருக்கும் இவர்கள், தமிழர்களுக்கு ஏற்பட்ட மேற்கண்ட இழிவுகள் இல்லாமல் மேன்மையாய், கட்டுப்பாடாய், சுதந்திரமாய் மதிக்கத் தக்க வண்ணம்—அன்னியன் கண்டு பயப்படும்படியும்—வாழ்வதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்தால், தமிழர் இழிவுக்குக் காரணங்கள் சுலபமாய்க் கிடைத்துவிடும்.

காரணம் (1) தமிழனுக்கு அஸ்திவாரமில்லை. அதாவது, அவன் யார்? அவனுக்குச் சொந்தம் எது? அவனுடைய பூர்வோத்திரமென்ன? இலட்சியம் என்ன? என்பனவாகிய நாலும் தெரியாதவனாகவும் ஆதாரம் இல்லாதவனாகவும் இருக்கிறான். ஆகவே, அஸ்தி வாரம் இல்லாக் கட்டிடம் வெடிப்புக் காணுவதும் அதிருவதும் அதில் (மானமோ, மேன்மையோ) குடியிருக்க மக்கள் பயப்படுவதும் இயற்கைதானே! அதுபோலவே, தனக்குச் சொந்தம், உரிமை இன்னது என்று தெரியாதவன், தொட்டதற்கெல்லாம் அன்னிய னிடம் பல்லைக் கெஞ்சுவதும் ஒண்டுவதும், ஒருவனுக்கொருவன் போட்டி போட்டுப் பின்தள்ளிவிட்டுப்போய்த் தன்காரியம் பார்த்துக்கொள்வதும் இயற்கைதானே!

(2) தமிழனுக்கு ஒரு ஸ்தாபனம் கிடையாது; வேறு எதனுடனாவது சேர்ந்துதான் தன்னைத் தமிழன் என்று காட்டிக்கொள்ளவேண்டியவனாய் இருக்கிறான். அப்படி இல்லா விட்டால், பார்ப்பனரல்லாதான் —முஸ்லிமல்லாதான் —கிறிஸ்தவனல்லாதான் —இந்து அல்லா தான் என்பது போன்ற—"அல்லாதான்" என்கின்ற பெயரால்தான் தன்னைக் காட்டிக் கொள்ள முடிகிறது.

(3) தமிழன் என்றால் இதில் பார்ப்பான், முஸ்லிம், கிறிஸ்தவர் முதலிய பலர் சேர் கிறார்கள். யாரையாவது நாம் சேர்ப்பதில்லை என்றால் அவர்கள், 'நானும் தமிழன், தமிழ்நாட்டில் பிறந்தவன், தமிழ் பேசுகிறவன்' என்கிறார்கள். அது மாத்திரமா? தமிழனே—தமிழ்ப் பண்டிதனே—"தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ் பேசுகிற எவனும்—அவன் நம்மை எவ்வளவு இழிவாயும், மானமற்ற தன்மை உண்டாகும்படியும் நடத்தினாலும் சரி அவனெல்லாந் தமிழனே" என்று வக்காலத்துப் பேசுகிறான்; ஆதாரம் காட்டுகிறான்.

(4) தமிழன் நடந்துகொள்ளுவதற்கு என்று தனிமுறை, வழிதுறை கிடையாது; தமிழனுக்கு என்று தனி நடை உடை பாவனை கிடையாது.

(5) தமிழனுக்கு என்று தனித்த முறையில் ஆரியம் கலவாத இலக்கியம் கிடையாது.

['குடிஅரசு' – கட்டுரை—27-11-1943]

11. இழிவு நீங்க ஒரு மருந்து

எஸ்.அய்.ஆர். இரயில் நிலையத்தில் அலுவல் பார்க்கும் தோழர்களே! அவர்களது அனுதாபிகளே!

திராவிடர் கழக நிதிக்கு நீங்கள் அன்புடன் 1080 ரூபாய் அளித்தமைக்கு எனது நன்றி உரித்தாகுக. அலுவலில் உங்களுக்குள்ள குறைபாடுகளைப் பற்றிய முறையீட்டைப் பார்த்தேன். தலைவர் வேதாசலம் அவர்கள் அதை மக்களுக்கு மிக நன்றாய் விளக்கிச் சொன்னார். அதிலிருந்து நானும் பல விஷயங்கள் அறிந்துகொண்டேன். உங்கள் முறையீட்டில் குறிப்பிட்டு இருக்கும் முக்கிய விஷயங்கள் 5, 6 ஆகும்.

இவற்றுள் முதலாவதான உத்தியோகம் நியமிக்கும் கமிட்டியைப் பற்றி பேசத் துவக்கினால் உடல் பதறுகிறது; இரத்தம் கொதிக்கிறது. முட்டாள்தனமான ஆத்திரங் கூடப் பொங்குகிறது. சுயராஜ்யம் வந்த காலத்தில் உத்தியோக விநியோகக் கமிட்டி, இந்த யோக்கியதையில் நியமிக்கப்படுகிறதென்றால்—இதன் அரசாங்க முறையை, எந்த மடையனும் சுயராஜ்ய ஆட்சிமுறை என்று சொல்லமாட்டான். இந்த நாட்டில் உள்ள எல்லா இன, வகுப்பு மக்களுக்கும் இரயில்வே நிர்வாகம் பொதுவாகும்; எல்லாப் பதவியும் பெற உரிமையுண்டு. எல்லா முக்கிய வகுப்பாரும் அந்தக் கமிட்டியில் இடம்பெற வேண்டியது யோக்கியமும் நாணயமுமாகும். ஒன்று இரண்டு பெரு வகுப்புக்குச் சரியான பிரதி நிதித்துவம் இல்லாவிட்டாலும் முக்கியமானதும், அடிப்படையானதும், மொத்த ஜனத் தொகையில் 100க்கு 80, 90 வீதம் எண்ணிக்கை கொண்ட வகுப்புக்கும் பிரதிநிதித்துவமே இல்லாமல்—மொத்த ஜனத்தொகையில் 100க்கு 3 பேர்களாகவும், மற்ற மக்களை யெல்லாம் கீழ்ச்சாதி மக்கள், இழிமக்கள், தகுதியற்ற மக்கள் என்று பித்தலாட்டமாகவும், அயோக்கியத்தனமாகவும் கூறிக்கொண்டு, மனித சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் கேடு செய்து கொண்டிருப்பதுமான வகுப்புக்கே எல்லா ஸ்தானங்களையும் கொடுத்து, மக்களைத் தெரிந்தெடுக்கச் சொல்லுவதென்றால்—இது, நம்மைக் கொடுமைப்படுத்தி, அலட்சியப் படுத்தி இம்சிப்பதில் கவலையற்று அகம்பாவமாகவும், ஆணவமாகவும் நடந்துகொள்ளும் முறையை சர்க்கார் துணிந்து கையாளுகிறது என்று அர்த்தமாகவில்லையா என்று கேட்கிறேன்.

இரயில்வே சர்வீஸ் கமிஷன் கமிட்டி அங்கத்தினர் தன்மையைச் சற்று கவனித்துப் பாருங்கள். இது S. I. R., M. S. M. ஆகிய இரண்டு இரயில்வேக்கும் உத்தியோகஸ்தர் நியமிக்கும் கமிட்டியாகும். அதாவது:

(1) இராவ்பகதூர் R. மாதவாச்சாரியார். கமிட்டிக்கு இவர் தலைவர்.
(2) இராவ்பகதூர் M. இராமச்சந்திர (அய்யர்)
(3) T. K. சுந்தரராஜ அய்யங்கார்.
(4) கான்பகதூர் அப்துல் கரீம்.
(5) K. சுந்தரராஜ (அய்யர்)

இந்த அய்வரில் நால்வர் பார்ப்பனர் (அதிலும் பெரும்பாலும் அய்யங்கார்கள்); மீதி யுள்ள ஒருவர் சாயபு என்பவர். அதாவது முஸ்லிம் என்று சொல்லப்பட்டாலும் அவரும் முக்கால் பார்ப்பனர், கால் முஸ்லிம் என்று இங்கு சொல்லப்பட்டது. அதாவது, கான் பகதூர் அப்துல் கரீம் சாயபு அவர்கள் பார்ப்பன மதமாகிய 'தியாசபியைச்' சேர்ந்தவர்; பார்ப்பன மாதை மணம் செய்துகொண்டவர். அந்த மாது கமிட்டித் தலைவருக்குச் சொந்தமான மாதாம். அன்றியும், இவர் இன்றைய அரசியலில் Dr. T. S. S. இராஜனுக்கு அடுத்தபடியாகப் பச்சைப் பார்ப்பனீயத்தைக் கொடுங்கோன்முறையில், நெஞ்சில் சற்றும் ஈவு இரக்கமில்லாமல் திராவிடர்மேல் செலுத்தும் தோழர் கே. சந்தானம் என்னும் அய்யங்கார் பார்ப்பனருக்குச் சகலையாம்.

எனவே, கமிட்டியின் யோக்கியதையைப் பாருங்கள். இவர்களால் பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கு, திராவிடர்களுக்கு ஏதாவது கடுகளவு நீதியோ, கருணையோ, உரிமையோ கிடைக்கும் என்று எவர்தான் கருதமுடியும்? இது "சுயராஜ்ய" சர்க்காரின் எவ்வளவு துணிகரமான வேலை என்று பாருங்கள்.

இனி, அடுத்த விஷயம் சம்பள விஷயம். இந்தச் சம்பள விஷயத்தில் சில உத்தியோகங்களை ஒவ்வொரு இலாகாவிலும் உயர்தரம் என்று அதிகாரமும் சவுகரியமும் இருக்கும்படியும், கீழ்த்தர அதிகாரம் என்று அதிக வேலையும் குறைந்த சம்பளமும் இருக்கும்படியும் பிரித்து—உயர்தர வேலையைப் பெரிதும் பார்ப்பனருக்கே கிடைக்கும்படியாய் வழிசெய்து நல்ல சம்பளம் பெற்றுக்கொண்டு—கஷ்டப்படும் மக்களுக்கு மிகவும் பேதமுள்ளதும், நித்திய வாழ்வுக்குப் போதாததுமான சம்பளத் தன்மையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை தானாகவே பார்ப்பனர்களை மேல் உத்தியோகஸ்தர்களாகவும், மற்றவர்களைக் கீழ் உத்தியோகஸ்தர்களாகவும் ஆக்கிவிடுகிறது.

மாதம் 500 சம்பளம் வாங்கிய மந்திரிகள் இன்று மாதம் 1500 ரூபாய் வாங்குகிறார்கள். பெரும்பாலான நாட்களில் ஊரார் வீட்டிலிருந்து சாப்பாட்டில் காலத்தைக் கழித்துவிட்டு, சம்பளத்தில் பெரும்பாகம் மீதி செய்துகொள்ளுகிறார்கள். காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் மாதம் 75 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தவர்கள்—இன்று மாதம் 150 ரூபாய் சம்பளமும், –உத்தியோகம், 'லைசென்சு,' தண்டனை ரத்து, கேஸ் வாபஸ் வாங்கிக்கொள்ளச்செய்தல் முதலிய காரியங்களுக்கு மந்திரிகளிடம் சிபாரிசு செய்வதில் ஏராளமான கவுரவத் தொகையும் (ஆனரேரியமும்) கமிஷனும் சன்மானமும் வாங்கியும்; சட்டசபை மெம்பராவதற்கு முன் வீட்டுவாடகை கொடுக்காமல் சண்டித்தனம் செய்துகொண்டு இருந்தவர்கள்—இன்று மோட்டார் கார்கள் வைத்துக்கொண்டும், சிலர் இலட்சக் கணக்கில் பொருள் சேர்த்தும் செல்வச் சீமான்களாய்—"இலட்சுமி புத்திரர்"களாய் இருக்கிறார்கள். இப்படியாக இவர்கள் மாத்திரம் இருந்துகொண்டு, இரவும் பகலும் 24 மணி நேரத்திலும் பொறுப்பு ஏற்று வேலை செய்யவேண்டிய திராவிடமக்களுக்கு இரயில்வேயில் இந்தக் கேவலமான சம்பள நிலையும்; கண்விழிப்பும், தொல்லையும் இருக்கும்படியான மக்களுக்குக் குறைந்த சம்பளம்—அதுவும் வீடு, கல்வி, வைத்தியம், வசதிபற்றிக்கூட கவலையில்லாத சம்பளம்—இருப்பதென்றால், இது மனுதர்ம ஆட்சியா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள்.

அடுத்தபடி, உத்தியோக விநியோகம். இந்த விஷயம் மிகவும் முக்கியமானதாகும். இது கண்டிப்பாய், இந்த மாகாணத்தின் பல வகுப்பு மக்களுக்கும் வகுப்புவிகிதம் விநியோகிக்கப் படவேண்டியதும்; உத்தியோகத்துக்கு வேண்டிய அளவு கல்வித் தகுதி இருந்தால் எல்லா முக்கிய, உயர்தர, தனி உத்தியோகங்களும் விகிதாச்சாரம் இருக்கும்படி இருக்க வேண்டியதும் நேர்மையாகும். ஆனால், இப்போது சர்க்கார் உத்தியோகம்கூட எவ்வளவோ பித்தலாட்டமாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. முக்கிய உத்தியோகம் கொடுக்கப் படுவதில் எந்த வகுப்பார் தகுதியாய் இருந்தாலும், முதலாவதாகப் பார்ப்பனர் தான் தெரிந்தெடுக்கப்படுகிறார். அதற்குப் பெருத்த எதிர்ப்பு இருந்தால் அது வெள்ளை

யருக்கு அளிக்கப்பட்டுவிடும். வெள்ளையருக்குக் கொடுக்கமுடியாததாய் ஏற்பட்டால் வேறு மாகாணத்தானுக்குக் கொடுக்கப்பட்டுவிடும். அவனுக்குக் கொடுக்கவும் வசதிப்படாத தானால் ஒரு கிறிஸ்தவருக்கும்; அவருக்கு எதிர்ப்பு இருந்தால் ஒரு முஸ்லிமுக்கும்; அதுவும் தடைப்பட்டால் ஒரு மங்களூர்க்காரனுக்கும்; அதற்கும் தடைப்பட்டால் ஒரு மலையாளிக்கும்; அதற்கும் தடைப்பட்டால் ஒரு ஆந்திரருக்குமாவது பெரிதும் வழங்கப் படுகிறதே தவிர—சுலபத்தில் ஒரு தமிழனுக்கு—அவன் எவ்வளவு தகுதியானவனாய் இருந்தாலும் வழங்கப்படுவதில்லை. சில சமயங்களில் தமிழனுக்கு வழங்கப்படவேண்டிய அவசியம் வந்தபோது, "அந்த உத்தியோகமே இருக்கவேண்டியதில்லை" என்று செய்யப் பட்டிருக்கும் விஷயமும் எனக்குத் தெரியும்.

உத்தியோக விநியோக விஷயத்தில் இன்றைய சென்னை அரசாங்கம் முன்னைய வகுப்புவாரி உத்தரவை மிகமிகப் பரிகாசமாக ஆக்கிவிட்டது. நமது அய்க்கோர்ட்டைப் பாருங்கள்! கலெக்டர்களைப் பாருங்கள்! மற்றும் மாகாண அதிகாரிகளைப் பாருங்கள்! மாகாண அதிகார விநியோகங்களைப் பாருங்கள்! மனுதர்ம சாஸ்திரத்தை அனுசரித்தே இதுவரை இது நடந்துவந்திருக்கிறது. இதில் பார்ப்பனர்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். வெள்ளையர் காலத்திலும் இது மாற்றமடையவில்லை.

காங்கிரசும் சுயராஜ்யமும் இராமராஜ்யமும், திராவிடர்கள் சூத்திரத் தன்மையில் இருந்து மனிதத் தன்மை பெறாமல் இழிநிலையில்—அடிமை நிலையில் இருப்பதற்கு ஏற்பட்டவைகளே தவிர, வேறு எந்தக் காரியத்துக்கும் ஏற்பட்டதல்ல என்பதை நான் எங்கும் நிரூபிப்பேன். இல்லாவிட்டால், தேவைக்கு மேற்பட்ட யோக்கியதாம்சத்தை ஏற்படுத்திக்கொண்டு, திராவிடனுக்கு மாத்திரம் தகுதி, திறமை என்கின்ற முட்டுக்கட்டை ஏன்? முஸ்லிமுக்குத் தகுதி, திறமை வேண்டியதில்லை; வெள்ளையனுக்கு வேண்டிய தில்லை; சட்டைக்காரர்களுக்கு வேண்டியதில்லை, 'வேறு மதத்திற்குப் போய்விடுவேன்' என்று மிரட்டுகிற ஆதித் திராவிடர்களுக்குத் தகுதி, திறமை என்பவை—'திராவிடனுக்கு இருக்கவேண்டும் என்றபடி' வேண்டியதில்லை. ஆனால் திராவிடனுக்குப் பள்ளியில் சேர்க்கப்படுவதற்கே தகுதி, திறமை வேண்டும் என்று, சுயராஜ்யப் பார்ப்பனப் பிரதம மந்திரி சர்க்காரிலுள்ள திராவிடக் கல்வி மந்திரியைக் கொண்டே திட்டம் செய்வாரானால், மனுதர்மமும் விபீஷணத்தன்மையும் எவ்வளவு பலாத்காரமாகக் கையாளப்படுகிறது என்று பாருங்கள்.

இனி அடுத்த விஷயம் புரமோஷன் என்பதாகும். இதில் பார்ப்பனர் தந்திரம் மிக மிகக் கண்டிக்கப்படத் தக்கதாகும். முறைப்படி புரமோஷன் (மேல் உத்தியோகம்) இல்லாததாலேயே, நல்ல உத்தியோகம் பெற்ற திராவிடர் (தமிழர்)களில் பலர் இனப்பற்று அற்ற இனத் துரோகிகளாக, அளவுக்கு மீறிய சுயநல அயோக்கியர்களாக ஆகி விடுகிறார்கள். அவர்களுக்கு உத்தியோகம் வரும்படி செய்கின்றவர்கள் நாம் என்றாலும், அவர்களுக்கு அதில் தகுதி, பட்டம் கொடுத்து புரமோஷன் செய்கிறவர்கள் பார்ப்பனர் களாக இருப்பதால், அவர்கள் பார்ப்பன தாசர்களாகவும், விபீஷணர், அனுமார்களாகவும் ஆகி, நமக்குத் துரோகம் செய்யாமல் இருக்கமுடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். இன்று இரயிலிலாகட்டும், சர்க்கார் பதவியிலாகட்டும் பெரிய பதவியில் இருக்கும் திராவிடர்கள் யாராவது தன்னைத் திராவிடன் என்றோ, தமிழனாயிற்றே என்றோ கருதுகிறவர் உண்டா? என்று கேட்கிறேன். இதற்குக் காரணம், இவர்கள் அயோக்கியர்கள் என்பது அல்லவே அல்ல. அவர்கள்—நல்ல பேர், அந்தஸ்து, உயர்வு பெறவேண்டுமானால், பார்ப்பனர் ஆசீர்வாதம், மங்களாசாசனம், சடகோபம் பெற்றே ஆகவேண்டும். பார்ப்பனர் மற்றொரு தந்திரம் இதற்குக் கையாளுகிறார்கள். அதாவது—

ஏதாவது புரமோஷன் தமிழனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் வாதாடிக் கொடுத்தாகவேண்டிய அவசியம் வந்தால்—அப்போது பார்ப்பனர், ஏதாவது ஒரு கண்

போன, கைபோன, நொண்டி, முடம், 'ஸ்குரு லூஸ்', 'கிராக்', மக்கு, அதிகப் பிரசங்கி அல்லது இரகசியத்தில் பல குற்றச்சாட்டுள்ள அயோக்கியன் எங்காவது இருக்கமாட்டானா? என்று, அவனைத் தேடிப்பிடித்து அவனுக்கு ஒரு மேல் உத்தியோகத்தைக் கொடுத்து விட்டு, அன்று முதலே அவன்மீது குப்பை செத்தை சேர்த்து, ஒரு நாளில் குவிய வைத்து நெருப்பிட்டு, "பார்த்தாயா, பார்த்தாயா! திறமை, தகுதி எல்லா வகுப்புக்கும் உண்டு என்று திராவிடர்கள் வாதாடுகிறார்களே! உத்தியோகம் கொடுத்து நடந்தது என்ன?" என்று ரிகார்டு ஏற்படுத்தி, நமக்கு வெட்கம் ஏற்படும்படி செய்துவிடுகிறார்கள். அல்லது புரமோஷனுக்குத் தேவையில்லாத கடுமையான நிபந்தனைகளைத் திடீரென்று வைத்து நல்ல கெட்டிக்காரர்களையும் அறிவாளிகளையும் யோக்கியர்களையும் சலித்து எடுத்துத் தள்ளிவிடுகிறார்கள்.

உதாரணமாக, கல்வி இலாகாவில் தோழர் அவினாசிலிங்கம் அவர்களுக்கு மந்திரி வேலை கொடுத்தார்கள். எதற்காகக் கொடுத்தார்கள்? "ஒருவராவது இலஞ்சம் வாங்காதவர் இந்த 13 மந்திரிகளில் இல்லையா?" என்று யாராவது சொன்னால், நான் கண்டிப்பாய், "இலஞ்சம் வாங்காதவர் அவினாசிலிங்கனார்" என்று உறுதி கூறுவேன். ஆனால், புத்திக்கும் இன உணர்ச்சிக்கும் வகுப்பு அபிமானத்திற்கும் உலக அனுபவத் திற்கும் அவருக்கும் வெகு வெகு தூரம். நம்மை இங்கிலீஷ் படிக்கக்கூடாது என்றார்; ஆனால் இந்தி கட்டாயம் படி என்றார்; பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் சேர்க்கப்படுவ தற்குக்கூட, சட்டப்படி உண்டான தகுதிக்குமேல் தகுதியும் திறமையும் வேண்டு மென்றார்; அந்தத் தகுதி இங்கிலீஷிலும் இருக்கவேண்டும் என்றார். இப்படிப் பல முட்டாள்தனமான காரியங்களைப் பார்ப்பனர் சொன்னபடி நடந்து, அவர்கள் கையெழுத் துப் போடும்படி சொன்ன இடத்தில் போடுகிறார். நமக்கு எவ்வளவு கேடு? நமது பின் சந்ததிக்கு எவ்வளவு கெடுதி? இந்தப்படி பார்ப்பனர் செய்துவிட்டுத் தாங்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். இப்படி உத்தியோகங்களிலும் பலர் நமக்குப் பயன்படாமலும், நல்ல பேர் எடுக்காமலும், பார்ப்பனரின் அடிமைகளாகி, அவர்களுக்கும் பயனில்லாமல் செய்யப்பட்டு விடுகிறார்கள். இது பார்ப்பனத் தந்திரமாகும்.

அடுத்த விஷயம், நம்மை அவர்கள் நடத்தும் மாதிரி. இது உண்மையில் மோச மாகவே இருக்கிறது. பார்ப்பன மேலதிகாரிகள் நம்மவர்களை மிக மிக இழிவாய் நடத்து கிறார்கள்; குற்றம் கண்டுபிடிப்பதில் மிகக் கடினமாக இருந்து, அக்கிரமமான வழியில் நெஞ்சுத் துணிவோடு நம்மைக் கெடுத்து வருகிறார்கள். உதாரணம் பாருங்கள். தோழர் (புலவர். கனகசபை என்னும்) பொன்னம்பலம் என்பவர் ஒரு தமிழ்ப் புலவர்; அவர் சேலம் அய்ஸ்கூலில் ஒரு புலவர். அவர் சிறிது திராவிட உணர்ச்சி உள்ளவர். அந்த உணர்ச்சி என்னவென்றால் முடம், மொக்கை இல்லாமல், சுத்தமான தமிழில் கூடியவரை பேசுபவர். அவர் பேசுவதைக் கண்டால் எந்தப் பார்ப்பனருக்கும் கோபம் வரும்; வடமொழிக் கலப்பில்லாமல் பேசுவார். அதுதான் அவரிடம் பார்ப்பனருக்குப் பிடிக்காத காரியம்.

அப்பள்ளித் தலைமை உபாத்தியாயர் ஒரு ஆரியர். அவர், பொன்னம்பலத்தைப் பற்றி பள்ளிப் பிள்ளைகளைக்கொண்டு முனிசிபல் கமிஷனருக்கு ஒரு முறையீடு எழுதிக் கொடுக்கச் செய்து, அவரை வீட்டுக்கனுப்ப முயற்சிகள் கட்டுப்பாடாகச் செய்வதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. கமிஷனர்கள் யோக்கியதையோ நாம் சொல்ல வேண்டியதில்லை. 100-க்கு 75 கமிஷனர்கள் திராவிடர்களேயானாலும்—அவர்கள் கமிஷனர்கள் ஆனவுடன், திராவிட இரத்தம் பார்ப்பன அடிமை இரத்தமாக மாறும்படி 'இனாக்குலேஷன்' செய்யப்பட்டவர்கள். அவர்கள் பார்ப்பன ஆசிரியரைக் கண்ணியப் படுத்தி, திராவிட ஆசிரியரைக் கண்டித்து, எச்சரிக்கை செய்து அந்த முறையீட்டை முடிப்பவர்களே தவிர, வேறு பார்ப்பன ஆசிரியரை—குற்றம் இருந்தாலும்—கண்டிக்க மாட்டார்கள். மற்ற இலாகாவிலும் திராவிடர்களை ஆரியர்கள், அரசாங்கத்தார்—திராவிட

மேலதிகாரிகள்கூட—கீழ்மையாக நடத்தி, மேல் உயர்வுக்குத் தகுதியற்றவர்களாக ஆக்கி வருகிறார்கள். பல கலெக்டர்கள் திராவிட அதிகாரிகளை நடத்துகிற மாதிரி மிகமிக மோசமானதென்றே சொல்லலாம். ஏனென்றால் ஆட்சி, மனு ஆட்சிதானே!

ஆதித் திராவிடர்களையும் முஸ்லிம்களையும் நடத்தியமாதிரி மிக மோசமாக இருந்து வந்தாலும், இப்போது அவர்களுக்குப் "பிரைஸ்" அடித்துவிட்டது. முதல் பிரைஸ் இல்லையானாலும் நல்ல பிரைஸ். அவர்கள் நிலை உயர்த்தப்பட்டுவிட்டது. இனி அவர்களுக்குச் சரியானபடி விகிதாசாரமும்–மேலுங்கூட–கண்டிப்பாய்க் கிடைக்கும். அவர்களுக்கு சிபாரிசு, குறைகளைக் கேட்க வசதிகள் ஏற்பட்டுவிட்டன.

நாம் ஒன்று 'பஞ்சம வர்ணத்தாரா'கவோ, அதாவது ஆதித் திராவிடராகவோ, இஸ்லாம் மதஸ்தராகவோ ஆனால் ஒழிய, நமக்கு மானவாழ்வு, நீதிவாழ்வு, முற்போக்கு வாழ்வு இல்லை என்றே சொல்லுவேன்.

தோழர்களே! நேற்று இதே இடத்தில் நான் சுமார் 20 ஆயிரம் பேர் இடையில் நம் தலைவர் வேதாசலம் அவர்கள் தலைமையில் இதையே வலியுறுத்திச் சொன்னேன். நேற்றுக் காலை நகரசபைக் கொட்டகையில் நடந்த டாக்டர். அம்பேத்கார் மாணவர் இல்ல ஆண்டு விழாவில் தலைமை வகித்தபோதும் இதையே சொன்னேன். இதனால் திராவிடர்கள் இடையில் எனக்குக் கெட்ட பெயர் வளருகிறது என்றுகூடச் சிலர் சொன்னார்கள். இன்றும் காலையில் சிலர் சொன்னார்கள்; சிலர் என்கூடவே இருந்துகொண்டு இதைச் சொல்லி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். எனக்கு இதைப்பற்றிக் கவலையில்லை.

எனக்கு இந்தவிதமான—உணர்ச்சிக்கு இடமில்லாத, மானத்தைப்பற்றிக் கவலையில்லாத—திராவிட மக்களிடத்தில் நல்ல பேர் வாங்கவேண்டுமென்ற கவலை சிறிதுமில்லை. அப்படிப் போலி நல்ல பெயரின்மீது எனது வாழ்வு ஏற்பட்டிருக்கவில்லை. திராவிடர்களுக்கு ஏதாவது தொண்டாற்றவேண்டும்; அதில் முதன்மையாக, திராவிடன் இழிவு நீங்க வேண்டும் என்கின்ற ஆசையும் கவலையுமே தவிர, வேறு ஒன்றுமே எனது கவலையாக இல்லை. என் வாழ்வைப் பற்றி எனக்குக் கவலையில்லை; எனக்கு வேறு அடைய வேண்டிய சாதனமும் இல்லை. இன்று திராவிடனுக்கு உள்ள இழிவு என்னவென்றால், அவன் சூத்திரனாய் இருக்கவேண்டியிருக்கும்; 'இந்துவாய்' இருப்பதைத் தவிர வேறில்லை.

ஆதித் திராவிடர்களுக்குத் திடீர் என்று வந்தயோகம் டாக்டர். அம்பேத்கார், "நான் இந்து அல்ல; பஞ்சமன் அல்ல; இந்து மதத்தின் எந்தப் பாகுபாட்டுக்கும் சம்பந்தப்பட்டவன் அல்ல" என்று சொன்னதால்தான். கோயில் திறக்கப்பட்டதும்; "லிஸ்ட்டு கொடுங்கள், உத்தியோகம் கொடுக்கிறேன்" என்று மந்திரி கேட்பதும்; "உங்களுக்கு நீதிக்குமேல், அளவுக்குமேல் நன்மை செய்கிறேன். என்ன வேண்டும்? கேள்" என்று பட்டேல் சொல்லுவதும்; "நானும் ஆதித் திராவிடன், பங்கி (Bungi)" என்று காந்தியார் சொல்வதும் ஆன காரியங்களுக்குக் காரணம்—"நான் இந்துவல்ல" என்ற அஷ்டாட்சர மந்திரமேயாகும். டாக்டர். அம்பேத்காருக்கும் ஐந்து வருடத்துக்கு முன்பே, நான், 1925-ல் சொன்னேன்; ஆனால், எனக்கு 5 வருடத்துக்குப் பின்பு சொன்ன அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். ஆனாலும், அவர்கள் இனியும் "இந்து அல்ல" என்றுதான்—வாயிலாவது சொல்லிக்கொண்டே—எல்லா உரிமைகளும் பெறப் போகிறார்கள்.

முஸ்லிம்களுக்கு வந்த, வரப்போகின்ற மேன்மையும் அதனால்தான். அதாவது—"நாங்கள் இந்துக்கள் அல்ல; இந்திய சமுதாயம் அல்ல" என்று சொல்லுவதால்தான். நான், "திராவிடநாடு" பற்றி 1937-ல் பிரஸ்தாபித்தேன்; ஜின்னா சாயபு 1940-ல் பாகிஸ்தான் பிரஸ்தாபித்தார். இன்று பாகிஸ்தான் அவர் காலடியில் கிடக்கின்றது. "நன்றாய் விளக்கித் தேய்த்துக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு வாருங்கள்" என்று திருப்பி அடிக்கிறார் ஜின்னா. இந்தத் திராவிடசமுதாயத்தினர் மானங்கெட்ட சமுதாயத்

தினராய்—சூத்திரராய்—4ஆம் 5ஆம் சாதியாய்—வேசி மக்கள்—தாசி மக்கள்—அடிமை மக்களாய்; கல்வி, செல்வம், மானவாழ்வு, உழைத்த கூலிகூட இல்லாமல் மிருகங்களிலும் கேவலமாய்; உரிமை இழந்து, மனிதத் தன்மை இழந்து, ஈனவாழ்வில் அழுத்தப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம்—இந்துவாய் இருப்பதல்லாமல் வேறு என்ன என்று கேட்கிறேன். உங்களை மாத்திரம் அல்ல, நம் சர்கள்—அண்ணாமலை, சண்முகம், ஏ. இராமசாமிகளையும்; ஜமீன்தார்களையும், மகாராஜாக்களையும்; பண்டார சன்னதிகளையும் மறைமலைகளையும் பாரதிகளையும் கேட்கிறேன். இந்தச் சிறு கூட்டத்தாரின் மாயவாழ்வுக்கு நாம் இத்தனை கோடிப்பேர்கள் இந்துக்களாக (சூத்திரர்களாக) இருப்பதா என்று கேட்கிறேன்.

தோழர்களே! நமது வியாதி–நோய் ('சூத்திரர்கள்', 'வேசிமக்கள்' என்ற நோய்) பெரிது, மிகமிகப் பெரிது. இது (Cancer) புற்று, தொழுநோய் போன்றது; வெகு நாளைய நோய். இதற்கு ஒரே ஒரு மருந்துதான்—அது இஸ்லாம்தான்! இதைத் தவிர, வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப்பட வேண்டியதுதான். தூக்க மருந்தும் போதைமருந்தும் கொண்டு, நோய் இம்சை தெரியாமல், நாமும் பிணம்போல் கிடக்க வேண்டியதுதான். நோய் தீர்ந்து எழுந்து நடக்க, இன்றைய நிலையில் இஸ்லாம் ('இந்து மதத்தைவிடுவது' என்னும்) மருந்துதான். இதுதான் நாடுகொடுக்கும், வீரம் கொடுக்கும், நிமிர்ந்து நடக்கச் செய்யும் மருந்தாகும்.

இஸ்லாம் என்றால் முகம்மது நபிகள் மதம் என்றோ, இங்கு 'லுங்கி' கட்டிக்கொண்டு, அளந்து தாடி வைத்துக்கொண்டு இருக்கும் சாயபு, ராவுத்தர், மரைக்காயர், மாப்பிள்ளை என்கின்றவர்கள் மதம் என்றோ, கருதிவிடாதீர்கள். திராவிடர்கள் மதம்—முகமது நபிக்கு முன்பு, கிறிஸ்துநாதருக்கு முன்பு, புத்த மகானுக்கு முன்பு–ஆரியர்களுக்கு, 'கிருஷ்ணன்', 'ராமன்', 'சிவன்', 'விஷ்ணு'க்களுக்கு முன்பு—திராவிடர்களுக்கு இருந்த மதமாகும்.

இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்ற பொருள்படும் அரபுச் சொல்; இஸ்லாம் என்பது சகோதரத் தன்மை என்பது. இவ்வளவுதான். 100, 200 வருடங்களுக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில்–ஒரு கடவுள், உருவமற்ற கடவுள் வழிபாடு, சாந்தி, ஒற்றுமை, பரஸ்பர பணிவு, பக்தி, உடன்பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும். கடவுள் என்பது திராவிட மொழி; காட் (God) என்பது ஆங்கில மொழி; அல்லா என்பது அரபு மொழி என்பதல்லாமல், திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல—கொள்கை அல்ல என்பேன். மதங்களை விபூதிப் பூச்சு, நாமம், உச்சிக் குடுமிகளைக்கொண்டு நிர்ணயிப்பதுபோல், இஸ்லாத்தை தலை மொட்டை, தாடி, லுங்கி முதலியவைகளைக்கொண்டு நிர்ணயிக்காதீர்கள். இஸ்லாத்துக்கு எஜமானர் இந்நாட்டு முஸ்லிம்கள் அல்லர்; இவர்கள் இஸ்லாத்தின் ஒரு பகுதியினர்; மலையாள மாப்பிள்ளையார் மற்றொரு பகுதியினர்; ஈஜிப்ட்டார் மற்றொரு பகுதியினர்; ஜப்பான், ஜெர்மன் இஸ்லாமியர்கள் மற்றொரு பகுதியினர்; ஆப்பிரிக்கர், நீக்ரோவர், அபிசீனியர் ஆகிய இஸ்லாமியர் மற்றொரு பகுதியினர்.

இவர்கள் இத்தனை பேருக்கும் ஒரு கடவுள். அதுவும் உருவம், பெண்டு, பிள்ளை, சோறு, சாறு வேண்டாததும் அற்றதுமாகும். உடன்பிறப்பு, சம உரிமை, கட்டுப்பாடு இவைதான் பொது; மற்றவைகள் எல்லாம் காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்தது. இவை ஒன்றாய் இருப்பதால்தான் 60 கோடி மக்கள் உலகில் எந்தப் பாகத்தில் இருந்தாலும் உடன்பிறப்பாய் இருக்கிறார்கள்; இவர்களுக்கு உலகம் நடுங்குகிறது. நீங்கள் 'இந்து' என்றால் உங்கள் 15 கோடி மக்களுக்கு ஏது பொது? எங்கே மானம்? எங்கே உடன்பிறப்பு? எங்கே ஒற்றுமை? எங்கே மனிதத் தன்மை? கட்டுப்பாடு? கோபித்து, ஆத்திரப்பட்டு என்ன செய்வது? டாக்டர். அம்பேத்கார் இப்போதைக்கு வெற்றி பெற்றாலும், இந்த ஆவேசம் அடங்கியவுடன் அவர் இந்து என்று சொல்லிக்கொள்வாரேயானால்—மறுபடியும் அவர் 'பஞ்சம பட்டியலில்' சேர்க்கப்பட்டுவிடுவார்.

நாம் இந்த நாட்டை இந்து நாடாக—இந்துஸ்தானாக ஆக்குவதைவிட, திராவிடஸ்தானாக—அதாவது அந்தப் பெயரைப் பார்ப்பனர் சகிக்கவில்லையானால்—'திராவிடநாடு கொள்கையையே கொண்ட பாகிஸ்தான்' என்ற வேறு பெயரில் மாற்றிக்கொள்வதில் தப்பு என்ன?

'மதம்' இல்லாமல் மக்கள் வாழமுடியாது. அதாவது நான் சொல்லும் மதம், கடவுளுக்கும் மக்களுக்கும், சம்பந்தமும் மோட்சமும் விதியும் மன்னிப்பும் சமாதானமும் மேல் லோகத்தில் அளிப்பது என்கிற மதம் அல்ல. மற்றெதுவென்றால், மனிதனுக்கு மரியாதையாய், (பணிவாய்) அன்பாய், பக்தியாய், சாந்தியாய், சகோதரத் தன்மையாய், ஒற்றுமையாய், ஒழுக்கமாய், உதவியாய் வாழும் கொள்கையை—உங்களுக்குப் புரிவதற்காக மதம் என்ற பழக்கமான வார்த்தையில் கூறுகிறேன். இதை 'சமுதாயக் கொள்கை' என்று சொல்ல எனக்கு இஷ்டம். இதை நீங்கள் மதம் என்று சொல்லவேண்டும் என்றாலும் ஆட்சேபிக்கவில்லை. இப்படிப்பட்ட 'மதம்' இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழுவது சங்கடப்படும்.

ஆகையால், இந்த நாட்டில் இந்தக் கொள்கையின் பேரால் ஏற்கனவே ஒன்றுபட்டு வாழும் 10 கோடி மக்களுடன், நாம் திராவிடர்கள் 4 கோடி பேர்களில் குறைந்தது 2½ கோடி பேர் சேர்ந்து, 12½ கோடி பேர் ஒரு கொள்கையினராய் வாழ்ந்து—மானம் பெற்று, ஈனம் ஒழித்து, மனிதத் தன்மை, உரிமையுடன் வாழ்ந்தால்—யாருக்கு என்ன நஷ்டம், என்ன இழிவு என்று கேட்கிறேன்.

அல்லது, இந்தப் பார்ப்பன அட்டூழியத்துக்கு யாராவது வேறு மருந்து சொல்லட்டும்; நான் கேட்கிறேன். திராவிட நாட்டில், நாம், 'இஸ்லாம்' ஆனால் நம் இஷ்டப்படிதான் இஸ்லாம் இருக்குமே தவிர—யாரோ சாயபோ, முல்லாவோ சொல்லுகிறபடி இஸ்லாம் இருக்காது. எனக்கு 10 நாட்டு முஸ்லிம்கள் அனுசரிக்கும் இஸ்லாமும் தெரியும். நாட்டு இஷ்டம், மெஜாரிட்டி இஷ்டம்தானே தவிர—இந்து மதம்போல் (3¾) மூன்றே அரைக்கால் பார்ப்பனர் 93 பேர்களை, 'எட்டி நில்; நீ படிக்க முடியாது; நீ சூத்திரன்; நீ வேசி மகன்; உனக்கு சரி சமத்துவம் இல்லை; உத்தியோகம் இல்லை; பிரதிநிதித்துவம் இல்லை' என்பதல்ல இஸ்லாம். அதாவது, பணிவையும் சாந்தியையும் உண்மை சகோதரத்துவத்தையும் கொள்கையாய்க் கொண்ட மார்க்கம். மற்றது எது எப்படி இருந்தாலும் ஒற்றுமை கட்டுப்பாடு கொண்ட மார்க்கம். இதை யாரும் மறுக்க முடியாது.

நான் இஸ்லாத்துக்கு 'வக்காலத்து'ப் பேசவில்லை; பிரச்சாரம் செய்யவில்லை. இது உண்மை! உண்மை!! முஸ்லிம்களிடம்—எனக்கு, உங்களை எல்லாம்விட அளவு கடந்த அன்போ, நேசமோ, நம்பிக்கையோ, கூட்டுறவோ கிடையாது. ஆனால், 'பார்ப்பனீயம்'—'இந்து' என்னும் பொல்லாத—கொடுமையான—கோரமான பாம்பைக் கொல்லுவதற்கு, அல்லது அதன் விஷத்தன்மைப் பாதகத்திலிருந்து விலகுவதற்கு இதுதான் மருந்து. இஸ்லாத்தைச் சரியாய்த் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் இங்கிலாந்து, ஈஜிப்ட், துருக்கி சென்று வாருங்கள்.

வரப்போகும் சுயராஜ்யம் நமக்கு மகா மகா கேடானதாக இருக்கும். திராவிடர்கள் 100க்கு 75 பேர்கள் அனுமார்களாக, விபீஷணர்களாக வாழுவதுடன் தோழர் அவினாசிலிங்கம் போன்ற மற்றும் பல திராவிடர்கள், பண்டிதர்கள், 'சர்'கள், தங்கள் பின்னால் மணி கட்டின வால் ஒட்ட வைத்துக்கொண்டு, இராம பஜனை (ஆரியர் பஜனை) செய்து, ஆரியன் பின் திரிந்து, நம்மை நசுக்கப் போகிறார்கள்.

இது என்ன மானக்கேடு! என்னுடைய நாட்டில், என் வரிப்பணத்தில், எனக்காக நடக்கிற ஆட்சியிலே எனக்குப் பிரதிநிதித்துவம் இல்லை; எனக்கு விகித உத்தியோக

மில்லை என்றால்—எனக்கு மனிதத் தன்மை இல்லை என்றால்—இதற்காக ஆரியனுக்கு நான் விண்ணப்பம் போடுவதும், விழுந்து கும்பிடுவதும், கெஞ்சிக் கூத்தாடுவதும் மானமுள்ள தன்மையா என்று கேட்கிறேன். யாரோ சில துரோகிகள், சுயநல வஞ்சகர்கள் மானம், ஈனம் இல்லாமல் தங்களைப் பார்ப்பன அடிமை (இந்து) என்று சொல்லிக் கொண்டால்—நாமும் 'இந்து' (அடியேன், தாசன், நாய்க்குட்டி, அடிமை) என்று சொல்லிக்கொள்ளுவதா என்று கேட்கிறேன். "இழிவு நீங்க இஸ்லாம்" ('நான் இந்து வல்ல') என்கிற மந்திரம்தான் நம்மை மனிதராக்க முடியும். இதை நான் இன்று நேற்று சொல்லவில்லை; 1919 முதல், 1920 முதல் இன்று வரை 28 வருடங்களாகச் சொல்லி வருகிறேன். எனக்கு ஒன்றும் செல்வாக்குக் குறைந்துபோகவில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், இழிவு நீங்க வேறு மருந்தில்லை. இந்த வியாதியை நீக்கும் முயற்சியில் இதுவரை எந்தப் பெரிய வைத்தியனுடைய—எந்த மருந்தும் தோல்வியையே அடைந்துவிட்டது.

சாயபுகளும் பதவி விகிதாச்சாரம் பெற்று, ஷெட்யூல்டு வகுப்பாரும் பதவி உத்தி யோகமும் கல்வி விகிதாச்சாரமும் பெற்று, மீதி உள்ளதில் பார்ப்பனர் ஏகபோகமாய் உட்கார்ந்துகொண்டால்—திராவிடனே அல்லது தமிழனே, அதாவது பார்ப்பானல்லாத, முஸ்லிம் அல்லாத, கிறிஸ்தவன் அல்லாத, ஆதித் திராவிடன் அல்லாத (ஷெட்யூல்டு வகுப் பார்) திராவிடனே! 'சூத்திரனே!' உன் கதி, உன் எதிர்காலம் என்ன ஆகும்? சிந்தித்துப் பார்! அரசியல் நிர்ணய சபையில் உனக்குப் பிரதிநிதி எங்கே? ஷெட்யூல்டு வகுப்புக்கு, பார்ப்பானுக்கு, கொள்ளை அடிக்கும் வியாபாரிக்கு, கொடுமை முறை சங்கராச்சாரிக்கு அங்கே பிரதிநிதிகள் இருக்கிறார்கள். "நான் ஏன் சூத்திரன்" என்று பதறுகிற திராவிடனுக்குப் பிரதிநிதிகள் எங்கே? நினைத்துப் பார். மானத்தோடு சிந்தித்துப் பார்! உத்தியோகம் மாத்திரம் அல்ல நமது இலட்சியம். நம் இழிவு போக வேண்டும்; நாம் விபீஷணன் இல்லாத சமுதாயத்தினராக வேண்டும்.

என் அன்புள்ள அருமை திராவிடச் சகோதரர்களே! இதற்கு இஸ்லாத்தைத் தவிர ஒரு மருந்து சொல். இப்போதே சொல்லாதே; வீடுபோய் தமிழ்ப் பெரியார்கள், 'சர்' பெரியார்கள், பண்டிதப் பெரியார்கள், ஆங்கிலம் கற்றுப் பதவி வகிக்கும் வக்கீல்கள், உத்தியோகப் பெரியார்கள் முதலானவர்களுடன் கலந்து, கட்டியமுது முடிவு கண்டு—நாளைக்குச் சொல்!

இதுவரை கல்லைப் போடாமல், கலகம் செய்யாமல் பேச இடங்கொடுத்துப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு 100 'இஸ்லாம்'.

(திராவிட உத்தியோகஸ்தர்கள் எஸ். அய். ஆர். (எம்ப்ளாயீஸ் அசோசியேஷன்) சங்கத்தார் சார்பாகப் பெரியாருக்குத் திருச்சியில் 18–3–1947ஆம் தேதி 1080 ரூபாய் கொண்ட பணமுடிப்பு ஒன்று அளிக்கப்பட்டது.)

[நூல்: "இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து"–'குடி அரசு' பதிப்பகம், ஈரோடு—1947]

12. முஸ்லிம்களே, கிறிஸ்தவர்களே சிந்தியுங்கள்!

பெரியோர்களே! தோழர்களே!

முஸ்லிம் தோழர்களுக்கு ஓர் விண்ணப்பம்! உங்களை ஏன் எங்களுடன் நன்கு சேர ஒட்டாமல், உங்கள் தலைவர்கள் தடுத்துவருகிறார்கள்? ஜின்னா சாகிப் ஒரு காலத்தில், "முஸ்லிம்கள் யாரும் வேறு கட்சியில் சேரக் கூடாது" என்று கூறினார் என்றால் அதற்கு அர்த்தம் இருந்தது. முஸ்லிம்களின் இலட்சியமான பாகிஸ்தானையடைய எல்லா முஸ்லிம்

களும் ஒரே கட்சியின் கீழிருந்து வேலை செய்யவேண்டும் என்பதற்காக அவர் அவ்விதம் சொல்லியிருந்தார். அப்பொழுது நானும் முஸ்லிம் கட்சியில் இருந்தேன். பாகிஸ்தான் பெற்றாகிவிட்டது. எனவே, அவர் கூறியது காலாவதியாகிவிட்டது—'லிமிடேஷன் பார்' ஆகிவிட்டது.

இனி முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்புக்காக, ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து கொள்வதுதான் நல்லது. இன்றுள்ள இம்மாகாண முஸ்லிம் தலைவர்கள் சொற்ப சலுகைகளுக்காகவும், பயத்துக்காகவும், சுயநலத்துக்காகவும் காங்கிரஸ்காரர்களின் காலடியில் இருந்துகொண்டு வருகின்றனர். தமக்குக் கிடைக்கும் சலுகைக்காக முஸ்லிம் இனத்தையே காட்டிக்கொடுக்கத் துணிந்து அவர்களைக் கோழைகளாக்கிவிட்டனர். இதை முஸ்லிம் பாமர மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். காங்கிரசுடன் சேர்ந்துகொள்வதா யிருந்தால் தாராளமாய்ச் சேர்ந்துகொள்ளுங்கள்! நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை. 100க்கு 90 பேராக உள்ள எங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களா 100க்கு 7 பேரான உங்களுக்கு வளைந்து கொடுத்துவிடப் போகிறார்கள்? எங்களைப் பொறுத்தவரை இன்னும் நாங்கள் உங்களை எங்கள் உடன் பிறந்தவர்களாகத்தான் கருதுகிறோம். எனவே, எங்கள் இனத்தவர் நீங்கள் என்பதற்காக—உங்களை இந்த அளவுக்கு அளவளாவவும், ஆதரிக்கவும் உள்ள எங்கள் கழகத்தில் வேண்டுமானாலும் சேருங்கள்! அல்லது வடநாட்டானால் பல கோடி செலவிட்டுப் பத்திரிகைகளைக் கொண்டு தீவிரப் பிரச்சாரம் செய்து, இந்துக்களைத் தூண்டிவிட்டு, உங்களைக் கொள்ளையடிக்க நினைக்கும் பார்ப்பனர்களோடாவது சேர்ந்து கொள்ளுங்கள்!

சேருமுன் கொஞ்சம் தீர யோசித்துவிட்டுமட்டும் சேருங்கள். திருவண்ணாமலையும், ஈரோடும், திருநெல்வேலியும் உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்! முஸ்லிம்களைவிடக் குறைவான எண்ணிக்கையுடைய கிறிஸ்தவர்களுக்கும் சொல்கிறேன்.

கிறிஸ்தவர்களாகிவிட்டதாலேயே நீங்கள் உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டு விடாதீர்கள்! நீங்களும் குறள் மதக்காரர்கள்—பைபிளுக்கு விரோதமாகக் குறளில் ஒன்றும் கிடையாது. பார்ப்பனர்களின் தயவுக்காகவேண்டி சுயமரியாதையை இழந்துவிடாதீர்கள்! உங்கள் நன்மையைப் பாதுகாத்துக் கொள்வதாயிருந்தால் சாதி, சமய பேதமின்றிப் பாடுபடும் திராவிடர் கழகத்தில் சேருங்கள்! திராவிடர்கழகம் திருவள்ளுவர் குறளைப் பின்பற்றி நடந்துவரும் கழகம். இந் நாட்டில் மனுதர்மம் ஒழிந்து, மனிதத் தன்மை ஏற்படப் பாடுபட்டு வரும் கழகம். அதற்குக் குறள்தான் வழிகாட்டி; எந்த முன்னேற்றத்திற்கும் விரோதமில்லாமல் பணியாற்றிவரும் கழகம் என்பதை உங்களால் உணர்ந்து, ஆன எல்லா உதவியையும் அதற்களித்து ஆதரியுங்கள்.

[ஈரோட்டில், 23, 24-10-1948-ல், சொற்பொழிவு—'விடுதலை' 5-11-1948]

13. பார்ப்பனர் எதற்கு?

பார்ப்பனர்கள் இந்த நாட்டுக்குச் சுமார் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பிழைக்கவந்தவர்கள்; வந்ததும் இந்த நாட்டுவாழ்க்கைக்குச் சம்பந்தப்படாமல் இந்த நாட்டுவளப்பத்தை அனுபவிக்கத் துவங்கிவிட்டார்கள்.

நாம் உழைக்கிறோம்; உழுகிறோம். நம்மால்தான் மக்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. நாம் வேளாண்மை செய்யாவிட்டால், இந்த நாட்டு மக்களுக்கு உணவு இல்லை. நாம்தான் நெசவு செய்கிறோம்; நம்மால்தான் அத்தனைபேருக்கும்உடை, துணி கிடைக்கிறது. நாம்தான் வீடுகட்டிக் கொடுக்கிறோம். ஆகவே நம்மால்தான் இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிற வசதிகளெல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே ஒரு நாட்டு

மக்களுக்கு உணவு, உடை, வீடு முதலிய வசதிகளை அளிக்கும் நாம்தான் சூத்திரர்கள் என்று இழிவுபடுத்தப்பட்டு இருக்கிறோம்.

பார்ப்பனன் எங்காவது உழைக்கிறானா? எந்தப் பார்ப்பனத்தியாவது வீடு கட்டுகிறாளா? கல் உடைக்கின்றாளா? ஏன்? இவைகள் எல்லாம் அவர்கள் செய்தால் பாவம் என்று எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகையால் இவைகள் எல்லாம் மாறி, நாம் முன்னேற வேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

[சித்தோட்டில் 26-7-1951-ல் நடைபெற்ற தி.க. பொதுக்கூட்டத்தில் விளக்கவுரை—'விடுதலை' 31-7-1951]

14. பார்ப்பனரும், தி. க.வும்

தோழர்களே!

யாரோ சில பிராமணர்கள், "பெரியார் ராமசாமி நாயக்கர், பிராமணர்கள் இந்த நாட்டில் வாழவே கூடாது என்று கூறி வருகிறார். இவரை நீங்கள் எப்படி இங்கே கூப்பிட்டீர்கள் என்பதாகக் கேட்டார்கள்" என்று ஒருவர் இங்கு சொன்னார். பிராமணர்கள் இந்த நாட்டில் வாழக்கூடாது என்றோ, இருக்கக்கூடாது என்றோ திராவிடர் கழகம் வேலை செய்யவில்லை—திராவிடர் கழகத்தின் திட்டமும் அதுவல்ல. திராவிடர் கழகத்தினுடைய திட்டமெல்லாம்—திராவிடர் கழகமும் நானும் சொல்லுவதெல்லாம், விரும்புவது எல்லாம்—நாங்களும் கொஞ்சம் வாழவேண்டும் என்பதுதான். இந்த நாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத் தன்மையோடு சமத்துவமாக இருக்கவேண்டும் என்பதுதான்.

இது 'பிராமணர்கள்' இங்கு வாழக்கூடாது என்று சொன்னதாகவோ, இந்த நாட்டைவிட்டு அவர்கள் போய்விட வேண்டுமென்று சொன்னதாகவோ அர்த்தம் ஆகாது. அவர்களைப் போகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அது ஆகிற காரியம் என்று நான் கருதவுமில்லை. தவிரவும் 'பிராமணர்களுக்'கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றும் இல்லை. அவர்கள் அனுசரிக்கிற சில பழக்க வழக்கங்களையும், முறைகளையும் தான் நாங்கள் எதிர்க்கிறோம். இது, அவர்கள் மனம் வைத்தால் மாற்றிக்கொள்வது பிரமாதமான காரியம் இல்லை.

நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம்? இப்போது அவர்களும், நாமும் ஒரு குழாயிலே தண்ணீர் பிடிக்கிறோம். ஒரு தெருவிலே நடக்கிறோம்; ஒரு தொழிலையே இருவரும் செய்கிறோம். காலமும் பெருத்த மாறுதல் அடைந்துவிட்டது. மக்களும் எவ்வளவோ முன்னேற்றமடைந்து விட்டார்கள். விஞ்ஞானம் பெருக்கம் அடைந்து விட்டது. இந்த நிலைமையில் நமக்குள் மனித தர்மத்தில் பேதம் இருப்பானேன்? ஆகவே, உள்ள பேதங்கள் மாறி, நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும் சகோதர உரிமையுடனும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன். நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக்கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. எனவே, முயற்சியில் பலாத்காரம் சிறிதும் இருக்கக்கூடாது என்பதிலும் எனக்குக் கவலை உண்டு. காலம் எப்போதுமே ஒன்றுபோல இருக்கமுடியாது.

நம்மில் இருதரப்பிலும் பல அறிஞர்களும், பொறுமைசாலிகளும் இருப்பதனாலேயே நிலைமை கசப்புக்கு இடமில்லாமல் இருந்துவருகிறது. இப்படியே என்றும் இருக்கும் என்று நினைக்க முடியாது. திராவிடர் கழகப் பின் சந்ததிகளும், பிராமணர்களின் பின் சந்ததிகளும் இந்தப்படியே நடந்துகொள்வார்கள் என்றும் கூறமுடியாது. ஆதலால், அதிருப்திகளுக்குக் காரணமானவைகளை மாற்றிக்கொள்வது இருவருக்கும் நலம். அதை நண்பர் ஸ்ரீனிவாச ராகவன் அவர்களும் நன்றாய் விளக்கி இருக்கிறார்;

அதாவது பிராமணர்களும் கால தேச வர்த்தமானத்துக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று சொன்னார். அதுதான் இப்போது இருதரப்பினரும் கவனிக்க வேண்டியது.

[இராயப்பேட்டை லட்சுமிபுரத்தில் 5-1-1953-ல் சொற்பொழிவு—' விடுதலை ' 8-1-1953]

15. பூதேவர்களின் தேவ பாதுகாப்பு மாநாடு

தேசியப் பத்திரிகை நகரத்தில், பார்ப்பன நிருபர்கள் பந்தலில், பூதேவர்கள் கழகச் சார்பில், விஷமப் பிரச்சாரக் கோஷ்டிப் படையின் சதியாலோசனை மாநாடு நடவடிக்கைகள்.

விஷயாலோசனைக் கூட்டம்

தலைவர்: நம் மாநாட்டு ஊர்வலம் வெகு வெற்றிகரமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

வரவேற்புக் கழகத் தலைவர்: ஆம்! ஆம்! மிக மிக வெற்றிதான்! யாவரும் அறியாமல், ஒருவருக்கும் தெரியாமல், நாம் தனித்தனியாய் எங்கேயோ போகிற யாரோ ஒரு அனாமதேயம்போல் நடித்து–மெள்ள வந்து இத்தனைபேர் இந்த சதி ஆலோசனைக் கூட்டத்துக்கு வந்து சேர்ந்தது நமக்கு மாபெரும் வெற்றிதான்.

தலைவர்: சரி, சந்தோஷம்! மாநாட்டிற்கு முதல் தீர்மானம் என்ன?

காரியதரிசி: அதிகாரத்திலிருக்கும் தேவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டியதாகும்.

தலைவர்: சரி, அவர்களுக்காகத்தானே பாடுபடுகின்றோம். அதற்கு நன்றி செலுத்தவேண்டுமா? அவர்கள் கடமையைத்தானே அவர்கள் செய்கிறார்கள்?

காரியதரிசி: இருந்தாலும் நாம் நன்றி செலுத்தினால் இன்னும் அதிகமாக அக்கிரமங்கள், அநியாயங்கள் செய்து நமக்கு உதவி செய்வதோடு நல்ல யோசனையும் சொல்லி உற்சாகப்படுத்துவார்கள். நம் ஆதரவு பூரணமாக இருக்கிறது என்று–என்னமும் (எதுவும்) செய்து நம் எதிரிகளை அழித்துவிடுவார்கள். அந்தக் காலத்தில் நமக்கு விஷ்ணு, இந்திரன் இருந்தது போலத்தானே, இந்தக் காலத்தில் நம்மவாள் ஆட்சியும், நம் அதிகாரிகளும் இருந்து வருகிறார்கள்? ஆதலால், செய்யும் யாகம், எக்கியம் என்பவைகளான—பத்திரிகைப் பித்தலாட்டம், விஷமத்தனம் ஆகியவைகளால் (நம்மவாள்) அரசாங்கத்தாரும், நம் அதிகாரிகளும் வாழ்கிறார்கள். ஆதலால், அவர்களுக்கு நம் ஆதரவு காட்டும் முறையில் நன்றி காட்டவேண்டியது முதல் தீர்மானமாகும்.

தலைவர்: சரி, இதை நானே பிரரேபித்து விடுகிறேன். இனி அடுத்த தீர்மானம்?

காரியதரிசி: பத்திரிகைக்காரர்கள் கட்டுப்பாடாய் எதிரிகளின் நடவடிக்கைகளை, அவர்கள் அனுப்பும் சேதிகளை அறவே பிரசுரிக்கக் கூடாது. அப்படி மீறிப் பொது ஜனங்களுக்குப் பயந்து பிரசுரித்தாலும், நம் எதிரிகள், "இதை ஏனடா இவன் போட்டான்" என்று (அவர்கள்) வருத்தப்படும் மாதிரியில், அவர்களுக்குக் கேடுவரும் மாதிரியில் பிரசுரிக்கவேண்டும் என்று பத்திராதிபர்களைக் கேட்டுக்கொள்வதாகும்.

தலைவர்: இப்படித்தானே இப்போது நடக்கிறது! இதை மறுபடியும் அவர்களுக்குச் சொல்லுவதெதற்கு? ஒரு சமயம் அவர்கள் இதுவரை செய்துவருவதை நாம் அறியாமல் இருக்கிறோம் என்று நினைத்து, இதனால் வருத்தப்பட்டால் என்ன செய்வது?

வரவேற்புக் கழகத் தலைவர்: வருத்தம் ஒன்றும் ஏற்படாது. இன்னும் சிறிது சுறுசுறுப்பாய் வேலை நடக்கும். எதிரி நடவடிக்கைகளைக் கொன்று தீர்த்துவிடுவார்கள்; அனுமதியுங்கள்.

தலைவர்: சரி, இதை வரவேற்புத் தலைவர் பிரரேபிக்கட்டும்; காரியதரிசி ஆதரிக்கட்டும். இனி அடுத்த தீர்மானம்?

ஆலவாய்க் கதை தேவர்: அடுத்த தீர்மானமாக, நான் பிரரேபிப்பது, 'பத்திரிகை நிருபர்கள் நம் நோக்கங்களுக்கு, நலன்களுக்கு ஏற்பவும்—நம் எதிரிகளுக்குக் கேடுகள், கெட்டபெயர்கள் ஏற்படவும்,—கலகம் விளைவிக்காத நம் இயக்கக் கோழைகள் இருக்கும் இடத்திலும் கலகம் நடக்கும்படி தூண்டிவிடவும், எங்கும் காலித்தனம் தாண்டவமாடவும், அதுவே பாரதமாதா சேவை, தேசியத் தொண்டு, காங்கிரஸ் பக்தர்கள் கடமை என்று கருதும்படியாகவும்—அவ்வளவு திரித்துக் கற்பித்துச் சேதிகள் விடவேண்டும்; இந்தக் கைங்கரியத்தைச் சர்க்காரும் செவ்வனே செய்துவருகிறது. பிரசுரிக்க வேண்டுமென்று ஆசிரியர், நிருபர், ஏனைய ரிப்போர்ட்டர்களைக் கேட்டுக்கொள்கிறது' என்ற தீர்மானமாகும்.

இதன்மீது நான் சிறிது பேசுகிறேன். அதாவது, இந்தக் காரியத்தில் அல்லாது தேவர்களாகிய நாம் இனி வாழமுடியாது. எதிரிகள் வலுத்துவிட்டார்கள்; அவர்கள் மக்களை வசப்படுத்திக் கொண்டார்கள். தனிப்பட்ட முறையில் எதிரிகள் எதுவும் செய்யச் சக்தி உடையவர்களாகிவிட்டார்கள். நாம் தனியே நடக்கப் பயப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்போதைய விபீஷணர்களும், அனுமார்களும் கூட முன்காலத்தவர்களைப் போல நடக்கிறார்கள்.

எனவே, நம்மை இனி நம் பத்திரிகைக்காரர்கள்தான் காப்பாற்றவேண்டும்; நம் தந்திரங்கள், சூழ்ச்சிகள்தான் நமக்குக் கதிமோட்சம் கொடுக்கக் கூடியவை. ஆகவே இதை அவர்கள் உணரவேண்டும்.

தலைவர்: இதை நீங்களே பிரரேபியுங்கள். ஆசிரியர், நிருபர், பத்திரிகைச் சொந்தக்காரர்கள் வந்திருக்கிறார்களா?

காரியதரிசி: ஆம்!

தலைவர்: சரி, அடுத்து?

கணநாதர்: நம் அதிகாரிகள் சிறிதும் தயவு, தாட்சண்யம் பார்க்காது—கல் நெஞ்சத்துடன்—காரியம் பார்த்து நம் எதிரிகளின் ஸ்தானங்களை அழிக்கவேண்டும் என்கின்ற தீர்மானத்தை நான் பிரரேபிக்கிறேன்.

தலைவர்: இனி இப்படித் தனித் தனித் தீர்மானம் வேண்டாம். நம்மவர்கள், அதிகாரிகள், மனுதர்ம சாஸ்திரம், பராசரஸ்மிருதி, இராமாயணம், பாரதம், புராணம் ஆகியவைகளில் இராட்சதர், அசுரர் என்பவர்களை அழிக்க—பிராமணர்கள், தேவர்கள் என்பவர்கள் எப்படி எப்படி நடந்தார்களோ அப்படி அப்படியெல்லாம் நடக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் போட்டால் போதும்.

மற்றவர்கள் ஏகோபித்து—சரி, சரி, ரொம்பவும் விளக்கமாகிவிட்டது. இது ஆளுகிறவர்கள், அதிகாரிகள், பத்திரிகைக்காரர்கள் ஆகியவர்களுக்கு மாத்திரம் அல்ல; தேவர்கள் யாவருக்குமே பொருந்தியதாகும்.

தலைவர்: சரி, விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டது. இவை பொதுமாநாட்டில் முடிவுசெய்தபின் மற்றவை.

['விடுதலை'—'சித்திரபுத்திரன்' உரையாடல்—2-11-1953]

16. பார்ப்பனர் உயர் வாழ்வு

பெரியோர்களே! தோழர்களே!

இன்று பார்ப்பனர்களெல்லாம் சவுக்கியமாக இருக்கிறார்கள். பிச்சை எடுக்கிற பார்ப்பான் கூட இரண்டு வேளை காப்பி குடிப்பான். தினமும் வெயிலில் பாடுபடும் குடியானவனுக்கோ—அவன் குடும்பத்துக்கோ காப்பி என்றால் என்ன என்றே தெரியாதே! கஞ்சிதான் இருக்கும்; வெறும் கூழ்தான் இருக்கும். அதற்கு உப்பும் இருக்காதே!

ஆனால் பார்ப்பனர்களில்—ஓட்டலில் வேலை செய்யும் பார்ப்பானாக இருந்தாலும், கோவிலில் வேலை செய்யும் பார்ப்பானாக இருந்தாலும், புரோகிதப் பார்ப்பானாக இருந்தாலும்—அவன் மகனெல்லாம் நன்றாகப் படித்து கலெக்டர், ஜட்ஜ், மந்திரி, இந்தியா பிரஸிடெண்டாக ஆகிவிடுகிறானே! ஆனால் உழைக்கிற நாம் கீழான நிலையில்தானே இருக்கிறோம்!

நேற்றுவரையில் மந்திரியாக இருந்தாரே இராஜகோபாலாச்சாரியார் அவர் என்ன பிரபுவின் மகனா? அவர்தானே சொல்லி இருக்கிறார், 'ஸ்காலர்ஷிப்பில்' படித்ததாக! அவருடைய பாட்டன் புரோகிதர்; இவர் முதல் மந்திரி! இந்த நாட்டை ஆளுகின்றாரே நேரு, அவர் ஒரு காஷ்மீரத்துப் பார்ப்பனர். இங்கே எப்படிக் கல்யாணம், கருமாதி செய்கிற பார்ப்பனரைப் புரோகிதர் என்று சொல்லுகிறோமோ, அப்படி நேரு குடும்பம் அங்கே 'பண்டா' என்று சொல்லுகிற புரோகிதக் குடும்பம். அவருடைய பாட்டன் அப்படிப்பட்ட பண்டா என்று சொல்லும் புரோகிதர்; அவருடைய அப்பன் வக்கீல்; இவர் பெரிய தலைவர்—காங்கிரஸ் ராஷ்டிரபதி—இந் நாட்டுக்கே முதல் மந்திரி. இராஜகோபாலாச்சாரியாரின் பாட்டன் ஒரு சாமியார். அவரே சொல்லி இருக்கிறார், 'எனக்கு மைசூரில் ஸ்காலர்ஷிப் கொடுத்தார்கள்; அதில்தான் நான் படித்தேன்' என்று.

இன்றைக்கு இந்த நாட்டுக்குப் பிரசிடெண்டாக இருக்கிற இராஜேந்திர பிரசாத் ஒரு பார்ப்பனர். அவருடைய குடும்பம் ஒரு மலைஜாதி நாட்டுப் பார்ப்பனர் குடும்பம்.

இப்படி முக்கியமானவர்களைப் பற்றி மட்டுந்தான் சொன்னேன். இப்படிப் பட்டவர்களெல்லாம் தங்கள் சாதி காரணமாகவே உயர்ந்திருக்கிறார்கள். நம்மவனுக்கு சற்றுப் பணக்காரத் தன்மை வந்துவிட்டால், அவனுக்கு தான் ஏன் கீழ்சாதி என்றே படுவதில்லை. நம்மவருள் மிராசுதார், புலவர் என்பவருக்கும் நாம் ஏன் கீழ்சாதி என்றே படுவதில்லை. நம்மவர் எவராவது இதுபற்றிச் சிந்தித்தது உண்டா? அது கிடையவே கிடையாது. எப்படியாவது நமக்குப் பணம் வேண்டும்; எப்படியாவது நம்மை மிராசு, மிட்டா என்று மற்றவன் சொன்னால் போதும் என்று கருதுவதும், பார்ப்பான் தன்னைத் தர்மப்பிரபு என்று சொன்னால் போதும் என்று கருதிக் கோயில் கட்டுவதும் கும்பாபிஷேகம் செய்வதும்; 100 ஏக்கர், 200 ஏக்கர், 500 ஏக்கர், 1000 ஏக்கர், 100 வேலி, 200 வேலி, 700 வேலி என்று காவேரிப் பாசனத்தில் எழுதிவைக்கிறானே! இதை எழுதி வைத்தவரெல்லாம் நம்மவர்கள். அப்படிப்பட்ட நாம் ஏன் கீழ்சாதி? இப்படிப்பட்ட மக்களுடைய சரித்திரம் எப்படிப்பட்டது? நாம் உயர்ந்தவர்களாக வாழ்ந்ததாகத்தானே சரித்திரம் கூறுகிறது! பார்ப்பனர் வந்தபிறகுதானே நாம் தாழ்ந்ததாக உள்ளது? எந்த நாட்டிலேயாவது அந்த நாட்டு உழைப்பாளி—தர்மப் பிரபுக்கள் தாழ்ந்த சாதியாக இருந்திருக்கிறார்களா?

காட்டுமிராண்டிகளும்கூட முன்னேறி வர திராவிடர் மட்டும் இழிசாதியினராய் இருப்பதா?

மற்ற நாட்டுக்காரனுக்கு வேட்டிக் கட்டத் தெரியாதபோது நாமெல்லாம் நாகரிகத்தோடு வாழ்ந்து வந்தோம்; வெளிநாட்டான் காட்டுமிராண்டியாகவே இருந்தான். அப்படி இருந்தவன் நாளுக்கு நாள் வளர்ந்து, இன்றைக்கு அதிசயப்படும்படியாக வளர்ந்து விட்டானே!

வெள்ளையன்தான் இரயிலைக் கண்டுபிடித்தான்; இந்த ஒலிபெருக்கி, கேஸ் லைட், மோட்டார், விமானம் எல்லாம் அவன் கண்டுபிடித்தவைதாமே! இன்னும் எலெக்டிரிக் விளக்கும் அவன் கண்டுபிடித்திருக்கிறான். ஒரு பொத்தானை அழுத்தினால் இலட்சம் விளக்கு எரிகிறது. இந்த வெள்ளைக்காரன் 1000 ஆண்டுக்கு முன்பு பாம்பு, மீன், காய் எல்லாம் பச்சையாகத் தின்றவன். அதே நேரத்தில் நம்மவன் உயர்ந்த வாழ்வு வாழ்ந்தான்.

இன்றைக்குச் சீரங்கம் கோவிலை எடுத்துக்கொள்ளுங்களேன். அதில் எவ்வளவு பெரிய சிலைகளைச் செய்து வைத்திருக்கிறார்கள்? எவ்வளவு நல்ல சித்திரங்களை வரைந்து வைத்திருக்கின்றார்கள்? அங்கே மொட்டைக் கோபுரம் என்று ஒன்று இருக்கின்றது. அங்கே நான்கு கால்கள் இருக்கின்றன. அது 40 அடி மேலே நிற்கின்றது; அந்தக் கல் ஒவ்வொன்றும் 4 அடி, 3 அடி பருமன் இருக்கும். 40 அடி மேலே நின்றால் 10 அடியாவது பூமியில் அஸ்திவாரம் எடுத்திருக்க வேண்டும். இப்போதுதானே வெள்ளைக்காரன் 'ஜாக்கி' கொண்டு வந்திருக்கிறான். இந்த சீரங்கம் கோவிலை என்ன இன்றைக்கு நேற்றா கட்டினார்கள்? அப்போது இப்படித் தூக்கி நிறுத்த வசதி ஏது? அப்படிப்பட்ட வசதியில்லாத காலத்திலேயே தூக்கி நிறுத்தியிருக்கிறானே! அதுமட்டுமல்ல. காவேரியையே வேறுபக்கம் திருப்பி இருக்கிறானே ஒரு அரசன்! அப்படிப்பட்ட நாம் எப்படி இந் நிலைக்கு வந்தோம்? எனக்கு முன் பேசியவர் சொன்னார்—மொகஞ்சோதாரோ, ஹாரப்பா பற்றி; அவை இப்போது சாயபுக்கிட்டே போய்விட்டன. அவை 4000 வருடங்கட்கு முந்தியவை என்று கூறுகிறார்கள்.

இந்தப் பார்ப்பனர்கள், தங்கள் மாட்டுக்குப் புல்லைத் தேடிக்கொண்டு இங்கே வந்து, நம்மைக் கோயிலைக் கட்டச்சொல்லி சாமியைச் செய்யச் சொல்லி—அந்தச் சாமியை நாம் தொட்டால் தீட்டு, சாமி செத்துப் போய்விடும் என்று சொல்லிவிட்டானே? இதை இந்துப் பணக்காரனும் பண்டிதனும் ஒப்புக்கொண்டதன் விளைவாக, நாம் இப்படி நாசமாகிவிட்டோம். மிருகங்கள் இருக்கின்றனவே! அவற்றில் பார்ப்பாரக் கழுதை, பறைக் கழுதை என்று இருக்கின்றனவா?

உலகத்திலேயே மிகவும் தாழ்வாகப் பேசப்படுகின்ற—கருதப்படுகின்ற மக்கள் நீக்ரோக்களாவர். அவர்கள் காட்டில் திரிபவர்கள்; ஆடைக்குப் பதிலாகத் தழைகளைக் கட்டிக்கொண்டு இருப்பவர்கள். அவர்கள் உதடு தடித்திருக்கும். அவர்கள் இப்போது அமெரிக்காவிலிருக்கிறார்கள். அமெரிக்காவில் அவர்கள் ஜனத்தொகை 1 கோடியே 30 இலட்சமாகும். அப்படிப்பட்ட மக்கள் இன்று 100க்கு 90 பேர் படித்திருக்கின்றார்கள். உலகத்தில் தாழ்ந்த காட்டுமிராண்டி, இன்றைக்கு எவ்வளவு முன்னேறி இருக்கிறான். இவர்கள் முன்னேறியது எல்லாம் கடந்த 150 வருடத்திற்குள்ளாகத்தான். இவர்கள் ஆட்களில் 100க்கு ஒருவன் வெள்ளைக்காரனைப் போலவே பி. ஏ. படித்திருக்கிறான். வெள்ளைக்காரனைப்போலவே அவனுக்குச் சரிசமமாக இருக்கிறான். ஆனால், இங்கு இன்று எல்லா உயர் பதவிகளும் பார்ப்பனருக்கேதானா? பிச்சை எடுக்க வந்தவன்தான் இன்று மந்திரி, பிரஸிடெண்ட், ராஷ்டிரபதி, சங்கராச்சாரி—எல்லாம் அவன்தானே? அரசாங்கத்தில் உயர்ந்த பதவி, எதை எடுத்தாலும் பார்ப்பான்தானே இருக்கிறான்? எப்படி இந்த நிலை வந்தது?

நாளைக்கு ஒரு கம்யூனிஸ்டோ, சோஷ்யலிஸ்டோ வருவார்கள். "என்ன, நேற்று இந்த ராமசாமி ஏதேதோ பேசினாராமே; மக்கள் உணவுக்கு, உடைக்கு ஏதாவது பரிகாரம் கூறினாரா?" என்பார்கள். நம் மட ஜனங்களும் அதை நம்புவார்கள்!

நான் கேட்பதெல்லாம்—"ஏன் பிச்சை எடுக்கிறான்?" என்றுதான் கேட்கிறேன். "ஏன் பட்டினி? யாருக்குப் பட்டினி?" என்றுதான் கேட்கிறேன்.

இந்தக் கேள்வியை, அந்தக் கம்யூனிஸ்டைக் கேளுங்களேன். "ஊரெல்லாம் பட்டினி; மக்கள் பட்டினி ஊர்வலம் போகிறார்களே" என்கிறார்கள். அப்படிப் போகிற பட்டினி ஊர்வலத்தில் எந்தப் பார்ப்பான் போகிறான்? நமக்குக் கஞ்சிக்கு உப்பில்லை என்றால்—அவன் சோற்றுக்கு நெய்யில்லை என்கிறான். நம்மவனுக்கு வேட்டியில்லை, கிழிந்ததையெல்லாம் ஒட்டி, வெட்டித் தைத்துக்கொண்டு கட்டிக்கொள்கிறான். பார்ப்பானுக்கா வேட்டியில்லை? வேட்டி வாங்கித் தருபவனும் நம்முடைய பணக்காரன்! பார்ப்பனப் பெண்கள் 18 முழமல்லவா கட்டுகிறார்கள்? மொட்டைப் பார்ப்பனத்தியும் அல்லவா 18 முழம் கட்டுகிறாள்?

[இராமியம்பட்டியில் 30-5-1954-ல் சொற்பொழிவு-'விடுதலை' 6-5-1954]

17. பேதச் சின்னத்தை அகற்றுக

28-3-1955-ஆம் தேதி அழகிரி நினைவுநாள் ஆதலாலும், நானும் அத் தேதியில் தஞ்சையில் இருக்க நேர்ந்ததாலும், அன்று நான் தஞ்சையில் உள்ள திரு. அழகிரியின் நினைவுச் சின்னத்திற்குச் சென்று மாலையிட்டு வரலாம் என்று கருதிச் சென்றுவந்தேன். அதுசமயம் அந்தச் சுடுகாட்டில் பார்ப்பனர், சூத்திரர் என்று இடம் பிரித்து, 'சூத்திரர்கள் இடம்' என்பதாகச் செதுக்கப்பட்ட கல் ஒன்று நட்டு வைத்து இருப்பதைப் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன் என் மனம் சங்கடப்பட்டது. அக் கல்வெட்டுக்குச் சம்பந்தப்பட்ட இடத்தில்தான் திரு. அழகிரியையும், நெடும்பலம் திரு. சாமியப்ப முதலியார் அவர்களையும் அடக்கம் செய்திருந்ததுடன், அவ்விருவர்களுக்கும் ஸ்தூபிகளும் கட்டப்பட்டிருந்தன. நான் அங்கிருந்து திரும்பி வரும்போது அக் கல்லைப் பெயர்த்தெடுத்து அப்புறப்படுத்தி விடும்படி, தஞ்சை முனிசிபல் கவுன்சிலுக்கு, சென்னை சென்றவுடன் ஒரு வேண்டுகோள் விடுவதென்று எண்ணிக்கொண்டு வந்தேன்.

தஞ்சையை விட்டு நேரே சென்னைக்கு வராமல், பல இடங்களுக்குச் சென்றுவிட்டு வரவேண்டி இருந்தபடியால், அதை உடனே தெரியப்படுத்த முடியாமல் போய்விட்டது.

இப்போது இந்த வேண்டுகோளை தஞ்சை முனிசிபல் கவுன்சிலுக்குச் (நகராட்சி மன்றத்திற்கு) செய்துகொள்ளுகிறேன்.

அதாவது, 1. தஞ்சை நகர புதைகாடு, சுடுகாடு என்பதாக இருக்கும் இடத்தில் பின்புறம் கோடியில் 'சூத்திரர்கள் இடம்' என்பதாகக் கல்லில் அடித்து (மைல் கல் போல்) நட்டு இருக்கும் அந்தக் கல்லானது, தஞ்சை நகராட்சிக்குச் சேர்ந்ததாயிருந்தால் தஞ்சை நகராட்சி மன்றத்தார் அருள்கூர்ந்து அக் கல்லை அப்புறப்படுத்திவிட வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஏனெனில், அந்தக் கல் திராவிட மக்கள் இனத்தையே இழிவுபடுத்தும் அறிகுறியாகக் காட்சி அளிக்கிறது. இன்று மக்களுக்குள்ள உணர்ச்சியைப் பொறுத்தும், மனிதத் தன்மையைப் பொறுத்தும் திராவிட நாட்டில் எந்த இடத்திலானாலும் இப்படிப்பட்ட பேதச் சின்னமும், இழிவுச் சின்னமும், பேத நடைமுறையும் இருந்துவருவது சிறிதும் ஏற்கக்கூடியதும், பொறுக்கக்கூடியதும் அல்ல என்றே கருதுகின்றேன்.

2. மேலும், இப்படியாகவும் மற்றும் இதுபோன்ற தன்மையதாகவும் இருந்துவரும் பேதச் சின்னமும், இழிவுச் சின்னமும், நடைமுறையும் தமிழ்நாட்டில் இன்று தஞ்சையில் மாத்திரமல்லாமல் மற்றும் எந்த ஊரில், எந்த நாட்டில் இருந்தாலும் அந்த இடத்தில் உள்ள

திராவிடத் தோழர்கள் அருள்கூர்ந்து அரசாங்கத்திற்கும், அந்தந்த இடத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அதை நீக்கிவிடும்படி வேண்டுகோள் செய்துகொள்வதோடு, அருள்கூர்ந்து நமக்கும் அவசியம் தெரிவிக்க வேண்டுமாய்ப் பொதுமக்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'—அறிக்கை—5-4-1955]

18. பார்ப்பனர் திமிர்

பார்ப்பனர் கொடுமைகளைப்பற்றி இப்பொழுது உள்ள வாலிபர்களைக் கேட்டால் தெரியாது; 60 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கேட்டால் தெரியும். 15 வயது பார்ப்பனப் பையன் 60 வயதுக் கிழவனைக்கூட, "ஏண்டா, இராமசாமி!" என்றுதான் கூப்பிடுவான். நம் மக்கள் பாடுபட்டாலும் வயிராறக் கஞ்சி கிடைப்பதில்லை. பாடுபடாத பார்ப்பனர்கள் மட்டும் நான்கு வகைப் பதார்த்தங்களுடன் நெய் ஊற்றிக்கொண்டு சாப்பிடுவார்கள்; 12 முழ வேஷ்டியைக் கட்டிக்கொள்வார்கள். இந்த நிலை சமுதாய அமைப்பினால்தானே? இப்போதுதான் மக்கள் இதை உணர முடிகிறது.

[புகளூர் செம்படாபாளையத்தில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-8-1956]

19. அரசியல் புரட்சி இல்லை

இந்த நாட்டில் அரசியல் புரட்சி என்பதாக ஒன்று, சரித்திரம் தெரிந்த காலந்தொட்டு நடந்து வரவில்லை.

தோழர்களே! புராணங்களில்கூட அரசியல் காணப்படுகின்றது. கந்த புராணம் இருக்கின்றது. அதில் சூரபதுமன் அரசாண்டு இருக்கின்றான். பாகவதத்தில் விஷ்ணு, பத்து கடவுள்களாக அவதாரம் எடுத்தான். அந்த 10 அவதாரங்களும் 10 அரசர்களைக் கொல்லுவதற்கே ஆகும். அவர்கள் இராவணன், இரணியன், இரண்யாட்சதன், மாபலி முதலானவர்களைக் கொன்று இருக்கிறார்கள். அப்படி அவதாரம் எடுத்த புராணக் கடவுள்கள், புராண கால அரசர்களை ஒழித்தது அரசியலுக்காக அல்ல; சாதிக்காக ஆகும். அத்தனை ராஜாக்கள் பண்ணிய காரியங்களும் ஒரு சாதியாரை,—அதாவது தேவர்களைக் கொடுமை பண்ணினார்கள் என்பதே!

இந்தத் தேவர்கள் எத்தனை பேர்? இன்றைய்ப் பார்ப்பனர்கள் போல 100க்கு 2, 3 பேர்களே! ஆனால், அசுரர்கள் என்பவர்கள் 100க்கு 97 பேர்கள். இந்த 97 பேர்கள் மீது 100க்கு 3 பேராக உள்ள தேவர்களால் சுமத்தப்பட்ட பழியும் அதற்காக அவர்களை ஒழித்ததும் அரசியல் ஆகிவிடுமா? அது சாதிப் போராட்டமேயாகும்.

அடுத்து, சரித்திர காலத்தை எடுத்துக்கொண்டால் நமக்குக் கேடான ஆட்சியும், பார்ப்பனனுக்கு நன்மையான ஆட்சியுமே நடந்து வந்திருக்கின்றது. அதன் காரணமாக தேவாசுரப் போராட்டம் நடைபெறவில்லை. அந்த அரசர்கள் எல்லாம் பார்ப்பானுக்கு அடிமையாக இருந்து, அவனுக்குத் தொண்டுசெய்வதே மேலான புண்ணியம் என்று கருதி ஆண்டு வந்தார்கள். பார்ப்பானுக்குப் பிழைக்கக் கோவிலும் மானியமும் வேத பாடசாலையும் ஏற்படுத்தி, அவர்கள் ஆதிக்கத்தை வளரச்செய்யப் பாடுபட்டார்களே ஒழிய, நம் மக்களின் நலனிலோ கல்வியிலோ அக்கறை காட்டவில்லை.

அடுத்து, முஸ்லிம்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். அவர்களும் பார்ப்பானுக்கு வாய்க்கரிசி போட்டுவிட்டுத் தங்கள் ஆட்சியை நடத்திக்கொண்டு போனார்களே ஒழிய, இந்த நாட்டு மக்களைப்பற்றிக் கவலைப்படவில்லை.

அடுத்து, அறிவு வளர்ச்சி அடைந்த வெள்ளைக்காரன் 200 ஆண்டுகள் ஆட்சி புரிந்தும்—நம் நலனிலோ, கல்வியிலோ அக்கறை செலுத்தாமல், பார்ப்பானுக்குக் கல்வி, உத்தியோகம், பதவி முதலியன பெற வாய்ப்பளித்து வந்தானே ஒழிய, நம்மைப்பற்றி கவலைப்படவில்லை.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது. காமராஜர் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் வரையில் எவனும் இந் நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டாமல்—பார்ப்பானுக்கே, பார்ப்பான் உயர்வுக்கே, பார்ப்பான் வாழ்வுக்கே—பாடுபட்டு வந்தார்கள்.

தோழர்களே! சேரன், சோழன், பாண்டியன் காலம் முதல் காமராஜர் பதவிக்கு வரும் முன்பு வரையில், எவராவது—100க்கு 97 பேராக உள்ள இந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலை எடுத்துக்கொண்டு பாடுபட்டார்கள் என்று சொல்ல, ஒன்றுமே இல்லை.

[தூத்துக்குடியில், 18-3-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-4-1961]

20. பார்ப்பனத் தோழர்களுக்கு

பார்ப்பனத் தோழர்களே! நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லன். தமிழ் நாட்டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள்-பெரியோர்கள் ஆகியோர்களுக்கு அன்பனாகவும், மதிப்புக்குரியவனாகவும் நண்பனாகவும் கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள்.

சமுதாயத் துறையில் பார்ப்பனர்கள் அனுஷ்டிக்கிற உயர்வு, அவர்கள் அனுபவிக்கிற அளவுக்கு மேற்பட்ட விகிதம்—ஆகியவைகளில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இது பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல, இந்த நிலையில் உள்ள எல்லோரிடத்திலுமே நான் வெறுப்புக் கொள்கிறேன். இந்நிலை என்னிடத்தில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கைக் குணமாக இருக்குமோ, அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றும், அந்தத் தாய் தனதுமக்களில் உடல்நிலையில் இளைத்துப்போய், வலிவுக்குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போஷணையை விட எப்படி அதிகமான போஷணையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அது போலத்தான் நான் மற்ற வலுக் குறைவான பின் தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும், மற்ற வகுப்புக்களிடமும் காட்டிக்கொள்ளும் உணர்ச்சி ஆகும்.

உண்மையிலேயே பார்ப்பனர்கள் தங்களை இந்நாட்டு மக்கள் என்றும், இந்நாட்டிலுள்ள மக்கள் யாவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றும், தாயின் செல்வத்துக்கும், வளப்பத்துக்கும் தாங்கள் எல்லோரும் சரிபங்கு விகிதத்துக்கு உரிமை உடையவர்கள் என்றும் கருதுவார்களேயானால், இந்நாட்டிலே சமுதாயப் போராட்டமும், சமுதாய வெறுப்பும் ஏற்பட வாய்ப்பே இருக்காது.

நான் காங்கிரஸில் இருந்த காலத்தில்—அதாவது எனது நல்ல நடுத்தர வயதான 40-வது வயது காலத்தில்—நான் ஒரு சுயநலமும் எதிர்பாராமல், எதிர்பார்க்கவேண்டிய அவசியமும் இல்லாமல் (உயர்ந்த அந்தஸ்தில்) இருக்கும் போதே, பார்ப்பன சமுதாயத்தில் இரண்டறக் கலந்து, எவ்வளவு தொண்டு செய்திருக்கிறேன் என்பது எல்லாப் பார்ப்பனர்களுக்கும் தெரியும். நான் காங்கிரஸிலிருந்து பிரிந்ததே, பார்ப்பன வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுத்தான் பிரிந்தேனேயொழிய, மற்றபடி எந்தவிதமான சுயநலம் காரணமாகவும்

பிரியவில்லை. பிரிந்தபிறகு பார்ப்பன வெறுப்புணர்ச்சியோடு தொண்டாற்றுகிறேன் என்றால், அத்தொண்டில் எனக்குச் சுயநலம் என்ன இருக்கிறது? அல்லது எனது தொண்டில் நான் வெளிப்படையாகச் சொல்லுகின்ற கருத்தல்லாமல் வேறு உட்கருத்து என்ன இருக்கிறது?

என்னைப் போலவே என் கருத்துக்களுக்கெதிரான கொள்கைகளின்மீது உண்மையாகப் பாடுபடுகிற இராஜாஜி அவர்களுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். எப்படியோ நாங்கள் இரு பிளவாகப் பிளந்து ஒன்றுக் கொன்று ஒட்டமுடியாத அளவு விலகிப் போய்க்கொண்டிருக்கிறோம்.

எனக்கு, "நான் தோல்வியடைய மாட்டேன்; நிதானமாகவாவது வெற்றியடைவேன்" என்கிற நம்பிக்கை உண்டு. இராஜாஜியோ, எப்படியோ யோசனையின்றி ஆத்திரப் பட்டுத் தவறான வழியில் இறங்கிவிட்டார். உண்மையிலேயே வருணாசிரம சாதி முறையைப் புதுப்பித்து நிலைநிறுத்துவது சாத்தியமாகுமா? காந்தி இப்படிச் சொல்லித் தப்பித்துக்கொண்டார் என்றால், அது இன்றைக்கு 35 ஆண்டுக்கு முந்தியகாலம். இந்தக் காரணத்தினால்தான், அவர் கொல்லப்பட்டதற்குத் தமிழர்கள் அவ்வளவாக வருந்தவில்லை. இன்றைய இராஜாஜியின் கருத்தை, என்னை அவர் காங்கிரஸில் இழுத்த காலத்தில் சொல்லியிருப்பாரேயானால், அவருக்கு ஏற்பட்ட பெருமையும், பதவி வாய்ப்பும், செல்வ வளர்ச்சியும் ஏற்பட்டு இருக்கமுடியுமா? ஆகவே அவருடைய இன்றைய நிலைமை மக்களை ஏய்த்து வளர்ந்தவர் என்றுதானே பொருள்? நான் அப்படியொன்றும் ஏய்க்க வில்லையே; உளறவும் இல்லையே?

நான்—எனக்கு ஞாபகமிருக்கிற வரையில்—என்னுடைய 10ஆவது வயதிலிருந்தே நாத்திகன்; சாதி, சமயச் சடங்கு முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவன். ஒழுக்க சம்பந்தமான காரியங்களில்கூட, மற்றவர்களுக்குத் துன்பமோ, தொல்லையோ தரப்படாது என்பதைத் தவிர, மற்றபடி வேறு காரியங்களில் ஒழுக்கத்துக்கு மதிப்புக் கொடுத்தவனும் அல்லன். பணம், காசு, பண்டம் முதலியவைகளில் எனக்குப் பேராசை இருக்கிறது என்றாலும், அவைகளைச் சம்பாதிப்பதில் சாமர்த்தியத்தையாவது காட்டியிருப்பேனே யொழிய, நாணயக் குறைவையோ, நம்பிக்கைத் துரோகத்தையோ காட்டியிருக்க மாட்டேன். யாரையும் ஏமாற்றலாம் என்பதில் நான் சிறிதுகூட முற்பட்டிருக்கமாட்டேன். வியாபாரத் துறையில் பொய் பேசி இருந்தாலும், பொதுவாழ்வுத் துறையில் பொய்யையோ, மனதறிந்த மாற்றுக் கருத்தையோ வெளியிட்டிருக்கமாட்டேன்.

இப்படிப்பட்ட நான், எதற்காக ஒரு சமுதாயத்தாரிடம் விரோதமோ, குரோதமோ கொள்ளவேண்டும்? நான் நமது நாட்டையும், சமுதாயத்தையும் ஆங்கில நாட்டுத் தன்மைக்கும், நாகரிகத்திற்கும் கொண்டு வரவேண்டும் என்கின்ற ஆசையுடையவன். இதற்கு முட்டுக் கட்டையாகப் பார்ப்பன சமுதாயம் இருக்கிறது என்று சரியாகவோ, தப்பாகவோ கருதுகிறேன்.

தாங்கள் அப்படி இல்லையென்பதைப் பார்ப்பனர்கள் காட்டிக்கொள்ளவேண்டாமா? உண்மையிலேயே எனக்கு மாத்திரம் பார்ப்பனர்களுடைய ஆதரவு இருந்திருக்குமானால் நம் நாட்டை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டுவர என்னால் முடிந்திருக்கும்.

நம் நாடு இன்று அடைந்திருக்கிற இந்தப் போலி சுதந்திரம் என்பது ஒன்றைத் தவிர—மற்ற எல்லா வளர்ச்சிக்கும் பார்ப்பன சமுதாயம் எதிரியாக இருந்திருக்கிறது. இதுமாத்திரம் அல்லாமல், நாட்டில் சமயம், தர்மம், நீதி, அரசியல் என்னும் பேரால் இருந்து வளர்ந்துவரும் எல்லாக் கேடுகளுக்கும் பார்ப்பனசமுதாயம் ஆதரவளித்தே வந்திருக்கிறது, வருகிறது. அவர்களின் எதிர்ப்பையும் சமாளித்துத்தான் இந்த நாடும் இந்தச் சமுதாயமும் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இனி வளர்ச்சியை மெதுவாக்கலாமே தவிர, யாராலும் தடுக்கமுடியாது என்கிற நிலைமையைக் காண்கிறேன்.

ஆகவே, பார்ப்பன சமுதாயம் இன்றையத் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். இராஜாஜியின் போக்கைத் தங்கள் சமுதாயத்துக்கு ஏற்பட்ட ஒரு அபாயகரமான நோய் என்று கருதி, அவரை வெறுத்து நல்ல செல்வாக்குள்ள பார்ப்பனர்கள் எல்லாம் அறிக்கை விடவேண்டும். அதுமாத்திரம் போதாது. வரப்போகும் தேர்தலில் தங்களின் நல்லெண்ணத்தைக் காட்டிக்கொள்ள வேண்டும். அதாவது—இந்தத் தேர்தலில் இராஜாஜியின் போக்குக்கு அல்லது அவர் கட்சிக்கு, அல்லது அவர் கூட்டுஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிற எந்தக் கட்சிக்குமாவது வோட்டுப் போடுவது இல்லை; அல்லது காங்கிரசுக்கே வோட்டுப் போடுவது; அல்லது காங்கிரசும் அல்லாத, இராஜாஜியும் அல்லாத மற்ற கட்சிக்குப் போடுவது—என்கின்ற இப்படியான எந்த முறையைக் கையாண்டாலும் இந்தத் தேர்தலில் பார்ப்பனர்கள் பொதுமக்கள் நம்பிக்கையைப் பெறமுடியாது; பொதுமக்கள் சந்தேகமும் மாறாது. எதிர் காலத்தில் பார்ப்பனர்கள் பொதுமக்களின் அன்பையும் அபிமானத்தையும் நல்லெண்ணத்தையும் நட்பையும் பெறவேண்டுமானால், பார்ப்பனர்களுக்குப் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள இன்று ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

அதாவது, பார்ப்பனர்கள் வரப்போகும் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் யாருக்கும் எந்த முறையிலும் வோட்டுப் போடாமல் விலகி இருப்பதே ஆகும். இத்தேர்தல் உண்மையிலேயே பார்ப்பனர்களுக்கு ஒரு சோதனைக் காலம். தேர்தலில் இராஜாஜி தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கண்டிப்பாக ஜெயிக்கமாட்டார். கூட்டு ஒப்பந்தங்கள் எல்லாம் ஒருவரை ஒருவர் ஏமாற்றுகிற அடிப்படையில் ஏற்பட்டவைதான். கூட்டு ஒப்பந்தத்தின்படி எந்தக் கட்சி ஜெயித்தாலும் ஒருவருக்கொருவர் உபயோகப்பட மாட்டார்கள். காங்கிரஸ் ஜெயிப்பது என்னமோ உறுதி. காங்கிரஸ் ஜெயித்தால் அதன் பின்விளைவு பார்ப்பன வெறுப்புத்தான் மக்களிடம் வளரும்.

இப்போது ஏதோ சில பார்ப்பனர்கள் உத்தியோகத்தில் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள் என்பதாலேயே பார்ப்பனர்களுக்கு நல்ல பலன் ஒன்றும் ஏற்பட்டுவிடாது; தற்கால சாந்தியாய் ஏதாவது நடக்கலாம். இந்த உத்தியோகஸ்தர்களாலும் அய்க்கோர்ட் ஜட்ஜுகள், செக்ரடரிகள், கலெக்டர்கள் முதலியவர்களாலும் மக்களிடம் பார்ப்பன வேறுபாடுகள், வெறுப்புகள் வளர்ந்துதான் வருகிறது. அவர்களை நம்பியே பார்ப்பனர்கள் இருப்பது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல.

இவற்றையெல்லாம் விட, பார்ப்பனர்கள் பண்டித நேருவைப் பகைத்துக்கொள்வது அவ்வளவு புத்திசாலித்தனமான காரியம் ஆகமாட்டாது. தேர்தலுக்குப் பிறகு அரசியல் திட்டம் எதுவாயிருந்தாலும்—சமுதாயத் திட்டம் என்பது பார்ப்பனர் வெறுப்புத் திட்டங்களாகத்தான் இருக்கும். பார்ப்பனரல்லாதவர்களில் ஒரு சில சுயநலக்காரர்கள் தவிர, மற்ற எல்லோரும் இத்திட்டத்துக்கு ஆதரவளிப்பவர்களாகத்தான் இருப்பார்கள்.

இனி, கண்ணீர்த் துளிக் கட்சி தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவ வேண்டுமானால், பார்ப்பன வெறுப்புச் சாதனத்தைத்தான் கைத்தடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள்! இந்தக் காரியத்துக்கு என்னை அணுகலாம்; நானும் ஆதரவளிக்கலாம். எனக்கு சமுதாயத் துறையில் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாரும் எதிரிகளல்லர்.

பார்ப்பனர்கள், நான் இப்படியெல்லாம் கூறுவதை, ஏதோ மிரட்டுகிறேன் என்பதாகக் கருதிவிடக் கூடாது. உண்மையிலேயே இருக்கிற நிலைமையையும் எதிர் காலத்தையும் விளக்குவதோடு, இந்த நாட்டுச் சமுதாய நலனுக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் பார்ப்பனர்களுடைய ஆதரவு, ஒத்துழைப்பு இருந்தால் வேகத்தில் நலம் பெறலாம் என்கிற எண்ணத்தில் இவைகளைச் சொல்லுகிறேனே தவிர, வேறு இதில் சூழ்ச்சியோ, தந்திரமோ, மிரட்டுதலோ

இல்லை; கண்டிப்பாக இல்லை. நான் இவைகளை உபயோகப்படுத்துவதில் வெட்கப் படுகிறவன்.

ஆகவே, இத்தேர்தலில் பார்ப்பனர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், ஓட்டல் வகையறாக்காரர்கள் முதலியவர்கள் வோட்டுச் சாவடியை அணுகாமல் இருப்பதன் மூலம் பார்ப்பனரல்லாதவர் சமுதாயத்துக்கு நம்பிக்கையுடையவர்களாக ஆக வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கேற்றமாதிரி பார்ப்பனத் தலைவர்கள் அறிக்கை விடுவது நலம் என்று கருதுகிறேன்.

['விடுதலை'—அறிக்கை—1-1-1962]

21. மைனாரிட்டி சமுதாயம்

நாட்டு இலட்சணப்படி, எந்த நாட்டிலும் மைனாரிட்டி சமுதாயம், மைனாரிட்டி மதம், மைனாரிட்டி கலாசாரம் கொண்ட மக்களுக்கு ஆதிக்கமோ, செல்வாக்கோ இருக்குமானால்—அது அந்த நாட்டின் நலத்துக்கு, பொது வளர்ச்சிக்குக் கேடாகவே முடியும்.

இந்நாட்டு மைனாரிட்டி சமுதாயங்களான பார்ப்பனர், முஸ்லிம் ஆகியவர்களுக்கு அன்னிய ஆட்சியாலும் காங்கிரசாலும்—மற்றும் இவர்களுக்கு நீதி, அல்லது தனிச் சலுகைகளை இன்றுள்ள ஆட்சியும் காட்டி வந்த காரணத்தினாலும், மேலும் இவர்களது செல்வாக்குக் காரணமாய் 'புத்திசாலித்தனமான' 'திறமையான' 'தகுதியுள்ள' சமுதாயம் என்று கருதி ஆதிக்கத்திற்கும் இடம் கொடுத்ததினாலும், நாடு வளர்ச்சியடையாமலும் மெஜாரிட்டி (நாட்டின் இயற்கையான பெருவாரி) மக்கள் மனிதத் தன்மை பெறாமலுமே போய்விட்டார்கள்.

குறிப்பாகத் தமிழ்நாட்டின் இன்றைய நிலைக்கு இதுவே காரணம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

தமிழ்நாடு இன்னும் சுதந்திரமற்ற அடிமை நாடு என்பது எனது பலமான கருத்து. இதை இந்நாட்டுப் பெருவாரி (மெஜாரிட்டி) சமுதாயம் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். காரணம், தமிழனுக்கு சுதந்திரம் என்பது என்ன என்றே தெரியாது. ஏன் என்றால், தமிழன் பல பிரிவினன் ஆக ஆக்கப்பட்டவனானதால், "எதையும் கொடுத்து—என்னவும் செய்து" பயனடைந்து வந்தவன். இந்தத் தன்மைக்கு ஏதாவது ஒரு மாறுதல் தோன்றிற்று என்று சொல்ல வேண்டுமானால், 1900 ஆண்டுக்குப் பிறகுதான் இதுபற்றிச் சிந்திக்க வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

அது எப்படியோ போகட்டும்.

இனிமேலாகிலும் தமிழன், தமிழ்நாடு—சுதந்திரத்துடன், சுயமரியாதையுடன் வாழ வேண்டாமா என்பதுதான் இனி சிந்திக்க வேண்டியதாகும்.

இன்றைய சுதந்திரம், சுதந்திரமே அல்ல. வெள்ளையன் ஆட்சிக்கால சுதந்திரத்தை விட மோசமான நிலை என்பது—'சுதந்திர உதய நாள்' முதல் எனது கருத்து.

இதற்கு உதாரணம், இந்த நாட்டில் இன்று மைனாரிட்டியாக உள்ள சமுதாயத்திற்கு இருந்து வரும் ஆதிக்கமும், நடப்பு வசதியுமே போதுமானதாகும்.

அதாவது 100க்கு 90 விகிதம் உள்ள இந்த நாட்டுப் பெருவாரி சமுதாயமாகிய தமிழனின் பெண்கள்—நாட்டில் களை பிடுங்கி, ரோட்டில் கல் உடைத்து, வீதியில் மக்கள் நடக்க மண் சுமந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற ஏராளமான பொதுத் (மக்கள்) தொண்டு செய்கிறார்கள். இப்படி இன்னும் பல இருக்கின்றன.

100க்கு 3 விகிதமுள்ள பார்ப்பன மக்களும் அவர்கள் பெண்களும் பொது நலத்துக்கு என்று ஒரு தொழிலும் செய்யாமல் 'நம்மை எட்டிப் போ!' 'மேலே படாதே!' என்று சொல்லிக்கொண்டு உயர்வாழ்வு வாழ்கிறார்கள். அதுபோலவே, 100க்கு 6 வீதம் உள்ள முஸ்லிம்கள், ஒரு கூலி உடலுழைப்பு வேலையும் செய்யாமல், அவர்கள் பெண்கள் நம் மனிதர்கள் "கண்ணுக்கே தென்படக்கூடாது" என்கின்ற நிலையிலும், பிச்சை எடுப்பவன் வீட்டுப் பெண்கள் உள்பட 'கோஷா' முறையில்—உழைப்பில்லாமல் வாழும் முறையை இந்த நாட்டில் அனுபவிக்கிறார்கள். அதே நேரத்தில் நம் ஆண்களும் பெண்களும் அவர்கள் வீட்டு வேலைக்காரர்கள், வேலைக்காரிகளாக இருக்கிறார்கள்.

முதலாவது, இந்த இரண்டு தர மக்கள் நிலையும் இந்நாட்டுத் தமிழனுக்கு எவ்வளவு இழிவு, மானக்கேடு என்பதை எந்தத் தமிழன் உணருகிறான்?

'இது அவரவர்கள் மத தர்மம், மத ஆசாரம்' என்றால்—யார் நாட்டில், யார் மத்தியில், யாருடைய மத தர்மம், யாருடைய மத ஆசாரம்; யாரை இந்த நிலையில் இழிவு படுத்துவது? என்பதைச் சிந்தித்தால் தமிழனின் சுதந்திரம், சுயமரியாதை அளவு விளங்கும்.

ஜோசியத்தில் வல்லவரான ஒரு மேதாவியானவன் (அமாவாசையில் பிறந்தவன் திருடுவான் என்பது ஜோஸ்யமானால்) தன் வீட்டில் திருடின—அமாவாசையில் பிறந்தவனை மன்னித்து விடுவானா? இதுபோல், நமது நாட்டில் மைனாரிட்டிகள் உரிமை அவர்களது சமய, கலாச்சாரப் பண்பு என்பதற்காக, பல காரியங்களில் நாம் நம் சுயமரியாதையை விட்டுக் கொடுத்து வந்த காரணமே, இன்று நாட்டுக்கு மைனாரிட்டிகளால் பெருங்கேடும் துரோகமும் அடையவேண்டியவர்களாகிவிட்டோம்.

மைனாரிட்டிகளுக்கு அளிக்கும் சலுகையும் உரிமையும் 'துரோகம்—பச்சைத் துரோகம்' என்கின்ற குழந்தைகளைத்தான் ஈனும்; ஈன்றும் வருகிறது. இது இயற்கையான பண்பு (அல்லது விதி.)

அதனாலேயே, நம் நாட்டிலுள்ள யோக்கியப் பொறுப்பற்ற மக்கள் தங்கள் சுயநல சமுதாயக் கேடான காரியங்களுக்கு, இப்படிப்பட்ட மைனாரிட்டிகளின் பின்பலத்தைப் பயன்படுத்திக்கொண்டு எதையும் செய்யத் துணிகிறார்கள்.

இந்தத் துரோகி மைனாரிட்டிகளும் அப்படிப்பட்ட பொறுப்பற்ற சமூகத் துரோகிகளுக்கு பயன்பட்டு வாழக் காத்துக் கிடக்கிறார்கள்.

இந்தியக் கூட்டாட்சியில் தமிழ்நாடு ஒரு நாடாக இருக்கும் வரை, தமிழ்நாடு இந்த கதிக்கு ஆளாகித்தான் தீரும்.

தமிழ்நாட்டு அரசியல் வாதிகள், பதவி—பண வாதிகள் ஆகையால் அவர்களுக்கு இந்த உண்மை ஒப்புக்கொள்ளத் தகாதது.

பார்ப்பானுக்குப் பயந்தும், முஸ்லிம்களுக்கு அதிக இடம் கொடுத்தும் வந்தோம். அதன் பலனை இன்று அனுபவிக்கிறோம்.

இது சாணியை மிதிக்க அசிங்கப்பட்டு, மலத்தின்மீது காலை வைக்க நேர்ந்த பழமொழியாக முடிந்தது.

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், பார்ப்பான் துரோகம் செய்ய அவனுக்குக் காரணம் உண்டு. என்னவென்றால், அவனது பொய் பித்தலாட்ட உயர் வாழ்வு சரிந்து விழுகிறது. முஸ்லிம் துரோகம் செய்யக் காரணம் என்ன? முஸ்லிம்கள் அதை வெளியிட்டு மக்களைத் திருப்தி செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் துரோகக் கூட்டத்திலிருந்து விலக இச்சைப்பட்டவர்கள் ஆவார்கள்.

இவ்வளவு எழுதப்பட்டதன் காரணம், மைனாரிட்டிகளை ஆதிக்கத்தில் விட்டு வைப்பதும், அவர்களது தனிச் சலுகைகளுக்கு இடம் கொடுப்பதும் நாட்டுக்கு—நாட்டுப் பெருவாரி மக்கள் சமுதாயத்துக்குக் கேடு என்பதை விளக்கவேயாகும்.

நான் ஒரு மனித தர்மவாதி என்பதும், எதையும் திரைமறைவு இல்லாமல் திகம்பர மாய்க் கண்டே கருத்துக் கொள்கிறவன் என்பதையும் யாவரும் அறிவார்கள்.

['விடுதலை'—தலையங்கம்—6–3–1962

22. திராவிடர் கடமை

இன்றைய நிலையில் தமிழர்கள் (திராவிடர்கள்) ஓர் அளவு முன்னேற்றப் பாதையில் செல்லுகிறார்கள். அவர்கள் அடைய உரிமையுள்ள இடத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூற முடியாது.

சமுதாயத்துறையில் ஒரு அளவுக்குப் பார்ப்பனரைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள் என்றாலும் அந்த அளவு, பகுதிக்கும் குறைவான அளவு என்றுதான் சொல்லவேண்டும். கல்வித்துறையில் பார்ப்பனர்களுக்கு ஏகபோகம் இல்லையென்றுதான் சொல்லலாமே தவிர, அவர்கள் தங்கள் விகிதாச்சார அளவிற்கு 100க்கு 500 பங்கு முதல் 1000 பங்கு வரை அதிக மாக அனுபவித்து வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த விகிதம் ஒழிந்து அவர்கள் தங்களுக்கு உள்ள உரிமையுடன் இருக்க வேண்டுமானால், டில்லி ஆதிக்கம் ஒழிந்தேயாகவேண்டும். டில்லி ஆதிக்கம் ஒழியும் வரை திராவிடர்கள் 4 ஆம் சாதி—இழிசாதி என்கின்ற இழிவும் நீங்காது என்பது உறுதி.

அரசியல் தலைமைத்துறை ஆகியவற்றில் அவர்களுக்கு இடமில்லாமல் ஆகிவிட்டது என்றாலும், அவர்கள் அவற்றில் இல்லாமலே அவர்களுக்கு வேண்டிய காரியங்களும், நாம் வளர்ச்சி அடைய முடியாமல் இருக்கும்படியான காரியங்களும் தாராளமாய் அவர் களால் செய்ய முடிந்துதான் வருகிறது.

இவற்றிற்கெல்லாம் அவர்களுக்கு ஆதாரமாக—'சஞ்சீவி' மருந்தாக—இருந்துவரும் சாதனமான பத்திரிகை உலகம் 100க்கு 100 அவர்களுடையதாகவும், அவர்களுடைய அடிமைகளுடையதாகவும் இருந்து வருவதேதான். இந்தத் துறையில் தமிழர் சிறிதுகூட சிந்தனை செய்ததாகவே காண முடியவில்லை. அந்த ஒரு காரியத்தில் நாம் முயற்சி எடுத்து நமது மனிதாபிமானத்தைக் காட்டாத வரையில் வேறு எந்தக் காரியத்தில் நாம் வெற்றி பெற்றபோதிலும் அதன் பயனை நாம் அனுபவிக்கவே முடியாது என்பது மாத்திர மல்லாமல், நம்முடைய நாட்டிலே—அதிலும் நாம் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 90–க்கு மேற்பட்டவர்களாக இருக்கும் நமது நாட்டிலே—100க்கு 3 பேராய் இருப்பவரும் நமது பிறவி எதிரியும், நமது கேட்டிற்கும் அழிவிற்கும் இழிவிற்குமாகவே உழைத்துவரும் வெகு, வெகு சிறு சாதியாரான இனத்தாரிடம் நமது நாட்டுப் பத்திரிகைகளும், பத்திரிகை களின் ஆதிக்கமும் இருந்துவருவது என்றால், இது நமது சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவான நிலை என்பதும் யோசிக்கத் தக்கதாகும் என்பதோடு, இது (நம்) போன்ற இழிவான மானங்கெட்ட சமுதாயம் வேறு எங்குமே இருப்பதாகத் தெரியவே இல்லை.

அது மாத்திரமா? நமது பத்திரிகை என்பவைகளை நமது மக்கள் ஆயிரக் கணக்கில் வாங்கிப் படிக்கிறார்கள் என்றால், நமது எதிரிகளான பார்ப்பனருடையவும் அவர்கள் அடிமைகளுடையவும், அவர்கள் ஆதரவால்தான்—அவர்களுக்கு நல்ல பிள்ளை களாய் இருந்தால்தான் வாழ முடியும் என்று கருதுபவர்களுடையதுமான பத்திரிகைகளை இலட்சக் (1,00,000) கணக்கில் நமது மக்கள் வாங்கிப் படித்து ஈனர்களாக ஆகி வருகிறார்கள்.

சாதாரணமாகச் சொல்வோமானால், தமிழர் நல்வாழ்வுக்காகவே வளர்ச்சிக்காகவே யென்று 45 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் சுயமரியாதை (சமூக முன்னேற்ற) இயக்கம் என்பது ஆரம்பிக்கப்பட்டு, மூலை முடுக்குகளெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தும், நம் எதிரிகளை 'பிராமணாள்', 'சாமி' என்றழைப்பது ஆயிரத்துக்குப் பத்து வீதமான மக்களால்கூட நிறுத்தப்படவில்லை என்பதோடு—பத்திரிகை படிப்பவர்களில் ஆயிரத்துக்கு ஒருவரால்கூட நம் எதிரிகளது பத்திரிகைகளை வாங்கிப் படிப்பது நிறுத்தப்படவில்லை என்றால், நம் மக்கள் தன்மைக்கு எந்தக் குணத்தை உதாரணமாகக் கூறுவது என்பது நமக்குப் புரியவில்லை.

அது மாத்திரமா? நமது கேட்டிற்கும், இழிவிற்கும், வளர்ச்சித் தடைக்கும் என்பதற்காகவே நடத்தப்படும் நமது எதிரிகளுடைய பத்திரிகைகளால் எதிரிகள் ஆண்டு ஒன்றுக்கு—ஒன்று, இரண்டு, மூன்று, ஏன் அய்ந்து இலட்சம் ரூபாய்கள் வரை இலாபம் வருவாய் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்.

ஆகவே, இழி நிலையானது நமது எதிரிகள்—மேல் சாதியார், பிராமணன், சாமி—என்று நம்மாலேயே அழைக்கப்படுபவர்களாகவும் நமது செல்வத்தையே ஆண்டு ஒன்றுக்கு ஒன்று முதல் அய்ந்து இலட்ச ரூபாய் வரை இலாபம் வருவாய் உள்ளவர்களாக இருப்பதற்கும் நாம் இடம் கொடுத்து வருகிறோம் என்றால், மறுபடியும் நமது நிலை எவ்வளவு இழிவானது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—15–7–1971]

23. பரிகாரம் என்ன?

உலகில் நானறிந்த வரையில், நம் நாட்டு மக்களிடம் (இந்துக்கள் என்பவர்களிடம்) ஒழுக்கம், நாணயம் என்பது சற்றேறக்குறைய 100க்கு 99 பேர்களிடம் இருப்பதில்லை. காரணம் என்ன?

நமக்கு 'கடவுள்' இல்லையா? நாம் 'கடவுள் பக்தி' இல்லாதவர்களா? நாம் 'மதம்' அற்றவர்களா? நமக்குக் 'கடவுள் பயம்' இல்லையா? 'கடவுள் நெறி' இல்லையா? 'நன்மை செய்தால் நற்பயன் கிடைக்கும், தீமை செய்தால் தீய பயன் கிடைக்கும்' என்கின்றதான எச்சரிக்கை சாதனங்கள் இல்லையா? நம்மில் பெரியவர்கள்—'தெய்வீகத் தன்மை' கொண்ட மக்கள்—என்பவர்கள் ஏற்பட்டு, நமக்கு அறிவுரை கூறியவர்கள், கூறுபவர்கள், கூறும்படியான நீதி நூல்கள் இல்லையா? அரசாங்கக் கட்டுதிட்டம், தண்டனை முதலியவைகள் இல்லையா? நமக்கு 'நற்கதி' அளிக்கும்படியான கோயில்கள் இல்லையா? நமக்குக் குருமார்கள்—மடாதிபதிகள் இல்லையா? இவைகளும் மற்றும் இவை போன்ற பலவும் ஏராளமாக இருக்கும்போது நமக்கு—நம் மக்களுக்கு—ஏன் ஒழுக்கம், நாணயம், இன உணர்ச்சி, பொதுநல உணர்ச்சி, யோக்கியத் தன்மை முதலிய நற்குணங்கள் இல்லை? இப்படிப்பட்ட நிலை நமக்கு ஏற்படக் காரணம் என்ன? என்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனக்குப் பல ஆண்டுகளாகவே இந்தக் கவலை உண்டு என்பதோடு, எனது தொண்டில் இதை—அதாவது மக்களிடம் ஒழுக்கம், நாணயம், யோக்கியப் பொறுப்பு, இன உணர்ச்சி ஏற்பட வேண்டுமென்பதை—முக்கிய இலட்சியமாகக் கொண்டு தொண்டாற்றி வந்திருக்கிறேன். அதை முதன்மையாகக் கொண்டு பிரச்சாரமும் செய்து வருகிறேன்.

எனது இத்தனை ஆண்டு வாழ்வில்–80 ஆண்டு உலக அனுபவத்தில்–நாளுக்குநாள் மக்களிடம் ஒழுக்கம், நாணயம், யோக்கியப் பொறுப்பு ஆகிய தன்மைகள் குறைந்து

கொண்டே வந்திருப்பதுடன், இன்று அக் குறைவு நிலை உச்ச நிலையடையும் வழியில் மனித சமுதாயமானது சென்று கொண்டிருக்கிறது என்பதுதான் எனது கருத்து.

இது பற்றி நான் மிகவும் கவலையடைகிறேன். இவ்விஷயங்களில் இன்றைய நிலை மாறுமா என்பதில் நான் மிகுதியும் கவலைப்படுகிறேன். மேற் சொன்னபடி எனது பல நாள்—30, 40 ஆண்டுகள்—இதற்காகவே நான் செய்துவந்த தொண்டின் காரணமாய் ஏதாவது பயன் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அடியோடு இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆகவேதான் மேலும் மேலும் கவலையோடு, இந்த நிலை ஏன் ஏற்பட்டது? இதற்கு என்ன பரிகாரம்? என்பதில் நான் மிகுதியும் சிந்திக்க முயற்சித்து, சதா சிந்திக்கிற வண்ணமாகவே இருக்கின்றேன்.

நமக்கு சுயராஜ்யம் வந்து என்ன பயன்? சுதந்திரம்—பூரண சுயேச்சை வந்து என்ன பயன்? நம்மை நாமே ஆண்டு கொள்வதில் (ஜனநாயகத்தில்) என்ன பயன்? இந்த நிலையில் வாழும் மக்களுக்கு அந்நிய ஆட்சி ஏற்படுவதில் தீமை என்ன? என்றெல்லாம் என் மனம் சிந்தனையில்—கவலையில் மூழ்கிக் கிடக்கின்றது. ஏனெனில் இந்த நாட்டில், பொது வாழ்வில், எல்லா மக்களையும் பொறுத்த பொதுத் தொண்டில்—சிறிதும் சுயநலமில்லாமல்—எனக்குள்ள சகலத்தையும் பொதுவுக்கு ஈடுபடுத்திய தொண்டின் பயனாய், தொண்டின் பெயரால் எவ்வித சுயநல நன்மையும் அடையாமல், உண்மையாகவே என்னை ஒரு தொண்டன்—தொண்டுக்காகவே வாழ்பவன், வாழவேண்டியவன் என்று கருதிக் கொண்டு, உண்மைத் தொண்டு செய்து வந்ததில்—வருவதில் எனக்கு மேற்பட்ட தொண்டன் யாருமில்லையென்னும் தன்மையில் தொண்டாற்றி வருபவன் நான் எனக் கருதிக்கொண்டு தொண்டாற்றி வருவதால், எனக்கு இந்தக் கவலை—அதாவது நம் மக்களில் யோக்கியமானவன், நாணயமானவன், எந்தத் தரத்திலும், எந்த நிலையிலும் ஏன் ஒருவனைக்கூட காணமுடியவில்லை? இருப்பதாகக் கருதக்கூட முடியவில்லை?—என்பனவற்றைக் கருதக் கூடியவனாக, கவலைப்படக்கூடியவனாக இருந்து வருகிறேன்.

இந்த நீண்ட நாள் கவலையின்—சிந்தனையின் பயனாக இதற்கு—அதாவது இந்த நாட்டில் இன்று, இந்தக் காலத்திலும் ஒரு யோக்கியன், நாணயமானவன், ஒழுக்கமானவன், யோக்கியப் பொறுப்புக்கு ஆளானவன் எந்தத் தரத்திலும் எவனும் இல்லாமல் போனதற்கு—காரணம்: நமது நாட்டிலுள்ள சூழ்நிலை, சுற்றுச்சார்பு, நமது கடவுள்கள், நமது நீதி நெறி, சாத்திரங்கள், தர்மங்கள் இவைபற்றிய புராணங்கள், இதிகாசங்கள், பிரசாரங்கள், பெரியவர்கள், மகான்கள் மகாத்மாக்கள், இன்று இருந்துவரும் அரசாங்க முறை, அரசியலில் ஈடுபடும் மக்கள் தன்மை, அரசியலில் ஒழுக்கம், மத ஒழுக்கம், சமுதாய அமைப்பு முதலியவைகள் தாம் என்கிற முடிவுக்கு வரவேண்டியவனாகி விட்டேன். அது மாத்திரமல்லாமல், மேற்கண்ட காரண காரியங்களில் நல்ல அளவுக்கு மாறுதல் ஏற்படாதவரை—மாறுதல் செய்யப்படாதவரை—நமக்கு மேற்கண்ட தீய குணங்களில் எவ்வித மாற்றமும் ஏற்பட முடியாது என்பதுடன், ஏற்படுத்த எவராலும் ஆகாது என்கிற முடிவுக்கு வரவேண்டியனாகிவிட்டேன்.

நமது கடவுள்களில் ஒன்றுகூட ஒழுக்கமாய், யோக்கியமாய், நாணயமாய் யோக்கியப் பொறுப்புடன் இருந்ததாகக் கடவுள் சம்பந்தப்பட்ட எந்த ஆதாரங்களிலுமே காணமுடியவில்லை—கேட்க முடியவில்லை. அது மாத்திரமல்லாமல், இன்றுள்ள மக்களில் எந்த இழி மக்களிடமிருந்தும் எப்படிப்பட்ட ஒழுக்க ஈனம், யோக்கிய ஈனம், நாணயமான காரியங்கள் எதுவும் இன்றுள்ள நம் கடவுள்கள் எதனிடமும் இல்லை என்று சொல்ல முடியாத தன்மையில் தானே நம் கடவுள்கள் இருந்துவருகின்றன! ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, யோக்கியக்கேடு இல்லாத நம் பதினாயிரக்கணக்கான கடவுள்கள், அவர்களின் பெண்டு பிள்ளைக் கடவுள்களில் ஒரு கடவுளையாவது காட்ட எந்த பக்தனாலாவது, குருமார்களினாலாவது, கடவுள் கதைகளினாலாவது காட்டமுடியுமா என்று பந்தயம் கட்டிக் கேட்கிறேன்.

மற்றும் வேத சாஸ்திர, தர்ம புராண—இதிகாசங்கள் எதிலாவது இன்று நாம் கூறும், விரும்பும் ஒழுக்கம், நாணயம், யோக்கியம், நேர்மை, யோக்கியமாகக் கருதும், நடக்கும் தன்மை மிகுந்திருப்பதாக எந்தப் பக்தன், குரு, பண்டிதன், புலவன் ஒருவனாலாவது காட்ட முடியுமா என்று கேட்கிறேன். அல்லது நமது பெரியோர்கள், முன்னோர்கள், தெய்வீகத்தன்மை பெற்ற ரிஷிகள், மகான்கள், மகாத்மாக்கள் என்பவர்களில் யாரிடமாவது மேற்கண்ட குணங்களோ, அல்லது அறிவோ, பண்போ இருந்ததாக யாராவது காட்ட முடியுமா என்று கேட்கிறேன். பந்தயம் கட்டிக் கேட்கிறேன்.

[‘விடுதலை’–தலையங்கம்—31–7–1972]

24. சுகாதார வாழ்வு

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

உலகத்திலேயே நாகரிகம் பெற்ற நாடுகள் என்று சொல்லப்படுபவைகளில் நம்நாடே சுகாதார விஷயத்தில் மிகவும் கேவலமாக இருந்து வருகிறது. இது வெளிநாடு சென்று வந்தவர்களுக்குத் தெரியும்.

வெளிநாட்டிற்கும் நமது நாட்டிற்கும் சுகாதாரக் கொள்கைகளும் அனுஷ்டிப்பு முறைகளும் நேர்தலைகீழாக இருக்கின்றன. அதாவது, நமது நாட்டுச் சுகாதாரமெல்லாம்—ஒரு சாதி மனிதனை மற்றொரு சாதி மனிதன் தொட்டால் தோஷம்; பார்த்தால் தோஷம்; நிழல் பட்டாலே தோஷம்; தெருவில் நடந்தால் தோஷம் என்கின்ற முறையிலிருக்கின்றதே தவிர—மற்றபடி மனிதன் அசிங்கமாக இருக்கக்கூடாது; துர்நாற்றம் வீசக்கூடாது; கெட்டுப்போன பதார்த்தமாக இருக்கக்கூடாது என்கின்ற கவலைகள் சுத்தமாய்க் கிடையாது.

இதன் காரணமெல்லாம் சுகாதார அறிவு இல்லாததேயாகும். ஒரு மனிதன் பணக்காரனாக வேண்டும்; பெரிய உத்தியோகஸ்தனாக வேண்டும்; பெரிய பண்டிதனாக வேண்டும்; பெருமையுடையவனாக வேண்டும் என்பன போன்ற விஷயங்களில் அதிகக் கவலை வைத்திருக்கிறானே ஒழிய—நல்ல திடகாத்திரத்துடன் இருக்க வேண்டும்; சுகஜீவியாக இருக்கவேண்டும் என்பன போன்ற விஷயங்களில் கவலைப்படுவதில்லை.

மேல்நாட்டார் முதலியவர்கள் தாங்கள் உலகத்தில் இருப்பதே சுகமாய் வாழ்வதற் கென்றும், சுகாதார முறைப்படி இருப்பதற்கே சம்பாதிப்பதென்றும், சுகாதார வாழ்க்கையை அனுசரித்தே தமது பொருளாதார நிலைமையென்றும் கருதி, அதற்கே தமது கவனத்தில் பெரும்பாகத்தைச் செலவு செய்கிறார்கள். அதனாலேயே மேல்நாட்டுக்காரன் நம்மைவிட இரட்டிப்புப் பலசாலியாகவும், சுகசரீரியாகவும், அதிகப் புத்திகூர்மையும் மனோஉறுதியும் உடையவனாகவும், நம்மைவிட இரட்டிப்பு வயது ஜீவியாகவுமிருந்து வருகிறான்.

நமது மக்களின் சராசரி வயது 24; வெள்ளைக்காரரின் சராசரி வயது 45. இதற்குக் காரணம் என்ன? சுகாதாரத்தினால் என்ன பலனிருக்கின்றது என்பதே நமக்குத் தெரியாது. “எல்லாம் கடவுள் செயல்” என்கின்ற ஒரே ஒரு அறிவுதான் நமக்கு உண்டு. நமக்குக் ‘காலரா’ வந்தால் ‘ஓங்காளியம்மன்’ குற்றமென்று பொங்கல் வைக்கவும்; வேல் மிரவணை செய்யவும் தான் முயற்சி செய்வோம். வைசூரி வந்தால் மாரியம்மன் குற்றமென்று மாரியாயிக்கு தயிர் அபிஷேகமும், இளநீர் அபிஷேகமும் தான் செய்வோம். வயிற்றுவலி வந்தால் திருப்பதி பொன்றாமத்தையனுக்கு வேண்டுதல் செய்வோம். நரம்புச் சிலந்தி வந்தால் சிலந்திராயனுக்கு அபிஷேகம் செய்வோம். நம் சங்கதிதானிப்படி என்றால், குழந்தைகளுக்குக் காயலா வந்தால் ‘பாலாரிஷ்டம்’ என்போம்; கிரக தோஷ

மென்போம்; செத்துவிட்டால் விதி மூண்டுவிட்டது என்போம். ஆகவே இந்த மாதிரி வழிகளில்தான் நமது புத்திகள் போகுமேயல்லாமல் ஏன் வியாதி வந்தது? ஆகாரத்திலாவது, பானத்திலாவது, காற்றிலாவது என்ன கெடுதி ஏற்பட்டது? சரீரத்தில் என்ன கோளாறு இருக்கின்றது? என்கின்ற விஷயங்களில் கவலை செலுத்தும்படியான அறிவோ, படிப்போ நமக்குக் கிடையாது.

நமதுநாட்டு மக்கள் தங்கள் வீட்டுக் குப்பைகளை பக்கத்து வீட்டுக்கு முன்புறமாய்க் கொண்டுபோய்க் கொட்டுவதே வழக்கம்; பக்கத்து வீட்டுக்காரன் நமது வீட்டுக்கு முன்புறத்தில் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போவது வழக்கம். நமது குழந்தைகளுக்குப் பொது வீதிகளேதான் கக்கூசுகள்.

[ஈரோட்டில், 27-8-1930-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 21-9-1930]

25. சாயலும் உடையும்

இந்திய மக்கள் எவ்வித முன்னேற்றமோ, விடுதலையோ, சுதந்திரமோ பெறுவதற்குத் தங்களை அருகர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதற்கு முன்பாக—இந்தியர்கள் ஒரே சமூகத்தார் ஒரே இலட்சியமுடையவர்—என்கிற நிலையை அடையவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இன்று முற்போக்கோ, சுதந்திரமோ, விடுதலையோ அடைந்திருக்கும் நாட்டார்கள் எல்லாம் முதலில் தங்கள் நாட்டாரெல்லாம் ஒரே சமூகத்தார் என்றும், ஒரே இலட்சியமுடையவர்கள் என்றுமானபிறகுதான் அவர்கள் முன்னேறவும், விடுதலை பெற்றுச் சுதந்திரமடையவும் முடிந்தது.

ஆனால், நமது இந்தியாவைப் பற்றிப் பேசப் புறப்படுவோமானால், இது ஒரு சமூக மக்கள்கொண்ட நாடு என்றோ, ஒரே இலட்சியமுள்ள மக்களைக் கொண்டநாடு என்றோ யாரும் சொல்ல முடியாது. ஏனெனில், இந்தியாவானது பல மதங்களாய், பல சாதிகளாய் இருப்பதோடு, மொழிகளிலும் நடை, உடை, பாவனைகளிலும் பலப் பல மாறுதல்களைக் கொண்டிருக்கிறது. இந்த வித்தியாசங்கள் என்று தொலைவது? மக்கள் எந்தக் காலம் ஒன்றுபட்டு ஒரு சமூகமாகி, ஒரே இலட்சியம் கொள்ளுவது என்பவைகளை நினைத்தால், மனம் ஒடிய வேண்டியிருக்கிறதே தவிர நம்பிக்கைக்கு இடமில்லை. என்றாலும், மக்கள் ஒன்றுபட்ட சாயலை அடைந்து பார்வையிலாவது,—அதாவது மனிதனுக்கு மனிதன் பார்த்தவுடனே ஒரு வேற்றுமை உணர்ச்சி தோன்றுவதற்கில்லாமல் செய்துவிட்டால்—பிறகு ஒவ்வொருவரும் தன்தன் மதம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவைகளைக் காட்டியபின்பு ஒரு சமயம் வேற்றுமை உணர்ச்சி உண்டானாலும், அதை அது முதலில் பார்த்தவுடன் தோன்றிய ஒற்றுமை உணர்ச்சியின் பலத்தால் தலை தூக்காதிருக்கும்படி செய்யலாம்.

ஆதலால், ஒரு நாட்டினருக்குள் இருக்கும் பலவிதமான வேற்றுமைகளை ஒழித்து ஒரு சமூகமாக்க வேண்டுமானால், முதலில் சாயலுக்கும் பிரித்துக் காட்டுவதற்கும் ஆதாரமாய் இருக்கும் உடையை ஒன்றுபடுத்தவேண்டியது முக்கியமானதாகும்.

உதாரணமாக, மற்ற நாட்டினரான சைனாக்காரரையோ, ஜப்பான்காரரையோ எடுத்துக்கொண்டால், அந்த நாட்டாரில் அந்த நாட்டாருக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் எவ்வித வித்தியாசத்தையும் கண்டுபிடிக்க முடியாத சாயலையும் உடையையும் கொண்டிருப்பது யாவருமறியலாம்.

இந்த உண்மையையும் இரகசியத்தையும் கண்டுதான் வீரர் கமால்பாட்சா அவர்கள் எல்லோரும் ஒரேவித உடை அணிந்து ஒரு சாயலாகவே இருக்கவேண்டுமென்று உத்தர

விட்டார். அதன்மூலம், துருக்கிநாடு சிறியதாக இருந்தாலும் அது தன்னையும் ஒரு வல்லரசு என்று மதிக்கும்படி செய்துகொண்டது. இதைப் பின்பற்றியேதான் ஆப்கானிஸ்தானமும் முயல்கின்றது.

நமது நாட்டிற்கும் இப்போது வெகு அவசரமாக உடையும் சாயலும் மாற்றப்பட்டு ஒன்றுபோல் தோன்றும்படி செய்யவேண்டியது அவசியம். இந்த எண்ணம் நமக்கும் நமது நண்பர்களில் பலருக்கும் வெகுநாளாகவே இருந்துவந்தாலும், என்ன மாறுதல் செய்வது என்னும் விஷயத்தில் யோசனையாகவே இருந்துவந்ததால் தாமதப்படுத்தப்பட்டு விட்டது. அதோடு நாம் சொல்லுவது மற்றவர்களுக்கும் சம்மதப்படும்படியாய் இருக்க வேண்டுமே, உடனே பின்பற்றவேண்டுமே என்கின்ற யோசனையும் இருந்துவந்தது.

சாயல், உடை, பழக்க உணர்ச்சி ஆகியவைகளில் மேல்நாட்டாரைப் போல் கட்டுப் படுகின்ற வழக்கமோ, கவலையோ நம்மவர்களுக்குச் சிறிதும் கிடையாததலினாலும், அவ்வித வித்தியாசங்களே இந்த நாட்டின் பெருமைக்கும், இயற்கை வனப்பிற்கும் அணிகலனாய் இருப்பதாக மக்கள் கருதிவந்ததாலும், இது இப்போது பிரஸ்தாபிக்கக் கூடாததாகக் கூட பலருக்குத் தோன்றினாலும் தோன்றலாம்.

மேல்நாட்டார் கட்டுப்பாட்டுக்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால், அவர்கள் உடை, முன் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் உள்ளமாறுதலும், அதை ஒரேயடியாய் அய்ரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய கண்டங்கள் உடனே பின்பற்றுவதும்—அதுபோலவே அப்பெண்கள் தலைமயிர் முன் இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் உள்ள வித்தியாசமும், அதை எல்லாக் கண்டங்களிலுள்ள வெள்ளைக்காரரும் பின்பற்றுவதையும் பார்த்தாலே போதுமானதாகும்.

அவசியம் என்றோ, கட்டுப்பாடு என்றோ அவர்களுக்குத் தோன்றிவிடுமானால், எந்த மாறுதலானாலும் அதை அரச ஆக்கினைபோல் பாவித்து, எல்லோரும் உடனே கீழ்ப் படியும் வழக்கம் அவர்களுக்குள் உண்டு. கட்டுப்பாட்டிற்கு மற்றொரு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிடுகின்றோம்.

அதாவது, அய்ரோப்பாவில் பெண்கள் தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டதில் சில உயர் குடும்பங்கள் என்று சொல்லப்படும் குடும்பப் பெண்கள் தாங்களும் தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டாலும், ஜார்ஜ் சக்கரவர்த்தியின் மனைவியான மேரிராணியார் தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளாததில் சற்று அதிருப்தியுடன் கட்டுப்பாட்டிற்குப் பயப்பட வேண்டியவர்களாக இருந்தார்களாம். இதை அரசகுடும்பத்தார் அறிந்ததும் இளவரசர் மனைவியரான இளவரசியை உடனே தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளும்படி செய்தார்களாம். இப்போது அது பொது தேசாச்சாரமாய் விட்டது.

ஆனால், நம் நாட்டிலோ எப்பேர்ப்பட்ட மாறுதலாயிருந்தாலும் அது எவ்வளவு சரியானதாயும், தேவையானதாயும் இருந்தாலும் பயனும் பொருளும் அற்ற பழைய வழக்கம் என்னும் 'பேய்க்கு'—அதாவது மூடபயத்திற்கு அடிமையாகி, உடனே அதைக் குற்றம் சொல்லவும், உள் எண்ணம் கற்பிக்கவும், எதிர்ப் பிரச்சாரம் செய்யவும் புறப்பட்டு விடுகிறார்கள். ஆதலால்தான், ஆயிரக் கணக்கான வருஷங்களாக இந்தியமக்கள் மாத்திரம் வேற்றுமைப்பட்டு, பிரிந்து, துவேஷங்கொண்டு, அன்னியருக்கு அடிமைகளாய் இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். இதை ஒரு வழியில் போக்க முயற்சிக்க வேண்டுமென்று கருதி, பல மாறுதல்களுடன் உடைமாறுதல்களைப் பற்றித் துணிந்து தெரிவிக்கிறேன்.

['குடி அரசு'–தலையங்கம்—9–11–1930]

2. ஆதித் திராவிடர்

1. தென் ஆப்பிரிக்கா தினம்

தென்ஆப்பிரிக்காவில் இந்தியர்களைத் தாழ்வாய் நடத்துவதைப்பற்றியும், இந்தியர்களை அந் நாட்டைவிட்டு ஒழிப்பதற்கென ஏற்படுத்திய சட்டத்தைப்பற்றியும் சென்ற 11–ந் தேதி இந்தியாவெங்கும் பொதுத் தினமாகக்கொண்டாடி, தேசமெங்கும் கண்டனத் தீர்மானங்கள் நடைபெற்றன. அக் கண்டன விஷயத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம். ஆனால், நமது நாட்டில் கோடிக்கணக்கான சகோதரர்களைத் தீண்டாதாரென்றும், பார்க்கக்கூடாதாரென்றும், தங்களுடைய வேதங்களையே படிக்கக்கூடாதாரென்றும், தங்களுடைய தெய்வங்களையே கண்டு வணங்கக்கூடாதாரென்றும் கொடுமை செய்திருக்கிற ஒரு நாட்டார், இக் கண்டனத் தீர்மானம் செய்வதில் ஏதாவது பலன் உண்டாகுமா? இதை அறிந்த தென் ஆப்பிரிக்கா வெள்ளையர்கள் இக் கண்டனத் தீர்மானங்களை மதிப்பார்களா? அல்லது குப்பைத்தொட்டியில் போடுவார்களா? என்பதை வாசகர்களே கவனித்துப் பார்த்தால், வீணாக ஒரு நாளை இப் போலிக் கண்டனத் தீர்மானங்களுக்காகப் பாழாக்கினோமே என்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

['குடிஅரசு'–தலையங்கம்—18–10–1925]

2. பறையரும் சூத்திரரும்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

ஆதித் திராவிடர் முன்னேற்றத்துக்கு உழைப்பதாய் நினைத்துக் கொள்வதும், ஆதித் திராவிடர்களுக்கு உழைப்பதாய்ச் சொல்லுவதும், வேஷத்திற்காகத்தான் உழைக்கிறவர்களும் பேசுகிறவர்களுமாய் இருப்பார்கள் என்பது எனது அபிப்பிராயம். அதாவது, இந்தியாவின் நன்மைக்காக அய்ரோப்பியர்கள் இந்தியாவை ஆளுகிறார்கள் என்பது போல்தான் அது ஆகுமே யல்லாமல், வேறல்ல. நான் அப்படி நினைக்கவேயில்லை.

'பறையர்' என்கிற ஒரு சாதிப் பெயர் நம் நாட்டிலிருப்பதால் தான் 'சூத்திரர்' என்கிற ஒரு சாதிப் பெயர் நம் நாட்டில் இருக்கிறது. 'பறையர்' என்கிற சாதிப் பெயரை விட, 'சூத்திரர்' என்கிற சாதிப் பெயர் மிக்க இழிவானது. இந்து சாஸ்திரப்படி, பறைய ஸ்திரிகளில் பதிவிரதைகளுக்கும்—சரியான ஒரு தாய்க்கும், தகப்பனுக்கும்—பிறந்தவர்களும் இருக்கலாம். 'சூத்திரர்'களில் அப்படி இருக்க இடமில்லை. ஏனென்றால், 'சூத்திரச்சி' என்றால் தாசி, வேசி மகள் என்பதுதான் பொருள். 'சூத்திரன்' என்றால் தாசி மகன், வேசி மகன் என்றுதான் பொருள். இதை ஒப்புக்கொள்ளாதவன் இந்து ஆக மாட்டான் என்பது சாஸ்திர சம்மதம். ஆகையால், என்போன்ற 'சூத்திரன்' என்று சொல்லப்படுபவன், 'பறையர்கள்' என்று சொல்லப்படுவோருக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம், 'சூத்திரர்கள்' என்று தம்மை யாரும் கருதக் கூடாது என்பதற்காகத்தானே யல்லாமல் வேறல்ல. ஆகையால், எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களைத் தாழ்மையாய்க் கருதும் பெண்களும் ஆண்களும், தாங்கள் பிறரால் உங்களை விடக் கேவலமாய்—தாழ்மையாய்க் கருதப்படுவதை அறிவதில்லை. அன்னியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையால், தங்களை மற்றவர்கள் தாழ்மையாய் நினைப்பது தங்களுக்கு ஈனமாய்த் தோன்றுவதில்லை.

இந்த இலட்சணத்தில், உங்களிடம் தப்பிதங் கண்டுபிடித்து, "உங்கள் உடம்பில் துர்வாடை அடிக்கிறது; நீங்கள் ஸ்நானம் செய்வதில்லை; துணி துவைப்பதில்லை; மாட்டு மாமிசம் சாப்பிடுகிறீர்கள்; மது அருந்துகிறீர்கள்; இதை விட்டுவிடுங்கள்" என்று ஞானோபதேசம் செய்கிறார்கள்.

நீங்கள் வேட்டி துவைக்காமலும் குளிக்காமலும் இருப்பதற்கு யார் ஜவாப்தாரி என்பதை அவர்கள் உணருவதில்லை. உங்களுக்குக் குடிக்கவே தண்ணீர் இல்லை என்றால் குளிப்பதெப்படி? அழுக்கும் நாற்றமும் உங்கள் கூடப் பிறந்தவையா என்று கேட்கிறேன். குளிக்கவும் வேட்டி துவைக்கவும், பல் துலக்கவும் தண்ணீர் கொடுக்காமல்—மகந்துகள் என்போரையும், சங்கராச்சாரிகள் என்போரையும் கொண்டுவந்து வீட்டில் அடைத்து வைத்து விட்டால், அவர்கள் துணி அழுக்கில்லாமல் இருக்குமா? அவர்கள் உடம்பும், வாயும் நாற்றமடிக்காமலிருக்குமா என்று யோசித்துப் பாருங்கள்! நாமே ஒருவனைப் பட்டினி போட்டு வைத்து, அவன் இறந்துபோன பிறகு, "பட்டினியால் இறந்துபோய்விட்டான், பாவி" என்று சொன்னால், யார் பாவி என்பதை நினைத்துப் பாருங்கள்!

அல்லாமலும், மாடு தின்பதும் மதுவருந்துவதும் நீங்கள் பறையர்களாக இருப்பதற்குக் காரணமென்று சொல்வது கொஞ்சமும் யோக்கியமான காரியமல்ல. மாடு சாப்பிட்டுக்கொண்டும், மதுவருந்திக்கொண்டும் இருப்பவர்கள் தான் இன்று உலகத்தையே ஆண்டுகொண்டிருக்கிறார்கள். தவிரவும், நீங்கள் மாடு சாப்பிடுவதன் குற்றம் உங்களைச் சார்ந்ததல்ல. உங்களை, மற்றவர்களைப் போல சரியானபடி சம்பாதிக்கவும், தாராளமாய்ச் சாப்பிடவும், தெருவில் நடக்கவும், தாராளமாய் எங்கும் போய் வேலைசெய்து சம்பாதிக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டதால், கொஞ்சப் பணத்தில் அதிக ஆகாரம் ஆகக்கூடியதான மாட்டு மாமிசத்தைப் புசிக்கவேண்டியதாயிற்று. மாட்டு மாமிசத்தை அனுமதிக்கும் மதத்தைச் சேர்ந்த முகமதியரிலும் கிறிஸ்தவரிலுங்கூட, சிலர் கைப் பணந் தாராளமாய்க் கிடைப்பதாயிருந்தால், 'நாங்கள் மாட்டு மாமிசம் சாப்பிடும் வழக்கம் இல்லை' என்று சொல்லி விடுகின்றார்கள். ஆதலால், நமது நாட்டில் மாட்டிறைச்சி சாப்பிடுவதற்குத் தரித்திரந்தான் முக்கிய காரணம். அல்லாமலும், மாட்டு மாமிசம் சாப்பிடுவது—ஆடு, கோழி, மீன், பன்றி இவைகளை விட என்ன அவ்வளவு அதிகமான பாவமாய்ப் போய்விட்டது? கோழியும் மீனும் பன்றியும், எச்சிலையும் பூச்சி புழுக்களையும் அழுக்குகளையும் மலத்தையும் தின்கின்றன. இப்படி இருக்க, இதைச் சாப்பிடுகிற வடநாட்டு 'பிராமணர்கள்' முதல் தென்னாட்டு சூத்திரர்கள் வரை, நல்ல சாதியும் தொடக்கூடியவர்களாயும் இருக்கும்போது, புல்லும் பருத்திக்கொட்டையும் தவிடும் பிண்ணாக்கும் தின்கிற மாட்டின் இறைச்சி சாப்பிடுவதனால் மாத்திரம் எப்படி ஒரு மனிதன் தாழ்ந்தவனாவான்? அப்படிப் பார்த்தாலும், மாடு சாப்பிடுகிறவர்களையெல்லாம் "தொடாதே; தெருவில் நடக்காதே; குளத்தில் தண்ணீர் சாப்பிடாதே; ஊருக்குள் குடி இருக்காதே" என்று சொல்லுகிறார்களா? இது வேண்டுமென்றே வீணாய் உங்களைத் தாழ்த்திவைப்பதற்காகச் சொல்லும் ஒரு யோக்கியப் பொறுப்பற்ற காரணமேயல்லாமல்—உண்மையான காரணமல்ல என்பதுதான் எனது முடிவு. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ளவேண்டும் என்பதை நான் ஆட்சேபிக்க வரவில்லை. மதுவையும் மாட்டு மாமிசத்தையும் தள்ளினால் தான், உங்கள் சாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரணத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. சாதி உயருவதற்காக மதுவையும் மாட்டு மாமிசத்தையும் விடுங்களென்று கேட்கமாட்டேன். அதற்காக நீங்கள் விடுவதும் அவ்வளவு அவசியமில்லை.

நம் நாட்டில் தென்னை, பனை மரங்களில் ஊறும் கள்ளும், காய்ச்சும் சாராயமும், வெளிநாடுகளிலிருந்து வரும் சாராய தினுசுகளும் சென்னை மாகாணத்தில் மாத்திரம் சுமார் 15, 20 கோடி ரூபாய் பெறும்படியானதையெல்லாம் நீங்களே குடித்து விடுகிறீர்களா?

யாராவது நம்புவார்களா? ஒருகாலும் நம்பமாட்டார்கள். ஆதலால், சாதி உயர்வை உத்தேசித்து இவற்றை விட்டுவிட வேண்டுமானால், மற்றவர்கள் முதலில் விடட்டும்.

"மதுபானம் மனிதனின் ஒழுக்கத்திற்கு விரோதமானதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மது விலக்குக்காக நானும் சிறிது தொண்டு செய்து இருக்கிறேன். ஆனால் சாதி உயர்வுக்கு எல்லா சாதியாரும் சாப்பிடும் மதுபானம் ஒன்றும் தடை செய்வது இல்லை. ஆகையால், மதுவிலக்கும் மாமிசவிலக்கும் சாதி உயர்வுக்கு அவசியம் என்று சொல்வது வேண்டுமென்றே சொல்லும் பொய். அல்லாமலும், உங்களிடம் சில குற்றங்கள் இருக்கிறதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அதாவது, நீங்களாகவே உங்கள் சாதிக்கு இழிவு சம்பாதித்துக் கொள்கிறீர்கள். அனாவசியமாக, யாரைக் கண்டாலும் 'சாமி' என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் உங்கள் இரத்தத்தில் கலந்திருக்கிறது. அதை மாற்றிவிட வேண்டும். ஒரு மனிதனைப் பார்த்தால், அவனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்பது உங்கள் மனத்தில் உதிக்க வேண்டும். சுயமரியாதையில் கவனமில்லாத சாதியாரை உயர்த்தினாலும் உயர மாட்டார்கள். அவனவனுக்கே, தான் மனிதன் என்ற உணர்ச்சி வரவேண்டும்.

நீங்கள் இனிமேல் யாரையும் 'சாமி' என்று கூப்பிடக்கூடாது. வேண்டுமானால் 'அய்யா' என்று கூப்பிடுங்கள். நீங்களாகவே பதுங்குவதும் ஒதுங்குவதுமான துர்க்குணங்கள் உங்களை விட்டுப் போகவேண்டும். அன்றுதான் நீங்கள் சமத்துவமாக நடத்தப்படுவீர்கள்.

[சிராவயலில், 7-4-1926-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 25-4-1926]

3. ஆதித் திராவிடர் நிலை

சகோதர, சகோதரிகளே!

இந்த ஜில்லா ஆதித் திராவிடர்கள் மகாநாட்டுக்கு நான் இதற்குமுன் நான்கு அய்ந்து தடவைகள் அழைக்கப்பட்டிருந்தாலும், அப்போது பல காரணங்களால் எனக்கு வரமுடியாமல் போய்விட்டதால், இந்தத் தடவை கட்டாயமாய் எப்படியாவது வரவேண்டுமென்று கருதியே வந்து சேர்ந்தேன். வரவேற்புக் கழகத் தலைவர் என்னைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து கூறினார். அவ்வளவு புகழ்ச்சி எனக்கு வெட்கத்தைக் கொடுத்ததே அல்லாமல், மற்றபடி அதில் உண்மை இல்லை என்று சொல்லுவேன்.

தீண்டாமை விலக்கு என்னும் விஷயத்தில் நான் ஏதாவது ஒரு சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால் அது எங்கள் நலத்திற்குச் செய்ததாகுமே ஒழிய, உங்கள் நலத்திற்கென்று செய்ததாக மாட்டாது.

ஏனெனில், உங்களுக்கும் எங்களுக்கும் சமூக வாழ்வின் பொதுத் தத்துவத்தில் சிறிதும் பேதமில்லை. உதாரணமாக, நீங்கள் எப்படித் தீண்டப்படாதவர்களோ அப்படியே தான் உங்களைவிடச் சிறிது மேல்வகுப்பார் என்கின்ற நாங்களும் ஒரு வகுப்பாருக்கு, அதாவது கடவுள் முகத்திலிருந்து பிறந்ததாகவும், பூலோகத் தேவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களுக்கு—நாங்கள் தீண்டாதவர்களாகவே இருக்கின்றோம். கோவில் பிரவேசம் என்பதிலும் உங்களைவிட சற்று முன்போக மாத்திரம் அனுமதிக்கப் படுகிறோமே தவிர, மற்றபடி பார்ப்பனன் இருக்கும் இடத்திற்குப் பின்னால்தான் நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நீங்கள் கோவிலுக்குள் வந்தால் எப்படிக் கோவிலும் சாமியும் தீட்டுப்பட்டுவிடுகின்றதோ, அப்படித்தான் நாங்களும் ஒரு இடத்திற்குப் போனால் சாமியும் கோவிலும் தீட்டுப்பட்டுவிடுகின்றன. உங்கள் எதிரில் சாப்பிட்டால்—உங்களுடன் சாப்பிட்டால்—உங்கள் வீட்டில் சாப்பிட்டால், எப்படித் தோஷமும் பாவமுமான காரியமாகி

விடுகின்றதோ, அப்படியே எங்கள் வீட்டில்—எங்கள் முன்னாலே—எங்கள் பக்கத்திலே சாப்பிட்டாலும் தோஷம், மோசம், பாவமென்றுதான் சொல்லப்படுகின்றது.

நமது சமூகத்திற்குப் பெயர் சொல்லி அழைப்பதிலும் உங்களைவிட இழிவாகவே தான் அழைக்கப்படுகின்றோம். உங்களைப் பறையர் என்றும் பள்ளர் என்றும் சொல்லுகிறார்கள். ஆனாலும் பறையர், பள்ளர் என்கின்ற வார்த்தை தொழிலையும் வசிப்பு இடத்தையும் பொறுத்து ஏற்படுத்தப்பட்டது. பறையனும் பள்ளனும் அந்தப் பெயரால் சுதந்திரமானவராகவும் இழிவுபடுத்தத் தகாதவராகவும் இருக்கிறார்கள். ஆனால், எங்களை அழைக்கும் பெயராகிய 'சூத்திரன்' என்று சொல்லப்படும் பெயரானது, பிறவியிலேயே இழிவை உண்டாக்கத் தக்கதும், ஒருவனுக்குப் பிறவி அடிமையாகவும், பிறவித் தாசி மகனாகவும், மற்றும், மிக்க இழிவான கருத்து கொண்டதாகவுமே இருக்கின்றது. எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் நிர்பந்தங்களும் சகிக்கமுடியாத இழிவைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கின்றது. பறையன் என்றால் சொந்தத் தாய் தந்தைக்கே பிறந்தவன் என்கின்ற கருத்து உண்டு. ஆனால், சூத்திரன் என்றால் தாசிமகன், வேசிமகன், வைப் பாட்டிமகன், பிறவி அடிமை, விலைக்கு வாங்கப்பட்ட அடிமை என்பதுபோன்ற பல இழிவுப் பொருள்கள் நிரம்பியிருக்கின்றது.

தவிர, உங்களைப் போன்ற ஒரு வகுப்பும்—அதாவது பஞ்சமர்கள் என்று சொல்லப் படுவதற்கும் அப்படி ஒன்று இருப்பதற்கும் பார்ப்பன மதத்தில்—அதாவது இந்து மதத்தில்—இடமே இல்லை. இந்து மதத்தில் சூத்திரன் என்பதற்கும் கீழாக ஒரு சாதியே பிறவியில் கிடையாது. ஆனால், வாழ்க்கையில் நான்கு வருணக்காரர்களும் நடந்து கொள்ளுகின்ற முறையில் 'சண்டாளர்கள்' என்று ஒரு வகுப்பு உண்டாகிறது. அதாவது—பார்ப்பன ஆணுக்கும் பார்ப்பனரல்லாத பெண்களுக்கும் பிறக்கும் பிள்ளைகள், பார்ப்பனர்களில் வேதம் படிக்காதவன், நெருப்பு வளர்க்காதவன், சந்தியாவந்தனம் செய்யாதவன், மற்றும் இதுபோல் பார்ப்பனீய கருமம் என்பவைகளைச் செய்யாதவன்—முதலானவர்கள் சண்டாளர்களாகின்றார்கள். இதைத் தர்க்க பார்ப்பனப் பண்டிதர்களும், வேதசாத்திர நிபுணர்கள் என்பவர்களுமே சொல்லி உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். ஆதலால், உங்களை யாராவது சண்டாளர்கள் என்று சொல்வார்களானால் அவர்கள் உங்களைப் பார்ப்பனிக்கும் பார்ப்பனரல்லாதார்க்கும், அல்லது பார்ப்பனர்க்கும் அல்லாத பெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படி இல்லையானால், ஒழுக்கந் தவறிய பார்ப்பனர்கள்தான் நீங்கள் என்பதைஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியானால், இன்றையத் தினம் பார்ப்பனச் சமூகத்திலுள்ள நூற்றுக்கு 99¾ பேர்வழிகள் சண்டாளர்களாகத்தான் இருக்கவேண்டும். எனவே, இந்த முறையில் உங்களுக்காவது தர்க்க ரீதியில் ஒரு வழியில் குற்றம்சொல்லாமலிருக்க ஆதாரங்களும் இடமும் இருக்கின்றன. ஆனால், எங்கள் நிலை நினைக்கவே முடியாதபடி, பெரிய இழிவாய் இருக்கின்றது. ஆதலால்தான், சமூக வாழ்வில் உங்களைவிட நாங்கள் தாழ்ந்த, இழிவான தன்மையில் இருக்கின்றவர்கள் என்று சொல்லுகின்றதுடன், இதனை இழிவு நீங்க முயற்சிக்கும் வேலை—முக்கியமாக எங்கள் வகுப்புக்காகச் செய்யப்படும் வேலை—என்றும் சொல்லு கின்றேன். தவிர, உங்களுக்கோ, எங்களுக்கோ இப்போது இருக்கும் இழிவுகள் ஒழிய வேண்டுமென்கின்ற கவலை சிறிதளவாவது—யாருக்காவது—இருக்குமானால், அவர்கள் இவ்விழிவு நிலைக்கு ஆதாரமாய் உள்ளதை அழிக்கத் தைரியங்கொண்டு தயாராய் இருந்தாலொழிய, கண்டிப்பாய் முடியவே முடியாது. ஏனெனில், இவ்விழிவு நிலைகளை ஏற்படுத்தியது மனிதனுடைய அயோக்கியத்தனமாய் இருந்தாலும், அதை நிலைநிறுத்தக் கருதி அதையே ஒரு மதத் தத்துவமாகவும், அத் தத்துவம் எல்லாம்வல்ல கடவுள் என்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கற்பிக்கப்பட்டு, நிலைநிறுத்தி அமுலில் நடத்திவரப்படுகின்றது.

இந் நிலை சிறிது மாற்றப்படவேண்டுமென்றாலும், மேற்கண்ட மதமும் கடவுளும் வந்து குறுக்கிடுகின்றன. ஆதலால், இந் நிலைக்கு ஆதாரமானதென்று சொல்லப்படும்

மதத்தையும், அம் மதத்தை உண்டாக்கினதாகச் சொல்லப்படும் கடவுளையும் எதிர்த்து நின்று அவற்றை அழித்தாலொழிய வேறு மார்க்கமில்லையென்று பதில் அளிக்கவும் ஒழிக்கவும், தைரியமாகவும் தயாராகவுமிருந்தாலொழிய,—வேறு மார்க்கத்தில் முடியவே முடியாது. அன்றியும் உங்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியும் வேண்டும். நாம் ஏன் தாழ்ந்தவர்கள்? நாம் ஏன் ஒருவனுக்குப் பாடுபடவேண்டும்? என்கின்ற உணர்ச்சி வர வேண்டும். நீங்களும் மற்றவர்களைப்போல் மனிதர்கள்தான் என்று கருதவேண்டும்.

உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால், இழிவாய் நடத்தினால் எதிர்த்து நிற்கவேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டனங்களுக்குக் குடியேறிவிட வேண்டும். அங்கும் ஜீவனத்திற்கு மார்க்கமில்லாவிட்டால் இம் மாதிரியான கொடுமையான மதத்தை உதறித்தள்ளிவிட்டு சமத்துவமுள்ள மதத்திற்குப் போய்விடவேண்டும். அதுவும் முடியாவிட்டால், வெளிநாடுகளுக்காவது கூலிகளாய்ப் போய் உயிரையாவது விடவேண்டும். இம் மாதிரியான உறுதியான முறைகளைக் கையாளத் துணியவில்லையானால், உங்கள்மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்லுவேன். கஷ்டப்படவும் கட்டுப் பாட்டை உடைத்து எறியவும், உயிரை விடவும் தயாராய் இல்லாமல், எந்தக் காரியத்தை யும் சாதிக்கமுடியாது. அன்றியும் வேறு ஒருவன் வந்து உங்களுக்கு உதவி செய் வான் என்று எதிர்பார்ப்பதும் பெரிய முட்டாள்தனமாகும்.

உங்களையே நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளத் துணிவு கொள்ளவேண்டும். படிப்பினாலும் பணம் சம்பாதிப்பதாலும், குளிப்பதனாலும், குடிக்காமல் இருப்பதாலும், மாமிசம் சாப்பிடாது இருப்பதினாலும் இவ்விழிவு போய்விடுமென்று சிலர் உங்களுக்கு உபதேசம் சொல்லுகின்றார்கள். நான் அவைகளை ஒப்புக்கொள்ளமாட்டேன். உங்க ளுடைய இழிவுக்கு இவைகள்தாம் காரணமானால் இந்தத் தன்மைகள் உள்ள மற்றவர்கள் இவ் விழிவை அடையாமல், பிராமணர்களாகவே எப்படி இருக்கின்றார்கள்? உங்களுடைய இழிவுக்குக் காரணம் உங்களுக்கு மானம், சுயமரியாதை உணர்ச்சி ஏற்படாததுதானே ஒழிய வேறில்லை. ஆகையால், நீங்கள் மற்றவர்களைப்போல் மனிதர்கள்தாம் என்று எண்ணிக் கொண்டு, அதற்கு ஏற்றவிதமாக நடந்துகொள்ளத் துணிவு கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்கத் தைரியம் கொள்ளுங்கள். சீக்கிரத்தில் விடுபடுவீர்கள்.

[சிறுவத்தூரில், 12-6-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 16-6-1929]

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

ஆதித் திராவிட சமூகத்தாருக்கு, மற்ற சமூகத்தார்கள் செய்யும் கொடுமைகளைப் பற்றிக் கேட்க எனக்கு ஆத்திரமாய் இருக்கின்றது. ஆனால், இதற்கு யார் ஜவாப்தாரி என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கையில், உங்களைக் கொடுமை செய்பவர்கள் ஜவாப் தாரியல்லர்; ஏனெனில், அவர்கள் தங்களது நம்பிக்கையின் பேரில், தங்களது மத உணர்ச்சி மத ஆதாரம் ஆகியவைகளில் உள்ள பற்றுதலின் பேரில், தங்கள் முன் ஜென்மத்தின் கர்மம்—பூர்வ புண்ணியம்—தலைவிதி என்கின்ற சுதந்திரத்தின் பேரில், ஒரு உரிமை பாராட்டி அம்மாதிரி செய்கின்றார்களேயொழிய வேறில்லை. அதுபோலவே, நீங்களும் பிறர் உங்களை நடத்துகின்ற அந்த மாதிரியான கொடுமைகளை நினைத்த மாத்திரம்—அதுவும் அந்தச் சமயத்தில் மாத்திரம்—சிறிது அக்கிரமமாகவும் கொடுமையாகவும் இருப்ப தாகக் கருதுகின்றீர்களே யொழிய, 'அதற்குக் காரணம் என்ன? இப்படிப்பட்ட ஒரு கொடுமையானதும், அக்கிரமமானதுமான காரியம் ஏன் நடக்கின்றது?' என்கின்ற விஷயத் தையும், 'இதை எப்படி அடியோடு ஒழிப்பது? இதற்காக என்ன செய்ய வேண்டியது?' என்கின்ற விஷயங்களையும் நீங்கள் நினைப்பதுமில்லை. அப்படிப்பட்டவைகளை, வேறு யாராவது எடுத்துச் சொன்னாலும் அவைகளை ஒப்புக்கொண்டு நடவடிக்கையில் நடப்பதற்கு நீங்கள் துணிவதுமில்லை. வீணாய், இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சமயத்தில்—

உங்களில் தனிப்பட்டவர்களுக்கு ஏதாவது சங்கடம் வந்த காலத்தில் மாத்திரம்—இரண்டொரு வார்த்தைகளால்—அதுவும் இதன் அஸ்திவாரத்தைக் கவனியாமல்—தனிப்பட்ட நபர் மீதோ, வகுப்பார் மீதோ குற்றம் சொல்லிக் கூப்பாடு போடுவதும், பிறகு நாலு நாள் கடந்துவிட்டால், அது மறைந்து போய்ப் பழையபடி ஆகிவிடுவதும் வழக்கமாயிருக்கிறது. பொது வாழ்க்கையில் உள்ள சில கனவான்களும் உங்களுக்குப் பரிந்து பேசுவது போல் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு, பிறகு அவரவர்கள் சொந்த வேலையை அவரவர்கள் பார்ப்பதும், பிறகு என்றும்போல் சாதாரணமாய் இருப்பதும் வழக்கம்.

எப்படி இருந்தாலும், மனிதன் மனித சுதந்திரம்—அதாவது தெருவில் நடப்பது, குளத்தில் தண்ணீர் மொள்ளுவது, மனிதனுக்கு மனிதன் தொடுவது முதலிய சுதந்திரங்கள் கூடக் கொடுப்பதற்குத் தன் நாட்டினனாலேயே தடைப்பட்டிருக்கும் போது, வேறு நாட்டானிடம் அரசாட்சி சுதந்திரம் கேட்பது வேடிக்கை இல்லையா? உங்களுக்கு மனித சுதந்திரம் கிடைக்க வேண்டும். அல்லது இந்த நாட்டிலாவது, மதத்திலாவது, சமூகத்திலாவது இல்லாமல் இருக்க வேண்டும். இந்த முடிவைத் தவிர, எப்படியோ உயிர் வாழ்ந்தால் போதும் என்று நினைத்துக்கொண்டு, இப்படியே இருப்பது மிகவும் மானங்கெட்ட தன்மையாகும். இவ்விஷயத்தில் பொறுத்துப் பார்க்கலாம் என்பது பேடித்தன்மையாகும். எவ்வளவு நாள் பொறுப்பது? எவ்வளவு மெல்லப் போவது? இந்த நிலைக்காக இதற்கு முன் எத்தனையோ பேர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வக்காலத்துப் பேசியாய்விட்டது. எத்தனையோ பேர் தர்மம், நியாயம் பேசியாய் விட்டது. அவ்வளவும் பழைய நிலையைப் பலப்படுத்தவே முடிந்தது. "தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து வேட்டை நாய் ஆகிவிட்டது" என்பது போல், தேசியமானது ஒரு பக்கம் அரசியல் சுதந்திரம் கேட்டுக் கொண்டும், மற்றொரு பக்கம் வருணாசிரம சுயராஜ்யமும் பெற முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த விழிப்பாசை மயக்கத்தில் கூட, "சாதி வித்தியாசம் இருக்க வேண்டும்; பறையர் வேண்டும்; மனுதர்மம் வேண்டும்" என்று மாநாடுகள் கூடிப் பேசப்படுகின்றது.

நம் மீதும் உங்கள் மீதும் சுமத்தப்பட்ட இழிவுகள் ஒழிய வேண்டும். அதற்காக, உயிரையும்விட, உங்கள் பெண்டு பிள்ளைகளும் நீங்களும் தயாராயிருங்கள்! இன்றைய தினம் உலகத்தில் பல தேசங்கள் பணக்காரன்—ஏழை என்கின்ற வித்தியாசமும் இருக்கக் கூடாது என்று முடிவுகட்டி, வேலைசெய்து வெற்றியடைந்து வருகின்ற காலத்தில், நீங்கள் 'பார்ப்பார சாதி—பறைச் சாதி; ஒருவரையொருவர் பார்த்தால்—தொட்டால்—தெருவில் நடந்தால் தீட்டு' என்ற கொள்கையை வைத்துக்கொண்டிருந்தால், நமக்கும் மேல் நாட்டிற்கும் கருத்தில் எவ்வளவு வித்தியாசம் என்பதை யோசியுங்கள்! இந்த உணர்ச்சிகள் உங்களுக்குத் தோன்றாமல் இருப்பதற்குக் காரணம், உங்கள் முட்டாள்தனமும், அதற்கு ஆதரவான உங்கள் மத நம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையுமாகும். ஆதலால், அவற்றை முதலில் விரட்டி அடியுங்கள். பிறகு சுயமரியாதையும் சமத்துவமும் கிடைக்கும்.

(இருகூரில், 3-1-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-1-1931)

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சாதியை நாங்கள் ஒன்றாக்குகின்றோம். ஆம்! ஆக்க முயற்சிக்கின்றோம். அதில் சந்தேகமில்லை, ஆனால், சீக்கிரத்தில் முடியுமா என்பது சந்தேகம். மனித சாதி ஒன்றாகித் தான் தீரவேண்டும். அதற்குத் தடை செய்கின்றவர்கள் அயோக்கியர்கள்—மடையர்கள் என்று தைரியமாகச் சொல்லுகின்றோம். எங்கள் பெண்களை பறையனுக்குக் கொடுப்போமா என்று கேட்கப்படுகின்றது.

இது ஒரு அறிவீனமான கேள்வி; அல்லது அயோக்கியத்தனமான கேள்வி என்றே சொல்லுவேன். ஏனெனில், எங்கள் பெண்களை நாங்கள் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்

களுடன் கூடி வாழச் செய்யப்போகின்றோமே யொழிய, எங்களுக்கு இஷ்டமானவர் களுக்குக் கொடுக்கும் உரிமையைக் கொண்டாடுகின்றவர்கள் அல்லர். பெண்களை ஒரு சாமானாகக் கருதி, 'ஒருவருக்குக் கொடுப்பது' என்கின்ற முறையை ஒழிக்க முயற்சிக் கின்றோம்.

நண்பர்களே! நாங்கள் ஆதித் திராவிடர்களைப்பற்றிப் பேசும் போது, பார்ப்பனர் கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு. ஆனால், பார்ப்பனரல்லாதார் மனவருத்த மடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையுமே யாகும். ஏனெனில், நமது சமூகத்தில் பார்ப்பனர் என்கின்ற கூட்டத்தாராகிய 100க்கு 3 வீதமுள்ள ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை), ஆதித் திராவிடன் என்கின்ற பட்டமில்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள்! சூத்திரன் என்கின்ற 'கலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால், பறையன் என்கின்ற பட்டம் போகவேண்டு மென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா?

பறையன் பட்டம் போகாமல், உங்களுடைய சூத்திரப்பட்டம் போய்விடும் என்று கருதுகிறீர்களேயானால், நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்.

மற்றும் பேசப்போனால், பறையன், சக்கிலி என்பதற்கு இன்னார்தான் உரிமை என்றும், அது கீழ்சாதி என்பதற்கு இன்னது ஆதாரமென்றும் சொல்லுவதற்கு ஒன்றுமே இல்லை. கை பலமேயொழிய, தந்திரமேயொழிய வேறில்லை. ஆதலால், பறைப்பட்ட மாவது சீக்கிரத்தில் மறைந்துவிடக்கூடும். உங்கள் சூத்திரப் பட்டத்திற்குக் கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராணம் இதிகாசம் ஆகிய அனேக ஆதாரங்கள் உண்டு. இத்தனை யையும் நாசமாக்கி அடியோடு ஒழித்தாலல்லாமல் உங்கள் தலையில் இருக்கும் சூத்திரப் பட்டம் கீழே இறங்காது.

ஆகவே, யாருக்காவது மான உணர்ச்சி இருந்திருந்தால், "நீங்கள் சாதியை ஒன்றாக்குகின்றீர்களே!" என்று நம்மைக் கேட்டிருக்க மாட்டார்கள்.

ஆகவே, ஆதித் திராவிடர் நன்மையைக் கோரிப் பேசப்படும் பேச்சுகளும், செய்யப் படும் முயற்சிகளும் ஆதித் திராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லோருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள்.

[நாகையில், 3-10-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-10-1931]

4. தீண்டாமை

அமெரிக்காவில் நீக்ரோவர் துயரத்திற்கு, எந்த, 'நிற இறுமாப்பு' காரணமோ, அதே 'நிற இறுமாப்பு' தான் நமது நாட்டுத் தீண்டாமைக்குக் காரணமாயிருக்கிறது. இது ஆரியர் ஆதிகாலத்தில் நமது நாட்டில் குடியேறியபோது, பழங்குடி மக்களை அசுரர், இராட்சதர், மிலேச்சர், பஞ்சமர், சூத்திரர் என்று இழிவு படுத்தக் காரணமாய் இருந்தது.

தீண்டாமை என்பது, ஏணி மரப்படிபோல், இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கின்றது. தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று பேசும் இந்தியத் தலைவர்கள் வருணாசிரம தர்மத்தை ஒழிக்க விரும்புவதில்லை.

['குடி அரசு'—தலையங்கம்—12-4-1931]

உலகிலுள்ள கொடுமைகள் எல்லாவற்றையும் விட, இந்தியாவில் மக்களை மக்கள் தீண்டாமை என்கின்ற இழிவு சம்பந்தமாகச் செய்துவரும் கொடுமையே மிகப் பெரிய கொடுமை என்றும், அதற்குச் சமமாக வேறு எந்தக் கொடுமையும் கூறமுடியாதென்றும் எல்லா மக்களாலும் அரசியல் சமூக இயல்வாதிகளாலும் சொல்லப்பட்டு, பொதுமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். ஆனால், அது விஷயத்தில் மாத்திரம் பயன்படத் தக்க வழியில் ஏதாவதொரு முயற்சியை இதுவரை யாரும் எடுத்துக் கொள்ளாமல்—வெறும் வாய்ப்பந்தல் போடுவதனாலேயே, மக்களை ஏமாற்றிக்கொண்டு காலங் கழித்துவருவதும் பிரத்யட்சத்தில் தெரிந்த காரியமாகும்.

ஏதோ ஒருவகையில் சுயமரியாதை இயக்கம் செய்துள்ள கிளர்ச்சிகளாலும், தீண்டத் தகாதார் எனப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள தீவிர உணர்ச்சியாலும், பொதுமக்களுள் ஒருவித பரபரப்பு ஏற்பட்டு இருப்பதுடன், எதிர்ப்புக்கு அதிக மரியாதை இருக்காது என்பதாகவும் தோன்றுகிறது. ஆதலால், காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களும் தொண்டர்களும் தனியாகக் கூடியாவது இந்தச் சமயத்தில்—மற்ற இயக்கக்காரர்களையும் கலந்துகொண்டும்—ஏதாவது முயற்சிக்கு முந்துவார்களாக! இந்த நிலையில் தீண்டப் படாதவர்கள் என்பவர்களும் தகுந்தபடி கிளர்ச்சி செய்தோ, அல்லது தீண்டாமைக்கு ஆதாரமான இந்து மதத்தை விட்டுவிடச் செய்தோ, தங்களது இழிவுகளையும் கொடுமை களையும் ஒழித்துக் கொள்ள முயற்சி செய்யவேண்டும்.

தீண்டாதார் என்பவர்களில் ஆங்கிலப் படிப்பு படைத்தோ அல்லது செல்வம் படைத்தோ உத்தியோகம், நியமனம் முதலியவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் களால் தீவிரமான முயற்சிகள் எதுவும் செய்யப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக் காமல், ஆங்காங்குள்ளவர்கள் கூடிக்கூடி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—24-5-1931]

தீண்டாமையை ஒழித்து, அதனால் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் மக்களைக் கைதூக்கி விடவேண்டியது ஒழுங்கும் நியாயமும் அவசியமும் ஆகும் என்ற உணர்ச்சி, தற்போது நமது நாட்டு உயர்சாதி மக்கள் எனப்படுவோர் சிலருடைய மனத்தில் பட்டிருப்பதற்குக் காரணம், தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் செய்யும் கிளர்ச்சியும், சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக நமது இயக்கம் செய்துவரும் பிரச்சாரமுமே என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், தீண்டாமையை எந்த வழியினால் ஒழிக்கமுடியும் என்பதை ஆலோசிக்கும் போது, எல்லோரும் கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமலிருக்க முடியாது.

இந்து மதத்தைச் சாராதவர்களும் இந்து மதத்திற்கு எதிரானவர்களும், இந்து மதப் பற்றுடைய மக்களால், 'அன்னியர்கள்', 'மிலேச்சர்கள்' என்று இழித்துக் கூறக் கூடியவர் களுமாகிய வேற்று மதத்தினர்கள் உயர்சாதி இந்துக்களுடன் தீண்டாமை யென்ற வேறுபாடின்றி நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், நீண்டகாலமாக இந்துக்கள் என்றே மதிக்கப்பட்டு வருகின்ற தாழ்த்தப் பட்ட மக்களோ, உயர்சாதி இந்துக்களுடன் நெருங்கிப் பழக முடியாதவர்களாகவும், அவர்கள் வசிக்கும் தெரு, குளம், கிணறு, பள்ளிக்கூடம், கோயில் முதலியவைகளைச் சமத்துவமாக அனுபவிக்க முடியாதவர்களாகவும்; 'சண்டாளர்கள்' என்றும்; 'பாவிகள்' என்றும்; 'பஞ்சமர்கள்' என்றும்; 'பாதகர்கள்' என்றும்; 'புலையர்கள்' என்றும் பலவாறு இகழ்ந்து ஒதுக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தத் தகாத நடத்தைக்குக் காரணம் என்ன என்பதைக் கொஞ்சம் பொறுமையோடு ஆலோசித்தால் விளங்காமல் போகாது.

அன்னியராயிருந்தாலும் அவர்களிடம் மற்ற உயர்ந்தசாதி இந்துக்களைப் போலக் கல்வியும் செல்வமும் திறமையும் செல்வாக்கும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் அமைந்திருப்பதே, அவர்கள் மற்ற உயர்ந்தசாதி இந்துக்களுடன் சமத்துவமாகப் பழகுவதற்குக் காரணமாகும்.

சகோதர இந்துக்கள் என்று சொல்லப்பட்டாலும் தாழ்த்தப்பட்டவர்களிடம் செல்வமும் கல்வியும் திறமையும் செல்வாக்கும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லாமையே, இவர்கள் 'உயர் சாதி' என்று சொல்லப்படுகின்ற இந்துக்களால் தீண்டப்படாதவர்களாகக் கொடுமைப்படுவதற்குக் காரணமாகும்.

ஆகையால், உண்மையில் தீண்டப்படாத சகோதரர்கள் சமூக சமத்துவம் பெற வேண்டுமானால், அவர்கள் கல்வியிலும் திறமையிலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் ஒற்றுமையிலும் மற்றவர்களைப் போல சமநிலையை அடையவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தீண்டப்படாதவர்கள் மற்றவர்களுடன் சமத்துவமாகக் கோவிலுக்குச் செல்லும் உரிமை பெறுவதன் மூலம் ஓரளவு தீண்டாமை ஒழிகின்றதென்பதையும், சமத்துவம் கிடைக்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். இதுவும்—இரயில் வண்டிகளிலும், திருவிழாக் காலங்களிலும், கோயில்களின் தேர்களை இழுக்கும் காலங்களிலும் எந்த அளவில் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படுகின்றதோ, அந்த அளவில்தான் கோயில் நுழைவினாலும் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படும் என்பதே நமது கருத்தாகும். ஆகவே, கோயில் நுழைவினால் நிரந்தரமாகத் தீண்டாமை ஒழியவோ, சமத்துவம் ஏற்பட்டுவிடவோ முடியாது என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

ஆகையால், பொது இடத்துக்குப் போகக்கூடிய உரிமை தீண்டாதார்களுக்கும் இருக்கவேண்டும் என்ற கருத்துடன் கோயில் பிரவேச முயற்சி நடைபெறுமானால்—அதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கவே கடமைப்பட்டுள்ளோம் என்பதில் அய்யமில்லை.

இவ்வாறில்லாமல், தீண்டாதவர்களும் கோயிலில் சென்று, அங்கு இருப்பதாகச் சொல்லப்படும் 'கடவுள்' என்கின்ற குழவிக் கல்லுகளையும் பதுமைகளையும் தொழுவதற்கும்; அவைகளின் பேரால் மற்ற மூட மக்களைப்போல் பணம் செலவு செய்வதற்கும்; இவ்வாறு செய்வதன்மூலம் அவர்கள் 'பக்திமான்கள்' ஆவதற்கும் 'மோட்சம்' பெறுவதற்கும் கோயில் பிரவேசம் அவசியம் என்ற கருத்துடன் முயற்சி செய்யப்படுமானால்—"இம்முயற்சி கண்டிப்பாகத் தீண்டாதவர்களுக்குக் கேடு சூழும் முயற்சியே" என்றுதான் கூறுவோம்.

இப்பொழுது நமது நாட்டில் இருந்துவரும் எண்ணற்ற கோயில்கள் காரணமாகவும் அவைகளின் சார்பில் நடைபெற்றுவரும் 'திருவிழா'க்களின் காரணமாகவும், இவைகளின் மேல் பாமர மக்களுக்குள்ள 'நம்பிக்கை', 'பக்தி' முதலியவைகளின் காரணமாகவுமே பொதுஜனங்களின் செல்வம் பாழாகின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதோடு மட்டுமல்லாமல், பொதுஜனங்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும் மூட நம்பிக்கை மிகுந்தவர்களாகவும் இருந்து வருகின்றதற்குக் கோயில்களே காரணமாகும். இந்த நிலையைக் கருதும்போது, நமது நாட்டுப் பொதுமக்கள் சேவை என்ன என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்!

['குடி அரசு'—தலையங்கம்—8-5-1932]

தலைவரவர்களே! தோழர்களே!

தாழ்த்தப்பட்ட மக்களை, அவர்களுக்கு மற்றவர்கள் இழைத்துவரும் கொடுமையிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால், அது ஒரு புரட்சி வேலையேயாகும். ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை ஒரு பெரிய அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றது.

எப்படி என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்சாதி மக்கள்; தீண்டப்படாதவர்கள் என்பவர்களெல்லாம் பிறவியிலேயே கீழ்மைத்தன்மை அடைந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்பிவிக்கப்பட்டவர்கள் என்றும், கடவுள் செயலையோ மத விதிகளையோ யாரும் மாற்றக்கூடாது என்றும், அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவை அல்லவென்றும் சொல்லக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும் தீண்டாமைத் தத்துவம் மனித சமூகத்திலிருந்து விலக்கப்படுவதும், வெறும் வார்த்தையாலோ, பிரச்சாரத்தினாலோ, மேல்சாதிக்காரர்களைக் கேட்டுக்கொள்வதினாலோ ஆகக்கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால், அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்றுதான் சொல்லுவேன்.

தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களில் சிலர் தாங்கள் ஏதோ குளித்து முழுகிவிட்டு விபூதிப் பூச்சோ, பட்டை நாமமோ விதிப்படி அணிந்து, வைதீகர்கள்போல் வேஷம் போட்டுக்கொண்டு, மது மாமிசம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிக் கொண்டு, சுவாமி என்று பெயர் வைத்துக்கொண்டு திரிந்தால்—தங்கள் நிலை உயர்ந்து விடும் என்றும், தீண்டாமை ஒழிந்துவிடும் என்றும் கருதியிருக்கிறார்கள். இது மற்றவர்களை ஏமாற்ற நினைத்துத் தங்களையே ஏமாற்றிக்கொள்ளும் பைத்தியக்காரத்தனமேயாகும்.

இந்தப்படி வெகுபேர்—தாழ்த்தப்பட்ட மக்களில், ஆதித் திராவிடர்களில்—வெகு காலமாகவே வேஷம் போட்டுப் பார்த்தாகிவிட்டது. அதற்குப் பல புராண சரித்திர ஆதாரங்கள் உண்டு.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்து நாளது வரை, தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஒரு காரியமும் முடிந்ததில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

ஏதோ சில பாஷாண்டிகள் செய்த காரியங்களைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளத்தான் முடிந்ததே ஒழிய, அப்படிப்பட்ட வேஷத்தாலும் பக்தியாலும் காரியத்தில் ஏதும் ஆகி இருக்காது.

ஆகவே, கடவுளும் மதமும் அதற்கு ஆதாரமான கீதையும் மனுதர்ம சாஸ்திரமும் காப்பாற்றப்படுவதாயிருந்தால், சூத்திரத் தன்மையும் கீழ்சாதித் தன்மையும் தீண்டப்படாமையும் எப்படி மாற்றப்பட முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும் சாதி வித்தியாசம் ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100க்கு 100 பேரும் கீதை, மனுதர்ம சாஸ்திரம் ஆகியவற்றை நம்பும்—ஆதரிக்கும் சோணகிரிகளேயாவார்கள்.

இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும், அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களே யாவார்கள்.

ஆகவே, தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாகவேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால்

மதத்தை விட்டு நீங்களாவது விலகியாகவேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒருநாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப்போன்ற உறுதி.

உதாரணம் வேண்டுமானால், இதுவரையில் தீண்டப்படாதவர்களாய் இருந்து, மனித சமூகத்தில் தீண்டக்கூடியவர்களாக ஆன எவரும்—தீண்டப்படாதவர்களாய் இருந்த போது அவர்கள்மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதறித் தள்ளிவிட்ட பின்புதான்—'தீண்டத் தக்கவர்கள்' ஆகியிருக்கிறார்கள்.

ஆதலால், மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு தீண்டாமையை விலக்கிவிடலாம் என்று நினைத்து ஏமாற்றமடையாதீர்கள்.

[சீர்காழியில் 10-7-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1935]

5. ஆட்சிக் காலங்களும் ஆதித் திராவிடர் நிலையும்

தலைவரவர்களே! தோழர்களே!

இந் நாட்டில் இன்று எங்கு பார்த்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் மாநாடு என்பதாகப் பல மகாநாடுகள் கூட்டி, தாழ்த்தப்பட்ட மக்கள் குறைகளைப்பற்றிப் பேசப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் சுதந்திரம் பெறவேண்டும் என்றும், சுயமரியாதை பெறவேண்டுமென்றும் இந்த 10, 18 வருஷ காலமாகத்தான் வெளிப்படையாகவும், தைரிய மாகவும் கிளர்ச்சி செய்ய சந்தர்ப்பமும் சவுகரியமும் பெற்றிருக்கிறார்களென்பதோடு, உங்களுக்கே இந்த உணர்ச்சியும் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நாட்டில், புராண காலங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் மேம்பாட்டிற் காகப் பொதுவாக உழைத்ததாகவோ, உழைக்க ஆசைப்பட்டதாகவோ காணமுடியவில்லை யென்றாலும், ஏதோ இரண்டொருவர்—நந்தன், பாணன், சொக்கன் என்பதாகச் சிலர்—தங்கள் தங்கள் சொந்தத்தில் முத்தியடையவோ, கடவுளைத் தரிசிக்கவோவென்று பாடுபட்டதாகப் புராணங்களில் காணலாம். அவை வெற்றிபெற்றதாகக் கதைகள் இருந்த போதிலும், அவை நம்ப முடியாததும், சாதிக்கமுடியாததுமான பெரிய நிபந்தனைகள்மீது—அதாவது நெருப்பில் குளித்துவிட்டு வந்தும், கடவுளுடைய சம்மதமும் உத்தரவும் பெற்ற பிறகும்—ஏதோ முத்தியோ, மோட்சமோ அடைந்ததாகத்தான் காணப்படுகின்றனவே யொழிய, இந்த உலகத்தில் மற்ற மனிதர்களைப் போல் மானத்துடன் வாழ முயற்சித்த தாகவோ, வாழ முடிந்ததாகவோ பொய்க் கதைகள் கூடக் கிடையாது. அதுமாத்திர மல்லாமல், இந்து அரசர்கள் காலத்திலும் நீங்கள் இன்றுள்ள நிலையைவிட மிக்க கேவல மான நிலையில் நடத்தப்பட்டதாகத்தான் காணமுடிகின்றது.

அன்றியும், தமிழ்அரசர்கள், மூவேந்தர்கள் முதலியவர்களுடைய ஆட்சிக்காலத் திலும் நீங்கள் மிகக் கேவலமாகவே உயிர்வாழ்ந்ததாகத்தான் காணக்கிடக்கிறது.

அவற்றிற்கு உதாரணம், திருவாங்கூர், கொச்சி முதலிய இந்து அரசர்கள் வாழும் நாட்டில், நீங்கள் எப்படி நடத்தப்பட்டீர்கள்—நடத்தப்படுகிறீர்களென்பதைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.

இந்து அரசர்களல்லாத முகமதிய அரசர்கள், கிறிஸ்துவ அரசர்கள் ஆகியவர்கள் ஆட்சிக்காலமே உங்களை ஓரளவுக்காவது மனிதர்களாக நடத்தப்பட்ட காலமாகச் சரித்திரமும், பிரத்தியட்ச அனுபவமும் காணப்படுகின்றன.

உண்மையாகவே, இந் நாட்டில் முகமதிய அரசர்கள் ஆட்சி 600, 700 வருஷ காலம் நடந்திருக்கவில்லையானால், தாழ்த்தப்பட்ட—தீண்டப்படாத மக்களின் எண்ணிக்கை இன்று, 'தோட்டத்தில் முக்கால் பாகம் கிணறு' என்பது போல், சுமார் 15—20 கோடி மக்களுக்குக் குறையாமல் இருந்திருக்கும்.

தீண்டப்படாதவர்கள் எண்ணிக்கை இன்று இந்திய ஜனத்தொகையில் அய்ந்தில் ஒரு பாகத்திற்குள்ளாக இருப்பதற்குக் காரணம் முகமதிய ஆட்சியேயாகும். அது பெருகாமல் அந்த அளவுக்கு உள்ளாகவே இருந்து வருவதற்கும், கூடிய சீக்கிரத்தில் அடியோடு ஒழிந்துபோவதற்கும் நம்பிக்கைக்கு இடம் ஏற்படக் காரணமாய் இருப்பது பிரிட்டிஷ் அரசாட்சியின் பயனேயாகும்.

இந்த இரண்டு ஆட்சிகளும் எந்தக் காரணத்தாலோ இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்க வில்லையானால்—இந்தியாவில் இராஜ குடும்பமும், பார்ப்பனர் குடும்பமும் தவிர—மற்ற மக்கள் எல்லோரும் தீண்டத்தகாதவர்களாய், தாழ்த்தப்பட்ட மக்களாய்த்தான் இருந்திருக்க வேண்டும். இன்றுகூடப் பார்ப்பனரொழிந்த மற்ற மக்கள், 'கீழ்ச் சாதிக்காரராய், மத சம்பிரதாயப்படியும் பழக்கவழக்கப்படியும்—ஏன் அரசாங்கச் சட்ட முறைப்படியும்—குறிப் பிடப்பட்டிருப்பதை யாரே மறுக்கமுடியும்?

பழையகால அரசர்களின் யோக்கியதைகளைப் பார்க்கவேண்டுமானால்—அவர்கள் மக்களை எப்படி நடத்தினார்கள் என்பதை உணரவேண்டுமானால்—இராமன், அரிச் சந்திரன், சந்தனராஜன், பாண்டியன் முதலிய இந்து அரசர்கள் என்பவர்கள் நாடகத்தைப் பார்த்தாலே அறியலாம்.

முதன்முதலாக அரசன் கொலுமண்டபத்துக்கு வந்தவுடன் என்ன கேட்கிறான்?

"மந்திரி! நமது நாட்டில் பிராமணர்கள் ஜப, தபம்; ஓமம், எக்கியம்; யாகம் முதலியவைகளைச் செய்து சுகமாக வாழ்கின்றார்களா?

அவர்களுக்கு மான்யங்கள் முதலியவைகள் தாராளமாக விடப்பட்டிருக்கின்றனவா?

பிராமணர் முதலியவர்களுக்குச் சூத்திரர்கள் அடங்கி, ஒடுங்கி, ஒழுங்காகத் தொண்டு செய்து வருகிறார்களா?" என்றுதான் நகர விசாரணை செய்கிறார்களே யொழிய, வேறு என்ன?

ஆனால், இன்றுள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் நகர விசாரணை எப்படி இருக்கிற தென்பதை யோசித்துப் பாருங்கள்!

சமீப காலத்தில் பாராளுமன்றம் என்னும் பார்லிமெண்டைத் துவக்கியபோது அரசர்பெருமான் என்ன சொன்னார்?

"என்னுடைய பிரஜைகள் எல்லோரையும்—அவர்கள் எந்த சாதியினராக இருந் தாலும்—எவ்வித வித்தியாசமுமில்லாமல், எல்லாத்துறையிலும் சரிசமமாய் நடத்துவேன்" என்று சொல்லித் திறந்துவைத்தார்.

"அந்தப்படி அவர் நடத்துவார் என்பதற்கு என்ன நம்பிக்கை?" என்று இராம ராஜ்ய ஸ்தாபிதர்களாகிய காந்தியாரும், காந்தி பக்தர்களும் கேட்கலாம்.

மற்ற காரியங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் எப்படி நடந்துகொண்டு வந்தது என்றாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களாகிய உங்களைப் பொறுத்தமட்டில் யோக்கியமாகவும்—கூடிய அளவுக்கு நீதியாகவும்—ஆட்சி புரிந்திருக்கிறது என்று தைரிய மாகச் சொல்லுவேன்.

இன்று தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து சபை, சட்டசபை, இந்திய சட்டசபை ஆகியவைகளில் உங்களுக்கு ஸ்தானமளித்து—பெரிய சாஸ்திரிகள், 'கனபாடி'கள், சங்கராச்சாரிய சுவாமிகள், இராஜாக்கள், ஜமீன்தார்கள் என்பவர்களுக்குச் சமமாய் நடத்துகிறார்கள். இராமராஜ்யத்தில் இந்த சபைகளுக்கு கக்கூஸ் வாரவோ, 'பங்கா' போடவோகூட—உங்களை அனுமதிக்கமாட்டார்கள்.

உதாரணமாக, இன்றும் சில அக்கிரகாரங்களில் எச்சிலை எடுக்கவோ, குப்பை கூட்டவோ, கக்கூஸ் வாரவோகூட உங்களை அனுமதிப்பதில்லை.

கும்பகோணம் முனிசிபாலிட்டியில், "அக்கிரகாரத்துக்கு கக்கூஸ் எடுக்கச் சூத்திரர்கள் என்பவர்களை நியமிக்கவேண்டும்" என்று பாடுபட்டது உங்களுக்குத் தெரியாதா?

இப்படி, பிரிட்டிஷ் அரசாங்கம் உங்களைப் பொறுத்தவரை எவ்வளவோ நன்மை செய்துவந்திருப்பதோடு, உங்களுக்கு ஒரு மந்திரி ஸ்தானமும் கிடைக்கும்படியான அளவுக்குச் சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி சீர்திருத்தம் வழங்கி இருக்கிறது.

ஆகவே, நான் ஏதோ இராஜவிஸ்வாச உபந்யாசம் செய்வதாய் தேசாபிமான வீரர்களுக்குத் தோன்றலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கம் மாத்திரமேயல்லாமல், உலகிலுள்ள அரசாங்கங்கள் எல்லாமே ஒழிந்துபோக வேண்டும் என்கின்ற ஆசையுள்ளவன் நான்.

இராஜாக்கள் என்பவர்களே இன்றைய உலகுக்கு அவசியமில்லாதவர்கள் என்றும், பொதுஜனங்களுடைய சுயமரியாதைக்குக் கேடானவர்கள் என்றும் கருதியும், சொல்லியும், எழுதியும் வந்திருக்கின்றவன் நான்.

இராஜாக்கள் மாத்திரமல்லாமல் பணக்காரர்கள், ஜமீன்தார்கள், வியாபாரிகள், முதலாளிகள் என்கின்றதான கூட்டங்கள் கூடப் பொதுஜனங்களை அரித்துத் தின்னும் புழுக்களானதால், அவை அழிக்கப்படவேண்டியவை என்றும் கூடச் சொல்லுகிறவன் நான்.

உங்களைப் பொறுத்தவரையிலும், நீங்கள் காந்தி ராஜ்யத்துக்கோ, இராம ராஜ்யத்துக்கோ, கராச்சி சமதர்ம ராஜ்யத்துக்கோ போவதை விட—பிரிட்டிஷ் அரசாங்கம் ஆயிரம்மடங்கு மேலானது என்று பறை அடிப்பேன்.

இராம ராஜ்யத்திலாகட்டும், கராச்சி திட்ட சமதர்ம ராஜ்யத்திலாகட்டும்—வருணாசிரம தர்மமோ, சாதிப் பாகுபாடோ, இவைகள் சம்பந்தப்பட்ட பழைய பழக்க வழக்கங்கள், இது சம்பந்தமான கலைகளோ சிறிதுகூட மாற்றமுடியாதென்றும், அவை பத்திரமாகக் காப்பாற்றப்படுமென்றும், மேல் சாதியாருக்கு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வாக்குறுதிகள், உங்களுக்கு எவ்வளவு ஆபத்து என்பது இப்போது ஒரு சமயம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இந்த வாக்குறுதிகள், எவ்வித முற்போக்குக்கும் முட்டுக்கட்டையாக வந்து தடுத்துக் கொள்ளும்.

ஏதோ ஒரு காலத்தில் விக்டோரியா மகாராணியார், "உங்கள் மதவிஷயங்களில் பிரவேசிப்பதில்லை" என்று வாக்குறுதி கொடுத்ததாகக் கூறிக்கொண்டு, இன்று அவ்வாக்குறுதியை,

ஏதாவது ஒரு பொதுக் கிணற்றில் எல்லோரும் தண்ணீர் இறைத்துக் கொள்ளலாம் என்றாலும்,

ஏதாவது ஒரு பொதுரோட்டில் எல்லோரும் நடக்கலாம் என்றாலும்;

ஒரு பொதுச் சத்திரத்தில் எல்லோரும் இருக்கலாமென்றாலும்;

விபசாரத்துக்குக் கடவுள் பேரால் பெண்களுக்கு (பொட்டுக்கட்டு) லைசென்சு கொடுக்கக் கூடாது என்றாலும்;

ஏதாவது ஒரு கடவுள் என்பதைக் கோயிலில் சென்று தரிசிக்கலாமென்றாலும்;

பால் குடிக்கும் குழந்தைகளை—சீலைகட்டத் தெரியாத குழந்தைகளைப் பெண்சாதியாக ஆக்கிப் படுக்கை வீட்டிற்குள் விடக்கூடாதென்றாலும்;

அவ்வாக்குறுதிகள் வந்து முட்டுக்கட்டையாக இருக்கும்படி பயன்படுத்தப் படுகின்றன.

இப்படியிருக்கும்போது, பழைய பழக்கவழக்கங்கள், சாஸ்திரங்கள், கலைகள், தொழில்முறைகள் ஆகியவை காப்பாற்றப்படுமென்று வாக்குறுதி கொடுத்து, ஒரு சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபிப்பதென்றால்—அந்த சமதர்ம ராஜ்யத்துக்குக் காந்தியாரால் இராம ராஜ்யமென்றும், வருணாசிரம ராஜ்யமென்றும் பாஷ்யம் சொல்லப்பட்டு இருக்கிறதென்றால்—'சர்வ வியாதிக்கும் ஒரே மாத்திரை' என்பது போல்—சகலவித சீர்திருத்தத்திற்கும் இந்த ஒரு வாக்குறுதியே 'எமனாய்' வந்து கொன்றுவிடாதா என்று யோசித்துப் பாருங்கள். இந்த வாக்குறுதியின் கீழ் என்னென்ன சீர்திருத்தமோ—ஏதாவது ஒரு மாறுதலோ செய்யமுடியுமாவென்று யோசித்துப் பாருங்கள்.

இன்று உங்கள் மக்களுக்கு இருக்கும் தரித்திரமும் கொடுமையும் சேர்த்து இந்த இராம ராஜ்யத்தை ஆதரிக்கச் செய்கின்றது—ஏன்? உங்களைவிடப் பெரிய சாதி என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனரல்லாத மேல்சாதி இந்துக்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பசியான தங்களுடைய சூத்திரப் பட்டம், இந்த ராமராஜ்யத்தில்—வருணாசிரம ராஜ்யத்தில்—கராச்சி சமதர்ம ராஜ்யத்தில்—ஒழியாது என்று தெரிந்திருந்தும், எத்தனை பேர் இன்று அதை ஆதரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது—உங்களில் சிலர் ஆதரிப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை.

இவ்வளவு தூரம் நான் இவற்றை விவரித்துச் சொல்லக் காரணம், இன்றுள்ள உங்கள் குறைகள், இழிவுகள் நீங்கி, மனிதத் தன்மை பெறுவதற்கு நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சியைத்தான் நம்பவேண்டுமென்றும், அது உள்ள காலத்திலேயே உங்கள் குறைகளை, இழிவுகளை நிவர்த்தித்துக்கொள்ள முயலவேண்டும் என்றும், அரசாங்கத்துக்கு விரோதமாகப் பேசவோ, மக்களுக்குள் விரோத உணர்ச்சி ஏற்படச் செய்யவோ, அரசாங்கத்தாரோடு போர் புரிவதாகச் சொல்லிக்கொள்ளுகின்ற கட்சியிலோ, கூட்டத்திலோ நீங்கள் கலந்துகொள்ளக் கூடாதென்றும் சொல்லுவதற்காகவே இவற்றைச் சொல்லுகிறேன்.

நீங்களெல்லாம் அப்படிச் செய்யவில்லையா என்றும், மற்றும் எத்தனையோ பேர் அந்தப்படி அரசாங்கத்துக்கு விரோதமாய் நடந்துகொண்டு வாழவில்லையா என்றும் கேட்பீர்கள்.

அவர்கள் நிலை வேறு; உங்கள் நிலை வேறு. அவர்களில் சிலர் இன்று மதத்தில் கீழாக மதிக்கப்பட்டாலும், பழக்க வழக்கத்தில் பலர் சமமாக மதிக்கப்படுகிறார்கள்; கல்வியில் சிறிது முன்னணிக்கு வந்துவிட்டார்கள்; உத்தியோகம் தொழில்கள் ஆகியவைகளில் எதிலும் போட்டிபோடத் தகுதி அடைந்துவிட்டார்கள்.

பார்ப்பனர்கள் சங்கதியோ கேட்க வேண்டியதில்லை; எல்லாவிதத்திலும்—மதத்தாலும், பழக்கவழக்கத்தாலும், பிரத்தியட்சத்திலும்—மேல் நிலையில் இருக்கிறார்கள்;

பாடுபடாமல் வாழ்க்கை நடத்தும் யோக்கியதை அடைந்துவிட்டார்கள்; 100-க்கு 100 பேர் படித்து இருக்கிறார்கள்; 100க்கு 90–க்கு மேல் உத்தியோகங்கள் அவர்கள் கைவசம் இருக்கின்றன.

இனி, அவர்களுக்கு வேண்டியதெல்லாம்—அவர்களோ, அவர்களது அடிமைகளோ நாட்டை ஆளவேண்டியது என்பதைத் தவிர வேறு இல்லை. ஆதலால், அவர்கள் அரசாங்கத்தாரோடு போராடவும், சட்டம் மீறி, அரசாங்கத்துக்குச் சதா தொல்லை விளைவிக்கவும் சவுகரியமுடையவர்களாக இருக்கிறார்கள்.

இது மாத்திரமல்லாமல், அவர்கள் மதத்துக்கும் பழக்கவழக்கத்துக்கும் விரோதமாக அரசாங்கம் சில சீர்திருத்தங்களைச் செய்ய முற்படுவதாலும், அதனால் பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பங்கம் வரும்போலிருப்பதாலும், அச்சீர்திருத்தங்களைச் செய்யவொட்டாமலும்—செய்துவிட்டால் அது அமுலில் நடத்தப்படாமலும் இருப்பதற்காக வேண்டியாவது—அரசாங்கத்தை வழிமறிப்பதற்காக அரசாங்கத்துக்குத் தொல்லை விளைவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், அவர்களுடன் நீங்கள் சேரக்கூடாது என்று சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன்.

[இராசிபுரத்தில், 29–9–1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 6–10–1935]

எந்தக் கட்சியிலும் நீங்கள் சேரக்கூடாது என்று சொல்லவேண்டியவனாய் இருக்கிறேன். உங்களுக்குள், 'தேசாபிமானம்' என்கின்ற யோக்கியமற்ற சூழ்ச்சிக்கு நீங்கள் ஆளாகக்கூடாது. அது, சோம்பேறிகள், காலிகள் ஆகியவர்கள் பிழைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மோட்சம், நரகம் என்பது போன்ற மூட நம்பிக்கையாகும். உங்களுக்கு இன்று சுயமரியாதை அபிமானந்தான் உண்மையாய் வேண்டும்.

தேசாபிமானம் என்பதைப்போல் அர்த்தம் தெரியாததும் சூழ்ச்சி நிறைந்ததுமான வார்த்தை பல்ல, நான் இப்போது உங்களுக்குச் சொல்லும் சுயமரியாதை என்கின்ற வார்த்தை. நீங்கள் மனித சமூகத்தில் கீழானவர்களாய், இழிமக்களாய்க் கருதப்படுகிறீர்கள். மிருகங்களில் மிகமிகக் கீழாகவும், இழிவாகவும் கருதப்படுகின்ற நாய், கழுதை, பன்றி ஆகியவைகளை மதிப்பது போலக்கூட, நீங்கள் மதிக்கப்படுவதில்லை என்று உங்கள் வரவேற்புத் தலைவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். அதைத்தான் நானும் சொல்லி—அந்தக் காரணத்தாலேயே, உங்கள் சமூகத்துக்கு முதலில் சுயமரியாதையையும், மனிதத் தன்மையையும் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறேன். இதை நீங்கள் மனத்தில் கெட்டியாய்ப் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய தேசாபிமானம் என்பது, உங்களுடைய சுயமரியாதையையும், முற்போக்கையும் தடுப்பதாகவே இருந்து வருகின்றது. அதற்காகவே தேசாபிமானம் என்பது கற்பிக்கப்பட்டது என்றுகூடச் சொல்லலாம். காந்தியாருடைய தேசாபிமானத்தைப் பார்த்தாலே மற்றவர்கள் தேசாபிமானத்தின் யோக்கியதையைப்பற்றி நாம் யோசிக்க வேண்டியதில்லை.

வட்டமேசை மகாநாட்டில், உங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படும் பட்சத்தில் அது தனது தேசாபிமானத்திற்கு விரோதமானதென்றும், உயிரைவிட்டாவது உங்கள் தனிப்பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதுதான் தனது தேசாபிமானமென்றும் காந்தியார் சொல்லவில்லையா?

அவரை உங்கள் தலைவர் என்றும், அவர்கொண்ட தேசாபிமானந்தான் உங்கள் தேசாபிமானமென்றும் நீங்கள் ஒப்புக் கொள்வீர்களானால் உங்கள் கட்சி என்னவாகி இருக்கும்?

மற்ற தேசாபிமானக்காரர்கள் தங்களுக்கு எந்தெந்தமாதிரி பிரதிநிதித்துவம் கேட்கிறார்களோ, அது உங்களுக்கும் கிடைக்கும்படி செய்திருக்க வேண்டாமா ?

கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், சீக்கியர்கள், நாட்டுக்கோட்டையார்கள் என்கின்ற பிரிவுக்காரர்களும் சாதிக்காரர்களும் தனிப் பிரதிநிதித்துவம் பெறும்போது, நீங்கள்—தீண்டப்படாதவர்களாய் இருக்கிறவர்கள்—தனிப் பிரதிநிதித்துவம் பெறுவது தேசாபிமானத்துக்கு விரோதமென்றால், அப்படிப்பட்ட தேசாபிமானத்தின் யோக்கியதையை நான் சொல்லவேண்டுமோ என்று கேட்கிறேன் ?

ஆகவே, தேசாபிமானம் என்பதும் சீர்திருத்தமென்பதும் கஷ்டப்பட்டு இழிவு படுத்தப்பட்ட மக்கள் விடுதலையடையக் கூடாது என்பதோடு, பாமரமக்கள் சீர்திருத்தம்–முன்னேற்றம் அடையக் கூடாது என்பதுமேயாகும்.

அரசாங்கத்தார் வழங்கிய சீர்திருத்தத்தில் உங்களுக்குச் சுயமரியாதையுள்ள சீர்திருத்தம் இருந்தது. அதைத் தேசாபிமான சீர்திருத்தமென்னும் பூனா ஒப்பந்தம் பாழாக்கிவிட்டது.

பூனா ஒப்பந்தத்தை உங்களில் சிலர் ஆதரிப்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் மிகமிக ஆச்சரியமாய் இருக்கிறது.

அதாவது, நீங்கள் மேல்சாதிக்காரர்களைப் போய் வோட்டுக் கேட்கவேண்டுமாம்; மேல்சாதிக்காரர்கள் உங்களை வந்து வோட்டுக் கேட்கவேண்டுமாம்; இதில் பரஸ்பர சிநேகம் ஏற்படுமாம்.

இது 'மைனா பிடிக்கின்ற வித்தை'யேயொழிய, இதில் நாணயமோ, அறிவுடைமையோ இல்லை.

பார்ப்பான் அதிகாரியாய் இருக்கிற கச்சேரிக்குள் நீங்கள் போகவேண்டுமானாலே சர்க்கார் உத்தரவும்—பொதுத் தெருவில் நீங்கள் நடக்கவேண்டுமானாலே 'பினல்கோட் சட்டமும்' வேண்டி இருக்கிறபோது, நீங்கள் பார்ப்பன அக்கிரகாரத்தில் நடந்துபோய், அவர்கள் வீட்டுவாசல் நடைகடந்து, உள் ஆசாரத்தில் படுத்து வயிற்றைத் தடவிக் கொண்டிருக்கும் பார்ப்பானிடம் போய் வோட்டுக் கேட்கமுடியுமா ? மற்றும், அதுபோலவே தன்னை மேல்சாதிக்காரனென்றும், உங்களைத் தீண்டத்தகாதவனென்றும் கருதிக் கொண்டிருக்கும் மற்ற சாதியாரிடமாவது நீங்கள் போய் வோட்டுக் கேட்கமுடியுமா ?

அவர்கள் உங்களது சேரிக்கு எலும்பையும் தோலையும் குப்பையையும் மயிரையும் மிதித்துக்கொண்டு வந்து வோட்டுக் கேட்டுவிடுவார்களா ? அவ்வளவு மனமாற்றம் ஏற்பட்டிருக்குமானால், உங்களைக் கோவிலுக்குள் விடுவதாக வாக்குறுதி கொடுத்து பூனா ஒப்பந்தம் செய்துகொண்ட காந்தியார், "இன்று பொதுஜனங்கள் அதற்குத் தயாராக இல்லை; ஆதலால், அது சம்பந்தமாக ஒரு சட்டமும் கொண்டுவரக் கூடாது" என்று சொல்லமுடியுமா ?

இந்திய சட்டசபைக்குச் சென்ற காங்கிரஸ் தேசபக்தர்களாவது, சமூக சீர்திருத்தம் சம்பந்தமாக எவ்விதச் சட்டமும் கொண்டுவர முடியாதென்று சொல்லுவார்களா ?

ஒரு தோட்டியைவிட்டு உங்கள் எல்லோரையும் இழுத்துவரச் செய்து, தங்கள் இஷ்டப்படி வோட்டுப் போடாவிட்டால் உதைப்போமென்று எச்சரிக்கை செய்து, வெளிப் படையாய்ச் சொல்லிவிட்டுப் போகும்படி செய்வார்களே ஒழிய, உங்களை வந்து வோட்டுக் கேட்பார்களா ?

அப்படியே நீங்கள் கேட்பதாகவே வைத்துக்கொண்டாலும், உங்களில் சுதந்திர புத்தி உள்ளவர்களுக்கு வோட்டுப்போட்டு விடுவார்களா ?

அப்படியே போடுகிறார்களென்று வைத்துக்கொண்டாலும், அதனால், இரண்டு சாதிக்கும்—அதாவது பறை சாதிக்கும் பார்ப்பார சாதிக்கும்—பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டு விடுமா?

இன்று பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்றவர்களுக்கு ஒரே தொகுதி இருந்தும், ஒருவருக்கொருவர் வோட்டுக் கேட்டும், இன்று இருசாதியும் பரஸ்பர சிநேகமாய் இருக்கிறார்களா?

இதுவெல்லாம் உங்களை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சியேயல்லாமல், உண்மையில் நாணயமான காரியமல்ல என்பதை மனத்தில் இறுத்துங்கள்.

இன்று இந் நாட்டில்—இந்துக்கள் என்பவர்களை முகமதியர் வோட்டுக் கேட்காததி னாலும், முகமதியர்களை இந்துக்கள் என்பவர்கள் வோட்டுக் கேட்காததினாலும்—ஒருவரை யொருவர் தெருவில்விடாமல் உதைத்து விரட்டுகிறார்களா?

ஆகவே, நீங்கள் 'தேசாபிமானம்' 'மகாத்மா' என்கின்ற வார்த்தைகளுக்குட் பட்டதின் பயனால் உங்கள் சுயமரியாதை வழியைத்தான் அடைத்துக் கொள்ளப் போகிறீர்கள்!

[இராசிபுரத்தில், 29-9-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 13-10-1935]

6. தீண்டாமை விலக்கு

தீண்டாமை விலக்கு என்றால், ஒருவனைத் தொட்டு விடுவதாலும் கோயிலுக்குள் புக விட்டு விடுவதாலும் தீண்டாமை விலகிப்போய்விட்டதுஎன்று கற்பித்து, அந்தப்படியே இந்நாட்டு மக்களை நம்பச்செய்து, அவ்வளவு செய்தாலே போதுமென்று சொல்லி, அதற்கே பெரிய புரட்சி செய்ய வேண்டியதாய் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறோம். அப்படி சொல்லு கின்றவர்களையே—மகான்கள்—மகாத்மாக்கள்—பொதுஜன சேவைக்காரர்—தீண்டாமை விலக்கு வீரர்—வைக்கம் வீரர்—என்றெல்லாம் ஆக்கிவிட்டோம்.

"கங்காதரா மாண்டாயோ?" என்ற ஒரு வண்ணாத்தியின் அழுகைக்குரல் அரசன் வீடுவரை அழச்செய்து விட்டது என்ற கதை போல், இந்தக் காரியமே இப்போது தேசிய சேவையாய்—பொதுஜன சேவையாய்—சுயராஜ்ய சேவையாய்—அன்னிய ஆட்சியை விரட்டி அடிக்கும் சேவையாய் ஆக்கப்பட்டு, எங்கு பார்த்தாலும் இதே தப்பட்டை அடிக்கப் படுகிறது. அது மாத்திரமல்லாமல், மக்கள் எல்லோராலும் அப்படியே கருதப்படுகின்றது. இதனால் எல்லாம் உண்மைத் தீண்டாமை எப்படி விலகும்? தீண்டாமை விலக்கு என்றால் தீண்டாதவனைத் தொடுவதும், அவனை 'மோட்சத்திற்கு அனுப்ப' என்று கோவிலுக்குள் கொண்டு விடுவதும் தானா என்று கேட்கிறேன். ஒரு மனிதனுக்கு சாப்பாடும் உடையும் இடமும் கல்வியும் வேண்டுமா? மனிதனைத் தொடுவதும், செத்தபிறகு அனுபவிப்பதான மோட்சமும் வேண்டுமா என்று கேட்கின்றேன்.

தொடவும் கோவிலுக்குள் போகவும் விடப்பட்டு விட்டால், அவனுக்கு உண்டியும் உடையும் இடமும் கல்வியும் கிடைத்துவிடும் என்று சிலர் சொல்ல வருவார்கள். அப்படி யானால், இன்று தொடவும் கோவிலுக்குள் போகவும் உரிமையுடையவர்களும், ஆயிரக் கணக்கான வருஷங்களாய் அவற்றை அனுபவித்து வருபவர்களுமான மனிதர்கள் எல்லாம் இன்று சோறும் துணியும் குடிசையும் படிப்பும் உடையவர்களாய் இருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! "சோற்றுக்கும் துணிக்கும் வழி என்ன?" என்று கேட்கும் போது, கல்லில் போய் முட்டிக்கொள்ளக் கூட்டிவிட்டதால் அது பொது நல சேவையாகுமா? ஜீவகாருண்யமாகுமா? சமதர்மமாகுமா என்று யோசித்துப் பாருங்கள்! தீண்டப்படாத சகோதரர்களும் மூடநம்பிக்கை காரணமாகக் கோயில் நுழைவு உரிமை

பெறுவார்களாயின், அவர்களும் தங்கள் பொருள்களைச் சிறிதும் பயனில்லாமல் பாழாக்கி என்றுமுள்ள வறுமை நிலையில் இருந்துவர வேண்டியதைத்தவிர, வேறு வழியில்லை என்றே கூறுகின்றோம்.

ஆகையால், தீண்டப்படாத சகோதரர்களும் அவர்கள் சமூக சமத்துவத்தில் ஆவலுடைய மற்றவர்களும் 'பக்தி' என்ற மூடநம்பிக்கையைக்கொண்டு கோயில் நுழைவுக்குப் பாடுபடாமல், பொது இடத்தில் எல்லா மக்களுக்கும் உரிமை வேண்டும் என்ற உறுதியுடன் கோயில் நுழைவுக்கு முயற்சிசெய்ய வேண்டுகின்றோம். இந்த வகையில் தீண்டப்படாத சகோதரர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுகிறோம்.

[கோவை நகரசபையில், 22-1-1933-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 29-1-1933]

7. தீண்டாதார் தேற வழி என்ன?

தலைவரவர்களே! தோழர்களே!

உங்களுக்கு மதத்தின் பயனாகச் சுயமரியாதை உணர்ச்சி இல்லையென்பதை உங்கள் பாதிரிமார்கள் நன்றாய் உணர்ந்திருப்பார்கள். கட்டுப்பாட்டை மீறி நீங்கள் ஏதும் செய்யமாட்டீர்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் மதத்திற்காகவும் கடவுளுக்காகவும் எவ்வளவு கஷ்டங்களையும் இழிவுகளையும் பொறுத்துக் கொண்டு வெறும் வாயினாலே மாத்திரம் எதையாவது பேசிக் கொண்டிருப்பீர்களே யொழிய, கட்டுப் பாடுகளை மீறவோ, உங்கள் இழிவுக்குக் காரணமானவற்றை உதறித்தள்ளவோ, அதை அழிக்க முயற்சிக்கவோ ஒருநாளும் சம்மதிக்க மாட்டீர்கள்.

உண்மையான விடுதலை உங்களுக்கு வேண்டுமானால், உங்கள் இழிவுக்கும் அடிமைத் தனத்துக்கும் அஸ்திவாரமான ஆதாரத்தை அழிக்க நீங்கள் தைரியம் கொள்ள வேண்டும். அந்தத் தைரியம் எவ்வித கட்டுப்பாடுகளையும் நம்பிக்கைகளையும் உடைத் தெறியத் தக்கதாயிருக்கவேண்டும். அப்படியில்லாமல், வீணே வாய்ப் பேச்சிலும் காகிதத் தீர்மானத்திலும் சாதித்து விடலாமென்று கருதுவது பைத்தியக்காரத்தனமாய்த்தான் முடியும். நீங்கள் கீழ்சாதி என்பதும்—தொடக்கூடாதவர்கள் என்பதும்—சமத்துவமளிக் காமல் தனியாய் வைக்கப்பட வேண்டியவர்களென்பதும்—ஆகிய காரியங்களுக்கு வெறும் மதமோ, பழக்க வழக்கமோ சாஸ்திரமோ, கடவுள் செயலோ என்பதெல்லாம் வெறும் பித்த லாட்டமேயாகும். உங்களுடைய கீழ்சாதித் தன்மைக்கும் மேற்கொண்ட காரியங்களுக்கும் யாதொரு சம்பந்தமே கிடையாது. உண்மையான காரணத்தைச் சொன்னால், ஒரே நிமிஷத்தில் நீங்கள் அவர்கள் மீது பாய்ந்து சின்னாபின்னமாய்க் கிழித்தெறிந்து விடுவீர்கள் என்று கருதி, ஏதேதோ சாக்குப் போக்குகளைச் சொல்லி உங்களை ஏமாற்று வதற்குக் கடவுளையும் மதத்தையும் பழக்க வழக்கத்தையும் சொல்லி வருகிறார்கள். கடவுள் மதத்தினர் கட்டளை என்றபடி, பழக்க வழக்கங்கள் என்ற முறைப்படி யார் நடக்கிறார்கள்? அவர்கள் சொந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில், எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் பழக்க வழக்கத்திற்கும் கடவுள் மதக்கட்டளைக்கும் கீழ்ப் படியாமல், தங்கள் இஷ்டம்போலவே—சமுதாயத்திற் கேற்றபடியே—நடந்து கொள்கிறார்கள். ஆனால் பிறத்தியானை அடக்கி ஆண்டு அடிமை கொள்வதற்காக மாத்திரம் இந்தப்படி சொல்லிப் பயன் பெறுகிறார்கள்.

கீழ்சாதி என்பதாக ஒரு பிரிவு எதற்காக? யாரால் ஏற்படுத்தப்பட்டது? என்பதின் இரகசியத்தை உணர்ந்தால் பிறகு அதை அழிக்கும் விஷயம் வெகு சுலபமாக முடிந்து விடும். கீழ்சாதி, மேல்சாதி என்று சொல்வதின் தத்துவம் என்ன என்பதைப்பாருங்கள்! ஒரு பார்ப்பானையும், ஒரு பறையனையும் கூட்டி வந்து நிறுத்தி, கீழ்சாதி, மேல்சாதி என்பதும் அவர்களிடத்தில் எப்படி விளங்குகிறது என்று பார்த்தால், மேல்சாதி என்பவன் பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து—ஊரார் உழைப்பில் வாழ்கிறவன் என்பதும்;

கீழ்சாதி என்பவன் பாடுபட்டு உழைத்து உழைப்பின் பயனையெல்லாம் அன்னியருக்கே அழுதுவிட்டு, வீடில்லாமல், துணியில்லாமல், கஞ்சியில்லாமல், கல்வியில்லாமல், மிருகத்திலும் கேடாய் வாழ்கிறவன் என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே, கீழ்சாதித் தன்மை ஒழிய வேண்டும் என்று கருதுகிற ஒருவன்,—அன்னியருக்காக நாம் உழைக்கப் பிறந்தோமென்கிற எண்ணத்தை விட்டுவிட்டு,—நமது உழைப்பின் பயனைச் சோம்பேறிகள், பாடுபடாத மக்கள் அனுபவிக்கவிடக்கூடாது என்கிற உறுதி கொண்டு—பிறவியில் நமக்கும் மற்றவருக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்கின்ற உறுதியோடு, சோம்பேறிக் கூட்டத்திற்கு எதிராக எவன் போர்தொடுக்க முனைந்து நிற்கிறானோ அவனே இவ்வித இழிவுகளை நீக்கிக்கொள்ள அருகதையுள்ளவனாக ஆகிறான்.

அதை விட்டுவிட்டு, மதக் கட்டளையை மதிப்பவன், பாதிரிகளின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும். கடவுள் நம்பிக்கையைக் கொண்டவன், அவனவன் தற்கால நிலைமைக்குக் காரணம் 'கடவுள்சித்தம்' என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். மதக் கட்டளையையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்ட ஒரு அடிமை,—ஒரு தாழ்ந்த சாதிக்காரன்—ஒரு நாளும் விடுதலை அடையவோ, முன்னேற்ற மடையவோ முடியவே முடியாது. மதக்கட்டளையும், கடவுள் நம்பிக்கையும்—மேல்சாதிக்காரனுக்கும் பாதிரிகளுக்கும் முதலாளிகளுக்கும்தான் மேன்மையையும் அனுகூலத்தையும் அளிக்கக் கூடியதாகும். இந்தநாட்டில், ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏழைமக்களும் தாழ்ந்த சாதிக்காரர்களும் இருந்துதான் வருகிறார்கள். அவர்கள் அன்றுமுதல் இன்றுவரை, மத பக்தியும் கடவுள் பக்தியும் கொண்டு, அதற்காக எவ்வளவோ பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து, தங்கள் கஷ்டங்களும் இழிவுகளும் ஒழிய வேண்டு மென்று பிரார்த்தனை செய்து கொண்டுதான் வந்திருக்கிறார்கள். ஏழைகளின் எண்ணிக்கை குறைந்ததா? கீழ் சாதிக்காரர்களின் எண்ணிக்கை குறைந்ததா? அல்லது இவர்களுடைய கஷ்டமாவது ஒழிந்ததா? யோசித்துப் பாருங்கள்!

உங்களுக்கு—உங்களுடைய பிரதிப் பிரயோசன மெல்லாம், உங்களுடைய வயிற்றுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான்; அதுவும் நீங்கள் சாகாமலிருப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் என்பதாகப் பதினாயிர வருஷங்களுக்கு முன்பாகவே நிர்ணயிக்கப் பட்டுவிட்டது. இந்த நிர்ணயத்தை மீறி நீங்கள் அதிகம் கேட்காமலிருக்கவேண்டும் என்பதற்காகத்தான், உங்களைப் பறையர், சக்கிலியர் என்று சொல்லித் தீண்டாத சாதியார்களென்று ஆக்கவும், உங்கள் அண்ணன்மார்களை யெல்லாம் 'அடிமை' 'பார்ப்பானின் வைப்பாட்டிமகன்' 'சூத்திரன்' என்று சொல்லித் தாழ்ந்த சாதியாகவும் ஆக்கி வைக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஜீவனத்திற்காக என்று கொடுக்கப்படும் கூலிகளும் உங்கள் மீதுள்ள கருணையினால் என்று நினைத்து விடாதீர்கள். இந்த ஆகாரமும் இல்லாமல் மடிந்துபோவீர்களேயானால், நாளைக்கு மேல்சாதிக் காரர்களுக்கும் முதலாளிமார்களுக்கும் வேலை செய்ய ஆள் இல்லாமல் போகுமே என்கிற சுயநலக் கருணை கொண்டுதான்—மாடு வளர்க்கிறவன் தீனிபோடா விட்டால் பால் கறக்காதே, பாடுபடாதே என்று கருதி அதற்குத் தீனி போடுவதுபோல்,—உங்களுக்கும் ஜீவனத்திற்குக் கொடுக்கப் பட்டு வருகிறது. இந்தநிலை மாறவேண்டும் என்பதில்தான் உங்களுடைய முக்கியவேலை இருக்கவேண்டுமே ஒழிய—சும்மா பறையர் பட்டம் போனால் போதும், கிராதியை (தடுப்பு) எடுத்து விட்டால் போதும், கோயிலுக்குள் நுழைய விட்டால் போதும்—என்றெல்லாம் கருதி இருப்பதில் பிரயோசனமில்லை. கிராதி வித்தியாசமில்லாமலும், பறைசாதிப் பட்டம் இல்லாமலும், கோயிலுக்குள் போய்த் தொழுகிற உரிமையுடனும் இருக்கின்ற கோடிக் கணக்கான மக்கள் கஞ்சிக்கு வகையில்லாமல், இருக்க வீடில்லாமல் ஊர் ஊராய்ப் பிச்சைக் காரர்கள் போல், லம்பாடிகள் போல் திரிவதையும், மரங்களின் நிழல்களில் தலைக்குக் கல்லையோ, கையைமடக்கியோ வைத்துப் படுத்துக்கொண்டிருப்பதையும், இன்றையதினம் எங்கும் பார்க்கலாம். இதற்குக் காரணம் என்ன என்று கருதுகிறீர்கள்?

ஆகவே, உங்களுடைய கிளர்ச்சியானது பொருளாதாரத்துறையில், நீங்கள் மற்றவர்களால் ஏமாற்றப்படுவதும் வஞ்சிக்கப்படுவதும் ஒழியவேண்டுமென்பதையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கவேண்டும். அதில்தான் உங்கள் விடுதலை இருக்கிறது. எந்தக் கடவுளும் எந்தப் பாதிரியும் இதற்கு வகைசெய்யமுடியாது.

எல்லாம்,—உங்கள் மதக் கடவுளையெல்லாம்—உங்கள் கடவுள் கட்டளையெல்லாம் 'பொறு, பொறு அவசரப்படாதே; ஆத்திரப்படாதே; உனது வாழ்வில் உள்ள எல்லாத் துன்பங்களையும் எல்லா இழிவுகளையும் பொறுமையோடு பொறுத்துக் கொண்டிருந்தால்—நீ செத்தபிறகு மேல் லோகத்தில் கடவுள் உன்னுடைய பொறுமைக்காக நல்ல சன்மானம் கொடுப்பார். அடுத்த ஜென்மத்தில் நல்ல பிறவி பெறுவாய். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்றுதான் உபதேசிக்கும். இந்த உபதேசத்தை ஆயிரக்கணக்கான வருஷங்களாகக் கேட்டுக் கேட்டு, அதன்படி பொறுமையாய் இருந்து வந்ததின் பலன்தான் இன்றும் இன்னமும் நீங்கள் பொறுமையாகவே இருந்து, இழிவடைந்து, கஷ்டப்பட்டுச் சீக்கிரம் செத்து, கடவுளிடம் சன்மானம் பெறவேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

ஆகவே, செத்த பிறகு மேல் லோகத்தில் அல்லது அடுத்த ஜென்மத்தில் பயன் பெறலாமென்கின்ற பித்தலாட்ட சுயநல சூழ்ச்சியான உபதேசத்தை அடியோடு மறந்து, இந்த ஜென்மத்தில் நீங்கள் சாவதற்கு முன் உங்கள் இழிவுக்கும் கஷ்டத்திற்கும் என்ன பரிகாரம் என்பதைக் கவனித்து, அதற்குத் தக்கது செய்ய முன் வாருங்கள்!

இந்தப்படி நினைத்துத் தைரியமாய் முன்வந்த மக்கள்தான், இன்று உலகில் ஒரு பக்கத்தில் அடிமையாய், கூலியாய், இழிசாதியாய், ஏழையாய் இல்லாமல் மனிதனாக, கவலையற்று, தேசமே ஒரு குடும்பமாகவும், எல்லோரும் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

[லால்குடி தாலுக்கா களத்தில்வென்றான்பேட்டை கிராமத்தில் ஆதித் திராவிட கிறிஸ்தவர்கள் மாநாட்டில் சொற்பொழிவு—'குடிஅரசு' 7-5-1933]

தலைவரவர்களே! தோழர்களே!

இந்த நாட்டில் தீண்டப்படாதவர் என்று அழைக்கப்படாத சாதி ஒரே சாதிதான் உண்டு; அதுதான் பார்ப்பன சாதியாகும். அதைத்தவிர மற்றெல்லா சாதி வகுப்பு மக்களும் தீண்டப்படாதவர்களாகவேதான் கருதப்படுகிறார்கள்.

அய்ரோப்பியர்களும் முஸ்லிம்களும் இந்தியக் கிறிஸ்தவர்களும் பார்ப்பனர் ஒழிந்த ஏனைய இந்துக்கள் என்பவர்களும் பார்ப்பனர்களுக்குத் தீண்டப்படாதவர்களேயாவோம்.

இது சும்மா வாயினால் மாத்திரம் சொல்லப்படுவதல்ல. மதத் தர்மப்படி என்றும், வேதசாஸ்திர விதிப்படி என்றும் சொல்லப்பட்டுத் தாழ்த்தப்பட்டிருக்கிறோம். ஒருவன் இந்து என்று சொன்னால் அவனுக்கு ஒரு சாதிப்பிரிவு இருந்துதான் இருக்கும்; அதை அவன் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அன்றியும், இந்துமதம் மாத்திரமல்லாமல், இந்து கடவுள்கள் என்பவைகளும் சாதிப் பாகுபாட்டுக்கு உட்பட்டவையே. ஆகவே, ஒரு மனிதன் இந்து என்கின்ற கூட்டத்தில் இருக்க ஆசைப்படுகிற வரை—அவன் சாதிப் பாகுபாட்டுக்கு உட்பட்டும்; அவன் பார்ப்பனரல்லாதாராய் இருக்கும் வரை—கீழ்சாதியானாகவும் இருந்துதான் ஆகவேண்டும். எத்தனை காந்திகள் தோன்றினாலும் சரி, அவர்களை எப்படிப்பட்ட மகாத்மாவாக விளம்பரப்படுத்தினாலும் சரி, சாதிப் பாகுபாடும் கீழ் மேல் சாதியும் ஒருநாளும் ஒழிக்கப்படமாட்டாது. இதுவரை இதற்காக எத்தனையோ பேர் எவ்வளவோ முயற்சிகள் செய்தாகி விட்டது. அப்படிப்பட்ட முயற்சியாளர்கள் எல்லோரையுமே பார்ப்பனர்கள் அடிமைகொண்டும், அடிமையாகக் கட்டுப்படாதவனை அழித்தும் வந்திருக்கிறார்களே ஒழிய, ஒருவனையாவது தலையெடுக்க விடவில்லை.

[பெரம்பலூரில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-3-1938]

8. ஆதித் திராவிடர்

பெரியோர்களே! தோழர்களே!

நம் நாட்டில் திராவிட மக்களுக்குள்ளாகவே திராவிடர்—ஆதித் திராவிடர் என்கின்ற ஒரு பிரிவு இருக்கிறது என்பதோடு, ஆதித் திராவிட சமூகம் மிகப் பெரும் எண்ணிக்கை கொண்ட சமூகமாக இருந்து வருகிறது. திராவிட நாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்குத் திராவிட மக்கள் தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதித் திராவிடர்கள்—அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாய்—இருக்கிறார்கள். இந்த நிலைமை திராவிட சமுதாயத்துக்கே ஒரு பெரும் மானக்கேடான நிலைமையாகும் என்பதோடு, திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று வகுத்திருப்பதையும், நடத்துவதையும் அரண் செய்கிறது. ஆகையால், ஆதித் திராவிடர் என்கின்ற பெயரே மாற்றப்பட்டு, இருவரும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் என்கின்ற பெயராலேயே வழங்கப்பட வேண்டுமென்பதும், திராவிடருக்கும் ஆதித் திராவிடருக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும் பேதங்களும் ஒழிந்து, ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் எனது ஆசை. இந்த இரு நோக்கங்களும் ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கங்களில் பட்டதென்பது எனது அபிப்பிராயமாதலால் கட்சியின் பேரால் இவைகளைச் சொல்லுகிறேன்.

உத்தியோகம், கல்வி முதலிய விஷயங்களில் ஆதித் திராவிடர் என்பவர்களுக்குத் தனிச் சலுகை காட்டி, சீக்கிரத்தில் நம்மோடு சரி சமத்துவம் அடையும்படியான நிலைமை ஏற்படுத்த வேண்டியது நம் கட்சியின் தனிப்பட்ட கடமைகளில் ஒன்று.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் தலைமைச் சொற்பொழிவு—
'குடிஅரசு' 25-8-1940]

9. வகுப்பு மாநாடு

வகுப்பு மகாநாடுகள் நமது நாட்டில் நடந்து வருவது நாட்டின் முற்போக்குக்கு ஏற்றதா இல்லையா என்பது கேள்வி. பலர் இது கெடுதல் எனச் சொல்லுகிறார்கள். எனினும், வகுப்பு மாநாடு அல்லாத (வகுப்புவாத மல்லாத) மகாநாடுகளே இந்நாட்டில் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுடைய உரிமைகளைக் கேட்கவே மகாநாடுகள் நடத்துகிறார்கள். மற்றொரு வகுப்பார் தலையெடுக்காமல் அடிக்கவும், மற்ற வகுப்பார் உரிமைகள் பெறாமலிருக்கவுமே பலர் பல மகாநாடுகளை நடத்துகிறார்கள். ஆனால் நமது 'நாடார் மகாநாடோ' அப்படியில்லை. பிறருக்குக் கெடுதல் செய்யாமல், நாடார் மகாஜனங்களின் நன்மையைநாடியும் உரிமைகளைப் பெறவுமே இம் மகாநாடு நடைபெறுகின்றது. வகுப்பு மகாநாடுகளும், வகுப்புவாதங்களும் மேல் சாதியாராலும் அவர்களுடைய கொடுமைகளாலும்தான் ஏற்பட்டவை. துவேஷத்தை உண்டாக்க நாம் மகாநாடுகள் கூட்டுவதில்லை. 'துவேஷம் வேண்டாம்; எல்லோரும் சமம் என்று சொல்லுங்கள்' என்று சொல்லவே நாம் இம்மகாநாடு கூட்டியிருக்கிறோம். நம் நாட்டில் அடிக்கடி சொல்லப்பட்டு வரும் ஒற்றுமை என்ற வார்த்தையும், பிரச்சினைகளும் வெளி வேஷமே. தங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய நிலைமை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பின்னரே, உண்மை ஒற்றுமை ஏற்படும். ஒருவருக்கொருவர் ஒற்றுமையும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டியது அவசியம். அதற்கான வேலைகளைச் செய்யச் சுதந்திரம் ஒவ்வொரு சமூகத்திற்கும் இருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் சுயமரியாதை, சமத்துவம், சுயமதிப்பு ஏற்படவேண்டும். அதன்மூலந்தான் தேசம் முன்னேற்றமடையும். உண்மையான

தேசியம் என்பது சுயமரியாதை ஒன்றே. சுயமரியாதையைப் பொறுத்தேதான், சுய ராஜ்யம் இருக்கிறது. சகலரும் ஒன்று; மேலோர், கீழோர் என்ற உணர்ச்சி இருக்கவே கூடாது.

[குடந்தையில், 1-10-1927-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 9-10-1927]

10. தாழ்த்தப்பட்டோர் ஈடேற வழி

அக்கிராசனரவர்களே! அன்பார்ந்த சகோதரர்களே! சகோதரிகளே!

அக்கிராசனரவர்கள் எம்மைப்பற்றி அதிகப் புகழ்ச்சியாகக் கூறிவிட்டார்கள். நான் அவைகளுக்கு அருகதையுடையவனல்ல என்றாலும், நமது மக்கள் தங்களது பகுத்தறிவைக்கொண்டு, நமது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை ஒப்புக்கொள்கிறது ஒன்றே எமக்குத் திருப்திகரமாயிருக்கிறது. 'தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழி' என்பதாக என்னைப் பேசும்படிக் கேட்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி வியாக்கியானம் அதிகம் செய்யவேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஏனெனில், பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம் என்பவைகளின் உட்கருத்தை ஊன்றிக் கவனித்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடேறும் வழி தானாகவே தோன்றும். எப்படியெனில், குறிப்பிட்ட எந்தவிதமான அபிமானத்தை எடுத்துக்கொண்டபோதிலும், அனேகமாக அந்த அபிமானத்தின் பேரால் ஏமாற்றுகளே நடைபெறுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக உள்ளவர்கள் இவைகளை ஊன்றிக் கவனித்து, அலசிப்பார்த்து, உரைகல்லில் வைத்து உரசிப் பார்க்கவேண்டும். அவ்வாறு அவர்கள் பார்ப்பார்களேயானால், வாஸ்தவத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் ஈடேறும் வழியை எளிதில் கண்டுகொள்வதற்கு ஏதுகரமாகவிருக்கும். மக்களது முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாகவிருக்கும் காரியங்கள் எதுவுண்டோ அவைகளைத் தகர்த்தெறியவேண்டும். வீணாக—ஆடம்பரமாக 'நாங்களும் தலைவர்கள்தான்' என்று வீரம்பேசிக் கொள்வதில் பயனில்லை. நமக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அப்பகுத்தறிவின் பயனால், இடையூறாக இருக்கும் காரியங்களை மனோதிடத்துடன் தகர்த்தெறிய முன்வரவேண்டும். அன்றே முன்னேற—ஈடேற வழியேற்படுமென்பதில் சிறிதும் அய்யமில்லை.

[கொழும்பில், 22-10-1932-ல் ஆதித் திராவிட அபிவிருத்தி சங்கத்தார் அளித்த வரவேற்பில் சொற்பொழிவு —'குடி அரசு' 6-11-1932]

11. மகாத்மாவும் வருணாசிரமமும்

மகாத்மா காந்தி, 'தீண்டாமை ஒழியவேண்டும்; மதத்திலும், சமுதாயத்திலும் சீர்திருத்தம் ஏற்படவேண்டும்' என்கிற கொள்கை உடையவர் என்று ஜனங்கள் நம்பி வந்தாலும், அவரது எண்ணத்திலும் பேச்சிலும் அதற்கு நேர்விரோதமான கொள்கையை உடையவராகவே காணப்படுகிறார். இம்மாதிரி எண்ணத்தோடும் பேச்சுகளோடும் மகாத்மா காந்தியின் பிரச்சாரம் நடைபெற நடைபெற, தீண்டாமையும் மூடக்கொள்கைகளும் நாட்டில் வலிமையோடு நிலைபெற இடம் ஏற்படுமே அல்லாமல், ஒருக்காலும் இவை ஒழிக்கப்படவே முடியாது. எந்தத் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று வெளிப்படையாய்ப் பேசுகிறாரோ, அதே தீண்டாமையை நிலைநிறுத்த அதே பேச்சை வியாக்கியானம் செய்வதில் பாடுபடுகிறார்.

இதைப்பற்றி முன் ஒருதடவைகூட எழுதி இருக்கிறோம்.

உண்மையான தீண்டாமையை நமது நாட்டைவிட்டு வெளிப்படுத்த வேண்டுமானால் மகாத்மா காந்தியையும் எதிர்த்துப் போராடித்தான் தீரவேண்டி இருக்கிறது.

'தீண்டாமை' இன்னது என்பது மகாத்மாவுக்கு இன்னமும் சரியாய்ப் புலப்பட வில்லை என்பதே நமது அபிப்பிராயம். அவர் மதத்தின் பெயரைச் சொல்லிக்கொள்வத னால், பொதுஜனங்களிடம் உண்டாக்கக்கூடிய செல்வாக்கையும் உபயோகப்படுத்திக் கொள்ள நினைப்பதால், உண்மைத் தீண்டாமைத் தத்துவம் அவருக்குப் புலப்பட மார்க்க மில்லாமல் போய்விடுகிறது. ஆதலால், மகாத்மாவினது தீண்டாமை விலக்குக் கொள்கை யைப் பின்பற்றுவோமானால், மறுபடி தீண்டாமைச் சேற்றிலே சறுக்கி விழுகவேண்டிவரும் என்றே நாம் பயப்படுகிறோம். வெகுகாலம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும், மூடிமூடி வைத்தும்கூட உண்மையான தீண்டாமை விலக்கையும், சுயமரியாதையையும் உத்தேசித்து வெளிப்படையாய் இப்போது அவரைத் தாக்கித்தீரவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டதற்கு வருந்துகிறோம்.

ஏனென்றால், சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு மகாத்மா காந்தி வரப்போகிறார். தீண்டாமையைப்பற்றி பேசும்போது அவரது வழக்கப்படியேதான் பேசித் தீருவார். அதன் மூலம் நமது எதிரிகளுக்கு அதிகமான பலம் ஏற்பட்டு நமது முயற்சியை ஒழிக்க அதை அவர்கள் உபயோகித்துக் கொள்ளுவார்கள். ஆதலால், அதை இப்போதே நாம் வெளிப் படுத்திவிடுவது மேலானதென்றே கருதுகிறோம். அதாவது, மகாத்மா காந்தி, நமது பார்ப்பனர்கள் சொல்லுவதுபோலவே, நமது சமூக வாழ்வில் 'வருணாசிரம தர்மம்' உண்டு என்றும், அது பிறவியிலேயே ஏற்பட்டது என்றும் அடிக்கடி சொல்லி வருகிறார். சமீபத் தில் மைசூரில் ஒரு கூட்டத்தில் தீண்டாமையைப்பற்றிப் பேசும்போதும், 'இந்து சமூகத் தில் வருணாசிரம தர்மம் உண்டு' என்றும், அது நமது சமூகத்திற்கு அவசியம் என்றும், ஒவ்வொரு வருணத்தாருக்கு ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தந்த வருணத்தார் அந்தந்த தர்மத்தைச் செய்யும்போது அவரவர்கள் அம்மட்டிலுயர்ந்தவர்கள் என்றும், 'பிராமணன் அவன் தர்மத்தைச் செய்யும்போது உயர்ந்தவனாகிறது போலவே, மற்ற வருணத்தானும் அவனவன் தர்மத்தைச் செய்யும்போதுதான் உயர்ந்தவனாகிறான்' என்பதாகவும் பேசி இருக்கிறார். இதைத்தான் பார்ப்பனர்களும் தாங்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்பதற்குக் காரணங்களாகச் சொல்லி வருகிறார்கள்.

வருணாசிரம தர்மத்தின் மூலமாகத்தான் நமது நாட்டில் தீண்டாமைக் கொள்கை அமுலில் இருந்து வருகிறதே ஒழிய, வருணாசிரமம் இல்லாவிட்டால் தீண்டாமைக் கொள்கை பரவ மார்க்கமே கிடையாது. வருணாசிரம தர்மம் என்கிற ஓர் உடல் இல்லா விட்டால், தீண்டாமை என்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை. யோசித்துப் பார்த்தால், இந்தக் கொள்கைத் தத்துவம் எவருக்கும் விளங்காமல் போகாது. அந்தந்த வருணத்தா னுக்கு ஏற்பட்ட தர்மப்படி அவனவன் நடக்கவேண்டுமென்று மகாத்மா சொல்லுவதைத் தான், தூவார் மகாநாட்டு 'பிராமண சம்மேளன'மும் ஏகமனதாய்த் தீர்மானம் செய்திருக் கிறது.

மகாத்மா சொல்லும் வருணாசிரம தர்மம் அதுவல்ல என்பதற்கு வேறு ஆதாரம் என்ன? மகாத்மாவும் வருணாசிரமம் நான்கு என்று சொல்லுகிறார். அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிறார். தூவார் பிராமண சம்மேளனத்தாரும் மகாத்மா சொல்லும் ஆதாரத்தைக் கொண்டே, 'க்ஷத்திரியனும் வைசியனும் உலகத்தில் இப்போது காணப்படவில்லை; ஆதலால், பிராமணன், சூத்திரன் ஆகிய இரண்டு வருணத்தார் மாத்திரம்தான் இருக்கிறார்கள்' என்கிறார்கள். மறைந்துவிட்ட இரண்டு வருணத்தாரைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. இருக்கிற இரண்டு வருணத்தாரைப் பற்றிய வரையிலாவது, இவர்களுக்கு 'மகாத்மா' கற்பிக்கும் தர்மங்கள் என்ன? என்பதுதான் நமது கேள்வி. வருணாசிரமத்தையும் அதன் தர்மத்தையும் ஒப்புக்கொள்ளுகிற ஒருவர்— அதுவும் வருணாசிரமமும் அதனதன் தர்மமும் மக்களுக்குப் பிறவியிலேயே உண்டு என்று ஒப்புக்கொள்ளுகிற ஒருவர்—தீண்டாமை இல்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? மகாத்மா

கூறும் வருணாசிரமத்திற்கு, பார்ப்பனர் கூறும் தர்மத்தைவிட, வேறு ஏதாவது தர்மம் கற்பிக்க ஆதாரம் இருக்கிறதா என்று பார்த்தால், நாளதுவரை மகாத்மா 'அதுவேறு' என்று சொன்னதாகவே தெரியவில்லை. மைசூர் உபந்நியாசத்தில், 'ஜன சேவையே பிராமணர்களுடைய தர்மம்' என்று சொல்லி இருக்கிறார். அதுபோலவே, 'பிராமண சேவையே சூத்திரனுடைய தர்மம்' என்றுதான் அவர் சொல்லி ஆகவேண்டும். பொதுஜன சேவைதான் பிராமண தர்மம் என்று சொன்ன சாஸ்திரங்களில்தான், பிராமண சேவையே சூத்திர தர்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமணருக்குப் பொதுஜன சேவை செய்வதினால்மாத்திரம் உயர்வு உண்டாகுமானால், சூத்திரனுக்கு பிராமண சேவை செய்வதினால் மாத்திரந்தான் உயர்வு உண்டாகுமேயன்றி, அதை விட்டு வேறு வேலை செய்வானானால் சூத்திரன் கண்டிப்பாய்த் தாழ்ந்தவனாகிறான் என்றுதான் மகாத்மாவின் தத்துவத்திற்குப் பொருள் ஏற்படுகிறது. இந்தப்படியானால், எந்த விதத்தில் பிராமணனுக்கு சம அந்தஸ்தாக சூத்திரன் இருக்கமுடியும் என்று மகாத்மா கருதுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும், அந்தந்த வருணத்தார் அந்தந்த தருமத்தைச் செய்து வருகையில் ஒருவருக்கொருவர் உயர் தாழ்வு சொல்லிக்கொள்ள இடமேது என்றும் பேசி இருக்கிறார். அப்படியானால், அந்தந்த வருணத்தாருக்குத் தனித்தனி தர்மம் ஏற்படவேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றியாவது, ஒரு வருணத்தான் மற்ற வருணத்தானுடைய தர்மத்தைச் செய்வதானால் கெடுதி என்ன என்பதைப் பற்றியாவது, ஒரு வார்த்தையாவது இதுவரை மகாத்மா சொன்னதேயில்லை. 'பொதுஜன சேவை என்பது பிராமணர்களுக்கு மாத்திரம் சொந்தமானது; அதற்காகவே அவர்கள் பிறந்திருக்கிறார்கள்' என்றும் மகாத்மா சொல்லுவாரானால், மகாத்மா அவர்கள் நான்கு வருணத்தில் தான் எந்த வருணத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லமுடியும்? மகாத்மா சொல்லுகிற கொள்கைப்படி பார்த்தால், அவர் பிறவியில் ஒன்று சூத்திரராய் இருக்கவேண்டும் அல்லது வைசியராயிருக்க வேண்டும். எனவே சூத்திரனுக்கும், வைசியனுக்கும் ஏற்பட்ட தர்மத்தைச் செய்வதைவிட்டுவிட்டு, பிராமணனுக்கு ஏற்பட்ட தர்மமாகிய பொதுஜன சேவையைச் செய்வதற்கு மகாத்மாவுக்கு உரிமை ஏது? தன்னாலேயே நடத்திக் காண்பிக்கமுடியாத வருணாசிரம தர்மத்தை மற்றவர்களை ஏற்று நடத்தும்படி சொல்லுவதில் ஏதாவது பொருளுண்டா? இவைகளைப் பற்றி இவ்வளவு தூரம் எழுதினது, தீண்டாமை விஷயத்தில் மகாத்மாவுக்கு உள்ள குழப்பத்தைக் காண்பிக்கவும், அவரும் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டவரே அல்லாமல் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவராகப் புலப்படவில்லை என்பதையும் காட்டுவதற்குமே எழுதுகிறோமே அல்லாமல் அவர்மீது குறைகூறுவதற்காக அல்ல. அன்றியும், மகாத்மா நாட்டிற்கும் மக்களுக்கும் செய்திருக்கும் அனேக நன்மைகளைப்பற்றி நமக்கும் மகாத்மாவின் அந்தரங்க சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்பவர்க்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. எனினும், இத்தீண்டாமை விஷயத்திலும், வருணாசிரம விஷயத்திலும் மகாத்மாவுக்குத் தெளிவு ஏற்பட்டிருக்குமானால், நமது சமூகத்திற்கு எவ்வளவோ நன்மை உண்டாகும் என்கிற ஆசையே இதைப்பற்றி மேலும் மேலும் எழுதிவரவும் தூண்டுகிறது.

['குடிஅரசு'-தலையங்கம்—7-8-1927]

'மகாத்மா காந்தியும் வருணாசிரமும்' என்னும் விஷயமாய் இரண்டு வாரங்களுக்கு முன் 'குடிஅரசில்' மகாத்மாவின் வருணாசிரம அபிப்பிராயத்தைக் கண்டித்தெழுதியது நேயர்கள் பார்த்திருக்கக்கூடும். அதன்பிறகு பலர் பலப்பல விதமாக நமக்குக் கடிதமூலமாய், 'மகாத்மாவைத் தாக்குவது தர்மமல்ல' என்றும் 'அபிப்பிராய பேதத்தை மகாத்மாவிடம் நேரில் தெரிந்து கொள்ளலாம்' என்றும், 'நேரில் சொன்னால் நமது அபிப்பிராயத்தை மகாத்மா ஒப்புக்கொள்வார்கள்' என்றும் 'எப்படி இருந்தாலும் மகாத்மாவைப்பற்றி ஒரு

வார்த்தையாவது வித்தியாசமாய் எழுதினால் நமது செல்வாக்கே அடியோடு போய்விடும்' என்றும், 'நமது பத்திரிக்கை ஆகிய 'குடிஅரசு' கூட ஜனங்களால் மதிக்கப்படாது போய் விடும்' என்றும் 'மகாத்மா பார்ப்பனரல்லாதார் ஆதலால் அவர்பேரில் குற்றம் சொல்லக் கூடாது' என்றும்,—இப்படியாகப் பலபேர் பலவிதத்தில் கடிதமூலமாயும் நேரிலும் நமக்குத் தெரிவிக்கிறார்கள்.

மற்றும் சிலர், பல பத்திரிக்கைகளிலும் ஜாடைஜாடையாய் நமது அபிப்பிராயத்தைக் கண்டித்தும், மகாத்மாவை ஆதரித்தும் எழுதிவருகிறார்கள். மற்றும் சிலர், 'எல்லா வற்றையும் குற்றம் சொல்லிவிட்டு நீர் என்னதான் செய்யப்போகிறீர்? எதைத்தான் ஆதரிக் கிறீர்கள்? உமது கொள்கைதான் என்ன?' என்று எழுதுகிறார்கள், ஆகவே, இவை களுக்குத் தனித்தனி பதிலும் சமாதானமும் சொல்லிக்கொண்டிருப்பது மிகவும் கஷ்டமான காரியமானதால், இவற்றிற்குப் பொதுவாக இந்த வாரம் சில விஷயங்களை எழுதுகிறோம்.

ஆரம்பத்தில் ஒருவிஷயத்தைப் பொதுஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறோம். அதென்னவெனில், நாமும் நமது பத்திரிக்கையும் வயிற்றுப் பிழைப்புக்கோ, பொது ஜனங்களின் செல்வாக்குப் பெறுவதற்கோ, பொதுநன்மையின் பேரால் தொண்டுசெய்ய வரவில்லை என்பதே. உண்மையை உண்மை என்றும், சரிஎன்று பட்டதை வெளிப்படுத்துவதற்கும், பொய்யென்றும் தப்பென்றும் பட்டதைக் கண்டிப் பதற்குமே நடைபெற்று வருகிறது என்பதாகவும், பத்திரிக்கையின் கொள்கையே அதுதான் என்பதாகவும் ஆதிமுதற் கொண்டே பலதடவைகளில் வெளிப்படுத்தி இருக்கிறோம்.

இரண்டாவதாக, மகாத்மா காந்தியவர்களிடத்தில் மற்றவர்களுக்கு இருக்கும் அபி மானத்திலும் பக்தியிலும் நமது பக்தி எள்ளளவும் குறைந்ததல்ல வென்பதையும் தெரிவிப்ப தோடு, மகாத்மாவைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தின அனேகருள் நாமும் ஒருவரென்றும், மகாத்மாவைப் பின்பற்றிவந்த விஷயத்திலும் இப்போது சிபாரிசுக்கு வருகிற எல்லோரையும்விட நாம் பின்பட்டவரல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

நிற்க, மகாத்மாவைக் குருட்டுத்தனமாய் ஆதரிப்பதன் மூலமாய் வரும் செல்வாக்கு நமக்கு அவசியமில்லை என்றும், மகாத்மாவைப்பற்றி நாம் கண்டிக்கும் விஷயம் சரியா தப்பா என்று விசாரணை செய்து பார்த்து ஒருமுடிவுக்கு வரயோக்கியதை இல்லாமல், குருட்டு பக்தியாய் அபிப்பிராயம் கொள்ளுபவரது கண்டனத்தைப் பற்றி நமக்குக் கவலை இல்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க,

இதுவரையில் கடிதமூலமாயும், பத்திரிக்கை மூலமாயும் நேரிலும் நமதுகண்டனத்தை மறுத்தவர்களில் ஒருவராவது பிறவியில் வருணாசிரமதர்மமும் சாதி வித்தியாசமும் இல்லை என்று மகாத்மா சொன்னதாகவாவது, பிறவியில் வருணாசிரம தர்மமும் சாதிப்பிரிவுகளும் உண்டு என்று அவர் சொல்லவில்லை என்றாவது, ஒருவரும் சொல்லவே இல்லை. இனியும் யாராவது மகாத்மாவுக்கு பிறவியில் வருணாசிரம தர்மமும் சாதியும் இல்லை என்று சொல்வார்களேயானால், அல்லது இல்லை என்று மகாத்மா இன்ன இடத்தில் சொல்லி இருக்கிறார் என்று காட்டுவார்களேயானால், உடனே நான் எழுதியவைகளையும் மறுத்து எழுதிவிட்டு, மகாத்மா விஷயமாய் நான் கொண்ட அபிப்பிராயத்தையும் மாற்றிக்கொண்டு, எனது வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

அப்படிக்கில்லாமல், 'அவர் அப்படி எண்ணி இருக்கமாட்டார்'; 'இப்படி எண்ணி இருக்க மாட்டார்'; 'மகாத்மா சொல்வதற்கு அதுவல்ல அர்த்தம், இதுவல்ல பொருள்' என்பதான வெறும் உத்தேசமும் வியாக்கியானமும் நமது அபிப்பிராயத்தை ஒருசிறிதும் மாற்றிக்கொள்ளும்படிசெய்யவே முடியாது என்பதை வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

நிற்க, நமது கருத்தையும், மகாத்மா கருத்துக்கும் நமது கருத்துக்கும் மாறுபட்ட கருத்துகளைப் பற்றியும் சென்ற மாதம் மகாத்மா அவர்களிடம் நேரில் கலந்துபேசி, நம்மைப் பொறுத்தவரையிலும் ஒரு முடிவுகட்டிக்கொண்டே வந்துவிட்டோம். 'மகாத்மாவிடம் நான் கலந்து பேசினேன்' என்று சொல்லிக்கொள்வதும் எழுதிக்கொள்வதும் இக்காலத்தில் பெரிதும் தற்பெருமைக்கே உபயோகித்துக்கொள்ளக்கூடியதாய் விட்டபடியால், அந்தத் தற்பெருமை நமக்கு வேண்டாம் என்பதாகக் கருதியே நாம் அதுசமயம் அதை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை.

தவிரவும், அதுசமயம் நமக்கும், மகாத்மாவுக்கும் நடந்த சம்பாஷணைகளின் விபரத்தை மகாத்மாவின் சம்மதம் பெற்றே வெளிப்படுத்த வேண்டியதான ஒரு நிபந்தனைக்கும் நாம் சம்மதம் கொடுத்து வந்ததால், அதையும் வெளியிடமுடியாத நிலையில் இருக்கிறோம்.

முக்கியமாய் மூன்று விஷயத்தைப்பற்றியேதான் மகாத்மாவிடம் நாமும் நமது நண்பரான ஸ்ரீமான் எஸ். இராமநாதனும் சம்பாஷித்தோம். அதாவது என்னுடைய அபிப்பிராயமாக மகாத்மாவுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் :

இந்தியாவின் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் மூன்றுமுக்கிய காரியங்கள் செய்து முடிக்கவேண்டும் என்றும், அது முடிவுபெறாமல் நமது நாட்டுக்கு விடுதலை இல்லை என்றும் நாம் முடிவு செய்திருக்கிறோம் என்பதாகச் சொன்னோம்.

அதாவது ஒன்று, காங்கிரசு என்பதை ஒழிக்கவேண்டியது ;

இரண்டாவது, இந்துமதம் என்பதை ஒழிக்கவேண்டியது ;

மூன்றாவது, பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டியது—என்பவைகளாகும்.

முதல் இரண்டை ஒழித்தாலே பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்து விடுமானாலும், இவ்விரண்டின் மூலமாய் ஒழிந்தது போக பாக்கி கொஞ்ச நஞ்சம் இருந்தாலும் அதையும் ஒழிப்பது என்கிற கொள்கையும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையே காட்டினோம்.

இது விஷயமாய் நடந்த தர்க்கங்கள் முன்சொன்ன காரணத்தால் வெளியிடக் கூடியதல்ல. ஆதலால், இனி இதைப்பற்றி மகாத்மாவிடம் மறுபடியும் கலந்துபேசித் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை என்பதையும், மகாத்மாவினிடம் நேரிலேயே இம்மூன்று விஷயங்களைப்பற்றியும் மகாத்மா சொன்ன சமாதானங்கள் எம்முடைய அபிப்பிராயத்தை மாற்றக்கூடியதாயில்லை என்றும் சொல்லி, மகாத்மாவினிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு வந்துவிட்டோம். மகாத்மாவும், தான்சொன்ன சமாதானத்தால் நாம் திருப்தி அடையவில்லை என்பதைத் தெரிந்துகொண்டதாகவும், இன்னும் இரண்டொரு தடவை இதைப்பற்றிப் பேசவேண்டும் என்றும் சொன்னார். எமது நண்பர் ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள்கூட, மகாத்மா சொன்னதுபோலவே மறுபடியும் இரண்டொரு தடவை மகாத்மாவிடம் பேசலாம் என்றுகூடச் சொன்னார். இதற்கு உடனே நாம், 'மகாத்மா நம்முடைய அபிப்பிராயத்தை மாற்றும்படி திருப்தி செய்வார்கள் என்று நம்புகிறீர்களா ? அல்லது மகாத்மா அபிப்பிராயத்தை நாம் மாற்றக்கூடும் என்பதாகக் கருதுகிறீர்களா ?' என்று கேட்டதில், 'மகாத்மா சொல்வதைக்கொண்டு நம்முடைய அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளக் கூடியதாய் ஏற்படாது என்றும் ஒருகால் நமது அபிப்பிராயத்துக்கு மகாத்மா இணங்கக்கூடியதானால் நமது பிரச்சாரத்திற்கு இன்னும் உதவியாக இருக்காதா ?' என்றும் சொன்னார். உடனே நாம், 'அந்தப்படி எதிர்பார்ப்பது தப்பு என்றும், மகாத்மாவைத் திருத்தும்படியாக நாம் சொல்லி சரிசெய்யமுடியாது என்றும், நம் அபிப்பிராயத்தை நாம் வெளிப்படுத்த வேண்டியதுதான் நமது கடமை' என்றும்

சொல்லிவிட்டோம். இன்ன இன்ன விஷயங்களைப்பற்றி மகாத்மா அவர்களுடன் சம்பாஷித்ததாக திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களிடம் தெரிவித்து விட்டே உத்திரவுபெற்றுக்கொண்டு வந்துவிட்டோம்.

எனவே, இதுசம்பந்தமாக இனி மகாத்மாவின் அபிப்பிராயம் எப்படி என்பதைப் பற்றி நாம் மறுபடியும் அவரைக்கண்டு கேட்கவேண்டியதில்லை என்பதைப் பற்றியும், அதைப்பற்றி நாம்கொண்டுள்ள அபிப்பிராயத்தில் நமக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வருணாசிரம விஷயமாய் மகாத்மாவுடன் சம்பாஷித்ததை ஆதாரமாய் வைத்துக்கொள்ளாமலேயே, மகாத்மாவே மைசூரில் பேசினதைக் கொண்டும், அதற்கும் அவர் எழுதினதைக் கொண்டும்தான் அந்தமறுப்பு எழுதப்பட்டது. தவிர, மகாத்மாவின் வருணாசிரம தர்ம நியமனமும், சாதி வித்தியாச நியமனமும் பிறப்பை ஒட்டியது என்பதாக இதற்குமுன் எத்தனையோ தடவைகளில் மகாத்மாவின் பேச்சினாலும், எழுத்துக்களினாலும் நாம் தெரிந்தே இருக்கிறோம்.

மகாத்மா, பார்ப்பன மதமான ஆரியரின் மதத்தைத்தான் இந்துமதம் என்று சொல்லிக்கொண்டு, தன்னையும் 'அதே இந்து இந்து' என்று அடிக்கடி சொல்லிவருகிறார். தன்னுடைய பிரசங்கங்களுக்கு அடிக்கடி ஆரியக் கதைகளான புராணங்களைத்தான் அதாவது—இராமாயணம், பாரதம், பாகவதம் முதலியவைகளையே—தனக்கு ஒரு படிப்பினைகளாகவும் மேற்கோள்களாகவும் காட்டிக்கொண்டும் வருகிறார். இந்தமாதிரி புராண வழக்கலானது எப்படியாவது மகாத்மாவைச் சேற்றில் கொண்டுபோய் அழுத்தியே தீரும் என்பதே நமது துணிபு.

தமிழ்நாட்டின் நாகரிகமும், தமிழ்நாட்டின் பழைய பழக்கவழக்கங்களும் மகாத்மாவுக்குத் தெரிவதற்குச் சந்தர்ப்பமே இல்லை. மகாத்மா தென்ஆப்பிரிக்காவில் இருந்த காலத்தில் வள்ளியம்மை, நாகப்பன் என்பவர் போன்ற சில தமிழ்மக்கள் மூலம் தமிழரின் வீரத்தை அறிந்திருக்கலாமே தவிர, தமிழ்நாட்டைப் பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் பார்ப்பனர்களின் மூலமாகத்தவிர வேறொன்றும் அவர் அறிந்திருக்க முடியாது என்பதாக உறுதிகூறலாம்.

ஆரியக்கொள்கையான பார்ப்பன மதத்திற்கும் தமிழர் நாகரிக, பழக்கவழக்கத்திற்கும் ஏறக்குறைய 2000, 3000 வருஷங்களாகவே யுத்தங்கள் நடந்து வரும் விஷயங்களை மகாத்மாவுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள், மகாத்மா மடத்தில் யார் இருக்கிறார்கள்? ஆதலால், தமிழ்நாட்டிற்கு ஆரியக்கொள்கைகள் கூடாது என்பதாக நாம் பிரச்சாரம் செய்வதானால், அதைப் பொறுத்தவரை மகாத்மா கொள்கை கூடாது என்றுதான் நாம் சொல்லி ஆகவேண்டும். தொழிலின் மூலமாகக்கூட மக்களைப் பிரிக்கக்கூடாது; பிரிக்க முடியாது; பிரிப்பது உலக இயற்கைக்கும் மனிதத் தன்மைக்கும் சரியல்லவென்று வாதாடுகிற நாம், 'பிறவியில் சாதி உண்டு; தொழில் உண்டு; இதுபெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டது; கடவுளால் ஏற்படுத்தப்பட்டது, ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது' என்றால் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? ரிஷிகள், கிருஷ்ணன் முதலானவர்கள் காலமல்ல இது என்பதும், நாம் அந்தக் காலத்தில் இல்லை என்பதும், இந்தக் காலத்தில் அவர்கள் இல்லை என்பதும், அது சரியா, தப்பா, நிஜமா, பொய்யா என்பதற்குச் சரியான ஆதாரமும் அவசியமும் சாத்தியமும் இல்லை என்பதும் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மனிதனுக்கும் தானாக விளங்கும்போது, 'பாட்டி கதைக்கு' எப்படி மரியாதை கிடைக்கும் என்பது நமக்கே விளங்கவில்லை.

'மகாத்மாவும் வருணாசிரமமும்' என்னும் வியாசத்தை மகாத்மாவுக்கும் அனுப்பித்தான் இருக்கிறோம். மற்றொன்றை அவரது அந்தரங்க சிஷ்ய கோடிகளுக்கும் அனுப்பி, மகாத்மா தகவலுக்குக் கொண்டுபோகும்படி கேட்டுக்கொண்டும் இருக்கிறோமேயல்லாமல்,

மகாத்மாவுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆனால், அவரது பரமானந்த சிஷ்யர்கள், 'இம் மாதிரி விஷயங்களை லட்சியம் செய்யாதீர்கள்; லட்சியம் செய்தால் மறுப்புக்கு அதிக யோக்கியதை யுண்டாகிவிடும்; மறுப்பவனுக்கும், அந்தப் பத்திரிக்கைக்கும் யோக்கியதை அதிகமாகிவிடும். ஆதலால், குப்பையில் போட்டுவிடுங்கள்' என்றுதான் சொல்லிக்கொடுப்பார்கள். அதை மீறுவதற்கு மகாத்மாவுக்கும் இதுசமயம் சக்தியில்லை யென்பதே நமது அபிப்பிராயம். ஆகவே, இந்த விஷயம் முக்கியமானதாலும் நமது நாட்டின் விடுதலைக்கும், நமது சுயமரியாதைக்கும், வருணாசிரமம் என்கிற தத்துவமே —அதிலும் பிறவியில் வருணாசிரமமும் சாதியும் உண்டு என்கிற தத்துவமே—'எமனாய்' இருக்கிறது என்பதான கண்ணியமான முடிவுக்கு வந்திருப்பதாலும், அதையொழிக்கப் பாடுபடுவதே நாட்டின் விடுதலையும் சுயமரியாதையும் கோரும் மனிதனின் கடமையென்று நாம் களங்கமற உணருவதாலும், கண்டிக்க வேண்டியதாயிருக்கிறதே என்பதாக வருத்தத் துடன்தான் இதை எழுதுகிறோம்.

['குடிஅரசு'—தலையங்கம்—28-8-1927]

12. கோயில் நுழைவு ஏன்?

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமது தமிழ்நாட்டில் சுயமரியாதை மாநாடு நடந்து 8, 9 மாதங்கள் ஆகிவிட்டன. அடுத்து பம்பாயில் சுயமரியாதை மாநாடு நடந்து 3, 4 மாதங்களே ஆயின. ஆனால், பம்பாய்க்காரர்கள் இதற்குள் சத்தியாக்கிரகம் துவக்கிவிட்டார்கள். சத்தியாக்கிரகம் அன்றியும் வடநாட்டில் இல்லாமலும் பல கோயில்கள் எல்லோருக்கும் திறந்துவிடப்பட்டு விட்டன. நாமோ மற்றொருவர் செய்த சத்தியாக்கிரகத்தைப் பாராட்டுவதில் முனைந் திருக்கிறோம். இதை நினைக்கும்போது—நம்மை நாம் வாய்ப்பேச்சு வீரர்கள் என்றே சொல்லிக்கொள்ளவேண்டும். நிற்க,

சிலர் நம்மை 'உங்களுக்குத்தான் இந்த மாதிரி கடவுள்களிடத்தில் நம்பிக்கை இல்லையே; அப்படி இருக்க எதற்காகக் கோயிலுக்குள் போக சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்?' என்று கேட்கின்றார்கள். ஆனால், சகோதரர்களே! நாம் மாத்திரமல்ல; இப்போது எங்கு பார்த்தாலும் ஆஸ்திகர்கள் என்பவர்கள்—சொல்லிக்கொள்பவர்கள்கூட— நம்மைப் போலவேதான் அதாவது-கோயிலில் இருப்பது கல்லும் செம்புமே ஒழிய அவைகள் கடவுள்கள் அல்லவென்பதைத் தாராளமாய் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் மனிதன் கடவுளை நினைக்க ஞாபகம் வருவதற்காகவே கோயில் என்றும்—ஆனால், பாமர மக்களுக்கு இதைச் சொன்னால் புரியாதென்றும், அதையே கடவுள் வீடு என்றும், உள் ளிருப்பவைகளே கடவுள் என்றும் சொல்லவேண்டி இருக்கின்றது—என்பதாகத் தத்துவார்த் தம் சொல்லுகின்றார்கள். இவர்களைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்றால், ஒன்று இவர்கள் கடவுளை மிகக் கேவலப்படுத்துபவர்களாக இருக்கவேண்டும்; அல்லது, கடவுள் தன்மை இன்னது என்பதை அறியாத மூடர்களாக இருக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாவிட்டால் பொதுஜனங்களை ஏமாற்றும் அயோக்கியர்களாக இருக்கவேண்டும் என்பதேயாகும்.

ஏனெனில், எல்லாம் வல்லவரும், எங்கும் இருப்பவரும், சர்வ இயங்குதலுக்கும் காரணமான கடவுள் என்பவரை ஆறறிவுள்ள மனிதனுக்கு ஞாபகப்படுத்த மற்றொரு மனிதன் முயற்சி வேண்டும் என்றால், அதுவும் அதற்கு ஒரு கட்டடமும் கல் உருவமும் வேண்டுமென்று ஒருவன் சொல்வானானால், அவன் கடவுள் என்பதற்கு மேற்கண்ட எல்லாம் வல்ல சக்தியும், எங்கும் உள்ள சக்தியும் என்று ஒப்புக்கொண்டவனாவானா என்று கேட்

கிறேன். ஆதலால், ஒரு சமயம் கோயில்கள் மூடர்களால் கட்டப்பட்டன என்று சொல்லுவதானால் நமக்கு ஆட்சேபம் இல்லை. அப்படிக்கில்லாமல், கோயில்கள் அறிவாளிகளால் கட்டப்பட்டன என்று சொல்லுவதானால், கண்டிப்பாய் அந்த அறிவாளிகள் என்பவர்கள் சூழ்ச்சியும் வஞ்சகமும் நிறைந்தவர்களாய்த்தானிருக்கவேண்டும். ஏனெனில், அந்தக் கோயில்கள் இப்போது அந்தப் பெரியவர்களின் ஆதாரப்படி நடந்து வருவனவாகவே இருக்கின்றன. அந்த ஆகமங்கள் என்பவைகளே, மனிதன் அந்தக் கோயில்களுக்குள் போகவும் அங்குள்ள சாமியை வணங்கவும் பல நிபந்தனைகளைக் கொண்டவையாக இருக்கின்றன. அந் நிபந்தனைகள் மனிதத் தன்மைக்குச் சிறிதும் பொருத்தமில்லாதனவாயிருக்கின்றன.

அதில் ஒரு சிறிதும் ஒழுக்கத்திற்கும் பக்திக்கும் ஆதாரமானதும், கடவுள் ஞாபகம் வருவதற்கும் ஆதாரமுமான காரியங்கள் இல்லவே இல்லை. அங்குள்ள கடவுள்களைப் பார்த்தால், கடவுள் ஞாபகம் வருமென்றால், அங்குள்ள தாசிகளைப் பார்த்தால் தாசிகள் ஞாபகம் வராதா என்று கேட்கின்றேன். மற்றும், அங்கு கடவுளை வணங்க வரும் மற்ற பெண்களைப் பார்த்தால், பெண்கள் ஞாபகம் வராதா என்று கேட்கிறேன். உணர்ச்சியற்ற குழவிக்கல்லைப் பார்த்த மாத்திரத்தில் கடவுள் ஞாபகம் வருவதானால், உயிருள்ள ஜீவன்கள்—பெண்கள் தங்களைப் பிறர் பார்க்கவேண்டுமென்றே அலங்கரித்து வந்து நின்றுகொண்டிருந்தால்—ஏன் அந்த ஞாபகம் வராது? அன்றியும், அங்கு கடவுளுக்கு நடக்கும் மற்ற காரியங்களையும் பார்த்தால்—ஏன் பார்க்கின்ற மனிதனுக்கு மற்ற ஞாபகமும் வராது என்று கேட்கின்றேன்.

கோயிலைப்பற்றி என்னுடைய கண்ணியமான அபிப்பிராயமெல்லாம் கோயில்கள் கண்டிப்பாக பக்திக்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்பட்டவை அல்லவென்றும், மக்களை மூடர்களாக அடிமைப்படுத்தவும் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்கின்ற சாதி வித்தியாசத்தை நிலைநிறுத்தவும், ஒரு கூட்டத்தார் பாடுபடாமல் இருந்துகொண்டே—சோம்பேறித்தனமாய்—வயிறு வளர்க்கவேண்டி, பொதுஜனங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைக் கொள்ளை அடிக்கவும் வசதி செய்துகொள்வதற்காகவே ஏற்பட்டவையாம்.

முன்காலத்திலிருந்த அரசர்கள் மூடர்களும் அயோக்கியர்களுமாய் இருந்ததால், இம் மாதிரி கோயில் சூழ்ச்சிக்கு அவர்களும் அனுகூலமாயிருந்து வந்திருக்கின்றார்கள். சில அரசர்களுக்கு இம்மாதிரியான கோயில் மூலமாகவே ஆட்சியும் அனுகூலமும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால், கோயில்கள் என்பவை சோம்பேறிக்கூட்டமும், அரசர்களும் சேர்ந்து தங்கள் சுயநலத்திற்காகப் பாமர மக்களை ஏமாற்றுவதற்குச் செய்த சூழ்ச்சியேயாகும். அவ்வித சூழ்ச்சியை ஒழிக்கவே நாம் எல்லோருக்கும் கோயில் பிரவேசம் கேட்கின்றோம்.

இன்றைய சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ள ரோடு, கிணறு, பள்ளிக்கூடம், சாவடி, முதலியவைகள் எல்லாம் ஒருவிதமாக மாற்றப்பட்டு வந்து கொண்டிருப்பதாலும், இந்தக் கோயில்கள்தான் சிறிதும் மாற்றுவதற்கு இடம்தராமல் சாதிவித்தியாசத்தை நிலை நிறுத்த உபயோகப்பட்டு வருகின்றது. ஆதலால்தான், நான் தீண்டாத மக்கள் என்போர் கண்டிப்பாய்க் கோயிலுக்குள் போய்த்தீரவேண்டும் என்று கூறுகின்றேனே ஒழிய—பக்திக்காகவோ மோட்சத்திற்காகவோ, பாவமன்னிப்புக்காகவோ அல்லவே அல்ல. கோயிலில் சமத்துவமடைந்து விட்டால் மற்ற காரியங்களில் வித்தியாசம் இருக்க முடியவே முடியாது. கோயிலில் பிரவேசித்து நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் சாதி வித்தியாசத்தை ஒழிக்கச்செய்யும் முயற்சியே ஒழிய வேறில்லை.

இன்றைய தினம் எல்லோரும் கோயிலுக்குள் சாதி வித்தியாசமின்றி விடப்பட்டு விட்டார்கள் என்று ஏற்பட்டு விட்டால், நாளையதினமே நான், அங்கு எதற்காகப் போகின்றீர்கள்? அங்கு என்ன இருக்கின்றது? அங்கு போனதால் உங்களுக்கு என்ன

பலன் ஏற்படுகின்றது? ஏன் உங்கள் பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் அறிவையும் பாழாக்குகிறீர்கள்?' என்று சொல்லித் தடுக்கவே முயற்சிப்பேன். ஏனென்றால், கோயிலினுள்ள சாதி வித்தியாசம் காரணமாகவே சில மூடர்கள் கோயில்களைப் புனிதமான இடம் என்று கருதிக்கொண்டு—தங்கள் பணத்தையும், புத்தியையும் பாழாக்கிவருகின்றார்கள். நமது நாட்டின் வறுமைக்கும் முட்டாள் தனத்திற்கும் கோயில் வரியும் புரோகிதர்களின் வரியும் ஆகமங்களுமே காரணமாகும் என்பது எனது உறுதியான எண்ணம். தரித்திரமும் சாதி வித்தியாசமும் ஒழிந்து நமது நாட்டில் அறிவும் செல்வமும் பெருக வேண்டுமானால், இந்தக் கோயில்களும் புரோகிதர்களும் அடியோடு அழிக்கப்பட்டாக வேண்டும். எனவே, இம்முயற்சிகள் பலாத்காரத்தின் மூலம் துவக்குவது என்பது எனக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை இல்லாததும் பிடிக்காததுமான காரியமாகும். ஏனெனில், 100க்கு 100மனிதர்கள் உண்மையாகவே தீண்டாமையை நம்பிக்கொண்டு, ஆட்சேபிக்கும்படியான பாமரத்தன்மையில் இருக்கின்றார்கள். அவர்களிடம் பலாத்காரம் செய்வது நியாயமற்றதும் பாதகமானதுமாகும்.

தவிர, நீங்கள் (ஆதித் திராவிடர்கள்) நன்றாகப் படித்த பிறகுதான் இவ்வித உரிமைக்கு அருகதையாவீர்கள் என்று சாமி சகஜானந்தம் சொல்லுகிறார். இதைக்கேட்க எனக்கு மிக வருத்தமாயிருக்கின்றது. இந்த நாட்டில் 100க்கு 90 பேர் கொஞ்சங்கூடப் படிக்காதவர்கள். அப்படியானால், அவர்களெல்லாம் நாயிலும் பன்றியிலும் கடையாய் இருக்கின்றார்களா என்று கேட்கிறேன். இன்றைய தினம் உங்களைத் தெருவில் நடக்க வேண்டாம் என்று தடுத்து விட்டு நடக்கும் மற்றவர்களெல்லாம் படித்தவர்களா? அன்றியும், உங்களைத்தவிர—நடக்கும் நாய், பன்றி ஆகியவைகள் படித்தவைகளா என்று கேட்கிறேன். தவிர, உங்களில் 'ரிக்ஷா' வண்டி இழுப்பவர்கள் முதல் மலம் எடுத்து ஜீவிக்கின்றவர்கள் வரை—எந்தக் காலத்திற்குப் படித்துமுடிவது? நீங்கள் எந்தக் காலத்தில் தெருவில் நடப்பது? கோயிலுக்குள் போவது? எந்தக் காலத்திற்கு இழிவை விலக்கிக் கொள்வது? என்பது எனக்குச் சிறிதும் விளங்கவில்லை. தவிரவும், ஒருவன் படிப்பதினாலேயே யோக்கியனாய் விடுவானா? மேல்சாதியாய் விடுவானா என்றே கேட்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் படித்தவர்களில் அனேகரை அயோக்கியர்கள் என்றே அறிகிறேன். பெரிய பண்டிதர்களும் பெரிய வித்வான்களும் தேவாரம், பிரபந்தம், ஆகமம், சாஸ்திரம், திருக்குறள் முதலியவை படித்த மதப் பித்தர்களும் அயோக்கியர்களாகவே காணப்படுகின்றார்கள். பெரிய பெரிய ஆங்கிலேயப் பட்டம் பெற்றவர்கள் அதைவிட மோசமாயிருக்கிறார்கள்.

இன்றைய 'சர்க்கார்' வெள்ளைக்காரர், பார்ப்பனர், பணக்காரர் ஆகிய மூவர்களுடைய கூட்டு வியாபாரமாய் நடைபெறுகின்றது. இம்மூன்று கூட்டத்தினரும் ஏழைகளுக்கு நன்மை செய்யவோ, தீண்டாமையை விலக்கவோ சுலபத்தில் சம்மதிப்பார்களா என்று கேட்கிறேன். தவிரவும், சீர்திருத்தமும் சுயமரியாதையும் சட்டம் கொண்டு 'வோட்டு' வாங்கி நிறைவேற்றிப் பெற்றுவிடலாம் என்பது ஒருநாளும் முடியாத காரியம். வோட்டு என்பது கூட்டுக்கொள்ளையே தவிர வேறில்லை. 'என்னுடைய உரிமையைக் கொடுக்கின்றாயா, அதற்காக உயிர் விடட்டுமா?' என்கின்ற கொள்கையுடைய மக்கள்தான் எங்கும் வெற்றிபெற்றிருக்கின்றார்கள். 'இந்தப்படி நடக்கின்றாயா? அல்லது ஜெயிலில்போட்டு அடைக்கட்டுமா?' என்று சொல்லும் அரசாங்கம்தான் சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றது. அதை விடுத்து, இம்மாதிரி காரியங்களுக்கு வோட்டும், சட்டசபையும் ஜாலவேடிக்கையும் வேடிக்கை பார்க்கும் விளையாட்டுப்பிள்ளை நிலையங்களேயாகும்.

தவிர, இங்கு செய்யும் பிரச்சாரத்தைப் பார்ப்பனர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் போய்ச் செய்யட்டும் என்று அவர் சொல்லுகின்றார். பார்ப்பனர்கள் நமது பிரச்சாரத்தினால் புத்தி திருந்திவிடுவார்கள் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். அவர்கள்

தெரியாதவர்களாயிருந்தால் நியாயம் சொல்லலாம். நன்றாய்த் தெரிந்தே, எங்கு தங்கள் ஆதிக்கமும் சோம்பேறிப் பிழைப்பும் போய்விடுகின்றனவோ என்று சுயநலங்கருதி, குரங்குப் பிடிவாதமாய் இருப்பவர்களை நாம் எந்தப் பிரச்சாரத்தால் எப்படி மாற்றக்கூடும் ? பார்ப்பனரல்லாதவர்களோ—முக்கால்வாசிப்பேர்—பார்ப்பனர்களைப் பின்பற்றுபவர்களாகவும், பார்ப்பானுக்குத் தாசிமகனாய் இருந்தாலும் சரி, நாம் பறையனுக்கு மேலே இருந்தால் போதும்—என்று முட்டாள்தனமாய் கருதிக்கொண்டிருக்கின்றவர்கள் என்றாலும், நம்மால் கூடியதைச் செய்துதான் வருகின்றோம். எதற்கும் உங்கள் முயற்சியும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால், ஒரு காரியமும் நடவாது. தவிரவும், தீண்டாமை ஒழிவதற்கு இந்த ஒரே ஒரு மார்க்கந்தான் என்று சொல்ல வரவில்லை. தீண்டாமை ஒழியவேண்டுமானால், மதத்தை விட்டுவிடுங்கள்; அல்லது ஏதாவது மதம் வேண்டுமானால், தீண்டாமை இல்லாத மதத்தைத் தழுவலாம்.

ஆகவே நான் சொல்லுவதைப் பொறுமையுடனும் சுயபுத்தியுடனும் ஆராய்ச்சி செய்துபார்த்து, உங்களுக்குச் சரி என்று தோன்றியபடி நடவுங்கள்.

[சென்னை, நேப்பியர் பார்க்கில், 22–10–1929-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 27–10–1929]

13. வைக்கம் சத்தியாக்கிரகம்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சத்தியாக்கிரக ஆரம்பத்தில் பிராமணர்கள் கட்சியில் இருந்த அரசாங்கத்தார், இப்பொழுது பிராமணர்களுக்கு விரோதமாகவே, தீண்டாதாரென்போரைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு செல்லுவதை நாம் பார்க்கிறோம்.

அப்பொழுது நமக்கே சத்தியாக்கிரகத்தின் தன்மையைப் பற்றி ஆச்சரியப்படத் தக்கதாய் இருக்கிறது. சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட கஷ்டங்களை நாம் பொறுமையாய் அனுபவித்து வந்ததால், இவ்வித சக்தியை இங்கு காண்கின்றோம். பலாத்காரத்திலோ, கோபத்திலோ, துவேஷத்திலோ நாம் இறங்கி இருப்போமேயானால், இச் சக்திகளை நாம் ஒருகாலும் கண்டிருக்கவேமாட்டோம். சத்தியாக்கிரகத்தின் உத்தேசம்—கேவலம் நாய், பன்றிகள் நடக்கும் தெருவில் நாம் நடக்கவேண்டும் என்பதல்ல. மனிதனுக்கு மனிதன் பொது வாழ்வில் வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதுதான். அந்தத் தத்துவம் இந்தத் தெருவில் நடந்ததோடு முடிந்துவிடவில்லை. ஆகையால், தெருவில் நிரூபித்த சுதந்திரத்தைக் கோவிலுக்குள்ளும் நிரூபித்துக் காட்டவேண்டியது மனிதர் கடமை.

மகாத்மா காந்தியும், மகாராணியைக் கண்டு பேசிய காலத்தில், மகாராணியார் மகாத்மாவைப் பார்த்து, 'இப்பொழுது தெருவைத் திறந்து விட்டுவிட்டால் உடனே கோயிலுக்குள் செல்லப் பிரயத்தனப்படுவீர்களே' என்று கேட்டார்கள். மகாத்மா காந்தி அவர்கள், 'ஆம்; அதுதான் என்னுடைய குறி. ஆனால், கோயிலுக்குள் செல்ல உரிமை வேண்டிய ஜனங்கள் போதுமான பொறுமையும் சாந்தமும் அவசியமான தியாகமும் செய்யத் தயாராய் இருக்கிறார்கள் என்று நான் அறியும் வரையில்—அக் காரியத்தில் பிரவேசிக்க மாட்டேன். அதற்கு வேண்டிய காரியங்களை அது வரையில் செய்து கொண்டு இருப்பேன்' என்று சொன்னார்.

வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு விரோதியாய் இருந்தவர்கள் பிராமணர்களே ஒழிய அரசாங்கத்தார் அல்ல என்பதை அரசாங்கத்தார் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். மனித உரிமையை அடைய அன்னிய மதங்களுக்குப் போவது மிகவும் இழிவான காரியமாகும். அப்படி அவசியம் இருந்தாலும் கிறிஸ்துவ மதத்திற்காவது, முகமதிய மதத்திற்காவது

1928-ல்—வைக்கம் வீரர் பெரியார் ஈ. வெ. ரா.

செல்லலாமே ஒழிய, ஆரிய சமாஜத்திற்குப் போவது எனக்கு இஷ்டமே இல்லை. ஏனென்றால், ஆரிய சமாஜத்திற்குப் போவதானால் பொருள் இல்லாத—அர்த்தமற்ற பூணூல் போட்டுக்கொள்வதோடு,—பொருளறியாத சந்தியா வந்தனமும் செய்துகொள்ள வேண்டும். இப்படி ஒரு காலத்தில் பூணூல் போட்டுக்கொண்டு சந்தியா வந்தனம் பண்ணினவர்கள்தான் இன்றைய தினம் நமது சுதந்திரத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் விரோதிகளாய் இருக்கின்றார்கள். அந்த நிலைமைக்கு நீங்களும் வரக்கூடாது என்று நினைப்பீர்களேயானால் கண்டிப்பாய் அந்தக் கூட்டத்தில் சேராதீர்கள்.

[திருவாங்கூரில், 29–11–1925-ல் வைக்கம் சத்தியாக்கிரக வெற்றி விழாச் சொற்பொழிவு

—'குடிஅரசு' 6–12–1925]

என்னைப் பொறுத்தவரை இன்றைக்குச் சுமார் 35 வருடங்களுக்கு முன்பே நம் சாதிக்கு உள்ள இழிவுகளை—தடைகளை நீக்க, வைக்கத்தில் போராட்டம் நடத்தி, அதில் நான் தலைமை வகித்து, தெருவில் நம்மில் பெருவாரியான மக்கள் நடப்பதற்கும் ரோடில் நடந்து செல்வதற்கும் கூடாதபடி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்துவந்த தடையை ஒழித்துக்கட்டி உரிமைகளைப் பெற்றோம். அதெல்லாம் தெரிய வேண்டுமானால்—சுமார் 35 வருடத்துக்கு முந்தைய சங்கதியானபடியால்—இன்றைக்கு 45, 50 வயதானவர்களாக இருக்கவேண்டும். அதற்குக் குறைந்த இந்தக் காலத்து இளைஞர்களுக்கு அதெல்லாம் தெரியாது. அந்தக் கிளர்ச்சிகள் இல்லாதிருந்தால்—இன்று இந்த நாட்டிலேயே பெரும்பாலான நம்மவர்கள் பல தெருக்களில் நடக்கக்கூட உரிமையற்றவர்களாக இருப்போம்.

அப்போது இந்த நாட்டில் நிலைமை மிகமிக மோசமானதாக இருந்தது. இது, ஒரே பார்ப்பன—வைதிக—வருணாசிரம ஆதிக்க ஆட்சியாக இருந்தது. எங்கள் நாட்டில் 'பார்ப்பனரல்லாதார் இயக்கம்' (ஜஸ்டிஸ் கட்சி என்று அந்த இயக்கம் நடத்திய பத்திரிகைப் பெயரை வைத்து அழைத்தார்கள்) தோன்றிய பிறகுதான் அப்போதிருந்த பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, பார்ப்பனரல்லாத மக்களுக்குச் சில உரிமைகள் பெறப்பட்டன.

பார்ப்பனர்கள் 'பிராமண சமாஜம்', 'பிராமண மகாசபை' என்றெல்லாம் வைத்து வெளிப்படையாக நாம் பெற்ற எல்லா உரிமைகளையும் எதிர்த்துப் பலவற்றை ஒழித்துக் கட்டிவிட்டார்கள். பார்ப்பனன் தன்னை மேல்சாதி என்றும், தன்னை பிராமணன் என்றும் அழைத்துக்கொள்ளுவதிலும்; நாமும் அவனைப் பிராமணன் என்று சொல்லுவதிலும் அவனுக்குப் பெருமையுண்டு; ஆனால், நம்மை அவன் சூத்திரன் என்றழைப்பதிலும், சாஸ்திரமும் சட்டமும் நம்மைச் சூத்திரர் என்றே குறித்து வைத்துள்ளதிலும் நமக்கு எவ்வளவு இழிவும், வாழ்வுக்கேடும், முன்னேற்றத் தடையுமிருக்கின்றன? நாம் திராவிடன் அல்லது தமிழன் என்ற பெயரை வைத்துக்கொள்ளாமல் வேறு பெயரை வைத்துக் கொள்ள வேண்டுமென்றால்—'சூத்திரர் கழகம்' என்று தானே வைத்துக்கொள்ளவேண்டும்?

அதனால்தான், நம்மைக் குறிப்புக் காட்டுவதற்கு திராவிடர் என்ற இனப்பெயரை வைத்துத் 'திராவிடர் கழகம்' என்று—தென்னிந்தியர் கட்சி, ஜஸ்டிஸ்கட்சி என்பதற்குப் பதிலாகப் பெயர் மாற்றினோம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றழைக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் முயற்சியாலேயே 1919, 1920 ஆம் வருடங்களில் நடந்த கிளர்ச்சிகளால் எங்கள் நாட்டிலே, ஏன்—தெலுங்கு, கன்னட, மலையாள நாட்டிலே வீதியிலே நடக்கிற உரிமை வந்துவிட்டது. இப்படி 'வீதியில் எல்லோரும் நடக்கலாம்; எல்லா ரோடுகளிலும் யார் வேண்டுமானாலும் நடக்கலாம்' என்ற நிலைமையை அப்போது அதிகாரத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

பார்ப்பனர்கள் தண்ணீர் மொண்டு உபயோகப்படுத்துகிற குளத்திலேயும், கிணற்றிலேயும் மற்ற தாழ்ந்த சாதிக்காரர்கள் எனப்படுகின்ற நாமும் தண்ணீர் எடுக்கலாம்; உபயோகப்படுத்தலாம் என்று அப்போதே ஜஸ்டிஸ் கட்சியினர் சட்டம் செய்தார்கள்.

இதெல்லாம் காந்திக்கு முன்பே நடந்த காரியங்களாகும். காங்கிரசும் காந்தியும் வந்துதான் இந்தக் காரியங்கள் நடந்தன என்பதெல்லாம் புரட்டும் பித்தலாட்டமுமாகும்.

அது மாத்திரமல்லாமல், எல்லா சாதிக்காரனும் பஞ்சாயத்து போர்டிற்கு, முனிசிபாலிடிக்கு, தாலுகா, ஜில்லா போர்டுகளுக்கு, சட்டசபைக்குப் போகலாம் என்று—நியமிக்க வேண்டும் என்றுகூட—காந்தி வருவதற்கு முன்பே—ஜஸ்டிஸ் கட்சியினர் திட்டம் செய்துவிட்டனர்! பார்ப்பானும் சட்டசபைக்குள் நுழையலாம், பறையனும் போகலாம் என்பதெல்லாம் காந்தியாலான காரியம் அல்ல. அதற்கு முன்பே பறையர், சக்கிலி, பள்ளர் என்பவர்கள் சட்டசபையில் இருந்தார்கள் என்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

குளத்திலேயும், கிணற்றிலேயும் பார்ப்பானும் 'பறையனும்' 'சூத்திரனும்' ஒன்றாகத் தண்ணீர் எடுக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; மேல்சாதிக்காரனுக்குத் தனிக்குளம்—கிணறு, தனிக்கோயில், மற்றசாதிக்காரனுக்குத் தனிக்குளம்—கிணறு, தனிக்கோயில் முதலியன கட்டித்தரவேண்டும் என்பதுதான் காந்தியின் திட்டம்; இவை எனக்குத் தெரியும்—யாராவது இல்லையென்று சொல்லட்டுமே பார்ப்போம்! சும்மா இன்றைக்குச் சொல்வார்கள், 'காந்திமகான் காட்டிய வழி', 'மகாத்மாவின் சேவை' என்றெல்லாம்! அது வெறும் புரட்டு.

நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குக் காரியதரிசியாக, தலைவனாக இருந்த போதுதான் ரூ 48,000 (நாற்பத்தெட்டாயிரம் ரூபாய்) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு 'கிராண்ட்' அனுப்பினார்கள். எதற்கு? 'பறையன், சக்கிலி, பள்ளனுக்கு—வேறு பள்ளிக்கூடம், வேறு கோயில் கட்டிக்கொடு; மற்ற சாதியானுக்கு, மேல்சாதிக்காரனுக்கென்று இருப்பதில் போய் ரகளை செய்யக்கூடாது' என்பதற்கு.

ஆனால், அந்தக் காலத்திலேயே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சட்டம் செய்துவிட்டார்கள்; ஒன்றாகப் படிக்கவேண்டும்; படிக்கிறதில் சாதி வித்தியாசம் காட்டக்கூடாது என்று. இன்றுங்கூட, அந்தச் சட்டப்படிக்கு எல்லாப் பள்ளிக்கூடத்திலும் அமுல் நடக்கிறது. பறையர்கள், பஞ்சமர்கள் எனப்படும் சாதிகளிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சில மாணவர்களைச் சேர்த்துக்கொண்டேயாக வேண்டும்; இல்லாவிட்டால் சர்க்காரின் கிராண்ட் அவைகளுக்குக் கிடைக்காது என்று திட்டம் செய்துவிட்டார்கள்.

கல்வி இன்ஸ்பெக்டர் வரும்போது "கீழ்சாதிப் பையன்கள் இல்லையா?" என்பார். "இல்லை; யாருமே வரவில்லை" என்றால், "இல்லாவிட்டால்—போய்ச் சேர்த்துக் கொண்டு வா" என்பார்.

அப்படி எங்கள் நாட்டிலே ஏராளமாக நடந்துகொண்டிருக்கிற நேரத்திலே உங்கள் நாட்டிலே கொடுமை; கீழ்ச் சாதியான் மேல் சாதியான் கண்ணில் தென்படக் கூடாது; அவனின் நிழல்கூட மேல் சாதிக்காரர்களின்மேல் படக்கூடாது என்ற நிலைமை அல்லவா இருந்தது! மற்றும், அவன் தன்னை இன்னான் என்று காட்டிக்கொள்ள மறைவிலிருந்தே ஒருவித சத்தம் போடவேண்டும் என்றும் திட்டமிருந்தது. நாராயண குருசாமி அவர்களின் போற்றத் தகுந்த தொண்டு காரணமாகத்தான் ஓரளவு கீழ்ச்சாதி மக்கள் உணர்வு பெற்று, வைக்கம் கிளர்ச்சி நடந்து, இதற்குப் பரிகாரம் கிடைத்து, நிலைமை மாறியது என்று சொல்லலாம். இதெல்லாம் கூட இன்றைக்கிருக்கும் சிறு பிள்ளைகளுக்குத் தெரியாது. 40, 45 வயதானவர்களுக்குத் தெரியும்.

வைக்கத்திலே நாங்கள் செய்ததும், அதனால் நாங்கள் பல தடவைகள் சிறை சென்றதும், அடிபட்டு அவமானமடைந்ததும்—இக் கொடுமைகளை நீக்கத்தானே?

அந்தக் காலத்தில் ஜெயிலில் வகுப்புக்கள் கிடையாது. ஒரே 'சி' வகுப்புத்தான்; ஆகவே, அப்போது சாதிக்கொடுமை யொழிய நாம் எப்படிப்பட்ட கொடுமைகளை அனுபவித்து இருந்தோம் என்பதும் இப்போதுள்ள உங்களில் பலருக்குத் தெரியாது. இது எப்படி மாறியது? இப்போது நம் நிலைமை எப்படி இருக்கிறது? என்பதையெல்லாம் நீங்கள் யோசித்தால்தான், 'இப்போது, நாங்கள், மெதுவாக இந்த சாதி ஒழிப்பு விஷயத்தில் போகிறோம்; இன்னும் வேகமாகப் போகவேண்டும்' என்று உங்களுக்குத் தெரியும்.

வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலே யிருந்துதான். தோழர் மாதவன் என்ற பி.ஏ., பி.எல். படித்த ஒரு வக்கீல், ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார். வழக்கு விசாரணைக்கான கோர்ட்—இடம்—இராஜாவுடைய கொட்டாரத்தில், (அரண்மனையில்) ஓரிடம். இராஜாவின் பிறந்த நாள் விழாவிற்கு அந்த இராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்) எல்லா பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்குமிடமும் பந்தலுக்குள்ளாகிவிட்டது. இந்த மாதவன் என்கிற வக்கீல் கேசில் ஆஜராக அங்கே போகவேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக முறை ஜெபம் ஆரம்பமாயிற்று. இந்த வக்கீல் ஈழவ (நாடார்) சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால் அங்கே போகக்கூடாது என்று தடுத்தார்கள்.

அந்த நேரம், நான் தமிழ்நாட்டிலே தீண்டாமை விலக்கு என்பதில் தீவிரமாக இருந்து பிரச்சாரம் செய்துகொண்டிருந்த நேரம்! கலப்பு மணம், சம பந்தி போஜனம், எல்லோரும் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டும்—என்பன போன்ற கருத்துக்களில் தீவிர நம்பிக்கை கொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துத்தான் காந்தியும் அதை நிர்மாணத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டார். அந்தக் காலத்தில் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சிக்காரர் நல்லபடி வெளியாக்கி வெளுத்து வாங்குவார்கள்! ரோடிலே பார்ப்பனர்கள் அப்போது தைரியமாகத் தனியே நடக்கக்கூட முடியாது. டி. எம். நாயரும், தியாகராயரும், ஜஸ்டிஸ் இயக்கமும் ஜனங்களிடத்தில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து, பார்ப்பனரல்லாதாரின் ஆதரவைத் திரட்டி ஆட்சியைப் பெற்று (ஜஸ்டிஸ் கட்சி) ஆண்டு வந்தது. பார்ப்பனர்கள் அவர்களைக் கண்டு நடுங்குவார்கள்! பார்ப்பனர்களுக்கு மேடையே இல்லாமல் போன காலம் அது!

அப்போதெல்லாம் பார்ப்பனர்கள், "எங்களுக்கு ஆட்சி வேண்டாம்; அதிகாரம் வேண்டாம்; சட்டசபை வேண்டாம்" என்று குள்ள நரித் தந்திரம் செய்து, மக்களை வசப்படுத்தச் சதி செய்துகொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு இருந்த செல்வாக்கைக் கண்டு வஞ்சக மனத்தோடு—பித்தலாட்டக் கருத்துக்கொண்ட காந்தி, 'தீண்டாமை விலக்கு' என்பதைத் தங்கள் திட்டத்தில் சேர்த்தார்.

அந்தக் காலத்தில் நான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு மிகவும் வேண்டியவனாகத்தா னிருந்தேன்; என்னை நிரம்பவும் மதிப்பார்கள். காரணம், நான் எல்லாப் பதவிகளிலும் இருந்து வந்தவன். திரு. இராசகோபாலாச்சாரியார் வந்து, "சமுதாய சீர்திருத்தம்தான் நமக்கு வேண்டும்; அது காந்தியால்தான் முடியும்" என்று சொல்லி, என்னைக் காந்திக்கு சிஷ்யனாக்கினார். நானும் சேர்மன் பதவியை ராஜிநாமாச் செய்து வெளியேறிக் காங்கிரசில் சேர்க்கப்பட்டுவிட்டேன். சென்ற பிறகு தமிழன் ஒருவருக்குக்கூடக் கிடைத்திராத—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர், தலைவர் இடத்தில் என்னை உட்கார வைத்தார்கள்.

ஏனென்றால், திரு. வி. க. சாதாரணமாக ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து வந்தவர். டாக்டர் வரதராஜுலு அவர்கள் 'பிரபஞ்சமித்திரன்' என்ற வாரப் பத்திரிகை

நடத்தி வந்தவர்; என்றாலும் பார்ப்பனர்கள் அவரை அவ்வளவு நம்பமாட்டார்கள். திடீரென அவர்களை யாரும் மாற்றிவிடலாம் என்று அவர்களுக்குத் தெரியும். வ. உ. சிதம்பரனார் ஒருவர்; அவர் பாவம்! எல்லாவற்றையும் விட்டு நொந்துபோய் கஸ்தூரிரங்க அய்யங்கார் தயவில் இருந்தவர். 'அதனால் சிறிது வசதியுள்ளவன்—பெரிய வியாபாரி—பல பதவிகளை விட்டு வந்தவன்' என்கிற முறையில் இராசகோபாலாச்சாரியார் என்னைத்தான் நம்பி மதிப்புக்கொடுத்து முன்னே வைப்பார், எதற்கும்!

உண்மையாகவே நானும் அதை நம்பி, அவரிடம் மிக விசுவாசமாய் இருந்து, பெரிய பிரச்சாரம் செய்து, பார்ப்பனருக்கு மேடை தேடிக் கொடுத்துவிட்டோம்! அப்போதே நான், 'நாம் தொட்டால் தீட்டுப்பட்டுவிடும் என்கிற சாமி நமக்கெதற்கு? அதையெடுத்து ரோடுக்கு ஜல்லி போடணும்; அல்லது ஆற்றிலே தூக்கிப் போட்டு வேட்டி துவைக்கப் போடணும்' என்று பேசுவேன். டாக்டர் வரதராஜுலு, கலியாணசுந்தரனார், சிதம்பரனார், நான் ஆகிய நால்வரில் பார்ப்பனர்கள் என்னைத்தான் முன்னே தள்ளுவார்கள்; என்னைப் பார்த்து பதவிவேட்டைக்காரன் என்று எவரும் சொல்லமுடியாதென்பதால்—பார்ப்பனர்களும் நான் என்ன சொன்னாலும் வாயை மூடிக்கொண்டிருப்பார்கள்.

சாதி, மதம், கடவுள் துறையில் இப்பொழுது சொல்லுவதெல்லாம் நான் அப்போதே சொல்லுவேன். நான் பேசி முடித்து வந்ததும் ஆச்சாரியார் சொல்லுவார், 'நாயக்கர்! உங்களுடையது ரொம்ப 'Strong dose'" என்று. நான் சொல்லுவேன், 'இந்த மடப் பசங்களுக்கு Strong என்ன? லேசு என்ன?' என்று சொல்லித் தப்பித்துக் கொள்வேன். அவரும் வேறுவழி இல்லாததால் சிரித்துக் கொள்ளுவார். அந்தமாதிரி முறையில் நாட்டைப் பார்ப்பனர் கைக்குப் போகும்படியான அளவுக்குப் பக்குவப் படுத்திவிட்டோம்.

இந்த மாதவன் வக்கீல் சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். வக்கீல் மாதவன், டி. கே. மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே. பி. கேசவமேனன் இவர்களெல்லோரும் இன்னும் சிலரும் சேர்ந்து, சத்தியாக்கிரகம் பற்றி முடிவு செய்தார்கள்; முறை ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கலாமென்பதற்கு, வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால், அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும், அதன் 4 வாசலுக்கு எதிரிலும் 4 நேர் வீதிகள்—கோயில் மதில்கள்—சுற்றியும் தெருக்கள், பிரகாரம் எல்லாமும் இருக்கும்.

அந்த வீதிகளில் கீழ்ச் சாதிக்காரர்களான—'அவர்ணஸ்தர்கள்' எல்லோரும், அயித்தக்காரர்கள் எனப்படும் தீண்டாதாரும், நான்கு புறத்திலும் கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக்கூடாது! மூன்று பர்லாங், நான்கு பர்லாங் தூரத்திலேயுள்ள ரோட்டில் கூட நடக்காமல், ஒருமைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக்கொண்டுதான் எதிர் ரோட்டிற்குச் செல்லவேண்டும். அயித்தக்காரர், தீண்டப்படாதவர்களைப் போலவேதான். ஈழவர்கள், ஆசாரிகள், வாணியர்கள், நெசவாளிகள் முதலியோரும் அந்த ரோட்டில் நடந்து போகக் கூடாது.

இதேமாதிரிதான் சுசீந்திரத்திலுள்ள கோயில்; மற்றும் அந்த இராஜ்யத்திலுள்ள மற்ற கோயில்கள், தெருக்கள் பக்கமும் நடக்க இவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது.

வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக, வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில் தான் எல்லா முக்கிய ஆபீசுகளும், கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன.

ஏதாவது போலீஸ்காரர்களையோ, இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதானாலுங்கூட, கீழ்ச்சாதியார்களை அங்கு மாற்றி அனுப்பமாட்டார்கள். ஏனென்றால், அந்தப் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுகள் இருக்கும் இடத்திற்குப் போகக் கீழ்ச் சாதியாருக்கு அனுமதி கிடையாது என்பதால்! முக்கியமான கடைகளும் அந்த வீதிகளிலானதால் கீழ்ச் சாதிக் கூலிகள் அங்கு செல்லமுடியாது.

சத்தியாக்கிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி. கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப்போல் சுமார் 19 பேரை இராஜா அரஸ்ட் செய்யும்படி உத்தரவிட்டு, அதன்படி அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து, அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் திரு. பிட் என்ற வெள்ளைக்காரர் 'போலீஸ் அய். ஜி'யாக இருந்தார். அவர் இந்த சத்தியாக் கிரகத்தை வெகு சாமர்த்தியமாகவும் ரொம்ப ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்தப் பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டவுடன், அடுத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட யாரும் முன்வரவில்லை; ஆள் கிடைக்கவில்லை. அதோடு அது நின்றுவிடும்போல் தோன்றியது.

உடனே, எனக்கு பாரிஸ்டர் மேனன், ஜார்ஜ் ஜோசப், கேசவமேனன் ஆகிய மூவரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். 'நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள் வதைத் தவிர வேறு வழியில்லை; அப்படி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதானால் எங்களுக்கொன்றும் நஷ்டம் இல்லையென்றாலும் பெரிய காரியம் கெட்டுப்போகுமே என்று கவலைப்படுகிறோம்; உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்கவேண்டும்' என்று எழுதி அனுப்பினார்கள். எனக்கேன் எழுதி அனுப்பினார்களென்றால், தீண்டாமையைப்பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன்; கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பெயர். அப்போது நான் சுற்றுப்பிரயாணத்திலிருந்தேன்.

ஈரோட்டிற் கெழுதப்பட்ட அந்தக் கடிதம் 'ரீடைரெக்ட்' செய்யப்பட்டு, மதுரை ஜில்லாவிலுள்ள பண்ணபுரம் என்ற ஒரு மலைப்பக்க கிராமத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவன் என்ற முறையில் நான் பேசிக்கொண்டிருந்தபோது என் கைக்குக் கிடைத்தது.

உடனே மீதிச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திப்போட்டுவிட்டு, நேரே ஈரோட்டுக்குப் போனேன். வீட்டிற்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய் சத்தியாக் கிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டைகட்டிவிட்டேன். திரு. இராச கோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும்வரை தலைமைப்பதவியை ஏற்றுக்கொள்ளும் படி ஒரு கடிதம் எழுதிவிட்டு, 'இந்த சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு, இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலைசெய்ய வேறு வாய்ப்புக் கிடைக்காது' என்று அவருக்கு எழுதி விட்டு, 2 பேரைக் கூட்டிக்கொண்டு வைக்கத்திற்கு வந்தேன்.

வைக்கம் போராட்டத்திற்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்து கொண்டு, போலீஸ் கமிஷனர் திரு பிட், இன்னொரு அய்யர் (அவர் பெயர் சரியாய் ஞாபகத்திற்கு வரவில்லை; சுப்ரமணிய அய்யர் என்று நினைக்கிறேன்), ஒரு தாசில்தார் எல்லோரும் படகிலிருந்து நான் இறங்கும் போதே என்னை வரவேற்றார்கள். 'மகாராஜா அவர்கள், எங்களை அவர் சார்பில் வரவேற்று வேண்டிய எல்லா சவுகரியங்களையும் செய்து தரச் சொன்னார்' என்று சொல்லி எங்களை வரவேற்றார்கள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும், ஏன் மகாராஜா அப்படிச் செய்தாரென்றால், அந்த இராஜா டெல்லிக்குப் போவதற்கு ஈரோடு வழியாக வந்து ஒருநாள் ஈரோட்டிலே தங்கிவிட்டு அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிப்போவது வழக்கம். அப்படி ஈரோட்டிலே தங்கும்

போது, அதற்குவேண்டிய வசதிகளை மகாராஜாவின் சிப்பந்திகள் தங்குமிடம் எங்கள் சத்திரத்திலும், இராஜா தங்குமிடம் எங்கள் பங்களாவிலுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி 3 மாதத்திற்கு முன்வந்தபோது அவருடன் அந்தப் போலீஸ் அதிகாரியும் இன்னும் இராஜாவுக்கு உதவிக்குத் தேவையான எல்லா அதிகாரிகளும் வந்து போனதில், அவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறவர்களாகவும், நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது சந்தித்துப் பேசியவர்களாகவும் இருந்திருக்கிறோம். இதனால் மகாராஜா சற்று மரியாதை காட்டினார்.

சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்திவந்த என்னை மகாராஜா சார்பில் அந்தப் பெரிய அதிகாரிகள் வரவேற்கிறார்கள் என்று கண்டதும்—அப் பக்கத்தியப் பாமர மக்களுக்கு ஒரே 'குஷாலாக' ஆகிவிட்டது. என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலுங்கூட, நான் பல இடங்களிலும் சென்று சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசினேன்; காரசாரமாகப் பேசினேன்! 'கீழ்ச்சாதி மக்களான நாம் உள்ளே போவதால் தீட்டுப்பட்டுவிடும்—செத்துப் போகும் என்று சொல்லும் வைக்கத்தப்பனைப் போட்டு வேட்டி துவைக்கணும்' என்றெல்லாம் கடுமையாகப் பேசினேன். சுற்றுவட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடிவிட்டார்கள். அது இராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது; 5, 6 நாள் வரை சும்மாதான் இருந்தார். பலரும் போய் அவரிடத்தில் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள்; பிறகு இராஜாவினால் சும்மாயிருக்க முடியவில்லை.

இப்படிச் சுமார் 10 நாட்களானவுடனேயே ஒரு போலீஸ் (சூபரின்டெண்டண்ட்) அதிகாரி, அவர் அய்யங்கார்; அவர் முயற்சியால் பி.சி. 26 படி தடையுத்தரவு போட்டார். அந்நாட்டில் 26 என்பது இப்போது இங்கே 144 தடையுத்தரவு போன்றது. நானும் சட்டம் மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனே நான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் (தற்போது காங்கிரசிலிருக்கும்) அய்யாமுத்து அவர்களும், மற்றுமிருவரும் சட்டம் மீறினோம்; எங்களைக் கைது செய்தார்கள்; எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங் காவல் போட்டார்கள். என்னை அருவிக்குத்தி என்ற ஊரிலுள்ள ஜெயிலிலே வைத்தார்கள். அதற்குப் பிறகு என்னுடைய முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும், பிறகு நான் வெளியே வந்தவுடன்—எனது தங்கை எஸ். ஆர். கண்ணம்மாளும், மற்றும் சிலரும் வந்து நாடெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள். நான் விடுதலையாகி வந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன்.

நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது; மளமளவென்று ஆட்களும் வந்து சேர ஆரம்பித்தனர்; ஏராளமான பேர்கள் பல பகுதியிலும் சென்று சுற்றுப்பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி, காலித்தனம், கலவரங்கள் முதலியவற்றிலீடுபட்டு, இதையெப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று பலவித முயற்சிகளும் செய்து பார்த்தார்கள்.

ஆனால், போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு பெருகிக்கொண்டேயிருந்தது. வெளி நாடுகளிலிருந்து மலையாளிகளும் சாதிக்கொடுமை என்பதைக் கண்டு மனந்துடித்து, அதற்குத் தங்கள் எதிர்ப்பையும், சாதிக் கொடுமைகளை யெதிர்த்துச் செய்யப்படும் போராட்டத்திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும்வண்ணம் தினம் ரூ. 50, 60, 100 என்று மணியார்டர் அனுப்பிக்கொண்டே யிருந்தார்கள்.

பெரியபந்தல் போட்டு தினசரி போராட்ட வீரர்கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200, 300 பேர் சாப்பிடுவார்கள்; தேங்காயும் மற்ற காய்கறிகளும் மலை மலையாகக் குவிந்து கிடக்கும்; பெரிய கலியாணவீடு மாதிரி காரியங்கள் நடைபெறும்.

திரு. இராசகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார்; 'நீ ஏன் நம் நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்? அது சரியல்ல;

அதை விட்டுவிட்டு நீ இங்குவந்து, நீ விட்டுச்சென்ற வேலைகளைக் கவனி' என்றெழுதினார். அப்போதிருந்த எஸ். சீனுவாசய்யங்காரும் இப்படித்தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்தார்; வரச் சொன்னார். அதேமாதிரி பத்திரிக்கையிலேயும் எழுதினார்கள். ஆனால், இதற்குள் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1000 பேருக்கு மேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர்முழுவதும் சத்தியாக்கிரக பஜனையும், தொண்டர்கள் ஊர்வலமும் நடந்து உணர்ச்சி வலுத்துவிட்டது.

பஞ்சாபில் சுவாமி சிரத்தானந்தா என்பவர் ஒரு 'அப்பீல்' போட்டார். அதன் பிரகாரம் பஞ்சாபிலேயிருந்து 20, 30 ஆட்களையும் இரண்டாயிரம் ரூபாயையும் கையிலெடுத்துக் கொண்டு நேரே வைக்கத்துக்கு வந்தார்கள்—தாங்கள் சாப்பாட்டுச் செலவை ஏற்றுக்கொள்ளும் ஆதரவு தருவதற்காக. உடனே இங்கிருந்த பார்ப்பனர்கள் எல்லாம், சீக்கியர்கள் வந்து இந்துமதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள் என்றெல்லாம் காந்திக்கு எழுதினார்கள்.

உடனே, அதன்பேரில் காந்தியார் துலுக்கன், கிறிஸ்தவன், சீக்கியன், பிறமதக்காரன் ஆகிய எவனும் இதில் கலந்துகொள்ளக் கூடாது என்று எழுதிவிட்டார்.

காந்தி எழுதினவுடனே, இதில் கலந்திருந்த சீக்கியன், சாயபு, கிறிஸ்தவன் எல்லாரும் போய்விட்டார்கள். அதுபோலவே, தீவிரமாக இதிலீடுபட்டு முன்னோடியாக உழைத்த, காலஞ்சென்ற ஜார்ஜ் ஜோசப்புக்கும் இராசகோபாலாச்சாரியார் கடிதம் எழுதினார். "இந்துமதச் சார்புள்ள இந்தக் காரியத்திலே, நீ சேர்ந்திருப்பது தப்பு" என்றார்.

அதை ஜார்ஜ் ஜோசப் அவர்கள் இலட்சியம் பண்ணாமல் திருப்பி எழுதினார். 'நான் என் சுயமரியாதையை விட்டுவிட்டு இருக்கமாட்டேன்; வேண்டுமானால் என்னை விலக்கிவிடுங்கள்' என்றார். தற்போதைய நாகர்கோயில் பயோனீர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த சேவு என்பவரும், அண்மையில் காலஞ்சென்ற டாக்டர் எம். இ. நாயுடு (திரு. எம். எம். பெருமாள் நாயுடு இந்தப் பேச்சுக்கு முதல்நாள் இரவு நாகர்கோயிலில் காலமானார். பிறகு தந்தை பெரியார் சென்று துக்கம் விசாரித்தார்.) அவர்களும் என்னுடனேயே இருந்து தொடர்ந்து நடத்துவதென்று முடிவுசெய்தார்கள். அவர்கள், 'இதை விட்டுவிட்டுப் போகமாட்டோம்' என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார்களென்றாலும், காந்தி சத்தியாக்கிரகத்திற்கு விரோதமாக எழுதிப் பணத்தையும் ஆளையும் தடுத்துவிடுவாரோ என்று சிலர் பயப்பட்டார்கள்.

அந்தச் சமயம் சுவாமி சிரத்தானந்தா அவர்கள் வைக்கம் வந்து, தான் பணத்திற்கு வகை செய்வதாகச் சொன்னார். பிறகு, காந்தி கட்டளைக்கு விரோதமாகவே சத்தியாக்கிரகம் நடந்துவந்தது.

இதற்கிடையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியும் கவனிக்கத்தக்கது. எங்கள் போராட்டத்திற்குப் பெரிய மரியாதையையும், செல்வாக்கையும் தேடிக் கொடுத்துவிட்டது—இந்த காந்தி கட்டளை. இந்தச் சமயத்தில் என்னை மறுபடியும் பிடித்து 6 மாத கடுங்காவல் விதித்து ஜெயிலில் போட்டுவிட்டார்கள். பிறகு, சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நான் ஜெயிலில் இருக்கிற சமயத்தில்—இந்த நம்பூதிரிப் பார்ப்பனர்களும் சில வைதீகர்களும் சேர்ந்துகொண்டு, 'சத்ருசங்கார யாகம்' ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக் கணக்கான ரூபாய் செலவுசெய்து நடத்தினார்கள். ஒரு நாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச்சத்தம் கேட்டது. நான் ஜெயிலில் விழித்துக் கொண்டிருந்தேன்; 'ரோந்து' வந்தவனைப் பார்த்துக் கேட்டேன்; "என்ன செய்தி? இப்படி வெடிச்சத்தம் கேட்கிறது? இந்தப் பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா?" என்று கேட்டேன். அதற்கவன் சொன்னான், 'மகாராஜாவுக்கு உடம்பு சவுக்கியமில்லாமலிருந்தது; மகாராஜா நேற்று இரவு திருநாடு எழுந்துவிட்டார்' என்று.

அதாவது, 'இராஜா செத்துப்போனார்' என்று சொன்னான்; அவ்வளவுதான். மகாராஜா செத்தார் என்றவுடன் எங்களுக்கு ஜெயிலுக்குள்ளாகவே ரொம்பப் பெருமை வந்துவிட்டது. அவர்கள் செய்த யாகம் அங்கேயே திரும்பி மகாராஜாவைக் கொன்று விட்டது என்றும், அந்த யாகம் சத்தியாக்கிரகக்காரர்களை ஒன்றும் செய்யமுடியவில்லை என்றும் மக்களிடையில் ஒரு தனி மதிப்பை ஏற்படுத்திவிட்டது. அதன்பிறகு, அரசாங்கம் எங்களையெல்லாம் இராஜாவின் கருமாதியை முன்னிட்டு விடுதலை செய்தது. எதிரிகள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி வர ஆரம்பித்தது.

இராணியும் கூப்பிட்டு எங்களோடு ராஜி பண்ணி ஒரு உடன்பாட்டிற்கு வர விருப்பம் தெரிவித்தவுடன், அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு பார்ப்பனர் —என்னிடத்தில் இராணி நேரே பேசக்கூடாது என்று கருதி, திரு. இராசகோபாலாச் சாரியாருக்குக் கடிதம் எழுதினார். இராசகோபாலாச்சாரியாரும்,—எங்கே என்னிடத்தில் இராணி பேசி உடன்பாட்டிற்கு வந்தால் எனக்கு மரியாதையும் புகழும் வந்துவிடுமோ; அந்தமாதிரி வரக்கூடாதே என்று கருதி, அந்த வாய்ப்பைக் காந்தியாருக்கே அளித்து, காந்தியின் மூலமே காரியம் நடந்ததாக உலகுக்குக் காட்டவேண்டுமென்று தந்திரம் செய்து, காந்திக்குக் கடிதம் எழுதினார். எனக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை; எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும்; நமக்குப் பேரும் புகழும் வருவது முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக்கொண்டேன்.

காந்தியும் புறப்பட்டு வந்தார். இராணியோடு காந்தி பேசினார். (இப்படி இந்த சத்தியாக்கிரகம் நல்லபடி வேரூன்றி வெற்றி நிலைமைக்கு வந்தவுடன் பார்ப்பனர்கள் காந்தியை இதில் புகுத்தினார்கள்.) இராணி காந்தியோடு பேசியபோது, இராணி தெரிவித் தார்கள், 'நாங்கள் ரோடுகளைத் திறந்துவிட்டுவிடுகிறோம். ஆனால், அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள். உடனே, காந்தி 'டி.பி.'யில் தங்கி யிருந்த என்னிடத்தில் வந்து, இராணி சொன்னதைச் சொல்லி 'என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக்கொண்டு விடுவது நல்லது' என்றார். நான் சொன்னேன், "Public ரோடு திறந்துவிடுவது சரி! ஆனால், அதை வைத்துக்கொண்டு கோயிலைத் திறந்து விடும்படி கேட்கமாட்டோம் என்று நாம் எப்படி உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும்—எனது இலட்சியம் அதுதானே, (கோயில் நுழைவு) அதை விட்டுக்கொடுக்க எப்படி முடியும்? வேண்டுமானால் இராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள்; 'இப்போதைக்கு அதுமாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்சநாள் அதுபற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து, கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம்,' என்று சொல்லுங்கள்" என்று சொன்னேன்.

அதை, காந்தி இராணியிடம் சொன்னவுடன் இராணியார், 'ரோட்டில் யார் வேண்டு மானாலும் நடந்து செல்லலாம்' என்று உத்தரவு போட்டு பொது ரோடாக ஆக்கினார்கள்.

அதன்பிறகு, சிலநாள் பொறுத்து ஈரோட்டிலே நான் தேவஸ்தானக் கமிட்டித் தலை வராக இருந்தபோது, நான் ஊரிலில்லாத ஒரு நாளில் தோழர்கள் அ. பொன்னம்பலமும், சா. குருசாமியும், இப்போது காங்கிரசுக்காரராக இருக்கும் ஈசுவரனும் எங்கள் ஆபீசில் வேலை செய்கிற இரு ஆதித் திராவிடரை விபூதி பூசச் சொல்லிப் பூசிக் கோயிலுள்ளே அழைத்துச் சென்றவுடன் பக்தர்களெல்லாம் சத்தம் போட்டு, கோயிலுக்குள்ளே இவர்கள் சென்றதும் இவர்களை உள்ளே விட்டு வெளிக் கதவுகளைப் பூட்டிவிட்டார்கள்;. அது குறித்துக் 'கேசும்' போட்டார்கள்; 'சாமி தீட்டாய்ப் போச்சு' என்று வாதாடி தண்டிக்கச் செய்தார்கள். பிறகு அய்க்கோர்ட்டிலே அதற்கு எதிராகத் தீர்ப்புக் கிடைத்தது. (அது வெள்ளையராட்சிக்காலம்).

ஆனால், இந்தியாவிலேயே முதன் முதலில் சுசீந்திரம் கோயிலில்தான் கோயில் நுழைவுக்கென்று கிளர்ச்சி துவக்கப்பட்டது. அந்தக் காலத்திலே, கோட்டயத்திலே என் தலைமையில் ஒரு சுயமரியாதை மாநாடு போட்டார்கள். அதில் சாதியொழிப்பு சம்பந்தமாகவும், கோயில் நுழைவு உரிமை சம்பந்தமாகவும் பலவிதத் தீர்மானங்களையும் போட்டார்கள்.

அடுத்து, எர்ணாகுளத்தில் ஒரு மாநாடு என் தலைமையில் கூட்டப்பட்டது. அதில் சாதி ஒழிப்புக்காக, சாதியில்லாத மதமாகிய இஸ்லாம் மதத்தில் இந்துக்கள் சேர்ந்து விடுவது என்று தீர்மானம் நிறைவேற்றக் கொண்டுவரப்பட்டது. சில செல்வருக்குட்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேருவது என்று தீர்மானம் கொண்டுவந்தார்கள். மாஜிமந்திரி அய்யப்பன் அவர்கள் இஸ்லாம் மதத்திற்குப் போய்ச் சேருவது என்பதைத் திருத்திப்போட வேண்டுமென்று சொல்லி ஏகமனதாய் நிறைவேறச் செய்தார்.

இஸ்லாத்தில் சேருவது என்ற தீர்மானம் வந்த அன்றைக்கே ஒரு அய்ம்பது பேர்களைப்போல் முஸ்லிம்களாகிவிட்டார்கள்; பிறகு வெளியிலும் பலர் மதம் மாறிவிட்டார்கள்; இது ஒரு பெரிய கலக்குக் கலக்கிவிட்டது.

இப்படி முஸ்லிமான ஒரு ஆள் (அவர் புலையர் வகுப்பைச் சேர்ந்தவர்) ஆலப்புழையில் ஒரு நாயர் கடையில் கடைமீது ஏறி சாமான் கேட்டார் என்பதை வைத்துக்கொண்டு—அவரை ஓங்கி அடித்தான். அவர் சத்தம் போடவே நாயர்களும் ஓடிவந்தார்கள், சாயபுகளும் ஓடிவந்தார்கள். பலமான அடிதடி சண்டை நடந்தது; ஒருவர் செத்துவிட்டார். இந்த மாதிரி இந்து–முஸ்லீம் கலவரம் வலுத்தவுடன், மேலே எல்லாம் தந்தி கொடுத்தார்கள். அப்போது திவானாக இருந்த சர். சி. பி. இராமசாமி அய்யர், இதை இந்து–முஸ்லீம் சச்சரவு என்று சொல்லிக்கொள்ளாமல், 'முதலாளி–தொழிலாளி சண்டை' என்று சொல்லி அடக்கிவிட்டார்.

பிறகு, இராஜாவுக்கு சி. பி. சொன்னார், 'புலையர்களெல்லோரும் துலுக்கர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மருந்து, கோயிலைத் திறந்துவிட்டுவிடவேண்டியது தான்' என்று கூறினார். அப்போது ஆயுசு ஓமம் நடந்துகொண்டிருக்கிறது. இராஜாவும் இதைக் கேட்டு ஒப்புக்கொண்டு, பிறந்த நாளுக்கு ஏதாவது நல்ல செய்தி வருடா வருடம் சொல்லுவதில்—அந்த வருடத்து இராஜா பிறந்தநாள் செய்தியாக, 'கோயில் எல்லா இந்துக்களுக்கும் திறந்து விடப்படும்' என்று அறிவித்தார். இப்படித்தான் அங்கு ஆலயப்பிரவேச உரிமை கிடைத்தது.

இதற்கப்புறம்தான் ஆச்சாரியார் முழங்கினார்; அதற்குப் பிறகுதான் காந்தியாரும் மற்றவர்களும் மாறினார்கள். இந்தக் காரியமெல்லாம் காந்தியால்தான் நடந்தது என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமாகும். காந்தி தீண்டப்படாத மக்களுக்கும், ஆதித் திராவிட மக்களுக்கும் ஒடிந்த ஊசியளவுக்குக்கூட அவர்களது இழிவு நீக்கப் பாடுபடவில்லை என்பது அம்பேத்கார் எழுதியுள்ள 'காங்கிரசும்–காந்தியும், தீண்டாதவர்களுக்குச் செய்தது என்ன?' (What Congress and Gandhi have done to Untouchables) என்ற புத்தகத்தைப் பார்த்தால் தெரியும்.

[கன்னியாகுமரி மாவட்டச் சுற்றுப்பயணம் செய்தபோது மார்த்தாண்டம், இரணியல் ஆகிய ஊர்களில் ஆற்றிய சொற்பொழிவுகள்—'விடுதலை'–8, 9–1–1959]

14. பழங்குடி மக்கள் இழிவுக்குக் காரணங்கள்

மக்களில் 100க்கு 90 பேர் தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்களுக்கு சுயராஜ்யம் பற்றியோ, அரசியல் பற்றியோ, 'கான்ஸ்டிடியூஷன்' பற்றியோ பேசினால் புரியாது. மேலும், அது தற்காலத்திற்குத் தேவையற்ற சங்கதி என்பதுதான் என் கருத்து.

உங்களுக்குத் தனி உடைமையோ, பொது உடைமையோ என்பது பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. மானத்தைக் கவனித்துக்கொண்டு உடைமை பற்றிக் கவனிக்கலாம். ஏன்?

முதலில், மனிதன் மனிதனாக வேண்டும்; இரண்டாவது, அவனுக்கு அறிவு வரவேண்டும். கண்டதுக்கெல்லாம் குனிந்து கும்பிடு போடும் தன்மையும், கண்டதை—கேட்டதை எல்லாம் கண்மூடித்தனமாக நம்பிவிடும் தன்மையும், தண்டவாளத்தின் மீது ரயில் ஓடினால் அதுவும் ஒரு பகவான் அவதாரமோ என்று நினைத்து அதற்குத் தேங்காய் பழம் நிவேதனம் செய்வது போன்ற தன்மையும், மக்களை விட்டகலவேண்டும். நம்மைத் தாழ்வு படுத்துவது எதுவும் நம் முன் நிற்கக் கூடாது. ஆகவே, முதலாவதாக உங்கள் போக்கை—முயற்சியைத் தற்செயலாய்ப் பணக்காரர்களான மிராசுதாரன் பக்கம் திருப்பாமல், அறிவுப்பக்கம் திருப்புங்கள்.

மிராசுதாரன் மீது கோபித்துக் கொள்ளுவதாலோ, அல்லது அவனுக்கு ஆதரவாயிருந்துவரும் பார்ப்பனரின் மீது கோபித்துக் கொள்ளுவதாலோ யாதொரு பயனுமில்லை. பாம்பு கடித்தால் விஷமேறுகிறதே என்று, எவனாவது பாம்பின்மீது கோபித்துக்கொண்டு சண்டைக்குப் போவானா? நெருப்புப் பட்டால் சுடுகிறது என்று, நெருப்புடன் சண்டைக்கு நிற்பானா? மலம் நாற்றம் அடிக்கிறதே என்று, எவனாவது மலத்தின்மீது கோபித்துக் கொள்வானா? பாம்பு கடித்தால் விஷம் ஏறுவதும்; நெருப்புப் பட்டால் கொப்பளிப்பதும்; மலமிருந்தால் துர்நாற்றம் வீசுவதும் இயற்கை. நாம்தான் அவற்றால் கேடு வராமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமே யொழிய, அவை ஒழியப் பாடுபட வேண்டுமே யொழிய, அவைகளின் இயற்கைக் குணத்தை மாற்ற நம்மால் ஆகாது. நீங்கள் மிராசுதாரன்மீது சண்டைக்குப் போனால் அவனைக் காப்பாற்றப் போலீஸ் படையும், அதற்கான சட்டமும், அவற்றைப் பிரயோகிக்க சர்க்கார் சிப்பந்திகளும் தயாராக இருக்கின்றனர். மிராசுதாரனிடம்தான்—அதாவது நீங்கள் போராடும் மிராசுதாரின் வோட்டுப் பெற்றுத் தான் ஆட்சியாளர்கள் பதவிக்கு வருகிறார்கள். இன்னமும் சொல்லுவேன்அவர்கள்தான் ஆட்சியாளர்கள். ஆகவே, அவனைத்தான் ஆட்சியாளர்கள் காப்பாற்றியாக வேண்டும். அதுதான் இயற்கையுங்கூட.

அப்படியிருக்க, சர்க்கார் பாதுகாப்புக்குட்பட்ட இந்த மிராசுதாரன்மீது கோபிப்பதிலோ, போர் தொடுப்பதிலோ பயன் என்ன? அவனைப் போல் நீங்களும் வோட்டுரிமை பெறவேண்டும்; அவனைப்போல் நீங்களும் ஆட்சியாளராக வேண்டும்; உங்கள் தயவு சர்க்காருக்கு வேண்டும். அப்புறம் ஆட்சி உங்களுக்கு அடக்கமாகிறதா, இல்லையா பாருங்கள். ஆட்சிபீடம் அவர்கள் (மிராசுதார்கள்) பக்கம் இருக்கும் வரைக்கும் உங்கள் கிளர்ச்சி வெற்றி பெறாது; மிராசுதாரர்களை ஆட்சியாளர்கள் காப்பாற்றியே தீருவார்கள். காரணம், அவர்கள் வரி கொடுப்பது அதற்குத்தான்.

உங்கள் கவனத்தை—முயற்சியை ஆட்சியாளர் பக்கம் திருப்புங்கள்! உங்களுக்கு எது நன்மையானது? எது தீமையானது? என்று முதலில் சிந்தித்துத் தெளிவு அடையுங்கள்; உங்கள் எதிரி யார் என்று கண்டுபிடியுங்கள். எப்படி முயற்சித்தால் நல்ல பயன் ஏற்படும் என்பதையும் நீங்களே சிந்தித்துப் பாருங்கள். சிந்திப்பதில் கெடுதியில்லை.

இங்குள்ள பெரும்பாலான மக்கள் ஆதித் திராவிடர்கள். வெள்ளையாகச் சொல்ல வேண்டுமானால் 'பறையர்கள்', 'கீழ்சாதி மக்கள்' 'தீண்டத் தகாதவர்கள்' சாஸ்திரப்படி 'சண்டாளர்கள்'; மற்ற ஒரு கூட்டம் பாட்டாளி மக்கள்–பெரிதும் (சூத்திரர்கள்)—அதாவது மேல்சாதியானின்—பார்ப்பனரின் அடிமை, தாசி மக்கள் என்பவர்கள். இது, என் கருத்துப்படி—சாஸ்திரப்படியுங்கூட. இப்படிப்பட்ட சமுதாய அமைப்பிலும், அரசாட்சியிலும்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ற பயன்தானே கிடைக்கும்? நாம் சமுதாயத்தில் இப்படி இழிவு படுத்தப்பட்டிருக்கக் காரணம் என்ன? நம் சமுதாயம்

ஏன் இப்படி பிரிக்கப்பட்டிருக்கவேண்டும்? நாம் என்ன தப்பு செய்தோம்? ஏன் நாம் தாழ்மைப்படுத்தப்பட்டோம்? நாம் ஏன் உழைத்தும் உண்டிக்குத் திண்டாட வேண்டும்? நம்மால் உழுது விதைத்து அறுக்கப்பட்ட பண்டத்திற்கும், நாம் ஏன் பாடுபடாத சோம்பேறியைக் கெஞ்ச வேண்டும்? நமது உழைப்பின் பலன், ஏன் ஒரு சோம்பேறி மிராசுதாரனுக்கு போய்ச்சேரவேண்டும்? உழாத, விதைக்காத ஒரு சோம்பேறிப் பார்ப்பான் ஏன் உண்டு கொழுக்க வேண்டும்? என்பவையான இவற்றையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சிந்திப்பதில் கெடுதியில்லை; சிந்திப்பதால் நீங்கள் பாவியாகிவிடமாட்டீர்கள்; சிந்தித்தால்தான் உங்கள் இழிவினுடைய—துன்பத்தினுடைய அஸ்திவாரம், ஆணிவேர் எங்கிருக்கின்றது என்று உங்களுக்குப் புரியும். ஆணிவேரிருக்க, அதன் கிளைகளை வெட்டுவதால் பயனில்லை. வெட்டவெட்ட அது தழைக்குமேயொழிய—அடிமரம் உரம் கொள்ளுமேயொழிய—அது அழியாது. ஆகவே, அதன் ஆணிவேர் எங்கிருக்கிறது என்று பாருங்கள். இந்த ஏற்பாட்டுக்கு மூலகாரணம் எது என்று சிந்தித்துப் பாருங்கள். நமக்குக் 'கடவுள் அறிவு கொடுத்திருப்பதாகச்' சொல்லப்படுவது சிந்திக்கத்தான்; இருப்பதை, கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைந்து அடுத்த ஜென்மத்தை நோக்க அல்ல. இருப்பதைக்கொண்டு மேலும் 'இந்த ஜென்மத்திலேயே' முன்னேற்றம் அடையத்தான். ஆகவே 'அவர் (கடவுள்) பார்த்து இடணும், நமது குறை தீரணும்' என்று நீங்கள் நினைக்காதீர்கள். 'அவர்' இட்டது அறிவு. அதை எல்லோருக்கும் சமமாகவேதான் 'அவர்' அளித்துவிட்டார். 'அவர்' கொடுத்துள்ள அறிவை நீங்கள் பயன்படுத்தவில்லை. ஆகவே, அடிமைகளாக உழலுகிறீர்கள். அறிவைப் பயன்படுத்துகிறான் பார்ப்பான். அதனால் அவன் உங்களை அடிமையாக்கிக்கொண்டான். ஆதலின், முதலில் உங்கள் அறிவைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். அதுதான் உங்கள் குறைதீர நல்ல மருந்து.

ஆட்சியாளருக்கு உங்களை அறிவுள்ள மக்களாக்குவது பற்றிக் கவலை இருக்காது; அது தேவையும் அல்ல, அவர்களின் சுயநலத்துக்கு. அதனால்தான் 'நாட்டுக்கு நல்ல துரை வந்தால், தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது' என்ற பழமொழியும் நடப்பும் இப்போது நிலவிவருகிறது. பின் இந் நிலை எப்படித்தான் போவது—போகும்? இதைத்தான் நீங்கள் முதலில் சிந்திக்க வேண்டும்.

"நான் ஏன் கக்கூஸ் எடுக்கவேண்டும்—நீ ஏன் மலஜல உபாதைக்குப் போக வேண்டும்? நான் ஏன் உழைக்கவேண்டும்—நீ ஏன் அதன் பயனை அடையவேண்டும்? நீ ஏன் உடுக்கவேண்டும்—நான் ஏன் அறுப்பு அறுக்கவேண்டும்? நீ ஏன் கொண்டுபோய்க் கொட்டிக் கொள்ளவேண்டும்?—என்று நீங்கள் துணிந்து கேட்கவேண்டும். இதை அனுமதிக்கும் கடவுளை வெறுக்கவேண்டும்; உடைத்து ரோட்டுக்கு ஜல்லி போட வேண்டும். இந்த உரிமையை மறுக்கும் சட்டத்தையும், சாஸ்திரத்தையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டும். இந்த உரிமையை மறுக்கும் மதத்தை மடியச் செய்யவேண்டும். மனதில் நீங்கள் உறுதிகொள்ள வேண்டும்; இதைச் சாதிக்க மன உறுதியின்றேல் காரியம் கைகூடாது. உறுதி இருந்தாலோ அது உங்களை வெற்றிப் பாதையில் தள்ளிக் கொண்டு போகும். உறுதி உள்ளவனை—சாமியோ, பூதமோ கூட பயமுறுத்தாது. அதற்கு அதிகாரமும் இல்லை—உன்னுடைய அறிவின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு. எங்களால் இதை ஜம்பமாக, ஏன்—ஆணவமாகக் கூடக் கூறமுடியும்.

தயை, தாட்சணியமின்றி—அறிவு, அதனால் ஏற்பட்ட தெளிவு, அத் தெளிவால் ஏற்பட்ட உறுதி இவைகளைத் தவிர எதையும் நாங்கள் எதிர்த்து வெறுத்து ஒதுக்கினோம். எங்கள் அறிவொன்றையே நம்பி, மனோ உறுதியோடு, மக்களை எதிர்த்து 1926-ல் எங்கள் காரியத்தைத் துவக்கினோம். இன்று எப்படி ஊர்ஊராய் அலைந்துதிரிந்து பிரச்சாரம் செய்கிறோமோ, அப்படித்தான், அன்றும் அலைந்து திரிந்தோம்.

அன்று சொன்னோம்—அனைவரும் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று; அன்று சொன்னோம்—அனைவரையும் அனுமதிக்கமுடியாத அந்தக் கடவுள் அழியட்டும் என்று. அன்று எங்களுக்குக் கிடைத்தது—144 தடை உத்தரவு; நாங்கள் செல்லும் ஊரெல்லாம், கோயில்களுக்குப் போலீஸ் காவல்—எங்கு ஆதித் திராவிடரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றுவிடுகிறோமோ என்று. போகிற வழியெல்லாம் அயோக்கியப் பார்ப்பனரின், மதவெறியனின், வேஷக்காரனின் அடியாட்கள் தொல்லை. போலீஸ் பாதுகாப்பில் நாங்கள் ஊர்விட்டு மறு ஊர் போகவேண்டிய நிலை. அவ்வளவு எதிர்ப்புக் கிடையேயும் மாதத்திற்கு இரண்டு மாநாடுகள் நடக்கும். எதிர்ப்புக்கு அஞ்சிவிட்டோமா அன்று? அடித்துக் கொண்டேதான் இருந்தோம், எங்கள் அறிவுத் தப்பட்டையை. அடிமேல் அடி அடிக்க அம்மி—ஒன்று, நகரட்டும் அல்லது உடையட்டும் என்றுதான் அறிவுரை கூறிவந்தோம்.

அரசாங்கம் அறிவுபெறுவதாகக் காணோம். அதற்கு ஒரு படிமேலே சென்றோம். பறையனும் பள்ளனும் பார்க்கக் கூடாத சாமி இருந்தென்ன, போயென்ன? அதை எடுத்தெறியுங்கள் என்று சொன்னோம். அப்படித் தீண்டத்தகாதவராக, ஒரு பெரும் பான்மைக் கூட்டத்தை வைத்திருக்கும் மதத்தைவிட்டு வெளியேறுங்கள் என்று பறையருக் கும் பள்ளருக்கும் கூறினோம். அவர்கள் உள்ளத்திலே மதம் மாறும் துணிச்சல் ஏற்பட்டதும்—எந்தப் பார்ப்பான், எந்தப் போலீஸ்காரன், எந்த மாஜிஸ்ட்ரேட், எந்தப் பண்டாரசந்நிதி எங்கள் முயற்சிக்கு எதிர்ப்பாய் இருந்தார்களோ—அவர்களே பிறகு அதே பறையனையும், பள்ளனையும் மேளதாளத்தோடு கோயிலுக்குள் அழைத்துச் செல்வதைப் பார்த்தோம்—பார்க்கிறோம். உள்ளேவிட்டால் சாமி செத்துப்போகும், ஓடிப்போகும் என்று கூறினவனே—இன்று, அதே பறையரையும், பள்ளரையும் கோயிலுக்குள் கூட்டிக் கொண்டு போகிறானா, இல்லையா? இதோடு திருப்தியடைந்துவிடலாமா, நீங்கள்? எதுவரை கூட்டிக்கொண்டு போகிறான்? அதனால் உங்களுக்கென்ன இலாபம்? உங்களுக்கு முன்னமேயே, பல ஆயிரம் ஆண்டுகளாக, சூத்திரர் என்பவர்கள் அந்த 'சுங்கக் கேட்டு' வரை சென்று முடிச்சவிழ்த்துக் கொடுத்துவிட்டு வந்துகொண்டிருக்கிறோமே? நாங்கள் என்ன பயன்கண்டோம், அதனால்? எங்கள் சூத்திரப் பட்டம் போயிற்றா?

அப்படியிருக்க, கோயில் நுழைவால் உங்கள் பாமரத்தன்மை, இழிதன்மை போய்விடுமா? ஆகவே, உறுதியோடு கேளுங்கள்: அவன்மட்டுமேன், அந்தச் சாமிக்குப் பூசை செய்துவரவேண்டும்? நான்மட்டும் ஏன் அவிழ்த்துக் கொடுத்துவிட்டு அப்பால் வரவேண்டும்? கோயில் கட்டிடத்துக்குள் வந்தால் சாமி சாகவில்லையே—இனி அந்தக் கர்ப்ப அறைக்குள் போனால்மட்டும் எப்படிச் சாகும்—என்று; அப்படிக் கிளர்ச்சி செய்தால், ஒன்று—அந்தச் சாமி மடிந்துபோகும் அல்லது பாரபட்சமின்றி, யோக்கியமாக நடந்து கொள்ள ஆரம்பிக்கும். 'இந்த மக்களுக்கு ஓரளவுக்குத்தான் புத்தி வந்துள்ளது. ஆகவே, இந்த அளவுவரைக்கும்தான் அவர்களை அனுமதிக்கவேண்டும்' என்று, அந்தப் பார்ப்பான் அந்த 'சுங்ககேட்' வரைதான் இன்று உங்களை அனுமதிக்கச் சம்மதிக்கிறான். இவர்கள் மேலும் தெளிவடைந்து 'நாம்தான் ஏன் கொடுக்கவேண்டும்? இவன் ஏன் வாங்கிச் செருகிக் கொள்ளவேண்டும்?' என்று கேட்க ஆரம்பித்தால், அப்புறம் அந்த இடத்தை அவனே காலி செய்துவிடுவான். அவனுக்கு இலாபம் இல்லையானால் அவனே அதை எடுத்து எறிய ஆரம்பித்துவிடுவான்; அவனே இதைக் 'கல்' என்று சொல்லிவிடுவான். உங்கள் அறிவு கொண்டு சிந்தித்துப் பாருங்கள், இது உண்மையா, அல்லவா என்று!

ஒரு இடத்தில் பித்தலாட்டத்திற்கு இடம் கொடுத்துவிட்டால் மற்ற இடத்திலும் பித்தலாட்டம் செய்து ஏமாற்றத்தான் முயற்சிப்பார்கள். அதேபோல், ஓரிடத்தில் பித்த லாட்டம் இருப்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால் மற்ற இடங்களிலுள்ள பித்தலாட்டங்களும் நமக்குத் தெளிவாகப் புலனாகும். எல்லா மனிதர்களும் கடவுள் ஒருவராலேயே படைக்கப்

பட்டவர்களானால்—எல்லோரையும் கடவுள் ஒன்றாகவே நடத்துகிறார் என்றால்—அவர்களில் எப்படி ஏழை–பணக்காரன்; கீழ்சாதி–மேல்சாதி இருக்கமுடியும்? 'எங்கும் எல்லாமாய்', 'எல்லாவற்றிற்கும் ஏகமாய்' இருக்கும் கடவுள், எப்படிப் பாரபட்ச முடையவராக இருக்கமுடியும்? ஆகவே—ஒன்று, கடவுளென்பது பொய்யாக இருக்க வேண்டும்; அல்லது கடவுளைப்பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து தவறானதாக இருக்க வேண்டும். ஆகவே, மனிதன் மேலும் தெளிவு பெறவேண்டும். ஒருவன் உயர்வு, ஒருவன் தாழ்வு; ஒருவன் காலை ஒருவன் கழுவிக்குடிப்பது என்பது முட்டாள்தனம், அறியாமை. அவனுக்கும் இவனுக்கும்—எவனுக்கும் பிறவித் தத்துவத்தில் எவ்வித பேதமுமில்லை. இருவருக்கும் நெருப்பு சுடத்தான் செய்யும்; இருவருக்கும் உப்பு கரிக்கத்தான் செய்யும்; இருவருக்கும் வேம்பு கசக்கத்தான் செய்யும். அப்படியிருந்தும், பிறவியின் பெயரால் சாதி வித்தியாசம் இருந்துவரக் காரணம் என்ன என்பதை உங்கள் சொந்த புத்தியைக் கொண்டு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகாத்மா கூறுகிறார் என்றோ, மகான் கூறுகிறார் என்றோ, சாஸ்திரம் கூறுகிறது என்றோ, கடவுள்கள் சொன்னார்கள் என்றோ நீங்கள் ஏமாந்து போய்விடக்கூடாது. அந்த மகான்களும் அவர்களின் சாஸ்திர புராணங்களும் அந்தக் காலத்திற்குத் தேவையாயிருந் திருக்கலாம். அவற்றை நம்பவேண்டுமென்ற கட்டாயமும் அந்தக் கால மக்களுக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாம். ஆனால், இந்தக் காலத்திற்கு அவை பயன்படக் கூடியவை அல்ல. அவற்றை நம்பி அவற்றின்படி நடப்பது முட்டாள்தனமாகும். அப்படிச் செய்வது, போனவருடத்திய 'ரயில்வே கைடை'—கால அட்டவணையைக் கொண்டு—இந்த வருடம் ரயிலுக்குப் போவதை ஒக்கும். அப்படிச் சென்றால், எங்காவது ரயில் கிடைக்குமா? அதேபோல், என்றோ செல்லுபடியாய்விட்ட அவற்றை நம்பினால், ஏதாவது பலன் இன்று கிடைக்குமா? அந்த சாஸ்திர புராணங்களுக்குக் கட்டுப்பட்டு 'நீ என்னாங்கோ எஜமானே' என்றால், அவன் 'ஏண்டா பறப்பயலே' என்கிறான். அதை விட்டு, 'நான் ஏன் சூத்திரன், நீ ஏன் பிராமணன்?' என்று நாங்கள் இன்று கேட்டு வருவதுபோல், நீங்களும் 'நான் ஏன் பறையன், நீ ஏன் எஜமான்?' என்று கேளுங்கள். அவன் வழிக்கு வருகிறானா இல்லையா, பாருங்கள். பழைமை ஆதாரம் என்பதைத் தவிர்த்து அறிவினால் சிந்தித்துப் பாருங்கள்.

பழைமைகளில் எது 'மாற்றமடையாமல்' இருந்து வருகிறது? பண்டைக்காலத்தில் நமது பெண்களுக்கு எங்காவது ரவிக்கை உண்டா? அவர்கள் மார்புக்குச் சேலையாவது போட்டு மூடிக்கொள்ள முடியுமா? அப்படி மூடினால், அவர்கள் தண்டிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்து வந்தது தெரியுமா உங்களுக்கு? இப்போது காலம் அப்படியேவா இருக்கிறது? இன்று அவர்கள் உள்ளே ஒரு லகான், அதற்குமேலே ஒருபாடி, அல்லது அதற்கும் மேலே ஒரு ரவிக்கை, இத்தனை போட்டுக் கொள்ளவில்லையா? இன்று எங்கே போய் விட்டது அந்த ஆசாரம்? அப்போது 4 முழக் கந்தைதான் இடுப்பிலே சுற்றிக்கொண்டு திரிந்தார்கள். இன்று அவர்களுக்கே 12 முழம் சேலை தேவையாயிருக்கிறதே! அதே '4 முழக் காலத்தில்' ராட்டினம் இருந்தால் போதும்; இன்று 12, 16 முழக் காலத்திலும் அதே ராட்டினம் இருக்கவேண்டுமென்றால், அது அறிவுடைமை ஆகுமா? அவ்வப்போதைய ஆசா பாசத்திற்கேற்ப, தேவைக்கேற்ப அந்தந்தச் சாதனங்களும் மாற்றமடைந்து வருவதுதான் இயற்கை. ஆகவே, காலத்திற்கேற்ப நாமும் நம் பழைய எண்ணங்களை விட்டுவிட வேண்டும்.

இன்று ஆறாம் ஜார்ஜ் மன்னருக்கு இதுவரை இருந்து வந்த சக்கரவர்த்திப் பட்டத்தை எடுத்துவிட்டார்களா, இல்லையா? அரசர் கடவுளின் பிரதிநிதி என்ற பழைய கொள்கை இன்று என்னவாயிற்று? கோவணங் கட்டத்தெரியாத குழந்தைப் பிள்ளை களெல்லாம் இன்று, 'அவன் ஏன் பணக்காரன்', 'இவன் ஏன் மிராசுதாரன்' என்று கேட்க

ஆரம்பித்துவிட்டார்களா இல்லையா? அதேபோல், தாழ்த்தப்பட்ட மக்கள் சிந்திக்க வேண்டும்—நாம் எதனால் தாழ்த்தப்பட்டிருக்கிறோம் என்று. அப்போது தெரியும்—தாம் தாழ்த்தப்பட்டிருக்கக் காரணம், தாம் தழுவிநிற்கும் இந்து மதம்தான் என்று. எவனும் தன்னை ஒரு இந்து என்றே கூறிக்கொள்ளக்கூடாது. அந்தத் தாழ்வும் இழிவும் நீங்க ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். கடவுளிடம் பிரார்த்தனை செய்துகொண்டால் இழிவு நீங்காது; நீங்கிவிடும் என்று நினைப்பது முட்டாள்தனம். அது இவனுடைய முயற்சியைத் தான் தடை செய்யும். பிரார்த்தனை செய்வதென்பதே பெரிய முட்டாள்தனம். பெரிய அக்கிரமத்தைச் செய்துவிட்டுப் பிரார்த்தனை செய்துவிட்டால் போதும் என்று, எவனும் துணிவுடன் அக்கிரமம் செய்ய ஆரம்பித்துவிடுகிறான். பிரார்த்தனையில் உள்ள நம்பிக்கை யால் கொலை பாதகனும்கூடத்தான் கடவுளைப் பிரார்த்தித்துவிட்டுக் கொலை செய்யச் செல்கிறான். பிரார்த்தனை எங்காவது அவனது கொலை பாதகத்திற்குப் பரிகாரம் ஆகி விடுமா? பிரார்த்தனையால் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளமுடியுமானால், தகுதியும் அறிவும் தேவையே இல்லையே! ஆகவே பிரார்த்தனையின் மூலம் நீங்கள் முட்டாள் ஆவதோடு கடவுளையும் முட்டாளாக்கி விட்டவர்களாகிறீர்கள்.

மன உறுதியோடு, இனி ஒருவனையும் சாமி என்றோ, எஜமான் என்றோ கூப்பிடு வதை நிறுத்திவிடுங்கள். எவனையும் ‘அய்யா!’ என்று மட்டுமே அழையுங்கள்; அல்லது அவனவன் பேரால் அழையுங்கள். எந்த மிராசுதாரனாவது “என்னடா, புதுசா அய்யா என்று அழைக்கிறாய்; திமிர் ஏறிப் போய்விட்டதா?” என்றால், “இல்லீங்க அய்யா, நாங்களும் உங்களைப்போல் மனிதர்கள்தானே; அப்படியிருக்க நாங்கள் ஏன் உங்களை எஜமான் என்றோ, சாமி என்றோ அழைக்கவேண்டும்? இதுவரை ஏதோ முட்டாள்தனத்தால் நாங்கள் எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று நினைத்து உங்களை உயர்வாக எஜமான் என்று அழைத்து வந்தோம்; இனி நாங்களும் மனிதத் தன்மை அடையத் துணிந்துவிட்டோம். ஆகவேதான் அய்யா என்று அழைக்கிறோம்” என்று தயை தாட்சணியமில்லாமல் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். “அடே, உங்களைக் கடவுள் தண்டிப்பார்” என்று அவன் கூறினால், “நீங்கள் கூறும் கடவுளென்பது காட்டுமிராண்டி காலத்திற்குத்தான்; பகுத் தறிவுக் காலத்திற்கு அல்ல” என்று கூறிவிடுங்கள்.

உண்மையில், உங்கள் இழிவு நீங்கவேண்டுமென்ற கவலையும் ரோஷமும் வெட்க மும் இருக்குமானால், இந்த விதத்தில்—வெகு சீக்கிரத்தில்—இந்த இழிவிலிருந்து நீங்கள் விடுதலை பெறலாம். இதற்கு வாலிபர்கள் துணிந்து முன்வரவேண்டும். வாழ்வில் மாற்றம் வேண்டியவர்கள் கடவுளைப்பற்றியோ மதத்தைப்பற்றியோ ஒரு சிறிதும் கவலைப் படக்கூடாது. உயர்ந்த சாதி என்று, எவனெவன் திமிரோடு உங்கள் முன் வருகிறானோ, அவனை, குறுக்கே வரும் பாம்பைப்போல் கருதி, துரத்தி அடிக்கவேண்டும்; அதுதான் சாதி ஒழிப்புக்குச் சரியான மருந்து. அது ‘இன்ஜெக்ஷன்’ மாதிரி உடனே வேலை செய்ய ஆரம்பித்துவிடும். அதைவிட்டு, சாதி ஒழிப்புச் சட்டத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தால், அதற்குள் சாதி அழியாமல் இருக்க அரசாங்கம் சட்டம் செய்துவிடும். ஆகவே, அடக்குமுறை வருமுன் ஆவன செய்யுங்கள்.

உங்கள் இழிவுக்குக் காரணம் நீங்கள் மாடு தின்பதல்ல; மதம்தான் காரணம் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். மாடு தின்பதால் எவ்வித பாபமோ, கஷ்டமோ, நஷ்டமோ வந்துவிடாது. 220 கோடி உலக மக்களில் ஒரு கோடி மக்கள்தான் மாடு தின்னாதவர்கள். இவர்களும் மாட்டின் கொழுப்பைப் பாலாகவும், தயிராகவும், நெய்யாக வும் சாப்பிட்டு வருபவர்கள் என்பதை நீங்களும் உணருங்கள். மாடு தின்பது கொடுமை என்றால், மாட்டின் விதரைப் பதைக்கப் பதைக்க இடுக்கிக்கொண்டு நசுக்குகிறார்களே, அடிக்கிறார்களே, பெரும் பாரத்தை இழுக்கும்படி அடிக்கிறார்களே அது கொடுமை இல்லையா என்று கேளுங்கள். மாட்டைத் தின்பது எவனாவது அனாசாரம் என்று

கூறினால், " மாடாவது வெறும் புல்லைத்தான் தின்கிறது; பன்றி, கோழி இவை ஜலதாரையில் இருக்கும் புழுவையும், மலத்தையும்கூடத் தின்கின்றன. அவற்றைத் தின்பது அதைவிட அனாசாரம் ஆயிற்றே " என்று கூறுங்கள். 'மாடு தின்பதால்தான் புலையனாக்கப் பட்டேன் என்றால், சாஸ்திரப் புராணப்படி ஆடு, மாடு, கழுதை, குதிரை இவற்றை உயிரோடு வதைத்துத் தின்ற ஆரியப் புரோகிதர்கள் மட்டும் எப்படி பிராமணர்களாக்கப் பட்டார்கள்?' என்று கேளுங்கள்.

எவனாவது உங்களைப் பார்த்து, 'ஒதுங்கிப்போ' என்று சொன்னால், 'ஏனப்பா, நான் ஒதுங்கவேண்டும்; என் காற்றுப்பட்டால் உனக்கு என்ன காலராவா வந்துவிடும்?' என்று கேளுங்கள். அவன் தானாகவே ஒதுங்கிப் போய்விடுவான். எவனாவது உங்களைக் கண்டு ஒதுங்கிப்போனால் அவனையும் சும்மா விடாதீர்கள். 'என்னப்பா என்னைப் பார்த்து தவளை மாதிரி எட்டிக் குதிக்கிறாய்? நான் என்ன மலமா, தொட்டால் நாற்றமடிக்க? அல்லது நான் என்ன நெருப்பா, தொட்டால் சுடும் என்று கூற; ஏனப்பா இப்படிப் பித்தலாட்டம் செய்கிறாய்? மலத்தைத் தொட்டால்கூட கையைக் கழுவிவிட்டால் சரியாய்ப் போகிறது என்கிறாய்; என்னைத் தொட்டால் உடுத்தியிருக்கிற வேட்டியோடு குளிக்க வேண்டுமென்று சொல்கிறாயே; இதற்கு என்னப்பா அர்த்தம்?' என்று கேளுங்கள். நீங்களே சிந்தித்துப் பாருங்கள்—இவையெல்லாம் கலப்பற்ற அயோக்கியத்தனமா, அல்லவா என்று! நீங்கள், உங்களது இந்த சமூக இழிவுபற்றிக் கவலைப்படாத—உங்கள் மூடநம்பிக்கை நடத்தைபற்றிக் கவலைப்படாத 'கிஸான் சபை'யை நம்பாதீர்கள். கூலி உயர்வால் மட்டுமே உங்கள் இழிவு போய்விடாது. எஜமான், கூலி என்கிற அந்த வேற்றுமையும் அதனால் மறைந்து விடாது. 'உழைக்காத சோம்பேறிக்கு ஏன் உடைமை இருக்க வேண்டும்? உழைக்கும் பாட்டாளி ஏன் அவனிடம் கூலி பெற்று வாழவேண்டும்?' என்று நீங்கள் கேளுங்கள். நீங்கள் முதலில் சரிசமம் ஆன மனிதனாகுங்கள்; பிறகு உடைமையைச் சரிசமமாக்கிக் கொள்ள நீங்கள் பாடுபடுங்கள். உடைமையில் அதிகமான உடைமைக் காரர்களாக இருந்தும் அனேகம் பேருக்கு இழிவு நீங்கவில்லை. உடைமை வரும்; போகும், தற்செயலாய். இழிவு அப்படி அல்ல. ஆகவே, ஒரு காலணா கூலி உயர்வுக்காக அடிபட்டுச் சாவதைவிட, 'அவன் ஏன் மேல்சாதி, அவன் ஏன் முதலாளி, நான் ஏன் தொழிலாளி' என்று கேட்பதில் உயிர் விடுங்கள். கிஸான் தலைவர்களும் அரசாங்கத்தின் ஏவலாளர்கள்; மிராசுதாரரின் கையாட்கள்; பெரிதும் சுயநலமிகள்; தங்கள் வாழ்விற்காக உங்களைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் என்பதை அறிந்து, நீங்கள் உங்கள் அறிவு காட்டும் வழியைப் பின்பற்றி நடவுங்கள். அரசியலில் வோட்டுரிமை பெறவும், சமூக இயலில் இழிவு நீங்கவும், பொருளாதாரத்தில் முதலாளி ஒழியவும் நீங்கள் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்யுங்கள்.

நமது மக்கள் மாத்திரம் பெரிதும் பலகாலமாகவே முன்னேற்றமடையாமல் இருக்கக் காரணம் என்ன என்று யோசிக்கவேண்டும். இப்படிப்பட்ட நாளை இவ்வாறு சிந்தனை செய்யத்தான் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வெகுகாலமாகவே நம் மக்கள் அறிவு வளர்ச்சியடையாமல் இருந்துவரக் காரணம் கடவுள் இல்லாத குறையாலா? அல்லது அவைகளுக்குப் பூஜை சரிவர நடத்திவைக்காததாலா? அல்லது அவற்றை மதிக்கத் தவறிவிட்டதாலா? யாரேனும் பூஜை நடத்தி வைக்கவில்லை என்றோ, கடவுளை நாம் மதிக்கவில்லை என்றோ, அல்லது கடவுள்களுக்கு நம் நாட்டில் பஞ்சம் என்றோ நம்மீது குற்றம் கூற முடியுமா? அப்படியிருக்க, மற்ற சமுதாய மக்களுக்குள்ள வசதியும் வாய்ப்பும் நமக்கேன் இல்லாமற் போய்விட்டன? இவற்றை நீங்கள் சிந்திக்க வேண்டுமென்பதுதான் எனது முக்கிய கருத்து. எனது வாழ்நாளில் கிடைக்கும் வசதியை இந்தக் காரியத்திற்கே பெரிதும் பயன்படுத்த நான் ஆசைப்படுவதால், இதைப் பற்றித் திருப்பித் திருப்பிக் கூறுகிறேன்.

நமது இழிவின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்குவதில்தான் நாம் பூரா கவனத்தையும் செலுத்த வேண்டும். நம் ஊரில் காலராவோ, மலேரியாவோ வந்தால் நாம் எப்படி அவற்றுக்குக் காரணமாயிருந்து வரும் அசுத்தங்களையும் கசுமாலங்களையும் நீக்கி, அந்நோய் பரவ வொட்டாமல் செய்கிறோமோ, அதே போல் நமது இழிவுக்குக் காரண மாயிருந்து வரும் சில கசுமாலங்களையும் நீக்கவேண்டும். நம் குறைபாடுகளுக்கு நாம் தழுவி நிற்கும் மதந்தான் காரணமே தவிர, கடவுள் ஒருபோதும் காரணகர்த்தராக மாட்டார். கடவுள்மீது பழி போடுவது என்பது அற்பத்தனம்; அயோக்கியத்தனம். 'ஏனப்பா திருடினாய்?' என்று ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு திருடனைப் பார்த்துக் கேட்டால் "நான் என்ன செய்யட்டுமுங்க; கடவுள் செயல் என்னை அப்படிச் செய்துட்டதுங்க" என்று சொன்னால், மாஜிஸ்ட்ரேட் ஒப்புக் கொள்வாரா? எவனாவது ஒரு போக்கிரி உங்கள் பாக்கெட்டில் கைபோட்டால், 'எல்லாம் கடவுள் செயல்' என்று நீங்கள் யாராவது சும்மா இருந்து விடுவீர்களா?

'கடவுள் இருக்கிறார் எல்லாம் பார்த்துக்கொள்வார்' என்று எந்த பக்தனாவது தனது பெட்டியைப் பூட்டாமல் விட்டுவிடுகிறானா? 'கடவுள் காப்பாற்றுவார்' என்று நினைத்து எவனாவது காசு, பணம் தேடாமல் தெருவில் சோம்பித் திரிகிறானா? அப்படியிருக்க, நமது இழிவு நீக்கத்திற்கு மட்டும் ஏன், 'எல்லாம் கடவுள் பார்த்துக்கொள்வார்' என்று நாம் விட்டு வைக்கவேண்டும்? நமது இழிவுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை. யாரோ, சில சுயநல நயவஞ்சகக் கூட்டத்தார் தம் சுகபோக வாழ்வுக்காகத் தம்மை மேன்மைப் படுத்தியும், மற்றவரைத் தாழ்மைப்படுத்தியும்—சாஸ்திர புராணங்களை எழுதி வைத்துக் கொண்டு, அவற்றைக் கடவுள் வாக்கென்று கூறி, நம்மை ஒப்புக்கொள்ளும்படி சொன்னால்—நாமும் பேசாமல் ஒப்புக்கொண்டு விடுவதா? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? என்ன குற்றம் செய்தோம்?

நாம் என்ன குற்றம் செய்ததற்காக நம்மைக் கடவுள் சூத்திரனாகப் படைத்தார்? நாம்தானே கோயில் கட்டுவதும் கும்பாபிஷேகம் செய்வதும்? நம் முன்னோர்தானே சாமிக்குப் படியளந்து வந்தார்கள்? அப்படியிருக்க, நம்மவர் கொடுத்ததை வாங்கி வயிறு வீங்க உண்டு சோம்பேறி வாழ்வு நடத்திய பார்ப்பான், எப்படி உயர்சாதியாக்கப்பட்டான்? பாடுபட்டுழைத்த நம்மவர், எப்படி கீழ்சாதியாக்கப்பட்டார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

இந்த இழிவிற்குக் கடவுள்தான் காரணம் என்று உங்களுக்குத் தோன்றினால், அந்தக் கடவுளுக்கு உடனே 'நோட்டீஸ்' கொடுங்கள். 'கடவுளே, நாங்கள்தான் உனக்கும், உன்னைக் குளிப்பாட்டிவரும் உனது அர்ச்சகனுக்கும் அன்றாடம் படி அளந்து வருகிறோம்; அதை உணராமல் நீ நன்றி மறந்து எங்களை இழிசாதியாய்ப் படைத்துவிட்டாய். பாடுபடாத உன்னையும், பாடுபடுகிற என்னையும் ஏமாற்றுகிற அவனை—உயர்சாதி ஆக்கிவிட்டாய்; ஆகவே—ஒன்று இனி மக்களில் உயர்வு தாழ்வு இல்லை என்றாவது கூறு; அல்லது நீயல்ல அதற்குக் காரணம் என்றாவது ஒப்புக் கொண்டுவிடு. இந்த நோட்டீஸ் விண்ணப்பத்தை அறிந்த இரண்டு வாரத்திற்குள் நீ ஏதாவது ஒரு முடிவான பதில் தெரிவிக்காவிட்டால் உன் கோயிலை இடித்து விடுவோம்' என்று எச்சரிக்கை செய்யுங்கள். கடவுள் என்று ஒன்று அந்தக் குழவிக் கல்லில் அடைந் திருக்குமானால், அது வாய் திறந்து பேசட்டும்! இன்றேல் அதை உதறித் தள்ளுங்கள். கடவுள் நரகத்திற்கு அனுப்பிவிடுவார் என்று நீங்கள் அஞ்சாதீர்கள்; அப்படி ஒன்று இருக்குமானால் அது அர்ச்சகருக்கே சரியாய்ப் போய்விடும். நரகம் என்பது வெறும் கற்பனைப் பூச்சாண்டி; மதத்தைக் காப்பாற்றிக்கொள்ள—அறிவாராய்ச்சியைத் தடை செய்து தமது வாழ்க்கையைப் பாதுகாத்துக்கொள்ள—சூழ்ச்சிக்காரர்கள் செய்த ஒரு தந்திரம்.

நான் என்னுடைய சூத்திரப் பட்டம் போகத்தான் இவ்வளவு பாடுபடுகிறேன் என்று நீங்கள் நினைத்துவிடாதீர்கள். நான் கிழவனாகிவிட்டேன்; இனி வெகு சீக்கிரத்தில் சாகப்போகிறவன். ஆனால், உங்கள் கதி என்ன? உங்கள் சந்ததிகளின் கதி என்ன? நீங்கள் பாடுபட்டு உழைப்பதெல்லாம் உங்கள் சந்ததியின் நல்வாழ்வுக்குத்தானே? அப்படியிருக்க, அந்தச் சந்ததியின் சூத்திரத் தன்மைபற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாமா? உங்கள் சந்ததியார் மனிதர்களாக வாழ வழி செய்யவேண்டாமா? இதோ எனக்கெதிரில், பிரகாசம் பொருந்திய கண்களோடு பொறுக்கி எடுத்த மனிதன் மாதிரி வீற்றிருக்கும் இவ் இளைஞர்களின் கதி என்னாவது? இவ் இளங் குழந்தைகள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதற்காக, இவர்கள் சூத்திரர்களாய்—தாழ்ந்த சாதியாய்—இழிமக்களாய் இருக்கவேண்டும்? நீங்கள் சூத்திரர்களாக இருப்பதால்தானே உங்கள் குழந்தைகள் சூத்திரர்களாக, உங்கள் மனைவியர் சூத்திரச்சிகளாக இருந்து வருகிறார்கள்? அதனால் தானே மிருக சீவன்களாக நடத்தப்படுகிறார்கள்? இதைக் கண்டு நீங்கள் வெட்கப்பட வேண்டாமா? துக்கப்பட வேண்டாமா? இந்த இழிவுக்குக் காரணமாயுள்ள மதத்தையோ, சர்க்காரையோ, சமுதாயத்தையோ, ஒழித்துக்கட்ட நீங்கள் திட்டமிட வேண்டாமா? அதை ஒழிக்க உங்களுக்குக் கஷ்டமாயிருந்தாலும் அதை மாற்றியமைக்கவாவது நீங்கள் முற்பட வேண்டாமா?

மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் பறக்கும் ஆகாயக் கப்பல்களும், ஐயாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள ஒருவரின் குரலை அப்படியே கேட்க வசதி செய்துகொடுக்கும் அதிசய ரேடியோ பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதி அற்புத விஞ்ஞான காலத்திலா—நாம் நம் அறிவைப் பயன்படுத்தாமல் அற்ப—அன்னக்காவடி—லம்பாடிக் கூட்டத்தினருக்கு அடிமைகளாக, தாசி மக்களாக இருப்பது? இதைக் கூறுவதாலா தேசபக்தர்களுக்கு—காங்கிரஸ்காரர்களுக்கு—சமதர்ம ஆட்சியாளருக்குக் குற்றமாகப் படவேண்டும்? இதற்கா எங்களுக்கும் எங்கள் கழகத்தாருக்கும் கல்லடியும் சொல்லடியும் அடக்குமுறைத் தண்டனையும் கிடைக்க வேண்டும்? நான் என்ன ஆட்சியா வேண்டுமென்று கேட்கிறேன்? 'மகாராஜனாக' இன்றைய ஆட்சியே இன்னமும் ஆயிரம் ஆண்டுகள் வேண்டுமானாலும் ஆண்டு வரட்டும். ஆனால், ஆயிரம் சாதிகளையும் பத்தாயிரம் வகுப்புகளையும் இழி சாதிகளையும் பிராமண சாதிகளையும் நாட்டில் இருக்க அனுமதிக்கக் கூடாது. அதற்குக் காரணமாய் இருந்துவரும் மதத்தை மரியாதையாக அழித்து விடட்டும். எல்லா மக்களையும் ஒரே சமுதாய—சரிநிகர் சமான மனிதர்களாக நடத்தட்டும் என்றுதானே கூறுகிறேன். 'மக்களின் அறிவுக்குத் தடை விதிக்கும் எதையும் அழி' என்றுதானே நான் கூறுகிறேன்.

அறிவுகொண்டு ஆராய்வோம். அறிவிற்குத் தென்பட்டதுதான் கடவுளாக இருக்க முடியும்; அறிவினால் ஏற்படுத்தியதுதான் மதமாக இருக்கவேண்டும். அறிவுகொண்டு ஏற்படுத்தியதுதான் சாஸ்திரமும், புராணமும் ஆக இருக்கவேண்டும். ஆகவே, அந்த அறிவுக்குக் கடவுள், மதம் சாஸ்திரபுராணம் மாறானதாக இருந்தாலும்—ஒப்புக்கொண்டு ஆகவேண்டும் என்று நிபந்தனைபோடாதே! எதையும் சுதந்திரமாக, சுத்த அறிவுகொண்டு ஆராய்ச்சி செய்ய அனுமதி! அப்போதுதான் காலத்திற்கேற்ப அது முன்னேற்றப் பாதையில் உன்னை அழைத்துச் செல்லும்; உன் அறிவின் தெளிவுக்கேற்ற பயனளிக்கும். எனவே இவற்றைச் சிந்தித்துப் பார்! உன்னைத்தவிர்த்த மற்ற அயல்நாட்டு மக்கள், அயல் மதஸ்தர்கள் எத்தகைய கடவுள்களை வணங்குகிறார்கள் என்று அறிவால் ஆராய்ந்து பார்; அவர்களது கடவுள்களுக்கு உருவமில்லை; அதை வணங்க அவர்கள் காசு பணம் செலவழிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதுபோலவே, அவர்களுடைய மதமும் அவர்களைப் பல சாதிகளாகப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. அப்படியிருக்க, நாம் மட்டும் ஏன் உருவ வழிபாடு, அதுவும் ஆடம்பரமான செலவுடன் செய்யவேண்டும்? நம் மதம்மட்டும் ஏன் அநியாய உயர்வு - பிராமணன், சூத்திரன் - தாழ்வு கற்பிக்க

வேண்டும்? அவர்களைவிட நாம் எப்படி உயர்ந்தவர்கள், எதில் வல்லவர்கள் அல்லது அறிவாளிகள்? மற்ற விஷயங்களில் எல்லாம் அற்புத அதிசயங்களில் எல்லாம் அவர்கள் காட்டியவழியை நாம் ஆசையோடு பின்பற்றி வரும்போது, அதி முக்கியமான கடவுள் தத்துவத்திலும் மதத்திலும்மட்டும் ஏன் நாம் அவர்களுக்கு நேர்மாறாக—காட்டுமிராண்டிகளாக—நடந்துகொள்ள வேண்டும்?

உனக்கு சுயராஜ்ய அறிவை உண்டாக்கியது அவனா அல்லது உன்னுடைய மதமா? அரசன் வேண்டாமென்று ஆரம்பப் பாடம் கற்றுத்தந்தது அவனா அல்லது உன்னுடைய ஆரியமதமா? அன்பனே, ஆத்திரம் தவிர்த்து நீயே சிந்தித்துப் பார்! அவன் மாடு தின்கிறான், மடையன் என்று சுலபமாய்க் கூறிவிடுகிறாயே! நீ சர்வ சக்திபொருந்திய—சர்வ வியாபகனாகிய கடவுளைச் சாணளவு கல்லில் அடைத்துவிட்டு, அதற்குப் பெண்டு பிள்ளைகள் தேடிவைக்கிறாயே—இந்த அக்கிரமத்திற்காக உன்னை என்னவென்று அழைப்பது? சாணளவு கல்லை நட்டுவிட்டு, 'அதுதானடா சாமி!' என்கிறாய்; அதற்கு வருடாவருடம் கல்யாணம் செய்யவேண்டும் என்கின்றாய். அதுதான் போகட்டும் என்றால் அதுவும் போதாது;—அதற்கு ஆடவும் பாடவும் அழகான கூத்திமார் வேறு வேண்டுமென்கிறாய். அதற்கும் எங்கள் பெண்கள்தான் (பொட்டுக் கட்டிக்கொள்ள) வேண்டுமென்கிறாய்; அந்த ஆடலழகிகளோடும், மேளதாளத்தோடும், ஆனந்தமாக அதை ஊர்வலமாகக் கொண்டு செல்லவேண்டுமென்று கூறி—அதற்கும் எங்களைப் பணம் கொடுக்கும்படி துன்புறுத்துகிறாய். அந்த ஒருபிடி பித்தளை சாமியை—செம்புப் பொம்மையை ஆள் மட்டும் தூக்கிச்சென்றால் போதாது என்று—அதற்கு மரத்தாலும், வெள்ளியாலும், தங்கத்தாலும் யானையும் குதிரையும் வேண்டுமென்கிறாய்; சர்வ சக்தியுள்ள கடவுள் என்று கூறிவிட்டு அதற்கு இத்தனையும் நாம்தானடா செய்யவேண்டும் என்கிறாயே! அப்புறம் அதைக் கைதிமாதிரி ஒரு அறையில் போட்டுப் பூட்டிவைக்கிறாய்; 'உலகமக்கள் எல்லாம் இப்படியா சாமி கும்பிடுகிறார்கள்? நீ மட்டும் ஏன் இப்படிக் கூத்தடிக்கிறாய்' என்று கேட்டால்—இதற்காகவா என்னை நாத்திகன் என்று குற்றம் சாட்டுவது? வேற்று நாட்டான் சிரிப்பான்! கல்லையும், களிமண்ணையும், காட்டையும் மேட்டையும், கழுதையையும், குதிரையையுமாகிய சகலத்தையுமா கடவுளாக்கிவிடுவது?

சிந்தனை அறிவு ஒன்றுதானே உண்மையறிவாகக் கருதப்படக்கூடியது. வெறும் புத்தக அறிவு அறிவாகிவிடுமா? அதைக் குருட்டுப்பாடம்பண்ணி ஒப்புவித்தவனே மேதாவி ஆகிவிடுவானா? அப்படியானால், படித்த மேதாவிகள், பட்டதாரிகள், விஞ்ஞானப் பாடத்தில் பட்டதாரிகள், கல்லைக் கடவுள் என்று நம்பி அதன் காலில் விழுந்து வணங்குவார்களா? மகா விஞ்ஞானம் படித்த மகோன்னத பண்டித நிபுணர் என்பவர்களெல்லாம் மோட்சத்துக்காகச் சாணியையும் மூத்திரத்தையும் கலக்கிக் குடிப்பார்களா? அல்லது பாப விமோசனத்திற்காகத்தான் தீர்த்தமென்று சேற்றுநீரை வாரித் தெளித்துக்கொள்வார்களா? அவர்கள் படித்த 'சயின்சு'க்கும், இந்த சாணி மூத்திரக் கலவைக்கும் ஏதாவது சம்பந்த முண்டா? வேறு நாட்டில் எந்த மடையனாவது இப்படிச் செய்வானா? வெள்ளையன் இதைக் கேட்டால் காறித் துப்பிச் சிரிப்பானே!

எதற்காக ஒரு திருப்பதி சாமிக்கு வருடம் 32 இலட்சம் ரூபாய் வரும்படி? அந்த வரும்படியால் சோம்பேறிகளும், பார்ப்பனர்களும் தின்று கொழுப்பதைத்தவிர, வேறு ஏதாவது பயனுண்டா? சர்க்கார் வரி கேட்டால், கொடுக்க எவ்வளவு சங்கடப்படுகிறாய்? சர்க்காராவது—உனக்கே இல்லாவிட்டாலும், உன்னைப்போன்ற மக்களுக்காவது ஏதாவது நன்மை செய்கிறது; இந்தக் குழவிக்-கல்லுக்கு அழுவதால், பார்ப்பான் ஒருவன்தானே கொழுக்கிறான். இந்தக் குழவிக் கல் கொள்கையை அனுமதிக்கலாமா, நீ? இந்தக் குழவிக் கல்லுக்காக வேண்டி உன்னை மொட்டையடித்துக் கொள்ளலாமா, நீ? புத்தியிருக்கிறதா உனக்கு? இந்தச் சாமியை உனக்குக் காட்டிக் கொடுத்தவன் பார்ப்பான்தானே! அந்தப்

பார்ப்பான் ஒருவனாவது சாமிக்கென்று மயிர்வளர்த்து மொட்டையடித்துக்கொள்கின்றானா? ஒரு பார்ப்பனத்தியாவது சாமிக்காக மொட்டையடித்துக் கொள்கிறாளா? அப்படியிருக்க, நீ மட்டும் ஏனப்பா—மகா கடவுளைக் கண்டுவிட்டவன்போல்—அதற்கு மயிரைச் சிறைக்கக் கொடுக்கிறாய்? அதற்காக ஏனப்பா நீ காவடி தூக்கிக் குதிக்கிறாய்?

நமது மக்களில் 100க்கு 90 பேருக்குப் படிப்பில்லை; அவர்களைப் படிக்கவைக்கப் பணமில்லை என்கிறாய். திட்டம் போடத்திறமையில்லை,—திட்டம் போடுகிறார் நமது கல்வி மந்திரி, மேலும் மக்களை மடையர்களாக்க. மதத்தையோ புராணத்தையோ கேலி செய்யக்கூடாதாம்! செய்தால்—'டிஸ்மிஸ்' செய்வாராம், வாத்தியார்களை. அடேயப்பா, என்ன மதம் அப்பா இவருக்கு? இதுவரை அடிமையாக, தாசிமகனாக, கீழ்சாதியாக ஆக்கி வைத்திருக்கும் இந்து மதம்தானா இவருடைய மதம்? இவர் கூறும் புராண இதிகாசங்களின் யோக்யதையோ இன்னும் சொல்லத் தேவையில்லை.

பாரதம்—அதில் ஒருவனாவது அப்பனுக்குப் பிறந்ததாகக் கூறப்படவில்லை. ஒரு காலத்தில் ஒரு கூட்டம் அப்படி இருந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை! 1948-ல் போய் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமா? ஆட்சேபிக்கக் கூடாது என்று மந்திரி கூறுகிறார். இப்படிப்பட்ட கதையை நம் பெண்கள் படிக்க வேண்டுமென்றால் என்ன அர்த்தம்? அதில் கூறப்படுகிறதே ஒரு அழியாத பத்தினி திரவுபதி அம்மையார்—அந்த அம்மாளுக்கு அய்ந்துபேர் கணவர்கள். அதுவும் போதாமல், ஆறாவது மாப்பிள்ளைக்குக் கவலைப்பட்டாளாம். அப்படிப்பட்டவளைப் போய்—நம் தாய்மார்கள் 'பதிவிரதை' என்று வணங்குவார்களானால், அதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? அப்படிப்பட்ட பெண் தன்மையில் கதையைப் படிப்பதால், நம் பெண்களுக்கு ஏதாவது ஒழுக்கம் ஏற்படுமா?

இராமாயணம் அதைவிட மேலான காவியம். அதில் கூறப்படும் தசரதனுக்கோ 60,000 மனைவிமார்; அத்தனை மனைவிகள் இருந்தும் அவனுக்குப் பிள்ளை கிடையாது. அதற்காக ரிஷ்யசிருங்கர் வந்து பிள்ளை உண்டாக்கித் தரவேண்டும். இப்படிப்பட்ட கதையைப் படிப்பதால் கொஞ்சமாவது நாணயமோ பெருந்தன்மையோ ஒழுக்கமோ ஏற்படுமோ? இந்தக் கதையைப்போய் சரித்திரப்பாடத்தில் புகுத்திக் கொலை பண்ணுகிறாயே, இது நியாயமா? இந்தத் தசரதனோ அல்லது இவனுக்கு இஷ்ட புத்திரன் இராமனோ ஆண்டதற்கு ஏதாவது சரித்திர ஆதாரம் உண்டா? இப்படி இருக்க, அதைச் சரித்திரத்தில் புகுத்தி அதைப் படிக்கும்படி ஏன் அனாவசியமாகக் குழந்தைகளை வற்புறுத்தி, அவர்கள் அறிவைக் கெடுக்கப் பார்க்கிறாய்?

வேண்டாமய்யா இந்த இதிகாச புராணங்கள்; இவையல்ல நமக்கு வேண்டியவை. நமக்கு வேண்டியதெல்லாம் சிந்தனை அறிவு! எதனையும் சிந்தித்துச் செய்யுங்கள். விபூதி பூச வேண்டுமா? ஏன் எதற்கு என்று சிந்தித்துப் பார்த்த பிறகு பூசிக் கொள்ளுங்கள்! வேண்டாமென்று கூறவில்லை. சாமியா, விபூதி பூசிக்கொள்ளும்படி சொல்லியது? சாமியா, உன்னை நாமம் போட்டுக் கொள்ளச் சொன்னது? சாமியா, உன்னைத் திவசம் கொடுக்கச் சொன்னது? நீ திவசத்தின்போது பார்ப்பானுக்குக் கொடுக்கும் அரிசி, பருப்பு—நீ கண்டாயா உங்கள் அப்பனுக்குப் போகிறது என்று? நீ சிந்தித்துப் பார்த்தாயா அது அந்தப் பார்ப்பான் வீட்டிற்குப் போகிறதா அல்லது அவன் வைப்பாட்டி வீட்டிற்குப் போகிறதா என்று?

'ஏனப்பா—சாமி கும்பிட சாம்பல் பூசிக்கொள்கிறாய்?' என்றால், 'இறந்த பிறகு எல்லாம் சாம்பலாகத்தானே போய் விடுகிறோம்; அதற்கு அறிகுறி இது' என்கிறார்கள் மத பக்தர்கள். என்ன அர்த்தம்? இந்த உடல் சாம்பலாகுமுன் அது நெருப்பாக எரிந்து தானே சாம்பலாகிறது? நீ அப்போது சவமாகக் கிடக்கிறாயே! அதுதானே உனது முடிவென்று—நீ கொஞ்சம் 'கிரஸினை' மேலே ஊற்றிக் கொண்டு, சவம்போல் படுத்து,

வத்திக்குச்சி எடுத்துப் பற்ற வைத்துக்கொள்ளேன், பார்க்கலாம்! எரியாமல் எப்படிச் சாம்பல் வரக்கூடும் என்று இதைச் செய்வாயா முன்னால்?

ஏனப்பா இப்படி அறிவுக்குப் புறம்பான காரியங்களை மதம் என்ற பெயரால், நீ செய்கிறாய்? உன்னை மூடநம்பிக்கைகளுக்கு அடிமையாகவும்—ஒரு இழிமகனாகவும் வைத்திருக்கும் மதத்தை ஏன் நீ இன்னும் சுமந்துகொண்டு இருக்கவேண்டும்?' என்றால், 'நீ யார் கேட்க, அது என் இஷ்டம்!' என்று கூறினால், அது அறிவுக்குப் பொருந்துமா? ஒரு பாரமான கல்லைத் தலைமீது வைத்து நிற்கிறவனைப் பார்த்து—அதுவும் எதற்காகச் சுமக்கிறோம்; ஏன் சுமக்கிறோம்; யாருக்காகச் சுமக்கிறோம் என்பதுகூடத் தெரியாமல் சுமந்துகொண்டிருப்பவனைப் பார்த்து—'ஏனப்பா அதை வீணாகச் சுமந்துகொண்டிருக்கிறாய்? அதனால் உனக்கு யாதொரு பயனும் இல்லையே; அதை இறக்கி வைத்து விடேன்' என்று கூறினால், 'அதைக் கேட்க நீ யார்?' என்று கூறினால்—அதில் அர்த்தமுண்டா?

இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் இந்த உலகத்தில் சூத்திரர்களாயிருப்பது? நம் பின்சந்ததிகளைச் சூத்திரர்களாயிருக்கும்படி விடுவது? இத் தலைமுறையிலாவது—இந்த விஞ்ஞான, சுதந்திர காலத்திலாவது—நமது இந்த இழிவு நீங்கி, நாம் மனிதத் தன்மைபெற ஏதாவது செய்ய வேண்டாமா? இதைவிட, இனிமேல் இப்படிப்பட்ட காரியம் நமக்கேது? அதனால்தான், எனது வாழ்நாள் பூராவும் இதற்கென்றே நான் அர்ப்பணித்து வந்திருக்கிறேனே ஒழிய, முட்டாள் தனமல்ல; துவேஷமல்ல; நாஸ்திக உணர்ச்சியாலல்ல.

1925-ல் காங்கிரசில் இருந்து நான் விலகியதற்கும் இதுதானே காரணம்! காங்கிரஸ் ஒரு வகுப்புவாத ஸ்தாபனம்; ஆரியப் பார்ப்பனரின் நலனுக்காகவே பாடுபட்டு வரும் ஒரு ஸ்தாபனம்; வருணாசிரம பாதுகாப்பு ஸ்தாபனம் என்பதைத் தெளிவாக உணர்ந்த பிறகுதானே நான் அதைவிட்டு வெளியேறினேன்!

அன்றுமுதல் நான் இதைத்தானே கூறிவருகிறேன். நம்மை இழிவுபடுத்தும் மதமும், நாம் தீண்டினால் செத்துப்போகும் கடவுளும், நாம் படிக்கக்கூடாத சாஸ்திரமும், நம்மைக் காட்டுமிராண்டிகளாக்கும் புராணமும், நம்மைச் சுரண்டிப் பார்ப்பானுக்கு அழும் தெய்வமும் நமக்குத் தேவையில்லை என்பதுதானே எனது விண்ணப்பம். 1929-லேயே என்னுடைய கருத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேனே!

உருவமற்ற கடவுளை—யாவரையும் ஒன்றுபோல் சிருஷ்டிக்கும் கடவுளை—ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்ட கடவுளை—பகுத்தறிவுக்கு ஏற்ற கடவுளை—காசு பணம் செலவு செய்யாமல் வணங்கக்கூடிய கடவுளை—மூடநம்பிக்கைக்கு இடமில்லாத தன்மையில் யாரும் வணங்கலாம். நீதிக்கும் நேர்மைக்கும் அறிவுக்கும், அன்புக்கும் கட்டுப்பட்ட எந்த மதத்தையும் யாரும் தழுவலாம் என்று அன்றே கூறியிருக்கிறேனே! அதனால்தானே அன்று முதலே நான் நாஸ்திகனாக்கப்பட்டேன். அன்று ஏற்பட்ட எதிர்ப்புச் சொல் கொஞ்சமா? கல்லடி கொஞ்சமா? அப்படியிருந்தும், நெருப்பில் புழுத்த புழுபோல், அறிவு காரணமாக—அதன் நேர்மை காரணமாக அக்கொள்கை அழியாது நின்று, இன்று சற்று செல்வாக்குப்பெற்று விளங்குகிறது. 20 வருட சேவையின் பயனாய் இப்போதுதான் ஏராளமான வாலிபர்கள் இக்கொள்கையை ஏற்று நடக்க முன் வந்துள்ளனர். இனியும் அவர்களது தாய்தந்தையர்கள் ஞானமடையவில்லை; ஞானசூனியர்களாய் இருக்கிறார்கள். ஆணவ அடக்குமுறையால்—அதன் பாதுகாப்பில் நடத்தும் மூடப்பிரச்சாரத்தால்—மூர்க்கத்தனத்தால், அறிவு என்றும் அழிந்ததில்லை என்பதை அமைச்சர்கள் சீக்கிரமே உணர வேண்டும்.

அன்பர்களே! ஒவ்வொரு மனிதனும் செத்துப்போவது உண்மைதான் என்றாலும் அவனோடு அவனுடைய முயற்சியும்—அவன் துவக்கிய காரியமும் செத்துப்போய் விடுவ

தில்லை. அதுவும், அவனுடைய எண்ணத்தை அவனால் கூடுமான அளவுக்கு அவனைச் சூழ்ந்துள்ள மக்களிடையே பரப்பிவிட்டால்—அந்த எண்ணம் ஒருபோதும் அழியாது; அடக்கிவிடமுடியாது. என்னுடைய முயற்சியெல்லாம் மக்கள் எதையும் சிந்திக்கவேண்டும் என்பதுதான், அவர்கள் எதையும் கண்மூடி நம்பிவிடக்கூடாது என்பதுதான். இது போதுமான அளவுக்கு மக்களிடையே வேரூன்றிவிட்டது. இனியும் தொடர்ந்து எனது உயிருள்ள வரையில் நான் இதைத்தான் கூறிவருவேன்.

[புலியனூரில் சொற்பொழிவு—'விடுதலை' 29-2-1948]

3. பெண்ணுரிமை

1. பெண்கள் விடுதலை

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில் அனேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக்கொண்டு, மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும்—எவ்வழியிலும்—பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்கமுடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப் பெண்மக்களால் முயற்சிக்கப் படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல், மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம்.

எதுபோலவென்றால், இந்தியப் பொதுமக்கள் விடுதலைக்கு வெள்ளைக்காரரும், பார்ப்பனரும் பாடுபடுவதாக ஏற்பாடுகள் நடந்துவருவதன் பலனாக—எப்படி நாளுக்கு நாள் இந்திய மக்களுக்கு அடிமைத்தனம்—விடுதலை பெறமுடியாதபடி பலப்பட்டு, என்றென்றைக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டுவருகிறதோ அதுபோலவும்; சமூக சீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேஷம் போட்டுக்கொண்டு பார்ப்பனர்களும், புராணக்காரர்களும் சீர்திருத்தத்தில் பிரவேசித்துவருவதன் பலனாக எப்படி சமூகக் கொடுமைகளும், உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும், மதத்தினாலும் நிலைபெற்றுப் பலப்பட்டு வருகின்றதோ அதுபோலவுமே என்று சொல்லலாம்.

அன்றியும் ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டுவருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனர் அல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒருசமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும் கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதைமாத்திரம் உறுதியாய் நம்பலாம்.

ஏனெனில், 'ஆண்மை' என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது. அந்த 'ஆண்மை' உலகில் உள்ளவரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகத்தில் 'ஆண்மை' நிற்கும்வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தேவரும். பெண்களால் 'ஆண்மை' என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லது 'பெண்மை' விடுதலையில்லை யென்பது உறுதி. 'ஆண்மை'யால்தான் பெண்கள் அடிமையாக்கப் பட்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் 'ஆண்மை'க்குத்தான் உரியதாக்கப்பட்டுவிட்டன, ஏன்? 'ஆண்மை'க்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண்மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைமாத்திரம் பெண்கள் நன்றாய் உணரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

எனவே, பெண்மக்கள் அடிமையானது ஆண்மக்களாலேயேதான் ஏற்பட்டது என்பதும், அதுவும் 'ஆண்மை'யும் 'பெண் அடிமையும்' கடவுளாலேயே ஏற்படுத்தப் பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண் மக்களும் இதை உண்மையென்றே நினைத்துக்கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால், பெண் அடிமைக்குப் பலம் அதிகம் ஏற்பட்டிருக்கின்றது என்பதும்—நடுநிலைமைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பொது மக்கள் பிறவியில் உயர்வு–தாழ்வு ஒழியவேண்டுமானால், எப்படி கடவுளாலேயே மக்களுக்குப் பிறவியில் உயர்வு–தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற இந்துமதக் கொள்கையைச் சுட்டுப் பொசுக்கவேண்டியது அவசியமோ—அதுபோலவே, பெண்மக்கள் உண்மை விடுதலைபெற்று உண்மைச் சுதந்திரம் பெறவேண்டுமானால், 'ஆண்மை'யும், 'பெண் அடிமையும்' கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்பதற்குப் பொறுப்பாயுள்ள கடவுள்தன்மையும் ஒழிந்தாக வேண்டும்.

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கிறார்கள். ஏனெனில், இன்னமும் பெண்களுக்குத் தாங்கள் முழு விடுதலைக்குரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறிகளாய்க் கருதிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம்; ஆனால், ஆண் இல்லாமல் பெண் வாழமுடியா தென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக்கொண்டிருக்கிறாள். அப்படி அவர்கள் கருது வதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால், தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழமுடியும் என்பதை ருசுப் படுத்திக் கொள்ளமுடியாதவர்களா யிருக்கின்றார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால், தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழமுடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களா யிருக்கின்றார்கள். அன்றியும், அப்பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால்—அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகி விடுகின்றது. எனவே, உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்துபோக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்துப் புருஷனை நியமித்துக்கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மை விடுதலை அடைந்து விட முடியாது என்றே சொல்லுவோம்.

இம்மாதிரி இதுவரை வேறுயாரும் சொன்னதாகக் காணப்படாவிட்டாலும்—நாம் இதைச் சொல்லுவது பெரிதும் முட்டாள்தனமோ என்பதாகப் பொது மக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும்—இந்த மார்க்கத்தைத் தவிர—அதாவது பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து விடுதலையாக வேண்டும் என்கிற மார்க்கத்தைத் தவிர—வேறு எந்த

வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப் போன்ற உறுதியுடைதாய் இருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதம் என்று சொல்ல வரலாம்.

உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும்போது—மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே, அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு நடத்திவருகின்றபோது, இந்த விஷயத்திலும் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப்போய் விடாது.

தவிர, 'பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் உலகம் விருத்தியாகாது; மானிட வர்க்கம் விருத்தியாகாது' என்று தர்ம நியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும்? அல்லது இந்தத் தர்ம நியாயம் பேசுபவர்களுக்குத்தான் என்ன நஷ்டம் உண்டாகிவிடும்? என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரை பெருகி வந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத்திற்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை.

பெண்களின் அடிமைத் தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது, மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால், நாம் இந்த இடத்தில் அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலை கொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள் வேறு எவ்விதமான முயற்சி செய்தாலும், அது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால், இந்தக் காரியத்தில்—அதாவது பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்வித கஷ்டமும் கிடையாது என்பதோடு, ஆண்களுக்கு இலாபமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எப்படியெனில், ஒரு மனிதன் தான் பிள்ளை குட்டிக்காரனாயிருப்பதனாலேயே யோக்கியமாகவும், சுதந்திரமாகவும் நடந்துகொள்ளப்பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய்விடுகிறான். அன்றியும், அவனுக்கு அனாவசியமான கவலையும் பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது. மற்றபடி இதனால் ஏற்படும் மற்ற விஷயங்களையும், முறைகளையும் மற்றொரு சமயம் விவரிப்போம்.

['குடிஅரசு'-தலையங்கம்—12-8-1928]

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்கமென்பதோ, கற்பென்பதோ ஆண் பெண் இருபாலாருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்கு மட்டுமல்ல. இன்றையச் சீர்கேடான நிலைக்குப் பெண்மக்கள் மிருகங்களினும் கேவலமாகக் கருதப்பட்டதும், அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாக எண்ணப்பட்டதும், மனித ஜென்மத்துக்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லை என ஆண்கள் மதித்து வந்ததும், இவைகளின் சவுகரியத்தினால் இவன் ஒழுக்கம் என்பதை விட்டுவிட்டு நாளாவட்டத்தில் வெகுதூரம் விலகி, அதற்கும் இவனுக்கும் சம்பந்தமில்லாது இன்று வாழ்வதுமே காரணமாகும்.

[ஈரோட்டில், 8-12-1929-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 22-12-1929]

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பெண் மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது, மேல் சாதிக்காரன் கீழ் சாதிக்காரனை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட, எசமான் அடிமையை நடத்துவதைவிட மோசமானதாகும்.

அவர்கள் எல்லாம் இருவருக்கும் சம்பந்தமேற்படும் சமயங்களில் மாத்திரந்தான் தாழ்மையாய் நடத்துகின்றார்கள். ஆனால் ஆண்களோ பெண்களை பிறவி முதல் சாவு வரை அடிமையாயும் கொடுமையாயும் நடத்துகின்றார்கள். நாம் எல்லோரும் அடிமை வயிற்றில் பிறந்து அடிமைகளாய் வளர்க்கப்பட்டோம் என்பதை மறுக்கின்றீர்களா?

'நான் எத்தனை பெண்டாட்டி வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளுவேன்; நான் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஆசைநாயகிகளாக வைத்துக்கொண்டு அநுபவிப்பேன். ஆனால், பெண்ணாய்ப் பிறந்த நீ ஒரு புருஷன்தான் கட்டிக்கொள்ள வேண்டும்; அவன் செத்துப்போனாலும் புருஷன் என்பதாக ஒரு உயிர் உண்டு; ஆண் பெண் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் என்பதாக ஒரு குணம் உண்டு என்பதை மறந்து விடவேண்டும் என்கிற விதி உண்டு. இதற்கும் கடவுள், மதம், முன் பிறவிப் பலன் சம்பந்தப்பட்டிருக்கிறது' என்பதான நியதி இருக்கிறது. இது மிகவும் அநீதியும் அக்கிரமு மான விஷயமாகும். இந்தக் கொள்கைகளை ஆண்கள் மாற்றிக்கொள்ளலாம் என்றும் பெண்கள் அப்படி மாற்றிக்கொள்ள நினைப்பது சுத்த முட்டாள்தனமாகும் என்றும் கருதப்படுகிறது.

ஆண்களைப் போலவே பெண்களும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக்கொண்டால், பெண்கள் 3 ஆசைநாயகர்களை வைத்துக்கொள்ள முற்படவேண்டும். உடனே நிலைமை சரிப்பட்டுப்போகும்; உண்மை யான சமரசம் தோன்றிவிடும். பிறகு இருவருக்கும் கஷ்டமே இருக்காது. சிலர் இப்படிச் சொல்லுவது தப்பு என்றும், ஒழுக்கம் கெட்டுப்போகும் என்றும் ஆண்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் புத்தி சொல்லுங்கள் என்றும் சொல்ல வருவார்கள். ஆண்களுக்குப் புத்தி அனேக காலமாய்ச் சொல்லியாகிவிட்டது. கலியாணம் செய்துகொள்ளுவதே அடிமைப் பிரவேசம் என்றாய்விட்டது.

[கிரே நகரில், 26-1-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 8-2-1931]

திருமணத்துக்குச் சம்பந்தப்படாத, 'கற்பு' என்பது ஒன்று பெண்கள்மீது மாத்திரம் சுமத்தப்பட்டிருக்கிறது. கற்பு என்பதை சுகாதாரத்தையும், சரீரத்தையும், பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. உதாரணம் என்னவென்றால் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப் படுவதில்லை என்பதிலிருந்தே இதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கு மேலும் உதாரணம் என்னவென்றால், இந்து கடவுள்கள் என்பவற்றுக்கும்கூட—ஆண் கடவுள் களுக்குக் கற்பு வலியுறுத்தப்படுவதில்லை. ஆதலால், அந்த—அதாவது 'ஒரு பிறவிக்கு ஒரு நீதி' என்கின்ற கற்பு முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டும்.

இந்தத் தனிஉடைமை தேசத்தில் இது ஒழிக்கப்படுவது என்பது சுலபத்தில் ஏற்படக் கூடிய காரியம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக்கூடாது என்கின்ற தத்துவமே தனிஉடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது.

ஏன் என்றால், பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலைமை.

எப்படியெனில், ‘புருஷன் சம்பாதிக்கிறவன்; சம்பாதித்த பொருளுக்கு அவனே சொந்தக்காரன்; மனைவிக்குச் சோறுபோட்டு சேலை கொடுத்துக் காப்பாற்றுகிறவன்; மனைவி பெற்ற குழந்தைக்குத் தன் சொத்துக்களைக் கொடுக்கிறவன். குடும்ப பாரமும், குடும்பப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகவே, அவனால் காப்பாற்றப்படுகிற—அவன்மீது பொறுப்பு விழுந்த—மனைவியை அடக்கி ஆள அவனுக்கு உரிமை உண்டு’ என்பது இன்றைய சமுதாய முறைச் சட்டமாய் இருக்கின்றது.

சம்பாதித்தனை, குடும்பப் பொறுப்பு, குழந்தைகள் பெற்றால் அதைக் காப்பாற்றும் திறமை ஆகியவைகள் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டு, இத் திறமைகள் இல்லாத ஒரு புருஷனைக் கட்டிக்கொள்வதாய் இருந்தால் மாத்திரம், ஆண்களைப் பெண்கள் அடக்கி ஆளமுடியும்; முடியாவிட்டாலும் சம சுதந்திரமாகவாவது இருக்கமுடியும். இதில்லாமல் எவ்வளவு சுயமரியாதையும் சம சுதந்திரம் போதித்தாலும், பெண்களுக்குச் சம சுதந்திரமும்–கற்பும் என்பது ஒருநாளும் முடியக்கூடிய காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். அன்றியும் அப்படிப்பட்ட திறமை அற்றவர்களுக்குச் சம சுதந்திரம் அளிப்பதும் ஆபத்தான காரியம்தான்.

ஆதலால், பெண்கள் சுதந்திரம் இந்த மாதிரிக் கல்யாண காலங்களில் பேசி விடுவதாலோ, ‘சுத்த’ சுயமரியாதைமுறையில் திருமணம் செய்துவிடுவதாலோ ஏற்பட்டு விடாது.

தனிஉரிமை உலகில், பெண்கள் சுதந்திரம் வேண்டுமென்பவர்கள் பெண்களை நன்றாய்ப் படிக்கவைக்கவேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்கவேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்கவேண்டும். தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்று இல்லாமல், அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்டபிறகு—ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் ‘கன்னிகாதானம்,’ ‘கலியாணம்,’ ‘தாரா முகூர்த்தம்’ என்கின்ற வார்த்தைகளே மறைந்து—அகராதியில்கூட இல்லாமல்—ஒழியவேண்டும். அன்றுதான் பெண்கள் சுதந்திரம் அனுபவிக்க இலாயக்கு உள்ளவர்களாவார்கள்.

1, 2, 3 கூட எண்ணத் தெரியாத நிலையில் உள்ள பெண்களைக் கட்டிக்கொண்டு, அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது என்றால் எப்படி முடியும்' என்று யோசித்துப் பாருங்கள்.

[ஈரோட்டில், 28–2–1936-ல் சொற்பொழிவு—‘குடிஅரசு’ 1–3–1936]

தோழர்களே! தாய்மார்களே!

இன்றையதினம் ஒவ்வொரு குடும்பத்தையும் பாருங்கள்! பணம் சம்பாதிப்பது ஆண்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் பெண்கள் செய்து கொடுக்கிறார்கள். என்றாலும், அவருடைய இலட்சியம் என்ன? தான் தேடிவைக்கிற சொத்துக்கு வாரிசு வேண்டும்; அந்த வாரிசுக்கு இன்றையதினம் சில இடங்களிலே ஆணுக்குத்தான் வாரிசு என்று செய்துவிட்டார்கள்.

சொத்து உடைய தகப்பன் ஒருவன் இறந்துவிட்டால், அந்தச் சொத்து ஆணுக்குத் தான் சேரவேண்டும்; பெண்ணுக்கு இல்லை. மலையாள நாட்டைப் பொறுத்தவரையில் சொத்து பெண்களுக்குத்தான் சேரவேண்டும்; ஆணுக்கு இல்லை. அங்கே தாயார் தான் முக்கியம். அவர்களுக்குத் தகப்பனைப்பற்றிக் கவலையில்லை. அது அவர்களுடைய குற்றம்; அந்த நாட்டுப் பழமை (வளமை). அந்த நாட்டிலே இன்றையதினம் பெரிய ஜமீன்—இராஜா என்று சொல்லுகின்றவர்களை எடுத்துக்கொண்டு, ‘உங்களுடைய

தகப்பன் யார்' என்று கேட்டால், 'ஒரு பார்ப்பான்' என்று பெருமையாகச் சொல்லுவார்கள். காரணம் என்ன? அவர்களுக்குத் தாயார்தான் முக்கியமே தவிர, தகப்பனைப்பற்றிக் கவலையே இல்லை. ஏன்? அங்கு சொத்து தாயாருக்குத்தான் உரிமை. அந்தச் சொத்துக்கு ஒருமகன் அந்தத் தாய் வயிற்றில் பிறந்திருக்க வேண்டும். ஆனதனால் அந்தந்த நாட்டுப் பழக்க வழக்கங்களுக்குத் தக்கவாறு சொத்துக்கு உரிமை பேசுகிறபோது, அந்தச் சொத்துக்குரிய தகப்பனுக்குப் பிறந்த பிள்ளையாகவே இருக்கவேண்டும் என்கிற அவசியம் வந்து விட்டது. அதற்கு ஏற்றபடியே சட்டங்கள் இருக்கின்றன. ஆனதனாலேதான் சொத்துக்கு வருகிற குழந்தை தன்னுடைய மனைவிக்குப் பிறந்ததாக இருந்தாலும், அவனுக்கே பிறந்தவனாக இருக்கவேண்டும்—என்று கட்டுக்காவல் ஏற்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

பெண் சமுதாயத் துறையிலே வேறு வசதியில்லாமல், உரிமை இல்லாமல், அடிமையைப்போல நடத்தப்பட்டு விட்டபடியினாலே, ஏதோ சொத்துக்கு வாரிசான ஒரு பிள்ளை பெற்றுக்கொடுக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டுவிட்டாள்—இந்தத் திருமணமுறைமூலம். இதைத் தவிர மற்றபடி அவசியமே இல்லை.

[பெரம்பூரில், 11-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 17-2-1951]

2. கற்பொழுக்கம்

நமது முன்னோர்கள் வாழ்ந்ததைவிடச் சிறப்பாக வாழக் கற்றுக்கொள்வதே நாம் நமது முன்னோருக்குச் செய்யும் மரியாதை என ஒரு பெரியார் கூறியிருக்கிறார். சமூக முன்னேற்றத்தைப் பற்றிய கருத்துக்கள் பல திறப்பட்டனவாயிருக்கின்றன. முன்னோர்கள் முன்னேற்றத்தைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. மேனாட்டாரைப் போலவே கீழ்நாட்டாரும் முன்னேற்ற விஷயத்தில் அலட்சியமாகவே இருந்துவந்தனர். உண்பது, உடுப்பது போன்ற புறத்தேவைகளில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்திவந்தனர். சீர்திருத்த உணர்ச்சியும் முன்னேற்ற உணர்ச்சியும் மிகச் சமீப காலத்திலே தோன்றின.

இப்பொழுதும் மிக்க ஆர்வமுடைய சீர்திருத்தவாதிகளும்கூட, சில குறிப்பிட்ட துறைகளிலே சீர்திருத்தம் செய்ய விரும்புகின்றனர். சர்வ வியாபகமான சீர்திருத்தங்களை விரும்புவோர் மிகச்சிலரே.

உலகமுழுதும் பொதுவாக இருந்துவரும் சமூக இலட்சியம் என்னவெனில், தமது முன்னோர்களைப்போல் வாழ்க்கை நடத்துவதே.

ஆனால், சமூக ஸ்தாபனங்கள் எல்லாம் குறைபாடுடையனவாகவே இருக்கின்றன. சீர்திருத்தம் தேவையில்லாத ஸ்தாபனங்களே இவ்வுலகத்தில் இல்லையென்று ஒப்புக்கொள்வதே உயர்வான இலட்சியம். ஒழுக்கம் மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதை இப்பொழுது அனேகமாக எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். பழைமை விரும்பிகள், எப்பொழுதும் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகிறார்கள். கற்பு அல்லது ஆண் பெண் ஒழுக்க விஷயமாகத் தற்காலம் இருந்துவரும் ஏற்பாடுகளே சரியானவை என்றும், அவைகளை மாற்றினால் சமூகமே அழிந்துவிடும் என்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

எனவே, தற்காலம் அமலில் இருந்துவரும் ஆண்–பெண் ஒழுக்கம் சம்பந்தமான ஏற்பாடுகளைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

'கற்பு உணர்ச்சி' உலகம் முழுவதும் ஒரேசீராக இருக்கவில்லை. ஒரு தேசத்தில் நல்லொழுக்கமென மதிக்கப்படுவது வேறொரு தேசத்தில் கூடாவொழுக்கமாக எண்ணப் படுகிறது. பொதுவாக, பெண் புருஷனின் அடிமை என்றும், போகப் பொருள் என்றும்,

அவளைப் புருஷன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்றும் உலக மக்கள் ஒருகாலத்தில் நம்பியே வந்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவிலே பெண்கள் அடிமைகளிலும் கடையராக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பெண்களை புருஷர்கள் மிகக் கொடுமையாக நடத்தினார்கள்; மிருகத்தனமாக இம்சித்தார்கள். பெண்கள் சுந்தரிகளாக இருந்துவிட்டாலோ அவர்கள் பாடு அதோ கதிதான்.

ஆப்பிரிக்கப் பெண்கள் நிலைமையும் மிக்க பயங்கரமாகவே இருந்து வந்திருக்கின்றது. புருஷன் சொத்தாகவே பெண் இருந்துவந்திருக்கிறாள். தன்னிஷ்டப்படி அவளை உபயோகித்துக்கொள்ள புருஷனுக்குப் பூரண சுதந்திரம் இருந்துவந்திருக்கிறது.

இமாலயப் பிரதேசத்திலுள்ள ஒரு சாதியார் திபெத்தியர் வழக்கத்தைப் பின்பற்றி வருகிறார்கள். பண்டங்களை விற்பதுபோல் அவர்கள் பெண்களை விற்பனை செய்து வருகிறார்கள். ஒரு பெண்ணுக்கு ஏககாலத்துப் பல புருஷர்கள் கணவன்மாராக இருந்து வருகிறார்கள். தகப்பன் புத்திரிகளைத் தாராளமாக விற்கிறான். அதோடு மட்டுமல்லாமல், தங்கள் மனைவிகளை யாருக்கு வேண்டுமானாலும் வாடகைக்கு விடுகிறார்கள்.

நியூஜீலந்து வழக்கம் கொடியதாயிருப்பதுடன் விநோதமாகவும் இருக்கிறது. தந்தை தன் மகளையும், சகோதரன் தன் சகோதரியையும் வேறொருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கும்போது, ‘அவள் உனக்கு திருப்தியளிக்கவில்லையானால் அவளை நீ விற்றுவிடு; அல்லது கொன்றுவிடு; அல்லது தின்றுவிடு; நீயே அவளுக்கு எஜமான்; அவளை உன் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யலாம்’ என்று கூறுவார்களாம். காட்டாள சாதியார் பழக்க வழக்கங்கள் இவ்வாறாக, நாகரிக மக்கள் நிலைமை எவ்வாறு இருந்திருக்கிற தெனப் பார்ப்போம்.

ரோமாபுரியில் ஆதிகாலத்திலே, கணவனுடைய குடும்பத்தின் பொதுச் சொத்தாக—பொது அடிமையாகப் பெண் மதிக்கப்பட்டு வந்தாள். காட்டோ என்ற நல்லொழுக்க முடைய பெரியார் தன் மனைவி மரேஷியாவைத் தன் நண்பன் ஹார்ட்டன்சியக்கு இரவலாகக் கொடுத்து, அவன் இறந்தபின்பு அவளைத் திரும்பப் பெற்றுக்கொண்டாராம். ரோமர் கலியாண முறை ஒரு அடிமை ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. பெண் தன் ஆயுட்காலம் முழுதும் கனவனது அடிமையாகவே மதிக்கப்பட்டு வந்தாள்.

ஆங்கிலப் பெண்கள் நிலைமையும் ஆதியில் மிக மோசமாகவே இருந்துவந்தது. புருஷன் தன் மனைவியை மனங்கொண்டமட்டும் அடிக்கலாம். ஆனால், பெருவிரலை விடப் பருமனான தடியால் அடிக்கக்கூடாது. இந்தப் புராதன கொடிய வழக்கம் சில இடங்களில் இப்பொழுதும் வெகு அபூர்வமாக இருந்தேவருகிறது. பெண்களின் துயரத்தைக் குறைக்கும் சட்டங்கள் தோன்றியபோதெல்லாம் பழமைவிரும்பிகள் மிக வன்மையாக எதிர்த்தே வந்தனர். அத்தகைய எதிர்ப்பு நெடுங்காலம் மிக வன்மையாக இருந்து வந்ததாயினும் காலஞ் செல்லச் செல்ல மாற்றங்கள் ஏற்பட்டே வந்தன.

தகப்பன் மகளைத் தீண்டுவதும், சகோதரன் சகோதரியைத் தொடுவதும் பயங்கர அநாசாரமான பாபச் செயலாக இப்பொழுது மதிக்கப்பட்டுவருகிறது.

ஆனால், கி. மு. 66-ல் அரேபியாவிலே சகோதரர், சகோதரிகளையும்; புத்திரர் தாய்மாரையும் பெண்டாண்டுவந்ததாக ஸ்ட்ராபோ என்பார் கூறுகிறார். வமிச விருத்திக்காக முறை கேடான புணர்ச்சி உலகமுழுதும் அனுமதிக்கப்பட்டேவந்திருக்கிறது.

பிரம்மா தன் புத்திரியான சரஸ்வதியை மணஞ்செய்து கொண்டாராம். எகிப்திய தேவனான அம்மன் தன் தாயை மனைவியாக்கிக் கொண்டானாம். ஒடின் என்ற தேவன்

தன் புத்திரி பிரிக்காவை மனைவியாக்கிக் கொண்டானாம். ஜனுபிட்டர் தன் சகோதரி ஜூனோவை விவாகம் செய்துகொண்டான். இந்தியாவிலும் சில சாதியாருக்கு சகோதரர் சகோதரிகளை மணந்துகொள்ளும் வழக்கம் இப்பொழுது இருந்தேவருகிறது.

ஒரு காலத்திலே ஆணும் பெண்ணும் தன் இஷ்டப்படி கண்டபடி புணர்ந்தே வந்தார்கள். 'ஒரு புருஷன் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அவளைச் சேர எல்லாப் புருஷர்களுக்கு உரிமையுண்டு' என ஹெராடாட்டஸ் கூறியிருக்கிறார். லீசியார், எட்ரூஸ் கானர், சிரீட்டர், அத்தீனியர், லெஸ்பெயின்கள், எகிப்தியர் முதலியவருக்குள் பண்டு ஆண்களும் பெண்களும் தத்தம் இஷ்டப்படி வரையரையின்றிப் புணரும்வழக்கம் இருந்துவந்தது என பாச்சோபின் என்பார் தக்க ஆதாரங்களுடன் விளக்கிக்காட்டியிருக்கிறார். பெண்கள் பருவமடைந்த பிறகு ஏதேனும் ஒரு ஆலயத்துக்குச் சென்று யாரேனும் ஒரு இளைஞனைத் தேடிப் பிடித்துக் கூடி கன்னி கழித்துக் கொள்ள வேண்டியது, பாபிலோன் நகரத்திலே ஒரு புனிதமான மதச்சடங்காக மதிக்கப்பட்டு வந்தது. மெம்பிஸ், அர்மீனியா, டயர்சி டொன் முதலிய பிரதேசங்களிலும் அந்த அநாச்சாரம் இருந்து வந்திருக்கிறது. லிபியன் கன்னிப் பெண்கள் தங்களுக்கு இஷ்டமானவரைக் கூடி சீதனத்துக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதித்தார்கள். விவாகத்துக்கு முன் அவர்களுக்கு புணர்ச்சி சுதந்திரம் இருந்துவந்தது. எனவே பல பேரைக் கூடி அதிகப் பணம் சம்பாதித்தவர்களையே எல்லோரும் மணக்க விரும்பினர். தாரசிய சாதியாருக்குள்ளும் இவ்வழக்கு இருந்து வந்ததாக ஹெராடாட்டஸ் கூறுகிறார். எகிப்திய இராஜ குமாரி ஒருத்தி விபச்சாரம் செய்து பணம் சம்பாதித்துத் தனக்கென ஒரு கோபுரம் (Pyramid) கட்டிக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

மார்கு ஸாஸ், பிலிப்பைன், பொலினிஷியத் தீவுகளிலுள்ள சில பிரதேசங்களிலும் ஆப்பிரிக்காவில் சில சாதியாருக்குள்ளும் பெண்களுக்கு இப்பொழுதும் புணர்ச்சி சுதந்திரம் இருந்தே வருகிறது. கலியாண தினத்தன்று பெண்ணின் பந்துக்களான புருஷர்கள் எல்லாம் அப்பெண்ணைக் கூடும் வழக்கம் பாலியரிக் தீவுகளில் மிகச் சமீபகாலம் வரை இருந்துவந்தது. சில சாதியார், எல்லாப் புருஷர்களுக்கும் ஒரு பெண்ணைச் சேர உரிமையுண்டென்பதற்கு அறிகுறியாக, எல்லாருக்கும் பொதுவான சாதித் தலைவர்களோ குல குருவோ அப்பெண்ணைக் கூட அனுமதிக்கிறார்கள். மலையாளத்திலே ஒரு சாதியார் தம் மனைவிமாருக்கு கன்னி கழிக்க மத குருமாரை ஏற்படுத்துகிறார்கள். இந்தியாவின் அனேக பிரதேசங்களிலும், பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள சில தீவுகளிலும் இவ்வழக்கம் இப்பொழுதும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. செனிகாப்பியாவில் சாதித் தலைவன் அந்தப் புண்ணிய கருமத்தை நடத்தி வருகிறான். சில பிரதேசங்களிலே கன்னிகழிக்க விக்கிரகங்களை உபயோகப்படுத்துகிறார்கள். இவ்வழக்கங்களைப் பின்பற்றியே அய்ரோப்பாவிலும் மத்தியகாலம் வரை, முதலில் புணரும் உரிமை குறிப்பிட்ட சிலருக்கு இருந்து வந்தது.

ஆண்–பெண் ஒழுக்க ஏற்பாடுகளை நாம் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், அவை யாவும் ஏதேனும் ஒரு முறையில் ஒரு மதக் கொள்கையைத் தழுவி நிற்பதைக் காணலாம். எனவே, ஆண்–பெண் ஒழுக்கக் கொள்கைகளையும் ஆச்சாரங்களையும் நாம் பரிசீலனை செய்யும்போது அந்த விஷயம் மிகவும் சிக்கலானது என்பதையும் விசாலமானது என்பதையும் நாம் முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய ஒழுக்க முறையே மேலானதென்று கண்ணை மூடிக்கொண்டு முடிவு கட்டிவிடலாகாது. மற்ற கால ஆசாரங்களை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால்தான் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய முறை புலனாகும்.

தற்காலக் கிறிஸ்தவக் கற்பொழுக்கத் திட்டங்களுக்குப் புதிய ஏற்பாட்டைத் தழுவிய பழைய ஏற்பாட்டு ஒழுக்க முறைகளும் அவைகளின் பாஷ்யங்களுமே ஆதாரமாகும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதைப் பழைய ஏற்பாடு ஆதரிக்கிறது. 'புருஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல. நான் அவனுக்கு ஒரு வாழ்க்கைத் துணையை உண்டு பண்ணுவேன்' என்று சொல்லி, ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்து, கடவுள் ஜோடி சேர்த்ததாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. மற்றும் ஆணையும் பெண்ணையும் கடவுள் ஆசீர்வதித்து 'நீங்கள் பெற்றுப் பெருகி உலகத்தை நிரப்புங்கள்' என்று கட்டளை யிட்டானாம். கிறிஸ்தவ ஒழுக்கங்களை வகுத்த ஆதிக் கிறிஸ்தவ ஞானிகள் பிரம்மச் சரியத்தைப் பாராட்டிப் பேசியிருந்தாலும், கிறிஸ்து மதத்துக்கு ஆதாரமான ஹிப்ரு மதம் பிரம்மச்சரியத்தை ஆதரிக்கவில்லை. ஒரு புருஷன் பல பெண்களை மனைவியாகக் கொள் வதைப் பழைய ஏற்பாடு ஆதரிக்கிறது. ஆதாமின் ஏழாம் தலைமுறையான லாமெத்து இரண்டு பெண்களை மணந்திருக்கிறான். தலைமைப் பூசாரி ஒரே பெண்ணைத்தான் மணக்கவேண்டுமென்று பழைய ஏற்பாடு வற்புறுத்தியிருக்கிறது. அரசன் பல பெண்களை மணத்தல் கூடாதென்றும் கட்டளையிட்டிருக்கிறது. எனினும், பல அரசர்கள் அதை மதிக்க வில்லை. தாவீது அரசன் பல பெண்களை மணந்தான். சாலமோன் அரசனுக்கு 700 மனைவிமாரும் 300 வைப்பாட்டிகளும் இருந்தார்கள். ஆபிரகாம் தன் சிற்றப்பன் மகளைக் கலியாணம் செய்துகொண்டான். ஒருவன் இறந்தால் அவனது விதவையை அவன் தம்பி கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று 'லெவியட் சட்டம்' வற்புறுத்து கிறது. ஆபிரகாம் தன் மனைவியின் வேலைக்காரியைக் கூடிப் பிள்ளை பெற்றான். ஜேக்கப் இரண்டு சகோதரிகளை மணந்துகொண்டதுடன், அவர்களுடைய வேலைக்காரி களையும் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டான்.

ஹிப்ரு சட்டப்படி, கணவனுக்கு அடிமையாகவே மனைவி இருந்தாள். மனைவி யைக் கணவன் இம்சித்தால், சட்டப்படி அவளுக்குப் பரிகாரமில்லை. கணவனுக்கு மட்டும் விவாக விடுதலை உரிமையளிக்கப்பட்டிருந்தது. புருஷனுக்குப் பிடிக்காத பெண்ணை அவன் வீட்டைவிட்டு விரட்டலாம். அவள் அப்பால் விருப்பமுள்ளவனைக் கூடி வாழலாம். கணவன் மனைவியை நீக்கும்போது தன் கைப்பட ஒரு அறிக்கை எழுதி வெளியிட வேண்டும்.

தந்தைக்குத் தன் குழந்தைகள்மீது பூரண அதிகாரம் இருந்துவந்தது. குழந்தை களைக் கொல்லவும் கூட அவனுக்கு உரிமை இருந்தது; புத்திரிகள்மீதும் பூரண சுதந்திரம் இருந்து வந்தது; அவன் புத்திரிகளை விற்பனை செய்யலாம்; விபச்சாரம் செய்யக்கூடா தென்று பத்துக் கற்பனைகளில் ஒரு விதி இருக்கிறது. மனைவி கணவனின் சொத்தாகை யினால், அவளைப் பிறர் உபயோகப்படுத்தக்கூடாதென்பதே அத் தடையின் கருத்து. 'ஒரு மனிதன் தன் அயலான் மனைவியோடாவது பிறன் மனைவியோடாவது விபச்சாரம் செய்தால், விபச்சாரம் செய்த ஆணுக்கும் பெண்ணுக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும்' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு கன்னிப்பெண் வேறொரு பெண்ணின் கணவனோடு சேர்ந்தால், அவளுக்குத் தண்டனை வழங்குவதைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை. விபச்சாரம் ஒரு குற்றமென்று பழைய ஏற்பாடு விதித்திருந் தாலும், அக் காலத்தில் விபச்சாரம் தாராளமாக நடைபெற்றே வந்திருக்கிறது.

லாட் என்பான் வீட்டுக்கு இரண்டு விருந்தாளிகள் வந்தனர். அவர்களை வரவேற்று அவன் உபசாரம் செய்தான். ஆனால், அவ்விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டுமென்று ஊரார் கேட்டுக்கொண்டார்கள். எனினும் லாட் இணங்கவில்லை. அதிதிகளை விரட்டுவது மகா பாபமென எண்ணினான். எனவே, அதிதிகளை ஊரார் தொந்தரவு செய்யாதிருந் தால் தன் இரண்டு புத்திரிகளையும் ஊராருக்கு வழங்கி விடுவதாக லாட் கூறினான். தன் புத்திரிகளின் கற்பைவிட அதிதி சத்காரமே அவனுக்குப் பெரிதாகத் தோன்றிற்று. இதனால் அக்காலத்துப் பெண்களின் நிலைமை எவ்வளவு இழிவாக இருந்ததென்று விளங்க வில்லையா?

கிறிஸ்துவின் உபதேசங்களைக் கேட்டால் நாம் கனவுலகத்தில் இருப்பதுபோலவே தோன்றும். 'ஒரு பெண்ணைக் காமக்கண்ணால் நோக்குபவன் மனத்தினால் விபச்சாரம் செய்கிறான்' என்று கிறிஸ்து கூறுகிறார். ஆனால், இது அனுபவ சாத்தியமான உபதேச மல்ல. மனத்தினால் விபச்சாரம் செய்கிறவர்களுக்கெல்லாம் சர்க்கார் தண்டனையளித்தால் உலக விடுதலையைப்பற்றிய கிறிஸ்துவின் உபதேசம் மிகவும் கண்டிப்பானதுதான். 'விபச்சார தோஷத்துக்கு ஆளாகாத பெண்களை விவாக விடுதலை செய்பவன் அவன் விபச்சாரம் செய்யும்படி தூண்டுகிறான். விவாக விடுதலை பெற்ற பெண்களை விவாகம் செய்கிறவனும் விபச்சாரம் செய்கிறவனாகிறான்' எனக் கிறிஸ்து கூறுகிறார். இது உயர் வான இலட்சியந்தான். ஆனால், அக்கால மக்களுக்கு அது பொருத்தமானதல்ல. இன்றும் ஆண்களும் பெண்களும் அதைப் பின்பற்ற முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். மணவினைகள் சுவர்க்கத்தில் நடைபெற்றால் அவைகளை ரத்து செய்ய நமது நீதி ஸ்தலங் களுக்கு ஒருகால் அதிகாரமில்லாது இருக்கலாம். ஆனால், மண்ணுலகத்தில் நடைபெறும் கல்யாணங்களை ரத்து செய்ய நமது நீதி ஸ்தலங்களுக்கு அதிகாரமிருந்து தான் ஆக வேண்டும்.

மேலும், கிறிஸ்துவின் போதனை பழைய ஏற்பாட்டின் முதல் ஆகமத்துக்கு முரணானதாகவே இருக்கிறது. இல்லறத்தை கிறிஸ்து பாராட்டவில்லை. எல்லாரும் இல்லற வாழ்க்கை நடத்தவேண்டுமென்று அவர் கூறவில்லை. பிரமச்சரியத்தையே அவர் ஆதரிக் கிறார். கிறிஸ்து உபதேசப்படி எல்லாரும் பிரமச்சாரிகளாயிருந்தால் வெகு சீக்கிரத்தில் உலகம் காலியாகிவிடுமென்று நாம் கூறவும் வேண்டுமா?

அது ஒரு பயங்காளித்தனமான போதனை எனினும், அது உலகம் முழுதும் பரவி யிருக்கிறது. அது பெண்ணுலகத்தை அவமதிக்கிறது; காதலைக் கேவலப்படுத்துகிறது. மனோகற்பிதமான சுவர்க்கத்தை யடையும் பொருட்டு ஆண்கள் எல்லாம் ஆண்மையை இழந்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. பெண்கள் எல்லாம் தேவாலயத்தில் மவுன மாக இருக்கவேண்டுமென்றும், புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் கணவன்மாரின் கட்டளைகளை மீறக் கூடாதென்றும் பால் கூறுகிறார். ஏனெனில், கிறிஸ்து ஆத்மாவின் இரட்சகனாயிருப்பதுபோல, கணவன் மனைவியின் உடலின் இரட்சகனாயிருக்கிறானாம். ஆகவே, ஆதிக் கிறிஸ்தவர்கள் பெண்ணுலகத்தை அவமதித்தே வந்தார்கள்; பிரமச்சரியத்தையே மேலானதாக மதித்தார்கள். இல்லறம் இரண்டாம் பட்சமாகவே மதிக்கப்பட்டது.

மற்றும், பெண் அசுத்தமானவள் என்றும், ஆண்களைத் தப்பு வழியில் செலுத்து கிறவள் என்றும், மக்கள் வீழ்ச்சிக்குக் காரணமானவள் என்றும் பழைய ஏற்பாடு கூறு கிறது. 'பெண்ணே! நீ நரகத்தின் வாயாய் இருக்கிறாய்' என டெர்ட்டுலியன் கூறியிருக் கிறார். 'கலியாணம் ஒரு சாபத்தீடு' என வேறொரு ஞானி கூறுகிறார். பெண் விரை வாக வளரும் ஒரு களை யென்றும் அசுத்தமானவள் என்றும் 13-வது நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு கிறிஸ்தவ ஞானி கூறியிருக்கிறார்.

பெண்ணுலகத்தை கிறிஸ்து மதம் மட்டும் இழிவாகக் கூறவில்லை. 'பெண்கள் அவமானத்துக்கு இருப்பிடமானவர்கள், அவர்களைப் பார்க்கவும் கூடாது' என இந்துக் களின் மனுதர்மம் கூறுகிறது.

தத்துவ முறையில் பார்த்தால், தற்கால கிறிஸ்துவ ஒழுக்கத் திட்டங்கள் மிகவும் உயர்வானவைதான். ஆனால், அவை அனுபவ சாத்தியமானதல்ல. சுவர்க்க போகத்துக்காக ஆண் தன்மையை இழந்தவனே கிறிஸ்து மதக் கொள்கைப்படி மேலான வனாகக் கருதப்படுகிறான். இல்லறம் இரண்டாம் பட்சமாகவே கருதப்படுகிறது. விபச்சார தோஷம் ஏற்பட்டால்தான் விவாக விடுதலையுண்டு. விபச்சாரத்துக்கு கிறிஸ்து மதத்

திட்டத்தில் இடமே இல்லை. சுமார் 19 நூற்றாண்டு காலம் இந்த ஒழுக்கத் திட்டம் அமலில் இருந்தே வருகிறது. ஆனால், அந்தத் திட்டத்தினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதையே நாம் இப்பொழுது முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சரியாக வேலை செய்யும் திட்டங்கள் எல்லாம் உத்தமமானவை என்று கூறப்படுவதுண்டு. கிறிஸ்துவ ஒழுக்கத் திட்டப்படி நடக்க கிறிஸ்தவர்கள் ஒரு சிறிதாவது முயன்றிருந்தால், அந்தத் திட்டத்துக்கு ஒருவாறு மதிப்புக் கொடுக்கவேண்டியதுதான். ஆனால், அந்த இலட்சியத்தையடைய நாம் முயற்சியே செய்யாது இருந்தால், அந்த இலட்சியத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்றுதான் முடிவு கட்டவேண்டும்.

அந்த இலட்சியத்தை உயர்த்த அறிவாளிகள் எல்லாம் எதிர்க்கிறார்கள். இந்திரிய நிக்கிரகம் அவ்வளவு உயர்வான சீலமல்லவெனக் கூறுகிறார்கள். ஏக பத்தினி விரதம் விபசாரத்துக்கும் மற்றும் எண்ணற்ற முறைகேடான புணர்ச்சிக்கும் இடமளிக்கிறது. கிரியாம்சையில் அதனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறதென இனி ஆராய்ந்து பார்ப்போம்.

['பகுத்தறிவு'—கட்டுரை—1936 மலர் 1, இதழ் 3]

3. கற்பு

கற்பு என்கின்ற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானால்—கல் என்பதிலிருந்து வந்ததாகவும் அதாவது, படி—படிப்பு என்பதுபோல், கல்—கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும், 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்கின்ற வாக்கியப்படி பார்த்தால் 'கற்பு' என்பது சொல் தவறாமை—அதாவது, நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது—என்கிறதான கருத்துக்கள் கொண்டதாக இருக்கின்றது.

அதைப் பகாப் பதமாக வைத்துப் பார்த்தால், மகளிர் நிறை என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்பது பெண்களையே குறிக்கும் பதமாக எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. நிறை என்கின்ற சொல்லுக்குப் பொருளைப் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும்—அழிவில்லாதது, உறுதியுடையது என்கின்ற பொருள்களே காணக் கிடக்கின்றன.

அழிவில்லாதது என்கின்ற வார்த்தைக்குக் கிரமமான கருத்துப் பார்க்கும்போது, இந்த இடத்தில் சுத்தம்—அதாவது கெடாதது, மாசற்றது என்பதாகத்தான் கொள்ளலாம். இந்த சுத்தம் என்கின்ற வார்த்தையும், கெடாதது என்கின்ற கருத்தில்தான் ஆங்கிலத்திலும் காணப்படுகிறது. அதாவது, 'சேஸ்டிடி' (Chastity) என்கின்ற ஆங்கில வார்த்தைப்படி பார்த்தால் 'வர்ஜினிட்டி' (Virginity) என்பதே பொருளாகும். அதை, அந்தப் பொருளின்படி பார்த்தால், இது ஆணுக்கென்றோ, பெண்ணுக்கென்றோ சொல்லப்படாமல், பொதுவாக மனித சமூகத்திற்கே—எவ்வித ஆண்-பெண் புணர்ச்சி சம்பந்தமே சிறிதுமில்லாத பரிசுத்தத் தன்மைக்கே உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதைக் காணலாம். ஆகவே, கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதல்ல என்பதும், அதுவும் ஆணோ, பெண்ணோ ஒரு தடவை கலந்தபிறகு, எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு போய்விடுகிறது என்கின்ற கருத்து கொள்ளக்கூடியதாயுமிருக்கின்றது.

ஆனால், ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம், 'கற்பு' என்கின்ற பதத்திற்குப் பதிவிரதை என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயம். அதாவது,—பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய்

இருப்பதையே விரதமாகக் கொண்டவள், பதியைத்தவிர வேறு யாரையும் கருதாதவள்—எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், 'பதி' என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்களிருப்பதால் அடிமைத்தன்மையை இவ் வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. ஆனால், தலைவி என்ற பதத்திற்கும் நாயகி என்கின்ற பதத்திற்கும் மனைவி என்கின்ற பொருள் குறிக்கப்பட்டிருப்பதாலும், அது அன்பு கொண்ட நிலையில் மாத்திரம் ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றதேயொழிய, வாழ்க்கையில் கட்டுப்பட்ட பெண்களுக்கு 'தலைவி' என்கின்ற வார்த்தை, அதன் உண்மைக் கருத்துடன் வழங்கப்படுவதில்லை. நாயகன், நாயகி என்கின்ற சமத்துவமுள்ள பதங்களும் கதைகளிலும், புராணங்களிலும் ஆண்-பெண் இச்சைகளை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றன. ஆகவே, காமத்தையும் அன்பையும் குறிக்குங் காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகன்-நாயகி தலைவர்-தலைவி என்கின்ற பதங்களை உபயோகித்து விட்டு, கற்பு என்கின்ற நிலைக்கு வரும்போது அதைப் பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப் படுத்தி, 'பதி' ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ளவேண்டுமென்ற கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் நமது திருவள்ளுவரின் நிலைமையும் எனக்குச் சற்று மயக்கத்தையே தருகின்றது. அதாவது, குறளில் வாழ்க்கைத் துணை நலத்தைப்பற்றிச் சொல்லவந்த 6ஆம் அத்தியாயத்திலும், பெண்வழிச் சேறல் என்பதைப்பற்றிச் சொல்லவந்த 91ஆம் அத்தியாயத்திலும், மற்றுஞ் சில தனியிடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையையும், தாழ்ந்த தன்மையையும் புகுத்தப்பட்டிருப்பதாகவே எண்ணக் கிடக்கின்றது. 'தெய்வத்தைத் தொழாமல் தன் கொழுநனாகிய தன் தலைவனைத் தொழுகின்றவள்,—மழையைப் பெய்யென்றால் பெய்யும்' என்றும், தன்னைக் கொண்டவன் என்றும்–இம் மாதிரியான பல அடிமைக் குகந்த கருத்துக்கள் கொண்ட வாசகங்கள் காணப் படுகின்றன. இவ்விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவோர் மேற்கண்ட இரண்டு அத்தியாயங்களையும்—20 குறட்பாக்களையும்—உரைகளைக் கவனியாமல் மூலத்தை மாத்திரம் கவனிக்கும்படி வேண்டுகிறேன். அப்படிப் பார்த்த பிறகு, இந்த இரண்டு அதிகாரங்களும்—அதாவது, 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரமும் 'பெண்வழிச்சேறல்' அதிகாரமும் குற்றமற்றவையென்பதாக யார் வந்து எவ்வளவு தூரம் வாதிப்பதானாலும்—கடைசியாக திருவள்ளுவர் ஒரு ஆணாக இருந்திராமல் பெண்ணாக இருந்து இக் குறளை எழுதியிருப்பாரானால் இம் மாதிரிக் கருத்துக்களைக் காட்டியிருப்பாரா என்பதையாவது கவனிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அதுபோல, பெண்களைப் பற்றிய தர்ம சாஸ்திரங்கள் என்பனவும் பெண்களைப் பற்றிய நூல்கள் என்பனவும் பெண்களால் எழுதப் பட்டிருக்குமானாலும்—அல்லது கற்பு என்கின்ற வார்த்தைக்குப் பெண்களால் வியாக்கியானம் எழுதப்பட்டிருந்தாலும்—கற்பு என்பதற்கு 'பதிவிரதம்' என்கின்ற கருத்தை எழுதியிருப்பார்களா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கற்பு என்பதற்குப் பதிவிரதம் என்று எழுதிவிட்டதன் பலனாலும், பெண்களைவிட ஆண்கள் செல்வம், வருவாய், உடல்வலி கொண்டவர்களாக ஆக்கப்பட்டுவிட்டதனாலும், பெண்கள் அடிமையாவதற்கும்; புருஷர்கள் மூர்க்கர்களாகிக் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை.

தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம்—ஆண்களின் ஆதிக்கம் தவிர வேறில்லை.

இந்த விஷயத்தில், உலகத்தில் ரஷ்யா தவிர வேறு நாடோ, வேறு மதமோ, வேறு சமூகமோ யோக்கியமாய் நடந்துகொண்டிருக்கிறது எனச் சொல்லமுடியாது. உதாரணமாக

அய்ரோப்பிய தேசத்தில் பெண்களுக்குப் பலவித சுதந்திரங்கள் இருப்பதுபோல் காணப் பட்டாலும், புருஷர்கள் பெண்சாதி என்பதற்காக ஏற்பட்ட பதங்களிலேயே உயர்வு, தாழ்வு கருத்துக்கள் நுழைக்கப்பட்டிருப்பதுடன், சட்டங்களும் புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டியதாகவே ஏற்பட்டிருக்கின்றன.

மற்றும், சில சமூகங்களில் 'பர்தா' என்றும் 'கோஷா' என்றும், 'திரை' என்றும் அதாவது பெண்கள் அறைக்குள்ளிருக்கவேண்டியவர்களென்றும், முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போகவேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளும்; புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏககாலத்தில் ஒரு புருஷனுக்குமேல் கட்டிக்கொண்டு வாழக்கூடாது என்ற கொள்கையும்; நம் நாட்டில் ஒரு தடவை புருஷன்-பெண்சாதி என்கின்ற சொந்தம் ஏற்பட்டுவிட்டால் பிறகு அந்தப் பெண்ணுக்குச் சாகும் வரைக்கும் வேறு எந்தவிதச் சுதந்திரமும் இல்லையென்றும், புருஷன் பல பெண்களைக் கட்டிக் கொண்டு ஒரு பெண்ணின் முன்பாகவே பல பெண்களுடனும் கூடி வாழலாம் என்றும்; புருஷன் தன்னுடைய மனைவியைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு, அவளுடன் ஒன்றித்து வாழாமலிருந்தாலுங்கூட, புருஷனை சாப்பாட்டிற்கு மாத்திரம் கேட்கலாமே யொழிய, இன்பத்திற்கோ இச்சையைத் தீர்ப்பதற்கோ அவனைக் கட்டுப்படுத்த மனைவிக்கு உரிமையில்லையென்றும் கட்டுப்பாடுகள் இருந்துவருகின்றன.

இந்நிலை சட்டத்தாலும், மதத்தாலும் மாத்திரம் ஏற்பட்டதென்று சொல்வ தற்கில்லாமல், பெண் சமூகம் ஒப்புக்கொண்டு, இந் நிலைக்கு உதவி புரிந்து வருவதனாலும் இது உரம் பெற்று வருகிறதென்றே சொல்லவேண்டும். அனேக வருடப் பழக்க வழக்கங் களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக்கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும் ஒடுங்கவும் விலகவும் முந்துகின்றார்களோ, அதுபோலவே பெண் மக்களும் தாங்கள் ஆண் மக்களின் சொத்துக்களென்றும், ஆண் களுக்குக் கட்டுப்பட்டவர்களென்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக்கூடாதவர் களென்றும் நினைத்துக் கொண்டு, சுதந்திரத்தில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டுமானால்—'ஒரு பிறப்புக்கொரு நீதி' வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு முறையொழிந்து, 'இரு பிறப்பிற்கும் சமமான—சுயேச்சைக் கற்பு முறை' ஏற்படவேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கலியாணங்கள் ஒழியவேண்டும்.

கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டு மென்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாயவேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை, காதலை மறைத்துக்கொண்டு— காதலும், அன்புமில்லாதவனுடன் இருக்கவேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழியவேண்டும்.

எனவே, இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக் கற்பை—இயற்கைக் கற்பை—சுதந்திரக் கற்பைக் காணலாமேயொழிய நிர்ப் பந்தங்களாலும், ஒரு பிறப்புக் கொரு நீதியாலும், வலிமை கொண்டவன் வலிமையற்ற வனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும் ஒருகாலும் காணமுடியாது என்பதுடன், அடிமைக் கற்பையும் நிர்ப்பந்தக் கற்பையுந்தான் காணலாம். அன்றியும், இம் மாதிரியான கொடு மையைவிட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்று இருப்பதாக என்னால் சொல்ல முடியாது.

['பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூலிலிருந்து—அத்தியாயம்-1. பதிப்பு—1971]

4. வள்ளுவரும் கற்பும்

கற்பு என்ற கட்டுரைக்கு மறுப்பாகத் திருக்குறளை மேற்கோளாகக் காட்டி, நமது தோழர் ஒருவர் ஒரு நீண்ட மறுப்பு எழுதியுள்ளார்.

அதில் நாம், 'வள்ளுவர் ஒரு பெண்ணாக இருந்து குறள் எழுதியிருந்தால் இக் கருத்துக்களைக் கூறியிருக்கமாட்டார்' என்று குறிப்பிட்டிருந்ததற்கு, நமது தோழர் அதை ஒருவாறு ஒப்புக் கொண்டு—'தன்னலங் கொண்ட ஒரு கூட்டத்தார் ஏற்றுக் கொள்ளவில்லையானால், நீதியானது அநீதியாகிவிடுமோ?'—என்று பதில் கூறியிருக்கிறார்.

இங்குப் பெண்களைத் தன்னலங் கொண்ட கூட்டத்தார் என்று குறிப்பிட்டது பெண்களுக்கு நீதி வழங்கியதாகுமா என்பதை யோசிப்பதோடு, பெண்கள் தர்மம் எழுதுவதில் ஆண்கள் இம்முறை கொண்டு பிரவேசிப்பது தன்னலங் கொண்டதாகாதா என்பதையும் சிந்திக்க வேண்டுகிறேன்.

(இந்த இடத்தில் 'கருத்து' இன்னது என்பதை முடிவு காட்டாவிட்டாலும்) 'தமிழ் நாட்டில் வாழ்ந்த, வாழுகின்ற பெண்ணரசிகளும் அக் கருத்துக்களை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்' என்று எழுதியிருக்கிறார். எந்தப் பெண்ணரசியாகிலும் தம்மை, ஆண் பிறவிக்கு அடிமையென்றாவது, தாம் அப் பிறவிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்றாவது, ஆண் தன்மையைவிட பெண் தன்மை ஒரு கடுகளவாவது தாழ்ந்தது என்றாவது எண்ணிக் கொண்டிருப்பார்களானால், அவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைப் 'பெண்ணரசி' என்று சொல்ல நாம் ஒருகாலும் ஒப்போம்.

'பல தலைமுறைப் பழக்கத்தால் பெண்கள் அக் கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றனர்' என்று நாம் எழுதியிருப்பதும், அதைத் 'தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் தாழ்ந்த நிலையை ஏற்றுக்கொள்வதுபோலாகும்' என்பதற்கு ஒப்பிட்டு நாம் எழுதியிருப்பதும் 'தாய்மார்களைப் பழித்துக் கூறியதாகும்' என்று நமது தோழர் கூறியிருக்கிறார்.

அதற்குக் காரணம் காட்டுவதில், 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் கிடைக்கவொட்டாமல் செய்துவிட்டதால் அன்னார்கள் அறியாமையுடையவராகி விட்டார்கள். பெண்களுக்கு அது பொருந்தாது' என்றும் நமது தோழர் சொல்லுகிறார்.

இதை அவர் ஆராய்ச்சியுடன் கூறியிருப்பதாக நமக்கு விளங்கவில்லை. ஏனெனில், எந்தக் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற கூட்டம் ஏற்பட்டதோ, எந்தக் காலத்தில் எந்தக் கூட்டத்தார்கள் தாழ்த்தப்பட்டோருக்கு அறிவு வளர்ச்சிக்குரிய சாதனங்கள் இல்லாமல் செய்தனரோ, அக் காலத்திலேயே அந்தக் கூட்டத்தாராலேயே பெண் மக்களுக்கும் அறிவு வளர்ச்சிக்கேற்ற சாதனங்கள் இல்லாமல் செய்யப்பட்டுத் தாழ்த்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதை ஏன் நமது தோழர் உணர முடியவில்லை என்பதும் நமக்கு அறிய முடியவில்லை.

தவிர, பெண்களின் அறிவுத் திறத்திற்கு உதாரணமாக, இவர் ஒரு அவ்வைப் பிராட்டியை எடுத்துக் காட்டியிருக்கின்றார். அதே மூச்சில் திருவள்ளுவரையும் எடுத்துக் காட்டியிருப்பாரானால், தாழ்த்தப்பட்டிருப்பவர்களுக்குள்ளும் ஏதோ ஒருவருக்கு அறிவு வளர்ச்சி இருந்துவந்தது என்பதை ஒத்துக்கொண்டிருப்பார். எனவே, நாம் ஒன்றிரண்டு பெண்ணரசிகளைப் பற்றிப் பேச வரவில்லை என்பதையும், தற்காலத்தில் நிகழும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் அரைம்வீசம் பெண்களைப் பற்றிப் பேசுகின்றோம் என்பதையும் உணர வேண்டுகின்றோம்.

இப்படிச் சொல்லுவதால், நாம் தாய்மார்களைப் பழித்துக் கூறியதானால், நமது தோழர் சொல்வதிலிருந்து அவர் 'தாழ்ந்த சாதி' என்பவர்களைப் பழித்துக் கூறியதாக ஏற்படவில்லையா என்று வினவுகின்றோம்.

உண்மையைப் பேசும்போது அதனால் யாருக்கும் பழிப்பு ஏற்படுமானாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது, அப் பழிப்புக்குக் காரணமாயுள்ளதை ஒழிக்க முயல வேண்டியதே வீரர்களின் கடமையாகும்.

தவிர, அவ்வைப் பிராட்டியாரும் திருவள்ளுவரையே அரண் செய்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவ்வையாரின், 'தையல் சொல் கேளேல்' என்கின்ற முதுமொழியை எடுத்துக் காட்டி, அதற்கு அரணாக வள்ளுவரின், 'பெண் வழிச்சேறல்' என்கின்ற வாக்கைச் சுட்டிக் காட்டுகின்றார். 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்ற பிராட்டியாரின் முதுமொழியையும் கூடவே குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால், நமது தோழர் தனது கடைசி ஆயுதத்தை எறிந்திருக்கிறார் என்றே கூற வேண்டியுள்ளது. பெண்களும் பகுத்தறிவுள்ள—சிந்தனா சக்தியுள்ள மனித ஜீவன்தான் என்பதை ஒப்புக்கொள்ளும் எவரும் இம்மூன்றையும் ஒருகாலும் நடுநிலைமையுள்ளவர் வாக்கென்றோ, உண்மையை ஆராய்ந்த அறிவுடையோர் வாக்கென்றோ ஒப்புக்கொள்ள முடியாதென்பதே நமது துணிபு. அங்ஙனமில்லையாயின், அவ்வக்கால நிலைக்கேற்றதென்றாவது சொல்லியாக வேண்டும். இங்கு சற்று வாசகர்களுக்குச் சங்கடமுண்டாகும் என்பது நமக்குத் தெரியும்; ஆகிலும் குற்றமில்லை.

முதலாவது, அவ்வையும், வள்ளுவரும் சகோதரர்கள் என்பது ஒரு கதை. ஆதி என்கின்ற புலைச்சிக்கும் பகவன் என்கின்ற பார்ப்பானுக்கும் பிறந்த பிள்ளைகள் எழுவரில் இவர்கள் இருவர் என்று அக் கதையே சொல்லுகின்றது. இவற்றுள் மற்றொரு விசேடம் என்னவென்றால், மேற்கண்ட ஆதிக்கும் பகவனுக்கும் புணர்ச்சி முடிந்ததும் பிள்ளை பிறந்ததாகவும், அதை அங்கேயே போட்டுவிட்டுப் போய்விட்டதாகவும் அக்கதை கூறுகின்றது. இது சம்பந்தமாக மற்றும் பலப்பல கதைகளும் உண்டு. அன்றியும், மற்றும் பலப்பல அவ்வைகள் இருந்தார்கள் என்றும் சிலர் கூறுவார்கள். எனினும், இது விஷயத்தில் புராணக்கூற்றையும், தெய்வீகமூட நம்பிக்கையையும் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, மேற்கண்ட நீதிவாக்கியங்களும் குறள்களும் யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அதையும் கவனியாமல், மேற்படி வாக்கியங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு, அது போன்ற மற்ற வாக்கியங்களுக்குப் பொருள் காணுவது போலவே இவைகளுக்கும் பகுத்தறிவைக் கொண்டு பொருள் காணுவோமானால், மேற்கண்ட முதுமொழிகளின் கருத்தான 'பெண்கள் சொல்லைக் கேட்கக் கூடாது' என்பதும்; 'அறியாமை என்பது பெண்களது ஆபரணம்' அதாவது அவர்களின் தன்மைக்கேற்றது என்பதும்; 'பெண்கள் இஷ்டப்படி நடக்கக் கூடாது' என்பதுமே பொருளாக விளங்குகின்ற கருத்துக்கள்தாம் காணக்கிடக்கும்.

இனி, இதற்கு விசேட உரைகளும் தத்துவார்த்தங்களும் பலப்பல சொல்லப் பல வித்துவான்கள் முந்தக்கூடும். ஆனாலும், தத்துவார்த்தமும் விசேடவுரையும் சொல்ல முடியாத சப்தங்களும், எழுத்துக்களும் வாக்கியங்களும் செய்யுள்களும் உலகத்தில் கிடைப்பதரிது என்பது யாவரும் அறிந்ததாகும். ஆதலால், இதற்கு மாத்திரம் தத்துவார்த்தமும், விசேட உரையும் கொண்டு பொருள் கூற வரவேண்டிய காரணம் அறிவாளிகளால் ஒப்புக்கொள்ளக் கூடியதாகாது. அவ்வை முதுமொழியும், வள்ளுவர் குறளும் யார் சொன்னார்கள் என்பது இங்குக் காணவேண்டிய விஷயமல்ல. மற்றபடி, இவ்விரண்டும் நீதி நூல்களில் சிறந்தவைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆதலால், இதைப் பற்றிப் பேசவே இங்கு முன்வருகின்றோம். இதில் குறுக்கே நிற்கும் சங்கடமென்னவென்றால், இவ்வளவு உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட நீதிகளை உணர்ந்தவர்கள்

இவ்வளவு பெரிய பிழைகளை இழைத்திருப்பார்களா என்னும் விஷயமாகும். ஆனால், எல்லா விஷயங்களுக்கும் இவ்வாயுதத்தை உபயோகிக்க முற்படுவதால், அவ்வாயுதம் சில சமயங்களில் உபயோகிப்பவர்களையே மோசம் செய்துவிடக்கூடும். அல்லாமலும், கால தேச வர்த்தமானத்தைக் கொண்டுதான் யாரும் எதையும் சொல்லியிருக்க முடியுமே யல்லாமல், பார்ப்பனர்கள் சொல்லுவதுபோல்—எதையும் கடவுள் சொன்னார் என்பதும், அது எக் காலத்திற்கும் ஏற்றது என்பதும் இக் காலத்திற்குப் பொருத்தமற்றதாகும்.

இவ்விரு பெரியார்களும் வாழ்ந்தது உண்மையாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந் நீதிநூல்கள் சொல்லப்பட்ட காலம் ஆரிய ஆதிக்கம் பரவியிருந்த காலமென்பதையாவது ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். தவிர, அவ்வைப் பிராட்டியார் பெயராலோ, வள்ளுவர் பெயராலோ சொல்லப்பட்ட நீதிகளை ஆக்கிய கர்த்தர்கள் நம்மைப் போன்ற மனிதத் தன்மை வாய்ந்தவர்கள் என்பதை முதலாவதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் மேலே குறிப்பிட்டதுபோல், தெய்வத் தன்மைகள் என்று சொல்லப்படுவதை—அதாவது, மனிதத் தன்மைக்கு மேற்பட்டது என்பதெதையும் மூட்டை கட்டி வேறாக வைத்துவிட்டுப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். அப்படிக்கில்லா விட்டால், யாரும் எதையும் சொல்ல இடமேற்பட்டுவிடும். ஆகவே, அப்படிப் பார்த்தால்தான் அவர்கள் இப்படிச் சொன்னதற்கு நியாயம் கிடைக்கும். அதாவது, 'அக்காலத்திய நிலைமைக்கு—யாராயிருந்தாலும்—நீதி இப்படித்தான் சொல்லியிருக்க முடியும்' என்கின்ற முடிவுகாணலாம். எப்படியென்றால், கம்பர் அறிவுத் திறமுடைய கவி என்பதில் யாருக்கும் வேறுபாடு இராது. ஆனாலும், அப்படிப்பட்ட கம்பர் இராமாயணம் பாடினார் என்றால், ஆரியர் செல்வாக்குக் காலத்தில்—ஆரிய ஆதிக்கத்தில் மக்களுக்கு உணர்ச்சியுள்ள காலத்தில்—பாடியதானதால், அதில் வான்மீகி உரைத்த கருத்துக்களை மாற்றி, அதிலுள்ள ஆபாசங்களை எல்லாம் நீக்கி, ஆரியர்களுக்கே முழுஉயர்வையும் ஆதிக்கத்தையும் வைத்து, மக்கள் கொண்டாடும்படியாகப் பாடியிருக்கின்றார்.

அதுபோலவே, இப்போதுங்கூட எவ்வளவு அறிவு முதிர்ச்சியும், ஆராய்ச்சி முதிர்ச்சியும் பல பண்டிதர்களுக்கிருந்தாலும் ஆரிய ஆதிக்கத்தை மறுப்பதற்குப் பயப்படு கின்றார்கள்; ஆரிய உயர்வையே பேசுகின்றார்கள். காரணம், 'ஆரியருக்குப் பயந்தல்ல' வென்று சொல்லிக் கொண்டாலும், அவர்களுக்கு ஏற்பட்ட ஆரியப் பழக்க வழக்கங்களும், ஆரியர் கதைகளையே படிப்பதும், ஆரிய ஆதிக்கத்திற்கு ஏற்படுத்தின கடவுள் தன்மை களையே வணங்கிவருவதும், ஆரியக்கதையையே ஆதரித்துப் பாடுவதும் எழுதுவதும் ஆகியகுணங்களே இப்படித்தான் நடக்கச் செய்யும். எனவே இம்முறையில் குழந்தைப்பருவ முதல் வளர்ந்து சரீரத்தின் மூலமாகவும், மயிர்க்கால்கள் மூலமாகவும் ஆரியத் தன்மையை ஏற்றுக்கொண்டு மூளையை நிரப்பி வைத்திருப்பவர்கள் என்ன செய்யக்கூடும்? ஆதலால், அவர்கள் பரிசுத்தத் தன்மையும் மேன்மையும் உற்றவர்களானால், அக் காலத்திற்கு ஏற்பக் கூறினார் என்பதோடு முடித்துவிடுவதே நன்று. அப்படிக்கில்லாமல், எக் காலத்திற்கும் ஏற்றதென்போமாயின் அவைகள் குற்றம்—குற்றமே; நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றமேதான்.

பின்பு, நமது தோழர், 'சமத்துவம்' என்பதுபற்றி என்னென்னவோ அவசிய மில்லாத அனேகவற்றைச் சொல்லுகின்றார். அதைப்பற்றி இங்கு இதுசமயம் ஒரு விவகாரமும் வைத்துக்கொள்ள அவ்வளவு அவசியமில்லை. என்றாலும், கடைசியாக அவர் குறிப்பிடும் சமத்துவக் கொள்கையையாவது எடுத்துப் பார்த்தாலும், அதிலும் முறையாகச் சொல்லாமல் நழுவிவிட்டார் என்றே கூறவேண்டும். அதாவது, 'பெண்மக்கள் தமது உரிமையையும், தேவையையும் ஆண்மக்கள் தடையில்லாமலும், பெண்ணின் தடையின்றி அவர்களுக்குத் துன்பமில்லாமல் பெறுதலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதும் ஆண், பெண் சமத்துவமாகும்' என்று சொல்லுகிறார்.

ஆனால், அதே மூச்சில், 'ஆண் உரிமை யாது? பெண் உரிமை யாது? அன்னாரின் தனித்தனித் தேவைகள் என்பவை யாவை?' என்பதைப்பற்றி ஆராய்தல் வேறொன்று விரித்தலாகும் என்று சொல்லிவிட்டார்.

இவ்வியாசத்தின்-விவகாரத்தின் ஜீவநாடி, 'ஆண் உரிமையென்ன? பெண் உரிமையென்ன? இவ்விரண்டிற்கும் ஏன் வித்தியாசம் இருக்கவேண்டும்?' என்பதேயாகும். அப்படியிருக்க நமது தோழர், அதை ஆராய்வது வேறொன்று விரித்தல் என்னும் குற்றமாகிவிடும் என்பது, உள்ளத்தை விரிக்கப் பயந்து—'மறைத்தல்' என்கின்ற குற்றத்திற்கு ஆளாகுமே தவிர வேறில்லை என்று சொல்ல வருந்துகிறோம்.

தவிர, 'ஆணின் தன்மை—வீரம், கோபம், வன்மை, ஆளுந்திறம் கொண்டு விளங்குகின்றது' என்றும்; 'பெண்ணின் தன்மை—அன்பு, மென்மை, சாந்தம், பேணுந்திறம் கொண்டு விளங்குகின்றது' என்றும் சொல்லுகின்றார். இம்முடிவுதான் நமது தோழர் திருவள்ளுவருக்கு 'வக்காலத்து'ப் பெற்று மறுப்பெழுத முன்வரச் செய்து விட்டதென்பது இப்போது நமக்கு நன்றாய் விளங்குகின்றது.

வன்மை, கோபம், ஆளுந்திறம் ஆண்களுக்குச் சொந்தமென்றும்; சாந்தம், அமைதி, பேணுந்திறம் பெண்களுக்குச் சொந்தமென்றும் சொல்வதானது—வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் புலிக்குச் சொந்த மென்றும்; சாந்தம், பேணுந்திறம் ஆட்டுக்குச் சொந்தமென்றும் சொல்வது போன்றதேயொழிய வேறில்லை. நாம் வேண்டும் 'பெண்ணுரிமை' என்பது என்னவெனில், ஆணைப்போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

அன்றியும், மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலருக்கும் நமது தோழர் குறிப்பிட்ட இருபாலர் குணங்களும் சமமாய் இருக்கவேண்டுமென்பதே நமது கருத்தாகும். இருபாலருக்கும் சமமாகவே இருக்க இயற்கையில் இடமும் இருக்கின்றது. ஆனால், அது செயற்கையில்—ஆண்களின் சுயநலத்தால், சூழ்ச்சியால் மாறுபட்டு வருகின்றது.

கர்ப்பமாகிப் பத்துமாதம் சுமந்து பிள்ளை பெறுகின்றகுணம் பெண்களுக்கு இருப்பதாலேயே, பெண்கள் நிலை ஆண்களைவிட எவ்விதத்திலும்—அதாவது, வீரம், கோபம், ஆளுந்திறம், வன்மை முதலியவைகளில் மாறுபட்டுவிடவேண்டியதில்லை என்றே சொல்வோம். கர்ப்பம் தரித்துப் பிள்ளை பெறாத காரணத்தாலேயே ஆண்மக்களுக்கு அன்பும், சாந்தமும், பேணுந்திறமும் பெண்களைவிட மாறுபட்டதாகி விடாதென்றும் சொல்லுவோம்.

உண்மையான சமத்துவத்திற்கு மதிப்புக் கொடுப்போமானால்,—உண்மையான அன்பு இருக்குமேயானால்,—பிள்ளையைச் சுமந்து பெறும் வேலை ஒன்று தவிர, மற்ற காரியங்கள் இருபாலருக்கும் ஒன்றுபோலவே இருக்கும் என்பது உறுதி.

தவிர, 'தற்கொண்டான்' என்பதற்கு, அன்பைக் கொண்டவன் என்கின்றபொருளை வருவித்துக்கொள்வது இங்கு. வள்ளுவருக்குக் காப்புச்செய்யக் கருதியதாகுமேயல்லாமல், குறளுக்கு நீதி செய்ததாகாது.

அன்றியும், பெண்ணிடமிருந்து ஆண் அறியவேண்டிய குணம் ஒன்றுமில்லையென்பதும், அப்படியிருந்தால்தான் 'தற்கொண்டாள்' என்பதாகச் சொல்லலாம் என்பதும் பொருத்தமற்றதென்றே சொல்லலாம்.

அதுபோலவே, 'தொழுதெழுவதையும்' ஆணுக்குக் குறிப்பிட நியதி இல்லையென்பதும் பொருத்தமற்றதேயாகும். பெண்ணைக் கொள்ள ஆணுக் குரிமையிருந்தால்,

ஆணைக்கொள்ளப் பெண்ணுக்கு உரிமை வேண்டும். 'ஆணைத் தொழுதெழவேண்டும்' என்று பெண்ணுக்கு நிபந்தனையிருந்தால், 'பெண்ணைத் தொழுதெழ வேண்டும்' என்று ஆணுக்கு நிபந்தனை இருக்கவேண்டும். இதுதான் ஆண்–பெண் சரிசம உரிமையென்பது.

இஃதில்லாதது எதுவானாலும் சுயநன்மையும் மூர்க்கமுமேயல்லாமல், அன்பு அல்ல வென்றே சொல்லிவிடுவோம்.

தவிர, நமது தோழர் அவர்கள், குறளில் ஆண்களுக்கும் வள்ளுவர் கற்பு கூறி யிருப்பதாகச் சொல்லுகின்றார். இருக்கலாமானாலும், பெண்களுக்குக்கூறியது போலில்லை யென்றுதான் கூறுகிறோம். அதாவது, ஆண்களின் கற்புக்கு நமது தோழர் அவர்கள் இரண்டு குறட்பாக்களை எடுத்துக்காட்டாகக் கூறியிருக்கிறார். அவை,

" சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை."

" நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்."

இவைகளை ஆண்கள் கற்பை வலியுறுத்தக் கூறியதாகக் கூறுகிறார்போல் காண் கின்றது. இவைகள் அதற்காகக் கூறப்பட்டவையல்ல என்பது நமது அபிப்பிராயம்.

அதாவது, முதற் குறளுக்கு, 'காவலினால் பெண்கள் கற்பாயிருப்பதால் பயனில்லை; பெண்கள் தாங்களாகவே கற்பாயிருக்கவேண்டும்' என்பதுதான் கருத்தாக இருக்கலாம் என்று கருதுகிறோம்.

இரண்டாவது குறள், 'விலைமாதரைப் புணர்கின்றவர்க்குக் கூறிய பழிப்புரை'யே யல்லாமல், காதல் கொண்ட மற்ற பெண்களைக் கூடித்திரியும் ஆண்களைக் குறித்துக் கூறியதல்ல வென்பது நமது அபிப்பிராயம். நிறை என்கின்ற வார்த்தை மாத்திரம் காணப் படுகின்றதே தவிர, நிர்ப்பந்தமில்லை.

ஆகவே, இருபாலருக்கும் சமநிபந்தனை குறளில் இல்லை என்பதற்கு மற்றும் பல குறட்பாக்களையும் நாம் கூறக்கூடும்.

தவிர, கடைசியாக நமது தோழர் நமக்கு உறுத்தும் அறிவுக்கு நாம் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் விரும்புவது போலவே, ஆன்றோர் நூல் களில் அய்யம் தோன்றுமிடங்களில் அய்யவினாவாகவே எழுதிவருகிறோம். ஆனால், இக் கற்பு விஷயத்தில் நாம் குறிப்பிட்ட குறளின் கருத்தில் நமக்கு அய்யமில்லையென்று கருதுவதோடு, நமது கூற்றுக்கு ஆதரவாக மற்றும் சில அறிஞர்களின் கருத்தையும் பெற்றோமென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மற்றும், குறள் விஷயத்திலும், குறளாசிரியர் விஷயத்திலும் நாம் கொண்டுள்ள பக்தி, தோழர் கொண்டுள்ள பக்திக்கு மீறியதல்லவானாலும் குறைந்ததல்ல வென்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அதற்கு அனேக சான்றுகளுண்டு. மற்றபடி நமது தோழர் குறிப்பிட்ட கடைசி குறட்பாக்கள் இரண்டைப்பற்றி, அதாவது,—'பெரும் பான்மை மக்களது கருத்துக்கு மாறுபடுவதும், பெரியோரிடம் குறைகாணுவதும் மடமை' என்கின்ற பொருள் கொண்டவேறு இரண்டு குறட்பாக்கள்பற்றி நாம் சிறிதும் கவலைப்பட வில்லை. ஏனெனில், சரி என்று பட்டதைச் சொல்லும் தன்மை எவனிடமிருந்தாலும் அவன் இக் குறட்பாக்கள் மாத்திரமல்ல—இதுபோன்ற வசைகள் பலவற்றிற்கும், மற்றும் அனேக காரியங்களுக்கும் தயாராயிருக்க வேண்டியவன்தான் என்கின்ற முடிவால் கவலைப்பட வில்லை.

['பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூலிலிருந்து 11-ம் பதிப்பு, 1971]

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

1

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

போன் : 0422 – 2572635
செல் : 936 2970121

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., எஃப்.அய்.இ.
(மருத நாடன்)
தலைமைப் பொறியாளர் மி.வா. (ஓய்வு)
தலைவர் : சிந்தனையாளர் கழகம்
தமிழ் தமிழர் ஒருங்கிணைப்பாளர்
அமைப்பாளர் : தொழில் நுட்ப வல்லுநர் குழுமம்

18/12ஏ, அண்ணாநகர், ஆறுமுகம் லே–அவுட்,
பூளைமேடு (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 004.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;r erd; (09-06-2011)
jkpHk;t iy (www.thamizham.net)

பகுதி II

இயக்கங்கள்

1. காங்கிரஸ்

1. பாட்னா தீர்மானம்

சென்ற மாதம் 22ஆம் தேதி பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தையும், அதைப்பற்றி மகாத்மாவின் தனி அபிப்பிராயத்தையும் நிதானமாய் யோசனை செய்து பார்த்தோம். அவற்றுள் காணப்படும் தத்துவத்தைச் சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால், மகாத்மா காந்தி அவர்கள் காங்கிரசை சுயராஜ்யக் கட்சியார் வசம் ஒப்படைத்துவிட வேண்டுமென்பதாக முடிவு செய்துகொண்டு அந்தப்படியே ஒப்புவித்து விட்டாரென்றுதான் சொல்லவேண்டும்.

தீர்மானத்தின் சாரம் என்னவென்றால், நான்கணா கொடுத்தவரெல்லாம் காங்கிரஸ் மெம்பராகலாம். காங்கிரசில் பதவி வேண்டியவர்கள், காங்கிரஸ் காரிய சமயங்களில் கதர் கட்டிக்கொண்டிருக்க வேண்டும். சட்டசபை முதலிய தேர்தலுக்கு நிற்கிறவர்கள் சுயராஜ்யக் கட்சியாரின் தயவைப் பெறவேண்டும். இந்தத் தீர்மானத்தின்மேல் மகாத்மாவின் அபிப்பிராயமோ, இதற்குச் சம்மதமில்லாதவர்கள் காங்கிரசைவிட்டு விலகிக்கொள்ள வேண்டுமேயல்லாமல், உள்ளே இருந்துகொண்டு சுயராஜ்யக் கட்சியின் வேலைகளுக்கு இடையூறாயிருக்கக் கூடாதென்பதுதான். அத்துடன், பழைய நிலை ஒன்றும் மாறவில்லையென்றும், நிர்மாணத் திட்டம் பாதிக்கப்படவில்லை என்றும் கூறுகிறார். மற்ற விஷயங்களைப்பற்றி நாம் அதிகக் கவலைப்படாவிட்டாலும், நிர்மாணத் திட்டம் பாதிக்கப்படவில்லையென்பதை ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்துகின்றோம். ஏனெனில், பாட்னா காங்கிரசின் அதிகாரத்தை சுயராஜ்யக் கட்சியார் கையில் முற்றிலும் ஒப்படைத்தாகிவிட்டது என காந்தியடிகளே அக்டோபர் 1-ந்தேதி 'யவ்வன இந்தியா'வில் கூறியிருக்கின்றார். சுயராஜ்யக் கட்சியாருக்கோ நிர்மாணத் திட்டங்களாகிய கதரிலும் தீண்டாமையிலும் முழு நம்பிக்கையுமில்லை. இந்த நிலைமையில், நிர்மாணத் திட்டம் எப்படி பாதிக்கப்படவில்லை என்பது நமக்குப் புரியவில்லை. சுயராஜ்யக் கட்சியினரல்லாத காங்கிரஸ்வாதிகளுக்கோ, சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் நம்பிக்கையில்லை. இருந்தால், சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருப்பார்கள். தங்களுக்கு நம்பிக்கை இல்லாததும் தேச நன்மைக்கு ஏற்றதல்ல என்று நினைப்பதுமான திட்டத்தைத் தேசத்தில் நடத்துவிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதை, காங்கிரசில் இருக்கவேண்டுமே என்னும் ஒரு காரியத்திற்காகச் சகித்துக்கொண்டிருப்பதைவிட, அதை எதிர்க்கவேண்டும் என்னும் அவசியமுள்ளவர்கள் காங்கிரசைவிட்டு வெளியே போய்த் தங்கள் மனசாட்சிப்படி நடந்துகொள்ளலாமென மகான் சொல்லுவதை காங்கிரசும் ஒப்புக்கொள்ளுமானால், அப்படிச் செய்வது மேலானதென்றே நினைக்கிறோம்.

அதற்கடுத்தாற்போல், நிர்மாணத் திட்டத்தில் ஒரு பாகமாகிய கதரை உத்தேசித்து 'நூற்போர் சங்கம்' ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பெரும்பாலும், மாறுதல் வேண்டாதாருக்கும், ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கும் தேச நன்மையை உத்தேசித்து அதிக திருப்தியைக் கொடுக்கும் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், சுயராஜ்யக் கட்சியார் இதையாவது ஒழுங்குபெற நடக்க விடுவார்களா என்பதுதான் நமது சந்தேகம். நூற்பதில் நம்பிக்கை இல்லாதவர்களும் நூற்பதைக் கேவலமாகக் கருதுபவர்களும், கதரில் நம்பிக்கை இல்லாதவர்களும் உறுதிமொழியில் கையெழுத்திட்டு, உள்ளே வந்து புகுந்து, இதிலும் சிறிது சிறிதாக மகாத்மாவை விட்டுக் கொடுத்துக்கொண்டே போகச் சொல்லுவார்களோவென்று நாம் சந்தேகப்படாமலிருக்க முடியவில்லை.

கடைசியாக ஒரு வார்த்தை: 'நூற்போர் சங்கம்' ஏற்படுத்தியதால் நிர்மாணத் திட்டத்தில் ஒரு பாகமாகிய கதர் திட்டம் பாதிக்கப்படவில்லை என்று சொல்வதானாலும், தீண்டாமை விலக்குத் திட்டம் சுயராஜ்யக் கட்சியார் கருத்துப்படியே தானே மறைந்து போய்விட்டது. பெல்காமில் மதுவிலக்கு மறைந்தது; பாட்னாவில் தீண்டாமை விலக்கு மறைந்தது. இனி 'கதரின் தலை எழுத்து' எந்த ஊரில் முடியப்போகிறதோ தெரிய வில்லை. ஆனாலும், சுயராஜ்யக் கட்சியார் அதை ஒழிக்கவும் ஒருவாறு மனதில் வைத்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாம் செய்யவேண்டியது என்னவென்பதை யோசிக்க வேண்டும். நம் நாட்டில் சுயராஜ்யக் கட்சியாரில்லாமல் காங்கிரஸ்காரர்களுக் குள்ளேயே சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்கிறவர்களும், அதன் திட்டமானது தேசத்திற்குக் கெடுதியை விளைவிக்கக் கூடியதென்று நம்பி காங்கிரஸ் அதன் வழி செல்லவிடாமல் தடுத்து, உண்மையான வழியில் நிறுத்த வேண்டுமென்று அந்தரங்க சுத்தியுடன் வேலை செய்பவர்களுமிருக்கிறார்கள். இதில் யார் பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இவர்களிருவருக்கும் காங்கிரசில் இடமிருக்கின்றதா? இல்லையா? இரண்டாவதவர்களுக்கு இடமில்லையென்ற தீர்மானம் ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்யவேண்டியது என்பதைப் பற்றியும் அல்லது தனிச் சங்க மொன்று கண்டு அதன் மூலமாக உண்மை ஒத்துழையாமைத் திட்டத்தையும் நிர்மாணத் திட்டத்தையும் நிறைவேற்ற முயற்சி செய்வதா என்கிற விஷயத்தைப்பற்றியும், காஞ்சி புரம் மகாநாட்டிலும், கான்பூர் காங்கிரசிலுமே நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இது விஷயத்தை தமிழ்நாட்டிலுள்ள தேசியவாதிகளும், தேசத் தொண்டர்களும் ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

லாலாஜி அவர்களும், தமது 'பீபிள்' பத்திரிகையில், பாட்னா தீர்மானங்களை ஆட்சேபித்து விரிவாக எழுதி இருக்கின்றார்.

[தலையங்கம்—'குடி அரசு'–11-10-1925]

2. காங்கிரஸ் மடிவதே மேல்

பெரியோர்களே!

காங்கிரஸ் முன்னிருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷமாகிறது. அதனால் என்ன பயன் கிடைத்தது? இது ஏற்படாததற்கு முன்பு என்ன பலன் கிடைத்தது?

'காங்கிரஸ் இருப்பதா, மடிவதா?' என்று துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். என்னைக் கேட்டால் தற்போதுள்ள காங்கிரஸ் மடிவதே நன்று என்று சொல்லுவேன். இப்போதுள்ள காங்கிரசைக் குழிதோண்டிப் புதைக்கவேண்டும்.

காங்கிரஸ் ஏற்படாததற்கு முன்பு 'பிராமணரல்லாதார்கள்' செல்வாக்கும் யோக்கிய தையும் அடைந்திருந்தார்கள். அன்றியும், சகல உத்தியோகங்களையும் நம்மவர்களே நடத்தி ஒற்றுமையாக நடத்தி வைத்திருக்கிறார்கள். நீதி நிர்வாகங்கள் ஒழுங்காக நடந்து வந்தன. முன்பு கேசவலு நாயுடு என்ற ஒரு 'சிரஸ்தார்' (Sherishtadar) இருந்தார். கலெக்டர் அவரைக் கூப்பிட்டாலும், கையில் தடியும் வாயில் சுருட்டும் பிடித்துக்கொண்டே போய் 'என்ன?' என்று கேட்பார். கலெக்டரும் இவருக்கு மரியாதை கொடுத்துவந்திருக் கிறார்.

பதிவு நம்பர் 2041

குடி அரசு

[வாரப்பதிப்பு]

(18—10—25)

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.

வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் நான்கு.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

18–10–1925 'குடி அரசு' முகப்பு அட்டை. நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களுள் மிகப் பழமையானது–11–10–1925 இதழ்

முனிசீப் ஒருவர் இருந்தார். அவர் எவ்வித உத்தியோகத்தையும் திறமையாக நடத்தி இருக்கிறார். திரு. பெத்தண்ணா என்ற தாசில்தார் இருந்தார். அவருக்கு இங்கிலீஷில் கையெழுத்துப் போடத்தான் தெரியும்; ஆனால், வேலையில் திறமைசாலி. அவரை வேறு இடத்திற்கு மாற்றினதற்காகப் பல தடவை இராஜிநாமாச் செய்தார். அப்போது உத்தியோகங்களுக்கு மரியாதையும் கவுரவமும் யோக்கியதையும் ஏற்பட்டிருந்தது.

காங்கிரசுக்குப் பின் தெருப் பிச்சை எடுக்கும் வகுப்பினரெல்லாம் உத்தியோகங்களுக்கு வந்துவிட்டதால் மரியாதையைக் கெடுத்துவிட்டார்கள். இவர்களை வேலைகளிலிருந்து விலக்கிவிட்டாலோ, அதிகாரிகளுக்குக் கும்பிடு போட்டோ அல்லது அந்த அதிகாரிக்கு வேண்டிய சகல சவுகரியங்களையும் செய்துகொடுத்தோ அந்த வேலையைச் சம்பாதித்துக்கொள்வார்கள்.

காங்கிரஸ் ஏற்பட்டதன் பலனாக பார்ப்பனரல்லாதார்களுக்குப் பெருத்த கஷ்டமும், நீதி நிர்வாகங்களுக்கு அநீதியும் ஏற்பட்டு விட்டதென்றே சொல்லுகிறேன். காங்கிரஸ் போர்வையைப் போர்த்திக்கொண்டே நிர்வாக சபை அங்கத்தினர் முதற்கொண்டு கீழ்த்தர உத்தியோகங்கள்வரையில் பார்ப்பனர்களே புகுந்துவிட்டார்கள். காங்கிரஸ் ஏற்பட்டு முப்பது, முப்பந்தைந்து வருடங்கள்வரை இவ்விதமாகவே நடந்துவந்திருக்கின்றது. காங்கிரஸின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு வகுப்பார் எல்லா உத்தியோகங்களையும் அனுபவித்துவருவதைக் கண்ட மகாத்மா காந்தி அவர்கள், எல்லோரையும் சமம் செய்யும் உத்தேசத்தோடு ஒத்துழையாமை ஆரம்பித்து, 'ஒருவரும் அரசாங்க உத்தியோகங்களுக்குப் போகக்கூடாது' என்று உபதேசம் செய்தார். அப்போது இந்தப் பார்ப்பனர்களெல்லாம் ஏன் உத்தியோகத்தை விட்டு வெளியே வரவில்லை?

[சென்னை வண்ணாரப்பேட்டையில், 29-7-1926-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 8-8-1926]

3. காங்கிரசும் நானும்

பெரியோர்களே!

பொதுமக்களின் சுயமரியாதைக்கும் உரிமைக்கும் விடுதலைக்கும் ஆபத்தான இயக்கம் என்று எதையாவது நான் கருதினால், அதை அடியோடு அழிக்க நான் பின்வாங்க மாட்டேன். எவ்வித பழியோ, அபகீர்த்தியோ, ஆபத்தோ வருவதானாலும் அவற்றைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல் என்னால் கூடியதைச் செய்துதான் தீருவேன்.

நான் பொதுவாழ்வில் உழைக்க ஆரம்பித்த பிறகு—இக் கொள்கையையே, என்னால் கூடியவரை அனுசரித்துவந்திருக்கிறேன். உதாரணமாக, 'ஹோம் ரூல்' கிளர்ச்சியின்போதும், ஈரோட்டில் நடந்த கொடித் தகராறில் நானே முன்னணியில் இருந்ததும், என் வீட்டில் கொடி கட்டினதும்; ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்த காலத்தில், 'அது தேசத் துரோகமான கட்சி' என்று நமது பார்ப்பனர்கள் செய்த பிரச்சாரத்தில் ஏமாந்துபோய் அதற்கு எதிராக, 'சென்னை மாகாணச் சங்கம்' ஏற்படுத்துவதற்காகக் கூட்டின முதல் கூட்டத்திற்கு என்னுடைய முழு ஆதரவையும் கொடுப்பதாக வாக்களித்து 1000 ரூபாய் தந்தியில் வாக்களித்து அனுப்பியதும்; அக் கூட்டத்திற்கு முன்னணியில் இருந்து மகாநாடுகள் முதலியன நடத்தியதும், உப அக்கிராசனாதிபதியாக இருந்ததும்; பிறகு, 'ஹோம் ரூல்' கிளர்ச்சியில் உள்ள சில புரட்டுகள் வெளியானதும், அதை ஒழிப்பதற்கு, 'நேஷனலிஸ்ட் அசோசியேஷன்' என்பதாக சென்னையில் ஒரு தேசிய சபை ஸ்தாபித்த காலத்தில் அதிலும் முன்னணியிலிருந்து அச் சபைக்குத் தமிழ்நாடு காரியதரிசியாக இருந்ததும்; மற்றும் அதற்குப் பிறகும், முன்னும் தேசிய சம்பந்தமான

எல்லா விஷயங்களிலும் (மனப்பூர்வமாய்) எவ்விதக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் ஊழியம் செய்ததையும் நீங்கள் நேரில் பார்த்திருப்பீர்கள்.

அப்படிப்பட்ட ஒருவன், இன்று ஏன் தற்கால காங்கிரசால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஆபத்து என்று சொல்ல வந்திருக்கிறேன் என்பதைச் சற்று யோசியுங்கள்! காங்கிரசால் வரும் பெருமையையோ சுயராஜ்யத்தையோ அடைய எனக்கு இஷ்டமில்லாததாலா? அல்லது சுயராஜ்யத்திற்கு விரோதமாக இருந்தால் அரசாங்கத்தாரிடம் ஏதாவது பட்டம் பதவி அல்லது எனது மக்களுக்கு உத்தியோகம் முதலியன பெறலாமென்றா? இனி எனக்கு எப்பேர்ப்பட்ட பட்டமும் கிடைக்காது; உத்தியோகமும் கிடைக்காது; எனக்குப் பிள்ளை குட்டிகளும் இல்லை. மற்றபடி, ஜஸ்டிஸ் கட்சியாரால் ஏதாவது ஜீவனத்திற்கு ஆதாரமோ அல்லது கவுரவ உத்தியோகங்களோ அடையலாம் என்று நினைக்கிறேன் என்றாலோ—நான் எல்லா உத்தியோகங்களையும் பார்த்து இராஜிநாமா கொடுத்துவிட்டு, ஒத்துழையாமைக்கு வந்தவன். நான் ஆனரரி மாஜிஸ்ட்ரேட் பதவியை ஒன்றரை வருடத்தில் இராஜிநாமா செய்தவன்; தாலூகா போர்டு மெம்பர் பதவியை இரண்டு தடவை இராஜிநாமா கொடுத்தவன்; ஜில்லா போர்டு மெம்பர் பதவியை 2 வருடத்தில் இராஜிநாமா கொடுத்தவன்; முனிசிபல் சேர்மன் பதவியை ஒன்றரை வருஷத்தில் இராஜிநாமா கொடுத்தவன். ஆகவே, இனி எந்த உத்தியோகம் பார்க்க நான் ஆசை கொள்ளவேண்டும்? ஆசை கொண்டால் ஜஸ்டிஸ் கட்சி தயவில்லாமல் கிடைக்காதா என்பதை நீங்கள் நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பாருங்கள்! எனது தாலூகா தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டாக மாத்திரம் இருக்கிறேன். ஆனால், இது சுமார் 15 வருஷத்திற்குமேல் பார்த்துவருகிற வேலையானதாலும் இதற்கு மற்றொருவர் தயவும் வேண்டியதில்லை. ஆதலால், எதை உத்தேசித்து நான் காங்கிரசை வேண்டுமென்று குற்றஞ்சொல்ல நினைப்பேன் என்பதை நீங்கள் யோசனைசெய்து பாருங்கள்!

ஆனால், நமது பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உழைக்கிறவன் எவ்வித அயோக்கியன் என்றாலும் அவனைத் தேச பக்தன் என்பார்கள். அவர்கள் நன்மைக்குக் கடுகளவு விரோதம் ஏற்படத் தக்கவாறு எவராவது நடந்துவிட்டால் எல்லா பார்ப்பனர்களும் கம்பியில்லாத தந்திபோல், எல்லோருக்கும் ஏககாலத்தில் உதயமாகி எல்லோரும் கூடிக்கொண்டு 'தேசத் துரோகி, தேசத் துரோகி' என்று கூறுவார்கள்.

'காங்கிரஸ்' என்பதை நமது நாட்டையும்—இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான நமது சங்கத்தையும் அழிக்க வந்த ஒரு 'அரக்கன்' என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரஸ் என்கிற விஷத்தன்மை நமது நாட்டில் ஏற்பட்டுப் பரவாதிருக்குமானால் முதலாவது நமது நாட்டில் அன்னிய ஆட்சி இவ்வளவு பலமாய் ஆதிக்கம் பெற்று இருக்காது. இரண்டாவது, இந்த அன்னிய ஆட்சி பலமாய் ஆதிக்கம் பெறவும் அதற்கு ஒற்றர்களாயிருந்தும், அஸ்திவாரம் போலும் கண்கள் போலுமிருந்தும், அந்த அன்னிய ஆட்சி இந் நாட்டில் இருப்பதாலேயே வாழக்கூடியவர்களான நமது பார்ப்பன ஆதிக்கமும் நமது நாட்டில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது. இந்தப் பார்ப்பனர்கள், ஒன்று—ஆற்றோரங்களில் காலை மாலைகளில் மூக்கைப் பிடித்து முணுமுணுத்து கொண்டிருந்துவிட்டு நம்மிடம் பிச்சை எடுத்து வயிறு வளர்த்துக்கொண்டிருக்க வேண்டும். அல்லது, வேறு ஏதாவது ஒரு தேசத்துக்குப் போய் அத்தேச மக்களின்மேல் ஆதிக்கம் செலுத்த வேற்றரசர்களைக் கூட்டிக்கொண்டுவந்து வைக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

[திருச்சி, தஞ்சை, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 31-10-1926 முதல் 7-11-1926 முடிய சொற்பொழிவு—'குடிஅரசு' 7-11-1926]

4. காங்கிரசும் சுயமரியாதையும்

அன்புள்ள தலைவரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று இங்கு சுயமரியாதை வாசக சாலை ஆண்டுவிழாவை உத்தேசித்து நடைபெறும் உபந்நியாசங்களில் நான் 'காங்கிரசும் சுயமரியாதையும்' என்பது பற்றிப் பேசவேண்டும் என்பதாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இது விஷயமாய் எனது அபிப்பிராயங்கள் அனேகமாகத் தமிழ்நாடு முழுவதும் அறிந்ததேயாகும். எப்படியெனில், 'குடி அரசு' பத்திரிக்கை வாயிலாகவும், அனேக உபந்நியாசங்கள் மூலமாகவும் சுமார் 5, 6 வருஷங்களாக வெளிப்படுத்திக்கொண்டே வந்திருக்கின்றேன். அவற்றில் இருந்து மாறும்படியான நிலைமை இப்போது ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

சமீபகாலத்தில், அதாவது இந்த ஒருவருஷ காலத்தில் காங்கிரசுக்குச் செய்யப்பட்ட விளம்பரத்தின் காரணமாய் பொது ஜனங்களில் பலருக்கு ஒரு உணர்ச்சி தோன்றி அதைப் பற்றி பேசப்படுகின்றது என்பதைத் தவிர வேறில்லை. ஒரு நாட்டில் புதிதாக ஏதாவது விஷயம் தோன்றினால் அதைப்பற்றி எங்கும் பேச்சாய் இருப்பது சகஜமேயாகும். அதுபோல்தான், இப்போது காங்கிரசைப்பற்றியும் பேசப்படுகின்றது. ஆதலாலேயேதான், நீங்களும் என்னை அதைப்பற்றியே பேசக்கேட்டு இருக்கிறீர்கள் என்று கருதுகின்றேன். காங்கிரஸ் ஏற்பட்டு சுமார் 45 வருஷமானபோதிலும், அது எதை உத்தேசித்து, எப்படிப் பட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பது காங்கிரஸ் அனுபவம்பெற்ற யாவரும் அறிந்ததேயாகும். அது இராஜவிசுவாசப் பல்லவியைப்பாடி உத்தியோகம்பெற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமேயாகும். உதாரணம் வேண்டுமானால், நமது நாட்டில் இதுவரையிலும், இப்போதும் பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரிய வக்கீல்கள், பெரிய பட்டதாரிகள் முதலியவர்கள் எல்லாம் காங்கிரசினாலேயே பெரிய மனிதர்களானவர்கள் என்பதைக் கவனித்துப் பார்த்தால் விளங்கும். நானும் 10, 15 வருஷங்களுக்கு முன்பு இரண்டொரு பழைய காங்கிரசுகளுக்கும் சென்றிருக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் காங்கிரசின் முதல் தீர்மானம் இராஜவிசுவாசத் தீர்மானமேயாகும். உதாரணமாக, 1914ஆம் வருஷம் சென்னையில் கூடிய காங்கிரசுக்கு நான் சென்றிருந்தபோது கல்கத்தா திருவாளர் பூபேந்திரநாத் போஸ் தலைமை வகித்திருந்தார். காங்கிரஸ் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கையில் சென்னை கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் துரையவர்கள் காங்கிரசுக்கு விஜயம் ஆனார். அவர் விஜயமானதும் மற்ற நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு திருவாளர் சுரேந்திரநாத் பானர்ஜீ அவர்கள் உடனே எழுந்து ஒரு இராஜவிசுவாசத் தீர்மானத்தைப் பிரரேபித்து, வெகு அழகாக—அதாவது, 'இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கடவுளால் அனுப்பப்பட்டது' என்றும் 'இந்திய மக்கள் தலைமுறை தலைமுறையாய் இராஜவிசுவாசிகளாய் இருக்கவேண்டும்' என்றும் பேசிமுடித்தார். பலர் ஆமோதித்துப் பேசியபின் 5 நிமிஷ நேர கரகோஷத்துடன் அதை (இராஜவிசுவாச தீர்மானம்) நிறைவேற்றி, சென்னை அமிதவாத தேசியவாதிகளான அய்யங்கார் கூட்டத்தினர்கள் சமீபகாலம் வரை, எட்வர்டு மன்னரும் ஜார்ஜ் மன்னரும் விஷ்ணு அம்சமென்றே பேசி, வேதங்களிலிருந்தும் சாஸ்திரங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்டி வந்தார்கள். (அதாவது அரசர்கள், விஷ்ணு அம்சமென்று வேதம் கூறுவதாக உரைத்துக்கொண்டு வந்தார்கள்.)

கடைசியாக, சமீபகாலந்தொட்டுதான்—அதாவது, காங்கிரசின் பலனை (உத்தியோகங்களை) ஒரே கூட்டத்தார் (பார்ப்பனர் மாத்திரம்) அனுபவிப்பதில் பொறாமைப்பட்ட சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார், 'காங்கிரசின் பலன் எல்லோருக்கும் கிரமமாய் பங்கு

கிடைக்கவேண்டும்' என்று கேட்க ஆரம்பித்தது முதல், அதுபோலவே காங்கிரஸ் பலனும் எல்லோருக்கும் பங்குபோக ஆரம்பித்த பிறகே—இராஜவிசுவாசம் போய் ஒத்துழையாமை யாகி, இராஜவிசுவாசமாய் இருப்பவர்களை, 'தேசத் துரோகிகள்' என்றும் 'சுயநலக் காரர்கள்' என்றும் 'வகுப்புவாதிகள்' என்றும் சொல்லவேண்டியதாகி, வழக்கமாய் அனுப வித்து வந்த பலனை அடையமுடியாமல் போனவுடன், காங்கிரஸ்வாதிகள் (பார்ப்பனர்) 'தேசீயவாதி'களாகப் பரிணமிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சி என்பதாகவும், முஸ்லிம் லீக் என்பதாகவும், மற்றும் வகுப்புச் சங்கங்கள் என்பதாகவும் சில ஸ்தாபனங்கள் தோன்றி காங்கிரஸ் பலனில் (உத்தியோகங்களில்) பங்கு கேட்காது இருந்திருக்குமானால் இன்றையதினம் இந்தியாவில் இராஜவிசுவாசம் என்பது காங்கிரசுக்கே சொந்தமான ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்காய்—அதாவது, உரிமைசெய்த வியாபாரக் குறியாய் இருந்துவரும். சென்னபட்டணம் ஜார்ஜ்டவுன் ஆனதுபோல் பார்ப்பன மக்கள் பெயரும் ஜார்ஜ் அய்யர், ஜார்ஜ் சாஸ்திரி ஆகி இருக்கும். உதாரணமாக,

இராஜா, விஷ்ணு அம்சம் என்பதுகூட பார்ப்பனர் சொல்லி இருக்காவிட்டால் இன்று மற்ற யாருக்குமே தெரிந்திருக்காது என்பதேயாகும். அப்படி அவர்கள் சொன்னதி லிருந்தே இன்னும் பலர் அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிற்க,

இன்றும் காங்கிரஸ் என்பதற்கும் ஆறரைக்கோடி தீண்டாதார் என்பவர்களுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. அவர்கள் இராஜவிசுவாசிகள். மேலும் 8 கோடி முகமதியர் என்பவர்களுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை. இவர்களும் இராஜவிசுவாசிகள். வருணாசிரமம் பேசும் பார்ப்பனர்களும் தங்களை இராஜவிசுவாசிகள் என்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள். இந்த இரண்டு மூன்று கூட்டத்திலும் 100-க்கு ஒருவர் இருவர்கூட காங்கிரஸ்காரர்களாய் இருக்கிறார்கள் என்று தைரியமாய்ச் சொல்லமுடியாது. ஒருசமயம் முகமதியர்களில் ஒருவர், இருவர் என்கின்ற எண்ணிக்கை இருந்தாலும்கூட, தீண்டப் படாதார் என்பவர்களில் சுத்தமாய் தேசியவாதிகள் இல்லையென்பதை யாரும் மறுக்க முடியாது. கிறிஸ்தவர்களிலும் மிகச்சிலரே இருக்கக்கூடும். அவர்களும் வயிற்றுப் பாட்டிற்கு சர்ச்சுகளில் இராஜவாழ்த்துப் பாடிவிட்டு, வெளியில் வந்து வேடிக்கைக் கூட்டத்தில் 'ஜே' போடுபவர்களாகத்தான் இருக்கமுடியுமேயொழிய 'இராஜா வேண்டாம்' என்கின்றவர்கள் இல்லை என்றே சொல்லலாம். மற்றபடி, சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் தவிர பார்ப்பனரல்லாதவர்களில் வயிறாரக் கஞ்சி குடிக்கும் 100-க்கு 95 பேருக்கு மேலாகவே காங்கிரசினிடம் கவலையில்லாதவர்களும் அதை ஒப்புக்கொள்ளாதவர்களுமே இருப்பார்கள். வேண்டுமானால், தேர்தலில் ஓட்டுப்பெற வேண்டியவர்கள் இரண்டுக்கும் நல்ல பிள்ளைகள்போல் காட்டிக்கொள்வார்கள். மற்றும், இதை ஒரு வியாபாரமாய்க் கருதுகிறவர்கள், அதுவும் இலாபநஷ்டம் பார்த்து, இதைப் பயன்படுத்திக்கொள்பவர்களாகவே இருப்பார்கள். இவற்றைத் தவிர வகுப்பு மகாநாடுகள் என்பவைகள் பெரிதும் இராஜவிசுவாசப் பல்லவி பாடிக்கொண்டுதான் வருகிறது என்றாலும், ஒரு சில வாலிபர்கள் பார்ப்பனரல்லாதாரிலும் காங்கிரசைப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நான் மறக்கவில்லை. அதுவும் அப்படிப்பட்ட வாலிபர்களில், ஒரே கொள்கையாய் தொடர்ந்து அதில் இருக்கின்ற வாலிபர்கள் என்பவர்கள் பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கவேண்டியவர்களாகவே இருப்பார்கள். எந்த ஸ்தாபன மானாலும் அது ஒரு சம்பளம் கிடைக்கும் ஸ்தாபனமாகவும் வாழ்வுக்குச் சவுகரியமான ஸ்தாபனமாகவும் விளம்பரத்துக்கு அனுகூலமானதாகவும் ஏற்பட்டுவிட்டால், பிறகு அதில் கலந்துகொள்ளும் மக்கள் ஏராளமாகிவிடுவார்கள் என்பதையும் அந்த ஸ்தாபனத்தைப் பற்றிப் புராணம் பாடுவார்கள் என்பதையும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லித்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை. ஆதலால், அதைப்பற்றியே காங்கிரசின் யோக்கியதையை நிர்ணயித்துவிடமாட்டீர்கள்.

ஆகவே, இவை ஒருபுறமிருக்க, காங்கிரசின் கொள்கைகள்தான் என்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.

எந்தக் காரணங்களால் இந்த நாடு அன்னிய நாட்டார் என்பவர்களின் ஆட்சிக்கு ஆளாக நேரிட்டதோ, அதுவும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் தலைசிறக்க நேரிட்டதோ அந்தக் காரணங்களை இல்லாமல் செய்ய இந்தக் காங்கிரசில் ஏதாவது ஒரு கொள்கை இருக்கின்றதாக யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கிறேன்.

இந்தியாவின் பெருமையைப் பற்றி யார், என்ன பேசுவதாக இருந்தாலும், இந்தியாவில் பல மதம், பல சாதி, பலவித உயர்வு தாழ்வு என்பவைகள் இருந்து வருகின்றதை யாரும் மறுக்கமுடியாது. இந்தியாவில் தெருவில் நடக்காத, கண்களில் தென்படாத 'இழிமக்கள்' இருந்துவருவது இரகசியமல்ல. இந்தக் காரணங்களே இன்று அன்னிய ஆட்சி இந்த நாட்டில் இருந்து வருவதற்கும், பார்ப்பனர்கள் பாடுபடாமல் வாழ்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதற்கும் காரணம் என்பதையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் இல்லை. இதைச் சரிப்படுத்த யார் என்ன செய்தார்கள்? எந்தக் கொள்கையைக் காங்கிரஸ் திட்டத்தில் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்? அல்லது, அன்னிய ஆட்சியை ஒழித்த பிறகாவது இதற்கு என்ன மார்க்கம் செய்வதாகக் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

சுயராஜ்யத்தில் 'மதங்கள் ஒழிக்கப்படும்' என்றாவது, 'மத ஆதிக்கங்கள் ஒழிக்கப்படும்' என்றாவது, அல்லது அதுதான் இல்லாவிட்டாலும் 'சாதிகள் ஒழிக்கப்படும்' என்றாவது, 'சாதிப் பாகுபாடுகள் ஒழிக்கப்படும்' என்றாவது எங்காவது தீர்மான ரூபமாக வாவது எழுதப்பட்டிருக்கின்றதா? எங்காவது, யாருடைய வாயினாலாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? என்று கேட்கிறேன். மற்றும், மதங்களும், சாதிப் பாகுபாடுகளும் காப்பாற்றப்படும் என்று உறுதி கூறப்படுகிறதா, இல்லையா என்றும் கேட்கிறேன்.

அதாவது, மதத்தில் நடுநிலைமை வகிப்பதாகவும், வருணாசிரமம் காப்பாற்றப்படும் என்பதாகவும், சாதியில் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பாருடைய உரிமைக்கும் பங்கம் விளைவிக்கப்படமாட்டாது என்பதாகவும், எந்த மனிதனுடைய மாறுபட்ட அபிப்பிராயத்தையும் புண்படுத்தப்பட மாட்டாதென்பதாகவுமல்லவா ஒவ்வொரு சாதி மத ஆதிக்கக்காரனுக்கும் உறுதி கூறப்பட்டு வருகின்றது. பிரஜா உரிமைத் திட்டத்தில் 14-வதாக 'மத விஷயங்களில் சர்க்காரார் தலையிடமாட்டார்கள்' அதாவது, மதக் கொள்கைகளை மாற்ற முயற்சிக்க மாட்டார்கள் என்றும், 17-வதாக 'மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டோர் மனது புண்படும்படியாக எந்தக் காரியமும் செய்யமாட்டார்கள்' என்றும், அதாவது 'பிராமணர்கள் மனம் புண்படும்படி எதுவும் செய்யப்படமாட்டாது' என்றும் ஸ்பஷ்டமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதா, இல்லையா?

ஆதியிலும், இந்தக் கொள்கைகளையேதான் நமது பார்ப்பனர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டையும் ஒப்புக்கொள்ளச்செய்து, இதையே அரசியலிலும் அனுசரிக்கும்படி சட்டமாக்கி, சட்டப்படுத்தியதன் பயனாகத்தான் இதுவரை இந்தக் கவர்ன்மெண்டில் சரியான சீர்திருத்தம் ஏற்படுத்தமுடியாமலேயே இருந்துவருகின்றது. உதாரணமாக, 'சாரதா சட்டம்' எடுத்துக்கொள்ளுங்கள்; 'விபசாரிகள் சட்டம்' எடுத்துக்கொள்ளுங்கள். சர்க்காரால் சட்டமாக்கப்பட்டும் ஒருசில ஜனங்கள் மனம் புண்படுகிறதென்ற காரணம் கொண்டு, அவர்களது முட்டுக்கட்டையாலேயே அதுவும் சரிவர அமுலுக்கு வரமுடியாமல் இருந்துகொண்டு வருகின்றது. பார்ப்பனீயத் தொல்லை இல்லாதிருக்குமானால் அவை தானாக அமுலில் இருக்கும். இவ்விஷயத்தில் இன்றும் சட்டத்தை மீறுகின்றவர்கள் ஜனங்களா, சர்க்காரா என்று கேட்கிறேன். இந்த நிலைமை புதிய அரசாங்கத்திலும் 14, 17 பிரிவுகளை வைத்துக்கொண்டு எப்படி மாற்றக்கூடும் என்பதை யோசித்துப்

பாருங்கள். பாமர மக்கள், பகுத்தறிவற்ற மூடமக்கள் ஏமாறும்படி பேசிவிட்டால் போதுமா? உண்மையைப் பகுத்தறிவுடன் யோசித்துப் பார்க்கவேண்டாமா? என்று கேட்கிறேன்.

மத நடுநிலைமை வகிக்கும் சர்க்காரால்—எந்த மனிதனுடைய மனதும் புண்பட சகியாத சர்க்காரால், அது தன்னை எவ்வளவுதான் பூரண சுயேச்சை உடையது என்று சொல்லிக்கொண்டாலும் அதனால் நமக்கு என்ன பலன் உண்டாகக்கூடும்? வேண்டுமானால், பார்ப்பான் இன்றைய வாழ்வைவிட இன்னும் பல மடங்கு மேலாகவே வாழக் கூடும். ஆனால், தெருவில் நடக்க உரிமை இல்லாத 'பறையன்' நிலைமையும் சரீரத்தில் பாடுபட்டாகவேண்டிய 'சூத்திரன்' நிலைமையும் என்னவாகும்? என்றுதான் கேட்கின்றேன். இப்பொழுதும் பறையன் வீதியில் நடந்தாலே எத்தனை பார்ப்பனர் மனம் புண்படும் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் மனமும் புண்பட சகிக்காத சுயராஜ்யம் யாருக்குப் பயன்படக்கூடும்?

மற்றும், ஒருசமயம் திரு. ஜவஹர்லால் அவர்கள் பார்ப்பனரிடையே பேசும்போது, 'யாவருடைய, எந்த வகுப்பாருடைய உரிமையும் சுயராஜ்யத்தில் பறிக்கப்படமாட்டாது' என்று சொன்னார். ஆனால், உடனேயே மற்றொரு கூட்டத்தில் பேசும்போது, 'தீண்டாதாரை அனுமதிக்காத கோவில் பறிமுதல் செய்யப்படும்' என்று சொன்னார். இவற்றை திரு. காந்தி அவர்களும் ஆமோதித்து வருகிறார்.

அப்படியானால், மக்களின் மத, சாஸ்திர, பழக்க வழக்கம் சம்பந்தமான உரிமைகளை எல்லாம் என்ன செய்வது? அவற்றை ஒழிக்க ஆரம்பித்தால் யாருடைய மனதும் புண்படாதா? எந்த வகுப்பாருடைய உரிமையாவது இதனால் பாதிக்கப்படாதா? என்று யோசித்துப் பாருங்கள். இன்றைய நமது நாட்டு வாழ்க்கையே மேற்கண்ட மதம், சாஸ்திரம், புராணம், பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டுதானே இருந்துவருகின்றது. எனவே, இதிலிருந்து, ஒருவனுடைய உரிமை என்றால் என்ன என்பதைக் கவனித்து முடிவு செய்ய வேண்டாமா? காங்கிரசில் மனித உரிமை என்பது மதக் கொள்கைப்படி ஏற்பட்ட உரிமையா? சாஸ்திரத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது இது வரை அனுபவத்தில், பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட உரிமையா? அல்லது தேச ஆதாரத்திற்கு ஏற்பட்ட உரிமையா? மனித இயற்கைக்கு ஏற்பட்ட உரிமையா? எதைக் குறிக்கின்றது என்று கேட்கிறேன்.

மத உரிமை என்றால் இந்து மதத்தின்படி மேளமடிக்கவேண்டும். இஸ்லாம் மதத்திற்கு மேளம் கூடாது. என்பது போன்ற உரிமைகளில் எதைக் காப்பாற்றுவது?

பார்ப்பனனுக்கும், பறையனுக்கும் உள்ள மதக் கொள்கை உரிமை, சாஸ்திர உரிமை, பழக்கவழக்க உரிமை ஆகியவைகள் என்ன ஆவது? மக்களுக்கு மக்கள், சாதிக்கு சாதி, ஊருக்கு ஊர் மாறுபட்ட தேசாச்சார உரிமை என்ன ஆவது? மனித இயற்கை உரிமை என்றால், பழக்க வழக்க மத உரிமை என்ன ஆவது? முதலாளி பாதுகாப்பும், ஜமீன்தாரன் பாதுகாப்பும் என்ன ஆவது?

ஆகவே, இவர்கள் இருவரும் இதைக் கேட்கும் மக்களை முழு மூடர்கள் என்று கருதிக்கொண்டே இந்தப்படி—அதாவது, யாருடைய உரிமையும் காப்பாற்றப்படுமென்று ஒருபுறமும், பறிமுதல் செய்யப்படும் என்று மற்றொரு புறமும் பேசுகின்றார்கள் என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில்,

முதலாவது, திரு. காந்தியும் திரு. ஜவஹர்லாலும் கேட்கும் சுயராஜ்யம் ஜனநாயக சுயராஜ்யமா? ஏகநாயக சுயராஜ்யமா? என்பதை முதலில் விளக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஜனநாயகமானால், 'தீண்டாதவர்களைக் கோவிலுக்குள் விடமாட்டேன், குளத்தில் விட

மாட்டேன்' என்று சொல்லுகின்றவர்கள் யார்? பிறகு, அந்தக் கோவிலையும், குளத்தையும் பறிமுதல் செய்கின்றவர்கள் யார்? என்று யோசித்துப் பாருங்கள். ஜனங்கள் விட மாட்டேன் என்று சொன்னால், அந்த ஜனப்பிரதிநிதி சர்க்கார்—யார் மனதையும் புண் படுத்தாத சர்க்கார் கோவிலை எப்படிப் பறிமுதல் செய்யமுடியும்? கோவிலுக்குள் பறையனைவிட இஷ்டப்படாத ஜனங்கள், இஷ்டப்படும் பிரதிநிதியைத் தெரிந்தெடுப் பார்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். ஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் இராஜிய பாரம் ஜனநாயக ராஜிய பாரமாகுமா? மற்றும், இந்திய ஜனங்கள் தங்களுக்குள் இருக்கும் சாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஜனநாயக சுயராஜ்யம் வேண்டுமென்றால் இது பித்தலாட்டமா, அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள். இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பதை யார் வேண்டாமென் கின்றார்கள்? இஸ்லாமானவர் ஆட்சேபிக்கின்றார்களா? கிறிஸ்தவர் ஆட்சேபிக்கின்றார் களா? அல்லது கிறிஸ்துவ அரசாங்கம் ஆட்சேபிக்கின்றதா? ஆரம்பத்திலேயே புரட்டு பேசும் சுயராஜ்ய அதிகாரம் வந்தால் கொடுமை செய்யுமா? நன்மை செய்யுமா? இன்று தீண்டாமை அனுசரிக்கும் ஜனங்களுக்குச் சர்வ அதிகாரம் வந்தால் தீண்டாமையைப் பலப் படுத்துவார்களா? தளர்த்துவார்களா? எந்த அரசாங்கத்தில் தீண்டாமை இருந்தாலும் தீண்டாமையை அனுசரிக்கின்றவர்கள் இன்று சுயராஜ்யம் கேட்கும் இந்துக்களேயொழிய வேறல்லர்.

ஆகவே, இந்தமாதிரி வார்த்தைகள் மக்களை ஏய்க்கும் தந்திர வார்த்தை அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

சகோதரர்களே! காங்கிரசில் நான் இருக்கும்போது 'காங்கிரசில் சாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது' என்று ஒரு தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியில் நானும் திரு. எஸ். இராமநாதனும் சேர்ந்து எங்கள் சொந்த செல்வாக்கில் நிறைவேற்றி வைத்தோம். ஆனால் உடனே திருவாளர்கள் சி. இராஜகோபாலாச்சாரி, டாக்டர் இராஜன், டி.வி.எஸ். சாஸ்திரி, என். எஸ். வரதாச்சாரி, கே. சந்தானம் முதலாகிய காங்கிரஸ் தலைவர்கள் என்கின்ற பார்ப்பனர்கள் இராஜினாமா செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா என்று கேட்கின்றேன். காங்கிரஸ் பணத்தில் காங்கிரஸ் பக்தரால் நடத்திய குருகுலத்தில்தானே எல்லோரையும் சமமாய் வைத்துச் சாப்பாடு போடவேண்டுமென்று நாங்கள் சொன்னதற்கு மேற்கண்ட தலைவர்களேதாம் 'அது அவரவர்கள் இஷ்டமேயொழிய யாரையும் கட்டாயப் படுத்தி, யாருடைய மனதையும் புண்படுத்தி, யாருடைய உரிமையையும் பறிக்கக் கூடாது' என்று பதில் சொன்னதோடு, அதற்காக அந்தக் குருகுலமே கலைக்கப்பட்டு இப்போது அதை ஒரு பார்ப்பனர் தனது சொந்தச் சொத்தாக அனுபவிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்கின்றேன். இந்த விஷயத்தை திரு. காந்தியும் ஒப்புக்கொண்டு அது அவர் தனி அபிப்பிராயம் என்று செட்டிமார்நாட்டு சுற்றுப்பிரயாணத்தில் சமாதானம் சொல்லவில்லையா? என்று கேட்கிறேன்.

இந்த மகாத்மாக்களும், தியாகிகளும், தலைவர்களும் இதற்குள்ளாக இப்போது புடம்போட்ட தங்கமாய்விட்டார்களா? அல்லது சலவைசெய்த மக்களாய்விட்டார்களா? என்று கேட்கின்றேன். அல்லது, இந்த விஷயங்கள் பொய்யா? என்று கேட்கின்றேன். அல்லது, இன்றைய சுயராஜ்யத் திட்டத்தில் பார்ப்பனருக்குள்ள இந்த உரிமை பறிக்கப் பட்டுவிட்டதா, அல்லது இந்த 'யாருடைய மனமும் புண்படக்கூடாது' என்கின்ற தர்மநீதி எடுத்தெறியப்பட்டு விட்டதா? என்று கேட்கிறேன்.

காங்கிரஸ் அங்கத்தினரில் சாதிவித்தியாசம் பாராட்டப் பட்டதில்லை என்று ஒரு நண்பர் சொன்னார். என்னுடைய சொந்த அனுபவத்தை இங்கு எடுத்துச் சொல்வதற்கு மன்னிக்கவேண்டுகிறேன். அதாவது, நானும் உயர் திரு. எஸ். சீனிவாசய்யங்காரும் காங்கிரஸ் பிரச்சார விஷயமாய் திண்டுக்கல்லுக்குப் போனபோது ஒரு பார்ப்பனர்

வீட்டுக்குப் போயிருந்தோம். அந்தக் காலத்தில் நான் வேறாகவைத்தே சாப்பாடு போடப் பட்டேன். ஆனாலும், பகலில் சாப்பிட்ட எச்சில் இலை அப்படியே இருக்க, அதன் பக்கத்தில்தான் இரவும் இலைபோடப்பட்டுச் சாப்பிட்டேன்.

இது இப்படியிருக்க, மற்றொரு சமயம் நானும் தஞ்சை திரு. வெங்கிடசாமி பிள்ளையும் காங்கிரஸ் பிரச்சாரமாக பெரியகுளத்திற்குப் போனபோது ஒரு வக்கீல் பார்ப்பனர் வீட்டில் இறக்கப்பட்டோம். அப்போது காலை பலகாரம் சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்தில் பகல்சாப்பாடும், பகல்சாப்பாடு சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்திலும் காலை பலகாரம் சாப்பிட்ட எச்சில் இலைக்குப் பக்கத்திலும் இராத்திரி சாப்பாட்டுக்கும் இலை போடப்பட்டு, எறும்புகளும் பூச்சிகளும் ஈக்களும் ஊறிக்கொண் டிருக்கவே சாப்பிட்டுவந்தோம். இவற்றையெல்லாம் இலட்சியம் செய்யாமல்தான் காங்கிரசில் உழைத்தேனானாலும் காங்கிரசில் சாதிவித்தியாசம் பாராட்டப்படுவதில்லை என்பதை நான் ஒப்பமுடியாது என்பதற்காக இதை சொல்லிக்கொள்ளுகின்றேன்.

இவ்வளவு தூரம் போவானேன்? இன்றும் காங்கிரசிலுள்ள காங்கிரசை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும், மற்றும் 'காங்கிரசும் மகாத்மாவும்தான் இந்தியாவுக்கு விடுதலை சமத்தவம் வாங்கிக் கொடுப்பவர்' என்று சொல்லும் பார்ப்பனரில் 100-க்கு 5 பேராவது சாதிவித்தியாசம் விட்டவர்களா? விடத்தயாராக இருக்கின்றவர்களா? என்று கேட்கின்றேன். பார்ப்பனரல்லாதார்களில் 100-க்கு 10 பேராவது சாதிவித்தியாசம் விட்டவர்களா? என்று கேட்கிறேன். மூடிவைப்பதில் பயனென்ன? 'வாய்க்கு ருசியான சாப்பாடு எங்கு கிடைத்தாலும் சாப்பிடலாம்' என்கின்ற ஒன்றிரண்டு 'துறவி'களைப் பார்த்து முடிவு கட்டலாமா? என்று கேட்கின்றேன்.

சுயராஜ்யம் வந்தகாலத்திலும் இந்த மனிதர்கள்தாமே இந்தநாட்டு மக்களாயிருக்க முடியும்? இவர்களது பிரதிநிதிகள்தாமே ஜனநாயக ஆட்சி செலுத்துவார்கள்? ஆகவே இந்த நிலையில் என்ன மாறுதலை ஏற்படுத்திவிட முடியும்?

மற்றும், பொருளாதாரத்துறையில் செல்வவான்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு என்ன நன்மைசெய்ய சுயராஜ்யத்தில் திட்ட மிருக்கின்றது என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். பணக்காரனுடைய பணத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி நான் கேட்கவில்லை. தேசத்துப் பணமெல்லாம் சர்க்காருடையதாவதானால் ஆகட்டும். இல்லையானால், பணம் ஒரே பக்கம் போய்ச் சேருவதற்கு மார்க்கமில்லாமலிருக்க வேண்டும் என்றுதான் சொல்லு கின்றேன். இன்றைய தினம் பணக்காரனுடைய பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்குப் பங்குபோட்டுக் கொடுத்துவிட்டால், இந்த ஏழை நாளைக்கு கயா சிரார்த்தமும், மதுரைவீரன் பூசையும், காவடி அபிஷேகமும் பண்டிகையும் செய்து, வீட்டில் உட்கார்ந்துகொண்டே பணத்தைத் தொலைத்துவிடுவான் என்பதும், பிறகு பழையபடி புரோகிதனும் தந்திரக் காரனும் ஏமாற்றுக்காரனும்தான் மறுபடியும் பணக்காரன் ஆகிவிடுவான் என்பதும் எனக்குத் தெரியும். ஆதலால்தான், நாட்டுச்செல்வம் ஒரு பக்கமே போய்க் குவியாமல் இருக்கும் திட்டமே போடவேண்டும் என்றும், யாருக்கும் எந்தத் தொழிலும் செய்யவும், எல்லோரும் எதையும் படிக்கவும், சவுகரியமும் அனுமதியும் இருக்கவேண்டும் என்றுந்தான் சொல்லுகிறேன்.

வருணாசிரம சுயராஜ்யத்தில்—யார் மனதையும் புண்படுத்தாத சுயராஜ்யத்தில் இது முடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

மற்றும், இன்றைய இந்தியநாட்டின் அடிமைத்தனத்திற்கும், தரித்திரத்திற்கும் ஆதாரவாயிருப்பது மதமும் கோவில்களும் என்பது நீங்கள் எல்லோருமே ஒப்புக்கொண்ட விஷயமாகும். ஆகவே, காங்கிரசினால் இந்த மதமும் கோவில்களும் ஒழியுமா என்று

நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்று நமது நாட்டில் காங்கிரசில் இருப்பவர்கள் பெரிதும் மதப் புரோகிதக் கூட்டத்தாரும் அவர்களது மக்களும், கோவில் பூசாரி மக்களும் அல்லவா என்று கேட்கின்றேன். காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் இவற்றை ஆதரிக்கின்றவர்கள் அல்லவா? என்று கேட்கின்றேன். மதமும் கோவிலும் போய்விடுவது உண்மையானால் இந்த ஆட்கள், 'காங்கிரசுக்கு ஜே' 'காந்திக்கு ஜே!' என்று கத்துவார்களா? என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஏதோ பார்ப்பனருக்குக் கையாளாய் இருப்பதன் மூலம் ஏதோ ஒருவிதத்தில் வாழ்க்கை நடைபெறுகின்றது என்பது தவிர, காங்கிரசின் யோக்கியதை அறியாத காங்கிரஸ் பக்தர்கள் யார் இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, சகோதரர்களே, காங்கிரஸ் பைத்தியம் என்கின்ற பார்ப்பனராட்சியிலிருந்து விலகி மக்களுக்கு உண்மைச் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டாலொழிய இந்த நாட்டுக்கோ மக்களுக்கோ எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்பதுதான் எனது உறுதி.

[கோட்டாறு சுயமரியாதை சங்க ஆண்டுவிழாவில், 4-7-1931-ல் பேச்சு—'குடி அரசு' 12-7-1931]

5. காந்தியாரும் காங்கிரசும்

பெரியோர்களே!

திரு. காந்தியவர்கள் பார்ப்பனப் பிரச்சாரகர் என்றும் பார்ப்பனீயத்திற்குப் பாடு படுபவர் என்றும் சொல்லிவந்திருக்கிறேன். இந்த அபிப்பிராயம் எனது அனுபவத்தில் பலப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது.

காங்கிரஸ் ஒரு வகுப்புவாத சபையேயாகும்; தேசியப் போர்வைபோர்த்திய வகுப்பு வாதக் குரங்கேயாகும். அதாவது, பிடிவாத வாதமாகும். தேசியம் என்னும் பித்தலாட்ட வார்த்தையைச் சொல்லிக்கொண்டே வகுப்புவாதங்களை—அதாவது, உயர்வகுப்பு உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு ஏற்பட்ட ஸ்தாபனமாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும், திரு. காந்தியிடம் நாம் சமதர்மத்தை எதிர் பார்க்கக் கருதினோமானால் நாம்தான் மூடர்களாய்த் தீருவோம். அதாவது, ஆயுள் காலம் முடியும் வரை அவரிடம் சமதர்மத்தையோ, ஒற்றுமையையோ காணமுடியாது. அவர் வடநாட்டுப் பணக்காரர்களையும், தென்னாட்டுப் பார்ப்பனர்களையுந்தான் மனிதராய்க் கருதுகின்றார். அவர்களது சகவாசந்தான் அவருக்கு உண்டு. அவர்களது குறைகளைத் தான் உலகக் குறைகளாகக் கருதுகின்றார். ஆதலால், திரு. காந்தியவர்களின் திட்டமெல்லாம், அவ்விருவருடைய குறைகளைத் தீர்ப்பதற்காகத் தான் இருக்குமே ஒழிய ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் உயரவும் அவருக்கு இரண்டு வழிகள்தாம் தெரியும். ஒன்று, இராட்டினம் சுற்றுவது; இரண்டாவது, 'தீண்டாமை பாராட்டுவது பாவம்' என்று வாயால் சொல்லுவது. இந்த இரண்டும் கூட மில்லுக்காரனையும், பார்ப்பானையும் கண்டமாத்திரத்தில் தத்துவார்த்தம் சொல்லவேண்டி வரும்.

[மாயவரத்தில் 17-7-1931லும், பட்டுக்கோட்டையில் 18-7-1931லும் சொற்பொழிவு—'குடிஅரசு' 26-7-1931]

6. சேரமாதேவி குருகுலம்

பெரியோர்களே! தாய்மார்களே!

அந்தக் காலத்து எங்கள் சக்திக்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்—கேளுங்கள்! நான் காங்கிரஸ் காரியதரிசியாயும், தலைவனாயும் இருந்த காலங்களில் தமிழ் நாட்டு வாலிபர்களை தேசிய வீரர்களாக்கவென்று வி. வி. எஸ். அய்யர் என்னும் ஒரு தேசிய பார்ப்பனர் காங்கிரசை 10,000 ரூபாய் கேட்டபோது, அதற்கு நானே பிரதானமாய்

இருந்து ரூபாய் அனுமதித்தேன். அந்தப் பணம், குருகுலம் என்று ஒரு ஆச்சிரமம் வைத்து, அதில் பார்ப்பனப் பிள்ளைகளை வீட்டிற்குள் வைத்தும், பார்ப்பனரல்லாத பிள்ளைகளை வெளியில் வைத்தும் சாப்பாடுபோட்டு வருணாசிரம தருமம் கற்றுக் கொடுக்கப் பயன்படுத்தப்பட்டதுடன், அதன் பேரால் தமிழ்மக்களிடம் மற்றும் 20, 30 ஆயிரம் ரூபாய் வசூல்செய்யப்பட்டது. அதற்கு 'தமிழ்நாடும்', 'நவசக்தியும்' ஆதரவு அளித்தன. இந்தச் சூழ்ச்சியான அக்கிரமம் சகிக்காமல் நான், முதலியார் அவர்களிடம் மாயவரத்தில் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன். அப்போது அவர்கள் டாக்டர் நாயுடு அவர்கள் பேரில் புகார்சொல்லி, நாயுடு அவர்கள் 'தமிழ் நாடு' பத்திரிகையில் ஆதரிப்பதால் நான் ஆதரிக்கவேண்டியிருக்கின்றது என்றார். இருவரும் நாயுடு அவர்களிடம் தெரிவித்துக் கொண்டோம். அவ்வளவுதான் சங்கதி.

உடனே டாக்டர், குருகுலத்தின்மீது போர்தொடுத்தார். தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் தோழர்கள் இராஜகோபாலாச்சாரியார், சீனிவாச அய்யங்கார் உள்பட எல்லோரும் நாயுடு அவர்களுக்கு விரோதமாய் எவ்வளவோ தொல்லைகள் விளைவித்தும் பயன்படாமல், கடைசியில் குருகுலம் அடியோடு அழிந்தும் அதில் இப்போது படைக்கள்ளியும், நெருஞ்சில் முள்ளும் வளரும்படி, பாம்பும் பூச்சியும் வாழும்படி ஆகிவிட்டது.

[ஈரோட்டில், 26-11-1933-ல் சொற்பொழிவு—'புரட்சி' 3-12-1933]

7. காங்கிரஸ்—ஒரு வகுப்பு ஸ்தாபனம்

பெரியோர்களே!

இன்று நாங்கள் இங்கு ஏன் இவ்வளவு ஏராளமாய்க் கூடியிருக்கிறோம் என்பதை யாவரும் அறிந்திருப்பீர்கள்.

27 மாதங்களாக நம்மை ஆண்டு பல தொல்லைகளுக்குள்ளாக்கிவந்த காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி ஒழிந்ததற்காக, மகிழ்ச்சி தெரிவிக்கவேண்டியே கூடிஇருக்கிறோம். இது இயற்கையேயாகும்.

மக்களுக்கு ஏற்பட்டிருந்த கொடுமைகள் ஒழிந்தால் அவர்கள் மகிழ்ச்சியடைந்து கொண்டாட்டம் கொண்டாடத்தான் செய்வார்கள்.

இன்று இந்தக் கொண்டாட்டம் இந்தியா முழுவதும் கொண்டாடுவார்கள். அதுபோல் இங்கும் கொண்டாடுகிறோம்.

இது சில தோழர்களுக்கு அதிருப்தியை உண்டாக்கி இருக்கிறது. அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

இந்த மந்திரிகள் ஆட்சியில் பல கஷ்டங்களையும், தொல்லைகளையுமடைந்த மக்கள் ஏன் விடுதலை நாளைக் கொண்டாடமாட்டார்கள்? இது எங்கும் நடப்பதுதானே! இதற்கு உதாரணம் வேண்டுமானால், சமீபத்தில் அதாவது, ஒரு மாதத்திற்குமுன், புராணக்கதைப் படி நரகாசூரன் என்ற அசுரன் கொல்லப்பட்டதற்காக தீபாவளி என்று ஒருநாளை வைத்து, அன்று எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகியும், பலகாரங்கள் செய்து சாப்பிட்டும், புது ஆடைகள் வாங்கிக் கட்டியும் மகிழ்ச்சி கொண்டாடவில்லையா? இதில் ஏமாந்த, அறிவற்ற திராவிடர்களும் கலந்து கொள்ளவில்லையா? அதுபோல், 27 மாதங்களாக பலவிதக் கஷ்டங்களையும், தொல்லைகளையும் அடைந்த மக்கள் அப்படித் தொல்லைகள் உண்டாக்கிவந்தவர்கள் ஒழிந்ததற்காக ஏன் விழாக் கொண்டாடமாட்டார்கள்?

நான் உண்மையாகக் கூறுகிறேன்,—தோழர் ஜின்னா அவர்கள் அறிக்கைவிட்டதும் காங்கிரஸ்காரர்கள் பேசாமல் சும்மா இருந்திருந்தால், இவ்வளவு பிரமாதமாக இருக்காது;

இந்தக் கொண்டாட்டம் எங்கேயோ முக்கியமில்லாத இடங்களில் கொண்டாடி இருப்பார்கள்; இவ்வளவு ஆர்ப்பாட்டம் இருக்காது. ஆனால், அறிக்கை வெளிவந்ததும் காந்தியார் முதல் பலர், 'இது இந்து—முஸ்லிம் கலவரத்திற்கு இடமுண்டாக்கும்' என்று அறிக்கைகள் விட்டனர்; இதை ஒரு இந்து-முஸ்லிம் கலவரமாக ஆக்கவும் முயற்சித்தனர்; அதன் பேரிலேயே, தோழர் ஜின்னா அவர்கள் அறிக்கையை ஆதரித்தும், 22-ந்தேதி 'விடுதலை விழா' கொண்டாட வேண்டியது அவசியமென்றும், பார்சிகள், மைசூர் பிராமணர்கள், ஆதித் திராவிடர்கள், திராவிடத் தலைவர்கள், திராவிட ஸ்தாபனங்கள் மற்றும் பல தனிப்பட்ட பிரபலஸ்தர்கள் ஆகியவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

சிலர்—தேசியவாதிகள் என்பவர்கள், இந்தக் கொண்டாட்டம் இந்து மதத்திற்கு விரோதமானது என்று துண்டு விளம்பரம் போட்டு வினியோகித்து இருக்கிறார்கள். இது எவ்வளவு இழிவான, போக்கிரித்தனமான காரியமென்று பாருங்கள். இந்து மகாசபையும், இந்து மகாசபைத் தலைவரும் இதுவரை இதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை.

காங்கிரசில் இந்து—முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றிப் பேசிவந்ததின் பித்தலாட்டம் இப்போதாவது மக்களுக்கு விளங்கியிருக்கும் என்று கருதுகிறேன். தோழர் காந்தியார், பெசன்ட் அம்மையாரையும் திலகரையும் தள்ளிவிட்டுத் தான் அரசியல் தலைவராக வருவதற்கு இந்த இந்து-முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தைத்தான் மிகப்பிரமாதமாகப்பேசி, அதுவே தனது முக்கிய கொள்கையென்றும் சுயராஜ்யம்கூட அதற்குப் பிற்பட்டது தானென்றும் பறைசாற்றி, முஸ்லிம்களை ஏமாற்றி, முஸ்லிம் தலைவர்களை சுவாதீனப் படுத்திக்கொண்டு தலைவரானார். ஆனால், இப்போது அது என்னவாய் முடிந்தது?

சில காலிகள் இந்த விழாவில் கலந்துகொள்கிற இந்துக்களைக் கூலிகளென்றும், 'குலாம்'களென்றும் துண்டு விளம்பரம் போட்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. யார் கூலி என்பது அவரவர் நிலைமையை யோசித்துப் பார்த்தால் விளங்கும்.

இந்த விழாவில் முஸ்லிம்களைவிட ஆதித் திராவிடர்களும் தமிழர் கழகங்களும் சுயமரியாதைச் சங்கங்களும் ஜஸ்டிஸ் சங்கங்களும் கலந்துகொள்ள உரிமை உண்டு.

இந்த விடுதலைவிழாக் கொண்டாட்டத்தைக் கொண்டாடும்படி, நானே ஓர் அறிக்கை விடவேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதற்காகப் பல ஏற்பாடுகளும் செய்துவந்தேன். ஆனால், ஜனாப் ஜின்னா அவர்கள் முந்திவிட்டார்கள். இந்த நாளைக் கொண்டாடவேண்டுமென்று ஜனாப் ஜின்னா அறிக்கை விட்டதற்காக அவர்மீது காங்கிரஸ்காரர் கோபப்படுகிறார்கள். அவர்மீது ஒருகுறையும் கூறவேண்டியதில்லை. என்மீது வேண்டுமானால் குறைகூறலாம்.

நான், 'காங்கிரஸ் என்பது அரசியல் ஸ்தாபனமல்ல; அது ஒரு வகுப்பாருடைய நன்மைக்காக உழைக்கும் வகுப்பு ஸ்தாபனம்' என்று கருதி 1924 ஆம் வருடத்திலேயே அதைவிட்டு வெளிவந்து விட்டேன். வெளிவந்ததும், 'காங்கிரஸ் பார்ப்பனர்கள் நன்மைக்காக உழைப்பது' என்பதை வெளிப்படுத்தினேன். 1925 ஆம் வருடம் முதல் வகுப்புவாதி என்ற பட்டமும் சூட்டப்பட்டேன். ஆனாலும், காங்கிரசின் வகுப்பு உணர்ச்சியை நானே முதலில் வெளியாக்கினவனானேன்.

1926ஆம் வருடத்திலிருந்து இன்றுவரை திராவிடர்களுக்குக் காங்கிரசினால் ஒரு நன்மையும் ஏற்படாதென்றும், ஏற்படவில்லையென்றும், அது தமிழர்களை அடிமைப் படுத்தி அடக்கிவைக்கவே வேலை செய்து வருகிற ஆரிய ஸ்தாபனமென்றும் கூறியதுடன், 'காங்கிரஸ் ஓர் அரசியல் ஸ்தாபனமல்ல; அது ஒரு வகுப்பாரின் நன்மைக்காகப் பாடுபடும் ஒரு வகுப்பு ஸ்தாபனம்' என்றே கூறிவருகிறேன்.

1686—45

அதை இன்றும் யாராவது மறுக்கமுடியுமா? இன்று, காங்கிரஸ் யாருடைய ஆதிக்கத்திலிருக்கிறது? காங்கிரசில் எல்லா உயர்ந்த பதவிகளையும் ஆரியர்களே அனுபவித்து வருகிறார்கள். காந்தியாரும் அதையே தான் ஒத்துக்கொள்வதோடு, 'ஆரிய ஆட்சிக்கே உழைக்கிறேன்' என்று வெளிப்படையாய்ச் சொல்லிவருகிறார். அதாவது, 'தான் கோரும் சுயராஜ்யம், இராமராஜ்யத்தை ஸ்தாபிப்பதே' என்று 100 தடவை கூறியிருக்கிறார். அதற்காகவே உயிர் வாழ்வதாகவும் கூறுகிறார்.

திராவிடர்களாகிய நமக்கு இராமஇராஜ்யத்தால் எவ்வளவு கேடுகள் உண்டாகும் என்பதைச் சற்று யோசித்துப்பார்த்தால் நன்றாக விளங்கும்.

ஜனாப் ஜின்னாவைப் போல்தான் நாமும் கருதுகிறோம். காங்கிரஸ் என்பது— திராவிட மக்களைச் சூத்திரர்களாக ஆக்கி, ஆரியர்களுக்கு அடிமைப்படுத்துவதற்காகவே இருக்கும் ஸ்தாபனம் என்று கருதுகிறோம். ஆகையால், நமது இருவருடைய வேலையும், என்ன விலைகொடுத்தாவது காங்கிரசை ஒழிக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

உதாரணம் வேண்டுமானால் கூறுகிறேன். காங்கிரஸ் பதவிக்கு வந்தவுடன் எதற்காக 'வந்தேமாதரப்' பாட்டைப் பாடவேண்டும்? ஒரு மதஸ்தர்களின் மனத்தைப் புண்படும்படி செய்யும் என்று தோழர்கள் லால்ஜானும், அமீதகானும் ஆட்சேபித்தால் அவர்களை வெளியில்போகும்படி சொன்னது எவ்வளவு ஆணவமான செயல் என்பதைப் பாருங்கள்!

வங்காளத்தைச் சேர்ந்த பங்கிம் சந்திரசட்டர்ஜி என்பவரால் எழுதப்பட்ட 'ஆனந்த மடம்' என்ற புத்தகத்தில் முஸ்லிம்களை எவ்வளவு இழிவாகவும் கேவலமாகவும் எழுதி இருக்கிறார் என்பதைப் பாருங்கள்!

அந்தப் புத்தகத்தில் முஸ்லிம்களின் மனத்தைப் புண்படுத்தும்படியான பல பாகங்கள் இருக்கின்றதுடன், முஸ்லிம்களைத் தாடிக்காரப் பன்றிகள் என்றும், அவர்களைக் கண்ட விடங்களிலெல்லாம் அடித்துக் கொல்லவேண்டுமென்றும் எழுதப்பட்டு இருக்கிறது. அந்தப் புத்தகத்திலுள்ள பாடல்களை சட்டசபையில் பாடவேண்டாமென்று கூறினால், சட்டசபையைவிட்டு வெளியில் போகும்படி கூறினால் அவர்கள் சும்மா இருப்பார்களா?

நான் கேட்கிறேன்: இன்று சைவர்களில் ஒருவர் விஷ்ணு மதத்தையும் புராணத்தையும் விஷ்ணு கடவுளையும் பற்றி இழிவாகப் புத்தக மெழுதினால், விஷ்ணு பக்தர்கள் சும்மா இருப்பார்களா? அதேபோல், சைவமதத்தையும் புராணத்தையும் கடவுளையும் பற்றி—புராணங்களில் உள்ளதுபோல்கூட, வைணவர்கள் எழுதினால், சைவர்கள் சும்மா இருப்பார்களா?

இன்று காங்கிரஸ் ஆட்சிசெய்த கொடுமைகளைச் சொன்னால் தேசியத் தம்பிகளுக்குக் கோபம் வருகிறது. நாம் இப்போது என்னென்ன குறைகளை, கொடுமைகளைக் கூறுகிறோமோ அவைகளை அன்றே எடுத்துக்காட்டினோம். அப்போது புத்தியில் ஏறவில்லை.

சட்டசபையில் எல்லா மதஸ்தர்களும் கூடியுள்ள ஓர் இடத்தில் 'வந்தேமாதரம்' பாடக்கூடாதென்று கூறியபோது, தோழர் இராஜகோபாலாச்சாரியார் ஆணவமாகவும், யோக்கியப்பொறுப்பில்லாமலும் பதில் கூறினார். இதன் கருத்தென்ன? 'நாம் பதவிக்கு வந்து விட்டோம்; முஸ்லிம்களை ஒழித்து விட்டோம்' என்கின்ற எண்ணத்தின்மீது வெற்றிச் சங்கு ஊதுவதாகத்தானே அர்த்தம்?

அதுதான் போகட்டும். பள்ளிகளில் அரசியல் தலைவர்கள் படங்களையும், கட்சிக் கொடிகளையும் தொங்கவிடக் கூடாதென்று ஆட்சேபித்தால், அதைக் காதிலும் போட்டுக் கொள்வதில்லை. பள்ளிக்கூடத்தில்—பொதுப்பணத்தில் காந்திபடம் மாட்டுவது என்பதும், முஸ்லிம்களை இழிவுபடுத்தும் மூவர்ணக்கொடியைக் கட்டவேண்டுமென்பதும் அரசியல் கொள்கையா, வகுப்புத்திமிர் கொள்கையா? என்று கேட்கிறேன்.

பள்ளிகளில் பலகட்சியாரும், பல வகுப்பாரும் மதஸ்தர்களுமிருப்பார்கள்; அங்கு காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டியராக இருப்பதால், மனத்தைப் புண்படும்படி செய்வதுதான் அரசியலா? ஒரு பிரகஸ்பதி கேட்கிறார், 'பள்ளிகளில் இராஜா படம் இருக்கும்போது, அரசியல் தலைவர்கள் படங்கள் ஏன் இருக்கக்கூடாது?' என்று.

இராஜா படம் இருக்கலாம்; யார் இராஜாவானாலும் அந்தப்படம் இருந்துதான் தீரும். அதற்குக் காரணமிருக்கிறது. அவர் இந்த நாட்டை ஆளுகிறார். நாமெல்லாரும் அவருடைய குடிகள்; அதனால் அவர் படம் இருக்கலாம். அந்த இராஜா போய்விட்டால் அடுத்த இராஜா யாரோ அவர் படம் இருக்கலாம். அவர் இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் சக்கரவர்த்தி; அவரை யாரும் சக்கரவர்த்தியல்லவென்று சொல்லமுடியாது. நம்மில் அபிப் பிராய பேதமில்லாமல் எல்லோருக்கும் அரசராயிருக்கிறார். ஆனால், காந்திக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அவரை இந்தியர்களெல்லோரும் அரசரென்றோ, தலைவ ரென்றோ, பிரதிநிதியென்றோ ஒப்புக்கொள்கிறார்களா? காங்கிரஸ் கட்சிக்குத்தானே அவர் தலைவர்! காங்கிரஸ் கட்சி ஜெயித்ததால் அவர்படம் வைக்க வேண்டுமென்றால்—எந்தக் கட்சி தேர்தலில் வெற்றி பெறுகிறதோ, அந்தக் கட்சித் தலைவர் படத்தை—இராஜா படம்போல் பாவிக்கலாம் என்பதைக் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? என்று கேட்கிறேன்.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுக்கு இருந்துவந்த சில உபகாரச் சம்பளத்தில் கையை வைத்துக் குறைத்துவிட்டார்கள். ஆரம்பப் பள்ளிக் கூடங்களையெல்லாம் மூடிவிட்டார்கள். இதையெல்லாம் கேட்டால், முதல் மந்திரியார்— 'வாய்க்கால் கரைகளில் அட்டைகளில் எழுதிப் படித்துக் கொள்ளும்படி' கூறுகிறார். இது அரசியல் கொள்கையா, பார்ப்பனீயக் கொள்கையா?

இந்த நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களை, 'ஹரிஜனம்' என்ற மதப்பெயரைச் சூட்டி அழைக்கும்படி சட்டம் செய்தார்கள். இது அரசியல் கொள்கையா? மதக் கொள்கையா? தமிழ்நாட்டில் 'உயர்திரு', 'திருவாளர்' போன்ற தமிழ்ப் பதங்கள் வைத்து அழைத்து வந்ததை நீக்கிவிட்டு, ஆரியப் பதமாகிய 'ஸ்ரீ' என்ற பதத்தை உபயோகிக்கும் படி உத்தரவிட்டார்கள். இப்படி இவர்கள் செய்தது அரசியல் வேலையா? பார்ப்பன மத வேலையா? என்று கேட்கிறேன்.

தமிழர்கள் கலையையும் நாகரிகத்தையும் குலைக்க, வடநாட்டுப் பாஷையாகிய இந்தியைக் கட்டாய பாடமாகக் கொண்டுவந்தார்கள். அதை எதிர்த்த 1300 பேர்களைச் சிறையில் வைத்தார்கள். 2 வீரர்கள் சிறையில் இறக்கும்படி செய்தார்கள். இது அரசியலா? பார்ப்பனீயமா?

விஸ்வப் பிராமணர்களுக்கிருந்த 'ஆச்சாரி' யென்பதை எடுத்துவிட்டு, 'ஆசாரி' என்று அழைக்கவேண்டு மென்று உத்தரவிட்டார்கள். ஏன்? 'ஆச்சாரி' என்றிருந்தால் இவர்களிடம் பங்குகேட்டு விடுவார்களென்றா? 'விஸ்வப் பிராமணர்கள்' என்றிருந்தால் இவர்களுக்குக் குத்துகின்றதா? குடைகின்றதா? அதை எடுத்து 'விஸ்வகர்ம' என்று போட வேண்டுமென்று உத்தரவிட்டார். இது அரசியலா? பார்ப்பனீயமா? இவை எல்லாம் பார்க்கும்போது இவை வகுப்பு நலமான காரியமா, அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

காங்கிரஸ் மந்திரிகள் பதவியிலிருந்த காலத்தில் பார்ப்பனரல்லாத உத்தியோகஸ் தர்கள் அடைந்த கொடுமைகளை அளவிட்டுக் கூறமுடியாது.

[ஈரோட்டில், 22-12-1939-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 14-1-1940]

8. ஏன் காங்கிரசிலிருந்து வெளியேறினேன்?

பேரன்பு படைத்த தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

வ. வே. சு. அய்யர் என்ற பார்ப்பனர் சேரமாதேவி என்ற இடத்தில் ஒரு குரு குலத்தை வைத்து நடத்திவந்தார். அதற்கு தமிழ்நாடு காங்கிரசிலிருந்து 2 தடவையில் ரூ. 10,000 கொடுப்பதாகச் சொல்லி முதல் முறையாக ரூ. 5000-த்தை அப்போது தலைவனாய் இருந்த நான் கொடுத்தேன். அதோடு, பொதுமக்களிடம் ரூ. 10,000க்குமேல் சேர்ந்தது. இவைகளை வைத்துக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட குருகுலத்தில், பார்ப்பான் பிள்ளைகளுக்கு உப்புமாவும் நம்மவர் பிள்ளைகளுக்குப் பழைய சோறும், தனி இடத்தில் (வெளியில்) சாப்பாடும் தரப்பட்டன. அவர்கள் பிள்ளைகளுக்கு வேதபாராயணம்; நம்மவர்களுக்கு தேவாரம், திருவாசகம் சொல்லிக்கொடுத்துக்கொண்டும்; நம்மவர்களுக்குத் தண்ணீர் குடிக்கத் தனிப் பானை அவர்களுக்கு வேறு பானை என்ற நிலையில் நடத்திவந்தார்கள்.

அந்தக் குருகுலத்திலே படிப்பதற்காக அனுப்பப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் மகன், பார்ப்பனப் பிள்ளைகளுக்காக வைக்கப்பட்டிருந்த பானையில் தண்ணீர் மோந்து குடித்துவிட்டதற்காக அவன் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டான். இது என் காதுக்கு வந்தது. நான் ஆச்சாரியாரிடம் சொன்னேன். அவர் கோபித்துக்கொண்டு, வ. வே. சு. அய்யரைக் கூப்பிட்டு, 'இந்த மாதிரி செய்வது சுத்தத் தப்பு' என்று அவரைக் கண்டித்தார். அதற்கு வ. வே. சு. அய்யர் அவர்கள், 'வைதிகர்கள் வசிக்கிற இடத்தில் இதை ஆரம்பித்துவிட்டேன்; கொஞ்சங் கொஞ்சமாக சரிசெய்துவிடுகிறேன்' என்றார். நானும் ஒப்புக்கொண்டேன்.

பிறகு வ. வே. சு. அய்யர் பாக்கி 5000-த்தையும் கேட்டார். 'காரியம் முடியட்டும்; கொடுக்கிறேன்' என்று கூறினேன். கோபித்துக்கொண்டு போய்விட்டார்.

'நாங்கள் 5, 6 பேர் இருந்துகொண்டு, ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துக்கொண்டு, காங்கிரசுக்குச் செல்வாக்குத் தேடித் தந்துகொண்டிருக்கிறோம்; இப்படியெல்லாம் நடந்தால் என்ன நியாயம்?' என்று கேட்டேன். ஆச்சாரியாரும் என் பக்கம் இருந்தார். சென்னையிலிருந்த காங்கிரஸ் கமிட்டியை ஈரோட்டில் எனது வீட்டிற்கு மாற்றியதிலிருந்தே ஆச்சாரியார்மீது மனக்கசப்புக்கொண்ட பார்ப்பனர்கள் இந்தச் சமயத்தில் வெளிப்படையாகவே ஆச்சாரியாரை எதிர்த்தார்கள்.

வ. வே. சு. அய்யருக்காக கஸ்தூரிரெங்க அய்யங்காரும், 'சுதேசமித்திரன்' ரெங்கசாமி அய்யங்காரும், எஸ். சீனிவாசய்யங்காரும், சத்தியமூர்த்தியும் மற்றும் பல பார்ப்பனர்களும் குருகுலத்தை ஆதரித்து எனக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார்கள். இந்தக் காரியங்களினால் பயந்துவிட்ட ஆச்சாரியார் தானும் அவர்கள்பக்கம் சேர்ந்து கொண்டதுமல்லாமல், டாக்டர் வரதராஜுலு நாயுடுவின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வந்தார். நான் ஆச்சாரியார்பக்கம் இருந்தாலும், வரதராஜுலு சென்னை பார்ப்பனர் பக்கம் இருந்து வந்தாலும் நான் ஆச்சாரியார் தீர்மானத்தை எதிர்த்தேன். எனக்குச் சாதகமாக திரு. வி. க, ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார், தங்க பெருமாள் பிள்ளை, எஸ். இராமநாதன் முதலியவர்கள் ஓட்டுச்செய்தார்கள். இராஜன், சந்தானம், வரதாச்சாரி, கிருஷ்ணமாச்சாரி, ஆலாசியம், டாக்டர். சாஸ்திரி முதலிய பார்ப்பனர்கள் அவர்பக்கம் ஓட்டுச்செய்தார்கள். எங்களுக்கு 12 ஓட்டும் அவர்களுக்கு 7 ஓட்டும் கிடைத்தன. அவர்களின் தீர்மானம் தோல்வியுற்றது. உடனே ஆச்சாரியார் பார்ப்பனர்கள் 7 பேரிடத்திலும் கையெழுத்து வாங்கி இராஜிநாமாக் கடிதம் கொடுத்தார். நான் வேண்டாம் என்று கூறினேன்; முடியாது என்று இராஜிநாமாவே கொடுத்தார்.

அதே சாக்கில் மெஜாரிட்டியாக இருந்த நாங்கள், 'காங்கிரஸ் பொது ஸ்தாபன மாகும். ஆகவே, காங்கிரசைப் பொறுத்தமட்டிலாவது சாதிபேதம் இருக்கக் கூடாது' என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டோம்.

பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக வெளியேறியதுபற்றி காந்தியாருக்குக் கடிதம் எழுதி, 'சாதி ஒழியக்கூடாது என்று சொல்லுவது நியாயமா'? என்று கேட்டோம். காந்தியார் அதை ஆச்சாரியாருக்கு அனுப்பினார். அவர் அதை டாக்டர். ராஜனுக்கு அனுப்பினார். அவர் காந்திக்குப் பதில் எழுதினார்.

உடனே காந்தியார், 'சாதி ஒழியக் கூடாது என்பதல்ல அவர்கள் கருத்து; அந்த மாதிரித் தீர்மானம் போடுவது அவர்கள் மனச்சாட்சியை உறுத்துகிறது; ஆகவேதான் எதிர்த்தார்கள்' என்று எங்களுக்குப் பதில் எழுதிவிட்டார். அப்போதே எங்களுக்குக் காங்கிரசின்மேல் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

அதற்கப்புறம், பதவிக்குப் போவதற்காக வங்காள தாஸ் (C. R. Das) அவர்களைத் தலைவராகக் கொண்டு 'சுயராஜ்யக் கட்சி'யை ஆரம்பித்தார்கள். சத்தியமூர்த்தி அய்யரும், சீனிவாச அய்யங்காரும், ரெங்கசாமி அய்யங்காரும் அதில் தீவிரமாய்ப் பங்கெடுத்து வேலை செய்தார்கள். பதவிக்குப் போவதற்காகக் காங்கிரசின் பெயரைக் கூறி அதன் செல்வாக்கைப் பயன்படுத்திப்போக நினைத்ததைக் கண்டித்தோம். ஆனால் காந்தியார், 'சட்டசபைக்குப் போகிறவர்கள் போகட்டும்; வெளியே இருந்து வேலை செய்பவர்கள் செய்யட்டும்' என்று பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக அனுமதி கொடுத்து விட்டார். நாங்கள் வாதாடிப் பார்த்தோம். அதிலும் எங்களுக்குச் சாதகம் கிடைக்கவில்லை.

திரு. வி. க. தலைமையில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாகாண மாநாட்டில், விஷய ஆலோசனைக் கமிட்டியில், 'சுயராஜ்யக் கட்சியை எதிர்க்கக்கூடாது; ஒத்துழையாதார் தேர்தலுக்கு நிற்பதில்லை' என்றும்; '100-க்கு 50 பேர்களுக்குக் குறையாமல் பார்ப்பன ரல்லாதாருக்கு ஸ்தானம் கொடுக்கவேண்டும்' என்றும் தீர்மானம் கொண்டுவந்தேன். ஆச்சாரியார், சீனுவாசய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி போன்றவர்கள், 'வேண்டாம்; இத் தீர்மானம் கூடவே கூடாது' என்று சொன்னார்கள். எனக்கு மெஜாரிட்டி கிடைத்துவிடும் என்று கண்ட அய்யர், திரு. வி. க.வையும், நாயுடுவையும் எப்படியோ தங்கள்பக்கம் இழுத்துக் கொண்டார்கள்.

கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டதால் அதைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். நான் முடியாது என்றேன்.

அப்புறம் 30 பேர்களிடத்தில் கையெழுத்து வாங்கினால் மாநாட்டில் தீர்மானத்தைக் கொண்டு வரலாம் என்றார்கள். ஆனால் 50 பேர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொடுத்தோம். மாநாட்டுத் தலைவராக இருந்த திரு. வி. க., 'பொதுஜன நன்மைக்காக இந்தத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது' என்று பார்ப்பனருக்குப் பயந்து கூறிவிட்டார்.

புனர் ஆலோசனை செய்யும்படி வாதாடிப்பார்த்தேன்; மறுத்துவிட்டார். ஆதலால், அன்றைக்கே—அதே விநாடியில் நான் காங்கிரசிலிருந்து வெளியேறினேன்.

[மணப்பாறையில், 27-3-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-3-1950]

9. காங்கிரசில் மனக்கசப்பு

பேரன்பு படைத்த தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

1921ஆம் ஆண்டில் திருவண்ணாமலையில் என்னுடைய தலைமையின்கீழ் காங்கிரஸ் மாகாண மாநாடு கூடியது. அந்த மாநாட்டில் ரெங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் ஆகியவர்களின் ஆட்கள் தியாகராய செட்டியார் அவர்களையும், ஜஸ்டிஸ் கட்சியையும்

மோசமாக, அளவுக்கு மீறித் தாக்கிப் பேசினார்கள். இது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. எனவே, அவர்கள் பேசியதற்கு எதிராக நானும், இராமநாதனும் பேச முயன்றோம். மாநாட்டின் தலைவர் என்றதால் நான் பேசமுடியாமல் போகவே, இராமநாதன் அவர்கள் பேச ஆரம்பித்தார். அப்போது நமது ஷாபிமுகமது அவர்கள் இராமநாதனை எதிர்த்து வாய்க்கு வந்தபடிக் கேவலமாகப் பேசினார். அதற்குப் பிறகு அப்போது நமது ஆட்களாயிருந்த அண்ணாமலைப் பிள்ளையும், தஞ்சாவூர் வெங்கிடகிருஷ்ணப் பிள்ளையும்—ரெங்கசாமி அய்யங்காரையும், சீனிவாசய்யங்காரையும் எதிர்த்து, அவர்கள் தியாகராயரைத் தாக்கியதற்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் கொடுத்தார்கள். அந்த மாநாட்டிலேயே எனக்கு மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது.

[பெரம்பூரில், 13-8-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-8-1950]

10. டாக்டர் நாயர்—தியாகராயர்—நான்

தோழர்களே!

நீங்கள் யோசிக்கவேண்டுவது அவசியம். டாக்டர் நாயர் போன்ற பெரியார் ஏன் 'பாவி'யாக்கப்பட்டார்? நான் ஏன் பாவியாக்கப்பட்டிருக்கிறேன்? முன்பெல்லாம் டாக்டர் நாயர் வெளியே செல்லுகிறார் என்றால் அவரோடு ஒரு துப்பறியும் சப்-இன்ஸ்பெக்டரும் மாறுஉடையில் உடன்செல்வாராம். அதுசமயம் நான் ஓர் இளைஞன். ஒருசமயம் ஏதோ ஒரு பொது அலுவலாக அவர் ஈரோட்டுக்கு வந்திருந்தார். அவருடைய சாமான்களை எல்லாம் இரயிலடியிலேயே விட்டுவிட்டு வந்திருந்தார். அவருடைய நண்பர் ஒருவர், 'யாருடைய பாதுகாப்பில் சாமான்கள் விடப்பட்டிருக்கின்றன?' என்று கேட்கவும்—தனக்குக் காவலாக ஓர் இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் அனுப்பப்பட்டிருப்பதாகவும், வேறு நபர் தன்னுடன் இல்லாமையால் அவரிடமே தன் சாமான்களை ஒப்புவித்துவிட்டு வந்ததாகவும் தெரிவித்தார். ஓர் இரகசிய போலீஸ் அதிகாரி பின்பற்றும் அளவுக்கு தேசியவாதியாய் இருந்த அவர்தான்—பிறகு 'தேசத் துரோகி'யாக்கப்பட்டார். ஆரம்பத்தில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு விரோதமாக தேசியப் போர்வையில் பார்ப்பனர்களை ஆதரித்தவர் தான் அவர். நானும் ஆரம்பத்தில் பார்ப்பனர்களுக்கு ஆதரவாயிருந்து பார்ப்பனரல்லாதார் தேர்தலை எதிர்த்தவன்தான். பிறகுதான் உண்மை உணர்ந்து நாங்கள் பார்ப்பனரல்லாதாரோடு ஒன்றானோம்.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களில் மிக முக்கியமானவரான சர். பி. தியாகராயச் செட்டியார்கூட ஆரம்பத்தில் தேசியவாதியாக இருந்தவர்தான். 1914-ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் காரியதரிசியாயிருந்து அரும்பெரும் தொண்டாற்றியவர் தான் அவர். பிறகுதான் அவரும் இன உணர்ச்சி பெற்றார். ஆகவே, நாங்களெல்லாம் துவக்கத்திலேயே 'இராட்சதர்களாக' ஆக்கப்பட்டவர்கள் அல்லர். அடிமைகளாயிருந்து பிறகு அவர்களின் கொடுமை தாங்கமுடியாமல், இழிவுபற்றிய உணர்ச்சிபெற்று விழிப்படைந்தவர்கள்தாம் நாங்கள். அப்படி மான விழிப்புணர்ச்சி பெற்றபிறகுதான் நாங்கள் 'இராட்சதர்களா'க்கப்பட்டோம்.

பிறகுதான் அவர்கள் எங்களை விட்டுவிட்டு வேறு விபீஷணர்களைப் பிடிக்க ஆரம்பித்தார்கள். உத்தியோகத்தில் நம் இனத்தவருக்கு உரிய பங்கு வேண்டும் என்று கேட்க ஆரம்பித்த பிறகுதான், காங்கிரஸ் ஸ்தாபனம் வேறுபக்கம் பார்க்க ஆரம்பித்தது. அதுவரை அது வெறும் உத்தியோகக் கோரிக்கை ஸ்தாபனமாகத்தான் இருந்துவந்தது.

காங்கிரசின் ஆரம்பகால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். அப்போதெல்லாம் காங்கிரஸ் மாநாடுகளில் முதலாவதாக இராஜவிசுவாசப் பிரமாணத் தீர்மானம் நிறைவேற்றப்படும். வெள்ளையரை இந் நாட்டுக்கு அனுப்பிய

தற்காகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்படும். அவர்கள் ஆட்சி நீடூழி காலம் இருக்கவேண்டுமென்று வாழ்த்துச் செய்யப்படும். சென்னையில் 1915-ல் நடைபெற்ற மாநாட்டில் இம்மாதிரி இராஜவிசுவாசத் தீர்மானம் காலை ஒருமுறையும், மாலையில் கவர்னர் விஜயத்தின்போது மற்றொரு முறையும் ஆக இரண்டு முறைகள் நிறைவேற்றம் ஆகியது எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருந்துவருகிறது.

ஆகவே, வெள்ளையர் வழங்கிய உத்தியோக சலுகைகளில் நம் இனத்தவருக்கும் உரிய பங்கு வேண்டும் என்று கேட்க ஆரம்பித்த பிறகுதான்—வெள்ளையர்களும் கொஞ்சம் நமக்குச் சலுகை தர ஆரம்பித்த பிறகுதான்—காங்கிரஸ் இயக்கமானது ஒரு தேசிய ஸ்தாபனமாக மாறி, வெள்ளையர்கள் வெளியேறவேண்டும் என்று கூறிற்றே ஒழிய—அதுவரை அது பார்ப்பனர்களுக்குப் பதவி தேடித்தரும் ஸ்தாபனமாகத்தான் இருந்து வந்தது என்பது கண்கூடு.

[திருச்சியில், 3-12-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-12-1950]

11. காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கம்

திரு. காமராசர் அவர்கள் செங்கற்பட்டு இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் பேசிய பேச்சில் ஒரு அதிசயம் காணலாம். அதாவது, இவ்வளவு தைரியமாக, 35 ஆண்டுகளுக்கு முன் அதே செங்கற்பட்டு மாவட்டத்தில், காஞ்சிபுரத்தில் நடந்த ஒரு செய்தியைப்பற்றிப் பேசி இருக்கின்றார் என்றாலும், அது நூற்றுக்கு நூறு உண்மையான செய்தியே ஆகும்.

அதாவது—'பெரியார் அந்தக் காலத்தில் காங்கிரஸ் வைதிக வெறியர்கள் கையில் இருந்துவருகிறது என்பதை உணர்ந்து—இதில் இருந்துகொண்டு தமது மக்களுக்கு ஒரு நலமும் செய்யமுடியாது என்று கருதியே காங்கிரசை விட்டு வெளியேறினார்' என்பதாகவும்,

'அதுபோலவே இன்று இராஜாஜி, காங்கிரஸ்—இந்திய காங்கிரஸ் முழுவதுமே இல்லாவிட்டாலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையிலாவது—காங்கிரஸ் வைதிக எதிரிகள் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது; இதில் இருந்துகொண்டு வைதிக (வேத) தர்மத்தைக் காப்பாற்றமுடியாது என்று தீர்மானம் செய்துகொண்டே (இராஜாஜி) காங்கிரஸை விட்டு வெளியேறி இருக்கிறார்' என்பதாகவும் துணிவாக உண்மையினைக் கூறிவிட்டார்.

இராஜாஜிக்கு இன்று காங்கிரசில் ஏற்பட்ட குறை என்ன? இராஜாஜி இரண்டு முறைகள் சென்னை இராச்சியத்தில் முதல் மந்திரியாய் இருந்தபோது அவர் செய்யாதது எந்தக் காரியம்—இன்று காமராசரை முதல் மந்திரியாகக்கொண்ட ஆட்சியில் செய்யப்பட்டு விட்டது? அல்லது, அன்று நடக்காத எந்தக் காரியம் இன்று காமராசர் காலத்தில் நடக்கின்றது, அல்லது நடந்துவிட்டது?

முன்பு காங்கிரஸ் நிலைமை சென்னை இராச்சியத்தில், தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் :—

திரு. T. V. வெங்கட்ராம அய்யர்.

ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் :—

திருநெல்வேலிக்கு — திரு. மகாதேவ அய்யர்
மதுரைக்கு — திரு. வைத்தியநாத அய்யர்
திருச்சிக்கு — திரு. சாமிநாத சாஸ்திரி
தஞ்சைக்கு — திரு. பந்தலு அய்யர்

கோவைக்கு — திரு. என். எஸ். இராமசாமி அய்யர்
சேலத்துக்கு — திரு. இராமராவ்
வடஆற்காடுக்கு — திரு. ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரி
செங்கற்பட்டு }
தென்னாற்காடு } — ஞாபகமில்லை
மதராசுக்கு — திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்கார்

இந்தப்படி சர்வம் பார்ப்பனமயமாய் அமைந்து இருந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைமை—முதன் முதலாக திராவிடர் (பார்ப்பனர் இல்லாதார்) என்கின்ற தன்மையில் எனக்குத்தான் கிடைத்தது. உடனே என்மீதும், வ. வே. சு. அய்யர் என்கின்ற 'தேசிய'ப் பார்ப்பனர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்.

இரண்டாவது தடவையாக, எனது முயற்சியின்மீது டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களுக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவி கிடைத்தது. அப்போதும் திரு. C. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், டாக்டர் வரதராஜுலு நாயுடுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார். இதை அன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியாக இருந்த நான் எதிர்க்கவேண்டி நேரிட்டது. இந்தத் தீர்மானத்திற்கு

ஆதரவாக,

திருவாளர்கள் :—C. இராஜகோபாலாச்சாரியார்
" டாக்டர் சாமிநாத சாஸ்திரி
" டாக்டர் T. S. S. ராஜன் (அய்யங்கார்)
" கே. சந்தானம் (அய்யங்கார்)
" ஆலாஸ்யம் அய்யர்
" N. S. வரதாச்சாரி
" சேலம் சுப்பாராவ்
" O. கிருஷ்ணமாச்சாரி

ஆகிய எல்லா காரியக் கமிட்டி பார்ப்பனர்களும் ஓட்டு அளித்தார்கள்.

எதிர்ப்பாக,

ஈ. வெ. இராமசாமி (நான்)
திருவாளர்கள் :—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
" S. இராமநாதன்
" தங்கப் பெருமாள்
" O. P. இராமசாமி ரெட்டியார்
" புதுப்பாளையம் ரெத்தினசாமி கவுண்டர்
" தஞ்சை. டாக்டர் இராமச்சந்திரன் செட்டியார்
" சென்னை சிங்காரவேலு செட்டியார்
" சேலம் ஆதிநாராயணன் செட்டியார்

(என்பது ஞாபகம்)—ஓட்டு அளித்தார்கள்.

கு. காமராஜ்

போன்: 41373
8 திருமலை பிள்ளை ரோட்,
தி. நகர், சென்னை-17

6-9-1964.

தமிழ் நாட்டில் சமூக சீர்திருத்தங்கள் செய்து, ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முயற்சி செய்து வரும் பெரியார் அவர்கள், அதன் பயனை ஜனநாயக சோஷலிச கொள்கைகளுடன் பரப்பி, உலகத்திலேயே நம் இந்திய நாடு சமுதாய, பொருளாதார வளர்ச்சிகளில் முன்னேற மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து வரவேண்டுமென்று மனமார வாழ்த்துகிறேன்.

86 வயதாகியும், தளராது உழைத்து பொதுத் தொண்டு செய்துவரும் அவருடைய மனப் பாங்கை நம் இளைஞர்கள் ஒரு படிப்பினையாகக் கொள்ளவேண்டும்.

காமராஜ்

ஆசிரியர்,
'விடுதலை',
சென்னை-2.

ஆகவே, எனது முயற்சியால் ஆச்சாரியாரின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றது. இதிலிருந்தே ஆரியர்—திராவிடர் பிரிவு காங்கிரசில் வெளிப்படையாய்த் தலை காட்டிவிட்டது.

உடனே ஆச்சாரியார் இராஜிநாமா செய்துவிட்டார். அவரோடு பல பார்ப்பன அங்கத்தினர்களும் இராஜிநாமா செய்துவிட்டார்கள். பிறகு அவர் சிறிதுநாள் பொறுத்து காங்கிரசுக்குள்ளே வந்து புகுந்து, சென்னை திரு. S. சீனிவாச அய்யங்காரைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஆக்கித் தானும் காரியக் கமிட்டியின் அங்கத்தினராக இடம் பெற்றுக்கொண்டார்.

இப்படியாக, முதலில் சென்னை காங்கிரஸ் முழுக்க முழுக்கப் பார்ப்பனர்களிடம் இருந்து எனது (ஈ. வெ. இராமசாமி) காலத்தில் பகுதி பார்ப்பனர்—பகுதி திராவிடர்கள் என்று ஆகி, இன்று காமராசர் காலத்தில் முக்காலே அரைக்கால் பங்கு திராவிடர்—அரைக் கால் பங்கு (ஒன்றோ, இரண்டோ) ஆரியர் என்று ஆனதுடன்—அதுவும் இன்று ஆச்சாரி யார் கோஷ்டிக்கு இடமே இல்லை என்ற நிலைமையுடன், ஆச்சாரியார் காங்கிரசை விட்டு வெளியேறி காங்கிரசையே ஒழிக்க, காங்கிரசுக்கு எதிர்ப்பாகப் பிரச்சாரம் செய்து கோஷ்டி கும்பல் சேர்க்கின்றார் என்றால், இன்றைய நிலையில் ஆச்சாரியார் இதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

எப்படியோ, ஒருவகையில் பார்ப்பனரைக் காங்கிரசுக்கு எதிர்ப்பாகக் கட்சி கட்டும் படிச் செய்த தன்மையானது இந்த நாட்டுக்கு, சிறப்பாக திராவிடர்களுக்கு நல்ல (காலம்) வாய்ப்பு என்றுதான் சொல்லவேண்டும். 'தர்மம் (என்ன தர்மம்? வருணாசிரம தர்மம்) காப்பாற்றப்பட வேண்டுமானால், காங்கிரசை ஒழிக்கவேண்டும்' என்று பார்ப்பனர்கள் முயற்சிப்பதனால்—இந்தச் சமயத்தில் திராவிடர்களின் முக்கிய முழுமூச்சுக் கவனம் அப் பார்ப்பனர்கள் அக் காரியத்தில் வெற்றிபெறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வதே ஆகும்.

['விடுதலை'—அறிக்கை—6-1-1960]

12. நானும் காங்கிரசும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நான் ஒரு சாதாரண வியாபாரியாக ஈரோட்டில் வியாபாரம் செய்த காலத்திலகூட கொஞ்சங் கொஞ்சமாகப் பொதுநலனில் ஈடுபடத் துவங்கினேன். காங்கிரஸ் 1920ஆம் ஆண்டு காந்தியாருடைய கைக்கு வந்தபிறகு அதற்கு அரசியல் கட்சி என்ற பெயர் இல்லாமற்போய்விட்டது. ஆகையினால், அதுவும் சமுதாயத்திற்கு—பொது நலனிற்குப் பயன்படும்படியான வேலை செய்யும் என்ற நினைப்புடனே அதில் நான் சேர்ந்தேன்.

1920-லே காங்கிரஸ், 'சட்டசபைக்குப் போவதோ, பதவி ஏற்பதோ இல்லை' என்ற தீர்மானம் கொண்டு வந்துவிட்டது. இவைகளினால்தான் அன்றைய தினம் காங்கிரஸ் அவ்வளவு செல்வாக்கு உடையதாக இருந்தது. அதனால்தான் நானும் காங்கிரசில் சேர்ந் தால் நாட்டு மக்களுக்குத் தொண்டு புரியலாம் என்று நினைத்து அதிலே நாட்டம் கொண்டேன்.

மேலும் அன்று கூறினார்கள், 'நாங்கள் சுயராச்சியத்திற்கு முட்டுக்கொடுக்க மாட்டோம். அப்படியும் கேட்பதாய் இருந்தால்கூட தீண்டாமை, சாதி பேதம் ஆகிய வற்றை ஒழித்து மக்களைச் சீர்திருத்தின பிறகுதான் கேட்போம்' என்றனர்.

ஒரு தடவை காந்தியார் சென்னைக்கு வந்திருந்தபோது பெரிய பெரிய அரசியல் வாதிகளும், நானும், இராஜகோபாலாச்சாரியும் இன்னும் பல தோழர்களும் காந்தியாரைக் காணச் சென்று இருந்தோம். அப்பொழுது சீனிவாச சாஸ்திரியார் காந்தியாரை ஒரு கேள்வி கேட்டார். அதாவது, 'நீங்கள் சுயராச்சியத்தைப்பற்றிக் கவலை இல்லை; சமுதாயத்திலே மக்களுக்கு இருந்துவருகின்ற கஷ்டங்களை நீக்கவேண்டும், தீண்டா மையை அகற்றவேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறீர்களே! இந்தச் சமயத்திலே ஒருகால் திடீரென்று வெள்ளைக்காரனுக்குப் புத்திவந்து, 'நீங்கள் இந்த நாட்டை எடுத்துக்கொள் ளுங்கள்' என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?' என்று கேட்டார். இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னரே, 'எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விடுவோம்' என்றார் காந்தியார். 'ஏன்?' என்று கேட்டனர். 'மக்களிடத்திலே புத்தி இல்லை. மக்கள் கீழ்த்தரமான நிலையிலேயே இருக்கின்றனர்' என்றார். ஆகவே, இப்படியெல்லாம் கூறினவர்கள், கடைசியாக சட்டசபைக்குப் போவதும், பதவி ஏற்பதும் என்ற முறையிலே வந்தவுடன்தான் நான் அதை விட்டு விலகினேன். பதவி ஏற்றதும் தாங்கள் சொல்லிய வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டார்கள்.

சமுதாயத் துறையிலே வேலை செய்ய வேண்டுமானால் அரசியலைக் கைப்பற்றிப் பயன் இல்லை. ஆட்சி பீடத்திலே இருந்துகொண்டு எதையும் செய்துவிடலாம் என்று நினைப்பது மிகவும் மோசமானது. அதனாலேயே நாங்கள் அரசியலைப்பற்றிப் பொது வாகவே கருதுவதில்லை. அரசாங்கத்தைக் கைப்பற்றித்தான் சமூக சீர்திருத்தம் செய்ய முடியும் என்று சொல்வதையும் ஒப்புக்கொள்வதில்லை.

[பாண்டமங்கலத்தில், 10-10-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-10-1951]

அன்புக்கும் பெருமைக்கும் உரிய சேலம் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களே! அங்கத்தினர்களே! நிர்வாகி அவர்களே! பொதுமக்களே! தாய்மார்களே!

நான் காங்கிரஸில் 1920-ல் சேர்ந்தேன். நாங்கள் சேர்ந்து 2 வருடங்களுக்கு அப்புறம் இராஜாஜி, சீனிவாசய்யங்கார், நான் ஆகிய மூவரும் உட்கார்ந்து ஒரு பலன் கணக்கிடும் திட்டம்—'பேலன்ஸ் ஷீட்' (Balance Sheet) போட்டோம். அதற்கு முன் னாலோ காங்கிரஸ்காரன் என்று சொல்லிக்கொண்டு வீதியிலே நடக்கமுடியாது. காங் கிரசோ, மேல்சாதிக்காரர்கள் ஆதிக்கத்திலேயே இருந்தது, அப்போதைய மக்கள் அனை வருக்கும் தெரியும். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் நல்லவண்ணம் இதை மக்களுக்கு எடுத்துச் சொல்லியிருந்தனர்.

நாங்கள் போட்ட கணக்குப்படி பலன்கள் கிடைத்தன. முதலாவதாக, மேடை ஜஸ்டிஸ் கட்சியினரிடமிருந்து எங்களிடம் வந்தது.

டாக்டர் வரதராஜுலு நாயுடு, வ. உ. சிதம்பரம் பிள்ளை, திரு. வி. க., நான்— இப்படி நாங்கள் பேசினால்தான் கூட்டம் வரும்; அய்யர், அய்யங்கார் என்று யாராவது பேசினால் கூட்டமே நடக்காது; நடக்கவும் விடமாட்டார்கள். எனவே, எங்களது உழைப் பைக் கொண்டு காங்கிரஸ் இங்கே நன்கு வளர்ந்தது. காங்கிரஸ் ஒருநாளும் பொது மக்களது ஸ்தாபனமாகவே இருந்தது கிடையாது. அவர்களது இன நலத்துக்காகவே ஒரு சிலர் அமைத்த ஸ்தாபனம்தான் அது. இன்றைய காங்கிரஸ்காரர்களிலே பலபேருக்கு இது தெரியாது.

வெள்ளைக்காரர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் காங்கிரஸ் ஸ்தாபனமே துவக்கப் பட்டது. வெள்ளைக்காரன் நேரில் வந்தால் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று தெரிந்து தான், அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு ஆரம்பித்தான். 'ஆனரேரியம்' வாங் கிக்கொண்ட கங்காணிகள்தாம் ஆரம்பித்தனர். இதை நான் சொல்லவில்லை; காங்கிர

சுக்கு 75 வருஷம் பூர்த்தியாகி இருக்கிறது என்பதால்—வைர விழா மலர் என்ற ஒரு புத்தகம் காங்கிரசுக் கமிட்டியாரால் வெளியிடப்பட்டுள்ளது; அதிலேயே இது தெளிவாக இருக்கின்றது. அய். சி. எஸ். உத்தியோகத்திலே இருந்து 'ரிட்டைய'ரான—சர்க்காருக்கு செக்ரெட்டரியாக இருந்த ஒரு வெள்ளைக்காரன், இன்னொரு வெள்ளைக்காரன், லார்டு டப்ரின் போன்றவர்கள் ஊர்தோறும் பல பேருக்கு, பல மாகாணத்திலிருக்கிற ஆட்களுக்கு எல்லாம் கடிதம் எழுதினார்கள்.

இதற்கு அவ்வளவு அவசியம் என்ன வந்தது என்று கேட்டால், துலுக்கனும், மராட்டியனும் வெள்ளைக்காரனைக் கண்ட கண்ட இடத்தில் உதைக்க ஆரம்பித்தார்கள். ஒரு வெள்ளைக்கார கவர்னரின் தலையைக் கொண்டுவந்தால் ரூ. 500 (அய்நூறு ரூபாய்) பரிசு தருவதாகப் பகிரங்கமாக விளம்பரப்படுத்துகிற அளவுக்கு வெள்ளைக்காரன்மேல் வெறுப்பு வளர்ந்துவிட்டதால், இதை எப்படியாவது மாற்றவேண்டும்; இல்லாவிட்டால் முடியாது என்று கண்டுதான்—கூலிக்கு ஆள் பிடித்து, இலஞ்சம் கொடுத்து தங்களுக்குத் துதிபாட வைத்தார்கள். லாலா லஜபதி ராய் எழுதியுள்ள 'யுவ பாரதம்' என்ற புத்தகத்தைப் படித்தால் இது விளங்கும்.

இப்படி அவன் நாடு பூராவும் எழுதி ஆட்களைச் சேகரிக்க ஆரம்பித்தாலும் தென்னாட்டிலே இருந்து—4, 5 அய்யர்மார்கள்தாம் முன்வந்தார்கள்! ஜி. சுப்பிரமணிய அய்யர், ரகுநாதராவ், ஆனந்தாச்சார்லு இப்படிச் சில பேர்களை வைத்துத்தான் இம் முயற்சி துவக்கப்பட்டது. பிறகு, வெள்ளைக்காரன் வைத்த பெயர்தான் 'இண்டியன் நேஷனல் காங்கிரஸ்' என்பது. இப்பொழுது நேஷனல் என்பதற்கு 'தேசியம்' என்று சொன்னாலும்கூட, அது தேசத்தைக் குறிக்கிற பதம் அல்ல; சாதி என்பதைத்தான் குறித்து வைக்கப்பட்டதாகும்.

காங்கிரஸ் ஆரம்பித்ததிலிருந்தே முதல் தீர்மானம் இராஜவிசுவாசம்; இரண்டாவது தீர்மானம், உலகம் உள்ள அளவுக்கும் இந்தியாவில் வெள்ளையர் நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்பது. முதல் காங்கிரசிலே இராஜ விசுவாசத் தீர்மானத்தைப் பிரரேபித்ததே திரு. ஜி. சுப்பிரமணிய அய்யர்தான். 'இதற்கு முன்னாலே ஏதோ நாங்கள் உங்களை எதிர்த்திருந்தாலும்கூட—அதையெல்லாம் மறந்துவிட வேண்டும் என்று மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ஆட்சியினருக்குத் தெரிவிக்கிறோம்' என்றெல்லாம் கூடப் பேசியிருக்கின்றார்கள்.

இராஜ விசுவாசத் தீர்மானம் பிரரேபித்த இந்த சுப்பிரமணிய அய்யருக்கு அய்கோர்ட் ஜட்ஜு பதவி கொடுத்தான்—வெள்ளைக்காரன். மேல் நாட்டிற்கும்கூட—இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் சிலபேரைப் பிடித்து அனுப்பி, இராஜ விசுவாசத் தீர்மானத்தைப் பரப்பச் சொல்லி, வெள்ளைக்காரன் அதற்குக் கூலி கொடுத்தான்; அப்படி அனுப்பப்பெற்றவர்களில் ஒருவர்தான் சீனிவாச சாஸ்திரி; அவருக்கு 'ரைட் ஆனரபிள்' பட்டம் அதற்குத்தான் வழங்கப்பட்டது. பார்ப்பானுக்குக் கிடைக்கிற பங்கு பார்த்து, 'எங்களுக்கு இல்லையா?' என்று துலுக்கன் நினைத்துக் கேட்கவே அவர்களுக்கும் அரசியல் பங்கு தந்தார்கள் வெள்ளைக்காரர்கள்.

வெள்ளைக்காரனைப் புகழ்ந்தது என்றால் எப்படி? வெள்ளைக்காரன் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்றே கூறிப் புகழ்ந்தார்கள். ஒருதடவை சென்னையிலே காங்கிரஸ் நடந்தபோது இராஜ விசுவாசத் தீர்மானம் காலை 9 மணிக்கே நிறைவேற்றப்பட்டது. ஆனால், வெள்ளைக்கார கவர்னர் காலை நடவடிக்கையின்போது வரவில்லை; மத்தியானம் இரண்டு மணிக்குமேலேதான் வந்தார். சென்னை காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு எஸ். என். பானர்ஜியே கவர்னர் முன்னிலையிலே மாலை 4 மணிக்கு மீண்டும் ஒரு தடவை அந்த இராஜ விசுவாசத் தீர்மானத்தைப் பிரரேபித்தார். அந்தக் காலத்தில்

காங்கிரஸ் மாநாட்டிற்கு வரும் 'டெலிகேட்டு'களுக்கெல்லாம் அன்று மாலையே கவர்னர் 'பார்ட்டி' கொடுப்பது வழக்கம். இப்படிக் காங்கிரசும் வெள்ளைக்கார ஆட்சியும், ஒரே குடும்பமாக இருந்ததைக் கண்டுதான்—முகமதியர்கள் ரகளை பண்ணிப் பங்கு வாங்கினர். இதைப் பார்த்த ஜஸ்டிஸ் கட்சிக்காரன் 'பார்ப்பனரல்லாத மக்களுக்கும் கிடைக்கட்டுமே— நாம் மாத்திரம் ஏன் ஏமாந்து விடவேண்டும். நாம்தானே மெஜாரிட்டி' என்று உணர்ந்து அவர்களும் இராஜவிசுவாசத் தீர்மானத்தில் இறங்கினார்கள்.

இப்படி இராஜவிசுவாசத் தீர்மானத்தில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு தங்களை ஆதரிப்பதைக் கண்ட வெள்ளைக்காரன், ஆளுக்கு ஏதோ இரண்டு கொடுக்க ஆரம்பித்தான். மற்றவர்களுக்கே வாய்ப்பில்லாமல் தாங்களே ஏகபோகமாக அனுபவித்துவந்த பதவி, உத்தியோகம் மற்ற சலுகைகள், வசதிகள் வரவரக் குறைந்து கொண்டே வருகின்றன என்பதை இந்தப் பார்ப்பனர்கள் அறிந்துகொண்டுதான்—இந்தக் கட்டத்தில்தான்—சலித்துப்போய் இராஜ விரோதத் தீர்மானம் போட ஆரம்பித்தனர்.

இன்றைய 'தேசியம்' இப்படித்தான் உற்பத்தியானது.

நானும் இந்தத் தேசியத்தில் மயங்கி, ஏதோ முட்டாள்தனமாக ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க, காங்கிரஸ் கட்சிக்கு உழைத்தேன். பிறகுதான் உணர்ந்தேன்—அதன்மூலம் நமது இனத்துக்குப் பெரிய துரோகம் இழைத்து விட்டோம் என்று!

பதவி வேட்டைக்காகத்தான் காங்கிரசே ஆரம்பிக்கப்பட்டது. பின்னாலே—காங்கிரசில் காந்தி வந்த பின்னர், அவர் கொஞ்சம் சன்னியாசி வேஷம் போட்டார். பதவி வேண்டாம்—அப்படி, இப்படி என்று! ஆனால், மற்றவர்கள் யாரும் அதைக் கேட்கத் தயாராக இல்லை. உள்ளே நுழையவே கூடாது; சட்டசபையைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று சொல்லிவந்தவர்கள்-புது மாதிரியான விசித்திரக் காரணத்தைச் சொல்லிக்கொண்டே நுழைய ஆரம்பித்தார்கள். அதாவது, நாம் சட்டசபையில் நுழைவதன் மூலம்தான் நம் எதிரிகளை நுழைய விடாமல் தடுக்கமுடியும் என்று ஏதோ கூறிவிட்டுப் போனார்கள்.

1919-ல் காங்கிரசின் வேலைத்திட்ட அறிக்கையிலேயே கூறப்பட்டு இருக்கிறது. 'காங்கிரசு பதவிக்கு வருமானால், 100-க்கு 50 பேர் வீதம் பார்ப்பனரல்லாதாருக்குப் பதவிகள் ஒதுக்குவது' என்று.

இதோடு மட்டுமல்லாமல், 'சென்னை மாகாண அசோசியேஷன் (Madras Presidency Association) என்று, ஜஸ்டிஸ் கட்சிக்குப் போட்டியாக ஒன்றைக் காங்கிரஸ் காரர்களே தூண்டிவிட்டு திரு. கேசவப் பிள்ளை தலைமையில் அமைத்தார்கள். அதிலும் இந்த வகுப்புவாரி விகிதாச்சாரம் ஒப்புக்கொள்ளப்பட்டுத் தீர்மானம் போடப்பட்டது. அதில் மட்டும் அல்ல.

'சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சி செய்யவேண்டும்; வெள்ளைக்காரர்களை எதிர்க்கக் கூடாது' என்பதனால் தகராறு ஏற்பட்ட நிலையில்—அதி தீவிரவாதிகள் எல்லாம் சேர்ந்து 'நேஷனலிஸ்ட் அசோசியேஷன் (Nationalist Association')—'அதி தீவிரவாதிகள் சங்கம்' ஏற்படுத்தினோம்; நண்பர் ஆச்சாரியார் ஏற்படுத்தினார். சேலம் விஜயராகவாச் சாரிதான் அதற்குத் தலைவர். நான் வைஸ் பிரஸிடெண்ட்; இராஜாஜி அதன் செக்ரெட்டரி. அதிலேயும் இந்த 50 சதவீதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. 'ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பதவிக்காகவே பாடுபடுகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள்; அதையே நாங்களும் எங்கள் திட்டமாகக்கொண்டு—நாங்கள் பதவிக்கு வந்தால் பார்ப்பன ரல்லாத மக்களுக்கு 50 சதவீதம் விகிதாசாரப் பங்கு தருகிறோம்' என்று சொல்லியே ஆதரவு தேடினார்கள்.

இவ்வளவும் ஆனபிறகு இந்த மூன்று தீர்மானங்களையும் சேர்த்து நல்ல வடிவம் கொடுத்து, காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் மாநாடு நடக்கையில் கொடுத்தபோதுதான் ஆச்சாரியாரும் மற்ற காங்கிரசுப் பார்ப்பனர்களும் அதை மெல்ல நழுவவிடச் சூழ்ச்சி செய்தார்கள். திரு. வி. கலியாணசுந்தரனாரும், டாக்டர் வரதராஜுலுவும் அவர்கள் கையாட்களாகவே இருந்து சதிசெய்தனர். விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்திற்கே என் தீர்மானத்தை வைக்காமல் விட்டுவிட்டார்கள். 'என்ன இப்படி செய்துவிட்டீர்களே?' என்று கேட்டதற்கு, 'காங்கிரஸ் மகா ஸ்தாபனத்தில் வகுப்பு உரிமைத் தீர்மானம் போட்டால்—வகுப்புவாதமாகி விடாதா? அதன் பெருமை என்ன ஆவது?' என்று ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தார். 'நேரே, மாநாட்டில் கொண்டுவந்துவிடுங்கள்' என்றார். நான் உடனே 'அப்பன் வீட்டுப் பெருமையை அண்ணனுக்குத் தங்கை சொன்னது மாதிரியே, காங்கிரஸின் பெருமையை நீங்கள் எனக்குச் சொல்லவேண்டாம்; மாலையில் தீர்மானம் கொண்டு வருகிறேன்' என்றேன். அதை எதிர்பார்த்தேதான் பார்ப்பனர்கள் அடியாட்களைக் கொண்டுவந்து திரு வி. க. வை மிரட்டினார்கள். தீர்மானத்தை 'அலவ்' பண்ணினால் அது 'பாசா'கி விடும் என்று தெரிந்தே, அதைக் கடைசி நேரத்தில் கலியாணசுந்தர முதலியார் சூதாக, "டிஸ் அலவ்' (Disallow) பண்ணுகிறேன்' என்றார். நாங்களும் உடனே ஆத்திரம் அடைந்து, 'காங்கிரஸ் பார்ப்பனர்களுடைய ஸ்தாபனம் என்பது மெய்ப்படுத்தப்பட்டு விட்டது; இதை ஒழிப்பதுதான் எங்கள் முதல் பணி' என்று கூறி வெளியேறினோம். (நண்பர் எஸ். இராமநாதனும் என்னுடன் அப்பொழுது வந்தார்) அப்போது நண்பர் இராஜாஜி என்னைப் பார்த்துச் சொன்னார் 'நாயக்கரே! நாயக்கரே! அவசரப்படாதீர்கள்; யோசித்துப் பாருங்கள்; கல்லிலே மோதிக் கொள்ளாதீர்கள்; யோசித்துப்பாருங்கள்' என்று சொன்னார்.

அப்படிச் சொல்லிக்கொண்டு வந்த நான் இன்றையக் காங்கிரசைக் காப்பாற்ற ஆகவும்—அன்றைக்கு 'முடியுமா உங்களால்?' எனக் கேட்டு, 'முடியாது' என்று கருதிய ஆச்சாரியார்—'ஒழித்தே தீருவேன்' என்று இன்று கூறவுமான அளவுக்கு நிலைமை தலை கீழாக மாறிவிட்டது.

[சேலத்தில், 3-4-1961-ல் நகரசபை வரவேற்பில் சொற்பொழிவு—'விடுதலை' 26-4-1961]

13. நான் காங்கிரசில் சேர்ந்துவிட்டேனா?

நான் காங்கிரசில் சேர்ந்துவிட்டேனா என்பதுபற்றி ஏன் எழுதுகிறேன் என்றால், நம்மிடம் எதிர்ப்புணர்ச்சி கொண்டவர்கள் சிலர் செய்யும் விஷமப் பிரச்சாரத்திற்கும், கூட்டங்களில் சிலர் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் அறிக்கையாக இருக்கட்டும் என்ற கருத்தில் எழுதுகிறேன்.

நான் காங்கிரசில் சேர்ந்தால்—முதலாவதாக காங்கிரசுக்கு நாட்டு நலனைப் பற்றிய, மக்கள் சமுதாய மாறுதல் பற்றிய—மற்றும் கடவுள், சாதி, மதம், சாஸ்திர, புராண சம்பந்தமான பித்தலாட்டம், மூடநம்பிக்கை இவைகளின் பேரால் நீண்டகாலமாக மக்களை மக்கள் மடையராக்கி, அடிமைப்படுத்திச் சுரண்டுதல் பற்றிய காரியங்களில்—அரசாங்கத்தைத் தேவைக்கு ஏற்ற வண்ணம் கவனிக்கும்படிச் செய்யவும், அவைபற்றி அரசாங்கம் தவறான வழியில் சென்றால், தடுப்புக் கிளர்ச்சி, புரட்சி முதலியவை செய்யவும், இன்று இந்நாட்டில் எதிர்க் கட்சியோ, எதிர்ப்புக் கட்சியோ இல்லாமலே போய்விடும்.

பொதுவாகவே, இந்நாட்டு அரசாங்கம் என்பதும், அரசியல் என்பதும் சுயநலம், பதவி வேட்டை, தனிப்பட்ட மனிதன்—இனம் ஆகியவர்களின் வாழ்க்கை நலன் ஆகியவற்றைப் பொறுத்ததாகவே இருந்து வருகிறதேயல்லாமல் நான் மேலே குறிப்பிட்ட காரியங்களைப் பொறுத்ததாக இல்லை.

மற்றும், இத் துறைகளில் தலையிடுபவர்கள் இன்று, இந்நாட்டில் அரசியலின் பேரால் வாழவே முடியாது. ஆதலால், இன்றைய நிலையில் நான் ஒருநாளும் காங்கிரசில் சேர முடியாது. இன்று நான் காங்கிரசில் சேருவது என்றால் 1925 ஆம் ஆண்டில் நான் காங்கிரசில் 'பெருந்' தலைவனாக இருந்த காலத்தில் நான் அதைவிட்டு வெளியேறியதை சுத்த முட்டாள்தனமான காரியம் என்றுதானே சொல்லவேண்டும்?

அன்றியும், நான் காங்கிரசைவிட்டு வெளியேறி காங்கிரசின் எதிரியாகவே இருந்து வந்திருக்காவிட்டால், காங்கிரசில் இன்று நாம் காணும் மாறுதல்கள் காணப்படக்கூடியதாகி இருக்குமா? நம் சமுதாய நிலை இன்றுள்ள நிலைக்கு வந்திருக்க முடியுமா?

இந்த நிலையில் நான் காங்கிரசில் சேர்ந்தாலும் இன்றுள்ள நிலையே நமக்குப் போதுமானது என்று நான் கருதியதாகத்தானே ஆகிவிடும்?

இன்னும் நாம் எத்தனை பேர் படிக்கவேண்டும்? இன்னும் நமக்கு எத்தனை பேருக்கு பதவி, உத்தியோகம் கிடைக்கவேண்டும்? கடவுள், மதம், சாதி முதலிய துறைகளில் எவ்வளவு பெரிய மாற்றங்கள் ஏற்படவேண்டும்? நான் காங்கிரசில் சேர்ந்து விட்டால் இத் துறைகளில் அரசாங்கத்தை எதிர்த்து இணங்கவைக்க ஆள் எங்கே என்று கேட்கிறேன்.

கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், கண்ணீர்த் துளி, நாம் தமிழர், சுதந்திரா முதலிய கட்சிகள் இன்று இருக்கின்றன; இவைகளில் எதற்காவது, நான் மேலே காட்டிய எந்தத் துறையைப் பற்றியாவது ஒரு சிறு அளவு கவலையோ, திட்டமோ, கிளர்ச்சியோ ஏதாவது ஒன்று இருக்கிறதா? இருக்கிறது என்று பேச்சு முறைக்காவது அவர்களாலேயே சொல்ல முடியுமா?

ஆகையால், 'எல்லா இந்திய காங்கிரசு' உள்ளவரை நான் காங்கிரசுக்கு எதிர்ப்பாளனாகவே இருந்து தீரவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

மற்றும், காங்கிரசின் கள் ஒழிப்பை, கதர் பரப்புதலை, காந்தியத்தை, சாதி-மத-கோவில்-சம்பிரதாயப் பாதுகாப்பை நான் ஒப்புக்கொள்ள முடியுமா? இவற்றையெல்லாம்விட முக்கியமாக, யோசிக்கத் தகுந்த காரியம், இத் துறைகள் பற்றியெல்லாம் காங்கிரசுக்குள் புகுந்து ரகளையோ, காலித்தனமோ செய்வதன் மூலமாவது ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணலாம் என்று—நானே மானங்கெட்டோ, ஒழுக்கங்கெட்டோ, நாணயங்கெட்டோ காங்கிரசுக்குள் நுழையலாம் என்று துணிந்தாலும் அவர்கள் என்னைச் சேர்ப்பார்களா? ஒருநாளும் சேர்க்கமாட்டார்கள்.

ஆகவே, நான் காங்கிரசில் சேராதிருப்பதுதான் நாட்டுக்கு, மக்களுக்கு, காங்கிரசுக்கும்கூட நல்லது என்பதோடு, எனக்கும் மிகமிக நல்லது என்கின்ற முடிவு கொண்டிருக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—20-7-1961]

14. மதுவிலக்கு

காங்கிரசாரின் போலி மதுவிலக்கு முறையை சென்னை சர்க்கார், வரப்போகும் வருஷம் முதல் மாற்றிவிடக்கூடும் என்பதாகத் தெரிகிறது.

இது மிகவும் சரியான காரியம் என்பதோடு, இதை 2, 3 வருஷங்களுக்கு முன்னமேயே செய்திருக்க வேண்டும். இந்தியாவில் வேறு சில மாகாணங்களில் முன்னமேயே மாற்றிவிட்டார்கள். அப்படி இருந்தும், சென்னை சர்க்கார் இந்த இரண்டு வருஷமாய்

தாமதம் காட்டிவந்து, இந்த வருஷம்தான் அதை ஒழிக்க முனைந்திருக்கிறார்கள். இதன் காரணம், இந்த மதுவிலக்கு விஷயத்தின்மீது, இந்தியா மந்திரி சிறிது கண்காணிப்பு வைத்திருந்ததேயாகும். இது மாத்திரமல்லாமல், காங்கிரஸ்காரர் செய்துவிட்டுப் போன எந்தக் காரியத்தை மாற்றுவதானாலும், இந்தியா மந்திரி அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது என்கின்ற கொள்கை மத்திய அரசாங்கத்துக்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இருந்துவந்ததாகத் தெரிகிறது. அதே காரணத்தால்தான், கட்டாய இந்தியை உடனே எடுப்பதற்குக்கூட, சென்னை கவர்னர் அவர்கள் சிறிதுநாள் நமக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டே வந்தார். மற்றும் பல காரியங்களும் மாகாண சர்க்கார்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் மாற்றவேண்டும் என்கின்ற அவசியம் தோன்றியும் சரியாகச் செய்ய முடியாமல் போனதாகத் தெரிகிறது.

இந்த காங்கிரஸ் மதுவிலக்குத் திட்டம் மாற்றப்படவேண்டும் என்று நாம் ஆசைப் படுவதிலும் சர்க்காரை வலியுறுத்துவதிலும் உள்ள கருத்து என்னவென்றால், காங்கிரசின் மதுவிலக்குப் போலி முறை ஒழிந்து, சீக்கிரம் ஒரு யோக்கியமானதும், பயன் உள்ளதுமான ஒரு நல்லமுறை ஏற்படவேண்டும் என்பதேயாகும்.

இன்று நம் மாகாணத்தில் உள்ள 25 ஜில்லாக்களில் 4 ஜில்லாக்களில் மாத்திரமே மதுவிலக்கு செய்வதாகக் காங்கிரசார் திட்டம்போட்டு, அந்தப்படி அமுல் நடத்திவந்தார்கள். நாமறிந்தவரை இந்தத் திட்டம் மகா மகா முட்டாள்தனமாகவே முடிந்தது என்பதோடு, மதுவிலக்குக் கொள்கைக்கே கேடு செய்யும்படியாகவும், உலகோர் சிரிப்புக்கு இடமாகவும் இருந்துவருகிறது என்பதை வலியுறுத்திக் கூறுவோம்.

ஏனெனில், நமக்கு நன்றாய்த் தெரிந்த சேலம் ஜில்லாவிலுள்ள மதுவிலக்குத் திட்டத்தின் நிலைமை, தெருக்கள்தோறும் திருட்டுச் சாராய விற்பனையும், தோட்டங்கள் தோறும் கள் விற்பனையும், தெருவிலே போகும் எந்தக் கூடையை இறக்கிப் பார்த்தாலும் அதில் தெரியும்படியாய் உள்ள சாமான்களுக்கு அடியில் சாராயம், கள் அடங்கிய 'பாட்டில்'களும் குச்சுக்காரி வீடுகள் பல கள், சாராயக் கடைகளாகவும் இருந்துவந்ததால், இலாக்கா சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஏராளமான வரும்படியும், மணியக்காரர்களுக்குக் கொள்ளை இலாபமாகவும் இருந்துவந்தன.

இந்த விஷயம் பலதடவை சர்க்கார் தலைமை அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் அவர்கள் உடனே ஒன்றும் செய்யமுடியாமல் விழித்ததும் நமக்குத் தெரியும். எனவே, இப்போதாவது கவனித்துத் தக்கது செய்ய முன்வந்தது போற்றத்தக்கதேயானாலும், சர்க்காரின் மதுவிலக்குக் கொள்கை, போலி மதுவிலக்குத் திட்டத்தை ஒழிப்பது மாத்திரமாய் இல்லாமல், உண்மையான மதுவிலக்குக் கொள்கைக்கு நல்ல ஒரு யோக்கியமான திட்டத்தை ஏற்படுத்தி, அதை உடனே அமுலுக்கும் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தி வேண்டிக்கொள்கிறோம். அப்படிச் செய்யாவிட்டால், சர்க்கார் தங்களை யாரும் சுலபமாய்க் குற்றம் சொல்ல இடம் கொடுத்தவர்களாவார்கள் என்பதுடன் உண்மையாகவே அது ஒரு குறை சொல்லக்கூடிய காரியமுமாகும்.

சர்க்கார் இது விஷயத்தில் என்ன செய்ய வேண்டுமென்றால், நம் மாகாணத்தில் உள்ள மொத்த கள், சாராயக் கடைகளைக் கணக்கு எடுத்து, அந்த எண்ணிக்கையை தாலுக்காக்கள், சர்க்கிள்கள்தோறும் வருஷம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் இல்லாமல் போகும்படியாகச் செய்துவிடவேண்டும். குடிகாரர்களைத் திடீரென்று 'குடி பட்டினி' போட்டால், அவர்கள் திருட்டுத்தனமாய் அதை அடைய முயற்சிக்காமல் போகமாட்டார்கள்; இது இயற்கை.

சிலருக்குக் குடிக்க அனுமதி கொடுத்து சிறிது சிறிதாய்க் குறைத்துவர வேண்டும்; இல்லாவிட்டால் அவர்கள் எப்படியாவது குடிப்பார்கள். அதற்கு இவ்வளவு விலை

இல்லாமலும் இன்றுள்ளதுபோல் ஒரு இலாக்கா வைத்துக் குடியைப் பெருக்காமலும் காங்கிரசுக்காரர்களைப்போல் தந்திரம் செய்யாமலும் சர்க்கார் மனப்பூர்வமாய் யோக்கிய மாய் நடந்துகொள்ள வேண்டும்.

இன்றையக் குடியானது மனிதனைப் போதையினால் கெடுப்பதைவிட, விலை அதிகத்தினாலேயே குடிக்கிறவனும் அவன் குடும்பமும் கஷ்டப்படுகிறார்கள்.

அன்றியும், அதற்கென்று ஒரு இலாக்கா இல்லாவிட்டால், கள்ளில் இவ்வளவு போதை இருக்க நியாயமில்லை. தென்னந்தோப்பிலேயே போய் உடனே இறக்கிக் குடிப்பதால், கடையில் குடிப்பதில் கால்வாசி போதைகூட இல்லையென்று நல்ல குடிகாரர்களே சொல்லுகிறார்கள்.

இன்னும் நியாயமானதும் யோக்கியமானதும் அமுலில் பயன்தரக் கூடியதுமான பல திட்டங்கள் இருக்கின்றன. சர்க்கார் கவலை எடுத்தால் வெகு சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம்.

['குடிஅரசு'-தலையங்கம்—6-11-1943]

சென்னை இராஜ்யத்தில் மதுவிலக்கு முறையைத் தொடர்ந்து நடத்துவதென ஆச்சாரியார் ஆட்சி முடிவு செய்துவிட்டது.

இதில் பிடிவாதம் தவிர வேறு எந்தவிதமான நீதிவாதமும் கிடையாது. இந்த மது விலக்குத்திட்டம் ஆச்சாரியார் அவர்களால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது என்ப தல்லாமல், மற்றபடி அதற்கு எந்தவிதமான தேவையும், பெருமையும் கிடையாது என்பது நமது கருத்து. ஆபீசில் உள்ள ஒரு வேலைக்காரன் எவ்வளவு அயோக்கியனாக, நாணய மற்றவனாக இருந்தபோதிலும் அவனது நாணயக் குறைவான காரியத்தைப் பலர் அறிய—கைப்பிடியாக பிடித்தாலும் அந்த வேலைக்காரன் மேனேஜருக்கு வேண்டியவன், மேனேஜருக்குச் சொந்தக்காரன் என்பதாக இருந்தால் அவன்மீது மற்ற அதிகாரிகள் எவரும் குற்றம் சொல்லமாட்டார்கள் என்பதுமாத்திரமல்லாமல், அவனுக்குச் சற்று சலுகை காட்டி அவனை மரியாதையாகக்கூட நடத்த முயலுவார்கள் என்பது இயற்கையேயாகும்.

அதுபோலவே, மதுவிலக்குத்திட்டம் ஆச்சாரியாருக்குச் சொந்தமானது—ஆச்சாரி யாரின் அபிமானத்திற்குப் பாத்திரமானது; ஆச்சாரியார் பெரிய காரியம் சாதித்தார் என்பதற்கு ஒரு சின்னமாக விளங்கத் தக்கது. ஆதலால், அது எவ்வளவுதான் பயனற்ற தாகவும், தோல்வி அடைந்ததாகவும், நடத்தமுடியாததாகவும், அதனால் சர்க்காருக்குப் பெரும் வேலைத் தொந்தரவுடையதாகவும் இருந்தாலும் மதுவிலக்குத்திட்டம் இனியும் நடைபெறவேண்டியதுதான் என்பதாகத் தீர்மானம் செய்யப்படவேண்டியதாகிவிட்டது.

உணவு கண்ட்ரோல் எப்படி சர்க்காரால் ஒழுங்காக நடத்தமுடியாமல் போனதோடு, இது அமுலில் இருப்பதாலேயே மக்கள் நாணயக் குறைவாகவும், ஒழுக்கக் குறைவாகவும் நடந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டு, பலர் பலவிதமாய் அநியாயக் கொள்ளை இலாபமும், நட்டமும் அடையும்படி நேர்ந்து இருந்ததோ அதேபோல்—மதுவிலக்குத் திட்டத்தாலும் பெருவாரியான மக்கள் நாணயக் குறைவாக—ஒழுக்கக் குறைவாக நடந்து மது அருந்தவும், அதுபோலவே நடந்து மக்கள் மது உற்பத்தி செய்யவும், அதுபோலவே மக்கள் குறைசொல்லவும் ஏற்பட்டுவருவதுடன், அதிகாரிகளும் ஒரு நல்ல அளவுக்கு நாணயக் குறைவான மக்களாக ஆகிவருகிறார்கள். இவை மாத்திரமல்லாமல் பலர் விஷ சத்தை மதுவாக அருந்தவேண்டியவர்களாக ஆகிறார்கள்.

மதுவிலக்குத் திட்டத்தைப் பயன் ஏற்படும்படி அமுல் நடத்த முடியாது என்று ஆச்சாரியாரைப் போன்ற மதிப்புள்ள மக்கள்—ஆச்சாரியாரைப் போன்ற பொதுஜன

தன்மையில் கவலையுள்ள மக்கள் ஏராளமானவர்கள் சொல்லிவிட்டார்கள். உண்மையைச் சொல்லப்போனால், நடுநிலைமையில் இருந்து பேசுவதானால்—மதுவிலக்குக்கு இன்று ஆச்சாரியாரைத் தவிர வேறு யார் ஆதரவளிக்கிறார்கள் என்று சொல்ல நபர் கிடைக்கவில்லை.

இன்றைய மந்திரிசபையில் சில மந்திரிகள் ஆதரிக்கிறார்கள் என்றால், காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் யாவரும் ஆதரிக்கிறார்கள் என்றால், மற்றும் காங்கிரஸ் அல்லாத சட்டசபை மெம்பர்களிலும் சிலர் ஆதரிக்கிறார்கள் என்றால், அது பெரிதும் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு ஆகவும், பதவிக்கு ஆகவும், மந்திரிசபை தயவுக்கு ஆகவும் அல்லாமல் உண்மைக்கு ஆக அல்லவே அல்ல என்று நன்றாய்க் கூறலாம்.

மதுவிலக்கு தோல்வி அடைந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறவர்களும், 'மதுவிலக்குத் திட்டத்தைப் பயன் ஏற்படும்படி நடத்த முடியவில்லை. ஆதலால், இனி மது அருந்தியவர்களுக்கு அதிக தண்டனை விதிப்பதன் மூலமும், மது உற்பத்தி செய்தவனை மாத்திரம் அல்லாமல், அந்த வீதிக்காரர்களையெல்லாம், அந்த ஊர்க்காரர்களையெல்லாம் தண்டிப்பதன் மூலமும் பயன் ஏற்படும்படி நடத்தலாம்' என்று சென்ற மந்திரி சபையிலுங்கூட, மந்திரிகளே பேசியிருக்கிறார்கள்; இப்பொழுதும் சட்டசபையில் அதையே பேசியிருக்கிறார்கள்.

இப்போதே குடிகாரர்கள் மாத்திரமல்லாமல் விற்பனைக்காரர்களும் வீடு வீடாக, காடு காடாக, புதர் புதராகக் காய்ச்சுகிறார்கள். இதனால் பயன் அடைந்த—அடைகிற பலர் சட்டசபை மெம்பர்களாக இருப்பதோடு, சிலர் மந்திரியாகவும் இருக்கிறார்கள். சட்டசபை மந்திரிகள் மாத்திரமல்லாமல் இவர்களது நண்பர்களும், அதிகாரிகளில் பலரும், போலீஸ் சிப்பந்திகளில் பலரும் இந்த மது உற்பத்தி வேலையிலும், உற்பத்தியாளரிடம் பங்குபெறும் வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது யாராலும் மறுக்கக்கூடிய செய்தியல்ல.

இந்த மதுவிலக்கால் சர்க்காருக்கு 15 முதல் 20 கோடி ரூபாய் வரை நஷ்டமாவது ஒருபுறமிருந்தாலும்—தவறான வழியில் உற்பத்தி செய்கிறவர்கள், பகுதிக்குமேல் இதில் பணம் பெறுகிறார்கள். இயற்கை மதுவல்லாத—மற்ற செயற்கை மதுவை அருந்துகிறவர்கள் பல கோடி ரூபாய் செலவழித்து போதை அடைகிறார்கள். மற்றும் பல வழிகளில் கேடும் செலவும் ஏற்படுகின்றன.

இவ்வளவு கேடுகளையும் பொறுத்துக்கொண்டு—தங்களால் முடியாத காரியத்தைச் செய்துதான் தீருவோம் என்று மந்திரிசபை முடிவுசெய்யுமானால், இது பிடிவாதம் என்பதைத் தவிர வேறு என்ன என்பதாகச் சொல்லமுடியும்? அதிலும், இது ஆச்சாரியார் அவர்களின் பிடிவாதமானதால் அவர் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் அவரவர்கள் மனச்சாட்சிப்படி இஷ்டமில்லாத காரியம் சட்டசபையில் நிறைவேறி இருக்கிறது.

இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்—ஜனநாயகத்தின் தன்மையையும் மக்கள் பிரதிநிதித்துவத்தின் தன்மையையும்.

ஆகவே, மதுவிலக்கு வெற்றி மக்கள் வெற்றி அல்ல; ஆச்சாரியார் வெற்றியேயாகும். மக்கள் தோல்வி, ஒழுக்கம் தோல்வி, உண்மை தோல்வி எல்லாம் ஒருபக்கம் இருந்தாலும், பந்தயத்தில் ஈடுபட்டுத் தோற்றவன் வெற்றிபெற்றவனைப் பாராட்டுவதுபோல் ஆச்சாரியார் அவர்களை இந்த வெற்றிக்கு ஆகப் பாராட்டுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—18-7-1952]

நான் காங்கிரசைவிட்டு வந்தபிறகு, சுமார் 30 ஆண்டுகளாகவே இன்று உள்ள மதுவிலக்குக் கொள்கைக்கு எதிரி. இதற்காக என்னை நான் மதுக் குடங்களைக் காவடிகட்டிச் சுமந்து நிற்கிறமாதிரி காங்கிரசுக்கு ஆதரவான பத்திரிக்கைகளில் கேலிச்சித்திரம் போட்டுக் கண்டித்து எழுதியுள்ளார்கள்.

நான் காங்கிரஸ் மதுவிலக்கைப்பற்றி எதிர்த்து 'குடிஅரசு' இதழில் எழுதிய தலையங்கங்கள், கட்டுரைகள் ஆகியவற்றில் காங்கிரஸ் மதுவிலக்குக்கு உள் எண்ணம் கூடக் கண்டுபிடித்து எழுதியிருக்கிறேன்; பேசி வந்திருக்கிறேன்.

அந்த உள் எண்ணம் என்னவென்றால், 1938-ல் காங்கிரஸ் (இராஜாஜி) பதவிக்கு வந்தகாலத்தில் 'நமது கல்வி வளர்ச்சியை ஒழித்துக்கட்டுவதற்கு ஒரு ஆதாரம் தேட வேண்டும் என்கிற எண்ணத்தின்மீது மதுவிலக்கு ஏற்பாடு செய்யப்பட்டது' என்று எழுதியும் பேசியும் வந்திருக்கிறேன். அதாவது, 100-க்கு 5 வீதமே படித்த மக்களாய் இருந்த நாம் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு 100-க்கு 7 படித்த மக்களானோம். அதைக்கண்டு ஆத்திரமடைந்த இராஜாஜி தாம் 1938-ல் பதவிக்கு வந்தவுடன் 'கல்வியை அன்றுள்ள தன்மைப்படி நடத்துவதானால் அரசாங்கத்தினிடம் போதிய பணம் இல்லை. ஆதலால், வரவு-செலவைச் சரிகட்ட 2600 பள்ளிகளை மூடவேண்டியது அவசியமாகிவிட்டது' என்பதாக ஒரு சாக்குக் கண்டுபிடிக்கக் கருதியே 'மதுவிலக்கினால் ஏற்பட்ட நட்டத்தைச் சரிகட்டினேன்' என்று சொல்ல வசதி ஏற்படுத்திக்கொண்டார். அது, மதுவிலக்கினால் மது வரும்படித்தொகை பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டது என்று கூறிவிடலாம் என்பதாகக் கருதி ஏற்பாடு செய்தார். ஆனால், அந்த மதுவிலக்கு ஏற்பாடு செய்த நாள் முதல் நாளது வரைக்கும் அந்த மதுவிலக்குக் காரணமாக அது குடிசைத் தொழிலாக மாறி, இன்று அது (குடி) ஒரு பிரபுத்துவ நாகரிகமாகவே மக்களிடம் பரவி வந்திருக்கிறது.

இந்த மதுவிலக்கினால் குடிகாரர்களின் எண்ணிக்கை ஒரு சிறிதும் குறைந்த பாடில்லை என்பதோடு, இதற்காகக் குடியர்கள் செலவிடும் பணமும், மற்றும் 50 முதல் 100 சதவீதம் உயர்ந்ததே அல்லாமல் குறையவில்லை என்பதோடு, முன்பு மதுக் கடைகளுக்குச் சென்று வாங்கிக் குடித்தவர்களுக்கு இன்று அவர்கள் வீடுதேடிவந்து மதுவிநியோகம் ஆகும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மது உற்பத்தித் தொழில்மூலம் நாட்டில் அயோக்கியர்கள், நாணயமில்லாதவர்கள் பெருகி வருகிறார்கள். இது மாத்திரமல்லாமல், கீழ்நிலை போலீஸ் நண்பர்கள் அனேகர் குடிப் பழக்கத்துக்கு ஆளாகி, நாணயம் கெட்டவர்களாகவும் ஆகிவருகிறார்கள்.

மற்றும், இந்த மது உற்பத்தி காரணமாக அனேக அயோக்கியர்கள், காலிகள் போலீசுக்கு நண்பர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இவற்றையெல்லாம்விட, குடியர்கள் உடல்நிலை மிக மிகக் கேடடைந்து விடுகிறது.

மது அருந்தியதற்காக 5 சதவிகிதத்திற்கும் குறைவான பேர்கள்தாம் குற்றவாளிகளாக ஆக்கப்படுகிறார்கள். மற்ற 95 சதவிகிதத்தினர் தாராளமாய் முறைப்படி அருந்திக் கொண்டே இருக்கிறார்கள்.

இன்னும், இவற்றுள் பல இரகசியமான கேடுகள் நிகழ்ந்து வருகின்றன. இன்று அரசாட்சி செய்ய 'மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டு' ஆட்சிக்கு வந்திருக்கும் கட்சியார் மதுவிலக்கு விஷயத்தில் சில சீர்திருத்தம் செய்து மதுவிலக்கை நிலைநிறுத்துவோம், தீவிரப்படுத்துவோம் என்பதாகக் கூறி இருப்பதாகத் தெரிகிறது.

இப்படி இவர்கள் கூறி இருப்பதற்குக் காரணம், இராஜாஜியைத் திருப்திப்படுத்த அவருக்குப் பயந்து கூறி இருக்கிறார்கள் என்றுதான் கருதவேண்டி இருக்கிறது.

'நம் மக்கள் சகல துறைகளிலும் கேடடைந்து சிலர் கெட்டு உழலவேண்டும் என்பதுதான் பார்ப்பனர் தர்மம். ஆதலால், எந்த நிலையிலும் பார்ப்பனர் நம் யாருக்குமே நல்வழி காட்டமாட்டார்கள்.

இந்த மதுவிலக்குத் துறையில், தேவைப்பட்டவர்களுக்கு எல்லாம் மது கிடைக்கும் படியும் மதுவினால் உடலும் புத்தியும் கெடாதபடியும் இருக்கத்தக்க வண்ணம் மது அனுமதிப்பு ஏற்படுத்தினால் சர்க்காருக்கு நல்லநிதி வரும்படி ஏற்படுவதுடன், பார்ப்பனர் தவிர்த்த மற்ற சகலதுறையிலும் உள்ள மக்களில் நல்ல அளவுக்கு இந்த ஆட்சிக்கு ஆதரவு கிடைக்கும் என்றும் கருதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—4-3-1967]

2. தேசியம்

1. தேசியம்

சகோதரர்களே! சகோதரிகளே!

தேசிய நிலைமை என்பதற்கு நமது தேசத்தினுடையவும், தேச மக்களினுடையவும் நிலைமையைப் பற்றியும், அக்கம் பக்கமுள்ள தேசங்களின் நிலைமைக்கும், நமது தேசங்களின் நிலைமைக்கும் என்ன வித்தியாசம் என்பதுபற்றியும், அதற்குக் காரணங்கள் என்ன என்பதுபற்றியுமே நான் பேசவேண்டும் என்று நீங்கள் கருதுவதாக நான் நினைக்கிறேன்.

சகோதரர்களே! ஒவ்வொரு நாடும் இதுசமயம் தனது பழையநிலையில் இருந்து விடுபட்டு, புதியமுறையில் முன்னேறவேண்டும் என்கின்ற ஆசைகொண்டு அதிலேயே ஈடுபட்டிருக்கின்றன. இவ்வழியில் சிலநாடுகள் கொஞ்ச நாளைக்குமுன்பே இறங்கி வெற்றி பெற்றுப் பழமையைச் சற்றும் இலட்சியம் செய்யாமலும், வெறுத்தும், அழித்தும் புதுமைகளில் இறங்கி எவ்வளவோ முற்போக்கு அடைந்துவிட்டன. சில நாடுகள் பழமையை அழிக்கும் வேலையில் இப்போதுதான் இறங்கி, அதிலேயே வெகுகஷ்டத்துடன் ஈடுபட்டு வேலைசெய்வதன் மூலம் வெற்றியடைந்தும் வருகின்றன. ஆனால், நமது நாடோ பழமையிலிருந்து ஒரு சிறிதும் மாற்றம் அடையக்கூடாது என்னும் குரங்குப் பிடிவாதத்தில் இறங்கிப் பழமையைக் காப்பாற்றப் பாடுபடுவதோடு—அதற்கும் முந்தின பழமையைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கி வெகுதீவிரமாய் வேலை செய்கின்றது. இந்த உபயோகமற்றதும், பிற்போக்கானதுமான காரியத்திற்குச் சிலர், நமது மக்கள்முன் பெரிதும் பொருளற்றவிதத்தில் மதத்தையும் கடவுளையும் கொண்டுவந்து போட்டுக் கொண்டு வெகுபாடுபட்டுக் குழப்பிவருகின்றார்கள். இவர்கள் பாமர மக்கள் முன்னிலையில், 'மதத்திற்காக எதையும் தியாகம் செய்யவேண்டி உயிரையும் விடுவேன்' என்று வெறும் ஆவேசப் பேச்சுப் பேசுவதன் மூலமே மக்களின் அறிவைக்கெடுத்து நாட்டின் முற்போக்கை நாசப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். 'கடவுளுக்கு ஆபத்து வந்துவிட்டது; ஆஸ்திக மாநாடு கூட்டுங்கள்' என்பவர்களும்—'தர்மங்களுக்கு ஆபத்து வந்துவிட்டது; கூட்டுங்கள் வருணாசிரம மாநாடு' என்பவர்களும்—'புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் ஆபத்து வந்துவிட்டது; கூட்டுங்கள் சமய மாநாடு' என்பவர்களும் இப்போது மிகுதியும் மலிந்துவிட்டார்கள்.

சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால், இந்தியாவில் தேசியம் என்கின்ற பதமே தப்பான வழியில், மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார்—அதாவது மேல் சாதியார் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பன

ரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சியாலும் பாமரமக்களை ஏமாற்றிச் சிலர் பிழைக்க உபயோகிக்கப்பட்டு வரும் ஒரு பாதகமும் அபாயகரமுமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்.

இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், தேசியமென்பது மக்களின் 'ஆத்மார்த்த இயல்' என்பதில் கடவுள், மோட்சம், நரகம் என்கின்ற வார்த்தைகள் எப்படி அர்த்தமற்றதாகவும் புரோகிதக் கூட்டமும், பாதிரிக் கூட்டமும், முல்லாக் கூட்டமும், சந்நியாசிக் கூட்டமும் பாமரமக்களிடம் சமயத்திற்கு ஒரு அர்த்தமும், சந்தர்ப்பத்துக்கு ஒரு கருத்துமாய்ச் சொல்லி, அவர்களை ஏமாற்றிப் பிடுங்கித் தின்று, சோம்பேறிகளாய் இருந்து—நோகாமல் வாழ்வதற்காக செய்துகொண்டிருக்க உபயோகப்பட்டு வருகின்றனவோ அதேபோல் தேசியமென்னும் பதமும் சரீரப்பிரயாசை ஒருசிறிதும் எடுத்துக்கொள்ள இஷ்டமில்லாமல் நெஞ்சத்தில் அழுக்குப்படாமல், பாமரர்களை ஏமாற்றிப் பிழைக்கவும் கீர்த்தி பெறவும் கண்டுபிடிக்கப்பட்ட சாதனமாகும்.

இந்தப் பதமானது, ஆங்கில பாஷையில் நேஷனல் என்கின்ற பதத்தின் மொழி பெயர்ப்பு என்கின்ற முறையில் ஏற்பட்டதே தவிர, மற்றபடி அது இந்தியாவின் வேறு எந்த பாஷையிலும் எந்தக் கருத்திலும் இருந்ததல்லவென்றே சொல்லலாம்.

அன்றியும், பத அர்த்த உணர்ச்சியானது தேசத்தின் பொதுவான நன்மைகளை உத்தேசித்ததாகக் காணப்படுவதாயிருந்தாலும் அப் பதத்தின்பேரால் நடைபெற்று வரும் முயற்சிகள் முழுவதும் அரசியல் சம்பந்தமான துறையில் சில உத்தியோகங்களையும், அதிகாரங்களையும் மாத்திரம் கருதி, அவைகளை அரசாங்கத்தாரிடமிருந்து அடைவதற்காகச் செய்யும் முயற்சிகளாகவே இருந்துவருகின்றனவே யல்லாமல் வேறில்லை. உதாரணமாக, தேசியம் (அதாவது இந்திய காங்கிரஸ்) ஏற்பட்டு இன்றைக்குக் (1929) கிட்டத்தட்ட 50, 60ஆண்டுகள் ஆகி, அது இன்றைய தினம் செய்திருக்கும் வேலை என்னவென்று பார்த்தால், அரசாங்க சம்பந்தமான உத்தியோகங்களை ஒன்றுக்கு 10 ஆகப் பெருக்கி, அவ்வுத்தியோகங்களுக்கெல்லாம் சதாவேலை இருக்கும்படியாக அனேக புதிய புதிய அதிகாரங்களை உண்டாக்கி—அவ்வுத்தியோகங்களும், அதிகாரங்களும் மக்களுக்குச் சதா தேவையாய் இருக்கும்படியாக மனித வாழ்க்கையையும் குணங்களையும் ஒழுக்கங்களையும் திருப்பி, இதன் பயனாய் முன்சொல்லப்பட்ட உயர்ந்த சாதியார் என்னும் எல்லாப் பார்ப்பனர்களும் படித்தவர்கள் என்னும் பார்ப்பனரல்லாதாரும் போட்டிபோட்டு வாழும்படியாக ஏற்பட்டதல்லாமல்—நாட்டிற்கோ, நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்கோ ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கின்றதா என்பதைச் சிறிதாவது கவனித்தால், நாம் கூறுவதின் தன்மை நன்றாக விளங்கும்.

ஒரு தேசத்தின் தேசியம் முக்கியமாய் எதைப் பொறுத்திருக்க வேண்டுமென்று பார்ப்போமானால், குறைந்தபட்சம் ஒரு தேசமக்கள் தங்களது மனத்தையும் மனச்சாட்சியையும் விற்காமலும், விட்டுக்கொடுக்காமலும் வயிறு வளர்க்கும்படியாவது இருக்க வேண்டும். ஈதன்றி, அதற்கு மேற்பட்ட தேசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறிவு வளர்ச்சி வேண்டும்; கல்வி வேண்டும்; ஆராய்ச்சி வேண்டும்; கண்ணியமான தொழில் வேண்டும்; சமத்துவம் வேண்டும்; ஒற்றுமை வேண்டும்; தன் முயற்சி வேண்டும்; உண்மை உணர்வு வேண்டும்; ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும்; சோம்பேறிகள் இருக்கக்கூடாது; அடிமைகள் இருக்கக்கூடாது; தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக்கூடாதவர்கள் முதலியவர்கள் இருக்கக்கூடாது; இனியும் இதுபோன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

ஆனால், 'இவைகளில் எதனையேனும் இந்த அம்பது வருஷத்திய தேசியம் செய்திருக்கின்றதா?' என்று பொது தேசியத் தலைவர்களையும், தனித்தனி தேசியக்

கட்சித் தலைவர்களையும், இவைகளில் சம்பந்தப்பட்ட தேசிய பக்தர்களையும், தேசத் தொண்டர்களையும் கேட்கிறோம். இந்த 50 வருஷ காலமாக உத்தியோகப் பெருக்கிற்கும், அதிகாரப் பெருக்கிற்கும், அவற்றிற்கு ஏற்பட்ட யோக்கியதாபட்சப் பெருக்கிற்கும், சம்பளப் பெருக்கிற்கும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நூற்றக்கணக்கான திட்டங்கள் கொண்ட சட்டங்கள் தேசியத்தின் பேரால் நிறைவேற்றப்பட்டிருப்பதுபோல், உண்மையாகவே தேச நன்மைக்கேற்றதான மேலே குறிப்பிடப்பட்டவைகள் விஷயத்தில்—ஏதாவது சட்டம் செய்ய இந்தத் தேசிய இயக்கமோ தேசியத் தலைவர்களோ ஒரு சிறிது முயற்சியாவது செய்து சட்டம் செய்தார்களா? செய்ய முற்பட்டார்களா? என்று கேட்பதுடன், அவ்வித சட்டம்செய்ய முன்வந்த வேறு கனவான்கள் முயற்சிக்காவது முட்டுக்கட்டை போடாம லாவது இருந்தார்களா என்று கேட்கிறோம்.

மக்கள் சாதி பேதத்தையும், மத பேதத்தையும் ஒழிக்க தேசியவாதிகள் கவனிக்காம லிருப்பது மாத்திரமல்லாமல், அவற்றை நிலைநிறுத்தவும் வலுப்படுத்தவும் முயற்சிக்காம லிருப்பதுமில்லை. இன்றையத் தேசிய வாழ்வில் தேவஸ்தான மசோதாவை எதிர்த்தவர்கள் யார்? சாமிகள் பேரால் பெண்மக்கள் விபச்சாரத்தைத் தடைபுரியும் மசோதாவை எதிர்த்த வர்கள் யார்? மக்கள் எல்லோருக்கும் சமப்பிரதிநிதித்துவமும் சமசந்தர்ப்பமும் அளிக்க வேண்டும் என்னும் கொள்கைகளை எதிர்ப்பவர்கள் யார்? இவைகளை முந்தியவர்கள் யார் என்கின்ற விவரங்களைக் கவனிப்போமானால், 'தேசத் துரோகிகள்' என்பவர்களால் மசோதாக்கள் கொண்டுவரப்படுவதும், 'தேசியவாதிகள்' என்பவர்களால் எதிர்க்கப் படுகின்றதேயல்லாமல் வேறு என்னவென்றுதான் கேட்கிறோம்.

செங்கற்பட்டு மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் யாரால் கொண்டுவரப் பட்டவை? இப்போது அவைகள் யாரால் எதிர்க்கப்படுகின்றன? என்று பார்த்தால் அவ் வளவும் தேசியவாதிகள் என்பவர்களாலேயே எதிர்க்கப்படுவதைக் காணலாம்.

[பாலக்காட்டில், 9-5-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-5-1929]

2. தேசிய வாதிகள்

'பழுத்த தேசாபிமானிகளும், பிரபல தேசியத் தலைவர்களும்' ஆகிய திருவாளர்கள் மாளவியா, கேல்கர், மூஞ்சே, எம். கே. ஆச்சாரியார், கே. வி. ரெங்கசாமி அய்யங்கார், ஏ. ரெங்கசாமி அய்யங்கார், மோதிலால் நேரு ஆகியவர்கள் எல்லோருமே இந்த இருபதாவது நூற்றாண்டில் இடையூறாயிருந்திருக்கிறார்கள் என்றால், இனி எந்தத் தேசியவாதியின் ஆதரவை எந்தக் காலத்திலாவது எதிர்பார்க்கக் கூடுமா என்பதுதான் கேள்வி. இதில் மற்றொரு விஷயம் என்னவென்றால், மேற்கூறிய எல்லாத் தேசியவாதிகளும் மசோதாவின் (சாரதா மசோதா) தத்துவத்தை ஒப்புக்கொள்வதாகச் சொல்லிக்கொண்டே ஆட்சேபித்திருக் கிறார்கள் என்றால், இனி ஒப்புக்கொள்ள முடியாத விஷயத்தில் இவர்கள் ஆட்சேபணை எப்படி இருக்கும் என்பதை யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது.

திரு. மாளவியா அவர்கள் தனது ஆட்சேபணைக்குச் சொல்லிய காரணம் என்ன வென்றால், '14 வயதுக்கு மேற்பட்டுக் கலியாணம் செய்வது நல்லதுதான். ஆனாலும், ராஜியை முன்னிட்டு 12 வயதாக இருக்கவேண்டும்' என்பது. திரு. மூஞ்சே சொன்ன ஆட்சேபணையைக் கவனிப்போம். இவர் பார்ப்பனர்—பார்ப்பன மாணவர்களை மாமிசம் சாப்பிடவேண்டும் என்று சொல்லுபவர்—வைத்தியர். இத்துடன் வைத்திய சாஸ்திரப் படியும், உடற்கூறு சாஸ்திரப்படியும் பெண்களுக்கு 18 வயதுக்கு முன் விவாகம் செய்வது கெடுதி என்கின்ற அபிப்பிராயம் கொண்டவர். அப்படி இருந்தும், இந்த மசோதா விஷயத்தில் '12 வயதுக்குமேல் கலியாண வயது இருக்கக்கூடாது' என்று வாதம் செய்தவர். திரு. மோதிலால் நேரு எந்த மாமிசமும் சாப்பிடுபவர்; எந்தப் பானமும் செய்வார்;

20 வயதுக்கு முன்னால் தங்கள் குழந்தைகளுக்குக் கலியாணம் செய்வதில்லை என்றும் சொன்னார். அப்படி இருந்தும், அந்த மசோதாவின் ஜீவநாடியைப் பிடுங்கிவிடக் கருதி சூழ்ச்சி செய்தார். அதாவது, 'அவசியமிருக்கின்றவர்கள் 14 வயதுக்குள்ளாகவும் கலியாணம் செய்ய அனுமதிக்க வேண்டும்' என்னும் ஒரு திருத்தம் கொண்டுவந்து மசோதாவை அடியோடு கவிழ்த்து விடப்பார்த்தார். திரு. கேஸ்கர், திரு. திலகரின் ஸ்தாபனத்திற்கு வந்தவர். அவரோ மசோதாவின் தத்துவத்தை ஒப்புக்கொள்வதாய்ச் சொல்லி, ஆனால்—'வைதிகர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய்ச் சட்டம் செய்யக்கூடாது' என்றார். இனி சென்னைத் 'தலைவர்' களைப்பற்றிச் சொல்லவேண்டிய அவசியம் இருக்காது என்றே நினைக்கிறோம். எனினும், திருவாளர்கள் சேஷயங்கார், கே. வி. ரெங்கசாமி அய்யங்கார், எம். கே. ஆச்சாரியார், எ. ரெங்கசாமி அய்யங்கார் போன்ற 'பரம்பரை தேசியவாதி'களின் யோக்கியதை, இம் மசோதா விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கூர்மையாய்க் கவனித்து வந்தவர்களுக்கு விளங்காமல் போகாது.

எனவே, நமது நாட்டிற்கென்றோ, சமுதாயத்திற்கென்றோ எவ்வித திருத்தம் கொண்டு வந்தாலும் இந்தக் கூட்டத்தவர்களே—அதாவது பார்ப்பனர்களே ஒருபுறம் தேசியத்தின் பேராலும், மற்றொருபுறம் மதத்தின் பேராலும், மற்றொருபுறம் சாஸ்திரத்தின் பேராலும், மற்றொருபுறம் மனச்சாட்சியின் பேராலும் தொல்லை விளைவித்து வருவதை வெகுகாலமாகவே கவனித்து வருகிறோம். சாதாரணமாய், 'வினா அறியாக் குழந்தை களை'க் கடவுள் பேரால் பொட்டுக்கட்டி விபச்சாரிகளாக்குவதையும், மக்களை விபச்சாரத் தொழிலால் ஜீவனம் செய்யக்கூடாதென்றும் கருதிக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள்கூட மதத்தின் பேராலும், சாஸ்திரங்களின் பேராலும், சாமிகளின் பேராலும் ஆட்சேபிக்கப் படுமானால், அதுவும் பூரண சுயேச்சையை விரும்பும் சங்கக் காரியதரிசியும், கற்ற பண்டிதர் களால் தெரிந்தெடுக்கப்பட்டவருமான திரு. சத்தியமூர்த்திப் பார்ப்பனராலேயே எதிர்க்கப் படுமானால்—இனி சாதாரண பார்ப்பனர்களாலும் அவர்கள் கலந்த இயக்கங்களாலும், நாம் எந்தவிதமான சீர்திருத்தத்தை சுயராஜ்யத்தில்—இராமராஜ்யத்தில் எதிர்பார்க்கக் கூடுமென்பது நமக்கு விளங்கவில்லை. பொதுவாக, இந்தப் பார்ப்பனர்கள் சர்க்காருக்கு விரோதமாகவும், சர்க்காருடன் ஒத்துழைக்கக்கூடாது—சர்க்காரை ஒழிக்கவேண்டும் என்றும் சொல்வதின் இரகசியம் எல்லாம், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த சர்க்கார் பார்ப்பனரல்லாத மக்களுக்கு வசமாகக்கூடாதென்றும், பார்ப்பனரல்லாத மக்களுக்கு அனுகூலமாக ஏதாவது நன்மையோ, சீர்திருத்தமோ செய்ய இடம் கொடுத்துவிடக்கூடாது என்பதுமான கெட்ட எண்ணமே தவிர, மற்றபடி சர்க்காரோடு ஒத்துழைக்கக்கூடாது என்பதில் ஏதாவது யோக்கியப் பொறுப்போ, தேசியமோ, நாணயமோ இருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—29-9-1929]

கிளர்ச்சியினால் அனேகர்கள் தேச பக்தர்களாகவும் தியாகிகளாகவும் ஆகலாம். முயற்சியினால் பலருக்கும் பெரிய பட்டமும், பதவியும், உத்தியோகங்களும் கிடைக்கலாம். இதைத் தவிர, நாம் எதிர்பார்க்கும் காரியம் கிடைக்குமென்று நம்புவதற்கில்லை. சைமன் கமிட்டியார் தெரிவித்தபடியும், சக்கரவர்த்தியார் தெரிவித்தபடியும் இந்தியாவில் 'அநாதி' காலந்தொட்டு இருந்துவரும் மேல்சாதி-கீழ்சாதி வித்தியாசக் கொடுமையும், ஆண் - பெண் வித்தியாசக் கொடுமையும். பணக்காரன் - ஏழை, மிராசுதார் - உழுபவன் வித்தியாசக் கொடுமைகளும்; பொதுவில் மதக் கொடுமையும் ஆகியவைகளை நன்றாய்க் கவனித்து, அஸ்திவாரத்தில் இருந்தே பறித்துக் களைந்து எறியும்படியான கிளர்ச்சியும் வெற்றியுந்தான் உண்மையில் ஏதாவது பயனளிக்கக் கூடியதாயிருக்குமே தவிர, வேறில்லை.

தேசியக் கிளர்ச்சியில் வரும் பூரண சுயேச்சையானாலும், சீர்திருத்தமளிக்க முயற்சி செய்யும் சர்க்காரால் வரும் முழுச் சீர்திருத்தமானாலும் இரண்டும் உயர்ந்த சாதிக்காரன், பணக்காரன், படித்தவன் ஆகிய மூவருக்கும் மாத்திரம் அனுகூலமும் முற்போக்குமான சுதந்திரமும், சீர்திருத்தமுமாய் இருக்குமே தவிர, 100-க்கு 90 மக்களாய் இருக்கின்ற குடியானவனுக்கும் கூலிக்காரனுக்கும் தாழ்த்தப்பட்டவனுக்கும் வேண்டிய மார்க்கம் அதில் ஒன்றும் இருக்காது என்றே சொல்லுவோம்.

['குடி அரசு' தலையங்கம்—23-11-1930]

8. தேசிய வியாபாரம்

உலகத்தில் மக்கள் தங்கள் தங்கள் வாழ்க்கைக்கு விகிதாயங்கள் ஏற்படுத்திக் கொள்வதில்—பலர் பொதுநல சேவை என்பதையும் ஒரு மார்க்கமாக உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். அந்த முறையிலேதான் இன்று எல்லாவிதமான பொதுநல சேவைகள் என்பவைகளும் ஒரு மனிதன் சுயநல வாழ்க்கையை முக்கிய நோக்கமாகவும், அடிப்படையாகவும் கொண்டதாகவும் இருந்துவருகின்றன.

இந்த நிலைமையானது இந் நாட்டின் மக்களின் உண்மையான பொது நலம் என்பதை அடியோடு கெடுத்துவிட்டதல்லாமல், இம் மாதிரி நன்மைகளால் பொது நல வாழ்வானது—உண்மை, ஒழுக்கம், நாணயம் என்பவைகள் சிறிதும் இல்லாத புரட்டுக்கும், பொய்யுக்கும், வஞ்சகத்திற்கும் நிலையாயுள்ள ஒரு வியாபார சாலைபோல் ஏற்பட்டு விட்டது. இதன் பயனாகவே மக்கள் மிகவும் ஏமாற்றப்பட்டுக் கஷ்டத்திற்கும், கொடுமைக்கும் ஆளாகி முற்போக்கடைய இடமில்லாமல் போய்விடுகின்றார்கள். இந்த மாதிரியான காரியங்கள் சமீப காலம்வரை மதம், கடவுள், மோட்சம், சன்மார்க்கம் முதலாகியவைகளின் பேராலேயே பெரிதும் நடந்துவந்திருந்தாலும்—கொஞ்ச காலமாய் தேசம், தேசியம், சுயராஜ்யம் என்பவைகளின் பேரால் வியாபாரமாகவே துவக்கப்பட்டு, மக்களுக்குப் பெருத்த இடையூறையும், கஷ்டத்தையும் கொடுத்து வருகின்றது.

ஏனெனில், சாதாரணமாக மற்ற பல நாடுகளில் பொதுநல சேவை என்பதில் ஈடுபடுகின்றவர்கள் பலர் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் கவலைக்கும் உள்ளாகி, அனேகவித தொல்லைகளை அனுபவிக்கின்றார்கள். ஆனால், இந்த நாட்டிலோ சிறிதும் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும், கவலையும் இல்லாமல்—நேருக்கு நேராகவே, உடனுக்குடனே பதவி, உத்தியோகம், பணம், கீர்த்தி, அதிகாரம் முதலியவைகள் மாற்றுப் பண்டமாக அடையப்பட்டு வருகின்றன. இவற்றிற்குக் காரணம், பொது மக்களை மூட நம்பிக்கைக்கு ஆளாக்கி, வைத்திருப்பதால், அந்த மூட நம்பிக்கையானது அந்த மக்களைத் தேசிய வியாபாரிகளிடமும் சிக்கி, ஏமாந்து கஷ்டப்படும்படி செய்துவருகின்றது.

இந்த நிலைமையானது நாளுக்கு நாள் பெருகி, அனேகர் இவ் வியாபாரத்தில் பங்கெடுக்க நேர்ந்ததன் பின், 'லிமிடெட் கம்பெனி'யாக இருந்தது, 'அன்-லிமிடெட் கம்பெனி'யாகி—அதாவது ஒரு வகுப்பாருக்கு மாத்திரம் என்று இருந்தது எல்லா வகுப்பாருக்கும் பங்கு எடுத்துக்கொள்ள சவுகரியம் ஏற்பட்டு—பிறகு, அதற்கு அனேக (பிராஞ்சு)கிளை இயக்கங்களும் உண்டாகி, இப்போது வரவரப் பெருகி, ஏறக்குறைய சிறிது கல்வியும் தந்திரமும் உள்ள எல்லா மக்களுமே தேசிய வியாபாரத்தில் கலந்து, அளவுக்கு மீறிய—அதாவது தங்களது யோக்கியதைக்கும் தகுதிக்கும் எத்தனையோ பங்கு மீறியதான இலாபத்தை,பயனை அடையும்படியாகச் செய்துவிட்டது.

இந்த நாட்டில் பொது மக்களின் நலத்திற்கும் பாதுகாப்பிற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமானது என்று சொல்லத்தகுந்த கள், சாராயக்கடை, சூதாடுமிடம், விபச்சாரிகள்

விடுதி, கொள்ளைக்கூட்டத்தார் முதலிய எல்லா ஒழுக்கமும் நாணயமும் கெட்ட துறைகள்— இயக்கங்கள் என்பவைகளை யெல்லாம்விட மிக்க மோசமான துறையாகவும் ஸ்தாபன மாகவும் உள்ள இடத்தை மேற்படி தேசிய வியாபாரம் அடைந்துவிட்டது.

இன்னும் விளக்கமாய்ப் பேசவேண்டுமானால், வேறு எந்தக் காரணத்தாலும் பிழைக்க முடியாதவர்களும் ஒழுக்கமும், நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசிய வியாபாரத்தைவிடச் சுலபமான வழி, வேறு ஒன்றும் இல்லை.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, நமக்கு 3 கிளர்ச்சிகளின் அனுபவமும், 4 தேசிய ஸ்தாபனங்களின் அனுபவமும், அனேக தேசபக்தர்கள் அனுபவமும், 4 மந்திரி சபைகள் அனுபவமும், பல ஜனப் பிரதிநிதிகளின் அனுபவமும், அனேக உத்தியோகக் காரர்களால் ஏற்பட்ட அனுபவமும் உண்டு. இவைகளில் கலந்துள்ள 100 க்கு 99¾ பேர் களின் யோக்கியமும் நாணயமும் இலட்சியமும் ஒன்றேயாகும். எல்லோரும் ஏழைகளை— பாமர மக்களை வஞ்சித்து, கொள்ளை அடித்துப் பணம் சம்பாதித்துப் பெரிய மனிதர்கள் ஆகவேண்டும்; பட்டம் பதவிகள் பெறவேண்டும்; தங்கள் பிள்ளை குட்டி சந்ததிகளுக்கு உத்தியோகங்கள் பெறவேண்டும் என்பவைகளையே முக்கிய தத்துவமாய்,—கொள்கை யாய்க் கொண்டவர்கள் என்பதைத் தூக்குமேடைமீது இருந்து சொல்லுவோம்.

இது மாத்திரமல்லாமல், எந்தவிதமான யோக்கியர்களையும், இன்றையத் தேசிய மானது அயோக்கியர்களாக்கத் தயாராயிருப்பதோடு—வெளியில் இருக்க முடியாமல் உள்ளே இழுத்துப் போட்டுக்கொள்ளுகின்றதாகவே இருக்கின்றது.

['குடி அரசு'–தலையங்கம்—1-3-1931]

4. பார்ப்பனர்களின் தேசியம்

பார்ப்பனர்கள் என்ன நோக்கத்துடன் தேசியம், தேசியம் என்று கூப்பாடு போடு கிறார்கள் என்பதைப்பற்றிப் பல தடவைகளில் நாம் வெளியிட்டிருக்கிறோம். 'தேசியம்' என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதற்குக் காரணமே பார்ப்பனீயமான சனாதன தர்மங் களைப் பலப்படுத்தவே ஒழிய வேறில்லை. தேசியம் என்கின்ற வார்த்தைக்கு அனேகமாய் மக்கள் மனத்தில் இத் தேசத்தில் பழைய நாகரிகம், சனாதன தர்மம், பழைய பழக்க வழக்கம் என்பவைகளையே பிரதானமாகக் கொள்ளும்படிப் பிரச்சாரம் செய்து வந்ததும், அதற்காக இந்தியப் புராண இதிகாசங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டிப் பிரச்சாரம் செய்து வந்ததும் வாசகர்கள் அறிந்ததே. இந்தக் கருத்தைக் கொண்டேதான் கராச்சி காங்கிரஸ் சுயராஜ்யத் திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. மற்றும், இந்திய நாட்டை பாரதமாதா (பூமிதேவி) என்று அழைப்பதும், பாரத தேசம் என்று சொல்லுவதும் எல்லாம் இக் கருத்தை ஆதாரமாகக் கொண்டதே ஒழிய வேறில்லை. தேசியம் என்பதற்கு அரசியலைச் சம்பந்தப் படுத்திய கருத்தும், இந்தியாவின் பழைய நாகரிகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும், சனா தன தர்மத்திற்கும் ஏற்ற அரசியலை ஸ்தாபிக்கச்செய்த சூழ்ச்சியே தவிர வேறல்ல.

இன்றுகூட ஆங்கில ஆட்சியானது சனாதன தர்மப்படி—மனுதர்மப்படி ஆட்சி நடத்தப்படுவதாய் இருந்தால், இன்றைய தேசியமும், சட்டமறுப்பும், ஒத்துழையாமையும் எல்லாம் பறந்தோடிப் போகும்.

இந்தக் காரணத்தினாலேயேதான் தோழர் காந்தியும் மகாத்மாவாக்கப்பட்டார். ஆனால், இதுசமயம் காந்தியின் செல்வாக்கு வேறுவழியில் ஓரளவு குறைந்துபோன காரணத்தினால் அதைப் புதுப்பிக்கவும், காந்தியின் பிரயத்தனமோ, தயவோ சிறிதும் இல்லாமல் தீண்டாமை விலக்கும், ஆலயப்பிரவேசமும் கிளர்ச்சி பெற்றதின் காரணமாய்

காந்தியார் இதில் பங்குபெறக் கருதி, வலியவந்து கலந்துகொள்ளவேண்டியேற்பட்டதாலும் 'தேசியவாதி'களான பார்ப்பனர்களுக்கு இப்போது சிறிது கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. சென்னை தேசியப் பார்ப்பனர்கள் இருக்குமிடம் தெரியவில்லை. தோழர்கள் சத்திய மூர்த்தி, ஏ. ரெங்கசாமி அய்யங்கார், கே. பாஷ்யம் மற்றும் எத்தனையோ சென்னை பார்ப்பனர்களுடைய பேச்சையும், மூச்சையும் காணோம். தோழர் சத்தியமூர்த்தியின் விலாசமே கண்டுபிடிப்பது கஷ்டமாய் இருக்கிறது. அவருடைய முழுசேவையும் தோழர் இராஜா சர். அண்ணாமலையின் குடும்பத்தாருக்குக் கண்ட்ராக்டாய் (சோல்ஏஜன்ஸி) விட்டு விட்டார். அவரைப்பற்றிக் கவிபாடவும் அவர்கோரும் பொதுவாழ்வுக் காரியங்களைக் காங்கிரஸ் பிரதிநிதியாய் இருந்து நிறைவேற்றிக் கொடுக்க முன்னோடும் பிள்ளையாய் இருப்பதுமே அவருடைய சுயராஜ்யத் தபசாயும், அவரது பிறப்புரிமையாயும் ஆகிவிட்டது. ஆனால், தோழர் இராஜா சர். அண்ணாமலை கொடுக்கும் பணங்கள் எல்லாம் சத்திய மூர்த்திக்கே சேர்ந்தது. தோழர் ஏ. ரெங்கசாமி அய்யங்காரோ சங்கராச்சாரி கூட்டத்தினர் களை ஆதரித்து அவர்களை மேன்மைப்படுத்துவதன் மூலமும், மற்றும் சில பணக்காரர் களை விளம்பரப்படுத்துவதன் மூலமும் பெருமையும், பணமும் சம்பாதிப்பதே அவருடைய காங்கிரஸ் பிரச்சாரமாகவும், தேசிய பிரச்சாரமாகவும் ஆகிவிட்டது. தோழர் கே. பாஷ்யம் அடுத்த சட்டசபை தேர்தல்வரை தலை நீட்டமாட்டார். குட்டி தேசியவாதிகளான ஒரு கூட்டம் அதாவது, தோழர் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் போன்றவர்கள் மேற்குறிப் பிட்ட தேசியவாதிகளின் உத்தரவுகளுக்கு இணங்க காந்தியின் செல்வாக்கைக் குறைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் 7-3-1933-ம் தேதி 'தமிழ்நாட்'டில் பிரசுரித்து இருக்கும் தோழர் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் பிரசங்கத்தைப் படித்துப் பார்த்தால் தெரியவரும். இந்த அவசரத்தில் தோழர் இராஜகோபாலாச்சாரி, டாக்டர் இராஜன் கூட்டத்தை நான் மறந்துவிட்டதாகச் சிலர் சொல்லக்கூடும். ஒருநாளும் மறக்கவில்லை. முன்கூறிய கூட்டமும் இந்தக் கூட்டமும் சகோதரர்களே ஆவார்கள். முன்கூறிய கூட்டம் வாதிக்கு வக்கீலாக இருந்து கொள்ளை அடித்தால், பின்கூறிய கூட்டம் பிரதிவாதிக்கு வக்கீலாய் இருந்து கொள்ளை அடிப்பவர்களாவார்கள். வரும்படியைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவார்கள்.

தோழர்கள் இராஜகோபாலாச்சாரியாரும், இராஜனும் எந்த அளவில் சீர்திருத்தக் காரர்கள் என்பதைக் கவனித்தால் யாவருக்கும் சுலபத்தில் உண்மை விளங்கிவிடும். இராஜகோபாலாச்சாரியும் இராஜனும் அவர்களது சாதி உயர்வுக்கு உரிய ஏதாவது ஒரு சின்னத்தை விட்டு இருக்கிறார்களா என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

(1) உச்சிக்குடுமி, (2) வடகலை-தென்கலை பிரிவுப்படி நாமம், (3) பூணூல், (4) பஞ்சகச்சம், (5) சந்தியாவந்தனம், (6) நன்மை தீமைகளில் பார்ப்பனர்களுக்குரிய சடங்குகள் முதலிய காரியங்களை எவ்வளவு ஜாக்கிரதையாய் அனுஷ்டிக்கிறார்கள் என்பதும், இவர்கள் பிரசங்கங்களில் பாரதம், இராமாயணம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய வைணவ மத சாஸ்திர பிரச்சாரங்கள் எவ்வளவு நடைபெறுகின்றனவென்பதும் கவனித்துப் பார்த் தால், சத்தியமூர்த்தி-ரெங்கசாமி அய்யங்கார் கோஷ்டிப் பிரச்சாரத்துக்கு இராஜகோபா லாச்சாரி-இராஜன் கோஷ்டிப் பிரச்சாரம் ஏதாவது கடுகளவாவது இளைத்ததா என்பது விளங்கும்.

நம் தென்னாட்டில் இன்றையப் பொதுவாழ்வில் முன்னுக்கு வரவேண்டும் என்கின்ற ஒருவனுக்கோ அல்லது விளம்பரம் பெறவேண்டும் என்கிற ஒருவனுக்கோ அல்லது அதிகாரம், பதவி, சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தினர் முதலியவை பெற வேண்டும் என்பவர்களுக்கோ அவர்கள் பார்ப்பனராக இருந்தாலும், முஸ்லிம்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாய் இருந்தாலும், பார்ப்பனரல்லாதவர்களாய் இருந்தாலும், இராஜா, சர்களாய் இருந்தாலும், ஜமீன்தார்களாய் இருந்தாலும், பெரும்பணம்பூமிபடைத்த

செல்வவான்களாய் இருந்தாலும் இந்த இரண்டு கூட்டத்தில் ஏதாவதொரு கூட்டத்திற்கு அடிமையானாலொழிய அல்லது வாய்பூசினாலொழிய வெறு மார்க்கமில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட இவர்கள் சங்கதியே இப்படியானால், மற்றபடி வயிற்றுச் சோற்றுக்கு வேறுவழி இல்லாமல் எப்படி நடந்தாவது வயிறு வளர்க்கலாம் என்ற சில தேசபக்தர்களைப்பற்றி நான் சொல்லவேண்டுமா என்று கேட்கிறேன். ஆகவே, இன்றைய நிலைமையைப் பார்த்தால், பார்ப்பனர்களின் தேசியம் ஓரளவுக்கு வெற்றிபெற்று வருகின்றது என்றுதான் சொல்லவேண்டும். காரணம் என்னவென்றால், பார்ப்பனரல்லாத மக்களுக்குள் தலைவர்கள் என்பவர்கள் முதல் வாலர்கள் என்கின்ற வரை, சுயமரியாதையில் போதிய கவலை இல்லாமல், எப்படியாவது அவரவர்கள் தனித்த முறையில் வாழ்ந்தால் போதும் என்கின்ற சுயநலத் தன்மையானது, அவர்களை மறுபடியும் கீழ்நிலைக்குக் கொண்டுவரும்படி செய்கின்றது. இதற்கு நான் என்ன செய்யமுடியும்? இந்தக் காரணங்களால்தான் பார்ப்பான் சாதித் திமிரும், பார்ப்பனரல்லாதவர்களில் உள்ள பணத் திமிரும், மொத்தத்தில் உள்ள படிப்புத் திமிரும், உத்தியோக அதிகாரத் திமிரும் எல்லாம் ஒருங்கே அழியவேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றதுபோல் தோன்றுகின்றது.

['சித்திர புத்திரன்' கட்டுரை—'குடி அரசு' 19-3-1933]

5. ஏன் தோற்றார்?

கேள்வி : தோழர் காந்தியார் ஏன் தோல்வியடைந்தார்?

பதில் : காந்தியார் அரசியலில் தலையிட்டபோது சமூக சீர்திருத்தத்தைப் பற்றியே பிரதானமாய்ப் பேசி, பாமர ஜனங்களிடம் செல்வாக்குப் பெற்றார். அதாவது, தீண்டாமைஒழியாமல் சுயராஜ்யம் கிடைக்காதென்றும்; இந்து, முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாமல் சுயராஜ்யம் கிடைக்காதென்றும்; மதுபானம் ஒழியாமல் சுயராஜ்யம் கிடைக்காது என்றும் சொன்னார்.

ஒவ்வொரு வீட்டிலும் இராட்டினம் சுற்றப்பட்டாலொழிய சுயராஜ்யம் கிடைக்காது என்றார். நாளாக, நாளாக தீண்டாமையை ஒழிப்பதை ஒருபக்கம் பேசிக்கொண்டு மற்றொருபுறம் வருணாசிரம தர்மத்தை ஆதரித்தார். சாதிப்பிரிவுமுறை—சாதிப்படி தொழில்முறை அப்படியே இருக்கவேண்டும்; ஆனால், சாதிகளில் மேல், கீழ் வித்தியாசம் கூடாது என்று சொல்லிப் பூசி மெழுகினார். பிராமணனாய்ப் பிறந்தாலொழிய பிராமணனாக முடியாது என்று சொன்னார். அப்புறம் சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் தீண்டாமை தானே ஒழிந்துவிடும் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

கடைசியாக, சுயமரியாதைக்காரர்கள் கிளர்ச்சியால் தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்துவிட்ட பிறகு, அதை ஒழிக்க 'அரிசன இயக்கம்' ஒன்றை ஆரம்பித்து, அவர்களைக் கோயிலுக்குள் விடவேண்டும் என்று கிளர்ச்சி செய்து, கடைசியாக அக் கிளர்ச்சியையும் பட்டினியில் ஆரம்பித்து சட்டசபையில் கொண்டு போய் விடப்பட்டாய்விட்டது. இதனால், இனிச் சட்டம் ஏற்படும்வரை கோயில் பிரவேசம் முடியாது என்று தீர்மானமாய் விட்டது.

இந்து—முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்சினையும் 21-நாள் பட்டினி விரதத்தையும் கடந்து, அதுவும் தீண்டாமை ஒழிப்பைப் போலவே, சுயராஜ்யம் கொடுக்கப்பட்டுவிட்டால் இந்து-முஸ்லிம் ஒற்றுமையும் தானாக ஏற்பட்டுவிடும் என்றும், தோழர் காந்தியாராலேயே சொல்லப்பட்டுவிட்டது.

மதுவிலக்குப் பிரச்சினையும் சுயராஜ்யம் கிடைத்தாலொழிய மதுவை விலக்க முடியாது என்று முடிவுகட்டப்பட்டது. இராட்டின விஷயமும் சில வீடுகளில் மாத்திரம் சிறிது நாளே சுற்றிவிட்டு முடிவில் கறையானுக்கும் நெருப்புக்கும் ஆளாயின.

இராட்டின தத்துவமும் மாறிவிட்டது. அதாவது, இராட்டினம் வெள்ளைக்காரனுடன் சண்டை போட ஒரு ஆயுதமென்றும், கதர் ஒரு தேசிய உடையென்றும், தேசிய சின்னமென்றும் சொல்லப்பட்டுவிட்டது.

ஆகவே, காந்தியாரின் சுயராஜ்ய நிபந்தனைகள் ஒன்றுகூட நிறைவேற்றப்படாமல் போய் விட்டதால், காந்தியார் வாக்குப்படியே சுயராஜ்யம் கிடைக்காமல் போய்விட்டது. இதனால் காந்தியார் தோல்வியடைய வேண்டியது நியாயமே ஆயிற்று.

கேள்வி : இப்பொழுது காந்தியார் என்ன செய்யப்போகிறார்?

பதில் : ஜெயிலுக்குப் போகப் போகிறார்.

கேள்வி : ஏன் ஜெயிலுக்குப் போகிறார்?

பதில் : வில்லிங்டன் பிரபு பேட்டி அளிக்க மறுத்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதற்காக ஜெயிலுக்குப் போகிறார்; இது வெளிப்படையான அர்த்தம். மற்றொரு தத்துவார்த்தம் என்னவென்றால், அவர் வெளியிலிருந்து கொண்டு என்ன வேலை செய்வது என்பது ஒரு பெரிய பரிசுப் பிரச்சினையாய்விட்டது. இரண்டாவது, காந்தியார் வெளியில் இருந்தால் தோல்வியை ஒப்புக்கொண்டதாகிவிடும். ஆகையால், ஜெயிலில் இருக்கும்வரை அவரை இந்தக் கேள்வி கேட்க யாருக்கும் சந்தர்ப்பம் வாய்க்காது. அன்றியும், போர் இன்னும் முடியவில்லை என்கின்ற அர்த்தத்தையும் கொடுக்கும். ஆதலால், ஜெயிலில் இருப்பதே உத்தமம் என்று கருதிவிட்டார்.

கேள்வி : வில்லிங்டன் பிரபு காந்தியாரை ஜெயிலில் வைத்துவிடுவாரா?

பதில் : ஜெயிலில் வைக்காவிட்டால் சர்க்கார் தோற்றுப் போய்விட்டார்கள். என்னை ஜெயிலில் வைக்க இந்த சர்க்காருக்கு சக்தியில்லை என்று முன்னொருதரம், உப்பு சத்தியாக்கிரகத்தின் போது காந்தியார் பரிகாசம் செய்ததுபோல, இப்போதும் பரிகாசம் செய்வார். அப்போது வில்லிங்டன் பிரபுக்கு ரோஷம் வந்து உடனே ஜெயிலில் வைத்து விடுவார். (வைத்து விட்டார்)

'யாரை விட்டது காண்; சுயமரியாதை எவரைவிட்டது காண்' என்கின்ற பல்லவிப்படி இன்றைய காந்தி—வில்லிங்டன் சண்டையானது, சுயராஜ்யத்தைப் பொறுத்ததல்ல; பின்னை என்னவென்றால், அது முழுச் சுயமரியாதையைப் பொறுத்ததேயாகும். எப்படியெனில், தோற்றுப் போனாலும் பரவாயில்லை, ஊரார் சிரிப்பார்களே—என்பதுதான் கவலையென்று ஒருவர் சொன்னது போல்—ரோஷம் தான் பாதிக்கின்றது.

கேள்வி : அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்; சுயராஜ்யம் கிடைக்கவில்லையென்ற கவலை மக்களுக்கு இருக்காதா?

பதில் : சுயராஜ்யம் என்றால் என்னவென்று எனக்கும் தெரியாது; உமக்கும் தெரியாது; காந்தியாரும் இதுவரை விவரித்ததில்லை. ஒத்துழையாமையின் போது ஒருவர் காந்தியாரை 'உம்முடைய சுயராஜ்யத்துக்கு அர்த்தமென்ன?' என்று கேட்டார். அதற்குப் பதில், காந்தியார், 'அது இப்போது சொல்லமுடியாது' என்று சொல்லிவிட்டார். கடைசியாகக் காங்கிரசில் முடிவுசெய்யப்பட்ட, 'பூர்ண சுயேச்சை, காங்கிரசின் இலட்சியம்' என்பதுதான் சற்று விளக்கமாக ஜனங்களுக்குத் தெரிந்தது. அதென்னவென்றால், ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுப் போய்விட வேண்டியதாகும்.

கேள்வி : அப்படியானால் அது எப்பொழுது முடியக்கூடிய காரியம்?

பதில் : அது, காந்தியாரின் மற்றொரு பட்டினி விரதத்துக்குப் பிறகுதான் சொல்லமுடியும்.

கேள்வி : அதுவரை நாம் என்ன செய்வது ?

பதில் : அகிம்சை, ஆத்மசக்தி, சத்தியம், சத்தியாக்கிரகம் என்கின்ற கடவுள் தன்மைகளில் நம்பிக்கை இல்லாமல்—கையில் வலுத்தவன் காரியம் என்பதில் நம்பிக்கை வைத்து—சாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசமில்லாமல், உலகிலுள்ள ஏழை மக்கள் எல்லோரும் ஒன்றுகூடும்படியான மார்க்கத்தைச் செய்து, ஏமாத்துகின்றவர்களை ஒழிக்க முயற்சி செய்து கொண்டிருக்கவேண்டும்.

காங்கிரஸ்காரன் கேள்வி : கடவுள் இல்லை என்று சொல்லுகின்றீர்களே, அப்படியானால் ஒரு மனிதன் ஏன் பணக்காரனாய் இருக்கின்றான் ? ஒரு மனிதன் ஏன் ஏழையாய் இருக்கின்றான் ?

சுயமரியாதைக்காரன் பதில் : தனிஉடைமைக் கொள்கையை ஒழித்துப் பொது உடைமைக் கொள்கையை ஏற்படுத்தாததால் ஒருவன் பணக்காரனாகவும், ஒருவன் ஏழையாகவும் இருக்கமுடிகின்றது.

['குடி அரசு'—6-8-1933]

6. இதுதானா தேசியம் ?

மத விஷயங்களிலுள்ள குற்றங்களும், கொடுமைகளும், ஒழுக்கக்குறைவுகளும் தேசிய விஷயத்தில் இல்லையென்று யாராலும் சொல்லமுடியாது.

பொதுவாகவே, தேசியம் என்னும் வார்த்தையே அர்த்தமற்றது என்றும், மோசக் கருத்துக் கொண்டது என்றும், அதில் பணக்காரத்தன்மை பிரதிபலிப்பதோடு பணக்காரத் தன்மையை ஆதரிப்பதற்கென்று கற்பிக்கப்பட்டதென்றும் பலதடவை கூறிவந்திருக்கிறோம்.

நாம் மாத்திரமல்லாமல் பல மேல்நாட்டு அறிஞர்களும் தேசியத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜான்சன் என்கின்ற ஒரு மேதாவி 'தேசியம் (தேசாபிமானம்) என்பது வடிகட்டின அயோக்கியத்தனம்' என்று—அதாவது 'பிழைப்புக்கு வழியில்லாதவர்களின், கடைசியான இழி பிழைப்புக்கு மார்க்கமானது' என்று கூறி இருக்கிறார்.

இந்த அபிப்பிராயம் முதன் முதல் தேசியம், தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகள் எங்கு உண்டானதோ, அங்கு ஏற்பட்ட அபிப்பிராயமே தவிர, இந்தியாவில் 'தேசிய விரோதிகள்', 'தேசத் துரோகிகள்', 'சர்க்கார் குலாம்கள்' என்று 'தேசாபிமானி' களால் கருதப்படுகின்றவர்களால் சொல்லப்பட்டதல்ல.

இன்று இந்தியத் தேசியவாதிகள், தேசாபிமானிகள், தேசியத்துக்கும், தேசாபிமானத்துக்கும், பத்திரிகை நடத்தும் பத்திராதிபர்கள், தேசாபிமானத்தில் வயிறு வளர்க்கும் பிறவி-வாழ்க்கை தேசபக்தர்கள் என்பவர்களைப் பற்றிச் சற்று கவனிப்போம். இன்று இந்தியாவில் இந்திய சட்டசபைக்குத் தேர்தல்கள் நடக்கின்றன. இது ஒரு அரசியல் விஷயம்.

இந்திய சட்டசபை அரசியல் மூலம், சாதீய சம்பந்தமான, மனித சமூக வாழ்வு சீர்திருத்த சம்பந்தமான—அதாவது, சாதி, மத, பழக்க வழக்க சம்பந்தமாக ஒரு காரியமும் செய்யமுடியாது. முடியும் என்றாலும் தேசியவாதிகள், தேசாபிமானிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் இதுவிஷயங்களை சட்டசபையில் பேசவோ, சட்டம்செய்யவோ ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒப்புக்கொள்ளுவதானாலும், தேசமெல்லாம் ஒரே அபிப்பிராயமாய் அந்தந்த மத, சாதிக்காரர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாய் இருக்க வேண்டும் என்கின்றதான ஆகாத நிபந்தனைகளையெல்லாம் சொல்லுகின்றவர்கள்.

இந்திய தேசாபிமானம் என்பதே—இன்று, இந்தத் தேச பணக்காரர்களுடைய சவுகரியங்களைக் குறிப்பாய்க் கொண்டதும், பணக்காரர்கள் பண வருவாய் முறையைச் சிறிதும் மாற்றமுடியாததும், பணக்காரர்களுக்குப் பணம் பெருகிக்கொண்டு, வளர்ந்து கொண்டு போவதைத் தடுக்க முடியாததும், தேசசெல்வம் எல்லாம் ஒருவன் கைக்கே போவதானாலும் ஆட்சேபிக்க முடியாததுமான கொள்கைதான் (தேசாபிமானத்தில்) இருந்து வருகிறதே தவிர—தேசம், தேச மக்களுக்குப் பொது: தேசத்தின் செல்வம், விளைபொருள், போக்குவரத்து, வர்த்தகம், தொழிற்சாலை ஆகியவைகளின் பலன்கள் இந்தத் தேசத்து எல்லா மக்களுக்கும் பொது—என்று சொல்லக்கூடிய காரியங்கள் தேசாபிமானத்தில் இல்லவும் இல்லை; அதை அதில் சேர்த்துக் கொள்ள மகாத்மாக்கள் என்பவர்கள் முதல் எந்த தேச பக்தர்களும் சம்மதிப்பதும் இல்லை. இப்படிப்பட்ட யோக்கியதையுள்ள நபர்கள் தாங்கள் சேர்ந்துள்ள ஸ்தாபனத்தையும், தாங்கள் சொல்லும் கொள்கைகளையும் தேசாபிமானம் என்று சொல்லிக்கொண்டு இருப்பதாலேயே—தங்களைத் தேசாபிமானிகள் என்றும், தங்களோடு சேராதவர்கள் எல்லாம் தேசாபிமானிகள் அல்லர் என்றும், தேசத் துரோகிகள் என்றும், தங்கள் ஸ்தாபனம்தான் குதிரைக்குச் சமானமானது என்றும் மற்றவைகள் கழுதைக்குச் சமானமானது என்றும் சொல்லுகிறார்கள். இதனாலேயே தேசாபிமானம் என்பது வடிகட்டிய அயோக்கியத்தனம் என்றும் அதில் வாழ்கின்றவர்கள் உலகிலுள்ள பிழைப்புக்களில் எல்லாம் மிக இழிவான பிழைப்பில் பிழைக்கின்றவர்களாவார்கள் என்றும் சொன்ன சொல்லைப் பொன்னே போல் போற்றி, பொன்னெழுத்தில் எழுதி, சொன்னவரைப் பொன்னேபோல் வாழ்த்த வேண்டாமா என்று கேட்கின்றோம்.

இன்று சிறப்பாக, இந்த நாட்டில் தன்னை ஒருவன் தேசாபிமானி என்று சொல்லிக் கொண்டாலோ, அல்லது அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துகொண்டாலோ அல்லது வேறு வழியில்லாமல் அதன் பயனால் வாழ்வை நடத்த ஆரம்பித்துவிட்டாலோ, அவன் எவ்வளவு அயோக்கியனாய், இழிபிறப்பாய் ஒழுக்கங்கெட்டவனாய் இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் மேடை ஏறவும், வாயில் வந்ததைப் பேசவும், மனத்தில் நினைத்ததை எழுதவும், பொய், பித்தலாட்டம், போக்கிரித்தனங்கள் செய்யவும் யோக்கியதைகள் ஏற்பட்டுவிடுவது என்றால்—இப்படிப்பட்ட தேசாபிமானத்தையும், தேசியத்தையும், தேசபக்தியையும் வெட்டிப் புதைக்க வேண்டாமா என்று கேட்கின்றோம்.

அதற்காக உயிர் போகுமளவும் பாடுபட்டு—அதற்காக உயிர்விட நேரிடுவதைப் பெரியதொரு, கிடைத்தற்கரியதொரு காரியம் என்று கருத வேண்டாமா என்று கேட்கின்றோம்.

தோழர் இராசகோபாலச்சாரியார் நமது பாராட்டுதலுக்குரியர் என்றே கருதுகிறோம். (நமது பாராட்டுதலை அவர் இலட்சியம் செய்யாதிருந்தாலும் இருக்கலாம்.) அவரை உண்மைத் தியாகிகளில் ஒருவராகவே கொள்ளலாம். அவரது நிலைமையைப் பார்த்தும், அவர் தேசாபிமானத்தால் பிழைக்கவேண்டிய அவசியமில்லாதவர் என்றே கூறுவோம்.

அதோடு கூடவே, ஒவ்வொருவருக்கும் அவரவர் கருதும் வழியில் தொண்டாற்ற, தியாகம் செய்ய, உயிர்விட அவரவருக்கு உரிமை உண்டு என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகிறோம்.

என்றாலும், 'காங்கிரஸ் ஒன்றுதான் தேசாபிமான ஸ்தாபனம். காங்கிரஸ்காரர்கள் தாம் தேசாபிமானிகள்' என்று சொல்லுவதும்; 'எவ்வளவுதான் ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் சொந்த வாழ்வில், எவ்வளவு அயோக்கியனாய், ஈனனாய் இருந்தாலும் அவன் காங்கிரசில் சேர்ந்துவிட்டால் அவன் யோக்கியனாய் விடுவான்' என்றும்; அவனை யோக்கியனாகக் கருதவேண்டும் என்றும் சொல்ல முன்வந்துவிட்டாரானால், பிறகு இவரைப்பற்றி என்ன சொல்வது என்பது நமக்குப் புரியவில்லை.

ஒரு சிட்டிகைச் சாம்பலை எடுத்து நெற்றியில் வைத்துக்கொண்டால், பெற்ற தாயாரைப் புணர்ந்த பாவம் நாசமாகி, சிவனுடைய பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளலாம் என்றும் 'ஒரு தடவை இராமா என்றால் பல ஜன்ம பாபங்கள் தீர்ந்து வைகுண்டம் சேரலாம்' என்றும் சொல்லும் வாக்கியங்களுக்கும்—இதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றோம். இதனால்தான், இத் தேசத்திலுள்ள அயோக்கியர்கள், இழிதொழிலாளிகள் ஆகிய எல்லோரும் தாங்கள் யோக்கியர்களாகக் கருதப்படலாம் என்று காங்கிரசில் வந்து சேருகிறார்கள் போலும்!

தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தொண்டும், நமது தொண்டும் பார்ப்பனர் நன்மை—பார்ப்பனரல்லாதார் நன்மை என்கின்ற தத்துவங்களின் போட்டித் தொண்டு என்று மாத்திரம் நாம் கண்ணியமாய் எண்ணி இருந்த எண்ணம், இப்போது அயோக்கியர்—யோக்கியர் என்கின்ற விஷயத்திலும் 'போட்டித் தொண்டு' என்று சொல்ல வேண்டியதாகின்றது என்றால் இதற்கு நாம் விசனப்பட வேண்டியதுதான்.

உலகம் எவ்வளவுதான் தந்திரங்களுக்கு அடிமைப்பட்டுவிட்டதென்றாலும், இன்றைய நிலையில் நாணயத்திற்கும், ஒழுக்கத்திற்கும்—அதாவது, நாணயம், ஒழுக்கம் என்கின்ற வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கின்றது என்றே கருதுகின்றோம். ஆதலால், நாணயம் இல்லாதவனும் ஒழுக்கம் இல்லாதவனும் காங்கிரசில் சேர்ந்தால், ஒழுக்கமும் நாணயமும் ஏற்பட்டுவிடும் என்கின்ற வார்த்தையின் பயனாய் (அறிவுள்ள சமூகத்தில்) பிரதிகூலம்தான் ஏற்படுமே தவிர, அனுகூலம் ஏற்படாதென்றே சொல்லுகின்றோம். அன்றியும் மனிதனின் முன் பின் நிலை, திபாகம், ஒழுக்கம், நாணயம் முதலியவை ஒன்றும் கவனிக்கப்படாமல் வெறும் தேசாபிமானத்தையும் அந்தத் தேசாபிமானத்துக்கும் தாங்கள் சொல்லுவதையே அர்த்தமாக வைத்துக்கொண்டு 'காங்கிரஸ்—காந்தி ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்' என்று சொல்லுவதென்றால், அதன் தைரியத்தைப் பார்க்கும்போது தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முழு மூடர்கள், கபோதிகள், களிமண் உருண்டைத் தலைகள் என்று கருதி இருப்பதாகத்தான் நினைக்கவேண்டி இருக்கிறது.

இன்றைய தினம் தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது, தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கும் இராமசாமி முதலியாருக்கும் எந்த விஷயத்தில், என்ன வித்தியாசம்? தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் என்பவருக்கும் டாக்டர் வரதராஜுலுவுக்கும் எந்த விதத்தில், என்ன வித்தியாசம்? தோழர் குமாரசாமி ராஜா என்பவருக்கும் விருதுநகர் வி. வி. இராமசாமி அவர்களுக்கும் எந்த விஷயத்தில், என்ன வித்தியாசம்? தோழர் சாமிவெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும் சர். ஆர். கே. சண்முகம் அவர்களுக்கும் எந்த விதத்தில், என்ன வித்தியாசம்? தோழர் முத்துரங்க முதலியார் அவர்களுக்கும் தோழர் நடராஜ முதலியார் அவர்களுக்கும் எந்த விதத்தில், என்ன வித்தியாசம் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

5 ஸ்தானங்களுக்கு காங்கிரசின் பேரால் 5 பேரை நிறுத்திப் போட்டி போட்டுக் கொண்டு, காங்கிரசின் பேரால் என்று போடப்பட்ட ஆட்களைப்பற்றியோ, அவர்களின் யோக்கியதைகளைப்பற்றியோ ஒரு வார்த்தைகூட எடுத்துப் பேச யோக்கியதை இல்லாத நிலையில் இருந்துகொண்டு. 'காங்கிரசு, காந்தி, காங்கிரசில் சேராதவன் தேசத் துரோகி; ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்' என்றும், 'காங்கிரசுக்கும், காந்திக்கும் போர் நடக்கின்றது. ஆதலால் ஓட்டுச் செய்யுங்கள்' என்றும் சொல்லுகின்றதினாலேயே, இவர்கள் எப்படி ஜெயித்து விடுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

காங்கிரசின் பேரால் நிறுத்தப்பட்ட கனவான்கள் என்பவர்கள் சாதி மதங்களைக் காப்பாற்றும் வருணாசிரமவாதிகளா, அல்லவா, என்று கேட்கின்றோம்.

ஒருவர், இருவர் ஒரு சமயம் அரை வருணாசிரமவாதிகளாய் இருக்கலாம்; அல்லது வெளியில் சொல்லப்படுபவர்களாய் இருக்கலாம். வேறு விதத்தில் மற்றவர்களைவிட காங்கிரஸ்காரர்கள் எப்படி உயர்ந்தவர்கள் என்று கேட்கின்றோம்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கம் என்பதைத் தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்களும், சில பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஏன் பார்ப்பனரல்லாதாரில் தகுந்த ஆட்கள் வரக்கூடாது என்று கேட்கின்றார்கள். அது வேறு விஷயம்.

இந்தப் பார்ப்பனர்களின் கருத்து, தமிழ் நாட்டில் எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தலை எடுக்கக் கூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்பது காந்தியார், ஜவஹர்லால் வரையில் எட்டிய உண்மையாகும்.

இந்தத் தேர்தலில் இவர்களுடைய நோக்கம் எல்லாம் பார்ப்பனரல்லாத சுயபுத்தி உள்ளவர்கள் இந்திய சட்டசபைக்குப் போகக்கூடாது என்பதைத் தவிர சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால்—தோழர்கள் ஆர். கே. சண்முகம், பி. வரதராஜுலு, ஏ. இராமசாமி முதலியார் போன்றவர்கள் கண்டிப்பாகப் போகக்கூடாது என்பதைத் தவிர வேறு இல்லை என்று உறுதியாகச் சொல்லுவோம்.

இம் மூவரும் சென்றால், தமிழ் நாட்டில் பார்ப்பனர்களைவிட ஒவ்வொருவிதத்தில் திறமைசாலிகள் பார்ப்பனரல்லாதாரிலும் இருக்கிறார்கள் என்பது உலகத்துக்கு விளங்கிவிடும். இதனால் தாங்கள் (பார்ப்பனர்கள்) இது கால வரையில் பார்ப்பனரல்லாதாரைத் தமிழ் நாட்டைவிட்டு வெளி மாகாணங்களுக்குத் தெரியாதபடி பத்திரிக்கை மூலமும், விஷமப் பிரச்சாரம் மூலமும் அடக்கி வைத்திருந்ததின் பயன் வீணாகப் போவதுடன்—தங்கள் யோக்கியதைகளும் வெளியாகிவிடுமே என்கின்ற நடுக்கமே அல்லாமல் வேறு ஒரு காரணமும் அல்ல.

எனவே, இந்தக் கருத்தை முக்கியமாய் வைத்துக்கொண்டுதான் ஞானமற்ற, சுயநலக்கார, வேலையில்லாக் கஷ்டத்தால் துன்பப்படுகிற, பொறாமைப் பேய்க்கு அடிமைப்பட்ட, பூதக் கண்ணாடியை வைத்துக் கண்டுபிடிக்கத்தக்க யோக்கியதையுள்ள பார்ப்பனரல்லாதார்களைச் சுவாதீனம் செய்துகொண்டு, 'காந்தி, காங்கிரஸ், தேசாபிமானம்' என்று சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட சூழ்ச்சியையும், பித்தலாட்டங்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பனரல்லாத சுயமரியாதையுள்ள மக்கள் உணர வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

['பகுத்தறிவு' கட்டுரை—9-9-1934]

7. தேசாபிமானம்

நான் ஒரு தேசாபிமானியல்லன். அது மாத்திரமல்ல; தேசாபிமானத்தைப் புரட்டு என்றும், அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்றும் சொல்லியும், எழுதியும் வரும் 'தேசத் துரோகி' யாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச் சிறை செல்லும்படியான அவ்வளவு தேசாபிமானியாய் இருந்து, பல முறை சிறை சென்று வந்துதான் அதன் அனுபவத்தைச் சொல்லுகிறேனே ஒழிய, வெளியில் இருந்து வேடிக்கை மாத்திரம் பார்த்துவிட்டு நான் இப்படிச் சொல்ல வரவில்லை.

இதனால் பாமர மக்கள் தூஷணைக்கும் பழிப்புக்கும்கூட ஆளாகியிருக்கிறேன். என்றாலும் எனது உறுதியான எண்ணத்தை நான் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

'நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது' என்பதுதான் தேசாபிமானிகளின்—மகாத்மாக்களின் சுயராஜ்ய தர்மமாகும். இந்த சுயராஜ்யம் வருவதைவிட இப்போது இருக்கும் பரராஜ்யமே மேலானது என்பது எனது கருத்து.

இன்றைய பரராஜ்யத்தில், தோட்டி புல் சுமக்கும் வேலையை விட்டு மந்திரி வேலை செய்தாலும் செய்யக்கூடும்.

ஆனால், அவனவன் சாதித் தொழிலையும் பரம்பரைப் பெருமையையும் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றும் காங்கிரஸ் சுயராஜ்யத்தில், தோட்டி புல் சுமப்பதைவிட வேறு தொழில் ஏற்பட முடியுமா என்று யோசித்துப்பாருங்கள். இந்தக் காரணத்தினால் தான் நான் தேசத் துரோகியாக இருக்கிறேன்; சுயராஜ்யத்துக்கும் விரோதியாக இருக்கிறேன். ஆனால், பார்ப்பனச் சாதியையும் பறசாதியையும் அழித்து, எல்லோரும் சரிசமமான மனிதர்கள் என்று ஆக்கும் தேசாபிமானத்திற்கும் சுயராஜ்யத்துக்கும் நான் விரோதியல்லன்; துரோகியுமல்லன் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

நான் இந்திய சுயராஜ்யம், இந்திய தேசாபிமானம் என்பதைப்பற்றி மாத்திரம் பேசுவதாக நினைத்துவிடாதீர்கள். உலகத்தில் உள்ள எல்லா தேசங்களின் தேசாபிமானங்களையும் சுயராஜ்யங்களையும் கண்டும், தெரிந்தும்தான் பேசுகிறேனே ஒழிய கிணற்றுத் தவளையாய் இருந்தோ வயிற்றுச் சோற்றுச் சுயநல தேசபக்தனாக இருந்தோ நான் பேச வரவில்லை.

எந்தத் தேசத்திலும்—எப்படிப்பட்ட சுயராஜ்யத்திலும்—குடி அரசு நாட்டிலும் ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி வித்தியாசம் இருந்துதான் வருகின்றது. நம் நாட்டில் இவைகள் மாத்திரம் அல்லாமல் பார்ப்பான்-பறையன், மேல்சாதி-கீழ்சாதி ஆகிய அர்த்தமற்ற அயோக்கியத்தனமான வித்தியாசங்களும் அதிகப்படியாக இருந்து வருகின்றன. இவைகளை ஒழிக்கவோ அழிக்கவோ இன்றைய தேசாபிமானத்திலும் சுயராஜ்யத்திலும் கடுகளவாவது யோக்கியமான திட்டங்கள் இருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கின்றேன்.

உலகத்திலேயே மேம்பட்ட செல்வச் செருக்குடைய நாடான அமெரிக்க நாட்டிலேயே 2 கோடி பேர்களின் குடும்பங்கள் (1934-ல்) வேலை இல்லாமல் திண்டாடுகின்றனவென்றால், உலகத்தில் சூரிய அஸ்தமனம் இல்லாத பிரிட்டிஷ் சுயராஜ்ய இங்கிலாந்தில் 20 இலட்சம் பேர்களின் குடும்பங்கள் வேலை இல்லாமல் பட்டினிகிடக்கின்றனவென்றால், சுயராஜ்ய ஜனநாயக ஆட்சிக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

சுயராஜ்யம் உள்ள சுதேச சமஸ்தானங்களை எடுத்துக்கொள்ளுங்கள். 'பிரிட்டிஷ் இந்தியா' சின்ன கருப்பன் ஆனால், 'சுதேச சமஸ்தான இந்தியா' பெரிய கருப்பனாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட தேசாபிமானம், 'சுயராஜ்யாபிமானம்' என்கின்ற சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் விட்டுவிட்டு 'மனித ஜீவ அபிமானம்' என்கின்ற தலைப்பின்கீழும் கொள்கையின்கீழும் எல்லோரும் ஒன்று சேருகின்ற வரையில் நான் 'தேசத் துரோகி'யாக இருந்து, தேசாபிமானப் புரட்டையும், சுயராஜ்யப் புரட்டையும் வெளியாக்காமல் இருக்க முடியாது.

[கோவை டவுன் ஹாலில், 12-10-1934ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 21-10-1934]

தேசாபிமானம், தேசபக்தி என்பவைகள் சுயநல சூழ்ச்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்களால் தங்கள் வகுப்பு நலத்துக்காகப் பாமர மக்களுக்குள் புகுத்தப்படும் ஒரு (வெறி) போதையென்றும் பல தடவைகள் நாம் சொல்லி வந்திருக்கிறோம்.

மற்றும், 'தேசாபிமானம் என்பது காலிகளுக்கு ஏற்பட்ட கடைசி ஜீவன மார்க்கம்' என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியது ஆப்தமொழி என்றும் பல தடவைகள் எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

இவற்றை எந்த ஒரு தேசபக்தனும், தேசாபிமானியும் இதுவரை மறுக்கவேயில்லை என்பதோடு, இவ்வாப்த வாக்கியங்கள் நிறைந்த ஆங்கிலப் புத்தகங்கள் பாடப் புத்தகங்களாகவும் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இனியும் யாருக்காவது இவற்றில் சந்தேகங்களிருக்குமானால் இன்றைய அபிசீனியா-இத்தாலி யுத்தமேகங்களையும் இடியையும் மின்னலையும் பார்த்தால், கண்ணாடியில் முகம் தெரிவதுபோல் விளங்கும். மற்றும், தேசாபிமான விஷயமாயும், தேசங்களைக் காப்பாற்றும் விஷயமாயும் பல தேசக் காவலர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற 'சர்வதேசப் பாதுகாப்புச் சங்கத்தின்' யோக்கியதையைப் பார்த்தாலும் தெரியும்.

இளைத்தவனை வலுத்தவன் கொடுமைப்படுத்துவதும்; ஏமாந்தவனைத் தந்திரசாலி ஏமாற்றுவதும் இன்று ஆஸ்திகர்களுடைய கடவுள்களின் இரண்டு கண்களாகவும்; தேச பக்தர்கள், தேசாபிமானிகள் என்பவர்களின் ஜீவநாடியாகவும் இருந்துவருகின்றன.

இந்த இரண்டு காரியங்களுக்காகத்தான், அதாவது இம்சித்தல்-ஏமாற்றுதல் ஆகிய இரண்டு காரியங்களுக்காகவும்—அவை நிரந்தரமாகவும், ஒழுங்காகவும், பத்ததியாகவும் நடைபெறுவதற்காகவேதான் உலகில் கடவுள், மதம், மோட்சம், நரகம், சாஸ்திரம், புராணம், அரசு, பிரதிநிதித்துவம், சட்டசபை, சட்டம், போலீஸ், நீதிபதி, சிறைக்கூடம், சத்தியம், நீதி, ஒழுக்கம், ஒழுங்குமுறை, யோக்கியம், பரிசுத்தம், பெரியவர் வாக்கு, மகாத்மாக்கள் சேவை, தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் அவதாரம் என்பன போன்ற 'சர்க்கரை பூசிய பாஷாணங்கள்' இன்று உலகில் கற்பிக்கப்பட்டு—இருந்து செல்வாக்குப் பெற்றோ, பெறாமலோ காப்பாற்றப்பட்டு வருகின்றன.

சைனாவோடு ஜப்பான், போர்தொடுத்தபோது, ஜப்பானுக்கு அதன் வியாபாரப் பொருள் விற்பதற்கு நாடுகள் இல்லை; அதற்குப் போதிய துறைமுகமில்லை; மற்ற நாடுகளைப்போல் அதற்குக் குடியேற்ற நாடு இல்லை என்பது போன்ற காரணங்கள்தாம் வெளிப்படையாகவே சொல்லப்பட்டன.

அபிசீனியா மீது இத்தாலி போர் தொடுப்பதற்கும், இந்தக் காரணங்கள்தாம் இன்று முக்கியமாகச் சொல்லப்படுகின்றன. பிறகு பிறத்தியாரை ஏமாற்ற ஏதோ நொண்டிச் சாக்குகள் பஞ்சாயத்தில் பேசப்படுகின்றன.

சர்வதேசப் பாதுகாப்புச் சங்கத்தில் யுத்தத்துக்குச் சம்பந்தப்பட்ட நாடுகள்போக, மற்ற நாட்டு அங்கத்தினர்களோவெனில் உலகத்துக்கோ, தங்களுக்கோ சரியென்று பட்டதை வெளியில் சொல்லவே மயங்குகின்றார்கள்.

காரணம் என்னவென்றால், யுத்தத்தில் சம்பந்தப்பட்டு வலுவில் தாக்கப்பட்ட நாடுகள் மற்ற பிரதிநிதிகளைப் பார்த்து, 'உங்களுக்கு மாத்திரம் வியாபாரத்துக்குப் பல நாடுகள் இருக்கின்றன. நீங்கள் மாத்திரம் உங்கள் தேசமல்லாமல் வேறுபல தேசங்களைக் குடியேற்ற நாடாகவும் அனுபவிக்கிறீர்களே—அதுமாதிரி, எங்களுக்கும் வேண்டாமா?' என்று கேட்க ஆரம்பித்தால் தலை குனிய வேண்டியவர்களாய் இருக்கவேண்டியிருப்பதால், 'நான் நோகாமல் அடிக்கிறேன்; நீ ஓயாமல் அழு' என்று சொல்லவேண்டியதாய் விட்டது.

சர்வதேச சங்கம் என்பது கண்டித்து, உண்மையான எண்ணத்தோடு இத்தாலியைப் பார்த்து ஓர் உறுமல் உறுமி இருக்குமானால், இன்று இத்தாலி வாலை ஒடுக்கிக்கொண்டு அடங்கியிருக்கும்.

ஜப்பான்–சைனா சண்டையின்போதும் ஜப்பான் இஷ்டம் ஓரளவுக்குப் பூர்த்தியான பின்பே சர்வதேச சங்கம் மிரட்ட ஆரம்பித்தது.

அதுபோலவே, இத்தாலியின் உள் எண்ணம் பூர்த்தியான பின்புதான் சர்வதேச சங்கம் மிரட்டும்போல் இருக்கிறது.

பொதுவாகவே, சர்வதேச சங்கத்தை நாம் ஓர் உண்மையான உலகப் பாதுகாப்புச் சங்கம் என்று சொல்ல முடிவதில்லை.

அதை வலுத்தவர்கள், தந்திரக்காரர்கள் பாதுகாப்புச் சங்கம் என்றுதான் சொல்ல வேண்டும்.

யோக்கியமான ஒரு சர்வதேசப் பாதுகாப்புச் சங்கம் இருக்கவேண்டுமானால், அது உலக எல்லா தேசங்களுக்கும், ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பிரதிநிதிகள் அடங்கிய சபைக்கு உலக அரசியல், இராணுவம் ஆகியவை முழுவதையும் ஒப்படைத்துவிட்டு, இன்று தனித்தனி இராஜாவாகவோ, சர்வாதிகாரியாகவோ இருப்பவர்களுக்கு ஜீவனாம்சம் கொடுத்து உட்காரவைத்து, அச் சபைக்குத் தலைவராகத் தேசம், சாதி, மதம், கடவுள்செயல் என்கின்ற குறுகிய நோக்கமற்று உலகமெல்லாம் ஒருதேசமாகவும், மக்களெல்லாம் ஒரே (மனித) சாதியாகவும் கருதுபவராகவும், உலக சொத்துக்கள் எல்லா மக்களுக்கும் சொந்தமானது என்கின்ற சகோதர உணர்ச்சி உள்ளவராகவும் உள்ளவரைத் தலைவராகப் போட்டு ஆட்சி நடத்தப்படுமானால் அது உண்மையான சர்வதேசப் பாதுகாப்புச் சங்கமாக இருக்கலாம்.

35 கோடி மக்களுள்ள இந்தியாவுக்கும் 45 கோடி மக்களுள்ள சைனாவுக்கும் (கிட்டத்தட்ட உலக ஜன சமூகத்தில் சரிபகுதியுள்ள தேசங்களுக்கு) இன்று சர்வதேச சங்கத்திலிருக்கும் பிரதிநிதிகள் யாரென்பதும், அவர்கள் இந்தத் தேசங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு என்ன உதவி செய்தார்கள் என்பதும், சர்வதேச சங்கத்தின் நீதியான ஆட்சியில் இவ்விரு தேசமக்களும் திருப்தியாய், கவலை இல்லாமல், மானத்தோடு வாழ்கின்றார்களா என்பதும் கவனித்துப் பார்த்தால்—இன்றைய சர்வதேச பாதுகாப்புச் சங்கத்தின் யோக்கியதை தானாகவே விளங்கும்.

ஆகவே, சர்வ தேசாபிமானச் சங்கத்தின் யோக்கியதையே இப்படியிருக்கும்போது, இனி தனித்தனி தேசாபிமான சங்கத்தின் யோக்கியதையும், அச் சங்கத்தால் ஏற்பட்ட தேசப் பாதுகாப்பு யோக்கியதையும் எப்படியிருக்கும் என்பதைப்பற்றி நாம் அதிகம் வர்ணிக்கவேண்டியதில்லை என்றே சொல்லுவோம்.

இந்திய தேசாபிமானம், தேசபக்தி என்பது இன்று ஒரு சாதாரண மனிதராகிய காந்தியாரிடம்—அதாவது, மகாத்மா என்பவரிடம் மக்கள் வைத்திருக்கும்—வைக்கும் பக்தி, அபிமானம் ஆகியவற்றைப் பொறுத்தே இருக்கிறது.

எவனாவது காந்தியாரை முட்டாளென்று சொல்லிவிட்டாலோ, அல்லது அவர் நம்மைப்போல சாதாரண மனிதர்தான் என்று சொல்லிவிட்டாலோ—அதுவே இன்று எந்த மனிதனையும் தேசத் துரோகியென்றும், தேசாபிமானமற்றவரென்றும் சொல்லி விடுவதற்கும், பரீட்சிப்பதற்கும் போதுமான கருவியாய் இருக்கிறது.

இன்று இந்தியாவிலுள்ள தேசாபிமானம் பணச் செலவினாலும், பார்ப்பனப் பிரச்சாரத்தாலும் ஏற்படுவதேயொழிய—மற்றபடி மக்கள் சமூகத்துக்குப் பொதுவாகவுள்ள ஏதாவது ஒரு குறையையோ தேவையையோ உத்தேசித்து ஏற்பட்டதல்ல.

பார்ப்பான் தன்னை மனித சமூகத்தில் இருந்து பிரித்துக்கொண்டு தான் மாத்திரமே மேல் சாதிக்காரன் என்றும், மற்றவர்கள் தனக்குத் தொண்டு செய்யவே கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்களென்றும் சொல்லுகிறவன்.

பணக்காரர்களாய், முதலாளிகளாய் இருக்கிறவர்களோ அவர்களுக்கும், அது போலவே தாங்கள் மற்ற சாதாரண மக்களிடம் இருந்து விலக்கப்பட்டவர்களென்றும், மற்ற மக்களிடம் தமக்கிஷ்டமான வேலை வாங்கிக்கொண்டு தமக்கிஷ்டமான கூலி கொடுக்கவே கடவுள் தங்களைச் சிருஷ்டித்துத் தமக்குச் செல்வத்தைக் கொடுத்து, மற்ற மக்களைத் தொழில் செய்யச் சிருஷ்டித்து இருக்கிறாரென்றும் கருதிக்கொண்டிருக்கிறவர்கள்.

இவ்விரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசமெல்லாம் பார்ப்பான் கூலி கொடுக்காமல் வேலை வாங்கிக்கொள்ள உரிமையுள்ளவனென்பதும்; பணக்காரன் ஏதாவது கூலி கொடுத்து வேலை வாங்கவேண்டும் என்பதும் தவிர—மற்றபடி மற்ற ஜனங்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்பதிலும், இந் நிலை கடவுளால் அளிக்கப்பட்டது என்பதிலும் வித்தியாசமான அபிப்பிராயம் இல்லவே இல்லை.

இப்படிப்பட்ட இந்த இரண்டு கூட்டத்தாரும் சேர்ந்துதான், இந்தியாவின் தேசாபிமானத்துக்குக் கர்த்தாக்களாய் இருக்கிறார்கள்.

எப்படியென்றால், பணக்காரன் பணத்தைப் பல இலட்சக்கணக்காய்க் கொடுக்கிறான்; பார்ப்பான் தந்திரத்தைப் பிரயோகிக்கிறான்; இருவரும் சேர்ந்து கூலிகளைப் பிடித்துத் தேசாபிமானப் பிரச்சாரம் நடத்தி அதற்குச் செல்வாக்கை உண்டாக்கி விடுகிறார்கள்.

ஆகவே, இந்த இரண்டு கூட்டத்தார்களாலும் இவர்களுடைய கூலிகளாலும் நடத்தப்படும் தேசாபிமானம் பாமர மக்களுக்குப் பயன்படுமா—அல்லது இந்த மூன்று கூட்டத்தையும் வெளியாக்கி அவர்களை ஒழிக்க முயற்சிக்கும் 'தேசத் துரோகம்' பாமர மக்களுக்குப் பயன்படுமா என்பதை அறிஞர்கள் யோசிக்க வேண்டும்.

இன்று நம்முடைய பொதுஜனங்கள் அல்லது பாமர ஜனங்கள் என்பவர்களின் யோக்கியதை நாம் அறியாததல்ல. அவர்கள் ஆண்களில் 100-க்கு 90 தற்குறிகள்; பெண்களில் 100-க்கு 98 தற்குறிகள்.

அதோடு மாத்திரமல்லாமல், 100-க்கு 50 பேர்களுக்குமேல் ஜீவனத்துக்கு வேறு எவ்வித மார்க்கமும் இல்லாமல், 'எந்தக் காரியத்தையும் செய்தாவது ஜீவனம் நடத்த வேண்டும்' என்கின்ற கவலையும் பசிப் பிணியும் உள்ளவர்கள். எனவே, இந்த நாட்டில் நன்மை—தீமை; யோக்கியன்—அயோக்கியன்; சுயநலக்காரன்—பொதுநலக்காரன்; சூழ்ச்சிக்காரன்—உண்மையானவன் என்கின்ற தன்மைகளைக் கண்டுபிடிக்கச் சரியான அறிவும், யோக்கிதையும் பொதுமக்களுக்கு எப்படி உண்டாகும்?

ஆகவே, ஒரு சில நபர்கள்தாம் உண்மையாகவும், கவலையாகவும், உழைக்கக் கூடியவர்களாகவோ, உண்மையை எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவோ கிடைக்கலாம். ஆனால், அவர்கள் பொதுஜனங்களால் மகாத்மா என்றோ, தேசாபிமானி என்றோ, தேச பக்தர் என்றோ, தேசியவாதி என்றோ கருதப்படக் கூடியவர்களாய் இருக்கமுடியாதென்பதோடு அவர்கள், 'தேசத் துரோகியாயும், மதத் துரோகியாயும், நாஸ்திகர்களாயும்' தாம் இருக்கமுடியும்.

அதோடு மாத்திரமல்லாமல், பொது ஜனங்களால் வசவு கேட்கவும், துன்புறுத்தப் படவும் வேண்டியவர்களாகவும்கூட இருக்கக்கூடும்.

எப்படி இருந்தாலும் முடிவில் தேசத் துரோகிகள் எனப்படுபவர்களும், நாஸ்திகர்கள் எனப்படுபவர்களுந்தாம் வெற்றிபெறுவார்களே தவிர—அவர்கள்தாம் வெற்றி பெற்றாக வேண்டுமே தவிர, மற்றபடி இந்த ஜால வித்தையான தேசபக்தி வெற்றியடையவோ, மக்களுக்குப் பயன்படவோ போவதில்லை என்பது உறுதி.)

['குடிஅரசு'-தலையங்கம்—29-9-1935]

8. பாரத தேசம்

இந்தியாவை 'பாரத தேசம்' என்றும் இந்திய அரசியலை இராம-ராஜ்யம் என்றும் காங்கிரஸ்காரர்கள் (ஆரியர்—பார்ப்பனர்) சொல்லும் காரணம் என்ன? இவற்றிலிருக்கும் உண்மை என்ன? என்பவை சிந்திக்கப்படத் தக்கவையாகும். நிலப் பரப்புக்கு எடுத்துக் காட்டும் ஆதாரமும் காட்டவேண்டுமானால், பூகோளத்திலிருந்து கையாளப்படவேண்டும். அதுபோலவே, பண்டைய அரசியலுக்கு எடுத்துக்காட்டும் ஆதாரமும் காட்டப்பட வேண்டுமானால், சரித்திரத்திலிருந்து கையாளப் படவேண்டும். இதை எப்படிப்பட்ட தர்க்கவாதியும் அறிவாளியும் ஒப்புக்கொள்ளுவர். அதுபோலவே, மக்களின் சாதி வகுப்புக்கு எடுத்துக்காட்டும் ஆதாரமும் வேண்டுமானால் உடல்கூற்று, இயற்கையமைப்பு ஆகியவைகளிலிருந்தே கையாளப்பட வேண்டும்.

ஆனால், இன்று காங்கிரசார், அதாவது இந்த நாட்டு மக்களுக்கு அரசியலிலும், ஆத்மார்த்தத்திலும் நாங்களே பிரதிநிதிகள் என்று கொண்டாடும், பலாத்காரத்தைப் பயன்படுத்தி உரிமைகொண்டாடும் காங்கிரசார் தங்கள் கூற்றுக்கு அதாவது, இந்தியாவை 'பாரததேசம்' என்பதற்கும், அரசியலை 'சுயராஜ்யம்' என்பதற்கும் ஏதாவது பூகோளத்தில், சரித்திரத்தில் ஆதாரம் காட்டுவார்களா என்று கேட்கிறோம்.

இந்தியாவை பாரதநாடு என்று கூறுவதற்குப் புராணக் கதைகள்தான் ஆதாரமாக இருக்கின்றன. பூகோளத்தில் அந்தப் பெயர் எங்கும் காணப்படுவதில்லை. புராணங்களிலும் இந்தியாவை பரதகண்டமென்று, 'கண்டமாகக்' காட்டப்படுகிறது. அதில் இந்தப் பெயர் வாய்த்ததற்குக் காரணம் 'பரதன்' என்பவன் ஆண்டான் என்கின்ற காரணத்திற்காக இந்தப் பெயர் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

அந்தப் பரதன் இன்றைய பரதன்கூட அல்லன் என்றே சொல்லப்படுகிறது. துஷ்யந்தனின் மகனான பரதன்கூட அல்ல என்றும் காட்டப்படுகிறது. மற்றும், யார் என்றால், ஒரு சமணசமயப் பெயரையுடைய 'வரிஷபன்' என்பவனுடைய மகன் என்றும், அவன் ஒன்பதில் ஒருவன் என்றும், இந்தியாவை நவகண்டமாகப் பிரித்து ஒன்பது பேருக்கு ஒன்பது பங்குகொடுத்ததில்—பரதனுக்கு ஒரு பங்கு வந்ததென்றும் அதற்குத்தான் 'பரத கண்டம்' என்ற பெயர் என்றும் காணப்படுகிறது. இது பாகவதம் என்னும் புராணத்தில் காணும் கதையாகும். இதற்குக் காலம் ஒன்றும் குறிப்பிடவில்லை. இந்தக் கதையை மெய் யாக ஏற்றுக்கொண்டால், இதுபோன்று அனேக கதைகள் அந்தப் புராணங்களில் உள்ளவை களைப் பொறுத்தே இருந்துவரும் மற்ற சங்கதிகளுக்கு, என்ன சமாதானம் சொல்ல முடியும்? ஆண்ட ஒரு அரசனின் பேரால் ஒரு நாடு அழைக்கப்படுவதால் அதற்கு உண்மை, ஆதாரம் ஒன்றும் தேவையில்லையென்பது அறிவு வாதமாகுமா? உண்மையாக இந்த நாட்டை ஆண்ட அரசர்கள், உண்மை சரித்திரப்படி எத்தனையோ பேர்கள் இருக்கும் போது—ஆளாததும், அறிவுக்கும், உண்மைக்கும், உரிமைக்கும் மாறுபாடானதுமான ஒரு பெயரை மக்கள் அழுலுக்குக் கொண்டுவர வேண்டுமானால் அது எப்படி நியாயமாகும் என்று கேட்கிறோம். அதிலும் இந்தப் பெயர்களை, போலித் தன்மைகளை வைத்துக் கொண்டு அதன்மூலம் உண்மையான, சரித்திர ஆதாரமான பெயரைக்கொண்டு ஒரு நாட்டை அதாவது திராவிடநாட்டை, 'திராவிடநாடு' என்றழைத்து, அது உரிமைபெற வேண்டுமென்று முயற்சிப்பவர்கள் கூட்டத்தில் புகுந்துகொண்டு, அக் கூட்டத்தில் குழப்பம், காலித்தனம் விளைவிக்க, 'பாரதநாட்டுக்கு ஜே!' 'பாரதமாதாவுக்கு ஜே!' என்று கூப்பாடுபோடுவது எந்தவிதத்தில் யோக்கியமும், மானமும், உண்மையுமான காரியமாகும் என்று கேட்கிறோம்.

அதுபோலவே, இந்த நாட்டு அரசியலுக்கு இங்கே 'இராம-ராஜ்ய' அரசியல் வேண்டு மென்று சொல்லப்படுகிறது. இது காந்தியார் மாத்திரமல்லாமல் அனேகமாய் காங்கிரஸ்

காரர்கள் எல்லோராலும் சொல்லப்படுகிறது என்றால் அதற்கு ஆதாரம் ஒன்றும் காட்ட வேண்டாமா என்கின்றோம்.

இந்துதேச சரித்திரம் என்பதானது கிறிஸ்து பிறப்பதற்கு 2000, 3000 வருடங்களுக்கு முன்பிருந்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் இராமன் ஆண்டதாக 'இராம ராஜ்யம்' என—ஒருகாலமும் குறிப்பிடப்படவில்லை. 5000 வருடங்களுக்கு முன்புள்ள ஒரு அரசியல் முறை, அது உண்மையானாலும்—பொய்யானாலும், இன்றைக்குப் பயன்பட முடியுமா என்று கேட்கிறோம்.

ஆரியர்கள் வேண்டுமென்றே தங்களுக்கு அனுகூலமான, தங்கள் உயர்வுக்கும் இந் நாட்டுப் பழங் குடிமக்கள் இழிவுக்கும் அனுகூலமான ஒரு கட்டுக் கதையை நாணயப் பொறுப்பு இல்லாமல் இந்துதேச சரித்திரத்திலும், பள்ளிக்கூடத்திலும் நுழைத்து மக்கள் மூளையில் பதியவைத்துவிட்டு, இன்று அதை மெய்யாய் நடந்ததாக ஆக்கி, அதன் தன்மைகளுக்குக் கட்டுப்படும்படியாக மக்களை இழிநிலைக்குக் கொண்டுபோவதென்றால்—இதை அறிவும், மானமுமுள்ள மக்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? புராணக் கதைகளின்படி பண்டிகைகள் கொண்டாடுவது போலவே, அரசியலும் புராணக் கதைகளுக்கு உள்ளாக்கப் பட்டுவிடுமானால் மக்களுக்கு வளர்ச்சி எங்கே? அறிவு எங்கே என்று கேட்க ஆசைப் படுகிறோம்.

நம் மக்களின் 'ஆத்மார்த்தம்' கூட, புராணக் கற்பனைக்கு அடிமைப்படுத்தப்பட்டு விட்டதே தவிர—அதுவும் காங்கிரஸ்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்டு விட்டதே தவிர—அதுவாவது அறிவுக்கும் மானத்திற்கும் ஏற்றதாக இருக்கவிடப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டுகிறோம். இன்று இந்தநாட்டில் காந்தியாருக்கு அரசியலில்தான் தலைமை இருக்கிறதே தவிர மத இயலில் ஒன்றுமில்லை. ஏனெனில் அவர் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியவருக்கும் தலைவர் என்கிறார். அந்த உரிமையிலேயே மதிக்கப்படுகிறார், நடத்தப்படுகிறார். அவர் அரசியலில் இராமபஜனை, இராம பிரார்த்தனை செய்வதும், மற்றவர்களையும் செய்யச்சொல்லுவதும், அதையே அவரைப் பின்பற்றும் அரசியல்காரர்கள் பின்பற்றுவதுமென்றால்—அதைச் சரியென்று நம்மால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

ஆகவே, காங்கிரசானது ஆரியர் நலனுக்காகவே ஒரு போலியான, கற்பனையான புராணக் கதைகளின் சேதிகளின் பேரில் கட்டப்பட்டிருக்கும் ஒரு மாயா ஜாலவித்தையென்றும், ஆகாயக் கோட்டையென்றும் சொல்லுகிறோம்.

['விடுதலை'-தலையங்கம்—12-6-1946]

3. காந்தீயம்

1. காந்தியத்தின் கதி

தோழர் காந்தியவர்கள் அரசியலில் தலையிட்டுத் தலைமை ஸ்தானத்தை அடைந்ததற்கு முக்கிய காரணம், ஒருபுறம் அவர் போட்டுக்கொண்ட மத சம்பந்தமான வேஷமும், கடவுள் சம்பந்தமான பேச்சும், மற்றும் சத்தியம், அகிம்சை, சத்தியாக்கிரகம், ஆத்ம சுத்தம், ஆத்மசக்தி, பரித்தியாகம், தவம் முதலிய வார்த்தைகளும், மற்றொருபுறம் அவரது சிஷ்யர்கள் அரசியலின் பேராலும், தேசியத்தின் பேராலும் தங்கள் வாழ்நாளைக் கழிக்க ஏற்பாடு செய்துகொண்ட தொண்டர்கள், தேசியவாதிகள், பத்திராதிபர்கள் ஆகிய கூட்டத்தார்கள் காந்தியாரைப்பற்றி (அவர் ஒரு) ரிஷி என்றும், முனிவர் என்றும், கிறிஸ்து

என்றும், நபி என்றும், மகாத்மா என்றும், விஷ்ணுவின் அவதாரம் என்றும் சொல்லி பிரச்சாரம் செய்ததும், இனி ஒருபுறம் காந்தியைக் கடவுளாகவும் விஷ்ணுவாகவும், மற்றும் பலவிதமாகவும் சித்திரங்கள் எழுதிப் படம்போட்டு விளம்பரம் செய்ததும், மற்றும் லவுகீகத்திலும், வைதீகத்திலும் விளம்பரம் பெறவும், சுயகாரிய சித்தி பெறவும் ஆசைப் பட்ட பணக்காரர்களும், படித்தவர்களும் முறையே இலட்சக்கணக்காகத் திரவிய சகாயமும் பிரச்சாரமும் செய்து வந்ததுமாகிய காரியங்களுமாக எல்லாம் சேர்ந்து அவரை அரசியல் சர்வாதிகாரியாக ஆக்கிவிட்டது.

இதனால் பாமர ஜனங்கள் தங்களது பகுத்தறிவைச் சிறிதாவது உபயோகப்படுத்தி காந்தியத்தை ஆலோசித்துப் பார்க்கக் கூடாமற் போய்விட்டது. எப்படியெனில், கடவுள் பக்தி, மதபக்தி ஆகியவைகளுக்கு எப்படி ஒரு மனிதன் அடிமைப்பட்டு கடவுள் அற்புதம் மத அற்புதம் ஆகிய பல வகைகளைக் கண்மூடித்தனமாய் நம்புகிறானோ அதுபோலவே காந்தியத்துக்கும் பகுத்தறிவுப் பிரயோகமே சிறிதுகூட இல்லாமல் செய்துவிட்டது.

இந்தியாவில் கல்வியற்ற தன்மையும், பாமரத்தன்மையும், மதக் கற்பனையும் எந்த மனிதனை வேண்டுமானாலும், கடவுள் தன்மையுடையவனாகவும், மனித சக்திக்கு மீறின மகாத்மாவாகவும் ஆக்குவதற்கு மிக அனுகூலமாகவே இருந்து வருகின்றன. அன்றியும் எந்த விஷயத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு அதற்குத் தெய்வீகப் பூச்சோ, மதப்பூச்சோ சிறிது கொடுத்துவிட்டால் சுலபத்தில் யாரையும் நம்பும்படி செய்து விடலாம்.

உதாரணமாக, இதுவரை எத்தனை சாதுக்கள், சித்தர்கள். ரிஷிகள், மகாத்மாக்கள், துறவிகள், ஞானிகள் முதலியவர்கள் ஏற்பட்டு எவ்வளவோ அபூர்வ காரியங்கள் செய்த தாகவும் பார்த்ததாகவும் இன்றும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றன என்பதைக் கவனித்தால் உண்மை விளங்கிவிடும். ஆகையால், இந்திய ஜனங்களிடையில் காந்தியார் அரசியல் தலைமை ஸ்தானம் பெற்றதில் அதிசயமொன்றும் இருக்க ஞாயமில்லை.

தோழியர் பெசன்ட் அம்மையாரும், தோழர் காந்தியைப் போலவே பகவத்கீதைப் பிரச்சாரத்தாலும், கடவுள்களிடத்திலும் மகாத்மாக்களிடத்திலுந் தான் தினம் பேசுவ தாகவும், முன்ஜென்மம், பின்ஜென்மம் முதலியவைகள் எல்லாம் தனக்குத் தெரிகின்ற தாகவும் சொன்னதாலும், மற்றும் என்னென்னமோ சொல்லிக்கொண்டதாலும், அந்த அம்மாளும் அரசியலில் தலைமை வகிக்கப்பெற்று, கொஞ்சகாலம் சர்வாதிகாரியாக இருந்து, இந்தியா மாத்திரமல்லாமல் ஒரு காலத்தில் உலகம் முழுவதுமே விளம்பரம் பெற்றிருந்த தைப் பார்த்தால், காந்தியத்திற்கும், பெசன்டீயத்திற்கும் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். ஆதலால், காந்தியாருக்கு இருந்த செல்வாக்குக்கும், மதிப்புக்கும் அவரைப் பின்பற்ற ஆட்கள் இருந்துவந்ததற்கும் யாருக்கும் எவ்வித தத்துவார்த்தமும் தனிக் காரணமும் சொல்லவேண்டியதில்லை.

ஆனால், அது இன்று என்ன கெதியில் இருக்கின்றது என்பதுதான் இந்தக் கட்டுரையின் முக்கிய பாகமாகும்.

பெசன்டீயத்தின் கதியே காந்தியமும் அடைந்து வருகின்றது. காந்தியார் உலகிலுள்ள மற்ற இயக்கங்களையும், மதங்களையும், மத ஆதாரங்களையும் ஒரு தட்டில் வைத்து, தானும் பகவத்கீதையும் இந்துமதமும் ஒரு தட்டில் இருந்துகொண்டு ஞானம் பேசி வந்ததற்கும், அதற்கு இந்தியா இடம் கொடுத்து வந்ததற்கும் காரணம் என்ன வென்றால், எடுத்ததெற்கெல்லாம் சத்தியம், சத்தியாக்கிரகம், அகிம்சை, ஆத்மசுத்தம், ஆத்மசக்தி, பரித்தியாகம், கடவுள் கட்டளை ஆகிய அர்த்தமற்ற மொழிகளும், தன் இஷ்டப்படி வியாக்கியானம் செய்வதற்கு இடமுள்ளதும், தந்திரமானதுமான வார்த்தைகளை உபயோகப்படுத்தி வந்ததுமாகும்.

இதுவரையில் அவைகள் எப்படி இருந்தபோதிலும், இருந்ததாகச் சொல்லப்பட்ட போதிலும் இன்று அக் காந்தியத்தின் நிலை எப்படி இருக்கின்றது என்று பார்க்க வேண்டியது அறிவுள்ள மனிதனின் கடமையாகும்.

தோழர் காந்தியாரது சத்தியத்திற்கும், சத்தியாக்கிரகத்திற்கும் ஏதாவது யோக்யதை ஏற்பட்டதா? அல்லது, அவரது ஆத்மசுத்தத்திற்கும், தியாகத்திற்கும், அகிம்சைக்கும், கடவுள் செயலுக்கும் ஏதாவது பயன் உண்டாயிற்றா? என்பனபோன்ற காரியங்களைச் சற்றுக் கவனித்துப் பார்ப்போம்.

தோழர் காந்தியார் யாரிடம் இருந்து பயன் பெறுவதற்காகச் சத்தியமாய் நடந்து, சத்தியாக்கிரகம் செய்தாரோ, அவர்களிடமிருந்து ஒரு காதொடிந்த ஊசியைப் பெறுவதற்குக்கூட இவரது சத்தியமும் சத்தியாக்கிரகமும் பயன்படாமல் போனது, இன்று யாவருக்கும் தெரிந்த விஷயம். இவரது சத்தியாக்கிரகத்தின் பயன் எல்லாம், 'உடும்பு வேண்டாம்; கையைவிட்டால் போதும்' என்கின்ற பழமொழிப்படி, சத்தியாக்கிரகத்தின் பயனாய் சிறையிலடைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காக சர்க்காரோடு ராஜிபேசி, இனிமேல் சத்தியாக்கிரகம் அல்லது சட்டமறுப்புச் செய்வதில்லை என்று சொல்லி ஒப்பந்தம் பேசி, சத்தியாக்கிரகிகளை விடுதலை செய்ய வேண்டியிருந்ததேயாகும். மறுபடியும் செய்த சத்தியாக்கிரகமானது, 'சத்தியாக்கிரகி வெளிப்படையாய் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் சிறையிலிருக்க வேண்டும்' என்கின்ற நிலையில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

ஆத்ம சுத்திக்காகவும், ஆத்ம சக்திக்காகவும் செய்த காரியங்களெல்லாம் ஆத்ம சுத்தியானவர்களையும் ஆத்மசக்தி உடையவர்களையும் கண்ணினால் பார்ப்பதற்கும், பேட்டி கொடுப்பதற்கும், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்பதற்கும்கூட வெல்லிங்டன் பிரபுவால் அருகதை அற்றவர்களாகச் செய்து விடப்பட்டன. இவை மாத்திரமல்லாமல், நம்பிக்கையற்றவர்களாகவும், வாக்குத் தந்தபடி நடவாதவர்களாகவும், நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களாகவும் சர்க்கார் சொல்லும்படி செய்துவிட்டது. இனி என்ன செய்யவேண்டிய பாக்கி இருக்கிறது என்பது நமக்குப் புலப்படவில்லை.

நிற்க, சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு முதலாகிய காரியங்கள் அதில் ஈடுபட்ட மக்களை எல்லாம் தோல்வியடையச் செய்து விட்டதென்றும், இனி அத் தகைய விஷயங்களைக் கைவிட்டுவிட்டு வேறு மார்க்கம் தேடவேண்டுமென்றும், தேசியவாதிகளும், தேசியப் பத்திரிக்கைகளுமே கூப்பாடுபோட ஆரம்பித்துவிட்டன.

மேலும், சத்தியாக்கிரகத்தினுடையவும், சட்டமறுப்பினுடையவும் உயிர் கடைசி மூச்சில் இருக்கிறதென்றும், அது எப்படியாவது காந்தியார் தோல்வியடையவில்லை என்றும், ராஜி செய்துகொண்டார் என்றும், பொதுமக்கள் நினைக்கும்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதுவே போதும் என்கின்ற ஒரு போலி அபிமானத்திற்காகக் காத்திருக்கிற தென்றும், அப்படிக் காத்திருப்பது சுயமரியாதைக்கும் சத்தியத்துக்கும் ஏற்றதல்ல வென்றும், சத்தியாக்கிரகம் (தோற்றுவிட்டது) செத்துப்போய்விட்டது என்பதைத் தைரியமாயும் நாணயமாயும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், தேசியவாதிகளும், தேசீயப் பத்திரிக்கைகளுமே கூக்குரல் இட ஆரம்பித்துவிட்டன.

ஆகவே, இதிலிருந்து ஆத்மசுத்தியும் சத்தியாக்கிரகமும் சத்தியமும் இதுவரை யாதொரு பலனையும் கொடுக்காமல் இருந்துவந்திருப்பதை யாவரும் அறியலாம்.

1921-ம் வருஷ முதல் கள்ளுக்கடை சத்தியாக்கிரகம், அன்னிய ஜவுளிக்கடை சத்தியாக்கிரகம், உப்புக் காய்ச்சும் சத்தியாக்கிரகம், கோவில் சத்தியாக்கிரகம் முதலிய அனேக சத்தியாக்கிரகங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அகிம்சையின் பேரால்

அனேகர் அடி, உதை முதலியவைகள் அடைந்தும் வந்தார்கள். ஆத்மசுத்திக்காகவும், இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் சத்தியாக்கிரகிகளுக்குள் தப்பான காரியங்கள் நடந்து விட்டதற்காகவும், மற்றும் பல காரியங்களுக்காகவும், பல பட்டினி விரதங்கள் இருந்துமாய் விட்டன. இவ்வளவும் போதாமல் பல தடவைகளில் காந்தியார் கடவுளிடம் பேசியுமாய் விட்டது. அசரீரி மூலம் காந்தியாருக்குப் பல கட்டளை இட்டும் ஆகிவிட்டன. இவ்வளவும் போதாமல் தினம் பிரார்த்தனைகளும், ஜபங்களும், தபசுகளும், மவுனவிரதப் பிரார்த்தனைகளும் முறை தவறாமல் நடந்தும் வருகின்றன. இவைகள் எல்லாம் எதற்காக, யாருடைய நன்மைக்காகவெனச் செய்யப்படுகின்றனவோ, அவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டது? அல்லது, யாரிடமிருந்து பெறுவதற்காக, யாருக்கு நல்ல புத்தி வருவதற்காகச் செய்யப்பட்டதோ அவர்களையாவது என்ன செய்துவிட்டது என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பதோடு தோல்வியையும், இழிவையும் கொண்டுவந்து விட்டுவிட்டது என்றும் சொல்லித்தீர வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்கு காந்தியாராகட்டும் மற்றவர்கள் தானாகட்டும் என்ன காரணம் சொல்லக்கூடும்? ஒன்று, சத்தியாக்கிரகத்துக்கும் சத்தியத்துக்கும் ஆத்மசக்திக்கும், கோரிய பலனைக் கொடுக்கக்கூடிய சக்தி இல்லை என்று சொல்லவேண்டும்; அல்லது, காந்தியாரின் சத்தியத்திலோ, சத்தியாக்கிரகத்திலோ, ஆத்ம சக்தியிலோ, தியாகத்திலோ, கடவுளைக் கண்டதிலோ உண்மையில்லை என்றாவது சொல்லியாக வேண்டும்.

பொதுஜனங்கள் பாமரர்களாகயிருப்பதாலும், படித்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்களும், பணக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்களும், தேசியப் பத்திரிக்கை பிழைப்புக்காரர்களும் அயோக்கியர்களாகவும், சுயநலக்காரர்களாகவும், பொறுப்பற்ற வர்களாகவும் இருப்பதால், இம்மாதிரி பிரச்சினைகளுக்கே இடமில்லாமல் ஜனங்களை ஏமாற்றிவிடக்கூடும் என்றாலும், பகுத்தறிவுக்காரர்களுக்கு இவ்விஷயங்கள் தெரியாமல் இருக்கும்படி செய்துவிட இனி யாராலும் முடியாது.

இந் நிலையில் ஒரு விஷயத்தை மாத்திரம் நாம் ஒப்புக்கொள்ளப் பின்வாங்கவில்லை. அதென்னவென்றால், தோழர் காந்தியுடையவும், அவருடைய பிரதம சிஷ்யர்களுடையவும் அந்தரங்க எண்ணம் ஓர் அளவு கைகூடி வந்திருக்கின்றது என்பதேயாகும்.

எப்படியெனில், தோழர் காந்தியின் முயற்சியெல்லாம் பார்ப்பனீயமும், பணக்காரத் தன்மையும் இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதேயாகும். இந்த எண்ணமே தான் அவருடைய பார்ப்பன–பணக்கார 'சிஷ்யர்கள்' (நண்பர்கள்) உடையதுமாகும். இந்த எண்ணம் அவரிடம் இருப்பதற்கு ருஜு என்னவென்றால், (பணக்காரர்கள் பிழைக்க) ஏழைகளுக்கு இராட்டினம் கண்டுபிடித்திருப்பதும், பார்ப்பனர்கள் பிழைக்க பகவத்கீதை வருணாசிரமம், சாதிமுறை, தொழில்முறை ஆகியவைகளைக் காப்பாற்றுவதாகச் சுயராஜ்யத் திட்ட பிரஜா உரிமையில் ஏற்பாடு செய்திருப்பதும், வட்டமேசையில் இந்திய சமஸ்தானாதி பதிகளின் ஆட்சிகளையும் ஜமீன்தார்கள் முதலியவர்களின் நிலையையும் ஒப்புக்கொண்ட துமே போதிய காரணங்களாகும். நாம் சொல்வதை நம்புவதற்கு இவ்வளவும் வாசகர் களுக்குப் போதிய திருப்தியைக் கொடுக்கவில்லை என்றால், மற்றும் ஓர் ஆதாரம் எடுத்துக் காட்டுகிறோம். அதென்னவென்றால், உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலத்தில் தோழர் காந்தி அவர்கள் தான் எதற்காக உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார் என்று காரணம் சொல்லும்போது, 'நான் இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவில்லையானால் தேசத்தில் பொதுவுடைமைக் கிளர்ச்சி ஏற்பட்டுவிடும்' என்று ஒரு காரணம் காட்டியிருக் கிறார். (இதனால்தான் பணக்காரர்கள் காந்தியத்திற்குத் தாராளமாய் பணம் உதவ முன்வர வேண்டியதாயிற்று.)

அன்றியும், தாழ்த்தப்பட்டவர்களின் தனிமுறையை ஒழித்து ஹரிஜன இயக்கம் என்று ஒன்று ஆரம்பித்து, அதற்கும் பிர்லா போன்ற முதலாளி கூட்டத்திலிருந்து 10 இலட்சக்

க்கணக்கான ரூபாய் பெற்று செலவு செய்து, தீண்டப்படாதவர்கள் என்பவர்களிலும் சிலரை விலைக்கு வாங்கி, கோவில் பிரவேசக் கிளர்ச்சி, புராணப் பிரச்சாரம் முதலியவைகள் செய்ததின் பலனாய், இந்து சமூகம் என்பதில் பிறருக்குப் பாடுபட்டு உழைப்பதற்கு என்று ஒரு பெரிய கூட்டத்தை என்றும் நிலைக்க வைக்கவேண்டிய காரியங்கள் செய்யப்பட்டாய் விட்டது. இந்தக் காரணங்களால்தான் தோழர் காந்தியாரின் அந்தரங்க எண்ணம் ஒருவிதத்தில் பலித்துவிட்டது என்று சொன்னோம். இதே எண்ணம் கொண்ட அவரது அத்தியந்த நண்பர்களின் எண்ணமும் ஒருவாறு பலித்துவிட்டது.

மற்றபடி, தோழர் காந்தியவர்கள் எதிர்பார்ப்பதாக வெளிப்படையாய்ச் சொன்ன காரியங்களுக்குத் தோல்வியேற்பட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

நம்மைப் பொறுத்தவரையில், உப்புச் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே இதில் நாணயம் இல்லை என்றும், இது கடைசியில் புஸ்ஸென்று போய்விடும் என்றும், இதனால் மக்களுக்கு வீண்தொல்லையே விளையுமென்றும், அதோடு அனேக நல்ல காரியங்கள் செய்யப்படுவதையும் இந்தக் கிளர்ச்சி தடுத்துவிடுமென்றும் பல தலையங்கங்கள் எழுதியும், பல இடங்களில் பேசியும் வந்திருக்கிறோம். இதற்காகத் தேசியப் பிழைப்புக்காரரிடம் வசவும், பழிப்பும் அடைந்தும் வந்திருக்கிறோம். ஆனால், முடிவில் நாம் பார்ப்பதற்கு மேலாகவே காந்தியத்தின் கதி ஏற்பட்டுவிட்டது.

இப்போது காந்தியத்தின் கவலையெல்லாம் காந்தியம் தோற்றுவிட்டது என்பதில் 100-க்கு 96 மக்களுக்கு ஆட்சேபணை இல்லை; என்றாலும் அது தோற்றுவிட்டது என்று ஜனங்கள் சொல்லாமல் இருப்பதற்கு ஒரு மார்க்கம் கண்டுபிடிக்கவேண்டும் என்பதும், வைசிராய் ராஜிக்கு வரமாட்டேன் என்றார் என்ற பெயரை ஏற்படுத்திவிட்டால், சர்க்கார்மீது ஜனங்களுக்குக் கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டால், அதை உபயோகித்து ஏதாவது செய்யலாமா என்று யோசிப்பதுமாகும். இதைச் சில காந்தி பக்தர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் எனலாம். ஆனால், அவர்களை ஒன்று கேட்கின்றோம். அதாவது, காந்தியம் தோல்வி அடையவில்லை. ஆனாலும் தேசியப் பத்திரிக்கைகள் எழுதுவதுபோல் காந்தியமானது நாட்டிற்குப் பயன்படாமல் போய்விட்டது என்பதையாவது ஒப்புக்கொள்ளுகின்றார்களா? இல்லையா? என்பதேயாகும். அதையும் ஒருசமயம் காந்தி பக்தர்கள் ஒப்புக்கொள்ளவில்லையானால் அவர்களை மற்றொரு கேள்வி கேட்கின்கிறோம். அதென்னவென்றால்,

ஒரு வாதியானவன் ஒரு பிரதிவாதியின்மீது தாவாபோட்டு விசாரணை முடிந்த பிறகு பிரதிவாதியிடம் ராஜியாய்ப் போகிறேன் என்று கேட்கப்போனால் இதற்கு என்ன அருத்தம்? வாதிக்கு விசாரணையின் போக்கிலிருந்து தன் கேஸ் ஜெயிக்காது என்றும், தோற்றுவிடும் என்றும் தோன்றிவிட்ட காரணமா? அல்லது வாதியின் கண்ணியமும் பெருந்தன்மையும் காரணமா? என்று கேட்கின்றோம்.

நிற்க, இப்போது காங்கிரசுக்காரர்களிலேயே அனேகம் பேர் காந்தியம் தோற்றுவிட்டதென்றும், சத்தியாக்கிரகமும், சட்டமறுப்பும் செத்துவிட்டதென்றும், ஆதலால் இனி சட்டசபைக்குப் போகவேண்டும் என்றும் தாராளமாய்ச் சொல்ல முன்வந்துவிட்டார்கள். எல்லா தேசியப் பத்திரிகைகளும் அப்படியே எழுதத் துணிந்தும்விட்டன. தோழர் காந்தி வைசிராயைப் பார்க்க அனுமதி கேட்பதுகூட இந்திய தேசிய காங்கிரசுக்குச் சுயமரியாதையற்ற தன்மையை உண்டாக்கி விட்டதென்றும் எழுதிவிட்டன.

இவற்றுள் ஒரு பிரபல தேசியப் பத்திரிகையானது, 'காந்தியார் தன்னுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்காகக் காங்கிரசின் மரியாதையை விற்றுவிட்டார்' என்றுங்கூட எழுதிவிட்டது.

காந்தியாரைப் பற்றியோ, சட்டமறுப்பைப் பற்றியோ குறைகூற இனிச் சொல்ல வேண்டிய பாக்கி ஒன்றும் இல்லாமல் எல்லாம் சொல்லி ஆய்விட்டது. நமக்கு இவைகள் எதுவும் புதுமையாகத் தோன்றவில்லை. ஏனெனில், இதெல்லாம் நாம் முன் சொன்ன மாதிரி ஆரம்பத்திலேயே எதிர்பார்த்ததாதலால் அதிசயமொன்றும் இல்லை. காங்கிரசுத் தொண்டர்கள் என்பவர்கள் இந்த அளவோடாவது ஒரு பாடம் கற்றதாக முடிவு செய்து கொண்டு, இனி அப்படிப்பட்ட சூழ்ச்சிக் காரியங்களிலும், பயனற்ற காரியங்களிலும் சம்பந்தப்படாமல் தேசம், சாதி, மதம், ஏழை, பணக்காரன், எஜமான், அடிமை என்பனவாகிய வித்தியாசமில்லாத, உண்மையான சமதர்மத்துக்கு உழைக்க வருவார்களா? அல்லது செத்த பாம்பை எடுத்து ஆட்டப்போகும் காந்தியத் திருவிளையாடலில் மறுபடியும்போய் சேரப்போகின்றார்களா? என்பதேயாகும்.

['குடி அரசு'—தலையங்கம்—23-7-1933]

2. தோழர்களே வாருங்கள்!

காங்கிரஸ் ஸ்தாபனங்கள் மூடப்பட்டதுபற்றியும், காந்தியம் தோற்றுப்போய்விட்டது பற்றியும் பலர் மகா விசனப்படுவதாகத் தெரியவருகிறது. இன்றைய வரையில் காங்கிரசும், காந்தியமும் நம் மக்களுக்கு என்ன விதமான பயனை உண்டாக்கிற்று என்பதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை.

காங்கிரஸ் ஏற்பட்டு ஏறக்குறைய அய்ம்பது வருஷமாகின்றது எனலாம். அய்ம்பது வருஷ காலத்தில் அரசாங்கத்தாரால் காங்கிரஸ் கேட்டபடி (சீர்திருத்தங்கள் என்னும் பேரால்) எவ்வளவோ அதிகாரங்களும் பதவிகளும் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட்டும் இருக்கின்றன. இதன் பயனாய் நாட்டில் கோடீஸ்வரர்கள் பெருகினார்கள். பதினாயிரக் கணக்கான ஏக்கரா பூமியுடைய ஜமீன்தார்கள், மிராசுதார்கள் அதிகமானார்கள். மாதம் 1-க்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம் வாங்கும் பெரும் பெரும் பதவியாளர்களும் உத்தியோகஸ்தர்களும் ஏராளமானார்கள். மாதம் 1,000, 10,000 ரூபாய் வரும்படி சம்பாதிக்கும் வக்கீல்களும், டாக்டர்களும் இலக்ஷக்கணக்கில் பெருகினார்கள்.

தவிர மற்றொருபுறம், பாடுபடாமல் தேசத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு சோம்பேறிகளாய் இருந்து வாழும் மக்கள் பலர் பெருகினார்கள். அதாவது 'வைதிகத்தில்' ஒரு கூட்ட மக்கள் எப்படிக் குருமார்களென்றும், பாதிரிமார்களென்றும், சந்நியாசிகளென்றும், சாமியார்களென்றும் சொல்லிக்கொண்டு ஊரார் உழைப்பில் வாழ ஆசைப்பட்டு வேஷம் போட்டுத் திரிகின்றார்களோ, அதுபோல் காங்கிரசின் பேரால் ஒரு கூட்ட மக்கள், தேசியத் தலைவர்கள், தேச பக்தர்கள், தேசிய வாதிகள், தேசாபிமானிகள், தேசியத் தொண்டர்கள் என்பதாகப் பல பெயர்களை வைத்துக்கொண்டு யாதொரு வேலையும் இல்லாமல், எவ்விதப் பொறுப்புமில்லாமல் பதவி பெறவும், வயிறு வளர்க்கவும் ஏற்பட்டார்கள்.

இவைகளைத் தவிர, காங்கிரசானது ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் நாள் ஒன்றுக்கு 14 மணி நேரம், 18 மணி நேரம் மழையிலும், வெயிலிலும், காடுகளிலும், கழனிகளிலும், மலையிலும், சமுத்திரத்திலும், பட்டறைகளிலும், தொழிற்சாலைகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் அலைந்து மிருகங்கள்போல் உழைத்துப் போதிய ஆகாரமில்லாமல், சுகாதாரம், வைத்தியம் முதலிய வசதிகள் இல்லாமல் தங்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுக்குப் படிப்பு, உடை முதலியவைகளில்லாமல் ஒட்டைக் குடிசைகளில் வசித்து மடியும் மனித ஜீவன்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்று கேட்கின்றோம்? அல்லது காங்கிரஸ் ஏற்பட்டதற்குப் பின் இவர்கள் விஷயத்தில் என்ன மாறுதல் ஏற்பட்டது என்று கேட்கின்றோம்?

இந்த நிலையில் இப்படிப்பட்ட யோக்கியதையுள்ள காங்கிரசானது மூடப்படுகின்றதே, மறைந்து போகின்றதே, செத்துப் போகின்றதே என்று சிலர் விசனப்படுவதைப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாகவே தோன்றுகின்றது.

இந்த 50 வருஷ காலமாய் காங்கிரசினால் நாட்டுக்கு என்ன—என்ன காரியங்கள் ஏற்பட்டதோ—காங்கிரசினால் மக்களுக்கு என்னென்ன உணர்ச்சிகள் ஏற்பட்டதோ அவைகளையெல்லாம் இன்று அடியோடு அழித்துத் தீரவேண்டிய அவசியத்தில் உலகம் இருக்கும்போது, அப்படிப்பட்ட காங்கிரஸ் ஒழிந்து போவதனால் மக்கள் மகிழ்ச்சி அடையவேண்டியதிருக்க எதற்காக விசனப்படுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்திய தேசீயக் காங்கிரஸ் என்பது ஒரு விபச்சாரித்தனத்திற்கொப்பான ஸ்தாபனமாய் இருந்து வந்தது என்று சொன்னால், சமதர்ம ஞானம் உள்ள எவரும் வாய்பேசாமல் ஒப்புக்கொண்டாகவேண்டும் என்றே சொல்லுவோம். ஏனெனில், ஏழை மக்கள் பெயரையும், பாமர மக்கள் பெயரையும், கஷ்டப்படும் மக்கள் பெயரையும் சொல்லிக்கொண்டு, அந்த ஏழை மக்களுக்கு மேற்கண்ட காங்கிரஸ் ஸ்தாபனம் செய்துவந்த அக்கிரமங்களுக்கும், கொடுமைகளுக்கும், பித்தலாட்டங்களுக்கும் ஏதாவது எல்லை கட்ட முடியுமா? என்று கேட்கிறோம்.

மக்களுக்கு, அவர்களுடைய மனிதத் தன்மைக்கு அடிப்படையானதும், மிகவும் முக்கியமானதுமான கல்வி விஷயத்தை எடுத்துக்கொண்டோமானால் முதலாளிகள் குழந்தைகள், ஜமீன்தார்கள் குழந்தைகள், உத்தியோகஸ்தர்கள் குழந்தைகள், மேல் சாதிக்காரர்கள் குழந்தைகள் ஆகியவர்கள் தவிர, மற்றபடி நாட்டில் 100-க்கு 90 பேர்களாயிருக்கும் சாதாரண மக்களின் குழந்தைகள் படிப்பில் பூஜ்யமாகவே இருந்துவருகிறார்கள். கையெழுத்துக்கூடப் போடத்தெரியாதவர்கள் அதிகம் பேர்கள் இருந்து வருகின்றார்கள். சுகாதாரத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், அதுவும் மேல்குறிப்பிட்ட வகுப்பாரைத் தவிர மற்றபடி 100-க்கு 90 மக்கள் சுகாதாரமற்று, நோயாளியாகவும் வைத்திய வசதி அற்றவர்களாகவும் மிக்க மெலிந்தவர்களாகவும் இருந்து, அகாலத்தில் மரணமடைந்த வருகிறார்கள். ஜீவனோபாய விஷயத்திலும் வயிறார உண்பதற்கும் தங்கள் பிள்ளை குட்டிகளைச் சாதாரண நிலையிற்கூட போஷிப்பதற்கும் முடியாமலும் 100-க்கு 75 குழந்தைகள் தங்களது 6-வது 7-வது வயதிலேயே தங்கள் வயிற்றுக்குக் கூலி வேலை செய்து தீரவேண்டியவர்களாகவும் இருந்துவருகிறார்கள். மனிதனுக்கு வேண்டிய முக்கிய காரியங்களாகிய கல்வி, சுகாதாரம், ஜீவனம் முதலாகிய விஷயங்களில் ஒரு சிறு மாறுதலைக்கூட செய்ய முடியாத ஸ்தாபனங்கள் இருந்தென்ன, செத்தென்ன என்பதை நடுநிலையிலிருந்து யோசிக்கும் எந்த அறிவாளியும், காங்கிரஸ் செத்துப்போகிறதென்று கடுகளவுகூட விசனப்படமாட்டானென்றே சொல்லுவோம்.

கல்வி முதலிய மேற்கண்ட விஷயங்களில் காங்கிரசினால் ஒன்றும் செய்யமுடியாமல் போனதற்குக் காங்கிரஸ் பக்தர்கள் சர்க்கார் பேரில் குறைகூறலாம். ஆனால், அந்தக் காங்கிரஸ் பக்தர்களை ஒன்று கேட்கிறோம். அதென்னவென்றால், பணக்காரர்கள், மேல் சாதிக்காரர்கள் என்பவர்களுடைய கல்வி, சுகாதாரம், ஜீவனோபாயம் முதலிய விஷயங்களிலும் மற்றும் பெரும் பெரும் சம்பளம், அதிகாரம், பதவி பெறுவதற்குத் தகுதியான கல்வி, சுகாதார ஜீவனோபாய உத்தியோக விஷயத்திலும் இந்த 40, 50 வருஷங்களுக்குள்ளாக காங்கிரசினால் எவ்வளவு சீர்திருத்தங்கள் அனுகூலங்கள் ஏற்பட்டு, அக்கூட்டத்தார்கள் பயனடைந்து வருகின்றார்களா, இல்லையா? உதாரணமாக, வக்கீல், வைத்தியம், கணிதம், இஞ்சினீயர், அய். சி. எஸ்., பி. சி. எஸ்., முதலிய படிப்பு விஷயத்தில் எவ்வளவு முற்போக்கு, எவ்வளவு சம்பள உயர்வு, எவ்வளவு உத்தியோக அதிகரிப்பு முதலிய காரியங்கள் நடைபெறவில்லையா என்று கேட்கின்றோம்?

இவைகள் எல்லாம் எப்படி ஏற்படச்செய்ய முடிந்தது என்று பார்த்தால், காங்கிரஸ் துரோகமும் ஒழுக்க ஈனமும் நன்றாய் விளங்கிவிடும்.

ஆகவே, ஒரு நாட்டில் செல்வவான்களுக்கும், மேல்சாதிக்காரர்களுக்கும் மாத்திரம் அனுகூலமாயும் ஏழைகளுக்கும் பாடுபடும் மக்களுக்கும் பிரதிகூலமும், துரோகச் சிந்தனையும் உள்ளதாயுமுள்ள ஒரு ஸ்தாபனம் செத்துப் போகுமேயானால், ஜனங்கள் அதற்காக மகிழ்ச்சியடைவதுடன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அது மறுபடியும் தலை எடுக்காமல் இருக்கும்படி ஆழக் குழிதோண்டிப் புதைத்து அதன்மீது குத்துக்கல் களை நடவேண்டியது சமதர்ம அறிஞர்களின் கடமையாகும்.

காங்கிரசின் அயோக்கியத்தனங்களும், துரோகங்களும் பாமர ஜனங்களுக்கு வெளி யாகக்கூடிய நல்ல ஒரு சமயத்தில், அதை மறைக்க தோழர் காந்தியாரைப் பிடித்து, அவரை மகாத்மாவாக்கி, அவர் மூலம் மத சம்மந்தமான உணர்ச்சிகளை மக்களுக்குள் புகுத்தச் செய்து, காங்கிரஸ் பித்தலாட்டங்களுக்கெல்லாம் வேறுவித பாஷ்யம் கூறி, வருணாசிரமமென்றும், பரம்பரைத் தொழில் முறை என்றும், ஏழ்மைத் தன்மையையும் துன்பத்தையும் கஷ்டத்தையும் அனுபவிப்பதே மேல் என்றும் 'தத்துவ ஞானம் பேசச் செய்து, மக்களை ஏமாற்றி, மறுபடியும் காங்கிரஸ் படுகுழியில் விழும்படியான காரியத்தைச் செய்வித்து வந்தார்கள். 'கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் தெரிந்துவிடும்' என்பது போல் காந்தியத்தின் யோக்கியதை இப்போது இந்த 10 வருஷத்தில் விளங்கிவிட்டதால், இரண்டும் சேர்ந்து மண் வீடு சரிவதுபோல் காங்கிரசும், காந்தியமும் 'உன்னால் நான் கெட்டேன். என்னால் நீ கெட்டாய்' என்று ஒன்றையொன்று சொல்லிக்கொண்டு மாள வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது.

இந்திய தேசிய காங்கிரசும், காந்தியமும் அழிந்தொழிந்து போவது என்பது இந்திய ஏழை மக்களுக்கு மாத்திரமல்லாமல், உலக ஏழைமக்கள் இயக்கத்திற்கே அதாவது, சமதர்ம உலகத்திற்கே பெரிய இலாபகரமான காரியமாகும்.

இந்தியாவில் சமதர்மக் கொள்கை என்றைக்காவது ஒருநாள் ஏற்படும் என்று நினைப்போமேயானால், அது தேசிய காங்கிரசும், காந்தியமும் ஒழிந்த நாளாகத்தான் இருக்குமே தவிர, அவை ஒழியாமல் ஏற்படாது என்பது உறுதி.

இந்தியாவைவிடப் பலமடங்கு அரசியல் கொடுமையும், பணக்காரர் கொடுமையும், பார்ப்பனீயக் (பாதிரித்தன்மை) கொடுமையும், அநாகரிகக் கொடுமையும், அடிமைத் தன்மைக் கொடுமையும் இருந்துவந்த ரஷியா தேசத்துக்குச் சமதர்ம உணர்ச்சி எப்பொழுது ஏற்பட்டது என்று பார்ப்போமேயானால், அங்கும் டால்ஸ்டாயிசம் என்னும் வைதீகப் புடுங்கலீசம் (காந்தியம்) ஒழிந்த பிறகுதான் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. ரஷிய மகாத்மாவான டால்ஸ்டாய் என்பவரும், தோழர் காந்தியாரைப்போலவே ஏழ்மை வேஷமும், கடவுளைத் தேடும் தொழிலும், கடவுள் அருளுடன் கலந்திருக்கும் தன்மை மையும் கொண்டவராக இருந்து வந்தவர். அவருக்குச் செல்வாக்கு இருக்கும்வரை, ரஷிய மக்களுக்கு இந்த உலக வாழ்வு விஷயத்தில் கவலை இல்லாமல் 'செத்தபின் வாழும் மேல் உலக வாழ்க்கை'யிலேயே கவலை உண்டாகும்படி உணர்ச்சியே வலுத்திருந்தது. ஏழை களுடைய கஷ்டம் இன்னது, தொழிலாளிகளுடைய கஷ்டம் இன்னது என்று உணராமலும் அனுபவ ஞானமில்லாமலும், ஏழ்மைத்தன்மையையும் உழைப்பையும் சிலாகித்துப்பேசி மக்களுக்குப் பிரச்சாரம் செய்துவந்தவராவார்.

அப்படிப்பட்ட டால்ஸ்டாயிசம் ஒழிக்கப்பட்டபிறகுதான், முன்சொன்னபடி மக்களுக்குச் சமதர்ம உணர்ச்சி பரவத்தொடங்கி, நாட்டையும் புரட்சிக்குத் தயாராக்கி முதலாளித் தன்மையையும், பாதிரித்தன்மையையும் ஏகாதிபத்திய தன்மையையும் இருந்த இடம் தெரியாமல் செய்து இன்றைய ரஷியக் குழந்தைகளுக்கு 'ஒரு காலத்தில் சார்

(சக்ரவர்த்தி) என்பவன் இருந்தான்; அவனுக்கு முதலாளி என்ற அடிமைகளும், பாதிரி என்ற தரகர்களும் இருந்தார்கள்' என்று கதை சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆதலால், அந்த நிலைமை இந்தியாவில் ஏற்படக்கூடியதின் அறிகுறியாக இருந்த காங்கிரசும், காந்தியமும் அழிவதானால் நாம் மகிழ்ச்சி அடையவேண்டுமேயல்லாமல் யாரும் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காந்தியமும், காங்கிரசும் மறைபடவேண்டியது ஏற்பட்டதற்குப் பணக்காரர்களும், பார்ப்பனர்களும், படித்துவிட்டு உத்தியோகத்துக்குக் காத்திருக்கும் சோம்பேறிகளுந்தாம் விசனப்படவேண்டுமே தவிர, மற்றபடி மனித சமூகத்தினிடம் அன்புகொண்டு சம நோக்குடன் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையுள்ள மக்களுக்கு வேலை யில்லாமல் போய்விடுமே என்று எவரும் பயப்படவேண்டியதில்லை.

அப்படிப்பட்ட சமதர்ம நோக்கமுள்ள உண்மைத் தொண்டர்களை இரண்டு கையையும் நீட்டி மண்டியிட்டு வரவேற்கச் சமதர்ம இயக்கம் காத்திருக்கிறது. அது உலக மக்கள் எல்லோரையும் பொறுத்த இயக்கம். சாதி, மதம், வருணம், தேசம் என்கின்ற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், ஹரிஜன் என்கின்ற வருணங்களை ஒழித்து எல்லோரும், எப்பொழுதும், மனிதரே என்று கூவும் இயக்கம். ஏழை என்றும், பணக்காரன் என்றும், முதலாளி என்றும், தொழிலாளி என்றும், எஜமான் என்றும், கூலி என்றும், ஜமீன்தாரன் என்றும், குடியானவன் என்றும் உள்ள சகல வகுப்புகளையும், வேறுபாடுகளையும் நிர்மூலமாக்கித் தரைமட்டமாக்கும் இயக்கம். மற்றும் குரு என்றும், சிஷ்யன் என்றும், பாதிரி என்றும், முல்லாவென்றும், முன்ஜன்மம், பின்ஜன்மம் என்றும், கர்மபலன் என்றும், அடிமையையும், எஜமானனையும், மேல்சாதிக்காரனையும், கீழ்சாதிக்காரனையும், முதலாளியையும், தொழிலாளியையும், ஏழையையும், பணக்காரனையும், சக்கரவர்த்தியையும், குடிகளையும், மகாத்மாவையும், சாதாரண ஆத்மாவையும், அவனவனுடைய முன்ஜன்ம கர்மத்தின்படி அல்லது ஈஸ்வரன் தம் கடாட்சப்படி உண்டாக்கினார் என்றும், சொல்லப்படும் அயோக்கியத்தனமான சுயநலங்கொண்ட சோம்பேறிகளின் கற்பனைகளை எல்லாம் வெட்டித் தகர்த்துச் சாம்பலாக்கி, எல்லோருக்கும் எல்லாம் சமம், எல்லாம் பொது என்ற நிலையை உண்டாக்கும் இயக்கம். சாதி, சமய, தேசச் சண்டையற்று, உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்று சாந்தியும் ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம். இன்று உலக மெங்கும் தோன்றி தாண்டவமாடும் இயக்கம். ஆதலால், அதில் சேர்ந்து உழைக்க வாருங்கள், வாருங்கள், என்று கூவி அழைக்கின்றோம்.

['குடிஅரசு'–தலையங்கம்—30-7-1933]

3. காந்தியாரின் விஷம்

தோழர் காந்தி அவர்கள் 'தீண்டாமைப் பேயை ஓட்டவேண்டும்' என்பது, மதத்தைப் புனிதமாக்கவே ஒழிய தீண்டாதவர்களைப் பற்றிய கவலையால் அல்ல என்பது யாவரும் உணரக்கூடியதேயாகும். மதத்தைப் புனிதமாக்குவது என்பது எதற்காக வென்றால், இந்து மதம் குற்றமுடையதாகி—அது பலராலும் குற்றம்சொல்லும் நிலைமைக்கு வந்து—சீக்கிரத்தில் அழிந்து போகத் தக்க நிலைமைக்கு வந்துவிட்டதனால் அக் குற்றங்களைக் களைந்து, சீக்கிரம் அழிந்து போகக் கூடுமான நிலைமையில் இருக்கும் இந்து மதத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக என்பது காந்தியவர்களுடையதும், அவரைக் கூட்டிவந்து வேடிக்கை காட்டும் பார்ப்பனர்களுடையதும், அவ் வேடிக்கையில் வரூலாகும் பணங்களைக்கொண்டு வயிறுவளர்க்கும் மத–தேச பக்தர்களுடையவும் கருத்து என்றே வைத்துக்கொள்ளலாம்.

தீண்டாமை விலக்கு ஒரு பொதுஜன தர்மம் அல்லவென்றும், அது இந்துக்களை மாத்திரம் சேர்ந்த வேலை என்றும் தோழர் காந்தியார் ஆயிரம் தடவைகள் சொல்லியிருக்கின்றார். இதிலிருந்தே தீண்டாமை விலக்கு என்பது ஒரு மதப் பிரச்சாரம் என்பதாக ஒரு சாதாரண மனிதனுக்கும் விளங்கவில்லையா என்று கேட்கிறேன்.

காந்தியார் பலதடவைகளில் ஒவ்வொரு சாதியாரையும் பார்த்து 'சாதிப் பாகுபாடுகள் அவசியம்' என்றும், 'அவனவன் தகப்பன் செய்த தொழில் [அவனவன் சாதித் தொழில்] அவனவன் செய்யவேண்டும்' என்றும் சொல்லி வருவதும், இதை அனுசரித்துத் தனது ஆச்சிரமத்தில இன்றையதினம்கூட தீண்டப்படா சாதியாருக்குத் தோல்பதனிடும் வேலை செய்யவும், பழகவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுத்து வருவதும் யாவரும் அறிந்ததாகும்.

சாதிகள் அழியவேண்டும் என்று நாளதுவரை தோழர் காந்தியார் தன் வாயினால் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை என்றும், ஆனால் சாதிகள் இருக்கவேண்டும் என்று பல தடவைகள் சொல்லி இருக்கின்றார் என்றும் நான் பந்தயங்கட்டிக் கூறத் தயாராக இருக்கிறேன்.

வருணாசிரம விஷயத்தில் தோழர் காந்தியார், 'பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கின்ற நான்கு வகுப்புகள் இருக்கவேண்டும்' என்றும்; 'அய்ந்தாவதான சண்டாளர் என்கின்ற வகுப்புக்கூடாது' என்றும்; 'அச் சண்டாளர் என்னும் வகுப்பைச் சூத்திரர் என்னும் வகுப்புடன் சேர்க்க வேண்டும்' என்றும் சொல்லுகிறார்.

தீண்டாதார் கோயிலுக்குள் போனால் அவர்கள் நிற்கவேண்டிய இடம் எது என்று கேட்கப்பட்ட கேள்விக்கும்; தீண்டாமை என்பது போய்விட்டால் தீண்டாதவர்களாய் இருந்தவர்களுக்கு இந்துமதத்தில் அவர்களுடைய நிலைமை என்ன என்று கேட்கப்பட்ட கேள்விக்கும்—தோழர் காந்தி அவர்கள், 'அவர்கள் [தீண்டப்படாதவர்கள்] சூத்திரர்களுக்குச் சமமாக—அதாவது, சூத்திரர்கள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டியவர்களாகப் பாவிக்கப்படுவார்கள்' என்று சொல்லி இருக்கிறார்.

தோழர் காந்தியாரைவிட வைதிகர்களும், சனாதனதர்மிகளும் எத்தனையோ மடங்கு மேம்பட்டவர்கள் என்பது எனது அபிப்பிராயம். எப்படியெனில், வைதிகர்களுடைய அக்கிரமம், அயோக்கியத்தனங்கள் எனப்பட்ட விஷமானது நன்றாகக் குருடனுக்கும் மூடனுக்கும் தெரியும்படியாக இருக்கின்றது.

காந்தியாரின் விஷம், மேலே சர்க்கரைப் பூச்சுப்பூசி எப்படிப்பட்ட 'அறிவாளி'யும் எடுத்துச் சாப்பிடும்படியான மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால், வைதிகர்களது விஷத்தை யாரும் சாப்பிட்டுச் செத்துப்போக மாட்டார்கள் என்பதோடு, அவ் விஷயங்கள் வைதிகர்களையே கொல்லுவதற்குத்தான் பயன்படும் என்றும் சொல்லலாம். ஆனால், 'காந்தியாரின் விஷம்' எல்லோரையும் அருந்தச்செய்து எல்லோரையும் கொல்லத் தக்க மாதிரியில் பூச்சுப் பூசப்பட்டிருக்கிறது என்பதோடு, காந்தியாரை 'மகாத்மா' வாக்கி பின் சந்ததிகளையும் கொல்லச்செய்யத்தக்கதாகும் என்று சொல்லலாம். ஆதலால், வைதிகப் பிரச்சாரத்தையும் சனாதனப் பிரச்சாரத்தையும் பகிஷ்கரிப்பதைவிட, காந்தி பிரச்சாரத்தைப் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும்.

['புரட்சி'-தலையங்கம்—10-12-1933]

4. நிதி வசூல்

தோழர் காந்தியார் அவர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்காக 1920-ல் காங்கிரசின் பேரால் அதாவது, 'சுயராஜ்ய நிதி' என்று ஒரு கோடி ரூபாய் வசூல் செய்ததும், அது பெரும்பான்மை பார்ப்பனர் கையிலேயே கொடுக்கப்பட்டுச் செலவானதும் யாரும் அறிந்ததேயாகும். அதன் பிறகு 1926—27-ல் கதரின் பேரால் 'கதர் பண்டு' என்று சுமார் 30 இலட்ச ரூபாய் வரை வசூல் செய்தார். அதுவும் பெரிதும் பார்ப்பன ஆதிக்கத்துக் காகவே—பார்ப்பனர்கள் கையாலேயே செலவுசெய்யப்பட்டது.

மறுபடி 1934-ல் 'அரிசன பண்டு' என்ற பெயரால், தீண்டப்படாதவர்களுக்கு என்று 20, 30 இலட்ச ரூபாய் வரை வசூல் செய்து, அதுவும் பார்ப்பனர் ஆதிக்கத்துக்காகவே— பார்ப்பனர் வசம் கொடுக்கப்பட்டு அவர்களாலேயே செலவழிக்கப்பட்டும் வந்து அதன் பயனால் இந்திய சட்டசபைத் தேர்தலும் நடத்தப் பட்டாய்விட்டது. முடிவாக சுயராஜ்யம் என்ன ஆயிற்று என்பதைப்பற்றி நாம் யாரையும் கேட்கவேண்டியதில்லை. எப்படியாவது தோழர் சத்தியமூர்த்தி அய்யர் ஒரு நாளைக்காவது முதல் மந்திரி உத்தியோகம் பார்த்து விட்டுப் போய்விட வேண்டியது என்பதிலும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேல் என்பதிலும் வந்து முடிந்து விட்டதுடன், அரசியல் திட்டத்தில் ஏற்பட்ட பாதுகாப்புக்களுக்கெல்லாம் 'நாங்களும், எங்கள் கொள்கைகளுமேதான் காரணம்' என்று காங்கிரஸ்காரர்கள் பெருமை பேசிக்கொள்ளுவதிலும் வந்து நிற்கிறது.

இனி, சமீபத்தில் புதிய அரசியல் திட்டத்தின்படி ஏற்படப்போகும் சட்டசபைத் தேர்தலுக்குச் சில புதிய கொள்கைகளின் பேரால் 10, 20 இலட்சம் ரூபாயாவது புதிய பணமாக வேண்டியிருக்கிறது. அதை 'அரசியல் சம்பந்தமில்லாதது' என்று சொல்லிக் கொண்டு, அதன்பேரால் வசூல் செய்யவேண்டியதாக இருக்கிறது. கூடிய சீக்கிரம் அந்த இரகசியமும் முயற்சியும் வெளியாகப் போகிறது. அது என்னவென்றால், அதுதான் 'கிராமப் புனருத்தாரணமாம்'; அதற்காக வேறு பண்டு வசூலிக்கவேண்டும் என்பதாகும். அதற்காக, காந்தியார் அடுத்த மாதத்திலிருந்தே சுற்றுப் பிரயாணம் புறப்படப் போகிறாராம். தேர்தலில் ஓட்டு வாங்கிக் கொடுக்கிறோம் என்று காங்கிரஸ் பக்தர்கள் இப்பொழுதிருந்தே தேர்தல் ஆசை பிடித்தவர்களிடமும் ஏமாந்த சோணகிரிகளிடமும் பணம் வசூல் செய்ய அஸ்திவாரம் போட்டு வருகிறார்கள்.

கிராமப் புனருத்தாரணப் பண்டுக்கு வசூலாகும் தொகை சுயராஜ்ய பண்டு, கதர் பண்டு, தீண்டாமைப் பண்டு ஆகிய பண்டுகள் அடைந்த கதிதான் அடையப்போகும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. கதர் இன்று என்ன நிலையில் இருக்கின்றது? இத்தனை நாள் பொறுத்து இப்போது தான் காந்தியார், 'நான் இயந்திரத்துக்கு விரோதியில்லை' என்றும்; 'இராட்டினமும் ஒரு இயந்திரம்தான்' என்றும்; 'மனித வாழ்க்கைக்கு உபயோகமான எல்லா இயந்திரங்களையும் ஆதரிப்பேன்' என்றும் சொல்லி விட்டார்.

எனவே, கைராட்டினம், கை நெசவு எல்லாம் இனிப் பறக்க வேண்டியதுதான்; இதுவே இன்றைய கதரின் நிலையாகும். தீண்டாதார்களுக்காக இதுவரை என்ன காரியம் நடந்தது என்று பார்த்தால், தீண்டாமை விலக்குக்கு இப்போது சட்டம் கொண்டு வரக் கூடாது என்பதோடு முடிந்தது. ஆகவே, கிராமப் புனருத்தாரணம்—கைக் குத்து அரிசியும், கை ஆலை வெல்லமும் சாப்பிட வேண்டும்' என்ற பிரச்சாரத்தோடு முடியப் போகிறது.

இந் நிலையில், இதற்காக ஒரு பண்டு தேவையா என்று கேட்கின்றோம். போனது போகட்டும்; 4-வது பண்டு வசூல் விஷயத்திலாவது உஷாராய் இருங்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

['குடி அரசு'—அறிக்கை—30-6-1935]

5. காந்தி

தோழர் காந்தியார், பார்ப்பனரல்லாதாரைப் பார்த்து 'நீங்கள் பாடுபட்டு மற்ற மக்களுக்கு உழைத்துப் போட வேண்டுமேயொழிய, உங்கள் பெட்டிகளில் சிறிய வெள்ளி நாணயம்கூட இருக்கக்கூடாது' என்று சொல்லிவருவதும்; 'பழைய வருணாசிரம முறையை அமைக்கவே சுயராஜ்யம் கேட்கிறோம்' என்று சொல்லுவதும்; 'வருண முறைப்படி அவனவன் தகப்பன் செய்த தொழிலைத்தான் அவனவன் மகன் செய்ய வேண்டும்' என்று சொல்லுவதும்; 'அதற்காகவேதான் வார்தா திட்டம் வகுத்திருக்கிறேன்' என்று கூறுவதும்—அதை அனுசரித்தே இன்று மதுவிலக்கு என்கின்ற சாக்கை வைத்துக் கிராமப் பள்ளிக்கூடங்களை மூடிவிட்டு, 'ஊர்ச் சாவடியில், கிணற்று மேட்டில், நந்தவனத்தில்—அட்டையில் வாசகம் எழுதிக் கட்டச்செய்து, அதைத் தெருவில் வருகிறவர் போகிறவர்களைக்கொண்டு கேட்டுத் தெரிந்து கொள்வதன்மூலம் பிள்ளைகள் படிக்க வேண்டும்' என்று சொல்லுவதும் ஆகும்.

['குடிஅரசு'—தலையங்கம்—7-8-1938]

4. பார்ப்பனரல்லாதார் இயக்கம்

1. அம்பலத்து அதிசயம்

தேச விடுதலை விஷயத்தில் பிராமணரல்லாதார் பொதுநன்மையை உத்தேசித்து, அனேக பிராமணர்களுடைய கொடுமைகளையும், சூழ்ச்சிகளையும் கூட்டாக்காமல் கபடமற்றுப் பிராமணர்களுடன் ஒத்துழைத்து வந்திருந்தாலும், அவர்களுடைய உழைப்பையெல்லாம் தாங்கள் தங்கள் வகுப்புச் சுயநலத்திற்கென்று அனுபவித்துக் கொள்வதல்லாமல், உழைக்கின்ற பிராமணரல்லாதாருக்கு எவ்வளவு கெடுதிகளையும் துரோகங்களையும் செய்து வந்திருக்கிறார்களென்பதை—செய்து வருகின்றார்களென்பதைப் பொறுமையோடு படித்து அறியவேண்டுமாய்க் கோருகிறோம்.

முதலாவது, பழங்காலத்திய தேசியவாதிகளுள் சிறந்தவர்களில் சர். சி. சங்கரன் நாயர் என்கின்ற பிராமணரல்லாதார் முக்கியமானவர் ஆவார். அவர் காங்கிரசிலும் தலைமை வகித்தவர். அப்பேர்ப்பட்டவரை முன்னுக்கு வரவொட்டாமல் தடுப்பதற்காக, பிராமணர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்துவந்தார்கள். அவருக்குக் கிடைக்கவிருந்த ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவியைக் கிடைக்கவொட்டாதபடிக்குச் செய்ய எவ்வித பொது நலத்திலும் தலையிட்டிராத சர். வி. பாஷ்யம் அய்யங்கார் போன்றவர்களும் மற்றும் அனேக பிராமண வக்கீல்களும் சீமைக்கெல்லாம் தந்திகொடுத்ததோடல்லாமல், அவர்பேரில் எவ்வளவோ பழிகளையெல்லாம் சுமத்திக் கஷ்டப்படுத்தினார்கள். அதன் காரணமாக 4, 5 வருடங்கட்கு முன்னதாகக் கிடைக்கவேண்டிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவி வெகுகாலம் பொறுத்துத்தான் கிடைத்தது.

டாக்டர் டி. எம். நாயர் அக் காலத்திய தேசியவாதிகளில் மிகவும் முக்கியமான பிராமணரல்லாத தேசியவாதி. அவர் எவ்வளவோ பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருந்தவர். அவரையும் மயிலாப்பூர் பிராமணர்கள் ஓர் முனிசிபாலிட்டியில்கூட அவர் உட்காருவதைப் பொறுக்காமல், அவருக்கு விரோதமாகச் சூழ்ச்சிகளைச் செய்து அவரையும் உபத்திரவப் படுத்தினார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்துவதற்கு நமதுநாட்டில் ஏற்பட்ட முக்கியமான காரணங்களில் இவையிரண்டும் முதன்மையானதென்று ஓர் காங்கிரஸ் பிராமண பிரசிடெண்டே நம்மிடம் சொல்லியிருக்கிறார்.



தராசுக்கொடி

1916-ல் நிறுவப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (South Indian Leberal Federation) நீதிக்கட்சியின்—தராசுக்கொடி

இவ்விதமான கஷ்டங்களிலிருந்து பிராமணரல்லாதாரைக் காப்பாற்றுவதற்காக வேண்டி, முக்கிய காங்கிரஸ்வாதிகளாயிருந்த டாக்டர். நாயர் போன்ற பிராமணரல்லாத தலைவர்களால் ஜஸ்டிஸ் கட்சியென்று ஓர் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

அதை ஒழிப்பதற்காகப் பிராமணர்கள் சூழ்ச்சிசெய்து அதற்கு எதிரிடையாக பிராமணரல்லாதார் சிலரைப் பிடித்தே சென்னை மாகாணச் சங்கமென்ற ஒன்றை ஆரம்பிக்கச் செய்து, அதற்கு வேண்டிய பொருளத்தனையும் பெரும்பான்மையாக பிராமணரே உதவி, 'தேச பக்தன்' என்ற தமிழ்த் தினசரிப் பத்திரிகையையும் 'இந்தியன் பேட்ரியட்' என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகையையும்—ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்லுவதற்காகவே பிரச்சாரம் செய்யும்பொருட்டு—ஏற்பாடு செய்துகொடுத்து, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் செல்வாக்கு இல்லாமல் அடித்தார்கள். 'இந்தியன் பேட்ரியட்' பத்திரிகையை தங்கள் வேலையை முடித்துக்கொண்டவுடனே ஒழித்து விட்டார்கள். எஞ்சியிருந்த 'தேச பக்தன்' பத்திரிகையைத் தேசத்தில் அதற்குக் கொஞ்சம் செல்வாக்கு ஆரம்பித்தவுடனே, அதில் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் ஆசிரியரா யிருப்பதை ஒழிக்கவேண்டுமென்னும் முக்கிய கருத்துடன், அவருக்கு விரோதமாகச் சில பிராமணரல்லாதாரையே கிளப்பிவிட்டு, சில பிராமணர்களும் இரகசியமாக அப் பத்திரிகைக்கு விரோதமாகத் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்து, ஸ்ரீமான் முதலியாரவர்களே 'தேசபக்தனை' விட்டு ஓடிப்போகும்படியாகச் செய்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அப் பத்திரிகைக்குப் பிராமணர்களே ஆசிரியர்களும் எஜமானர்களுமாகி, மெதுவாக நழுவ விட்டுக்கொண்டார்கள். இதேமாதிரியே, சென்னை மாகாண சங்கத்திலும், பிராமணர் களின் சொற்படி நடந்துகொண்டிருந்த சிலர் ஆதிக்கம் பெற்றிருந்ததை ஆதாரமாக வைத்து, அவர்களைக் கொண்டே தங்கள்காரியமெல்லாம் முடிந்துபோனவுடன் மறையும்படி செய்துவிட்டார்கள்.

இவையெல்லாம் பழைய காங்கிரசின் கொள்கைப்படி ஏற்பட்ட திருவிளையாடல் களென்றாலும், ஒத்துழையாமை ஏற்பட்ட காலத்தில் பிராமணரல்லாத தேச பக்தர்களுக்குச் செய்த கொடுமைகளில் சிலவற்றைக் கீழே குறிக்கிறோம் :

ஒத்துழையாமை ஆரம்பிப்பதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்பாக சென்னையில் தேசிய வாதிகளின் சங்கமொன்று (Nationalists Association) என்று ஒன்றை ஆரம் பித்தார்கள். அதற்கு ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியார் அவர்களை அக்ராசனராக வைத்து உப அக்ராசனார் ஸ்தானத்துக்கு ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பெயரைப் பிரேரேபித்தவுடன், அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுக்க இஷ்டமில்லாதவர் களாகி, அதை அவர் அடையவிடாமல் செய்வதற்கு எவ்வளவோ பிரயத்தனங்களைப் பிராமணர்கள் செய்தார்கள். இதைப் பிராமணரல்லாதாரில் சிலர் தெரிந்து, அப்போதே கூச்சல் போட்டதின் பலனாக, அனேக உப அக்ராசனாதிபதிகளை ஏற்பாடு செய்து, அந்த ஸ்தானத்திற்கு ஒரு மதிப்பில்லாமல் அடிக்கப் பார்த்தார்கள். இதன் பலனாக, அதன் நிர்வாக சபைகளில் பிராமணரல்லாதாரை அதிகமாகப் போடும்படி நேரிட்டது. இதன் காரணமாக, தேசியவாதிகளின் சங்கமென்பதைக் குழந்தைப் பருவத்திலேயே கழுத்தைத் திருகிக் கொன்று போட்டார்கள். பிறகு, திருப்பூரில் கூடிய தமிழ்நாடு மாகாண கான்பரன் சுக்கு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களை அக்ராசனம் வகிக்கவேண்டுமென்று சிலர் பிரேரேபித்தார்கள். அதற்கு விரோதமாக 'இந்து', 'சுதேசமித்திரன்', 'சுயராஜ்யா' ஆகிய மூன்று பத்திரிகைகளும் அதுசமயம் நாயுடு அவர்கள் கான்பரன்சில் தலைமை வகிக்கத் தகுதியற்றவரென்று எழுதி வந்ததோடு, பிரேரேபித்தவருக்கும் இம் மாதிரி பிரேரேபித்தது தப்பிதமென்று சொல்லியும், அனேக ஜில்லாக்கள் பெரும்பான்மையாய் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவையே தெரிந்தெடுத்திருந்தும், ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாரவர்களைக் கொண்டும், ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் திருப்பூருக்குக்

சென்றதின் பலனாயும், உபசரணைக் கமிட்டியாரை வசப்படுத்தி, இவருடைய தேர்தலை ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கும்படி செய்துவிட்டார்கள். பிறகு, மாகாண காங்கிரஸ் கமிட்டியார் பிரவேசித்து, அவரை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு நிர்ப்பந்தப்படுத்தியதின்பேரில், சுயமரியாதையுள்ளவர் ஒப்புக் கொள்ள முடியாதவாறு உள்ள ஓர் தீர்மானத்தைப் போட்டு, அவரையே ஒப்புக்கொண்ட மாதிரியாய்த் தெரியப்படுத்தினார்கள். இத் தீர்மானத்தின் போக்கு யோக்கியதையற்றதாயிருந்தபடியால், ஸ்ரீமான் நாயுடு அதைத் தமக்கு வேண்டாமென்று நிராகரிக்கும்படியாயிற்று. பிறகு, திடீரென்று ஸ்ரீமான் எம். ஜி. வாசுதேவரய்யரவர்களைக் கொண்டு அம் மாநாட்டை நடத்திக்கொண்டார்கள்.

அதற்கு அடுத்தாற்போல், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அக்ராசனாதிபதியாகப் பெரும்பான்மையோரால் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட போது, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் ஸ்ரீமான் வ. வெ. சு. அய்யரவர்கள் 'நம்பிக்கையில்லை' என்னும் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார், இது இராஜீய நோக்கத்துடன் கொண்டுவந்த தீர்மானமல்லவென்றும், அது ஓர் பிராமணரல்லாதார் இந்த ஸ்தானம் பெறுவதை எப்படியாவது ஒழிக்க வேண்டுமென்கிற வகுப்புத் துவேஷத்தின் மேல் கொண்டு வந்ததென்றும் பொருள்பட உக்கிரமாய் அப்பொழுதே பேசியிருக்கிறார். இத் தீர்மானம் ஸ்ரீமான் வ. வெ. சு. அய்யர் கொண்டு வந்ததின் பலனாய் சில நாட்களுக்குள் ஸ்ரீமான் என். சீனிவாசய்யங்காரால் அய்யரவர்களுக்கு குருகுலத்திற்கென்று ரூ. 500 நன்கொடை அளிக்கப்பட்டது.

இவ்வருஷம் காஞ்சீபுரத்தில் நடக்கப்போகும் தமிழ் மாகாண மாநாட்டிற்கு ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரை சில ஜில்லா கமிட்டிகள் தெரிந்தெடுத்திருந்தும், அதை வெளியாருக்குத் தெரிவிக்காமல் இரகசியமாய் வைத்துக்கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆகும்படி இரகசியப் பிரச்சாரங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னெல்லாம் யார் யாரை எந்தெந்த ஜில்லாக்கள் தெரிந்தெடுத்தன என்பது பத்திரிகைகளில் வருவது வழக்கம். இப்பொழுது, உபசரணைக் கமிட்டியாரும் தெரிவிக்காமல் பத்திரிகைக்காரர்களும் தெரிவிக்காமல், இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. தவிர, கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டி, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தமது காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியை இராஜிநாமா செய்யவேண்டுமென்று தீர்மானமொன்று செய்திருக்கிறது. சென்னை காங்கிரஸ் கமிட்டி, ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கரையும், சுரேந்திரநாத் ஆரியாவையும் கண்டித்து ஓர் தீர்மானம் செய்திருக்கிறது. நன்னிலம் பொதுக்கூட்டத்தில், ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், கலியாணசுந்தர முதலியார், ஆரியா ஆகிய இவர்களைக் காங்கிரசினின்று வெளியாக்க வேண்டுமென ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பேசியிருக்கிறார்.

சட்டசபையில் காங்கிரஸ் பிராமண மெம்பர்களுடைய வேலை, பிராமணரல்லாதருடைய ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்பதும், பிராமணரல்லாதாருக்கு எதிரிடையாய் நிற்க வேண்டுமென்பதுமேயென்று சட்டசபையில் எலெக்ஷன் ஆனவுடனேயே 'சுதேசமித்திரன்' பத்திரிகை எழுதியுமிருக்கிறது. சட்டசபையில் ஒரு பிராமணர், எங்களுக்கு உத்தியோகம் கொடுக்காவிட்டால் ஒத்துழையாமைக் கட்சியில் சேர்ந்துவிடுவோமென சர்க்காரை மிரட்டியிருக்கிறார். அன்றி, வைக்கம் சத்தியாக்கிரகத்தின் மூலமாய் அடைந்த தண்டனையிலிருந்து ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் விடுதலையாகி தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் மறுபடியும் வைக்கம் போகாமலிருப்பதற்காக வேண்டி, ஓர் பிராமண மெம்பரையும், ஓர் பிராமண அட்வகேட் ஜெனரலையும் கொண்ட கவர்மெண்ட், எட்டு ஒன்பது மாதங்களுக்கு முன்னால் பேசிய பழைய குப்பைகளை ஆதாரமாக வைத்து, இராஜதுரோக முதலிய கேஸ் எடுத்து, அதன் மூலமாகக் கைதியாக்கிக் கொண்டுபோனார்கள். பிராமணர்களின்

பொல்லாத வேளையாய், ஓர் பிராமணரல்லாத மாஜிஸ்ட்ரேட்டிடம் அந்தக் கேஸ் நடந்த படியால், கேஸ் ஒன்றும் ருஜுவாகவில்லையென்றும், அவர் கேசை முடித்துத் தண்டிக் காமல் திருப்பி ஓட்டிவிட்டார். இவ்வளவுமல்லாமல், 'பிராமணரல்லாத மந்திரிகள், பெரிய உத்தியோகஸ்தர்கள் இலஞ்சம் வாங்குகிறார்கள். இலஞ்சம் வாங்குகிறவர்கள் அது செய் கிறார்கள், இது செய்கிறார்கள்' என்று கிராமம் கிராமமாய், ஊர் ஊராய்ப் பிரச்சாரம் செய் வதற்குப் பணம் செலவுசெய்து, ஆட்களை ஏற்படுத்திப் பிரச்சாரம் செய்து, அவர்கள் பேரில் தப்பபிப்பிராயத்தைக் கற்பித்து வருகிறார்கள்.

குருகுலம் சம்பந்தமாய் நடந்த மீட்டிங்குகளில் பிராமணர்கள் கல்லெடுத்துப் போட் டார்கள். சென்னை கார்ப்பரேஷன் தேர்தல்களில், ஸ்ரீமான் ஆரியாவை ஆட்களைவிட்டு அடித்தார்கள். பொதுவாய் ஏழைகளுக்கும், முக்கியமாய் பிராமணரல்லாதார்களுக்கும் அவசியமானதாகிய மதுவிலக்கு, தீண்டாமை முதலிய திட்டங்களைக் காங்கிரசை விட்டு ஓட்டிவிட்டார்கள். போதாக்குறைக்குக் கதரும் காங்கிரசில் இருக்கக் கூடாதென்று பூனா பிராமணப் பத்திரிகைகள் இப்பொழுதே எழுத ஆரம்பித்துவிட்டன. இதைப்பற்றிச் சென்ற வாரமே 'குடி அரசில்' ஜோசியம் கூறப்பட்டிருக்கிறது.

பிராமணரல்லாதார் தெய்வத்தின்பேராலும் க்ஷேத்திரங்களின்பேராலும் காணிக்கை, வேண்டுதல் மூலமாகக் கொடுக்கின்ற பணம் ஒழுங்கான வழியில் செலவழிப்பதற்காக ஏற்பட்ட தேவஸ்தான ஆக்ட்(Act)டானது, பிராமணர்களுடைய எவ்வளவோ எதிர்ப்புக் களுக்கும் கண்டனங்களுக்கும் தப்பி நிறைவேறிவிட்டபடியால், இப்போது அந்த ஆக்ட்டே செல்லாதென்றும், அதை எடுத்துவிட வேண்டுமென்றும், அதை இப்போது அமுலில் லாமல் சஸ்பெண்டு செய்வதற்கு இன்ஜங்ஷன் தடை கோரி, அய்க்கோர்ட்டில் மகந்துக்கள் பேரால் வியாஜ்யம் தொடுத்து இருக்கின்றார்கள். இதற்கு வக்கீல்களோ, ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார், டி. ரங்காச்சாரியார், டி. இராமச்சந்திர அய்யர்—மகந்து பக்கமும் இதற்கு எதிர் வக்கீலாய் ஏற்பட்டவரோ அட்வகேட் ஜெனரலான ஸ்ரீமான் டி. ஆர். வெங் கட்டரமண சாஸ்திரிகள் என்ற பிராமணருமே. இந்த ஆக்ட் ஒழிய வேண்டுமென அய்க்கோர்ட்டில் பிராது தொடுத்திருந்தாலும், இந்த ஆக்ட்டின் மூலமாய் ஏற்பட்ட உத்தி யோகங்களெல்லாம் தங்களுக்கே கிடைக்க வேண்டுமென்று, தேவஸ்தான போர்டு ஆபீசையும் மந்திரி வீடுகளையும் பிராமணர்கள் சுற்றிக்கொண்டு வருகிறார்கள்.

இவையெல்லாமிருக்க, மகாத்மாவையே ஒழிப்பதற்காக, 'பிராமணன்' என்கின்ற ஓர் பத்திரிகையையும் சங்கராச்சாரியார்கள், மகந்துக்கள் முதலிய பிராமண சிரேஷ்டர்க ளென்போரின் ஆதரவில் ஆரம்பித்திருக்கிறார்கள். மற்றொரு பக்கம் மகாத்மாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு பதவிகளையும் சட்டசபை ஸ்தாபனங்களையும் பெறுவதற்கு, பிராமணரல்லாதாரை ஏமாற்றியும் அலைந்துகொண்டுமிருக்கிறார்கள். இதற்குச் சில பிராமணரல்லாதாரையும் மிரட்டி சுயாதீனப் படுத்திக்கொண்டார்கள்.

தினசரிப் பத்திரிகைகள் தங்கள் கைகளில் இருக்கிற காரணங்களால், பாமர ஜனங் களை ஏமாற்றித் தங்கள் வசப்படுத்திக் கொள்வதோடு, சில முக்கியமான பிராமணரல்லா தாரைத் தலையெடுக்கவொட்டாதபடி பத்திரிகைகளில் ஊர், பெயர் தெரியாத பிராமண ரல்லாதாரின் பொய்ப் பெயர்களையிட்டுத் தூற்றுதலான வியாசங்களை எழுதுவதும்; பிராமண வக்கீல்களிடம் (அப்ரெண்டிஸ்)—அதாவது வேலை படிக்கும் பிராமணரல்லாத வக்கீல்களான வாலிபர்களின் கையெழுத்தைப் போடச்செய்து அவர்கள் பெயரால் பிராமண ரல்லாதாரை வைது பத்திரிகைகளில் எழுதுவதும்; வயிற்றுக்கில்லாதவர்களினுடையவும், பணத்தாசை பிடித்தவர்களினுடையவும் தேச பக்தியையும் விலைக்கு வாங்கிக்கொண்டு, அவைகளைப் பிராமணரல்லாதாருக்கு விரோதமாக வியாசப்படுத்தி பணச் செருக்கால் செய்து வருவதும்,—சென்னைத் தேர்தல்களிலும் மற்ற தேர்தல்களிலும் தெரிந்து போயிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்குள் கட்சி பிரதி கட்சிகளை உண்டாக்கி, இவர்களைக் கோர்ட்டுக்குச் செல்லும்படி செய்வதும் சில பிராமணர்களேயாகும்.

பிராமணரல்லாதாருக்குத் தேசியப் பிராமணர்கள் செய்துள்ள கொடுமைகள் இவ்வளவுதானென வரையறுத்துவிட முடியாது. அவர்கள் செய்ததையும், இன்னும் செய்யப்போவதுமான காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை சமயம் நேரும்போது வெளியிட நாம் பின்வாங்கப் போவதில்லை. இவ்வளவெல்லாமிருக்கும்போது, சென்னை காங்கிரஸ் கமிட்டியார், ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கரவர்கள் மீதும், ஆரியா அவர்கள் மீதும் கண்டனத் தீர்மானம் செய்திருப்பதை நாம் இலட்சியம் செய்யவேண்டியதில்லை என எண்ணுகிறோம்.

[தலையங்கம்—'குடி அரசு' 18-10-1925]

2. தமிழர் மாநாடுகள்

காஞ்சிபுரத்தில் 31-வது இராஜீய மாநாடு நாளது நவம்பர் மாதம் 21, 22 தேதிகளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சென்னை 'நவசக்தி' ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்ராசனத்தின்கீழ் கூடும்.

அது சமயம் சர்வகட்சியார்களுமடங்கிய பிராமணரல்லாதார் மாநாடு ஒன்றும் கூடும்.

பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் கரிசனமுள்ள தமிழ்நாட்டுப் பிராமணரல்லாதார் அனைவரும் வந்திருந்து, தங்களது முன்னேற்றத்திற்கான ஒரு திட்டத்தைக் காணவும், அதைச் சரிவர அமுலுக்குக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது விஷயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் இராஜீய அபிப்பிராய பேதங் காரணமாகவாவது, சொந்த அசவுகரியங் காரணமாகவாவது அலட்சியமாய் இருந்துவிடாமல் கண்டிப்பாய் வரவேண்டுமாய் மறுபடியும் வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதாருக்கு மிகவும் முக்கியமானதொரு கடனாகும். ஏனெனில், தீண்டாதார்களின் முன்னேற்றந்தான் பிராமணரல்லாதார்களின் முன்னேற்றமாகும். தீண்டாதார்களின் துன்பந்தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் பிராமணரல்லாதார் கடைத்தேற முடியும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் நாடு சுயராஜ்யமடையும். ஆதலால், தீண்டாமை விலக்கில் கவலையுள்ளவர்களும், தீண்டாதாரென்று சொல்லப்படுபவரும் அவசியம் காஞ்சிபுரத்திற்கு வந்து, அதற்கென்று ஓர் மாநாடு கூட்டி, காரியத்தில் பலன் தரத்தக்க திட்டங்களைக் காணவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[அறிக்கை—'குடி அரசு' 15-11-1925]

3. தமிழ்த் தினசரிப் பத்திரிக்கை

இப்போது தமிழ்நாட்டில் பெரும்பாலாராகிய ஆதித் தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமாயும் அவசரமாயும் வேண்டியது பொதுநோக்குடைய ஒரு தமிழ்த் தினசரிப் பத்திரிக்கையேயாகும். தமிழ் நாட்டில் தற்காலம் உலவிவரும் தமிழ்த் தினசரிப் பத்திரிக்கைகள் மூன்று. அதாவது 'சுதேசமித்திரன்', 'திராவிடன்', 'சுயராஜ்யா' ஆகிய இவைகளே. இவற்றில் 'சுதேசமித்திரன்' முதலில் தோன்றியது. இதன் முக்கிய கொள்கை, பழைய காங்கிரஸ் கொள்கைகளைப்போல்—அரசாங்கத்தினிடமிருந்து பதவிகளும் உத்தியோகமும் மக்கள் அடையக் கிளர்ச்சி செய்வதாயிருந்தது. இதன்படி, பதவி

களும் உத்தியோகங்களும் கிடைக்கக் கிடைக்க அவையெல்லாம் தங்கள் சமூகமாகிய பிராமணர்களுக்கே கிடைக்கும்படியாகவும், பிராமணர்கள் தாம் உயர்ந்தவர்கள் அவர்கள் தாம் அறிவாளிகள் என்றும், மற்றும் பிராமணமதம் ஆக்கம்பெறவும் உழைத்து வந்தது. இம் மட்டோடல்லாமல், வரவர பிராமணரல்லாதாருக்கு உயர்ந்த உத்தியோகங்களும் பதவிகளும் அந்தஸ்துகளும் கீர்த்திகளும் உண்டாவதைக் கூற்றுவன்போல் நின்று தடுத்துக்கொண்டேயும் வந்தது.

இச் சூழ்ச்சி வெகுகாலமாய் பிராமணரல்லாதாருக்குத் தெரியாமல் இருந்துவிட்டதால், சகல பதவிகளும் அரசாங்க உத்தியோகங்களும் அந்தஸ்தும் கீர்த்தியும் பிராமணர்களுக்கே கிடைத்து, அரசாங்கமே பிராமணமயமாய்ப் போய்விட்டதால், பிராமணரல்லாதார் நிலை தாழ்த்தப்பட்டது. அப்போது படித்திருந்த பிராமணரல்லாதார் சிலர், தாங்கள் எவ்வளவு கெட்டிக்காரராயும் யோக்கியர்களாயும் புத்திசாலிகளாயும் தேசபக்தி, பரோபகாரம் முதலிய அருங்குணங்கள் நிறைந்தவர்களாயும் இருந்தும், தாங்கள் ஏன் தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்றோம் என்று யோசனை செய்துபார்த்ததில், இப் பிராமணப் பத்திரிக்கைகளும் கட்டுப்பாடான பிராமண சூழ்ச்சிகளுமே இதற்குக் காரணம் என்று கண்டுபிடித்து, தாங்களும் மற்றவர்களைப்போல முன்னேறுவதற்குத் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றும், தங்களுக்கும் பிரச்சாரத்திற்கு ஒரு பத்திரிக்கை வேண்டும் என்றும் கருதி, ஒரு சங்கத்தையும் 'திராவிடன்', 'ஜஸ்டிஸ்' என்கிற பத்திரிக்கைகளையும் ஏற்படுத்தினார்கள். இப் பத்திரிக்கைகளும் சங்கமும், சகலபோக்கியங்களையும் தாங்களே ஏகபோகமாய் அனுபவித்துவந்த 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிக்கைக்கும், அதன் கூட்டத்தாருக்கும் இவை போட்டியாய்க் கண்டதால், இவற்றைச் செல்வாக்கில்லாமலடித்து ஒழிக்கப் பல தந்திரங்களும் செய்ததினால், இத் தந்திரங்களுக்குத் தாக்குப்பிடிக்க 'சுதேசமித்திரன்' போலவும் அதன் கூட்டத்தார் போலவும், 'திராவிடனும்' அதன் கூட்டத்தாரும் அரசாங்கத்தைத் தழுவநேரிட்டது. என்ன செய்தும் 'சுதேசமித்திரன்' கூட்டத்திற்குள்ள தந்திரசக்தி 'திராவிடன்' கூட்டத்திற்கில்லாததாலும், பிராமணரல்லாதாரில் சிலருக்குத் தங்கள் தனிப்பட்ட சுயநலத்திற்கும் கீர்த்திக்கும் 'சுதேசமித்திரன்' கூட்டம் இடங்கொடுத்ததாலும், இவர்களும் அதோடு சேர்ந்து எதிர்ப் பிரசாரம் செய்ததாலும், 'திராவிடனு'க்கு பாமரஜனங்கள் உண்மையை உணரும்படி செய்யவும், பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்குப் பெறவும் முடியாமல் போய்விட்டதால், இது தக்க பலனைத் தென்னிந்திய மக்களுக்கு அளிக்கக்கூடியதாய் இல்லாமலிருக்கிறது. இதுதான் இப்படி என்றாலோ, மகாத்மா ஏழை மக்கள் விடுதலையின் பொருட்டுக் காங்கிரசில் சேர்ந்து ஒத்துழையாமை என்னும் கொள்கையை உண்டாக்கி, நிர்மாணத்திட்டம் எனச் சில திட்டங்களைக்கண்டு வேலைசெய்த காலத்தில், ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டமும் தங்கள் கூட்டத்தாருக்கும் சுயநலப் புலிகளுக்கும் கஷ்டத்தைக் கொடுப்பதாய் இருந்ததால், ஒத்துழையாமையையும் நிர்மாணத்திட்டத்தையும் மகாத்மா செல்வாக்கையும் அழிக்க 'சுதேசமித்திரன்' பிரச்சாரம் செய்துவந்த காலத்தில், ஒத்துழையாமையிலும் நிர்மாணத்திட்டத்திலும் மகாத்மாவிடமும் ஈடுபட்டிருந்த சிலர் 'சுதேசமித்திர'னால் தேசத்திற்கு ஏற்படும் கெடுதியைத் தடுக்க ஒரு தினசரி ஏற்படுத்த எண்ணினார்கள். அதுசமயம் ஆங்கில 'சுயராஜ்ய' பத்திரிக்கை மக்கள் நம்பக்கூடியதுபோல் நடந்துவந்ததால், பொதுமக்கள் பணமாகிய 10,000 ரூபாயைத் தூக்கி அதன் முக்கியஸ்தரான ஸ்ரீமான் பிரகாசத்தினிடம் கொடுத்து, தினசரி ஆரம்பிக்கச் சொன்னார்கள். கடைசியாய், 'சுதேசமித்திரன்' திட்டமும் 'சுயராஜ்யா' திட்டமும் வித்தியாசமற்றதாகி இரண்டும் ஒன்றுபடக் கலந்துவிட்டதால்—புதுத் திருடனைவிட பழைய திருடனே மேல் என்னும் பழமொழிபோல்—இரண்டும் ஒன்று சேர்ந்துகொண்டு, பிராமணர்கள் ஆக்கம் பெறவும், பிராமணரல்லாதாரின் அழிவுக்கும் ஒத்துவேலை செய்கின்றன. இதில் ஒரு விசேஷம், 'சுதேசமித்திரன்' ஒருவிதத்தில் 'சுயராஜ்யா'வைவிட யோக்கியன் என்றே சொல்லலாம்.

எப்படி என்றால், 'சுதேசமித்திரன்'தான் ஒரு பிராமணனையே தன் ஆசிரியராகக் கொண்டிருக்கிறேன் என்று உண்மையே பேசுகிறான். 'சுயராஜ்யா'வோ இரண்டு பிராமணரல்லாதாரை ஆசிரியராய் வைத்திருப்பதாய்ப் பொய் சொல்லிக்கொண்டு, மக்களை ஏமாற்றித் தனது அட்டூழியங்களை நடத்துகிறது. பத்திரிக்கைகள் யோக்கியமாய் நடந்திருந்தால், தென்னிந்தியாவில் ஒத்துழையாமை ஒழிந்து, சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சி நடந்தேருமா?

இந்நிலையில், தென்னிந்தியாவுக்கு—தென்னிந்தியர்களுக்கு ஒரு நம்பிக்கையும் யோக்கியமுமுள்ள தமிழ்த் தினசரிப் பத்திரிக்கை வேண்டுமா, வேண்டாமா என்று யோசிக்கவேண்டும். வேண்டுமென்றால், சுலபத்தில் நடத்திவிடமுடியாது. 'சுதேசமித்திர'னின் போட்டியையும் கெடுதியையும் சமாளிப்பது லேசான காரியமல்ல. அதற்குப் பிராமணரல்லாதார் பொருள்களும், பிராமணரல்லாதார் சந்தாதாரர்களும் பிராமணரல்லாத சுயநலப் புலிகள் ஆதரவும், சாராய விற்பனை முதலிய விளம்பர வரும்படிகளும் மலிந்து கிடக்கிறது. ஆதலால், நாம் ஆரம்பிப்பதானால் தக்க மூலதனத்துடனும் தக்க ஏற்பாட்டுடனும்தான் ஆரம்பிக்கவேண்டும். குறைந்தது ஒரு லட்ச ரூபாய் மூலதனம் வேண்டும்; ஒரு வருஷத்தில் 10,000 சந்தாதாரர்கள் சேரவேண்டும். 50,000 ரூபாயாவது இல்லாமல் ஆரம்பிப்பது நிலைபெறத்தக்கதாகாது. குறைந்த அளவு 5 வருஷ காலத்துக்குக் குறையாமல் பத்திரிக்கை நடத்தக்கூடிய முஸ்தீபுகளைக் கையில் வைத்துக் கொண்டு ஆரம்பித்தாலல்லாது எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. ஆதலால், இவைகளைப்பற்றிச் சில கனவான்களோடு யோசனை செய்து பார்த்ததில், அடியிற்கண்ட விஷயங்கள் புலப்பட்டன. அதாவது, பங்கு 1-க்கு 5 ரூபாய் வீதம் 20,000 பங்கு கொண்ட ஒரு லட்ச ரூபாய் மூலதனம் வேண்டும். 50,000 வசூலித்த பிறகுதான் பத்திரிக்கை ஆரம்பிக்கவேண்டும். தமிழ் ஜில்லாக்களாகிய 12 ஜில்லாக்களும் ஜில்லா ஒன்றுக்கு 5000 ரூபாய் வீதம் முன் பணம் வசூலித்துக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் 1000 ரூபாய் கொடுக்கக்கூடிய இரண்டுபேர்கள் அவசியம் முன்வருவதோடு, பாக்கி மூவாயிரம் ரூபாயையும் வசூலித்துக் கொடுக்க அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆயிரம் கொடுப்பவர்களும், ஊதியமில்லாமல் உழைக்க வருபவர்களும், நிர்வாகிகளாக இருக்கவேண்டும்.

பத்திரிக்கையின் கொள்கை, பிராமணரல்லாதாருடையவும் தீண்டாதாருடையவும், சமத்துவமும் முன்னேற்றமுமே முக்கியமானதாய் இருக்கவேண்டும். பத்திரிக்கையின் நேரான நிர்வாகமும், பதிப்பும் யோக்கியமான ஒரு சிறு போர்டினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இப்போர்டிலுள்ளவர்கள் பத்திரிக்கை நிர்வாகம், பதிப்பு இவைகளைத்தவிர வேறு எந்தப் பொதுக் காரியங்களிலும் சம்பந்தப்படாதவர்களா யிருக்கவேண்டும். குறைந்தது 5 வருஷத்திற்கு ஒரு தரம் இந்த போர்டை புதுப்பிக்கத் தக்கதாய் இருக்க வேண்டும். இக் கொள்கைக்கு இதுவரை சில செல்வாக்குள்ள கனவான்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், இதைப்பற்றித் தமிழ்மக்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டாகலாம் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

[தலையங்கம்—'குடி அரசு' 22-11-1925]

4. நமது கடமை

சகோதரிகளே, சகோதரர்களே!

நான் இந்த ஊரில் தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாடு நடந்த பிறகு இன்றுதான் முதல் தடவையாக வந்திருக்கிறேன். இந்த காஞ்சீபுரம் நமது சரித்திர புராண காலங்களில் எப்படி முக்கியமானதோ, அதுபோலவே தற்கால அரசியல் சமூகவியல் முதலிய இயக்கங்களின் சரித்திரத்திற்கும் முக்கியமானதாக இருந்துவருகிறது.

ஸ்ரீமதி பெசன்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல் இயக்கம்' தேசத்தில் செல்லுபடி அற்றதாக ஏற்படுவதற்கும், பெசன்ட் அம்மையாரின் அரசியல் வாழ்வில் மாற்றம் ஏற்படவும் இந்தக் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமதி சரோஜினி அம்மாள் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிய சென்னை மாகாண கான்பரன்சில்தான் அஸ்திவாரம் போடப்பட்டது. அதுபோலவே, காங்கிரஸ் இயக்கம் தேசத்தில் செல்லுபடி அற்றதாகவும் சுயராஜ்யக் கட்சிக்கு உளை மாந்தை வரவும், பார்ப்பனர்களின் சூழ்ச்சி வெளியாகவும் இந்தக் காஞ்சீபுரத்தில் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய தமிழ்நாடு மகாநாட்டில்தான் அஸ்திவாரம் போடப்பட்டது. காஞ்சீபுரம் மகாநாட்டிற்கு அப்புறம் தமிழ்நாட்டில் மாத்திரம் அல்லாமல், இந்திய தேசத்திலேயே அரசியலிலும் சமூக இயல்களிலும் பெரிய மாறுதல்களும் ஏற்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. பொதுவாகப் பார்க்கும் பொழுது, ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடந்த மகாநாட்டுச் சம்பவங்கள் நன்மைக்கு ஏற்பட்டது என்றேதான் சொல்லவேண்டும். அப்பொழுது நடந்த சம்பவங்கள் அம் மாதிரி நடந்திருக்கவில்லையானால், நாம் எவ்வளவோ ஏமாந்துபோய் இருப்போம். அச் சம்பவமே நம் எல்லோரையும் கண்விழிக்கச் செய்தது. தவிர, 'தற்கால நிலைமையும் நமது கடமையும்' என்பது பார்ப்பனரல்லாதவர்களின் தற்கால நிலைமையும், பார்ப்பனரல்லாதார்களாகிய நமது கடமையும் என்பதுதான் இன்றைய விஷயம் ஆதலால், காஞ்சீபுரம் மகாநாட்டிலிருந்து நமது நிலைமையும் நமது கடமையும் என்ன என்பதை நீங்கள் நன்றாய் அறிந்திருப்பீர்கள். அம் மகாநாட்டில் அம் மாதிரி நடைபெறாமலிருந்தால் காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சி, சுயராஜ்யம், உரிமை ஆகிய வார்த்தைகள் நம்மை ஏமாற்றி, நாம் என்றென்றும் தலையெடுக்க முடியாமல் நமது பார்ப்பனர்களால் அமுக்கப்பட்டுக்கிடக்க நேரிட்டு இருக்கும்.

இந் நாட்டின் சுக துக்கத்திற்குப் பொறுப்பானவர்களும் பெரும்பான்மையானவர்களுமான நாம், காங்கிரஸ் பெயரால் நமது பார்ப்பனர்களாலும் அவர்களது அடிமைப் பிரச்சாரகர்களாலும் ஏமாந்து நமது நலனைக் கெடுத்துக்கொள்வதோடு அல்லாமல், நமது நன்மைக் கென்று ஏற்பட்டதான பிராமணரல்லாதார் இயக்கமாகிய ஜஸ்டிஸ் கட்சியையும் ஒடுக்கி இருப்பார்கள். தற்கால காங்கிரஸ் நமக்கு எவ்வளவு தூரம் கெடுதி செய்திருக்கிறது என்பதும், அதனால் நமக்கு எந்தக் காலத்திலும் நன்மை இல்லாததோடு நமது சமூகத்திற்கே அது பெரிய ஆபத்தாய் இருக்கிறதென்பதும் நான் சொல்லாமலே நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். இந்தக் காங்கிரஸின் மூலம் நமக்காவது நமது நாட்டிற்காவது அனுகூலமான திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர் அல்லாதாரில் சிலர் காங்கிரஸில் சேர்ந்ததும் அதற்காக உழைத்ததும் கஷ்டப்பட்டதும் நஷ்டப்பட்டதும் சிறை சென்றதும் எதை உத்தேசித்து என்றால், மகாத்மா திட்டங்கள் ஆகிய கதரும், தீண்டாமையும், ஒற்றுமையும், மதுவிலக்கும் மிகுதியும் பார்ப்பனரல்லதாராகிய நமது சமூகத்திற்கே நன்மை விளைவிப்பதும், தரித்திரத்தை ஒழிப்பதும், சுயமரியாதையையும், சமத்துவத்தையும் அளிப்பதுமான வழிகளுக்கு அனுகூலமாய் இருந்ததால்தான் நாம் அதில் முழுமனதோடு இறங்கி உழைத்து வந்தோம். இத் திட்டங்கள் நிறைவேறினால் நமது பார்ப்பனர்கள் வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடுமென்று நினைத்து, அவர்கள் இவற்றைக் காங்கிரசிலிருந்து விலக்கப் பிரயத்தனப்பட்டு, அதில் வெற்றியுமடைந்து, இப்போது காங்கிரசையே தங்கள் ஒரு வகுப்புக்கு மாத்திரம் அனுகூலமாகவும் மற்ற வகுப்பாருக்கு ஆபத்து உண்டாக்கத்தக்க மாதிரியாகவும் அமைத்துக்கொண்டார்கள். இப்போதைய காங்கிரசில் நிர்மாணத்திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள்.

கதரை அடியோடு காங்கிரசிலிருந்து ஒழித்துவிட்டதோடு, அதை ஒரு கண்ணியக் குறைவாகவும் கருதும்படி செய்துவிட்டார்கள். அதாவது, காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக் கேட்கும்போதுமாத்திரம் கதரைக் கட்டிக்கொள்ளவேண்டிய மாதிரியில் தீர்மானம் செய்

திருக்கிறார்கள். இதனால், உண்மையிலேயே ஒருவன் கதரிடம் அபிமானம் கொண்டு கட்டி இருந்தாலும், பொதுஜனங்கள் அவனைப் பார்த்தால் சந்தேகிக்கப்படும்படியாகவும், ‘இவன் திருட்டு ஆசாமி, பொதுஜனங்களை ஏமாற்றி ஓட்டுவாங்க கதர்கட்டி இருக்கிறான்’ என்று பொதுஜனங்கள் நினைக்கும்படியும் செய்துவிட்டார்கள். இதனால், எவ்வித அவமானத்திற்கும் கட்டுப்படத் தைரியமிருக்கிறவர்தான் கதர் கட்டிக்கொள்ள முடிகிறது. இதனாலேயே, தன்மானத்தில் இலட்சியமுள்ளவர்கள் கதர் கட்டப் பயப்படுகிறார்கள். தீண்டாமை விஷயமாவது காங்கிரசில் இருக்கிறதா என்று பாருங்கள். தீண்டாதவர்களையும் நம்மையும் கண்ணில் பார்ப்பதற்கே நமது பார்ப்பனர்கள் சம்மதிப்பதில்லை. இதை குருகுல விவாதத்தில் நன்றாய்த் தெரிந்திருப்பீர்கள். இரண்டாவது, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மானம் செய்தவுடன், ஸ்ரீமான்கள் சி. இராஜகோபாலாச்சாரியார், இராஜன், சாஸ்திரி போன்றவர்களே காங்கிரஸ் கமிட்டியினின்றும் இராஜிநாமா செய்துவிட்டார்கள் என்றால், மற்ற பார்ப்பனர்களைப்பற்றி நினைக்கவும் வேண்டுமா? ஸ்ரீனிவாசய்யங்கார் பேசும்போதெல்லாம் ‘அரசியலில் தீண்டாமையைக் கலக்காதீர்கள்’ என்று பேசி வருகிறார். ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார், ‘பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதைப் பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒருமாதம் பட்டினி இருப்பேன்’ என்று சொல்லிக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஓடிப்போய்விட்டார். இதிலிருந்து காங்கிரசில் தீண்டாமை விலக்கு இருக்கிறதா என்று பாருங்கள்.

மதுவிலக்காவது காங்கிரசிலிருக்கிறதா என்றால், ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் பாமர ஜனங்களை ஏமாற்றிப் பார்ப்பனருக்கு ஓட்டுவாங்கிக்கொடுக்கக் கருதியாத்திரம் இவ்வருஷம், ‘மதுவிலக்குச்செய்ய சம்மதித்தவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்’ என்றார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சட்டசபையில் மதுவிலக்குச் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். பிறகும், ஸ்ரீமான் ஆச்சாரியார் மதுவிலக்கு என்று சொல்லிக்கொண்டு, மது உற்பத்தி செய்பவர்களுக்கு ஓட்டுவாங்கிக் கொடுக்கப் பிரச்சாரம் செய்தார். இப்பவும் காங்கிரசிலுள்ள தலைவர்களில் 100-க்கு 90 பேர்களில் மது உற்பத்தி செய்கிறவர்கள் சிலரும், விற்பவர்கள் சிலரும், அருந்துபவர்கள் சிலருமாகவே இருக்கிறார்கள். இன்றும் நாளையும் காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் சாராயம், பிராந்தி விற்பனையில் பணம் சம்பாதித்துக்கொண்டுதான் வருகிறார். இன்னமும் சில சுயராஜ்ய பார்ப்பனர் கள்ளுக்கு மரம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒற்றுமைக்காகவாவது ஏதாவது திட்டம் காங்கிரசில் இருக்கிறதா என்றால், அதுவும் ஒன்றுமில்லை. காங்கிரசிலிருந்து ‘ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர், வரதாராஜுலு, கலியாணசுந்தர முதலியார், ஆரியா, சக்கரை, தண்டபாணி பிள்ளை முதலிய பார்ப்பனரல்லாதார்கள் போய் விட்டதால் காங்கிரஸ் பரிசுத்தமாய்விட்டது’ என்கிறார்கள் நமது பார்ப்பனர்கள். அல்லாமலும், ஸ்ரீமான்கள் ஆரியாவையும், ஈ. வெ. இராமசாமி நாயக்கரையும் ஜெயிலில் பிடித்துப் போடவேண்டுமென்று கவர்னரையும் பார்ப்பன அதிகாரிகளையும் கெஞ்சுகிறார்கள்; விண்ணப்பமும் போட்டிருக்கிறார்கள் நமது பார்ப்பனத் தலைவர்கள். இந்து–முஸ்லிம் ஒற்றுமையாவது இருக்கிறதா என்று பார்த்தால், ‘முகமதியர்களுக்கு சுயராஜ்யம் கொடுக்கக் கூடாது’ என்று காங்கிரசின் பேராலேயே இந்திய சட்டசபையில் ஆட்சேபித்து சர்க்காரோடு சேர்ந்து ஓட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒருவரையொருவர் சந்தேகிக்காமலிருக்கவும், ஒருவரையொருவர் மோசம் செய்யாமலிருக்கவும், எல்லோரும் சம உரிமை அடையவும் தக்க பந்தோபஸ்தான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால், அதைப்பற்றிக் காங்கிரசுக்குள்ளாகவே பேசக்கூடாது என்று பார்ப்பனரல்லாதார்களைக் கொண்டே சொல்லிவிட்டார்கள். ஆனால், ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபோது அதைக் கொல்ல எண்ணி, பார்ப்பனரல்லாதாரான ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார் இவர்களை வசப்படுத்திக் கொண்டு ‘தேசீய பார்ப்பனரல்லதார் சங்கம்’ என்பதாக ஒன்றை ஏற்படுத்தச் செய்து, அதன்மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும்

கேட்டுவிட்டு, பார்ப்பனரல்லாதாருக்குள் கட்சி ஏற்பட்டதும், இப்போது பார்ப்பனரல்லாதாருக்கே பணங்கொடுத்து அதை எதிர்க்கச் சொல்வதோடு, தாங்களும் அனேக சூழ்ச்சி செய்து வருகிறார்கள்.

ஆகிய இக் காரணங்களால், காங்கிரசில் தேசத்துக்கு அனுகூலமான திட்டம் ஏதாவது கொஞ்சமாவது இருக்கிறதா என்று நீங்கள் நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்களுக்கு ஆதிக்கம் வரவும் உத்தியோகம் வரவும், பார்ப்பனரல்லாதார் தாழ்த்தப்படவும் உத்தியோகங்களிலிருந்து விலக்கப்படவும் நாம் காங்கிரசில் சேரவேண்டுமா? காங்கிரஸ் தேசத்திற்கு அனுகூலமாக இருந்தால், காந்தியும் லாலா லஜபதிராயும் ஏன் காங்கிரசுக்கு உழைக்காமல் ஒதுங்கி இருக்கிறார்கள்? ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், ஆரியா, தண்டபாணி பிள்ளை முதலியவர்களும் ஒதுங்கி இருப்பதோடு, என்போன்றவர்கள் இம் மாதிரி, காங்கிரசுக்கு எதிர்ப் பிரச்சாரமும் ஏன் செய்கிறோம்? இவற்றை நன்றாய் யோசித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் உங்களை ஏமாற்றவே காங்கிரஸ் என்ற ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள். 'சம உரிமையும், வகுப்பு சுதந்திரமும், சுயமரியாதையும் இல்லாத நாட்டிற்கு (காங்கிரஸ் போன்ற) அரசியல் இயக்கம் இருப்பது அறிவுடைமை யாகாது. அதை ஒழிக்கவேண்டியது அறிவுடையோர் கடமை' என்ற பொருட்பட, 'காங்கிரஸ்' 'காங்கிரஸ்' என்று கதறிக்கொண்டு இருந்த ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியாரே எழுதி இருக்கிறார். இனிமேல் தான் அரசியலில் (காங்கிரசில்) உழைப்பதில்லை என்றும், மக்கள் சமத்துவத்திற்கு உழைப்பதாகவும் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதுவரை அரசியலுக்கு உழைத்ததற்காகத் தனது அறியாமையின் பொருட்டு என்னைப் போலவே விசனப்பட்டும் இருக்கிறார்.

ஆதலால், சகோதரர்களே பார்ப்பனருக்காவது அவர்களால் நிறுத்தப்பட்ட நமது கோடரிக் காம்புகளுக்காவது வரும் தேர்தல்களில் நீங்கள் கண்டிப்பாய் ஓட்டுச் செய்யாதீர்கள். ஜஸ்டிஸ் கட்சி மூலம் நிர்மாணத் திட்டத்தை நடத்தவே நான் பாடுபடுகிறேன். பார்ப்பனர்களின் எதிர்ப்பும் சூழ்ச்சியும் அடக்கப்பட்டுவிட்டால், கண்டிப்பாய் நிர்மாணத் திட்டதை ஜஸ்டிஸ் கட்சி மூலம் நிறைவேற்றலாம். நிர்மாணத்திட்டந்தான் முக்கியமாய்ப் பார்ப்பனரல்லாதாருக்கு விடுதலை அளிப்பது. எவ்விதத்திலும் பார்ப்பனர்கள் நிர்மாணத் திட்டத்திற்கு அனுகூலமாய் இருக்கமாட்டார்கள். அதோடு, அதைப் பார்ப்பனரல்லாதார் நடத்தவும் பார்ப்பன ஆதிக்கம் இடங்கொடுக்க மாட்டாது. ஆதலால், பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க ஜஸ்டிஸ் கட்சிக்கு உதவி செய்யுங்கள். அடுத்த தேர்தலில் நீங்கள் உங்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் மாத்திரமே ஓட்டுக் கொடுங்கள். கண்டிப்பாய் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி என்கிற மாயவலையில் சிக்கி ஏமாந்து போகாதீர்கள் என்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்.

[காஞ்சிபுரத்தில், 20-9-1926-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 26-9-1926]

மதுரை மகாநாட்டை அனுசரித்து, அதன் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக ஜில்லா, தாலுக்கா மகாநாடுகள் நடத்தப்படவேண்டுமென்பதாக, அந்தந்த ஜில்லாக்காரர்களை வேண்டிக்கொண்டிருந்தோம். அதற்கிணங்க கோயமுத்தூர், சேலம், வடஆர்க்காடு, தஞ்சை ஆகிய ஜில்லா வாசிகள் வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்வதாக அறிவதோடு, கோயமுத்தூர், வடஆர்க்காடு ஜில்லாக்காரர்கள் ஜில்லா மகாநாடு நடத்த கமிட்டி முதலியவைகள் நியமித்துத் துரிதமாய் முயற்சி எடுத்துவருகிறார்கள்.

இம் மகாநாடுகள் அனேகமாய் இம் மாத முடிவிலோ, மார்ச்சு மாத ஆரம்பத்திலோ நடத்தக்கூடும். மற்ற ஜில்லாக்காரர்களும் அதாவது, செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்காரர்களும் எதுவும் செய்ததாக நமக்குத் தகவலே இல்லாமலிருக்கிறது. ஆதலால், அவர்களும் சீக்கிரம் முயற்சி எடுத்து, சீக்கிரத்தில் மகாநாடுகள் நடத்தி, திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகள்

செய்து வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். பார்ப்பனர்கள் பணம் சேர்க்கவோ, தங்கள் ஆதிக்கத் திட்டங்களை நிறைவேற்றவோ, எப்படியாவது தந்திரங்கள் செய்து அவர்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, பார்ப்பனர்களின் சர்வஜீவநாடியும் செத்துப்போய் இருக்கும் இச் சமயத்தில் மகாத்மாவைத் தருவிக்கப் போகிறார்கள். அவர்பெயரால் ஆங்காங்கு நம்மவர்களிலேயே சில சோணகிரிகளைப் பிடித்துக் கூட்டம் கூட்டி, நம்மையே நம்பச்செய்து, அடுத்த தேர்தல்வரை தங்களுக்குச் செல்வாக்கு இருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளப்போகிறார்கள். நாம் அதைப் பார்த்துப் பொறாமைப் படுவதிலோ, அவர்கள் அப்படிச் செய்கிறார்கள், இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதிலோ, ஒரு பயனும் விளையப்போவதில்லை. உருப்படியான காரியத்தைச் செய்தாலல்லது நமது திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியவே முடியாது. நமக்கு இருக்கும் பொறுப்புக்கும் பார்ப்பனர்களுக்கு இருக்கும் பொறுப்புக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. பார்ப்பனர்களின் காங்கிரசும் தேச சேவையும் அவர்கள் ஆதிக்கம் நிலைநிற்கவும், அவர்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகம் சம்பாதிப்பதும் தவிர வேறில்லை. நாம் மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறோம். பார்ப்பனர்கள் கூட்டம்கூடி, பாமர ஜனங்கள் ஏமாறும்படி வாயில்பேசிவிட்டு, சட்டசபை, ஜில்லா, தாலுக்கா, முனிசிபாலிட்டி போர்டுகளில் ஸ்தானம் பெற்றுக் கூச்சல்போட்டு விட்டால் அவர்கள் கடமையும், காங்கிரஸ் வேலையும் தீர்ந்துவிட்டது.

நமது கடமையோ, முதலாவது இப் பார்ப்பனர்கள் செய்யும் புரட்டுகளை வெளியிட வேண்டியதும், ஒவ்வொரு மனிதனுள்ளத்திலும் நமது நிலையை உணரும்படி செய் விப்பதும், நமது உண்மையான சுயமரியாதைக்கும் முன்னேற்றத்திற்குமான வழிகளை எடுத்துச்சொல்லி நடக்கச் செய்தலும் ஆகிய அனேக கஷ்டங்கள் இருக்கின்றன. இவ்வள வுடன் இவைகளுக்கு எதிரிடையாக வேலைசெய்யும்படியாக நமது பார்ப்பனர்கள் நம்மவர் களிலேயே சிலரைப் பிடித்து, கூலிகொடுத்து, ஏவிவிட்டுச்செய்யும் உபத்திரவங்களுக்கும் தலைகொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், நமது பொறுப்பும் கடமையும் என்ன என்பதை யோசிப்பவர்களுக்குப் பயமாகவே இருக்கும். ஆனால், இவற்றை இதுசமயம் கவனியாமல் அசார்சமாகவோ, சுயநலத்தில் கவலையாகவோ இருந்து விடுவோமேயானால் பின்னால் சுலபத்தில் மீளமுடியாது என்பதை ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் நன்றாய் கவனத்தில் வைக்கவேண்டும்.

தவிரவும், மதுரை மகாநாட்டிற்குப் பிறகு நாம் ஆசைப்பட்டது போலவே அனேக மாய் ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள பார்ப்பனரல்லாத மக்கள் பார்ப்பனரல்லாதார் சங்கங் களும், பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கங்களும், சுயமரியாதை சங்கங்களுமாக ஏற்படுத்து வதிலிருந்தும், ஏற்படுத்த முன்வருவதிலிருந்தும், இவற்றின் பொருட்டு ஆங்காங்கு செல்லு மிடங்களில் காணப்படும் உற்சாகத்திலிருந்தும், ஒத்துழையாமையின்போது திரிகரண சுத்தியாய் காங்கிரசில் உழைத்துவந்த பார்ப்பனரல்லாத உண்மைத் தியாகிகள் பலர் ஆங்காங்கு இவற்றில் மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கலந்து உழைத்து வருவதினாலும், நமது பிற்கால வாழ்வில் கொஞ்சம் நம்பிக்கைகொள்ள இடமேற்படுகிறது. ஆனாலும், புராண வைராக்கியம்போல், இந்தச் சமயத்தில் மாத்திரம் ஏற்படும் எழுச்சியில் தலைகால் தெரியாமல் திரிந்துவிட்டு, பின்னால் சோதனை ஏற்படுங்காலத்தில் அடியோடு படுத்துப் போய்விடுமோ என்று பயப்படவும் வேண்டி இருக்கிறது. ஆதலால், தொடர்ச்சியாய் இருந்து வேலைசெய்யப் பிரச்சாரங்களும் பத்திரிக்கைகளும் வேண்டியதற்காகவும் தக்க ஏற்பாடுகளும் செய்யவேண்டி இருக்கிறது. எனவே, இவைகளுக்கெல்லாம் பூர்வாங்க வேலையாக முதலில் ஜில்லா மகாநாடுகளைக் கூட்டுவதிலும், அதன்மூலமாகத் தொகைகள் வசூலிப்பதிலும் ஆங்காங்குள்ளவர்கள் கவனம்செலுத்தவேண்டுமாய் மறுபடியும் மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

[தலையங்கம்—'குடிஅரசு' 6-2-1927]

5. பார்ப்பனரல்லாத வாலிபர் கடமை

இளைஞர்களே !

இன்றைய தினம் வாலிபர்களாயிருக்கிற உங்களில் இருந்துதான் புத்த பகவானும் மகாத்மா காந்தியும் நாயர்பெருமானும் தியாகராயரும் தோன்ற வேண்டும். இவர்கள் எல்லாம் உங்களைப்போல வாலிபர்களாக இருந்தவர்கள்தாம்.

எந்தத் தேசமும் எந்தச் சமூகமும் பெரும்பாலும் அவ்வத் தேசத்தில் வாலிபர்களைக் கொண்டுதான் முன்வந்திருக்கிறதே அல்லாமல், பெரியோர்களையும் முதியோர்களையும் கொண்டல்ல. உலக வாழ்க்கையில் ஈடுபட்ட பெரியோர்களிடம் பொதுநலமும் தியாக புத்தியும் காண்பது மிகவும் அரிது ; சுயநலந்தான் வளர்ந்துகொண்டு போகும். அவர்கள் பொதுநலத்திற்கு உழைப்பதாய்க் காணப்படுவது அவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்துத்தான் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். மகாத்மாவைப் போலவும் நாயர் பெருமான், தியாகராயர் ஆகிய இவர்களைப் போலவும் வெகு சிலர்தான் உண்மையான பெரியோர்களாய் இருக்கக்கூடும். உதாரணமாக, நாயர் பெருமானுக்கும் தியாகராயருக்கும் பதிலாக அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய முடியவில்லை என்பதை அனுபவத்தில் அறிந்து விட்டோம். 33 கோடி மக்களில் மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக இன்னொருவரை நினைக்க முடியாமலிருக்கிறது. ஆதலால், உலக வாழ்க்கையில் ஈடுபடாத வாலிபர்களாகிய உங்களுடைய மனந்தான் பொதுநலத்திற்கேற்ற பரிசுத்தமான தன்மையுடையது. உங்களிடம்தான் எவ்வித தியாகத்தையும் எதிர்பார்க்கலாம்.

ஆனால், இதுபோழ்து நமது நாட்டில் வாலிபர் முன்னிலையில் மிகவும் மலிந்து கிடப்பது 'இராஜீய விஷயம்'. அது உங்களைப்போன்ற வாலிபர்களுக்கு மிகவும் ஆபத்தான காரியம் என்று எச்சரிக்கை செய்கிறேன். பொதுவாகவே இராஜீய விஷயமென்பது ஒரு நாணயக் குறைவான காரியம். இதைப்பற்றி அனேக பெரியோர்கள், 'இராஜீய விஷயத்தில் ஈடுபடுவதென்பதை–மனிதன் எல்லாவித அயோக்கியத் தனமான காரியங்களையும் செய்துபார்த்துப் பிழைக்க முடியாவிட்டால், கடைசியாகப் பிழைப்புக்கு வழி ஏற்படுத்திக்கொள்ளத்தக்க அயோக்கியத்தனம் ஆகும்' என்று சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய ஆறேழு வருஷகால அனுபவத்தினால் இது சரியென்றே உணருகிறேன். ஆதலால், உற்சாகமாகப் பேசும் வயிற்றுப் பிழைப்பு அரசியல்வாதிகளைக் கண்டும், அவர்கள் பேச்சைக் கேட்டும் ஏமாந்துபோகாதீர்கள் ! உண்மையான அரசியல் சுதந்திரத்திற்கு இருக்கவேண்டிய பக்குவமே வேறு. அம் மக்களுக்கு இருக்கவேண்டிய நிலைமையே வேறு. இந்த நாட்டுக்கு எந்தவிதத்திலும் இப்போது அரசியல் சுதந்திரம் அவ்வளவு முக்கியமானதல்ல. இந் நாட்டு மனித சமூகத்திற்கு வேண்டியதெல்லாம் முதலில் சுயமரியாதைதான். அதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை.

பார்ப்பனரல்லாத வாலிபர்களாகிய உங்களிடமிருந்து உங்கள் சமூகம் இதுசமயம் எதிர்பார்ப்பது எல்லாம் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொடுக்கும்படியாகத்தான். பார்ப்பனரல்லாத சமூகத்தில் பெரிய மனிதர்களானாலும் சரி, அரசியலில் பெரிய உத்தியோகம் பெறுவோர்களானாலும் சரி, சிறிய மனிதர்களானாலும் சரி, துடிக்கும் இரத்தமுள்ள உங்களைப்போல வாலிபர்களானாலும் சரி—தற்போது சுயமரியாதை அற்றுத்தானிருக்கிறார்கள் என்பதை உணருங்கள் ! இன்னும் எவ்வளவு பெரிய அரசியல் உரிமையும் உத்தியோகமும் பதவியும் கீர்த்தியும் பெற்று வாழ்ந்தாலும், அவை எல்லாம் தனித்தனி மனிதன் அனுபவித்து ஒழியத்தக்கதே அல்லாமல், அவர்கள் சாகும்போதே அவர்களுடைய சந்ததிகள் சுயமரியாதை அற்றுத்தான் நடைப் பிணமாய் இருந்து சாவார்கள். ஆதலால், உங்கள் உழைப்பும் பொதுநலமும் தியாகமும் சுயமரியாதை பெறுவதற்குத்தான் இருக்கவேண்டும். ஆனபடியால், நமது நாட்டில் நமது அரசியல் சுதந்திரத்தை விட நமது சுயமரியாதைக்குத்தான் விரோதிகள் அதிகம் இருக்கிறார்கள்.

ஆதலால், இவ்வேலையில் இறங்குகையில் அஞ்சாமையும் மன உறுதியும் சலிப்பின்மையும் ஏற்படவேண்டும். ஏனெனில், நமது சுயமரியாதைக்கு எதிரிகள் பெரும்பாலும் நமது நாட்டிலேயே இருக்கும் பார்ப்பனர்களே. ஆதலால், அவர்களை வெல்லுவது சுலபமான காரியமல்ல. இதற்கு ஒற்றுமையும் தியாகமும் வேண்டும். இவைகளை உங்களிடம்தான் எதிர்பார்க்கலாம். ஆதலால், உங்களுக்குத் தன்னம்பிக்கையும் வேண்டும்; உங்களுக்குள் இருக்கும் பல குருட்டு நம்பிக்கைகளும் ஒழியவேண்டும்.

இதற்கு முதலாவது, பிறவி காரணமாய் உங்களைவிட உயர்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதனையும், உங்களைவிடத் தாழ்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதனையும், உங்கள் மனத்தைவிட்டு அறவே வெளியேற்றவேண்டும். உங்கள் வாழ்க்கைச் சடங்குகளிலும், வைதிகச் சடங்குகளிலும் உங்களைவிடப் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்கிற எண்ணம் ஒழியவேண்டும். பார்ப்பனரல்லாதாரில் பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பதாகச் சொல்லும் வெகு பெரியார்களுக்கு இந்தக் குருட்டு நம்பிக்கை இருக்கிறதை நான் பார்க்கிறேன். உங்கள் கலியாண காலங்களில் பார்ப்பனர் இருந்து நடத்திவைத்தால்தான் செல்லுபடி உள்ளதென்றும், நல்ல வாழ்க்கை ஏற்படும் என்றும் நம்புகின்றீர்கள். உங்கள் சாந்தி முகூர்த்தத்திற்குப் பார்ப்பனர்கள் பக்கத்தில் இருந்து வீட்டிற்குள் தள்ளிக் கதவை மூடினால்தான் நல்ல குழந்தை பிறக்குமென்று நம்புகிறீர்கள். உங்கள் பெரியோர்களை, நீங்கள் பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுத்து, மோட்சமடையச் செய்யலாம் என்று நம்புகிறீர்கள். இவற்றை ஒழியுங்கள்!

இவற்றை ஒழிக்கப் பிரச்சாரம் செய்யுங்கள். நமக்குத் தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்கிற மனப்பான்மை உள்ளவர்கள் இந்தப் பிரச்சாரத்திற்குக் கொஞ்சமும் உதவ மாட்டார்கள். உங்களுக்குள் சரியான கட்டுப்பாடு வேண்டும். ஒவ்வொரு ஊரிலும், 'பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்' ஏற்படுத்தவேண்டும். இதற்கென்றே சிலர் புறப்பட வேண்டும்; இதற்குப் பொருள் வேண்டும். பொருள் இல்லாமல் ஒரு காரியமும் நடக்காது. மகாத்மா காந்திக்கும் ஒரு கோடி ரூபாய் சேர்ந்ததால்தான் இவ்வளவு காரியங்கள் செய்ய முடிந்தது. இன்னும் ஒரு கோடி அவர் கையில் இருந்தால் இன்னும் ஒரு வருஷத்திற்கு அவருடைய ஒத்துழையாமையும் நிலைத்து இருக்கும். ஆதலால், பொருள் மிகவும் அவசியமானது. இதற்காகப் பொருள் சேர்க்கவேண்டும். கடைசியாகப் பிச்சை எடுக்கவும் தயாராக இருக்கவேண்டும். சரியானபடி கணக்கு வைக்கவேண்டும். யார் இதில் மும்முரமாய் வேலை செய்கிறார்களோ அவர்களை ஒழிக்க நமது எதிரிகள் பெரும் பழிகளைச் சுமத்துவார்கள். அதற்குப் பயப்படுவதனாலும் நாம் ஒரு காரியத்திற்கும் பயன்படமாட்டோம். அனேக கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு வேலை செய்வது எப்படித் தியாகத்தில் சேர்ந்ததோ, அதுபோலவே எதிரிகளின் பழிகளை இலட்சியம் செய்யாமலும், அதனால் நம்முடைய பெயர் கெட்டுப்போகுமே என்று பயப்படாமலும், கெட்டாலும் அனாவசியம் என்று எண்ணிக்கொண்டு வேலை செய்வதும் ஒரு பெரிய தியாகந்தான். மகாத்மாமீது என்னென்ன பழிகள் நமது பார்ப்பனர்கள் கட்டிவிட்டார்கள்? அவரது அஞ்சாமையும் பரிசுத்தத் தன்மையுந்தான் எதிரிகளின் பழிகளை எல்லாம் சாம்பலாக்கிவிட்டன. உங்களுடைய விடுமுறை நாட்களை வீணாக்காதீர்கள். இச் சங்கத்தின்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

தவிர, வரப்போகும் தேர்தல்களில் உங்கள் சமூகத்தின் சுயமரியாதைக்குப் பாடுபடுபவருக்கு வெற்றி சம்பாதித்துக் கொடுங்கள். பார்ப்பன வாலிபர்கள் தேர்தலில் எவ்வளவு வேலைகள் செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பாடுபடுபவர்க்கு, அவர்கள் தங்கள் தங்கள் படிப்பைக்கூட விட்டுவிட்டு ஓட்டு வாங்கிக் கொடுக்கப் பாடுபடுகிறார்கள். ஆதலால், நீங்களும் அவர்களைப்போலவே வீதி வீதியாய், ஊர் ஊராய்த் திரிந்து உங்கள் சுயமரியாதைக்கு வெற்றியளியுங்கள்.

படுக்கையில் இருந்து எழும்போது, இன்று உங்கள் சுயமரியாதைக்கு என்ன செய்வது என்று யோசியுங்கள்! ஒன்றும் செய்யாத நாளை வீணாய்ப் போனதாகவும், உங்கள் வாழ்நாளில் ஒன்று குறைந்ததாகவும் நினையுங்கள். ஒவ்வொரு வாலிபரும் தங்கள் கடமையை உணருங்கள். உங்கள் சுயமரியாதைக்கு உங்கள் உயிரைக் கொடுக்கும் பாக்கியத்தை அடைய 'தபசு' இருங்கள்.

[சென்னை சர். தியாகராயர் ஞாபகச் சின்னக் கட்டடத்தில் 1926, ஆகஸ்டில் சொற்பொழிவு—
'குடி அரசு' 12-9-1926]

சிலர், 'பார்ப்பனரல்லாதார்' என்று ஒரு பிரிவு காட்டத்தக்க பெயர் ஏன் என்கிறார்கள். சிலர், இம்மாதிரி பிரித்துக்கொண்டே போனால் உலகநிலை என்னவாகும் என்கிறார்கள். மற்றும் சிலர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவு உணர்ச்சி வாலிபருக்கு உண்டாகக் கூடாது என்கிறார்கள். இவர்கள் சொல்வதெல்லாம் நமது நாட்டின் உண்மையான நிலைமையைக் கவனியாதவர்களுக்கு வேண்டுமானால் ஒரு சமயம் நியாயமாய்த் தோன்றலாம். நமது நாட்டின் நிலைமையைக் கவனிக்கின்ற காலத்தில் இந்தப் பிரிவை ஏற்படுத்தியது யார்? இது எப்பொழுது ஏற்பட்டது? என்பதைக் கவனிக்க வேண்டும். யோசித்துப் பார்த்தால், ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பே இது ஏற்படுத்தப்பட்டதென்பது விளங்காமல் போகாது. நமது நாட்டை ஆயிரக்கணக்கான பிரிவுகளாக நாம் பிரிக்கவில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு வகுப்பார் நம்மைப் பிரித்துவைத்து, தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு நம்மைக் கொடுமையாய் நடத்தி வருகின்றார்கள்.

ஒரு கூட்டத்தாரை மாத்திரம்—அதாவது நம்மை, பார்ப்பனர்கள் என்பவர்களை நீக்கி மற்றவர்களை—'பார்ப்பனரல்லாதார்கள்' என்று பிரித்தது இன்றல்ல, நேற்றல்ல. ஆதலால், நாம் அதற்குப் பொறுப்பாளிகளல்லர். தவிர, சிலர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயரைத் தவிர்த்து வேறுபெயரிடக்கூடாதா என்கிறார்கள். கிரமமாக எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளும்படியாக நமக்கு வேறு ஒரு பெயர் என்ன கொடுக்கமுடியும்? கிரமமாக யோசித்தால்—ஆதாரப்படி பார்த்தால் 'சூத்திரன்' என்கிற பெயரைத்தான் கொடுத்தாக வேண்டும். அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏனெனில், மதக்கொள்கைப்படி, இந்தப் பார்ப்பனர்கள் நம்நாட்டு மக்களுக்கு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர், மிலேச்சர் என்ற பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். பிராமணர்கள் என்கிற பெயரைப் பொறுத்தவரையில் ஒருவிதமான தகராறும் இல்லை. ஏனென்றால், பார்ப்பனர்கள் தங்களைப் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்கின்றார்கள்.

க்ஷத்திரியர்கள் என்பதில் அனேக தகராறுகள் ஏற்படுகின்றன. யார்யாரை க்ஷத்திரியனென்று கூப்பிடுவது? க்ஷத்திரியன் என்ற பெயர் யாருக்கு உரிமை உண்டென்று சொல்ல முடியும்? க்ஷத்திரியனென்றால் நாட்டை ஆளுபவன், போர்வீரன், காப்பாளன், கத்தி வாளுடன் அமர்க்களத்தில் போர் புரிபவன் என்பதாகப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி எல்லோரும் க்ஷத்திரியர்கள்தாம். ஏதாவது ஒரு காலத்திலாவது நாட்டை ஆளாதார் யாரிருக்கிறார்கள்? பட்டாளத்தில் போர்வீரனாயில்லாதார் யார் இருக்கிறார்கள்? ஒருகாலத்தில் வேளாளர், நாயுடு, வன்னியர், ராஜுக்கள், நாடார்கள், செட்டியார்கள், குயவர்கள், மறவர்கள், தொட்டியர்கள், பார்ப்பனர்கள், ஒட்டர்கள், முகமதியர்கள் முதலியவர்கள் அரசாண்டிருக்கிறார்கள். இப்பொழுது நம்நாட்டை ஆங்கிலேயர்கள்தாம் ஆள்கின்றார்கள். அந்த முறைப்படி யாரை க்ஷத்திரியர் என்று கூப்பிடுவது?

ஒரு காலத்தில் அரசாண்டவர்களை க்ஷத்திரியர் என்பதா? அல்லது இப்போது அரசாள்பவர்களை க்ஷத்திரியர் என்பதா? ஆளுகிறவனை மாத்திரம் க்ஷத்திரியன் என்பதா? அல்லது அவன் குடும்பத்தை மாத்திரம் க்ஷத்திரியனென்பதா? அல்லது ஆளுகின்ற

சாதியையே க்ஷத்திரியரென்பதா? இப்படிப் பார்ப்போமானால், ஒன்று—உலகத்தில் உள்ள மக்கள் பூராவையும் க்ஷத்திரியர்கள் என்று சொல்லவேண்டும்; அல்லது ஜார்ஜ் சக்கரவர்த்தியை மாத்திரம் க்ஷத்திரியன் என்று சொல்லவேண்டும். ஏனெனில், நாம் காணும் ஒவ்வொரு சாதியார் என்போர்களும் ஒருகாலத்தில் அரசாண்டுதானிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் யுத்தத்தில் சேவை செய்துதானிருக்கிறார்கள்.

அடுத்தாற்போல், வைசியர் என்றாலோ வியாபாரம் செய்வோர்; ஆகையால், வியாபாரம் செய்வோர் அனைவரும் வைசியர். இக் காலத்தில் எல்லா வகுப்பாரும் வியாபாரம் செய்வதால் யாரை வைசியர் என்று சொல்லுவது? இன்னும் விவசாயம் செய்பவர் வைசியர்; மாடுமேய்ப்பவர் வைசியர் என்று சொல்லப்படுகிறது. இத் தொழில்களை எல்லோருமே செய்திருக்கின்றார்கள்; செய்கிறார்கள். எனவே யாரை வைசியரென்பது?

தவிரவும், க்ஷத்திரியர், வைசியர் என்கிற பிரிவுகளைப் பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டால் அவர்கள் ஏகபோகமாக அனுபவித்து வருகின்ற உரிமைகளை மூன்று பிரிவாகப் பிரித்து, அதில் அவர்கள் ஒன்று எடுத்துக்கொண்டு பாக்கியை க்ஷத்திரியருக்கு ஒன்றும் வைசியருக்கு ஒன்றுமாகப் பிரிக்கநேரிட்டுவிடும். ஆதலால், இதற்குப் பயந்துகொண்டே வெகு தந்திரமாய், 'கலியுகத்தில், உலகத்தில் 'பிராமணர்கள்', 'சூத்திரர்கள்' என்கின்ற இருபிரிவுகள் தவிர வேறில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

எனவே, மதக்கொள்கைப்படி யார் சூத்திரன் என்று பார்த்தால், 'பிராமணனின் வைப்பாட்டி மகன், பரம்பரையாக மேல் சாதியாருக்குத் தொண்டுசெய்வதைவிட வேறு தொழில் இல்லாதவன்'—முதலிய 'யோக்கியதை உடையவன். இந்தப் பெயரை ஏற்றுக் கொள்ள நம் மனம் பொறுக்குமா? தவிர, மற்றொரு வகுப்பார்களென்ற 'பஞ்சமர்களைத் 'தீண்டப்படாதவர்கள், சண்டாளர்கள்' என்று பிரித்திருப்பதோடு, வேறு மதத்தினர் என்கிறவர்களான கிறிஸ்தவர்களையும், முகமதியர்களையுமாகச் சேர்த்து 'மிலேச்சர்' களென்றும் பிரித்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நாம் ஏன் சொல்ல நேரிட்டதென்றால், 'பார்ப்பனரல்லாதார்' என்ற பெயர் தவிர வேறுபெயர் வைக்கமுடியாமலிருப்பதற்கு நேரிட்ட காரணத்தை விளக்குவதற்காகத்தான் என்றும்; இவ்வித இழிவான பெயர்களையும் கொடுமைகளையும் ஒழிக்கத்தான் அப்பெயர் கொடுக்கப்பட்டது என்றும் காட்டத்தான். தவிர சிலர், ஏன் இவ்வியக்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது? என்கிறார்கள். பார்ப்பனர்களை எப்போதும் நம்முடன் சேர்க்கக்கூடாதென்ற கொள்கை இதிலில்லை. அவர்கள் இவ்வித வித்தியாசங்களையும் சூழ்ச்சிகளையும் ஒழித்து, சமத்துவத்தை ஒப்புக்கொண்டு. நல்ல எண்ணத்துடன் செய்கையில் நடந்துவரும்வரையில் நீக்கிவைக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது.

அன்றியும், பார்ப்பனருக்கு என்று மாத்திரந்தான் எங்கு பார்த்தாலும் ஒரு தனியிட மேற்படுத்திக்கொண்டு, அதில் அவர்கள் ஆதிக்கத்தை உபயோகித்துக்கொள்கிறார்கள். மற்றவர்களுக்கு அவ்வித வித்தியாசம் வேண்டும் என்கிற ஆசை இல்லை. அதோடு, பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள்; மற்றவர்கள் இழிந்தவர்கள் என்பதை நமது மக்களின் இரத்தத்திலேயே பாய்ச்சிவிட்டார்கள். எனவே, ஒரு சிறு கூட்டத்தாரின் கொடுமையால் பெரிய சமூகம் சுயமரியாதை இழந்து பல கஷ்ட நஷ்டங்களுக்காளாகி இருப்பதற்குப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் காரணஸ்தர்கள் அல்லர். தவிர, சிலர் நம்மைப் பார்த்து 'பார்ப்பனரிடம் துவேஷம் வேண்டாம், பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் கூடி ஒன்று சேர்ந்து இக் கொடுமையை நிவர்த்திக்க வழி பாருங்கள்' என்று நல்ல பிள்ளைகள்போல் பேசுகிறார்கள்.

நாம் அவர்களைத் தொடுவதற்கும், ஒன்றாய் இருப்பதற்கும், உண்பதற்கும் ஒன்று சேர்ந்து கடவுளை வணங்குவதற்கும், தெருவில் நடப்பதற்குங்கூட உரிமை கொடாத

அவர்களா—அல்லது, நடப்பதற்கு வழிவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கின்ற நாமா—துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் என்பது சற்று யோசிப்பவர்களுக்குத் தோன்றாமல் போகாது.

அன்றியும், ஒற்றுமையாய் இருந்து துவேஷத்தை ஒழித்துக்கொள்ளக்கூடாதா என்று சிலர் சொல்லுகின்றார்கள். துவேஷம் ஒழியவேண்டுமானால் துவேஷத்திற்குக் காரணமாயிருப்பவர்களிடம் ஒற்றுமையாயிருக்க முடியவேமுடியாது. இன்றையதினம் நான் மாத்திரமல்ல இக் குற்றங்களை எடுத்துக் கண்டிப்பது. ஏறக்குறைய 5000, 6000 வருடங்களுக்கு முன்புள்ள தேச சரித்திரத்தைப் பார்த்தால், நமது முன்னோர் காலத்திலிருந்தே மனிதத் தன்மைக்கு விரோதமானதும், இயற்கைக்கும் சத்தியத்திற்கும் விரோதமானதுமான கொடுமைகளை ஒழித்துச் சமத்துவத்தையும் அன்பையும் உலகின்கண் நிலைநிறுத்த நம்மவர்கள் பாடுபட்டிருப்பது விளங்காமலிராது. 5000 வருடமாகப் பாடுபட்டும், அதுவும் அன்புடனும் ஒற்றுமையுடனும் பாடுபட்டும், இன்னும் அப்'பேய்' தாண்டவமாடுமானால், இனியும் எப்படி அன்பாயும் ஒற்றுமையாயுமிருந்து இப் பொல்லாப் பிரிவினையை நீக்க முடியும்? என்பதை யோசியுங்கள். இவைகளை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், நம் வாலிபர்களிலும் சிலர், 'எதற்கு இந்த வித்தியாசம்? பாவம், பார்ப்பனர்கள் நம்மிடம் வருகிறார்கள்; பிச்சையெடுக்கிறார்கள்; பிறகு போய் விடுகிறார்கள்; அவர்கள்மீது நமக்கேன் வெறுப்பு?' என்று தர்ம சாஸ்திரம் பேசி, நம் இயக்கத்திற்கே முட்டுக்கட்டையாய் நின்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு நான் மேலே சொல்லியிருக்கும் சமாதானத்தையே சொல்கிறேன். கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள், நம் சொந்த இடங்களில் எங்கேயாவது 'இது பார்ப்பனர்களுக்கு' 'இது பார்ப்பனர் அல்லாதார் என்கிற சூத்திரர்களுக்கு' என்று நாம் எழுதி வைத்திருக்கிறோமா? எந்தப் பொது ஸ்தலத்திலும், எந்த உயர்ந்த இடத்திலும், எந்தப் புண்ணிய பூமியிலும்—'இது பார்ப்பனருக்கு', 'இது சூத்திரருக்கு' என்று எழுதி வைத்திருப்பதோடல்லாமல், அதை அமுலில் வைத்துக்கொண்டிருப்பது பார்ப்பனர்களா? அல்லது நாமா? அன்றியும், இப்போதும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு காப்பி ஓட்டலிலும், வெட்டிவைத்த குளக்கரையிலும் 'இது பார்ப்பனர்களுக்கு', 'இது சூத்திரர்களுக்கு' என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி எழுதியது தப்பு, இவ்வித வித்தியாசம் இருக்கக் கூடாதென்றால், அது ஒற்றுமைப் பிளவாகுமா? அல்லது ஒற்றுமைக்கான முயற்சி ஆகுமா? ஒற்றுமையை எப்படி உண்டாக்குவது? 'நீங்களெல்லாம் ஒற்றுமையாய் இருங்கள்; இருக்கிற வித்தியாசங்கள் அப்படியே இருக்கட்டும்; அவை கடவுளால் உண்டாக்கப்பட்டவை' என்றால், எப்படி ஒற்றுமை நிலவும்? இதனால் கடவுளே பிரித்து வைத்திருக்கிறார் என்றல்லவா ஏற்படும்? உண்மையாய் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய் இருக்க வேண்டுமென்றால், ஒவ்வொருவர் எண்ணமும் ஒரே மாதிரியாகவும், ஒவ்வொருவரும் மற்றவரால் சமத்துவமாக மதிக்கப்பட்டும், ஒவ்வொருவருக்கும் அன்னியோன்னியமும் அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டாலன்றி, உண்மையான ஒற்றுமையாய் எப்படி வாழ முடியும்? ஒரு புலியினிடத்தில் ஓர் ஆட்டுக்குட்டியை விட்டு, 'நீங்களிருவரும் ஒற்றுமையாய் இருங்கள்' என்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாய் இருக்க முடியும்? புலி ஆட்டைக் கொன்று தின்னாமலிருக்க முடியுமா? எலிகள் இருக்குமிடத்தில் பூனையைக் கொண்டுவந்து விட்டு, எலிகளைக் கூப்பிட்டு, 'நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இருங்கள்' என்றால் அவைகள் எப்படி ஒற்றுமையாய்ச் சேர்ந்து வாழ முடியும்? கொஞ்ச காலத்திற்குள் எலிகளே காணப்படாதொழியுமா அல்லவா? இரண்டுக்கும் நம்பிக்கை உண்டாக்கி, ஒன்றைக் கொன்று ஒன்று வயிறு வளர்க்க வேண்டியிருக்கிற நிலையை மாற்றாமல், அவைகளை எப்படி ஒற்றுமையாய் இருக்கச் செய்ய முடியும்? ஆனால், சிலர் வெகு சுலபமாக, 'நீங்களெல்லாம் ஒற்றுமையாயிருங்கள்; அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் பொறுப்பை உணராதவர்கள் ஆவார்கள் என்றே சொல்லுவேன்.

புழு, பூச்சிகள், பன்றி, நாய்களை விடக் கேவலமாய் நடத்தப்படுவது நாமா? அவர்களா? இப்படிச் சொல்லுகிறவர்கள் நிமிர்ந்து போட்டதென்ன? குனிந்து எடுத்ததென்ன? வெறும் வாய்வேதாந்தம் பேசுகிறவர்கள்தாமே! சுயமரியாதை உணர்ச்சி இல்லாதவர்களுக்கு இதன் கஷ்டம் தோன்றாது. நித்திய வாழ்வில் நாம் படும் துயர் யாரே அறிவார்?

தவிர, வேறு சிலர், 'வேளாளருக்குள்ளும் மற்றும் பல வகுப்பார்களுக்குள்ளும் இம் மாதிரியான ஒருவரை ஒருவர் தொடக்கூடாதென்றும், உண்ணக்கூடாதென்றும், கலியாணம் செய்யக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அதை முதலில் ஒழியுங்கள். கீழிருந்து ஒழித்துக்கொண்டு வந்தபிறகு மேலுள்ளவர்களை ஒழிக்க முயலுங்கள்' என்று சொல்லக்கூடும். கீழே காணப்படும் பிரிவினைகள் உண்மையானவையல்ல. இது பார்ப்பானைப் பார்த்து, அவன்போல் நடக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, அறியாமையால் 'நடித்து' வருகிற வினையின்றிச் சூழ்ச்சிக்காக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்டதல்ல.

பார்ப்பனருக்கு முன் நம்நாட்டில் இந்தக் கொடுமைகளும் கூடா ஒழுக்கங்களுமிருந்ததாகச் சொல்ல முடியாது. நான் சிறந்த ஆராய்ச்சிக்காரனுமல்லன்; குறைந்த ஆராய்ச்சிக்காரனுமல்லன்; அடியோடு ஆராய்ச்சி இல்லாதவன். ஆயினும், பல ஆராய்ச்சிக்காரர்களை அடுத்துக் கேட்டதின் பயன் அறிந்தவனேயன்றி வேறல்லன். முதலாவதாக, இந்த சாதி என்னும் சொல்லே தமிழ்ச்சொல் அல்ல; சாதிக்கு ஆதாரம் இந்து மதம் என்று சொல்லுவது. அந்த இந்து மதம் என்ற சொல்லும் தமிழ்ச் சொல் அல்ல; அதற்கு ஆதாரமாக உள்ள வேதமும் மனுதர்மமும் நமக்குச் சம்பந்தப்பட்டவையல்ல; அவைகள் நம் மொழியில் உள்ளவையுமல்ல; நம் மக்களால் எழுதியவையுமல்ல; எப்படியோ அவை நம் தலைக்கு வினையாக வந்து சேர்ந்திருக்கின்றன; இந்து என்ற சொல் எந்த மொழியிலும் இல்லை. ஆராய்ச்சிக்காரர்கள் அதை ஒரு நதியின் பெயர் என்கிறார்கள்; சிலர் ஓர் இடத்தில் வாழும் குறிப்பிட்ட மனிதர்களைக் குறிப்பது என்கிறார்கள்; சிலர் 'பர்சிய' மொழியில் திருடர்களைக் குறிப்பது என்கிறார்கள். அது மருவி வந்ததென்பார்கள் சிலர்.

மற்றபடி, வருணாசிரம தர்மம் என்னும் சொல்கூட தமிழ்ச் சொல் அல்ல. நம் நாட்டில் அந் நியமம் இருந்திருந்தால் நம்மொழியில் அதற்கு வார்த்தை இருந்திருக்கும். சோளம் நம் நாட்டில் விளைகிறது; அதைச் சோளம் என்று சொல்லுகிறோம். ஆங்கிலேயரும் அதைச் சோளம் என்றே சொல்லுவார்கள். ஏன்? அவர்கள் நாட்டில் அது இருந்ததில்லை. அது போலவே, காப்பியை நம் தமிழ் மக்கள் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு ஒரு பானமாக உபயோகிக்கவில்லை. அதனால், நம் தமிழ்மொழியில் அதற்கு ஒரு பெயரிடுவதற்கில்லாமல் போயிற்று. ஆதலால், நாமும் அதை அன்னிய நாட்டுப் பெயரால் 'காப்பி' என்றே அழைக்கின்றோம். 'வருணாசிரம தர்ம சாதிப் பாகுபாடு' நம் தமிழ் நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே இருந்திருந்தால், நம் மொழியில் அவைகளுக்குத் தனிப் பெயர் இருந்துதானிருக்கும். அன்றியும், இப் பெயர்களையும் இவ் வித்தியாசங்களையும் நாம் ஆதியிலிருந்தே கண்டித்து வந்திருக்கின்றோம் என்பதற்கு அறிகுறிதான்—ஆரியர்களை நாம் மிலேச்சர்கள் என்று சொல்லுவது. எனவே, இவை ஒழிய வேண்டுமானால், இவ் வாரியத்தன்மை ஒழிய வேண்டும்; ஆரிய மதம் ஒழிய வேண்டும்; ஆரியக் கொள்கை ஒழிய வேண்டும்.

அப்படிக்கின்றி, அவைகளை ஒழிக்காமல் மகாத்மாவைப்போல் சவுகரியத்திற்கும் சமயத்திற்கும் தகுந்தபடி வியாக்கியானம் செய்துகொண்டிருப்பதனால் ஓர் அணுவளவு பயனும் இன்றி, ஆரிய மாய்கையில் விழவேண்டியதாய்த்தான் விடும். அதனால்தான், இவ்வளவு ஆயிரம் வருடம் பாடுபட்டும் இன்னமும் அதே அடிமை நிலையில் நமது நாடு இருந்து வருகின்றது.

தவிர, சிலர் சொல்லுவதுபோல் கீழே இருந்து இவ் வித்தியாசங்களைப் போக்கிக் கொண்டு போகவேண்டுமென்பது ஒரு காலத்திலும் முடியும்படியான காரியமல்ல. அதற்கு ஆதாரமானதாகிய வேரிலிருந்து பறித்து வெட்டியிருந்தால்தான் மறுபடி முளைக்காமலிருக்கும். அப்படிக்கில்லாமல், அதிலிருந்து முளைத்த கிளைகளை மாத்திரம் வெட்டினால் மறுபடியும் அது நன்றாய்த் துளிர்த்து, தழைந்துகொண்டுதானிருக்கும். எனவே, உற்பத்தி ஸ்தானமான பார்ப்பனர்களிடமிருந்து அதை ஒழிக்கவேண்டும். அவர்களால்தான் இவ் வித்தியாசங்கள் பரவுகின்றன.

உதாரணமாக, எங்கள் வீட்டிற்குமுன் ஒரு குழாய் இருக்கிறது. அதில் தண்ணீர் பிடிக்க ஒரு பார்ப்பன சகோதரி வரும்போது ஒரு சுண்டைக்காய் பிரமாணம் புளியும் பஞ்சபாத்திரத்தில் தண்ணீரும் கொண்டு வந்து, குழாயைப் புளியால் விளக்கிக் கழுவி, பின்பு தண்ணீர் பிடித்துக்கொண்டு போக ஆரம்பிக்கிறாள். இதைப் பார்த்த நம் சகோதரிகள், நெல்லிக்காய் அளவு புளியும் ஒரு தோண்டி தண்ணீரும் கொண்டுவந்து, புளியால் விளக்கிக் கழுவி தண்ணீர் எடுத்துக்கொண்டு போகப் பழகுகிறார்கள். இதைக் கண்ணுற்ற நம் முகமதிய சகோதரிகளும் கொளுமிச்சங்காய் அளவு புளியும் முக்கால்குடம் தண்ணீரும் கொண்டுவந்து புளியால் குழாயை விளக்கிக் கழுவித் தண்ணீர் பிடித்து எடுத்துக் கொண்டு போகப் பழகுகிறார்கள். அந்த முகமதிய சகோதரியை அடுத்து, "உங்கள் மதத்திற்கு வித்தியாசம் இல்லையே, நீங்கள்கூட ஏன் இப்படிக் கழுவித் தண்ணீர் பிடிக்கின்றீர்கள்?" என்றால், "எனக்கு என்ன தெரியும்; இப்படித்தான் தண்ணீர் பிடிப்பது வழக்கமோ, என்னமோ என்று கருதி நான் செய்துவருகிறேன்" என்கிறாள். இவ்வளவுக்கும் காரணமாயிருந்தவர்கள் யார் என்று பாருங்கள்! பார்ப்பனர்கள் இப்படிச் செய்யாதிருந்தால் இவ்வித வழக்கங்கள் பரவ வழியில்லை.

நம் மக்களில் சிலர், 'அல்லாதார்' என்ற பெயர் ஏன் என்பார்கள். அதற்கும் சமாதானம் சொல்லவேண்டியிருக்கிறது. 'ஆன்டி–காலரா' (Anti-cholera) மருந்தென்றால் அம் மருந்து எப்படி காலரா வந்தவுடன் நினைவுக்கு வருமோ, 'ஆன்டி–பிளேக்' மருந்தென்றால் பிளேக் வந்தவுடன் அது நினைவுக்கு வருமோ, மூட்டைப் பூச்சிக்கு 'எமன்' என்றால் எப்படி மூட்டைப் பூச்சி கடித்தவுடன் அம் மருந்து நினைவிருக்குமோ, அது போல்—சமத்துவமில்லாமல் கொடுமையில் பட்டு இழிவை அனுபவித்துவரும் மக்களுக்கு அது ஒழியவேண்டுமானால், அதற்கு ஆதாரமானவர்கள் பெயரும் அவர்களைக்கண்ட அளவில் நினைவிருக்கவேண்டும்; கொடுமை செய்தவிதமும் ஞாபகத்திற்கு உடனே வரவேண்டுமெனக் கருதியே 'பார்ப்பனரல்லாதார் இயக்கம்' எனப் பெயர் கொடுக்கப் பட்டதேயன்றி வேறல்ல. இந்தவித இழிவும் கொடுமையும் ஒழிந்து எல்லா மக்களும், சமத்துவம் அடைந்து நாம் ஒற்றுமையானால் இந்த 'அல்லாதார்' என்ற பெயர் தானாகவே இல்லாமல் போகும்.

அரசியலிலும்கூட 'அல்லாதார்' என்கிற பெயரை நீக்கி நாம் வாழ முடிவதில்லை, அது அவமானமில்லை என்றுதான் கருதி இருக்கிறோம். அரசியல் சீர்திருத்தம் என்பதில், தேர்தல்களுக்குக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் தொகுதியில் நிற்கிறார்கள்; ஆனால், நாம் மாத்திரம் முகமதியரல்லாதார் என்கிற தொகுதிக்கு நின்றுதான் இப்பொழுதும் சட்டசபை அங்கத்தினராகிறோம்; நாம் முகமதியரல்லாதார் தொகுதியில் தான் ஓட்டர்களாகவும் இருந்துவருகிறோம். அரசாங்கத்தாருக்கும் இதைத்தவிர வேறுபெயர் கிடைக்கவில்லை. நமக்கும் சொல்லத் தெரியவில்லை.

இந்து மத பரிபாலன சட்டம் கொண்டு வந்த காலத்தில், இந்தப் பார்ப்பனர்கள் இந்துமதம் போயிற்றென்று சொன்னார்களே ஒழிய, தங்களுக்கும் 'முகமதியரல்லாதார்' என்கிற பெயர் வேண்டாம் என்று சொல்லவே இல்லை. ஏன் என்றால் வேறு பெயர் சொல்லுவதற்கு இல்லை; இருந்திருந்தால் வாதாடிப் பார்த்திருப்பார்கள். இவைகளை

எல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நமது எதிரிகள் நம் இயக்கத்தைக் கெடுக்க சில்லரை விஷயத்தைச் சொல்லி மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றுகின்றார்களென்பதைத் தெளிவுபடுத்தவேயன்றி வேறில்லை. எந்தப் புராணத்திலும் எந்தச் சரித்திரத்திலும் இந்து மதம் என்பதைப்பற்றி எங்கும் ஒரு வரிகூடச் சொல்லவில்லை. ஆங்கில அரசாங்கமுள்ள இந்த நாளில்தான் 'இந்து' என்ற பெயர், இரயில்வே பிளாட்பாரத்திலுள்ள ஓட்டல்களில் 'இந்து பிரயாணிகள்' என்றும், வெளிக்குப் போக உள்ள கக்கூஸ்களில், 'இந்து புருஷர்கள்,—இந்து பெண்கள்' என்றும் எழுதியதைக் காணலாமேயன்றி வேறு காண முடியாது.

நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றிச் சிறிது சொல்லுகிறேன். நாம் சத்தியத்தின் பெயரால் படும் இடையூறுகளை வேருடன் களைந்தெறியும்வரை பார்ப்பன ரல்லாத வாலிபர்கள் கண்டிப்பாய் அரசியலில் ஒருபோதும் தலையிடுதல் கூடாது. அரசியலில் தலையிட ஒரு பக்குவமுண்டு. அந்தப் பக்குவம் உங்களுக்கும் இந்த நாட்டுக் கும் வந்த பின்பு அரசியலில் தலையிட்டால் பயன்படும். நமக்கும் அரசியலுக்கும் தற்பொழுது பொருத்தமும் கவனமும் வைக்கக் கூடாது. நாம் அனைவரும் பொது வாழ்வில் சம சுதந்திரமும்; பிறவியில் நமது வாழ்வும் துக்கமும், அனைவருடைய வாழ்வும் துக்கமுமாகும் என்றும்; பிறவியில் உயர்ந்தவருமில்லை, இழிந்தவருமில்லை என்றும் உணர்ச்சி உண்டாகும்வரையில், அரசியலில் தலையிடுதல் கூடாது. அப்படித் தலை யிட்டால் அது தற்கொலையாகவே முடியும்.

மக்களுக்கு அன்னியர் ஆளுவது என்பது கஷ்டமாகத்தானிருக்கும். அந்த ஆட்சியை வாங்கி நாம் ஆளவேண்டுமென்ற எண்ணங்கள் சாதாரணமாக உண்டாவது இயல்புதான். அன்னியர் என்பவர் யார்? நாம் என்று சொல்லிக்கொள்பவர் யார்? என்று ஆராயப்புகின், அன்னியர் என்பது வெள்ளைக்காரரென்றும், நாமென்பது பிராமணர், சூத்திரர், பஞ்சமர், கிறிஸ்தவர், முகமதியர் மற்றும் பல சாதியாரும் என்றும் எண்ணியிருக் கின்றோம். பிராமணனை நம்மவர் என்பதில் சேர்க்கும்போது, வெள்ளைக்காரர்களை மாத்திரம் எப்படி அன்னியர் என்று சொல்லக்கூடும்? பார்ப்பனனைவிட வெள்ளைக்காரன் நமக்கென்ன கொடுமை செய்கிறான்? வெள்ளைக்காரன் நமக்குச் செய்துவரும் கொடுமைகள் என்பதெல்லாம் பார்ப்பனனின் யோசனையைக் கேட்டு, பார்ப்பனன் சொல்லுகிறபடி, பார்ப்பனன் உதவியால், அவன் சம்மதத்தின் பேரில் செய்கிறானா? அல்லது தானாகவே செய்கிறானா? தவிர, வெள்ளைக்காரன் நீங்கிய மற்றவர்கள் எல்லாம் ஒன்று என்றும், ஒன்றாய்ச் சேர்ந்து சுயராஜ்யம் கேட்கின்றார்கள் என்றும் எப்படிச் சொல்ல முடியும்? லார்டு இர்வின் துரை இங்கு வந்து, 'நாங்கள் ஊருக்குப் போகிறோம். இந்த கஜானா சாவி, இந்த முத்திரை, இந்தப் பட்டம் ஆகிய மூன்றையும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதாகவே வைத்துக்கொள்வோம். அதை யார் வாங்கிக் கொள்வது? முதலில் அய்யர் வருவார், 'நான்தான் படித்திருக்கிறேன். எனக்கு அரசாளும் திறமை வெள்ளைக் காரர்களை அடுத்துக் கற்றுக்கொண்டிருக்கிறேன்' என்று நம்மிடத்தில் சொல்லி, வெள்ளைய ரிடம் சென்று, 'நீங்கள் இவ்வளவு நாள் இங்கிருப்பதற்கு நாங்களல்லவா உதவியா யிருந்தோம். உங்களை எங்கள் நாட்டாருக்குக் காண்பித்துக் கொடுக்காமல், எங்கள் நாட்டாரை உங்களுக்குக் காண்பித்துக்கொடுத்தோமே, நீங்கள் நன்றியுடையார் என் கிறீர்களே, அப்படியானால் எங்களிடம் கொடு' என்பார்கள். இதற்குச் சம்மதிக்கக் காத்திருக்கின்றோமா? 'வெள்ளைக்கார அரசாங்கம் இருக்கும்போதே, எங்களைச் சூத்திரர்கள் என்று கொடுமைப்படுத்தும் நீங்கள், வெள்ளைக்காரர்கள் போய்விட்டால் என்ன செய்யமாட்டீர்கள்?' என்று கேட்டுத் தடுப்போமா இல்லையா? இதைக்கேட்ட லார்டு இர்வின், 'நீங்கள்தான் பெருவாரியாய் இருக்கிறீர்களே, நீங்களாவது வைத்துக் கொள்ளுங்கள்' என்று நம்மிடம் கொடுத்தால் பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களா? 'வெள்ளைக் காரர் இருக்கும்போதே பார்ப்பனத் துவேஷம் நிறைந்திருக்கின்றது. நீங்கள் போய்

விட்டால் எங்கள் கதி என்ன?' என்று சொல்லுவார்களா இல்லையா? இப்பொழுதே, எத்தனையோ உத்தியோகங்கள் தங்களுக்கு இல்லை என்றால் வெள்ளைக்காரர்களுக்குப் போகட்டும் எனப் பார்க்கின்றார்களேயன்றி, நமக்குக் கிடைக்கச் சம்மதிக்கின்றார்களா? அதன் இரகசியம்தானே 'இரட்டை ஆட்சி' ஒழிய வேண்டுமென்பது.

அன்றியும், நாம் இருவரும் சம்மதித்து இராஜியாவதாயிருந்தாலும் முகமதியர்கள் சும்மாயிருப்பார்களா? 'நாங்கள் இப்பொழுது 7½ கோடி இருக்கிறோம்; இன்னும் நான்கைந்து வருடத்திற்குள் நாங்களே பெருவாரியாக 12 கோடிக்கு வந்துவிடுவோம். அப்பொழுது உங்களையே துரத்திவிட எங்களுக்குத் தெரியும். அதுவரை நீங்கள் போகாதீர்கள்' என்பார்களா இல்லையா? அவர்களும் சம்மதித்தார்களென்றே வைத்துக் கொள்ளுவோம்; கிறிஸ்தவர்கள் சும்மா இருப்பார்களா? "நாங்கள் சில பேர் உங்களை நம்பி இப்பொழுதுதான் கிறிஸ்தவர்களானோம். அப்படி இருக்க நீங்கள் போவதானால் எங்களுக்காகவும் ஒரு கப்பல் அதிகமாக ஏற்பாடு செய்யுங்கள். நாங்களும் உங்கள் கூடவே வந்துவிடுகின்றோம்' என்பார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டதாகவே வைத்துக்கொள்வோம். எம். சி. இராஜா சும்மா இருப்பாரா? 'அய்யா, எங்களுக்காகத் தானே கடவுள் உங்களை இங்கு அனுப்பினார். உங்களால்தானே நாங்கள் மனிதர்களாகி இருக்கிறோம். அப்படி இருந்தும் நீங்கள் இருக்கும்பொழுதே எங்களை வீதியில் நடக்கக் கூடாதென்கிற இவர்கள், நீங்கள் போய்விட்டால் என்ன செய்வார்கள்? வண்டியில் கட்டி ஓட்டமாட்டார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்' என்று சொல்லிக் காலைப்பிடித்தாவது குறுக்காட்டிக்கொள்வார்களா இல்லையா? இந்த நிலையில் 'நாம்' என்பது யார் என்பதை யோசித்துப்பாருங்கள்.

ஒன்றும் இல்லை—ஒரு மந்திரி என்கிற ஒரு பொறுப்புமில்லாத ஓர் உத்தியோகத்தை நமக்குக் கொடுத்திருக்கும்போதே, நமது யோக்கியதை இப்படி இருக்கின்றது. வெளியில் சொல்ல வெட்கக்கேடு. அன்றியும், அதற்குப் பார்ப்பான் சூழ்ச்சியும் அதற்கு மற்ற சூழ்ச்சியும் எப்படி இருந்துகொண்டு, நாடு சிரித்து, நம்மை மானக் கேடாக்குகின்றது! இனி அரசாட்சியே வந்தால் என்ன கதியாகும் என்பதை நீங்களே யோசியுங்கள். நான் வேண்டுமென்றாவது, வெள்ளைக்காரரென்கிற கொள்ளைக்காரருக்கு அனுகூலமாகவாவது, பார்ப்பனருக்கு இடையூறாகவாவது சொல்லவில்லை. நாட்டின் உயிர் நாடியைப் பார்த்து, உணர்ந்து சொல்கிறேன். எனவே, நம்மில் ஒரு கூட்டத்தாரே ஏகபோகமாய் வகிக்கும் ஆதிக்கம் ஒழிந்தால், ஒருவரிடம் ஒருவருக்கு அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டால், வெளிச்சத்தைக் கண்ட இருள் ஓடுவதுபோல், அன்னிய ஆட்சி நம்மைவிட்டு ஓடிவிடும். இதனால் தான் நான் அதுவரையில் குறிப்பாக நம் வாலிபர்களுக்கு அரசியல் உணர்ச்சி ஏற்படவே கூடாது என்கிறேன். அதனால் என்ன கெடுதி நேரிட்டாலும் நம் வாலிபர்கள் அரசியலினின்றும் முற்றும் விலகியிருத்தல் வேண்டும். உத்தியோகத்தால்தான் நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பிளவேற்பட்டது. நம் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் உண்மையாக உத்தியோகப் பற்றின்றி ஆரம்பித்திருக்கலாம். அதை ஏற்படுத்திய தலைவர்களும் அதே எண்ணத்துடனிருந்து இறந்திருக்கலாம். இப்பொழுதும் பலர் உத்தியோக வெறி பிடியாதவர்களுமிருக்கிறார்களென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், கொஞ்சமிருந்தாலும் பிளவு உண்டாக்குகின்றது. நம் வாலிபர் கருத்தெல்லாம் நாம் எப்படிச் சுயமரியாதையடைவது? நாம் எப்படி விடுதலை அடைவது? என்பதையே கொண்டிருத்தல் வேண்டும்.

[புரசைவாக்கத்தில், 19-10-1927-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 30-10-1927]

6. ராயல் கமிஷன்

ராயல் கமிஷனைப்பற்றி ஜஸ்டிஸ் கட்சியார்கள் ஒருவித அபிப்பிராயமும் இதுசமயம் தெரிவிக்கக்கூடாது என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பார்ப்பன அரசியல் தந்திரத்தை நாம் பின்பற்றுவதும், அவர்களது இயக்கங்களை நாம் பின்பற்றுவதும் பார்ப்பனரல்லாத சமூகத்தின் தற்கொலையேயாகும்.

நம் நாட்டில் பார்ப்பனர்கள் சம்பந்தப்பட்ட அரசியல் இயக்கங்கள் என்பது எதுவும் கொஞ்சமும் நாணயமுடையதல்ல. அக்கூட்டத்திற்கே இவ் விஷயங்களில் மானம், வெட்கம், நாணயம் முதலியவைகள் கடுகளவும் கிடையாது என்றே சொல்லுவோம். ஏனெனில், இன்று பகிஷ்காரம் என்பார்கள், நாளை ஏற்றுக்கொள்வது என்பார்கள் ; இன்று ஒத்துழையாமை என்பார்கள், நாளை ஒத்துழைப்பு என்பார்கள்; இன்று முட்டுக்கட்டை என்பார்கள், நாளை சன்னக்கட்டை போட்டு நடத்திக்கொடுப்பது என்பார்கள் ; இன்று நம்பிக்கை இல்லை என்பார்கள், நாளை சம்பந்தம் செய்துகொள்ளுவது என்பார்கள் ; இன்று காங்கிரஸ் கட்டளை என்பார்கள், நாளை காற்றில் பறக்கவிடுவார்கள் ; இன்று வைவார்கள், நாளைக்குப் பல்லைக் காட்டுவார்கள். இவ்வளவும் தங்கள் சுய நலத்திற்காகவே செய்வார்கள். எனவே, இம் மாதிரிக் கூட்டத்தில் சேர்ந்தால்தான் வாழமுடியும் என்கின்ற பார்ப்பனரல்லாதார் யாராவது இருப்பாரானால், அவர்களின் நிலை பெரும்பாலும் இதை விட்டால் நாளைக்கு ஜீவனத்திற்கு மார்க்கமில்லை என்கின்றவர்களாகத்தான் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களை மாத்திரம் ஒரு நிபந்தனையின்மேல் பார்ப்பனர்களிடம் செல்ல அனுமதிக்கின்றோம். அதாவது, பார்ப்பனர்களைப்போல்—எந்தச் சமயத்திலும் தனது சமூகத்தைக் காட்டிக்கொடுத்து வாழாமல், பார்ப்பனர்களைப் பற்றி கவிபாடிக் கொண்டோ பார்ப்பனரல்லாதார் சிலரை மாத்திரம் வைதுகொண்டோ வயிறு வளர்ப்பதில் நமக்கு ஆட்சேபணை இல்லை.

தவிர, இதுசமயம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பெரிய ஆபத்து இருக்கின்றதை முன்னமேயே தெரிவித்து இருக்கின்றோம்.

அதாவது, பெசன்டம்மையின் புதிய உபத்திரவம் என்னவெனில், நம் நாட்டுப் பார்ப்பனர்கள் இப்போது தங்களுக்குள்ள சகலநாடிகளும் விழுந்துவிட்ட பிறகு அம்மையைப் பற்றி இருக்கின்றார்கள். இனி அது ஓர் ஆட்டம் ஆடித்தான் நிலைக்கு வந்து சேரும். யாரும் அதில் ஏமாந்துபோய் விழுந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம். கோயமுத்தூர் தீர்மானத்தால் ஏற்பட்ட ஆபத்திலிருந்தே இன்னமும் சரியானபடி நாம் மீளவில்லை. இதே சமயத்தில் மற்றொரு ஏமாற்றம் என்னும் பெசன்டம்மை ஆபத்திலும் யாருடைய சூழ்ச்சியின் பலனாகவாவது மாட்டிக்கொள்வோமானால், பிறகு சுலபத்தில் நமக்கு விடுதலை கிடைப்பது என்பது மிகவும் கஷ்டமாகிவிடும். இதுசமயம் நமக்கு யாருடைய தயவும் வேண்டியதில்லை. நம்முடைய சுயமரியாதை இன்னது என்பது நமக்கு ஞாபகத்திற்கு வந்தால் அதுவே போதுமானதாகும். ‘நாட்டிற்கு நல்லதுரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கும் தொழில் போகாது’ என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல், இந்நாட்டில் பார்ப்பனரல்லாத மக்கள் பெரும்பான்மையும் தோட்டி நிலையிலேயே இருக்கின்றார்கள். அத் தோட்டி நிலைமாற ஏதாவது மார்க்க முண்டானால் மாத்திரம் எந்தத் துரையையும் எந்தக் கமிஷனையும் வரவேற்கவும் செய்யலாம்; பகிஷ்கரிக்கவும் செய்யலாம். அதில்லாத பட்சம், நாமாகத் தனித்து நின்று ஒரு கை பார்த்து நமது நிலையை மற்றவர்களுக்குச் சமமாக உயர்த்திக்கொள்ள வேண்டிவரும். ஆதலால், அவசரப்பட்டுக்கொண்டு இப்போது எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்து விடக்கூடாது என்பதுடன், எந்த அரசியல் கட்சியிலும் சேரக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

[அறிக்கை—‘குடிஅரசு’ 13-11-1927]

7. ராயல் கமிஷனும் சுயமரியாதையும்

பிரிட்டிஷாரின் ஏகபோக ஆதிக்கத்தை இந்தியர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிற வரையில், 'இம் மாதிரியான ராயல் கமிஷன்களில் இந்தியர்களுக்குப் பதவி அளிக்காதது, நம்மவர்களின் சுயமரியாதையைப் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது' என்று எண்ணுவதில் கொஞ்சமாவது அர்த்தமில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஒரு அம்சமாகவே இந்த கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியரின் சுயமரியாதையை அடியோடு அழித்ததான பஞ்சாப் அநீதிபோன்ற காரியங்களில் ஒன்று சேர்ந்து பரிகாரம் தேட சம்மதிக்காத ஒரு கூட்டத்தார், இப்போது பகிஷ்காரத்தைப் பற்றி வீண் கூப்பாடு போடுவது கேலிக்கிடமானதென்றே சொல்ல வேண்டும்.

உண்மையில் ராயல் கமிஷனை பகிஷ்கரிப்பது என்பது, எந்த அரசாங்கத்தாரால் இந்த ராயல் கமிஷன் ஏற்படுத்தப்பட்டதோ அதே அரசாங்கத்தின் அம்சங்களான சட்டசபைகளையும், மந்திரி முதலிய பதவிகளையும், உத்தியோகங்களையும் பகிஷ்கரிக்கத் தக்க கொள்கையுடையதாயிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், ஒருவிதமான தியாகத்திற்கும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லாததான வெறும் வார்த்தையளவில் பகிஷ்காரம் என்று கூச்சல் போடுவதானது, சுயமரியாதை உள்ள தேசத்தார் என்பவர்களுக்குக் கொஞ்சமும் அழகாகாது. உண்மையிலேயே முழு விடுதலைக்கும் நம்முடைய நாட்டார் தயாராக இருக்கின்றார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அந்தக் காலத்தில் பார்ப்பனரல்லாதாரே முன்னணியில் நின்று விடுதலைப்போர் புரிவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகப்படவேண்டியதில்லை.

இராஜ்ய விஷயங்களில் சாத்தியமானதும், காரியத்தில் நடக்கக் கூடியதுமான துறையில் பாடுபடும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், வேண்டுமென்றே பொதுஜனங்களை ஏமாற்றுவதற்காக மற்ற கட்சியார் செய்யும் சூழ்ச்சிகளில் கலந்துகொள்வது என்பது அறிவுடைமையாகாது.

கோயமுத்தூரில் கூடிய தென்னிந்திய நலவுரிமைச் சங்க மகாநாட்டில் மாகாண சுயாட்சி கிடைக்கும் வரையிலும் பதவிகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆதலால், முழுசுதந்திரமும் கேட்கக்கூடிய காலம் வரும்வரை, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் மாகாண சுயாட்சிக்காகவும் நம்முடைய நாட்டிலுள்ள எல்லா வகுப்பார்களுக்கும் சமமான நீதியும் பங்கும் கிடைக்கும்படியாகவும், ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரைவிட உயர்ந்தவர்கள் என்று கொண்டாடும் பாத்தியதையை நிராகரிக்கவும் ஒரே நிலையாக இருந்து பாடுபட்டு வரவேண்டியவர்களாவார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரின் வெளிப்படையான இந்தக் கொள்கையை நம்முடைய தேச மக்களிடமும் மற்றும் அன்னியநாட்டாரிடமும், அவர்களால் ஏற்படுத்தப்படும் சபைகளின் முன்னிலையிலும் ஸ்தாபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கமிஷன் அங்கத்தினர்களில் இந்திய அங்கத்தினர்கள் ஒருவரும் இல்லாதது ஒரு கெடுதியாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. கவர்ன்மெண்டார் ஒரு சமயம் இந்தியர்களில் யாரையாவது நியமிப்பதானால், இப்போதைய நிலைமையில் நியமனம் பெறக் கூடிய இந்தியர்கள், பொதுவாக பிராமணரல்லாதாருக்குத் தீங்கு இழைக்கக் கூடியவர்களாகத்தான் இருக்கமுடியும்.

தவிர, ஆதியில் 'ரவுலட் கமிட்டி'யில் இந்தியர் ஒரு அங்கத்தினராக இருந்துங்கூட அக் கமிட்டியின் சிபாரிசானது இந்திய மக்களை அரசாங்கத்தோடு ஒத்துழையாமை

செய்யவேண்டிய அளவுக்குக் கொண்டுவந்துவிட்டது. பொதுவாக யோசிக்குமிடத்து, கமிஷனில் அங்கம் பெறக்கூடியவர்கள் ஏகபோக உரிமையாளர்களான பார்ப்பனர்களாகவே இருந்துவிடக்கூடும் என்கிறதை நினைக்கும்போது, அக் கமிஷனில் இந்தியர்களை நியமிக்காதது ஒரு பாக்கியமென்றே சொல்லவேண்டும்.

[செய்தி—'குடிஅரசு' 27-11-1927]

ராயல் கமிஷன் பகிஷ்காரக் கூச்சல் சுயநல அரசியல்வாதிகளிடை எவ்வளவுக் கெவ்வளவு பலமாகக் கிளம்புகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நாட்டிலுள்ள மக்களிடை அதன் புரட்டுக்களும் வெட்ட வெளிச்சமாய்க் கொண்டு வருகின்றன.

தவிர, பகிஷ்காரத்திற்கு எதிர்ப் பிரச்சாரமும் பலமாய் ஏற்பட்டு வருகின்றது. பகிஷ்கார காரணங்களும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றன. எனவே, கூடிய சீக்கிரத்தில் பகிஷ்கார கூச்சலுக்கு சாவுமணி அடித்துவிடும் என்பது திண்ணம்.

'ராயல் கமிஷனில் இந்தியர்களைச் சேர்க்கவில்லை' என்ற கருத்துடன்தான் ஆதியில் பகிஷ்காரம் ஆரம்பிக்கப்பட்டது. தேசத்தில் இருக்கும் கட்சிப் பிளவுகளையும், ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கும் சூழ்ச்சிகளையும் வெளியாக்கி, யாரை நியமிப்பது என்ற கேள்வி பிறந்தபின், அதற்குப் பதில்சொல்ல முடியாமல், இப்போது கமிஷனைப் பகிஷ்கரிப்பதற்கு அது காரணமல்ல என்று சொல்ல முன்வந்துவிட்டார்கள். காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி முதலியவற்றிற்குத் தலைவரான பண்டித மோதிலால் நேரு அவர்கள், கமிஷனில் இந்தியரைச் சேர்க்காதது மிகவும் நல்லதென்றே சொல்லிவிட்டார்.

ஆகவே, பகிஷ்காரத்தின் வேருக்கு சாவுமணி அடித்தாய்விட்டது; இனி கப்புக் கவறுகளைப் பற்றி நாம் அதிகக் கவலைப்படவேண்டியதில்லை.

பகிஷ்காரத்திற்கு இப்போது முக்கியமாய்ச் சொல்லப்படும் காரணமெல்லாம், இந்தியாவின் சுயமரியாதையை உத்தேசித்து பகிஷ்காரம் செய்யவேண்டுமென்பதாகக் கூச்சலிடப்படுகின்றது. கமிஷன் நியமித்ததினால் இந்தியாவின் சுயமரியாதை இந்தக் கூட்டத்தாருக்கு எந்தவிதத்தில் பாதிக்கப்பட்டுவிட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த ராயல் கமிஷன் நியமிக்கப்படும் என்கிற விஷயம் இன்றல்ல, நேற்றல்ல; இன்றைக்கு 8, 9 வருடத்திற்கு முன்பாகவே நமக்கு வழங்கியதாய்ச் சொல்லப்பட்ட சீர்திருத்த நிபந்தனையிலேயே கண்டிருக்கின்றது. அதாவது, இந்தச் சீர்திருத்தத்தை இந்தியர்கள் நன்றாய் நடத்திக்காட்டி விட்டார்களா என்கின்ற பரீட்சை பார்க்க, இனி பத்து வருஷம் கழித்து ஒரு கமிஷன் வைத்து விசாரணை செய்யப்படும் என்கின்ற தத்துவம்கொண்ட வியாசங்கள் அதில் காணப்பட்டிருக்கின்றன. '1920 ஆம் வருஷத்திய சீர்திருத்தம் போதாது; அது அதிருப்தியும் ஏமாற்றமும் அளிக்கிறதாயிருக்கிறது; ஆதலால் அதைப் பகிஷ்கரிக்க வேண்டும்' என்று காங்கிரஸ் சொன்ன காலத்தில் அதை எதிர்த்து, 'இந்தச் சீர்திருத்தமானது சுயராஜ்யத்திற்கு முதற்படியானது; இதை நடத்திக்காட்டி, மேலால் சீர்திருத்தம் கேட்கவேண்டுமேயல்லாமல் பகிஷ்கரிப்பது சரியல்ல' என்றும் 'இத் தீர்மானத்தை நிறைவேற்றியதாலேயே காங்கிரஸ் செத்துப்போய்விட்டது' என்றும் சொல்லியதுடன், சீர்திருத்தத்தை நடத்த தனது சிஷ்யகோடிகளை ஏவிவிட்டு ஆள் ஒன்றுக்கு மாதம் 5000, 6000 ரூபாய் வீதம் சம்பளம் வாங்கிக்கொடுத்தது இதே பெசன்ட் அம்மையார்தான். அப்படிப்பட்ட அம்மைக்கு மறுபடியும் கமிஷன் நியமித்ததால் இப்போது திடீரென்று சுயமரியாதை ஞானம் எப்படிவந்தது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தியாவின் சுயமரியாதைக்கு ஒரு வெள்ளைக்கார சீமாட்டி அழுவதென்றால் 'ஆடு நனைகிறதென்று ஓநாய் ஓலமிட்டழுத' கதையையே ஒக்கும் என்பதே நமது அபிப்பிராயம். அதிலும், பெசன்டம்மையார் அழுவதென்பது, 'ஆடு நனைகிறதென்று சிறுத்தைப் புலி அழுவதையே ஒக்கும்' என்றும் சொல்லுவோம்.

இந்த அம்மையார் இந்தியாவின் சுயமரியாதைக்காக கவலைப்படுவதின் யோக்கியதையைப் பொதுமக்கள் அறிய உதாரணம், பஞ்சாப் படுகொலையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்களே அது ஒன்றே போதும் என்றே நினைக்கிறோம். அதாவது 'பஞ்சாபியர்கள் செங்கல் போட்டதற்கும், ஜனரல் டயர் பீரங்கிக் குண்டு போட்டதற்கும் சரியாய்ப் போய் விட்டது; இதுதான் அரச தர்மம்' என்று சொன்னார்கள்.

இவ் வம்மையாரின் சுயமரியாதை இலட்சணம் இப்படியானால், அய்யர்மார்– அய்யங்கார்மார்கள் சுயமரியாதை உணர்ச்சிக்கு ஏதாவது உதாரணம் வேண்டுமானால், அதே பஞ்சாப் அக்கிரமத்தின்போதும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒத்துழையாமையின் போதும் இவர்கள் என்ன செய்தார்கள் என்பதைச் சற்று யோசித்தால் விளங்காமல் போகாது.

ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேறியதும் ஸ்ரீமான்கள் 'சுதேசமித்திரன்' ஆசிரியரும் இப்போதைய காங்கிரஸ் காரியதரிசியுமான எம். ரங்கசாமி அய்யங்காரும், 'இந்து' ஆசிரியரும் தமிழ்நாட்டுத் தலைவராயுமிருந்த கஸ்தூரி ரங்கய்யங்காரும், பரிசுத்த தேசியவாதி என்று சொல்லப்படுபவரும் சுயராஜ்யக் கட்சிக் காரியதரிசியும் சட்டசபையில் காங்கிரஸ் கட்சி உபதலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியுமான சத்திய மூர்த்தி அய்யரும் ராஜிநாமா கொடுத்துவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். இந்தியத் தேசியத் தலைவரும் எல்லா இந்திய காங்கிரஸ் தலைவரும் 'டிக்டேட்டர்' என்று சொல்லுவதான ஏக தலைவருமான ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் (ஒத்துழையாமை) பகிஷ்காரம் என்பது சட்ட விரோதம் என்று சொன்னார்.

ஆகவே, பஞ்சாபில் குழந்தை குட்டிகளுடன் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களைக்கொண்ட ஒரு பெருங் கூட்டத்தில், முன்பின் எச்சரிக்கை இல்லாமல் பின்புறமாய் வந்து ஓடவிடாமல் தடுத்து, மிஷின் பீரங்கி வைத்து, பட்டாஸ் சுடுவதுபோல சடபுட, சடபுட என்று குண்டுகளைப் பொழிந்து மக்களைக் கொன்றதும், தண்ணீர்க் குழாய்களையும் காந்த விளக்குகளையும் நிறுத்தித் தெருவில் மக்கள் வயிற்றினால் ஊர்ந்து போகும்படி சொன்னதும், மக்களை மூக்கை நிலத்தில் தேய்த்ததும், முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தினதும், நொண்டி அடித்து நடக்கும்படி கட்டளையிட்டதும், பெண்கள் கற்பை அழித்ததும், சகோதரிகளை நிர்வாணமாக்கி மர்மஸ்தானத்தில் கோலைக் குத்தினதும்— ஆகிய காரியங்களை இந்தியாவின் சுயமரியாதைக்கு பங்கம் என்று நினைக்காமலும்; வேறு சிலர் அப்படி நினைத்தும் அதற்குப் பரிகாரம் செய்ய ஏற்படுத்திய பகிஷ்காரங்களுக்குக் கட்டுப்படாமலும்; எதிரிகளுக்கு உளவாயிருந்து கூலி வாங்கினதுமான இந்தத் துரோகிகள், வஞ்சகர்கள், காட்டிக்கொடுப்பவர்கள், அயோக்கியர்கள் இப்போது தங்களுக்குத் திடீரென்று சுயமரியாதை ஞானம் வந்துவிட்டது என்று சொன்னால், கடுகளவு மூளையுள்ளவனாவது இவற்றை நம்ப முடியுமா என்றுதான் கேட்கின்றோம்.

குறிப்பாகப் பேசுமிடத்தில், இந்தப் பகிஷ்காரத்தைக் கிளப்பியதில் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களது வயிற்றுப் பிழைப்புக்காக எந்த எந்த வழியில் தங்கள் சுயமரியாதையை விற்றுப் பிழைக்கின்றார்கள் என்பதும், தங்கள் சுயநலங்களுக்காக எந்தெந்த விதத்தில் மதத்தின் பேராலும், அரசியலின் பேராலும் எத்தனை கோடி மக்களின் சுயமரியாதையைக் கெடுத்து வாழ்கின்றார்கள் என்பதும், இந்திய நாட்டுக்கு வந்த எந்த அன்னிய ஆட்சியாவது இந்த பகிஷ்காரப் பார்ப்பனக் கூட்டத்தின் உள் உளவும் காட்டிக் கொடுக்கும் தன்மையும் இல்லாமல் வர முடிந்ததா என்பதும்—அறியாதார்கள் யார் என்றே கேட்கின்றோம்.

ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டதானது எந்த விதத்திலாவது இந்தியாவின் சுயமரியாதைக்கு விரோதமானது என்று இந்தப் பார்ப்பனக் கூட்டத்தாராவது,

பெசன்டம்மைக் கூட்டத்தாராவது, மற்றும் வேறு எந்த யோக்கியராவது உண்மையில் நினைப்பார்களானால், அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய யோக்கியதை என்ன என்பதை யாவது சற்று யோசித்துப் பாருங்கள் என்று வேண்டிக் கொள்கின்றோம்.

ராயல் கமிஷன் யாரால் ஏற்படுத்தப்பட்டது? பிரிட்டிஷ் பார்லிமெண்டாரால். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்பவர்கள் யார் என்றால், நம் நாட்டை ஆளுவதற்கு ஏற்பட்ட பிரிட்டிஷ் ஜனங்களின் பிரதிநிதிகள். ஆகவே, அவர்களுடைய நடவடிக்கையை நாம் ஒப்புக்கொள்ளவில்லையானால் அல்லது அவர்களது நடவடிக்கை நமக்கு சுயமரியாதைக்கு விரோதம் என்பதானால் நாம் செய்யவேண்டிய காரியம் என்ன? அவர்கள் ஏற்படுத்திய சட்டசபையில் அரைக்ஷணம் உட்கார்ந்திருக்கலாமா? அவர்கள் ஏற்படுத்திய உத்தியோகத் தில், அரை விநாடி இருக்கலாமா? அதற்காக அவர்கள் கொடுக்கும் காசில் ஒரு சின்னக் காசு பெறலாமா? அவர்களின் இம் மாதிரியான, நமது சுயமரியாதைக்கு விரோதமான ஆட்சியை நடத்த நாம் அடிமையாகப் பதிவு செய்துகொள்ளலாமா? அவர்கள் ஏற்படுத்திய கோர்ட்டுகளில் அந்தக் கூட்டத்தாரால் ஏற்படுத்திய அதிகாரிகளிடத்தில் போய் நின்று கொண்டு, 'கடவுளே! பிரபுவே! கனம்மணியவான்களே!' என்று கும்பிடு போட்டுக் கெஞ்சும் வக்கீல் உத்தியோகத்தில் ஒரு இமை நேரமாவது இருக்கலாமா? ஆகவே, இதுபோன்ற வைகளை யோசித்துப் பார்த்தால், இப்போது பகிஷ்காரத்தை ஒரு வாயில் பேசிக்கொண்டு, மற்றொரு வாயில் மேற்படி காரியங்களைச் செய்துகொண்டு இருக்கும் கூட்டத்தார் யோக்கியர்கள் என்று யாராவது நம்பமுடியுமா என்றும், அப்படி நம்புகிறவர்களும் அவர்களைப் பின்பற்றுகின்றவர்களும் அறிவாளிகளாகவும் யோக்கியர்களாகவும் இருக்கக் கூடுமா என்றும் கேட்கின்றோம்.

பார்ப்பனர்களின் சுயமரியாதை, யோக்கியம், நாணயம் ஆகிய இவைகளின் தத்துவம், 'கவுகத்தி காங்கிரஸ்' தீர்மானத்திற்குக் கொடுத்த மதிப்பையும், பார்ப்பன ரல்லாதார் சிலர் காங்கிரசில் சேர எண்ணி வந்தவர்களை நடத்திய மாதிரியையும், சென்னை முனிசிபல் தலைவர் தேர்தலையும் கவனித்த எந்தக் கண்மண் உருண்டைக்கும் விளங்காமல் போகாது.

சென்னையில் உண்மையைத் தைரியமாய் எடுத்துச் சொல்லவோ, பகுத்தறிவுடன் நடந்துகொள்ளவோ பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகள்கூடப் பயப்படுகின்றன. ஆன போதிலும், இது விஷயத்தில் 'சைபுல் இஸ்லா'மும், 'நவசக்தி'யும் தைரியமாய்த் தங்கள் கருத்தை வெளிப்படுத்தி இருப்பதற்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம். 'சைபுல் இஸ்லாம்' எழுதியிருப்பதை வேறு இடத்தில் குறிப்பிட் டிருக்கின்றோம். 'நவசக்தி' எழுதுவதாவது:—

'பகிஷ்காரம், பகிஷ்காரம் என்று கூச்சலிடுவது சூழ்ச்சியின்பாற் பட்டதாகும். முன்னே உருக்கொண்ட பல கமிஷன்களில் இந்தியர் சிலர் அங்கம் பெற்றதின் பயன் என்னவாயிற்று? பகிஷ்காரம் என்னும் சொல்லைக் கேட்டுச் சகோதரர்கள் ஏமாறலாகாது என்று எச்சரிக்கை வழங்குகின்றோம்' என்று குறிப்பிட்டிருக்கின்றது.

எனவே, நம் நாட்டிடை இதுசமயம் தோன்றியிருக்கும் பகிஷ்கார இயக்கமானது பார்ப்பனர்களின் மற்றொரு சூழ்ச்சி என்பதையும், இதில் கலப்பது மக்களுக்கும் குறிப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் தற்கொலையாயிருக்கும் என்பதையும் தெரிவிப்பதுடன், பார்ப்பனரல்லாதாரிலும் சிலர் பார்ப்பனர் ஓலமிடும் பகிஷ்காரத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமான முதலியார்கள், கந்தசாமிகள், வரதராஜுலுக்கள் போன் றோர்களை நம்பிக் குழியில் விழுந்துவிடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்கின்றோம்.

[தலையங்கம்—'குடிஅரசு' 27-11-1927]

8. சட்டசபை அங்கத்தினர்களுக்கு

புதிய சட்டசபை கூடி சுமார் ஒரு வருடமாகின்றது. இந்த ஒரு வருட காலத்தில் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குச் சட்டசபையின் மூலம் நிகழ்ந்த நன்மைகள் என்னவென்று பார்ப்போமானால், ஒன்றுமில்லை என்று சொல்லவேண்டியதுடன், பல கெடுதிகள் நடந்திருப்பதாகவும் சொல்லாமலிருக்க முடியாது.

புது சட்டசபை கூடியவுடன் முதன் முதல் நடந்த சங்கதி பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தில் இருந்த தாலுக்கா, ஜில்லா போர்டுகளைப் பார்ப்பன ஆதிக்கத்திற்குக் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. அதிலும், பார்ப்பனர்களே சிறிது வெற்றி பெற்றார்கள்.

அடுத்தபடியாக, 'ஜஸ்டிஸ்' மந்திரிகள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த சர்வகலாசாலை (University) சட்டத்தைத் திருத்தி, அந்த இலாக்கா முழுவதும் பார்ப்பனமயமாக்க ஸ்ரீ சத்தியமூர்த்தியால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு சட்டசபையில் இருக்கிறது.

மூன்றாவதாக, பார்ப்பனரல்லாதாரை ஒழிக்கப் பெரிதும் போராடிப் பாடுபட்டு வருவதாகிய வருணாசிரம தர்மத்திற்குச் சட்டசபை ஆதரவளித்து வருவதற்கு அறிகுறியாக, பிராமணன்–பஞ்சமன் என்கின்ற பாகுபாடுகளுக்கு ஆதாரம் கற்பிக்கப்பட்டது. இன்னும் இதுபோன்ற மற்றும் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் அவ்வளவும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமானதும், பார்ப்பனரல்லாதார்களுக்குப் பிரதிகூலமும் கொடுமையும் இழிவுமானவை என்பதில் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் யாருக்கும் சந்தேகமிருக்காது.

இது நிற்க, பார்ப்பனரல்லாதார்களுக்கு அனுகூலமாய் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதாவது, 'கோயில்களின் பேரால் சில பெண்களுக்குப் பொட்டுக்கட்டி விபச்சாரத்திற்கு விடும் வழக்கத்தை நிறுத்த ஒரு சட்டம் கொண்டுவரும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றது' என்கின்ற தீர்மானம். இது நிறைவேறி இருந்தாலும், காரியத்தில் ஒரு பலனையும் கொடுக்கத் தக்கதல்லவென்றே சொல்லுவோம். சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் காரியம் என்ன பலனடையும் என்பது யாவருக்கும் தெரிந்தது தான். அதுவும் பார்ப்பனர் சட்டமெம்பராய் இருக்கும் காலத்தில் என்ன காரியம் நடைபெறக்கூடும் என்பதும் நன்றாய்த் தெரிந்த விஷயந்தான். இத் தீர்மானம் கூடாது என்பதற்குப் பார்ப்பன சூழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இதைத் தவிர, வேறு எவ்வித முக்கியத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டதாகவும் தெரியவில்லை. 4, 5 முறை சட்டசபை கூடியாகிவிட்டது. இதற்குள் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை, பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படவில்லை. பார்ப்பனர்கள் சுமார் 15 பேர்கள் தான் சட்டசபையில் உண்டு; பார்ப்பனரல்லாதார் புற்றீசல் போல் பலபேர் இருக்கின்றார்கள்; இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காகவே சட்டசபைக்குப் போவதாகப் பறைசாற்றிப் பெரிய கிளர்ச்சி செய்து பார்ப்பனரல்லாதாரின் ஓட்டுக்களைப் பெற்றுப் போனவர்கள். இதுவரை என்ன செய்தார்கள்? எத்தனை தீர்மானங்கள் கொண்டு போனார்கள்? என்று கேட்கின்றோம். மந்திரி வேலைக்குப் பிரயத்தனப்பட்டதும், முடியாமல் போன பிறகு மந்திரிகளுடன் சண்டை போட்டதும், மந்திரிகளை மிரட்டி நியமனங்கள் பெற்றதும் அல்லாமல் வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது என்று பாமரமக்கள் நினைக்கும்படியாகத்தானே இருக்கின்றது? அந்த காரியங்களைத்தானே பார்ப்பனர்களும் செய்து வருகின்றார்கள்? பார்ப்பன சூழ்ச்சிகளை எதிர்த்து வருவதை ஒரு வெற்றியாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும், இதுவேதானா நமது இலட்சியம் என்று கேட்கின்றோம்.

எத்தனை மாநாடுகளில் நமது நலத்தைக் குறித்து எவ்வளவு தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? அத் தீர்மானங்கள் அமுலில் வருவதற்குச் சட்ட சம்பந்தமான ஆதரவுகள்

வேண்டியவைகளுக்குச் சட்டசபை மெம்பர்கள் ஆதரவுபெற முயற்சித்தார்களா? ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் அக்கிரமங்களை ஒழிக்க ஏதாவது முயற்சித்தார்களா? பார்ப்பன ரல்லாதார்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லாத இலாக்காக்களில் பிரதிநிதித்துவம் கிடைக்க முயற்சித்தார்களா? என்று கேட்கின்றோம். ஒரு சமூகத்திற்கே பிரதிநிதிகளாகப் போய், தங்கள் காரியங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டார்கள் என்று சொல்லும்படி நடந்து கொள்ளுவது யோக்கியப்பொறுப்பாகுமா? பார்ப்பன மெம்பர்கள் வெகு சொற்பமாய் இருந்தாலும் அவர்களது சமூக முன்னேற்றத்திற்கும், நமது சமூகத்தின் முன்னேற்றத்தை தடுத்து இழிவு படுத்தவும் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றார்கள்? அந்த உணர்ச்சி ஏன் பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கக்கூடாது என்று கேட்கின்றோம். 'காங்கிரஸ்', 'தேசியம்' என்பவைகள் எப்படிப் பார்ப்பனர்கள் உத்தியோகம் சம்பாதிக்கும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ, பார்ப்பன ஆதிக்கத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் ஸ்தாபனங்களாக இருக்கின்றதோ, அது போலவே பார்ப்பனரிடம் இருக்கும் உத்தியோகங்களை பார்ப்பனரல்லாதார்களில் யாரோ சிலர் கைப்பற்றக்கூடியதாக மாத்திரம் இருக்கின்றது என்று நமது எதிரிகள் கருதும்படியாகவே நடந்துகொண்டு வந்திருக்கிறார்களே யல்லாமல்—பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் பாடுபடும் கருத்தும் வர வர மறைந்து வருகிறது. எவ்வளவோ ஊக்கமும் எழுச்சியும் உள்ள இந்தக் காலத்தில்கூட ஒரு காரியமும் செய்யமுடியவில்லையானால் இனி எப்போதுதான் சாதிக்கமுடியும்? ஆதலால், பார்ப்பனரல்லாத சட்டசபை மெம்பர்கள் ஒரு கூட்டம் கூட்டி, மீதி உள்ள காலத்திற்குள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக என்னென்ன மசோதா கொண்டுபோக வேண்டியது என்று ஒரு முடிவிற்கு வந்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதுவரை செய்த வேலைகள் கண்டிப்பாய்த் திருப்தியற்றதென்றும், அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்வது மாத்திரம் ஓட்டுப் பெறக்கூடிய யோக்கியதாபாத்திரமாகாதென்றும், செய்த வேலையைக் காட்டவேண்டிய நிலைமை முதலியவைகள் கண்டிப்பாய் நேரிடுமென்றும் இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம்.

[அறிக்கை—'குடிஅரசு' 11-12-1927]

9. ஜஸ்டிஸ்—பார்ப்பனரல்லாதார் இயக்கம்

தென்னிந்திய நல உரிமைச் சங்க—அதாவது ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாடு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நெல்லூரில் நடத்தப்படப் போகின்றது. இம் மாநாடானது 1927ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் மதுரையில் கூட்டப்பட்ட பிறகும், அதே ஆண்டு மத்தியில் கோயம்புத்தூரில் விசேஷ மாநாடாகக் கூட்டப்பட்ட பிறகும், சுமார் 2 வருஷம் கழித்து இப்போது கூட்டப்படுகின்றதென்றாலும் இவ்வியக்கத் தலைவர் திரு. பனகல் அரசர் காலமாகி சுமார் 9 மாதத்திற்குப் பிறகு தலைவர் தேர்தலையே முக்கிய காரணமாகக் கொண்டு கூட்டப்படுகின்றதாகும்.

இந்த இயக்கமானது ஆதியில் மக்களின் எல்லா சமூக சமத்துவத்தையும் உரிமையையும், சம சந்தர்ப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது என்பதாகும். எனினும் இவ் வியக்கம் வெற்றிபெற்றால், இந்தியாவில் சமூகத்துறையிலும் அரசியல்துறையிலும் உயர்வுபெற்று ஏகபோக ஆதிக்கம் செலுத்திவரும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்துவிடுமே என்ற ஆத்திரத்தால், பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவ் வியக்கத்தின் கொள்கைகளைத் திரித்துக் கூறி, இவ் வியக்கத்தினிடம் பாமர மக்களுக்குத் துவேஷம் உண்டாகும்படி செய்து, இவ் வியக்கத் தலைவர்களுக்கும் பல வித தீங்குகள் செய்து, மிக்க தொல்லைகளை விளைவித்து வந்தார்கள். ஆனபோதிலும், இவ் வியக்கத் தலைவர்கள் எதற்கும் பயப்படாமல் உறுதியுடன் நின்று, இவ் வியக்கத்தை அழிய

விடாமல் காப்பாற்றி வந்ததுடன், அதன்மூலம் மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியையும் ஊட்டி வந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவ் வியக்கம் வெறும் அரசாங்க ஊதியத்தை மாத்திரம் கைப்பற்றுவதற்காக ஏற்பட்ட உத்தியோக வேட்டை இயக்கம் என்றும், தேசத் துரோக இயக்கமென்றும், 'சர்க்கார் தாசர்கள்' இயக்கம் என்றும் எவ்வளவோ தூற்றப்பட்டும், தென்னிந்திய பாமர மக்களினுடைய செல்வாக்கையும் மதிப்பையும் பின்பற்றுதலையும் பெற்று விளங்கி வருகின்றது.

இதற்கு உதாரணம் வேண்டுமானால், தென்னாட்டில் சட்டசபை மந்திரிகள் முதல் ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள், தலைவர்கள் ஆகியவர்களும், கிராம பஞ்சாயத்து, கூட்டுறவு, முதலிய சாதாரண ஸ்தாபனங்களும் இவ் வியக்கம் ஏற்படுத்துவதற்கு முன் எல்லாம் பார்ப்பன மயமாகவே இருந்ததானவை, இப்போது இவ் வியக்கத்திற்குப் பிறகு பார்ப்பனரல்லாதார்கள் அவரவர்கள் ஜனத்தொகை விகிதப்படி இல்லையானாலும், சற்றேறக்குறையவாவது பங்கு பெற்று ஆதிக்கம் பெற்றிருப்பதே போதுமானதாகும். இதிலிருந்து, அரசாங்கத் தயவிலேயே இந்த இயக்கம் இருப்பதாக நமது எதிரிகள் சொல்லுவது எவ்வளவு புரட்டு என்பது இனிது விளங்கும்.

எப்படி எனில், அரசாங்கத் தயவால் அரசாங்க உத்தியோகங்கள் மட்டுந்தான் கிடைக்குமே ஒழியே, தேர்தலில் பொது மக்கள் ஓட்டுகள் பெற்று அடையும்படியான பதவிகள் பெற ஒருகாலமும் முடியவே முடியாது. அன்றியும், இவைகள் தாராளமான பொதுஜன ஆதரவும் அனுதாபமும் இருந்தால்தான் கிடைக்கும். எனவே, இவ் வியக்கம் இப்படிப்பட்ட பொதுஜன தேர்தல் ஸ்தாபனங்களைப் பெற்று அந்த ஸ்தாபனங்களையெல்லாம் கைப்பற்றி இருப்பதிலிருந்தே பொதுஜன ஆதரவு முழுவதும் இவ் வியக்கத்திற்கு இருப்பது தானாக விளங்கும். ஆகவே, ஜஸ்டிஸ் இயக்கம் அதன் எதிரிகள் சொல்லுவது போல் 'சர்க்கார் தாசர்கள்' இயக்கமாக இருந்தால் இவ்வித பொதுஜன ஆதரவு கிடைத்திருக்குமா என்பதையும் யோசித்தால், அறிவாளிகளும் யோக்கியர்களும் இதை சர்க்கார் தாசர் இயக்கம் என்று சொல்ல ஒருபோதும் முன்வர மாட்டார்கள்.

பார்ப்பனரல்லாதார்கள் இனியும் மத சம்பந்தமான புராணங்களிலும், குருட்டு நம்பிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு குருட்டு நம்பிக்கையிலும், புளுகுப் புராணங்களிலும் ஈடுபட்டிருக்கின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களை மேதாவிகள் என்றும், பெரியவர்கள் என்றும் நினைத்துக்கொண்டிருப்பார்கள். மத சம்பந்தமாய் எப்படி அவர்கள் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டு, பார்ப்பனர்களையும் அவர்களது கட்டுப்பாடான சூழ்ச்சி இயக்கங்களையும் வழிகாட்டிகளாகவும், ஆதாரங்களாகவும் கொண்டு பின்பற்றுகின்றார்களோ, அதேபோல் அரசியல் விஷயத்திலும் குருட்டு நம்பிக்கை உடையவர்களாகி, அவர்களது கட்டுப்பாடான கொள்கைகளிலும் சூழ்ச்சி இயக்கங்களிலும் நம்பிக்கை வைத்து, அவர்களை வழிகாட்டியாக ஏற்று, கண்மூடித்தனமாகப் பின்பற்றி வருகின்றார்கள். எனவே, மூடநம்பிக்கையிலிருந்தும், கண்மூடிப் பின்பற்றும் நடவடிக்கைகளிலிருந்தும் என்று விடுதலை பெறுகின்றார்களோ—அன்றுதான், அவர்கள் பார்ப்பன மதப் புரட்டுகளிலிருந்தும் அரசியல் புரட்டுகளிலிருந்தும் விடுதலையடைய முடியும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களை இவ் வியக்கத்தில் சேர்த்தால் அவ் வியக்கம் அன்றே—தேன்கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டதுபோல், இயக்கம் செத்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும் என்பதைமட்டும் அழுத்தம் திருத்தமாக உறுதியாய்ச் சொல்லுவோம். பார்ப்பனரல்லாத தலைவர்களில் சிலர் இவ் வியக்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதற்குப் பலவிதமான அரசியல் காரணங்களைச் சொல்லி, நம்மை வசப்படுத்த முயற்சிக்கக் கூடும். அரசியல் காரணங்களே முக்கியமல்ல. அன்றியும், பார்ப்பனருக்குள்ள அரசியல் பங்கை மோசம்

செய்யவேண்டும் என்றும் நாம் சொல்வதில்லை. நமது கொள்கைக்கும் நன்மைக்கும் விரோதமில்லாத பார்ப்பனர்களுக்கு அவர்களது பங்கைக் கொடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம். அரசியலில் நன்மையான காரியங்களுக்கு அவர்களுடன் ஒத்துழைக்கவும், அவர்களது ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கின்றோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நமது இயக்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளாத தாலேயே, அரசியல் தத்துவம் கெட்டுப் போவதாயிருந்தால் நமக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலையில்லை.

கடைசியாக நாம் ஒன்று சொல்லுகின்றோம்: அதாவது, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டு விட்டால் அது தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை மாத்திரம் பாதிப்பது என்பதல்லாமல் சுயமரியாதை இயக்கத்தையும், பார்ப்பனரல்லாதார் வாலிபர் இயக்கத்தையும் சிறிதாவது பாதிக்காமல் போகாது என்பதே. மேற்கண்ட இவ்விரு இயக்கங்களிலும் பற்றுள்ளவர் களும் பார்ப்பனர்களைச் சேர்க்காமல் பார்த்துக்கொள்வதுடன், மேற்கண்ட இரண்டு கொள்கைகளையும்—அதாவது, சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும், வாலிபர் இயக்கக் கொள்கைகளையும் நிறைவேற்ற முயற்சிக்கவேண்டியது முக்கிய கடமையாகும்.

[தலையங்கம்—'குடி அரசு' 22-9-1929]

இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம். அதாவது, எவை தெய்வங்கள்? அவற்றில் எந்தத் தெய்வங்களை என்ன குற்றம் சொன்னோம்? யார் அவதார புருஷர்கள்? அவர்களின் எந்தக் குணத்தைக் குறைசொன்னோம்? எது புனித ஸ்தலம்? அதை எப்படிக் குற்றம் சொன்னோம்? என்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது கூறாமலும், நாம் சொன்ன தாகச் சொல்லப்படும் குற்றங்களுக்கு ஒரு சமாதானமும் சொல்லாமலும், சும்மா பாமர மக்களின் முட்டாள்தனத்தையும் வெறியையும் தனக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு, தனது மனதாரக் கூசாய்ப்பேசி பாமர மக்களை நம்மீது ஏவிவிட முயற்சிப்பது பேடித்தனமா? அல்லது, நாம் உள்ளதை உள்ளபடி நினைத்து, நினைத்தபடி வெளியில் ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்லுவது பேடித்தனமா? என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தவிர, 'பிராமணர்—பிராமணரல்லாதார் சண்டை இல்லாவிட்டால் தென்னாட்டுப் பிராமணர்கள் பாலிய விவாகத் தடை மசோதாவை எதிர்த்திருக்கமாட்டார்கள்' என்று சொல்லுகின்றார் திரு. இராஜகோபாலாச்சாரியார். இது உண்மையாக இருக்கு மானால், பிராமணர்களின் மனப்பான்மையின் யோக்கியதையை அறிவதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா என்று கேட்கின்றோம். அதாவது, நமது நாட்டில் என்ன காரியத் திற்காகப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் சண்டை இருக்கின்றதோ, அதற்காகத்தான் பார்ப்பனர்களுடைய சீர்திருத்த எதிர்ப்பும் இருக்கிறது என்று சொல்லுகின்றார். நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். பார்ப்பனரல்லாதார், பார்ப்பனருடன் போராடுவதன் முக்கிய தத்துவம், பார்ப்பனரல்லாதாரைவிடப் பார்ப்பனன் பிறப்பினால் மேலானவன் என்கின்ற ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதற்காகவே யொழிய வேறல்ல. திரு. இராஜ கோபாலாச்சாரியார் சொல்லுகின்றபடியே, பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே—அதாவது, பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாகவே எவ்வித சீர்திருத்தங் களையும் எதிர்க்கின்றார்கள் என்றாகிறது. இது தன்னை அறியாமல் சொன்ன உண்மை என்றே கருதுகிறோம். கடைசியாக, பொது ஜனங்களுக்கு ஒன்று சொல்லுகிறோம்:

நாட்டில் எந்தச் சீர்திருத்தமோ, இயக்கமோ ஏற்பட்டாலும் பார்ப்பனர்கள் அதை நாஸ்திகம் என்றும், தெய்வ நிந்தனை என்றும் புண்ணிய ஸ்தல நிந்தனை என்றும், சாஸ்திர நிந்தனை என்றும், தேசத் துரோகம் என்றும், மதத் துவேஷம் என்றும், சாதித் துவேஷம்

என்றும் பழிகளைச் சுமத்தி, பாமர மக்களை ஏய்த்தே இதுவரை தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றார்கள்.

[தலையங்கம்—'குடி அரசு' 27-10-1929]

10. பார்ப்பன ஆதிக்கம் ஒழிப்பு நாள்

சுயமரியாதை இயக்கத்தின் சுமார் 10 வருஷ கால வேலையின் பயனாய், பார்ப்பனீயம் ஒரு அளவுக்காவது ஆட்டம் கொடுத்துவிட்ட விஷயம் நாம் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லையென்றே கருதுகிறோம்.

ஆனபோதிலும், சமுதாய விஷயங்களில் பார்ப்பனீயம் எவ்வளவு பகிஷ்கரிக்கப் பட்டிருக்கின்றதோ, அதில் 8-ல் ஒரு பங்குகூட அரசியல் விஷயத்தில் பகிஷ்கரிக்கப் பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

அரசியலில் ஜஸ்டிஸ் கட்சி, பார்ப்பனர்களுக்கு விரோதமாய் வேலைசெய்வது என்று பெயர் வைத்துக்கொண்டிருந்தாலும், அதன் தலைவர்கள் என்பவர்கள் பலர் தனிப்பட்ட முறையில் தங்கள் சுயநலத்திற்காக எதையும் விற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தோழர் முத்தையா முதலியார் அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத் திட்டம் அரசாங்க உத்தரவு மூலம் போட்ட காரணத்திற்காகவே, பார்ப்பனர்கள் அவரை ஒழிக்கச் செய்த சதியில், சில ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் உள் உளவாய் இருந்ததோடு, பார்ப்பன ரல்லாதார் கட்சியின் பயனாய் முதல் மந்திரி ஸ்தானம் பெற்ற தோழர் முனுசாமி நாயுடு அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் இருந்து வந்ததுடன், தனது ஸ்தானத்தைக் காப்பாற்றப் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவேண்டிய நிலையும் அடைந்தார்; அதன் பயனையும் அடைந்தார் என்றாலும், இப்போது ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளவும் ஏற்பாடாகிவருகிறது.

இது எப்படியோ இருக்கட்டும். தோழர் முத்தையா முதலியார் அவர்கள் ஏற்படுத்திய வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவை ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கம் இப்போது மறுபடியும் பிரசுரித்திருப்பது போற்றத்தக்கதேயாகும்.

இன்றையதினம் எந்த ஊரில், டவுனில் எடுத்துக்கொண்டாலும் வாசல் கூட்டி, பியூன் ஆகியவர்கள் போன்ற உத்தியோகம்போக, பாக்கி உத்தியோகங்களில் பார்ப்பனர்கள் தாம் 100–க்கு 80 பேர், 90 பேர்கள் இருந்து வருகிறார்கள். அதிலும், நீதி இலாக்காவாகிய முனிசீப்பு, சப் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ் முதலியவைகளும், நிர்வாக இலாக்காவாகிய போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ் பெக்டர் ஆகியவைகளிலும் பார்ப்பன ஆதிக்கமே தலைசிறந்து நிற்பதுடன், பார்ப்பன ரல்லாதார் முயற்சியையும் முன்னேற்றத்தையும், ஒழிக்கவும் தடுக்கவும் அவைகளின் மூலம் எவ்வளவு காரியம் செய்யவேண்டுமோ அவ்வளவு காரியங்கள், நெஞ்சில் ஈரமில்லாமல் வன்னெஞ்சத்துடன், ஆங்காங்கு செய்யப்பட்டு வருகின்றதானது எவரும் அறியாததல்ல.

அரசாங்கத்தார் ஒவ்வொரு இடத்திலும் உத்தியோகங்களில் பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார் நிலைமை சரிவரக் காக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அதிகாரிகளைக் குறைந்த அளவாவது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதித்துவம் கவனிக்கப்பட இடமிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு ஊரில் டிப்டி-கலெக்டர் பார்ப்பனராயிருந்தால் தாசில்தார் பார்ப்பனரல்லாதாராயிருக்கும்படியும், சப்-இன்ஸ்பெக்டர் பார்ப்பனராயிருந்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்ப்பனரல்லாதாராயும், ஜில்லா ஜட்ஜ் பார்ப்பனராயிருந்தால் சப் ஜட்ஜ்

பார்ப்பனரல்லாதாரையும், மற்றும் இதுபோல் அதிகாரங்கள் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

அப்படியில்லாதவரை, அரசியலிலானாலும் தேசியத்திலானாலும் வகுப்புணர்ச்சி தாண்டவமாடும் இக் காலத்தில் பல வகுப்பு மக்களுக்கு பந்தோபஸ்து இருக்குமென்று கருதமுடியாது.

அரசாங்கம் சம்பந்தமில்லாத வேறு பல விஷயங்களில் கூடியவரை பார்ப்பனரல்லாதார்கள் விழித்துக்கொண்டார்கள் என்றே சொல்லலாம்.

உதாரணமாக, இப்போது நடைபெற்றுவரும் முனிசிபல் எலக்ஷனில் பார்ப்பனக் கோட்டைகளாயிருந்த சேலம், திருப்பூர் முதலிய இடங்களில் ஒரு பார்ப்பனர்கூட வர முடியாமல் போனதைப் பார்த்தால் அங்குள்ள காங்கிரஸ் ஆதிக்கமும் பார்ப்பன ஆதிக்கமும் எவ்வளவு என்பது விளங்கும்.

பெண்களும் ஆதித் திராவிடர்களும் ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் ஸ்தானம் பெற்றார்கள் என்றால், அது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் பெருமையாலேயே அல்லாமல், ஜனங்களுக்கு சமரச உணர்ச்சி ஏற்பட்டல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டில் வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அதிலும் தங்களைப் பிறவியிலேயே உயர்ந்த சாதி என்று கருதிக்கொண்டு மற்றவர்களைத் தாழ்ந்த சாதியாகக் கருதிக்கொண்டிருக்கிறவர்களிடத்தில்—தாழ்ந்த சாதிக்காரர்களாய்க் கருதப்படுகிறவர்கள் துவேஷமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பது மனித இயற்கைக்கு விரோதமானது.

உதாரணமாக, ஒரு பிராமணன் என்பவனிடம் ஒரு சூத்திரன் என்பவன் துவேஷமாயிருக்கிறான் என்பது ஒரு நாளும் ஆச்சரியமான காரியமாகாது. மற்றெது ஆச்சரியமான காரியம் ஆகுமென்றால், ஒரு பிராமணன் என்பவனிடம் ஒரு சூத்திரன் என்று அழைக்கப் படுகிறவன்—தீண்டப்படாதவன் என்று அழைக்கப்படுகிறவன் துவேஷமில்லாமல், வெறுப்பு இல்லாமல் இருந்து வருவதுதான் ஆச்சரியப்படத் தக்கதாகும்.

ஆதலால், சாதிப் பிரிவு சம்பந்தமான உயர்வு, தாழ்வு இருக்கும்வரை நாட்டில் துவேஷம், வெறுப்பு, வகுப்புணர்ச்சி ஆகிய காரியங்களும், ஒரு வகுப்பாரால் ஒரு வகுப்பு கஷ்டமடையும் காரியங்களும் எதிர்பார்த்துதான் இருக்க வேண்டும்.

ஒரு பார்ப்பனரல்லாதார் ஆதிக்கமுள்ள ஸ்தாபனங்களிலிருந்து, தகுந்த ஒழுக்கக் குறைவுள்பட ஒரு குற்றத்துக்காக ஒரு பார்ப்பனரை நீக்கிவிட்டால், அக்கிரகாரம் முதல் கொண்டு சர்க்கார் அதிகாரிகள்—அய்கோர்ட்டு வரை அந்த ஸ்தாபனத்தின்மீது பழிவாங்க நினைக்கிறார்கள். 'பிராமணத் துவேஷம், பிராமணத் துவேஷம்' என்று கூப்பாடு போடுகிறார்கள்.

பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தில் இருக்கிற எந்த ஸ்தாபனங்களிலாவது 100-க்கு 10 வீதமாவது பார்ப்பனரல்லாதார்களுக்கு வேலை கொடுக்கிறார்களா எனப் பார்த்தால், வகுப்பு துவேஷம் யாரிடத்தில் இருக்கிறது என்பது விளங்கும்.

ஆதலால், பார்ப்பனரல்லாத மக்கள் இனியாகிலும் இவ் விஷயங்களை உணர்ந்து, அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ள முயற்சிப்பதுடன், காந்தி ஜெயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, ஹரிஜன நாள், ஏகாதிபத்திய ஒழிப்பு நாள், மே தினம் என்பது போன்ற நாட்களை வருஷத்துக்கு ஒருநாள் கொண்டாடுவதுபோல், 'பார்ப்பன ஆதிக்கம் ஒழிப்பு நாள்' என்பதாக வருஷத்தில் ஒருநாள் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்—அதை

அடுத்துவரும் தீபாவளிக்கு அடுத்த நாளோ அல்லது முந்திய நாளோ வைத்துக்கொள்வது நல்லது என்றும் அபிப்பிராயப்படுகிறோம்.

இத் தினங்களில் ஆங்காங்கு கூட்டம் போட்டு, பார்ப்பன ஆதிக்கக் கொடுமை சமுதாயத்திலும் அரசியலிலும் இருப்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டி, தீர்மானங்களை நிறைவேற்றி. அரசாங்கத்துக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பவேண்டிய வேலையை அத் தினநாள் கொண்டாட்ட வேலையாக வைத்துக்கொள்ளலாம் என்று அபிப்பிராயப்படுகின்றோம். இன்ன நாள் என்பதைப் பின்னால் உறுதிப்படுத்துகிறோம்.

[தலையங்கம்—'பகுத்தறிவு' 30-9-1934]

11. ஜஸ்டிஸ் கட்சி சாதித்தது என்ன ?

தோழர்களே!

என்னிடம், இங்குக் கேட்கப்பட்டுள்ள சில கேள்விகளுக்குப் பதில் கூறுகிறேன் :

காங்கிரஸ்காரர் : நீங்கள் ஆதரிக்கும் R. K. சண்முகம் செட்டியார் மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரா இல்லையா?

ஈ. வெ. ரா : ஆம் ; மேள தாளத்தோடு வாங்குகிறார்.

காங் : அதற்குத்தானே அவர் சட்டசபைக்குப் போகப் பார்க்கிறார்?

ஈ. வெ. ரா : ஆம். அதற்கும், அதற்கு மேற்பட்ட பதவிக்கும் போகத்தான் போகிறார். இதில் என்ன தப்பு இருக்கிறது? தோழர் பட்டேல் காங்கிரஸ்காரராய், ஒத்துழையாதாராய் இருந்து, இந்திய சட்டசபைக்குப் போய் முட்டுக்கட்டை போட்டுச் சர்க்காரை உடைத்து விடுவதாகப் பொதுஜனங்களிடம் சொல்லி, சத்தியம் செய்து கொடுத்துவிட்டு ஓட்டு வாங்கி, அங்கு போனபிறகு மாதம் 4000 ரூபாய் சம்பளத்துக்கு அடிமையாகி, சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுவதற்குப் பதிலாய் ஒழுங்காக நடத்திக் கொடுப்பதாகவும், இராஜ விஸ்வாசத்துடன் இராஜபக்தி உள்ளவராய் இருப்பதாகவும் சத்தியம் செய்து கொடுத்து, மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்கினாரா இல்லையா? ஆனால், தோழர் சண்முகம் அப்படிச் செய்யவில்லை. 'நான் முட்டுக்கட்டை போடுகிறேன்' என்று சொல்லி ஓட்டுக் கேட்கவில்லை. 'தேச பக்தர்', 'தேசிய வீரர்', 'தேசாபிமான சிங்கம்' என்கின்ற தோழர் பட்டேல் வாங்கிய சம்பளத்துக்கு மேல் ஒரு காசும் அதிகம் வாங்கவுமில்லை. இப்பொழுதாவது, காங்கிரஸ்காரர்கள் தாங்கள் இந்திய சட்ட சபைக்குப் போனால் பிரசிடெண்டு ஸ்தானம் (கிடைப்பதானால்) ஆசைப்படுவதில்லை என்றோ, தாங்கள் பிரசிடெண்டுக்கு யாருக்கும் ஓட்டுச் செய்வதில்லை யென்றோ சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். இன்னமும் இவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லப் போகிறேன். அவை உங்களுக்கு ஒரு அறிவு விருந்தாகும். அதைக் கேட்டால் உங்களுக்குப் பசி கூட ஏற்படாது.

காங் : ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியாயிற்றே; அதை நீங்கள் ஆதரிக்கலாமா?

ஈ. வெ. ரா : ஆம் ; ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சிதான். ஆனால், காங்கிரஸ்காரர்கள் 30, 40 வருடகாலமாய் ஆடிவந்த உத்தியோக வேட்டையைத்தான் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் வேட்டையாடிப் பிடிக்கிறார்களே தவிர வேறில்லை. ஆனால், காங்கிரஸ் காரியதரிசிகள், காங்கிரஸ் பிரமுகர்கள், தேசாபிமானிகள் ஆகிய சர். சி. பி. இராமசாமி அய்யர், கே. சீனிவாசய்யங்கார், வி. கிருஷ்ணசாமி அய்யர், சர். பி. எஸ். சிவசாமி அய்யர், மகா கனம் சீனிவாச சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆடிய வேட்டைகளைத்

தான் ஆடுகிறார்களேயொழிய—அவர்கள் வாங்கின சம்பளத்தைத்தான் வாங்குகிறார்களே ஒழியப் புதிய வேட்டையொன்றுமில்லை; அதிக சம்பளமொன்றுமில்லை.

மற்றும் காங்கிரஸ் தேசாபிமானிகள் தங்கள் சாதிக்கு மாத்திரமே உத்தியோக வேட்டையாடினார்கள். ஜஸ்டிஸ் தேசாபிமானிகள் தங்களுக்கும் பார்ப்பனர்களுட்பட எல்லா மக்களுக்குமாக வேட்டையாடுகிறார்கள். வேட்டையை இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டவர் ஆகிய எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். பழைய காங்கிரஸ் வேட்டைக்காரர்கள் இப்போது தங்களுக்கு வேட்டை கிடைக்கவில்லை என்கின்ற காரணத்தால் வேட்டையைப் பரிகாசம் பண்ணுகிறார்கள். இப்போதும் பல காங்கிரஸ்காரர்களை எனக்குத் தெரியும். அவர்கள் தங்கள் அண்ணன், தம்பிகளையும், சிற்றப்பன் பெரியப்பனையும், மாமன் மச்சானையும் உத்தியோக வேட்டையாட விட்டுவிட்டு தாங்களும் முயற்சி செய்து பார்த்த—வேட்டைக்கு லாயக்கில்லாதவர்களே பெரிதும் ஜெயிலுக்குப்போய் விட்டு வந்து இங்கு தேசாபிமானிகளாயிருப்பது எனக்குத் தெரியும்.

காங்: ஜஸ்டிஸ் கட்சி என்ன சாதித்தது?

ஈ. வெ. ரா.: ஜஸ்டிஸ் கட்சியானது தோழர் சி. பி. சுப்பையாவை மாகாண காங்கிரஸ் காரியதரிசி ஆக்கிற்று. இதைவிட வேறு என்ன வேண்டும்? தோழர் வரதராஜுலுவைத் 'தென்னாட்டுத் திலக'ராக்கிற்று. சென்னை மாகாண காங்கிரஸ் காரியதரிசியாகவும், பிரசிடெண்டாகவும் ஆக்கிற்று. இவை தவிர இதுவரை காங்கிரஸ் சாதித்ததையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியும் சாதித்து வருகின்றது.

காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கே உத்தியோகம், படிப்பு முதலியவை இருக்கும்படி பார்த்து வந்தது. ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கும் படி பார்த்து வருகிறது. எல்லா உத்தியோகங்களுக்கும், எல்லாப் பதவிகளுக்கும் பார்ப்பன ரல்லாதாரும் லாயக்கும் உரிமையும் உடையவர்களேயென்று செய்துகாட்டி மெய்ப்பித்து வருகின்றது.

உத்தியோக வேட்டையில் எல்லாருடைய சீட்டையும் ஒன்றாய்ப் போட்டு குலுக்கு கிறது. இன்னும் என்ன வேண்டும்?

காங்.: உத்தியோகம்தான் பெரிதா?

ஈ. வெ. ரா.: ஆம்; இதுவரை தேசாபிமானிகள், காங்கிரஸ்காரர்கள், தேசிய வீரர்கள் என்பவர்கள் பெரிதும் உத்தியோகத்தை இலட்சியமாகக் கொண்டுதான் உழைத்து வந்திருக்கிறார்கள். இப்போது, பார்ப்பனரல்லாதார் அந்தக் கொள்கையைத் தேசாபி மானமாகக் கொண்டவுடன், பார்ப்பனர்கள் அதைத் தேசத் துரோகமென்று சொல்ல வந்து விட்டார்கள். பார்ப்பனர் அனுபவித்த காலம் எவ்வளவோ, அவ்வளவு காலமும் அந்த விகிதாச்சார எண்ணிக்கைக்குத் தக்கபடியும், அவ்வளவு பணமும் பார்ப்பனரல்லா தாரும் அனுபவிக்கும் காலம் வந்துவிட்டால், பிறகு ஜஸ்டிஸ் கட்சியே நமது நாட்டிற்கு வேண்டாமென்று நானே சொல்லுவேன்.

தவிரவும் உத்தியோகங்களை வேண்டாமென்று சொல்லக்கூடாது. அதன் சம்பளங் களைக் குறைக்கும்படி சொல்லவேண்டும். உத்தியோகத்தின் மூலம்தான் அரசாங்கம் நடைபெற வேண்டும். அதைப் பெற ஒவ்வொரு பிரஜைக்கும் எந்தக் கட்சியானாலும், எந்தச் சாதியானாலும் உரிமையுண்டு.

எலக்ஷன்களிலும் உத்தியோகங்களிலும் ஒரு யோக்கியமான முறை இல்லாத காரணத்தால்தான் எலக்ஷன்கள் வரும்போதும், உத்தியோகங்கள் வரும்போதும் நாட்டில் கலவரம், கட்சிச் சண்டைகள் நடந்துகொண்டு வருகின்றன.

எப்படியானாலும் வகுப்பு சமரசமில்லாமல் நடைபெறும் தேசாபிமான வேலைகள்—காந்தியார் நடத்துவதானாலும், யார் நடத்துவதானாலும் நாணயமாயும் நியாயமாயும் உண்மையாயும் நடத்த முடியாது. அது ஏற்படுகின்றவரையில் நான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும், உத்தியோகத்தில் குறைந்திருக்கும் மக்களுக்கும் அனுகூலமாய்த்தான் இருப்பேன். அதற்காக ஆயிரம் தேசத் துரோகிகூட ஆவேன். வகுப்பு நியாயம்தான் எனக்கு எல்லாவற்றையும் விடப் பெரியது.

ஒருவன் பாடுபட்டும் பட்டினியாய்க் கிடப்பதும், ஒருவன் பாடுபடாமல் வயிறு புடைக்கத் தின்று புரளுவதும், ஒருவன் பல வேலைகளைக் கைப்பற்றித் தனது தேவைக்கு மேல் பயனடைந்து பாழாக்க, ஒருவன் செய்வதற்குக்கூட வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் திரிய—இவைகளுக்கு வகுப்பு ஆதிக்கமும், வகுப்பு வித்தியாசமும் காரணமாயிருப்பதென்றால், இவற்றை எப்படிச் சகித்துக்கொண்டு, வகுப்பைப்பற்றியே கவலையில்லாத தேசாபிமானத்தை ஒரு மனிதன் ஆதரிக்க முடியுமென்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சியை நான் ஆதரிப்பதைக் கண்டு நீங்கள் வயிற்றெரிச்சல் படுவதில் பயனொன்றுமில்லை. அது தைரியமாய் வகுப்பு நியாயத்தையும், வகுப்பு உத்தியோகங்களையும், உயர்வு தாழ்வுகளையும் ஒழிக்கச் சட்டம் செய்வதையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அமுல் நடத்துவதையும் கொள்கையாய்க் கொண்டு வேலை செய்து வருகின்றது. அதன் பயனாய் இன்று இந்த நாட்டில் எல்லா சாதியாரும் உத்தியோகம் அனுபவிக்கிறார்கள்.

கடைசியாக உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். அக் கட்சிமீது பொறாமைப்பட்டுப் பிரயோசனமொன்றுமில்லை. இன்றைய நிலையில் அதை உங்களால் அசைக்க முடியாது. அதற்குக் கெடுதி செய்ய எண்ண எண்ண, அது தேசமெல்லாம் வேரூன்றப் போகின்றது. அதன் பலக்குறைவு-குற்றம் எங்கிருக்கிறதென்பது எனக்குத் தெரியும். அதைச் சரிப்படுத்த நானும் முயற்சிக்கிறேனேயொழிய சும்மா இருக்கவில்லை. ஆனால், அது காங்கிரசில் இல்லையென்று கருதிவிடாதீர்கள்.

உங்களை ஒன்று கேட்கின்றேன். இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சியிருந்து, அது இந்த 20 வருஷ காலமாகச் செய்துவந்த அரசியல்-சமுதாய வேலையைவிட ஜஸ்டிஸ் கட்சியில்லாத வேறு மாகாணங்கள் அதிகமாகச் செய்த ஒரு காரியத்தைச் சொல்லுங்கள், பார்ப்போம். மற்ற மாகாணங்களில்லாத கெடுதி இங்கு ஏதாவது இருக்கிறதா, சொல்லுங்கள் பார்ப்போம். மற்ற மாகாண மந்திரிகள், இந்திய கவர்னர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களா?

அங்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியில்லாததால் கவர்ன்மெண்டு ஒழிந்து போய்விட்டதா? உத்தியோகங்கள், சட்டசபைகள், நிர்வாக சபைகள் காலியாகக் கிடக்கின்றனவா? தயவு செய்து யோசித்துப் பதில் கூறுங்கள்.

வீணாக இப்படி இந்தச் சூழ்ச்சிகளும், விஷமங்களும், துவேஷமும் வலுக்க வலுக்க பார்ப்பனப் பூண்டுகள் உத்தியோகங்களில் குறைந்து போவதோடு மாத்திரமல்லாமல் மறைந்து போகவும் நேரிடுமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

காங்கிரசின் யோக்கியதையும், ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையும், நாணயமாய் வெளியாக வேண்டுமானால், கம்பளிப்போட்டு எல்லோரும் உட்கார்ந்து ஒரு பொது நியாயாதிபதியை வைத்து இருவரும் பேசுவோம். ஜஸ்டிஸ் கட்சியின் அக்கிரமங்களை, நாணயத் தவறுதல்களை நீங்கள் சொல்லுங்கள். காங்கிரஸ்-பார்ப்பனர் அக்கிரமங்களை, மோசங்களை, நாணயத் தவறுதல்களை நானும் சொல்லுகிறேன். யார் சொல்லுவது சரியென்று முடிவு செய்யட்டும். இந்த நாட்டுப் பார்ப்பனர்களுடையவும், பார்ப்பனீயத்தினுடையவும், காங்கிரசினுடையவும், அரசியலினுடையவும், தேசாபிமானத்தினுடையவும்

30, 40 வருஷத்திய வண்டவாளமும் கொடிவழிப்பட்டியும் என்னிடமிருக்கிறதேயொழிய, நான் வெறும் ஆள் மாத்திரம்தானென்று கருதிக் கூப்பாடு போட்டு, மிரட்டி ஓட்டி விடலாமென்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள்.

நான் மொட்டை மரம். என்னை மிரட்டுவதற்கு உங்களிடம் சரக்கு கிடையாது. உத்தியோகமோ, பணமோ, வயிற்றுச் சோற்றுக்கு வழியோ, ஒரு பெருமையோ, கவுரவமோ எதிர்பார்த்துப் பொதுச் சேவையில் இறங்கவில்லை. நான் 6, 7 முறை ஜெயில் பார்த்தாய்விட்டது. சிவில், கிரிமினல் இரண்டும் பார்த்தாய்விட்டது. பார்ப்பனர்கள் தொல்லைகளையும், அவர்களால் கூடியமட்டிலும் செய்து பார்த்தாய்விட்டதை அனுபவித்துமாய்விட்டது. காடு வா, வா என்கிறது; வீடு போ, போ என்கிறது. நான் செத்தால் எனக்காக அழுபவர்கள் கூட யாருமில்லை. என்னால் காப்பாற்றப்பட வேண்டியவர்களும் யாருமில்லை. நான் ஒற்றையாள். 'நின்ற நாளைக்கு நெடுஞ்சுவர்; விழுந்தால் குட்டிச்சுவர்'. முழுகிப்போவது ஒன்றுமில்லை. எலக்ஷன் முடிந்த எட்டாம் நாள் நான் அரசாங்க விருந்தாளியாய்ப் போகப்போகிறேன்.

காங்: அப்படியானால் நீங்கள் ஏன் காங்கிரசில் சேரக்கூடாது?

ஈ.வெ.ரா: சேருவதற்கு சமயம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். இந்த பம்பாய் காங்கிரசில் தோழர் காந்தியவர்கள் விலகிப்போய்விடுவதாகச் சொல்லுகிறாராம். அப்படி அவர் விலகிவிடுவாரானாலும், எனது திட்டங்களை ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக்கொள்ளவில்லையானாலும் நான் காங்கிரசில் சேர்ந்து எனது திட்டத்தை நடத்த, முயற்சிக்க உத்தேசித்திருக்கிறேன்.

'இன்று இரவு 8 மணிக்குக் கூட்டத்தை முடித்துக்கொண்டு வருவதாக, ஒரு பெரிய விருந்துக்கு ஒப்புக்கொண்டு இருக்கிறேன். மணி 8½ ஆகிவிட்டது. இனியும் கேள்விகள் இருந்தால் கேட்கலாம். இன்னும் 15 நிமிஷம் இங்கிருக்க ஆட்சேபணையில்லை' என்று சொல்லிச் சிறிது நேரம் சும்மா நின்று கொண்டிருந்தார். யாரும்—எவ்விதக் கேள்வியும் இல்லாததால், 'கூட்டத்தை முடித்துவிடுகிறேன்' என்றார்.

[கோவை, டவுன் ஹாலில், 12-10-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 21-10-1934]

12. எனது திட்டம்

தலைவரவர்களே! தோழர்களே!

'ஜஸ்டிஸ் கட்சியின் வேலைத்திட்டம்' என்று இப்போது என்னால் ஆமோதிக்கப்படும் வேலைத் தீர்மானமானது, சுமார் 2 வருஷத்துக்கு முன்னமேயே என்னால் அக்கட்சிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டமாகும். இத் திட்டத்திற்குப் பல சரித்திரங்கள் உண்டு.

இத் திட்டம் முதன்முதலில் எப்படி ஏற்பட்டது என்றால், தோழர்கள் காந்தியாரும், இராசகோபாலாச்சாரியார் அவர்களும், நானும் ஒத்துழைக்க ஏதாவது சந்தர்ப்பம் ஏற்படக்கூடாதா என்ற பிரச்சினை எழுந்த காலத்தில் என்னால் யோசித்து எழுதப்பட்டு ஷை நபர்களில் ஒருவர் ஆமோதிப்பும் பெற்று, காந்தியாருக்கு அனுப்பிக் கொடுக்கப்பட்ட திட்டங்களின் தத்துவமாகும். அவற்றை ஏற்றுக்கொண்டதாக தோழர் காந்தியாரிடமிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் வாராததாலேயே, ஜஸ்டிஸ் கட்சிக்குச் சமர்ப்பித்தேன். அவர்கள் அவற்றைச் சில வார்த்தைத் திருத்தங்களுடன் ஒப்புக்கொண்டார்கள். அதன் பின்தான் இதே திட்டங்கள் தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்களால், 'இவை பொதுவுடைமைத் தீர்மானங்கள்' என்றும், 'இராமசாமியைத் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவதற்காக ஜஸ்டிஸ் கட்சியார் கொடுத்த விலை' என்றும் சொல்லப்பட்டதாகும்.

மற்றும், பார்ப்பனத் தேசியப் பத்திரிகைகளாலும் பார்ப்பனக் கூலிகளாலும், 'கராச்சி தீர்மானத்திலிருந்து திருடிய தீர்மானங்கள்' என்று சொல்லப்பட்டதுமாகும். இவை பொதுஉடைமைத் தீர்மானமானாலும் சரி; கராச்சி திட்டத்தில் இருந்து திருடியது என்றாலும் சரி, அவற்றால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை; இலாபமேதான். ஏனெனில், காங்கிரஸ்காரர்கள் நமக்குத் திட்டமில்லை என்றோ அல்லது நமது திட்டங்கள் பிற்போக்கானவை என்றோ சொல்ல முடியாதல்லவா? கராச்சி திட்டத்தை நாம் திருடிக்கொண்டோமென்றால், அதன் அர்த்தம் என்ன? அதாவது, கராச்சி திட்டத்தை நாம் நமது திட்டமாகக் கொண்டு விட்டோம் என்பதுதானே அர்த்தம்? அப்படி இருக்கும்போது, காங்கிரஸ் திட்டமும் நம்முடைய திட்டமும் ஒன்று என்றாவதோடு, அரசியலில் காங்கிரஸ் திட்டம் என்பதற்கும் ஜஸ்டிஸ் திட்டம் என்பதற்கும் வித்தியாசமில்லை என்பதைக் காங்கிரஸ் காரர்களே ஒப்புக்கொள்கிறார்கள் என்று ஆகிவிடவில்லையா?

ஆனால், உண்மையிலேயே நமது திட்டங்களுக்கும் காங்கிரஸ் திட்டங்கள் என்பதற்கும் உள்ள வித்தியாசம் இரண்டு. அவை முக்கியமான வித்தியாசங்களாகும்.

காங்கிரஸ் திட்டத்தில் பழைய புராணங்களையும் சாதி–மத வித்தியாசங்களையும் காப்பாற்றவும், அவரவர் சாதி ஆச்சாரங்களை அமுலில் நடத்திக்கொள்ள உரிமையும், காப்பாற்றிக்கொடுப்பதாக உத்திரவாதமும் அளிக்கிறது. இவற்றை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஒப்புக்கொள்ளுவதானால் நாம் சூத்திரர்களாகவும், தீண்டாத சாதியாராகவும் இருக்க நாமே சம்மதித்துக் கொண்டவர்களாவோம். அன்றியும், வருணாசிரமத்தையும், பறையன்–பிராமணன் என்கின்ற உயர்வு தாழ்வையும் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாவோம்.

இன்றைய காங்கிரசின் கிளர்ச்சி எல்லாம் டி பிராமணத் தன்மையையும், பஞ்சமத் தன்மையையும் காப்பாற்ற இருந்துவருகிறதே யொழிய, பொதுவாக மனித சமூகத்திற்கு எவ்வித நன்மைக்காகவும் இல்லை என்று நான் 15 வருடகாலமாகச் சொல்லி வருவதற்கு, கராச்சி தீர்மானத்திலுள்ள இந்தத் தத்துவமேதான் காரணம். ஆகவே, இவ்வளவு பெரிய வித்தியாசம் நமது திட்டத்துக்கும், கராச்சி திட்டத்திற்கும் இருக்கும்போது, கராச்சி திட்டமும், நமது திட்டமும் ஒன்று என்று எந்தப் பைத்தியக்காரனாவது சொல்ல முடியுமா?

அன்றியும், நமது திட்டத்தில் உள்ள விஷயங்கள் கராச்சி திட்டத்தில் இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? நமது திட்டத்தில் 'அரசியல் உத்தியோகங்கள், பிரதிநிதித்துவங்கள்—இந்த இந்த மாகாணத்தில் உள்ள எல்லா வகுப்பார்களுக்கும் (அதாவது முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகிய வகுப்பார்களுக்கு) அவர்கள் ஜனத்தொகைப் பெருக்கத்துக்குத் தகுந்தபடி கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்' என்பதாக உள்ள திட்டம், காங்கிரஸ் காரர்களின் கராச்சி திட்டத்தில் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

ஆகவே, காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசமெல்லாம் சாதி, மத, பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டியதும், அதுவரையில் வகுப்புகளின் அளவுக்குத் தகுந்தபடிதான் உத்தியோகமும், பிரதிநிதித்துவமும் இருந்துவர வேண்டும் என்பதுமே யாகும். இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு விஷயம் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அதாவது, 'சாதிபேதம், சாதிப் பிரிவு ஆகியவை ஒழிய வேண்டும் என்று சொல்லுகின்ற நீங்கள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது—சாதியைக் காப்பாற்றுவது ஆகாதா?' என்று பார்ப்பன தேசியப் பத்திரிகைகள் என்பனவும், அவர்களது கூலிப் பத்திரிகைகளும், கூலிகளும் எழுதவும், கேட்கவும் செய்கின்றார்கள். இவர்களுக்குள் சிலர் தெரிந்தே விஷமத்துக்காகக் கேட்பவர்களும், சிலர் விஷயம் புரியாமல் பார்ப்பனர்கள் சொல்வதை நம்பிக் கேட்பவர்களும் உண்டு.

ஆனால், அதை விளக்கிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். என்னவென்றால், இன்று கராச்சி திட்டமோ காங்கிரசின் கொள்கையோ, பேதங்களை அடியோடு ஒழித்துவிடுவது என்கிறதாக இல்லை. பூரண சுயேச்சை பெற்ற இந்தியாவில் பறையனும், பிராமணனும் இருக்கமாட்டார்கள் என்றோ, கொடுப்பன கொள்வினைக்கு அருகதையற்ற சாதி மத பேதங்கள் இருக்காது என்றோ ஒரு வாசகம் இருக்குமானால், நான் மாத்திரம் எதற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், வகுப்புவாதமும் பேசவேண்டும் என்றுகேட்க காங்கிரஸ்காரர்களுக்கு உரிமை உண்டு. சாதி மதத்தில் நடுநிலைமை வகித்து, பழைய சாஸ்திர புராண தர்மங்களைக் காப்பாற்றிக் கொடுப்பதாக உத்திரவாதமளிக்கும் காங்கிரசிடம், எங்கள் பங்கு என்ன? எங்கள் உரிமை என்ன? என்று ஒருவர் கேட்டால் அவர் எப்படி வகுப்புவாதியாகவோ, தேசத் துரோகியாகவோ ஆகிவிடக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

பார்ப்பனர்கள் வெகு ஜாக்கிரதையாகத் தங்கள் உயர்வைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் காங்கிரசினிடம் உத்திரவாதம் பெற்றுக்கொண்டு, நம்மிடம்வந்து 'நமது தாழ்வையும், இழிவையும் நாம் காப்பாற்றிக்கொள்வதாய் உத்திரவாதம் கொடு' என்று நம்மைக் கேட்டால் நாம் அத்தனை பேரும் முட்டள்களா அல்லது வகுப்பு நலத்தை விற்று வயிறு வளர்க்கும் பார்ப்பனக் கூலிகளா என்று யோசித்துப் பாருங்கள்.

நான் இந்தக் காங்கிரசினுடையவும் பார்ப்பனர்களுடையவும் யோக்கியதைகளைத் தெரியாமல் பேசுவதாக நீங்கள் யாரும் கருதிவிடாதீர்கள். காங்கிரசின் யோக்கியதைக்கு— சென்னை காங்கிரசுக்கு, தோழர் R. K. சண்முகம் அவர்கள் அனுப்பிய சாதி வித்தியாச ஒழிப்புத் தீர்மானம் என்ன கதி ஆயிற்று என்பதையும், பார்ப்பனர்கள் யோக்கியதைக்கு— தோழர் டாக்டர் வரதராஜலுவால் கிளர்ச்சி செய்யப்பட்ட குருகுல சமபந்தி போஜனத் தீர்மானம் என்ன ஆயிற்று என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

இந்த இரண்டு காரியங்களும் போதுமான ஆதாரமல்லவா என்று கேட்கிறேன்.

இந்த நாட்டில் வாழும் கோடிக்கணக்கான பார்ப்பனரல்லாத மக்களுக்கு, இன்று முதலில் சாதி ஒழிப்பதும், சமமாய் நடத்தப்படுவதுமல்லாத வேறு சுயராஜ்யம் என்ன வேண்டியிருக்கிறது, என்று யோசித்துப் பாருங்கள். அவற்றை ஒப்புக்கொள்ளாத காங்கிரசைப் பார்ப்பனரல்லாதார்கள் ஆதரிக்கிறார்கள் என்றால், பார்ப்பனரல்லாதார்களைச் சூத்திரன் என்றும், பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்களென்றும், பார்ப்பனர்களின் அடிமை என்றும் பார்ப்பனர்கள் சொல்லுவதை மெய்யென்று ஒப்புக்கொண்டதாகத்தானே அர்த்தமாகிறதா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகையால், நாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பது, சாதி ஒழியவேண்டும் என்பதற்கு எந்தவிதத்திலும் முரணான காரியம் ஆகாது என்பதுடன்— அதிலும் காங்கிரசைக் கேட்பது எப்படியும் எந்தவிதத்திலும் தவறாகாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சாதி பேதங்கள் ஒழிவது சட்டத்தினால்தான் முடிய வேண்டுமே ஒழிய, பொதுஜன சம்மதத்தில் என்றால் ஒருநாளும் முடியவே முடியாது.

ஏனெனில், சாதி காரணமாகப் பாடுபடாமல் கடவுளையும் மோட்சத்தையும் காட்டி, ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும்படியான சவுகரியம் இருக்கும்போது, பலாத்காரத்துக்கோ அல்லது தண்டனைக்கோ அல்லாமல் எவனாவது சாதி ஒழிய சம்மதிப்பானா என்று கேட்கிறேன்.

ஆகவே, சட்டத்தின் மூலம் சாதிகள் ஒழிகின்றபோது, சட்டத்தின் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எடுத்து விடுவது சிறிதும் சிரமமான காரியமல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பெரியாரும் வ. உ.சியும்

கப்பலோட்டிய தமிழரான காலஞ்சென்ற வ.உ.சி. அவர்கள், பார்ப்பனரின் சூழ்ச்சியைப் புரிந்து தந்தை பெரியார் அவர்களின் இன உரிமைப் போராட்டத்தின் அவசியத்தை உணர்ந்து, வரவேற்றார் என்பதனை விளக்கும் கடிதம் :—

V. O. CHIDAMBARAM PILLAI
PLEADER.

2

TUTICORIN

கடவுள்துணை—11—5—1936

ஈ. ரோடு "குடியரசு" ஆசிரியர் ஸ்ரீமான்
ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களுக்கு.

தோழரவர்களே,

காஞ்சியில் தமிழர் மகாநாட்டுக்கு ஈ. வெ. ரா. வேண்டுகோ"ளையும், தாங்கள் 10-5-36ல் எழுதிய தலையங்கத்தையும் படித்தேன்.

சர்வகக்ஷிப் பார்ப்பனரல்லாதார்களும் ஒன்றுகூடவேண்டுமென்று தாங்கள் சொல்வதே சரியான உபாயம். அவ்வாறு சர்வகக்ஷிப் பார்ப்பனரல்லாதார்களின் மகாநாடு ஒன்று காஞ்சிபுரத்தில் வருகிற ஜூன் மாதத்தில் நடக்கப்போகும் தமிழர் மகாநாட்டுப் பந்தலிலேயே கூட்டுவிக்கும்படியாக அதன் தலைவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு நான் இதனுடன் ஒரு கடிதம் பொருத்து எழுதியிருக்கிறேன். அவர்கள் பதிலை எதிர்பார்ப்போம். கடவுள் துணை. தங்களன்புள்ள,

வ. உ. சிதம்பரம்பிள்ளை

அன்றியும், காங்கிரஸ்காரர்கள் முயற்சிப்பதாலோ அல்லது சட்டத்தினாலோ வகுப்புகள் இல்லாமல் போகுமானால்—பிறகு யாருக்கு நாம் பிரதிநிதித்துவம் கொடுக்கப் போகிறோம்? ஆகவே, அது தானாகவே மறைந்துவிடும். ஆதலால், சாதி வகுப்புகள் உள்ளவரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதும், அதுவும் சாதியைக் காப்பாற்றுகின்ற காங்கிரசினிடம் கேட்பதும் குற்றமாகவோ, சாதியைக் காப்பாற்றியதாகவோ ஆகாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது திட்டத்தில் வியாபாரிகள், தரகர்கள் கொள்ளையும் ஒழிக்கப்படுகின்றது.

இயந்திர முதலாளிகளின் கொடுமைகளும், தொழிலாளர்களின் கஷ்டங்களும் ஒழிக்கப்படுகின்றன.

மற்றபடி, கல்வி குறைவு, மதுபானக் கெடுதி, தீண்டாமை இழிவு ஆகியவைகள் நீங்குவதுடன், சகல சாதி, மத வகுப்பு மக்களுக்கும், அரசியல் பிரதிநிதித்துவத்திலும், உத்தியோகங்களிலும் விகிதாச்சார உரிமை கிடைப்பதன் மூலம் சமநிலை ஏற்பட வசதி அளிக்கிறது.

வரி விதிப்பு, நிர்வாகம், ஜன சமூகத்துக்கு அனுகூலமான கூட்டுறவு, ஸ்தல ஸ்தாபன நிர்வாகம், சம்பளக் கொள்ளை ஆகியவைகளும் ஒழுங்காக மக்களுக்கு அனுகூலமான வழியில் நடைபெறத்தக்க வண்ணம் அமைந்திருக்கிறது.

நிற்க. நமது தீர்மானங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும்—காங்கிரஸ்காரர்களால் எவ்வளவு குறை சொல்லக்கூடியதாய் இருந்தாலும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், இன்று நமது பாமர மக்களுக்கு அவை தேவையானதும், போதுமானதும் தானா, அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள். நமது திட்டங்களால் விவசாயிகளின் நிலைமை காப்பாற்றப்படுகிறது.

லேவாதேவிக்காரர்களால் ஏற்படும் கொடுமை ஒழிக்கப்படுகிறது. வக்கீல்களின் தொல்லையும், விவகாரங்களின் தொல்லையும் ஒழிக்கப்படுகிறது.

இவைகள் அனுபவ சாத்தியமான முறையிலேயே கைகூடும் மாதிரியாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, நமது திட்டங்கள் எவ்வளவு தீவிர சமதர்ம வாதியும் ஒப்புக்கொள்ளக் கூடியதும், இதற்குமேல் எந்த சமதர்ம வாதியாலும் வகுக்கப்படாததுமான அவ்வளவு மேன்மையானவையாகும்.

இவைகள் செவ்வனே வெற்றிபெற வேண்டுமானால், நமக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். பார்ப்பனரல்லாத மக்களுக்குள் காங்கிரசின் விஷமும், பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் பரவாதிருக்குமானால் இந்தப் பதினைந்து வருஷ காலத்திற்குள்ளாக இன்னும் எவ்வளவோ பயனுள்ள காரியங்களைச் செய்திருக்கலாம். ஆனாலும் குற்றமில்லை. இனியாவது ஒற்றுமையாய் இருப்போமானால் வரப்போகும் சீர்திருத்தத்தைப் பயன்படுத்தி நல்ல வேலை செய்யலாம் என்றே கருதுகிறேன்.

நாம் பணக்காரர்களுக்கு அடிமை என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். எப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் என்றால், தங்கள் வயிறு வளர்ப்பதற்கு காங்கிரஸ்காரர்களிடமும் பார்ப்பனர்களிடமும் கூலி பெற்று நம்மைக் குரைக்கும் கூட்டத்தார்கள்தான் சொல்லுகிறார்களே ஒழிய—தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நாணயமான ஒரு மார்க்கத்தை வைத்துக்கொண்டு நம்மை அடிமை என்று சொல்லுகிறவர்கள் யாருமே இல்லை. ஆதலால், அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

[வாடிப்பட்டியில், 1936-ல் சொற்பொழிவு—'திராவிட நாடு' 30-5-1943]

13. நீதிக் கட்சி நிலைக்க வழி

தலைவரவர்களே! தோழர்களே!

நம் கட்சியைப்பற்றிப் பேச வேண்டுமென்றும் கட்சியில் கவலையுள்ள தொண்டர்களுக்கும் சுயநலமில்லாது கட்சிப்பற்றுள்ள பொதுமக்களுக்கும் ஏதாவது உறுதியான வழி காட்ட வேண்டுமென்றும் பல நண்பர்கள் ஆசைப்பட்டார்கள். நான் எதைப் பேசுவது? உண்மையில் இதுவரை நான் இங்கு என்ன பேசுவதென்பதைச் சிந்திக்கவேயில்லை. ஆனாலும், சென்னையில் இந்திய சட்டசபை எலக்ஷனில் நம் கட்சி அபேட்சகர்களுக்குப் படுதோல்வி ஏற்பட்டது என்பது இன்று எங்கும் பேசப்படும் பேச்சாகவும், நம் எதிரிகளான பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதார்களில் சிலருங்கூட மகிழ்ச்சியடைந்துகொண்டிருக்கும் விஷயமாகவும் இருக்கிறது. ஆனால், அதைப்பற்றி முதலில் பேசுகிறேன்; பிறகு நம் கட்சியைப்பற்றிப் பேசுகிறேன்.

'நாம்' எலக்ஷனில் தோற்றுவிட்டோம். 'நாம்' என்றால் யார்? ஜஸ்டிஸ் கட்சி யாரா? பார்ப்பனரல்லாதாரா? நாம் ஜஸ்டிஸ் கட்சி என்றால் இன்று ஜெயித்திருந்தால் தான் அக் கட்சிக்கு என்ன இலாபம் வரும்? ஜெயிக்காவிட்டால் என்ன முழுகிப்போகும்? அல்லது, நாம் பார்ப்பனரல்லாதார் என்றால் தோழர் கத்தே ரங்கைய நாயுடுவுக்கும், தோழர் சுந்தரராவ் நாயுடுவுக்கும் பார்ப்பனரல்லாதார் என்பதில் என்ன பிரமாத வித்தியாசம்? கத்தே நாயுடுகாரு அரசியலிலும் மத இயலிலும் பார்ப்பனருக்கு அடிமை. தோழர் சுந்தரராவ் நாயுடு மத இயலில் பார்ப்பனர்களுக்கு அடிமை.

ஜஸ்டிஸ் கட்சியின் முக்கியகொள்கை சமுதாய முன்னேற்றமேயாகும். ஜஸ்டிஸ் கட்சிக்கு நான் சொல்லுகிறபடி ஏதாவது சமுதாயக் கொள்கை இருக்குமானால், அதில் இருப்பவர்கள் எந்த விதத்திலும் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இல்லாத பார்ப்பனரல்லாதார்களாகவே இருப்பார்கள். ஏனெனில், நாம் இதுவரை ஜஸ்டிஸ் கட்சியைப் 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்றே சொல்லி வருகிறோம். அதனாலேயே நம்மை 'நான்–பிராமின்' (Non-Brahmin) கட்சி என்று சொல்லிக்கொள்கிறோம்.

அதற்காகவே திருவாரூர் மாகாண மாநாட்டில், 'பார்ப்பனரல்லாதாராகிய நாம் இந்துக்கள் அல்லர் என்றும், நாம் திராவிடர்கள் என்றும், நமது மதம் இந்து மதம் அல்ல' என்றும் தீர்மானம் செய்தோம். இதை எதற்காகச் செய்தோம்? பார்ப்பனரிடமிருந்து நாடு, மதம் ஆகியவைகளில் பிரிந்தவர்கள் என்று காட்டுவதற்கேயல்லவா?

இதை எந்தப் பார்ப்பனரல்லாதாராவது, எந்த ஜஸ்டிசாராவது காரியத்தில் ஏற்று நடந்துகொள்ளுகிறார்களா? நாம் ஒரு சிலர் தொண்டை கிழிய, நம் குடும்பம் கெட, உடலழிய, 'ஆரியநாடு—திராவிடநாடு', 'ஆரியர்—திராவிடர்', 'பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்' என்று கத்துவதும் சாகப் போவதுமாய் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, மற்றொருபுறம் நம்மில் முக்கிய தலைவர் என்போர்களும், நாளை மந்திரி ஆகப் போகிறவர்களும், நிர்வாக சபை மெம்பர், மந்திரிகளின் காரியதரிசி, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி தலைவர், மற்றும் பட்டம், பதவி, சட்டசபை மெம்பர், உத்தியோகம் முதலாகியவை இந்தக் கட்சியின் பேரால் அடைந்தவர்களும், அடையப்போகிறவர்களும், அடையத் தவம் கிடப்பவர்களும்—ஆரியர்களுக்கு ஆக்கமளிக்கும் தேசம், மதம், கோயில், குளம், சட்டம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் ஆகியவைகளை ஏற்படுத்திக்கொண்டும், காப்பாற்றிக்கொண்டும், காப்பாற்றப் பிரச்சாரம் செய்துகொண்டும், அவைகளுக்கு அடிமைகளாக நடந்து தங்கள் செல்வங்களையும், அறிவுத் திறனையும், ஊக்கத்தையும் அவற்றிற்குச் செலவு செய்துகொண்டுமிருந்தால், நம் கட்சிக்கோ நம் முயற்சிக்கோ ஏதாவது பயன் விளையுமா? என்று கேட்கிறேன்.

இந்திய வர்த்தக மந்திரி சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களைப் பாராட்டி 11-12-1939-ல் சென்னையில் நடந்த தேநீர் விருந்தின் போது. முன்வரிசையில் சர். ஏ. டி. பன்னீர் செல்வம், பெரியார் ஈ. வெ. ரா. மற்றும் பலர்—'குடி அரசு' 31-12-1939

இப்படிப்பட்டவர்கள் ஒன்று, 'இந்த மருந்து எங்களுக்கு ஜீரணம் ஆகாது; குடல் வெந்துபோகும்; வேண்டாம்' என்று அடியோடு இம் முயற்சிக் குழுவிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும். அல்லது, 'உன் வைத்தியம் எனக்குப் பிடிக்காது; நீ உன் அடைப்பத்தைக் கட்டிக்கொள்; வேறு வைத்தியனைப் பார்த்துக்கொள்கிறோம்' என்று தைரியமாய்ச் சொல்லவேண்டும். இல்லாமல், 'நான் ஜஸ்டிஸ் கட்சி', 'நான் பார்ப்பன ரல்லாதார் கட்சி' என்று சொல்லிக்கொண்டு இருந்தால் இதற்கு என்னதான் அர்த்தம் என்று கேட்கிறேன்.

'பார்ப்பனரல்லாதார்' என்றால் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனரல்லாதார் என்பவர்களுக்கும் ஏதாவது நடைமுறையில், வேஷத்தில், உள்ளத்தில், உணர்ச்சியில், பாவனையில் வித்தியாசம் இருக்கவேண்டாமா? பார்ப்பனன் பார்க்கும் உத்தியோகத்தில் ஆத்திரப் படுகிறோம். ஆனால், அவனை நடுவில்வைத்து மனைவியுடன் நமஸ்கரிக்கிறோம்; காலில் விழுகிறோம்; நம் செல்வத்தைக் காணிக்கையாகக் கொடுக்கிறோம்.

ஆகையால், இந்நிலையில் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனர்–அல்லாதாருக்கும் அப்படி எந்த வித்தியாசத்தை அவர்களைவிட்டுப் பிரிந்திருப்பதற்குக் குறிப்பிட முடியும்?

உண்மையில், நாம் பார்ப்பனரல்லாதார் என்றால் பார்ப்பனர்களுக்கும் நமக்கும் சமயக்கோட்பாடு என்னும் தத்துவத்தில் பேதம் என்று காட்டவேண்டியதைத் தவிர, வேறு எதில் பேதம் காட்டினால்—நாம் அவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று காட்டமுடியும்?

முஸ்லிமுக்கும் நமக்கும் அல்லது கிறிஸ்தவருக்கும் நமக்கும் இன்றுள்ள பேதம் சமயக்கொள்கை தவிர வேறு எதில் இருக்கிறது?

இதுபோல், பார்ப்பனருக்கும் நமக்கும் சமயத்துறையில் பேதம் இல்லையானால் —காட்ட முடியவில்லையானால், வேறு எதில் காட்டமுடியும்? எதற்காக நாம் பார்ப்பன ரல்லாதார் என்று சொல்லிக்கொள்ள வேண்டும்? இதுவரைச் சற்றேறக்குறைய 25 வருஷ காலத்துக்குமேல் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக 'ஜஸ்டிஸ் கட்சி'யைச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இன்றுவரை அக் கட்சியில் ஒரு பத்துபேர்கள் கூட உண்மையான பார்ப்பனரல்லாதாராக இருக்கமுடியவில்லையானால், இந்தக் கட்சியைப் பார்ப்பனரல்லாதார் கட்சி என்று சொல்லுவது வெட்கக்கேடும் பித்தலாட்டமும் அல்லது மடமையும் அல்லவா என்று கேட்கிறேன்.

அரசியலில் இக் கட்சி என்ன ஆதிக்கம்பெற்றும் என்ன பயன்? பார்ப்பனரல்லாதார் என்றால் நியாயமாக அது மத இயலையும், சமுதாய இயலையும் அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்காகவே அப்பெயர் ஏற்பட்டதாகும். அந்தத் துறையில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ன செய்தது? ஜஸ்டிஸ்கட்சி அரசியல் துறையில் சிறிதாவது சில நாட்களாவது வெற்றிபெற்றதென்றே சொல்லலாம். அதனால் பட்டங்கள், பதவிகள், அதிகாரங்கள் பெற்றது என்றே சொல்லலாம்

இதனால் நமது நாட்டுக்கோ, நமது சமுதாயத்துக்கோ ஏற்படவேண்டிய நன்மை என்ன ஏற்பட முடிந்தது?

சர். கே. வி. ரெட்டி நாயுடு கவர்னர் வேலை பார்க்கவில்லையா? சர். பனகால், சர். P. T. இராசன், சர் குமாரசாமி ரெட்டியார், சர். பாத்ரோ, சர். முத்தையா செட்டியார் முதலியவர்கள் மந்திரிவேலை பார்க்கவில்லையா? சர். இராமசாமி முதலியார் இன்னும்கூட வைசிராய் நிர்வாகசபையில் இருக்கவில்லையா?

இவர்களில் எவராவது அந்தப் பதவிகளின் மூலம் பார்ப்பனரல்லாதார் சமயத்துக்கோ, சமுதாயத்துக்கோ, திராவிட நாட்டுக்கோ செய்த நன்மை என்ன? அவர்களால் என்ன செய்யமுடிந்தது? பார்ப்பனர்களால் நமக்குச் சூட்டப்பட்ட சூத்திரர், தாசி

மக்கள் என்கின்ற இழிவுப் பட்டம் நீக்கப்பட முடிந்ததா? பார்ப்பனர் உயர்ந்த சாதி என்பதையாவது மாற்றமுடிந்ததா? நாளைக்காவது நீக்க முடியுமா? என்று கேட்கிறேன். மேலே காட்டிய இத்தனை கனவான்களிலும் யார், பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்குப் பயன்படவே ஏற்பட்ட சாதனைகளை—கொள்கைகளை வெறுத்தவர்கள் இருக்கிறார்கள்?

சென்னையில் தோழர் சுந்தரராவ் நாயுடு சார்பாகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் நான் 'அந்தக் கட்சித் தலைவன்' என்கின்ற ஓதாவில் பேசும்போது ஒரு விஷமத்தனமான பத்திரிகைக்குப் பதில் சொல்ல நேர்ந்தது.

அதாவது, முதல் நாள் கோகலே ஹாலில் நான் தலைமை வகித்துப் பேசும்போது, 'காங்கிரஸ் தலைவர்கள் நமது சமுதாயக் கொள்கைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளுவார்களானால் நான் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகரை உடனே பின் வாங்கிக் கொள்ளச் செய்யமுடியும்' என்று சொன்னேன். இதற்கு இப் பத்திரிகை, 'இராமசாமி நாயக்கரின் சமுதாயக் கொள்கை ஒரு பெண்ணுக்கு இரண்டு புருஷனும், ஒரு புருஷனுக்கு இரண்டு பெண்டாட்டியும் கட்டிக்கொள்ள வேண்டும் என்பதுதானே? இதை ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக் கொள்ளுகிறார்களா?' என்று எழுதி இருந்தது. இதற்குச் சமாதானமாக நான் சொன்னது என்னவென்றால்,

'அய்யா, இதை நான் சொல்லவில்லை. இந்து சமூகத்தில் இக் கொள்கை வெகு காலமாக இருந்துவருகிறது. துரோபதை 5 புருஷன் கட்டி 6-வது புருஷன் மீதும் ஆசையாக இருந்தாள் என்றும், தசரதன் 60003 பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்டிருந்தான் என்றும் இந்துக்களின் வேதங்கள் என்னும் தெய்வீகச் சரித்திரத்தில் இருக்கிறதுடன், இப்படி நடந்துகொண்ட பெண்ணுக்கும் ஆணுக்கும் கோயில் கட்டி எத்தனையோ மூடர்கள் இன்றும் பணம் கொடுத்துக் கும்பிட்டு வருகிறார்கள் என்றும், ஆதலால், ஒரு பெண், புருஷன் செத்துப்போனால், மறு புருஷன் கட்டிக்கொள்ளலாம் என்று நான் சொன்னதில் இவர்கள் யோக்கியதைக்கு ஒன்றும் குறைந்துபோகாது' என்றும் சொன்னேன்.

இதற்கு அக் கூட்டத்தில் தலைமை வகித்த தலைவர் குறுக்கிட்டு, இப்படிப் பேசினால் ஓட்டுக் கிடைக்காது என்பதாகச் சொன்னார். எனக்குப்பின் பேசியவர்களில் ஒருவரான டாக்டர் கிருஷ்ணசாமியும் இதற்காக வருத்தப்பட்டார். இந்நிலையில் பார்ப்பனரல்லாதார் என்று நம்மை நாம் எப்படிச் சொல்லிக் கொள்வது?

'நாங்கள் பார்ப்பனரல்லாதார் என்னும் பேரால் பதவிக்குப் போனால், மந்திரியானால் இன்னது செய்வோம்' என்று கொள்கையைத் தைரியமாய் வெளியில் சொல்ல வேண்டாமா? காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு தைரியமாய், 'நாங்கள் சுயராஜ்யம் பெற்றால் இராம ராஜ்யத்தை ஸ்தாபிப்போம்' என்கிறார்கள்? இராம ராஜ்யம் என்றால் பார்ப்பன இராஜ்யம்தானே!

முஸ்லிம்கள், 'நாங்கள் சுயராஜ்யம் பெற்றால், இஸ்லாம் தர்மத்தை உலகெங்கும் நிலை நாட்டுவோம்' என்கிறார்கள்.

பார்ப்பனரல்லாதார் கட்சியார் சுயராஜ்யம் பெற்றால் எதையாவது நாட்டுவதாகச் சொல்ல வேண்டாமா? அப்படி நாட்டுவதற்கு ஒன்றும் இவர்களுக்குத் தனியாக இல்லையானால் வேறு எதோடாவது—பார்ப்பனரோடாவது முஸ்லிம்களோடாவது சேர்ந்து கொள்ள வேண்டாமா? இரண்டும் கெட்ட—அதாவது, தனிக் கொள்கை, குறி இல்லாத நமக்குத் தனிக் கட்சி எதற்கு என்றுதான் கேட்கிறேன். அல்லது, பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவாவது நமக்கும் காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் ஏதாவது சமுதாயத் திட்டத்தில் வித்தியாசமிருக்க வேண்டாமா என்று கேட்கிறேன்.

காங்கிரஸ் பார்ப்பனரல்லாதாரும் ஜஸ்டிஸ் பார்ப்பனரல்லாதாரும் சமுதாயத் துறையில் எதில் மாறுபட்டவர்கள்? அவர்களும் கோயில் குளங்கள், இராமாயணம், பாரதம்,

புராணங்கள் முதலியவைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், பார்ப்பானை வைத்தே திதி, திவசம், கலியாணம், கருமாதி முதலியவைகள் நடத்தவேண்டும் என்றும் சொல்லு கிறார்கள். ஜஸ்டிஸ் அல்லது பார்ப்பனரல்லாதார் கட்சிப் பார்ப்பனரல்லாதாரும் அப்படியே சொல்லுகிறார்கள். கட்டாயமாக அப்படியே எல்லாத் தலைவர்களும் நடந்து காட்டு கிறார்கள். இதனால் பார்ப்பனரல்லாதார் கட்சிக்குப் பலமில்லாமல் போகிறது; மதிப்பு மில்லாமல் போகிறது; நாணயம் இல்லாமல் போகிறது என்று சொல்வதில் தப்பு என்ன இருக்கிறது?

நான் உண்மையில் இக் கட்சிக்குத் தொண்டாற்ற வந்தது, என்னுடைய கொள்கைகளை மூட்டை கட்டிவைத்துவிட்டு, இப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியையும் அதன் தலைவர்களையும், பார்ப்பனரல்லாதாருக்குச் சமய, சமுதாயத் துறையில் பயன்படாததும் பொறுப்பிருக்க முடியாததுமான பதவி பெறத் தொண்டு புரியவா என்று சிந்தித்துப் பாருங்கள்.

எனக்கு வயதாகிவிட்டது. வரவரத் தலைவர்களாகவும் பதவிக்குரியவர்களாகவும் இருக்கும் ஒருவரிடத்தில்கூட உண்மைப் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இருப்பதாக என்னால் காணமுடியவில்லை. என் வியாபாரத் தொழிலில் அல்லது என் எஸ்டேட் கவலையில் நான் இருந்திருப்பேனானால் நானும் பணக்காரத் தலைவர்கள் கூட்டத்தில் மாலைகள் சுமப்பவனாக இருந்திருப்பேன். அல்லது, சுயமரியாதை இயக்கத்தோடேயே இருந்திருப்பேனேயானால் தோல்வி என்கிற பேச்சே காதில் கேட்பதற்கில்லாமல் பல தலைவர்கள் பயப்படும்படியான நிலையில் இருந்திருப்பேன். இப்போது வெறும் மரக்கட்டையாக இருக்கிறேன். சிறிது அதிகப் பணமும் பதவியும் பெற்றவர்கள் நம்மைத் துரும்பாக மதிக்கும்படியும் தங்கள் மார்பைப் பார்த்து ஆகாயத்தைப் பார்க்கும்படியும் இருப்பதை நான் உணருகிறேன். என் தொண்டு ஏன் வீணாகப் போகவேண்டும்?

சுயமரியாதைக் கட்சிப் பெயரையோ ஜஸ்டிஸ் கட்சிப் பெயரையோ சொல்லிக் கொள்ள இஷ்டமில்லாதவர்கள், என்னைக் குற்றம் சொல்வதை ஒரு கவுரவமாகக் கருது கிறார்கள். பார்ப்பனரல்லாதார்—ஜஸ்டிஸ் கட்சியார் என்கின்றதன் நிழலில் நிற்கா விட்டால் பொதுவாழ்வில் தூசியும் இலட்சியம் செய்யப்படத் தகுதி இல்லாதவர்களும் பார்ப்பனரல்லாதார் கொள்கைப்படி நடக்கச் சிறிதும் கவலையோ, அவசியமோ இல்லாத வர்களும் 'பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் புத்தி சொல்ல வருகிறார்கள். இதை என்னால் பொறுக்க முடியாது. நீங்கள் இப்படிப்பட்ட சுயநல சமய சஞ்சீவிகளை இனி வெறுக்க வேண்டும்.

உங்களுக்குப் பார்ப்பனர்களை வெறுப்பது ஒன்று மாத்திரமே போதாது. பார்ப்பனர்களுக்கும் உங்களுக்கும் என்ன பேதம், எதற்காக வெறுக்கிறீர்கள் என்பதைத் தெளிவாய் நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் காட்டவேண்டும். அந்த பேதத்தை ஒப்புக் கொள்ளுகிறவர்களையும் அதன்படி நடக்கிறவர்களையும் தவிர—மற்றவர்களுக்குக் கட்சி யில் இடமிருக்கக்கூடாது. அவர்கள் பணத்தினால், செல்வாக்கினால் கட்சிக்குள்ளே புகுந்து கொண்டால், கட்சியைப் பயன்படுத்திக்கொள்ள வந்தால் நீங்கள் அவர்களிடம் உள்ள வெறுப்பைத் தைரியமாய்க் காட்டவேண்டும். எண்ணிக்கை குறைந்தால் கவலை இல்லை. நன்றாய் வெறுக்கத் தெரிந்தவனும், வெறுக்கத் துணிந்தவனுமே வெற்றி பெறுவான். இதுவரை நடந்துவந்த முறை வெற்றி கொடுக்கவில்லையானால் புது முறையைக் கையாள வேண்டாமா என்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்.

நாம் இன்று தொடுத்துள்ள இராமாயணம், பெரிய புராணம் வெறுப்பு என்பது 'நாம் பார்ப்பனரல்லாதார்' என்பதை ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் உணரும்படி செய்ய ஒரு மார்க்கமாகும்; பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் ஒரு வித்தியாசம் காட்ட

அறிகுறியாகும். இராமாயணமோ, பெரிய புராணமோ பார்ப்பனரல்லாதார்க்குச் சிறிதும் சம்பந்தப்பட்டதல்ல. அதில் தமிழர்கள் அல்லது பார்ப்பனரல்லாதார்கள் ஆகியவர்களுடைய பழைய கொள்கைகளோ அல்லது ஏற்ற கொள்கைகளோ ஒன்றும் இல்லை.

மூடநம்பிக்கை, முட்டாள்தனம், இழிதன்மை என்பவை எந்த முறையிலும் பார்ப்பனரல்லாதாருக்கு இருக்கக்கூடாது. இராமன் நடந்துகொண்டதும், (நாயன்மார்கள்) தொண்டர்கள் நடந்து கொண்டதும் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்றது என்றால்—பார்ப்பனரல்லாதார் சமுதாயம் ஒழிந்து போவதே மேல்; அல்லது, பார்ப்பனருக்கு அடிமையாய் இருப்பதே மேல். இப்படிப்பட்ட பார்ப்பனரல்லாதார் சமயம், சமுதாயம் நமக்கு வேண்டாம். இவை எல்லாம் ஆரியர் நலனுக்காக வேண்டியே ஏற்பட்டவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டவைகளுமாகும். இவற்றாலேயே பார்ப்பனர் நிலை இவ்வளவு கெட்டியாய் இருக்கிறது. இந்தச் சமயத்தை விட்டு நீங்கிய தமிழர்கள் வாழமுடியவில்லையானால் மானமுள்ளவர்கள் வேறு சமயத்தைத் தழுவிக் கொள்வதே மேலாகும். இராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் நீக்கிவிட்டு, அதில் காணும் கடவுள்களையும் இகழ்ந்து ஒதுக்கிவிட்ட நம் திராவிட மக்களில் ஒரு சார்பாரான இஸ்லாமியர்கள் மான வாழ்வும், ஒற்றுமை வாழ்வும் வாழாமல் போய்விடவில்லை.

ஆகவே, இத்தனை நாட்களைப்போல் அல்லாமல், தீவிரமாய் யோசிக்கவேண்டிய காலம் ஏற்பட்டுவிட்டது. சண்டை முடிந்தால் நம் கதி என்ன? நம்மை அரசியலில் யார் இலட்சியம் செய்கிறார்கள்? யார் செய்யப் போகிறார்கள்? செய்யும்படியாக எங்கே, நாம் காட்டிக் கொள்கிறோம்? இவைகளை நன்றாய்க் கவனியுங்கள்! கட்டுப்பாடாய்ப் புரட்சி மனப்பான்மை கொள்ளுங்கள்.

[வேலூர் (வ.ஆ.) நகர மண்டபத்தில், 3-6-1943-ல் சொற்பொழிவு—'திராவிட நாடு' 20-6-1943]

14. தலைவர் அறிக்கை

ஜஸ்டிஸ் கட்சியானது சிறிது காலமாக அதன் பிரச்சாரத்தாலும், வேலைத்திட்டங்களாலும் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்துச் சற்று செல்வாக்குப் பெற்றிருப்பது வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இதைக்கண்ட ஒருசிலர்—அதாவது, தோழர்கள் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சர். பி. டி. இராஜன், பி. ராமச்சந்திர ரெட்டியார் முதலியவர்கள் கட்சியின் பேரால் வாழ்க்கை நடத்தும் மக்களாகிய தோழர் பி. பாலசுப்பிரமணியம் முதலியவர்களையும் அப்படிப்பட்டவர்களுடைய பத்திரிக்கைகளாகிய 'சண்டே அப்சர்வர்' முதலியவற்றையும் கையாளாக வைத்துக்கொண்டு, மற்றும் நம் கட்சிக்கும் கொள்கைகளுக்கும் இன நலத்திற்கும் முழு எதிரிகளாகிய பார்ப்பனர் முதலியவர்களுடைய 'தேசிய' பத்திரிக்கைகளினுடையவும் ஆதரவைப் பிடித்துக்கொண்டு, தாங்களேதாம் ஜஸ்டிஸ் கட்சியார்கள் என்றும், தோழர் பி. ராமச்சந்திர ரெட்டியார் அதன் தலைவர் என்று ஒருதடவையும், அவர் தற்காலத் தலைவர் என்று ஒருதடவையும், ஆக்டிங் (பதில்) தலைவர் என்று ஒருதடவையும், தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் காரியதரிசி என்று ஒரு தடவையும், அவர் கட்சி நிர்மாணஸ்தர் என்று ஒருதடவையும், மெம்பர் அல்லாத தோழர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் நிர்வாகசபை மெம்பர் எனவும், ராவ்பகதூர் ஏ. துரைசாமி முதலியார் அவர்கள் கூட்டங்களையும், மாநாடுகளையும் கூட்டுவிப்பவர்களாகவும் பலவிதமான பெயர்களை அவர்களாகவே உற்பத்தி செய்து கொண்டும், உரிமையாக்கிக்கொண்டும் சமீபத்தில் தாங்கள் ஜஸ்டிஸ்கட்சி மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு கூட்டப்போவதாகவும், பத்திரிக்கைகளில் சேதியாகவும், அறிக்கையாகவும் வெளியாகி வருவதைப் பார்க்கிறேன்.

ரஷ்ய நாட்டில் லெனின் அவர்களுடன் பணியாற்றித்
திரும்பிய இந்திய நாத்திக அறிஞர் எம். என். ராய் அவர்களை
சென்னையில் பெரியார் ஈ. வெ. ரா. வரவேற்றபோது.
(1941 பிப்ரவரி)

ஆதலால், நான் இந்தப் பெரியோர்களின் இந்த அறிக்கையும் சேதியும் 'சவுத் இந்தியன் லிபரல் பெடரேஷன்' என்று ஆங்கிலத்திலும், 'தென் இந்திய நலஉரிமைச் சங்கம்' என்ற பெயரோடு தமிழிலும் இருந்துவந்து (27-8-1944-ல்) சேலம் 'ஜஸ்டிஸ் கட்சி கான்பிரன்ஸ்' என்னும் மாநாட்டில் முறையே, 'திரவிடியன் ஃபிடரேஷன்', 'திராவிடர் கழகம்' என, பெயர் மாற்றப்பெற்று நடந்துவரும் ஜஸ்டிஸ் கட்சிக்குச் சம்பந்தப்பட்டதல்ல வென்றும் தெரிவிப்பதோடு, இம் மாதிரி பெயர்களை உபயோகித்துக்கொண்டு தங்கள் கூட்டங்களை ஜஸ்டிஸ் கட்சி நிர்வாக சபைக் கூட்டமென்றும் சொல்லிக்கொண்டு இவ்வித நடவடிக்கை செய்ய அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்றும் பொது மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

['குடிஅரசு'—அறிக்கை—16-12-1944]

15. வடநாடும் தென்னாடும்

அன்புள்ள தோழர்களே!

உங்களைப் பெருங்கூட்டமாக இங்குக் காணவும், உங்கள் எல்லோரையும் கண்டு பேசவும், அறிமுகப்படுத்திக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டதைக் கொண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய உணர்ச்சியையும், உற்சாகத்தையும், என்னைக் கண்டதும் நீங்கள் செய்த ஆரவாரத்தையும் பார்த்து நான் மிகப் பெருமையடைவதோடு எனது ஆசையைப்பற்றி மிகவும் நம்பிக்கை அடைகிறேன். மொழி பேதத்தாலும், நம் பழக்க வழக்கங்களாலும் நம் இருவர் நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கிற அதிகத் தூரத்தாலும் நாம் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுவதற்கு இல்லாமலும், நம் இருநாட்டார் நலத்திற் காகவும் ஒன்றுபட்டு வேலைசெய்து போராட்டம் துவக்கமுடியாமலும் இருந்து வருகிறோம்.

இவை ஒருபுறம் இருக்க, நம் எதிரிகளின் கையாயுதங்களாகிய போலி தேசிய மென் பதும் தேசிய பத்திரிக்கைகள் என்பவையும் நம்மை ஒருவருடன் ஒருவர் சேர ஒட்டாமல் செய்வதோடு, நமக்கு எவ்வளவு கேடுசெய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்து வருவதல் லாமல், நமது முயற்சிகளையெல்லாம் திரித்துக்கூறி, நம்மைப் பிரித்து வைத்து, அடக்கி, ஆதரவற்றவர்களாக ஆக்கி வருகின்றன. என்றாலும், இன்று இங்கு ஒரு கூட்ட வாலிபர் களும், பட்டம் பெற்ற வக்கீல்களும், காவி உடைதரித்த சில சாமியார்களும் எனது கொள் கைகள், ஆசைகள் சம்பந்தமான பெரும்பாலான பிரச்சினைகளை ஆதரிக்கும் அறிகுறி யோடு கிளத்தும் ஒலிகளும், காட்டும் அன்பும், ஆரவாரமும் நம் இருவருடைய நிலை மையும் ஒன்று என்பதையும், ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்ற முயற்சிகளையும் காணநேர்ந்ததை உண்மையிலேயே ஒருபெரும் பேறாகவே கருதி அளவிலா ஆனந்தம் கொள்ளுகிறேன்.

எப்படி ஒரு அன்னிய அரசாங்கமானது ஒருநாட்டு மக்களைத் தங்கள் நலனுக்கு ஏற்றவண்ணம் அடக்கி ஆள வேண்டுமானால், 'பிரிவினை செய்து ஆளவேண்டும்' என்பதைக் கொள்கையாகக் கொண்டு இருக்கிறதோ, அதேபோல் இந்த நாட்டிலுள்ள பழங்குடி மக்களாகிய நம்மை ஒரு அன்னிய நாட்டு ஆரிய இனமானது நம்நாட்டில் பிரவே சித்து, நம்மை அடக்கி, நம்மீது நிரந்தரமாய் ஆதிக்கம் செலுத்துவதற்காகவே கடவுள், மத, வேத, சாஸ்திரங்கள் என்பவற்றின் பேரால் நம்மைப் பல வகுப்புகளாக பிரித்துவைத்து விட்டார்கள். இதனால்தான், இந்தநாட்டுப் பழங்குடி மக்களும் சகல விதத்திலும் செல்வமும் வீரமும் உள்ள சக்தி பொருந்திய பெரும்பான்மையுள்ள மக்களுமாகிய நாம் பிற்பட்ட மக்களாகவும், தாழ்த்தப்பட்ட மக்களாகவும், தொடக்கூடாத மக்களாகவும் மனிதப் பிறவி உரிமைக்கு உரியதல்லாத மக்களாகவும் நம்முடைய நாட்டிலேயே நாம் ஆக்கப்பட்டு இருக் கிறோம். இதை நம்மில் இதுவரை ஒரு சிலராவது அறிந்திருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை,

கடந்த பல நாட்களாக நம்முடைய ஈனநிலையைக் குறிவைத்து விளக்கிச் சொல்லிக் கொண்டு, சமுதாய சீர்திருத்தம் என்னும் பெயரை வைத்து எத்தனையோ பேர் எவ்வளவோ வேலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். என்றாலும், அவர்களில் எவரும் வெற்றி பெறாமலேபோயிருக்கிறார்கள். ஏன்என்றால், அவர்கள் அத்தனைபேரும் இருக்கிற குறைபாடுகளை நீக்கவேண்டும் என்று கருதுகிறார்களேயொழிய, அவை ஏற்படுவதற்கு அடிப்படையான மூலகாரணம் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்து அதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவே இல்லை. ஆகையால், இன்று நான் சொல்வது என்னவென்றால், நமது சமுதாயத்திலுள்ள இழிவுகளையும் குறைபாடுகளையும் ஒழித்து, நம்மை மனிதத் தன்மைக்கு அருகதை உடையவர்களாக ஆக்கவேண்டும் என்று கருதுகிறவர்கள், 'இந் நிலைக்குக் காரணம் என்ன? எதனால் நாம் இக் கேவலமான நிலையை இந்தப் பகுத்தறிவு, சமதர்மக் காலத்திலும் சுமந்துகொண்டு இருக்கிறோம்' என்பதைக் கண்டு பிடிக்க முயலவேண்டும் என்பதேயாகும்.

எனக்கு வயது இன்று 67. நான் சென்ற 40 வருஷகாலமாக நமக்குள்ள சமுதாயக் குறைகளையும், இழிவுகளையும் ஒழிக்க வேண்டுமென்ற துறையில் உழைத்து வந்திருக்கிறேன். எனது குடும்பமும் ஒரு வைதிகக் குடும்பமாகும். குடும்பத்தில் எவ்வளவோ கோவில் கட்டுதல், சத்திரம் கட்டுதல், அன்னதானம் செய்தல் முதலிய பல காரியங்கள் செய்திருப்பதோடு, இந்தத் தர்மங்களுக்குச் சொத்துக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றபோதிலும்,

அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த நான் இன்று பல மக்களால் ஒரு புரட்சிக்கார னென்றும், தீவிரக் கிளர்ச்சி செய்கிறவன் என்றும் சொல்லப்படுகிறேன். காரணம் என்ன வென்றால், நம்முடைய நிலைமைக்குக் காரணமாய் இருக்கும் அடிப்படையில் நான் கையை வைப்பதால்தான். அது என்னவெனில், எவ்வளவு காலத்திற்கு நாம் இந்து மதத் தையும், இந்துக் கடவுள்களையும், இந்து சாஸ்திரம், புராணம், வேதம், இதிகாசம் முதலி யவைகளையும் நம்பிப் பின்பற்றிக்கொண்டு இருக்கிறோமோ அதுவரையில், நாம் தாழ்த் தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் சம உரிமைக்கு அருகதை அற்றவர் களாகவும் இருப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியவே முடியாது. அந்த மாதிரி அவை களில் இருந்து வெளியேறாமல் அவைகளை நம்பிப் பின்பற்றி நடந்து வந்தவர்களில் ஒருவராவது, அவர்கள் வேறு வழிகளில் எவ்வளவு முயற்சித்தவர்களாய் இருந்தாலும், எவ்வளவு பெரியவர்களாக ஆகி இருந்தாலும் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவிலிருந்து தப்பித்துக்கொண்டவர்கள் இல்லவே இல்லை என்பதை ஒவ்வொரு சீர்திருத்தவாதி என்ப வனும் நன்றாக உணரவேண்டும் என்று சொல்லி வருகிறேன். இதனாலேயே நான் நாத்திகன் என்றுகூட சொல்லப்படுகிறேன்.

தோழர்களே! நான் ஏன் இப்படிச் சொல்லிவருகிறேன் என்றால், சாதி முறைகள் என்பவைகள் எல்லாம் இந்து மதத்தினுடைய சிருஷ்டியேயாகும். இந்துக் கடவுள்கள் பெயராலும், சாஸ்திரங்கள் பெயராலுமேதான் அவை நிலை நிறுத்தப்படுகின்றன. பகுத் தறிவற்ற சில சமுதாய சீர்திருத்தக்காரர் என்பவர்கள் இப்படிப்பட்ட கடவுள், மத சாத் திரங்களுக்கும், இந்து மதத்திற்கும், வேதாந்தமும் தத்துவார்த்தமும் சொல்லி, இதை ஏற்படுத்தினவர்களுக்கு நல்ல பிள்ளைகளாக ஆவதற்கு முயற்சிப்பார்கள். இந்த அறி வீனமும், மோசமும், தந்திரமும் ஆன காரியங்களால் தாங்கள் மாத்திரம் மரியாதை யடையலாமே தவிர, சமுதாயத்தின் இழிநிலை போக்க ஒரு கடுகளவும் பயன்படாது. ஆகையால், உங்களுக்கு முதலாவதாக நான் என்ன சொல்லுகிறேன் என்றால், நீங்கள் உங்களுடைய நிலையைச் சிறிதாவது மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உண்மையாய் ஆசைப்படுவீர்களானால், இந்து மதம் என்பதையும் அது சம்பந்தப்பட்ட கடவுள் மத, புராண, சாத்திர, இதிகாசம் என்பவைகளையும் உதறித் தள்ளி அவற்றிலிருந்து வெளி

வாருங்கள். அதைச் சொல்லவேதான் நான் இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் அதைச் செய்யவில்லையானால் இனியும் ஓர் ஆயிரம் ஆண்டிற்குக்கூட நீங்கள் எப்படிப்பட்ட மாநாடுகளும், சங்கங்களும், பிரச்சாரங்களும், கிளர்ச்சிகளும் நடத்தினாலும், எவ்வளவுதான் அரசியல் சுதந்திரமும், பொருளாதார முன்னேற்றமும் பட்டம் பதவிகளும் பெற்றாலும் உங்கள் சமுதாயத்திற்குள்ள இழிவு நீங்கப்போவதில்லை. இது உறுதி; உறுதி. உங்களுக்கு முன் முயற்சித்தவர்கள் செய்த தவறுகளையே நீங்களும் செய்துகொண்டிருந்தால் உங்கள் வாழ்நாட்களும் அவர்களைப் போலவே தவறு செய்யத்தான் முடியுமே ஒழிய, திருத்தம் காண முடியவே முடியாது. மலைக் காய்ச்சலால் அவதிப்படும் மக்கள் கொய்னா சாப்பிடுவதையே அதற்குப் பரிகாரம் என்று கருதுவார்களேயானால் அம் மக்களுக்கு மருந்து சாப்பிடுகிற வேலையும், மருந்து வியாபாரிகளுக்கு இலாபம் கிடைக்கிற வேலையும்தான் நடைபெறுமே தவிர, அவர்களுக்கும் அவர்களது சந்ததிகளுக்கும் மலைக் காய்ச்சல் ஏற்படுவது தடுக்கப்படமாட்டாது.

உண்மையில் மலைக் காய்ச்சலை ஒழிக்க வேண்டுமானால் மலைக் காய்ச்சலுக்கு ஆதாரமான, அதை உற்பத்தி செய்கிற கொசுப் பூச்சிகள், விஷக் காற்றுகள் முதலியவைகளை ஒழிக்கவேண்டும். இவைகள் ஒழிக்கப்படவேண்டுமானால், மறுபடியும் அவைகள் உற்பத்தியாகாவண்ணம் கசுமாலங்களையும் குப்பைக்கூளங்களையும் நெருப்பு வைத்து எரித்து, அழுக்குத் தண்ணீர்க் குட்டைகளை மூடி ஆகவேண்டும். அதுபோலவேதான், நம் சமுதாய இழிவுக்குக் காரணங்களாய் இருக்கிற எப்படிப்பட்ட மதத்தையும், கடவுள்களையும், ஆதாரங்களையும் நாம் அடியோடு அறுத்தே தீரவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்து மதத்தையோ, அது சம்பந்தமான கடவுள், மதம், சாஸ்திரம், இதிகாசம், புராணங்களையோ சீர்திருத்திவிடலாம் என்று நினைப்பது வெறும் கனவும், வீண் வேலையும், கடைந்தெடுத்த முட்டாள்தனமுமேயாகும்.

சரியான வழி—புத்திசாலித்தனமான வழி என்னவென்றால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதுதான். அதாவது, இந்து மதத்தைவிட்டு நாம் வெளியேறிவிட வேண்டியதுதான்.

அதாவது, இந்து மதம் என்பதற்கு வேறு வார்த்தை சொல்ல வேண்டுமானால் ஆரியம், பார்ப்பனீயம் என்றுதான் சொல்லவேண்டும். உங்களுக்குச் சந்தேகமிருந்தால் அகராதிப் புத்தகங்களையும், அறிஞர்களால்—ஆராய்ச்சி நிபுணர்களால் எழுதப்பெற்ற ஆராய்ச்சிக் குறிப்புகளையும் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். இதை நீங்கள் யாவரும் நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். ஆஷாடபூதிகளைக் கண்டு ஏமாந்துவிடாதீர்கள். புத்தர், சங்கரர், இராமானுஜர் போன்றவர்களின் முயற்சிகள் என்ன ஆயின? புத்தரை ஒழிக்கவே இராமன், கிருஷ்ணன், இராமாயணம், கீதை, புராணங்கள், அவை சம்பந்தப்பட்ட கோவில்கள் முதலியவை கற்பிக்கப்பட்டன. இராமாயணத்தையும், கீதையையும், பிற சாத்திரங்களையும், ஆதரித்துப் பிரச்சாரம் செய்யவே சங்கரர், இராமானுஜர்கள் முயன்று வந்தார்கள். அவர்களைப் பின்பற்றித்தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும், பக்தர்களும், தாசர்களும், மகாத்மாக்களும், ஆனந்தாக்களும், சுவாமிகளும் தோன்றினர். இதை உணர்ந்தவர்கள்தாம் இன்று இந்நாட்டு மனித சமுதாய சீர்திருத்தத்திற்கு ஒரு கடுகளாவாவது தகுதியுடையவர்களாவார்கள்.

சமீபத்தில் தோழர் அம்பேத்கார் அவர்கள் சென்னை வந்திருந்தபோது என்னிடத்தில் இது சம்பந்தமாக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்ததிலிருந்தும் பஞ்சாப் லாகூரிலிருந்து 'ஜாத்பாத் தோரக் மண்டல' தலைவர் சாந்தராம் அவர்களும், முன்பு காரிய தரிசியாய் இருந்த ஹரிபவன் அவர்களும் உங்களைப்பற்றி எனக்கு எழுதிய சில கடிதங்களிலிருந்தும் உங்கள் காரியதரிசி எழுதின சில குறிப்புகளிலிருந்தும் நீங்கள் நான் சொல்லும்

இந்த வார்த்தைகளைப் பொறுமையாய்க் கேட்கக்கூடியவர்களென்றும் நடுநிலைமையிலிருந்து கவலையாய் சீர்திருந்தக்கூடியவர்கள் என்றும் தெரிந்ததினால் இவ்வளவு ஆயிரம் பேர் கொண்ட இந்த மாபெரும் கூட்டத்தில் இதை நான் சொல்லுகிறேன். எங்கள் நாட்டில் நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவனாய் இருந்த 1922-வது வருடத்திலேயே ஒரு பெரிய மாகாண காங்கிரஸ் மகாநாட்டில், 'இராமாயணம் கொளுத்தப்பட்டாலொழிய தீண்டாமை ஒழியாது' என்று சொல்லியிருக்கிறேன். வெகு பேர்களுக்கு அன்று ஆத்திரமாய் இருந்தது. இன்று எங்கள் நாட்டில் இப்படிப் பேசுவதும் கொளுத்துவதும் சர்வசாதாரணமாய் ஆகிவிட்டது. இராமாயணத்தைக் கொளுத்த ஒரு கூட்டமும், அதை ஆதரிக்க ஒரு கூட்டமும் தினமும் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசிவருகிறார்கள்.

மற்றும், பதினாயிரக் கணக்கான சுயமரியாதைக்காரர்கள் இந்துமதத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள் என்றே சொல்லலாம். தங்கள் வடமொழிப் பெயர்களை எல்லாம் மாற்றிக்கொண்டார்கள்; இந்துமத அறிகுறியாய் இருக்கிற சின்னங்களையெல்லாம் விட்டு விட்டார்கள். உச்சிக் குடுமிகளை எல்லாம் தாங்கள் கத்தரித்துக் கொண்டதுமல்லாமல் பிறருக்கும் கத்தரித்துவிட்டார்கள். அனேகர் புராணப் பண்டிகைகளையும் உற்சவங்களையும் கொண்டாடுவதில்லை. இதற்குமுன்பு ஏழைகள் பணத்தை வஞ்சித்துக் கொள்ளையடித்த பணக்காரர்கள் இதற்குமுன்பு கோயில் கட்டிவந்ததை நிறுத்திவிட்டு, பள்ளிக்கூடம் முதலிய காரியங்களில் செலவிட்டுவருகிறார்கள். சென்சஸில் தாங்கள் இந்துக்கள் அல்லவென்று அனேகம் பேர் சொல்லிவிட்டார்கள். புராண நாடகங்களையும், சினிமாக்களையும், பஜனைப் பாட்டுகளையும் ஜனங்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் பெரும் கிளர்ச்சிகள்செய்து ஜெயிலுக்கும் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் போகத் தயாராய் இருக்கிறார்கள். எங்கள் நாட்டார் பலர் எங்கள் திராவிடநாடு, வடநாட்டு சம்பந்தத்திலிருந்து பிரிந்து தனியாக இருக்கவிரும்பும் முக்கிய காரணங்கூட இந்துமதத்தால் ஏற்பட்ட இழிவும், ஆரிய ஆதிக்கத்திலிருக்கும் இழிவும் சுரண்டலும் ஒழியவேண்டும் என்பதற்கு மாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாகிய டாக்டர் அம்பேத்கார், ராவ்பகதூர் சிவராஜ் போன்றவர்கள் எல்லாம், தாங்கள் இந்து மதஸ்தர்கள் அல்லவென்றும், தாங்கள் இந்துக்கள் அல்லவென்றும், தங்கள் சமூகத்தார் இந்துமதத்திலிருந்து விலகவேண்டும் என்றும், 15 வருடத்திற்கு முன்பிருந்தே சொல்லிவருகிறார்கள். 'இந்துமதத்தை விட்டு விட்டால் எங்களை என்ன மதம் என்று சொல்லிக்கொள்வது?' என்று கேட்கலாம். உங்களுக்குத் துணிவு இருந்து நீங்கள் வேறு எந்த மதத்தின் பேரை சொல்லிக்கொண்டால் சமுதாயத்தில் உங்களைத் தீண்டாமையும், இழிவும் அணுகாதோ அதைச் சொல்லுங்கள். அப்படிச் சொல்லிக்கொள்ளுவதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்குமானால் நீங்கள் திராவிடர்கள் என்றும், திராவிடர் சமயத்தவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளலாம். அதிலும் கஷ்டமிருந்தால், சமரச சமயத்தார், மனித சமுதாய ஜீவகாருண்ய சமயத்தார் என்று சொல்லிக் கொள்ளலாம். பொருள் இல்லாததும், பித்தலாட்டமானதும், இழிவையும் அன்னிய ஆதிக்கத்தையும், சுரண்டலையும் தருவதுமான ஒரு சுயநல கற்பனையான (இந்து) மதத்தின் பேரைச் சொல்லிக்கொள்வது என்பது வெட்கக்கேடான காரியமாகும். மதம் வேண்டுமானால் மதம் வேண்டும் என்பவர்கள் மதத் தத்துவங்களையும் அவசியத்தையும் ஆராய்ச்சி செய்துபார்த்து, ஒரு மதத்தைத் தழுவுவது என்பது அறிவுடைமையாகும். அப்படி இல்லாமல், தான் ஒரு மதத்தில் பிறந்துவிட்டான் என்பதற்காகவே அதை எப்படி விடுவது என்று சொன்னால் அது வருணாசிரமத்தை மற்றொரு முறையில் பின்பற்றுவதேயாகும். பகுத்தறிவுவாதி என்று சொல்லுவது எல்லா மதத்திற்கும் தாய் மதம் என்று சொல்லிக் கொள்வதை ஒக்கும். நீங்கள் திராவிடர்கள் என்பதை உணராவிட்டாலும் நீங்கள் ஆரியர்கள் அல்லர். ஆரிய சம்பிரதாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்றும், ஆரியர்கள் இந்த நாட்டிற்குக் குடியேறிவந்த ஒரு அன்னிய இனத்தவர்கள் என்றும்

அவர்களுடைய ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட கடவுள், மத, சாத்திர, புராண, இதிகாசங்களைச் சுமந்துகொண்டிருப்பதன் பயனாகவே இந்த இழிநிலையில் இருக்கின்றீர்கள் என்றும் தெரிந்தால் எனக்கு அதுவே போதுமானதாகும்.

தோழர்களே!

முன்னுரையாக அதிகநேரம் பேசிவிட்டேன். அனேக காரியங்கள் நடக்கவேண்டி இருப்பதால் மாநாட்டுக் காரிய நடவடிக்கை ஆனபிறகு சில வார்த்தைகள் சொல்லுகிறேன். நான் சொன்ன இவற்றை நீங்கள் நன்கு ஆலோசனை செய்துபார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

[கான்பூரில், 29, 30, 31-12-1944-ல் நடந்த இந்திய பிற்படுத்தப்பட்ட இந்துவகுப்பார் சங்க மாநாட்டுத் தலைமை உரை—'குடி அரசு' 13-1-1945]

16. என் மாற்றங்கள்

நான் எப்போதும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு கொடுக்க முந்துபவன் அல்லன்; முந்தியதே கிடையாது. என்னை அணுகுகிறவர்களுக்குத்தான் ஆதரவு கொடுத்து வந்திருக்கிறேன். எனக்கு எந்தக் கட்சி ஆதரவும் தேவையில்லை. ஜஸ்டிஸ் கட்சி என்னை அடைந்ததால் அதற்கு ஆதரவு கொடுத்தேன்; நானே ஜஸ்டிஸ் கட்சியானேன். யாரையும் போய் ஆதரவு தேடாமல் இன்று ஜஸ்டிஸ் கட்சியே அதாவது, திராவிடர் கழகமே (முன்னேற்றக் கழகமே) ஆட்சி செய்யும்படியான நிலைமைக்கு அதை ஆக்கியிருக்கிறேன்.

மற்றும், அந்தக் காலத்தில் காங்கிரஸ் ஒழிக்கப்பட்ட 1939-ல், அரசாங்கமே வந்து, இரண்டு கவர்னர் ஜெனரல்கள் என்னை வேண்டியும்—நான் இணங்காமல் வெளியில் நின்றேன்; அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்து காங்கிரசை அடக்கினேன்.

வெள்ளையர் அரசாங்கம் நாட்டைக் காலி செய்துவிட்டுப் போனவுடன் வேறு கதியில்லாமல் காங்கிரஸ் பார்ப்பனர் கைக்கு வந்தவுடன், அவர்கள் எவ்வளவு என்னை வேண்டியும் நெருங்காமலிருந்து, பார்ப்பனரைப் பதவியிலிருந்து வெளியேற்றினேன். பிறகு பதவிக்கு வந்த பார்ப்பனரல்லாத தமிழர் திரு. காமராஜர், அவரே விரும்பியதற்கிணங்க அவரை ஆதரித்தேன்.

அவர் ஆட்சி மாறி ஜஸ்டிஸ் கட்சியின், திராவிடர் கழகத்தின் ஒரு பிரிவான—திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்தது என்றாலும், அது பார்ப்பனர் ஆதரவு தங்களுக்கு அபாயத்தைக் கொடுக்கும் என்று கருதி, பிரிவுபட்ட ஜஸ்டிஸ் கட்சியின் (தி.மு.க.வின்) தலைவரான அண்ணா அவர்களே நேரில் என் வீட்டிற்கு வந்து, 'உங்களிடம் ஒப்படைக்கிறேன்; நீங்களே எங்களை நடத்துங்கள்!' என்று சொன்னதால் ஜஸ்டிஸ் (திராவிடர் கழக) கட்சியின் ஆதரவில் நடந்து வருகிறது.

இந்த ஜஸ்டிஸ் கட்சி சேலம் மாநாட்டில் அண்ணா அவர்களின் பிரேரணையின் மீதுதான், 'திராவிடர் கழகம்' என்ற பெயர் கொண்டதாயிற்று. அதற்கு மற்றொரு ஆதாரம் ஜஸ்டிஸ் (தி.க.) கட்சிக் கொள்கையாகிய பார்ப்பனரல்லாதாராலேயே இன்று ஆளப்பட்டு வருகிறது.

['விடுதலை'—தலையங்கம்—24-10-1972]

5. சுயமரியாதை இயக்கம்

1. சுயராஜ்யமா? சுயமரியாதையா?

நமது நாட்டிலுள்ள பொதுமக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் சூழ்ச்சிகளாலும், தந்திரங்களினாலும் ஒருவரையொருவர் இழிவுபடுத்தியும், அடிமைப்படுத்தியும் கொடுமை செய்து வருவதன் பலனாய் அன்னிய அரசாங்கத்தின்கீழ் ஆளப்பட்டு துன்பமடைந்து வருகிறோம். இத் துன்பம் நமக்கு ஒழியவேண்டுமானால் நாம் பிறருக்குச் செய்யும் துன்பம் ஒழியவேண்டும். அன்னிய அரசாங்கத்தார் நமக்குச் செய்யும் கொடுமையை ஒரு தட்டில் வைத்து, நம் நாட்டில் சிலர் நமக்குச் செய்யும் கொடுமையையும், நம்மைக்கொண்டு மற்றவர்களுக்குச் செய்யச் செய்யும் கொடுமையையும் ஒரு தட்டில் வைத்துத் தூக்கிப் பார்த்தால் அரசாங்கத்தின் கொடுமையைவிட நம்மவர்களின் கொடுமையே பெரிய பளு வானதாயிருக்கும்.

நமது நாட்டில் சில வேஷக்காரர்கள், சுயராஜ்யம் என்கிற பதமும், சுதந்திரம் என்கிற பதமும், உரிமை என்கிற பதமும் வாழ்க்கையை உத்தேசித்து வாயளவில் பேசி, பொது ஜனங்களை ஏமாற்றி, நகத்தில் அழுக்குப்படாமல் காலங்கழிக்க பார்க்கின்றார்களே யல்லாமல், அதற்காகச் செய்யவேண்டிய காரியங்களில் தங்களுக்குச் செய்ய யோக்கியதை இல்லாவிட்டாலும், வேறு யாராவது செய்தாலும் தங்களுக்கு யோக்கியதை குறைந்து போகுமே என்கிற பயத்தால், அதற்கு வேண்டிய முட்டுக்கட்டைகளைப் போட்டுத் தாங்களே முன்னணியிலிருக்கவேண்டிய மாதிரியில் இராஜீயவாதிகளென்னும் பெயரால் வாழ்ந்து வருகின்றார்கள். நமது நாட்டுக்கு முக்கியமாக வேண்டியது சுயராஜ்யமா? சுயமரி யாதையா!

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றிப் பிழைக் கின்ற அனேகர், சுயராஜ்யம் இன்னதென்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொன்னவர் களல்லர். அதை ஜனங்கள் அறியாதிருக்கும்படி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து வருகின்றார்கள். மகாத்மா காந்தி அவர்கள் சுமார் அய்ந்து வருடங்களுக்கு முன்பாக சென்னைக்கு வந்திருந்த சமயம் ஓர் கூட்டத்தில் பேசும்போது, ‘என்னுடைய சுயமரி யாதையைக் காப்பாற்றிக்கொள்ள யோக்கியதை இல்லாமலிருக்குமானால் நான் சுயராஜ் யத்தை விரும்புவதில் அர்த்தமேயில்லை’ என்று சொல்லியிருக்கிறார்.

மனிதனுக்கு அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதுதான் பிறப்புரிமையேயல்லாமல், அரசியலான இராஜீயமென்னும் சுயராஜ்யம் ஒருகாலும் பிறப்புரிமையாக மாட்டாது. இராஜீய பாரமானது ஒரு தொண்டு.

வீதி கூட்டுவதும், விளக்குப் போடுவதும், காவல் காப்பதும் எப்படிச் சேவையா யிருக்கிறதோ, அதுபோலவே இராஜீய பாரமென்பதும் ஒரு சேவைதான். தேசத்தில் அவனவனது வாழ்க்கைக்கும் அல்லது பொது நன்மைக்கும் எப்படிப் பல தொழில்கள் இருக்கின்றனவோ, அதுபோல் இராஜீய பாரமென்பதும் ஒரு தொழில்தான். இத்தொழிலை இன்னார்தான் செய்யவேண்டுமென்றாவது, இன்னாருக்குத்தான் உரிமையென்றாவது கடவுள் என்பவரால் யாருக்கும் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் ஊமை, கூன், குருடு, செவிடு உட்பட அதற்கு அருகர்கள்தாம். ஆதலால், அவ்வுரிமையை எல்லோரும் சமமாய் அடையவேண்டியதுதான். ஆனபோதிலும், மனித ஜென்மத்திற்கு இக் கேவலஆட்சியைப் பிறப்புரிமை என்று சொல்லமுடியாது. மனிதனுக்கு உண்மையான பிறப்புரிமை என்று சொல்வது அவனது சுயமரியாதையும், பரோபகார மென்பதுதான்.

சுயமரியாதை இல்லாத ஒரு மனிதனுக்கு சுயராஜ்யம் அவசியமே இல்லாததாகும். சுயராஜ்யம் இல்லாத எந்த மனிதனுக்கும்கூட சுயமரியாதை என்பது அவசியமானதே யாகும். சுயமரியாதையற்றவனைப் பிணமென்றுதான் சொல்லவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது, நமது தேசத்தில் சுயமரியாதை அற்று பூச்சி, புழுக்கள்போலும், நாய், பன்றிகள்போலும், பிசாசுகள், அரக்கர்கள்போலும் வாழும் ஜனங்கள் கோடிக்கணக்காய் இருக்கின்றனர்; இலட்சக்கணக்காய் தினமும் பிறக்கின்றனர். இச் சமூகத்திற்கு சுயராஜ்யம் எதற்கு?

உதாரணமாக, மனித உடல் தாங்கிய ஒருவன், அவனுடைய தெய்வத்தைக் காண—தரிசிக்க உரிமையற்ற ஒருவன், எப்படிச் சுயமரியாதை யுள்ளவனாவான்? அந்தச் சமூகத்திற்கு சுயராஜ்யம் எதற்கு? எந்த இராஜ்யமிருந்தால்தான் அவர்களுக்குக் கவலை என்ன? இம்மாதிரி, ஓர் சமூகத்தாரை ஒடுக்கிச் சுயமரியாதையற்று வைத்திருக்கும் ஒரு 'இராட்சச' சமூகத்தார் சுயராஜ்யமடைவது, மற்ற சமூகங்களுக்கு நன்மையைத் தருமா? அல்லது, ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கும் சேர்ந்துதான் சுயராஜ்யம் தேடுவது என்று சொல்லுவோமானால், அவர்கள் தங்கள் தெய்வங்களைக் காணவும், தரிசிக்கவும் முடியாதபடியும், தெருவில் நடக்கவும், கண்ணில் தென்படவும் முடியாதபடியும் வைத்திருப்பதற்குக் காரணம் சுயராஜ்யம் இல்லாமைதானா?

அன்னிய இராஜ்யம் நமது ஜனங்களை இம்மாதிரிக் கொடுமையாக நடத்தும்படி நமக்குச் சொல்லவே இல்லை. எந்தக் காரணத்தைக் கொண்டோ அன்னிய இராஜீய பாரங்கள் நமது நாட்டிற்கு ஏற்படாமலிருந்திருக்குமேயானால், இந்தச் சுயமரியாதை இன்னதென்று உணருவதற்குக்கூட நமக்குச் சவுகரியம் கிடைத்திருக்காது. நமது நாட்டு மக்களின் சுயமரியாதைக்கு விரோதமாயிருப்பது, நம் நாட்டார் சிலரின் ஆதிக்கத்தினாலே யல்லாமல், அன்னிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தினாலல்ல. ஆனால், நமது நாட்டில் பெரும்பாலோர் சுயமரியாதையற்றிருக்குந் தன்மை, அன்னிய அரசாங்கத்தாருக்கு அனுகூலமாயிருப்பதனால் இக் கொடுமைகளைப் போக்க அவர்களுக்கு அதிகக் கவலையில்லை.

ஆனபோதிலும், அவர்களுடைய தத்துவம் ஒருநாளும் இவ்வித சுயமரியாதைக் கேடுக்கு அனுகூலமாயிருப்பதில்லை. ஒரு தேசம் சுதந்திரமடைய வேண்டும் என்ற உண்மையான கவலை இருக்குமானால், அக் கவலைக்கு அவர்கள் அருகர்களா, இல்லையா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானால் அவர்கள் சுயமரியாதை உள்ளவர்களா, இல்லையா என்பதிலிருந்துதான் அவர்களுடைய அருகதை வெளிப்படும்.

அஃதில்லாமல், சுதந்திரத்திற்காகச் செய்யப்படும் எவ்வித முயற்சிகளும் தனிப்பட்டவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்கும், வாழ்க்கை நலத்திற்கும் சுய மரியாதையில்லாத நிலைமையைப் பலப்படுத்தவும்தான் ஆகுமேயல்லாமல், வேறொன்றுக்கும் உதவாது. அதை உத்தேசித்தேதான் மகாத்மா காந்தியும் சுதந்திரம் பெறுவதற்காக ஏற்படுத்திய திட்டங்களையே சுயமரியாதை அடைவதற்கான திட்டங்களாகப் போட்டு விட்டார். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்வதும், கதர் அணியவேண்டுமென்று சொல்வதும் நம் நாட்டு மக்களின் சுயமரியாதையின் ஜீவ நாடிகள். ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தெருவில் நடக்கவும், பக்கத்தில் வரவும், கண்ணில் தென்படவும், அவனது தெய்வத்தைக் கண்டு தரிசிக்கவும் முடியாதபடி வைத்திருக்கிற வரையில், சுயமரியாதை இல்லையென்றும், அப்படிப்பட்டவனுக்குச் சுதந்திரமென்பது அர்த்தமில்லாத வார்த்தை என்றும், ஒரு மனிதன் தன்னுடலில் போதிய அளவு சக்தியிருந்தாலும் ஜீவனத்திற்கு வேண்டிய அளவு தொழிலில்லாமல் வைத்திருப்பதனால் அவன் எவ்விதத்திலும் சுயமரியாதையோடு வாழ முடியாதென்றும், ஜீவனத்திற்காக எப்படியாவது தன்னுடைய சுயமரியாதையை இழக்கத்தான் நேரிடுமென்றும் கருதியே பெரும்பான்மையான ஏழைகளுக்கு ஜீவனோபாயத்திற்கு ஆதாரமான கதரையும் வற்புறுத்தி வந்தார். மற்றவர்களை

அடிமைப்படுத்தி வைத்திருப்பதினாலேயே வாழமுடியும் என்கிற நிலைமையடைந்த நமது நாட்டிலுள்ள ஒரு சமூகத்தார், இத்திட்டத்தை அடியோடுஒழித்து, பழையபடி தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளத் தகுந்த மாதிரியில் ஜெயம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலைமையில் 'சுதந்திரம்', 'சுயராஜ்யம்', 'உரிமை' என்கின்ற வார்த்தைகள் தேச ஜனங்களுக்குப் பெரிய இழிவுக்கும், கொடுமைக்கும் ஆதாரமானவைதான். ஆதலால், நமது தேசம் உண்மையான உரிமை அடையப் பாடுபட வேண்டுமானால், மக்களின் சுய மரியாதைக்காகத்தான் முதலில் பாடுபடவேண்டும்.

['குடி அரசு'-தலையங்கம்—24-1-1926]

2. சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுசீந்திரம் என்னுமிடத்தில் சத்தியாக்கிரகம் நடைபெறும் விஷயத்தைப்பற்றி இதற்குமுன் நமது பத்திரிகை மூலமாகத் தெரியப்படுத்தியிருப்பதை வாசகர்களறிவார்கள். அது விஷயமாக அமைக்கப்பட்டுள்ள கமிட்டியின் விஷயத்தையும் இந்த இதழ் 3-வது பக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

வைக்கம் சத்தியாக்கிரகம் முடிவடைந்து வெகு நாட்களாகிவிடவில்லை. அதற்குள்ளாக மற்றோரிடத்தில் சமத்துவத்தை நிலைநாட்டத் தோன்றியுள்ள சத்தியாக்கிரகத்தைக் காண நாம் மகிழ்ச்சியுறுகிறோம். அநீதியும் அக்கிரமமும் தொலைய வேண்டுமானால், வெறும் சட்டங்களாலும், எழுத்தாலும், பேச்சாலும் முடியாதென்றும், சத்தியாக்கிரகமும், தியாகமுமே உற்ற சாதனமாகுமென்றும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம். நமது நாட்டில் சாதிக் கொடுமையும், பிறவியினால் உயர்வு-தாழ்வு என்னும் அகங்காரமும் உடனே தொலையவேண்டியது அவசியமாகும். இக் கொடுமைகளை ஓர் பக்கத்தில் வைத்துக்கொண்டே—ஜம்பமாக தென் ஆப்பிரிக்கா இந்தியருக்காகப் பரிந்து பேசுவதும், எழுதுவதும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் நன்மையையே பெரிதும் கவனிப்பது போல் நடித்து நீலிக் கண்ணீர் விடுவதும், தன் மனச்சாட்சி அறிய செய்யும் மகத்தான அக்கிரமமேயன்றி வேறல்ல.

மேலும், இவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு பொதுஜனங்களை ஏமாற்றுவதும், எலெக்ஷன் பிரச்சாரம் செய்வதும் மிக மோசமான செய்கையாகும். தாங்கள் பிழைக்க வேண்டும்; தங்கள் மக்கள் நன்றாயிருக்கவேண்டும், தங்கள் சமூகத்தார் மேன்மையான ஸ்திதியில் இருக்கவேண்டும், மற்றவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்களாய் சாஸ்திரங்களையும் புராணங்களையும், இதிகாசங்களையும், மனுதர்ம சாஸ்திரம் என்னும் அயோக்கிய நூலொன்றையும் காட்டிக்கொண்டு வயிறு வளர்ப்பதுடன், தங்கள் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள சுயமரியாதையற்ற, ஆண்மையற்ற சிலரைச் சேர்த்துக்கொண்டு செய்யும் சூழ்ச்சிகள் எல்லாம் நொறுக்கப்படவேண்டுமாயின், பொதுமக்கள் சர்வஜாக்கிரதையுடனிருந்து விழித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவைகளையெல்லாம் சுட்டிக்காட்டவல்லது சுயமரியாதையும், சத்தியாக்கிரகமும், உண்மையான தியாகமுமே என்று கூறலாம்.

நமது நாட்டிலேயே பிறப்பால் மனிதர்களாயிருந்தும், தாழ்த்தப்பட்டவர்கள்—கண்ணில் தென்படக்கூடாதவர்கள்—தங்கள் தெய்வங்களைத் தரிசிக்கக் கூடாதவர்கள்—தங்கள் வேதத்தைப் படிக்கக் கூடாதவர்கள் என எத்தனையோ இலட்சம் பேர்களை ஒதுக்கிவைத்திருக்கிறோம். நாய்களுக்கும், பன்றிகளுக்கும் கொடுத்துள்ள உரிமையைக் கூட அவர்களுக்கு அளிக்க மறுக்கின்றோம். இந் நிலைமையில் நமக்கு சுயராஜ்யமும், விடுதலையும் அத்தியாவசியமா? அல்லது, முன் கூறியவர்களின் முன்னேற்றமும் சுயமரியாதையும் அத்தியாவசியமா? என்பதைப் பொது மக்களே சிந்திக்கவேண்டும்.

சமத்துவம், சுயமரியாதை என்பது நமது நாட்டிலுள்ள யாவருக்கும் ஏற்பட்டாலன்றி அதற்கு முன்னர் கிடைக்கும் சுயராஜ்யம் ஓர் சாதியார் பிழைப்பிற்கு ஆதாரமாயிருக்குமேயல்லாது, வேறல்ல.

சுயராஜ்யம் கிடைக்குமுன் நம்மவர்களுக்குள் எவ் விஷயத்திலும் ஒற்றுமை, சமத்துவம், சுயமரியாதை ஏற்படக்கூடிய விதமான வேலைகளைச் செய்துகொள்ள வேண்டியது மிக்க அவசியமாயிருக்கின்றது. சமத்துவம் ஏற்படுமானால் 'பிராமணர்கள்' பாடு திண்டாட்டம் ஆகிவிடுமென்பது உண்மையே. முன்னர் கூறிய நூல்களைக் காட்டிக் கொண்டு பிராமணர்கள் வயிறு வளர்ப்பது நின்றுபோய்விடும். சுயமரியாதை உண்டாகி விடுமானால், பிராமணர்கள் நிலை இப்போது இருப்பதுபோலிராமல் கீழ் நிலையடையலாம். இங்ஙனம் நேரிடுமென்பதைக் கருத்தாகக்கொண்டே, இராஜீய பிராமணர்களாகட்டும், சில சர்க்கார் உத்தியோக பிராமணர்களாகட்டும், அவர்கள் மிதவாதிகளோ, சுயேச்சைக் கட்சியோ, ஆச்சாரியாரோ, அய்யங்காரோ, அய்யரோ, பந்துலுவோ, எவராயிருந்த போதிலும் சரி, ஒன்றுகூடிக்கொண்டு பிராமணரல்லாதாரை—தமிழர்களை எதிர்த்து நிற்கின்றார்கள்.

நிற்க, பிராமணர்கள் அநியாயம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல; திருவிதாங்கூரிலும் அதிகமாக இருக்கிறதை வைக்கம் சத்தியாக்கிரகத்தின் மூலமாய் யாவரும் அறிவார்கள். திருவாங்கூர் கவர்ன்மெண்டார் இவ்வநியாயங்களுக்கு உடந்தையாயிருக்கின்றார்களோ எனச் சிலர் சந்தேகிக்கக்கூடும். திருவிதாங்கூர் இராஜ்யத்திலுள்ள பொது ரஸ்தாக்களும், பொதுக் குளங்களும் சாதி, மத வித்தியாசமில்லாமல் பொது ஜனங்கள் அனுபவிக்கலாம் எனச் சில வருடங்களுக்கு முன்னரே உத்தரவு போட்டிருக்கின்றனர். ஆக, கவர்ன்மெண்டார் பேரில் குற்றமில்லை. பிராமணர்கள் தவிர்த்த ஏனைய சாதிகளாகிய நாயர் முதலானவர்கள் தங்கள் சமூக மாநாடுகளில் பொது ரஸ்தாக்களிலும், பொதுக் குளங்களிலும் சாதி, மத வித்தியாசங்கள் காட்டலாகாது எனத் தீர்மானம் செய்திருக்கின்றனர், செய்து வருகின்றனர். ஆக, பொது ஜனங்களின்சமத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் இடைஞ்சலாயிருப்பவர்கள் பிராமணர்களேயாவார்கள். இதிலும் மலையாள நம்பூதிரி பிராமணர்களைவிட, அங்கு பிழைக்கவும், அங்குள்ள கோயில் சோற்றைச் சாப்பிடவும் சென்றுள்ள தமிழ்நாட்டுப் பிராமணர்களே அதிக இடைஞ்சல் செய்பவர்களென்று கூறத்தக்க ஆதாரமுண்டு.

இவர்களின் இடைஞ்சல்களும், தொந்தரவும் தொலையவேண்டுமானால் சத்தியாக்கிரகந்தான் சிறந்த வழி. சுசீந்திரம் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நோக்கமெல்லாம் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கேயாகும்.

தமிழ் நாட்டினர், வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு எவ்வாறு பணம் கொடுத்தும், ஆட்கள் உதவியும் ஒத்தாசை செய்தார்களோ, அவ்வாறே சுசீந்திரம் சத்தியாக்கிரகத்திற்கும் தாங்கள் நன்கொடையளித்தும், ஆட்கள் உதவியும் முழு ஒத்தாசையும் அளிப்பார்களென்று நம்புகிறோம்.

பிராமணர்கள் பலரும், மற்ற வகுப்பாரைச் சார்ந்த சில சுயநலக்காரர்களும் இச் சத்தியாக்கிரகத்திற்கு எதிரிடையாய் இருப்பார்களென்பது உண்மையே. இத்தகைய குறுகிய நோக்கமுடையோர் வெகு சிலரேயானபடியால் பொதுமக்கள் இவர்களைப்பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியமே இல்லை. தங்கள் கடமை எதுவோ, எது நியாயமெனத் தங்கள் மனத்தில் படுகிறதோ, அதை மாத்திரம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, இப்படிப் பட்ட சமயத்தில் இத்தகைய சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு அளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம். தமிழ் நாட்டுத் தேசிய வாலிபர்களானாலும் சரி, மற்றும் எந்தக் கட்சியைச் சேர்ந்த எவரேயானாலும் சரி, அனைவரும் சத்தியாக்கிரகத்திற்குத் தொண்டு செய்ய அவசியமேற்படும்போது தயாராயிருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் நாட்டார் சுசீந்திரத்தில் உரிமைப் போர் நடப்பதற்குத் தங்களாலியன்ற நன்கொடையைக் கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டுமென்பதே நமது வேண்டு கோளாகும்.

சுசீந்திரம் சத்தியாக்கிரகம் வெற்றி பெறுமாருக!

['குடி அரசு'-அறிக்கை—31-1-1926]

3. சுயமரியாதை இயக்கம் ஏன்?

சென்ற வருஷம் காஞ்சீபுரத்தில் நடந்த தமிழ்நாடு அரசியல் மாநாட்டிலிருந்தே நமது சுயமரியாதையைக் காப்பாற்ற நமக்கு ஒரு தனி இயக்கம் வேண்டும் என்பதாகப் பல முறை பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். அவற்றை நீங்கள் எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டதாலும், வரவேற்பதாய்த் தெரிந்துகொண்டதாலும் என்னுடைய அபிப் பிராயம் முன்னிலும் பலப்பட்டது. அதை உத்தேசித்துத்தான் உங்கள் விருப்பத்திற்கு இணங்கி வந்திருக்கிறேன். இச் சங்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும், இதற்கு முன் இரண்டொரு சமயங்களில் இவ்விடம் வந்த காலத்திலும் சுருக்கமாக எடுத்துச் சொல்லி யிருக்கிறேன்.

இந்தத் தேசத்தில் 22 கோடி மக்களுக்கும் மேலாக இருக்கும் நாம், வெகு சொற்ப மான எண்ணிக்கையுள்ளவர்களால், நாம் எவ்விதத்திலும் பொறுப்பாளிகளாய் இல்லாத பிறவி காரணமாய் எவ்வளவு இழிவாயும் தாழ்மையாயும் கருதப்பட்டு விலங்கு, பூச்சி, புழுக் களிலும் கேவலமாய் நடத்தப்படுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்தே இருக் கிறோம். இதைப் போக்கிக் கொள்வதற்காக நமது முன்னோர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக எவ்வளவோ முயற்சிசெய்து வந்திருக்கிறார்கள். நமது இழிவையும் தாழ்வையும் நீக்கி நமக்கு சுயமரியாதையும், சமத்துவமும் அளிப்பதற்கென்றே கபிலர், புத்தர், இராமாநுஜர் போன்ற எவ்வளவோ பெரியார்கள் அவதாரமும் செய்து, இதற்காகவே உயிரையும் விட்டார்கள். இவ்வளவு செய்தும் நமது இழிவினாலும் தாழ்மையினாலும், சுய மரியாதையில் இலட்சியம் இன்மையினாலும், வாழவேண்டிய இயற்கைநிலை படைத்த நமது எதிரிகள் (பார்ப்பனர்கள்) அவ்வப்போது அதற்குத் தகுந்த சூழ்ச்சிகள் செய்து நம்மில் சிலரையே தமது ஆயுதமாகக்கொண்டு, அம் முயற்சிகளையெல்லாம் அழித்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். எவ்வளவு அழித்தாலும், எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும், எவ்வளவு தோல்வி ஏற்பட்டாலும் மேலும்மேலும் இவ்விழிந்த தன்மைகளான கொடுமையி லிருந்து நீங்கவேண்டுமென்கிற அவா மாத்திரம் நமக்கு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறதேயல்லாமல் குறையவே இல்லை. அதோடு, பொதுஜன அபிப்பிராயமும் ஒன்று போலவே இருந்துவருகிறது. ஆதலால் இவ் விழிவுகளை நீக்கி, நம் சுயமரியாதையைப் பெறுவதற்கும் காப்பதற்கும் இதுவே தக்க சமயம். இது விஷயத்தில் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன்கூடி ஒரே அபிப்பிராயமாக இருந்து தீவிர முயற்சி எடுத்து உழைக்க வேண்டும்.

நமது முயற்சிக்கும் உழைப்புக்கும் பலவித எதிர்ப்புகளும் பழிப்புகளும், பொய்க் கற்பனைகளும், பழிகளும் நமது சுயமரியாதையின் எதிரிகளால் (பார்ப்பனர்களாலும் அவர்களின் கூலிகளாலும்) ஏற்படும். அதாவது, நம்மிலேயே பலர் அவர்களோடு சேர்ந்து கொண்டு தமது வாழ்விற்கும் வயிற்றுப் பிழைப்பிற்குமாக—'தேசாபிமானம்' என்னும் போர்வையைப் போர்த்துக்கொண்டு—நமது இயக்கத்திற்குக் கேடு சூழ எதிரிகளுக்கு அனுகூலமாயிருப்பார்கள். இவைகளையெல்லாம் நாம் பொருட்படுத்தக்கூடாது.

நாம் யாருக்காவது கெடுதி செய்ய நினைக்கிறோமா? யாருடைய கிரமமான உரிமையாவது பறிக்கிறோமா? நமது சுயமரியாதைக்குப் பாடுபடுகிறோமே யல்லாமல்,

குடி அரசு

[வாரப்பதிப்பு]

(18—4—26)

திருப்பூர்

சுத்த கத்தர் ஜவுளிகள்.

திருப்பூர்

சுத்த கதர் ஜவுளிகள்.

கத்தர் வியாபாரிகளுக்கு

அறிக்கை.

18-4-1926 'குடி அரசு' முகப்பு அட்டை

தலைப்பில் 'மகாத்மா காந்தி வாழ்க' என உள்ளது.

மற்றவர் சுயமரியாதைக்கு நாம் விரோதிகளாக இருக்கிறோமா? நமது வீட்டுப் பொருள்கள் கொள்ளை போகாமல் நமது வீட்டுக் கதவைத் தாளிட்டு பந்தோபஸ்து செய்தால், நமது வீட்டுப் பொருள்களைக் கொள்ளைகொண்டே பிழைக்கக் காத்திருக்கும் திருடர்களுக்கு நாம் கெடுதி செய்தவர்களாவோமா? இவர்களைப் பட்டினிபோட்ட பாவத்திற்காளாவோமா? இதனால் மற்றொருவரை மோசம் செய்து உயிர் வாழ்வது வாழ்வல்லவென்றும் திருடிப் பிழைப்பது ஒரு பிழைப்பல்லவென்றும் திருடனுக்குத் தோன்றும்படி செய்து—அவனைக் கண்ணியமாக தனது உழைப்பினால் வாழும்படி தூண்டுவதாகாதா? இதற்காகத் திருடன் நம்மேல் கோபித்துக்கொண்டால், அதற்கு நாம் என்ன செய்வது? நாம் சுயமரியாதை அடைய வேண்டுமா, வேண்டாமா? நமது இழிவுகளும் தாழ்வுகளும் ஒழிய வேண்டுமா, வேண்டாமா? என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டுமேயொழிய—அவர் என்ன சொல்லுகிறார், இவர் என்ன சொல்லுகிறார் என்பதைப்பற்றி நாம் அதிகக் கவனம் செலுத்தக் கூடாது. இப்போது சர்க்கார் சட்ட மெம்பராக இருப்பவரும், தமது சரீரத்தின் ஒவ்வொரு அணுவும், ஒவ்வொரு மூச்சும் பார்ப்பன மயமாயிருப்பவருமான சர். சி. பி. இராமசாமி அய்யர் என்கிற ஒரு பார்ப்பனரே சென்ற வருஷம் நாடார் மகாநாட்டில் அக்கிராசனம் வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதாவது :—

'இராஜரீகத்திலும், வியாபார விவகாரங்களிலும் அய்ரோப்பியர்கள் நமக்கு மேலானவர்கள்போல நடக்கவிடக் கூடாது என்றும், சமத்துவமாகவே நடக்கச்செய்யவேண்டும் என்றும் இந்தியர்களாகிய நாம் கூறி வருகின்றோம். காங்கிரசும் முஸ்லிம் லீகும் ஆரம்பமுதற்கொண்டே இந்த இலட்சியத்தைப் பல வழிகளிலும் எடுத்துரைத்து அமுலுக்குக் கொண்டு வர முயற்சிக்கின்றன. அப்படி இருக்கும்போது, அதுபோலவே தற்செயலாகவோ துரதிருஷ்டவசமாகவோ நம்மில் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள் உயர்ந்த வகுப்பார்களுடன் போராடி, தாங்களும் அவர்களுக்குச் சமமானவர்கள் என்பதை நிலைநாட்ட முயற்சி செய்கிறார்கள். இந்தப் போராட்டம் கட்டாயம் நடக்கவேண்டியதுதான்; இது மிகவும் அவசியமானதுமாகும். ஆரம்ப தசையில் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மீது குரோதம் கொண்டு அதனைத் தாக்கவும் வேண்டிவரும். வழக்கம் என்னும் பேரால் இருந்துவரும் இம்மாதிரி அனுஷ்டானங்களை மாற்றித் தங்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ள முயலும் போது, ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்களும் சச்சரவுகளும் ஏற்படுவது சகஜமே. சமூக சமத்துவங்களுக்கு இந் நிலை இன்றியமையாதது என்பதைத் தீர்க்கதிருஷ்டி உடையவர்கள் உணர்ந்தே தீருவார்கள்' என்று பேசி இருக்கிறார்கள்.

அல்லாமலும், உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாரும், ஒவ்வொரு சமூகத்தாரும் தங்கள் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளவும் முன்னேற்றமடையவும் தங்கள் தங்கள் தேசத்தின் பெயராலோ, மதத்தின் பெயராலோ ஒவ்வொரு இயக்கத்தை ஏற்பாடு செய்துகொண்டு, நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ முன்னேறி ஆதிக்கம்பெற முயற்சித்து வருவதை நாம் பார்த்துவருகிறோம்.

உதாரணமாக, ஆசியா, அய்ரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தார் தங்கள் தங்கள் நாட்டின் பேரால் பல இயக்கங்களும்; முகம்மது, கிறிஸ்து, புத்தர் முதலிய மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்தின் பேராலும்—உதாரணமாக முஸ்லிம்கள், 'முஸ்லிம் லீக்' 'ஜெமேயத்துல் உலாமா' முதலிய சங்கங்களும்; கிறிஸ்தவர்கள், 'எல்லா இந்திய கிறிஸ்துவ சங்கம்,' 'புராட்டஸ்டண்டு லீக்' முதலிய சங்கங்களும் வைத்து இருப்பதை நாம் பார்த்துவருகிறோம்.

அதுபோலவே, நமது நாட்டில் அரசாங்கத்தாரால் 'முகமதியரல்லாதார்' என அழைக்கப்படும் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்ளும் வகுப்பார்களுக்குள்ளும் பொதுவில் என 'இந்து மகாசபை' என்றும்; பார்ப்பனர்களால் 'பிராமண மகாசபை' என்றும், 'ஆரிய தர்மபரிபாலன சபை' என்றும், 'வருணாசிரம தரும

பரிபாலன சபை' என்றும் பல ஸ்தாபனங்களும் ஸ்தாபிக்கப்பட்டு மாநாடுகளும் நடத்தப் பட்டு வருவதையும்; அதில் தமது உயர்வுகளையும் ஆதிக்கத்தையும் நிலை நிறுத்த— கொள்கைகளையும் திட்டங்களையும் தீர்மானித்து 'பிராமணன்' முதலிய பல பத்திரிகைகள் மூலம் பிரச்சாரத்துடன் அமுலில் நடத்தி வருவதையும் பார்த்துவருகிறோம். அவர் களுக்குள் உள் வகுப்பில் 'ஸ்மார்த்த பிராமணர்', 'மாத்துவ பிராமணர்', 'மகாராஷ்டிர பிராமணர்', 'விஸ்வப் பிராமணர்' எனச் சங்கங்களும் ஏற்படுத்தி பிரச்சாரங்கள் செய்து வருவதையும் பார்த்துவருகிறோம். அதுபோலவே பார்ப்பனரல்லாதார் (திராவிடர், தமிழர்) களுக்குள்ளும் பொதுவில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்றும், 'பார்ப்பனரல்லா தார் சங்கம்' என்றும் ஸ்தாபனங்கள் ஸ்தாபித்து, மகாநாடுகள் கூட்டி அதற்கேற்ற கொள் கைகளையும் திட்டங்களையும் வகுத்துப் பிரசங்கங்கள்மூலமாகவும், 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' முதலிய பத்திரிகைகள் மூலமாகவும் பிரச்சாரங்கள் செய்து வருவதையும்; 'சைவ சமய சங்கம்,' 'வைணவ சமயச் சங்கம்' என்றும் மற்றும் உள் வகுப்புகள் பெயரால் 'ஆதிதிராவிட சங்க'மென்றும், 'சோழிய வேளாள சங்க'மென்றும், 'தொண்டைமண்டல வேளாள சங்க' மென்றும், 'கொங்கு வேளாளர் சங்க'மென்றும், 'வன்னியகுல க்ஷத்திரிய சங்க'மென்றும், 'பலிஜவாரு சங்க'மென்றும், 'கம்மவாரு சங்க'மென்றும், 'பார்க்கவ குல சங்க'மென்றும், 'முத்திரிய சங்க'மென்றும், 'சேனைத் தலைவர் சங்க'மென்றும், 'அருந்ததியர் சங்க' மென்றும், 'மருத்துவர் சங்க'மென்றும், 'குயவர் சங்க'மென்றும், 'இந்திர குலாதிபர் சங்க'மென்றும் 'இரசபுத்திரர் சங்க'மென்றும், 'தனவைசிய சங்க'மென்றும், 'ஆரிய வைசிய சங்க'மென்றும், 'காசுக்கார செட்டியார் சங்க'மென்றும், 'பன்னிரண்டாம் செட்டியார்கள் சங்க'மென்றும், 'ஐந்நூற்றான் செட்டியார் சங்க'மென்றும், 'அறுபத்தி நாலு மனை செட்டியார் சங்க'மென்றும், 'இருபத்திநாலு குல செட்டியார் சங்க'மென்றும், 'விஸ்வகர்ம சங்க'மென்றும், 'சிவாச்சார்கள் சங்க'மென்றும், இன்னும் இதுபோன்ற எத்தனையோ வகுப்பார்கள் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு தங்களது குறைகளைப் போக்கிக்கொள்ளவும், அன்னியர்களால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், தங்களது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் தடையாயிருக்கும் சாதனங்களை விலக்கவும் முயற்சித்து வருவதையும் பார்த்துவருகிறோம்.

இப்படிச் செய்துவருகிற காரியங்கள் சில சமயங்களில் மற்றொரு சமூகத்தாருக்கு அதிருப்தியைக் கொடுக்கக்கூடியதாகவுமிருக்கலாம். அதற்காக மற்றவர்கள்மேல் குற்றஞ் சொல்வதில் பொருளில்லை. உதாரணமாக, ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் ஆரிய தர்ம பரிபாலன சபைமூலமாயும், வருணாசிரம தருமபரிபாலன சபை மூலமாகவும் என்ன கோருவார்கள்? வருணாசிரம தர்மம் நிலைக்கவேண்டுமென்றும், தாங்கள் உயர்ந்த சாதியார்கள் என்றும், மற்றவர்கள் சூத்திரர்கள் (தங்களது வைப்பாட்டி—வேசி மக்கள்) என்றும், பஞ்சமர்கள் (சண்டாளர்கள்) என்றும் உள்ள தர்மம் நிலைத்திருக்க வேண்டும் என்றும்; இச் சூத்திரர்களும், பஞ்சமர்களும் வருணாசிரம தர்மத்திற்கு விரோதமாய் சுயமரியாதை அடைய விரும்புவதும் சமத்துவமும் சுதந்திரமும் அடைய விரும்புவதும் தங்கள் ஆரிய தர்மத்திற்குக் கெடுதி என்றும்; வருணாசிரம தர்மமும், ஆரிய தர்மமும் காப்பாற்றப் படவேண்டுமென்றும்; சூத்திரத் தன்மையும் பஞ்சமத்தன்மையும் மறையவிடக் கூடாது என்றும்; அதை மறையச் செய்ய ஏற்படுத்தப்படும் இயக்கங்களுக்கும், முயற்சி களுக்கும் விரோதமாயிருந்து பலவித சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும் அவ்வியக்கங் களையும் முயற்சிகளையும் அழிக்கவேண்டும் என்றும் பேசி, அதற்கு வேண்டிய தீர்மானம் செய்வார்களேயொழிய 'வருணாசிரம தர்மம்' கெட ஒருகாலும் சம்மதிக்கமாட்டார்கள்.

அதுபோலவே, மற்ற வகுப்பார்களும் முன்னேறி தங்களது பிறப்புரிமைகளால் சுயமரியாதையையும் சமத்துவத்தையும், வேண்டுமானால் அதற்கெதிராயுள்ள ஆரிய தர்மமும் வருணாசிரம தர்மமும் தங்கள் தோளில் ஏறாமலும், அதனால் தங்களுக்குக் கெடுதி ஏற்படாமலும் எவ்வளவு தூரம் தடுக்கவேண்டியதோ அவ்வளவு தூரம் தடுக்க

வேண்டியதுதான். ஆரிய தர்மக் கொள்கைகளும், வருணாசிரம தர்மக் கொள்கைகளும் நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் எவ்வளவு தூரம் கொடுமை இழைக்கிறது என்பதை வெளியிலெடுத்துச்சொல்லவேண்டியதுதான். இதனால் ஒருவரையொருவர் துவேஷமென்றோ துரோகமென்றோ சொல்லிக்கொள்வது கொஞ்சமும் பொருந்தாது.

ஆனால், செல்வாக்கில்லாதவர்களின் சுயமரியாதைக் கொள்கை, செல்வாக்குள்ளவர்களின் சுயநலக் கொள்கைக்கு விரோதமாயிருக்குமானால், அச் செல்வாக்கின் மூலம் செல்வாக்கில்லாதவர்களுக்குப் பலவித இடையூறுகளும் கெடுதிகளும் ஏற்படுவது சகஜம்தான். உண்மையாக சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் உழைப்பவர்கள் இவைகளுக்குப் பின் வாங்கக்கூடாது; வருவது வரட்டுமெனத் தைரியமாகத் தலைகொடுக்க வேண்டும். உதாரணமாக, நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் என்று கவலை எடுத்து, அதிலுள்ள கஷ்டங்களை நாம் வெளியிலெடுத்துச் சொல்ல ஆரம்பித்தவுடன் பார்ப்பனர்களால் பிராமண துவேஷிகள் என்றும், வகுப்புவாதக்காரர்கள் என்றும், தேசத் துரோகிகள் என்றும் நாஸ்திகர்கள் என்றும் குற்றம் சொல்லப்பட்டு விட்டோம். இதையும் நமது பாமர ஜனங்கள் நம்பும்படியாகிறது. காரணம் என்னவென்றால், தற்கால அரசியலிலும் வைதிகத்திலும் பார்ப்பனர்களுக்குச் செல்வாக்கும் ஆதிக்கமும் இருப்பதுதானே யொழிய வேறில்லை.

அச் செல்வாக்கும் ஆதிக்கமுமே நமக்கு இவ்வளவு கொடுமைகள் இழைக்க இடம் கொடுக்கின்றன. முதலாவது, வகுப்பு வாதமும் வகுப்புத் துவேஷமும் நம்மிடம் எங்கே இருக்கிறது? பிராமணர், பிராமணரல்லாதார் என்கிற பிரிவினை யாரிடமிருந்து உண்டாயிற்று?

கோவில்களிலும், தீர்த்தங்களிலும், நதிகளிலும், பள்ளிக்கூடங்களிலும், வாசம் செய்யும் தெருக்களிலும், ஓட்டல்களிலும் காப்பிக் கடைகளிலும், 'பிராமணர்', 'சூத்திரர்' என்கிற பிரிவும்; முறையே உயர்வு தாழ்வு என்கிற பாகுபாடுகளும் பார்ப்பனரல்லாதாராகிய நம்மால் ஏற்பட்டதா, அல்லது பார்ப்பனர்களால் ஏற்பட்டதா என்று யோசித்தால்—நம்மை, யாராவது வகுப்புத் துவேஷி என்றோ வகுப்புவாதக்காரர் என்றோ சொல்ல முடியுமா?

பார்ப்பனர்கள் தங்கள் உயர்வையும் ஆதிக்கத்தையும் உண்டாக்கிக் கொள்வதும் நம்மைத் தாழ்ந்த நிலையிலும் இழிதன்மையிலும் இருக்கும்படி செய்வதும் கொஞ்சமாவது குற்றமென்று அவர்கள் நினைக்கவில்லை. ஆனால், நாம் அவர்களால் தாழ்மையாயும் இழிவாயும் கருதப்படாமல், சமத்துவமாய் சுயமரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்று நினைப்பது மாத்திரம் குற்றமாய்விடுகிறது.

1. எப்படியெனில் ஆரிய தர்ம பரிபாலனம், வருணாசிரம தர்ம பரிபாலனம்—இதனால், தீண்டாமை, சூத்திரன் இவைகளை நிலைத்திருப்பது ஆகியவைகள் தெய்வீக இயக்கம், ஆஸ்திக இயக்கம் என்கிறார்கள். சூத்திரன், தீண்டாமை ஆகியவைகள் ஒழிக்கும் இயக்கம் நாஸ்திக இயக்கம், பிராமணத் துவேஷ இயக்கம் என்று சொல்லுகிறார்கள்.

2. நம்முடன் அவர்கள் பேசுவதும், நம்மை அவர்கள் பார்ப்பதுவும் அவர்களுக்குப் பாவம், தோஷம் என்கிறார்கள். ஆனால், நாம் அவர்கள் காலில் விழுவதும், சாமி என்று கும்பிடுவதும் நமக்குப் புண்ணியம் என்கிறார்கள்.

3. நாம் தொட்டதையோ பார்த்ததையோ, நமக்குக் கொடுத்தபிறகு அவர்களுக்குக் கொடுப்பதையோ தோஷம் என்கிறார்கள். அவர்கள் எச்சிலையோ, கால் கழுவின தண்ணீரையோ நாம் சாப்பிடுவது மோட்சம் என்கிறார்கள்.

4. நம்மோடு அவர்கள் பேசும்போது அவர்கள் பூணூலைக் காதில் சுற்றிக் கொள்வார்கள். (ஏனென்றால் பார்ப்பனர்கள் மலஜலம் கழிக்கும்போது அவர்களது சரீரம்

அசுத்தமாகிவிடுகிறபடியால் அசுத்தப்பட்ட சரீரத்தில் பூணூல் தரிப்பது தோஷம். அதனால் காதில் சுற்றிக்கொண்டு இருந்துவிட்டு, தேக பரிசுத்தமானபின்பு தோளில் போட்டுக் கொள்வார்கள். அதுபோலவே, சூத்திரனாகிய நம்முடன் பேசும்போதும் அவர்கள் தேகம் அசுத்தப்படுகிறதாம்.)

நாம் அவர்களுடன் பேசும்போது வாயைப் பொத்திக் கொள்ள வேண்டும். (ஏனென்றால் வாயிலிருந்து வெளிவரும் காற்று அவர்கள்மீது பட்டுத் தீட்டாகிவிடுமாம்.)

இம் மாதிரியான ஆயிரக்கணக்கான உதாரணங்களைக் காணலாம். இந்நிலையில் நம் முன்னேற்றத்தின் எதிரிகள் நம்மை வகுப்புத் துவேஷிகள் என்றோ நாஸ்திகர்கள் என்றோ சொல்லுவார்களே எனப் பயந்து, நமது ஜீவாதாரமான உரிமைகளை அறியச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து கொஞ்சமும் பின்வாங்கிக் கொள்ளக்கூடாது.

அரசியல் விஷயங்களில் நமது தற்கால யோக்கியதை என்ன என்பதைக் கவனித்துப் பாருங்கள். பார்ப்பனர்கள் உத்தியோகம் சம்பாதிப்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட இயக்கத்தை, அவர்கள் தேசிய இயக்கம் என்பதாகப் பெயரை வைத்துக்கொண்டு—நம் பேராலேயே நமது நாட்டுக்கும் நமது வகுப்புக்கும் கேடானவற்றைச் செய்து, அரசாங்கத்திற்கு அனுகூலம் செய்துகொடுத்து—1000, 2000, 5000, 7000 ரூபாய்கள் மாதச் சம்பளமுள்ள உத்தியோகங்களையும் சம்பாதித்துக்கொண்டும், கோர்ட்டுகள் என்றும் பள்ளிக்கூடங்கள் என்றும் அரசாங்கத்திற்கும் தங்களுக்கும் அனுகூலமான ஸ்தானங்களையும் அரசாங்கத்திற்குள் உளவாயிருந்து ஏற்பாடு செய்துகொண்டு அவற்றின் மூலமாய்ப் பிழைத்து வருகிறார்கள்.

நாம் ஏதாவது இவற்றில் ஆசைப்பட்டால், நமக்கு யோக்கியதை இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். யோக்கியதை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று நாம் பிரயத்தனப் பட்டால்—'தேசத் துரோகி,' 'வகுப்புத் துரோகி' என்று சொல்லிவிடுவார்கள். ஆதலால், இவ்விதக் கஷ்டங்களில் இருந்துவரும் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சுயமரியாதையும் விடுதலையும் ஏற்படவும் நமக்கென்று ஒரு தனி இயக்கம் இருந்துதான் ஆகவேண்டும். அவ் வியக்கத்தில் நாம் எல்லோரும் ஈடுபட்டு ஒற்றுமையாய் உழைக்கவேண்டும்.

[திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, மதுரை ஆகிய இடங்களில் 28-11-1926 முதல் 3-12-1926 முடிய சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1926]

தோழர்களே!

மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும் ஏற்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது. சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். இந்தக் காரியம் ஒரு சமூகப் புரட்சியில் ஏற்பட வேண்டியதேயொழிய சிரிப்பு, விளையாட்டில் ஏற்படக்கூடியதில்லை. இதற்காக அனேக தொல்லைகளை அனுபவிக்கவேண்டிவரும்.

அனேக காரியங்களில் மற்றவர்களால் நாம் துன்பமும் இழிவும் அடையாமல், நம்மாலேயே நாம் இழிவுக்கும், கீழ்நிலைமைக்கும் ஆளாகிவருகின்றோம். நம்மை நாம் திருத்திக்கொள்ளாமல், நமக்குள் ஒரு பெரிய மன மாறுதல் ஏற்படாமல் நமது சமூகம் மாறுதலடைதல் என்பது ஒரு நாளும் முடியாத காரியமாகும்.

சமூகத்தில் மேல் சாதி, கீழ் சாதி, அடிமை சாதி என்பவர்கள் இருப்பதோடு ஆண்—பெண் தன்மைகளில் உயர்வு தாழ்வும் இருந்துவருகின்றது. இவை தவிர ஏழை—பணக்காரன், முதலாளி—தொழிலாளி தன்மைகளும் இருந்துவருகின்றன.

இவற்றுள் சில இயற்கையாக ஏற்பட்டவையாகவும், இவ்வளவுக்கும் காரணம் மனிதன் அல்லவென்றும், சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும் பொருந்திய கடவுளால்

ஏற்பட்டவை என்றும் சொல்லப்படுகிறது. இவற்றையே மேல் நிலையில் உள்ளவனும், கீழ் நிலையில் உள்ளவனும் நம்பிக்கொண்டிருக்கிறான்.

மூடநம்பிக்கைகள்தாம் வெகுகாலமாக மனித சமூகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதற் கில்லாமல் தடுத்துக் கொண்டு வருகின்றன.

சாதி வித்தியாசங்களுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் கடவுள்தான் காரணம் என்று எண்ணிய பிறகு யாரால்தான் பரிகாரம் செய்யமுடியும்?

எந்த மனிதனும் மற்ற சாதியைப்பற்றிச் சந்தேகப் பட்டாலும், தன் சாதியைப்பற்றி நம்பிக்கையாகவும் மேன்மையாகவும் கற்பித்துக் கொண்டு, மற்றவர்களைத் தாழ்த்திப் பெருமையடைகிறான். இந்தக் குணம் பார்ப்பானிடத்தில் மாத்திரமல்ல, எல்லா சாதியாரிடமும் இருந்து வருகின்றது.

சாதிபேதம் ஒழிவதை இழிவாய்க் கருதுகிறான்; சாதிக் கலப்பை விபச்சாரித் தனமாக எண்ணுகிறான். இந்த மனப்பான்மை சாதி ஒழிப்புக்கு எமனாய் இருக்கிறது.

அஸ்திவாரத்தில் கையை வைத்து சாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம்தவிர வேறு எந்த இயக்கமும் இல்லையென்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

திருவள்ளுவர், கபிலர், இராமானுஜர் முதலிய புராணக்காரர்களும், பிரம்மசமாஜம், ஆரியசமாஜம் முதலிய மத சம்பந்தமான சில புதிய முயற்சிகளும் எல்லாம் உண்மையறியாமலும், உலகமொப்புக்கும் தனிப்பட்ட சமூக சுயநலத்தை முன்னிட்டும் செய்யப்பட்ட காரியங்களேதவிர, மனித சமூகத்தில் பிறவியின் பேரால் உள்ள சாதிபேதம் அடியோடு ஒழியத்தக்க மாதிரிக்கோ, ஒழியும்படியாகவோ செய்த காரியங்கள் அல்ல.

ஆதலால், சாதியை அடியோடு ஒழிக்க எவரும் முயற்சித்ததில்லை. மற்ற பல சாதிமக்களின் முயற்சிகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தாலோ, அவைகளும் தாங்கள் எப்படியாவது மேல்சாதிக்காரர்கள் என்று மதிக்கப்படவேண்டும் என்கிற முயற்சிகளாகவே இருக்கின்றன. சாதியில்லாதவர்களும் கலப்பு சாதிக்காரர்களும் தாங்கள் ஒரு கலப்பற்ற சாதியைச் சொல்லிக்கொள்ள முடியாமல் போய்விட்டதே என்று வெட்கப்படுகிறார்களே யொழிய, தங்களைப் பொறுத்தவரை சாதியொழிந்ததே என்று யாரும் திருப்தியடைவதில்லை. இந்தத் தொல்லைகள் அடியோடு ஒழியவேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தில்தான் இடமிருக்கிறது; சுயமரியாதை இயக்கத்தால்தான் முடியும். மற்றபடி எப்படிப்பட்ட சீர்திருத்தவாதியானாலும் காரியத்திற்கு உதவமாட்டான்.

[பட்டுக்கோட்டையில், 23-3-1936-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 5-4-1936]

முஸ்லிம்களில் கூடச் சிலர் சுயமரியாதை இயக்கம் நாத்திக இயக்கம் என்று பயப்படுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவர்களில் பலர் தங்களுக்கு ஒன்றும் பயமில்லாவிட்டாலும் மற்றவர்கள் தங்களை ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்று பயந்து பந்தோபஸ்துக்காக இந்த அணையைக் கட்டிக்கொள்கிறார்கள். சுயமரியாதை இயக்கத்தை ஆதரிக்கவோ தழுவவோ வரும் முஸ்லிம்களுக்கும் மற்றவர்களுக்கும் இயக்கத்தின் பேரால் நான் ஒன்று சொல்லுகிறேன். அதாவது, இந்த இயக்கத்துக்கு என்று வகுத்திருக்கும் கொள்கைகளில் நாத்திகம் ஒரு கொள்கையாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

சுயமரியாதை இயக்கத்தில் சகல மதக்காரருக்கும், சகல அபிப்பிராயக்காரருக்கும் இடம் உண்டு. அதன் கொள்கை இவ்வளவுதான். 'மனித சமூகத்தில் உள்ள குருட்டுப் பழக்க வழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் விளக்கமறியாச் சடங்குகளையும் அவற்றிற்காகச் செய்யப்படும் செலவுகளையும் ஒழித்தல்.'

'சாதி, மதம், வகுப்பு ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டுள்ள பேதங்களையும் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் இருந்துவரும் உயர்வு தாழ்வுகளையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும் சகோதரத்துவமாகவும் சமமாக வாழும்படி செய்தல்.'

'பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் கட்டுப்பட்டு நடக்கும்படி மக்களுக்குச் சுயமரி யாதை உணர்ச்சியை உண்டாக்குதல்.' இதை நடத்தி வைக்கவேண்டிய காரியத்திற்கும், ஆத்திக–நாத்திகத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? ஆத்திகமும், நாத்திகமும் அவரவருடைய அபிப்பிராயமும் ஆராய்ச்சித் திறமுமாகும். இன்று முஸ்லிமும், தமிழனும் ஒத்துழைத்துச் சாதிக்கவேண்டிய காரியத்துக்கும் ஆத்திக–நாத்திகப் பிரச்சினைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் தொடர்பும் இல்லை.

[ஆம்பூரில், 28-11-1937-ல் சொற்பொழிவு-' குடி அரசு ' 5-12-1937]

தோழர்களே !

சுயமரியாதை இயக்கம் இந் நாட்டு மக்களுக்கு மான உணர்ச்சி ஏற்படவும் எல்லா மக்களையும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமப்படுத்தி ஒன்றுசேர்க்கவும் ஏற்பட்ட தாகும். மற்றும் பல கொள்கைகளை அது கொண்டிருந்தாலும் மற்றபடி அது நம் எதிரிகள் சொல்வதுபோல மதங்களையும் கடவுள்களையும் எதிர்ப்பதற்கென்றே ஏற்பட்டதல்ல.

நமது நாட்டு மக்களுக்கு மான உணர்ச்சி இல்லாமல் போனதற்கும், ஒற்றுமையும் சமத்துவமும் இல்லாமல் போனதற்கும் ஏற்பட்டுள்ள தடைகள் யாவும் ஒழிக்கப்பட வேண்டு மென்று சொல்லுவதிலும், அவைகளை ஒழிக்க முயற்சிப்பதிலும் உண்மையிலேயே சுயமரி யாதை இயக்கம் சிறிதும் ஒளிவு மறைவு இல்லாமல் பாடுபடுகிறது.

இந்தக் காரியங்கள் செய்வதில் மதங்களோ, கடவுள்களோ, வேறு எவைகளானாலும் சரி, அத் தொண்டிற்குத் தடையாய் இருந்தால் அவற்றையும் ஒழிப்பதில் சுயமரியாதை இயக்கம் பின்வாங்காது.

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—' குடிஅரசு ' 19-12-1937]

தாய்மார்களே ! தோழர்களே !

சூத்திரர்களுக்கும், பார்ப்பனரல்லாத மக்களுக்கும், சண்டாளர்களுக்கும் இதன் அருமையும் பெருமையும் தெரியாது. ஏனெனில், இப்படிப்பட்டவர்கள் மனிதத் தன்மை, சமத் துவஉணர்ச்சி ஏற்பட்டதற்குப் பிறகு, அறிவு பெற்றவர்களும்–கருப்பந் தரித்தவர்களு மாவார்கள். ஆதலால், அவர்கள் பிறக்குமுன்பு, அறிவு பெறுமுன்பு அவர்கள் சமூகத் திற்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் என்ன யோக்கியதை இருந்தது என்பது அவர் களுக்குத் தெரியாது. ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். சுமார் 30, 35 (1938) வருடங் களுக்கு முன்பு எனது தகப்பனார் ஈரோட்டில் முனிசிபல் கவுன்சிலர், பிரபல வியாபாரி. சுமார் 100, 150 ரூபாய் 'இன்கம் டாக்ஸ்' கட்டிவந்தவர். அவரை அக் காலத்தில் 12½ ரூ. 15 ரூ. மாதச் சம்பளம் உள்ள முனிசிபல் 'பில் கலெக்டர்'—பார்ப்பனன், வரி விதிப்பு விஷய மாக ஒரு விண்ணப்பத்தை நேரில் பார்த்து பைசல் செய்ய மண்டிக் கடைக்கு வந்து கூப்பிடு வான். அப்படிக் கூப்பிட வந்தால் அவனைக் கண்டதும் என் தகப்பனார் எழுந்து, 'ராவால ராவால தேவடா '—' வரவேணும் வரவேணும் ஸ்வாமி ' என்று இரு கைகூப்பிக் கும்பிட்டு, உட்காரச் சொல்லிவிட்டு, நின்றுகொண்டே இருப்பார். அப் பார்ப்பன ' பில் கலெக்டர் ' தலையை ஆட்டிவிட்டு உட்கார்ந்துகொண்டு, ' ஏமிரா, வெங்கிட்ட நாயுடு! போத்தாமா ஆ இண்டினி சூசேதானிக்கி '—' ஏண்டா, வெங்கிட்ட நாயுடு அந்த வீட்டைப் பார்க்கப் போக லாமா ?' என்று கூப்பிடுவான். என் தகப்பனார் ' ஆஹா ' என்று சொல்லி வஸ்திரத்தை

தலையில் கட்டிக்கொண்டு, அவன் பின்னால் புறப்பட்டுவிடுவார். சுற்றிவிட்டு வந்தவுடன் மஞ்சள், மிளகாய், கருப்பட்டி, வெல்லம் எல்லாம் ஒரு சாக்கில் கட்டி ஒரு பையனிடம் கொடுத்து, 'சுவாமிகள் வீட்டில் கொடுத்துவிட்டு வா' என்று சொல்லி வழி அனுப்புவார். இதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

இதே மாதிரி எவ்வளவு பெரிய மிராசுதாரையும் ஒரு வக்கீல் குமாஸ்தா பார்ப்பான், நாயிலும் கீழாக மதித்து அடா, புடாவென்று பேசுவான். இதுவும் நான் கண்ணால் பார்த்ததேயாகும். அந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்!

சுயமரியாதை இயக்கத்துக்கு முன்பு பார்ப்பனர்கள் நிலையும், மத உணர்ச்சியும் எப்படி இருந்தன, இப்போது எவ்வளவு மாற்றமடைந்துள்ளன என்பவைகளை உணர்ந்தவர்களுக்குத்தான் நன்கு தெரியும்.

[காஞ்சிபுரத்தில், 1-3-1938-ல் தலைமையுரை—'குடி அரசு' 6-3-1938]

4. பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கு விண்ணப்பம்

சென்னை மாகாணத்தில்—சிறப்பாகத் தமிழ் நாட்டில் சுமார் 10 வருஷங்களுக்கு முன்பாக பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்பட்டதும், அதை ஏற்படுத்த ஸ்ரீமான் டாக்டர் நாயர் அவர்கள் முதன்மையாகவும், சர். தியாகராச செட்டியார் உதவியாகவும் இருந்து, அதை உலகினர் ஒப்புக்கொள்ளும்படி செய்து, தங்களது கொள்கையை நிலை நிறுத்தியதும் உலகறிந்த விஷயம்.

ஆனால், இன்றைய தினம் நம்மில் பெரும்பான்மையான மக்கள் அக் கட்சியின் பெயரைச் சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுகிறார்கள். காரணமென்ன? தமிழ்நாட்டில் இக் கட்சியின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யப் பணமில்லாதிருந்ததா? பத்திரிக்கை இல்லாதிருந்ததா? உத்தியோகமும் அதிகாரமும் இல்லாதிருந்தனவா? எல்லாமுமிருந்தும் இக் கதி ஆவானேன்? எதிரிகளின் சூழ்ச்சிகளும், தந்திரமும் என்று சொல்லலாம். ஸ்ரீமான்கள் நாயரும், செட்டியாரும் உள்ள காலத்திலும், இவ்வெதிரிகள் இருந்தவர்கள் தானே? இப்பொழுது மாத்திரம் இச்சூழ்ச்சி பலிப்பானேன்? ஒரு சமயம் நமக்குள்ளாகவே எதிரிகள் ஏற்பட்டுவிட்டார்கள் என்று சொல்லலாம்.

அப்படியானால், இனிமேலாவது நமக்குள்ளாக எதிரிகள் ஏற்படாமலிருக்க இப்போது என்ன செய்யப்போகிறோம்? இனிமேலாவது எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யப்போகிறோம்? மகாநாடு கூடிக் கலைந்தால் மட்டும் போதுமா?

முதலாவது, நமது இலட்சியம் என்ன என்பதைப் பாமர மக்கள் அறியும்படி செய்திருக்கிறோமா? பாமர மக்களின் அனுதாபத்தைப்பெற நாம் ஏதாவது வழிசெய்தோமா? கவலையாவது கொண்டோமா? நமது மக்களின் உண்மையான தேவை என்பதிலாவது நாம் அபிப்பிராயபேதமில்லாமல் இருக்கிறோமா? நமது நாட்டினிடமாவது, நமது மக்களிடமாவது அபிமானம் உள்ளவர்கள் என்பதற்கு நம்மிடம் ஏதாவது ஒரு அடையாளமிருக்கிறதா? உத்தியோகங்கள் பெற்றோம், பட்டங்கள் பெற்றோம், பதவிகள் பெற்றோம்—இதனால் நமது மக்களுக்கு அடிப்படையான நன்மை என்ன செய்தோம்? பார்ப்பன ஆதிக்கம் வளராமல் இருக்க இவைகளைப் பயன்படுத்திக்கொண்டோம் என்கிறவரையில் இவற்றைப் பெற்றது சரி.

பாமர ஜனங்கள் மூட நம்பிக்கையுடையவராய், ஏழை ஜனங்களாய், தொழிலாளர்களாய், கூலிகளாய் உள்ள நமது மக்களின் குறைகளை நீக்க என்ன நன்மையைச் செய்தோம்? பார்ப்பன மாயையில் மூழ்கி விவகாரத்தில் சிக்கி, அல்லல்பட்டு அழியும் குடியா

னவர்களுக்கு நாம் என்ன செய்தோம்? அறிவீனத்தில் மூழ்கி, மதுவருந்தி, ஒழுக்கங் கெட்டு நாசமாகும் ஏழைக் குடும்பங்களுக்கு என்ன பந்தோபஸ்து செய்தோம்? உத்தியோகம் ஒப்புக்கொண்ட அளவில் உத்தியோகத்தைக்கொண்டு எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவு செய்திருக்கிறோம் என்ற பதில் போதுமா? உத்தியோகத்திற்கு வெளியில் செய்யக்கூடிய வேலைகளில் ஏதாவது செய்தோமா? நம் மனத்தை நாம் கேட்டுப் பார்ப்போம்.

நமது எதிரிகளான பார்ப்பனர்கள் தேசத்தின் பெயரையும், காங்கிரசின் பெயரையும் சுயராஜ்யம், உரிமை என்கிற பெயர்களையும் வைத்துக்கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி, உத்தியோகமும் பதவியும் பெற்று, தங்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்கிறார்களே அது போலவும், நம்மில் பல கூலிகள் பார்ப்பனருக்கு ஒத்துப் பாடி, அவர்களும் தேசம், சுயராஜ்யம், தேசியம் என்பவைகளைச் சொல்லி உயிர் வாழ்கிறார்களே அது போலவும், நாமும் செய்தால் பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேறி விடுவார்களா? இவற்றை மாநாட்டுக்கு வரும் பொது ஜனங்கள் நன்றாய் யோசிக்க விரும்புகிறோம்.

உத்தியோகப் பதவி, பட்டம் பெறவேண்டாம் என்று நாம் இப்போது சொல்ல வரவில்லை. ஆனால், இதுவே நமது இலட்சியமல்ல என்பதையும் அதனாலேயே நமது குறைகள் முழுதும் நிவர்த்தியாகி விடாது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. ஆதலால், உண்மையில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குத் தகுந்த கொள்கைகளும் திட்டங்களும் வகுத்துப் பாமர மக்களிடையே தாராளமாய்ப் பிரச்சாரம் செய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். உத்தமமான தலைவர்களையும், உண்மையான தொண்டர்களையும், உறுதியான கொள்கையையும், யோக்கியமான பிரச்சாரகர்களையும் கொண்டு சரியானபடி ஒரு வருஷத்திற்கு வேலை செய்தால், நமது சமூகம் சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் அடைந்துவிடலாம். இதற்கு முதலாவது எல்லோரும் கதரை ஒப்புக்கொள்ள வேண்டும். தீண்டாமை விஷயத்தில் வெளிப்படையாய்ச் சொல்லி விடவேண்டும்—அதாவது, மக்கள் பிறவியில் உயர்வு-தாழ்வு இல்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயங்களில் ஆட்சேபணை உடையவர்கள் சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் விரோதிகள் என்றே சொல்லுவோம். அங்கத்தினர் உறுதிமொழிப் பத்திரத்திலேயே இவைகள் குறிக்கப்பட வேண்டும்.

மற்றபடி, 'ஒத்துழையாமையோ, ஒத்துழைப்போ; 'பரஸ்பர ஒத்துழைப்போ, முட்டுக்கட்டையோ'; 'சட்ட வரம்பிற்குட்பட்ட கிளர்ச்சியோ, வெளிப்பட்ட கிளர்ச்சியோ'; 'பிரிட்டிஷ் குடைக்குள் சுயராஜ்யமோ, குடைக்கு வெளியில் சுயராஜ்யமோ'; 'இரட்டை ஆட்சியோ, ஒற்றை ஆட்சியோ'; 'சாதாரண சுயராஜ்யமோ, பூரண சுயராஜ்யமோ'—அவரவர்கள் கொள்கை அவரவர்களுடனேயே இருக்கட்டும். இது சமயம் இவைகள் எல்லாம் அடியோடு புரட்டு என்றும்—பார்ப்பனர்களும், ஆங்கிலம் படித்தவர்களும், பாமர ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றி வயிறு வளர்க்கச் செய்யும் தந்திரங்கள் என்றும் நாம் உறுதியாய் நம்புவதால்தான், அதைப்பற்றி யாருக்காவது கெடுதியோ நன்மையோ ஒன்றும் ஏற்படப் போவதில்லை. ஆதலால், அவைகள் ஒவ்வொரு மனிதனின் தனித்தனி அபிப்பிராயமாய் இருந்து கொள்ளலாமே தவிர, சங்கத்தின் கொள்கைகளில் கலக்க வேண்டியதில்லை. சுயமரியாதையும் சுதந்திரமும் பெறுவது என்பதை இலட்சியமாக வைத்துக் கொண்டாலே போதுமென்று நினைக்கிறோம். ஏனெனில், பார்ப்பனரல்லாதார் என்றால் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் 100-க்கு 90 பேர்களாயிருக்கும் பாமர மக்களையும் ஏழை மக்களையும் குறிக்குமே அல்லாமல், 100-க்கு 5 பேர் கூட இல்லாத இராஜாக்களையும், ஜமீன்தார்களையும், பிரபுக்களையும், வக்கீல்களையும் மாத்திரம் குறிக்காது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்; பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பதும் 100-க்கு 90 பேர்களின் முன்னேற்றத்தையும் சேர்த்துக் குறிக்குமே

13–8–1926 ‘குடி அரசு’ முகப்பு அட்டை

யல்லாது 100-க்கு 5 பேர்களின் முன்னேற்றத்தை மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இச் சங்கம் உண்மையான பார்ப்பனரல்லாதார் முன்னேற்றச் சங்கமா அல்லது யாரோ சில குறிப்பிட்ட நபர்களின் முன்னேற்றச் சங்கமா என்பது வெளியாக இது ஒரு தக்க சமயமாய் ஏற்பட்டு விட்டதால், ஒவ்வொரு தலைவரும் பொறுப்புடனும், புத்திசாலித்தனத்துடனும் நடந்துகொள்ளவேண்டும் என்பதாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—26-12-1926]

5. நமது பத்திரிக்கை

நமது 'குடிஅரசு' ஆரம்பமாகி இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருடத்தில் முதல் இதழ் இன்று வெளியாகிறது. 'குடி அரசு' ஆரம்ப இதழில் 'குடி அரசு' என்று ஒரு தலையங்கமும், ஆறுமாதம் கழிந்து 'நமது பத்திரிக்கை' என்று ஒரு தலையங்கமும், ஒரு வருஷம் முடிந்து இரண்டாவது வருஷ ஆரம்பத்தில், 'நமது பத்திரிக்கை' என்று ஒருதலையங்கமும் எழுதி இருக்கிறோம்.

இப்போது இரண்டு வருஷம் முடிந்து, மூன்றாவது வருஷ ஆரம்ப முதல் இதழிலும் அவ்வாறே 'நமது பத்திரிக்கை' என்று தலையங்கமிட்டு ஒருகுறிப்பு எழுத ஆசைப்படுகிறோம்.

நமது நாட்டு மக்களுக்குள் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உண்டாக்க 'குடி அரசு' என்னும் ஒரு பத்திரிக்கையை ஆரம்பிக்கவேண்டும் என்பதாக முதல்முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கபெருமாள் பிள்ளையும் 1922-ல் கோயமுத்தூர் ஜெயிலில் சிறைவாசம் செய்யும்போதே நினைத்தோம்.

அதுபோலவே, வெளியில் வந்த கொஞ்ச நாட்களுக்குள், 'குடி அரசு' என்று ஒரு வாரப் பத்திரிக்கையும், 'கொங்கு நாடு' என்று ஒரு மாதாந்திரமும் நடத்தப்போவதாய் 19–1–1923 தேதியில் சர்க்காரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இவ்விஷயத்தை முதலில் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களிடம் சொன்னேன். அவர் எனது கொள்கையைக் கேட்டவுடன் சந்தோஷப்பட்டு 'இப்படி ஒரு பத்திரிக்கை வேண்டியதுதான்; அதற்கு நீயே சரியானவன். நீ ஆரம்பித்தால் தமிழ் நாட்டிலேயே பதினாயிரக்கணக்கான சந்தாதாரர்கள் சேருவார்கள். ஆனால், அதிக நாள் நிலைக்காது; ஒரு கூட்டத்தார் எப்படியாவது அதை ஒழித்து விடுவார்கள். ஆனாலும் நடந்தவரை லாபம்; நடத்துங்கள்' என்றார்.

பிறகு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களிடம் சொன்னேன். அவரும் மிகச் சந்தோஷப்பட்டுச் சீக்கிரத்தில் வெளியாக்க வேண்டுமென்று விரும்புவதாகவும், வெளியாகத் தாமதமேற்பட்டால் அதுவரை தனது பத்திரிக்கையில் வேண்டுமானாலும் எழுதி வரும்படியும் சொன்னார்.

பிறகு ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களிடம் சொன்னேன். அவர், 'இந்தச் சமயம் இப்படிப்பட்ட பத்திரிக்கை கூடாது. அல்லாமலும், மகாத்மா ஜெயிலில் இருக்கும்போது இதை விட்டுவிட்டு நீ பத்திரிக்கை நடத்தப் போவது சரியல்ல. உன்னுடைய சேவை இதுசமயம் மிகவும் அவசியமானது. ஆனதால், கண்டிப்பாய்ப் போகக் கூடாது' என்று சொல்லிவிட்டார். அதன் பேரில் அந்த எண்ணத்தை ஒத்திவைத்துவிட்டு, மறுபடியும் ஒத்துழையாமைக்காகவே உழைத்தேன். தற்செயலாய் வைக்கம் சத்தியாக்கிரகம் ஏற்பட்டது. ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப் அவர்களும் வைக்கத்திலிருந்து, 'என்னைப் பிடிக்கப் போகிறார்கள்; நான் இதோ ஜெயிலுக்குப் போகிறேன்; வேறுயாரும் இல்லை;

நீ வந்து ஒப்புக்கொள்' என்று எழுதின கடிதமும், தந்தியும் என்னைக் குடும்பத்துடன் வைக்கத்திற்குப் போகும்படி செய்துவிட்டது. அங்கு ஜெயிலில் இருக்கும்போது இதே எண்ணந்தான். அதாவது, 'வெளியில் போனதும் பத்திரிக்கை நடத்தவேண்டும்' என்கிற ஆவல் அதிகமாயிற்று. அதுபோலவே, வெளியில் வந்ததும் பத்திரிக்கை ஆரம்பிக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கேற்றாற்போல் திருப்பாப்புலியூர் ஞானியார் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சார்ய சுவாமிகளும் கோயம்புத்தூருக்கு வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அவர்களை இங்கு அழைத்து அவர்களைக் கொண்டே ஆரம்பவிழா நடத்திவிடலாம் என நினைத்து, கோயம்புத்தூர் சென்று அழைத்ததும் யாதொரு ஆட்சேபணையும் சொல்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டு, ஈரோட்டிற்கு வந்து, ஆரம்ப விழா நடத்திக்கொடுத்தார்கள். அதுசமயம் பத்திரிக்காலயத்தைத் திறந்துவைக்கும்படி ஞானியார் சுவாமிகளைக் கேட்டுக் கொண்டபோது, நான்,

'அனேக பத்திரிக்கைகள் நமது நாட்டிடை இருந்தாலும் அவைகள் தங்கள் மனச்சாட்சிக்கு உண்மை என்று பட்டதைத் தெரிவிக்க அஞ்சுகின்றன. அதனால்தான் நான் இப் பத்திரிக்கையை ஆரம்பிக்கிறேன். மற்றப் பத்திரிக்கை போலல்லாமல் மனதில் பட்டதைத் தைரியமாய், பொதுமக்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டுமென்பது எமது நோக்கம்' என்று சொல்லி இருக்கிறேன்.

ஞானியார் சுவாமிகளும் பத்திரிக்காலயத்தைத் திறக்கும்போது,

'நமது நாட்டில் பல பத்திரிக்கைகள் இருந்தும் இப் பத்திரிக்கைபோன்ற கருத்துடைய பத்திரிக்கை வேறொன்றுமில்லை. இன்று உயர்வு—தாழ்வு என்கிற ஆணவம் மிகுந்திருக்கிறது. சமத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவவேண்டும். 'குடிஅரசி'ன் கருத்து இதுவே என நான் அறிந்துகொண்டேன். சமயத்திலிருக்கும் கேட்டை முதலில் ஒழிக்க வேண்டும். இவை 'குடிஅரசி'ன் முதல் கொள்கையாய் விளங்கவேண்டும். இப் பத்திரிக்கையில் ஸ்ரீமான் நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு' என்று ஆசீர்வதித்து இருக்கிறார்.

முதல் இதழ் தலையங்கத்திலும், நமது நோக்கத்தை வெளியிட்ட தலையங்கத்திலும் நாம் குறிப்பிட்டிருப்பதாவது: 'ஒவ்வொரு வகுப்பும் முன்னேறவேண்டும். இதை அறவே விடுத்து வெறும் 'தேசம்' 'தேசம்' என்று கூக்குரலிடுவது எமது பத்திரிக்கையின் நோக்கமன்று. மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும். உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளரவேண்டும்...... இன்னோரன்ன பிற நறுங்குணங்கள் நம் மக்கள் அடையப் பாடுபடுவது நமது நோக்கமாகும்.' 'எவர் எனக்கு இனியர்; எவர் எனக்கு இன்னார் என்ற விருப்பு வெறுப்பு இன்றி, 'நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்மேற் சென்றிடித்தற் பொருட்டு' என்ற வாக்கைக் கடைப்பிடித்து, நண்பரேயாயினும் ஆகுக, அவர் தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்' என்று எழுதி இருக்கிறோம். இவை யாவும் 2-5-1925 தேதி 'குடிஅரசி'ல் காணலாம்.

அடுத்தபடி, ஆறு மாதம் முடிந்த இதழில், 'நமது பத்திரிக்கை' என்னும் தலையங்கத்திலும், ''குடிஅரசு' குறிப்பிட்ட கருத்தைப் பிரச்சாரம் செய்யும் பத்திரிக்கையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிக்கை அல்லவாதலால்......பிரதிவாரமும் 'குடிஅரசு' தனது ஆத்மாவை வெளிப்படுத்தும் (தத்துவத்தை விளக்கும்)போது கண்ணீர் கொட்டாமலிருக்க முடிவதே இல்லை. இதன்பலனால், உயர்ந்தோர் என்று சொல்லிக் கொள்வோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர் என்று சொல்வோராகிய பல ராஜதந்திரிகளுக்கும் விரோதியாகவும், அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கும் நமது

'குடிஅரசு' ஆளாக வேண்டி இருப்பதால் இது சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப்பெற முடியாமலிருப்பது ஆச்சரியம் அல்ல' என்றும்;

'உண்மையில் 'குடிஅரசு'க்கு எந்தப் பிராமணனிடத்தும் குரோதமோ, வெறுப்போ கிடையாது; ஆனால் பிராமணன் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் என்பன போன்ற இழிவான மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக்கொண்டிக்கும் எண்ணத்தினிடத்திலும்; தங்கள் வகுப்பார்தான் முன்னணியில் இருக்கவேண்டும், மேன்மையுடன் பிழைக்கவேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டு அதற்காகச் செய்யும் சூழ்ச்சிகளிடத்திலும்தான் 'குடிஅரசு'க்குக் குரோதமும் வெறுப்பும் இருப்பதுடன் அதை அடியோடே களைந்தெறியவேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்து வருகிறது' என்றும்;

'குடிஅரசு' ஏற்பட்டு, ஆறு மாதகாலமாகியும் இதுவரை ஆயிரத்துச்சில்லரை சந்தாதார்களே சேர்ந்திருக்கிறார்கள்; அதனைப் படிக்கவேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லையென்றும், பாமர ஜனங்கள் சரியானபடி 'குடிஅரசை' ஆதரிக்கவில்லையானால், அது தானாகவே மறைந்துபோக வேண்டியதுதான் அதன் கடமையே அல்லாமல், வியாபார தோரணையாய் நடந்துவராது' என்றும் எழுதியிருந்தது. இதை 1-11-1925 இதழிற் பார்க்கலாம்.

பிறகு ஒருவருஷம் முடிந்து இரண்டாவது வருஷ ஆரம்ப இதழில், 'நமது பத்திரிக்கை' என்ற தலையங்கத்திலும், 'இதுவரை நமக்குள்ள 2000 சந்தாதாரர்களில் நால்வர் அதிருப்திக்கே ஆளாகிறோம்' என்று எழுதிவிட்டு, ''குடிஅரசு' எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநல வாழ்வுக்கோ, கீர்த்திக்கோ நடைபெறவில்லை. யோக்கியமாய், உண்மையாய் நடக்கக்கூடிய காலம்வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால் அது தானேமறைந்துவிடுமே யல்லாமல், மானங்கெட்டு விலங்குகளைப் போல் வாழாது. 'குடிஅரசு' தோன்றியபிறகு, அதனால் ராஜீய உலகத்திலும், சமூக உலகத்திலும் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதி இருப்பதை நாமும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம்' என்றும் எழுதி இருக்கிறோம்.

ஆகவே, இப்போது இரண்டுவருடங்கள் முடிந்து மூன்றாவது வருட ஆரம்ப இதழில் அதே தலையங்கத்துடன் ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம். முதலாவதாக, ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்துகிறோம். அதாவது, 'குடி அரசு'க்கு ஆறு மாதத்தில் ஆயிரம் சந்தாதாரர்களும், ஒரு வருஷத்தில் இரண்டாயிரம் சந்தாதாரர்களும், இப்போது இரண்டு வருஷத்தில் நாலாயிரத்து அய்ந்நூறு சந்தாதாரர்களும் இருப்பதால், கூடுமான வரையில் தமிழ்மக்களின் ஆதரவைப்பெற்று இருக்கிறது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆரம்பத்திலிருந்து இதுவரை, முன்னால் குறிப்பிட்ட கொள்கைகளில், அது ஒரு சிறிதும் தவறாமல் ஏற்றுக்கொண்டபடி நடந்துவந்திருக்கிறது என்பதையும் மெய்ப்பித்து விட்டோம். ஆகவே 'குடி அரசு' குறைந்தது ஒரு பதினாயிரம் பிரதிகளாவது அச்சிட்டு வெளியாகவேண்டும் என்கிற ஆசைநமக்கு இருந்தாலும், இந்நாலாயிரத்து அய்ந்நூற்றைக் கொண்டு நான் சந்தோஷமடைகிறேனே தவிர, ஒருசிறிதும் அதிருப்தி அடையவில்லை. அன்றியும் எமது விருப்பத்தை நிறைவேற்ற அனேக நண்பர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். 250 சந்தாதாரர்களை ஏற்படுத்திக் கொடுத்தும் இனியும் இருநூற்றைம்பது சந்தாதாரர்களை ஒரு மாதத்தில் சேர்ப்பதாய் வாக்களித்த சிங்கப்பூர் நண்பர்களுக்கும், மற்றும் 250 சந்தாதாரர்களை எதிர்பார்க்கும் மலேயா நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டிலும் ஊர்கள் தோறும்

'குடி அரசி'ன் வளர்ச்சியையும், பரவுதலையும் எம்மைவிட அதிக கவலைகொண்டு எதிர் பார்க்கும் நண்பர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதும் எமக்குத் தெரியும். அவர்கள் 'குடி அரசு'க்காக உழைத்து வந்ததற்கும், சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்த தற்காகவும், 'குடி அரசு' கொள்கைகளைப் பரப்பப் பாடுபட்டதற்கும் நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். 'குடி அரசு'க்கு இரண்டாவது வருஷத்தில் நஷ்டமில்லை; முதல் வருஷத்தின் நஷ்டம் அடைபடவேண்டும். ஆனால், இன்னமும் கொஞ்சம் நல்ல இதழில் இன்னும் நாலுபக்கம் அதிகப்படுத்த வேண்டும் என்கிற ஆவல் இருந்துவருகிறது. இக் காரியங்களுக்கு, இப்போது ஆகும் செலவைவிட இன்னமும் வருஷம் ஒன்றுக்கு 2000 ரூ. அதிகமாகச் செலவு பிடிக்கும். இனியும் கொஞ்சம் சந்தாதாரர்கள் அதிகமானால் இவைகளைச் செய்ய சவுகரியமாய் இருக்கும்.

இவ்வருடம் புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் அதிகமாய் இல்லை என்றே நினைக் கிறேன். பொதுவாக, நமது பிரசங்கத்தினாலும், 'குடி அரசு'வினாலும் நான் செய்துவந்த பிரச்சாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன்; அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன்; மதம் என்பதைக் கண்டித்தேன்; மதத் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன்; மதச்சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக் கிறேன்; குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; கோயில் என்பதைக் கண்டித் திருக்கிறேன்; சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன்; சாஸ்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; புராணம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; ஜாதி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; நியாயாதிபதி என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; நிர்வாக ஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; ஜனப் பிரதிநிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பிரதி நிதிகள் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; கல்வி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சுயராஜ்யம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, சி. இராஜகோபாலாச் சாரியார் முதலிய ஒரேதுறையில் வேலை செய்துவந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்.

இன்னும் என்னென்னவற்றையோ, யார்யாரையோ கண்டித்திருக்கிறேன்; கோபம் வரும்படி வைதுமிருக்கிறேன். எதைக் கண்டித்திருக்கிறேன், எதைக் கண்டிக்கவில்லை, யாரை வையவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத் திறந் தாலும் கண்டிக்கவும், வையவும், துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத் தகாத, வையத் தகாத இயக்கமோ, திட்டமோ அபிப்பிராயமோ என் கண்களுக்குப் படமாட்டேன் என்கிறது.

இவைகளன்றி, எனது வார்த்தைகளும், எழுத்துக்களும், செய்கைகளும், தேசத் துரோகமென்றும், வகுப்பு துவேஷமென்றும், பிராமண துவேஷம் என்றும் மானநஷ்ட மென்றும், அவதூறு என்றும், ராஜ துரோகமென்றும், ராஜ துவேஷமென்றும், நாஸ்திக மென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும், ஆத்திரப்படவும் ஆளானேன். அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேசபக்தர்கள் என்பவர்கள் என்னை வையவும், என்னைக் கண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்யவேண்டும்? சிலருக்காவது மனவருத் தத்தையும் அதிருப்தியையும் கொடுக்கத் தக்க காரியத்தை ஏன் செய்யவேண்டும்? என்று நானே யோசிப்பது உண்டு. சிற்சில சமயங்களில் யாரோ எப்படியோ போகட்டும். நாம் ஏன் இக் கவலையும் இவ்வளவு தொல்லையும் அடையவேண்டும்? நமக்கென்ன இதனால்

ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிக்கையாவது உதவி உண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவி உண்டா? 'இமயமலை வெயிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல்' இருக்கிறது என்பதாகக் கருதி, விலகி விடலாமா என்று யோசிப்பதுண்டு. ஆனால் விலகுவதில்தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுள்காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ, அய்ந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்துவயது காலமோ இருக்கலாம். இந்தக் கொஞ்ச காலத்தை ஏன் நமது மனச்சாட்சிக்கு விட்டுவிடக்கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப் போகிறோம்? என்பதாகக் கருதி மறுபடியும் இதிலேயே உழன்றுகொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை.

உண்மையில், நாம் முன் சொன்ன அரசியல், மத விஷயம் முதலியவைகளைக் கண்டிக்க நேரிட்டபோது உண்மையான அரசியல், மதஇயல் இவைகளை நாம் கண்டிக்கவே இல்லை. எதைப் பார்த்தாலும் புரட்டும், பித்தலாட்டமும், பெயரைப்பார்த்து ஏமாறத் தகுந்ததாகயிருக்கிறதேயல்லாமல்—தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதாகவும், கொஞ்சங்கூட 'ரிப்பேர்' செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்கவேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப்பாடடையும் என்கிற நம்பிக்கை கொஞ்சமும் இல்லாவிட்டாலும், வேறு யாராவது மகாத்மாவைப்போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்குப் பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா? என்றும் அதுவும் முடியாவிட்டால் பலன் எப்படியானாலும் கடமையைச் செய்யவேண்டியதுதானே என்கிற முடிவும் கிடைக்கிறது. ஆகவே, இக் கஷ்டமானதும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடியதுமான இக் காரியத்தில் இறங்கிவிட்டோம். உலகம் ஒப்புக்கொண்டாலும் சரி, தள்ளிவிட்டாலும் சரி நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. நமது கடமையை எப்படி நாம் பிரதானமாய்க் கருதியிருக்கிறோமோ, அதுபோலவே பொதுஜனங்களும்—அதாவது இக் கடமையை சரி என்று எண்ணியவர்கள் தங்கள் தங்களது கடமையையும் எண்ணி அக் கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

['குடி அரசு'–தலையங்கம்—1-5-1927]

6. எத்தனை காலத்துக்கு?

பெரியோர்களே!

நமது நண்பரும், அரசியல் தலைவருமான திருவாளர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் என்னைப்பற்றிச் சொல்லியவைகள் யாவும் என்னிடம் உள்ள அன்பினாலல்லாது அவ்வளவும் உண்மை என்று தாங்கள் நம்பிவிடக் கூடாது என்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை அவர் 'தலைவர்' என்று சொன்னதற்காக நான் மிகுதியும் வெட்கப்படுகிறேன். அவர் வங்காளப் பிரிவினையின்போது தமிழ்நாட்டில், சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராயிருந்து நடத்திய பெருங்கிளர்ச்சியின்போது, நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக்கொண்டிருந்தேன். அவரையும் அவர் போன்றாரையும் கண்டே பொதுத் தொண்டில் இறங்கினவன். அன்றியும், சிவஞான யோகிகள் வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திர வாக்கியங்களுக்கும் நான் ஒருசிறிதும் பொருத்தமுடையவன் அல்லன். ஆகிலும் அப் பத்திரத்தில் எனது கொள்கைகளைப் புகழ்ந்திருக்கும் விஷயங்களைப் பொறுத்தவரை அக் கொள்கைக்கு அதை ஒரு நற்சாட்சிப் பத்திரமாக எடுத்துக்கொண்டு, அதற்காக எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

இத் திராவிட சங்கம் 18-வது ஆண்டுவிழா என்று சொல்லப்படுவதால், இதற்கு 18 ஆண்டு முடிந்திருக்கிறது. நமது நாட்டில் திராவிடர் முன்னேற்ற சம்பந்தமாய் ஏதாவது இயக்கங்கள் மூலம் பேசுவதாயிருந்தால், நமது எதிரிகள், 'உத்தியோகத்திற்கு

ஆசைப்பட்ட யாரோ சில பார்ப்பனரல்லாதாரால், சமீபத்தில் திராவிடர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு சுயநல இயக்கம்' என்று சொல்லி வருவது உங்களுக்குத்தெரியும். ஆனால், இக் கழகம் அப்பேர்ப்பட்டவர்களால் ஆக்கப்பட்டதா என்பதும், சுவாமி சிவஞான யோகிகள் ஏதாவது உத்தியோகம் ஆசைப்பட்டுக் கிடைக்காமல் போனதற்காக ஆரம்பித்தாரா என்பதையும், அவருக்கு ஏதாவது உத்தியோகம் வேண்டியிருக்கிறதா என்பதையும்; திருவள்ளுவருக்கு உத்தியோகம் வேண்டி இருந்ததா? புத்தருக்கு உத்தியோகம் வேண்டி இருந்ததா? கபிலருக்கு உத்தியோகம் வேண்டி இருந்ததா? அவ்வைக்கு உத்தியோகம் வேண்டி இருந்ததா? என்பதையும் யோசித்துப் பாருங்கள். அன்றியும், சுவாமி சிவஞான யோகிகள் காலத்தில் மாத்திரம் இம் மாதிரி முயற்சிகள் தோன்றிற்று என்பதாக நினைக்கிறீர்களா?

என்று இந்தநாட்டில் ஆரியர்கள் கால் வைத்தார்களோ அன்று முதலே ஆரியர், திராவிடர் என்கிற வேற்றுமையும், 'ஆரியர் சங்கம்', 'திராவிடர் சங்கம்' என்கிற இயக்கங்களும், சுயமரியாதைக் கிளர்ச்சிகளும் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. இவைகளை எவ்வளவோ பாடுபட்டு நமது எதிரிகள் மறைக்க முயன்றாலும் இயற்கைத் தத்துவம் மறைக்க முடியாமல் செய்துவருகிறது. எதுவரையில் ஆரியர்வேதம் என்பது நமது நாட்டில் இருக்குமோ, எதுவரை ஆரியர் ஆதிக்கம், ஆரிய தர்ம பிரச்சார சபை, வருணாசிரம தர்ம பிரச்சாரசபை நமது நாட்டில் இருக்குமோ அதுவரை, நமது இயக்கம்—அதாவது 'திராவிடர் முன்னேற்ற இயக்கம்', 'சுயமரியாதை இயக்கம்', 'சமரச இயக்கம்' இருந்து தீரவேண்டியதுதான்.

சமீப காலத்தில் ஆரியர்களால் தஞ்சை ஜில்லா தூவார் என்கிற கிராமத்தில் கூட்டப்பட்ட 'பிராமண சம்மேளனம்' என்னும் கூட்டத்தையும், அதன் நடவடிக்கைகளையும் பார்த்தவர்களுக்கு, இம்மாதிரி இருக்கப்பட்ட சங்கங்கள் அவசியமா, இல்லையா என்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். மேலும், நமதுநாட்டில் மதம் அடங்கிய வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் முதலியவைகளின் பேரால், ஆரிய பிரச்சாரம் செய்துவரும் வரையில் நாம் இம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டு இருந்து தீரவேண்டியதுதான். எனவே, இம்முயற்சிகள், வெற்றிபெறவேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் எனது முகவுரையை நிறுத்திவிட்டு, மற்றும் நான் ஏதாவது சொல்லிக்கொள்ளவேண்டிய விஷயங்கள் ஏற்பட்டால் அவற்றை எனது முடிவுரையில், சொல்லிக்கொள்ளுகிறேன்.

[கோவில்பட்டி திராவிடர் கழகத்தில், 19-6-1927-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 26-6-1927

7. நமது வேலை

'குடிஅரசு' பத்திரிக்கை தோன்றி 27 மாதங்கள் ஆகின்றதெனினும் அதன் மூலம் தேசத்திற்கும் சமூகத்திற்கும் நமக்குச் சரியென்று தோன்றிய வழியில் நம்மால் கூடிய தொண்டை ஆற்றி வந்திருக்கிறோம். எனினும், செய்யவேண்டிய வேலை எவ்வளவோ பாக்கி இருக்கிறது. முன்னொரு சமயம் நாம் எழுதியதுபோல், 'குடி அரசு' பத்திரிக்கை வேலை மாத்திரம் அல்லாமல், அதன் கொள்கையைப் பரப்ப மக்கள் மனதில் பதியச்செய்ய ஊர் ஊராய்த் திரிந்து பிரச்சாரமும் செய்யவேண்டிய பொறுப்பு இனியும் எவ்வளவோ மடங்கு அதிகமாயிருந்து வருகிறது.

கோவை மாநாட்டுத் தீர்மானங்களின் மூலம், பார்ப்பனரல்லாதாருக்குள் இனி அபிப்பிராய பேதம் இருக்காது என்றும், பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்போர்களும் பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளும் நமது கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யும் என்றும், நமக்கும் போதிய ஓய்வு கிடைக்கும் என்றும், பல நண்பர்கள் கருதினார்கள். இப்போது அவைகள் ஒரு விநாடிக் கனவுபோலவே முடிந்துவிட்டன. பார்ப்பனரல்லாதார்

கட்சியிலேயே யார் யாரை நமது சமூக முன்னேற்றத்திற்கும் உண்மையான தேச முன்னேற்றத்திற்கும் உதவி செய்வார்கள் என்று எண்ணி இருந்தோமோ, அவர்கள் எல்லோரும் இப்போது காங்கிரஸ் பேரில் நாட்டம் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள். அரசியல் புரட்டும், தேர்தல் பைத்தியமும் மக்களை அவ்வழி இழுக்கிறது. கோவை தீர்மானமானது 'யாரோ இரண்டொருவர் காங்கிரசில் சேர இஷ்டப்படுகிறவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்' என்று இருந்தாலும், ஏறக்குறைய பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் யாவருமே அதில் போய்ச்சேர தீர்மானித்துக்கொண்டதாகவே தெரியவருகிறது.

இது நிற்க, காங்கிரசிலிருந்து புதிதாகச் சிலர் பார்ப்பனரல்லாத கட்சியில் வந்து சேர்ந்து இக் கட்சிக்கு உதவி புரிவார்கள் என்று எண்ணி இருந்தவர்கள், மகாநாட்டின் போது மாத்திரம் பொதுமக்கள் மனம் திருப்தியடையும்படி பேசினார்களேயொழிய, அவரவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தவுடன் 'வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது' என்பது போல், பழையபடியே பார்ப்பனரல்லாத கட்சியை வைவதன் மூலம் பலனடைவதும், நமது எதிரியைப் புகழ்வதும், 'நான் இன்னமும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேரவில்லை' என்று சொல்லிக்கொள்ளுவதுமாய் இருக்கிறார்கள். பார்ப்பன ரல்லாதார் பத்திரிக்கைகளும் இக் கட்சியை வைதால்தான் நாட்டில் தமக்குச் செல்வாக்கு உண்டு என்று எண்ணும்படி ஆகிவிட்டதாகவே அறியக்கிடக்கின்றது. இவற்றைப் பார்க்கும்போது, நாம் இதுவரை என்னதான் மகாநாடுகள் கூட்டி இருந்தாலும், எவ்வளவு தான் பிரச்சாரங்கள் செய்திருந்தாலும், பொதுவாகவே பார்ப்பனரல்லாதாரில் பல பிரபுக் களுக்கும், பொது வாழ்க்கையில் இறங்கி இருப்பவர்களுக்கும், பத்திரிக்கைக்காரர்களுக்கும் பார்ப்பனர்களிடம் உள்ள பயம் இனியும் நீங்கவில்லை என்றேதான் சொல்லவேண்டி இருக்கிறது.

உதாரணமாக, 'தமிழ்நாடு' பத்திரிக்கையின் ஆசிரியர் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் கோவை மகாநாட்டிற்கு வந்து தனது அபிப்பிராயத்தைச் சொல்லிப் பார்ப்பனரல்லாதாருக்கு உழைக்கும் கட்சி இதுதான் என்பதை ஒப்புக்கொண்டு தானும் இதில் சேர்ந்துவிட்டதாக எல்லாரையும் நம்பும்படியாகச் செய்து—இவ்வளவும் ஆனபின் மறுபடியும், 'தமிழ்நாடு' பத்திரிக்கையில் இன்னமும் பார்ப்பனரல்லாதார் கட்சியை ஜஸ்டிஸ் என்னும் பேரால் வைவதற்கு இடம் வைத்துக்கொண்டும், அதற்கு ஏதேதோ வியாக்கியானம் செய்துகொண்டும், 'ஜஸ்டிஸ் கட்சியாரோடு தேசியவாதிகள் ஒருநாளும் ஒத்துழைக்க முடியாது' என்றும் ஒரேயடியாய் எழுதிவிட்டார். இவற்றைக் கவனிக்கும் போது, இதுவரையிலும் பார்ப்பனரல்லாதார் கட்சியைப்பற்றி எப்படித் தூற்றிவந்தாரோ அதே மாதிரிதான் இப்போதும் தூற்ற ஆரம்பித்திருக்கிறாரே அல்லாமல், கோவை மகா நாட்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களின் நிலைமையில் ஒன்றும் மாற்றமில்லை என்றே நினைக்கும்படி இருக்கிறது. ஜஸ்டிஸ் அரசியல் கொள்கையில் இவருக்குள்ள வித்தியாசம் என்ன என்பதை எழுதி இருந்தால் அது நன்றாய் இருந்திருக்கும். ஜஸ்டிஸ் கட்சியாரானாலும் சரி, தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தாரானாலும் சரி, அவர்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டிருந்த காலத்திலும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுக்கு அக் கட்சியினது அரசியல் திட்டம் பிடிக்கவில்லை; கவர்னருடன் சிநேகமாயிருந்த காலத்திலும் அரசியல் திட்டம் பிடிக்கவில்லை; இப்போது உத்தியோகம் பெற்றுக்கொள்ளுவதில்லை என்று தீர்மானித்திருப்பதும் பிடிக்கவில்லை; கவர்னரிடம் நம்பிக்கையில்லையென்று தீர்மானித்திருப்பதும் பிடிக்கவில்லை. இனி இக் கட்சி எப்படி நடந்து கொண்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுக்குப் பிடிக்குமோ, நமக்குத் தெரியவில்லை.

தவிரவும், மேட்டூர் புரட்டுகளைப்பற்றி மகாநாட்டில் பேசும்போதும், தீர்மானிக்கும் போதும் அதன் ஆபாசங்களைப் பற்றி 'ஜஸ்டிஸ்,' 'திராவிடன்,' 'குடிஅரசு' ஆகிய வைகள் கலம் கலமாய் எழுதி வரும்போதும் பார்த்துக்கொண்டு சும்மா இருந்த ஸ்ரீமான்

வரதராஜுலு நாயுடு, திடீரென்று ஸ்ரீமான் சர்.சி.பி. அய்யருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டார் என்றால், இதற்கு நாம் என்னதான் செய்து அவருக்கு உண்மை அறியும்படி செய்யமுடியும் என்பது நமக்குப் புரியவில்லை.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்களும் இதே மனப்போக்கையே காட்டி இருக்கிறார் என்றே சொல்லவேண்டி இருக்கிறது.

'வகுப்புவாதமிட்டுக்கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சியார், காங்கிரசில் நுழைய முன் வந்துள்ளனர்' என்றும், 'ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் நேரிய நெஞ்சுடன் காங்கிரசில் சேர வேண்டும்' என்றும், 'சமுதாய சீர்திருத்தத்தில் பற்றுடைய ஜஸ்டிஸ் கட்சியார், நாட்டிலெழும் அரசியல் கட்சிக்கு இடையூறு செய்யாமல் தன்னந்தனிபராய்த் தமது தொண்டை நிகழ்த்துவாராக' என்றும் எழுதி இருப்பதிலிருந்தே அன்னாருடைய மனப்பான்மை வெளியாகிறது. ஸ்ரீமான் ஆர். கே. சண்முகம் செட்டியாருடைய விளக்க உரையை ஸ்ரீமான் முதலியார் நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தார் என்பது அவரே ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயம். ஸ்ரீமான் செட்டியாரவர்களது சொற்பொழிவில் காங்கிரசுக்கும்— ஜஸ்டிஸ் கட்சிக்கும் கொள்கையில் வித்தியாசமில்லை என்றும், ஜஸ்டிஸ் கட்சி கேட்கும் சுயராஜ்யம்தான் காங்கிரஸ் கேட்கிறது என்றும், காங்கிரஸ் மற்ற வகுப்பாருக்குக் (அதாவது மகமதியர், கிறிஸ்தவர்களுக்கு) கொடுத்திருக்கும் வகுப்புவாரி உரிமையைத்தான் ஜஸ்டிஸ் கட்சி கேட்கிறதென்றும், இதற்குப் பார்ப்பனர்களே முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்றும் நன்றாய் எடுத்துரைத்தார். இவைகளை நன்றாய் அறிந்தும், தெரிந்தும், மனப் பூர்வமாகத் தானும் ஒப்புக்கொண்டும், தனது வாக்காலேயே இன்னும் என்ன என்னவோ பேசியும் ஆனபின், ஊர்போய்ச் சேர்ந்தவுடன், 'ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாதக் கட்சி; அரசியல் கிளர்ச்சிக்கு இடையூறு செய்யக்கூடாது' என்கிற பழைய பல்லவியைப் பாடிக் கொண்டு இருப்பாரானால், இதற்கு நாம் என்ன சமாதானம் சொல்லக்கூடும்? தேசிய அரசியல் கிளர்ச்சிக்கோ, அல்லது காங்கிரஸ் அரசியல் கிளர்ச்சிக்கோ, ஸ்ரீமான் முதலியார் போற்றும் மகாத்மாவின் அரசியல் கிளர்ச்சிக்கோ ஜஸ்டிஸ் கட்சி எந்த விதத்தில் மற்ற கட்சிகளைவிட இடையூறு செய்யக்கூடியதாக இருக்கிறது? இடையூறு செய்த கட்சிகளுக் கெல்லாம், தான் ஆக்கமளித்ததை அடியோடு மறந்துவிட்டு இப்படிப் பேசவும் எழுதவும் ஆரம்பித்துவிட்டால் நாம் என்ன செய்யலாம்? இதுபோலவே, ஸ்ரீமான் ஜோசப்பு போன்ற சில காங்கிரஸ்காரர்கள் என்பவர்களும் இதே பாடத்தைப் படிக்கிறார்கள். முன் எழுதியது போலவே, பல பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளும் அப்படியே நடக்கிறார்கள். ஆகவே, இக் கட்சிக்கு உள்ள கஷ்டம், 'காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார்'களுக்குள்ளாகவே எவ்வளவு ஏற்படுகிறது என்பதும், இக் கட்சிக்காரர் பலர் காங்கிரஸ் அரசியல் வேஷம் போட்டுக் கொண்டதின் பயனாய் ஏற்படக்கூடிய கஷ்டம் எவ்வளவு என்பதும் நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. ஆகவே, கோவை மகாநாட்டால் நமக்கு நன்மை ஏற்பட்டதா, தீமை ஏற்பட்டதா என்பதை ஒருவாறு இதன் மூலம் ஊகித்துக்கொள்ளலாம். இது எப்படியோ இருக்கட்டும்.

இனிச் செய்யவேண்டியது என்ன? தலைவர்கள் என்போர்களை நம்புவதில் பயனில்லை. பாமர மக்களுக்குப் பகுத்தறிவு வரும்வரை தலைவர்கள் யோக்கியமாய் நடந்துகொள்வார்களென்று எண்ணுவது பைத்தியக்காரத்தனமேயாகும். எனவே, நாம் இனி பாமர மக்களைக் கண்விழிக்கச் செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதுதான் உண்மையான தொண்டு. இதற்காகப் பிரயாசைப்பட போதிய பத்திரிக்கை இல்லை; ஆட்கள் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நமது நாட்டில் உள்ள பத்திரிக்கைகள், ஆட்கள், பணம் ஆகியவை எல்லாம் போலி தேசியத்திற்கும், போலி சுயராஜ்யத்திற்கும் உபயோகப்படுத்தும் முறையில் வாழ்வும், கீர்த்தியும் அடையக் கூடியதாய் இருக்கிறதேயொழிய, உண்மைக்கு உதவக்கூடியதாக ஒன்றும் தென்படுவது

இல்லை. புதிதாக நமக்கு ஆட்களும், பத்திரிக்கை உதவிகளும் சேர்க்கத் தக்க காலம் இன்னும் வரவில்லையானாலும், இருப்பவைகளையாவது நழுவவிடாமல் வைத்திருக்க வேண்டியதாக இருக்கிறது.

சுமார் 4 மாதத்திற்குமுன் 'குடிஅரசு'வில், 'வேண்டுகோள்' என்னும் தலைப்பின் கீழ் 'திராவிடன்' பத்திரிக்கையை ஒப்புக்கொள்ளலாமா என்பதைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதி இருந்ததும், அதற்கு 500 கனவான்கள்வரை பதில் எழுதி இருந்ததும், அவர்களுள் 20 கனவான்கள் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்ளும்படி எழுதி இருந்ததும் அதன்பேரில் சில நிபந்தனைகளின்படியானால் ஒப்புக்கொள்ளக் கூடுமென்று 'தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தா'ருக்கு நாம் எழுதி இருப்பதாக எழுதி இருந்ததும் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அந் நிபந்தனைகளுக்கு இப்போதுதான் பதில் வந்திருக்கிறது. நமது நிபந்தனைகளில் முக்கியமானது என்னவென்றால், 'குடிஅரசு' கொள்கைப்படி தான் 'திராவிடனை'யும் நடத்த முடியும் என்றும், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையோ, ஜஸ்டிஸ் கட்சியையோ அதன் கொள்கைகளையோ அதில் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட நபர்களையோ கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கண்டிக்கத் தகுந்த உரிமை நமக்கு இருக்கவேண்டுமென்றும் எழுதி இருந்தோம். நாம் ஏன் அப்படி எழுத நேர்ந்தது என்றால், 'தேசியம்', 'சுயராஜ்யம்' என்கிற அரசியல் புரட்டுப் பதங்கள் அக் கட்சிக் கொள்கையிலும் கலந்திருப்பதால் அதன்மூலம் அக் கட்சியார்களும் காங்கிரஸ் காரர்களைப்போல், பாமர மக்களை ஏமாற்றும் வழியில் செல்ல நேரிட்டால்—அம் மோசத்தி லிருந்து பாமர மக்களைத் தப்புவிக்க யார்யாரை அல்லது எந்த எந்தக் கட்சியைக் கண்டிக்க வேண்டுமானாலும் கண்டிப்பதற்கு பாத்தியமிருக்கவும், மற்றும் சர்க்கார், அதன் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களைக் கண்டிக்கும் விஷயத்தில் எவ்விதத் தடையும் இருக்கக்கூடாது என்பதற்காகவுமே அந் நிபந்தனை எழுதி இருந்தோம். அதற்குப் பதில் எழுத ஏறக்குறைய 2 மாதத்திற்கு மேலாகிவிட்டது.

இப்போது பதில் வந்திருக்கிறது. அதாவது, நம்மிஷ்டம்போல் நடத்த ஒப்புக் கொண்டதாகவும், காலவரையறை கட்டியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். ஆகஸ்டு முதல் தேதி முதலே ஒப்புக்கொள்ளும்படியாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அனேக நண்பர்கள் ஒப்புக்கொள்ளும்படியும் எழுதியிருக் கிறார்கள். இரண்டொரு கனவான்கள் மாதம் ஒன்றுக்கு 100, 200 ரூபாய் வீதம் நஷ்டத் திற்கு உதவுவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். சில நண்பர்கள் ஊதியம் எதிர்பாராமல் தொண்டு செய்வதாகவும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே, இந் நிலையில் சிறிது காலத்திற்காவது நாமும் அதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதாகவே கருதுகிறோம்.

ஆனால், முக்கிய நண்பர்களில் பலர் உடல் நிலையைக் கவனிக்கும்படிக்கும், ஓய்வெடுத்துக்கொள்ளும்படிக்கும் எழுதி வருகிறார்கள்.

ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டிய சமயம் நமக்குத் தெரியும். அதாவது, நமது தொண்டு நாட்டிற்கு உதவாது என்றாவது, நமது தொண்டை நாட்டார் ஏற்பதில்லை என்றாவது நமக்குத் தெரிந்தால் யாரிடமும் சொல்லாமல் நாமே ஓய்வெடுத்துக்கொள்வோம். அதுவரை எடுத்துக்கொள்ளும் ஓய்வு உண்மையான ஓய்வாகாது. அப்படிக் கடுமையாக ஓய்வு எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும் என்கிற முறையில் நமது உடலில் கோளாறு ஒன்றும் இதுசமயம் இல்லை என்றே நினைக்கிறோம்.

தனவைசிய நாட்டுச் சுற்றுப்பிரயாணம் முடிந்தவுடன் ஒரு வாரத்தில் 'திராவிடன்' சம்பந்தமான ஏற்பாடுகளைப்பற்றி முடிவு செய்ய சென்னைக்குச் செல்லவேண்டியிருக்கும்.

இது விஷயத்தில் நண்பர்கள் தங்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறமாட்டார்கள் என்றே முடிவு செய்துகொண்டு இம் முயற்சியில் ஈடுபடலாமெனக் கருதுகிறோம்.

['குடிஅரசு'—தலையங்கம்—17-7-1927]

8. சமூகத் தொண்டும் அரசியல் தொண்டும்

சமூகத் தொண்டிற்கும் அரசியல் தொண்டிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் வைத்துக்கொள்வதானது, சமூகத் தொண்டிற்குப் பெருத்த கேடு சூழ்வதேயாகும்.

அரசியல் தொண்டு என்பதாக ஒரு தொண்டே இல்லை என்பதும், அது அவ்வளவும் புரட்டு என்பதுமே நமது அபிப்பிராயம். அப்படி ஒன்று இருப்பதாக யாராவது வாதத்தில் வெல்லலாமானாலும், அது கண்டிப்பாய் இது சமயம் நமது நாட்டிற்குத் தேவை இல்லாதது என்றே சொல்லுவோம்.

நம்மைப் பொறுத்தவரை அரசியலின் பேரால் கூடுமானவரை உழைத்தாகிவிட்டது; கண்டது ஒன்றும் இல்லை; அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள்மூலம் பாமர மக்களை வஞ்சிக்கச் செய்ததே அல்லாமல் வேறில்லை.

அதை விட்டுத்தொலைத்து சமூகத் தொண்டையே பிரமாதமாய்க் கருதி அதற்கென உழைத்தாலும், அடிக்கடி சறுக்கி அரசியல் சேற்றில் விழவேண்டியதாக நேரிட்டுவிடுகிறது. இது சகவாசதோஷமே அல்லாமல் வேறல்ல.

இனி, அடியோடு அரசியலை உதறித் தள்ளிவைத்துவிட்டு, மக்களுக்கும் அதிலிருக்கும் மூட நம்பிக்கையை ஒழிப்பதை ஒரு திட்டமாக சமூகத் தொண்டில் சேர்த்து, எல்லா மக்களையும் சமூகத் தொண்டையே பிரதானமாய்க் கருதும்படி செய்வதை முக்கிய தொண்டாக வைத்துக்கொள்வதே நலமெனத் தோன்றுகிறது.

அரசியலில் உழல்வதென்பது என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்காவது மனிதன் தன்னை அயோக்கியனாக்கிக் கொள்ளாமலும், தேசத்தையும், சமூகத்தையும் காட்டிக் கொடுக்காமலும் வாழும்படி செய்யவே முடியாது. இது நமது அனுபோகத்திற்குச் சந்தேகமறத் தோன்றிவிட்டது.

சமூகத் தொண்டில் ஈடுபட விருப்பமுள்ளவர்களிடம் அரசியலில் அதைக் கண்டிப்பதைத்தவிர, மற்றபடி, தான் நேரில் கலப்பதில்லை என்பதாக உறுதி பெற்றே அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் நிபந்தனை ஏற்படுத்தினால்தான் சமூகத் தொண்டு இயக்கம் நடைபெறவும், வெற்றி பெறவும் முடியுமென்றே இப்போது நினைக்கவேண்டி இருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய 'தென் இந்திய நல உரிமைச் சங்க இயக்கம்' கூட இரண்டு பாகமாய்ப் பிரிக்கப்பட்டால் நன்மையென்றே கருதுகிறோம். 'தென் இந்திய நல உரிமைச் சங்கம்' என்பதாக உள்ளதில் அரசியல் கலந்த சமூகஇயல், தனி சமூகஇயல் ஆகிய இரண்டு பேருக்கும் இடமுள்ளதாக்கி, தனி சமூகஇயல்காரரும் அதனுள் ஒரு உள் பிரிவாக ஒன்றை ஏற்படுத்திவிடுவது நலமென்றே தோன்றுகிறது. ஏனெனில், அரசியல் கலந்தால் எப்பேர்ப்பட்டவர்களும் நாணயக் குறைவுள்ளவர்களாகப் போய்விடுகிறார்கள்.

மகாத்மா இயக்கம்கூட எவ்வளவு புனிதமானதாகக் கருதப்பட்டும், அரசியலில் பகிஷ்காரத்தை மாற்றி சட்டசபை உள்நுழைவை அது என்று ஏற்றதோ அன்றே விதிவிலக்கு இல்லாமல் எல்லோரிடமும் நாணயக் குறைவு தோன்ற வழி ஏற்பட்டுவிட்டது. ஆதலால், அதைப்பற்றி இனி சந்தேகப்பட வேண்டியதில்லை. தனி சமூகத் தொண்டில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு இஷ்டமான ஓர் அரசியல்காரரை ஆதரிக்கலாம்; ஆதரிக்க சிபாரிசு

செய்யலாம் என்பதாக ஒரு கொள்கை மாத்திரம் வைத்துக்கொள்வதானால் (அதுவும் அவசியமானால்—அதாவது, நமது சமூகத் தொண்டுக்கு அரசியலால் தடை ஏற்படாமல் இருக்கும் அளவுக்கு அனுகூலம் கிடைக்கும்போல் இருந்தால்மாத்திரம்) வைத்துக்கொள்ளலாம். நமது அபிப்பிராயத்தில், 'அந்த அளவுகூட' மனிதனை அயோக்கியனாக்கிவிடும் என்றே பயப்படவேண்டி இருக்கிறது.

இந்த அடுத்துவரும் ஆகஸ்ட் மாதத்திய சட்டசபைக் கூட்டம் முடிந்தவுடன், வட ஆர்க்காடு ஜில்லாவில் கூடப்போகும் பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாட்டில் இதைப் பற்றித் தொண்டர்கள் ஒன்றுகூடி யோசிக்க வேண்டும் என்றே நினைக்கிறோம். அதாவது, எந்தவிதத்திலாவது சர்க்கார் சம்பந்தமான உத்தியோகம், கவுரவ உத்தியோகம், பட்டம், பதவி முதலியவைகள் எதுவும் இல்லாதவர்களும், இனி பெற்றுக்கொள்வதில்லை என்கிற உறுதி உள்ளவர்கள் மட்டுமடங்கியதாகவே ஓர் அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்பதே தான். அந்தப்படி இல்லாமல், என்னதான் வேலை செய்தாலும் பயன் பெறமுடியாது. 'தாடி நெருப்புப் பற்றி எரிகிறபோது அதில் சுருட்டுப் பற்றவைக்க நெருப்புக் கேட்பது போல்' நமது மக்களின் நிலை தாழ்ந்து கிடப்பதையும், சிறுமைப்படுவதையும், அயோக்கியர்களால் கொடுமைப் படுத்தப்படுவதையும்பற்றிக் கொஞ்சமும் கவலை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதோடு, மற்றவர்கள் யாராவது கவலை எடுத்துக்கொண்டாலும் அதையும் கெடுத்து, அதன் பலனையும் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளப் பார்க்கிற மக்களை வைத்துக்கொண்டு என்னதான் செய்யமுடியும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

ஆகையால், உண்மைத் தொண்டர்கள் இது விஷயத்தில் போதிய கவலை எடுத்து, யோசித்து இது சமயம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்போதே தெரியப்படுத்திக்கொள்ளுகிறோம். இதில் சேர வருகிறவர்கள் கூடுமானவரை கஷ்டம் அனுபவிக்க நேர்ந்தால் அனுபவிக்கவும், தியாகம் செய்யவும், தன்னலத்தை அடியோடு மறுக்கவும் தயாராய் இருக்கவேண்டுமென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு யோசிக்க வேண்டும் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்ளுகிறோம்.

['குடிஅரசு'—தலையங்கம்—31-7-1927]

9. மனுதர்ம சாஸ்திரம்

சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகு மக்களுக்கு எங்கு பார்த்தாலும் மனிதரின் சுயமரியாதைக்கு விரோதமான ஆதாரங்களை ஒழிப்பதில் கவலையும் ஊக்கமும் அதிகமாகி வருகின்றது. சென்னை, வட ஆர்க்காடு, சேலம், தஞ்சை, திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் கூடிய பல மாநாடுகளில் 'வருணாசிரம தர்மம்' என்பதைக் கண்டித்திருப்பதுடன் அதற்கு ஆதாரமான புத்தகங்களையும் பகிஷ்கரிக்கத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. சில மாநாடுகள் மனுதர்ம சாஸ்திரத்தை நெருப்பில் கொளுத்தி சாம்பலைக் கரைத்தும் வந்திருக்கின்றன.

அரசாங்கமும், சட்டசபை மெம்பர்களும் இதைக் கவனிக்கப் போகிறார்களா என்று தீர்மானிக்க முடியவில்லை. பழைய காலமாயிருக்குமானால், இம் மாதிரிப் பெரும்பான்மையான மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியை மதித்து, அரசாங்கமானது வருணாசிரம தருமத்தை அழித்துச் சட்டம் செய்திருக்கும் என்பதோடு, வருணாசிரமக் கொள்கைக்காரர்களைக் கழுவிலேற்றி இருக்கும் என்றுகூடச் சொல்லலாம். ஏனெனில், பிரபராதிகளான 8,000 சமணர்கள் கழுவேற்றப்பட்டதாகச் சொல்லும் சரித்திரத்தைப் பார்க்கும்போது, இவ்வளவு அக்கிரமமும்—ஜீவ காருண்யமும் அறிவும் அற்ற தன்மையான கொடுமையை சகித்துக்கொண்டிருக்கும் என்று யாரும் சொல்லமுடியாது. நமது அரசாங்கங்கள் பழைய

கால அரசாங்கங்களைப் பின்பற்றிக் கழுவேற்றாவிட்டாலும், சட்டம் மூலம் கொடுமைகளை ஒழிக்கவாவது உதவவேண்டாமா என்று கேட்கின்றோம்.

ஒருக்கால், 'மத விஷயத்தில் தலையிட முடியாது' என்று சொல்வார்களானால் மத விஷயங்களையாவது கவனித்து மதத்தில் எப்படிச் சொல்லியிருக்கின்றதோ, யார் யாருக்கு என்னென்ன வேலை இடப்பட்டிருக்கின்றதோ, யார் யாரின் நடத்தை எப்படி இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ, அப்படியாவது நடக்கும்படி பார்க்கவேண்டும். அப்படியுமில்லாமல் இப்படியுமில்லாமல்—பார்ப்பானும், வெள்ளைக் காரனும் மாத்திரம் பிழைக்க என்னென்ன மாதிரி நடக்க வேண்டுமோ, எப்படியெப்படி சீர்திருத்தம் செய்யவேண்டுமோ, அப்படியெல்லாம் சூழ்ச்சிகள் செய்துகொண்டு, 'மதவிஷ யத்தில் பிரவேசிக்க மாட்டோம்' என்று சொல்லுவது வடிகட்டின அயோக்கியத்தனமாகும் என்றே சொல்லுவோம்.

இச் சூழ்ச்சிகளைப் பார்க்கும்போது, இதுசமயம் முகம்மதிய அரசாங்கத்தில் வாழும் யோக்கியதையாவது நமக்குக் கிடைக்காதா என்று ஆசைப்படவேண்டியதாயிருக் கிறது. காரணமென்னவென்றால், ஒரு அரச விசாரணைக்கு 'குர்ஆனை' ஆதாரமாகக் காட்டியபோது, வீரர் கமால் பாஷா அவர்கள், 'அது அக்காலத்திய சங்கதி; இக் காலத் திற்குச் செல்லாது' என்று கூறி அதைப் பிடுங்கி வீசி எறிந்தாராம். குர்ஆன் வாக்கியம் செதுக்கப்பட்ட இடங்களையெல்லாம் அழித்து, 'சுயமரியாதையையும். கைத்தொழிலையும் கவனியுங்கள்' என்று எழுதி வருகிறாராம். மகம்மதியரைவிட வெள்ளைக்காரர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் மதபக்தி இருக்கின்றது என்று சொன்னால் எந்தப் பைத்தியக்கார ராவது நம்பமுடியுமா என்று கேட்கின்றோம்.

எனவே, மதம் என்கின்ற புரட்டுகளையும், மதாச்சாரியர்கள் என்கின்ற அயோக் கியர்களையும் சாஸ்திரம், வேதம், புராணம் என்பவைகளாகிய அதர்ம, அக்கிரம ஆதாரங் களையும் குருட்டுத்தனமாய் பின்பற்றாமல், அன்பு, ஜீவகாருண்யம், அறிவு, சத்தியம் என்பவைகளை ஆதாரமாய் வைத்து, அவற்றிற்கு விரோதமாய் உள்ளவைகளையெல்லாம் அடியோடு ஒழிப்பதற்கு முற்பட வேண்டியதுதான் பகுத்தறிவுள்ள மனிதன் கடமை. ஆதலால், அதற்கு ஒவ்வொருவரும் முற்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்ளு கின்றோம்.

['குடி அரசு'—தலையங்கம்—4-12-1927]

10. சுயமரியாதைச் சங்கக் கொள்கை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

இயக்கம் ஆரம்பித்த காலத்தில் எதிர்ப்புகள் பலமாய் இருந்தன. இன்னும் யாவரும் ஏகமனதாய் ஆதரிப்பதாகவும் எண்ண இடமில்லை. இன்னும் அதிக எதிர்ப்பு இருக்கிறது. ஆயினும், இத்தகைய மகான்கள் எல்லாம் ஆதரவு அளித்து வருவதைக் கண்டு மிகத் தைரியம் கொண்டு அந்த ஆசையின் மீது அவர்கள் உரையை நான் சகித்துக் கொண்டிருக் கிறேன். 'குடிஅரசை'ப் பற்றி மிக அதிகமாகக் கூறினார்கள். அதிலுள்ள குற்றமெல்லாம் எனக்குத் தெரியும். அதிலுள்ள மெல்லினம், வல்லினம் போன்ற பல இலக்கணப் பிழை களும் மற்றும் பல பிழைகளும் எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப் போவதில்லை. இவ்வாண்டுவிழாவிற்கு எனக்குக் கடிதம் அனுப்பாவிட்டாலும் எங்கிருந் தாலும் ஓடிவந்துவிடுவேன். இந்த நிலையில் உள்ள என்னையே தலைமை வகிக்க வேண்டும் என்று கூறியது எனது பாக்கியமேயாகும். சிறந்த கல்வியாளர்களும், பெரியார் களும் நிறைந்த இந்த ஜில்லாவாசிகளான நீங்கள் இவ்வியக்கத்துக்கு இவ்வளவு ஆதரவைக் காட்டி வருவதைக் கண்டு நான் பெருமையடைவது மட்டுமல்ல, மற்ற ஜில்லாவாசிகளும்

பதிவு எண் 2041

கதர் வாழ்க

குடி அரசு

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

(18—12—27) ஞாயிற்றுக்கிழமை

கணித சோதிடம்

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

மதுரை தென்னிந்திய மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம் அல்லது

8000 கஜம் நூல்.

"குடி நூல்"

திருப்பூர் கதர் பனியன்கள்.

விலை டஜன் 1-க்கு

26 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

18–12–1927-ல் 'குடி அரசு' முகப்பு அட்டை. தலைப்பில் 'கதர் வாழ்க' என உள்ளது.
"ஆசிரியர் : ஈ. வெ. இராமசாமி நாயக்கர்" என வெளியிடப்பட்ட
கடைசி 'குடி அரசு' இதழ்

குடி அரசு

(25–12–27)

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

விதைகள், செடிகள்.

Sri Siddhartha Book Depot
Champion
Kolar Gold Fields

"தாருல் இஸ்லாம்"
வாரப்பத்திரிகை.

" ஆசிரியர் : ஈ. வெ. ராமசாமி " எனக் குறிக்கத் தொடங்கிய
' குடி அரசு ' முதல் இதழ்
—' குடி அரசு ' 25–12–1927

உங்களுடன் போட்டியிட்டுத் தங்கள் சுயமரியாதையை நிலை நிறுத்துவதில் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டுமென்று மீண்டும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

சுயமரியாதை இயக்கம் என்றோரியக்கம் தோன்றிய காலத்தில் பலர் பலப் பலவித மாகப் பேசியதுண்டு. ஆனால், இப்பொழுதோ எனில் இவ்வியக்கம் பலரால் ஒப்புக் கொள்ளக்கூடியதாயும், மனிதனுடைய வாழ்விற்கும், உலக முற்போக்குக்கும் இன்றி யமையாததென நம் மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள்; உணர்ந்தும் வருகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் சுயமரியாதைப் பேச்சாகத்தானிருக்கிறது. நம்நாடு, வெளி நாடு தேசியவாதிகளுங்கூட இச் சுயமரியாதை என்னும் வார்த்தையை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீ காந்தியும் சுயமரியாதையைப்பற்றிப் பேசுகிறார். ஒத்துழை யாமையே சுயமரியாதைக்காக ஆரம்பித்ததே ஒழிய சுயராஜ்யத்திற்காக அல்ல. இப் பொழுது கொஞ்ச காலமாய் நமது நாட்டில் நடந்து வரும் 'ராயல் கமிஷன்' பகிஷ்காரம் என்கின்ற கூச்சல்கூட சுயமரியாதைக்காகத்தான் என்று சொல்லுகிறார்கள்.

இச் சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கைகள் என்னவெனிலோ பிறப்பில் உயர்வு-தாழ்வு இல்லை என்பதும் மேல்-கீழ் இல்லையென்பதுந்தானேயல்லாமல், எந்தத் தனி வகுப்பாரையும் இழிவுபடுத்த அல்ல என்பதையும் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். ஆனால், நம்நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களை ஏதோ துவேஷிப்பதாகக் கூறி வருகின்றனர். இது அக் கூட்டத்தாரின் யோசனையின்மையாலும் பேராசையாலுமே ஏற்படுகிறது. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கட்கும், நமக்குச் சுயமரி யாதைத் தத்துவம் எவ்வளவு பயன்படுகிறதோ அதைவிட அதிகமாகப் பார்ப்பனர்களுக்கும் பயனுண்டு.

பார்ப்பனரல்லாதாராகிய நாம் எவ்வளவு தூரம் இழிவுபடுத்தி வைக்கப்பட்டிருக் கின்றோமோ, அந்த அளவுக்குப் பார்ப்பனர்கள் சுகம் அனுபவித்து வருகிறார்கள்; நாம் எவ்வளக்கெவ்வளவு கொடுமையுடன் நடத்தப்படுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் களுக்கு நன்மையாகவே இருக்கிறது. இவ்வியக்கத்தின் பயனால் நாம் மாத்திரம் சுகப் படுவதல்லாமல், பார்ப்பனர்களும் இதன் மூலமாய்த் தங்கள் இழிவைப் போக்கிக்கொள்ளுகிற வர்களாகிறார்கள். உண்மையாக, கடைசியாக இவ்வியக்கத்தால் யாருக்காவது கடுகள வாவது துன்பம் நேரிடுமா என்றால், இல்லவே இல்லை. ஆனால், அரசாங்கத்தாருக்கு மாத்திரம் கொஞ்ச காலத்திற்குக் கஷ்டமாகத்தானிருக்கும். ஏனெனில், நாம் எவ்வளவு தூரம் சுயமரியாதையற்றிருக்கின்றோமோ, அவ்வளவு தூரம் நம்மை இழிவுபடுத்தி, நம்மிட மிருந்து அவர்கள் கொள்ளையடித்துக்கொண்டு இருப்பார்கள். ஆனால், அவர்களுக்குக் கூட கொஞ்ச நாளைக்குள் புத்தி வந்துவிடும். எத்தனை நாளைக்குத்தான் தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பதென்று சொல்லி விலகிவிடுவார்கள். பின்னர் யாவரும் சுதந்தரத் துடன் வாழலாம். ஆகையால், வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கும் சுயமரியாதையே அடிப் படையானது. இதைப்பற்றி எத்தனையோ பெரியார்கள் கூறியிருக்கின்றனர். 'கவரிமான் ஒரு மயிரிழப்பின் உயிர் வாழாது' என்பதுபோல், மனிதனும் மானம் இழந்து வாழ விரும்பான். ஆகவே, நம் மானத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், மனிதத் தன்மையோடிசைந்த வாழ்க்கை நடத்தவேண்டு மென்றால் சுயமரியாதைதான் வேண்டற்பாலது.

[திருநெல்வேலியில், 28-11-1927-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 4-12-1927]

11. சுய மரியாதை

சுயமரியாதை இயக்கம் தோன்றிச் சுமார் மூன்று வருஷ காலத்திற்குள் தமிழ் நாட்டில் அது அனேகமாக ஒவ்வொருவருடைய கவனத்தையும் இழுத்திருப்பதோடு, இவ்வியக்க விஷயமாய் அனேகரைக் கூர்ந்து கவனிக்கும்படிக்கும் கவலைப்படும்படிக்கும் செய்து வந்திருக்கின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இந்த இயக்கம் ஆரம்பமானது முதல் இதற்கு அனேக தத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டு இருந்தாலும், ஒருவாறு அவ்வளவையும் சமாளித்து வளர்ந்து கொண்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

இதற்கு உதாரணம், இவ்வியக்க ஆரம்பகாலத்தில் காங்கிரஸ், இதைத் துவேஷ இயக்க மென்றும், பிறகு பார்ப்பனத் துவேஷ இயக்கமென்றும், பின்னால் தேசத் துரோக இயக்க மென்றும், பிறகு சர்க்கார் பிரச்சார இயக்கமென்றும், பிறகு வைணவ துவேஷ இயக்க மென்றும், பிறகு சைவத் துவேஷ இயக்கமென்றும், பிறகு நாஸ்திக இயக்கமென்றும், பிறகு நிரீச்சுவரவாத இயக்கமென்றும்—மற்றும் அனேகர் அனேகவிதமாய் இதன்மீது பழி சுமத்தி, இதற்குப் பொதுமக்களிடம் எவ்வளவு தூரம் வெறுப்பும் துவேஷமும் ஏற்படச் செய்ய வேண்டுமோ அவ்வளவு தூரம் ஏற்படவேண்டி பலவழிகளிலும் பெரு முயற்சிகள் செய்தாகிவிட்டன என்றாலும்—இவ்வளவு செய்தும் இதன் முன்னேற்றம் சிறிதும் குந்தகப் படாமல் மேலும் மேலும் முன்னேறுவதைப் பார்க்கின்றபோது, இவ்வியக்க எதிரிகள் வேறு சமாதானம் சொல்ல முடியாமல், 'இது இனி எத்தனை நாளைக்கு நிற்கப்போகின்றது? அப்பேர்ப்பட்ட ஒத்துழையாமை இயக்கமே பழங்கதையாய் விட்டது, இதுதானா வாழப் போகின்றது? ஏதோ பார்ப்பனர்கள்மீது நமது நாட்டு மக்களுக்கு இருக்கும் துவேஷத் தினால் சிலர் ஆதரிக்கின்றார்கள். நாயக்கருக்கு இருக்கும் சொந்த செல்வாக்குக்கும் அரசாங்க செல்வாக்குக்கும் பயந்து சிலர் ஆதரிக்கின்றார்கள். இதெல்லாம் எத்தனை நாளைக்கு நிற்கும்?' என இம் மாதிரியாகச் சொல்லிக்கொள்வதன் மூலம் தங்கள் பொறாமைகளை ஒருவாறு திருப்தி செய்து கொள்வதோடு, இரகசியமாய்த் தங்களால் கூடிய கெடுதியையும் செய்துகொண்டே வருகின்றார்கள் என்பதும்—இவ்வளவையும் தாண்டி தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு முக்கிய இடத்திலும் மற்றும் வெளியிடங்களிலும் சுயமரியாதைச் சங்கங்களும், மகாநாடுகளும், பிரச்சாரங்களும் நடந்துவருவதும், அதன் கொள்கைகளில் பல, சற்றும் எதிர்ப்பின்றிக் காரியத்தில் அனுஷ்டிக்கப்படுவதுமே போது மான உதாரணங்களாகும்.

அது மாத்திரமல்லாமல், இப்போது எந்தவிதமான மகாநாடு எங்கு நடந்தாலும் சுயமரியாதைக் கொள்கைகள் கொண்ட தீர்மானங்களே தாம் நிறைவேற்றப்பட்டு வருவ துடன் சமூக மகாநாடு, சமரச மகாநாடு, பெண்கள் மகாநாடு, பார்ப்பனரல்லாதார் மகா நாடு சீர்திருத்த மகாநாடு—ஏன், சில அரசியல் மகாநாடுகள் ஆகியவைகளிலெல்லாம் மேற்கண்ட தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்த இயக்கத்திற்கு ஆதாரமாக, ரஷ்யா, ஜப்பான், சைனா, துருக்கி, ஈஜிப்ட், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகள் வழிகாட்டியும் வருகின்றதைப் பார்த்தால், இவ்வியக்கம் தளர்ந்துவிடும் என்றோ மறைந்துவிடும் என்றோ நினைப்ப வர்கள் கண்டிப்பாய் ஏமாந்துவிடுவார்கள் என்பது தெளிவாகாமல் போகாது. அன்றியும், நமது நாட்டு அரசியல் தலைவர்கள் என்பவர்களும் அனேகமாக இக் கொள்கைகளை உச்சரிப்பதின் மூலமாகவே செல்வாக்குப் பெறுவதையும் பார்க்கும்போது, இக் கொள்கை களின் தத்துவம் எவ்வளவு மேன்மையானது என்பதும் விளங்காமல் போகாது. இவ்வளவும் இருந்தாலும், இவ்வியக்கத்திற்கு ஒரு நிலையான ஸ்தாபனமும் பிரச்சார பலமும் ஏற்படுத்தவேண்டியது மிகவும் முக்கியமான வேலை என்று நமக்குப் படுகின்றது.

மேல்நாடுகளிலும் ஒவ்வொரு தேசத்திலும் இக் கொள்கைகள் கொண்ட இயக்கம் அதிகமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டு வெகு விரிவான முறையில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. உதாரணமாக,

லண்டனில் 'R. P. A' என்னும் பகுத்தறிவாளர்கள் சங்கமும், அமெரிக்காவில் 'பிரீ திங்கர்ஸ் அசோசியேஷன்' என்னும் 'தாராள எண்ணக்காரர்கள்' (அறிவு எவ்வளவு

தூரம் செல்லுமோ அவ்வளவு தூரம் செலுத்துவது) என்கின்ற சங்கமும், ரஷ்யாவில் ‘ஆன்டி காட் சொசைட்டி’ (கடவுள் உற்சவம், வணக்கம் ஆகியவைகள் அவசியமில்லை) என்கின்ற (ரஷ்ய கவர்ன்மெண்டாராலும் ஆதரிக்கப்பட்ட) சங்கமும், சைனாவில் ‘யங் சைனீஸ்’ அதாவது ‘வாலிப சைனாக்காரர்கள்’ என்கின்ற சங்கமும், மற்றும் ஆப்கானிஸ்தானம், துருக்கி முதலிய சர்க்கார்களால் அனேக இடங்களில் குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழிக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

அதுபோலவே, நமக்கு நமது அரசாங்கம் அடியோடு நமது இயக்கத்தின் சுவாதீனத்திற்கு வருமளவும்—அதாவது, சுயமரியாதை அரசாங்கம் ஏற்படும்வரை—நமக்குத் தக்க ஆஸ்பதம் வேண்டியிருக்கின்றது. அனேகமாய் இவற்றை உத்தேசித்தே அடுத்த மாதம் 2-வது, 3-வது வாரவாக்கில் செங்கற்பட்டில் தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அம் மகாநாட்டிற்கு ‘சைமன் கமிஷனும்’ அழைக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் அம் மகாநாட்டில் அனேக பெரியார்களும் செல்வாக்குக்காரர்களும் உண்மைத் தொண்டர்களும் செல்வந்தர்களும் பங்கெடுத்துக்கொள்ளச் சம்மதித்து இருக்கிறார்கள். இதுவரை சுமார் 10 ஆயிரம் ரூபாய் போல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

திருவாளர்கள் ராவ்பகதூர். எம். கே. ரெட்டியார், ஜி. ஜெயராம நாயுடு காரு, கே. வி. மேனன், கண்ணப்பர் முதலியவர்களும் உழைத்து வருகின்றார்கள். சுமார் இருபத்தையாயிரம் மக்களுக்குக் குறையாமல் கூடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மகாநாட்டிற்கு வந்து சில தீர்மானங்களை எதிர்க்கவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு சிலர் இரகசியமாய் கட்சி சேர்ப்பதாகவும் தெரியவருகின்றது. எப்படியானாலும்சரி, நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. நமது நிலைமையையும், உண்மையென்று நாம் நினைப்பதையும் வெளிப்படுத்தி, அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் நடத்த ஒரு பலமான ஸ்தாபனமும், பிரச்சாரமும் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் நமது கவலை.

ஆதலால், நாட்டின் சேமத்திலும் மக்களின் முன்னேற்றத்திலும் கவலையுள்ள மக்கள் யாவரும் அங்கு வந்து கூடி, தங்கள் கடமையைச் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒவ்வொருவரும் தங்கள் மனைவி மக்களுடனேயே வரவேண்டியது மிகவும் அவசியமானது என்பதை மிகவும் அழுத்தமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட பெண்களும், தங்களை விதவைகள் என்றோ, வேசிகள் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் அவசியம் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர, அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் கண்டிப்பாய் வர வேண்டியது அவசியமாகும் என்று தெரிவிப்பதோடு, இந்த மகாநாடு எவ்வழியிலும் அரசியல் மகாநாடு என்பதல்ல என்றும் அவர்களுக்கு உறுதி கூறுகின்றோம். அன்றியும், அரசாங்க சட்ட மெம்பர் திவான்பகதூர் கனம் கிருஷ்ணநாயர் அவர்களும் மற்றும் பல பெரிய அதிகாரிகளும் வரச் சம்மதித்து இருக்கின்றார்கள்.

முக்கியமாக இம் மகாநாட்டில் யோசித்துத் தீர்மானிக்கப்படும் விஷயங்கள் யாவை என்றால்—சமத்துவம், சம உரிமை, சம சந்தர்ப்பம், சிக்கனம், அன்பு, இரக்கம், ஒழுக்கம் ஆகியவைகள் ஏற்படவும்; குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கம், தீண்டாமை, பெண் அடிமை ஆகியவைகள் எடுபடவும்; எளியோரை வலியோர் அடக்கி ஆளாமலும்; பாமரர்களைப் படித்தவர்கள் ஏமாற்றாமலும், ஏழைகளைச் செல்வந்தர் கொடுமைப் படுத்தாமல் இருப்பதற்கும்; பகுத்தறிவு வளர்ச்சிபெறவும்; தன் முயற்சியில் நம்பிக்கை உண்டாகவுமான தன்மைகள் போன்ற விஷயங்களேதாம் அங்கு நடைபெறும். ஆகையால், இவைகளை அரசியல் விஷயமென்று யாரும் சொல்லமுடியாது. அரசியல் விஷயம் என்று ஏதாவது சொல்லவந்தால் அது மேற்கண்ட விஷயங்கள் நிறைவேறி அமுலுக்குவர அரசாங்

கத்தின் உதவி ஏதாவது வேண்டியிருந்தால் அந்த அளவக்கு,—அதுவும் அரசாங்கத்தின் ஆதரவை எதிர்பார்க்கும் அளவுக்கு—ஏதாவது பேசப்படுமே ஒழிய வேறு ஒன்றும் நடைபெறாது என்று உறுதி கூறுகிறோம்.

ரஷ்ய தேசத்தில் கொஞ்ச நாளைக்கு முன்பிருந்தே கடவுளைப்பற்றிப் பிரசங்கங்களோ, உபதேசங்களோ, வணக்கங்களோ அவசியமில்லை என்பதாக ஒரு சங்கம் ஏற்பட்டு, அது தாராளமாய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வருஷத்திய கிறிஸ்து பிறந்த நாளை உற்சவமாய்க் கொண்டாடக் கூடாது என்று வெகு பலமான பிரச்சாரம் செய்யப்பட்டு வந்ததில் முழுவதும் வெற்றியடைய முடியாமல் போனதால், அடுத்து வரும் 'ஈஸ்டர்' உற்சவத்தை யாரும் கொண்டாடாமல் இருக்கும்படி இப்பொழுதிருந்தே வேண்டிய பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்கு அங்குள்ள சர்க்காரும் இந்த இயக்கக்காரர்களை அனுசரித்து உத்தரவு போட்டு, சர்க்கார் மூலமாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்காக அனேக பிரபுக்கள் இலட்சக்கணக்காக ரூபாய்கள் கொடுத்து உதவியிருக்கின்றார்களாம்.

எனவே, கடவுள் பிறந்த நாளையும் மறுபடியும் உயிர்த்து எழுந்த நாளையும் கொண்டாடக் கூடாது என்று சொல்லுவதும், சர்க்கார் மூலமாகவே அவற்றைப் பிரச்சாரம் செய்வதும் அங்கு நாஸ்திகம் என்று கருதப்படுவதில்லை.

நமது நாட்டிலோ, சாமி தாசி வீட்டிற்குப் போகும் உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! சமணரைக் கழுவேற்றும் உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! குடம், குடமாய் நெய்யையும் வெண்ணெயையும் கொண்டுபோய் நெருப்பில் போட்டு வீணாக்கும் கார்த்திகைத் தீப உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! வெடி மருந்துக்கும் அடுப்புக் கரிக்கும் காசைப் பாழாக்கும் தீபாவளி உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! இளங் குழந்தைகளைப் பாலில்லாமல் கஷ்டப்பட வைத்து விட்டு, குடம் குடமாய்ப் பாலைக் கொண்டுபோய்க் கல்லின்மீது கொட்டும் பாலாபிஷேக உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்!

அரசனிடம் குதிரை வாங்க என்று பணம் பெற்றுத் தன்னிஷ்டப்படி செலவழித்து விட்டு—அரசன் 'குதிரை எங்கே?' என்று கேட்டால், நரியைக் கொண்டுவந்து குதிரை என்று காட்டி, அந் நரி அரசனுடைய பழைய குதிரைகளையும் கடித்துக் கொன்றுவிட்டதுடன் அரசனும் அடிபட்ட உற்சவமும் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! வேறு ஒரு மதக்காரர் (பவுத்தர்) கோவிலை இடித்து, விக்ரகத்தைத் திருடிக்கொண்டு வந்து உடைத்த உற்சவத்தை நடத்தவேண்டாம் என்றால், அது நாஸ்திகம்!

எனவே, நமது நாட்டுக்கு எந்தக் காரியம்தான் நாஸ்திகம் அல்லாததோ நமக்குத் தெரியவில்லை.

['குடி அரசு'–தலையங்கம்—13-1-1929]

உலகத்தில் உயிரையுங்கூட கொடுத்துப் பெறவேண்டியதாக அவ்வளவு மதிப்பும் விலையும் பெறுமானமுமுள்ளது சுயமரியாதையே யாகும் என்றாலும்—சிலரால், தங்களுக்கு அவ் வார்த்தையே பிடிக்கவில்லை என்றும்; சிலரால், ஜஸ்டிஸ் கட்சி இருக்கும்போது சுயமரியாதை இயக்கம் ஒன்றுதனியாக எதற்கென்றும்; மதத்திலும், மனிதனுடைய நம்பிக்கை உணர்ச்சியிலும் கை வைப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றும்; சுயமரியாதை இயக்கத்தால் நாஸ்திகம் பரவுவதாகவும், அரசியல் கெட்டுப்போனதாகவும், தேசியம் தடைப்படுவதாகவும் இன்னும் பல மாதிரியாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

இவற்றிற்கு நமக்குத் தோன்றிய பதிலைச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

ஒரு இயக்கத்திற்கு ஒரு பெயரை எதற்காக இடுவது என்றும், அது காதுக்கினிமையாக இருப்பதற்காகவா, அல்லது இயக்கத்தின் தத்துவத்திற்காகவா என்றும் கேட்கின்றோம். சுயமரியாதை இயக்கம் என்றால், 'சுயமரியாதை இல்லாதவர்களின் இயக்கம் என்று பிறர் கருதமாட்டார்களா?' என்கின்றார்கள். அப்படியானால், நாம் அவர்களை, சன்மார்க்க இயக்கம் என்றால் அது துன்மார்க்கர்களுடைய இயக்கமாகிவிடுமா? ஜீவகாருண்ய இயக்கம் என்றால் அது ஜீவகாருண்யமில்லாத சகாப்புக் கடைக்காரர்கள் இயக்கமென்றாகிவிடுமா? சைவ சித்தாந்த இயக்கம் என்பது அசைவர்கள் கூட்டமாகிவிடுமா? அதுபோலவே, ஜஸ்டிஸ் இயக்கம் என்பது 'இன்ஜஸ்டீஸ்'காரர்கள் இயக்கம் என்றாகிவிடுமா?—என்று கேட்கின்றோம். ஒருசமயம் அப்படியே அர்த்தமாகிவிடும் என்று சொல்வதானாலும்கூட, சுயமரியாதை இயக்கம் என்பதற்குப் பொருள்—'சுயமரியாதை இல்லாதவர்கள், அதை அடைய ஏற்படுத்திக்கொண்ட இயக்கம்' என்பது நமக்கு ஆட்சேபணை இல்லை என்றே சொல்லுவோம்.

இதற்கு உதாரணம், முதலாவது, சுயமரியாதை இயக்கம் என்கின்ற பெயர் பிடிக்கவில்லை என்று சொல்லுகின்றவர்கள் தங்களையே—அதாவது, தங்கள் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்து, 'உனக்கு சுயமரியாதை இருக்கின்றதா?' என்பதாக ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு, தனது உருவம், நடை, உடை, குறி, கொள்கை இவைகளை வெளிப் பார்வையிலும்; தனது எண்ணம், நம்பிக்கை, தான் நடந்துகொண்டமுறை, நடந்து கொள்ள இருக்கின்ற கருத்து ஆகியவைகளை உள்ளுக்குள்ளாகவும்; தான் கட்டுப்பட்டிருக்கும் ஆட்சி, தான் பின்பற்றி வரும் மதம், மத உணர்ச்சி, மதச் சடங்கு, மதக் கொள்கை ஆகியவைகளை அனுபோகத்தைக் கொண்டும்; மற்றும் தங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன பேசிக்கொள்ளுகின்றார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்த்தால் எவ்வளவோ மோசமானவர்களாகவும் எவ்வளவோ சுயநலக்காரர்களாகவும் இருப்பவர்களுக்குங்கூட தங்களின் சுயமரியாதையற்ற தன்மை—சூரிய வெளிச்சம் போல் விளங்காமல் போகாது என்றே நினைக்கின்றோம்.

மற்றும், ஜஸ்டிஸ் கட்சி இருக்கும்போது இது எதற்கு? என்பவர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் 10 வருடகாலமாய் விளைந்து வந்த உணர்ச்சிகளையும் சுயமரியாதைக் கிளர்ச்சியில் இந்த இரண்டு வருடத்தில் விளைந்த உணர்ச்சியையும் கவனித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

சமீபகாலம்வரை, ஜஸ்டிஸ் கட்சி அரசியலில் மாத்திரம் மிதவாதம், அமிதவாதம் என்கின்ற முறையில் மிதவாதிகளின் கொள்கைகள் என்பனவற்றைப் பின்பற்றிக்கொண்டு, பார்ப்பனரிடமிருந்து உத்தியோகங்களைப் பிடுங்கி எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் வேலையில் மாத்திரம் ஒருவாறு வெற்றிபெற்று வந்ததே ஒழிய, மற்றவைகளில் தாராளமாய் முன்னேற முடியாதபடி தடைப்படுத்தப்பட்டே வந்திருந்தது. சுருக்கமாகச் சொல்லப் போனால், பார்ப்பனரல்லாதார் என்கின்ற ஒரு குறிப்பிடத்தகுந்த சமூகம் தமிழ்நாட்டில் இருக்கும் சங்கதியே வெளி மாகாணங்களுக்குத் தெரிய முடியாமல் இருந்தது என்றும், கொஞ்ச நஞ்சம் தெரிந்தாலும் அது தேசத் துரோகிகள், முட்டாள்கள், காட்டுமிராண்டிகள் என்று கருதும்படியாகச் செய்துவந்த எதிரிகளைச் சமாளிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததும் யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், அரசாங்கத்தாராலும் இது ஒரு தனி வகுப்புவாதக் கட்சியென்று மாத்திரம் மதிக்கப்பட்டு, அவர்களால் தங்கள் சுயநலத்திற்காக இது உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவே கருதியும் வந்திருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் இதே ஜஸ்டிஸ் கட்சியை மதிக்கின்றார்கள் என்பதற்கும், அதற்கு எவ்வளவு கட்டுப்பட்டு இருக்கின்றார்கள் என்பதற்கும், இது வெளி மாகாணங்களில் எவ்வளவு மதிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கும்

இந்த வருஷத்திய—அதாவது 1927–28ஆம் வருஷத்திய இந்திய கவர்ன்மெண்ட் ரிப்போர்ட்டைப் பார்த்தால் விளங்காமல் போகாது.

சமூக விஷயத்திலும் மக்களின் உணர்ச்சி எவ்வளவு முற்போக்கடைந்திருக்கின்றது என்பதற்கும், மதுரை மகாநாடு முதல் இதுவரை நடந்துவந்த பார்ப்பனரல்லாதார் மகா நாட்டு நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும், கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. அரசியலில் ஜஸ்டிஸ் கட்சியை சர்க்கார் தாசர்கள் என்று நமது எதிரிகள் சொல்லி வந்ததைக் கோயமுத்தூர் தீர்மானத்தின் மூலமாகவும், அதற்குப்பின் அரசாங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்குள்ள மதிப்பின் மூலமாகவும்தான் பொது ஜனங்களுக்குப் பொய்ப்பித்துக் காட்ட முடிந்தது.

ஆகவே, சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எவ்வளவு ஆதரவை தந்திருக்கின்றது என்பதைக் கவனித்தால், எந்த வகையிலும் அது அவசியமில்லாதது என்று சொல்ல முடியவே முடியாது என்று சொல்வோம்.

மதம் என்பது மனிதனின் வாழ்க்கை நலக் கூட்டுறவுக்கும் ஒழுக்கத்திற்கும் தேவையானதே ஒழிய, மதத்திற்கு மனிதன் தேவையில்லை என்றே சொல்வோம். ஆனால், இப்போது வாழ்க்கை நலக் கூட்டுறவுக்கும், ஒழுக்கத்திற்கும் ஆதாரமான எந்த மதத்தில் அது பிரவேசித்து என்ன கெடுதியைச் செய்தது, அல்லது அதனால் என்ன விளைந்தது? யாராவது எடுத்துக்காட்ட முடியுமா? என்று கேட்கின்றோம். அன்றியும், கூட்டுறவு நலத்திற்கும், ஒழுக்கத்திற்கும் சமரச உணர்ச்சிக்கும் விரோதமாக எது இருந்தாலும் அதை அழிக்கவேண்டாமா என்றுதான் நாம் கேட்கின்றோம்.

எந்த விஷயத்தையும் மனிதன் தன் அறிவைப் பொறுத்து ஒரு விஷயத்தை நம்ப வேண்டுமா? என்று கேட்கின்றோம். நமது இயக்கக் கொள்கைகளை நடைபெறவொட்டாமல் தடுப்பதற்காகக் கடவுள் என்பதைக் கொண்டுவந்து தடையாகவோ முட்டுக்கட்டையாகவோ போடச் சூழ்ச்சி செய்தால், அதற்குச் சற்றும் இடம்கொடுக்க முடியாது என்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் உறுதியான கொள்கையாகும். அறிவையும், தன்னம்பிக்கையையும், தன் முயற்சியையும், அன்பையும், ஒழுக்கத்தையும் தன்னகத்தில் கொண்ட எந்த சமயத்தினுடையவும் ஒத்துழைப்பை, சுயமரியாதை இயக்கம் வலிய வரவேற்கும் என்றும் உறுதி கூறுகிறோம்.

மக்களின் சுயமரியாதைக்காகத்தான், மக்கள் மானத்தோடு வாழ்வதற்காகத்தான் அரசாங்கமும், தேசியமும் வேண்டுமே ஒழிய, மற்றபடி, கேவலம் இவைகள் மனிதன் வயிறுவளர்க்க மாத்திரம் வேண்டியது என்றால், அதற்காக எந்த அரசாங்கமும் அரசியலும், தேசியமும் கண்டிப்பாய் வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற எந்த அரசியல் இயக்கமாவது, தேசிய உணர்ச்சியாவது மக்கள் சுயமரியாதைக்கேற்றதான திட்டங்களுடன் அமைக்கப்பட்டிருந்தனவா என்று அரசியல் வாதிகளையும் தேசியவாதிகளையும் கேட்கின்றோம்.

எனவே, உண்மையான சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்குத் தோன்றிவிட்டால் அதுவே அரசியலையும், தேசியத்தையும், மற்றும் மத இயலையும் தானாகவே சரிப் படுத்திக்கொள்ளும். அப்போது சுயமரியாதை வேறு; அரசியல் வேறு; தேசியம் வேறு; மத இயல் வேறு; ஒழுக்க இயல் வேறு; அன்பு இயல் வேறு என்கின்ற பாகுபாடுகளும் பிரிவுகளும் கண்டிப்பாய் மறைந்தோடி விடும்.

உதாரணமாக, நமக்கு மேலானதும் கீழானதுமான ஒரு வகுப்பு இருக்கக் கூடாது என்று சொன்னால்—அந்த வார்த்தையிலேயே, நமக்கு மேலானதாக ஒரு அரசாங்கமும் ஆட்சியும் இருக்கக் கூடாது என்பது உதயமாகிவிடும். அதுபோலவே, நமக்கு மேலாகவோ, கீழாகவோ ஒரு நாடு இருக்கக் கூடாது.என்பதும் தோன்றிவிடும்.

பொதுவாக, சுயமரியாதை என்கின்ற ஒரு இஞ்சினைப் பலப்படுத்தி, சரியாக ஓடத் தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால், பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டுவந்து அதோடு இணைத்துத் தோல்பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்ன விதமான இயந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி, எல்லா உணர்ச்சிகளையும் விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத் தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் இலட்சியம். ஒரு இயந்திரத்தை சுழற்றும்போது முதலில் சுற்றும் சிறு வேகம்போல், இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது; மற்றபடி, பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த—உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மை சக்தியும் பெருமையும் வெளியாகும்.

அன்றியும், அது கிளம்பிவிட்டால் யாராலும் அதை அழிக்கவோ, அல்லது சற்றாவது அடக்கிவைக்கவோ கண்டிப்பாய் முடியாது என்பதுடன், அடிக்க அடிக்க எழும் பந்துபோல், எதிர்க்க எதிர்க்க வளர்ந்துகொண்டே போகும் சக்தி உடையது என்பதே நமது உறுதி. அன்றியும், எந்த விதத்திலும் எல்லோரும் எவ்வித அபிப்பிராயமுடையவர்களும் இதில் இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்காவது அல்லது எதிர்காலத்திலாவது சேர்ந்துதான் ஆகவேண்டும் என்பதும் நமது பலமான உறுதியாகும். அன்றியும், இவ்வியக்கம் ஒவ்வொன்றையும்—'பெரிதும் வேண்டாம்' என்று சொல்லும் விரக்தியைப்பற்றி இருக்கின்றதே ஒழிய—'வேண்டும்' என்று சொல்லும்படியான ஆசையைப் பற்றி இல்லை. ஆதலால், இதில் யாரும் ஏமாற்றமடைவதற்கு இடமேயில்லை. அன்றியும், இதற்குள் போட்டிகளுக்கும் இடமில்லை. மற்றபடி, இதைப்பற்றி சர்க்கார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நமக்கு அதைப்பற்றிச் சற்றும் கவலையில்லை. உலக வாழ்க்கையில் இறங்கி ஆசையிலீடுபட்டு உழலும் சம்சாரவாதிகளிடமிருந்து நமக்கு யாதொரு உதவியும் ஒத்துழைப்பும் தேவையில்லாததாலும்; பெரிதும் பரிசுத்தமானதும் சுயநலமற்றதும் எதற்கும் எவ்விதத் தியாகத்திற்கும் தயாராயிருக்கும் இளங் காளைகளிடத்திலும் இளம் கன்னிகைகளிடத்திலும் திக்கற்றவர்களிடத்திலும் நமது இயக்கத்திற்குப் பெரிதும் உதவி எதிர்பார்க்கின்றபடியாலும்; அவர்களும் தாராளமாய் உதவி அளிக்கத் தயாராய் மேல் விழுந்து வருவதாலும், நாமும் இதன் முடிவைப்பற்றிச் சற்றும் கவலை கொள்ளாமல் கடமையையே பின்பற்றிக் கொண்டிருப்பதாலும் இந்த இயக்கத்தின் மூலம் எவ்வித நஷ்டமாவது, கஷ்டமாவது அடையவேண்டி வருமோ என்கின்ற எண்ணமே சிறிதும் கொள்ளாமலிருக்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—17-2-1929]

12. சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்க ஸ்தாபனமானது, சென்னையில் பொது ஸ்தாபனப் பதிவுச் சட்டப்படி பதிவுசெய்யப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றன. அது முடிந்தவுடன் 'குடி அரசு', 'ரிவோல்ட்' ஆகிய வாரப் பத்திரிகைகளும் 'பகுத்தறிவு' என்னும் மாதப்பத்திரிகையும் சுயமரியாதைச் சங்க சார்பாகவே பிரசுரிக்கப்படும். 'திராவிடன்' தினசரி பத்திரிகையும் அதன் நிர்வாகப் பொறுப்பும் நம்மிடம் இருக்கும்வரை இச் சங்கச் சார்பாகவே பதிப்பித்து வரப்படும்.

சுமார் இரண்டுவருஷ காலமாகவே பத்திரிகைகள் நடத்தும் பொறுப்பை யார் வசமாவது ஒப்புவித்து விடுவதற்கு மிகுதியும் முயற்சி செய்து வந்தது, நாம் பல நண்பர்

களிடம் நேரில் தெரிவித்துக்கொண்டதாலும் பத்திரிகையின் ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்தில் எழுதிவரும் தலையங்கத்தாலும் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். பத்திரிகை நடத்துவதில் உள்ள கஷ்டம்—அதுவும் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தின் பிரச்சாரத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு இருக்கும் கஷ்டம் அதை அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரிய வரும். உதாரணமாக, 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' பத்திரிகைகள் தென்னிந்திய நல உரிமைச் சங்கச் சார்பாக 12 வருஷங்கட்கு மேலாகவே நடந்துவருகின்றன. அவற்றுக்கு, இந்த மாகாணத்திலுள்ள பெரிய பெரிய பிரபுக்களும், இராஜாக்களும், ஜமீன்தார்களும் மற்றும் 100-க்கு 97 வீதம் உள்ள பொதுஜனங்களும் ஆதரித்தும் பதினாயிரக்கணக்காகப் பணம் கொடுத்தும் வந்திருக்கிறார்கள். அச் சங்கத்தார் அதிகார ஆதிக்கம் பெற்ற காலத்திலும்—அதாவது மந்திரிகளாய் இருந்த காலத்திலும் மாதம் 1-க்கு ரூ. 3000 வீதம் உதவி வந்தார்கள். இந்த மாதிரி உதவி செய்ததன் மூலம் சுமார் 2 இலட்ச ரூபாய்கள் வரை இப் பத்திரிகைகளுக்குப் பண உதவி கிடைத்தும் இன்றைக்கும் தம் காலில் நிற்க முடியாமல், மாதம் இரண்டாயிரம் ரூபாய்போல் நஷ்டத்தில் நடைபெற வேண்டியிருக்கிறது. இவ்வளவு ஜனக்கட்டும், பணக்கட்டும், செல்வாக்கும் இருக்கும் பத்திரிகைகளின் கதியே இப்படியானால், நம் போன்றவர்கள், அதிலும் செல்வாக்குள்ள கொள்கைகளுக்கு எதிராகவும், ஆதிக்கமும் அதிகாரமும் சூழ்ச்சியுமுள்ள சமூகங்களுக்கு விரோதமாகவும் ஒரு பத்திரிகையைத் துவக்கினால் அதில் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை யோசித்தால் தெரியும். அதோடு மாத்திரமல்லாமல், சந்தாவும் வெகு சுருக்கமான தொகை. அதாவது, வருடத்திற்கு 3 ரூபாய். 20 பக்கமுள்ள பத்திரிகையின் காகிதக் கிரயம், அச்சுக் கூலி, ஸ்டாம்பு செலவு முதலியவைகளுக்கே சந்தா தொகை போதும் போதாத நிலையில் இருக்கின்றது. இதில் நிலுவை பாக்கி, வீண்செலவு ஆகியவைகளும் ஆசிரியக் கூட்டத்திற்கும், கணக்கு நிர்வாகத்திற்கும் கைப் பொறுப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த நிலையில் பத்திரிகை ஆரம்பித்த 4 வருஷ காலத்தில் ஒரே ஒரு தலையங்கம் மாத்திரம்—அதுவும் காயலாவாய் படுத்த படுக்கையில் இருந்த சமயம் தவிர, பாக்கி எல்லாத் தலையங்கங்களும் நம்மாலேயே எழுதப்பட்டு வந்திருக்கின்றன. ஆரம்பத்தில் ஒவ்வொரு வாரமும் 12 பக்கமும் நாமாகவே எழுதி வந்திருக்கிறோம். இந்த நிர்ப்பந்தத்தில் வாரம் 2, 3 நாட்களுக்குக் குறையாமல் வெளியூர்ப் பிரயாணமும் செய்து வந்திருக்கிறோம். இதன்றி பிரச்சாரகர்களையும் பல இடங்களுக்கு அனுப்பியும் வந்திருக்கின்றோம்.

இம் மாதிரி எவ்வளவோ கஷ்டமும் நஷ்டமும் அடைந்துகொண்டு இப்பத்திரிக்கையை நடத்தி வந்திருக்கின்றோமென்றாலும்—சாதாரணமாக, இந்தத் தொண்டில் பெருத்த இலாபம் இருப்பதாகவும்; மாதம் 1000, 2000 வரும்படி வருகின்றதென்றும் உண்மையாகவே பலர் நம்பி இருக்கின்றார்கள். சமீபத்தில் எமது குடும்பத்தில் கட்டப்பட்ட வீட்டைப் பார்த்துப் பெண்கள், குழந்தைகள் எல்லாம்—பத்திரிகை இலாபத்தாலும், பிரச்சாரத்திற்குப் போகிற இடத்தில் கிடைக்கும் இலாபத்தாலும் அவ்வீடு கட்டப்பட்டதென்றே, நமது காதுக்கு எட்டும்படியாகப் பேசிக்கொண்டு போகின்றார்கள். இதை எதற்காக எழுதுகின்றோமென்றால், பொது நலச்சேவையில் உண்மையாகக் கஷ்டமும் நஷ்டமும், கெட்டபேரும், பழியும் அடைகின்ற மக்களைப் பார்த்தால் பெருத்த இலாபமடையும் சுயநலக்காரர்களைப் போலத் தோன்றுவதும்; பொது வாழ்க்கையின் பேரால் பணலாபமும், சுகமும், கீர்த்தியும் பெறுகின்றவர்களைப் பார்த்தால் பெரிய தியாகிகள் போலவும் கஷ்டநஷ்டம் அனுபவிப்பவர்கள் போலவும் காணப்படுவதும் உலக இயற்கைகளில் ஒன்றாயிருக்கின்றது என்பதைக் காட்டவே எழுதினோம்.

தவிர, நமது இயக்கத்தை அழிக்க நமது எதிரிகள் கைக்கொண்ட சூழ்ச்சி ஆயுதம் இரண்டே இரண்டுதாம். அதாவது, நாம் மதத்திற்கு விரோதி என்பதும்; மக்களுக்குக் கடவுள் உணர்ச்சியைக் கெடுக்கின்றோம் என்பதும் ஆகியவைகளே. இவ்விரண்டு காரியங்

களையும் நாம் செய்கின்றோமோ, இல்லையோ என்பது ஒரு பக்கமிருந்தாலும், அவர்கள் சொல்லும் மேற்படி இரண்டு காரியங்களும் இப்போது உலகத்தில் காட்டுத் தீபோல் பரவி வருகின்றன.

இன்று அய்ரோப்பா நாட்டிலுள்ள மாஸ்கோ என்கின்ற நகரில் கடவுள் மறுப்பு மகாநாடு ஒன்றுகூடி, உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும் காட்சியாளர்களும் வந்து, கடவுளையே மறுத்துப் பல தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். கடவுள் மறுப்புக்கு ஆதாரமாய் அனேக கண்காட்சிகளையும் வைத்துக்காட்டி, அதை உலகமெல்லாம் பிரச்சாரம் செய்ய கமிட்டிகள் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அது மாத்திரமல்லாமல், அந்தத் தேசத்தில் உற்சவங்கள் கூட நடத்தக்கூடாது என்று அரசாங்கத்தின் மூலம் உத்தரவுகள் போடச்செய்ததோடு, அதைப் பிரச்சாரமும் செய்து வருகின்றார்கள். இவை நிற்க,

நமது நாட்டிலேயே பம்பாய் மாகாணத்தில் சென்ற கடவுள் பூசைக்காக சர்க்கார் கொடுத்துவரும் 'மோகினித் தொகை'யை நிறுத்திவிடவேண்டுமெனத் தீர்மானம் செய் திருப்பதுடன், இராமாயணம், பாரதம், மனுஸ்மிருதி முதலிய மத ஆதாரங்கள் என்பவைகளைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வளவும் ஒரு புறம் இருந்தாலும், 'மீரத் சதி வழக்கில்' எதிரிகளின் பேரில் சர்க்கார் வக்கீல் குற்றம் சாட்டுகின்ற முறையில், 'எதிரிகள் கடவுளை நம்பாதவர்கள்' என்றும், 'கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்கின்றவர்கள்' என்றும் சொல்லி இருக்கின்றார். எதிரிகளுடைய வக்கீலும், கடவுளை மறுப்பதும் கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாதென்றும்; அதற்கும் இக் குற்றத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் வாதாடினாரே ஒழிய—அது உண்மை அல்ல என்று சொல்லவே இல்லை.

இதுவும் தவிர, ஆப்கன் அரசர் அமானுல்லா அவர்கள், அவர் நாட்டுக்கு 'முல்லாக்களின்' சூழ்ச்சியால் நாத்திகர் என்றும், இஸ்லாம் மத விரோதி என்றும், மதத் துரோகி என்றும் பழிசுமத்தப்பட்டு அரசைத் துறக்கச் செய்திருந்தாலும்—நமது மாகாணத்தில் அய்கோர்ட் ஜட்ஜாகவும் வங்காள மாகாண மந்திரியாகவுமிருந்த சர். அப்துல் ரகீம் அவர்கள் மேற்படி அம்ரைப்பற்றி வெகு பரிதாபப்பட்டு என்ன சொல்லுகின்றார் என்றால், 'அமீரின் தத்துவங்களை ஆப்கானியர்கள் ஒப்புக்கொள்ளாததிலிருந்து, அத் தேசத்தில் தேசிய உணர்ச்சி சிறிதும் இல்லை என்பதாகத் தெரிகின்றது. அமீருக்கு விரோதமாக இருந்தவர்கள் தேசத் துரோகியும், இராஜத் துரோகியுமாவார்கள். அமானுல்லாவைப் போன்ற தேசபக்தர் வேறு எந்தேசத்திலும் பிறக்கவில்லை. பண்டைய மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டியது அவசியம். அவ்வண்ணம் கொண்டவர்கள் மிகவும் ஊக்கமாகவே இருப்பார்கள். அமீரின் கொள்கைகள் வெற்றி பெற்றால் முஸ்லிம் நாடு உலகத்தில் ஒரு சிறந்த நாடாய் இருக்கும்' என்று பேசி இருக்கின்றார். எனவே, இந்த மாதிரியாக அனேக இடங்களிலிருந்து நமது இயக்கத்திற்கு ஆதரவு தாராளமாய்க் கிடைத்துவருவதைப் பார்க்க, நாம் எய்தும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆதலால், நமது வாலிப நண்பர்கள் நமது வேலையை ஒப்புக்கொண்டு நமக்கு வேண்டிய உதவிபுரியக் கேட்டுக்கொள்கிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—16-6-1929]

சுயமரியாதை இயக்கமானது அரசியல்களின் பேரால் நமது நாட்டிலுள்ள பல கட்சிகளைப் போலல்லாமல், அன்னியர்களிடம் இருந்து யாதொருவிதமான சுய விஷயத்தையும் எதிர்பாராமல், மக்களின் அறிவை விளக்கி அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலமே உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும், தன்மதிப்பையும் உண்டாக்கக் கூடியதான ஒரு இயக்கமாகும்.

இவ் வியக்கத்தின் முக்கிய கொள்கையெல்லாம், கட்டுப்பட்டு அடைக்கப்பட்டிருக்கும் அறிவுக்கு விடுதலையை உண்டாக்குவதேயாகும். ஆதலால், சுயமரியாதை இயக்கம் என்பதை அறிவு விடுதலை இயக்கம் என்றே சொல்லலாம். இதன் உண்மை விளங்க வேண்டுமானால், ஒரு நேர்மையான மனிதன் தனது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் உள்ள கட்டுப்பாட்டையும் நிர்ப்பந்தத்தையும் பற்றி நாம் நினைத்துப் பார்ப்போமானால் இவ்வியக்கத்தின் பெருமை தானாக விளங்கும்.

சாதாரணமாக, இவ்வியக்கம் தோன்றி 3, 4 வருடங்களுக்குள்ளாக மக்களுக்கு இது உண்டாக்கி இருக்கும் உணர்ச்சியைப் பார்த்தாலும் கூட, இவ் வியக்கம் அறிவு விடுதலை இயக்கமா, அல்லவா என்பது நன்றாய் விளங்கும்.

நிற்க, தங்களுடைய சொந்த அறிவினாலும் ஆற்றலினாலும் பிழைக்க முடியாமல் அன்னியர்களின் முட்டாள் தனத்திலேயே பிழைத்துக்கொண்டிருந்தவர்களான அரசியல் தேசியக் கூட்டத்தார்கள் என்பவர்களும், சமய இயல்பில் வைதிக பண்டிதக் கூட்டத்தார்கள் என்பவர்களும் இவ்வியக்கத்தால் தங்களுடைய வாழ்விற்கும் பெருமைக்கும் ஆபத்து வந்துவிட்டதாய்க் கருதி, இவ்வியக்கத்தைப் பாமர மக்களுக்குத் திரித்துக் கூறி—அதாவது, சு. ம. இயக்கம் தேசத் துரோக இயக்கமென்றும், சமயத் துரோக இயக்கமென்றும், நாத்திக இயக்கம் என்றும் சொல்லிக்கொண்டு எவ்வளவோ முயற்சியும் கட்டுப்பாடுமான சூழ்ச்சிகளும் செய்துங்கூட, இவ்வளவுக்கும் சுயமரியாதை இயக்கம் ஒரு சிறிதும் பின்னடையாமல்—அடிக்க அடிக்கப் பந்து எழுவதுபோல, விஷமப் பிரச்சாரம் செய்யச் செய்ய இப்போது இந்தியா தேசம் முழுவதும் 'பஞ்சில் நெருப்புப் பிடிப்பது போல்' மக்களிடம் பரவிக்கொண்டே போகின்றது.

இவ் வியக்கம் ஆரம்பித்த காலம் முதல் இதற்கு எதிரிடையாக நமது நாட்டில் வேலை செய்த பத்திரிகைகள் எவ்வளவு என்பது யாவருக்கும் தெரியும். அதாவது, அந்தக் காலத்தில் நாட்டில் செல்வாக்காயிருந்த 'சுதேச மித்திரன்', 'இந்து', 'சுயராஜ்யா', 'தமிழ் நாடு', 'நவசக்தி', 'லோகோபகாரி', 'ஊழியன்' முதலிய தேசியப் பத்திரிகைகள் என்பவைகளும்; மற்றும் பல குட்டிப் பத்திரிகைகளும், கூலிப் பத்திரிகைகளும்—மனதார, நடந்தவைகளைத் திரித்துக் கூறுவதும், கருத்துக்களை மாற்றிக் கூறுவதும் பொது மக்களுக்குத் துவேஷமும் வெறுப்பும் உண்டாக்கும்படி எழுதுவதுமான காரியங்களில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தன. மற்றும், பிரச்சாரம் செய்வதிலும் தேசியத் தலைவர்கள், பிரச்சாரகர்கள் என்பவர்கள் எல்லோருமே ஒரேமுகமாய் சுயமரியாதை இயக்கம் தேசத் துரோக இயக்கமென்றும், நாத்திக இயக்கமென்றும் இதைக் கொல்லுவதற்கு 'ஆண்டவன் அருள்கொண்டு' துணிந்துவிட்டோமென்றும்; கடவுள் துணைகொண்டு இறங்கிவிட்டோமென்றும்; கிருஷ்ண பகவானே துணை என்றும் கர்ச்சித்துக்கொண்டு தொண்டை கிழியப் பேசியும் பார்த்தார்கள். அவர்களுக்குள் வருணாசிரம மகாநாடு, சைவ மகாநாடு முதலிய மகாநாடுகள் கூட்டித் தீர்மானித்தும் பார்த்தார்கள். மற்றும், புராணப் பண்டிதர்கள், புத்தகக் கடைக்காரர்கள், பூசாரிகள், குருக்கள், மடாதிபதிகள் முதலிய கூட்டத்தார்களும் தேசிய மேடையிலும், 'சுயமரியாதை இயக்கம் சமயத்தைப் பாழ்பண்ணி வருகின்றது; இதை ஒழிக்கவேண்டும்' என்று கூட்டங்கள் போட்டுக் கூவிப் பார்த்தார்கள்.

இவ்வளவும் போதாமல் வெளிநாடுகளிலிருந்து திருவாளர்கள் காந்தி, மாளவியா, மூஞ்சே ஆகியவர்களைக் கொண்டுவந்து இதற்கு எதிரிடையாகப் பிரச்சாரம் செய்தும் பார்த்தார்கள். இனியும் இரகசியமாகச் செய்த இழிதகைப் பிரச்சாரத்திற்கு அளவே இல்லை. என்னவெனில், நம்முடைய தனிப்பட்ட நாணயத்தைப்பற்றியும், நடவடிக்கைகளைப்பற்றியும், ஒழுக்கங்களைப்பற்றியும் எவ்வளவோ கேவலமாகப் பேசியும், கூலி கொடுத்துக் காலிகளை ஏவிவிட்டுப் பேசச்செய்தும் செய்யப்பட்ட இழி பிரச்சாரத்திற்கு அளவே இல்லை. இவ்வளவும் போதாமல் நம்மைக் கொன்றுவிடுவதாகவும், குத்திவிடுவ

தாகவும், சுட்டுவிடுவதாகவும் மற்றும் பலவிதமாய் அவமானப்படுத்திவிடுவதாகவும் கண்டு எழுதிய அநாமதேயக் கடிதங்களுக்கும், பொய்க் கையெழுத்திட்ட கடிதங்களுக்கும் கணக்கே இல்லை. மற்றும், நமக்குள் இருந்த தொண்டர்களைக்கொண்டு செய்வித்த குறும்புகளுக்கும் அளவே இல்லை.

இவ்வளவு சங்கடங்களையும் தாண்டி இவ்வியக்கம், இன்றைய தினம் ஒருவாறு தமிழ்நாட்டிலுள்ள பொது மேடைகளையெல்லாம் கைப்பற்றி—தேசியத் தலைவர்கள் என்பவர்களை எல்லாம் முக்காடிட்டு, மூலையில் உட்கார வைத்தும்; பெரிய பெரிய பண்டிதர்கள், சாஸ்திரிகள் சமயவாதிகள், சமயத் தலைவர்கள் என்பவர்களை எல்லாம் வெளியில் தலைகாட்டுவதற்கு இல்லாமல் செய்துவிட்டதுடன், சாதி இறுமாப்பையும் சமய இறுமாப்பையும் பண்டித இறுமாப்பையும் 'கசகச'வென்று நசுக்கிக்கொண்டு வருகின்றது.

இன்றைய தினம் நமது இயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் விரோதமாக ஏதாவது ஒரு அரசியல் கட்சி என்பதற்குச் செல்வாக்கு கடுகளவாவது இருக்கின்றதா என்று யாராவது பரீட்சை பார்க்க விரும்பினால், இதுபோது நாட்டில் நடந்துவரும் தேர்தல்களையும், அவற்றின் முடிவுகளையும் கவனித்துப் பார்த்தாலே போதுமானதாக இருக்கும். அது மாத்திரமல்லாமல், தேசியத்தின் பேராலும், ஆஸ்திகத்தின் பேராலும் தேர்தலுக்கு நிற்க ஆட்களே இல்லாமற் போனது, 'நாத்திகத்தின்' செல்வாக்குக்கும் வெற்றிக்கும் ஒரு பரீட்சையாகும். 'காங்கிரசே பெரிது' என்ற காங்கிரஸ் தலைவர் திரு. அய்யங்கார் தேர்தலைப்பற்றித் தான் ஒன்றுமே கவனிக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். 'தேசமே பெரிது' என்ற கட்சித் தலைவர் திரு. வெங்கட்ராம சாஸ்திரியார், வேலைபோன மந்திரிகள் ஆகியவர்கள் இருக்குமிடமே தெரியவில்லை. 'உத்தியோகமே பெரிது' என்ற பின்பற்றுவோர் இல்லாத குட்டித் தேசியக் கட்சி ஸ்தாபகரும் தானே தலைவருமான திரு. வரதராஜுலு, காங்கிரஸ் தோல்வியுற்ற சந்தோஷத்திலும் அய்யங்கார் மூலையில் அடங்கிய சந்தோஷத்திலும் மூழ்கிக் கிடக்கின்றாரே அல்லாமல், தன்னைப்பற்றி நினைக்கவோ, உலகம் என்ன பேசிக்கொள்கிறது என்பதைக் கேட்கவோ, நாட்டில் தனது நிலைமை என்ன என்பதைப் பார்க்கவோ, தனது கட்சியின் யோக்கியதை என்ன என்பதைப்பற்றி யோசிக்கவோ சிறிதும் நேரமில்லாமல் இருக்கின்றார். மற்றும், சைவ சமயமே பிரதானம், சமய ஆச்சாரிகளே தனது உயிர் என்ற திரு. கல்யாணசுந்தர முதலியார், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடம் சென்று 'சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்தால் உங்களுக்கு ஓட்டுக் கிடைக்காது' என்று மிரட்டுவதும், ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய் ஓட்டர்கள் வீட்டுக்கு இரகசியமாய் நடந்து நாஸ்திகக் கட்சிக்கு ஓட்டு செய்யாதீர்கள் என்று சொல்லிப் பார்ப்பனர்களுக்குச் சில ஓட்டுகளை வாங்கிக் கொடுத்துவிட்டதுடன், அவர் வேலை முடிந்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கின்றார். மற்றபடி, ஆஸ்திகக் கூலிகளோ—வாங்கின பணம் சரிவர ஜீரணம் ஆயிற்றா, இல்லையா? என்பதையுங்கூடக் கவனிக்காமல், இனியும் 'பணம், பணம்' என்று கூவிக்கொண்டு, 'கொடுக்கின்றாயா, அல்லது எதிர்க் கட்சியில் சேர்ந்துகொள்ளட்டுமா?' என்று திரு. அய்யங்காரை மிரட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

செங்கற்பட்டு தீர்மானங்கள் என்னவென்று பார்ப்போமானால், அவைகளில் (1) மக்கள் பிறவியில் சாதிபேதம் கிடையாது என்பது. (2) சாதிபேதம் கற்பிக்கும் மதம், வேதம், சாஸ்திரம், புராணம் இவைகளைப் பின்பற்றக்கூடாது என்பது. (3) வருணாசிரமப் பிரிவுப்படி பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்கின்ற பிரிவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது. (4) மக்களுக்குள் தீண்டாமை என்பதை ஒழித்து, பொதுக் குளம், கிணறு, பாடசாலை, சத்திரம், தெரு, கோயில் முதலியவைகளில் பொதுஜனங்களுக்குச் சம உரிமை இருக்கவேண்டும் என்பது. (5) இவை பிரச்சாரத்தால் நிறைவேற்றி வைக்கமுடியாதபடி சில சுயநலக் கூட்டத்தார் தடைசெய்வதால், சர்க்கார்

மூலம் சட்டம் செய்து, அச் சட்டத்தின் மூலம் அமுலில் நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும் என்பது. (6) சாதிமத வித்தியாசங்களால் மக்களின் ஒற்றுமையும், பொது நன்மை உணர்ச்சியும் பாதிக்கப்படுவதால், அதை உத்தேசித்து, சாதிமத வித்தியாசத்தைக் காட்டும் பட்டம், குறி முதலியவைகளை உபயோகிக்காமலிருக்க மக்களைக் கேட்டுக் கொள்கின்றது என்பது. (7) பெண்கள் விஷயத்தில், கலியாண வயது 16-க்குமேல் இருக்க வேண்டும்; கணவனுக்கும் மனைவிக்கும் ஒற்றுமையின்றேல் பிரிந்துகொள்ள உரிமை வேண்டும்; விதவைகள் மறுவிவாகம் செய்துகொள்ளவேண்டும்; கலப்பு மணம் செய்து கொள்ளலாம்; ஆண், பெண் தாங்களே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்பது. (8) சடங்குகள் விஷயத்தில், கலியாணம் முதலிய சடங்குகள் மிகச் சுருக்கமாகவும், அதிகச் செலவில்லாமலும், ஒரே நாள் சாவகாசத்திற்கு மேற்படாமலும், ஒரு விருந்துக்கு மேற்படாமலும் செய்யவேண்டும் என்பது. (9) கோயில் பூசை விஷயத்தில், கோயில்களின் சாமிக்கென்றும், பூசைக்கென்றும் வீணாகக் காசைச் செலவழிக்கக்கூடாது; சாமிக்கும் மனிதனுக்கும் மத்தியில் தரகனாவது, மொழிபெயர்ப்பாளனாவது கூடாது; புதிதாகக் கோயில் கட்டுவதில் பணத்தைச் செலவழிக்கக் கூடாது; கோயிலுக்கும், சத்திரத்திற்கும், வேதம் படிப்பதற்கு என்றும் விட்டிருக்கும் ஏராளமான சொத்துக்களைக் கல்வி ஆராய்ச்சி, கைத்தொழில் கற்றுக்கொடுத்தல் முதலாகிய காரியங்களுக்குச் செலவழிக்க முயற்சி செய்யும்படி கேட்டுக்கொள்வது; உற்சவங்களில் செலவழிக்கப்படும் பணத்தையும் நேரத்தையும், அறிவு வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவைகளுக்கு உபயோகமாகும்படியான காட்சி, பொருட்காட்சி ஆகியவைகளில் செலவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்வது என்பது.

(10) மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது; அதற்கு விரோதமான புத்தகம், உபாத்தியாயர் ஆகியவர்களைப் பகிஷ்கரிப்பது என்பது. (11) பெண் உரிமை விஷயத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை அளிப்பது; உத்தியோக உரிமை அளிப்பது; உபாத்தியாயர் வேலை முழுவதும் அவர்களுக்கே கிடைக்கும்படி பார்ப்பது என்பது. (12) 'தீண்டப்படாதார்' விஷயத்தில் உண்டி, உடை, புத்தகம் ஆகியவைகளைக் கொடுத்துக் கல்வி கற்பிப்பது; 'தர்க்காஸ்து' நிலங்களை அவர்களுக்கே கொடுப்பது என்பது. (13) பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்குக் கல்வி விஷயத்திலிருக்கும் கஷ்டங்களையும் தடைகளையும் நீக்க ஏற்பாடு செய்வது என்பது. (14) கல்வி விஷயத்தில், தாய் பாஷை, அரசாங்க பாஷை இரண்டைத் தவிர மற்ற கல்விக்குப் பொதுப் பணத்தைச் செலவிடக்கூடாது; அதுவும் ஆரம்பக் கல்விக்கு மாத்திரம் பொதுநிதியைச் செலவழித்துக் கட்டாயமாய்க் கற்பிக்க வேண்டும்; உயர்தரக் கல்விக்குப் பொதுநிதி எதுவும் செலவழிக்கக் கூடாது. சர்க்கார் காரியத்திற்குத் தேவையாய் இருந்தால் வகுப்புப் பிரிவுப்படி மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பிக்கவேண்டும் என்பது. (15) சிற்றுண்டி, ஓட்டல் முதலிய இடங்களில் வித்தியாசம் கூடாது என்பவைகளாகும்.

மேலும், இவைகளும் அனேகமாக 'சிபாரிசு செய்வது', 'கேட்டுக் கொள்ளுவது', 'முயற்சிக்க வேண்டியது' என்கின்ற அளவில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றனவே அல்லாமல், திடீரென்று நிர்ப்பந்தமாய்த் தீர்மானிக்கப்படவில்லை. எனவே, இவற்றுள் எவை எவை நாத்திகம் என்றும், எவை எவை அன்னிய சர்க்காரை ஆதரிப்பவை என்றும், எவை எவை தேசியத்திற்கும் காங்கிரசுக்கும் விரோதமானவை என்றும் கூற எந்த யோக்கியமான தேசியவாதியோ அல்லது ஆத்திகவாதியோ வீரத்துடன் வெளிவரட்டும் என்றுதான் அறைகூவி அழைக்கின்றோம். உண்மை விஷயங்களைச் சொல்லாமல் பொதுப்பட சுயநலப் பார்ப்பனர்கள் சொல்லிக்கொடுத்தபடி—கிளிப் பிள்ளையைப் போலும், பிறவி அடிமையைப் போலும் கூப்பாடுபோடுவதனாலேயே, சு. ம. இயக்கத்தின் எதிர்ப்பு, கோழைத்தன்மை உடையதென்றும் சுயநலமும் கூலித் தன்மையும் கொண்ட இழிதகைமையது என்றும் அறிவினர்க்குத் தெற்றென விளங்கவில்லையா என்று கேட்கின்றோம். எது எப்படி

இருந்தபோதிலும், விதவை மணம், கலப்பு மணம், கல்யாண ரத்து, தக்க வயது மணம், பட்டப்—குறிவிடுதல், பெண்கல்வி, தீண்டாமை விலக்கல், சுருக்கக் கல்யாணம், வகுப்பு உரிமை, மூடப் பழக்கங்கள் ஒழித்தல், கோவில் கட்டுவதையும் உற்சவங்கள் செய்வதையும் நிறுத்தி அந்தப் பணத்தைக் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் செலவிடுதல்—முதலாகிய காரியங்கள், சுயமரியாதை இயக்கத்தின் பலனாய்ச் சமீப காலத்திற்குள் இவ்வளவு தூரம் காரியத்தில் பரவிவந்திருக்கின்றன, வருகின்றன என்பதும் இவ் விஷயங்களில் பொது மக்களுக்கு எவ்வளவு தூரம் மனம்மாறுதல் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கின்றது என்பதும்; இவைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் எவ்வளவு தூரம் தானாகவே அழிந்துபட்டு வருகின்றன என்பதும் பொதுவாழ்க்கையைக் கவனித்து வருபவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கிவருகின்றது.

அன்றியும், இவ் வியக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் நாட்டில் இருக்கும் ஆதரவைப் பரீட்சிப்பதற்கும் இவ்வியக்க சம்பந்தமான பத்திரிக்கைகள் வளர்ச்சியையும், ஜில்லாக்கள் தோறும் தாலுக்காக்கள்தோறும் நடைபெறும் மாநாடுகளும், அங்கு கூடும் கூட்டங்களும், அக் கூட்டத்திற்கு வரும் மக்களின் யோக்கியதைகளும், அவற்றில் ஏகமனதாய் நிறைவேறும் தீர்மானங்களும் ஆகியவற்றையும்—இவைகளுக்கு எதிரிடையாக இருக்கும் கட்சிகளின் கூட்டங்களுடைய, தீர்மானங்களுடைய, அதிலிருக்கும் மக்களுடைய யோக்கியதைகளையும் நிலைமைகளையும் கவனித்து, நடுநிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்த்தால் எது மதிக்கப் படுகின்றது என்பதைச் சிறு குழந்தையும் அறியமுடியும்.

நிற்க, தற்போது உலகத்தில் முன்னேறிவரும் எந் தேசத்திலாவது மேலே குறிப் பிட்ட கொள்கைகள் இல்லாமலிருக்கின்றனவா? யாராவது சொல்ல முடியுமா? அன்றியும், மேற்கண்ட கொள்கைகள் நமது நாட்டில் அதற்கு முன் பல பெரியார்களாலும், சீர்திருத்தக் காரர்களாலும் சொல்லப்பட்டும், உபதேசம் செய்யப்பட்டும் வந்தவைதாமா அல்லது நம் மால் மாத்திரம் இப்போது புதிதாய்ச் சொல்லப்படுகின்றனவா என்று கேட்கிறோம்.

பொதுவாக, இப்போது புதிதாக உள்ள வித்தியாசமெல்லாம் முன்னுள்ளவர்கள் வாயினால் சொன்னார்கள்; புத்தகங்களில் எழுதினார்கள். ஆனால், நாம் இப்போது அவைகளைக் காரியத்தில் கொண்டுவர முயற்சிக்கின்றோம். நம்முடைய ஆயுளிலேயே முழுதும் அமுலில் நடைபெறவேண்டுமென்று உழைக்கின்றோம். அவற்றுள் சிறிது பாகமாவது நடைமுறையில் காணப்படுகின்றது. இவைகளைத் தவிர வேறு எவ்வித வித்தியாசங்கள் சொல்லக்கூடும் என்று கேட்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—25-8-1929]

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்த உலகத்திலுள்ள எல்லா அகராதிகளையும் கொண்டுவந்து போட்டு, ஏடு ஏடாய்ப் புரட்டிப் பார்த்தாலும் அழகும் பொருளும் சக்தியும் நிறைந்த வார்த்தையாகிய 'சுய மரியாதை' என்கிற வார்த்தைக்கு மேலானதாகவோ, ஈடானதாகவோ உள்ள வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இந்த வார்த்தையானது, நமது நண்பர் களிலேயே சிலர், 'கொள்கைகளெல்லாம் நமக்குப் பிடிக்கின்றன. ஆனால், சுயமரியாதை என்ற சொல் மாத்திரம் பிடிக்கவில்லை' என்று சொல்லும் மேதாவிகளுக்குத் தக்க பதிலாகும்.

இந்த இயக்கமானது இன்றைய தினம் பார்ப்பனரையும், மதத்தையும், சாமியையும், பண்டிதர்களையும் வைதுகொண்டு—மூடப் பழக்க வழக்கங்களை எடுத்துக்காட்டிக் கொண்டு, மக்களைப் பரிகாசம் செய்துகொண்டிருப்பது போலவே என்றைக்கும் இருக்கு மென்றோ, அல்லது இவைகள் ஒழிந்தவுடன் இவ் வியக்கத்திற்கு வேலையில்லாமல் போய் விடுமென்றோ யாரும் கருதிவிடக்கூடாது.

மேற்சொன்னவைகளின் ஆதிக்கங்கள் ஒழிவதோடு, ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கிற தன்மை இருக்கும்வரையிலும்; ஒருவன் தினம் ஒரு வேளை கஞ்சிக்கு வழியின்றிப் பட்டினிகிடந்து சாவதும், மற்றொருவன் தினம் 5 வேளை சாப்பிட்டுவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கிறதுமான தன்மை இருக்கிறவரையிலும்; ஒருவன் இடுப்புக்கு வேஷ்டி இல்லாமல் திண்டாடுவதும், மற்றொருவன் 3 வேஷ்டி போட்டுக்கொண்டு உல்லாசமாகத் திரிவதான தன்மை இருக்கின்றவரையிலும்; பணக்காரர்கள் எல்லாம் தங்கள் செல்வம் முழுவதையும் தங்களது சுயவாழ்வுக்கே என்று எண்ணிக்கொண்டிருக்கிறவரையிலும் சுயமரியாதை இயக்கம் இருந்தேதான் தீரும். மேற்கண்ட தன்மைகள் ஒழியும்வரை இவ்வியக்கத்தையும் ஒழிக்க யாராலும் முடியாது.

[ஈரோட்டில், 11-5-1930-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 1-6-1930]

பச்சை உண்மையானது மக்களுக்கு எப்போதும் கலப்பு உண்மையைவிட அதிகமான அதிருப்தியைக் கொடுக்கக்கூடியதாகவே இருக்கும். உண்மையை மறைத்துப் பேசுவது என்பது, எப்போதும் பேசுகின்றவனுக்கும், பேச்சுக் கேட்பவர்களுக்கும் திருப்தியைக் கொடுக்கக்கூடியதாகவே இருக்கும். திருப்தி உண்டாகும்படியும் செய்துகொள்ளலாம். ஆனால், உண்மை பேசுவதன்மூலம் அப்படிச் செய்ய முடியாது.

இன்ன மதந்தான் சுயமரியாதை இயக்கம் என்பதாக நான் ஒரு காலமும் சொல்ல மாட்டேன். அந்தப்படியும் என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இன்று காணப்படும் எந்த மதமும் அவசியம் இல்லை என்கின்ற கொள்கையுடைய சுயமரியாதை இயக்கமானது—எப்படித் தன்னை ஏதாவது ஒரு மதத்துடன் பிணைத்துக்கொள்ளமுடியும்? ஏனெனில், சுயமரியாதை இயக்கமானது ஒருநாளும் யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக எதையும் ஒப்புக்கொள்ளக்கூடியது அன்று; யார் எதைச் சொன்னாலும், பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருக்கின்றதா என்பதைப் பார்த்து, திருப்தி அடைந்த பிறகே எதையும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்கின்ற கொள்கையுடையது.

அன்றியும், அது அந்தக் கொள்கையோடு—அதன் நிபந்தனைக்குட்பட்டு யார் எதைச் சொன்னாலும் அதை யோசிக்கத் தயாராக இருக்கின்றது. அப்படிக்கில்லாமல், எந்த மதமாவது எந்த நபராவது, தான் அனுசரிக்கும் கொள்கையும் தான் சொல்லுவதும் இன்ன காலத்தில் இன்னார் மூலமாக இன்னார் சொன்னது என்பதாகவும், கடவுளே சொன்னதாகவும், அதற்கு யாரும் விரோதமாக எதையும் சொல்லக்கூடாது என்பதாகவும், அதை யாரும் பரீட்சிக்கவும் கூடாது, அதைப்பற்றிச் சந்தேகமும் படக்கூடாது என்பதாகவும் யாராவது சொல்ல வந்தால்—அது எந்த மதமானாலும், அது எப்படிப்பட்ட உண்மையானாலும் அதைச் சுயமரியாதை இயக்கம் ஒருநாளும் ஒப்புக்கொள்ளமுடியாது.

பழைய அபிப்பிராயங்கள் எல்லாம், அது எதுவானாலும் அடியோடு பரிசோதிக்கப் படவேண்டும்; பரிசோதிக்கச் சற்றும் பயப்படக்கூடாது. அப்படிப் பரிசோதிப்பதிலும் நடுநிலைமையிலிருந்தே பரிசோதிக்கவேண்டும். அந்தப்படி பரிசோதிக்கப் பின்வாங்குகின்றவன் யாராயிருந்தாலும் கோழையேயாவான்.

நமக்கு முன்னால் இருந்த மனிதர்களைவிட நாம் விசேஷ அனுபவமும் ஞானமும் உடையவர்களென்று சொல்லிக்கொள்ள பாத்தியதையுடையவர்கள் என்பதை ஞாபகத்திலிறுத்தாதவன், மனிதத் தன்மையுடையவனாகமாட்டான். அன்றியும், இந்தக் காலம் 'அனுபவத்தின்மேல் அனுபவம்' என்கின்ற முறையில் புதிய புதிய தத்துவங்கள் வளர்ந்து வந்த காலமுமாகும். மேலும், இப்போதுள்ளவர்கள் பல வழிகளில் இயற்கையாகவே முற்போக்கும், அறிவு விளக்கமும், அனுபவப் பயிற்சியும் பெற்றுவருகிற சந்ததியில் பிறந்தவர்களுமாய் இருக்கிறார்கள்.

ஆகவே, இயற்கையாகவும், செயற்கையாகவும், முன்னோர்களைவிட நாம் எவ்விதத்திலும் அறிவிலோ, ஆராய்ச்சியிலோ, இளைத்தவர்கள் அல்லர் என்பதையும், கால வேறுபாட்டிற்கும் காட்சி வேறுபாட்டிற்கும் தகுந்தபடி கருத்து வேறுபாடு அடையவேண்டிய உரிமையும் அவசியமும் உடையவர்கள் என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும்.

இந்த நிலையில் இருந்துகொண்டு பார்த்தோமானால், முன்னோர் சொன்னவைகள் என்பவற்றிற்கு எவ்வளவு மரியாதை கொடுக்கலாம் என்பது தானாகவே விளங்கிவிடும்.

முன்னோர் கருத்துக்கு அடிமையாய் இருந்தோமானால், உண்மையையும் அறிவு வளர்ச்சியையும் நாம் அடியோடு கொன்றுவிட்டவர்களாவோம்.

[சென்னை மவுன்ட் ரோடில், 22-3-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 29-3-1931]

நம்மைப்பொறுத்தவரை நாம் தைரியத்தை விடவில்லை. நம் அபிப்பிராயங்களில் சந்தேகமில்லை. நம்பிக்கையில் குறைவேற்படவில்லை. எதற்கும் முயற்சியையும் ஊக்கத்தையும் சிறிதும் தளர்த்திக்கொள்ளவில்லை. ஒரு பத்தாண்டுகள் பொறுத்தாவது மக்கள் நம் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுவார்கள்.

கோயில், குளம், உற்சவம் முதலியவைகள் எவ்வளவு அநாகரிகமானவையாயும் ஒழுக்கக் குறைவானவையாயும் நாட்டுக்குக் கேடு உள்ளனவாயுமிருந்தாலும் சரி—பூசாரிகளும், புரோகிதரும், புலவரும், புத்தகக் கடைக்காரரும் உள்ளவரை எப்படி அவை ஒழியமாட்டாவோ, அதேபோல் காங்கிரசும் காந்தியமும் கதரும் தேசியம், சுயராஜ்யம் என்பவைகளும் எவ்வளவு பித்தலாட்டமானவையானாலும், நாட்டு முற்போக்குக்கு விரோதமானவையானாலும், சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் முட்டுக்கட்டை போடுவனவானாலும்—அவை பலரின் சுயநல வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்விற்கும் பயன்படுவதனால் பார்ப்பனர்களும், பண்டிதர்களும், வக்கீல்களும், பதவி பட்டம் பெற ஆசைப்பட்டவர்களும், பத்திரிக்கைப் பிழைப்புக்காரர்களும், தேசிய பக்தர்களும், தொண்டர்களும், கதர் வியாபாரிகளும், தொண்டர்களும் உள்ளவரை நிலைத்துத்தான் தீரும். அவற்றை ஒழிப்பதும் சுலபமான காரியமல்ல. ஆகையால், எதிர்ப் பிரச்சார அளவுக்கு உடனே பயன் எதிர்பார்க்க முடியாது.

ஏதோ ஒரு வழியில் நாம் மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கிவிட்டோமானால், பிறகு அவர்கள் எல்லாவற்றையும் ஒரே கண்ணாடிகொண்டு பார்த்து, உண்மையை உணரக் கூடியவர்களாகிவிடுவார்கள்.

பாம்பையும் மரத்தையும் வணங்கி, பேயையும் பிசாசையும் கள்ளும் சாராயமும் வைத்துப் பூசித்து, ஆண் பெண் குறிகளை சிலையாகப் பூசனைசெய்து அதை அடையாளமாய் நெற்றியில் தரித்துக்கொள்ளுவதாய் இருக்கின்ற மதம் எந்த மதம் ?

கடவுள் என்பது ஒரு விளையாட்டுச் சாமான் ; சுவர்க்கம், மோட்சம் என்பவைகள், தின்பண்டங்கள் ; நரகம் என்பது பூச்சாண்டி. இம் மாதிரிக் கற்பனைகள் எல்லா மதத்திலும் உண்டு.

சுயமரியாதை இயக்கம் எந்த மதத்தையும் தனிப்பட்டுத் தாக்கவில்லை. மதம் ஒழிந்தால் சமூகம் முன்னேறும். ஆனால், இந்து மதம் மிகவும் மோசமானது.

திலகருக்கும், தாசருக்கும் இறுதிச் சடங்குகள் வெகு ஆர்ப்பாட்டமாய்ச் செய்யப்பட்டன. மோதிலால் நேரு காயத்திரி மந்திரம், பஜனை முதலியவை நடத்தி மோட்சத்திற்கு அனுப்பப்பட்டார் ; அவரது குமாரர், தகப்பனாரின் அஸ்தியைப் பிரயாகையில் விட்டார்.

இவைகளை நடத்தமுடியாத கோடிக் கணக்கான மக்கள் நரகத்திற்குப் போகின்றார்களா? மகாத்மாக்களும், தலைவர்களுமே இக்கதியானால் பாமர மக்களின் கதி என்ன?

கர்மாவை நம்பினவன் கடைத்தேறமாட்டான். விதியை நம்பினவன் மதியை இழப்பான். மூடநம்பிக்கைகளை அகற்றவே சுயமரியாதை இயக்கம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. ஓவியம் என்கின்ற பேரால் கோவில்களில் கொடுமைகளும் புராண ஆபாசங்களும் நிலைத்துநிற்கின்றன.

['குடி அரசு'-தலையங்கம்—12-4-1931]

சகோதரிகளே! சகோதரர்களே!

சுயமரியாதை இயக்கம் தோன்றிய இந்த 5, 6 வருடங்களாக நாட்டில் ஏற்பட்டிருக்கிற உணர்ச்சிகள் என்ன என்பதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட காரியங்கள் என்ன என்பதைப் பற்றியும், சுயமரியாதை இயக்கத்தின் பேரால் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் முதலில் கேட்பவர்களுக்கு அதிசயமாயும் தலைகீழ்ப் புரட்சியாகவும் காணப்பட்ட போதிலும் பின் செல்வாக்குப்பெற்று எல்லா ஜனங்களாலும் சகித்துக்கொண்டு வரப்படுகிறதென்றும், பார்ப்பனர்களுடைய ஆதிக்கத்திலும், பார்ப்பனீயப் பிரச்சாரகரின் ஏகநாயகத் தன்மையிலும் இருந்துவந்த காங்கிரஸ் முதலிய அரசியல் இயக்கங்களும், மத இயக்கங்களும், சமுதாய வகுப்பு இயக்கங்களும் இப்பொழுது இந்த அபிப்பிராயங்களையே சொல்லத் தொடங்கிவிட்டன என்றும்—இவைகளுக்கெல்லாம் காரணம், நாம் ஆரம்பித்த எடுப்பிலிருந்து ஒரு சிறிதும் எந்தக் கொள்கையிலும் பின்போகாமல் நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டு வந்ததோடு, யாருடைய பழிப்புக்கும் பகைமைக்கும், தாட்சண்யத்திற்கும் பயப்படாமல் உறுதியுடனிருந்ததோடு, யாரானாலும் எப்படிப்பட்டவர்களானாலும் நமது கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லையானால் நமக்கு அவர்களைப் பற்றிக் கவலை இல்லை என்றும் அலட்சியமாயிருந்ததோடு சிறிதும் ராஜிக்கு இடம் கொடுக்காமலிருந்து வந்ததுமே யாகும்.

நம்மைப்பற்றிப் பலர் குற்றம் சொன்ன காலத்திலும், நமது இயக்கம் என்ன சாதித்தது என்று கேட்கவந்த காலத்திலும் நாம் அவர்களை இலட்சியம் செய்து பதில் சொல்லிக்கொண்டிராமல் நமது இலட்சியத்திலேயே கவலை வைத்துக்கொண்டு, 'நாம் அப்படித்தான் செய்வோம்; இஷ்டமிருந்தால் பின்பற்றி வா. இல்லாவிட்டால் உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ! அதன் பேரில்—நமது கொள்கையின் பேரிலோ, நமது செய்கையின் பேரிலோ ஆதிக்கம் செலுத்த வேறு யாருக்கும் உரிமை இல்லை' என்று சொல்லிக்கொண்டு வந்த உறுதியான நிலைமையேதான் நல்லதோ, கெடுதியோ நமது இயக்கத்தின் தற்கால நிலைமைக்குக் காரணமாக இருந்து வருகிறது.

ஏனெனில், நாம் யாரிடத்திலும் நமது இயக்கத்திற்காக 'இப்படிச் செய்கிறேன்; அப்படிச் செய்கிறேன்' என்று வியாபாரம் பேசி ஒப்பந்தம் செய்து 'அட்வான்ஸ்' வாங்கவில்லை. ஒருவருக்கும் கட்டுப்பட்டு எவரையும் ஏதாவதொரு விஷயத்தை நம்பச்செய்து, அதனால் நஷ்டத்தை அடையுங்கள் என்று யாருக்கும் நஷ்டத்தை உண்டுபண்ணவோ, யாருடைய தயவையும் எதிர்பார்க்கவோ இதுவரையில் வைத்துக்கொள்ளவில்லை. நாம் சொல்லுவதற்கும் செய்வதற்கும், சொல்லாததற்கும் செய்யாததற்கும் நம்மையே பொறுப்பாளியாக்கிக் கொண்டிருக்கிறோம். இதில் கலந்து ஒத்துழைத்ததாகச் சொல்லக்கூடியவர்கள் எல்லாரும் நமது கொள்கையும் அவர்களது கொள்கையும் ஒன்றாய் இருக்கிற முறையில் நம்முடன் சேர்ந்து இருக்கிறவர்களே தவிர, அவை சிறிது மாறினவுடன் பிரிந்துவிட வேண்டியவர்களே யாகையால், கொள்கை மாறாமல் இருக்கும் வரையிலுந்தான் யாரும் ஒத்துழைக்க வேண்டியவர்களென்று கருதிச் சேர்ந்து வேலை செய்துகொண்டு வந்தவர்களென்று நினைத்தோமேயொழிய, யாரையும் கூட்டு வியாபார ஒப்பந்தமாக

ஒருவருக்கொருவர் எப்படி இருந்தாலும் ஒத்துப் போகவேண்டிய நிர்ப்பந்தமுடைய குடும்ப வாழ்க்கைக் காரியமாகக் கருதவே இல்லை.

அன்றியும், நாமும் இதுவரை என்ன செய்துவிட்டோமென்று கவலைப் படவில்லை. ஏனெனில், நமது இலட்சியம் மிகப்பெரிது. இதற்காக நாம் செய்யும் முயற்சி மிகச்சிறிது. இதனுடைய நஷ்டம் நமக்குப் பெரிதல்ல. அன்னியருக்கும் நம்மால் ஏற்பட்ட கஷ்டமோ நஷ்டமோ சிறிதும் கணக்கிடத் தகுந்ததேயல்ல. ஏதோ நமக்குத் தோன்றியதைப் பேசுவது, எழுதுவது, ஊரூராய்ச் சுற்றுவது என்பதைத்தவிர நாம் செலவழிக்கும் பொருளோ ஊக்கமோ எதிர்பார்க்கும் காரியத்திற்கு எத்தனையோ மடங்கு சிறியதேயாகும். மலை போன்ற காரியத்தைக் கொண்டு வருவதற்காக, தலைமுடி போன்ற அற்ப சங்கதியைக் கொண்டு கட்டியிழுக்கப் பார்க்கிறோம். வந்தால் மலைபோன்ற கொள்கைகள் வரட்டும்; அறுந்து போனால் முடிபோன்ற நமது அற்ப முயற்சிகள் வீணாய்ப் போகட்டும். நமக்கு அதைப்பற்றிப் பெரிய கவலை ஒன்றும் இல்லை. இதனால் பெரிய நஷ்டம் இல்லை.

ஏனெனில், இவ்வளவு பெரிய இயக்கத்திற்கும் நமது மன உறுதியும் நிர்த்தாட்சண்ய முந்தான் ஆஸ்தியாகவும், மூலப் பொருளாகவும் இருக்கின்றனவே தவிர வேறில்லை.

எந்தக் காலத்திலும் எந்த இயக்கமோ, எந்த அபிப்பிராயமோ, செல்வாக்கு உடையதாக இருந்தால் காரண காரியங்களைக் கவனியாமலும், அவ் வியக்கத்தின் பிரமுகர்களது நடவடிக்கைகளையும் அபிப்பிராயங்களைக் கவனியாமலும் வந்து—தெரிந்தோ தெரியாமலோ வந்து புகுந்து சொள்வதும், பிறகு ஏதாவது செல்வாக்கு உள்ள இயக்கமோ, அபிப்பிராயமோ, தோன்றினால் அதில் பாய்ந்து விடுவதும், அந்தப்படி பாய்ந்து விட்டதற்குப் பிறருக்குச் சமாதானம் சொல்வதற்காக தாங்கள் முன்பு போய்ச் சேர்ந்த இயக்கத்தையோ அபிப்பிராயத்தையோ அல்லது அது சம்பந்தமானவர்களையோ குற்றம் சொல்லுவதின்மூலம் சமாதானம் சொல்லப்பார்ப்பதும் உலக மக்களில் பலரது இயற்கையேயாகும்.

மற்றும் ஒரு இயக்கத்திற்குத் தாராள செல்வாக்கு இருக்கும் வரையிலும்—அதாவது ஒரு வண்டி பள்ளத்தில் தானாக உருண்டுபோவதாயிருந்தால் வண்டியைத் தொங்கிக் கொண்டே வண்டிக்குப் பின்னால் ஓடுவதும், அப்படி இல்லாமல் மிக்க பாரத்தோடு ஒரு வண்டி சேற்றில் புதைந்து கொண்டோ, மேட்டில் ஏற வேண்டியதாகவோ ஏற்பட்டபோது அதைத் தோள் கொடுத்துத் தள்ளிவிட வேண்டிய கஷ்டத்திற்குப் பயந்துகொண்டு கழி போட்டுக்கொண்டு தொல்லைகொடுப்பதும், விட்டுவிட்டு ஓடப்பார்ப்பதும் சில சாதாரண மக்களுக்கு சகஜமேயாகும். இதைக் கண்டு இயக்கத்தில் பொறுப்பு உடையவர்கள் பயப் படாமலும், தங்களிடம் ஏதாவது மாறுதல் குணம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதை மட்டும் பார்த்துக்கொண்டு தைரியமாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும்.

ஒரு இயக்கத்தையோ ஒரு காரியத்தையோ செய்வதனால் ஒருவனுக்கு ஏற்படுகிற பெருமைக்கு அளவாகவே சிறுமையும் ஏற்படலாம். பெருமையைக் கண்டு சந்தோஷமடைபவன் சிறுமையைக் கண்டு துக்கப்பட வேண்டியதுதான். எப்படி இருந்தபோதிலும் இவ்விரண்டையும் உத்தேசித்து உறுதியான கொள்கைகளிலிருந்து பிறழாமல் இருப்பானே யானால், அவன் ஒரு வகையில் காரிய சித்தி அடைந்தவனேயாவான். ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் காரியம் தனது சொந்த இலாப நஷ்டத்திற்கா, அல்லது பிற நலத்திற்கா என்பதை யோசித்து, இலாப நஷ்டத்திற்குத் தயாராக இருக்கவேண்டும்.

[தரங்கம்பாடியில், 25-5-1931-ல் தலைமையுரை—'குடி அரசு' 31-5-1931]

சகோதரர்களே!

சுயமரியாதைக்குக், கடவுள் தயவே தேவை இல்லை. அந்தக் கடவுளைப்பற்றிய கவலையும் இல்லை. சகலமும் சுயமுயற்சியோடு ஆகவேண்டும் என்றும் சொல்லப் படுவதாகும்.

அது மாத்திரமல்லாமல், சுயமுயற்சியை விட்டுக் கடவுள் தயவுக்கும் கடவுள் செயலுக்கும் இதுவரை எதிர்பார்த்திருந்ததன் பலனே நமது நாட்டுக்கு இன்று சுயமரியாதை இவ்வளவு இன்றியமையாத அவசியமாய்ப் போய்விட்டது.

சுயமரியாதை இயக்கம், சுயராச்சிய முயற்சியைப்போல் எல்லாப் பொறுப்பையும் வெள்ளைக்காரன்மீது சுமத்தி, அவனைப்பற்றிப் பேசுவதிலேயே காலம்கழித்து, அவனுக்குக் கஷ்டம் கொடுப்பதிலேயே நமது ஊக்கத்தையும் முயற்சியையும் செலவழிப்பதில்லை.

[திருச்சியில், 17-5-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 24-5-1931]

சகோதரிகளே! சகோதரர்களே!

புதிய சங்கதி எதுவானாலும் காதை மூடிக்கொள்ளவே நமது மக்கள் கற்பிக்கப் பட்டிருக்கின்றார்கள். குழந்தைப் பருவத்தில் நமது உள்ளத்தில் எது எது பதிக்கப்பட்டு விட்டனவோ அவையெல்லாம்—தேர்ந்த ஞானிகளாலும் அவதார புருஷர்களாலும் சொல்லப் பட்ட உண்மைகள் என்ற உறுதியுடனே புகுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால், புதிய நோக்கங்களையும் தோற்றங்களையும் காணச் சகிக்காதவர்களாக நாம் இருக்கின்றோம்.

உலகப்போக்கை நாம் தெரிய நேர்ந்தாலும், பார்க்க நேர்ந்தாலும் அதன் அனுபவத்தின் மேன்மையை அடையவும், பாராட்டிப்பேசவும் தயாராய் இருக்கின்றோமே யல்லாமல், அதை நமது வாழ்க்கையுடன், நமது நாட்டு எண்ணங்களுடன் பொருத்திப் பார்ப்பதற்குச் சிறிதும் எண்ணுவதே கிடையாது. நமது மக்களின் இம் மாதிரியான நிலையைப் பார்த்துப் பார்த்து மனம் கஷ்டப்பட்டதால்தான் நாங்கள் இத்துறையில் இறங்கவேண்டியவர் களானோம்.

சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் ஒன்றும் புதிதானவையோ, ஏதாவது அதிசய மானவையோ என்று நீங்கள் மலைக்கவேண்டியதில்லை. அது மனிதன் அறிவு பெறவும், சமத்துவம் அடையவும், சுதந்திரம் பெறவும் பாடுபடுகின்றது. இவற்றிற்கு எதிராயும் தடையாயும் இருக்கும் எதையும் அடியோடு ஒழிக்கத் தைரியம் கொள்ளுகின்றது. இந்த நிலையில், மக்களின் மூடத்தனத்தினாலும், தாழ்வினாலும், அடிமைத் தனத்தினாலும் பயனடைந்து வாழ்கின்றவர்களுக்குச் சுயமரியாதை இயக்கம் ஒரு கோடாரியாய்க் காணப் படுவதில் அதிசயமில்லை. எதிர்ப்புக்கும், தொல்லைக்கும் பயந்தால் ஒரு காரியமும் நடவாமல் போவதோடு பிற்போக்கும் ஏற்பட்டுவிடும்.

இந்த மாதிரியான பாமர உணர்ச்சியும், பயங்காளித்தனமும், வைத்ததைச் சுமக்கும் மிருக சுபாவமும் இந்நாட்டு மக்களின் உயர் குணங்களாகப் பாவிக்கப்பட்டு வருவதாலேயே உலகத்தில் இந்திய நாடு மாத்திரம் வெகுகாலமாகவே அடிமை நாடாகவே—சுயமரியாதை யும், அறிவும் அற்ற நாடாகவே இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் இன்னதுதான் என்று கண்டுபிடிக்க நம்மவர்களுக்கு இன்னமும் அறிவு ஏற்பட்டு விடுவதில்லை. ஒருநாய் வளர்க்கின்றவன் தன் நாயை மற்றவன் மேல் ஏவி விடுவதுபோல்—நம்மை யார் சூழ்ச்சி செய்து இக் கதிக்கு ஆளாக்கினர்களோ அவர்களேதாம் அச் சூழ்ச்சியை ஒழிக்க வரும் ஆட்கள்மேல் உசுப்பிவிடுவதால், உண்மையை உணரக் கவலைகொள்ளாமல் அவர்கள் கைகாட்டின பக்கம் திரும்பிக்கொண்டு கத்துகின்றோம்.

நமது நாட்டு அடிமைத்தனம் எத்தனை காலமாய் இருந்து வருகின்றது என்பதை நினைத்துப் பாருங்கள். தர்மராஜ்யம், இராமராஜ்யம், சத்தியகீர்த்தி அரிச்சந்திர ராஜ்யம், முதலிய அவதார ராஜ்யம் முதல்—தெய்வீகத் தன்மை பொருந்திய மூவேந்தர் முதலிய சரித்திர ராஜ்யம் வரை, இந்திய மக்கள் நிலைமையைச் சற்று ஞாபகப்படுத்தி ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டு பாருங்கள். அந்த நிலைக்கு இந்த நிலை மேலானதா, கீழானதா என்று சுயமரியாதைக் கண்ணாடி மூலம் பாருங்கள். அறிவுக் கண்ணாடி மூலம் பாருங்கள்.

நீங்கள் எந்தப் பார்ப்பனரையும் கேட்டுப் பாருங்கள். தங்கள் நிலை இன்றைய நிலையைவிட, அன்று—அதாவது அவதார ஆட்சியிலும் மூவேந்தர் ஆட்சியிலும் மேலாயிருந்தது; ஆனால், இன்று கீழாயிருக்கின்றது என்றுதான் சொல்லுகின்றார்கள். ஆனால், அவர்கள் தவிர மற்ற மக்களாகிய சூத்திரர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்ட சாதியார்கள் என்று இழிவுபடுத்தப்பட்டிருக்கிற நம்மில் 100-க்கு 99 பேர்களைக் கேட்டுப் பாருங்கள். நெஞ்சில் கையை வைத்து நினைத்துப் பாருங்கள். அன்றுக்கு இன்று எவ்வளவோ மேலாக இருக்கின்றோம்.

இந்த நிலையோடு திருப்தி அடையாமல் இன்னும் மேலே போக வேண்டுமானாலும் நானும் கூடவே வரப் பாடுபடுகின்றேன். ஆனால், பழைய நிலையே மேல், அதற்குப் போக வேண்டுமென்று சொன்னால் அதைச் சகிக்க முடியவில்லை. அரை நிமிஷங்கூட அதை ஆதரிக்கமுடியாது. அறிவு, பொருள் முதலிய அகத்திலும் புறத்திலும் சமத்துவத்தை அடைய உலகம் தீர்மானித்துவிட்டது. இந்தியர்மட்டும் மூடர்களாய், அடிமைகளாய் இழிமக்களாய் இருக்கும் அவதார ராஜ்யத்திற்குப் போகவேண்டுமென்றால், இந் நாடு அடியோடு அழிந்துபோவதே மேல்.

உலகத்தை ஒரு கண்ணில் பார்த்து, இந்தியாவை மற்றொரு கண்ணில் பார்த்து இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை உணருங்கள்! நம் கல்வி, செல்வம், வாழ்வு, விவசாயம், வீரம், மானம், அறிவு, ஆராய்ச்சி, முற்போக்கு ஆகியவைகள் எல்லாம் எப்படி இருந்தன; மற்ற நாடுகளில் எப்படி இருந்தன, இருக்கின்றன என்பவைகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

[பழைய கடலூரில், 13-9-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 20-9-1931]

திரு. காந்தியால் 1921ஆம் வருஷம் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கமானது அரசியல் கொடுமைகளை ஒழிப்பதோடு, பார்ப்பனக் கொடுமைகளையும் ஒருவாறு ஒழிக்கும்படியான மாதிரியில் சில கொள்கைகள் கொண்டிருந்ததாலும் நம்போன்றவர்களின் ஆசைக்கும் அவசரத்திற்கும் தக்கபடி அது காணப்பட்டதை முன்னிட்டும், அவ் விஷயத்தில் கலந்து மனப்பூர்வமாக நாலைந்துகால வருஷம் உழைத்ததின் மூலமும், அது சமயம் பார்ப்பனர்களுடைய நெருங்கிய சம்பந்தம் இருக்க நேர்ந்ததின் மூலமும், அதன் பலாபலன்களை நாமும் ஒரு பங்கு அனுபவிக்க நேர்ந்ததின் மூலமும், அந்த இயக்கத்தின் போக்கைப் பார்ப்பனர்கள் எந்த வழியில் திருப்பி அதன் பலனை எப்படி அடைய முயற்சித்தார்கள்—முயற்சிக்கின்றார்கள் என்பதை நன்றாய் அறிய நமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதிலிருந்து நமது போக்கையும் ஒருவகையில் ஒன்றுபடுத்தி ஒரே வழியில் திருப்பி யோசிக்கவேண்டிய அவசியமுண்டாயிற்று. அங்ஙனம் யோசித்ததன் பலனாக நமக்குக் கிடைத்த பலன் என்னவென்றால், நமது மக்கள் அரசியல் விஷயமாய்ச் கூச்சல் போடுவதும் முயற்சிகள் செய்வதும் சற்றும் நமக்குப் பயன்படுவனவல்ல என்பதும், (இவைகள்) பார்ப்பனர்கள் நம்மீது செலுத்திவரும் தங்கள் உயர்வையும், ஆதிக்கத்தையும் நிலை நிறுத்திக்கொள்ளும் சூழ்ச்சிக்கே இவை உண்டாக்கப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்லவென்றும், இன்றைய நிலையில் நமது மக்களுக்கு வேண்டியவைகளிலெல்லாம் பகுத்தறிவும், மானமுமே முக்கியமானதென்றும், இன்றையப் பார்ப்பன ஆதிக்கத்திற்கு முக்கிய காரணமும், அன்னிய ஆட்சியின் கொடுமைக்குக் காரணமும், நமது மக்களுக்குப் பகுத்தறிவும், தன்மதிப்புணர்ச்சியும் தடைபட்டிருப்பதேதானென்றும் கண்டுபிடித்தோம். இது மாத்திரமல்லாமல், நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், சமத்துவத்திற்கும் வேண்டிய வேலையெல்லாம் செய்தும் பார்த்துவிட்டோம். அதாவது, பணம் கொடுத்தோம்; சுக சவுக்கியம்விட்டோம்; சிறை சென்றோம். இன்னும் மனிதனால் உயிரைத் தவிர வேறு

என்னென்ன சாதனங்களை அலட்சியமாய்க் கருதமுடியுமோ, அவ்வளவும் செய்தோம். இப்படிச் செய்ததால் ஒருவரல்லர், இருவரல்லர், ஆயிரக்கணக்கான பேர், இலட்சக்கணக்கான ரூபாய்களையும் நட்டமடைந்து—ஒரு தடவை மாத்திரமல்லாமல் பல தடவைகள் சிறையும் சென்றோம்.

இவ்வளவு செய்ததின் பலனாகவும் கடுகளவும்கூட முற்போக்கு அடைய முடியாமல் போனதையும் கண்கூடாகக் கண்டோம். அதன் பிறகு, மற்ற நாட்டு விடுதலை நிகழ்ச்சிகளை ஆராயத் தொடங்கியதில், அவற்றிலும் அனேகமாய் ஒவ்வொரு நாடும் நம்மைப் போலவே வேறு பல முயற்சிகளை எவ்வளவோ செய்துபார்த்தும் முடியாமற்போன காலங்களில், எந்த முடிவைக் கண்டுபிடித்து அந்த முயற்சியிலேயே இறங்கிக் கடைசியாக விடுதலை பெற்று சமத்துவம் அடைந்ததாகக் கண்டோமோ—அதையே நாமும் பின்பற்ற ஆசைப்பட்டோம். அன்றியும், பெருமையும் வலிமையும் கொண்ட நாடு என்று சொல்லப்பட்ட அய்ரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களின் உன்னத நிலைமைக்கு அவற்றின் பகுத்தறிவு வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியுமே முக்கியமானதென்பதையும் கண்டோம். சமீப காலம் வரை கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த துருக்கி, சைனா, ஜப்பான் முதலிய தேசங்கள் வல்லரசுத் தன்மை பெற்றதற்கு அவற்றின் சுயமரியாதை உணர்ச்சியே காரணம் என்பதையும் கண்டோம். அதன் பிறகே, நாமும் நமது தேசத்தின் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும் பகுத்தறிவும், தன்மதிப்புமே பிரதானம் என்பதாகக் கருதி, அதன் முயற்சிக்கு, 'சுயமரியாதை இயக்கம்' எனப் பெயரிட்டோம். இந்த இயக்கம் எந்த ஒரு தனிப்பட்ட நாட்டிற்கோ, சமூகத்திற்கோ என்பதாக இல்லாமல், பொதுவாகத் தாழ்த்தப் பட்டும், இழிவு செய்யப்பட்டும், தன்மான உணர்ச்சி உண்டாகாமல் அழுத்தப்பட்டும், பகுத்தறிவு வளர்ச்சி செய்யாமல் தடை செய்யப்பட்டும் இருக்கும் எல்லா மக்களுக்கும், கொடுங்கோன்மையில் அடக்கி ஆளப்பட்டு வரும் மக்களுக்கும் பயன்படும்படியான முறையில் அமைக்க விரும்பியே இதில் வீறு நடை போடுகிறோம். பகுத்தறிவிற்கு மதிப்புக் கொடுத்து, மக்கள் எல்லோரும் சமத்துவம் என்கின்ற உண்மையான மனிதத் தன்மைக்குத் தாராளமாய் இடங் கொடுக்கின்ற ஒவ்வொருவருக்கும் இடம் ஒதுக்கி வைக்கும் எண்ணங் கொண்டே இம் முயற்சியில் ஈடுபட்டோம். இம் முயற்சி மிகவும் கஷ்டமானது என்றும் அளவுக்கு மீறிய துன்பத்தையும் தொல்லைகளையும் கொடுக்கக்கூடியது என்றும் நாம் நன்றாய் உணர்கிறோம்.

எனினும், இது வெற்றிக்கு வந்தாலொழிய நமது சமூகம் மாத்திரமல்ல, நமது நாடு மாத்திரமல்ல, உலக முழுவதும், உலக சமூகம் எல்லாவற்றிற்கும் நிர்ப்பயமான விடுதலையோ, சாந்தியோ, ஓய்வோ இல்லையென்கின்ற முடிவினாலும் இம் முயற்சி இன்றைய பெரியோர்கள் எனப்படும் வயது சென்றவர்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் பெற முடியாவிட்டாலும் பெரும்பான்மையான பரிசுத்தத் தன்மையுடைய வாலிபர்களின் கூட்டுறவும் அனுதாபமும், ஆதரிப்பும் மலிந்துகிடப்பதாலும் துணிந்து இறங்கி விட்டோம். முடிவில் இதனுடைய வெற்றி தோல்வியைப் பற்றி நாம் அதிகமான கவலையெடுத்துக் கொள்ளாமல், இந்த முயற்சி சரியா, தப்பா என்பதைப்பற்றி மாத்திரம் தீர யோசித்து தைரியமாய் இறங்கியிருக்கிறோம்.

['குடிஅரசு' கட்டுரை—1-5-1932]

13. முதல் மாகாண சுயமரியாதை மகாநாடு

தமிழ்நாட்டு சுயமரியாதை மகாநாட்டை, செங்கற்பட்டு ஜில்லாவில் கூட்டவேண்டு மென்று செங்கற்பட்டு ஜில்லா பிரமுகர்கள் முடிவுசெய்திருப்பதாகப் பத்திரிக்கைகளில் காண நாம் மிகுதியும் மகிழ்ச்சியுடன் அவ் வபிப்பிராயத்தை வரவேற்கின்றோம்.

17, 18–2–1929 தேதிகளில் செங்கற்பட்டில் நடைபெற்ற சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாட்டில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், மற்ற தலைவர்களும்.

(‘ திராவிடன் ’ 22–2–1929)

தற்காலம் அரசியல் புரட்டாலும் மதவியற் புரட்டாலும் கஷ்டப்பட்டும், பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும் வஞ்சிக்கப்பட்டும், பகுத்தறிவும் தன்மதிப்பும் இழந்து தவிக்கும் நாட்டிற்கும் பாமர மக்களுக்கும் சுயமரியாதை இயக்கமே ஒருவாறு புத்துயிரளித்து வருகின்றது என்பது நடுநிலைமைகொண்ட அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமேயாகும். அப்பேர்ப்பட்ட இயக்கத்தை நாடு முழுவதும் பரவச் செய்வதன்மூலம் மக்களுக்கு உண்மையை உணர்த்தி, தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பி, ஊக்கமூட்டி, நிலைத்த உணர்ச்சியை உண்டாக்கவும், அடிக்கடி ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டிக் குறைகளை வெளிப்படுத்தியும், பல அறிஞர்களின் உபதேசத்தைக் கேட்கச் செய்தும் நாட்டில் தீவிர பிரச்சாரம் செய்யவும் வேண்டியது மிகவும் அவசியமானது என்பதும், இது ஆங்காங்குள்ள தலைவர்களுடையவும் பிரமுகர்களுடையவும் கடமை யானதுமான காரியம் என்பதும் நாம் சொல்லாமலே விளங்கும்.

இதுவரை பல ஜில்லாக்களிலும், தாலுக்காக்களிலும் ஜில்லா, தாலுக்கா மகாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றதானாலும் தமிழ்நாட்டுக்கே 'தமிழ் மாகாண பொதுவான மகாநாடு' கூட்டப்படவில்லை. இதற்காகச் சுமார் 4, 5 மாதமாய் சில ஜில்லாக்காரர்கள் முயற்சி செய்து வருவதாகத் தெரிந்தாலும், நமது செங்கற்பட்டு ஜில்லாவில் தீவிர முயற்சிசெய்து, ரூபாய் 5000-க்கு மேல் வசூல் செய்யப்பட்டு, வரவேற்பு சபை முதலியவைகளும் ஏற்படுத்தி வரவேற்புசபை அக்கிராசனரையும் தெரிந்தெடுத்தாய்விட்டதாகத் தெரியவருகின்றது.

மகாநாட்டுக்கு தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் தக்க கவனம் செலுத்தி, சுயமரியாதை இயக்கத்தில் மிகுதியும் கவலையும் உறுதியும் கொண்ட கனவான்களாகவும் சுயமரியாதை எல்லோருக்கும் மிக அவசியமானதெனக் கருதும் கனவான்களாகவும் பார்த்துத் தெரிந்தெடுக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

திருவாளர்கள் சவுந்தரபாண்டிய நாடார், எம். கிருஷ்ணன் நாயர், பி. சுப்பாயன், சர். கே. வி. ரெட்டி நாயுடு, எம். கே. ரெட்டி, பன்னீர்செல்வம், குமாரசாமி ரெட்டியார், ராஜன், சண்முகம் செட்டியார் முதலியவர்களைப் போன்றவர்களையே தெரிந்தெடுத்தால் மிகுதியும் பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதேயில்லை.

நிற்க, தஞ்சாவூரும் மாகாண சுயமரியாதை மகாநாட்டை நடத்த முயற்சிப்பதாய்த் தெரிகின்றது. தமிழ்நாட்டிலுள்ள ஜில்லா போர்டுகளில் செங்கற்பட்டும், தஞ்சாவூரும் உறுதியானதும் பயமற்றதுமான தன்மையுடன் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு அனுகூலமாயுமிருக்கிறது. அதற்குக் காரணம், இந்த இரண்டு ஜில்லாபோர்டு தலைவர்களையும் எப்படியாவது ஒழிக்கவேண்டுமென்று பார்ப்பனர்கள் தலைகீழாகப் பாடுபடுவதே போதியதாகும். பார்ப்பனப் பத்திரிக்கைகளும், அவர்களின் கூலிகளும் இவர்களைப்பற்றித் தூற்றாத—விஷமப்பிரச்சாரம் செய்யாத நாட்களைக் காண்பது மிகவும் அரிதாகும். சென்னை மாகாணம் முழுவதற்கும் பார்ப்பனர்கள் கண்களுக்கு, நமது பனகல் அரசர் எப்படி ஒரு பெரிய 'இராட்சதராக'க் காணப்படுகின்றாரோ, அதுபோல் தஞ்சை, செங்கற்பட்டு ஜில்லாப் பார்ப்பனர்களுக்கு நமது திருவாளர்கள் டி. பன்னீர்செல்வம் அவர்களும், எம். கே. ரெட்டி அவர்களும் 'இராட்சதர்'களாகக் காணப்படுகிறார்கள். [இராட்சதர்கள் என்றால், பார்ப்பன ஆதிக்கத்தை அழிக்கத் தோன்றியவர்கள் என்பது தத்துவார்த்தம்.] இந்த நிலையில் அவர்கள் சுயமரியாதை மகாநாடு கூட்ட முன்வந்தது யாருக்கும் அதிசயமாய்த் தோன்றாது.

தஞ்சை ஜில்லாவில் 'பார்ப்பனரல்லாதார் மாகாண மகாநாடு' கூட்டும் முயற்சியில் மாத்திரம் இருந்துகொண்டு, 'சுயமரியாதை மகாநாட்டை' செங்கற்பட்டு ஜில்லாவிற்கு விட்டுவிட வேண்டுகிறோம். செங்கற்பட்டு ஜில்லா பிரமுகர்கள் இந்த முயற்சிக்குத் தாராளமாய் வெளியில் வந்து வேண்டிய உதவிசெய்யக் கோருகின்றோம்.

['குடிஅரசு' அறிக்கை—16-12-1928]

(தலைவரை முன்மொழிந்து உரை)

சகோதரிகளே! சகோதரர்களே!

இப்பொழுது இந்த மகாநாட்டுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டி என்னை, எனது நண்பர் திரு. சவுந்தரபாண்டிய நாடார் அவர்களைப் பிரேரேபிக்கும்படியாக நமது வரவேற்பு அக்கிராசனர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார். அதற்கிணங்கி நான், இப்போது அவர்களை உங்கள் சார்பாகப் பிரேரேபிக்கப்போகிறேன். (கரகோஷம்)

இப்படிப் பிரேரேபிப்பதில் ஒரு விஷேசமிருக்கிறது. என்ன? திரு. நாடார் அவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மாதத்திற்கு முன்பாகவே வரவேற்புக் கமிட்டியாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய சம்மதத்தையும் வெகு நிர்ப்பந்தத்தின்பேரில் பெற்று, உங்களுக்கும் எல்லோருக்கும் வெளிப்படுத்தியாய்விட்டது. இனிமேல்வந்து இங்கு அவரை ஒருவர் பிரேரேபிக்கவோ, ஆட்சேபிக்கவோ உண்மையாக யாருக்கும் அதிகாரமும், யோக்கியதையும் கிடையாது. பிரேரேபணையோ, ஆமோதிப்பதோ, ஆதரிப்பதோ கொஞ்சமும் அவசியமே இல்லை. ஆனால், பின் ஏன் இப்படி ஒரு வழிமுறை இருந்துவருகின்றது என்பதாகப் பல நண்பர்களுக்குச் சந்தேகம் தோன்றலாம். என்ன அதனுடைய கருத்து ரகசியம்? இப்பேர்ப்பட்ட பெரிய மகாநாட்டில் தலைமை வகிக்கும் பெரியாரைப்பற்றி அறிமுகப்படுத்துவான் வேண்டியும் அவருடைய அருமை பெருமைகளையும் தெரியப்படுத்துவான் வேண்டியும் சில வார்த்தைகளைச் சொல்லுவதற்காகவே இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதைத் தவிர வேறு காரணம் ஒன்றும் இல்லை. மேலும், இந்த மகாநாடு விஷயமாகவும் சில வார்த்தைகள் சொல்லுவதற்கும் இந்தச் சந்தர்ப்பம் இடங்கொடுக்கிறது. அந்த முறையில்தான் நான் அப் பெரியாரைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

நம்முடைய மகாநாட்டுத் தலைவராக இருக்கிற திரு. நாடாரவர்களைப்பற்றி நான் உங்களுக்கு அதிகமாக எடுத்துச்சொல்ல முன்வருவது, பகலில் சூரியனைக் காட்டுவதற்குத் தீவட்டி பிடித்ததுபோலாகும். அவர் இரண்டாவது தடவை நம்முடைய சென்னை மாகாண சட்டசபைக்கு நம்முடைய பொதுமக்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர். அது மாத்திரமல்லாமல், நம்முடைய அரசாங்கத்தை நடத்தும் கவர்ன்மெண்டாகிய மந்திரி கட்சியாருடைய முக்கிய (பிரதம) அங்கத்தினர் அவரே; பெரிய தனவந்தர். இவைகளெல்லாம் போதுமா—ஒரு பெரிய மகாசபைக்கு அக்கிராசனப் பதவிக்குத் தெரிந்தெடுப்பதற்கு என்று கேட்கலாம். இவைகளைப்போல் பணக்காரரும் உண்டு. பத்துத் தடவை சட்டசபை மெம்பராக ஒட்டிக்கொள்கிறவர்களுமுண்டு (சிரிப்பு). தலைமுறை தலைமுறையாய் ஜில்லா, தாலுக்கா போர்டு பிரசிடெண்டாயிருக்கிறவர்களுமுண்டு. போதுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், இன்னும் அதைவிட அருமையான குணங்கள் அவர்களிடத்தில் என்ன இருக்கின்றது என்று கேட்பீர்களானால், என்னைப் பொறுத்தவரையிலும் நான் கொஞ்சங் குறைவாகவே சொல்லக்கூடும். என்ன? எந்தக் காரியத்தை உத்தேசித்து இந்த மகாநாட்டைக் கூட்டி இருக்கிறோமோ, அந்த இயக்கத்திற்காக என்ன விஷயங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதற்குக் கூடியிருக்கிறோமோ, அதன் கொள்கைகளில் மூழ்கினவர். அது மாத்திரம் போதாது, மனப் பூர்த்தியாக அதை ஒப்புக்கொண்டு ஒழுகுகின்றவர். அனுபவத்தில் அனேக உபத்திரவங்கள் குறுக்கே இருந்தாலும் அவர் திரணமாக நினைக்கிறாரென்றே திடமாய்ச் சொல்லுகிறேன். அந்தக் கொள்கைகளின் தத்துவங்களை ஒப்புக்கொண்டு உணர்ந்து, அதன்படி நடப்பதிலும் மற்றவர்களும் இம் மாதிரி நடப்பதற்குத் தன்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ்செய்து அவரால் கூடியவரை நாட்டில் பிரச்சாரம் செய்யவேண்டுமென்று தொண்டு செய்வதற்கும் தயாராயிருக்கிறார் என நான் மனப்பூர்த்தியாய்ச் சொல்லுகிறேன். ஒரு சமயம் நான் சொல்லுவது தவறாயிருந்தால் நான் ஜவாப்தாரியல்ல (கரகோஷம்); அந்த எண்ணத்தினால் எவ்வளவு உறுதியாய் இருக்கிறேன் என்பதுதான் இப்பொழுது கேள்வி, அப்பேர்ப்பட்ட பெரியார்

நமக்குக் கிடைக்கத்தக்கது கண்டிப்பாய் நாம் வெற்றியுறுவோம் என்பதற்கு அறிகுறி என்றுதான் சொல்லமுடியும்.

நீங்கள் அடுத்தாற்போல் இந்த இயக்கத்தைப்பற்றி எதிர்பார்ப்பீர்கள். வாஸ்தவத்தில் இந்த இயக்கத்தின் தத்துவத்தைப்பற்றி எனக்குக்கூட போதுமான பதில் சொல்லத் தெரியாத அளவு, இன்றைய தினம் ஆரம்பத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் விளக்கமாக எடுத்துக்காட்டி இருக்கிறார். அதற்கு மேலாக அதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதே இல்லை. இதற்கு சுயமரியாதை இயக்கம் எனப் பெயரிட்டது, மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டியும், மதத்தைப் பொறுத்த வரையிலும், வாழ்க்கையைப் பொறுத்தவரையிலும் ஒழுங்குபடுத்த வேண்டியும்தான். எல்லா வாழ்க்கைக்கும் சுயமரியாதை வேண்டியது தான். அரசியலில் அமிழ்ந்து கிடப்பதற்கு முக்கிய காரணம் சுயமரியாதை இன்மையே. இதைப்பற்றிச் சொல்லிய டாக்டர் சுப்பராயனின் புத்திமதிகள் பொன்னேபோல் போற்றத் தக்கன. சுருக்கமாக இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். இந்த இயக்கம் ஒரு தனி சமூகத்திற்கு விரோதமாகவோ, அனுகூலமாகவோ தனி அரசாங்கம், வகுப்புக்கு விரோதமாகவோ, அனுகூலமாகவோ இருக்கிறது என்று நினைப்பீர்களானால் நாம் எல்லோரும் ஏமாந்து போவோம். இப்பொழுது நமது விரோதிகளின் விஷமப் பிரச்சாரத்தால் அனேகம் பொய்ப் புரட்டுகள் பரவி, இது பார்ப்பனர்களுக்கு விரோதமான இயக்கம்; அவர்களை ஒழிக்கவேண்டும் என்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட இயக்கம்; மதத்தையே ஒழிக்க வந்த இயக்கம்; நாஸ்திக இயக்கம்; அரசாங்கத்தோடு இரகசியமாகச் சண்டை போடுவதுபோல வாலைப் பிடித்துக்கொண்டிருக்கிற இயக்கம்—என்று பழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் தத்துவமென்ன?

உலகிடை இப்பொழுது உயர்வுக்கும் தாழ்வுக்கும் சண்டை நடக்கிறது (கரகோஷம்). கொடுங்கோன்மை அரசாட்சி—சாதுக்களான குடியானவர்கள் சண்டை; மதம் பிடித்த முதலாளிகள்—ஏழைக் கூலித் தொழிலாளர்கள் சண்டை. இவர்கள் இரண்டு பேர்களும் ஒத்து வாழவேண்டுமென்பதே இதன் நோக்கம். முதலாளிகளையோ, பார்ப்பனர்களையோ, வெள்ளைக்காரர்களையோ ஒழிக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு இந்த இயக்கத்தை ஆரம்பிப்போமானால் ஏமாந்துபோய், பின்னால் போய்விடுவோம். பின் என்ன அதன் அம்சம்? அவர்களும் நாமும் சமமென்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். சீக்கிரத்தில் அது ஏற்படத்தான் கூடும். அதன் மூலம்தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம் பலமற்றுப் போகும். நாளைய தினம் இது வேண்டிய அவசியமிருந்தால் உங்கள் எல்லோரையும்விட நான் சந்தோஷப்படுவேன். ஆனால், இந்த சுயமரியாதை இயக்கம் உலகத்தை சீரிட்டுக் கொண்டிருக்கவேண்டும். உலகத்திலுள்ள ஆணவம், அகம்பாவம், அறியாமையை ஒழிக்கவேண்டியிருக்கிறது. அதன் மூலமாக எல்லா மக்களையும் சமத்துவமாகச் செய்வதற்குச் சாத்தியமாகும்.

டாக்டர் சுப்பராயன் சொன்னமாதிரி வேறுவேறு விதமாக இவ்வியக்கம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏற்பட்டிருக்கிறது. பிராமண ஆதிக்கம், பெண்களை அடிமைப்படுத்துதல் முதலியவை எல்லாம் ஒழியவேண்டும். துர்ஜன்னியமாக ஒரு மேக வெள்ளம் தலை விரித்தாடுகின்றது. அதற்கு இப்போது கொஞ்சம் சக்திபெற்று உலகத்தை நடத்துகிற சக்தி ஏற்படக்கூடும். என்னைப்போல் சில விளையாட்டுப் பிள்ளைகளிருந்தாலும் இன்னும் மகா பெரியோர்கள் வந்து தங்கள் சக்தியைக் காட்டுவார்கள் (கரகோஷம்). எந்தெந்தக் குணங்கள் எதிரிடையாக நம்முடைய நாட்டுக்கு, மனிதத் தன்மைக்கு விரோதமாக இருக்கிறதோ அதை ஒழித்து வருகிறோம். அதனால்தான் இப்பொழுது, முன்னால் நம் முகத்திலே விழித்ததற்கு எவ்வளவு தரம் குளித்தார்களோ—அவர்கள் இப்போது காதோடு காது கேட்க அவ்வளவு பொறுமை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு மிகவும் சந்தோஷம். இப்பேர்ப்பட்ட மாநாடுகள் கூட்டுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு

உங்கள் சார்பாக அக்கிராசனரைப் பிரேரேபிக்க ஏற்பட்ட சந்தர்ப்பத்தைக் குறித்து நான் பெருமை பாராட்டுகின்றேன். மனப்பூர்த்தியாக நீங்களும் ஆதரிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[செங்கற்பட்டில், 17-2-1929-ல் முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் சொற்பொழிவு—'திராவிடன்' 19-2-1929]

('சைமன் கமிஷன்' ஆதரிப்புத் தீர்மானம்)

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

இப்பொழுது சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்வதற்கு மூன்று காரணங்கள் சொல்லுகிறார்கள். 1 இந்தியர்கள் அதில் சேர்க்கப்படவில்லை. 2 இந்தியர்களுடைய நிலைமையை விசாரிப்பதற்கு அவர்களால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. 3 அது தங்கள் சுயமரியாதைக்கு விரோதம். இவ்வாறு சொல்லுவதில் உண்மை ஒன்றுமே இல்லை. இம் மூன்றுக்கும் சமாதான முறையில் இத் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக, இந்தியர்களைச் சேர்க்காததற்குக் காரணம், அவர்களே 'உங்களில் ஒரு மனப்பட்ட அபிப்பிராயமே இல்லை. பல வகுப்புக்களும், சாதிக் கலகமும் உயர்வு தாழ்வு என்று ஒற்றமை இல்லாமலும் போராட்டத்தில் இருக்கிறபோது யாரை நம்புகிறது?' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். நாமே, பார்க்கிறபோது, நம் நாட்டிலே இந்துக்களென்றும், முஸ்லிம்களென்றும், பார்ப்பனர்களென்றும், பார்ப்பனரல்லாதாரென்றும், உயர்ந்தோரென்றும், தாழ்ந்தோரென்றும் இருந்துவந்து, ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்களில் பல வித்தியாசங்கள் வைத்துக்கொண்டு போராடிக் கொண்டிருக்கிற சமயத்தில்—யாரைத் திருப்திப்படுத்துவது? நம் இஷ்டம்போல் ஒரு திட்டம் அமைக்கவோ அதைத் திருத்தி அமைக்கவோ இப்போது சர்க்கார் ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள். அப்படியே நம்மில் சிலர் சேர்ந்திருந்தாலும், அவர்கள்தான் நம்மைக் காட்டிக்கொடுக்கிறார்கள். ரவுலட் ஆக்ட், ஆயுத ஆக்ட், ஜெயிலில் வித்தியாசத்தோடு நடத்தவேண்டுமென்று சொல்லுவது நம்முடைய ஆட்கள். தொழிலாளிகளுக்குக் கடுமையான சட்டங்கள் இயற்றுவது நமது ஆட்கள். அவர்கள் நம்மை ஏமாற்றி, நம்மீது பெரிய பிழைகளைப் போடுகிறார்கள். இவைகளை எல்லாம் யோசித்துத் தக்க சமாதானம் சொல்ல இப்பொழுது நமக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, நம்நாட்டில் 1050 கட்சிகள், அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. காங்கிரசில் மிதவாதிகள், அமிதவாதிகள்; அமிதவாதிகளுள் காங்கிரஸ் கட்சியார், சுயராஜ்யக் கட்சியார், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரெனப் பலவிதமான கட்சிப் பிளவுகள் இருக்கின்றன. ஜஸ்டிஸ் கட்சியிலும் சந்தர்ப்பத்துக்கேற்றதுபோல் அனேக பெயர்களிருக்கின்றன. இன்னும் எந்தக்கட்சியை எடுத்துக்கொண்டாலும் வித்தியாசங்களிருக்கின்றன. இவைகளினால்தான், நாமே யோக்கியதை இல்லாமலிருக்கிறோம். அதலால் இதற்கும் சரியான காரணமில்லை.

மூன்றாவதாக, சுயமரியாதைக்கு விரோதம் என்கிறார்கள். இது விரோதம்—ஆனால் இன்னொருவன் நம்மீது உட்கார்ந்து, நம் இஷ்டத்திற்கு விரோதமாக ஆட்சிசெய்கிறது விரோதமில்லையா? அப்படி இல்லாவிட்டாலும் இதை ஒப்புக்கொள்ளலாம். விடிந்தெழுந்திருந்தால் வெள்ளைக்காரன் முகத்தில் விழிக்கிறவர்கள் நீங்களே; அதிகாரிகளும் நீங்களே; அந்த ஆட்சிக்காக இருக்கிற சட்டசபைகளிலும் நீங்களே; அதை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டு, நடத்துவதற்குப் பாடுபடுபவர்களும் நீங்களே. இப்படியிருக்க, அந்த அரசாங்கத்துக்கு நம்முடைய இஷ்டங்களைச் சொல்லுவது சுயமரியாதை இல்லையென்று சொன்னால் ஒன்றுக்கொன்று உண்மை இருக்கிறதா, பாருங்கள். இப்படி இங்கு சொல்லிவிட்டு, கோர்ட்டில் சலாமிட்டு 'துரையே' என்று சொல்லி ஒரு விண்ணப்பத்தைப் போட்டுக்

கொண்டிருக்கிறார்கள். கவுன்சில்களிலும், இந்திய சட்டசபைகளிலும் மாகாண சட்டசபைகளிலும் உட்கார்ந்து, அரசாங்கத்தை நடத்துவதற்கு உதவியாக இருந்துவர அவர்கள் முன்னே வாக்குக்கொடுத்து, 'நாங்கள் இப்பொழுது போகிறோம்; நீங்கள் பிற்பாடு வாருங்கள்' என்று சொல்லுவதுதான் சுயமரியாதையோ? 'கவர்ன்மெண்டார் நம் மதம் சம்பந்தத்தில் பிரவேசிக்கக்கூடா'தென்று சொல்லுகிறார்கள். விபச்சாரமும், பொட்டுக் கட்டுவதும் கூடாதென்று சொன்னால்—நம்மால் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதற்குப் பிரவேசிக்கவில்லை; அப்பேர்ப்பட்ட கொள்கைகளை மாற்றவேண்டுமென்றே அரசாங்கத்தார் முயற்சி செய்ய வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது, பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று இன்றைய தினம் சொல்லுகிறவர்களும், அங்கே போய் தங்கள் கொள்கைகளைச் சமர்ப்பிக்கவில்லையா? பெசன்ட் அம்மையார் காமன்வெல்த் பில் என்றும், நேரு கமிட்டியார் இந்தியாவின் பேராலும், காங்கிரசின் பேராலும் ஒரு ரிபோர்ட்டும் அளித்து, வருணாசிரம தர்மக்காரர்களும் சைமன் கமிஷன் முன்போய் தம் குறைகளைப் போக்கவேண்டிய முயற்சிகளும் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படியே நாம் வெளிப்படையாக ஏன் நமது கஷ்டங்களைத் தெரிவிக்கக் கூடாது? நீங்கள் சொல்லுகிற தீர்ப்பை ஒப்புக்கொள்ளுகிறோம். எங்கள் கஷ்டங்களை நீங்கள் அறியச் செய்துவிட்டோம். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று ஓர் எச்சரிக்கை யிறுத்தி இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன். நீங்களும் ஆதரிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[செங்கற்பட்டில் சுயமரியாதை மாகாண முதல் மகாநாட்டில் சைமன் கமிஷன் ஆதரிப்புத் தீர்மான உரை—'திராவிடன்' 20-2-1929]

(பாராட்டுரை)

வாலிபர்கள் தீவிரப் பிரச்சாரம் செய்யவேண்டும். தற்சமயம் சிலருக்கு ஒவ்வொரு மயிர்க் காலிலும் சமயப் பித்து இருக்கிறது. சாதி மத வேற்றுமைகளை ஒழிக்கவேண்டுவது அத்தியாவசியம். எல்லாவற்றிற்கும் நம்பிக்கையோடு உழைக்கவேண்டும். ஒழுக்கம், அறிவு, ஆசை எல்லோருக்கும் உண்டென்பது உண்மை. இவைகளினால் இந்தியாவிலுள்ள 33 கோடி ஜனங்களுள் 16½ கோடி பெண்களும் அடிமையாய் இருந்து, சந்தைக்குப் போய் மாடு வாங்குவதுபோல் நடத்தப்படுவது ஒழியவேண்டும். சிலருக்கு இக் காரியங்கள் செய்ய சாத்தியப்படாவிட்டால் சும்மாவாவது இருக்கவேண்டும். அவர்கள் முதலில் தங்கள் வாழ்க்கையை ஊன்றிப் பார்த்துப் பிறகு உலகத்தைப் பார்க்கவேண்டும். சுயமரியாதை இயக்கம் வாலிபர்கள் கையிலிருக்கிறது. பெண்களும் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு சுயமரியாதை உணர்ச்சியை உணர்த்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[செங்கற்பட்டில் முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் பாராட்டுரை—'திராவிடன்' 21-2-1929]

(பனகல் படத்திறப்பு நன்றியுரை)

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

இந்தப் பெருமைதங்கிய நமது காலஞ்சென்ற தலைவர் திரு. பனகல் அரசருடைய உருவப் படத் திறப்புவிழாக் கொண்டாட்டத்திற்கு நன்றி செலுத்தும்படியாக எனக்குக் கட்டளையிட்டதை, நான் மிகவும் பெருமை பாராட்டிக்கொள்ளுகிறேன். இந்தக் கொண்டாட்டமானது செங்கற்பட்டு ஜில்லாபோர்டுக்குச் சம்பந்தப்பட்டது. நமது தலைவர் அவர்களுடைய உருவப்படம் செங்கற்பட்டு ஜில்லா போர்டு பிரஸிடெண்டாயிருக்கும் நம்முடைய நண்பரும், உண்மையான சுயமரியாதை வீரர்களில் ஒருவருமான திரு. எம். கே. ரெட்டி அவர்களுடைய தகப்பனாரால் செங்கற்பட்டு போர்டுக்கு அளிக்கப்

பட்டது. அதை இன்றைய தினம் நம்முடைய பெரியார்கள் திரு. இராமசாமி முதலியாரவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் திரு. எம். கே. நாயர் அவர்களால் திறப்புவிழா நடத்தப்பட்டது. செங்கற்பட்டு ஜில்லாபோர்டு பிரஸிடெண்டு அவர்கள் இம் மாதிரி முயற்சிகளில் பொதுக் காரியங்களுக்காகப் பாடுபட்டு உழைக்கின்றவர்களுக்கு எவ்வளவு மரியாதை கொடுக்கிறார்கள் என்பதும், அப்பேர்ப்பட்ட பெரியார்களை மரியாதை செய்வதின் பொருட்டும், அவர்களுடைய அருமையான காரியங்களுக்கு நன்றி செலுத்துவதின் பொருட்டும் ஓர் உண்மையான மனிதன் செய்யவேண்டிய காரியத்தை அவர்கள் இன்று செய்திருக்கிறார்கள் என்று சொல்லுவதும் மிகையாகாது.

திரு. பனகல் அரசரவர்களைப் பற்றி முன்னே பேசிய இரண்டுபேர் அவ்வளவும் பேசி இருக்கிறார்கள்; அது மாத்திரமல்ல; அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு எல்லோரைக் காட்டிலும் அவர்களுக்கே அதிக உரிமை உண்டு; அதிக சங்கதியும் தெரியும். அக்கிராசனர் திரு. இராமசாமி முதலியார் அவர்கள் திரு. பனகல் அரசரவர்களுக்கு வலக் கை போல் இருந்தவர். திரு. பனகல் அரசரவர்களுக்கு வந்த பெருமையெல்லாம் அவரைச் சார்ந்தாலும், ஏதாவது சில தப்பாவது, தப்புகளாவது சொல்லக்கூடியவரிருந்தால் அவ்வளவையும் வாங்கித் தம் தலையியில் போட்டுக்கொள்ளக்கூடிய பெரியவர் நம்முடைய இராமசாமி முதலியார். அவர்களை அறியாமல் ஒரு காரியமும் நடந்திருக்காது என்றே சொல்லலாம். சாதாரணமாக இந்துக் கோயில் விக்கிரகங்களுக்குச் சொல்லுவதுபோல் திரு. பனகல் அரசரவர்களை 'மூல விக்கிரகம்' என்று சொன்னால், திரு. இராமசாமி முதலியாரை 'உற்சவ விக்கிரகம்' என்று சொல்லலாம். இவ்வளவு தூரம் அவர்கள் இரண்டறக் கலந்து ஒன்றாக நமது நாட்டினுடைய நன்மையைக் குறித்து, நம்முடைய மக்கள் சுயமரியாதையைக் குறித்து மனமாரப் பாடுபட்டவர்கள். அப்பேர்ப்பட்ட ஒருவர் அப்பெரியாருடைய படத்திறப்பு விழாவிற்குத் தலைமை வகிப்பது மிகவும் பொருத்தமானது. அதிலும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் எத்துணையோ அவசரக் காரியங்களினிடையே இக் காரியத்தைச் செங்கற்பட்டு போர்டாரவர்கள் கேட்டுக் கொண்டவுடனே—யாதொருவிதமான ஆட்சேபணையும் சொல்லாமல் உடனே இன்றைய தினம் விஜயம் செய்து, இந்தக் காரியத்தை நடத்தித் தலைமை வகித்ததற்கு, செங்கற்பட்டு போர்டின் சார்பாகவும், காலஞ்சென்ற தலைவர் அபிமானத்தால் நன்றி செலுத்திய மக்கள் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

நமது பெரியார் கிருஷ்ணன்நாயர் அவர்களைப்பற்றி, அதிகம் சொல்ல வேண்டியதே இல்லை. இன்றைய தினம், அவர் ஒருசமயம் தற்கால அதிகாரியாக இருக்கிறாரே என்ற காரணத்தால், கொஞ்சம் குறைத்துச்சொல்லவேண்டி இருந்தாலும் இருக்கலாம். ஏன்? அதிகாரத்திற்காக அதிகமாகப் புகழ்ந்துவிட்டார் என்று நினைப்பார்களே என்றுதான். நம்முடைய நாட்டிலே குறிப்பாக நம் தமிழ் நாட்டிலே, பார்ப்பனரல்லாதாருக்காக ஏற்பட்டிருக்கிற ஒரு கட்சியிலே ஆதிமுதற்கொண்டு கொஞ்சமும் கட்சியினிடத்தில் பிணக்குக்கொள்ளாமலும், தமது காரியங்களுக்காக வேண்டி தமது கட்சிக் கருத்துக்களைத் திருத்திக் கூறாமலும் ஒரே பிடிவாதமாக இருந்துவரும் சில நண்பர்களில் மிகமிக முதன்மையானவர். அப்பேர்ப்பட்ட அருமையான பெரியாரோடு சேர்ந்தாற்போல் விரலை நீட்டுவதற்கு, மனம் நீண்டாலும் அது மாட்டேன் என்கிறது. அவர் கட்சியின் தலைவர்களிலே மிகவும் சிறப்பானவர். மிகவும் நுட்பமாய்த் தாம்கொண்ட அபிப்பிராயத்தை எந்தச் சமயத்திலும் தைரியமாய் வலியுறுத்தும் ஒரு பெரியார். வேறு தாட்சண்யத்திற்காகவோ, அல்லது ஏதாவது போதிய காரியங்களுக்காகவோ, அவர்களுடைய மனப்பூர்த்தியான அபிப்பிராயத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் மாற்ற சிறிதும் சம்மதியார். அதோடு மாத்திரமல்ல, காலஞ்சென்ற பெரியார் பனகல் அரசருக்கு மந்திரியாய் இருந்தார் என்றும் சொல்லவேண்டும். அனேக சமயங்களில் இவர்களை நடத்தினார்களென்றும் சொல்லலாம். அந்த முறையில் அவர்கள் திரு. பனகல்

அரசருடைய குணாதிசயங்களைப்பற்றிப் பேசவும், அவருடைய படத்தைத் திறந்து வைக்கவும் எல்லோரையும்விட மிகவும் உரிமை உடையவரென்றும் சொல்லுவது மிகையாகாது. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியார் செங்கற்பட்டு ஜில்லாபோர்டு மெம்பர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி யாதொரு விதமான ஆட்சேபணை சொல்லாமல் உடனே ஒப்புக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து கொடுத்ததற்காகப் பலவிதத்திலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். வேறு பல காரணங்களால் இந்தக் காரியத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகத் திரித்துக் கூறியிருந்த போதிலும், 'இவர் அரசாங்கத்தைச் சார்ந்த அதிகாரி, இந்த மாதிரியான பொதுக் காரியங்களில், கட்சி சம்பந்தமான காரியங்களில் தலைமை வகிக்கலாமா?' என்றும், வேறுவிதமான பிரச்சாரங்கள் நடந்திருந்தும் அவர் லட்சியம் செய்யாமல் மனசாட்சியையே பிரதானமாகக் கருதி, ஜில்லா போர்டு அழைப்பிற்கிணங்கி, அவர்களுடைய ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசையின் பேரில் தைரியமாகவந்து இந்தக் காரியத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். ஆகையால், அவர்களுக்கும் நம்முடைய மனப்பூர்த்தியான நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.

அடுத்தாற்போல், செங்கற்பட்டு போர்டார் அவர்களுக்கும், செங்கற்பட்டு போர்டு தலைவர் அவர்களுக்கும் இப்பேர்ப்பட்ட அருமையான காரியத்தைச் செய்ததற்கும், இம் மாதிரியான பெரியார்களின் தொண்டுகளை மதித்து அவர்களுக்கு நன்றி செலுத்தியதற்கும், பொது ஜனங்கள் சார்பாகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். மேலும், இம் மாநாடு விஷயத்தில் செங்கற்பட்டு போர்டார் அவர்களும், இந்த ஜில்லா பிரதிநிதிகளும், பெரியார் தலைவர் ரெட்டியார் அவர்களும் எவ்வளவு பிரயத்தனம் எடுத்துக் கொண்டு, இவ்வளவுபெரிய காரியங்களில் பொறுப்பு எடுத்துக்கொண்டு செய்துவருகிறார்கள் என்பதைப் பார்த்தால், இந்த பனகல் அரசருடைய படத்திறப்பு விழா சாதாரண மென்றுதான் சொல்லலாம். நம்முடைய ரெட்டியாரவர்கள் ஜில்லாபோர்டு பிரஸிடெண்ட் உலகத்திற்கும், ஸ்தல ஸ்தாபன உலகத்திற்கும் ஒரு வழிகாட்டி எனச் சொல்லுவது மிகையாகாது. எந்தக் காரியத்தை அவர் நினைத்த போதிலும் தைரியமாக நடத்துகிறவர். இந்த மகாநாடு ஆரம்பித்த காலத்திலே திரு. பனகல் அரசர் அவர்கள் உயிருடன் இருந்தவர்தான். அவரைக்கேட்டுக்கொண்டு இந்த விஷயங்களை எல்லாம் தெரியப்படுத்தி இம்மாதிரி ஒரு மகாநாடு நடக்கப்போகிறதென்றும், இதைப்பற்றிய நடவடிக்கைகள் இன்னின்னதென்றும் இரண்டு மூன்று தடவைகள் விளம்பரங்களில் அவர் காதார, கண்ணாரக் கேட்டும் பார்த்தும் ஆனந்தம் கொண்டிருந்தவர். இப்பொழுது இதை வந்து பார்த்து இதை நடத்துவதற்கு நமக்கு வேண்டிய சக்தியையும், மார்க்கங்களையும் சொல்லிக் கொடுத்து நடத்திவைக்கும் திறமையை நாம் அடையமுடியாமல் போய்விட்டோம். இப்போது அவருடைய உருவம் நம் முன்னாலே இருந்துகொண்டு பின்னால் ஒவ்வொரு காரியத்தையும் அவரே நடத்துகிறாரென்று மனதிற்கொண்டு, நம்முடைய காரியத்தைச் செய்யத் துணிச்சலோடு தயாராக இருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

மற்றும், இந்தக் கொண்டாட்டத்திற்கு இங்கு விஜயஞ் செய்திருக்கிற அனேக பெரியார்களுக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது அரசாங்க மந்திரிமார்கள் திரு. டாக்டர் சுப்பராயன் அவர்களும், கனம் சேதுரத்தினம் அய்யர் அவர்களும், கனம் முத்தையா முதலியார் அவர்களும் இன்றையதினம் விஜயஞ் செய்திருப்பதற்கு நாம் மனப்பூர்த்தியாக நன்றி செலுத்தவேண்டும். சென்னை மாகாண மந்திரிமார்கள் மாத்திரம் அல்ல, மத்திய மாகாண மந்திரிமார்களில் ஒருவராகிய ராகவேந்திர ராவ் நாயுடு அவர்கள் இங்கு வருவதற்கென்றே வேலையை ராஜினாமா செய்துவிட்டு இங்கு ஆஜராயிருக்கிறார் என்பதற்கும் நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும், மைசூரிலிருந்து சட்டசபை மெம்பராகிய நீலகிரி சஞ்சீவி அய்யா அவர்களும் இன்னும் இரண்டு மாகாணங்களிலிருந்து அனேக கனவான்களும், பெரியார்களும், எங்கள் ஜில்லா பிரமுகராயிருக்கிற பட்டக்காரர் அவர்களும், இன்றையதினம் இந்த மாநாட்டுக்கு வந்திருப்பதற்காக நம்

செங்கற்பட்டு போர்டார் சார்பாகவும், இந்தக் கூட்டத்திலுள்ள மகாஜனங்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும்; ஒரு சந்தில் வேண்டுமென்று ஒளிந்துகொண்டிருக்கிற கைவல்ய சாமியார் அவர்களுக்கும், இங்கு திரள்திரளாக விஜயஞ் செய்திருக்கிற நம்முடைய தாய்மார்களுக்கும் நம் மனப்பூர்த்தியான நன்றியைச் செலுத்துகிறோம். எனவே, என்னுடைய சொந்த முறையிலே செங்கற்பட்டு போர்டு தலைவருக்கும் இந்தச் சிறிய தொண்டை எனக்குக் கொடுத்ததற்காக வேண்டியும், கவுரவப்படுத்த வேண்டுமென்ற ஆசையிலே இதை அளித்ததற்காக வேண்டியும் நானும் என் சார்பாகவே என்னுடைய நன்றியை அளிக்கிறேன்.

[செங்கற்பட்டில், 17-2-1929-ல் நன்றியுரை—'திராவிடன்' 18-2-1929]

14. வேலைத் திட்டக் கூட்டம்

இந்த மாதம் 28, 29 தேதி புதன், வியாழக்கிழமைகளில் ஈரோட்டில், சுயமரியதை இயக்கத்தின் 1933 வருஷத்திய வேலைத் திட்டத்தைப்பற்றி யோசிக்க ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக சுயமரியாதை இயக்கத்துப் பிரமுகர்களும், தீவிர பிரச்சாரகர்களும் அபிமானிகளும் ஆதரவளிப்பவர்களுமான தோழர் பலருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. சில முக்கிய பிரபலஸ்தர்களுக்கு அழைப்பு வந்து சேராமலோ, அல்லது அனுப்பத் தவறிப்போயோ இருந்தாலும் இருக்கலாம். அவற்றையெல்லாம் இலட்சியம் செய்யாமல் இயக்க அபிமானிகள் உட்பட யாவரும் விஜயம்செய்து ஒரு வேலைத் திட்டம் நிர்ணயிக்க உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம். இதுவரை சுயமரியாதை இயக்கம் பெரிதும் பிரச்சார நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது என்றாலும், அது தோன்றியது முதல் நாளுக்கு நாள் முற்போக்கான கொள்கைகளையே படிப்படியாய்க் கைக்கொண்டு பிரச்சாரம் செய்துவந்திருப்பதன் மூலம் பெரிதும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் ஒரு பெரிய புரட்சி உணர்ச்சியை உண்டாக்கி இருப்பதுடன், குறுகிய நோக்கமும் சுயநலப் பிரதானமும் கொண்டவர்கள் உள்ளத்தில் பெரும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி வந்திருக்கிறது.

தீவிர முற்போக்குகள் ஏற்படுகின்ற எந்தத் தேசத்திலும், எந்தக் காலத்திலும் சுயநலமக்களுக்கு இவ்வித அச்சமும் ஆத்திரமும் தோன்றி, சிறிது காலம் புத்தி தடுமாறி தாறுமாறாய்த் திரிந்துவிட்டுக் கடைசியாய் உள் நுழைந்துகொள்வது இயல்பேயாகும். ஆனால், உண்மையான கவலையோடு மக்களின் முற்போக்கிற்கு உழைக்கின்றவர்கள் இவற்றை இலட்சியம் செய்யாமல் புதுப்புதுக் கொள்கைகளுடன் மேலே மேலே போய்க் கொண்டிருப்பார்களேயானால் பழைய கொள்கைகள் என்பவை எதிரிகளால் சகிக்கக்கூடியதாகவும், சாதாரணமானதாகவும் கருதக்கூடியதாகி, புதுக்கொள்கைகளோடு மாத்திரம் போரிடுபவர்களாக ஆகிவிடுவார்கள். அப்படிக்கில்லாவிட்டால், குறிப்பிட்ட கொள்கையைப் பற்றியே விவகாரம் நடத்திக்கொண்டிருக்க நேரிட்டு, முயற்சிகளுக்கு முன்னேற்றமென்பதில்லாமல் தேக்கமுண்டாய் விடும். ஒரு விஷயத்தைப்பற்றிச் சரியோ, தப்போ என்பதைக் கவனிக்காமல், எதைச் சொன்னாலும் ஏட்டிக்குப் போட்டியாய் வம்பளந்து வயிறு வளர்ப்பதையே வாழ்க்கையாய்க் கொண்ட மக்கள் உலகம் எங்கும் இருந்துதான் வருகின்றார்கள். இவர்களுடைய உதவி யாருக்கும், எவ்வளவு குறைந்த விலைக்கும் கிடைக்கக் கூடும்.

ஆதலால், முற்போக்கால்—புதுக் கொள்கைகளால் சுயநலப் பங்கமடையக் கூடிய மக்கள் இக்கூட்டத்தாரின் உதவியால் ஒரு சாதாரண விஷயத்திற்கெல்லாம் ஆகாயம் இடிந்துவிழப் போவதைத் தடுக்கவேண்டியவர்கள்போல், மாய்மாலக் கூப்பாடு போட்டு அங்கும் இங்கும் திரிந்து பாமர மக்களை ஏமாற்றி ஆதரவுதேட அலைவார்கள்.

நிற்க, மக்கள் நலத்தில் கவலைகொண்டு, பொதுக்காரியத்தில் முனைந்திருப்பவர்கள் சிறிதாவது ஏதாவதொரு காரியத்தைச் செய்து சாதிக்கவேண்டும் என்று கருதுவார்களே

(தொடரும்) →

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

1

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்

திருச்சிராப்பள்ளி-2.

போன் : 0422 – 2572635
செல் : 936 2970121

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., எஃப்.அய்.இ.
(மருத நாடன்)
தலைமைப் பொறியாளர் மி.வா. (ஓய்வு)
தலைவர் : சிந்தனையாளர் கழகம்
தமிழ் தமிழர் ஒருங்கிணைப்பாளர்
அமைப்பாளர் : தொழில் நுட்ப வல்லுநர் குழுமம்

18/12ஏ, அண்ணாநகர், ஆறுமுகம் லே–அவுட்,
பூளைமேடு (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 004.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shrp; erd; (09-06-2011)
jkpHk;tiy (www.thamizham.net)

5. பத்தினி-பதிவிரதை

பத்தினி—பதிவிரதை என்ற சொற்கள் முட்டாள்தனத்திலிருந்தும், மூர்க்கத்தனத்திலிருந்தும் தோன்றிய சொற்களாகும்.

இச் சொற்களுக்கு இயற்கையிலோ, நீதியிலோ, சமத்துவத்திலோ, சுதந்திரத்திலோ சிறிதும் இடமில்லை. இச்சொற்கள் தமிழ்ச் சொற்களுமல்ல; இச்சொற்களுக்கு உரிய பொருளில் தமிழில் சொற்களோ சொல்லோ இல்லை.

இச்சொற்பொருளுக்குள்ள குணம், மனிதர்களுக்கு அவசியம் என்ன ? என்பதுபற்றி இதுவரையிலும் யாராலும் விளக்கப்படவே இல்லை. இச்சொற்கள் ஆரியமொழிச் சொற்கள் என்றாலும், அவர்களது பழக்கவழக்கங்களிலும் அவர்களது நூல்கள், கதைகள், கற்பனைப் புராண இதிகாசங்கள், நீதிகள், நடப்புகள் முதலிய எவற்றிலும் இச்சொற்களுக்கு உரிய குணங்கள் எவையும் அறிவுக்கு ஏற்ற முறையில் கற்பிக்கப்படவே இல்லை. ஆரிய புராண இதிகாசங்களில் காணப்படும் பதிவிரதைகள், பத்தினிகள் யாவரும் மேற்சொன்ன பொருளுக்கு ஏற்றபடி நடந்தார்கள், நடந்துகொண்டார்கள் என்பதாக ஒரு பதிவிரதை கூடச் சுட்டிக் காட்டப்படவில்லை.

ஆரிய நீதியாகிய மனுதர்மத்தில், பெண்கள் பச்சைப் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எங்கும் காணப்படவே இல்லை.

மற்றும், பதிவிரதா தர்மத்துக்கு என்ன பலன் உண்டு என்றுகூட எதிலுமே காணப்பட முடியவில்லை.

ஆரிய பதிவிரதைகள் தன்மைக்கு அகலிகை, சீதை, துரோபதை, மண்டோதரி, என்று சொல்லப்பட்ட பதிவிரதைகளின் யோக்கிதையே நன்றாக விளங்கும்.

மற்றும், பதிவிரதைகளுக்கு உதாரணம் காட்டிக் கற்பிக்கப்பட்டிருக்கும் சாவித்திரி, நல்லதங்கை, கண்ணகி முதலிய பெண்களின் தன்மையை அவர்களது அனுபவத்தைப் பார்த்தாலும்—பதிவிரதத் தன்மை விளங்கும்.

பதிவிரதைகளுக்கு ஏன் துன்பம், துயரம் ஏற்படவேண்டும்? அவர்கள் ஏன் 'விதவைகள்' ஆகவேண்டும்?

மற்றும், தமிழர்களது சரித்திரத்தில்—தமிழர்கள் பெண்களின் எண்ணிக்கையில்—தமிழர் சரித்திரம் தொடங்கிய காலம்முதல் இன்றுவரை ஒரே ஒரு பெண்ணைத்தான் பத்தினியாக—பதிவிரதையாகப் போற்றப்படவேண்டியவளாகக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது என்றால், இது தமிழ்ப் பெண்சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவும் பழியும் ஆகும் என்று சிந்தியுங்கள்.

தமிழர் பெண்களில் ஒருத்திதான் பதிவிரதை என்பது தமிழர் பெண் சமுதாயத்தை இழிவுபடுத்தியதும், வெறுக்கத்தகுந்த செய்கையும் ஆகாதா? அக் கதையை உண்டாக்கினவன் ஒரு முட்டாளாக இருக்கவேண்டும்; இல்லையானால், பெண்களை—தமிழர்களை இழிவுபடுத்தின வருணாசிரம தர்மத்தைக் காப்பாற்றுகிற அயோக்கியனாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் கூறி முடிக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—4-5-1973]

6. இந்தியப் பெண்கள்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தியாவில் இந்துப் பெண்கள், இந்துமத சம்பிரதாயப்படி, பாபஜென்மங்களாகக் கருதப்படுவர். அதாவது, சென்ற ஜென்மத்தில் அவர்கள் செய்த பாபகாரியங்களால், இந்த ஜென்மத்தில் பெண்களாய்ப் பிறக்கின்றார்கள் என்பது ஒரு சாஸ்திர விதி. ஒரு குடும்பத்தில் எத்தனை பெண் குழந்தைகள் இருந்தாலும், அக் குடும்பத்திற்கு ஆண் குழந்தைகள் இல்லாவிட்டால், அதைப் 'பிள்ளையில்லாத குடும்பம்' என்று சொல்லுவது வழக்கம். ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்தால், அது அவ் வீட்டுக்கு அதிருப்தி தரத் தக்க விஷயமாகவே கருதப்படும். ஆண் குழந்தை பிறந்தால் வெகு திருப்தியுடன் ஆடம்பரமாகச் செலவு செய்வார்கள். ஏதாவது ஒரு சபை அல்லது கூட்டம் ஒருவரும் பேசாமல் நிசப்தமாய் இருப்பதாய் இருந்தால் அதைப் பார்த்து, "என்ன, பெண் பிறந்த வீடுபோல் இருக்கிறதே!" என்று கேட்பது வழக்கம். எவ்வளவு பெண் குழந்தைகள் இருந்தாலும், ஒருவனுக்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால், வேறு குடும்பத்தில் இருந்து ஒரு ஆண் பிள்ளையைச் சுவீகாரம் எடுத்துக் கொள்வார்களே ஒழிய, பெண் குழந்தையை வாரிசுக் குழந்தையாய்க் கருதுவதில்லை.

'பெண்கள் எந்த நிலையிலும் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள்' என்பதே மதச் சம்பிரதாயம். ஒரு பெண்ணானவள் குழந்தைப் பருவத்தில் தாய், தந்தை மேற்பார்வையிலும், வாலிபப் பருவத்தில் புருஷன் மேற்பார்வையிலும், வயோதிகப் பருவத்தில் தன் மக்களின் மேற்பார்வையிலும் இருக்கவேண்டுமே ஒழிய, சுதந்திரமாய் இருக்கக்கூடாதென்று மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மாத்திரமல்லாமல், பெண்களைக் கடவுள் பிறவியிலேயே விபசாரிகளாய்ப் பிறப்பித்திருப்பதால் அவர்களைச் சர்வ ஜாக்கிரதையாகக் காவல் காக்க வேண்டும் என்று மத சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதும் மத சாஸ்திர விரோதமான காரியமாகும். இவ்வளவு நாகரிகமான காலத்திலும் இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் 100க்கு ஒருவர் வீதம்தான் பெண்கள் கல்வி கற்றிருக்கக்கூடும். அப்படிக் கற்றிருந்தாலும் அந்தக் கல்வி அவர்களது வாழ்க்கையில் யாதொரு காரியத்திற்கும் பயன்படுவதில்லை. பெண்களுக்குக் கற்றுக்கொடுப்பதெல்லாம் வீட்டு, சமையல் வேலை முதலிய வேலைகளைச் செய்யத்தான் கற்றுக்கொடுப்பது வழக்கம். சிறு பருவம் முதலே அவர்களை ஆண் குழந்தைகளிடம் இருந்து பிரித்துவைக்க வேண்டும் என்று கருதுவதால், பொதுப்பள்ளிக் கூடங்களுக்கு அவர்களை அனேகமாய் அனுப்பமாட்டார்கள். மற்றபடி, சிறு குழந்தைப் பருவத்தில் யாருக்காவது சங்கீதம், பாட்டு முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டாலும், அவை அப்பெண்ணின் வாழ்க்கையில் சிறிதும் பயன்பட சந்தர்ப்பம் இருப்பதே கிடையாது.

கலியாண விஷயம் என்பது மிகவும் பரிதாபகரமானது. அனேகமாகப் பெண்களுக்கு 10, 12 வயதிற்குள்ளாகக் கலியாணம் ஆகிவிடும். பிறந்த ஒரு வருஷத்திலிருந்தே எப்பொழுது வேண்டுமானாலும் கலியாணம் செய்யலாம். சில வகுப்புகளில் எப்படியானாலும் 10 வயதிற்குள் கலியாணம் செய்தாகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் உண்டு. கலியாணம் என்பது, பெண் கழுத்தில் ஆண் ஒரு கயிற்றைக் கட்டுவதுதான். தாலி கட்டுகின்றது என்கின்ற சடங்கு நடக்கிற வரையிலும், பெண்ணுக்கு மாப்பிள்ளை இன்னார் என்றே அடையாளம் தெரியாது; மாப்பிள்ளைக்கும் பெண் இன்னார் என்றே அடையாளம் தெரியாது. கலியாணம் என்பது பெண்–மாப்பிள்ளை ஆகியவர்களின் பெற்றோர்கள் செய்துகொள்ளும் ஏற்பாடே ஒழிய, பெண்–மாப்பிள்ளை ஆகிய இருவருடைய சம்மதம் என்பது கிடையாது. பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொருத்தம் என்பது ஜோசியத்தின் மூலமும் சகுனத்தின் மூலமும் பார்ப்பதே தவிர, பிரத்தியட்ச யோக்கியதை

முதலியவைகளைக் கொண்டு பார்ப்பதில்லை. 5, 10 வயதுள்ள சிறு பெண்களுக்கு 40, 50 வயதுள்ள மாப்பிள்ளைகளைக் கலியாணம் செய்வதும் உண்டு. 60 70 வயதுக் கிழவர்களுக்குச் சிறு பெண்களைக் கலியாணம் செய்வதும் உண்டு. சென்ற ஆண்டில் கூட 90 வயதுக் கிழவன் ஒரு சிறு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான். பெண்ணின் தாய் தகப்பன்மார் யாருக்குக் கலியாணம் செய்து கொடுப்பதானாலும் பெண் சம்மதித்துத்தான் ஆகவேண்டும். பெண் ஏதாவது தனது அதிருப்தியைக் காட்டினால், அது பெண்ணின் கற்பிற்கே விரோதமானது என்று சொல்லிவிடுவதால், பெண் தன்னை யாருக்குக் கொடுப்பதானாலும் சம்மதித்தாக வேண்டும்.

கலியாணம் செய்யப்பட்ட பெண், புருஷன் வீட்டு வேலைக்கே கலியாணம் செய்யப்பட்டதாய்க் கருதி, புருஷன் வீட்டில் மாமனார், மாமி, நாத்தி, கொழுந்தன் ஆகியவர்களுக்கு வேலையாளாக இருந்து சகல வேலைகளையும் பார்க்கவேண்டும். சில வகுப்புகளில் பெண், புருஷனின் தகப்பன்மாருக்கும், சகோதரர்களுக்கும் கூட 'பெண்சாதி'யாய் இருக்க வேண்டும். இதற்குச் சட்டத்திலும் இடம் உண்டு. பெண், தாய் வீட்டிலிருந்து புருஷன் வீட்டிற்குப் போகும்பொழுது அழுதுகொண்டே போவாள். பெற்றோர்கள் பெண்ணுக்குச் சொல்லியனுப்பும் புத்திமதியெல்லாம், 'புருஷன் வீட்டில் உள்ளவர்களுக்குப் பணிந்து, நல்ல வேலைக்காரியாய் நடந்துகொள்' என்றுதான் சொல்லியனுப்புவார்கள். அந்தப் பெண்ணை புருஷன் எவ்வளவு கொடுமையாய் நடத்தினாலும் கேள்வி கிடையாது. புருஷன் எவ்வளவு அயோக்கியனாகவும், குடிகாரனாகவும், சூது, விபச்சாரம் செய்பவனாகவும் இருந்தாலும் பெண்ணுக்கு அவனைக் கேட்க அதிகாரம் கிடையாது.

அவன் வரும்படி இல்லாமல் திரிந்தாலும், பெண் தானே கூலி வேலை செய்தாகிலும் அவனுக்குச் சோறு போடவேண்டும். பெண் இவற்றையெல்லாம் தனது முன்ஜென்மத்தின் கர்மபலன் என்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

புருஷன் மேற்கொண்டு எத்தனை 'பெண்சாதி' வேண்டுமானாலும் கலியாணம் செய்துகொண்டு வாழலாம்; எத்தனை 'தாசி'களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இந்துமதக் கடவுள்கள் 60 ஆயிரம் பெண்களைக் கட்டிக்கொண்டதாகவும், 12 ஆயிரம் தாசிகளை வைத்திருந்ததாகவும் மத ஆதாரங்கள் உண்டு. எந்த நிலையிலும் கலியாண ரத்து என்பது கிடையவே கிடையாது. பெண்ணுக்கு ஒரு தடவை கலியாணம் ஆகிவிட்டால் சாகும்வரை அவனிடமேதானிருக்க வேண்டும். புருஷன் கொடுமை சகியாமல் பெண் தாய் வீட்டுக்குப் போய்விட்டால், புருஷன் கோர்ட்டில் தாவாசெய்து டிக்ரி பெற்றுப் பெண்ணைச் சுவாதீனம் செய்துகொள்ளலாம். ஆனால், பெண்ணுக்குப் புருஷனிடம் இருந்து ஜீவனாம்சம் பெறத்தான் பாத்தியம் உண்டு. அதுவும் பெண் விபச்சாரி என்று புருஷன் ருசுப்படுத்திவிட்டால் அந்த ஜீவனாம்சமும் இல்லை.

பெண்ணுக்குத் தகப்பன் சொத்தில் சிறிதும் பங்கு கிடையாது; புருஷன் சொத்திலும் பங்கு கிடையாது.

புருஷன் இறந்துவிட்டால் பெண் விதவை என்று அழைக்கப்படுவாள். புருஷன் இறக்கும்போது அவள் எவ்வளவு செல்வத்துடன் மேன்மையாய் இருந்தாலும், கணவன் இறந்தவுடன் அவள் ஒரு 'அபசகுன உருவமாக ஆகிவிடுவாள். நகை அணியக் கூடாது; புஷ்பம், வாசனை, நல்ல உடுப்பு ஆகியவை அணியக்கூடாது. ஒரே வேளை—அதுவும் சத்தற்ற ஆகாரந்தான் சாப்பிட வேண்டும். சில வகுப்புகளில் தலையை மொட்டையடித்து, வெள்ளை உடுப்பு அணிந்து கொண்டு வீட்டிற்குள்ளாகவே வீட்டு வேலைகள் செய்து கொண்டு இருக்கவேண்டும். விதவையைக் காணுவது அபசகுனமாகப் பாவிக்கப்படும். விதவைக்குக் குடும்பக் காரியங்களில் அல்லது சடங்குகளில் எந்தவித பாத்தியமும் கிடையாது; சாப்பாட்டுக்கு மட்டும் பெறப் பாத்தியம் உண்டு. வேறு கலியாணம் செய்து

கொள்ளக்கூடாது. ஆனால், புருஷன் தனது பெண் சாதி இறந்த 10 நாட்களிலே மறு கலியாணம் செய்து கொள்ளலாம்.

அவன் எவ்வளவு கிழவனாய் இருந்தாலும் மறுமணம் செய்து கொள்ளுவதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை. புருஷன் குழந்தையே இல்லாவிட்டாலும், ஆண் குழந்தை இல்லாவிட்டாலும் வேறு கலியாணம் செய்துகொள்ளலாம். பெண் தனது குழந்தைப் பருவத்தில் புருஷன் இறந்துபோனாலும் வேறு கலியாணம் செய்துகொள்ளக் கூடாது.

இது பொதுநிலைமையாகும். இனி சில தனி வகுப்புகளிலுள்ள பெண்கள், நிலைமைபற்றிச் சில குறிப்பிடுகின்றேன். சில வகுப்புகளில் பெண்கள், ஆண்களின் கண்களுக்கே தென்படக் கூடாது. உடம்பு, தலை, முகம் ஆகிய எல்லாவற்றையும் ஒரு துணியினால் போர்த்து மூடிக்கொள்ளவேண்டும். கண்கள் மாத்திரம் தெரியும்படி ஓட்டை விட்டுப் பார்த்துக்கொண்டே போகவேண்டும். பெண்கள் எங்கும் தனியே போகக் கூடாது; சிறு பெண்ணை, அதாவது 8, 10, 12 வயதுப் பெண்ணை 20, 30, 40 வயதுக் காரர்களுக்குக் கட்டிக் கொடுத்தாலும், கலியாணமான அன்று இரவே படுக்கை வீட்டில் பெண்ணையும் ஆணையும் தனியாகப் படுக்கவைத்துவிடுவார்கள். அவன் அதை காமாகாரமாய், எப்படி மிருகத்தனமாய் வேண்டுமானாலும் சில சமயங்களில் நடத்துவான்.

சில வகுப்புகளில், மகனுக்குக் கலியாணம் செய்த பெண் மாமனாருக்கும் 'பெண் சாதியாய்' இருந்தாக வேண்டும். 10 வயதுப் பையனுக்கு 20 வயதுப் பெண்ணைக் கலியாணம் செய்து, பையன் 18 வயது நிரம்புவதற்குள் பெண்ணுக்கு 2, 3 குழந்தைகள் பிறந்துவிடும்; குழந்தைகள் மாமனாருக்கோ அல்லது புருஷனுடைய அண்ணனுக்கோ பிறந்ததாக இருந்தாலும் அக் குழந்தைகள் சட்டப்படி புருஷனுக்குப் பிறந்த 'லெஜிட்டிமேட்' (Legitimate) குழந்தைகளாகவே பாவிக்கப்படும்.

சில வகுப்புகளில் குடும்பத் தலைவன் மாத்திரம் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு அவனுடைய சகோதரர்கள் உட்பட எல்லோருமே, அப்பெண்ணைப் 'பெண்சாதியாய்' அனுபவிப்பது உண்டு.

சில வகுப்புகளில் ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம்தான் கலியாணம் செய்து கொள்ளலாம். மற்ற இளைய சகோதரர்களெல்லாம் வேறு சாதிப் பெண்களை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டு இருப்பது வழக்கம். இதன்படி, வைப்பாட்டியாக வைத்துக்கொண்ட பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்தால், அவற்றைத் தகப்பன் காப்பாற்றவேண்டும் என்கின்ற நிபந்தனை இல்லை; தகப்பன் சொத்தில் அவர்களுக்குப் பங்கும் இல்லை.

சில வகுப்புகளில் உயர்ந்த சாதிக்காரன் என்கின்ற 'பிராமணன்' மற்ற வகுப்புப் பெண்களைக் கூப்பிட்டால் அவனுக்கு அவள் இணங்கியே ஆகவேண்டும். ஒரு பெண்ணினுடைய புருஷனைக் கூப்பிட்டே அவனுடைய பெண்சாதிமீது தனக்கு ஆசையாய் இருப்பதாகவும் அவளை அழைத்துவரும்படியும் கேட்டால், புருஷன் உடனே அழைத்துக் கொண்டு போகவேண்டும். பெண் சம்மதிக்காவிட்டால் நிர்ப்பந்தப்படுத்தி, அல்லது கொடுமைப்படுத்திச் சம்மதிக்கச் செய்வதும் உண்டு. சில வகுப்புகளில் 'குரு' கூப்பிட்டால் இணங்கியே ஆகவேண்டும். முன் குறிப்பிட்ட—அதாவது ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம் கலியாணம் செய்துகொள்ளலாம்; மற்றவர்கள் வேறு வகுப்புகளில் வைப்பாட்டி வைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்ட வகுப்பில், பெண்கள் மிதி ஆகி அனேக பெண்கள், சாகும் வரை கலியாணம் இல்லாமல் கன்னிப் பெண்களாக இருந்து, சாவது வழக்கம். இப்படிப்பட்ட பெண்களுக்கு, அவர்கள் செத்த பிறகு பிணத்திற்கு ஒருவனைத் தாலி கட்டச் செய்து பிறகு நெருப்பில் வைத்துக் கொளுத்திவிடுவது வழக்கம்,

சில வகுப்புகளில், ‘ கடவுளுக்குப் பெண்சாதி ஆகிறது ’ என்று கோயிலில் வைத்துக் கடவுளைக் கலியாணம் செய்துகொண்டதாக ஏற்பாடு செய்து, பொது விபச்சாரியாய் வாழச்செய்வது உண்டு. இவர்களுக்குப் பெயர் ‘ தேவதாசி.’

ஒரு கலியாணமான பெண்ணுடன் மற்றொரு ஆண் சம்பந்தம் வைத்துக்கொண்டதாகத் தெரிந்தால், ஆண் சட்டப்படி தண்டனைக்குள்ளாவான். பெண்ணைச் சாதியை விட்டுத் தள்ளிவைத்துவிடுவார்கள். ஒரு பெண் விபச்சாரியாக இருந்தால், சொத்து வைத்துக்கொண்டு சுதந்திரமாய் இருக்கலாம்; இல்லாவிட்டால் சொத்து உரிமை இல்லை; சுதந்திரமும் இல்லை.

[பெண்கள் கூட்டத்தில் சொற்பொழிவு—‘ குடிஅரசு ’ 10–1–1948]

7. பெண்கள் போகப் பொருள்களா ?

தலைவரவர்களே ! பெரியோர்களே ! தோழர்களே !

பெண்கள் மனித சமுதாயத்தில் சரி பகுதி எண்ணிக்கை கொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றம் அல்லாமல், மற்றபடி பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்டவர்கள் ஆவார்கள் என்பேன். நாமும் அவர்களைச் சிசு குழந்தைப் பருவமுதல் ஓடிவிளையாடும் பருவம் வரையில் கொஞ்சி முத்தங்கள் கொடுத்து, பலவிதத்தும் பேத உணர்ச்சியே அற்று, ஒன்றுபோலவே கருதி நடத்துகிறோம், பழகுகிறோம். அப்படிப்பட்ட மனித ஜீவன்கள் அறிவும் பக்குவமும் அடைந்தவுடன், அவர்களைப்பற்றி இயற்கைக்கு மாறான கவலை கொண்டு, மனித சமுதாயத்தில் வேறாக்கி, கடைசியாக ஒரு பொம்மையாக்கி, பயனற்ற ஜீவனாக மாத்திர மல்லாமல், அதைப் பெற்றோருக்கு ஒரு தொல்லையான ‘ பண்டமாக ’ ஆக்கிக் கொண்டு, அவர்களது வாழ்வில் அவர்களை அவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கவலைப் படத்தக்க ஒரு ‘ சாதனமாய்ச் ’ செய்துகொண்டு, அவர்களைக் காப்பாற்றவும் திருப்திப் படுத்தவும் அலங்காரப்படுத்தி திருப்தியும் பெருமையும் அடையச்செய்ய வேண்டியதுமான ஓர் அஃறிணைப் பொருளாகவே ஆக்கிவருகிறோம்.

பெண்களால் வீட்டிற்கு, சமுதாயத்திற்குப் பலன் என்ன ? எங்கு கெட்டபேர் வந்து விடுகிறதோ என்பது தானே ? இன்று பெண்கள் வேலை என்ன ? ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணாய் அமைப்பது. அது எதற்கு? ஆணின் நலத்துக்குப் பயன்படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக்கும் பெண் ஓர் உபகருவி என்பதல்லாமல் வேறு என்ன ? ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி ; ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி ; ஓர் ஆணின் குடும்பப் பெருக்குக்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை ; ஓர் ஆணின் கண் அழகிற்கும் மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல், பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள் ; பயன்படுத்தப்படு கிறார்கள் ?

இது என்ன நியாயம் ? மனித சமுதாயம் தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி, ஐந்து முதலியவைகளில் வேறு எந்த ஜீவனாவது, ‘ ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம் ’ என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா ?

இந்த இழிநிலை பெண்களுக்கு அவமானமாய்த் தோன்றவில்லை என்பதற்காகவே, ஆண்கள் பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன். ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தனது சொத்து என்று எண்ணுகிறானே—எதனால் ? துணியாலும் நகையாலுந்தானே ! கம்பி இல்லாத தந்தியும் ரேடியோவும், அணுகுண்டும் கண்டுபிடிக்கப் பட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் அலங்காரப் பொம்மைகளாக இருப்பதா ?

நம் 'பெண்கள் உலகம்' பெரிதும் மாற்றமடைய வேண்டும். நம் பெண்களைப் போல், பூமிக்குப் பாரமானவர்கள்—மனிதனுக்குத் தொல்லையானவர்கள்— நல்ல நாகரீக மான வேறு நாடுகளில் கிடையாது. இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். பெற்றோர்களும், கணவன்மார்களும் அவரவர்களது பெண்களை அழகிய பொம்மைத் தன்மையை உடையவர்களாக ஆக்கி அதைக் கொண்டே திருப்தி அடைகிறார்கள்; பெருமை அடைகிறார்கள். பெண்களைத் திருப்தி செய்ய அவர் களை நல்ல பெண்களாக ஆக்க, 'விலையுயர்ந்த நகையும் துணியும் கொடுத்து அழகிய சிங்காரப் பதுமையாக்கிவிட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பெண்கள் பெருமை, வருணனை ஆகியவைகளில் பெண்கள் அங்கம், அவயவங்கள், சாயல் ஆகியவைகளைப்பற்றி 50 வரி இருந்தால் அவர்களது அறிவு, அவர்களால் ஏற்படும் பயன், சக்தி திறமை பற்றி ஒரு 5 வரிகூட இருக்காது. பெண்களின் உருவை அலங் கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழுவது ஆகியவைகள் பெண்கள் சமுதாயத் திற்கு அவமானம், இழிவு, அடிமைத்தனம் என்பதை ஆயிரத்தில் ஓர் பெண்ணாவது உணர்ந்திருக்கிறாள் என்று சொல்லமுடியுமா?

பெண்களுக்குத் தகப்பன் சொத்தில் உரிமை கிடையாதது ஏன் என்று எந்தப் பெண்ணாவது காரணம் கேட்டனளா? "பெண்களை அனுபவிக்கிறவன்—அவர்களிடம் வேலை வாங்கிப் பயன் அடைகிறவன் காப்பாற்றமாட்டானா?" என்பதுதான் அதற்கேற்ற நகை அணி ஆகியவையாகும்.

'பெண்களுக்கு, மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை, துணிமணி, ஆபரணம் ஏன்?' என்று எந்தப் பெண்ணாவது, பெற்றோராவது, 'கட்டினவ'ராவது சிந்திக்கிறார் களா? பெண்கள் அஃறிணைப் பொருள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக்கொண்டு மற்ற மக்கள் கவனத்தைத் தம்மீது திருப்புவது இழிவு என்றும், அநாகரீகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம், அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவே இருக்கிறது.

நல்ல கற்புடைப் பெண்களுக்கு உதாரணம், "மற்றொருவர் உள்ளம் புகாள்" என்பது திராவிட மரபு நூற்களின் கூற்று. அதாவது, ஒரு பெண் இயற்கையில் கற்புடை யவளா யிருந்தால் தன் கணவன் தவிர மற்றவர்கள் நினைவுக்குக்கூட ஆளாகமாட்டாள்— "பிறர் நெஞ்சு புகாள்" என்பதாகும். நாம் நம் பெண்ணை மற்றவர்கள் எப்படிப்பட் டவர்களாயினும், 150 தடவை திரும்பித் திரும்பிப் பார்க்கும்படி, அவர்கள் கவனத்தை நம்மீது திரும்பும்படி அலங்கரிக்கிறோம். அலங்கரிக்க அனுமதிக்கிறோம். அதில் நம் பணம், உழைப்பு, நம் வாழ்க்கைப் பயன் முதலியவைகளைச் செலவழிக்கிறோம். இது ஏன், எதற்காக என்று சிந்திக்காததால்—அதைத் தவிர வேறு காரியத்திற்கு நம் பெண்கள் பயன்படாமல் போய்விட்டார்கள்.

நான் பாமர மக்களை மாத்திரம் சொல்லவில்லை. நம் அறிஞர், செல்வர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரானவர்கள் என்று சொல்லப்படும் பெரியோர்களின் யோக்கியதை களையும், அவர்கள் பெண்கள் உலகத்துக்கு ஆற்றும் தொண்டுகளைப் பற்றியுமே சொல்லுகிறேன்.

திராவிடப் பேரறிஞர்களின் மனைவிகள், தங்கை, தமக்கைகள், பெண்கள் எங்கே, எப்படிப் பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படித் தகுதி ஆக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? ஷராப்புக் கடைகள், ஜவுளிக் கடைகள் ஆகியவற்றில் விளம்பரத்திற்கு வைத்திருக்கும் அழகிய பொம்மைகள், உருவங்கள் போலல்லாமல்—நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்கு, பெண்கள் உலகத்திற்கு இவர்கள் என்ன மாதிரியில் தொண்டாற்ற அல்லது தாங்களாவது ஒரு புகழோ, கீர்த்தியோ பெறத்தக்கபடி வைத்தார்களா? இவர்

களே இப்படி இருந்தால்—மற்ற பாமர மக்கள், தங்கப் பெட்டியின் உள்ளே வெல்வெட் மெத்தை போட்டுப் பூட்டித்தானே வைப்பார்கள்!

நம் பெண்கள்—நகைகள் மாட்டும் 'ஸ்டாண்டா'? இந்தப் பிரபல ஆண்கள் பிறந்த வயிற்றில்தான் இவர்கள் தங்கை, தமக்கையர் பிறந்தார்கள்? இவர்கள் தகப்பன்மார்கள் தான்—அவர்களுக்கும் தகப்பன்மார்கள்? அப்படி இருக்க, இவர்களுக்கு இருக்கும் புத்தி திறமை அவர்களுக்கு ஏன் இல்லாமல் போகும்? இதைப் பயன்படுத்தாதது நாட்டுக்கு, சமூகத்திற்கு நட்டமா, இல்லையா?

பெண்கள் படிப்பு என்பது சுத்த முட்டாள்தனமான முயற்சியாகவே பெரிதும் இருக்கிறது. ஒரு குடும்ப வாழ்க்கைப் பெண்ணுக்கு அவள் தாய் தகப்பன் பாட்டு, பிடில், வீணை, நாட்டியம் கற்றுக்கொடுத்து, அவற்றில் வெற்றியாய்த் தேறவைக்கின்றனர். அப் பெண்ணை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்தபின்பு, அந்தப் பாட்டு, பிடில், வீணை யாருக்கு என்ன நன்மை கொடுக்கிறது? புகுந்த வீட்டில் சங்கீதம் பாடினால், 'இது என்ன குடித்தன வீடா வேறுவீடா?' என்று மாமி கேட்கிறாள். பிடிலும் வீணையும் தூசி அடையும்.

ஆகவே, இந்தப் படிப்பு நல்ல மாப்பிள்ளை சம்பாதிக்க ஒரு 'அட்வர்டைஸ் மெண் டாகப்' பயன்பட்டது தவிர, மற்றபடி வீணாகப் போய்விட்டதல்லவா? வெறும் செலவு கண்டதுதானே மிச்சம் என்கிறேன். அதுபோல், ஒரு பெண்ணை தாய் தகப்பன்—B.A. படிக்கவைத்து, ஒருவன் கையில் பிடித்துக்கொடுத்து, அந்தப் பெண் சமையல் செய்யவும் குழந்தை வளர்க்கவும் நகை, துணி அலங்காரங்களுடன் மக்கள் கவனத்தை ஈர்க்கவும் செய்தால் B.A. படிக்கவைத்த பணம் வீண் என்பதோடு, அதற்காக சர்க்கார் செலவழித்த மக்கள் வரிப்பணமும் வீண்தானே? இது தேசிய குற்றமாகாதா?

இந்தத் துறையில் எந்த அறிஞரும் சீர்திருத்த வாதியும் கவலை செலுத்தாமல்—எல்லோராலும் இனப் பெருக்கத்திற்கே பெண்கள் ஆளாக்கப்பட்டு விட்டார்கள். நான் சில படித்த பெண்களைப் பார்க்கிறேன். வயிற்றில் ஒரு குழந்தை; கட்கத்தில் ஒரு குழந்தை; கையில் பிடித்துக்கொண்டு ஒரு குழந்தை; இவ்வளவோடு சிலருக்கு முன்னால் ஓடும்படி ஒரு குழந்தையை விட்டு—இப்படியாகப் படைகளோடு நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் கூட்டங் களுக்கு வந்து நடுவிலிருந்துகொண்டு, நிகழ்ச்சிகளுக்கு இடையூறும் தொல்லையும் கொடுப்பதைப் பார்க்கிறேன். இதற்காக அவர்கள் வெட்கப்படாததையும், சிலர் வருத்தப் படுவதையும் பார்க்கிறேன். இது மனித சமூகத்தில் இருக்கத்தக்கதா? அதுவும் நாகரிக சமூகத்தில்—படித்த பெண்கள், படித்தவர் வீட்டுப் பெண்கள் என்கிறவர்கள் இடையில் இருக்கத்தக்கதா? இந்த இலட்சணத்தில் நகைகள், விலையுயர்ந்த துணிகள் ஏன்? குழந்தைகள் கூட்டத்தில் மலஜலம் கழிக்கும், கத்தும் ஆபாசங்கள் ஏன்?

நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தை பாங்கியில் போட்டு குறைந்த வட்டியாவது வாங்கி, குழந்தை பிறந்தவுடன் அதை எடுக்க அந்த வட்டியில், ஓர் ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக்கொள்ளச் செய்தால், அன்பு குறைந்துவிடுமா? பெற்ற தகப்பன் குழந்தையைத் தன்னுடன் கூடவே வைத்துத்தானா அழகு பார்க்கின்றான்? அன்பு காட்டுகின்றான்? கொஞ்சி விளையாடுகின்றான்? ஆகையால், குழந்தையை ஆட்கள் மூலம் வளர்க்க வேண்டும். சமையல்—ஆட்கள் மூலம் செய்விக்க வேண்டும். பெண்கள்—ஆண்களைப் போல் உயர்வேலை பார்க்கவேண்டும்; பொம்மைகளாக—நகைமாட்டும் ஸ்டாண்டுகளாகக் கூடாது என்கிறேன்.

ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும், தொண்டுகளையும் பெண்கள் பார்த்துச் செய்ய முடியும் என்பேன். ஆனால் நகைப் பைத்தியம்—துணி அலங்காரப் பைத்தியம்—அணிந்து கொண்டு சாயல் நடை நடக்கும் அடிமை, இழிவு, சுயமரியாதை அற்ற தன்மைப் பைத்தியம் ஒழிய வேண்டும்.

நம் பெண்கள், நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயன்படாமல் அலங்காரப் பொம்மைகளாக ஆனதற்கு, ஆண்களின் கண்களுக்கு விருந்தானதற்குக் காரணம், இந்தப் பாழாய்ப் போன—ஒழுக்கமற்ற சினிமாப் படங்களேயாகும். சினிமாப் பெண்களின் தன்மை என்ன? ஒழுக்கம் என்ன? வாழ்க்கை என்ன? இலட்சியம் என்ன? இவை எல்லாவற்றையும் நம் பெண்கள் கருதாமல்—புகழ், வீரம், பொதுநலத் தொண்டு முதலியவற்றில் கீர்த்தி பெற்ற ஆண்களைப் போல் தாங்களும் ஆகவேண்டுமே என்றில்லாமல்—இப்படி அலங்கரித்துக் கொண்டு திரிவது பெண்கள் சமுதாயத்தின் கீழ்ப்போக்குக்குத்தான் பயன்படும் என்று வருந்துகிறேன்.

'டீசென்சி' (Decency)—சுத்தம்—கண்ணுக்கு வெறுப்பில்லாத ரம்மியம் வேண்டாம் என்று நான் சொல்லுவதாக யாரும் கருதக்கூடாது. அது அவசியம் வேண்டும். ஆனால், அது அதிகம் பணம் கொண்ட, மக்கள் கவனத்தை ஈர்க்கத் தகுந்த 'பேஷன்' அலங்காரத்தால் அல்ல என்றும், சாதாரண குறைந்த தன்மையில் முடியும் என்றும் உணரவேண்டும்.

நம் நாட்டுப் பெண்கள் மேல் நாட்டுப் பெண்களைவிடச் சிறந்த அறிவு, வன்மை, ஊக்கம் உடையவர்களாவார்கள். நம் நாட்டுச் சீதோஷ்ணநிலை அப்படிப்பட்டது. ஒரு 'ருக்குமணி', ஒரு 'விஜயலட்சுமி' என்கின்ற பார்ப்பனப் பெண்தானா பொது வாழ்வில் ஈடுபடத்தக்கவர்களாக, மந்திரிகளாக ஆகவேண்டும்? ஏன் நம்மவர்கள் ஏராளமாக வெளியில்வரக்கூடாது? இவர்களைத் தடுப்பது சீலை, நகை, துணி அலங்காரவேஷம் அல்லாமல் வேறு என்ன?

எனவே, பெற்றோர்கள் தங்கள் பெண்களைப் பெண் என்றே அழையாமல் ஆண் என்றே அழைக்க வேண்டும். பெயர்களும் ஆண்கள் பெயர்களையே இடவேண்டும்! உடைகளும் ஆண்களைப் போல கட்டுவித்தல் வேண்டும். சுலபத்தில், 'இது ஆணா? பெண்ணா' என்று மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் தயாரிக்க வேண்டும். பெண்ணும், தன்னை, 'பெண் இனம்' என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும் படியாக நடக்கவேகூடாது. ஒவ்வொரு பெண்ணும், 'நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? ஏன் உயர்வு தாழ்வு?' என்ற எண்ணம் கொள்ள வேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், நம் பெண்கள் வெறும் போகப் பொருளாக ஆகப்படாது. அவர்கள் புது உலகைச் சித்தரிக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

[திருப்பத்தூரில் 15-9-1946-ல் சொற்பொழிவு-'குடிஅரசு' 21-9-1946]

8. இளம் வயது விவாக விலக்கு மசோதா

மக்கள் இளம் வயதில்—அதாவது தக்க வயதும், அறிவும், உணர்ச்சியும் இல்லாத காலத்தில்—விவாகம் செய்யப்பட்டு வருவதால், மக்கள் சமூக வளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்கின்ற உண்மையை நமது வாழ்வில் தினமும் அனுபவத்தில் கண்டு வருவதோடு, அவற்றைத் தடுக்கவேண்டுமென்பதாகவும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

இதைப்பற்றிப் பல சமூக மகாநாடுகளிலும், பல சீர்திருத்த மகாநாடுகளிலும் பேசி தீர்மானங்களும் செய்து வந்திருக்கின்றோம். ஆனால், அதை அனுசரித்து அது அமுலில் வரத்தக்க ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரம்பித்தால், உடனே அங்கு மதம் வந்து குறுக்கே விழுந்து, அம் முயற்சிகளை அழிப்பது வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றதும் நாம் அறிவோம். இதன் காரணமாகவே, பெரிதும் நாம் மனித இயற்கைக்கு விரோதமான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண்மூடிப்போக வேண்டுமென்று முயற்சித்து வருகின்றோம். இம் முயற்சிக்கு யார் எதிரிடையாக இருந்தபோதிலும் நாம் ஒரு சிறிதும் இலட்

சியம் செய்யாமல் இடையூறான மதங்களையும் அதற்கு ஆதாரமான சாமிகளையும்கூட ஒழித்தாக வேண்டும் என்றே சொல்லுகின்றோம்.

சமீப காலத்தில் சென்னை சட்டசபையில் இது விஷயமாய் சட்டம் செய்வதைப்பற்றி வாதம் நடைபெற்ற சமயத்தில், பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்த மாஜி மந்திரி சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் சற்று மாறுதலாய்ப் பேசியதற்காக அவரை, 'பார்ப்பனரல்லா தார் கட்சி ஸ்தானத்தை இராஜிநாமா கொடுத்துவிட்டுப் பார்ப்பனர் கட்சிக்குப் போய்விட வேண்டும்' என்றுகூட எழுதியிருந்தோம். அவரை இனி 'பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர்' என்று சொல்வது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே அவமானம் என்றுகூட எழுதி இருந்தது வாசகர்களுக்குத் தெரியும்.

இந்நிலையில் சென்ற வாரம் இந்திய சட்டசபையில் இம் மசோதா விவாதத்திற்கு வந்தபோது தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பெரிதும் இம் மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசியிருப்பதாகவும், பலர் தனி விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும், அதில் சில முகமதிய அங்கத்தவர்களும் கையொப்பம் இட்டிருப்பதாகவும் தெரிய வருவதுடன், பல சங்கராச்சாரி களும், சாஸ்திரிகளும் 'இராம ராஜ்யம்' நடத்தும் மகாராஜாக்களும் இம் மசோதாவிற்கு விரோதமாய் அரசப் பிரதிநிதியிடம் தூது போனதாகவும் தெரியவருகின்றது.

இந்த வருணாசிரமக்காரரோடு சில முகமதியர்களும் சேர்ந்துகொண்டதானது, அச் சமூகத்திற்கே அவமானத்தை விளைவித்த காரியமென்பதோடு, மனித சமூக உரிமைக்கே கேடுவிளைவித்ததாகுமென்றே கருதுகிறோம். அவர்களைப்பற்றிய மற்ற விஷயங்களையும், அதில் இவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்து வாழவேண்டிய அவசியத்தில் இருக்கிற விஷயங்களையும் வெளிப்படுத்தவும் அவர்களைக் கண்டிக்கவும் ஆன காரியங் களை அச் சமூகத் தலைவர்களுக்கும் அச் சமூகப் பத்திரிக்கைகளுக்குமே விட்டுவிட்டு, நமது பிரதிநிதி என்னும் உரிமையின் பேரால் நடந்துகொண்டவர்களைப்பற்றி சற்று விசாரிப் போம்.

இது விஷயமாய் இந்திய சட்டசபையில் நடந்த முழு விவரத்தையும் எழுத நமக்குப் போதிய இடமில்லாவிட்டாலும், அம் மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசிய தமிழ்நாட்டுப் பிரதிநிதியும், இந்துமத வருணாசிரமப் பிரதிநிதியும் ஆகிய எம். கே. ஆச்சாரியார் அவர் களின் போக்கைச் சற்று கவனிப்போம்.

திரு. ஆச்சாரியார் அவர்கள் இச் சட்டத்தை எதிர்த்துப் பேசுகையில், 'பாலிய விவாக மில்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்தியமில்லை' என்றும், 'பெண் களின் வாழ்க்கை நாசமடைந்துவிடும்' என்றும், 'குடும்ப வாழ்க்கை துக்கமயமாகி சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும்' என்றும், 'புருஷர்களுக்குச் சிறைத் தண்டனை அளித்து விடுவதால் பெண்கள் நடத்தையும் அதிகக் கேவலமாக மாறிவிடும்' என்றும், 'பாலிய விவாகம் இருந்தாலொழிய வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்' என்றும் பேசி இருக்கின்றதாகத் தெரியவருகிறது. இவைகள் 'சுதேசமித்திரன், தமிழ்நாடு' பத்திரிகைகளில் காணப்படுகின்றதுடன் 'சுதேசமித்திரன்' நிருபரும் திரு. ஆச்சாரியாரை ஆதரித்தும் புகழ்ந்தும் எழுதி இருக்கின்றார்.

பாலிய விவாக மில்லாவிட்டால் பெண்கள் கற்பு கெட்டுப்போகும் என்று சொல்வதும், வாழ்க்கையில் துக்கம் ஏற்படும் என்று சொல்வதும் எவ்வளவு மனந்துணிந்து சொன்ன அயோக்கியத்தனமான வார்த்தைகளாகும் என்பதை வாசகர்கள்தான் யோசித்துப் பார்க்க வேண்டும். இது பார்ப்பனர்களுக்காக என்றோ, அல்லது அய்யங்கார் கூட்டத்திற்காக என்றோ திருவாளர் ஆச்சாரியார் பேசியிருப்பாரானால், நமக்கு அதைப்பற்றி அவ்வளவு கவலை இல்லை. ஆனால், நம் எல்லோருக்குமே பிரதிநிதி என்கின்ற முறையில் பேசி இருப்பதால் நாம் அதைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. நம்மில் அனேகர்கள்

இதுவரை பெண்களை சுமார் இருபது வயதுவரைகூட வைத்திருந்து விவாகம் செய்து கொடுத்திருக்கின்றார்கள் என்பதும், இப்போதுதான் வரவர பார்ப்பனீயத்திற்கு அடிமைப் பட்டு பார்ப்பனர்களைப் பார்த்து காப்பியடித்து, தாங்களும் உயர்ந்த சாதிக்காரர் என மதிக்கப்படவேண்டும் என்கின்ற ஆசையில், பலர் சிறு பிராயத்திலேயே கலியாணம் செய்து விடுகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. திரு. ஆச்சாரியாரின் வாக்குமூலப் படிக்குப் பார்த்தால், பக்குவமான பின்னோ, பக்குவமாகி 2 வருடம், 4 வருடம் பொறுத்தோ விவாகம் செய்யப்பட்ட பெண்கள் கற்பில்லாமல் விபச்சாரிகளான பிறகுதான் விவாகம் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாக ஏற்படுகிறது. திரு. ஆச்சாரியார் ஒரு சமயம் தாம் மற்ற வர்களைப்பற்றி அப்படிச் சொல்லவில்லையென்றும், தம்முடைய சமூகத்தைப்பற்றித்தான் தாம் சொன்னதாகவும் சொல்வாரானால், தம் சமூகத்துப் பெண்களும் பக்குவமடைந்து விட்டால் அவர்கள் கலியாணமில்லாமல் கற்புடனிருக்க முடியாதென்று கருதிச் சொன்னவ ராகவே நினைக்க வேண்டியிருக்கிறது. இதனால் அவர் எப்படியும் பெண்கள் சமூகத்தையே இழிவுபடுத்தியதாகத்தான் கொள்ளவேண்டியிருக்கிறது.

திரு. ஆச்சாரியார் இப்படிச் சொல்ல நேர்ந்தது அந்தப் பார்ப்பனீயத் தன்மையே ஒழிய வேறல்ல. ஏனெனில் பார்ப்பனீயத்தன்மையான இந்து மதம் என்பதில், 'பெண்கள் காவல் இல்லாமல் கற்புடனிருக்க முடியாது' என்றே சொல்லப்படுகிறது. உதாரணமாக, இந்துக்கள் என்பவர்கள் கலியாண காலத்தில் கலியாணப் பெண்களுக்கு கற்புக்கு உதாரண மாகக் காட்டி உறுதிவாங்க வழங்கும் மகா பதிவிரதையென்று சொல்லப்படும் அருந்ததி என்னும் 'உத்தம ஸ்திரி'யின் யோக்கியதையைப் பார்த்தால், மற்ற பெண்களுடைய நிலைமை தானாகவே விளங்கும். அதாவது, ஒரு சத்தியம் சொல்லவேண்டிய சந்தர்ப்பத்தில் அருந்ததி சொல்வதாவது :—

'ஸ்திரீகளுக்கு மறைவான இடமும், புருஷர்களின் சந்திப்பும் கிடைக்கும் வரையில் தான், ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க முடியுமாதலால், பெண்களை, வெகு ஜாக்கிரதை யாகக் காவல்காக்க வேண்டும்' என்பதாகத் தேவர்களிடத்தில் சொல்லி சத்தியத்தைக் காப் பாற்றினதாக இந்துமதம்—அதிலும் சைவர்களுக்கு ஆதாரமான, 'மகா சிவபுராணம்' சொல்லுகிறது. அதற்கு ஆதாரமாக மற்றொரு இடத்திலும் அதாவது துரோபதையும் அருந்ததி சொன்னதையேதான் சொல்லி, சத்தியத்தை நிரூபித்ததாகவும் சொல்லப்பட்டிருக் கிறது.

அதாவது, 'ஆண்கள் இல்லாதிருந்தாலொழிய, பெண்கள் கற்புடையவர்களாக இருக்க முடியாது' என்பதாகப் பாரதத்தில் இதைப்பற்றிச் சொல்லும்போது—'வசிஷ்டர் நல்லற மனைவியை அனையாள்'—அதாவது அருந்ததிக் கொப்பானவள் சொன்னாள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தக் கொள்கைகளையுடைய இந்துமதப் பிரதிநிதியிடம்—அதிலும் வருணாசிரம தர்மியிடம் வேறு என்ன எதிர்பார்க்கமுடியும்? இதே யோக்கியர்தான் மூன்று வருடத்திற்கு முன் திருச்சியில் கூடிய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், 'ஒரு பார்ப்பனரல்லாத பைய னுடன் ஒரு பார்ப்பனப் பையன் ஒரு வேளை சாப்பிட்டால் ஒரு மாதம் பட்டினியிருப்பேன்' என்று சொன்னவர்—இப்படிச் சொன்ன பிறகுதான் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஜில்லாக்களின் பிரதிநிதியாக அந்த ஜில்லா வாசிகள் அவரை இந்திய சட்டசபைக்கு அனுப்பினார்கள். அவருடைய தேர்தலுக்காகத்தான் பார்ப்பனரல்லாத தேசியவாதிகள், காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் தொண்டைகிழியப் பிரச்சாரம் செய் தார்கள்.

எனவே, இதிலிருந்தே நம் நாட்டு வோட்டர்களின் யோக்கியதையையும், தேசிய வாதிகளின் யோக்கியதைகளையும் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

தவிர, இப்படிப்பட்ட ஆசாமிகளையும் இவர்களுக்கு ஆதாரமாயுள்ள மதங்களையும் இவர்களை இந்திய சட்டசபைக்கு அனுப்பிய காங்கிரசையும் காப்பாற்றிக்கொண்டிருக்கும் யோக்கியர்கள்தாம் மிஸ். மேயோவைக் குற்றம் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள் என்பதை வாசகர்களே தெரிந்துகொள்வார்களாக.

நிற்க, திரு. ஆச்சாரியார் சொன்ன மற்றொரு விஷயத்தைப்பற்றிக் கவனிப்போம். அதாவது, 'பாலிய விவாகம் செய்யாவிட்டால் குடும்ப வாழ்க்கையில் துக்கம் ஏற்படும்' என்கிறார்.

என்ன துக்கம் ஏற்படுமென்பது நமக்கு விளங்கவில்லை. அதைப்பற்றி விவரிக்க நமக்கு வெட்கமாயிருக்கிறது. அன்றியும், புருஷர்கள் சிறைக்குப் போய்விட்டால் பெண்களின் நடத்தை கேவலமாகிவிடும் என்றும் சொல்லுகிறார்.

இவை எவ்வளவு தூரம் பெண்களை இழிவுபடுத்துவதாகின்றது? இந்துமதமும் வேதமும், புராணமும், வைதீகமும், வருணாசிரமமும் பெண்களை அடிமைப்படுத்துவதையும், கேவலப்படுத்துவதையும் அஸ்திவாரமாகக் கொண்டனவாதலால், இம்மாதிரியான வார்த்தைகள் நமது இந்திய சட்டசபைப் பிரதிநிதிகளிடமிருந்து வருவது ஒரு அதிசயமல்ல.

உதாரணமாக, கடவுளுடைய அவதாரமென்று சொல்லப்படும் இராமனே, கடவுள் பெண்சாதியின் அவதாரம் என்று சொல்லப்படும் சீதையின் கற்பில் சந்தேகப்பட்டு, அவள் நெருப்பில் பொசுக்கப்படவும் பூமியில் புதைக்கப்படவும் செய்ததிலிருந்தும், அந்த சீதையும் ஒரு சமயத்தில் புருஷனை விட்டுப் பிரியும்போது, 'இதோ பார்! நான் இப்பொழுதே கர்ப்பமாகியிருக்கிறேன்' என்றும், 'இது புருஷனிடத்திலேயே உண்டான கர்ப்பம்' என்றும் வயிற்றைத் திறந்து காட்டியதோடு, தான் கொஞ்சகாலம் புருஷனை விட்டு நீங்கி இருக்க நேருவதாலேயே தான் விபச்சாரத்தனம் செய்து கர்ப்பந்தரித்துவிட்டதாகத் தன் புருஷன் கருதக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டிருப்பதிலிருந்தும் (வால்மீகி ராமாயணம்) திரு. ஆச்சாரியார், மற்ற பெண்கள் புருஷனைவிட்டு நீங்கி இருந்தால் ஒழுக்கம் கெட்டுவிடுவார்கள் என்று சொல்வதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஆனால், இவைகள் மனிதத் தன்மைக்கு ஏற்றதான வார்த்தைகளாகுமா என்றும், நமது பெண் சகோதரிகளுக்கு நியாயம் செய்ததாகுமா என்றும் கேட்கின்றோம்.

இதைக் கேட்ட அன்னிய நாட்டார்கள் என்ன நினைப்பார்கள்?

எனவே, நமது மக்களின் முன்னேற்றத்திற்கும் மனிதத் தன்மைக்கும் ஏற்றதான சீர்திருத்தங்கள் செய்யப் புறப்படும்போதெல்லாம், இப்படி ஒரு கூட்டத்தார் இருந்துகொண்டு, நம்மை இழிவுபடுத்தி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வருவதை இனி எத்தனை காலத்திற்குத்தான் நாம் பொறுத்துக்கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

இவை இப்படியிருக்க, இவ்விஷயங்களில் ஒரு சிறிதும் கவலை எடுத்துக்கொள்ளாமல், தேசத்தின் பேராலும், சாமியின் பேராலும், சமயத்தின் பேராலும், சமயாச்சாரியாரின் பேராலும், புராணங்களின் பேராலும் உலகத்திற்கு நன்மையைச் செய்தவர்களைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றி வயிறுவளர்த்து வருகிறவர்களைப் பார்க்கும்போது—திரு. ஆச்சாரியாரைவிட இக்கூட்டத்தார்களே அதிகமான அயோக்கியர்களும், கொடுமைக்காரர்களும், மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு எதிரிகளுமாவார்கள் என்று தோன்றுகிறது.

ஆதலால், பொதுமக்கள் இதிலிருந்தாவது அறிவு பெற்று 'தேசிய' மென்றும், சைமன் பகிஷ்காரமென்றும், சமயப் பாதுகாப்பு என்றும், தேசியத் திட்டமென்றும், முழு

சுதந்திரமென்றும் சொல்லிக்கொண்டு திரியும் சுயநல வீணர்களின் வலையில் சிக்கி ஏமாந்து போகாமல், உண்மையான சீர்திருத்தத்திற்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற கொள்கைகளில் ஈடுபட்டு அரசியலையும் சமூக இயலையும் கைப்பற்றி, அதைத் தக்க வழியில் திருப்ப வேண்டியது அவசியமென்று மற்றொரு முறை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—23-9-1928]

9. விதவா விவாகம்

பழுத்த ஞானமும் நீடிய அனுபவமும் கொண்ட அறிஞர் திரிசிரபுரம் திருவாளர் சி. பி. ராஜகோபால் நாயுடு அவர்கள் தாம் ஆக்கிய, 'விதவா' விவாக விளக்கம் என்னும் புத்தக அச்சுப் பிரதியை அனுப்பி, எனது அபிப்பிராயத்தை எழுதுமாறு எழுதியிருந்தார்.

விதவா விவாகத்தைப்பற்றி நான் தீவிர கருத்துக் கொண்டவனேயாகிலும் போதிய அமயமும் அவகாசமும் வாய்த்திலாமையான், அஃதினை ஊன்றிப் படித்து விரைவினில் எனது கருத்தினை வெளியிட இயலாது போயிற்று. பிறகு அப் புத்தகம் முடிவு பெற்று புத்தக ரூபமாய் கிடைக்கப் பெற்றேன். அஃதினை அமைதியுடன் படித்து எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை எழுத முற்பட்டேன்.

இந்திய நாட்டின் ஆளுகை உரிமை இந்தியருக்கே கிடைக்கவேண்டுமென அரசியல் சீர்திருத்தக்காரர்களும், இந்திய மக்களுக்குள்ளிருக்கும் வகுப்புப் பிரிவினையும், சாதி வேற்றுமையும் தொலையவேண்டுமென்பதாக சமூக சீர்திருத்தக்காரர்களும் போராடுகிறார் களேயன்றி, பெண் மக்களுள் ஒரு பகுதியார் அழிந்துவருவதைப் பாராமுகமாகவே பார்த்து வருகின்றனர்.

சிருஷ்டிகர்த்தா மக்கட் படைப்பிலடங்கிய ஆண் பெண்களை ஏற்றத் தாழ்வுடன் படைக்கவில்லை என்பதை அறிவுடைய உலகம் ஏற்கும். அங்க அமைப்பிலன்றி அறிவின் பெருக்கிலோ, வீரத்தின் மாண்பிலோ ஆண் பெண்களுக்கு ஏற்றத்தாழ்வான வித்தியாசம் காண இயலுமோ? இயலவே இயலாது. ஆடவரிலும் சரி, பெண்டிரிலும் சரி, முறையே அறிவாளிகளும் ஆண்மையுடையோரும்; அறிவிலிகளும், பேடிகளும் உள்ளனர். இவ் வாறிருக்க, திமிர்பிடித்த இந்த ஆண் உலகம் சாந்தகுலபூஷணமான பெண்ணுலகத்தைத் தாழ்த்தி, அடிமைப்படுத்திவருதல் முறையும் தர்மமுமான செயலாகாது.

இந்துமத ஆண் உலகம் தங்களது பெண்ணுலகத்தின் மாட்டு பூண்டொழுகும் கொடுமைச் செயல்கள் பலவற்றில் இங்கு நாம் விதவைகளைப்பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுள்ளது.

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப்போயிருக்கும் பழுத்த கிழவனாயினும், தன் மனைவியார் இறந்துவிட்டவுடன் மறுமணம் புரிய முயலுகிறான். அதுவும் வனப்பு மிகுந்த, எழில் பொருந்திய இளஞ் சகோதரிகளையே தன் மனத்திற்குத் தேர்ந்தெடுக் கிறான். ஆயின், ஒரு பெண்மகள் தன் கொழுநனை இழந்துவிட்டால்—அவள் உலக இன்பத்தையே சுவைத்தறியாதவளாயிருப்பினும்—தன் ஆயுட்காலம் முற்றும் அந்தோ, தன் இயற்கைக் கட்புலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது. என்னே! அநியாயம்!

இந்து சகோதரர்கள் இவ்வாறு தங்கள் சமூகம் அநியாயமாய் அழிந்துவருவதைப் பார்த்துக்கொண்டு வருவது பெரும் பாவகரமான செயலாகும்.

முன்னாளில் தன் கணவனைப் பரிகொடுத்த மனைவியும் உடன்கட்டை ஏறுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை அக்காலத்தில் ஆங்கிலோ இந்திய வியாபாரக்

தமையனார் ஈ. வெ. கிருஷ்ணசாமி, தாயார் சின்னத்தாயம்மை,
தங்கை S. R. கண்ணம்மாள் ஆகியோருடன் பெரியார் ஈ. வெ. ரா. (1935 ல்)

கூட்டத்தின் தலைவராயிருந்த வாரன்-ஹேஸ்டிங்ஸூம், சுவாமி தயானந்த சரஸ்வதி போன்ற இந்திய நாட்டு அறிவாளிகளும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் நிறுத்தப் பட்டது. உடன்கட்டை ஏறுதலை நிறுத்துவதற்காகப் போராடிய அக் காலத்திலும்—ஆச்சாரமே அழிந்துபோவதாகவும், மதமே கெட்டுப்போவதாகவும் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால், நாளடைவில் அக் கூக்குரலும் அடங்கி, ‘சககமனம்’ என்னும் உடன்கட்டை ஏறுதலான கொலை வழக்கமும் அறவே மறைந்தது.

இதுபோழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாகாதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்துகொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த—மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்துகொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச் செயலாகாது.

விதவைகள் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைவிப்பது ஆகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்காதிருத்தலி னாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமச்சுவை கருதும் இளம் கைம்பெண்கள் படிற்றொழுக்கத்தில் வீழ்ந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டோர் திங்களுள் ‘சிசு ஹத்தி’ தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப் பாவம் யாரைச் சாரும்? விதவைகளை மறுமணம் செய்துகொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்திவரும் பெற்றோர் களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம் பெண் களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று.

விதவைகளின் கலியாணத்தைப்பற்றி இவ்வாறு எழுதும் நான், எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா, அன்றிச் செய்கையிலும் ஆதரித்துள்ளேனா என்ற அய்யம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேனும் எனது கருத்தைப் பிரதி பலிக்கும் செய்கையைக் கூற விரும்புகிறேன்.

நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். என் வகுப்பின் பெண் மக்கள் முக்காடுடன்—‘கோஷாவாக’ இருக்கவேண்டியவர்கள் எனவும், விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாத வகுப்பினரெனவும் வழங்கப்படுபவர்கள். நான் பிறந்த குடும்பமோ அளவுக்கு மிஞ்சிய ஆசாரத்தையும், வைணவ சம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம். இப்படி இருந்தபோதிலும், என்னுடைய 7-வது வயதிலிருந்தே மக்களில் உயர்வு-தாழ்வு கற்பித்தலையும், ஒருவர் தொட்டதை மற்றொருவர் சாப்பிடலாகாதெனச் சொல்வதையும் நான் பரிகாசம் செய்துவந்ததோடு, யாரையும் தொடுவதற்கும், எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் சிறிதும் பின்வாங்கியதே கிடையாது.

என்னை, இளம் போதிலிருந்தே எங்கள் வீட்டு ஆக்குபுரைக்குள் செல்ல அனுமதிப்ப தில்லை. நான் தொட்ட செம்பை என் தகப்பனார் தவிர மற்றையோர் கழுவாமல் உபயோகப்படுத்தமாட்டார்கள். எங்கள் குடும்ப ஆசார அனுஷ்டானங்களைப் பார்த்துப் பொறாமைப்படுபவர்கள்—என்னைப் பார்த்து சாந்தியடைந்து விடுவார்கள். ‘நாயக்கருக்கு அவர்கள் ஆச்சாரத்திற்கு ஏற்றாற்போல்தான்—ஒரு பிள்ளையென்றாலும் பிள்ளை, நவமணியாய்ப் பிறந்திருக்கிறது!’ என்று சொல்லுவார்கள். என்னுடைய 16-வது வயதிலேயே, பெண் மக்களைத் தனித்த முறையில் பழக்குவதும்—அவர்களுக்கென சில கட்டுத்திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் ஆண் மக்களின் அகம்பாவம் என்று நினைத்து வந்தேன்.

இவ்வாறாக, என் தங்கை தன் இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் அம்மாயி என்று அழைக்கப் பெறும் அப்பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில்—சிறந்த செல்வாக்கோடு ஒரு

செல்லக் கலியாணம் செய்துவைத்தோம். கலியாணம் செய்த 60-ம் நாள் அப்பெண்ணின் கணவன் என்னும் 13 வயதுள்ள சிறு பையன், பகல் 2 மணிக்கு 'விஷபேதி'யால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும், அப்பெண்குழந்தை என்னிடம் ஓடிவந்து, 'மாமா! எனக்குக் கலியாணம் செய்து வை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே' என்று 'ஓ'வென்று அலறிய சத்தத்தோடு என் காலடியில் அதன் மண்டையில் காயமுண்டாகும்படி திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்பட சுமார் 600, 700 பேர்கள் அக் குழந்தையையும், என்னையும் பார்த்தவண்ணமாய்க் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால், கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப்பிடித்துத் தூக்கும்போதே, மறுபடியும் அதற்குக் கலியாணம் செய்துவிடுவது என்கின்ற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு, அந்தப் பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப்பின், அதற்குக் கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச்செய்தி எனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் எட்டவே, அவர்கள் இதைத் தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டதுபோலக் கருதி, பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி, நாங்கள் பார்த்துவைத்திருந்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாரம் மைத்துனரைப் பிடித்து சரி செய்து, எவரும் அறியா வண்ணம் பெண்ணையும், மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று அங்கு கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டி வந்தனர். ஆனால், நான் சிதம்பரத்திற்குப் போகாமல் ஊரிலேயே இருக்கவேண்டியதாயிற்று. ஏனெனில், அவர்கள் போயுள்ள செய்தியை சுற்றத்தார் அறிந்தால், ஏதாவது மாப்பிள்ளையைத் தடைசெய்து விடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரிலிருந்தால் கலியாணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்களெனச் சந்தேகமிருக்காது என்கிற எண்ணங்கொண்டேயாகும். இக் கலியாணத்தின் பலனாக, இரு மூன்று வருட காலம் பந்துக்களுக்குள் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டு, சாதிக் கட்டுப்பாடு இருந்து, பிறகு அனைத்தும் சரிப்பட்டுப்போயின.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஒத்துவாழ்ந்து ஓர் ஆண் மகவைப் பெற்றனர். ஆனால், துரதிருஷ்டவசமாகக் கொஞ்ச நாளையில் அந்த இரண்டாவது புருஷனும் இறந்துவிட்டான். இப்பொழுது தாயும் மகனுமே சேமமாயிருக்கிறார்கள். இன்னமும் எனது வகுப்பில் 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைக் குழந்தைகள் சிலர் இருக்கின்றனர். பாவம், அக் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தீண்டாதார்போல் கருதி நடத்துவதைத் தினமும் பார்க்கப் பாவமாயிருக்கிறது.

எவ்வளவோ இடருக்குள் அகப்பட்டு அக் கலியாணத்தை முடித்து வைத்தோம். ஆனால், கடைசியில் அந்த இரண்டாவது கணவனும் மரிக்கவே விதவா விவாக விஷயத்தில் தீவிரமாகத் தலையிட வேண்டுமென எனக்கிருந்த கருத்துக்கு பெரிய முட்டுக்கட்டை போட்டதுபோலாயிற்று.

விதவைகளின் விஷயம் நினைவிற்கு வரும்போதும்—நேரில் காண நேரும் போதும்—'உலக இயற்கை, எளியாரை வலியார் அடக்கி ஆண்டு இம்சிப்பதல்லாமல் வேறல்ல' என்றே முடிவு செய்வேன். நமது இந்து சமூகம் எந்தக் காலத்தில் எவருடைய ஆதிக்கத்தில் கட்டப்பட்டதோ, அன்று மதமில்லாமல், முறையில்லாமலிருந்து, இயற்கையாகவே ஏதாவது கட்டுப்பாடுகள் ஏற்பட்டு, அவற்றை வலியவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்திற்குத் தக்கபடி திருத்திக்கொண்டார்களோ என நினைக்கும்படி இருந்தாலும்—பொதுவாய் விதவைத் தன்மை நிலைத்திருக்கும் காரணத்தினாலேயே இந்து மதமும் இந்து சமூகமும் ஒருகாலத்தில் அடியோடு அழிந்துபோனாலும் போகுமென்பதே எனது முடிவான கருத்து.

அரசியல் என்றும் சமூகவியல் என்றும் ஜனாச்சார சீர்திருத்தவியல் என்றும் பெண் மக்கள் முன்னேற்றமென்றும் சொல்லிக்கொண்டிருக்கும் மக்களில் பெரும்பான்மையோர், இவற்றைத் தங்களது வாழ்விற்கும் கீர்த்திக்கும் சுயநலத்திற்கும் பயன்படுத்திக்கொள்வோராக இருக்கிறார்களே தவிர, உண்மையில் அக் கருத்தைக்கொண்டு உழைப்பவர்கள் அரிதினும் அரிதாகிவிட்டனர் என்று சொல்லுவதை மன்னிக்க வேண்டுகிறேன்.

அன்றியும், இவ்விதத் துறைகளிலும் சீர்திருத்தங்களிலும் பாடுபடுபவர்களாய்க் காணப்படுவோர்களில் பெரும்பாலோர், தாங்கள் செய்வது சரியென்ற தீர்மானம் தங்களுக்கேயில்லாமல் 'உலக மெப்புக்குச்' செய்பவர்களாகவே இருக்கிறார்கள். பெண் மக்கள் முன்னேற்றத்தைப்பற்றிப் பேசுவோர், தங்கள் வீட்டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக்கொண்டும்; விதவா விவாகத்தைப்பற்றிப் பேசுவோர்—தங்கள் குடும்பங்களிலுள்ள விதவைகளைக் காவல்போட்டு, விதவைத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்களே தவிர, உண்மையில் ஒரு சிறிதும் தாங்கள் நடவடிக்கையில் காட்டுவதில்லை. இதன் காரணம் என்னவெனப் பார்க்கும்போது, பெண்மக்கள் என்று நினைக்கும்போதே, அவர்கள் அடிமை; நமக் கடங்கினவர்கள்; கட்டுப்படுத்தி வைக்கப்பட வேண்டியவர்கள் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது என்றே நினைக்கிறோம். இதனாலேயே அவர்களை விலங்குகளைப்போல நடத்திவருகிறார்கள். அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது என்கிற விஷயத்தை நினைக்கும்போது, செய்யக்கூடாத ஒரு பெரிய குற்றமான செய்கையைச் செய்ய நினைக்கிறதுபோலவே தோன்றுகிறது. அதனால், மனித சமூகத்தில் சரி பகுதியான எண்ணிக்கைக்குப் பிறவியிலேயே சுதந்திரம் இல்லை என்பதுதானே இதன் பொருள்? ஆடவருக்குப் பெண்டிரைவிடச் சிறிது வலிமை அதிகமாக ஏற்பட்ட குற்றந்தானே, இம்மாதிரி ஒரு சரி சமமான சமூகத்தைச் சுதந்திரமில்லாமல் அடிமைப் படுத்தும் கொடுமையை அனுஷ்டிக்க வேண்டியதாயிற்று? இந்தத் தத்துவமே வரிசைக் கிரமமாக மேலோங்கி எளியோரை வலியோரால் அடிமையாக்கச் செய்கிறது.

உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே—சமத்துவம், சுதந்திரம் என்னும் முளைமுளைக்கும் இடம்.

உலகிலேயே மிகப் பெரிய சீர்திருத்தக்காரரான மகாத்மா காந்தியடிகள் இந்து விதவைகளைப்பற்றி, அனேக சந்தர்ப்பங்களில் பேசியும், எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு, 'நவஜீவன்' பத்திரிக்கையில் மகாத்மா எழுதி இருக்கும் விஷயத்தைக் கவனித்தால், விதவைகளின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும். அக் கட்டுரையின் ஒரு சில பாகமாவது :—

'பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று—இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை என்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகாது. பலாத்காரத்தினால் அனுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. பதினைந்து வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கின்றாள் என்று சொல்லுவது, அவ்விதமாகச் சொல்லுவோரின் கொடூர சுபாவத்தையும், அறியாமையையுமே விளக்குகிறது.'

என்று எழுதிவிட்டு, விதவைகள் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதாகத் தன் உள்ளன்போடும் ஆவேசக் கிளர்ச்சியோடும் மகாத்மா கூறிய மணிவாசகங்களில் ஒரு சிலவற்றைக் கவனிப்போம்.

"........அமைதியுடன் தங்களுடைய துக்கத்தைச் சகித்துக்கொண்டு, தங்களுடைய உண்மையான கருத்தைத் தங்களின் பெற்றோர், அல்லது போஷகர்களான ஸ்திரீ, புருஷர்

களிடம் தைரியமாய்ச் சொல்லிவிடவேண்டும். அவர்கள் அதைக் கவனிக்காவிட்டால் தாங்களே, ஒரு யோக்கியமான புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்துகொள்ளட்டும். அதுவரையில் யோக்கியமான புருஷனை அடைய தமயந்தி, சாவித்திரி முதலியவர்கள்போல் தவம் செய்வதே ஏற்ற வழியாகும்.........விதவைகளின் போஷகர்கள் இவற்றைச் சரிவரக் கவனியாவிடின், பின்னால் பச்சாதாபப்படுவார்கள். ஏனெனில், நான் ஒவ்வோரிடத்திலும் துராசாரமே பார்த்துக்கொண்டு வருகிறேன். விதவைகளைப் பலாத்காரமாய்த் தடுத்து, விதவைத்தன்மைகளை அனுஷ்டிக்கச் செய்வதால் விதவைகளுக்காவது, குடும்பத்திற்காவது அல்லது விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம்மூன்று தத்துவங்களும் நசித்து வருவதை என் கண்களினாலேயே பார்த்துக்கொண்டிருக்கிறேன். பால்ய விதவைகளே! நீங்களும் உங்களைப் பலவந்தப்படுத்தி விதவைகளாக வைத்திருக்கும் ஸ்திரீ புருஷ வர்க்கங்களும் இதை அறியுமாக!' இவ்வாறாக 1921-ம் வருடத்திய ஜனசங்கியைப்படி இந்து கைம்பெண்களின் தொகையினை நோக்குகையில் அய்யகோ! என் நெஞ்சு துடிக்கிறது!

1 வயதுள்ள விதவைகள்	...	597
1 முதல் 2 வயதுள்ள விதவைகள்	...	494
2 முதல் 3 வயதுள்ள விதவைகள்	...	1,257
3 முதல் 4 வயதுள்ள விதவைகள்	...	2,837
4 முதல் 5 வயதுள்ள விதவைகள்	...	6,707
ஆக மொத்தம்	...	11,892
5 முதல் 10 வயதுள்ள விதவைகள்	...	85,037
10 முதல் 15 வயதுள்ள விதவைகள்	...	2,32,147
15 முதல் 20 வயதுள்ள விதவைகள்	...	3,96,172
20 முதல் 25 வயதுள்ள விதவைகள்	...	7,42,820
25 முதல் 30 வயதுள்ள விதவைகள்	...	11,63,720
ஆக மொத்தம் விதவைகள்	...	26,31,788

அல்லாமலும், இத்தகைய விதவைத் தன்மையானது, பிரஜா உற்பத்திக்குப் பேரிடராயிருக்கிறது. நமது இந்து மதத்திலிருந்து ஏவரேனும் இரண்டொருவர் பிற மதத்திற்கு மாற்றப்பட்டால் நம் மக்களுக்கு எவ்வளவோ துன்பம் நேரிட்டு விட்டதாகக் கருதிப் பரிதாப்படுகிறார்கள். இதன் காரணம், நமது மதத்தினரில் இருவர் குறைந்து விட்டதால் இந்து சமூகத்திற்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு விட்டது என்பதனாலேயன்றோ! அந்த இரண்டு நபர்களுக்காக இவ்வளவு துக்கமும், துயரமும் ஏற்படுமானால், தற்காலம் நமது இந்திய நாட்டிலுள்ள இருபத்தாறு இலட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு விதவைகளும் கலியாணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவதாயிருந்தால் எத்துணைக் குழந்தைகள் பெறக்கூடும்! சராசரி மொத்தத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெண்கள் 2 வருடத்திற்கு 1 குழந்தை வீதம் பெறுவதாக வைத்துக்கொண்டாலும்—தடவை ஒன்றுக்கு 87,726 குழந்தைகள் வீதம் வருடம் ஒன்றுக்கு 4,38,631 பிரஜா உற்பத்தியை நாம் கெடுத்துக் கொண்டு வருகின்றோம். இது, இரண்டொருவர் மதம் மாறுவதால் நஷ்டம் வந்துவிட்டதாகக் கருதுவோருக்குப் புலப்படுவதில்லை. பால் மணம் அறாத—5 வயதிற்குட்பட்ட இளங் குழந்தைகள் மட்டிலும் 11,892 பேர் இருக்கிறார்கள் என்பதையும், தன் பிறவிப்பயனையே நாடுதற்கில்லாது, இன்பந்துய்த்தற்கில்லாது அடக்கிவைக்கப்பட்டிருக்கும் 15 வயதிற்குட்பட்ட கைம்பெண்கள் 2,32,147 பேர் இருக்கிறார்கள் என்பதையும் கேட்கவே என் குலை நடுங்கிற்று. இத் தகைய படுமோசமான விதவைத் தன்மையை எந்த நாகரிக உலகம் ஏற்கும்?

விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர், கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டு உழைத்தனர். இதுபோழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்.

['குடிஅரசு'-கட்டுரை—22-8-1926]

சகோதரிகளே, சகோதரர்களே!

விதவைகளுக்கு விவாகம் செய்யலாமா என்பதற்கும், சாஸ்திரத்திற்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் விவாகம் எந்த மாதிரி செய்வது என்பது பற்றி யோசிப்பது என்றாலும் சமாதானம் சொல்லலாம். அப்படிக்கின்றி, விவாகம் செய்யலாமா, வேண்டாமா என்பதற்கே சமாதானம் சொல்லுவதென்றால் அது சுத்த முட்டாள்தனமென்று தோன்றவில்லையா?

என்னைக் கேட்டால் இந்தக் கொடிய நாட்டில் விதவைகளுக்குத் துன்பத்தை இழைத்தவர் நமது இராஜாராம் மோகன்ராய் அவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். ஏனெனில், அவரால்தான் நமது விதவைகள் இருக்கவும் கஷ்டப்படவும் ஏற்பட்டுவிட்டது. எப்படி என்றால், மோகன்ராய் அவர்கள் உடன்கட்டை ஏற்றும் வழக்கத்தை நிறுத்தாதிருப் பாரானால் ஒவ்வொரு பெண்டும் புருஷன் இறந்தவுடனே அவனோடு கூடவே அவன் பக்கத்தில் 'மாங்கல்ய ஸ்திரி' யாகவே உயிருடன் கட்டையில் வைத்துச் சுடப்பட்டுக் 'கற்பு லோகத்தை' அடைந்து, மோட்சலோகத்திலிருப்பாள்! கற்புலோகமும், மோட்சமும் எவ்வளவு புரட்டாயிருந்தாலும்—ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது, உயிருடன் சுடப் பட்ட பெண்ணுக்கு ஒரு மணிநேரந்தான் கஷ்டம் இருந்திருக்கக்கூடும். ஆனால், அந்தப்படி நடவாமல் காப்பாற்றப்பட்ட விதவைப் பெண்ணுக்கு அவள் ஆயுள்காலம் முழுவதும் அங்குலம் அங்குலமாகச் சித்திரவதை செய்வதுபோன்ற கஷ்டத்தை விநாடி தோறும் அனுபவித்துவர நேரிடுகின்றதா இல்லையா என்றுதான் கேட்கிறேன்.

இப்போதும் விதவைகளுக்கு உடனே மணம் செய்யவேண்டும்; மணமில்லாத பெண் இருக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் கொஞ்ச காலத்திற்காவது இருக்கவேண்டும். இல்லை யானால் உண்மையான ஜீவகாருண்யத்தை உத்தேசித்துப் பழைய உடன்கட்டை ஏற்றும் வழக்கத்தையாவது புதுப்பிக்கவேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம். ஏனெனில், விதவைத் தன்மையை நினைத்தால் வயிறு பற்றி எரிகிறது; நெஞ்சம் கொதிக்கிறது. மனிதனுக்குத் தன் பெண்சாதி சமீபத்தில் இல்லாத காலங்களில் போக இச்சை ஏற்பட்டால் உடனே 'போக மாதர்'களைக் கொண்டு அவ்விச்சையைத் தணிக்கவேண்டியதும்; மிருகங்களுக்கு ஏற்படும் தினவைத் தீர்த்துக்கொள்ள மைதான வெளியில் சொரிக்கல் நட்டு வைக்கவேண்டியதும் 32 தர்மங்களில் 2 தர்மங்களாகக் கொண்டு—கோயில்களில் தாசிகளை வைத்தும், கிராமங்கள்தோறும் நத்தங்களில் சொரிக்கல் நட்டும் வைத்திருக் கிறார்கள். ஆனால், இப்பேர்ப்பட்ட ஜீவகாருண்ய அறிவு—நமது பெண் மக்களிடம் மாத்திரம் ஏன் காட்டமுடியாமல் போய்விட்டது என்பதை நினைக்கும்போது, ஜீவகாருண்யப் புரட்டும் 32 தர்மங்களின் புரட்டும் நன்றாய் விளங்கும்.

அதோடு மாத்திரமல்லாமல், அம் மாதிரி ஜீவகாருண்யம் கூடாது என்பதற்குச் சாஸ்திரம் இருப்பதாயும், அந்த சாஸ்திரம் கடவுளால் சொல்லப்பட்டதாகவும் மனிதர்கள் என்பவர்கள் சொல்ல வருவார்களானால்—அப்படிப்பட்ட சாஸ்திரத்தையும், கடவுளையும், மனிதர்களையும் என்ன செய்வது என்பதை நீங்கள்தான் யோசித்து முடிவு கட்டவேண்டும்.

ஒரு பெண்சாதியை இழந்த ஆண் கலியாணம் செய்துகொள்ளலாமா வேண்டாமா என்பதைப் பற்றி, எந்தப் பெண்ணாவது அபிப்பிராயம் சொல்ல வருகிறாளா? அப்படி

யிருக்க, புருஷனை இழந்தவள் கலியாணம் செய்துகொள்ளலாமா வேண்டாமா என்பதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லப் புருஷனுக்கு என்ன பாத்தியம் என்பது நமக்கு விளங்க வில்லை. நாட்டில், சிறப்பாக நமது சமூகத்தில் விதவைகள் கர்ப்பமடைந்து கர்ப்பத்தை அழிப்பதும், பிள்ளைகளைப்பெற்றுக் கொலை செய்வதும், வீடுகளை விட்டுப் பெற்றோர் அறியாமல் நினைத்த புருஷர்களுடன் ஓடுவதும், பிறகு பொது விபசாரிகளாகி குச்சுகள் மாறுவதும் முதலிய காரியங்களைத் தினமும் கண்ணால் பார்த்தும் தாங்களாகவே துன்பங்கள் அடைந்து வரும்போது, விதவா விவாகம் சாஸ்திர சம்பந்தமா, சாதி வழக்கமா என்று பார்க்கும் மூடர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா என்று கேட்கிறேன். சாஸ்திரத்தில் இடம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? சாதியில் வழக்கம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? அதைப் பற்றிக் கவனிப்பதில் பலன் என்ன? புருஷனை இழந்த பெண்ணுக்குப் புருஷ இச்சை இருக்குமா, இருக்காதா? அவளுக்குப் புருஷன் வேண்டுமா, வேண்டாமா—என்பதைத்தானே கவனித்து முடிவுகட்டவேண்டும்? அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும் என்று ஜோசியத்திலிருந்து விட்டால், அந்தப் பிள்ளை திருடின திருட்டையெல்லாம் ஜோசியம் நம்புகிறவன் சும்மா விட்டுவிடுவானா என்று கேட்கிறேன்?

தினம் புருஷனுடன் வாழ்ந்து கொண்டு, புருஷன் என்பதாகத் தனக்கு ஒரு எஜமான் இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டு அடிமைத்தனத்தில் இருந்து, குழந்தை குட்டிகளைப் பெற்றுக் கொண்டு இருக்கும் மாங்கலியப் பெண்களின் போக உணர்ச்சியைவிட—மேற்கண்ட கவலைகளேயில்லாத விதவைப் பெண்களின் போக உணர்ச்சி எத்தனை மடங்கு அதிகமாயிருக்கும் என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்! ஒரு ஜீவனைப் பட்டினியாகப் போட்டுக் கொல்வதிலும் ஒரு பெண்ணை விதவையாக வைத்துச் சாகாமல் காப்பாற்றுவது கொடுமை அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள்! ஒரு பெண் எதற்காக விதவையாய் இருக்கவேண்டும் என்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா? அல்லது எந்த மதமாவது, எந்த சாதியாவது காரணம் சொல்லி இருக்கின்றனவா? காரணமில்லாத இவ்விதக் கொடுமையான ஜீவ இம்சையைச் செய்துகொண்டிருக்கும் சமூகம் வடிகட்டின முட்டாள்தன முடையது என்பதற்கு என்ன ஆட்சேபங்கள் சொல்லப்போகின்றீர்கள்?

விதவைகளாயிருப்பது கடவுள் கட்டளை என்று கருதுவீர்களானால்—விதவை களுக்குப் போக உணர்ச்சியும், அதனால் ஏற்படும் கவலையும் சில சமயங்களில் கர்ப்பம் உண்டாக்கப்படுவதும், அது அழிக்கப்படுவதும், பெற்ற குழந்தையைக் கழுத்தைத் திருகுவதுமான காரியங்கள் நடைபெற முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்!

விதவைத் தன்மை நாட்டில் இருப்பதாலேயே சாஸ்திரங்களும், கடவுள் செயல் என்பவைகளும், சோதிடம் என்பவைகளும் பொய் என்பதாக உங்களுக்கு விளங்கு கின்றதா, இல்லையா?

ஏனெனில், நம்மில் ஒவ்வொருவனும் கலியாணம் செய்வது கடவுள் முன் பூ வைத்தோ, கருட தரிசனம் பார்த்தோ குறிகேட்டோ திருப்தி அடைந்தும்; சாஸ்திர விதிப்படியும் செய்கிறான். அப்படியிருக்க, இந்தக் கதி நேர்ந்தால் மேற்கண்டவைகள் நிஜமாய் இருக்கமுடியுமா? இந்த அஸ்திவாரப்புரட்டை நாம் நம்பி, 'மதம்,' 'சாதி,' 'வழக்கம்' என்று சொல்லுகின்றோமே நமக்கு வெட்கமாக இல்லையா? அல்லது புத்தியில்லையா என்று கேட்கிறேன்.

பெரும்பாலும் மதப்படியும், சாதி வழக்கப்படியும் நடக்காதவர்களேதான் மதம் என்றும், சாஸ்திரம் என்றும், சாதி வழக்கம் என்றும் தொல்லைப்படுத்துகிறார்கள்.

தங்களைப் பொறுத்தவரை, தாங்கள் நம்பும் மதக் கொள்கைப்படியும், சாஸ்திரப் படியும் நடக்க முடியாதவர்கள்தானே—நாம் செய்யும் காரியத்திற்கு இடையூறாக மதத்தை

யும், சாஸ்திரத்தையும், வழக்கத்தையும் கொண்டுவந்து போடுகின்றார்கள்? இப்படிப் பட்டவர்களால்—தங்களுக்காகக் கொண்டுவந்து போடும் மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் கடுகளவு புத்தியுள்ள எந்த மனிதனாவது மதிப்புக்கொடுக்க முடியுமா என்று பாருங்கள்.

உதாரணமாக, சாரதா மசோதாவை எடுத்துக்கொள்ளுங்கள். பெண்கள் பருவம் அடைந்ததற்குப் பின்னால் கலியாணம் செய்தால் சாஸ்திர விரோதமாம்; பாவமாம்; நரகம் கிடைக்குமாம். இதற்குச் சத்தியாக்கிரகம் செய்து உயிரை விடவேண்டுமாம். நீங்கள் இந்த வீரர்களை உண்மையானவர்கள் என்று நம்புகிறீர்களா?

இந்த வீரர்களின் ஆண்—பெண் கடவுள்களுக்கும், அவர்களது சொந்தக்காரர் களுக்கும் எப்போது கலியாணம் நடந்தது? கலியாணம் நடந்ததை இவர்கள் பார்க்கா விட்டாலும்—எப்போது நடந்ததாக இவர்கள் சாஸ்திரம் கூறுகின்றது என்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

சீதைக்கும், ருக்குமணிக்கும், சத்தியபாமைக்கும், பார்வதிக்கும், வள்ளிக்கும், தெய்வ யானைக்கும், மீனாட்சிக்கும், ஆண்டாளுக்கும், நாச்சியாருக்கும், துரோபதைக்கும் எப்போது கலியாணம் நடந்தது? இவர்கள் பருவம் அடைந்த பிறகா? அதற்கு முந்தியா என்று கேட்கிறேன்.

பழைய இராஜாக்கள் என்பவர்கள் காலத்திலும், மத சம்பந்தமான புராணங்களிலும் எங்காவது 'மைனர்' பெண்களையோ 10 வயதுக்குட்பட்ட பெண்களையோ கலியாணம் செய்துகொடுத்ததாக இவர்கள் சொல்லக்கூடுமா என்று கேட்கிறேன். தவிரவும், மேற் கண்ட ஆண் பெண் கடவுள்கள் தாங்களாகவே கலியாணம் செய்துகொண்டார்களா? அல்லது அவர்களின் தாய் தகப்பன்மார்—கட்டுச்சாத மூட்டையைத் தோளில் சுமந்து திரிந்து மாப்பிள்ளை தேடி—சகுணம், குறி சோதிடப் பொருத்தம் முதலியவை பார்த்துக் கலியாணம் செய்துகொடுத்தார்களா என்று யோசித்துப் பாருங்கள்!

இந்த சாஸ்திரத்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள், சாஸ்திரத்தில் பருவமடைந்த பிறகு கலியாணம் செய்வதற்கு இடமில்லை என்று சொல்ல வருவார்களானால்—அதிலும் அதற்காக அவர்கள் சத்தியாக்கிரகம் செய்வேனென்று சொல்வார்களானால், அவர்கள் நம்மை எவ்வளவு முட்டாள்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்! உங்களுக்கு ஒரு காரியம் சரியென்று பட்டால்—அது சாஸ்திர சம்மதமா, விரோதமா என்று எதிர்பார்ப்பது அறியாமையும் அடிமைத் தனமுமாகும். இந்த உலகத்திற்கு அவசியமான காரியம்—மேல் லோகத்தில் என்ன பயனைத் தரும் என்பது மற்றொரு அடிமைத் தனமாகும்.

எந்தக் காலத்திலோ, எங்கிருந்தோ, யாராலோ, எதற்காகவோ, யாருக்கோ எழுதிய ஒரு புத்தகத்தை—இந்தக் காலத்திற்கு, இந்த இடத்திற்கு, நமது நன்மைக்காக, நமது நன்மையில் கவலை கொண்டவர்களால் எழுதப்பட்டதென்றும்—அதன்படி நடந்து தீர வேண்டும் என்றும் கருதுகின்றவன் மனிதனல்லன் என்பதுதான் எனது மாற்றமுடியாத உறுதியான அபிப்பிராயம் ஆகும்.

[சென்னை பிரம்மசமாஜ கட்டடத்தில், 19–10–1929-ல் தலைமையுரை—'குடிஅரசு' 27–10–1929]

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமது நாட்டில் விதவைகள் உள்ள வீடுகளில் நடக்கும் காரியங்கள் எனக்கு நன்றாய்த் தெரியும். அனேக சிசுக் கொலைகளும், அனேக மனவருத்தங்களும், இயற்கைக்கு விரோதமான காரியங்களும்—ஏதாவது ஒன்று நடந்தவண்ணமாகவே இருந்து வருகின்றது. இதனால் பல கொலைகளும் நடக்கின்றன. சில இடங்களில்

பெண்கள் வெளியில் ஓடஓட அழைத்துவந்து பந்தோபஸ்தில் வைக்கப்படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்று பார்த்தால், இயற்கை உணர்ச்சியைக் கட்டுப் படுத்தி வைப்பதேயாகும்.

இயற்கை உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும், முறைகளும் சரிவர நடைபெறா. அப்படி எங்காவது நடைபெற்றாலும் நிலைத்திருக்க முடியாது. இந்தக் கொடுமைகள் இப்படியே இருக்குமானால் 4 அல்லது 5 பெண்கள் கூடி ஒரு ஆணைத் தங்கள் இன்பத்திற்கு என்று ஏற்படுத்தி, அவனுக்கு நல்ல போஷணையும் அழகும் செய்து அடைத்துவைத்து—அவனைத் தங்களது காம இச்சை தீர்க்கும் இன்பப் பொருளாய் அனுபவிக்கும் காலமும், வீட்டு அடிமையாய் வைத்து நடத்தப்படும் காலமும் வந்துவிடும் என்றுதாம் கருதுகிறோம். அப்படி வந்தால் ஆச்சரியப்படமாட்டோம்.

இந்நாட்டில் ஒழுக்கம் சீர்பட வேண்டுமானால்—விபச்சாரம் என்னும் காரியத் திலுள்ள கெடுதிகள் நீங்கவேண்டுமானால்—விதவைத் தன்மையும், ஆண்களுக்கு விபச்சார தோஷமில்லை என்கின்ற நடப்பையும் ஒழித்தாக வேண்டும். இவ்விரண்டு காரியங்களே பெரிதும் மனித் தன்மைக்கும், இயற்கை இன்ப நுகர்ச்சிக்கும் இடையூறாய் இருந்து வருகின்றன. பெண்களைப் பெற்றோர்களும் ஒரு விஷயத்தில் கவனிக்க வேண்டும். பெண்களுக்கு 16 வயதுவரை நல்ல கல்வியைக் கொடுக்கவேண்டும்; தனக்கு வேண்டிய வனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளப் பழக்கவேண்டும்.

ஒரு குழந்தையுள்ள விதவையை மணம் செய்துகொள்ள ஏற்பட்டால், 'குழந்தையே இல்லாத விதவை கிடைக்கவில்லையா?' என்றும்; இதற்குமுன் பக்குவமான 'சாந்தி முகூர்த்தமான' விதவையைக் கலியாணம் செய்தபோது, 'பக்குவமாகாத விதவை கிடைக்கவில்லையா?' என்கிறார்கள். வேறு சாதியில் ஒரு விதவையைக் கலியாணம் செய்துகொண்டபோது, 'நமது சாதியிலேயே ஒரு விதவை இல்லையா?' என்கிறார்கள். இவ் விஷயங்களில் நாம் பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டு பயப்படக்கூடாது.

[நாகர்கோவிலில், 10–9–1930-ல், சொற்பொழிவு—'குடிஅரசு' 28–9–1930]

தலைவரவர்களே! தோழர்களே!

ஒருசமயம் விதவா விவாகஞ் செய்துகொண்டது குற்றம் என்று சொல்லப்படுமானால் அதுவும் அறியாமை என்றுதான் சொல்லவேண்டும். உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும்—எந்த மதத்திலும் விதவை மணம் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

இந்தியாவிலும், இந்து மதத்திலுங்கூட அனேக சாதிகளில் விதவை மணம் அனுமதிக்கப்பட்டும் நடந்தும் வருகின்றது.

விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபச்சாரத் தனத்தைத் தூண்டவும், அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்லவேண்டும்.

[காரைக்குடியில், 19–4–1935-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 28–4–1935]

தாய்மார்களே! தோழர்களே!

விதவைத் தன்மையேதான் விபச்சாரம் என்கின்ற பிள்ளையைப் பெறுகின்றது. பிறகு, ஆண் எப்படி வேண்டுமானாலும் திரியலாம்—எவ்வளவு பெண்சாதிகளை வேண்டு மானாலும் மணக்கலாம் என்கின்ற முறையே விபச்சாரம் என்னும் அந்தப் பிள்ளையை வளர்க்கின்றது.

கலியாண ரத்து இல்லை என்கிற முறையானது, விபச்சாரத்தை நீடூழி வாழச் செய்கிறது. இவற்றிற்கு எல்லாம் பரிகாரம் செய்யாமல் விபச்சாரத்தைப்பற்றிப் பேசுவது என்பது பயனற்ற காரியமாகும்.

விதவைத் தன்மை என்பது நமது நாட்டில் மிக்க கொடுமையான முறையில் இருந்துவருகின்றது. இதை எந்தச் சீர்திருத்தவாதியும் கவனிப்பதேயில்லை. விதவைகள் வாழ்க்கை ஒரு சிறைக்கூட வாழ்க்கையை ஒக்கும். ஒரு கைதிக்குள்ள நிர்ப்பந்தம் ஒவ்வொரு விதவைக்கும் இருந்துவருகின்றது. எப்படி ஒரு கைதியானவன் சிறைக்கூட விதியை மீறவேண்டும் என்கின்ற ஆசைக்கும், அவசியத்துக்கும் உள்ளாகிறானோ, அது போலவேதான் ஒவ்வொரு விதவையும் விதவைச் சட்டத்தை மீறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிக் கஷ்டப்படுகிறாள். இந்தக் கொடுமை ஒரு நிரபராதியான பெண்ணுக்கு ஏன் ஏற்படவேண்டுமென்று கேட்டால், இதற்கு என்ன மறுமொழி இருக்கிறது? இந்த 20-வது நூற்றாண்டில் தலைவிதி என்றும், கடவுள் செயல் என்றும் சொல்லி மக்களை ஏய்க்க முடியுமா?

விதவைத் தன்மை என்பது கடவுள் செயலாக இருந்தால், பார்ப்பனர்கள் நிறைந்த பார்த்தசாரதிகோயில் தெரு (சென்னை), தெப்பக்குளத்தில் தினம் ஒரு குழந்தை எப்படி மிதக்கமுடியும்? ஊர்தோறும் குப்பைத்தொட்டிகளும், ஓடைப் புறம்போக்குகளும், கள்ளி மேடும், ஊருணிகளும் எப்படிப் பிள்ளைகளைப் பெறமுடியும்?

ஆகவே, மனித சமூகத்துக்குக் கடுகளவாவது புத்தியும், நேர்மையும் இருக்கிறது என்று சொல்லப்பட வேண்டுமானால், இந்த விதவைக் கொடுமை முதலில் ஒழிக்கப்பட்டாக வேண்டும். இந்தக் கொடுமை பகுத்தறிவுள்ள மனித சமூகத்தில் இருக்கிறது என்றால், பகுத்தறிவுக்கு இழிவு கற்பிக்க இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா என்று கேட்கிறேன்.

அதோடு, கலியாண ரத்து என்கின்ற ஒரு முறையும் ஏற்படுத்தி ஆகவேண்டும். ஏனெனில், கலியாண ரத்துக்கு இடமில்லாத காரணத்தாலேயே ஆண்கள் மனைவிமார்களிடத்தில் மனிதத் தன்மையோடு நடந்துகொள்ளாமல் மிருகத்தனமாய் நடக்கத் தூண்டப்படுகிறார்கள்.

மனைவிமார்களைத் தங்களுக்குப் பிடிக்கவில்லையானால் ஆண்கள், மறுபடியும் மணம் செய்துகொள்கிறார்கள்.

மணமில்லாமல் வைப்பு முறையிலும் வேறு ஸ்திரிகளைச் சேர்த்துக்கொள்ளவும் செய்கிறார்கள். மற்றும் தங்களுக்கு இஷ்டமானபடியெல்லாம் நடந்துகொண்டு பெண்களை இம்சிக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் தைரியம் வந்ததற்குக் காரணம், ஆண்கள் எப்படி நடந்துகொண்டாலும் மனைவிமார்களுக்கு ஜீவனாம்சம் கேட்கும் பாத்தியம் தவிர வேறு எவ்வித உரிமையும் இல்லாததேயாகும்.

பெண்களுக்குத் தங்கள் கணவன் பிடிக்கவில்லையானால், சகித்துக்கொண்டு, தலைவிதி என்பதாகச் சொல்லி திருப்தியுடன் இருக்கவேண்டியதைத்தவிர வேறு ஒரு கதியும் இல்லை. குரூர குணமுள்ள புருஷன், குடிகார புருஷன், குஷ்டரோகியான புருஷன் முதலிய எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் அவனுடைய கொடுமைகளைச் சகித்துக் கொண்டு அவனுடன்கூட பெண் வாழவேண்டியிருக்கிறது. இது ஜீவகாருண்யமாகுமா என்று கேட்கிறேன்.

[கீழையூர், திருப்புவனம், திருச்சி ஆகிய இடங்களில் சொற்பொழிவு—'குடிஅரசு' 16–6–1935]

தாய்மார்களே! தோழர்களே!

'விதவைத் திருமணம்' என்கிற சொல், நமது பெண்கள் விஷயத்தில்தான் சொல்லப் படுகிறதே தவிர, ஆண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மை ஒரு புருஷனுடன் கூடி, அவர் காலமான பிறகு இன்னொரு புருஷனை மணந்துகொள் கிறார்களோ—அதுபோல ஆண்களும் பலர், ஒரு மனைவி தவிர இரண்டாவதாக வரிப்பதை விதவைத் திருமணம் என்கிறார்களா? 'விதவன் திருமணம்' என்றுதானே போட வேண்டும்?

நானே ஒரு விதவன்; விதவனாகிப் பின் இரண்டாவது பெண்டாட்டி கட்டிக் கொண் டிருக்கிறேன். இம்மாதிரி சம்பவம் நம்நாட்டில் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே நடந்து வருகிறது; பெண்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். சாஸ்திர, மதப்புராணங்களைப் பார்த்தால் ஏராளமாக உண்டு. நமது பெண்கள் இப்படிச் செய்து கொள்ளுகிறதுதான் நமக்கு அதிசயமாகத் தோன்றலாமே தவிர, உலகத்தில் இது அதிசயமல்ல.

கிறிஸ்தவர்களிலும் முஸ்லிம்களிலும்—கணவன் இறந்தவுடனே பெண்கள், வேறு புருஷனைக் கட்டிக் கொள்வார்கள். இது நம் நாட்டில் சிற கூட்டத்தில் நடப்பது அதிசயம் என்னலாமே தவிர, புருஷன் செத்துவிட்டால் வேறு ஒரு புருஷனைச் சேர்த்துக் கொள்வது உலகத்தில் நடந்துவருகிற வழக்கமேயாகும். இந்துக்கள் என்று சொல்லப்படுகிற சாதியில் பல சாதிப் பிரிவுகள் உண்டு. சமூகத்தில் சிலரை, அவர்கள் ஏதோ தாழ்வான சாதி என்று கூறுகிறார்கள்! ஆனால், அவர்களிடையே இவ்வித மறுமணம் ஏராளமாக நடந்துவருகிறது.

முன்பு மலையாளத்தில் கலியாணம் என்று ஒன்று கிடையாது; 30 ஆண்டுகளாகத் தான் உண்டு; சிட்டுக் கலியாணம் என்பார்கள். அப்போது எட்டு வயது, பத்து வயதுப் பெண்களை ஒன்றுக்கு 100 பேர்கள்வரை உட்கார வைத்து, ஒரு பார்ப்பான்—நம்பூதிரி என்பவன் அவர்களின்மேல் தண்ணீரை ஊற்றி, ஒரே கயிற்றால் முடிச்சுப் போட்டு விடுவான். அந்த நூறு பேரும் வாழ்க்கை நடத்துவதற்குச் சுத்தியாகி விடுவார்கள். அவர்கள் யாருடன் வேணுமானாலும் கலந்துகொள்ளலாம். அதை, 'சம்பந்தம்' என்று கூறுவார்கள். கொஞ்சம் வசதியுள்ளவர்கள் தங்கள் சாதியில் சம்பந்தம் வைத்துக் கொண்டால், ஒரு மாற்று அல்லது அய்ந்து ஆறு மாற்றுக்குக் குறைவாகக் கருதுவார் களாதலால்—பார்ப்பானையே வைத்துக் கொள்வார்கள். வெள்ளையாகவே கூறுவார்கள்: 'இந்தப் பார்ப்பானிடம்—இந்த நம்பூதிரியிடம் தனக்குச் சம்பந்தம்' என்று; வாரத்திற்கு ஒரு ஆண் மாற்றிக்கொள்ளலாம்.

சில வகுப்புகளில் இந்த விதவைக் கலியாணம் என்று சொல்லுவதற்குப் பதில், குடும்பத்தில் இளையவன் அல்லது மூத்தவன் ஒருவன் இறந்து விட்டாலோ—இரண்டாம் பேருக்குக் கலியாணம் என்று தெரியாமலே அவனுடைய மனைவி இவனுக்கு உரிமையாகி விடுகிறாள்! அதில் தப்பு இல்லை; நான் பார்த்திருக்கிறேன். மலையாளத்தில் இது உரிமையாக வந்துவிடுகிறது.

என் குடும்பத்தில் 1909-லே ஒரு நிகழ்ச்சி நடந்தது. எனது தங்கைக்கு (பொன்னுத் தாய்) ஒரு பெண் இருந்தது. அதற்கு ஒன்பது வயதிலேயே திருமணம் செய்து விட்டார்கள். கலியாணம் ஆகி 30-ம் நாள் நடைபெறும் சடங்கான தாலிமாற்றல் சடங்கு செய்வதற்கான ஏற்பாடு நடந்தது. அன்று மாப்பிள்ளைக்கு 2, 3 தடவை தீடீரென்று வயிற்றுப்போக்கு போயிற்று. சரி பிள்ளையாண்டான் பலகாரம் அதிகமாய்ச் சாப்பிட்டிருப்பான், சரியாய்ப் போய்விடும் என்று இருந்து விட்டார்கள். அது 7, 8 தடவை என்று ஆகி, கடைசியில் அது காலரா (பேதி) என்ற நிலைக்கு வந்து விட்டது. அப்புறம் என்னென்னவோ செய்தும் பயன் இல்லை. 12 வயதுடைய மாப்பிள்ளை இறந்துபோனான்.

பிறகு இரண்டு, மூன்று வருஷங் கழித்து அந்தப் பெண் பெரியமனுஷியாகி விட்டது. உடனே மறு மணத்திற்கு ஏற்பாடுசெய்து கடைசியாக ஒரு பையனைப் பார்த்து முடிவு செய்தேன்; வெளியில் யாரிடமும் கூறவில்லை. எனக்கு இயற்கையாகவே சிறிது தைரியம் உண்டு. ஒரு வேலை செய்தேன். நான், சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஊரில் இருந்து கொண்டேன். என் மைத்துனர், பெண், நம்பிக்கையுள்ள ஒரு அம்மை ஆகிய மூவரையும் சிதம்பரத்தில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தைப் பார்ப்பதற்கென்று சிதம்பரம் அனுப்பிவிட்டேன். பையனைப் பட்டணத்தில் அச்சாபீஸ் சாமான் வாங்குவதற்காக என்று இந்தப் பக்கம் சொல்லி அனுப்பிவிட்டேன். சாமானை வாங்கிக்கொண்டு சிதம்பரம் வந்து விடவேண்டுமென்று ஏற்பாடு.

சிதம்பரத்தில் ஒரு நாயுடு இன்ஸ்பெக்டர்—எனக்கு மிகவும் வேண்டியவர்; அவரிடம் தான் அனுப்பி வைத்தேன். அவரிடம்போய், 'இராமசாமி அனுப்பிவைத்தான்' என்றுகூறி விஷயத்தைக் கூறியவுடன், அவர் மிக்க மகிழ்ச்சியோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆதலால் பெரிய மனுஷர்கள் பலர் வந்தனர். அவர்களது இல்லத்திலேயே திருமணம் முடிந்தது. பிறகு எனக்குத் தந்தி வந்தது—'எங்களின் யாத்திரை சரியாய் நடந்துபோயிற்று' என்று. கலியாணம் ஆன இரண்டாம் நாள் வெளியில் தெரிந்து போய்விட்டது. நான் இரயிலில் வரவேற்கப் போனேன். எனது அப்பா அழாத குறையாய், 'அவமானம் வந்து விட்டதே' எனத் தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டார். எங்கள் அம்மாவோ, தூக்கில் தொங்கவேபோய்விட்டார்கள்.

ஊரில் பலர் கூடினார்கள்; ஒருமனதாகச் சாதிநீக்கம் செய்துவிட்டார்கள். நாங்கள் மூன்று வீட்டாரும், நீக்கப்பட்ட ஆறுவருஷம் வரை சாதியிலிருந்து தள்ளப்பட்டு (உறவினர் விலக்கம்) இருந்தோம்.

பிறகு 'சேர்மன்' தேர்தல் வந்தது. நான் நின்று தேர்தலில் ஜெயித்தேன். ஒவ்வொரு சமூகத்தாரும் சீர் கொண்டுவந்து என்னைப் பார்த்துச் சென்றனர். ஓரிருவர், 'என்ன! நம்முடைய சாதியில் ஒருவன் சேர்மனாக வந்திருக்கிறான்; ஊரில் உள்ள மற்ற சாதியார் எல்லாம் சீர் கொண்டு போகிறார்கள்; நாம் சும்மா இருப்பதா?' என்று கிளம்பி விட்டனர். அது எப்படியோ சூடுபிடித்து, கடைசியில் என்னைப் பார்ப்பதற்கென்று வந்தார்கள். முதல்நாளே வருவதாகச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். சரி, வரட்டும்; என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம் என்று ஒரு அண்டா நிறையக் காப்பி போட்டு வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மேளம் வைத்துக்கொண்டு 7–8 ரூபாயில் ஒரு வேட்டியும் எடுத்துக்கொண்டு வந்தார்கள். உட்கார்ந்து பேச ஆரம்பித்தவுடன், நாகம்மையார் டம்ளரில் காப்பியை ஊற்றி ஆள்மூலம் அனுப்பினார்கள். பார்த்தார்கள்—சரி என்று இரண்டு மூன்று பேர்கள் வாங்கிச் சாப்பிட்டனர். அவ்வளவுதான்—எல்லோரும் மடமடவென்று தொடர்ந்து வாங்கிச் சாப்பிட்டார்கள். ஒரு அண்டா காப்பியும் தீர்ந்து, இன்னொரு அண்டா போடும்படி ஆகிவிட்டது. அன்று முதலே எங்களைத் தள்ளிவைத்தது தீர்ந்து போய்விட்டது.

சிலர் கூறுவார்கள்: 'சாதி ஒழிய வேண்டுமானால் ஒவ்வொருவரும் தம் சாதியில் திருமணம் செய்யக்கூடாது என்று அரசாங்கம் சட்டம் செய்யவேண்டும்' என்று. அது தப்பு; நம்மில் சாதியில்லை. பார்ப்பான் ஒரு சாதி; மற்ற நாம் எல்லோரும் ஒரு சாதி. இந்த இரண்டுக்கும் நடப்பதுதான் கலப்புமணம் எனலாம். எப்படி உத்தரவு போட்டால் பயனுள்ளதாகும் என்றால், 'ஒருவன் கலியாணமே ஆகாமல் இருந்தால் கலியாணம் ஆகாத பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளலாம். அது தப்பு இல்லை. ஆனால், ஒரு கலியாணம் ஆகி மனைவி தவறிப்போய் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டால், அது போலவே ஒரு கலியாணம் ஆகி கணவன் தவறிப்போய் உள்ள பெண்ணையே கலியாணம் செய்துகொள்ளவேண்டும். இது மாதிரியே ஒரு பெண்ணும் முதல் கலியாண

மானால் முதலாவது கலியாணம் செய்துகொள்ளுபவனையும், இரண்டாவது கலியாண மானால் முதல் மனைவியை இழந்தவனையும் கலியாணம் செய்துகொள்ளவேண்டும்'— இது மாதிரி உத்தரவு போடணும். இப்போது இது மாதிரி இல்லாததால், இது மாதிரி முறை புதுமையானதாகத் தோன்றுகிறது. இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இதில் இந்தப் பெண்ணைத்தான் பாராட்ட வேண்டும். ஒருமுறை கெட்டது தப்பு இல்லை. நம்கடவுள் மத, சாஸ்திர, புராணங்களைப் பார்த்தால் தெரியும். கடவுள் என்பவைகளின் பெண்டாட்டிகள் கெட்டதையும், அவர்கள் ஒழுக்கங்கெட்ட நடத்தைகளும்! மானமிழந்த கடவுளும் உண்டு. மனைவியை வாடகைக்கு விட்ட பக்தர்களும் உண்டு. மோட்சம் பெறுவதற்காகத் தம் மனைவியைக் கடவுளுக்குத் தானம் தந்தவர்கள் கூட உண்டு.

[குத்தாலத்தில், 31-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-4-1959]

10. விவாக ரத்து

'விவாக ரத்து' சட்டமானால் உடனே எல்லாப் பெண்களும் தங்கள் கணவன்களை விட்டு ஓடிப்போவார்கள் என்றும், 'கற்பு நிலை' அடியோடு கெட்டுப்போகுமென்றும் பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பிற்கும் அவசியத்திற்கும் ஒரு சட்டம் செய்தால், பொதுஜனங்கள் எல்லோரும் அதே வேலையாய் இருப்பார்களென்பது நியதியல்ல. அவசிய மான சந்தர்ப்பங்களில் மாத்திரந்தான் ஜனங்கள் அதனைக் கையாளுவார்கள். ஏனெனில், அதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களுக்குத் தாங்களே பாத்தியப்பட்டவர்கள் என்பது அனுபவத்தினால் மக்களுக்கு நாளடைவில் விளங்கிவிடும். ஆகவே, விவாக ரத்து அனுமதிக்கப்படுமானால் ஏதோ ஆபத்து வந்துவிடுமென்று சிலர் நினைத்துக்கொண் டிருப்பது அவர்களது சுயநலத்தினால் ஏற்படக்கூடிய பயம் என்றுதான் சொல்லுவோம்.

விவாக ரத்து சட்டமாவது பெண்கள் சமூகத்திற்கு ஒரு இன்றியமையாத பாது காப்புக் கருவி என்பதே நமது முடிவான அபிப்பிராயம். புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பர அன்பும், சமமான வாழ்க்கையும் ஏற்படவேண்டுமானால், இருவருக்கும் தனித் தனியாக உரிமை இருந்தால்தான் முடியும். இப்போதிருக்கும் இந்திய சமூகத்திலுள்ள மண வாழ்க்கையானது பல வழிகளிலும் பெண்மக்களுக்குப் பாதகமான முறையிலேயே நடைபெற்று வருகின்றது. ஒரு புருஷன் தனக்குத் தேவை இல்லாதபோது தனது மனைவியை ஒதுக்கிவைத்துக்கொள்ள உரிமை அளித்திருக்கும் நமது சட்டமானது பெண் களுக்கு அதே உரிமையைக் கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இந்த உரிமை மனிதனுக்கு இருப்பதால் எல்லாப் புருஷர்களும் இதே வேலையாகவா இருக் கிறார்கள் என்றுதான் கேட்கிறோம்.

ஆகவே, இதே உரிமையைப் பெண்மக்களுக்கும் அளிக்கவேண்டியது நியாயமும் கிரமமும் ஆகும் என்பதை இன்னும் ஏன் ஆண் மக்களில் சிலர் அறியவில்லை என்பது தான் நமக்கு விளங்கவில்லை. இந்த விவாக ரத்துத் தீர்மானத்தை, வைதீகப் பத்திரிகைகள் தான் கண்டித்தனவென்றால், நமது ஜனநாயக தினசரியான 'ஜஸ்டிஸ்' பத்திரிகையும் கண்டித்ததுதான் நமக்கு விளங்கவில்லை. எது எப்படி ஆயினும், இந்தத் தீர்மானத்தின் அவசியத்தை நமது சுயமரியாதை இயக்கத்து அன்பர்கள் நன்கு அறிவார்களாகையால், இம் மாதிரியான சமத்துவமான நோக்கமுடைய விஷயங்களில் எவ்வளவு எதிர்ப்பு இருந் தாலும், அதற்காக நாமோ நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களோ எங்கள் கடமையினின்றும் பின்வாங்கமாட்டோம் என்பதை மாத்திரம் உறுதி கூறுகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—29-12-1929]

ஆண், பெண் கலியாண விஷயத்தில் அதாவது, புருஷன்-மனைவி என்ற வாழ்க்கையானது நமது நாட்டிலுள்ள கொடுமையைப்போல், வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கலியாண தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக்கொள்வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதிலில்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு, அவ்விதக் கலியாணத்திற்குத் தெய்வீகக் கலியாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்துப் பெண்களை வஞ்சிக்கின்றோம்.

பொதுவாகக் கவனித்தால், நமது நாடு மாத்திரமல்லாமல் உலகத்திலேயே அனேகமாய்க் கலியாண விஷயத்தில் பெண்கள் மிகக் கொடுமையாயும், இயற்கைக்கு விரோதமான நிர்ப்பந்தமாயும் நடத்தப்படுகிறார்கள் என்பதை நடுநிலைமையுள்ள எவரும் மறுக்க முடியாது. ஆனால், நமது நாடோ இவ்விஷயத்தில் மற்ற எல்லா நாட்டையும்விட மிக்க மோசமாகவே இருந்து வருகிறது.

இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்றுவருமானால், சொற்பகாலத்திற்குள்ளாக, அதாவது-ஒரு அரை நூற்றாண்டுக்குள்ளாகக் கலியாணச் சடங்கும் தொந்தமும் உலகத்தில் அனேகமாய் மறைந்தேபோகும் என்பதை உறுதியாய்ச் சொல்லலாம். இதை அறிந்தே மற்ற நாடுகளில் அறிஞர்கள் பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் தளர்த்திக் கொண்டு வருகின்றார்கள். நம் நாடு மாத்திரம் குரங்குப் பிடியாய்ப் 'பழைய கருப்பனாகவே' இருந்துவருகின்றது. ஆதலால், தலைகீழ் முறையான பெண்கள் கிளர்ச்சி ஒன்று நமது நாட்டில்தான் அவசரமாய் ஏற்படவேண்டியிருக்கின்றது.

செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில், 'பெண்களுக்கும் ஆண்களுக்கும் கலியாண விடுதலை செய்துகொள்ள உரிமையிருக்கவேண்டும்' என்பதாக ஒரு தீர்மானம் செய்யப் பட்டவுடனும்; பின்னர், சென்னையில் கூடிய பெண்கள் மாநாட்டில், 'கலியாணத்துக்கு ஒரு சட்டம் வேண்டும்' என்று தீர்மானித்தவுடனும், சீர்திருத்தவாதிகளென்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள் உட்படப் பலர் உலகமே முழுகிவிட்டதாகக் கூக்குரலிட்டார்கள். ஆனால், செங்கற்பட்டுத் தீர்மானத்திற்குப் பிறகு, வெளிநாட்டிலும், இந்தியாவிலும் பல இடங்களில் கலியாண ரத்துச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவில், கலியாணமே தினசரி ஒப்பந்தம்போல் பாவிக்கப்பட்டு வருகின்றது; ஜெர்மனியில் புருஷனுக்கும் பெண்சாதிக்கும் இஷ்டமில்லையானால், உடனே காரணம் சொல்லாமலே கலியாணத்தை ரத்து செய்துகொள்ளலாமென்பதாகச் சட்டம் கொண்டுவரப்பட்டது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். சமீபத்தில், பரோடா அரசாங்கத்தாரும் 'கலியாண ரத்துக்கு' சட்டசபையில் சட்டம் நிறைவேற்றிவிட்டார்கள். மற்றும், பல மேல்நாடுகளிலும் இவ்விதச் சட்டங்கள் இருந்தே வருகின்றன. நமது நாட்டில் மாத்திரம் இவ்விஷயமாய்ச் சட்டம் செய்வதைப்பற்றிக் கவலைப்படாமலிருந்து வருகின்றதானது, மிகவும் கவலையற்ற காரியமென்றே சொல்லவேண்டும். சாதாரணமாகத் தென்னாட்டில் அனேக புருஷர்கள் தங்களது பெண்சாதிகளின் நடவடிக்கைகளில் சந்தேகங்கொண்டு கொலைகள் செய்ததாகத் தினம் பத்திரிகைகள் மூலம் செய்திகள் வெளியாவதைப் பார்த்துவருகின்றோம்.

சில சமயங்களில் ஒரு பெண்சாதியின் நடவடிக்கை சந்தேகத்திற்காகப் பல கொலைகள் நடந்ததாகவும் பார்க்கின்றோம். தெய்வீக சம்பந்தமான கலியாணங்கள் இப்படி முடிவடைவானேன், என்பதைப்பற்றித் தெய்வீகத்தில் பிடிவாதமுள்ள எவருக்குமே யோசிக்கப் புத்தியில்லை. பெண்கள் உலகம் முன்னேற்றமடைய வேண்டுமானால்-அவர்களுக்கு மனிதத் தன்மையும், மனித உரிமையும், சுயமரியாதையும் ஏற்படவேண்டுமானால், ஆண்களுக்குத் திருப்தியும் இன்பமும் உண்மையான காதலும் ஒழுக்கமும் ஏற்படவேண்டுமானால்-கலியாண ரத்திற்கு இடம் அளிக்கப்படவேண்டியது முக்கியமான காரியமாகும்.

அப்படிக்கில்லாதவரையில் ஆண், பெண் இருவருக்கும் உண்மை இன்பத்திற்கும் சுதந்திர வாழ்க்கைக்கும் இடமே இல்லாமல் போய்விடும்.

நமது 'சீர்திருத்தவாதிகள்' பலர், ஒரு மனிதன் இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக் கொள்வதைப்பற்றி மாத்திரம் குடிமுழுகிப் போய்விட்டதாகக் கூச்சல் போடுகின்றார்கள். இவர்கள் எதை உத்தேசித்து இப்படிக் கூச்சல் போடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்க வில்லை. மதத்தை உத்தேசித்தா? அல்லது பகுத்தறிவை உத்தேசித்தா? அல்லது மனித சுதந்திரத்தை உத்தேசித்தா? என்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. அல்லது மனித ஒழுக்கத்தை உத்தேசித்து இப்படிப் பேசுகின்றார்களா என்பதும் விளங்கவில்லை. இதைப் பற்றி மற்றொரு சமயம் விவரிப்போம்.

நிற்க, ஒரு பெண்ணுக்குமேல் மனிதன் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது என்று சொல்லுபவர்களை நாம் ஒன்று கேட்கிறோம். அதென்னவெனில், கலியாணம் என்பது மனிதன் இன்பத்துக்கும் திருப்திக்குமா? அல்லது சடங்குக்காகவா? என்று கேட்பதோடு— இஷ்டமில்லாத, ஒற்றுமைக்கு இசையாத, கலவிக்கு உதவாத ஒரு பெண் எந்தக் காரணத் தினாலோ ஒருவனுக்குப் பெண்சாதியாக நேர்ந்துவிட்டால், அப்போது புருஷனுடைய கடமை என்ன என்று கேட்கின்றோம். அதுபோலவே, ஒரு பெண்ணுக்கும் அப்படிப் பட்ட ஒரு புருஷன் அமைந்துவிட்டால், அப்பெண்ணின் கதி என்ன என்றுதான் கேட் கின்றோம். கலியாணம் என்பது தெய்வீகமாகவோ, பிரிக்க முடியாததாகவோ உண்மை யிலிருக்குமாயின், அதில் இவ்விதக் குறைகளும் குற்றங்களும் ஏற்பட முடியுமா என்பதை யோசித்தாலே, தெய்வீகம் என்பது முழுப்புரட்டு என்பது எப்படிப்பட்ட மனிதனுக்கும் புரியாமற்போகாது.

ஆகவே, நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலிருப்பது போன்ற கலியாண ரத்துக்குச் சட்டம் சமீபத்தில் ஏற்படாமல் போகுமாயின், கலியாண மறுப்புப் பிரச்சாரமும், கலியாணம் ஆன புருஷர்களுக்கும் பெண்களுக்கும் பல தாரப் பிரச்சாரமும்தான் செய்யவேண்டியது வரும். அன்றியும், இது சமயம் ஒற்றுமைக்கும் திருப்திக்கும் இன்பத்திற்கும் உதவாத பெண் களுடைய புருஷர்கள் கண்டிப்பாகத் தைரியமாக முன்வந்து தங்களுக்கிஷ்டமான பெண் களைத் திரும்பவும் மணம் செய்து கொள்ளத் துணியவேண்டும் என்றும் தூண்டுகின்றோம். ஏனெனில், அப்படி ஏற்பட்டால்தான் தெய்வீகம் என்கின்ற பெயரைச் சொல்லிக்கொண்டு புருஷர்களுக்கும் பெண்களுக்கும் சம்மதமும், முன்பின் அறிமுகமும் இல்லாமல் செய்யப் பட்டுவரும் கலியாணங்களினால் மணமக்கள் அடையும் துன்பம் ஒழிபட முடியும். மனிதன் ஏன் பிறந்தானோ, ஏன் சாகிறானோ என்பது வேறு விஷயம். ஆதலால், அது ஒருபுறமிருந்தாலும் மனிதன் இருக்கும்வரை அனுபவிக்கவேண்டியது இன்பமும் திருப்தியுமாகும்.

அப்படிப்பட்ட சாதனத்தில், இப்படிப்பட்ட தொல்லைக்கும் துன்பத்திற்குமிடமான இடையூறு இருக்குமானால், அதை முதலில் களைந்தெறியவேண்டியது ஆறறிவுள்ள மனிதனின்முதல் கடமையாகும். மனித ஜீவகாருண்யத்திற்கும் திருப்திக்கும் இன்பத்திற் கும் வேலை செய்பவர்கள் இதை முதலில் செய்யவேண்டும். அப்படிக்கில்லாமல், "ஏதோ கலியாணம் என்பதாக ஒன்றைச் செய்துகொண்டோமே, செய்தாய்விட்டதே, அது எப்படி இருந்தாலும் சகித்துக்கொண்டுதானே இருக்கவேண்டும்" என்று கருதி, துன்பத்தையும் அதிருப்தியையும் அனுபவித்துக்கொண்டிருப்பதும், அனுபவித்துக்கொண்டிருக்கச் செய் வதும் மனிதத் தன்மையும், சுயமரியாதையுமற்ற காரியமாகுமேயல்லாமல், ஒருநாளும் அறிவுடைமையாகாது என்பதே நமது அபிப்பிராயமாகும்.

['பெண் ஏன் அடிமையானாள்? என்ற புத்தகத்திலிருந்து. 11-ம் பதிப்பு : 1971]

11. மறுமணம் தவறல்ல

"ஒரு மனைவியிருக்க, ஆண்மகன் மறுமணம் செய்யலாமா?" என்ற விஷயத்தில் பலருக்குப் பலவித அய்யப்பாடுகள் தோன்றியிருக்கின்றன. இந்த விஷயத்தில் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்குள்ளேயே—இம்மாதிரி, 'மறுமணம் செய்து கொள்வது தவறு' என்கிற அபிப்பிராயமும் சந்தேகமும் இருந்துவருகின்றன. பொது ஜனங்களில் பலர், "மனைவியிருக்க மறுமணம் செய்துகொள்வது, சீர்திருத்தக் கொள்கைக்கு விரோதம்" என்று கருதுகிறார்கள்.

முதலாவது, இந்தக் கொள்கையைப்பற்றிக் கவனிக்கும் முன்பு, மணம் என்பது என்ன என்பதை முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். மணம் என்பதை, மணமக்கள் தாங்கள் வாழ்க்கைச் சவுகரியத்துக்காகச் செய்துகொள்ளும் ஒரு ஒப்பந்த ஏற்பாடு என்று தான் நாம் கருதுகிறோம். ஆதலால், அதில் இவர்களுடைய சுயேச்சையையும் சேர்த்தோ அல்லது தனித்தனியோ கட்டுப்படுத்தும் எவ்விதக் கொள்கைக்கும் இடம் இருக்கக்கூடாது என்றும் கருதுகின்றோம். இதுமாதிரி கருதுவது சரியா, தப்பா என்று முடிவு செய்வதிலிருந்தே மேற்கண்ட கேள்விக்குச் சிறிது சமாதானமும் கிடைத்துவிடும்.

நிற்க, இன்று உலகத்தில் இயற்கை உணர்ச்சியிலும் அனுபவத்திலும் மற்றும் கட்டுப்பாட்டுக் கொள்கையின் கீழும், தமிழர் பின்பற்றும் மதத்தின்படியும் மறுமணம் என்பது எங்காவது தடுக்கப்பட்டிருக்கின்றதா—என்பதை நம்மால் அறியமுடியவில்லை. அதுமாத்திரமல்லாமல், மண விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களிலும், எந்த மத சம்பந்தமான கொள்கைகளிலும் மறுமணம் என்பது தடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. இந்து மதத்தில் அறுபதனாயிரம் பெண்கள் வரையும்; இஸ்லாமிய மதத்தில் 4 பெண்கள் வரையிலும், கிறிஸ்துவ மதத்தில் அளவு குறிப்பிடாமல் எவ்வளவு பெண்களை மணம் செய்துகொள்ள நேர்ந்தாலும் அதுவரையிலும், மணம் செய்துகொள்ள இடமிருக்கின்றது. கிறிஸ்துவ மதத்தில் மாத்திரம் ஆணோ, பெண்ணோ திருமணத்தை ரத்து செய்துவிட்டு மறுமணம் செய்துகொள்ளலாம் என்பதாகவும், அந்தப்படி ரத்து செய்துகொள்வதிலும் இன்னின்ன நிபந்தனைகளின்படிதான் செய்துகொள்ளலாமென்றும் காணப்படுகின்றது. அதாவது, சமுதாய சம்பந்தமான ஒரு பாதுகாப்பை உத்தேசித்து மாத்திரமேயல்லாமல் கொள்கைக்காக அல்ல என்று புரியும்படியாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இவ்வளவுதான் மறுமண விஷயத்தில் மற்ற மதத்திற்கும் கிறிஸ்துவ மதத்திற்கும் உள்ள வித்தியாசம். எனவே, ஒன்றுக்கொன்று நிபந்தனைகளிலும் திட்டங்களிலும்தான் வித்தியாசமே தவிர, மற்றபடி மறுமணக் கொள்கையை—மதங்களின்படி பார்த்தால்—எந்த மதமும் ஆட்சேபித்திருப்பதாய்த் தெரியவில்லை.

அன்றியும், இந்துமதத்தில் இந்துக் கடவுள்களே பல மணங்கள் செய்துகொண்டதாகவும், மற்றும் பல வைப்பாட்டிகளை வைத்திருப்பதாகவும் மத ஆதாரங்களில் காணப்படுவதுடன், அக் கடவுள்களை அந்தப்படியே—அதாவது, பல மனைவிகள், வைப்பாட்டிகள் ஆகியவைகளுடன், தமிழர்கள்—இந்துக்கள் என்பவர்கள் பூசை, கலியாண உற்சவம் முதலியவைகள் செய்தும் வணங்குகின்றார்கள். இஸ்லாமிய மதத்திலும், நாயகம் முகமது நபி அவர்களே ஏககாலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளுடன் இருந்ததாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஆகவே, இதை மறுப்பவர்களோ, இம்மாதிரி கடவுள்களையோ, நபிகளையோ குற்றம் சொல்லுகின்றவர்களோ ஒருக்காலும் தங்கள் மதத்தின்பேரால், மத சம்பந்தமான கட்டளைகளின் பேரால் மறுக்கின்றோம் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அந்தப்படி யாராவது ஒருவர் தன்னை இந்துவென்று சொல்லிக்கொண்டு இம்மாதிரி—அதாவது, "ஒரு மனிதன் மனைவி இருக்க மறுமணம் செய்துகொள்ளலாமா?" என்று கேட்பாரேயானால், அப்படிப்பட்டவர் தம் மதத்தைவிடத் தன்னுடைய பகுத்தறிவையோ, அல்லது அனுபவ சவுகரியத்தையோ, அல்லது வேறு ஏதாவது ஒரு கொள்கையையோ

முக்கியமாகக் கருதிக்கொண்டு, இம்மாதிரி கேள்வி கேட்க வந்திருக்கிறார் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஆகவே, அக் கேள்விக்காரர் தன்னை இந்து என்றும் கருதிக்கொண்டு கேள்வி கேட்பதைவிடப் பகுத்தறிவுக்காரர் என்றோ, அனுபவக் கொள்கைக்காரர் என்றோ கருதிக் கொண்டு கேள்வி கேட்கிறார் என்று அறிந்தோமானால், அது விஷயத்தில் நாம் மகிழ்ச்சி அடைவதுடன், அவருக்கு நியாயம் மெய்ப்பிக்கும் விஷயத்தில் நமக்குச் சிறிதும் கஷ்ட மில்லை யென்றே எண்ணுகின்றோம்.

நிற்க, பொதுவாக ஒரு மனிதனுக்குத் தன் முதல் மனைவி (1) செத்துப்போன காலத்திலும், (2) மற்றொரு கணவனிடம் ஆசைகொண்டு வெளிப்பட்டுவிட்ட காலத்திலும் மறுமணம் செய்துகொள்வதை யாரும் குற்றம் சொல்லுவதில்லை. அதுபோலவே, (3) தீராத கொடிய வியாதிக்காரியாயிருக்கும் காலத்திலும் மறுமணம் செய்துகொள்வதை யாரும் ஆட்சேபம் செய்வதில்லை. (4) பைத்தியக்காரியாய்—புத்தி சுவாதீனமில்லாமற் போய்விட்ட காலத்திலும், யாரும் ஆட்சேபம் செய்வதில்லை. ஆகவே, பகுத்தறிவுக் காரரும் அனுபவக்கொள்கைக்காரர்களும் மேற்கண்ட முதல் சந்தர்ப்பம் தவிர, மற்ற மூன்று சந்தர்ப்பங்களிலும்கூட, மனைவியிருக்க மறுமணம் செய்வதை ஆட்சேபிக்க மாட்டார்கள். இனி, அய்ந்தாவது, ஆறாவது முதலியவைகளாகப் பல விஷயங்களைக் கவனிப்போம். (5) மனைவி அறியாமையாலோ, முரட்டுத்தனமான சுபாவத்தாலோ புருஷனை இலட்சியம் செய்யாமல் ஏறுமாறாய் நடந்துகொண்டு வருவதாக வைத்துக் கொள்வோம். (6) புருஷன் பெண்ணின் மனத்திற்குத் திருப்திப்படாததாலோ அல்லது வேறு காரணத்தாலோ புருஷனிடம் பெண்ணுக்கு அன்பும் ஆசையும் இல்லாமல் வெறுப்பா யிருப்பதாக வைத்துக்கொள்வோம். (7) மேற்கண்ட குணங்களுடன் அடிக்கடி தாய் வீட்டுக்குப் போய்விடுவதாக வைத்துக்கொள்வோம். (8) புருஷனுடைய கொள்கைக்கு நேர் மாற்றமான கொள்கையுடன் புருஷன் மனம் சதா சங்கடப்படும்படி பிடிவாதமாய் நடந்துகொள்ளும் சுபாவமுடையவள் என்று வைத்துக்கொள்வோம். இவைகள் மாத்திர மல்லாமல், மற்றுமிதுபோன்ற குணங்களுள்ள மனைவியிடம் அகப்பட்டுக்கொண்ட கணவன் கதி என்ன ஆவது என்பதைக் கவனிக்கவேண்டியது கேள்வி கேட்பவர்கள்—அதாவது, அனுபவக் கொள்கைக்காரர்கள் என்பவர்களின் முக்கிய கடமையாகும்.

இவை தவிர, புருஷனுக்கு 12 வயதிலும், பெண்ணுக்கு 10 வயதிலும் பெற்றோர் களாலோ, மற்றவர்களாலோ திருமணம் செய்யப்பட்டிருப்பதால், அவைகள் மணமக்கள் அனுசரிக்கவேண்டிய தர்மங்களுக்குக் கட்டுப்பட்ட மணங்களாகுமா? அல்லது திருமணங் கள் செய்து வைத்தவர்கள் அனுசரிக்கவேண்டிய தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவைகளாகுமா? என்பதும் கேள்வி கேட்கிறவர்கள்—அதாவது, பகுத்தறிவுக்காரர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களாகும். இந்தக் காரணங்கள் தவிர, மற்றும் எது எப்படியிருந்தாலும் மனத்துக்குப் பிடிக்கவில்லை; அன்புக்குச் சிறிதும் பாத்திரமில்லை; வாழ்க்கைத் திருப்திக்கும் இயற்கை இன்பத்திற்கும் சிறிதும் பயன்படவில்லை என்று மணமகன் முடிவு செய்து கொள்ளத் தகுந்த மணமகளை அடைந்து விட்டால், அப்போது மணமகளின் கடமை என்ன? என்பதை மதக் கட்டுப்பட்டுக்காரரும் அனுபவக் கொள்கைக்காரரும் பகுத்தறிவுக்காரரும் பாமர பொதுஜனங்களும் சேர்ந்து கவனித்துப் பார்க்கவேண்டிய காரியமாகும்.

கடைசியாக இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, இவைகளைப் பற்றிய யோசனையே சிறிதுமின்றி—'மற்றொருபுறம் எப்படியிருந்தாலும் பொறுத்துக் கொள்ளவும், சகித்துக் கொள்ளவும் வேண்டும்; ஒருகாலமும் மனைவியிருக்க மறுமணம் செய்துகொள்ளக்கூடாது' என்று ஒருவர் சொல்லுவாரானால், அப்படிச் சொல்லுகின்றவர் எந்தக் கொள்கையின்மீது, அல்லது என்ன அவசியத்தைக் கோரி, அல்லது என்ன நியாயத்தை உத்தேசித்து, எவ்வித

நன்மையை அனுசரித்து, அல்லது எந்தப் பகுத்தறிவைக்கொண்டு அப்படிச் சொல்லு கின்றார்; அல்லது எதிர்பார்க்கின்றார் என்று விளக்கப்பட வேண்டும்.

அப்பொழுதுதான் அது கவனிக்கப்படத்தக்கதாகும். ஏனெனில், சாதாரணமாகப் பேசுவோமானால், வெகு சாதாரண பாமரமக்கள் என்பவர்களும்கூட இக்காலத்தில் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசும்போது—'அது சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றிற்கும் பொருத்தமாயிருக்கின்றதா?' என்று கேட்பது எங்கும் சகஜமாயிருக்கின்றதைப் பார்க் கின்றோம். அன்றியும், அம்மூன்று வார்த்தைகளின் அமைப்பும் முதலில் குறிப்பிட்ட சுருதிப்படி அதாவது, நமக்கு முன்பிருந்த அனுபவசாலிகளின் அபிப்பிராயங்கள் என் கின்ற முறையில் கவனிக்கவேண்டும் என்கின்ற தத்துவம் கொண்டதானாலும், அப்படிப் பட்ட அனுபவசாலிகளின் அபிப்பிராயம் எவ்வளவு சரியான தென்று சொல்லப்பட்டாலுங் கூட—மற்றும் அவ்விஷயமானது யுக்திக்கு (அதாவது நமது பகுத்தறிவுக்கு) ஒத்ததாயிருக் கின்றதாவென்று கவனிக்க வேண்டுமென்கின்ற தத்துவத்தையே கொண்டு யுக்தி என்பதை இரண்டாவதாக வைக்கப்பட்டிருக்கின்றதையும் பார்க்கின்றோம். அப்படியும்—அதாவது, யுக்திக்குப் பொருத்தமானதாக இருந்து விட்டதாகச் சொல்லப்படுவதானாலும் அது அனு பவத்திற்கு (அதாவது நடைமுறையில் கொண்டுசெலுத்த) ஏற்றதாயிருக்கின்றதா? என்று கவனித்துப் பார்க்கவேண்டும் என்கின்ற தத்துவத்தை வைத்தே அனுபவம் என்பதை முடிவில்—மூன்றாவதாக வைக்கப்பட்டிருக்கின்றது என்பது யாவருக்கும் விளங்கும். ஆகவே, ஒரு மனிதன் 'ஒரு மனைவி இருக்கும் போது மறுமணம் செய்துகொள்ளக் கூடாது' என்பது, இந்த மேற்கண்ட மூன்று பரீட்சைகளில் எந்தப் பரீட்சைக்கு விரோத மானதென்று கேட்கின்றோம்.

நிற்க, திருமணத்தில் மணமகனுக்கு மணமகளை வாழ்க்கைத் துணை என்று கருது கின்றோம். இந்நிலையில், மேலே ஆரம்பத்தில் சொல்லப்பட்ட 9 வகைப்பட்ட அசவுகரிய மான குணங்களமைந்த மணமகள் ஒரு மணமகனுக்கு அமையப்பட்டுவிட்டால், அது வாழ்க்கைத் துணையா, அல்லது வாழ்க்கைத் தொல்லையா என்பதை முதலில் கண்டிப்பாய்க் கவனிக்கவேண்டும். வேடிக்கையாக வெளியிலிருந்து பேசுகின்றவர்கள் உண்மையறியாமல் —நிலையறியாமல் சிறிதும் பொறுப்பற்ற முறையில் பாமர மக்களின் ஞானமற்ற தன் மையைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு, கண்மூடித் தனமாய்க் குற்றம் சொல்லக் கருதிக்கொண்டு, 'மனைவியிருக்க மறுமணம் செய்யலாமா?' என்று யார் வேண்டு மானாலும் பேசிவிடலாம். அதாவது, 'மனைவியிருக்க மறுமணம் செய்துகொள்வது— அக்கிரமம், அயோக்கியத்தனம்' என்பதாகச் சொல்லிவிடலாம். ஆனால், அந்தப்படி செய்துகொண்டது தப்பா; அல்லது இந்தப்படி சொன்னது தப்பா—என்பதையும் பகுத் தறிவைக் கொண்டாவது, அனுபவத்தைக் கொண்டாவது இந்தப்படி பேசுகின்றோமா —நினைக்கின்றோமா—இதில் பிரவேசிக்கின்றோமா என்றும் நினைத்துப் பார்த்தால், கடுகளவு அறிவுடையவனுக்கும் ஒருகாலமும் உண்மை விளங்காமற் போகாது என்று உறுதியாகச் சொல்லுவோம்.

கடைசியாக ஒன்று சொல்லுகின்றோம். ஒரு மனிதன் ஒரு விஷயம் தனக்கு இஷ்ட மில்லையென்றோ, இன்ன காரியம் செய்யத் தனக்கு உரிமை இருக்கவேண்டுமென்றோ, உரிமையிருக்கக்கூடாதென்றோ கருதுவதற்கு அருகதை உடையவன்தானா, அல்லது அற்றவர்களா என்பதையும்; இம் மாதிரியான தன் சொந்த விஷயங்களில் முடிவான அபிப்பிராயத்திற்கு வர அவனுக்கு உரிமையில்லையா என்பதையும் கவனிக்க வேண்டியது உண்மையான விடுதலையும் சுதந்திரமும் கோருகின்றவர்களின் கடமையாகும்.

நிற்க, வாஸ்தவத்திலேயே அன்பும் ஆசையுமில்லாத, அல்லது அவை தனக்கு ஏற்படாத ஒரு இடத்தில் மனிதன் எப்படி வாழ்வது? மக்களுடைய அன்புக்கும் ஆசைக்கும் இன்பத்திற்கும் திருப்திக்கும்தான் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணும், ஒரு ஆணுக்கு ஒரு

பெண்ணும் சேர்ந்து மணம் (வாழ்க்கை ஒப்பந்தம்) செய்துகொள்வதா? அல்லது மணம் செய்துகொண்டதற்காக அன்பையும், ஆசையையும் திருப்தியையும் தியாகம் செய்வதா? என்பதை மனித ஜீவ சுபாவமுடைய ஒவ்வொருவரையும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

உலகிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களில்—அர்த்தமற்ற கட்டுப்பாடுகளில்—சிக்கிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை அவற்றிலிருந்து விடுவிப்பது என்பது சுலபமான காரியமல்லவானாலும், அவ்விதக் கட்டுப்பாடுகளையும் கஷ்டங்களையும் ஒழிக்கவென்றே ஏற்பட்ட ஸ்தாபன நடவடிக்கைகளையே—'மூடப்பழக்க வழக்கப் படியும், குருட்டு நம்பிக்கைப்படியும் செய்யவில்லை' என்று குற்றம் சொன்னால், சொல்பவர்களுக்கு அறிவு என்பது ஏதாவது இருக்கின்றதா என்றுதான் கருத வேண்டியதிருக்கின்றது. ஏனெனில், இவ்வியக்கம் (சுயமரியதை இயக்கம்) அதற்காகவே ஏற்பட்டிருக்கும்போது, அதன் நடவடிக்கைகள் வேறு எப்படி இருக்கமுடியும்? ஆகையால், இவ்வித யுக்திக்கும் அனுபவத்திற்கும் மனித சுதந்திரத்திற்கும் இன்பத்திற்கும் திருப்திக்கும் விரோதமான கொள்கைகள் எதற்காகக் காப்பாற்றப்பட வேண்டும் என்னும் விஷயங்களை அன்பர்கள் நிடுநிலையில் இருந்து நேர்வழியில் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே மறுமண விஷயத்திலுள்ள அதிருப்தியைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

சுயமரியாதை இயக்கத்தில் கலியாண ரத்து என்பதும் ஒரு திட்டமாகும். அந்தப் படியே செங்கற்பட்டு மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஈரோடு மாநாட்டில் அதற்காக ஒரு சட்டம் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மணம் செய்துகொண்ட மணமக்கள் அந்தப்படியே கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ கலியாண பந்தத்திலிருந்து நீக்கிவிட அல்லது நீக்கிக்கொள்ள உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டாய் விட்டது. இந்தப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை அமுலில் கொண்டுவரச் சட்ட சம்பந்தமான இடையூறு யாருக்காவது, எந்த மதத்திற்காவது இருக்குமானால், அதற்காகச் சட்டத்தை உத்தேசித்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதா? அல்லது சட்டங்களைக் கவனிக்காமல் நியாயம் என்று தோன்றியபடி நடந்துகொள்வதா? என்பதைக் கவனித்துப் பார்த்தால், அவர்களது அதிருப்திக்குச் சிறிதும் இடமிருக்காது என்றே கருதுகின்றோம்.

உதாரணமாக, சுயமரியாதைக் கொள்கைப்படி செய்யப்படும் திருமணங்களிலும் சில சட்டப்படி செல்லக்கூடாதவைகளாக இருந்தாலுமிருக்கலாம். அதாவது,

'மணமக்களிருவரும் வேறு வேறு சாதிகள்' என்று சொல்லப்படும் கலப்பு மணங்களும்; மூடப் பழக்க வழக்கங்களும் அர்த்தமற்றதும் அவசியமற்றதுமான சடங்குகள் செய்யப்படாத சில திருமணங்களும் செல்லுபடியற்றதாகவானாலும் ஆகலாம் என்று சட்ட வல்லுநர்கள் சொல்லுவதாகக் கேள்விப்படுகிறோம். அப்படியிருந்தாலும், கொள்கையிலிருக்கும் அவாவை உத்தேசித்துச் சட்டத்தைக் கவனியாமலும், அதனால் ஏற்படக்கூடிய பலன்களை இலட்சியம் செய்யாமலும் எல்லாவற்றுக்கும் துணிந்து பலர் மணம் செய்து கொள்வதை நாம் பார்க்கின்றோம். ஆகவே, மறுமண விஷயத்தில், முதல் 'மனைவி'யைச் சட்டப்படி கல்யாண ரத்துச் செய்யமுடியாமல் போய்விட்டதால், 'கல்யாண ரத்துச் செய்யாமல் மறுமணம் நடத்தப்பட்டது' என்று சொல்லப்படுவதைவிட—இம் மாதிரித் திருமணங்களில் சுயமரியாதைக்காரர்களுக்குக் கொள்கைப் பிசகோ, நியாப் பிசகோ இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

தவிரவும், முதல் மனைவி மணமகனுடன் ஒன்றாக வாழ்ந்து கொண்டு இருக்கும் போதுகூட, மறுமணம் செய்துகொள்ளப்படுவதையும், சுயமரியாதைக் கொள்கை ஏன் ஆதரிக்கின்றது என்பதைப் பற்றியும் சற்றுக் கவனிப்போம்.

மக்களின் அன்பும் ஆசையும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, அது இன்ன விதமாக, இன்னாரோடு மாத்திரம்தான் இருக்கவேண்டும் என்பதாக நிர்ப்பந்திக்க எவ்வித நியாயமும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. ஏனெனில், ஆசையென்பது ஜீவ சுபாவமானது. அதை ஏதோ ஒரு நிர்ப்பந்தத்திற்காகத் தடுத்து வைப்பது என்பது ஒரு வகையான அடிமைத் தனமேயாகும். அன்பு, ஆசை ஆகியவைகள் ஏற்படுவது ஜீவனுக்கு இயற்கைச் சுபாவம் என்றும், அது சுதந்திரமுடையதாயும் உண்மையுடையதாயும் இருக்கவேண்டும் என்றும், அதை ஒரு இடத்திலாவது ஒரு அளவிலாவது கட்டுப்படுத்துவதென்பது ஜீவசுபாவத்திற்கும் இயற்கைத் தத்துவத்திற்கும் மீறினதென்றும் ஒப்புக்கொள்கின்ற மக்கள், அன்பு ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்று சொல்ல முன் வருவது முன்னுக்குப்பின் முரண் என்றே சொல்லுவோம். ஆனால், அனுபவத்தில் உள்ள சில சவுகரிய, அசவுகரியங்களை உத்தேசித்தும், இயற்கைத் தடுப்பு, சமுதாய வாழ்க்கை நலக்கொள்கைமுறை முதலியவைகளை உத்தேசித்தும்—அன்பும் ஆசையும் கட்டுப் பாட்டுக்குள் அடங்கவேண்டியதாக ஏற்படலாம் என்பதை நாம் மறுக்க வரவில்லை. அன்றியும், ஒப்பந்தங்களினால் கட்டுப்படவேண்டியதாகவும், ஆசைப் பெருக்கால் தானாகவே கட்டுப்பட்டு விட்டதாகவும் போனாலும் போகலாம். அம்மாதிரி நிலைகளில் இம்மாதிரிக் கேள்விக்கே இடமில்லை. ஆதலால், அப்படிப்பட்ட காரியங்களை அவரவர் இஷ்டத்திற்கே விட்டுவிடவேண்டியதவசியமாகும். முடிவாக ஒன்று சொல்லி, இதை இப்போது முடிக்கின்றோம்.

அதாவது, இம் மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் ஒரேயடியாய் அடியோடு இடம் இல்லாமல் போகவேண்டுமானால், பொதுவாகப் பெண்கள் நிலைமை மாறியாகவேண்டும். ஏனெனில், மேற்கண்ட கேள்வி கேட்கப்படுவதற்குப் பெரிதும் அஸ்திவாரமாயிருக்கும் காரணமெல்லாம், 'இப்படிச் செய்துவிட்டால், முன்மணம் செய்துகொண்ட பெண்ணின் கதி என்ன ஆவது?' என்கின்ற கவலை கொண்டேதான் கேள்வி கேட்கப்படுகின்றது. எந்தெந்தக் காரணத்தால் புருஷனுக்குப் பெண் பிடிக்கவில்லையோ—ஒத்துவரவில்லையோ—அந்தக் காரணங்களால் பெண்ணுக்குப் புருஷன் பிடிக்காதபோது, இப்போது புருஷனுக்கு இருக்கவேண்டுமென்று சொல்லப்படும் சுதந்திரமும் சவுகரியமும் போல பெண்களுக்கும் ஏற்பட்டுவிடுமானால், பிறகு இந்த மாதிரியான அனுதாபமும் கவலையும் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட இடமே இருக்காது என்பதுதான்.

நம்மைப் பொறுத்தவரை ஆண்களுக்குச் சொன்ன விஷயங்கள் எல்லாம் பெண்களுக்கும் பொருந்துமென்றும், அவர்களுக்கும் ஆண்களைப் போலவே ஏற்படவேண்டுமென்றும், அம்மாதிரியே அவர்களும் நடந்துகொள்ளவேண்டுமென்றும், உலக வாழ்விலும் சமுதாயத்திலும் சட்டத்திலும் மதத்திலும் ஆண்களுக்குள்ள சவுகரியங்களும் உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கவேண்டுமென்றும், அப்பொழுதுதான் பெண்களுக்கு உண்மையான சுதந்திரம் ஏற்பட்டதாகும் என்பதோடு, உண்மையான—திருப்திகரமான இன்பத்தையும் ஆசையையும் அடையமுடியுமென்றும் கருதுகின்றோம்.

['பெண் ஏன் அடிமையானாள்?' என்ற புத்தகத்திலிருந்து. 11-ம் பதிப்பு : 1971]

12. ஒருதார மணம்

இந்துக்கள் என்று கூறப்படும் பிரிவினருக்குள் இன்று பலதார மணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எவ்விதக் கொடுமைக்குட்பட்டாலும், திருமணத்தை ரத்து செய்து கொள்ளும் உரிமை மனைவிக்குக் கிடையாது. இன்றுள்ள 'இந்துச் சட்டம்' என்பது மனுதர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. பெண்ணுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்பதும் (மனு–9 : 3); கணவன் சொன்னபடி மனைவி

நடக்காவிடில் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டு நரியாய்ப் பிறந்து பாவப் பிணியால் வருந்துவாள் என்பதும் (9 : 30)—இன்னும் பல கட்டுப்பாடுகளும் பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டிருப்பதை மனுதர்மத்தில் காணலாம். இவைகளை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டதுதான் இந்துச் சட்டம். இதைத் தலைகீழாக மாற்றியமைத்தாலொழிய, திராவிடப் பெண்களுக்குச் சுயேச்சையில்லை. இந்தத் துறையில் 'ராவ் கமிட்டி' என்ற 'இந்துச் சட்டத் திருத்த விசாரணைக் கமிட்டி'யின் முடிவுகள், விரைவில் இந்திய சட்டசபையில் விவாதத்திற்கு வருமென்று அறிகிறோம்.

அரசியல் நிர்ணய சபையில் செய்யப்படவிருக்கும் முடிவுப்படி, இம் மாதிரிச் சட்டங்களை மாற்றும் உரிமை, இனிமேல் மாகாண சட்டசபைகளுக்கே வழங்கப்படும் என்ற நம்பிக்கையிருக்கிறது. அதுவரையில் காத்திருப்பதற்குப் பதிலாக தோழர். ஏ. காளேஸ்வர ராவ் என்பவர் இருதார மணத்தைத் தடுப்பதற்காகவும், திருமண ரத்து உரிமையை இரு பாலருக்கும் வழங்குவதற்காகவும், சென்னை சட்டசபையில் ஒரு மசோதாவைக் கொண்டு வரப்போவதாகத் தெரிகிறது.

இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில், நமது 20 ஆண்டுப் பிரச்சாரத்தின் பயனாக, இம் மசோதாவுக்குப் பொதுமக்களின் எதிர்ப்பு இருக்காதென்றே கூறலாம். படித்த ஒரு சிலரும், வைதிகப் பித்து நீங்காதவரும் இம் மசோதாவை எதிர்க்கலாமே தவிர— மற்றவர்கள், குறிப்பாகப் பெண்மக்கள் எதிர்க்கமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

முதலாவது சுயமரியாதை மாநாடு செங்கற்பட்டில் கூடியபோது, அதாவது சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு, திருமண ரத்து உரிமையை வற்புறுத்தி அம் மாநாட்டில் தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு சில மாதங்கள் கழித்து, சென்னையில் நடைபெற்ற மாதர்கள் மாநாட்டில், அத் தீர்மானத்தைக் கண்டித்தும், 'திருமண ரத்து மத விரோதமானது' என்றும் தீர்மானிக்கப்பட்டது ஒரு சிலருக்காவது நினைவிருக்கலாம். அவ்வளவு பின்னணியிலிருந்த இம் மாகாண மாதர்கள் இன்று எவ்வளவோ முன்னேறியிருக் கின்றனர். ஆதலால், படித்த பெண்கள் சார்பில் இம் மசோதாவிற்கு எதிர்ப்பிருக்கா தென்றே கூறலாம்.

பிள்ளைப் பேறில்லை என்ற காரணத்தைக் காட்டியும், வேறு அற்பச் சண்டைகளைக் கொண்டும், 'இந்துமத ஆண்கள்' ஒரு மனைவியிருக்கும்போது மற்றொரு பெண்ணையும் மணந்துகொள்ளுகின்றனர். அவ்வாறு செய்பவர்கள் இருவரும் மனமொப்பி, திருமண ஒப்பந்தத்தை ரத்து செய்து கொண்ட பிறகாவாது செய்தாலும் பரவாயில்லை. அதைவிட்டு, ஆண்மட்டும் சர்வாதிகாரத்துடன் மற்றொரு பெண்ணை மணந்துகொள்கிறான். பெண்ணும் இதே காரணத்தைக் கொண்டு (பிள்ளைப் பேறில்லாமை), சர்வாதிகாரத்துடன் மற்றொரு ஆணை மணந்து வீட்டில் சேர்த்துக் கொண்டால் கணவன் சும்மாயிருப்பானா?

இது மட்டுமல்ல; திருமணமான ஆண்களில் சிலர் பிற பெண்களுடன் நேசமாகி அதைப் பெருமையாகவும் வெளிப்படையாகவும் கூறிக்கொள்ளும் அக்கிரமச் செயலை சென்னை நகரத்தைத் தவிர வேறெங்கும் காணமுடியாது.

இம் மாதிரிக் கொடுமைகளைத் தடுப்பதற்கு இந்தப் புதிய மசோதா உதவி செய்யும்.

திருமண ரத்து உரிமை சட்டத்திலிருக்குமானால், நாள்தோறும் ஆயிரக்கணக்கான திருமண ரத்துக்கள் நடைபெறும் என்று சிலர் விஷமப்பிரச்சாரம் செய்வார்கள். இது பெருந் தவறு. சட்டத்திலிருக்கும் ஒருரிமையை எல்லோரும் செய்வதென்பது எளிதல்ல. 'இந்து' என்று கூறப்படுகிறவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்பதைச் சட்டம் அனுமதிப்பதனால், எத்தனை பேர் பல மனைவிகளுடன் இருக்கிறார்கள்?

எனவே, திருமண ரத்து என்பது கணவன்—மனைவி ஆகியவர்களுக்கு இருக்க வேண்டிய தற்காப்பு ஆயுதம்; இதைக்கொண்டு இருவருமே அடிக்கடி குத்திக் கொள்வார்கள் என்று கூறுவது அபத்தம்.

இந்த மசோதாவில், 'எல்லாத் திருமணங்களையும் சர்க்காரில் பதிவு செய்துவிட வேண்டியது அவசியம்' என்ற ஒரு விதியையும் சேர்த்துக் கொண்டால்தான் நல்லது.

இம் மசோதாவைக் காங்கிரஸ் மந்திரிசபை நிறைவேற்றி வைக்குமா, அல்லது ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்துவிட்டுத் தட்டிக்கழிக்குமா என்பது தெரியவில்லை. ஆண்களே நிறைந்திருக்கும் சட்டசபையிலிருந்து (மசோதாவைக் கொண்டுவருபவர் ஆண் தான் என்றாலும்) பெண் சமுதாயத்திற்கு அதிக நியாயம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. இம் மசோதாவை உடனே நிறைவேற்றி வைக்காவிட்டால், சட்டசபையிலுள்ள பெண் அங்கத்தினர்களனைவரும், பெரிய பெண் பட்டாளங்களைத் திரட்டிக் கிளர்ச்சி செய்தால் வெற்றி கிடைக்கும். இம் மசோதா விஷயத்தில் பெண்களுக்கெதிராக சர்வ கட்சி ஆண்களும் ஒன்றுசேர்ந்துவிடுவார்கள்; பெண்ணினம் உஷாராயிருக்கட்டும்!

[*'விடுதலை'—தலையங்கம்—4-9-1946*]

13. கர்ப்பத் தடை

கர்ப்பத் தடையின் அவசியத்தைப்பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்ற வர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசமிருக்கின்றது. அதாவது, பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத் தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள், பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும், குடும்பச் சொத்து குறையாமல் இருக்கவேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத் தடை அவசியம் என்று கூறுகின்றார்கள். இதை மேல்நாட்டினர் பலர்கூட ஆதரிக்கிறார்கள். ஆனால், நமது கருத்தோ இவைகள் எதையும் முக்கியமாய்க் கருதினதல்ல. மற்றெதைக் கருதி என்றால், முன் சொன்னது போல் பொதுவாகப் பெண்களின் விடுதலைக்கும் சுயேச் சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால், சாதாரணமாய்ப் பெண்கள் பிள்ளை பெறுவதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்கிறோம். அதுமாத்திரமல்லாமல், பல பிள்ளைகளைப் பெறுகின்ற காரணத்தால் ஆண்களும்கூட சுயேச்சையுடனும் விடுதலை யுடனும் இருக்கமுடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதன் உண்மையைச் சாதாரணமாய் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் சுதந்திரத்திற்குக் கஷ்டம் வருகிறது என்கிற காலத்தில் பேசிக்கொள்வதைப் பார்த்தாலே தெரியும்.

ஒரு மனிதன் தான் கஷ்டநிலையில் பேசும்போது, "நான் தனியாய் இருந்தால் ஒரு கை பார்த்துவிட்டு வருவேன். 4, 5 குழந்தைகள் ஏற்பட்டுவிட்டதால் இவைகளைக் காப்பாற்ற வேண்டுமே என்கிற கவலையால் பிறர் சொல்லுவதை யெல்லாம் கேட்டுக் கொண்டு ஆளாயிருக்கவேண்டி இருக்கின்றது" என்றே சொல்லுகிறான். அதைப் போலவே பெண்ணும், "நான் தனியாய் இருந்தால் எங்காகிலும் தலையின்மேல் துணியைப் போட்டுக்கொண்டு போய்விடுவேன். அல்லது ஒரு குளத்திலாவது ஆற்றி லாவது இறங்கிவிடுவேன்; இந்தக் கஷ்டத்தைச் சகித்துக்கொண்டு அரைநிமிடமும் இருக்க மாட்டேன்; ஆனால், இந்தக் குழந்தைகளையும் குஞ்சுகளையும் எப்படி விட்டுவிட்டுப் போகமுடியும்?" என்றே சொல்லுகிறாள்.

உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு தன்தன் ஜீவனத்திற்கே—பொருள் தேடுவதற்கே சுதந்திரத்தை விற்று அடிமையாகவேண்டிய நிலையில் இருக்கும்போது, பிள்ளைகளையும்,

குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலைமேல் இருக்குமானால், அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்கமுடியும்? ஆகையால், ஆண் பெண் இருவர்களின் சுயேச்சைக்குமே கர்ப்பமாவதும் பிள்ளைகளைப் பெறுவதும் இடையூறான காரியமாகிறது. அதிலும் பெண்கள் சுயேச்சைக்குக் கர்ப்பம் என்பது கொடிய விரோதியாய் இருக்கிறது. அதனால்தான் நாம் கண்டிப்பாய் 'பிள்ளை பெறுவதை நிறுத்தியே ஆகவேண்டும்' என்கிறோம்.

அன்றியும், பெண்கள் வியாதியஸ்தர்களாய் ஆவதற்கும், சீக்கிரம் கிழப் பருவம் அடைவதற்கும் ஆயுள் குறைவதற்கும் இந்தக் கர்ப்பம் என்பதே மூல காரணமாக இருக்கின்றது. தவிரவும், ஆண்களில் பிரம்மச்சாரிகளும் சந்நியாசிகளும் சங்கராச்சாரியர்களும் தம்பிரான்களும் பண்டார சன்னியாசிகளும் ஏற்பட்டிருப்பதுபோல், பெண்களிலும் பிரம்மச்சாரிகள் ஏற்படுவதற்கு இந்தக் கர்ப்பமே தடையாய் இருந்து வருகின்றது. இந்தப் படி, நம்மில் ஒருவருக்கொருவர் கருத்தும் காரணமும் எப்படி இருந்தபோதிலும் கர்ப்பத் தடை என்பதில் அபிப்பிராயபேதமில்லாதிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தத் தேசத்தில் பிறக்கும் குழந்தைகளை எல்லாம் இந்தத் தேசத்து அரசாங்கமே வளர்த்து, கல்விகொடுத்து 'மேஜர்' ஆக்கிவிடவேண்டும் என்கின்ற ஒரு நிபந்தனை இருந்திருக்குமானால்—அப்படிக்கில்லாமல் யாரோ பெற்று யாரோ வளர்த்து மக்களைப் பெருக்கி அடிமைக்கு விடுவதனால்—சர்க்கார் எப்படி அதை வேண்டாம் என்று சொல்ல முன்வருவார்கள்? உண்மையான சுகாதாரத்தில் பிள்ளைப்பேற்றைத் தடுப்பது முக்கிய மான சுகாதாரம் என்பதை டாக்டர் பட்டம் பெற்றவர்கள்கூட அறியாமல்போனது வருந்து வதற்குரியதாகும்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தைவிட, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரச்சாரத்தை விட இந்தக் கர்ப்பத்தடைப் பிரச்சாரம் மிகவும் முக்கியமானதென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால், இந்தக் கர்ப்பத்தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரச்சாரம் செய்யப் பொதுமக்களில் சிலராவது இதுசமயம் முன்வரவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

['குடி அரசு'-தலையங்கம்—6-4-1330]

ஒருவன் தன்னால் காப்பாற்றக்கூடியதற்கும் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கஷ்டப்பட்டு என்ன பயன் என்பது கவனிக்கத் தக்கதாகும். 'உலகம் விருத்தியாக வேண்டாமா?' என்ற சொல் சுத்த முட்டாள்தனமானது. சம்போக விஷயங்களில் கவலை யற்றும் முரட்டுத்தனமாயும் அளவுக்கு மீறியும் நடந்துகொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவேதான் குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர அதற்கும் இதற்கும் சற்றும் வித்தியாசமே இல்லை. சம்போக உணர்ச்சி உள்ள உயிர்களில் மனிதனைத் தவிர வேறு எந்த உயிருக்கும், குழந்தை பெறுவதற்காக என்கின்ற எண்ணத் தின்மீது உணர்ச்சி தோன்றுவதே கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கின்ற ஆணவத்தால் அவனுக்கு ஏற்படும் அனேக முட்டாள்தனமான செய்கைகளைப்போல், குழந்தை பெறவேண்டும் என்கின்ற முட்டான்தனமும் ஏற்பட்டு, அது ஒரு ஆசையாகி, சொத்தாகி, 'மோட்சத்திற்கு' உதவும் காரியமாகி, கடைசியாய் வீண் துன்பமும்பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லை.

மேலும், பிள்ளை பெறுவதினாலேயே பெண்கள் சமூகம் அடிமையாகி அனேக ஆபத்துக்களுக்கும் வியாதிக்கும் உள்ளாகி அற்ப ஆயுளுடன் துன்பமும் படவேண்டியதாகி, அவர்கள் வாழ்வே பரிதாபத்திற்குரியதாக முடிகின்றது. பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கே என்று கருதுவதால் சுதந்திரமும் வீரமும் இன்றி அடிமை யானதுமான காரியங்களுக்கு ஆளாகிறார்கள். பெண்கள் துன்பம் இப்படி இருக்க,

பொதுவில் வேலையில்லாத் துன்பத்தை நீக்கவும், மக்கள் கவலையும் தொல்லையும் இல்லாமல் இருக்கவும் பிள்ளைப்பேற்றைக் குறைப்பது என்பது தக்க வழியாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—14-12-1930]

ஒரு தேசத்து மக்கள் தேக ஆரோக்கியமும் பலமும் வீரமும் சுயமரியாதையும் அறிவும் உள்ளவர்களாக இருக்கவேண்டுமானால், அவர்கள் குழந்தைப்பருவம் முதற் கொண்டே தங்கள் பெற்றோர்களால் கவனிக்கப்பட்டும் கல்வி கற்பிக்கப்பட்டும் விசாரமில்லாமல் மன உல்லாசமாகவும் வளர்க்கப்படவேண்டும். அவ்விதம் பெற்றோர்களால் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டுமானால், பெற்றோர்கள் தங்கள் சக்திக்கும் தகுதிக்கும் போதுமான அளவே குழந்தைகளை அளவோடு நிறுத்திக்கொள்ளவேண்டும். அப்படி இல்லாமல், சக்திக்கும் அளவுக்கும் மீறி அதிகக் குழந்தைகளைப் பெற்றால், கஷ்டத்திற்குள்ளாவதுடன் குழந்தைகளும் பலவீனர்களாகவும் சவுகரியமற்றவர்களுமாகி, அவர்களைக் கொண்ட தேசமும் தரித்திரத்தில் மூழ்கி மற்ற மக்களுக்கும் துன்பத்தை விளைவிக்க வேண்டியவர்களாகி விடுவார்கள்.

உதாரணமாக, நமது நாட்டையே எடுத்துப் பார்ப்போம். சில குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பங்களுக்கும், அதிகமான பிள்ளைகுட்டிகளைக்கொண்ட பெரிய குடும்பங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை நாம் உள்ளங் கை நெல்லிக்கனிபோல் அறிகின்றோம். முதலாவது, பிள்ளைகளை அதிகம் பெறப்பெற, பெற்றோர்களின் சுகபோகங்கள் தானாகவே குறைந்துகொண்டு வருகின்றன. இதுபோலவேதான், ஒரு நாடும் தனது சக்திக்கு மீறி மக்களை உடையதாகிவிட்டால், அது சதாகாலமும் பஞ்சத்தினாலும் நோயினாலும் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கவேண்டியதோடு, தன் அழகையும் முற்போக்கையும் சுயமரியாதையையும் இழந்து தயங்கவேண்டியதாக இருக்கின்றது.

இந்த உண்மை அறியாமலே இதுவரை அனேக சமூக சீர்திருத்தக்காரர்கள் தங்கள் நாட்டின் மக்கள் சமூகத்தின் முற்போக்கிற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வேறு எத்தனையோ துறைகளில் உழன்று துன்பப்பட்டும் பயனடையாமல் சலிப்பின்மீது கடைசியாக ஒரு நாட்டு மக்களை, மற்றொரு நாட்டு மக்கள் வெறுக்கவேண்டியவர்களாகி விட்டார்கள்; சதாகாலமும் பிறர்மீதே குற்றம் சொல்லவேண்டியவர்களாகவுமாகி விட்டார்கள்; நன்றாய் வாழ்பவர்களின்மீது பொறாமைப்படவேண்டியவர்களாகவும் மற்றவர்களைப் பட்டினி போட்டால்தான் தாம் வாழலாம் என்று நினைக்கவேண்டியவர்களாகவுமாகி விட்டார்கள்.

ஆனாலும், சில நிபுணர்கள் இவ் விஷயங்களை நடுவுநிலைமையிலிருந்து ஆராய்ச்சி செய்துபார்த்து, இவ்விதக் கொடுமையான நிலைமைக்கு உண்மையான காரியங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

முதலில் ஜனங்கள் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று மனித சமூகத்தை அதிகப்படுத்திவிடக்கூடாது. இந்த முடிவானது இப்போது மேல்நாட்டின் அறிவாளிகள், பொது நலசேவைக்காரர்கள், வைத்திய–பொருளாதார நிபுணர்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, இத் துறைகளில் இறங்கி, மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து மிக்க முற்போக்கான மார்க்கங்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அன்றியும், இந்தத் தத்துவத்தை அனேக அறிஞர்கள் தங்கள் வாழ்க்கைகளில் அமுலுக்குக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதாவது, மேல்நாட்டார்களில் படித்தவர்கள் என்பவர்களாலேயே கர்ப்பம் தரிக்காமல் இருக்கத்தக்க அனேக வழிகள் கையாண்டுவரப் படுகின்றன. இதற்காகப் பல சாதனங்களையும் கண்டுபிடித்துப் பொதுமக்களுக்கு அறிவித்து, சில சாதனங்களை வினியோகித்தும் வருகின்றார்கள். ஆனால், சாதாரண

ஏழை ஜனங்களும் பாமர ஜனங்களும் இதன் உண்மைத் தன்மையை உணரவோ பயன் அடைய முடியாமலோ இருந்து வருகிறார்கள்.

உண்மையிலேயே, கர்ப்பத்தடை செய்துகொள்ளவேண்டியவர்கள் ஏழை மக்களே யாவார்கள். ஆனால், இவர்களோ இம் மாதிரியான—கருத்தரிக்காமல் இருப்பதற்கான காரியங்களைப்பற்றிப் பேசுவதுகூட நாகரிக விரோதமான பேச்சென்று கருதுகிறார்கள். அறிவில்லாத பொதுமக்களும் மதவிஷயத்திலும், கடவுள் விஷயத்திலும் கண்மூடித்தன மான மூடபக்தியுள்ளவர்களும் இதை மதவிரோதமானதென்றும் பாவகரமானதென்றும் கடவுள் கோபத்திற்கு இலக்கான காரியமென்றும் பேசி, இந்தத் தத்துவங்களை எதிர்த்து வருவதால், ஏழைமக்களும் பாமரமக்களும் இப்படி ஒரு மார்க்கம் இருக்கிறது என்று அறியக்கூட சவுகரியமில்லாமல் போய்விட்டது.

ஆனால், மேல்நாட்டில் டாக்டர். மாரி ஸ்டோப்ஸ் என்கின்ற ஓர் ஆங்கிலப் பெண் தைரியமாக முன்வந்து, எவ்விதப் பழிக்கும்எதிர்ப்பிரச்சாரத்திற்கும் அஞ்சாமல் கர்ப்பத்தடையைப் பிரச்சாரம் செய்யத் துணிந்ததன் பயனாய், இப்போது இவ்விஷயம் எங்கும் சாதாரணமாய் ஆனதும் சகஜமானதுமான விஷயமாய்ப் பேசிக்கொள்ளும்படியாய்விட்டது. அது மாத்திரமல்லாமல், மேல்நாடுகளில் பல இடங்களில் பிள்ளைப்பேற்றைத் தடுக்கும்படியான வசதிகள் சம்பந்தமாகப் பல வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டும் இருக்கின்றன. கருத்தரிக்காமல் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுபவர்களுக்கு அம் மார்க்கங்களைக் கற்றுக் கொடுப்பதுடன், அதற்கு வேண்டிய சாதனங்களையும், கையாளும் முறைகளையும் போதிக்கின்றார்கள். மருந்து வியாபாரக் கடைகளில் கர்ப்பத்தடைக்கு அனுகூலமான மருந்துகளும் சாதனைக் கருவிகளும் விற்பனைசெய்யவும் ஏற்பாடுகள் செய்கிறார்கள்.

இதைச் சட்ட விரோதமென்றும் யாரும் சொல்லவில்லை. சட்ட விரோதமான காரியமெல்லாம், அன்னியனுக்கும் தனக்கும் துன்பத்தையும் நஷ்டத்தையும் கொடுக்கக்கூடிய காரியங்களைத்தான் சொல்லலாம். இதனால் யாருக்கும் எவ்வித நஷ்டமோ கஷ்டமோ அதிருப்தியோ ஏற்படுவதில்லை.

அன்றியும், இந்தக் கர்ப்பத்தடை முறை என்பது கர்ப்பம் ஏற்படாமல் தடுப்பதற்கு உரியதே ஒழிய, கர்ப்பம் ஏற்பட்ட பிறகு அதைக் கலைப்பதற்காக அல்ல. அதற்கு இந்த முறைகள் பயன்படவும் மாட்டா. கர்ப்பம் ஏற்பட்ட பிறகு கரைப்பது என்பது தாயின் சரீர சக்திக்கும்—சில சமயங்களில் உயிருக்குமே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாயிருப்பதால், கண்டிப்பாக அந்த முறையை யாரும் கையாளக்கூடாது. கர்ப்பத்தைக் கலைக்கும் முறை எதுவானாலும் அது கண்டிப்பாக நீக்கப்படவேண்டியதேயாகும். தேசப் பொது நன்மையையும், சமூக நன்மையையும் மாத்திரமே உத்தேசித்து அறிஞர்கள் கர்ப்பத்தடையைக் கண்டுபிடிக்கவில்லை.

கர்ப்பத்தடை அவசியத்தை விளக்குவோமாயின், பெண்ணானவள் திட சரீரமில்லாமலும் காயலாவுடனும் சரியான அமைப்பு பொருந்திய சரீரமில்லாமலும் இருக்கின்ற சமயத்தில் கர்ப்பம் தரித்துப் பிள்ளைகளைப் பெறுவதென்பது அவளுக்கு மிக அபாயகரமானதாகும்.

சயரோகத்தாலும், நீரிழிவு வியாதியாலும், நெஞ்சுத் துடிப்பினாலும் பீடிக்கப் படுகின்ற பெண்களும், பிள்ளை பெறும் துவாரம் மிகச் சிறுத்து இருக்கும் பெண்களும் கர்ப்பம் தரிப்பது மிக்க ஆபத்தாகும்.

பிரசவத்தினால் சரீர மெலிவும் பலக்குறைவும் ஏற்படுகின்ற சுபாவ சரீரமுடையவர்கள் மறுபடியும் மறுபடியும் கர்ப்பமானால் சரீரம் மிகவும் பலவீனமடைந்துவிடும். ஒரு பெண் ஒரு குழந்தையைப் பெற்று அது நன்றாகப் பால் குடித்து வளருவதற்கு

முன்னாலும், முதலில் பிள்ளை பெற்ற பலவீனம் நீங்குவதற்கு முன்பும் கர்ப்பமாகிவிட்டால் முதல் குழந்தை சவுகரியமில்லாமல் போவதோடு, மறு குழந்தையைப் பெறுவதற்கும் போதிய சக்தி இல்லாமல் போய்விடும்.

பெண்ணும் ஆணும் தகுந்த வயதடைவதற்குமுன், பெண் கர்ப்பம் தரித்துவிட்டால் அந்தக் குழந்தைகள் இளமைப்பருவத்தில் காய்ப்பாகி உறுதியற்ற உடற்கட்டுடையதாகி விடும். குடும்பத்திலும் போதிய வரும்படி இல்லாத நிலையில் பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுவிட்டால், தரித்திரமும் கஷ்டமும் அதிகமாகி வாழ்க்கை திருப்தியற்றதாகிவிடும்.

அன்றியும் பெண் ருதுசாந்தியானவுடன் பெண் கர்ப்பமாகிவிட்டால் கொஞ்சகாலமாவது தம்பதிகள் இயற்கை இன்பம், கலவி இன்பம் அடைவதற்குச் சாவகாசமில்லாமல் போய்விடும்.

இவ்வளவு விஷயங்களில் பெண்கள் கர்ப்பமாவது அசம்பாவிதமாயிருப்பதுடன், பெண்களின் சுதந்திர வாழ்வுக்கும் இந்தக் கர்ப்பமானது பெரிய இடையூறாயிருக்கின்றது. என்னவெனில், பெண்களுக்கு கர்ப்பத்தை உண்டாக்குகின்ற பொறுப்பு மாத்திரம் ஆணைச் சேர்ந்ததாயிருக்கின்றதே தவிர, மற்றபடி கர்ப்பமான நிமிடம் முதல் பிள்ளை பெறும்வரை அதன் பொறுப்பு முழுவதும், பிள்ளை பெறும்போது அடையும் பிரசவ வேதனையும், அதனால் உண்டாகும் ஆபத்துக்களும் பெண்களே அடைகின்றார்கள். பிள்ளையைப் பெற்ற பின்பும் தாயானவள்தான் தனது இரத்தத்தைப் பாலாக்கிக் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கின்றாள். குழந்தைகளுக்கு வரும் வியாதிகளுக்கும் தானே பத்தியமிருக்கவேண்டியவளாகிறாள். அதைச் சுமந்து போஷிக்கும் வேலை முழுவதும் தாயே செய்ய வேண்டியவளாகிறாள்.

பெண்ணானவள் ஒன்றிரண்டு பிள்ளைகளைப் பெற்றவுடனே சகலவித சுகபோகங்களிலும் விரக்தியுடையவளாகி விடுகின்றாள். குழந்தை பெற்றவுடனே குழந்தையின் போஷணையையும் வளர்ச்சியையும் உத்தேசித்துத் தனது சுதந்திரத்தை விட்டு, புருஷனுக்கும் குடும்பத்திற்கும் அடிமையாக வேண்டியவளாகிறாள்.

புருஷன் தனக்கு இஷ்டமான பெண்ணை மணந்து கொள்வதற்கும், பெண்சாதி ஒரு புருஷனைத் தவிர வேறு எந்தப் புருஷனை எந்தக் காரணங்கொண்டும் மணந்துகொள்ள முடியாததற்கும் இக்குழந்தைகளைப் பெறுவதே பெருத்த தடையாயிருக்கிறது. பிள்ளைகளைப் பெறுவதாலேயே பெண்கள் சுதந்திரம், மானம், அறிவு எல்லாவற்றையும் விட்டுவிட நேரிடுகின்றது. சிறிதளவாவது சுயேச்சையுள்ள பெண்ணாய் விளங்குவதைவிட, பிள்ளைகளைப் பெறும் அடிமையான இயந்திரமாகவே இருக்க வேண்டியதாய் இருக்கின்றது. இதுவரை கூறிவந்தவைகளாலும் இன்னும் பல காரியங்களாலும் பெண்கள் கர்ப்பத்தடையை அனுசரிக்கவேண்டியது அவசியமாகும்.

['குடிஅரசு'—கட்டுரை—1-3-1931]

14. தனியுடைமையும் பெண்ணடிமையும்

பெரியோர்களே! தோழர்களே!

இத் திருமணத்தில் இரண்டு மாறுதல்கள் இருக்கின்றன. மணமக்கள் கலப்புத் திருமணம் என்ற பேரால் தமது வாழ்க்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொண்டிருப்பதும், சாதாரணமாக நமது நாட்டில் நடைபெற்றுவரும் திருமணங்களில் காணப்படும் சடங்குகளில் அல்லாமல், பதிவு முறைத் திருமணம் செய்துகொண்டிருப்பதும் ஆகிய இவைதான் இரு முக்கிய மாறுதல்கள் ஆகும்.

முதலாவது மாறுதல் ஒரு முக்கியமான போலி உணர்ச்சி; இதிலொன்றும் கலப்பில்லை. மணமக்கள் இருவரும் ஒரே இனத்தை—அதாவது திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே தவிர, மணமகன் நீக்ரோ வகுப்பைச் சேர்ந்தவரோ, மணமகள் ஆரிய வகுப்பைச் சேர்ந்தவரோ அல்லர். எனவேதான், கலப்பு என்பது வெறும் போலி உணர்ச்சி என்று குறிப்பிட்டேன். சட்டத்தின்படியும் சாஸ்திரத்தின்படியும் இவர்கள் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் என்றாலும்—இன்றைய நடைமுறைப் பழக்கவழக்கத்தில் இவர்கள் குடும்பங்கள் வெவ்வேறு குடும்பங்களாகவே கருதப்பட்டுவருகின்றன. இப்படி ஒரே இன மக்கள் வெவ்வேறு சாதியினராகப் பிரிந்து வாழ்வது தவறு. இப் பிரிவினைகளை எப்படியும் தகர்த்தெறிய வேண்டும் என்று திடசங்கற்பம் கொண்டு, அச் சங்கற்பத்தின் படியே, பல எதிர்ப்புக்களிடையேயும் தமது திருமணத்தை நடத்திக்கொண்டமைக்காக இம் மணமக்களை நாம் பாராட்ட வேண்டியதுதான்.

இம் மணமக்களுடைய பெற்றோர்களும் பணக்காரர்கள்தான். ஒருவரை ஒருவர் விரும்பிய இவர்கள், தம் விருப்பத்தைப் பெற்றோர்களுக்குத் தெரிவித்து அனுமதி கோரினர். மணமகளுடைய பெற்றோர்கள் சம்மதித்தார்கள்; மணமகனுடைய பெற்றோர்கள்—எங்கு தம் பெருமை குறைந்துவிடுமோ என்று ஒப்புதல் கொடுக்க மறுத்து விட்டனர். மணமகன் சற்றும் அதற்கு அஞ்சாமல் துணிகரத்துடனேயே பதிவு முறையில் திருமணம் செய்துகொண்டு, இரண்டு மாதகாலமாகவே தம் தந்தையார் ஒப்புதலை எதிர் பார்த்து, இரகசியமாகவே வைத்திருக்கிறார். இரண்டுமாதத் தவணையிலும் தமது தந்தையார் அனுமதி தராமல்போகவே, தாம் திருமணம் செய்துகொண்டதை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, இன்றைய தினத்தைத் தம் திருமணச் செய்தி வெளியீட்டு நாளாக ஏற்பாடு செய்திருக்கிறார். வேறு இதிலொன்றும் அதிசயமில்லை.

நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டது முதற்கொண்டே இத் திருமண முறைகளைப் பற்றி ரொம்பவும் கவலை எடுத்துக்கொண்டு சிந்தித்து வந்திருக்கின்றேன். சிந்திக்கச் சிந்திக்க, இத் திருமண முறையையே ஒழித்துவிடலாமா என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. திருமணமுறை கூடாதது; ஒழிக்கப்பட வேண்டியது என்று ஒன்றிரண்டு கூட்டங்களில் பேசியதோடு, பத்திரிகையிலும் எழுதியிருக்கிறேன். திருமண சம்பந்தத்தைச் சிலர், மக்களின் நல்வாழ்வுக்கேற்ற சீர்திருத்த முறை என்று கருதுகிறார்கள். சிலர் இன முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்கிறார்கள். இப்படிக் கருதுவதற்கெல்லாம் ஆதாரமே இல்லை என்றும், பெண்களை என்றென்றும் அடிமைகளாக வைத்திருக்கச் செய்யப்பட்ட சூழ்ச்சிதான் இத்திருமண முறை என்றும் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

புருஷன்—மனைவி சம்பந்தமே, எஜமான் அடிமைச் சம்பந்தமே ஒழிய அன்பு முறைச் சம்பந்தமோ, நட்புமுறைச் சம்பந்தமோ அல்ல. ஒரு அரசனுடைய மகளாயினும், அவள் ஒரு வேலைக்காரனுக்கு வாழ்க்கைப்பட நேரிட்டால், அவளும் அடிபணிந்து நடந்துவர வேண்டியதுதான். தந்தை ஒரு நாட்டுக்கு அரசனாயிருக்கிறான் என்கிற அளவுக்குத்தான் பெருமை அடையலாமேயொழிய, மனைவி என்கிற முறையில் மற்ற பெண்களைப்போலவே அவளும் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவள் தான். ஒரு பெண்ணை, ஒரு ஆணுக்கு அடிமையாக்குவது தவிர்த்து—திருமண முறையில், புருஷன்–மனைவி முறையில் வேறு தத்துவம் இல்லவே இல்லை என்பதை உறுதியாகச் சொல்வேன். ஆரிய முறை மந்திரங்களின் அர்த்தங்களைப் படித்துப் பார்த்தால் இதன் உண்மை உங்களுக்கு நன்கு புலனாகும்.

உலகிலுள்ள எத்தனையோ வகை ஜீவராசிகளில் மனிதனும் ஒருவகை ஜீவராசி தான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். அப்படியிருக்க, மற்ற எந்த ஜீவராசியிலும் காணப்படாத இத்திருமண முறை ஏன் மனித ஜீவராசியில் மட்டும் காணப்படுகிறது? மற்ற ஜீவராசிகளெல்லாம் இஷ்டப்பட்டபோது கூடித் தம் இனத்தைப் பெருக்கிவரும்போது,

மனிதன்மட்டும் ஏன் திருமணம் என்கிற கட்டுப்பாட்டுக்குட்பட்டுக் கலவி செய்து இனத்தைப் பெருக்கிவரவேண்டும்? ஒருத்தியை மணந்துகொண்ட ஒரு ஆண் மகன் தான் ஒருவனேதான் அவளுக்குப் புருஷனாக இருக்கவேண்டும்; அவளுடன் மாற்றார் யாரும் கலவி செய்யக்கூடாது என்று கருதிவருவதன் அடிப்படை நோக்கம்தான் என்ன?

அன்பர்களே! நீங்கள் இதைத் தப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் எட்டிக் குதித்து, தவறான பாதையில் உங்கள் புத்தியைத் திருப்பிவிடக்கூடாது. ஒரு ஆண்மகன்—தான் ஒருவனே தன் மனைவிக்குக் கணவனாக இருக்கவேண்டுமென்று கருதுவதுபோல்—தானும் அவள் ஒருத்திக்கேதான் உரியவனே ஒழிய, பிற பெண்களுடன் கலவிசெய்ய உரிமையற்றவன் என்று நினைக்கின்றானா? அப்படி நினைக்காததன் தாத்பரியம் என்ன? ஒருத்தி ஒருவனைத்தான் மணக்கலாம்; அவனைத்தான் கூடலாம் என்றும்—ஒருவன் மட்டும் எத்தனை பெண்களையும் மணக்கலாம், எத்தனை பேரையும் கூடலாம் என்றும் விதியும், சம்பிரதாயமும் இருக்கக் காரணம் என்ன? ஒருவன் 60,000 பெண்களையும் மணக்கலாம்; அதற்கு மேல் இலட்சம் வைப்பாட்டிகளையும் வைத்துக் கொள்ளலாம்; ஆனால், ஒரு பெண் மட்டும் ஒருவனை மட்டுந்தான் மணக்கலாம்; அவன் ஒருவனோடுதான் கூடி வாழலாம் என்றால்—அது நியாயமாகுமா? நமது சாமிக்குக் கூட இரண்டு பெண்டாட்டிகள் உண்டு என்றாலும், அதோடு—அது தாசிவீட்டுக்குப் போகும் மாண்பும் நடந்துகொண்டுதான் வருகிறது. ஆண்களுக்கும் கடவுளுக்கும் இப்படிப்பட்ட நியதி இருக்கும்போது, பெண்களுக்கு மட்டும்—ஒருத்தி, தான் மணந்து கொண்ட ஒருவனோடுதான் கூடிவாழ்ந்து வரவேண்டும் என்கிற நியதி இருந்து வருவானேன்? இந்நியதி உடற்கூற்றையோ, சரீரக் கூற்றையோ ஒட்டி ஏற்பட்டதா? ஜீவ நுணுக்கத்தை ஒட்டி ஏற்பட்டதா? எதையொட்டி இவ்வடிமைத் தன்மை பெண்களுக்கு ஏற்பட்டது? என்று யாரேனும் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

"நீ என் மனைவி; நானே உனக்குக் கணவன்; நீ என்னைத்தவிர வேறு யார் மீதும் காதல் கொள்ளக்கூடாது" என்று ஒரு தலைமகன் கூறும் தத்துவத்தை—ஒரு தலைவி அப்படியே ஏற்றுக்கொள்வதாயிருந்தால், அது அடிமைப் புத்திதானே? பெண் களுக்கு உரிமை வேண்டுவோர் இத் தத்துவத்தைக் கொண்டுள்ள திருமண முறைகளை ஒழித்துக்கட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டாமா?

"திருமணத் தத்துவம் போய்விட்டால் ஒழுக்கம் போய்விடும்" என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள், ஆண்கள் விபசாரம் செய்ய முற்படாவிட்டால் பெண்கள் மட்டும் எப்படிக் கெட்டுப்போய் விடுவார்கள்? அறிவிருந்தும் 'பெண்கள் ஏன் ஆண்களுக்கு அடிமைகளாயிருக்கவேண்டும்? பெண்கள் இத்திருமண முறையிலிருந்து விடுதலைபெறும் வரைக்கும், பெண்கள் ஆண்களிடமிருந்து விடுதலை பெறும்வரைக்கும் இந்நாடு சுதந்திரம் பெற்ற நாடாக ஆகவே முடியாது. எனவேதான், நாம் பெண்கள் விடுதலையை முக்கிய மாகக்கொண்டு பாடுபட்டு வருகிறோம். மத சம்பிரதாயமோ, கடவுள் சம்பிரதாயமோ, புராண சம்பிரதாயமோ—எது பெண்கள் விடுதலைக்கு விரோதமாயிருந்தாலும் அது ஒழிக்கப்பட வேண்டியதுதான். நாங்கள் 1929-ல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டின் போது பெண்கள் விடுதலைக்காகச் சில தீர்மானங்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய போது, பெண்கள் உலகமே அன்று ஆண்களைவிட அதிகமாகத் தூற்றியது.

பலதார மணமுறையைக் கண்டித்தும், பெண்களுக்கு விவாக ரத்து உரிமையைக் கோரியும் தீர்மானங்கள் அப்போதே நிறைவேற்றப்பட்டன. அத் தீர்மானங்களைப் பெண்கள் கூட்டமே வரவேற்கவில்லை என்றாலும், நாங்கள் எங்கள் முயற்சியைக் கைவிட்டோமில்லை. புருஷன் இருக்கும்போதே சில பெண்களுக்குக் கலியாணம் செய்வித் தோம்; சில விதவைகளுக்கும் கலியாணம் செய்வித்தோம். பலதாரத் திருமண முறை ஒழிக்கப்படாவிட்டால், ஒரே பெண்ணுக்கு இரண்டு மாப்பிள்ளைகளைக் கட்டிவைப்போம்

என்று கூப்பாடு போட்டோம். இப்படி எத்தனையோ சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றபிறகுதான், சர்க்காருக்குப் புத்திவந்து, பெண்களுக்கும் புத்திவந்து இன்று ஒரு சில சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவர முன்வந்திருக்கிறார்கள். இதுகாறும் திருமண முறையில் பெண் அடிமையாக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். இனி, திருமண முறை எப்போது, எதற்காக ஏற்பட்டது எனக் காண்போம்.

ஆணின்மீது பெண்ணுக்கு எப்படி ஆதிக்கம் இல்லாமற்போய்விட்டது என்பது குறித்துச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். மக்கள் பூரண சுதந்திரர்களாக வாழ்ந்த பண்டைக்காலத்து இவ்வித அடிமைமுறைத் திருமணம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நம்மால் நினைக்க முடியவில்லை. தனிவுடைமைச் சுதந்திரம் இல்லாதபோது தனக்கே பிள்ளை பிறக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் உதித்திருக்க இடமே இல்லை. என்றைக்குத் தனக்கென்று பொருள் சேமித்து வைத்துக்கொள்ள உரிமை ஏற்பட்டதோ, அதன் பிறகு தான் திருமணமுறையும் ஏற்பட்டிருக்க வேண்டும். பொருள்தேடிச் சேமித்துவைக்கும் உரிமை ஏற்பட்டபிறகுதான்—வெளியே பொருள்தேடிச் செல்லும்போது தான் சேமித்து வைத்துள்ள பொருளைப் பாதுகாக்கவும், தான் வந்தபோது தனக்குச் சிரமபரிகாரம் செய்யவும் ஒரு ஆள் தேவையாயிருந்தது. எந்த ஆணும் மற்றொரு ஆணுக்கு இவ்விதமான உதவிசெய்ய முன்வந்திருக்கமாட்டான். எனவே, இவ்வேலைக்கு ஒரு பெண்ணைத்தான் நாடவேண்டியிருக்கிறது. முதலில், பெண் ஒருவனது சொத்துக்குப் பாதுகாப்பாக அமைந்த பிறகு, அவனுக்குச் சொத்துமானாள். பிறகு அந்தச் சொத்துக்கு வாரிசு தேட வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. வாரிசு தேட ஆரம்பித்த காலத்தில்தான், தன் சொத்துக்கு வரும் வாரிசு தனக்கே பிறந்ததாக இருக்கவேண்டும் என்கிற காரணத்தால் அவளைத் தனக்கே உரிமையாக்கிக்கொள்ளவும், அவளைத் தன்னையன்றி வேறு புருஷனை நாடாமல் இருக்கும்படி செய்யவும் ஆன நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மனித சுபாவம் இப்படித்தான் இருக்கும். அதாவது, தான் தேடிய பொருளைத் தனது இறப்புக்குப் பிறகு அனுபவிக்கப்போகும் வாரிசு, தனக்கே பிறந்ததாக—தன் இரத்தத்தி லிருந்து தோன்றியதாக இருக்கவேண்டும் என்று நினைப்பது இயற்கையின்பாற்பட்டதே ஆகும். எனவே பெண் அடிமையாக்கப்படவும், அவளது இயற்கை ஆதிக்கம் பறிமுதல் செய்யப்படவும்; ஆணுக்கு மட்டுமே சொத்துரிமை கொடுக்கப்பட்டதுதான் காரணமாகும். ஆணுக்குமட்டும் நிபந்தனை ஏதும் இல்லாமைக்கும் இதுவே காரணம்.

ஆணுக்கு எவ்வித நிபந்தனையும் இல்லாததால்தான், தன் மனைவி ஒருத்தியுடன் மட்டுமே கலவிசெய்து, வாழ்க்கை நடத்திவரக்கூடிய ஆண்களைக் காண்பது அரிதாக இருந்துவருகிறது. ஆனால், பெண் இனத்திலோ 100க்கு 90 பேராவது தன் கணவனைத் தவிர வேறு புருஷனைக் காதலிக்காமலே இருந்துவருகிறார்கள். காரணம், கணவன்மார்களின் நிர்ப்பந்தமும் அவர்களுக்குள்ள வசதிக் குறைவுந்தானே ஒழிய இயற்கை ஜீவ சுபாவத்தால் அல்லவே அல்ல.

இனவிருத்திக்காகவும் ஒருத்தி ஒருவனோடு கூடிவாழவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் இல்லை. மனித சுபாவமும்—தன் மனைவி எவ்வளவுதான் அழகாயிருந்தாலும், வேறு பெண்ணை நாடும் நிலையில்தான் இருக்கிறது. எனவேதான், அவனால் மனைவியைத் தவிர்த்து வேறு வைப்பாட்டிகளை வைத்துக்கொள்ளவும், ஒரு மனைவி இருக்கும்போதே பல பெண்களை மணந்துகொள்ளவும், ஒரு மனைவி இறந்த பிறகு, அவளுக்குக் கருமகாரியம் நடத்தும்போதே வேறு பெண்களைப்பற்றிச் சிந்திக்கவும் முடிகிறது. இவற்றிலிருந்து, ஒருத்தி ஒருவனோடுதான் சேர்ந்து குடும்பம் நடத்திவரவேண்டுமென்று இயற்கை நியதி ஒன்றும் இல்லையென்று அதி திடமாய்ச் சொல்லலாம். மற்ற ஜீவராசிகளையும் எடுத்துக்கொண்டால் புறாக்களைப் போன்று சில—ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்தே வாழ்ந்துவர வேண்டிய நியதிக்குள்ளாக்கப்பட்டனவாகவும்; சில, ஒன்று இறந்து

விட்டால் மற்றொன்றும் இறந்துபடவேண்டும் என்ற நியதிக்குள்ளாக்கப்பட்டனவாகவும்; பெரும்பான்மையானவை ஆடு, மாடுகளைப்போல் சமயம் நேர்ந்தபோது கூடிப் பிரிந்து வாழ்ந்துவரக்கூடியனவாகவும் காணப்படுகின்றன. மனித ஜீவனும் ஒருவன் ஒருத்தியோடுதான் வாழ்ந்துவரவேண்டுமென்ற நியதிக்குள்ளாக்கப்பட்டு இருந்தால் தாசி வீடுகள் இருக்க நியாயமே இல்லை.

ஆகவே, ஏதோ சில நிர்ப்பந்தங்களுக்காகத்தான் இத் திருமணமுறை ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது பெறப்படுகிறது. திருமணமுறை வந்ததெப்போது? உடைமை எல்லாம் ஆணுக்குத்தான் என்கிற நிலை ஏற்பட்ட பிறகுதான் இத்திருமண முறையும் வந்திருக்க வேண்டும். ஆணுக்குத்தான் சுதந்திரம்; ஆணுக்குத்தான் சொத்து; ஆணுக்குத்தான் வீடும் வாழ்க்கையும் என்று சம்பிரதாயம் ஏற்பட்ட பிறகு இதற்கேற்பத்தான் சமுதாயத்தையும் அமைக்கவேண்டியதாயிற்று.

இயற்கை இன்பத்துக்காக ஒரு பெண்ணுடன் கலவி செய்வது என்பது போய், தனக்கு ஓர் வாரிசு உண்டாக்கிக்கொள்வதற்காக ஒருத்தியோடு கூடவேண்டியது அவசியம் என்கிற நிலை ஏற்பட்டது. தான் பாடுபட்டுத் தேடிய பொருள், தான் சிறுகச் சிறுகச் சேமித்துவைத்த பொருள், தான் இறந்தபிறகு யாருக்குச் சேருவது என்கிற கவலை ஏற்படுவதும், அது தன் வாரிசுக்கே சேரவேண்டுமென்று நினைப்பதும் இயற்கையின் பாற்பட்ட ஆசையே என்று முன்னமே கூறினோம்.

இதன் காரணமாகத்தான், தன் மனைவியைப் பிறர் புணரக்கூடாது என்று ஒருவன் நினைக்கிறானே யொழிய, தான் தொடும் ஒரு பொருள் பிறரால் தொடப்படாமல் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்ற ஆசையில் அல்ல. அப்படிப்பட்ட ஆசை உடையவனாயிருந்தால், ஒருவன் ஹோட்டலுக்கும் செல்லமாட்டான்; மார்க்கெட்டையும் எட்டிப் பார்க்க மாட்டான்; பிறர் தொடாத பொருள் அங்கு கிடைக்காது என்று கருதித்தான் புரோகிதன் நம் வீடுகளில் புகுந்தான்.

சொத்துக்காக ஒரு பிள்ளை பெறவேண்டுமென்கிற அவசியம் ஏற்பட்டபிறகு, கடவுளையும் நரகத்தையும் காட்டி, பணக்காரன் பொருளைப் பிற ஏழை மக்கள் அபகரிக்காமலிருக்கப் பார்த்துக்கொள்ளும் பார்ப்பனர்கள், அப் பணத்தில் தாமும் ஒரு பங்கடைவது அவசியம் என்று கருதி, பணத்திற்காக வாரிசு இருப்பது அவசியம் என்பது ஒருபுறம் இருந்தாலும், ஒருவன், தான் இறந்தபிறகு தன் பேரைச் சொல்லித் தனக்காகக் கருமம் செய்யப் பிள்ளையைப் பெற்றுவிட்டுச்செல்வது அவசியமென்றும், பிள்ளைப்பேறில்லாதவர்களால் மோட்சலோகத்திற்குச் செல்ல இயலாதென்றும் கூறிப் பிள்ளைப்பேற்றை மிகமிக அவசியமாக்கிவிட்டனர். லவுகீகத்திற்காக, சொத்துரிமைக்காக ஒரு பிள்ளை பெறுவது அவசியமாக்கப்பட்டதைவிட—வைதீகத்திற்காக, தனக்கென்று பார்ப்பானிடம் அரிசி, பருப்பு அழ ஒரு பிள்ளை பெறவேண்டிய அவசியம் அதிகமாக வற்புறுத்தப்பட்டுவிட்டது. லவுகீகத்திற்காக மட்டுமே என்றால்—எங்கு ஒருவன் தன்னால் பிள்ளைப்பேறு அடையமுடியவில்லை என்பதற்காகக் குழந்தை இல்லாமலேகூட இறந்துபட்டுவிடுவானோ, அப்படியானால் அவனுக்குக் கருமம், திவசம் செய்வது இவற்றால் அடையக்கூடிய பணம் போய்விடுமே என்று அஞ்சி, 'உன்னால் பிள்ளைப்பேறு அடைய முடியாவிட்டாலும், உன்னுடைய ஒப்புதலின்பேரில் உன்னுடைய பேரைச் சொல்ல, உன் மனைவி வேறு ஒருவனுடனாவது கூடி ஒரு பிள்ளையைப் பெறட்டும்' என்று கூறிவிட்டனர். இவ்விதமாகத் திருமணமுறை நாளுக்குநாள் நிர்ப்பந்தமாகிவந்து, கடைசியில் பெண்களை மீளா அடிமைத்தனத்தில் ஆழ்த்தும் நிலைக்கு வந்துவிட்டது. அதனால்தான், பெண்களுக்குக் கடவுளைத் தொழும் உரிமைகூட மறுக்கப்பட்டு விட்டது—தன் கணவனேதான் ஒருத்திக்குக் கடவுள் என்று கூறப்பட்டுவிட்டது. எனவே, இத் தீங்குகளுக்கெல்லாம் காரணமாயமைந்த தனிஉடைமை ஒழியும்வரை—பெண்ணடிமையும் நீங்காது.

உதாரணமாக, தனிஉடைமை இல்லாத ரஷ்யா போன்ற நாடுகளில் பெண்கள் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருப்பதை நாம் பார்க்கலாம். தனிஉடைமையில்லாத நாட்டில் திருமணமுறை இருக்காது; வாழ்க்கை ஒப்பந்தந்தான் இருக்கும். இன்றையப் பெண்கள் வெறும் அலங்காரத்தோடு திருப்தியடைந்துவிடுகிறார்கள்; அல்லது திருப்தி செய்யப்பட்டுவிடுகிறார்கள். எனவே, இவர்களுக்கு விடுதலை வேட்கை பிறப்பது கஷ்டமாயிருக்கிறது. இன்றையப் பெண்களின் மனோநிலை பெரிதும் மாறுதல் அடைய வேண்டும். விபச்சாரம் பெண்களுக்குத்தானேயொழிய ஆண்களுக்கு ஏன் இல்லை என்று இவர்கள் சிந்திக்கவேண்டும். ஆணுக்கு மட்டும் ஏன் விபச்சார தோஷம் இல்லை; விபச்சாரம் என்றால் திருட்டு என்றுதானே பொருள்; திருட்டு என்றால் பிறருக்குரிய பொருளை வேறு ஒருவன் அடைவது, அல்லது உரிமையாக்கிக்கொள்வது என்றுதானே அர்த்தம்! ஒருவனுக்கு உடைமையாக்கப்பட்டுவிட்ட பெண்ணை மற்றொருவன் அனுபவிக்க முயற்சிப்பதைத்தானே நாம் விபச்சாரம் என்று கருதி வருகிறோம்?

உதாரணமாக, ஒருவருக்கும் உரிமைப்படாத தாசியை ஒருவன் அனுபவித்தால் அதைத் திருட்டு என்று கூறுகிறோமா? அதைப் போகம் அல்லது 'என்ஜாய்மென்ட்' என்றுதானே கருதிவிடுகிறோம்? அவளை மட்டும் சமுத்திரத் தண்ணீர்போலவும், ஆற்று மணல்போலவும் கருதி யாரும் அனுபவிக்கலாம்—அது விபச்சாரம் ஆகாது; ஆனால், 'ஒருவனுடைய வீட்டு உப்பு, மிளகாய், புளியை அபகரிக்க நினைப்பது எப்படித் திருட்டாகுமோ, அதுபோல் அவனுடைய மனைவியையும் அபகரிக்க நினைப்பது திருட்டு ஆகும்' என்று நினைத்து, அவளை அனுபவிக்க மனத்தாலும் நினைக்கக்கூடாதாம்! என்னே அடிமைத்தனம்! உப்பு, மிளகாயா பெண்கள்? கேவலம் பெண்கள் இப்படியா ஒருவனுடைய வீட்டு உப்பு, மிளகாயைப்போல் தனிஉடைமைச் சொத்து ஆகிவிடுவது? நாட்டின் பொதுநலன் கருதி, பெண்களின் முன்னேற்றங்கருதி அவசியமான மாறுதல்களைச் செய்யவேண்டாமா? சமுதாயத்தின் சரிபாதி ஆகிய பெண்கள் சமூகம் எவ்வித முன்னேற்றமுமின்றி இப்படி அடிமைப்பட்டுக்கிடத்தல் நியாயமா? இப்போது ஒருசில பெண்கள் ஏதோ முன்னேற்றமடைந்துள்ளார்கள் என்றால், நாம் தனிமையாகப் போராடிப் பெற்ற உரிமையால்தானேயொழிய, சமுதாயச் சட்டப்படிப் புதிதாக வழங்கப்பட்ட உரிமைகளால் அல்லவே! தமக்குள்ள உரிமையோடு தமது வாழ்க்கை ஒப்பந்தத்தை மணமக்கள் நிறைவேற்றிக்கொண்டார்கள் என்பதுதானே புதுமுறைத் திருமணத்தின் பெருமை! பெற்றோர்களின் முயற்சியில்லாது இவர்களுடைய திருமணம் நடைபெற்றவரை இவர்களுடைய அடிமைத் தளை ஒழிந்தது. மணமகனுக்கு இத் தளை ஒழிந்தது ஒன்றும் அதிசயமில்லை; மணமகளுக்கும் ஒழிந்ததுதான் அதிசயம். இருவருக்கும் சம உரிமை வழங்கக்கூடிய பதிவு முறையில் இவர்கள் திருமணம் நடைபெற்றிருப்பது போற்றத்தக்கது. இப்படித் தாமாக ஒருவரை விரும்பி ஏற்கப் பெண்கள் முன்வருவது நம் நாட்டைப் பொறுத்தவரை மிக்க கஷ்டமேயாகும்.

நாம் பெண்களை முட்டாள்களாக்கிவிட்டோம். பெற்றோர்களை மீறியும், சமூகக் கட்டுப்பாடுகளைப் பற்றியும் ஆண்கள் காரியம் ஆற்ற முன்வருவதுபோல் பெண்கள் முன்வருவதில்லை. வயதுவந்த பிறகு தகப்பன் சொல் கேட்கவேண்டிய அவசியம் என்ன என்று—ஆண்கள் சுலபத்தில் தீர்மானித்துவிடுகிறார்கள். ஆனால், பெண்களில் 100க்கு ஒருவர்—ஆயிரத்துக்கு ஒருவர்கூட அப்படி முன்வருவது கஷ்டமாயிருக்கிறது. பெண்களுக்கு விடுதலை பற்றிய அறிவு போதவில்லை. அவர்களுக்கு விடுதலை உணர்ச்சி உண்டாக்க எவ்வித முயற்சியும் இதுகாறும் செய்யப்படவில்லை. அவர்களுக்குச் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கான வசதி கொடுக்கப்படவில்லை. ஒரு வயது வந்த பெண்ணை, 'உனக்கு எப்போதம்மா கலியாணம்?' என்று கேளுங்கள். அவள் நாணிக் கோணி—'அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? எங்கள் அப்பா அம்மாவைக் கேளுங்கள்' என்று

தான் கூறுவாளேயல்லாது, வேறுவிதமாகப் பதில் கூறமாட்டாள். அந்த மாதிரிப் பக்குவத்தில்தான் நாம் அவர்களை வளர்க்கிறோம்.

பெண்களை வெளியில் செல்ல விடுவதில்லை; பிறருடன் தாராளமாகப் பழக அனுமதிப்பதில்லை. 'சன்னலின் அருகே நிற்காதே! 'வாசலில் யார் போகிறார்கள் என்று எட்டிப் பாராதே! ஆண்கள் வந்தால் அடுப்பங்கரைப் பக்கம் ஓடிவிடு' என்றெல்லாம் கூறி அவர்களை ஒன்றும் தெரியாத முட்டாள்களாக்குகிறோம். இவை மாய்ந்துபோய், பெண்களுக்கு உண்மையான விடுதலை வரவேண்டும். தற்காலத்தில் தங்களை நாகரிக நாரீமணிகள் என்று கருதிக்கொள்ளும் பெண்களெல்லாம்கூட நல்ல முறையில் ஆடை அலங்காரம் செய்து கொள்வதையும், நைசான நகைகள் போட்டுக் கொள்வதையும், சொகுசாகப் பவுடர் பூசிக்கொள்வதையும்தான் நாகரிகம் என்று கருதி வருகிறார்களே தவிர—ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ்வதுதான் நாகரிகம் என்பதை உணர்ந்திருக்கவில்லை. போதிய உரிமை வேட்கையுடைய பெண்களும் தம்மை எங்கு உலகம் தூற்றுமோ என்று அஞ்சி பேசாமல் இருந்துவிடுகிறார்கள். இது தீது. ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த விதத்திலும் வேற்றுமை இருக்ககூடாது. பெண்கள் வெறும் மிருக இனம்போல் நடத்தப்படும் இந்நிலை ஒழிந்தேயாகவேண்டும்; தாமாக ஒழித்துக்கொள்ள முயற்சிக்கமாட்டார்கள்; முன்வரமாட்டார்கள். ஆண்கள்தான் முன்வந்து, விட்டுக் கொடுத்து, பெண்களைச் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டும். தாய் தந்தையர், ஆண்களைவிட மேலாகப் பெண்களுக்குத்தான் அதிகப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும். 'சுதந்திரம் கொடுத்தால் பெண்கள் கெட்டுப்போய்விடுவார்கள்' என்று நினைத்து அவர்களை எந்நாளைக்குமே அடிமைத் தளையில் கட்டிப்போட்டு வைத்திருப்பது என்பது முடிவில் பெருங் கேட்டையே விளைவிக்கும். வீட்டில் பெண்களை இருளில் அடைத்துவைத்திருந்துவிட்டு வெளியில் கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்றால், அவர்கள் வெளிச்சத்தில் நன்றாகப் பார்க்க ஆரம்பிக்கிறார்கள். பார்த்துப் பழக்கம் இராததால் அவர்கள் மிரட்சியோடு பார்க்க வேண்டியிருக்கிறது.

நம் வீட்டு நாய்களையே எடுத்துக்கொள்வோம். சில நாட்கள் விடாப்பிடியாகக் கட்டிப்போட்டு வைத்திருந்து பிறகு அவிழ்த்துவிட்டால், காரணமின்றியே சந்தோஷத்தால் இங்கே ஓடும், அங்கே ஓடும்; குதிக்கும்; ஒரு நிமிஷங்கூடச் சும்மா இருக்காது. கட்டு ஒழிந்ததில் அதற்குள்ள ஆனந்தம் அவ்வளவு! இதுதான் இயற்கை. எனவே, நம் பெண்களை உலகத்தினின்றும் மறைத்துவைப்பதும், அவர்களை உலக ஞானத்தை அடையவொட்டாமல் தடுத்துவைப்பதும் மிகமிகக் கேடானதாகும். பெண்களைச் சுதந்திரமாக நடந்துகொள்ளத் தகுதியுடையவர்களாக நாம் ஆக்குவதில்லை. சிலர் பெண்களைப் படிக்க அனுமதிப்பார்கள்; ஆனால், பிறருடன் பழக அனுமதியார்கள். பெண்களுக்கு வேண்டியது புத்தகப் படிப்பு மட்டுமல்ல; உலக அறிவும்தான் வேண்டும்; நல்லது, கெட்டது ஆராய்ந்தறியும் அறிவு வேண்டும். பெண்களைப் பழகவிடாமல் தடுத்துவிட்டு—'உனக்கு யாரையம்மா, மணந்துகொள்ள விருப்பம்?' என்று கேட்டால், அது யாரை விரும்பும்? சினிமாக்காரனைப்போல், வேஷக்காரனைப்போல் பவுடர் பூசி அழகாகக் காட்சியளிக்கும் ஆடவனைத்தானே அவள் விரும்புவாள்! உலகம் அறியா மங்கைக்குத் தெரியுமா—பவுடர் கலைந்தால் அதனடியே பல வடுக்கள் இருக்குமென்பது? ஒருவரையொருவர் நன்கு தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படாத நிலையில் தன் கணவனைத் தெரிந்துகொள்ளும் உரிமையைமட்டும் பெண்களுக்குக் கொடுத்தென்ன பயன்? அப்பெண் பிறர் கூறும் உபதேசத்தைத்தானே கேட்கவேண்டி நேரிடும்? அப்படி உபதேசம் செய்பவர்களின் தன்மையையாவது அதனால் அறிந்துகொள்ள இயலுமா?

'காதல், காதல்' என்று இப்போது எங்கு பார்த்தாலும் பேச்சாக இருக்கிறதே! ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்துகொள்ளாத வரை காதல் எப்படிப் பிறக்கும்? இவரை

மணந்தால் இன்ன இலாபம் பெறலாம் என்ற தன்மையால்தானே காதலின் தோற்றுவாய் சிக்கியிருக்கிறது! காதல் தெய்வீகமானது என்கிறார்களே! எப்படி அது தானாகவே தோன்றிவிடும்? 'அவன் பெரிய புத்திசாலி; அவன் ஒப்பிலா அழகன்; அவன் பெரிய செல்வந்தன்; அவன் பெரிய கொடையாளி; பெருமை மிக்கோன்' என்றெல்லாம் கேள்விப் பட்டுத்தானே பிறகு காதல் பிறக்கிறது. செல்வந்தன் என்று கேள்விப்பட்டுக் காதல் கொண்ட ஒரு மங்கையின் காதல், 'அவன் ஒரு 'இன்சால்வென்ட்.' பேர்வழி' என்று—மணந்த பிறகு அறிய நேர்ந்தால், அவள் காதல் போனதுதானே? அழகன் என்று காதல் கொண்டு மணந்த மங்கையின் காதல் 'அவனுக்கு ஒரு காது செவிடு' என்று பிறகு அறிய நேர்ந்தால் அழிந்துபட வேண்டியதுதானே! தான் நினைத்ததுபோல் இல்லையென்றால் ஏமாற்றந்தானே! ஏமாற்றமடைந்த காதலில் சுவையிருக்குமா? எனவே, காதலுக்கு ஏது இயற்கைச் சக்தி? கண்டதும் காதல் என்பதும், காதல் மாறக்கூடாதது என்பதும் காதலின் தோற்றுவாய் தெரியாமல் எழுந்த நினைப்புகள்தானே?

"காதலும், கடவுளும் ஒன்று" என்பதிலிருந்தே இரண்டும் பித்தலாட்டங்கள் என்பது விளங்கவில்லையா? எல்லா மக்களும் மிகமிக மாற்றமடைந்தாக வேண்டும். சின்னப் புத்தியால் தோன்றும் தீய கருத்துக்களை அறவே ஒழித்து ஒதுக்கிவிட்டு—ஏன், எதற்காக இப்படிச் சொல்லுகிறோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

[சென்னை விக்டோரியா மண்டபத்தில், 30–9–1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11–10–1948]

15. சொத்துரிமை

இந்திய நாட்டில், பெரும்பாலும் உலகத்தின் வேறு எங்குமில்லாததும், மனிதத் தன்மைக்கும் நியாயத்திற்கும் பகுத்தறிவிற்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும், அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டு மிராண்டிகளல்லர் எனவும்—மனிதத் தன்மையும் நாகரிகமுமுடையதான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்படவும் மற்றும் உலகிலுள்ள பெரும்பான்மையான நாட்டார்களைப் போலவே அன்னிய நாட்டினர்களின் உதவியின்றித் தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆட்சி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் வேண்டுமானால்—முக்கியமாகவும் அவசரமாகவும் ஒழிக்கப்பட வேண்டியதாகவுமிருக்கும் கொடுமைகள் இரண்டு உண்டு.

அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பலகோடி ஜன சங்கியையுள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களினும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக் களினும் இழிவாகவும் நடத்துவதாகும்.

இரண்டாவது எதுவென்றால், பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே அடியோடு பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்களென்றும், ஆண்களுக்கு அடிமையாகவே இருக்கக் 'கடவுளாலேயே' சிருஷ்டிக்கப்பட்டவர்களென்றும் கற்பித்து, அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதாகும். ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவில் இனி, அரைக்கணம்கூட இருக்கவிடாமல் ஒழித்தாகவேண்டியவைகளாகும்.

மேலும், மேற்கண்ட இரண்டு கொடுமைகளும் அழிக்கப்படாமல், இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கேட்பதோ, இந்தியாவின் பாதுகாப்பையும், ஆட்சி நிர்வாகத்தையும் இந்திய மக்கள் தாங்களே பார்த்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லுவதோ ஆகிய காரியங்கள் முடியாதென்றும், முடியுமென்று யாராவது சொல்வதானால் அது சுத்த

அறியாமைத்தனமானதென்றும், இல்லாவிட்டால்—சுயநல சூழ்ச்சியே கொண்ட நாணயத் தவறான காரியமாகுமென்றும் நாம் சொல்லி வருகிறோம் என்பதோடு, இப்படிச் சொல்லும் விஷயத்தில் நமக்குப் பயமோ, சந்தேகமோ கிடையாதென்றும் சொல்லுவோம். ஆதலால் தான், இவ்வித முட்டாள்தனமானதும் சூழ்ச்சியானதுமான முயற்சிகளை நாம் எதிர்க்க வேண்டியவர்களாயுமிருக்கிறோம்.

ஏனெனில், நம்மில் ஒரு கூட்டத்தாரையே நாம் நமது சமூகத்தாரென்றும், நமது சகோதரர்களென்றும் ஜீவகாருண்யமென்றுங்கூடக் கருதாமல், நம் மக்களுக்கே நாம் விரும்பும் சுதந்திரமளிக்காமல், அவர்களை மனிதர்கள் என்று கூடக் கருதாமல் அடிமைப் படுத்தி, கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்திருக்கிறோம். ஆதலால், அத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தையோ, விடுதலையையோ நம்மிடம் ஒப்புவிப்ப தென்றால், கசாப்புக் கடைக்காரரிடம் ஆடுகளை ஒப்புவித்ததாகுமே தவிர, வேறல்ல என்று கருதுவதால் தானேயொழிய வேறல்ல.

இந்தத் தத்துவமறியாத, சில தீண்டப்படாதவரென்ற சில தாழ்த்தப்பட்ட மக்களும், சுதந்திரம் அளிக்கப்படாதவர்கள் என்ற அடிமைப்படுத்தப்பட்ட பெண்களும் தங்களுக்கு மற்றவர்களால் இழைக்கப்பட்ட கொடுமையையும் இழிவையும் கருதிப்பாராமல், இந்திய சுதந்திரம், 'விடுதலை' என்கின்ற கூப்பாடுகளில் இவர்களும் கலந்துகொண்டு தாங்களும் கூப்பாடு போடுவதைக் காண்கிறோம். ஆனாலும், அதற்குக் காரணம், அவர்களுக்கு உண்மைச் சுதந்திரம், விடுதலை என்பவைகளின் பொருள் தெரியாததாலும், தெரிய முடியாமல் வைத்திருந்த வாசனையினாலும் இவ்வாறு அறியாமல் திரிகின்றார்களே தவிர வேறில்லை.

தீண்டாமை என்னும் விஷயத்திலிருக்கும் கொடுமையும் மூடத்தனமும் மூர்க்கத் தனமும் யோசித்துப் பார்த்தால், அதை மன்னிக்கவோ, அலட்சியமாய்க் கருதவோ, 'நாளை பார்த்துக்கொள்ளலாம், இப்போது அதற்கு என்ன அவசரம்?' என்று காலந் தள்ளவோ சிறிதும் மனம் இடந்தருவதில்லை. ஒருவனை—அதாவது, பிறரைத் தீண்டாதார் எனக் கருதிக் கொடுமைப்படுத்துகின்றவர்களை அத்தீண்டாதார்களுக்கு இருக்கும் உண்மையான கஷ்டத்தை உணரச்செய்ய வேண்டுமானால், இப்போதைய வெள்ளைக்கார அரசாங்கத்தின்கீழ் அனுபவிக்கும் மனுதர்மக் கொடுமைகள் என்பவைகள் போதாதென்றும், சிறிதும் சுதந்திரமும் சமத்துவமற்றதும், சதா இராணுவச் சட்டம் அமுலில் இருப்பதுமான ஏதாவது ஒரு கொடுங்கோல் ஆட்சி இருந்தால்தான் இம்மாதிரிக் கொடுமைப்படுத்துகின்ற மக்களுக்கு உணர்ச்சி வரும்; புத்தி வரும் என்றும் நமக்குச் சிற்சில சமயங்களிலே தோன்றுவதுமுண்டு.

ஆனால், இந்தியாவை இம்மாதிரி மூர்க்கத்தனமும், நாணயக் குறைவும் மாத்திரம் சூழ்ந்து கொண்டிருக்காமல், மூடத்தனமும் சேர்ந்து கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதால், இன்னமும் எவ்வளவு இழிவும் கொடுமையும் ஏற்பட்டாலும் இம்மாதிரியான மக்களுக்கு உண்மையான துன்பத்தை உணரத்தக்க நிலைமை ஏற்படுவது கஷ்டமாக இருக்கு மென்றாலும், இந்நிலை மாறுதலடையக்கூடும் என்ற உறுதியை உண்டாக்கத் தக்க நம்பிக்கை கொள்வதற்கு இடமில்லாமல் போகவில்லை.

இனி, பெண்கள் விஷயத்திலும் இது போலவேதான் அவர்களுடைய சுதந்திரத்தை யும் உணர்ச்சியையும் கட்டிப்போட்டிருக்கும் கொடுமையானது, இந்தியர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியேயில்லை என்பதைக் காட்டவும், அவர்கள் அடிமைகளின் குழந்தைகள் என்பதை ஒப்புக்கொள்ளவும் ஆதாரமானதென்றுதான் சொல்லவேண்டும்.

எப்படியெனில், இவ்விரண்டைப்பற்றி இந்திய விடுதலைவாதிகள், சுதந்திர வாதிகள், சுயேச்சைவாதிகள், தேசியவாதிகள், மக்கள் நல உரிமைவாதிகள் என்கின்ற

கூட்டத்தார்கள் ஆகியவர்களுக்குச் சிறிதும் உண்மையான கவலையில்லாவிட்டாலும், மேற்கண்ட கூட்டத்தார்களில் 100க்கு 90 பேர்களுக்கு மேலாகச் சுயநலங்கொண்ட நாணய மற்றவர்களாகவே காணப்படினும், இவர்களது முயற்சி இல்லாமலும் சில சமயங்களில் மேற்கண்ட சுயநல சூழ்ச்சிவாதிகளின் எதிர்ப்பிற்கும் இடைஞ்சலுக்கும் இடையிலும் கொடுமைகள் அனுபவிக்கும் மேற்கண்ட இருவகையாருக்கும் விமோசனம் ஏற்படுவதற்கு அறிகுறிகள் ஆங்காங்கு வேறு ஒரு வழியில் காணப்படுகின்றதைப் பார்க்கச் சிறிது மகிழ்ச்சியடைகின்றோம். அதாவது, இந்திய சுதேச சமஸ்தானங்கள் என்று சொல்லப்படும் மைசூர், பரோடா, காஷ்மீர், திருவனந்தபுரம் முதலிய சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்திய ராஜ்யத்தைவிட—பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சீர்திருத்தக்காரர்களைவிட இந்தக் கொடுமைகளை ஒழிக்க, ஒவ்வொரு துறையில் ஒவ்வொன்றுமாக முன் வந்திருக்கின்றன என்பதாகும்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் எந்த விஷயத்திலும் தீண்டாமையைப் பாவிக்கக் கூடாதென்றும், தீண்டப்படாதார் என்னும் வகுப்பாருக்கு மற்றவர்களைப்போல் சகல உரிமைகளும் அளிக்கப்பட்டிருப்பதோடு, கல்வி விஷயத்தில் அவர்களுக்குச் சாப்பாடு போட்டும் இலவசமாய்க் கற்றுக் கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானமாயிருக்கும் விஷயம் முன்பே தெரிவித்திருக்கிறோம்.

மற்றும், திருவாங்கூர் சமஸ்தானத்தில் தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்குக் கோவில்கள், தெருக்கள், குளங்கள் ஆகியவை தாராளமாகத் திறக்கப்பட்டு, இவ்விஷயங்களில் மற்றவர்களுக்குள்ள சுதந்திரங்கள் அளிக்கப்பட்டிருப்பதோடு, பெண்களைக் கடவுள் பேரால் விபச்சாரிகளாக்கிக் கோவில்களின் ஆதரவுகளைக் கொண்டு, அவ் விபச்சாரத் தன்மையை நிலைநிறுத்துவதையும், அஃதன்றி நடந்துவரும் விபச்சாரத்தையும் ஒழிக்கச் சட்டம் நிறைவேற்றி அமுலுக்குக்கொண்டு வந்ததையும் முன்னமே தெரிவித்திருக்கின்றோம்.

இப்போது மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் விஷயமாக யோசனை செய்யப்பட்டு, அந்த யோசனையை அரசாங்கமும் ஜனப் பிரதிநிதிகளும் ஒப்புக்கொண்டு, அதற்காக ஒரு கமிட்டியும் நியமித்து, அக் கமிட்டியார் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கலாம் என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டு, ஏகமனதாக ரிப்போர்ட் அனுப்பியிருப்பதாய் எல்லாத் தினசரிப் பத்திரிகைகளிலும் வெளியாக்கப் பட்டிருக்கிறது.

அதன் முக்கிய பாகம் என்னவென்றால் :—

1. பெண்கள் வாரிசு சொத்துரிமை அனுபவிக்கத் தகுதி யுடையவர்கள் அல்ல என்பது கொடுமையும் அநீதியுமாகும்.
2. பெண்கள், சீதனம், நன்கொடை முதலிய சொத்துக்களை அடைந்து, அவைகளை வைத்து நிர்வகித்து வரத் தக்கவர்கள் என்ற உரிமையும் வளமையும் இருக்கும்போது, வாரிசான சொத்தை அடைய ஏன் தகுதி யுடையவர்களாக மாட்டார்கள் ?
3. பெண்களுக்கு வாரிசு சொத்துரிமை இல்லை யென்பது பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையா யிருப்பதோடு, பொதுவாக இந்து சமூக முன்னேற்றத்திற்கே கேடாயிருக்கிறது.
4. ஆகவே, இவற்றிற்கான சட்டம் செய்ய வேண்டியதும், பெண்கள் என்கிற காரணத்திற்காக அவர்களுக்கு எவ்வித சிவில் உரிமையையும் தடுப்பது கூடாதென்று திட்டமாய் முடிவு செய்துவிட வேண்டியதுமான காலம் வந்துவிட்டது.
5. எந்தவிதமான சீதன சொத்தையும் பெண்கள் தங்களிஷ்டப்படி விநியோகித்துக் கொள்ளலாம் என்பவைகளாகும்.

இவைகள் ஒருபுறமிருக்க, மற்றொரு விஷயத்திலும் பெண்களுக்குச் சில சுதந்திரங்கள் அளிக்க அக் கமிட்டி சிபாரிசு செய்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

அவை என்னவெனில் :—

"புருஷன் மேக வியாதிக்காரனாகவாவது, கொடிய தொத்து வியாதிக்காரனாக வாவது இருந்தாலும், வைப்பாட்டி வைத்திருந்தாலும், தாசி, வேசி, வீடுகளுக்குப் போய்க் கொண்டிருப்பவனா யிருந்தாலும், மறு விவாகம் செய்துகொண்டவனா யிருந்தாலும், கொடுமையாய் நடத்தினாலும், வேறு மதத்திற்குப் போய்விட்டாலும் புருஷனை விட்டுப் பிரிந்திருக்கவும், புருஷனிடம் ஜீவனாம்சம் பெறவும் மனைவிக்குப் பூரண உரிமை உண்டு என்பதாகும்.

அதோடு, மேற்படி விஷயங்களை அனுசரித்து ஒரு மசோதாவும் தயாரிக்கப்பட்டிருக்கின்றதாகவும் காணப்படுகின்றது.

ஆகவே, இந்தச் சட்டம் அனேகமாகக் கூடிய சீக்கிரம் மைசூர் சமஸ்தான சட்ட சபையில் நிறைவேறி சட்டமாக்கப்படுமென்றே நம்பலாம். இவற்றில் சொத்துக்களின் அளவு விஷயங்களில் ஏதாவது வித்தியாசமிருந்த போதிலும் பெண்களுக்குச் சொத்துரிமைக் கொள்கையும், பெண்கள் புருஷனை விட்டு விலகி இருந்து கொள்ளும் கொள்கைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயம் கவனித்துப் பாராட்டத் தக்கதாகும்.

இவை போன்று பல காரியங்களில், இந்தியாவிலுள்ள சுதேச இந்து சமஸ்தானங்களெல்லாம் ஒவ்வொரு துறையிலும் முன்வந்து சட்டம் செய்துகொண்டு வரும்போது, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள தேசியவாதிகளுக்கும், பூரண சுயேச்சைவாதிகளுக்கும், பொதுஜன நலஉரிமைவாதிகளுக்கும் மாத்திரம் இக் கொள்கைகள் அவசியமானவைகள் என்றோ, சட்டம் செய்யத் தக்கது என்றோ தோன்றப்படாமலிருப்பதானது—இக் கூட்டத்தார்களின் நாணயக் குறைவையும், பொறுப்பற்ற தன்மையையும் நன்றாகக் காட்டுவதற்கு ஒரு அறிகுறியாகும்.

சாரதா சட்டம் (குழந்தை மணத் தடுப்புச் சட்டம்) என்கிற ஒரு சட்டம் பிரிட்டிஷ் சர்க்கார் தயவினால் 'பாசா'கியும், இந்திய தேசியவாதிகளாலும், "பூரண சுயேச்சை வாதி"களின் முயற்சியாலும் அது சரியானபடி அமுலுக்கு வர முடியாமல் முட்டுக்கட்டை போடப்பட்டு வருவதும், அச் சட்டம் கூடாதென்று வாதாடி ஒழிப்பதாகத் தெரியப்படுத்தினவர்களை ராஜாங்க சபைக்கும், மாகாண சபைக்கும் நமது பிரதிநிதிகளாக அனுப்பியதும் நம்மவர்களுக்கு மிகமிக மானக் கேடான காரியமாகும்.

நமது தேசியவாதிகள் என்னும் அரசியல்வாதிகள், இம் மாதிரிக் காரியங்களைச் சிறிதும் கவனியாமல் இருப்பதோடு, நாம் ஏதாவது இவற்றிற்காகப் பிரச்சாரம் செய்தால், "இது தேசியத்திற்கு விரோதம், சுய ராஜ்யம் கிடைத்துவிட்டால், பிறகு சட்டம் செய்து கொள்ளலாம்" என்று சொல்வதும், வேறு யாராவது இவைகளுக்காகச் சட்டம் செய்ய சட்டசபைக்கு மசோதாக்கள் கொண்டு போனால், "சீர்திருத்தங்கள் சட்டங்கள் மூலம் செய்துவிட முடியாது; பிரச்சாரத்தின் மூலம்தான் செய்ய வேண்டும்" என்று சொல்லுவதுமான தந்திரங்களினால் மக்களை ஏமாற்றிக் காலம் தள்ளிக்கொண்டு வருகிறார்கள்.

ஆகவே, இந்த நிலைமையில் முதலில் நமது கடமை யென்னவென்பதை யோசித்துப் பார்த்தால், இம் மாதிரியான காரியங்களுக்கு ஆண்கள்தாம் முயற்சிக்க வேண்டியவர்கள் என்ற உரிமை முதலில் நீக்கப்பட வேண்டும். நம் பெண்மணிகள் இக் காரியங்களில் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கவேண்டும். பெண்கள் கிளர்ச்சி—முதலாவதாக, ஆண்களைப் போன்ற சொத்துரிமை பெறுவதற்கே செய்யப்பட வேண்டும். பெண்களுக்குச்

சொத்துரிமை யிருந்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவிதமான அசவுகரியங்களும் ஒழிந்து போகும். கேவலம் தாசிகளுக்குச் சொத்துரிமை இருப்பதால் அவர்கள் தங்கள் குடும்பங்களில், தங்கள் சமுதாயத்தில் எவ்வளவு சுதந்திர முடையவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால், குடும்ப ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை யிருந்தால் எவ்வளவு மேன்மையாய் வாழ்க்கை நடத்துவார்கள் என்பது விளங்கும். அன்றியும், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படாததற்குக் காரணம் இதுவரை யாரும் சொன்னதே கிடையாது.

பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இவை இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டுவிட்டால், சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்துவிடும். பிறகு, தங்கள் கணவன்மார்களைத் தாங்களே தெரிந்தெடுக்கவும், அல்லது பெற்றோர்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும் கணவனோடு சுதந்திரமாய் வாழ்க்கை நடத்தவும் கூடிய தன்மை உண்டாகிவிடும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பதே நமது அபிப்பிராயம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமாகும்.

['பெண் ஏன் அடிமையானாள்?' என்ற புத்தகத்திலிருந்து. 11-ம் பதிப்பு–1971

16. விபச்சாரம்

விபச்சாரம் என்னும் 'வார்த்தை, அனேகமாய் ஆண்–பெண் சேர்க்கை சம்பந்தப்பட்டதற்கே உபயோகப்பட்டு வருகின்றது. அதாவது, 'விபச்சாரம்' என்பது தனக்குக் கணவன் என்றோ, தன்னை வைத்துக்கொண்டிருக்கிறவன் என்றோ, வேசித் தொழிலில் இருப்பவளானாலும் யாராவது ஒரு புருஷனிடம் தற்கால சாந்தியாய் தன்னைக் குத்தகையாய் அனுபவிப்பவன் என்றோ சொல்லப்படும்படியான அந்தக் குறிப்பிட்ட ஆண் மகனைத் தவிர, மற்றவரிடமோ, பல பேர்களிடமோ சேர்க்கை வைத்துக்கொண்டிருப்பதற்கே கணவனாலும், வைப்புக்காரனாலும், குத்தகைக்காரனாலும் மற்றும் பொது மக்களாலும் சொல்லப்படுகின்ற—அதாவது ஒரு பெரிய குற்றம் சாட்டுவதற்கும், பழி சுமத்துவதற்கும் உபயோகிக்கும் ஒரு சொல்லாகும். ஆனால், அதே பெண்ணை அந்தக் கணவனோ, வைப்புக்காரனோ மற்றொருவனுக்குத் தன் சம்மதத்தின் பேரில் கூட்டிவிடுவானானால் அதை அவர்கள் விபச்சாரம் என்று சொல்லுவதில்லை. இந்தச் சங்கதி பொதுஜனங்களுக்குத் தெரிந்தாலும் கணவனைத்தான் அவர்களும் வசை கூறிக் குற்றம் சொல்லுவதே தவிர, பெண்ணை விசேஷமாக முன் சொல்லப்பட்ட விபசாரி என்கிற முறையில் அனேகமாகக் குற்றம் சொல்லுவதில்லை. அன்றியும், இம் மாதிரிக் குற்றச் சாட்டுதலும், வசவுக்கும் பழிப்புக்கும் உபயோகப்படுத்துதலும் ஆண்களுக்குக் கிடையாது. அன்றியும் ஆண்களை 'விபச்சாரன்' என்று வைகின்ற வழக்கமும் கிடையாது. அப்படிச் சொன்னாலும் எந்த ஆணும் கோபித்துக்கொள்வதும் கிடையாது.

எனவே, விபச்சாரம் என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தையே. ஏனெனில், விபச்சார தோஷம் என்பதும், விபச்சாரம் செய்வதால் ஒழுக்கக் குறைவு என்பதும் வழக்கத்தில் பெண்களுக்குத்தான் உண்டேயொழிய ஆண்களுக்குக் கிடையாது.

உதாரணமாக, விபச்சாரம் செய்யும் பெண்களைத்தான் குற்றம் சொல்லி சாதியை விட்டுத் தள்ளிவைத்தும், வீட்டை விட்டுத் துரத்தியும், அடித்தும் உதைத்தும் வைதும் துன்பப்படுத்துகின்றார்களே ஒழிய—சில சமயங்களில் கொலையுங்கூட செய்கின்றார்களே ஒழிய—ஆண்களை இப்படிச் செய்ததாகக் கண்டதோ கேட்டதோ இல்லை.

சில இடங்களில் விபச்சாரம் ஆண்களுக்குத் தற்பெருமையாகவும், கீர்த்தியாகவும் கூட இருக்கின்றதைப் பார்க்கின்றோம். சில ஆண்கள் அதைப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வதையும் கேட்கிறோம். மக்களும் விபச்சாரி மகன் என்று சொன்னால் கோபப்படுகின்றார்களே ஒழிய—விபச்சாரனுடைய மகன் என்றால் கோபிப்பது இல்லை. ஆனால், எந்தச் சமயத்தில் ஆண்கள் கோபித்துக்கொள்கின்றார்கள் என்றால், தங்கள் மனைவிகள், வைப்பாட்டிகள், குத்தகைத் தாசிகள் விபச்சாரம் செய்தார்கள் என்று சொன்னால் மாத்திரம்—உடனே கோபித்துக்கொள்ளுகின்றார்கள்; மேலும், மிகவும் அவமானம் ஏற்பட்டு விட்டதாகவும் பதறுகிறார்கள். மற்றும் தங்கள் பெண்களைத் தங்களுடைய சம்மதத்தின் பேரில் தங்களுடைய சுயநலத்திற்காக விபச்சாரத்திற்கு விட இணங்குகிறான் என்றோ, பெண்ணை அடக்கமுடியாமல் 'ஊர் மேல்' விட்டுவிட்டான் என்றோ சொல்லுகின்றபோது, அதிகமாய்க் கோபித்துக்கொள்கின்றார்கள். ஆகவே, விபச்சாரம் என்ற வார்த்தையின் தத்துவம்—பெண்கள் ஆண்களின் அடிமைகள் என்றும், ஆண்களுடைய போக போக்கியப் பொருள் என்றும், விலைக்கு விற்கவும், வாடகைக்கு விடவும் கூடிய வஸ்து என்றும் கருதி இருக்கின்றார்கள்.

அதாவது, விபச்சாரம் என்னும் வார்த்தை வழக்கத்தில் ஏன் பெண்களை மாத்திரம் சொல்லப் பயன்படுத்தப்பட்டது? ஆண்களைச் சொல்லுவதற்கு ஏன் அது பயன்படுத்தப் படவில்லை? விபச்சாரம் என்று சொல்லப்படுவது சுபாவத்தில் உண்மைக் குற்றமுள்ள வார்த்தையாக இல்லை. எப்படிக் 'கற்பு' என்னும் வார்த்தையையும் அதைப் பயன் படுத்தும் முறையையும் புரட்டானது என்றும், பெண்ணடிமை கொள்ள உத்தேசித்து ஏற்படுத்தியதாகுமென்றும் சொல்லுகிறோமோ—அதுபோலவே, 'விபச்சாரம்' என்னும் வார்த்தையும் அதன் பிரயோகமும் புரட்டானதும் பெண்களை அடிமை கொள்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டதென்றும் காணப்படுவதோடு—அது இயற்கைக்கு விரோதமானதென்றுங் கூடச் சொல்லலாம். இவ்விரு வார்த்தைகளும் தேவையில்லாதவைகளாகும். வாழ்க்கை ஒப்பந்த நிபந்தனைக்கு மாத்திரம் இவை தேவையாய் இருக்கலாம். ஆனபோதிலுங்கூட, அவையும் இயற்கைக்கு முரணானவை என்பதை யாரும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அதற்கு ஆதாரம்—இவ்விரண்டு வார்த்தைகளின் தத்துவங்களும் பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டு ஆண்கள்மீது சுமத்தப்படாமையும், ஆண்கள் அவற்றிற்குக் கட்டுப்படாமையும்—அதைப்பற்றி இலட்சியம் செய்யாமையுமேயாகும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் 'கற்பு தவறுதலும்', 'விபச்சாரத்தனமும்' கூடாது என்று பலர் கற்பித்தும், பல நிபந்தனைகளைக்கூட ஏற்படுத்தியும்—மற்றும் எவ்வளவோ பயங்களைக் காட்டியும் அதனால் சிலராவது அடிதடி, விரோதம், கொலை, உடல்நலிவு முதலியவைகளால் துன்பப்படுவதை நேரில் காணக்கூடிய சந்தர்ப்பங் களிருந்தும், இவ்வளவையும் மீறி கற்புக்கு விரோதமாகவும், விபசாரத்திற்கு அனுகூல மாகவும் உணர்ச்சியும் ஆசையும் ஏன் உண்டாக வேண்டுமென்பதைக் கவனித்தால், அது தானாக விளங்கும். இயற்கையோடியைந்த வாழ்வு எது என்பதையும், இயற்கைக்கு மாறு பட்ட வாழ்வு எது என்பதையும் எவ்வித நாட்டுப்பற்று, நடப்புப்பற்று, பிறப்புப்பற்று என்பதில்லாமல் நடுநிலையிலிருந்து—தன் அனுபவத்தையும் தன் மனத்தில் தோன்றிய—தோன்றும் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் ஒரு உதாரணமாக வைத்துக்கொண்டு, பரிசுத்தமான உண்மையைக் காணுவானேயானால், அப்போதும் 'கற்பு', 'விபச்சாரம்' என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும், மற்றவர்களை அடிமையாகக் கட்டுப் படுத்த உண்டாக்கப்பட்ட சுயநல சூழ்ச்சி நிறைந்தவை என்பதும் தாமாகவே விளங்கி விடும். மற்றும், விபச்சாரம் என்பது ஒருவனுடைய பாத்தியதைக்கும், ஏற்படுத்திக் கொள்ளும் கட்டுப்பாட்டிற்கும் மாத்திரம் விரோதமே தவிர, உண்மையான ஒழுக்கத்திற்கு விரோதமல்ல என்பதற்கு மற்றொரு உதாரணம் கூறுவோம்.

மலையாள நாட்டில் இரண்டு, மூன்று ஆண்கள் ஒரு பெண்ணை மனைவியாக ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கம் உண்டு. ஆனால், அந்தப் பெண் மற்ற ஆண்களிடம்—அதுவும் தங்களுக்கு மனைவியாயிருக்கும் காலத்தில்—பிற ஆண்களிடம் சம்பந்தம் வைத்துக்கொண்டால் மாத்திரந்தான் அதை விபச்சாரமாகக் கருதி சில சமயங்களில் கொலைகள் கூட நடக்கின்றன. மற்றும் சில வகுப்புகளில் தங்கள் இனத்தார் தவிர மற்ற இனத்தாரிடம் சகவாசம் செய்தால் மாத்திரம் விபச்சாரமாய்க் கருதப்படுகின்றது. நமது நாட்டிலும் சில வகுப்புகளில் தம் குடும்பத்தைச் சேர்ந்த 'மச்சாண்டார்', 'கொழுந்தனார்', 'மாமனார்' ஆகியவர்கள் சம்பந்தமானது விபச்சாரத்தனமாய்க் கொள்ளப்படுவதில்லை. இவைகளையெல்லாம் கவனித்தால், விபச்சாரம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கைமீது—பொதுவான ஒழுக்கக்குறைவு என்கிற தத்துவத்தில் எப்போதும் பழக்கத்தில், அமுலில் இல்லை என்பது விளங்கும்.

மனித சமூகத்திற்குச் சில கட்டுப்பாடுகளும் ஒழுங்கும் வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை மறுக்கவில்லை. பொது வாழ்க்கைக்கு ஏற்படுத்தப்படும் கொள்கைகள் பொதுஜனங்களில் யாருடைய தனிச் சுதந்திரத்திற்கும் பாதகமில்லாமலும் பிரயோகத்தில் உயர்வு—தாழ்வுத் தத்துவம் இல்லாததாகவுமிருக்கவேண்டும்; முக்கியமாக, இயற்கையோடி யைந்ததாக இருக்கவேண்டும். அவைகளும் மற்றவர்களுடைய நியாயமான உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் சிறிதும் பாதகம் உண்டுபண்ணாததாக இருக்கவேண்டும். அன்றியும் அறிவுக்கும் சாத்தியத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்றதாகவும், அவசியம் கொண்ட தாகவும் இருக்கவேண்டும்.

இப்படி இல்லாமல், வெறும் நிர்ப்பந்தத்திற்கு நாணயமற்றதும், அறிவுக்கும் அனுப வத்திற்கும் ஒவ்வாததுமான விஷயங்களுக்காக வலுத்தவர்கள், தந்திரக்காரர்கள் தங்களுக்குத் தோன்றினபடிக்கெல்லாம் கட்டுப்பாடுகள் செய்துகொண்டு போவதானது—எவ்வித பயனையும் தராது; அது மனித சமூகத்திற்கு வீண் கஷ்டத்தை உண்டாக்கும்.

பொது வாழ்க்கையில் ஒருவன் செய்யக்கூடாது என்பதாக ஏற்பாடு செய்திருக்கும் 'திருட்டு' என்பதானது, ஒரு மனிதனுக்கு—அதாவது திருட்டுக் கொடுத்தவனுக்குக் கஷ்டத்தையும் மன வருத்தத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கின்றது. எதனால் அந்த நஷ்டமும் சங்கடமும் ஏற்படுகிறதென்றால், திருட்டுக்கொடுத்தவன் திருட்டுப்போன சொத் தைத் 'தன்னுடையது' என்றும், அது 'தனக்கே உரியது' என்றும் எண்ணியிருப்பதால் தான். உலகில் பொருளியல் சமத்துவம் ஏற்படுகின்றவரை திருட்டு என்னும் குணமானது குற்றமாகத்தான் பாவிக்கப்படும். இன்று உலகத்தில், சிறப்பாக நமது நாட்டில் இருந்து வரும் கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியவைகள் எல்லாம் பெரிதும் இயற்கைக்கு எதிராகவும்—அடிமைத்தனத்திற்கு ஆதரவாகவும்—தனிப்பட்டவர்கள் சுயநலத்திற்கேற்ற சூழ்ச்சிகளு மாகவே இருக்கின்றன ஜீவ சுபாவம் என்னவென்றால், உணர்ச்சியும் இந்திரியச்செயலும் ஆசையுமேயாகும். உணர்ச்சியின் காரணமாய்ப் பசி, நித்திரை, புணர்ச்சி மூன்றும் முக்கிய இயற்கை அனுபவம். இந்திரியங்களின் காரணமாய்ப் பஞ்சேந்திரியங்களும் (உடல், வாய், கண், மூக்கு, காது) அவற்றின் செயல்களையும் முக்கியமான இயற்கை அனுபவமாய்க் காண்கிறோம். பொது உணர்ச்சியும், இந்திரியச் செயலும் மனிதனுக்கு ஆசையை உண்டாக்கிக்கொண்டே இருக்கின்றது. ஆசையின் காரணமாய் எதையும் ஆசைப்படு வதும், அதுவும் அளவுக்கடங்காமல் மேலும் மேலும் போய்க்கொண்டிருப்பதும் சுபாவ மாகவே இருக்கிறது. ஆகவே உணர்ச்சியும், இந்திரியச் செயலும், ஆசையும் மனிதனால் கட்டுப்படுத்த எளிதில் முடிவதில்லை; கட்டுப்படுத்தியவர்கள் பல இலட்சத்திற்கு ஒருவர் இருப்பாரோ என்னவோ? அந்தப்படி இல்லாத சாதாரண மனித ஜீவனின் உணர்ச்சியையும் இந்திரியச் செயலையும் ஆசையையும் கட்டுப்படுத்தும்படியானதாகக் கொள்கைகளை—கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினால் அவை செலாவணியாகுமா?? பொய் சொல்லக்கூடாது

என்று வாயால் சொல்லிவிடுகிறோம். ஆனால் தொழில் முறைக்காக, பொய்யை அவசிய மாக வைத்து, அதனால் பிறருக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுத்துவரும் வக்கீல் களையும், வியாபாரிகளையும் மனித சமூகத்தில் எவ்வித இழிவின்றி ஏற்றுக்கொண்டிருக் கிறோம். அத்தொழிலால் சம்பாதித்த செல்வத்தைக்கொண்டு அம் மக்களைக் கவுரவமாக நடத்துகிறோம்—மதிக்கின்றோம். ஆனால், அதுபோலவே நடக்கும் மற்றொரு தொழில் காரரை (தேவதாசிகள்) இழிவாகக் கருதுகிறோம்.

பொதுவாக, இம்மூன்று பேர்களாலும் சமூகத்திற்குக் கஷ்டமும் நஷ்டமும் இருந்து– இருவரை ஏற்றுக்கொண்டு ஒருவரைத் தள்ளுவதானது கேவலமும், சூழ்ச்சியும், சுய நலமுமேயல்லாமல் இதில் நியாயம் இருப்பதாகச் சொல்ல முடியுமா?

இப்போது நடைமுறையிலிருக்கும் 'விபச்சாரம்' என்பதும் அதன் தத்துவமும் பெண்களை அடிமைப்படுத்துவதற்காக—பெண்கள் அடிமைகள் என்னும் கருத்தின்மீது ஏற்பட்டவைகளாதலாலும், அவை ஆண்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமலிருப்பதாலும் அவை ஒப்புக்கொள்ளமுடியாததாய்க் காணப்படுவதோடு, பெண்கள் சுதந்திரம் என்னும் காரியத்திற்காக நடைபெறும் காரியங்களில் 'விபச்சாரம்' என்னும் காரியம் வந்து முட்டுக் கட்டை போடுமானால்—அதைத் தைரியமாய் எடுத்தெறிந்துவிட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியது உண்மையான உழைப்பாளிகளின் கடமையாகும்.

['குடிஅரசு'–தலையங்கம்—26–10–1930]

17. தேவதாசி ஒழிப்புச்சட்டம்

கோயில்களில் பெண்களைப் பொட்டுக்கட்டுவதைத் தடுக்கச் சட்டம் செய்யவேணு மாய்த் திருமதி. முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தைச் சர்க்கார் நமக்கு அனுப்பி அதன்மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்காகச் சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித் தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், கோவில்களில் கடவுள்கள் பெயரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி, அவர்களையே பொதுமகளிர்களாக்கி, நாட்டில் விபச்சாரி தனத்திற்குச் செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்துவரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகு காலமாய் இருந்துவரு கின்றது. அன்றியும், நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்பிற்கே உரியது என்பதாகி, இயற்கை யுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ கோரின அரசாங்கமாகவாவது ஒன்றிருந் தால், இந்த இழிவான கெட்ட பழக்கம், கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்துவர ஒருகண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காது என்றே சொல்லுவோம்.

ஆனால், நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடிபுகவும், நிலைபெறவும் நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவியாகவும் இருந்து வந்ததால், அப் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால், அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து வெள்ளைக் காரர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டிய அவசியத்தில் பட்டுவிட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாய்ச் சீர்திருத்தத் துறையி லாவது, மனிதத் தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்கவேண்டியவர்களாகி விட்டார்கள். ஆனால், இப்போது கொஞ்ச

காலமாய் அப் பார்ப்பனர்களின் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கண்டுபிடித்த', அவர்களது யோக்கியதைகளை அடியோடு வெளியாக்கி, சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக்காரர்களை மிரட்டக்கூடிய சமயம் மிரட்டியும் ஆதரிக்கக்கூடிய சமயம் ஆதரித்தும், பார்ப்பனர்களின் செல்வாக்கை ஒழித்து நமது சக்தியையும், தீவிர ஆசையையும் காட்ட ஆரம்பித்துவிட்டதால், இப்போது ஏதோ சிறிது அளவிற்காவது சர்க்கார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையின் பலனேதான் இப்போது நமது கொள்கைகள் சிலது, நாட்டில் பிரச்சாரம் செய்யவும், செல்வாக்குப் பெறவும் இடம் ஏற்பட்டதும்; சட்டசபையில் இதுசமயம் ஒரு முடிவைப் பெற்றுத்தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு வரநேர்ந்ததுமாகும்.

நிற்க, இப்போது திருமதி டாக்டர். முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் 'பொட்டுக்கட்டுவதை ஒழிக்கும்' இந்த மசோதா வானது வெகுகாலமாகவே ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களிலும் பொது மகாநாடுகளிலும் கண்டித்துப் பேசப்பட்டிருப்பதுடன், இம் மாதிரி ஒரு சட்டம் செய்யவேண்டும் என்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப் பட்டு வந்திருக்கின்றது. இது சம்பந்தமாக திருமதி டாக்டர். முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கமாவது :

தேவதாசி மசோதா :

இந்தச் சமூகக் கொடுமையை ஒழிக்க ஆரம்பித்த கிளர்ச்சியானது 1868 வருடம் முதல் நடைபெற்று வருகிறது. 1906, 1907 வருடம் உலக தேசீய மகாநாட்டில் இந்தக் கொடிய கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்காகப் பல மாகாண சர்க்கார் அபிப்பிராயங்களையும் அறிந்து தம்மால் கூடியவரை ஒழிப்பதென முடிவு செய்ததினின்று இந்திய கவர்ன் மெண்டும் இந்தத் தேவதாசி மசோதாவில் அதிகச் சிரத்தைக்காட்டி வந்தது.

1912-ம் வருடம் பழைய இம்பீரியல் சட்ட நிருபணச் சபையில் மூன்று இந்திய அங்கத்தினர்கள்—கனம் மாணிக்ஜி தாதாபாய், முதோல்கர், மேட்கித் ஆகியவர்கள்—இந்தக் கொடிய பழக்கத்தை ஒழிப்பதற்கு இதே எண்ணத்தோடு வேறே மூன்று மசோதாக்கள் கொண்டுவந்தனர். இந்திய சர்க்கார் இந்த மசோதாவை உள்நாட்டுச் சர்க்காருக்கு அனுப்பி, அவர்களது அபிப்பிராயம் தந்தவுடன் 1913-ம் வருடம் செப்டம்பர் மாதம் தாங்க ளாகவே ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். மீண்டும் அம் மசோதா ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அவர்களது ரிப்போர்ட்டையும் 1914-ம் வருடம் மார்ச் மாதம் பெற்றார்கள். அந்த ரிப்போர்ட் மறுபடியும், இப்போதைப்போலவே பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடப்பட்டது. இம் மசோதாவை நிறைவேற்றுவதில் எல்லோருக்கும் பூரண எண்ணம் இருந்தபோதிலும், அத்தகைய பெண்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது போன்ற சில சில்லரை விவாதங்கள் கிளப்பிவிடப்பட்டதால் அம் மசோதா தானாகவே அதுசமயம் மறைந்துவிட்டது.

அதன்பின்னர், மகா யுத்தக்கிளர்ச்சியினால் அது கவனிக்கப்பட முடியாமல் போயிற்று. பிறகு 1922-ம் வருடம் டாக்டர் கோர் மீண்டும் அதை இந்தியச் சட்டசபையில் கொண்டுவந்தார். மேற்படி தீர்மானத்தின்மேல் விவாதம் நிகழ்ந்து கடைசியாக அது மறுபடியும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு பிரசுரிக்கப்பட வேண்டுமென்ற பிரேரேபனை அதிகப்படியான வோட்டுக்களால் தோற்கடிக்கப்பட்டது. பிறகு மேற்படி 1922-ம் வருடத்திய தீர்மானத்தின்மீது, 1924-ம் வருடம் அதைச் சட்டமாக்கப்பட்டதோடு, அதை அனுசரித்து இந்தியன் பினல்கோடு 372, 373 செக்ஷன்கள் திருத்தப்பட்டன. அதன் சட்டம் 1925-ம் வருடம் ஜனவரி மாதம் முதல்தேதியினின்று அமுலுக்கு வந்தது. அதில் 14 வயதிற்கு

மேற்பட்ட பெண்களுக்கு பொட்டுக்கட்டுதல் கூடாது என்றே சாத்திரத்தால் தடுக்கப்பட்டு இருக்கிறது. ஏனெனில், பொட்டுக்கட்டப்படவேண்டிய பெண் சாத்திரப்படி கன்னிகையாய் இருக்கவேண்டுமாதலால், 14 வயதிற்குள்தான் இந்தச் சடங்கு செய்வது வழக்கமாக இருந்து வந்தது. அதாவது, எந்தப் பெண்ணையும் 14 வயதிற்குமேல் பொட்டுக்கட்ட எந்தக் கோயில் அதிகாரியும் அனுமதிப்பதில்லை. ஆனால், மேற்படி சட்டம் வந்தபிறகு 16 வயதிற்கு கீழ்ப்பட்ட பெண்களுக்குப் பொட்டுக்கட்டப்பட்டால், கோயில் அதிகாரிகள் குற்றவாளிகளாவதோடு அந்த விதமாக அனேக கேஸ்கள் நடந்து, அந்த 25-வது சட்டப்படி தண்டனை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, வைதீகர்களது அபிப்பிராயப்படிப் பார்த்தாலுங் கூட, சாத்திரப்படி 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குக் கோயில்களில் பொட்டுக்கட்ட அனுமதிப்பதில்லை என்று தெரிகிறது.

இந்தியன் பினல்கோடுப்படி, ஒரு மைனர் பெண்ணைப் பொட்டுக்கட்டுவது குற்றம் என்றாலும், பேராசையுள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் பெண்களுக்குப் பொட்டுக்கட்டிக் கோவிலிடமிருந்து உத்திரவு பெற்றுவிடுகின்றார்கள். இது விபச்சாரத்திற்கு அனுமதி கொடுத்ததாகுமேயன்றி வேறில்லை. பொதுஜன அபிப்பிராயம் இதைச் சட்டமாக்க அனுகூலமாகி இருக்கிறது. பத்திரிக்கைகளில் இதை ஆதரித்தெழுதியும் பொதுக்கூட்டங் களில் ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும் சுமார் 13 வருடத்திற்கு மேற்பட்ட ஆண் பெண் சங்கங்களில் அதை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும் இந்தக் கொடிய பழக்கத்தினால் அல்லலுறும் சமூகத்தினரே இதைச் சட்டமாக்க வற்புறுத்தி எழுதியும் இருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டு, முனிஸிபாலிடிகளிலும் தங்களது ஆதரவைத் தெரிவித்து இருக்கின்றார்கள். இவ்வாறெல்லாம் இருக்க, இச் சட்டத்திற்குப் பொதுஜன அபிப்பிராயத்தை அறிய விரும்புவானேன், என்பது விளங்கவில்லை.

இந்த நாள்பட்ட கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபமோ எதிர் அபிப்பிராயமோ இருக்கமுடியாது. இந்தியத் தலைவர்கள் கூறியிருப்பதுபோல், 'தேவதாசி' என்று ஒரு வகுப்பு இருப்பது இந்து சமூகத்திற்கே இழிவானதும் அல்லாமல், இந்து மதத் திற்கே பெரும் பழியுமாகும். ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு பெண்ணுல கிற்கே ஏற்பட்டதாகுமாகையால், இவ்வழக்கம் பெண்களின் அந்தஸ்தையும் கவுரவத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதாய் இருக்கின்றது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட சாதியையோ சமூகத்தையோ விபச்சாரத்திற்கு அனுமதி கொடுப்பதும் பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடுமையாகும். சிறு குழந்தைகளில் இருந்தே துராச்சார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதிகளையே மீறியதாகும்.

எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இனி இதைப்பற்றிப் பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரியவேண்டிய அவசியமே இல்லை.

தவிர, இது விஷயத்தில் சாத்திர சம்பந்தமான வைதீகர்களின் ஆட்சேபத்துக்கும் இடமில்லை. ஏனெனில், சாத்திரத்தில் 14 வயதுக்குமுன் கன்னிப் பெண்ணாய் இருக்கும் போதுதான் பொட்டுக்கட்டவேண்டும் என்று இருக்கின்றது. இந்தியன் பினல்கோடு 372, 373 செக்‌ஷன்களின் படியோ 18 வயதுக்குள் பொட்டுக்கட்டக்கூடாது என்றும், கட்டினால் ஒரு வருஷக் கடினக் காவல் தண்டனையும் அபராதமும் என்றும் இருக்கின்றது. ஆகவே, இது விஷயத்தில் வைதீகமும், இந்து மதமும் 1924-ம் வருஷத்திலேயே ஒழிந்துவிட்டது. இந்நிலையில் இப்போதைய வைதீகர்கள் என்பவர்கள் இதை ஆட்சேபிப்பதானால்—ஒன்று அவர்களது சாத்திரம் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கவேண்டும்; அல்லது தாசிகள் மூலம் தங்கள் வகுப்பார்களில் சிலர் வயிறு வளர்ப்பது கெட்டுப் போகுமே என்கின்ற சாதி அபிமானமாக இருக்கவேண்டும்.

அடுத்தாற்போல், பொதுஜனங்கள் எந்தவிதத்திலாவது இந்தச்சட்டத்தை ஆட்சேபிப் பார்களா என்று எண்ணுவதும்—ஒன்று, முட்டாள்தனமாகவோ அல்லது யோக்கியப்

பொறுப்பற்ற தன்மையாகவேதான் இருக்கவேண்டும். ஏனெனில், இந்து சமூகத்தில் கடவுள் பேரால், மதத்தின் பேரால் விபச்சாரிகளை ஏற்படுத்தவேண்டுமென்று எந்த சமூகத்தாரோ, தேசத்தாரோ கருதுவார்களானால் அவர்களைப் போல் காட்டுமிராண்டிகளோ கெட்டவர்களோ இருக்கவே முடியாது. மற்றபடி, எந்த சமூகமாவது இம் மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்கவேண்டுமென்று கேட்பார்களேயானால், அவர்களைப் போல் சுயமரியாதையற்றவர்களும் இழிகுல மக்களும் வேறுயாரும் இருக்கமுடியாது. எந்தப் பெண்களாவது இந்தத் தொழிலில் ஜீவிக்கலாம் என்று கருதி அதற்காகச் சுவாமியையும் மதத்தையும் உதவிக்கு உபயோகப்படுத்த நினைத்தால், அவர்களைப்போல் ஈனப் பெண்கள் வேறு எங்குமே இருக்கவே முடியாது.

ஆகவே, இந்தச் சட்டம் சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே, நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமாகும். ஆனால், அந்தப்படி நிறைவேற்றப்படாமல் இருக்க, சட்டமெம்பர் ஆட்சேபணைகளைக் கிளப்பி, இதைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தடைப்படுத்தி விட்டது மிகவும் வருந்தத் தக்கதாகும். அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் வோட்டு கொடுத்தது மிகுதியும் மானக்கேடான காரியமாகும். அக் கட்சியார்கள் இந்தக் காரியத்தைக்கூடச் செய்ய முடியவில்லையானால், பின் என்ன வேலை செய்யத்தான் அந்தச் சட்டசபையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகவில்லை. 'காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் இல்லாததால் இச்சட்டம் நிறைவேறாமல் போயிற்று' என்று திருமதி டாக்டர். முத்துலட்சுமி நமக்கு எழுதியிருப்பதைப் பார்க்க, நமக்குத் தாங்க முடியாத அவமானமாகவே இருந்தது.

எப்படியானாலும், அடுத்த சட்டசபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால் சர்க்காரின் யோக்கியத்திலும் ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக்கூட மதிப்பும் நம்பிக்கையும் இருக்காது என்றே சொல்லுவோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—23-3-1930]

18. பெண்டிர் கடமை

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

சகோதரிகளே! நீங்கள் தற்போது தழுவி நிற்கும் இந்துமத வருணாசிரம தர்மப்படி நீங்கள் சூத்திரச்சிகள்; பார்ப்பனனின் தாசிகள் என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். கடவுள்களுக்கும் நீங்கள்தாம் தாசிகள். எந்தக் கடவுளும் சூத்திரச்சிகளுடன்தான் லீலை செய்ததாகப் புராணக்கதைகள் கூறுகின்றனவே ஒழிய, எந்தக் கதையும் கடவுள் பார்ப்பனத்திகளோடு லீலை செய்ததாகக் கூறக் காணோம். கடவுள் அவதாரமெல்லாம் நம் பெண்களின் கற்பைத்தான் சோதித்ததாகக் கதைகளில் கூறப்படுகிறதே ஒழிய—நம்மவரின் பெண்களைத்தான் கையைப் பிடித்து இழுத்துக் கற்பழித்ததாகக் கூறப்படுகிறதே ஒழிய—எந்தக் கதையிலும் பார்ப்பனப் பெண்கள் கடவுளால் கற்பழிக்கப் பட்டதாகக் கூறப்படக்காணோம். அவ்வளவு இழிவு படுத்திவிட்டார்கள் இந்த அன்னக் காவடிப் பார்ப்பனர்கள், நம்மை! இதை அறியாமல் நீங்கள் இன்னும் அவன் காலடியில் வீழ்ந்து காசு பணம் அழுதுவருகிறீர்கள்.

இனி நீங்கள் ஒரு காசுகூட, எந்தப் பார்ப்பானுக்கும் அழக்கூடாது. உங்கள் வீட்டு நல்ல காரியங்களுக்கோ, கெட்ட காரியங்களுக்கோ அவனை ஒரு நாளும் அழைக்கக்கூடாது. நீங்கள் கோயிலுக்குப் போகக்கூடாது; போவதாய் இருந்தாலும் பார்ப்பான்தான் பூசை செய்யவேண்டும் என்கின்ற கட்டுத்திட்டம் உள்ள கோயிலுக்கோ—இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்டு, அதோடு ஒரு வைப்பாட்டியையும் வைத்திருக்கும் சாமிகளும் உள்ள கோயிலுக்கோ நீங்கள் கட்டாயம் போகக்கூடாது.

அப்படிப் போவதானால், போகும்போது ஒரு தடி எடுத்துக்கொண்டு போங்கள்— தேங்காய் வெற்றிலை பாக்குக்குப் பதிலாக! அந்தத் தடியால் அடித்துக் கேளுங்கள், அந்தச் சாமியை! 'நான் தடியால் அடிக்கிறேன்; நீ அழாமல் இருக்கிறாயே! உனக்கு உயிர் கிடையாது; நீ வெறும் குழவிக் கல் சாமி; அதனால்தான் நான் அடிப்பது உனக்குத் தெரியவில்லை. அப்படி இருக்க, உனக்கு ஏன் பெண்டாட்டி? அப்படித்தான் பெண்டாட்டி வேண்டுமென்றால், ஒரு பெண்டாட்டி போதாதா? இரண்டு பெண்டாட்டிகள் ஏன் உனக்கு? இரண்டு பெண்டாட்டிகள் தான் இருந்து தொலையட்டும்–ஒரு தடவை மட்டும் அவர்களைக் கலியாணம் செய்து கொண்டால் போதாதா? வருடா வருடம் ஏன் உனக்குக் கலியாணம் நடக்க வேண்டும்? அதுவும் போதாதென்று வைப்பாட்டிகள் வேறு வேண்டுமென்று கேட்கிறாயே! இது நியாயமா? இத்தனையும் வேண்டுமானால் வைத்துக்கொள்! அண்டங்களையெல்லாம் படைத்த உனக்கு நாங்கள் படி அளக்க வேண்டுமா? உனக்கு வேண்டியதை உன்னால் தேடிக்கொள்ள முடியவில்லையா? நீயா எங்களுக்குப் படியளக்கப் போகிறாய்? ஏன் சாமி, மவுனம் சாதிக்கிறீர்கள்? கல்லில்லையானால்—நீர் உண்மையில் கடவுளானால்—நாங்கள் தரும் பொருள் உனக்குச் சேர்வதில்லையானால்—உன் பேரால் எங்களைக் கொள்ளையடித்துவாழும் இந்த அன்னக் காவடிகளான பார்ப்பனர்களை ஏன் தண்டிக்கக் கூடாது?' என்று தடியால் அடித்துக் கேளுங்கள். பதில் இல்லையானால், நாங்கள் கூறுவது போல்—அது வெறும் குழவிக் கல் என்பதை அறிந்துகொண்டு வீடு திரும்புங்கள். பிறகு உங்களை ஒரு வார்த்தை பேசுவார்களா உங்கள் கணவர்கள்?

தாய்மார்களே! நீங்கள் எதையும் பகுத்தறிந்து பார்க்கவேண்டும். கல்லே கடவுள் என்று நம்புவதையும் பார்ப்பானைக் கடவுள் அவதாரம் என்று நம்பி அவனுக்கு அரிசி பருப்பு அழுவதையும் அறவே விட்டொழிக்க வேண்டும். சாணி, மூத்திரத்தைக் கலக்கிக் குடிப்பது மதம் அல்ல. மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதுதான் மதம்—மனிதனை மனிதனாக மதித்து நடத்துவதுதான் மதம்—என்பதை நீங்கள் உய்த்துணர வேண்டும். புராண சம்பந்தமான நாடகங்களுக்கோ, சினிமாக்களுக்கோ, புண்ணிய ஸ்தலங்களுக்கோ நீங்கள் கட்டாயம் போகக்கூடாது. இவையாவும் பார்ப்பனர்கள் உங்கள் காசைப் பறித்துச் சுகபோக வாழ்வு வாழ்வதற்கு வகுத்துக்கொண்ட வழிகள். நீங்களும் மேல்நாட்டுப் பெண்களைப்போல் சகல உரிமைகளையும் பெற்று, இன்ப வாழ்வு வாழ வேண்டும். அதற்கு நீங்கள் ஆண்களைப் போல் படிக்கவேண்டும். உங்களுக்குச் சட்டத்தின் மூலம் பல உரிமைகள்—சொத்துரிமை, விவாகரத்து உரிமை ஆகிய உரிமைகள் வரக் காத்திருக்கின்றன. அவ்வுரிமைகளை அனுபவிக்க உங்களுக்குக் கல்வி அறிவு அவசியமாகும். நகைகளிலோ, சேலைகளிலோ உங்களுக்குள்ள பிரியத்தை ஒழித்துவிடுங்கள்! இவற்றில் பிரியம் வைத்துக்கொண்டு இருப்பீர்களானால், ஜவுளிக் கடையிலும் நகைக் கடையிலும் சேலை விளம்பரத்திற்காக அவ்வப்போது வெவ்வேறு சேலை உடுத்தி வெவ்வேறு நகை மாட்டி வெளியே நிறுத்திவைக்கும் வெறும் பொம்மைகள் போலத்தான் நீங்கள் ஆக வேண்டும்.

ஆகவே, அவ்விருப்பங்களை விட்டு, கல்வி அறிவில் விருப்பம் கொள்ளுங்கள். வீரத் தாய்மார்களாக ஆக விருப்பப்படுங்கள்! நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்களும் மற்ற ஆண்களும் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள்மீது பழிசுமத்தி வருகிறார்கள். அப்படிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள். எதிர்காலத்தில்—'இவள் இன்னாருடைய மனைவி' என்று அழைக்கப்பட மாட்டாது; 'இவர் இன்னாருடைய புருஷர்' என்ற அழைக்கப்படவேண்டும். அந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவர அனுதினமும் பாடுபட்டுவரும் திராவிடர் கழகத்தை நீங்கள் அனைவரும் ஆதரித்து வரவேண்டும்.

[தூத்துக்குடியில் 8, 9-5-1948-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 5-6-1948]

19. திருமணம் வேண்டாதது

உலகில் அர்ச்சகன், மாந்திரிகன், ஜோதிடன் இவர்களை விடப் பித்தலாட்டத்தில் கைதேர்ந்தவர்கள் கிடையாது.

மதமும் கடவுள் சங்கதியும் மனித சமூகத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்து நிறுத்திவிட்டன. குறிப்பாகப் பெண்கள் சங்கதியை எடுத்துக்கொள்ளுங்கள். பார்ப்பான் நம்மை எப்படிக் கீழ்சாதி என்று கூறி அடிமை வேலை வாங்குகிறானோ, அதைப்போலத் தான் மக்களில் சரிபகுதி எண்ணிக்கையுள்ள பெண்களை நடத்தி வருகிறோம். பெண்கள் என்றால் வெறும் குட்டி போடும் கருவி என்றுதான் நடத்தி வருகிறோம். பெண்களும் கணவன்மார்கள் நகை, நட்டு வாங்கிக்கொடுத்தால் போதும்—நல்ல துணிமணி வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குத் தங்களைக் குறுக்கிக்கொண்டு விட்டார்கள்.

பிராமணன்–சூத்திரன் என்ற அமைப்புக்கும் பேதத்திற்கும், புருஷன்–பெண்டாட்டி என்ற விகிதத்துக்கும் எந்தவித வேறுபாடும் கிடையாதே! உலகத்திற்குப் பயன் படும்படியான பேர்பாதி மனித சக்தியை, பெண்ணடிமை மூலம் நாம் விரயப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இதற்கு ஒரு பரிகாரம் என்ன என்றால் 'கலியாணம்' என்பதையே சட்ட விரோதமாக ஆக்க வேண்டும். இந்தக் 'கலியாணம்' என்ற அமைப்பு முறை இருப்பதால் தான் கணவன்-மனைவி என்ற உறவும், பெண் அடிமைத் தன்மையும் உருவாகிறது. மனைவியாகிவிட்டால் அதோடு சரி—அவள் ஒரு சரியான அடிமை! அதுமட்டுமல்ல— இந்தக் கலியான முறை இருப்பதால்தானே குழந்தை குட்டிகள்—அவற்றுக்குச் சொத்துக்கள் சம்பாதிப்பது—அதுவும் எதைச் செய்தாவது சம்பாதிப்பது என்ற சமுதாய ஒழுக்கக் கேடுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

மந்திரி ஆகிறவன்கூட, கலெக்டர் ஆகிறவன்கூட பெண்டாட்டி பிள்ளையைக் காப்பாற்றத்தானே இருக்கிறான். இந்த வகையில் அமைப்பு முறை என்றால், உலகத்தைப் பற்றியோ சமுதாயத்தைப் பற்றியோ எவன் கவலைப்படுவான்? பொது உணர்ச்சி எப்படி ஏற்படும்? அவனவன் அவனவன் சொந்த வாழ்க்கைப் பிரச்சினைக்கே ஈடு கொடுத்துக் கொண்டு இருப்பதென்றால், சமுதாய உணர்ச்சி எப்படி ஏற்பட முடியும்?

இந்தக் கலியாண முறையை இந்த நாட்டில் ஏற்படுத்தியதே பார்ப்பான்தான். சாத்திரங்களில் சூத்திரனுக்குக் கலியாண முறையே இல்லையே!

தொல்காப்பியத்திலே கூறப்பட்டு இருக்கிறதே "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் அய்யர் யாத்தனர் கரணம் என்ப" என்று இருக்கிறதே! "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க் காதிய கரணமும் உண்டே" என்றும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றில் இருந்தெல்லாம் சூத்திரர்களுக்குத் திருமணம் என்ற அமைப்பே இல்லாதிருந்தது என்பதுதான் தெளிவாகத் தெரிகிறது.

பெரும் பகுதி மக்களைச் சூத்திரனாக்க—உடலுழைப்புக்காரனாக்க எப்படிப் பார்ப்பான் சாத்திரங்கள் செய்தானோ அதைப் போலத்தான்—பெண்களை அடிமையாக்க 'கலியாணம்' என்ற முறையும் ஏற்படுத்தப்பட்டது.

தவம், சூத்திர சம்பூகன் எப்படிச் செய்யக்கூடாது என்று இராமாயணத் தத்துவம் கூறுகிறதோ அதை அடிப்படையாக வைத்துத்தான், வள்ளுவனும் பெண்கள் கடவுளைத் தொழாமல் கணவனையே தொழ வேண்டும் என்று எழுதி வைத்து இருக்கிறான்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறள் அதுதான்.

இந் நாட்டிலே ஒரு பெண்ணானவள் பதிவிரதையாக இருக்க வேண்டும் என்றால், அவள் எவ்வளவுக்கு எவ்வளவு அடிமை உணர்வோடு இருக்கிறாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவள் உயர்ந்த பதிவிரதையாகப் பாவிக்கப்படுகிறாள்.

இதைத்தான் நமது இதிகாசங்களும் புராணங்களும் சாஸ்திரங்களும் வலியுறுத்து கின்றன.

வள்ளுவனிலிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத் தான் கருதி இருக்கிறானே தவிர ஆண்களோடு சரி சமானமான உரிமை யுடையவர்களாகக் கூறவில்லையே!

ஆணும் பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில் சுதந்திரத்தைப்பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?

முஸ்லிமை எடுத்துக்கொண்டால் பெண்களை உலகத்தைக்கூடப் பார்க்கவிட மாட்டேன் என்கிறானே! முகத்தை மூடி அல்லவா சாலையில் நடமாடவிடுகிறான். இதை விடக் கொடுமை உலகில் ஒன்று இருக்க முடியுமா?

நம் நாட்டு யோக்கியதைதான் என்ன? ஏழு வயதிலேயே பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு அன்றைக்கு இரவே சாந்தி முகூர்த்தம் வைத்துவிடுவானே!

சாந்தி முகூர்த்தம் நடந்த மறுநாளே அந்தப் பெண் ஆஸ்பத்திரிக்குப் போய் விடுவாள்—இவ்வளவு காட்டுமிராண்டுத் தனங்களும் பெண்கள் மீது சுமத்தப்பட்டு இருந்தனவே!

பெண்களுக்காவது உணர்ச்சி வர வேண்டாமா? சிங்காரிப்பது—ஜோடித்துக் கொள்வது—சினிமாவுக்குப் போவது என்பதோடு இருந்தால் போதுமா? தாங்களும் சம உரிமை உடையவர்கள் என்ற உணர்ச்சி வர வேண்டாமா?

உலகிலே மற்ற நாட்டுக்காரன் எல்லாம் எப்படி எப்படி முன்னேறி வருகிறான். வெள்ளைக்காரன் என்ன நம்மைவிடப் புத்தியுள்ளவனா? இயற்கையிலே நம்மைவிட அவன் அறிவில் குறைந்தவன்தானே—அவனோ குளிர் தேசத்துக்காரன்; நாமோ உஷ்ண தேசத்துக்காரன். பாம்புக்குக்கூட உஷ்ண தேசத்துப் பாம்புக்குத்தான் விஷம் அதிகம். பூவில்கூட உஷ்ண தேசத்துப் பூவுக்குத்தான் மணமும் மதிப்பும் அதிகம். அந்த இயற்கை அமைப்புப்படி, நாம் இயற்கையிலேயே அவர்களைவிட அறிவாளிகள்தான். இருந்தாலும் அவர்களின் முன்னேற்றம் எங்கே? நம் நிலை எங்கே? காரணம்—அவன் அறிவைப் பயன்படுத்தினான்—நாமோ பயன்படுத்தத் தவறிவிட்டோம். அறிவைப் பயன்படுத்தினால் நாமும் அவனைவிட வேகமாக முன்னேற்ற மடையலாம்.

"நான் 1932–ல் ஜெர்மனி சென்றிருந்தேன். அப்போது ஒரு வீட்டில் தங்கி யிருந்தேன். அந்த வீட்டுக்காரர்களை விசாரித்தேன். அவர்கள் தங்களை, "Proposed Husband and Wife" என்றார்கள். அப்படி என்றால், என்ன அர்த்தம்? என்று கேட்டேன். "நாங்கள் உண்மையான கணவன்–மனைவியாகத் திருமணம் செய்துகொள் வதற்கு முன்பு—ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ள, நாங்கள் பயிற்சி பெறு கிறோம்" என்றார்கள். "எவ்வளவு காலமாக" என்று கேட்டேன். "எட்டு மாதமாக" என்றார்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்? அந்த நாடு முன்னேறுமா? 'பதிவிரதம்' பேசி, பெண்களை அடிமை யாக்கும் இந்த நாடு முன்னேறுமா?

[பெங்களூரில், 23, 24–6–73–ல் சொற்பொழிவு—'விடுதலை' 28–6–1973]

4. வாழ்க்கை ஒப்பந்தம்

1. காதல்

அன்பு, ஆசை, நட்பு என்பவற்றின் பொருளைத் தவிர வேறு ஒரு பொருளைக் கொண்டதென்று சொல்லும்படியான 'காதல்' என்னும் ஒரு தனித் தன்மை ஆண், பெண் சம்பந்தத்தில் இல்லை என்பதை விவரிக்கவே இவ்வியாசம் எழுதப்படுவதாகும். ஏனெனில், உலகத்தில் காதல் என்பதாக ஒரு வார்த்தையைச் சொல்லி, அதனுள் ஏதோ பிரமாதமான தன்மை ஒன்று தனிமையாக இருப்பதாகக் கற்பித்து, மக்களுக்குள் புகுத்தி, அநாவசியமாய் ஆண்-பெண் கூட்டு வாழ்க்கையின் பயனை மயங்கச் செய்து, காதலுக்காக என்று இன்பமில்லாமல்—திருப்தி இல்லாமல்—தொல்லைப் படுத்தப்பட்டு வரப்படுகின்றதை ஒழிக்க வேண்டுமென்பதற்காகவேயாகும்.

ஆனால், காதல் என்றால் என்ன? அதற்குள்ள சக்தி என்ன? அது எப்படி உண்டாகின்றது? அது எதுவரையில் இருக்கின்றது? அது எந்த எந்தச் சமயத்தில் உண்டாவது? அது எவ்வப்போது மறைந்து விடுகிறது? அப்படி மறையக் காரணம் என்ன?

ஆழ்ந்து யோசித்தால், காதல் என்பதின் சத்தற்ற தன்மை, பொருளற்ற தன்மை, உண்மையற்ற தன்மை, நித்தியமற்ற தன்மை, அதைப் பிரமாதப்படுத்துவதின் அசட்டுத் தனம் ஆகியவைகள் எளிதில் விளங்கிவிடும்.

ஆனால், அந்தப்படி யோசிப்பதற்கு முன்பே, இந்தக் காதல் என்கின்ற வார்த்தையானது இப்போது எந்த அர்த்தத்தில் பிரயோகிக்கப்படுகின்றது? உலகவழக்கில் அது எப்படிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது? இவற்றிற்கு என்ன ஆதாரம்? என்பவைகளைத் தெரிந்து ஒரு முடிவு கட்டிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்றையதினம் காதலைப்பற்றிப் பேசுகிறவர்கள் காதல் என்பது அன்பு அல்ல, ஆசை அல்ல, காமம் அல்ல; அன்பு, நேசம், ஆசை, மோகம், காமம் என்பவை வேறு; காதல் வேறு, நட்பு வேறு என்றும்; அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்களுக்குள் நேரே விவரித்துச் சொல்லமுடியாத ஒரு தனிக் காரியத்திற்காக ஏற்படுவதாகும்; அதுவும் இருவருக்கும் இயற்கையாய் உண்டாகக் கூடியதாகும்; அக் காதலுக்கு இணையானது உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை என்றும்; அது, ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடமும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணிடமும் மாத்திரந்தான் இருக்க முடியும். அந்தப்படி ஒருவரிடம் ஒருவருக்குமாக இருவருக்கும் ஒரு காலத்தில் காதல் ஏற்பட்டு விட்டால் பிறகு எந்தக் காரணங்கொண்டும், எந்தக் காலத்திலும் அந்தக் காதல் மாறவே மாறாது என்றும்; பிறகு வேறு ஒருவர் இடமும் அந்தக் காதல் ஏற்படாது; அந்தப்படி மீறி அந்தப் பெண்ணுக்கோ ஆணுக்கோ வேறு ஒருவரிடம் ஏற்பட்டு விட்டால் அது காதலாயிருக்க முடியாது. அதை விபச்சாரம் என்றுதான் சொல்ல வேண்டுமே யொழிய அது ஒருகாலும் காதல் ஆகாது என்றும்; ஒரு இடத்தில் உண்மைக் காதல் ஏற்பட்டுவிட்டால் பிறகு யாரிடமும் காமமோ, விரகமோ, மோகமோ ஏற்படாது என்றும் சொல்லப்படுகின்றது.

மேலும், இந்தக் காதல் காரணத்தாலேயே ஒரு புருஷன் ஒரே மனைவியுடனும் ஒரு மனைவி ஒரே புருஷனுடனும் மாத்திரம் இருக்கவேண்டியது என்றும் கற்பித்து, அந்தப்படி கட்டாயப் படுத்தியும் வரப்படுகின்றது.

ஆனால், இந்தப்படி சொல்லுகின்றவர்களையெல்லாம் உலக அனுபோகமும் மக்களின் அனுபவஞானமும் இல்லாதவர்கள் என்றோ, அல்லது இயற்கையையும் உண்மையையும் அறியாதவர்கள் என்றோ, அல்லது உண்மையை அறிந்தும் வேறு ஏதோ ஒரு காரியத்திற்காகவேண்டி வேண்டுமென்றே மறைக்கின்றவர்கள் என்றோதான் கருதவேண்டிஇருக்கிறது.

அன்றியும், இம் மாதிரி விஷயங்களைப்பற்றி நாம் சொல்லும் மற்றொரு விஷயம் என்ன வென்றால், ஓர் ஆணின் அல்லது ஒரு பெண்ணின் அன்பு, ஆசை, காதல், காமம், நட்பு, நேசம், மோகம், விரகம் முதலியவைகளைப்பற்றி மற்றொரு பெண்ணோ ஆணோ மற்ற மூன்றாமவர்கள் யாராவதோ பேசுவதற்கோ, நிர்ணயிப்பதற்கோ, நிர்ப்பந்திப் பதற்கோ சிறிதுகூட உரிமையே கிடையாது என்றும் சொல்லுகிறோம்.

இன்னும் திறந்து வெளிப்படையாய்—தைரியமாய்—மனித இயற்கையையும் சுதந் திரத்தையும் சுபாவத்தையும் அனுபவத்தையும் கொண்டு பேசுவதானால், இவை எல்லாம் ஒரு மனிதன் தனக்கு இஷ்டமான ஓர் ஓட்டலில் சாப்பிடுவது போலவும், தனக்குப் பிடித்த பலகாரக்கடையில் பலகாரம் வாங்குவது போலவும், சாமான் கடைகளில் சாமான் வாங்குவது போலவும் அவனவனுடைய தனி இஷ்டத்தையும் மனோபாவத்தையும் திருப்தியையும் மாத்திரமே சேர்ந்ததென்றும், இவற்றுள் மற்றவர்கள் பிரவேசிப்பது அதிகப் பிரசங்கித் தனமும், அநாவசியமாய் ஆதிக்கம் செலுத்துவதுமேயாகும்.

இப்படிச் சொல்லப்படுவதுகூட, இவ்வளவு பெருமையையும் அணியையும் அலங் காரத்தையும் கொடுத்துப் பேசப்பட்ட காதல் என்பதை முன்குறிப்பிட்டபடி அது என்ன, அது எப்படி உண்டாகின்றது என்பதை யோசித்துப் பார்த்தால், யாவருக்கும் சரி என்று விளங்கிவிடும். காதல் என்கின்ற வார்த்தை தமிழா, வடமொழியா என்பது ஒருபுறமிருந் தாலும்—தமிழ்மொழியாகவே வைத்துக் கொண்டாலும்—அதற்கு ஆண் பெண் கூட்டுத் துறையில் அன்பு, ஆசை, ஆவல், நட்பு, நேசம், விரகம் என்பவைகளைத் தவிர வேறு பொருள்கள் எங்கும் எதிலும் காணப்படவில்லை; அதில் வேறுவிதமான பிரயோகமும் நமக்குத் தென்படவில்லை.

அன்றியும், அகராதியில் பார்த்தாலும் மேற்கண்ட பொருளைத்தவிர—வடமொழி மூலத்தை அனுசரித்துக் காதல் என்பதற்கு கொலை, கொல்லல், வெட்டுதல், முறித்தல் என்கின்ற பொருள்கள்தான் கூறப்பட்டிருக்கின்றன. மற்றபடி, தனித்தமிழ் மொழியில் பார்த்தாலும், ஆண்–பெண் கூட்டு சேர்க்கை முதலியன சம்பந்தமான விஷயங்களுக்கும் அன்பு, ஆசை, நட்பு, நேசம் என்பவைகளைத் தவிர வேறு தமிழ் மொழியும் இல்லை. இவைகளுடன் காதல் என்பதைச் சேர்த்துக் கொண்டால், இக் கருத்துக்களையேதான் மாற்றி, மாற்றி ஒன்றுக்கு மற்றொன்று கூறப்படுகின்றதே தவிர காதலுக்கு என்று வேறு பொருளில்லை. ஆதலால், இவைகளின்றிக் காதல் என்பதற்கு வேறு தனி அர்த்தம் சொல்லுகின்றவர்கள் அதை எதிலிருந்து கண்டு பிடித்தார்கள் என்று தெரியவில்லை.

நிற்க, இப்படிப்பட்ட காதலானது ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ எப்படி உண்டா கிறது? இது தானாகவே உண்டாகின்றதா? அல்லது மூன்றாவது மனிதனுடைய பிரவே சத்தைக் கொண்டு உண்டாகின்றதா? ஒரு சமயம் தானாகவே உண்டாவதாயிருந்தால், எந்தச் சந்தர்ப்பத்தில்—எந்த ஆதாரத்தின்மீது—என்பவைகளைக் கவனித்தால் பெண் ஆணையோ, ஆண் பெண்ணையோ தானே நேரில் பார்ப்பதாலும், மூன்றாவது மனிதர் களால் கேள்விப்படுவதாலும் உருவத்தையோ, நடவடிக்கையையோ யோக்கியதையையோ வேறு வழியில் பார்க்கவும் கேட்கவும் நேரிடுவதாலுமேதான் உண்டாகக்கூடுமே தவிர வேறுவழியாக இல்லை.

இப்படியும் கூட ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணிடத்தில் காதல் ஏற்பட்டு அந்தப் பெண்ணுக்கு அந்த ஆணிடம் காதல் ஏற்படாமல் போனாலும் போகலாம். இந்தப்படியே, ஒரு பெண்ணுக்கு ஓர் ஆணிடம் காதல் ஏற்பட்டு அந்த ஆணுக்கு அந்தப் பெண்ணிடம் காதல் ஏற்படாமல் போகலாம். எப்படியும் ஒரு மனிதன் ஒரு பொருளைப் பார்த்த மாத் திரத்தில், கேட்ட மாத்திரத்தில், தெரிந்த மாத்திரத்தில் அந்த வஸ்து தனக்கு இருக்கலாம்— வேண்டும் என்பதாக ஆசைப்படுகின்றானோ, ஆவல் கொள்கின்றானோ—அது போல்தான்

இந்த 'காதல்' ஏற்படுகின்றதே தவிர, வேறு எந்த வழியிலாவது ஏற்படுகின்றதா என்பது நமக்குப் புலப்பட வில்லை.

எப்படிப்பட்ட காதலும் ஒரு சுயலட்சியத்தை—தனது இஷ்டத்தை—திருப்தியைக் கோரித்தான் ஏற்படுகின்றதே தவிர வேறில்லை என்பதும், காதலர்கள் என்பவர்களின் மனோபாவத்தைக் கவனித்தால் விளங்காமல் போகாது.

அதாவது, அழகைக் கொண்டோ, பருவத்தைக் கொண்டோ, அறிவைக் கொண்டோ, ஆஸ்தியைக் கொண்டோ, கல்வியைக் கொண்டோ, சங்கீதத்தைக் கொண்டோ, சாயலைக் கொண்டோ, பெற்றோர் பெருமையைக் கொண்டோ, போக போக்கியத்திற்குப் பயன் படுவதைக் கொண்டோ அல்லது மற்றும் ஏதோ ஒரு திருப்தியை அல்லது தனக்குத் தேவையான ஒரு காரியத்தையோ, குணத்தையோ கொண்டேதான்—யாரும், எந்தப் பெண்ணிடமும் ஆணிடமும் காதல் கொள்ளமுடியும். அப்படிப்பட்ட காரியங்களுக் கெல்லாம் ஒருவன் காதல் கொள்ளும் போது இவன் அறிந்தது உண்மையாகவும் இருக் கலாம்; அல்லது அங்கு இருப்பதாக அவன் நினைத்துக் காதல் கொண்டு இருந்தாலும் இருக்கலாம்; அல்லது வேஷமாத்திரத்தில் காட்டப்பட்ட ஒன்றினால் இருந்தாலும் இருக்கலாம்.

உதாரணமாக, ஒரு நந்தவனத்தில் ஒரு பெண் உல்லாசமாய் உலாத்துவதை ஒரு ஆண் பார்க்கின்றான். பார்த்தவுடன் அந்தப் பெண்ணும் பார்க்கின்றாள். இரண்டு பேருக்கும் இயற்கையாய் ஆசை உண்டாகி விட்டது. பிறகு 'நீ யார்' என்று இவர்களில் யாரோ ஒருவர் கேட்கிறார்கள். பெண் தன்னை ஓர் அரச குமாரத்தி என்று சொல்லு கிறாள். உடனே ஆண் காதல் கொண்டு விடுகிறான். அவனை யார் என்று அவள் கேட் கிறாள். அவன் ஒரு சேவகனுடைய மகன் என்று சொல்லுகிறான். உடனே அவளுக்கு அசிங்கமும் வெறுப்பும் ஏற்பட்டுப் போய்விடுகிறது. இது சாதாரணமாக நிகழும் நிகழ்ச்சி. இங்கு ஏற்பட்ட காதல் எதை உத்தேசித்தது?

நிற்க, அவன் தன்னை சேவகன் மகன் என்று சொல்லாமல் தானும் ஒரு பக்கத்து தேசத்து அரசகுமாரன் என்று சொல்லிவிட்டால் அவளுக்கு அதிக காதல் ஏற்பட்டு மறு ஜென்மத்திலும் அவனை விட்டுப் பிரியக்கூடாது என்று கருதி விடுகிறாள்.

நான்கு நாட்கள் பொறுத்த பின்பு தான் காதல் கொண்டவன் அரசகுமாரன் அல்லன் என்றும் சேவகன் மகன் என்றும் அறிகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அந்த நிலையில் அந்தக் காதல் அப்படியே இருக்குமா? அல்லது இருந்தாக வேண்டுமா? என்று யோசித்துப் பார்த்தால், காதல் ஏற்படும் தன்மையும் மறுக்கும் தன்மையும் விளங்கும். இந்தப் படிக்கே, ஒரு பெண்ணை நோயில்லாதவள் என்று கருதி ஒருவன் காதல் கொண்ட பின் நோயுடையவள் என்று தெரிந்தது; அல்லது மற்றவனுடைய மனைவி என்று தெரிந்தது; அல்லது ஒரு தாசி என்று தெரிந்தது; அல்லது மோசம் செய்து தன்னிடம் உள்ள பொருளை அபகரிக்க வந்தவள் என்று தெரிந்தது; அல்லது தான் முதலில் நினைத்ததற்கு மாறாகவோ அல்லது தனது நன்மைக்கும் திருப்திக்கும் இஷ்டத்திற்கும் விரோதமாய், தான் எதிர்பார்க்காத கெட்ட காரியத்திற்கு அனுகூலமாகவோ ஏற்பட்டு விட்டால் அந்தக் காதல் பயன்படுமா? அதை எவ்வளவுதான் கட்டிப் போட்டாலும் அது இருக்க முடியுமா? என்பவைகளை யோசித்தால், உண்மைக் காதலின் நிலையற்ற தன்மை விளங்கும்.

நிற்க, உண்மைக் காதல் என்பது ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் உண்டாகுமா? அல்லது கொஞ்ச நாளாவது பழகியவுடன் உண்டாகுமா? பார்த்ததும் ஏற்பட்ட காதல் உயர்வானதா? பழகியபின் ஏற்படும் காதல் உயர்வானதா? சரீரத்தைக்கூடச் சரியாய்த் தெரிந்துக் கொள்ளாமல் தூர இருந்து பார்ப்பதாலேயே ஏற்படும் காதல் நல்லதா? அல்லது

சரீரத்தின் நிலை முதலியவைகள் தெரிந்து திருப்தி அடைந்த காதல் நல்லதா? என்பவைகளைக் கவனிக்கும் போது, சரீரமாறுபாடாலும், பொருத்த மின்மையாலும், ஏன் எப்படிப்பட்ட உண்மைக் காதலும் மாற முடியாது என்பதற்கு என்ன விடை பகரமுடியும்? அல்லது உண்மையாகவே ஒருவன் ஒருத்தியுடன் காதல் கொண்டு விட்டால், ஆனால் அவள் வேறு ஒருவனிடம் காதல் கொண்டு விட்டதாய்க் கருத நேர்ந்தால்—அது பொய்யாகவோ, மெய்யாகவோ இருந்தாலும்—தன் மனத்துக்கு சந்தேகப்படும்படி ஆகிவிட்டால் அப்போது கூட காதல் மாறாமல் இருந்தால்தான் உண்மைக் காதலா? அல்லது தன் மனம் சந்தேகப்பட்டால்—அதிருப்தி அடைந்தால் நீங்கி விடக்கூடிய காதல் குற்றமான காதலா என்பதற்கு என்ன மறுமொழி பகரமுடியும்?

காதல் கொள்ளும்போது காதலர்கள் நிலைமை, மனப்பான்மை, பக்குவம், இலட்சியம் ஆகியவைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். பிறகு கொஞ்ச காலம் கழிந்தபின் இயற்கையாகவே பக்குவம், நிலைமை இலட்சியம் மாறலாம். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களிலும் காதலுக்காக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக் கொண்டு சதா அதிருப்தியில்—துன்பத்தில் அழுந்தவேண்டியதுதானா என்று பார்த்தால் அப்போதும் காதலுக்கு வலுவில்லாததையும் அது பயன்படாததையும் காணலாம்.

ஒரு ஜதை காதலர்களில் அவ்விருவரும் ஞானிகளாய், துறவிகளாய்விட்டார்களானால் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் பிரிவதும், வெறுப்பதும் காதலுக்கு விரோதமாகுமா? விரோதமானால் அப்படிப்பட்ட காதல் பயன்படுமா? விரோதமில்லையானால் ஒருவர் ஞானியாகி, துறவியாகிவிட்டதால் மற்றவரை விட்டுப் பிரிந்துகொள்ளுவது காதலுக்கு விரோதமாகுமா? என்பதும் கவனித்தால் காதலின் யோக்கியதை விளங்காமல் போகாது. பொதுவாக மனித ஜீவன் ஒன்றைப் பார்த்து நினைத்து ஆசைப்படுவதும், ஒன்றினிடம்—பலவற்றினிடம் அன்பு வைப்பதும் நேசம் காட்டுவதும் இயற்கையேயாகும்.

அதுபோலவே, மனிதனுக்குத் தானாகவே எதிலும் விரக்தி வருவதும், வெறுப்புக் கொள்வதும் பிரிவதும் இயற்கையேயாகும். பலஹீனமாய் இருக்கும்போது ஏமாந்து விடுவதும், உறுதி ஏற்பட்டபின்பு தவறுதலைத் திருத்திக்கொள்ள முயற்சிப்பதும், அனுபவ ஞானமில்லாதபோது கட்டுப்பட்டுவிடுவதும் அனுபவம் ஏற்பட்ட பிறகு விடுதலை செய்து கொள்ளுவதும் இயற்கையேயல்லவா?

உதாரணமாக, ஒரு வாலிபன் ஏமாந்து ஒரு தாசியிடம் காதல்கொண்டு சொத்துக்களையெல்லாம் கொடுத்துவிடுவதைப் பார்க்கின்றோம். அந்த வாலிபனுக்கு அந்தத் தாசியிடம் ஏற்பட்டது காதல் என்பதா? அல்லது காமம் என்பதா? அதே தாசி சில சமயத்தில் தனக்குத் தாசித்தொழில் பிடிக்காமல் இந்த வாலிபனிடமே நிரந்தரமாயிருந்து காலத்தைக் கழிக்கலாம் என்று கருதிவிடுவதைப் பார்க்கின்றோம். ஆகவே, தாசி கொண்டது காதலா அல்லது வாழ்க்கைக்குச் சவுகரியமான ஒரு வழியா? இதை வாலிபன் அறியாமல் நேசத்தை வளர்த்துக்கொண்டே வந்தால் இது ஒத்த காதலாகிவிடுமா? இப்படியெல்லாம் பார்த்தால், காதல் என்பது ஆசை, காமம், நேசம், மோகம், நட்பு என்பவைகளை விடச் சிறிதுகூடச் சிறந்தது அல்லவென்பது விளங்கும்.

அதற்கு ஏதேதோ கற்பனைகளைக் கற்பித்து ஆண்–பெண்களுக்குள் புகுத்திவிட்டதால், ஆண்–பெண்களும் தாங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி—எப்படி பக்திமான் என்றால் இப்படி எல்லாம் இருப்பான் என்று சொல்லப்பட்டதால் அனேகர் தங்களை பக்திமான்கள் என்று பிறர் சொல்ல வேண்டுமென்று கருதி பூச்சுப் பூசுவதும், பட்டை நாமம் போடுவதும், சதா கோவிலுக்குப் போவதும், பாட்டுகள் பாடி அழுவதும், வாயில் 'சிவ, சிவ' என்று சொல்லிக்கொண்டிருப்பதான காரியங்களைச் செய்தும் தங்களைப் பக்திமான்களாகக் காட்டிக்கொள்கின்றார்களோ—அதுபோலும்; எப்படிக் குழந்தைகள் தூங்குவதுபோல் வேஷம் போட்டுக் கண்களை

மூடிக்கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக 'தூங்கினால் கால் ஆடுமே' என்று சொன்னால், அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ—அது போலும்; எப்படிப் பெண்கள் இப்படி, இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பதுபோல் நடப்பதாய்க் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்றார்களோ—அதுபோலும்; உண்மையான காதலர்களானால் இப்படியல்லவா இருப்பார்கள் என்று சொல்லிவிட்டால், அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்துவிட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர்களும் தங்கள் காதலைக் காட்டிக்கொள்ளுகின்றார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத வேஷத்தை எல்லாம் போடுகிறார்கள்.

ஆகவே, ஆசையைவிட, அன்பைவிட, நட்பைவிடக் காதல் என்பதாக வேறு ஒன்றும் இல்லை என்றும் அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள்கூட மக்களுக்கு அஃறிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்கள் இடத்திலும் ஏற்படுவது போலத்தானே ஒழிய வேறில்லை என்றும்; அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்வதிலிருந்து, நடவடிக்கையிலிருந்து, யோக்யதையிலிருந்து, மனப்பான்மையிலிருந்து தேவையிலிருந்து, ஆசையிலிருந்து உண்டாவதென்றும்; அவ்வறிவும், நடவடிக்கையும், யோக்கியதையும், மனப்பான்மையும், தேவையும், ஆசையும் மாறக்கூடியவைதான் என்றும் கருதுகிறோம்.

ஆகவே, இதிலிருந்து நாம் யாரிடமும் அன்பும் ஆசையும் நட்பும் பொருளாகக் கொண்ட காதல் கூடாதென்றோ அப்படிப்பட்டது இல்லை என்றோ சொல்லவரவில்லை.

ஆனால், அன்பும் ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமே ஒழிய, மனத்திற்குத் திருப்தியும் இன்பமும் இல்லாமல் அன்பும் ஆசையும் நட்பும் இருப்பதாய்க் காட்டுவதற்காக அல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இதை எழுதுகின்றோம். ஏனென்றால், மற்றவர்கள் திருப்தியிலும் சந்தோஷத்திலும் நுழைந்து கொண்டு, தொட்டதற்கெல்லாம் 'இது காதலல்ல', 'இது காதலுக்கு விரோதம்', 'இது காம இச்சை', 'இது மிருக இச்சை', 'இது விபசாரம்' என்பது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளை—ஒருவிதப் பொறுப்பும் இல்லாதவர்கள் எல்லாம் கூறுவதால் இதை எழுதினோம்.

['குடி அரசு'—தலையங்கம்—18-1-1931]

2. திருமணமும் ஒப்பந்தமும்

தலைவரவர்களே! தோழர்களே!

விவாகம் அல்லது திருமணம் என்று சொல்லப்படுவதெல்லாம் ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு, அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப் பொறுப்பில் நடத்துவதற்குப் பலர் அறியச்செய்யச் செய்துகொள்ளும் காரியமேயாகும். இதைச் சிலர்—அதாவது பழைய முறைக்காரர் சடங்கு என்கிறார்கள்; புதிய முறைக்காரர் ஒப்பந்தம் என்கிறார்கள். சடங்கு என்று சொல்லுகின்றவர்கள் உண்மையிலேயே சடங்காகவே கருதிக் காரியங்களில் இலட்சியமில்லாமல் நடத்துகிறார்கள். அதாவது, கலியாணத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் எவ்வித உரிமையும் இல்லை. அது போலவே சடங்கிலும் கலியாணக்காரருக்கும் சடங்குக்கும் யாதொரு உரிமையும் இல்லை. எப்படி என்றால், தம்பதிகளின் பெற்றோர்களோ அல்லது இந்தப் பெற்றோர்களுக்கு வேண்டியவர்களோ பார்த்து, இன்ன பெண்ணுக்கு இன்ன மாப்பிள்ளை என்று தீர்மானித்துவிட்டால், அதை மணமக்கள் ஆட்சேபிக்கமுடியாது. அதுமாத்திரமல்லாமல் இன்னொரு அநியாயம் என்னவென்றால், திருமணம் நடக்கும் நிமிடம்வரையில்

மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்திருக்கமாட்டார்; பெண் மாப்பிள்ளையைப் பார்த்திருக்க மாட்டாள். அங்க இலட்சணம், அறிவு இலட்சணம், யோக்கிய இலட்சணம் ஆகிய எதையும் பார்க்காமலும், தெரியாமலும்தான் திருமணம் தீர்மானிக்கப்படுகிறது. இவர்கள் இருவர் விஷயத்தில் ஏதாவது ஒன்று கவனிக்கப்படுகிறதா என்றால், இருவர் பிறந்த நேரம் என்று சொல்லப்படும்—அது சரியான நேரமோ தப்பான நேரமோ என்பதைப்பற்றிக் கவலையில்லாமல்—ஒரு பொறுப்பற்ற நபரால் இருவருக்கும் பொருத்தம் உண்டா இல்லையா என்பது முடிவுசெய்யப்பட்டுவிடும். சில சமயங்களில் பிறந்த கால நேரங்கள்கூட கவனிக்கப்படாமல், பெண்ணின் பெயரின் முதல் எழுத்தையும் மாப்பிள்ளையின் பெயரின் முதல் எழுத்தையும் ஆதாரமாக வைத்துப் பொருத்தம் முடிவுசெய்யப்பட்டுவிடும். மற்றும் சில சமயங்களில் அதுகூட இல்லாமல், கோவிலில் பூ வைத்துக் கேட்பதுமூலமோ, கருடன் பறப்பது மூலமோ, பல்லி கத்துவதின் மூலமோ, இருவர் பெயர் எழுதப்பட்ட சீட்டுகளின் மீது ஈ உட்காருவதின்மூலமோ, அல்லது கோவில்களில் ஏதாவது ஒருவன் சாமி ஆடி வாக்குச்சொல்வதின் மூலமோ கலியாணம் தீர்மானிக்கப்பட்டுவிடும். எவ்வளவு காட்டுமிராண்டித்தனமான வாழ்வில் நமது மக்கள் இருந்துவருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

இதுபோலவே, சடங்குகள் விஷயத்திலும் இந்தச் சடங்குகள் எதற்காக என்றாவது, இந்தச் சடங்கின் அர்த்தம் என்ன என்றாவது, இச் சடங்குகளுக்கு அவசியமோ ஆதாரமோ, ஆரம்ப காலமோ, பொருத்தமோ என்ன என்றாவது மணமக்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, மற்றும் உறவினர்களுக்கோ யாருக்குமே தெரியாது.

ஆனால், சுயமரியாதைத் திருமணம் என்பது அப்படி அல்ல. மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து, தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அர்த்தமும் பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு, பழக்க வழக்கம் என்பதற்காக மாத்திரம் ஒன்றையும் செய்யக்கூடாது என்பதுமேயாகும்.

இவை மாத்திரமல்லாமல், திருமணம் சம்பந்தமாக செலவு, மெனக்கெடு, வீண் கஷ்ட நஷ்டம் ஆகியவைகளைப்பற்றிப் பழைய முறைக் கலியாணங்களில் இலட்சியமே செய்யப் படுவதில்லை. ஆடம்பரத்துக்காகவே வீண் செலவுகளைத் தகுதிக்கு அதிகமாகக் கடன் வாங்கியாவது செய்யப்பட்டு வருகிறது. திருமணத்திற்காக மூன்று நாள், நான்கு நாள், ஏழு நாள் கூட மெனக்கெட்டு வெளியூர் உறவினர்களையும் தருவித்து—மெனக்கெடச் செய்து அய்ந்து நாள் விருந்து, பத்து நாள் விருந்து என்று சாப்பாட்டுச் செலவும்; பந்தல், மேளம், சங்கீதம், ஊர்வலம், வாணம் என்பதாக வீண் காரியங்களும்—குடிகாரர்கள் குடித்த போதையில் தாறுமாறாய் நடப்பதுபோல்—கலியாண போதையில் சிக்கி பணங்கள், நேரங்கள், கஷ்டங்கள் ஆகியவைகள் தாறுமாறாகச் செலவாக்கப்பட்டுவருகின்றன. இரண்டு மூன்று நாட்களுக்காக—சிலர் பார்த்துப் புகழுவதற்காக என்று செய்யப்படும் இப்படிப்பட்ட தாறுமாறான ஆடம்பரச் செலவுகள் கலியாண தம்பதிகள் தலையிலோ அல்லது குடும்பத்தார் தலையிலோ விழுந்து, கலியாணக் கடன்களால் வெகு நாளைக்கு அவதிப்பட வேண்டியிருப்பதால்—சில குடும்பங்கள் கலியாணச் செலவாலேயே 'பாப்பர்' ஆகி, மீளாக் கடன்காரர்களாகக்கூட ஆகவேண்டியதாகிவிடுகின்றன. இப்படிப்பட்ட கொடுமைகளும் முட்டாள்தனமான காரியங்களும் கூடாது என்பதுதான் சுயமரியாதைக் கலியாணம் என்பதின் முக்கிய அம்சமாகும்.

மற்றும், கலியாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் தம்பதிகளைவிட மூன்றாவதான வர்களுக்கே சகல சுதந்திரமும் இருந்துவருகிறது. செய்துவைப்பதற்கு ஒரு புரோகிதன் வேண்டும். இன்னின்ன மாதிரி செய் என்பதற்குப் பெற்றோர்கள், உறவினர்கள் வேண்டும். இவர்கள் சொன்னபடிஎல்லாம் தம்பதிகள் நடக்கவேண்டும்.

சுயமரியாதைக் கலியாணம் என்பதில் இந்த முறையில்லை. மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களை ஒருவருக்கொருவர் சொல்லி சம்மதித்ததற்கு அறிகுறியாக மாலையிட்டுக் கொள்வது என்பதுடன் முடிவு பெற்றுவிடுகின்றது.

மற்றும் இவற்றையெல்லாம்விட ஒரு முக்கிய விவரம் என்ன என்றால், கலியாண விஷயத்தில் மணமக்களின் வாழ்க்கைச் சம்பந்தம் முக்கியமானது—இலட்சியமானது அல்லவென்றும், அதில் ஏதோ ஒரு தெய்வீக சம்பந்தம் இருக்கிறதென்றும், அதுவேதான் திருமணத்தின் இலட்சியமென்றும், ஆதலால் அப் பெண்ணும் மாப்பிள்ளையும் அத் தெய்வீக சம்பந்தத்திற்காக ஒருவர் குற்றங்களையும் அநீதிகளையும் மற்றவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதிலும் சிறப்பாக மாப்பிள்ளை செய்யும் கொடுமையையும் அநீதியையும் பெண் பொறுத்துக்கொண்டு வாழ்நாள் முழுதும் மாப்பிள்ளைக்குப் பெண் அடிமையாய், பக்தியாய் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், சுயமரியாதைக் கலியாணம் என்பது அப்படியில்லை. திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்த விஷயம் பெண்ணையும் ஆணையும் மாத்திரமே பொறுத்ததே ஒழிய வேறு எவ்விதத் தெய்வீகத்திற்கோ அல்லது எவ்விதக் கட்டுப்பாட்டிற்கோ சம்பந்தப் பட்டதில்லையென்பதுமே ஆகும். மேலும், பழைய முறைக் கலியாணமானது ஆணுக்கும் பெண்ணுக்கும் கலியாணம் ஏற்பட்ட பிறகுதான் ஒருவர்மீது ஒருவர் ஆசை கொள்வதோ, காதல் கொள்வதோ ஏற்படவேண்டுமேயொழிய, அதற்கு முன்னால் ஒருவர்மீது ஒருவருக்கு ஆசையும் காதலும் ஏற்படுதல் கூடாதென்றும், குற்றமென்றும் அது விபச்சாரத்திற்குச் சமமானதென்றும் கூறப்படுகின்றது.

சுயமரியாதைக் கலியாணத்திலோ, கலியாணத்துக்கு முன்பாகவே ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் ஆசை ஏற்பட்டு, அதன் பின்னரே கலியாணம் நடக்க வேண்டும் என்றும், மற்றபடி கலியாணம் ஆனபிறகு ஆகிவிட்டதே என்கின்ற காரணத்திற்காக அங்க ஈனராய் இருந்தாலும், வியாதியஸ்தராக இருந்தாலும், கொடியவராய் இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஆசை கொண்டுதான் ஆகவேண்டும் என்றும் சொல்வதைக் கண்டிப்பாய் ஒப்புக்கொள்வதில்லை.

மற்றும், பழையமுறைக் கலியாணங்கள் ஒரு தடவை கலியாணம் ஆகிவிட்டால், எக் காரணத்தைக்கொண்டும் மறுபடியும் பிரியக்கூடாதென்றும், இப்படிக் கூறாவிட்டாலும் ஆணுக்குப் பிரித்துவிடவோ பிரிந்துகொள்ளவோ உரிமையுண்டு (ஆனால் பெண்ணுக்குத் தான் உரிமையில்லை) என்றும், மனைவி இறந்துபோனால் கணவன் மறுவிவாகம் செய்து கொள்ளலாம் என்றும் மனைவி உயிருடன் இருக்கும்போதே கணவன் மாத்திரம் பல பெண்களைக் கலியாணம் செய்துகொள்ளலாம் என்றும்—பெண்கள் மாத்திரம் எந்தக் காரணம் கொண்டும் புருஷன் எவ்வளவு கொடியவனாகவும், மனிதத்தன்மை அற்றவனாகவும், எந்த விஷயத்துக்கும் பொருத்தமில்லாமல் கொடுமையும் சித்திரவதை போன்ற கஷ்டத்தையும் கொடுப்பவனானாலும் புருஷனை விட்டுப் பிரியக்கூடாதென்றும் வேறு கலியாணம் செய்துகொள்ளக் கூடாதென்றும், புருஷன் தான்பக்குவமாவதற்கு முன் தனது அய்ந்தாவது பத்தாவது வயதிலேயே இறந்துபோனாலும் வேறு புருஷனைக் கலியாணம் செய்துகொள்ளாமல், விதவை என்னும் பெயருடன் உலக சுகபோகங்கள் எல்லாவற்றையும் வெறுத்து, மக்கள் கண்ணுக்கும் மனத்துக்கும் வெறுப்புத் தோன்றும் தன்மையாய் வாழ வேண்டும் என்றும் சொல்கின்றது.

சுயமரியாதைக் கலியாணத்தில் இவ்வித அக்கிரமும் அயோக்கியத்தனமும் அறியாமையும் கொடுமையும் மூர்க்கத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் இல்லை. வாழ்க்கைக்கும் மனத்துக்கும் ஏற்ற தம்பதிகளானால் கூடி வாழலாம். அவைகளுக்கு

ஒவ்வாத—வாழ்க்கையே நரகம்போன்றதான—தம்பதிகளானால் பிரிந்து மனத்திற்கு ஏற்ற வர்களை மணந்து இன்ப சுகவாழ்வு வாழ உரிமை உண்டு என்பதோடு, புருஷனோ மனைவியோ யார் இறந்துபோனாலும் மறுவிவாகம் செய்துகொள்ளலாம் என்றும் கூறுகிறது.

பழைய முறைக் கலியாணப்படி பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை; வாழ்க்கையில் சரிபங்கு ஆதிக்க உரிமை இல்லை. சுயமரியாதைக் கலியாணத்தில் சொத்திலும் வாழ்க்கை ஆதிக்கத்திலும் பெண்ணுக்கு ஆணைப்போலவே சரிபங்கு உரிமை இருக்கிறது என்பதுடன், இவைகளே கலியாண ஒப்பந்தத்தின் சரத்துக்களாகும். அனேகமாய்க் கலியாணத் தத்துவம் பழையதும் புதியதும் ஒரே மாதிரிதான். எப்படியெனின், இங்கு ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் கலியாணம் செய்துகொண்டார்களே ஒழிய, ஆணும் ஆணும் சேர்ந்தோ பெண்ணும் பெண்ணும் சேர்ந்தோ கலியாணம் செய்து கொள்ளவில்லை.

ஆதலால், இவ்விதத் திருமணத்தைப்பற்றிக் கவலையோ, ஆத்திரமோ படவேண்டிய தில்லை. பெண்மக்களில் பலருக்கு இவ் விஷயத்தில் மன சஞ்சலம் இருந்தாலும் இருக்கலாம். ஆண்களில் படித்தவர்கள், வித்துவான்கள் என்று சொல்லப்படுபவர்களிலேயே சில அழுக்கு மூட்டைகள் இருந்துகொண்டு விஷமப் பிரச்சாரம் செய்துவரும்போது, பெண்களில் இது விஷயமாய் அதிருப்தி உள்ளவர்கள் இருப்பது அதிசயமல்ல. ஏனெனில், பெண்களை நாம் எப்படி வைத்திருக்கிறோம்? அவர்களில் 100க்கு 99 பேர்களுக்கு அடுப்பாங்கரையையும், படுக்கை வீட்டையும் மாத்திரமே காட்டி—நகை மாட்டுகின்ற ஸ்டாண்டுபோல், நகைகளை மாட்டி—இது என் பெண்சாதி; இது உன் பெண்சாதி என்று கண்காட்சி காட்டுகின்றோமே ஒழிய வேறு அவர்களுக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறோம்? வேண்டுமானால் கண்ணை மூடிக்கொண்டு, பல்லைக் கடித்துக்கொண்டு, கணக்கு வழக்குப் பார்க்காமல் பிள்ளைகளைப் பெறுவார்கள். இதற்குமட்டும் ஒரு உபாத்தியாயரோ அறிவோ வேண்டிய தில்லை. எவ்வளவுக் கெவ்வளவு மடமை உண்டோ அவ்வளவுக் கவ்வளவு பிள்ளைகள் பிறந்துவிடும். எவ்வளவுக் கெவ்வளவு அடிமைத் தன்மையில் மோகம் உண்டோ அவ்வளவுக் கவ்வளவு நகைகளை மாட்டிக் கொள்வார்கள். தங்களை விகாரமாய்ச் சிங்காரித்துக் கொள்வார்கள். இவைகளையும் இவை போன்றவைகளையும்தான் நாம் அவர்களுக்குத் தாய் தந்தையர்கள் என்ற முறையில் கற்றுக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட பெண்களிடம் நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? இன்றையப் பெண் எவ்வளவோ கல்வியும் செல்வமும் நாகரிக அறிவும் கவுரவமும் உள்ள சுற்றத்தாருக்குள்ளும், சகவாசத் துக்குள்ளும் இருந்துவந்தும்—நிரம்பவும் கர்நாடக முறையில் பட்டிக்காட்டுக் கிராமவாசிப் பெண்களைவிட—இளப்பமாய் நடந்துகொள்வதைப் பார்த்தால், நமக்கு எவ்வளவு சங்கட மாய் இருக்கிறது! இப்படிப்பட்ட பெண்கள் வயிற்றில் பிள்ளைகள் பிறந்து இவர்களால் வளர்க்கப்பட்டால், அவற்றிற்கு மனிதத் தன்மை எப்படி ஏற்படும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்! நமது மக்களுக்கு ஏன் மனிதத் தன்மை இல்லை, சுயமரியாதை யில்லை என்றால் அவற்றிற்கெல்லாம் முக்கியத்திலும் முக்கியமான காரணம்—இப்படிப்பட்ட தாய்மார்களால் பெறப்பட்டு வளர்க்கப்பட்டதேயாகும்.

கலியாணமானவுடன் பெற்றோர்கள் பிள்ளைகளை எதிர்பார்ப்பார்கள். சுற்றத்தார் எத்தனை ஆயிற்றென்று கணக்குக் கூட்டி வருவார்கள். தம்பதிகள் பிள்ளைகளைப் பெறு வதினால் படும் கஷ்டம், காயலா, அசவுகரியம், வாலிபம் பாழாவது, தரித்திரம், துன்பம், வியாகூலம், விசாரம், மானம் கெட நேருவது, சுயமரியாதை இழந்தாவது வாழ ஆசைப் படுவது ஆகிய காரியங்களைப்பற்றி எவரும் சிந்திக்கமாட்டார்கள். யாதொரு பொறுப்பும் அறிவும் அற்று, இன்று மணமக்களைப் பார்த்து ‘பதினாறு பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்’ என்று சொல்கிறவர்கள்—நாளைக்கு ஒரு குழந்தைக்கு அரைச்சங்கு பால் வார்க்கக்கூடச் சம்மதிக்கமாட்டார்கள். ஏதாவது கஷ்டம் வந்தால்கூட, பக்கத்து வீட்டில்

குடியிருந்துகொண்டு கணக்குக் கூட்டிப் பார்த்து அசூயையும் வெறுப்பும் அடைவார்களே தவிர, சிறிது பரிதாபம்கூடக் காட்டமாட்டார்கள். ஆதலால், மணமக்கள் குழந்தைகளைப் பெறும் விஷயத்தில் சிறிது ஜாக்கிரதையாகவும் அறிவுடைமையாகவும் இருக்கவேண்டும்.

[சென்னை சவுகார்பேட்டையில், 8-6-1934-ல் சொற்பொழிவு—'புரட்சி' 17-6-1934]

40 வருஷங்களுக்கு முன்னால் நடந்த எனது திருமணமும் என் தகப்பனாருக்கு இஷ்டமில்லாமல் நடந்ததாகும். எனக்குப் பிடித்த மனைவியை நான் மணக்க என் தந்தைக்கு இஷ்டமில்லாததால், அவர் எனது திருமணத்தன்று சாப்பாட்டு இடத்திலேயே இருந்துகொண்டு தனது வெறுப்பைக் காட்டிக்கொண்டு இருந்தாரே ஒழிய மணக் கொட்டகைக்கு வரவே இல்லை. மற்றபடி செலவு விஷயத்தில் அவர் எதுவும் குறுக்கிடவே இல்லை. அய்ரோப்பியர் வந்தபோது மாத்திரம் வரவேற்க வந்ததைத் தவிர மற்றபடி எந்தக் காரியத்தையும் கவனிக்கவில்லை. பிறகு என் மனைவி விஷயத்தில் மிக பட்சமாக இருந்தார். ஒவ்வொன்றுக்கும் மனைவிக்காகச் சிபாரிசுக்கு வந்து என்னைக் கண்டித்தார்.

(நீடாமங்கலத்தில், 5-5-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 12-5-1935]

3. சுயமரியாதை—புராண மரியாதை

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று நடக்கும் இத் திருமணத்திற்குச் சுயமரியாதைத் திருமண மென்றும் சீர் திருத்தத் திருமணமென்றும் சொல்லப்படுகிறது. சுயமரியாதைத் திருமணம் என்றால் சிலருக்குப் பிடித்தமில்லாமல் இருக்கலாம் என்று சீர்திருத்தத் திருமணமெனச் சொல்லப் படுகிறது.

எப்படி இருந்தாலும் ஒன்றுதான். சீர்திருத்தம் என்றால் என்ன? இருக்கின்ற நிலைமையிலிருந்து மாற்றம் செய்வதையே சீர்திருத்தம் என்றும், நாகரிகமென்றும் சொல்லு கிறோம். என்றாலும், இந்தச் சீர்திருத்தமும் நாகரிகமும் வெறும் மாறுதலுக்காகவே ஏற்படு வதும் உண்டு. மற்றும் பல விஷயங்களில் சவுகரியத்தையும் நன்மையையும் அவசியத்தை யும் பகுத்தறிவையும் உத்தேசித்து மாற்றப்படுவதும் உண்டு. மாறுதலும் சீர்திருத்தமும் மக்களுக்கும் உலகத்துக்கும் புதிதல்ல. உலகம் தோன்றிய நாள்முதல் ஒவ்வொரு துறை யிலும் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கிறது என்பதைச் சரித்திரங்களையும், பழைய சின்னங்களையும் பார்த்து வந்தால் நன்றாய் விளங்கும். அதுபோலவே, மனித சமூகமும் சகல துறைகளிலும் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கின்றது என்பதும், வாழ்க் கையில் எவ்வளவு மாறுதல் அடைந்து வந்திருக்கின்றது என்பதும் நம் குறைந்த கால ஆயுளின் அனுபவத்தைப் பார்த்தாலே தெரியவரும்.

மாறுதல் என்பது இயற்கையேயாகும். மாறுதல் இல்லாமல் எந்த நாடும், எந்த சமூகமும் எந்த வஸ்துவும் இருக்கமுடியாது.

இந்தக் கலியாணம் சுயமரியாதைக் கலியாணம் என்றும், இதில் பழக்க வழக்கங்கள் சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் ஒன்றும் கவனிக்கப்படுவதில்லை என்றும் இதைப் புராண மரியாதைக்காரர்களும், வைதிகர்களும் குற்றம் சொல்லலாம்.

சாதாரணமாக இந் நாட்டில் நடைபெறும் வைதிகக் கலியாணம், புராண முறைப்படி நடக்கும் கலியாணம் ஆகியவைகளைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். வைதிகப் பிரசாரத் துக்கும் வைதிகத்துக்காகவே உயிர் வாழ்வதாய் சொல்லிக்கொள்ளும் பார்ப்பன சமூகத் தையே எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய கலியாணங்களில் இப்போது எவ்வளவு சீர்திருத்தம், எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் கவனித்துப்

பாருங்கள். காலை 7 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தூரத்திலுள்ள கோயில்களுக்குப் போய் அங்குக் கலியாணம் செய்துகொண்டு, பகல் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு மாலை 6 மணிக்குப் புறப்பட்டு வீடுவந்து சேர்ந்துவிடுகிறார்கள். 3 நாள், 5 நாள், 7 நாள் அவ்பாசனங்கள், சடங்குகள் என்பவைகள் எல்லாம் எங்கே போய்விட்டன? பெரும் செலவுகள், ஆடம்பரங்கள், பல வகைப்பட்ட விருந்துகள் எல்லாம் எங்கே போய்விட்டன?

மற்றும், குருட்டு நம்பிக்கையும் மூட பக்தியும் பிறந்த ஊராகிய சென்னை முதலிய இடங்களில் நாயுடு, முதலியார், செட்டியார் என்று சொல்லப்படும் சாதிகளும் வைதீக சிகாமணிகளும் சடங்குகளினாலும் வேஷங்களினாலும் தங்களைப் பெரிய சாதியார் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுமான மக்கள்—இன்று தங்கள் தங்கள் வீட்டிலேயே ஒரே நாளில்—ஒரு பகலில்—ஒரு விருந்தில்—கலியாணங்களை முடித்துவிடுகின்றார்கள். இவைகள் எல்லாம் மாறுதல் அல்லவா, சீர்திருத்தம் அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். மனிதனில் எவனும் மாறுதலுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது.

காசிக்கும் இராமேஸ்வரத்துக்கும் நடந்துபோனால்தான் புண்ணியம் என்று நம்பின மனிதன்—இன்று காளை வண்டியில் போய், குதிரை வண்டியில் போய்—இரயிலில் போய், மோட்டாரில் போய், ஆகாயக் கப்பலில் மணிக்கு 300 மைல் போகக்கூடிய நிலைமையை அடைந்துவிட்டான். இவனிடம் புராணத்தையும் வைதிகத்தையும் பேசினால் செல்லுமா என்று யோசித்துப் பாருங்கள். அதுபோலவே, சக்கிமுக்கிக் கல்லின்மூலம் விளக்கு வெளிச்சத்தை உண்டாக்கிக்கொண்டிருந்த மனிதன்—விளக்காகி, பந்தமாகி, பவர் லைட்டாகி, கியாஸ் லைட்டாகி, இன்று எலெக்ட்ரிக் லைட்—அதாவது ஒரு பொத்தானை அமுக்கினால் 'இலட்சம் விளக்கின் வெளிச்சம்' போன்ற பிரகாசத்தைக் கண்டுபிடித்து அனுபவித்து வருகிறான். இந்தக் காரியங்களையெல்லாம் புராணமும் வைதீகமும் தடுத்துவிடக்கூடுமா என்று பாருங்கள்.

அதுபோலவே, இந்தத் திருமணம் என்னும் விஷயத்திலும் முற்போக்கு ஏற்பட்டுத்தான் தீரும். அதை நீங்கள் தடுத்துவிட முடியாது. திருமணத்துக்கு 1000 சாஸ்திரமும் புராணமும் இருந்தாலும் அதை இனி மக்கள் நம்பிக்கொண்டும், ஏற்றுக்கொண்டும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. கால தேச வர்த்தமானத்திற்குத் தகுந்தபடி மாறிக்கொண்டுதான் வரும். அனேக தேசங்களில் கலியாணம் என்கிற பேச்சே இப்போது அமுலில் இல்லை. ஆணும் பெண்ணும் ஒன்றாகக் கூடித்தான் வாழ வேண்டும் அல்லது வாழ்க்கை நடத்த வேண்டும் என்கின்ற முறையும் இல்லை. இஷ்டப்பட்டால் இரண்டு பேர் கூட்டு வியாபாரம் செய்வதுபோல் சேர்ந்து ஒரு குடும்பத்தை நடத்துகிறார்கள். இஷ்டம் இல்லாவிட்டால் தனித்தனியாகக் குடும்பத்தை நடத்துகிறார்கள். மேலும் குடும்பம் என்கின்ற தொல்லையே இல்லாமல் சுதந்திர மக்களாகவே இருக்கிறார்கள்.

ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து அனுபவிக்கும் இன்பத்தையும், உணர்ச்சி பரிகாரத்தையும் இரு சிநேகிதர்கள் அனுபவிக்கும் சிநேக இன்பத்தைப் போலவும், இயற்கைக் கூட்டைப் போலவும் கருதி வாழுகின்றார்கள். இவைகள் எல்லாம் மனிதன் அனுபவத்தினாலும், நாளுக்கு நாள் மனிதனுடைய கஷ்டமும் கவலையும் தொல்லையும் குறைக்கப்பட்டு வரவேண்டும் என்கின்ற முயற்சியினாலும், தத்துவ விசாரத்தினாலும் ஏற்படும் காரியங்களேயாகும்.

ஆதலால், சுயமரியாதை என்கின்ற வார்த்தையைக் கண்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை. மனிதனுடைய பகுத்தறிவுக்கு மரியாதை கொடுப்பதுதான் சுயமரியாதையின் முக்கிய தத்துவம் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் பகுத்தறிவினாலும் உங்கள் அனுபவ உண்மையாலும் உங்களுக்கு ஒன்று தோன்ற—உலகப் பழக்க வழக்கத்துக்கு—சாஸ்திரத்துக்கு—மதக் கட்டுப்பாட்டுக்கு என்கின்ற நிர்ப்பந்தத்தின்மீது, அதற்கு

மாறாய் நீங்கள் நடக்க வேண்டிய அடிமைத்தன்மை ஏற்பட்டால், அதைத்தான் சுயமரியாதைக்கு விரோதம் என்று சொல்லுகிறோம். அதைத்தான் அடிமைத்தனம், சுதந்திர மற்ற தனம் என்று சொல்லுகின்றோம்.

ஆதலால், எந்தக் காரியத்தையும் உங்கள் பகுத்தறிவையும் அனுபவ பலனையும் அனுசரித்துப் பார்த்து நடக்க வேண்டும் என்கின்ற முறையிலேதான், இந்த சுயமரியாதைக் கலியாணம் என்பதும் ஆங்காங்கு செய்யப்பட்டும் பிரச்சாரம் செய்யப்பட்டும் வருகின்றதே ஒழிய வெறும் மாறுதலுக்காக என்று செய்யப்படவில்லை.

உங்களுடைய புராண மரியாதைக் கலியாணத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். புராண மரியாதைக் கலியாணத்தின் முதல் தத்துவமே பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள்—சுதந்திரமற்றவர்கள்—மனிதத் தன்மைக்கு அருகதையற்றவர்கள் என்பவைகளை நிலை நிறுத்துவதற்காகச் செய்யப்படும் சடங்கு அல்லது காரியம் என்பது எனது அபிப்பிராயம். உதாரணமாக 'கன்னிகாதானம்', 'பெண் கொடுத்தல்', 'பெண் வாங்குதல்' 'தாலி கட்டுதல்' முதலிய வார்த்தைகளாலும் புருஷனுக்கு 'கொண்டவன்', 'கொண்டான்' என்று சொல்லப்படுகின்ற வார்த்தைகளாலும் பெண் அடிமையாகப் பாவிக்கப்படுகிறாள் என்பதை உணரலாம்.

இச் சுயமரியாதைக் கலியாணம் என்பதன் முக்கிய தத்துவம்—கூட்டு வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ இல்லை என்பதும் சகல துறைகளிலும் சம சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பதுமேயாகும்.

மற்றும் வைதிக, புராண முறைக் கலியாணத்தில் மதம், சாதி, வகுப்பு, குலம், கோத்திரம் முதலியவைகளைக் கவனிப்பதே முக்கியமாய் இருப்பதால், ஆண்-பெண் பொருத்தம் சரியாய் ஏற்படுவதில்லை. 'குலத்தில் ஒரு குரங்கைக் கொள்ளு'; 'பாத்திர மறிந்து பிச்சை இடு'; 'கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்னும் பழமொழிகளைப் பார்த்தாலே குலம், கோத்திரம், சாதி, வகுப்பு முதலியவைகளுக்குள்ள நிர்ப்பந்தங்கள் நன்றாய்த் தெரியும். இதன் பயனாய் அனேக கலியாணங்களில் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை இல்லாமலும், மாப்பிள்ளைக்கு ஏற்ற பெண் இல்லாமலும்—நாயும் பூனையும் போல்—ஜோடிகள் சேர்ந்துவிடுகின்றன.

சுயமரியாதைக் கலியாணத்தில் சாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பவைகள் கவனிக்கப்படாமல் மணமக்களுடைய யோக்கியதாம்சங்களையே கவனித்துப் பார்க்கப் படுகின்றது.

வைதிகக் கலியாணத்தில் வயதுக் கிரமங்களில் தக்க பருவங்களை முக்கியமாய்க் கவனிப்பதில்லை. தக்க பருவம் வருவதற்கு முன்பு பெண்களுக்குக் கலியாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகின்றது. உதாரணமாக '10 வயது வந்தால் ஒரு பறையனுக்குப் பிடித்துக் கொடு' என்று சொல்லும் பழமொழியைப் பார்த்தால் விளங்கும். 50, 60 வயதான ஆண் கிழத்துக்கு 10, 12 வயதுப் பெண் குழந்தையைப் பிடித்துத் தாலி கட்டி விடுகிறார்கள். கலியாண விஷயத்தில் ஆண்களுக்குக் கிழம் என்பதே இல்லையாம். இந்த விஷயத்திலும் சுயமரியாதைக் கலியாணம் தக்க சரிசமமான வயதுப் பொருத்தம் பார்த்தே செய்யப்படும்.

மற்றபடி, புராணக் கலியாணங்களில் நாள் பார்ப்பது, கோள் பார்ப்பது, சடங்குகள் செய்வது, அதிகச் செலவுகள் செய்வது முதலிய காரியங்களால் கலியாணக்காரர்களுக்குத் தாங்கமுடியாததும், விலக்க முடியாததுமான பல அசவுகரியங்கள், செலவுகள் ஏற்படுகின்றன.

உதாரணமாக, புரோகிதன் அதிகாலையில் 4½ மணி, 5 மணி, 6 மணிக்கு 'முகூர்த்தம்' வைத்துக் கொடுத்துவிடுகிறான். இதனால் இரவெல்லாம் தூக்கமில்லாமல் கலியாணத்துக்கு வந்த ஜனங்கள் அவஸ்தைப் படுகிறார்கள்; பல் விளக்காமல், கால், கை கழுவாமல், வெளிக்கும் போகாமல் நித்திய கடன்களைக் காலா காலத்தில் கழிக்கமுடியாமல் மக்கள் அவஸ்தைப்படுவதும், மற்றும் பழக்க வழக்கமென்றும் சடங்கு, ஆடம்பரம் முதலியவைகளால் கலியாணக்காரர்களுக்குச் சகிக்க முடியாத தொல்லைகளும் தாங்க முடியாத கடன்களும் ஏற்பட்டு அக் குடும்பங்கள் ஒன்று, இரண்டு வருஷங்களுக்கும்—சில சமயங்களில் வாழ்நாள் முழுவதும்—கடனில் மூழ்கி வேதனைப்படுவதுமாக இருந்துவருகின்றது.

சுயமரியாதைக் கலியாணத்தில் எல்லோருக்கும் சவுகரியமான நேரமும் மிகவும் சுருக்கமான செலவும் கொண்டு நடத்தப்படுவதோடு, அநாவசியமான அர்த்தமற்ற சடங்குகளையும் ஒழித்து நடத்தப்பட வேண்டுமென்று கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் எல்லாம் கலியாணத்திற்கு ஏதாவது பலக் குறைவோ, கெடுதலோ ஏற்பட்டுவிடும் என்று யாரும் பயப்படவேண்டியதில்லை. கலியாணத்துக்கும் சாதி மதம், சடங்கு, நேரம், காலம், குலம், கோத்திரம் ஆகியவைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

நம் நாட்டில் சாதி, மதம், குலம், கோத்திரம், காலம், நேரம், சடங்குக் கிரமம் முதலியவைகள் கவனித்தே 100க்கு 99 கலியாணங்கள் செய்யப்படுகின்றன. இப்படியெல்லாம் செய்தும் இன்று அவற்றின் பலன்களைக் கவனித்துப் பார்ப்பீர்களானால், ஒட்டுமொத்தம் பெண் சமூகத்தில் 100க்கு 20 பெண்கள் விதவைகளாய் இருக்கிறார்கள். இந்த விதவைகளுள் 100க்கு 25 பேர்கள் 20 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகளென்றால், அவர்களின் கஷ்டத்தையும், அனுபவிக்கும் வேதனைகளையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. நாள்கோள் பார்த்து, சாஸ்திரப்படி சடங்குகள் செய்யப் பெற்ற தெய்வீகக் கலியாணங்களில் பெண்கள் 100க்கு 20 பேர் ஏன் விதவைகளாய் இருக்க வேண்டும்? அவர்களில் 100க்கு 25 பெண்கள் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் விரக வேதனையில் ஏன் அழுந்திக்கொண்டிருக்க வேண்டும்? இது 'தெய்வீக' மணத்தின் பலனா? அல்லது 'அசுர' மணத்தின்—'பிசாசு' மணத்தின்—பலனா என்று யோசித்துப் பாருங்கள்.

'தெய்வீகம்', 'பழக்கம்', 'வழக்கம்', 'சாஸ்திரம்' என்கின்ற வார்த்தைகள் முன்னேற்றத்துக்கும், பகுத்தறிவுக்கும், சுதந்திரத்திற்கும் ஜன்ம விரோதியான வார்த்தைகளாகும். ஆதலால், சுயமரியாதைக் கலியாணம் என்பதில் மேற்படி முன்னேற்ற விரோதிகளுக்கும் சுதந்திர விரோதிகளுக்கும் இடமில்லை.

இந்தக் காரணங்களால்தான் பழைமை விரும்பிகள், வைதிகர்கள்—பகுத்தறிவற்ற கோழைகள்—சுயமரியாதை இயக்கம் என்றாலும், சுயமரியாதைக் கலியாணம் என்றாலும் முகத்தைச் சுளித்துக் கண்களை மூடி விழிப்பார்கள். இவர்களைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தக் கூட்டங்களுக்கு மரியாதை கொடுத்த எந்தத் தேசமோ சமூகமோ விடுதலை பெற்றதாக யாரும் சொல்ல முடியாது.

ஆகையால்தான், இந்தப் பிரச்சாரம் செய்து வருகின்றோம். மற்றபடி, இந்தக் கலியாணத்தில் என் போன்றாருக்கு யாதொரு வேலையும் இல்லை. புரோகிதத்துக்காக எவரும் இங்கு வரவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நீங்கள் எல்லோரும் இதனைக் கவனித்து நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள். நன்மையைக் கைக்கொண்டு பகுத்தறிவு வளர்ச்சிக்கும், விடுதலைக்கும் உதவி புரியுங்கள் என்று கேட்டுக்கொண்டு—உங்கள் சார்பாக மணமக்களைத் தங்கள் ஒப்பந்தங்களைக் கூறி ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ள வேண்டிக்கொள்ளுகிறேன்.

[கோவையில், 22-9-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 7-10-1934]

4. திருமணம்—உலக சித்தாந்தம்

தலைவரவர்களே! தோழர்களே!

பாமர மக்கள் கலியாணம் என்பதை வீட்டு வேலைக்கு ஒரு பெண் ஆள் (வேலைக்காரியை) வைப்பதுபோலவே கருதுகிறார்கள்.

புருஷன் அப்படியே கருதுகிறான். புருஷன் வீட்டாரும் அதுபோலவே தங்கள் வீட்டு வேலைக்கு ஒரு பெண் கொண்டுவருவதாகவே கருதுகிறார்கள். இது மாத்திரமா? பெண் வீட்டாரும் தங்கள் பெண்ணை வீட்டு வேலைக்கே தயார்செய்து விற்றுக்கொடுக்கிறார்கள்.

பெண்ணும் தான் ஒரு வீட்டுக்கு வேலைசெய்யப் போவதாகவே கருதுகிறாள்.

பெண்ணின் கடமையும் சமையல்செய்வது, பாத்திரம் விளக்குவது, வீடு வாசல் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்வது இவைகளோடு பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டு அவர்களை வளர்ப்பது ஆகியவைகளையே முக்கியமாய்க் கொண்டதாக இருக்கிறது.

மதமும் சாஸ்திரங்களும் கலியாணத்தைப்பற்றி என்ன சொல்லுகின்றன என்று பார்த்தால் பெண் சுதந்திரமற்றவள்; அவள் காவலில் வைக்கப்படவேண்டியவள் என்பது ஒரு புறமிருக்க, கலியாணம் செய்வதானது மனிதன் 'புத்' என்னும் நரகத்திற்குப் போகாமல் இருப்பதற்கு ஆகவும், பெற்றோர்களுக்கு இறுதிக்கடன், திதி முதலியவைகள் செய்ய ஒரு பிள்ளையைப் பெறவும் கலியாணம் செய்துகொள்ள வேண்டியது அவசியம் என்று கூறுகிறது.

ஆகவே, கலியாணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பத்தை நுகரவும், ஒருவரை ஒருவர் காதலித்து ஒருவருக்கொருவர் வாழ்க்கைப் போட்டியில் ஏற்படும் சிரமத்திற்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்த்துக்கொள்ளவுமே ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஒரு ஆணும் வேண்டியிருக்கிறது என்பதைப் பெரும்பாலோர் சிந்திப்பதேயில்லை.

கலியாணப் பொருத்தம் பார்க்கவேண்டிய பொறுப்பு மணமக்களுக்கே உண்டு என்பதையும் கருதுவதே இல்லை. கலியாணம், மணமக்கள் எத்தனத்தினாலேயே ஆக வேண்டியது என்பதையும் ஒப்புக்கொள்ளுவதே இல்லை.

கலியாணம் என்றால், 'அது தெய்வீகமானது', 'தெய்வ எத்தனமானது', 'தெய்வமே பொருத்தி வைக்க வேண்டியது' என்று கருதுவதும் கலியாணத்தில் எப்படிப்பட்ட பொருத்தம் பொருந்தாப் பொருத்தமானாலும், அதனால் எப்படிப்பட்ட துன்பமும் தொல்லையும் அனுபவமானதும் கண்கூடான பிரத்தியேக அனுபவமாய் இருந்தாலும் அதைத் தெய்வ எத்தனம், தெய்வ சித்தம் என்கின்ற பெயரால் அனுபவிப்பதும், அப்படி நினைத்து திருப்தியடைவதுமாய் இருக்கின்றன.

கலியாணம் என்றால் சுதந்திர வாழ்க்கை—சமத்துவ வாழ்க்கை என்று இருக்க வேண்டுமே ஒழிய அடிமை வாழ்க்கை—மேல் கீழ் வாழ்க்கை—என்று இருக்கக்கூடாது என்பதே எனது ஆசை.

நாம் ஆயிரம் சமாதானம் சொன்னாலும், பெண்ணை அடிமையாகவே—ஒருவனுடைய சொத்தாகவே கருதுகிறோம் என்பதோடு, பெண்ணை நமது போகப் பொருளாகவே கருதுகிறோம். அதற்கு ஒரு தனி உயிரும் மனமும் இருப்பதாகக் கருதுவதில்லை. இது இன்று உலக சித்தாந்தமாய் இருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு 'பெண்சாதி' யாய் இல்லாத—கலியாணமில்லாத பெண்ணுக்கு மாத்திரம் சுதந்திரம் என்பது சிறிதாவது உண்டு என்று சொல்ல

லாமே தவிர, மற்றபடி கலியாணமான பெண்கள் என்றால் அடிமைகளாகவே மதிக்கப் படுகிறார்கள்.

பெண் அடிமை என்பது மனித சமூக அழிவு என்பதை நாம் நினைக்காததாலேயே, வளர்ச்சி பெற வேண்டிய மனித சமூகம் பகுத்தறிவு இருந்தும் தேய்ந்துகொண்டே வருகின்றது.

தாயின் குணம், தாயின் தன்மை பெரிதும் பிள்ளைக்குப் பிறவியிலேயே வருகின்றது என்பதை யார் மறுக்கமுடியும்? மக்களின் குணம் 100க்கு 90 பாகம் சரீர அமைப்பைப் பொறுத்ததேயாகும். சரீர அமைப்புக்குத் தாய் தகப்பன் சரீர அமைப்பே பெரும்பாகம் காரணமாகும். ஆகையால், இந்த அடிமைப் பெண் சுதந்திர உணர்ச்சியுள்ள பிள்ளையைப் பெறமுடியும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

கல்வி, அறிவு, செல்வம் ஆகியவைகள் இல்லாத தாயானவள் நல்ல தாராள புத்தியும் சமத்துவ ஞானமும் திருப்தியான மனமும் உள்ள பிள்ளைகளை எப்படிப் பெறமுடியும் என்பதை உணர்ந்தோமேயானால், மனித சமூகம் சுதந்திரமாகக் கவலையற்று ஏன் வாழ வில்லை என்பது தானாகவே விளங்கும்.

[கீழையூரில் 10-6-1935-லும், திருபுவனத்தில் 11-6-1935-லும் திருச்சிராப்பள்ளியில் 13-6-1935-லும் சொற்பொழிவு—'குடி அரசு' 16-6-1935]

5. திருமணம் ஏன்?

தாய்மார்களே! தோழர்களே!

இந்த உலகத்தில் சொத்தைப்பற்றியும், மேல் உலகம் என்பதில் மோட்சம் என்பதைப்பற்றியும் இலட்சியம் இல்லாவிட்டால் திருமணம் என்பதாக—வாழ்க்கை ஒப்பந்தம் என்பதாகக்கூட—எதுவும் தேவையில்லை. நாம் தேடிய சொத்துக்கு நாம் பெற்ற பிள்ளை வாரிசாக இருக்கவேண்டும் என்பதே திருமணத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்கும் அந்தந்த சமுதாயப்படி சொத்தை அனுபவிக்கச் சிலருக்கு ஆண் பிள்ளை வேண்டும்; சிலருக்குப் பெண் பிள்ளை வேண்டும். தேவதாசிகளும், மருமக்கள் தாயம் உள்ளவர்களும் தங்கள் சொத்துக்குப் பின்சந்ததியாக உரிமைக்குப் பெண் குழந்தைகள் பெறவும், இல்லாமல்போனால் பெண் குழந்தையைத் தத்துக்கு எடுக்கவும் ஆசைப்படுகிறார்கள். மற்றவர்கள்—நம் போன்றவர்கள்—ஆண் குழந்தை பெறவும், பிறக்காவிட்டால் ஆண் குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொள்ளவும் செய்கிறோம். இதற்காகவேதான் திருமணம் பெரிதும் சடங்காக, ஒப்பந்தமாக, பதிவாக, சட்டத்திற்குள் அடங்கியதாகச் செய்யவேண்டியிருக்கிறது. இந்த நிலை மாறிவிட்டால் திருமணம் என்கின்ற வார்த்தையே மறந்து போகும்.

அதனால்தான், நான் இந்த முறைகூட முடிந்த முடிவல்ல என்று அடிக்கடி சொல்லி வருகிறேன். இனி 40, 50 வருடங்களுக்குப் பின்பு (1944)—அதாவது இந்த சொத்து முறைகள் மாறி, பொதுஉடைமை முறை வந்து தாண்டவமாடும்போது—இந்த முறைகூட இருக்காது என்பதோடு, இதை ஒரு மூட நம்பிக்கை—காட்டுமிராண்டிக் கால முறை என்று சொல்லவேண்டிவரும் என்பதோடல்லாமல், இன்று உங்களில் பலரால் 'புரட்சிக்காரன்' என்று கூறப்படுகின்ற என்னை ஒரு மூட நம்பிக்கைக்காரனாக—'வைதிகப் பிடுங்கல் இராமசாமி என்று ஒருவன் இருந்தான்' என்று என்னை உங்கள் பிள்ளைகள், பேரன்மார்கள் சொல்லும்படியான நிலைகூட வந்துவிடும் என்று நான் சொல்லுவதுண்டு.

ஆகையால், திருமணத்திற்கு ஒரு கட்டுப்பாடுதான் இருக்கவேண்டியிருக்கிறதே ஒழிய, முறை ஒன்றும் இன்று தேவை இல்லை. கட்டுப்பாடே வேண்டாத காலம்

வருமென்றால் முறை வேண்டிய காலம் எதற்காக வேண்டி இருக்கும்? ஒரு சமயம் கட்டுப்பாடு வேண்டியதில்லை என்கின்ற தன்மை நடைபெறக் கட்டுப்பாடும் முறையும் வேண்டியதாக இருக்கலாம்.

இன்று நாமாகிய திராவிடர்களுக்கு நம்மைப்பற்றிய சரித்திரமும் நம் நாட்டைப் பற்றிய தன்மைகளும்கூடத் தெரியவில்லையானால், நம் திருமணத்திற்கு என்ன முறை சிறந்தது என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அப்படித்தான் ஒன்று இருந்திருந்தாலும் அதைப்பற்றி இன்று பேசுவது எப்படி அறிவுடைமையும் பொருத்தமுடையதும் ஆகும்?

[இராஜபாளையத்தில், 6-12-1944-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-12-1944]

6. உறவு முறை

மக்கள் சமூகத்தில் சொந்தம் பாராட்டவும், சொத்துக்கள் அனுபவிக்கவும், கலவிகள் செய்யவும் உறவுமுறை என்பதாக ஒரு நியதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அந் நியதிக்கு எவ்விதக் கொள்கையும் ஆதாரமும் இல்லாமலும்—உலகமெங்குமுள்ள மனித சமூகத்தில் ஒரே விதமான உறவு முறை அனுஷ்டிக்கப்படாமலும்—தேச ஆச்சாரம், சாதி ஆச்சாரம், மத ஆச்சாரம், பழக்க வழக்கம் என்கின்ற பல வகையான மார்க்கங்களைப் பின்பற்றியே உறவு முறைகள் கையாளப்படுகின்றன; யாதொரு நியாயமும் காரணமும் சொல்லப்படாமலே பின்பற்றப்படுகின்றன. அவ்வளவோடு மாத்திரமல்லாமல், இம் முறைகள்—சிறிதும் தவறாமல் மிகவும் ஜாக்கிரதையாய்க் கையாளப்படவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகியிருக்கின்றன.

ஆகவே, இவைகளை எல்லாம் பார்த்தால், உறவு முறைகள் என்பவை அர்த்தமற்ற பழக்க வழக்கத்தில் கட்டுப்பட்டதாகவும், குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவும்தான் காணப்படுகின்றனவே தவிர, அவசியங்களை அறிந்து கொண்டதாகக் கருதமுடியவில்லை.

உதாரணமாக, சகோதரர்கள் விஷயத்தில் ஆண் சகோதர உறவுக்கு ஒரு முறையும், பெண் சகோதர உறவுக்கு ஒரு முறையும் கையாளப்பட்டு வருகிறது. ஆண் சகோதரன் வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தங்கள் தங்கள் குழந்தைகளாகவும் பெண் சகோதரி வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தாங்கள் கலியாணம் செய்யத்தக்க பந்தத்துவம் உடையவர்களாகவும் இந்துக்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள்.

முஸ்லிம் சமூகத்திலோ, பெண் சகோதரி மகளைக் கலியாணம் செய்து கொள்ளுவது தகாது என்றும், சிறிய தகப்பனார், சிறிய தாயார் பெண்ணைக் கலியாணம் செய்வது தகும் என்றும் கருதப்படுகிறது.

சில சமூகங்களில் ஒருவித இரத்தக் கலப்பும், முன் சம்பந்தமும் இல்லாதிருந்தாலும் குலங்கள் பெயரையும் கோத்திரங்கள் பெயரையும் பார்த்துக்கொண்டு அதன் பேரிலேயே கலவிக்கு—கலியாணத்துக்கு முறைகள் வைத்துக்கொள்ளப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் சமூக உறவு முறை என்பது எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உடன்படாமல் கண்மூடித்தனமாய் ஏதோ ஒரு முறையைப் பின்பற்றப்படுவதாய் இருக்கின்றது.

வேறு நாடுகளில், தன்கூடப் பிறந்த சகோதரிகளையே—அதாவது 'சயாம்' தேசத்தில் ஆரிய மதத்தைப் பின்பற்றுகின்ற அரசர்கள் தம்கூடப் பிறந்த தங்கையையே மணந்துகொண்டு கலவி செய்கிறார்கள். பவுத்த இராமாயணத்தில், இராமனுக்குச் சீதை உடன் பிறந்த தங்கை என்றும், அக் காலத்தில் ஆரியர்களில் ஒரே தாய் தகப்பன் வயிற்றில்

பிறந்த அண்ணன், தங்கைகள் கலியாணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்ததென்றும், அதை அனுசரித்தேதான் இப்போது சயாம் தேசத்தில் நடந்து வருகிறதென்றும் அறியக் கிடக்கின்றது.

மலையாள தேசத்தில் சில பாகங்களிலும், திபெத்து தேசத்திலும் ஒரு பெண் பல புருஷர்களுக்கு மனைவியாய் இருக்கும் வழக்கம் இருந்து வருகிறது. நம் நாட்டில் ஒரு புருஷன் பல ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொள்ளுகிறான்.

சில சாதிகளில், ஒரு குடும்பத்தில் மகனுக்குக் கட்டப்பட்ட பெண்— தகப்பனுக்கும், கலியாணம் செய்து கொண்டவனுடைய மற்ற சகோதரர்களுக்கும் கலவிக்குரிய ஸ்திரீயாகக் கருதப்படுகிறாள்.

நம் நாட்டில் தாசி சாதி என்பவர்களிலும் மலையாளத்தில் நாயர் சாதி என்பவர் களிலும் குடும்பச் சொத்துக்குப் பெண்களே உரிமையானவர்களாக இருக்கிறார்கள். மற்ற சமூகங்களில் குடும்பச் சொத்துக்குப் பாத்தியஸ்தர்கள் ஆண்பிள்ளைகள் மட்டுந்தான் என்று கருதப்பட்டு வந்தது.

இஸ்லாம் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டு பங்கில் வித்தியாசம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்களிலும் உறவுமுறை, கலியாண முறை ஆகியவைகளில் இந்தியாவை விடப் பல மாறுதல்களும் பல தலை கீழ் முறைகளும் இருக்கக் காண்கிறோம். அத்தை மக்கள், சிற்றப்பன் மக்கள் ஆகியவர்களை ஒரே மாதிரியாகப் (நெவ்யூ, நீஸ்) பாவிக்கிறார்கள். அதுபோலவே, சகோதரன் மக்களுக்கும் சகோதரி மக்களுக்கும் ஒரே விதமான உறவுமுறை கொண்டாடுகிறார்கள். அழைக்கும் முறையிலும் ஒரே முறை வைத்துத்தான் அழைக்கிறார்கள்.

சில தேசங்களில் பெண்கள் பாடுபட்டுச் சம்பாதித்து ஆணுக்குப் போடுகிறார்கள். அத் தேசங்களிலுள்ள ஆண்கள் இங்குள்ள பெண்களைப் போல அலங்காரம் செய்து கொண்டு பெண்களுடைய போகப் பொருளாய்க் கிடக்கிறார்கள்.

சில இடங்களில் விபச்சாரத்திற்காகப் பெண்களை நீக்கி வைக்கிறார்கள். வேறு சில இடங்களில் விபச்சாரத்தனத்திற்காக ஆண்களை நீக்கி வைக்கிறார்கள்; சிலவிடங்களில் ஆண்கள் செய்யும் விபச்சாரத்தனத்தைக் குற்றமாகப் பாவிப்பதில்லை. இன்னும் சில இடங்களில் பெண்கள் விபச்சாரத்தனமே குற்றமாகப் பாவிக்கப்படுகிறது. மற்றும் சில இடங்களில் விபச்சாரத்தனம் எவ்வளவு இருந்தாலும் அதைப்பற்றிப் பேச்சே இல்லாம லிருந்து வருகிறது. சில வகுப்பார்கள் பெண்ணைக் கலியாணமே செய்துகொள்வதில்லை.

சிலர், புருஷன் செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; ஆனால் பெண்சாதி செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. வேறு சிலர் மனைவி செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; புருஷன் செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. அதுபோலவே, சிலர் ஆண் குழந்தை செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; வெகு நாளைக்கு விசனப்படுகிறார்கள்; ஆனால் அங்கு பெண் குழந்தைகள் மரணத்துக்கு அதிகம் கவலைப்படுவதில்லை. சில இடங்களில் இது மாறுபட்டு உள்ளது. பொதுவாக சாவுக்காகத் துக்கப்படுவது பெரும் பாலும் வயது, நிலைமை, இறந்தவர்களால் தங்களுக்கு ஏற்பட்ட—ஏற்படும்—பலாபலன் முதலியவைகளைப் பொறுத்தே உண்டாவதாயிருந்து வருகிறது.

ஆகவே, கலவிக்கும் துக்கத்துக்கும் விபச்சாரத்திற்கும் சொத்துக்கும் கலியாணத்துக் கும் அகில உலக மனித சமூகம் முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரு முறையோ, வரையறையோ காரண காரியங்களோ பொதுவாய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பழைய சரித்திரம் ஒன்றில் ஒரு தேசத்து அரச முறையில் அந்த அரசனுடைய (இராணி)

பெண்சாதி இறந்துவிட்டால், உடனே அந்த அரசனின் மகள் இராணியாக (அரசன் மனைவியாக) ஆகிவிடுகிறாள் என்றும் அரசன் இறந்துவிட்டால் உடனே மகன் அரச (கணவ)னாக ஆகிவிடுகிறான் என்றும்—அதாவது உண்மையான புருஷன்–மனைவியாக ஆகிவிடுகிறார்கள் என்றும் பார்த்த ஞாபகம் இருக்கிறது.

இவைகளை எல்லாம் யோசிக்கும்போது, கலவி முறை என்பதும் சொத்து முறை என்பதும் பெரும்பாலும் தேசாச்சாரம், மதாச்சாரம், அல்லது சாதியாச்சாரம் பழக்க வழக்கம் முதலியவற்றைப் பொறுத்து இருக்கின்றனவே தவிர, வேறு நியாயமான—நிர்ப்பந்தமான—உலகமெங்கும் ஒரே வழி துறையான, காரண காரியமான முறை கிடையவே கிடையாது என்றுதான் யூகிக்கவேண்டியதாக இருக்கிறது. இது விஷயத்தில் மற்ற உயிர்களின் இயற்கைச் சுபாவங்களும் எவ்வித வரையறைக்குக் கட்டுப்பட்டதாகவும் காணமுடியவில்லை. நமது பழங்கால புராணங்களைப் பார்த்தால், தான் பெற்ற மகளையும் தன்னை ஈன்ற தாயையும் புணர்ந்த கதைகள் பல இருக்கின்றன. முறையற்ற விபச்சாரத்தன சம்பந்தமான கதைகள் எண்ணிறந்தவைகள் இருக்கின்றன. குருவின் மனைவி, சகோதரன் மனைவி ஆகியவர்களைக் கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. பிள்ளைப் பேற்றுக்காக வேறு புருஷனுடன் செய்யும் கலவி குற்றமாகக் கருதப்படவில்லை. சில இடங்களில் பிராமணர்களுடன் கலவி செய்வதைப் பிசகென்று கருதுவதில்லை. கடவுள்கள் 'பக்தப்' பெண்களிடம் கலவி செய்த கதைகள் அனந்தம்.

ஆகவே, இவ்விஷயங்களில் இன்னதுதான் சரி; இன்னதுதான் தப்பு என்று குறிப்பிடுவதற்கு இல்லாமல் இருந்து வருகிறது. ஆனாலும், கலவிக்கான வைத்திய முறைப்படியும், தேக தத்துவ முறைப்படியும் சில முறைகள் கற்பிக்கப்பட்டிருப்பதைக் குற்றமென்று சொல்ல இதுவரை எவரும் முற்படவில்லை. ஆதலால், இதைப் பகுத்தறிவுள்ள மனிதன் ஒப்புக் கொண்டாகவே வேண்டும் என்றும் சொல்லலாம்.

என்றாலும், கலவியைப் பற்றிய காரியங்களுக்குப் பாவம், புண்ணியம், கடவுள் தண்டனை, மானம் என்பவைகள் பொருத்தம் ஆகும்படியாக எவ்வித—குறிப்பிட்ட ஒரே மாதிரியான முறையும் கண்டுபிடிக்க முடியாமலிருந்து வருகின்றதென்பது மேற்கண்ட விஷயங்களால் கருதவேண்டி இருக்கிறது.

இந்த உறவு முறை சம்பந்தம், கலவி சம்பந்தம் மாத்திரமல்லாமல், மற்றும் மனித ஒழுக்க சம்பந்தமான பல காரியங்களிலும், பாவ புண்ணியம் நிர்ணயிக்கவோ, நன்மை தீமை நிர்ணயிக்கவோ முடியாமல்—இதுபோலவே தேசத்துக்கு ஒரு முறை, மதத்துக்கு ஒரு தினுசு, வகுப்புக்கு ஒரு மார்க்கம், சாதிக்கு ஒரு மார்க்கம்—என்பதாகத்தான் இருந்து வருகிறது.

ஆகவே, இவ் விஷயங்களை எடுத்துக்காட்டி, 'மனிதன் எப்படி நடந்துகொள்வது?' என்னும் கேள்விக்கு, பொது அறிவும் ஆராய்ச்சியுமுள்ள மனிதன் என்ன சொல்லமுடியும் என்று யோசிக்கும்போது—சமயோசிதம் என்பதைத் தவிர வேறு வழிகாட்டி இருப்பதாக அறிய முடியவில்லை என்பதற்காகவே இவ்வுறவு முறை விஷயத்தை உதாரணமாக எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று.

['குடிஅரசு'–கட்டுரை—2-6-1945]

7. திருமணம் தேவையா?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

மாற்றம் என்பது இயற்கையாய் எல்லாத் துறைகளிலும் நடந்துவந்தாலும், நமக்கு அவசியம் வேண்டியதான மாற்றங்கள்—நமக்கு நலமாக்கிக்கொள்ளும் மாற்றங்கள் பற்றிச் சிந்திக்கவேண்டியதும், அப்படிப்பட்ட மாற்றத்தில் ஈடுபடவேண்டியதும் அறிவுடைமை

யாகும். திராவிடர் திருமணம் என்றாலும் நான் இதை 1946-ம் வருஷத்திய (தற்கால நிலைக்கேற்ற) திருமணம் என்றும், இதுவே இன்று உலக மக்கள் திருமணமாக இருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறேன். ஆனால், இது மாறாமல் இப்படியே இருக்கவேண்டும் என்று நான் சொல்லுவதில்லை. 1946-ம் வருஷத்தியது என்று நான் சொன்னதால் 1956-க்கும் இப்படியே இருக்கவேண்டுமென்பது கருத்தல்ல. இந்த மாற்றம் நம் சவுகரியத்தையும், அறிவையும் மனிதத் தன்மையும், பொது நலத்தையும் குறிக்கொண்ட மாற்றமாகும். இதனிலும் மேலான நலனுக்கும் தெளிவுபட்ட அறிவுக்கும் ஏற்றபடி நாளைக்கோ 1956-ம் வருஷத்திலோ மாற்றம் ஏற்படலாம். அதைக் கூடாது என்று, இந்த 1946ஆம் ஆண்டு திருமண முறை சொல்லாது. 1912-ம் ஆண்டில் ஏற்பட்ட 'போர்ட் மோட்டார் கார்' முறை (அமைப்பு) 1946-ல் இல்லை; இன்று வேறு மாதிரி ஆகிவிட்டது. இதுவும் 1947-ல் இருக்காது; மாற்றமடைந்து தீரும். இந்த மாற்றம் எல்லாம் அறிவின் சவுகரியம் பற்றியது.

ஆனால், நமது திருமண முறையானது மாற்றம், அறிவு, சவுகரியம் மாத்திர மல்லாமல் சமுதாய அமைப்பு, அரசியல் சட்டம், பொருளாதார உரிமை, சுத்த சுதந்திரம் ஆகியவைகளையும் அடிப்படையாகக் கொண்டதாதலால், அவற்றிற்கு ஏற்றவண்ணம் அது மாறுதலடைந்துதான் தீரும். திருமணம் தேவையா? ஒப்பந்தம் தேவையா? என்பதுகூட சிந்தனைக்கு விருந்தாக ஆகிவிடலாம். ஆகவே, வரப்போகிற காலம் ஆராய்ச்சி, பகுத்தறிவு, சர்வ துறைகளிலும் சம சுதந்திர வேட்கைக் காலமாக இருக்குமாதலால், அதை இந்த மூட நம்பிக்கை பெரிதுமாயும் பகுத்தறிவு சிறிதுமாயும் இருக்கிற காலத்தில் கட்டுப்படுத்துவது பயன்படாதென்றே கருதுகிறேன்.

[திருப்பத்தூரில், 15-9-1946-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 21-9-1946]

8. கலப்பு மணம்

கலப்பு மணமோ, உயர்வு-தாழ்வு சாதி மணமோ இக் காலத்தில் ஒன்றும் அதிசயம் அல்ல என்பது எனது அபிப்பிராயம். நாம் செய்வதெல்லாம் இவற்றை விளம்பரம்செய்து மற்றவர்களையும் இதைப் பின்பற்றும்படி செய்ய ஆசைப்படுவதைத் தவிர வேறில்லை.

கலப்பு மணம் செய்து கொண்டால் சொத்து இல்லை என்றும், சட்டப்படி செல்லாது என்றும் சொல்வதுகூட சரியல்ல. பார்ப்பனப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டாலோ அல்லது பார்ப்பன ஆணைக் கலியாணம் செய்துகொண்டாலோ மாத்திரம் தான் செல்லாதாம்! அதைத்தவிர, மற்றபடி 'பார்ப்பனரல்லாதார்' இந்துக்கள்— தங்களுக்குள் எந்த சாதியில் யாரை மணம் செய்துகொண்டாலும் அது செல்லுபடி ஆகும். ஆதலால், அதைப் பற்றிச் சந்தேகம் இனி யாருக்கும் வேண்டாம்.

'இந்து லா' என்பதில் பார்ப்பனர்கள் தங்கள் சாதி கலந்து போகக்கூடாது என்பதற்காக—ஏனெனில் தாங்கள் மற்ற சாதிகளைவிட உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதற்காக—தங்களைப் பொறுத்தவரையில் வேறு சாதியில் கலியாணம் செய்துகொண்டால் சொத்து பாத்தியமில்லை என்று செய்துகொண்டார்கள். ஆதலால், நமக்கு அதனால் கெடுதல் ஒன்றும் இல்லை.

['குடிஅரசு'—கட்டுரை—10-1-1948]

9. காதல் மணம்

பழங்காலக் காதல் மணம் இன்று 'மிருகப் பிராய' மணம் என்றே சொல்லவேண்டும். காதல் என்பது மிக மிகச் சாதாரணமான அற்ப விஷயம். காதலுக்கு அடிமையாவது இன்றையச் சமுதாய வாழ்க்கை முறைக்குச் சிறிதும் பொருந்தாது. கண்டதும் காதல் கொண்டு, காதல் பசி தீர்ந்ததும் சலிப்படைந்து, அதன் பயனைப் பிறகு வேதனையுடன் பொறுத்துக் கொண்டிருப்பதென்றால், அது இன்ப வாழ்க்கையாக இருக்க முடியாது. உண்மையைப் பேசவேண்டுமானால், யாரைப் பார்த்தால் யாருக்குக் காதல் இல்லாமல் இருக்கமுடியும் ? சமுதாயக் கட்டுப்பாடுகள் பல இருப்பதால் காதல் கொண்டு, காதல் கொண்டு ஏமாற்றம் அடைவதுமாக வாழ்வு முடிகிறதே ஒழிய வேறில்லை. காதலை அவரவர் உள்ளத்திற்கே விட்டுவிடுவோம்.

ஆனால், வாழ்க்கைத் துணை விஷயத்தில் காதல் போதாது. அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானவையாகும். பழங்காலத்தில் காதலே போதுமானதாக இருக்கலாம்; அப்போதைய அறிவுக்கு அவ்வளவுதான் தேவையாக இருந்திருக்கும். அது மனித வாழ்வையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாக இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட இச்சையின் பெருக்கம்தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்றுவிடுகிறது. மற்ற பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு அந்த இச்சைப் பெருக்கம் இருவருக்கும் போதவே போதாது. ஆகையால், அறிவையும் நிகழ்ச்சிப் பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி, வாழ்க்கைத் தன்மையைக் கொண்டு வாழ்க்கைத் துணையைப் பொருத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும். ஆதலாலேயும் பழைய தமிழர் மணமுறைகளுக்கோ ஆரியர் மணமுறைக்கோ இங்கு வேலை கிடையாது. அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின்மீது ஏற்பட்ட மணமுறைகளுக்கே இங்கு வேலை உண்டு. அவை பழையவையானாலும், புதியவையானாலும், தமிழனுடையதானாலும், ஆரியனுடையதானாலும், அய்ரோப்பியனுடையதானாலும் இருந்து போகட்டும் !

['குடிஅரசு'—கட்டுரை—10-1-1948]

10. திருமணம் சொத்துக்காகவே

தோழர்களே !

எப்போது புருடன்-பெண்டாட்டி, அதற்கு ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால் தனக்கெனச் சொத்து, நிலம், உடைமை தோன்றிய காலத்தில்தான்.

முதலில் மனிதன் மற்ற ஜீவன்களைப் போல் எதையோ அடித்துத் தின்றுவிட்டு, அவன் போக்கில் திரிந்து கொண்டிருந்தான். அப்போது சொத்து என்ற பேச்சுக்கு இடமில்லை. பின்னர் அவன் பயிர்செய்யக் கற்றுக் கொண்டு—இது இன்னாருக்குச் சொந்தமான நிலம்—இது இன்னார் சொத்து என்று ஏற்பட்டுத் தனிஉடைமை ஏற்பட்ட காலத்தில்தான், புருடன்-பெண்டாட்டி என்பதற்கும் இடம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தனிஉடைமை ஏற்பட்ட பிறகு சொத்து சேர்க்கிறான் ; தான் உயிருடன் இருக்கிற வரையில் அது அவனுடையதாக இருக்கிறது.

அவன் இறந்த பிறகு அந்தச் சொத்து யாருக்கோ பயன்படப்போகிறது ; யாருக்கோ பயன்படுவதைவிட, தனக்குப் பிறந்த குழந்தைக்கே பயன்பட வேண்டும் என்று மனிதன் சிந்தித்து—சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாடாகத்தான், புருடன்-பெண்டாட்டி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும். சொத்தில் இருந்துதான் இந்த முறை பிறந்திருக்க வேண்டும்.

இன்னமும்கூட நீங்கள் பார்க்கலாம்; பணக்காரர்களாக அல்லது உயர்சாதி என்று கருதிக்கொண்டிருப்பவர்களிடம்தான் 'பெண் வெளியில் போகக்கூடாது; அக்கம் பக்கம் பார்க்கக்கூடாது' என இந்தக் காரியத்தில் அதிகக் கவலை கொண்டு, கட்டுப்பாடு உள்ளது. சாதாரண பாட்டாளி மக்கள், ஏழைகள், அன்றாடக் கூலி மக்களாக வாழ்பவர்களிடத்தில் இவ்வளவு கடுமையான கட்டுப்பாட்டைக் காணமுடியவில்லை.

[புத்திரகவுண்டன் பாளையத்தில், 4-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-4-1959]

11. திருமண முறைகள்

பெரியோர்களே! தோழர்களே!

உலகில் மக்களின் வாழ்க்கைத் துறையில் நாளுக்கு நாள் இயற்கையாகவே பல மாறுதல்களும் சீர்திருத்தங்களும் ஏற்பட்டு வருவது போலவே, திருமண முறையிலும் தாமாகவே பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரிதும் திருமண நாட்களைக் குறைப்பதும், செலவுகள் சுருக்கப்படுவதும், சடங்குகள் கைவிடப் படுவதும் முதலாகிய காரியங்கள்—மிக்க வைதீகக் குடும்பம் என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் குடும்பங்களிலும், சாதியிலும் – நடந்து வருகின்றன.

சமுதாயத் துறையில் செல்வத்திலோ, போலி வகுப்புப் பெருமையிலோ, குடும்பப் பெருமையிலோ குறைபாடு இருப்பதாகக் கருதிக்கொள்ளுகின்றவர்கள் மாத்திரம் சற்று பிடிவாதமாய் இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டியவர்களாகி விடுகிறார்களே தவிர, உலக முற்போக்குக்கும், பகுத்தறிவும் நாகரிகமும் மக்களைச் சீர்திருத்தத்திற்கு விரட்டிக் கொண்டு போகின்றன என்பதற்கும் எந்தக் காரணத்தாலும் தடைப்படவில்லை.

அதனால்தான், சுயமரியாதைத் திருமணம் என்றாலும், தமிழர் திருமணம் என்றாலும் அவைகளை—'திருமண மக்களைவிட மேல் சாதிக்காரன்—மேல் வகுப்புக் காரன் என்கிற ஒருவன் நடத்தவோ, மரியாதை பெறவோ திருமணத்தில் கலக்கவோ விடக்கூடாது' என்பதை முக்கியமாக வலியுறுத்தி வருகிறேன்.

இரண்டாவது, அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் தேவைக்கும் பொருத்தமில்லாக் காரியங் கள்—பழக்கத்தின் பேராலோ வழக்கத்தின் பேராலோ, தெய்வத்தின் பேராலோ, மதத்தின் பேராலோ, சாதிவகுப்பின் பேராலோ நடத்தப்படக் கூடாது என்கிறேன்.

சீர்திருத்த முறையில் இன்று நடைபெறும் மணங்கள் முடிந்த சீர்திருத்தம் பெற்றவை அல்ல என்பதே என் கருத்து.

இயற்கையைப் பார்க்கும்போதும், பல நாடுகளில் உள்ள மனித சமூகம் பலவிதமான முறைகளை வழங்கி வருவதைப் பார்க்கும்போதும் திருமணத்திற்கு நாம் கூறும் வாழ்க்கைத்துணை ஒப்பந்தப்பெயரும்—அவ்வொப்பந்தம் துணைவர்களுடைய அன்புக்கும் ஆசைக்கும் உள்ள வலுவையும் எல்லையையும் பொறுத்ததாகவோ கூட இருப்பதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

[மாயவரத்தில் சொற்பொழிவு-'குடிஅரசு' 29-9-1940]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுவதென்றால், பாமர மக்களைப் பார்த்துப் பயப்படு வதைவிடச் சீர்திருத்தத்தைத் தங்கள் சுயநலத்திற்காக எதிர்ப்பவர்களைக் கண்டு பயப்பட வேண்டியிருக்கிறது.

எனவே, சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்து, சரி என்ற பட்டபடி நடவுங்கள் என்பதேயாகும்.

சீர்திருத்தத் திருமணங்களில் தமிழர் திருமணம் ஒன்று; மற்றொன்று, சுய மரியாதை அல்லது பகுத்தறிவுத் திருமணம் என்பதாகும்.

முதல்வகைத் திருமணத்தை வகுப்பு உணர்ச்சித் திருமணம் என்கிறேன். ஏனென்றால், ஆரியருக்குப் பதில்—திராவிடர்; ஆரியத்திற்கு பதில்—தமிழ்; ஆரிய சமயத்துக்குப் பதில்—சைவம் என்பதல்லாமல் அதில் வேறு ஒன்றுமில்லை.

சீர்திருத்தம் என்றால் இலாபகரமான அதாவது, சவுகரியமான மாறுதல்கள் இருக்க வேண்டும். அதாவது, 3 மணி நேரத் திருமணத்தை 10 நிமிட நேரத் திருமணமாக ஆக்க வேண்டும். புராணக் கதைகளைப் பாடலாகப் பாடுவதைவிட—அதுவும் பல பேருக்கு சமஸ்கிருதம்போல பொருள் தெரியாமல் இருப்பதைப் பாடுவதைவிட—மணமக்களுக்குச் சில புத்திமதிகளும் திருமண ஒப்பந்தக் கருத்துக்களும் விளங்கும்படி சுருக்கமாய்ச் சொல்லுவதாய் இருக்க வேண்டும். பழைய முறை என்ற சட்டி பானை அடுக்குவதோ, பட்டப் பகலில் (அயிரப் பந்தம்) பெரிய அகல் விளக்கு வைப்பதோ நிறுத்தப்பட வேண்டும். ஓமம் வளர்த்தல், அதில் மக்கள் சாப்பிடக்கூடிய சத்துப் பொருந்திய நெய்யைக் கொட்டுதல்—ஆகிய காரியத்தை அடியோடு அகற்ற வேண்டும். இவை முதலான திருத்தங்களையாவது செய்யாமல் சீர்திருத்தத் திருமணம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

[கருங்கல்பாளையத்தில், 11-11-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 24-11-1940]

மண முறைக்கும் பழமையைத் தேடித் திரிய வேண்டியதில்லை. இன்றுள்ள எந்த மனிதனுடைய அறிவும் அனேகமாய்ப் பழமைக்கு இளைத்ததாய் இருக்காது; இருந்தாலும், நிலைமை தானாக சரிப்படுத்திவிடும். கால நிலைக்கும் சமுதாய நிலைக்கும் அறிவு முதிர்ச்சி நிலைக்கும் ஏற்றபடிதான் முறைகள் வகுக்கப்பட வேண்டியவைகளே ஒழிய, ஒரு காலத்து முறைகள் எக் காலத்துக்கும் என்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள். அதன்படி எந்த மனிதனும் தனது அனுபவத்தையே சொல்ல முடியாது என்று கூறுவேன்.

இதில் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் அறிவுக்கும் மேற்பட்ட காரியம் எதையும் கலக்கக்கூடாது. கலக்குவதானால், அதை எழுதி நெருப்பில் போட்டு அது பொசுங்காமல் இருக்கிறதா என்று பார்த்து அதன் பிறகே அறிவை அடக்கவேண்டும்! இந்த நிலையில் ஏதோ சிலர் தாங்கள்தாம் அறிவாளிகள்—மற்றவர்கள் அறிவிலிகள் என்று நினைப்பது கற்றறி மூடர்கள் குணங்களேயாகும்.

['குடிஅரசு'—கட்டுரை—10-1-1948]

தாய்மார்களே! தோழர்களே!

டாக்டர். அம்பேத்கார் ஒரு சட்டம் கொண்டு வருகிறார் (1951). அதன்படி நீங்கள் எல்லாம் பதிவு செய்துகொள்ள வேண்டியதுதான். இதற்குப் பார்ப்பனர்கள் இப்பொழுது எதிர்ப்பாக இருக்கிறார்கள். ஏன் என்றால், இந்தத் திருமணம் மதச் சம்பந்தமாக, மதத்திலேயே உள்ள சாஸ்திரம் சம்மதமாக, சாஸ்திரத்திலே உள்ள சடங்கு முறையாக நடக்கிறதனாலே பார்ப்பானுக்குப் பிழைப்புண்டு. அந்த முறை போய்விட்டால் அவனுக்கு பிழைப்புப் போய்விடும். ஆனதனாலே, அவர்கள் இன்னமும் மத சம்பிரதாயப்படி நடக்க வேண்டும் என்று வழக்குப் போடுகிறார்கள்.

டாக்டர். அம்பேத்கார் அவர்களுடைய கொள்கைப்படி, திருமணம் என்று சொன்னால் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கூடி வாழ்க்கை நடத்துவதுதான். அதற்கு ஒரு

குறிப்பு இருக்கவேண்டும் என்பதுதானே தவிர, மற்றபடி வேறு ஒன்றும் வேண்டியது இல்லை என்று சொல்கிறார்கள்.

எப்பொழுதும் சொல்லி வருகிறேன்: நம்முடைய சொத்துரிமை, நமக்கிருக்கிற சொத்துரிமை எடுக்கப்பட்டுவிட்டால்–அதாவது, ஒரு கடை இருக்கிறது, தோட்டமிருக்கிறது, இத்தனை ரூபாய்க்குச் சொத்து இருக்கிறது என்று சொல்லுகிற முறை ஒழிந்து, ரஷ்ய சட்டம் நமக்கு வந்துவிடுமேயானால்—இங்கே இந்த ஏற்பாடு எல்லாம் இருக்காது. இந்த விஷயம் மக்களுக்குப் புரிந்திருந்தாலும்கூட சில பேருக்கு வேறு ஒரு மயக்கம் என்ன வென்றால், சொத்துக்காக ஏற்பட்ட திருமண முறையானது, பார்ப்பனர் உள்ளே புகுந்து சொத்தோடு மாத்திரம் விட்டுவிடாமல் இந்த உலகத்திற்குத்தான் சொத்து; மேல் உலகத் திற்கு இன்னும் வேறு ஒன்று இருக்கிறது; அதற்கும் திருமணம் வேண்டும் என்று சொல்லு கின்றார்கள்.

'மோட்சம் நரகம் என்பதெல்லாம் இருக்கிறதே! தாய் தகப்பன் இந்த உலகத்திலே செத்துப் போய்விட்டார்களே யானால் அவர்கள் உயிர் ஆவி ரூபம் அடைந்து மேல் லோகத் திற்குப் போய் மனித ரூபம் பெற்று வாழ்கிறது. அந்த மனித ரூபத்திற்கு வேண்டிய திதிகள், திவசம் செய்யப் பிள்ளை வேண்டும்' என்பதாக ஒரு பித்தலாட்டத்தை உள்ளே புகுத்தி—கட்டாயம் பிள்ளை பெற வேண்டும்; ஆகவே ஒவ்வொரு ஆணும், பெண்ணும் குழந்தையை உண்டாக்கிக் கொண்டுதான் தீரவேண்டும் என்று செய்துவிட்டார்கள். அத் திட்டம் எந்த அளவு வந்துவிட்டது என்றால்—நீங்கள் பரிகாசம் செய்வீர்கள்,—நான் பார்ப் பனர்களுடைய முறைப்படி சொல்லுகிறேன்:

சொத்துக்காகப் பிள்ளை இல்லாவிட்டாலும் திதி, திவசம் செய்வதற்காகப் பிள்ளை வேண்டும். தந்தை ஒரு பிள்ளையை உண்டாக்கச் சக்தி யில்லாதவனாக இருந்தால்— இந்த சாஸ்திரம் சொல்லுகிறது 'மனைவியை இன்னும் யாரிடமாவது விட்டுக் குழந்தையைப் பெற்றுவிடு!' என்று. காரணம் என்ன?

சொத்துக்காகக் குழந்தை வேண்டும்; மேல் லோகத்திலே இருக்கிற தகப்பனுக்கு திதி, திவசம் செய்வதற்குக் கட்டாயம் ஒரு பிள்ளை வேண்டும் என்று சொல்லி, இந்தத் திரு மணத்தைக் கட்டாயப்படுத்தி விட்டனர். அந்தக் குறைதான் இன்று இருக்கின்றது.

நாம் சமுதாயத்திலே பெரிய மாறுதல் வேண்டும் என்று சொல்லுகின்றோம்; சம உரிமை வேண்டும் என்று சொல்லுகின்றோம். வைதிக சம்பந்தமான திருமணங்களிலே வேறு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அது இங்கே இல்லை. பல இடங்களிலே அதற்காக சட்டி பானையை வைப்பார்கள்; நெருப்புக் கொளுத்துவார்கள். வேறு ஏதேதோ சடங்குகள் செய்வார்கள். இந்த மாதிரியான காரியங்களெல்லாம் இங்கே இல்லை. இல்லாததனால் ஒன்றும் தவறு இல்லை. நாமும் அவைகளிடத்திலே உள்ள வெறுப்பினால் அவைகளை வெறுக்கவில்லை.

இந்த இடத்திலே சட்டி பானையை அடுக்கவில்லை என்றால் அதற்கும் நமக்குமே சண்டையா? இந்த மாதிரிக் காரியமெல்லாம் தேவையில்லை. அவசியமானதைத் தவிர வேறு ஒன்றும் வேண்டியதும் இல்லை.

எதற்காக நெருப்பைக் கொளுத்துவது? ஒரு வீட்டின் முன்னாலே நெருப்பு எரிந்து கொண்டிருந்தால், அந்த வீட்டில் ஏதோ ஒரு பெரிய காரியம் (சாவு காரியம்) ஆகிவிட்டது என்றுதானே அர்த்தம்? கல்யாணத்திலே என்ன பெரிய காரியம் இருக்கிறது? நெருப்புக் கொளுத்துவது எதற்கு? சாப்பிடுகிற நெய்யை அதிலே ஊற்றுவதனால் யாருக்கு என்ன பலன்?

இவைகளை எல்லாம் நாம் கூடாது என்று சொன்னால் நமக்கு நெருப்போடு என்ன சண்டையா? இல்லை. நெய்யோடுதான் சண்டையா? இல்லை. அவைகள் எல்லாம்

இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும். எனவே, இத்தகைய மடமை மூடப் பழக்கங்கள் ஒழிந்து சீர் திருத்த முறையில் திருமணம் செய்துகொள்ள ஏராளமான இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[பெரம்பூரில், 11-2-1951-ல் சொற்பொழிவு—' விடுதலை ' 17-2-1951]

12. திருமணமுறையும் நாமும்

தாய்மார்களே! தோழர்களே!

நம்மிடையே நடைபெற்றுவரும் திருமணங்களில் பெரும்பாலானவை எவ்வித நியதிக்கும் உட்படாதவையாகவே காணப்பட்டு வருகின்றன.

இந்துமதத் தத்துவப்படி, வைதிக முறையில் நடந்து வருகின்றன என்றோ, வேத தத்துவப்படிதான் நடந்து வருகின்றன என்றோ, இன்னாருக்கு இன்னின்ன முறை என்கிற ஏதோ ஒரு சம்பிரதாயத் தத்துவப்படி நடந்து வருகின்றன என்றோ—வரையறுத்துக் கூற முடியாத வகையில் பற்பல விதமாகவே இன்றையத் திருமணங்கள் நடந்து வருகின்றன. கண்டவர்கள் கண்டபடிதான் தம் திருமணங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த அளவில் இந்துக்கள் என்று தம்மைக் கருதிக்கொண்டிருக்கிற திராவிட மக்களுக்கு எப்போதாயினும் சடங்குமுறைத் திருமணம் என்று ஒன்று இருந்ததுண்டா என்பதும்; இருந்ததில்லையானால் இச்சடங்கு முறைகள் ஏன், எப்போது இவர்களிடையே புகுந்திருக்க வேண்டும் என்பதும் ஆராயத்தக்கனவேயாகும். நமது ஆராய்ச்சிக்கு எட்டிய அளவில் ஆதியில் திராவிட மக்களுக்கு எவ்விதச் சடங்கு முறையும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆரியம் இந் நாட்டில் நுழைந்த பிறகுதான் இச் சடங்கு முறைகளும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தெரிகிறது. இதையொட்டித்தான் நாமும் சென்ற 35 வருட காலமாகவே பகுத்தறிவு வழிநின்று மூட நம்பிக்கைகளின் இருப்பிடமாய் அமைந்திருக்கும் சடங்குகளையும், சாஸ்திர சம்பிரதாயங்களையும் எதிர்த்து வந்திருக்கிறோம். திராவிடர்கள் இந்துக்களல்லர் என்பது தெரிந்துதான் அவர்களின் சூத்திரத்தன்மைபோக, பார்ப்பனனின் தாசி மக்கள் என்கிற இழிபெயர் ஒழிய, அவர்களை மானமுள்ள மனிதர்களாக ஆக்கி, உண்மை மனிதத் தன்மை பெறும்படி செய்யப் பகுத்தறிவின் பெயரால் சுயமரியாதை இயக்கம் சென்ற 35 ஆண்டு காலமாகவே பாடுபட்டு வந்திருக்கிறது. திருமணத்தில், நான் தலைமைவகித்து நடத்துவதற்கென்று எவ்விதப் பணியுமில்லை. அப்படி நடத்தப்பட அவசியமுள்ளதும் ஒன்றுமில்லை. வைதிகத்தின் பேராலும், கடவுள் மதம் சம்பிரதாயப் பழக்கவழக்கம் என்பனவற்றின் பேராலும் நடத்தப்பட்டு வருகின்ற திருமணங்களைவிட ஆயிரம் பங்கு கெட்டியுள்ள தன்மையிலும், ஒழுக்க நீதியுள்ள தன்மையிலும், நமது சமுதாயத்தை மேல் நிலைக்குக் கொண்டுவரும் தன்மையிலும் இத்திருமணம் அமைந்திருக்கிறது. மேலும், மூட நம்பிக்கைக்கு ஆதாரமானதும், நம்மைப் பார்ப்பானுக்கு அடிபணியச் செய்வதுமான எவ்விதச் சடங்கும் இதில் காணப்படவே இல்லை. எனவேதான், நாம் இம்முறையைப் போற்றி வரவேற்கிறோம். சடங்கு முறைகளைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், அப்போது புரியும் ஒவ்வொரு சிறிய சடங்கின் அடிப்படையிலும் பார்ப்பானுடைய இலாபத்திற்கு வழியும் அவனது உயர்தன்மைக்கு ஆதாரமும் அடங்கிக் கிடப்பது.

திராவிடர்களிடையே சடங்குமுறைத் திருமணம் இருந்ததென்பதற்கு எந்தப் பண்டைத் திராவிட நூலிலும் ஆதாரம் காட்ட முடியாது. தேவாரத்தில் ஏதோ காணப்படுகிறது; இராமாயணத்தில் இருப்பதாகத் தெரிகிறது; பாரதத்திலும் இருக்கிறது என்றுகூறி, இவ்வாறாக ஆரிய ஏடுகளைத்தான் காட்டுவார்களே ஒழிய—எந்தத் தமிழ் நூலிலும் திருமண முறைக்கு ஆதாரம் காட்ட முடியாது. இன்னும் யோசித்துப் பார்க்கப்போனால், வண்ணானுக்கு ஒரு முறையிலும், நாவிதனுக்கு ஒரு முறையிலும் திருமணச் சடங்குகள்

நடைபெற்று வருவதிலிருந்தே திராவிடர்களுக்கு எப்போதுமே திருமணமுறை இருந்திருக்க முடியாதென்பதும், இவையாவும் ஆரியர் வழி வந்தனவேயாகும் என்பதும் தெரியவரும்.

இது மட்டுமா? ஒரு ஆண் ஒரே பெண்ணுடன்தான் வாழ்ந்து வரவேண்டும் என்பதற்குக்கூட ஆதாரங் காட்டப்படவில்லை; ஆனால், ஒரு பெண் ஒரே ஆணுடன்தான் இருக்கவேண்டும் என்பதற்குமட்டும் ஆதாரங்கள் பல கிடைக்கின்றன. ஒரு ஆண் பல பெண்களை மணந்து கொள்வது கடவுளுக்கோ, சட்டத்துக்கோ, சாஸ்திரத்திற்கோ விரோதமாகாது. ஆனால், ஒரு பெண் பல ஆண்களை மணப்பது மட்டும் சட்ட விரோதமாகும்; சாஸ்திர விரோதமாகும்; சம்பிரதாய விரோதமாகும். ஒரு குழவிக் கல்லுக்கு 1000 மனைவிகள் இருக்கலாம்; இருந்தாலும் அதைத் தெய்வம் என்று தொழுவார்கள். நமது முதன் மந்திரியார் அன்றாடம் போற்றிப் புகழ்ந்துவரும் இராமபிரானின் தந்தை தசரதருக்கோ, ஒன்றல்ல—ஆயிரமல்ல—60 ஆயிரம் மனைவிமார்கள்! இருந்தாலும், இராமாயணம் ஒரு பக்தி நூலாகக் கருதப்படும். கீதையை உபதேசித்த கிருஷ்ணனுக்கோ 10 ஆயிரம் மனைவியர்; ஓர் இலட்சம் வைப்பாட்டிகள். கிருஷ்ணனுடைய நடத்தை இவ்வளவு மோசமாக இருந்தாலும் இதற்காகக் கீதை படிப்பவர்கள் யாரும் வெட்கப்பட மாட்டார்கள். ஏன்? அவர்களெல்லாம் மகான்கள்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நம்மவர் தொழும் கடவுள்களில் 100-ல் 90க்கு—இரண்டு மனைவிகளுக்குக் குறையாமலிருக்கும். இரண்டு மனைவிகள் போதாமல் தாசி வீட்டிற்கு வேறு அழைத்துச் செல்லப்படும்; இருந்தாலும் கடவுள்கள் பூஜிக்கப்பட வேண்டியவைகள். இப்படிப்பட்ட கடவுளைத் தொழும் அன்பர்கள் எப்படி ஒழுக்கமாக இருப்பார்கள்? இத்தகைய ஒழுக்கக்கேடான கடவுளைத் தொழுகிறோமே என்கிற நினைப்பாவது—எப்போதேனும் தோன்றுகிறதா உங்களுக்கு? மதமும், கடவுளும் ஒழுக்கத்தைக் கெடுக்க உண்டாக்கப்பட்டனவா, அல்லவா? இதைக்கூட உணராது மிருக வாழ்க்கை வாழ்ந்து வருகிறீர்களே! இது நலமா?

எனவே, திராவிடத் தோழர்களே! உங்களுக்கு ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால்—நீங்கள் மனிதத் தன்மை பெறவேண்டுமானால், சாஸ்திர புராண சம்பிரதாயங்களிலும், மதங்களிலும், உங்களுக்குள்ள பற்றுதலை, பக்தியை நீங்கள் உடனே விட்டொழியுங்கள்! இன்று நடைமுறையிலிருந்துவரும் கடவுளும் மதமும் சாஸ்திரமும் சட்டமும் அவற்றின் வழிவந்த சம்பிரதாயமும் உங்களை இழிவுபடுத்தவும், அடிமைப்படுத்தவும் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டவை. மானமுள்ள ஒரு சிலராவது இம்மாதிரி சீர்திருத்தக் காரியங்களைச் செய்ய முன்வர வேண்டாமா? பயனற்ற காரியங்களை விட்டொழித்துப் பயனுள்ள முற்போக்கான காரியங்களைச் செய்தல் அவசியமல்லவா? தோழர்களே! நான் யாரையும் இம்மாதிரிதான் திருமணம் செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. சமாதானமாகத்தான் என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லிவருகிறேன். உங்களுக்குள்ள அறிவைக் கொண்டு ஆலோசித்துப் பாருங்கள். உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றால் தயவு செய்து, அருள் கூர்ந்து நான் கூறுவதைச் செவிமடுத்துக் கேளுங்கள். முன்னோர் கூறியது என்றோ, முன்னோர் செய்தது என்றோ எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள்! நெருப்பென்பதே என்னவென்று தெரியாத காலத்தில் சக்கிமுக்கிக் கற்களால் நெருப்பை உண்டாக்கியவன்—'அந்தக் காலத்துக் கடவுள்'தான்; 'அந்தக் காலத்து எடிசன்'தான். அதைவிட மேலான வத்திப்பெட்டி வந்த பிறகு எவனாவது சக்கிமுக்கிக் கல்லைத் தேடிக் கொண்டு திரிவானா, நெருப்புண்டாக்க? அப்படித் திரிந்தால் அவனைப் பைத்தியக்காரன் என்றல்லவோ உலகம் மதிக்கும்! அக் காலத்திய புத்தி எவ்வளவு, இக் காலத்திய புத்தி எவ்வளவு—இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அக் காலத்தில் எது பெருமையாய்ப் பேசப்பட்டதோ அதையே இக் காலத்திலும் பெருமையாகப் பேசமுடியுமா?

பஞானில் பறந்த அந்த முதல் மனிதனின் பெருமை அன்று எவ்வளவாக இருந்தது; இன்று எவ்வளவாக இருக்கிறது? கிராமபோனுக்கே அன்றிருந்த பெருமை எவ்வளவு—ரேடியோ வந்தபிறகு அதற்குள்ள பெருமை எவ்வளவு? இதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? இதேபோல் ஒரு காலத்திய கடவுள் இக் காலத்திற்கு உதவுமா? இக் காலத்திற்குப் பயன்படுமா?

நான் சொல்லும் சில கருத்துக்கள் இன்று தலைகீழ்ப் புரட்சியாகச் சிலருக்குத் தோன்றுகின்றன. அடுத்த 20 வருடங்களில்—என்னையே 'மகா பிற்போக்குவாதி' என்று அன்றைய உலகம் கூறுமே! அறிவு வளர்ச்சியின் வேகம் அவ்வளவு அதிகமாயிருக்கிறதே! மாறுதலுக்குக் கட்டுப்பட்டதன்றோ உலகம்? மாறுதலுக்கு வளைந்துகொடாத மனிதன் மாயவேண்டியதுதானே! இதுவரை மாறுதலை எதிர்த்து வெற்றிபெற்றவர்கள் கிடையாதே! நமது போக்குவரத்துச் சாதனங்கள், நமது வாத்தியங்கள், நமது உடைகள், நமது ஆபரணங்கள் இவையெல்லாம் இன்று எவ்வளவு மாறுபட்டுவிட்டன? 20 வருடத்திற்கு முன் எத்தனை பேர் கிராப் வைத்திருந்தார்கள்—இன்று எத்தனை பேர் குடுமி வைத்துள்ளார்கள்? இப்பெரிய கூட்டத்தில் குடுமி வைத்தவர்கள் எத்தனைபேர் என்று சுலபத்தில் எண்ணிவிடலாமே! இயற்கை மாறுதலால் ஏற்பட்டதா இது? அல்லது சர்க்கார் தான் குடுமி வைத்திருக்கக்கூடாதென்று சட்டம் போட்டதா? இல்லையே!

இன்று எத்தனைபேர் நெற்றியில் பூச்சுடன் காணப்படுகிறார்கள்? விரல்விட்டு எண்ணிவிடலாமே! 'பூச்சுடன் காணப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்' என்றா அரசு உத்தரவு போட்டுப் பூச்சுக்கள் மறையும்படி செய்யப்பட்டது? இல்லையே! காலம் மாறி வருகிறது; அம் மாறுதலுக்குக் கட்டுப்பட்ட மனிதனும் தானாக மாறுகிறான். பணக்காரர்களின் உயர்வெல்லாம் இன்று எங்கு போயின? அவர்களுடைய பிடிவாதம்தான் எங்கே போயிற்று? முன்பெல்லாம் தாய்மார்கள் எத்தனை முழம் சேலை கட்டினார்கள்; இப்போது எத்தனை முழம் சேலை கட்டிக்கொள்கிறார்கள்? 18 முழத்துக்குக் குறையாது சேலை கட்டுவதுதான் பெருமை என்று கருதிய தாய்மார்கள், இன்று 6 கெஜத்துக்கு மேல் கட்டக் கூச்சப்படவில்லையா? அன்றுமட்டும் அவர்கள் தாமாகவா விரும்பினார்கள், 9 கெஜ சேலையை? சேலை சுற்றுக் குறைந்திருந்தால் எங்கு ஓடிவிடுவார்களோ என்று ஆண் பிள்ளைகள் செய்த தந்திரம் அது! அன்றிருந்த கட்டுப்பாடு அவ்வளவு! இன்று பெண்களுக்கு அவ்வளவு கட்டுப்பாடு இல்லை. எனவே, நைசான சேலை கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். நகைகளில்தான் எவ்வளவு மாற்றம்! அன்று தங்கச் சங்கிலி எல்லாம் எருமைமாட்டுக் கழுத்து இரும்புச் சங்கிலிபோல் இருக்கும்; இன்று சங்கிலி கண்ணுக்குத் தெரிந்தும், தெரியாத அளவுக்கு நைசாக இருக்கிறதே! சட்டம் போட்டா இம்மாறுதல் செய்யப்பட்டது? இப்படி எவ்வளவு வேண்டுமானாலும் உதாரணம் காட்டிக் கொண்டே போகலாமே!

அன்று விரல்தேய மண்ணில் எழுதி எழுத்துக்களைக் கற்றோம்; இன்று நம் கண் முன்னாகவே 8-வது பையன் சீமைப் பேனா வைத்துக்கொண்டு 'நைசான' பேப்பரில் எழுதுகிறானே! யாரால் தடுக்க முடிந்தது, இம்மாறுதல்களை? இப்படிச் சாதாரணமான காரியங்களில் எல்லாம் மாறுதலை ஏற்றுக்கொண்டபோது, தன்மானத்தையொட்டி நாங்கள் கூறும் மாறுதல்களைத்தானா நீங்கள் ஏற்கத் தயங்குவது? யாரோ சில அன்னக்காவடிப் பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்திக்கொண்ட திட்டத்தையா இப்படி விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பது? நெஞ்சில் துணிவு பிறக்கவேண்டாமா, உங்களுக்கு? நடுநிலையிலிருந்தாவது நாங்கள் கூறுவதை ஆலோசிக்க வேண்டாமா? தூங்கிக் கொண்டுள்ளவர்களுக்கு விழிப்பூட்ட — மயங்கியிருப்பவர்க்குத் தெளிவூட்ட அறிவுள்ள சிலராவது முயற்சிக்கவேண்டாமா? அப்படி அறிவை வளர்க்கத்தான் இம் மாதிரி சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்கிறோம்; இப்படிப் பயன்படுத்துவதுதான் முறையுங்கூட.

இன்று இம் மணமக்கள் தம் இல்வாழ்க்கையைத் துவங்குகிறார்கள். புதுக்கடை வைத்து புதுக்கணக்குப் போடுவதுபோல், இம் மணமக்கள் 'எங்களையும் உங்களோடு ஒரு குடும்பத்தினராகச் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்று அறிமுகப்படுத்திக்கொள்ளும் நாள்தான் இது. இப்படிப்பட்ட நாளில் நாம் எல்லோரும் நம்மைச் சோதித்துக் கொள்ளவேண்டும். நம்முடைய குறை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளவேண்டும். நமது சமுதாயத்தை எப்படி முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று ஆலோசிக்க வேண்டும். சமுதாய உணர்வை அடியோடு மறந்துவிட்டு, 'பழைமை, பழைமை' என்று பழைமைப் பித்தில் வாழ்ந்ததால்தான்—நாம் இதுவரை அடிமைகளாக இருக்க நேரிட்டது என்பதை உணர்ந்து, இனியும் அம் மாதிரி இருக்கக்கூடாது என்று உறுதிகொள்ள வேண்டும்.

திருமணம் செய்துகொள்கிறவர்கள் கட்டாயம் ரிஜிஸ்டரில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். பதிவு செய்துகொள்ள முதலில் ஆரம்பித்துவிட்டால் நாளாகஆக மற்ற சடங்குகள் தானாக மறைந்துவிடும். பதிவுசெய்துகொள்வதால் உள்ள நன்மையைத் தாய்மார்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பதிவுசெய்துகொள்வதால்—கணவனுக்குச் சரிசமமான அந்தஸ்து மனைவிக்கும் கிடைக்கிறது. மேலும், மணந்த அன்றைக்கே அவனுடைய சொத்துக்கு அவளும் சமஉரிமை உடையவள் ஆகிறாள். கணவன் தாசி வீடு சென்று திரும்பிவந்தால், மனைவி விவாகரத்து கோரலாம். ஆனால், பார்ப்பனச் சடங்கு முறைத் திருமணம் செய்துகொண்டாலோ விவாகரத்து கோர முடியாது. ஜீவனாம்சம் கோருவதானாலும், அவனால் கற்புக் கெட்டவள் என்று ஒருமுறையாவது குற்றம் சாட்டப்பட்டு, அது தவறு என்று ரூபிக்கப்படவேண்டும். கணவன் அடித்தால்கூட அடங்கிக்கிடக்கவேண்டியதுதான். பதிவுமுறைத் திருமணத்தில் இத்தகைய அடிமைத்தனத்திற்கே இடமில்லை. திருமணப் பதிவின்போது, 'கலியாணம் செய்துகொள்ளக்கூடாத முறையைச் சேர்ந்தவர்கள் அல்லரே நீங்கள்?' என்று பதிவாளர் கேட்பார். 'மணந்து கொள்ளக்கூடிய முறையைச் சேர்ந்தவர்கள்தாம்' என்று பதில் அளித்தால், அப்புறம் "ஒருவரையொருவர் மணந்துகொள்ளச் சம்மதிக்கிறீர்களா?' என்று கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு சரியென்று பதிவுசெய்துகொள்வார். இம் மணமக்களும் அதேபோல் இருவரும் சமம் என்பதாகச் சொல்லியே கையொப்பமிட்டனர். அப்படிக் கையொப்பமிட்டுப் பதிவுசெய்துகொள்வது தமக்குத்தான் இலாபம் என்பதைப் பெண்மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அரசாணைக் கால் வைத்து, அக்கினியைச் சுற்றி, அம்மியை மிதித்துச் செய்யப்படும் திருமணங்களில் உள்ள அடிமைத்தனம் இதில் இல்லவே இல்லை. இப்படிப்பட்ட மாறுதலுக்குப் பெண்கள் முழு மனதோடு இணங்கவேண்டும்; பிடிவாதம் காட்டக்கூடாது. பொது மக்கள்முன்னேற்றத்தைக் கண்டு கடவுளும், பணக்காரரும் நடுங்கும் இந்தக் காலத்தில்— பெண்கள் எப்போதும்போல் 'கண்மூடித் தெய்வங்களாக' இருக்கக்கூடாது. கடவுளுடைய செல்வாக்குகூடப் பறந்துவிட்டது. இதனால்தான், இப்போதெல்லாம் உற்சவம் நடந்தால்— பூசைசெய்யும் பார்ப்பானும், மேள வாத்தியக்காரனும் தான் அதைத் தொடர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. முன்பு 5000 பேர் வந்த உற்சவத்திற்கு இன்று 500 பேரைக் காண்பது கூடக் கஷ்டமாயிருக்கிறது. 'என்னப்பா, பகவான் போகிறார் பாரப்பா!' என்று தெருவில் போகிறவனிடம் சொன்னால்கூட—'அவர் வேலையாக அவர் போகிறார்; என் வேலையாக நான் போகிறேனப்பா' என்று கூறிச் சென்று விடுகிறான். 'ஏன் முதலாளி?' என்று கேட்கிறோம்—முதலாளி ஒன்றும் பேசமுடியவில்லை. 'ஏன் கடவுள்?' என்கிறோம்; அதுவும் பேசாமல் கிடக்கிறது. 'ஏன் பார்ப்பான்?' என்கிறோம்; அவனுக்கு என்ன செய்வது என்று தோன்றாமல் என்னமோ வஞ்சக சூழ்ச்சிகள் செய்கிறான். 'ஏன் ராஜா?', 'ஏன் ஜமீந்தார்?' என்றெல்லாம் கேட்கிறோம். அவர்களும், 'இதோ மறைந்துவிடுகிறோம்" என்று கூறுகிறார்களே!

இப்படிப்பட்ட மாறுதல்கள் எல்லாம் எப்படிச் சுலபமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன? இப்போது இவையெல்லாம் ஒழிந்தபோது—இந்த மூடப் பழக்கவழக்கங்கள் தாமா ஒழிந்துபோகமாட்டா? காலம் போகப்போக இவை ஒழியும். இவற்றை வளர்க்கும் ஒரு கூட்டம் நாட்டில் இல்லாவிட்டால், இக்கூட்டத்தையும்மீறி அவைகள் ஒழியத்தான் போகின்றன என்றாலும் அறிவுள்ள மக்களுக்கு, நாகரிக மக்களுக்கு அழகு—கூடிய சீக்கிரத்தில் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடுவதல்லவா? பழகிவிட்ட பெரியவர்களுக்குத் தான் மூடப் பழக்க வழக்கங்களை விடமுடியவில்லையென்றால் இளைஞர்களாவது அவற்றை ஏற்காமல் இருக்க வேண்டாமா?

அரசியல் சம்பந்தமான கூட்டங்களில் பொது அரசியலைப்பற்றி எவ்வளவு காரசாரமாக விவாதிக்கிறோமோ, அதுபோல் சமுதாய சம்பந்தப்பட்ட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின்போதும் நமது சமுதாயத்தின் குற்றங்களைப் பற்றியும் காரசாரமாகப் பேசி அவற்றை நீக்கும் மார்க்கத்தைத் தேடவேண்டாமா? சமுதாய சம்பந்தமான கடவுளைப் பற்றியும், மதத்தைப்பற்றியும் பேசினால்—அவற்றிலுள்ள குற்றங்களை எடுத்துத் தாராளமாக விளக்கினால் என்ன பாவிகளாகவா ஆகிவிடுவோம்?

[திருவொற்றியூரில், 17-10-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 24-10-1948]

13. திருமணம்

சுயமரியாதைத் திருமண அழைப்பில் 'வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற திருமணங்களில், 'கன்னிகா தான முகூர்த்தப் பத்திரிகை' 'தாரா முகூர்த்தப் பத்திரிகை', 'விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை' என்று போடுவார்கள். இந்த மாறுபாட்டை நல்லவண்ணம் சிந்திக்க வேண்டும்.

விவாக முகூர்த்தம், கன்னிகா தானம், தாரா முகூர்த்தம்—இந்தச் சொற்களுக்கு நேர்ச்சொல் தமிழில் இல்லை.

நாம் தமிழர்கள்; நமக்கு என்று நடக்கிற இது போன்ற காரியங்களில் வடமொழிப் பெயர்கள் வந்து புகுந்துகொண்டன. தமிழர்கள் என்பவர்களுக்கு என்ன திருமண முறை? என்ன பெயரில் வழங்கப்பட்டுள்ளது? என்ன ஆதாரம்? என்று புலவர்களைக் கேட்டால் அவர்களும் விழிக்கிற நிலையில்தான் உள்ளார்கள்.

தமிழர்களுக்கென்று ஏதாவது முறை உண்டா என்பதைப் பார்த்த அளவில், தமிழர்கள் ஆண்களும் பெண்களும் ஓரளவு சமமாக இருந்திருக்கிறார்கள் என்பதை வள்ளுவரின் குறளைக் கொண்டு கண்டறிந்தோம். பெண்ணுக்கு 'வாழ்க்கைத் துணை' என்றிருப்பதிலிருந்து இந்நிகழ்ச்சிக்கு 'வாழ்க்கைத் துணை ஒப்பந்தம்' என்று பெயரிட்டு, அதற்கேற்ப இம்முறைகளையும் கையாளுகிறோம்.

வெறும் பெயர் மாற்றம் மாத்திரமல்லாமல் அந்தச் சொல்லுக்கு அர்த்தம்—மற்ற வார்த்தைகளுக்குண்டான அர்த்தத்திற்கு மாறுபட்ட, சமுதாய நலத்திற்கேற்ற ஒரு நல்ல வாழ்க்கை முறையைக் குறிக்கும் சொல்லாக உள்ளது.

இதற்கு முன் திருமண முறை என்ற ஒன்று இல்லை. ஒரு ஆண் ஒரு பெண்ணை அடிமைகொள்வது என்ற முறையில்தான் நடந்துவந்திருக்கின்றது. திருமணம் என்பது தமிழ்ச் சொல்லே ஒழிய அதில் கருத்தொன்றும் இல்லை. திருமணம் போலவே கலியாணமும் அர்த்தமற்றது.

கலியாணம் என்பது வாழ்த்து என்று பொருள். அது 'வாழ்க்கைத் துணை' என்ற பொருளில் இல்லை. ஏதோ, கறுப்பு ஆட்டை வெள்ளாடு என்பது போலவும், கொடிய

விஷம் உள்ள பாம்பை நல்ல பாம்பு என்பது போலவும்,—இப்படித் தப்பான சொற்களை அமைத்துக் கலியாணம், திருமணம் என்றெல்லாம் சொல்லிவருகின்றோம்.

ஆனால், பார்ப்பனர் மட்டும் சரியான வார்த்தைகளையே உபயோகித்து வருகின்றனர். அவைகள் 'தாராமுகூர்த்தம்', 'கன்னிகா தானம்' என்பவைகளாகும்.

சமுதாயத்தில் திருமணம் என்பதும் வழக்கில் உள்ளது. இராஜகோபாலாச்சாரியார் ஆட்சியின்போது நடந்த இந்தி எதிர்ப்பின்போது (1938-39) வடமொழியின்பால் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகத் திருமணம் என்று பெயர் வந்தது.

தானம் என்பது வடமொழிச் சொல் ஆகும். தாரா முகூர்த்தம் என்பதும் வடமொழிச் சொல்லே; தமிழ்ச் சொல் அல்ல. தமிழர்களுக்கான காரியங்களில் வடமொழிச் சொல்லாக இருந்தால் அது ஒன்றிலேயே நன்றாகத் தெரியுமே—அந்த முறை நமக்கில்லை என்று. நாம் தினமும் குடிக்கும் காப்பியை எடுத்துக்கொள்ளுங்கள். காப்பி என்றால் என்ன அர்த்தம்? அது இங்கிலீஷ் சொல். நித்தம் புழங்குகிற அந்தப் பண்டத்திற்குத் தமிழ்ச் சொல் இல்லை. 'டீ'க்காவது தேநீர் என்று தமிழில் கூறுகிறோம். காப்பி என்பது அன்னிய மொழி. தினம் சாப்பிடுகிற பண்டத்திற்கே அன்னிய மொழி என்றால் என்ன அர்த்தம்? அது நம் நாட்டில் இல்லை. எங்கிருந்தோ வந்தது; அதுதான் அந்தப் பெயர். நம் நாட்டில் இல்லாததால் அதற்குத் தமிழ்ச் சொல் இல்லை. எலக்ட்ரிக் லைட் இருக்கிறது. அது தமிழ்ச் சொல் இல்லை. ஆங்கில மொழிச் சொல். வெள்ளைக்காரன் கண்டுபிடித்துக் கொண்டுவந்ததால் அவன் மொழியிலேயே பெயர் வைத்துக்கொண்டான். தினம் வாழ்வில் அதை உபயோகப்படுத்துகிறோம். அதேபோல், கன்னிகா தானம், தாரா முகூர்த்தம் என்றால் அது நம் நாட்டுச் சொல் இல்லை. வெளியிலிருந்து வந்தது என்றுதான் அர்த்தம். அதனால் அவனுக்கு (பார்ப்பானுக்கு) அனுகூலம்; நமக்கு இழிவு. ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து ஒருவனுக்குத் தாரை வார்ப்பது—தானம் தருவது என்பது கருத்து. நம் பழக்கப்படி ஆணும் பெண்ணும் சம உரிமை கொண்டு அன்பு பூண்டு ஒற்றுமையுடன் இருத்தல்—வாழ்க்கைத் துணை—தமிழ்ச் சொல். அவன் வந்த பிறகுதான் இதையெல்லாம் அழித்துவிட்டுப் பெண்களை அடிமையாக்குகிற நிகழ்ச்சியாக ஆக்கிவிட்டான்.

தன் பெண்ணை அருமையாக வளர்த்து யாரோ ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பதென்றால் என்ன நியாயம்? எதற்காக ஒரு பெண்ணைத் தானமாகக் கொடுப்பது? சிந்திக்க வேண்டாமா?

அதற்கு மேலே மிகவும் மோசமானது தாரா முகூர்த்தம் என்பது. அதாவது, கணவன் கையைக் கீழே வைத்து, தன் பெண்ணின் கையை அதன் மேலே வைத்து அதன் மேல் தண்ணீரை ஊற்றி, 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று சொல்லிக்கொண்டே திரும்பிக் கூடப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டே வந்துவிடுவார்கள். அதாவது, தாரை வார்த்துக் கொடுப்பது என்பது திரும்பிக்கூடப் பார்க்கக்கூடாது என்பதுதான். தானமாகக் கொடுத்த பெண்ணைக் கணவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவன் தன் மனைவியை வாடகைக்கு விடலாம்; பக்தருக்குக் கூட்டிக்கொடுக்கலாம்.

இப்போது நடைபெறும் திருமணத்தில் நாம் ஒன்றும் பெரிய மாறுதலைக் காண வில்லை. தலைகீழாக ஒன்றும் நடைபெறப் போவதில்லை. ஒரு சிறிய மாறுதல் மட்டும் உண்டு. மாறுதல்கள் இயற்கையாகவே பல இனங்களாலேயே பல இடங்களிலே கையாளப் பட்டுத்தான் வருகிறது.

இங்கே நாம் என்ன மாறுதலைக் காண்கிறோம்? சடங்கு இல்லை; வேறு இனத்தவன் எவனும் மணத்தை நடத்துவதில்லை. சுயமரியாதைக்கும் பகுத்தறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்திய மணம் வேண்டுகிறோம். இப்படிப்பட்ட இந்துத் திருமணத்தை நாத்திகத் திருமணம் என்று பலர் சொல்லக்கூடும்.

'இது நாத்திகத் திருமணமா?' என்றால் 'ஆமாம்' என்பேன். எந்த அர்த்தத்தில் சொல்கிறேன் என்றால், எதையும் அறிவைக்கொண்டு ஆராய்ந்து—தர்க்க வாதம் செய்து—அறிவின் முடிவுப்படி நடப்பது நாத்திகம். அதைத்தான் நாத்திகம் என்கிறார்கள். அதன்படி இது அறிவுப்படி நடக்கிற திருமணமாதலால் நாத்திகத் திருமணந்தான்.

இந்தத் திருமணத்தில் முதல் வெற்றி, பார்ப்பனன் இல்லாதது. ஆதலால், இதை சுயமரியாதைத் திருமணம் என அழைக்கிறோம். தான்தான் உயர்ந்த சாதி என்ற ஆணவங் கொண்டு, நம்மைப் பார்த்து, 'தொடாதே!, கூட உட்கார்ந்து சாப்பிடாதே!' என்று சொல்லும் ஒருவனை மனையில் உட்காரவைத்துக் காரியம் நடத்தினால், தமிழனுக்கு மானமுண்டு என்று சொல்லமுடியுமா?

இரண்டாவது வெற்றி என்ன வென்றால், இது பகுத்தறிவுத் திருமணம். 'சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ, அதுதான் நடக்கவேண்டும்; ஏன்? எப்படி? என்று கேட்கக்கூடாது' என்றால்—இது அறிவு சம்பந்தமான அடக்குமுறை என்பதைத் தவிர வேறு என்ன? நாம் பகுத்தறிவுவாதிகள் ஆனதால், அறிவுக்குப் பொருத்தமற்ற காரியங்கள் தேவையில்லை என்று கருதியே இதுபோன்ற முறையில் செய்கிறோம். மற்றும் இந்தத் திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை இருக்கின்றது. ஆரியரின் 8 வகைத் திருமண முறைகளில் ஒன்றில்கூட பெண் ஓர் உயிருள்ள பொருளாகக்கூட மதிக்கப்படுவதில்லை.

நாம் எதற்காகப் பார்ப்பானை அழைக்கவேண்டும்? முதலாவதாக, பார்ப்பான் நம்மவனும் அல்லன். இரண்டாவது, நம்மைப் பின்பற்றுபவனும் அல்லன். மூன்றாவது, நம்மை இழிசாதி, தாழ்ந்த சாதியாக்கி அவன் மேல்சாதி என்று கூறிக்கொள்ளுபவன்.

நமக்கும் அவனுக்கும் எவ்வகையில் சம்பந்தம் உண்டு? புராணப்படி நடப்பது வைதிகம். நாம் புராணப்படியும், வேதப்படியும் சூத்திரன்—இழிசாதி மகன். நாம் எதற்காகப் புராணப்படியோ வேதப்படியோ நடத்த பார்ப்பானை அழைக்கவேண்டும்?

பார்ப்பானுக்கு நம்மைவிட அதிகமான யோக்கியதை இருக்கிறது என்று கருதித்தானே அழைக்கிறோம்? பார்ப்பான் மேல்சாதிக்காரன் என்று நினைத்துக்கொண்டு, அவன் வந்து நடத்திக்கொடுத்தால் நல்லது, பெருமை என்று நினைத்துத்தானே கூப்பிடுகிறோம்? இது காரணமாகத்தான்—அதாவது, பார்ப்பானை உயர்ந்த சாதிக்காரன் என்பதாக நாமே ஒத்துக்கொண்டு, அவனைவிடத் தாழ்ந்தவர்களாக, கீழ்சாதிக்காரர்களாக நம்மை நாம் நினைத்துக்கொண்டு அதற்கேற்றபடி நாமே நடந்துகொள்வதால்—பார்ப்பான் தன்னுடைய உயர்சாதித் தன்மைக்கு நிரந்தரப் பாதுகாப்புத் தேடிக்கொள்வதோடு நம்மவரை இழிவுபடுத்தவும் முடிகிறது.

இன்று நாம் பார்ப்பானைவிட ஒன்றும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்கிறதான உணர்ச்சி நம்மவர்களில் பெரும்பாலோருக்கு இருந்துவருகிறது. இப்படி இருக்கிறபோது, உயர்ந்த சாதிக்காரன் என்கிற பார்ப்பானை இங்கே உள்ளே கொண்டுவந்து விட்டுக் கொள்வது என்பது என்ன நியாயம்?

கீழானவன்—மேலானவன் என்றிருப்பது நமக்கு அவமானம் என்று கருதி அதனை ஒழிக்கும் முறையில் வேலை செய்துவரும் நிலையில் அவனை எதற்கு அழைப்பது? பார்ப்பான் வந்தால், முதலாவது நாமே ஒதுங்கி நிற்போம்; மேலே பட்டால் அவனது பார்ப்பனத் தன்மை கெட்டுவிடும் என்று ஒதுங்கி நிற்போம். 'சாமி, சாமி' என்று கூப்பிடுவோம். அவன் வந்து என்ன செய்கிறான்? அரிசி, பருப்பு வாங்கிக்கொண்டு நெருப்பு (ஓமத் தீ) போட்டுக் கொளுத்துவான். எதிரே நெருப்பு எடுத்துக்கொண்டு யாராவது வந்தால் அவன் காரியத்திற்கு சகுனத் தடை என்பான். முதலில் வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கிற நேரத்தில் அந்த நெருப்பை எதற்குப் போடவேண்டும்? நெருப்புக் கொளுத்துவதால் என்ன பயன்? யாருக்கு நன்மை?

அடுத்து, வைதிகத் திருமணத்தில் பார்ப்பனர் கூறும் மந்திரம் என்ற பித்தலாட்ட வார்த்தையில் ஒன்று, பெண்ணானவள் இதுவரை தேவர்கள் யாவருக்கும் ரிஷிகளுக்கும் மற்றும் கின்னரர், கிம்புருடர் போன்றவர்களுக்கும் மனைவியாக இருந்து, இறுதியில் இம் மணமகனுக்கு மனைவியாக இருக்க இன்றுமுதல் ஒப்புக்கொள்வதாகிய வார்த்தை களைக் கூறுகிறான். இவ்வித வார்த்தையைத் தமிழில் கூறினால் சும்மா விடுவோமா? அல்லது இதைக் கேட்கும் மணமகன் புரோகிதனை உயிருடன் விடுவாரா? இக் காலத்தில் ஒரு கைமாறிய பெண்ணையே (செகண்டு ஹாண்டு) விபச்சாரி என்று கூறும்பொழுது, கணக்கற்ற தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் வெங்காயங்களுக்கும் மனைவியாக இருந்தவளைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்வாரா? அவன் சொல்கிற மந்திரத்திற்கு என்ன அர்த்தம் என்று யாருக்குத் தெரியும்?

மணமகள் படித்த பெண்ணாக இருந்து—அவன் சொல்கிற மந்திரத்திற்கு அர்த்தம் தெரியுமானால் முறத்தால் விரட்டுவாள். மணமகள் சொல்லுவதாக அவனே சொல்லிக் கொள்கிறான். 'நான் அவனுக்குப் பெண்டாட்டியாக இருந்தேன்; அக்கினிக்கும் பெண்டாட்டியாக இருந்தேன்; இப்போது உனக்குப் பெண்டாட்டியாகிறேன் என்று சொல்லுகிறேன். இன்னும் நீ அடித்தாலும் சரி; உதைத்தாலும் சரி; கஞ்சி ஊற்றினாலும் சரி; ஊற்றாவிட்டாலும் சரி; நீ எத்தனை தேவடியாள் வைத்துக்கொண்டாலும் சரி, உனக்கும் அவளுக்கும் நான் அடிமையாக இருக்கிறேன்' என்று மணமகள் சொல்லுவதாகச் சொல்லுகிறான். அவள் (மணமகள்) சொல்லாவிட்டால் அதற்குப் பதில் அவனே சொல்கிறான். இது என்ன நியாயம்?

புராண முறைகள் சமுதாய ஒழுக்கத்தையே கெடுத்துவிட்டனவே! சாஸ்திரத்தில் எத்தனை பெண்டாட்டி, தேவடியாள் வைத்துக்கொண்டாலும் வைத்துக்கொள்ளலாம் என்று எழுதிவிட்டதால் ஆண்கள் இஷ்டப்படி செய்து சமுதாய ஒழுக்கம் கெட்டுவிட்டது. ஏன்னடா இப்படி யென்றால், 'விஷ்ணு, சிவன், சுப்பிரமணியன், கிருஷ்ணன் செய்யவில்லையா?' என்று கேட்கிற தன்மையில் ஒழுக்கம் கெடாமல் என்ன செய்யும்?

'ஒரு பார்ப்பானுக்கு—அவன் இஷ்டப்பட்ட ஒரு பெண் இசைந்தாளானால் அவள் கற்பு கெடாது' என்று மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ளது. பெண்கள் தன் கணவன் கூறுகிற படி விபச்சார செய்கைகளுக்கும் ஈடுபட்டால், அவள் பதிவிரதை லிஸ்டில் சேர்க்கப்பட்டு மோட்சமடைகிறார்கள் என்பது சாஸ்திர புராணங்களின் கொள்கை.

இந்தப்படி பார்த்தால், ஆரியர்களுக்குக் கற்பு என்று ஒன்று இல்லை. ஒழுக்கத்தைப் பற்றிப் பார்த்தால் அதுவும் சிறிதுகூட இல்லை. இவர்களுடைய கதைகளைப் படிக்கும் போதே இது தெளிவாகத் தெரிகிறது.

அக் கதைகளில் நீங்கள் என்ன காண்பீர்கள்? ஒரு பெண் பதிவிரதையாக இருக் கிறாள். ஒருத்தி பதிவிரதையாக இருப்பதைக் கெடுப்பதற்கு பிர்மா, விஷ்ணு, சிவன் இந்த மூன்று கடவுள்களும் போகிறார்கள். இப்படிக் கதை எழுதியிருக்கிறானே!

நாரதன் என்ன செய்கிறான். ஒரு நாள் இரும்புக் கடலையைக் கொண்டுபோய் இந்த மூன்று கடவுளுடைய பெண்டாட்டிகளிடம் கொடுத்து, 'இதை வறுத்துக்கொடு' என்கிறான். பார்வதி, இலட்சுமி, சரசுவதி இந்த மூன்று பேர்களிடமும் கொடுத்து வறுத்துக்கொடுக்கச் சொல்கிறான். அவர்கள், 'என்ன நாரதரே! குறும்பு செய்கிறாய்; இரும்புக் கடலையை வறுப்பதாவது—போ, போ' என்று கூறிவிட்டார்கள். 'இரும்புக் கடலையை வறுக்க முடியாதா, பார்—நான் வறுத்து வாங்கிக்கொண்டு வருகிறேன்'—என்று சொல்லிவிட்டு நாரதன் பூலோகத்திற்கு வருகிறான். அனுசூயா என்கிற பெண்ணிடம் தந்து, 'எனக்கு இதை வறுத்துக் கொடு' என்கிறான். அவள் பதிவிரதை; அவள் வறுத்துத் தருகிறாள்! இரும்புக்கடலை பொரிந்து, தின்பதற்கு நன்றாக இருக்கிறது. அதை நாரதன் கொண்டு

வந்து இந்த மூன்று கடவுள் பெண்டாட்டிகளிடமும் கொடுத்து, 'இதோ, பார் வறுத்துக் கொண்டு வந்துவிட்டேன்' என்று அவர்களிடம் தருகிறான். அவர்கள் வாயில் போட்டுப் பார்க்கிறார்கள். பொரபொரவென்று கடலை நன்றாக இருக்கிறது. 'நாங்கள் கடவுள் பெண்டாட்டிகள். எங்களால் வறுக்க முடியாததை யார் வறுத்தாள்? எப்படி வறுத்தாள்?' என்கிறார்கள். அதற்கு நாரதன் 'பூலோகத்தில் ஒருத்தி இருக்கிறாள். அவள் பதிவிரதை. அவள் வறுத்துக்கொடுத்தாள்' என்கிறான்.

'அவள் பதிவிரதையானால் நாங்கள்.......?' உடனே அவர்களுக்குக் கோபம் வந்து விடுகிறது. 'அவள் பதிவிரதை என்றால் எங்கள் சங்கதி என்ன ஆகிறது? வரட்டும் எங்கள் கணவன்மார்கள்' என்கிறார்கள்.

சிவன், விஷ்ணு, பிர்மா மூன்றுபேரும் தங்கள் பெண்டாட்டிகளிடம் வருகிறார்கள். அவர்களின் பெண்டாட்டிகள் முகத்தைத் திருப்பிக்கொண்டு பேசவில்லை. என்ன விஷயம் என்கிறார்கள். நடந்ததைச் சொல்லி, 'இப்படி ஒருத்தி மாத்திரம் பூலோகத்தில் பதிவிரதையாக இருக்கிறாள் என்றால் நாங்கள் உங்கள் பெண்டாட்டிகளாக இருந்து என்ன பலன்? எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது' என்கிறார்கள்.

'என்னடி! அவள் பதிவிரதையாக இருக்கிறாள் என்றால் அதற்கு எங்களை என்ன பண்ணச்சொல்கிறீர்கள்?' எனக் கேட்க, அதற்கு, 'என்ன பண்ணச் சொல்கிறேன் என்று கேட்கிறீர்களா? போங்கள்! போய் அவளைக் கெடுத்துவிட்டு வாருங்கள்' என்கிறார்கள்.

அவர்கள் மூன்றுபேரும் இவளைக் (அனுசூயா) கெடுக்க வருகின்றார்கள். மூன்று பேரும் சந்நியாசி போல வந்து பிச்சை கேட்கிறார்கள். அவள் பிச்சை போட வருகிறாள். 'அம்மா, நாங்கள் ஒரு பூசை முடிக்கணும்; அதை முடித்துவிட்டுத்தான் சாப்பிடவேண்டும்' என்கிறார்கள். 'பூசை என்றால் என்ன வேண்டும்? தேங்காய் வேண்டுமா? பழம் வேண்டுமா?' என்கிறாள். 'அதெல்லாம் வேண்டாம், நீ துணியை அவிழ்த்துப் போட்டு விட்டு வரவேண்டும்' என்கிறார்கள்.

அவள் பார்க்கிறாள். சரி என்று மூன்றுபேரையும் குழந்தைகளாக ஆக்கி, பால் கொடுத்து, தொட்டிலில் போட்டுத் தூங்க வைக்கிறாள். இந்த மூன்றுபேர்களும் இல்லாததால் உலகத்தில் ஒரு வேலையும் நடக்கவில்லையாம். அதாவது, சிருஷ்டி, காப்பு, அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் நடவாமல் நின்றுவிட்டதாம். எல்லோரும் பிறகு வந்து அந்த அம்மாள் காலில் விழுந்து கேட்டு அந்த மூன்று குழந்தைகளையும் திரும்பவும் கடவுள்களாக்கி அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

இப்படியாக ஒருபெண் பதிவிரதையாக இருந்ததைக் கெடுக்க மூன்று கடவுள்களும் வந்து இருக்கின்றனர். இப்படி ஒழுக்கத்திற்கு இடமில்லாக் கடவுள்தன்மை, பெண்களை இழிவுபடுத்தும் சாஸ்திரம், அப்பனுக்கே—ஏன் மனிதனுக்கே பிறக்காத ரிஷிகள், வெங்காயங்கள் சொன்னபடி நடக்காவிட்டால் அந்தக் கலியாணம் செல்லாது என்று பார்ப்பான் சொல்கிறானே?

புராணங்களில் வரும் பதிவிரதைகள் அத்தனைபேரும் கணவனின் சொல் கேட்டு நடந்தவர்கள்தாம். ஒரு பதிவிரதைகூட தன் கணவனை எதிர்த்துக் கேட்டிருக்கமாட்டாள். தன் கணவன் தன்னை நடத்துவது காட்டுமிராண்டித் தனமும் அறிவுக்குப் பொருத்த மற்றதும் ஆக இருக்கிறதே என்று சிந்தித்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாள். கணவனின் ஆசையைப் பூர்த்திசெய்யவே நாம் வந்திருக்கிறோம் என்ற ஒரே நோக்கத்தின்மீது, கணவனின் மனம் கோணாமல் அவன் சொல்வதை எல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் பதிவிரதைகள் என்ற பெயர்கள் இடப்பட்டன.

இப்படிப்பட்ட பதிவிரதைகள்தாம் சீதை, திரவுபதி, சந்திரமதி போன்றவர்கள்.

சீதை கர்ப்பமாக இருக்கிறாள் என்று இராமன் தெரிந்ததும் அவளைக் காட்டிற்கு ஓட்டி விட்டான். சீதையும் மறுத்துப் பேசாமல் காட்டிற்குச் சென்றாள். அவளிடம் அடிக்கடி சந்தேகப்பட்டு அவளைச் சத்தியம் செய்யச்சொல்கிறான். 'நெருப்பில் இறங்கு' என்று கூறினதாக ஒரு இராமாயணத்திலும் கூறப்படுகிறது. அவள் அதன்படி செய்த பின்புதான் அவன் சந்தேகம் தீருகிறதாம். அப்படி இருந்தும் அவளைக் கர்ப்பத்தோடு காட்டுக்கு அனுப்பிவிடுகிறான்.

அடுத்து, மகாபாரதத்தில் வருகிற திரவுபதி என்கிற பெண்ணை மணந்த அர்ச்சுனன் அவளைப் படாதபாடு படுத்துகிறான். அவளைத் தனக்கு மனைவியாக அமைத்துக் கொண்டது மட்டுமின்றித் தன்னுடன் பிறந்த மற்ற நான்கு பேர்களுக்கும் மனைவியாக இருக்கவேண்டும் என்று அவளை—'கோவாப்ரேடிவ் லிமிடெட் கம்பெனி சொஸைட்டி'யைப் போல்—அனுபவிக்கின்றனர்.

இதற்குத் திரவுபதி மறுத்துக் கூறவே இல்லை. அவளும் அப்படியே கணவன் சொன்னபடியே மொத்தம் அய்ந்து பேர்களுக்கும் 'டைம் டேபிள்' குறித்துக்கொண்டு, அதன்படி அய்ந்து பேர்களையும் அனுபவித்துவருகிறாள். அப்படிக் கணவன் சொல்லைக் கேட்டதால் அவள் பதிவிரதை நம்பர் 2..... என்று ஆக்கப்பட்டாள்.

எனவே, இதன் கருத்து என்னவென்றால், ஒருவன் மணந்த மனைவியைக் கணவன் மனது வைத்தால் பல பேர்களுக்கும் இசையும்படி செய்யலாம். அதை மனைவி மறுத்துக் கேட்கக்கூடாது. மற்றும் அவளைச் சூதாட்டத்தில் பந்தயப் பொருளாக வைத்து விளையாடினார்கள். தோற்றுப்போனவுடன் ஜெயித்தவன் பின்னால் அவள் போகும்படி ஆனது. அதற்கு அவள், 'நான் உனக்கு மனைவியாக வந்தேனே தவிர, சூதாட்டத்தில் பந்தயப் பொருளாக வைத்து விளையாடுவதற்கு வரவில்லை' யென்று கேட்கவே இல்லை. கணவன் சொன்னவுடன், ஜெயித்தவன் பின்னால் சென்றுவிட்டாள். அதன் பொருள் மனைவியைப் பந்தயப் பொருளாக உபயோகிக்கலாம் என்பது.

சந்திரமதியை, அரிச்சந்திரன் தான் பட்ட கடனைக் கொடுப்பதற்காக ஒருவனிடம் விற்றுப் பொருள் வாங்குகிறான். அரிச்சந்திர புராணம் என்ன கருத்தைக் கூறுகிறதென்றால், ஒருவன் தன்னுடைய கடனைத் தீர்க்க தன் மனைவியை விலை கூறி விற்று விடலாம் என்பது தான். சந்திரமதி தன் கணவன் தன்னை விலை கூறும்போது, 'நான் உனக்கு மனைவியே தவிர கடனைத் தீர்க்க விற்கக் கூடிய பொருளாக நான் உனக்கு என் பெற்றோர்களால் கொடுக்கப்படவில்லை' என்று கேட்கவில்லை. அரிச்சந்திரன் சொன்னவுடன்விலைக்கு வாங்கியவன் பின்னால் சென்றுவிட்டாள்.

மேலும், இயற்பகை நாயனார் என்ற அடிமுட்டாள் ஒருவன், தான் மோட்சமடைவதற்காகத் தன் மனைவியை ஒரு பார்ப்பானுக்குக் கூட்டிக்கொடுத்தானாம். அவளும் சம்மதப்பட்டு பார்ப்பானுடன் போயிருக்கிறாள்.

ஆனால், அவள் மறுத்துக் கேட்கவில்லை. அவளைப் பெற்ற பெற்றோர்கள் மறுத்துக் கூறவும் அப் பெற்றோர்களைக் கணவன் வெட்டி வீழ்த்தினானாம். உடனே பார்ப்பானுக்கென்று இவன் செய்த தீரச்செயல்களைக் கேள்வியுற்ற பரமசிவன், பார்வதி சமேதரராய்க் காளைமாட்டின்மீது மெயில் வேகமாக வந்து காட்சிகொடுத்து, சொர்க்கத்திற்குப் பாதை காண்பித்துச் சென்றாராம். இக் கதைகளையெல்லாம் நான் நம்புவதில்லையென்றாலும் எவ்வளவு முட்டாள்தனமாகப் பார்ப்பனர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும். தான் மோட்சமடைவதற்காகத் தன் மனைவியை மற்றவனுக்குக் கூட்டிக்கொடுக்கலாம் என்பதற்காக இக் கதை கூறப்படுகிறது.

தாரை என்பவள் ஒரு பத்தினி. தன் கணவனிடத்தில் படிக்கவந்த மாணவனிடத்தில் இவள் சோரம் போனாள். இதனால் உண்டான கர்ப்பத்திற்கு, 'நான்தான் தகப்பன்,

நீ தகப்பன் அல்லன்' என்று சண்டை போடுகிறார்கள். இதற்குப் பரமசிவன் தீர்ப்புக் கூறியிருக்கிறான். பதிவிரதத் தன்மை எப்படி?

அதுபோலவே, அகலிகை ஒரு பத்தினி. இவள் கணவன் கவுதம முனிவர் என்கிற ஒரு ரிஷி. இந்திரன் பெரிய பணக்காரன்; நல்ல அழகன் என்று அறிந்து அவன்மேல் காதல் கொண்டாள். இந்திரனும் இவள் நல்ல பேரழகி என்று கேள்விப்பட்டு இவள்மேல் ஆசைகொண்டான்; முனிவர் இல்லாத சமயம் வந்தான். பின்பு அகலிகை கர்ப்பம் தரித்திருப்பதை அறிந்து, இதற்கு மூலகாரணம் தெரிந்துகொண்டு முனிவர் சாபம் கொடுத்தார். இவ்வளவு ஆதாரத்துடன் அவர்களே எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் பத்தினிப் பட்டியலில் சேர்த்து இருக்கிறார்கள்! ஆரியப் பெண்களை பத்தினிப் பட்டியலில் இவ்வளவு சுலபமாகச் சேர்த்துவிட்டிருக்கிறார்கள்.

அதுபோலவே, கபீர்தாசரின் கதையிலும் அவர் தன் மனைவியைப் பிறனுக்கு அடமானப் பொருளாக வைக்க அதற்கு அந்த அம்மாள் உடன்பட்டதுதான் அந்த அம்மாளுக்குப் பெருமை.

நடுக்காட்டில் சேலையை உருவிக்கொண்டு ஓடிவிட்ட புருஷனாய் இருந்தாலும் அவனைத் தெய்வமாகக் கும்பிட்டாளாம் தமயந்தி.

பாரதக் கதையில், 'பெண்கள் பாப ஜென்மங்கள்; அவர்களுக்கு ஒழுக்கம் என்பது கிடையாது; பாதுகாக்கும் அளவுக்குத்தான் அவர்களிடம் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும்' என்று எழுதியிருக்கிறான். இப்படி இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

ஆனால், இம்முறையானது பார்ப்பனர்களுக்கு ஆபாசத்தை விளைவிப்பதாகத் தென்படவில்லை. அவர்களுடைய பழக்க வழக்கப்படி, இதைப்போன்று பெண்கள் பல பேர்களை மணப்பதும், விபச்சாரத்தனம் செய்வதும், அவர்களுடைய சாதி வழக்கமாக அமைந்துவிட்டது. அதை வெளிப்படுத்துவதற்காகத்தான் பார்ப்பனர்கள் எழுதிய பதிவிரதைகளின் ஒழுக்க முறைகள் விளக்கப்படுகின்றன.

பார்ப்பனர்களுக்கு மான ஈனமும், தன்மானமும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் ஒருவன் கட்டியவளைப் பல பேர்கள் அனுபவிக்கலாம்; மற்றவனுக்குக் கூட்டிக் கொடுக்கலாம் என்ற முறையை அவர்கள் கடைப்பிடித்திருக்கலாம். அம் முறையைத் தமிழ் மக்களிடம் புகுத்தி நம்மையும் முட்டாள்களாக்கிவிட்டனர். அதை உணராத முட்டாள்களும் பார்ப்பனன் கூறியவைகளைச் சிந்திக்கமுடியாத பாமர மக்கள் என்பவர்களும் படிப்பறிவில்லாதவர்களுந்தாம் பார்ப்பனப் புரட்டுகளை அறியமுடியாதுபோய் பார்ப்பனன் கூறியவைகளை நம்புகிறார்கள் என்றால்—படித்தவன், பட்டம் பெற்றவன், அறிவாளி, மேனாட்டுப் படிப்புப் படித்தவன் என்பவர்கள் எல்லாம் நம்பிவிடுகின்றனரே!

மதம், சாதி, உட்பிரிவு, பழக்க வழக்கம் இந்த நான்கின் அடிப்படையில்தான் நம்முடைய சமூகம் இருக்கிறது. சாதி இந்துக்கள் (Caste Hindus), சாதி இல்லாத இந்துக்கள் (Non-Caste Hindus), பஞ்சமர்கள் இந்த மூன்று பிரிவுகளும் இப்போது சட்ட மூலம் அமுலில் இருக்கின்றன. இவர்களில் சாதி இல்லாத இந்துக்கள், பஞ்சமர்கள் வீட்டுத் திருமணங்களுக்குப் பார்ப்பான் வரவேமாட்டான். இவ்வளவு பேதாபேதம் கொண்ட சட்டமும் சமூக அமைப்பும் இருக்கின்றன.

தமிழன் என்பவனுக்கு வருடம் கண்டுபிடிக்க சாதனம் கிடையாது. பார்ப்பான் 10 இலட்சம், 15 இலட்சம், 20 இலட்சம் வருடம் ஒரு யுகம் என்கிறான். நாளைக்கு ஒரு கதையை எழுதி இன்ன யுகத்தில் நடந்தது என்று எழுதி வைத்துவிடுவான். எனவே, வருடம் கண்டுபிடிக்கத் தமிழனுக்குச் சாதனமே இல்லை. இப்போது பிரபவ, விபவ என்று இருக்கிற 60 வருடங்களும் பார்ப்பான் வந்த பிறகு ஏற்பட்டவை. நான் பிரமாதி வருடம்

பிறந்தேன். எனக்கு இப்போது வயது 80. என்னைப் பார்க்கிறவர்கள் வேண்டுமானால்—இப்போது எண்பது வயதிருக்கும் என்பர். ஆகவே, இந்தப் பிரமாதிக்கு முதல் பிரமாதியில் பிறந்திருப்பேன் என்று கண்டுபிடிக்கலாம். அதல்லாமல், பிரமாதி வருடம் இன்ன மாதம் இன்ன தேதியில் பிறந்தேன் என்றால் அதை வைத்துக்கொண்டு எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? பிரமாதி என்றால்—இந்தப் பிரமாதியா, இதற்கு முந்திய பிரமாதியா? முந்திய எத்தனையாவது பிரமாதி என்பது எப்படித் தெரியும்? பிரமாதியில் பிறந்தவன் என்றால் அவன் 500 வருடத்திற்கு முன் இருந்தானா? ஆயிரம் வருடத்திற்கு முன் இருந்தானா? என்பதே கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, தமிழன் என்பவனுக்கு வருடமோ, சரித்திர ஆதாரமோ இல்லை. வருடமாவது பார்ப்பான் வருவதற்கு முன் இருந்ததா என்பது பிரச்சினையாகத்தான் இருக்கிறது. வருடங்களுக்குத் தமிழில் பெயர் இல்லை. எல்லாம் வடமொழியிற்றான் இருக்கிறது. எனவே, பார்ப்பான் வந்தபின் ஏற்பட்டதுதான் இந்த பிரபவ, விபவ என்னும் வருடங்கள். அதற்கு அவன் சொல்லும் காரணம், சொன்னால் சிரிக்கக்கூடியதாகவே இருக்கிறது.

['வாழ்க்கை ஒப்பந்தம்' என்ற நூலிலிருந்து]

14. வாழ்க்கைத் துணைநலம்

மணமக்கள் தாம் ஒருவரை ஒருவர் விரும்பித் தமது கூட்டு வாழ்க்கையைத் துவக்கிக் கொள்ள ஆசைகொண்டு, அதற்காக ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றிக் கொள்ளவும் அதை நமக்கு அறிவிக்கவும் முன்வருகிறார்கள்.

அதாவது, கூட்டு வியாபாரம் தொடங்கும் இரு நண்பர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டி இங்கு வீற்றுள்ளார்கள். வியாபாரம் தொடங்கியபிறகு ஒப்பந்தம் செய்து கொள்வது பெரும்பாலும் கூட்டாளிகளிடையே அதிருப்தி ஏற்படக் காரணமாய் இருப்பதால், இவர்கள் முன்கூட்டியே ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறார்கள். கூடிச் செயலாற்றுதல், கூடி வியாபாரம் செய்தல், கூடிப் பண்ணயம் வைத்தல் ஆகியவற்றிற்குக் கூட்டாளிகள் முன்னாடியே தமக்குள் ஒரு திட்டம் ஏற்படுத்திக்கொள்வது இயற்கையே யாகும்; அறிவுக்கும் பொருந்தியதேயாகும்; மிகவும் அவசியமாகும்.

அதுபோலவேதான், வாழ்க்கை நடத்துவதும் வியாபாரம் நடத்துவது போன்ற ஒரு செயல்தான். வியாபாரத்திற்கு முதலும் உழைப்பும் எப்படித் தேவையோ அதேபோன்று வாழ்க்கைக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அவர்களது இரண்டறக் கலந்த ஒப்புரவும் தேவையாய் இருக்கிறது.

இரு ஆண்கள் சேர்ந்தோ, இரு பெண்கள் சேர்ந்தோ ஒருபோதும் கூட்டுறவு வாழ்க்கை—குடும்ப வாழ்க்கை நடத்த முடியாது. இயற்கையும் அதற்கு இடம் கொடாது. இயற்கையாக ஒரு ஆணும் பெண்ணும் சேர்வது ஜீவ சுபாவத்தை ஒட்டியதுதான். எந்த ஜீவனும் தன் இனப்பெருக்கத்துக்காக ஆணும் பெண்ணுமாக இயற்கையால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அவை ஒன்றோடொன்று ஒட்டித்தான் தீரும். உயிருள்ள பிராணிகள் மட்டுமல்ல—தாவரங்கள் கூடத்தான் ஒன்றுக்கொன்று ஒட்டித் தம் இனத்தை, தம் வர்க்கத்தை விருத்திசெய்கின்றன. விதையிலிருந்து முளை முளைக்கிறது; இலை விடுகிறது; செடியாகிறது; தழைக்கிறது; பூக்கிறது; பிஞ்சுவிடுகிறது; காயாகிறது; கனியாகிறது; மறுபடி செடியாகிறது. இப்படியாக இச்செடி தன் இனத்தைப் பெருக்கி வருகிறது. உலகில் காணப்படும் சகல உயிருள்ள, உயிரல்லாத தாவர வர்க்கத்துக்கும் பொதுச் சுபாவம் இனப் பெருக்கம்தான்.

மனிதனும் அப்படித்தான். மனிதன் குழந்தையாகப் பிறக்கிறான்; வளர்கிறான்; பக்குவத்தில் அதுபோன்ற பெண்ணைக் கூடுகிறான். கூடிய தன்மையின் பயனாகவே ஒரு குழந்தை தோன்றுகிறது; அந்தக் குழந்தை மறுபடியும் வளர்ந்து அதுபோலவே தோற்றமளிக்கிறது. இது ஜீவ சுபாவம். இதன் தத்துவம் தன் இனத்தைப் பெருக்குவது தான். இந்தப்படி மனித வர்க்கம் இனப்பெருக்கம் செய்து வருகிறது. மிருகங்களும் அப்படித்தான். குட்டி பிறக்கிறது; வளர்கிறது; கூடுகிறது; குட்டி போடுகிறது; அது வளர்ந்து மறுபடியும் இனப்பெருக்கம் செய்கிறது. பட்சிகளும் அப்படித்தான். முட்டையிலிருந்து குஞ்சு வெளியாகிறது; அது வளர்கிறது; பிறகு கூடுகட்டுகிறது; முட்டை இடுகிறது; அடை காக்கிறது; குஞ்சு பொரிக்கிறது. அந்தக் குஞ்சு தொடர்ந்து இனப் பெருக்கம் செய்கிறது. இக்கூடுதல் செடிகளில்கூடக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. ஒரு பூவிலுள்ள ஆணின் தன்மை பொருந்திய மகரந்தத் தூள்கள், மற்றொரு பூவிலுள்ள பெண் தன்மை பொருந்திய மகரந்தப் பொடிகளோடு காற்றின் மூலமோ, வண்டுகளின் மூலமோ சேர்ந்தால்தான் காய் உண்டாவதாகக் கூறப்படுகிறது. எனவே, இந்த ஜீவசுபாவ தத்துவம் எல்லோருக்கும் புரிந்த ஒன்றுதான். இதில் புரியாததோ விளங்காததோ ஒன்றும் இல்லை.

இந்த ஜீவ சுபாவத்தின்படிக்கே எல்லா ஜீவராசிகளும் தம் இனத்தைப் பெருக்கிக் கொண்டுதான் வாழ்கின்றன. என்றாலும், மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் கொஞ்சம் பேதம் காணப்படுகிறது. மற்ற ஜீவன்கள் பெரும்பாலும் கூட்டு வாழ்க்கை முறையின்படியே சந்தர்ப்பம் வாய்க்கும்போது—அவசியம் ஏற்பட்டபோது—கூடித் தம் இனத்தைப் பெருக்குகின்றன. மனிதன் பெரும்பாலும் கூட்டு வாழ்க்கை முறையின் மூலமே தன் இனத்தைப் பெருக்கவேண்டுபவனாக இருந்து வருகிறான். இதற்குக் காரணம் மற்ற ஜீவன்களுக்கு இல்லாத பகுத்தறிவு மனிதனுக்கு இருக்கின்றது என்பதுதான். எனவே, அவ்வறிவின்மூலம் மனிதன் தனக்கென்று சில கருத்துக்கள், சில கொள்கைகள், சில திட்டங்கள், சில முறைகள் வகுத்துக்கொண்டு அவற்றின்படிக்கே வாழ்கிறான். அவற்றின் மூலம் தனக்கென்று சில வசதிகள் செய்துகொள்கிறான். மனிதன் தான் தனது உணவைச் சமைத்துச் சாப்பிடுகிறான். மற்ற ஜீவராசிகள் யாவும் இயற்கையாகக் கிடைப்பனவற்றையே உண்டு வாழ்கின்றன. மனிதன்தான் நகைகள், ஆடைகள் போட்டுக் கொள்கிறான். மற்ற ஜீவராசிகள் அணிகளோ, ஆடைகளோ அணிந்துகொள்வதன்மூலம் அழகு, பெருமை ஏற்படுத்திக்கொள்வதில்லை; அவற்றை உண்டாக்கிக் கொள்ளவும் அவைகளால் முடியாது. அப்பகுத்தறிவு உள்ள காரணத்தால்தான், மனிதன் வீடு கட்டி வாழ்கிறான். அவ் வறிவுள்ள காரணத்தால்தான் கூட்டு வாழ்க்கை முறையையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறான். அப் பகுத்தறிவுள்ள காரணத்தால்தான், தன் சமுதாய கூட்டு வாழ்க்கைக்கென்று பல திட்டங்களை வகுத்துக்கொண்டு இருக்கிறான். அத் திட்டங்களை நிறைவேற்றத் தனி மனிதனால் முடியாது; அதற்கு மற்றவர் உதவி இருந்தே தீரவேண்டியிருக்கிறது. இதனாலும் கூட்டு வாழ்க்கையோடு கூடிய சமுதாய வாழ்க்கைமுறை அவசியமாகிறது. இனப் பெருக்கத்தை உத்தேசித்தும் சமுதாய வாழ்க்கை நலத்தை உத்தேசித்தும் கூட்டு வாழ்க்கைமுறை அவசியந்தான்.

வயது வந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் வாழ்க்கையில் பிரவேசிப்பதற்காகத் தங்களுக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்த வினையைத்தான் இன்று நாம் திருமணம் என்கிறோம். அந்த வினைகள் பலவிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன. அத்தனை விதங்களுக்கும் ஆதாரமோ, அவசியமோ என்ன என்பதற்கு யாராலும் காரணம் சொல்ல முடியாவிட்டாலும், ஏதோ பழக்கம் என்று சொல்லிக்கொண்டு தங்கள் கவுரவங்களையும் நினைத்துக்கொண்டு என்னமோ செய்துவருகிறார்கள். உலகில் மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் மாற்றம் ஏற்பட்டு வருவதுபோல், இத் திருமணம் என்கின்ற முறையிலும் காலதேச வர்த்தமானத்தைப் உத்தேசித்துப் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. மற்றும் பல துறை

களிலும் அநாதியான பழக்கவழக்கம் என்பவைகளில்கூட அறிவு விசாலத்தை முன்னிட்டும் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன.

தமிழர்களுக்குத் திருமண முறை எது என்று ஆதாரம் சொல்லமுடியுமா? புலவர்களைக் கேட்டால் புராணத்தைக் காட்டுவார்கள். பரமசிவனுக்கும் பார்வதிக்கும் நடந்தது; இராமனுக்கும் சீதைக்கும் நடந்தது என்பார்கள். இந்தப் புராணங்கள் நமக்கு ஏது? எப்படி, எப்போது வந்தன?

இதெல்லாம் எப்படித் தமிழர் திருமண முறையாகும்? சரித்திர ஆதாரம் உண்டா? முதலாவது, தமிழனுக்கு நாளும் இல்லை; கோளும் இல்லை. இவற்றிற்கு அடியோடு ஆதாரமில்லை. காலை 4-30 மணிக்குத் திருமணம் என்பதும் பொருத்தமில்லாத சடங்கேயாகும். முகூர்த்தம், நட்சத்திரம், லக்கினம், எதுவும் தமிழ்ச் சொல் அல்ல. முதலில் தமிழனுக்கு வருஷமே இல்லை. 60 ஆண்டுகளும் தமிழ்ச் சொற்கள் அல்ல. அந்த வருஷங்கள் பிறப்பைப்பற்றிய கதையோ ஆபாசம்! ஆபாசம்! நாரதனுக்கும் கிருஷ்ணனுக்கும் சேர்ந்து பெற்ற பிள்ளைகளாம் அவைகள்! இப்படி பாகவதம் முதலியவைகள் சொல்லுகின்றன. கிறிஸ்தவனுக்கு வருஷக் கணக்கு இருக்கிறது; முஸ்லிம்களுக்கும் உண்டு. ஆனால், தமிழனுக்கு வருஷம் இல்லை. பார்ப்பானைக் கேட்டால் ஏதாவது புளுகுவான். அவன் தமிழர் வாழ்க்கையை நாசம் பண்ண இவைகளைப் புகுத்தி இருக்கிறான். தனது பிழைப்புக்கு வழிதேடிக் கொண்டிருக்கிறான். இவைகளை நாம் நம்புவதும் நம் அறியாமை—நம் மடமை எத்தனை டிகிரி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

இதுமாதிரித் திருமணங்களில், மற்றும் தமிழர் வாழ்க்கை நடப்புகளில் பழந்தமிழர் கொள்கை என்பதைப்பற்றிப் பேசக்கூடாதென்றும் அதைக் கொண்டுவந்து மேற்கோள் காட்டக் கூடாதென்றும் எனது தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பழந்தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? இன்று அவசியம் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக அந்தப் பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களைச் சுரண்டவோ தங்கள் எண்ணத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளவோ பயன்படுகிறது. பழந்தமிழன் யாராயிருந்தால் எனக்கென்ன? உங்களுக்குத்தான்என்ன காரியமாகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சாதியோ எதுவாய் இருந்தால்தான் இங்கு இன்று நமக்கு என்ன இலாபம்? என்பதுதான் எனது கேள்வி.

இனிக் காதல் மணம் என்பதைப்பற்றிப் பேசுவோம். பழங்காலக் காதல் மணம் இன்று மிருகப்பிராய மணம் என்றே சொல்ல வேண்டும். காதல் என்பது மிகமிக சாதாரண அற்ப விஷயம். காதலுக்கு அடிமையாவது இன்றைய சமுதாய வாழ்க்கை முறைக்குச் சிறிதும் பொருந்தாது. கண்டதும் காதல்கொண்டு, காதல் பசி தீர்ந்ததும் சலிப்படைந்து, அதன் பயனைப் பிறகு வேதனையுடன் பொறுத்துக்கொண்டிருப்பது என்றால் அது இன்ப வாழ்க்கையாக இருக்கமுடியாது. உண்மையைப் பேசவேண்டுமானால், யாரைப் பார்த்தாலும் யாருக்குக் காதல் இல்லாமல் இருக்க முடியும்? சமுதாயக் கட்டுப்பாடுகள் பல இருப்பதால், காதல் கொள்வதும் ஏமாற்றம் அடைவதுமாக வாழ்வு முடிகிறதே ஒழிய வேறில்லை. காதலை அவரவர் உள்ளத்திற்கே விட்டுவிடுவோம். ஆனால், வாழ்க்கைத் துணை விஷயத்தில் காதல் போதாது. அறிவு, அன்புப் பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானவையாகும். பழங் காலத்தில் காதலே போதுமானதாக இருந்திருக்கலாம். அப்போதைய அறிவுக்கு அவ்வளவுதான் தேவையாக இருந்திருக்கும். இப்போதைய அறிவுத் திருமணம் வாழ்நாள் முழுவதும் பொருந்தும்படியாக இருக்க வேண்டும். மனித வாழ்வையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இச்சையின் பெருக்கம்தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்றுவிடுகிறது. மற்ற பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு அந்த இச்சைப் பெருக்கம் இருவருக்கும்

போதவே போதாது. ஆகையால், அறிவையும் நிகழ்ச்சிப் பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி, வாழ்க்கைத் தன்மையைக் கொண்டு வாழ்க்கைத் துணையைப் பொருத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும். ஆதலாலேயும் பழைய தமிழர் மண முறைகளுக்கோ ஆரியர் மண முறைகளுக்கோ இங்கு வேலை கிடையாது. அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின்மீது ஏற்பட்ட மணமுறைகளுக்கே இங்கு வேலை உண்டு. அவை பழையதானாலும், புதியதானாலும், தமிழனுடையதானாலும், வேற்று நாட்டுக்காரனுடையதானாலும், அய்ரோப்பியனுடையதானாலும் இருந்துபோகட்டும். மண முறைக்குப் பழைமையைத் தேடித் திரிய வேண்டியதில்லை.

நான் ரஷ்யாவில் பார்த்தேன். திருமணம் என்ற முறையில் அமைப்பும், ஏற்பாடும் இல்லாமலேயே வாழமுடியும் என்பதை. இதற்குக் கட்டுப்பாடற்ற காதல் (Free Love) என்று பெயர். இந்த முறையும் அங்கு அமுலில் வைத்து இருக்கிறார்கள். இது எப்படி சாத்தியமாகிறது என்றால், அந் நாட்டு மக்கள் சோற்றைப்பற்றிக் கவலையில்லாமல் வாழ்கிறார்கள்; சுதந்திரமான வாழ்க்கை ஆண்-பெண் உறவிலும் நடத்துகிறார்கள். சொத்து, வாரிசு, உரிமை இருப்பதால்தான் நம்முடைய சமுதாயத்தில் கட்டுப்பாடு உள்ள குடும்ப முறை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதைத்தான் உயர்ந்த முறை என்று கூறி மதவாதிகள் வாழ்கிறார்கள். காதல் என்பதற்கும் கலியாணம் என்ற ஏற்பாட்டிற்கும் எந்தவிதத்திலும் சம்பந்தமில்லை. கலியாணம் செய்துகொண்ட பெண்ணிடம்தான் காதல் உணர்வு உண்டாகவேண்டும் என்ற இயற்கை நியதி இல்லை. தான் கலியாணம் செய்து கொள்ளாத பெண்ணிடம்கூட காதல் உணர்வு ஏற்பட்டுவிடலாம். இதை இயற்கையால் தடுத்துவிட முடியும்.

எந்தப் புலவரையாவது கேளுங்கள்! எப்படி அந்தக் காலத்தில் திருமணம் நடந்தது என்றால், நந்தவனத்தில் ஒரு ஆண் மகன் போவான். எதிர்த்தாற் போல் ஒரு பெண் வருவாள்; இரண்டு பேரும் பார்த்துக் கொள்வார்கள்—காதல் பொங்கியது; திருமணம் நடந்தது என்பார்கள். எங்கே இம்மாதிரி உண்மையில் நடக்கிறது? யாராவது தன் வீட்டுப் பெண்ணைப் பார்த்து, 'அம்மா நந்தவனத்திற்குப் போய்விட்டு வா' என்று அனுப்புவார்களா? கதவு கொஞ்சம் திறந்து இருந்தாலும், 'ஏன் அதிகமாகத் திறந்து வைத்து இருக்கிறது? உள்ளே வா' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் அடைத்து வைப்பார்களே தவிர, அம்மாதிரி அனுப்புவார்களா? இது எல்லாம் வெறும் கதைதான்.

அப்பாவும் அம்மாவும் பார்த்து ஒருவனுக்குக் கொடுத்து அடங்கி இருக்கவேண்டும்; அவ்வாறு இருந்தால் தான் கற்பு. அல்லாமல் பெண்ணும் பிள்ளையும் பார்த்துக் கொண்டால் உடனே களவு என்றாகிவிடும். நாம் இப்பொழுது செய்வது புதியதா அல்லது பழைய முறையா என்று கேட்கலாம்; அதை எப்படிச் சொல்ல முடியும்? அதாவது ஒரு முறை இருந்தால்தானே இதைப்பற்றிச் சொல்லலாம்? என்ன பெயர்?

இம்முறையில் எவை எவை தேவையோ அவை மட்டும் பின்பற்றப்படுகிறதே அன்றி தேவையற்றதும் அறிவுக்குப் பொருத்தமற்றதும் பின்பற்றப்படுவதில்லை. காரணம், இது வரை நடந்த திருமண முறைகள் எல்லாம் மாற்றமடையும் நிலை வந்துவிட்டது. பல்வேறு துறைகளில் உலகம் மாறுதல் அடைந்துகொண்டே போகிறது. அப்படி மாறுதல் அடையும் போது இந்த முறையிலும் மாற்றம் அடைந்து வருகிறது.

வைதிக முறைப்படி செய்யும் திருமண முறைகள் எல்லாம் நம் மக்களுடைய நாகரிகத்துக்கும் பண்புக்கும் பொருத்தமற்றவை என்பது தெரிந்தவுடன் அம்முறை நீக்கப் பட்டுவிட்டது. வைதிகம் என்ற சொல்லே வேதம் என்ற சொல்லினின்று வந்த வார்த்தை யாகும். சிவத்திலிருந்து சைவமும் விஷ்ணுவிலிருந்து வைஷ்ணவமும் வந்தது போல் வேதத்திலிருந்து வைதிகம் என்ற சொல் வந்தது.

வேதம் என்ற சொல் பார்ப்பனர்களால் புகுத்தப்பட்டதாகும். சரித்திரத்தில் கூட வேத காலம் என்று புதிதாக வந்ததைக் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். வேதம் என்பது ஒரு காலத்தில் புதியதாக வந்ததாகும். அப்பொழுது மக்களிடையில் வேதம் என்பது மட்டும் புகுத்தப்பட்டதேயன்றி வேதம் என்றால் என்ன என்பது புகுத்தப் படவில்லை.

அன்றியும், அதை யாரும் அறிந்துகொள்ளாமல் இருப்பதற்கு அதற்குப் பல நிபந்தனைகளையும் உண்டாக்கினர். வேதத்தைப் படித்தால் நாக்கை அறுக்கவேண்டும்; கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்; படித்து மனத்தில் பதியவைத்தால் நெஞ்சைப் பிளக்கவேண்டும் என்று பயம் காட்டி அதைப் பற்றி யாரும் அறிவதற்கே முடியாதபடி செய்துவிட்டனர்.

ஆனால், மக்கள் பின்பற்றுவதோ, எதையும் வைதிக முறைப்படி பின்பற்றுவது என்ற முறை வழக்கத்திலேயே வந்துவிட்டது. பிறர் மெச்சிக் கொள்வதற்காகிலும் எங்கள் வீட்டில் வைதிக முறைப்படிதான் செய்வது வழக்கம் என்று பெருமையாகப் பேசிக் கொள்ளுவதும் உண்டு. முன் கூறியபடி, வேதத்தின்படி நடப்பதாக வைதிகர் பெருமை யாகப் பேசிக் கொள்வதும் உண்டு. வேதம் என்ற சொல்லில் இருந்து வைதிகம் என்பது வந்தபோதிலும்—வேதத்தில் கூறப்படும் முறைக்கும், வைதிக முறைப்படி நடப்பதற்கும் சம்பந்தமே கிடையாது. முன்புதான் வேதத்தை ஆராயக்கூடாது என்று கூறி, வைதிக முறைப்படி என்று பலமுறைகள் ஏற்படுத்தி அதன்படி பின்பற்றிவந்தார்கள்.

ஆனால், இப்பொழுதோ வேதத்தை எல்லாம் அலசிப் பார்க்கும்போது அதன் யோக்கியதை என்னவென்று புரிந்துகொள்ளும் காலம். இப்பொழுது அதன் யோக்கியதை எல்லாம் வெளியாகிறது. ஆகவே, வேதத்துக்கும் வைதிக முறைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று தெரிகிறது. ஆனால், வைதிக முறைப்படி நடைபெறும் அத்தனையும், பார்ப்பனர்களின் கற்பனைக் கதைகளாகிய புராணங்கள் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. புராணங்களில் எப்படிக் கடவுளுக்கும், கடவுளச்சிகளுக்கும் கலியாணம் ஆன முறைகள்தாம்—வைதிக முறைகள்தாம்—வைதிக முறையில் பின்பற்றப் படுகின்றன. புராணங்கள் அத்தனையும் பார்ப்பனக் கட்டுக் கதைகள். அவைகளில் காணப்படும் ஒன்றுகூட தமிழர்களின் நாகரிகத்திற்கோ பண்புக்கோ ஏற்றதில்லை.

பார்ப்பனர்களின் பழக்கம், வழக்கம், நாகரிகம் இவைகளைச் சித்திரிக்க எழுதப் பட்டவைகள் புராணங்கள் என்பவைகள். அவைகளில் காணப்படும் அனைத்தும் பார்ப் பனர்களின் வாழ்க்கைமுறைகளைக் குறிக்கின்றன. ஆனால், தமிழர்களுடைய நாகரிகத் திற்கும் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமே இல்லாதவைகள். அப்படி இருக்க, புராணங் களில் கூறியபடி நம் மக்களைப் பின்பற்றும்படி செய்துவிட்டார்கள்.

இதற்குமுன் நம்மிடையே ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வாழ்க்கை நடத்த ஆரம்பிக் கும் ஒரு முறை இருந்திருக்கத்தான் வேண்டும். அப்பொழுது அந்நிகழ்ச்சிகளுக்கு ஏதாவது பெயர் இருந்திருக்க வேண்டும்.

புராணப்படி பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் என்ற இந்த மூன்று சாதி யார்கட்கு மட்டும்தான் கலியாணம் செய்துகொள்ள சாத்திரத்தில் இடம் இருக்கிறது. சூத்திரர்களுக்குத் திருமண முறை கிடையாது. நமக்குப் பார்ப்பான் வந்து கலியாணம் செய்துவைப்பது புரோகிதம் என்ற முறை ஆகும். புரோகிதம் என்றால், புராண முறைப்படி நடக்கும் திருமணம் ஆகும். மற்ற மூன்று சாதியார்களுக்கு நடப்பது வைதிக முறைப்படி நடக்கும் திருமணம் ஆகும். வைதிகம் என்றால் வேத முறைப்படி நடக்கும் திருமணம் ஆகும்.

சூத்திரர்கள் என்பவர்களுக்குத்தான் திருமண ஏற்பாடே கிடையாது. நீங்கள் சிந்திக்க வேண்டும். திருமண ஏற்பாடு இல்லை என்பது மாத்திரம் அல்ல, வேறு எந்த ஏற்பாடும் கிடையாது. சூத்திரனுக்குத் திருமணமே இல்லையென்றால்—வேறு எப்படி நடக்கிறது என்றால், நீங்கள் கவனித்து இருந்தால் தெரியும். சாதாரணமாகத் திவசம் முதலியவைகளைச் செய்யும்போதுகூட சூத்திரன் என்பவனை வேறு சாதியாக மாற்றித் தான் பார்ப்பான் காரியம் செய்கிறான். அதாவது, அவனுக்கு அந்தச் சமயத்தில் பூணூல் போட்டு அவனைச் சத்திரியனாகவோ, வைசியனாகவோ மாற்றித்தான் காரியங்கள் செய்கிறான். அதைத் தவிர, சூத்திரனுக்கு எந்தக் காரியமும் செய்யத் தனி ஏற்பாடு எதுவும் இல்லை. இன்று இருப்பது சூத்திர சாதி, பிராமண சாதி என்ற இரண்டு சாதிகள்தாம். சூத்திரர்களில்தான் பல பிரிவுகள்—முதலியார், நாயுடு இப்படியெல்லாம். இவர்களுக்குள் திருமணம் செய்துகொள்வதானது சாஸ்திர சம்பிரதாயப்படிகூடக் கலப்பு இல்லை.

'இந்து லா'வில் பிராமணன், சூத்திரன் என்ற பிரிவுகள் உண்டே தவிர நாயுடு, செட்டியார், படையாச்சி, பிள்ளை என்ற தனி வகைகள் இல்லை. ஆகையால், பார்ப் பனரைத் தவிர்த்து நாம் எல்லோரும் ஒரே சாதிதான். திராவிடர் என்று சொல்லலாம். மதப்படி, சாஸ்திரப்படி பார்த்தால் சூத்திரச் சாதிதான்.

மேல்சாதிக்காரனுக்குத்தான், அதாவது பார்ப்பானுக்குத்தான்—பூணூல்காரனுக்குத் தான் திருமணம் செய்துகொள்ள உரிமை உண்டே தவிர, சூத்திரனுக்கு உரிமை கிடையாது. அண்மையில் நடந்த, சிதம்பரம் செட்டியார்–ரங்கம்மாள் திருமணத் தீர்ப்பைப் பார்த்தாலே தெரியுமே!

திரு. சிதம்பரம் செட்டியார் தம் பிள்ளைகளுக்குச் சொத்துப் பிரிவினை சம்பந்தமாக ஒரு வழக்குப் போட்டார். அதில் அப்பீல் செய்த அவருடைய முதல் மனைவியின் மகனின் மனைவி (சிதம்பரத்தின் மருமகள்) சுயமரியாதைத் திருமணம் செல்லாது என்றும், எங்கள் சொத்தை இரண்டாகத்தான் பங்குபோட வேண்டுமென்றும், என் மாமன் மக்களுக்கு (ரெங்கம்மாள் குழந்தைகட்கு) இந்தச் சொத்தில் பங்கு கிடையாது; அவருக்குப் பிள்ளை இல்லை; அவர் கலியாணம் செல்லாது என்பதாகவும் குறிப்பிட்டார். அவருடைய இரண் டாம் மனைவியும் இறந்த பிறகு அவர் (திரு. சிதம்பரம் செட்டியாரே) நமது முறைப்படி செய்துகொண்ட தனது மூன்றாம் மனைவியின் இரண்டு மக்களுக்கும் பங்கு உண்டு என்று சொன்னார்.

அதற்கு நீதிபதி அவர்கள் சொன்னார்கள்: 'சூத்திரர்களுக்குக் கலியாணம் இல்லை'. பெண்டாட்டியும், வைப்பாட்டியும் ஒன்றுதான் என்றும் கலியாணம் செல்லாது என்றும், இதற்கு ஆதாரமாக நாரதர், பராசரர், யாக்ஞவல்கியர், மனு ஆகியோர் சொல்லி யிருக்கின்றார் என்பதாகவும் ஜட்ஜ்மெண்டிலேயே காட்டினார். அதற்கு வக்கீல், 'சடங்குகள் செய்தே திருமணம் செய்து இருக்கிறார்கள்' என்று சொன்னார். அதற்கு நீதிபதி அவர்கள், 'அந்தச் சடங்குகள் என்பது கலியாணச் சடங்குகள் அல்ல. கலியாணத்தை உடைக்கும் சடங்குகள் என்றுதான் சொல்லவேண்டும்; ஆகவே, திருமணம் செல்லாது' என்றார்.

இன்னொரு கேசிலே நீதிபதி சொல்லுகிறார்: 'திருமணத்திற்கு ஏதாவது சடங்குகள் இருந்தால் போதும் என்று'. இதிலேகூட எவ்வளவு முரண்பாடுகள்!

அதற்கு வக்கீல் அவர்கள், 'திருமணம் செல்லுமோ, செல்லாதோ அதைப்பற்றிக் கவலையில்லை; இவர்களுக்குச் சொத்துக்கு ஏதாவது வழி செய்யுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டார்.

அதற்கப்புறம் ஜட்ஜுக்குப் பரிதாபம் வந்தது. 'ஓஹோ; அப்படியா? இதற்கு வேண்டுமானால் வழி சொல்லுகிறேன்' என்று சொல்லி, 'சூத்திரர்களுக்கு மனைவிக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும், வைப்பாட்டிக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான சொத்துரிமைதான். ஆகவே, சொத்தை நான்காகப் பிரித்து அதில் மூன்று பங்கு உங்களுக்கும் ஒரு பங்கு இன்னொரு மகனுக்கும் ஆகப் பிரித்துக் கொடுக்க வேண்டும்' என்பதாகத் தீர்ப்புச் சொல்லி இருக்கிறார். 'சூத்திரர்களுக்குத்தானே திருமண முறை கிடையாது என்கிறீர்கள்? நாங்கள் வைசியர்கள், எங்களுக்குத் திருமண முறை உண்டல்லவா?' என்று எதிரி கேட்டதற்கு, 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சூத்திரர்கள் என்பதாகத்தான் பிரிவி கவுன்சில் தீர்ப்பு இருக்கிறது' என்று ஜட்ஜ் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

சூத்திரர்களுக்குக் கலியாணம், சொத்து, திவசம் எதுவும் கிடையாது. கலியாணமோ, திவசமோ செய்வதானால் முதலில் புரோகிதன் நம்மைச் சூத்திரனிலிருந்து மாற்றுவதற்காகப் பூணூலைப்போட்டு வைசியனாக்கித்தான் பிறகு சடங்குகள் செய்வான்! சடங்குகள் முடிந்ததும், 'பூணூலைக் கழற்றி ஆற்றில் போட்டுவிடு' என்பான்.

சூத்திரனுக்குச் சொத்து என்பதாக ஒன்றும் கிடையாது. சூத்திரனுடைய சொத்தைப் பார்ப்பான் கொள்ளை அடிக்கலாம்; திருடலாம். அது குற்றம் ஆகாது. சூத்திரன் சொத்து வைத்திருப்பதுதான் குற்றமாகும். இது மனுநீதியில் உள்ளது! நமது இயக்கம் வலுத்துவிட்டதால் இதில் பார்ப்பனர் அடங்கிக் கிடக்கிறார்கள்; ஒன்றும் செய்ய முடியவில்லை. பார்ப்பானுக்குச் செல்வாக்கும், பலமும் இருந்தால் இப்பொழுதும் அந்தப்படிதான் செய்வான்.

எதற்காகப் பார்ப்பான் என்றும் சூத்திரன் என்றும் அவர்ணஸ்தர்கள் என்றும் பிரித்தார்கள் என்றால், இவர்கள் ஒற்றுமையாக இருந்தால் தங்களுக்கு ஆபத்து என்று கருதியே இப்படிப் பிரித்தார்கள். தமிழர்களுக்குள்ளாகவே நான் மேல்சாதி, நீ கீழ்சாதி என்று சண்டை போட்டுக்கொண்டால் தம்மிடம் சண்டைக்கு வரமாட்டான் என்பதாகக் கருதியே பார்ப்பான் இம் மாதிரி சூழ்ச்சி செய்து இருக்கிறான்.

மற்றபடி வைசியன் ஏது? சத்திரியன் ஏது? ஆசாரி பூணூல் போட்டுக் கொள்வதனாலேயே தன்னை மேல் சாதி என்று கருதிக்கொண்டு இருக்கிறான். அது போல்தான் பார்ப்பனர் முதலியவர்களும்.

ஆந்திராவில் உள்ள நாயக்கர்களுக்குப் பூணூல் உண்டு. எதற்காக? தன்னை மேலான சாதி என்று மற்றவர்கள் நினைப்பதற்காகத்தான்.

அதனால்தான், ஜஸ்டிஸ் கட்சியில் இருந்த ஆந்திரர்கள்கூடத் தங்களைத் திராவிடர் என்று சொல்லிக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால், திராவிடன் என்றால் சூத்திரன் என்று எங்கு அவன் நினைத்துக் கொள்வானோ என்று கருதியே திராவிடன் என்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சூத்திரன் என்றால் வைப்பாட்டி மக்களுக்கும் பணம் (பங்கு) கொடுக்கவேண்டும். மற்ற மேல்சாதியாரின் வைப்பாட்டி மக்களுக்குக் கீழ்சாதி மனைவி மக்களுக்குப் பங்கு சொத்து, பாத்தியம் கிடையாது.

நாம் திராவிடர்; நமது திருமணம் திராவிடர் திருமணம்தான். ஆனால், இந்த முறையில்தான் திராவிடன் பழங்காலத் திருமணம் நடந்ததென்றோ அல்லது இப்படியேதான் திராவிடர் எதிர்காலத்திலும் திருமணங்கள் நடத்தவேண்டும் என்றோ நான் முடிவுகட்டவில்லை. இது திராவிடர் திருமணம் என்றாலும் நான் இதை 1946ஆம் ஆண்டு (தற்கால நிலைக்கேற்ப) திருமணம் என்றும், இதுவே இன்று எல்லா உலக மக்கள் திருமணமாக இருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறேன். ஆனால், இது மாறாமல் இப்படியே

இருக்கவேண்டும் என்று நான் சொல்லுவதில்லை. 1946ஆம் வருடத்தியது என்று சொல்லுவதானால் 1950க்கும் இருக்கவேண்டும் என்பது கருத்தல்ல. இந்த மாற்றம் நம் சவுகரியத்தையும் அறிவையும் மனிதத் தன்மையையும் பொதுநலத்தையும் குறிக்கொண்ட மாற்றமாகும்.

இதனினும் மேலான நலனுக்கும் தெளிவுபட்ட அறிவுக்கும் ஏற்றபடி நாளைக்கோ 1956ஆம் வருடத்திலோ மாற்றம் ஏற்படலாம். அப்படி ஆகக் கூடாது என்று இந்த 1946ஆம் ஆண்டு திருமண முறை சொல்லாது. 1912ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஃபோர்டு மோட்டார் கார் முறை (அமைப்பு) 1946-ல் இல்லை. இன்று வேறு மாதிரியாகிவிட்டது. இதுவும் 1947-ல் இருக்காது. மாற்றம் அடைந்து தீரும். இந்த மாற்றம் எல்லாம் அறிவின் திறம், சவுகரியம் முதலியவற்றைப்பற்றியது. ஆனால், நமது திருமண முறையானது மாற்றம், அறிவு சவுகரியம் மாத்திரம் அல்லாமல், சமுதாய அமைப்பு, அரசியல் சட்டம், பொருளாதார உரிமை, சொத்து சுதந்திரம் ஆகியவைகளையும் அடிப்படையாகக் கொண்டதாதலால் அவற்றிற்கு ஏற்றவண்ணம் அது மாறுதல் அடைந்துதான் தீரும். திருமணம் தேவையா—ஒப்பந்தம் தேவையா என்பதுகூட சிந்தனைக்கு விருந்தாக ஆகிவிடலாம். ஆகவே, வரப்போகிற காலம் ஆராய்ச்சி-பகுத்தறிவு சர்வ துறையிலும் சம சுதந்தர வேட்கைக் காலமாக இருக்கும். ஆதலால், அதை இந்த மூடநம்பிக்கை பெரிதுமாயும், பகுத்தறிவு சிறிதுமாயும் இருக்கிற காலத்தில் கட்டுப்படுத்துவது பயன்படாது. மண முறைக்கும் பழமையைத் தேடித்திரிய வேண்டியதில்லை. இன்றுள்ள எந்த மனிதனுடைய அறிவும் அனேகமாய் பழமைக்கு இணைந்ததாய் இருக்காது. இருந்தாலும் நிலைமை தானாகச் சரிப்படுத்திவிடும். காலநிலைக்கும் சமுதாய நிலைக்கும் அறிவு முதிர்ச்சி நிலைக்கும் ஏற்றபடிதான் முறைகள் தானே வகுக்கப்பட வேண்டியவைகளேயொழிய—ஒரு காலத்து முறைகளே எக் காலத்துக்கும் என்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள். அந்தப்படி எந்த மனிதனும் தன் அனுபவத்தைச் சொல்ல முடியாது என்று கூறுவேன்.

இதில் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் அறிவிற்கும் மேற்பட்ட காரியம் எதையும் கலக்கக்கூடாது. கலக்குவதானால்—அதை எழுதி நெருப்பில் போட்டு அது பொசுங்காமல் இருக்கிறதா என்று பார்த்த பிறகே அறிவைக் கடக்கவேண்டும். இந்த நிலையில் ஏதோ சிலர் தாங்கள்தாம் அறிவாளிகள், மற்றவர்கள் அறிவிலிகள் என்பது கற்றறிந்த மூடர்கள் குணங்களேயாகும்.

புரோகிதன் எதற்கு? புரோகிதன் என்றால் என்ன என்பது முதலில் யோசிக்கத் தக்கதாகும். இன்று புரோகிதன் என்பவனுக்கு உள்ள இலட்சணம் எல்லாம் முதலில் அவன் பெரிய சாதிக்காரனாக இருக்கவேண்டும். அவனுடைய நடத்தை, தன்மை முதலியவைகளைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. பெரிதும் நமக்குத் தெரியாத மொழியில் அவனுக்குப் புரியாத சடங்குகளைச் செய்யச்சொல்லி, பணம் வசூலித்துக் கொண்டு போகின்றவனைத்தான் இன்று புரோகிதன் என்கிறோம். மற்றும், அவன் காலில் நாமும் மணமக்களும் விழுந்து கும்பிடுகிறோம்; இவற்றைத் தவிர, புரோகிதனுக்கு வேறு இலட்சணம் சொல்லுங்கள், பார்க்கலாம்; அல்லது வேறு பயனையாவது சொல்லுங்கள், பார்க்கலாம். இந்தப் புரோகிதன் நமக்கு எதற்கு என்று உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அவன் நமது தமிழ் மக்கள் திருமணங்களில் எந்தக் காலத்தில் வந்து கலந்து கொண்டான் என்று உங்களுக்குள் யாருக்காவது தெரியுமா?

நாம் செய்த முதல் மாறுதல் நம் திருமணங்களில் புரோகிதமோ, பார்ப்பனனோ இல்லை என்பதாகும். ஒருவரை மேலான பிறவி, தாழ்ந்த பிறவி என்பதாக நாம் ஒப்புக் கொள்வதில்லை. அதற்காகப் பார்ப்பனத் துவேஷமோ, அவர்களிடத்தில் வெறுப்போ நாம் கொள்ளவில்லை. நாம் கீழான சாதி என்று ஒப்புக் கொள்வதற்கில்லை. அவ்வளவுதான்.

மேலும், கூட்டங்களில் நெய்விட்டு நெருப்பு உண்டாக்குவதுபோன்ற புரியாத சடங்குகளையும் செய்வதில்லை. இது நமக்கும் தெரியாத ஏதோ ஒரு பழக்கம். அது எப்பொழுது உண்டாயிற்று என்று நமக்குத் தெரியாது; அதைச் செய்கின்ற புரோகிதனுக்கும் தெரியாது. நாம் உஷ்ண நாட்டில் வாழ்வதால் குளிர் காய நெருப்பு அவசியம் இல்லை. சாப்பாட்டிற்குப் போட்டுக்கொள்ள வேண்டிய நெய்யை நெருப்பில் ஊற்றும் முட்டாள்தனத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்கிற முடிவிற்கு வந்துவிட்டோம். அதுபோலவே, வேறு பல காரியங்களையும் வெறுக்கிறோம். ஏதோ காலத்திற்கு, உணர்ச்சிக்கு, பழக்கத்திற்கு அல்லாமல் இன்னும் இன்ன ஆதாரத்தோடு இன்ன காரியம் செய்யப்பட்டது என்பதாக ஒன்றும் வரவில்லை. புராணத்தில் வேண்டுமானால் அதுமாதிரி, இது மாதிரி சொல்லியிருக்கிறது என்று சொல்வானேதவிர ஆதாரம் என்று ஒன்றையும் காட்ட முடியாது.

திருமணத்தில் எதற்காகப் பார்ப்பானை அழைக்க வேண்டும்? திருமணத்திற்கும் பார்ப்பானுக்கும் என்ன சம்பந்தம்? உதாரணமாக வேண்டுமானால் சொல்லுவேன்: வீடு கட்டுகிறோம்; வீடு கட்ட வேண்டுமானால் கொத்துக்காரனை அழைக்கிறோம். அவனை மேல்சாதி என்பதற்காக அழைப்பதில்லை. கொத்துக்காரன் அருமையாக வீட்டைக் கட்டிக் கொடுக்கிறான். நாம் சுகமாக வாழ்வதற்கு வீடு கட்டுவதோடு சரி; அவன் வேலை முடிந்து விட்டது. பார்ப்பானைத் திருமணத்திற்கு அழைத்தால் என்ன செய்கிறான்? நம்மிடம் இருந்து பொருள்களை அபகரித்துக்கொண்டு போவதோடல்லாமல், நம்மைக் கீழ்மக்கள் என்றும் தாசி மகனென்றும் கூறி, பார்ப்பான்மட்டும்தான் உயர்சாதி என்றும் கூறி, நம்மை இழிவுபடுத்துகிறான்! அப்படி இருக்கப் பார்ப்பானை எதற்காக அழைக்கவேண்டும்?

பார்ப்பானை வைத்துத் திருமணம் செய்வதெல்லாம் ஒரு நூற்றாண்டுக்குள்தான் பரவிற்று என்றுதான் சொல்லவேண்டும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. 60, 65 ஆண்டுகளுக்கு முன் எங்கள் வீட்டுத் திருமணத்திற்கு வந்து 500 பேர்களுக்கு மேலாக மொய் (அன்பளிப்பு) எழுதினார்கள். அவர்களுக்குத் திருப்பி மொய் எழுதுவதற்கு என்னைத்தான் என் வீட்டிலே அனுப்புவார்கள். அதனால் பல திருமணங்களைப் பார்த்து இருக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் இப்படி எல்லோரும் பார்ப்பானைத் திருமணத்திற்கு அழைப்பதில்லை. அப்படித் திருமண வீட்டிற்கு பார்ப்பான் வந்தால் பிச்சை வாங்குவதற்குத்தான் அங்கு வருவான். அதுவும் உள்ளேகூட அழைப்பது இல்லை. வெளியே ஒரு திண்ணையில் வந்து உட்கார்ந்துவிட்டுப் போகும்போது ஆளுக்கு ஓரணா, இரண்டணா, பெரிய மனிதர்களாக இருந்தால் ஆளுக்கு 8 அணா, ஒரு ரூபாய் பிச்சையாய்க் கொடுப்பார்கள். அதை வாங்கிக்கொண்டு சென்றுவிடுவான். கலியாணம் செய்துவைக்கப் பரியாரி (நாவிதன்)தான் வருவான். அவன்தான் மணமக்களை ஆசிகூறி வாழ்த்திச் செல்வான்.

அப்பொழுதெல்லாம் மணப் பெண்ணுக்கு யார் தாலி கட்டியது என்றுகூட அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. மணப் பெண் வரும்போதே முகத்தை நன்றாக இழுத்து மூடிக் கொண்டேதான் வரும். இந்த நிலையில் எப்படித் தாலி கட்டுவது? அல்லது தாலி கட்டியவர்கள் யார் என்று பெண்ணுக்கு எப்படித் தெரியமுடியும்? மாப்பிள்ளைக்கு அக்காளோ, தங்கையோ, அத்தையோதான் பெண்களுக்குத் தாலி கட்டுவார்கள். இந்த வழக்கம் எல்லாம் சாதாரணமானவர்களல்ல—பெரிய மனிதர்கள், ஊத்துக்குழி ஜமீன்தார், பட்டக்காரர் வீட்டிலேயெல்லாம்கூட இருந்து வருகிறது.

நாயக்கர் சாதியிலேயெல்லாம் சாத்தாணியைத்தான் புரோகிதம் சொல்ல அழைப்பார்கள். சாத்தாணி என்றால் பூணூல் சாத்தாதவன் என்று அர்த்தம். பின்னர்தான்—அதுவும் எங்களூரில் எங்கள் வீட்டிலேதான்—அதுவும் நாங்கள் சிறிது பணக்காரர் ஆனபின்

முதன்முதலாக சாத்தாணியையும் பார்ப்பானையும் சேர்த்து அழைக்க ஆரம்பித்தோம். அது எப்படியோ நாளடைவில் பார்ப்பானே நிரந்தரமாகப் புரோகிதம் செய்யும்படியான நிலையில் வந்துவிட்டது. சாத்தாணி தட்சிணை வாங்குபவனாகிவிட்டான்.

அப்படிப் பார்ப்பானை அழைப்பதால் என்ன விளைவு ஏற்படுகிறது? சுற்றி வளைத்துப் பார்த்தால் மிஞ்சுவது நாம் கீழ்சாதி என்பதுதான்.

ஆகவே, இதுபோன்ற நிலையை உடைப்பதுதான் எங்கள் வேலை. இதையெல்லாம் சொல்லிவிட்டால், பார்ப்பான் நா கூசாமல் நம்மைப் பார்த்து நாத்திகன் என்று கூறி விடுவான். நம் இன மடையர்கள் அதை நம்பிவிடுவார்கள்! நம் மக்களுக்கு இன உணர்ச்சியே இல்லாத காரணத்தால்தான் நாம் சமுதாயத்தில் இன்னும் மலக்குழியில் வாழ்கின்ற புழுக்களைப்போல் வாழ்கின்றோம்.

திருமணத்தில் எதற்காகக் கடவுளை அழைக்கவேண்டும்? திருமணத்திற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? அவசியம்தான் என்ன? ஒட்டலுக்குப் போகும்போதும், கக்கூசுக்குப் போகின்றபோதும் கடவுளைக் கூப்பிடுகிறோமா? அங்கெல்லாம் கூப்பிடாத கடவுளைத் திருமணத்திற்கு எதற்காக அழைக்கவேண்டும்? இதைக் கேட்டால் உடனே நம்மை நாத்திகன் என்று சொல்லிவிடுவான். இது என்ன நியாயம்?

சடங்குகள் ஏற்படுத்தியதன் நோக்கம் எல்லாம் அவற்றால் சாதியை நிலைநாட்டவேயன்றி வேறல்ல; எதற்காகச் சடங்குகளைச் செய்யவேண்டும்? அதனால் என்ன பயன்? என்று கேட்டால், ஒன்றும் தெரியாது என்று சொல்லுவார்களேயொழிய, அதன் அவசியம் இன்னது என்று சொல்லமுடியாது. யாரைக் கேட்டாலும், 'இது எங்கள் சாதி வழக்கம்', 'அது அவர்கள் சாதி வழக்கம்' என்றுதான் சொல்லுகிறார்கள். அவரவர்கள் சாதியைப் பாதுகாக்கவே ஒவ்வொருவிதமான சடங்குகள் என்பதாக ஆக்கி, நிரந்தரமாக நம்மைப் பிரித்துவைக்கவே இந்தச் சடங்குமுறையை ஏற்படுத்தினார்கள்.

இன்று வன்னியர் சாதியை எடுத்துக் கொள்ளுங்களேன். அதிலேயும் எத்தனை பிரிவு தெரியுமா? திருமணங்களிலே பானையை அடுக்குவதும், 10 பானைகள் அடுக்குவதும், பந்தல் முட்டுகிறவரைக்கும் பானைகள் அடுக்குவதும், இப்படியாக இன்னும் பல வழக்கங்கள் உண்டு. இதில், 'நீ என்ன வன்னியர்?' என்று கேட்டால், 'பந்தல் முட்டு வன்னியர்' என்பார். அப்படி என்றால்—பந்தல் முட்டும்வரைக்கும் பானையை அடுக்கும் வழக்கமுடையவர் என்பதாகும். இந்த வழக்கம் எல்லாம் எங்கள் பக்கம்—பவானி பகுதியில்—கேட்டால் சொல்லுவார்கள். ஆகவே, சாதியைப் பாதுகாக்கவே இந்தச் சடங்குகளை ஏற்படுத்தினான். அப்படி இருக்க எதற்காக இந்தச் சடங்குகள் வேண்டும்? திருமணத்திற்கு மாலை மாற்றிக்கொண்டாலே போதுமானதாகுமே!

திருமணம் எதற்கென்று பார்த்தால்—ஒருவன் என்ன மதம், அவன் என்ன சாதி, என்கின்ற உட்பிரிவைக் காட்டிக்கொள்வதற்குத்தான் புகுத்தப்பட்டன. ஒரு மனிதன் கிறிஸ்தவனா, இந்துவா, முஸ்லிமா என்று திருமணம்போன்ற காரியங்களில் கண்டுபிடித்து விடலாம். இந்து மதத்தில் எடுத்துக்கொண்டால் பார்ப்பனர், சூத்திரருள்ளும் தேவாங்கர், படையாச்சி, பறையர், சக்கிலி இவர்கள் வேறு வேறு முறையில் சடங்குகளைச் செய்து திருமணங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். இப்படி வாழ்க்கைத் துறையில் பலவிதமாக, சாதிக்கொரு தினுசாகச் சடங்குகளைப் புகுத்திவிட்டார்கள். அருமைத் தோழர்களே! இந்தப் பழக்க வழக்கங்களையெல்லாம் நாம் கண்டிக்கிறோம்.

ஒவ்வொரு காரியத்திற்கும் பார்ப்பான் கட்டிவைத்திருக்கும் ஒவ்வொரு கட்டும் இப்போது உடைந்துவருகிறது. சாதகம் பார்க்கவில்லை; ஒரு கட்டு உடைந்தது. முகூர்த்தம் பார்க்கவில்லை; இன்னொரு கட்டு உடைந்தது. இராகுகாலத்தில் நடந்தது; இன்

னொரு கட்டு உடைந்தது. இப்படிப் படிப்படியாக பக்குவமான [Perfect] பகுத்தறிவுவாதியாக வரவேண்டும். இராகுகாலம், சாதகம் இதெல்லாம் பெருத்த தொல்லை.

எங்கள் அண்ணாவுக்கு இதில் ரொம்பவும் பைத்தியம்! எங்கள் குடும்ப சாதகத்தையே அச்சுப்போட்டு வைத்திருக்கிறார். அதில் எனக்கு 60 வயதுதான்! ஆனால் அதைத் தாண்டிவிட்டேன். அவர் சாதகம் என்ன ஆயிற்று? நானோ எனக்கு 42 வயதுதான் என்று நினைத்துக்கொண்டிருந்தவன். ஏன்? எனது சிநேகிதர்கள் 42 வயதுவுடன் செத்துப்போனார்கள். அதனால், எனக்கு 42 வயதுதான்—அதுவரைதான் இருப்பேன் என்று நினைத்துக்கொண்டு இருப்பேன். 42 வயது இருந்துவிட்டோம். இனிமேல் மிச்ச வயது எப்படியாவது போகிறது. 42 வயது முடிந்தவுடன் காங்கிரசில் சேர்ந்தேன். சாதகத்தில் எனக்கு 60 வயது என்று எழுதி வைத்திருந்தது—இன்று என்ன வாயிற்று? இதையெல்லாம் எடுத்துச் சொல்ல வேறுயார் இருக்கிறார்கள்?

மாட்டு சாதகத்தையும் மனித சாதகத்தையும் சோதிடனிடம் காட்டினால், எது மாட்டு சாதகம், எது மனிதனின் சாதகம் என்று அவனுக்குச் சொல்லத்தெரியாது. அண்ணன் சாதகத்தையும் தங்கை சாதகத்தையும் புரிந்துகொள்ள முடியாது அவனால். இருவருக்கும் அவன் கலியாணப் பொருத்தம் சொல்லுவான். கடவுளாலேயே சொல்லமுடியாதே! கடவுள் சிலை முன்னால் சிவப்பு விபூதிப் பொட்டலம் கட்டிப்போட்டு எடுத்தால் மாறுதலாகத் தீர்ப்புக் கிடைக்கிறதே! நமக்குத் தன்மான உணர்ச்சி வேண்டும்.

சாத்திரம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, பூ வைத்துக் கொள்ளக் கேட்பது—இவைகள் எவ்வளவு இழிவான தன்மை? பொருத்தம் என்றால் ஆண் பெண்ணைப் பார்க்கவேண்டும், பெண் தன்னைக் கட்டிக்கொள்ளப்போகும் ஆணைப் பார்க்கவேண்டும். ஒருவருடைய குணத்தை மற்றவர் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வண்டிக்கு ஒரு மாடு வாங்க வேண்டுமானால் இருக்கின்ற மாட்டுக்குப் பொருந்துமாறு எவ்வளவு கஷ்டப்பட்டு ஜோடி சேர்க்கிறோம்? சாதாரணமாக, நாய் குட்டிபோட வேண்டுமென்றால் நல்லரக நாயாகப் பார்த்துத்தானே சேர்க்கிறோம்? அதுபோலத்தானே குதிரையும்? ஆனால், மனிதனுக்கு ஜோடி சேர்ப்பதற்கு மாத்திரம் ஏன் அழுக்குப்பிடித்த பார்ப்பானிடம் போய்ப் பொருத்தம் கேட்கவேண்டும்? மருமகளின் குணம் மாமியாருக்குத் தெரியாது. கணவன் குணங்கள் மனைவிக்குத் தெரியாது. சாதகத்தைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, வீட்டைப் பார்த்துப் பரவாயில்லை என்று கூறி வந்துவிட்டால் திருமணம் தீர்ந்துபோயிற்றா?

திருமணம் செய்துகொள்பவனுக்குச் சாதகமே இருக்காது. சோதிடம் பார்ப்பவன் சாதகம் இல்லை என்றால், 'பரவாயில்லை' என்று கூறிவிட்டுக் 'கையை நீட்டு' என்பான். இப்படிக் கையை நீட்டி விரலைப் பார்த்துப் பொருத்தம் கண்டுபிடித்தால் என்ன அர்த்தம்? தாய் பெயரைச் சொல்லி பூ போட்டால், சாமி 'ஏண்டா தாய்ப் பெயரைச் சொல்லுகிறாய்?' என்று கூறி, பூவை எடுத்து எறிந்துவிடுமா? இல்லை அக்காள், தங்கை பெயரைச் சொன்னால், 'என்னை என்ன சோதித்துப் பார்க்கிறாயா?' என்று கூறி அடித்து விரட்டுமா! அந்த சாமி—கழுதை, நாய்க்குட்டிப் பெயரைச் சொன்னால்—இவை மிருகத்தின் பெயர் என்று கூறுமா? இப்படி இந்த 1958ஆம் ஆண்டிலுமா நாம் இத்தகைய பைத்தியக்காரர்கள் என்று காட்டிக்கொள்வது?

சகுனம் பார்ப்பது—எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாக வாழ்கிறார்கள்—எத்தனை டிகிரி முட்டாள் என்பதை அளக்கப் பார்ப்பான் வைத்துள்ள அளவுகோலேயாகும். முகூர்த்தம் பார்ப்பது—அஸ்திவாரமே இல்லாமல் ஆகாயத்திலே கட்டுகிற கோட்டைக்கு வாயிற்படி கிழக்கிலா, மேற்கிலா என்று அடித்துக்கொள்ளுவதாகும். காலை 4 மணிக்குத் திருமணம் என்பார்கள். அப்பொழுதுதான் நல்லநேரம் என்பார்கள். எந்த வேலைக்கும் சரியில்லாமல் ஒன்றுமே செய்யமுடியாமல் இடைஞ்சலான நேரத்தில் வைத்துக்கொண்டு

'நேரம், நேரம்' என்று பறக்கிறார்களே எவ்வளவு முட்டாள்தனம் இது! நல்ல இராகு காலத்தில் 3 மணிக்குக் கோர்ட்டிலே கேசுக்குக் கூப்பிட்டால் பேசாமல் இருந்துவிடுவீர்களா? 'எக்ஸ்-பார்ட்டி'யாகிவிடும்—உடனே ஓடுவார்கள்! நல்ல எமகண்டத்தில் இரயில் புறப்படுகிறது என்பதற்காக அதில் ஏறாமல் இருந்துவிடுவார்களா? உலகமெல்லாம் முன்னேறுகின்ற சமயத்தில் நம்முடைய சங்கதியைப் பார்த்தால் எவ்வளவு பிற்போக்கு? முற்காலத்தில் முன்னேறியிருந்தவர்கள் இந்தக் காலத்தில் இம் மாதிரி இருக்கலாமா? நம்மிடமே வாங்கிக்கொண்டு நம்மையே கீழ்மகனாக ஆக்கிவிட்டுப் போய்விடுகிறானே தவிர, 2 படி அரிசி வாங்கிக்கொண்டு போகிறான் என்பதற்காகவா பார்ப்பானை—எதிர்க்கிறோம்? அந்தக் காலத்திலே மோட்டார், ஆகாயவிமானம், இரயில் இல்லை. இப்பொழுது அவைகளையும் பயன்படுத்திக்கொள்கிறோம். நாம் இழிவுபடுத்தப்படுகிற சங்கதிகளை மட்டும் ஏற்றுக்கொண்டு முன்னேற மறுக்கிறோம்.

எல்லாத் துறைகளிலும்—எல்லோர்களுக்குள்ளும் மாற்ற உணர்ச்சி ஏற்பட்டால் ஒழிய நம் நாட்டைப்போன்ற, நம் சமுதாயத்தைப்போன்ற தாழ்த்தப்பட்ட, அடிமையாக்கப்பட்ட நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் விமோசனமில்லை.

பெண்கள், சமுதாயத்தில் சரி பகுதி எண்ணிக்கை கொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றமேயல்லாமல், மற்றபடி பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்டவர்கள் ஆவார்களென்பேன். நாமும் அவர்களை சிசு, குழந்தைப் பருவம் முதல் ஓடி ஆடி விளையாடும் பருவம் வரையில் கொஞ்சி முத்தங்கள் கொடுத்துப் பலவிதத்தும் பேத உணர்ச்சியற்று ஒன்றுபோலவே கருதி நடத்துகிறோம்; பழகுகிறோம். அப்படிப்பட்ட மனித ஜீவன்கள் அறிவும் பக்குவமும் அடைந்தவுடன் அவர்களைப்பற்றி இயற்கைக்கு மாறான கவலை கொண்டு, மனித சமுதாயத்தில் வேறாக்கி—கடைசியாக ஒரு பொம்மையாக்கிப் பயனற்ற ஜீவனாக மாத்திரம் அல்லாமல், அதைப் பெற்றோருக்கு ஒரு தொல்லையான பண்டமாக ஆக்கிக்கொண்டு, அவர்களது வாழ்வில் அவர்களை, அவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கவலைப்படத்தக்க ஒரு சாதனமாகச் செய்துகொண்டு, அவர்களைக் காப்பாற்றவும், திருப்திப்படுத்தவும் பெருமையும் அடையச்செய்ய வேண்டியதான ஒரு அஃறிணைப் பொருளாகவே ஆக்கி வருகிறோம்.

பெண்களால் வீட்டிற்கு, சமுதாயத்திற்குப் பலன் என்ன என்று பாருங்கள்! எங்கு கெட்டபெயர் வந்துவிடுகின்றதோ என்பதுதானே? இன்று பெண்கள் வேலை என்ன? ஒரு ஆணுக்கு, ஒரு பெண்ணாக அமைவது. அது எதற்கு? ஆணின் நலத்திற்குப் பயன்படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக்கும் ஒரு கருவி என்பதல்லாமல் வேறு என்ன என்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஒரு ஆணின் வீட்டுக்கு ஒரு காவல்காரி; ஒரு ஆணின் குடும்பப்பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஒரு ஆணின் கண் அழகிற்கும் மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன்படுத்தப் படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

இது என்ன நியாயம்? மனித சமுதாயம்தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி, ஜந்து முதலியவைகளில் வேறு எந்த ஜீவனாவது, 'ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம்' என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா என்று பாருங்கள்!

இந்த இழிநிலையில் பெண்களுக்கு அவமானமாய்த் தோன்றவில்லை என்பதற்காகவே ஆண்கள், பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன். ஒரு ஆண் ஒரு பெண்ணைத் தனது சொத்து என்று எண்ணுகிறானே, எதனால்? துணி

யாலும் நகையாலும்தானே? பெரிதும் கம்பி இல்லாத் தந்தியும் ரேடியோவும் அணுகுண்டும் கண்டு பிடிக்கப்பட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் அலங்கார பொம்மைகளாக இருப்பதா என்று கேட்கிறேன்.

நான் சொல்வது இங்குள்ள பல ஆண்களுக்கும் ஏன், பெண்களுக்குங்கூட வெறுப்பாய், குறைவுமாய், சகிக்க முடியாதபடியாய்த் தோன்றலாம் என்பது எனக்குத் தெரியும். இந்த வியாதி கடினமானது. தழை அடித்துப் பாடமந்திரம் போடுவதாலும், பூச்சுப் பூசிப் பற்றுப் போடுவதாலும் விலக்கக்கூடிய வியாதியல்ல இது. கூர்மையான ஆயுதத்தால் ஆழப்பட அறுத்துக்கிளறி காரம் (எரிச்சல் மருந்து) போட்டுப் போக்கடிக்க வேண்டிய வியாதி! அழுத்திப்பிடித்துக் கண்டித்து, அதட்டி அறுத்துத் தீர வேண்டியதாகும். நான் வெறும் அலங்காரப் பேச்சைத் தொண்டாகக் கொண்டவனல்லன். அவசியப்பட்ட வேலை நடக்கவேண்டும். என் ஆயுளும் இனி மிகமிகச் சொற்பம். இதையாவது செய்தாக வேண்டும். ஆதலால், கோபிக்காமல் ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள்.

நம் பெண்கள் உலகம் பெரிதும் மாற்றமடைய வேண்டும். நம் பெண்களைப்போல் பூமிக்குப் பாரமானவர்கள், மனிதனுக்குத் தொல்லையானவர்கள் நல்ல நாகரிகமான வேறு நாடுகளில் கிடையாது. இங்கு படித்தபெண், படியாதபெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களும் கணவன்மார்களும் அவர்களது (பெண்ணை) அழகிய பொம்மைத் தன்மையைக்கொண்டே திருப்தியடைகிறார்கள்; பெருமையடைகிறார்கள். பெண்களைத் திருப்திசெய்ய, அவர்களை நல்ல பெண்களாக ஆக்க விலையுயர்ந்த நகையும் துணியும் கொடுத்து அழகிய சிங்காரப் பொம்மைகளாக (பதுமைகளாக) ஆக்கிவிட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பெண் பெருமை, வருணனை ஆகியவைகளில் பெண்கள் அங்கம், அவயவங்கள் சாயல் ஆகியவைகளைப்பற்றி அய்ம்பதுவரி இருந்தால், அவர்களது அறிவு, அவர்களால் ஏற்படும்பயன், சக்தி, திறமை பற்றி ஒரு அய்ந்துவரி கூட இருக்காது. பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழுவது ஆகியவை பெண்கள் சமுதாயத்துக்கு அவமானம், இழிவு, அடிமைத்தனம் என்பதை ஆயிரத்தில் ஒரு பெண்ணாவது உணர்ந்து இருக்கிறது என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

பெண்களுக்குத் தகப்பன் சொத்தில் உரிமை கிடையாதது ஏன் என்று எந்தப் பெண்ணாவது காரணம் கேட்டாளா? 'பெண்களை அனுபவிக்கிறவன்—வேலை வாங்கிப் பயனடைகிறவன் காப்பாற்றமாட்டானா?' என்பதுதான். அதற்கு ஏற்ற அணி, நகை ஆகியவையே போதும்.

அலங்காரம் ஏன்? மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை, துணி, மணி, ஆபரணம் ஏன் என்று எந்தப் பெண்ணாவது, பெற்றோராவது, கட்டினவனாவது சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள்கள் என்பதற்கு இதைவிட வேறுஎன்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக்கொண்டு மற்ற மக்கள் கவனத்தைத் தன்மீது திருப்புவது இழிவு என்றும், அநாகரிகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம்—அவர்கள் போகப்பொருள்கள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவே இருக்கிறது.

நாம் நம் பெண்களை மற்றவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் பலதடவை திரும்பித் திரும்பிப் பார்க்கும்படி—அவர்கள் கவனத்தை நம்மீது திருப்பும்படி அலங்கரிக்கின்றோம். அதில் நமது பணம், உழைப்பு, நம் வாழ்க்கைப்பயன் முதலியவைகளைச் செலவிடுகிறோம். இது ஏன், எதற்காக என்று சிந்திக்காததால் அதைத் தவிர நம் பெண்கள் வேறு காரியத்திற்குப் பயன்படாமல் போய்விட்டார்கள்.

நான் பாமர மக்களை மாத்திரம் சொல்லவில்லை. நம் அறிஞர், செல்வர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரானவர்கள் என்று சொல்லப்படும் பெரியோர்கள் யோக்கியதை

களையும் அவர்கள் பெண்கள் உலகத்திற்கு ஆற்றும் தொண்டுகளையுமேபற்றிச் சொல்லு கிறேன். சர். சண்முகம், சர். குமாரராஜா முதலாகிய திராவிடப் பேரறிஞர், செல்வர்களின் மனைவிகள், தங்கை தமக்கைகள், பெண்கள் எங்கே, எப்படிப் பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படித் தகுதியாக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? ஷாப்புக் கடைகள், ஜவுளிக்கடைகள் ஆகியவற்றிற்கு விளம்பரத்திற்கு வைத்திருக்கும் அழகிய பொம்மைகள், உருவங்கள்போல் அல்லாமல், நாட்டுக்கு—மனித சமுதாயத்திற்குப் பெண்கள் உலகத்திற்கு இவர்கள் என்னமாதிரியான தொண்டாற்ற அல்லது தாங்களாவது ஒரு புகழோ, கீர்த்தியோ பெறத் தக்கபடி வைத்தார்களா என்று கேட்கிறேன். இவர்களே இப்படி இருந்தால் மற்ற பாமரமக்கள் தங்கப்பெட்டியினுள்ளே 'வெல்வெட்' மெத்தை போட்டுப் பூட்டித்தானே வைப்பார்கள்!

பெண்கள் படிப்பு என்பது சுத்தமுட்டாள்தனமான முயற்சியாகவே பெரிதும் இருக்கிறது. படிப்பு, நல்ல மாப்பிள்ளை சம்பாதிக்க ஓர் 'அட்வர்டைஸ்மெண்டாகப்' (விளம்பரமாக) பயன்பட்டது தவிர, மற்றபடி வீணாகப் போய்விட்டதல்லவா? செலவும் தண்டம் தானே என்கிறேன். அதுபோல், ஒரு பெண்ணை தாய், தகப்பன் பி.ஏ., படிக்க வைத்து, ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து அந்தப் பெண் சமையல் செய்யவும், குழந்தை வளர்க்கவும், நகை துணி அலங்காரங்களுடன் மக்கள் கவனத்தை ஈர்க்கவும் செய்தால் பி.ஏ., படிக்கவைத்த பணம் வீண் என்பதோடு—அதற்காக சர்க்கார் செலவழித்த மக்கள் பணமும் வீண்தானே? இது தேசீய குற்றமாகாதா?

இந்தத் துறையில் எந்த அறிஞர்களும் சீர்திருத்தவாதியும் கவலை செலுத்தாமல் எவராலும் இனப்பெருக்கத்திற்கே பெண்கள் ஆளாக்கப்பட்டு விட்டார்கள்.

நான் சில படித்த பெண்களைப் பார்க்கிறேன். வயிற்றில் ஒரு குழந்தை; கட்கத்தில் ஒரு குழந்தை; இவ்வளவோடு சிலருக்கு முன்னால் ஓடும்படியான ஒரு குழந்தையை விட்டுவிட்டு இப்படியாகப் படைகளோடு, நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் கூட்டங்களுக்கு வந்து நடுவிலிருந்துகொண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையூறும் தொல்லையும் கொடுப்பதையும் பார்க்கிறேன். இதற்காக அவர்கள் வெட்கப்படாததையும், சிலர் வருத்தப்படாததையும் பார்க்கிறேன். இது மனித சமூகத்தில் இருக்கத்தக்கதா? அதுவும் நாகரிக சமூகத்தில் இருக்கத்தக்கதா? அதுவும் நாகரிக சமூகத்தில் படித்த பெண்கள், படித்தவர்கள் வீட்டுப் பெண்கள் என்றவர்களிடையில் இருக்கத்தக்கதா என்று கேட்கிறேன். இந்த இலட்சணத்தில் நகைகள், விலையுயர்ந்த துணிகள்! குழந்தைகள் கூட்டத்தில் மலஜலம் கழிக்கும்; கத்தும். ஆபாசம்! இவை ஏன்?

நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தைப் பாங்கியில் போட்டு குறைந்த வட்டி யாவது வாங்கி, குழந்தை பிறந்தவுடன் அதை எடுக்க அந்த வட்டியில் ஒரு ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக்கொள்ளச் செய்தால் அன்பு குறைந்துவிடுமா? பெற்ற தகப்பன் குழந்தையைத் தன்னுடன் கூடவே வைத்துத்தானா அழகு பார்க்கிறான்? அன்பு காட்டுகிறான்? கொஞ்சி விளையாடுகிறான்? ஆகையால் குழந்தையை ஆண்கள் மூலம் வளர்க்கவேண்டும்; சமையல் ஆண்மூலம் செய்விக்கவேண்டும்; பெண்கள் ஆண்களைப் போல் உயர்வேலை பார்க்கவேண்டும்.

ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும்—ஆண்கள் செய்யும், எல்லாத் தொண்டு களையும் பெண்கள் பார்க்க வேண்டும். உறுதியாய் இது முடியும் என்பேன். ஆனால் நகைப் பைத்தியமும், துணி, அலங்காரப் பைத்தியமும் அணிந்துகொண்டு சாயல்—நடை நடக்கும் அடிமை, இழிவு, சுயமரியாதையற்ற தன்மைப்பைத்தியம் ஒழியவேண்டும்.

நம் பெண்கள் நாட்டுக்கு—சமூகத்திற்குப் பயன்படாமல் அலங்காரப் பொம்மை களானதற்கு—ஆண்கள் கண்களுக்கு விருந்தானதற்குக் காரணம் இந்த பாழாய்ப்போன,

ஒழுக்கமற்ற சினிமாப் படங்களையும், சினிமா நட்சத்திரங்களையும் பார்த்து தினம் ஒரு 'பேஷன்' நகை, துணிக்கட்டு, வெட்டு, சாயல் ஏற்பட்டதுவே என்பேன். அந்தப் பெண்கள் தன்மை என்ன? ஒழுக்கம் என்ன? இவை எல்லாவற்றையும் நம்குலப் பெண்கள் என்பவர்கள் கருதாமல், புகழ், வீரம், பொதுநலத் தொண்டு முதலியவற்றால் கீர்த்திபெற்ற ஆண்களைப்போல் தாங்களும் ஆகவேண்டும் என்றில்லாமல் இப்படி அலங்கரித்துக் கொண்டு திரிவது பெண்கள் சமுதாயத்தின் கீழ்ப்போக்குக்குத்தான் பயன்படும் என்று வருந்துகின்றேன்.

நான், டீசென்சி (Decency)—சுத்தம், கண்ணுக்கு வெறுப்பு இல்லாத ரம்மியம் வேண்டாம் என்று சொல்லுவதாக யாரும் கருதக்கூடாது. அது அவசியம் வேண்டும். ஆனால், அது அதிகப்பணம் கொண்ட, மக்கள் கவனத்தை ஈர்க்கத் தகுந்த 'ஃபாஷன்', நகை, துணி வெட்டு போன்ற அலங்காரத்தால் அல்ல என்றும் (Simple) சாதாரண குறைந்த தன்மையில் முடியும் என்றும் சொல்வேன்.

நம் நாட்டுப் பெண்கள் மேல்நாட்டுப் பெண்களைவிடச் சிறந்த அறிவு, வன்மை, ஊக்கம் உடையவர்கள் ஆவார்கள். இச் சீதோஷ்ண நிலை அப்படிப்பட்டது. அப்படி இருக்க, ஒரு ருக்குமணி, ஒரு விஜயலட்சுமி என்கின்ற பார்ப்பனப் பெண்கள்தாமா பொது வாழ்வில் ஈடுபடத்தக்கவர்களாக, மந்திரிகளாக ஆக வேண்டும்? ஏன் நம்மவர்கள் ஏராளமாக வெளியில் வரக்கூடாது? இவர்களைத் தடுப்பது சேலை, நகை, துணி அலங்கார வேஷம் அல்லாமல் வேறு என்ன?

எனவே, பெற்றோர்கள் பெண்களைப் பெண் என்றே அழைக்காமல் ஆண் என்றே அழைக்கவேண்டும். பெயர்களும் ஆண்கள் பெயர்களையே இடவேண்டும். உடைகளும் ஆண்களைப்போல் கட்டுவித்தல் வேண்டும். சுலபத்தில் இது ஆணா, பெண்ணா என்று மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாத மாதிரியில் தயாரிக்கவேண்டும். பெண்களைப் புருஷனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும் கீர்த்தி புகழ் பெறும் பெண்மணியாகவும் ஆக்கவேண்டும். பெண்ணும் தன்னைப் பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கக் கூடாது. ஒவ்வொரு பெண்ணுக்கும், நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? உயர்வு-தாழ்வு என்ற எண்ணம் எழவேண்டும். ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நம் பெண்கள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படக்கூடாது. அவர்கள் புது உலகம் சித்திரிக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. இந்தப்படி பேசுகின்ற தன்மையும் இதற்குத்தான்.

பெண்களைப் படிக்கவைப்பதுடன் நன்றாக அறிவுள்ளவர்களாக்க வேண்டும். மேல் நாட்டில் ஒரு வெள்ளைக்காரனை, 'உன் பிள்ளைக்கு எப்போது கலியாணம்? உன் பெண்ணுக்கு எப்போது கலியாணம்?' என்றால் 'நீ என்ன காட்டுமிராண்டியாக இருக்கிறாயே!' என்பான். பிள்ளை என்றால்—அவன் கலியாணம் எப்போது என்று அவனுக்குத் தெரியும். அவரவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். தனக்கு ஒழுக்கமான, குணமுள்ள ஒருவனைப் பார்த்துப் பெண்ணே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக அறிவுபெற, அவர்களைப் படிக்கவைத்து அறிவுள்ளவர்களாக்க வேண்டும்.

ஆண்களைப்போல் பெண்களையும், 'நீ பெண்; அங்கு போகாதே' என்று சொல்லாமல் சரிசமமாக வளர்க்கவேண்டும். இன்று ஒரு பெண் வெளியில் போவதானால் எவ்வளவு பெரிய பெண்ணாக இருந்தாலும் துணையில்லாமல் போக முடியாது. ஒரு சிறு பையன் போய் வந்துவிடுவான். ஏன்? அப்படி வளர்த்துவிட்டோம். பெண்களுக்கு குத்துச் சண்டை முதற்கொண்டு சொல்லிக்கொடுத்து ஆண்களைப்போலவே வளர்க்க வேண்டும். இந்து மதப்படி பதிவிரதை என்பதற்கு ஒழுக்கம், நற்குணம், நற்பண்பு

இவைகள் தேவையில்லை. கணவன் சொல்லுகிறபடி நடப்பதுதான் பதிவிரதாத் தன்மையாகும். அதை வலியுறுத்தவே புராணங்களில் பதிவிரதைகளின் கதை சித்திரிக்கப்படுகின்றன.

பெண்கள் சுதந்தரமற்ற பொருள்கள். அப் பொருள்களை ஆண் தன் இஷ்டப்படி நடத்தலாம். விற்றும் பணம் சேர்க்கலாம். மோட்சம் அடைய மற்றவனுக்குக் கூட்டிக் கொடுக்கலாம் என்கிற முறையில் பெண்களை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில் பெண்களைக் கொடுமைப்படுத்தி இருக்கும் முறையைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது.

திருமணம் நடக்கும் மேடையிலேயே மணமகன்—கோவலன்—தாசியின்மேல் ஆசைப்பட்டு அவளுடன் போய்விட்டானாம்! கோவலன் திரும்பி வரும் வரையில் கண்ணகி தன்னை அலங்கரித்துக்கொள்ளாமல், கூந்தலை அலங்கரிக்காமலும், பொட்டிட்டுக்கொள்ளாமலும், நல்ல உணவு இல்லாமலும், உப்பில்லாத உணவை உட்கொண்டும் கவலையே உருவெடுத்தும் இருந்தாளாம். எதற்காக இப்படிச் செய்யவேண்டும்?

அந்த இடத்தில் ஒரு ஆணை வைத்துப் பார்த்தால் அப்படி நடக்குமா? மனைவியானவள் கணவனை விட்டு வேறு ஒரு ஆணுடன் போய்விட்டால், அவள் வரும்வரையில் கணவன் இப்படி உப்பில்லாத உணவு சாப்பிடுவானா? பகவான் பார்த்து நம்மிடம் நம் மனைவியைக் கொண்டுவந்து சேர்க்கும்வரையில் கணவன் நமக்குச் சுகம் தேவையில்லை என்று கவலையுடன் இருப்பானா? எனவே, ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது. இப்படியே பெண்களை இழிவுபடுத்த வேண்டும் என்பதற்காக மிகவும் மோசமாகவும் எழுதிவைத்து இருக்கிறார்கள்.

பெண்கள் ஆண்களைப்போல் எதிலும் உரிமைகொள்பவர்களாய் இருக்கவேண்டும்.

நாசமாகப்போகிற கற்பு, கற்பு என்று சொல்லி நம் பெண்களை எவ்வளவு கேவலமாக ஆக்கிவிட்டார்கள்? பார்ப்பானோ மிகக் கெட்டிக்காரன்! ஆயிரம் பேர்களை அவள் பார்த்து இருந்தால்கூட பத்தினியாக்கி விடுவான்! சீதை, துரோபதை, தாரை இவர்களே இதற்கு உதாரணம். கற்பு என்றால் இரண்டு பேருக்கும் ஒரேமாதிரியாக அல்லவா இருக்க வேண்டும்? பைத்தியக்காரத்தனமாக மூட நம்பிக்கைகளைப் புகுத்திப் பாழாக்கி விட்டார்கள்.

கட்டுப்பாட்டிற்காகவும் நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒரு காலமும் கூடாது! கூடவே கூடாது! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும் காதல் அன்பிற்காகவும் இருவரையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கிற கற்பு மாத்திரம் அடிமைப்படுத்துவதில்—ஆசை, மூர்க்கத்தனமே அல்லாமல், அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை.

பாவத்திற்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், காவலுக்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், மானத்திற்குப் பயந்து பதிவிரதையாயிருப்பவளும் ஒரே யோக்கியதை உடையவளே ஆவாள்.

தசரதன், கிருட்டிணன் முதலியோர் 60,000 மனைவியரோடும், கோபிகா ஸ்திரீகளோடும் வாழ்ந்து இருக்கின்றனர்.

சுப்பிரமணியனுக்கும் கிருட்டிணனுக்கும் இருபுறங்களிலும் இரு மனைவியர் இருக்கிறார்களே, அதைப்போல் அம்மனுக்கு இருபக்கங்களிலும் ஆண்களை வைக்க முடியுமா? இந்த மாதிரியாகப் பெண்கள் விஷயங்களில் ஒழுங்கீனமாக நிறைய நடத்தி இருக்கிறார்கள்.

இப்பொழுது ஒரு மனைவி இருக்க மற்றொரு மனைவியைக் கட்டிக்கொண்டால் தண்டனை. தாசியிடம் தொடர்பு கொண்டிருந்தால்கூடப் போதும். ஆதாரத்துடன் காட்டி, 'நான் என் கணவனுடன் வாழ இஷ்டம் இல்லை; எனக்கு இவ்வளவு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும்' என்று தன் அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரி மனைவி தொகை கேட்கலாம். முன்பு இப்படிக் கேட்டால் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? ஆண் அப்படித்தான் செய்வான். ஆண் வெள்ளிச் செம்பு; பெண்ணோ குயவன் சட்டி போன்றவள். ஆண் அதில் கழுவிக் கழுவி எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்பொழுது அது மாதிரிக் கூற முடியாது.

இந்தப்படியுள்ள மாறுதல்கள் எல்லாவற்றிலும் பெண்களுக்குத்தான் இலாபம். குழந்தை விளக்கெண்ணெய் குடிக்கும்போது மிகவும் கஷ்டப்படும். பிறகு அந்த நன்மை குழந்தைக்குத்தான். அதுபோல, பெண்கள் இதை எதிர்த்தார்கள். பிறகு நமக்குத்தான் நன்மையாக இருக்கின்றது என்று அறிந்தவுடன் வாய் மூடிக்கொண்டு விட்டார்கள். பார்லிமெண்டில் பெண்களுக்குச் சொத்துச் சேரவேண்டும் என்று சட்டமாக நிறைவேறி விட்டது. இதனால் பெண்களுக்குச் சரிபங்கு சொத்து கிடைக்கும். இதனால் பெண்கள் ஆண்களைவிட அதிகமாகப் பணக்காரர்களாக ஆகலாம். ஏனெனில், பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் சொத்து சேருகிறது.

இப்போது பெண்கள் படித்து முன்சீப், கலெக்டர், மந்திரியாக வேலை பார்க்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் சம உரிமை கொடுத்தால் ஆண்களைவிட நன்றாக வேலை செய்வார்கள். 4 ஆண்களும் 1 பெண்ணும் குடும்பத்தில் இருந்தால் முதலில் அந்தப் பெண்ணைத்தான் படிக்கவைக்க வேண்டும். அப்படிப் படிக்கவைத்தோமே யானால் நம்மையெல்லாம் வண்டியில் வைத்து ஓட்டுவார்கள்.

வாழ்க்கை இன்ப துன்பங்களிலும் போக போக்கியங்களிலும் இருவருக்கும் சம உரிமை உண்டு என்றும் குறிப்பிட, சமத்துவ சுபாவம் மிளிரும் மாறுதல் அவசியமா, இல்லையா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்கள் மனைவிமார்களை நினைத்துக்கொண்டே யோசிக்காதீர்கள். உங்களுடைய செல்வப்பெண் குழந்தைகளையும் அன்புச் சகோதரிகளையும் மனத்தில் கொண்டு யோசித்துப்பாருங்கள். உங்கள் தாய்மார் சுதந்திரவாதிகளாய் இருந்தால் நீங்கள் எப்படி இருந்து இருப்பீர்கள் என்பதையும் யோசித்துப்பாருங்கள். இன்று உலகில் கீழ் சாதியார் என்பவர்களுக்குச் சம சுதந்திரம் வேண்டும் என்று போராடுகிறோம். அரசாங்கத்தினிடம் இருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரமாய் வாழ வேண்டும் என்று போராடுகிறோம். அதே போராட்டத்தை நமது தாய் மார்கள் விஷயத்திலும், நமது சகோதரிகள் விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? அந்தப்படி கவனிக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களானால், அதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைவிட வேறு சந்தர்ப்பம் ஏது என்று கேட்கிறேன். புரோகிதம் இல்லாத தாலேயே நாத்திகம் என்றும், பெண்ணுக்குச் சம சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதனாலேயே சுயமரியாதைத் திருமணம் என்றும் சொல்லப்படுகிறது. அந்தப்படி சொல்லப்படுவதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. திருமணங்களில் ஆத்திக, நாத்திகத்திற்கு இடமே இல்லை. நாத்திகம் அவரவர்கள் மன உணர்ச்சி, ஆராய்ச்சித் திறன் ஆகியவைகளைக் கொண்டதே தவிர—அது ஒரு குணமல்ல; ஒரு கட்சி அல்ல; ஒரு மதம் அல்ல. ஆகையால், திருமண முறை மாறுதல்களில் நாத்திகத்திற்கு இடமில்லை. கடவுள் நம்பிக்கைக்காரர்கள் இந்த இடத்தில் கடவுள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? என் போன்றவர்கள் அப்படிச் சொல்லுவதனால் எந்தக் கடவுள் நம்பிக்கைக்காரராவது அதை நம்ப முடியுமா? அதனால், இதில் நாத்திகத்தைப் புகுத்துவது சரியல்ல. புரோகிதன் இல்லாததே நாத்திகம் என்றால்—அவன் இல்லாமல் செய்யும் மற்ற அனேக காரியங்கள் நாத்திகம் என்றுதான் அர்த்தம். ஆதலால், அதையும் நாம் இலட்சியம் செய்யவேண்டிய

தில்லை. மற்றொரு விஷயமான ஆண், பெண் சமத்துவம் என்கின்ற சுயமரியாதை சிலருக்குப் பிடிக்கவில்லையானால் நாம் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

எதற்காக ஆணுக்குப் பெண் அடிமையாக இருக்க வேண்டும்? இஷ்டப்படாவிட்டால் என்ன செய்யமுடியும்? அதற்கு என்ன நிர்ப்பந்தம் செய்ய, யாருக்குப் பாத்தியம் உண்டு? ஆகையால், வேறு எந்தக் காரியங்களில் மாறுதல் இல்லாவிட்டாலும் இந்த வாழ்க்கைச் சுதந்திரத்தில் சம சுதந்திரம் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். சுயமரியாதை இயக்கத்தின் முதல் இலட்சியமே அதுவாகும். ஆதலால், அது விஷயத்தில் உள்ள—ஏற்படப்போகும் மாறுதலை மக்கள் வரவேற்றுத்தான் ஆகவேண்டும்.

மேல்நாட்டிலே உள்ள வெள்ளைக்காரர்கள் பெண்களுக்கு மிகவும் மரியாதை கொடுத்து வாழ்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் நாகரிகம் உள்ள மக்களாக மாறினார்கள். பெண்களை அடக்கி ஆளுவதும், அவமரியாதையாக அழைப்பதும், பேசுவதும் ஆண்கள் முதலில் தம் மனைவிகளிடம் விளையாட்டாக ஆரம்பிக்கிறார்கள். கடைசியில் பெற்ற தாயைக்கூட மரியாதைக் குறைவாகப் பேசுகிறார்கள். இந்தக் கெட்ட பழக்கத்தை ஒழித்துவிட்டுப் பெண்களுக்கு மரியாதை செலுத்தி வாழவேண்டும்.

மணமக்கள் இருவரும் சிநேகிதர்களாக நடந்து கொள்ளவேண்டும். 'நான் ஆண் பிள்ளை' என்று அதிகாரம் பேசக்கூடாது. இருவரும் சிநேகிதர்கள் என்று கருதி இருக்க வேண்டும்; அதிகாரம் என்பதை வெறுக்கவேண்டும்; அன்பாக எவ்வளவு வேலை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம்; மிரட்டக்கூடாது. இம் மாதிரியான காரியங்களால்தான் உடலில் அதிகமாக அன்பு உண்டாகின்றது. வாழ்க்கையில் சதா அடிதடி நடந்தால் என்ன பயன்? வாழ்க்கை அன்புருவாக இருக்கவேண்டும். ஆண்கள் மெதுவாகத்தான் திருத்த வேண்டும். மணமக்கள் தங்களுக்காகவே என்று இல்லாமல் மற்றவருக்காகவே வாழ்கின்றோம் என்று எண்ணவேண்டும். இந்துமதம் மக்களிடையில் புகுந்து கெடுத்துவிட்டது. 'தான் மாத்திரம் மோட்சம் போகவேண்டும்' என்று எண்ணும்படி செய்துவிட்டது. நாம் தாம் மனிதர்கள் என்றில்லாமல் மற்றவர்கள் நமக்காக இருக்கிறார்கள் என்று எண்ண வேண்டும். கக்கூஸ் எடுப்பவர்கள், வீதியில் குப்பை கூட்டுபவர்கள் தங்கள் சுயநலத்திற்காகவா வேலை செய்கிறார்கள்? அதுபோல் நாமும் நடக்கவேண்டும். அதுதான் பரந்தநலப் பான்மையாகும்.

இந்தத் துறையில் மேல்நாட்டைப் பார்த்தால் இன்பமாக இருக்கும். ஒரு மனிதரும் அங்கு பிறருக்கு அசவுகரியமாக நடக்கமாட்டார்கள். இரவு 10½ மணி ஆகிவிட்டால் விருந்தாளி, உறவினர் வீட்டுக்குப் போய்த் தொல்லை கொடுக்கமாட்டார்கள். தாயானாலும் முதலில் சொல்லிவிட்டுத்தான் வருவார்கள். அந்தப் பழக்கம் நம் நாட்டில் குறைவு. மோட்டாரில் ஏறக் கும்பலாய் இருக்கும். அதில் ஒரு தடியன் பின்னாலிருந்து எல்லோரையும் இடித்துத் தள்ளிக்கொண்டு போய் ஏறிவிடுவான். இம் மாதிரித் துன்பம் கொடுக்கிறோமே என்பது பற்றிச் சிந்திக்க மாட்டான். ஆனால், அந்தக் காரியம் நம் நாட்டில் கெட்டிக்காரத்தனம் என்று பாராட்டப்படுகிறது. மற்றவர் மனைவிகளை நாம் இடித்துத் தள்ளுகிறோம் என்று கருதுவதும் இல்லை; நம் மனைவியையும் இப்படித்தானே இடிப்பார்கள் என்று எண்ணிப் பார்ப்பதும் இல்லை.

ஆணுக்குப் பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்துப் போட்டுச் சாப்பிடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; நண்பனைப் போன்றவள்—வாழ்க்கைக்குத் துணைவி அவள். இருவருக்கும் உரிமை ஒன்றே. தகப்பன் சொத்தில் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சரிபங்கு உண்டு. அவர்கள் பதவியும் வகிக்கலாம். அவர்களின் பதவிக் குறைக்குக் காரணம் அவர்களைப் பக்குவப்படுத்தாததுதான். அவர்களுக்கு நல்ல அறிவையும், நல்ல பழக்க வழக்கங்களையும் அளிக்கவேண்டும். அன்னாரிடமிருந்து மூட

நம்பிக்கையை அகற்றவேண்டும். உதாரணமாக, பகவான் குழந்தைகளைக் கொடுப்பதாக நினைக்கின்றார்கள். பகவான் ஒன்றும் கொடுப்பதில்லை; டாக்டர் சிகிச்சையால் கொடுக்க முடியும்; நிறுத்த முடியும். பகவானுக்கும் குழந்தைக்கும் சம்பந்தமேயில்லை. எனவே, திட்டப்படி பிள்ளைகளைப் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும். அதிகப் பிள்ளைகளால் அதிகத் தொல்லைதான். இதைப் புரிந்துகொள்வது முக்கியமானது.

இன்னும் பெண்களை விட்டிலேயே அடைத்து வைக்கிறோம். வெளியில் அனுப்பினால் அல்லவா அறிவு வளரும்? அப்படி அனுப்புவதென்றால், சந்தைக்கு அனுப்புகிறோம் அல்லது கோயிலுக்கு அனுப்புகிறோம். அங்கேயா அறிவு வளரும்? ஆகவே, இந்தச் சங்கதியெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்னும் நாம் பழமை விரும்பிகளாக இருக்கக்கூடாது. மேல்நாடுகள் நாகரிகத்தில் முன்னேறியுள்ளன. உலகமே மிக வேகமாகத் திருந்தி மாறிவருகிறது. பல புதிய சாதனங்கள் உண்டாகி வருகின்றன. அமெரிக்கா கூப்பிடு தூரத்தில் வந்துவிட்டது. இந் நிலையில் நாம் இன்னும் சாதி, சடங்கு, பார்ப்பான் இவைகளைக் கட்டிவைத்துக் கொண்டு இருந்தால் எப்பொழுது மேலே போவது என்று சிந்திக்கவேண்டும். காலம் தாழ்த்தக்கூடாது. ஆனால், நான் சொல்வதை அப்படியே நம்பவேண்டும் என்பதில்லை; தவறாகப் புரிந்து கொள்ளவும் வேண்டியதில்லை. நேர்மையோடு சிந்தியுங்கள். உங்கள் மனத்தையே கேட்டுப்பார்த்து ஆராயுங்கள்! அதன் பிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மணமக்கள் கண்ணைக் மூடிக்கொண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. அவசரப்படாமல் அய்ந்து வருடத்துக்குப் பிறகு பிள்ளை பெற்றுக்கொண்டால் நல்லது. மனைவியைக் கொஞ்சித் தீர்க்காமல், திருமணமான உடனே குழந்தை பெற்றுக்கொண்டால் மனைவியைக் கொஞ்சுவதா அல்லது குழந்தையைக் கொஞ்சுவதா? பிறகு வாழ்க்கையின் இலட்சியம் என்ன இருக்கிறது? அநாவசியமாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால் உடம்புக்குக் கெடுதல்தான். திருமணமான பத்து வருடத்தில் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டால் அவர்களை எப்படிப் படிக்கவைக்க முடியும்; வைத்திய வசதி செய்ய முடியும்? வாழ்க்கை நடத்த முடியும்?

இதற்காகச் சட்டம் செய்ய முயற்சித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் போஸ்ட் ஆபீசில் மாத்திரை விற்கப்போகிறார்கள். கடவுளுக்கு மேலே உத்தரவு போடப்போகிறார்கள். 'கடவுள் கொடுத்தார்; எல்லாம் பகவான் செயல்' என்பதும், 'பூச்சி, புழு ஒன்று கொடேன்' என்று நம் பெண்கள் வேண்டிக் கொள்ளுவதும் தவறு என்று அறிவு சொல்லுகிறது.

மணமக்கள் கூடுமானவரைக்கும் ஒரு அய்ந்து ஆண்டுகளுக்காவது பிள்ளை பெறாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். பிள்ளைகளை ஏராளமாகப் பெற்றுவிட்டு, 'பகவான் அந்தப் பிள்ளைகளை வளர்க்க வருவான்' என்று சொல்லிக்கொண்டு, ஒழுக்க ஈனமாய் நடந்து, மற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்தல் ஆகியவை செய்வார்கள். ஒழுக்கக் கேட்டுக்கு, அதிகப் பிள்ளைகளைப் பெறுவதும் காரணமாகும். நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே இதை உணர்ந்து, கர்ப்ப ஆட்சியைப் பற்றி எழுதி இருக்கிறேன். புத்தகமும் போட்டேன். அப்பொழுது 'ஜஸ்டிஸ்' பத்திரிக்கை முதல் மற்ற பத்திரிக்கைகளும் எதிர்த்தன.

எனக்குப் பிள்ளை குட்டிகள் இருந்தால் இந்த அளவுக்குக் கூடத் தொண்டு செய்ய முடியுமா? நல்ல யோக்கியர்கள், பொதுத் தொண்டர்களாக இருந்தவர்கள் எல்லாம் மக்கள் பெருக்கால் அயோக்கியர்கள், சுய நலக்காரர்களாக ஆகிவிட்டார்கள்! இது இயற்கை.

தன் புகழ் என்றும் நிலைக்கவாகிலும் பிறருக்காகத் தொண்டுசெய்யுங்கள்.

ஒவ்வொருவரும் பொது நலத்திற்காக என்ன செய்தோம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு வீடு எப்போதும் அவன் வீடாக இருக்கவேண்டுமே யானால் பொதுவாக்கப் பட்டால்தான் அவன் வீடாக இருக்கும். அதுபோல முடிந்தவரை ஒவ்வொருவரும் பொது நலத்திற்காக ஏதாவது செய்யவேண்டும்.

தனக்காக மட்டிலும் வாழ்வது என்பது ஒழுக்கமாக ஆக முடியாது. சமுதாயத்திற் காகவும் மணமக்கள் வாழவேண்டும். சமுதாயத்திற்காகப் பணிபுரிய வேண்டும். வரவுக்குள் செலவு செய்யவேண்டும். அதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, எதிர் காலத்துக்கும் சேமித்து வைக்கும் பழக்கம் வேண்டும். ஒழுக்கத்தோடு வாழ்கிறேன் என்று சொல்லிக்கொண்டு உங்கள் வீட்டுக் கதவை மூடிக்கொண்டு வாழாதீர்கள்.

முக்கியமாகக் கணவனும் மனைவியும் தங்கள் இலட்சியமாகக் கொள்ளவேண்டியது வரவுக்கு மீறாமல் செலவு செய்வதுதான். வரவுக்கு மேல் செலவுசெய்வது ஒரு விபச்சாரம் போன்றதாகும். இப்படியெல்லாம் வாழ்க்கையில் வழுக்கி விழக்கூடாது. ஆண்கள் பெண் களின் மூடநம்பிக்கையைப் போக்கிப் பக்குவப்படுத்த வேண்டும். துணி மணி நகைகளை வாங்கிக்கொடுத்து ஏமாற்றிவிடுவது சரியன்று. பெண்களுக்கு அறிவை வளர்க்கவேண்டும். சிந்தனையைத் தூண்டவேண்டும். இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, துருக்கி, ஜப்பான், சைனா போன்ற பெரிய நாடுகளில் பெண்கள் நகை அணிவதில்லை. எங்கோ பெரிய அரசு குடும்பங்களில் வேண்டுமானால் நகை இருக்கும். அவர்களும் எப்போதும் கழுத்திலும் காதிலும் அணிந்துகொண்டே இருப்பதில்லை. நகைகளை 'இன்ஷியூர்' செய்து பெட்டியில் பூட்டிவைத்து இருப்பார்கள். நாமோ துணிமணிகளுக்காக நிறையச் செலவுசெய்கிறோம். இந்தப் பழக்கத்தை நிறுத்த வேண்டியது அவசியமாகும்.

என்றைக்கும் வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்து விட்டுக் கடனாளியாக மாறிப் பிறரை ஏமாற்றுவது இழுக்கு. இதைவிட விபச்சாரம் என்பது இழிவானதல்ல. விபசாரத்தை விட மோசமான பண்பு அதிகச் செலவுசெய்து, அதற்காகக் கடன் வாங்கித் திண்டாடுவது என்று தான் சொல்லவேண்டும்.

முஸ்லிம் மவுல்விகள் ஒரு புத்தகத்தில் திருமணம் நடந்ததைக் குறித்து வைத்துக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கும் பாதிரிமார்கள் ஒரு புத்தகத்தில் பெயரைப் பதிவு செய்து திருமணம் முடிக்கிறார்கள். நமக்குத்தான் அதுபோன்ற ஏற்பாடு இல்லை. கிராம முன்சீபிடம் ஒரு புத்தகம் இருக்கவேண்டும். குழந்தை பிறந்தால் பதிவு செய்து வைப்பது போல், திருமணத்தைப் பதிவு செய்துகொள்ள வசதியிருக்க வேண்டும். திருமணம் அது போல செய்துகொண்டு, பத்திரிக்கையில் நான்கு வரி, 'இன்னாருக்கும் இன்னவருக்கும் திருமணம் நடந்தது' என்று போட்டுவிட்டால் எல்லோருக்கும் தெரிந்துவிட்டுப் போகிறது. திருமணம் என்பதற்கு விருந்து, தடபுடல் செலவுசெய்கிற நிலை ஒழியவேண்டும். அதோடு பெண்களை நன்முறையில் படிக்கவைக்கவேண்டும்.

இப்பொழுது நாளாவட்டத்தில் திருந்திய திருமணங்கள் அதிகமாக நடக்க ஆரம் பித்தவுடன், எங்கு இவர்கள் எல்லோரும் ஒன்றானால் நம் பாடு ஆபத்தாகிவிடுமோ என்று பயந்து, பார்ப்பனர் இதுபோன்ற காரியங்கள் நடைபெற முடியாதபடி என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சாதாரணமாகப் பதிவு செய்துகொள்வதில் இப்பொழுது பல சங்கடங்களை உண்டாக்கிவிட்டார்கள். அதற்கு முன்னால் பதிவு செய்து கொள்ளுவதானால் பெண்ணுக்கு 14 வயதுக்குமேல் 15 வயது ஆகியிருந்தால் போதும். ஆணுக்கு 18 முடிந்து 19 ஆகிஇருந்தால் போதும். இப்பொழுது ஆணுக்கும் பெண்ணுக்கும் 18 வயதாகி இருக்கவேண்டும் என்கிறார்கள். அதற்கு முன்னால் கையெழுத்துப் போட்டு 15 நாட்கள் கெடு இருந்தால் போதும்; 15 நாட்கள் கழித்துத் திருமணம் பதிவு செய்து கொள்ளலாம். இப்பொழுது 30 நாள் ஆகவேண்டும். 30 நாள் முடிந்து 31வது நாள்தான்

பதிவுசெய்யலாம். அதற்குமுன் கட்டணம் ரூ 1. இப்பொழுது ரூ 3 ஆக உயர்த்திவிட்டார்கள். இப்படித் தேவையில்லாத தொந்தரவுகளையெல்லாம் உண்டாக்கி வைத்திருக்கிறார்கள்.

இந்த 30 நாட்களுக்குள் எத்தனை திருமணங்கள் உடைந்துபோகும்? 'இந்த ஒரு மாதத்துக்குள் எத்தனை கருத்து மாறுபாடு, சொந்தக்காரர்கள் தொல்லைகள்? இவைகளால் எத்தனை திருமணங்கள் உடையாமல் உறுதியாக இருக்க முடியும்? நமது முயற்சிகளை எப்படிக் கெடுப்பது, உடைப்பது என்பதற்காகத்தான் சட்டம். இதுபோன்ற காரியங்கள்தாம் நமது சமுதாயத்தில் உள்ள மடமையை அளந்துபார்க்கும் 'தெர்மா மீட்டர்'.

இப்பொழுது பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றால் திருமணம் பதிவு செய்யப்படுகிறது. வருங்காலத்தில் கடுதாசியில், 'நாங்கள் இருவரும் கணவனும் மனைவியுமாக ஆகிவிட்டோம்' என்று அந்த ஆபீசுக்கு எழுதிவிட்டாலே போதும்; அல்லது ஆள் மூலமாகக் கொடுத்து அனுப்பினாலும் போதும் என வரவேண்டும்.

ரஷ்யா போன்ற மேல்நாடுகளில், கார்டுகளில் எழுதிப் பதிவு செய்து விடுவார்கள்— 'நான் திருமணம் செய்துகொண்டேன்' என்று. இல்லையானால், 'எனக்குக் கணவர் பிடிக்கவில்லை; தனியாகப் பிரிந்துபோய்விடுகிறேன்' என்று கார்டில் எழுதி அனுப்பி விடுவார்கள். ஆகவே, பதிவுமுறை எளிதாக்கப்பட வேண்டும்.

['வாழ்க்கைத் துணை நலம்' என்னும் புத்தகத்திலிருந்து—1958-ம் ஆண்டு பதிப்பு]

15. ரஷ்யக் குடும்ப முறை

தோழர்களே!

ரஷ்யா முதலிய இடங்களிலே சொத்துக்களைப்பற்றி வாரிசு அவசியமே இல்லை; அவர்களுக்கு அந்த மாதிரிக் கட்டுபாடு இல்லை.

ஏதோ இயற்கை உணர்ச்சிக்காக ஓய்வு நேரங்களிலே சாந்தி ஏற்படுவதற்காக ஒரு வாழ்க்கைத் துணைவி இருக்கவேண்டும்; அவர்கள் சிநேகிதர்கள் மாதிரி என்றைக்கும் இருப்பார்களே தவிர, அங்குக் கலியாண முறையே கிடையாது. மற்றபடி நண்பர்களாக இருக்கவேண்டும்; ஒருவர் இடத்திலே ஒருவர் காதல் உடையவர்களாக இருக்கவேண்டும். இவ்வளவுதான் ரஷ்யாவிலே ஆண், பெண்ணுடைய வாழ்க்கைத்தன்மை. காரணம் என்ன?

அங்கு ஏதாவது சொத்து இருந்தால்தானே—வாரிசு ஏற்படவேண்டும் என்பதற்கு! அந்த சர்க்கார் எல்லோருக்கும் பொது. அந்த நாட்டுச் செல்வம், தொழில்முறை, வளப்பம் எல்லாம் எல்லா மக்களுக்குமே விகிதாச்சாரம் என்று இருப்பதனாலே, தனிப்பட்ட தங்களுடைய சொத்துக்கு வாரிசு இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

குழந்தைகளைப் பெற்றால்கூட நம் நாட்டைப்போல அவ்வளவு அன்பு, ஆசை, பார்க்காமல் இருப்பதால் கவலை என்று சொல்லுகிற தன்மை ரஷ்யாவிலே இல்லை. நானே நேரில் பார்த்துவிட்டு வந்தேன். குழந்தைகளைப் பெறவேண்டும்; பெற்றவுடனே அவர்கள் வைத்துக்கொள்ளலாம்! இல்லாவிட்டால் சர்க்காரிடம் ஒப்படைத்து விடலாம்; ஓய்வு உள்ள போது குழந்தையைப் பார்த்துவிட்டு வரலாம். மற்றபடி, படிப்புச் சொல்லிக்கொடுத்து, வேலை தேடிக்கொடுப்பது ஆகிய இந்த வேலைகள் எல்லாம் ரஷ்யாவில் தாய் தந்தையர்களுக்குக் கிடையாது.

அங்கே தனக்கு என்று வைத்துக்கொள்ள வீடு கிடையாது. உள்ளவீட்டை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு, சர்க்கார் கட்டி இருக்கிறார்கள். அதில் அவர்களுக்கு என்று

ஒரு வீடு தருகிறார்கள். அந்த வீடு யாருடையது, எவருடையது என்பது பற்றிக் கவலை இல்லை. அப்படி இருப்பதனாலே அவர்கள் வாரிசைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. 'நாளை'யைப் பற்றி அவர்களுக்குக் கவலையும் இல்லை.

எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அந்த வாழ்க்கை முறையில் எந்த ஆணும், பெண்ணும் எந்த நிர்ப்பந்தத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்கி நடக்கவேண்டும் என்பது இல்லை.

இப்பொழுது சட்டம், அந்த நாட்டுப் பழக்க வழக்கம், அந்த மதத்திற்கு ஏற்பட்ட முறை இவைகளையல்லாம் அனுசரித்து ஏற்படுத்திக் கொண்டகாரியம் இதுவானதனாலே, அதற்கு இவைகள் எல்லாமில்லை. இவைகள் எல்லாம் இல்லாதபோது என்னமுறை இருந்திருக்க முடியும்? ஆனதினாலே, திருமணங்களுக்கு ஒருமுறை கிடையாது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இஷ்டப்பட்டு, 'நாம் இருவரும் இன்றிலிருந்து நண்பர்களாகி விட்டோம்' என்று சொன்னால் தீர்ந்தது.

சொத்து முதலியவைகள் இருப்பதனாலே, குழந்தை குட்டிகள் பெற்று விட்டால் எப்படி வளர்ப்பது என்கிற பொறுப்புகள் எல்லாம் இருப்பதினாலே ஒருமுறை ஏற்படச் செய்து, அந்த முறை இப்படி இருக்கவேண்டும் என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த அமைப்புதான் இந்தத் திருமணமுறை. அதற்குத்தான் கலியாணம் என்பது தவிர வேறு ஒன்றும் இல்லை.

[பெரம்பூரில், 11–2–1951–ல் சொற்பொழிவு—'விடுதலை' 17–2–1951]

5. மக்கள் பிரிவினை

1. நமது தலைவர்கள்—இரணியன்

இரணியாட்சன், இரணியகசிபு என்ற இரு அசுரர்களான ஆரியத் துவேஷிகளை ஆரியர் கொன்ற கதைகளே—விஷ்ணு பன்றியாகவும், சிங்கமாகவும் அவதாரம் செய்த (வேஷம் போட்டுச் சதிசெய்த) கதைகளாகும்.

இரணியாட்சன் (பொற்கண்ணன்) என்பவன் பூமியைப் பாயாகச் சுருட்டிப் பாதாளத் துக்குக் கொண்டுபோய்விட்டான் என்பதாகச் சொல்லி, அதற்காக விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்துப் பாதாளத்துக்குப்போய், இரணியாட்சனைக் கொன்று, பூமியைக் கொண்டு வந்து விரித்தானாம்.

இந்த இரணியாட்சன் இப்படிச்செய்ததற்கும், இம்மாதிரி கொலையுண்டதற்கும் காரணம், பிராமணர்களின் சாபத்தால் ஏற்பட்டதாம். இது நிற்க, இரணியாட்சனுடைய உடன்பிறந்தவனான இரணியகசிபு என்பவன் இதற்காக விஷ்ணுவுடன் பழிவாங்க யுத்தம் செய்ததாகத் தெரிகிறது. அந்த யுத்தத்தில் மறைந்திருந்து கொன்றதேதான், 'தூணிலிருந்து நரசிம்மமூர்த்தி தோன்றி இரணியனைக் கொன்றார்' என்பதாகக் கற்பிக்கப் பட்டிருக்கவேண்டும். இந்தக் கதையைப் பாகவதப் புராணத்தின்படி பார்த்தால் இந்த உடன்பிறந்தார்கள் இருவரும் கொல்லப்பட்டதற்குக் காரணம் பார்ப்பனர் சூழ்ச்சி என்றே விளங்கும்.

பாகவதத்தில் இரணியன் கதையில் சொல்லப்படுவதாவது: இரணியகசிபு சொல்லுகிறான் 'ஓ தானவர்களே! இந்த விஷ்ணுவின் சகாயத்தால் நமது எதிரிகளும் அற்பர் களுமான தேவர்கள் என் சகோதரனைக் கொன்றார்கள்; அந்த மகாவிஷ்ணு ஒரு

பட்சபாதகன்; தந்திரக்காரன்; ஒரு சிறுவன்போல் தம்மைப் போற்றுகிறவன்; இஷ்டம் போல் நடப்பவன். இப்படிப்பட்டவனான அந்த விஷ்ணுவை வெட்டிவீழ்த்தப் போகிறேன். விஷ்ணுவைக் கொன்றால் தேவர்களும், தேவர்களின் கூட்டமும் வேரற்ற மரம்போல் வீழ்ந்துவிடுவார்கள். ஆதலால், நீங்கள் முதலில் பிராமணர்கள் இருக்கும் இடம் சென்று அவர்களது தபசு, யாகம், வேத அத்தியயனம், விரதம், தானம் முதலானவைகளைச் செய்பவர்களைக் கொல்லுங்கள். பிராமணர்களால் செய்யப்படும் அனுஷ்டானம், யாகம் இவை மகாவிஷ்ணு இருப்பதற்குக் காரணமாயிருக்கின்றன. ஆகையால், எந்த எந்தத் தேசத்தில் பிராமணர்கள் இருக்கிறார்களோ, எங்கு எங்கு வேத அத்தியயனம் செய்யப் படுகிறதோ, எந்த எந்தத் தேசத்தில் வருணாசிரமத்திற்கு உரிய கர்மங்கள் அனுஷ்டிக்கப் படுகின்றனவோ அந்த அந்தத் தேசத்திற்குச் சென்று அவர்களை அக்கினியை வைத்துக் கொளுத்துங்கள்; நாசஞ்செய்யுங்கள்' என்றான்.

'உடனே தானவர்கள் சென்று பிராமணர்கள் இருக்கும் பட்டணங்கள், கிராமங்கள், ஆச்சிரமங்கள் முதலிய அனைத்தையும் கொளுத்தினார்கள்; சிலர் கோடாரியையும் மண் வெட்டியையும் எடுத்துப் போய் கோவில்களையும் பிரகாரங்களையும், கோபுரங்களையும் இடித்துத் தள்ளினார்கள்; சிலர் கொள்ளிகளைக்கொண்டு வீடுகளை எரித்தார்கள்! இதனால்தேவர்கள் மறைந்து சஞ்சரித்தார்கள்' என்று பாகவதம் 7-வது ஸ்கந்தம் 2-வது அத்தியாயம் 715, 716-ம் பக்கங்களில் இருக்கின்றது.

மற்றும், இந்த பாகவதத்தில் சில இடங்களில் தனித்தனியாக இருப்பனவற்றைப் பொருத்திப் பார்த்தால்—நமது சீர்திருத்தக் கவி பாரதிதாசன் அவர்கள் எழுதிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகத்தில் உள்ள விஷயங்கள் அத்தனைக்கும் ஆதாரங்கள் இருக்கின்றன.

விஷ்ணுவும் சிவனும் பார்ப்பனர்களின் அனுகூலத்திற்கும், அவர்கள் ஆதிக்கத் திற்கும் வாழ்வுக்குந்தான் இருக்கிறார்கள் என்று, இன்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிற விஷயங்கள் அவ்வளவும்—பாகவதத்தில் இரணியன் கதையில் இரணியன் வாக்காலேயே ஆரியர்கள் அந்தக் காலத்திலேயே எழுதிவைத்திருப்பது மிகுதியும் ஆச் சரியப் படத்தக்கதும், கவனிக்கத்தக்கதுமாகும்,

மற்றும், இரணியனை விஷ்ணு கொன்றவுடன் தேவர்கள் பலர் தனித்தனியாகத் தங்கள் மகிழ்ச்சியைச் சொல்லிப் பாராட்டுகிறார்கள். எப்படியெனில், வருணாசிரம தர்மம் காப்பாற்றப்பட்டதற்கு ஒருவரும்; திதி, பிண்டம் முதலியவைகள் நடைபெறமுடிந்ததற்கு ஒருவரும்; பிராமணர்கள் காப்பாற்றப்பட்டதற்கு ஒருவரும்; தங்கள் பயமும், அடிமைத் தனமும் நீங்கியதற்கு ஒருவரும்; தங்களுக்கு மக்கள் அவிர்ப்பாகம் கொடுக்கமுடிந்ததற்காக ஒருவரும்; தியானம், தபசு செய்யமுடிந்ததற்கு ஒருவரும்;—இப்படியாக இன்னும் பல காரியங்கள் செய்யமுடிந்ததற்காகப் பலரும் விஷ்ணுவைப் பாராட்டித் தோத்திரம் செய் கிறார்கள். இதுவும் 753, 754, 755-ம் பக்கங்களில் இருக்கின்றன.

எனவே, இன்றைய வருணாசிரம தர்மத்தையும், மற்றும் பார்ப்பனர்களையும், பார்ப்பனர் தங்கள் பிழைப்புக்காக ஏற்படுத்திக்கொண்டிருக்கிற வைதிக காரியங்கள் என்று சொல்லப்படும் அனேக தந்திரமான காரியங்களையும், அப்பொழுதே இரணியன் நடக்கவொட்டாமல்செய்து, பார்ப்பனர்களைத் தண்டித்து நிறுத்தி இருக்கிறான் என்பதும், பார்ப்பனர்களை நாட்டில்கூட வசிக்கவொட்டாமல் துரத்தி அடித்து இருக்கிறான் என்பதும், பார்ப்பனர்களின் உயர்வுக்கும் ஆதிக்கத்திற்கும் ஆரியக்கடவுளான விஷ்ணுவும் சிவனும் இருப்பதுதான் காரணம் என்பதும், தனது நாட்டில் அடிமையாய் இருக்க இஷ்டப்பட்டவர் களை மாத்திரம் வைத்திருந்தான் என்பதும் பாகவதத்தால் நன்றாய் விளங்குகின்றன.

ஆகவே, இரணியன் என்பதாக அந்தக் காலத்தில் ஒருவன் இருந்தானா, இல்லையா என்பது விவாதத்துக்கு இடமான பிரச்னையானாலும், அந்தக் காலத்திலேயே சுயமரியாதை இயக்கம் வீறுகொண்டிருந்தது என்பதும்; அதுவும் பலாத்காரத்தில் ஈடுபட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது என்பதும்; அதுபெரிதும் பார்ப்பனர்களை ஒழிப்பதும்; வேத சாத்திரங்களையும் பார்ப்பனர்கள் வீடுகளையும் கொளுத்துவதும்; கோயில், மடம், ஆச்சிரமம், கோபுரம் முதலியவைகளைக் கோடரி, மண்வெட்டிகொண்டு இடித்துத் தரை மட்டமாக்கி இருப்பதும் நன்றாய், தெளிவாய் விளங்குகிறது.

இரணியன் ஒரு சுயமரியாதை வீரனேயாவான். இரணியன் கதை ஒரு சுயமரியாதைக் கதையேயாகும்.

['குடிஅரசு'-கட்டுரை—26-2-1944]

2. இராவணன்

தலைவரவர்களே! தோழர்களே!

பாகவதத்தை எடுத்துக்கொண்டால் இரணியன் எவ்வளவு தூரம் சாதியை ஒழிக்கப் பாடுபட்டு இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவன் தீவிரமாகவே வேலை செய்திருக்கிறான். 'பார்ப்பனர் (அதாவது பார்ப்பனீயம்) எங்கு எங்கு இருக்கிறார்களோ அவர்களுடைய வீட்டை எல்லாம் இடித்துத் தள்ளுங்கள்; கையிலே மண்வெட்டி, பிக்காசுகளுடன் போங்கள். மூக்கைப் பிடித்துக்கொண்டே உட்கார்ந்து இருக்கின்றவர்களைக் கண்டால் மண்டையிலே அடியுங்கள். செய்கின்ற ஓமங்களைக் கலைத்துவிடுங்கள்' என்று கூறித் தனது ஆட்களை அனுப்பினான் இரணியன் என்பதாகப் பாகவதம் கூறுகிறது.

இதைப்போல்தான் கந்தபுராணத்தை எடுத்துக்கொண்டாலும், இராமாயணத்தை எடுத்துக்கொண்டாலும் காணலாம். பார்ப்பனீயத்தின் கொடுமையை ஒழிக்க முற்பட்டவர்களைப் பற்றித் தேவர்களிடம் பார்ப்பனர்கள் போய் என்னசொல்லி இருக்கிறார்கள்?

'இராவணன் எங்களது பூஜையைக் கலைக்கிறான்; ஓமம் வளர்க்க இடம் கொடுக்காமல் செய்கிறான்; வேதம் ஓதுவதற்குச் சம்மதிக்கமாட்டேன் என்கிறான்; யாகம் செய்ய அனுமதிக்கமாட்டேன் என்கிறான்' என்றுதான் தேவர்களிடம் பார்ப்பனர்கள் குறையிட்டு இருக்கிறார்கள். எனவே இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்ன? அந்தக் காலத்தில் பார்ப்பனீயத்தின் கொடுமையால், நமது இந்த முன்னோர்கள் சாதியை ஒழிக்கப் பாடுபட்டவர்கள். இதனால்தான் இராக்கதர்கள்—அசுரர்கள் ஆனார்கள். சாதியை ஆதரிப்பவர்கள் ரிஷிகள், மகான்கள், மகாத்மாக்கள் ஆனார்கள்.

இதிலிருந்து எந்தவழிகளில் எல்லாம் சாதியைக் காப்பாற்ற வழிசெய்து இருக்கிறார்கள் என்பதைக் காணலாம். ஆகவே, இந்தச் சாதியை ஒழிக்க அந்த மாதிரியான புராணங்களிலும் சிலபேர் பாடுபட்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்களை நாளடைவில் பார்ப்பனீயம் 'அசுரர்கள்' என்று பெயரிட்டு, மக்களிடையே பிரச்சாரம் செய்து, பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள்.

ஆகையால்தான், மக்கள் சாதியை ஒழிப்பது என்றால் ரொம்பவும் பயப்படுகிறார்கள். யாரும் பயப்படவேண்டிய தேவை இல்லை.

[திருவொற்றியூரில், 17-1-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-1-1952]

தலைவரவர்களே! தோழர்களே!

இராவணனின் வீரதீரம் வெகுவாகப் புகழப்படுகின்றது. இராவணன் அரண்மனையின் சிறப்பை, அலங்காரத்தை அனுமான் வாயிலாகவே மிகவும் போற்றிப்புகழப்படு

கிறது. அனுமனே இராவணனுடைய அரண்மனையையும் அந்தப்புரத்தையும் கண்டு மிகவும் அதிசயப்படுவதுடன் அந்தப்புரத்திலே அழகான பெண்கள் உறங்க, இராவணன் அவர்களுக்கு மத்தியில் உறங்குவது 'நட்சத்திரக் கூட்டங்களிடையே பூரணசந்திரன் பொலிவுடன் தோன்றுவதுபோல இருக்கிறது' என்று வர்ணிக்கிறான். அத்தனைப் பெண்களும் இராவணனைக்கண்டு அவன் அழகிலும் அறிவிலும் வீரத்திலும் மயங்கி அவனை விரும்பித் தாங்களாகவே இராவணனைத்தேடி வந்தார்களே தவிர, ஒருவரையாவது இராவணன் கொண்டு வரவில்லை என்று சொல்லுவதோடு, சீதையையும் அவளுக்குத் திருமணமாவதற்கு முன் இந்த இராவணன் கொண்டுவந்திருந்தால் நன்றாயிருக்குமே என்றும்கூட அனுமன் நினைக்கிறானாம்.

இராவணனைப்பற்றி வால்மீகி சொல்லுகிறபோது—இராவணன் மகா கல்விமான்; தவசிரேஷ்டன்; வேதசாஸ்திர விற்பன்னன்; குடிகளையும், சுற்றத்தாரையும் இரக்கத்துடன் ஆதரிப்பவன்; தைரியசாலி; அதிபலசாலி; சுத்தவீரன்; மிகுந்த பக்திமான்; கடவுள்களுடைய பிரீதிக்குப் பாத்திரமானவன்; அனேக வரங்களைப்பெற்ற வரப்பிரசாதி என்று பல இடங்களிலும் எடுத்துக்காட்டியிருக்கிறார். இராமனைப்பற்றிச் சூதகனாகவும், வஞ்சகனாகவும், பேடியாகவும் காட்டப்படுவதுபோல—ஓர் இடத்திலாவது இராவணன் காட்டப்படவில்லை.

சூர்ப்பனகையை இராமன் மானபங்கம் செய்ததுபோல் சீதையையும் அந்தப்படியே இராவணன் செய்திருக்கமுடியும். ஆனாலும், அப்படிச்செய்யவேண்டும் என்று ஒருபோதும் இராவணன் நினைத்ததே இல்லை. சீதையை அசோகவனத்திலே தம்பியின் மகளையே அவளுக்குக் காவலாக இருக்கும்படிசெய்துவைத்தான். அதுமட்டுமல்ல; இராவணன் மிகவும் நல்லவன்; அவன் பெருமை உடையவனாகவும், பேரழகு உடையவனாகவும் விளங்கினான். ஆனால், பிராமணர்கள் யாகம் செய்வதையும், சோமரசம் அருந்துவதையும் கண்டால்மட்டும் அவர்களைக் கண்டிப்பான் என்று வால்மீகியே கூறுகிறார்.

இப்படி எல்லாம் சொல்லப்படுகிற இராவணனும் அவன் கூட்டத்தாரும் பார்ப்பனர்களுடைய விரோதிகள் என்பதால்—அவர்களைக் கொடியவர்களாக, அரக்கர்களாக ஆக்கி விட்டார்கள். இதை நாம் நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

[சென்னையில், 15-11-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-11-1954]

3. அரக்கர்கள் யார்?

இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக் கொண்டு அக்கிரமம் செய்தார்கள்—என்பதெல்லாம் இந் நாட்டுப் பழங்குடி மக்களையும் அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக் கொல்லுவதற்குக் கடவுள்களும் தேவர்களும் என்ற பெயர்கொண்ட ஆரியர்கள் வழிதேடிக் கொண்ட ஒரு சாக்கே அல்லாமல், அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யாவர்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்?—என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

அதுபோலவே, தேவர்கள் யார்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? உலகிற்கு அவர்களால் என்ன பயன்? — என்பதற்கும் ஆதாரமும் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம்தான்—அதாவது, 'இந்தியா கண்டம்' என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய, மற்றபடி இந்தியாவுக்கு அப்பாற்பட்ட

அய்ந்து கண்டங்களிலும் இருந்ததாகவோ, அந்தக் கண்டங்களைப்பற்றி இவர்கள் ஏதாவது தெரிந்திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

கீழ் ஏழு லோகம், மேல் ஏழு லோகம் கண்டு பிடித்தவர்கள்—ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, அய்ரோப்பாக்களைப்பற்றி ஒன்றையும் கண்டுபிடித்ததாகவோ, அல்லது அங்குள்ளவர்கள் இந்தியாவையும் சிவ, விஷ்ணு, தேவர், அசுரர், இராட்சதர், சூரன் ஆகியவர்களை அறிந்திருந்ததாகவோ தகவல்களையும் காண முடியவில்லை.

அவதாரங்களில்கூட அக் கடவுள்களின் ஆட்சியில் அவர்களது பிள்ளை, குட்டி, மனைவி, முதலியவர்கள் வாழ்க்கையில் உள்ள இடம், மலை, ஆறு, கடல், ஊர், வீடு, வாசல் எல்லாம் இந்தியாவில் இருப்பவைகளைத்தான் சொல்லப்படுகின்றனவே ஒழிய—மற்றநாட்டு மலை, காடு, வனம், நதி, சமுத்திரம் எதுவும் சொல்லப்படவில்லை. கடவுள்கள், தேவர்கள் வாழ்க்கைகளில் காணப்படும் 'பூலோகமே' இந்தியாவாகத்தான் கருதப்பட்டிருக்கின்றதே தவிர, வேறு ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப்பார்த்து, இந்தியக் கண்டத்தின் பூர்வநிலை, அதாவது ஆரியர் வருவதற்குமுன் இருந்த நிலையையும் யோசித்துப் பார்த்தால்—சிவன், விஷ்ணு அல்லது சேயோன், மாயோன் மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றில்வரும் 'உலகம்' முதலியவை பெரும்பாலும் இந்தியாவுக்குள் ஆரியர் வந்த பிறகு ஏற்பட்டவர்கள் தான் என்பதும்; அவை இந்தியாவைப் பொறுத்தவைகள்தான் என்பதும் சாதாரணமாய் விளங்கும். அவைகளைப்பற்றித்தான் மற்றவேறு ஆதாரங்களும் விளக்குகின்றன.

சிந்துநதி தீரத்தைப்பற்றியும் அங்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பூர்வ சின்னங்களைப்பற்றியும் பேசுவதில், ஆரியர்களுக்குமுன் தமிழர்கள் அங்கிருந்தார்கள் என்றும் இந்தியா கண்டம் பூராவும் தமிழர்கள் இருந்தார்கள் என்றும்தான் சொல்லப்படுகிறது.

ஆனால், மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இன்றைக்கு 6000, 7000 வருஷ காலத்துக்கு முந்தியது என்று சொல்லப்படுகிறது.

ஆரியர்களுக்கு முன்பே இந்த இடங்கள் நாகரிகமாய் இருந்திருந்தால் ஆரியர் இங்கு எப்படி வந்திருக்கமுடியும்? இந்தியாக் கண்டம் முழுவதும் சமயம், சமுதாயம், கலை, பழக்கவழக்கம் முதலிய யாவும் ஆரிய மயமாய்—ஆரிய ஆகமம், ஆரிய ஆச்சாரம், தர்மம், ஆரியக்கதை ஆகியவைகளே கொண்ட இலக்கண இலக்கியம், சரித்திரம், காவியம் ஆகியவை எப்படி ஏற்பட்டிருக்கமுடியும்?

கோவில்கள் எல்லாம் தமிழர்களுடையதா, ஆரியர்களுடையதா என்று பார்த்தாலும் அவற்றுக்குப் பணம் செலவு செய்தவனும், கட்டடம் கட்டினவனும், அதற்கு மானியம், மடப்பள்ளி விட்டவனும் தமிழனாக இருக்கலாம். சந்தேகமேயில்லை. ஆனால், சொந்தக் காரனும் கோவில் ஆகமக்காரனும் கடவுள் தன்மைக்காரனும் ஆரியனாகத்தானே இருக்கிறான்!

கோவில்களில் உள்ள உருவங்கள், அதன் தோற்றத்திற்கான கதைகள். பூசை, உற்சவ முறைகள், நைவேத்திய சாதனங்கள் ஆகியவை ஆரியர்களுடையவையாகத்தானே இருந்து வருகின்றன? அந்தக் கோவில்கள் கட்டப்பட்ட காலத்திலும் அப்போதுள்ள அரசர்கள் ஆட்சியிலும் ஆரிய ஆதிக்கம் தலை சிறந்து உச்ச ஸ்தானத்தில் இருந்தது என்பதற்கு—முதல், இடை, கடைச் சங்கங்களும், அப்போதிருந்த புலவர்களும் அரசர்களும், அரசநீதியும் அவர்கள் கைக்கொண்டிருந்த சமயங்களும் உதாரணமாக இல்லையா?

இந்த நிலையில் அசுரர், இராட்சதர்கள் என்பவர்கள் யாராக இருந்திருக்கமுடியும்? அவர்கள் எங்கிருந்து வந்திருக்க முடியும்? அதுவும் இந்தியாவிற்குள் உள்ள அயோத்தி,

மதுரை, டெல்லி, மிதிலை, காந்தாரம், விராடம், விதர்ப்பம், தண்டகாரண்யம், கோதாவரி, சித்திரகூடம் ஆகிய இடங்களும்—அங்கும் அதற்குப் பக்கத்திலுமே தாடகை, சூரன், சூர்ப்பநகை, மாரீசன் முதலியவர்களும் இருந்தார்கள் என்றால், இவர்கள் யாராக இருந்திருக்க முடியும்? இதைக் கண்டுபிடிக்கப் பெரிய பெரிய புராண, சரித்திர, இலக்கிய காவிய நூல் ஆராய்ச்சி ஏன் வேண்டும்?

இவை பொய்க் கதை, கற்பனைக் கதைகளாக இருந்தால் கவலை வேண்டாம்; மெய்க் கதை—சிறிதாவது நடந்த கதை என்றால், கோதாவரி நதிக்குப் பக்கத்திய தேசத்தில்தான் இராவணன் தங்கை சூர்ப்பநகை, இராவணன் தம்பி கரன் முதலியவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து "உங்களைக் கொல்லவே நான் வந்தேன்" என்று இராமன் சொல்லுகிறான். முனிவர்களும், "பக்கத்தில் ஜனஸ்தானம் இருக்கிறது. அங்கு இராட்சதர்கள் இருக்கிறார்கள்" என்கிறார்கள்.

இந்தியாக் கண்டத்தின் பாகத்தைக் கடல் கொண்ட காலம் பதினாயிரம் வருஷத்துக்கு மேற்பட்டது என்கிறார்கள். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தது, 6000 வருஷத்துக்கு உட்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பே தமிழர்கள் இந்தியாக் கண்டம் பூராவும் பரவி இருந்ததோடு, தமிழர் ஆட்சியும் அங்கெல்லாம் பரவி இருந்தது என்றும் சொல்லி, அஸ்ஸாம் கண்டுபிடிப்புகளையும், சிந்து கண்டுபிடிப்புகளையும் உதாரணம் காட்டுகிறார்கள்.

மீனக்கொடியோனாகிய தெற்கத்திய சம்பரான் என்னும் 'அசுர' அரசனுடன் தசரதன் சண்டை போட்டதாகவும் வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. சம்பரான் என்று ஒரு பாண்டிய மன்னன் இருந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது.

கதையை வளர்த்துவதற்காக, 'இராமன் சீதையை அங்கே போய்த் தேடினான்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல்—சீதை காணாமற்போன சிறிது காலத்துக்குள்ளாகவே இராவணன்தான் தூக்கிக்கொண்டு போனான் என்பதும் தெரிந்துபோய் விட்டதாகக் காணப்படுகிறது.

அன்றியும், இராவணன் சீதையின் பக்கத்திலேயே இருந்து இலட்சுமணன் வெளியில் சென்றவுடன் தூக்கி வந்து இருக்கிறான். மாரீசன், தாடகையின் மகன் பக்கத்திலேயே வசித்திருக்கிறான். சூர்ப்பநகை தனது மூக்கறுபட்ட உடனே இராவணனிடம் சென்று இரத்த ஒழுகலோடு முறையிட்டிருக்கிறாள். இராவணன் உடனே மாரீசனோடு அதைப் பற்றிப் பேசுகிறான். விஸ்வாமித்திரன் யாகம் செய்ததும் தாடகை அதைக் கெடுத்ததும் இந்தியாவில் இன்னும் வடக்கில் என்றாலும் சமீபமாகத்தான் காணப்படுகிறது. சுக்கிரீவன், அனுமான் முதலியவர்களையும் பர்ணசாலைக்குச் சமீபத்திலேயே சந்திக்கிறான். ஜடாயு இரத்தம் காயாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போதே, இராம-லட்சுமணர்கள் காண்கிறார்கள். இராமன், "நான் புத்தியில்லாமல் இராட்சதர்களை விரோதித்துக் கொண்டேன்" என்று வருந்துகிறான்.

ஆகையால், வால்மீகி கதைப்படி இராட்சதர்கள், இராட்சத அரசர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் திராவிட நாட்டிற்குள் அல்லது நமக்குச் சமீபத்திற்குள் தான் இருந்திருக்க வேண்டுமேயொழிய—அவர்கள் வெளிநாட்டார் என்றோ, வேறு இனத்தார் என்றோ சொல்லுவதற்குத் தக்க ஆதாரம் எதுவும் அதில் காணப்படவில்லை.

வால்மீகி இராமாயணத்தை, வால்மீகி கதைமுகமாய் எழுதியதால், வர்ணனைக்காகவும் கவர்ச்சிக்காகவும் சில கற்பனைகள் சேர்க்கவேண்டியதாக ஆகி, அவை ஒன்றுக்கொன்று முரண் படத்தக்கதாகவும் ஆகிவிட்டதால், பண்டிதர்கள் வக்கீல்களைப்போல் உண்மையைப் பற்றிய இலட்சியமில்லாமல் தங்கள் வெற்றியையே குறி வைத்தும், சில அற்ப குறிப்புகளை எடுத்துக்கொண்டும், மனச்சாட்சிக்கு விரோதமாய்க் கூச்சல் போட்டு தேவ–

அசுரர்களை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதல்லாமல், வேறு உண்மை என்ன இருக்கிறது? புராணங்கள், இதிகாசங்கள், வேத சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் என்பவைகளுட்பட ஆரியர்கள் தங்கள் உயர்வுக்கும், திராவிடர்களை இழிவு படுத்தவும் செய்து கொண்டவைகளே தவிர வேறில்லை. அக் காலத் தமிழர்கள் ஒருசமயம் பாமர மக்களாக இருந்திருக்கலாம். ஆதலால் சமய, சரித்திர ஆதாரங்களைக் கொண்டு நாம் நம்மைக் கவனிக்காமல், தற்கால அறிவைக்கொண்டு பார்ப்பதுதான் பயன்தரக்கூடியதாகும்.

['குடி அரசு'-சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை—20-9-1947]

4. திராவிடர்கள்

திராவிடர் கழகமானது இனத்தின் பேரால், பிறவியின் காரணமாய், நாட்டின் உரிமையின் காரணமாய்—ஆரியர்களால் இழிவு செய்யப்பட்டு அடக்கி, ஒடுக்கி, தாழ்த்தி வைக்கப் பட்டிருக்கும் மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடும் ஒரு அமைப்பு (ஸ்தாபனம்) ஆகும். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்துமத (ஆரிய தர்மப்படி 4-வது வர்ணஸ்தர்களாகவும் அல்லது 5-வது அவர்ணஸ்தர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கும்) சூத்திரர்கள் எனப்படுபவர்கள் எல்லாருடையவும் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கும் கழகமாகும்.

திராவிடர்களைத்தான், 'சூத்திரர்கள்' என்பதாக இந்து மதத்தின் பேரால் ஆரியர்கள் அழைத்து வருகிறார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருந்து வருகின்றன. உதாரணமாக, மனுதர்ம சாஸ்திரத்தில் 10-வது அத்தியாயத்தில், 'சங்கர சாதி' என்ற தலைப்பின் கீழ், 'சாதி தர்மத்தை அனுசரிக்காதவர்கள், அனுசரிக்காதவர்களுக்குப் பிறந்தவர்கள் திராவிடர் என்ற பெயர் கொண்டவர்' என்றும், சூத்திரன் பிராமணத்தியைப் புணர்ந்தால் பெறப்படும் குழந்தைகள் 'பாக்கிய சாதியினர்'—அதாவது சமீபத்தில் வரக் கூடாத சண்டாள சாதிகள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும், பிராமணர்களுக்குச் சூத்திரப் பெண்களிடத்தில் பிறந்த குழந்தைகள் ஆர்ய வர்த்த தேசத்தில் செம்படவன் என்று ஈன சாதியாக சொல்லப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும், சாதி தர்மம் தவறிய கலப்பினால் பிறப்பவர்களால்தான் தோல்வேலை செய்யும் (சக்கிலி) சாதியும், பிணத்தின் துணியைப் பிடித்துக் கொள்கிறவர்களும் எச்சில் சாப்பிடுபவர்களுமான (பறையர்) சாதியும் ஏற்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'திராவிட தேசத்தை ஆண்டவர்கள் சூத்திரர்களாய்விட்டார்கள்' என்று தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மனு 10-வது அத்தியாயம் 44-வது ஸ்லோகம் ஆகும். மற்றும் 'மிலேச்ச பாஷை பேசுகிறவர்கள் அனைவரும் தஸ்யுக்கள் என்று சொல்லப்படுவார்கள்' என்று தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இது 10-வது அத்தியாயம் 45-வது ஸ்லோகம். 'தஸ்யுக்கள்' என்றால் திருடர்கள் என்ற கருத்தும் அதில் கீழே காட்டப்பட்டிருக்கிறது. இதில் மற்றொரு விசேஷம் என்ன என்றால் 'திராவிடன்' என்கிற பெயரைப் போலவே—ஆந்திரன் என்ற பெயரும் மனுதர்மத்தில் காணப்படுகின்றது. அதாவது, காட்டிற்குச் சென்று மிருகங்களைக் கொன்று நாட்டில் கொண்டுவந்து விற்பவன் 'ஆந்திரன்' என்று கூறப்பட்டிருக்கிறது (அத்தியாயம் 10, ஸ்லோகம் 48). எனவே திராவிடர்கள், ஆந்திரர்கள் என்பது மாத்திரமல்லாமல் கீழான, இழிவான, தீண்டப்படாத, திருடர்களான சாதியார்கள் என்பதை மனுதர்ம சாஸ்திரம் நன்றாக வலியுறுத்துகிறது என்பது 10-ம் அத்தியாயத்தில், 'சங்கர சாதி' என்ற தலைப்பில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது.

மற்றும், 'இவர்கள் அனைவரும் பட்டணத்துக்கும் ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, மயானத்திற்குச் சமீபமான இடம் ஆகிய இடங்களில் இழி தொழிலைச் செய்யும் மக்கள் என்று யாவருக்கும் தெரியும்படியாக வாசம்செய்ய வேண்டியது' என்று 50-வது

ஸ்லோகத்தில் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட திராவிடர்களான மக்கள், 'நாயும் கழுதைகளும்தான் வளர்க்கவேண்டியது; மாடு முதலியன வைத்திருக்கக் கூடாது' என்று கூறுகிறது.

திராவிடத் தோழர்களே! கவனியுங்கள்! 'இவர்கள் பிணத்தின் துணியையே உடுக்க வேண்டும். உடைந்த சட்டியில் அன்னம் புசிக்கவேண்டும். உலோகப் பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது. இரும்பு பித்தளை ஆகியவைகளால் செய்யப்பட்ட நகைகளையே அணியவேண்டும். இவர்கள் ஜீவனத்துக்காக எப்போதும் வேலை தேடிக்கொண்டே திரிய வேண்டும். நல்ல காரியம் நடக்கும்போது இவர்களைப் பார்க்கக் கூடாது; இவர்களோடு பேசக்கூடாது. இவர்களைத் தங்கள் சாதிக்குள்ளாகவே மணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தவேண்டும். இவர்களுக்கு நேரே எதுவும் கொடுக்கக்கூடாது; உடைந்த பாத்திரத்தில் அன்னம் போட்டு வைக்கவேண்டியது; ஊருக்குள் இரவில் சஞ்சரிக்க விடக் கூடாது' என்றும் இப்படிப்பட்ட ஈன சாதியினர்கள் நல்ல வேடம் தரித்திருந்தபோதிலும் அவர்களை ஈனர்கள் என்றே கருதவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரே ஒரு விமோசனம், அதென்ன தெரியுமா? அதுதான் ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு காந்தியார் இங்கு வந்தபோது சொன்ன மார்க்கம்—ஒரு சூத்திர ஸ்திரி வயிற்றில் பிராமணனுக்கு விவாக முறைப்படி பிறந்த பெண் மறுபடியும் பிராமணனையே மணந்ததின் மூலம் அவள் வயிற்றில் பிறந்து—இப்படியாக 7 பிறவி பிறந்தால் 7-வது தலைமுறையில் 'பிராமண சாதி' ஆகலாம் என்பதுதான். இதுதான் காந்தியார் தமிழ்நாட்டுக்கு வந்த போது திருப்பூரில் சொன்னது. மற்றும் கடைசியாக, 'சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்வதாலேயே பிராமணன் ஆக மாட்டான். எப்படி ஒரு பிராமணன் எந்த விதமான இழிவான தொழிலைச் செய்தாலும் அவன் பிராமணனே ஒழிய சூத்திர சாதி ஆகமாட்டானோ, அதுபோல ஒரு சூத்திரன் எவ்வளவு மேலான பிராமணன் தொழிலைச் செய்தாலும் பிராமணனாக மாட்டான்'. இது பிரம்மாவினால் நிச்சயிக்கப்பட்ட உண்மையாகும், தத்துவமாகும் (அத்தியாயம் 10, ஸ்லோகம் 73).

பிராமணன் கீழான தொழிலைச் செய்தபோதிலும் பயிரிடும் தொழிலை (உழுவதை)க் கண்டிப்பாய்ச் செய்யக்கூடாது. அதைச் செய்யாவிட்டால் ஜீவனத்திற்கு மார்க்கமில்லை என்கின்ற காலத்தில், அன்னியனைக் கொண்டு செய்விக்கலாம்; (அத்தியாயம் 10, ஸ்லோகம் 83). ஏனெனில், அந்தப் பிழைப்பு இரும்புக் கலப்பையையும் மண்வெட்டியையும் கொண்டு பூமியை வெட்டவேண்டியதாகும். ஆகையால், பிராமணர் உழுது பயிரிடல் கூடாது என்பதாகும் (அத். 10, ஸ்லோகம் 84).

தாழ்ந்த சாதியான் மேலான சாதியானின் தொழிலைச் செய்தால் அவனுடைய பொருள் முழுமையும் பிடுங்கிக்கொண்டு அவனையும் நாட்டைவிட்டு அரசன் உடனே விரட்டிவிட வேண்டும் (அத். 10, ஸ்லோகம் 96).

சூத்திரனுக்கு சம்ஸ்காரங்கள், ஓமம் வளர்த்தல் முதலியவைகளுக்கு உரிமை கிடையாது (அத். 10, ஸ்லோ. 126). சூத்திரன் எவ்வளவு தகுதியுடையவனாயினும் தன் ஜீவியத்துக்கு அதிகமாகப் பொருள் சம்பாதிக்கக்கூடாது. அப்படிச் சம்பாதித்தால் அது பிராமணனுக்கு இம்சையாக நேரும் (அத். 10, ஸ்லோ. 129).

சூத்திரனுக்கு யாகாதி கர்மங்கள் சம்பந்தமில்லை. ஆதலால், அவன் வீட்டிலுள்ள செல்வத்தைப் பிராமணன் தாராளமாக வலுவினாலும் கொள்ளலாம் (அத். 11, ஸ்லோ. 13).

அசுரர்கள் என்பது சூத்திரர்களைத்தான் என்பதற்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில், 11-வது அத்தியாயம், 20-வது ஸ்லோகத்தில் காணப்படுகிறது. அதாவது, 'யாகம் செய்யாதவர்கள் அசுரர்கள்—அவர்கள் பொருளைக் கவருவது தர்மமாகும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிடர்கள், சூத்திரர்கள்; சூத்திரர்களுக்கு யாகாதி காரியங்களுக்கு உரிமையில்லை. யாகம் செய்யாதவர்கள் அசுரர்கள். இந்த மாதிரி குறிப்புகள் மனுதர்ம சாஸ்திரத்தில் இருக்குமானால், மனுதர்ம சாஸ்திரமே இந்து மதத்திற்கு ஏற்பட்ட தர்மமானால், திராவிடர்கள் இந்துக்களானால்,—திராவிடர்களின் நிலை என்ன என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமாய் விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட இழிவாலேற்பட்ட தன்மை திராவிட சமுதாயத்திற்கே இருக்கக் கூடாதென்றும், அவை எப்படியாவது ஒழிக்கப்பட்டே ஆகவேண்டுமென்றும், அதற்கு முக்கிய எல்லையான திராவிட நாட்டை (சென்னை மாகாணத்தைப்) பரப்பாக வைத்து—அதில் உள்ளவர்களைத் திராவிடர்களாகக் கருதி நடத்தப்படும் திராவிடர் கழக—திராவிட நாடு எழுச்சிக்கு தமிழ் நாடு, ஆந்திர நாடு, கேரள நாடு, கர்னாடக நாடு என்பதான கிளர்ச்சிகளை இந்த முக்கிய குறிப்பில்லாமல் குறுக்கே போட்டு—மொழியைப் பிரதானமாக வைத்துக்கொண்டு போராடுவதென்றால், மனுதர்ம சாஸ்திரத்தை மெய்ப்படுத்துகிறோம் என்பதல்லாமல் அதில் வேறு தன்மை என்ன இருக்கிறதாகக் காணமுடியும்?

['குடி அரசு'—கட்டுரை—20-9-1947]

5. இனப் பெயர்கள்

தோழர்களே!

திராவிடர் என்ற பெயர் அப்படி யாராலும் கற்பிக்கப்பட்டதல்ல. ஆரியர் என்ற பெயரும் அப்படித்தான். என்று மக்கள் அவரவர் வாழ்ந்துவந்த தேசத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ப, அமைந்திருந்த அங்க மச்ச அடையாளங்களைக் கொண்டு பல இனப் பிரிவினராகப் பிரிக்கப்பட்டனரோ, அன்று இரண்டு வெவ்வேறு இனங்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்தான் .திராவிடர், ஆரியர் எனப்படும் பெயர்கள். இதே சமயத்தில் கொடுக்கப்பட்ட பெயர்தான் மங்கோலியர் என்பதும் நீக்ரோக்கள் என்பதும். உஷ்ணமான ஆப்ரிக்காக் காட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த—சற்று முரடான மக்களை நீக்ரோக்கள் என்று அழைத்தனர். நல்ல குளிர்ப் பிரதேசமான மத்திய ஆசியாவில் வசித்துவந்த தவிட்டு நிற மக்களுக்கு ஆரியர் என்று பெயர் அளித்தனர். அதற்கு அடுத்தாற்போல் சற்று குட்டையாகவும் சப்பை மூக்குடனும் சைனா, ஜப்பான் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை மங்கோலியர் என்று அழைத்தனர். இப் பிரதேசங்களுக்குத் தெற்கே சற்றுச் சம சீதோஷ்ணமான சமவெளிகளில் வாழ்ந்த தென்னாட்டு மக்களைத் திராவிடர் என்று அழைத்தனர்.

ஆகவே, அன்று அங்க மச்ச அடையாளங்களைக் கொண்டு மக்களைப் பல இனங்களாகப் பிரித்தார்களே ஒழிய, ஒருவன் கடவுளின் நெற்றியிலிருந்து வந்தவன் என்றோ, மற்றொருவன் கடவுளின் பாதத்திலிருந்து தோன்றியவன் என்றோ, அல்லது கண்ணிலிருந்து வந்தவன் என்றோ, காதிலிருந்து வந்தவன் என்றோ, மூக்கிலிருந்து வந்தவன் என்றோ பிரிக்கவில்லை. இதை நான் பேர் ஊர் தெரியாத எவனோ, மாட்டுக்கும் மனிதனுக்கும் பிறந்த எவனோ எழுதியதாகக் கூறப்பட்டு வரும் எந்த சாஸ்திரங்களைப் பார்த்தோ, வேதங்களைப் பார்த்தோ கூறவில்லை. சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களின் முடிவை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டதும், அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டதும், உங்கள் நாலாவது அய்ந்தாவது வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகமாக இருந்து வருவதும், அசல் ஆரியப் பார்ப்பனர்களால் எழுதப்பட்டிருப்பதுமான புத்தகங்களைப் பார்த்துத்தான் கூறுகின்றேன்.

"என்னப்பா, இன்றைக்குக் கூட்டமாமே? என்ன விசேஷம்?" என்று யாராவது இன்று ஒரு ஓட்டல் அய்யனைக் கேட்பாரானால், அவர் என்ன கூறியிருப்பார் தெரியுமா? "எவனோ ஈரோட்டிலிருந்து ஒரு அயோக்கியன் வருகிறானாம், அவன் மயிலாப்பூர்

பார்ப்பான் ஒருவனை ஏதோ பணம் கேட்டானாம். அவன் கொடுக்க மறுத்துவிட்டானாம். அதிலிருந்து பார்ப்பனர்களைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறான். அதுக்கு ஏன் போகப் போறீங்க? அவ்வளவும் பார்ப்பன துவேஷமாகவே இருக்கும்" என்று கூறியிருப்பான். அப்படித்தானாக்கும் என்று நினைத்தே சற்று தயக்கத்துடன்தான் நீங்களும் வந்திருப்பீர்கள். யார் என்ன கூறியிருந்தாலும் சரியே, நான் கேட்கிறேன். பண்டிதர்கள், பாவலர்கள் யாராயிருந்தாலும் பதில் கூறும்படி சவாலிட்டுக் கேட்கிறேன்:

இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா என்ற பெயரோ, இந்துக்கள் என்ற பெயரோ, எங்காவது வழங்கப்பட்டு இருந்ததாக உங்களில் யாராவது கூறமுடியுமா? கூற முடியுமானால் அதற்கு உங்கள் வேதத்திலோ, சாஸ்திரத்திலோ இதிகாசங்களிலோ, ஒரே ஒரு ஆதாரமாவது காட்ட முடியுமா? ஆதாரம் கண்டோம் என்ற யாராவது சொல்லட்டுமே பார்க்கலாம். யாராவது சொல்வார்களானால் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்; நன்றியறிதலோடு என் தவற்றைத் திருத்திக்கொள்ளவும் தயாராய் இருக்கிறேன்! 230 ஆண்டுகளுக்கு முன் பூகோளத்தின்படி இத் தேசத்திற்கு, இந்தியா என்று பெயர் இருந்ததாக யாராவது காட்டமுடியுமா? இந்தியா என்பதும் இந்துக்கள் என்பதும் நடுவாந்திரத்தில், அதுவும் சமீபத்தில் ஆரியர்களால் கற்பித்துக்கொள்ளப்பட்ட பெயர்களே ஒழிய, பழைய மூலப் பெயர்கள் அல்ல. ஆனால் ஆரியர், திராவிடர் என்ற பெயர்மட்டும்—என்று தோன்றினவோ என்றுகூட வரையறுத்துக் கூறமுடியாத அளவுக்குப் பழமைப் பெயர்கள். ஆரியர் அல்லாத திராவிடர்களைத்தான்—ஆரியர்கள் 'தஸ்யூக்கள்' என்றும், 'சூத்திரர்கள்' என்றும், இழிவான வேலைகளுக்கே உரியவர்கள் என்றும், அரக்கர்கள், இராட்சதர்கள் என்றும் கூறி இருக்கின்றனர்: இதை நாம் கூறவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பண்டித நேருகூட தம் மகளுக்கு எழுதிய கடிதத்தில், 'இராமாயணத்தில் குரங்குகள், அரக்கர்கள் என்று பழித்துக் கூறப்படுவது திராவிடர்களைப் பற்றித்தான்' என்று கூறியுள்ளார். அதாவது, புல்தரை தேடிவந்த ஆரிய லம்பாடிக் கூட்டம், திராவிடர்களோடு போராடித் தமக்கு அடிமைப்பட்டுப் பணியாட்களாக உழைக்க ஒப்புக்கொண்டவர்களைச் சூத்திரர், பஞ்சமர் என்றும், தம்மை எதிர்த்துத் தம் ஆட்சியை வெறுத்து ஓடியவர்களை அரக்கர்கள், இராட்சதர்கள் என்றும் கூறி வந்திருக்கிறது.

நம்மவர் தென்னாட்டில் பெரும்பகுதியாகவும், வடநாட்டில் ஆரியர் பெரும்பகுதியாகவும் இருப்பது—வடநாட்டிலிருந்த திராவிடர்கள் ஆரிய எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் தென்னாட்டை நோக்கி வந்திருக்கவேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது. ஆரியர்களின் முக்கியச் சடங்காகிய யாகத்தை எவன் பழித்தானோ, கெடுத்தானோ அவனே ஆரியர்களால் அரக்கன் என்றும், இராட்சதன் என்றும் கூறப்பட்டான். ஆகவே, யாகத்தில் உயிர்ப் பலி கூடாது; அத்தியாவசியமான பொருள்கள் நெருப்பில் போட்டு எரிக்கப்படக் கூடாது என்று கூறும் நம்மைத்தான், 'அரக்கர்' என்கின்றனர், இந்த அன்னக்காவடி பார்ப்பனர். இன்னும் நாம்தான் யாகத்தைத் தடுக்கிறோம்; பழிக்கிறோம். ஜீவ இம்சை கூடாது என்று கெஞ்சிக் கூத்தாடிச் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டு யாகங்களின் மீது தடை உத்தரவு வாங்கி வருகிறோம்.

யாகம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆடு, மாடு தின்ன ஆசைப்படும் சில பிராமண பைசாசங்கள் ஒன்றுகூடிக்கொண்டு, அவற்றின் இரத்தம் வெளிப்பட்டால் ருசி கெட்டுவிடும் என்பதற்காக, அவற்றை வெட்டிக் கறி செய்யாமல் அவைகளைக் கட்டிப்போட்டு அவற்றின் விதைகளைக் கிடுக்கி கொண்டு கசக்கிக் கசக்கிச் சாகவைப்பார்கள். ஒரு ஆடோ, மாடோ இவ்விதம் சாகவைக்கப்பட பல மணி நேரங்கூட ஆகலாம். ஆனாலும், அகோர மாமிசப் பிண்டங்களான இந்த யாகப் 'பிசாசு'களுக்கு அதுபற்றிக் கவலை யேது? இவ்வாறு உயிர்வதை செய்யப்பட்ட மிருகத்தை யாக குண்டத்

திலிட்டு, அதில் நெய்யூற்றி வேகவைத்துத் தின்பதுதான் மனுதர்ம சாஸ்திரப்படி செய்யப் படும் யாகம். இப்படிப்பட்ட கோரவதை கூடாது என்று தடுத்தவர்கள்தாம் ஆரியரால் அரக்கர்களாகச் சித்தரிக்கப்பட்டனர்.

சூத்திரனுக்கு யாகம் செய்யும் உரிமை கிடையாது. யாகத்தை வெறுப்பவன் சூத்திரன். ஆகவே, யாகத்தை வெறுக்கும் திராவிடராகிய நாம் ஆரிய சாஸ்திரப்படி சூத்திரர்தான். 'ஆரியன் ஏது? சூத்திரன் ஏது?' என்று நம்மைக் கேட்கிறார்கள் சில அப்பாவி மக்கள். சட்டம் கூறமா சூத்திரன் இல்லை என்று? சூத்திரன், பிராமணன் இல்லையென்றால், கோயிலில் மணி அடிக்கும் தொழில் ஒரே சாதிக்காரன் வசமே இருக்கக் காரணம் என்ன? கோவில் அர்ச்சகர்கள் யார்? அவர்கள் ஏன் சமஸ்கிருதம் ஓதுகிறார்கள்? சமஸ்கிருதம்தான் தேவ பாஷை—மற்றவை மிலேச்ச பாஷை, நீச்ச பாஷை என்று ஆரிய சாஸ்திரம் கூறி இருப்பதை நீ அறிவாயா? திடுதிடு என்று நான்கு சாதியாரும் கோவிலுக் குள் போவோம்—சற்று இருங்கள் என்று கூறி பிராமணத் தோழன் உங்களைத் தாண்டிக் கொண்டு மூல ஸ்தானத்திற்குள் போய்விடுகிறானா, இல்லையா என்று பாருங்களேன்! இதைப் பார்த்த பிறகும் எந்தத் தோழனாவது பிராமணன், சூத்திரன் இல்லை என்று கூறுவானாயின்—'அவன் அறிவு மலையேறிவிட்டது' என்றுதானே கூறவேண்டும்? ஏன் இந்த உயர்வு—தாழ்வுக் கொடுமையை இன்னும் மூடிவைக்கப் பார்க்கிறீர்கள்? உள்ளதை மூடிவைத்தால் அது புரையோட ஆரம்பித்துவிடும் என்பதை நீங்கள் அறியீரோ?

[சுற்றுப்பிரயாணச் சொற்பொழிவின் சுருக்கம்—'குடிஅரசு' 8–5–1948]

6. திராவிடர்—பார்ப்பனர் யார்?

தலைவரவர்களே! தோழர்களே!

நம் நாட்டுக்கு கி. மு. 2000-ம் ஆண்டு காலத்தில் 'திராவிடம்' என்றே பெயர் இருந்தது. இராமாயணங்களிலும், புராணங்களிலும்கூட நம் நாட்டுக்கு 'திராவிடம்' என்றே பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆரியர் இந் நாட்டுக்குக் குடியேறிய பின்னர்தான் திராவிடம் என்பதற்குப் பதிலாக 'தென்னாடு' என்று பெயர் கொடுக்கப் பட்டது. பின்னர் 'தமிழ்நாடு' என்றும் வழங்கிவரலாயிற்று. திராவிடம், திராவிடர் என் பதால் ஆரியர் ஆதிக்கத்துக்கு என்றும் எதிர்ப்பு இருக்கும். ஆதலால் திராவிடம் என்ற உணர்ச்சியை அறவே அழித்தொழிக்கச் சூழ்ச்சி செய்துவரலாயினர்.

ஆனால், தற்சமயம் இந் நாட்டில் உள்ள பார்ப்பனர் கூறலாம்; 'நாங்கள் ஆரிய ரல்லர்; நாங்களும் இந்த நாட்டினர்தாம்' என்று. ஆனால், இதே சமயத்தில், நம் நாட்டுப் பற்றோ, மொழிப்பற்றோ சிறிதும் அவர்கட்குக் கிடையாது. ஆரிய கலாச்சாரத்தையே பின்பற்றிவருவதோடல்லாமல் நமது முன்னேற்றத்தையும், முயற்சியையும் ஒழிப்பதையே அவர்களது முழுமுயற்சியாகக்கொண்டு இருக்கின்றனர். இவைகளைக் கைவிடாமல், 'நாங்கள் ஆரியர் அல்லர்' என்று கூறிவிட்டால் போதுமா?

உதாரணமாக, ஆங்கிலோ-இந்தியர்கள் எப்படியோ அதேபோலத்தான் இந் நாட்டுப் பார்ப்பனர்களும். ஆங்கிலோ-இந்தியர்கள் நம் நாட்டுத் தாய்மார்கள் ஈன்றெடுத்த வர்கள்தாமே? ஆனால், அவர்களுக்குச் சற்றாவது நம் நாட்டு உணர்ச்சி இருக்கிறதா? நமது மக்களைப் பார்த்தால் 'டேய், டமில் மனுசா' என்று கேவலமாகத்தானே கூறு கின்றனர்? அவர்கள் யார்? எந்த நாட்டில் எப்படிப் பிறந்தவர்கள்? என்ற வரலாற்றை அறியாமல், தான் ஏதோ அய்ரோப்பாவில் பிறந்து இங்கு குடியேறியதுபோல சாதி ஆண வத்துடன் அல்லவா நடக்கிறார்கள்!

அதைப்போலவே, இந் நாட்டுப் பார்ப்பனர்களும், மேல் நாட்டில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களுக்கும் நம் நாட்டவர்களுக்கும் பிறந்தவர்களாய் இருந்தும்கூட,

ஆரிய சாதி முறைகளையும், அதற்கான ஆணவத்தையும் கொண்டு, நாட்டுக்குரிய நம்மை கீழ்ச்சாதிகளாக—அடிமைகளாக மதித்து நடத்துவதும், அதற்கேற்ப நம் நாட்டு மன்னர்களை ஏமாற்றி, சாதி, மதம், கடவுள், புராணம், இதிகாசங்களின் பேரால் தங்களுக்குத் தனிச் சலுகைகளும் பெற்று, பாடுபட்டு உழைக்கும் ஏழை மக்களுக்கு வாழ்வில் வறுமையும் தொல்லையும் இருக்க, பாடுபட்டு உழைக்காத ஒரு கூட்டத்துக்கு வாழ்க்கையிலே மித மிஞ்சிய ஆதிக்கமும் இருந்துவருகிறது.

இன்றுகூட எந்தப் பார்ப்பனனையாவது பார்த்து, 'நீ என்னய்யா, பிராமணனா? என்று கேட்டால், இன்றைய நிலையில் அவன் அவ்வாறு கூறிக்கொள்ளச் சற்று அச்சங் கொண்டாலும், 'நான் பிராமணனல்லன்' என்று கூறுவானேயன்றி, 'நானும் திராவிடன் தான்' என்று கூற முன்வரமாட்டானே! ஏன்? திராவிடர் என்ற உணர்ச்சி வலுத்து விட்டால் பார்ப்பனீய ஆதிக்கத்துக்கு அன்றே அழிவு ஏற்பட்டுவிடும் என்பதாலேயாகும்.

எனவேதான், திராவிடர் கழகத்தாராகிய நாங்கள், பார்ப்பனர்களுக்குத் தனிப்பட்ட தொல்லையோ, தீங்கோ விளைவிப்பது என்பது எங்கள் கொள்கையல்ல; பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து மக்களிடையே ஒன்றுபட்ட சமுதாய உணர்ச்சியை உண்டாக்கவேண்டும் என்பதாகும் என்று கூறுகிறோம். இதை இந் நாட்டுப் பார்ப்பனர்கள் இனியாவது அறிந்து தங்களது தவறுதலைத் திருத்திக்கொள்ளவேண்டும். அதை விடுத்து, எங்களது முயற்சியை அழிக்க மேலும் சூழ்ச்சி செய்வார்களேயானால், அது தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்வதாக முடியும். பார்ப்பனர்களுக்குத் தனித் தொழிலாளர் கழகம் என்று ஒன்று இருக்கிறதா? காரணம் என்ன? உழைக்கும் வேலை அவர்களுக்குக் கிடையாது. எதற்கும் இலாயக்கற்ற பார்ப்பனனாய் இருப்பினும் கடவுள்பேரால், பாடுபடாமலேயே சுகவாழ்வு வாழ்வது ஏன்? பிறவியின் பெயரால், சாதியின் பெயரால் ஒரு கூட்டம் ஆதிக்கம் செலுத்தும் அக்கிரமம், இந் நாட்டைத் தவிர வேறு நாட்டில் இருக்கிறதா? அதுவும் சுயராஜ்யம் பெற்றபின்னரும், இந்த அக்கிரமம் இருக்கலாமா? அறிவின் பெயரால், உழைப்பின் அருமையினது பெயரால் ஒருவனுக்கு உயர்வும், நல்ல பலனும் இருக்கத்தான் வேண்டுமா? சாதியின் பெயரால் பதவியின் பெயரால் சோம்பேறிகள் எல்லாம் உயர்ந்தவர்கள் என்று புகழப்படுவதா? என்று கேட்கிறேன். இந்த உணர்ச்சியும் மானமும் ரோஷமும் உங்களுக்கு ஏற்படாமல் உங்களுக்கு என்னதான் கூலி உயர்ந்தாலும் பயன் என்ன?

[பொன்மலையில், 22-5-1949-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 28-5-1949]

7. மக்கள் பிரிவினை

தலைவரவர்களே! தோழர்களே!

இந்த உலகத்து மக்களை நான்கு பெரும் பிரிவுகளாக—அதாவது திராவிடர், ஆரியர், மங்கோலியர், காக்கேசியர் (நீக்ரோ) என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து இருக்கிறார்கள். இந்தப் பிரிவு—கடவுள் முகத்தில் இருந்து பிறந்தவன் இவன்; காலிலே இருந்து பிறந்தவன் இவன் என்பதாகப் பிரிக்கப்படவில்லை.

இந்த மக்களின் அங்க, மச்ச அடையாளங்களுக்கு ஏற்பப் பிரித்து இருக்கிறார்கள். இந்தப் பிரிவுகள் மிருகங்களிலும் உண்டு. மாட்டை எடுத்துக்கொண்டால் இது காங்கயம் மாடு, இது பெருகூர் மாடு என்று மாட்டைப் பார்த்தவுடனேயே சொல்லிவிடலாம். பூணூல் போட்ட மாடு பெருகூர் மாடு என்றோ, பூணூல் போடாத மாடு காங்கயம் மாடு என்றோ நாம் பார்த்துச் சொல்வதில்லை. இதேமாதிரியாகக் குதிரை, நாய், குரங்கு முதலிய பல மிருகங்களிலும்—இது இன்ன பிரிவைச் சேர்ந்தது என்று அதன் உருவ அமைப்பைப் பார்த்தே சொல்லிவிடலாம்.

அதுபோலவேதான், மனிதர்களையும் அங்க அமைப்பு அடையாளங்களைக்கொண்டு பல பிரிவுகளாகப் பிரித்தார்கள். அந்தப் பிரிவிலேயே நாம் திராவிடர்கள் என்ற தலைப் பின்கீழ் வருகிறோம். எனவேதான், இன்றையதினம் நம் மக்களை ஒன்றாகக் கூட்டுவ தற்கு இனத்தின் பெயரை வைத்து இருக்கிறோம். நாம் அனைவரும் இந்து மதத்தின்பேரால்-இந்துமத சாஸ்திரங்களின் பேரால்—இந்துமதக் கடவுள்களின்பேரால் சூத்திரர்களாக, இழி சாதி மக்களாகக் கருதப்படுவதற்கு—அந்தப்படியே நடத்திவருவதற்கு நம்மிடத்திலே என்ன கீழ்த்தன்மை இருக்கிறது? நம்மிடத்திலே என்ன துர்நாற்றம் வீசுகிறது? உயர் சாதிக்காரர்கள் என்பவர்களிடத்தில் என்ன நறுமணம் வீசுகிறது?

[காரைக்குடியில், 12-6-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 18-6-1950]

8. பார்ப்பன அகராதி

காங்கிரஸ் என்றால் என்ன? வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒடுக்கி, பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்துவது.

வெளியேற்றம் என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் சமூகத்தையும் அவர்கள் சுயமரியாதையையும் ஒழிக்க, மறுபடியும் சில குலத் துரோகிகளைக் கூட்டிக்கொண்டு வாக்குத் தத்தத்தை மீறி—மனச்சாட்சியின் பேரால்—கட்டுப்பாடாய்ச் சட்டசபைக்குப் போவதுதான்.

தொழிலாளிகள் நன்மை என்றால் என்ன? தொழிலாளிகளை ஏமாற்றி, அவர்களுக்குத் தலைவர்களாகி, அவர்கள் வோட்டுப் பெற்று—சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற்று, தொழிலாளர்களையே விட்டு, பார்ப்பனரல்லாதாரையும் தலைவர்களையும் ஈனத் தனமாகவும் இழி தன்மையாயும் திட்டும்படியும் அடிக்கும்படியும் கலகம் செய்யும்படியும் தூண்டி விடுவது.

இந்துமத பரிபாலன சட்டத்தால் இந்து மதம் போய்விடுமே என்று பயப்படுகிறார்கள் என்றால் என்ன? பார்ப்பனர்களுக்கு வரும்படி போய்விடுமே என்று பயப்படுவது.

மத விஷயத்தில் சர்க்கார் பிரவேசிக்கிறார்களே என்றால் என்ன? பார்ப்பனரல்லா தார் பிரவேசிக்கிறார்களே என்பது.

சட்டசபை கலையும்போது, மத பரிபாலன சட்டத்தை நிறைவேற்றுகிறார்களே என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் எல்லாம் இம் மசோதாவை ஆட்சேபிப்பவர்களுக்கு மறு தேர்தலிலே வோட்டுக் கொடுக்கமாட்டார்களே என்கிற பயம்தான்.

பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்றால் என்ன? பார்ப்பனர் பார்த்து, "போடு, தோப்புக்கரணம்" என்றால், "இதோ போடுகிறேன், எண்ணிக்கொள்" என்று சொல் பவர்கள்தான்.

பிராமணத் துவேஷம் என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார்—சுயமரியாதைக்குப் பாடுபடுவதுதான்.

சுயராஜ்யக் கட்சியின் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்படுவது என்றால் என்ன? பார்ப் பனரல்லாதாரை ஒடுக்க பார்ப்பனர் சொல்லுகிறபடியெல்லாம் கொஞ்சமும் தவறாமல் நடப்பதுதான்.

காங்கிரஸ் துரோகம் என்றால் என்ன? காங்கிரஸ் பேரால் பார்ப்பனர் பாமர ஜனங்களை ஏமாற்றுவதை வெளியிலெடுத்துச் சொல்வதுதான்.

காங்கிரஸ் தோல்வி என்றால் என்ன? பார்ப்பனருக்கும் அவர்களின் அடிமைகளுக்கும் சட்டசபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் இடம் கிடைக்காமல் போவதுதான்.

பொதுஜனங்களுக்கு இராஜீய ஞானம் இல்லையென்றால் என்ன? பார்ப்பனரல்லாதார்க்கு வோட்டுப் போடுவதுதான்.

பொதுஜனங்கள் ஏமாறவில்லை என்றால் என்ன? பார்ப்பனருக்கு வோட்டுப் போடுவதுதான்.

பிராமண விசுவாசம் என்றால் என்ன? கர்ப்பதான முகூர்த்தம் முதல், பிறந்து வளர்ந்து செத்தும்—செத்த பிறகும் பார்ப்பனருக்குப் பணம் கொடுத்துச் சடங்கு செய்து, பார்ப்பனர்கள் தயவால்தான் மோட்சத்துக்குப் போகலாம் என்று சொல்வதுதான்.

தரும பூஷணம் என்றால் என்ன? ஆயிரக் கணக்கான ரூபாய்களை ஒரு பார்ப்பனரின் காலில் கொட்டி, தங்க புஷபத்தால் அருச்சனை செய்து, அக் காலைக் கழுவி, அந்தத் தண்ணீரைச் சாப்பிடுவதுதான்.

செல்லுபடி இல்லாத எலெக்ஷன் என்றால் என்ன? பார்ப்பனர் தோற்றுப்போகும் எலெக்ஷன்கள்தாம்.

நல்ல நிர்வாக அதிகாரி என்றால் யார்? பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுப்பவன்தான்.

கொடுமையான அதிகாரி என்றால் யார்? பார்ப்பனச் சிப்பந்திகள் செய்யும் அயோக்கியத்தனத்தைக் கண்டிப்பவன்தான்.

மகா அயோக்கிய அதிகாரி என்றால் என்ன? பார்ப்பனச் சிப்பந்திகள் இலஞ்சம் வாங்குவதைக் கண்டுபிடித்து, இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லுகிறவன்தான்.

சுதேச வைத்தியம் என்றால் என்ன? பார்ப்பனர் மாத்திரம் படிக்கத் தக்க வைத்திய முறையும், பார்ப்பனர்களே வைத்தியர்களாயிருந்து தீர்க்கத் தக்க வைத்தியமுமாகிய சமஸ்கிருதத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியம்தான்.

பரதேச வைத்தியம் என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் படிக்கத் தக்கதும் பார்ப்பனரல்லாதார் வைத்தியராகத் தக்கதுமான தமிழில் உள்ள சித்த வைத்தியம்தான்.

இந்தியாவுக்குப் பொது பாஷை என்றால் என்ன? பார்ப்பனர் மாத்திரம் படித்து, இந்தியா பூராவும் சுற்றி, பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த உபயோகப்படுத்தப்படும் ‘ஹிந்தி’ பாஷைதான்.

தமிழ்ச் சங்கம் என்றால் என்ன? அக்கிராசனாதிபதி பார்ப்பான், உப அக்கிராசனாதிபதி பார்ப்பான், காரியதரிசி பார்ப்பானாக இருக்கும் சங்கம்தான்.

தமிழ்க் கலாசாலை என்றால் என்ன? பிரின்ஸ்பால் பார்ப்பனன்; உதவி பிரின்ஸ்பால் பார்ப்பனன்; உபாத்தியாயர் பார்ப்பனன்; படிக்கும் பிள்ளைகளும் பார்ப்பனப் பிள்ளைகளாய் இருப்பதுதான்.

சமஸ்கிருதத் துரோகிகள் என்றால் யார்? தனித்தமிழ் பேசுகிறவரும், எழுதுகிறவரும்தான்.

தமிழில் தக்க ஆராய்ச்சியுடையவர் என்றால் யார்? சமஸ்கிருதத்தில் இருந்துதான் தமிழ் வந்தது, தமிழன் சமஸ்கிருத வார்த்தைகளையும் சேர்த்துப் பேசுவதுதான் தமிழுக்கு அதிக யோக்கியதையைக் கொடுக்கும் என்று சொல்லுபவர்தான்.

தமிழில் கொஞ்சமும் ஆராய்ச்சி இல்லாதவன் என்றால் யார்? தமிழ் தனிப்பாஷை; வேறு எந்த பாஷையின் உதவியில்லாமலே அது இருந்திருக்கிறது என்று சொல்லுபவன் தான்.

தேசீயப் பத்திரிகை, யோக்கியமான பத்திரிகை என்றால் எது? பார்ப்பனர்களுக்கு விரோதமில்லாமல் அவர்கள் செய்யும் அக்கிரமங்களை யெல்லாம் மூடி வைத்துவிட்டு, காங்கிரசைப் போற்றவேண்டும்; 'சுயராஜ்யக் கட்சியில்தான் தேசியத் திட்டம் இருக்கிறது. அதை ஆதரித்து ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கவேண்டும்' என்று எழுதுவதுதான்.

யோக்கியப் பொறுப்பற்ற, தேசபக்தி இல்லாத பத்திரிகை என்றால் எது? காங்கிரசின் தற்கால யோக்கியதையையும் அதில் இருக்கும் பார்ப்பனச் சூழ்ச்சியையும் வெளியிலெழுதுவதும், சுயராஜ்யக் கட்சி சுத்தமாய்ப் பார்ப்பனக் கட்சி என்று எழுதுவதுமான பத்திரிகைதான்.

['சித்திர புத்திரன்' என்ற பெயரில் கட்டுரை—'குடி அரசு' 29-8-1926]

9. பார்ப்பனீயம்

திரு. ஆச்சாரியார், 'பிராமண சங்கம் பல வருஷங்களாக இந்த நாட்டில் வேலை செய்து வருகின்றது' என்றும், 'எவன் தன் மனத்தை அடக்கி ஆண்டுகொண்டு யோக்கியனாக இருக்கின்றானோ அவனே பிராமணன்' என்றும் சொல்லியிருக்கின்றார்.

அப்படியானால், இப்போது 'பிராமணர்' என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள் எல்லாம் தம் மனத்தை அடக்கிக்கொண்டு யோக்கியர்களாக இருக்கின்றவர்களா? அல்லது பிறர் மனத்தை அடக்கி அவர்களை ஆண்டுகொண்டு அயோக்கியர்களாக இருக்கின்றவர்களா?—என்று கேட்பதுடன், வெகு நாட்களாக இந்த நாட்டில் நடந்துவரும் 'பிராமண சங்கங்கள்' என்பவைகளெல்லாம் தங்கள் மனத்தை அடக்கி ஆண்டு யோக்கியமாய் இருந்துகொண்டு வரும் பிராமணர்களுடைய சங்கங்களா.—என்றும் கேட்கின்றோம்.

'யார் பிராமணன்?' என்று கேட்கும்போது மாத்திரம், 'தன் மனத்தை அடக்கி ஆண்டுகொண்டும் யோக்கியனாக இருந்துகொண்டும் இருக்கின்றவன் பிராமணன்' என்று சொல்லுவதும், மற்ற சமயங்களில் மான ஈனமின்றி உலகிலுள்ள சகல அயோக்கியத்தனங்களையும்—அதாவது கொலை, களவுகள், திருட்டு-புரட்டுகள் செய்வதும், சாமி தரிசனைக்கும், தரகு தரிசனைக்கும் தரகு பெறுவதும், போலீசு வேலை செய்வதும், வக்கீல் வேலை செய்வதும், இஷ்டமில்லாத பெண்களைக் கூட்டிக்கொடுத்தாவது உத்தியோகம் பெறுவதும், அந்த உத்தியோகத்தில் இலஞ்சம் வாங்குவதும், தங்கள் வகுப்பாரைத் தவிர மற்ற வகுப்பார் தலையெடுக்காமல் அமுத்துவதும், தங்கள் பிள்ளைகளைத் தவிர மற்ற பிள்ளைகளைப் படிக்கவிடாமல் தடுப்பதும், தேசத்தையும் ஏழை மக்களையும் காட்டிக்கொடுத்து உயிர் வாழ்வதுமான காரியங்களையெல்லாம் செய்துகொண்டு, தங்களைப் பிராமணர்கள் என்று சொல்லிக்கொண்டும்—இந்த 'பிராமணத் தன்மைக்காக' கள்ளுக்கடை, வேசி வீடு முதல் கடவுள் சன்னிதானம் என்பது வரையில் தங்களுக்கு வேறு உரிமையும், மற்றவர்களுக்கு வேறு உரிமையும் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு மக்களை வதைத்துக்கொண்டும்—இருக்கின்றதுமான அக்கிரமங்களை இனியும் எத்தனை காலத்திற்கு மறைக்கலாம் என்று திரு. ஆச்சாரியார் கருதிக்கொண்டிருக்கின்றார் என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர, 'இராஜீய விஷயத்தில் நாங்கள் (பிராமணர்கள்) தலையிடுவதே கிடையாது' என்று சொல்லி இருக்கின்றார்.

இது உண்மையா? அப்படியானால் திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்கார், சக்கரவர்த்தி அய்யங்கார், சத்தியமூர்த்தி, கஸ்தூரி ரங்கய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், இராமானுஜ ஆச்சாரியர், இராஜகோபாலாச்சாரியார், மாளவியா, நேரு, திலகர், சாஸ்திரி, சர்மா, சாப்ரு, வி. வி. சீனிவாசய்யங்கார், மணி அய்யர், சிவசாமி அய்யர், சர். சி. பி. இராமசாமி அய்யர், சரோஜினி தேவி, பாலாம்பாள், இதே உபன்யாசகர் திரு. என். சீனிவாசாச்சாரியார் முதலியவர்கள் அரசியல் விஷயத்தில் தலையிடவில்லை என்கின்றாரா? அல்லது இவர்களை இந்தப் 'பிராமணர்'களோடு சேர்க்காமல் பேசுகின்றாரா? என்று திரு. ஆச்சாரியாரைக் கேட்கின்றோம்.

பிச்சைக்கும் புரோகிதத்துக்கும் வரும்போது மாத்திரம் தாங்கள் அரசியலில் பிரவேசிக்காதவர்கள் என்று சொல்லுவதும், உத்தியோகத்திற்கு வரும்போது வெள்ளைக்காரர்களிடம் பிராமணர்கள்தாம் அரசியலில் தலைமை வகிக்கவும் சீர்த்திருத்தத்தில் பெரிய உத்தியோகம் வகிக்கவும் யோக்கியர்கள் என்றும்; வெள்ளைக்காரர்களுக்குத் தகுந்தபடி சகல விதத்திலும் நடந்துகொள்ளும் திறமையும் சவுகரியமும் பிராமணர்களுக்குத்தான் உண்டு என்றும் சொல்லி, சகல அரசியல்களிலும் இந்தப் பிராமணர்களே புகுந்துகொண்டு வெள்ளைக்கார இராஜ்யத்தை நடத்துவதும் இந்த உபன்யாசகருக்கு உண்மையிலேயே தெரியாதா என்று கேட்கின்றோம்.

பிராமணர்கள் தங்களுக்குச் சட்ட பூர்வமாய் எவ்வித உரிமையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்கின்றனர். இது மனதாரச் சொல்லும் பேச்சா, அல்லது தங்களைத் தவிர மற்றவர்கள் முட்டாள்கள் என்று கருதிக்கொண்டு சொல்லும் பேச்சா—என்று கேட்கின்றோம். வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம், புராணம், மனுதர்மம், 'இந்துலா', பழக்க வழக்கம் முதலியவைகளின்பேரால் தங்களுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பதவிகளும், தனி உரிமைகளும் சட்ட பூர்வமாக ஏற்படுத்திக்கொண்டதாகாதா—எனக் கேட்கின்றோம். மற்றும் கக்கூசுகளில் போர்டு பலகை போட்டு ஆண்–பெண்களுக்குப் பிரித்திருப்பதுபோல்—இன்றைக்கும் (1928-ல்) அனேக இடங்களில் (போர்டு) பலகை போட்டு 'பிராமணர்களுக்கு மாத்திரம்' என்று பிரித்திருப்பது சட்ட பூர்வமா அல்லது பலகைப் பூர்வமா—என்று கேட்கின்றோம்.

'பிராமணரல்லாதார் இயக்கம் உத்தியோகத்திற்கு ஏற்பட்டதென்று எண்ணிக் கவலையில்லாமல் இருந்துவிட்டோம். அது, 'குடிஅரசு' இயக்கத்தில் சேர்ந்துகொண்டு, (சுயமரியாதை) உரிமையை ஸ்தாபித்துக்கொள்ளுவதற்கு என்று சொல்லிக்கொண்டு, மத விஷயத்திலும் கோவில் விஷயத்திலும் புகுந்து நம்மை அடியோடு கவிழ்க்க ஆரம்பித்து, ஆயிரக்கணக்கான வருடங்களாய் நாம் (பிராமணர்கள்) அனுபவித்து வந்த உரிமையை இப்போது பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது; உதாரணமாய், சுயமரியாதைக்காரர்கள் செய்துவரும் பிரச்சாரத்தின் கொடுமை ஊர் ஊராகச் சுற்றிப் பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும்' என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

இந்த வாக்கியங்களால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் உண்மையும், சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமும் விளங்காமல் போகாது. வெறும் உத்தியோகத்தைப் பற்றிப் பார்ப்பனரல்லாதார் இயக்கம் பாடுபடுவதாகப் பார்ப்பனர்கள் நினைத்துக்கொண்டிருந்த காலத்தில், அவர்களுக்கு இதைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதற்கு நியாயம் இல்லை. ஏனெனில், எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் சர்க்கார் உத்தியோகங்களிலிருந்து பார்ப்பனர்களைச் சுலபத்தில் விரட்டிவிட முடியாது. ஏனெனில், வெள்ளைக்காரர்களிடமிருந்து உத்தியோகம் பெறும் யோக்கியதையும், சவுகரியமும், அவைகளுக்கேற்றபடி நடக்கும் தன்மையும் பார்ப்பனரல்லாதவர்களுக்கு இல்லையென்பது பார்ப்பனர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். அன்றியும் பார்ப்பனரல்லாதார்க்கு விரோதமாய் எதிர்ப் பிரச்சாரம் செய்ய, பார்ப்பனர் அல்லாத பல கூலிகள் தங்களுக்குச் சுலபமாய்க் கிடைத்து

விடுவார்கள் என்கின்ற தைரியமும் இருந்தது. ஆதலால், அவர்கள் இதை இலட்சியம் செய்யவில்லை. ஆனால், இப்போது சுயமரியாதை இயக்கமானது பார்ப்பனச் சூழ்ச்சிகள் பலிக்கவிடாமல் செய்வதோடு, பார்ப்பனரல்லாத கூலிகளும் பார்ப்பனர்களோடு முன்போல் அவ்வளவு தாராளமாய்ச் சேருவதற்கில்லாமல் செய்வதால், இப்போது பார்ப்பனர்கள் பயந்து தீரவேண்டியதாகிவிட்டது. அன்றியும் சு. ம. கொள்கைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதாரமானதும், ஆணி வேரானதுமான—பார்ப்பன மதத்தையும், பார்ப்பன சாமி கோயில்களையும் கழுத்துப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டதால் பார்ப்பனர்கள் திமிறுவதற்கு இடமில்லாமல் கண் பிதுங்க விழிக்கின்றார்கள். மேலும், இந்த இயக்கம் வெற்றிபெற்றது என்று சொல்லுவது, பார்ப்பனர்கள் ஆயிரக்கணக்காக அனுபவித்து வந்த தனி உரிமைகளைப் பிடுங்கி எல்லா மக்களையும் சமமாக்கித் தீரவேண்டியதாதலால், சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க முயற்சிக்கவேண்டியது பிராமண மகா சபையின் கடமையாகப் போய்விட்டது என்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

'கிராமங்களில் கூட இந்த இயக்கம் பரவிவிட்டது' என்று திரு. ஆச்சாரியார் சொல்லுவதிலிருந்து நாம் சந்தோஷப்பட வேண்டியதானாலும்—அது பரவவேண்டிய அளவுக்கு ஆயிரத்தில் ஒருபங்குகூட இன்னும் (1928-ல்) பரவவில்லை என்பது நமது கருத்தாகும்.

தவிர உபன்யாச முடிவில், 'சுயமரியாதை இயக்கம் பிராமண துவேஷ இயக்கமானதால் அந்த இயக்கத்தால் பிராமணர்களுக்குக் கெடுதியேற்படாமல் தடுப்பதற்காக, சைமன் கமிஷனைத் தஞ்சமடைய வேண்டும்' என்பதாகச் சொல்லியிருக்கின்றார்.

தாங்கள் மாத்திரம் எவ்வளவு இழிவானதும் அயோக்கியத்தனமான காரியங்களைச் செய்தாலும் பிராமணர்கள் என்பதும்;—தங்களைத் தவிர, மற்றவர்கள் எவ்வளவு யோக்கியர்களானாலும் அவர்கள் தங்களது 'வைப்பாட்டி மக்கள்' என்றும் 'சூத்திரர்கள்' என்றும், 'சண்டாளர்கள்' என்றும், தொடக்கூடாதவர்கள்–தெருவில் நடக்கக்கூடாதவர்கள் என்றும் பல மாதிரியான இழிவான வார்த்தைகளால் அழைப்பதும், கொடுமைப்படுத்தி வதைப்பதும் துவேஷமாகாமல் போவதும்; இம்மாதிரி செய்வது யோக்கியமானதல்லவென்று நாம் சொல்லுவது மாத்திரம் துவேஷமாவதுமானால், இந்தத் துவேஷம் உலகம் முழுமையும் ஏற்பட வேண்டும் என்றே ஆசைப்படுவதோடு, இந்தத் துவேஷமில்லாத தமிழ் மக்கள் சுயமரியாதை அற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

திரு. ஆச்சாரியார்—எந்தக் காரணத்திற்காகத் தங்கள்மீது துவேஷம் ஏற்படுவதாகச் சொல்லுகின்றாரோ—அல்லது சுயமரியாதைக்காரர்கள் எந்த விஷயங்களைச் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்கள்மீது துவேஷம் உண்டாகும்படி செய்கின்றார்கள் என்று நம்புகின்றாரோ—அந்தக் காரணங்களைப்பற்றி ஒரு சிறிதாவது கவனித்தாரா? என்றும் அல்லது அதற்கு ஒரு சிறிதாவது சமாதானம் சொல்ல முற்படுகின்றாரா? என்றும் கேட்கின்றோம்.

திரு. ஆச்சாரியாரின் கூட்டம் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஒரு உரிமையை அனுபவித்துக்கொண்டு வந்ததாலேயே அவர்களுக்கு அது நிரந்தர பாத்தியமாய் விடுமானால்—அதனால் மனிதத் தன்மையை இழந்து கஷ்டப்படுகின்ற மக்கள் அவ்வுரிமையை பலாத்காரத்தால் பிடுங்கிக்கொள்வதல்லாமல், வேறு என்ன வழி அவர்களுக்கு இருக்கின்றது? என்று கேட்கின்றோம். தங்களுடைய ஆயிரக்கணக்கான வருஷ அனுபோக பாக்கியதையைச் சொல்லாமல்—வேறு யோக்கியமான நியாயத்தைச் சொல்லித் தங்கள் உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள வந்தால், அதற்கு நாம் தாராளமாய் இடம் கொடுக்கத் தயாராய் இருக்கின்றோம். அப்படிக்கில்லாமல், வெறும் அனுபோக பாத்தியம் மாத்திரம் சொல்லுவதானால் அதை யார் ஒப்புக்கொள்ள முடியும்? ஏனெனில், பார்ப்பனர்கள் மீது நாம் சொல்லும் குற்றமே அதுதானேயல்லாமல் வேறு என்ன?

அதாவது, இந்தப் பார்ப்பனர்கள் வேதம் என்றும், மதம் என்றும், சாமி என்றும், பூதம் என்றும் புரட்டுகள் கற்பித்து அவைகளின்பேரால் நம்மை ஏமாற்றி, நம்மைத் தாழ்த்தி, நம்மீது ஆயிரக்கணக்கான வருடங்களாய் ஆதிக்கம் செலுத்திவருகின்றார்களாதலால்—அந்த ஆதிக்கத்தை ஒழித்து, நாம் விடுதலை பெறவேண்டும் என்றுதான் சொல்லிவருகின்றோம். இந் நிலையில் இருக்கின்ற நாம் எப்படி, 'காலாவதி தோஷத்தை' ஒப்புக் கொள்ள முடியும் ?

அன்றியும், இந்த ஆதிக்கத்தையும் உரிமைகளையும் நிலைநிறுத்திக்கொள்ள சைமன் கமிஷனைத் தஞ்சமடைந்து விஞ்ஞாபனம் செய்துகொள்ள வேண்டும் என்கின்றார்.

இதை, தான் மாத்திரம் தனியாய்ச் சொல்லுவதாக இல்லாமல் பிராமண சபை, வருணாசிரம பரிபாலன சபை, வைதிகப் பிராமண சபை ஆகியவைகளும் இக் கொள்கைகளை ஒப்புக்கொண்டிருப்பதாகவும் சொல்லுகின்றார். இதிலிருந்து சைமன் கமிஷனின் சக்தி எவ்வளவு என்பது விளங்காமல் போகாது.

எனவே, சுயமரியாதை இயக்கத்தைக் குற்றம் சொல்லுகின்றவர்களும், சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூலிப் பிரசாரம் செய்கின்றவர்களும் இதிலிருந்தாவது பாடம் கற்றுக்கொள்வார்களாக !

['குடிஅரசு'—தலையங்கம்—26-8-1928]

10. பிரம்மஞான சங்கமும் பார்ப்பனரல்லாதாரும்

உலகத்திலுள்ள மக்கள் மனித சக்தியை உணராததற்கும் அறிவின் அற்புதத்தின் கரை காணாததற்கும், பல்வேறு பிரிவுகளாய்ப் பிரித்து ஒற்றுமையைக் கெடுத்திருப்பதற்கும், சுயநலம், பிறநல அலட்சியம், துவேஷம் முதலியவைகள் ஏற்பட்டுப் பரோபகாரம், இரக்கம், அன்பு முதலியவைகள் அருகிப் போனதற்கும், இயற்கை இன்பங்களும், சுதந்திர உரிமைகளும் மாறி, துக்கத்தையும் நிபந்தனை அற்ற அடிமைத்தனத்தையும் இன்பமாகவும் சுதந்திரமாகவும் நினைத்துக்கொள்ள வேண்டியதான நிர்ப்பந்தமுள்ள செயற்கை இன்பத்தையும் சுதந்திரத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டியதற்கும் முக்கிய காரணம் மதங்கள் என்பதே எமது அபிப்பிராயம்.

இந்த மதங்களேதாம் மக்களுக்குக் கொடுங்கோன்மையான ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்தனவென்றுகூடச் சொல்லவேண்டியிருக்கிறது.

உலகத்தில் பல காரணங்களால் ஏற்படும் பூகம்பம், எரிமலைக் குழம்பு, பூமிப் பிளவு, மண்மாரி, மழை, வெள்ளம், புயற்காற்று போலவும், காலரா, பிளேக் முதலிய ரோகங்கள் போலவும் மனித சமூக வீழ்ச்சிக்கு அடிக்கடி வேறு வேறு வேஷத்தின்பேரால் மதங்கள் என்பவைகளும் தோன்றிக்கொண்டே வருவதுண்டு.

இம் மதக் கேடுகளை உணர்ந்த அனேகரும், உண்மையிலேயே அக் கெடுதல்களை ஒழிப்பதற்கென்று வேலை செய்தவர்கள் அனேகரும் அந்த மதத்தை அப்படியே வைத்துக் கொண்டு கொள்கைகளுக்கு வேறுவித வியாக்கியானம் செய்தும், மற்றும் அம் மதத்திற்கு வேறு கொள்கைகளைப் புகுத்தியும், மற்றும் வேறு மதத்தை ஏற்படுத்திப் பழைய கொள்கைகளையே வேறு ரூபத்தில் வைக்கும் பலவித மாயவேலை செய்து வந்தும் ஒரு விதத்திலும் வெற்றி பெறாமல் பழைய நிலையிலேயே இருந்திருக்கிறார்கள்.

மற்றும் சிலர் சுயநலங்கொண்டு தங்கள் சமூக உயர்விற்கும், வகுப்பு ஆதிக்கத்திற்கும் ஆதாரமாகச் சூழ்ச்சிகள் செய்து, மக்களை ஏமாற்றிப் பல தந்திரங்கள்மூலம்

பழைய கொள்கைகளையே நிலைநிறுத்தி வஞ்சித்து வருகின்றார்கள். இந்த இரண்டிற்கும் தோற்றத்தில் வித்தியாசமிருந்தாலும் காரியத்தில் ஒரே பலனைத்தான் கொடுத்து வந்திருக்கின்றன.

இந்த நிலையிலேயே, அதாவது மக்களை அறியாமையில் ஆழ்த்தவும், சிலரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவுமாக இது சமயம் நமது நாட்டில்—சிறப்பாகத் தமிழ்நாட்டில் கற்றறிந்த கூட்டத்தார் என்னும் பார்ப்பனரது உதவிகொண்டு ஒருவாறு நாட்டில் உலவுகின்ற புதிய மதத் தோற்றங்களில் 'பிரம்ம ஞான சங்கம்' அல்லது 'தியாசபிகல் சொசைட்டி' என்பதும் ஒன்று. அது தலைமைப் பேராசையும், கீர்த்தி வெறியும்கொண்ட ஒரு அய்ரோப்பிய மாதின் ஆதிக்கத்திலும், வெள்ளைக்காரர்களின் பண வலிமையிலும் ஒருவாறு செல்வாக்குப் பெற்று உலவுவதுடன். ஏற்கெனவே பல காரணங்களால் உயர்வு-தாழ்வுக் கொள்கையால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மூட நம்பிக்கையால் அறிவு வளர்ச்சி பெறாத மக்களுக்கும் பெரிதும் இடையூறாகத் தோன்றி இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

இச் சபை செல்வமும், செல்வாக்கும் கொண்ட ஒரு ஸ்தாபனமாயிருப்பதால் மேற்கண்ட இரண்டிலும் ஆசையுடையவர்களான பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு இதை ஒரு சாதனமாய் உபயோகித்துக்கொள்ளக் கருதி, ஒருவாறு அதில் போய்க் குவிந்துகொள்ளுகின்றார்கள்; அதனால் பலனும் அடைந்துவருகின்றார்கள்.

நிற்க! இதன் கொள்கைகள் எவை என்று பார்ப்போமானால்—சத்தியம், சகோதரத் தன்மை ஆகியவைகள் முக்கியமானவையாகும்.

அன்றியும், கடவுள்கள்—இராம, கிருஷ்ணாதி அவதாரங்கள், தேவர்கள், மகாத்மாக்கள், தேவாத்மாக்கள், உலகத்தை இரட்சிக்க உலகக் குரு தோன்றப் போகிறார் என்பது; மகாத்மாக்களுடனும், தேவர்களுடனும் சம்பாஷணை நடத்துவதென்பது; புராணம், இதிகாசம், கீதை ஆகியவைகளில் சிலவற்றை முழுதும் சிலவற்றை ஒரு அளவுக்கும் ஒப்புக்கொள்வது; முன் ஜன்மம் அதன் நடவடிக்கைகளை அறிவது; மற்றும் இது போன்றவைகளில் நம்பிக்கையுடையவர்களும் இதை நேரில் தினம் அனுபவிக்கின்றவர்கள் என்பவர்களும் இம் மதஸ்தராவார்கள் என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், காரியத்தில் இவர்கள் நடவடிக்கை எப்படிப்பட்டது என்று பார்க்க வேண்டுமானால், அதை இந்தச் சங்கத்தில் சேர்ந்து இருக்கும் நபர்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். இதில் சேர்ந்திருப்பவர்களில் பார்ப்பனர்களே முக்கியமானவர்கள்; அதிலும் வருணாசிரமக்காரரும், வேத சாஸ்திர, இதிகாச, புராணம் முதலியவைகளில் நம்பிக்கையும் பக்தியும் உடையவர்களாம். அவர்கள் நடவடிக்கைகளைக் கவனிப்போமானால் பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் சிறிதும் சம்பந்தமற்றவர்கள் என்பதும், மக்களை ஏய்க்க வெளியில் ஒரு கொள்கையும், தங்கள் ஆதிக்கத்திற்கு உள்ளுக்குள் ஒரு கொள்கையும் உடையவர்கள் என்பதும் விளங்காமல் போகாது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக திருநெல்வேலியில் கூட்டப்பட்ட திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட, 'எல்லா இந்துக்களுக்கும் கோவில் பிரவேசம் கொடுக்கவேண்டும்' என்கின்ற தீர்மானத்தை உரமாய் எதிர்த்தவர் பிரம்மஞான சங்கத்தில் அதிக பக்தியும் நம்பிக்கையும் பற்றுதலும் உடையவரான நண்பர் திருவாளர் நெல்லையப்ப பிள்ளையே ஆவார்கள். அவர்கள் சொன்ன ஆட்சேபம் என்னவென்றால்,

'ஆதித் திராவிடர்கள் முதலியவர்கள் அசுத்தமுள்ளவர்களானதால் கடவுள் அருகில் செல்லவோ பூசை முதலியவைகள் புரியவோ அருகதை அற்றவர்கள்' என்றும், 'கடவுளின் அருகில் அவர்களைச் செல்லவிடக்கூடாது' என்றும் சொன்னார்கள்.

அதை ஆட்சேபித்து அவ்வூர் பிரபல சைவ மக்களும், சைவ தேசிகர்களும் தக்க காரணம் காட்டி மறுத்தார்கள். முடிவில் ஓட்டு எடுக்கும்போது பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த பிரபலஸ்தரான திருவாளர் பென்ஷன் தாசில்தார் நெல்லையப்ப பிள்ளை அவர்கள் ஒருவர் மாத்திரமே எதிரிடையாகக் கை தூக்கினார். இந்த விஷயத்தில் அச் சங்கத்தின் ஏக தலைவரான திருமதி பெசண்ட் அம்மையார் அவர்களும் அதே அபிப்பிராயத்தையே சொல்லி இருக்கிறார்கள். அதாவது : ‘ஆதித் திராவிடர் முதலியவர்கள் பரிசுத்தமற்றவர்களானதால் அவர்கள் தீண்டப்படாதவர்களானார்கள்’ என்று சொன்னார். அதுமாத்திரமல்லாமல், இவர்கள் சமீபத்தில் காசியில் பல்கலைக்கழகத்தில் மாணாக்கர்களின்முன்பு பேசிய காலத்தில் சாதிப் பிரிவுகளை அதாவது, வருணாசிரமத்தை ஆதரித்து, ‘தேச நன்மையை உத்தேசித்து அது அவசியம்’ என்றும் பேசி யிருக்கின்றார்கள்.

ஆகவே, வருணாசிரம தருமமும், தீண்டாமையும் ஆதரிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தால் நாட்டுக்கு எந்தவிதத்தில் சகோதரத் தன்மையும் ஒற்றுமையும் அன்பும் சத்தியமும் உண்டாகக்கூடும் என்பதை அறிவாளிகள் யோசித்துப் பார்க்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

மற்றபடி, இந்த ஸ்தாபனத்தில் நடைபெறும் மற்ற விஷயங்களை நாம் இந்த வியாசத்தில் புகுத்த இஷ்டப்படவில்லை. ஆதலால், அதைப்பற்றி நாம் எழுத வரவில்லை. அரசியல் துறையில், பார்ப்பனரல்லாதார்களுக்கு இந்தச் சங்கத்திலுள்ள வருணாசிரமப் பார்ப்பனர்களின் தொல்லையும், வகுப்பு ஆதிக்கப் பேராசையும், (இச் சங்கத்தின்) தலைவியால் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏற்படும் கொடுமையும் அளவிடற்பாலதல்ல.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் ‘பிரம்மஞான சங்கம்’ என்பது ஆரிய தர்மப் பிரச்சாரம், வருணாசிரம தர்ம பரிபாலனம், பிராமண மகாசபை என்பனபோன்ற பார்ப்பன ஆதிக்கப் பிரச்சார சபைகளில் ஒன்றே ஒழிய வேறல்ல. அதில் மேற்கண்ட சபைகளாவது வெளிப்படையாய் நம்முடன் போர் புரிகின்றன என்று ஒருவாறு சொல்லலாம். ஆனால், இந்த பிரம்மஞான சங்கம் என்பதோ சூழ்ச்சியின்மூலம் நம்மைக் கழுத்தறுத்து வருகின்றது. ஆதலால், பார்ப்பனரல்லாதார் பிரம்மஞான சங்கத்தில் சேருவது தற்கொலைத்தன்மை பொருந்தியது என்றே சொல்லுவோம்.

சமத்துவக் கொள்கையை அழித்துப் பார்ப்பனீயத்தைப் புகுத்த திருஞான சம்பந்தர் என்ற பார்ப்பனர் உதித்து ‘சைவத்தைக் காப்பாற்றிய கதை’யைப் போலவே, நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை அழித்துப் பார்ப்பனீயத்தைப் பரப்ப பெசண்ட் அம்மை என்னும் ‘லோக மாதா’ வந்து பிரம்மஞான சங்கத்தால் மக்களுக்கு ‘பிரம்மஞானம்’ புகட்டுகிறார் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு சமயம் அந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கிற செல்வாக்கால் தங்களது சுயநலத்திற்கு ஏதாவது வழி செய்துகொள்ளலாம் எனக் கருதிப் பார்ப்பனரல்லாதாரில் சிலர் அதில் சேருவதானாலும், சுயமரியாதைக் கொள்கையை ஒப்புக்கொள்ளுபவர்கள் அதில் கலந்துகொள்வது சிறிதும் பொருந்தாததாகும். அதில் உள்ளவர்களில் பெரும்பான்மையோரின் மனப்பான்மையையும் முக்கியஸ்தர்களில் தனித்தனி நபர்களின் மனப்பான்மையையும் அறிந்தே நாம் இந்தப்படி எழுதுகின்றோம்.

['குடி அரசு'–தலையங்கம்—9-12-1928]

11. பார்ப்பனீயம் : தடைக்கல்

உலகம் முழுவதும் விழிப்படைந்து முன்னேறிக்கொண்டிருக்கிற காலத்தில்—குறிப்பாக எல்லா சமூகத்தையும்விட, மதசம்பந்தமான பிடிவாதத்தில் இணையற்ற முகமதிய அரசர்கள் ஆட்சி செய்யும் நாடுகளும் கூட அரசுரிமையை இழந்தாவது சீர்திருத்தத்தைப்

பரப்பவேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கும் அரசர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து வரும் இக் காலத்தில்—இந்தியா மாத்திரம் ஒரு கடுகளவு கூட தன் நிலையைவிட்டு அசையாமல் இருக்கக் காரணம் என்னவென்பதை மக்கள் யோசித்துப் பார்த்தால் விளங்காமற் போகாது.

நிற்க, பொதுவாக உலக மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, சகோதர பாவம் கொள்ளுவதற்கு உலகத்தில் முதல் தடையாயிருந்தது—இருப்பது—'மதங்கள்' என்று சொல்லப்படுபவைகளேயாகும்; இரண்டாவது, அதன் உட்பிரிவுகள் ஆகும்; மூன்றாவது, பாஷைகளாகும். இதை அனுசரித்து இட வித்தியாசங்களும் ஆகும். உதாரணமாக, பவுத்தர்கள், கிறித்தவர்கள், முகமதியர்கள், இந்துக்கள் என்பன போன்ற மதப்பிரிவுகள் உலகத்தில் இல்லாமலிருந்தால் மக்கள் சமூகத்தைப் பெரும்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காட்டவும்—ஒரு நாட்டாருடைய சுக துக்கங்கள் மற்ற நாட்டார்களுக்குச் சம்பந்தமில்லாமலிருக்கவுமுள்ளதான நிலை உலகத்தில் இருக்கவே முடியாது என்னலாம்.

வேண்டுமானால், ஒரு சமயம் தேசத்தின் பேரால் மக்களையும் பிரித்துக் காட்ட வேண்டியதாக ஏதாவது ஏற்பட்டால் ஏற்படலாம். அப்படிக்கு இருந்தாலும் துருக்கியருக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் உள்ள பிரிவுகள் போன்ற பிரிவுகளும்; அமெரிக்காவுக்கும் அய்ரோப்பாவுக்கும் உள்ள வித்தியாசம் போன்ற பிரிவுகளும் போல இருக்குமே ஒழிய—எக்காரணத்தைக் கொண்டும் ஒற்றுமைப்படமுடியாததும், ஒரு தேசத்தையோ, ஒரு சமூகத்தையோ அடியோடு கொன்று ஒரு தேசத்தார் வாழத் துணியும்படியான பிரிவுகளாகவும்—மற்றவர்களைப்பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளாமல் தங்கள் தங்கள் சமூக நன்மையை மாத்திரம் கவனிக்கக்கூடிய பிரிவுகளாகவும்—ஒருவருக்கொருவர் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம் முதலியவைகளால் வெறுப்புக் கொள்ளும் பிரிவுகளாகவும் பிரிந்திருக்க முடியவே முடியாது என்பது நமது உறுதியாகும். கிறித்தவர்களுக்குள் பல பிரிவுகள் இருந்தபோதிலும் மதம் என்கிற ஒரு காரணத்தால் ஒன்றுபட்டு உலகத்தில் உள்ள எல்லாக் கிறித்தவர்களும் இந்தியாவின் ஆதிக்கம் முதலிய விஷயங்களில் எதிரிகளாகவே இருந்து—இந்தியாவை உறிஞ்சி வருகின்றார்கள் என்பதை தினமும் உணருகிறோம். அதுபோலவே, உலகத்திலுள்ள எல்லா முகமதியர்களும் தங்கள் மதத்தின் பேராலும் சமூகத்தின் பேராலும் தங்களது நன்மையைக் குறிக்கொள்ளும்போது—இந்துக்கள் என்பவர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் எதிரிடையாய் இருக்க நேர்ந்தாலும் சிறிதும் அபிப்பிராய பேதமில்லாமல் ஒன்றுசேருகின்றார்கள்.

அதுபோலவே, இந்துக்கள் என்பவர்களும் மதவிஷயங்கள் என்பவைகளில்—முகமதியர்கள், கிறித்தவர்கள் என்பவர்களுக்கு எதிராக ஒன்றுசேர முடியாதவர்களாயிருந்தாலும் கூட ஒன்றுசேர வேண்டும் என்கின்ற உணர்ச்சிகளை எளிதில் அடைவதன்மூலம் எதிரிகளாகக் கருதத் தக்கவர்களாகிவிடுகின்றார்கள். இது சரியா, தப்பா அல்லது இதற்கு ஏதாவது பொருள் உண்டா என்பவைகள் ஒருபுறமிருந்தாலும்—முக்கியமாய், மதத்தின் பலனாய் வேற்றுமை உணர்ச்சிகள் தோன்றியே தீருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படியெல்லாம் இருந்தாலும்கூட, மேல்நாட்டில் உள்ள ஒவ்வொரு மதக்காரர்களும் சமீப காலமாய்த் தங்கள் பிடிவாத குணங்களை விட்டு முதலில் தங்களுக்குள் ஒன்றுபடுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு, அம் முயற்சிக்கு எதிரிடையாய் இருப்பவைகளைத் தகர்த்தெறிந்து ஒரே சமூகமாக ஆவதற்கு மிக முனைந்து வருகின்றார்கள். இம் முயற்சிக்கு விரோதமாக மதத்தின் பேராலும் தெய்வத்தின் பேராலும் இருக்கும் தடைகளைக்கூட வெகு சுலபத்தில் தகர்த்தெறியத் துணிந்து வருகின்றார்கள்.

உதாரணமாக, இம்முயற்சியில் சிறிதளவானாலும் முதலில் வழிகாட்டின பெருமை மேல்நாட்டுக் கிறித்தவர்களுக்கே உண்டு என்று சொல்லவேண்டும். ஏனெனில், அவர்கள் தாம் முதன்முதலாக நிலைமைக்குத் தக்கபடித் தங்களைச் சரிப்படுத்திக்கொள்ள முன்

வந்தவர்கள். உதாரணமாக, அவர்கள் வேதம் என்று சொல்லப்படும் பைபிளைக்கூடத் திருத்த முயன்று, 'பழைய ஏற்பாட்'டிற்கு விரோதமாய்ப் 'புதிய ஏற்பாட்டை' உண்டாக்கி—நடை, உடை முதலியனவைகளையும் மாற்றிக்கொண்டார்கள். அதுபோலவே, இரண்டாவதாக முகமதியர்களையும் சொல்லலாம். ஏனெனில், அவர்களிலும் இந்துக்கள் என்பவர்களைப் போல் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது போன்ற சில கடுமையான பிரிவினை வித்தியாசங்கள் இல்லாவிட்டாலும், வாழ்க்கையில் முகமதியர்களையும் மதம் என்பது இந்துக்கள் என்பவர்களைப்போலவே அனேக விதங்களில் கட்டுப்படுத்தி வந்திருக்கின்றது என்று சொல்லலாம். உதாரணமாக, நடை, உடை, பாவனை முதலாகிய பலவற்றுள் மதங்களின் பேரால் கட்டுப்பட்டுக்கிடந்தாலும் இப்போது தைரியமாய் அக் கட்டுப்பாடுகளில் சிலவற்றையாவது தளர்த்திவிட ஆரம்பித்து விட்டார்கள். அது மாத்திரமல்லாமல், வெகு துரிதமாகவும் தைரியமாகவும் சிலர் மாற்றிக்கொள்ளவும் ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் படிக்கு மாற்றிய முகமதிய வீர அரசர்களான அமீருக்கும், பாட்சாவுக்கும் ஆதரவு கொடுக்கவும் முந்துகிறார்கள்.

மற்றும், வெளிநாடுகளில் அந்தந்த தேச குடிஜனங்கள் பெரும்பாலோர் அத் திருத்தங்களுக்குத் தாராளமாய் ஆதரவளித்துப் பின்பற்றி வருவதில் யாதொரு தடையும் காண முடியவில்லை. ஆனால், புரோகிதக் கூட்டத்தின் தொல்லைகள் மாத்திரம் எந்த மதத்திலும் சிறிதளவாவது இல்லாமலிருக்கும் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும், அவர்களிலும் சிலர் தம் சுயநலத்திற்கு வலியுறுத்துவதைத் தவிர வேறு காரணங்கள் சொல்லவோ, ஆதாரங்கள் காட்டவோ முடியாதபடி மக்கள் அறிவு பெற்றுவிட்டார்கள். இந்தியாவில் உள்ள முகமதிய சமூகமும் இந்தியர்களுடன் பழகுவதால் கமால் பாட்சாவுக்கும், அமீருக்கும் விரோதமாக அதிருப்தியும் ஆத்திரமும் காட்டுவதன்மூலம் ஒரு புறத்தில் தங்கள் மதப் பற்றைக் காட்டிக் கொண்டாலும், மற்றொரு புறம் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து அவர்களுக்கு ஆதரவளித்தே வருகின்றார்கள். உதாரணமாக, அமீரையும் அவரது மனைவியரையும் இந்திய முகமதியர்களில் சிலர் குறை கூறி இருந்தாலும், அமீரினது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிட்டது என்று தெரிந்தவுடன் அவருக்கு இந்தியாவில் உள்ள மவுலானாக்கள் முதற்கொண்டு அனுதாபப்படுவதுடன், ஆதரவளிக்கவும் முந்துகின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதன் காரணம் என்னவென்று பார்ப்போமானால், கூடுமான வரை அந்தச் சமூக நன்மை சம்பந்தமான கவலையும் ஒற்றுமையுமேயாகும். ஆனால், இந்துக்கள் என்பவர்களுக்குள் அம் மாதிரியான சமூக ஒற்றுமை இல்லாமல் எவ்விதத் திருத்தங்களுக்கும் எதிர்ப்புகள் இருந்து வருவதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால், இதில் உள்ள மதப்பிரிவுகளோடு அவைகளிலுள்ள உட்பிரிவுகளும் சாதிப் பிரிவுகளும் அவற்றில் உள்ள உயர்வு-தாழ்வுகளும், அதனால் சிலருக்கு ஏற்படும் நிரந்தர நலமுமே காரணமாகும். இந்த உட்பிரிவுகளும் சாதிப் பிரிவுகளும் நிலைத்துக் குருட்டுப் பிடிவாதமாய் இருப்பதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போமானால், மற்ற மதங்களைவிட இந்துக்கள், இந்து மதம் என்பனவற்றில் அதிகமான நிர்ப்பந்தங்கள் இருந்து வருகின்றன என்பதேயாகும்.

அவையாவன :—முதலாவது, இந்துக்களுடைய மதக் கொள்கைகளின்படி மக்கள் படிக்கக்கூடாது. ஆனால், ஒரு சிறு வகுப்பினர்—பார்ப்பனர்கள் என்பவர்கள் மாத்திரம் தான் படிக்க உரிமையுள்ளவர்கள். மத ஆதாரம் என்பதைப்பற்றி, இந்து மதத்தைச் சேர்ந்த மக்களே தெரிந்துகொள்ளக்கூடாது. மத சம்பந்தமான எந்த விஷயங்களிலும் பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்கள் என்று ஏற்பாடு செய்துகொண்ட ஒரு சிறு வகுப்பார் அதாவது 100க்கு 2 பேர்களான பார்ப்பனர்கள் தவிர—மற்றவர்களுக்குச் சொந்த அறிவை உபயோகிக்கவோ, ஆராய்ச்சி செய்யவோ, நன்மை தீமை எவை, அவசியமானவை எவை, அவசியமில்லாதவை எவை என்று தெரியவோ சற்றும் உரிமை கிடையாது.

படிப்பு, மத சம்பந்தம் ஆகியவைகளில் இம் மாதிரியான நிர்ப்பந்தம் இருப்பதோடு மாத்திரமல்லாமல், மனித வாழ்க்கையிலும் மக்களைத் தனித்தனி சாதிகளாகப் பிரித்த தோடல்லாமல் அவற்றில் உயர்வு தாழ்வும், ஒருவரை ஒருவர் தொடாமல் நெருங்காமல் காணமுடியாமல் செய்வித்து, ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு பிறவித் தொழிலையும் ஏற்படுத்தி, அவைகளையேதான் அவ்வவ் வகுப்பைச் சேர்ந்தவன் செய்து தீரவேண்டும் என்றும் அந்தப்படி அரசன் சட்டம், தண்டனை, கண்டனை ஆகியவைகள் மூலம் செய் விக்கவேண்டும் என்றும் அரசர்களாலும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டுவிட்டது.

ஒரு சிறு கூட்டத்தார் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கபடி, தங்கள் வாழ்வுக்குத் தேவையானபடி, நிரந்தரமாய்ப் பொருள் வருவாய் இருக்கத் தக்கதாகப் பதினாயிரக் கணக் கான கடவுள்களைச் சிருஷ்டித்து, ஆயிரக்கணக்கான சடங்குகளையும் சிருஷ்டித்து அவற்றிற்குத் தினப்படி பூஜை, உற்சவம், கலியாணம், அவைகளின் திருப்திக்கு என்று அச்சிறு கூட்டத்தாருக்கு வேண்டிவைகளையெல்லாம் அவசியமாக்கி, அவர்கள் கேட்டதை யெல்லாம் கொடுக்கவேண்டும் என்றும், அச்சிறு கூட்டத்தாரின் திருப்தியே கடவுள் திருப்தி என்றும், மற்ற மக்கள் பிறந்ததே அச்சிறு கூட்டத்திற்குத் தொண்டு செய்வதற்கென்றும் பலவாறாகக் கற்பித்து, அக் கட்டுபாடுகளிலிருந்து யாராவது விலகவோ அல்லது அக் கட்டுப் பாடுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவோ புறப்பட்டால்—அந்த ஆராய்ச்சி செய்வது மகா பாதகமானதென்றும், நாத்திகமென்றும், அப்படிப்பட்ட நாத்திகனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் மற்றும் இதுபோன்ற பல நிர்ப்பந்தங்களையும் உண்டாக்கி வைத் திருக்கின்றார்கள்.

இது மாத்திரமல்லாமல், யாராவது துணிந்து இக் கட்டுப்பாட்டையும் கொடுமை யையும் உடைக்கப் புறப்பட்டால் அவர்களை அசுரர்கள், இராட்சதர்கள், துஷ்டர்கள், தேவர்களுக்கு விரோதி, கடவுளுக்கு விரோதி, உலகத்திற்கு ஆபத்தை விளைவிப்பவன் என்பதான விஷமப் பிரசாரத்தால் அவனை அடியோடு அழித்துவந்திருக்கின்றார்கள். இன்றைய தினமும் மேற்கண்ட கொள்கைகளே மதக் கொள்கைகளாகவும் அவைகளைக் கொண்ட புஸ்தகங்களே மத ஆதாரங்களாகவும் அவைகளை நிலைநிறுத்தச் செய்வதே சீர்திருத்தங்களாகவும் இருந்து வருகின்றன.

உதாரணமாக, இது சமயம் நாட்டில் ஏற்பட்ட ஒரு புது உணர்ச்சியையும் கிளர்ச்சியு மானது மக்களை எவ்வளவோ தூரம் நடை, உடை, ஆச்சாரம், போகம், போக்கியம் முதலியவைகளில் பழைய கொள்கைகளையும், பழைய அனுபவங்களையும் மாற்றிக்கொள்ள அவசியமும் இடமும் ஏற்படுத்திக் கொடுத்து அனுபவத்திலும் தலை சிறந்து விளங்கிக் கொண்டிருந்தும், தனது சொந்த சுயநல மாத்திரம் எவ்வளவு அறிவீனமும் ஆணவமும் இழிவும் பொருந்தியதாக இருந்த போதிலும், அதிலிருந்து சற்றாவது மாறுவதோ தளர்த்தப் படுவதோ என்பது சிறிதும் முடியாததாகவே இருக்கின்றது.

உதாரணமாக, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதி வித்தியாசத்தை நமது இந்திய நாட்டில் உள்ள அறிவாளிகள், பிரமுகர்கள், தலைவர்கள், பெரியோர்கள், இந்திய நாட்டில் உள்ள பொது இயக்கங்கள், சமயத் தத்துவங்கள் என்பவைகள் எல்லாம் அனேகமாய் ஏகோமுகமாக விலக்க வேண்டும் என்றும், ஒழிக்கவேண்டும் என்றும், அந்தப்படி ஒழிக்காவிட்டால் நாட்டிற்குச் சுதந்திரமில்லை—தேசத்திற்குச் சுயமரியாதை இல்லை—சமயத்திற்கு மதிப்பு இல்லை என்றும் பலவாறாக அபிப்பிராயம் கொடுத்தும், தர்மத்தின் பேராலும், மதத்தின் பேராலும் கூட்டங்கள் கூடித் தங்களுக்கும் தங்கள் ஆதிக் கத்திற்கும் தகுந்தபடியே தீர்மானங்கள் செய்து வருகின்றார்கள்.

உதாரணமாக, சமீபத்தில் பல இடங்களில் பார்ப்பனர்கள் ஒன்றுகூடி வருணாசிர மத்தை உறுதிப்படுத்தி, 'பார்ப்பனர் தவிர மற்றவர்கள் பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள், பார்ப்பனச் சேவைக்காகக் கடவுளால் உண்டாக்கப்பட்டவர்கள்' என்கின்ற

கருத்துக்களடங்கிய—'சூத்திரர்கள்' என்பதை நிலை நிறுத்த முயற்சித்திருப்பதும்; சைவர்கள் என்பவர்கள் ஒன்றுகூடி, தீண்டாமை என்பதை நிலை நிறுத்தத்தக்க வண்ணமாக, 'தீண்டாதவர்கள் என்பவர்களுக்குத் தனிக் கோவில் கட்டிக் கொடுக்க வேண்டும்' என்று தீர்மானித்திருப்பதும் போதுமான உதாரணங்களாகும்.

எனவே, இந்த மாதிரி 'வருணாசிரம தர்ம'ங்களும், இந்த மாதிரி 'சைவர்'களும் நமது நாட்டில் உள்ளவரை எந்த விதத்தில் பார்ப்பனீயம் ஒழிய முடியும்? எந்த விதத்தில் சமத்துவம் உண்டாகும்? எந்த விதத்தில் மக்கள் ஒற்றுமைப்பட்டு மானத்துடன் வாழ முடியும்? என்பதை யோசித்தால் இந்தியாவில் எப்படிப் பார்ப்பனீயம் நிலைத்து-எந்தெந்த வழியில் நாட்டைப் பாழாக்கிவருகின்றது என்பது புலனாகும்.

எனவே, இந்தியாவில் பார்ப்பனீயமற்ற மதமே இல்லை என்றும், இந்து மதமென்னும் தலைப்பின் கீழ் எந்த மதமானாலும், சமயமானாலும் அகச் சமயமானாலும் அவற்றை எல்லாம் அடியோடு அழித்தாலல்லது மக்கள் அன்பு நிலை என்பதை ஒரு காலமும் அடைய முடியாதென்றே சொல்லுவோம்.

['குடி அரசு'-தலையங்கம்—14-4-1929]

12. பார்ப்பனீயம் ஒழிய

தலைவரவர்களே, தோழர்களே,

ஒரு இடத்தில் ஒரு வியாதி ஏற்பட்டால்—வியாதி வந்தவனுக்குப் பார்த்துப் பார்த்து மருந்து கொடுத்துக் கொண்டு வருவதால்—வியாதியை ஒழித்துவிட முடியாது. வியாதியின் மூலாதாரத்தைக் கண்டுபிடித்து, அதை அடியோடு அழிக்கவேண்டும். அதுபோலவே, கொசுக்கள் இந்த மண்டபத்திற்குள் வருவதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதை அழிக்கவேண்டும். இந்த மண்டபத்தில் இவ்வளவு அதிகமான கொசுக்கள் 'கொச, கொச' வென்று இருக்கின்றனவென்றால்—இதற்குக் காரணம் இங்குள்ள ஓதம், அருகிலுள்ள நீர்த்தேக்கம், அதிலுள்ள அசுத்தம், அழுக்கு ஆகிய காரணங்களால் தான் கொசுக்கள் உண்டாகின்றன என்பதை நன்றாய் அறியவேண்டும். கொசு உபத்திரவங்கூடாதென்கின்றவர்கள் மேற்கண்ட அசிங்கங்களையும், நீர்த்தேக்கங்களையும் ஒழிக்க வேண்டும். அக்கம் பக்கம் உள்ள எல்லா இடமும் சுத்தமாக வைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் கொசுக்கள் ஒழியும்; இல்லாவிட்டால், 'வெட்ட வெட்டத் தழையும்' என்பதுபோல—எவ்வளவு அழித்தாலும் வட்டியுடன் பெருகும் என்பதே எனது அபிப்பிராயம்.

ஆகையால், அதுபோலவே பார்ப்பனர்கள் எப்படி உண்டானார்கள், அவர்கள் தொல்லை எதனால் ஏற்பட்டது, அதை எது பாதுகாத்து வளர்க்கின்றது, என்பவைகளைக் கண்டுபிடித்து அவற்றை அழியுங்கள்! நசுக்குங்கள்! அதுதான் பார்ப்பனீயத்தை ஒழிக்கும் மார்க்கமாகும். இல்லாதவரையில், நமது பாடெல்லாம் வீணாகிவிடும். அன்றியும், மற்றவர்களால் வீண்கூச்சலும் குரோதமும் துவேஷமும் என்றுதான் சொல்லப்பட்டுவிடும்.

ஆகையால், நாம் விஷயங்களில் முன்னைய அபிப்பிராயங்களைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாமல், மூலகாரணங்களைக் கண்டு அவற்றை அழிக்கும் வேலையில் ஈடுபட வேண்டும் என்று சொல்லுகின்றேன்.

அது என்னவென்றால், பார்ப்பான் என்பது—'மேல் சாதிக்காரன்' என்கின்ற தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. மேல்சாதிக்காரன் என்பது பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து, ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பது என்கின்ற தத்துவத்தின்

மீது கட்டப்பட்டிருக்கின்றது. இதை நன்றாய் உணர்ந்து, இந்தத் தத்துவ அடிப்படையை இடித்தெறிய முயன்றோமானால், பார்ப்பனர்கள் என்கின்ற வார்த்தையே நாட்டில் இல்லாமல் போய்விடும். பார்ப்பனர் மாத்திரமல்ல—ஒரு சாதிக்கு மற்றொரு சாதி மேல் என்கின்ற தத்துவமே அழிந்துவிடும். அதுமாத்திரமல்ல, சாதிமுறையே அடியோடு அழிந்துவிடும். சாதாரணமாக, இன்று பார்ப்பன சாதியை மாத்திரம் ஒழித்துவிட்டால் போதுமா, என்று பாருங்கள்! இந்த நாட்டில் பார்ப்பனர்கள் கூடாதென்று சொல்லுகின்ற போது, அதற்கு அடுத்த சாதியராய் விளங்கும் சைவர்கள் முதலியவர்கள் இருக்க இடமுண்டா, என்று யோசித்துப்பாருங்கள். சைவன் என்றால் என்ன? பார்ப்பானைப் போலவே சரீரத்தால் வேலைசெய்யாத சோம்பேறி என்றுதானே அர்த்தம்? எவனெவன் தன்னை மேல்சாதிக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகிறானோ அவனெல்லாம் சரீரத்தால் வேலை செய்யாமல் மற்றவர்கள் உழைப்பில் வாழுகின்றவன்—வாழ ஆசைப்படுகின்றவன் என்றுதானே அர்த்தம்!

ஆகவே, சாதியை ஒழித்தாக வேண்டும் என்றும், எல்லோரும் சரீரத்தால் பாடுபட்டாக வேண்டும் என்றும் நிபந்தனை ஏற்படுத்தியாக வேண்டும். பாடுபடாதவனுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்று ஆக்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பானும் ஒழிவான்; பார்ப்பானால் ஏற்படுகின்ற கொடுமை என்பதும் வேறு எந்த வகையிலும் இந்த நாட்டில் இல்லாமல் ஒழியும்.

மேல்நாடுகளில்கூட பல இடங்களில் இந்தக் கொடுமை—அதாவது சோம்பேறிகளின் சூழ்ச்சியும், கொடுமைகளும் இருந்துதான் வருகின்றன. அதற்காகத்தான் இன்று அனேக பாகங்களில் சோம்பேறி–பாட்டாளி சண்டைகளும் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வையுங்கள். அதென்னவென்றால், இந்த சோம்பேறி சாதிகளுக்கோ, வகுப்புகளுக்கோ ஆதரவும் ஆக்கமும் அளித்துக் காப்பாற்றிவர மற்றொரு கூட்டம் இருக்கின்றது. அதுவும் ஒழிந்தாக வேண்டும் என்பதைக் கருத்தில் இறுத்தினால்தான், இந்த ஏமாற்றமும் கொடுமையும் ஒழிந்துபடும். அதென்னவெனில், அதுதான் பணக்கார வகுப்பு, முதலாளி வகுப்பு, மிராசுதார் வகுப்பு என்பனவாதியவைகளாகும். இந்த வகுப்புகளால்தான் 'பார்ப்பனீயம்'—அதாவது 'சோம்பேறித்தத்துவம்' இருந்து வருகின்றது. அதையும் மாற்றியோ அழித்தோதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் சுலபத்தில் பார்ப்பனீயம் ஒழிந்துவிடாது.

[சேலத்தில், 19–2–1933–ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 5–3–1933]

13. பார்ப்பன ஆட்சி

'தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்து, மனிதனைக் கடிக்க ஆரம்பித்து விட்டது' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அது போல், பார்ப்பனீயம்—அதாவது பார்ப்பன ஆட்சி அங்கு கை வைத்து, இங்கு கை வைத்து அடிமடியில் கையைப் போட்டு விட்டது என்று சொல்லவேண்டியதாகி விட்டது.

காங்கிரசைப்பற்றியும் காந்தியைப்பற்றியும் நாம் எதிர்த்தும் மக்களை ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று எச்சரித்து வந்ததுமானது, அரசியல் ஆதிக்கம் நமக்குக் கூடாதென்றோ, வெள்ளையர்–அன்னியர் இந் நாட்டைவிட்டுப் போகக்கூடாது என்றோ அல்ல என்பதை அவ்வப்போது தெரிவித்து வந்திருக்கிறோம். ஆனால், மற்றென்ன காரணமென்றால், இந் நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து வயிறு பிழைக்க வந்து, இந் நாட்டு ஆதி மக்களைப் பல வழிகளிலும் ஏய்த்தும் கொடுமைப்படுத்தியும் வெற்றிகொண்டு

அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி ஆட்சிபுரிந்த மூன்று வகையாரில்—அதாவது, ஆரியர், முஸ்லிம்கள், அய்ரோப்பியர் ஆகியவர்களில்—ஆரியர்களே மிகமிகக் கொடுமை செய்து மக்களைக் காட்டுமிராண்டிகளாக்கி மதத்திலும் சமுதாயத்திலும் அரசியலிலும் அடிமைகொண்டு ஆட்சி புரிகின்றவர்கள் ஆவார்கள். ஆதலால், எந்தக் காரணம் கொண்டும்—அதாவது, அய்ரோப்பியரே இன்னமும் ஆயிரம் வருஷம் ஆட்சிபுரிவதாயிருந்தாலும், முஸ்லிம்களே இன்னம் பதினாயிரம் வருஷம் ஆட்சி புரிவதானாலும்—ஆரியப் பூண்டின் ஆதிக்கம் மாத்திரம் கூடவேகூடாது என்று கருதி, காங்கிரசும் காந்தியும் ஆரிய ஆதிக்கத்துக்கு ஆயுதமாகவும் கூலியாகவும் இருந்து வருவதால் ஆரிய ஆதிக்கம் ஒழிவதற்கு இவ்விரண்டும்—அதாவது காங்கிரசும் காந்தியும் அடியோடு ஒழியவேண்டும் என்று சொல்லி எதிர்த்து வந்தோம்.

ஆரியர்களின் பிறவிக்குணம், சாதிக்குணம் இவ்விரண்டும் ஆரியரல்லாதவர்களை ஒழிப்பது அல்லது அடிமைகொண்டு அவர்கள் உழைப்பில் வாழ்வது என்பதேயாகும். இதற்கு உதாரணம் வேண்டுமானால் ஜெர்மானியரை—ஹிட்லரைப் பார்த்தால் விளங்கும். 'ஆரியரல்லாதவர்கள் ஒழியவேண்டும்' என்பது ஹிட்லருடையவும் நாஜி ஸ்தாபனத்தினுடையவும் கொள்கையாகும். நம் நாட்டு காங்கிரஸ் கொள்கையும், ஆரியர் கூலியாக உபயோகப்படுத்தும் காந்தியின் கொள்கையும் அதுவேயாகும். அதாவது, காங்கிரஸ் 'மனுதர்மம்' வருணாசிரம முறை ஆகியவைகளின்படி இந்தியா புதுப்பிக்கப் படவேண்டும் என்று சொல்லப்படுவதே இந்த நமது கூற்றை மெய்ப்பிக்கும். மற்றும் ஆரியருடைய எந்த ஆதாரங்களை எடுத்துப் பார்த்தாலும் ஆரியரல்லாதார் நாடு மிலேச்ச நாடு, ஆரியரல்லாதார் பாஷை மிலேச்சர் பாஷை, ஆரியரல்லாதார் மிலேச்சர், அசுரர், இராக்கதர் என்பதாகக் காணக்கிடப்பதை இன்றும் பார்க்கலாம்.

இவை இந்நாட்டு ஆதிக் குடிகளுக்கும், ஆரியர் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத முஸ்லிம்களுக்கும் அவர்களது பாஷைக்கும் அவர்களது தேசத்துக்கும்தான் பொருந்தக் கூடியதாய் இருக்கிறதே தவிர, மற்ற ஜெர்மானியர் போன்றவர்களுக்குப் பொருந்தப் படுவதில்லை. ஆகவே, இந்தக் கொள்கைகள் கொண்ட ஆரியர்கள்—நமது நாட்டுக்கும் நம் நாட்டுப் பழங்குடி சமூக மக்களுக்கும் ஆரியம், ஆரிய பாஷை, அவர்களது மத உபதேசங்கள் முதலியவை கூடாது என்று கூறி வருகிறோம்.

இதில் நம்மவர்களான—அதாவது ஆரியரல்லாதாரான சிலருக்குப் பல காரணங்களால் இக் கொள்கை பிடிக்காததாகக் காணப்படலாம். அவர்கள், 'ஆரியரும்—நாமும் இந்நாட்டு மக்கள்' என்றும், 'உடனிருந்த முறை கொண்டவர்கள்' என்றும் நமக்கு உபதேசம் செய்ய வரலாம். இதை அறியாமை என்றும், அல்லாவிட்டால் கூழுக்குப் பாடும் கூலிக் கவி என்றும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆரியர்கள் இந்த நாட்டிற்கு மத்திய ஆசியாவிலிருந்து ஆடுமாடுகள் மேய்த்துக் கொண்டு கைபர், போலன் கணவாய்கள் வழியாக வந்தவர்கள் என்றும், ஆரியர்கள் என்றால் உழவர்கள்—பயிரிடுவோர்கள் என்ற அர்த்தமென்றும், அவர்கள் வருவதற்கு முன் இந்த நாட்டில் வடக்கில் 'தஸ்யூக்கள்' என்பவர்களும் தெற்கில் 'திராவிடர்கள்' என்பவர்களும் ஆதி குடிகளாய் இருந்தார்கள் என்றும், இந்த இரு சமூகத்தாரைவிட ஆரியர்கள் தந்திரசாலிகளாகவும் பலசாலிகளாகவும் இருந்ததால் இவர்கள்மீது படையெடுத்து அடக்கி ஒடுக்கி ஆதிக்கம் கொண்டார்கள் என்றும், பார்ப்பனர்களால் எழுதப்பட்ட சரித்திரங்களிலேயே இருந்து வருகிறது. மேலே குறிப்பிட்டபடி அதை இன்றும் பள்ளிப் பிள்ளைகள் படிக்கிறார்கள்.

மற்றும், இதை மெய்ப்பிக்க ஆரியர்களின் வேதம் என்று சொல்லப்படும் ஏடுகளைப் பார்த்தாலும்—அவற்றுள்ளும் ஆரியர்கள் ஆடு மாடுகளை மேய்த்துப் பயிரிட்டதையும்,

அதற்கு அனுகூலமானவற்றைக் கடவுளாகக் கற்பித்துக்கொண்டு—அக் கடவுள்களை மழை பெய்யவும், வெள்ளாமை விளையவும், பிரார்த்தனை செய்வதும், அவர்களுக்கு அக் காலத்தில் எதிரிகளாகக் காணப்பட்ட தஸ்யூக்கள் என்பவர்களையும் திராவிடர்களையும் கண்டபடி எல்லாம் வைது, சபித்தும் 'இவர்கள் அடியோடு அழிந்து ஒழிய வேண்டும்' என்று தங்கள் சாதிக் கடவுளாகக் கற்பித்துக்கொண்ட இந்திரன் முதலியவர்களைப் பிரார்த்திப்பதுமான பல பாசுரங்களைக் காணலாம். இன்றும் ஆரியர்களின் வேதமாக மாத்திரமல்லாமல் இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் ஒழிந்த கிறித்தவர்கள் ஒழிந்த, மற்ற எல்லா மக்களுக்குமே மத வேதம், புராணம், இதிகாசம் என்று சொல்லப்படும் எல்லா ஆதாரங்களிலும் நூல்களிலும் இவற்றைக் காணலாம்.

ஆனால், இவைகளைச் சரித்திர மூலமாகவும் பழந்தமிழ் நூல்கள் மூலமாகவும், வடநூல் படித்ததின் மூலமாகவும் படித்தறிந்த சில தமிழ் மக்கள் தங்கள் இழி பிறப்பினாலும், தங்களுக்கு மானத்துடன் பிழைக்க வேறு வழி இல்லாத இழி தன்மையினாலும் இவைகளை மறைத்துக்கொண்டு ஆரியர்க் கடிமையாக வாழ்ந்து காலம் கழிக்க ஒருப்பட்டிருக்கிறார்கள்.

இவை எப்படி இருந்தாலும், இந்த ஆரிய ஆட்சி அல்லது ஆதிக்கம் இந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கு—முஸ்லிம் ஆட்சி செய்ததாய்ச் சொல்லுவதைவிட—ஐரோப்பிய ஆங்கில ஆட்சி செய்ததாய்ச் சொல்லுவதைவிட—மிக மிகக் கொடுமை செய்து வந்திருக்கிறது என்பதல்லாமல், இன்னமும் சகிக்க முடியாத துன்பங்கள் அடையும்படி வதைத்து வருகின்றது என்று சொல்லவேண்டியிருக்கின்றது.

['குடிஅரசு'–தலையங்கம்—7-8-1938]

14. உஷார்

தோழர்களே! தாய்மார்களே!

எங்கள் கழகத்திற்குத் திட்டமில்லை என்று கூறுகிறீர்களே! உங்கள் இராஜகோபாலாச்சாரியாருக்கே தெரியுமே—ஜஸ்டிஸ் கட்சித் திட்டமென்றால் அது எவ்வளவு முற்போக்கானதென்று. ரஷ்யாவுக்குக்கூட நாங்கள் திட்டம் போட்டுக் கொடுப்போமே! நாங்களொன்றும் புத்தகப் பூச்சிகளல்லவே—கம்யூனிஸ்டுகளைப்போல் புத்தகம் பார்த்துத் திட்டம் போட.

கொழும்பு நகரத்தில் ஒரு பெரிய தோட்டம் இருக்கிறது. அங்கு ஒரு விளம்பரப் பலகையில், 'அந்தத் தோட்டத்தில் இல்லாத செடியின் பெயரைக் கூறிவிட்டால் அவருக்கு ரூ. 100 பரிசாக அளிக்கப்படும்' என்று எழுதி இருக்கிறது. அதே போல், நான் 100 அல்ல, 500 ரூபாய் தருகிறேன். ஏதோ குறிப்பிட்டுக் காட்டுங்கள், எங்கள் கழகத்தில் இல்லாத ஒரு திட்டத்தை. தனி உடைமையா, பொது உடைமையா, சமதர்மமா—எதற்கு எங்களிடம் திட்டம் இல்லை என்று கூறமுடியுமா, உங்களால்? கம்யூனிஸ்டுகள் முதல் போட்ட முதலாளிகளை மட்டுமே திட்டிவிட்டுப் பார்ப்பான் கிளப்பில் போய் ஓசிக் காப்பி வாங்கிச் சாப்பிடுவார்கள். நாங்கள் முதல் போடும் முதலாளிகள் மட்டுமல்லாமல், முதல் போடாத குழவிக் கல்லையும் அதன் பேரால் பிழைக்கும் பூணூல் பார்ப்பன முதலாளிகளையும் சேர்த்துக் குறை கூறுகிறோம். இது தானே வித்தியாசம்? அடுத்த 50 ஆண்டிற்கு ஆகக் கூடிய திட்டமுண்டு எங்களிடம். எங்களிடம் உடனடியாகப் போராட்டம் நடத்துவதற்கான திட்டம் ஒன்றுமில்லை என்று வேண்டுமானால் கூறலாம். போராட்டம் வேண்டும் என்பதற்காகவே ஒரு போராட்டத்தை நடத்துவதா? ஏதாவது ஒரு இலட்சியம் வெற்றி பெறுவதற்காகப் போராட்டம் நடத்துவதா? சிந்தித்துப் பாருங்கள்! மக்களிடம் பதவி கேட்கவோ அல்லது நற்சாட்சிப் பத்திரம் பெறவோ அல்ல—போராட்டம் நடத்தப்பட

வேண்டியது. போராட்டம் நாம் நடத்துவோமானால் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே நமது இலட்சியமும் நிறைவேறிக் கொண்டு வரவேண்டும்; அப்படிப்பட்ட தறுவாயில்தான் நமது போராட்டமும் துவங்கும்! சட்ட மறுப்புச் செய்வதென்பது முட்டாள்தனம்; சண்டித்தனம். அதனால்தான் 'சட்டமறுப்பு, சட்டமறுப்பு' என்று பஜனை செய்தவர்கள் இன்று சட்டம் செய்ய முடியாமல் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள்.

ஆகஸ்ட் கலவர காலத்திச்—அதாவது, தந்திக் கம்பி அறுக்கப்பட்டு, தபாலாஃபீஸ் கொளுத்தப்பட்ட அந்தக் காலத்தில் ஒரு கவர்னர் 'டாப்' இல்லாத காரில் நடுத்தெருவில் பயமின்றிச் சவாரி செய்து கொண்டிருந்தான். ஆனால், அந்தக் காலத்தில் 'சட்டமறுப்பு, சட்டமறுப்பு' என்று கூறிக் கொண்டிருந்தனரே—இந்த சுயராஜ்ய காலத்தில் அவர்கள் மந்திரிகளாகியும்கூட வெளியே தனித்துச் செல்லப் பயப்படுகிறார்கள். இந்தியாவின் முதன் மந்திரி முள்வேலிக்குள் அடைபட்டுக் கிடக்கிறார்; எங்கும் சுதந்திரமாகப் போக முடிய வில்லையே என்று பிரலாபிக்கிறார். ஏன் இந்த நிலை? ஜெயிலை விட்டு வெளிவந்த பிறகு ஆகஸ்ட் கலவரக் காரணஸ்தர்களுக்கு நன்றி தெரிவிக்காதிருந்தால்—அவர்களுடைய அக்கிர மம், நாச வேலையைக் கண்டித்திருந்தால், நாட்டில் இவ்வளவு அக்கிரமம் தாண்டவமாடுமா?

தோழர்களே! நாட்டில் தங்கு தடையின்றி வளர்ந்து வரும் இக் காலித்தனத்திற்கு இடங் கொடாமல் அதை அடக்கிவருவதுதான் எங்கள் முதல் வேலை. ஆகஸ்ட் கலவரத்தின் போது செத்தவர்கள், கஷ்டப்பட்டவர்கள், பொருளிழந்தவர்கள் நம்மவர்கள் தாம். ஆனால், இன்று பயனும் பெருமையும் அடைந்தவர்களோ, அக்கிரகாரச் சோம்பேறிகள் தாம். பாடு படத்தான் நமக்கு உரிமை; இதை நீங்கள் நன்றாக மனதில் இறுத்தவேண்டும். பாடு படத்தான்—ஆரிய தர்மப்படி நமக்கு உரிமையுண்டே தவிர, பாடுபட்டதன் பயனை அனுபவிக்க நமக்கு உரிமை இல்லை என்பதை காங்கிரஸ் திராவிடத் தோழர்கள் உணர வேண்டும்.

ஒரு இராமசாமி ரெட்டியாரோ, ஒரு காமராஜரோ, என்னதான் நமக்குத் துரோகம் செய்தாலும், அவர்கள் நம்மவர்கள்; அவர்களும் திராவிடர்கள் என்பதை நம்மால் மறந்து விடக்கூடுமா? அவர்கள்மீது நம் கழகத் திராவிடர்களை ஏவிவிடுவது முறையாகுமா? அன்னக்காவடி பார்ப்பனர்கள் நாட்டில் காலித்தனம் வளர இடம் கொடுக்கிறார்கள் என்பதற்காக, ஆண்ட இனத்தவரான நாமும் காலித்தனத்தைக் கற்பித்துக் கொடுப்பதா? அவர்களைவிட நமக்குத்தான் பொறுப்பு அதிகம். ஏனெனில், இது நம்முடைய நாடு; இதில் வாழ்பவர்கள் 100-க்கு 97 பேர் நம்மவர்கள். ஆகவே, நாம்தான் மக்களுக்கு ஒழுக்கத் தையும், யோக்கியதையையும், கட்டுப்பாட்டையும் கற்பித்துக்கொடுக்க வேண்டியவர்கள். பார்ப்பனர் இந்நாட்டிற்குப் பிச்சையெடுக்க வந்தவர். ஆகையால் இந்நாட்டைப்பற்றியோ, இந்நாட்டு மக்களைப்பற்றியோ, அவர்களுக்குக் கவலையிடையாது. ஆகவே, அவர்களைக் கண்டு நீங்கள் ஆத்திரப்பட்டுவிடக் கூடாது; ஆராய்ந்து தெளியவேண்டும்.

பார்ப்பனர்–திராவிடர் போராட்டம் ரொம்பவும் வளர்ந்துவிட்டது; பார்ப்பனர்களும் துணிந்துவிட்டார்கள்; துணியக் காரணம் இல்லாமல் இல்லை. இன்று ஆட்சி அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறது. அனேகமாக அவர்கள் ஆதிக்கத்திற்கு இதுவே கடைசி கால மாகவும் இருக்கக்கூடும். இன்று தவறின், நாளை ஆட்சி யார் கைக்குச் செல்லுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே, ஆட்சி தம் ஆதிக்கத்தில் உள்ளபோதே நம்மீது பாய்ந்து தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள நினைக்கிறார்கள். 'கறுப்பு நாய், வெள்ளை நாய் ஆகாது; கழுதை, குதிரை ஆகாது; ஆண், பெண்ணாக மாறமுடியாது; பெண், ஆணாக மாறமுடியாது. இவை எப்படி ஆண்டவன் படைப்போ, அதேபோல் ஆண்டவனால் பார்ப்பானாகப் பிறப்பிக்கப்பட்டவன் பார்ப்பானாகத்தான் இருப்பான்; ஆண்டவனால் சூத்திரனாகப் பிறப்பிக்கப்பட்டவன் சூத்திரனாகத்தான் இருப்பான். இவை மாற்ற முடியாதவைகள்' என்று கூறியிருக்கிறார்கள்.

திவான் பகதூர் சாஸ்திரியார், எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ஆகியோர் கூடி இனி இரண்டில் ஒன்று பார்த்துக்கொள்ள இருக்கிறார்கள். 'புல் லேந்திய கை வாளேந்தும். பல முறை வாளேந்திப் பலரைக் கொலைசெய்திருக்கிறோம்; பலரை அண்டியிருந்து கெடுத்திருக்கிறோம்' என்று கூறி மேலும் மார்தட்டிக் கூறுகிறார்கள். சிப்பாய்க் கலகத்தை நடத்தியவர் யார் தெரியுமா? இராணா என்கிற ஒரு பார்ப்பான்தான்—ஞாபக மிருக்கட்டும். இது மட்டுமா? திருநெல்வேலியில் ஆஷ் துரையைச் சுட முன்வந்தவன் யார் தெரியுமா? வாஞ்சி என்கிற ஒரு பார்ப்பனன். இதுமட்டுமா? உலகமே போற்றிய உத்தம காந்தியாரைக் கொன்றது—யார் தெரியுமா? கோட்ஸே என்கிற ஒரு பார்ப்பான் என்பது ஞாபகமிருக்கட்டும்! துப்பாக்கி எடுக்குமளவுக்குத் துணிந்து நம்மைப் போருக் கழைக் கிறார்கள்—நாம் அஞ்சாமல் எதிர்த்து நிற்போம். அவர்கள் பேச்சுப்படி முன்வரட்டும்.

அதற்முன் அந்த அய்யர் கூறியிருப்பதைச் சற்று அலசிப் பார்ப்போம். 'ஆணைப் பெண்ணாக்க முடியாது, பெண்ணை ஆணாக்க முடியாது' என்கிறார். அய்யோ, பாவம்! இன்னும் இந்த அய்யர் பஞ்சாங்க காலத்திலேயே இருக்கிறார். மேனாட்டு அறிஞர்கள் இதற்கும் வழிகண்டுபிடித்துவிட்டார்கள் என்பதையும்; ஒரு பெண் ஆணாக்கப்பட்டு விட்டதையும்; இயற்கையாகவே சேவல் பெட்டையாவதும், பெட்டை சேவலாவதும் சகஜமாகவே இருந்துவருகிறது என்பதையும், இவர் அறிந்துகொள்ள வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, 'பார்ப்பானும், சூத்திரனும் கடவுள் படைப்பு; ஆகவே, இவ் வேற்றுமை மாற்றக்கூடாதது, மாற்றமுடியாதது' என்கிறார். இந்தப் பார்ப்பனரைப் படைத்த கடவுள்தானே என்னையும் படைத்திருக்கவேண்டும்? 'அந்தக் கடவுள் அனுமதி யில்லாமலே, பார்ப்பானை ஒழிப்பதுதான்—சூத்திரனை ஒழிப்பதுதான் என் வேலை' என்று கூறிக்கொண்டு அதையொட்டிப் பிரச்சாரம் செய்துவருவேன். நான்மட்டும் எப்படிக் கடவுள் ஆக்கினைக்குப் புறம்பாக நடக்கமுடியும்? அப்படி இருக்கும்போது அவனண்டையே போய் முட்டிக் கேளேன்—'ஆண்டவனே, அந்தணனையும் படைத்து அவனை ஒழிக்க ஒரு இராமசாமி நாயக்கனையும் ஏன் படைத்தாய்?' என்று!

இங்கு சுமார் 1½ இலட்சம் பேர்கூடி இருக்கிறோம் என்றாலும், ஒரு பார்ப்பனப் பத்திரிகையாவது ஒருவரி எழுதுமா, இங்கு நடக்கும் நடவடிக்கையைப் பற்றி? ஏதாவது ஒரு சின்னக் கலவரம்—இங்கல்ல, தூத்துக்குடி கடைத்தெருவில் நடந்துவிடட்டும், கொட்டை எழுத்தில் எல்லாப் பார்ப்பனப் பத்திரிகைகளும் 'தூத்துக்குடி கடைத்தெருவில் கருப்புச் சட்டையினர் கலாட்டா' என்று பிரசுரிக்கின்றனவா, இல்லையா பாருங்கள்? அவ்வளவு கட்டுப்பாடாக நம் சங்கதியை மறைக்கின்றனர். எங்கோ சென்னை ரஸிக ரஞ்சன சபாவில் 3¾ பார்ப்பனர்கள் கூடினார்கள் என்றால், அதுபற்றி ஒவ்வொரு பார்ப்பனப் பத்திரிகையிலும் ஒரு பக்கம் சேதிவருகிறதே! இந்த அக்கிரமத்தைப் பற்றிக் கேட்க ஆளுண்டா! இவ்வளவு அக்கிரமம் நீங்கள் செய்துகொண்டு, 'புல்லேந்தும் கை, வாளேந்தும்' என்று கூறுகிறீர்களே, அடுக்குமா இந்த ஆணவம் உங்களுக்கு? இப்படி நீங்கள் நேரில் வெளி வரவேண்டும் என்றுதானே இவ்வளவு காலம் பொறுத்திருந்தோம். எவ்வளவு சீக்கிரம் வெளிவருகிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் எங்களுக்கும் நலமாயிற்றே! அவ்வளவு சீக்கிரத்தில் இழிவும் ஒழிந்துபோகுமே! நீங்கள் இருப்பது 100-க்கு 3 பேர்; நாங்கள் இருப்பது 100-க்கு 97 பேர். எங்களில் ஒரு ஆள் உங்களில் ஒரு ஆளைக் கூடவா, வெற்றிகொள்ளமாட்டான்? நாங்கள் 97-க்கு 3 பேர் அழிந்தால் பரவாயில்லை; மிச்சம் இருக்கும் 94 பேராவது இழிவு நீங்கி மனிதர்களாக வாழ்வார்கள். உங்களில் 3-க்கு 3 பேர் மாண்டால் அப்புறம் 'சைபர்'தான் இருக்கும்!

புல்லேந்தியவர்கள், வாளேந்தினால்—வாளேந்தியவர்கள் என்ன ஏந்துவார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்! விரல் உரல் ஆனால், உரல் என்னவாகும்? அப்புறம் உங்கள் கதி என்னவாகும்? என்பதையும் நினைத்துப் பாருங்கள். அனுதினமும் பார்ப்ப

னர்கள்தாம் திராவிடர்களுக்குத் தொல்லைகொடுத்து வருகிறார்களே ஒழிய, திராவிடர்களல்லர் பார்ப்பனர்களுக்குத் தொல்லைகொடுத்து வருவது என்பதை எல்லா மக்களும் உணர்ந்துகொள்ளவேண்டும். பார்ப்பனர்கள் வாழை இலைகள்; திராவிடர்கள் முட்செடிகள். வாழை இலை முள்ளின்மீது மோதினாலும், முள் வாழை இலைமீது மோதினாலும் வாழை இலைதான் அழிந்துபடும். அதுபோல், பார்ப்பனர்கள் திராவிடர்கள் மீது மோதினால் அவர்கள்தான் அழிவார்கள். திராவிடர்கள் பார்ப்பனர்களை மோத ஆரம்பித்தார்களோ—அப்புறம் பார்ப்பனப் பூண்டே இந்நாட்டில் இருக்காது. இதைப் பார்ப்பனர்கள் உணரவேண்டும். பார்ப்பனத் தோழர்களே! எங்களை முட்டாள்களென்று கூறி உங்களைப் புத்திசாலிகள் என்று பெருமையடித்துக்கொள்கிறீர்கள். ஆணவப்பட்டு அழிந்து போகாதீர்கள். புத்திசாலிகளானால், புத்திசாலிகளாகவே பிழைத்துக்கொள்ளுங்கள்.

உங்களவரே இந்தியாவின் முதன் மந்திரியாயிருப்பது பற்றியும், உங்களவரே கவர்னர் ஜெனரல் ஆகப் போவதுபற்றியும் நீங்கள் பெருமையடித்துக் கொள்ளாதீர்கள். இவர்கள் பார்ப்பனர்களா யிருப்பதால்தான் இந்தப் பதவிக்கு உரியவர்களானார்களே தவிர—எங்களவர்களைவிட அதிகமான யோக்கியதை ஒன்றும் இவர்களுக்கு இருந்துவிடவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். இந்நாட்டில் எத்தனையோ அறிவாளிகளான திராவிடத் தாய்மார்கள் இருக்க ஒரு பார்ப்பனத்திதான் இம் மாகாணத்தின் மந்திரியாக முடிந்ததென்றாலும் அதுவும் உங்களவர் ஆதிக்கத்தினால்தானே ஒழிய, புத்திசாலித்தனத்தால் அல்ல என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். 100-க்கு 3 பேரேயுள்ள உங்களுக்கு உயர்ந்த பதவிகள் எல்லாம் சொந்தமாய் இருப்பது முறையல்ல. பாடுபடும் பாட்டாளிகள் சூத்திரர்களாகவும், பாடுபடாத சோம்பேறியாகிய நீங்கள் உயர்சாதிக்காரர்களாகவும் இருப்பது நேர்மையல்ல என்பதையும் நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள்! பொதுவாக, உங்களுக்குச் சகல உரிமைகளும் வாங்கிக் கொடுத்தவர்கள் திராவிடர்கள்தான் என்பதை நீங்கள் உணருங்கள். 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்ததுபோல்', நீங்கள் சுயராஜ்யத்தை உங்கள் நன்மைக்காகவே பயன்படுத்திக் கொள்ளல் நியாயமல்ல என்பதை உணருங்கள்; எல்லோருக்கும் சுயஉரிமை இருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.; எங்களையும் உங்களது சகோதரரைப் போல் நடத்துங்கள். 'எல்லோரையும் சமமாகப் பார்ப்பவர்கள் பிராமணர்கள்' என்று கூறிக்கொண்டு—எதற்காக உச்சிக்குடுமி வைத்துக்கொள்கிறீர்கள்? எத்தனை நாட்களுக்கு எங்களவர்களில் சிலரை உங்கள் கையாட்களாக வைத்துக்கொண்டு எங்களை ஏய்த்துவரலாம் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் பக்கம் வந்துவிட்டால் உங்கள் கதி என்ன ஆவது? என்ன செய்யப் போகிறீர்கள்? இப்போதே வந்துகொண்டிருக்கிறார்களே!

சென்ற கறுஞ்சட்டை மாநாட்டின்போது மதுரையில் எங்கள் பந்தலைக் கொளுத்துவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட தோழர் ஒருவர் என்னிடம் வந்து, 'அய்யா! நான் அக்கிரகாரக் கும்பலின் பேச்சைக் கேட்டு அன்று ஏமாந்துபோனேன். இன்றுமுதல் நான் உங்கள் சிஷ்யன்; என்னை மன்னிக்கவேண்டும்' என்று கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்! 'அப்பா நீ மட்டுமல்ல, நானும் அப்படித்தானப்பா ஏமாந்தேன்; ஆகவே மன்னித்து ஏற்கவேண்டும் என்று ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர்களோடு நான் சேர்ந்தேன்' என்று ஆறுதல் கூறினேன். ஒவ்வொரு தோழரும் இப்படித்தானே நடக்க நேரிடும்! அந்த மதுரைக்காரரைத் தூண்டிவிட்ட அக்கிரகாரத்துக்கார அய்யர் கூறினாராம், "டேய், நீ நேற்றுவரை வெறும் ரெங்கசாமியாயிருந்தே, இன்று நீ ரெங்கசாமி நாயக்கர் ஆகிவிட்டே' என்று. அதற்கு அந்தத் தோழர் கூறினாராம், 'நானாவது நேற்றுவரை வெறும் ரெங்கசாமியாயிருந்து, இன்று ரெங்கசாமி நாயக்கர் ஆனேன்; ஆனால், நீ பிறந்தது முதற்கொண்டு அய்யராகவே இருந்து வருகிறாயே, இது நியாயமாகப்படுகிறதா உனக்கு?' என்று கேட்டாராம். கேள்வி கேட்ட பார்ப்பனர் பேசாமல் வாயை மூடிக்கொண்டாராம்.

இந்தப் பார்ப்பனர்கள் தாம் எங்கு பார்த்தாலும் நமக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள்; நமது கூட்டங்களுக்குத் தடை விதிக்கும்படி பார்ப்பன சப்-இன்ஸ்பெக்டர்களைத் தூண்டுகிறார்கள்; நமது கறுப்புச்சட்டைக்காரர்கள்மீது தடையுத்தரவு பிறப்பிக்கும்படி தூண்டுகிறார்கள், பார்ப்பன உபாத்தியாயர்கள் நமது பிள்ளைகளுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள்; பார்ப்பனத் தலைமை உபாத்தியாயர்கள், திராவிட உபாத்தியாயர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள்.

நாம் கோரும் முன்னேற்றத் திட்டங்களையெல்லாம், கூடுமான அளவுக்கு எதிர்க்கிறார்கள். ஆனால் அது சட்டமாகியவுடன் அதன் முழுப் பயனையும் அவர்களே அடைந்து கொள்கிறார்கள். பெண்களுக்கு வயது வந்த பிறகுதான் கல்யாணம் செய்யவேண்டுமென்று, நாம் கூப்பாடிட்ட போது எதிர்த்தார்கள். ஆனால், அது சட்டமானபோது அவர்கள் தான் அதன் முழுப்பயனையும் அடைந்து வருகிறார்கள். விவாகரத்து உரிமை, பதிவுத் திருமணம், சொத்துரிமை ஆகிய எதையும் எதிர்ப்பவர்கள் இவர்கள்தான். இப்படியாகப் பார்ப்பனர்கள் நம்மை எவ்வளவுதான் எதிர்த்து வந்தபோதிலும் நமக்கு ஏதோ நல்ல வாய்ப்பாய்த்தான் இருந்து வருகிறது. நாம் இதுவரை உயிரோடிருப்பதே ஒரு நல்ல வாய்ப்புத்தான். இனி நான் இறந்தாலும் ஏனைய திராவிடத் தோழர்கள் ஏமாந்து விடமாட்டார்கள். எனது வேலையை அப்படியே விட்டு விடமாட்டார்கள். தொடர்ந்து போராடி வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

நமது கொள்கைகள் ஒரு அளவுக்குப் பொதுமக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டன. இன்னும் கொஞ்ச காலத்திற்குள், நம் இஷ்டம் போல் நடக்காத மந்திரிகளுக்கு மந்திரிசபை நாற்காலி இடம் கொடுக்காது; நம் இஷ்டப்படி நடக்காத அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடைக்காது; நம் இஷ்டப்படி நடக்காத சட்டசபை மெம்பர்களுக்குச் சட்டசபை இடங் கொடுக்காது என்கிற நிலை ஏற்பட்டுவிடும். இந்நிலை வெகு சீக்கிரமே ஏற்பட வேண்டுமானால் நாம் எல்லோரும் கறுப்புச் சட்டைக்காரர்களாக வேண்டும். நீங்கள் என்ன 'சட்டைக்காரனா?' என்று நம்மைச் சிலர் கேட்கக்கூடும். நம் நாட்டில் 'சட்டைக்காரர்கள்' என்றொரு கூட்டம் இருந்து வருவது உண்மைதான்; அவர்கள் பலசாதிக்குப் பிறந்தவர்கள். ஆகவே வெறும், 'சட்டைக்காரர்கள்' என்று மட்டும் அழைக்கப்பட்டு வருகிறார்கள். நாம் அப்படியல்ல. நாம் ஒரே சாதிக்குப் பிறந்தவர்கள். ஆகவே 'கறுப்புச் சட்டைக்காரர்கள்' என்று நம்மையழைத்துக் கொள்கிறோம். கறுப்புச்சட்டை ஒரு படையெடுப்பின் எண்ணமல்ல; அது இழிவின் அறிகுறி. 'இழிவிற்காக அவமானப்படுகிறோம்; துக்கப்படுகிறோம்; அதைப் போக்கிக் கொள்ள முயற்சி செய்கிறோம்; முடிவு செய்து விட்டோம்' என்பதன் அறிகுறி.

தோழர்களே! நீங்கள் விரும்பி அணியுங்கள் கறுப்புச் சட்டையை! அடுத்த மாநாட்டிற்குள்ளாவது இந்த இழிசாதிப் பட்டம் கட்டாயம் ஒழிக்கப்பட்டேயாகவேண்டும். அதற்காக ஒரு 2000, 3000 பேர்களாவது பார்ப்பனர்களின் பலிபீடத்தில் தம் உயிரை இழக்கத் தயாராயிருக்க வேண்டும். 'நானா சூத்திரன்? எங்கள் தாய்மார்களா சூத்திரச்சிகள்? இந்நிலை ஒரு நிமிட நேரமேனும் இருக்க இடங்கொடேன்! இதோ என் உயிரை இதற்காக அர்ப்பணிக்கவும் துணிந்துவிட்டேன்!' என்கிற உணர்ச்சி ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்படவேண்டும். இழிசாதிப் பட்டத்தை யொழிப்பது சுலபமான காரியமல்ல என்றாலும், உலக அறிவு முன்னேற்றம், சாதி உயர்வு—தாழ்வுகளை இனி இருக்க விடாது. ஆகவே, உறுதி பெற்றெழுங்கள்—இழிவு நீக்கந்தான் முக்கியம் என்று! சாகாமலேகூட வெற்றி பெற்றுவிடலாம்.

[தூத்துக்குடியில், 9-5-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-5-1948]

15. ஆரியர் இயல்பு

ஜெர்மானியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். நம் நாட்டுப் பார்ப்பனர்களும் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இந்துமத ஆதாரங்களும் ஆரிய மதம், ஆரிய வேஷம், ஆரியக் கடவுள்கள், ஆரிய மன்னர்களின் கதைகள் என்பதாகத்தான் இருந்து வருகின்றன.

புராண ஆராய்ச்சிக்காரர்களும் பண்டிதர்களும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் பாரதம், இராமாயணம், மற்ற புராதனக் கதைகள் ஆகியவைகளில் வரும் சுரர், அசுரர் என்கின்ற பெயர்களையும், இராட்சதர்கள், தேவர்கள் என்கின்ற பெயர்களையும், இராமன், அனுமன் என்கின்ற பெயர்களையும், ஆரியர்—திராவிடர் என்கின்ற பிரிவையே பிரதானமாய்க் கொண்டதாகவும் தீர்மானித்துப் புத்தகங்கள் எழுதி இருக்கிறார்கள். மேல் நாட்டுச் சரித்திரக்காரர்களும், சிறப்பாக அரசாங்கத்தார்களும் மேற்கண்ட ஆரியர்—திராவிடர் என்கின்ற பிரிவை ஒப்புக்கொண்டு அந்தப்படியே ஆதாரங்கள் ஏற்படுத்திப் பள்ளிப்பாடமாகவும் வைத்து வந்திருக்கிறார்கள்.

அரசியல்காரர்களில் தீவிரக் கொள்கைகொண்ட தேசீயவாதிகள், சமதர்மக்காரர்கள், பொதுவுடைமைக்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற தோழர் ஜவகர்லால் நேரு போன்றவர்களும், தங்களது ஆராய்ச்சிகளில் ஆரியர்-திராவிடர் என்கின்ற பிரிவுகளை ஒப்புக் கொண்டும், சரித்திரங்களில் இருந்துவரும் ஆரியர்-திராவிடர் பிரிவுகளை ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆரியர்களின் தத்துவம் எப்படி இருக்கிறதென்றால் இந்தியா அவர்களுடைய பூர்வீக நாடு என்று சொல்லுவதற்கில்லாமல் இருப்பதோடு, இந்தியாவில் ஆரியர்களுக்கு உள்ள சம்பந்தம்—கேவலம், ஐரோப்பாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் அரேபியாவிலும் பர்சியாவிலும் இருந்து வந்து குடியேறிய ஐரோப்பியர், முகமதியர்கள், பார்சியர்கள் ஆகியவர்களுக்கு இருந்துவரும் பொறுப்பும் உரிமையும், மனிதாபிமானமும்கூட இல்லாதவர்கள் என்று சொல்லும்படியான நிலையில்தான் இருந்து வருகின்றார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், ஜெர்மானியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொண்டு, 'ஜெர்மனி தேசத்தில் உள்ள யூதர்களுக்கு ஜெர்மனியில் இருக்க உரிமை இல்லை' என்று சொல்லி விரட்டியடித்த தன்மை போலத்தான்—இந்தியாவிலுள்ள மக்களால் ஆரியர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் யூதர்களை விரட்டியடிப்பதற்குச் சொல்லிய காரணங்கள், இந்தியர்கள் ஆரியர்களை விரட்டியடிக்கலாம் என்பதற்குப் பொருத்தமானதாகவே இருக்கின்றன என்பது கவனிக்கத் தக்கதாகும்.

அதாவது, ஜெர்மானியர்கள் யூதர்களை விரட்டியடித்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் சொல்லுகிறார்கள்.

அவைகளில் ஒன்று, யூதர்கள் தங்களுக்கென்று தேசம் இல்லாதவர்கள் என்பதும், தேசம் இல்லாத (அதாவது ஜிப்ஸி—மலைசாதியார்—லம்பாடிகள்—கூடாரத்தோடு திரிகின்றவர்கள் போன்றவர்கள்) அப்படிப்பட்டவர்களை ஒரு நாட்டில் வாழ விட்டால் அவர்கள் அந்த நாட்டின் வளப்பத்தையும் முற்போக்கையும் காட்டிக்கொடுத்து ஜீவிக்கிறவர்களாகி விடுவார்கள் என்பதுமாகும்.

இரண்டாவது, யூதர்கள் சரீரத்தினால் பாடுபடமாட்டாதவர்கள்; சரீரத்தினால் பாடுபடாதவர்கள் ஊரார் உழைப்பைக் கொள்ளை கொண்டு வாழுபவர்களாவார்கள் என்றும்;

ஊரார் உழைப்பால் வாழுகின்றவர்கள்—மனித சமூகத்துக்கு சயரோகம் போன்ற வியாதிக்குச் சமமானவர்கள் என்பதோடு, தங்கள் சோம்பேறி வாழ்க்கைக்காக நாட்டையும் மனித சமூகத்தையும் பிரிவினையிலும் கலகத்திலும் தொல்லையிலும் இழுத்து விட்டுக் கொண்டு சமாதான பங்கத்தை விளைவித்து மிகக் குறைந்த விலைக்கும் எதையும் காட்டிக்கொடுப்பார்கள் என்பதாகும்.

இந்த இரண்டு காரணங்களும் இன்று நமது நாட்டில் 'ஆரியர்' என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களாதியோரிடம் இருந்துவருகின்றன.

முதலாவது, 'ஆரியர்களுக்கு இன்ன தேசம்' என்பதாகவே ஒன்று இல்லை என்பதோடு, ஆரியர்கள் என்பவர்கள் சரீரத்தினால் பாடுபடாமல்—மதம், புரோகிதம், சாதி உயர்வு, அரசியல், உத்தியோகம், தேசியத் தலைமை என்கின்றதான சூழ்ச்சித் தொழில்களால்—சிறிதும் சரீரப் பாடுபடாமல் மற்ற ஆரியரல்லாத மக்கள் உழைப்பினாலேயே 'வஞ்சக ஜீவியம்' நடத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்கள் வாழ்க்கை, தங்கள் ஆதிக்கம் என்பது அல்லாமல் மற்றபடி எந்த தேசத்தைப் பற்றியோ, எவ்வித ஒழுக்கத்தைப் பற்றியோ, எந்த சமூகத்தைப் பற்றியோ சிறிதும் கவலை இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

இந்தக் காரணத்தாலேயே நமது பழைய ஆதாரங்கள், அகராதிகள் ஆகியவற்றில் ஆரியர்கள் என்றால் 'மிலேச்சர்கள்' என்றும், 'ஒருவிதக் கழைக்கூத்தர்கள்' என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

இதற்கேற்பவே, ஆரியர்கள் இந்நாட்டில் என்று காலடி வைத்தார்களோ அன்று முதல் இன்றுவரை, பலவித வஞ்சகங்களாலும், சூழ்ச்சிகளாலும் இந்நாட்டுமக்களை ஏமாற்றி அவர்களைச் சின்னாபின்னமாகப் பிரித்து, ஆபாசக் கற்பனைகளையும் நடத்தைகளையும் வேதமாகவும், மோட்ச சாதனமாகவும் ஆக்கி, இந்நாட்டு மக்களுக்கு அவர்களே ஆதிக்கக்காரர்களாகவும்—'இகம்', 'பரம்' இரண்டிற்கும் தர்மகர்த்தாக்களாவும், சமுதாயம், அரசியல் இரண்டிற்கும் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் எஜமானர்களாகவும்கூட தங்களை ஆக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆனால், இவர்களது தர்மகர்த்தாத் தன்மையிலும் எஜமானத் தன்மையிலும் வழிகாட்டித் தன்மையிலும் இந்நாட்டுக்கு எந்தத் துறையிலாவது ஏதாவது கடுகளவு முற்போக்கோ, நன்மையோ ஏற்பட்டு இருக்கின்றன என்று யாராவது சொல்லமுடியுமா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியாவுக்கோ, இந்திய நாட்டுப் பழம்பெருங்குடி மக்களுக்கோ ஏதாவது ஒரு நன்மை—சிறிதளவாவது ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுமானால் அதில்—ஒரு சிறிது முஸ்லிம் அரசர்களாலும், பெரும்பாலும் அய்ரோப்பிய ஆட்சியாலும் ஏற்பட்டதென்றே சொல்லாம்.

அதுவும் ஆரியர்களின் முட்டுக்கட்டையையும், தொல்லைகளையும் சமாளித்து ஏற்பட்டவைகள் என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய, மற்றபடி ஆரியர்கள் முயற்சியோ, உதவியோ ஒருசிறிதாவது கொண்டு ஏற்பட்டனவென்று எதையும் சொல்லமுடியாது.

மேலும், இன்று அரசியல், சமூக இயல், பொருளியல், அறிவியல் ஆகிய நான்கு துறைகளிலும் இந்நாட்டு மக்கள் அடைந்திருக்கும் ஈனநிலைக்கு இந்த ஆரியர்களே காரணம் என்று சொன்னால் அதுவும் மிகையாகாது.

ஆகையால், தேசமில்லாதவர்களும் தேக உழைப்பு இல்லாதவர்களுமான சமூகம் எந்த நாட்டிற்கும் கேடுவிளைவிக்கக்கூடியது என்பதோடு, முக்கியமாக இந்தியாவுக்கு அது ஒரு பெருங்கேட்டையே விளைவித்துக்கொண்டிருப்பதாகவே இருந்துவருகிறது.

இதை நமது பாமர மக்கள் உணராமல் ஏமார்ந்து போய் தங்களுக்குத் தாங்களே கேட்டை விளைவித்துக்கொள்கிறார்கள் என்பது ஒரு புறம் இருக்க, இந் நாட்டு ஆரியரல்லாத மக்களில் படித்தவர்களாயும் விஷயமறிந்தவர்களாயுமுள்ள ஒரு கூட்ட மக்கள் அவ்வாரியர் களுக்கு 'உள் ஆளாய்' இருந்து சமூகத்தையே அடியோடு காட்டிகொடுத்தும்—கெடுத்தும் தாங்கள் வாழ முயற்சிக்கும் இழிநிலையை உணரும்போது, ஆரிய சுபாவம் இவர்களது இரத்தத்தில் எப்படி ஊறியது என்று ஆச்சரியப்பட வேண்டியிருப்பதை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

['குடி அரசு'—கட்டுரை 10-9-1949]

16. புரோகித ஆட்சி

தலைவரவர்களே, தோழர்களே!

நான் கூறுகிறேன், தொழிலாளர்கள் மோதிக்கொள்ள வேண்டிய இடம் முதலாளிகள் அல்ல. முதலாளிகளிடம் முறையிடுவதற்குப் பதிலாக மந்திரிகளிடம் முறையிடுங்கள்; அவர்கள் வீட்டைக் கொள்ளையடிப்பதற்குப் பதிலாக சஜானாக்களைக் கொள்ளையிடுங்கள். உங்களுக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கை இருந்தால் அதை யோக்கியமான முறையில், வீரமான முறையில் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளியின் கூலி உயர்ந்துவிட்டால் மட்டும் அவன் நிலை, அந்தஸ்து உயர்ந்துவிடாது; தொழிலாளித் தன்மை அடியோடு மாறிவிடாது.

கூலி உயர்வு என்று கூறுவதெல்லாம் பார்ப்பனர் சூழ்ச்சி. பாட்டாளிகளை வேறு பக்கம் திருப்ப அவர்கள் கையாளும் தந்திரம் பாடுபடாதவன் எப்படிச் சுகவாழ்வு வாழ்கிறான் என்று உள்ள நிலைமைகளைத் தொழிலாளர்கள் உணர்ந்துவிட்டால், பார்ப்பன இனத்தின்மீது பாய்ந்துவிடுவார்கள். இந்த நிலைமை ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சியே, மற்ற கழகங்கள் கூலி உயர்வுப் பிரச்சினையை மட்டும் பேசுகின்றன. தொழிலாளர் பிரச்சினை சீக்கிரமாகத் தீர்ந்துவிட, முடிவுபெற நாங்கள் புரோகித ஆட்சிமீது—பார்ப்பனர்கள்மீது திருப்புகிறோம். அரசாங்கத்தின்மீது திருப்புவது, பார்ப்பனன்மீது திருப்புவது ஆகிய இரண்டும் ஒன்றேதான். அரசாங்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் புரோகிதர்கள். இந்தியப் பிரதம மந்திரி நேருவும் புரோகிதன் பரம்பரை; சென்னை முதன் மந்திரி இராஜகோபாலாச்சாரி ஓர் புரோகிதரின் பேரர், நேற்று ஆந்திராவில் ஒருவர் முதன் மந்திரியானர், அவர் ஒரு புரோகிதரின் மகன். புரோகிதர்களுக்குப் பதவி வசதியாகக் கிடைக்கிறது. ஆகவே, புரோகிதர் ஆட்சி ஒழியவேண்டுமென்றாலும்—அரசாங்கம் ஒழிய வேண்டும் என்றாலும் எல்லாம் ஒன்றுதான்.

இந்தியாவிற்குச் சக்கரவர்த்தியிருந்தார் [Emperor of India]. அவருக்குப் பாதுகாப்பாகத் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை அனைத்தும் இருந்தன. அவன் இன்று எங்கே போய்விட்டான்? அவனை விரட்டி விட்டோமே, 'Quit India' என்று கூறி! சக்கரவர்த்தி இல்லாமலேயே நாம் வாழ்கிறோமே? இந்தியாவில் 562 சிற்றரசர்கள் வாழ்ந்திருந்தார்கள்; 'சுதந்திரம்' பெற்றவுடன் அவர்கள் தங்கள் கிரீடங்களை இறக்கிக் காணிக்கையாக வைத்துவிட்டு, மாதம் 50000, 20000 என்று கூலி பெற்றுக்கொண்டு போய் விட்டார்கள்! அரசன் இல்லாத காலமே சரித்திரத்தில் இல்லாதிருந்தது. அப்படிப்பட்ட நிலையை மாற்றிவிட்டோமே! ஜமீன்தார்களும் ஓடிவிட்டார்களே! அடுத்தப்படி பணக்காரன் இருக்கிறான். உனக்கு ஏன் 1000 வேலி, 2000 வேலி என்று கேட்கும் நாள் வரும். அவனும் ஒழிந்துவிடுவான். இந்த அருமையான மாறுதல் ஏற்பட்டுவரும் காலத்தில் இந்த அன்னக்காவடிப் பார்ப்பான் ஏன்?

[கல்லக்குறிச்சியில், 4-10-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-10-1953]

17. 'பார்ப்பானே, வெளியேறு!'

தலைவரவர்களே! தோழர்களே!

ஆரியர்கள்—பார்ப்பனர்கள் இந்த நாட்டுக்காரர்கள்தாம் என்று சொல்ல முடியுமா? அல்லது நாம்தான் இந்த நாட்டுக் குடிமக்கள் அல்லவென்று சொல்லிவிட முடியுமா? பார்ப்பனர்களே எழுதிவைத்த சரித்திரங்களிலேயே எழுதியிருக்கிறார்களே, பார்ப்பனர்கள் இந்த நாட்டுக்குப் பிழைக்க வந்தவர்கள் என்று! அவர்களே எழுதி இருக்கிறார்களே, திராவிட மக்களாகிய நாம்தான் இந்த நாட்டின் பூர்விகக் குடிமக்கள், சொந்தக்கார மக்கள் என்று!

நாட்டுக்குச் 'சுதந்திரம்' கிடைத்துவிட்டதே! எங்கள் நாடு எங்கள் மக்கள் கையில்தானே இருக்கவேண்டும்? அப்படியிருக்க அன்னியர்கள்—இங்கு வந்தவர்கள், திராவிடர்களல்லாதவர்கள்—'நாங்கள் வேறு இனம், வேறு சாதி, வேறு பிறப்பு' என்று தங்களைத் தாங்களே சொல்லிக் கொள்ளுகிறவர்கள்—நம்மை இழிவானவர்கள், தகுதி திறமை அற்றவர்கள் என்று சொல்லி ஆதிக்கம் செலுத்துவது என்றால் என்ன அர்த்தம்? ஆதலால், இந்த நாட்டுக்கு அன்னியர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறட்டும் என்று சொல்லுகிறோம்.

வெள்ளையன் இந்த நாட்டுக்கு அன்னியன் என்றால், இந்தப் பார்ப்பனர்களும் அன்னியர்கள்தானே! அவன் (வெள்ளையன்) 200, 300 வருட காலமாக இருந்த அன்னியன் என்றால், இந்தப் பார்ப்பனர்கள் 2000, 3000 ஆண்டு காலமாக இருக்கிற அன்னியர்கள்தானே!

வெள்ளைக்கார அன்னியன் 6000 மைலுக்கு அப்பால் வெகுதூரத்தில் இருந்ததால் தன் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள இந்த நாட்டு மக்களை அடக்கி வைத்திருந்தான் என்றாலும், நம்மை மனிதனாக நடத்தினான்; நம் ஆட்களிடம் சாப்பிட்டான்; நம் ஆட்களைத் தொடமாட்டேன் என்று அவன் சொல்லவில்லை. இன்னும் 'பறையர்கள்' என்று இந்தப் பார்ப்பனர்களால் அழைக்கப்படுகிற மக்கள்தானே அவனுடைய சமையல்காரர்களாக—'பட்லர்'களாக இருந்தார்கள்?

ஆனால், இங்கே இருக்கிற அன்னியனாகிய—இந்தப் பார்ப்பன அன்னியன் நம்மைத் தொடக்கூடமாட்டேன் என்கிறானே! தொட்டால் தீட்டு என்கிறானே! 'நான் முகத்திலே பிறந்த முதல் சாதி மனிதன்; நீ காலிலே பிறந்த கடைசாதி மகன்' என்கிறானே! நம் மக்கள் தலையெடுக்க வொட்டாமல் எல்லாத் துறையிலேயும் நம்மை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி அதற்கேற்ற முறைகளையே ஆட்சி, சட்டம், அரசாங்கம், மதம், கடவுள் என்பவைகளாக வைத்திருக்கிறானே! ஆதலால் இப்படிப்பட்ட அன்னியனை எப்படி வெளியே துரத்தாமல் இருக்க முடியும்?

'இந்த அன்னியர்களை எப்படி வெளியேற்றுவது?' என்கிறீர்களா? எப்படி வெளியேற்றுவது? வெள்ளைக்கார அன்னியன் எப்படி வெளியேற்றப்பட்டான்?

தண்டவாளத்தைப் பெயர்த்தார்கள்; இரயிலைக் கவிழ்த்தார்கள்; தந்திக் கம்பியை அறுத்தார்கள்; போஸ்டாபீசுகளைக் கொளுத்தினார்கள்; அதிகாரிகளைக் கொன்றார்கள்; முகத்தில் திராவகத்தை ஊற்றினார்கள். இவைகள் எல்லாம் பார்ப்பான் வகுத்துக் கொடுத்த திட்டங்கள்தானே!

இப்படிப்பட்ட காரியங்களால்தான் வெள்ளைக்கார அன்னியன் வெளியேறினான் என்று காங்கிரஸ்காரர்களும் பார்ப்பனர்களும் சொல்லுகிறார்கள். அவனும் இதை ஒப்புக் கொண்டதன் அடையாளமாகவோ என்னவோ இந்தக் காரியங்களுக்கு அப்புறம் போய் விட்டான்.

ஆதலால், வெள்ளைக்கார அன்னியனை வெளியேற்றுவதற்காக என்னென்ன காரியங்களைச் செய்தார்களோ அப்படிப்பட்ட காரியங்களையெல்லாம், இந்தப் பார்ப்பன அன்னியனை வெளியேற்றுவதற்கும் செய்துதானே தீரவேண்டும்! ஆனால், நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல, அவைகள் மாதிரியே திருப்பிச் செய்வதற்கு! தண்டவாளத்தைப் பிடுங்கியதிலும், இரயிலைக் கவிழ்த்ததிலும், தந்திக்கம்பியை அறுத்ததிலும், போஸ்டாபீஸைக் கொளுத்தியதிலும் யாருக்கு நட்டம்? வெள்ளைக்கார அன்னியனுக்கா? இல்லையே! நமக்குத்தானே! நம் பொருள்கள்தானே நட்டமடைந்தன? ஆதலால், நாங்கள் அதுபோல, நமக்கு நாமே நட்டத்தைத் தேடிக் கொள்கிறமாதிரி நடந்துகொள்ளவே மாட்டோம். அக்கிரகாரத்தின் பக்கம்தான் எங்கள் பார்வை திரும்பும்.

ஆகவே, தோழர்களே! இன்று சமுதாயத் துறையில், அரசியல் துறையில் நமக்குக் கேடாக இருப்பது இந்தப் பார்ப்பனர்கள்தான்.

பார்ப்பனர்களும் முடிவு கட்டிக்கொண்டார்கள், இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்று. ஆச்சாரியார் அவர்களே சொல்லிவிட்டார், 'இப்போது நடைபெறுகிறது தேவ–அசுரப் போராட்டம்' என்று. அப்படியென்றால் என்ன? ஆரிய–திராவிடப் போராட்டம், இராமாயணம்போல் துவங்கி விட்டதென்று பொருள்.

இதைப் பார்ப்பனர்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். பெரிய பெரிய அறிவாளிப் பார்ப்பனர்களிலிருந்து சாதாரண 'சவுண்டிப்' பார்ப்பனர்கள் வரை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், நம்மவர்களில் சிலர்தான் இதை இன்னும் உணராமல் இருக்கிறார்கள். உணரவில்லை என்பதோடு, நாம் செய்கிற இந்தக் காரியம் தப்பு என்றே சொல்ல வந்துவிட்டது ஒரு கோஷ்டி!

நாம் இப்போது செய்கிற இந்தக் காரியம் நம்முடைய சொந்தத்துக்காகவா? அல்லது நம்முடைய சொந்த, சுயநல, சுயசுக வாழ்வு, சுயலாபத்துக்காகவா செய்கிறோம்? எல்லாத் திராவிட மக்களுக்கும், சூத்திரர்களுக்கும், 'தாசி மக்க'ளுக்கும், பறையர் சக்கிலிகளுக்கும் சேர்த்துத்தானே செய்கிறோம்? நாளைக்குச் 'சூத்திரன்' என்ற பட்டம் போனால் எனக்கு மட்டும்தானா போகும்? அல்லது 'சூத்திரன்' என்று இருப்பது எனக்கு மட்டும்தானா? எல்லோருக்கும் சேர்த்துத்தானே இந்தக் கீழ்நிலை? நாளைக்குச் சூத்திரப் பட்டம் போனால் எல்லோருக்கும் சேர்த்துத்தானே போகும்? இதைத் திராவிட மக்கள் நன்றாக உணர வேண்டும்.

நமக்கு இன உணர்ச்சி–கட்டுப்பாடு இருந்திருக்குமேயானால் இந்த ஆச்சாரியார் தானாகட்டும், அல்லது பார்ப்பனர்கள் தாமாகட்டும் இவ்வளவு மேலே போயிருக்க முடியுமா?

நமக்கு இன உணர்ச்சி—அத் தகைய அறிவு இல்லையென்பதாலேயே நாளுக்கு நாள் அவர்கள் மேலே மேலே போகிறார்கள். காந்தியையே கொன்றார்களே!

தோழர் காந்தியார் எப்பேர்ப்பட்டவர்; எவ்வளவு பெரியவர் என்று புகழப்பட்டவர். அந்தக் காந்தியார் இல்லாவிட்டால் இந்தப் பார்ப்பனர்கள் எங்கோ கிடந்திருப்பார்கள். இவர்களையெல்லாம் தூக்கி நிறுத்தி, ஆளாக்கி, அதிகாரத்தையும் இவர்கள் கையிலே வாங்கிக்கொடுத்தாரே காந்தியார்—அவர் கொஞ்சம் பார்ப்பனருக்கு எதிராகச் சொன்னார். அதாவது, பார்ப்பனர்கள் காந்தியாரிடம் போய், 'எங்கள் பிள்ளைகளுக்குப் படிக்க இடம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்' என்பதாகப் புகார் செய்தபோது, காந்தியார், 'நீங்களெல்லாம் பிராமணர்கள்; கடவுளைத் தொழப்போங்கள். அவர்கள்தான் படிக்கட்டுமே' என்று சொன்னார் என்ற உடனேயே—ஒரு பார்ப்பான், பார்ப்பன இனத்துக்கு அவர் செய்த நன்மை, தேடித்தந்த உயர்வையெல்லாம்கூட மறந்து சுட்டுத்

தள்ளிவிட்டானே! மற்றொரு பார்ப்பனர் நாம் படிக்கவேகூடாது என்று சட்டம்—சூழ்ச்சி செய்துவிட்டாரே? இந்த அளவுக்குப் பார்ப்பனர்களிடம் இன உணர்ச்சியும் வெறியும் இருக்கின்றன.

நாம் யாரையும் சுடவேண்டாம். இனத்தைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்காமலாவது, நாம் செய்வதைக் கெடுக்காமலாவது இருக்கலாமல்லவா?

நாமும் இத்தனை நாட்களாகப் பார்க்கிறோமே! பார்ப்பனர்களில் எத்தனையோ கொள்கை பேசுபவர்கள், புரட்சிக்காரர்கள், பெரிய பெரிய தலைவர்கள் என்பவர்களையெல்லாம் பார்த்திருக்கிறோமே! இவர்களில் எந்தப் பார்ப்பனராவது, எந்தப் பார்ப்பானையாவது எதிர்த்து இருக்கிறானா? எந்தக் கட்சியில் பார்ப்பான் இருந்தாலும், பார்ப்பன சமுதாய விஷயத்தில் எல்லாப் பார்ப்பனர்களும் ஒரே கட்சிக்காரர்கள்தானே!

[வண்ணாரப்பேட்டையில், 15-11-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 18-11-1953]

18. நீதி கெட்டது யாரால்?

மேன்மைதங்கிய கனம் நீதிபதி அவர்களே!

1. சமூகம் கோர்ட்டார் எனக்கு அனுப்பியிருக்கும் நோட்டீசில் சமூகம் கோர்ட்டை அவமதித்ததாகவும், அதற்கு ஏன் நான் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்ட வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது. மேலும், ஒரு சிவசாமி முதலியார் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லி எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரமாணப் பத்திரிக்கையில், (Writ-Petition) ரிட் பெட்டிஷன் நெம்பர் 568-55-ல் சமூகம் கோர்ட்டு தீர்ப்பில் கனம் திருச்சி ஜில்லா கலெக்டரைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பவைகளைக் குறித்து, திருச்சி பொதுக்கூட்டத்தில், நான் 4-11-1956ஆம் தேதியில் மேற்படி தீர்ப்பைச் சொன்ன கனம் நீதிபதி அவர்களைக் குறைகூறியிருப்பதாகவும் (criticise), அந்த நீதிபதிகளைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியிருப்பதாகவும், அவர்களுக்கு உள் எண்ணம் (motive) கற்பித்துத் தாக்கியிருப்பதாகவும் அதனால் சமூகம் கோர்ட்டின் கவுரவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சமூகம் கோர்ட்டு நீதிபரிபாலனத்திற்கு இடையூறு விளைவிப்பதாகவும் இருக்கிறதென்றும் கண்டிருக்கிறது.

2. இந்தக் குற்றச்சாட்டு வார்த்தைகளில் நேரிடையான பொருளுக்கு ஏற்றமாதிரி நான் யாதொரு குற்றமும் செய்தவனல்லன். பொதுவாக மனித சுபாவத்தைப் பற்றியும், நீண்டகாலமாக அது பிரதிபலித்து வருவதுபற்றியுமே எடுத்துச் சொல்லி, அதற்குப் பரிகாரம் தேடவே முயற்சித்து இருக்கிறேன். பிரஸ்தாபத் தீர்ப்பில் (Writ-Petition) ரிட் பெட்டிஷன் நெம்பர் 568-55 தீர்ப்பில் பாதிக்கப்பட்டிருப்பவர் ஒரு திராவிடர்; அதிலும் தமிழர் (Non-Brahmin). தீர்ப்பு கொடுத்திருக்கிறவர்கள் பிராமணர்கள் என்று சொல்லப்படுகிற பார்ப்பனர்கள். இந்தத் தீர்ப்பின்மீது என்னுடைய ஆராய்ச்சிக்கு எட்டிய கருத்து—பாதிக்கப்பட்டவர் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதாலும், தீர்ப்புக்கூறினவர்கள் பார்ப்பனர்களாயிருப்பதினாலும் இம்மாதிரி ஏற்பட்டது என்பது எனது தாழ்மையான முடிவு. இதில் முற்கூறப்பட்டவர் பார்ப்பனரல்லாதார் என்பதையும், பின் கூறப்பட்டவர்கள் பார்ப்பனர்கள் என்பதையும் கனம் கோர்ட்டார் அவர்கள் மறுக்கமுடியாத உண்மையென்றும், இரு தரப்பார்களும் இந்துக்கள் என்பதையும் மறுக்கமுடியாத உண்மையென்றும் கருதுகிறேன்.

3. பார்ப்பனர் என்பது இந்துமதத்தின்படி வேதசாஸ்திர, புராணங்களின் தன்மையைப் பொறுத்தது. சம்பந்தப்பட்ட கனம் நீதிபதிகள் இருவரும் அந்த வேத சாஸ்திர இதிகாச புராணங்களின் தன்மைப்படி பார்ப்பனர்களாக இருப்பதோடு,

அவர்களது வாழ்விலும். தொழிலிலும் நடத்தையிலும்–மத வேத சாஸ்திர, இதிகாச, புராண தத்துவங்களுக்கு மாறுபாடாக நடக்கக்கூடாது என்ற உறுதியுடையவர்கள். இவர்கள் மாத்திரம் அல்ல, இந்த நாட்டிலே தங்களைப் பார்ப்பனர்கள் என்று சொல்லிக் கொள்கிற—கருதுகிற எவரும் இந்தத் தன்மைக்கு மாறாக நடந்துகொள்வதாகக் கூறினால் அது இயற்கைக்கும், உண்மைக்கும் மாறானதாகும். அதே வேத சாஸ்திர புராண இதிகாசங்களின்படி, பார்ப்பனர் உயர்ந்த சாதி; மற்றவர்கள்—குறிப்பாக இந்தப் புகார் சம்பந்தப்பட்ட தீர்ப்பினால் பாதிக்கப்பட்டிருப்பவர் தாழ்ந்த சாதியாளர் ஆவார்கள். உயர்ந்த சாதிக்கும் தாழ்ந்த சாதிக்கும் மனுதர்மம் முதலிய இந்து சாஸ்திர–புராண–இதிகாசங்களில் பெரிய கீழ்–மேல் பேதமும், பெருத்த இழிவும், பெருமையும் கற்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதை விட்டுவிடுவது என்பது எந்தப் பார்ப்பனனாலும் முடியாததும், விரும்பப்படாததுமான காரியமாகும். மற்றும், மேல் சாதிக்காரன் என்கின்ற பார்ப்பானுக்கு இந்த சாதி உணர்ச்சியை விடாமல் எந்தத் துறையிலும் காட்டிக்கொள்வதனால் மேன்மையும் நல்வாழ்வும் இலாபமும் இருந்து வருகின்றன. அதை இழக்க எந்தப் பார்ப்பானும் சம்மதிப்பான் என்று நம்புவது இயற்கைக்கு விரோதமானதாகும். ஆனதனால், இந்தப் பிரச்சினையில் நான் பேசியிருப்பது சம்பந்தப்பட்ட இந்த இரண்டு கனம் நீதிபதிகளையும் தனிப்பட்ட முறையில் குறித்து அல்ல என்பதையும், பார்ப்பனர்கள் எல்லோரையுமே கருத்தில் வைத்து அவர்களுடைய சுபாவத்தை நினைத்து, இதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்கிற கருத்திலேயே பேசி இருக்கிறேன்.

4. மனுதர்ம சாஸ்திரத்தின்படி ஒரு பார்ப்பனரல்லாதவன் ஒரு நாட்டிலே நீதிபதியாகவோ, நிர்வாக அதிகாரியாகவோ, அமைச்சராகவோ, அரசனாகவோ, உயர் பதவியாளனாகவோ இருக்கக்கூடாது என்பது தர்மமாகும். அப்படி இருக்கக்கூடாது என்பதும் பார்ப்பனர் தர்மமாகும். இன்று மனுதர்மம்தான், நீதிபதிகள் கையாளும் இந்துச் சட்டத்துக்கு மூலாதாரமாகும். இதற்கு உதாரணங்கள் அதிகம். கனம் கோர்ட்டார் அவர்களுக்குக் காட்டவேண்டியதில்லையென்றே கருதுகிறேன்.

ஒரு உதாரணம் காட்டவேண்டுமானால், சென்னை அய்க்கோர்ட்டு ஏற்பட்டு சுமார் 100 ஆண்டுகள் ஆகியும் சமீபத்திய 10, 15 ஆண்டுகளில்தான்—அதாவது, 'பார்ப்பன துவேஷம்' என்று சொல்லப்படக்கூடிய சாதிப் புரட்சியும், பார்ப்பனர்கள் நடத்தையை வெளிப்படையாகக் கண்டித்தல் என்ற தன்மையும் சர்வசாதாரணமாக நாட்டில் ஏற்பட்ட பிறகுதான்—பார்ப்பனரல்லாதார்களில் ஒருவர் இருவர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகத் தோன்ற முடிந்தது. ஆகையினால்தான், பார்ப்பனர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் அவர்களுடைய நடத்தையில் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம், பார்ப்பனர் அல்லாதவர்களை ஒழித்துக்கட்டுவதில்—தலை எடுக்கவிடாமல் செய்வதில் சரியாகவோ, தப்பாகவோ காலாகாலம் பாராமல் தங்கள் முயற்சிகளைச் செய்து கொண்டுதான் வருவார்கள். இப்படி இவர்கள் நீண்ட நாட்களாகச் செய்து வருகிறார்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் எடுத்துக்காட்டமுடியும். பின்னால் தருகிறேன்.

5. பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட கலெக்டருடைய உத்தரவு சரியானதென்று வாதாட நான் முன்வரவில்லை. அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது; எங்களுக்குள் அறிமுகம் அளவுக்குக்கூட சந்திப்பு ஏற்பட்டதும் இல்லை; இதை உறுதியாகச் சொல்லுகிறேன். அதுபோலவே, கனம் இரு ஜட்ஜுகளையும் நான் சந்தித்ததே கிடையாது; எனக்கு அறிமுகமும் இல்லை; என்னால் அவர்களை அடையாளம் காட்டவும் முடியாது. வெளியிலே சொல்லுவார்கள்—கலெக்டரைப்பற்றி நேர்மையும் நாணயமும் உள்ளவர் என்றும்; சம்பந்தப்பட்ட கனம் ஜட்ஜுகளை, தமிழர்களின் நல்வாழ்வு விஷயத்தில் விஷம் உள்ள பார்ப்பனர்கள் என்றும் பேசிக்கொள்வார்கள். நான் பேசியதாகச் சொல்லப்படும் பேச்சில் இந்த இருதரப்பினர்களைப்பற்றியும் தனிப்பட்ட முறையில் இந்த

குணங்களைச் சம்பந்தப்படுத்தியோ, மனத்தில் வைத்தோ நான் ஒரு பேச்சும் பேச முற்படவில்லை. தனிப்பட்ட முறையில் இவர்களைப்பற்றி எனக்கு எந்தவிதமான விருப்போ, வெறுப்போ கிடையாது. ஆனால், தீர்ப்பைப்பற்றிப் பத்திரிக்கையில், படித்ததும் அதைப்பற்றிப் பார்ப்பனப் பத்திரிக்கையான 'இந்து' பத்திரிக்கை எழுதிய தலையங்கத்தைப் படித்ததும் தமிழ் மக்கள் இதைக் கேட்டுப் பதறின பதட்டத்தையும் காட்டின பரிதாபத்தையும் பார்த்த பிறகு, எனக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றிற்று. 'ஆகா! இந்தக் கலெக்டர் ஒரு பார்ப்பனராய் இருந்தால் கனம் பார்ப்பன ஜட்ஜுகள் இப்படி எழுதியிருப்பார்களா? அல்லது ஜட்ஜுகள் இருவரும் பார்ப்பனரல்லாதாராய் இருந்திருந்தால்—இவ்வாறு கலெக்டரை அநாவசியமாகத் தாக்கி எழுதியிருப்பார்களா?' என்ற எண்ணமும் தோன்றியது. அதாவது, கலெக்டர் உத்தரவு (15-7-1955) தவறானது என்று கனம் ஜட்ஜுகள் கண்டுபிடித்த கருத்தைப்பற்றியல்ல நான் சொல்லுவது மற்ற எதைப்பற்றி என்றால், 'எதேச்சாதிகார நோக்கம் கொண்டவரும் சட்டத்தை மதிக்காதவருமான இப்பேர்ப்பட்ட ஓர் உத்தியோகஸ்தரிடம், இந்த இராஜ்யத்தில் எந்த இடத்திலும் சட்டம், அமைதி இவைகளைப் பாதுகாத்து நிர்வகிக்கின்ற ஒரு வேலையை மேலும் சர்க்கார் ஒப்படைக்கலாமா என்பதை அரசாங்கம் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்' (அதாவது ஒப்படைக்கக்கூடாது) என்ற கருத்தைக்காட்டி எழுதித் தீர்ப்புக்கூறி இருப்பது பெருத்த அநியாயம் என்கிற ஆத்திரமும் எனக்கு ஏற்பட்டது. அந்த வாக்கியம் ஆங்கிலத்தில் உள்ளபடி :

It is for the Government to consider and consider seriously whether an officer of such totalitarian views and disregard of law should continue to be entrusted with the duties of maintaining law and order in any locality in this State.' என்பதாகும்.

6. மேலும், இந்த பிரஸ்தாபத் தீர்ப்பு சம்பந்தப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் பார்ப்பனர்களாகவே—அதுவும் பெரிதும் 'அய்யங்கார்'களாகவே இருந்திருக்கிறார்கள். அதாவது, ரிட் மனுதாரருக்கு ஆஜராகி இது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் நடத்தியவர் திரு. அண்ணாதுரை அய்யங்கார் என்ற பார்ப்பனர். சர்க்காருக்கு சகலவிதமான சட்டப்பிரச்சினைகளிலும் தக்க ஆலோசனை சொல்லக்கூடிய பெரிய வக்கீல், அதாவது, அட்வகேட் ஜெனரல் திருவேங்கட ஆச்சாரியார் என்ற பார்ப்பனர். கலெக்டருக்காக சமூகம் கோர்ட்டில் வாதாட நியமனம் செய்யப்பட்டவர் திரு. ராகவன் அய்யங்கார் என்கிற ஒரு பார்ப்பனர். தீர்ப்பை அளவு கடந்து ஆதரித்து சர்க்காருக்குக் கலெக்டர்மீது ஆத்திரம் ஏற்படும்படியும், தீர்ப்பை அமுலுக்குக் கொண்டு வரும்படியும் 'இந்து' பத்திரிக்கையில் தலையங்கம் எழுதியவரும் ஒரு அய்யங்கார் பார்ப்பனர் என்று தெரிகிறபோது—இயல்பாகவே பார்ப்பனர்களின் சுபாவத்தை உறுதிப் படுத்துவதோடு, எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டது. மற்றும், இவ்வளவு பார்ப்பனர்கள் ஒன்று சேர்ந்து சதி ஆலோசனை செய்ததுபோல், கலெக்டர்மீது இவ்வளவு பெரிய—அதாவது கலெக்டருடைய வாழ்க்கைக்கே ஆபத்து ஏற்படும்படியான கடுமையான குறிப்பு எழுதித் தீரவேண்டிய அவசியத்திற்கு ஏற்றதாக இருக்கத் தகுந்த அளவுக்கு, கலெக்டர் செய்த பெரிய தப்பு என்ன என்பது இங்கே சிந்திக்கத்தக்கது.

மேலும், குதிரை வண்டிக்காரர்களிடமெல்லாம் ½ ரூ, 1 ரூ. என்று இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டி ருசுப்பிக்கப்பட்ட சப் கலெக்டர், ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டாக இருந்த திரு. டி. எஸ். சுவாமிநாதன் என்ற அய். சி. எஸ். பார்ப்பன அதிகாரியைப்பற்றியும்; துணி, மணி, உயர்ந்த ரக சாராயம், மதுவகைகளை இலஞ்சமாக வாங்கிக்கொண்டு பல ஊழல்களைப் புரிந்த எஸ். ஏ. வெங்கட்ராமன் என்ற அய். சி. எஸ். பார்ப்பன அதிகாரியைப்பற்றியும்; இரசாயன உர ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்ட எஸ். ஒய். கிருஷ்ணசாமி

என்ற மற்றோர் பார்ப்பன அதிகாரியைப்பற்றியும்;—இன்னோரன்ன பல பார்ப்பன அதிகாரிகளைப் பற்றியும், குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டுகள் முன்னால் கொண்டுவரப் பட்ட பார்ப்பன அதிகாரிகளில் யாரைப்பற்றியாவது—திருச்சி கலெக்டரைப்பற்றிய தீர்ப்பில் தாக்கி எழுதியுள்ளதைப் போல, எந்தத் தீர்ப்பிலாவது தாக்கி எழுதப்பட்டிருக்கிறதா? அல்லது அவர்களைப்பற்றி இந்த யோக்கியமான அய்யங்கார் 'இந்து' பத்திரிக்கையில் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறதா? நில விஷயத்தில் அவர்—அதாவது திருச்சி கலெக்டர் ஒரு உத்தரவைப் போட்டார் என்பதின் காரணமாக அந்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டுமென்று வந்த வழக்கில்—'அந்த வழக்கு தப்பு; அது ரத்து செய்யப்பட்டுவிட்டது' என்று தீர்ப்புக் கூறினால் போதுமானதா யிருக்கலாம். அதற்குமேல் கலெக்டரும் இனி அம் மாதிரி உத்தரவு போடமாட்டார்; வேறு அதிகாரிகளும் அம் மாதிரி உத்தரவு போடமாட்டார்கள்; இது சாதாரணமாகப் பெருந்தன்மையில் செய்யக்கூடிய காரியம்.

இதில் கவனிக்கத் தருந்த இன்னொரு காரியம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், ரிட் மனு விசாரணைக்கு வருவதற்கு முன், மனுதாரர் (வாதி) தரப்பில் ஆஜரான குளித் தலை அட்வகேட் திரு. அண்ணாதுரை அய்யங்கார் அவர்களே 11-9-1956 ஆம் தேதியில் சென்னை யில் ஆஜரான வக்கீல் திரு. நம்பியாருக்கு எழுதிய கடிதத்தில், ரிட் மனு சம்பந்தமான விவகாரங்கள் பைசலாகிக் கொண்டிருப்பதால் வாய்தா வாங்கிக்கொள்ளும்படியும், சர்க்கார் தரப்பு வக்கீல் ரிட் மனு விசாரணைக்கு வரும்போது குறிப்பிட்ட சம்பவங்களுக்குப் பின் கலெக்டர் முன்னர் போட்ட உத்தரவை modify செய்து, மேற்கொண்டு போட்டிருக்கும் உத்தரவுகளைப்பற்றிச் சொல்லுவாரென்றும், ஆனதால் 16-7-1955 ஆம் தேதியில் கலெக்டர் போட்டிருக்கும் உத்தரவு சரியா, தப்பா என்று கவனிக்க வேண்டியதில்லை என்று நம் தரப்பில் சொல்லி, மனுவை விசாரணை இல்லாமல் முடித்துவிடலாம் என்றும் எழுதி இருக்கிறார். திரு. அண்ணாதுரை அய்யங்கார் திரு. நம்பியாருக்கு எழுதிய அந்தக் கடிதத்தின் நகலைத் தன்னுடைய கவரிங் லெட்டருடன் கலெக்டரின் பர்சனல் அஸிஸ் டென்ட் திரு. வில்சனுக்கு எழுதியிருக்கிறார். அந்த இரண்டு லெட்டர்களையும் கலெக்டர் தன்னுடைய வக்கீலான திரு. ராகவனுக்கு அனுப்பி, கோர்ட்டில் அதன்படி விளக்கிக்காட்டி, வழக்கை முடித்துவிடும்படி அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

7. ரிட் மனு விசாரணைக்கு எடுத்தபொழுது கலெக்டருடைய வக்கீல் வழக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் முடிந்துவிட்டதாகக் கோர்ட்டார் அவர்களிடம் எடுத்துச் சொன்னதாகவும்; நீதிபதிகள் 'அதைப்பற்றி அக்கறை இல்லை; மனுவை விசாரித்து முடித்துவிடலாம்' என்று சொல்லி, வழக்கை விசாரித்து இம்மாதிரி முடிவு செய்திருப்ப தாகவும் தெரிகிறது. அதாவது, ரிட் மனுவில் கண்ட விஷயம் கோர்ட்டுக்கு வெளியிலேயே தீர்ந்துவிடுகின்றபடியால் விசாரிக்க வேண்டியதில்லை என்று வக்கீல் சொல்லியும்—'அதைப்பற்றிக் கவலையில்லை; கேசை நடத்திவிடலாம்' என்று கேசை நடத்தியிருக் கிறார்கள் என்றால்—இது உண்மையாய் இருக்குமானால், கனம் நீதிபதிகள் நடத்தையில் உள் எண்ணம் கொள்ளவேண்டி யிருக்கிறது. அந்தப்படி, கலெக்டரின் வக்கீல் நீதிபதி களுக்கு விசாரணை நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லாமல் இருந்திருக்கும்பட்சத்தில், அந்தப் பார்ப்பன வக்கீலுடைய நடத்தை மேலே குறிப்பிட்டபடி, கலெக்டர் மீது சதி எண்ணம் கொண்டு செய்யப்பட்ட காரியங்களில் ஒரு அம்சமாக இருக்குமோ என்று எண்ணவேண்டி யிருக்கிறது.

மேலும் அட்வகேட் ஜெனரலாக இருக்கிறவர்—கலெக்டர், சர்க்கார் பிரதிநிதியாக இருந்து செய்த காரியமானதால் இதன் தன்மைகளைச் சரிவர உணர்ந்து கலெக்டரின் காரியங்களை முழுவதும் ஆதரிக்காவிட்டாலும் உத்தரவை ரத்து செய்வதோடல்லாமல்—விடாமல் கலெக்டரையே அடியோடு கெடுப்பதற்குத் தாராளமாய் இடம் கொடுத்துவிட்டுப் பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால், அதற்காக, கனம் ஜட்ஜுகளும்

அட்வகேட் ஜெனரலுக்கு நல்வாழ்த்துக் கூறுகிறார்கள் என்றால்—இதை, சதிக்கு மற்றோர் அம்சமாகக் கொள்ளவேண்டி யிருக்கிறது. மற்றும் சாதாரணமாக, நாணயக் கேடான காரியங்களில் அதிகாரிகளைத் தண்டிப்பது, குற்றம் கூறுவது முதலிய காரியங்களுக்குத் தலையங்கம் எழுதாத 'இந்து' பத்திரிக்கையானது, அமைதியை நிலைநிறுத்தச் செய்த சாதாரண நிர்வாக உத்தரவுமீது ஏற்பட்ட தீர்ப்பில் மிகக் கடுமையான வார்த்தைகளைப் போட்டுத் தலையங்கம் எழுதி இருக்கிற ஆசிரியர் பார்ப்பனராக இருப்பதாலேயே என்றும் அவர்களும், அதாவது சாதாரண சம்பந்தமில்லாதவர்களும் சேர்ந்து சதியில் கலந்திருக்கிறார்கள் என்று எண்ணவேண்டி யிருக்கிறது.

8. ஒரு கலெக்டருக்கு உத்தியோக முறையில் கலெக்டர் என்ற 'ஹோதா'வில் எத்தனையோ இலாக்கா நிர்வாகங்கள், நடைமுறை வேலைகளும் இருக்கின்றன. அவைகளில் இந்தத் தீர்ப்புக்குக் காரணமான உத்தரவு நூற்றில் ஒரு பாகமாக இருக்கலாம். இதுவே கலெக்டருக்கு வேலையும் அல்ல; இந்த மாதிரி காரியங்களும் அவர் முன்னால் வரக்கூடியவைகளும் அல்ல; ஏதோ ஒரு சமயத்தில் வரும். இம் மாதிரி சந்தர்ப்பங்களில் அவருக்கு எந்தவிதமான உள் எண்ணமும் இருந்திருக்க வேண்டிய அவசியம் காணப்படவில்லை. கலெக்டருடைய 30 ஆண்டு நிர்வாக நடத்தைகளைப்பற்றி எந்தவிதமான குற்றமோ, குறையோ கூறப்படவில்லை; எவராலும் குறிப்பிடப்படவுமில்லை. இப்படிப் பட்டவர் ஒரு காரியத்தில் தவறுதலான உத்தரவு, அதுவும் தான் தவறு செய்கிறோம் என்கிற எண்ணமே யில்லாமல்—அரசாங்க நோக்கத்தைச் சரியாகவோ தப்பாகவோ புரிந்து, அதன்பேரில் போடப்பட்ட ஓர் உத்தரவுக்காக, இவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்பட்டு விட்டதுதான் என் உள்ளத்தைப் பெரிதும் வருத்திவிட்டது.

9. நான் ஏறக்குறைய சுமார் 50 ஆண்டு காலமாகவே பார்ப்பன—மேல்சாதி மக்கள் என்பவர்கள்—சட்டப்படி, சாஸ்திரத்தின்படி, மதத்தின்படி என்று தாங்கள் அடைந்திருக்கும் வசதியையும் உயர் நிலையையும்—பார்ப்பனரல்லாத கீழ் மக்கள் நலனுக்குக் கேடாகப் பயன்படுத்தும் வாய்ப்பை ஒழிக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகின்றேன். என்னுடைய பிரதானமான தொண்டு இதுதான்—இனியும் என் வாழ்நாள் வரையிலும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற தொண்டும் இதுதான். இவ்வளவு நாள் வரையிலும் பாடு பட்டும் இந்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்குப் பார்ப்பனர்களால் ஏற்பட்டு வருகிற கொடுமைகள், அவர்கள் தலை எடுக்க வொட்டாமல் அழுத்தப்பட்டு வருகிற துணிச்சலான அநீதிகள் ஒரு குறிப்பிடத்தகுந்த அளவுக்காவது குறைந்திருக்கிற அளவு நிலைத்திருக்குமா என்றும் சொல்லமுடியாது. என்னுடைய தொண்டிலே எத்தனையிலோ ஒரு பாகமான காரியத்திற்காக ஏற்பட்ட இந்த வழக்கில், பிரஸ்தாப ஜட்ஜுகளை நான் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை என்பதோடு நான் இராமசாமி என்ற தனிப்பட்ட தன்மையில் பேசவில்லை; பொதுமக்கள் தொண்டன், அவர்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறவன் என்ற முறையில்—கீழ் சாதிக்காரர்கள், சூத்திரர்கள் என்று சொல்லப்படுகிற அவர்களின் பிரதிநிதி என்ற முறையில் பேசுகிறேனே தவிர என் சொந்த நலத்திற்காக நான் அவ்விதம் பேசவில்லை.

10. கனம் ஜட்ஜுகளுடைய தீர்ப்புகளைச் சட்டமுறையில் நான் எவ்விதமான தவறும் கூறவில்லை. அவர்களுடைய உள் எண்ண விஷயங்களில் இந்த வழக்கு அதாவது, கலெக்டர் உத்தரவை ரத்து செய்திருப்பதை, சட்டப்படி என்கிற நீதி செலுத்தியிருக்கிற விஷயத்தில் அவர்களுக்கு எந்த விதமான உள்எண்ணங்களைக் கற்பிக்கவும் இல்லை. சட்ட நீதி பரிபாலனம் கெடும்படியான அளவில் நான் அவர்கள் மீது ஒருவிதமான குற்றத்தையும் எடுத்துக்காட்டவில்லை. என்னுடைய குறிப்பெல்லாம் பொதுவாக பார்ப்பன ஜட்ஜுகள் தயாராக இருந்தாலும் அவர்களுடைய நடத்தையில் சட்டத்தைப்பொறுத்து எப்படி நடந்து கொண்டாலும், தமிழனுக்குத் தன்னாலான கேடுசெய்து அழுத்தவோ, அழிக்கவோ செய்ய

வேண்டியது அவர்கள் சாதி-மதக் கடமை என்பதும்; இதில் யாரும் எந்தப் பார்ப்பனரும் மறந்தும் தவறி நடக்கமாட்டார்கள் என்பதும்; இந்தநிலை ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது மற்றவர்கள் கடமை என்பதும்தான். இந்த ஜட்ஜுகள்மீதும் சட்ட ரீதியில் நான் குறை சொல்லவில்லை என்பதோடு, சட்டரீதியில் தகுதியற்றவர்கள் என்றும் சொல்லவரவில்லை. நான் சொல்லுவதெல்லாம் எங்களுக்கு—எங்களைக் கீழ்சாதி என்றும், நாங்கள் மேலே வருவது தங்களுக்கு ஆபத்து என்றும், தங்கள் மத தர்மத்துக்குக் கேடு என்றும், தங்களை மேல்சாதி என்றும், இந்த சாதிப் பிரிவுகள் இப்படியே இருக்கவேண்டும் என்றும் கருதிக் கொண்டிருக்கிற மனுதர்ம—இந்து பார்ப்பனர்கள் ஜட்ஜுகளாகவும், வேறு எந்த உத்தியோகஸ்தர்களாகவும், எங்கள் நாட்டில் எங்கட்கு வேண்டாம். வேறுநாட்டில் அவர்களுக்கு எவ்வளவு உயர்பதவி வேண்டுமானாலும் கொடுங்கள்; அவற்றுள் நாங்கள் குறுக்கிடவில்லை. அவர்கள் நீதிபதிகளாக இருப்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இந்தக் கருத்தை வெளியிடும் வகையில்தான் பிரஸ்தாப வழக்குப் பேச்சில் நான் பேசியிருக்கிறேன்.

11. பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும். ஆதலால், நாங்கள் புலிவேட்டை ஆடுகிறோம். புலி, மேலே பாய்ந்தால் ஒருவர் இருவர் கடிபடவேண்டியதுதான். 'எல்லாப் பார்ப்பனர்களும் அப்படித்தானா?' என்று கனம் ஜட்ஜுகள் சிந்தித்து, நான் சொல்லுவதைத் தவறு என்று கருதலாம். நம் நாட்டில் இன்றைபதினம் உள்ள பார்ப்பனர்களில் ஆச்சாரிய புருஷர்களாய் இருக்கிறவர்களைத் தள்ளிவிட்டு, எல்லோரையும் ஒன்றுபோல் பாவித்து, பொதுமக்கள் நன்மைக்காகப் பாடுபடுகின்ற பார்ப்பனர்கள் என்று எண்ணி இருக்கின்ற தன்மையில் உயர்ந்த சீர்திருத்தக்காரர், நாட்டின் விடுதலைக்காகப் பெரிய தியாகங்களைச் செய்தவர்கள் என்ற தன்மையில் இதுவரையில் எந்த இந்தியனும் வகித்திராத உயர்ந்த பதவி வகித்தவர்கள் என்கிற தன்மையில் முதல் வரிசையில் முதல்வராக இருக்கும் மாஜி கவர்னர்-ஜெனரல் உயர்திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொல்லுகிறார்கள்: 'நான் வேத சாஸ்திர, புராண, இதிகாச, உபநிஷத் தர்மங்களில் முழு நம்பிக்கையுடையவன். வருணாசிரம தர்மத்தில் (சாதிப் பிரிவில்) மிக்க நம்பிக்கையும் கவலையும் உடையவன்; அவைகளைப் பரப்பவும் நிலைநிறுத்தவுமே நான் பாடுபடுகிறேன்; இனியும் அதற்காகவே பாடுபடுவேன்' என்று சொல்லுகிறார்; எழுதுகிறார்; அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்கிறார் என்றால்—இனியாரை மனத்தில் வைத்துக்கொண்டு—'எல்லாப் பார்ப்பனர்களும் இப்படித்தான் இருப்பார்களா?' என்று நினைப்பது?

> வாயில்—நாக்கில் குற்றம் இருந்தால் ஒழிய வேம்பு இனிக்காது; தேன் கசக்காது, பிறவியில் மாறுதல் இருந்தால் ஒழிய—புலி புல்லைத் தின்னாது; ஆடு மனிதனைத் தின்னாது. அதுபோலவாக்கும் நமது பார்ப்பனர்கள் தன்மை. இந்த ஒரு வழக்குக்காக அல்ல, நான் இப்படிச் சொல்லுவது.

12. திரு. ரெங்கசாமி ரெட்டியார் எம். எல். ஏ 18-2-1956ஆம் தேதியில் சென்னை சட்டசபையில் பேசியிருப்பதைவிட, நான் திருச்சி பொதுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கனம் நீதிபதி அவர்களை அதிகமாகத் தாக்கியோ உள்எண்ணம் கற்பித்தோ ஒன்றும் பேசிவிடவில்லை. சட்டசபையில் பேசிய பேச்சுக்காக திரு. பி. ரெங்கசாமி ரெட்டியார் பேரில் கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காகவோ, வேறு எந்தக் குற்றம் சாட்டியோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் சொல்லுகிறார்கள். இது என்ன விபரீதம்! ஒரு விஷயத்தைப்பற்றிச் சட்டசபையில் பேசினதற்குச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது; வெளியில் அதே விஷயத்தைப்பற்றி mild ஆகப் பேசியதற்காக 'கன்டெம்ட் ஆப் கோர்ட்' என்ற குற்றம் சாட்டி நடவடிக்கை எடுக்க அதே சட்டம் இடம் கொடுக்கிறது. நியாயப்படி இருவர் பேச்சிலும் குற்றம் இல்லை.

திரு. ரெங்கசாமி ரெட்டியார் பேசின பிறகாவது சர்க்கார் சம்பந்தப்பட்ட கனம் நீதிபதிகளைப் பொறுத்து உடனடியாக விசாரணை நடத்த ஏற்பாடு செய்திருந்தால், இந்த 'கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்' நடவடிக்கைக்கு இடம் இருந்திருக்காது.

13. அய்க்கோர்ட் ஜட்ஜுகளைப்பற்றிவிசாரணை நடத்துவதா என்ற அய்யப்பாடும் கனம் நீதிபதிகளுக்கு எழலாம். தற்போது உத்திரப்பிரதேசம் என்று அழைக்கப்படும் பழைய அய்க்கிய மாகாண சர்க்காரால் அலகாபாத் அய்க்கோர்ட் ஜட்ஜாக இருந்த திரு. சின்கா என்பவர் ஜட்ஜாக இருந்த காலத்தில் தான் செய்யவேண்டிய நீதிபரிபாலன காரியங்களைத் தாறுமாறான வகையில் செய்தார் என்றும், பட்ரவுனா வழக்கு, முராளிலால் வழக்கு இந்த இரு வழக்குகளில் தீர்ப்புச் சொன்னது அந்த ஜட்ஜால் நீதி பரிபாலனத்திற்குப் புறம்பான சலுகைகள் காரணமாக ஏற்பட்டவை என்றும் குற்றம் சாட்டி, அப்போதைய கவர்னர்-ஜெனரலாக இருந்த உயர்திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. கவர்னர்-ஜெனரலும் அந்த விஷயங்கள் குறித்து விசாரித்து ரிப்போர்ட் அனுப்பும்படி பெடரல் கோர்ட்டுக்குத் தெரிவித்தார். பெடரல் கோர்ட்டும் விசாரணை செய்த பிறகு, 'In our opinion in those two cases. he was actuated by extra-Judicial considerations in arriving at his conclusions. We consider that his conduct in two cases viewed in the light of proved facts, cannot be explained as an honest error of Judgment'.

பட்ரவுனா கேசில் அந்த ஜட்ஜு சின்ஹாவினுடைய சகோதரர் அட்வகேட் திரு. சாம்பு பிரசாத் என்பவர் 5-6-1945-ல் 'வகேஷன் கோர்ட்'டில் முதல் பிரதிவாதிக்காகச் சில நடவடிக்கைகளில் ஆஜராகி இருந்ததையும் பெடரல் கோர்ட்டு தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெடரல் கோர்ட் ரிப்போர்ட்டை ஒப்புக்கொண்டு திரு. சின்காவை ஜட்ஜு பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். இச்செய்தி 29-4-1949 ஆம் தேதி, சென்னை 'மெயில்' பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது. அப்படிப்பட்ட 'சின்காக்கள்' நமது புனிதமான சென்னை அய்க்கோர்ட்டில் இருக்கப்படாது என்பதே எனது எண்ணம். சமீபகாலத்தில் மைசூர் அய்க்கோர்ட் ஜட்ஜ் ஒருவரை இந்திய குடியரசுத் தலைவர் நீக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

14. திரு. ரெங்கசாமி ரெட்டியார் சட்டசபையில் பேசியிருக்கிறபடி—கனம் நீதிபதிகளும் சாதாரண மக்களைப் போன்றவர்கள்தான். நேர்மையிலும் நாணயத்திலும் கடுகளவும் தவறாத ஜட்ஜுகளும் உண்டு; தவறி நடப்பவர்களும் உண்டு. தவறி நடக்கும் ஜட்ஜுகள் பற்றியும், அவர்கள் அக்கிரமத் தீர்ப்புகளைப்பற்றியும், எவ்விதமான சொந்த மாச்சரியமும் இல்லாமல் பொதுநல எண்ணத்துடன் (Bonafide) யோக்கியமாக விமர்சனம் செய்வது என்பது எவ்வாறு தவறாகும்? அப்படித் தவறு என்றால் ஜட்ஜு அக்கிரமம் செய்யலாம்; நடுநிலைமை பிறழ்ந்து தீர்ப்புகள் கூறலாம்; அது சட்டப்படி தவறு இல்லை—ஆனால், அதைப்பற்றிப் பேசினால், எடுத்துச் சொன்னால் தவறு என்று அல்லவா ஆகிறது? இது எந்த விதத்தில் நியாயமாகும்? அக்கிரமம் செய்யும் ஜட்ஜுகளைப் பற்றிப் பேசினால், கோர்ட்டு அவமதிப்புக் குற்றம் என்றால்—யார்தான் அதைப்பற்றிப் பேச முன்வருவார்கள்?

15. அப்படி ஜட்ஜுகள் என்ன அநீதி இழைக்காமலா இருக்கிறார்கள்? (1) This is an audacious attempt by a BRAHMIN Judge to invent a new rule, namely that a daughter who is unchaste is under the same rule of exclusion as a widow and cann't inherit her father's or mother's estate......... 'The reason why that learned Judge seems to have stretched the law was that while apparently he was prepared to admit that ordinary unchastity

might not be fatal, cohabitation with a Mohammedan was such an aggrevated form of unchastity that different considerations should apply'.

(தயவு செய்து 51 M. L. J. 387 பக்கம் பார்க்கவும்). ஒரு பார்ப்பன சப் ஜட்ஜ் சட்ட விரோதமான நியாயம் வழங்கினார் என்று உயர்நீதி மன்றம் கண்டித்தது.

(2) சென்னை அய்க்கோர்ட் கிரிமினல் அப்பீல் நெம்பர் 20-56-ல் முடிவு செய்திருக்கும் தீர்ப்பில் இருப்பது:

'The special Judge has gone to the extent of making a stupid and almost insulting suggestion, that the wife inside the kitchen and the aged father inside the house, presumably of the P. W. I. should have been examined to corroborate him'. It is not usual as our own experience shows in the house-hold of officers, for wives and children and parents to be present in the office and participate in what is going on there, probably the special Judge's experience in his own house-hold is different (Judgment dt: 31-10-1956 in Cr. A. No. 20-56 on the file of the High Court of Judicature, Madras delivered by Hon. Justice Mr. P. N. Ramasamy).

இதில் சம்பந்தப்பட்ட கீழ்க்கோர்ட் ஸ்பெஷல் ஜட்ஜ் ஒரு முஸ்லிம் என்பதும், அப்பீல் கோர்ட்டாகிய அய்க்கோர்ட் ஜட்ஜ் ஒரு பார்ப்பன ஜட்ஜ் என்பதும்தான் காரணமாகும்—இவ்வளவு கடினமாகவும் கீழ்த் தரமாகவும் தன் கீழ் உள்ள சப்-ஆர்டினேட் ஜட்ஜைப்பற்றித் தாக்கி எழுதி இருப்பதற்கு.

(3) 1950ஆம் ஆண்டில் துறையூரில் திரு. இராமானுஜ அய்யங்கார் என்ற ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப், பார்ப்பனரல்லாத வக்கீல் திரு. பி. ரெங்கசாமி ரெட்டியாரின் O. S. No: 215-49-ல் விசாரணை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது சட்டவிரோதமாகவும், வக்கீலை அநாவசியமாக அவமதிக்கும் முறையிலும் சாதி ஆணவம் கொண்டு நடந்துகொண்டார்.

அந்த அய்யங்கார் முன்சீப் பேரில், திருச்சி சப்கோர்ட் O. S. No 213-51-ல் வக்கீல் ரெங்கசாமி ரெட்டியார், முன்சீப் இராமனுஜம் அய்யங்கார் ரூ. 2500க்கு மான நஷ்டத்திற்காகத் தாவா செய்தார். அந்தத் தாவாவில் எதிர் வியாஜ்யம் செய்து, கடைசியாக இந்த அய்யங்கார் முன்சீப் 16-2-1954-ல்,

'I regret for my behaviour towards plaintiff on 9-8-1950 and tender my apologies to him' என்று பிராதின்பேரில் எண்டார்ஸ் செய்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டதன்பேரில் அந்தத் தாவா மேற்கொண்டு நடத்தப்படவில்லை. இது, பார்ப்பன அதிகாரிகள் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதாருக்குத் தொந்தரவு கொடுப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு. அந்த முன்சீபை வேலையிலிருந்து நீக்காமல் ஒரு அய்க்கோர்ட்டு டிபார்ட்மெண்டில் விசாரணை செய்து 'புரோபேஷனை' மட்டும் இரண்டு ஆண்டு அதிகப்படுத்தியதாகத் தெரிகிறது.

(4) சமீபத்தில் சுப்ரீம் கோர்ட் பார்ப்பன ஜட்ஜுகளுள் ஒருவராகிய கனம் பாலகிருஷ்ண அய்யர், பார்ப்பனரல்லாத மந்திரியாகிய கனம் பக்தவத்சலம் கோர்ட்டில் நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்குக் கோரிப் போட்டிருந்த மனுவின்பேரில் தீர்ப்புச் சொல்லும்போது, 'மந்திரிகள் பல கிராமங்களுக்குச் சென்று பலதரப்பட்ட சாதாரண திறப்புவிழாக்களில் எல்லாம் கலந்துகொள்ளலாம்; கோர்ட்டிற்கு மட்டும் வரக்கூடாதா?' என்று கிண்டல் செய்யும் பாணியில் எழுதியிருக்கிறார். அதே விஷயத்தில் கனம்

பக்தவத்சலத்திற்குப் பதில் ஒரு பார்ப்பன மந்திரி—திரு. இராஜாஜி போன்ற ஒருவர் மனுப்போட்டிருந்தால் இந்த மாதிரி எழுதியிருப்பாரா? 'சட்டப்படி மனு அனுமதிப்பதற்கில்லை' என்று சுருக்கமாக எழுதியிருக்கமாட்டாரா?

(5) திரு. இராஜகோபாலச்சாரியார் மத்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாக இருந்தபோது, பெங்களூர் L. S. ராஜு என்ற பார்ப்பன அய்யங்கார் வக்கீல்மீது தொடரப்பட்ட வழக்கில் அவரைத் தப்புவிப்பதற்காக, 'கிரிமினல் புரொசிஜர் கோடை'யே திருத்துவதற்காகச் செய்த பிரயத்தனமும்; தற்போதைய டெல்லி மக்கள் சபை சபா நாயகராக இருக்கும் திரு. அனந்தசயனம் அய்யங்கார் என்ற பார்ப்பனர் தன்னுடைய அதிகாரம், பதவி இவைகளை உபயோகப்படுத்தி அந்தக் குற்றம் சாட்டப்பட்ட பார்ப்பன வக்கீலை விடுதலை செய்வதற்குச் செய்த 'பகீரதப்பிரயத்தனங்'களும் எதை எடுத்துக் காட்டுகின்றன? இத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அய்யங்கார் கோஷ்டியின் ஆதிக்கமும், அட்டூழியமும் காட்டக்கூடிய, 'சாதிக்குறி 111' (Caste Mark 111) என்ற புத்தகத்தைப் பார்த்தால் முழுவிவரங்களும் தெரியவரும்.

16. இந்த நாட்டில் சாதிமுறை, பிரிவு, கீழ்சாதி-மேல்சாதி இருந்துவருகிறது. ஆட்சியும் ஆதிக்கமும் பெரிதும் மேல்சாதிக்குச் சொந்தம்; அவர்களிடம் அல்லலும் அவதியும் படுவது கீழ்சாதிக்காரர்களுக்குச் சொந்தம். இது சட்டப்படி, சாஸ்திரப்படி, கடவுள் சிருஷ்டியின்படி இந் நாட்டில் இருந்து வருகின்றது. இதை மாற்றுவதுதான் எங்கள் முயற்சி. இதற்கு நாங்கள் தக்க விலை கொடுத்தாக வேண்டும். ஆகையால் நீங்கள் கனம் கோர்ட்டார் இஷ்டப்படி விலை போடுங்கள். அய்க்கோர்ட் ஆதிக்கம் பார்ப்பனர்களிடமே இருந்து வந்திருக்கிறது. கீழ்சாதிக்காரர்கள் 100-க்கு 90 பேர்கள் உள்ள இந்த நாட்டில், மேல்சாதி ஜட்ஜுகள் ஏன் 100-க்கு 50, 60, 70 பேர்கள்? இவைகளெல்லாம் கேட்டால் 'கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்' குற்றமா?

17. சட்டசபையில் திரு. ரெங்கசாமி ரெட்டியார் பேசியிருக்கிறபடி ஏன் இந்த ஜட்ஜுகள் பேரில் விசாரணை நடத்தப்படவில்லை? 'சாமி அய்யங்கார் (சவுமியநாராயண அய்யங்கார்) திருச்சி ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் சி. டி. வெங்கட்டரமணனுக்கு நெய், பால், சப்ளை செய்பவர் என்றும்; சாமி அய்யங்காரை ஹானரரி மாஜிஸ்டிரேட்டாகப் போடும்படி கலெக்டர் மலையப்பனிடம் சிபாரிசு செய்து அதன்படி நடக்காததால், கலெக்டர் பேரில் சி. டி. வெங்கட்டரமணனுக்குக் கோபம் ஏற்பட்டு அவர் அவருக்கு வேண்டிய அய்க்கோர்ட் ஜட்ஜ் கனம் நீதிபதி இராஜகோபால அய்யங்காரை சீரங்கம் அழைத்துவந்து விருந்துவைத்தார் என்றும்; பின்பு கிசான் தகராறுகள் நடந்த இடமாகிய திம்மாச்சிபுரத்திற்கு மேற்கூறியவர்கள் சென்று வந்தனர் என்றும்; 'ரிட் பெட்டிஷன்' ஜட்ஜ்மெண்ட் சொல்லுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே, அப்போது திருச்சியில் புரோபேஷனரி கலெக்டராக இருந்த வேதநாராயணன் என்பவரும் சி. டி. வெங்கட்டரமணன் என்பவரும் அய்க்கோர்ட்டில் கலெக்டரைக் கடுமையாகத் தாக்கி ஜட்ஜ்மெண்ட் தயாராகி வருகிறது என்றும் வெளிப்படையாகவே சொல்லும் அளவிற்குச் சதி நடந்திருக்கிறது என்ற விஷயங்கள் எல்லாம்—மேலே சொல்லப்பட்ட அலகாபாத் அய்க்கோர்ட் ஜட்ஜ் திரு. சின்கா அவர்கள் செய்த குற்றங்களைவிடக் குறைந்தவைகளா? அல்லது அற்பமானவைகளா?

18. கனம் நீதிபதி அவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:

(1) ரிட் பெட்டிஷன் ஜட்ஜ்மெண்டில் கலெக்டர் 15-7-1955-ல் போட்ட உத்தரவை ரத்துச்செய்து தீர்ப்புச் சொல்லுவதற்குப் பதிலாகக் கடுமையாக கலெக்டரைத் தாக்கி எழுத வேண்டிய காரணம் என்ன?

(2) திரு. மலையப்பனுக்குப் பதிலாக ஒரு பார்ப்பனர் கலெக்டராக இருந்திருந்தால் இவ்வாறு தாக்கி எழுதி இருப்பார்களா?

(3) நீதி இலாக்கா அல்லது வேறு எந்த இலாக்காவிலாவது பார்ப்பன கீழ் அதிகாரி ஒருவரைப் பார்ப்பன மேலதிகாரி ஒருவர் இந்த மாதிரி எப்போதாகிலும் தாக்கி எழுதி இருக்கிறாரா? என்பவைகள் எல்லாம் நன்கு பரிசீலனை செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயங்கள். சம்பந்தப்பட்ட இரண்டு கனம் ஜட்ஜுகளும் உள்ளபடியே பாரபட்சம் இல்லாத முறையில் எவ்வித உள் எண்ணமும் இல்லாமல் நடந்துகொண்டிருந்தால்—சட்டசபையிலும் வெளியிலும் இவ்வாறு பேசப்படுமா? மற்ற கனம் ஜட்ஜுகளைப் பற்றி அவ்வாறு பேசப்படுகின்றதா? அந்த இரண்டு ஜட்ஜுகளும் எவ்வளவு தவறு வேண்டுமானாலும் செய்யலாம்; அது குற்றமல்ல. ஆனால், அந்தத் தவற்றை நான் எடுத்துச் சொன்னது குற்றம் என்றால் நான் அதை முழுமூச்சுடன் எதிர்க்கிறேன். அது மாதிரியான சட்டத்தை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. அதனால்தான், நான் இந்த விசாரணையில் கலந்துகொள்ளவில்லை. கோர்ட்டை அவமதிப்பதாகக் குற்றம் சுமத்துவது என்பது பொதுவாகக் கோர்ட்டுகளின் கவுரவத்தையும் நீதிபரிபாலனத்திற்குத் தடங்கல் விளையாமல் பாதுகாப்பதற்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டுமேயன்றி, நீதிபதிகளின் சொந்தக் கவுரவத்தைக் காப்பாற்றுவதற்கு—அவர்கள் தனியான நபர்கள் என்கிற முறையில் அவர்களுக்கு ஏற்படுகிற இழுக்குகள் அல்லது பழிகளிலிருந்து காப்பாற்றுவதற்காக இருக்கக்கூடாது. கோர்ட்டுகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைத் தனிப்பட்ட நீதிபதிகள் தங்களுடைய சொந்தக் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு என்று—அவர்களுக்குத் தனி நபர்கள் மீதுள்ள வெறுப்பின் காரணமாகப் பயன்படுத்திக் கொள்ளுவது முறையல்ல.

('Proceedings for contempt of court have always been understood to be intended not for the vindication of the personal dignity of the Judges or to protect them from insults as individuals but to vindicate the authority and dignity of the court itself, and to prevent acts tending to obstruct the due course of Justice. Equally any attempt to use the power possessed by courts to punish persons for contempt to vent private spite or to gain private ends has never been tolerated'—Foreword dated 23-3-51 by the Hon. the chief Justice Mr. P. V. Rajamannar to the book, 'The law of Contempt of Court' By Mr. V. G. Ramachandran.)

19. இம் மாதிரி விஷயம் எப்படி இருந்தாலும் உண்மையில் விவாதத்துக்கு இடமில்லாமல் ஒரு நீதிபதி என்பவர் தவறானது என்று சொல்லும்படியான தன்மையில் நடந்து கொண்டால்—தீர்ப்பு அளித்தால்—அதற்குப் பரிகாரம் தேடவேண்டுமானால், பொதுமக்களுக்கு என்னவழி இருக்கிறது? அப்பீலுக்கே போய்த் தீர வேண்டுமானால் எல்லோருக்கும் சாத்தியப்படும்படியான காரியமாகுமா? எல்லோருக்கும் எல்லாகாரியங்களிலும் அப்பீலில் இடமிருக்குமா? அரசாங்கத்தில் அரசர், ராஷ்டிரபதி, பிரதமர், முதலமைச்சர் முதலியவர்களுடைய போக்குகளைப் பற்றியும் உத்தரவுகளைப் பற்றியும் பொதுக்கண்டனங்களும் கிளர்ச்சிகளும் நடத்தத் தாராளமாக இடமும் சட்ட அனுமதியும் இருக்கும்போது—இந்த ஜட்ஜுகளைப் பொறுத்து மாத்திரம் அம்மாதிரியான இடமும் அனுமதியும் கிடையாது என்றால், மக்களுக்குச் சுதந்திரம் எங்கே இருக்கின்றது? பரிகாரம் எப்படித் தேடுவது? பொதுமக்களுடைய உணர்ச்சிகளை எப்படிக் காட்டுவது? 'சீசரின் பெண்டாட்டி சந்தேகத்திற்கு இடமில்லாதவளாய் இருக்கவேண்டும்' என்பதான காரியங்கள் மிகவும் யோசிக்கத் தக்கவைகள். என்னுடைய பிரச்சினை யெல்லாம் நீதிபதிகளைக் குறை சொல்லுவதல்ல; பார்ப்பனர்கள் நமக்கு ஜட்ஜுகளாக இருக்கக்கூடாது என்பதுதான். வெள்ளைக்காரர்களைக் குறிப்பிட்டு இந்த முறையில்தானே நாம் சுதந்திரப் போராட்டத்தில் போராடியிருக்கிறோம். வெள்ளைக்காரன் எவ்வளவு உயர்ந்த அதிகாரியாக இருந்தாலும்—

அவன் வெள்ளையன் என்கின்ற முறையில் இதைச் செய்தான், அதைச் செய்தான் என்று ஏராளமான விஷயங்களை எடுத்துக்காட்டிக் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியத்தில் தான் இது நேர்ந்தது என்பதைப் பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

20. இந்த ஸ்டேட்மெண்டில் நான் எடுத்துக் காட்டியிருக்கிற விஷயங்கள் எல்லாம் எவ்வித குரோத, துவேஷ உணர்ச்சி இல்லாமல்—என் இன மக்களுடைய உண்மையானதும் அவசியமானதுமான நலன் கருதி—ஒரு யோக்கியமான பொதுநலத் தொண்டன் என்கிற தன்மையில் சமூகம் கோர்ட்டார் அவர்களுக்கும், கனம் நீதிபதிகளுக்கும் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறேன். இதன்மீது கனம் நீதிபதிகளுடைய சித்தம் எதுவோ, அது என்னுடைய 'பாக்கியம்' என்பதாகக் கருதி, எதையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

[சென்னை அய்க்கோர்ட்டில் 23-4-1957-ல் தாக்கல் செய்த 'ஸ்டேட்மெண்ட்'—புத்தகம், 23-4-1957]

19. ஓர் உண்மைச் சம்பவம்

சுமார் 70 வருடங்களுக்கு முன் திரு. பா. வெ. மாணிக்க நாயக்கர் அவர்கள் ஈரோடு கரூர் டிவிஷனில் அஸிஸ்டெண்ட் இன்ஜினியராக நியமிக்கப்பட்டபோது, ஒரு ஓவர்ஸீயரிடம் வேலை கற்க அமர்த்தப்பட்டார். பிறகு அவர் அஸிஸ்டெண்ட் இன்ஜினியர் வேலை ஏற்றுக்கொண்டார். அப்போது அந்த ஓவர்ஸீயர் மாணிக்க நாயக்கரின் கீழ் வேலை பார்க்கவேண்டியவரானார். இவரின் நடத்தையை மாணிக்க நாயக்கர் வேலை பழகும்போது தெரிந்து இருந்ததினால், சந்தேகப்பட்ட ஒரு காரியத்தில் கண்டித்தார். இது அந்த ஓவர்ஸீயருக்குப் பிடிக்கவில்லை. 'நம்மிடம் வேலை பழகின பையன் நம்மைக் கண்டிக்கிறானே!' என்று கருதி மாணிக்க நாயக்கருக்குப் புத்தி சொல்லுகிற மாதிரி,

'நீங்கள் சிறுவயது; உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார். உடனே மாணிக்க நாயக்கர், 'என் பெயர் ஏன் கெடும்?' என்று கேட்டார்.

'உங்களைப்பற்றி மக்கள் கண்டபடி பேசுகிறார்கள். இதற்கு இடம் வைத்துக் கொள்ளாதீர்கள்' என்று ஓவர்ஸீயர் சொன்னார்.

'என்ன பேசுகிறார்கள்? சொல்லுங்கள்' என்று மாணிக்க நாயக்கர் கேட்டார்.

'நீங்கள் பணம் வாங்க ஆரம்பித்து விட்டீர்கள் என்று பேசுகிறார்கள்' என்றார் ஓவர்ஸீயர்.

'அந்தப்படி யார் சொன்னார்? சொல்லுங்கள்' என்று சற்று கோபமாகக் கேட்டார் மாணிக்க நாயக்கர். அதற்கு ஓவர்ஸீயர், 'ஜனங்கள் அப்படிப் பேசிக் கொள்ளுகிறார்கள்' என்று சொன்னார்.

உடனே மாணிக்க நாயக்கர், 'வாழாமல் உன் வீட்டிற்கு வந்திருக்கும் உன் மகளுக்கும், லஸ்கர் நாராயணசாமிக்கும் சம்பந்தம் உண்டு என்று ஊரெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்களே? அப்படி நீ வைத்துக் கொள்ளலாமா?' என்று கேட்டார். உடனே அந்த ஓவர்ஸீயர் கோபப்பட்டு, 'எந்த அயோக்கியப் பயல் அப்படிச் சொன்னான்? சொல்லு; முட்டாள்தனமாகப் பேசாதே' என்றார்.

உடனே மாணிக்க நாயக்கர் தன் காலில் இருந்ததைக் கழற்றி அந்த ஓவர்ஸீயர் தலையில் இரண்டு, மூன்று போட்டார்; பக்கத்திலிருந்தவர்கள் தடுத்து ஓவர்ஸீயரைப் பார்த்து, 'நீங்களும் ஊரில் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னீர்கள்; அவரும் ஊரில் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னார். இதில் தப்பென்ன? உங்களைச் சொன்னதால் உங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. நீங்கள் அவரைச் சொன்னது அவர் வேலைக்கே

ஆபத்தாய் முடியுமே' என்று சொல்லி ஓவர்ஸீயரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செய்தார்கள். இது, கரூர் அக்கால T.B.யில் நடந்த நிகழ்ச்சி.

இதை ஏன் எழுதுகிறேன் என்றால், அரசியலில் எதிர்க்கட்சி மீது, எதிரிகள் மீது குறை கூறுவதற்காகச் சிலர் எதையும் சொல்லிவிட்டு, அழுத்திக் கேட்டால், 'மக்கள் அப்படிப் பேசிக்கொள்ளுகிறார்கள்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்குப் புத்தி வருவதற்காக உண்மையாய் நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டேன்.

'ஊரில் பேசிக்கொள்ளுகிறார்கள்' என்பது மிகக் கீழ்த்தரமான மக்கள் தன்மையாகும்.

[அறிக்கை—'விடுதலை' 26-3-1969]

20. ஆரியர்களின் தன்மை

ஆரியர்கள் இந்தியாவிற்குள் பிரவேசித்த காலத்தில் சுத்தக் காட்டுமிராண்டிகளாகவே இருந்திருக்கிறார்கள்.

அந்தக் காலம் பொதுவாகக் காட்டுமிராண்டிக் காலமாகவே இருந்த காலமானாலும், ஆரியர்கள் அக் காலத்தில், நம் திராவிடர்களைவிடக் காட்டுமிராண்டிகளாகவே இருந்திருக்கிறார்கள் என்றே தெரியவருகிறது.

இது எப்படிப் புலப்படுகிறது என்றால், அவர்களுடைய கற்பனைக் கருத்துக்களும், செய்யப்பட்ட கதைகளும், பின்னால் அவைகளைத் தழுவி உண்டாக்கப்பட்ட நூல்களும் முதலியவைகளால் நல்லவண்ணம் அறியக்கிடக்கின்றது.

அக்கால இந்தியர்களுடைய, திராவிடர்களுடைய நிலை எப்படி இருந்தது என்பதை அறிய பவுத்தரையும், பவுத்த ஆட்சியையும், பவுத்தக் கருத்துக்களையும், அவற்றைப் பின்பற்றி ஆரியர் கூறிய கருத்துக்களையும் சரித்திரக் கிரமப்படிப் பார்த்தாலே விளங்குகிறது.

அது மாத்திரமல்லாமல், உதாரணமாக ஆரியர்கள் தங்கள் கதை, கற்பனை முதலியவைகளில் நம்மை (அசுரர், இராக்கதர் என்கின்ற பெயர்களால்) இழிவுபடுத்தி இருந்தாலும் அக் கதைகளிலேயே நம் 'அரசர்களை'ப்பற்றி அவர்கள் குறிப்பிடும்போது (இரணியன், இராவணன் முதலியவர்களைப்பற்றிக் குறிப்பிடுவதில்) நமது அறிவு, ஆற்றல், தன்மை, குணம் ஆகியவைகளையும், வாழ்க்கைமுறை ஆகியவைகளைப்பற்றியும் குறிப்பிடுபவைகள்—இன்றைக்கும் அந்தப்படி எவனாலும் வாழமுடியாதபடி அவ்வளவு மேன்மையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேசமயத்தில், அவர்கள் தங்களைப்பற்றியும் தங்கள் பெரியவர்கள், ரிஷிகள், அறிஞர்கள், தெய்வீகத்தன்மையர்கள் என்பவர்களைப்பற்றியும் குறிப்பிடுகையில் மிகமிகக் கீழ்த்தரமான எண்ணம், நடத்தை, ஒழுக்கம், அறிவு, ஆற்றல், குணம் ஆகியவை அவ்வளவும் கீழ்த்தரமாகவே கற்பித்துக்கொண்டுமிருக்கிறார்கள்.

நம் அரசர்களை அவர்கள் எவ்வளவு இழிவுபடுத்திக் கூறியிருந்தாலும் அவர்களைப் பெரிய தவசிரேஷ்டர்களாகவே, அறிவாற்றல் பெற்ற உயர்தர 'வரப்பிரசாதி'களாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு மனிதன் தவம் செய்வது என்றால் நல்லொழுக்கத்தோடு இருந்துதானே செய்திருக்கமுடியும்? தவம் என்பது சுயநலத் தியாகம், கஷ்டநஷ்டங்களைச் சகித்தல்—ஏற்றுக்கொள்ளுதல், நல்ல ஒழுக்கம், நன்னடத்தை முதலிய காரியங்களால்தானே இருக்க முடியும்?

அப்படிப்பட்ட ஒருவன் அந்தப்படிப் பலகாலம் நடந்துவந்து வரம்பெற்ற பின்பு அதைத் தவறான வழியில் செலவழித்தானென்றால் அது எப்படி அறிவுக்கும் அனுபவத்திற்கும் பொருந்திய காரியமாக இருக்கமுடியும்?

ஒரு மனிதன் எப்படிப்பட்ட தவறு செய்தான் என்றாலும், அதற்குக் காரணம் அவனுடைய மனத்தின் பலவீனம் என்பதுதான் விஞ்ஞானத் தத்துவமாகும். தவறு என்ற காரியத்தை ஒரு மனிதன் செய்ய நேருவது அவனது மனத்தின் பலக்குறைவு என்பதை முதன்முதல் மேல்நாட்டாரால்தான் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது.

அதாவது, சில கெட்டகாரியங்கள் செய்பவர்களை மேல்நாட்டவர்கள் (That is his weakness) 'அது அவனது மனத்தின் பலவீனம்' என்று சொல்வார்கள். அதாவது, மனத்தில் தோன்றும் ஆசை, காரியங்களை அடக்கிக்கொள்ளும் சக்தி அவன் மனத்திற்கு இல்லை என்பது பொருள்.

திருடுபவன், பொய் பேசுபவன், பலாத்காரச் செயல்களில் இறங்குபவன், புணர்ச்சி விஷயங்களில் தவறாக, வெறியனாக நடப்பவன் முதலிய தவறு செய்பவர்களின் மனம் அவற்றைச் செய்யாமல் அடக்கி, தடுத்துக்கொள்ளும் சக்தி இல்லாததால் எளிதில் அக் காரியங்களைச் செய்துவிடுகிறார்கள். 'மனோ பலம்தான் மனிதனின் உயர்ந்த தன்மைக்குக் காரணம்; மனோ பலக் குறைவுதான் மனிதனின் கீழ்த்தன்மைக்குக் காரணம்' என்பது தேர்ந்த தத்துவமாகும். மற்றும் அவனவன் சுபாவம் என்பதும் மனிதன் பிறவித் தன்மையையே பெரிதும் பொறுத்ததாகும்.

இந்த அடிப்படையைப் பார்த்தால் ஒரு மனிதன் பல ஆண்டுகள் தவம் செய்தான் என்றால், அவன் மனத்தை அடக்கி—அடக்கி என்றால் அடக்கும் சக்தி, பலம் அவனுக்கு இருந்தது; இருந்தாகவேண்டும் என்பதுதான் பொருள். அப்படிப் பல ஆண்டுகள் மனத்தை அடக்கித் தவம் செய்து பலன் (வரம்) பெற்றவன் தனது சுபாவத்திற்கு மாறான, தவறான காரியம் செய்யும்படியான அளவுக்கு அவன் மனம் எப்படிப் பலவீனமடையமுடியும்?

நீதி செய்வதற்காக அரசன் தண்டிப்பது என்பது தவறான காரியமாக ஆகாது. இரணியனும், இராவணனும் தவறு செய்ததாகக் கற்பனை செய்திருப்பதில் அதற்குக் காரணங்களை ஆரியர்கள் சொல்லும்போது,—

'இரணியன் பிராமணர்களுடைய நடத்தை பிடிக்காமல் அவர்களைக் கொடுமையாய் நடத்தினான். அதற்கு விஷ்ணு மூலகாரணமாய் இருப்பதால் விஷ்ணுவை எதிர்த்தான்' என்பதாகத்தான் குற்றம்சாட்டி இருக்கிறார்கள்.

அதுபோலவே, இராவணன்மீது ஆரியர் குற்றம் சாட்டுகையில், முதல் குற்றமாக, 'இராவணன் பிராமணர்கள் செய்யும் யாகத்தை—ஜீவ ஹிம்சை, கொலைக் காரியங்களை—நடத்த முடியாமல், நடைபெறவொட்டாமல் தடுத்தான்' என்றுதான் குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.

சீதை சம்பந்தப்பட்ட குற்றமும் பழிக்குப்பழி வாங்க நேரிட்டதைக் குற்றமாக்கப்பட்டிருக்கிறது; அக்காலத்தில் இவை குற்றமாக்கப்படவுமில்லை. மேற்கண்ட இருவரையும் ஆரியர் வெற்றிபெற்றதும் 'தெய்வீகத் தன்மையாலேயே' ஒழிய மனிதத்தன்மையால், மனித இயற்கை பலத்தால் அல்ல என்பதை நல்லவண்ணம் அந்தக் கதைகளிலேயே ஆரியர்கள் விளக்கி இருக்கிறார்கள். ஆதலால், ஆரியர்கள் போதிய மனிதத் தன்மை, அறிவுத்தன்மை பெறாத காட்டுமிராண்டிகளாய் இருந்த காலத்தில் எழுதிய கதைகளானதால் தங்கள் பக்குவமற்ற தன்மையை அப்போது அவற்றில் காட்டிக்கொண்டார்கள்.

மற்றும், அவர்களது வாழ்வு, ஒழுக்கம், கலவி—அதாவது ஆண்-பெண் சேர்க்கைத் தன்மை, நீதிமுறை, தர்மமுறை, வேதமுறை, சம்பிரதாயமுறை யாவையும் சுத்தக் காட்டுமிராண்டித்தன்மை கொண்டவைகளே தவிர, அறிவில் பக்குவமடைந்த மனிதத் தன்மை கொண்டதாக ஓர் இடத்திலும் காணமுடிவதில்லை.

அவர்களில், அவைகளில் ஒருகடுகளவு மனிதத் தன்மை கொண்டவையாய் இருக்குமானால் அவை இன்றும் இயற்கைக்கு ஒத்ததாய், நடக்கத் தக்கதாய், செயல் முறைக்கு ஏற்றதாய் இருக்கவேண்டாமா?

அக் காலத்தியவர்கள் காட்டுமிராண்டிகள்—பச்சைக் காட்டுமிராண்டிகள் என்பதாய் இல்லாவிட்டால் அவர்கள் தன்மை, அவர்களது அக் கால கற்பனைத்தன்மை இன்று உலகிலுள்ள 300-க்கு மேற்பட்ட கோடி மக்களில் ஒருசிறு கூட்டத்தாராகிய அவர்களைத் தவிர மற்ற யாராவது—ஒரு மனிதனாவது ஒப்புக்கொள்ளத்தக்கதாய் இருக்கவேண்டாமா?

அவர்கள் (ஆரியர்கள்) வாழ்வின் தன்மை, அக் காலங்களில் காட்டுமிராண்டித் தன்மையதாய் இருந்தது என்பதற்கு அவர்கள் எழுதிய உலக சிருஷ்டிமுறைகள்—அவர்கள் குறிப்பிடும் காலங்கள், அக் காலத்தேவர்கள், கடவுள்கள், அவர்களது யாகமுறைகள், புணர்ச்சிமுறைகள், நீதிமுறைகள் முதலியவைகளும், மற்றும் அவர்கள் கற்பித்துக் கொண்ட தேவர்கள், கடவுளர்கள், ரிஷிகள் முதலியவர்களின் பிறப்புமுறை, செய்கைமுறை, ஆயுள்முறை, வாழ்க்கைமுறை, நீதிமுறை, புணர்ச்சிமுறை முதலியவைகளில்—எது இன்று அவர்களாலேயே ஒப்புக்கொள்ளத் தக்கதாய், மனிதத் தன்மையுடையதாய், நடப்புக்கு ஏற்றதாய் இருக்கிறது?

கேவலம் இதிகாசக் காலங்களில் அவர்களது தன்மை எப்படிப்பட்டது என்று பார்த்தால் பாரத, இராமாயணக் கதைகளில் இராமன் பிறப்புமுறை, பஞ்சபாண்டவர்கள் பிறப்புமுறை ஆகியவை அறிவுக்கோ, நடப்புக்கோ ஏற்றமுறை என்று அவர் (ஆரியர்)களாலேயே ஒப்புக்கொள்ள முடியுமா?

இராமாயணகாலம், பவுத்தனுக்கு, ஆரியர் இந்தியாவிற்கு வந்ததற்கு, சேர, சோழ, பாண்டியர்க்குப் பிற்பட்டகாலம். இதில் வசிஷ்டன்—விசுவாமித்திரன்—நாரதன் வருகிறார்கள். அவர்களுக்கு நூற்றுக்கணக்கான கோடி காலம் (வயது) கூறப்படுகிறது.

செத்துப்போனவர்கள், பிரம்மா, சிவன், விஷ்ணு, இந்திரன், பூமிதேவி முதலியோர் வருகிறார்கள். இவர்கள் காலம் எண்ணிறந்த காலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யாகத்தைக் குறிப்பிடும்போது, கொல்லப்பட்ட குதிரைகளின் ஆண்குறியை, மனிதப்பெண்களின் பெண்குறியில் பொருத்திக் கலவி செய்யும்படி அவர்களின் கணவன்மார் வேண்டிக் கொண்டதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

கழுகு பதினாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்ததாகவும், கழுகு யானையைத் தூக்கிக் கொண்டுபோய் மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு கொத்தித் தின்றதாகவும் கூறப்படுகிறது. மற்றும், வாலி, அனுமன், ஜாம்பவான் முதலியவர்கள் கதைகள் இயற்கைக்கு ஏற்றவையாகுமா? அறிவுக்கு ஏற்ற கதைகளாக இருக்கமுடியுமா?

பாரதக்கதையில் கவுரவர்கள், பஞ்சபாண்டவர்கள் மனிதர்களாகத்தாம் கற்பிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால், பஞ்சபாண்டவர்கள் சூரியனுக்குப் பிறந்தார்கள்; எமனுக்குப் பிறந்தார்கள்; காற்றுக்குப் பிறந்தார்கள்; இந்திரனுக்குப் பிறந்தார்கள்; அசுவினி குமாரர்களுக்கு இருவர் பிறந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவர்கள் இந்தப் பூலோகத்தில் இருப்பவர்களா? மனிதத் தன்மையுடையவர்களா? இவர்கள் மனிதப் பெண்களிடம் புணர்ச்சி செய்யத்தக்க அவ்வளவு சிறிய உருவங்களாக முடியுமா? கூப்பிட்டவுடன், நினைத்தவுடன் வருவதற்கு முடியுமா? வானலோகம், பூலோகம் அவ்வளவு சமீபத்தி

துள்ளனவா? இப்படியாக, சுத்தக்காட்டுமிராண்டித் தன்மையுடைய ஆரியர்கள், இந்திய மக்களையே காட்டுமிராண்டிகள் ஆக்கிவிட்டார்கள் என்பதோடு,—

இன்னமும் இப்படிப்பட்ட கற்பனையின்மீது 'நம்பிக்கை' கொண்டு பரப்பி வருகிறார்கள்.

மனிதப்பிறப்பு எப்படியோ நாசமாய்ப் போனாலும், இவர்கள் கூறும் கடவுள்கள்—கந்தன், கணபதி முதலியவர்கள் பிறப்பும், அவதாரக் கதைகளும் பகுத்தறிவுள்ள மனிதன் என்பவனால் சிந்திக்கத் தக்கவையா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

எனவே, ஆரியர்கள் எவ்வளவு காட்டுமிராண்டிகள் என்பதை எடுத்துக்காட்ட ஒரு சில குறிப்புகளைக் காட்டினேன். அதோடுகூடவே, இப்படிப்பட்ட கருத்துக்கள் திராவிடரிடம் அக் காலத்தில் இருந்ததாகக் கூட ஆதாரம் காணமுடியவில்லை என்பதைக் கூறி இதை முடிக்கிறேன்.

[தலையங்கம்—'விடுதலை' 12-8-1972]

21. பார்ப்பான் பணக்காரனானால்?

இந்த நாட்டில் பார்ப்பனர்மீது பாமர மக்களுக்கு வெறுப்பு உண்டாகும்படி செய்து வரும் (என்னால் தோற்றுவிக்கப்பட்ட) சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் பிரச்சாரத்தால் பார்ப்பனர்கள் தங்களுக்கு உரிய வைதிக சம்பந்தமான ஏழ்மை வாழ்க்கையை விட்டுவிட்டு பாங்கு, வியாபாரம், இயந்திரசாலை முதலாளி முதலிய தொழில்களில் ஈடுபட்டு, ஏராளமான பணம் சம்பாதித்து, அவர்களில் அனேகர் செல்வவான்களாகவும், இலட்சாதிபதிகளாகவும் ஆகிவிட்டார்கள். 'இதுதான் துவேஷப் பிரச்சாரத்தால் ஏற்பட்ட பயன்' என்று, பார்ப்பனர்கள்மீது வெறுப்புக்கொண்ட பலர் என்னைக் குற்றம் சொல்லுகிறார்கள். இது உண்மையானால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியே யாகும்.

எனக்கு, எனது சுயமரியாதை—திராவிடர் கழகப் பிரச்சாரத்தின் கருத்து என்னவென்றால், ஒரு பார்ப்பான்கூட 'மேல்சாதி'யான் என்பதாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தானே தவிர, பார்ப்பான் பணக்காரனாகக்கூடாது—அவன் நல்வாழ்வு வாழக் கூடாது—அவன் ஏழையாகவே இருக்கவேண்டும் என்பது அல்ல. ஒவ்வொரு பார்ப்பானும் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், பொப்பிலி இராஜா, சர். சண்முகம் செட்டியார், சர். இராமசாமி முதலியார் போன்றவராகக் 'கோடீஸ்வர'னாகவும், இலட்சாதிபதியாகவும் ஆகிவிட்டாலும் சரியே; எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எந்தப் பார்ப்பானும், மடாதிபதிகள் உட்பட எவரும் சிறிதுகூட நமக்கு மேல் சாதியினன் என்பதாக இருக்கக் கூடாது என்பதுதான் என் நோக்கம்.

பணக்காரத்தன்மை ஒரு சமூகத்துக்குக் கேடானதல்ல; அந்த முறை தொல்லையானது—சாந்தியற்றது என்று சொல்லலாம்; என்றாலும் அது பணக்காரனுக்கும் தொல்லையைக் கொடுக்கக்கூடியதும், மனக்குறை உடையதும், இயற்கையில் மாறக் கூடியதும், எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றக்கூடியதுமாகும்.

ஆனால், இந்த மேல்சாதித்தன்மை என்பது இந்த நாட்டுக்குப் பெரும்பாலான மனித சமுதாயத்துக்கு மிகமிகக் கேடானதும், மகாக் குற்றமுடையதுமாகும். அது முன்னேற்றத்தையும், மனிதத்தன்மையையும், சம உரிமையையும் தடுப்பதுமாகும்; ஒரு பெரிய மோசடியும், 'கிரிமினலு'மாகும். ஆதலால், என்ன விலை கொடுத்தாவது மேல் சாதித்தன்மையை ஒழித்தாகவேண்டும் என்பது எனது பதிலாகும்.

['குடி அரசு'—9-11-1946; 'உண்மை' 14-10-1972]

22. பார்ப்பனர்—அன்றும் இன்றும்

நம்மில் சமுதாய சீர்திருத்தத்திற்கு யார் பாடுபட்டாலும் அவர்களுக்குப் பார்ப்பனர்கள் அளிக்கும் பட்டங்கள் என்னவென்றால் இராட்சதர், அரக்கர், அசுரன் என்கிறதான பட்டங்களாகும்.

இந்தப் பெயர்களின் தத்துவம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தால், இன்று இந் நாட்டில் நடந்துவரும் சமுதாயப் (பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்) போராட்டமானது 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்தியாவில் தொடங்கி நடந்து வந்திருக்கிறது என்பதுதான்.

கடவுள் (விஷ்ணு) அவதாரங்கள் என்கின்ற பார்ப்பனக் கற்பனைகளைப் பார்த்தால், நமது அரசர்கள் அக்காலங்களில் பார்ப்பனர் விஷயங்களில் எப்படியெப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும், அவற்றைப் பார்ப்பனர்கள் எப்படியெப்படிச் சமாளித் திருக்கிறார்கள் என்பதும் விளங்கும். அந்த விஷ்ணு அவதார எண்ணிக்கை 10 என்றாலும்—10க்கும் கதைகள் இல்லை.

விஷ்ணுவின் (1) மச்ச (2) கூர்ம (3) வராக (4) நரசிம்ம (5) வாமன (6) பரசுராம (7) இராம (8) பலராம (9) கிருஷ்ண என்பவையான—9 அவதாரங்களுக்குத்தான் கதைகள் இருக்கின்றன. 10-வது அவதாரம் இனிமேல் ஏற்படும் என்று கூறப்பட்டிருக் கிறது. 'அந்த அவதார காலத்தில் இன்னின்ன காரியம் நடக்கும்; மக்கள் இப்படி நடந்துகொள்ளுவார்கள்' என்பதாகக் காணப்படுகிறது. அப்படிக் காணப்படுவதற்கேற்ப இன்று காரியங்கள் நடக்கின்றன.

அதாவது—'இன்றையப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போராட்டம்தான் 10-வது அவதாரப் போராட்டம்; அதுதான் இன்று நடைபெறுகிறது' என்பதற்கு அந்த அவதாரங்களுக்கு எதிரிகளாக இருந்த இராட்சதர்கள் முதலிய பெயர்களை—இன்றும் பார்ப்பனர் நமக்குச் சூட்டுவதே ஆதாரமாகும். அதாவது இராஜாஜி, நம் தலைவர்களை—இராவணன், இரணியன், சூரபத்மன் என்றெல்லாம் சொல்லுவதும் அந்த ஆதாரத்தையே நமக்குக் காட்டுகிறது. அத்துடன் சத்தியமூர்த்தியும் இப்படி நம் தலைவர்களைப் பல முறை சொல்லியிருக்கிறார்.

இந்த 'அவதாரங்களின்' தத்துவம் என்னவென்றால்—'பார்ப்பனன் என்பவன் எந்தத்துறையிலும் ஒழுங்காக, ஒழுக்கமாக, நாணயமாக, நேர்மையாக, உண்மையாக நடந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை; தனது நலத்திற்கு எந்தத் தவறான காரியத்தையும் செய்யலாம்; தன் உயர் வாழ்வும், வெற்றியும்தான் முக்கியம்' என்பதைப் பார்ப்பனர்களுக்குப் படிப்பிப்பதேயாகும். இவை ஏதோ ஒருகாலத்தில் எழுதப்பட்டிருந் தாலும் இன்று பார்ப்பனர் நடப்பில் இருந்துவரும் நடத்தைகளையும், குணங்களையுமே நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நூல்கள் 1000, 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நூல்களாய் இருந் தாலும்—அக்காலத்திலேயே பார்ப்பனர் தங்களுக்கு இருந்துவந்த எதிர்ப்புக்களைச் சமாளிக்கவும், மேலால் ஏற்படக்கூடும் என்று நினைத்து முன் எச்சரிக்கையாகவும், எக்காலத்துக்கும் பொருந்துமாறும் பார்ப்பன மக்களுக்கு வழிகாட்டவும் எழுதப்பட்டவை களாகும்.

இவைகளைத் துருவிப் பார்த்தால்—கவனமாகச் சிந்தித்தால், பார்ப்பனரின் இன்றைய நிலை என்ன; அதற்கு நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது விளங்கும்.

[தலையங்கம்—'விடுதலை' 2-12-1972]

6. விழாக்கள்

1. நினைவுநாள் ஏன்?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

எத்தனையோ பேர் சாகிறார்கள். ஏதோ இரண்டொருவர்கட்குத்தான் நாம் நினைவு நாள் கொண்டாடுகிறோம். செத்துப்போனவர்களின் பணத்தை உத்தேசித்தோ, படிப்பை உத்தேசித்தோ, அதிகாரம், பட்டம், பதவி, அறிவு, சாமர்த்தியம் முதலியவை களைப்பற்றியோ நாம் எவருக்கும் நினைவு நாள் கொண்டாடுவதில்லை. இவைகள் காரணமாக நாம் எவரையும் போற்றுவதுமில்லை; துதிப்பதுமில்லை.

பணத்தால் ஒரு மனிதனை மதிப்பதென்றால், ரிசர்வ் பாங்கியைத்தான் மதிக்க வேண்டும். படிப்பால் ஒரு மனிதனை மதிப்பதென்றால் பெரிய லைப்ரரியைத்தான் மதிக்கவேண்டும். அறிவால் ஒருவனை மதிக்கவேண்டுமானால் 'என்சைக்ளோபீடியா', ரேடியோ முதலியவைகளை மதிக்கவேண்டும். இப்படி அனேகவற்றை—உயிரில்லாதவை களிலும் காணலாம். ஆதலால், நாம் மதிப்பது, பேசுவது, நினைவுறுவது என்பவை யெல்லாம் இவைகளை உத்தேசித்தல்ல.

மற்றெதற்காக என்றால், மனிதர்களாக—மனிதத்தன்மை உடையவர்களாக இருந்து, மறைந்த மனிதர்களுக்காக இரங்கி, அவர்களது மனிதத்தன்மையை எடுத்துக் கூறி, மற்றவர்களையும் மனிதர்களாக ஆகுங்கள் என்பதற்காகவே யாகும்.

அப்படியானால், செத்துப்போன மற்றவர்களும், இப்போது இருக்கும் மக்கள் எல்லோரும் மனிதர்கள் அல்லவா என்று கேட்பீர்கள். அவர்களையெல்லாம் மனிதர்கள் என்று சொல்லுகின்றோமே ஒழிய, மற்ற ஜீவபிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் பேதம் காணக்கூடிய தன்மையுடைய மனிதர்கள் என்று சொல்லுவதற்குரியவர்களாக மாட்டார்கள். பேதம் என்றால் உருவ பேதம் அல்ல. நடப்பிலும், நடப்பால் ஏற்படும் பயனிலும் உள்ள பேதமேயாகும்.

உலகிலுள்ள எல்லா ஜீவபிராணிகளுக்கும்—மனிதர்கள் என்பவர்கள் உட்பட, உருவத்தில் பேதம் இருந்தாலும், குணத்தில் பேதம் இருந்தாலும் நடப்பும் பயனும் அனேகமாய் ஒன்றுதான்.

அரசர்களை மதிக்கிறோமா? பெரிய மனிதர்களை, ஆழ்வார்களை மதிக்கிறோமா? அல்லது தெய்வங்கள் என்பவர்களையாவது மதிக்கிறோமா? மடாதிபதிகள் அல்லது மகான்கள் அல்லது ஆச்சாரியார்களை மதிக்கிறோமா? இவர்களை எல்லாம் அவரவர் களிடத்தில் சம்பந்தமும், தனிப்பட்ட நலமும் பெறுகிறவர்கள்தான் மதிப்பார்கள்; மற்றவர்கள் ஏன் மதிப்பார்கள்?

ஏன் என்றால், வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பவனை யார், எதற்காக மதிப்பார்கள்? ஓட்டல்காரன், 'அன்னதான பிரபு' ஆவானா? சம்பள உபாத்தியாயர், 'குருநாதன்' ஆவானா? தாசி, 'காதலி'யாவாளா? என்பதுபோல்தான் தன் தன் நலத்துக்கு—தன் தன் பொறுப்புக்காகக் காரியம் செய்யும் எவனுடைய காரியமும்—எப்படிப்பட்டதாயினும், அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக்கூடியதாகாது. அப்படியல்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள்—அதாவது தன்னைப் பற்றிய கவலை இல்லாமல் பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்துத் தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத் தொண்டால் பாதகமடையும் தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட வகுப்புக்கள், கும்பல்கள் அவனை மதிக்காமல் இருக்கலாம்; அவமதிக்கலாம்; அது பொதுவாய் மதிக்காததாகாது.

ஆகவே, நாம் நினைவு நாள் கொண்டாடும் மக்களை, உண்மையான மனிதர்களாய்க் கருதி, அவர்களது மனிதத்தன்மையை மதித்து, மற்றவர்களும் அந்தத் தன்மைக்கு வரவேண்டுமென்கிற ஆசைக்காக, எடுத்துக்காட்டுக்காக, பிரச்சாரத்திற்காக கொண்டாடுகிறோம்.

[திருச்சி, தஞ்சை, கும்பகோணம் ஆகிய இடங்களில் 1945 மார்ச், ஏப்ரல் மாதங்களில் சொற்பொழிவு —'குடி அரசு' 14-4-1945]

2. படத்திறப்பு விழா

நாம் உருவப்படத் திறப்புவிழா நடத்துவது என்பது பூசை செய்யவோ, தேங்காய், பழம் ஆராதனை செய்து, விழுந்து கும்பிட்டுப் பக்தி செய்து, நமக்கு வேண்டியதைக் கோரிப் பிரார்த்தனை செய்யவோ, நாம் செய்த—செய்யும் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கவோ அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட சக்தி இருப்பதாகக் கருதிக்கூட நாம் எந்தப் படத்திறப்பு விழாவும் செய்வதில்லை. மற்றும், எப்படிப்பட்ட படத்திற்கும் பூசை செய்யும்படியோ, கோவில்களிலோ தேர், இரதம், விமானம், சப்பரம் ஆகியவைகளிலோ வைத்து ஊர்வலம் ஆராதனை செய்யும்படி காலித்தனம் செய்வதற்கோ அல்ல.

ஆனால் மற்றெதற்கு என்றால், மனித சமூக நலனுக்கு—சுயநலமில்லாமலும், மற்றவர்களிடமும் எவ்விதக் கூலியோ, புகழோ, பிரதிப் பிரயோஜனமோ பெறாமலும், தன் முயற்சியால், தன் பொருளால், தன் பொறுப்பென்று கருதித் தொண்டாற்றி வந்த பெரியார்களின் குணாதிசயங்களையும் தொண்டையும் எடுத்துச் சொல்வதன்மூலம், மற்றும் பலரும் அக்காரியத்தைப் பின்பற்ற வேண்டும்—பின்பற்ற மாட்டார்களா என்பதற்காகவேதான். மனித சமூக நலனுக்குப் பிரதிப் பிரயோஜனம், கூலி இல்லாமல் மக்கள் பாடுபட வேண்டும் என்கின்ற மேலான குணத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு ஒரு சாதனமாகவேதான் இக்காரியத்தைச் செய்கிறோம்.

உதாரணமாக, கிரீஸ் தேசத்துச் சாக்ரடீஸ் என்பவர்—எந்தக் காரியத்தையும் அறிவால் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னதற்காக விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார். கவுதம புத்தர் என்பவர்—ஆரியப் புரட்டுகளை எதிர்த்ததற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டார். இயேசு கிறித்து விக்கிரக ஆராதனை, கோவில் பூசை முதலியவைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ததற்காகச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். முகமது நபி அனேக மூடப்பழக்க வழக்கங்களையும், பல தெய்வ உணர்ச்சியையும், பெண் கொடுமையையும் எதிர்த்துப் பல நல்ல கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ததற்காகப் பல முறை சங்கடப்படுத்தப்பட்டார். அப்படிப்பட்டவர்களும் மற்றும் அது போன்ற பல புதிய அபிப்பிராயம் சொன்னவர்களும் அவர்களது ஆயுள் காலத்தில் இதுபோல் எவ்வளவு துன்பப் படுத்தப்பட்டு, எவ்வளவு கஷ்டப்படுத்தப்பட்டு, எவ்வளவு தொல்லைப்படுத்தப்பட்டு இருந்தாலும் இன்று அவர்கள் கோடானுகோடி மக்களால் அவர்களது அபிப்பிராயங்களோடு மதிக்கப்படுகிறார்கள்; கோடிக்கணக்கான பேர்களால் பின்பற்றப்படுகிறார்கள். அது போலவேதான், நாங்களும் இன்று எங்கள் அபிப்பிராயங்கள் எவ்வளவுதான் வெறுக்கப்பட்டபோதிலும், பாமர மக்களாலும், சுயநலச் சூழ்ச்சிக்காரர்களாலும் எவ்வளவுதான் வெறுக்கப்பட்டுத் தொல்லைகள் விளைவிக்கப்பட்டு அல்லல் பட்டாலும், பிற்காலத்தில் எங்கள் தொண்டு மக்களுக்கு மிக்க பயன்தரக்கூடியதாயும் பாராட்டக்கூடியதாயும், மக்களை ஞான வழியில் நடத்தக் கூடியதாயும் இருக்கும் என்கின்ற நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கிறோம். இல்லாவிட்டால் இவ்வளவு தொல்லைகளுடன் எங்களுக்கு எவ்விதத்திலும் சுயநல மற்ற இந்தத் தொண்டைப் பெரும்பான்மையான மக்களுடைய இவ்வளவு வெறுப்பிற்கிடையில் துணிந்து ஆற்ற முனைந்திருக்கமாட்டோம்.

நாங்கள் பாமர மக்களால் வெறுக்கப்படுவதினாலேயே எங்கள் தொண்டின் மேன்மையை உணருகிறோம். பாமரமக்கள் மதித்துப் பக்தி செலுத்திப் புகழும்படியாக நடந்துகொண்டவர்களுடைய எப்படிப்பட்ட தொண்டும், அபிப்பிராயமும் அவர்களது வாழ் நாளுக்குப்பின் பயன்பட்டதாக எங்களுக்கு ஆதாரமே கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர் களால் மனித சமூகம் திருத்தப்பாடு அடைந்ததாக எவ்வித ருசுவும் இதுவரை கிடைத்த தில்லை.

நாமறிய ஒரு காலத்தில் திலகர் புகழப்பட்டார்; பெசண்ட் அம்மையார் புகழப் பட்டார்; காந்தியும் புகழப்படுகிறார். சரித்திரத்தில் எத்தனையோ ஆச்சாரியார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சுவாமிமார்கள் எனப்பட்ட எத்தனையோ பேர் புகழப் பட்டதாகவும் பார்க்கிறோம். இவர்களில் பலர் 'தெய்வீகம்' கற்பிக்கப்பட்டார்கள்; பலர் தெய்வங்களாகவும் கருதப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களாளெல்லாம் ஒரு காதொடிந்த ஊசியளவு பயன் மக்களுக்கு ஏற்படுகிறதா? ஏற்பட்டதா? ஏற்படும் என்கின்ற குறியாவது காணப்படுகின்றதா? இவர்கள் எல்லாம் புராணங்களுக்குப் புதிய உரை எழுதுகிற உரையாசிரியர்கள் போல் தோன்றி, பாமரர்களுடைய பக்திக்கும் பூசைக்கும் பாராட்டுத லுக்கும் ஆளாகி, முட்டாள்தனத்துடனும் அல்லது பாமர மக்களை ஏமாற்றிப் பொய்ப் புகழ் பெற்று வருகிறோமே என்கின்ற உணர்ச்சியுடனும்தானே செத்தார்கள்—சாகின் றார்கள்—சாகப்போகின்றார்கள் என்று சொல்லவேண்டி இருக்கிறதே தவிர, கண்கண்ட பயன் என்ன என்று பாருங்கள்!

இன்று உண்மையில் மனித சமூகத்திற்கு ஏதாவது புதிய மாறுதல் உணர்ச்சி அல்லது புரட்சிகரமான சுதந்திரம், விடுதலை, சமத்துவம், சுயமரியாதை என்பதான உணர்ச்சி தோன்றி இருக்குமானால்—அவை அனைத்தும் ஒரு காலத்திலோ, நேற்றோ, இன்றோ—கல்லடிபட்டு, கொல்லப்பட்டு, கையடிபட்டு, தொல்லைப்பட்டு உயிர் துறந்த, உயிர் வாழ்கின்ற—வெறுக்கப்பட்ட மக்களாலேதான் என்பது ஆராய்ந்து பார்க்கின்ற எவருக்கும் சுலபத்தில் புலப்படும்.

அப்பேர்ப்பட்டவர்கள் எல்லாம் மக்களின் தன்மை உயர வேண்டுமென்று கருதித் தொண்டாற்றியவர்களே ஒழிய, மக்கள் தங்களைப் போற்றிப் புகழ்ந்து பூசிக்க வேண்டு மென்று கருதியவர்கள் அல்லர். ஆதலால் அப்பெரியவர்களை ஞாபகப்படுத்தி, அவர்கள் தன்மையை மற்ற மக்கள் உணர்ந்து, அம்மாதிரியான உள்ளம் பெற்று மனித சமூகத்துக்குத் தொண்டாற்ற முற்படவேண்டும் என்பதற்காகவே அவர்களது உருவப்படத் திறப்பு விழாக்கள் என்ற பெயர் வைத்து இவற்றை எடுத்துக் கொள்கிறோம்.

[கட்டுரை—'குடிஅரசு' 10-1-1948]

3. விழாவும் நாமும்

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இங்கு நடைபெற்று வரும் இந்தப் பொங்கல் விழாவில் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்காக என்னை அழைத்ததில் நான் ஏதோ எனக்குத் தோன்றும் கருத்துக்களை உங்களிடம் சொல்லி அளவளாவ முன் வந்திருக்கிறேன்.

விழா என்பதன் நோக்கமே மக்கள் பலர்கூடி அளவளாவிக் களிக்க வேண்டு மென்பதுதான். விழாவிற்காகப் பலதரப்பட்ட கருத்துக்களுடைய மக்கள் ஒன்று சேரும் போது அவரவர்களுடைய கருத்தை ஒருவரோடொருவர் பரிமாறிக்கொள்ளச் சந்தர்ப்பம் எழுகிறது. இங்கு நடைபெறும் பொங்கல் விழாவில் அன்றாடம் ஒரு அறிஞரை வர வழைத்து அவருடைய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்கப்பட்டு

வருகிறது. இது மிகவும் பாராட்டத்தக்க காரியம் ஆகும்; அதோடு பயனுள்ள காரியமு மாகும். அனேகமாக விழாக்கள் எல்லாம் இப்படித்தான் கொண்டாடப்படவேண்டும். நம் நாட்டு விழாக்கள் என்பவை இன்று பெரும்பாலும் அர்த்தமற்ற சடங்குகளாகவே இருந்து வருகின்றன. மேலும், இவைகள் பெரும்பாலும் எந்தக் காலத்திலோ, யாருடைய நன்மை கருதியோ, யாராலோ, எதனாலோ ஏற்படுத்தப்பட்டனவாயிருக்கின்றனவே யொழிய, பெரிதும் நம்முடைய முன்னேற்றத்திற்கு ஏற்றனவாக அமைந்திருக்கவில்லை.

உதாரணமாக, ஒவ்வொரு விழாவும் மத சம்பந்தமானதாகவும் அவை பெரிதும் பார்ப்பான் மேன்மைக்கும், பிழைப்புக்கும் பயன்படத்தக்க ஒரே தத்துவத்தை அடிப்படையாக வைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பவையாகவே நாம் காண்கிறோம். அந்தந்த விழாவையொட்டிய சடங்குகளும் பெரும்பாலும், துவக்கிய காலந்தொட்டு ஒரே மாதிரியாக இருக்கின்றனவேயொழிய, நாளுக்குநாள் எவ்வித முன்னேற்ற மாறுதலும் அடைந்துவரக் காணோம். மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் விழாச் சடங்குகளுக்கும், எவ்வித சம்பந்தமும் இருப்பதாகக் கூட நமக்குத் தோன்றவில்லை. சென்ற ஆண்டில் நடைபெற்ற சரஸ்வதி பூஜை, பிள்ளையார் பூஜை, உற்சவம், கடவுள்கள் திருமணம் ஆகிய இவற்றிற்கும்—இவ்வாண்டு நடைபெற்ற இவ்விழாக்களுக்கும் நம்மால் எவ்வித மாறுதலும் காண முடியவில்லை. முன்பு விளக்கெண்ணெய் விளக்கென்றால் இன்று 'காஸ்லைட்', 'எலெக்ட்ரிக் லைட்'—இவைதாம் மாறுதல். நம்முடைய பழம்பண்டிகைகளும்கூட எவ்வித மாறுதலும் இன்றியேதான் நடைபெற்று வருகின்றன. இத்தகைய விழாக்களில் கலந்து கொள்வதால் மக்களுக்கு ஏதாவது பயனுண்டா என்பதுபற்றி யாரும் கவலை எடுத்துக் கொண்டு சிந்திப்பதில்லை. இந்தமாதிரி பலர் கூடிக் களிக்கும் சந்தர்ப்பத்தை—அவர்களிடையே உள்ள வேற்றுமையை நீக்கவும், அவர்களது அறிவை முன்னேற்றப்பாதையில் அழைத்துச்செல்லவும் அறிவாளிகள் உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும். அந்த மாதிரி நம்முடைய விழாக்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எனக்கு வெகு காலமாகவே இருந்துவருகிறது. கொஞ்ச காலத்திற்கு முன்பே பொதுநலத் தொண்டர்கள் இதில் போதிய கவனம் செலுத்தியிருப்பார்களானால், நம் நாடு இதற்குள் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கும். அறிவுக்குக் கேடாயிருந்துவரும் பல விழா முறைகள், அறிவு வளர்ச்சிக்கான விழாக்களாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்று நான் கூறுவது வெகு பேருக்குச் சங்கடமாயிருக்கலாம்.

நான் இதுபற்றிக் கவலை எடுத்துக்கொண்டு மேல்நாடுகளில் நடைபெறும் விழாக்களைப்பற்றியும், அவைகளின் முறைகளைப் பற்றியும் ஆராய்ந்திருக்கிறேன். எனது மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்போது பல விழாக்களில் நான் கலந்துகொண்டும் இருக்கிறேன். அவர்களது விழாக்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது புதிய படிப்பினை இருக்கும். ஏதாவது முற்போக்கு உணர்ச்சிப் பெருக்கத்திற்கான வசதி இருக்கும். ஆனால், இங்கு எந்த விழாவும் அப்படி இருப்பதில்லை; அறிவுக்கு உணர்ச்சி கொடுக்கும் தன்மையே நமது விழா முறையில் இருப்பதில்லை. இங்கும் பெரிய, பெரிய உற்சவ விழாக்கள் பல இலட்சக்கணக்கான பொருட்செலவில் இலட்சக் கணக்கான மக்களைக் கூட்டுவித்து நடைபெற்று வருகின்றன என்றாலும் அவற்றால் அறிவும் நாகரிகமும் மேலும் மேலும் அந்தகாரத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறதே அல்லாது ஒன்றேனும் அறிவு விளக்கத்திற்கு—நவநாகரிகத்திற்கு ஏற்றதாய் அமையவில்லை.

மற்ற நாடுகளில் இம்மாதிரியான விழா நாட்களைக் கண்காட்சி மாதிரி நடத்து வார்கள். அக்கண்காட்சி சாலைகளில் புதிய கற்பனைகள் பல மலிந்திருக்கும். வாழ்க்கை வசதி மேம்பாட்டிற்கான பல புதிய கண்டுபிடிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். பல நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட நுண்ணிய கருவிகள் கண்காட்சியில் இடம்பெற்றிருக்கும். ஒவ்வொரு துறையிலும்—எழுத்து, இயந்திரம், கைத்தொழில், சித்திரம் ஆகிய

சகல துறைகளிலும் அது பெரிய படிப்பினையாக அமைந்திருக்கும். கண்காட்சி சாலையின் ஒரு பக்கத்தில் நுழைந்து மறு பக்கத்தில் வெளி வருவதற்குள் ஒருவன் சகல துறைகளிலும் தன் அறிவை வளர்த்துக்கொண்டு விடுவான். அவன் உலகத்தின் முன்னேற்ற வளர்ச்சிகளைத் தன் கண்கள்முன் கண்டு களித்துத் தெளிவுபெறுகின்றான்; பல ஆராய்ச்சி நுணுக்கங்களை அறியும் வாய்ப்புப்பெறுகிறான்; பல அதிசயக் கருவிகளைக் கண்டு அகமகிழ்கிறான். சுருங்கக்கூறின் கலாசாலை சென்று படித்துப் பெறவேண்டிய அறிவு வளர்ச்சியை, அவன் அந்தக் கண்காட்சியின் மூலம் ஒரு சில மணி நேரத்திலேயே பெற்று விடுகிறான். அவ்வளவு பயன்தரத்தக்க முறையில் அவர்கள் கண்காட்சிச் சாலைகளை நடத்துகிறார்கள். மனித சமுதாயத்தின் அறிவு முன்னேற்றத்திற்கென்றே அவைகள் நடத்தப்பட்டுவருவதால் அதில் அறிவாளிகள் பெருங்கவலை எடுத்துக்கொண்டு உழைக்கிறார்கள்.

அரசாங்கம் மட்டுமல்ல; தனிப்பட்ட நபர்களும் மனித சமுதாயத்தின் நல் வாழ்வுக்குத் தம்மாலான சகல உதவிகளையும் செய்ய முயற்சிக்கிறார்கள். தொழில் துறையில் இருந்துவருகிற மக்கள் அத் துறையில் தமது பூரா கவனத்தையும் செலுத்தி மக்கள் தேவைக்கான நற்பொருள்களை நயமான விலைக்குத் தருவதற்கான முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். பொது மக்களின் நன்மைக்கான புதிய, புதிய கண்டுபிடிப்புக்களை மக்களுக்குக் கண்காட்சியின்மூலம் அறிமுகம் செய்துவைக்கிறார்கள். தமது வாழ்க்கையையே பொது மக்களின் நன்மைக்காக அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அம்மாதிரி பொதுநல உணர்ச்சியே நம்மிடம் இருப்பதில்லை. ஆகவேதான் நம் விழாக்கள் இன்றும் அர்த்தமற்ற சடங்குகளாகவே இருந்துவருகின்றன. நம் நாட்டிலும் பெரிய பண்டிகைகளும், திருவிழாக்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

நாமும் பல இலட்சக் கணக்கில் திரும்பத் திரும்ப அவற்றிற்குச் சென்றுகொண்டுதான் இருக்கிறோம். பழையபடி பல சாமான் கடைகளையும், பல சில்லரை வேடிக்கைகளையும் தான் பார்க்கிறோமே யொழிய—அறிவு முன்னேற்றத்திற்கான வசதி ஒன்றையேனும் அங்கு காண்கிறோமில்லை.

விழாவிற்கு வந்து வீடுதிரும்பும் ஒருவனைக் கண்டு, 'என்னப்பா விசேஷம்?' என்று கேட்டால் அவன் என்ன கூறுவான்? 'ஒன்றும் விசேஷமில்லை; நிறையக் கூட்டம் இருந்தது; அலங்காரம் அழகாயிருந்தது; கூட்டத்தில் பலர் நசுக்கப்பட்டார்கள்; இந்த வருடம் புது வாத்தியக்காரன் வந்திருந்தான்; அவன் விடியவிடிய வாசித்தான்; வாத்தியத் திற்குமட்டும் ரூபாய் ஓராயிரமாம்' என்று இப்படித்தான் பதில் கூறுவானே அல்லாது, 'இந்த விழாவிற்குச் சென்றதால் இன்ன பலன் பெற்றேன்; அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட ஆகாய விமானத்தையும், பர்ஷியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட அற்புதக் கம்பளங்களையும் பார்வையிட்டேன். அரைமணி நேரத்திற்குள் 50 கெஜம் ஆடை நெய்யக் கூடிய அதிசயக் கருவியைக் கண்டேன்' என்று கூறமாட்டான் அல்லவா?

அழகிய அலங்காரத்தாலும், அற்புத வாத்தியத்தாலும் அவனுக்கு ஏதாவது பயனுண்டா? மற்ற உலக மக்களைப் போல் நாமும் பெருமையடித்துக்கொள்ள நாம் ஏதாவது ஒரு அதிசயக் கருவியையாவது உற்பத்தி செய்திருக்கிறோமா? நம் பெருமையெல்லாம், 'நான் ஒரு வருஷத்திய புரட்டாசி சனிக்கிழமைகூட திருப்பதிக்குச் செல்லத் தவறியதில்லை;' 'ஒரு வருடமேனும் திருவண்ணாமலை தீபசேவைக்குச் செல்லாமல் இருந்ததில்லை' என்பதோடு அடங்கிவிடுகிறதேயல்லாது, வேறு என்ன இருக்கிறது, நாம் பெருமைப்பட? பாடுபட்டுத் தேடிய பணத்தை இரயில்வேக்காரரும், பார்ப்பன அர்ச்சகர், ஓட்டல்காரர், காப்பிக்கடைக்காரர் உண்ண அழுவதைத் தவிர, வேறென்ன பயன் கண்டோம், நமது விழாக்களால்? இந்த விழாக்களால் நமது சமுதாய நிலை, அல்லது அறிவு வளர்ந்து விட்டதென்று யாரேனும் கூறமுடியுமா? தலைமுறை தலைமுறையாக நமது சமுதாய நிலை

வாழ்க்கைநிலை ஒரே நிலையில்தானே இருந்துவருகிறது? வேறு நாட்டுமக்களுக்கு இருந்து வரும் அறிவு முன்னேற்றத்திற்கான வாய்ப்பு நமக்கு இல்லாமற் போன காரணம் என்ன?

மனிதன் எப்போதும் ஒரு காரியத்தை ஒரேமாதிரி செய்துகொண்டு வருபவன் அல்லனே! செக்குமாட்டைப் போல் ஒரேமாதிரித் திருப்பித் திருப்பிச் சுழன்றுகொண்டு வருபவனல்லனே! மனிதன் பகுத்தறிவுச் சிந்தனை உடையவனானதினால், அவன் ஓர் வளர்ச்சிப்பிராணி! அதனால்தானே அவன் மிருகங்களுக்கு மாறுபட்டு இருக்கிறான்? மிருகங்கள் குட்டிபோட்டுச் சந்ததியை வளர்த்துவரும்; அவற்றிற்கும் உடல் வளர்ச்சி உண்டு என்றாலும் அவைகளுக்கு அறிவுவளர்ச்சி இல்லை. ஆதலால், அவற்றின் ஜீவியத்தில் தாமாக ஒன்றையும் மாற்றிக்கொள்வதில்லையே. நம்முடைய நிலை ஒன்றும் அப்படிப்பட்டதல்லவே! நாள்தோறும் புதியன தோன்றலும், அதற்கேற்ப ஆசாபாசங்கள் வளர்ச்சியடைவதும் மனிதனுக்கு இயற்கையாயிற்றே! நல்ல நல்ல கண்டுபிடிப்புக்களின் மூலம் அவனுடைய இன்பப் பெருக்கிற்கான வசதிகள் அதிகப்படக் கடமைப்பட்டிருக்கின்றனவே!

நமது அறிவுவளர்ச்சி அத்துறைகளில் செல்வதற்கில்லாமல் ஏதோ ஒரு வகையில் தடைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றுதானே நாம் யூகிக்கவேண்டி இருக்கிறது? சாதாரணமான மோட்டார் வண்டிகூட, சென்ற சில வருடங்களில் எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறதே! 1917இல் இருந்த 'மோட்டர்'வண்டி 1930ஆம் வருடத்திய மோட்டார் இல்லை; 1947ஆம் வருடத்திய மோட்டார்வண்டி 1946ஆம் வருடத்திய மோட்டார்வண்டி மாதிரி இருக்கவில்லை. 1947ஆம் வருடத்தின் முடிவில் வரும்வண்டி 1947இன் ஆரம்பத்தில் வந்த வண்டிக்குக் கொஞ்சமாவது மாறுபட்டிருக்கிறதே— இதற்குக் காரணம் என்ன? இயந்திரசாலை நிபுணர்கள் அதில் கவலை எடுத்துக்கொண்டு வேலைசெய்து வருவதால் தானே இத்தகைய முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. முதலில் 5 வருடத்திற்கு ஒரு முறை (மாடல்) அமைப்பு மாறிக்கொண்டே வந்தது. இன்று ஒரு வருடத்திற்குள்ளாகவே இரண்டு முறை மாறக்கூடிய நிலைக்கு வந்துவிட்டதே! ஆரம்பத்தில் மெதுவாக இருந்த வளர்ச்சி முடிவில் வேகம் அடைந்துவிட்டதே! இப்படித்தானே இன்னும் அனேக சங்கதிகள் மாற்றமடைந்து வருகின்றன. இப்படி மாறுவதுதான் இயற்கை.

நமது அரசியல் கருத்தைத்தான் எடுத்துக்கொண்டு பார்ப்போமே! 1885இல் தோன்றிய இந்திய தேசிய காங்கிரஸின் அன்றையக் கருத்து என்னவாக இருந்தது? இன்று அதன் கருத்து என்னவாக இருக்கிறது? அன்றைய சூழ்நிலைக்கேற்ப அதன் குறிக்கோள் அன்று அமைந்தது. இன்றையச் சூழ்நிலைக்கேற்ப அதன் குறிக்கோள் இன்று மாற்றப்பட்டு இருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலை எப்படி அன்றிருந்தவர்களுக்குத் தெரிந்திருக்க முடியும், இன்றைய சூழ்நிலைக்கேற்ப அன்றைய குறிக்கோளை அமைக்க? அன்றுகூடிய காங்கிரஸ், முதலில் இராஜாவைக் காப்பாற்றும்படி கடவுளை வாழ்த்தியது; பிறகு இராஜாவை வாழ்த்தியது; இராஜ விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டது; அருள் கூர்ந்து மன்னர்பிரான் ஏதாவது உத்தியோகம் வழங்கவேண்டுமென்று பிரார்த்தித்துத் தீர்மானங்கள் செய்தது. அன்று காங்கிரஸ் செய்தது தவறென்றோ அல்லது அவர்களெல்லாம் அடிமை மனப்பான்மை கொண்டவர்கள் என்றோ நான் கூறவரவில்லை. அன்று எது அந்த ஸ்தாபனத்திற்குத் தேவை என்று தோன்றியதோ, அதை வழங்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது. பிறகு சிறு உத்தியோகங்களிலிருந்து பெரிய உத்தியோகங்களுக்கு வந்தது. பிறகு சம்பளத்தில் ஏன் வெள்ளையனுக்கும், இந்தியனுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும் என்று கேட்டது. அப்புறம் எல்லா உத்தியோகங்களும் தங்களுக்குத்தான் இருக்கவேண்டுமென்று கேட்டது. பிறகு எங்களை ஏன் வெளிநாட்டார் ஆளவேண்டும் என்றது. 'இனி நீங்கள் போய்விட்டு வாருங்கள்' என்று வெள்ளையனைப் பார்த்துக் கடைசியாகக் கூறிவிட்டது. இன்று அந்தப்படியே அவனும் போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

'கல்லுங் காவிரியும் உள்ளவரைக்கும் எங்களைத் தாங்களே ஆண்டுவரவேண்டும்' என்று கூறிய காங்கிரஸ் இன்று அதற்கு நேர்மாறாக, 'என்னைத்துக்கு நீ ஆளவேண்டும்', 'வெள்ளையனே வெளியேறு' என்று சாதாரணமாகக் கூறிவிடவில்லையா? அவ்விதமே, ஒவ்வொரு கருத்தும் முன்னேறிக்கொண்டுதான் வருகிறது. 'ப்ராகிரஸ்' (Progress) என்பதும் வளர்ச்சி என்பதும் பரிணாமமுன்னேற்றம் என்பதும் இதுதான். மனிதன் தன் பகுத்தறிவுகொண்டு சிந்திக்கச் சிந்திக்க அவனுடைய ஆசாபாசங்களும் வளர்ச்சியடைகின்றன. அதற்கேற்ப அவனுடைய முயற்சியும் வலுக்கிறது; வெற்றியும் பெறுகிறான்; அதனால் தன் வாழ்க்கைநிலை உயர அவன் இன்பமடைகிறான்.

ஒவ்வொரு வளர்ச்சிக்கும் சிந்தனை அறிவுதான் அடிப்படைக் காரணமாகும். உலகத்திலுள்ள மற்ற அறிவுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்துடன் நம்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் ரொம்பவும் பின்னணியில் இருக்கிறோம் என்பது தெளிவாகும். இயற்கைப் பகுதறிவுப் பாதைவழிச் சென்று நாம் எங்கிருக்க வேண்டுமோ அந்த இடத்தில் நாம் இன்று இருக்கவில்லை. பல நூற்றாண்டுகளாக நாம் மிருகங்களைப்போல் எவ்வித முன்னேற்றமுமின்றி வாழ்ந்துவருகிறோம். அதாவது, மற்ற நாட்டு மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கு நாம் ஒரு நூறு ஆண்டுகளாவது பின்னணியில் இருக்கிறோம். காரணம் நமக்கு—அறிவில்லாமற் போனதாலல்ல; அந்த அறிவுக்குச் சுதந்திரம் கொடுக்காததால்தான். காரணம்—நாம் முன்னேற்றத்திற்கு அருகதையற்றவர்கள் என்பதற்காக அல்ல; நமது முன்னேற்றத்தைக் காலத்தினிடமும், கடவுளிடமும், தலைவிதிப் பயனிடமும் ஒப்புவித்துவிட்டதால்தான். காரணம்—நமக்கு அறிவை வளர்க்க சந்தர்ப்பம் கிடைக்காமல் போனதால் அல்ல; கிடைத்த சந்தர்ப்பத்தை மூட நம்பிக்கைகளைப் வளர்க்கப் பயன்படுத்தியதால்தான்.

நமது பண்டிகைகளையும், நமது சமுதாய சம்பந்தமான திருமணம் போன்ற விழாக்களையும் நாம் வெறும்வேடிக்கையாகவும் பொழுதுபோக்கு வாய்ப்பாகவும் கருதிவந்தோமே ஒழிய, அவற்றை மக்களின் அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்பாகக் கொள்ளவில்லை. அப்படிக் கொள்வது தவறென்றுகூடக் கருதியிருந்தோம். கடவுள் சம்பந்தமாக, மத சம்பந்தமாக, சாஸ்திர சம்பந்தமாக, பழக்கவழக்க சம்பந்தமாக—எந்த ஒரு சிறு மாறுதலுக்கும் இடம் கொடுக்காமல் நாம் நம் முன்னோர் நடந்துகொண்ட மாதிரியை அப்படியே பின்பற்றி வந்தோம். 'அவற்றை அறிவினால் ஆராய்ந்து பார்க்கக்கூடாது; அவற்றில் எத்தகைய மாறுதலும் செய்ய நினைக்கக் கூடாது; நினைத்தால் நரகம் சம்பவிக்கும்; புல்லாகவோ, புழுவாகவோ மறுபிறவியில் பிறக்கநேரிடும்' என்றெல்லாம் கூறப்பட்டுவந்தது; இன்றும் கூறப்பட்டுவருகிறது. பேய், பிசாசுகளுக்கும், மந்திரவாதிகளுக்கும் எப்படி இன்று சில மடையர்கள் பயந்துகொண்டு வாழ்க்கை நடத்துகிறார்களோ, அதேபோல் மத, சாஸ்திர பூச்சாண்டிக்கும், நரக பூச்சாண்டிக்கும் பயந்து மக்கள் தம் புத்தியை உபயோகிக்கத் தவறினார்கள். தமது அறிவிலும் ஆற்றலிலும் நம்பிக்கை இழந்து, 'ஐயோ, பாவமே நான் என்ன பாவம் செய்தோ இப்படித் துன்பப்படுகிறேன்; நான் சாணி மூத்திரம் வேணுமானாலும் குடித்துவிடுகிறேன்; என்னைமட்டும் நரகத்திற்கு அனுப்பிவிடாதே' என்று ஒவ்வொருவரும் கடவுளிடம் பிரார்த்தனை செய்துவந்தனர். ஒருவரிருவர் நரகத்தில் நம்பிக்கையற்று அறிவுகொண்டு முன்னேற்றமடைய முயற்சித்தனர் என்றாலும், இந்த நாசமாப்போன நாசகாரப் பயங்கொள்ளிகள் அவர்களையும் சும்மாவிடவில்லை. அவர்களைக் கடவுளுக்கு விரோதிகள் என்று பழித்துக் கூறி அவர்களுக்குப் பலவான கொடுமைகள் இழைத்துவந்தனர். இதனால்தான் நம் மக்கள் முன்னேற்றமடைய வாய்ப்பில்லாமற் போய்விட்டது.

எது எதற்குக் கடவுள், எதற்கு மதம், எதற்கு சாஸ்திரம், எதற்கு பழக்கவழக்கங்கள் ஆகியவைகளைப் பயன்படுத்துவது என்கின்ற தராதரம் இல்லாமல் அடியோடுயாவற்றிற்கும் அடிமையாகிவிட்டோம். அறிவை உபயோகிக்கும் வாய்ப்பு பெற்றிருக்கும் பிற நாட்டு

மக்கள், தம் அறிவால் கண்டுபிடித்திருக்கும் அதிசயக் கருவிகளை எல்லாம் நாமும் செய்ய வேண்டுமே என்ற கவலையில்லாமல், அவற்றால் நமக்கேற்படும் ஆசை, வசதி, காரணமாக அவற்றை ஆசையோடு அனுபவிக்கமாத்திரம் தொடங்கிவிட்டோம். நமக்குப் பிரயோசனம் இருப்பதைச் சட்டென்று ஒப்புக்கொண்டுவிட்டோம். அப்போதுமாத்திரம் நமக்கு இயற்கையாய் உள்ள பயத்தை வீசியெறிந்துவிட்டோம். இது அனுபவிக்கத் தக்கதுதானா? முன்னோர்கள் இதை அனுபவித்தார்களா? கடவுள் நம்பிக்கை இதை அனுமதிக்கிறதா? என்றெல்லாம் நாம் சிந்திக்கவில்லை. நாம் அனுபவிக்கிறோம். ஆனால் அனுபவிக்கப் படும் பொருள் எப்படிச் செய்யப்பட்டது? யாரால் செய்யப்பட்டது? நம்மால் ஏன் அப்படிப் பட்ட பொருளைச் செய்ய முடியவில்லை என்றெல்லாம் நாம் சிந்திப்பதில்லை. சாதாரண மாக இந்த விளக்கை எடுத்துக்கொண்டால்கூட இதுவும் படிப்படியாக எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துவந்திருக்கிறது. நெருப்பு, அகல்விளக்கு, கிரோசின்விளக்கு, பவர்லைட், கியாஸ்லைட், எலெக்ட்ரிக் லைட் என்று முன்னேறிவிட்டது. இன்று எவ்வளவு தான் பக்தனாயிருந்தாலும், அவன்கூட மின்சார விளக்கில்தான் தன் பிரார்த்தனையைச் செலுத்த ஆசைப்படுகிறான். பல மதங்களும் கணக்கற்ற தெய்வங்களும் பெரிய ரிஷிகளும் முனீஸ்வரர்களும் பலதீரர்களும் சூரர்களும் நம் நாட்டில் தோன்றியிருந்தும், அவர்களால் எல்லாம் இப்படிப்பட்ட காரியத்திற்கு ஒரு பயனும் ஏற்படக் காணோம்? இவர்களில் ஒருவருக்காவது இப்படிப்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய சக்தியை, நமக்கு அளிக்கத் திறனில்லாமற் போய்விட்டது. உலகம் எவ்வளவோ முன்னேறியும் நாம்மட்டும் இன்னும் காட்டுமிராண்டிகளாகத்தான் வாழ்ந்து வருகிறோம்.

நம்மிடையே இன்னும் நிரந்தரமான வருணாசிரம தர்மம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. 2000 வருடங்களுக்கு முன் எந்த வகுப்பார் சூத்திரராயிருந்தாரோ அந்த வகுப்பார் இன்னும் சூத்திரர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். 2000 வருடங்களுக்கு முன் யார் பிராமணர்களாய் இருந்தார்களோ அவர்கள்தாம் இன்றும் பிராமணர்களாய் இருந்து வருகிறார்கள். நம் வர்ணம் (நிறம்) பழக்க, வழக்கம், ஆசாபாசம், வருணதர்ம நடத்தை ஆகியவைகள் எல்லாம் மாறிய பின்பும் இது மட்டும் மாறுதலடையாமல் பிறவி காரணமான சாதித் தன்மை மட்டும் மாறாமல் இருப்பது சரியா? இதுவரை இருந்தது போகட்டும். இனிமேலும் இந்த இழிநிலை ஒழிய வேண்டாமா? மானத்தைப்பற்றிக் கவலைப்பட இடம் கொடுக்காத மதம் நமக்கேன்? இந்தமாதிரி நாம் கூட்டமாகக் கூடும் போது நமது கவனமும் கவலையும் நமது மானத்தைப்பற்றித்தான் இருக்கவேண்டும். நமது இழிவு நீங்குவது எப்படி? நாம் மனிதத்தன்மை பெறுவது எப்படி? என்று சிந்திப் பதில்தான் நமது பூரா கவலையும் இருக்கவேண்டும்.

நமது இழிவுக்குக் காரணம் நாம் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டிருக்கும் மதமும், அதற்கு ஆதாரமாயிருந்துவரும் சாஸ்திரங்களும், புராணங்களும், அவற்றிற்கேற்ப கற்பிக் கப்பட்ட கடவுள்களும் என்பதை நாம் முதலில் உணரவேண்டும். அவற்றை நமது தன் மைக்கேற்ப, மானத்திற்கேற்ப, முற்போக்குக்கேற்ப மாற்றியமைக்க முற்படல் வேண்டும். மதம், புராணங்கள், அவற்றிற்கேற்ற கடவுள்கள் ஆகியவற்றின் மூலமாய் வைத்துச் செய்யப் பட்ட கலையையும், இலக்கியத்தையும் அவ்வப்போது அறிவுகொண்டு நம் மனநிலைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக்கொள்ளவெண்டும். நரக தண்டனைக்குப் பயந்து நாம் மனிதாபிமானத்தை விட்டுவிட முடியாது. 'கடவுளா, பாடுபடும் பாட்டாளி மகனை ஏழை யாகவும், பாடுபடாத சோம்பேறியைச் சுகவாழ்வுக்காரனாகவும் பிறப்பித்திருக்கிறது, வைத்திருக்கிறது?' என்று கேட்கவேண்டும். மதமா, அது ஏன் பாடுபடுகிற பாட்டாளி மக்களை இழிசாதி மக்களாகவும், பாடுபடாத சோம்பேறி மக்களை உயர்சாதி மக்களாகவும் வைத்திருக்கவேண்டும்?' என்று கேட்கவேண்டும். கண்மூடிக் காலம், கண்மூடித் தலை வணங்கி நிற்கும் காலம் கடந்துவிட்டது. அதன் 'லிமிடேஷன் பார்' (Limitation Bar) ஆகிவிட்டது. கடவுளுக்கும் மதத்திற்கும், மக்கள் பயந்திருந்த காலம் மலையேறிவிட்டது.

மற்ற நாடுகளில் கடவுள் தன்மையிலேயே மக்கள் சந்தேகம் கொள்ள முற்பட்டுவிட்டனர். கடவுள் தன்மையை வெறுக்கக்கூடத் துணிந்துவிட்டனர். கடவுளைச் சந்தேகிப்பவர்களும், கடவுளை வெறுப்பவர்களும் தம் அறிவைச் சுதந்திரமாக விட்டு முயற்சி செய்து பார்க்கிறார்கள். அதனால் அவர்கள் கண்கள் இருண்டுபோய் விடுவதில்லை; அல்லது காதும் அடைத்துப்போவது கிடையாது. ஆகவே நீங்களும் கடவுளையும், மதத்தையும் எல்லாவற்றிற்கும் போட்டுக் குழப்பாமல் ஒருபுறம் தனியாய் ஒதுக்கிவிட்டு, பயமின்றி உங்கள் அறிவு கொண்டு யாவற்றையும் சிந்தித்துப் பாருங்கள். நான் சொல்லுவதை அப்படியே நம்பிவிட வேண்டும் என்று நான் கூறவில்லை; அப்படி நம்பப் பாத்தியப்பட்டவர்களும் அல்லர் நீங்கள். உங்கள் பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து பாருங்கள்!

[திருவத்திபுரத்தில் 19-1-1948-ல், சொற்பொழிவு—'விடுதலை' 29-2-1948]

4. தமிழர் திருநாள்

திராவிடத்தின் ஆதி மக்களான தமிழர்களுக்கு தமிழர்களுக்குரிய பண்டிகை என்பதாக ஒன்றைக் காண்பது மிக அரிதாக உள்ளது.

இதன் காரணம் என்னவென்றால், கலாசாரத்துறையில் தமிழனை ஆதிக்கம் கொண்டவர்கள் தங்களது கலாசாரங்களைத் தமிழனிடம் புகுத்துகிற வகையில் முதல் பணியாக—தமிழ்நாட்டின் தமிழனின் கலாசாரங்களை, பழக்க வழக்கங்களை அடியோடு அழித்து மறைத்து விட்டார்கள். இதனால் தமிழனுக்குரிய கலாசாரம் எது என்று அறிவது கூட மிகமிகக் கடினமான காரியமாக ஆகிவிட்டது தமிழனின் கலாசார பண்புகள் அழித்து ஒழித்து மறைக்கப்பட்டுவிட்டன என்பது மாத்திரமல்லாமல், தமிழனுக்கு வரலாறு, சரித்திரம் என்பதுகூட இல்லாமல் அழிக்கப்பட்டுவிட்டது.

எனவே, இன்று தமிழன் கலாசாரம், பண்பு, வரலாறு அற்ற ஒரு அடிமை ஜீவனாக விளங்குகிறான். இப்படி விளங்குவதுமாத்திரமல்லாமல் இன்று தமிழன் கொண்டாடும்—நடத்தும் கலாசாரப் பண்பு, வரலாறு என்பவைகள் எல்லாம் தமிழனுக்கு இழிவும் அடிமைத் தன்மையும் தந்து அவற்றை நிலைநிறுத்துபவைகளாகவே இருந்து வருகின்றன.

தமிழனுக்குள்ள கலைகள் என்பனவெல்லாம் தமிழனை அடிமையாக்குவனவாகவே இருந்து வருகின்றன. தமிழனுக்கு அடியோடு சமயம் என்பதே இல்லாமல் போய்விட்டதே எனலாம். மக்களுக்கு, விழா முக்கியமான தேவையாகும். விழாவை முன்னிட்டு மக்களுக்கு மகிழ்ச்சி, ஓய்வு, மக்களுடன் அளவளாவுதல், கவலையற்ற கொண்டாட்டம் கொள்ளுதல், அன்பு, ஆசைப்பரிமாற்றம், சுயேச்சையான களியாட்டம் முதலியவைகளை அனுபவிக்க முடிகின்றது. இவைகளை ஏற்படுத்துவதால்தான் இவற்றை விழா என்று கூறுகிறோம்.

அரசாங்க விடுமுறைக்கு உரிய பண்டிகைகள் போகி, பொங்கல், மாட்டுப்பொங்கல், மகாசிவராத்திரி, தமிழ் வருடப்பிறப்பு, ஆவணிஅவிட்டம், கோகுலாஷ்டமி, சரஸ்வதிபூசை, தீபாவளி. விடுமுறை இல்லாத பண்டிகைகள்—பிள்ளையார்சதுர்த்தி, கார்த்திகைதீபம், பங்குனிஉத்திரம், தைப்பூசம் இந்தப்படியாக இன்னும் பல உள.

இவைகளில் தமிழனுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழன் பண்பிற்கு, தமிழன் வரலாற்று நடப்புக்கு, தமிழனின் அறிவு ஆராய்ச்சிப் பொருத்தத்திற்கு—ஏற்றவாறு விழா அல்லது பண்டிகை என்பதாக எதையாவது சொல்ல முடிகிறதா?

தமிழனின் இழிவுக்கு மறுக்கமுடியாத—முக்காலத்திற்கும் ஏற்றநிலையில் ஒரு எடுத்துக்காட்டைக் கூறவேண்டுமானால் தமிழனுக்குக் காலத்தைக் காட்டக்கூடிய சொல், சாதனம், அமைப்பு என்பது இல்லையென்றே கூறலாம்.

கிறித்தவர்கள் காலத்தைக்காட்ட கிறித்துவ ஆண்டு (கி. பி.) இருக்கிறது. முஸ்லிம்கள் காலத்தைக்காட்ட இஸ்லாம் ஆண்டு (ஹிஜ்ரி) இருக்கிறது. இதுபோல, தமிழனுக்கு என்ன இருக்கிறது? இதற்குத் தமிழனின் ஆதாரம் என்ன இருக்கிறது?

மற்றும், இப்படியேதான் தமிழனுக்குக் கடவுள், சமயம், சமயநூல், வரலாற்றுச் சுவடி, இலக்கியம் முதலியவை என்று சொல்ல எதுவும் காண மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச்சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக் கூடியது அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம்.

இந்தப் பண்டிகையும் (Harvest Festival) அறுவடைத் திருவிழா என்ற கருத்தில் தானேயொழிய, சங்கராந்திப் பண்டிகை, போகிப் பண்டிகை, இந்திரவிழா என்று சொல்லப் படும் கருத்தில் அல்ல.

இந்தப் பொங்கல் பண்டிகையை தமிழர் எல்லோரும் கொண்டாடவேண்டும்.

[கட்டுரை—'விடுதலை' 30-1-1959]

பொங்கல் பண்டிகை என்பது நாள், நட்சத்திரம், மதக்—கதை ஆதாரம் முதலியவை எதுவுமே இல்லாமல் தை மாதம் ஒன்றாம் தேதி என்பதாகத் தை மாதத்தையும் முதல் தேதியையுமே ஆதாரமாகக் கொண்டதாகும்.

இதற்கு எந்தவிதமான கதையும் கிடையாது. இந்தப் பண்டிகை உலகில் எந்தப் பாகத்திற்கும் எந்த மக்களுக்கும் உரிமையுள்ள பண்டிகையாகும். என்றாலும், மற்ற இடங்களில் மற்ற மக்களால் பல மாதங்களில் பல தேதிகளில் பல பேர்களால் கொண்டாடப் படுவதாகும்.

இக் கொண்டாட்டத்தின் தத்துவம் என்னவென்றால், விவசாயத்தையும் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டு அறுவடைப் பண்டிகையென்று சொல்லப் படுவதாகும். ஆங்கிலத்தில் 'ஹார்வெஸ்ட் பெஸ்டிவல்' (Harvest Festival) என்று சொல்லப்படுவதின் கருத்தும் இதுதான்.

என்றாலும், பார்ப்பனர் இதை மத சம்பந்தம் ஆக்குவதற்காக விவசாயம், வெள்ளாண்மை, அறுவடை ஆகிய கருத்தையே அடிப்படையாகக் கொண்டு இதற்கு 'இந்திரன் பண்டிகை' என்றும் அதற்குக் காரணம் வெள்ளாண்மைக்கு முக்கிய ஆதாரமான நீரை (மழையை)ப் பொழிகிறவன் இந்திரன் ஆதலால் இந்திரனைக் குறிப்பாய் வைத்து, விவசாயத்தில் விளைந்து வெள்ளாண்மையாகியதைப் பொங்கி (சமைத்து) மழைக்கடவுளாகிய இந்திரனுக்கு வைத்துப் படைத்து பூசிப்பது என்றும் கதை கட்டி விட்டார்கள்.

இந்தக் கதையை இவ்வளவோடு விட்டுவிடவில்லை.

இம் மாதிரியான இந்திர விழாபற்றி கிருஷ்ணன் பொறாமைப்பட்டுத் தனக்கும் அந்த விழாவை (பூசையை) நடத்த வேண்டுமென்று மக்களுக்குக் கட்டளை இட்டதாகவும், மக்கள் அந்தப்படிச் செய்ததாகவும், இந்த இந்திரவிழா கிருஷ்ணமூர்த்தி விழாவாக மாறியது கண்ட இந்திரன் கோபித்து ஆத்திரப்பட்டு, இந்த கிருஷ்ணமூர்த்தி விழா ஈடேறாமல் நடைபெறாமல் போகும்பொருட்டு பெரிய மழையை உண்டாக்கி விழாக் கொண்டாடுவோர் வெள்ளாண்மைக்கு ஆதரவாக இருந்த கால்நடைகள், ஆடு மாடுகள் அழியும் வண்ணமாகப் பெரும் மழையாகப் பெய்யச் செய்துவிட்டான் என்றும், இதற்கு

ஆளான மக்கள் கிருஷ்ணமூர்த்தியிடம் சென்று முறையிட்டதாகவும், கிருஷ்ணமூர்த்தி மக்களையும் ஆடுமாடுகளையும் காப்பாற்ற ஒரு பெரிய மலை (கோவர்த்தனகிரி)யைத் தூக்கி அதைத் தனது சுண்டுவிரலால் தாங்கிப்பிடித்து காப்பாற்றினதாகவும், இதனால் இந்திரன் வெட்கமடைந்து கிருஷ்ணனிடம் தஞ்சமடைந்து தனது மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு இரங்கி கிருஷ்ணன், 'எனக்கு ஒருநாள் பண்டிகை; உனக்கு ஒருநாள் பண்டிகையாக, மக்கள் முதல்நாள் எனக்காக பொங்கல் பண்டிகையாகவும் பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடும்படியும் ராஜி செய்து கொண்டார்கள் என்றும் சிரிப்பிற்கிடமான—ஆபாச முட்டாள்தனமான கதைகளைக் கட்டிப் பொருத்திவிட்டார்கள்.

இதிலிருந்து தேவர்களுக்கு அரசனான இந்திரனின் யோக்கியதை எப்படிப்பட்டது? மக்களுக்குக் கடவுளான கிருஷ்ணனின் யோக்கியதை எப்படிப்பட்டது என்பதை மக்கள் சிந்தித்து உணர வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

மற்றும், இதில் பொங்கலுக்கு முதல் நாளைக்கு ஒரு கதையையும், மறு நாளைக்கு ஒரு கதையையும் போகிப் பண்டிகையென்றும், சங்கராந்திப் பண்டிகையென்றும் பெயர் வைத்து மூன்றுநாள் பண்டிகையாக்கி, அதில் ஏராளமான முட்டாள்தனத்தையும் மூடநம்பிக்கையையும் புகுத்திவிட்டார்கள்.

நமது பார்ப்பனர்களுக்கு எந்தக் காரியம் எப்படியிருந்தாலும், யார் எக்கேடு கெட்டாலும் தாங்கள் மனித சமுதாயத்தில் உயர்ந்த பிறவி மக்களாகவும், உடலுழைப்பு இல்லாமல் வாழும் சுக ஜீவிகளாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக மனித சமுதாயம் முழுவதுமே அறிவைப் பயன்படுத்தாத, ஆராய்ச்சியைப் பற்றியே சிந்திக்காத முட்டாள்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் இருக்கச் செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய பிறவிப் புத்தியானதால் அதற்கேற்ப உலக நடப்பைத் திருப்பிப் பாதுகாத்து வைக்கிறார்கள்.

பார்ப்பனர்களின் இம் மாதிரியான அட்டூழிய அக்கிரம காரியங்களில் இருந்து விடுபட்டு மனிதர்களாக நாம் வாழவேண்டுமானால் பொங்கல் பண்டிகை என்கின்றதை முதல்நாள் அன்றுமட்டும் நல்ல உயர்வான உணவு அருந்துவதையும், நல்லுடை உடுத்துவதையும், மனைவி மக்கள் முதலியவர்களுடன் இன்பமாகக் காலம் கழிப்பதையும் கொண்டு, நம்மால் கூடிய அளவு மற்றவர்களுக்கும் உதவி அவர்களுடன் குலாவுவதான காரியங்களையும் செய்வதன் மூலம் விழாக் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

மற்றபடியாக, மதச் சார்பாக உண்டாக்கப்பட்டிருக்கும் பண்டிகைகள் அனைத்தும் பெரிதும் நம் இழிவிற்கும், பார்ப்பனர் உயர்விற்கும், நம் மடமைக்கும், காட்டுமிராண்டித் தன்மைக்கும் பயன்படத் தக்கதாகவே இருந்துவருவதால்—பயனளித்து வருவதால் அறிவுள்ள, மானமுள்ள மக்கள் மத சம்பந்தமான எந்தப் பண்டிகையையும் கொண்டாடாமலிருந்து, தங்களை மானமும் அறிவுமுள்ள மக்களாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மானமும் அறிவுமே மனிதற்கழகு.

[அறிக்கை—'விடுதலை' 13-1-1970]

5. பெயர் சூட்டுவிழா

தாய்மார்களே! தோழர்களே!

சாதாரணமாக, மனிதருக்குப் பெயர் என்பது ஒவ்வொரு நபருக்கும், அந்தந்த நபரைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாகும். மனித சமுதாயத்தில் இம் மாதிரியான ஒரு குறியீட்டுச்சொல் அவரவர்களுக்கு அடையாளஞ் சொல்லக்கூடிய சொல் என்பது சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது.

பெயர் சூட்டுவதில்..................சாதாரணமாக, மனிதர்களுக்கு ஒரு குறியீடு என்கிற தன்மையில் சூட்டப்படுகிற பெயர் என்கிற போதிலும், பெயர் சூட்டுவது என்பதில் ஒரு கொள்கை, தத்துவம் உள்ளே இருந்து வந்திருக்கிறது.

முதலாவது, சாதாரணமாக மக்களுக்குள் இன்றைய தினம் இருந்துவரும் பெயர்களைப் பார்த்தால் பெரும்பாலும் மதத்தின் அடிப்படையிலேயே இருந்துவருகின்றன. சாதாரணமாக, உலகத்தில் மதத்திற்குச் செல்வாக்கு ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு மதத்தாருக்கும் அந்தந்த மதத்தின் பெயரால் அந்தந்த மதத் தத்துவம் மதக்குறிப்பின்படியாகப் பெயர்கள் இருந்து வருகின்றன.

கிறித்தவர்களுக்கு கிறித்துவ மத சம்பந்தமான பெயர்களும், முஸ்லிம்களுக்கு முஸ்லிம் மார்க்கப்படியான பெயர்களும், பவுத்தர்களுக்கு பவுத்த தன்மைப்படியான பெயர்களும், இந்துக்கள் என்பவர்களுக்கு இந்துமதம் என்பவைகளின் சாஸ்திர சம்பிரதாயப்படியும் பெயர்கள் இருந்து வருகின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், மத ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்ட செல்வாக்கும் மதத்தின் தன்மைப்படி பெயர் வைத்துக்கொள்வது என்பது புண்ணியம், பெருமைக்கு உகந்தது, உயர்ந்தது என்கிறதான கருத்தும் மக்கள் உள்ளத்திலே ஏற்பட்டதுதான் ஆகும்.

நம்மைப் பொறுத்தவரையில்—தமிழர்களைப் பொறுத்தவரையில் நம்முடைய பெயர்கள் என்பவைகள் எப்படி இருந்து வந்தன என்றால், மதச்சார்பு அற்றவையாக, மதத்திற்கு முற்பட்டு வெறும் பெயரீட்டுக் குறிச்சொல் என்கிற முறையிலேதான் இருந்து வந்திருக்கின்றன. மதச் சம்பிரதாயத்தின் அடிப்படையிலே தமிழர்களுக்குப் பெயர் இருந்ததில்லை. தமிழ்ப் பெயர்களைப் பார்த்தால் இது நன்றாகத் தெரியவரும்; இன்னும் சொல்லப்போனால் தமிழர்களின் நூல்களில்—2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட நூல்களில் மதம் அதிகம் இருக்காது. அதுபோலவே தமிழர்களின் சரித்திரப் பெயர்களை எடுத்துப்பார்த்தாலும் அதிலே மத, கடவுள் சார்புப் பெயர்கள் அதிகம் இல்லை. சேர, சோழ, பாண்டியர்கள் என்பவர்களிலும் முற்பட்ட மூவேந்தர்களிலும் மதப் பெயர்கள் அதிகம் இல்லை.

நாளாக ஆக மத ஆதிக்கம் வந்து குவிந்துவிட்டது. மத, புராண, கடவுள் சம்பந்தமான காரியங்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் இந்த மத ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்கிற தன்மையில் இந்தப்படியான மதப் பெயர்களைப் புகுத்திவிட்டார்கள்.

அதுவும் குறைந்தது இந்த 50 ஆண்டு காலத்துக்குள்ளாக ரொம்பவும் புகுந்துவிட்டது. அதுவும் இந்த மத சம்பந்தமான பெயர்கள் அதிகமாக ஏராளமாகப் புகுந்ததெல்லாம் பெண்களிடத்தில்தான் ஆகும். எந்தப் பெண்களுக்கும் கடவுள் பெயர், மத சம்பந்தமான பெயர் என்று வந்து புகுந்துவிட்டது.

இந்தப்படியான, மனித நபரைக் குறிக்கும் குறியீட்டுச் சொல் என்பது மதப் பெயர்களைக் கொண்டதாக ஏன் ஆகிவிட்டது என்றால், மதத்திற்கு, மத ஆதிக்கம் வளர்வதற்கு இதை இந்தப்படியான பெயர் சூட்டுவது என்பதை ஒரு பிரச்சார சாதனமாக வைத்துக்கொண்டார்கள்.

நீங்கள் சாதாரணமாகப் பார்த்திருக்கலாம். இந்தப் பெயர் சூட்டுவது என்பதிலே கூட இந்து மதத்தின் வருணாசிரமமுறை இருந்து வந்திருக்கிறது. அழகான பெயர்கள் எல்லாம் மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் வைத்துக்கொள்ளுவதும்—அதாவது மேல் சாதித் தன்மையைக் குறிக்கும் கடவுள், மத சம்பந்தமான பெயர்களை மேல்சாதிக்காரர்கள் வைத்துக்கொள்வது என்றும், அந்த மேல்சாதித் தன்மையைக் குறிக்கும் பெயர்களைக்

கீழ்ச்சாதி மக்கள் என்போர்—அதாவது சூத்திரர், பஞ்சமர் எனப்படுவோர்கள் வைத்துக் கொள்ளக்கூடாது, வைத்துக்கொள்வது பாவம் எனவும் கருதப்பட்டது. சாதாரணமாக, இந்த ராமன், கிருஷ்ணன், லட்சுமி, சரஸ்வதி, பார்வதி என்கிற பெயர்கள் மேல் சாதிக் காரர்கள் பெயராகவும் ; கருப்பன், மூக்கன், வீரன், காட்டேரி, பாவாயி, கருப்பாயி என்பன போன்ற பெயர்கள் கீழ்ச்சாதி மக்கள் வைத்துக்கொள்ள வேண்டிய பெயர்கள் என்பவை களாகவும் இருந்து வந்திருக்கின்றன.

வரவர மதத்திற்கும் மதத்தன்மைக்கும், எதிர்ப்பும்—தங்களுடைய இழிவைப் பற்றியதுமான உணர்ச்சியும் மக்களுக்கு ஏற்பட ஏற்பட, இந்தப்படியான எதிர்ப்பை ஒழிப்பது என்கிற முறையில் எல்லோரும் எல்லாப் பெயர்களையும் வைத்துக்கொள்ளலாம் என்கின்றதான நிலைமை வந்தது.

சாதாரணமாக, இந்த இழிசாதி மக்கள் என்பவர்களின் பெயர்களுக்குக் கடைசியில் சாமி, அப்பன் என்ற சொற்கள் வரக்கூடாது. ஏனென்றால் மேல்சாதிக்காரர்கள் என்பவர் கள், பெயர் சொல்லிக் கூப்பிடும் போது இழிசாதி மகனை, 'சாமி!' என்றும் 'அப்பன்!' என்றும் கூப்பிடவேண்டியிருக்கிறது என்பதால்—அது மேல்சாதிக்காரர்களின் அந்தஸ்துக்கு மட்டம் என்பதால் அந்தப்படியான பெயர்களை இழிசாதிமக்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படியே வைத்துக் கொண்டாலும் அந்த 'சாமி' 'அப்பன்' என்ற சொல்லை விட்டுவிட்டு, மேல்சாதிக்காரர்கள் 'ராமா', 'கந்தா' என்றுதான் அழைப்பார்கள். இப்படியாகப் பெயர்கள் என்பவைகள் கடவுளின் பேராலும், மதசாஸ்திர சம்பிரதாயத்தின் பேராலும் அவற்றை வகுத்த வருணாசிரம மேல்-கீழ்சாதி முறைப்பிரகாரமே வழங்கி வந்து, மேற்கண்டவைகளுக்கு இவைகள் ஒரு பாதுகாப்பாகவும், ஆதாரமாகவும், அஸ்திவார மாகவும், நின்று நிலவிவருகின்றன.

இன்னும் பல பெயர்களைப் பார்த்தால் மிக ஆபாசமாக இருக்கும். வைக்கப்படுகிற பெயர் கடவுள் பெயராக இருக்கிறதா என்றுதான் கவனிப்பார்களே தவிர, அப்படி வைக்கப் பட்டிருக்கிற பெயர்களுக்கு என்ன அர்த்தம், அது மிக ஆபாசமான அர்த்தமுடையதாக இருக்கிறதே என்று கவலைப்படமாட்டார்கள்.

சாதாரணமாக, ஆதிகேசவலு, குஞ்சிதபாதம், குஜலாம்பாள், துரோபதை என்கிற தாகவெல்லாம் பெயர் வைக்கிறார்களே! அந்தப் பெயர்களின் பொருளை விரித்துப்பார்த் தால் அதில் எவ்வளவு ஆபாசமும் அறிவற்றதுமான காரியங்கள் இருக்கின்றன! ஆனால், மக்கள் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் இம்மாதிரியான பெயர்களையே ஏற்றுக் கொண்டும் சூட்டிக்கொண்டும் ஏன் இருக்கிறார்கள் என்றால், நான் முன்னே சொன்னது போல், இந்தப்படியான பெயர்கள் என்பவைகள் கடவுள், மத சாஸ்திரங்களின் பேரால் ஏற்படுத்தப்பட்டுவிட்டன என்பதால்தான்.

இப்படியாக மத, சாஸ்திர, கடவுள் அடிப்படையிலேயே வளர்ந்து வந்த பெயர் முறைகள் இன்று கொஞ்சம் மறையத் தொடங்கியிருக்கின்றன. மக்கள் சமுதாயத்துக்கு மான உணர்ச்சியும், இந்தக் கடவுள், மத, சாஸ்திரங்கள் என்பவைகளின் பேரால் தாங்கள் அழுத்தப்பட்டும், அடிமைப் படுத்தப்பட்டும், இழிசாதி மக்களாக்கப்பட்டும் இருக்கிறதை— கடவுள், மத, சாஸ்திரத் துறையிலே இழிசாதிமக்கள்; பொருளாதாரத்துறையிலே ஏழை மக்கள்; அறிவுத்துறையிலே கீழ்மக்கள் என்பதாக இருக்கிற நிலைமையை உணர்ந்து— மக்கள் தங்கள் இழிவையும் ஏழ்மையையும் அடிமையையும் ஒழிக்கவேண்டும்; இவைகளி லிருந்து விடுதலைபெறவேண்டும் என்கிற மானஉணர்ச்சி பகுத்தறிவு உணர்ச்சி, ஏற்பட்டு வருவதால் இந்தப்படியான தங்கள் இழிவுக்கும், ஏழ்மைக்கும், கீழ்நிலைக்கும் காரணமான எந்தெந்த அமைப்பு முறைகள் இருக்கின்றனவோ அந்த அமைப்பு முறைகளை நம் முடைய விடுதலையைக் கோரி மாற்ற வேண்டும்; ஒழிக்கவேண்டும் என்கிற தன்மையில்

தான் திருமணத்துறை, சாதித்துறை, கிரஹப்பிரவேசம் என்கிற புதுமனை புகுவிழா சங்கதி, திருவிழாத்துறை. சங்கீத—இலக்கியத்துறை போன்ற எல்லாத் துறைகளிலும் மாற்றம் ஏற்படுத்தும் முயற்சி, கிளர்ச்சி நடத்துவதுபோல இந்தப் பெயர்த் துறையிலும் இது மாதிரியான மாறுதல் உணர்ச்சியோடு காரியம் நடத்தப்படுகிறது.

இதற்குமுன் மக்களிடத்தில் இவ்வளவு உணர்ச்சி இருந்ததில்லை. வர, வர இப்போது மக்களிடத்தில் மானஉணர்ச்சியும், பகுத்தறிவும் பெரும் அளவுக்கு வளர்ந்து வருகிறது; பலருக்கு ஏற்பட்டு வருகிறது. அந்தப்படியான உணர்ச்சி பெற்றவர்கள் செய்கிற காரியத்தில் எல்லாம் இம்மாதிரியான மாறுதல், அறிவுக்குப் பொருந்திய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இன்றைக்கு ஏராளமாக இதுமாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்த மாதிரித்தன்மையில்தான் இந்தப் பெயர் சூட்டுவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இதில் சூட்டப்படுகிற பெயர்கள் சாதாரணமாக மடமையான மதத்துக்கோ அறிவற்ற தன்மைக்கோ ஏற்றதாக இல்லாமல் பகுத்தறிவுத் தன்மைக்கேற்றதாகவே சூட்டப்படும்.

சாதாரணமாக, குழந்தைகள் பிறக்கும்போது இருந்தே இந்த மாதிரியான புதுமைப் பெயர் வைத்துவிட்டால் நல்லது. அதுவே பழக்கத்தில் வந்துவிடும். இப்போது என் பெயரையே எடுத்துக்கொள்ளுங்களேன். இது இந்துமதம் என்கிறதன் சார்புப் பெயர்தான். இவைகளை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிற எனக்கே இந்தப்பெயர் இருக்கிறது. இந்தப் பெயர் கூடாததுதான். ஆனால், இந்தப் பெயராலே 73 வருடம் இதையே என்னைக் குறிக்கும் குறியீடாகக் கொண்டு வந்தாகிவிட்டது. அதுமட்டுமல்லாமல், இந்தப் பெயர் என்பது மிகவும் விளம்பரமாகிவிட்டது; 'யார் ராமசாமியா! அட! அதுதான் இந்த ஆள்!' என்கிற மாதிரி ஒரு முக்கியமானதாகி விட்டது! இனி என் பெயரை மாற்றுவது என்றால்—இது ஏற்படுத்துகிற புதுப்பெயர் என்பது இந்தப் பெயர் அளவில் என்னைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாக இருக்க முடியாது. புதுப்பெயரால், பெயர் வைக்கிற தத்துவத்தின்படி இன்னாருக்கு இந்தப் பெயர் என்று புரிந்துகொள்ளுகின்ற மாதிரியில் இருக்கமுடியாது. ஆகவேதான் சொல்லுகிறேன், குழந்தையாய் இருக்கும்போதே புதுமைப்பெயர், பகுத்தறிவு சான்ற பெயர் சூட்ட வேண்டும் என்பதாக. இனி வருங்கால சந்ததிகளை உலகத்துக்கு அறிமுகப்படுத்துவதே புதுமையான, பகுத்தறிவான பெயராக—ஆரியமத, சாஸ்திர, கடவுள் தன்மை கொண்ட பெயர் அற்றதான மாதிரியில் வைக்கவேண்டும்.

[உளுந்தூர் பேட்டையில், 15-3-1953-ல் சொற்பொழிவு—' விடுதலை ' 24-3-1953]

6. ஒருவர் பேரால் விழா

தோழர்களே!

ஒரு பெரியாரைக் கொண்டாடுவது என்பது எதற்காக? பக்தி செலுத்தவா? வரம் பெற வேண்டுமென்ற ஆசைக்காகவா? அல்லது அந்தப்படி ஒரு பெரியாரை நாம் கொண்டாடுவதன் காரணமாகப் பலன் கிடைக்கும் என்பதற்காகவா? இல்லை. அனேகமாக இன்றைய தினம் கொண்டாடப்படுவது போல, இதுமாதிரி நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுவதெல்லாம் அவர் நடத்தை, அவர் மக்களுக்குச் சொன்ன போதனைகள், மக்களுக்காக அவர் ஆற்றிய தொண்டு முதலியவைகளை நினைவுபடுத்திக்கொண்டு, அவைகளைப் பாராட்டியும், போற்றியும், மற்ற மக்கள் அப்பெரியார்களின் போதனையைப் பின்பற்றுமாறும், அவர்களின் நடத்தையும் செயலையும் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றவேண்டும் என்பதை மக்களுக்கு உணர்த்தவுமேயல்லாமல் வேறில்லை.

[சென்னையில், 20-12-1953-ல், சொற்பொழிவு—' விடுதலை ' 22-12-1953]

7. நபி விழா

நபி பிறந்த தின விழா என்பது நீண்ட காலமாக இந்த நாட்டில் நடைபெற்று வருகிறது. நபி அவர்களின் போதனைகளில் எல்லா போதனைகளும் எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடியதாக, பின்பற்ற முடியாததாக இருந்தாலுங்கூட, இந்த விழாவில் அப்படிப் பட்ட பல தரப்பினரும் பிரிவினரும் தன்மையாளர்களும் கலந்துகொண்டு கொண்டாடப் பட்டு வருகிறது. காரணம் என்னவென்றால், வெவ்வேறு நிலைமை, வாழ்வு, எண்ணம் உடைய பல்வேறுபட்ட மக்களால் பின்பற்ற ஒப்புக்கொள்ள முடியாதன என்று பல இருந்தாலும்—யாரும், எப்படிப்பட்டவர்களும் எந்த நிலை, தன்மை, எண்ணம் உடையவர் களாய் இருந்தாலும் அவர்களாலும் மறுக்க முடியாத—எவர்களும் ஒப்புக்கொள்ளக் கூடியதான சில கருத்துக்கள், நீதிகள், கொள்கைகள் நபி அவர்களின் போதனையிலே அடங்கி இருக்கின்றன. அதோடு கூடவே, இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் நண்பர்கள் தங்களின் நபி அவர்களின் கொள்கையைப் பரப்பவேண்டும்; பிரச்சாரம் செய்யவேண்டும் என்ற காரியத்தில் தாராளமாக மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு கலந்துகொள்ள வாய்ப்பளித்து அவர்களைச் சொல்லச்செய்து அவர்கள் நபி அவர்களின் போதனைகளைப் போற்றிச் சொல்வதைக் கேட்டு மிகவும் திருப்தி கொள்கிறார்கள்.

எந்த ஒரு கொள்கையும் உலகத்து மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிற மாதிரி எல்லாத் தரப்பு மக்களுக்கும் பொருத்தமாக இருக்குமா என்றால், உள்ளபடி அந்தக் கொள்கைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாயும், எல்லோராலும் நியாயமான தன்மையில் இருக்கிறது என்று கூறப்பட்டாலுங்கூட, அந்தக் கொள்கைக்கும் எதிர்ப் பாளர்கள் இருக்கத்தான் செய்வார்கள். இது இயற்கை. ஏன் என்றால் உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் இயற்கையில் ஒரு நோக்கம், குணம், பண்பு கொண்டவர்களாய் இருக்கமுடியாது. மாறுபட்டுத்தான் இருப்பார்கள். அதற்கான காரணங்கள் வேண்டு மானால் மாறுபட்டு இருக்கலாமே தவிர, மாறுபாடு, வேறுபாடு இருப்பது இயற்கை. உலகத்து 200 கோடி மக்களும் ஒரே நோக்கத்தோடு ஏற்றுக்கொள்கிற மாதிரி இருக்க முடியாது.

மற்றொன்று; ஒரு கொள்கை, அல்லது திட்டம், நியாயம் என்பது எந்தக் காலத்துக்கும், என்றைக்கும், எந்தநிலை, தன்மைக்கும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவர்—எல்லோரும் ஏற்றுக்கொள்கிற மாதிரியில் அமைக்கப்பட்டது—வகுக்கப்பட்டது என்பதாகச் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், எக்காலத்திற்கும் பொருந்துகிறமாதிரி கொள்கை சொன்னார்கள்—என்பதானவர்களின் சக்தி 'முக்காலமறிந்த ஞானபாவ'மென்பதாகச் சொல்வது ஒரு பக்கம் இருந்தாலுங்கூட—மக்கள் அக் காலத்தில் இருந்த அதே நிலையில் இருக்கிறார்களா? காலம் பழங்காலத்தைப் போலவே மக்களை உண்டுபண்ணுகிறதா? பழக்க வழக்கம், ஆசாபாசம், அறிவு நிலை அப்படியே இருக்கின்றனவா? என்பதை யோசிக்கவேண்டும்?

நாளுக்கு நாள் மக்கள் மாறிக்கொண்டுதான் போகிறார்கள். கால மாறுதலும் அதற்கேற்ப வழி செய்கிறது. 1000, 2000 வருடங்களுக்கு முன்பு இருந்த மக்கள் நிலைமை, எண்ணங்கள், ஆசாபாசங்கள், அபிலாஷைகள் வேறு; இன்றைக்கு இருக்கிற மக்களின் மனோபாவம், ஆசாபாசங்கள் வேறு. அதுபோலவே, 500 வருடங்களுக்கு முன் மக்கள் இருந்த நிலையில் இன்று இல்லை. 300 வருடங்களுக்கு முன்பு—போன நூற்றாண்டில் ஏன் 50 வருடங்களுக்கு முன்பு மக்கள் இருந்த நிலையில் இன்று மக்கள் இல்லை. 50 வருடத்துக்கு முந்தைய மக்களினின்றும் சகல தன்மைகளிலும் துறைகளிலும் இக் கால மக்கள் மாறுபட்டிருக்கிறார்கள். அத்தகைய எண்ணங்கள் ஆசை, அபிலாசைகளுக்கு ஏற்பவே மக்களின் செயல்கள் நடப்புக்கள் இருக்கின்றன.

பொதுவாக ஜீவன் என்றாலே சுயநலம் உடையதுதான். அதிலும் மனிதன் தன் வாழ்வு, பாதுகாப்பு, வசதிக்கான அளவில் எல்லாத் துறையிலுமே முயற்சி செய்கிறான். அதன்பேரில் வசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று வருகிறபோது அதற்கேற்ப மாறுதல் காணவேண்டி இருக்கிறது. கொஞ்சம் சுயநலம் சிலருக்கு அதிகமாக ஏற்பட்டால் தங்கள் வசதி, தங்கள் வாழ்வுக்கு மட்டுமே பந்தோபஸ்து தேடுகிற மாதிரியில், மனித சமுதாயத்தைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் கவலைப்படாமல் தங்களுக்குச் சவுகரியமானதான அமைப்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இது ஒரு பக்கமிருக்கட்டும்.

எதற்குச் சொல்லுகிறேன்? மனிதன் வாழ்வும், எண்ணமும், நடப்பும் ஒரே நிலையில் இருப்பதில்லை, மாறுபாடு அடைந்துவருகிறது. அந்தந்த நிலைக்கு ஏற்ற மாதிரியில் என்பதற்கு ஆகவே! அப்படிப் பார்க்கிறபோது ஒருவர் எப்போதோ, எந்தக் காலத்திலோ, என்ன என்ன காரியத்துக்காகவோ சொன்னதை எல்லோரும், எப்போதும் கைக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது, சொல்லுவது எல்லோருக்கும் ஏற்புடைத்தாகாது என்பதற்கு ஆகவே!

எந்த மதத்திலும் எவ்வளவு பெரியதாகச் சொல்லப்பட்டாலும் கூட அது அனைவராலும் ஏற்க செய்யக் கூடியது என்று கூட அல்ல. மேலும் அந்த மதத்தைச் சார்ந்த மக்களாலேயே எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளப்பட முடிகிறதா? ஏற்றுக்கொண்டாலும் அதன்படியே நடக்க முடிகிறதா? அந்த மதத்தில் கட்டுப்பட்டிருப்பவர்கள் என்பவர்களிலேயே பலரால் அந்தப் பெரிய காரியங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதனவாக இருப்பதைப் பலரிடம் காணுகிறோமே! ஒரு சாரார் ஒரு மதத்தில் ஒன்றைப் பெரிய மிக முக்கியமான காரியம் என்கிறார்கள். பிறிதொரு சாரார் அதை எதிர்க்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவரவர்கள் தனிப்பட்ட கால தேச வர்த்தமான நிலைக்கும் வசதிக்கும் ஏற்ற மாதிரியில் இந்த வேறுபாடு இயற்கையாக எழுகிறது.

ஆதலால்தான் சொல்லுகிறேன், எல்லோரும் ஒரு சார்பாய் மறுக்கமுடியாமல் ஒப்புக் கொள்ளத்தக்க கோட்பாடுகளாக எல்லாமே இருப்பது என்பது மிகவும் அதிசயமான காரியம். அப்படிப்பட்ட அனைவராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய கோட்பாடு, காரியமாக சில இருந்தாலுங்கூட அது மிகப் பெரியதுதான். அந்தப்படி பார்க்கிறபோது நபி அவர்களின் உபதேசங்கள், கோட்பாடுகள், நடப்புகள் இவைகளில் பல எல்லோராலும் ஒப்புக் கொள்ளத் தக்கவையாயும், ஏற்றுக்கொள்ளத் தக்கவையாயும் மறுக்கமுடியாதவையாகவும் இருக்கின்றன. அது மிகவும் பாராட்டத்தக்க பெரிய காரியம் ஆகும்.

தோழர்களே! நபி அவர்களை நான் ஒரு மகான் என்றோ, அமானுஷ்ய சக்தி படைத்தவர் என்றோ கருதவில்லை. என்னைப் பொறுத்தவரையில், நபி அவர்களை ஒரு மனிதத் தன்மை படைத்த சிறந்த மனிதராகத்தான் கருதுகிறேனேயல்லாமல் அதற்கு மேற்பட்டதாகச் சொல்லப்படும் நிலையில் கருதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகமது நபி அவர்களுடைய முக்கியமான கருத்துக்களிலே தெய்வீகத் தன்மை என்பதை ஒப்புக்கொள்ள முடியாத நம் போன்றவர்களும், மற்றும் பல மதங்களைச் சேர்ந்த சீர்திருத்தவாதிகளும் ஆதரவு கொடுப்பதற்கும் ஒப்புக்கொள்வதற்கும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டுவதற்கும் பல கருத்துக்கள் இருக்கின்றன.

அவர் என்ன சொன்னார்? ஒரு கடவுள்தான் உண்டு, பல கடவுள்கள் இல்லை என்றார். நீங்கள் கேட்கலாம், 'நபி அப்படி அதாவது ஒரு கடவுள் என்று சொன்னார்; இதைப்பற்றி உன் கருத்து என்ன?' என்று. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன்: 'கடவுள் என்று மக்கள், ஆயிரக்கணக்கான கடவுள்களைக் கட்டி அழுகிறவர்களைவிட நபி அவர்கள் எவ்வளவோ மேலானவர்' என்பேன். முதலில் மக்கள், 'பல

கடவுள்கள் என்பது பொய், ஒரு கடவுள்தான் மெய்' என்ற நிலைக்கு வரட்டும்; மேற்கொண்டு அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். நம் நாட்டுக்கு நம்—மக்களுக்கு இது எவ்வளவு நல்ல உபதேசமென்பதைச் சிந்தியுங்கள்.

அடுத்தபடியாக முகமது நபி அவர்கள் சொன்னது, மனித சமுதாயத்தில் மக்களுக்குள் ஒருவருக்கொருவர் உயர்வு—தாழ்வு, பேதாபேதம், வித்தியாசம் இல்லை; யாவரும் சமமான பிறவியே என்று சொன்னார். இதுவும் மிக முக்கியமானதாகும்.

நம்மிலும் பல பெரியார்கள் இந்தப்படி சொன்னார்கள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது போலவெல்லாம் சொல்லிப்பார்த்தார்கள். ஆனால், அவைகள் வெறும் ஏட்டு அளவிலே இருக்கின்றனவே தவிர நடப்பில் இல்லை. ஆனால், முஸ்லிம் சமுதாயத்திலே, நடப்பிலேயே ஒரே ஆண்டவன் வழிபாடும், மக்களுக்குள் பிறவியில் பேதமற்ற நிலைமையும் இருந்துவருகின்றன. இது அவர்களைப் பொறுத்தமட்டும்தான். அதாவது அவர்கள் மதஸ்தர்களை பொறுத்தமட்டிலும்தான் என்று சொல்லப்பட்டாலுங்கூட, மற்ற மதங்களில் அந்த மதத்தில் கட்டுப்பட்டுள்ளவர்களுக்குள்ளாகவே காட்டப்படும் பேதாபேதங்கள், வித்தியாசங்கள் முஸ்லிம் மதஸ்தர்களுக்குள், அவர்களுக்குள்ளாகக் காண்பிக்கப்படுவதில்லையல்லவா?

இன்றையதினம் நமக்குள்ளும் இந்த உணர்ச்சி—அதாவது முஸ்லிம்கள் நபி அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் எப்படி ஒரு ஆண்டவன் மக்கள் அனைவரும் ஒருகுலம் என்பதான தன்மை உடையவர்களாக இருக்கிறார்களோ, அதேபோன்ற உணர்ச்சியும் கருத்தும் இன்று நமக்குள்ளும் தோன்றிவிட்டது. தவிரவும், இந்த மாதிரியான உணர்ச்சி என்பது இன்றைக்கு ஒரு பேஷனாகவும் போய்விட்டது.

இதற்குக் காரணம் என்ன? நபி அவர்கள் உபதேசம் அமுலில் இருப்பதேயாகும்.

அடுத்தாற்போல, முகமது நபி அவர்கள் விக்கிரக ஆராதனையை அந்தக் காலத்திலேயே மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். இதில் மிக வேகமாகவே போயிருக்கிறார். 'விக்கிரகத்தை முஸ்லிம்கள் தொழக்கூடாது. அப்படி விக்கிரகத்தை வணங்குகிறவன் முஸ்லிமே அல்ல' என்று சொல்லி அந்த அளவுக்கு அவர் உருவ வணக்கத்தைக் கண்டித்து வெறுக்கும்படி செய்துள்ளார். இதுவும் மிகவும் பாராட்டத்தக்க, போற்றத்தக்க காரியமாகும் என்பதோடு, இவையெல்லாம் நம் மக்கள் பின்பற்றவேண்டிய ஒரு பெரிய படிப்பினை என்பேன்.

இந்தக் காரியங்களைத் தவிர மற்றும் மிக முக்கியமானதொன்றை நபி அவர்கள் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னவற்றிலே இது மிகவும் முக்கியமாய்க் கவனத்தில் வைக்கவேண்டிய காரியமாகும். என்ன? அவர் சொல்லுகிறார், 'நான் என்ன சொல்லி இருந்தாலும், அவற்றில் உனக்கு சந்தேகம் இருந்தால் நீ உன் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்துபார்' என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

தோழர்களே! மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். நபி அவர்கள் 'மக்கள் சமுதாயத்துக்கு ஒரே கடவுள்; மக்கள் சமுதாயம் ஒரே குலம்; உருவ வழிபாட்டுக்கு மக்கள் ஆளாகக்கூடாது. நான் என்ன சொல்லி இருந்தாலும் அவைகளை உங்கள் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பாருங்கள்' என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

கடைசியாக இன்னொன்றும் சொன்னார்: நான்தான் கடைசி நபி. எனக்குப் பின்னால் நபிகள் (தீர்க்கதரிசிகள்) தோன்றமாட்டார்கள் என்று. அதைப்பற்றி நீங்கள் எப்படிக் கருதினாலும், என்ன முடிவுக்கு வந்தாலும் இன்றைய வரையிலே அவருக்குப் பின்னால் இந்தத் துறைகளில் அவர் சொன்ன கொள்கை கருத்துக்களைவிட மேலானதாகச் சொல்லுவதற்கு எவரும் தோன்றவில்லை. அந்த அளவுக்கு மனித சமுதாயத்தின் எல்லா



பெங்களூரில் 1954-ல், டாக்டர். மல்லலசேகரா, பி. என். ராஜ்போஜ்
ஆகியோருடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

வாழ்வுத்துறைத்தன்மைகள்பற்றியும் உயர்ந்த தத்துவங்கள் கொண்ட கோட்பாடுகள் சொல்லிவிட்டார் நபி அவர்கள்.

ஏதோ பொருளாதாரத் துறையில் சில பெரியார்கள் சில நூறு வருடங்களுக்கு முன் தோன்றி, பல அரிய கருத்துக்களைப் பொருளாதாரத் துறையைப் பொறுத்த வரையில் சொல்லி இருக்கிறார்கள். தோழர் ஜீவானந்தம் அவர்கள் அதைப் பற்றியும் கூட நபி அவர்கள் சொல்லியிருக்கிறார் என்று சொல்லிவிட்டார். அதுவும் மிக மகிழ்ச்சிக்கு உரியது என்பதோடு, நபி அவர்கள் சொன்னதற்கு மேலாக இதுவரை யாரும் எந்த ஆஸ்திகனும் சொல்லவில்லை.

இந்த விழாவிலிருந்து நாம் என்ன பயன் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால், நபி அவர்களின் இக்காரியங்களையும், கொள்கைகளையும் நம் மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, அந்தப்படி நடக்க நாமும் முயற்சி செய்யவேண்டும்.

மற்றும், தங்கள் மத சம்பந்தமான கோட்பாடுகளில் அதை யொட்டிய காரியங்களில் முஸ்லிம்கள் மற்றவர்களையும் அழைத்து மற்றவர்களுடைய பாராட்டைப் பெறவேண்டும் என்று கருதுகிறார்களோ அதேபோல மற்ற மதக்காரர்களும் தங்கள் மத சம்பந்தப்பட்ட காரியங்களில் மற்றவர்களை அழைத்து அவர்களின் பாராட்டைப்பெற முயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் முன்னேற்றத்திற்கு வழிதோன்றும்.

[சென்னையில் 20-12-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 23-12-1953]

8. புத்தர் விழா

பெரியோர்களே! தோழர்களே!

சரித்திர சம்பந்தமாக எவராவது மனிதனில் கீழ்சாதி, மேல்சாதி ஏன் என்பதுபற்றிக் கேட்டாரா என்றால், புத்தர் ஒருவர்தான் கேட்டார். அவர் ஒரு இராஜாவின் மகன்; அவர் பலவற்றைப்பற்றிக் கேட்டார். 'அவன் ஏன் கிழவன்?', 'இவன் ஏன் வேலைக்காரன்?', 'இவனுக்கு ஏன் கண் குருடு?'—என்று கேட்டார். அதே புத்தர்தான் கேட்டார், 'இவன் ஏன் கீழ்சாதி?' என்று. 'அது கடவுளால் பிறப்பிக்கப்பட்டது' என்றனர். 'அப்படிக் கீழ்சாதியாய் பிறப்பித்த கடவுள் எங்கேயடா?' என்றார். ஆத்மா பற்றிக் கூறினார்கள். 'அது என்ன? அப்படி ஒன்று இருப்பதாகக் காணோமே' என்றார். அப்படி வேலை செய்தவரையே இந்நாட்டைவிட்டுத் துரத்தினார்களே!

புத்தர் ஜயந்தி என்பது ஸ்ரீராம நவமி, கோகுல அட்டமி—கிருஷ்ண ஜயந்தி, கந்த சஷ்டி என்பவைபோல 'புத்தர் ஜயந்தி' நாள் என்பதுமாகும்.

ஆனால் இராமன், கிருஷ்ணன், கந்தன் பிறப்பு, பிறந்தநாள் ஜயந்தி என்பவை அடியோடு கட்டுக் கதையும், கற்பனைக் களஞ்சியமும் ஆகும். ஏனெனில், அவர்கள் காலம், பிறந்த முறை, மற்றும் அவர்களது நடப்பு, அவர்கள் செய்த அற்புதம் அதிசயம் என்பவை யெல்லாம் ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் விஞ்ஞான முறைக்கும் சிறிதும் பொருத்தமற்றவையாகும். அன்றியும், அவை முழுவதும் ஒரு மதசம்பிரதாய சார்புடைத்தாகும் என்பதோடு சரித்திரத்திற்குச் சம்பந்தப்படாததுமாகும்.

'இந்து மதம்' அதாவது பார்ப்பன ஆதிக்க ஆரிய மதமும், சைவ, வைணவ புராணங்களும் இல்லாவிட்டால் இராமன், கிருஷ்ணன், கந்தன் ஆகியவர்களுக்கு உலகில் இடமேயில்லை.

இந்தியா தவிர, அதுவும் இந்துக்கள், அதிலும் ஆரிய அடிமைகள் தவிர்த்த மற்றெங்கும் மற்றெவரிடமும் இராம, கிருஷ்ண, கந்தன்கள் கிடையவே கிடையாது; சொன்னாலும் வழியலா வழியில் சிரிப்பார்கள்.

இராமன் எவனுக்கோ பிறந்து—தசரதன் தன் பிள்ளையென்று கொண்டதாக வால்மீகி கட்டிய கதையில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, தசரதனுக்கு 60,000 (அறுபதாயிரம்) வயதிற்கப்புறம் குழந்தை வேண்டியிருந்ததால் ஆரிய முறைப்படி யாகம் செய்து, யாகப் புரோகிதர்களிடம் தன் மனைவிகளை ஒப்புவித்து, அவர்களால் கர்ப்பம் உண்டாக்கப்பட்டு, அந்த மனைவிகளைத் திருப்பி புரோகிதர்கள் தசரதரிடம் ஒப்புவித்ததாகவும், அதற்காக அவர்கள் சன்மானம் வாங்கிக் கொண்டதாகவும் இராமாயணக் கதை கூறுகின்றது. இந்த விவரம்—அதாவது வால்மீகி இராமாயணம் கூறுவதை சந்திரசேகரப் பாவலர் இராமாயண ஆராய்ச்சியிலும், மன்மதநாத தத்தர் அவர்கள் இராமாயணம் ஆங்கில மொழிபெயர்ப்பிலும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

அதாவது, பண்டித மன்மதநாத தத்தர் பின்வருமாறு மொழிபெயர்த்து எழுதுகிறார்:

Kausalya with three strokes slew that horse experiencing great glee. Kousalya with an undisturbed heart passed one night with that horse. The Hotas, Adhwaryus and the Ugatas joined the king's wives.

இதன் பொருள் வருமாறு :

" கோசலை மூன்று வெட்டில் அக் குதிரையை மிக உற்சாகத்தோடு கொன்றாள். அவள் கலங்கா நெஞ்சோடு ஓர் நாளிரவு அக் குதிரையோடு கழித்தாள். ஹோதா, அக்வர்யு முதலிய ரித்விக்குகள் இராஜ பாரியைகளைப் புணர்ந்தார்கள்.

பண்டித வில்சன் துரைமகனார், 'வேதகால இந்து மதம்' என்ற நூலில் பின் வருமாறு எழுதுகிறதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

Kausalya is directed to be all night in closest contact with the dead horse in the morning when the queen is released from the disgusting and in fact, impossible contiguity dialogue is given in the Yajush and in the Ashvamedha Section of the Sathapatha Brahmana and as explained in the Sutras, as taking place between the queen and the females accompanying or attending upon her and the principal priests which in brief is in the highest degree both silly and obscene.

இதன் பொருள் வருமாறு :

கோசலை ஒரு இரவு முழுதும் செத்த குதிரையை நன்றாகத் தழுவிப் படுத்திருக்கச் செய்யப்பட்டாள். காலையில் இந்த அருவருப்பானதும்—உண்மையாகவே அசாத்தியமானதுமான அக் குதிரையின் தேக சம்பந்தத்தினின்றும் நீங்கிய உடனே யசுர் வேத, சதபத பிரமாண அசுவமேத அத்தியாயத்திலும் சூத்திரங்களிலும் விவரித்துள்ளபடி, இராசபத்தினிகளுக்கும் அவர்களைச் சூழ்ந்துள்ள பெண்களுக்கும் ரித்விக்குகளுக்கும் ஒரு சம்பாஷணை நடைபெற்றது. அது சுருக்கமானதாக இருந்தபோதிலும் சொல்லுவதற்கு மிகவும் அசிங்கிதமாகவும், அருவருப்பை உண்டாக்குவதாயும் இருக்கிறது.

தெலுங்கில் வால்மீகி இராமாயணத்தை மொழிபெயர்த்துள்ள பண்டித லட்சுமணச் சார்லு, தமது மொழிபெயர்ப்பில், பக்கம் 181-ல் யாகம் முடிந்தவுடன் நடத்துபவன் தனது மனைவியாரை குருக்களிடம் தட்சணையாக ஒப்புவிக்க வேண்டுமென்பதும், பின் பணம் பெற்றுக்கொண்டு அப் பெண்களைச் சொந்தக்காரனிடம் ஒப்புவிக்க வேண்டுமென்பதும் சாஸ்திர விதி என்றெழுதுகிறார்.

இந்தக் கற்பனைகளும் நடப்பிற்கு—சாத்தியத்திற்கு ஒவ்வாததாகவே காணப்படுகின்றன. கிருஷ்ணன் சங்கதியும் எப்படியெனில், கிருஷ்ணன் பிறப்பும் பிறந்த மாதிரியும்

—பிறந்த உடன் குழந்தைப் பருவத்தில் செய்த செய்கைகளும், பெரியவனானபின் செய்த செயல்களும், பாட்டிகள் குழந்தைகளுக்குக் கூறும் காட்டுமிராண்டிக் கற்பனைகள் போன்றவையேயாகும். இவைகளைக் கொண்டு பார்த்தால் கிருஷ்ணன் சங்கதி அஸ்திவாரத்திலிருந்தே புளுகுக் களஞ்சியத்தில் பட்டதாகும்.

கந்தன் சங்கதியோ இன்னமும் மோசமாகும். சிவனும் பார்வதியும் 300 தேவ வருஷம் புணர்ந்தும் வயிறு வாய்க்காமல் போனதோடு, தேவர்கள் பயந்து இனிமேல் புணரக்கூடாது என்று தேவர்கள் புணர்ச்சியைத் தடுத்து, புணர்ச்சியைக் கலைக்கச்செய்து அதனால் சிவன் வீரியம் (இந்திரியம்) பூமியில் ஒழுகி ஆறாக ஓட, கங்கையில் கிளையாகப் பிரிந்து விழுந்து அவை உயிர் பெற, அவைகளை ஒன்று சேர்த்து பெண்கள் பால் கொடுக்க, அந்த இந்திரியக் கிளைகள் ஆறும், ஆறு தலைகளுடன் பால் குடித்ததால், அந்த உரு ஒன்று சேர்க்கப்பட்டதில் ஆறுமுகமாயிற்றென்றும், அதனால் கந்தனுக்கு ஆறுமுகன் என்பதாகப் பெயர் ஏற்பட்டதென்றும் கந்தபுராணம், இராமாயணம், காஞ்சி புராணம் முதலிய கதைகள் கூறும்.

இவை தவிர, சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து ஒரு தீப்பொறி வெளியாகி—அது, கந்தனானான் என்றும் புராணங்கள் கூறும்.

இவை இப்படி இருந்தாலும் இராமன், கிருஷ்ணன், கந்தன்களின் பிறப்பும் அவைகளின் நடப்பும் கற்பனை என்பதும், அறிவு ஆராய்ச்சி விஞ்ஞானத்துக்கும் சரித்திரத்திற்கும் சம்பந்தப்படாததுமாகும் என்பதுமாத்திரம் யாராலும் மறுக்கப்படாததாகும்.

ஆனால், புத்தர் சங்கதி அப்படி அல்ல. அவர் சரித்திர உண்மைக்கு இலக்கானவர். அறிவு ஆராய்ச்சிக்குக் கட்டுப்பட்டவர் என்பது மாத்திரமல்லாமல், அறிவு ஆராய்ச்சிக்கு உருவாகவே விளங்கியவர். அவர் தன்னைப்பற்றிக் கூறியவைகளும், மற்றவர்களுக்குக் கூறியவைகளும் பெரிதும் மறுக்கமுடியாததும் அறிவாளிகளால் தவிர்க்க முடியாதவைகளுமாகும். புத்தரை, புத்தர் சரித்திரத் தொகுப்பை, அதன் உண்மையை உலகம் முழுவதும் எம் மதத்தினரும் ஏற்றுக்கொள்ளுவதோடு உலக உண்மைச் சரித்திரம் என்பவற்றில் அவை இடம் பெற்றிருக்கின்றன.

அவைமாத்திரமல்லாமல் பெருத்த அஞ்ஞான மதமாகிய இந்து மதம் என்பதே இன்று—ஏன், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—புத்தரை ஒரு தெய்வ அவதாரமாகக் கொண்டாடும் தன்மையில் இருந்து வருவதோடு பார்ப்பன ஆதிக்க-ஆரிய ஆதிக்க அரசாங்கமாகிய இந்திய அரசாங்கம் புத்தர் மதத்தை (கொள்கைகளை) ஏற்றுக்கொண்டதுபோல் அறிகுறிகள் காட்டி புத்த ஜயந்திக்கு விடுமுறையும் விட்டிருக்கிறது என்றால், புத்தரைப் பற்றிய பெருமைபற்றி யாருக்கும் எடுத்துக் கூறவேண்டிய அவசியமிருக்காது.

இன்றைய தினம் நாமெல்லோரும், இங்கே புத்தருடைய பிறந்த தின விழாவைக் கொண்டாடுவதற்காகக் கூடியிருக்கிறோம். மற்ற மதங்களிலுள்ள நாயன்மார்கள் தெய்வீகப் புருஷர்கள் என்று சொல்லுபவர்களின் பிறந்தநாள் போல் புத்தர் பிறந்தநாள் ஒரு கொண்டாட்ட நாளல்ல. அந்தப்படி நாயன்மார்கள், தெய்வீகப் புருஷர்கள் என்பவர்களின் பிறந்த நாளில் என்ன நடக்கும் என்றால் அவரை வைத்துப் பூஜை செய்வார்கள்; அவருடைய பிறந்த நாள் திருநட்சத்திரம், 'இறந்தநாள் திருநட்சத்திரம் என்று பல சடங்குகள் செய்வார்கள்.

மற்றும் இன்று உலகிலுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் புராதன—காட்டுமிராண்டி காலத்திய மதம், 'இந்து மதம்' என்று சொல்லப்படும் ஆரிய மதமேயாகும். அதற்குப் பிறகு இந்த 2000 ஆண்டுகளாக ஏற்பட்ட மதங்கள் யாவும் இந்து மத சீர்திருத்தமாக ஏற்பட்ட மதங்களை தவிர்த்து பெரிதும் புதிய மதங்கள் அல்ல.

ஏனென்றால், ஒரு மதமென்றால்—ஒரு கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், மேல் உலகம், கீழ் உலகம் முதலியவை கிடையாது என்பது மாத்திரமல்ல; அவை இருக்கவே நியாயம் இல்லை என்பதை விஞ்ஞான ரீதியில் உடைத்துத் தள்ளுகிறார்.

இதுதான் இனி உலகக் கொள்கையாக—மார்க்கமாக இருக்கவேண்டிய நிலையில் விளக்கியிருக்கிறார். மத விஷயத்தில் இதற்குமேல் புரட்சி செய்ய இனி யாரும் தோன்ற முடியாது.

வேறு பல மதங்கள்—கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம் தவிர்த்த மற்றப் போக்குகளில் விஞ்ஞானத்தைத் தொடுவதாகக் காணப்பட்டாலும், அவை கடவுள், மத, மோட்ச, நரகங்களைக் கண்மூடி நம்பவேண்டுமே ஒழிய, 'பகுத்தறிவு கொண்டு ஆராயக்கூடாது; விஞ்ஞானத்திற்குச் சம்பந்தப்படுத்தக்கூடாது' என்று பச்சையாகக் கூறுகின்றன.

புத்தர்தான்—பகுத்தறிவுக்கும், விஞ்ஞானத்திற்கும் புறம்பான எதையும் நான் சொல்வதானாலும் தள்ளிவிடு என்று சொல்லியே அந்த அவையடக்கத்தின்மீது எதையும் கூறுகிறார். . ஆகையால்தான், அதை கடவுள், மதத்துறையில் புரட்சி மார்க்கம், புரட்சிக் கருத்து, புரட்சி உபதேசம் என்கிறோம். உண்மையில் அறிவுக்கு மதிப்பளிப்பவர்கள் சிந்திக்க வேண்டிய கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதேதான் புத்தர் ஜெயந்தி நாளின் கருத்து என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. திராவிடர் கழகத்தார் இதற்காகவே அண்மையில் ஒரு நாள் வைத்து இந்த நாளைக் கொண்டாடக் கருதி இருக்கிறார்கள் என்பதை இதனால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆனால், புத்தருடைய பிறந்தநாள் அப்படி அல்ல. புத்தர், 'நான் சொன்னதை நம்பினால்தான் மோட்சத்திற்குப் போவார்கள்; இல்லாவிட்டால் நரகத்திற்குத்தான் போவார்கள்' என்று சொன்னவரல்லர். புத்தர் அறிவுக்கு நல்லமுறையில் விளக்கம் கொடுத்தவர். நாமும், இப்பொழுது, 'புத்தர் அப்படி—இப்படிச் சொல்லியுள்ளார், ஆகவே நீங்கள் எல்லோரும் அந்தப்படி நடவுங்கள்' என்று சொல்லுவதற்காக இங்கே கூடவில்லை. இந்தக் காரியத்தில் புத்தர் சர்வ ஜாக்கிரதையாக—'உங்கள் அறிவுக்குச் சரி என்று பட்டால் செய்யுங்கள்' என்று சொன்னார். அறிவைக் கொண்டு எதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்குப் புத்தர் பிரதானம் கொடுத்திருக்கிறார். புத்தரைப்பற்றி மேலும் விளக்கமாக சொல்ல வேண்டுமென்றால் அவர் அறிவுக்கு மிக்க சுதந்திரம் கொடுத்தவர் என்று சொல்லலாம்.

ஏதோ வழக்கத்தினால் புத்தரை வணங்குகிற தன்மை ஏற்பட்டுவிட்டது. இதனால் என்ன ஏற்படுகிறது என்றால் புத்தரது மதத்தைச் சார்ந்தவன் என்றாலேயே அவன் புத்தரை வணங்குகிறவன் என்பதாக ஆகிவிடுகின்றது. புத்தரது மதம் வைதிகமல்ல. அப்படி அது வைதிக முறையில் சில சமயங்களில் நடப்பதற்குக் காரணம்—அதை அறிமுகப்படுத்துகிறவர்கள் அப்படிச் செய்துவிடுகிறார்கள். இதனால் நான் புத்தரைப்பற்றி சாதாரணமாகப் பேசுவதாகக் கருதிவிடக் கூடாது. புத்தரது பிறந்த நாளில் அவரைப் பற்றிப் பேசுவது, அவர் அறிவுக்கு அளித்த உணர்ச்சிக்கு, சுதந்திரத்திற்கு என்று சொல்லுகின்றோம். புத்தரது கருத்தை மக்கள் என்னவாகக் கருதுகிறார்கள் என்றால்—அதை ஒரு மத சம்பிரதாயமாகக் கருதுகிறார்கள். அப்படிப்பட்ட முறையில் அதற்குச் சில உபகரணங்கள் ஏற்பட்டுவிட்டன.

ஆனால், புத்தரது கொள்கை அல்லது சம்பிரதாயம் என்பது அப்படிப்பட்டதல்ல. புத்தர் அறிவுக்கு ஆராய்ச்சிக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கிறார். ஆதலால்தான் புத்தருடைய உபதேசங்கள் என்று சொல்லப்படும் அவரது கருத்துக்களை நாமும் அலசி ஆராய்ந்து பார்த்துச் சொல்லும் உரிமை அதில் இருக்கின்றது. அவர் சொன்னது ஒவ்வொன்றைப்பற்றியும் 'நான் சொல்லுவதை, நான் சொல்லுகிறேன் என்பதற்காக ஒப்புக்

கொள்ளாதீர்கள்! எதையும் உங்கள் புத்தியில் ஆராய்ந்து சரி என்று பட்டால்மாத்திரம் ஏற்றுக்கொள்ளுங்கள்!' என்று சொல்லியிருக்கிறார்.

[பெரம்பூரில் 17-5-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-5-1954]

இன்று பிறிதொரு இடத்தில் புத்த ஜெயந்தி விழா அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. புத்தர் (ஜயந்தி எனும்) பிறந்த நாள் விழா, 1956 மே மாதம் 24, 25, 26, 27 தேதிகளில் கொண்டாடுவது என்று சென்னை புத்தஜயந்தி விழாக் கொண்டாட்டக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. திராவிடர் கழகத்தாராகிய நாம் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று விழாக் குழுவினரால் அழைக்கப்பட்ட அழைப்பை கழகச் சார்பாக முழுமனதோடு ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆதலால், திராவிடர் கழகத் தோழர்களும் மற்றும் எல்லா ஸ்தாபனத் தோழர்களும் 'புத்தர் பிறந்த நாள் 2500-வது ஆண்டு விழா', சென்னை உட்பட தமிழ்நாடு எங்கும் சிறப்பாய் நடைபெறவும், புத்தர்பிரான் அறிவுரைகள் மக்கள் யாவருடைய உள்ளத்திலும் பதியும்படியான பிரச்சாரம் செய்யவும் ஆன எல்லா விதமான முயற்சியும் செய்யவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் அறிந்தவரை புத்தர் அறிவுரையின் முக்கியத்துவமானது :—

1. 'எதையும் உன் அறிவைக் கொண்டு நன்றாய் ஆராய்ந்து பார்'.

2. 'உன் அறிவுக்குச் சரி என்று தோன்றியவைகளையே ஏற்றுக்கொள்'.

3. 'உனக்கு விளங்காத தன்மையில் கடவுள், ஆத்மா, தேவர், மேல் உலகம், கீழ் உலகம், மோட்சம், நரகம் என்றும்; பிராமணன், சூத்திரன்—பஞ்சமன் என்றும் சொல்லப்படும் வெறும் கற்பனைச் சொற்கள் முதலியவைகளை நம்பாதே'. உலகில் உள்ள ஜீவன்களில் எல்லாம் மனிதன் எப்பொருளையும் ஆராய்ந்து பகுத்தறிந்து உணரும் உயர்ந்த அறிவுள்ள ஜீவன் ஆவான்—என்பதே ஆகும்.

'கடவுள் சொன்னார் என்றும், வேத சாஸ்திரம் சொல்லுகிறது என்றும், மகான் சொன்னது என்றும், வெகுபேர் பின்பற்றுகிறார்கள் என்றும், வெகுநாளாக நடந்துவருகிறது என்றும் கருதி எதையும் நம்பிவிடாதே; உன் ஆராய்ச்சி அறிவு என்ன சொல்லுகிறதோ அதை நம்பு' என்றும் சொல்லி இருக்கிறார்.

[தலையங்கம்—'விடுதலை' 19-4-1956]

9. படத்திறப்பு

ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

ஒருவரைப் பெருமைப் படுத்துவதற்கென்றே ஒருவருடைய படத்திறப்போ அல்லது சிலைத் திறப்போ நடத்தப்படுமானால் அதை எல்லோருக்கும் நடத்தி, எல்லோரையும் பெருமைப்படுத்தலாம். ஆனால், அந்த நோக்கத்தின்மீது இதுபோன்ற நிகழ்ச்சி நடத்தப் படுவதில்லை. யார் ஒருவர் மக்கள் நன்மைக்குப் பாடுபடுபவராகவும், ஒழுக்கத்தில் சிறந்து தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டும் விளங்குகிறாரோ அவர் மற்ற மக்கள் யாவரும் அப் பண்புகளைப் பின்பற்றுவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். அப்பேர்ப்பட்டவரை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். அவரின் உயரிய பண்புகளையும், சேவைகளையும் மற்ற மக்களும் பின்பற்றி நடக்கும் வண்ணம் செய்ய வேண்டும். அதற்கென்று அவரின் குணங்களை மக்கள் பார்த்து, தமது வாழ்க்கையில் பின்பற்றிவந்த தகாத காரியங்களை விட்டொழித்துத் திருந்தி வாழவேண்டும் என்பதற்காகவே படத்திறப்பும், சிலைத் திறப்புமான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. உருவ வழிபாடு வேறு—பண்பு வழிபாடு வேறு,

பலர் எங்களை 'உங்களுக்குத்தான் உருவ வழிபாடு கிடையாதே. இதை மட்டும் பின் பற்றலாமா?' என்று கேட்கலாம். ஆனால், உருவ வழிபாட்டுக்கென்று இது நடத்தப் படுவதில்லை. இது குண வழிபாடு, பண்பு வழிபாடு என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஒருவரின் குணத்தையும், பண்பையும் மக்கள் அறிந்து அதன்படி நடக்க வேண்டும் என்பதற்காக நடத்தப்படுவதாகும்.

[திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் 17-3-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-3-1956]

10. என் பிறந்த நாள் விழா

தோழர்களே!

பிறந்த நாள் விழா என்பது முதன் முதலில் துவக்கப்பட்டது எல்லாம்—பொய், பித்தலாட்டங்களை அடிப்படையாக வைத்துத்தான். எப்படி எனில் இதுவரை கடவுள் களின் பிறந்த நாள் என்ற பெயரால்தான் நம் நாட்டில் விழாக் கொண்டாடுவது வழக்கம். உண்மையிலேயே இந்தக் கடவுள்கள் எல்லாம் இருந்தார்களா? பிறந்தார்களா? என்றால் அதுதானில்லை.

அப்படி அவர்கள் கொண்டாடியதன் நோக்கம்—அதை வைத்து மக்களிடத்தில் பக்திப் பிரச்சாரத்தைச் செய்யலாம் என்பதற்காகத்தான்; அதில் வெற்றியும் பெற்றார்கள். அடுத்து நாயன்மார், ஆழ்வார் ஆகியவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடி வந்தார்கள்; அவர்கள் எல்லாம் கடைந்தெடுத்த பித்தலாட்டக்காரர்கள். அவர்கள் செய்யாத காரியங் களை எல்லாம் இட்டுக்கட்டிச் சொல்லி அவர்களுக்குப் பெருமையை உண்டாக்கி அதன் மூலம் கடவுள்களைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்து விட்டனர்.

எந்த அயோக்கியத்தனமான பொய்யை எல்லாம் சொல்லியும் கடவுள் பக்தியை உண்டாக்கவே இவற்றையெல்லாம் செய்தனர்.

நம் இயக்கம் தோன்றி அறிவுப் பிரச்சாரம் செய்ததற்குப் பின்னால்தான்—உண்மை யிலேயே பிறந்த மனிதர்கட்கு, மனிதத் தொண்டு செய்த பெரியார்கட்குப் பிறந்த நாள் விழாக் கொண்டாடும் தன்மை ஏற்பட்டது.

எனக்குப் பிறந்த நாள் விழாக் கொண்டாடுவதன் நோக்கம், கடவுளை ஒழிப்ப தாகும். இதைப் போன்ற கருத்துக்களில் இப்போது மக்கள் உற்சாகம் காட்டுகிறார்கள். நாடெங்கும் என் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறார்கள் என்றால் நோக்கம் அதுதான்.

மற்றவர்கட்கு விழா நடக்கிறது என்றால் அது சாதி வளர்க்கவும் கடவுள் பக்தியை வளர்க்கவும் பயன்படுமே தவிர, உருப்படியாக சமுதாய வளர்ச்சிக்கு எள்ளளவும் பயன் படாதே. எங்களுக்கு விழா நடக்கிறது என்றால், அவற்றிற்கு மாறுபட்ட கொள்கையைப் பிரச்சாரம் செய்வதால்தான் ஆகும்.

[மாயூரத்தில் 22-9-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-10-1972]

7. வாழ்க்கை நெறி

1. திராவிடர்க்கு நெறி உண்டா?

திராவிடர்களின் சமயம், அதாவது மதம் என்பது பெயரளவில் இந்துமதம் என்று சொல்லப்பட்டாலும், அதற்கு எவ்விதப் பொருளும் ஆதாரமும் இல்லை என்றாலும் உண்மையில், திராவிடர்கள் 'மதம்' என்பது ஆரிய புராண மதமே. கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் முதலானவர்களுக்கும் மதம் உண்டு என்றால் அவைகள் 'பைபிள்', 'குரான்' மதம் என்றெல்லாம் பெரிதும் சொல்லப்படுமே ஒழிய வேறுவிதமாய் இருப்பதில்லை. ஆனால், திராவிடர்கள் தங்களை இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் அப்படிச் சொல்லிக்கொள்கிறவர்கள் அத்தனை பேர்களும், ஆரிய மதப் புராணக்காரர்களாகத்தான் இருந்தும், நடந்தும் வருகிறர்களே தவிர—தங்களுக்கு என்று வேதமோ, சாஸ்திரமோ இல்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

திராவிடர்களுக்கு வேதம் கிடையாது; இருப்பதாக சொல்லப்படுமானால் அது, திராவிடர்களுக்குச் சம்பந்தப்பட்டதில்லை என்றும், திராவிடர்கள் பார்க்கவோ தெரிந்து கொள்ளவோ கூடியது அல்லவென்றும்தான் சொல்லப்படுமே ஒழிய, திராவிடர்களுக்குரிய வேதம் கிடையாது. 'திராவிட வேதம்' என்று எதையாவது சொல்லப்படுமானால், அது திராவிடர்கள் பின்பற்றுகிற, நடத்தப்படுகிற தன்மைக்கும் நடப்புக்கும் கட்டுப்பட்டதுமல்ல; பின்பற்றச் செய்வதுமல்ல.

திராவிடர்களுக்கு ஏதாவது சாஸ்திரங்கள் இருக்குமானால், அவை திராவிடர்கள் இன்ன மாதிரியாய் நடத்தப்படவேண்டியவர்கள் என்றும், நடத்தப்பட வேண்டும் என்றும்; திராவிடர் அல்லாத மற்றவர்களுக்கு அதிகாரம் அளிப்பதும் ஆக்கினை இடச்செய்வதுமான சாஸ்திரங்களே ஒழிய—திராவிடர்கள் தாங்களாக நடந்துகொள்ளுவதற்கு ஏற்றதான சாஸ்திரங்கள் அல்ல. ஆகவே, திராவிடர்களாகிய நாம் சமயம், சாஸ்திரம், வேதம் ஆகிய எவையுமில்லாத ஒரு நிபந்தனையற்ற—திக்கற்ற அடிமை சமுதாயமாக இருந்துவருகிற ஒரு இழிவான தாக்கப்பட்ட சமுதாயஸ்தர்களேயாவோம். இந்தப்படியான இழிவை நிலை நிறுத்தவும் திராவிடர்கள் தாங்களே அந்த இழிவைச் சிறிது நேரமாகிலும் இறக்கி வைக்காமல் சதா சுமந்துகொண்டே இருக்கச் செய்வதற்குமாக ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட புராணங்களைப் பின்பற்றி நடப்பவர்களாக—இருப்பவர்களாகவே இருந்துவருகிறோம்.

திராவிடர்—ஆரியர் என்கின்றதான (தேவர்—அசுரர்) இரு இனங்களைக் குறிப்பிடுவதும்—திராவிடர்களை ஆரியர்கள் இழிவுபடுத்தி, அடிமைப்படுத்தி, கீழ்மைப்படுத்திக் கொண்டதாகக் கற்பனைச் சித்திரங்கள் கொண்டதும் அல்லாமல், மற்றபடி புராணங்களைப் பற்றிச் சொல்லவோ, அதைப் பின்பற்றவோ புராணங்களில் என்ன இருக்கிறது?

'தேவர்களை அசுரர்கள் தொல்லைப்படுத்தினார்கள். சிவன், விஷ்ணு என்கின்ற கடவுள்கள் தோன்றி அசுரர்களை வெற்றி கொண்டு தேவர்களுக்கு அடிமையாக்கிக் கொடுத்து, தேவர்களைக் காப்பாற்றினார்கள்' என்கின்ற கற்பனைக் காரணங்களுக்காக இல்லாமல்—மற்றபடி மனிதர்களுக்கு வேண்டியதான அறிவோ, ஒழுக்கமோ, நீதியோ, நாணயமோ எந்தப் புராணங்களிலாவது கடுகளவு காணமுடியுமா?

அப்படிப்பட்ட புராணங்களில் காணப்படும் நடப்புகளைக் கொண்டாடுவதும், அவைகளில் சொல்லப்பட்டபடி நடப்பதுந்தான் இன்று திராவிடர்களின் சமயமாக, நடப்பாகவே இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இவ்வளவும் சொன்னோம்.

[தலையங்கம்—'குடிஅரசு' 12-10-1946]

2. தமிழர்க்கு நெறி உண்டா?

தோழர்களே! தாய்மார்களே!

இலக்கியம் படித்தவன் பழங்காலப் புலவன் என்ன சொன்னான், இலக்கியம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்பானே ஒழிய, அவைகளுக்கு அப்புக் கட்டிப் பேசுவானே ஒழிய, வேறு புதுமையில்—அறிவு ஆராய்ச்சிக்கு ஏற்றவற்றில் தன் புத்தியைச் செலுத்த மாட்டான். அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் படிப்பு அப்படிப்பட்டது.

சிலப்பதிகாரத்தைப்பற்றி, கண்ணகியைப் பற்றிப் பெரியதாகப் புகழ்வார்கள். அந்தக் கண்ணகியைப்போல் வேறு முட்டாள் பெண்பிள்ளையைக் காணவே முடியாது. அந்தக் கண்ணகியைப் புகழ்வதும் தமிழச்சிக்கு உதாரணம் காட்டுவதும் தமிழர் சமுதாயத்துக்கு எவ்வளவு இழுக்கு தெரியுமா! கோவலன் அவளைக் கல்யாணம் பண்ணி விட்டுவிட்டு, மாதவி என்ற தாசி அழகாய் இருக்கின்றாள் என்று அவள் வீட்டிலேயே போய் உட்கார்ந்துகொண்டு, கண்ணகி வீட்டுக்கு வரவே இல்லையாம். அதற்காக அவள் பூ முடித்துக்கொள்ளவில்லையாம்; பாயில் படுக்கவில்லையாம். அவன் அயோக்கியத் தனத்துக்கு, அவன் கேட்டு அனுப்பும்போதெல்லாம் நகைகளைக் கழற்றி அனுப்பிக் கொண்டே இருந்தாளாம். இது எவ்வளவு முட்டாள்தனம்! இந்தச் சிலப்பதிகாரம்போல் வேறு அழுக்கு மூட்டை இலக்கியம் இல்லவே இல்லை.

இதனைத் துணிவோடு கண்டித்து உண்மையினைச் சொல்ல நம் புலவர்களுக்குத் துணிவும் இல்லை; அவர்கள் அறிவு அப்படியெல்லாம் எண்ணத்தோன்றாது. சிலப்பதி காரமோ ஒரு கற்பனைக்கதை. கண்ணகியும் ஒரு கற்பனைப் பெண்பிள்ளை. நூல் முழுதும் மடத்தனம்–புளுகு! இப்படியா தமிழனுடைய வாழ்க்கைக்கு உதாரணம் எடுத்துக் காட்டுவது? புலவர்கள், பாவம்—இதில் ஊறியவர்கள் என்ன செய்வார்கள்? இதை நாட்டில் வைத்திருக்கலாமா? வயிற்றுப் பிழைப்புக்காக—நம் மேடையில் அலங்காரமாகப் பேச வேண்டுமானால் இது பயன்படும்; காரியத்திற்குப் பயன்படுமா? இந்த இலக்கியம் பூராவும் மூடநம்பிக்கை, பார்ப்பன உணர்ச்சிமிகுந்து காணப்படுவது. இந்த சிலப்பதிகாரத்தையோ கண்ணகியையோ எடுத்துப் பேசுவதாயிருந்தால்—கண்டித்துப் பேசவேண்டுமானால், எடுத்துக்கொள்ளலாம்; ஒழுக்கம், அறிவுக்கு எடுத்துப் பேசமுடியாது.

நம் புலவர்கள் தொல்காப்பியத்தைப்பற்றி அது பழமையான நூல்; மிகச்சிறந்தது என்று பேசுவார்கள். இருக்கின்ற நூல்களுக்கு எல்லாம் முந்தியது தொல்காப்பியம்; 2500, 3000 ஆண்டுகளுக்கு முந்தியது என்று பெருமை பாராட்டுவார்கள்.

இந்தத் தொல்காப்பியங்கூட பார்ப்பனர் தென்னாட்டில் ஆதிக்கம் வகிக்கத் தலைப் பட்ட பிறகுதான் எழுதப்பட்டதாகும். இதிலும் ஆரியக்கோட்பாடுகள் புகுந்து இருக் கின்றன. இதிலும், 'மேலோர் மூவர்' கீழோர்—நாம் என்று கூறப்படுகிறது. இந்த 'மேலோர் மூவர்க்கும்' தான் ஆதியில் கரணங்கள் இருந்து—பிற்காலத்தில்தான் கீழோ ராகிய நமக்கு வந்தன என்று கூறுகின்றது.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" என்று கூறுகின்றது.

எனவே, தமிழன் இன்றைய நிலையில் தனது வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக் கள் என்று தெரிந்துகொள்ளத் தக்க கருத்துக்களைக் கொண்ட தமிழ்நூல் ஒன்றுகூட இன்று நமக்கில்லை.

மேலை நாடுகளிலுள்ள புலவர்கள் எல்லாம் அந்தந்த நாட்டு இலக்கிய வளர்ச்சிக்காக நூல்கள் இயற்றி, அந்தந்த நாட்டு மக்களை எல்லாம் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லுகின்றனர்.

ஆனால், நம்நாட்டுப் புலவர்களோ அப்படி அல்லர். நம்மக்களை எவ்வளவு தூரம் பின்னுக்கு இழுத்துச்சென்று—நம் மக்களைச் சிந்திக்கச் செய்யாமல் காட்டுமிராண்டிகளாக ஆக்க முடியுமோ, அந்த வேலையைச் செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.

[புதுக்கோட்டையில், 16-3-1960-ல் திருமணத்தில் தலைமையுரை—'விடுதலை' 28-3-1960]

3. புத்தம்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

புத்த மதத்திற்குக் கடவுள் இல்லை; ஆத்மா இல்லை; நித்தியமொன்றுமில்லை என்கின்ற கொள்கைகள் இருக்கின்றன என்று சொல்லுகின்றார்கள்; இது புத்தரால் சொல்லப்பட்டது என்றும் சொல்லுகிறார்கள். இதை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம்.

இந்தக் கொள்கைகளை—புத்தர் சொன்னார் என்பதற்காக, புத்திக்குப் பட்டாலும் படாவிட்டாலும், பவுத்தர்கள் என்பவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள். இப்படியேதான் மற்ற மதக்காரர்களும் கடவுள், ஆத்மா நித்தியப் பொருள் உண்டு; மனிதன் இறந்த பிறகு கடவுளால் விசாரிக்கப்பட்டு, அவன் செய்கைக்குத் தகுந்தபடி மோட்சம், நரகம் (சன்மானம், தண்டனை) ஆகியவைகள் கடவுளால் கொடுக்கப்படுவது உண்டு என்பன போன்ற பல செய்திகளை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு கூட்டத்தார்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தங்கள் தங்கள் பகுத்தறிவு, ஆராய்ச்சி, யுக்தி அனுபவம் ஆகியவைகள் காரணமாகக் கொண்டிருக்கிறார்கள் என்று ஏற்படுவதானால் இருதிறத்தாரும் சுயமரியாதை இயக்கக்காரர்களேயாவர்கள்.

ஏனெனில், கண்மூடித்தனமாய்—முன்னோர் வாக்கு என்பதாக அல்லாமல், தங்கள் தங்கள் அறிவு ஆராய்ச்சியின் பலனாய் ஏற்பட்ட அபிப்பிராயம் என்று சொல்லுகின்றவர்களாய் இருக்கின்றார்கள்; ஆதலால் அவர்கள் சுயமரியாதைக்காரர்கள் ஆகின்றார்கள்.

உதாரணமாக, புத்த மதத்தினன் என்பவன் ஒருவன் தனக்குக் கடவுள் இல்லை என்று வாயால் சொல்லிக்கொண்டு, காரண காரியங்களுக்கு ஆதாரம் என்ன என்பதை அறியாமல் சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பானானால் அவன் தன்னைப் புத்த மதத்தான் என்று சொல்லிக்கொள்ள முடியவே முடியாது. அது போலவே, ஒரு இந்துவோ, இஸ்லாமானவரோ, கிறித்தவரோ கடவுள் உண்டு என்று கூறுகின்ற மதக்காரராக இருந்து கொண்டு, நடப்பில் தங்கள் காரியங்களுக்கும், அவற்றின் பயன்களுக்கும் தங்களைப் பொறுப்பாக்கிக்கொண்டு, தங்கள் காரியங்களுக்குப் பின்னால் பயன் உண்டு என்கின்ற கொள்கையையும் நம்பிக்கொண்டு அதற்குச் சிறிதும் கட்டுப்படாமல் நடந்துகொண்டும் இருக்கின்ற ஒருவன், தன்னைக் கடவுள் நம்பிக்கைக்காரன் என்றும்—தனது ஆத்மா தண்டனையையும் சன்மானத்தையும் அடையக்கூடியது என்றும் நம்பிக்கொண்டிருக்கின்றவனாக இருக்கமாட்டான். ஆதலால், இந்த இரண்டு கூட்டத்தார்களும் சுயமரியாதைக்காரர்கள் அல்லர்.

ஏனெனில், அவர்களுடைய அறிவுக்கும் அனுபவத்திற்கும் விரோதமான நம்பிக்கையை உடையவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால், இவ்விரு கூட்டத்தாரிலும் சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள் தங்களுக்குத் தோன்றியவைகளும், தாங்கள் கண்ட உண்மைகளும்—முன்னோர் கூற்றுக்கு ஒத்திருந்தால் மாத்திரம் முன்னோர் கூற்றுக்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள பாத்தியமுடையவர்களாவார்கள். அப்படிக்கில்லாமல் முன்னோர் கூற்றுக்குத் தாங்களே உண்மையைப் பொருத்துகின்றவர்களும்—அல்லது

அதற்கு ஆதரவாகத் தங்களது உண்மை இருக்கின்றது என்று கருதுகின்றவர்களும் சுயமரியாதைக்காரர்களாக மாட்டார்கள்.

ஆகையால், நீங்கள் எப்படிப்பட்ட கொள்கையை உடையவர்களாக இருந்தாலும், அதில் எவ்வளவு உண்மை இருப்பதாக இருந்தாலும், அதை நீங்கள் பிரத்தியட்சத்தில் தெளிவுபடுத்திக்கொண்டீர்களா? அனுபவத்தில் சரிப்பட்டு வருகின்றதா என்பதைப் பூரணமாய் அறிந்து கொண்டவர்கள் என்பதைப் பொறுத்தும், அவை உங்களுடைய சொந்த அபிப்பிராயத்தின்மீது நம்புகின்றீர்களா? அல்லது அந்தக் கொள்கைகளைச் சொன்ன மதத் தலைவர்கள் சொன்னதற்காக நம்புகிறீர்களா என்பதைப் பொறுத்துமேதான் உங்கள் மதத்திற்கோ கொள்கைக்கோ மதிப்புக் கிடைக்கும்.

[சென்னை மவுண்ட்ரோடிலுள்ள புத்தமத சங்கத்தில் 22-3-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 29-3-1931]

4. புத்தரும் நாமும்

தோழர்களே!

புத்தர் மாநாடு என்பதாக ஈரோட்டில் போனவாரம் ஏன் ஒரு மாநாடு கூட்டினோம்? நாம் எல்லோரும் புத்தர்களாக ஆவதற்கா? அல்லது மக்களை, 'இந்த மதத்தை விட்டு புத்த மதத்துக்குப் போங்கள்' என்று சொல்லுவதற்கு ஆகவா? இல்லை. பின் எதற்கு என்றால், இன்றையதினம் நாம் எவையெவைகளை நம்முடைய கொள்கைகளாகச் சொல்லி, எவையெவைகளை நமக்கு ஏற்றதல்ல எனக் கருதி அழிக்கவேண்டும்—ஒழிக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோமோ அந்தக் காரியங்களுக்குப் புத்தருடைய தத்துவங்களும், உபதேசங்களும், கொள்கைகளும் மிகவும் பயன்படுகின்றன என்பதனாலேயே ஆகும். அதாவது, இன்றைய தினம் நம்மை அடிமைப்படுத்தி நடத்தி வருவதற்கான ஆதாரங்களாயுள்ள கடவுள், மத, சாஸ்திர, புராண, இதிகாசங்கள் ஒழிப்பு வேலைக்கு, புத்தர் சொன்னவைகள் மிகவும் ஆதரவளிக்கும்.

எப்படி என்றால், இன்றையதினம் நாம் சொல்லுகிற கொள்கைகள் எவையெவையோ அந்தக் கொள்கைகளைப் புத்தரும் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலேயே, இந்தத் தன்மையிலேயே சொல்லியிருக்கிறார் என்பதாக—அதாவது நாம் சொல்லுகிற கொள்கைகள் அவர் சொல்லிலும் இருக்கின்றன என்று ஒரு மேற்கோளாய் எடுத்துக்காட்டுவதற்காகப் பயன்படும். சாதாரணமாக சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைச் சொல்லுகிற போது அதை யார் சொல்லுகிறார் என்றால் 'சாதாரண ஒரு இராமசாமி சொல்லுகிறான்' என்கிறபோது, 'இராமசாமியைவிட கீதை பெரிது; கீதையைவிட இவன் அறிவாளியாக்கும்?' என்பார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களுக்கு, 'இராமசாமி மட்டும் சொல்லவில்லை; நீங்கள் பத்தாவது அவதாரம் என்கிற புத்தரும்—இராமசாமி சொல்லுகிறதைத்தான் சொல்லியிருக்கிறார்' என்றால் எவன் அதை எதிர்க்க வரமுடியும்?

சாதாரணமாக, இன்று புத்தரை இந்துக்கள் என்பவர்களில் எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்; போற்றுகிறார்கள். புத்தக் கொள்கைக்காரர்களை எவ்வளவோ கொடுமைப்படுத்தி, அவர்கள் நிலையங்களுக்குத் தீ வைத்துக் கொளுத்தியும், புத்தர்களை அடித்து உதைத்துக் கழுவிலேற்றிச் சித்திரவதை செய்தும், மிஞ்சியவர்களைப் படகிலேற்றிக் கடலில் ஓட்டிவிட்டும்—ஆக இப்படிப் பலவிதமான கொடுமைகளைப் பார்ப்பனர்கள் இந்துமதம் என்பதன் பேரால் புத்தர்களுக்கு எதிராகச் செய்தும், புத்தர் பெருமையை ஒழிக்கமுடியாமல் போனதுடன்—இப்போது புத்தரை மகாவிஷ்ணுவின் பத்தாவது அவதாரம் என்றும், இந்து மதத்தின்—சைவம்-வைணவம் போன்ற உட்பிரிவு மதமே புத்தமதக் கொள்கை என்பதாகவும் ஆக்கிக்கொண்டு புத்தரை ஒப்புக்கொண்டார்கள் சரியாகவோ, தவறாகவோ.

அதுபோலவே, நம் சர்க்கார் என்பதும் புத்தரை ஒப்புக்கொண்டதோடு அவரது கோட்பாடுகள், கொள்கைகளுக்குச் சட்டப்படி மதிப்புக் கொடுத்து ஒப்புக்கொண்டிருக்கிறது. அதாவது புத்தருடைய சின்னமான சக்கரம் இன்று நாட்டுக்கொடி என்பதிலே வைக்கப்பட்டுள்ளது; தர்ம சக்கரம் என்கிற பெயரால், அதுபோலவே இந்திய சர்க்காரின் சின்னமாக புத்த அசோக ஸ்தூபிச் சின்னம் வைக்கப்பட்டுள்ளது. அதோடு புத்தர் பிறந்தநாள் என்கிற பேரால் சர்க்காரால் பொது விடுமுறையும் விடப்படுகிறது. இவ்வளவு தூரம் இதையெல்லாம் செய்கிறபோது இந்த சர்க்காரும் புத்தரது கொள்கையை ஏற்றுக்கொண்டது என்பதாகத்தானே அர்த்தம்! சர்க்காரும் ஒப்புக்கொண்டுள்ளது; இந்து மதஸ்தர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அப்படி ஒப்புக்கொள்ளப்பட்டவரின் பேரால்—நாம் இன்று சொல்லுகிற கொள்கைகள் என்பவைகள் அவருடைய உபதேசத்திலும் இருக்கின்றன. அதுவும், நமக்கு எப்படி இந்தக் கொள்கைகள்தாம் இலட்சியமோ, அதேபோல அவரும் இந்தக் கொள்கைகளையே இலட்சியமாகக்கொண்டு சொல்லி வந்தார். ஆதலால், அந்தப்படியான அவரை நீங்கள் ஒப்புக்கொண்டுள்ளீர்கள் என்பதாகக் காட்டிச் சொல்லமுடியும். எப்போதும், நான் சொல்லுகிறேன் என்பதைவிட, நான் மட்டும் சொல்லவில்லை; நமக்குப் பெரியவர்கள் எல்லாம் இப்படித்தான் சொல்லுகிறார்கள் என்று சொல்லுவதிலே கொஞ்சம் பலம் அதிகமல்லவா? ஆதலால்தான் இந்தப்படிச் சொல்லுவதன் மூலம் பார்ப்பனர்கள், காங்கிரசுக்காரர்கள், பண்டார சந்நிதிகள், பாஷாண்டிகள், ஆண்டிகள் போன்றவர்கள் நம்மைக் குறைகூற முடியாது.

இதைப் போலவேதான், சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் 'வள்ளுவர் குறள் மாநாடு' கூட்டினோம். அன்றும் இதையே சொன்னேன். அப்போது பல பார்ப்பனர்களும், தமிழ்ப் பண்டிதர்களும், 'இதிலும் கைவைத்து விட்டானே!' என்றார்கள். நாம் குறளை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னால் குறளுக்கு பார்ப்பன ஆதரிப்பு விளக்கமும், பாஷ்யமும் பார்ப்பனர்களாலும் அவர்களுடைய அடிமைகளாலும் கொடுக்கப்பட்டு—குறளின் உண்மைக் கருத்துக்கள், கொள்கைகள் மறைக்கப்பட்டு வந்தன. குறள் நம் கைக்கு வந்தவுடன் மக்களுக்கு உண்மை தெரிந்து இன்று பல மக்களாலும் குறளின் உண்மைத் தத்துவத்தைக் காண முடிந்தது; நாடெங்கும் குறள் சங்கமும், கழகமும், கொள்கையும் பரவுவதற்கு முடிந்தது. அது போலவேதான், இன்று நாம் 'புத்தக் கொள்கைப் பிரச்சார மாநாடு' கூட்டுகிறபோது பலர் பேசுகிறார்கள். 'இந்த இராமசாமி இதிலும் நுழைந்துவிட்டானே!' என்பதாக.

வள்ளுவரை ஆரிய மதத்தோடு சேர்த்துக்கொண்டு எப்படி அவர் மறைக்கப்பட்டு வந்தாரோ அப்படி புத்தரையும் பார்ப்பனர் மறைத்து வந்ததை வெட்ட வெளிச்சமாக்குகிறோமே என்கின்ற ஆத்திரத்தின் காரணமாகப் பார்ப்பனர் கண்டபடிப் பேசுகிறார்கள். நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. மேலெல்லாம் மலம் பூசிக்கொண்டு திரிபவன் மற்றொருவனைப் பார்த்து, 'உன்மேல் கெட்ட நாற்றம் அடிக்கிறது' என்பதுபோல்தான் அது.

தோழர்களே! புத்தமதம், அல்லது புத்தக் கொள்கை என்று சொன்னால் அது புத்தருக்குமட்டுமே சொந்தமான கொள்கை அல்ல. அது அறிவுக்குச் சொந்தமான கொள்கை. அறிவுதான் குரு என்றே அழுத்தமாகக் கூறியிருக்கிறார் புத்தர். 'உன்னுடைய அறிவு என்ன சொல்லுகிறதோ அந்தப்படி நட' 'அவர் சொன்னார், இவர் சொன்னார், இவ்வளவு பெரியவர் சொன்னார்; அதனால்தான் இப்படி நடக்கிறேன்' என்பது கூடாது. 'நான் சொன்னாலும் சரியென்றுபட்டால் மாத்திரம் ஏற்றுக்கொள்' என்று, அறிவுக்கு உரிமைகொடுத்தே புத்தர் எதையும் சொல்லியிருக்கிறார். அதுமாத்திரமல்லாமல் 'கடவுள் இருக்கிறாரோ இல்லையோ அதைப்பற்றி விவகாரம், கவலை எனக்கு வேண்டுவதில்லை.

ஆனால் எதற்காகக் கடவுள் என்பதாக இருக்கவேண்டும்? உயிர்கள் பிறப்பது இப்படி; அந்த உயிர்களின் வாழ்வு, அவைகளின் தன்மை, அடிப்படை இப்படி; அவைகளின் முடிவு இப்படி; அப்படியிருக்க இவைகளில் குறுக்கே எதற்காகக் கடவுளை இழுத்துப் போட வேண்டும்' என்றார்.

இந்த அளவோடு நிற்காமல் இன்னும் மேலேபோய்ச் சொல்லுகிறார், 'ஆத்மா என்பதாக ஒன்றும் கிடையாது' (புத்தன் என்றால் அநாத்மா கொள்கை கொண்டவன்) என்று தெளிவாகக் கூறி, 'ஆத்மா என்பதாக ஒன்று இருக்கிறது; அது உயிர்களின் கண்ணுக்குத் தெரியாமல் இயங்குகிறது; உடல்தான் அழிகிறதே தவிர, ஆத்மா அழிகிற தில்லை. உடல் அழிந்தபின் அந்த ஆத்மாவுக்கு அதனதன் கர்மவினைப்படிக்கு, அவை யவைகளுக்கு ஆன பலனை பகவான்—கடவுள் தருவார்' என்பதாகக் கூறி கடவுள் என்ற கற்பனையை உறுதிப்படுத்த, கடவுளுக்கு அனுசரணையானதாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ள மற்றொரு கற்பனையான 'ஆத்மார்த்தக் கொள்கை'யை மிகவும் கண்டித்துள்ளார். மற்றபடி இவைகளைத் தவிர உருவவழிபாடு, பல கடவுள்கள், அந்தப்படியானவைகளுக் காகச் செய்யும் பூசை, உற்சவம் முதலான காரியங்களையும் நல்ல அளவுக்குக் கண்டித்துள்ளார்; அவைகளைத் தவறு என்று மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளார், இப்படி இன்னும் பலவிதத்திலும் இந்த ஆரியப், பார்ப்பனக் கொள்கை, கலாச்சாரம், மதம் ஆகியவற்றைக் கண்டித்துள்ளார் புத்தர்.

இந்தப்படியெல்லாம் சொன்னதற்காக அவரும் அவருடைய இயக்கத்தார்களும்மிகுந்த அளவுக்குக் கஷ்டம் அடைந்துள்ளனர்; தொல்லைகள் அனுபவித்துள்ளனர். புத்தமாநாடு ஏன் கூட்டவேண்டும் என்பதற்கு, பார்ப்பனர்கள் புத்தமதத்தை அழிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கான ஆதாரங்களே போதும், அவ்வளவு தூரம் ஆரிய எதிர்ப்புக் கொள்கை கொண்டது புத்தக் கொள்கைகள், நான் முன்பே சொன்னதுபோல் இராத்திரியோடு இராத்திரியாக புத்த நிலையங்கள் பார்ப்பனர்களால் நெருப்பில் பொசுக்கப்பட்டுள்ளன; புத்தநூல்கள் நெருப்பில் போடப்பட்டும், ஆற்றில் எறியப்பட்டும் அழிக்கப்பட்டன; புத்தர்களைக் கப்பலேற்றி இந்த நாட்டைவிட்டுத் துரத்தினார்கள். எப்படி புத்தமதம் ஜப்பானிலும், சீனாவிலும், பர்மாவிலும், இலங்கையிலும் இன்னும் இதுபோன்ற இடங் களில், தீவுகளில் பரவமுடிந்தது என்றால்—இப்படிப் பார்ப்பனர்களால் கடலில் துரத்தப்பட்ட புத்தர்கள் அவரவர்கள் போய்ச் சேர்ந்த இடங்களில் தங்கள் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ய, அங்கெல்லாம் புத்தமதம் தோன்றியது.

இன்னும் இந்த சைவர்கள் செய்தகொடுமை இருக்கிறதே அவை சொல்லிமுடியாது. இன்றைக்கும் நடக்கிறது திருவிழா, மதுரையில்—'சமணர்களைக் கழுவேற்றிய திருவிழா' என்று. அதுபோலவே வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவத்திபுரம் (செய்யாறு) என்கிற ஊரிலுள்ள கோயில்மதிலில் சமணர்களைக் கழுவேற்றுவது போன்ற உருவத்தைச் செதுக்கி வைத்துள்ளார்கள். வைணவர்கள் யோக்கியதைதான் என்ன? அவர்களும் இப்படிச் செய்திருக்கிறார்கள். இன்னும், மாநாட்டில், புத்தர்மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் வேதாசலம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்—'இன்றையதினம் நம் கோயில் களாக இருக்கும் பல கோயில்கள் முன்பு புத்தநிலையங்களாக இருந்தன' என்றும், 'ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், பழனி, திருப்பதி முதலிய இடங்களில் இருந்த புத்தர் நிலையச் சிலைகளே அரங்கநாதராகவும், வரதராசராகவும், ஏகாம்பரராகவும், சுப்பிரமணியனாகவும், வெங்கடாசலபதியாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன,' என்று. இப்படிப் பல கொடுமைகள் செய்யப்பட்டுள்ளன.

ஏதோ சைவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். 'நாங்கள் அன்பு வழிக்காரர்கள்; அன்பே சிவம் என்றெல்லாம்; அத்தனையும் பித்தலாட்டம். 'சைவம் வளர்ந்ததே பலாத்காரத்தினால்தான்' என்பது அவர்களுடைய நூல்களைப் பார்த்தாலே தெரியவரும்.

அதுமட்டுமல்ல ; அன்பு, அன்பு என்கிறார்களே அவர்களுடைய கடவுள்களில் எதனுடைய நடத்தை அன்புடையதாய்—அன்பு நடத்தையாய் இருக்கிறது? தோன்றிய கடவுள்கள் அத்தனையும் மக்களை ஒவ்வொருவரைக் கொல்லுவதற்காகத் தோன்றிய கொலைபாதகக் கடவுள்களே தவிர, ஒரு கடவுளாவது கொலைசெய்யாத கடவுள் என்று சொல்லிவிடமுடியுமா? அந்தக் கடவுள்களின் ஆயுதங்கள் கூட மழு, சூலம், வேல் போன்ற ஆயுதங்கள் தாமே? அப்புறம் அன்பாவது, வெங்காயமாவது! அதுபோலவேதான் வைணவம்; அதாவது, வைணவக் கடவுள்கள் என்பவைகளின் யோக்கியதையுமாகும். ஆகவே இதிலிருந்து பொதுவாக மதசம்பந்தமான மாற்றம், மாறுதல் என்பதெல்லாம் பலாத்காரம் இல்லாமல் வெறும் அமைதி, அன்பு, அகிம்சை வழியிலே எதுவும் நடைபெற்றுவிடவில்லை என்றுதானே தோன்றுகிறது?

இப்போது நடைபெற்ற புத்தர் மாநாட்டின் மூலம் நல்லபலன் ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம். எல்லாதர, எல்லாநாட்டு மக்களுக்கும் நம் கொள்கையின் உண்மை நோக்கங்கள் தெளிவாகத் தெரிய ஒரு வசதி ஏற்பட்டதோடு மக்களிடமும் நல்ல அளவுக்குக் கிளர்ச்சி எண்ணமும் ஏற்பட்டிருக்கிறது.

மாநாட்டுத் தலைவர் டாக்டர் மல்லல சேகரா அவர்கள் பச்சையாக என்னிடம் ஒப்புக் கொண்டாரே; 'உங்கள் கொள்கைகள்தாம் புத்தர் கொள்கைகள்' என்று. அவர் கொழும்புவில் புத்தமதக் கலாச்சாரப் பேராசிரியர் ; டாக்டர் பட்டம்பெற்றவர் ; உலக புத்த அய்க்கிய சங்கத்தலைவர் ; மற்றும் பல சங்கங்களுக்கும் தலைவர். '53 சங்கங்களுக்கு நான் தலைவனாய் இருக்கிறேன்' என்று, நான் பேசிக்கொண்டிருக்கும் போது என்னிடம் சொன்னார். அவர் கூறினார், 'பல மாநாடுகள் பார்த்திருக்கிறேன்; ஆனால், இதைப் போல் பார்த்ததில்லை' என்று. அந்த அளவுக்கு இந்த மாநாடு பயன்பட்டிருக்கிறது.

['புரட்சிக்கு அழைப்பு' நூலிலிருந்து ஈரோட்டில் 23, 24-1-1954லும், சென்னையில் 31-1-1954லும் சொற்பொழிவுகள்.]

5. பவுத்தர்களின் சடங்குகள்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

பவுத்தர்கள் பெயரளவிலேயே, 'நாங்கள் புத்தரின் கொள்கைகளைக் கடைப் பிடிப்பவர்கள்' என்று கூறுகிறார்களே தவிர அவர்களும் இந்துமதத்தில் உள்ள வைதிக முறைகளைப் போன்ற—பகுத்தறிவுக்கொவ்வாத சடங்குமுறைகளைக் கடைப்பிடிக் கிறார்கள். அவர்கள் புத்தரையே தெய்வமெனக் கொண்டாடுகின்றனர். புத்தரின் சிலைகள் பல ரகங்களிலும் செய்யப்பட்டிருக்கின்றன. சில விக்கிரகங்கள் இருபது, முப்பது அடி நீளமுள்ளவைகளாகக் கூட இருக்கின்றன. தங்கத்தால் ஓடுகள்போட்ட ஆலயங்களும் இருக்கின்றன. அவர்களும் இதற்கென்றே செல்வத்தைப் பாழ்படுத்தி பெரிய பவுத்தக் கோவில்களையும், மடாலயங்களையும் கட்டியுள்ளனர். அவர்களும் புத்தவிக்ரகத்திற்குப் பச்சையாக உள்ள பதார்த்தங்களாகிய பழம் போன்றவைகளை வைத்துப் பூசை செய்கிறார்கள். இங்கு நின்றுகொண்டு வணங்குவதைப்போல் அல்லாமல் அவர்கள் மண்டியிட்டு உட்கார்ந்து கும்பிடுகிறார்கள்.

இவைகள் யாவையும் நான் கண்டபொழுது என்னுடைய மனத்திற்கு வெறுப்பாகி விட்டது. நாம் கடைப்பிடிக்கும் புத்தரின் கொள்கைக்கு முற்றிலும் மாறான முறையில் அவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

[சென்னை குயப்பேட்டையில், 6-2-1955-ல், சொற்பொழிவு—'விடுதலை' 8-2-1955]

6. புத்தர் யார்?

'புத்தர்' என்றால் என்ன? உங்களுக்குத் தெரியவேண்டும். ஈரோட்டில் நடந்த புத்த மாநாட்டில் திரு. மல்லல சேகரா விளக்கமாக எடுத்துச் சொன்னார். உலக புத்த சங்க தலைவர் அவர். அவர் வந்து எடுத்துக் கூறியபிறகுதான் நாமும் தைரியமாக ஓங்கி அடிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 'புத்தன்' என்று ஒருவர் இருந்தது கிடையாது. சித்தார்த்தன் என்று ஒருவர் இருந்திருக்கிறார். சித்தார்த்தன்தான் தன் புத்தியைக் கொண்டு ஆராய்ந்து, அதனால் புத்தர் ஆனார்! இது மல்லல சேகரா சொன்னது. புத்தர் என்றால் அறிவாளி என்றுதான் பெயர். ஆங்கிலப் பேரகராதியில் 'என்சைக்ளோபீடியா—(Encyclopeadia Britanica) அதாவது 60, 70 வருடங்களுக்கு முன்னால் வெளிவந்த அகராதியில் பார்த்தால் புத்தன் என்றால் புத்தியை அடிப்படையாகக் கொண்டவன்; அறிவை அடிப்படையாகக் கொண்டவன், அறிவன் என்றுதான் அர்த்தம் இருக்கிறது. இன்றும் தமிழ் நிகண்டில் பார்த்தாலும், புத்தியை ஆதாரமாகக் கொண்டவன் புத்தன்; புத்திக்கு ஆதாரமாகத் தோன்றுகின்ற உண்மைகள்தாம் புத்தம் என்று இருக்கிறது. ஈரோடு புத்த மாநாட்டில் 'பாலி' வார்த்தையில் உள்ள சுலோகங்களைச் சொல்லி எடுத்துக்காட்டியபோது பெரிய அதிசயமாக இருந்தது.

புத்தமதம் என்பதிலும் ஒன்றைச் சொல்லி அதை நம்பித்தான் ஆகவேண்டும் என்ற கட்டுத்திட்டம் இல்லை. மல்லல சேகரா இதை விளக்கமாகச் சொன்னார். புத்த மதத்தில் சித்தார்த்தர் எங்பவர் சொன்னதாக எதுவும் இல்லை. இப்போது 'குரான்' என்பது நபிகள் நாயகம் பல சந்தர்ப்பங்களில் பல பேரிடம் சொன்னதைப் பலபேர் கேட்டுக் கொண்டிருந்து எழுதினார்கள். அப்படி எழுதியதைக் கடைசியாக ஒத்துப்பார்த்தால் சரியாக இருந்தது என்று சொல்லுகிறார்கள். அதுபோல புத்தன் யாரிடம் என்ன சொன்னான் என்று சொல்லமுடியுமா? புத்தமதத்தில் சொல்லுவது எல்லாம், 'அம்மா சொல்லுகிறாள் என்பதற்காக நம்பாதே; அப்பா சொல்லுகிறார் என்பதற்காக நம்பாதே நீண்ட நாட்களாக நடந்து வருகிறது என்பதற்காக நம்பாதே; சாஸ்திரம் சொல்கிறது, வேதம் சொல்கிறது, அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்பதற்காக எதையும் நம்பாதே; உன் அறிவுக்கு ஆதாரமானதை—பொருத்தமானதை நம்பு' இதைத்தான் இன்று நாம் சொல்லிவருகிறோம். இதைச் செய்ய இந்து மதத்தை விட்டு வெளியேறித்தான் ஆகவேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது?

[வேலூர் நகராட்சியில், 28-10-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-11-1956]

புத்தர் கொள்கை இருட்டடிக்கப்பட்டது. ஏனெனில், புத்தர் இந்நாட்டில்தான் பிறந்தார், வளர்ந்தார். உண்மைகளைக் கண்டறிந்து பிரச்சாரம் செய்தார் என்ற போதிலும், அவர் இந்நாட்டில்தான் விரட்டியடிக்கப்பட்டார். அவருடைய கொள்கைகளுக்கும், உண்மைகளுக்கும் இந்நாட்டில்தான் மதிப்பின்றிப்போகும்படி செய்தனர். புத்தரைப் பற்றி இந்நாட்டு மக்கள் கொஞ்சமும் அறியமுடியாதபடி செய்துவிட்டனர். புத்தருக்கோ அவருடைய கொள்கைகளுக்கோ மரியாதை இல்லாது செய்துவிட்டனர். புத்தரை நினைத்தால் நினைத்த மனத்தைக் கழுவவேண்டும்! அவரைப் பற்றிக் காதினால் கேட்டால், காதைக் கழுவவேண்டும் என்ற அளவுக்குக்கூட புத்தரை வெறுக்கும் மனப்பான்மையை உண்டாக்கிவிட்டனர். இராமாயணத்தில் புத்தருக்கு இழுக்கு, இராமாயணத்தில் புத்தரைப்பற்றிக் கூறுகையில், 'புத்தன் ஒரு நாஸ்திகன்; திருடன்; அயோக்கியன் என்றும்' புத்த பிக்குகள் நாஸ்திகர்கள், சாஸ்திர புராணங்களை வெறுப்பவர்கள்,' என்றெல்லாம் ஆத்திரத்துடன் இராமன் வாயினாலேயே சொல்லுவதாகக் காணப்படுகிறது. நாயன்மார்களும் புத்தரை இழிவுபடுத்தினர். மற்றும் இந்து மதத்தின் பேரால் ஏராளமான நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலியோர்கள் உண்டாக்கப்பட்டு அவர்கள் எல்லோரும்

புத்தரைப்பற்றியும், அவருடைய கொள்கைகளைப்பற்றியும் இழிவுபடுத்தி இருக்கின்றனர். நாயன்மார்கள் என்பவர்களெல்லாம் 'புத்தரை விரட்டவேண்டும்; வெட்டவேண்டும் அவர் பின் நடக்கும் புத்த பிக்குகளைக் கொலைசெய்யவேண்டும், அவர்களின் பெண்களைக் கற்பழிக்கவேண்டும்' என்றுங்கூட எழுதிவைத்திருக்கின்றனர்.

[சென்னையில், 26-5-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 28-5-1956]

7. புத்தர் விழா

திராவிடர்களைச் சூத்திரர்களாகவும், இழிமக்களாகவுமாக்கி, கல்வி கொடுக்காமல், அறிவு வளர்ச்சிக்கு இடம் கொடுக்காமல், காட்டுமிராண்டிகளாக்கியது ஆரியமாகும்.

திராவிடப் பெண்களைச் சூத்திரச்சிகளாகவும், சில பெண்களை தாசி, வேசி, தேவடியாள்களாகவும், சில இடங்களில் உள்ள பெண்களை—பார்ப்பனர்களையே தங்களுக்குக் காதலர்களாகவும், சம்பந்தக்காரர்களாகவும் வைத்துக்கொள்ளச் செய்தது ஆரியமாகும்.

இதை 35 ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவை எதிர்த்துப் புரட்சி செய்து வந்ததால்—வருவதால் ஓரளவுக்கு நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறதுடன், இதுவரை நடந்திராதமாதிரி ஒரு 'சூத்திரனுக்கும் தாழ்ந்த சாதி என்று சொல்லப்பட்டவர்—தமிழ் நாட்டுக்கு முதல் மந்திரி (நிர்வாகபதி)யாகவும், ஒரு 'சூத்திரர்' ஹைகோர்ட்டு முதல் நீதிபதியாகவும், ஒரு 'சூத்திரர்' பாதுகாப்புபதி (I. G. of Police) யாகவும், ஒரு 'சூத்திரர்' கல்விபதி (கல்வி அதிகாரி)யாகவும் வர நேர்ந்தது. ஆகவே, நிர்வாகம், நீதி, பாதுகாப்பு, கல்வி இலாகா தலைமையானது—மனுதர்மசாஸ்திரத்திற்கும், 200 ஆண்டு நடப்புக்கும் விரோதமாக—'அகில இந்திய பார்ப்பன சமுதாயத்தின் எதிர்ப்பையும், சூழ்ச்சிகளையும் சமாளித்து' இந்த நிலை இன்று தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

மற்றும் முடநம்பிக்கைகளையொழிக்கும் முயற்சியும் ஓரளவுக்கு வெற்றிபெற்று பிள்ளையாரை உடைக்கவும்; இராமாயணம் வெறுக்கப்படவும், கொளுத்தப்படவுமான காரியங்கள் நடைபெறுவதுடன், ஆரியத்திற்கு அணுகுண்டு போன்ற 'புத்தர் பெருமான் விழா' கொண்டாடவும் தமிழ்நாடு முனைந்துவிட்டது.

இதைக்கண்டு பார்ப்பனர் அவதிப்படுகிறார்கள்; ஆத்திரப்படுகிறார்கள்; இடர் ஏற்படுத்தத் துடிக்கிறார்கள்.

தமிழர்கள் (சூத்திரர் எனப்பட்டவர்கள்), இந்தச் சமயத்தில் அசார்சமாய்க்—கவலையற்று இருந்துவிடாமல் 24, 25, 26, 27 தேதிகளில் புத்தர் விழாக் கொண்டாடுங்கள்! 'கடவுள்களும் ஆத்மாக்களும், பார்ப்பான் கற்பனையில் உதித்த பூச்சாண்டிகள் என்று கருதுங்கள்!

(நெஞ்சில் தீரமும், அறிவில் விளக்கமும் ஏற்பட்டவர்கள் குறைந்த அளவுக்கு, 'நான் இனிமேல் உருவ வணக்கம் செய்வதில்லை' உருவக் கடவுள்களுள்ள கோவில்களுக்கு வணக்கத்திற்காகப் போவதில்லை, எவ்வித மதக்குறியும் இட்டுக்கொள்வதில்லை.' என்கிறதான உறுதிசெய்துகொள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.)

டாக்டர் அம்பேத்கார் லோக்சபையிலேயே துணிந்து, 'எனக்குக் கடவுள் நம்பிக்கையும், ஆத்ம நம்பிக்கையும் கிடையாது' என்று சொல்லிவிட்டதுடன், ஆரியத்திலிருந்து அடியோடு விலகிவிட்டார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

[அறிக்கை—'தோழன்' 20-5-1956]

8. புத்தர்

புத்தர் பிறந்த காலம் ஆரியம் தலைசிறந்து விளங்கி மக்கள் ரொம்பவும் காட்டுமிராண்டிகளாக ஆக்கப்பட்டிருந்த காலம். வேதம், சாஸ்திரம், புராணம் எழுதியவர்கள், 'புத்திசாலிகளாக' இருந்தாலும் அந்தக் காலம் எந்த அளவு அறிவு வளர்ச்சி பெற்றிருந்ததோ அந்த அளவில்தான் அவர்கள் புத்திசாலிகளாக இருந்திருக்கமுடியும். புராணங்களில் பார்க்கும்போதே இது தெரியும்.

நான் வள்ளுவரைப் பற்றிச் சொல்லும்போதுகூட இதையேதான் சொல்வேன். அந்தக் காலத்தில் எந்த அளவு அறிவு வளர்ச்சி பெற்றிருந்ததோ—எந்தக் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனவோ அந்த அளவுதான் இருக்கும். ஏதோ அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதனாலேயே—அவர்கள் சொன்ன எல்லா விஷயங்களும் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமாக இருக்கும் என்று கொள்ளமுடியாது. வள்ளுவரும், புத்தரும் மக்கள் இன்றைய நிலையைவிட மிகுந்த காட்டுமிராண்டியாக வாழ்ந்த அந்தக் காலத்திலேயே அக்கால அறிவுக்கு ஏற்ற மாதிரி சொல்லியுள்ளார்கள் என்பதனால்தான் பெருமையுடன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

முஸ்லிம்களைப்பற்றிச் சொல்லும்போது நபிகள் பிறந்த காலத்தில் அராபிய மக்கள் அசல் காட்டுமிராண்டிகளாகவே வாழ்ந்தார்கள்; அந்தக் காட்டுமிராண்டிக் காலத்திலேயே, அவர் அந்தக்கால நிலைக்கு ஏற்ற வழி காட்டினார் என்பதனாலேயே அவரை மகான் என்கிறோம். அதுபோலவேதான், ஏசுநாதர். இவர்களையெல்லாம் பெரிதாகப் பேசக் காரணம் மக்களிடம் மூடநம்பிக்கையும், அறியாமையும், காட்டுமிராண்டித்தன்மையும் நிறைந்திருந்த காலத்தில் சொன்னார்கள் என்பதால்தான்.

மத சாஸ்திரிகள் வண்டி வண்டியாக அளப்பார்கள். ஆனால் சரித்திரத்தைப்பற்றிப் பேசினால், 'எவனோ வெள்ளைக்காரன் சொன்னதை நம்புகிறாயா? என்பார்கள். இவர்களெல்லாம் உள்ளபடியே மனச்சாட்சியை மறைத்துப் பேசுவார்கள். மக்களும் வாதாடத் தெரிந்த அளவு படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று எண்ணுவதில்லை. எதை எடுத்தாலும் சண்டப்பிரசண்டமாகப் பேசவேண்டும் என்பதைத் தவிர—சரித்திரம், உண்மைத் தத்துவம் படித்து விஷயங்களை உணர்ந்து பேசவேண்டும் என்று நினைப்பதேயில்லை. மதம் என்றாலே மடமைதான்.

வெள்ளைக்காரன் சொன்ன சரித்திரத்தைப்பற்றி கவலைப்படவேண்டாம். வடநாட்டில் 'பாரத இதிகாச சமிதி' என்ற ஒரு ஸ்தாபனம் உள்ளது. பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதில் முக்கியஸ்தர்களாக உள்ளார்கள். கவர்னர் முன்ஷி ஒரு முக்கியஸ்தர்; உபஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் ஒரு முக்கியஸ்தர்; பிர்லாதான் செலவுக்குப் பணம் கொடுக்கிறவர். மாஜி வெங்கட்ராம சாஸ்திரி இன்னும் பல ஆராய்ச்சிக்காரர்கள் உள்ள அந்த ஸ்தாபனத்தில் வேதகாலம் (vedic age) என்ற ஒரு புத்தகம் எழுதியுள்ளார்கள். அதில் ஆராய்ச்சி செய்து முன்ஷி எழுதியிருக்கிறார். அதில் பல விஷயங்களை எழுதுகிறார்கள். அதற்கு அர்த்தம் மாத்திரம் வேறு சொன்னாலும் பல உண்மைகள் எழுதப்பட்டுள்ளன. அதில், 'அந்தக்காலம் காட்டுமிராண்டித்தனமான காலம்; புராண—இதிகாசங்கள் என்பவை சரித்திரங்கள் அல்ல; நடந்த விஷயங்களைப்பற்றியவையுமல்ல. அவை கற்பனைக் கதைகள். வியாசன் என்றாலே வியாசம், கதை, கற்பனை எழுதுகின்றவன் என்று அர்த்தம்; இவை ஒரு கருத்தைப் பிரச்சாரம் செய்யவே ஏற்பட்டவை' என்று முன்ஷி எழுதுகிறார். 'வேதிக் ஏஜ்' என்ற புத்தகத்தில் முன்னுரையாக எழுதும்போது, 'புராணம் புகுந்து மக்கள் மனத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துவிட்டது. அதுதான் எங்களுக்குக் கஷ்டமாகிவிட்டது' என்று எழுதப்பட்டுள்ளது.

100க்கு 75 புராணங்கள் பின்னால் எழுதப்பட்டவை. புத்தர் 2500 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தவர். புராண காலம் (Puranic age) என்பது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். (அதாவது புத்தர் காலத்திற்கு பிற்பட்ட காலமாகும்) என்று ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளார்கள்.

புத்தர் ஏற்பட்டு, அறிவும் ஒழுக்கமும் ஏற்பட்டதை ஒழிக்கவே—அவதாரக் கதைகள்—அவற்றுள் முக்கியமாக கிருஷ்ண அவதாரம், அதிலும் சிறப்பாக கிருஷ்ணனின் திருவிளையாடல்கள் சிருஷ்டிக்கப்பட்டன. அதாவது மூட நம்பிக்கைக்காகக் கிருஷ்ணனும் ஒழுக்கக் கேடுகள் ஏற்பட அவனது திருவிளையாடல்கள், லீலைகள் ஆகியவைகளும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவும் செய்துவிட்டு, அவை கடவுள் நடத்தை—வாக்கு என்பதற்காக கீதையும் வெகு நாளைக்குப் பின் எழுதப்பட்டது.

சாதாரண அறிவுடன் பார்த்தாலே தெரியும். ஒரு கடவுளை இவ்வளவு கேவலமாக சிருஷ்டி செய்து பாட்டில், பஜனையில், நடனத்தில், கூட்டத்தில் மற்றும் சகலவிதமான முறையிலும் அதையே பிரச்சாரம் செய்யவேண்டிய அவசியமென்ன? கோபிகளிடம்—மாற்றான் மனைவியிடம் கிருஷ்ணன் செய்த லீலையைப்பற்றிய கதையை, வாயைப் பிளந்துகொண்டு பார்த்துக் கைதட்டுபவன், தன் வீட்டில் கிருஷ்ணன் வந்து லீலை நடத்த ஒத்துக்கொள்ளுவானா? தன் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராத நிகழ்ச்சிகளைக் கூட வெறுத்து ஒதுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? அறிவைக்கொண்டு சிந்திக்க வேண்டும்! ஒரு சாதாரண கீழ்த்தர மனிதன் செய்ய மனம் இடம் தராத ஆபாசங்களையெல்லாம் கடவுள் பெயரால் நடத்தப்படுவதை வெறுத்து ஒதுக்காமல் அதற்கு ஆதரவு அளிப்பதும் அதைப் பண்டிகையாய்க் கொண்டாடுவதும் என்ன நியாயம்?

கீதை எழுதியதும், இராமாயணம் எழுதியதும் புத்தருக்குப் பின்னால்தான். புத்தர் அறிவும் ஒழுக்கமும் வளர வேண்டுமென்றார். அவை வளர்ந்துவிட்டால் இவர்கள் கதி என்னாவது? அதற்காகத்தான் புத்தர் பிரச்சாரத்தால் எவை எவை மழுங்கிப் போய்விட்டனவோ அவைகளை, மீண்டும் மீண்டும் பலப்படுத்தவே இவைகளை எழுதினார்கள். முன்ஷி எழுதியிருக்கிறார்: இராமனையும், கிருஷ்ணனையும்பற்றி—இவர்களால் ஆரியத்திற்கு அதிகமான பிரச்சாரம் ஏற்பட்டதாலேயே அவர்களை அவதாரமாக்கிவிட்டார்கள் என்று. இது பாரத இதிகாச சமிதிக்காரர்களே சொல்வது. இதை யெல்லாம் யாரும் சிந்திப்பதில்லை. எடுத்துப்போட்டு உட்கார்ந்து பேச ஆரம்பித்தால் இவை கற்பனைகள்—வடிகட்டின மடமை என்பது தெரியும்.

இன்று சாதியை ஒருவரும் ஆதரிப்பதில்லை; சாதி வேண்டுமென்று சொல்ல யாருக்கும் தைரியமில்லை. ஆச்சாரியார் ஒருவர்தான் சாதி காப்பாற்றப்பட வேண்டுமென்கிறார். அவரையும் கிட்டே நெருங்கிக் கேட்டால், 'நான் வேறு அர்த்தத்தில் சொன்னேன்' என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்.

எதற்கு சாதி இருக்கவேண்டும்? எப்படி சாதி இருக்கிறது? வேத சாஸ்திர புராணங்களை உபயோகப்படுத்தாமல் சாதி எங்கிருந்து வந்தது? அதை யெடுத்து பித்தலாட்டம் என்று சொல்லாமல், சாதி ஒழிப்புக்கு வேறு வழி என்ன இருக்கிறது?

நான்காவது அய்ந்தாவது சாதியாக்கி—பார்ப்பனரல்லாத மக்களை மடமையில் அழுத்திவைக்கவே வேத புராண மதம் வழி செய்கிறது. இதைக் கொஞ்சம் எடுத்துச் சொல்ல, திருத்த முயற்சித்தாலும், 'நாஸ்திகன்', 'மதத் துவேஷி', 'வகுப்புத் துவேஷி' என்று சொல்லித் தலையில் கல்லைத் தூக்கி வைத்துவிட்டால் என்ன அர்த்தம்?

இங்கு புத்தரைப்பற்றிப் பேசவேண்டிய அவசியமென்ன? இதுவும் என்ன ஆழ்வார், நாயன்மார் திருநட்சத்திரமா? புத்தரை வைத்து அவருக்குத் தேங்காய் பழம் வைத்துப்

பூஜை செய்வதோடு சரி என்றால் அப்படிப்பட்ட புத்தர் என்ற வார்த்தை அகராதியிலேயே இல்லாமல் இருந்தால் நல்லது என்றுதான் சொல்லுவேன்.

[எழும்பூரில், 15-5-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 17-5-1957]

9. புத்தநெறி அழிக்கப்பட்டது

பெரியோர்களே! தோழர்களே!

நமது நாட்டில் பார்ப்பனர்களால் புத்தருடைய கொள்கைக்கு எவ்வளவு எதிர்ப்பு அந்தக் காலத்தில் இருந்திருக்கின்றது என்பதைப் பார்த்தாலே தெரியும். அவருடைய ஆட்கள் அந்தக் காலத்தில் இந்துமதக்காரர்களால் கழுவேற்றப்பட்டிருக்கின்றார்கள்; செக்கிலிட்டு அரைக்கப்பட்டும் நெருப்பில் தூக்கி எறியப்பட்டும் இருக்கின்றனர்.

காஞ்சிபுரம் போன்ற கோயில்களில் எல்லாம் புத்தர்களைக் கொடுமைப்படுத்துவது போன்ற சிற்பங்களை நாம் இன்றுங்கூடக் காணலாம். மதுரையில் மட்டும் 8000 சமணர்களைத் துடிக்கத் துடிக்கக் கழுவில் ஏற்றி, கழுமுனை மண்டையில் வந்து எட்டிப் பார்க்கும் படிச் செய்து இருக்கின்றனர்! இன்றுங்கூட மதுரையில் சமணர்களைக் கழுவேற்றும் விழா வருடந்தோறும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இமயமலைச் சாரலில் தோன்றிய புத்தருடைய கொள்கை தென்கோடியிலுள்ள கன்யா குமரிவரையில் அந்தக் காலத்தில் பரவி இருந்திருக்கின்றது. தஞ்சைபோன்ற ஜில்லாக்களில் தெருவில் சிறு குழி வெட்டினால்கூட புத்த விக்கிரகங்கள் ஏராளமாக அகப்படுகின்றன. இப்படிப்பட்ட செய்திகளை நாம் தினம் பத்திரிக்கைகளில் காண்கிறோம்.

முட்டாள்தனமான அரசர்களும் இந்து மதத்தைச் சேர்ந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் புத்த மடங்களையும் கோயில்களையும் இடித்துச் சூறையாடி இருக்கின்றனர். தங்கம், வைரம் இவற்றால் ஆன புத்த விக்கிரகங்களை எல்லாம் திருடிக்கொண்டுபோய்த் தங்கள் தங்கள் மதக் கோயில்களை யெல்லாம் புதுப்பித்து இருக்கின்றனர்.

திருமங்கை ஆழ்வார் என்பவன் நாகப்பட்டினத்தில் இருந்த தங்க புத்த விக்கிரகத்தைத் திருடிக்கொண்டுபோய், சீரங்கம் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்திருக்கின்றான். மற்றும், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களில் முன்பு புத்தக் கோயில்களாக இருந்த பலவற்றை இந்துக்கோயில்களாக மாற்றியிருக்கின்றனர்.

தஞ்சை ஜில்லாவில்மட்டும் அடிக்கொரு கோயில் காணப்படுகின்றது. இந்து மதம் என்று கூறப்படுபவற்றினைச் சார்ந்த கீர்த்திபெற்ற கோயில்களில் முக்கால் பாகத்திற்கு மேல் தஞ்சை ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும்மட்டும் உள்ளன. ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பெற்ற கோயில்களில் பெரும்பகுதிக்குமேல் தஞ்சை மாவட்டத்திலும் திருச்சி மாவட்டத்திலுமே உள்ளன. இவைகளுக்கு அந்தக் காலத்து முட்டாள் அரசர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நிறைய நிலங்களை மானியமாக விட்டிருக்கின்றார்கள்.

இப்படி யெல்லாம்—எப்படியோ புத்த மார்க்கத்தை நாட்டிலிருந்தே ஒழித்துவிட்டார்கள். இந்தக் கொள்கை இப்போது இந்த நாட்டில் மிகமிக அரிதாக ஆகிவிட்டது; ஏன், புத்த நெறி இந்த நாட்டைவிட்டே வெளிநாடுகளுக்கு விரட்டி அடிக்கப்பட்டுவிட்டது.

இந்த நாட்டில் அதற்கு ஆதரவு இல்லாமற்போய்விட்டதே யொழிய வெளிநாடுகளில் அதற்கு நல்ல ஆதரவு ஏற்பட்டுவிட்டது. இன்று சைனா, ஜப்பான், திபெத், சயாம், பர்மா, சிலோன் போன்ற நாடுகளில் நல்லமுறையில் வளர்ந்து வருகிறது. வெள்ளைக்காரனை—கிறித்துவினது கொள்கை காட்டுமிராண்டித்தன்மையில் இருந்து நீக்கி சாதி அற்றவனாகச்

செய்தது. அந்த கிறிஸ்துவுங்கூட புத்தரின் கொள்கையினையே சுருக்கிக் கூறிஇருக்கின்றார் என்றுதான் கூறவேண்டும். எப்படி என்றால், புத்தரால் கூறப்பட்ட பத்துக் கோட்பாடுகளையே கிறிஸ்து, பத்துக் கட்டளைகளாகச் சுருக்கிக் கூறியிருக்கின்றார்! முகமதுநபி கூட ஏறத்தாழ அப்படித்தான் செய்துள்ளார்! ஆகவே, எல்லா மதத்தினர்களும் புத்தக் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டே தங்கள் கோட்பாடுகளை வளர்க்க முயன்றிருக்கின்றனர்.

எனவே, புத்தரை அடுத்து கிறிஸ்துவும் முகமது நபியும் தோன்றினார்கள். இவர்களுக்குப் பிறகு இந் நாட்டில் வேறு அறிவாளிகளே இல்லை என்று அர்த்தமா?

புத்தர் தன்னை மனிதர் என்றே கூறிக்கொண்டார். ஏசு தன்னைக் கர்த்தரின் தூதுவன் என்று கூறிக்கொண்டார். முகமது நபியும் தன்னை ஆண்டவனால் அனுப்பப்பட்ட தூதன் என்று கூறிக்கொண்டார். அப்படிக் கூறிக்கொண்டதால்தான் பாமர மக்கள் அவர்களை நம்பினார்கள்.

தன்னை, இப்படி மனிதன் என்று கூறிக்கொண்டு—மனித சமுதாயத்திற்கு வேண்டிய பகுத்தறிவுக் கருத்துக்களைக் கூறிய புத்த தர்மத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால்தான், நாம் இன்று கடுகளவுகூட மான உணர்ச்சி அற்றவர்களாக, முட்டாள்களாக இருக்கிறோம்.

முட்டாள்தனம் என்றாலேயே சுலபத்தில் தீப் பிடித்துக்கொள்ளும் வஸ்து என்று சொல்லலாம். அறிவு என்றால் சீக்கிரத்தில் நெருப்புப் பிடிக்கமுடியாத வஸ்து என்பது பொருள்.

[ஆரல்வாய்மொழியில் 20-12-1958-லும், ஈத்தாமொழியில் 26-12-1958-லும் சொற்பொழிவு—'விடுதலை' 17-1-1959]

புத்தரும் சமணர்களும் பார்ப்பனப் பித்தலாட்டங்களை விளக்கியும் கடவுள், மத புராணங்களின் பித்தலாட்டங்களை விளக்கியும் பிரச்சாரம் செய்ததன் விளைவாகப் பார்ப்பனர்கள் மதிப்பிழக்க ஆரம்பித்தனர். இந் நிலையைக் கண்ட பார்ப்பனர்கள், சதி செய்து புத்தர்களையும், சமணர்களையும் அரசர்கள்மூலம் கொன்றே ஒழித்துக்கட்டினார்கள். அவர்களுக்குப் பிறகு வேறு எவருமே தோன்றவில்லை.

[இடைப்பாடியில், 4-5-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 17-5-1961]

10. புத்தம் ஒரு கொள்கையே

பெரியோர்களே! தோழர்களே!

புத்தம் என்றாலே அது ஒரு மதம் என்றே மக்களுக்குத் தவறாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. அது மதம் என்றே என்னிடம் பலர் வாதாடி உள்ளனர்.

புத்தர் என்று சொன்னது அவருடைய பெயர் அல்ல. அவர் பெயர் சித்தார்த்தர் என்பது. புத்தர் என்பது—புத்தியைப் பயன்படுத்துபவர் புத்தர் என்று பெயர். அகராதியிலும் இதுதான் உள்ளது. ஈரோட்டில் நடந்த புத்த மாநாட்டிற்கு, உலக புத்த சங்கத் தலைவர் திரு. மல்லல சேகராவை அழைத்திருந்தேன். அவரும் இதைத்தான் சொன்னார்.

புத்தன் என்றால் அறிவினைப் பயன்படுத்தி அதன்படி ஒழுகுபவன். எவர் எவர் அறிவைக்கொண்டு சிந்தித்துக் காரியம் ஆற்றுகின்றார்களோ அவர்கள் எல்லாம் புத்தர்கள்தாம். புத்தம் ஒரு மதமல்ல; அது ஒரு கொள்கை.

இந்த நாட்டில், புத்தர் என்றால் நாத்திகர் என்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. சாஸ்திரங்களிலும்—புத்தியை ஆதாரமாகக் கொண்டு காரியம் ஆற்றுபவர்கள் எல்லாம் நாத்திகர்கள் என்று கூறப்பட்டு உள்ளது. கடவுளை, மதத்தை ஒத்துக் கொண்டவன்தான் ஆத்திகன் ஆவான். கடவுளையோ, மதத்தையோ ஒத்துக்கொள்ளாமல்—அதனை அறிவைக் கொண்டு அலசிப் பார்ப்பவர்கள் எல்லாம் நாத்திகர் என்றே அழைக்கப்பட்டுள்ளனர்.

இராமாயணத்திலேயே புத்தர்கள் நாத்திகர்கள், அறிவு வாதம் பண்ணுபவர்கள் என்று கண்டிக்கப்பட்டு இருக்கிறது. எவன் ஒருவன் அறிவு கொண்டு முன்னோர்களின் நடப்புக்களையோ—கடவுள், மதம் இவைகளைப்பற்றியோ அறிவு வாதம் பண்ணுகிறானோ அவன் நாத்திகன் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

அறிவு கொண்டு நடப்பதற்குப் பெயர்தான் பவுத்தம். 'புத்தம் சரணம் கச்சாமி' என்பது—அறிவைக்கொண்டு சிந்திக்கவேண்டும்; அறிவுக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்பதுதான். அப்படிக்கல்லாமல் புத்தனைக் கடவுளாக எண்ணி வழிபாடு செய்யக்கூடாது; அப்படிப் புத்தரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்.

அறிவுப்பாதையில் ஈடுபட்டுப் பலதடவைகள் வழுக்கிவிழுந்தாலும் பரவாயில்லை. காலம் எல்லாம் மடையனாக இருந்து சாவதைவிட சிலதடவைகள் அறிவைக் கொண்டு சிந்தித்துக் காரியம் ஆற்றுவதில் இரண்டொன்று தவறினாலும் பரவாயில்லை. எப்படி குழந்தை தத்தித் தத்தி நடக்க எத்தனிக்கும்போது, கீழே சிலதடவைகள் பொத்துப் பொத் தென்று விழுந்தாலும் எப்படி பிறகு எளிதாக நடக்கின்றதோ அதுபோலவேதான், அறிவைக் கொண்டு சிந்திப்பதில் தயங்கக்கூடாது.

'சங்கம் தம்மம் கச்சாமி' என்பதும், 'தாம் கைக்கொண்டிருக்கும் ஸ்தாபனத்துக்கு நன்றி விஸ்வாசம் உடையவர்களாய் இருந்து பாடுபட வேண்டும்' என்பதாகும்.

புத்த தர்மம் என்றால், புத்தி தர்மம் என்பதாகும்; அதுதான் மனித தர்மமும் ஆகும். இந்த புத்தி தர்மத்தை—மனித தர்மத்தை எடுத்துக் கூறிப் பாடுபட்ட புத்தர்கள் எல்லாம் கழுவேற்றப்பட்டும், உடைமைகள் எல்லாம் சூறையாடப்பட்டும் இருக்கின்றனர். புத்த மடாலயங்கள் எல்லாம் இடிக்கப்பட்டும் தீ வைக்கப்பட்டும் இந்துக் கோவிலாக மாற்றப் பட்டும் கொடுமை இழைக்கப்பட்டும் இருக்கின்றன.

புத்தர் தோன்றிய காலம் பார்ப்பானுடைய ஆதிக்கமும் வைதிக மதமும் தலை கொழுத்துத் திரிந்த காலம். அந்தக் காலத்தில் தோன்றினார் புத்தர். அவர் கண்ணுக்கு ஒவ்வொரு பார்ப்பனரின் செய்கைகள், கோட்பாடுகள் எல்லாம் தவறாகப் பட்டிருக்கின்றன.

இதனை எல்லாம் மாற்றவே புத்தர் பாடுபட்டு இருக்கின்றார்.

[கோலார் தங்க வயலில், 29-4-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-5-1961]

11. புத்தரும் நாமும்

பெரியோர்களே!

சாதியை ஒழிக்க புத்தர் மேற்கொண்ட கருத்து என்ன?

அன்றைய தினம் சாதியை ஒழிக்கப் பாடுபட்ட புத்தர்தான் கடவுள் இல்லை என்று தைரியமாகச் சொன்னார். அவர் அப்படிச் சொன்னாரா இல்லையா என்று சிலர் வாதம் பேசுவதானாலும் அதை உறுதிப்படுத்தும் தன்மையில் அவர் எதற்கும் அஞ்சாமல் அடுத்த படியாக—'ஆத்மா என்பதாக ஒன்று கிடையவே கிடையாது; ஆத்மா என்று ஒன்று இல்லவே இல்லை' என்று கூறி இருக்கிறார். அதனால் அவருக்கு 'அனாத்மன்' என்றும் பெயர். ஆத்மா இல்லை என்பதை இலகுவில் யாரும் ஆதரிப்பவர்கள் இருக்கமுடியாது.

ஒருகால் திராவிடர் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் வேண்டுமானால் ஆதரிப்பதாய் இருந்தாலுங்கூட மற்றவர்கள் ஆதரிக்கமாட்டார்கள்.

எனவே, இவ்வளவு சுலபத்தில்—மற்ற எவராலும் சொல்லமுடியாத ஒன்றை புத்தர் சொல்லி இருப்பதால்தான் அவர்தான் உண்மையாய்ச் சாதியை அறவே ஒழிக்கப் பாடு பட்டார் என்பதோடு, அன்னாருடைய பெயரை இன்றைய தினம் வரை சொல்லமுடிந்தது. இவ்வளவு தூரம் நாமும் போனால்தான் சீக்கிரத்தில் சாதியை வெட்டியெறிய முடியுமே தவிர, ஆத்மா இருப்பதாக ஒப்புக்கொண்டால் சாதி போகாது.

இவ்வளவு நல்ல ரீதியில் அமைந்த புத்தர் கொள்கை, நாளடைவில் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் இந்த நாட்டிலே இல்லாமற் செய்யப்பட்டது. இப்போது எங்காவது புத்தமதம் இருக்கிறதா என்றால் சேரியிலே சிலபேரைக் காணலாம். அது பல பிரிவாக இருக்கிறது. எனவே கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் அதுவும் மறையத் தொடங்கிவிட்டது.

புத்தமதத்தை எதிர்த்தவர்களெல்லாம் சாமியாகவும், சாமியாராகவும் மாறிவிட்டார்கள்; ஆழ்வாராகவும், நாயன்மார்கள் என்றும் அழைக்கப்பட்டவர்கள் எல்லாம் தங்களுடைய புத்திசாலித்தனத்தால், பக்தியால் வந்தவர்கள் அல்லர். இவர்கள் எல்லாம் புத்தரை, சமணரை, புத்த சமணமதக் கொள்கைகளைக் கீழ்த்தரமாக—மூர்க்கத்தனமாக எதிர்த்து வைது பாடியதால் ஆழ்வார்கள், அடிகளார்களாக ஆனவர்கள்—ஆக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

[திருவொற்றியூரில், 17–2–1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21–2–1952]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நான் கூறுவது, கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை என்று–புத்தர் எதைச் சொல்லி இருந்தபோதிலும் அவர் கூறிய ஓர் உண்மையை மட்டும் யாருமே மறுக்கமுடியாது. அதாவது, 'எதையும் உன் சொந்த புத்தியைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து ஏற்றுக்கொள்' என்று அவர் சொல்லிய இந்த உண்மையை மட்டும் யாரும் மறுக்கமுடியாது. இக்கொள்கை ஒன்று மாத்திரமே போதும்—அறிவு வளர்ச்சிக்கு! இதைப் பேசும்போதுதான் சிலர் மழுப்பிவிடுகின்றனர். இன்றுவரை புத்தரைத் தவிர வேறு யாருமே, 'அவனவன் சொந்த புத்தியின்படி நட' என்று சொல்லவே இல்லை. அப்படிச் சொன்னவர்கள் யாருமே கிடையாது. வள்ளுவர் ஒருவர் மட்டுமே இந்த உண்மையை வலியுறுத்திக்கூறி இருக்கிறார் என்பதைக் காணலாம். இந்து மதம் என்றால் என்ன? 'புத்தர் எவ்விடத்திலும் கடவுளைத் தாக்கிப் பேசவில்லை' என்று கூறுவது சுத்தப் பைத்தியக்காரத்தனம். இப்படிப் பேசுகிறவர்களுக்கு இந்து மதம் என்றால் என்ன என்பதே தெரியாது. வேதத்தை ஏற்று நடந்து வருவதுதான் இந்து மதம். உபநிஷத்துக்கள், மந்திர சாஸ்திரங்கள்படி நாம் நடப்பதனால்தான் இங்கு பார்ப்பான்–பறையனும், மேல்சாதி–கீழ்சாதியும், எண்ணற்ற கடவுள்களும், இலட்சக்கணக்கான கோயில்களும் குப்பை கூளங்களும் இருக்கின்றன. புத்தர்களை வைதிகர்கள் விரட்டினர். எல்லாவற்றையும் கற்று, எது உண்மை–எது பொய்? என்று யார் தெரிந்துவைத்திருக்கின்றானோ அவன்தான் புத்தன். 'திருடனும் பவுத்தனும் ஒன்றே; பவுத்தனுக்கும் நாத்திகனுக்கும் வித்தியாசமில்லை; ஆகையால், அவனை நாட்டில் விட்டு வைக்காதே' என்று இராமன் பரதனுக்குச் சொல்லியிருக்கிறான். மற்றொரு இடத்தில், 'பரதா! பவுத்தர்கள் எல்லாம் நாத்திகர்கள்; அவர்களோடு பழகாமல் இருக்கிறாயா?' என்று இராமன் கேட்கிறான். சில பார்ப்பனர்கள், புத்தர் கடவுளைத் திட்டிப் பேசவில்லை என்று பேசுகிறார்கள். இம் மாதிரியாக சிலர் பெரிய விஷயங்களில் தலை கொடுத்து விடுகிறார்கள். புத்தர், 'உன் புத்தியைக் கொண்டாடு; ஆராய்ச்சி செய்; மூடக் கொள்கைகளை, மூடத்தனமான பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்காதே' என்று கூறி

இருக்கிறார். அப்படி ஆராய்ச்சி செய்து பார்த்தால் ஒரு கடவுள் மிஞ்சுமா? இராமன், கிருஷ்ணன் எல்லோரையும் மறந்துவிட மாட்டார்களா? புத்தர் கூறிய ஒரு இலட்சியத்தை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு கடவுளைக் கண்டு பிடியுங்களேன்; பார்ப்போம்!

[திருப்பத்தூரில், 30-5-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-6-1956]

12. புத்தம், வள்ளுவம் அழிவு

தோழர்களே!

2500 ஆண்டுகளுக்கு முன் சித்தார்த்தர் என்ற புத்தர் தோன்றி சாதியைக் கண்டித்தார்; கடவுள், ஆத்மா என்று கூறுவதெல்லாம் பித்தலாட்டம் என்று கூறினார்.

பெரிய இராஜாவுக்கு மைந்தராகப் பிறந்தவர் அவர். தமது இராஜபோகம் எல்லாம் துறந்து காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை தமது கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்.

ஆனால், புத்தருக்குப் பிறகு, பார்ப்பனர்கள் புத்தருடைய அறிவு மார்க்கத்தில் தாங்களும் பிச்சுக்களாகச் சேர்ந்து அதை ஒழிக்க முற்பட்டார்கள்; இரவோடு இரவாக சமண-பவுத்த மடங்களுக்குத் தீ வைத்துக் கொளுத்தியிருக்கின்றார்கள்; புத்தரின் அருமையான கொள்கைகளை இந்த நாட்டைவிட்டே ஒழித்துக்கட்டி விட்டார்கள். இன்று சீனா, ஜப்பான், பர்மா, சிலோன் ஆகிய இடங்களில் அந்தக் கொள்கை செழித்து வளர்ந்திருக்கின்றது.

புத்தரது மார்க்கம் ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் எவ்வளவு தூரம் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை உணர வேண்டுமேயானால்—இன்றுங்கூட, தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் ஒரு சிறிய குழி தோண்டினாலுங்கூட ஏராளமான புத்த விக்கிரகங்கள் பல சமயங்களில் கிடைக்கின்றன. எவ்வளவோ சீரும் சிறப்புடனும் இந் நாட்டு மக்களுக்கு அறிவுப் பிரச்சாரம் செய்து வந்த புத்த-சமண மார்க்கத்தினர்களைப் பனங்காயைச் சீவுவதுபோலத் தலைகளையெல்லாம் வெட்டிக் குவித்திருக்கின்றனர்! இப்படி இவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதை விளக்கும் முறையிலே, பல சைவ, வைணவக் கோயில்களில் சிற்ப வடிவிலேயே அடித்து வைத்திருப்பதைப் பார்க்கின்றோம்.

இன்றுங்கூட மதுரையில் ஆண்டுதோறும் 3000 சமணர்களைக் கழுவேற்றிக் கொன்ற கொடிய செயலை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

புத்தருக்கு அடுத்தபடி வள்ளுவர் தோன்றி, 'பிறப்பினால் பேதம் கிடையாது; எதையும் அறிவைக்கொண்டு சிந்தித்து அதன்படி நட' என அருமையான கருத்துக்களை எல்லாம் தமது நூலாகிய திருக்குறளில் கூறிச் சென்றார். ஆனால், அவற்றைப் பார்ப்பனர்கள் குப்பைத்தொட்டியில் போகும்படி செய்துவிட்டார்கள்.

பிறகு எத்தனையோ ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அவதாரப் புருஷர்கள் என்பவர்கள் எல்லாம் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் எல்லாம் பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொண்டு, அதன்மூலம் தாங்கள் புகழ் விளம்பரம் அடைந்து, தம் இனத்திற்குத் துரோகம் செய்து, பார்ப்பானுக்குக் காட்டிக்கொடுத்துத்தான் பெரியவர்களாகி யிருக்கின்றனர்.

ஆகவே புத்தர், வள்ளுவர் ஆகிய இருவருக்குப் பிறகு திராவிடர் கழகத்தாராகிய நாங்கள்தாம் இந்த சாதி, கடவுள் மூடநம்பிக்கைகள் இவற்றை எதிர்த்து வருகின்றோம்.

[திருச்சியில், 27-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-4-1959]

13. தமிழர் நிலை மாறவேண்டும்

தமிழர்களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுப் பிரச்சாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றைக் கையாளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழர்கள் புரட்சிகரமான மாறுதலடைய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

தமிழர்களைக் கைதூக்கிவிட இன்று எந்தக் கலையும் எந்தக் கவிஞரும் இல்லை. உள்ளவர்கள் எல்லோரும், 'பத்தாம் பசலிக்காரர்கள்' என்று சொல்லும்படி, பழமையைக் கண்டே தங்கள் கலைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழர்களைத் தாழ்த்தியதும் தலைதூக்க வொட்டாமல் அழுத்தியதும் தமிழறிஞர், கலைஞர், கவிஞர், புலவர் முதலியவர்கள் கையாண்ட சமய இலக்கியமும், முன்னோர்களைப் பின்பற்றிவந்த நடப்புகளும், தமிழர்களைக் குலைத்து உருவாக்கிய அரசியலுந்தான்.

தமிழன் வளர்ச்சிக்கு, அறிவிற்கு, கலைகளுக்கு, சமயத்திற்கு, அரசியலுக்கு— பார்ப்பான் காட்டிய வழியைத் தவிர, ஒரு தமிழன் காட்டிய வழி என்று சொல்ல இன்று என்ன இருக்கிறது? நமது கலைஞர்கள், கவிஞர்கள், புலவர்கள், அரசியல்வாதிகள் பார்ப்பானைக் குறை மட்டும் சொல்லிக் கொண்டு, அவன் கலாச்சாரத்தில் மூழ்கி, அவன் காட்டிய வழியில் நடந்து கொண்டு வாழ்கிறவர்களாகத்தான் இருந்து வந்தார்கள்; வருகிறார்கள் என்பதல்லாமல் தமிழர் நலனுக்கு, வளர்ச்சிக்கு, இழிவு நீக்கத்திற்கு என்று யாராவது எந்த அளவுக்காவது பாடுபட்டார்கள் என்று ஒரு விரலையாவது நீட்ட முடிகிறதா?

எல்லாத் தமிழ் உணர்ச்சியாளரும், எப்படிப்பட்ட பார்ப்பன வெறுப்பாளரும் சுய நலத்திற்கு வேண்டுமான அளவுதான் வெறுப்பைக் காட்டிக் கொள்கிறார்களே தவிர, தமிழ் நலத்திற்கு, தமிழர் சமுதாய நலத்திற்கு என்பதாகக் காட்டிக் கொண்டவர்கள் தமிழர்களில் மிகமிக அரிதாகவே இருந்து வருகிறார்கள்.

தமிழ்ப் பெரியோர்கள், கல்வியாளர்கள, மேதாவிகள், பெரும்பதவியாளர்கள் யாவரும் தமிழர்களின் கேட்டிற்கும் இழிவிற்குமே பார்ப்பனர்களால் கற்பனை செய்து உண்டாக்கப்பட்ட கதைகள், காவியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவைகளில் புகுத்தப்பட்ட கடவுள்கள்—கந்தன், சிவன், விஷ்ணு, கணபதி, இராமன், கிருஷ்ணன் முதலியவற்றைக் கும்பிடுபவர்களாகவும் இவர்களது பெண்டுபிள்ளைகளையும் பின்பற்றி நடப்பவர்களாகவும் இருக்கிறார்களே தவிர—அறிவைப் பற்றியோ, மானத்தைப் பற்றியோ, இனநலத்தைப் பற்றியோ சிந்தித்தவர்கள் என்று சொல்லி ஒருவரையும் குறிப்பிட முடியவில்லையே!

எந்தப் பெரிய மனிதன்—அறிஞர், கவிஞர், வித்துவான், மேதாவி என்பவர் யாரானாலும்—அவர், திவசம், திதி முதலிய பார்ப்பனக் காரியங்களைச் செய்பவரும்; இவை சம்பந்தமான நெற்றியில் சாம்பல், செம்மண், சுண்ணாம்பு, பூச்சுப்பட்டை அடித்துக் கொள்பவர்களும்; கடவுள், சமயப்பற்று உடையவர்களுமாகத்தான் இருக்கிறார்களே ஒழிய, இவை எதற்கு, இவற்றின் பலன் என்ன என்று சிந்தித்தவர்கள், சிந்திக்கிறவர்கள் ஒருவரையும் காண முடியவில்லையே!

இன்னும் தமிழன் சூத்திரனாக இருக்கிறான் என்றால்—இருந்து கொண்டு திவசம், திதி செய்துகொண்டு, சாம்பல் மண்ணை நெற்றியில் அடித்துக் கொண்டு கோவில் குளங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறான் என்றால்—தமிழன் எந்த வகையில் முன்னேறத்

தக்கவன் என்பது புரியவில்லை. பார்ப்பானைக் கூப்பிட்டுத் திதி கொடுக்கிற தமிழன்; எப்படித் தன்னைச் சூத்திரன் அல்லன் என்று சொல்லிக்கொள்ள முடியும்?

இன்னும் தமிழனுக்கு மானம், வெட்கம், பகுத்தறிவு வரவில்லையென்றால் மற்ற எந்த நூற்றாண்டில் வரமுடியும்?

சமுதாயப் புரட்சிக்கு உண்மையாகவே இந்தச் சமயம் மிகப் பொருத்தமான காலம் என்பதே என் கருத்து.

இன்று நமக்குப் பெரும் 'சனியனாக' அய்க்கோர்ட் ஒன்று இருக்கிறது. மற்ற எல்லா ஸ்தாபனங்களும் பெரிதும் நமக்கு அனுகூலமாக இருக்கின்றனவென்றே சொல்லலாம். ஆனால், தமிழனுக்குப் புத்தி, மானம் இருக்கவேண்டும்; இருந்தால்தான் எளிதில் மாற்றம் உண்டாக்கிக்கொள்ள முடியும்.

கல்வி இலாகாவில் பகுத்தறிவுப் புத்தகங்களையும், பகுத்தறிவு ஆசிரியர்களையும் நல்லவண்ணம் புகுத்தவேண்டும்.

உத்தியோக இலாகாவில் பெரிதும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் புகுத்த வேண்டும். போலீசிலும், கிராமக்கணக்கு, மணியம் பதவிகளிலும் தாழ்த்தப்பட்டவர்களை அதிகமாகப் புகுத்தவேண்டும்.

மற்றும் நிர்வாகத் துறையில் அய். ஏ. எஸ்ஸை (I. A. S.) ஒழித்துக் கட்டியாக வேண்டும். இது, வெள்ளையன், தன் சாதியாரிடமே நீதித்துறை—நிர்வாகத் துறை இருக்க வேண்டுமென்று செய்த சூழ்ச்சியேயாகும். ஆகவே, இவை தமிழர்களைத் தலையெடுக்கவொட்டாமல் செய்துவரும் காரியங்களுக்காகவே இருந்து வருகின்றன.

இந்தக் காரியங்களை இன்றைய ஆட்சி செய்துவிடுமானால், இந்த ஆட்சியை அசைக்க எவராலும் முடியாது என்பதோடு தமிழர் நிலையும் நல்ல அளவுக்கு முன்னேற்றமடையக்கூடும் என்பது நமது கருத்து.

['விடுதலை'—தலையங்கம்—7-10-1972]

8. சீர்திருத்தம்

1. சீர்திருத்தம்

இப்போது சமுதாய முற்போக்குக்கும் சமத்துவத்துக்கும் விடுதலைக்கும் புதியதாக நாம் கைக்கொள்ளவேண்டியது என்னவென்றால், அறிவு வளர்ச்சிக்கும், சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவைகளை அழித்துவிடவேண்டும் என்பதேயாகும். இவ்விதம் அழிவு வேலை மூலம் தடைகளை நீக்கிவிட்டால் தானாகவே முற்போக்குக்கு சரியான பாதை ஏற்பட்டுவிடும் என்பது அதில் நன்றாய் அறியக்கிடக்கிறது. இந்தக் குறிப்பானது, 'இருப்பதை எடுத்துவிட்டால் வேறொன்று வேண்டாமா?' என்று, ஆலோசனை இல்லாமல் பிதற்றிக்கொண்டிருக்கிற விதண்டாவாதிகளுக்கும்—பாமர மக்களை ஏய்ப்பதற்குச் சில சுயநலவாதிகள், 'நாயக்கர் எல்லாவற்றையும் அடியோடு அழிக்கவேண்டுமென்று கூறுகிறாரே; அப்படி அழித்துவிட்டால் மக்களுக்கு வேறுகதி என்ன?' என்று நீலிக்கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் பாசாண்டிகளுக்கும் தக்க பதிலாகும்.

மற்றும், ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் நடந்துவந்த சீர்திருத்தங்கள் பலிக்காமல் தடைபட்டுப் போனதற்குக் காரணம், மேற்குறிப்பிட்டதான தடைகளாய்

இருப்பவைகளைச் சரியானபடி வேருடன் களைந்தெறிவதான அழிவுவேலை செய்யாதது தான் என்றும், தற்காலத்தில் செய்யப்படுகிறதாய்ச் சொல்லப்படுவதெல்லாம் புரட்டும், சுயநலமும் அடிப்படையாய்க் கொண்டதென்றும், சீர்திருத்தத்திற்கு விரோதிகளாய் உள்ள உயர்ந்த சாதிக்காரர் என்பவர்களாலும், சித்தாந்தக்காரர்களாலுமே நடைபெற்று வந்த தென்றும் தெளிவாய் எடுத்துக் கூறியிருப்பதிலிருந்தும்—நமது நாடு உண்மையான சீர்திருத்தமடையாமல் போனதற்கான காரணம் விளங்கும்.

மற்றும், 'கபிலரை ஏமாற்றிவிட்டோம்; புத்தரை ஏமாற்றிவிட்டோம்; கூன் பாண்டியனை ஏமாற்றிவிட்டோம்; மூவேந்தர்களை அழித்துவிட்டோம்; முகமதிய அரசாங்கத்தை ஒழித்துவிட்டோம்; நாயக்கர் அரசாங்கத்தைப் பாழ்படுத்திவிட்டோம்; கம்பனைக்கொண்டே எங்களைக் கடவுளாகவும், தேவர்களாகவும் செய்துகொண்டோம். இப்படிப்பட்ட எங்களுக்கு, சில பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்தே இப் புதிய சீர்திருத்த இயக்கத்தை ஒழித்து—எங்கள் ஆதிக்கத்தைப் பழையபடி நிலைநிறுத்திக் கொள்ளச் செய்வதுதானா ஒரு பிரமாதமான காரியம்?' என்று மனப்பால் குடித்துக் கொண்டு இறுமாந்து, ஆணவமாய் பிதற்றித் திரிபவர்களுக்கு, அக்கிராசனர் உபந்யா சத்தில், 'அந்தக் காலமும் சவுகரியமும் அப்போதைய அரசாங்கத்தின் யோக்கியதையும் வேறு; இந்தக் காலமும் இப்போதைய அரசாங்கமும் சீர்திருத்தம் செய்யவோ, அழிவு வேலை செய்யவோ விருப்பம் கொண்டவர்களுடைய சவுகரியமும் வேறு' என்று சொல்லி யிருப்பது தக்க பதிலாகும். இப்போதைய இயக்கம் அடிக்க அடிக்க எழும்பும் பந்து போலவும், வெட்டவெட்டத் துளிரும் செடிகள் போலவும் பரவிவிட்டது. கொஞ்ச காலத் திற்கு முன் ஒருவர் எழுதியதுபோல்,—அதாவது, 'எங்களுக்கு இச் சுயமரியாதை இயக்கம் கண்களைத் திறந்துவிட்டது; இனி எவர் தடுத்தாலும், இந்த இராமசாமி நாயக்கரே மாறிவிட்டாலும், இந்த உணர்ச்சியை அடக்கிவிட முடியாது' என்று எழுதியதுபோல்— இனி என்றைக்கும் இந்த இயக்கமும் இந்த உணர்ச்சியும் மறையாது என்பதையும், யாரும் அழிக்கமுடியாது என்பதையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிவிட்டது.

மற்றபடி, பெண்கள் விடுதலைக்குத் தடையான அர்த்தமற்ற கற்பும் சம்பந்தமற்ற விதவைத் தன்மையும் அழிக்கப்படவேண்டும் என்றும்; அவைகள் அழிக்கப்படத்தக்க முறைகளும்—அதாவது கணவன் என்பவன், 'பழைய சாதம் சுடுகிறது; விசிறிகொண்டு வீசு' என்றால், உடனே மனைவி என்பவள் விசிறிகொண்டு வீசவேண்டியதுதான் கற்பு என்றும்; மனைவி என்பவள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும்போது, புருஷன் என்பவன் கூப்பிட்டால், திடீரென்று சேந்தும் கயிற்றை விட்டுவிட்டு ஓடிவர வேண்டும் என்றும்; ஓடிவந்தால் மாத்திரம் போதாது—கிணற்றில் கயிறும் பாத்திரமும் அந்தரங்கமாய்த் தொங்கிக்கொண்டிருக்க வேண்டுமென்றும்; அப்படி தொங்கிக் கொண்டிருந்தால்தான் 'கற்பு' உள்ளவள், பதிவிரதையானவள் என்றும் சொல்வதான கற்பையும் பதிவிரதாத் தன்மையையும் அடியோடு ஒழித்தாக வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதும்; விதவைகளுக்கு அவர்கள் தாய், தகப்பன்மாரோ அல்லது சுற்றத்தார்களோ மறுகல்யாணம் செய்துவைக்காவிட்டால், அவ் விதவைகள் தங்களுக்கு இஷ்டமான கணவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியது என்றும்; புருஷனுடன் வாழும் மற்ற பெண்களும் இதற்கு உதவிசெய்து விதவைகளைக் கணவனுடன் வாழச் செய்ய அனுகூலமாயிருக்க வேண்டும் என்றும் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதுமாத்திரமன்றி, குறுகிய நோக்கங்கொண்டோ அல்லது விஷமப் புத்தி கொண்டோ, 'பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழுக்க ஈனமாய் நடந்துகொள்ளலாமா?' என்று கேட்பவர்களுக்கும் சமாதானமாக—அதாவது, 'கணவன்-மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்துவதற்காகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பலனாகவோ, காதலன்-காதலி என்கின்ற முறையில் இருவர்களின் காதல் இன்பத்தின் பயனாகவோ,

இருவரையும் சமநிபந்தனைகள் கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இறுகக் கட்டினாலும் அது எவ்விதத்திலும் பெண்கள் விடுதலைக்கு இடையூறாக இருக்காது' என்று சொல்லியிருப்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றபடி, விதவைகள் என்னும் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும், 'அவர்கள் தங்கள் துக்கநிவர்த்திக்கு, இனி பெற்றோர்களையோ உறவினர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே தக்க கணவனைத் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்திவிட வேண்டியதுதான்' என்று குறிப்பிட்டிருப்பதும்; மற்றபடி புருஷனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களும் விதவைகளின் மேற்கண்ட முயற்சிக்கு உதவி செய்ய வேண்டியது என்றும் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

மற்றபடி, சாதி வித்தியாசம், தீண்டாமை, மூடப்பழக்கவழக்கங்கள் ஆகியவைகளை ஒழித்தலைப்பற்றியும், கல்வியைப்பற்றியும் குறிப்பிட்டிருப்பவைகளும் ஊன்றிக் கவனிக்கத் தக்கவைகளாகும்.

மகாநாட்டிலும் அக்கிராசனரின் உபந்யாசத்திற் கண்டபடியே, சில தீர்மானங்களே யானாலும் மிக முக்கியமான தீர்மானங்களாகவே தீர்மானிக்கப்பட்டிருப்பதானது குறிப்பிடத்தக்கது.

அதாவது, பெண்கள் சுதந்திரத்திற்குப் பெரிதும் இப்போது இடையூறாயிருப்பது— அவர்களுக்குச் சொத்துரிமை இல்லாமையால்தான் என்பதை உணர்ந்து, இனிமேல் குடும்பச் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமையும்; விதவைகள் விதவைத் தன்மையுடன் இருந்துகொண்டு கஷ்டப்பட வேண்டியதற்குக் காரணமாய் இருப்பது—அவர்களுக்குப் புருஷன் இறந்தவுடன் மற்றவர்களிடம் ஜீவனாம்சத்திற்குத் தொங்கிக்கொண்டிருக்க வேண்டியிருப்பதால்தான் என்பதை உணர்ந்து, அது மாறும்படி புருஷன் சொத்து பாத்தியம் முழுவதும் சர்வ சுதந்திரத்துடன் விதவைகளுக்கு அளிக்கப்பட்டுவிடவேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதானது சரியான பரிகாரமாகும்.

மற்றும், 'தீண்டாதார்' என்பவர்கள் கல்வி இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் இருப்பதால் அவர்களுக்குச் சாப்பாடுபோட்டுக் கட்டாயக்கல்வி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதும்; மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காகப் பள்ளிக்கூடங்களில் குருட்டு பக்தி, மூடநம்பிக்கைகளுக்கு இடம் தரும்படியான கல்வி கற்பிக்கக்கூடாதென்றும்; மூடநம்பிக்கையும் குருட்டு பக்தியும் உள்ள உபாத்தியாயர்களை பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைப் படிப்பிக்கச் சேர்க்கக்கூடாது என்றும்; உபாத்தியார் களைத் தயார் செய்யும் பள்ளிக்கூடங்களிலும், பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களிலும் மூடநம்பிக்கைகளும், குருட்டு பக்தியும் உண்டாக்கத்தக்க எந்தப் புத்தகங்களையும் பாடப் புத்தகமாக வைக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதும்—மற்றும் சில தீர்மானங் களும், முக்கியமாக 'மதத்தின் பேரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டம் செய்யவேண்டும்' என்று திருமதி டாக்டர் வோகளி ஆர்யா அவர்களால் பிரேரிக்கப்பட்டு திருமதி அலமேலுமங்கைத்தாயாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் குறிப்பிடத்தக்கவை.

['குடி அரசு'–தலையங்கம்—2-12-1928]

2. சீர்திருத்தக்காரர்களுக்கு

உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள், முதலில் சீர்திருத்தக் கொள்கைக்கு இடையூறாக இருக்கும் புல்லுருவிகளையும், களையான்களையும் அழிக்கத் தைரியமாய் முற்படவேண்டும். பழக்க வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிட வேண்டும்.

பழக்கவழக்கங்களை விடவேண்டுமானால் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். அப்படிப் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; எழுதிவைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; வெகுகாலமாக நடந்துவருவதாகத் தெரியவருவதனாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; அனேகர் பின்பற்றுவதாலேயே நம்பிவிடக்கூடாது; கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவது ஒரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவதாலேயே அதைத் தெய்வீகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவுக்குத் தாராளமாய் விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்கமுடியும்.

அப்படிக்கில்லாமல், 'எதையும் நம்பித்தானாகவேண்டும்'; 'பெரியவர்கள் நடந்தபடிதான் நடக்கவேண்டும்' என்று நினைப்போமானால், எதை நம்புவது? யார் சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்தப் புத்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிகளுக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்?—இவை போன்ற விஷயங்களுக்குச் சமாதானம் எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில் தான். இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயும் இருக்க வேண்டும்.

தீவிர சீர்திருத்தங்களைப்பற்றிப் பிரச்சாரம் செய்வதன்மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.

ஏனெனில், நமது பிரச்சாரத்தைச் செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக் காட்டிலும்—நமது சீர்திருத்தத்திற்கு எதிரிகளான வைதிகர்கள், பண்டிதர்கள், சுயநலப் பார்ப்பனர்கள், அவர்களது கூலிகள் ஆகியவர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும் சவுகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன. எப்படியெனில், கோயில்கள், புராணங்கள், சித்திரப்படங்கள் ஆகியவைகளும் அவைகளின் உற்சவம், காலட்சேபம், பஜனை, சம்பிரதாயம் ஆகியவைகளும்; பள்ளிக்கூடப் படிப்பு, பாடப்புத்தகம் முதலியவைகளும் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷயத்தைப் புகுத்திவிடுகின்றன. இது தவிர, கோடிக்கணக்கான ரூபாய்கள் வருவாய் கொண்ட மக்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங்களும் வெட்டி ஆட்களும் இருக்கின்றனர்.

அன்றியும், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று அதன்மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களால் சட்டங்கள் செய்யப்பட்டு, முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பன பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றன. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்குப் பயந்தவர்களாகவும், சரியான சீர்திருத்த அறிவில்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

சர்க்காரும் நம்முடைய கேவல நிலையினால் வாழவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதனால், உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால், ஏகச் சக்ராதிபத்தியத் தன்மை கொண்ட ஒரு வீரனின் ஆட்சியில்தான் முடியும்.

அதாவது, 'இந்தப் பொதுக் கோயிலுக்குள் செல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு' என்று விளம்பரம் செய்யவேண்டும். யாராவது ஆட்சேபித்தால் அவர்களைச் சிறையிலிட

வேண்டும். இதைப் பொது ஜனங்கள் கூட்டம்போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோயிலை இடித்தெறிந்துவிடவேண்டும்.

சாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக்கூடாது என்று சொல்லிவிடவேண்டும்; மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும். உயர்வு-தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிடவேண்டும். பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளைத் தீவாந்திரத்திற்கு அனுப்பிவிடவேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து, அவைகளை விற்றுப் படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பும், தொழில் இல்லாதவர்களுக்குத் தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப் படுத்திவிடவேண்டும்.

இதுபோன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவரவேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.

அப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவரவேண்டுமானால், அனேக சீர்திருத்தக்காரர்கள் உயிர் துறக்கத் தயாராயிருந்துகொண்டு பாமர மக்களிடையில் உண்மையைப் பரப்ப முன்வரவேண்டும்.

நம் நாட்டுப் பார்ப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில் ஒளிந்துகொண்டார்கள். ஆனாலும், நம்மவர்களிடையே சில கூலிகளையும் ஏமாந்த சோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீது ஏவிவிட்டு தடைவேலை செய்யச் செய்துவிட்டு, தங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் செய்துகொள்ள வருணாசிரம தர்ம மாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சனாதனதர்மிகள் மகாநாடு, வேதவித்துக்கள் மகாநாடு, புரோகிதர்கள் மகாநாடு, பண்டிதர்கள் சாஸ்திரிகள் கனபாடிகள் சம்மேளனம் ஆகிய பல மாநாடுகள் திருட்டுத்தனமாகவும் சூழ்ச்சியாகவும் கூட்டி, அவற்றில் பல இரகசிய தீர்மானங்கள் செய்து, இரகசிய சமாச்சாரப் போக்குவரத்து மூலம் தெரிவித்துக்கொண்டு கட்டுப்பாடாய் வேலைசெய்து வருகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு, சீர்திருத்த இயக்கத்திற்கு, 'நாஸ்திக இயக்கம்' என்ற பெயரைக் கொடுத்து, அதற்குப் பல தப்பர்த்தங்களையும் பழிப்புக்களையும் கற்பித்து வருகிறார்கள். இதைச் சில பார்ப்பனரல்லாதார்களும் நம்பிக்கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்கின்றார்கள். ஆனாலும், சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாஸ்திக மதம் என்கின்ற பூச்சாண்டிக்குப் பயப்படக்கூடாது. அது ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப் பிரயோகமும் என்னவென்றால், 'பார்ப்பனீயத்தில் அதாவது பார்ப்பனர்களுடைய வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம் ஆகியவைகளில் நம்பிக்கை இல்லாதவன்; பார்ப்பனர்களின் புரட்டுக்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துகின்றவன்' என்பதாகும். இந் நிலையில், நாம் எல்லோரும் நல்ல உறுதியான நாஸ்திகர்களே ஆவோம். ஆகையால், நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாஸ்திகர் என்றே சொல்லிக்கொள்ளவேண்டும். சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில் 'நாஸ்திகன்' என்ற பட்டத்தையே சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் நாஸ்திகப் பூச்சாண்டியைக் கொல்லமுடியும்.

நமக்கும் வேதத்துக்கும் என்ன சம்பந்தம்? அதை யார் உண்டாக்கினார்கள்? யாருக்காக உண்டாக்கப்பட்டது? என்ன பாஷையில் செய்யப்பட்டது? அதில் நமது நிலைமை என்ன? மேற்கண்ட விஷயங்களை யோசித்துப் பார்த்தால், அதை நம்பலாமா? நாம் ஒப்புக்கொள்ளலாமா? அது நமது மக்களிடையே பரப்பப்படுவதற்கோ இருப்பதற்கோ இடம் கொடுக்கலாமா? என்பன விளங்கும்.

கடைசியாக, சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும்—பொதுவாகப் பார்ப்பனர்களும், சமத்துவம் சுதந்திரம் சுயமரியாதை பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒருவர், 'எங்கள் மதத்தில் மேற்கண்ட சீர்திருத்தமுண்டு' என்பார். 'ஆனால், எங்களைப்போல் வேஷம் போட்டுக்கொள்ளவேண்டும்; எங்கள் வேதத்தை நம்பவேண்டும், எங்கள் சாமியையும் தூதனையும் வணங்கவேண்டும்' என்று சொல்லுவார்கள்.

மற்றொருவர், 'எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு. ஆனால், எங்களைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களையும் நம்பவேண்டும்' என்பார்கள். நம்பாவிட்டால் 'நாஸ்திகர், அஞ்ஞானி, பாவிகள், சமய துவேஷி' என்று சொல்லிவிடுவார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், இவர்கள் உண்மைச் சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால், பார்ப்பனர்களில் சிலர் சீர்திருத்தக்காரர்கள் என்று சுலபத்தில் பட்டம்பெற்றுப் 'புரட்டு' விடுவார்கள். அதாவது, கள்ளும் சாராயமும் குடித்தால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். ஒருவர் ஆடு, மாடு, பன்றி, சாப்பிட்டால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். மற்றொருவர் வெட்டிச் சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததையெல்லாம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். மற்றொருவர் ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்தப் பெண்ணையும் கலியாணமாகவோ வைப்பாட்டியாகவோ வேசியாகவோ அனுபவித்துக் கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். ஜனங்களும் முட்டாள்தனமாக அவர்களை வித்தியாசமற்றவரென்றும் சீர்திருத்தக்காரர்கள் என்றும் நம்பிவிடுவார்கள். ஆனால், அவர்களால் சீர்திருத்தத்திற்கு மாத்திர மன்னியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெரிய ஆபத்து என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும், எந்த விஷயத்திலும் சாமியையும் மதத்தையும் குறுக்கே கொண்டுவந்து போட்டுவிடுகின்றார்கள். ஆகவே, உங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக எந்த மதமாவது கடவுளாவது குறுக்கிட்டால் அவற்றைத் தைரியமாக எதிர்க்கவேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இனி, பார்ப்பனர்கள் நம்மிடம் வித்தியாசம் காட்டுவதுடன், பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் பற்பல சாதியார் ஒருவருக் கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். மேல் சாதியார்களை நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டு மென்று விரும்புவீர்களானால், உங்களுக்குக் கீழேயுள்ள சாதியார்களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை, பார்ப்பனர்கள் காட்டும் கொடுமைகளைவிடச் சற்று அதிகம் என்றே சொல்லவேண்டும். ஆனால், நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகச் சொல்லுகிறோமென்றால், அவர்கள் வைத்த தீதான் நம்முடைய வீடுகளிலும் பிடித்துக் கொண்டது. நாம் மேல்சாதி என்பாரோடு சண்டை செய்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப் படி உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் வெற்றிபெற்றால், கீழ்சாதியார்களெனச் சொல்லப்படுகிறவர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்கவேண்டும். சர்வகட்சி மாநாட்டுத் திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டு மென்ற விஷயமே காணப்படவில்லை. பார்ப்பனர்களுக்குப் பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப் போட்டுவிடுகிறார்கள். முதலில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுப்பதைவிட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டும் என நினைக்கின்றீர்கள்?

பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும் வேதப்படிப்பிற்காக, கொள்ளை கொள்ளையாக இலாபம் சம்பாதிக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், பார்ப்பனர் களுக்குச் சோறும் போட்டுப் படிக்கும்படி செய்கின்றார்கள். இம் மாதிரியான உதவி ஆதித் திராவிடப் பிள்ளைகளுக்கு அளிக்கப்படுமானால், அவர்களில் வயிற்றுப்பிழைப் பிற்கு வழியின்றிச் சிறுவயதிலேயே கூலிக்குச் செல்லும் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்று படித்து மந்திரி வேலைக்குத் தயாராக இருப்பார்களென்பதை நினைத்துப் பாருங்கள்.

இனி, சிலர் வேதங்களும் புராணங்களும் பழங்கதை என்று சொல்லிக் கொண்டு, பண்டிகை திதி திவசம் கிரகணம் ஆகியவைகள் வரும்போது, அவர்கள் அப் புத்தகங் களையே முதலில் திறந்து பார்ப்பார்கள். ஆனால், அவர்களைக் கேட்டால், 'வழக்கத்திற்கு விரோதமாக நடக்கலாமா?' வென்று கூறுகிறார்கள். அவர்களை எந்தக் கூட்டத்தில் சேர்ப்பது?

கடைசியாக, சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவும், அறிவை விருத்தி செய்யவும், ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுய மரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமையவேண்டும் என்பதைச் சீர்திருத்த வாதிகளுக்கு ஓர் வேண்டுகோளாக விடுத்து, அதில் தங்களைப் பொறுப்புடன் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று முடிக்கிறேன்.

['குடிஅரசு'–தலையங்கம்—9-12-1928]

3. எது ஆக்கவேலை?

சகோதரிகளே! சகோதரர்களே!

இப்போது நமது நாட்டில் ஆக்கவேலை செய்வதென்பது சாத்தியப்படாது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பாழும் மதத்தின் பேரால் உலகமே பல பிரிவுகளாகப் பிரிந்துகிடக்கின்றது.

குறிப்பாக, நமது நாடு மதத்தின் பேரால் பிரிந்தது மாத்திரமல்லாமல் சாதிகளின் பேரால் பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. இவை மாத்திரமல்லாமல், பணக்காரன்–ஏழை; படித்தவன்–பாமரன் என்ற பிரிவுகளும் நிரந்தரமாய் ஆகிக்கொண்டும் வருகின்றன. இப்படி நிரந்தரமாக இருக்கும்படியாக ஏற்பாடு செய்துகொண்ட மேல்சாதி–கீழ்சாதி முதலாகிய பிரிவுகளை அழிக்க ஆரம்பித்தால், இதை ஆதரவாய்க் கொண்டு மற்றொரு கெடுதி, அதாவது ஏழை–பணக்காரன் என்கின்ற பிரிவு நிரந்தரமாய் இருக்கும்படி ஒரு புதுமுயற்சி செய்யப்படுகிறது. இவைகளெல்லாம் அரசியல் கிளர்ச்சியாலும் சீர்திருத்த முயற்சியாலுமேதான் செய்யப்படுகின்றன. அதாவது, இந்த ஏற்பாடுகள்தான் சீர்திருத்தம் என்று சொல்லப்படுகின்றன. நமது பாமரமக்கள் இதன் இரகசியத்தைத் தெரியாமல்—விளக்கில் விட்டில் பூச்சிகள் விழுவதுபோல—அதில் விழுந்து, மடிந்து வருகின்றார்கள். இதற்காகவேதான் கடவுளும் மதமும் சாதியும் அரசியலும் ஏற்படுத்தப்பட்டன வென்றும் அந்தப்படியே பயன்பட்டு வருகின்றன வென்றும் நான் உறுதியாய்க் கூறுவேன். இவைகளை யெல்லாம் அடியோடு ஒழிப்பதுதான் நாம் மனித சமூகத்திற்குச் செய்ய வேண்டிய உண்மை யான தொண்டாகும். இதை விட்டுவிட்டு செய்யப்படும் வேறு எவ்விதமான தொண்டும் மனித சமூகத்திற்குக் கேடு விளைவிப்பதாகும்.

ஆகவே, நாட்டிற்கு நன்மை செய்வதாய்க் கூறிக்கொண்டு மக்களை மீளாத அடிமை யிலும், கொடுமையிலும் ஆழ்த்தப்போகும் பாதகமான வேலைகளை யெல்லாம் கூட நாம் அழிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாட்டுச் செல்வங்களை நாட்டிலுள்ள மக்களில் சிலர் தங்கள் தேவைகளுக்கு மேலாகவும் தகுதிக்கு மேலாகவும் சேர்த்து வைத்துக்

கொண்டு, அவைகளையெல்லாம் அக்கிரமமான வழியில் செலவு செய்துகொண்டு, மக்களை அடிமைப்படுத்தி ஆனந்தமாய் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற அவர்களேதான் 'இந்த நாடு தரித்திர நிலையில் இருக்கின்றது; விடுதலை பெறவேண்டும்' என்று பாசாங்கு செய்கின்றார்கள். கஷ்டப்படும் மக்களும் ஏழைமக்களும் தங்கள்மீது திரும்பாமல் இருக்கட்டும் என்று—அன்னிய நாட்டுக்காரர்களை நமக்குக் காட்டி நம்மை அந்தப் பக்கம் திருப்பி விடுகின்றார்கள்.

சாதாரணமாக, ஒரு குழந்தையிடமிருந்து ஒரு சாமானை வாங்கவேண்டுமானால், எப்படி அதற்கு வேடிக்கை காட்டிப் பொருளை எடுத்துக் கொள்ளுகின்றோமோ, அது போலவே பாமர மக்களை, 'சுயராஜ்யம் பார்!' 'பூரண சுதந்திரம் பார்!' 'மோட்சம் பார்!' 'கடவுளைப் பார்!' என்று பராக்குக்காட்டி, அவர்கள் வேலையின் பயனையும் அவர்களது செல்வத்தின் பங்குகளையும் சிலரே கொள்ளையடித்துக் கொள்ளுகின்றார்கள். இந்தக் கூட்டத்தாரின் தந்திரமேதான் இந்த நாட்டில் தரித்திரம் என்பதற்கும், அடிமைத் தனம் என்பதற்கும், அறிவும் ஆராய்ச்சியும் அற்ற தன்மை என்பதற்கும் ஆதாரமாய் இருக்கின்றது.

இந்த நாட்டின் செல்வத்தில் எவ்வளவு பெரிய பாகத்தை மதமும் கடவுளும் என்கின்ற பேரால், வேலை செய்யாத சோம்பேறிகள் அனுபவிக்கின்றார்கள் என்பதை நமது மூட ஜனங்கள் அறிந்து கொள்ளாமலேயே 'இந்த நாடு தரித்திரமான' நாடு என்று அழுகின்றார்கள்.

இந்த நாட்டிலுள்ள சந்நியாசிகள், துறவிகள், மதாச்சாரியார்கள் என்பவர்களுக்குள்ள சொத்துக்களும் வரும்படிகளும் வேறு யாருக்காவது இருக்கின்றதென்று யாராவது சொல்லமுடியுமா? அவர்களுக்கு எதற்காக அவ்வளவு சொத்தும் வரும்படியும் வேண்டியிருக்கின்றதென்று எந்தப் பொருளாதாரவாதியாவது கவனிக்கின்றானா? ஒரு சந்நியாசி கோடிக்கணக்கான ரூபாய் சொத்தும், வருஷத்தில் இலட்சக்கணக்காக வரும்படியும் உடையவனாக இருந்தால் அந்தநாடு ஏழைநாடு, தரித்திரநாடு என்று யாராவது சொல்ல முடியுமா? ஒரு முழம் உயரமுள்ள குழவிக் கல்லுக்கு நமது நாட்டில் எத்தனை கோடி ரூபாய்கள் சொத்தும் எவ்வளவு வரும்படியும் இருக்கின்றன? இப்படி எத்தனை ஆயிரக் கணக்கான குழவிக் கல்லுகள் நமது நாட்டில் செல்வத்தோடு, யானை, குதிரை, ஒட்டகம், பல்லக்கு, இரதம், தேர் முதலிய வாகனங்களோடு, பல பெண்டாட்டிகளோடு, பல கலியாணங்களோடு வாழ்கின்றன—என்பவைகளை நேரில் பார்க்கும் ஒரு யோக்கியன் நமதுநாடு தரித்திரநாடு என்று சொல்ல வருவானா? இதை எந்தப் பொருளாதார நிபுணனாவது கவனித்து நமது நாடு தரித்திரம் உள்ள நாடு என்று சொல்லுகின்றானா?

மற்றும், பிரபுக்கள், செல்வவான்கள், இலட்சுமிபுத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிகள் உடையவர்களும் எவ்வளவு இன்கம்டாக்ஸ் வரிகொடுக்கக் கூடிய இலாபம் அனுபவித்துக் கொண்டு, கோடிகோடியாய்ப் பொருள் சேர்த்து, தாசிவேசி ராஜபோகம் அனுபவித்துக்கொண்டு நிரந்தர ராஜாவாகவும், ஜமீனாகவும், பிரபுவாகவும், பாளையக்காரராகவும் இருக்க முயற்சிமேல் முயற்சி செய்து கொண்டு இருக்கும் மக்கள் பல ஆயிரக்கணக்காக இருந்துகொண்டிருக்கும் இந்த நாட்டை தரித்திரநாடு என்று யாராலும் சொல்லமுடியுமா?

மற்றும், நாள் ஒன்றுக்கு 100, 200, 500, 1000 ரூபாய்கள் வீதம் சம்பாதிக்கும் வக்கீல்களும் டாக்டர்களும் ஏராளமாய் இருந்துகொண்டு—ஒவ்வொருவரும் அய்ம்பதாயிரம், இலட்சம், அய்ந்து இலட்சம் பெறும்படியான பங்களாக்களில் வாழ்ந்துகொண்டு—நிலத்தில் கால்படாமல், நகத்தில் அழுக்குப்படாமல், சரீரத்தில் வேர்வை இல்லாமல்—பிழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் பல ஆயிரக்கணக்காக, இலட்சக்கணக்காக வாழும் இந்த நாட்டை தரித்திரமுள்ள நாடு என்று யாராவது சொல்லமுடியுமா?

இந்தக் கூட்டத்தினர்தானே இன்றைய தினம் இந்த நாடு தரித்திரநாடு, ஏழைநாடு, அடிமைநாடு என்றும் இது சுதந்திரநாடு ஆகவேண்டும், சுயராஜ்யநாடு ஆகவேண்டும் என்றும் பிரமாதமாய்க் கூப்பாடு போடுகிறார்கள்? ஒவ்வொரு காலத்திலும் வரும் சீர்திருத்தங்களிலெல்லாம் இந்தமாதிரி மக்கள்தானே நமது பிரதிநிதிகளாய் இருந்து நமக்காக என்று ஆட்சிபுரிந்து வருகின்றார்கள்! இப்படிப்பட்டவர்களுக்குத்தானே இன்னமும் அதிகாரமும் பெருமையும் கீர்த்தியும் பணமும் வரவும் ஏற்படவும்; நாம் மதத்தையும் கடவுளையும் சாதியையும் காப்பாற்ற முயற்சிப்பதோடு, சுயராஜ்யமும் பெற வேண்டுமென்றும் பாடுபடுகிறோம்.

நமது நிலைக்குக் காரணம் என்ன? நமது தரித்திரத்திற்கு யார் காரணம்? நமது செல்வமும், பாடும் என்ன ஆகின்றன? என்கின்ற அறிவு நமக்கு இல்லாமல் இருக்கிற முட்டாள்தனமே நமது இன்றைய இழிவுநிலைக்குக் காரணம். மதத்தையாவது, சாதியையாவது, கடவுளையாவது உண்மை என்று நம்பி அவைகளைக் காப்பாற்ற முயற்சிக்கும் எவனாலும்—மக்களுக்குச் சமத்துவமும் அறிவும் தொழிலும் செல்வமும் ஒருகாலும் ஏற்படவே ஏற்படாது.

ஆனால், இவைகளை அழிக்க மக்கள் ஒரு காலமும் சம்மதிக்கமாட்டார்கள். இவைகளைக் காப்பாற்ற அனேகவிதமான ஸ்தல ஸ்தாபனங்கள் ஆதியிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுவந்து, குழந்தைப் பருவமுதலே நமக்குள் புகுத்தப்பட்டுவந்திருப்பதால் இது சுலப சாத்தியமான காரியமாக இருக்கமுடியவில்லை. இவைகளில் எங்கு கை வைத்தாலும் நமது எதிரிகள் நம்மீது 'நாத்திகன்' என்னும் ஆயுதத்தை வீசி எறிந்து நம்மைக் கொல்லப் பார்த்துவிடுகிறார்கள். நமது மக்களும் பெரும்பாலாய் மூடர்களாய் இருப்பதால், அந்த நாத்திகம் என்னும் ஆயுதத்தைக் கொண்டே நமது எதிரிகளுக்கு உதவியாகவும் நமக்கு எதிரியாகவும் நின்று, நமது முயற்சிகளுக்கு இடையூறு செய்வார்கள். ஆகையால், நாம் இன்றைய நிலையில் இருந்து ஒரு சிறுமாறுதல் செய்யவேண்டுமானாலும் நமது எதிரிகளின் ஆயுதமாகிய நாத்திகத்திற்குப் பயப்படாமல், 'ஆமாம்; நான் நாத்திகன்தான்' என்று சொல்லிக்கொண்டு அந்த நாத்திகத்தையே நாட்டில் எங்கும் மூலை முடுக்குகளில் கூடப் பரப்ப நாம் துணியவேண்டும். அப்போதுதான் நமது எண்ணம் ஈடேறமுடியும். ஆதலால், நாம் இனிச் செய்யவேண்டியது முக்கியமாய் நாத்திகப் பிரச்சாரமேயாகும்.

[கேரளா–சேர்த்தலையில், 7-9-1930-ல் தலைமையுரை—'குடி அரசு' 14-9-1930]

பெரியோர்களே! தோழர்களே!

சமுதாய சீர்திருத்த விஷயத்தில் அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் இதுவரை நாம் தக்க பலன் அடையவேயில்லை. சமுதாயத்தில் ஏதாவது சிறிய முன்னேற்றமாவது பெற்றிருக்கிறோம் என்று சொல்லப்படுமானால்—அது, பொதுக் கிளர்ச்சியின் பயனாய்—நிவர்த்தி இல்லாமல் மேல்சாதிக்காரர்கள் இடம் கொடுக்கவேண்டி ஏற்பட்டதல்லாமல் மற்றபடி சட்டத்தின் மூலமாய் ஏற்பட்டதென்று சொல்லுவதற்குத் தகுந்ததான காரியம் ஒன்றும் இல்லை.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 25-8-1940]

4. சீர்திருத்தமா? அழிவு வேலையா?

தோழர்களே! தாய்மார்களே!

சாதிமுறைகள் என்பவை எல்லாம் இந்துமதத்தினுடைய சிருஷ்டியேயாகும். இந்துக் கடவுள்கள் பேராலும், சாஸ்திரங்கள் பேராலுமேதான் அவை நிலை நிறுத்தப் படுகின்றன. பகுத்தறிவற்ற சில சமுதாய சீர்திருத்தக்காரர் என்பவர்கள் இப்படிப்பட்ட

கடவுள்—மதசாஸ்திரங்களுக்கும் இந்து மதத்திற்கும், வேதாந்தமும் தத்துவார்த்தமும் சொல்லி, இவற்றை ஏற்படுத்தினவர்களுக்கு நல்ல பிள்ளையாக ஆவதற்கு முயற்சிப்பார்கள். இந்த அறிவீனமும் மோசமும் தந்திரமும் ஆன காரியங்களால் தாங்கள்மாத்திரம் மரியாதை அடையலாமே தவிர, சமுதாயத்தின் இழிநிலையைப் போக்க ஒரு கடுகளவும் பயன்படாது. ஆகையால் உங்களுக்கு முதலாவதாக நான் என்ன சொல்லுகிறேன் என்றால், நீங்கள் உங்களுடைய நிலையைச் சிறிதாவது மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உண்மையாய் ஆசைப்படுவீர்களானால், இந்துமதம் என்பதையும் அது சம்பந்தப்பட்ட கடவுள், மத, புராண, சாஸ்திர, இதிகாசம் என்பவைகளையும் உதறித்தள்ளி, அவற்றிலிருந்து வெளி வாருங்கள். நீங்கள் அதைச் செய்யவில்லையானால், இனியும் ஓராயிரம் ஆண்டிற்குக் கூட நீங்கள் எப்படிப்பட்ட மாநாடுகளும் சங்கங்களும் பிரச்சாரங்களும் கிளர்ச்சிகளும் நடத்தினாலும், எவ்வளவுதான் அரசியல் சுதந்திரமும் பொருளாதார முன்னேற்றமும் பட்டம் பதவிகளும் பெற்றாலும் உங்கள் சமுதாயத்திற்குள்ள இழிவு நீங்கப்போவதில்லை. இது உறுதி, உறுதி!

உங்களுக்கு முன் முயற்சித்தவர்கள் செய்த தவறுகளையே நீங்களும் செய்துகொண்டிருந்தால், உங்கள் வாழ்நாளும் அவர்களைப்போலவே தவறு செய்யத்தான் முடியுமே ஒழிய, திருத்தம் காண முடியவேமுடியாது. மலைக் காய்ச்சலால் அவதிப்படும் மக்கள் 'கொய்னா' சாப்பிடுவதையே அதற்குப் பரிகாரம் என்று கருதுவார்களானால், அம் மக்களுக்கு மருந்து சாப்பிடுகிற வேலையும், மருந்து வியாபாரிகளுக்கு இலாபம் கிடைக்கிற வேலையும்தான் நடைபெறுமே தவிர—அவர்களுக்கும் அவர்கள் சந்ததிகளுக்கும் மலைக் காய்ச்சல் ஏற்படுவது தடுக்கப்படமாட்டாது.

உண்மையில் மலைக் காய்ச்சலை ஒழிக்கவேண்டுமானால், மலைக் காய்ச்சலுக்கு ஆதாரமான—அதை உற்பத்திசெய்கிற கொசுப்பூச்சிகள், விஷக் காற்றுகள் முதலியவை களை ஒழிக்கவேண்டும். இவைகள் ஒழிக்கப்படவேண்டுமானால் மறுபடியும் இவைகள் உற்பத்தி ஆகாவண்ணம் கசுமாலங்களையும் குப்பைகூளங்களையும் நெருப்பு வைத்து எரித்து, அழுக்குத் தண்ணீர்க் குட்டைகளை மூடியாகவேண்டும். அதுபோலவேதான், நம் சமுதாய இழிவுக்குக் காரணங்களாய் இருக்கிற எப்படிப்பட்ட மதத்தையும் கடவுளையும் ஆதாரங்களையும் நாம் அடியோடு அழித்தே தீரவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்து மதத்தையோ, அது சம்பந்தமான கடவுள், மதம், சாஸ்திரம், இதிகாசம், புராணங்களையோ சீர்திருத்திவிடலாம் என்று நினைப்பது வெறும் கனவும் வீண் வேலையும் கடைந்தெடுத்த முட்டாள்தனமுமேயாகும்.

சரியானவழி—புத்திசாலித்தனமான வழி என்னவென்றால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதுதான்; அதாவது, இந்துமதத்தை விட்டு நாம் வெளியேறிவிட வேண்டியதுதான்.

அதாவது, இந்து மதம் என்பதற்கு—வேறு வார்த்தை சொல்ல வேண்டுமானால் ஆரியம், பார்ப்பனீயம் என்றுதான் சொல்லவேண்டும். உங்களுக்குச் சந்தேகமிருந்தால் அகராதிப் புத்தகங்களையும், அறிஞர்களால்—ஆராய்ச்சி நிபுணர்களால் எழுதப்பெற்ற ஆராய்ச்சிக் குறிப்புகளையும் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். இதை நீங்கள் யாவரும் நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். ஆஷாடபூதிகளைக்கண்டு ஏமாந்துவிடாதீர்கள். புத்தர், சங்கரர், இராமானுஜர் போன்றவர்களின் முயற்சிகள் என்ன, என்ன? புத்தரை ஒழிக்கவே—இராமன், கிருஷ்ணன், இராமாயணம், கீதை, புராணங்கள், அவை சம்பந்தப்பட்ட கோவில்கள் முதலியவைகள் கற்பிக்கப்பட்டன. இவைகளை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யவே சங்கரர், இராமானுஜர்கள் முயன்றுவந்தார்கள். இவர்களைப் பின்பற்றித்தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும், பக்தர்களும், தாசர்களும், மகாத்மாக்களும், ஆனந்தாக்

களும், சுவாமிகளும் தோன்றினர். எனவே, இதை எல்லாம் உணர்ந்தவர்கள்தான் இன்று இந்நாட்டு மனித சமுதாய சீர்திருத்தத்திற்கு ஒரு கடுகளவாவது தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

[கான்பூரில், 29, 30, 31-12-1944-ல் நடைபெற்ற அகில இந்திய பிற்படுத்தப்பட்ட, பார்ப்பனரல்லாதார் மாநாட்டுத் தலைமையுரை—'குடி அரசு' 13-1-1945]

சமுதாயச் சீர்திருத்தத்தில் இரண்டு வகைகள் உண்டு. முதலாவதாக, சமுதாயச் சடங்குகளைத் தீர்ப்பதற்காக, அந்தச் சடங்குகளின் காரண, காரியங்கள்—மூலம்—என்ன என்பதுபற்றிக் கவலைப்படாமல் மேலாக சீர்திருத்தம் செய்வது. இரண்டாவதாக, சமுதாயக் குறைபாடுகள் ஏன், எப்படி வந்தன என்று கண்டறிந்து, அந்தச் சங்கடங் களுக்குக் காரணமாய் இருக்கும் அடிப்படைகளை ஒட்டி சமுதாயச் சீர்திருத்தம் செய்வது.

உதாரணமாக, ஓர் ஊரில் அடிக்கடி மலேரியா வருகிறதென்றால் ஆஸ்பத்திரி வைத்து, போர்டு போட்டு, மருந்து கொடுத்து, தற்காலிகமாய் நோயைப் போக்கும் வைத்தி யர்கள் போன்றவர்கள் முதலாவது வகையினர். மலேரியா வருவதன் காரணத்தைக் கண்டறிந்து, அக் காரணங்களை ஒழித்து அந்த ஊரைச் சுத்தமாக்கி, மலேரியா வரவொட் டாமல் செய்வது என்ற சுகாதாரப்பணி செய்வது போன்றவை இரண்டாம் வகையினர்—நாங்கள்.

தீண்டாமையை ஒழிக்க வைத்தியர்கள்–டாக்டர்கள்போல் முயன்று, தீண்டப்படாத வர் என்பவர்களுக்கு எல்லா இடங்களிலும் சமத்துவம் அளிக்கவேண்டும் என்பதுபோன்ற சீர்திருத்தங்கள் செய்பவர் பலர். ஆனால், நாங்கள் தீண்டாமை ஏன்? எப்படி வந்தது? என்று பார்க்கிறோம். மதத்தால் அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்ற பதில் வருகிறது. மதத்தால் ஏன் தீண்டப்படாதவர்கள் என்று கேட்கின்றோம்? அது சாஸ்திர சம்மதம் என் கிறார்கள். இந்த சாஸ்திரம் எப்படி வந்தது என்றால், அது 'ஆண்டவன் ஆணை' என் கிறார்கள். அப்படியானால், தீண்டாமையை நிலைக்கச்செய்யும் மதத்தையும், அதற்கு ஆதரவு அளிக்கும் சாஸ்திரத்தையும், அதை ஏற்படுத்திய கடவுள்களையும் ஒழித்தால்தான் தீண்டாமை ஒழியும் என்கிறோம்.

அந்தப்படி இல்லாமல், சமுதாய சீர்திருத்தம் என்ற பெயரால் சில சீர்திருத்தங் களைத் தீண்டாதவர்களுக்குச் செய்து கொடுத்தாலும், அவர்கள் தீண்டப்படாத மக்கள் என்ற சாதியில் அல்லது அரிஜனங்கள் என்ற சாதியில்தான் இருப்பார்களே தவிர அந்தப் பெயர் ஒழியாது. அதனால் திராவிடர் கழகம் இவைகளின் அஸ்திவாரங்களைக் கண்டு பிடித்து—அதாவது சாதிமுறை எந்த உருவத்திலும் எதிலும் இல்லாமல் அவைகளைத் தகர்க்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது.

இன்று சமுதாயத்தில் பார்ப்பனர், சூத்திரர், பஞ்சமர் என்ற மூன்று பெரும் பிரிவுகள் இருக்கின்றன. இதில் மேல்சாதிக்காரன் என்ற காரணத்தினால் பார்ப்பனனும், கீழ்சாதிக் காரன் என்ற காரணத்தினால் பஞ்சமனும் தங்களுக்கு வேண்டிய சலுகைகள் பெறு கின்றனர். ஆனால், இடையில் இருக்கும் சூத்திரர்கள் சலுகை இல்லாமல் வேதனைப்படு கின்றனர்.

[வத்தலக்குண்டில், 13-4-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-4-1950]

5. மாறுதலுக்கு எதிர்ப்பு

சமுதாயத்தில் மாற்றம் செய்ய விரும்பும்போது உலகத்தில் எதிர்ப்பு வருவது இயற்கையே. ஆனால், எந்த நாட்டுச் சரித்திரத்தைப் புரட்டினாலும் மாறுதல் இருந்தே தீரும். மாறுதல் செய்ய விரும்புபவன் கீழே விழுந்து பல கஷ்டங்களை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 1954-ல் பர்மாவில் நடைபெற்ற உலக பவுத்த
மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது வரவேற்கப்படுகிறார். (மேலே)
அங்கு ஒரு முடிதிருத்தகத்தில் முடிதிருத்தம் (Shampoo) செய்துகொள்கிறார். (கீழே)

1954-ல் பர்மாவில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

கட்டை வண்டி ஏறுகிறவன் இரயிலை வெறுப்பான். பின், இரயிலின் அவசியத்தை உணர்ந்து இரயிலில் ஏறிப் பிரயாணம் செய்வான். நெய்விளக்கைத் தவிர வேறு எந்த விளக்கும் கூடாது, மண்ணெண்ணெய் கூடாது என்று கூறியவர்கள்கூட இன்று மின்சார விளக்குகளைப் பொருத்தி இருக்கிறார்கள். பறவைகளுக்கும் எருமை, புலி, எலி போன்ற வைகளுக்கும் பகுத்தறிவு கிடையாது. ஆனால், மனிதன் ஐந்து அறிவைத் தாண்டி, ஆறாவது அறிவை—பகுத்தறிவைப் பெற்றிருக்கிறான். அனுபவத்தைப் பெறுவதும், மற்றவர்கள் செய்வதை, சொல்வதை யோசிக்க சக்தி பெற்றிருப்பதும் மனித இனம். எனவே, மனித இனம் வாழ்வில் வளர்ச்சியடைந்து வருகிறது.

அறிஞர்களின் ஏற்பாட்டால் 1910-ல் வெளிவந்த வாகனத்துக்கும் 1951-ல் வெளி வந்திருக்கிற வாகனத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. உலகம் நாளுக்கு நாள், மணிக்குமணி முன்னேறிக்கொண்டு போகும்போது, நமது தமிழர் சமூகம் மட்டிலும் சூத்திரப் பட்டத்துடன் பின்னேறிக் கொண்டு போகிறது. நாம் செய்யும் மாறுதல் சுக போகிகளுக்குப் பாதகமாக இருந்தால்—அவர்களின் இன்பவாழ்வு பாதிக்கப்படும் என்று நினைத்தால், அவர்கள் மாறுதலை மறுப்பார்கள்; எதிர்ப்பார்கள்.

1928 என்று நினைக்கிறேன்; எங்கள் சுயமரியாதை இயக்கத்தில் பல செட்டியார்கள் சேர்ந்தார்கள். அந்தக் காலத்தில் பார்ப்பனர்கள் கப்பல் ஏறி வெளி நாடுகளுக்குப் போகக் கூடாது. அப்படிப் போனால் சாதிக்குப் பாதகம் விளையும் என்ற நிலையில் இருந்தார்கள். ஆனால், இன்று சாதி ஆசாரத்தையும் மறந்து, வெளி நாடுகளுக்காகக் கடல் கடந்து பிழைப்புக்காகவும், பதவிகள் வகிக்கவும் செல்லுகிறார்கள். இதுவும் மாறுதல்தானே! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ரோமத்தைக் கத்தரித்து 'கிராப்பு' வைத்திருந்தால் பள்ளிக்கூடத்தில் படிக்க இடம் தரமாட்டார்கள். ஆனால், இப்பொழுது அவர்களே கிராப்பு வைத்துக்கொள்ளுகிறார்கள். நெற்றியில் எதுவுமில்லை என்றால் பள்ளியில் மாணவர்களை நுழைய விடமாட்டார்கள்; ஆனால், இன்று 100க்கு 90 விகிதம் தமிழர்கள் நெற்றியில் எதுவும் வைத்துக்கொள்ளுவதில்லை. 150 ஆண்டுகட்கு முன்பு பெண்கள் ரவிக்கை போட்டுக் கொண்டதில்லை; மலையாளத்தில் மார்பில் துணிகூடப் போடக்கூடாது; இன்று பாட்டியம்மாள்கூட ரவிக்கை போட ஆசைப்படுகிறார்கள். நான் ஈரோடு சேர்மனாக இருந்தபொழுது குழாய்த் தண்ணீருக்கு ஏற்பாடு செய்தேன். மக்களெல்லாம் போற்றி னார்கள். ஆனால், என் தாயார் மட்டிலும், குழாய்த் தண்ணீர் கூடாது என்றார்கள். காரணம் என்ன? குழாய்த் தண்ணீரை யார் யார் பிடித்துவிடுகிறார்களோ—அதில் தீட்டு ஒட்டியிருக்குமே என்பதற்காக! பிறகு திருந்தினார்கள். மாறுதல் வேண்டும்போது பிடிவாதம் இருக்கத்தான் செய்யும். அக்கம் பக்கத்தைப் பார்த்து மாறுதல் ஏற்பட்டுவிடும். உலகம் போகிற போக்கைப் பார்த்தால் மனித சமுதாய வளர்ச்சி எந்த அளவில் கொண்டு போய்விடுமோ! என்ன ஆகுமோ? யார் கண்டது?

நம் நாட்டு இராஜாக்களெல்லாம் கடவுளாக மதிக்கப்பட்டார்கள்; கடவுள் அவதார மென எண்ணப்பட்டார்கள். கடவுளுக்குச் செய்வதெல்லாம் இராஜாவுக்கும் செய்தார்கள். ஆனால், அந்த இராஜாக்களெல்லாம் இன்று என்ன ஆனார்கள்? அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கும் இராஜாவாக ஆக்கப்பட்டார்கள். ஜமீன்தார்களும் இப்படியே ஒழிக்கப்பட் டார்கள். 'கடவுள் ஒருவனை உயர்ந்தவனாகவும், ஒருவனைத் தாழ்ந்தவனாகவும் படைத்தார்' என்ற வருணாசிரம வேதாந்தம் எங்கே போயிற்று? இப்படியே சுதந்திர ஜனநாயக எண்ணத்துடன் ஆராய்ந்தால் மாறுதல் கண்டிப்பாய்க் கிடைக்கும்.

2000 ஆண்டுகளாக சூத்திரர்கள் இருக்கிறார்கள்; ஏன் அப்படி இருக்கவேண்டும்? ஒரு பாவமும் அறியாத குழந்தை பிறந்ததும், நடமாட ஆரம்பித்ததும் ஏன் சூத்திரனாக இருக்கவேண்டும்? இந்த இருபதாம் நூற்றாண்டிலும், ஏன் புராணத்திலும், சாஸ்திர–சம்பிரதாயத்திலும் சூத்திரப் பட்டம் இருக்கவேண்டும் என்று கேட்பது தப்பா? உள்ளதைச்

சொல்லி மாறுதல் விரும்பும் எங்களைக் குறைகூறுபவர்கள், தொந்தரவு கொடுப்பவர்கள் ஒரு காலத்தில் அதே மாறுதலுக்காக உழைப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

அடிமை முத்திரை குத்தப்பட்டவர்களாக, விலை கொடுத்து வாங்கும் அடிமைகளாக நீக்ரோக்கள் நடத்தப்பட்டார்கள். லிங்கன் தோன்றினார்; மாறுதலைச் செய்தார். இன்று அந்தச் சமூகம், பிற இனத்தவர்களுடன் சரிசமமாக வாழும் ஒரு நிலையை ஏற்படுத்திக்கொண்டது.

சீனாவில் சன்யாட்சன் தோன்றினார்; மாறுதலை உண்டுபண்ணினார். 'அய்ரோப்பாவின் நோயாளி' என்று கூறப்பட்ட துருக்கி நாட்டிலே கமால் பாட்சா தோன்றி மாறுதலை உண்டுபண்ணினார். ஆனால், தமிழ் நாட்டில் சித்தர்களும் வள்ளுவரும் புத்தரும் தோன்றி—சாதி ஒழிய வேண்டும், மாறுதல் வேண்டும் என்று கூறியும் மாறுதல் காண முடியவில்லையே? உழைப்பதெல்லாம் நம்மவர்களாக இருந்தும், கீழ்சாதியாகத்தானே வாழ்கிறோம்! மலையாள நாட்டில் ஈழவர்கள் வீதியில் நடக்கக்கூடாது என்ற சம்பிரதாயமெல்லாம் மாறி, மாறுதல் ஏற்பட்டு, இன்று வீதியில் நடக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டில் இன்னும் தீண்டப்படாதவன் இருக்கத்தானே செய்கிறான்! அது போகட்டும். நம் தாய்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர்; ஆனால் தமிழுக்கு இடமில்லை. கோயிலில் வடமொழியில் மந்திரம் ஓதப்படுகிறது; இந்தி படித்தால்தான் பதவி கிடைக்கும்; தமிழில் சங்கீதம் வராது; தெலுங்கில்தான் சங்கீதம் வரும். சாஸ்திரம், புராணம் எல்லாம் வடமொழியில்!

காந்தியார் நம் நாட்டில் என்ன ஆனார்? மகாத்மாவாகி, மகானான அவரே மூன்று குண்டுகளுக்கு இரையானாரே! 'சூத்திரன் படிக்கக்கூடாது' என்கிறது மனுதர்மம்; 'எல்லோரும் படிக்க வேண்டும்' என்றார் காந்தியார்—உடனே பாய்ந்தன மூன்று குண்டுகள்! 'முஸ்லிம் மதமா, இந்து மதமா? எல்லாம் ஒன்றுதான்' என்றார் காந்தியார்—பாய்ந்தன மூன்று குண்டுகள்! எனவே, மாறுதலுக்கு எதிர்ப்பு இருந்துதான் தீரும்; அதைப்பற்றிக் கவலையில்லை.

நீங்கள் ஒவ்வொருவரும் சமத்துவம் காண, மாறுதல் கொள்ளப் பாடுபடுங்கள்! உயர்ந்தவன்–தாழ்ந்தவன் என்ற பேதமொழிய உழையுங்கள்! இந்நாட்டில் தமிழர்களாகிய நீங்கள் ஒற்றுமையாக இருங்கள். அதற்காகப் பாடுபடுபவர்களுக்கு உதவியாக இருங்கள். என் தொண்டின் அடிப்படை நோக்கமெல்லாம் சாதி ஒழிப்பேயாகும்.

[மலாயாவில், கோலப்பிறை செயின்ட் மார்க் ஸ்கூல் திடலில் 16-12-1954-ல் சொற்பொழிவு—
ஆதாரம் : பினாங்கு, 'சேவிகா' 18-12-1954—'விடுதலை' 23-12-1954]

பெரியார்

ஈ.வெ.ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

1

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்

திருச்சிராப்பள்ளி-2.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;rp er d; (09-06-2011)
jk;Hk; t i y (www.thamizham.net)

யானால், அவர்களுக்கு முக்கியமான ஒரு யோக்கியதை இருக்கவேண்டும். அதென்ன வென்றால், இப்படிப்பட்ட போலிக் கூப்பாடுகளுக்கும் கூலி மாரடிப்புகளுக்கும் மனம் கலங்காமல் இருக்கவேண்டியதேயாகும். மற்றும், 'நமது கொள்கையைப்பற்றி ஊரார் என்ன நினைப்பார்கள்? நம்மைப் பற்றி ஊரார் என்ன பேசுவார்கள்?' என்கின்ற விஷயத்தைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு கவனியாமல், யாவர் அலட்சியமாய் இருக்கின்றார்களோ அவர்களேதாம் அவ்வளவுக் கவ்வளவு புதிய எண்ணங்களையும், புதிய உணர்ச்சிகளையும், புதிய கொள்கைகளையும் மக்களுக்குள் புகுத்தவும், அதைக் காரிய அனுபவத்தில் கொண்டு செலுத்தச் செய்யவும் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

உதாரணமாக, நிர்வாணக் கொள்கையை ஒரு நாட்டில் வெற்றிபெற நடத்த வேண்டும் என்று ஒருவன் கருதுவானேயானால் அவன் அக் கொள்கையின் அவசியத்தையும் சரியா, தப்பா என்பதையும் கவனிக்கவேண்டுமேயொழிய, மற்றபடி இக் கொள்கையை எடுத்துச் சொன்னால் மக்கள் என்ன சொல்லுவார்கள் என்று நினைப்பானேயாகில், அக் கொள்கைக்காரன் அந்த வேலைக்குத் தகுதி அற்றவனே ஆவான். நிர்வாணக் கொள்கையைப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தால் பஞ்சாலைத் துணியாலை வியாபாரிகள் எல்லோரும் எதிர்ப் பிரச்சாரத்துக்கு வந்துவிடுவார்கள்; ஜவுளி வியாபாரிகள், ஆலைக் காரர்கள் எல்லோரும் விஷமப் பிரச்சாரத்துக்கு வருவார்கள். இவர்கள் வார்த்தைகளைக் கேட்ட சாதாரண பாமர மக்கள் எல்லோரும் நிர்வாணப் பிரச்சாரகர்கள் மீது கல்லெடுத்துப் போடவும் வருவார்கள். இவற்றைச் சமாளிக்கவோ அல்லது அதன் பயனை அடையவோ தயாராக இருப்பவர்கள்தாம் இந்தப் பிரச்சாரத்தில் புகவேண்டும்; இவர்கள்தாம் வெற்றி பெறக்கூடும். அப்படிக்கில்லாமல், 'நமது உருவப்படம் மூடர் வீட்டில் பூசையில் இருக்க வேண்டும்' என்று கருதுகின்றவர்கள் இவ் வேலைகளைச் செய்யச் சிறிதும் தகுதியற்றவர் களேயாவார்கள். ஆதலால், தனக்குள் உறுதியும் அதனால் ஏற்படும் பலனை அனுபவிக்கத் துணிவும் உள்ளவர்களால்தாம் பயன்படத்தக்க மாறுதல்களை உண்டாக்க முடியும் என்றும் அப்படிப்பட்டவர்களால்தாம் உலகில் தலைகீழான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் எடுத்துக்காட்டுவதற்காகவே இதைக் குறிப்பிட்டோம்.

நிற்க, 1933 வருஷத்துக்கு என்று நாம் வகுக்கப்போகும் திட்டங்களில் பல, பொது ஜனங்கள் என்பவர்களும் அரசாங்கத்தார் என்பவர்களும் குற்றங்கூறக் கூடியதாகவும், குற்றமாய்க் கருதக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனாலும், அவ்வியக்கத்திலும் அத் திட்டங்களில் நம்பிக்கையும் பற்றும் கொண்டவர்களும், முதலாவதாக இத் திட்டங்களை வெளியிட்டால் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்; அரசாங்கத்தார் என்ன செய்வார்கள் என்பதை மறந்து, இது சரியா, தப்பா; அவசியமா, அவசியமில்லையா என்பதைத்தான் யோசிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். பொதுஜன அபிப்பிராயம் என்பதை எப்படி இலட்சியம் செய்யக்கூடாது என்று சொல்லுகின்றோமோ அப்படித்தான் சர்க்கார் என்ன சொல்லுவார்கள், என்ன செய்வார்கள் என்பதையும் இலட்சியம் செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றோம். பொதுஜனங்களோ பாமரர்கள்; மூட நம்பிக்கையில் பற்றுக் கொண்டவர்கள்; பகுத்தறிவு தடைப்படுத்தப்பட்டவர்கள். சர்க்கார் என்பதோ சுயநலமே உருவாய்க் கொண்ட முதலாளித் தன்மையும் எஜமானத் தன்மையும் கொண்டது. அதாவது, இந்த இரண்டு பிரிவுகளும் முதலாளி(செல்வவான்கள்)களாலும், சோம்பேறி(பார்ப்பனர்)களாலும் நடத்தப்படுவனவாகும். மேற்கண்ட செல்வமும் பார்ப்பனீயமும், மதம் அரசாங்கம் என்னும் சாதனங்களாலேயே காக்கப்படுவதாகும். ஆகவே, ஒன்றுக்கொன்று சுலபத்தில் பிரிக்க முடியாத சம்பந்தமும் ஆதரவும் கொண்ட வைகள். எனவே, பொதுஜனங்களானாலும் சர்க்காரானாலும் செல்வவான்களுக்கும் சோம்பேறிகளுக்கும் விபரீதத்தை விளைவிக்கக்கூடிய எந்தக் கொள்கைகளையும் எதிர்த்தே தீருவார்கள். ஆதலால், இவ்விரண்டு வகை எதிர்ப்புக்கும் தயாராய் இருந்துதான் நாம் நமது திட்டங்களை வகுக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். தீவிரமான,

அவசியமான வேலைத் திட்டம் வகுக்கக் கருதும் தோழர்கள் இந்த இரண்டு எதிர்ப்பையும் சமாளிக்க உறுதி கொண்டு வந்தால்தான் சரியான திட்டங்களை வகுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்பொழுது இரண்டுவகைத் திட்டங்கள் யோசனைக்குக் கொண்டுவருவதற்காக சில தோழர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று 'சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டம்' என்னும் பேராலும், மற்றொன்று சுயமரியாதைக் கட்சி இதுவரையில் செய்து வந்ததுபோலவே பிரச்சாரத்தின் மூலமாக பல துறையிலும் சீர்திருத்தங்கள் செய்து மக்களுக்கு உலக ஒற்றுமையையும், பகுத்தறிவையும், அன்பையும் உண்டாக்குவது என்பது. இரண்டைப் பற்றியும் சுருக்கமாக விளக்கவேண்டுமானால், முன்னையது சில கொள்கைகளை வகுத்து, அதை நிறைவேற்ற சட்டசபை முதலிய அரசியல் பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றி அதன் மூலம் நடத்துவிப்பது என்பது. பின்னையது அரசியல் ஸ்தாபனங்களை இலட்சியம் செய்யாமல், மக்களிடை பல கொள்கைகளைப் பிரச்சாரம் செய்துகொண்டே உலகப் புரட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது. மற்றொன்று, இந்த இரண்டுவித வேலையும் தனித்தனியே நடத்தப்படலாம் என்பது. ஆகவே, இந்த விஷயங்கள் எல்லாம் நன்றாய்ப் பொறுப்புடன் ஆலோசிக்கப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

ஆதலால், உண்மை விடுதலையிலும் உண்மை சமத்துவத்திலும் பற்றுக்கொண்ட சுயமரியாதைத் தோழர்கள் அவசியம் விஜயம் செய்து கூட்டத்தின் உத்தேசத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

['குடி அரசு'-தலையங்கம்—25-12-1932]

15. சுயமரியாதைத் தொண்டு

சுயமரியாதை மாகாண மாநாடு முதல் முதலாக சென்ற வருடம் செங்கற்பட்டில் கூடியதும், அதை அடுத்த வருஷத்திற்கு ஈரோட்டிற்கு அழைக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமாகும். சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி நான்கைந்து வருட காலமானாலும், அது ஒரு விதமாக, அதாவது—சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ எப்படியோ ஒரு விதத்தில் பொது மக்களின் கவனத்தை இழுத்து, எங்கு பார்த்தாலும் இவ்வியக்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்படியான நிலைமையைப் பெற்றுவிட்டது.

மற்றும், இவ்வியக்க வேகமானது இன்றைய தினம் அரசியல் விஷயங்களிலும், மத விஷயங்களிலும், சமூக விஷயங்களிலும் புகுந்து அவைகளையெல்லாம் சற்று ஆட்டி விட்டதோடு, இதன் பேரால் பிழைத்துவந்தவர்களின் பிழைப்பில் மண் போடும்படியான நிலைமை ஏற்பட்டு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இவைகளுக்கு ருஜு வேண்டுமானால், நமது எதிரிகளின் வாக்குமூலங்களில் இருந்தே தெரிந்துகொள்ளலாம். அதாவது, சட்டசபைகளில் முத்துரங்க முதலியார் போன்றவர்கள் மூலமாய் சுயமரியாதை இயக்க விஷயமாய்க் கேட்கும் கேள்விகளாலும், வெளியில் திருவாளர் சத்தியமூர்த்தி, பி. வரதராஜுலு போன்றவர்கள் தேசியத்திற்கு ஆபத்து என்னும் பேரால் பிரசவ வேதனைப்படுவதாலும், இந்து, கிறிஸ்தவ, முகமதிய முதலிய மதப் புரோகிதர்கள் இதைப்பற்றி ஆவலாதி கூறுவதாலும், சைவ சமாசக்காரரும் வைஷ்ணவ மண்டலக்காரர்களும் கூடிக்கொண்டு மூலை மூலையாய் ஒப்பாரி வைத்து அழுவதாலும், பண்டிதர்கள், சாஸ்திரிகள், தங்களுக்கு மரியாதை இல்லாமல் பரிதவிக்கின்றதாலும், பல மடாதிபதிகள் இதை எதிர்க்கப் பணம் கொடுத்துக் கூலிகளைப் பிடித்து உளறச் செய்வதாலும், சில, அதாவது—சிருங்கேரி போன்ற பெரிய மடாதிபதிகள் நம்மையே ராஜி பேச 'ஸ்ரீமுக'த்தின் மூலம் கூப்பிடுவ

தாலும் மற்றும் சனாதன மகாநாடுகளும் ஆஸ்திகர்கள் மகாநாடுகளும் தினமும் நடப்பதாலும், கோவில் அதிகாரிகள் தங்கள் கோவில்களுக்கு ஆபத்து என்றும், வரும்படி குறைந்து விட்டது என்றும், 'கோவிலுக்குள் தாழ்ந்த வகுப்பார் பிரவேசித்து விடுவார்கள்' என்று சொல்லி நாம் போகின்ற ஊர்களில் எல்லாம் போலீஸ் உதவியுடன் கதவுகளைச் சாத்திக் கொண்டு இருப்பதாலும், ஒருவாறு இதன் வேகத்தை உணரலாம். அன்றியும், இவ்வியக்கம் நமது நாடு மாத்திரமல்லாமல் வெளிநாடுகளிலும் கானலில் நெருப்புப் பிடிப்பதுபோல் படர்ந்துகொண்டேயும் போகின்றது.

உதாரணமாக, நாம் இவ்வியக்க விஷயமாய் மலாய் நாட்டிற்குப் போகும்போது 'தமிழ்நாடு' பத்திரிக்கை செய்த விஷமம் யாவருக்கும் தெரிந்திருக்கும். மலாய் நாட்டிலுள்ள இவரது கூலிகளையும் மருந்து விற்கும் ஏஜண்டுகளையும் ஏவிவிட்டு விஷமம் செய்ததும் தெரிந்திருக்கலாம். நாம் மலாய் நாடு போகின்றோம் என்று தெரிந்ததும், 'நம்மைத் தடுத்துவிட்டார்கள்' என்றும், 'நாயக்கர் கோஷ்டி பகிஷ்காரம்' என்றும், 'நாயக்கருக்குத் தடை உத்தரவு' என்றும் அது பலவிதமாய் எழுதி வந்தது யாவருக்கும் தெரிந்ததே. ஆனால், நாம் மலாய் நாடு போய் வந்த பிறகு அதே 'தமிழ்நாடு' பத்திரிக்கையும் அதன் பத்திராதிபருமான திரு. வரதராஜுலுவும், அதன் கூலிகளும் பொறாமைப்படும் அளவையும், தன்னை அடியோடு ஒழிக்க முயற்சித்த ஆட்களின் காலுக்குள் புகுந்து கூலி கொடுத்துக் கூட்டி வைத்து அழும் ஒப்பாரி அழுகையும், ஆத்திரப்படும் மாதிரியும் அவர் பத்திரிக்கையில் பார்த்தாலே, குடியேற்ற நாடுகளிலும் இவ்வியக்கத்தில் மக்களுக்கு உள்ள ஆர்வம் இன்னதென விளங்கும்.

இவற்றிற்குக் காரணம் என்னவென்றால், எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்ட காலத்தும் அவைகளை எல்லாம் லட்சியம் செய்யாமல், எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆரம்பித்த கொள்கைகளிலிருந்து ஒரு சிறிதும் பின்வாங்காமல் உறுதியாய் நின்றதோடு, மேலும் மேலும் முன்போலவே முயற்சித்ததாலுமேதான் எவ்விதக் குறைவோ, தடையோ இல்லாமல் இவ்வியக்கம் முன்னேறிக்கொண்டு போகின்றது.

நிற்க, எப்படி எல்லா இயக்கங்களையும் ஒரு கூட்டம் தங்கள் சுயநலத்துக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் சோம்பேறி வாழ்வுக்கும் உபயோகப்படுத்தி வாழ்வது போலவே, இவ்வியக்கத்தையும் சிலர் தங்கள் வாழ்வுக்கும், வயிற்றுப் பிழைப்புக்கும் உபயோகப் படுத்திக்கொண்ட முறையில் ஏதாவது சிறு சிறு தடையோ, பொது ஜனங்களுக்குச் சிறு அதிருப்தியோ உண்டாகும்படியான காரியங்கள், சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. உதாரணமாக, ஈரோட்டில் நடந்த இரண்டொரு காரியங்களைச் சொல்லலாம். ஆனாலும், அவைகளைக் கண்டு நாம் பயப்படாமலும் சளைக்காமலும் அதற்குத் தகுந்த பரிகாரங்களைச் செய்துவிட்டு, மேல் போக வேண்டியது அறிவுடைமையே ஒழிய, அதற்காக இயக்கத்தைக் குற்றம் சொல்லிவிடக் கூடாது. இப்போதுங்கூட, வயிற்றுப் பிழைப்புக்காக சுயமரியாதை இயக்கத்தின் பேரை வைத்துக்கொண்டு திரிபவர்களில் சிலர், திருடுவதையும், நம்பிக்கைத் துரோகம் செய்வதையும், பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதையும், சிறு பிள்ளைகளை வஞ்சிப்பதையும், சமயத்திற்குத் தகுந்தபடி வேஷம்போட்டுப் பேசி மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதையும், தூர்ச்செய்கைகளையும் செய்துவிட்டுச் சுயமரியாதை என்று சொல்லிக்கொண்டு திரிந்து வயிறு வளர்ப்பதையும் நாம் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். இதற்காகவும் நாம் இயக்கத்தைக் குற்றம் சொல்லவோ, நிறுத்திவிடவோ முயற்சிப்பதும் மடமையாகும். வேண்டுமானால் எதிர்காலத்தில் இவ்விதமான காரியங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதை முன்னிட்டுச் சற்று ஜாக்கிரதையாகவும், கண்டிப்பாகவும் இருக்கவேண்டும் என்பதை நாம் மனப்பூர்த்தியாய் ஒப்புக்கொள்கின்றோம்.

இவ்வியக்கம் ஏற்பட்டு இன்றைக்கு நான்கைந்து வருஷ காலம் ஆகியிருந்தாலும், இதன் பேரால் நம்மால் வெளியிடப்படும் பத்திரிக்கைகளுக்கும் கொள்கைகளுக்கும் பொறுப்பாளியாய் இருந்து வந்ததோடு, பொது ஜனங்களிடமிருந்தோ அல்லது வேறு நண்பர்களிடமிருந்தோ, இன்றைய வரையில் ஒரு சின்ன காசாவது இவைகளுக்காக நாம் வாங்கவில்லை என்பதையும் இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ் விஷயத்தில் நாம் வேண்டுமென்றே ஜாக்கிரதையாய் இருந்து வருகிறோம். ஏனெனில், பணம் கொடுத்த காரணத்தாலோ அல்லது வேறுவித உதவி செய்த காரணத்தாலோ நமது அபிப்பிராயத்தின் மீது அதிகாரம் செலுத்த ஏற்பட்டுவிட்டால், அது நமது இயக்கத்திற்குத் தொல்லை விளைவிக்கக் கூடியதாகிவிடக் கூடுமென்று பயந்தே, நமது அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லாம் நமக்கு வேண்டியவர்கள் என்றும், ஏற்றுக்கொள்ளாதவர்களானால் அவர்களிடத்தில் நமக்கு வேலையில்லை என்றும் மாத்திரம் முடிவு செய்து கொண்டு நடந்து வருகின்றோம்.

இந்த முறையில் இன்றையதினம் வேண்டாதவர்களாய் இருப்பவர்கள் நாளை வேண்டியவர்களாகலாம். வேண்டியவர்களாய் இருப்பவர்கள் நாளை வேண்டாதவர்களும் ஆகலாம். ஆதலால், அப்படிப்பட்ட சமயங்களில் நாமும் மற்ற யாரும் மன வருத்தப் படாமல் இருப்பதற்கு, எவ்வித உதவியும் யாரிடமிருந்தும் பெறாமல் இருந்தால்தான் முடியும். அன்றியும், இந்தப்படி தைரியமாயும் உறுதியாயும் இருக்க வசதி இருந்தால்தான் நமது அபிப்பிராயத்தை நிலைநிறுத்தப் பாடுபட முடியுமே ஒழிய தாட்சண்யம் இருந்தால் முடியவே முடியாது.

இவ் வியக்கத்தை ஆரம்பிக்கும்போதுகூட நாம் 'என்னையே எண்ணி இப் பெரும் பணி ஏற்றேன்' என்று ஒரு பாட்டில் சொல்லப்படுதல்போல், நம்மையே நாம் பொறுப்பாளியாகவும் உதவியாளனாகவும் எண்ணியும் நம்பியுமேதான் இக் காரியத்தில் இறங்கினோமே ஒழிய நமக்குத் தொண்டர்கள் உண்டு, தலைவர்கள் உண்டு, சிநேகிதர்கள் உண்டு, பண உதவி செய்கிறவர்கள் உண்டு என்று நினைத்து அவர்கள் உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்து இவ் வியக்கத்தில் நாம் இறங்கவில்லை. ஆதலால், நமது கொள்கைகளை உத்தேசித்து வருகின்றவர்களை வரவேற்கவேண்டியதும், போகிறவர்களைப் போகச் சொல்ல வேண்டியதும், ஒழுக்கமற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள் தள்ளப்படவேண்டியதும் இவ் வியக்கத்தின் கடமையாகிவிட்டது. இவ் விஷயத்தில் நமக்கு உள்ள உறுதிதான் இவ் வியக்கத்திற்குச் சொத்தும் அஸ்திவாரமுமேயொழிய வேறொன்றும் இல்லை.

இது சமயத்தில் இதை ஏன் எழுதவேண்டி வந்ததென்றால், 'சில தலைவர்களும் சில தொண்டர்களும் எதிரிகளாயும் எதிரிகளின் ஆட்களாயும் இருக்கின்ற இந்தச் சமயத்தில் மகாநாடு நடத்துவது சற்று கஷ்டமாய் இருக்காதா?' என்று சில நண்பர்கள் கவலைப் படுவதால் இதை எழுதவேண்டி வந்ததே தவிர வேறில்லை.

செங்கற்பட்டில் சிலர் ஏற்றுக்கொண்டபடி, மகாநாடு இவ்வருடம் மார்ச்சு அல்லது ஏப்ரலில் நடத்தவேண்டியது அவசியமானது. அதற்கு இதுவரை 3000 ரூபாய்போல் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இனியும் இரண்டாயிரம் ரூபாய் ஒன்று அல்லது இரண்டு வாரத்தில் கிடைத்துவிடலாம். இது ஆனதும் மகாநாட்டின் வேலை துவக்கமாகி விடும். பிறகு மேற்கொண்டு கிடைப்பதையும் வெளி வசூல்களையும் உத்தேசித்தே மகா நாட்டை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பதுபற்றி யோசிக்கப்படும். ஏனெனில், சென்ற மகாநாடு 10,000 ரூபாய்வரை செலவுசெய்து இரண்டுநாளில் முடித்துவிட்டதானது பலருக்கு ஏமாற்றமாயும் பொசுக்கென்றும் போயிருக்கும். ஆதலால், ஈரோட்டில் ஒரு வாரமாவது மகாநாடு நடத்தவேண்டும் என்று கருதுகின்றோம். ஏனெனில், ஒவ்வொரு தினமும் இயக்க சம்பந்தமான வேறு மகாநாடுகளும் தனித்தனி உபந்நியாசங்களும் கண் காட்சிகளும் நாடகங்களுமாக நடத்திக்காட்டவேண்டும் என்று சில நண்பர்கள் ஆசைப்

படுகின்றார்கள். அதுபோலவே, சில வடநாட்டுப் பெரியார்களை இங்கு வரவழைக்கவும் உத்தேசித்திருக்கிறோம். அனேகமாய் இம்மாதக் கடைசி வாரத்தில் இங்குச் சுயமரியாதை மகாநாடு ஆபீசு ஒன்று திறக்கப்படும். திரு. இராமநாதன் அவர்கள் அதன் முக்கிய நிர்வாகஸ்தராய் இருப்பார். அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் அவ்வாபீசுக்கே வைத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதோடு, மகாநாட்டில் வேலை செய்ய இஷ்டமுள்ள கட்டுப்பாட்டில் நிலை உள்ளவர்களும் உண்மையிலும் ஒழுக்கத்திலும் லட்சியம் உள்ளவர்களுமான தொண்டர்கள் கடித மூலமாய் இப்போதே தெரிவித்துக் கொள்ளக் கோருகிறோம். அனேகமாய் மார்ச்சு முதல் வாரத்தில் தொண்டர்களுக்கு அழைப்பு வந்துவிடும். உடனே வரத் தயாராய் இருப்பவர்கள் எழுதவும்.

['குடி அரசு'—16-2-1930]

16. நமது நடைமுறை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்திற்கு ஆதரவு இல்லையென்று சொல்லுகின்றார்கள். வரவேற்புப் பத்திரத்தில் எழுதி இருப்பதைப் பார்த்தால் இயக்கத்தின் செல்வாக்கை நன்கு குறிப்பிடுகிறது.

சுயமரியாதை இயக்கம் எங்கு பார்த்தாலும் பரவி நன்றாக வேரூன்றி இருக்கின்றது என்பதற்கு மருத்துவ குல சங்கத்தாரின் வரவேற்புப் பத்திரமே ஒரு சாட்சியாகும். சமதர்மம் என்ற பெயரை சுயமரியாதை என்று இனி எடுத்துக்கொண்டு, சமதர்மக் கொள்கைகளைப் பரப்ப முயற்சிக்க வேண்டும். சாதிபேதங்கள் ஒழியவேண்டும். மேல் நாடுகளில் சாதிபேதம் ஒழிந்து போயிருக்கிறது. ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறோம். இது இந்தியாவில் ஆட்சேபிக்கப்படுகிறது. பரோடா மன்னர் சட்டம் செய்து விட்டார், ஸ்திரீகளுக்குக் கலியாண ரத்து அவசியமென்பதை. மேல்நாட்டார் சட்டபூர்வமாக அமுலில் கொண்டுவந்து விட்டார்கள். சுயமரியாதை இயக்கத்தைச் சில பண்டிதர்கள் எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றார்கள். எவ்வளவோபேர் எதிர்த்துப் பார்த்தும் அசைக்க முடியாத ஒரு இயக்கத்தைச் சில பண்டிதர்களால் எதிர்த்துவிட முடியுமா? புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாக அக்கிராசனர் திவான்பகதூர் டி. ராகவய்யா சமீபத்தில் 'கோயில்களைக் கட்டுவதில் பிரயோசனமில்லை' யென்று குறிப்பிட்டிருக்கின்றார். தொழிற்சாலைகள் எங்கு பார்த்தாலும் ஏற்படுத்தி மேல் நாட்டாரைப்போல் முன்னேற்ற மடைவேண்டிய வழிகளை நாம் தேடவேண்டும். தேர்தல்கள் நெருங்கிவிட்டபடியினால் இனிமேல் வரப் போகும் கவர்ன்மெண்டானது சுயமரியாதை இயக்கத்திற்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ இருக்குமென்று சொல்லமுடியாது. ஆகையினால், கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகித்துக் கொண்டுதான் போகவேண்டும். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைச் சரியாய்த் தெரியாமலும், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லிக் கொண்டு, சுயமரியாதைத் தலைவர்களைக் குறை கூறுவது வழக்கமாய் இருந்துவருகின்றது. இதைப் பொருட்படுத்தப் போவதில்லை.

சுயமரியாதை இயக்கமானது பரந்த கொள்கைகளை உடையது. ஒருவரால் உண்டாக்கப்பட்டாலும், பரந்த மக்களிடையே பரவிவிட்டபடியினால், அசைக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டது. மக்களே அதைக் கவனித்துக் கொள்வார்கள். சுயமரியாதை இயக்கத்தில் தீவிரப் பற்றுள்ள ஒருவருடைய குடும்பத்தில் மற்றவர்கள் வேறு மாதிரியாக இருந்தால், அவர் ஒருவர் மட்டும் என்ன செய்யமுடியும்? அவர்களைத் திருப்ப முடியாவிட்டால் அவர்களை விட்டு விலகவேண்டும். இல்லையேல், அவர்களுடன் கலந்துதானிருக்க நேரிடும். அதற்கு ஒரு குற்றமும் கூறக்கூடாது. படிப்படியாக வரவேண்டும்.

பழைய கால வழக்கங்களை அனுசரிப்பவர்களைத் திருப்பிக் கொண்டுவருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எல்லோரும் ஒரே மாதிரியான கொள்கைகளை அனுஷ்டானத்தில் கொண்டுவரும் வரையில், தவறுதல்கள் இருந்தாலும், அதை ஒரு பெரிய விஷயமாகக் கொள்ளக் கூடாது.

[திருச்சியில், 1-9-1930-ல் சொற்பொழிவு—'திராவிடன்' 5-9-1930]

17. சுயமரியாதை இயக்கத்தின் முடிவான இலட்சியம்

சுயமரியாதை இயக்க இலட்சியம் பொது உடைமை இயக்க இலட்சியமாய் இருக்கிறதென்றும், அதற்கு அரசாங்க அடக்குமுறைக் கொடுமை ஏற்படுமென்றும், அதனால் இயக்கமே அழிவுற வேண்டிவரும் என்றும் பலர் சொல்லக் கேட்கிறோம். பலர் பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் அந்தப்படி குறிப்பிட்டு வருவதையும் பார்க்கின்றோம்.

இதற்கு நாம் முதலாவதாகக் கூறும் பதில் என்னவென்றால், அவர்கள் கூறுகின்றபடியே பொது உடைமைக்கொள்கை என்று ஒத்துக்கொண்டே பார்ப்போமானாலும் அதனால் ஏற்படும் கஷ்டம் என்ன, நஷ்டமென்ன என்றுதான் கேட்கின்றோம். நாம் என்றைய தினம் சுயமரியாதை இயக்கம் என்று ஆரம்பித்தோமோ அன்று முதலேதான் இந்த இயக்கத்தைப் பற்றிப் பலரால் பொதுஉடைமை இயக்கம் என்று சொல்லப்பட்டு வந்திருக்கின்றது என்பதற்கு, சு. ம. இயக்கத்தின் முடிவான இலட்சியங்களை எடுத்துச் சொல்லும்போதெல்லாம் நாமும் மேற்கண்ட தத்துவத்தையேதான் சொல்லிவந்திருக்கின்றோம். ஆதலால், நாம் புதிதாக எதையும் கொண்டுவந்து புகுத்திவிடவில்லை.

நிற்க, மனித சமூகத்திற்கு ஏதாவது ஒரு உண்மையான தொண்டு செய்யவேண்டுமென்று ஒருவன் கருதினால், அவன் இராட்டினத்தின் பெருமையையும், கோவில்களிலுள்ள கடவுள்களின் பெருமையையும், பகவத்கீதை புராணங்கள் ஆகியவற்றின் பெருமையையும் உலகிற்கு எடுத்து ஓதிக்கொண்டிருந்தால் போதுமா என்றும், சகல கொடுமைகளுக்கும், குறைபாடுகளுக்கும் அன்னிய நாட்டான் மீது குற்றம் சொல்லி பாமரமக்களை, அவன் பக்கம் திருப்பி ஏவிவிட்டுக்கொண்டு இருந்தால் போதுமா என்றும் கேட்கின்றோம்.

இனி, இதைமாற்ற வேறுவழி என்ன இருக்கின்றது என்று யோசித்துப் பாருங்கள். ஆசையால், நாம் எப்படியாவது மகாராஜாக்கள், ஜமீன்தார்கள், முதலாளிமார்கள் ஆகியோர்கள் ஆதிக்கம்கொண்ட ஆட்சியை அழிக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். அப்படிப்பட்ட ஆட்சி பிரிட்டிஷாரால் நடத்தப்படுவதானாலும் சரி, இந்தியரால் நடத்தப்படுவதானாலும் சரி, மற்ற எவராலும் நடத்தப்படுவதானாலும் சரி, நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை; அடியோடு ஒழிக்கவேண்டியதுதான் கடமையாகும். உதாரணம் காட்ட வேண்டுமானால், பீரங்கியால் சுடப்படவேண்டும் என்ற முடிவை ஒப்புக்கொண்ட பிறகு, 'அந்தப் பீரங்கியை யார் சுடுவது?' என்பதில் சண்டைபோட்டுக்கொண்டிருப்பதில் பயன் உண்டா என்று கேட்கின்றோம்.

நமது தேசியம் இப்போது, 'யார் சுடுவது'? என்பதில்தான் சண்டைபோடுகின்றது.

ஆனால், நமது சுயமரியாதை இயக்கமோ, 'பீரங்கியை உடைத்துச் சின்னாபின்னமாக்குங்கள், இந்த வேலைக்குத் 'தேசியம்' வேண்டாம்; செய்யவருபவர்களை யெல்லாம் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றுதான் சொல்லுகின்றது. இது சரியா, தப்பா என்று யோசித்துப் பாருங்கள்.

வட்டமேஜை மாநாடானது இன்றைய தினம் காங்கிரசினிடமும், காந்தியினிடமும் பெடரல் திட்டத்திற்குக் கையெழுத்துப் பெற்ற அன்றே முடிவு செய்துவிட்டது. இனி அதை யார் எப்படித் திருத்தினாலும் அதனின் முக்கிய பயன் ஒன்றும் மாறுதலையடைந்து விடாது.

இந்த நிலையில் இன்று இந்தியர் மாத்திரம் இருப்பதாகக் கருதிவிடாதீர்கள். உலகத்திலுள்ள 'தேசியக் கிளர்ச்சி'கள் என்பவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள பாமர மக்களை ஏமாற்றி, பாடுபட்டு வாழும் மக்களை வதைத்து வாழ்ந்து வருகின்றன. இதனால்தான் நமது சு. ம. இலட்சியம் உலக இலட்சியமாய் உள்ளதைக் கைக்கொண்டு இருக்கிறது. இந்த இலட்சியத்தால் ஒன்றும் ஆபத்து வந்துவிடப் போவதில்லை. அப்படி ஏதாவது ஒரு ஆபத்து வருவதாய் இருந்தாலும், அந்த ஆபத்தானது மக்கள் சமூகத்தி னிடம் உண்மையான கவலை உள்ளவனுக்கு மேற்கண்ட ஆட்சியின் கீழ் வாழ்ந்துவருவதை விடக் கடினமானதாக இருக்காது. ஒரு சமயம் யாருக்குக் கடினமாக இருக்கும் என்று யோசித்தோமானால், சோம்பேறிகளுக்கும், ஊரார் உழைப்பில் வாழ்கின்றவர்களுக்கும், முதலாளிகளுக்கும், ஜமீன்தார்களுக்கும், இராஜாக்களுக்கும் மகா ராஜாக்களுக்கும் கடினமாய் இருக்கலாம்.

அதனால் நமக்கு என்ன? என்றைய தினம் நாம் அந்த சமூகங்கள்—பெரும் பான்மையான மனித சமூகத்தின் இன்ப வாழ்வுக்கும், சுதந்திர வாழ்வுக்கும், இடையூறாய் இருக்கின்றன என்று கருதி விட்டோமோ அன்றே அவற்றின் நாச காலத்தை எதிர்பார்க்க வேண்டியவர்களாகவும் அதற்கு நம்மால் ஆன எல்லாக் காரியங்களையும் செய்துதீர வேண்டியவர்களாகவும் ஆகிவிட்டோம். ஆதலால் அதைப் பற்றிக் கவலையில்லை.

['குடி அரசு'-தலையங்கம்—1-1-1933]

18. திருத்தப்பட்ட சு. ம. வேலைத்திட்டம்

1. பிரிட்டிஷ் முதலிய எந்த வித முதலாளித் தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டிய எல்லாக் கடன்களையும் ரத்துச் செய்வது.

3. எல்லாத் தொழிற்சாலைகளையும், இரயில்வேக்களையும், பாங்கிகளையும், கப்பல், படகு நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களையும் தேசியமயமாக்குவது.

4. எந்த விதமான பிரதிப் பிரயோசனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும் காடுகளையும் மற்ற தாவர சொத்துக்களையும் பொது ஜனங் களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும், தொழிலாளிகளும், லேவா தேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கேன்சல்) செல்லுபடியற்றதாக ஆக்கிவிடுவது. அடிமை ஒப்பந் தங்களை ரத்துச் செய்துவிடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளையெல்லாம், மாற்றி இந்தியா முழு வதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டு வருவது.

7. தொழில் செய்பவர்கள் 7 மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக்கூடாது என்பதுடன், அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது. தொழிலாளிகளுக்குக் கூலியை உயர்த்தி, அவர்களது சுக வாழ்க்கைக்கு வேண்டிய சவுகரியங்களை—இலவச நூல் நிலையங்கள், மருத்துவ மனைகள், பொழுதுபோக்கு இடங்கள் முதலிய வசதி களையும் ஏற்படுத்துவது. தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும் படியும் செய்வது. என்பவைகள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான இலட்சியங் களாகும்.

திருத்தப்பட்டபடி நிறைவேறிய வேலைத்திட்ட தீர்மானம் :—

சுயமரியாதை இயக்கமானது தென்னிந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாகப் பாமர மக்களிடை ஏராளமாய்ப் புதைந்து கிடந்த சாதி, மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதாரத் தன்மையின் கீழ்நிலையைப்பற்றியும் செய்துவந்த புரட்சிப் பிரச்சாரத்தின் பயனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருப்பதாலும்; பகுத்தறிவிற்கு ஏற்காத முறையில் நடைபெற்று வரும் மேற்கண்ட பழக்கவழக்க முறைகளைச் சட்ட மூலமாகவன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்குநாள் பலப்பட்டு வருவதாலும்,

பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும், சமூகக் கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்குச் சாதனமாக அரசியல் ஸ்தாபனங்களே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும்,

வட்டமேஜை மகாநாட்டின் பயனாய் பாமர மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் கொடுமையான பழக்க வழக்கங்களுக்கும் மனிதத் தன்மைக்கு முரணான சாதி வித்தியாசங்களுக்கும் மற்றும் பல கெடுதிகளுக்கும் பாதுகாப்பும் ஆக்கமும் அளிப்பதாய் இருப்பதாலும்,

சுயமரியாதை இயக்கத்தாருக்குள் (Socialist Party) சமதர்மக் கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற் கண்ட திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

1. பொதுஜன சவுகரியங்களுக்கே ஏற்பட்ட சாதனங்களைத் தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்பது என்பதற்கும்; சாதி மத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வாத முறைகளை ரத்துசெய்ய வேண்டும். பாமர மக்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையிலிருந்தும் சாதி, மதக் கொடுமையிலிருந்தும் விடுவித்தும் சுதந்திர மனிதர்களாக ஆக்குவதற்கும், பொதுஜன அவசியத்திற்கென்று ஏற்படுத்தப்படுகின்ற தொழில் முறைகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தையும், அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்யவேண்டும்.

2. எல்லா சட்டசபை, முனிசிபல், தாலுக்கா, ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயதுவந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்யவேண்டும். தனிப்பட்ட தொழிற்சாலைகள், இரயில், கப்பல் முதலியவைகளில் தொழிலாளிகளுக்கு எப்பொழுதும் தொழில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும் அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயப்படுத்தி, அதற்கு ஒரு உறுதிப்பாட்டையும் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

3. நிலச் சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு கிடைக்கச் செய்யவேண்டும்.

4. கோவில் பிரார்த்தனை முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகியவைகளைப் பொதுஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, அநாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்குப் பயன்படுத்த அனுமதி பெறவேண்டும்.

5. இந்திய சமூகத்தில் சாதி, மதப் பிரிவு முதலியவைகளைக் குறிக்கக்கூடிய குறிப்புகள் எதையும் பொது ஆதாரங்களில் (ரிகார்டுகளிலிருந்து) எடுத்துவிடுவதற்கும்,

அம் மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம்பெறாமல் இருக்கும்படி செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

6. முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரத்துச் சாதன வசதி, வீட்டு வசதி, பால் வசதி, வைத்திய வசதி முதலியவைகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

7. இவைகளை நிறைவேற்ற சட்டசபை, முனிசிபாலிட்டி முதலிய ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு மேற்கண்ட கட்சியினர் பேரால் அபேட்சகர்களை நிறுத்தவேண்டும்.

8. கட்சி அபேட்சகர்கள் மேற்கண்ட திட்டங்களுக்கு உறுதி கூறிக் கையெழுத்திட வேண்டும்.

9. மேற்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளை யெல்லாம் சட்ட சபைப் பிரவேசம் மூலம், பிரசங்கம் மூலம், சொல்லுவதன் மூலம், பத்திரிகை – துண்டுப் பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்யவேண்டியது.

['குடி அரசு'–தலையங்கம்—1-1-1932]

19. புரட்சி வேண்டும்

தலைவரவர்களே! கோவை சுயமரியாதை இயக்கத் தலைவரவர்களே! வாலிபத் தோழர்களே! மற்றும் இங்குக் கூடியுள்ள தோழர்களே!

உங்கள் பத்திரங்களின் மூலம் உங்களுக்குள்ள ஆவேசம் இன்னதென்று நன்றாய் விளங்குகின்றது. அவற்றையெல்லாம் என்னைப் புகழும் வழியில் காட்டி விட்டீர்கள். நான் அப் புகழ்ச்சிகளை ஒப்புக்கொள்ளக் கூடுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்; ஆனால், ஒன்றை மட்டும் ஒப்புக்கொள்கிறேன். அதாவது, என்னென்ன காரியம் நான் சாதித்த விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களோ, அந்தக் காரியங்கள் எல்லாம் அவசியம் நடந்தாகவேண்டும் என்றும், அதற்காக நாம் எல்லோரும் பாடுபடவேண்டும் என்றும் ஒப்புக்கொள்கிறேன்.

தவிர, அப் பத்திரங்களின் இரண்டொரு இடங்களில் நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமென்றும், பொதுநல இயக்கமென்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவைகளை நான் ஒப்புக்கொள்வதில்லை. 'நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமல்ல; ஆனால் அழிவு வேலை இயக்கம்' என்றே சொல்லுவேன். சீர்திருத்தம் என்றால் எதைச் சீர்திருத்தவது? இன்றைய நிலையில் மனித வாழ்க்கைக்கு, சமத்துவத் தன்மைக்குப் பெரும்பான்மையான மக்களாகிய ஏழை மக்கள் படும் கஷ்டமும் தரித்திரமும் இழிவும் நீங்குவதற்கு அனுகூல மாக என்ன கொள்கைகள், நடைமுறைகள் இங்கு இருக்கின்றன, என்று பாருங்கள். அதாவது, மத சம்பந்தமாகவோ, கடவுள் சம்பந்தமாகவோ, பொருளாதாரமுறை சம்பந்த மாகவோ, அரசியல் சம்பந்தமாகவோ ஏதாவது ஒரு கொள்கை மனித சமூக ஜீவகாருண் யத்திற்காவது, சமத்துவத்திற்காவது ஏற்றதாய் இருக்கின்றதா? என்று பாருங்கள். இருந் தால்தானே சீர்திருத்தம் செய்வீர்கள்? மதம்–கடவுள், பொருளாளன், அரசன் இவர்கள் எல்லோரும் மக்களை வருத்தி வஞ்சித்துக் கொடுமைப்படுத்தி வாழும் மக்களாவார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகள்; ஆளுக்கொரு வேலை பார்க் கின்றவர்கள். இவர்களுக்கு அனுகூலமாகவே எல்லாம் இருக்கின்றன. இவைகளில் எதைச் சீர்திருத்தம் செய்தாலும், செய்ய நினைத்தாலும் அவை இன்னும் வெகுகாலம் நிலைத்திருப்பதற்குத்தான் பயன்படுமே தவிர, மாறுதலை உண்டாக்க முடியாது. இவைகள் எல்லாம் அழிந்தொழிந்தால் ஒழிய கஷ்டம் நீங்கப் போவதில்லை.

உதாரணமாக, 'மகா விசேஷம்' பொருந்திய ஒரு (பேரூர்) தீர்த்தக் குளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது 'ஒரு கடவுளால் உலகிலுள்ள மக்களின் சர்வபாவமும் நீங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட பொற்றாமரைக் குளமாய்' இருக்கலாம். அதன் புராண மானது, 'அக் குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்டமாத்திரத்தில் சகல பாபமும் தீர்ந்து வெகு காலத்திற்குச் சொர்க்கத்தில் இருக்கக்கூடிய மகத்துவமுடைய'தென்று கடவுளே சொன்னதாக இருக்கலாம். ஆனால் இன்றையதினம் அக் குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்டால் சொரியும் ஊரலும் குஷ்டநோயும் உண்டாவதாய் இருந்தால், அதை நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் முனிசிபாலிட்டி என்ன செய்யும்? தண்ணீரைச் சுத்தமாக்க மருந்துகள் போடலாம் என்று சொல்லுவீர்கள். மருந்துகள் போட்ட பின்னும் அத் தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் என்ன செய்வீர்கள்? தண்ணீரையெல்லாம் இறைத்து வெளியில் கொட்டி கிணற்றைச் சுத்தம் செய்வீர்கள். அந்தப்படிச் சுத்தம்செய்த பின்பும் அத் தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் பிறகு என்ன செய்வீர்கள்? 'அக் கிணற்று நீர் ஊற்றமே விஷத் தன்மை பொருந்தியது' என்று கருதி அக் குளத்தில் யாரையும் இறங்கச் செய்யாமல் செய்து, குப்பை செத்தைகளைக் கொட்டி அதை மூடி விடுவீர்களா இல்லையா? இதைச் செய்யாமலிருந்தால் முனிசிபாலிட்டியாரையாவது, பொதுமக்களை யாவது அறிவுடைய மக்கள் என்று நாம் கூறுவோமா?

ஆகவே, மனித சமூகத்திற்குத் தீங்கை இழைத்துவரும் விஷயம் கடவுள் சொன்ன தானாலும், மதம் சொன்னதானாலும், அல்லது கடவுளும் மதமும் அரசாங்கமும் ஆனாலும் அவைகளை அழிக்கத் தைரியம் கொள்ளவேண்டும். நாம் எல்லோரும் வெகு காலமாகவே—முன்னோர் காலந்தொட்டு மத சீர்திருத்தவாதிகளாகவும், கடவுள் சீர்திருத்தவாதிகளாகவும், ஒழுக்க சீர்திருத்தவாதிகளாகவும், அரச சீர்திருத்தவாதிகளாகவும் இருந்து பார்த்தாய் விட்டது. நமது முன்னோர்கள் காலந்தொட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சீர்திருத்தவாதிகளாய் இருந்தும் பார்த்தாய்விட்டது. எந்தத் துறையில் சீர்திருத்தமடைந் திருக்கிறோம்? ஏழை 'சீர்திருத்தமடைந்து' நாளுக்கு நாள் பட்டினியும், நோயும் இழிவும் அடைந்துகொண்டே போகிறான். பணக்காரனும் சோம்பேறியும் சீர்திருத்தமடைந்து நாளுக்கு நாள் பெரும்பணக்காரராகி, பிரபுவாகி, ஜமீனாகி, ராஜாவாகி தலைமுறை தலைமுறை ஜமீனும், ராஜாவுமாய் ஆகிக்கொண்டே போகிறான். சீர்திருத்தத்தின் பலனைக் காண்பதற்கு இன்னும் வேறு என்ன உதாரணம் வேண்டும்? ஆகவே, ஏழைத் தன்மை, பணக்காரத் தன்மை என்கின்ற இரண்டு தன்மையும் உலகில் இருக்கக்கூடாது என்று, அவைகளை அடியோடு அழிப்பது நல்ல வேலையா? அல்லது, அத் தன்மைகள் எந்த ரூபத்திலாவது என்றும் இருக்கும்படி சீர்திருத்தம் செய்வது நல்ல வேலையா? என்று யோசித்துப் பாருங்கள். அழிவு வேலைக்கு எதிர்ப்புத்தான், சீர்திருத்த வேலை என்பது; தீமைகளுக்குக் காவல்தான் சீர்திருத்தம் என்பது. ஆகவே, தீமைகளை அழிக்க வேண்டு மானால், அவற்றின் காவல்களையும், காப்புகளையும் முதலில் நிர்த்தூளியாக்கவேண்டும்.

அரசனையானாலும், மதத்தையானாலும், கடவுளையானாலும், நாம் எதிர்ப்பதும், அழிக்க முற்படுவதுமான காரணமெல்லாம் இவை தீமைக்குக் காவலாய் இருக்கின்றன என்கின்ற ஒரே நோக்கமேயல்லாமல், அவைகளிடம் நமக்குப் பொறாமையோ, துவேஷமோ ஏற்பட்டதாலல்ல. ஏழ்மைக் கஷ்டமில்லாமலும், பணக்காரக் கொடுமை இல்லாமலும், பார்ப்பன உயர் சாதி இல்லாமலும், பறைய தாழ்ந்த சாதி இல்லாமலும், முதலாளி ஆதிக்க மில்லாமலும், கூலி அடிமைத் தன்மை இல்லாமலுமிருப்பதற்கு—ஆதாரமான மதம் கடவுள், அரசன், சட்டம், நீதி, தர்மம் ஆகியவைகளை நாம் அழிப்பதில்லை. அவைகளைப்பற்றி நமக்குக் கவலையே இல்லை. இவர்கள் விஷயத்தில் நாம் மதத் துரோகியோ, கடவுள் துரோகியோ, ராஜத் துரோகியோ சட்டம் மறுக்கவோ, அதர்மக்காரனாகவோ ஆக சிறிதும் விரும்பவில்லை.

ஏழை—பணக்காரத் தன்மையையும் கீழ்—மேல் சாதியையும், முதலாளி—அடிமையையும் கொண்டதான நிலைமைகள் நடைபெற ஆதரவாயிருக்கும் கடவுள், மதம், தர்மம், சட்டம் ஒழிந்தே ஆகவேண்டும்; ஆதரவாயிருக்கும் கடவுள், மதம், என்பவை அரசன் மாத்திரமல்ல, இவைகளை அனுமதித்துக்கொண்டிருக்கும் அரசாங்கமும், நீதி, ஒழுக்கம், பழக்கம், வழக்கம் முதலியன என்பவற்றையும், நாங்கள் அழித்தே தீருவோம். ராஜத் துரோகி, கடவுள் துரோகி, மதத் துரோகி என்கிற பூச்சாண்டிகள் இனி சுயமரியாதைக்காரர்களிடம் செல்லாது.

சுயமரியாதைக்காரர்களிடம் மாத்திரமல்ல, வெகு சீக்கிரத்தில் உலகத்திலேயே அவைகளுக்கு இடமில்லாமல் போகப்போகின்றது. இதுகாலம் வரையும் கஷ்டப்படும் மக்கள் தங்கள் தலைவிதியின் மீதும், கடவுள் மீதும் பழிபோட்டுக்கொண்டு, தலைவிதியை மாற்றவும் கடவுள் தயவு பெறவும் என்று, மேலும் மேலும் கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்து வந்தார்கள். ஆனால், இப்போது சுயமரியாதைக்காரர்களால்—நாத்திகர்களால், கடவுள் மதத் துரோகிகளால் ஜனங்கள் உண்மையை உணர்ந்துகொண்டார்கள். இவைகள் சோம்பேறிகளும், பணக்கார முதலாளிகளும் செய்யும் சூழ்ச்சியும் பித்தலாட்டமுமேயொழிய வேறலல்ல என்றும், கடவுளும் மதமும் இந்தப் பித்தலாட்டக்காரர் கற்பனைகளே தவிர வேறு இல்லை என்றும் உணர்ந்துகொண்டார்கள்; நன்றாய் உணர்ந்துகொண்டார்கள். இப்போது இவைகளை எப்படி ஒழிப்பது? என்பதில்தான் கவலையாய் இருக்கிறார்கள்.

வேகமாய்ப் போகவேண்டிய, போவதற்குத் தயாராய் இருக்கிற மோட்டார்காருக்கு முன்னால், பனை மரத்தைக் கொண்டுவந்து போட்டதுபோல், இன்று கடவுளும் மதமும் அரசாங்கமும் குறுக்கே கொண்டுவந்து போடப்பட்டு இருக்கின்றன. இவை வெகு நாளையக் கடவுளாய் இருந்தாலென்ன? அவதார புருஷர்களால் உண்டாக்கப்பட்ட மதமாய் இருந்தாலென்ன? சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கமாய் இருந்தால் என்ன? ஒழிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தபின்—அவை தானாக ஏற்பட்டால் என்ன? சட்டப்படி ஏற்பட்டால் என்ன? சும்மா ஏற்பட்டால் என்ன? ஒழியவேண்டுமா, வேண்டாமா? என்பது தானே முக்கிய விஷயம்.

அதுபோலவேதான், பொதுநலசேவை என்பதும், மனித சமூக சமதர்மத்துக்கு விரோதமானதேயாகும். பொதுநலம் என்றால் என்ன? எல்லோருக்குமே நன்மைசெய்ய வேண்டுமென்பதுதான் அதன் பொருளாக முடியும். கொடுமைப்படுத்துகிற கூட்டத்துக்கும், கொடுமைப்படுகின்ற கூட்டத்துக்கும் நன்மை செய்வதென்றால் அதனால் என்ன பிரயோஜனம் ஏற்படும்? கஷ்டப்பட்ட, படுகின்ற கூட்டத்துக்குத்தான் நன்மை செய்ய வேண்டும்.

ஆகவே, நாம் ஒரு கூட்டத்தாருக்குத்தான், ஒரு வகுப்புக்குத்தான் நன்மை செய்கின்றவர்களாவோம்; அது மற்றொரு வகுப்பாருக்குத் தீமையாய்த் தோன்றலாம். நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. திருடனுக்கும், திருட்டுக் கொடுப்பவனுக்கும் எப்படி நன்மை செய்ய முடியும்? 'திருட்டுப் புத்தியை விட்டு விடு; இல்லாவிட்டால் விட்டு விடும்படிச் செய்வேன்' என்பதுதான் திருடனுக்குச் செய்யும் நன்மையாகும். இதை நன்மையாகத் திருடன் மதிப்பானா? ஆதலால் நமது சேவை ஒரு நாளும் பணக்காரனுக்கும் முதலாளிக்கும் நன்மையாய்க் காணமுடியாது. அவர்களுக்கு இனியும் நன்மை செய்வது என்பது நமது கொள்கையுமல்ல. ஆகவே, நாம் பொதுநல சேவைக்காரர் அல்ல; நாம் புரட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுவோம். நமக்குச் சீர்திருத்தக்காரர்களும், பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகளேயாவார்கள். புரட்சி ஆரம்பித்த காலங்களில்தான் சீர்திருத்தங்கள், பொதுநலச் சேவைகள் புறப்படும். எதற்கு? புரட்சிகளை அடக்குவதற்கு! ஆகையால், நாம் எந்தவித சீர்திருத்தவாதி

களுடனும், எந்தவிதப் பொதுநலவாதிகளுடனும் சேராமல் தனித்து நின்றே புரட்சி செய்ய வேண்டும்.

தலை கீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சியாகும். இதற்காக யாரும் பயப்படக்கூடாது. குழந்தைகளைப் பூச்சாண்டி பேர் சொல்லி மிரட்டுவதுபோல, நம்மையும் 'புரட்சி என்று வாயில் சொல்லாதே, மனதினாலும் நினையாதே, வாய் வெந்துபோகும்' என்று பலர் சொல்லுவார்கள். இனி அந்தக் கதை பலியாது. புரட்சி செய்து வெற்றி பெற்ற தேசங்களையும் மக்களையும் பார்த்து விட்டோம். நாமும் சில விஷயங்களில் புரட்சி செய்தும் பார்த்துவிட்டோம். சாதிப் புரட்சி செய்தோமே என்ன ஆய்விட்டது? வெற்றி மார்க்கத்தில் செல்லுகிறோமா, இல்லையா? மதப் புரட்சி செய்தோமே, என்ன முழுகிப் போய்விட்டது? தத்துவார்த்தம் பேசி அதைக் காப்பாற்றப் பாடுபடுகின்றார்களே ஒழிய, புரட்சி செய்தவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது? கோவில் நுழைவுப் புரட்சி என்ன ஆய் விட்டது? இப்போது அது சட்டசபைக்கு வந்து விட்டது. கோயிலுக்குள் விடுவதற்கு மனமில்லாதவனும் கூட நம்முடன் சேர்ந்து கொண்டு 'கோவிந்தா' போடவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டானா, இல்லையா? அரசியல் புரட்சியும் செய்கின்றோம்; அரசனே வேண்டியதில்லை என்றும் சொல்லுகின்றோம். பல தேசங்களில் இப் புரட்சிகள் வெற்றி பெற்றும் இருக்கின்றன. இவற்றை நாமும் தைரியமாய்ச் சொல்லவும் முன்வந்து விட்டோம். என்ன ஆய்விட்டது? நம்மைப் பொறுத்தவரை இந்தப் புரட்சிகளை எல்லாம் நாம் ஏன் செய்தோம்? ஏழை மக்கள் கஷ்டம் நீங்கவும், பாடுபடுகின்ற மக்களைச் சோம்பேறிகள் ஏய்த்து அவர்களது பலன்களை எல்லாம் அடையாமல் இருக்கவும்தான் செய்தோமே ஒழிய, செய்கின்றாமே ஒழிய மற்றபடி யாரிடமாவது குரோதமோ வெறுப்போ பொறாமையோ துவேஷமோ பலவந்தமோ மனதில் வைத்துச் செய்தோமா? என்று யோசித்துப் பாருங்கள். மனிதன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவன் முன் மற்றொரு மனிதன் கஷ்டப்படுவதைப் பார்த்தால், எவனும் பரிதாபப்பட்டுத்தான் தீருவான். சகிக்கமுடியாத கஷ்டம் வந்துவிட்டால், அவனுக்குப் பாபமோ, நரகமோ சட்டமோ, நீதியோ, பழக்கமோ, வழக்கமோ ஒன்றும் எதிரில் இருக்கமுடியாது.

ஆதலால், இன்றைய நிலைமையானது சகிக்கமுடியாத கஷ்டத்தாலும் வேறு அனேக வழிகளில் பார்த்துப்பார்த்து முடியாததாலும் ஏற்பட்டதாகும்.

நாம் அடுத்த ஜன்மத்தை நம்பி வெகுகாலம் வீணாக்கிவிட்டோம்; மேல் லோகத்தை நம்பி வெகுகாலம் வீணாக்கி விட்டோம்; தலைவிதியை நம்பி வெகுகாலம் பாழாக்கி விட்டோம்; ஒழுக்கத்தையும், நியாயத்தையும், சட்டத்தையும் நம்பி வெகுகாலத்தை நாசமாக்கிவிட்டோம். இப்போதும் தேசத்தையும் தேசியத்தையும் நம்பி மறுபடியும் வெகுகாலம் பாழாக்கி வருகிறோம். இவைகளை நம்புவது, இவைகளுக்குக் கட்டுப்படுவது, இவைகளுக்காகப் பாடுபடுவது எல்லாம் முட்டாள்தனம் என்பதை உணர்ந்தோம். இனி மனித சமூக விடுதலைக்கும், ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதை ஒழிப்பதற்கும், ஒரு மனிதனின் உழைப்பை மற்றொரு மனிதன் அனுபவித்துக்கொண்டு சோம்பேறியாய் வாழ்வதை அழிப்பதற்கும் பாடுபடவேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன்.

இது குற்றமானால், இது பாபமானால் இந்தக் குற்றத்தையும், பாபத்தையும் 'குஷாலாக' ஒவ்வொருவரும் செய்யவேண்டியதுதான்; வரவேற்க வேண்டியதுதான். ஆனால், நமது கருத்தும், செய்கையும் பரிதாபத்தை ஆதாரமாய்க் கொண்டதாகவும் குரோதத்தையும், பலாத்காரத்தையும் வெறுத்ததாகவும் இருக்கவேண்டுமே யொழிய, மற்றபடி வீண் அர்த்தமற்ற ஆத்திரத்தையும், துவேசத்தையும் முரட்டுத்தனத்தையும் குறிகொண்டதாய் இருக்கக்கூடாது.

[கோவையில், 30-1-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 5-2-1933]

20. சுயமரியாதை நோக்கம்

'மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும், சகோதரத்துவமும் தோன்ற வேண்டும்; ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகல வேண்டும்; உலகுயிர் அனைத்தும் ஒன்றெனும் எண்ணம் உதிக்கவேண்டும். வகுப்புச் சண்டைகள் மறையவேண்டும். மேற்சொன்ன கொள்கைகளைப் பரவச்செய்தற்காக நாம் உழைக்கும் காலத்தில் நம்மைத் தாக்குபவர்களுடைய, வார்த்தைகளையாவது செய்கைகளையாவது நாம் சிறிதளவும் பயமின்றி, சிநேகிதர்–விரோதி என்கிற வித்தியாசமில்லாமல் யாவரையும் கண்டிக்க நாம் பயப்படப்போவதில்லை.

இந்த நோக்கம் காரணமாக, இந்தக் கொடுமைகளை யெல்லாம் நேர்முகமாக வெளிப் படுத்தி ஒருவனை ஒருவன் கொள்ளையிட முயற்சிப்பதைத் தடுக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறது.

['குடி அரசு'–தலையங்கம்—9-4-1933]

21. சுயமரியாதை சமதர்மம்

தோழர்களே!

தோழர் பி. சிதம்பரம் அவர்கள் M. L. A. ஸ்தானம் பெற்றதற்காக ஏற்பட்ட பாராட்டு விழாவிற்குத் தலைமை வகிப்பது என்பது மிக்க மகிழ்ச்சியாகவே இருக்கின்றது. இதற்காகவே குற்றாலத்திலிருந்து தேக அசவுக்கியத்தைக் கவனிக்காமல் வந்திருக்கிறேன்.

தோழர் சிதம்பரம் அவர்கள் சுயமரியாதை இயக்கத்திற்குத் தூண்போன்றவர். அவரது எழுத்துக்களும், அபிப்பிராயங்களும் எனக்குத் தீவிரமாய்ச் செல்லப் படிகள்போல் உதவின. நமது நாட்டிலுள்ள ஆராய்ச்சி அறிஞர்களில் தோழர் சிதம்பரம் முக்கியமான ஒருவராவார். அவர் இந்த 6, 7 வருஷ காலமாய் இயக்கத்துக்குச் செய்து வந்திருக்கும் தொண்டு மிகவும் போற்றற்குரியதாகும். இயக்கத்தின் பேரால் அவர் யாதொரு பயனையும் அடைந்ததில்லை என்பதையும் இயக்கத்தால் அவருக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட் டதும் எனக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட ஒருவரை சுயமரியாதைச் சங்கம் பாராட்ட வேண்டியது கடமையாகும். ஆதலால்தான், நான் இத் தலைமைப் பதவியை மிக்க மகிழ்ச்சி யுடன் ஏற்க வந்தேன். ஆனால், இந்தச் சமயத்தில் எனது பழைய நண்பர் தோழர் சிவதாணுப் பிள்ளை M. L. A. அவர்கள் என்னை இத் தலைமைப் பதவிக்குப் பிரேரேபிக்கும் சடங்கை நடத்துகையில், சடங்குகளில் சொல்லப்படுவது போலவே என்னைப்பற்றி என்னென்னவோ புகழ்ந்து கூறினார். அவைகள் பெரிதும் எனக்குப் பொருத்தமற்ற தாதலால், எனக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை என்று சொல்லுவதை தோழர் சிவ தாணுப் பிள்ளை அவர்கள் மன்னிப்பார்களாக. ஏதோ என் புத்திக்குச் சரியென்று பட்ட வகையில் நான் சிறிது தொண்டுசெய்து வருகிறேன். அது எனது கடமை என்று கருதிச் செய்கிறேன். அதற்கு இவ்வளவு புகழ்ச்சி வேண்டியதவசியமில்லை. அன்று நான் கொண்ட அனேக அபிப்பிராயங்களுக்கு இன்று நான் மாறுபட்ட அபிப்பிராயமுடைய வனாய் இருக்கிறேன். இனி நாளை எவ்வித அபிப்பிராயம் ஏற்படும் என்று எனக்கே தெரியாது. உலகம் மாறிக்கொண்டிருப்பது. மனிதனின் அறிவு சதா நேரமும் படிப்பி லேயே இருக்கிறது. அப் படிப்புக்குத் தக்க அபிப்பிராயங்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கும். இந்நிலையில் தோழர் சிவதாணுப் பிள்ளை அவர்களுடைய ஒரு அபிப்பிராயத் துக்கு நான் மாறுபட்டிருப்பதற்கும் அவர் மன்னிப்பாராக. அதாவது, எனது தீவிரமான சில அபிப்பிராயங்கள், அபிப்பிராய பேதத்துக்கு இடமானதென்றும் அதைப்பற்றிப் பேச எவருக்கும் உரிமை இல்லை என்றும் சொன்னார். அதை நான் தாழ்மையுடன் பலமாய் மறுக்கிறேன்.

ஏனெனில், அது எனது கொள்கைக்கு விரோதமானதாகும். ஒருவன் எப்படிப் பட்ட மனிதனாயினும், மனிதத் தன்மைக்கு மேற்பட்டவன் என்று சொல்லப்படுவானாகி லும் அவனது அபிப்பிராயங்கள் எப்படிப்பட்ட மனிதனாலும் பரிசோதிக்கப்படவும் தர்க் கிக்கப்படவும் தக்கதாகும் என்பதே எனது அபிப்பிராயமாகும். யாருடைய அபிப்பிராயத் தையும்—எந்தவிதமான அபிப்பிராயத்தையும் ஆட்சேபிக்கவும், அடியுடன் மறுத்து எதிர்க்கவும் யாருக்கும் உரிமையுண்டு என்பதும் எனது அபிப்பிராயம். ஆதலால், எனது அபிப்பிராயங்களைப்பற்றிக் குறை கூறவோ, தர்க்கிக்கவோ யாரும் தகுதியுடையவர்கள் அல்ல என்று தோழர் சிவதாணுப் பிள்ளை அவர்கள் சொன்னதை நான் ஏற்கமுடியாமல் இருக்கிறது.

ஒரு விஷயத்தை வேண்டுமானால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதாவது, எந்த மனிதனுக்கும் அவனது அபிப்பிராயம் என்னும் பேரால் எதையும் சொல்ல உரிமையுண்டு. அதைத் தடுப்பது என்பது யோக்கியமற்ற காரியமாகும். யார் எதைச் சொன்னாலும் சொல்ல அவகாசமளித்த பிறகுதான் அதை மறுத்துப் பேசவேண்டும்.

சுயமரியாதைக்காரர்கள் சட்டசபைக்குப் போகவேண்டுமென்பது சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டமாகும்.

சட்டசபையில் கட்சித் திட்டத்தை நிறைவேற்றி வைக்கமுடியுமா, என்று சிலர் கேட்கக்கூடும். எல்லாம் செய்யாவிட்டாலும் பெரும்பான்மையான விஷயங்களை சட்டசபை மூலம் செய்விக்கலாம் என்கின்ற நம்பிக்கை உண்டு. அன்றியும், சுயமரியாதைக்காரர்கள் சட்டசபையைக் கைப்பற்றவேண்டும் என்று சு.ம. சமதர்மத் திட்டம் வகுத்திருக்கிறது. இவை எப்படி இருந்தாலும், சு.ம. இயக்கத்தைப் பொறுத்தவரையில் அதன் கொள்கை களைப் பிரச்சாரம் செய்ய சட்டசபை முதலிய ஸ்தாபனங்களை உபயோகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில், சட்டசபையில் செய்யவேண்டிய காரியம் இன்னது என்று இப்போதைய சட்டசபை மெம்பர்களுக்கே தெரியாது என்றும், ஓட்டர்களுக்கும் தெரியாது என்றும் நான் கூறுவேன். அன்றியும், அதை வெளியில் பிரச்சாரம் செய்யவும் கூட சில கூட்டத்தார் இடம் கொடுக்காமல் காலித்தனம் செய்து தடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட காலிக் கூட்டங்களுடன் போராடிக்கொண்டு பிரச்சாரம் செய்துகொண் டிருப்பதைவிட, சட்டசபையில் பிரச்சாரம் செய்வது மிகவும் பலனளிக்கக்கூடியதாய் இருக்கும். சட்டசபை நடவடிக்கைகளில் ஒரு மனிதன் தனது அபிப்பிராயத்தைத் தாராளமாய் வெளியிட இடமுண்டு. பொறுமையுடன் கேட்டாக வேண்டும். பத்திரிக்கைக் காரர்கள் அதை யோக்கியமான முறையில் (திரித்துக் கூறாமல்)தான் வெளியிட்டாக வேண்டும். சட்டசபை நடவடிக்கை ரிக்கார்டுகளில் நாணயமாய் எழுதிவைக்கப்படும். இந்த நிலையுள்ளவரையில் சட்டசபைகள், பிரச்சாரத்துக்கு ஏற்ற இடமாகும். ஆதலால், அவைகளில் சு.ம.காரர் அமரவேண்டியது அவசியமான காரியம் என்று நான் கருதுகிறேன்.

தவிர, சட்டசபையில் பேசவேண்டிய அனேக விஷயங்கள் சு.ம. கொள்கைக்காரர் களுக்குத்தான் தெரியும்; அவர்கள்தாம் தைரியமாய்ச் சொல்லமுடியும் என்று முன் சொன்னேன். உதாரணமாக, இன்றைய வியாபாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். வியாபாரம் என்றால் ஒருவகைத் திருட்டு என்றும், பலர் செல்வத்தையும் உழைப்பையும் சிலர் அனுபவிப்பது என்பதுதான் சு.ம.காரருடைய அர்த்தமாகும்.

விவசாயிகளுக்கும், பொதுஜனங்களுக்கும் இடையில் ஒரு தரகர் இருக்கக்கூடாது. அதுபோலவே, தொழிலாளிக்கும் பொதுஜனங்களுக்கும் இடையில் தரகர் இருக்கக்கூடாது என்பது சு.ம.காரர்களின் வியாபார சம்பந்தமான கொள்கையாகும். இதை வேறு எந்த மெம்பராவது தைரியமாய்ச் சொல்லமுடியுமா? சு.ம. மெம்பர்கள்தாம் சொல்லுவார்கள்.

அதுபோலவே, வரி விஷயங்களில் செல்வவான்களை விட்டுவிட்டு இப்போது ஏழை மக்களையே துன்புறுத்துகிறோம்.

உதாரணமாக, விவசாயத்துறையில் இன்றுள்ள வரித்திட்டமானது அக்கிரமமான முறையில் போடப்பட்டு வருகிறது. அதாவது, ஓர் ஏக்கராகாரனுக்கு என்ன விகிதம், வரிபோடுகின்றோமோ, அதே திட்டம்தான் 1000 ஏக்கர்காரனுக்கும் வரிபோடப்படு கின்றது. இதை மாற்றியாகவேண்டும். 'இன்கம் டாக்ஸ்' (வருமானவரிபோல், இவ்வளவு ஏக்கர் பூமிக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் வரி என்றும், அதுவும் இத்தனை இத்தனை ஏக்கர் பூமிக்குமேல் உள்ளவனுக்கு இன்ன இன்ன வீதம் வரி என்றும் திட்டம் செய்ய வேண்டும். அப்படிக்கில்லாததால்தான், சிறு விவசாயக்காரர்கள் நாளுக்கு நாள் நசித்து, பெரும் பெரும் நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள் பெருகிவருகிறார்கள். இந்த ஞானம் மற்ற மெம்பர்களிடம் இல்லை; இருந்தாலும் எடுத்துச்சொல்லத் தைரியம் இல்லை.

அதுபோலவே, கல்வி விஷயத்திலும் பள்ளிக்கூடம் அதிகம் வைக்கவேண்டும் என்பதுதான் மற்ற மெம்பர்களுடைய கருத்தேயொழிய, எப்படிப்பட்ட படிப்பு—யாரைக் கொண்டு படிப்பிப்பது என்பதுபற்றிய ஞானமும் மற்ற மெம்பர்களுக்குப் போதாது. முதலாளித் தன்மை ஒழியும்படியான 'மார்க்கப்' படிப்பும் மூடநம்பிக்கை ஒழியும்படியான படிப்பும் படிப்பிக்கச் செய்யப்படும் என்கின்ற விஷயம் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. இவை சு.ம. மெம்பர்களால்தான் முடியும். அவர்களுக்குத்தான் தெரியும். ஆகையால், இதுபோன்ற அனேக விஷயங்களை உத்தேசித்தே சு.ம.காரர்கள் சட்டசபைக்குப் போக சமதர்மத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தப்படி இங்கு, முதல் முதலாக தோழர் சிதம்பரம் அவர்களைத் தெரிந்தெடுத்தது, அதுவும் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப் பட்டதுபற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

[நாகர்கோவிலில், 13-8-1933-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 20-8-1933]

22. இயக்க நடப்புகள்

சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி, அதன் சமுதாய சம்பந்தமான கொள்கைகளின் எதிரிகளால் கிளப்பிவிடப்பட்ட பலவிதமான கற்பனைச் சேதிகளாலும், விஷமப் பிரசாரங் களாலும் பொதுமக்களுக்குள் சில தப்புஅபிப்பிராயங்கள் பரவி வருவதாகத் தெரிகின்றது.

இதைப் பற்றிப் பல சமயங்களில் நாம் பொது ஜனங்களுக்கு விளக்கியிருந்தும், சில பகுதிகளில் அவ்வித தப்பு அபிப்பிராயங்கள் மாறியதாகத் தெரியவில்லை. ஆதலால், முன்பு விளக்கியவைகளையே மறுபடியும் விளக்கவேண்டியிருக்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கருத்தெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், ஏழை மக்களுக்கும் நன்மை செய்வதற்கு உழைப்பதேயாகும். அதாவது, அவரவர்களை தற்போது இருக்கும் கஷ்டமான நிலையிலிருந்து விடுவித்து, சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சமத்துவமாக வாழச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

இந்தக் கருத்து வெற்றிபெற வேண்டுமானால் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல் ஆகிய மூன்று துறைகளிலும் கவலையெடுத்து உழைத்து வந்தா லொழிய பயனேற்படாது. ஆதலால், சுயமரியாதை இயக்கமானது முக்கியமாய் இத் துறைகளில் உழைத்துவர வேண்டியதாகிறது. எனவே, இம் மூன்று துறை உழைப்பிலும் இயக்கத்தின் திட்டம் என்ன என்பதை - ஒருவாறு பொது ஜனங்களுக்கும், அரசாங்கத் திற்கும், இயக்கத்தைக் குறைகூறுகின்ற நண்பர்களுக்கும் விளக்குவதற்காகக் கீழே விவரிக்கின்றேன்.

சுயமரியாதை இயக்கம் ஆரம்ப காலத்தில் அரசியல் துறையில் பிரவேசிக்கக்கூடாது என்கின்ற ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருந்த போதிலும், அரசியலின் பேரால்

காங்கிரஸ் என்னும் ஒரு ஸ்தாபனத்தைப் பார்ப்பனர்கள் கைப்பற்றி, அதைத் தங்கள் ஆதிக்கத்திற்கு அனுகூலமான ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டு வந்து—இந் நாட்டில் எவ்விதமான சமுதாய சீர்திருத்தமும், பொருளாதார சீர்திருத்தமும் ஏற்பட முடியாமல் அவ் விரண்டுக்கும் முட்டுக்கட்டையாகவே இருந்து வந்ததால், குறிப்பாகவும்—தெளிவாகவும் சொல்ல வேண்டுமானால், காங்கிரசை சுயமரியாதைக் கொள்கைகள் முழுவதற்குமே விரோதமாக வேலை செய்வதற்கே பயன்படுத்தி வந்ததால்—அப்படிப்பட்ட காங்கிரசை எதிர்க்கவேண்டியதும், அதன் ஆதிக்கம் குறைக்கப்பட வேண்டியதற்கு எவ்வித முறையையும் கையாளவேண்டியதும் அவசியம் என்னும் தன்மையில், அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது அவசியமானால் அந்தப்படியும் செய்வது என்றும் கருதி வந்திருக்கிறது என்பதோடு, இனியும் அந்தக் கருத்தையே கொண்டிருக்கிறது.

ஆதலால், சுயமரியாதை இயக்கம் அரசியலில் பிரவேசிக்கிறது என்று சொல்லப்படுமானால், பார்ப்பன ஆதிக்கத்தைக் குறைப்பதற்காகவும், காங்கிரசைப் பார்ப்பனர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாய் உபயோகப்படுத்திப் பயன்பெறாமல் இருப்பதற்காகவுமேயொழிய, மற்றபடி அரசாங்க சட்டதிட்டங்களை எதிர்க்கவோ, அவற்றிற்கு மாறாக நடக்கவோ என்பதற்காக அல்லவென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். அதே அபிப்பிராயத்தை இதற்கு முன்னும் பலதடவை தெரியப்படுத்தியுமிருக்கிறோம். அன்றியும், சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பல அமுலுக்கு வரவேண்டுமானால், அரசாங்கத்தின் மூலம் பல சட்டதிட்டங்கள் ஏற்படவேண்டி இருப்பதால் அதை உத்தேசித்தும் அரசியலில் தலையிடவேண்டியது அவசியமாகிறது.

ஆகவே, சுயமரியாதை இயக்கம் ஏதாவது, எப்போதாவது அரசியலில் தலையிட்டது என்று சொல்லவேண்டி வருமானால்—அரசாங்க சட்டதிட்டங்களை மீறவோ, அவைகளுக்கு இடையூறு உண்டாக்கவோ அல்ல என்பதை அறிய வேண்டுகிறேன். நாட்டு மக்களின் பொதுநலத்துக்கும் ஏழை மக்களின் வாழ்க்கை உயர்வுக்கும் பொருளாதார நிலையை விருத்திசெய்து அது எல்லா மக்களுக்கும் ஒரு அளவுக்காவது சமமாய்ப் பரவப்படும்படியாயும், ஒரே கையில் ஏராளமாய்க் குவியாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியமானதும் அவசியமானதுமான காரியமாகும். ஆதலால், அந்த அளவுக்குப் பயன் ஏற்படும்படி செய்ய, வியாபாரம், லேவாதேவி, விவசாயம் முதலிய துறைகளில் சிலமாற்றம் செய்ய வேண்டியது அவசியம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாகும்.

அப்படிச் செய்வதிலும் பலாத்காரம் செய்வதோ, திடீரென்று தலைகீழ்ப் புரட்சியான காரியங்களால் மனித சமூகத்தில் பயமும் அதிருப்தியும் சமாதான பங்கமும் ஏற்படும்படி செய்து, சட்டம், சமாதானம் சீர்குலையும்படிச் செய்வதோ ஆகிய காரியங்கள் இல்லாமல், பொதுஜன உபயோககரமான தொழிற்சாலைகள், வியாபாரங்கள், லேவாதேவி முதலான காரியங்களை அரசாங்க நிர்வாகத்திற்குள்ளாகவே கொண்டுவரும்படி செய்வதும், அரசாங்க நேர்பார்வை நிர்வாகத்திற்குட்பட்ட கூட்டுறவு முறையின்கீழ் அவை நடைபெறும்படி செய்து, இலாப நஷ்டங்கள் எல்லா மக்களுக்கும் சமமாய் இருக்கும்படி செய்வது,—முதலான சமதர்மக் கொள்கையே இயக்கத்தின் பொருளாதாரத் தத்துவமாகும்.

மக்கள் அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும் கீழ்மைப்பட்டும், இழிவு படுத்தப்பட்டும் கிடப்பதற்கு—சமுதாயத் துறையிலுள்ள பழக்க வழக்கங்களும், மதத் துறையிலுள்ள பேத உணர்ச்சிகளும், பிரிவினைகளும் பெரியதொரு அளவுக்குக் காரணமாய் இருப்பதால் சாதிமத சம்பந்தமான மூடக் கட்டுப்பாடுகளும், குருட்டு நம்பிக்கைகளும் ஒழிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதை, சுயமரியாதை இயக்கம் ஆதியிலிருந்தே வற்புறுத்தி வந்திருக்கிறது.

ஆகவே, இந்தக் காரியங்கள் செய்வதற்கு வகுப்பு பேதங்கள், சாதி பேதங்கள் ஆகியவைகளை அறவே ஒழிக்க முயற்சிப்பதும், சாதிவகுப்பு முதலியவைகளுக்கு ஆக்கமளிக்கும்

மதங்களின் தன்மைகளை வெளிப்படுத்துவதும்; நியாயமான முறைகளில் சாதி, வகுப்பு, மதம் ஆகியவைகளின் தத்துவங்களைக் கண்டிப்பதுமான காரியங்கள் செய்யவேண்டியது அவசியமென்றும் கருதுகிறது.

இப்படிச் செய்வதில், சாதி, வகுப்புத் துவேஷங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதோ, எந்த சாதி—எந்த மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்குள் துவேஷமோ, மனவருத்தமோ உண்டாகும்படி செய்வதோ, அல்லது, வேண்டுமென்றே அவமானப்படுத்துவது என்பதோ சிறிதும் இலட்சியமல்ல என்பதோடு—அதை ஒருநாளும் இயக்கம் ஒப்புக்கொள்வதும் இல்லை.

எனவே, சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கையானது, பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசை எதிர்ப்பதும், அதற்காக எவ்வளவு அவசியப்பட்டாலும் அவ்வளவு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதும், சமுதாய இயலில் சாதி, மத பேதங்களை அகற்றுவதும், மூடநம்பிக்கைகளை ஒழிப்பதும், பொருளியலில் சமதர்மமுமேயாகும். இவைகளைப் பற்றிய விஷயங்களை மக்களிடையே பிரச்சாரம் செய்யவும், அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவுமான காரியங்கள் நடைபெற வேண்டுமானால் காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயமாகும்.

['குடி அரசு'—அறிக்கை—10-3-1935]

உண்மை விளக்கம் பிரஸ் பதிப்பாசிரியரான தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மீதும், தோழர். ப. ஜீவானந்தம் அவர்கள் மீதும், காலஞ்சென்ற பகத்சிங்கால் எழுதப்பட்ட 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்?' என்ற புத்தகத்தை—முறையே பிரசுரித்ததற்காகவும், மொழிபெயர்த்ததற்காகவும் இந்தியன் பினல்கோட் 124 ஏ. செக்ஷன்படி இராஜ துவேஷக் குற்றம் சாட்டி, கைதியாக்கிச் சிறையில் வைத்து, வழக்குத் தொடர்ந்திருந்தது வாசகர்கள் அறிந்ததாகும்.

அவ் வழக்கு, மேற்கண்ட இருதோழர்களாலும் இராஜ துவேஷத்தை உண்டாக்கவோ, அதைப் பிரச்சாரம் செய்யவோ எண்ணங்கொண்டு அப் புத்தகம் பிரசுரிக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்து, இராஜ துவேஷம் என்று கருதத்தகுந்த காரியங்கள் பதிப்பிக்கப்பட்டு விட்டதற்காக மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில்—அரசாங்கத்தார் வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு ஈ. வெ. கி., ப. ஜீ., ஆகியவர்களை விடுதலை செய்துவிட்டார்கள்.

இந்தப்படி இந்த இருதோழர்களும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுதலை அடைந்தார்கள் என்பதற்கு அவர்களே முழு ஜவாப்தாரிகள் அல்லர் என்பதையும், பெரும்பான்மையான அளவுக்கு நானே ஜவாப்தாரி என்பதையும் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மன்னிப்பு கொடுக்கப்பட்டதும், அதை சர்க்கார் ஏற்றுக்கொண்டதும் ஆகிய இரண்டு காரியங்களும் மிகுதியும் இந்தக் கேசையே பொறுத்தது மாத்திரமல்ல என்பது இதில் முக்கிய விஷயமாகும்.

விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி சர்க்கார் மனத்தில் எப்படியோ தப்பபிப்பிராயம் ஏற்பட்டு-எப்படியாவது சுயமரியாதை இயக்கத்தை அடக்கி அழித்துவிடவேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள் என்பதாக, நான் கொஞ்ச நாளைக்கு முன்பே தெரிந்துகொண்டேன்.

அன்றியும், நான் ரஷ்யாவில் கொஞ்சகாலம் தாமதித்து அங்கிருந்து திரும்பி வந்த பிறகு என் விஷயத்தில் சர்க்கார், எனக்கு ரஷ்யாவில் இருந்து பணம் வருவதாகவும், ரஷ்ய ஒற்றனென்றும் சந்தேகப்பட்டு அதிகக் கவலையெடுத்து எனக்காகத் தனியாக ஒரு சு ருக் கெழுத்து சி. அய். டி. சப்இன்ஸ்பெக்டர்—மாதம் ரூ. 200 செலவிலும், எனது தபால்களை

எல்லாம், வருவதையும் போவதையும் இரகசியமாய் உடைத்துப் பார்ப்பதற்கு என்று ஒரு சி. அய். டி. சப்இன்ஸ்பெக்டரும், என் வீட்டு வாசலிலும், ஆபீஸ் வாசலிலும் போலீஸ் சேவகர்களும், நான் செல்லுமிடங்களிலெல்லாம் என் பின் தொடர்ந்து எனது போக்கு வரத்தைக் கவனிக்க சில போலீஸ் கான்ஸ்டேபிள்கள் பின்தொடரவும் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் சில அறிக்கை இடும் காரியங்கள் நடந்துகொண்டே இருந்தன; இன்னமும் இருந்து வருகின்றன. இவை தவிர, பலதடவை ஆபீசும், வீடுகளும் சோதனையிடப் பட்டதுடன் என்னுடன் நெருங்கிப் பழகுகின்றவர்களுக்கும் இம்மாதிரி கவனிப்பும் அவர் களது தபால்களை உடைத்துப் பார்த்தல் ஆகிய காரியங்களும் நடந்துவந்தன.

உதாரணமாக, தோழர் சர். ஆர். கே. சண்முகம் அவர்களுடைய தபால்களைக்கூட சி. அய். டி. போலீசார் உடைத்துப் பார்த்து வந்திருக்கிறார்கள் என்றால், மற்றவர்கள் விஷயத்தைப்பற்றி எழுதவேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். மற்றும், நான் மேல் நாட்டுச் சுற்றுப்பயணத்தில் இருந்து வந்தபிறகு, தமிழ் ஜில்லாக்களில் சுமார் 175 சுயமரி யாதை கிளைச் சங்கங்கள் பல பெயர்களின் பேரால் ஏற்பட்டு ஏதோ சிறிது வேலை செய்து வந்ததை, சர்க்கார்—சி. அய். டி. இன்ஸ்பெக்டர்கள் ஆங்காங்கு சென்று அங்கத்தினர்கள் பயப்படும்படியான மாதிரியில் பல விசாரணைகள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் நடத்தித் தடபுடல் செய்ததின் மூலம் பல சங்கங்கள் பயந்து மூடப்பட்டும், யாதொரு வேலையும் செய்யாமல் இருக்கவும் நேர்ந்துவிட்டது.

இயக்க சம்பந்தமுள்ள பல பெரிய ஆட்கள் என்பவர்களும், சர்க்கார் உத்தியோகம் முதலியவைகளில் சம்பந்தமுள்ள சிலரும் இதையறிந்து இயக்கத்திலிருந்தும், சங்கத்தி லிருந்தும் விலகிக்கொள்ளவும், பாராமுகமாய் இருக்கவும் ஆரம்பித்ததோடு, 'சுயமரியாதை இயக்கம் ஆபத்தான இயக்கம்' என்று சொல்லவும் ஆரம்பித்துவிட்டார்கள். இவை ஒருபுற மிருக்க, இயக்கத்தில் கலந்து வேலை செய்துகொண்டிருந்த தொண்டர்களில் பலர் தங்கள் உற்சாகத்தைக் காட்டிக்கொள்ளும் முறையில், தலைகால் தெரியாமல் வேகமாகப் பேசுவதும் பாடுவதும்—அதைப் பார்த்த போலீசார் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறித்து சர்க் காருக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தூண்டுவதுமான காரியங்களும் எனது தகவலுக்கு அவ்வப்போது சில வந்துகொண்டே யிருந்தன. அன்றியும், என்பேரிலும் என் தங்கை பேரிலும், இயக்கத்தை அடக்க வேண்டுமென்ற கருத்தோடே செய்ததாக எண்ணும்படி, பல வழக்குகள் தொடுத்து காவல் தண்டனை, அபராதங்கள் முதலிய தண்டனைகளும் விதிக்கப்பட்டோம்.

இதனால் எல்லாம் நம்முடைய விரோதிகள் பலரும் இயக்கத்தில் பொறுப்பில்லாமல் கலந்து விளம்பரம் பெற்று வாழ்ந்து வந்த சிலர் மாத்திரம் 'பேஷ், பேஷ்' என்று நம்மை உற்சாகப்படுத்துகிற மாதிரியில் பேச முடிந்ததேயொழிய, மற்றபடி இயக்கம் வளர்ச்சி யடைய முடியாமல் போகவும் சர்க்காரின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாகுமே என்கின்ற பயத்துக்கும் இடம் தந்ததால், இயக்கப் பிரமுகர்களின் இரண்டொருவர் யோசனைக்கு இணங்கி இதைப்பற்றி சர்க்காரிலேயே சில பொறுப்புள்ள அதிகாரி களைக் கண்டு பேசவேண்டிய அவசியத்திற்கு உள்ளானேன்.

அப்படிப் பேசியதில் எனக்கும் ரஷ்யாவுக்கும் பணப் போக்குவரத்தோ, பிரச்சார சம்பந்தமோ ஏதும் இல்லை என்று விளக்கவேண்டியிருந்ததோடு—சுயமரியாதை இயக்கம் சட்டமறுப்பு இயக்கமல்ல என்றும், சர்க்காரோடு ஒத்துழையா இயக்கமல்லவென்றும், சட்டத்தையும், சமாதானத்தையும் மதியாத இயக்கமல்லவென்றும் எடுத்துச் சொன்ன தோடு, அதன் ஆரம்பகால முதல் நாளது வரை பல சமயங்களில் வெளியிடப்பட்டும் பல மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டும் இருக்கும் வேலைத்திட்டம், தீர்மானங்கள் எல்லாம் சட்டவரம்பிற்கு உட்பட்டு நடத்தும் காரியங்களாகவேதான் இருந்து வருகின்றதென்றும் விளக்கிக் காட்டினேன்.

மற்றும், சட்டவிரோதமாக அல்லது இராஜ துவேஷம் உண்டுபண்ணுவதற்காகப் பதிப்பிக்கப்பட்டதென்றோ, பேசப்பட்டதென்றோ ஏதாவது காட்டப்படுமானால், அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பதாகவும் ஒப்புக்கொண்டேன். இந்த நிலைமையில் பிரஸ்தாப வழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் எனக்குக் காட்டப்பட்டன. அதைக் கண்ட பிறகு, அது இராஜ துவேஷமான விஷயம் என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டார்கள் என்பதையும், அது எப்படியும் இராஜ துவேஷமான விஷயம் என்று தீர்ப்பு பெறும் என்பதையும், விவகாரம் பேசுவதால் பயன் ஏற்படாது என்பதையும் உணர்ந்தேன்; உணர்ந்ததும், உடனே அதை மன்னித்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டேன்; அதிகாரிகளும் அந்தப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

ஆகவே, இந்த சம்பவமானது இயக்கம் சம்பந்தமாய் சர்க்காருக்குள்ள தப்பபிப்பிராயத்தை நீக்கவேண்டும் என்பதற்காகவே ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறேன். நம் இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) சமூகத் துறையிலுள்ள குறைகளை நிவர்த்திப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்ததும், சர்க்கார் அதிகாரிகள் முதல் அனேக செல்வவான்களும் இயக்கத்தில் கலந்து வேலைசெய்து வந்ததும் எவரும் அறியாததல்ல. ஆனால், சிறிது காலம் சென்றபின் மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமைகள் தீரவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது மிகவும் அவசியமென்று கருதியதால் பொருளாதார சம்பந்தமாக நாம் சிறிது பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தோம். என்றாலும், அரசாங்கத்தார் தப்பபிப்பிராயத்தைக் கொண்டு இயக்கத்தை அடக்க அடக்குமுறைப் பிரயோகம் ஆரம்பித்துவிட்டார்கள் என்று உணருகிறேன். இதையேதான் அதிகாரிகள் முன்பும் தெரிவித்துக்கொண்டேன்.

ஆனால், ஒரு அளவுக்கு சர்க்காருடன் ராஜி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற ஆசையின்மீதே பொருளாதார விஷயத்தில் சமதர்மக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்றும், சாதி மத சம்பந்தமான விஷயங்களில் வேறு சாதி மதக்காரர்கள் மனம் புண்படும்படியோ, அவமானம் ஏற்படும்படியோ என்று இல்லாமல் சாதிமதக் கண்டனங்கள் செய்து கொள்ளலாம் என்னும் முடிவுக்கு வந்தோம். சர்க்காரோடு இந்த மாதிரியான ஒரு சமாதான முடிவுக்கு வராதபட்சம் சர்க்காருக்கும் நமக்கும் வீண் தொந்தரவும், மனக் கசப்பும் ஏற்பட்டுத் தீரும் என்கின்ற நிலையில் மற்ற ஆதாரங்களும் முயற்சிகளும், நிலைமைகளும் இருந்ததால், நான் இந்தச் சமாதானத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஆகவே, இதன் பலன் என்னவானாலும் அதற்கு நானே பொறுப்பாளி என்றுதான் சொல்லவேண்டும்.

சில இளைஞர்களுக்கு இது கேவலமாகத் தோன்றலாம். என்றாலும், நம் இயக்க சம்பந்தமாக நமது கொள்கைகளிலோ, திட்டங்களிலோ எதையும் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டதாக எனக்குப் படவில்லை. ஆதலால், யார் எப்படி நினைத்தாலும் நமக்கு ஒன்றும் முழுகிப் போய் விடாது என்று தைரியமாகச் சொல்லுகிறேன். சுயமரியாதை இயக்கம் சட்டவரம்புக்கு உட்பட்ட இயக்கம் என்பதையும், நாம் சட்ட வரம்பிற்குட்பட்டு பிரச்சாரம் செய்கிறவர்கள் என்பதையும் ஈரோடு சுயமரியாதை இயக்கம்—சமதர்மக் கட்சி வேலைத் திட்டத்திலேயே கடைசி பாராவில் தெளிவாய்க் காட்டி இருக்கிறோம்.

செங்கற்பட்டு மாநாட்டின் போதும், இயக்க நோக்கம் வகுத்தபோதும் நம் இயக்கம் சட்ட வரம்பிற்குட்பட்ட ஸ்தாபனம் என்றே குறிப்புக் காட்டியிருக்கிறோம். மத்தியில் பல தடவையிலும் எனது வழக்கு 'ஸ்டேட்மெண்டி'லும் குறிப்புக் காட்டி இருக்கிறேன். மற்றும், ஆரம்ப முதல் காங்கிரசை எதிர்த்து வந்திருப்பதோடு, தென்னாட்டில் காங்கிரசின் ஆதிக்கத்தைச் சிறிதாவது குறையும்படி செய்த பெருமைக்காக நம்மை நாமே பல தடவை

பாராட்டிக் கொண்டும் வந்திருக்கிறோம். இனியும், நாம்—காங்கிரசை பார்ப்பனர் கோட்டையென்றும், அதன் செல்வாக்கு அழிக்கப்படவேண்டும் என்பதையும் முக்கிய நோக்கங்களில் ஒன்றாய்க் கருதிக்கொண்டும் இருக்கிறோம்.

இன்றும் அன்றாடம் நித்திய நடவடிக்கைகளில் காங்கிரசின் சூழ்ச்சிகளைக் கண்டு ஆத்திரம் காட்டி, அவ்வப்போது கண்டித்துக் கொண்டுதான் வந்திருக்கிறோம். சுயராஜ்யம் என்பது அர்த்தமற்றதும் பாமரர்களை ஏமாற்றுவதுமான வார்த்தை என்றும்; தேசாபிமானம் என்பதும், தேசியம் என்பதும் சிலருக்கு வயிற்றுப் பிழைப்பு நாடகம் என்றும்; யோக்கியப் பொறுப்பற்ற காரியம் என்றும் ஆரம்ப முதலே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். இந்தியா பூராவுமே பகிஷ்கரித்த 'சைமன் கமிஷனை'க்கூட வரவேற்கச் செய்து அக் கமிஷனுக்கு உண்மை தெரியச் செய்தோம். இந்தக் காரியங்களால் ஒரு கூட்டத்தாரால் நாம் தேசத் துரோகி, சர்க்கார் தாசர் என்ற பெயரைக்கூட வாங்கினோம். இதனால் எல்லாம் கெட்டுப்போகாத, அழிந்துபோகாத சுயமரியாதை இயக்கமும், அதன் பிரமுகர்களும் அதில் கலந்திருந்த தொண்டர்களும் இந்த அறிக்கையினாலோ, சர்க்காருடன் சமாதானம் செய்து கொண்டதாலோ அழிந்துபோகும் என்று யாராவது நினைப்பார்களானால், அவர்களுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டு நேரத்தைக் கெடுத்துக் கொள்வதைவிட, சற்றுப் பொறுமையாயிருந்து பாருங்கள் என்று சொல்லி விடுவது புத்திசாலித்தனமான காரியமாகுமென்றே நினைக்கிறேன்.

சுதந்திர எண்ணம் தோன்றிய வாலிபர்கள் என்பவர்கள் என்னுடைய இந்த அபிப்பிராயத்துக்காக வெட்கப்படுவதாகக் கூடச் சொல்லலாம்; இயக்கத்தில் இருப்பதே தங்கள் சுயமரியாதைக்கு அழகல்லவென்றும் சொல்லலாம்; இதைப்பற்றி ஊரார் சிரிக்கிறார்கள் என்றும் பலர் சொல்லலாம்; பலர் இயக்கத்தை விட்டுப் போய்விடுவதாகவும் சொல்லலாம். இவை எல்லாம் எந்த—எப்படிப்பட்ட இயக்கத்துக்கும் ஒவ்வொரு சமயங்களில் இயற்கையேயாகும். பழைய வாலிபர்கள், ஆட்கள் கழிதலும், புதிய வாலிபர்கள், ஆட்கள் புகுதலும் குற்றமல்ல; கால இயற்கையே யாகும்.

அது மாத்திரமல்லாமல், இயக்கத்தில் முக்கியஸ்தர்களாகக் கருதப்பட்டு வந்தவர்களே இயக்கத்தையும், இயக்கத்தில் முக்கியமாய் வேலை செய்துகொண்டிருப்பவர்களையும் குற்றம் சொல்லுவது இயற்கையேயாகும். எந்த இயக்கத்தை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் இது விளங்கும். ஜஸ்டிஸ் கட்சியில் தாசானுதாசர்களாய் இருந்தவர்கள் இன்று அந்தக் கட்சியை வைதுகொண்டு, அழிக்க முற்பட்டுக் கொண்டு திரிவது நமக்குத் தெரியவில்லையா? காங்கிரசில் தாசானுதாசர்களாய், காந்தியாருக்குத் தாசானுதாசர்களாய் இருந்தவர்கள் காங்கிரசை வைதுகொண்டும், காந்தியாரை வைதுகொண்டும், இவை ஒழிந்தாலொழிய நாட்டுக்குச் சேமமில்லை என்று சொல்லுகின்றவர்களையும் நாம் பார்க்கவில்லையா? பெசன்ட் அம்மையாரைக் குருவாகவும், 'தெய்வ'மாகவும், அந்த ஸ்தாபனத்தைத் 'தெய்வீக' ஸ்தாபனமாகவும் கொண்டாடியவர்கள் இன்று அந்த அம்மையாரையும், அந்த ஸ்தாபனத்தையும் பயனற்றது என்றும், 'ஹம்பக்' என்றும் சொல்லுகின்றதை நாம் பார்க்கவில்லையா?

மற்றும் சைவன், சைவ மதத்தையே வைவதும், விட்டுப்போவதும்; வைணவன் வைணவ மதத்தையே வைவதும், விட்டுப்போவதும்; கத்தோலிக்கன் கத்தோலிக்க மதத்தையே வைவதும், விட்டுப்போவதும்; முஸ்லிம், முஸ்லிம் மதத்தையே வைவதும், விட்டுப்போவதும்—இவற்றிற்கெல்லாம் புது ஆட்கள் வந்து சேர்ந்துகொண்டிருப்பதுமான காரியங்களை 'தெய்வத் தன்மை பொருந்திய' மத விஷயங்களில்கூட நாம் தாராளமாய்த் தினமும் பார்த்துவரவில்லையா? ஆகவே, இவ்வாறெல்லாம் ஸ்தாபனங்கள் ஆடிப்போகும் என்று கருதுவது அனுபவ ஆராய்ச்சியின்மையே யாகும். எவ்வித மாறுதலும், இறக்கமும், ஏற்றமும், பிற்போக்கும், முற்போக்குமான விஷயமாய் இருந்தாலும் திடமான மனத்துடன்

உண்மையான முடிவுடன் ஏற்பட்டதானால் ஒற்றை ஆளாயிருந்தாலும்கூட ஒருநாளும் அடிப்போகாது என்பது உறுதி.

ஆனால், ஊரார் என்ன சொல்லுவார்கள், எதிரிகள் என்ன சொல்லுவார்கள் என்பதையே முக்கிய குறிப்பாய் வைத்து, அதற்கு அடிமையாகி, மாற்றங்கள் செய்வதானால் மாத்திரம், அவற்றிற்கு அதிக ஆயுள் இருக்குமென்று கருதமுடியாதே தவிர, மற்றபடி உண்மையும், துணிவும் உள்ள காரியத்தில் எவருக்கும் யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

ஆகவே, இயக்க சம்பந்தமாகவும் திட்டங்கள் சம்பந்தமாகவும், வழக்கு சம்பந்தமாகவும், சர்க்கார் நிலைமை சம்பந்தமாகவும் ஏற்பட்டுள்ள நிலையையும், அவசியத்தையும் விளக்கவே இதை எழுதுகிறேன்.

['குடி அரசு'–அறிக்கை—31-3-1935]

23. சுயமரியாதைக்காரரும் மதமும்

மதம் என்பது கடவுளாலும் கடவுளால் அனுப்பப்பட்டவர்களாலும், கடவுளை அடைவதற்கும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவதற்கும் ஏற்பட்டது என்பது ஒருசாராரின் அபிப்பிராயம்.

மனிதன் நடந்துகொள்ள வேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள், விதிகள், திட்டங்கள் என்பதுதான் மதம் என்பது மற்றொரு சாராரின் அபிப்பிராயம்.

இது எப்படி இருந்தாலும், சுயமரியாதைக்காரர்கள் 'மதம்' என்பதைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயம் பலர் அறிந்ததேயாகும். நிர்ப்பந்தமானதும், அல்லது மூட நம்பிக்கையானதும், பிரத்தியட்ச அனுபவத்திற்கும் சாத்தியத்துக்கும் மாறானதும், பகுத்தறிவிற்கும் ஆராய்ச்சி அல்லது விஞ்ஞானத்திற்கும் எதிரானதுமான காரியங்களையோ, கருத்துக்களையோ, ஆதாரங்களையோ ஏற்றுக்கொண்டு இருப்பதே 'மதம்' என்றும்; அது எதுவானாலும் அப்படிப்பட்ட மதங்களையே சுயமரியாதைக்காரர்கள் மறுக்கிறார்கள் என்பதோடு அம் மதங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

சாதாரணமாக, இன்று இந்தியாவில் பெரும்பான்மையான, அதாவது 100-க்கு 95 பேர்களுக்கு மேலாகவே உள்ள மக்களை ஆவாகனம் செய்துகொண்டிருக்கும் மதங்களாகிய இந்து மதமும், மற்றும் சீர்திருத்த மதங்கள் என்பவையாகிய இஸ்லாம், கிறிஸ்து, ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் முதலிய பல மதங்களும் நிர்ப்பந்தமான நம்பிக்கை (அதாவது நம்பித்தான் தீரவேண்டும் என்பது) அல்லது மூடநம்பிக்கை, அல்லது கொள்ள முடியாததும் ஆதாரமில்லாததுமான விஷயங்களில் நம்பிக்கை வைத்தல் ஆகியவைகளையோ அல்லது இவற்றில் சிலவற்றையோ கொண்டனவாகத்தான் காணப்படுகின்றன.

சரீரம் வேறு, ஆத்மா வேறு என்றும்; கடவுள் வேறு, ஆத்மா வேறு என்றும்; அது மனிதனுக்கும் கடவுளுக்கும் தொடர்புடையது என்றும்; மனிதனையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது என்றும்; சரீரத்தின் கூட்டுறவால் அதன் தூண்டுதலால் ஆத்மா செய்த குற்றத்துக்குக் கடவுளுடைய தண்டனைகள் ஆத்மாவுக்கு மாத்திரந்தான் கிடைக்கும் என்றும்; இறந்த பிறகு—அதாவது, சரீரத்தை விட்டு 'ஆத்மா' பிரிந்த பிறகு 'தீர்ப்பு நாளில்' மறுபடியும் ஒரு சரீரத்தைப்பெற்று, சித்திரபுத்திரன் கணக்குப்படி தண்டனைகள்—கண்டனைகள் அடையும் என்றும்; ஒரு ஆத்மாவுக்குப் பல ஜன்மங்கள் உண்டு என்றும்; அந்த ஜன்மங்கள் எல்லாம் ஆத்மாவும் சரீரமும் கலந்து இருந்த காலத்தில் செய்த காரி

யத்துக்கு ஏற்றவிதமாகக் கிடைக்கும் என்றும், இப்படி இன்னும் எவ்வளவோ விஷயங்களைக் கொண்டவைகளே இன்று செல்வாக்குள்ளதும் இந் நாட்டில் 100-க்கு 95 பேர்களுடையதுமான மதங்களாய் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மதங்களைத்தான் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை; ஒப்புக்கொள்ளவும் முடியாது என்பதோடு—இந்த மதங்களிலிருந்து மக்கள் விடுபட்டு அறிவு சுதந்திர வாதிகளாக—பகுத்தறிவு வாதிகளாக ஆகவேண்டும் என்பது சுயமரியாதைக்காரர்களின் முக்கிய இலட்சியமாகும்.

அதுபோலவே, உலக நடப்புக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கும், இன்ப துன்பங்களுக்கும் காரண கர்த்தாவாக கடவுள் என்கின்ற ஒரு வஸ்து இருக்கிறது என்பதையும் அது, மக்கள் தீண்டப்படாதவர்கள் ஆவதற்கும், மக்களை மேல்சாதிக்காரர்கள், முதலாளிகள், அரசர்கள் என்பவர்கள் கொடுமைப்படுத்துவதற்கும் காரணமாயும்; மனிதனுக்காக உலகில் உள்ள ஜீவராசிகள் ஆடு, மாடு பன்றி, கோழி, பட்சிகள், மச்சங்கள் முதலாகியவைகள் சிருஷ்டிக்கப்பட்டன என்பதற்கும் காரண கர்த்தாவாயும் இருக்கிறது என்பதையும்—சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு, அப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியை ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மற்றும், அக் கடவுளே எரிமலை, பூகம்பம், புயற்காற்று, வெள்ளக் கொடுமை ஆகியவைகளுக்குக் கர்த்தாவாகவும்; விஷஜுரம், தொத்துநோய், கொள்ளைநோய், குறைநோய் உளைமாந்தை ஆகிய வியாதிகளுக்கும், தேள், பாம்பு முதலிய விஷக் கிருமிகளுக்கும் புலி, சிங்கம், ஓநாய், நரி முதலிய துஷ்ட ஜந்துக்களுக்கும் சிருஷ்டி கர்த்தாவாகவும்; எலியைப் பூனை தின்பதற்கும், ஆட்டைப் புலி தின்பதற்கும், புழு பூச்சிகளைப் பட்சிகள் தின்பதற்கும், பட்சிகளை வேடர்கள் வேட்டையாடுவதற்கும் காரணகர்த்தாவாயும் இருக்கிறார் என்பதை சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவது இல்லை என்பதோடு, அப்படிப்பட்ட கர்த்தாவையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

மேலும், எப்படிப்பட்ட கடவுளானாலும் அதை வணங்கினால், அதற்கு ஆகாரம், நகை, துணி, பெண்சாதி, வைப்பாட்டி முதலியவை வைத்து பூஜை செய்தால்; உயிர்ப்பலி கொடுத்தால்; இன்ன இன்னமாதிரி தொழுதால்; ஸ்தோத்தரித்தால்; ஜபித்தால் மனிதன் செய்த எல்லா கெட்ட காரியங்களின் பாபங்களையும் மன்னித்துவிடுவார் என்கின்ற கடவுளையும் ஒப்புக்கொள்ளாததோடு—அப்படிப்பட்ட கடவுளுணர்ச்சியையும் ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

ஏன் இதை முதலில் குறிப்பிடுகிறோம் என்றால், விவகாரங்களுக்கு வரும்போது ஒவ்வொரு மதக்காரரும் தங்கள் தங்கள் மதங்களுக்கு வெவ்வேறு தத்துவம் இருப்பதாகவும், சகலவிதமான பகுத்தறிவுப் பரீட்சைகளுக்கும் தங்கள் மதம் நிற்கும் என்று சொல்லி வாதாடும்போது சமயத்துக்குத் தகுந்தபடி பேசுவதால், நிலைமை கஷ்டத்திற்கு உள்ளாகிறது. ஆகையால், மதங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பல மதங்களுக்கும் உள்ள பொதுக்கொள்கைகளையே குறிப்பிட்டோம்.

மற்றும், மதம் என்னும் வார்த்தைக்குப் பலவித அர்த்தங்களும், கருத்துக்களும் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக ஒருவர், 'என்னுடைய மதம் யார் மனத்தையும் புண்படுத்தாமலிருப்பதும், யாருக்கும் என்னால் கூடிய நன்மை செய்வதும்தான்' என்று சொல்லுகிறார்.

மற்றொருவர், 'என்னுடைய மதம் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத நாஸ்திக மதம் தான்' என்கின்றார்.

மற்றொருவர், 'என்னுடைய மதம் கடவுள் இல்லை; ஆத்மா இல்லை. ஆனால், கர்மத்துக்குத் தகுந்தபலன் உண்டு என்பதுதான்' என்கிறார்.

மற்றொருவர், 'நான் கருதி இருக்கும் மதம் திமிர் அல்லது கொழுப்பு' என்கிறார்.

மற்றொருவர், 'மதம் என்னும் வார்த்தைக்குக் கொள்கை அல்லது கடமை என்பது தான் அர்த்தம்' என்கிறார்.

மற்றொருவர், 'என்னுடைய மதம் விஞ்ஞானம்' என்கிறார்.

மற்றொருவர், 'என்னுடைய மதம் மனித ஜீவ அபிமானம்தான்' என்கிறார்.

மற்றொருவர், 'என்னுடைய மதம் பொதுவுடைமைக் கொள்கை' என்கிறார்.

இப்படியே இன்னும் பலவிதமாய், மதம் என்னும் வார்த்தைக்குத் தனித்தனிக் கருத்துக்கள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவைகளைப்பற்றி எல்லாம் விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

ஆனால், முகப்பில் கூறிய இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய மதங்களின் அஸ்திவாரம் ஒன்றுபோலவே இருந்தாலும், அதன்மேல் கட்டப்பட்ட கட்டடங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஒருவன் உண்மையாகவே மதம் இல்லாமல் இருப்பது நாஸ்திகம் என்று கருதிக் கொண்டு ஏதாவது ஒரு மதத்தின் பேரால் உயிர்வாழ வேண்டியவனாய் இருக்கிறான்; ஆதலால், எப்படியாவது தான் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்க வேண்டும்; மற்றபடி மதக்கொள்கைகள் எவை, எப்படி இருந்தாலும் தான் இலட்சியம் செய்வதில்லை என்கின்ற கருத்தின்மீதே தனக்குள் எவ்விதக் கொள்கையும் இல்லாமல், ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு, ஏதோ ஒரு மதவேஷத்தைப் போட்டுக்கொண்டு இருக்க வேண்டியவனாக இருக்கிறான்.

மற்றும் பலரும் அதுபோலவே மதங்களுக்கு உள்ள செல்வாக்குக்குப் பயந்து கொண்டு மதவேஷக்காரர்களாய் இருக்கிறார்கள். பரத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருப்பது போலவே, இகத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருக்கிறார்கள்.

பொதுவாகப் பார்க்கப்போனால், கடவுள் ஏற்பட்ட வெகு காலத்துக்குப் பிறகுதான் மதம் ஏற்பட்டு இருக்கவேண்டுமே ஒழிய, கடவுளும் மதமும் இரட்டைப் பிள்ளைகள்போல் பிறந்தவைகள் அல்ல.

எப்படி இருந்தாலும், மதங்களானவை இன்று சடங்காகவும், வேஷமாகவும் இருக்கின்றனவே ஒழிய, கொள்கையாகக்கூட எந்த மதமும் அனுபவத்தில் இருக்கவில்லை; புத்தகங்களில் பல கொள்கைகள் இருந்திருக்கலாம்; இன்னும் இருந்து கொண்டிருக்கலாம். காரியத்தில் அக் கொள்கைகள் பெரிதும் அமுலில் இல்லை.

ஆகவே, அமுலில் இல்லாத கொள்கைகளைக் கொண்ட மதங்களில் எந்த மதம் மேலானது என்றோ, எந்த மதக்கொள்கை மேலானது என்றோ வாதிப்பதானது, ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் கோட்டைகளில் எது பலமான கட்டடம் என்றும், எது வசிப்பதற்குச் சவுகரியமானது என்றும் கேட்பதுபோல்தான் ஆகும்.

முதலாவதாக, ஒரு மதத்துக்குக் கொள்கைகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்து கொள்ளவேண்டும்.

ஒரு கொள்கை நல்ல கொள்கை என்றால், அதற்கு இரண்டு சக்திகள் இருக்க வேண்டும். முதலாவது, அவை எல்லா மக்களுக்கும் ஒன்றுபோல் அனுபோகத்தில் சமமாக நடத்தக்கூடியனவாக இருக்கவேண்டும். அதோடு கூடவே அக் கொள்கைகள் எல்லா மக்களாலும், எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் தாமாகவே பின்பற்றித் தீரவேண்டியதாகவும் இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட கொள்கையை இதுவரை எந்தப் பெரியவரும் கண்டு பிடிக்கவுமில்லை; எந்த மதமும் கொண்டிருக்கவும் இல்லை.

அது செய்தால் பாவம், இது செய்தால் மோட்சம் என்றும்; அது செய்தால் இலாபம், இது செய்தால் நஷ்டம் என்றும்; அது செய்தால் தண்டனை, இது செய்தால் தூக்கு என்றும் இப்படியாகப் பல நிர்ப்பந்தங்கள், பயம், தண்டனை, கண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பில் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளாகவும், அமுலில் கொண்டுவர எப்போதுமே முடியாதனவாகவும், அமுலில் கொண்டுவர மிகவும் கஷ்டப்படவேண்டியவையாகவும், மனிதனால் சாதாரணமாகச் செய்யக்கூடியதும், செய்வதற்கு ஆசையுண்டாக்கக்கூடியதும் அல்லாதவையாகவும் இருக்கக்கூடிய கொள்கைகளையேதான் எந்த மதமும் கொண்டிருக்கிறது.

எந்தக் கொள்கையாவது கடவுளால் உண்டாக்கப்பட்டதாகவோ அல்லது கடவுளுக்கு இஷ்டமானதாகவோ இருந்திருக்குமானால், அது மக்களுக்கு மிகவும் இஷ்டமானதாகவும், செய்வதற்கு மிகவும் ஆசையுடையதாகவும், சுலபத்தில் செய்து முடிக்கக்கூடியதாகவும் இருந்திருக்க வேண்டாமா? கடவுளுக்கு இஷ்டமான கொள்கை மனிதனுக்குக் கசப்பானதாகவும், பெரும்பான்மையோருக்குச் செய்வதற்கு முடியாததாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஆகவே, கடவுளின் பேரால் மதத்தின்மூலம் மத கர்த்தாக்களால் சொல்லப்பட்ட கொள்கைகள் என்பவை, சொன்னவர்களுக்கு அவர்களது புத்தித் திறமையும், அக் காலத்துக்குச் சரி என்று பட்ட கருத்துக்களையும் கொண்டவைகளே தவிர, எந்தக் கொள்கையும் எந்தக் கடவுளாலும் சிருஷ்டிக்கப்பட்டதல்லவென்றே சுயமரியாதைக்காரர்கள் கருதுகிறார்கள்.

இன்று மதமானது மக்களின் கூட்டு வாழ்க்கையின் அவசியத்துக்கு ஏற்ற கொள்கைகளைக் கொண்டது என்பதுடன் அவை பகுத்தறிவுக்கு ஒத்ததாகவும், காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்ப திருத்திக்கொள்ளக் கூடியதாகவும் சகல மக்களுக்கும் பலன் ஒன்றுபோல் உண்டாகக்கூடியதாகவும் இருக்கத்தக்க கொள்கைகள் கொண்டது என்றால், அதை சுயமரியாதைக்காரர்கள் மறுப்பதற்கு முன்வரமாட்டார்கள்.

['பகுத்தறிவு'-கட்டுரை—மார்ச்சு 1936]

24. அறிவும் மானமும் கெட்டது ஏன்?

ஜீவப் பிராணிகளில் மனிதனையும் மிருகம் பறவை முதலிய மற்ற பிராணிகளையும் பிரித்துக் காட்டுவதற்கு அறிகுறியாய் உள்ள குணங்கள் இரண்டே இரண்டு குணங்கள் தாம். அவை, பகுத்தறிவு, தன்மானம் என்பனவாகிய இரண்டுமேயாம்.

அதாவது, 'அறிவும் மானமுமே மக்கள் தன்மை' என்பதற்கு ஒப்ப அவை இரண்டும் இல்லாதார் மக்களல்லாதாரேயாவர். இன்றைய மனித வாழ்வில் அவ் விரண்டிற்கும் இடமில்லாமலே போய்விட்டது.

மனிதன் பிறக்கும்போது அப் பிறப்பு இயற்கை அமைப்பில் அறிவு பெறும் சக்தி தான் அமையப்பெற்று இருக்கிறான். ஆனால், அறிவுபெற்று இருக்கவில்லை என்றாலும் வளர்ச்சியில் அறிவு பெற வேண்டியவனாகிறான்.

அப்படிப் பெறவேண்டிய அறிவில் தலையாயதும் வாழ்க்கைக்குப் பயன்படத் தக்கதும் ஆனது இயற்கையின் இயல்பை, தன்மையை உணர்வதேயாகும்.

ஆனால், மனிதப் பிறவியில் மனிதன் இயற்கையை உணர்ந்துகொள்ள முடியாதபடி மதத்தையும் கடவுளையும் கொண்டு தடுக்கப்பட்டுவிட்டான்.

கடவுளும் மதமும்தான் இயற்கையை அறியும் தன்மையைக் கெடுத்துவிட்டன. அவை மக்கள் அறிவு வளர்ச்சிக்கே முட்டுக்கட்டையாகிவிட்டன.

கடவுளும் மதமும் இயற்கையை அறியுந் தன்மையைக் கெடுத்துவிட்டன என்பது மாத்திரமே அல்லாமல், நமது கல்வி என்பதும் 'புண்ணில், புழுவும் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்வதற்கு ஒப்ப, கடவுளையும் மதத்தையும் தாண்டித் தானாக வளர வாய்ப்பிருக்கும் துறையையும் அடைத்துவிட்டது. மதத்தால் ஏற்படும் முட்டாள் தனத்தைவிட, 'கல்வி'யால் ஏற்படும் முட்டாள் தனம் மிகவும் கேடானது என்று சொல்லும்படியாகக் கல்வி ஏற்பட்டுவிட்டது.

எப்படி எனில், மதத்தால் அறிவு வளர்ச்சி குன்றுகிறது என்று ஏற்பட்டுவிட்டால், 'கல்வியால்' அயோக்கியத் தன்மை—அதாவது மனிதனை மனிதன் மோசடி செய்து வாழும் தன்மை ஏற்பட்டு, பொய் பித்தலாட்டங்களாலேயே மனிதன் வாழ்வு நடத்தும்படியான—நடத்தித் தீரவேண்டியதான தன்மை ஏற்பட்டு வருகிறது.

இதற்குக் காரணம், கல்வியை மதக் கல்வியாக—மதத்தை அனுசரித்த கல்வியாக ஆக்கியதும், ஆசிரியர்கள் உண்மையான ஆசிரியர்களாய் இல்லாமல் வயிறு வளர்க்க ஆசிரியர் வேலை கற்ற ஆசிரியர்களைக்கொண்டும்—அந்த ஆசிரியர்களும் அடிமைக் கல்வி கற்ற அடிமை ஆசிரியர்களாக இருந்ததும், இருப்பதுமேயாகும்.

ஆசிரியன் என்பவன் இயற்கை அறிவு பெற்றவனாக—அதில் மேம்பட்டவனாக—உலக அனுபவம் பெற்றவனாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவன்தான் ஆசிரியர் தன்மைக்கு அருகதை உடையவனாவான். நம் ஆசிரியர்களுக்கு—அதாவது, 'வைஸ் சான்ஸ்லர்', 'டைரக்டர் ஆப் எஜுகேஷன்', 'பிரின்ஸ்பால்கள்' முதற்கொண்டு 'செகண்டிரி கிரேட் டீச்சர்', 'எஜுகேஷன் மினிஸ்டர்' என்பவர்கள் வரை யாருக்காவது அத் தன்மை உண்டா? சிலருக்குக் கொஞ்சம் உண்டு என்றாலும்—அதை அவர்கள் கல்வித்துறையில் பயன்படுத்த உரிமை உண்டு என்றாவது, யாராலாவது சொல்ல முடியுமா?

ஆகவேதான், மக்கள் அறிவு வளர்ச்சியைக் கடவுள், மதம் ஆகியவை கெடுத்த தானது ஒரு பகுதி என்றும், 'கல்வி' கெடுத்தது மற்ற மீதிப் பகுதி என்றும் சொல்ல வேண்டியதாயிற்று.

அறிவின் தன்மை இத் தகையது என்றால், இனி மானத்தின் தன்மை எத்தகையது என்று பார்த்தால், அடியோடு மானம் கெட்டவனே சிறந்த மனிதனாகப் பாவிக்கும்படியான அளவுக்கு மானமற்ற தன்மை மதிப்புப் பெற்றுவிட்டது.

மனிதனுக்கு மானம் எவ்வளவு முக்கியமானது என்பதை மக்கள் உணர்ந்து அதற்கு மதிப்புக் கொடுத்தால், மனித வாழ்வில் கடுகளவுகூட குறையும் ஒழுக்கக்கேடும், அசவுகரியமும் ஏற்பட இடமிருக்காது. மனிதன் மானத்தில் இலட்சியமற்றவனாக ஆகிவிட்டதினாலேயே பகுத்தறிவுள்ள மனித ஜீவனின் கூட்டு வாழ்வு—காட்டில் கெட்ட மிருகங்களிடையில் வாழும் தற்காப்பற்ற சாது ஜீவன்கள் தன்மையாக மனிதன் நிலைமை ஆகிவிட்டது. நம் நாட்டில் மக்களிடையில் மான உணர்ச்சியைத் தூண்ட சாதனமே

இல்லாமல் போய்விட்டது. இதற்கு நம் சமுதாய வாழ்வு அமைப்பும், பொருளாதார அமைப்பும் பெரும் காரணமாக இருந்தாலும் இன்றைய அரசியலமைப்பு எல்லாவற்றையும் விட மேம்பட்ட காரணமாக இருந்துவருகிறது.

சமுதாயத் துறையில், மேல்பிறப்பு—கீழ்ப்பிறப்பு என மக்களைப் பிரித்து அமைத்த பிறகு, கீழ்ப் பிறப்பில் பட்ட மக்களுக்கு மான உணர்ச்சி என்பது செயற்கையால் போலியாகத்தோன்றி மறையுமே அல்லாது இயற்கையான உணர்ச்சி அச் சமுதாயத்துக்கு எப்படி இருக்க முடியும்? மனித சமுதாயத்தில் அதோடு கூடவே 'குச்சிக்கார தாசி பிழைப்பு'—அதற்கொரு சமுதாயம்; துரோக எண்ணமே கை முதலாக உடைய வியாபாரத் துறை—அதற்கொரு கூட்டம்; பொய்யும் பித்தலாட்டமும் மனதறிந்து பயன்படுத்தித் தொழில் செய்து வாழும் வக்கீல் துறை—அதற்குப் பெரும் ஸ்தாபனம் ஆகிய இவைகளுக்கு சமுதாயத்தில் மரியாதையும் உயர் வாழ்வும் ஆகிய தன்மைகளும் இருந்து வருமானால், மக்களுக்கு மானத்தைப்பற்றிய, ஒழுக்கத்தைப்பற்றிய கவலை எதற்காக வரவேண்டும்?

ஒழுக்கக் கேடு என்பது மானத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கமுள்ளவன் மானியாய் இருப்பான்; மானி, ஒழுக்கமுள்ளவனாக இருப்பான்.

அறிவு என்பது இயற்கையைப்பற்றிய தெளிவை அடிப்படையாகக் கொண்டது.

அறிவுள்ளவன், இயற்கை வாதியாய் இருப்பான்; இயற்கைவாதி, அறிவாளியாய் இருப்பான்.

ஒழுக்கம் என்றால் மானம் என்றும்—ஒழுக்கமுடையவன் என்றால் மானி என்றும் கொள்ளலாம்.

அதுபோல், அறிவு என்றால் இயற்கை என்றும் அறிவாளி என்றால் இயற்கையை அறிந்தவன் என்றும் கொள்ளலாம்.

ஆகவே, மனித சமுதாயத்துக்கு அல்லது தனி மனிதனுக்கு கூட்டு வாழ்க்கைக்கும், மனிதன் ஓர் உயர்ந்த பிறவி என்பதற்கும் அத்தியாவசியமானவை அறிவும் மானமும் ஆம் என்பதும், இவை இரண்டும் இன்று மக்களிடையில் இல்லாமல்போய்விட்டன என்பதும், அதற்கு முக்கிய காரணம் கடவுளும் மதமும் கல்வியும் சமுதாய-பொருளாதார அரசியல் அமைப்பும் ஆம் என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

['விடுதலை'-தலையங்கம்—2-1-1950]

25. சுயமரியாதைப் பொதுச்சேவை

சு. ம. இயக்கத்தில் பல தோழர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தோழர்கள் சிலராவது நிலைமை மாறாமல், உறுதியோடு தங்கள் நலத்தை விட்டுக்கொடுத்துப் போராடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களாலேயேதான் எனக்கு ஊக்கமும், உறுதியும் வளருகிறது. அவர்களுக்கு எனது உபதேசமெல்லாம் மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும் என்பதே ஆகும்.

சேவை என்பது கூலியை உத்தேசித்தோ, தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியந்தான் சேவையாகும்.

ரஷ்யாவில் மதம் இல்லை; கடவுள் இல்லை என்றும் சொல்லுவார்கள். ஆனால், அங்கு ஒருவன் மற்றவர்களைக் 'கடவுளாக'க் கருதுகிறான்; அவர்களுக்குத் தொண்டாற்றுவதை 'மதமாக'க் கருதுகிறான். ரஷ்யாவில் சொத்தெல்லாம் பொதுச்சொத்து, உழைப்பெல்லாம் பொது நலச் சேவை என்று இருந்தாலும், தொண்டு ஆற்றுவதன் மூலம்

வாழ்வுக்குப் பயன் அனுபவிப்பதால் அப்படிப்பட்ட தொண்டை அவன் பொதுத்தொண்டு என்று கருதுவதில்லை.

அந்த நேரம் போக—அதாவது, ஊதியத்திற்காக வேலை செய்யும் நேரம் போக அவன் இஷ்டப்படி அனுபவித்துக்கொள்ள, அவனுக்கு சுதந்திரமாய் இருக்கும் நேரத்தில் எவ்வளவு நேரத்தை எந்தக் காரியத்திற்கு ஊதியம் இல்லாமல் செலவழிக்கிறானோ—அதற்குத்தான் 'பொது நலச் சேவை' என்று பெயர். இப்படியே ரஷ்யாவிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் இம் மாதிரிப் பொது நலச் சேவை, தொண்டு இருக்கும். அதற்கு ஒரு அடையாளமும் உண்டு.

அதுபோல், சு. ம. இயக்கக்காரன் யார், எந்த வேலை செய்து, எவ்வளவு ஊதியம் சம்பாதித்து, எவ்வளவு செலவு செய்தாலும், பொதுநல சேவைக்கு ஒரு காலத்தை ஒதுக்கி வைத்து வேலைசெய்ய வேண்டியது முக்கிய காரியமாகும். அதில் மற்றவர்களின் விருப்பு வெறுப்பைப் பார்க்காமல், நற்பயனைக் கருதி அதற்கு ஏற்ற தொண்டாற்றவேண்டும்.

மற்றபடி சு. ம. இயக்கத்திற்கு அது உண்டா, இது உண்டா என்பதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டாம். அதற்கு அறிவு உண்டு; அந்த அறிவு மானத்தைக் காப்பாற்றப் பயன்படுத்தப்பட வேண்டும்.

[அய்ரோப்பாவில் பெண்கள் கூட்டத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 10-1-1948]

தோழர்களே! உங்களைப் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும்படி வேண்டுதல் செய்கிறோம். நாங்கள் கூறுவதெல்லாம் உண்மையென்றோ, சத்தியமென்றோ, அல்லது நாங்கள் கூறுவதைக் கடுதாசியில் எழுதி நெருப்பிலிட்டால்கூட அழியாத அளவுக்குச் சுத்தமானதென்றோ கூறுவதில்லை. நாங்கள் ஏதாவது தவறு சொல்லியிருந்தால், தவறு செய்திருந்தால் அருள்கூர்ந்து, தயைசெய்து எடுத்துக் கூறுங்கள். நாங்கள் நன்றியறிதலோடு திருத்திக்கொள்கிறோம். அல்லது, சமாதானம் தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் கூறுவதை அப்படியே நம்பிவிடவேண்டாம் என்றுதான் நாங்கள் உங்கள் பகுத்தறிவுக்கு விண்ணப்பம் செய்துவருகிறோம்.

நாங்கள் கூறுவனவற்றுக்கு எங்கு மறுப்புக் கிடைக்குமென்று நீங்கள் தேட வேண்டும். யாராவது ஆட்சேபணை தெரிவிப்பார்களானால், கண்கொத்திப் பாம்புபோல் இருந்து கருத்துடன் கவனிக்கவேண்டும். பிறகு பொறுமையோடு ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உங்கள் அறிவையே உண்மையான, நுட்பமான தராசாகக் கொண்டு தரா தரங்களை நிறுத்துப்பார்க்க வேண்டும். மாசு இருக்கும், பாசி இருக்கும்; களிம்பும் இருக்கலாம். அறிவுகொண்டு உரைத்துப் பாருங்கள்! உங்கள் அனுபவத்தால் அலசிப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! சிந்திக்க வேண்டியதுதான் மனித தர்மம். யார் எது சொன்னாலும் உங்கள் சொந்தப் புத்திகொண்டு சிந்தித்துப் பாருங்கள்! சுதந்திரத்தோடு—உங்கள் அறிவைச் சட்டத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ, சமய சந்தர்ப்பத்திற்கோ, சமுதாய சம்பிரதாயத்திற்கோ, பழக்க வழக்கங்களுக்கோ அடிமைப் படுத்தாமல் சிந்தித்துப் பார்த்து முடிவு செய்யுங்கள். நாம் இதைத்தான் சுயமரியாதை என்கிறோம். சுய அறிவுகொண்டு சிந்தித்துப் பார்ப்பதற்குத்தான் சுயமரியாதை என்று பெயர். ஒவ்வொருவரும் தம் சுய அறிவு கொண்டு சிந்திக்க உரிமைபெற்று இருப்பதற்குத்தான் பூர்ண சுயேச்சை என்று பெயர். எதையும் பூர்ண மரியாதை கொடுத்துக் கேட்டு, பூர்ண சுயேச்சையோடு ஆராய்ந்து முடிவுக்கு வாருங்கள்.

சிந்தனா சக்திதான் மனிதனை மிருகத்தினிடமிருந்தும், பட்சிகளிடமிருந்தும் பிரித்துக் காட்டுவதாகும். மிருகங்கள் மனிதனைவிட எவ்வளவோ பலம் பெற்றிருந்தும் அவை அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதற்குக் காரணம் இதுதான்.

எந்த மனிதனும் ஒரு அளவுக்காவது பகுத்தறிவை உபயோகித்துத்தான் வாழ்கிறான். நகை வாங்கும்போது அதை உரைத்துப் பார்க்காமலோ அக்கம் பக்கம் விசாரிக்காமலோ யாரும் வாங்கிவிடுவதில்லை. அப்படிப் பார்ப்பதும் பகுத்தறிவுதான். ஒரு சேலை வாங்கினாலும்கூட அது சாயம் நிற்குமா, அதன் விலை சரியா, அதற்கு முன் இவர்கள் கடையில் வாங்கிய சேலை சரியாக உழைத்து இருக்கிறதா, இக் கடைக்காரர் ஒழுங்கானவர் தானா என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் வாங்குகிறோம். இப்படிப் பட்ட சில்லரைக் காரியங்களுக்கெல்லாம் பகுத்தறிவை உபயோகிக்கும் நாம், சில முக்கியமான விஷயங்களில்மட்டும் பகுத்தறிவை உபயோகிக்கத் தவறிவிடுகிறோம். அதனால் ரொம்பவும் ஏமாந்து போகிறோம். இதை உணர்த்துவதுதான், பகுத்தறிவின் அவசியத்தை வற்புறுத்துவதுதான் எனது முதலாவது கடமை.

[சொற்பொழிவு—'குடி அரசு' 1-5-1948]

26. தொண்டர்களின் தன்மை

புத்திசாலிகள் சண்டையிட்டுக்கொள்வது எப்போதுமே இயற்கைதான். ஆகவே தான் நான் நீடாமங்கலம் மாநாட்டின்போதே மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்களின் பகுத்தறிவைக்கூட கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும் என்று! யாராவது ஒருவர்தான் ஒரு இயக்கத்தை நடத்தக்கூடியவராக இருக்க முடியுமே தவிர, எல்லோருமே 'தலைவர்களாக' இருக்க முடியாது. மற்றவர்கள் தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்க வேண்டியவர்கள்தாம். தோழர்களே! நான் இப்பொழுது கூறுகிறேன்; நீடாமங்கலத்தைவிட ஒருபடி மேலே செல்லுகிறேன்.

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவை மட்டும் அல்ல—உங்கள் மனச்சாட்சி என்பதைக்கூடத்தான் நீங்கள் கொஞ்சம் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டும். கழகத்தில் சேருமுன்பு நீங்கள் உங்கள் பகுத்தறிவு கொண்டு கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம்; உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்று நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆர அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம்.

ஆனால், எப்பொழுது உங்கள் மனச்சாட்சியும், பகுத்தறிவும் இடம் கொடுக்கிறதோ—எப்பொழுது நீங்கள் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்பொழுதிலிருந்து, உங்கள் பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் ஒருபுறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டுக் கழகக் கோட்பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்கவேண்டியதுதான் முறையாகும்.

[தூத்துக்குடியில், 9-5-1948-ல் நடந்த மாநாட்டுத் தலைமையுரை—'குடிஅரசு' 29-5-1948]

27. பெரியார் சுயமரியாதைப் பிரசார ஸ்தாபனம்

சுயமரியாதைப் பிரசார ஸ்தாபனம் ஏற்பட்டு இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அதற்கு 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மாநாட்டில் கொள்கை, திட்டம், விதிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அதன்பின் 1930ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டிலும், 1931ஆம் ஆண்டில் விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டிலும், அதை ஒரு ஸ்தாபனமாக சொசைட்டி ஆக்டின்படிப் பதிவுசெய்வது என்று தீர்மானம் செய்து, பதிவுசெய்ய தோழர் அய்யாமுத்துவை (கவுண்டரை) நியமித்து, பதிவுச் செலவுக்கு ஆக என்று 100 ரூபாயும் சாங்கிஷன் செய்யப்பட்டது.

அதுமுதல் ரிஜிஸ்டர் செய்வதற்காகப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. தோழர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களால் திருத்தப்பட்ட திட்டங்கள் விதிமுறைகளுடன் 1940 மே மாதத்தில் ஈரோடு வக்கீல் தோழர் ஈ. எம். அண்ணாமலை அவர்கள் மூலம் கோயம்புத்தூர் ஜில்லா ரிஜிஸ்ட்ரார் அவர்களிடம் கொடுக்கப்பட்டதில், அவர் அதைப் பார்த்து 'இது சொசைட்டி ஆக்டுப்படி பதிவுசெய்யக் கூடியதல்ல; கம்பெனி ஆக்டுப்படி பதிவுசெய்வது நல்லது' என்று 'எண்டார்சு' செய்து திருப்பி அனுப்பிவிட்டார்.

அதன்பிறகு கம்பெனி ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்தால் நிர்வாகத்திற்குச் சற்று அதிகக் கஷ்டமிருக்கும் என்று கருதித் தயங்கிக்கொண்டு இருக்கும் சமயத்தில், பெரியாரிடம் அபிப்பிராய பேதம்கொண்டு விலகி இருந்தவர்களான—தோழர் சவுந்திரபாண்டியன் அவர்களும், மற்றும் தோழர்கள் வி. வி. இராமசாமி, கே. ஏ. பி. விஸ்வநாதன், ஜே. எஸ். கண்ணப்பர், சாமி சிதம்பரனார், அ. பொன்னம்பலம், எஸ். இராமநாதன், வை. சு. சண்முகம் முதலாகியவர்கள் ஒன்றுகூடி 'செல்ஃப் ரெஸ்பெக்ட் லீக்,' 'சுயமரியாதை சங்கம்' என்பதாக ஒரு ஸ்தாபனம் ரிஜிஸ்டர் செய்துகொண்டுவிட்டார்கள்.

அதனால் அதே பெயரில் வேறு ஸ்தாபனம் ரிஜிஸ்டர் செய்யமுடியாமல் போய் விட்டது என்பதுடன், திராவிடர் கழகம் என்பதாகவும் ரிஜிஸ்டர் செய்யமுடியாமல் அதிலும் முன்கூறிய சு. ம. சங்க நிகழ்ச்சிகள் போலவே பல தொல்லைகளும் ஏற்பட்டுவிட்டதால் காலதாமதமாக நேரிட்டுவிட்டது. அதாவது, பெரியார் திருமண ஏற்பாட்டிற்குச் சில நாட்களுக்கு முன்பே இதற்கு ஆகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டைச் சிலர் அறிந்து, அதாவது யார் யார் அந்த ஏற்பாட்டில் சேர்க்கப்படமாட்டார்கள் என்று கருதினார்களோ அவர்களில் சிலர் சேர்ந்து உள்ளுக்குள்ளாகவே தனிக் கூட்டு அமைத்துக்கொண்டு சதிசெய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்ற நிலையைப் பெரியார் அறிந்தவுடன் அவசரத்தில் ஸ்தாபனத்தைப் பதிவுசெய்வது என்பது சிறிது கஷ்டமாகவும், குழப்பமாகவும், பயப்படத்தக்கதாகவும் இருந்ததால், திருமணத்தை முடிப்பதுமூலம் முதலில் ஸ்தாபனத் திற்கு ஒரு பாதுகாப்பு ஏற்படுத்தலாம் என்று கருதியே திடீரென்று திருமணத்தை முடிக்க வேண்டியதாயிற்று.

இந்தக் கருத்தை கோவை திருக்குறள் மாநாட்டிலும் சென்னைப் பொதுக்கூட்டங்கள் இரண்டொன்றிலும் அப்போதே வெளியிட்டும் இருக்கிறேன். அதன் பிறகே இந்த இரண்டு மூன்று வருஷகாலமாக ஸ்தாபனத்தின் சொத்துக்கள் விஷயத்தில் சற்றுக் கவனம் செலுத்தி, அவைகளைச் சரிவரத் திரட்டி, நல்ல வசதி ஏற்பட்ட இன்றைய நிலையில் பதிவுசெய்துவிடு வது அவசியமும் அவசரமும் நன்மையும் ஆனதென்று கண்டதும் இப்போது 22-9-1952-ம் தேதி திருச்சியில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இதற்கு சர்க்காரில் ஒரு மாதம் 'டிலே' ஆகிவிட்டது.

ஸ்தாபனத்தின் பெயர்—**Periyar Self-Respect Propaganda Institution** (பெரியார் செல்ஃப் ரெஸ்பெக்ட் பிராபகண்டா இன்ஸ்டிடியூஷன்) என்பதாகும்.

இதற்கு நிர்வாக சபை அங்கத்தினர்கள் 13 பேர்.

இந்த 13 பேர்கள் தன்மை 1940-ஆம் ஆண்டு பதிவுசெய்ய ஏற்பாடு செய்யப் பட்ட திட்டத்தின்படி 13-ல் 4 பேர் பரம்பரை மெம்பர்கள். அவர்கள் தோழர்கள் 1. ஈ. வெ. ராமசாமி, 2. ஆர். கே. சண்முகம், 3. டபள்யு. பி. ஏ. சவுந்திரபாண்டியன், 4. அ. பொன்னம்பலம் ஆவார்கள். 4 பேர் ஆயுள் மெம்பர்கள்—அவர்கள் தோழர்கள் கே. ஏ. பி. விஸ்வநாதன், சி. டி. நாயகம், வி. வி. இராமசாமி, ஈ. வி. கிருஷ்ணசாமி.

மற்ற தேர்தல் மெம்பர்கள் 5 (அல்லது ஏழு)—அவர்கள் தோழர் என். சிவராஜ், குஞ்சிதம் குருசாமி முதலியவர்கள் ஆவார்கள்.

அப்போது ஸ்தாபனத்திற்கு உள்ள சொத்துக்கள் என்பதாக அதில் குறிப்பிட்டிருந்தது ஒரு இலட்ச ரூபாய்தான். அதாவது சில கட்டிடங்கள், 2 அச்சு நிலையங்கள் 2 பத்திரிகைகள், புத்தகங்கள் உரிமைகள், ரொக்க நிதிகள் ஆகியவை, அன்றைய நிலவரப்படி.

இப்போதும் நிர்வாகசபை அங்கத்தினர்கள் 13 (அவசியப்பட்டால் 15)

ஆனால், இதில் பரம்பரை அங்கத்தினர்கள் தன்மை எடுக்கப்பட்டுவிட்டது. ஆயுள் கால அங்கத்தினர் 5. இந்த அய்ந்து பேர்கள் திருமணத்திற்கு முன்பு ஏற்பாடு செய்த மிமோராண்டத்தின்படி 1. ஈ. வெ. ராமசாமி, 2. தி. பொ. வேதாசலம், 3. கே. கே. நீலமேகம், 4. ஈ. திருநாவுக்கரசு, 5. கெ. ஏ. மணி.

இப்போது பதிவான மிமோராண்டத்தின்படி ஈ. வெ. ராமசாமி, தி. பொ. வேதாசலம், ஈ. வி. ஆர். மணி, ஏ. என். நரசிம்மன் (ஆனைமலை), இ. திருநாவுக்கரசு.

ஆயுள் நிர்வாக சபையில் தெரிந்தெடுக்கப்படும் அங்கத்தினர் 3 பேர்— 1. எஸ். குருசாமி பி. ஏ, 2. வி. வீராசாமி பி. ஏ; எம். பி; 3. ஆர். சொக்கப்பா பி. ஏ, பி. காம், தஞ்சை (இவர்கள் 3 ஆண்டு காலத்திற்கு)

மற்ற அய்ந்து பேர்கள் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய அவசர அவசியத்தை முன்னிட்டு தற்கால சாந்தியாக என்று சொல்லி அவர்கள் சம்மதம் பெற்றுக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் இருவர் பெண்கள்—ஒருவர் ஏ. சி. ராமகிருஷ்ணம்மாள் (ஆனைமலை), மற்றவர் விசாலாட்சி அம்மாள் (நாகரசம்பட்டி). மற்ற மூவர் என். எஸ். சம்பந்தம் (நாகரசம்பட்டி); வி. ராமச்சந்திரன் (திருச்சி), எம். எஸ். சுந்தரம் (திருச்சி); இவர்கள் அனேகமாக மாற்றப்படலாம்.

இப்போது ஸ்தாபனத்திற்கு உத்தேச நிதி மேலே குறிப்பிட்டதை விட அதிகமான நிதி என்றே சொல்லலாம்; அதாவது 3 இலட்சத்திற்குக் குறைவில்லாமல் சற்று ஏறக்குறைய 4 இலட்சத்திற்கு மதிப்பிடலாம். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 15 ஆயிரம் வரை வரும்படி வரலாம்.

மிமோராண்டத்திலும் யாதாஸ்திலும் குறிப்பிட்ட விஷயங்கள், சட்டதிட்டங்கள் 1945-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதிய 'குடி அரசு' பத்திரிகை—மலர் 18, இதழ் 16-ல் பிரசுரம் செய்யப்பட்டவைகளேயாகும். சில திட்டங்கள் சேர்க்கப்பட்டது தவிர, வேறு மாற்றம் இல்லை என்றே சொல்லலாம்.

கொள்கைகள், திட்டங்கள் விதிமுறைகள் கொண்ட நகல் புத்தக உருவமாக சீக்கிரத்தில் வெளிவரும்.

['விடுதலை'-தலையங்கம்—2-10-1952]

28. சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும்

இந்தப் பெயரால் ஓர் அமைப்பு நிறுவப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டிருப்பது கண்டு பொறாமைப்படுகின்ற ஒரு சில விஷமிகள் பொது மக்களிடையே தப்பான தின்ணைப் பிரச்சாரம் செய்து வருவதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அதாவது, இனிமேல் சுயமரியாதை ஸ்தாபனத்துக்குத்தான் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் என்றும், திராவிடர் கழகம் இனிமேல் இயங்காது என்றும், திராவிட நாடு பிரச்சினை நழுவ விடப்படுமென்றும், திராவிட இன உணர்ச்சிப் பிரச்சினை கவனிக்கப்பட மாட்டாது என்றும் இவ் விஷமிகள் விஷமப் பிரச்சாரம் செய்துவருகின்றனராம்.

சுயமரியாதை இயக்கத்துக்கும் திராவிடர் கழகத்துக்கும் உள்ள தொடர்பு யாவரும் அறிந்ததேயாகும். சுயமரியாதை இயக்கத்தில் திராவிட நாடு பிரச்சினையை எதிர்ப்பவர்கள் இல்லாவிடினும், அந்தப் பிரச்சினையை முன் நிறுத்தி வற்புறுத்திப் பிரச்சாரம் செய்து வருவதில்லை. அதேபோல், திராவிடர் கழகத்தில் மத வெறியர்கள், சாதி வெறியர்கள் இல்லையென்றாலும், திராவிட நாடு பிரச்சினைதான் அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கம் என்ற தனிப் பெயரால் தனிப்பட்ட முறையில் பிரச்சாரம் நடக்கவில்லையென்றாலும், திராவிடர் கழகத்தாரைப் பொறுத்தமட்டில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை அலட்சியப்படுத்தியது கிடையாது.

திராவிட நாடு கிடைத்த பிறகு திராவிடர் கழகம் கலைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால், கடைசி மூட நம்பிக்கைக்காரன் இந்த நாட்டில் இருக்கின்ற வரையில் சுயமரியாதைக்காரனுக்கு வேலையிருக்கிறது.

சுயமரியாதைக் கொள்கைகளைக் காங்கிரஸ்காரர்களும்கூடப் பலர் பின்பற்றி வருகின்றனர்; ஆனால், அவர்கள் திராவிட நாடு பிரிவதை ஆதரிப்பதில்லை. ஆதலால், சுயமரியாதை இயக்கம் கட்சி பேதமற்றது என்றுகூடக் கூறலாம். ‘ஜஸ்டிஸ்’ கட்சி என்ற பழைய கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களில் 100-க்கு 99 பேர் சுயமரியாதைக் கொள்கைகளுக்கு விரோதிகள் என்பதே இதற்குப் போதுமான சான்றாகும்.

மேலும், சுயமரியாதை இயக்கம் என்பது அரசியல் நாற்றமே இல்லாத ஒன்றாகும்; சர்க்கார் ஊழியர் உள்ளிட்ட எவரும் இதில் கலந்துகொள்ளலாம்; உறுப்பினர் ஆகலாம். பழைமைப் பாசியைச் சுரண்டி எறிந்து தூய்மைப்படுத்திப் புதுமைச் சுண்ணாம்பு அடிப்பதற்கு யாருக்குத்தான் விருப்பமிருக்காது? மேலும், சுயமரியாதை இயக்கம் மாணவர்களுக்கும் மாதர் கூட்டத்துக்கும் தனி உடைமை என்றுகூடச் சொல்லலாம். குறிப்பாகக் கூற வேண்டுமானால், திராவிடர் கழகத்தில் தொண்டாற்றுவதற்குத் துணிவில்லாதவர்கள் யாவரும் சுயமரியாதை இயக்கத்தில் கலந்து தொண்டாற்றலாம்.

கதர்த்துணி கட்டுபவர்கள் பெரும்பாலோர் காங்கிரஸ் கட்சிக்காரராயிருக்கலாம். ஆனால், காங்கிரஸ் கட்சியில் இல்லாதபடி எவரும் கதருடை கட்டலாமல்லவா? கதர் இயக்கம் இருப்பதனால் காங்கிரஸ் கட்சி அழிந்துபோய்விட்டது என்று காங்கிரஸ்காரர் கூறுவார்களா? கதர் இயக்கம் காங்கிரஸ்காரருக்கு உதவியாயிருக்கிறது என்பதைத்தானே காண்கிறோம்?

இதுபோலத்தான், சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகத்துக்கு உற்ற துணையாக இருந்துவரும். ஆனால், இதிலுள்ள உறுப்பினர் யாவரும் திராவிடர் கழகத்திலும் உறுப்பினராயிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.

மேலும், நீதிக் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் சேர்ந்து பெற்ற குழந்தைதான் திராவிடர் கழகம். இறுதி இலட்சியத்தில் இரண்டு இயக்கங்களுக்கும் எந்த விதமான மாறுதலும் கிடையாது. சுயமரியாதைக் கொள்கைகளைக் கொண்டிராத—தனித் திராவிட ஆட்சியை சுயமரியாதைக்காரர்கள் ஏற்கமாட்டார்கள். வைதீகத்திலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கிய தனித் திராவிட ஆட்சியைத் திராவிடர் கழகத்தார் விரும்பமாட்டார்கள்.

ஒன்று நீட்ட நூல்; இன்னொன்று குறுக்கு நூல். இந்த இரண்டுமில்லாவிடில் துணி ஏது? இரண்டில் ஒன்றுமட்டுமிருந்தால் அதற்குப் பெயர் துணியல்ல; நூல்!

எனவே, சுயமரியாதை அமைப்பு பதிவு ஆவதன் மூலம் திராவிடர் கழகப் பிரச்சினை கைவிடப்படும் என்ற பிரச்சாரம் உண்மையல்ல.

[‘விடுதலை’-தலையங்கம்—21-10-1952]

29. தேவர்களின் முறையீடு

இலண்டன் மாநகராகிய வைகுண்டத்திலே ஜார்ஜ் மன்னராகிய மகா விஷ்ணுவானவர் பார்லிமெண்டு என்னும் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருக்கின்றார்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கே. நடராஜன், சி. இராஜகோபாலாச்சாரி, வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, எஸ். சீனிவாசய்யங்கார், சிவசாமி அய்யர், வெங்கட்டரமண சாஸ்திரி, சி. பி. இராமசாமி அய்யர், டி. ரெங்காச்சாரி, டி. ஆர். ராமச்சந்திரய்யர், எம். கே. ஆச்சாரி, சத்தியமூர்த்தி முதலாகிய அனேக பூதேவர்கள் போய், கால்மாட்டில் நின்றுகொண்டு தவம் செய்கின்றார்கள்.

மகாவிஷ்ணு :—(தேவர்கள் தவத்திற்கிரங்கி) ஹே, பூதேவர்களே! எங்கு வந்தீர்கள்?

பூதேவர்கள் :—ஆபத் பாந்தவா, அநாத ரட்சகா தங்களிடம்தான் வந்தோம்.

ம.வி : என்ன விசேஷம்?

பூ.தே : தேவர்களுக்கு ஏதாவது இடுக்கண் வந்தால் அதைத் தடுக்க, தங்களையன்றி இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்? எனவே தங்களிடம் வந்தோம்.

ம.வி : என்ன விசேஷம்?

பூ.தே : மகாப் பிரபூ! பழையபடி ராட்சதர்களுடைய ஆதிக்கம் வலுத்துவிட்டது. பூதேவர்களாகிய எங்கள் நிலை இருப்பதா, இறப்பதா என ஊஞ்சலாடிக்கொண்டிருக்கின்றது. இந்தச் சமயம் தாங்கள் அருள்புரியவில்லையானால் பூலோகமே சாம்பலாய்ப் போய்விடும். பூலோகமே இல்லையானால் மகாவிஷ்ணுவாகிய தங்கள் பாடுகூட திண்டாட்டமாய்விடும். தங்களை வணங்கவோ, தங்களுக்குப் பூஜை ஆராதனைகள் உற்சவம் முதலியவைகள் செய்யவோகூட, யாரும் இருக்க மாட்டார்கள். வணங்காததும் பூஜிக்காததுமான பகவான் இருந்தென்ன? ஒழிந்தென்ன? எனவே இந்த சமயம் தாங்கள் கிருபை கூர்ந்து எங்களைக் கடாட்சித்தருளவேண்டும்.

ம.வி : என்ன, என்ன? உங்களுக்கு அப்பேர்ப்பட்ட கஷ்டம் என்ன வந்தது? சங்கதியைச் சொல்லுங்கள்.

பூ.தே : பிரபுவே! முன் யுகங்களில் தேவர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள்போல இப்போது பெரிய ஆபத்துகள் வந்திருக்கின்றன.

ம.வி : எப்படி வந்திருக்கிறது? சீக்கிரம் விவரமாய்ச் சொல்லுங்கள்.

பூ.தே : எப்படியோ வந்துவிட்டது. பெரிய உபத்திரவமாய் இருக்கின்றது. ஒவ்வொரு யுகங்களிலும் தேவர்களுக்கு இடர்கள் செய்ய அசுரர்களாகவும், அரக்கர்களாகவும் ராட்சதர்களாகவும் வந்து எங்களை இடர்கள் செய்யும்போது, பகவானாகிய தாங்கள்தான் பல அவதாரங்களாக வெளிக்கிளம்பி ராட்சதர்களை எல்லாம் அழித்து, எங்களையும் எங்கள் உயர்வாகிய வேதங்களையும், உத்தியோகங்களாகிய யாகத்தையும் காத்தருளி வருகிறீர்கள்.

ம.வி : ஆம். அது உண்மைதான்.

பூ.தே : பிரபுவே! இந்த யுகத்திலும் அதுபோலவே ஒரு ராட்சதன் தோன்றிவிட்டான். அவன் எங்களுடைய பெரியபெரிய உத்தியோகமாகிய யாகத்திலும், வேதத்திலும் கையை வைத்து, அவைகளையெல்லாம் அடியோடு ஒழிக்கப் பார்க்கின்றான்.

ம.வி : அப்படிப்பட்ட ராட்சதன் யார்?

பூ.தே : பிரபுவே! அவன்தான் 'சுயமரியாதை' என்று சொல்லப்பட்ட ராட்சதன். அவன் இப்போது தேவர்களாகிய எங்களுக்கு யாத்திரம் துன்பம் விளைவிக்கின்றான்

என்றோ, எங்களுடைய உத்தியோகங்களாகிய யாகத்தை மாத்திரம் அழிக்கின்றான் என்றோ கவலையினமாய் இருந்து விடாதீர்கள்! நாங்கள் ஒழிந்தால் பகவானாகிய தாங்களும் ஒழிந்துபோவது நிச்சயம். ஏனென்றால், எங்களை ஒழித்தால்தான் தங்களை ஒழிக்க முடியுமென்று நினைத்து முடிவுசெய்து, தங்களை ஒழிப்பதற்காகவே முதலில் எங்களை ஒழிக்கின்றானாம்.

ம.வி: அப்படியா! அப்பேர்ப்பட்ட ராட்சதனா அவன்? அவனுக்கு இவ்வளவு சக்தி எப்படி வந்தது?

பூ.தே: அவன் மகா தவசிரேஷ்டன்; பெரிய பெரிய தபங்கள் செய்து அதன் மூலம் பெரிய பெரிய வரங்களைப் பெற்றுவிட்டான். அன்றியும் தக்க ஆயுதங்கள் அவனிடமிருக்கின்றன. அவ்வாயுதங்களுக்குப் பயந்துகொண்டு சில்லரைத் தேவதைகளும், தங்கள் பரிவாரங்களுங்கூட அவனது பரிவாரங்களாக இருக்கின்றன. அவனைக் கண்டால் நடுங்காத முனிகள் இல்லை; ரிஷிகள் இல்லை.

ம.வி.: அப்படியா! அவன் செய்யும் கொடுமை என்ன?

பூ.தே: மதம் பொய் என்கின்றான்; வேதம் பொய் என்கின்றான்; புராணம் பொய் என்கின்றான்; பராசர ஸ்மிருதி பொய்யாம்; மனுதர்ம சாஸ்திரம் பொய்யாம்; எல்லாம் பொய் என்கின்றான். இராமாயணம் பொய்யாம்; பாரதம் பொய்யாம்; திருவிளையாடல் புராணம் பொய்யாம்; பெரிய புராணம்கூடப் பொய்யாம். தேவர்களைக் கண்டது யார்? விஷ்ணுவைக் கண்டது யார்? சிவனைக் கண்டது யார்? எல்லோரும் பொய் என்கின்றான். இருக்கின்றதாக அகச் சான்று, புறச் சான்று காட்டினாலோ, காட்டுகின்றவர்கள் எல்லோரையும் அயோக்கியர்கள், அன்னக் காவடிகள் என்கின்றான். அவனுடைய உபத்திரவத்தினால் புராணங்களை விற்பனை ஆவதில்லை; காலட்சேபங்களே நடைபெறுவதில்லை. இவைகள் போனாலும் போகட்டும். எங்கள் யாகங்களே நடைபெறுவதில்லை. அவனால் எங்களுக்கு வெகு கஷ்டமாக இருக்கின்றது.

ம.வி: அப்படியா சொல்லுகின்றான்?

பூ.தே: ஆமாம், பகவானே!

ம.வி: இன்னும் என்ன செய்கின்றான்?

பூ.தே: நாள் பொய் என்கின்றான்; திதி பொய் என்கின்றான்; சடங்கு பொய் என்கின்றான்; தேர் பொய், திருவிழா பொய் என்கின்றான்.

ம.வி: சரி, இவ்வளவையும் பொய் என்கின்றானா?

பூ.தே: ஆம், பிரபூ! மற்றும் இவனுடைய உபத்திரவத்தினாலே புஸ்தகக் கடைக்காரன் பட்டினி; புராணக் கடைக்காரன் பட்டினி; புராணப் பிரசங்கப் பண்டிதன் பட்டினி; புரோகிதன் பட்டினி; அர்ச்சகன் பட்டினி; குருமார் பட்டினி; சமயப் பிரச்சாரகன் பட்டினி; நல்ல ஆங்கிலம் படித்த சாஸ்திரிகள், சாதுக்கள் எல்லாம் பட்டினி கிடக்கும்படியாகிவிட்டது. இதைப்பற்றிக் கேட்டால் மூட்டை தூக்கி, மண்வெட்டி வயிறு வளர்க்கச் சொல்லுகிறான். கொடுமை! கொடுமை! சகிக்க முடியவில்லை.

ம.வி.: நமது கடவுள் தன்மையைப்பற்றி என்ன சொல்லுகின்றான்? அதையாவது ஒப்புக்கொள்ளுகின்றானா, இல்லையா?

பூ.தே: கடவுளைப் பற்றிச் சொன்னால், எனக்கு அவசியமில்லை என்கின்றான். கடவுள் உண்டா இல்லையா என்றால், 'நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதே கிடையாது' என்கின்றான். 'கடவுள் இருந்தாலும் சரி' இல்லாவிட்டாலும் சரி, அதைப் பற்றி உனக்கென்ன கவலை?' என்கின்றான்.

ம.வி: பின்னை, அவன் எதைத்தான் ஒப்புக்கொள்ளுகின்றான்?

பூ.தே: அவன், 'மனிதனுக்கு மனிதன் அன்பு, இரக்கம், உதவி, ஒழுக்கம் இவற்றைத்தவிர மற்றொன்றையும் மதிப்பதில்லை' என்கின்றான்.

ம.வி: அப்படியானால், இவற்றை எல்லாம் உலகம் ஒப்புக்கொள்ளுகிறதா?

பூ.தே: ஒப்புக்கொள்ளுகிறதே! இதுதானே ஆச்சரியமாய் இருக்கின்றது. ஒப்புக் கொள்ளுவது மாத்திரமா? இந்தச் சமயம் நாங்கள் தெருவில் ஒண்டியாய்ப் போகிறதே ஆபத்தாய் இருக்கிறது.

ம.வி: நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? நீங்களும் எதிர்த்துப் போர் செய்வதுதானே?

பூ.தே: நாங்களும் எங்களால் கூடியவரை பார்த்தோம். எங்கள் ஆயுதங்களாக அந்த ராட்சதக் கூட்டத்திலிருந்தே சில ஆட்களைக் கைப்பற்றி, அதன் மூலமாகவும் போரிட்டுப் பார்த்தோம். அவர்கள் ஆயுதங்களும் எங்கள் ஆயுதங்களும் நாங்கள் கூலிக்குப் பிடித்த ஆயுதங்களும் எல்லாம் அவன் ஆயுதங்களுக்கு முன்னால் முனை மழுங்கிப் போய்விட்டன.

ம.வி: அப்பேர்ப்பட்ட அந்த ராட்சதனுடைய ஆயுதந்தான் என்ன?

பூ.தே: 'குடிஅரசு', 'திராவிடன்', 'குமரன்', 'நாடார் குல மித்திரன்', 'தமிழன்', 'விஸ்வநேசன்', 'சிங்கப்பூர் முன்னேற்றம்', 'சுயமரியாதைத் தொண்டன்' முதலிய அனேக ஆயுதங்களின் வலிமை, எங்கள் ஆயுதங்களின் முனைகளை எல்லாம் மழுங்க வைத்துவிட்டன. எங்கள் கூலி ஆயுதங்களும் உறை இல்லாமல் வெளியே தலை நீட்ட முடியவில்லை. இப்போது நாங்கள் செத்த பாம்பை ஆட்டுவதுபோல், பொய்வேஷம் போட்டுக்கொண்டு திரிந்து பார்த்தும் வேறு மார்க்கமில்லாததால் தங்கள் பாதத்தில் வந்து விழுந்துவிட்டோம். தாங்கள்தான் எங்களைக் காப்பாற்றவேண்டும். தங்கள் பரிவாரங் களான 'சைமன் கமிஷன்' என்னும் உபதேவர்களை நாங்கள் அறியாமல் பகிஷ்காரம் செய்துவிட்டோம். அதைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

ம.வி: இதற்காக என்னை என்ன செய்யச் சொல்லுகின்றீர்கள்?

பூ.தே: தங்களிடமுள்ள சில பாணங்களைக் கேட்க வந்திருக்கின்றோம்.

ம.வி: என்ன பாணம்?

பூ.தே: 124 ஏ; 153 ஏ ஆகிய பாணங்கள் வேண்டும்.

ம.வி: ஏன், 144 பாணம் வேண்டாமா?

பூ.தே: 144 அவனிடம் செல்லாது. அது சரமாரியாய் அவன்மேல் விடப்பட்டும், அது அவனிடம்போய் அவன் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்துவிட்டு வந்து விட்டதோடு மாத்திரமல்லாமல், திரும்பிவந்து எய்தவர்கள் மீதுங்கூட சில சமயங்களில் பாய்ந்துவிடுகின்றது.

ம.வி: சரி; நமது தூதர்களை முதலில் உங்கள் லோகத்திற்கு அனுப்புகிறோம்; அவர்களைகொண்டு பூலோகநிலை அறிந்து பிறகு வேண்டியதுபோல் செய்வோம்.

பூ.தே: பிரபுவே! தங்கள் தூதர்கள் யார்? தயவுசெய்து அதைக் கொஞ்சம் தெரிவித்துவிட்டால் நாங்கள் ஜாக்கிரதையாக இருக்க அனுகூலமாயிருக்கும்.

ம.வி: நமது தூதர்கள் 'சைமன் கமிஷனர்கள்'; அவர்களிடம் முறைகளை மெய்ப்பியுங்கள்.

பூ.தே : நாங்கள் அறியாத புத்தியினால் தங்கள் தூதர்களை ஆதியில் அலட்சிய மாய்க் கருதிவிட்டோம்; அதனால் வந்த வினைப்பகுதி என்றுகூடச் சொல்லலாம். ஆனாலும், இப்போது அவர்களிடம் சொல்லிக்கொள்ளுவது எங்களுக்குக் கொஞ்சம் அவமானமாயிருக்கின்றதே!

ம.வி : நேரில் தெரிவிக்காவிட்டால் பாதகமில்லை; மறைமுகமாக வேறு ஏதாவது வழிகளில் தெரிவித்துவிடுங்கள்.

பூ.தே : அப்படியே ஆகட்டும், பிரபுவே! எப்படியாவது இந்தச் சமயம் எங்களைக் காப்பாற்றுங்கள். இல்லாவிட்டால் தங்களுக்கும் எங்களுக்கும் இரண்டுபேருக்குமே ஆபத்து வந்துவிடும். இதை நன்றாய் மனதில் வையுங்கள்.

ம.வி : நம்மைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் காரியத்தை நீங்கள் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். சரி, போய்வாருங்கள்!

[சித்திரபுத்திரன் கட்டுரை—'குடிஅரசு' 10.3.1929]

30. சுயமரியாதை இயக்கத்தின் பலன்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு பார்ப்பனர்களும், புராண பண்டிதர்களும், புத்தகக் கடைக்காரர்களும், புரோகிதக் கூட்டத்தார்களும் எவ்வளவுதான் பழிகள் கூறி விஷமப் பிரச்சாரம் செய்துவந்தும் நாட்டில் தோன்றி இருக்கும் உணர்ச்சிகளையும் அதனால் ஏற்பட்டிருக்கும் பலன்களைப்பற்றியும் இரண்டொரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறோம்.

பார்ப்பனர்களை எந்தக் காரணங்களைக்கொண்டும் நம்புவதென்பதோ, அவர்களோடு ஒத்துழைப்பதென்பதோ, அவர்கள் கலந்துள்ள கூட்டங்களில் சேர்வதென்பதோ, தேர்தல்களில் அவர்களுக்கு ஓட்டுச் செய்வது என்பதோ முதலாகிய காரியங்கள் அடியோடு மறுக்கப்பட்டு வருகின்றன. கோயில்கள் சம்பந்தமான விஷயங்களில், பூசைகள், அபிஷேகங்கள், உற்சவங்கள், புதுக் கோயில்கள் கட்டுதல் ஆகிய காரியங்களில் அலட்சியம் காட்டப்பட்டுவருவதுடன், பல கோயில்கள் அரைகுறை வேலையில் இருந்தவைகளும் நிறுத்தப் பட்டுவிட்டன.

பண்டிகைகள், விரதங்கள், சடங்குகள் முதலியவைகள் அனேகமாக சில இடங்களில் அடியோடு விடப்படும், சில இடங்களில் மிக்க அலட்சியமாக ஏதோ நிர்ப்பந்தத்திற்கு நடப்பவைகளாகவும் காணப்படுகின்றன.

விதவைகள் மணம் என்பதும், கலப்பு மணம் என்பதும், தினம்தினம் நடக்கும் விஷயங்களும் நடத்தத் தேவை விளம்பரங்களும் வெளியானவண்ணமாய் இருந்துவருகின்றன. சாதி வித்தியாசம் ஒழித்தல், தீண்டாமை ஒழித்தல் முதலிய வித்தியாசங்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பயன்கொடுத்து வருகின்றன. அதாவது, தினமும் மக்கள் முகமதியராவதும், கிறிஸ்தவராவதும் ஆன செய்திகள் வெளியாகின்றன. கோயில் பிரவேசம் பல இடங்களில் நடக்கின்றது.

புரோகித விலக்குச் சங்கங்கள் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுகின்றன. மதத்தைப் பற்றிய புரட்டுகள் வெகு தாராளமாய் வெளிப்படுத்தப்படுவதோடு, மதப் புரட்டர்கள் எல்லாம் மூலையில் முக்காடிட்டு ஒடுங்கி உட்கார்ந்துகொள்ள வேண்டியதாகிவிட்டது. அன்றியும், அவர்களின் உண்மையான தோல்வியைக்காட்ட அறிகுறி என்னவென்றால் தாங்கள் வாய் திறக்க யோக்கியதை அற்றுப்போய், புத்தியில்லாத பாமர மக்களை ஏவிவிட முயற்சியில் இறங்கி இருப்பதேயாகும்.

அல்லாமலும், இந்துமதப் புரட்டு தேசமெல்லாம் பரவி வருவதுடன், அடுத்த ஜன கணிதத்தில் ஒவ்வொருவரும் இந்தியன் அல்லது இந்துவல்லாதவன் என்று சொல்ல வேண்டும் என்றும், எந்தக் காரணம் கொண்டும் சாதியையும், சாதிப் பட்டத்தையும், சொல்லக்கூடாதென்றும், நூற்றுக்கணக்கான சங்கங்களும் மாநாடுகளும் தீர்மானங்கள் செய்து அனுப்புவதுமேயாகும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்—தேசத் துரோகம், தேசியத்திற்கு விரோதம் என்று எவ்வளவோ தூரம் பார்ப்பனர்களும், அவர்களது வால்களும் கத்தியும், இப்போது சட்ட சபையிலும், சர்க்கார் உத்தியோகத்திலும் அது ஏற்பட்டு நிலைத்து அனுபவத்திற்கு வந்து விட்டதோடு பார்ப்பனர்களே தங்கள் வகுப்புக்குள்ள உரிமையைக் கெஞ்சிக்கேட்க வேண்டிய அளவுக்குத் தைரியமாய் வெளியில் வந்துவிட்டார்கள்.

மற்றும், ரிஜிஸ்ட்ரேஷன் இலாக்கா, வருஷாந்தர ரிப்போர்ட்டு ஒன்றில் 'இப்போது ரிஜிஸ்டர் கலியாணங்கள் அதிகப்பட்டு வருவதால் கலியாணங்களை ரிஜிஸ்டர் செய்ய ஒவ்வொரு இடத்திலும் அதிகமான ரிஜிஸ்ட்ரார்களை நியமிக்க வேண்டும்' என்று குறிக்கப் பட்டிருக்கின்றது.

வைதீகக் குடுக்கைகளுக்கும், புராண அழுக்கு மூட்டைகளுக்கும் வருணாசிரம புராணங்களுக்கும் அடியோடு பொது மேடைகள் இல்லாமல் செய்துவிட்டது. காஞ்சிபுரம் சங்கராச்சாரி மடத்தில் இருந்துவந்த பள்ளிக்கூடத்தில் 'தீண்டப்படாதவர்'களைச் சேர்த்துக் கொள்ளாததற்காக 'கிராண்டு' மறுக்கப்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டுவிட்டது.

['குடிஅரசு'-கட்டுரை—3-11-1929]

81. பார்ப்பான் : பணக்காரன் : பெரியமனிதன்

இன்று நமது நாட்டில் சுயமரியாதை இயக்கம் அல்லது பகுத்தறிவு இயக்கம் என்பதாக ஒன்று தோன்றியபின், நாளாவட்டத்தில் பார்ப்பனருக்கும், பணக்காரர்களுக்கும் பெரிய மனிதர் என்பவர்களுக்கும் இருந்த மரியாதை, பெருமை என்பது படிப்படியாய் குறைந்துகொண்டு வருகிறது; வந்துவிட்டது என்றே சொல்லலாம்.

இவை மாத்திரமல்லாமல் சங்கராச்சாரிகள் என்கின்ற பூச்சாண்டிகளின் சாயமும் வெளுத்துவிட்டது. அவர்கள் சாதாரண மக்களிலும் கீழான மக்களாகக் கருதப்படும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டார்கள்.

இதுமாத்திரந்தானா? உயர்தர நீதிபதிகள் என்பவர்கள், வக்கீல்களிலும் கீழ்த்தர மக்களாகக் கொள்ளும் தன்மையர்களாக ஆகிவிட்டார்கள்.

மக்களில் உள்ள இப்படிப்பட்ட பேதநிலைகள் மாத்திரமல்லாமல், குணங்களில் உள்ள பேதநிலைகளும் மாறிவிட்டன. ஒழுக்கம், நாணயம், உண்மை ஆகிய குணங்கள் அவற்றிற்குத் தலைகீழ்த் தன்மைகொண்ட தலைசிறந்தவர் (அயோக்கியர்)களையே தஞ்ச மடைந்துவிட்டன! அதுபோலவே அந்து, மரியாதை, கீழ்ப்படி, மேல்படி என்பன வெல்லாம் ஒழிந்துவிட்டன.

இம் மாறுதல்கள் 'பகுத்தறிவு' காரணமாக (எதையும் நிர்வாணமாகக் காணும் தன்மையால்) ஏற்பட வேண்டியதானாலும், முதல் மாறுதலான பார்ப்பானின் மரியாதை கெட ஆரம்பித்தவுடன் மற்றெல்லா மரியாதைகளும் கெடுவதற்குப் பார்ப்பான் முயற்சி யாளனாகவும், உறுதுணைவனாகவும் இருக்கவேண்டிய, இருந்து தீரவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

கடவுளும் மதமும் கெடவேண்டுமானால் பார்ப்பான் கெட்டாக (இல்லாமல் போக) வேண்டும். அவன் கெட்டஇடம்தான் கடவுள் மதம் கெட்டஇடமாகும்.

அதுபோலவே, நீதி கெடவேண்டுமானால் அரசன் கெட்டாக (இல்லாமல் போக) வேண்டும். அரசன் கெட்ட இடம்தான் ஜனநாயகம் என்பது.

பார்ப்பான் இல்லையானால் எப்படி கடவுள், மதம் இல்லையோ அப்படித்தான் அரசன் இல்லையானால் நீதி, நேர்மை இல்லை என்பது உறுதி.

நமது நாட்டு ஆட்சிமுறை ஜனநாயகமாக ஆகி இன்றைக்கு 47 வருட காலமாகிறது. இது துவக்கம் 1920-ம் ஆண்டு ஆகும். அதற்கு முன் ஆட்சி 'மக்கள் தலைவர்களை அனுசரித்த' வெள்ளையன் ஆட்சியாய் இருந்தாலும், காங்கிரஸ் ஸ்தாபனம் காரணமாக பார்ப்பான் ஆதிக்க ஆட்சியாகவே இருந்தது.

பார்ப்பான்தான் மக்கள் தலைவனாக இருந்தான். அதை எதிர்த்து பார்ப்பனரல்லாதார் செய்த கிளர்ச்சியினால் 1920-ல் ஒரு அளவு ஜனநாயக ஆட்சியாக (பார்ப்பனர் சம்பந்தமில்லாமல்) பார்ப்பனரல்லாதார் மந்திரி சபை கொண்ட ஆட்சியாக இருந்நது.

அதில் பார்ப்பனருக்கு ஏற்பட்ட ஏமாற்றமானது பொய், புரட்டு, பித்தலாட்டத்தையும், நாணயக் குறைவு, நேர்மைக் குறைவு, சட்டம் மீறுதல், சண்டித்தனம் ஆகியவைகளை ஆயுதமாகக்கொண்டு பார்ப்பனர் செய்த கிளர்ச்சியான காலித்தனங்களின் பயனாய் பார்ப்பனரல்லாதார் மந்திரிசபை ஒழிக்கப்பட்டு, ஆட்சியைப் பார்ப்பனர் கைப்பற்ற முடிந்தது.

இந்த முயற்சிதான் அரசியலின் பெயரால் எல்லாவித ஒழுக்கக்கேட்டிற்கும் இழி தன்மைக்கும் வித்தூன்றியதாய் முடிந்தது என்றாலும், பார்ப்பனரல்லாதாருக்கு எதிர்ப்பாய் நடந்த அந்த ஆட்சி சுமார் இரண்டாண்டுகளுக்குள் காலியாக்கப்படவேண்டியதாகி, ஜனநாயகம் என்பதில்லாமல் அரசநாயகமாகவே 6–7 ஆண்டுகள் நடைபெறவேண்டியதாயிற்று.

இதில் சிறிது நேர்மை காணமுடிந்தது என்றாலும், 1926 முதல் 1947 வரை நாட்டில் சுயமரியாதை இயக்கமும், பகுத்தறிவு இயக்கமும், ஜஸ்டிஸ் கட்சியான திராவிடர் கழகமும் செய்துவந்த பிரச்சாரத்தால் பார்ப்பான் பெருமையும், பணக்காரன் பெருமையும், பெரிய மனிதர்கள் என்பவர்கள் பெருமையும் நாளுக்கு நாள் தேய்ந்துவர ஆரம்பித்தவுடன், வெள்ளையன் யுத்தத்தில் வெற்றிபெற்று அவனது கொள்கைப்படி ஆதிக்கத்தை இந்தியரிடம் ஒப்புவித்துவிட்டுப் போனவுடன், அதாவது இந்தியன் என்பது காங்கிரஸ்காரனாகவும், காங்கிரஸ்காரன் என்பது பார்ப்பனராகவும் இருந்துவந்ததால், பார்ப்பான் கைக்கு ஆட்சி, ஆதிக்கம் வந்தது. வந்தவுடன் முதல்காரியமாக இந்தப் பார்ப்பான், பணக்காரன், பெரியமனிதன் ஆகிய மூன்றையும் பாதுகாத்துகொள்ளும் அளவுக்கு ஆட்சிச் சட்டம் செய்துகொண்டு விட்டான்.

அச் சட்டத்தில் பார்ப்பானையும், சாதி மதத்தையும், பணக்காரனையும் அதாவது பொருளாதார சொத்துரிமையையும், பெரிய மனிதத் தன்மையையும் அதாவது அந்த ஸ்தானத்தையும் அசைக்க முடியாதபடி அரசியல் சட்டம் செய்துகொண்டான்.

இப்படிச் செய்துகொண்ட பின்பும், இவை மூன்றும் சட்டத்தினால் ஒழிக்கப்பட முடியாமல்தான் இருக்கிறதே தவிர, காரியத்தில் 'அஸ்திவாரமில்லாததால் பாரம் தாங்காமல் இடிந்துவிழும் மாடிக் கட்டிடம் போல்' சாய்ந்து விழுந்துவருகிறது. அதாவது, பார்ப்பான் என்பதாலோ, பணக்காரன் என்பதாலோ, பெரிய மனிதன் என்பதாலோ நாட்டில் இன்று எவருக்குமே பெருமையோ மரியாதையோ இல்லாமல் போய்விட்டது.

அது மாத்திரமே அல்லாமல், இந்திய ஆட்சியின் சிகரம்போன்ற ராஷ்டிரபதி பதவி, ஆட்சித் தலைமையான பிரதமர் பதவி ஆகியவை பொது மக்களால் சிறிதும் லட்சியப் படுத்தப்பட வேண்டிய பதவிகள் அல்லாததாய் ஆகிவிட்டன.

இன்று இவர்களுக்கு மரியாதை செய்யவேண்டிய, கொடுக்கவேண்டிய அவசியம், பொதுமக்கள் தன்மையில் யாருக்குமே தேவை இல்லாமல் போய்விட்டது. ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம், எப்படி கர்ணம், மணியக்காரன், பியூன் தவிர மற்றவர்களுக்கு மரியாதை காட்டவேண்டிய அவசியமில்லையோ, அதுபோல் சுயநலம் காரணமாய் பதவிக்குக் கீழ்ப்படியவேண்டியவர்களைத் தவிர்த்த மற்றவர்கள், இவர்கள் பெயரைக்கூடத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமோ, வாய்ப்போ இல்லாமல் அற்றுப் போய்விட்டது.

இப்படித்தான் மற்ற மந்திரிகள், கவர்னர்கள், நீதிபதிகள் முதலிய எல்லா 'பெரும்' பதவிகளும் மதிப்பற்றுச் சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டன.

பாதுகாப்புத் துறை என்பது போலீஸ் கீழ்த்தரச் சிப்பந்தி முதல், மேல்தர அதிகாரிகள்வரை அவர்களிடம் உள்ள மதிப்பும், பயமும் அற்றுப்போய்விட்டது. அதனால் இப்போது நடப்பது காலிகள் ராஜ்யம் என்றே சொல்லலாம்.

சுருக்கமாகச் சொன்னால், தேர்தல் என்பதே ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, என்பவைகளின் அடிப்படையில் நடப்பதோடு, காசுக்கும் காலித்தனத்திற்கும் தலை வணங்கும் தன்மையாகவே ஆகிவிட்டது! இவற்றிற்கெல்லாம் காரணம், மக்கள் இடையில் ஊடாடி வளர்ந்துவரும் 'பகுத்தறிவுத் தன்மை' என்றுதான் சொல்லுவேன்.

அதாவது, பகுத்தறிவு வளர்ச்சித் தன்மைதான் சமதர்மக் கொள்கைக்கு மக்களை இழுத்துச் சென்றது என்பதோடு, பகுத்தறிவின் வளர்ச்சிதான் சமதர்மக் கொள்கையை எதிர்க்கக்கூட எந்தக் காரியத்தையும் செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டதுமாகும். அதாவது, பகுத்தறிவுக்குப் பயம் என்பது கிடையாது. இந்த பயம் கிடையாது என்பது 'நல்ல' காரியங்களுக்கு என்பதும் 'கெட்ட' காரியங்களுக்கு என்பதும் ஒரே மாதிரிதான்.

'நல்ல காரியம், கெட்ட காரியம்' என்பது மூட நம்பிக்கையால், சுயநலத்தால் கற்பனை செய்யப்பட்ட காரியங்களே அல்லாமல், அதற்கு என்று ஒரு உண்மைத் தத்துவம் கிடையாது.

மூட நம்பிக்கை நீங்கும்போது இரண்டும் ஒன்றாகிவிடுகிறது. அதைக் கையில் வலுத்தவன் தன் இஷ்டப்படி கருதுகிறான். தன் இஷ்டப்படிப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைய சுதந்திர ஜனநாயகத்தால், ஜனநாயக ஆட்சியால், உண்மை சமதர்மம் ஒருநாளும் அமுல் படுத்துவது முடியாத காரியமாகத்தான் இருக்கும்; யார் எவ்வளவு பாடுபட்டாலும் வெள்ளரிப் பழத்திற்குப் பூண் (கட்டு) போடும் காரியமாகத்தான் முடியும். மக்களிடம் சுயநலம் ஓங்கிவிட்டது. பகுத்தறிவின் பயனாய் மக்கள் எதையும் செய்யத் துணிந்துவிட்டார்கள்!

இதைச் சமாளிக்க வேண்டுமானால், இரும்புக் கை அடக்குமுறை ஆட்சியால்தான் முடியுமே தவிர, சுதந்திர ஜனநாயக ஆட்சியால் ஒருநாளும் முடியாது. இதற்கு விளக்கம் வேண்டுமானால், இந்த நாட்டில் இந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக நடந்துவரும் குழப்பங்களும், நாச வேலைகளும், உயிர்ச் சேதங்களும், காலித் தனங்களுமே தக்க சான்றாகும். இராணுவத்தால் அல்லாமல், வேறு வழியில் அடக்க முடியாமல் போனதும், தண்டனை, கண்டனைகள் எல்லாம் பயன்படாமல், மதிக்கப்படாமல், நிறைவேற்றப் படாமல் போனதும், சங்கராச்சாரிகள், மந்திரிகள் முதலிய எல்லாத் தர, உயர்ந்த, தாழ்ந்த தர மக்களும் இதில் பங்கு கொண்டதும் மேலும் தக்க சான்றாகும்.

அடுத்தாற்போல், ஜனநாயக முறைத் தேர்தலும், அவற்றில் நடந்த காரியங்களும், அவை எல்லோராலும் கைப்பற்றப்பட்டதுமான மற்ற ஒழுக்க முறைகளும் மிகமிகப் பொருத்தமான சான்றாகும். இந்த நிலையில் இனியும் சமதர்மத்தைக் கட்டிக்கொண்டு அழுவதென்றால், சமதர்மத்தின் பேரால் 'வண்டி ஓடினவரை ஓட்டும்' என்பதல்லாமல் அதில் உண்மை என்ன இருக்கமுடியும்?

ஸ்தாபன ரீதியில் நாட்டில் காங்கிரஸ் ஒன்றுதான் உண்மையான 'ஸ்தாபன'த் தன்மை கொண்டதாக, எந்தக் காரியத்தையும் சாதிக்கப் பயன்படுத்தக்கூடிய ஸ்தாபனமாக இருந்து வந்தது. அப்படிப்பட்ட ஸ்தாபனம் இன்று மக்களின் பகுத்தறிவு (சுயநல) காரணமாக ஏற்பட்ட சுயநல உணர்ச்சியால் வலுக் குறைந்து, கோஷ்டி உணர்ச்சி வலுத்து பரிதாப நிலையில் இருக்கிறது என்றால், வேறு எந்த ஸ்தாபனத்தின் மூலம், எந்த வழியில் சமதர்மத்தை அமுல்படுத்த நம்பிக்கை கொள்ள முடியும்?

இந்த நிலையில் உண்மையான சமதர்மவாதிகள் சமதர்மத்தில் நம்பிக்கையும் அக்கறையும் கொண்டவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் சமதர்மம் என்கிறதை மாற்றிக்கொண்டு, பொது உடைமைத் தத்துவத்தை இலட்சியமாக்கிக்கொண்டு முயற்சித்தால் பயன் ஏற்படலாம் என்று கருதுகிறேன். 'பொது உடைமை' என்பது பகுத்தறிவின் எல்லையாகும்.

அது (பொது உடைமைக் கொள்கை) நல்ல பலாத்காரத்திற்கும் வலிமைபெற்ற பலாத்காரத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கக்கூடியது என்பதோடு, எந்த சுயநல, பகுத்தறிவு வாதியாலும் எளிதில் சமாளிக்க முடியாததான வலுவுடையதாக இருக்கும்.

பகுத்தறிவை அடிப்படையாய் வைத்து இந்தியப் பகுத்தறிவு வாதிகள்—பொது உடைமை வாதிகள் ஸ்தாபனம் என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனம் துவக்கி, அங்கத்தினர்களுக்குக் கண்டிப்பான பரீட்சைக்குள்ளாகும்படியான தகுதி ஏற்படுத்தி, பிரச்சாரம் துவக்கினால் தேர்தலுக்குள் பொது உடைமைக் கொள்கைக்கு அனுகூலமான ஒரு நிலையை அடையலாம் என்றே நினைக்கிறேன்.

ஏன் இதை இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், இது ஒரு தக்க சமயமாகும். அதாவது, பார்ப்பானும் பணக்காரனும், பெரிய மனிதனும் வலிமை இழந்து, மறைந்து, மறைக்கப்பட்டுப் போன காலமானதால், பகுத்தறிவும் வளர்ச்சிபெற்று இருக்கிறபடியால், எளிதில் வேர் பிடிக்கலாம் என்பதோடு, வேர் பிடிக்காவிட்டாலும் கெடுதி ஒன்றும் ஏற்பட்டு விடாது என்ற எண்ணத்தினால்தான்.

எனது சமுதாயத் துறை, சுயமரியாதை பகுத்தறிவுக் கொள்கை இனியும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யவேண்டி இருப்பதால், அது பொது உடைமைக்கு நல்லவண்ணம் பயன் படலாம் என்கின்ற ஆசையாலும்தான் இதை எழுதுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—24-4-1967]

32. நாம் வேகப்படுத்துகிறோம்

பெரியோர்களே!

'நான் விரும்பும் நல்ல சமுதாயம்' என்ற பொருளைப்பற்றிப் பேசவேண்டுமானால் நீண்ட நேரம் பேசவேண்டும். நேற்று முதல் என் உடல்நிலை சரியில்லை யென்றாலும் என்னாலியன்றவரை கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்மென்று கருதுகிறேன்.

'நான் விரும்பும் நல்ல சமுதாயம்' என்று சொன்னால் நண்பர்கள் சொன்ன மாதிரி, நான் மனித சமுதாயத்தையே விரும்புகிறேன். மனித சமுதாயம்தான் நல்ல சமுதாயம். இன்றைய மனித சமுதாயம் மிருக சமுதாயமாக இருக்கிறது. மனித சமுதாயமென்றால் பகுத்தறிவு பெற்றுச் சிந்திக்கிற சமுதாயமாக இருக்கவேண்டும்.

உலகிலுள்ள பலகோடி ஜீவன்களில் மனிதன் ஒருவனுக்குத்தான் ஆறறிவு, பகுத்தறிவு உண்டு; மற்ற ஜீவராசிகளுக்குக் கிடையாது. ஆறறிவுக்குள்ள தன்மை என்ன வென்றால், ஆறறிவு உள்ளவன் சிந்திக்கிறவன், சூழ் நிலைக்கேற்ப மாறுபவன், வளர்ச்சிக்

குரியவன் ஆவான். மற்ற ஜீவன்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் எப்படி வாழ்ந்தனவோ அப்படித்தான் இன்றும் வாழ்கின்றன. ஆனால், மனிதன் ஒருவன்தான் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகின்றான்.

சிந்தனையாளன், பகுத்தறிவாளன் எந்தக் காரியத்தையும் தன் அறிவைக்கொண்டு சிந்திக்கிறவன்தான் மனிதன்; சிந்திக்காதவன் அத்தனைபேரும் மிருகமேயாவான். சிந்திக்கிற கொள்கையைப் பின்பற்றாதவன் யாராக இருந்தாலும் அவன் மிருகமேயாவான்.

சிந்திக்கிறவனுக்குக் கடவுள் கிடையாது. நான் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த போது உலகத்தின் பல பாகத்திலிருந்த சிந்தனையாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தேன். மனிதனுக்கு அறிவு இருந்தும் மனிதன் மாறாததற்குக் காரணம் பல மதம், பல மொழி, பல கடவுள் என்பவையேயாகும்.

இவை யாவும் 2000, 3000, 4000 ஆண்டுகளுக்குமுன் தோற்றுவிக்கப்பட்டவையாகும். அப்போது மனிதன் காட்டுமிராண்டியாக இருந்தான். ஒரு பகுதியிலுள்ளவனுக்கும் மறு பகுதியிலுள்ளவனுக்கும் தொடர்பில்லை; ஒருவனை ஒருவன் சந்திக்க வாய்ப்பில்லை; போக்குவரவிற்குச் சரியான சாதனங்களில்லை. ஆனதால், அங்குள்ளவன் தனி மதக்காரனாக, மொழிக்காரனாக, மாறுதலான கடவுள், மாறுபாடான கொள்கையுடையவனாக இருந்தான்.

இப்போது உலகம் மிகச் சுருங்கிவிட்டது. மனிதன் எல்லாப் பகுதி மக்களோடும் பழகும்படியான வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. நினைத்த நேரத்தில் 10 ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள மனிதனோடு பேசும்படியான வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகாய விமானத்தின் மூலம் மணிக்கு 500 மைல்கள் செல்லும்படியான வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

இனி ஒரு மனிதன் சொல்லி மனிதனாக வேண்டிய அவசியத்தில் மனிதனில்லை; தானாக மாறித்தான் ஆவான். நாம் வேகப்படுத்துகிறோம், அவ்வளவுதான். இப்போது நாம் கடவுள்களையெல்லாம் ஒழிக்கவேண்டும், கோயில்களையெல்லாம் இடிக்கவேண்டும் என்று சொல்கிறோம்; மதம், சாதி ஒழிக்கப்பட வேண்டுமென்கிறோம். இந்தக் கோயிலும், மதமும், கடவுளும் என்றைக்கு ஏற்பட்டன? சாஸ்திரம், வேதம் இவைகள் எல்லாம் என்றைக் கேற்பட்டனவென்று சிந்தித்தால், இவைகளெல்லாம் மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில்—மனிதன் சிந்தனையற்றிருந்த காலத்தில் ஏற்பட்டவைகளாகும்.

அப்போது படிப்பே கிடையாதே; மனிதன் முட்டாளாகத்தானே இருந்தான்! அந்தக் காலத்திலிருந்தவைகளை இன்றைக்கும் மனிதன் பின்பற்றுகிறான், மதிக்கிறானென்றால் அவன் காட்டுமிராண்டிதானே! இந்த நிலை மற்ற நாடுகளிலெல்லாம் மாறி விட்டது. இங்கு மாறாமலிருப்பதற்குக் காரணம், இந்த நிலையை அழியவிடாமல் பாது காப்பதற்கென்றே ஒரு சாதி இருப்பதாலேயேயாகும்.

நாம் உண்மையான அறிவுள்ள, சிந்தனையுள்ள மக்களாக வேண்டும். எவனுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதோ அவன் அயோக்கியத்தன்மை யுடையவனாகத்தானிருப்பான். ஒவ்வொரு மதத்தையும் பரப்ப மதவாதிகள் இருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கெல்லாம் கடவுள் போன்றவர் போப்; அவரை போப் ஆண்டவர் என்றுதான் சொல்வார்கள். சில மாதங்களுக்குமுன் அவர் கதி என்ன வாயிற்று? அவரைக் கல்லாலடித்து அவரது காரையும் சேதப்படுத்தி இருக்கிறார்கள். போப் ஆண்டவர் தன்னை அடித்ததைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை; அந்தச் செய்தியை வெளியிட்டதற்காகத்தான் வருந்தியிருக்கிறார். இனி எல்லா மதங்களுக்கும் இந்தக் கதிதான் ஏற்படும்.

மனிதன் எந்த விஷயங்களையும் தன் அறிவைக்கொண்டு சிந்திக்கவேண்டும்; நடப்பிற்கும், அனுபவத்திற்கும், பிரத்தியட்சத்திற்கும் ஒத்து வருகிறதா என்று பார்க்க வேண்டும்; சரியாக இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்; மற்றதைத் தள்ளிவிட வேண்டும். இதைச் சொல்வதுதான் சுயமரியாதை இயக்கம், தன்மானப் பேரவை, சிந்தனையாளர் சங்கம், பகுத்தறிவாளர் பேரவை என்பவைகள் யாவுமாகும். நமது மக்கள் சமுதாயம் அறிவுள்ள, மானமுள்ள, இழிவற்ற சமுதாயமாக வேண்டும். மனிதனிடம் கடவுள் உணர்ச்சி மாற மாறத்தான் அறிவு வளர்ச்சியடைகிறது.

[கீழ்வேளூரில், 11-9-1970-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-11-1970]

33. சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்

சென்னையில் டிசம்பர் 8, 9 தேதிகளில் நடக்க இருக்கும் மகாநாடு மற்ற மகாநாடுகளைப் போல் இல்லாமல் தமிழர் சமுதாயத்தின் மானாபிமானத்தைப் பொறுத்த மகாநாடாகும்.

சமுதாயத்தில் தமிழன் (திராவிடன்) அன்னியனாகிய ஆரியனின் ஆதிக்கத்தினால் 2,13 ஆயிரம் ஆண்டுகளாக—அதாவது ஆரிய வேதகாலத்தில் இருந்தே, தஸ்யூக், அசுரர், இராக்கதர் என்பவைகளான இழிவு புதைந்த பெயர்களால் அழைக்கப்பட்டு, மனுகாலத்திலிருந்து நாலாம் பிறவி, ஆண்கள் சூத்திரர்கள், பெண்கள் பார்ப்பனருக்குத் தாசிகள் (வைப்பாட்டி மக்கள்) என்றும், பெயர் சூட்டி இழிவாய், தீண்டப்படாதவர்களாய் நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். 1922, 1923-ம் ஆண்டில்கூட பார்ப்பனர்கள், சூத்திரர்கள் எனப்படுபவர்களாகிய நம்மிடம் பேசிவிட்டால் குளித்து (ஸ்நானம்) செய்த பிறகுதான் சாப்பிடுவார்கள். ஸ்நானம் செய்தபிறகு எவ்வளவு அவசர, அவசியமான காரியமாயிருந்தாலும் நம்மிடம் (சூத்திரர்களிடம்) பேசமாட்டார்கள். மற்றும், வைதீகப் பார்ப்பனர் வேலைக்காரப் பெண்ணையும், ஆணையும் அக்கால பஞ்சமரை' நடத்துவதுபோல்தான் நடத்துவார்கள். பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றிய பிறகும்கூட, காந்தியாரின் இயக்க காலத்தில் தாழ்த்தப்பட்டோர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடம், தனிக் கிணறு என்பதாக ஏற்படுத்தியதுடன் சமபந்திபோஜனத்தை எதிர்த்து வந்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் தஞ்சை, திருநெல்வேலி ஜில்லாக்களில் பல நகரங்களிலும், கிராமங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களை (5-ம் சாதியாரை) வீதியில் நடக்கவோ, கக்கூஸ் எடுக்கவோ, கழுவவோ அனுமதிக்கப்படாமல் 4-ம் சாதியாரைக் கொண்டே பார்ப்பனர் நடத்திவந்தார்கள்.

1940-ல்கூட பொது உணவு விடுதிகளில், ஆலயங்களில், ரயில் நிலையங்களில், சத்திரங்களில் சாப்பிட, தங்கியிருக்க பார்ப்பனருக்கு வேறு, மற்றவர்களுக்கு வேறு இடம் என்பதாகப் பிரிவினை இருந்து வந்திருக்கிறது. இவையாவும் இப்போது மறைந்துவிட்டது என்று சொல்லலாம். ஆனாலும், இதற்கு காந்தியோ, காங்கிரசோ, தேசியத் தலைவர்களோ காரணம் என்று சொல்லமுடியாது. சுயமரியாதை இயக்கம் என்றுதான் சொல்லவேண்டும். என்றாலும், இவை நடப்பில்தான் மறைந்திருக்கிறது என்றாலும், ஆதாரங்களில் நாளுக்கு நாள் பலமாக (பலப்படுத்தப்பட்டு) இருந்து வருகிறது. மற்றும், கோவில்களிலும், சங்கராச்சாரியார்கள், தீவிர வைதீகப் பார்ப்பனர்கள், 100-க்கு 99 பார்ப்பனப் பெண்கள் ஆகியவர்களிடம் பிரச்சாரத்திலும், அனுஷ்டிப்பிலும் தெளிவாக இருந்து வருகின்றன.

நமதுநாட்டில் வெளியில் இருந்து வந்தவர்களான முஸ்லிமைத் தொடுவதில்லை; அவர்கள் தொட்டதை சாப்பிடுவதில்லை என்று சொல்லி, அந்தப்படி நடந்தும் வந்தோம். சுயமரியாதை இயக்கம் தோன்றிய பின் அவற்றை ஒழித்துவிட்டோம்.

ஆனால், அவர்களைப்போல் நம் நாட்டிற்கு, பிழைக்கவந்த ஒரு சிறு, மிகச் சிறு அதாவது 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்—அதாவது அசல் ஆரியர்கூட அல்லாத கலப்பு ஆரியர்கள் தங்கள் பாதுகாப்புக்கும், உயர்வுக்கும் ஏற்றபடி வேதசாஸ்திர மத ஆதாரங்களை செய்து வைத்துக்கொண்டு, பிராமணனுக்கு இடம் வேறு, பிராமணனுக்குச் சட்டம் வேறு, மற்ற தமிழனுக்கு (திராவிடனுக்கு) இடம் வேறு, சட்டம் வேறு, நடப்பு வேறு என்பதாகச் செய்து கொண்டு, அதை நடப்பிலும் அமல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்றால், 100-க்கு 97 பேர்களான தமிழர்கள் வாழ்வு என்றைக்கு இழிவு ஒழிந்த சமுதாய வாழ்வாவது ?

இந்த விஷயம் எளிதில் மாற்றப்படமுடியாததாக ஆக்கப்பட்டு இருப்பதால் அதற்கு ஆக நாம் பல கஷ்ட நஷ்டப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். இதில் ஒரு பெரிய கஷ்டம் என்னவென்றால், நம்மவர்களில் பலர் சைவர் முதலிய 'பெரிய' சாதிக்காரர் களாகவும் பெரும் பதவிகளில் இருப்பவர்களாகவும் இருப்பதால், இவர்களுக்குத் தன்மான உணர்ச்சியில்லாமல் மேலே கண்ட இழிவைப்பற்றிக் கவலைப்படவேண்டியவர்கள் அல்லாத வர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் மனைவி மக்களும் அதுபோல என்றே சொல்லலாம்.

என்றாலும், அவர்கள் எண்ணிக்கை மிக குறைந்ததாக இருக்குமாதலால் நாம் அதைப்பற்றிக் கவனிக்காமல், கிடைத்த அளவு, கூடிய அளவு அவர்களது உதவியையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டு, முழு மூச்சாக நாம் இதில் பணியாற்றவேண்டி இருக்கிறது.

பொருள் நஷ்டம் வரலாம். சிறைவாசம் ஏற்படலாம். என்றாலும் நமது 'பிறவி' இழிவு நீக்கத்திற்கு நாம் இவற்றை விலையாகக் கொடுக்கவேண்டியது மான உணர்ச்சி உடையவர்களாகிய நமக்குப் பெரிய காரியமல்ல. நம் சமுதாயத்தையும் பின் சந்ததியையும் கவனித்து அவசியம் செய்து தீரவேண்டியது நமது கடமையாகும்.

['விடுதலை'-தலையங்கம்—23-10-1973]

6. திராவிடர் கழகம்

1. திராவிடர்–ஏன் ?

தாய்மார்களே! தோழர்களே!

நாம் இந்த நாட்டில் உரிமை உடைய மக்களாயிருந்தும், சமுதாயத்தில் இழிந்தவர் களாகவும் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறோம். இதை மாற்றவேண்டிய முயற்சிகள் பல நடந்தும், நம் நிலையிலே சிறிதும் மாற்றம் ஏற்பட்ட தாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்று யோசித்தோம். முன்னேற்றம் அடைந் துள்ள நாட்டாரைப் பார்த்தோம். அதன்படி எந்த ஒரு நாட்டு மக்களோ அல்லது சமுதாயமோ முன்னேறவேண்டுமானால், அந்த மக்களுக்கு அல்லது அந்த சமுதாயத்த வருக்குப் பொது உணர்ச்சியையும் ஒற்றுமை மனப் பான்மையையும் உண்டாக்கக் கூடிய இலட்சியச் சொல் அல்லது குறிச் சொல் ஒன்று தேவை என்பது விளங்கியது. அதே சமயத்தில் நம் நிலையைச் சிந்தித்துப் பார்த்தபோது 'இந்து', 'இந்தியர்', 'இந்தியா' என்று நமக்குப் புரியாத சொற்களை—நமக்குச் சம்பந்தமில்லாத மொழிகளைச் சொல்லிக் கொண்டு வந்தோமே தவிர, உண்மையான ஒற்றுமை ஏற்படத்தக்க முறையைக் கையாள வேண்டுமே என்ற சிந்தனை நம் தலைவர்களுக்குள் ஏற்படவே இல்லை. நமது நாடு என்பதன் பெயராலோ, அல்லது சமுதாயம் என்பதன் பெயராலோ, அன்றிச் சமயம் அல்லது கொள்கை என்பதன் பெயராலோ நம் மக்களுக்குள்ளே ஒரு பொது உணர்ச்சி இல்லை. அத் தகைய மக்கள் எதைக் கொண்டு முன்னேற்றமடைய முடியும் ?



1946-ல் உருவாக்கப்பட்ட திராவிடர் கழகக் கொடி. கறுப்பு—திராவிடரைக் கப்பியுள்ள இழிவைக் குறிப்பது; சிவப்பு—இழிவு நீங்கி, புரட்சி மலருவதைக் குறிப்பது.
'பெரியார் வாழ்க!'; 'இழிவு ஒழிக!'; 'புரட்சி ஓங்குக!'
என்பவையே கொடியேற்ற ஒலிகள்.

ஆரியர்களும் முஸ்லிம்களும் நம்மோடு வாழ்ந்து வருபவர்கள்தாம். ஆனால், அவர்களுடைய முன்னேற்றம் நாளொக்கொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறது. சமயத்தின் பெயரால் முஸ்லிம்களும், இனத்தின் பெயரால் ஆரியர்களும் ஒன்றுபட்டு விட்டனர். உலகம் பூராவிலுமுள்ள முஸ்லிம்கள் ஒரே சமூகம் என்ற உணர்ச்சியும்; இமயம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள 'பிராமணர்கள்' ஒன்று என்ற உணர்ச்சியும் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன.

திராவிட மக்களாகிய நாம் உழைக்க உழைக்க, அன்னியன் உழைப்பின் பயனை அனுபவித்து வருகிறான். இந்த நிலை மாறவேண்டுமானால், நாம் நம்மை, 'திராவிடர்' என்றும்; 'இந்தியா' 'இந்தியர்' 'இந்து' ஆகியவற்றிற்குச் சம்பந்தப்பட்டவரல்லர் என்றும் உறுதிசெய்துகொள்ள வேண்டும். இந்து என்ற வார்த்தை இந்த நாட்டின் எப் பகுதிக்கும் உரியதல்ல என்பது, பார்ப்பனர்களாலேயே உண்டாக்கப்பட்ட புராணங்கள், இதிகாசங்கள், கற்பனைகள் ஆகியவற்றிலும் அவ் வார்த்தை காணப்படாததிலிருந்து அறியலாம். நம் மக்களை நிலைத்த அடிமைகளாக இருக்கச் செய்யப்பட்ட சூழ்ச்சியே 'இந்து' என்பதாகும். இலக்கியம், பஞ்ச காவியங்கள், நீதி நூல்கள் என்பனவெல்லாம் நம்முடையவை என்று நம் பண்டிதர்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆனால், அவற்றில்கூட 'இந்தியா' என்பதோ 'இந்து' என்பதோ, 'இந்தியர்' என்பதோ காணப்படவில்லை.

500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரங்களிலெல்லாம் நம்மைக் குறித்துத் 'திராவிடர்' என்றே எழுதப்பட்டிருக்கிறது. திராவிடர், ஆரியர் என்ற இனங்களே ஆதியில் இந்தியாவில் இருந்தன என்பதாகச் சரித்திர சான்றுகள் கூறுகின்றன. தென் பாகத்தில் திராவிடர்களே பெருங்குடி மக்களாக வாழ்ந்துவருகின்றனர். இவ்வளவு தெளிவாக உள்ள இலட்சியத்தை நாம் மறந்துவிட்டோம்; அதுமட்டுமின்றி, எதிரிகளுடையதை நாம் ஏற்றுக்கொண்டோம். அதிலும், அவர்களுக்கு நாம் அடிமை என்பதை ஒப்புக்கொண்டோம். இக் குறைபாடு நீக்கப்படவே நம் மக்களுக்குள்ளே 'இந்து' என்னும் உணர்ச்சி மங்கி, திராவிடம் என்னும் உணர்ச்சி வேரூன்ற வேண்டும். இந்து, இந்தியா, இந்தியர் என்பவற்றை ஆரியம், ஆரிய நாடு, ஆரியர் என்றே நாம் கருதி ஒதுக்கவேண்டும்.

'பார்ப்பனரல்லாதார்' என்று நம்மைநாமே ஏன் கூறிக்கொள்ள வேண்டும்? நாம் திராவிடர்; நம் எதிரிகள் வேண்டுமானால் 'திராவிடரல்லாதார்' என்று சொல்லிக் கொள்ளட்டுமே!

சென்னை மாகாணத்தை நாம் திராவிட நாடு என்று கூறி வருகிறோம். திராவிட நாட்டிலே நமக்கு மிகுந்த தொல்லை செய்துவரும் பழம் பண்டிதர்கள் இமயம் வரை நம்முடையதாயிற்றே என்று கூச்சலிடுவார்கள். இமயம் வரை ஆண்டதாகச் சொல்லப் படுவது ஒரு காலத்தில் இருந்திருந்தால் இருந்துபோகட்டும்; அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இப்போது இருப்பதையாவது நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா?

தமிழர்களாகிய நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' ஆகவேண்டுமென்பதில் முனைந்திருப்போம். சில நாட்களில் ஒரிசாக்காரன் தன்னையும் திராவிடன் என்றுணர்ந்து நம்முடன் சேர்வதாக இருந்தால் சேர்ந்துகொள்ளட்டும்; இல்லையேல், மலையாளி தன் இனம் திராவிட இனமல்ல என்பதாக அறிந்து, நம்முடைய கூட்டிலிருந்து விலகிவிட விரும்பினால் ஒதுங்கிப்போகட்டும்'

[லால்குடியில், 23-5-1944-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 3-6-1944]

தோழர்களே!

'இப்பொழுது, 'திராவிடர்' என்ற மாறுதல் ஏன்?' இது பலரும் கேட்கக் கூடிய நியாயமான கேள்வியாகும். இதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்,

இந்த நாட்டு மக்களாகிய நமக்கு ஏராளமான குறைபாடுகள் இருப்பது கண் கூடு. அதை உத்தேசித்தே நமது பெரியோர்கள் 27 ஆண்டுகட்கு முன்னர் நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது, இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் 'நீதிக்கட்சி' என்ற பெயர் இருந்ததில்லை. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படுவதுதான் அதன் பெயர். அந்தக் கட்சிக்காக ஏற்பட்ட ஆங்கிலப் பத்திரிகையின் பெயர் (Justice) 'ஜஸ்டிஸ்' என்பது. அப் பத்திரிகையின் பெயரே கட்சிக்கு நிலைத்து விட்டது. கட்சியின் தமிழ்ப் பத்திரிகைக்கு, 'திராவிடன்' என்ற பெயரிருந்தும் நம் கட்சிக்கு 'திராவிடர் கட்சி' என்ற பெயர் ஏற்படாமல் ஆங்கிலப் பத்திரிகையின் பெயராலே கட்சியின் பெயர் வழக்காற்றில் வந்து விட்டதற்குக் காரணம், ஆங்கில மறிந்தவர்களே அக் காலத்தில் நம் கட்சியில் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றிருந்ததுதான். அந்தக் காலத்தில் இந்தக் கட்சி எந்த மக்களின் நல் வாழ்விற்காக ஏற்பட்டதோ, அந்த மக்களுக்குப் பெயரென்ன என்ற பிரச்சினை எழுந்தது. ஆனால், 'திராவிடர்' என்ற பெயருக்கு ஏகோபித்த ஆதரவு கிடைக்காத காரணத்தால், பெரிதும் ஆந்திரர் ஒப்புக்கொள்ளாததால் 'தென் இந்தியர்' என்று ஏற்படுத்திக் கொண்டார்கள்.

'தென் இந்தியர்', 'பார்ப்பனரல்லாதார்' என்ற இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. உத்தியோகங்களைப் பிரித்துக்கொடுப்பதில் 'பார்ப்பனரல்லாதார்' என்ற பிரிவினை ஒப்புக்கொள்ளப்பட்டதே தவிர, இன உணர்ச்சி ஏற்படவேண்டிய முறையில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அந்தக் குறைபாடு நம் மனத்தில் பல நாட்களாகவேஇருந்து வருகின்றது. தென் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு இலட்சியச் சொல் ஒன்றில்லாமல் இருப்பது பெருங்கேடு. இந்தக் காரணத்தாலேயும், 'அல்லாதார்' என்ற பட்டம் நமக்குக் கூடாது என்பதாலேயும், நாமெல்லாரும் ஒரு கூட்டிற்குள் வர வேண்டும் என்பதாலேயும் ஒரு குறிச்சொல் தேவை; மிகமிகத் தேவை. இதைப் பல நாட்களாகவே நான் கூறி வருகிறேன்.

நம்மை, 'யார்?' என்று கேட்டால், 'பார்ப்பனரல்லாதார்' என்று சொல்கிறோம். மற்றபடி நம் நாடு எது என்று கேட்டால் நமது அருமை நாட்டின் பெயரை மறந்து, ஒரு பெரிய நிலப்பரப்பின்—நமக்குச் சம்பந்தமில்லாத நாட்டின் பெயரை (இந்தியா என்று) கூறுகிறோம். அதன் காரணமாக 'இந்தியர்' என்றும் அழைக்கப்படுகிறோம். மேல் நாடுகளாகிய ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ், எகிப்து, துருக்கி ஆகிய எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் பெயரை வைத்துக்கொண்டு, அதைக் காப்பாற்றவேண்டி மற்றவர்களுடன் போராடியே வந்திருக்கின்றன. ஜெர்மானியன், 'ஜெர்மனிக்குள் யூதன் ஏன் வாழ்ந்திருக்கவேண்டும்? அவன் நமது நாட்டை ஏன் சுரண்டவேண்டும்? வெளி நாட்டானுக்கு இங்கு என்ன வேலை? வெளியான் ஏன் நம்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும்?' என்ற உணர்ச்சிகளால் உந்தப் பட்டுப் போராடி வந்ததன் காரணமாக இன்று, ஜெர்மனி உலகில் பெரியதோர் வல்லரசாகவும், மற்ற நாடுகள் கண்டஞ்சும்படியாகவும் இருக்கிறது. 'நாமேன் அப்படி ஆகக் கூடாது?' என்பதை யோசிக்கவேண்டும்.

இனத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு ஒற்றுமைபெற வழியில்லாதவர்கள், சமயத்தைச் சொல்லி அதன் மூலம் ஒற்றுமைப்படுகின்றார்கள். முஸ்லிம்கள், தங்கள் இனம் இன்னது என்று சொல்லாவிட்டாலும் தங்களுக்குள்ளே பல இனங்கள் இருப்பதன் காரணமாக, 'இஸ்லாம்' என்ற ஒரு சமயத்தின் மூலம் ஒன்றுபட்டிருக்கின்றனர். உலகத்திலுள்ள பல்வேறு மக்கட் கூட்டத்தினரின் நிலை நாளுக்குநாள் முன்னேற்றமும் ஒற்றுமையும் ஏற்படுவதாக அமைந்திருக்க, இந்த நாட்டு மக்களாகிய நாம் நம்மைப் 'பார்ப்பனரல்லாதார்' என்ற பொருளுள்ள வார்த்தையால் அழைத்துக்கொண்டு இருப்பதால், நம்மிடையே இன உணர்ச்சியும் ஒற்றுமை உணர்ச்சியும் எப்படி ஏற்படமுடியும்?

நம் சமயம் 'இந்து' வென்றும், நாடு 'இந்தியா' என்றும்; இனம் 'இந்தியர்' என்றும் கூறி வருகிறோம். இதைத் தப்பு என்றுமட்டும் நான் கூறவில்லை; வெறும் கற்பனையுங் கூட. 'இந்து' என்று சொல்வதால்—நாம், இவ்வளவு பெரிய இனம்—பல சிறுசிறு வகுப்பு களாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டிருக்கத்தான் முடிகிறதே தவிர, அவ் வார்த்தையில் வேறென்ன தத்துவார்த்தம் இருக்கமுடியும்? 500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட எந்த நூலிலாவது இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை இந்து என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பண்டிதர்களையே நான் கேட்கிறேன்.

[விருதுநகரில், 11-6-1944-ல், இராமநாதபுர மாவட்ட மாநாட்டுச் சொற்பொழிவு—'குடிஅரசு' 17-6-1944]

தோழர்களே!

நாம் இந்தியர் என்பதை மறுக்கிறபடியாலும், இன உணர்ச்சியும், எழுச்சியும் பெறவேண்டுவதாலும் 'திராவிடர்' என்னும் பெயரைக் கொண்டோம். இது புதிதாக உண்டாக்கியதல்ல; மறந்ததை நினைத்துக் கொண்டதேயாகும். நம்மைக் குறிக்க பார்ப்பனரல்லாதார் என்கின்றோம். 'அல்லாதார்' என்பதைச் சேர்த்துக்கொள்ள நாம் என்ன நாடோடிகளா? நாம் ஏன்—'அல்லாதார்' ஆகவேண்டும்?

சிலர் திராவிடர் என்பது வடமொழி என்பார்கள். அதைப்பற்றிய கவலையோ ஆராய்ச்சியோ தேவையில்லை. 'காபி' என்பது ஆங்கிலச்சொல் என்று எவனாவது 'காபி' குடிக்காமல் இருக்கின்றானா? மேலும் நமக்கு, திராவிடர் என்பது பெயரல்லவானால் வேறு எதுதான் பெயராகும்? பார்ப்பனரல்லாதார் என்பதா? பார்ப்பனரல்லாதார் என்று கூறிக்கொள்ளும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், எந்த வகையில் பார்ப்பனரிலிருந்து வேறுபடு கின்றனர்? நடை, உடை, பாவனைகளில், மதத் துறையில், வேஷத்தில் பார்ப்பானைவிட இரண்டு மடங்காக அல்லவா இருக்கின்றார்கள்! இந்தப் பார்ப்பனரல்லாதார் வீட்டுக் கலியாணம், கருமாதி, சாந்திமுகூர்த்தம், திவசம், பூசை எல்லாம் பார்ப்பான் இல்லா விட்டால் ஆகாது! உத்தியோகத்தில், தேர்தலில் மட்டும் பார்ப்பானுடன் போட்டி போட வேண்டுமென்றால் யார் ஒப்புக்கொள்வார்கள்?

[கும்பகோணத்தில், 26, 27-11-1944-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 9-12-1944]

'முகம்மதியர்' என்று இதுகாறும் சர்க்கார் ரிக்கார்டுகளில் இருந்துவந்த பெயருக்குப் பதிலாக 'முஸ்லிம்கள்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்கள் தங்கள் பிரியப்படி தம் சமூகத்தின் பெயரை மாற்றிக் கொண்டனர்: சர்க்காரும் அவர்களது கோரிக்கைக்கு உடனே இணங்கிவிட்டனர்.

ஆனால், இத் திராவிட நாட்டின் பழங்குடி மக்களுக்கு மட்டும் ஒரு தனிப்பெயரில்லா மலிருப்பது எவ்வளவு பெரிய வெட்கக்கேடு!

தேர்தல் பட்டியல்களிலும், தேர்தல் சம்பந்தமான பல ரிக்கார்டுகளிலும் 'முகம்மதிய ரல்லாதவர்' என்ற பிரிவின் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் கூட்டத்தாருக்கு என்ன பெயர் கொடுக்கவேண்டும் என்பதுபற்றி இதுவரையில் காங்கிரஸ் மந்திரி சபையார் ஆலோசித்துப் பார்க்கவில்லையென்றே தெரிகிறது. இவர்களுக்கு 'இந்துக்கள்' என்ற பெயரைக் கொடுக் கலாமே என்று சிலர் கூறலாம். 'இந்துமதம்' என்றால் எது? அதன் கொள்கைகள், பழக்க வழக்கங்கள் எவை? அதன் மூல நூல் எது? அதைப் பின்பற்றுவோரின் நடத்தை, ஒழுக்கம் முதலியன எப்படி இருக்கவேண்டும்? அதன் கடவுள் எது? ஆகியவை போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கு எந்த மத ஆராய்ச்சி நிபுணராலும் முடியவில்லை. ஏனெனில், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளும், நேர் எதிர்ப்பான நடவடிக்கை களும், ஒன்றையொன்று தாக்கியழிக்கும்படியான கடவுள் தன்மைகளும், புராண இதிகாசங்

களும் நிறைந்த ஒரு பெருங் குப்பைத்தொட்டி போன்று காட்சியளிப்பதுதான் 'இந்துமதம்'. இதைப் பல ஆராய்ச்சிக்காரர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இச்சமயம் இதுபற்றி விரித்தெழுத இடமில்லை.

எனவே, 'இந்துமதம்' என்பதே இன்னதென்று விளக்கிக்கூற முடியாமலுள்ள நிலைமையில், அதைப் பின்பற்றுபவர்களுக்கு, அதாவது அதைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுபவர்களுக்கு, 'இந்துக்கள்' என்ற பெயர் கொடுப்பதைப் பலர் ஏற்றுக்கொள்ள மறுப்பதில் ஆச்சரியமில்லை.

சர்க்கார் ரிக்கார்டுகளில் உத்தியோகம், கல்வி ஆகிய துறைகளைப்பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு தனிப்பெயர் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

ஆங்கிலோ இந்தியர், முஸ்லிம், கிறிஸ்தவர், ஷெட்யூல்டு வகுப்பார், பிராமணர் என்று தனித்தனிப் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல், நம்மவர்களுக்கு மட்டும் ஒரு தனிப் பெயரில்லாமல், 'பிராமணரல்லாதார்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது பெருத்த அவமானமாகவும் அக்கிரமமாகவும் இருக்கிறது.

இந்நாட்டுக்குச் சொந்தமான மக்களுக்கு ஒரு பெயரில்லாமல் 'பிராமணரல்லாதார்' என்றழைக்கப்பட வேண்டிய இழிநிலையை, இதுவரையிலிருந்த சர்க்கார்கள்தாம் போக்கவில்லையென்றால், இப்போதுள்ள சர்க்காராவது நீக்கவேண்டும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'மக்கள், தேவர், நரகர் உயர்திணை; மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை' என்று தமிழ் இலக்கணங்களில் கூறப்படுவதுபோல், திராவிடர்களாகிய நம்மை, 'பிராமணரல்லாதவர்' என்று ஒரு அஃறிணைப் பொருளைப்போல மதித்திருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்ப்பதற்கேனும் நம்மவருக்கு நேரமில்லையே!

100-க்கு 3 பேர்களாயுள்ள ஒரு சிறு கூட்டம், அதுவும் இந் நாட்டிற்குக் குடியேறிய அன்னியர் கூட்டம்;—இந்தக் கூட்டத்தின் பெயரை மட்டும் கூறி—'இது அல்லாத பிறர்' என்று $4\frac{1}{2}$ கோடிப் பெருங்குடி மக்களைக் குறிப்பிடுவது முட்டாள்தனமான ஒரு முறை என்றே கூறுவோம்.

'திராவிடர்' என்ற பெயருக்கு ஆதாரம் தேடவேண்டிய அவசியமேயில்லை. முதல் வகுப்புச் சரித்திரப் பாடம் முதல், பெரிய வரலாறுகள் வரையில்—எல்லா நூல்களிலும் இதற்கு ஆதாரமிருக்கிறது; பழக்க வழக்கங்களிலும் ஆதாரமிருக்கிறது; கலாச்சாரங்களிலும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆகையால், இனிமேல் 'திராவிடர்' என்று நம்மையும்; 'திராவிடரல்லாதார்' அல்லது 'ஆரியர்' என்று பிராமணரையும் சர்க்கார் ரிக்கார்டுகளில் குறிப்பிட வேண்டும். கிறிஸ்தவர், ஷெட்யூல்டு வகுப்பார், முஸ்லிம்கள் ஆகியோரும் திராவிடர் என்ற பிரிவில் சேருவார்களே என்று சிலர் கேட்கலாம். ஆமாம். உண்மைதான்! அப்படியானால் இப்போதுள்ள 'பிராமணரல்லாதார்' என்ற பிரிவில் மட்டும் இவர்கள் சேர்க்கப்படக் காணோமே! ஆகையால், தனி இனம் என்ற பொதுப் பிரிவில்—இவர்களெல்லோரும் 'திராவிடர்' என்பதே சரியென்றாலும் உத்தியோகம், கல்வி, தேர்தல் ஆகிய எல்லாத் துறைகளிலும், இப்போது யார், யார் 'பிராமணரல்லாதார்' என்ற பிரிவின் கீழ் வருகிறார்களோ, அவர்களெல்லோரும் 'திராவிடர்' என்ற பெயராலேயே அழைக்கப்பட வேண்டும்.

இவ்விஷயம் கட்சி வேற்றுமையில்லாத ஒன்றாகையால், காங்கிரஸிலுள்ள திராவிடத் தோழர்களும், திராவிட மந்திரிகளும் இதை உடனே கவனித்து, நம்மைத் 'திராவிடர்' என்ற பெயரால் குறிப்பிடும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு வற்புறுத்த வேண்டுகிறோம்.

['விடுதலை'—தலையங்கம்—18-9-1946]

திராவிட மொழி பேசும் திராவிடரைப்பற்றிச் சிறிது கூற ஆசைப்படுகிறேன். 'திராவிடம்' என்பது நமது நாட்டினுடைய பெயராகும். 'திராவிடர்' என்பது இந் நாட்டின் பழங்குடி மக்கள் இனத்துக்கு ஏற்பட்ட உலகப் பெயராகும். திராவிடர் என்பதை நம்மில் சிலர் மறுக்கிறார்கள்; வெறுக்கிறார்கள். திராவிடர் என்பது என்ன, நாம் கற்பித்த ஒரு பெயரா? இது இன்று நேற்று ஏற்பட்டதல்லவே! ஆரியர் என்ற பெயர் தோன்றிய அன்று ஏற்பட்ட பெயர்தானே திராவிடர் என்பது? நீக்ரோ, மங்கோலியர் என்ற பெயர்கள் ஏற்பட்டதும் அன்றுதானே? திராவிடர் என்ற பெயரை மனுதர்ம நூலில் காணலாமே! இராமாயணத்தில், பாரதத்தில்கூட இதற்கு ஆதாரம் உண்டே! இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இதுவரைக்கும் இருந்துவரும் போராட்டமெல்லாம் ஆரியர்—திராவிடர் போராட்டமே ஒழிய, வடமொழி—தென்மொழிப் போராட்டமல்லவே! இதற்கு எவ்வளவோ ஆதாரங்கள் காட்டலாமே!

வடநாட்டு—தென்னாட்டுப் போராட்டம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; புராண கால முதற்கொண்டு இருந்து வந்திருக்கிறது. இதிகாசங்களுக்கெல்லாம் முந்தியது புராணம்; புராணங்களுக்கெல்லாம் முதன்மையானது கந்தபுராணம். கந்தபுராணத்தி லேயே இந்த வடநாடு—தென்னாடு போராட்டம் துவக்கப்பட்டுவிட்டது. அதிலுள்ள சிறு கதையைக் கேளுங்கள். கதை கற்பனையாக இருந்தாலும் அதிலுள்ள கருத்தைக் கவனித்துப் பாருங்கள். ஆரியக் கடவுளாகிய சிவனுக்கும் (ஆரியர் தலைவன்) பார்வதிக்கும் வடநாட்டில் திருமணம் நடக்கிறது. அப்போது தேவர்கள் (வடநாட்டவர்—ஆரியர்கள்) தென்னாடு உயர்ந்துவிட்டதையும், வடநாடு தாழ்ந்துவிட்டதையும் சிவனிடம் வருத்தத் துடன் கூறுகிறார்கள். சிவன் தென்னாட்டைத் தாழ்த்தவேண்டி அகத்தியனை அனுப்பு கிறார்; அகத்தியன் தெற்கு நோக்கி வருகிறான்; திராவிட நாட்டின் வடக்கெல்லையான விந்தியமலை அவனைத் தடுக்கிறது. அகத்தியன் சினந்து அம் மலையை அழுத்திவிடு கிறான். (அங்குள்ள மக்களை வென்றுவிடுகிறான்). மேலும் தெற்கு நோக்கிச் செல்கிறான்; வாதாவியும் வில்லவனும் தடுக்கிறார்கள். அவர்களையும் வென்றுகொண்டுபோய்த் தென்னாட்டில் இராவணனுடைய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து, தமிழை உண்டாக் கினான். அதாவது, முதலில் மொழியில்தான் அகத்தியன் கை வைத்தான்; மொழியை ஒழிக்கும் வேலைதான் அவர்களின் முதல் வேலை; இதுதான் அவர்களின் நடைமுறைப் பழக்கம்.

இந்த வடநாட்டு—தென்னாட்டுப் போராட்டம், நான் துவக்கியதல்ல. கந்தபுராண காலத்திலே வாதாவியில் துவக்கப்பட்டது. இது ஆரியப் புராணம் கூறுவது. அன்று தொட்டு இடைவிடாது இருந்துவரும் இயற்கைப் போராட்டந்தான் இது. ஆரியம் ஒழிந்து, ஆரியர்கள் அத்தனைபேரும் திராவிடர்களாகும் வரையிலும், அல்லது அவர்கள் அத்தனை பேரும் திராவிட நாட்டை விட்டு வெளியேறும் வரையிலும் இப்போராட்டம் இருந்தே தீரும். உடற்கூற்று வல்லுனர்கள் அந்தந்த நாட்டுத் தட்பவெப்பத்திற்கேற்ப அமைந்த அங்க, மச்ச அடையாளங்களைக் கொண்டு பாகுபடுத்திக் கொடுத்த இனப்பெயர்கள் தாமே ஆரியர்—திராவிடர் என்பவை! இப் பிரிவுகள் தேவர்களாலோ, கடவுளாலோ உண்டாக்கப் பட்ட பிரிவுகள் அல்லவே. அறிவுள்ள மக்களால் பிரிக்கப்பட்டு, மற்றவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு, வழக்கத்தில் இருந்துவரும் பெயர்தாமே இவை? இவர்களைப் பிரிக்க இரத்தப் பரீட்சை செய்ய வேண்டியதில்லையே! ஆடையின்றிப் பிறந்தமேனியாய் நிறுத் தினால்கூட—இவன் ஜப்பானியன், இவன் நீக்ரோ, இவன் திராவிடன், இவன் ஆரியன் என்று பிரித்துவிடலாமே! நாய்களைப் பிரிக்கவில்லையா நாம்? இது கோம்பை; இது 'புல்டாக்'; இது சிப்பிப் பாறை; இது இராஜபாளையம்; இது சீமை என்று? குதிரையைப் பிரிப்பதில்லையா நாம்? இது அரபிக் குதிரை; இது ஆஸ்திரேலியாக் குதிரை; இது வேதாரணியத் தட்டு என்று? இவற்றையெல்லாம் பிரிக்கும்போது மக்களைத்தானா பிரிக்க முடியாது? இது போகட்டுமே! நாம் பிறவி பார்த்து இனப்பிரிவினை செய்யும்படி

கேட்கவில்லையே? அவரவர்கள் கொண்டாடும் உரிமைகளைக் கொண்டுதானே பிரிக்கும்படி சொல்லுகிறோம்!

தமிழர் என்பது மொழிப் பெயர். திராவிடர் என்பது இனப்பெயர். தமிழ் பேசும் மக்கள் யாவரும் தமிழர் என்ற தலைப்பில் கூடமுடியும். ஆனால், தமிழ் பேசும் அத்தனை பேரும் திராவிடர் ஆகிவிட முடியாது. இனத்தால் திராவிடனான ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாயிருந்தாலும், எந்த மொழி பேசுபவனாயிருந்தாலும் அவன் திராவிடர் என்ற தலைப்பில்தான் சேருவான். ஆகையால், திராவிட மொழி தமிழ் என்ற காரணத்திற்காக, தமிழ் பேசும் திராவிடன் அல்லாத ஒருவன்—மொழி காரணமாக மட்டுமே தன்னைத் திராவிடனென்று கூறிக்கொள்ள முடியாது. 'தமிழர்' என்றால் பார்ப்பானும் தன்னைத் தமிழனென்று கூறிக்கொண்டு, நம்முடன் கலந்துகொண்டு மேலும் நம்மைக் கெடுக்கப் பார்ப்பான். திராவிடர் என்றால் எந்தப் பார்ப்பானும் தன்னைத் திராவிடன் என்று கூறிக்கொண்டு நம்முடன் சேர முற்படமாட்டான். அப்படி முன் வந்தாலும் அவனுடைய ஆசார அனுஷ்டானங்களையும், பேத உணர்ச்சியையும் விட்டுத் திராவிடப் பண்பை ஒப்புக்கொண்டு, அதன்படி நடந்தாலொழிய நாம் அவனைத் திராவிடன் என்று ஒப்புக்கொள்ள மாட்டோம்.

பண்டைத் திராவிட மக்களின் பழக்க வழக்கங்களை ஒட்டி, அதில் ஏதாவது தவறு இருக்குமானால் அதையும் களைந்துவிட்டு, ஒரு திராவிடன் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்தால், அவ்வேற்பாட்டுக்கு உட்பட்டு நடக்க ஒப்புக் கொள்பவனைத்தான் திராவிடன் என்று கூறுவோமே அல்லாது, சி. பி. இராமசாமி அய்யரையும், இராசகோபாலாச்சாரியாரையும் கூட அவர்களின் பண்பு திராவிடப் பண்பாக மாறும் வரை, திராவிட இனத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டோமே! தமிழர் என்பதில் இவ்வளவு நிபந்தனை உண்டா? இதைத்தவிர திராவிடர் என்பதில் எங்களுக்கு வேறென்ன உள் ளெண்ணம் இருக்க முடியும்? எங்கள் நடத்தையிலோ, அன்பிலோ உங்களுக்குச் சந்தேகம் எழத்தான் என்ன காரணம் இருக்க முடியும்? தமிழர் என்பதில் நான் சேர்க்க நினைத்த அத்தனை பேரையும் சேர்க்கவும், நான் விலக்க நினைத்த—நமக்கு மாறுபட்ட கலாச்சார முடைய கூட்டத்தை விலக்கவும் வசதியுண்டா? இழிவுக்கும், தாழ்வுக்கும் கட்டுப்பட்டுள்ள மக்களையும், இதற்கு நேர்மாறாக—இவ்விழிவுக்கே காரணமான உயர் சாதி மக்களையும் ஒன்றாக்கிக்கொண்டால், அதில் இவ்விழிவு நீங்க வழிஏற்படுமா? முதலில் இவ்விழிவு நீங்கட்டும்! பிறகு எல்லோரும் ஒன்றாவோம்.

இந்நாட்டுக் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் தம்மைத் திராவிடர் அல்லர் என்று கருதுவார்களானால்—தம்மைச் சூத்திரர் அல்லரென்று கருதுவார்களானால், அதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. ஆனால் உண்மையில், ஆரியம் அவர்களைச் சூத்திரருக்கும் தாழ்ந்தவராக—அதாவது மிலேச்சர்கள் என்பதாகத்தான் கருதி வருகிறது என்பதை அவர்கள் உணரவேண்டும். வைசியன் தன்னை ஆரிய வைசியன் என்று கூறிக்கொண்டாலும், ஆசாரி தன்னை விஸ்வப் பிராமணன் என்று கூறிக்கொண்டாலும், கவுண்டன் தன்னைத் தேவேந்திரகுல வேளாளன் என்று கூறிக்கொண்டாலும், படையாட்சி தன்னை வன்னியகுல க்ஷத்திரியன் என்று கூறிக்கொண்டாலும் ஆரியம் இவர்கள் அத்தனை பேரையும்—'சூத்திரன்' என்ற பிரிவில் ஒன்றாகத்தான் கருதிவருகிறது என்பதையும், கோயிலில் ஒரு குறிப்பிட்டவரையில்தான் இவர்கள் அத்தனைபேரும் போக முடியும் என்பதையும் இவர்கள் உணர வேண்டுகிறேன்.

பிராமணர், பிராமண மகாசபை வைத்துக்கொள்ளுகிறார்கள்; அதனால் அவர் களுக்குப் பெருமையும் உரிமையும் கிடைக்கின்றன. நாம் நம்மைச் சூத்திரன் என்று கூறிக்கொண்டால் உயர் சாதியானுக்கு அடிமையாயிருக்கும் உரிமைதான் கிடைக்கும்; பார்ப்பானின் தாசிமக்கள் என்ற பட்டம்தான் கிடைக்கும். அந்தச் சூத்திரத் தன்மையை

ஒழிப்பதையே நமது முக்கிய வேலையாகக் கொண்டிருப்பதால்தான், அப் பெயரால் எவ்விதச் சலுகையோ, உரிமையோ கிடைக்காததால்தான், அப் பெயரிலுள்ள இழிவு காரணமாகத்தான், அத் தலைப்பில் அதே இழிதன்மையுள்ள திராவிடராகிய முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், வைசியர்கள், க்ஷத்திரியர்கள், வேளாளர்கள், நாயுடு, கம்மவார், ஆந்திரர், கன்னடியர், மலையாளிகள் ஆகியவர்களெல்லாம் ஒன்றுசேர மறுத்துவிடுவார்கள். ஆதலால்தான், நம்மைச் சூத்திரர் என்று கூறிக்கொள்ளாமல் திராவிடர் என்று கூறிக் கொள்ளுகிறோம். சூத்திரர் என்பவர்களுக்குத் 'திராவிடர்' என்பது தவிர்த்து வேறு பொருத்தமான பெயர் யாராவது கூறுவார்களானால், அதை நன்றியறிதலுடன் ஏற்றுக் கொண்டு, எனது அறியாமைக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் தயாராயிருக் கிறேன். நீங்கள் கொடுக்கும் பெயரில் நான் மேலே கூறிய அத்தனைபேரும் ஒன்றுசேர வசதியிருக்கவேண்டும். அதில் சூத்திரனல்லாத ஒரு தாசிகூடப் புகுந்துகொள்ள வசதி யிருக்கக்கூடாது. அயலார் புகுந்துகொள்ளாமல் தடுக்க ஏதாவது தடையிருக்கவேண்டும். திராவிடர் என்று கூறினால் திராவிடர் அல்லாத பார்ப்பான் அதில் வந்து புகுந்துகொள்ள முடியாது. நாம் ஒழிக்கப் பாடுபடும், 'பிறவி காரணமான இழிதன்மை'யும் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் காரணமில்லை.

'ஆரியராவது, திராவிடராவது? அதெல்லாம் இன்றில்லை' என்பீர்கள். இங்கே வாருங்கள்; பேசாமல் மேல்துண்டு போட்டுக்கொண்டு நாலு வருணத்தாரும் கோயிலுக்குப் போங்களேன்! பார்ப்பான் உங்களையெல்லாம் ஒரே இடத்தில் விட்டுவிட்டு உள்ளே நுழைகிறானா இல்லையா பாருங்களேன்!

[நூல்: 'மொழியாராய்ச்சி' வள்ளுவர் பதிப்பகம், பவானி—1948]

2. திராவிடர் கழகம்—பெயர் ஏன்?

ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்கு முன் இங்கே (சேலம்) நீதிக் கட்சியின் நிர்வாகசபை கூட்டப்பட்டபோது, தெ. இ. ந. உரிமைச் சங்கம் என்பதைத் திராவிடர் கழகமாக மாற்றவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. 'பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்டுவந்தபோது ஏதோ ஒருசில சமயங்களில் தவிர, மற்ற காலங்களில் எல்லாத் தமிழ் மக்களையும் கொண்டதாக ஜஸ்டிஸ் கட்சி இருந்த தில்லை.

திடீரென்றே ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பதவி என்மீது சுமத்தப்பட்டது. நான் அதற்கு முன் அதை நினைக்கவில்லை. முதன் முதலில் இந்தச் செய்தி என் காதில் விழுந்த போது நான் ஆச்சரியப்பட்டேன். பின்னால் கனவு நனவாகியது. என்னுடைய பெருமையையும் இலட்சியத்தையும் தங்களுடைய பெருமையாகக் கருதும் என் தோழர்கள் எனக்கு உற்சாகமளித்தனர். சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும் கிளர்ச்சியைக் கண்டேனே தவிர, கட்டுப்பாட்டைக் காண முடியவில்லை. இந்த நிலையில் மந்திரி பதவி ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று தீர்மானம் செய்தேன். அதிலிருந்தே—உத்தியோகம், பதவி, எதிர்பார்ப்பவர்களின் உண்மை ஒத்துழைப்பை இழந்துவிட்டேன். மற்றும், ஆரம்பத்தில் கட்சியால் நன்மையடைந்தவர்களுக்கிருந்த உற்சாகம், நாளாக நாளாகக் குறைந்துவிட்டது. கட்சிப் பிரமுகர் சிலர் சர்க்காரிலும் மக்களிடத்தும் தனித்தனிச் செல்வாக்கு ஏற்படுத்திக்கொள்ள முயன்றுவிட்டார்கள்; கட்சியைப்பற்றிக் கவலைகொள்ள வில்லை. கட்சியைப் பலப்படுத்த நான் போதிய முயற்சி எடுத்தும், 'இனி சீர்படுமா?' என்று நினைக்கும் அளவிற்கு வந்துவிட்டது. 'கட்சி உருப்படியாகப் போகின்றதா?' என்று நினைக்கும் அளவுக்குத் தலைவனாகிய நானே சந்தேகங்கொண்டேன். பாமர மக்கள் உணர்ச்சிக்குக் குறைவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் நான் பிறர் நலனுக்குழைப்பவனென்றே எண்ணிக் கொண்டிருக்கிறேன். கட்சியினரால் சொந்தப் பயன்பெறும் நிலையில் நானில்லை; பெறப்போவதும் இல்லை. என்னைப்போல் கட்சியில் சுயநலம் எதிர்பார்க்காத தோழர்கள், அன்பர்கள் எத்தனையோ பேர் என்னைச் சுற்றி இருக்கிறார்கள். அவர்கள் மனமாரப் பாடுபடுகிறார்கள் என்றபோதிலும், நம் கட்சிக் கட்டுப்பாடு முன்னோக்கிச் செல்லாம லிருப்பதற்குக் காரணம் என்ன என்று நெடுநாட்கள் யோசித்தேன். நானும் என்னுடைய தோழர்களும் சிந்தித்ததின் பயனாக, 'நம்முடையது ஒரு ஸ்தாபனம்; நாம் ஒரு இலட்சியங் கொண்டவர்கள்' என்று கூறுவதற்கு நம்மிடையே பொதுவான குறிப்பு உணர்ச்சியைக் கொடுக்கக்கூடிய—பெயர்க் குறிப்பு இல்லை என்பதையே கண்டேன்.

ஏதோ சந்தர்ப்பம் நேர்ந்தபோது பத்துப் பேர்கள் நாம் கூடுவதும், பின்னர் பிரிவதும், நமக்குள் உள்கட்சியும் விஷமப் பிரச்சாரம் செய்வதும் ஆகிய நிலை முதலில் ஒழியவேண்டு மென்று தீர்மானித்ததின்பேரில் நாமெல்லோரும் ஒரு பட்டியில், ஒரு கூட்டத்தில் சேரும்படியாக இருக்கவேண்டுமென்று கருதியே நம்மைத் 'திராவிடர்கள்' என்றும், நமது நாட்டைத் 'திராவிட நாடு' என்றும், திராவிட நாடு தனி சுதந்திர நாடாக ஆகவேண்டும் என்ற கொள்கை கொள்ளவேண்டும் என்றும் முடிவாகத் தீர்மானித்தேன்.

1917ஆம் ஆண்டிலிருந்து 1943ஆம் ஆண்டு முடிய 26 ஆண்டுகள் மறைந்தன. காலஞ்சென்ற தலைவர்கள், ஆதியில் 'திராவிடர் கட்சி' என்ற பெயரைக் கொள்வதில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தார்கள். இந்தத் திராவிடர் கழகத்தின் அங்கத்தினர்களாக இருக்கும் தேவாங்கர்—அந்தக் காலத்தில், தங்களைப் பிராமணர்களென்றே கூறிக்கொண் டிருந்தனர். மேலும், ஆந்திர ஜமீன்தார்கள் தங்களை ஆரியர்கள் என்றே கருதிவந் தார்கள். காலஞ்சென்ற உறுதியான தலைவர் பனகல் அரசருக்கே பூணூலும் உச்சிக் குடுமியும் இருந்தன. அவர் பெரிய சமஸ்கிருதப் பண்டிதர்.

ஸ்ரீரங்கத்தில் வடமொழியில் வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புக்கு, வடமொழியிலேயே பனகல் அரசர் பதிலளித்திருக்கிறார். இந்தி எதிர்ப்புக் காலத்தில் ஆரியர் – திராவிடர் பிரச்சினை நம் கட்சியைப் பலமாக ஆக்கிரமித்தபோது வெங்கிடகிரி ராஜா அவர்கள் அதற் காகவே கட்சியை விட்டு விலகினார்.

திராவிட சமுதாயம் என்று நம்மைக் கூறிக்கொள்ளவே கஷ்டமாயிருக்கும்போது—தமிழர் என்று எல்லாரையும் ஒற்றுமையாக்க முயற்சி எடுத்தால் கஷ்டங்கள் அதிகமாகும். இங்கேயே பாருங்கள்! கண்ணப்பர் தெலுங்கர், நான் கன்னடியன், தோழர் அண்ணா துரை தமிழர். இனி எங்களுக்குள் ஆயிரம் சாதிப் பிரிவுகள். என்னைப் பொறுத்த வரையில் நான் தமிழனென சொல்லிக்கொள்ள ஒப்புகிறேன். ஆனால், எல்லாக் கன்னடி யர்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தெலுங்கரும் அப்படியே. எனவே, 'திராவிட சமுதாயத்தின் அங்கத்தினர்கள் நாம்; நம் நாடு திராவிட நாடு' என்று வரையறுத்துக் கொள்வதில் இவர்களுக்கு ஆட்சேபணை இருக்காது. அது நன்மை பயக்கும்.

எனவே, இத்தகைய கேவல நிலையொழிய, ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கட்சியாக மாறவேண்டும். சேலத்திலே நடைபெற இருக்கும் மாகாண மாநாட்டிலே இதையே முதல் தீர்மானமாகக் கொண்டுவர வேண்டும்.

மந்திரி பதவியில் அமர்ந்துவிடுவதே நம்முடைய இலட்சியமாகக் கொள்ளக் கூடாது. மந்திரியாக நான் வந்தாலும்—பிராமணன், சூத்திரன் என்ற பட்டத்தை ஒழிக்க முடியாது; அதற்குக் கிளர்ச்சி தேவை; கட்டுப்பாடு தேவை; ஒற்றுமை தேவை; தனி நாடு தேவை.

திராவிட நாட்டைப் பெறவும், அதற்கான காரியம் செய்யவும் நாம் தயாராயிருக்க வேண்டும். திராவிட நாடு தனி நாடாகாவிட்டால் நமக்கு நம் ஆயுள்வரை ஓய்வு கிடையாது.

அரசியல் அதிகாரம், நமக்குப் பிற்காலத்தில் வருவதற்கும்—வந்தால் நலம் செய்வதற்கும் முக்கியமான—அடிப்படையான காரியங்களைச் செய்வதில் இப்பொழுது நாம் முயற்சி கொள்ளவேண்டும்.

ஆகவே, 'திராவிடர்' என்ற பெயரையும், 'திராவிட நாடு' தனி சுதந்திர நாடாக வேண்டுமென்பதையும் நாம் குறிச்சொல்லாகவும் இலட்சியத் திட்டச்சொல்லாகவும் கொண்டாகவேண்டும்.

[சேலம்-செவ்வாய்ப்பேட்டையில், 16-1-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 29-1-1944]

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் பேரால் சுமார் 25 வருடகாலமாக இருந்துவந்த ஜஸ்டிஸ் கட்சி, 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்று பொதுமக்களால் அழைக்கப்பட்டு வந்ததும்; ஜமீன்தார் கட்சி, சர்க்கார் அடிமைகள் கட்சி, பட்டம் பதவியாளர் கட்சி, உத்தியோக வேட்டையாளர்கள் கட்சி என்றெல்லாம் திராவிடரின் பிறவி எதிரிகளாகிய ஆரியர்களாலும், ஆரியப் பத்திரிகைகளாலும், ஆரியக் கூலிகளாலும், ஆரியக் கூலிப் பத்திரிகைகளாலும் விஷமப் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்ததுமான திராவிடர்களின் ஸ்தாபனமானது 1944ஆம் ஆண்டு சேலத்தில் கூடிய தென்னிந்திய நல உரிமைச் சங்க 16ஆவது மாகாண மாநாட்டில், 'திராவிடர் கழகம்' என்று பெயர்பெற்று, இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக திராவிடநாட்டில், திராவிடர்களுக்கிடையில் தீவிர பிரச்சாரம் செய்யப்பட்டுவந்து, இன்று பலமானதும் பொதுமக்கள் ஆதரவுகொண்டதுமான ஒரு நல்ல ஸ்தாபனமாக இருந்துவருகிறது. திராவிடநாட்டில் 5-ல் 2 பாகமான தமிழ்நாட்டில் மாத்திரம்—இன்று 50,000 அங்கத்தினர்களையும், சுமார் 300 கிளை ஸ்தாபனங்களையும் கொண்ட ஒரு சரியான ஸ்தாபனமாகவும் இருந்துவருகிறது என்பது யாவரும் அறிந்ததாகும்.

அதன் கொள்கைகள் இன்று புரட்சிக் கொள்கைகளாகப் பலருக்குக் காணப்படுவதாலும், சுயகாரியப் புலிகளுக்கு அதில் இடமில்லாமலே போய்விட்டதாலும்; பாட்டாளிமக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், உண்மையான பொதுநல நோக்கம்கொண்ட மக்களும், நல்ல துடிதுடிப்பும் உற்சாகமும் ஊக்கமும் கொண்ட இளைஞர்களுமல்லாமல் மற்றவர்கள் தலைமறைவாயும், சிலர் எதிரிகளாகவும்; குறிப்பாக ஆரியர்கள் இதற்கு 'ஜென்மப் பகை'வர்களாகவும் இருந்து திராவிடர்கழகத்தை எதிர்க்கவும் ஒழிக்கவும் வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள். இந்தக் கும்பல்களையே பிரதிநிதிகளாகக் கொள்ளவேண்டிய சர்க்காராய் நமது அரசாங்கமிருப்பதால், அரசாங்கமும் திராவிடர் கழகத்திற்கு எதிரியாயிருந்து, அதனுடைய அழிவுக்கு உதவி செய்யவேண்டிய சர்க்காராகவும் ஆகிவிட்டது.

இப்படியெல்லாமிருந்தும், திராவிடர் கழகம் இன்று குறிப்பிடத் தகுந்த ஒரு கட்சியாகத் தென்னாட்டில் தொண்டாற்றி வருவதோடு, மக்களுக்குள் ஒரு பெரிய புரட்சி உணர்ச்சியையூட்டி, பல அரிய கருத்துக்களைப் பரப்பி நாடுமுழுவதும் எங்கும் வியாபித்து இருக்கும் கட்சியாகவும் இருந்துவருகிறது.

இது, தனது ஸ்தாபனத்தைப் பெருக்குவதிலும், பலப்படுத்துவதிலும், கொள்கைகளை இனியும் தீவிரமாய்ப் பிரச்சாரம் செய்வதிலுமே முக்கியமாய் ஈடுபட்டிருப்பதால் மற்ற காரியங்களில் அதிகக் கவனம் செலுத்தாமல், ஓரளவுக்கு அன்றாடக் காரியங்களில்—சர்க்காரால் நடந்துவரும், திராவிடர்களுக்குக் கேடானதும், அவர்களது முன்னேற்றத்திற்குத் தடையானதுமான காரியங்களைப்பற்றி மாத்திரம் கவனித்துத் திருத்திக்கொண்டும், திருத்த முயற்சித்துக் கொண்டும் வருகிறது.

சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் அது கலந்து கொள்ளாததால், சட்டசபையில் அதற்கு அடியோடு பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறதென்றாலும், சட்ட

சபையில் நடத்தப்படும் நமக்குக் கேடான காரியங்களை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது.

சட்டசபையைப் பகிஷ்கரித்து விட்டதால், சட்டசபையிலிருந்து முளைத்தெழ வேண்டிய அரசியல் நிர்ணய சபைக்கும் நமக்குப் பிரதிநிதித்துவம் இருப்பதற்கு இடவசதியில்லாமல் போய்விட்டது. ஆனாலும், அரசியல் பிரதிநிதித்துவ சபையில் நமக்கேற்படும் கெடுதிகளையும் எதிர்த்து நிற்க வேண்டியதும் நம் கடமையாகவும், பாரமாகவும் இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த நாட்டில் காங்கிரஸ், முஸ்லிம் லீக் தவிர வேறு கட்சிகளைப் பற்றிக் கவலையே இல்லாமல், வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் அரசியல் பிரதிநிதி சபைக்கு வருவதற்கு இடமேயில்லாமலிருப்பதற்கு யாதொரு பரிகாரமும் வழியும் செய்யாமல் அலட்சியப்படுத்தி விட்டார்கள் என்றாலும், காங்கிரசானது அரசியல் பிரதிநிதி சபைக்கு அங்கத்தினர் தெரிந்தெடுக்கும் ஏகபோக உரிமையைத் தங்களுக்கும் மற்றும் காங்கிரசிலில்லாத சில ஆரியர் (பார்ப்பனர்)களுக்குமே கொடுத்து, ஆரிய ஆதிக்கத்தையே ஏகபோகமாக்கிக் கொள்ளத் துணிந்துவிட்டதால், வரப்போகும் எதிர்காலத்தில் நாம் பலமான, கடுமையான போராட்டத்திற்குத் தயாராய் இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

உதாரணமாக, தென்னாட்டில் அரசியல் பிரதிநிதி சபைக்கு ஆட்களைத் தெரிந்தெடுப்பதில் தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு 'இன்னின்ன காங்கிரசாரல்லாதாரைத் தான் தெரிந்தெடுக்க வேண்டும்' என்று, ஆக்கினை அனுப்பி இருப்பதில்—தோழர்கள் இராசகோபாலாச்சாரியார், பட்டாபி சீதாராமய்யா, என். கோபாலசாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே. சந்தானம் அய்யங்கார், பி. சிவராவ், அம்மு சாமிநாத அய்யர், கமலாதேவி சட்டோபாத்தியாயா ஆகியவர்களும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் மற்றும் அவர்களையே—காங்கிரஸ் மெம்பர்கள் தவிர மற்றவர்களாக, அதாவது காங்கிரஸ் அல்லாதவர்களாகத் தெரிந்தெடுக்கக் கண்டிப்பான உத்தரவு வந்திருக்கிறது. கடைசிப் பெயர் கொண்டவரும் பலமாக முயற்சிக்கிறார். இந்தப்படி யாவரையும் காங்கிரஸ்காரராகவும், பார்ப்பனராகவுமே தெரிந்தெடுக்கவேண்டும் என்று காங்கிரசார் தீர்மானித்துக் கொண்டதிலிருந்து வேறு யாருக்கும் சுயராஜ்யத்தில் உரிமையுமில்லை, பிரதிநிதித்துவமுமில்லை என்பதைத் தெளிவாய்க் காங்கிரஸ் காட்டிவிட்டது; சர்க்காரும் ஒப்புக் கொண்டாய் விட்டது என்றும் ஆகிவிட்டது.

அதோடு கூடவே, இன்று தமிழ்நாடு காங்கிரசில் பார்ப்பன அறிவாளி யாரும் இல்லையென்று கருதியே வெளியிலிருந்து தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்கள் அத்தனை பேரையும் பச்சைப் பார்ப்பன உணர்ச்சியுள்ள பார்ப்பனர்களாகவே குறிப்பாய்க் குறிப்பிட்டார்கள். ஆகவே நமக்கு இருக்கும் வேலை—இப்போது சட்டசபையிலும் இல்லை; அரசியல் நிர்ணய சபையிலும் இல்லை; மற்றும் எந்தவிதமான தேர்தல் ஸ்தாபனங்களிலும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். சர்க்கார் உத்தியோகத்திலும் இனி இந்தக் கதிதான் ஆகும்.

இந்த நிலையில் நமக்கு வெளியில் மக்களிடத்தில் செய்யவேண்டிய வேலை அதிகமிருக்கிறது. நல்ல சம்பவமாகவே 'சமய சஞ்சீவி'கள், சுயநலப் புலிகள், கட்சியைச் சுயநலனுக்கு விற்கும் வியாபாரக் கும்பல்கள் நம்மை விட்டு நழுவிவிட்டார்கள். இவர்கள் நழுவிவிட்டதால் நம்மிடம் பெரும் செல்வவான்கள் இல்லாமல் போய்விட்டார்கள்; செல்வாக்குள்ள பிரபுக்கள் என்பவர்களும் இல்லாமல் போய்விட்டார்கள். இன்று நாம், ஒரு ஏழை மக்கள் கட்சியாய், பாமர மக்கள் கட்சியாய் இருந்துவருகிறோம். இந்த நிலையில் நம் பொது மக்கள் ஆதரவைப் பயனுண்டாகும்படியாகத் தேடவேண்டுமானால் பலமான வேலை செய்யவேண்டும்; தாராளமாக இன்னும் அதிகமான பிரச்சாரம் செய்ய

வேண்டும். இதற்கு நல்ல இளைஞர்கள் முழுநேரத் தொண்டர்களாயிருக்க வேண்டும். பிரச்சாரத்துக்குப் பொருள், நிதி வேண்டும். இதற்குமுன் பொருளைப் பற்றிக் கவலைப் படவில்லை. நம் எதிர்காலத் திட்டம் பொருளைக் கொண்டு நடத்தப்பட வேண்டியதாகி விட்டது.

இதை எதிர்பார்த்தே திருச்சி மாநாட்டிலும், நிர்வாகக் கமிட்டியிலும் நிதிவசூல் திட்டம் போட்டோம். எனினும், இதுவரை அதற்குச் சரியான முயற்சி நடக்கவில்லை; இப்போது துவக்கப்பட்டிருக்கிறது. நான்கு மாதத்திற்கு முன்னால் இம் முயற்சி துவக்கப் பட்டிருந்தால் நிதிவசூல் முடிந்திருக்கும்; பல காரணங்களால் தவக்கப்பட்டுவிட்டது. இதன் மத்தியில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வசூல்செய்து, பல மாநாடுகள்—ஆடம்பரமாக நாடகங்களுடன், கச்சேரிகளுடன், அறுசுவை உண்டிகளுடன், ஆடல் பாடல் ஊர்வலங் களுடன் அற்புதக் கொண்டாட்டங்களில் நடந்துவிட்டன. எதிர்பார்த்த பணவசூல்கள் இந்தக் கதி ஆகிவிட்டன என்றாலும், இவற்றால் ஏதாவது பலனும் ஏற்பட்டிருக்கலாம் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், ஒரு இரண்டு மூன்று வருஷங்களுக்காவது நல்ல வேலைசெய்யப் பயன்படும்படியான பெருந்தொகைகள் 2, 3 நாள் ஆடம்பரங்களுக்குச் செலவானது குறித்து வருந்தாமல் இருக்கமுடியவில்லை. இதை முதலிலேயே தெரிவித் திருந்தும், மேலும் நடந்து வருவதாலேயே குறிப்பிட வேண்டியதாயிற்று. இதை, ஆடம் பரமாய் மாநாடு நடத்தியவர்கள் சங்கடமாகக் கருதுவார்கள். ஆனபோதிலும், இந்தப்படி நடந்துவிட்டது பற்றிக் கவலைப்பட இடமில்லை என்றே கருதுகிறோம். ஏனெனில், நம் நிதி ஒரு ரூபாய் நிதி; ஆகையால் அந்தந்த மாவட்டக்காரர்களும், ஆங்காங்குள்ள இயக்கத் தோழர்களும் உண்மையாக மனம் வைத்தால் தாராளமாக இலட்சியம் நிறைவேறி விடலாம் என்பதில் ஐயமில்லை.

'டிக்கட்'டுகள் தஞ்சை, சென்னை, கோவை ஜில்லாக்களுக்கும் பிரித்துக்கொடுக்கப் பட்டுவிட்டன; மற்றைய ஜில்லாக்களுக்கும் அனுப்பப்படும். இதுவரை செய்த பிரச்சாரம், அதன்பயன், இன்றையநிலை, இந்தச் சிறு நிதிக்குக்கூடப் பிரயோஜனப்படாமல் போகுமா என்பதே நமது கேள்வி.

ஆகவே, ஆங்காங்குள்ள தோழர்கள் உடனே காரியத்திலிறங்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறோம். இனி, இரண்டு மூன்று மாதங்களுக்கு எங்கும் மாநாடுகள் நடத்தப்படாமல் இருக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறோம். இயக்கத்தால் மக்களுக்குள் ஏற்பட்ட உணர்ச்சிகளை—மாநாட்டுக்குப் பணம் வசூலிக்கவும், மாநாட்டுக்கு வந்துபோக மக்களைச் செலவழிக்கச் செய்யவுமே பயன்படுத்தி விட்டால், பின் பல காரியங் களுக்குக் கஷ்டமாய்விடும் என்றே நினைக்கிறோம். மாநாடுகள் நடைபெற வேண்டியது தான். அதனால் 5000, 10000 வீதம் வசூலித்துச் செலவு செய்வதென்பது சாதாரண மக்கள்—செல்வர்கள் இல்லாத மக்கள் ஸ்தாபனத்துக்குப் பாரமேயாகும். ஆதலால், அருள் கூர்ந்து சிறிது நாட்களுக்கு அதை நிறுத்திவிட்டு, நிதியில் கவலை செலுத்தவேண்டு கிறோம். இது மிகவும் முக்கியமும், நம் இயக்கத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் காரியமுமாகும். ஆதலால், தோழர்கள் அவசியம் கவனிப்பார்களாக!

['விடுதலை'-தலையங்கம்—5-7-1946]

பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே!

எதையும் உங்கள் பகுத்தறிவுக் கண் கொண்டு பாருங்கள். நான் கூறுவதைக்கூட ஏதோ ஒரு ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்பது போல் கேளுங்கள்; ஆனால் கவனத்தோடு கேளுங்கள்! ஒரு ரேடியோவில் உங்கள் அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட கருத்து கூறப்படு கிறது என்பதற்காக உடனே ரேடியோவின் மீது ஆத்திரம் கொண்டு அதை உடைத்தெறிய முற்படுவீர்களா? பத்திரிகையில் உங்களுக்குப் பிடிக்காத கருத்து வெளியிட்டிருப்பதற்காக

அதை உடனே கிழித்தெறிந்து விடுவீர்களா? எனவே, நான் கூறுவதையும் ரேடியோவில் கூறப்படுவது போன்றே கேளுங்கள்; பிறகு சிந்தித்து உண்மை உணருங்கள்; கேட்டதை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமென்றோ, கேட்டுத்தான் ஆகவேண்டுமென்றோ, நாங்கள் யாரையும் வற்புறுத்தவில்லை; வற்புறுத்துவதும் எங்கள் கொள்கையல்ல.

ஆகவே, பொதுவாழ்வில் கவலையிருந்தால் நாங்கள் கூறுவதைக் கேட்டுத் தெளிவடையுங்கள் என்றுதான் நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

திராவிடர் கழகம் என்பது சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டிலிருந்து வரும் ஒரு கழகமாகும். இது ஆதியில் 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்னும் பேராலும், 'ஜஸ்டிஸ் கட்சி' அல்லது பார்ப்பனர் அல்லாதார் சங்கம் என்கிற பேராலும் வழங்கி வந்தது. இந்தத் தென்னிந்திய சங்கம் (ஜஸ்டிஸ் கட்சி) என்னுடைய தலைமையின் கீழ் வந்ததும் நான் அதன் பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்றி அமைத்தேன்.

சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது தென்னாட்டில் திராவிடர் என்றும்—திராவிடர் அல்லாதார் என்றும் இரண்டு பிரிவான மக்கள் வாழ்ந்து வருவது புலனாகிறது. இவர்களில் திராவிடர்கள் என்று குறிப்பிடப்படும் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டு வரும் கழகம்தான் திராவிடர் கழகம் ஆகும். இது (ஜஸ்டிஸ் கட்சி) இந்நாட்டில் ஆட்சிபுரிந்த காலத்தில் அன்றைய அதிகார வரம்பிற்கு உட்பட்டுத் தம்மால் திராவிட மக்களுக்கென்று என்னென்ன செய்ய இயலுமோ அத்தனையும் செய்தார்கள். என்றாலும், அவர்களால் திராவிட மக்களின் நல்லெண்ணத்தைப் பெற முடியாமற் போய்விட்டது. 'ஜஸ்டிஸ் கட்சி தங்களுக்குரிய கழகம்' என்பதுகூட திராவிட மக்களுக்குப் புரியாமல் இருந்தது அப்போது. காரணம், அந்தப் பெயர்களில் உள்ள குறைபாடுகள்தான்.

'முஸ்லிம் லீக்' என்றதும் எப்படி ஒவ்வொரு முஸ்லிமும் அது தன்னுடைய சமூகத்துக்கு ஆக, நன்மைக்காகவே ஏற்பட்ட கழகம் என்று நம்பி எல்லா முஸ்லிமும் அதில் சேர வாய்ப்பு ஏற்பட்டதோ, அதே போன்று, தென்னிந்தியர் கழகம் என்றால் தென்னிந்தியர் யாவரும் ஒன்றுபடும்படியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. தென்னிந்தியாவில் பண்புகளிலும், பழக்க வழக்கங்களிலும் மாறுபட்ட இரண்டு பிரிவான மக்கள் இருந்து வருவதுதான் இதற்குத் தடையாயிருந்தது. இந்த இரண்டு பிரிவில் யாருடைய நன்மைக்காகத் தென்னிந்தியர் கழகம் பாடுபட்டதோ—அம் மக்களுடைய பேரால், 'திராவிடர் கழகம்' என்று அதை அழைக்க ஆரம்பித்ததும் தங்களைத் திராவிடன் என்று அறிந்த ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கும் திராவிடர் கழகம் தமக்காகவே இருந்து வரும் கழகம், அதில் தாம் அனைவரும் சேர்ந்து, நம் நலனைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிற உணர்ச்சி ஏற்பட்டது. அதன் பயனாக, மக்கள் ஆயிரக்கணக்கில் திராவிடர் கழகத்தின் அங்கத்தினர்களாயினர்; ஆதரவாளர்களாயினர். அதன் பயனாகத்தான் இன்று இங்கு இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காண முடிகிறது. ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் கூட, அக் கட்சி மந்திரிகளுக்கு இவ்வளவு பெரிய கூட்டத்தில் பேசக் கூடிய வாய்ப்பே கிடைக்காமல் இருந்ததற்கும் இதுதான் காரணம். அன்று அவர்கள் திராவிட மக்களுக்குச் செய்த நன்மைகளுக்கெல்லாம், அவர்கள் பெற்ற வெகுமதி—'வெள்ளையனின் கூலிகள்', 'அன்னியரின் குலாம்கள்' என்கின்ற கெட்ட பேர்தான். சங்கத்தின் பெயர் மாற்றம் அடைந்த பிறகு, இந்நிலை அடியோடு மாறி, இன்று ஒவ்வொரு வரும் 'தானும் திராவிடன்தான்' என்று பெருமையோடு கூறிக்கொண்டு நம் கழகத்தில் சேர முன்வருகிறார்கள்.

பெயர் மாற்றப்பட்டதன் பயனாக, இன்று சுமார் ஒரு இலட்சம் அங்கத்தினர்களையும், சுமார் 400 கிளைகளையும் நம் கழகம் கொண்டிருக்க வாய்ப்பேற்பட்டது மிகவும் கவனிக்கத்தக்கது. கூட்டம் கூட்ட காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள வசதிகள் அதிகம். அதில் சேரும் மக்களுக்குக் கிடைக்கும் வாழ்க்கை வசதியும் அதிகம். ஆனால், நம்

கழகத்திற்குள்ள பண வசதியோ, விளம்பர வசதியோ, அரசியலில் செல்வாக்கோ மிகக் குறைவு என்றாலும் காங்கிரஸின் பிரபலக் கூட்டங்களுக்கு இம்மியும் குறையாத அளவுக்கு—ஏன், பல தன்மைகளில் அவற்றையும் விட மேலான சிறப்புக்களோடு இப்படிப் பட்ட பெரிய கூட்டத்தை நம் கழகத்தவரால் கூட்ட முடிகிறதென்றால், அதற்குக் காரணம் பேர் மாற்றத்தால் ஏற்பட்ட இன உணர்ச்சிதான் என்றும் என்னால் அறுதியிட்டுக் கூற முடியும்.

இங்கு கூடியுள்ள அத்தனை பேரும் திராவிடர் கழகத்தில் அங்கத்தினர் அல்லர் என்றாலும் திராவிடர் கழகம் என்ன சொல்கிறது என்பதைக் கேட்கவாவது இவ்வளவு பேருக்கு ஆவல் ஏற்பட்டிருப்பது சற்றுப் பெருமைப்படத் தக்கதேயாகும். 'தென்னிந்தியர் கழகம்' என்பதில் திராவிட மக்களுக்குப் பற்று ஏற்படவில்லை. எனவே பேர் மாற்றப் படும் வரை, அதனுடைய வளர்ச்சி தடைப்பட்டு இருந்துவந்தது. அதன் பெயர் மாற்றப் பட்டதும் அந்த அவநம்பிக்கை போய், மக்களிடத்து ஆதரவு அமோகமாகப் பெருக ஆரம்பித்தது. இதுகாறும் திராவிடர் கழகத்தின் தோற்றுவாய் ஓரளவுக்கு விளக்கமாக்கப் பட்டது. இனி, திராவிடர்கள் என்று நாம் யாரைக் குறிக்கிறோம் என்பதை ஓரளவுக்குத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகும் என நினைக்கிறேன்.

இந் நாட்டில் வாழும் ஆரியர் தவிர்த்த மற்ற எல்லா மக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் உட்பட எல்லோரும் திராவிடர்கள்தாம். ஆரியர் தவிர்த்த என்றால்—பார்ப்பனர் தவிர்த்து என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். இந்நாட்டில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும், அவர்கள் மத்திய ஆசியாவில் இருந்து குடியேறியவர்கள் அல்லர் என்ற காரணம் பற்றித் திராவிடர்கள் என்று ஒப்புக்கொள்ளும் போது, அவர்களையும்—அதாவது நீண்டநாட்களாக இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து வரும் பார்ப்பனர்களையும்—ஏன் திராவிடர்கள் என்று கொள்ளக்கூடாது என்று நீங்கள் கேட்கலாம். கேள்வி நியாயமானதுதான்.

இந்நாட்டில் வாழும் தற்காலப் பார்ப்பனர்கள் மத்திய ஆசியாவிலிருந்து குடியேறிய ஆரியர்களின் நேரான, சுத்தமான சந்ததியார்கள் அல்லர் என்பது உண்மையே. ஆனாலும், அவர்களையும் திராவிடர்கள் என்று ஒப்புக்கொள்ளாமைக்குக் காரணம்—அவர்களுக்கும் நமக்குமுள்ள பல்வேறு பண்பு, கலை, ஆசாரம், நடப்பு ஆகிய பல வேறுபாடுகள் தாம். நம் கழகத்தில் யாரையும் பிறவி காரணமாக வேறினத்தவர் என்று ஒதுக்கவில்லை; யாரையும் இரத்தப் பரீட்சை பார்த்து ஒதுக்கவில்லை. பழக்க வழக்கங்களைப் பார்த்துத் தான்—அவர்களுக்கும் நமக்கும் இருந்துவரும் அடிப்படைப் பேதத்தைக் கருதித்தான் பிரிவினை செய்கிறோம்.

இந்நாட்டில் இந்துக்கள் இருக்கிறார்கள்; முஸ்லிம்கள் இருக்கிறார்கள்; மற்றும் பவுத்தர்கள், சமணர்கள் இருக்கிறார்கள். இவர்களை நாம் எவ்விதம் பிரித்தறிகிறோம்? இரத்தப் பரீட்சை செய்து பார்த்தல்லவே! அவர்களது நடையுடை, பழக்க வழக்கங்களைப் பார்த்துத்தானே! இந் நாட்டில் சட்டைக்காரர் என்று ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களை எப்படி நாம் பிரித்துப் பார்க்கிறோம்? அவர்கள் ஆங்கிலத் தந்தைக்கும், திராவிடத் தாய்க்கும் பிறந்தவர்கள்தாம்; இரண்டு பிரிவான மக்களின் இரத்தக் கலப்பால் தோன்றியவர்கள்தாம். என்றாலும், அவர்கள் பண்பு ஆங்கிலேயர்கள் பண்பைப் பின்பற்றியதாக அமைந்துவிட்டதால், அவர்களை நாம் ஆங்கிலேயர் என்று—இந்தியர், இந்துக்கள், முஸ்லிம்கள் என்பவர்களுக்கு மாறுபட்டவர்களாகப் பிரித்து, அழைத்துவருகிறோமா இல்லையா? அதே போல்தான், நாமும் பார்ப்பனர்களை நம்மிலிருந்து பிரித்துப் பார்க்கிறோம். பார்ப்பனர்களின் பண்பு, கலை, ஆசாரம் முதலியன வேறு; சட்டைக்காரன் எப்படித் தான் இரு இனக் கலப்பாய் இருந்தாலும்—நம்மை விட்டுப் பிரிந்து, நம்மைத் தாழ்வாய்க் கருதித் தனி வாழ்வு வாழ்கிறானோ, அப்படியேதான் பார்ப்பனரும் நம்மை

விட்டுப் பிரித்துக்கொண்டு வாழ்கிறார்கள். திராவிடர் கழகத்திற்கு ஏற்பட்டு வரும் செல்வாக்குக் காரணமாகத் தம்மையும் திராவிடர்கள் என்று கூறிக்கொள்ள பார்ப்பனர்கள் முன்வந்தாலும், பார்ப்பனர்கள் எப்போதுமே திராவிடர்களை ஒதுக்கி வைத்துத்தான் வந்திருக்கிறார்கள்; ஒதுக்கி வைக்கும்படியான கலாசாரத்தைத்தான் பின்பற்றி நடந்து வருகிறார்கள். அதாவது, தாம் உயர்ந்தவர்கள்; திராவிடர்கள் தாழ்ந்தவர்கள்; இருவரும் தனித் தனிப் பிறப்பு என்கிற உணர்ச்சி அவர்களைவிட்டு எப்போதுமே நீங்கியதில்லை.

திராவிடர்கள் என்றால் அவர்கள் தர்மப்படி யார் என்று கூறினால், அவ் வேற்றுமை ஓரளவுக்கு உங்களுக்கு நன்கு விளங்கும். ஆரிய தர்மப்படி, 'பார்ப்பனர்கள்—பிராமணர்கள் முதலாவது சாதியார்; திராவிடர்கள்—சூத்திரர்கள் நாலாவது சாதியார்'. எனவே திராவிடர் கழகத்தை, அவர்கள் கொடுத்துள்ள பேரால் அழைக்க வேண்டுமானால், 'சூத்திரர் கழகம்' என்றுதான் அழைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் யார் என்ன காரணத்திற்காகத் தம்மைச் சூத்திரன் (பார்ப்பானின் தாசிமகன்) என்று கருதிக்கொண்டிருந்த போதிலும், திராவிடர் கழகத்தைப் பொறுத்தமட்டிலாவது அந்தப் பெயரை ஒரு போதும் ஏற்கமாட்டார்கள். திராவிடர்களுக்குப் பன்னெடுங்காலமாக இருந்துவரும் இவ்விழிபட்டத்தை ஒழிப்பதுதான் திராவிடர் கழகத்தின் வேலை. எனவேதான் அப்பேரை நம்மால் ஏற்கக்கூடவில்லை என்பதோடு அவர்களும் நம்மோடு சேரமுடியாது.

சூத்திரர் கழகம் என்பதற்குப் பதிலாகப் 'பார்ப்பனரல்லாதார் கழகம்' என்று வேண்டுமானால் முன்போல் அழைக்கலாம் என்றாலும்—அதுவும் ஏற்புடைத்தல்ல. திராவிடர்கள் 100-க்கு 97 பேர்; பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேர். அப்படி இருக்கும் 100-க்கு 97 பேரான திராவிடர்களை 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்கள் பேரால்—'பார்ப்பனரல்லாதார்' என்று அழைப்பது எப்படி அறிவுடைமை ஆகும்? இந்தத் தில்லையில், ஒரு ஈரோட்டுக்காரன் வந்து குடியேறுகிறான் என்றால், அவனை, 'ஈரோட்டான்' என்றும் மற்ற தில்லைவாசிகள் எல்லோரையும் 'Non-Erodeuns'—'ஈரோட்டான் அல்லாதவர்கள்' என்றுமா நீங்கள் அழைப்பீர்கள்? அதேபோல், ஒரு பெரும்பான்மைக் கூட்டத்தை ஒரு சிறுபான்மைக் கூட்டத்தின் பேரைச் சொல்லி—'அவர்கள் அல்லாதார்,' (பார்ப்பனரல்லாதார்) என்றா திராவிட மக்களை அழைப்பது? எனவே, நமக்குரிய சரித்திர பூர்வீகமான பெயரைக் கொண்டே நம்மையழைக்க முற்பட்டோம்.

திராவிடர் என்பதற்குப் பதிலாக 'தமிழர்கள்' என்று ஏன் வழங்கக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள். தமிழர்கள் என்று சொன்னாலே—பார்ப்பனர்கள், தாங்களும் தமிழர்கள்தாம் என்று கூறி அதில் சேர்ந்துகொள்கிறார்கள். 'நாங்களும் தமிழ்நாட்டில் பிறக்கிறோம்; வளர்கிறோம்; தமிழே பேசுகிறோம் தமிழ் நாட்டிலேயே இருக்கிறோம். அப்படி இருக்கும்போது எப்படி எங்களைத் தமிழர்கள் அல்லர் என்று நீங்கள் கூற முடியும்?' என்று கேட்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழர் என்பது 'தமிழ் (திராவிட) பண்பு உள்ள மக்களுக்கு உரிய பெயராக இருந்திருக்கக் கூடுமானாலும்—இன்று அது மொழிப் பெயராக மாறிவிட்டிருப்பதால், அம் மொழி பேசும் 'ஆரியப் பண்புடைய' மக்கள் யாவரும் தாமும் தமிழர் என்ற உரிமை பாராட்ட முன் வந்து விடுகிறார்கள். அதோடு ஆரியப் பண்பை நம்மீது சுமத்த, அந்தச் சேர்க்கையைப் பயன்படுத்தி விடுகிறார்கள்.

அவர்களும் நாமும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் நாம் சூத்திரர்களாகிறோம். ஆகவே, நம் கூட்டத்திலிருந்து அவர்களை விலக்கிப் பேசித்தான், நம்மைத் திராவிடர்கள் என்று அழைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. நம்மில் தமிழன் என்று சொல்லும் ஏமாளிகளைத்தான் பார்ப்பனர்களால் ஏமாற்ற முடியுமேயொழிய—'திராவிடர்' என்றால் அவர்களால் ஏமாற்ற முடியாது.

தன்னையும் திராவிடன் என்று கூறிக்கொண்டு ஒரு பார்ப்பான் முன்வருவானானால் உடனே, 'நீ திராவிடனா? திராவிடனுக்கு ஏது பூணூல்? அதை முதலில் கத்தரித்துக்

கொள்!" என்போம். அதற்கும் துணிவானானால், 'திராவிடரில் ஏது நாலு சாதி? நீ பிராமணன் அல்ல; இந்துவல்ல என்பதை ஒப்புக்கொள்' என்று கூறுவோம். அதற்கு எந்தப் பார்ப்பானும் உடன்படமாட்டான். அதற்கும் உடன்பட்டு அவன் திராவிடனாக ஒப்புக்கொண்டால், பிறகு நமக்கு அவனைப் பற்றிக் கவலை ஏது? சாதி வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் ஒழியவேண்டும் என்பதுதானே நமது ஆசை. சாதியைக் கைவிட்டு, சாதி ஆசாரத்தைக் கைவிட்டு, 'அனைவரும் ஒன்றே' என்ற கொள்கையை ஏற்க முன்வரும் பார்ப்பானை—நாம் ஏன் ஒதுக்கப் போகிறோம்? தமிழர் என்று கூறுபவர்கள் இவ்வித நிபந்தனையின் மீது பார்ப்பனர்களைத் தம் கழகத்தில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்களா? இல்லையே! சில மாதங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற தமிழர் மாநாட்டிற்குத் தன்னை பிராமணன் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர்தானே வரவேற்புக் கமிட்டித் தலைவர்; மற்றும் இரண்டு மூன்று அய்யர்கள் தம் பூணூல்–பூச்சுகளுடனேயே தமிழர் கூட்டத்தில் 'தாமும் தமிழர்கள்' என்று கலந்துகொண்டார்களே? அப்படித்தானே நடக்கும்?

நமக்கு இரத்தத்தைப் பற்றித்தான் கவலை. வேற்றுமையில்லாத மனித சமுதாயம் வேண்டுமென்பதுதான் நமது குறிக்கோளே ஒழிய, வேற்றுமை பாராட்டி யாரையேனும் ஒதுக்கி வைக்கவேண்டும் என்பதல்ல நமது குறிக்கோள். இதை நீங்கள்—பெரிதும் மாணவ மாணவிகளான நீங்கள், நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். திராவிடர்களாகிய நாம் இந் நாட்டுப் பழங்குடி மக்கள். இந் நாட்டையாண்ட சேர, சோழ, பாண்டியர்களின் வழித் தோன்றல்கள். நாம் மேலை நாடுகளுடன் சிறப்பாக வாணிபம் நடத்தி தொழில்வளம் கண்டவர்கள். செல்வம் செழிக்க வாழ்ந்தவர்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என வாழ்ந்தவர்கள் நாம். அப்படிப்பட்ட நாம் 100-க்கு 97 பேர்கள் 4-வது சாதியாக; 100-க்கு 90 பேர் கல்வியற்றவர்களாக; 100-க்கு 99 பேர் உடலுழைப்புக்காரர்களாக, கூலிக்காரர்களாக; ஆணவம் பிடித்த பார்ப்பனக் கூட்டத்தினரால் தீண்டத் தகாதவர்கள், சூத்திரர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தப்பட்ட மக்களாய் வாழ்ந்து வருகிறோம் என்பது சிந்திக்கத் தக்கது. இந்நிலை மாறவேண்டும் என்பதுதான் நமது ஆசை.

நாம் மட்டுமல்ல, நம் முஸ்லிம் தோழர்களும் கிறிஸ்தவத் தோழர்களும் கூடத்தான் தீண்டத் தகாதவர்களாக, மிலேச்சர்களாக ஆரியத் தர்மப்படி கருதப்பட்டு வருகிறார்கள். நேற்றைய சட்டசபை நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் அவர்களைச் சேர்த்து நான் ஏன் பேசுகிறேன் என்று நீங்கள் அய்யப்படலாம். மந்திரியார் கேலிக்கு, முஸ்லிம் லீக் அங்கத்தினர்கள் இடம் கொடுத்தார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் தம்மைத் திராவிடர்கள் அல்லர் என்று நினைத்துக்கொண்டதால் அல்ல; அதற்குக் காரணம், தோழர் ஜின்னாவின் மறைவுக்குப் பிறகு அவர்களுக் கேற்பட்ட நடுக்கந்தான். அது எப்படியானாலும் இங்குள்ள முஸ்லிம்கள் மட்டும் யாரும்—'எல்லோரும் அரேபியாவிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களின் சந்ததியார்கள்' என்று கூறிக்கொள்ளமுடியாது. முஸ்லிம்கள் திராவிடர் கழகத்திற்கு ஆதரவாயிருக்கிறார்களா என்றால் அவர்கள் வேறு எதற்குப் பார்ப்பனர் மகாசபைக்கு ஆதரவாயிருப்பார்கள் என்று மந்திரியார் எதிர்பார்க்கிறாரா என்பது தான் புரியவில்லை. அரசியலில், முஸ்லிம்கள் நம்மவர்களைப் போலவே எவ்வளவு கரணங்கள் அடித்தாலும், இனத்தில், இனப் பண்புகளில் தங்களைத் திராவிடர்கள் அல்லர் என்று எந்த நல்ல முஸ்லிமும் சொல்லமாட்டார். எனவே, நாமும் அவர்களும் சமயக் கருத்தில் சில பேதங்கள் இருந்தாலும், சமுதாய சமத்துவத்தில் சிறிதும் பேதம் இன்றிப் பழகுகிறோம். நாம் எந்த முஸ்லிம் தோழரையும் தீண்டாதார் என்று ஒதுக்குவதில்லை; எந்த முஸ்லிமை நாம் தொட நேர்ந்தாலும் குளிப்பதில்லை. நம் கழகத்தவரால் அரசியல் தன்மையில்கூட அவர்களுக்கு எப்போதும் எவ்விதத் தீங்கும் ஏற்பட்டதில்லை. திராவிடர் கழகத்தில்தான் முஸ்லிம் கவர்னரானார். அவர்களும் நம்மை ஒதுக்குவதில்லை. அவர்கள் லீக்கும் நமக்கு எப் போதும் தீங்கிழைத்ததில்லை. நாமும் அதைக் கண்மூடிக்கொண்டு பிடிவாதமாய் ஆதரித்

தோம். இந்த ஒற்றுமைக்கெல்லாம் அடிப்படைக் காரணம் இன ஒற்றுமைதான். தென்னாட்டு முஸ்லிம்கள் யாவரும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தாம் என்பதைச் சரித்திர ஆராய்ச்சி அறிவுள்ள, எவரும்—ஏன் முஸ்லிம்களும் ஒப்புக்கொள்ளத் தயங்கார்.

முஸ்லிம்கள் யார்? இவர்கள் தமிழ் நாட்டில் ஆரியர் ஆதிக்கம் தலை தூக்க ஆரம்பித்ததும் அதன் கட்டுப்பாடுகளுக்கு—இழிதன்மைக்கு இடம் கொடுக்க விரும்பாமல் மதம் மாறிய திராவிடர்கள்தாம் இந்நாட்டு முஸ்லிம்கள் பெரும்பாலோர் ஆவார்கள். இந்நாட்டுக் கிறிஸ்தவர்களும், அவர்கள் இந்துவாயிருக்கும் போது இப்படித் தம் சமுதாய இழிவை நீக்கிக்கொள்ளவும், கிறிஸ்தவர்களுக்கென்று வழங்கப்பட்ட சில தனியான சலுகைகளைப் பெறவும் மதமாற்றம் செய்துகொண்ட திராவிடர்கள்தாமே யொழிய, இந் நாட்டுக் கிறிஸ்தவர் யாரும் ஜெருசலத்திலிருந்து வந்து குடியேறியவர்களின் சந்ததியார்களல்லர். நேற்றைய ராமன், கிருஷ்ணன், கருப்பன், சுப்பன், காத்தவராயன் இவர்கள்தாம்—இன்று தாமஸாகவும், ஜோசப் ஆகவும், காதர் சாயபு ஆகவும் காட்சியளிக்கிறார்களே யொழிய—இவர்கள் யாரும் இனத்தால் வேறுபட்டவரல்லர் என்பதுதான் எனது துணிவு. ஆராய்ச்சியாளர் முடிவும் இதுதான். ஆரிய தர்மம் இவர்களையும் நம்மோடு சேர்த்துத்தான் ஒதுக்கி வைத்திருக்கிறது.

பார்ப்பனர்கள் நம்மையும் தொடமாட்டார்கள். பார்ப்பனர்கள் உண்ணும் உணவு பார்ப்பன தர்மப்படி—நாம் பார்த்தாலும் புழுத்துவிடும்; ஒரு கிறிஸ்தவனோ, ஒரு முஸ்லிமோ பார்த்தாலும் புழுத்துவிடும். ஆனால், நமக்குள் அவ்வித பேதம் பாராட்டுவதில்லை. ஆனால், நாம் மூவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவோம்; உடனிருந்து உண்போம்; தீண்டினால் தீட்டுப்பட்டது என்று குளிக்கவும் மாட்டோம். ஆனால், பார்ப்பனர்களோ எனில் நம்மைக் கண்ணால் பார்ப்பது கூடப் பாபம் என்று நினைத்து வருகிறார்கள்; நம்மோடு பேசினால் வாய் கொப்பளிக்க வேண்டும் என்று அவர்கள் தர்மம் கூறுகிறது. அவர்கள் மாட்டைத் தொடுவார்கள்; சாணி மூத்திரம் குடிப்பார்கள்; மாட்டைத் தொட்டால் குளிக்கமாட்டார்கள். ஆனால் நம்மைத் தொட்டுவிட்டாலோ—உடுத்தியிருக்கும் வேட்டியோடு குளிப்பார்கள். இதனால்தான்—இந்தப் பான்மை உடையவர்களானதினால்தான்—அவர்கள் வேறு, நாம் வேறு என்கிறோம்.

'இரத்தக் கலப்பு ஏற்பட்டுவிட்டதே; ஏன் இன்னும் ஆரியர். திராவிடர் பிரச்சினை நாட்டில் நடமாடவேண்டும்?' என்று நம்மை நையாண்டி செய்யும் தோழர்கள் பார்ப்பனர்களுக்கு முதலில் புத்தி கூறி, அவர்களின் உயர்தன்மையைக் கைவிடவும் அவற்றிற்கு ஆதாரமான சாஸ்திர புராணக் குப்பைகளைக் கொளுத்திவிடவும் அதற்கேற்ற கடவுள்களைத் தாக்கவும் கேட்டுக்கொள்ளட்டும்; பிறகு வரட்டும் நம்மிடம்!

இந்த சாதி வித்தியாசம் காரணமாகத்தானே நாம் ஆரியத்தை எதிர்க்க நேரிட்டிருக்கிறது. ஆரியதர்மம் கூறுவதென்ன? சாதி பேதா பேதமும் மோட்ச நரகப் பித்தலாட்டமும் தவிர்த்த வேறு என்ன யோக்யமான, நாணயமான கொள்கை ஆரியத்தில் புதைந்து கிடக்கிறது? ஆரியர்களே கூறட்டுமே, சாதி உயர்வு தாழ்வுகளுக்கு ஏதேனும் தக்க ஆதாரம் உண்டென்று? தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஆரியதர்மத்தில் வழி வைத்திருப்பது ஒன்றுதான் அதைக் காப்பாற்றவேண்டிய அவசியத்தை ஆரியர்களுக்கு உண்டாக்கியிருக்கிறதேயொழிய, வேறு என்ன நன்மை இருக்கிறது ஆரிய தர்மத்தில்? உண்மையாகவே கேட்கிறேன்; அப்படித்தான் ஆரியர்களென்ன தம் தர்மத்தை அப்படியே சுத்தமாகக் காப்பாற்றி வருவது? அப்படி எதையாயினும் காப்பாற்றி வந்தாலும் (சாதி உணர்ச்சி தவிர, புரோகிதர் அர்ச்சகம் தவிர வேறு எதுவும் இல்லை) அதையும் தம் வாழ்க்கை வசதி காரணமாகச் செய்கிறார்களா அல்லது கடவுளுக்குப் பயந்து செய்கிறார்களா?

நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இன்று பார்ப்பனர்களில் 100-க்கு 90 பேர் 'கிராப்' வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; 100-க்கு 80 பேர் பூச்சை மறந்துவிட்டார்கள்; 100-க்கு 75 பேருக்கு 'காயத்ரி' தெரியாது; 100-க்கு 90 பேர் எங்கும் சாப்பிடுவார்கள்; 100-க்கு 50 பேர் எதையும் சாப்பிடுவார்கள். அவர்களில் 100-க்கு 90 பேருக்கு ஆரிய ஆசாரங்களில் நம்பிக்கைகூட இருப்பதில்லை; அவற்றைக் கைப்பற்றவும் 100-க்கு 99 பேரால் முடிய வில்லை. அப்படி இருந்தும், நாம் என்ன முன்னேற்றக் கருத்தைக் கூறப் புகினும், அதை எல்லோருமாக, 'வைதிகம் நாசமாகிறது' என்று கூறி முழு மூச்சோடு எதிர்ப்பார்கள். ஏன்? அவர்கள் சுகபோக வாழ்வு வைதிகத்தின் மீது, அதாவது இப்படிப்பட்ட பித்தலாட் டத்தின்மீது கட்டப்பட்ட கோட்டை!

வைதிகம் ஒழிந்தால் நம் பித்தலாட்ட சுகவாழ்வுக்கும் ஆபத்து வந்துவிடும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆதலால்தான், வைதிகத்தில் நம்பிக்கையற்றுப் போனாலும், அதன் தன்மையே கெட்டுப் போய்விட்டதென்றாலும், அதை அனுஷ்டிப்பதே இல்லை என்றாலும், அதனால் நாணயமான, யோக்யமான நன்மை ஒன்றும் கிடையவே கிடை யாது என்றபோதிலும் அதைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறார்கள். வைதிகப் பார்ப்பானை யாரும் போற்றுவதில்லை. நாம் எந்தப் பார்ப் பானையாவது உயர்த்திப் பேச வேண்டுமானால், 'அடே, அடே, அவர் பார்ப்பானாய்த் தப்பிப் பிறந்துவிட்டாரடா, அவருக்குக் கொஞ்சம்கூட சாதி வித்தியாசம் கிடையாதடா' என்று கூறித்தான் உயர்வு காட்டுவோம்! சாதி வித்தியாசம் பாராட்டாத பார்ப்பானை உயர்த்திப் பேசும் அளவுக்குச் சாதியை ஒழிப்பதில் நமக்கு ஆர்வம் பிறப்பதில்லை. அவர்கள் ஆசாரம் கெட்டுப்போனது நமக்கு மேலும் ஆபத்தாகவே முடிந்தது. அவர்கள் ஆசாரத்தோடு நம்மைப் பார்க்காமல், நாம் தொடுவதைத் தொடாமல், நம்கிட்டே நெருங் காமல் இருந்திருப்பார்களானால்—நம்முடைய தொல்லைகள் எவ்வளவோ குறைந் திருக்கும்; நாமும் அவர்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு ஒழுங்காக வாழ்ந் திருக்கலாம். ஆனால், அவர்கள் நம்மிடையே புகுந்து, நம் கலாச்சாரத்தையும் கெடுத்து, நம் வாழ்க்கையையே ரொம்பவும் கெடுத்துவிட்டார்கள். நம்முடன் கூடிக்கொண்டு நம் உயிருக்கே ஆபத்தை உண்டாக்கி வருகிறார்கள்.

நம்முடன் கூடி வாழ்வதென்றால், நமது இன்ப துன்பத்தில் அவர்களும் சமபங்கு கொள்ள முன்வரவேண்டும். நம்மோடு கூடியிருப்பது போல் வாயில் பேசி, திரை மறைவில் நம்மை வடநாட்டுக்குக் காட்டிக்கொடுத்து கேவல வாழ்வுவாழ வழி வகுக்கிறார்கள் என்றால் —அத்தகைய பார்ப்பனர்களை நாம் என்னவென்று மதிப்பிடுவது? மக்கள் ஒழுக்கத்திற்கும், நல்வாழ்க்கைக்கும் அவசியமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்று கூறிவரும் எங்களை—'சுதந்திரத்திற்கு விரோதி' என்றும், 'ஆசாரத்திற்கு விரோதி' என்றும் குற்றங்கூறி—இல்லாத பழிகளைச் சுமத்தி என்ன பயன் காணப்போகிறீர்கள்? ஒற்று மையைக் குலைத்து நிற்கும் மூடநம்பிக்கை ஆதாரங்கள் இவற்றைத்தானே நாங்கள் ஒழிக்க முற்பட்டிருக்கிறோம்! அப்படி இருக்க உங்களையே அழிக்க முற்படுவதாக—ஏன் அஞ்சி, எங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறீர்கள்? மனதறிந்து ஏன் எங்கள் மீது விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறீர்கள்?

விஷமப் பிரச்சாரத்தின் பலன் நீங்கள் அறியாததல்லவே? கர்மபலன் அனுபவித்தாக வேண்டும் என்பதை அறியாதவர்களல்லரே? நீங்கள் செய்து வரும் விஷமப் பிரசாரத்தின் கர்ம பலனுக்கு 'ரியாக்ஷனுக்கு' (Reaction) நீங்கள் ஆளாக வேண்டி நேரிடும். அப்போது என்ன செய்வீர்கள்? உங்கள் தவறுதல்களை அப்போது உணர்ந்து கொள்வது தான் உங்கள் அறிவுடைமைக்கு அடையாளமாயிருக்குமா என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்! என்றேனும் ஒரு நாள் நீங்கள் இவ்வுலக வாழ்க்கையிலேயே இதன் பலனை அனுபவிக்க நேரிட்டுவிடும். எனவே, ஜாக்கிரதையாகச் சிந்தித்து நல்லதோர் முடிவுக்கு வாருங்கள்! எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் எந்தப் பார்ப்பானிடத்தும் வெறுப்பில்லை.

அவர்கள் எங்களை—நம்மைத் தீண்டாதவர்களாக நடத்தி வருதல் கூடாது; இனியும் கூடாது என்பதுதான் எங்கள் கோரிக்கை. நீங்கள் எங்களோடு ஒன்றுபடாவிட்டாலும் நாசமாய்ப் போங்கள்; எங்களுக்குள்ளாவது ஒற்றுமை ஏற்பட்டு வருவதைத் தடை செய்யாதீர்கள்!

நமது சமுதாய முன்னேற்றத்தைத் தடுக்கும் அளவுக்குத்தான் நாம் அவர்களை வெறுக்கிறோம்; அந்த அளவுக்குத்தான் நாம் அவர்கள் ஆதிக்கத்தை ஒழிக்கப்பார்க்கிறோம். நாம் எல்லோரும் வெள்ளையன் போக வேண்டுமென்றோம்—அவன் நம்மைச் சுரண்டு கிறான் என்பதற்காக. அவன் போய் விட்டான். இப்போது வடநாட்டான் முன்னைவிட அதிகமாக நம்மைச் சுரண்ட ஆரம்பித்திருக்கிறான். அதுவும் சில இடங்களில் வெள்ளைய னோடு ஒப்பந்தம் பேசிக் கொண்டு, இருவரும் சேர்ந்து நம்மைக் கொள்ளையடித்திருக் கிறார்கள். அவர்கள் சுரண்டும் பணத்தையெல்லாம் இங்கே வைத்துக் கொள்வதில்லை; இங்கேயே செலவழிப்பதும் இல்லை. அகப்பட்ட அளவுக்குத் தம் ஊருக்கு அபகரித்துச் செல்வதுதான் அவர்கள் தொழில். எனவேதான், நாம் வடநாட்டானை வெறுக்கிறோம்; நம் பணத்தைச் சுரண்டிச் சுரண்டிச் செல்கிறானே என்று ஆத்திரப்படுகிறோம். ஆனால், அந்த அளவுக்குப் பார்ப்பனர்களிடம் நமக்கு ஆத்திரம் வருவதில்லை. ஏன்? அவர்கள் என்னதான் கொள்ளையடித்தாலும் அவர்கள் இங்குதான் சேர்த்துவைப்பார்கள்; இங்கு தான் செலவழிப்பார்கள்; செத்தாலும் இங்கேதான் புதைக்கப்படுவார்கள்; காசியில் சென்று செத்தால்தான் மோட்சம் கிடைக்கும் என்றாலும், அவர்கள் யாரும் காசிக்குச் சென்று சாகமாட்டார்கள்; நம்மை வேண்டுமானால் காசிக்கு வழியனுப்பி விடுவார்கள்—அவ்வளவு தான். இவர்களிடம் நமக்குள்ள ஆத்திரமெல்லாம்—பாடுபடாமல் இருக்க வசதி செய்து கொண்டு நமது உழைப்பின் பலனை யெல்லாம் அனுபவிக்கிறார்களே; அதுவும் நம்மை இழிமகன், தீண்டத் தகாதவன், சூத்திரன், சண்டாளன் என்று வைதுகொண்டே அனுபவிக் கிறார்களே; நம்மை அந்தப் பொல்லாத வடநாட்டானுக்குக் காட்டிக்கொடுத்து வருகிறார் களே—என்பதுதானே! இந்தப் பார்ப்பனர்கள் எந்நாளைக்கும் உயர்ந்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்க முடியாது; காலம் மாறிவிட்டது. அவர்கள் சற்று இறங்கி வர வேண்டியதுதான்; அப்போதுதான் அவர்கள் மனிதத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்ட வர்கள் ஆவார்கள். இன்றேல், பலவந்தமாக ஒரு காலத்தில் அந்த உயர் தன்மையிலிருந்து கீழே இறக்கப்படுவார்கள். ஆனால், பலாத்காரத்தால் அல்ல—நேர்மையான சட்டத்தின் மூலம்தான்!

தோழர்களே! இந்நாட்டில் ‘பார்ப்பான் ஏன் இருக்கவேண்டும்? சூத்திரன் ஏன் இருக்கவேண்டும்? என்று இதுவரை யாரும் கேட்டதில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும். காந்தியார் கூட கேட்டவரல்லர். ‘7 ஜென்மங்களாகத் தொடர்ந்து பார்ப்பானுக்கே, பார்ப்பன வயிற்றிலேயே ஒரு சூத்திரன் பிறந்து வருவானாகில், 8-வது ஜென்மத்தில் வேண்டுமானால் அவன் பிராமணன் ஆகலாம்’ என்றுதான் அவர் குறிப்பிட்டார்; அப்படித்தான் அவர் நம்பி இருந்தார். இந்நாட்டிற்குப் பார்ப்பனர் வந்தது முதற்கொண்டு யாரோ ஓரிருவர்தான் ‘பார்ப்பனன் ஏன்? சூத்திரன் ஏன்?’ என்று கேட்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் மறைக்கப்பட்டுப் போனார்கள்; அதே காரணத்தினால். வள்ளுவர், கபிலர் போன்ற அறிவாளிகள்தாம் பிறப்பில் ஏது வித்தியாசம்? என்று சூளுரை கூறினார்கள்; பார்ப்பனர்களால் அவர்களை எதிர்க்க முடியவில்லை. அதனால் அவர்களின் கூற்றுக்களை விளம்பரமின்றி மறைத்து வைத்துவிட்டார்கள். யாரோ சில சித்தர்கள்—ஆரிய வருணாசிரமத்தை எதிர்த்து நூல்கள் சில எழுதினார்கள் என்றாலும், அவையாவும் ஆடிப் பெருக்கத்தில் கசிந்து போகும்படிச் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு எதிர்த்துப் பேச ஆளின்றியே இது காலம் வரை ஆரியம் இந்நாட்டில் தழைத்தோங்கி, நம்மை மலத்திலும் கேவலமான மானிடப் பிண்டங்களாக பார்ப்பனர் களால் மதிக்கும்படியான நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

ஆங்கிலேய ஆட்சியால் நம் கண்கள் சற்றுத் திறக்கவே, நமது இழிவை நாம் உணர்ந்து அதைப் போக்க முற்பட்டோம். இதுவரை யாரும் கனவில் கூட நினைத்திராத மகரிஷிகள், ஞானிகள் மற்றும் பல நாயன்மார்கள், ஆழ்வார்கள் இவர்கள் யாருங்கூடச் செய்ய முற்படாத வேலையை நாம் துணிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறோம். திராவிடர் கழகம் இந்த வருணாசிரம ஒழிப்புக்காகத்தான் இருந்து வருகிறதேயொழிய, பட்டம் பெற அல்ல. ஏன்?

பதவி பெற்றுப் பார்த்தாகிவிட்டது; பதவிகளால் வெறும் பெருமைதான் அடைய முடிந்ததே தவிர சூத்திரப் பட்டம் போக வழி செய்யவே முடியவில்லை. பட்டம் பெற்றுப் பார்த்தாகிவிட்டது; பட்டம் பல பெற்ற சர் ஏ. இராமசாமி முதலியார் இன்னும் சூத்திரனாகத்தான் இருந்து வருகிறார். நாம் வேண்டுவது அரசியல் ஆதிக்கமல்ல; சமுதாய ஆதிக்கம்தான். சமுதாய ஆதிக்கம் என்றால் சமுதாயத்திற்கு எது நன்மை என்று நாம் கருதுகிறோமோ, எது நன்மையானது என்று நம் பகுத்தறிவு, உலகப் பகுத்தறிவு சொல்கிறதோ, அதை மக்களுடைய எதிர்ப்பின்றிச் செய்யக் கூடுமான ஆதிக்கம் என்றுதான் அர்த்தம். அதாவது, சமுதாயத்தின் நன் மதிப்பை, நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கும் ஆதிக்கம்தான் நமக்கு அவசியமானது. அத்தகைய சமுதாய ஆதிக்கம் இல்லாத அரசியல் ஆதிக்கம் இருந்து யாருக்குப் பலன்? நமது ஓமாந்தூர் ரெட்டியார் பிரதம மந்திரியார் தான்; அரசியல் ஆதிக்கத்தின் உச்சியில் இருப்பவர்தான். என்றாலும், அவரால் சாதி உயர்வு தாழ்வை ஒழிக்க முடிகிறதா? 'இந் நாட்டில் பார்ப்பான் ஏன், சூத்திரன் ஏன்?' என்று கேட்க முடிகிறதா? அவரது பிரதம மந்திரி பதவி வெறும் விலாசம் போட்டுக் கொள்ளத்தானே பயன்படுகிறது? நாளை அந்த விலாசம் போனால்—அவரும் நம்மைப் போல் ஒரு சாதாரண சூத்திரன் ஆக வேண்டியதுதானே! சர். கே. வி. ரெட்டி நாயுடு இம் மாகாண கவர்னராயிருந்தார்; அவராலேயே போக்க முடியவில்லையே இந்த இழிவை! தமக்கே அவர் போக்கிக் கொள்ள முடியாமல் போய்விட்டதே. அவர் வேலையில் இருந்த போதும் சூத்திரர்; வேலையை விட்ட பிறகும் சூத்திரர். அவரது பெண்டு பிள்ளைகள்—இன்னும் எல்லோரும் சூத்திரர்களாகத்தான் இருக்கிறார்கள். எனவே, சூத்திரத் தன்மை ஒழியப் பயன்படும்படியான ஆதிக்கம்தான் நமக்குத் தேவை. அதற்குப் பயன்படாத ஆதிக்கம் எல்லாம் வெறும் போலி ஆதிக்கங்கள்தாம். அதுவரை மந்திரிசபைப் பதவிகள் எல்லாம் நாடக மேடைப் பதவிகள்தாம். நாடக மேடையில் ஒருவன் இராஜாவாக இருப்பது போலத்தான் நமது ரெட்டியாரும் மந்திரி சபையில் பிரதமராகக் காட்சியளிக்கிறார். நாடகக்காரன் வேஷம் கலைந்ததும் சாதாரண மனிதன் ஆகிறான். நமது ரெட்டியார் தம் உத்தியோகம் போனதும் சாதாரண மனிதர் ஆவார்; அவ்வளவுதான். இதை உணராத மக்கள்தாம் வேஷத்தைக் கண்டு ஏமாந்து போகிறவர்கள் ஆவார்கள். நாம் இதை உணர்ந்திருக்கிறோம்; எனவே ஏமாறமாட்டோம்.

'எப்போதுமே, நீங்கள் இந்தப் பதவிகளைப்பற்றிக் கவலைப்பட மாட்டீர்களா?' என்று நீங்கள் கேட்கலாம். அது இப்போதல்ல; ஒரு காலத்தில்! எந்தக் காலத்தில் என்றால் பதவியில் உட்கார்ந்ததும், 'இனி இந்நாட்டில் பிராமணன் இல்லை; சூத்திரன் இல்லை; பார்ப்பனன் இல்லை; பறையன் இல்லை' என்று உத்தரவு பிறப்பிக்கக்கூடிய அளவுக்கு நமக்கு ஆதிக்கம் கிட்டும் என்று தெரியும் காலத்தில்! அப்போதுதான் பதவியைப் பற்றிக் கவலைப்படுவோம்.

'பார்ப்பானும் இல்லை; பறையனும் இல்லை' என்றால், பின் யார் இருப்பார்கள்? இந் நாட்டில் மனிதர்கள்தாம்—சாதி பேதமற்ற மனிதர்கள்தாம் இருப்பார்கள். அத்தகைய நிலையை உண்டாக்கக் கூடிய வசதியும், வாய்ப்பும் கிடைக்கக்கூடிய தறுவாயில்தான், நாம் பதவி குறித்துக் கவலைப்படுவோம். அதுவரை பதவிகளை நாம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டோம். அவையெல்லாம் நாம் துப்பிய தாம்பூலங்கள்தாம்!

பதவி மோகம் எவ்வளவு பேர்களை அயோக்கியர்களாக, நாணயமற்றவர்களாக ஆக்கி வருகிறதென்பது எங்களுக்குத் தெரியும். எவ்வளவு யோக்கியனாகப் பதவிக்குச் சென்றாலும் அவனால் இன்றைய நிலையில் அயோக்கியத்தனம் செய்யாமல் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். எனவே, இன்றுள்ள நிலையில் எந்தப் பொதுஜனத் தொண்டனும், எந்தப் பொதுநலவாதியும், எந்தச் சமூக வாதியும், சட்டசபைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமாட்டான். வெறும் அரசியல்வாதிகள் சமூகத்தைப்பற்றியோ, நாட்டைப்பற்றியோ ஒரு சிறிதும் கவலையில்லாத சுத்த சுயநல வாதிகள்; இவர்கள்தாம் சட்டசபைப் பதவிகளைச் சூழ்ந்து திரிவார்கள்; பதவியில் உள்ள வருக்குப் பின்பாட்டுப் பாடுவார்கள். உண்மைச் சீர்திருத்தவாதி எவனும் இன்றைய அரசியல் அரங்கை ஆதரிக்கமாட்டான். ஆதரிப்பவர்கள் யாவரேயாயினும் அவர்கள் யாவரும் தெரிந்தோ தெரியாமலோ ஒரு பயங்கர காட்டுமிராண்டித்தனமான ஆட்சியைப் பலப்படுத்த உதவிவருபவர்கள்தாம் என்றுதான் கூறுவேன். இப்படிக் கூறுவதால் நாங்கள் ஏதோ இன்றைய ஆட்சியைக் கவிழ்த்து, நாங்களே பதவிக்குவர முயற்சிக்கிறோம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஆட்சியாளர்கள் என்னமோ அப்படித்தான் நினைத்து எங்களைத் தம் விரோதிகளாகப் பாவித்து நடந்துவருகிறார்கள். அவர்கள் அப்படி நினைப்பது தவறு. நாங்கள் கள்ளம் கபடமின்றி ஆட்சியின் தவற்றை எடுத்துக்கூறி வருகிறவர்களேயொழிய, பதவி வேட்டைக்காக இல்லாததையும் பொல்லாததையும் கற்பித்துக் கூறி வருபவர்களல்லர் என்பதையும் ஆட்சியாளர்கள் உணர வேண்டுகிறோம். ஆட்சியை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பமேயொழிய, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்பதல்ல.

இன்றைய ஆட்சியைக் கவிழ்த்தால்தான் என்ன புதுமை நடந்துவிடப் போகிறது? இராமசாமி ரெட்டியார் கவிழ்ந்தால், ஒரு சுப்பராயக் கவுண்டர் வருவார்; இவ்வளவு தானே! இராமசாமி ரெட்டியாருக்கு மேலாக இவர்தான் என்ன செய்துவிடுவார்? ஆரிய அடிவருடி—ஆட்சிக்கு வந்தால்தான் என்ன உருப்படியான நன்மை செய்யமுடியும்? அவரும் ஆரியர் காலைக் கழுவித் தண்ணீர் குடித்தால்தானே பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கமுடியும்!

நமது இராமசாமி ரெட்டியார் கனம் அவர்களையே எடுத்துக்கொள்வோம். அவர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர். நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவனாக இருந்த போது என் பெட்டியைத் தூக்கிக்கொண்டு என்பின் வந்தவர்; மகா யோக்கியர்; இலஞ்சம் வாங்காதவர். அப்படி இருந்தும் தன்னை அண்டிவரும் சிலருக்காவது கள்ள மார்க்கெட் லைசென்ஸ் கொடுக்காவிட்டால் தம் பதவி போய்விடும்; கொடுத்தாவது காப்பாற்றிக் கொள்வதுதான் நலம் என்ற நிலைக்கு வந்துவிட்டாரே? 'அந்த ஊருக்கு ராமசாமி வருகிறான். அவன் வந்தால் என் வண்டவாளம் வெளியாகி விடும். ஆகவே, 144-க்கு உத்தரவு கொடு. திராவிடர் கழகத்தினர் மீது காங்கிரஸ்காரர்கள் கல்லெடுத்து அடித்தால், அந்த ஜில்லாக் கலெக்டர், அவர்களைப் பிடித்து மிரட்டுகிறார்; உடனே அவரைக் கர்நூல் ஜில்லாவுக்கு மாற்று' என்று எம். எல். ஏக்கள் வந்து சொன்னால், 'முடியாது' என்று கூறப் பிரதமரால் முடியவில்லையே! 'நாளைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் நாமென்ன செய்வது? ஏதோ, தொலைந்து போகட்டும்' என்று உத்தரவு கொடுத்து விடுகிறாரே! அப்படிப்பட்ட சத்தியசீலரே பதவிக்காக நாணயத்தை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறதென்றால், மற்றவர்களால்தான் என்ன செய்யமுடியும்? ஆனால், அது நியாயமா? பதவிக்காக நாணயம் தவறலாமா? பதவி இன்று வரும்; நாளை போகும்.

நான் எனது 30-வது வயதிலேயே ஈரோட்டுக்குச் 'சேர்மனாக' இருந்து பல பெருமைகளை அனுபவித்திருக்கிறேன்; பெரிய வியாபாரியாய் இருந்திருக்கிறேன்; ஏராளமான பணத்திற்குச் சொந்தக்காரனாயும் இருந்திருக்கிறேன். அன்று எனக்குப்

பியூனாயிருந்தவன் இன்று வரி போடும் உத்தியோகஸ்தனாக வந்துவிட்டான். எனக்கு 100 வீடு இருந்தபோதிலும், நான் முன் ஒரு சேர்மனாக இருந்திருக்கிற போதிலும்— இன்று அவனுக்குத்தானே சலாம் போட்டு வரியைக் கொஞ்சம் குறைக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டி இருக்கிறது? ஓமாந்தூராரின் நாளைய வாழ்வு அதுதானே! நாளை நமது பிரதம மந்திரி ரெட்டியாருக்குப் பதவி போனால், மறுநாள் தனக்குப் பணி செய்து கிடந்த அதே பாவாடை கட்டிய டவாலிப் பியூனுக்குச் சலாம் செய்து, ‘உள்ளே இருக்கும் மந்திரி அய்யாவைப் பார்க்கலாமா?' என்று கேட்டுவிட்டு, வெளியே காத்திருக்கவேண்டிய வர்தானே இவர்! இந்த அற்பப் பதவிக்காக ஆசைப்பட்டு நாணயத்தைத் தவற விடலாமா? நாணயம் இன்றேல், நம்மைச் சூழ்ந்து பட்டாளம் பவனி வந்தால்தான் என்ன பயன்? அது வேண்டுமானால் பலருக்குப் பெருமை தரத் தக்கதாக இருக்கலாம். ஆனால், நமக்கு வேண்டியது பெருமையல்லவே! உண்மைத் தொண்டுதானே? எனவேதான், பதவியை வெறுத்து மக்களிடம் சென்று முறையிடுகிறோம். மக்கள் கருத்தை மாற்றியமைப்பதில், அவர்கள் கருத்தை நல்வழிச் செலுத்துவதில் எங்கள் முழுக் கவனத்தையும் செலுத்து கிறோம். மக்கள் கருத்து மாறுவது கண்டு, மக்களை ஏமாற்றி வாழ்ந்துவரும் கூட்டம் திடுக்கிடுகிறது. பலகாரம் விற்றுப் பிழைத்தவர்கள் எப்படி இன்று 50 ஆயிரத்திற்கும் 60 ஆயிரத்திற்கும் சொந்தக்காரராயிருக்கிறார்கள்? அடையாளம் தெரியாத ஆட்களெல் லாம், எப்படி இன்று இலட்சாதிபதிகளாக ஆகி இருக்கிறார்கள்? என்று சிந்தித்துப் பார்க்கும்படி மக்களிடம் சொன்னால், ஆட்சியிலிருப்பவர்களுக்குக் கோபம் வருகிறது.

இப்படி அரசியல் பதவிகளைத் தம் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொண்ட ஆட்களைத் தெரிந்தெடுத்தனுப்பிய மக்கள், புத்தியுள்ள மக்கள் என்று எப்படி நம்மால் ஒப்புக்கொள்ள முடியும்? நல்ல ஆட்கள் பதவிக்கு வரமுடியவில்லையென்றால், பதவிக்குத் தேர்ந்தெடுத்தனுப்பும் ஓட்டர்களுக்குப் புத்தியில்லை; அல்லது புத்தியுள்ள மக்களுக்கு ஓட்டுரிமை இல்லையென்றுதானே அர்த்தம்! இந்த நிலை இப்படியே இருக்க விடுவதா? இதை மாற்றி அமைக்க வேண்டாமா? எப்போதுதான் மாற்றியமைப்பது என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

எங்களைக் காங்கிரஸ்காரர்கள், ‘விடுதலை விரோதிகள்' என்று கூறிவருவது எவ்வளவு பித்தலாட்டமானது என்று நீங்களே கவனித்துப் பாருங்கள்! காங்கிரஸ்காரர் களின் விடுதலை ஆசைக்கு எங்களுடைய ஆசை எவ்வளவுக்கும் குறைந்ததல்ல; மலையளவு அதிகமானது என்பதை எடுத்துக்காட்டுகிறேன் பாருங்கள்! காங்கிரஸ்காரர்கள் வெள்ளையன் ஒழிய வேண்டும் என்றார்கள். நாங்கள், வெள்ளையன் ஒழிந்தால் மட்டும் போதாது; அவனோடு வடநாட்டானும் ஒழிய வேண்டும் என்றோம். இதுவா விடுதலைக்கு விரோதம்? ‘நம் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள்' என்று எங்களைத் தூற்றிய அக் காங்கிரஸ் கூட்டத்தினரின் யோக்யதையைப் பாருங்கள்! வெள்ளையன் தீவிரமாகப் போரில் ஈடுபட்டிருந்த போது, வெள்ளையன் தோற்கவேண்டுமென்று கருதிப் ‘பட்டாளத்தில் சேராதே; பணம் கொடுக்காதே!' என்று பிரச்சாரம் செய்ததோடு மட்டும் அல்லாமல், அக்கிரகாரம் எல்லாம் ஜெர்மன் பாஷையும், ஜப்பான் பாஷையும் படிக்க வில்லையா? அவன் தோற்றிருந்தால் இவர்கள் ‘விடுதலை வேட்கை' என்னவாகியிருக்கும்? அன்று நாங்கள்தானே இந்தக் காட்டிக்கொடுக்கும் கூட்டத்தினரின் கல்லடியையும், தடியடி யையும், செருப்பு வீச்சுக்களையும் பொருட்படுத்தாமல் பட்டாளத்திற்கு ஆள் சேர்த்தோம்; பணம் திரட்டிக் கொடுத்தோம்! அதனால் வெள்ளையன் வெற்றி பெற்றனா? அல்லது இந்திய தேசியத் தோழர்கள் தந்திக் கம்பியை அறுத்ததாலும், தபாலாபீசைக் கொளுத்திய தாலும் அவன் வெற்றி பெற்றானா? தந்திக் கம்பியை அறுத்ததாலும், தபாலாபீசைக் கொளுத்தியதாலும் நம் பணம்தானே பாழாயிற்று? அரை கஜ தந்திக் கம்பிக்காவது வெள்ளையன் பணம் தந்திருப்பானா? அன்று யுத்தத்தில் ஈடுபட்டோரை, ‘கூலிப் பட்டாளம்; சோற்றுப் பட்டாளம்' என்று தூற்றிய இத் தேசியத் தோழர்கள், இன்று

அவர்களைப் பாராட்டிப் பேசுவதோடு அவர்களை வேண்டியும் அழைக்கவில்லையா? அன்றே இவர்கள் விரும்பியபடி வெள்ளையன் தோற்ற, வேறுநாட்டான் ஆதிக்கத்திற்கு வந்திருப்பானானால் இவர்களுக்கு இன்று தமக்கென்று தனிப் பட்டாளம் திரட்டும் யோக்யதை கூட இருந்திருக்குமா? இதை யெல்லாம் மறந்து, அதிகார ஆணவத்தால் நிலை தடுமாறி நாக்கில் நரம்பின்றி, எங்களைத் தூற்றும் இந்தத் தேசியத் தோழர்களுக்குச் சற்றேனும் நெஞ்சில் நேர்மை இருக்கக் கூடுமா என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! நாங்கள் இந் நாட்டிற்கு அன்னியர்கள் அல்லரே, இந் நாட்டைப் பிறருக்குக் காட்டிக் கொடுக்க. இந் நாட்டின் பழங்குடிகளான நாங்களா—இந் நாட்டுக்குரியவர்களான நாங்களா—இந் நாட்டை வளமாக்கிய நாங்களா—இந் நாட்டை ஆண்டவர்களின் சந்ததிகளான நாங்களா இந் நாட்டைப் பிறருக்குக் காட்டிக்கொடுத்துக் கூலி பெறுவோம்? நாங்கள் காட்டிக் கொடுப்போமா, அல்லது இந் நாட்டிற்குப் பிச்சை எடுக்க வந்து நாளடைவில் நயவஞ்சகத்தால் நம் மக்களை ஏமாற்றி ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு இன்று வடநாட்டார் தயவால் நம்மீது ஆதிக்கம் செலுத்தும் பார்ப்பனக் கூட்டமும், அவர்களின் கால்கழுவி வாழும் தேசியக் கூட்டமும் இந் நாட்டைப் பிறருக்குக் காட்டிக் கொடுக்குமா என்று நீங்களே சிந்தித்துத் தெளிவடையுங்கள்! இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்து வாழவேண்டிய அவசியமாவது எங்களுக்கு உண்டா? இந்த நாட்டை விட்டு வடநாட்டானைத் துரத்திவிட்டு—நாம் ஆள நினைக்கிறோமா, அல்லது அன்னிய வெள்ளையனுக்கே மறுபடியும் நம் நாட்டை அடிமைப்படுத்த நினைக்கிறோமா, இதில் எது உண்மை? இந்நாட்டு அரசியலும் கைத்தொழிலும் வடநாட்டான் கையில் சிக்கிச் சீரழியக் கூடாதென்றால், அதற்காகத் தேசியத் தோழர்கள் எங்கள்மீது சீறி விழுவானேன்? இந்நாட்டில் வடநாட்டான் ஆதிக்கம் இல்லை என்றாவது எந்தப் புத்திசாலியாவது கூறமுடியுமா? சென்ற 30 ஆண்டுகளாக நாட்டு விடுதலைக்காகப் போராடியது, கடைசியில் வடநாட்டானுக்கு அடிமைப்பட்டுச் சீர்கேடடையவா?

இன்று நம் மாகாணத்தில் நடைபெற்றுவரும் ஆட்சியை எவனாவது சுதந்திர ஆட்சி என்று கூறுவானா? சுதந்திர ஆட்சி என்றால் அதில் அன்னியன் சுரண்டல் இருக்கலாமா? ஹிந்துஸ்தான் ஆட்சி கூறுகிறது, 'பாகிஸ்தானில் இருந்து இந் நாட்டிற்கு யாராவது வரவேண்டுமென்றால் தம்மிடமிருந்து பாஸ்போர்ட் வாங்கிக் கொண்டுதான் வரவேண்டும்' என்று. நமது சென்னை மந்திரியாரால் கூறமுடியுமா, 'சேத்ஜி அவர்களே! லாலாஜி அவர்களே! நேற்றுவரை எங்களை வெள்ளையன் ஆண்டுவந்தான்; அதனால் உங்கள் இஷ்டம்போல் எங்களைச் சுரண்டிவந்தீர்கள். இன்று வெள்ளையனைத் துரத்தி விட்டோம்; எனவே, நாங்களே இந் நாட்டு மன்னர்கள். ஆகவே, எங்கள் தோழர்கள் மலேயா, சிங்கப்பூர், ஜாவா, சுமத்ராவுக்குப் போய்க் கூலிவேலை செய்துகொண்டிருக்க இங்கு நீங்கள் மாட மாளிகைகள் கட்டி வாழவும், வருடாவருடம் எங்களூர்ப் பணத்தை உங்களூருக்கு ஏற்றுமதி செய்யவும் இனி நாங்கள் பார்த்திருக்கமாட்டோம்; எனவே, வெளியேறுங்கள். உங்களூருக்கு நாங்கள் வந்தாலும் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வருகிறோம்; எங்களூருக்கு நீங்கள் வந்தாலும் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று கூற முடியுமா? உண்மையில் இந்த மந்திரி சபையாருக்கு இப்படிப்பட்ட சுதந்திரம் இருக்கிறதா? எங்கள் மாகாணத்தவர் வறுமையால் வாடி உதைபட, வடநாட்டவர்கள் இங்கு ஏழடுக்கு மாடி வீட்டில் வாழப் பார்த்திருக்கமுடியாது என்றுதானே நாங்கள் கூறுகிறோம். வியாபாரம் கைத்தொழில் எதிலும் அன்னியர்கள் சம்பந்தம்—வடநாட்டவர் சம்பந்தம் இருக்கக்கூடாது என்பதுதானே நாங்கள் கோருவது!

எந்தத் தொழிலைத்தான் இம் மாகாணத்தவர் திறம்பட நடத்த முடியாது? வடநாட்டான் வந்து உதவினாலொழிய இங்கு தொழில் நடத்த முடியாதென்கிற நிலையிலா நாம் இருக்கிறோம்? அப்படி இருக்க ஏன் எல்லா வியாபாரத்திலும்—தான்ய வியாபாரம், இரும்பு வியாபாரம், தங்க வியாபாரம் ஜவுளி வியாபாரம் யாவற்றிலும் வடநாட்டாரே

இம் மாகாணத்தில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்க வேண்டும் என்று கேட்பது—எப்படிச் சுதந்திரத்திற்கு விரோதமாகும்?

எங்களுக்கு உடுத்திக்கொள்ளத் துணியில்லை; குடியிருக்க வீடில்லை; படிக்கப் பள்ளி இல்லை; உயிர் வாழ்வுக்குப் பாதுகாப்பில்லை; எங்கும் கொள்ளை, கொலை, திருட்டு, 144! இப்படிப்பட்ட இராஜ்யத்தை எப்படிச் சுயராஜ்யமென்று ஒப்புக்கொள்ள மனந் துணியும்? நாங்கள் கேட்கும் சுயராஜ்யம் இதுவல்லவே! சூத்திரனல்லாத சுயராஜ்யம் அன்றோ நாங்கள் கேட்கிறோம்! எங்கள் சுயராஜ்யம் வந்தால் எங்களுக்கு மட்டுமா சூத்திரப் பட்டம் போகும்? தோழர் இராமசாமி ரெட்டியாருக்கும், தோழர் காமராஜருக்கும் சேர்த்துத்தானே சூத்திரப் பட்டம் போகும்? அவர்களுடைய அண்ணன் தம்பிகளும் கூடத்தான் இன்று வடநாட்டவர்களால் சுரண்டப்படுகிறார்கள். இதற்குப் பரிகாரம் என்ன?

நேருவுக்கும், படேலுக்கும் வால்பிடித்துத் திரிந்தால் இவர்கள் சூத்திரப்பட்டம் போகுமா? வடநாட்டான் சுரண்டலிலிருந்துதான் இவர்கள் மீளமுடியுமா? இந்தக் காலத்தில் 'ஜமீன்தார்கள் ஏன் இருக்கவேண்டும்?' என்று கேட்கிறோம். 'முதலாளி ஏன்? தொழிலாளி ஏன்?' என்று கேட்கிறோம். முதலாளியாவது கொஞ்சம் முதல் போட்டிருப்பான், தனது வியாபாரத்தில்; அதுவும், இலாப நஷ்டங்களுக்குக் கட்டுப்பட்டே வியாபாரம் செய்கிறான். முதலாளிகள் தொழிலாளிகளுக்கு இலாபத்தில் சமபங்கு கொடுக்கத் தயங்குகிறார்கள் என்கிற காரணத்தால், முதலாளிகள் ஒழியவேண்டும் என்கிறோம், இல்லையா? ஜமீன்தார்கள் என்போர் சில குண்டர்களை மிரட்டி அடக்கி வைத்து அவர்களுடைய உதவியால் அதிகப்படியான நிலப்பரப்பைத் தம் ஆதிக்கத்தில் கொண்டிருப்பார்கள். அல்லது, இராஜாக்களுக்குச் சண்டை சச்சரவு சமயத்தில் தமது குண்டர் படையை உதவி—அதற்காக, சன்மானமாகக் கொஞ்சம் அதிக நிலம் பெற்றிருப்பார்கள். தாம் பெற்ற நிலத்தைப் பிறர் வளம் செய்திருப்பார்கள். என்றாலும் இன்றைக்கு நாம் இவர்களும் ஒழிய வேண்டும் என்று கூப்பாடு போடுகிறோமா, இல்லையா? அவர்களும் நியாயமென்று ஒப்புக் கொண்டு சும்மா இருக்கிறார்களா, இல்லையா? இதுமட்டுமா?

நாம் கடவுளைக்கூட சும்மா விடவில்லையே? உனக்கேன் இவ்வளவு பெரிய கோவில்கள் கோபுரங்கள்? உனக்கேன் நாலுகால பூஜை? உனக்கேன் 2 பெண்டாட்டிகள்? உனக்கேன் கூத்திகள்? உனக்கேன் தங்கத்தாலும், வைரத்தாலும் நகைகள்? உனக்கேன் வேளா வேளைக்குச் சோறு? நீ சாப்பிடுகிறாயா? உனக்கென்று பொட்டுக் கட்டிக்கொள்ளும் தாசிகளைத்தான் நீ அனுபவிக்கிறாயா என்று கேட்கிறோமா, இல்லையா? அய்யோ, பாவம்! அது இதையெல்லாம் கேட்டுக்கொண்டுதானே இருக்கிறது? அதுகூட ஒன்றும் நம்மோடு சண்டைக்கு வருவதில்லையே!

இதெல்லாம் கேட்க உரிமை இருக்கும் போது, 'நீ ஏன் பிராமணன்? நான் ஏன் சூத்திரன்? நான் ஏன் ஓயாமல் உழைக்க வேண்டும்? நீ ஏன் உழைக்காமலே உண்டு வாழவேண்டும்?' என்று கேட்கமட்டும் உரிமை இல்லையென்றால், இதற்குச் சுயராஜ்ய மென்று பெயரா? மானங்கெட்ட ராஜ்யம் என்று பெயரா? மகா மகா செல்வந்தர் புத்திரரான முத்தையா செட்டியாரும் சூத்திரர். நாம் எல்லோரும்—நம் மனைவி, மக்கள் நம் பின் சந்ததியார்கள் உட்பட சூத்திரர்கள்; பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள். ஏன் இந்த இழிநிலை? எதற்காக நாம் சூத்திரர்கள்? நாம் என்ன சுயராஜ்ய விரோதிகளா? நாம் யார் சொத்தையாவது திருடினவர்களா? அல்லது, யாரையாவது ஏமாற்றி வாழ்கிறோமா? அல்லது மோசம் செய்து வாழ்கிறோமா? ஏதாவது இம் மாதிரிக் குற்றமிருந்தால் சொல்லட்டுமே?

வானம் முட்டும் கோபுரங்கள் கட்டியவர் யார்? அதன் உச்சிக் கெல்லாம் தங்கமுலாம் பூசியவர் யார்? தில்லை நடராஜருக்குத் தங்கக்கூரை வேய்ந்து தந்தவர் யார்? ஆங்காங்கு

ஆயிரக்கால் மண்டபம் எழுப்பித் தந்தவர் யார்? சத்திரம், சாவடி கட்டி வைத்தவர் யார்? அன்றாடம் ஆறுகால பூஜைக்கு உதவி வருபவர் யார்? அன்றாடம் உற்சவத்திற்கும், ஊர் வலத்திற்கும் உதவி வருபவர்கள் யார்? எல்லாம் நாம் தானே! நாம் பாடுபட்டுக் கொடுத்த செல்வம் தானே இவை யாவும்? ஒரு பார்ப்பானாவது - ஒரு செல்லாக் காசாவது—கோயில், குளம், தானதர்மம் இவற்றிற்குக் கொடுத்திருப்பானா? அப்படி இருக்க, இவ்வளவு செய்தும் நாம் ஏன் சூத்திரர்களாயிருக்கவேண்டும்? அவர்கள் மட்டும் ஏன் ஒன்றும் செய்யாமலே நம்மை ஏமாற்றி உண்டு—பிராமணர்களாக வாழவேண்டும்?

நாம் இன்று கடவுளையே குடுமியைப்பிடித்து ஆட்டுகிறோம். ஏன்? அதனால் நல்லது உண்டாகவில்லை. 'இது சாமியா, குழவிக் கல்லா?' என்று கூடத் துணிந்து கேட்கிறோம்—அது நட்டது, நட்டபடியே நின்று கொண்டிருக்கிறதே, 'ஆம். உண்மை, உண்மை' என்று ஒப்புக்கொள்ளும் தன்மையில். இப்படி எல்லாம் சொல்வதற்காக எந்தச் சாமியும் நம்மீது மானநஷ்ட வழக்குத் தொடரக் காணோமே! அதற்கே டிபெமேஷனுக்குத் தாவா செய்யப் பயமாயிருக்கிற தென்றால் இந்த அன்னக் காவடிப் பார்ப்பனர்கள் நமக்கு எம் மாத்திரம்? இவர்கள் தம் பூணூலையும், தர்ப்பைப் புல்லையும் வைத்துக்கொண்டு நம்மை என்ன செய்து விடமுடியும்? (நீண்ட கைதட்டல், சிரிப்பு) கைதட்டாதீர்கள்; சிரிக்கா தீர்கள்; இதற்காகவல்ல நான் இவ்வளவு பேசியது. சிந்தித்துப் பாருங்கள் கவலையோடு!

இந்த நிலையில் எப்படி ஒரு ஏழைத் தொழிலாளி சுகமாக வாழ முடியும்? ஏன் இந்த அக்கிரமம் என்று கேட்க யாராவது ஆளுண்டா? உண்மையைச் சொன்னால் உயிருக்கு ஆபத்தா? சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம் இப்படியா சோற்றுக்கும், துணிக்கும் திண்டாடுகின்றன? 'இப்படித் திண்டாடுகிறோமே, இதற்கு ஏதாவது வழி செய்யக் கூடாதா?' என்று கேட்க யாராவது முன்வந்தால், அந்த ஆளைப் பிறகு கண்டுபிடிப்பதே கடினமாயிருக்கிறதே! சர்க்கார் அடக்குமுறை அவ்வளவு ஒழுங்காக வேலைசெய்கிறதே! இந்த அரசாங்கத்தில் தம் தம் குறைகளை எடுத்துச் சொல்லக்கூட மக்களுக்கு உரிமை இல்லையே! சுதந்திரம் வந்தாலும் வந்தது, உண்மையை வெளியிடுவதென்றால் உயிருக்கே ஆபத்தாய் முடியும்போல் இருக்கிறதே! நாட்டில் பந்தோபஸ்து இல்லையென்றால் இதற்கு யார் பொறுப்பாளிகள்? காங்கிரஸ்காரர்கள் தாமே! வர வர காங்கிரஸ்காரர்களின் காலித் தனம் எல்லை மீறிக்கொண்டு போகிறதே!

நேற்றுக் கூடலூரில் கழகத் தோழர்களுக்கு அடி; சில நாட்களுக்கு முன் திருவாரூரில் கழகத் தோழர் வீட்டுக்குள் காங்கிரஸ் தோழர்களின் கல்மாரி! நாங்களும் தான் 20, 30 வருட காலமாகப் பார்ப்பனீய எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துவருகிறோம். எங்காவது ஒரு பார்ப்பானுக்காவது அடி கிடைத்தது என்று ஆதாரம் காட்டமுடியுமா? ஒருவரைக்கூடக் காலித்தனத்திற்கு ஏவி விட மாட்டேனே! யாராவது அப்படிக் காலித் தனம் செய்யவேண்டுமென்று விரும்புகிறார் என்று கேள்விப்பட்டால் போதுமே, உடனே அவரைக் கழகத்திலிருந்து ஒழித்து விட்டுத்தானே மறு வேலை பார்ப்பேன். ஆனால், காங்கிரஸ்காரர்கள் ராஜ்யத்திலோ சுதந்திரம் வந்த மூன்றாவது நாளே, முத்து மழை கல் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டதே! ஒவ்வொரு துலுக்கனும் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே!

எங்கள் கழக ஏழை ஆசிரியர் ஒருவர் பதைக்கப் பதைக்கப் பட்டப்பகலில் தூக்கி விடப்பட்டாரே, எங்களைத் தவிர வேறு யாராவது—ஏன் இந்த அக்கிரமம் என்று கேட்டதுண்டா? எங்கு கலகம் நடந்தாலும் அங்கு காங்கிரஸ் சம்பந்தம் இல்லாமல் இல்லையே! காங்கிரஸ்காரர்கள் சம்பந்தப்படாத கலகங்கள் 100-க்கு 5 கூட இல்லையே! கிடைத்த சுயராஜ்யம் நாட்டின் அமைதியைக் குலைக்கவா பயன்படுத்தப்படவேண்டும்? தன் குற்றங்களை எடுத்துக்காட்டுவோரின் உயிருக்கு ஆபத்து விளைவிப்பதும்—என்ன அயோக்கியத்தனம் வேண்டுமானாலும் செய்து சொந்தத்திற்குச் சொத்துச் சேர்த்துக்

கொள்வதும்—இவை தானா வாழ்க்கையின் இலட்சியங்கள்? பட்டம் பதவி, சம்பாத்தியம் இவையெல்லாம் ஒரு தலைமுறைக்குத்தானே நிலைக்கும்? அதன் பிறகு உன் சந்ததியார்கள் கதி என்ன ஆவது?

நேற்று வரை செட்டியார் செய்த ஆடம்பரம் பிரமாதமாய்த்தான் இருந்தது; இன்று அவர் கருமாதிக்கே கடன் வாங்க வேண்டியதாகிவிட்டதே? நீ எவ்வளவோ பாடுபட்டுத்தான் பொருள் சேர்த்துவைக்கிறாய்; அடுத்துவரும் வாரிசு ஆறு மாதத்தில் 'இன்சால்வென்ட்' ஆகிறானே! அல்லது கல்யாணத்திற்கென்றும் கருமாதிக்கென்றும் காசைக் கரியாக்கிக் காலணாவுக்கு ஓலெடுத்துத் திரிகிறானே! வீணில் பொருள் சேர்த்து வைத்தென்ன பயன்? அதைப் பகுத்தறிவோடு செலவு செய்யும் பண்பை உன் மகனுக்கு நீ உண்டாக்கிவைக்க வேண்டாமா?

மோட்சத்திற்காக ஆசைப்பட்டுக் கோபுரம் பல கட்டிவைக்கும் கோமான்களே! உங்கள் சூத்திரப் பட்டம் போக வழி கிடைத்ததோ? உங்களுக்குத்தான் வயதாகிவிட்டது, சூத்திரப் பட்டம் போயும் பயனில்லையென்றால் உங்கள் மனைவி மக்களுக்காவது சூத்திரத் தன்மை போக வழி பிறந்ததா? இல்லையே? இல்லாதபோது ஏன் வீணே உங்கள் பணத்தை அய்யருக்கும், அவரது அநாசாரத்திற்கும் வாரி இறைக்கிறீர்கள்? அய்யருக்கு அழுவதை விட்டு—அறிவை வளர்க்க, சூத்திரத் தன்மையை ஒழிக்க, உங்கள் பணத்தைச் செலவிடுங்கள்.

அன்பர்களே! நமக்கு உண்மையாக யாரிடத்தும் வெறுப்பில்லை; பொறாமையும் இல்லை. கழகத்தில் பலாத்கார சம்பந்தமும் கிடையாது. எனவே, யாரும் கழகத்தினரைக் கண்டு பயப்பட வேண்டாம். கழகத்தினர், அடிதடி என்றால், ஆளே கிடைக்க மாட்டார்கள்; ஓடிவிடுவார்கள். ஓடுகிறபோது சிக்கிக்கொண்டாலும், எதிர்க்காமல் அடிபடுவார்கள்—ஏன்? திருப்பி அடிக்க முடியாததால் அல்ல; திருப்பி அடித்தல் கழக விதிக்கு விரோதம் என்பதுதான். பலாத்காரம் வேண்டாம். நாங்கள் காந்தியாரைப்போல் அஹிம்சா மூர்த்திகள் என்று பேர்வாங்க அல்லது, பலாத்காரம் அற்றிருப்பது; சுத்த சுயநலத்தால்தான்.

காந்தியார் வாயளவுக்கு அஹிம்சை பேசினார். அவரது சிஷ்யகோடிகள் ஆங்காங்கு இஷ்டம்போல் கலகம் விளைவித்துக்கொண்டுதான் இருந்தனர். நாமோ கலகம் நேர்ந்தால், உதை தின்பவர்கள் நாமாகத்தானே இருக்க நேரிடும். திராவிடர்கள் தாமே ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ள நேரிடும். அதனால் ஒற்றுமை எப்படி ஏற்பட முடியும் என்றுதான் பலாத்காரத்தை ஒதுக்கி வருகிறோம். எந்த கலகம் நடந்தாலும் பார்ப்பான் ஒருவன் கூட கைக்குச் சிக்கமாட்டான் என்று தெரிந்துதான் பலாத்காரத்தைக் கைவிட்டிருக்கிறோமே ஒழிய—பலாத்காரம் இன்றி வாழ்ந்தால் கடவுள் நமக்கு மோட்ச லோகத்தில் இடம் தேடிக் கொடுப்பார் என்ற ஆசையாலோ அல்லது கடவுளிடம் கூலி கிடைக்கும் என்பதாலோ அல்ல.

பார்ப்பனரின் தூண்டுதலின்பேரில் அறியாமையினால் நம் கழகத்தினர் மீது வெறுப்புக் கொண்டுள்ள திராவிட தேசியத் தோழர்களுக்கு உண்மை விளங்குமாறு செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை ஏற்படும்படி நடந்துகொள்ள வேண்டும்—என்ற மேலான தத்துவங்களுக்கு ஆகத்தான் நாம் பலாத்காரத்தை அடியோடு தள்ளிவைத்திருக்கிறோமே யொழிய, கையாலாகாத கபோதிகள் அல்ல நாம். நம்முடன் சேராமல் ஒதுங்கி நிற்கும் திராவிடத் தோழர்கள் அனைவரும் நம்முடைய நண்பர்களாக வேண்டும்; நம் தோழர்களாக வேண்டும்; அது இல்லாதவரை, நமக்கு வெற்றி கிடைக்காது; கிடைத்தாலும் பயன் படாது என்ற சுயநல தத்துவத்தினால்தான் நாம் கழகத்தவரிடம் பலாத்காரம் கூடாது, கூடாது, கூடாது என்று சொல்லிவருகிறோம். அந்தப்படியேதான் நினைத்தும் வருகிறோம். சொல்வதோடு மட்டுமல்லாமல், எழுதுவதோடு மட்டுமல்லாமல்,

நினைப்பதோடு மட்டுமல்லாமல்—காரியத்திலும் 100–க்கு 100 விகிதம் நாம் பலாத்காரமின்றியேதான் நடந்துவருகிறோம்.

நாம் காங்கிரஸ்காரர்களைப்போல் சொல்வது ஒன்று, செய்வது வேறொன்றுமாக எவ்விதப் பித்தலாட்டமும் செய்யவில்லை யென்பது, பொது மக்களாகிய உங்களுக்கே நன்கு தெரிந்திருக்கும். மேலும், திராவிடர் கழகம் என்னுடைய தலைமையின்கீழ் வந்தது முதற்கொண்டு, நான் ‘இது ஒரு பிரச்சார இயக்கமே ஒழிய, அரசியல் ஆட்சியல்ல’ என்று தெளிவாக எடுத்துக்கூறி வந்திருக்கிறேன். எந்தப் பிரச்சார இயக்கமும் அன்பு வழிச் சென்றால்தான் வெற்றிபெறமுடியுமேயொழிய, பலாத்கார வழி சென்றதால் ஒருபோதும் வெற்றிபெறமுடியாது. அரசியல் கட்சி என்றால் அப்படி அல்ல. எப்படியோ பொய் சொல்லியோ, பித்தலாட்டம் செய்தோ, கலகம் விளைவித்தோ, காலித்தனம் செய்தோ முதலில் அரசியலைக் கைப்பற்றிவிட்டால், அப்புறம் அதன் மூலம் கிடைக்கும் அதிகாரத்தைக்கொண்டு கட்சியின் செல்வாக்கை வளர்த்துவிடலாம் என்றுதான் கட்சியாளர்கள் நினைப்பார்கள். இதுதான் நமக்கும் காங்கிரசுக்கும் உள்ள வேற்றுமையுங்கூட.

எனக்கு விவரம் தெரிய ஆரம்பித்த காலம் முதற்கொண்டே அதாவது 1910–ல் இருந்தே—காங்கிரஸ் ஸ்தாபனத்தின் போக்கை நான் கவனித்து வந்திருக்கிறேன். அது அரசியலைக் கைப்பற்றுவதிலேயேதான் நாட்டம் காட்டி வந்திருக்கிறது. பதவிகளையும் பட்டங்களையும் காட்டிப் பணக்காரர்களை மெல்ல மெல்லத் தன் கட்சியில் இழுத்துக்கொண்டதன் பயனாய் இன்றைக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகவே அது ஒரு பலம் பொருந்திய கட்சியாக நாட்டில் நிலவிவருகிறது. ஒரு காலத்தில் 100–க்கு 90 பேர் காங்கிரஸ்காரர்கள் என்று கருதும்படி அதன் செல்வாக்கு ஓங்கி இருந்தது. ஒரு கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டால் அறிக்கையில் கையெழுத்திட்ட மை உலருமுன்பே பணம் சேர்ந்துவிடக்கூடிய அளவுக்குப் பணக்காரர்களின் செல்வாக்கை உடைய கட்சியாக அது இருந்துவந்திருக்கிறது. அதற்கிருந்துவந்த பிரச்சார வசதிகள், தொண்டர்கள், கிளை நிலையங்கள், மிகமிக அதிகமானவை. பத்திரிகைகளோ ஏராளம். உலகே மதித்துவந்த காந்தியார் அதன் தலைவராக இருந்தார். என்றாலும் இதுவரை அது சாதித்துவிட்ட நற்காரியம் என்ன? இவ்வளவு பலம் பொருந்திய ஸ்தாபனத்தை நாங்கள் எதிர்த்து நின்று சாதித்ததென்ன என்பதைச் சற்றே உங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து காட்டுகிறேன், பாருங்கள்!

காங்கிரஸின் முதலாவது திட்டம்—மிக முக்கியமான திட்டம், இந்து–முஸ்லிம் ஒற்றுமை. இந்து–முஸ்லிம் ஒற்றுமையே தனது இலட்சியம்; அதுவே தனது மூச்சு என்றுகூடக் காந்தியார் பிரச்சாரம் செய்துவந்தார். அதன் பயன் என்னவாயிற்று? அதனாலேயே அவர் இறக்க நேர்ந்தது. இந்து–முஸ்லிம் ஒற்றுமை வேலை, அவருடைய உயிரையே கொள்ளைகொண்டு சென்றது. முடிவில் அவர் விட்டுச் சென்றதென்ன? என்றென்றும் ஒன்றுபடமுடியாத இரு தனி நாடுகள். இவற்றிற்குள் தினமும் ஓய்வு ஒழிச்சல் இல்லாத தொல்லை. காங்கிரஸ்காரர்கள் என்னுடன் பேச நேரும்போதெல்லாம் கூறுவது, ‘நீ எப்படியாவது போய்த் தொலை; அதுபற்றிக் கவலை இல்லை. நீ போயும் போயும், சாயபுமாரோடு சேர்ந்துகொண்டிருக்கிறாயே!’ என்பதுதான். இதுதான் இவர்களது ஒற்றுமை முயற்சியின் முடிவு. இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காக இடைவிடாது பாடுபட்ட காங்கிரஸ்காரர்களால் திராவிட கழகத்தினர்க்கும், முஸ்லிம்களுக்கும் உள்ள நட்பில் 100-ல் ஒரு பங்கு நட்பையாவது முஸ்லிம்களிடமிருந்து பெறமுடிந்ததா? ஏன்? உள்ளத்தில் ஒற்றுமை இருந்தால்தானே! முதலாவது திட்டம் முழுத் தோல்வியுற்றது.

காங்கிரஸ்காரர்களின் அடுத்த முக்கிய திட்டம் தீண்டாமை விலக்கு. இவர்களுடைய தீண்டாமை விலக்குத் திட்டம் நாம் சென்ற வேகத்தைத் தடுத்து நிறுத்தவே பயன்பட்டது. தீண்டாதார் என்றொரு கூட்டத்தை ஒதுக்கி வைத்திருக்கும் சாமியை உடைத்து

ரேட்டுக்கு ஜல்லி போடவேண்டும் என்றோம். தீண்டாதார் என்ற இழிவைச் சுமத்தி இருக்கும் இந்துமதச் சாக்கடையை விட்டு வெளியேறி-இஸ்லாம் மதத்தையோ, கிறிஸ்தவ மதத்தையோ தழுவுங்கள் என்றோம். ஆயிரக்கணக்கில் மத மாற்றங்களைச் செய்தோம். காங்கிரஸ் அந்தச் சமயத்தில் தீண்டாதவர்களில் சிலரைத் தம் கூலிகளாக்கிக்கொண்டு, நமக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தனர். ஆனால், அச் சூழ்ச்சி பலிக்கவில்லை. முடிவில் கோவில் நுழைவுச் சட்டம் செய்தார்கள். செய்து பயனென்ன? சுயமரியாதைச் சங்க சார்பிலும், ஜஸ்டிஸ் கட்சி சார்பிலும் பற்பல மாநாடுகள் நடத்தினோம். என்றாலும், 'இரண்டு பந்தி போஜனம்' எங்கும் நடைபெற்றதில்லை; தீண்டாதார் என்போரும் நம்முடன் இருந்துதான் உண்டார்கள்; எங்குமே அவர்கள் பிரித்துக் காட்டப்படவில்லை. காங்கிரஸ் மகாநாடுகளின்போது தனித் தனிப் பந்திகள் நடைபெற்றன என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் காட்டமுடியும்.

காங்கிரஸ்காரரின் 'கோயில் நுழைவுச் சட்டத்தால்' இதுவரை சூத்திரர்களுக்காக விட்டுக் கொடுக்கப்பட்டு வந்த உரிமைகூட பறிக்கப்படுகின்றது. நேற்று, தில்லை நடராஜர் கோயிலின் படிக்கட்டின் மீது காலெடுத்து வைக்கக் கூடாது என்று கூறப்பட்டதாம். திருப் பதியில், வெட்டிச் சோறு போட்டுவந்த இடத்தில் சமபந்தி போஜனம் செய்ய மறுத்த பார்ப்பன மாணவர்களுக்கு 15 ரூபா இனாம் படி தரப்பட்டது. இதே தீண்டாமை ஒழிப்புத் திட்டத்திற்குப் பாடுபடும் காங்கிரஸ்காரர்கள் சர்க்காரால், 'ஆகமம் படிக்கும் பையன்கள் ஆசாரமாய் இருக்கவேண்டியது அவசியம். ஆகவே, அவர்கள் சமபந்தி போஜனம் செய் யும்படி நிர்ப்பந்தப்படுத்துவது கூடாது' என்று பஞ்சாங்கப் பார்ப்பனர்கள் ஓலமிட, அதற்கிசைந்து சர்க்காரும் படி கொடுத்துவிட்டது. உடனே ஆகமம் படிக்காத பார்ப்பனப் பிள்ளைகளும் படி கேட்க ஆரம்பித்துவிட்டார்களாம். அதற்கும் சர்க்கார் ஒப்புக்கொண்டு படி அழுதுவருகிறதாம். இது ஆசாரத்தைக் காப்பாற்றும் சர்க்காரா? தீண்டாமையை ஒழிக்கும் சர்க்காரா? நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்! ஆசாரமாயிருக்க வேண்டு மென்று ஆசைப்படுகிற பார்ப்பான் பள்ளிக்கூடத்துக்கு வருவதே தவறு; வந்த பிறகு தனி போஜனம் கேட்பதாம்! இந்த சர்க்கார் மான்யம் கொடுக்க ஒப்புக்கொள்வதாம்! யாருடைய பணத்தைக்கொண்டு சர்க்கார் தாராளம் காட்டுகிறது? எந்தப் பார்ப்பானாவது திருப்பதி சாமிக்கு மான்யம் விட்டிருப்பானா? எவனோ ஒருவன் சொன்னானாம், 'அப்பப்பா! என்னைத் தொட்டு அடிக்காதே; உனக்குத் தீட்டு வந்துவிடப் போகிறது; இதோ, கொன்னை தருகிறேன், இதனால் அடி' என்றானாம். அப்படி அல்லவா இருக் கிறது இந்த அடிமை சர்க்காரின் போக்கு? அவர்கள், 'நீங்கள் இழிமக்கள்; உங்களோடு சேர்ந்து உண்ணலாமா?' என்று கூறுகின்றனர். அதற்கு, அதே இழிமக்கள் வகுப்பைச் சேர்ந்த சர்க்கார், தம் இழிதன்மையை ஒப்புக்கொண்டு தனி உணவுகொள்ள மான்யம் வழங்குவதாம். இதைவிட ஈனச் செய்கை ஏதாயினும் இருக்கமுடியுமா?

பார்ப்பனர்களில் 100-க்கு 100 பேர் படித்தவர்கள். அவர்களுக்கு அதிகப் படிப்பு, ஆகமப் படிப்புப் படிக்க தண்டச் சோறு. தீண்டாதவர்களில் நூறு பேரில் ஒருவருக்குக் கூடப் படிக்கத் தெரியாது—இருந்தாலும் அதுபற்றிக் கவலையில்லை. தீண்டாதவருக்குப் படிக்கப் போதிய பணம் இல்லை என்பதற்காக இலவசச் சாப்பாடு போடுவதுண்டா? அவர்களில் 100-க்கு 25 பேராவது படிக்க ஆவன செய்யப்பட்டதா? தீண்டாமை விலக் கென்று கூறிக் கோயிலைத் திறந்து விட்டுவிட்டார்களே;—இன்னும் பார்ப்பான்தானே அங்கு மணியடித்து வருகிறான். தட்டில் விழுகிற காசு அவனுக்குத்தானே இன்னும் போய்க்கொண்டிருக்கிறது? கோயில்களில் சாமிக்கென்று அழைப்படும் இலட்சக்கணக்கான ரூபாயும் நம்மவர்களால்தானே தரப்படுகிறது? அது, நம் மக்களையே சேரும்படியான வழி செய்யப்பட வேண்டாமா? திருப்பதி வெங்கடாசலபதிக்கு வருட வரும்படி ரூ. 44 இலட்சம் என்றால்—அத்தனையும் அன்னக்காவடிப் பார்ப்பனர்களுக்குக் கொடுக்கவேதானா பயன்படவேண்டும்? இதுவும் போதாது என்று—'இனி குடிக்காதீர்கள்; கோயிலுக்குப்

போங்கள் ' என்று வேறு கூறியாகிவிட்டதே! கோயில்களில் அனுமதிப்பதென்றால்—சுங்க கேட் வரைதானா அவர்களை அனுமதிப்பது? சுங்கத்தையும் அவர்களே அடையும்படி—மணியையும், தட்டையும் பார்ப்பனனிடத்தில் இருந்து பிடுங்கி, அவனிடம் கொடுக்கவேண்டாமா? உண்மையில் தீண்டாமையை விலக்கும் ஆசையிருந்தால்தானே—இதைச் செய்வார்கள்? நம் தீண்டாமை ஒழிப்பு வேகத்தைத் தணியச்செய்த சூழ்ச்சி தானே இது? இன்றேல், என்றோ இந்தக் கோயில்கள் எல்லாம் குட்டிச்சுவராகி யிருக்குமே! இந்து சமூகமே இருந்த இடம் தெரியாமல் மாய்ந்து போயிருக்குமே!

காங்கிரஸின் அடுத்த திட்டம் மதுவிலக்கு. மதுவிலக்குத் திட்டத்தால், மாகாண வருமானம் குறைந்து அதற்குப் பதில் விற்பனை வரி வந்ததுதான் மிச்சம். விற்பனை வரி என்பதே ஒரு பெரிய பித்தலாட்டம். முதலாளியான வியாபாரிக்கு 100-க்கு 25% இலாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 25%ல் விற்பனை வரியான 1½%யை எடுத்துக் கொள்ளக் கூடாதாம். வாங்குவோன் அழவேண்டுமாம். அந்த 1½% விற்பனை வரியை வாங்குபவரா கொடுப்பது? விற்கின்றவனன்றோ தரவேண்டும்! கொள்ளையடிக்கும் வியாபாரியை விட்டு விட்டு, கொள்ளை யடிக்கப்படுபவனான வாங்குவோனிடமா சர்க்கார் மேலும் கொள்ளையடிப்பது? அந்த விற்பனை வரி மூலம் வரிப் பணமாவது ஒழுங்காகச் செலவிடப் படுகிறதா?

எந்தக் குடிகாரனுக்காவது, ' குடிப்பது தவறு ' என்கிற எண்ணத்தை நீ உண்டாக்கினாயா? குடித்தால் போலீஸ்காரன் பிடித்துக்கொள்வானே என்று பயம் கொள்ளும் படி செய்தா மதுவிலக்கை அமுல் செய்வது? குடிகாரன் என்ன பைத்தியக்காரனா? ஒரு மொந்தை 2 அணா என்றால் போலீஸ்காரனுக்கு மேலும் 2 அணா இலஞ்சம் என்று சேர்த்து, மொந்தை விலையை 4 அணா என்ற கணக்கில், அகப்பட்டவரை குடிக்கிறான். திருட்டுக் கள் விற்றுப் பலர் கோடீஸ்வரராகி விடுகிறார்கள். குடிக்கிறவனும் ' என்னடா சனியன், கடையில் போய் ராஜாவாட்டம் குடிக்க முடியவில்லையே; திருட்டுத்தனமாய்க் குடிக்கவேண்டியிருக்கிறதே' என்று அவஸ்தைப் படுகிறானேயொழிய, குடியாமலே இருந்து விடுகிறானா? அல்லது குடிப்பது உடம்புக்குக் கேடு என்று உணர்ந்துகொண்டுவிடுகிறானா? குடிகாரர்களிடம் அத்தகைய உணர்ச்சி ஏற்படுத்த சர்க்காரால் ஏதாயினும் செய்யப் பட்டதா? செய்யப்பட்டிருந்தால், அமுல் நடத்த அதிகப் போலீஸ் எப்படித் தேவையாக இருக்கும்? மந்திரி கூறுகிறார், ' சம்பளத்துக்கு பணம் இல்லை. எனவே, மதுவிலக்குத் திட்டத்தை ஒத்தி வைப்பேன் ' என்று. சட்டசபை மெம்பர்கள், ' முடியாது. மதுவையாவது விலக்கு; அல்லது நீயாவது விலகு ' என்று கூறிவிட்டார்கள். மதுவிலக்கும் அமுலுக்கு வர ஏற்பாடாகிவிட்டது. என்றாலும், சென்னையில் மட்டும் 10 இலட்ச ரூபாய் சரக்கு பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. மது வியாபாரிகள் மதுவிலக்கை ஒத்திப்போடும்படி எவ்வளவோ கேட்டுக்கொண்டார்களாம். மந்திரியார், முடியாது என்று கூறிவிட்டாராம். ஆனால், கள்ள மார்க்கெட்டில் விற்றுப் பிடிக்கப்பட்டால், அப்போதும் கேஸ் தம்மிடம் தானே வரும்; அப்போது வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம் என்று அதிகாரிகளும் கூறிவிட்டார்களாம். இதுதான் இவர்களது மதுவிலக்கு யோக்கியதை. உண்மையிலேயே இவர்கள் மதுபானம் ஒழியவேண்டுமென்று விரும்பி இருந்தால், இவர்களுக்குள்ள பிரச்சார வசதியைக் கொண்டு, ' குடிப்பது கேடானது ' என்கிற உணர்ச்சியை ஒவ்வொரு குடிகாரனுக்கும் எப்போதே ஊட்டியிருக்கலாம். விளம்பரமும் அதன்மூலம் ஓட்டுப் பெறும் பயனும்—இவைதான் காங்கிரஸ்காரர்களுக்கு இப்போது வேண்டியவைகள்; அதற்குத்தான் இத்திட்டமும் போடப்பட்டது.

அடுத்த திட்டம் கதர்த் திட்டம். காந்தியாரோடு அதுவும் செத்துப்போய் விட்டது; அவர் பிரேதத்துடனேயே அவர் கதர்த் திட்டமும் கொளுத்தப்பட்டாகிவிட்டது. காந்தியார் இருந்தவரை, அவருடைய தயவைப்பெற, இந்த ஊர்ப் பார்ப்பன சட்டசபை மெம்பர்கள் சட்டசபையிலேயே தக்ளி எடுத்துச் சென்று கதர் நூல் நூற்றனர். ஏதாவது கேட்டால்,

'கை வேலை செய்துகொண்டிருந்தாலும்—காது கேட்டுக்கொண்டுதானிருக்கிறது' என்று இறுமாப்போடு பதில் சொல்லினர். இன்றோ அதெல்லாம் மறந்தாகிவிட்டது. கதர் ஆபீஸ் மானேஜர் அழுகிறார்; சென்னையில் ஒரு கடையில் மட்டும் ரூ. 7000 நஷ்டம் என்று கணக்குக் கொடுக்கப்படுகிறது. நாங்கள் காங்கிரஸில் இருந்தபோது கதர் விற்பனையில் மாத்திரம், ரூ. 60,000 வரை இலாபம் காட்டி இருக்கிறோம். இன்றோ, அன்றாடம் துணி விற்றால்தான் அன்றாடச் சம்பளமும் வேலையாட்களுக்குக் கிட்டும் என்கிற நிலை. காங்கிரஸின் முக்கிய திட்டங்களான நான்கிலும் அது படுதோல்வியடைந்துவிட்டது என்பதோடு மட்டுமல்லாமல், அவைகளால் நமக்கு யாதொரு பயனும் ஏற்படவே இல்லை. இவைதான் இப்படி என்றால், மற்ற சவுகரியங்களுக்காவது ஏதாவது வழி செய்தார்களா இவர்கள்? வெள்ளையன் ஆட்சிக் காலத்திலிருந்த சவுகரியங்களை இவர்கள் கடுகளவாவது உயர்த்தி இருக்கிறார்களா? வெள்ளையன் ஆண்டகாலத்தில் போர் நடந்து கொண்டிருக்கும்போதே அவன் ஒரு ஆளுக்கு 16 அவுன்ஸ் அரிசி அளந்து வந்தானே! சுயராஜ்ய ஆட்சி வந்தபிறகு 16 அவுன்ஸ் 12 அவுன்ஸ் ஆகி, 12 அவுன்ஸ் 10 அவுன்ஸாகி, 10 அவுன்ஸ் 8 அவுன்ஸ் ஆகி, 8 அவுன்ஸ் 6 அவுன்ஸ் ஆக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டதே! இன்னும் கொஞ்ச காலம் போனால் 6 அவுன்ஸுக்குப் பதில் 4 அவுன்ஸும் அதற்கப்புறம்—அதுவும் கிடைக்காமல் ஒரு பிடி மண்ணையே கொடுப்பார் போலிருக்கிறது நமது மந்திரியார்! இதற்குக் காரணம் என்னவென்று மந்திரியார் சிந்தித்துப் பார்த்தாரா? காந்தியாரே கேட்டாரே! பழைய பூமிகளெல்லாம் எங்கே? பூகம்பத்திலா அழிந்துவிட்டது, அல்லது ஜனத்தொகைதான் என்ன இரண்டு பங்கு அதிகமாகிவிட்டதா என்று! பின் ஏன் உணவுப் பொருள் போதவில்லை என்று கேட்டாரே, என்ன பதில் கிடைத்தது தெரியுமா? 'நெல் விளையும் இடங்களில் புகையிலையும் கரும்பும் நிலக்கடலையும் பயிரிடப்படுவதால் நெல் விளைவு குறைந்துவிட்டது' என்றனர். 'ஏனய்யா நெல் விளைவிப்பதில்லை?' என்றால், 'குடியானவர்கள் நெல் விதைக்கப் பயப்படுகிறார்கள்—நாங்கள் பிடுங்கிக்கொள்கிறோமென்று' என்பதாகக் கூச்சமில்லாமல் பதில் கூறுகின்றனர். நெல் விளைச்சல் குறைந்ததேன்? புகையிலை போட்டாலோ, கரும்பு போட்டாலோ, அதிகப் பணம் கிடைக்கிறது. மேலும் ரேஷன் தொல்லை அவர்களால் பொறுக்கமுடியாததாக இருக்கிறது. எனவே, நெல் விளைவிக்கக் குடியானவர்கள் விருப்பப்படவில்லையென்று பதில் கூறுகின்றனர். இப்படிப் பதில் கூறிவிட்டு, மக்களைப் பட்டினியாய் இருக்கவிடுவது நியாயமா என்று கேட்க இந் நாட்டில் ஆளுண்டா? பொறுப்புள்ள மந்திரியாயிருந்தால் ஒன்று, நெல்லின் விலையையாவது மற்றப் பொருள்களின் விலைக்கேற்ப உயர்த்தி இருக்கவேண்டும்; அல்லது, மற்ற கரும்பு, புகையிலை, நிலக்கடலை சாகுபடிகளைக் கட்டுப்படுத்தி இருக்கவேண்டும். ஒவ்வொரு குடியானவனும் இவ்வளவு ஏக்கராக்குள்தான் நிலக்கடலையோ, கரும்போ, புகையிலையோ, போடலாம்; மற்றவை எல்லாவற்றிலும் நெல்லோ, கம்போ, கேழ்வரகோ 'விளைவித்தேதான் ஆக வேண்டும் என்று உத்தரவு போட்டாக வேண்டும். இன்றேல் என்றைக்கும் இந் நாட்டில் சோற்றுப் பஞ்சம் இருந்துகொண்டுதான் இருக்கும்.

நாங்கள் ஜெயிலுக்குப் போயிருந்தபோது, எங்களுக்கு சாதத்தோடு கொஞ்சம் நிலக் கடலையும் கொடுக்கப்பட்டது; எனக்கு ஆச்சரியமாயிருந்தது. விசாரித்துப் பார்த்ததில் கைதிகளுக்கு 6 அவுன்ஸ் உணவுதான் தரப்படுகிறதென்றும் 2 அவுன்ஸ் நிலக்கடலையாகவும் கொடுக்கப்படுகிறதென்றும் அறிந்தேன். நிலக்கடலையைவிட விலை குறைவாக்கி, அதனால் நிலக்கடலை உற்பத்தியை அதிகமாக்கி, அப்புறம் போதுமான அரிசி கிடைக்காததால் அதே நிலக்கடலையை அதிக விலைக்கு வாங்கிக் கைதிகளுக்குக் கொடுப்பதாம். என்னே புத்திசாலித்தனம்! எவனோ 'வெறுந்துணியை சுமக்கப் பயந்து கொஞ்சம் தண்ணீரில் நனைத்துச் சுமந்தானாம்'. அதுபோலல்லவா இருக்கிறது இது? நெல் விளைவிக்கும்படி செய்வதை விட்டு நிலக்கடலையைப் பயிரிடச் செய்து, அதற்கு அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடும் முட்டாள்தனத்தை என்னென்பது?

இப்படிப் பொறுப்பற்ற முறையில் ஆட்சிசெய்யும் மந்திரிகளுக்கு ஆகாய விமானம் ஒரு கேடா? அன்று பொப்பிலி ராஜா மந்திரியாக இருந்தபோது 2-ஆம் வகுப்பில் பிரயாணம் செய்தால் அதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் கண்களெல்லாம் வீங்கிப் போயின. அவனாவது பரம்பரையாக இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவன். நேற்றுக் கட்டை வண்டியிலும் கால் நடையாகவும் சென்ற ஆட்களெல்லாம் இன்று மந்திரிகள் ஆனபிறகு இரயிலைக் கைவிட்டு ஆகாய விமானத்திலேயே பிரயாணம் செய்கிறார்களே! ஏன் இவ்வளவு செலவு என்று யாராவது கேட்கிறார்களா? ஏழை மக்களுக்குச் சோறில்லை, துணியில்லை என்பதுபற்றிச் சர்க்காருக்குக் கவலை இல்லை என்று கூறினால் உடனே அடக்குமுறை பாணத்தை அவர்கள்மீது எடுத்து வீசினால் அதை எதிர்த்துச் சமாளிக்க ஒரு இயக்கம் வேண்டாமா? இதைத் தானே நம் இயக்கம் செய்துவருகிறது. அக்கட்சியின் போக்கை மக்களுக்கு எடுத்துக்காட்டி அரசாட்சியைத் திருத்தும்படி செய்வதுதானே நம் வேலை. அரசியல் கட்சியாக இருந்தால் இதை எல்லாம் செய்ய முடியுமா? பிரச்சார இயக்கமாய் இருந்து வருவதால்தானே பொதுஜன அபிப்பிராயத்தை நம் பக்கம் திருப்பி, நாம் அவசியம் என்று கருதும் சில சீர்திருத்தங்களையாவது செய்யும்படி சர்க்காரைத் தூண்டமுடிகிறது.

நமக்கு எதிர்ப்பாக இருந்துவரும் காங்கிரஸ் சர்க்காரையே—நாம் சுயமரியாதைச் சங்கத்தின் பேரால் கோரிய சட்டங்களை நிறைவேற்றி வைக்கும்படி செய்து விட்டோம் என்றால், நமது கழகம் பிரச்சார இயக்கமாய் இருந்துவர வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்த வேண்டுமா? நாம் 1929-ல் கூறினோம். ஒருவனுக்கு ஒரு பெண்டாட்டிக்கு மேல் இருக்கக்கூடாது. இருக்கக் கூடுமானால், ஒருத்திக்கு இரண்டு புருஷர்களைக் கட்டிக் கொள்ளும் உரிமை இருக்கவேண்டும். கணவன் நோயாளியாகவோ விபச்சாரம் புரிபவனாகவோ இருந்தால் அவனை விட்டு விலகி,—மறுமணம் புரிந்து கொள்ள மனைவிக்கு உரிமை தரப்படவேண்டும் என்றும் கூறினோம். அன்று காங்கிரஸ்காரர்களும், பார்ப்பனர்களும் ஆசாரம் கெட்டுப்போய்விடும் என்று கூறி நம்மை எதிர்த்தனர். பார்ப்பனர்கள் பலதார திருமணத்தை ஆதரிப்பார்கள், ஒவ்வொரு திருமணத்திலும் தமக்குக் காசு வரும் என்று! கட்டிக் கொண்டு அழும் நம்மவர்க்கன்றோ தெரியும் அதிலுள்ள கஷ்ட நஷ்டங்கள்! அவர்கள் எதிர்ப்பைக் கண்டு நாம் அஞ்சினோமா? எத்தனை பெண்களுக்கு, புருஷன் இருக்கும்போதே வேறுமணம் செய்துவைத்தோம்? ஆங்காங்கு பார்ப்பனர்கள் சத்தம்போட்டு வந்தார்களே ஒழிய 'கேஸ்' போடக்கூட முன்வரவில்லையே? இது மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டு வந்ததால்தானே—இப்போது வேறு வழியின்றி, பலதார மணத்தடை மசோதாவும், விவாகரத்து மசோதாவும் சட்ட சபையில் நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு நாங்கள்தானே காரணமாயிருந்தோம்!

அந்த 1929 முதற்கொண்டே நாங்கள் புரோகிதன் இல்லாமல், ஓமம் இல்லாமல், தாலி இல்லாமல் கல்யாணம் செய்துவரவில்லையா? சட்டம் அனுமதித்தாலும் அனுமதிக்கா விட்டாலும் இன்று அம் மாதிரித் திருமணங்கள் ஆயிரக் கணக்காகப் பெருகிடவே, ராவ் கமிட்டியார், 'பதிவுத் திருமணம் தவிர்த்து வேறு திருமணம் சட்டப்படி செல்லாது' என்று ஒரு சட்டம் இயற்றவேண்டுமென்று சிபாரிசு செய்யவில்லையா? இதையும் அக்கிரகார அன்னக் காவடிகள்தானே எதிர்த்து நிற்கிறார்கள், தம்மவர் புரோகிதப் பாதைக்கு ஆபத்து வந்துவிடுமே என்கிற பயத்தால்! எங்கள் கழகத்தில் அதிகப்படியான தீண்டாதார்கள் இருக்கிறார்கள் என்றாலும்—நாங்கள் ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடத் தயங்குவதில்லையே! எங்கள் பிரச்சாரத்தின் பலன்தானே, இன்று கூடியுள்ள சுமார் 10 ஆயிரம் பேரில் ஒரு '111' பூச்சுக் கூடக் காணமுடியவில்லை. தற்காலத்தில் பார்ப்பான் ஓட்டல்களைக் காட்டிலும் சாயபு ஓட்டலில் அதிக வியாபாரம் நடக்கிறதென்றால் அது யாருடைய பிரச்சாரத்தால்? சட்டம் இயற்றியா நாம் இம் மாறுதல்களைச் செய்தோம்?

நாணயமான பிரச்சாரத்தின் வழியாக—மக்களின் பொது அறிவை வளர்த்ததன் பயனாகத் தானே இவ்வளவும் செய்யமுடிகிறது? இப்போது புரிகிறதா, சிறு கூட்டமாயிருந்தாலும், உண்மையும் உழைப்பும் இருந்தால்—பெருங் கூட்டத்தையும், செல்வாக்கையும் உடைய அரசியல் கட்சியைவிட அதிகமான நன்மைகளைச் செய்யமுடியும் என்பது? என்வேதான் நம் கழகத்தைப் பிரச்சார இயக்கமாகவே வைத்திருக்க நாம் ஆசைப்படுகிறோம்.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-10-1948]

3. நமது கொடி

தாய்மார்களே! தோழர்களே!

இன்று நமக்குள்ள தராசுக் கொடியானது இந் நாட்டில் எங்கும் காணப்படுகின்ற கொடுமைகளையும் அநீதிகளையும் பேத முறைகளையும் ஒழித்து, ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு இல்லை என்னும் சமநீதியைக் காட்டுவதற்கு அறிகுறியாக விளங்குகிறது எனலாம். இந்தக் கொடியில் கூட மாறுதல் ஏற்படலாம். ஏனெனில், இதுவரையில் நமக்குப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டிருந்த 'தென்னிந்திய நல உரிமை சங்க'மானது பழைய காங்கிரசைப் போல, 'எங்கள் உரிமைகளை எங்களுக்கு வழங்குங்கள்; எங்களுக்கும் பட்டம், பதவிகளை அளியுங்கள்' என்று வேண்டுகின்ற முறையில் அமைந்திருந்தது. இப்பொழுதோ அதே சங்கத்தின்பேரால் அந்த நிலை மாறி, பிறருக்கு அவரவர்களுடைய உரிமைகளை வழங்குகின்ற முறையில் நாம் திட்டம் வகுத்துக்கொண்டோம். நம்மையும், நம் இனத்தையும், நம் நாட்டையும் உணர்ந்து கொண்டோம். அதன் பலன்தான் இன்றைய தினம் தெ. இ. ந. உ. சங்கத்தைத் திராவிடர் கழகம் என்று சொல்லுகிறோம்.

திராவிடர் கழகம் தொடங்கியதானது நம் நாட்டு முழுப் பங்கையும் அடைந்து மற்றவர்களுக்கு அவரவர் பங்கைத் தகுதிப்படி வழங்குவதற்குப் போராட்டம் தொடங்கியது என்றே கூறலாம். போராட்டம் என்றதும் சிலர் அஞ்சலாம். ஆனால், போராட்டம் நமக்குப் புதிதல்ல. யாராவது கூறட்டும் இந்த நாடு எக்காலத்திலாவது போராட்டமின்றி சமாதானமாய் இருந்ததா என்பதை. ஆதிமுதல் இன்று வரை எதிலும் போராட்டந்தான். முதலில் உண்டானதாகக் கூறப்படும் ஆரியருடைய நான்கு வேதங்கள் என்ன ஆரியர்–திராவிடர் போராட்டம், தேவர்–அசுரர் போராட்டந்தானே! இதிகாசங்களில் கூறுகிற விஷ்ணுவின் பத்து அவதாரங்கள்தாம் என்ன? அவையும் ஆரியர்—அரக்கர் போராட்டந்தானே! கந்தபுராண கந்தன்–சூரன் போராட்டமும் அதுபோல்தானே! அவை போகட்டும், இந்த நாட்டுச் சரித்திரத்தின் நிலைதான் என்ன? அதுவும் அப்படியேதான்; அதாவது ஆரிய மதம்–புத்த மதம், பிறகு இந்து—முஸ்லிம்தான். ஆகவே மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் நிகழ்ந்து வந்த போராட்டங்கள் எத்தனையோ உண்டு. இன்று காண்பது புதிதல்ல என்கிறோம். இந்தத் தொல்லைகளை ஒழிப்பதற்குப் பழைய முறைகள் அல்லாமல் நாகரிகமான முறையில் சிந்தனை செய்ததின் பலன்தான் திராவிடர் கழகம் ஆகும்.

[போத்தனூரில், 17–12–1944-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 23–12–1944]

4. கழகத்தின் இலட்சியம்

தலைவரவர்களே! தோழர்களே!

திராவிடர் கழகம் நாட்டிலுள்ள காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமதர்மக் கட்சி, இந்துமகாசபைக் கட்சி, இன்னும் மற்ற கட்சிகள்—இவைகளைப் போல், அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியல்ல. ஆனால், மற்ற கட்சிகள், அப்படிக் கருதவில்லையே என்றால்—நாட்டிலுள்ள மற்ற அறியாமைகளைப் போல் அதையும் நாம் ஒரு அறியாமையாகத்தான் கொள்ளவேண்டும்.

திராவிடர் கழகம் என்பது திராவிட மக்களிடையே இன்று கடவுளின் பேராலும், மதத்தின் பேராலும், மோட்ச நரகங்களின் பேராலும், சுயராஜ்யத்தின் பேராலும் இருந்து வரும் மூடநம்பிக்கைகளையும், உயர்வு தாழ்வுகளையும், பித்தலாட்டங்களையும் போக்கி அவர்களிடையே ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், நாணயத்தையும் ஏற்படுத்தப் பாடுபட்டு வரும் ஒருசீர் திருத்தக் குழுவாகும். அது பொதுவாக எல்லாத் திராவிட மக்களுக் காகவும், அதாவது மற்றெல்லாக் கட்சிகளிலும் இருந்துவரும் எல்லாத் திராவிடர்களுக் காகவும் சேர்த்துத்தான் பாடுபட்டுவருகிறது.

பன்னெடுங் காலமாகவே அறிவீனர்களாய் ஆக்கிவைக்கப்பட்டிருக்கும் திராவிட மக்களுக்குச் சிந்தனை அறிவை உண்டாக்கிவைப்பதுதான் நம் திராவிடர் கழகத்தின் முதல்வேலை. திராவிடர்களின் இழிதன்மையை—சூத்திரத் தன்மையைப் போக்குவதுதான் அதனுடைய இரண்டாவது முக்கிய பணியாகும். இவ்விரண்டு பணிகளுக்கும், எந்த அளவுக்கு மற்ற கட்சிகள் அனுகூலமாயிருக்கின்றனவோ அந்த அளவுக்குத்தான் அவற்றைப் பெருமைப்படுத்த முடியும். நாம் அறிந்தமட்டும் இப் பணிகளைச் செய்ய வேறு எந்தக் கட்சியும் முன்வரவில்லை. முன்வராதது மட்டுமல்ல—அப் பணிகளைச் செய்யும் நம்மைப் பழித்தும் வருகின்றன. சில கட்சிகள், நம்மை அழிக்கவும் பாடுபட்டு வருகின்றன. இப் பணிகளை வேறு எந்தக் கட்சி ஏற்குமாயினும் எங்கள் கழகத்தைக் கலைத்துவிடுவதில் யாதொரு ஆட்சேபணையுமில்லை. கூறட்டும்; கலைக்கிறோம்.

இந்த சுயராஜ்ய சர்க்கார் கூறிவிட்டால்கூட—'இனி சூத்திரன் இருக்கமாட்டான்; பிராமணன் இருக்கமாட்டான், இந் நாட்டில்' என்று, எங்கள் கழகத்தைக் கலைத்துவிடத் தடையில்லை. இதை நாம் பலதடவைகள் தெளிவாகக் கூறி வந்திருக்கிறோம். இந்து மகா சபைதான் கூறட்டுமே இன்று—'இனி இந்நாட்டில் சூத்திரன், பிராமணன் என்கிற வேறுபாடோ, வகுப்புப் பிரிவோ, அவ்வேறுபாட்டை வலியுறுத்தும் சட்டங்களோ, சாஸ்திரங் களோ, புராணங்களோ, கடவுள்களோ இருக்க அனுமதியோம்; இவை அனைத்தையும் ஒழிக்கவே நாங்கள் இனி பாடுபடப் போகிறோம்' என்று! உடனே எங்கள் கழகத்தைக் கலைத்துவிட்டு இந்து மகா சபையில் சேர்ந்துவிடுகிறோமே! அதற்கு மாறாக இன்று வரைக்கும் இந்த இழிவு போக்கும் முயற்சியை 'பிராமண' உயர்சாதி மக்கள் தடுத்துக் கொண்டுதானே வந்திருக்கிறார்கள். இராமனாக வந்து, கிருஷ்ணனாக வந்து, நரசிம் மனாக வந்து சீர்திருத்தப் பெரியார்களைக் கொன்ற திருக்கூட்டந்தானே இக்கூட்டம்? தெய்வீக சக்திகளின் பேரால் அவர்களைக் கொன்றது—நரகத்தின் பேரால் மக்களைப் பயமுறுத்தி மூடநம்பிக்கைகளை வளர்த்துவிட்டது—அதனால் பகுத்தறிவு வளர முடியாமற் போய்விட்டது.

எந்தப் பகுத்தறிவுவாதிகளையும் இத் திருக்கூட்டம் முதலில் அழிக்கப் பார்க்கும்; அழிக்கமுடியாவிட்டால் அவனை மனிதனுக்கு மேலாகப் புகழ்ந்து பேசி, அவன் காரியத்தில் இறங்கும் சமயம் பார்த்து, அவனைப் 'பகவான் திருவடி நிழலில்' சேர்த்துவிடும்; அவ்வளவுதான். காந்தியார் நிலை அதுதான். அவர்கள் மட்டுமல்ல, நானும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் அப்படித்தான் செய்திருக்க முடியும். சமூக அமைப்பு—'பாடுபடும் உழைப்பின் பயனெல்லாம் பாடுபடாத வயிற்றுக்கு வந்து குவியும் ரீதியில்' அமைக்கப்பட்டிருக்குமானால்—அதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கூறுவேனா? பிறர் மாற்றப் புகுந்தால் அதற்கு என்னால்தான் இடங்கொடுக்க முடியுமா? ஆனால், சமூக அமைப்பு தானாகவே இப்படி அமைந்துவிடவில்லை. ஆதலால், எத்தனை காலத்திற்கு அப்படி இடங்கொடாமல் இருக்க முடியும்? பாடுபடும் மக்கள் உணர்ச்சி வலுப்பெற்று இருக்கும் இந்தக் காலத்தில்கூடவா மாற்றத்தைத் தடுத்துக்கொண்டிருக்க முடியும்? மாற்றம் வேண்டும். இம் மாற்றம் ஏற்படாதவரையில் எங்களுக்கு அரசியல் ஆட்சி பற்றிக் கவலையில்லை; எங்களை இன்னார்தான்—இன்ன இனந்தான் ஆளவேண்டும்

என்பதுபற்றிக்கூடக் கவலை இருக்காது. எங்களை ஒரு நீக்ரோ ஆள்வதைப் பற்றியோ, அல்லது இராமாயண காலத்தைப்போல் ஒரு 'ஜோடி செருப்பு' ஆள்வதுபற்றியோகூட எங்களுக்குக் கவலை இல்லை. ஆட்சி எதுவாயிருந்தாலும் அது யோக்கிய ஆட்சியாக எங்கள் மனிதத் தன்மை பற்றிக் கவலை கொள்ளும் ஆட்சியாக இருக்கவேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம். இன்று நடப்பது சுயராஜ்ய ஆட்சி அல்ல; காங்கிரஸ் ஆட்சி. இன்று நடப்பது மக்கள் ஆட்சி அல்ல; மனுதர்ம ஆட்சி. 'ரெகுலர்' பார்ப்பன ஆட்சி என்றுதான் நான் கூறுவேன். பார்ப்பன ஆட்சியில், 'மூத்திரத்தையும், சாணியையும் ஏனப்பா குடிக்கவேண்டும்?' என்றால், எப்படி மதத் துவேஷம் செய்வதாகக் குற்றம் சாட்டப்படுமோ, அதேபோல், 'ஏனப்பா, உங்கள் ஆட்சியில் நாங்கள் கெட்டுச் சீரழிய வேண்டும்? சுயராஜ்ய ஆட்சியில்கூட, நாங்கள் ஏனப்பா சூத்திரனாக இருக்க வேண்டும்? ஏனப்பா சுயராஜ்ய ஆட்சியில் சுரண்டல் இருக்க வேண்டும்?' என்று கேட்டால் இது இராஜ துவேஷமாகக் கருதப்படுகிறது. மேலும், நாம் பெற்றுள்ளது சுயராஜ்யமல்ல; குடியேற்ற நாட்டு அந்தஸ்தும், சில அதிகாரங்களும் என்பதை நீங்கள் அறியவேண்டும். அந்த அதிகாரமும் பார்ப்பனர் கைக்குத்தான் வந்திருக்கிறது; பொது மக்களுக்கல்ல. இந்த காங்கிரஸ்காரர்கள் நம்மிடம் என்ன கூறி ஓட்டு வாங்கிச் சென்றார்கள்? சுயராஜ்யம் வாங்கித் தருவதாகக் கூறித்தானே நம்மிடம் ஓட்டு வாங்கிச் சென்றனர்? அப்படியிருக்க சுயராஜ்யம் கிடைக்கச் சாத்தியமில்லை என்று கண்டதும் யோக்கியர்களாய் இருந்தால்—இவர்கள் தம் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு வரவேண்டாமா? எந்தப் பிரச்சினை மீது ஓட்டுப் பெறுகிறீர்களோ, அந்தப் பிரச்சினையை முறைப்படியாக முடித்துக்கொடுக்க வேண்டாமா, உங்களுக்குப் பொறுப்பிருந்தால்? அதை விட்டு, கிடைத்த அதிகாரத்தை உங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறீர்களே, அது நியாயமா? இராஜ துரோகமா?

சுயராஜ்யத்திற்காக ஓட்டுக் கொடுத்த நாங்கள் இன்று, 'எங்கள் சூத்திரப் பட்டம் போக சுயராஜ்யம் வேண்டும்; எங்கள் நாட்டை நாங்களே ஆண்டுகொள்ள எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டும்; எங்களை அன்னியன் சுரண்டாமல் பார்த்துக்கொள்ள எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டும்' என்று கேட்டால் அதை இராஜ துரோகம் என்று குற்றங் கூறுகிறாயே, அது நியாயமா? எங்கள் நாட்டை ஆள எங்களுக்கு என்ன தகுதியில்லையா? அல்லது, எங்கள் நாட்டுக்கு வளப்பந்தான் என்ன குறைவா? வேண்டாம் உங்களுக்கு இந்த வீண் தொல்லை; எங்களைப் பிரித்துவிட்டுவிடுங்கள்.

[வேலூரில், 12-3-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-3-1948]

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இங்கு கூட்டப்பட்டுள்ள இக்கூட்டம் திராவிடர் கழக ஆதரவில் நடைபெறுவதாகும். திராவிடர் இயக்க சம்பந்தமான நடவடிக்கைகள், மற்ற எல்லா இடங்களையும்விட ஈரோட்டில்தான் மிகவும் பின்னணியில் இருந்து வருகிறது. காரணம், மக்களிடையே உணர்ச்சி இல்லை என்பதல்ல; இவ்வூரின் சூழ்நிலை அவ்வாறிருக்கிறது.

இந்த ஊரிலிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் வியாபாரிகளையோ அல்லது மற்றவர்களையோ அங்குள்ளவர்கள், 'நீங்கள் எந்த ஊர்?' என்று கேட்க, இவர்கள், 'ஈரோடு எங்கள் சொந்த ஊர்' என்று பதில் கூறும்போது, 'நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்தாம்; இராமசாமி உங்கள் ஊர்க்காரர் என்பதில் உங்களுக்குப் பெருமைதான்' என்று கூறுவார்களாம். ஆனால், அதற்கு நம் ஊர்க்காரர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமோ? 'அட! நீங்கள்தானய்யா அவரைப் பிரமாதமாகக் கொண்டாடுகிறீர்கள்; எங்கள் ஊரிலே யாருமே இலட்சியம் செய்வதில்லை அவரை; அவருக்கு மதிப்பே கிடையாது' என்று கூறுவார்களாம். அதற்கு, வெளியூர்த் தோழர்கள் இவர்களைப் பார்த்து, 'அப்படியானால் நீங்கள்

மகா புத்திசாலிகள்தாம்' என்று பதில் சொல்லுவார்களாம். கோவை ஜில்லா மாற்றுக்கட்சி முக்கியஸ்தர் ஒருவரே, என்னைப்பற்றி இவ்வாறு வெளியூர்க் கூட்டமொன்றில் கூறினாராம்.

உள்ளூரில் என்னை மதிக்கும் அளவுக்கு நானில்லை என்பது வாஸ்தவந்தான். அதைப் பொறுத்துத்தானே கழக வேலையும் இங்கு இருக்கும்? இன்று கூட இக்கூட்டத்தில் அரசியல் நிலையைப்பற்றிப் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் அரசியலைப் பற்றியும் பேசினார்கள். ஆனால், நான் அரசியலைப்பற்றி இந்த ஊரில் பேச இஷ்டப்படவில்லை. காரணம், அதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் இவ்வூரில் மிகமிகச் சொற்பம்! இந்த ஊரில் பெரும்பாலும் எல்லாம் வியாபாரிகள்; அவர்களுக்கு அடிக்கடி ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்கவும், அதற்கான பூசை, திருவிழா செய்யவுமே காலமெல்லாம் சரியாய் விடுகிறது. அதுவும் கள்ள மார்க்கெட் வியாபாரிகள் தினமும் ஆண்டவனிடம் பேசுவதையே பெரும் பணியாகக் கொண்டுவிட்டனர். இவர்களுக்கு அரசியலைப்பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது? அரசியல் என்றால் என்ன என்றாவது தெரியமுடியுமா? ஒரு சிலருக்காவது அவ்வித ஆற்றல் இருக்கிறதென்றால், இப்பேர்ப்பட்ட வியாபாரிகளிடம் வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டிய காரணத்தினால், அவர்களும் அதிகமாகப் பொதுக் காரியங்களில் ஈடுபட முடிவதில்லை. எனவேதான், இவ்வூரில் திராவிடர் கழக வேலை அவ்வளவு ஆமை வேகத்திலிருப்பதும், என்னைப்பற்றி மதிப்பில்லை என்று கூறுவதற்கும் காரணமாகும்.

ஆகவே, அரசியலைப்பற்றியே தெரியாத, பேசினாலும் புரிந்துகொள்ள முடியாதவர்கள் பெரும்பான்மையாயுள்ள இக் கூட்டத்திலே, நான் அதைப்பற்றிப் பேசாமல், மக்களின் உண்மையான விடுதலைக்கு ஏற்ற சமுதாயத்தைப் பற்றிப் பேசலாமென்று எண்ணுகிறேன். நான் பல ஊர்களில் சுற்றிப் பிரச்சாரம் செய்து வருகிறேன் என்றால், எல்லா இடங்களிலும் ஒரே பேச்சுப் பேசுவது கிடையாது. சற்றுப் பக்குவமடைந்த, கழகக் கொள்கையில் மிகவும் ஆர்வமுடைய, அல்லது பொது அறிவு படைத்தவர்கள் மிகுதியாக உள்ள ஊர்களில் அரசியலைச் சற்றுக் குறிப்பிடுவது வழக்கம். ஈரோடு போன்ற ஊர்களானால் அதற்கேற்ற பேச்சாகத்தான் பேசுவேன்.

இன்னும் கூறவேண்டுமானால் அரசியலைப்பற்றித்தான் இன்று என்ன வாழ்கிறது? அரசியலை எவ்வளவு இழி தன்மைக்குக் கொண்டுவர வேண்டுமோ அந்த நிலைக்குக் காங்கிரஸ் கொண்டு வந்துவிட்டது. நாங்கள் அரசியலில் போட்டிபோடப்போவதில்லை என்று எத்தனை தரம்தான் கூறினாலும், நமது காங்கிரஸ்காரர்களுக்குப் புரிவதில்லை. இன்று நேற்றல்ல—நான் இவ்வாறு சொல்வது. நான் ஜஸ்டிஸ் கட்சிக்கு என்று தலைவனாய் வந்தேனோ, அன்று முதலே மந்திரி பதவி வகிப்பதற்கு எதிர்ப்பாயிருந்து வந்திருக்கிறேன்.

ஆனால், நீங்கள் கேட்கலாம்: 'என்னய்யா, நீங்களே உங்களைப்பற்றிப் பெருமையாய்ப் புகழ்ந்துகொள்கிறீர்களே; உங்களுக்குப் பதவி கொடுக்க யார் அழைத்தார்கள்; வேண்டினார்கள்?' என்பதாக. தோழர்களே! கனம் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமது மந்திரி சபையை இராஜிநாமா செய்துவிட்டு வீடுபோய்ச் சேருவதற்கு முன்னமேயே, கவர்னர், ஜஸ்டிஸ் கட்சியினரை மந்திரி சபை ஏற்படுத்தும்படி வற்புறுத்தி அழைத்ததை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அப்பொழுது உதகையிலே இருந்த கவர்னர், நமது காலஞ்சென்ற பன்னீர்செல்வம் அவர்களைக் கூப்பிட்டு, 'உங்கள் கட்சித் தலைவருக்கு ஆங்கிலம் நன்றாகப் பேசவும் எழுதவும் தெரியுமா?' என்று கேட்டாராம். அதற்குச் செல்வம் அவர்கள் கவர்னரை நோக்கி, 'ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்?' என்று வினவ, 'அடுத்த மந்திரிசபை உங்கள் கட்சியார்தான் நிறுவவேண்டியிருக்கும்; அப்போது கட்சித் தலைவர் தானே பிரதமராயிருக்கவேண்டும்! அதற்காகத்தான் கேட்டேன்' என்றாராம்.

'அவருக்கு ஆங்கிலம் தெரிகிறதோ இல்லையோ, முதலாவதாக அவர் பதவியை ஒப்புக்கொள்ளுகிறாரா, இல்லையா என்பதை அறிந்துகொள்ள வேண்டும்' என்று செல்வம் அவர்கள் கூறினாராம். 'நீங்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டு இயக்கத்தை நடத்துபவர்கள் தானே; பதவி வகிப்பதில் என்ன தவறு இருக்கிறது?' என்று கேட்டாராம் கவர்னர். 'எப்படியிருந்தாலும், பதவியேற்கும் விஷயம் மட்டும் கட்சித் தலைவரைக் கலக்காமல் கூற முடியாது' என்று அவர் கூறினாராம். பிறகு, என்னிடம், கவர்னர் கூறியதைச் செல்வம் கூறிவிட்டார் என்பதையறிந்த கட்சிப் பிரமுகர்களும் எனக்குக் கூறியதுடன் பதவியையும் ஒப்புக்கொள்ளலாமென்று ஜாடையாகக் குறிப்பிட்டனர். நான் பதவியேற்றுக்கொள்வ தென்பது முடியாது என்று அவர்களிடம் கூறியதோடல்லாமல், அடுத்து சென்னையில் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் அரண்மனையில் 1939-ல் கட்சியின் நிர்வாகக் கமிட்டியையும் கூட்டி, மந்திரி பதவி ஏற்பதுகூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினேன்.

ஆனாலும், அக்கூட்டத்தில் தீர்மானம் சுலபமாக நிறைவேறிற்றென்று நினைக்கிறீர்களா? அன்று நிர்வாகக் கமிட்டியிலிருந்து பெரிய பெரிய சீமான்கள், ஜமீன்தார்கள் எல்லாம் எதிர்த்தார்கள். எனது கருத்திற்கு ஆதரவாக ஒரு சில சாதாரணத் தோழர்கள் தாம் இருந்தார்கள். ஓட்டுக்கு விட்டிருந்தால் பதவியேற்புக்கு ஆதரவாகப் பெருவாரியாக ஓட்டுக் கிடைத்திருக்கும். எனினும், கட்சித் தலைவன் என்கின்ற முறையில் நானே தீர்மானத்தைப் பிரேரேபித்தேன். இதைக்கண்டதும் அவர்கள் விழிக்கலானார்கள். நமது பன்னீர்செல்வத்தை எழுந்து பேசுமாறு, பதவி ஆதரிப்பாளர்கள் செய்தனர். நான் பன்னீர்செல்வம் அவர்களையும், 'இனி பேசுவதற்கு இடமில்லை; தயவுசெய்து உட்காருங்கள்' என்று கூறிவிட்டேன். பிறகு எனக்கு வேண்டியவரான—அதாவது அவர் சொல்லைத் தட்டமாட்டேன் என்ற பாத்தியதையுடைய நண்பர் சவுந்தரபாண்டியன் அவர்களை விட்டுப் பேசச்சொன்னார்கள். அவரும் எழுந்து ஏதோ பேச வாயெடுத்தார். 'தாங்களும் ஒன்றும் பேசவேண்டிய அவசியமில்லை' என்றேன். அதற்குப் பாண்டியன், 'இப்படி நீங்கள் கூறக்கூடாது; தயவுசெய்து என் வார்த்தையைக் கேளுங்கள்' என்றார்.

நான், 'தங்களிடமும் அவ்விதம் கூறும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டதுபற்றி வருந்துகிறேன்; தயவுசெய்து உட்காருங்கள்' என்றேன். அவரும் உட்கார்ந்துவிட்டார். இவர்களிரண்டு பேருடைய முயற்சியும் தோல்வியுறவே, பதவி ஆதரிப்பாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதும், விழிப்பதுமாயிருந்தார்கள். உடனே ஓட்டுக்குவிட்டேன். ஏதோ என் சொந்த தாட்சண்யத்துக்காகச் சிலர் கையைப் பாதி உயர்த்துவதும், பாதி கீழே விடுவதுமாய் இருந்தார்கள் என்றாலும், நான் துணியை மேலே உதறிப் போட்டுக் கொண்டு பேசியதைக் கண்ட அவர்கள் கடைசியில் தீர்மானத்தை நிறைவேற்றித் தந்தார்கள். உடனே ஒன்றும் பேசாமல் புறப்பட்டுவிட்டேன். ஏன் அப்படி வந்து விட்டேன் என்றால், பதவி ஏற்பை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம் என்று மிக முன்னெச்சரிக்கையான காரியங்களை நடத்தி ஏமாந்த தோழர்களின் முகத்தைப் பார்க்க எனக்கே பரிதாபமாயிருந்தது.

தோழர்களே! இப்படி மந்திரிசபையை ஏற்க மறுத்தது மட்டுமல்ல, பின்னர், சட்ட சபைத் தேர்தலுக்கு நிற்பதும் கூடாதென்று சேலம் மாநாட்டிலே தீர்மானித்துள்ளோம். இதை ஏன் கூறுகிறேன் என்றால், நாங்கள் அரசியல் வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதுடன், காங்கிரஸ்காரருக்கு அரசியல் விரோதியாகவும் இல்லை என்பதை விளக்கவேயாகும்.

அது மட்டுமல்ல; காங்கிரஸ் உங்களிடம் ஓட்டுக் கேட்டபோது, என்னென்ன கூறினார்கள்? இன்று நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? ஓட்டு வாங்கிய சட்டசபை மெம்பர்களை நீங்கள் அணுகிக் கேட்டால், நியாயமான பதில் வருகிறதா? 'அன்று அவ்வாறு கூறினீர்களே; இன்று இப்படி நடக்கின்றீர்களே!' என்றால், 'நான் ஓட்டுப்

பெறுவதற்காகச் சொன்னேன். உனக்குப் புத்தி எங்கே போயிற்று?' என்றுதான் கூறுவாரேயன்றி, நாணயமான தன்மையுடன் தங்களின் தவறுதலுக்கு வருந்தப்படும் சட்டசபை உறுப்பினர் விரல்விட்டு எண்ண முடியுமா? சட்டசபை உறுப்பினர்தாம் அவ்வாறிருந்தாலும், மந்திரிகளாவது ஒழுங்காகப் பதில் கூறுகிறார்களா? ஓட்டர்களுக்குத் தான்—தங்களுக்கு என்ன வேண்டுமென்றாவது தெரியுமா? ஓட்டுப் பெற்றுச் சென்ற வீரர்களுக்குத்தான்—நாட்டின் இன்றைய நிலைக்கு எது தேவையென்றாவது அறிந்து கொள்ளும் ஆற்றலிருக்கிறதா என்று கேட்கிறேன்.

இவ்விதச் சூழ்நிலையில் திராவிடர் கழகத்தாராகிய நாங்கள் மந்திரி பதவி வகித்தாலும் இன்றைய நிலைதானிருக்குமே அன்றி, வேறில்லை. முதலாவதாக, மக்களுக்கு நல்வாழ்வு உண்டாக்கத்தக்க பொறுப்புள்ள ஆட்சி அமையவேண்டுமானால், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களிடத்திலே அறிவு வளர்ச்சி, மனமாறுதல் ஏற்பட்டாக வேண்டும். அதில்லாதவரை யார் மந்திரியானாலும் அவர்கள் தங்கள் சொந்தத்தில் இலாபமடைய முடியுமேயன்றி, மக்களுக்கு நன்மை பயக்கமுடியாது. ஒரு சிறிதாவது பொதுநலத்தில் அக்கறையுடையவர்கள் மந்திரிகளாக நீடித்திருக்க முடியாது. நமது மாஜி முதல்வர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் போன்ற நாணயமுள்ளவர்கள் பதவியில் நீடித்திருக்க முடியவில்லையே! அரசியலிலோ, பொதுவாழ்விலோ என்னைப் பொறுத்த வரை மிக யோக்கியமான, நாணயமானவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால்—இன்று கவர்னர் ஜெனரலாயுள்ள கனம் இராசகோபாலாச்சாரியார் அவர்களைப்பற்றியும், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களைப் பற்றியுந்தான் நான் அடிக்கடி கூறுவதுண்டு.

நண்பர் ஆச்சாரியார் அவர்களுக்கு, தன் இன அபிமானம் இருக்கிறதென்று கூறலாம். அதைப்பற்றிக் குற்றம் கூற முடியுமா? அந்தப் புத்தி நம்மவர்களிடத்தில் இல்லையென்று நாம் பொறாமைப்பட வேண்டியிருக்கிறதே அல்லாது, அவருக்குத் தனது இன உணர்ச்சியிருப்பது எப்படித் தவறாகும்? அரசியல் துறையில் இவர்களுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பினும், பொதுவாழ்வில் சிறிதேனும் நேர்மை தவறாமல் நடப்பவர்கள் என்பதில் யாரும் ஆட்சேபணை கூறமுடியாது.

ஆச்சாரியார் அவர்களுக்குத் தனது 'இன உணர்ச்சி அபிமானம்' இருக்கிற தென்றாலே, நான் மட்டும் என்ன அதில் இளைத்து விட்டேனா? அவர்களைவிட ஒரு படி மேலாகவேதான், நாமும் இன உணர்ச்சி கொண்டு தொண்டாற்றுகிறோம். எனவே, அவரது பொது நோக்கமே மிகவும் முக்கியமானதாகும். அதே போன்று ஓமாந்தூரார் அவர்களும் பொதுமக்களை வஞ்சித்தோ, ஏமாற்றியோ, கொள்கையை விட்டுக்கொடுத்தோ தனக்கென்று ஒன்றும் தேடிக் கொள்ளவில்லை.

நான் இவர்களை இப்படிப் புகழ்கிறேனே என்று சிலருக்குச் சந்தேகமிருக்கலாம். தோழர்களே! இந்த இரண்டு பேருந்தான் எனக்கும், எனது இயக்கத்துக்கும் பெரும் தொல்லை விளைவித்தவர்கள். ஆச்சாரியார் அவர்கள் சென்னை முதல்வராயிருந்தபோது தான்—சென்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் எனக்கு இரண்டாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது; எனது மோட்டார் காரையும் அபராதத்திற்காக ஏலம் போட்டார்கள். இன்னும் எவ்வளவோ அடக்குமுறைகள் உங்களுக்குத் தெரிந்தவைதான்.

நமது இராமசாமி ரெட்டியார் அவர்கள் ஆட்சியில் எங்களது இயக்கத்திற்கு ஏற்பட்ட அடக்குமுறைகள் சொல்லத் தரமன்று. எனினும் பித்தலாட்டமோ, பதவிக்காகச் சூழ்ச்சியோ, ஆதிகாரங்களைத் தன் சொந்த நலனுக்காகத் துஷ்பிரயோகம் செய்வதோ இவர்களிடத்தில் சிறிதும் கிடையாது. கொள்கைகளைப் பெரிதாகக் கொண்டார்களே யன்றிப் பதவிதான் நிரந்தரம் என்று அதற்கு அடிமையாகிவிடவில்லை. அதனாலேதான் நண்பர், இராமசாமி ரெட்டியார் அவர்கள் பதவி நிலைப்பதற்காகப் பேரமோ, சூதுவாதோ

செய்யாமல் வெளியேறிவிட்டார். ஆனால், அவர் கொண்ட இலட்சியத்தை ஏறத்தாழ நிறைவேற்றிவிட்டார்.

இன்று மந்திரி சபையில் ஒரு பார்ப்பனருக்கு மேல் வரமுடிந்ததா? அய்க்கோர்ட் பிரதம நீதிபதி பார்ப்பனராக வரமுடிந்ததா? மற்றும் அய்க்கோர்ட் நீதிபதிகளில் திராவிடர்கள் வரமுடியுமென்று, இதற்கு முன் நாம் எதிர்பார்த்திருக்க முடியுமா? மற்றும் போலீஸ் இலாக்காவில் பொறுப்புள்ள உத்தியோகங்களில் திராவிடர்கள் தாமே இன்று இருந்து வருகின்றனர். கலெக்டர் முதலான உத்தியோகங்களிலும், அவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எவ்வளவு நேர்மையாக அமுல் நடத்தியிருக்கிறார்! இதைக் கண்டு தான் பார்ப்பனர்கள் அவர் மீது காய்ந்து விழுந்து டெல்லி வரை கூப்பாடு போட்டனர்.

ஆனால், இராமசாமி ரெட்டியார் அவர்கள், தான் செய்த ஒவ்வொரு காரியத்திலும் உள்ள நேர்மையை அவர்களுக்கு எடுத்துக் காட்டியபின், எந்த டெல்லி அதிகாரிகள் பார்ப்பனர் பேச்சைக் கேட்டு இவரைத் தவறாக நினைத்தார்களோ அவர்களே—குறிப்பாக சர்தார் படேல் அவர்களே, ஓமாந்தூராரின் திறமை, நேர்மை ஆகியவைகள் பற்றிச் சென்னைக்கு வந்திருந்தபோது வெளிப்படையாய்க் கூறிவிட்டுச் சென்றாரே! அவர் மட்டுமா? கனம் ஆச்சாரியாரிடம் பார்ப்பனர்கள் எல்லாம், 'இந்த ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார், இராமசாமி நாயக்கரைவிட மேலே போய்விட்டார். இதற்கு உதாரணம் வேண்டுமென்றால் ரெட்டியாரை அடிக்கடி இராமசாமி நாயக்கரும், அவரது திராவிடர் கழகத்தாரும் புகழ்ந்து பேசுகின்றார்கள்; எழுதுகின்றார்கள்' என்று கூப்பாடு போட்டதற்கு, என்ன சொன்னார் தெரியுமோ ஆச்சாரியார்? 'அட பாவிகளா! திராவிடர் கழகத்தாரும், இராமசாமி நாயக்கரும் புகழும் அளவுக்கு ஆட்சி நடத்துகிறார் என்றால், அது எனக்குப் பெரும் மகிழ்ச்சியையல்லவா அளிக்கிறது? அந்த ஒரு மந்திரியையாவது அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களே, அதுவரை நமக்கு இலாபமல்லவா? ரெட்டியார் மிகச் சாமர்த்தியமாகச் சமாளித்து எப்படியோ ஆட்சி நடத்துகிறார். அவருக்கு ஒன்றும் தொல்லை விளைவிக்காதீர்கள். ரெட்டியாரைப் பதவியிலிருந்து தள்ளினீர்களோ தீர்ந்தது; அதிலிருந்து வீண்வம்புதான் ஏற்படும்' என்று பார்ப்பனர்களிடமும் அவர்களது ஆட்களிடமும் எச்சரித்து அனுப்பியிருக்கிறார்.

அவ்வாறிருந்தும் ஓமாந்தூராரை அவர்கள் விட்டபாடில்லை. கடைசியாக, அவரே பதவியிலிருந்து, அதாவது போட்டியிலிருந்து விலகிவிட்டார். எனினும், அவருக்குப் பதிலாக ஒரு திராவிடரே வரமுடிந்ததேயன்றிப் பார்ப்பனர் வரமுடியவில்லை; இனி முடியவும் முடியாது. ஆனால், இப்போது வந்துள்ள முதல்வர் அவரது கொள்கையைப் பின்பற்றுகிறாரோ, அல்லது சுயநலக்காரரின் ஆதிக்க ஆணவங்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவாரோ என்பதைச் சற்று நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டியிருக்கிறது.

இவைகளை ஏன் கூறுகிறேன் என்றால், இராமசாமி ரெட்டியார் இவ்வளவு ஒழுங்காக நடந்துவந்தும் பதவியிலிருந்து வெளியேற வேண்டியிருக்கிறதென்றால்—இன்றைய ஆட்சி முறைக்கும் நாணயத்திற்கும் சம்பந்தம் இல்லையென்றல்லவா அது எடுத்துக்காட்டுகிறது? அப்பேர்ப்பட்ட இடத்தில் நாங்கள் போய் உட்கார்ந்தால்மட்டும் என்ன சாதித்துவிட முடியும்? இராமசாமி ரெட்டியாராவது இரண்டாண்டுகள் சமாளித்தார். நாங்கள் இரண்டு நாட்கள் இருக்கமுடியாதே! அல்லது, நாங்களும் சுயநலக்காரர்களாகிவிட்டால், பதவியும் பட்டமும் பெரிதென்று மானத்தைவிட்டு வயிறு நிரப்பலாம்.

எனவேதான், நாங்கள் காங்கிரசுக்கு அரசியல்விரோதிகளல்லர் என்றும், எங்களுக்கு அரசியலைப்பற்றி அக்கறை கிடையாது என்றும் விளக்கமாகவும், உறுதியாகவும் கூறி வருகிறோம். அதுமட்டுமல்ல, இன்றைய ஓட்டர்களின் எண்ணிக்கை 100-க்கு 10 தான் ஆகும்; அதாவது படித்தவர், பணக்காரர்கள். இந்த ஓட்டர்களால் மட்டும் தேர்ந்தெடுக்கப் படும் சட்டசபை உறுப்பினர்கள், மந்திரிகளே இவ்வாறிருக்கையில், வரப்போகும் தேர்தலில்

வயது வந்தவர்க்கெல்லாம் ஓட்டு அளிக்கப்பட்டிருக்கிறது! அதாவது, திருடன், காலாடித் தனம் செய்பவன், எதற்கும் அருகதையற்றவன், பாமரர் ஆகிய அனைவருக்கும் ஓட்டு. இவர்கள் எப்பேர்ப்பட்டவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைச் சற்று நடுநிலையிலிருந்து யோசித்தால், நான் ஏன் அரசியல் வேலை முக்கியமல்ல என்று கூறுகிறேன் என்பது விளங்கும்.

தோழர்களே! நான் இவ்வாறு கூறுவதால் படித்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் மட்டுமே ஓட்டு இருக்கவேண்டும், மற்றவர்களுக்குக் கூடாது என்று நான் சொல்வதாகச் சிலர் தவறாகக் கருதக்கூடும். பாட்டாளி மக்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள உயரிய ஒரே சக்தி அவர்களுக்கிருக்கும் ஓட்டு முறை ஒன்றுதான். ஆனால், அதை உபயோகிக்கும் அறிவு வளர்ச்சி பெறாமல் ஓட்டர்களாக மட்டுமிருந்தால் பொதுஜன சர்க்கார் ஏற்படாது என்பதுடன்—அதற்குப் பதிலாக, 'ஜனநாயகம்' என்னும் பேரால் காட்டுமிராண்டித்தனமான அக்கிரம ஆட்சிதான் ஏற்படும். ஓரளவு இன்று அதன் அறிகுறிகளையும் கண்டுவருகிறோம்.

எனவே, திராவிட இயக்கத்தினராகிய எங்களது முதல் வேலையாக மக்களிடையேயுள்ள மடமையை, அறிவின்மையை ஒழித்து அவர்களை அறிவுள்ள மக்களாக்குவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் பின்னரே மக்கள் தங்களின் தேவைகளை அறிந்து, அதற்கேற்ற ஆட்சியாளரையும் தேர்ந்தெடுக்க முடியும் என்பதே எனது கருத்தாகும். இந்நிலை ஏற்படாத வரை அரசியல் வேலையென்பது ஒரு சுயநலக் கூட்டத்தாரின் சொந்த நலனுக்குகந்ததாகவே முடியும் என்பது உறுதி. இதன் காரணமாகத்தான் நான் மக்களிடையே முதன் முதலில் சமுதாய விழிப்பை, வளர்ச்சியை உண்டாக்கப் பாடுபட்டுவருவதின் கருத்துமாகும்.

அன்பர்களே! நம் நாட்டு அரசியல் பற்றி மட்டுமல்ல, இந்திய அரசியலைத்தான் எடுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு கேவல நிலைக்குச் சென்றுவிட்டது! உலகிலே எல்லா நாடுகளும் முடி அரசிலிருந்து விடுபட்டு வரும் இது சமயத்தில், இந்திய நாடானது முடியரசின் கீழ் ஓர் குடியேற்ற நாட்டு அந்தஸ்துடையதாக ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, உலகில் பெரும்பாலும் அரசர்களை அதிபதியாகக் கொண்ட நாடுகள் இன்று கிடையாது. பாகிஸ்தான், சிலோன் போன்ற நாடுகள் பிரிட்டிஷ் மன்னரின் ஆதிபத்தியத்திற்கு உட்பட்ட நாடுகளாகிவிட்டன; அதிலே இந்தியாவும் ஒன்று. ஆனால் அதை மறைக்க, இந்தியாவுக்கு மட்டும் தனிச் சலுகை, விரைவில் குடியரசாகிவிடும் என்றெல்லாம் பித்தலாட்டங்கள் செய்யப்படுகின்றன.

இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்துக்காகவா இவ்வளவு தியாகம் செய்தனர் என்று கேட்கிறேன். அக் காலத்தில் மிதவாதிகள் கேட்டுவந்த குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு, இன்று சுயராஜ்ய வீரர்—பொதுவுடைமை வீரர் ஜவஹர்லால் இந்தியாவைக் கொண்டுவந்து விட்டார். இது எவ்வளவு கேலிக்கூத்து என்பதை அரசியலிலே ஞானமுள்ளவர்கள் மட்டுமே ஒப்புக்கொள்வர்.

இவ்வாறு இந்தியாவை டெல்லி சர்க்கார்—மன்னரின் ஆதிபத்தியத்திற்குட்பட்ட நாடாக்கக் காரணம் என்ன? 'தனக்கு இரண்டு கண் போனாலும், எதிரிக்கு ஒரு கண் போகட்டும்' என்று கூறுவார்களே, அம் மாதிரியாக—இந்தியாவில் ஒவ்வொரு இனமும் தங்களின் உரிமையாகிய 'தனி அரசு' கேட்கின்றது. குறிப்பாக நாம் திராவிட நாடு தனித்து சுய ஆட்சி பெற வேண்டுமென்று கிளர்ச்சி செய்வது, வடநாட்டு ஆதிக்கத்திற்குப் பெரும் தலைவலியாயிருக்கிறது. 'தென்னாட்டினர் தங்களது உரிமையைப் பெற இறங்கி விட்டால், ஏற்கனவே வடநாட்டில் இருக்கும் கொந்தளிப்பையே சமாளிக்க முடியாது தவிக்கும் நாம், தென்னாட்டினரை வெல்ல முடியாது' என்று கருதியே, பிரிட்டிஷாரின் ஆதிபத்திய உறவைக்கொண்டு தென்னாட்டினர்களை அடக்கியாளலாம் என்ற சிறுமதி

கொண்டு, பாகிஸ்தான், சிலோன், தென்னாப்பிரிக்கா நாடுகள் போன்று இந்தியாவும் ஏகாதிபத்திய முறைக்கு அடிமைப்பட்டுவிட்டது. இந்த இலட்சணத்திலுள்ள அரசியலைப்பற்றி நாம் என்ன செய்வது?

எனவே, மக்களுக்குச் சற்று பயனுள்ள காரியமான சமுதாயத் தொண்டிலாவது பாடுபட்டால், அதன் மூலம் காலாகாலத்தில் நாடு சீர்திருந்தும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் கொண்டே, திராவிடர் இயக்கம் அத் துறையில் பாடுபட்டு வருகின்றது. இதை, காங்கிரஸ் திராவிடர்கள் அறிந்து—எங்களுக்கு எதிரிகளாகவும், பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகவும் இராமல்—நம் மக்களின் உண்மை விடுதலைக்கு உழைக்க முன்வர வேண்டுகிறேன்.

[ஈரோட்டில், 7-5-1949-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-5-1949]

தாய்மார்களே! தோழர்களே!

திராவிடர் கழகம் நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது என்பது உங்களுக்குத் தெரியும். இது 35 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிற ஒரு ஸ்தாபனம். நான் வேண்டுமானால் இதில் தலைமைப் பதவிக்கு வந்து பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் இருக்கலாம். 1938-ல் வந்தேன். அதற்கு முன்னாலே 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற பெயரால் இது இருந்துவந்தது. 1916-லிருந்து 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயரில் தொண்டாற்றி வந்தது. அந்தத் தொண்டைப் பின்பற்றியே, இன்னும் கொஞ்சம் முன்னேற்றக் கொள்கைகளைக் கொண்டு இப்பொழுது வேலை செய்து வருகிறது.

இப்பொழுது திராவிடர் கழகம் என்னுடைய தலைமைக்கு வந்தபிறகு நான் துணிவாகவே மூன்று கொள்கைகளைச் சொல்லிக்கொண்டு வந்து இருக்கின்றேன்.

முதலாவது கொள்கை, இந்த நாட்டிலே இருக்கிற மனித சமுதாயத்திலே உள்ள உயர்வு, தாழ்வு; அதற்கு ஆதாரமான வருணாசிரம தர்மம்; அதை ஆதரிக்கின்ற மதம், சாஸ்திரம், புராணங்கள்; இவைகளினாலே கற்பிக்கப்பட்ட கடவுள்கள் ஆகியவை ஒழிய வேண்டும் என்பது முதல் கொள்கையாகும்.

அது எதற்காக என்றால், அந்தக் கடவுள்களும், சாஸ்திரமும், மதமும்தான் பார்ப்பான், பறையன், சூத்திரன் என்றெல்லாம் சொல்லும்படியான முறைகளைக் கற்பித்து இருக்கின்றன. ஆகவே, அவை அடியோடு ஒழிந்தாக வேண்டும் என்று சொல்கின்றேன். இதை, நாங்கள் சுயமரியாதை இயக்கம் என்று துவக்கியபோது ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டோம்.

இரண்டாவது கொள்கை, எங்களுடைய நாடு விடுதலை அடைய வேண்டும் என்பதுதான். நாம் யாவருமே—காங்கிரசுக்காரர்கள் உட்பட, முன்பு, நம்முடைய மாநிலம் சுயாட்சி பெற்றிருந்தால் போதும்; வெள்ளைக்காரர்களுடைய ஆட்சியைப் பற்றிக் கவலை இல்லை என்று நினைத்தவர்கள். பிறகு, வெள்ளைக்காரர்கள் போவதாய் இருந்தாலும் சரி; போகாமல் இருந்தாலும் சரி; நாம் நமக்கு மாநில சுதந்திரம் வேண்டும் என்றோம்; பிறகு அவர்களை வெளியேற்றி நம்முடைய நாடு விடுதலை பெறவேண்டும் என்று சொன்னோம். இப்பொழுது வெள்ளைக்காரன் போய்விட்டான். ஆனாலும், நாம் இன்னும் அடிமைகளாக இருக்கிறோம். நம்முடைய மாகாணத்திற்கு—இராச்சியத்திற்கு சுய ஆட்சி இல்லை. ஆதலால், நம் மாநிலம் விடுதலை பெற்றாக வேண்டும்.

வெள்ளையன் இருக்கும்போதே, நம்முடைய நாடு மற்ற மாகாணங்களைப்போல் இல்லாமல் தனி நாடாக (இராச்சியமாக) பூரண சுயேச்சையாக இருக்கவேண்டும் என்று 1938-லேயே ஆரம்பித்தோம். அதாவது, திராவிட நாடு அல்லது தமிழ்நாடு ஒரு தனி நாடாக

இருக்கவேண்டும் என்று கூறி வந்தோம். இந்த நாட்டிற்கும் வெள்ளைக்காரனுடைய மத்திய அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது என்று சொன்னோம். அந்தக் கொள்கைப்படியே இன்றையதினம் திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்று சொல்லுகிறோம்.

இந்தச் சென்னை மாகாணம் இந்திய அரசாங்கத்திற்கு உட்பட்ட பல இராஜ்யங்களைப்போல இது ஒரு இராஜ்யம் என்று இருக்கக்கூடாது.

நாம் பூர்ண சுயேச்சை உடைய தனி இராஜ்யமாக இருக்கவேண்டும்.

நாம் கேட்பது—பர்மாவைப் போல, இலங்கையைப் போல, பாகிஸ்தானைப் போல ஒரு தனிநாடு கேட்கின்றோம். அந்தப்படிக்கே ஆகித் தீரவேண்டும். இது நம்முடைய இரண்டாவது கொள்கை ஆகும்.

மூன்றாவதாக, இந்த இரண்டு காரியமும் ஆகிறவரையிலே நம்முடைய சமுதாயத்திலே வருணாசிரம முறைப்படி வகுத்துள்ள வகுப்பு மக்கள் (பார்ப்பனர், சூத்திரர், பஞ்சமர்) விகிதப்படி வகுப்பு உரிமை தரப்படவேண்டும்.

நாம் இப்பொழுது சர்க்கார் கணக்குப்படி இந்துக்கள் என்ற கூட்டத்திலே மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறோம்.

இந்த மூன்றையும் வைத்துக்கொண்டாலும் சரி; பார்ப்பனர் அல்லாதார் யாவரும் ஒன்றே என்று வைத்துக்கொண்டாலும் சரி—அவரவர்களுடைய விகிதாச்சாரப்படி அவர்களுக்கு இடம் அளிக்கவேண்டும்.

பார்ப்பனர்கள் அவர்கள் எண்ணிக்கைப்படி 100-க்கு இரண்டே முக்கால் எடுத்துக் கொள்ளட்டும்; எங்களுக்கு மீதி விகிதாசாரப்படி—கிட்டத்தட்ட 75, 80 விகிதம் கொடுத்துவிட வேண்டும்; பஞ்சமர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சுமார் 15 விகிதம் இருக்கிறார்கள்; அவர்களுக்கும் பிரித்து, அந்த விகிதப்படிக்கே கொடுத்துவிடவேண்டும்.

அந்தந்த சாதியை எடுத்துக்கொண்டாலும் நாம் ஒன்றும் பயப்படவேண்டியதில்லை. அந்தப்படியான நிலைமை நமக்கு ஏற்படவேண்டும். நமக்கு ஆகவேண்டியது எல்லாம் இந்த மூன்று கொள்கைகள் வெற்றியடைய வேண்டுமென்பதேயாம்.

[சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், 25-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-3-1951]

5. கறுஞ்சட்டை அணியுங்கள்

தலைவரவர்களே! தோழர்களே!

இனி, திராவிடர் கழகத்தைப்பற்றியும் கூறவேண்டும். திராவிடர்கழகக் கொள்கைகளை விளக்குமுன்னால், கறுஞ்சட்டை ஸ்தாபனத்தின் மீது விதிக்கப்பட்டு இருக்கிறது என்னும் தடையுத்தரவு குறித்து சில கூறவிரும்புகிறேன். நமது மாகாண சர்க்கார், 'கறுஞ்சட்டை ஸ்தாபனம் சட்ட விரோதமான ஸ்தாபனம்' என்று பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். அம் மாதிரி ஸ்தாபனமொன்றும் திராவிடர்கழகத்தின் சார்பாகவோ தனிப்பட்ட தன்மையிலோ இல்லை. ஆனால், ஒரு காலத்தில் பொதுக்கூட்டங்களின் போதும், மாநாடுகளின்போதும் தொண்டர்களாயிருந்து பணியாற்ற ஒரு கறுஞ்சட்டைக் கூட்டத்தை ஏற்படுத்துவது நலமென்று கருதி, ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நினைத்து அறிக்கைவிட்டோம். அதையொட்டி அக்கூட்டத்தில் இருந்து தொண்டாற்ற விரும்பும் தோழர்களைச் சில கேள்விகள் கேட்டோம். 'உங்களால் கழகத்துக்கு

முழுநேரத் தொண்டாற்ற முடியுமா? அல்லது தேவைப்பட்ட நேரத்தில்தான் தொண்டாற்ற முடியுமா?' என்று கேட்டோம். 'முழுநேரத் தொண்டர்களாயிருப்பதால் உங்களுக்கு ஏதாவது ஊதியம் வேண்டுமா? அல்லது உங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு தொண்டாற்றுவீர்களா?' என்று பல தகவல்கள் கேட்டோம். அத் தகவல்கள் சரிவர வந்து சேருவதற்குள் நம் முயற்சியைக் கைவிட்டுவிட்டு, கறுப்புச் சட்டையை நம் இயக்கச் சின்னமாக்கி, சிலருக்கு அதை சில சமயங்களுக்கு அவசிய உடையாக்கிவிட்டு, திராவிடர்கள் யாவரும் பிறவி இழிவுக்காக அவமானப்படும், துக்கப்படும் அறிகுறியாக—திராவிடர் கழகத் தோழர்கள், தாய்மார்கள், இளைஞர்கள் அனைவரும் கறுஞ்சட்டை அணிந்துகொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் செய்தோம்.

அந்தத் தெளிவை நன்றாய் அனுபவத்திற்குக் கொண்டுவந்ததோடு, மாநாட்டிலும், அந்தப்படியே தீர்மானம் செய்தோம். நிர்வாகசபை அங்கத்தினர்கள் யாவரும் கட்டாயமாக கறுப்புச் சட்டை அணிந்துகொள்ள வேண்டும் என்று கூறினோம். இதுவும் அக் காலத்திய —ஒரு ஆண்டுக்கு முந்திய நடவடிக்கை ஆகும். பொதுமக்களையும் வேண்டினோம்; இளைஞர்களையும், கழக அனுதாபிகளையும் கறுஞ்சட்டை அணிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டோம். பத்திரிக்கை வாயிலாகவும், பொதுக்கூட்ட வாயிலாகவும், தவறாமல் ஒவ்வொரு கூட்டத்திலும் அதற்கு விளக்கங்கூடக் கூறிவந்திருக்கிறோம். சட்டத்தில், சாஸ்திரத்தில், சம்பிரதாயப் பழக்க வழக்கத்தில், கோயில் முறையில், சாதி முறையில் நமக்கு இருந்துவரும் இழிவை எடுத்துக்காட்டினோம்—அதன் அறிகுறிதான் கறுப்பென்றோம். அந்த இழிவை அழிக்க முயற்சி எடுத்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டோம் என்பதைக் காட்ட கறுஞ்சட்டை அணியுங்கள் என்றோம். யாராவது, 'ஏனப்பா கறுஞ்சட்டை அணிந்து கொள்கிறீர்கள்?' என்று கேட்டால், 'நான் என்னமோ சட்டப்படி, சாஸ்திரப்படி சூத்திரனாம்; பார்ப்பானின் தாசி மகனாம்; அப்படி இருக்க எனக்கு இஷ்டமில்லை. அது எனக்கு அவமானமாக, துக்ககரமானதாக இருக்கிறது. அந்த இழிவை உணர்ந்திருக்கிறேன். அதைப் போக்கிக்கொள்ள முயற்சிப்பேன் என்பதன் அறிகுறியாக இதை அணிந்துகொள்கிறேன்; உனக்கும் அவமானமாயிருந்தால் அணிந்துகொள்; அப்படி உனக்கு மானமில்லையானால் கறுப்புச் சட்டை அணிந்துகொள்ள வேண்டாம்' என்று பதில் கூறும்படியும் தெரிவித்தோம்.

யாராவது, 'என்னடா, இழவுக்குப் போகின்றவன் மாதிரி கறுப்புடை அணிந்திருக்கிறாயே; அல்லது நீ என்ன திருட்டுப்பயலா?' என்று கேலிசெய்தால், 'இது ஒன்றும் அப்படி அல்லப்பா; இழிவு போக்கும் முயற்சியின் அறிகுறிதானப்பா இந்தக் கறுப்புச் சட்டை; கறுப்புடை அணிந்துகொள்வதற்காக என்னைச் சாவுக்குப்போகிறவன் என்றோ, திருடப் போகிறவன் என்றோ கூறினால், கறுப்புடை அணிந்து கோர்ட்டுக்குச் செல்லும் வக்கீல் எல்லாம் என்ன இழவுக்கா போகிறார்கள்? அல்லது, திருடத்தான் போகிறார்களா? கோர்ட்டில் கறுப்புடை அணிந்து நீதி வழங்கும் நீதிபதிகள், வெயிலுக்குக் கறுப்புக் குடை பிடித்துச் செல்வோர்—பள்ளி ஆசிரியர் இவர்கள் எல்லாம் என்ன, இழவுக்குப் போகிறார்களா? கறுப்புடையணிந்து பட்டம் பெறும் பட்டதாரிகள் எல்லாம் திருட்டுத்தனத்திற்காகவா பட்டம் பெறுகிறார்கள்?' என்றெல்லாம் கேளுங்கள் என்று கூறினோம். அதைக் கேட்ட மக்கள் பெருவாரியாகக் கறுஞ்சட்டை அணிய ஆரம்பித்தனர். குறிப்பாக இளைஞர்கள் பலர் உற்சாகத்தோடு அணிந்து கொண்டனர். கறுப்புச் சட்டை அணிந்து செல்வதை ஒரு பெருமையாகக்கூடப் பலர் கருத ஆரம்பித்து விட்டனர்.

இதைக் கண்ட இழிவில்லாதவர்களும், மற்றவர்களை இழிவுபடுத்தி வாழுபவர்களுமான சுயநலக் கூட்டம் ஆத்திரப்பட்டு, இதை ஒழிக்கவேண்டுமென்று முயற்சித்தது. அதற்குக் கையாளாக இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் 'கறுப்புச் சட்டைப் படை' ஒன்று இருப்பதாகக் கற்பனை செய்து தடை உத்தரவு போட்டுவிட்டது.

உண்மையாகவே இது ஓர் படையமைப்பாகுமானால் இதில் வயது முதிர்ந்த கிழவிகளும், சின்னஞ்சிறு குழந்தைகளும் சேர்ந்திருக்க முடியுமா? இன்று கறுப்புடை அணிந்திருக்கும் இத்தனை பேர்களுக்கும் இந்தப் படையில் இடமிருக்குமா? இவ்விழிவு நீங்க வேண்டுமென்று எத்தனை பேர் முன்வந்துள்ளார்கள் என்பதை மக்கள் அறியவேண்டும்; அதன் மூலமாக இயக்கத்தின் உண்மைத் தன்மை மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகத்தான்—மேலும் மேலும் கறுஞ்சட்டை அணிந்துகொள்வதை வற்புறுத்தி வந்திருக்கிறோம். கறுப்புத்துணி தாராளமாய்க் கிடைத்திருந்தால் இன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் கறுப்புடை அணிந்திருப்பார்கள். இந்தக் கறுஞ்சட்டைக்கு எந்த ஒரே ஒரு மாதிரியையும் (Model) குறிப்பிடவில்லை. 'யார் வேண்டுமானாலும்—எந்த மாதிரிச் சட்டையை வேண்டுமானாலும் அணிந்துகொள்ளலாம்' என்றும், 'பெண்கள் ஒரு இரவிக்கையாவது அணியட்டும்' என்றும் கூறினோம்.

கறுஞ்சட்டை அணிபவர்களை யாருக்காவது தொல்லை கொடுக்கும்படியோ, யாரையாவது துன்புறுத்தும்படியோ நாங்கள் கூறியது இல்லை. அவர்களை ஏதாவது ஒரு ஆயுதத்தையோ, தடியையோ, வேறு அறிகுறியையோ வைத்துக்கொள்ளும்படியும் நாங்கள் கூறியதில்லை. அவர்களைத் தெருவில் நிறுத்தி கவாத்துப் பழகும்படியும் நாங்கள் கூறவில்லை. அதற்கான பயிற்சியாளர்களோ, பயிற்சிக்கூடமோ நாங்கள் வைத்திருக்கவில்லை. எங்காவது மகாநாடுகள், பொதுக்கூட்டங்கள் நடத்த அழைக்கப்பட்ட தலைவருக்கு ஊர்வலம் நடைபெறுமானால், அங்கு கறுப்புடை அணிந்துள்ள தோழர்கள், சிறுவர்கள், தாய்மார்கள் யாவரும் ஒருவர்பின் ஒருவராக வரிசையாக நின்று ஊர்வலம் செல்வார்கள். ஒரு சில இடங்களில் உற்சாகத்திற்காக, வந்துள்ள தலைவர்களைத் தம்முடன் நிறுத்திப் 'போட்டோ' எடுத்துக்கொள்வார்கள். தங்கள் ஊர்வலத்தைக் 'கறுஞ்சட்டைத் தொண்டர் ஊர்வலம்' என்று பல மாதிரியாய்ப் பெயரிட்டு அழைப்பார்கள். இவ்வளவுதானேயொழிய இவர்கள் ஒருபோதும் பலாத்காரத்தில் இறங்கியதாகவோ, அல்லது எப்போதேனும் இவர்களுக்குப் பலாத்கார உணர்ச்சி ஊட்டப்பட்டதாகவோ யாராலும் கூறமுடியாது.

இப்படி ஒரு தொண்டர் கூட்டத்திற்கு 'படை', 'சேனை' என்று பெயர் வைத்துக்கொள்வதுகூட, சாதாரணமாகத் தவறுதலாகக் கருதப்படுவதில்லை. 'சால்வேஷன் ஆர்மி' (Salvation Army) என்று ஒரு அமைப்பு இன்றும் இருந்துகொண்டுதான் வருகிறது. 'ஆர்மி' அல்லது 'சேனை' என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பதற்காக அவர்களை யாரும் சட்ட விரோதமானவர்களென்று பிடித்துவிடவில்லை. நம் கறுஞ்சட்டைத் தோழர்கள் விளையாட்டுக்காகக்கூட தடி எடுத்துப் பழகியதில்லை; அப்படிப் பழகுவது கூட சாதாரணமாகக் குற்றமாகக் கருதப்படுவதில்லை. உதாரணமாக 'பாய்ஸ் ஸ்கவுட்' 'இளம் சாரணர்கள்' தடி வைத்துக்கொண்டுதான் பழகுகிறார்கள். அப்படி எல்லாம் இருக்க, தடி, கவாத்து, ஒன்றுபோன்ற உடை (யூனிபாரம்), ஸ்தாபனம் இல்லாததற்கு இப்படி ஒரு தடையுத்தரவு போடுவதென்றால்—சர்க்கார் இக் கழகத்தின்மீது, இதை அழிக்கவேண்டுமென்று கண் வைத்து இருப்பதாகத்தானே அர்த்தம்? பழைய மக்களுக்கு திராவிடர் கழகத்தின்மீது அனாவசியமான பீதியை உண்டாக்குவானேன்? அவர்களுக்கு எங்கள் கழகத்தின்மீது வெறுப்பு ஏற்படும்படி செய்வானேன்?

இதனால் சர்க்காருக்கு ஏதாயினும் இலாபமாவது உண்டா? சர்க்காருக்கு இந்தக் கறுஞ்சட்டைத் தோழர்களால் ஏதாவது தொல்லை விளைவிக்கப்பட்டிருக்கிறதா? சர்க்காருடைய குறைகளை எடுத்துக் கூறித் திருந்தும்படி செய்துவருபவன் நான். அதுவேதான் திராவிடர் கழகத்தின் நோக்கம். அச் சிந்தனை வேண்டுமானால், சர்க்காருக்கும் அதிருப்தியைக் கொடுப்பதாக இருக்கலாம். அப்படி இருந்தால் தைரியமாகச் சொல்ல வேண்டாமா, 'இனியெல்லாம் நீ இப்படி அறிவுடன் பேசாதே!' என்று. சட்டசபையில் சட்டசபை மெம்பர்கள் இந்த சர்க்காரை, மந்திரிகளை, சிப்பந்திகளை, காங்கிரஸ் நண்

பர்கள் யோக்கியதைகளைப் பேசுகிற அளவில்—பத்தில் ஒரு பங்குகூட நாங்கள் பேசுவதில்லை. அவர்களை விட்டுவிட்டு எங்கள் மீது, என்னமோ சட்டம் போட அதிகாரம் இருக்கிறதென்று—என்னென்னமோ முட்டாள்தனமான தடை போட்டுப் பூச்சாண்டி காட்டுவது ஆண்மையும், பொதுஜன ஜனநாயக சர்க்கார் என்பதற்கு யோக்யமுமாகுமா? எவனோ ஒருவன் கூறிக்கொண்டானாம், மூன்று கோட்டைகளை ஒரே அடியில் பிடித்து விட்டதாக! 'எங்கேயப்பா அவை?' என்றால், 'அவையெல்லாம் ஆகாயத்தில் இருக்கின்றன' என்றானாம். அதைப்போலல்லவா முடிந்துவிட்டன, சர்க்கார் தடை உத்தரவின் விளைவுகளும்!

சர்க்கார் கனவு கண்டிருக்கலாம்—ஒரு தடையுத்தரவு பிறப்பித்துவிட்டால் இவர்கள் ஆத்திரப்பட்டு ஏதாவது செய்வார்கள்; அதையே சாக்காக வைத்துக்கொண்டு திராவிடர் கழகத்தையே அடியோடு கலைத்துவிடலாம் என்று. நாங்களென்ன மடையர்களா? நம் ஆட்களை நம்மவனையே கொண்டு அடிக்கச் செய்ய? தடையுத்தரவு பிறப்பிக்குமுன் உனக்கு அறிவிருந்தால் சிந்திக்க வேண்டாமா? இந்த இயக்கம் எத்தனை காலமாக இருந்து வருகிறது? இதுவரை எந்தெந்த இடத்திலாவது, சர்க்காருக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்திருக்கிறதா என்று?

நமக்கு வேண்டுமானால் சர்க்கார் எவ்வளவோ தொல்லை கொடுத்து இருக்கிறது. மதுரையில் நடந்த கறுஞ்சட்டை மாநாட்டின்போது சில காலிகளால் எங்கள் பெரிய பந்தலுக்கு, பட்டப்பகல் 12-30 மணிக்குத் தீ வைக்கப்பட்டபோது—ஜில்லா சூப்பிரண்டெண்டு முதல் அதிகாரிகள், மாஜிஸ்ட்ரேட் அனைவருந்தாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள், ஒழுங்காகத் தீ மூட்டப்படுகிறதா என்று. கொஞ்சம் தடுத்திருந்தால்கூட அன்று ஒரு 50 ஆயிரம் ரூபாய் பொருள் சேதம் ஏற்பட்டிருக்காது. ஏனென்று ஆட்சியாளர்கள் கேட்டதுண்டா? ஏதோ விசாரணை ஒன்று தலைவர்கள் நடத்தினார்கள். அதன் முடிவு என்ன என்று கேட்டால், 'அது இரகசியம், சொல்ல முடியாது' என்று கூறிவிட்டார்கள். சமீபத்தில் சங்கீதமங்கலத்தில் எங்கள் கழகத் தோழர்கள் காங்கிரஸ் காலிகளால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். போலீஸார்கூட தமது F. I. R. புத்தகத்தில் குற்றவாளிகளைப் பதிவு செய்துகொண்டிருக்கின்றனர் என்றாலும், அவர்கள்மீது எதுவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. சேலத்தில் சில காலிகளால் சோடா புட்டி வீசப்பட்டு எங்கள் தோழர் ஒருவருக்குக் கண்ணில் காயம்பட்டு 20 நாள் ஆஸ்பத்திரியில் கிடந்தார்; முடிவில் கண்ணை இழந்தார். அதற்காக 'Nuisance charge' செய்து 2 ரூபாய் அபராதம் விதித்தார்கள். அண்ணாமலை காலேஜில் திராவிடர் கழக மாணவர்களை நடுச்சாமத்தில் போலீஸை வைத்துக்கொண்டு அடித்துப் புடைத்து, கடைசியாக அடித்தவர்கள் மீதுள்ள பிராதை வாபஸ் வாங்கிக்கொண்டு, உதைபட்டவர்கள்மீது கேசு நடக்கிறது. வேறு எந்த மலைசாதி அரசாங்கமாவது இப்படிப்பட்ட கொடுங்கோல் ஆட்சி நடத்துமா? இவ்வளவையும் நாங்கள் பொறுத்துக் கொண்டுதானே வந்திருக்கிறோம்!

எங்கள் கழகத் தோழர்கள் சிலர் ஆத்திரப்படும்போதுகூட, 'ஆத்திரப்படாதீர்கள்; ஆத்திரப்பட்டால் இரண்டு கட்சியிலும் அடிபடுபவர் நம்மவராகத்தான் இருக்க நேரிடும்; ஆகவே, சமாதானமாக நடந்து காங்கிரஸ் திராவிடத் தோழர்களின் அன்புக்கும் பாத்திரமாகுங்கள்' என்றுதானே அவர்களுக்குச் சமாதானம் கூறி வந்திருக்கிறோம்! இதை யாராவது இல்லையென்று கூறமுடியுமா? இந்த உண்மையெல்லாம் சர்க்காருக்குத் தெரியாமலா இருக்கிறது? அல்லது, எங்கள் நடத்தையாவது இதற்கு மாறுபட்டிருந்தது என்று யாராவது கூறமுடியுமா? தெரிந்திருந்தும் ஏன் இந்த வீண்வேலை? கனம் சுப்பராயன் அவர்கள், 'பலாத்காரத்தைக் கையாளாத யாரையும் நாங்கள் வீணாகத் தொல்லை கொடுக்கப்போவதில்லை' என்று வானொலிப் பேச்சில் கூறினார் என்று கேட்டு அவருடைய நல்லெண்ணத்தில் நம்பிக்கை கொண்டு, அதற்காக அவரைப் பாராட்டி

மெமோரியல் ஹாலில் பேசிவிட்டு வீட்டிற்குப் போகிறேன்; அங்கு தந்தி வந்துசேருகிறது, திருவண்ணாமலையிலிருந்து. 'கறுஞ்சட்டை போட்டுக்கொண்டு இருந்ததற்காகவும்—கழகத்தில் கறுப்புக் கொடியை இறக்காததற்காகவும், கழகத்துக்கு வந்து, ஆறு தோழர்கள் கைதியாக்கப்பட்டு லாரியில் ஏற்றிச்செல்லப்பட்டார்கள்' என்று. கைது ஏன்? சர்க்காருக்கு, மந்திரிக்கு, போலீசுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்றா அவர்கள் கறுஞ்சட்டை அணிந்திருந்தார்கள்? அல்லது, அவரைப் பயமுறுத்தவேண்டுமென்று கறுப்புக் கொடி பறக்க விட்டிருந்தார்களா? எதற்காக அவர்களைக் கைதியாக்கி இருக்கவேண்டும்? எந்த அடக்குமுறைக்கும் சமாதானத்தோடு உட்பட்டு விடுவதுதானே எங்கள் வழக்கம்! இராஜகோபாலாச்சாரியார் ஆட்சியில்கூட நாங்கள் எதிர் வழக்குக்கூட ஆடியதில்லையே! அடக்கியே ஆள்வதென்று நீங்கள் தீர்மானித்திருந்தால் அதற்கு ஒருமுறை வேண்டியதில்லையா? இன்று நிர்வாகக் கமிட்டி கூட்டப்போவதறிந்து எத்தனை தோழர்கள் எனக்கு எழுதி இருந்தார்கள் தெரியுமா? 'எதுவும் பயங்கொள்ளித்தனமாகத் தீர்மானித்து விடாதீர்கள்; உங்களுக்குப் பயமாயிருந்தால் சற்று விலகியிருந்தாவது, எங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எங்களை அனுமதித்துவிடுங்கள்' என்று. இவற்றைக் கமிட்டி அங்கத்தினர்களுக்குக் கூட நான் படித்துக் காட்டவில்லை யென்பது உங்களுக்குத் தெரியுமா? எப்படியும் சமாதானமாக, அமைதியாக நடந்துகொள்ள வேண்டுமென்று பார்த்தால் ஆட்சியாளர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் போல் இருக்கிறதே! இதுதானா காந்தி பேரைச் சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்த யோக்கியர்கள் நடத்தை? ஒரு கட்சியால் தங்கள் பதவிக்கு ஆபத்து நேரும் என்று கருதினால், அதை இப்படித்தானா காட்டிக்கொள்ளவேண்டும்? அதுவும், காந்தியாரைக் கொன்று கரைத்து விட்ட ஒரு மாதத்திலேயா? இந்தப் பதவி என்ன சதமா? பதவி போனபிறகு மக்கள்முன் தலைகாட்டவேண்டாமா?

காந்தியார் மறைவுக்கு நான் துக்கப்பட்டது, பெரும்பாலோருக்கு முதலைக் கண்ணீராகவே தோன்றியது; தோன்றினால் தோன்றட்டும். அவர் மறைவுக்கு இனிப்பு வழங்கிய மாபாதகக் கூட்டத்திற்கு வேண்டுமானால் அவர் செத்ததைப்பற்றிக் கவலை இல்லை; மகிழ்ச்சி கூட அடைந்தது. ஆனால், அவர் துர்மரணமடைந்த சேதியைக் கேட்டதும் எனக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை; தலைவலி வந்துவிட்டது; என்ன செய்கிறேன் என்பது கூடப் புரியாமல் நெடுநேரம் 15 சதுரமுள்ள அறையில் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தேன். காரணம் என்ன என்றால், அவரிடம் அந்தரங்கத்தில் எனக்கு இருந்த பற்றுதல், அவர் கொள்கைகளில்–உழைப்பில் இருந்த நலன்கள்; அப்படிப்பட்டவருக்கு இதுதானா கூலி என்ற மனவேதனை—ஆகியவைகளே. அவருடைய முறையில் வேண்டுமானால் அபிப்பிராய பேதம் பலமாக இருந்தது உண்டு. ஆனால், அவருடைய முக்கியக் கொள்கையில்—அதாவது, சத்தியம், அஹிம்சை, அன்பு ஆகியவைகளில் அபிப்பிராய பேதம் இல்லையே! அதற்காக மனம் பதறிவிட்டது. இப்போது இங்குள்ள நமது மந்திரிகளிடத்தும் கூடத்தான், எனக்கு ரொம்ப வருத்தம் ஏற்பட்டிருக்கிறது; இவர்கள் மீது ரொம்பவும் கோபம் கூடத்தான்; பணமும் அதிகாரமும்தான் இவர்கள் இலட்சியமாய் இருந்திருக்கிறதே தவிர இன உணர்ச்சி, மான உணர்ச்சி இல்லையே என்று.

என் மனம் பதறாதா? என்ன இருந்தாலும் ஒரு திராவிட முதன் மந்திரியார் கூடவா—கேவலம் பதவிக்காக இப்படி ஓர் உத்தரவை அனுமதிப்பது என்றும் கோபந்தான். என்றாலும், அவரை ஒரு வைத்தியநாதய்யர் போன்ற பார்ப்பனர் சுட்டுக் கொன்றார் என்றால் என்னால் சும்மா இருந்துவிட முடியுமா? கனம் சுப்பராயன், நம்மவராக இருந்தும் எங்கள்மீது தடையுத்தரவு பிறப்பித்து விட்டாரே என்று கோபம் எனக்கு எவ்வளவுதான் இருந்தாலும்—அவரை ஓர் வரதாச்சாரி கொன்றுவிட்டார் என்றால் என் மனம் பொறுக்குமா? என்ன இருந்தாலும் நமது காமராஜ் கூடவா இதைத் திருத்தக் கூடாது என்று எனக்கு அவர்மீது வருத்தமிருந்தாலும், அவரை ஓர் கோட்சே கொன்று விட்டான் என்றால் என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? இயற்கையாகவேனும்

ஆத்திரம் வராமல் இருக்குமா? இது நரசிம்ம ராஜ்யமா? இப்படிப்பட்ட நம்மைப் போய் எதிரிகளாய்ப் பாவித்துச் சட்டமியற்றுவது நியாயமா? ஒரு திராவிடனுடைய பண்பு இதற்கு இடங்கொடுக்கலாமா என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

எதற்காக எங்கள் தோழர்களைக் கைதியாக்க வேண்டும்? எதற்காக நாங்கள் கறுஞ்சட்டை அணியக்கூடாது? எதற்காக எங்கள் கொடிகளை நாங்கள் பறக்கவிடக் கூடாது என்று தெளிவாகவாவது ஆட்சியாளர்கள் கூறவேண்டாமா? 'எழுத்துரிமை உண்டு; பேச்சுரிமை உண்டு' என்று பிரமாதமாய்ப் பேசப்படும் இக் காலத்தில் எங்களுக்குப் பிடித்தமான சட்டையை அணிந்துகொள்ளவும், எங்களுக்குப் பிடித்தமான கொடியைப் பறக்கவிடவும், எங்களுக்குள்ள இழிவை எடுத்துக்கூறி சமாதான முறையில் எங்கள் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்துகொள்ளவும், அதற்கான பிரச்சாரம் செய்யவும் கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக் கூடாது? இது என்ன—'தூண் மறைவிலிருந்து வந்து வயிற்றைக் கிழித்த' நரசிம்ம ராஜ்யமா? 'மரத்தின் மறைவிலிருந்து வாலியைக் கொன்ற' ராமராஜ்யமா? நாங்கள் உங்கள் ஆட்சியைப் பிடுங்கிக்கொள்ளப் போகிறோமா? அல்லது உங்கள் பதவிக்கு ஆபத்து விளைவிக்கவாவது நாங்கள் பாடுபடுகிறோமா? எங்களுக்குத் தெரியுமே, அரசியலைக் கைப்பற்றுவதாலும் மந்திரி பதவியைப் பெறுவதாலும் எங்கள் கொள்கைகள் வெற்றியடைய முடியாதென்று! நாங்களே ஆட்சியில் அமர்ந்தால்கூட இன்றைய மக்கள் நிலையில், நீங்கள் செய்த அளவுக்குச் சீர்திருத்தம் செய்வதுகூட எங்களுக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஏனென்றால், பார்ப்பனர் பாமர மக்களைத் தூண்டி விட்டுக் காலித்தனம் செய்விப்பார்கள். ஆதலால், உங்களைச் சீர்திருத்தம் செய்யவும், உங்கள் சீர்திருத்தங்களுக்கு மக்கள் ஆதரவைத் தேடிக் கொடுக்கவும், நீங்கள் செய்யாமல் விட்டுவிடுவதை உங்களுக்கு ஞாபகப் படுத்துவதுமான இவற்றிற்காகத்தானே எங்கள் கழகம் பாடுபட்டு வருகிறது? இதனால்தானே மந்திரிகள் சில சமயங்களில் எங்கள் கழகத்தின் கொள்கைகளைக் கண்டிக்கும்போதுகூட நாங்கள் பேசாமல் இருந்துவர வேண்டியிருக்கிறது.

மதுரை, சேலம் சம்பவங்களுக்குப் பிறகு எங்கள் தோழர்கள் அதற்காக மந்திரிகளைப் பகிஷ்கரிக்கும் முறையில் கறுப்புக் கொடி பிடிக்கவேண்டும் என்று கருதியபோது கூட, நான் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே! இக் காரணங்களால் நானும் ஓமாந்தூராரும் இரகசியமாக ஏதோ ஒரு பொது இடத்தில் சந்திக்கிறோம் என்ற வதந்தி கூடப் பரவிவிட்டிருக்கிறதே! ஓமாந்தூரார் மந்திரியான பிறகு நான் ஒருமுறைகூடப் பார்த்ததில்லை. அவர் என்னுடைய பழைய நண்பர்தான்; நாணயஸ்தர் என்ற போதிலுங் கூட, சேதி போக்குவரத்துக்கூட நான் வைத்துக்கொண்டதில்லை. மந்திரிகள் யாரிடத்திலும் எனக்கு எவ்விதப் பேச்சும் நடந்ததில்லை என்றாலும், ஒரு பெரிய C. I. D. உத்தியோகஸ்தர் என்னிடம் வந்து ஏதோ பேசிவிட்டு, 'ஓமாந்தூராரும் நீங்களும் சந்தித்துப் பேசியதுண்டா?' என்று கேட்டுச் சென்றார். என்னுடைய ஒரு சிறந்த நண்பர்கூடச் சொன்னார்—அதாவது ஒரு பொறுப்புள்ள பத்திரிகை ஆசிரியர் தன்னை இவ்விதமே கேட்டதாகவும், அதற்குத் தாம் விசாரித்துத் தெரிவிப்பதாகப் பதில் சொன்னதாகவும்.

இவ்வளவு சந்தேகம் எழுந்துவிட்டது—அக்கிரகாரத்திற்கு இன்றைய ஆட்சியின் மீது! ஓர் ஆரியப் பத்திரிகையே எழுதுகிறது, 'ஈரோட்டு ராமசாமியாவது நாஸ்திகம் பேசித் தொல்லை கொடுக்கிறான்; ஆனால், ஓமாந்தூர் ராமசாமியோ விபூதி பூசிக் கொண்டே தொல்லை கொடுக்கிறான்' என்று; அவர்களுக்குள் அவ்வளவு பற்றி எரிகிறது. அதைத் தணிக்க, பார்ப்பனரிடம் நல்ல பேர் வாங்க, ஆட்சியாளர்கள் ஏதோ நம்மீது அடக்கு முறையை ஏவி இருக்கின்றனர்; இது தான் இன்றைய நிலை. ஆகவே, நாம் கொடுத்த தொல்லை அல்ல இன்றைய தடையுத்தரவுக்குக் காரணம். அக்கிரகாரம் அரசியலாருக்குக் கொடுத்த தொல்லைதான் இன்றைய இந்த விபரீத விளைவுக்குக் காரணம். இதற்கு இனி நீங்கள்தான் பதில் கூறவேண்டும்.

'இழிவுக்கு வெட்கப்படும் மக்களுக்கு இங்கு இடமில்லை; காட்டுக்கு ஓடிப்போங்கள்' என்று கூறினாலும் ஓடத்தான் நாங்கள் தயாராயிருப்போமே யொழிய, இழிவைப் பொறுத்துக் கொண்டு இனியும் இன்னல் வாழ்வு வாழச் சம்மதியோம். ஏன் இந்த பட்டேல் தர்பார்? எந்த நாட்டில் எந்த சர்க்கார் ஆட்சிக்கு வந்தபோதிலும், அந்த சர்க்கார் தன் சொந்த நன்மைக்காகவேனும் ஒரு எதிர்க்கட்சியை வைத்திருப்பது, அதற்கு மரியாதை காட்டி வருவது இயற்கை. அந்த எதிர்க்கட்சி எங்கு தம் கட்சியை அழித்துவிடுமோ என்று கருதும்படியான அளவுக்குச் செல்வாக்குப் பெறுமானால், அதை ஆட்சியில் உள்ள கட்சி அழிக்கப் பார்ப்பதும் இயற்கை.

ஆனால், நாமோ ஒரு அரசியல் கட்சி அல்ல என்று தெளிவாகக் கூறியிருக்கிறோம். தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றுகூடக் கூறி வந்திருக்கிறோம். அதன்படியே தேர்தல்களில் கலந்துகொள்ளாமலும் இருந்துவந்திருக்கிறோம். அப்படியிருந்தும், ஆட்சியாளர்கள் நம்மை அழிக்கப் பார்க்கின்றனர்; அதுவும் அக்கிரமமான முறையில் நம்மை அடக்கப் பார்க்கின்றனர் என்றால், இந்நாட்டில் பார்ப்பனர் மனம் கோணும்படி எவனும் மூச்சுவிடக்கூடாது என்கின்றது ஆரியக்கட்சி.

'கறுஞ்சட்டைப் படைமீது தடை' என்று சொல்லிக்கொண்டு திராவிடர் கழகக் கொடியை எடுத்துச் செல்கிறார்கள்; கழகக் கணக்குப் புத்தகத்தை, நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தை, கறுப்புச் சட்டைகளை—இவற்றையெல்லாம் எடுத்துச் சென்றிருக்கின்றனர்; ஊருக்கோர் முறையைக் கையாண்டிருக்கின்றனர். இன்னது செய்யவேண்டும்; சோதனை இன்ன முறையில் நடத்தவேண்டும்; இன்னின்னவைதான் கைப்பற்றப்பட வேண்டும் என்று கூடத் தாக்கீது அனுப்பியிருப்பதாகத் தெரியவில்லை. அனுப்பி இருந்தால் சோதனை முறைகளில் இவ்வளவு வேறுபாடு இருந்திருக்குமா? திருவண்ணாமலையில் இவ்வளவு 'பட்டேல் தர்பார்' நடந்திருக்குமா? எங்களை ஏன் இப்படி இம்சிக்க வேண்டும், இந்த அஹிம்சா மூர்த்திகள்—எங்கள் கொள்கைகளைத் தெளிவாக நாங்கள் வெளியிட்டிருந்தும்கூட? இழிவு நீங்க வேறு வழி என்ன? சுயராஜ்யத்தில் சூத்திரனும் பஞ்சமனும் இருக்கக்கூடாது; மனிதன்தான் இருக்கவேண்டும் என்பது தானே எங்கள் கோரிக்கை. இதற்குத் தானே கறுப்புச் சட்டை? இக் கோரிக்கையைப் பூர்த்தி செய்துவைப்பதில் உங்களுக்கேன் கவலை இருக்கக் கூடாது? மதமற்ற ஆட்சி நடத்துகிறதாகக் கூறும் நீங்கள் ஏன் மதத்தினால் ஏற்பட்டுள்ள இந்த பேதத்தை ஒழிக்கக் கூடாது? நீங்கள் ஒழிக்க முற்படவில்லையானால் நாங்களாவது அதற்காகப் பாடுபட வேண்டாமா?

நாங்கள் என்ன உங்களிடமிருந்து பிரிந்திருக்கவா விரும்புகிறோம்? பிரிந்து நிற்கும் காங்கிரஸ் திராவிடத் தோழர்களை, கம்யூனிஸ்ட் திராவிடத் தோழர்களை, சமதர்ம திராவிடத் தோழர்களை எல்லாவற்றிலும் உள்ள திராவிடரையும்தான் அழைக்கிறேன். நீங்கள் அனைவரும்தானே 4-ம் சாதிக் கீழ்மக்கள்? உங்களுக்கு ஆசையில்லையா, இந்த இழிவு நீங்க வேண்டும் என்று? உங்களுக்கு அவமானமில்லையா, இப்படித் தாழ்த்தப்பட்ட மக்களாய் இருப்பது? நீங்கள் அனைவரும் எங்களோடு சேர்ந்து, இந்தப் பிறவி இழிவு நீங்க ஒத்துழைத்தால், அதிக நாள் இருக்க முடியுமா இந்த சாதி உயர்வு, தாழ்வுகள்? உங்கள் கொள்கைகளாவது ஒப்புக்கொள்கின்றனவா—இப்படிப்பட்ட பேதாபேதத்தை? அப்படியிருக்க ஏன் உங்களுக்குத் தயக்கம், இந்த ஒரு காரியத்திலாவது எங்களோடு சேர்ந்து பணியாற்ற?

எங்கள் கருத்துப்படிதான் நீங்கள் நடக்கவேண்டுமென்பதில்லையே; நீங்களே ஒரு மார்க்கம் கூறுங்களேன் இந்த இழிவு நீங்குவதற்கு! அதை நாம் எல்லோருமாகச் சேர்ந்து பின்பற்றுவோமே! 'இழிவு நீங்க வேண்டும்; இழிவு நீங்க வேண்டும்' என்று வாயால் கூறிவருவது மட்டும் போதுமானதாகி விடுமா? பேசிக்கொண்டே இருந்தால் காரியம் எப்போது முடிவது?

இனி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்காது என்று கூறப்படுகிறது; தனித் தனித் தொகுதி முறைத் தேர்தல் இனி இருக்காது என்று கூறப்படுகிறது. வசதியுள்ள கூட்டமே மேலும் மேலும் வசதி பெற்று வாழ வழிசெய்து வைக்கிறது நம் மாகாண சர்க்கார். வசதியுள்ளவர்கள் உத்தியோகத்தில் அமர்ந்தால் வசதியற்ற நாமெல்லாம் அவர்கள் இஷ்டப்படிதான் நடக்கவேண்டிவரும். அவர்கள் இஷ்டப்படி நடக்க விரும்பாதவர்கள், ஒன்று வேலைக்கு வைத்துக்கொள்ளப்படமாட்டார்கள்; அப்படி வைத்துக்கொண்டாலும் உடனே ஏதாவது காரணங்காட்டித் துரத்தப்பட்டுவிடுவார்கள். ஓமாந்தூரார் படும் பாட்டைப் பாருங்கள்! இவர்களே இப்படி ஆனால் நம் கதி என்ன ஆவது? நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இந்தச் சமயத்தில் ஏதாவது செய்ய வேண்டாமா? கிடைத்துள்ள 'சுயராஜ்யம்' என்பதை நம் மக்கள் ஒவ்வொருவருக்கும் பயன்படும்படி நாம் செய்ய வேண்டாமா? ஆகவேதான் நான் கேட்டுக்கொள்கிறேன்: திராவிடர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் இனியாகிலும் அனைவரும் ஒன்றுசேர்ந்து—'நாங்கள் இனி இழி மக்களல்ல' என்று கூறவேண்டுமென்று. ஏற்கனவே கறுப்பு அறிகுறியாக ஆக்கப்பட்டிருப்பதால் இழிவுக்காகக் கறுப்புடை அணிந்துள்ள மக்கள் மற்றவர்களையும் அணியச் செய்யுங்கள்; இதுவரை கறுப்புடை அணியாத மக்களும் தயவு செய்து விரும்பி அணியுங்கள். யாரோ ஒரு சிலர் அணிந்திருந்தால்தானே சர்க்கார் பயமுறுத்தும்? அனைவரும் அணிய ஆரம்பித்துவிட்டால் அப்புறம் சர்க்கார் யாரைப் பயமுறுத்தமுடியும்?

மக்கள் எல்லோருமே கவலையற்றிருந்தால் ஆள்பவர்களுக்குத்தான் எப்படிக் கவலை தோன்ற முடியும்? தற்போது நம்மை ஆட்டிவரும் அரசியல் நிர்ணயசபையில் நமக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. சர்வசக்தி பெற்றுள்ள அச் சபையின் சர்வாதிகார முடிவை மாற்றியமைக்கப் போதிய மக்களெழுச்சி இல்லாததால், நம் மாகாண சர்க்காரும் அவர்கள் தயவைநாடியே தம் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆகவே, இனியாயினும் நாம் எல்லோரும் துணிந்து, இப் பிற்போக்குச் சக்திகளை எதிர்க்க முன்வரவேண்டும். 'திராவிட நாட்டவரிடையே ஒற்றுமையில்லை' என்ற குறைபாடு இனியும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்றைய நிர்வாகக் கமிட்டித் தீர்மானப்படி இழிவு நீக்கப் பிரச்சாரம் மேலும் தீவிரமாக்கப்படவேண்டும். ஆட்சியாளரும், இனி சும்மா இருக்கமாட்டார்கள்; நமக்கு ஏதாவது தொந்தரவு கொடுப்பார்கள்.

அவர்கள் நினைத்தபடியெல்லாம் செய்ய அதிகாரம் இருக்கிறது, அவர்கள் கையில்; தம்மைப் பாதுகாத்துக்கொள்ள, பட்டாளமும் இருக்கிறது அவர்கள் கையில்; கத்தி கொண்டு நம்மை வெட்டும்படி கூறிவிட்டுக்கூட அவர்களால் கவலையற்றிருக்க முடியும். நாம்தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நமது பத்திரிகையை நிறுத்தலாம்; எங்களில் சிலபேரைச் சிறைப்படுத்தலாம்; நான் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்வது ஆங்காங்குள்ள சட்டசபை மெம்பர்களின் யோக்கியதையை அம்பலப்படுத்தி விடுகிறது. அதற்குப் பதில் கூறமுடியாமல் சங்கடப்படுகிறார்கள்; அந்த மெம்பர்கள்தாம் என்மீது 'ரிப்போர்ட்' அனுப்புகிறார்கள். 'இவன் வந்து இப்படியெல்லாம் பேசிவிட்டுப் போகிறானே; நாங்கள் எப்படி மானமின்றிச் சட்டசபையில் கைதூக்குவது?' என்று. 'காங்கிரஸ் வண்டவாளத்தை எல்லாம் இவன் வெளுத்துவிட்டபின், நாங்களெப்படி மறு எலக்ஷனில் நிற்பது?' என்று கவலைகொண்டு, இதைத் தடுக்கும்படி ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறார்கள். இச் சட்டசபை மெம்பர்கள் தொல்லைக்காவது அரசியலார் ஏதாவது செய்தே தீருவார்கள். என் செய்வார்கள் பாவம்? நாம் கூட்டங்கள் நடத்த முடியாமல் இருக்க ஏதாவது செய்வார்கள்; விரைவில் என்னைக் கைதுசெய்தாலும் செய்வார்கள். செய்தால் நீங்களென்ன செய்யப்போகிறீர்கள்? ஜெயிலை இடித்துச் சிறை மீட்கப்போகிறீர்களா? அதெல்லாம் மகா மகா முட்டாள்தனம். என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றால் நீங்கள் அந்தப் பக்கம் கூட,—ஒருவர்கூட வரக்கூடாது. பின் என்ன செய்யவேண்டும்? அதற்காக வருந்தும் ஒவ்வொருவரும் கறுப்புச்சட்டை அணிந்துகொள்ள

வேண்டும்; உங்கள் தோழர்களையும் கறுப்புச்சட்டை அணிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும்; வீதியில் போகிறவர்களில் 100-க்கு 10 பேராவது கறுப்புச்சட்டை அணியுமாறு செய்யவேண்டும். இப்போதே இப்படிச்செய்தால்கூட அரசியலார் மேலால் நடவடிக்கை எடுக்கப்பயப்படுவார்கள்; உடனே இழிவு நீக்க அவசியம் ஏதாவது செய்வார்கள். கிராமந் தோறும் கறுஞ்சட்டை பரவவேண்டும். இன்னும் பல கருத்துக்கள் அதில் அடங்கி இருக் கின்றன. எல்லோரும் கறுப்புச்சட்டை அணிய ஆரம்பித்தால், மற்றவை தாமாகவே நடக்கும்.

ஒவ்வொருவரும் கிராமப்புறத்திற்குப் போகவேண்டும். 'சாதி மத பேதங்கள் இருப்பது நியாயமா? பிராமணன் என்றும் பஞ்சமன் என்றும் உயர்வு–தாழ்வு இருப்பது நியாயமா? இவ்வுயர்வு–தாழ்வு நீக்க முயற்சியின் அறிகுறியாகக் கறுஞ்சட்டையணியும் தோழர்களைச் சிறைசெய்வது நியாயமா? தனக்குள்ள குறைபாட்டின் அறிகுறியாகக் கறுஞ்சட்டை அணிந்துகொள்ளக்கூடவா இன்றைய சர்க்காரில் உரிமையில்லை? தோழர்களே சிந்தித்துப் பாருங்கள். இழிவுக்கு அவமானப்படும் நீங்களும், இழிவினால் பலதுன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். நீங்களும் கறுப்புச்சட்டை அணிந்துகொள்ளுங்கள்!' என்று சாந்தமாய், சமாதானமாய் எடுத்துச் சொல்லுங்கள். அமைதியையும், பொறுமையையும் பரப்புங்கள்; பட்டி தொட்டிதோறும் கறுப்புச் சட்டையைப் பரப்புங்கள்; கறுப்புத் துணியும், கறுப்புச் சட்டையும் எடுத்துச்சென்று விற்பனை செய்யுங்கள். அப்போதுதான் தெரியும், நம் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்கள், நம் கொள்கைகளுக்கு மரியாதை செய்கிறவர்கள் எவ்வளவு பேர் என்பது. இதுவே நமது தோழர்களின் முக்கிய வேலையாக இருக்க வேண்டும் என்பதுதான் எனதுவிருப்பம்.

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 7-3-1943-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1943]

6. 'பிராமணன்' என அழையாதீர்?

பார்ப்பனர்கள் தம்மைப் 'பிராமணர்கள்' என்று கூறிக்கொண்டு, 'பிராமணாள் ஓட்டல்' என்று போட்டுக்கொண்டு, நம்மைப் பஞ்சமன், சூத்திரன் என்ற வகுப்பில் குறிக்கும் ஹரிஜனன், நாயுடு, ரெட்டியார், முதலியார், பிள்ளை, ஆச்சாரி, செட்டியார், நாடார் முதலிய பெயர்களால் அழைத்தும், அழைத்துக் கொள்ளும்படி செய்தும் வருகிறார்கள். அதாவது, பதிவு (ரிஜிஸ்டர்) ஆகும் ஆதாரங்களில் அப்படிப் போட்டாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இன்று நடப்பில் இருக்கும் சாதிக்கும், வகுப்புக்கும் இதுதான் தத்துவமாக இருந்துவருகிறது.

பார்ப்பனர்கள், 'பிராமணர்கள்' ஆனால் (பார்ப்பனர்கள் அல்லாத மற்ற 'இந்து'க்கள் என்பவர்களாகிய) நாம் யார்? சூத்திரர்கள் என்பதாகத்தானே (நாமே ஒப்புக் கொண்டதாக) ஆகிவிடுகிறது.

ஆதலால், பார்ப்பனர்களை நாம் பிராமணர்கள் என்று ஒப்புக்கொண்டதாகக் காட்டு வதோ அல்லது நாம் அவர்களைப் பிராமணர்கள் என்று அழைப்பதோ, சொல்வதோ, ஆதாரங்களில் எழுதுவதோ ஆகிய காரியங்கள் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள் வதாகவும், நமது கருத்துக்கும் ஆசைக்கும் முரணாக நடந்ததாகவும் ஆகிறது.

எனவே, திராவிடர் கழக அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் தங்களால் நடத்தப் படும் பத்திரிகைகள், எழுதப்படும் வியாசங்கள், புத்தங்கள், கடிதங்கள் முதலியவற்றில்— கண்டிப்பாகப் 'பார்ப்பனர்' என்று குறிப்பிடவேண்டிய இடத்தில் பிராமணன், பிராமணர்கள் என்கின்ற வார்த்தைகள் விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்.

'பார்ப்பானை அய்யர் என்ற காலமும் போச்சே' என்று பாரதியார் என்ற ஒரு பார்ப்பனரே பாடியிருக்கிறார். அந்தப் புத்தகம் பார்ப்பனர்களால், காங்கிரசாரால், சர்க்காரால் பாராட்டப்பட்டு—பாடப் புத்தகமாகவும் இருந்து வருகிறது; பாட்டுக் கச்சேரிகளிலும் பாடப்படுகிறது.

ஆகவே, திராவிடர்கழக அங்கத்தினர் எனது இந்த வேண்டுகோளை அருள்கூர்ந்து சுயமரியாதைக் கண்கொண்டு பார்த்து இலட்சியப்படுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

['குடி அரசு'—வேண்டுகோள்—17-4-1948]

7. தாய்மார்களுக்கு

தோழர்களே! தாய்மார்களே!

கடைசியாக, இங்கு மிகத் திரளாகக் கூடியிருக்கும் தாய்மார்களுக்கும் சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். என் அருமைத் தாய்மார்களே! நீங்கள் பல தொந்தரவுகளுக்கும் உள்ளாகி, பல கஷ்ட நஷ்டங்கள்பட்டு இங்கு வந்து இரண்டு நாள் தங்கிச் செல்லுவதற்காக ஏதாவது உருப்படியான பலன் பெற்றுச் செல்லவேண்டாமா? எதற்காக நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்? இது இராமேஸ்வரம் அல்லவே—பிள்ளைவரம் வாங்கிக்கொண்டுபோக! இந்த இடத்தில் அரசமரமும் வேப்பமரமும் இல்லையே—சுற்றிச் சென்றால் கர்ப்பம் தரிக்கும் என்று சுற்றிப்போவதற்கு! இது திருப்பதியும் அல்லவே—உள்ள காசைப் பார்ப்பானிடம் பறிகொடுத்துவிட்டு மொட்டையடித்துக்கொண்டுபோக. இது அறிவுபற்றிப் பேசும் இடம். ஆகவே நீங்களும் ஏதாவது அறிவு பெற்றுச் செல்ல வேண்டாமா? கொஞ்சம் காதுகொடுத்துக் கவனத்தோடு கேளுங்கள்.

தாய்மார்களே! நீங்கள் தற்போது தழுவி நிற்கும் இந்துமத, வருணாசிரம தர்மப்படி—நீங்கள் சூத்திரச்சிகள்; பார்ப்பானின் தாசிகள் என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். கடவுளுக்கும் நீங்கள்தான் தாசிகள். எந்தக் கடவுளும் சூத்திரச்சிகளுடன்தான் லீலைகள் செய்ததாகப் புராணக் கதைகள் கூறுகின்றனவே ஒழிய, எந்தக் கதையும்—கடவுள் பார்ப்பனத்திகளோடு லீலைகள் செய்ததாகக் கூறக் காணோம். கடவுள் அவதாரமெல்லாம் நம் பெண்களைத்தான், கற்பில் சோதித்ததாகக் கதைகளில் கூறப்படுகிறதே ஒழிய, எந்தக் கதையிலும் பார்ப்பனப் பெண் கடவுளால் கற்பழிக்கப்பட்டதாகக் காணோம். அவ்வளவு இழிவுபடுத்திவிட்டார்கள், இந்த அன்னக்காவடிப் பார்ப்பனர்கள் நம்மை. இதை அறியாமல் இன்னும் நீங்கள் அவன் காலடியில் வீழ்ந்து, காசு பணம் அழுதுவருகிறீர்கள். இனி நீங்கள் ஒரு காசுகூட எந்தப் பார்ப்பானுக்கும் அழக்கூடாது. உங்கள் வீட்டு நல்ல காரியங்களுக்கோ கெட்ட காரியங்களுக்கோ, அவனை ஒருநாளும் அழைக்கக்கூடாது. நீங்கள் கோயிலுக்குப் போகக்கூடாது; போவதாயிருந்தாலும் பார்ப்பான்தான் பூசை செய்ய வேண்டுமென்கிற கட்டுத்திட்டம் உள்ள கோயிலுக்கோ, இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்டு அதோடு ஒரு வைப்பாட்டியும் வைத்திருக்கும் சாமிகளுள்ள கோயிலுக்கோ நீங்கள் கட்டாயம் போகக்கூடாது. அப்படிப் போவதானால், போகும்பொழுது ஒரு தடி எடுத்துக்கொண்டு போங்கள்—தேங்காய் வெற்றிலைப் பாக்குக்குப் பதிலாக. அந்தத் தடியால் அடித்துக் கேளுங்கள், அந்த சாமியை! 'நான் தடியால் அடிக்கிறேன்; நீ அழாமல் இருக்கிறாயே! உனக்கு உயிர் கிடையாது, நீ வெறும் குழவிக் கல் சாமி! அதனால்தான் நான் அடிப்பது உனக்குத் தெரியவில்லை. அப்படியிருக்க உனக்கேன் பெண்டாட்டி? அப்படித்தான் பெண்டாட்டி வேண்டுமென்றால் ஒரு பெண்டாட்டி போதாதா? இரண்டு பெண்டாட்டி ஏன் உனக்கு? இரண்டு பெண்டாட்டிகள்தான் இருந்து தொலைய வேண்டுமென்றால் ஒரு தடவை அவர்களைக் கலியாணம் செய்துகொண்டால் போதாதா? வருடா வருடம் ஏன் உனக்குக் கலியாணம்

நடக்கவேண்டும்? அதுவும் போதாதென்று வைப்பாட்டிகள் வேறு வேண்டுமென்கிறாயே! அது நியாயமா? அத்தனையும் வேண்டுமானால் வைத்துக்கொள்! அண்டங்களை எல்லாம் படைத்த உனக்கு நாங்கள் ஏன் படியளக்க வேண்டும்? உனக்கு வேண்டியதை உன்னால் தேடிக்கொள்ள முடியவில்லை; நீயா எங்களுக்குப் படியளக்கப் போகிறாய்? ஏன் சாமி மவுனம் சாதிக்கிறீர்கள்? கல்லில்லையானால், நீ உண்மையில் கடவுளானால், நாங்கள் தரும் பொருள் உனக்குச் சேர்வதில்லையானால் உன் பேரால் எங்களைக் கொள்ளையடித்து வாழும் இந்த அன்னக்காவடிப் பார்ப்பானை ஏன் நீ தண்டிக்கக்கூடாது''? என்று தடியால் அடித்துக் கேளுங்கள். பதில் இல்லையானால்—அது வெறும் குழவிக் கல் என்பதை—நாங்கள் கூறுவதுபோல் அறிந்துகொண்டு வீடு திரும்புங்கள்.

பிறகு ஒரு வார்த்தை உங்களை எதிர்த்துப் பேசுவார்களா—உங்கள் கணவர்கள்? கடவுளுக்கு இந்தக் கதியானதால்—அவர்கள், தம் கதி என்னவாகும் என்று புரிந்துகொள்ள மாட்டார்களா? அப்புறம் ஒருநாள், வெளியே போவார்களா உங்கள் புருஷர்கள், வேறு மங்கையர்களைத் தேடி?

அந்தச் சாமியை அடித்து வைத்தவன் நம்மவன்; அந்தச் சாமிக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கக் கும்பாபிஷேகம் நடத்த உதவியது நம்முடைய பொருள்; அரிசி பருப்பு அழுது வருவது நாம். அப்படியிருக்க, நாம் அதைத் தொடக்கூடாது என்று அந்தப் பார்ப்பான் உறுதி கூறுகிறானென்றால் அப்படிப்பட்ட இடத்திற்கு நாம் போகலாமா? அதற்குத் தேங்காய் பழம் படைக்கிறீர்களே—துணிமணி வாங்கித் தருகிறீர்களே! அதை அந்தக் கல்லா அனுபவிக்கிறது? குழவிக் கல்லால் சாப்பிட முடியுமா? சாப்பிட்டால் ஜீரணமாகி வெளிக்குப் போகிறதா? எல்லாவற்றையும் பார்ப்பான்தானே அனுபவிக்கிறான்? பாடு பட்ட பணத்தை அப்படி விரயமாக்கலாமா, நீங்கள்? கடவுள் என்றால் அது யோக்கிய மாக, ஒழுக்கமாக பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டாமா? பாடுபடும் நீங்கள் பட்டினி கிடக்க, படிக்க வசதியின்றி தற்குறிகளாயிருக்க, ஏழைகளாகக் கீழ்சாதி மக்களாக இருக்க—பாடுபடாத பார்ப்பனத்திகள் சோம்பேறிகளாக, அய். சி. எஸ். காரரின் மனைவி களாக, பட்டாடை உடுத்தி மேனி மினுக்குடன் உயர்சாதி மக்களாக வாழ அனுமதிக்கும் கடவுளா, உங்களுக்குக் கடவுள்?

கடவுள் என்றால் கல், களிமண், புல், பூண்டு, செடி, கொடி, கழுதை, குதிரை, சாணி, மூத்திரம் இத்தனையும் கடவுளா? கடவுள்—அறிவுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டாமா? திருப்பதிக்குப் போய் மொட்டையடித்துக்கொண்டு வருகிறீர்கள்! சாமியா மயிரைக் கேட்கிறது? எந்தப் பார்ப்பனத்தியாவது திருப்பதிக்குப் போய் மொட்டையடித் துக்கொண்டு வருகிறாளா? இப்போது தாலியறுத்தால்கூட அவர்கள் மொட்டையடித்துக் கொள்வதில்லையே! மொட்டையடிக்கப்படும் என்று தெரிந்தால், அதற்கு முன்பே வீட்டை விட்டுவிட்டு யாருடனாவது ஓடிவிடுகிறார்களே! அப்படியிருக்க உங்கள் மயிரைத்தானா சாமி கேட்கும்? உங்கள் கணவன்மாரைக் காவடி தூக்கிச்செல்ல அனுமதிக்கிறீர்களே, அது தகுமா? எந்தப் பார்ப்பானாவது பழனியாண்டவனுக்குக் காவடி தூக்கிச் செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா? அய்ந்து புருஷன் போதாதென்று 6-வது புருஷனையும் விரும்பிய துரோபதியம்மாளைப் போய்க் கும்பிடுகிறீர்களே! அவளுக்கு மாவிளக்கு வைக்கிறீர்களே! உங்களுக்கு இன்னும் அதிகப்படியான புருஷன் வேண்டும் என்று வரங் கேட்கவா அந்தப் படி செய்கிறீர்கள்? திராவிடத் தாய்மார்களாகிய உங்களுக்கு அடுக்குமா, இது?

தாய்மார்களே! நீங்கள் எதையும் பகுத்தறிந்து பார்க்கவேண்டும். கல்லைக் கடவுளென்று கூறுவதையும், பார்ப்பான் கடவுள் அவதாரம் என்று அவனுக்கு அரிசி, பருப்பு அழுவதையும் அறவே விட்டொழிக்க வேண்டும். சாணி, மூத்திரத்தைக் கலக்கிக் குடிப்பது மதம் அல்ல. புராண சம்பந்தமான நாடகங்களுக்கோ, சினிமாக்களுக்கோ, புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள் என்பதற்கோ நீங்கள் கட்டாயம் போகக்

கூடாது. இவையாவும் பார்ப்பனர்கள் உங்கள் காசைப் பறித்துச் சுகபோக வாழ்வு வாழ்வதற்கு வகுத்துக்கொண்ட வழிகள். நீங்களும் மேல்நாட்டுப் பெண்களைப்போல் சகல உரிமைகளும் பெற்று இன்ப வாழ்வு வாழவேண்டும். அதற்கு ஆண்களைப் போல் நீங்கள் படிக்கவேண்டும். உங்களுக்குச் சட்டத்தின்மூலம் பல உரிமைகள்—சொத்துரிமை, விவாகரத்து உரிமை ஆகிய உரிமைகள் வரக் காத்திருக்கின்றன. அவ்வுரிமைகளை அனுபவிக்கக் கல்வியறிவு அவசியமாகும்.

நகைகளிலோ, சேலைகளிலோ உங்களுக்குள்ள பிரியத்தை ஒழித்து விடுங்கள். இவற்றில் பிரியம் வைத்துக்கொண்டிருப்பீர்களானால், ஜவுளிக் கடையிலும், நகைக் கடையிலும் சேலை விளம்பரத்திற்காக அவ்வப்போது வெவ்வேறு சேலை உடுத்தி, வெவ்வேறு நகை மாட்டி வெளியே நிறுத்திவைக்கும் வெறும் பொம்மைகளாகத்தான் நீங்கள் ஆக நேரிடும். ஆகவே, அவ் விருப்பங்களைவிட்டுக் கல்வியறிவில் விருப்பம் கொள்ளுங்கள்; வீரத் தாய்மார்களாக ஆக ஆசைப்படுங்கள். உங்கள் நன்மைக்காகத்தான் பெரும்பாலும் திராவிடர் கழகம் இருந்து வருகிறது. நீங்கள் மாறினால்—உங்கள் கணவன்மார்கள், மற்ற ஆண்கள் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள், உங்களைத்தான்—பிற்போக்காளிகள் என்று உங்கள்மீதே பழி சுமத்திவருகிறார்கள். 'ஏனப்பா, மூட நம்பிக்கைக்கு இடமான இக் காரியங்களைச் செய்கிறாய்?' என்று ஓர் ஆளைப் பார்த்துக் கேட்டால், 'நான் என்ன செய்யட்டும்; என் வீட்டில் ஒரு பெரிய 'சனியன்' இருக்கிறது; எல்லாம் அதன் தொல்லைதான்' என்று கூறிவிடுகிறான். அப் பழிச்சொல்லுக்கு ஆளாகாதீர்கள்! எதிர்காலத்தில்—'இவள் இன்னாருடைய மனைவி என்று அழைக்கப்படமாட்டாது; இவர் இன்னாருடைய புருஷர்' என்று அழைக்கப்படவேண்டும். அந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவர அனுதினமும் பாடுபட்டுவரும் திராவிடர் கழகத்தை நீங்கள் அனைவரும் ஆதரித்து வரவேண்டும்.

கடைசியாக உங்களை ஒன்று வேண்டிக்கொள்கிறேன். உங்களை என்றென்றும் மடமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்திவைக்க நினைக்கும் மதத்தையோ, மத கர்த்தர்களையோ, மகான்களையோ, ரிஷிகளையோ நம்பி நீங்கள் மோசம் போகாதீர்கள். மனித சக்திகளுக்கு மேற்பட்ட சக்தி தன்னிடம் இருப்பதாக எவன் கூறினாலும், அவன் எவ்வளவுதான் உயர்நிலையிலிருந்தாலும் சரி—அது பித்தலாட்டம், மோச வார்த்தை என்பதை மனத்தில் உறுதியாக வைத்துக்கொள்ளுங்கள். இந் நாட்டில்—ஏன் இந்த உலகிலேகூட எத்தனையோ மகான்கள், மகரிஷிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோன்றியிருக்கிறார்கள் என்றாலும், இதுவரை யாரும் உங்களுடைய இழிவைப் போக்கப் பாடுபட்டதாகக் காணோம். ஏசு கிறிஸ்து தோன்றி அன்பு மதத்தைப் போதித்ததாக 'பைபிள்' கூறுகிறது. அவருடைய சிஷ்யர்கள்தாம் இன்று அணுகுண்டு உற்பத்திக்கு முக்கிய காரணமாயிருந்து வருகிறார்கள். முகமதுநபி சிஷ்யர்களும், இந்துமத பாதுகாப்பாளர்களும் இன்று ஒருவரை ஒருவர் கொன்றுகொள்கிறார்கள். காந்தியாரின் அகிம்சை அவரையே கொன்று விட்டது.

[தூத்துக்குடியில் 8, 9-5-1948-ல் நடந்த மாகாண மாநாட்டில் சொற்பொழிவு—'விடுதலை' 20-5-1948]

8. போர் வீரர்களே வேண்டும்

பெரியோர்களே! தோழர்களே! தாய்மார்களே!

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில புரட்சிகரமான தீர்மானங்களால் சர்க்கார் சம்பந்தம் நீங்கப்பெற்று, கழகத்தின் பெரும் மாற்றம் அடைந்து, திராவிட நாடு பிரிவினையும் இலட்சியமாக்கப்பட்டதிலிருந்து நமது செல்வாக்கு அனுதினமும் பெருகிக்கொண்டே வருகிறது. இதைக் காணும் சில பொறாமைக்காரர்களும், மேதாவிகள் என்று தம்மை

நினைத்துக்கொண்டிருக்கும் சில புத்திசாலிகளும் நம்மீது ஏதேதோ குற்றங் குறை கூறி வருகின்றார்கள். நம் கழகத்தைப் பின்பற்றி நடந்துவருபவர்களை இவர்கள் பைத்தியக் காரர்கள் என்றுகூடக் கருதிவருகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், என்னைப் பின்பற்றி நடந்துவருபவர்கள் புத்திசாலி களாய் இருக்கவேண்டுமென்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. தங்கள் அறிவை, ஆற்றலை மறந்து, என் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய ஆட்கள்தான் எனக்குத் தேவையே ஒழிய, அவர்கள் புத்திசாலிகளா, முட்டாள்களா, பைத்தியக்காரர் களா, கெட்டிக்காரர்களா என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மதிப்பிற்குரிய நண்பர் மாணிக்க நாயகர் அவர்கள் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அவர் ஈரோட்டில் எக்ஸிக்யூடிவ் என்ஜினீயராய் இருந்தபோது அவர் எங்கள் வீட்டில் குடியிருந்தார். மாடுகளுக்குச் சுலபமாய் இழுக்கக் கூடிய புது மாதிரியான 'கவலை' ஒன்று செய்யத் தனக்கு இரண்டு கொல்லர்களைத் தருவித்துக்கொடுக்கும்படி சொன்னார். நான் யோசித்து இரண்டு கெட்டிக்காரக் கொல் லர்களின்—அதாவது, துப்பாக்கி செய்யக்கூடியவர்கள் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை அழைத்துவரும்படி என் காரியஸ்தர்களுக்குக் கூறினேன்.

அப்போது அவர் சொன்னார்: 'கொல்லன்—கெட்டிக்காரன் என்பவர்களை அனுப்பி வைப்பாயானால், அவர்கள் இருவருக்குள்ளும் எழும் கெட்டிக்காரத்தனப் போட்டி என் வேலையைக் கெடுத்துவிடும்; அவர்களே எனக்கு யோசனை சொல்ல முந்துவார்கள். என் திட்டம் ஆட்டம்கொடுத்து வேலை நடவாது. ஆகவே, நான் சொல்வதைப் புரிந்து கொண்டு அதன்படி வேலை செய்யக்கூடிய, ஒரு படிமானமுள்ள—சொன்னபடி நடக்கக் கூடிய, சம்மட்டியும் சுத்தியும் பிடித்துப் பழகிய இரண்டு ஆட்களை அனுப்பிவைத்தால் போதுமானது. அவர்கள் முட்டாள்களாயிருந்தாலும் சரி; அவர்களைக் கொண்டு சுலபத் தில் வேலையை முடித்துக்கொள்ளலாம்' என்று கூறினார்.

புத்திசாலிகள் சண்டை போட்டுக்கொள்வது எப்போதுமே இயற்கைதான். ஆகவே தான் நான் நீடாமங்கலம் மாநாட்டின்போது மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறேன்— 'என்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் சொந்தப் பகுத்தறிவைக்கூட கொஞ்சம் தியாகம் செய்யவேண்டும்' என்று. யாராவது ஒருவன்தான் நடத்தக்கூடியவனாக இருக்க முடியுமே தவிர, எல்லாருமே தலைவர்களாக இருக்கமுடியாது. மற்றவர்கள் தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்கவேண்டியவர்கள்தாம். தோழர்களே! நான் இப்போது கூறுகிறேன்; நீடாமங்கலத்தைவிட ஒரு படி மேல் செல்கிறேன்.

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவை மட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சி என்பதைக்கூட நீங்கள் கொஞ்சம் மூட்டைகட்டிவைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேருமுன்பு நீங்கள் உங்கள் பகுத்தறிவுகொண்டு கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம். என்னுடன் வாதாடலாம். உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்று நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆர அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம்.

ஆனால், எப்போது உங்கள் மனச்சாட்சியும் பகுத்தறிவும் இடங்கொடுத்து, நீங்கள் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்போதிலிருந்து உங்கள் பகுத் தறிவையும் மனச்சாட்சியையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டுக் கழகக் கோட் பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்கவேண்டியதுதான் முறை.

ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து, 'அந்தப் பெட்டியைக் கொஞ்சம் எடப்பா' என்று கூறினால், 'என் மனச்சாட்சி என்னை அதற்கு அனுமதிக்கவில்லையே' என்று கூறினால், அது முறையாகுமா? ஒரு டிஸ்ட்ரிக்ட் சூப்பிரண்டெண்ட், 'சுடு!' என்று

போலீஸ்காரனுக்கு உத்தரவு போட—அவன், 'என் மனச்சாட்சி அதற்கு இடங்கொடுக்க வில்லையே' என்று கூறினால் அந்த சூப்பரிண்டென்டு கதி என்ன ஆவது? கசாப்புக் கடையில் வேலைபார்க்க ஒப்புகொண்டவன், 'அந்த ஆட்டை வெட்டுடா' என்று எஜமான் உத்தரவிடும்போது, 'அய்யோ என் மனச்சாட்சி மாட்டேன் என்கிறதே; நான் என்ன செய்யட்டும்' என்று கூறினால், 'ஏண்டா மடப்பயலே, முன்னாடியே உனக்கு இது தெரியாமற் போனதென்னடா? அப்போது உன் மனச்சாட்சி எங்கேடா போயிருந்தது?' என்று கேட்பானா, இல்லையா அவனை?

ஆகவே, மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ கழகக் கொள்கையை ஒப்புக் கொள்ள மறுக்குமானால் உடனே விலகிக்கொள்வதுதான் முறையே ஒழிய, உள்ளிருந்து கொண்டே குதர்க்கம் பேசித் திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறேன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்குச் சர்வாதிகாரம்தான் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், தோழர்களே! நீங்கள் சிந்திக்கவேண்டும்—'இந்தச் சர்வாதிகாரம் எதற்குப் பயன் படுகிறது?' என்று. என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக இலட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே ஒழிய, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு கடுகளவாவது எனது சொந்த நன்மைக்காகவோ பயன் படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

என் சொந்த விளம்பரத்திற்காக, என் சொந்தப் பெருமைக்காக இதுபோன்ற மாநாடுகள் கூட்டப்படுகின்றன என்று சிலர் கருதுவதற்கொப்ப, இம் மேடையின்கண் பேச நேரும் தோழர்களும் என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலேயே தமது சொற் பொழிவுக்குக் கொடுக்கப்படும் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்கின்றார்கள். இதை நான் அறவே வெறுக்கிறேன்; சிறிதும் விருப்பமில்லை. ஆகவே, சொற்பொழி வாளர்கள் என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

[தூத்துக்குடி மாகாண மாநாட்டில் சொற்பொழிவு-'குடிஅரசு' 29-5-1948]

நான் இறந்தாலும் ஏனைய திராவிடத் தோழர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்; எனது வேலையை அப்படியே விட்டுவிடமாட்டார்கள்; தொடர்ந்து போராடி வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. நமது கொள்கைகள் ஒரு அளவுக்குப் பொது மக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டன. இன்னும் கொஞ்ச காலத்திற்குள் நம் இஷ்டம் போல் நடக்காத மந்திரிகளுக்கு மந்திரி சபை நாற்காலி இடங்கொடுக்காது; நம் இஷ்டப் படி நடக்காத சட்டசபை மெம்பர்களுக்கு சட்டசபை இடங்கொடுக்காது என்கின்ற நிலை ஏற்பட்டுவிடும். இந்நிலை வெகு சீக்கிரமே ஏற்படவேண்டுமானால் நாம் எல்லோரும் கறுப்புச் சட்டைக்காரர்களாக மாறவேண்டும்.

[தூத்துக்குடி மாகாண மாநாட்டில் முடிவுரை-'குடி அரசு' 5-6-1948]

9. இயக்கத்தைப் பரிசுத்தப் படுத்தவேண்டும்.

தோழர்களே!

நமது இளைஞர்களுக்குள் மேலும் கட்டுப்பாடு வேண்டுவது அவசியம். கழகத்தின் பொறுப்பை உணர்ந்து கொள்ளவேண்டும்; சுயநலக்காரர்களின் விஷமத்தனத்திற்குப் பலியாகக்கூடாது. நமது கழகத்தில் சுயநலக்காரர்களுக்கு இடமில்லை; கழகத்தில் தனது சொந்த இலாபத்தைக் கருதி இருப்பவனுக்கு இடமில்லை. கழகத்திற்காகத் தம் சொந்தப்

பணத்தை, சொந்த உழைப்பைச் செலவு செய்பவர்களுக்குத்தான் கழகத்தில் மதிப்புண்டு. கழகத்தினிடம் ஊதியம் பெற்று வேலை செய்பவன் கழகத்தின் வேலைக்காரனாகத்தான் மதிக்கப்படுவான். எவனொருவன் தன் சொந்தப் பணத்திலிருந்து ஒரு அரைக் காசாயினும் கழகத்திற்குச் செலவு செய்கிறானோ, அவனைத்தான் நான் என் நண்பனாக, என் துணைவனாக, என் தலைவனாகக்கூடக் கருதுவேன். கழகம்—பாடுபடுகிறவனுக்குச் சொந்தமானதே ஒழிய, கழகத்தின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைப்பவனுக்கு அல்ல. கழகத்தின் பேரால் வாழ்க்கை நடத்துகிறவன் கழகத்தின் வேலைக்காரன்; கழகத்திற்காகத் தன் காசைக் கொடுப்பவன் கழகத்தின் நண்பன். எவனையும் இந்த உரைகல்லைக் கொண்டுதான் நமது இளைஞர்கள் மதிப்பிடவேண்டும். இவ்விதம் ஆராய்ந்து தெளியாமல் நம் இளைஞர்கள் பொறாமைக்காரர்களின் விஷமப் பிரசாரத்திற்கு இடம் கொடுத்து வருவார்களேயானால் நான் கழகத்தைக் கலைத்துவிடவும் தயங்கமாட்டேன். நமது இளைஞர்களுக்கு உண்மையை உணர்ந்துகொள்வதில் கவலை இருக்கவேண்டும். யாரை வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு கூத்தாடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

நமது கழகம் திராவிடர்களுக்கே சொந்தமான கழகம்; சுயநலக்காரர்களுக்குச் சொந்தமானதல்ல என்பதை உணர்ந்து செயலாற்றவேண்டும். தலைவன் என்கிற முறையில் ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். இதற்காக வருத்தம் கொண்டு விடாதீர்கள். சுய பெருமைக்காகவும், சுய விளம்பரத்திற்காகவும், சுயநலத்திற்காகவும் மட்டுமே கழகத்தில் இருந்துவரும் தோழர்களின் சொற்கேட்டு ஏமாந்துபோகவேண்டாம் என்று எச்சரிக்கை செய்யவே இவ்வளவும் கூறினேன். மக்களின் ஆதரவு நமக்கு ஏற்பட்டு வரும் அளவுக்கு இயக்கத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும் என்ற ஆசையால்தான் இவ்வளவு வலியுறுத்திக் கூறநேர்ந்தது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மாநாடு ஒரு குறைவுமின்றி மிகமிகச் சிறப்பாக நடைபெற்றுவிட்டது. இதுவரை யாரும் நடத்தியறியாத முறையில், எங்கும் நடந்திராத முறையில் இவ்வூர்க்காரர்கள் மாநாட்டை நடத்திக்காட்டியிருக்கிறார்கள். இந்த அளவில் மற்ற ஜில்லா பிரமுகர்களுக்கு இவர்கள் ஒரு கஷ்டத்தையே கொடுத்துவிட்டார்கள் என்று கூறவேண்டியிருக்கிறது. இனி நடத்தப்போகும் மாநாடுகளில் எவ்வளவுதான் தங்களால் கூடுமான அளவுக்கு மக்களுக்கு வசதி செய்துகொடுத்தபோதிலும் மக்கள் குறைவாகவே, போதாததாகவே கருதக்கூடிய அளவுக்கு—இந்த ஊர்க்காரர்கள் வசதிசெய்து கொடுத்துவிட்டு மக்களைப் பழக்கிவிட்டார்கள். நாளைக்கு இரயில்வே ஸ்டிரைக்கால் சிலர் தங்க நேரிடுமே என்று கூறினால், 'பரவாயில்லை அதற்கும் சேர்த்துத்தான் அரிசி, பருப்பு வாங்கியிருக்கிறோம்' என்று கூறுகிறார்கள். இவ்வளவு ஏற்பாடுகளுக்கும் முக்கிய பொறுப்பாளிகளாயிருந்த தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார், தோழர் நீதி மாணிக்கம், தோழர் ஷண்முகம் ஆகியவர்களுக்கு எனது சார்பாகவும் கழகத்தின் சார்பாகவும், உங்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியறிதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தோழர் கே. வி. கே. சாமி அவர்களை இதுவரை ஒரு விளையாட்டுப் பிள்ளை என்று நினைத்திருந்தேன். அவர் இம் மாநாட்டுச் செயலாளராயிருந்து பணியாற்றியதைப் பார்த்ததிலிருந்து அவர் இந்தத் திராவிட நாட்டின் கவர்னர் பதவியைக் கொடுத்தால்கூட அதையும் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமை பெற்றிருக்கிறார் என்று கூற வேண்டியிருக்கிறது. அவருடன் ஒத்துழைத்த தொண்டர்களின் சிறப்பைப்பற்றி நான் கூற வேண்டியதே இல்லை. நீங்களே அவர்களைப்பற்றி நன்கு அறிந்துகொண்டிருப்பீர்கள்.

இவ்வூர் மகா ஜனங்களும் நம்மைப் பரிவுடன் நடத்தி இருக்கிறார்கள். வீதியிலோ, உணவுச்சாலைகளிலோ எங்குமே, நம் தோழர்களுக்கு யாரும் தொல்லை கொடுக்கக் காணோம். எங்கும் அன்பையே கண்டோம்; எல்லாம் வெகு திருப்திகரமாக நடந்தேறி விட்டது.

[தூத்துக்குடி மாகாண மாநாட்டில் சொற்பொழிவு-'விடுதலை' 20-5-1948]

10. புரட்சிக்கு அழைப்பு

தோழர்களே! தாய்மார்களே!

முதலாவது தீர்மானமாக 'ஆரியக் கடவுள்கள் 100-க்கு 97½-க்கு மேற்பட்டவைகளை, ஆரியர்கள் திராவிடர்களை (சூத்திரர்கள் என்பவர்களைக்) கொல்லுவதற்காகவும், தலையெடுக்காமல் இருக்கச் சூழ்ச்சிகள் செய்வதற்காகவும், விபச்சாரம் முதலிய கூடா ஒழுக்கங்களில் ஈடுபடுவதற்காகவுமே கற்பிக்கப்பட்டவைகளாக இருப்பதாலும்; அக் கடவுள்களை வழிபடுகிறவர்கள் ஒழுக்கசீலர்களாக இருக்கமுடிவதில்லை என்பதோடு, உள்ள ஒழுக்கத்தையும் இழக்கவேண்டியிருப்பதாலும் அக் கடவுள்களைத் திராவிடர்கள் வழிபடக்கூடாது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது' என்பதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

உண்மையாகவே ஆத்திகத் தோழர்களைக் கேட்கிறேன்; கடவுள் என்றால் என்ன? அந்தக் கடவுளுக்கு என்ன இலட்சணம், இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது? கடவுளின் நடத்தைக்கு என்ன தன்மை காட்டப்பட்டிருக்கிறது?

'கடவுள்' என்றால் ஒரே கடவுள், அதுவும் கண்ணுக்குத் தெரியாத, உருவமற்ற அரூபி, குணமற்றவர் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதே! அந்த இலட்சணத்தின்படி இன்றுள்ள இந்துக் கடவுள்களில் எந்தக் கடவுள்களாவது இருக்கின்றனவா? பல கடவுள்கள் இருப்பதோடு ஒரு கெட்டகுணம், செயல்கூட பாக்கியில்லாமல் அத்தனை அயோக்கியத் தனங்களையும், ஆபாச நடத்தைகளையும் எல்லாவற்றையும் அக் கடவுள்கள் மீது அல்லவா பார்ப்பனர் சுமத்தியிருக்கிறார்கள்! 'உருவமற்ற, குணமற்ற, எங்கும், எல்லாமுமாய் நிறைந்த கடவுள் இருக்கிறது' என்றால், அது கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இருக்கிறதே தவிர, நமக்கு இருப்பது எல்லாம் சராசரி மனிதத் தன்மை, பண்புக்கு கீழ்ப்பட்ட செய்கை படைத்த ஆபாசக் கடவுள்கள்தாமே! கடவுள் இருப்பது என்று சொன்னால், அது ஒரு கடவுளாக—யோக்கியமுள்ள கடவுளாக; மானத்தை-ஒழுக்கத்தை, உயர்வைக் கற்பிக்கக் கூடியதாய் அல்லவா இருக்கவேண்டும்? அதைவிட்டு இப்போது இருக்கிற கடவுள்களின் நடத்தைப்படி ஒருவன் தேவடியாள் வீட்டுக்குப் போனாலும் தவறு இல்லை! காரணம் கடவுளே இந்தப்படி போயிருக்கிறது! ஒருவன் எத்தனை பேரைக் கலியாணம் செய்துகொண்டாலும் அது தப்பல்ல; ஏனென்றால் கடவுளும், கடவுளுடைய தந்தைமார்கள் என்பவர்களும் பதினாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் மனைவிமார்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்! ஒருவன் திருடுவதோ, கொள்ளையடிப்பதோ தவறான செய்கையாகாது! ஏனென்றால், நம்முடைய கடவுள்கள் திருடியிருக்கின்றன; கொள்ளையடித்து இருக்கின்றன! திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் பரிசு அளிப்பது போல—அவர்களுக்குக் கடவுளே நேரில் தோன்றி மோட்சம் கொடுத்திருக்கிறது. ஒருவன் பொய் பேசுவதோ, அல்லது ஒருவன் இன்னொருவனைக் கொல்லுவதோ கூடத் தவறில்லை! காரணம், இந்தச் செயல்களெல்லாம் கடவுள்கள் எனப்படுகிற நம் சாமிகளால் செய்யப்பட்ட காரியங்கள் என்கிற மாதிரியில், சொல்லத்தக்க யோக்கியதையில்தானே கடவுள்கள் என்பவைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட இவைகள் கடவுள்களாக இருப்பதன் மூலமும், அவைகளுக்குச் செல்வாக்கு கொடுக்கப்பட்டு நடைபெற்றுவரவுமான தன்மையிலும் இருந்தால் மக்களின் பொது ஒழுக்கம் எப்படிச் சரியாக இருக்கமுடியும்? ஆதலால்தான் சொல்லுகிறோம், 'இப்படிப்பட்டதான—ஒழுக்கக்கேடான—யோக்கியதையற்ற கடவுள்கள் ஒழிக்கப்படவேண்டும். கடவுள் வேண்டுமென்றால் மனித நல்லொழுக்கத்துக்கும் நடப்புக்குமான கடவுளை ஏற்படுத்திக்கொள்' என்று.

உள்ளபடியே, பார்ப்பனர்களின் ஆதாரங்களின்படியே கேட்கிறேன்; அவர்களுக்குக் கடவுள் உண்டா? உண்டு என்றால், எப்போது முதல்? அது எது? அவர்களுக்கு இருந்ததெல்லாம் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவர்கள்; தேவர்கள். அதாவது, காற்றுக்கு ஒருவர்; நெருப்புக்கு ஒருவர்; மழைக்கு ஒருவர்; இடிக்கு ஒருவர்; சூரியன், சந்திரன்,

எமன் என்கிற மாதிரி இருந்ததெல்லாம் இலாக்காத் தலைவர்கள் என்கிற தேவர்கள்தாமே தவிர தலைவன் என்கிற மாதிரிகூட ஒன்றுமில்லை; பின்னாலே ஏற்படுத்தினார்கள்—இந்தத் தேவர்களுக்குத் தலைவனாக இந்திரன் என்கின்ற கற்பனையை. அந்த இந்திரன் மீது ஏற்றியிருக்கிற குணங்கள்கூட, சொன்னால் நாறும்; அத்தனை ஆபாசமாயும், கீழாயும் உள்ள குணத் தன்மைகளைக் கொடுத்தார்கள்.

பின்னர், இவைகளிலிருந்து எடுத்துப் படிப்படியாக உற்பத்தி செய்தார்கள்; சிவன் என்ற ஒன்றைச் சிருஷ்டித்தார்கள்; விஷ்ணு என்று வேறொன்று; பிரும்மா என்று மற்றொன்று. இப்படியாக மூன்று கடவுள்கள் என்பவைகளைச் சிருஷ்டித்து, இந்த மூன்று கடவுள்கள், மூலக் கடவுள்கள்—முக்கிய கடவுள்கள் என்று ஆக்கினார்கள். அதோடு நின்றுவிடாமல், மூன்று கடவுள்களுக்கும் பெண்டாட்டிகள் வைத்தார்கள். அந்தப் பெண்டாட்டிகளையும் ஒவ்வொரு கடவுளுக்கும் கணக்கு வழக்கு இல்லாமல் வைத்தார்கள்! அதோடு வைப்புகள் என்பதாகப் பல பெண்களைச் சிருஷ்டித்தார்கள்! அதோடு இல்லாமல், அவர்களுக்குக் குழந்தை-குட்டிகளை உண்டாக்கி, அப்படிப் பிறந்தவைகளையும் கடவுளாக்கி, இப்படி எல்லாவற்றையும் கடவுளாக்கி—மூன்றை முப்பதாக்கி, முன்னூறாக்கி, மூவாயிரமாக்கிப் பெருக்கிக் கடைசியில் முப்பத்தி முக்கோடி (33 கோடி) யாகப் பெருக்கிவிட்டார்கள். கடவுளுடைய பெண்டாட்டியும் கடவுள்; கடவுளுடைய பிள்ளை-குட்டிகளும் கடவுள்; கடவுளுடைய வாகனங்களும் கடவுள்கள்; கடவுள்களுடைய வைப்பாட்டிகளும் கடவுள்கள்'—இப்படி எல்லாமுமே கடவுள்! என்ன நியாயம்? எதற்காக வந்தது இத்தனை கடவுள்கள்? இதைக் கேட்டால்தானே பார்ப்பான் நம்மை நாத்திகன் என்கிறான்? நம் திராவிட 'அனுமார்'களும் பார்ப்பானோடு சேர்ந்து கூப்பாடு போடுகின்றனர்!

இப்படிப்பட்ட இந்தக் கடவுள்களுக்கு நாம்தான் கொட்டிக்கொடுத்து அழவேண்டும். அவைகளுக்குப் புராணங்கள்; அவைகள் புண்ணியத்துக்கு இலாயக்கான நாட்கள்! இந்தக் கடவுள்களுக்குப் பூசை, உற்சவங்கள் நம் செலவில் செய்யவேண்டும் என்று சொன்னால் என்ன நியாயம்? போக்கிரித்தனமல்லவா! இப்படியே வளர்ந்து கொண்டே போனால், இதற்கொரு முடிவுதான் என்றைக்கு உண்டாவது? இந்த 1954-ம் வருடத்தில் இதையெல்லாம் நாம் சகித்துக்கொண்டு இருப்பதா? இவ்வளவு நாகரிகக் காலத்தில் இதைப் பிரச்சாரம் செய்ய 10, 12 மந்திரிகள்; அவர்களின் படைகுடி ஆட்கள்! இவைகளைப் பிரச்சாரம் செய்வதற்கென்றே ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள்; அவைகளுக்குக் கொழுத்த பணம் என்கிற நிலைமை! எவ்வளவு கொடுமை? இவ்வளவு பெரிய நாட்டிலே இப்படி எல்லா இடங்களிலும் இந்த யோக்கியதையற்ற கடவுள்கள் வந்து புகுந்துகொண்டு உயிரை வாங்குவது!

இம் மாதிரியாக மக்களைப் புரிந்து கொள்ள முடியாமல் செய்து, அடியோடு மடையர்களாக்கி, இவைகளைப் பிரச்சாரம் செய்யவே பண்டிகை, சடங்கு, தீர்த்தம், ஸ்தலம், பக்தி என்பவைகளும்; இவைகளைக் கையாளுவதே அறிவின் கடமை என்பதாகவும் செய்யப்படுவதாயிருக்கிறதே தவிர, அறிவுக்கு என்ன வழி செய்யப்படுகிறது? எனவேதான் இரண்டாவது தீர்மானமாக, 'இக் கடவுள்கள் ஒழிக்கப்படும்படியாக நாட்டில் தீவிரமாக எல்லாவகையிலும் பிரச்சாரம் செய்யப்பட வேண்டுமென்றும், அவைகளுக்கென்று பூசை, உற்சவம் முதலியவைகள் நடைபெறாமல் இருக்கச் செய்யவேண்டுமென்றும் அதற்காக ஒரு காசு அளவும் செலவழிக்காமல் செய்யவேண்டும்' என்றும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உள்ளபடி, இந்த சர்க்கார்தான் புத்தர் கொள்கையை ஒப்புக்கொண்டு விட்டதே! அதற்காக முன் சொன்ன மாதிரி விடுமுறையும், சர்க்கார் சின்னமும் ஏற்படுத்திக் கொண்டதே! அப்படி இருக்கும்போது, இந்தப் பிரச்சாரங்கள் ஏன் செய்யவேண்டும்?

இவைகளின்பேரால் கோடிக்கணக்கான ரூபாய்களை பாழாக்குவதற்கு ஏன் இடந்தர வேண்டும்? இதற்குக் காரணமெல்லாம் தெரியாமல் அல்ல; இத்தகைய இந்த மடத்தனமான —காட்டுமிராண்டித்தனமான—அறிவைக் கெடுக்கும் பிரச்சாரம் செய்வதற்கான காரண மெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, தங்கள் இனமாகிய பார்ப்பன இனம் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் பிழைக்க வேண்டும் என்பதுதான். இந்த மதமும் சாஸ்திரமும் அவை களின் பேரால் நடக்கிற உற்சவம், சடங்கு இவைகளின் காரணமாகத்தான் பார்ப்பனர் களுக்கு வாழ்க்கையும், பாதுகாப்பும், உயர்வும், பெருவாழ்வும் இருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் பார்ப்பனர்களுக்கு ஒன்றுமில்லை; அவர்கள் 'சாதாரணங்கள்' ஆகிவிடுவார்கள். இவைகள்தாமே அவர்களை உயர்ந்த சாதிக்காரர்களாகவும்; அந்த உயர்ந்த சாதி, குலம் என்பதன் பேரால் பல இலாபங்களையும் வசதிகளையும்—அதாவது படிப்பு, பதவி, உத்தி யோகம் பெறும்படியான தன்மையிலும் வைத்திருக்கின்றன!

உதாரணமாக ஆச்சாரியார் அவர்களுக்கு மதிப்பு மரியாதை இருக்கிறது என்றால், அவர் ஒரு முதல் மந்திரி என்பது—புத்திசாலி என்பது போன்றவைகளால் இருக்கலாம். ஆனால், சாதாரண சவுண்டிப் பார்ப்பானுக்கு—அன்னக்காவடிப் பார்ப்பானுக்கு— ஈனத்தொழில் செய்யும் பார்ப்பானுக்குக்கூட, இன்னும் எவ்வளவோ கீழ்த்தரமான பார்ப் பானுக்குக்கூட உயர்வும் சமுதாய அந்தஸ்தும் இருக்கிறது என்றால், அவன் பார்ப்பன குலத்தான்—'உயர் சாதியான்' என்பதால்தானே! எனவேதான் பார்ப்பனர்கள் இவைகளை—இக் காட்டுமிராண்டித் தன்மைகளை அவ்வளவு தூரம் பாதுகாக்கிறார்கள்; பிரச்சாரம் பண்ணுகிறார்கள்.

அடுத்தபடியாக, 'உருவ வழிபாடு என்பது—உலகத்தில் இந்தியாவைத்தவிர வேறு எந்த நாட்டிலும் எந்தச் சமுதாயத்திலும் இல்லாததும், அது (விக்கிரக வழிபாடு) ஆரியர் களின் பிழைப்புக்கும், உயர்வுக்கும் ஆகவே இருந்து வருவதுடன், திராவிடர்களைக் காட்டுமிராண்டித்தனமான முட்டாள்களாக்கப் பயன்பட்டு வருவதனால், விக்கிரக அழிப்பு வேலை இன்றியமையாததாகிவிட்டதால் அவ்வேலையைத் தொடர்ந்து மக்கள் ஆற்ற வேண்டும்' என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

தோழர்களே! தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, உலகத்தில் இந்த 'ஞானபூமி' என்று சொல்லப்படும் இந்தக் காட்டுமிராண்டி, அஞ்ஞான நாட்டைத் தவிர வேறு எங்குமே உருவ வழிபாடு என்பது கிடையாது. சில நாடுகளில் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு உருவ வழிபாட்டு முறை, மக்கள் காட்டுமிராண்டிகளாய் இருந்த அந்தக் காலத்தில் இருந்தது என்றாலும், அந்தந்த நாடுகளில் அறிவு தோன்றியவுடனே— அறிஞர்கள் தோன்றியவுடனே உருவ வழிபாட்டு முறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. இன்று எங்கும் உருவத்தை கும்பிடும் மக்கள் இல்லை.

அதோடு, இந்த இந்துக்கள் என்கின்ற மக்கள் சமுதாயத்தைத் தவிர—வேறு முஸ்லிம், கிறிஸ்து மதங்களிலும் இந்த உருவ வழிபாடு முறை கிடையாது என்பதோடு, அவைகள் கண்டிக்கத் தக்கவைகளாகவும், வெறுக்கப்பட்டவைகளாகவும் உள்ளன. நான் முன்னமேயே சொன்னதுபோல, அவர்களுக்கெல்லாம் உருவமற்ற ஒரே கடவுள் வழிபாடு தான் உண்டு. ஆனால், இங்குதான் 'கடவுள் சாதி' என்றே ஒரு தனிசாதி உண்டாக்கப் பட்டு—அவைகளுக்கு உருவமும் வைத்து நம் உயிரை வாங்குகிறார்கள். இதனால் நம் புத்தி அழிவதோடு, பணமும் பாழாகிறது. எனவேதான் இந்த உருவங்களை உடைத்து அழிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம்.

தோழர்களே! உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். இந்த உருவங்களை உடைப்பது என்பது கடவுளை உடைப்பது ஆகாது; ஏனென்றால் இவைகளல்ல—கடவுள். கடவுள் என்பதற்கான யோக்கியதை இலட்சணம் ஒன்றும் இவைகளுக்கில்லை. இவைகள் ஆரியர் களின் கற்பனைக் கதைகளில் வரும் கதாநாயகர்கள்தாம்.

உள்ளபடி இன்றைக்கு இருக்கிற இந்த இராமனையும், கிருஷ்ணனையும், மற்ற கடவுள்கள் என்பவைகளின் உருவங்களையும் செய்து உடைத்தால் அது எப்படிக் கடவுளை உடைத்ததாக ஆகும்? ஆனால், பார்ப்பனர் சூழ்ச்சியால் மக்கள் இவைகளை—இந்தக் கதா பாத்திரங்களைத் தவறாகக் கடவுளாகக் கருதிக்கொண்டு மடமைக்கு அடிமையாகிறார்கள். எனவேதான் இவைகளை உடைத்து நொறுக்கவேண்டும் என்கிறோம். அதன் முதல் காரியமாகச் சென்ற மே மாதத்தில் பிள்ளையார் உருவத்தை உடைத்தோம். தொடர்ந்து மற்ற உருவங்களையும் உடைத்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, 'இந்துமத சாஸ்திர—புராண இதிகாசங்கள் என்பவைகள் அனைத்தும் ஆரிய ஆதிக்கத்துக்கும் உயர்வுக்கும், நம்முடைய அடிமைத்தனத்திற்கும் மடமைக்கும் இழிவுக்குமே ஆரியரால் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருவனவாகையால் அவைகளை அழிக்கவேண்டும் என்பதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியும்—புராணங்களின் யோக்கியதை. இந்தப் புராணங்களில் வரும் புருஷர்கள்தாம், பெண்கள்தாம், பார்ப்பன அடிமைகள்தாம், திராவிட இனத் துரோகிகள்தாம்—நம் கடவுள்கள்! இந்தப் புராணங்களின்படிதான் கடவுள், உருவம், செயல், தன்மை, பண்பு—இப்படியாக எல்லாம் இந்தப் புராணத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு புராணத்தையும் விரித்தால் ஆபாசமும், அறிவற்ற காட்டுமிராண்டித்தனமுமான தன்மையுமே பெருகி நிற்பதைக் காணலாம்.

இந்தப் புராணத்தில் சொல்லப்படுகிற கடவுள்கள் என்பவைகளை உடைக்க வேண்டும் என்கிறபோது நம்மீது சண்டைக்கு வருகிறார்களே ஆத்திகர்கள் என்பவர்கள், அவர்களைக் கேட்கிறேன்—உள்ளபடி இந்தப் பிள்ளையாரோ அல்லது வேறு எந்தக் கடவுளோ உடைபட்டால் இந்தப் பண்டார சந்நிதிக்கும், அல்லது சங்கராச்சாரியாருக்கே கூட, என்ன போகிறது? பிள்ளையார் என்பவர் எப்படிக் கடவுளாக ஆவார்? கடவுளுக்கான யோக்கியதை ஒன்றாவது இருக்கிறதா? சுமார் 1000 வருடங்களுக்குள்ளாகத்தானே இந்த நாட்டுக்கு, 'விநாயகக் கடவுள்' என்பதாக ஒரு கடவுள் கொண்டுவரப்பட்டது? அதற்கு முந்தைய காலத்து நூல்களில் விநாயகரைப்பற்றி ஒன்றுமே கிடையாது. 'வடநாட்டு வாதாபி என்கிற இடத்திலிருந்து, பரஞ்சோதி என்பவரால் கொண்டுவரப்பட்டது' என்பதாகப் புலவர்கள் சொல்லுகிறார்கள். இந்த விநாயகர் கதையை எடுத்துக்கொண்டால் எவ்வளவு முட்டாள்தனம்! இதை எப்படிக் கடவுள் என்று கொண்டாடுவது?

ஒரு கதை: ஒரு காட்டில் ஒரு பெண் யானையும், ஆண் யானையும் கலவி செய்து கொண்டிருந்தனவாம். அதைப் பார்த்தவுடன் கடவுள்கள் எனப்படுகிற பரமசிவனுக்கும், பார்வதிக்கும் அந்த யானைகள்போலவே தாங்களும் கலவி புரியவேண்டும் என்ற காம ஆசை உண்டாயிற்றாம். அந்தப்படி யானைகளாக மாறிக் கலந்ததால் 'ஆனைமுகப் பிள்ளை'யைப் பெற்றெடுத்தார்களாம்; அப்படிப் பெற்ற பிள்ளைதான் விநாயகராம்; அது நமக்குக் கடவுளாம்; விக்கினத்தைத் தீர்த்திடும் விக்கினேசுவரனாம்!

இன்னொரு கதை: பார்வதி ஒருநாள் குளிக்கப் போகையில், தான் குளிக்கிறபோது காவலுக்கு ஆள் வைக்கவேண்டும் என்று கருதி, தன்னுடம்பிலுள்ள அழுக்கையெல்லாம் தேய்த்துத் திரட்டி ஒருருவாகச் செய்து காவலுக்கு வைத்தாளாம். அந்தக் காலத்தில் கடவுள் பெண்சாதிகள் குளிப்பதற்குக்கூட கதவில்லாத 'பாத்ரூம்'—அடைப்பில்லாத வீடுதானா இருந்தது? அதுதான் போகட்டும் என்றால், அழுக்கைத் திரட்டி மனித உருவத்தை உண்டாக்கினாள் என்றால் அந்த அம்மையின் மேலெல்லாம் எவ்வளவு அழுக்கு வடிந்து நின்றிருக்கவேண்டும்! ஓராள் பார அழுக்கா கடவுள்மேல் இருப்பது? இந்தப்படி பார்வதி குளித்துக்கொண்டிருக்கும்போது, பார்வதியின் புருஷன் சிவபெருமான் வந்தாராம். பார்வதி குளிக்கும் இடத்திற்குப் போக முயற்சிக்கவே, காவலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அழுக் குருண்டை ஆசாமி தடுக்கவே, பரமசிவன் அந்த ஆளை வெட்டி

விட்டு உள்ளே புகுந்துவிட்டாராம். பிறகு பார்வதி வந்து பார்த்து, அந்த ஆள் செத்துக் கிடந்ததைக் கண்டு அழுது, உயிர்ப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்க, வெட்டப் பட்ட அந்த உருவத்தின் தலை அதற்குள் எப்படியோ காணாமற் போய்விட, ஒரு யானை யைப் பிடித்து அதன் தலையை வெட்டி, அந்த உருவத்தின் முண்டத்தில் ஒட்டி, 'யானைத் தலையனாகவும், மனித உடலாகவும்' உயிரைக் கொடுத்தாராம். இன்னும் இதுபோன்ற பற்பல கதைகள். இவற்றுள் ஒன்றாவது அறிவுக்கு, ஒழுக்கத்துக்குக் கட்டுப்பட்டிருக் கிறதா? இல்லையே! இவைகளும் இப்படிப்பட்டவைகளும் தாமே நம் கடவுள்கள்! யோக்கியமான மானமுள்ள அறிவாளிகளாய் இருந்தால் இவைகளையெல்லாம் உடைத்து நொறுக்கி மக்கள் மனத்திலிருந்து மறையும்படி செய்யவேண்டாமா?

பிறகு, இந்தக் கிருஷ்ணனின் யோக்கியதைதான் என்ன? வர்ணிக்கிறார்களே, 'கிருஷ்ணா உன்னுடைய அரைஞாண் கயிறு படாத பெண்கள் யார் உண்டு!' என்று. அவன் பண்ணாத விபச்சாரத்தனம் இல்லை; இலட்சக்கணக்கான பெண்களை மனைவியாகக் கொண்டவனாம். மேலும் இலட்சத்தி அறுபதாயிரம் கோபிகைப் பெண்களை வைப்பாகக் கொண்டிருந்தானாம்! இன்னும் ஆபாசம் என்னவென்றால், ஒரு நாள் நாரதர் கிருஷ்ண னிடம் போய், 'கிருஷ்ணா! நீ இப்படி இலட்சக்கணக்கில் பெண்களை வைத்திருக்கிறாயே; எனக்கு ஒரு பெண்ணைத் தயவு பண்ண மாட்டாயா?' என்று கேட்டாராம். அதற்குக் கிருஷ்ணன், 'சரி, நான் இல்லாத வீட்டில் நீ போய் அனுபவி!' என்றானாம். சரியென்று நாரதரும் உலகிலுள்ள ஒவ்வொரு வீடாகப் போகப் போக, எல்லா வீட்டிலும் கிருஷ்ணன் படுத்திருந்தானாம்; சலித்துப்போய், நாரதர் மறுபடியும் கிருஷ்ணனிடம் வந்து 'கிருஷ்ணா, எல்லா வீட்டிலும் நீயே இருக்கிறாய்; எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆதலால் நீயும் நானும் கூடுவோம்' என்று சொல்லிக் கூப்பிட, கிருஷ்ணனும் இசைந்து நாரதனைப் பெண்வேடம் போடச் செய்து கலவி செய்தானாம். அப்படிச் செய்யப்பட்ட கலவியின் மூலமாக 60 குழந்தைகளைப் பெற்றெடுத்தார்களாம். அந்தக் குழந்தைகள்தாம் பிரபவ, விபவ, சுக்கில என்று வருகிற 60 தமிழ் வருடங்கள் என்பவைகளாம். என்ன ஆபாசம்! உள்ளபடி கடவுளைக் கும்பிடுகிறவனுக்குக் கடுகளவாவது புத்தியிருந்தால், மானம், ரோஷம், வெட்கம் இருந்தால் நமக்கு முன் அவர்களல்லவா இந்தக் கிருஷ்ணனை உடைத்து நொறுக்க வேண்டும்?

இன்னும் இதோடு விட்டார்களா! குளிக்கிற பெண்களின் சேலைகளைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து, கையை மேலே தூக்கிக் கும்பிட்டால்தான் சேலை தருவேன் என்பது போன்ற அநாகரிகமான செய்கைகளைச் செய்தவன் நமக்குக் கடவுளா? யோசித்துப் பாருங்கள்! இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒவ்வொரு வீட்டிலும் இந்த நிர்வாணப் படத்தை வைத்துக் கும்பிடுகிறார்கள் என்பதற்காகவே. இவைகள்தாம் போகட்டும் என்றால், பாரதத்தில் துரியோதனாதிகளுக்கு எதிராகப் பாண்டவர்கள் வெற்றி பெறுவதற்காக கிருஷ்ணன் செய்த வஞ்சகமும், சூழ்ச்சியும் மற்றும் அவை போன்ற இழி நடத்தையும் எத்தனை? தெரிந்தோ, தெரியாமலோ கிருஷ்ணனுக்குப் பெயரே—'ஜார சோரன்', 'கபடநாடக சூத்திரதாரி' என்பது தானே!

இம் மாதிரியான கடவுளை வழிபடுவதன்மூலம், இந்தக் கடவுள்களின் உருவங்களைத் தொழுவதன் மூலம், இந்தப்படியான செய்கைகளைச் சொல்லும் நூல்கள் என்பவைகளைப் புண்ணிய சாதனங்கள் என்று கொண்டாடுவதன் மூலம்—நாட்டில் பொது ஒழுக்கம், நாணயம் ஏற்பட முடியுமா? அல்லது பித்தலாட்டம் பரவுவதற்கு வசதி ஏற்படுமா?

துரோபதை கதையை எடுத்துக்கொண்டால், அந்த அம்மாள் முதலிலே ஒருவனைத் திருமணம் செய்துகொண்டு, பின்பு மாமியாரின் சொற்படி அய்ந்து பேருக்கும் மனைவி யானாளாம். அதோடு நிற்கவில்லை. அய்ந்து பேரும் பற்றாமல் ஆறாவதாகக் கர்ணனை யும், 'இவனும் நமக்குக் கிடைத்திருக்கக் கூடாதா?' என்று கவலைப்பட்டாளாம்! எப்படி?

இதிலே அதிசயம் என்னவென்றால், அந்த அம்மாள் பத்தினி 'லிஸ்டில்' இடம் பெறுகிறாள். இப்படி இவைகளையெல்லாம் பார்க்கிறபோது, இந்தப் புராணங்கள் என்பவைகளைக் கொளுத்துவது தவிர வேறு என்ன செய்யமுடியும்?

அடுத்தபடியாக இராமாயணம்! இதனுடைய யோக்கியதைகளைப்பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறேன். முதல் 'அயிட்டமே' இராமர் என்கிற கடவுளுடைய தந்தையாகிய தசரதனுக்கு 60,000 மனைவிகள் என்று ஆரம்பிக்கிறது கதை. இந்த இராம–இலட்சுமண–பரத–சத்துருக்கனன் பிறப்பைப்பற்றிச் சொல்லுகிறபோது—ஒருநாள் இரவு முழுவதும், செத்த குதிரைகளைப் பட்டத்து மகிஷிகள் எனப்படுகிற கோசலை, சுமத்திரை, கைகேயி என்பவர்கள் கட்டிப்பிடித்துப் படுத்துக்கொண்டிருந்துவிட்டு, யாகப் புரோகிதர்களுடன் கூடி இந்த நான்கு பிள்ளைகளையும் பெற்றார்கள் என்பதாகச் சொல்லப்படுகிறது கதை. இதுவா யோக்கியதை! நான் சொல்லுவது, வால்மீகி இராமாயணக் கதையே! கம்பன் பார்ப்பனக் கூலி; பலவற்றை மறைத்தும் திரித்தும் கூறியிருக்கிறான்.

இன்னும், சீதை கர்ப்பமாய் இருக்கிறாள் என்றவுடன் இராமன் அழுகிறான்; விசனப்படுகிறான். அரண்மனை ஆடல் பாடல்காரர்கள் எவ்வளவோ சிரமப்பட்டு அவனைச் சந்தோஷப்படுத்தச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாய்ப் போய்விட்டன. அவ்வளவு விசனத்தோடு இராமன் இருக்கிறான், சீதை கர்ப்பமான சேதி கேட்டு. ஏனென்றால், சீதையின் அந்தக் கர்ப்பம் தனக்குண்டானதல்ல என்று இராமனே அறிந்து வேதனைப் படுகிறான் என்றுதானே அர்த்தம்? இல்லாவிட்டால் பெண்டாட்டி கர்ப்பத்திற்குப் புருஷன் ஏன் அழவேண்டும்—வெட்கப்பட வேண்டும்? இப்படிப் பல நிகழ்ச்சிகள். இன்னும் இராமனுடைய நடத்தையில்தான் என்ன யோக்கியதை இருக்கிறது? ஒரு பெண்ணின் மூக்கையும் மார்பையும் அறுப்பதுதான்—'மனிதத் தன்மைக்கும் மேம்பட்ட கடவுள்' தன்மையா? தன் அண்ணனைக் கொன்று தான் பட்டத்துக்கு வரவேண்டும் என்ற ஒரு துரோகியின் ஆசைக்கு உதவியாய், தனக்குக் கேடு எதுவும் செய்யாத ஒருவனை மறைந்திருந்து அம்புவிட்டுக் கொல்லுவதுதான் கடவுள் செயலா? இவைகளில் எதைக் கடவுள் செயல் என்று சொல்லமுடியும், அல்லது யோக்கியதை என்று சொல்லிவிட முடியும்?

கடைசியாக, இராமாயணம் எப்படி முடிகிறது தெரியுமா? சம்புகன் என்ற ஒரு சூத்திரன் சாமி கும்பிட்டதால் ஒரு பார்ப்பனச் சிறுவன் செத்துப்போய் விட்டானாம். இராமன் அதைக் கண்டுபிடித்து அந்தச் சூத்திரனைக் கொன்றுவிடவே, செத்துப்போன பார்ப்பானுக்கு 'டக்' கென்று உயிர் வந்துவிட்டதாம்! உண்மையோ பொய்யோ? இதன் கருத்தென்ன? சூத்திரன் நேரே சாமி கும்பிட்டால் அது பார்ப்பானுக்கு ஆபத்து என்பதுதானே! ஆகவே, சூத்திரன் சாமி கும்பிடக்கூடாது; பார்ப்பான்மூலம்தான் கும்பிட வேண்டும்; பார்ப்பானின் காலைக் கழுவித் தண்ணீர் குடிப்பதுதான் மோட்சம் என்பதாகத் தானே! இதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? இந்தப்படியான தன்மை படைத்தவர்கள்தாம் நமக்குக் கடவுள்கள்; அவைகளைத் தொழவேண்டும்; அதற்காகப் பணம் செலவு பண்ண வேண்டும்; இந்த நூல்களைத்தான் புண்ணியமான நூல்கள், மோட்சத்துக்கும் உதவும் நூல்கள் என்று கொள்ள வேண்டும்—என்பவைகளை ஒப்புக்கொண்டிருந்தால், இந்தக் காலத்தில், இந்த உலகத்தில் நம்மைவிட மடையர்கள் யார் இருக்கிறார்கள்? இதுவே 1954 ஆம் வருட 'மாடல்' மனிதனின் மனிதத் தன்மை என்றால் வெட்கம், மானம் வேண்டாமா?

இதுபோலவேதான் பார்ப்பனர்களின் மற்ற வேத சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள், கீதை என்பவைகளும். கீதையில் கிருஷ்ணன் 'பிராமண மம தேவதா' என்கிறான். அது போலவே மனு, பராசர், யக்ஞவல்க்யர் முதலியவர்களின் சாஸ்திரங்களிலும் ஏராளமாக இருக்கின்றன என்பதோடு, இந்த எல்லா நூல்கள், புராணங்கள், சாஸ்திர வேத பிரமாணங்கள் என்பவைகளின் கருத்து, சத்து, உள்நோக்கம் எல்லாம்—ஆரிய ஆதிக்கத்துக்கும், நம்முடைய இழிவு, மடமைக்குமே ஆக்கப்பட்டிருக்கின்றவை

களாகும். எனவேதான் இவைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற மேற்சொன்ன 4-வது தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

அடுத்தபடியாக அய்ந்தாவது தீர்மானமாக, 'புத்தர் கொள்கையானது கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், விதி, மேல் லோகம், பூசை, சடங்கு, தீர்த்தம், உற்சவம் முதலியவைகளின் பொய்மை விளக்கிக்காட்டி, மக்களுக்குள் பிறவியில் பேதமற்ற சமத்துவத்தையும் அன்பையும், ஒருவருக்கொருவர் உதவி உபகாரம் செய்துவர வேண்டியதையும் முக்கியமாக வலியுறுத்துவதால்—அக் கொள்கைகள் நாட்டில் பரவி மனித சமுதாயத்தில் காரியத்தில் நடைபெறும்படி செய்ய தமிழ் நாட்டில் உள்ள எல்லா சமுதாய மக்களும், எல்லாக் கழகங்களும், ஸ்தாபனங்களும் பிரச்சாரம் செய்து வரவேண்டும்' என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

என்ன? இந்த இந்துமத—ஆரிய மதத்தினாலும், அந்த மதம் என்பதினுடைய கடவுள், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்பதான காரியத்தினாலும் சகல துறைகளிலும் நம்மை அடிமையாக்கி, முட்டாள்களாக்கியதுமல்லாமல் ஒழுக்கக் கேட்டையும் உண்டாக்கியது என்பதற்கான விளக்கங்களை முன்பே எடுத்துக் காட்டியுள்ளேன். உள்ளபடி கடவுளைக் கண்டு, கடவுளுக்காகப் பயந்துகொண்டு—யார் ஒழுங்காக நடக்கிறார்கள்? உள்ளபடி கடவுளுக்குப் பயந்து, கடவுளும் ஒழுங்கான தன்மையில் இருக்கிறதென்றால் நாட்டில் இவ்வளவு திருட்டும், புரட்டும், கொலையும், துரோகமும், நடைபெறுமா? நாங்கள் தாம் நாத்திகர்கள், கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடுகிறார்கள்; அப்படியானால் இப்போது இந்தப்படியான சமுதாய விரோதமான காரியங்களைச் செய்பவர்கள் எல்லாம் கடவுள் விரோதிகளா? அல்லது, கடவுள் நம்பிக்கையற்றவர்களா?

இந்தக் கடவுள்களுக்கு ஆக எவ்வளவு பணம் செலவாகிறது? எவ்வளவு பிரச்சாரம் பண்ணப்படுகிறது? இவ்வளவு செய்தும் ஒழுக்கம் என்ன இருக்கிறது? என்ன—பிறருக்குதவும் பண்பு, பிறர் மீது அன்பு கொள்ளும் பண்பு இருக்கிறது? ஒன்றும் இல்லையே! பண்டார சன்னிதிகள், சங்கராச்சாரி என்பவர்களிடமே இந்தப்படியான ஒழுக்கங்கள் இல்லையே! நாம்தான் பார்க்கிறோமே! இன்னும் கடவுள், கடவுள் என்று சதா பேசிக்கொண்டிருந்த காந்தியார் கூட்டத்திலேதான்—என்ன யோக்கியர்கள் இருக்கின்றார்கள்? ஆச்சாரியாரே சொல்லிவிட்டாரே—'அங்கே யோக்கியர்கள் இல்லை, எல்லாம் அப்படித்தான்' என்று பச்சையாக அறிக்கை வெளியிட்டு! இன்னும் பொதுவாகவே மக்களிடத்தில் ஒழுக்கம், மரியாதை, அன்பு, பிறர்க்கு உதவும் பண்பு போய்விட்டதே!

எதற்குச் சொல்லுகிறேன், இத்தனை வருடகாலமாக? இன்றையக் கடவுள், மத சாஸ்திர புராண அடிப்படையில் கையாளப்பட்டு வந்த ஒரு முறையின் காரணமாக இந்த சமுதாய விரோதமான காரியங்களின் நடப்பைத் தவிர்க்க முடியவில்லை என்பதோடு, இந்த ஆதார அடிப்படைகளே இத்தகைய தவறான நடப்புக்களுக்கு சாட்சியாய், ஆதரவாய் இருக்கின்றன என்பதால், இந்த அடிப்படையிலே தவறு இருக்கிறது என்பதுதானே அர்த்தம்? இதற்கு மாறாக, புத்தர் நெறி என்பதில் இவைகளுக்குப் பரிகாரமும், நல்லொழுக்கத்திற்கான கொள்கை வழிமுறைகளும் இருப்பதால் அவைகளை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்வதன் மூலம் நல்ல பலன் ஏற்படும்.

ஆரிய மதத்துக்கு ஆதாரமாகவும், அனுசரணையாகவும் இருந்து வருகிறதான கடவுள், விக்கிரக வழிபாடு, உற்சவம், சடங்கு, அவைகளின் மூலமான புராண சாஸ்திரங்களை ஒழித்துக்கட்டி—முன்னே சொன்னதுபோல, புத்தநெறி பரவவும், இன்றைய பேதங்கள், மேல்-கீழ் தன்மைகள் ஒழியவும் எல்லோரும் கட்சி பேதமின்றி, 'சூத்திர மக்கள்' எனப்படுகின்ற திராவிட மக்கள் அனைவரும் இதற்காகப் பாடுபடவேண்டும் என்பதாக மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன. திருவள்ளுவர் மக்களுடைய நடப்புக்

கான கொள்கைகளை விளக்கினார்; புத்தர் மக்களின் எண்ணத்துக்கு, உள்ளத்துக்குக் கொள்கைகளையும், முறையையும் வகுத்துத் தந்தார்.

ஆதலால், இத்தகு காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்படும் எல்லாவிதமான முயற்சி, நடவடிக்கைகளுக்கு எல்லா மக்களும் தங்கள் தங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தந்து ஆதரவு அளிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[நூல்: புரட்சிக்கு அழைப்பு (1954)-சென்னையில் 31-1-1954-ல் சொற்பொழிவு; ஈரோட்டில் 23, 24-1-1954-ல் சொற்பொழிவு]

11. இம்சையும் அகிம்சையும்

தாய்மார்களே! தோழர்களே!

புலிக்கு, சீறுவதும் மற்ற ஜீவன்களைக் கொல்லுவதும் இயற்கை. ஆனால், மனிதன் இம்சையை இயற்கை என்று கருதுபவனல்லன்; மற்றவனை அடித்தால் நோகுமே என்ற உணர்ச்சியை உடையவனாவான். இம்சை செய்யாமல், மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்காமல் வாழத்தக்க அளவு பகுத்தறிவு இருக்கிறது.

ஆனால், அவ்வித மனித சமுதாயம் அறிவைத் தவறாகப் பயன்படுத்தி, மனிதத் தன்மையிலிருந்து பிறழ்ந்து, இயற்கையிலிருந்து மாறிவிட்டது. அதுவும் காங்கிரஸ் இயக்கம் பாமரர்களிடம் செல்வாக்குப் பெற்ற பின்னர்தான்—குறிப்பாகக் காந்தியார் சகாப்தத்தில்—அரசியல் வாழ்வைப் புராண இதிகாசப் போலித் தத்துவ மத வேஷத்தில் நடத்தியதால், மக்களும் கெட்டு தானும் ஒழியும்படியான இக்கதி ஏற்பட்டது. அவர், வாயால் அகிம்சை என்று கூறினால் போதும், பயன் இம்சையாக இருக்கட்டும் என்று கருதிக் கவலைப்படாமல் பாமரர்களை என்றைக்கு நடத்தினாரோ அன்று முதல் நாட்டில் இம்சையே மக்களுக்கு உற்சாகமாகவும், வாலிபர்கள் காலிகளாக, குழப்பக்காரர்களாகவும் ஆன காரியங்கள் நாட்டில் வளர்ந்து, அப்படிப்பட்ட நியாயங்களை தேசபக்தியாகவும், தேசியமாகவும், மத பக்தி, கடவுள் பக்தி, கடவுள்-மதங்களைக் காப்பாற்றும் உயர் தொண்டு பக்தியாகவும் ஆகிவிட்டது.

இவை ஒருபுறமிருப்பினும், காந்தியார் காலத்துக்குப் பின்னராவது—அவரது பரிதாபகரமான முடிவை ஒரு படிப்பினையாகக் கொண்டாவது, அரசியல்-மத இயலில் உண்மையான அகிம்சை ஏற்பட யாராவது முயற்சித்தார்களா? ஏற்படத்தான் ஏதாவது கவலைப்படுகிறார்களா? இன்று, எல்லாத் துறைகளிலும் வெறி நாய் களியாட்டம்போல் பலாத்காரமும் இம்சையுமே தலைசிறந்து விளங்குகின்றன. கட்டுப்பாட்டுக்கு இடமே இல்லை; எங்கு பார்த்தாலும் கட்டுப்பாட்டை மீறுவதும் காலித்தனமும் கலவரமும் இம்சையுமாகவுமே இருப்பதோடு, சர்வம் பித்தலாட்ட மயமாகவே இருக்கிறது. இவைகளை எதற்காகக் கூறுகிறேன் என்றால், கலவரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லையென்று சலிப்புறும் நண்பர்கள் அருள்கூர்ந்து கவனிப்பதற்காகவேயாகும்.

காங்கிரஸாரின் தவறான முறையில் ஏற்பட்ட குழப்ப நிலையை ஒழித்து, நாட்டில் நல்லாட்சி நிறுவவேண்டுமென்ற பொறுப்புடைய நாமும், காங்கிரஸார் போன்றே கலவரங்களை, குழப்பங்களை விளைவிக்கும்படி நடப்பதென்பது நேர்மையாகுமா? பதவி-பட்டங்களை வெகு விரைவில் பெறவேண்டும் என்ற கொள்கையை நாம் கொண்டிருந்தால்தான் கலவர ஆர்ப்பாட்டங்களில் இறங்கி—வீரர், சூரர், தியாகி, மகாத்மா, தேசோத்தாரர்கள் என்ற பெயரெடுத்து, மக்களை ஏய்த்துப் பதவிகளில் அமர்ந்து—முப்பதாயிரம், நாற்பதாயிரம் சம்பாதிக்கக் கலவரத்தை, குழப்பத்தை, கட்டுப்பாடற்ற தன்மையை உண்டாக்கலாம்.

ஆனால், திராவிடர் கழகமோ அதன் கொள்கையோ உண்டாக்கப்பட்டது, இந்தக் குறுகிய பதவி-பட்ட வேட்டைக்காக அல்ல. திராவிடர் கழகம், தனது வலிமையையும்,

வரலாற்றையும், நாகரிகத்தையும், சீரையும், சிறப்பையும் மறந்து அடிமை வாழ்வு நடத்தி வரும் ஒரு பெரும் இனமக்களுக்கு—எல்லா வகையிலும் தன்மானத்தையும் அறிவு வளர்ச்சியையும் உண்டாக்கும் இயக்கம் ஆகும்.

திராவிட மக்களை—அன்பு நெறியைப் பின்பற்றி அகிம்சா தன்மையில் வாழ்ந்து வந்தவர்களைப் பாழும் ஆரிய புராண இதிகாச மதமானது நரி, காட்டுநாய், புலி போன்ற ஜீவன்களாக ஆக்கிவிட்டது.

திராவிட மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மனிதத் தன்மையுடன், அன்பு நெறியுடன்—மாற்றானுக்கு அடிமைப்படாமல் வாழவேண்டும் என்ற உயரிய கொள்கையினைக் கொண்ட நாம், கலவரம் ஏற்படட்டும்; நடப்பது நடக்கட்டும் என்று விரும்புவதாயிருந்தால் அதன் பலன் என்னவாகும்? இவைகளையும் சற்று சிந்திக்கவேண்டாமா?

நாம், நமது இலட்சியம் கைகூட நாளையே கலவரத்தில் இறங்குவதாக வைத்துக் கொள்வோம். இதனால் திராவிட மக்களாகிய நமக்குள் கலவரம் ஏற்பட்டு நாம் தாம் இம்சைக்கு ஆளாவோமேயல்லாமல், அன்னியனாகிய—இக் கலகங்களுக்குத் தூண்டுகோலனாகிய ஒரு ஆரியனுக்காவது சிறு கஷ்டமோ நஷ்டமோ உண்டாகுமா? ஒரு ஆரியனாவது கலகத்தில் சிக்குண்டு நஷ்டமடைவானா? நம் இனத்தவர்கள்மீது தானே நாம் பாயவேண்டிவரும்? அல்லது, நமது இனத்தவர்களால்தானே நாம் துன்பப்பட வேண்டிவரும்? இதனால் பொதுவாக நமது இனத்துக்கும் நாட்டுக்கும் என்ன பயன் என்று கேட்கிறேன். இவ்விதக் கலவரத்தை உண்டாக்குவதே வீரமாக நாமும் கருதி விட்டால், நமது இலட்சியத்திற்கோ, பிரச்சாரத்திற்கோ என்ன மதிப்பும் உண்மையும் இருக்க முடியும்? கலவரம் உண்டாக்கிவிடுவது வெகு சுலபம். அதனால் ஏற்படும் பலாபலன்களை, விளைவுகளைப்பற்றிச் சிந்திக்கவேண்டாமா?

நமக்கு எடுத்துக்காட்டாக நமது காங்கிரஸ் தோழர்களே இன்று அவஸ்தைப்படுவதை நாம் பார்க்கிறோமே! கண்டதற்கு எல்லாம் கலகத்தை உசுப்பிவிட்டு, இன்று அதே கலகக்காரர்களால் மிரட்டப்பட்டும், அதட்டப்பட்டும் அவதிப்படுவதை!

எனவே, கலவரத்தால் வரும் பலன் இன்றே கைகூடுவதாயிருந்தாலுங்கூட, அதை விடுத்து அமைதியையும், அறிவுடைமையையும், அன்பையும் கொண்டு—அதனால் கிடைக்கும் பலன் சற்றுத் தாமதித்து வந்தாலும், நான் அதையே பெரிதும் விரும்புவேன். அது மாத்திரமல்ல, இவ்விதக் கலவரம், குழப்பம் இல்லாத கிளர்ச்சியே மக்களுக்கும் உண்மையான, நிரந்தரமான நல்வாழ்வை அடையச் செய்யும்.

நான் இதுவரை என் பொது வாழ்வில் தொட்டதில் எல்லாம் வெற்றிபெற்று வருவதற்குக் காரணம், எனது அல்லது என்னைச் சார்ந்த தோழர்களது அல்லது இயக்கத்துடைய பெரும் பலமே என்று கூறிவிடமாட்டேன்; நமது எதிரிகள் என்மீது பிசகாமல் பறைசாற்றி வந்த முறைகளின் பிரச்சாரமேயாகும்.

எப்படியெனில், நமது மக்களுக்கு உத்தியோகத் துறையில் பலன் கிடைக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்தபோது என்னை வகுப்புவாதி என்று நையாண்டி செய்தார்கள். 'ஆம்! நாம் வகுப்புவாதிகள்தாம். நீ என்ன வகுப்புவாதியில்லாத யோக்கியனாக இருக்கிறாய், கூறு பார்க்கலாம்?' என்று பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கூறி, இன்று அத்துறையில் வெற்றியும் பெற்றுள்ளோம்.

'இராமாயணத்தைக் குறைகூறுகிறார்' என்று சீறி விழுந்தனர். 'குறைகூறுவது மட்டும் அல்ல; அதைக் கொளுத்தியே தீருவோம். அதில் வரும் இராமனிலிருந்து, அவன் தகப்பனார், சகோதரர்கள் முதலிய யார்தான் ஒழுக்க முடையவர்?' என்று கேட்டோம். இன்று பண்டித சிகாமணிகள், 'அதைத் தெய்வத் தன்மையில் நாங்கள் கருதவில்லை;

தமிழ்க் கலைச்சுவை சொட்டுகிறது!' என்று கெஞ்சும் அளவுக்கு வந்து விடவில்லையா? இன்னும் இதைப்போல பல காரியங்களில் நம் எதிரிகள் நம்மைக் குறைகூறியே அழித்து விடலாம் என்று நினைத்தார்கள்; எனக்கும் பல தொல்லை கொடுத்துவந்தார்கள். ஆனால், இன்றளவும் அவர்களின் ஆணவமும், ஆதிக்கமும்தாம் வரவர அழிந்து பட்டு வருகின்றனவே யன்றி, நமது கொள்கை ஒரு நாளும் தோல்வி யடைந்துவிடவில்லை. ஆக, இவ்விதப் பாடுபட்டு வளர்ந்துவந்து நமது இயக்கத்தை யாரோ, ஆத்திரப்படுகிறார்கள் என்று வீண் கலவரத்துக்கும் ஆடம்பரத்துக்கும் இரையாக்க நான் ஒருபோதும் ஒப்பமாட்டேன். இப்படிக் கூறுவதில்—'நாம் பயங்காளிகள் என்று எதிரிகள் கருதுவார்களே' என்று உண்மையான எண்ணத்தின்மீது நண்பர்கள் வருத்தமுறலாம்.

நான் அவர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இதே தன்மையில் நாம் இன்னும் சிலகாலம் நமது அறப்போரை அமைதியாகவே நடத்திச்சென்றால் கண்டிப்பாகக் கட்டாய இந்தி ஒழிந்தேதீரும்.

நமது அமைதியான தன்மையை, அறிவுடைமை கொண்டு, இனப் பற்றுக்கொண்டு, நமது மந்திரிகள் ஆராய்ந்துபார்த்து நடந்தால் உள்ளபடியே நல்லாட்சி நடத்தலாம். ஆணவ புத்தி கொண்டு பார்த்து நடந்தால் விரைவில் அவர்கள் தங்களுக்குத் தாங்களே கேடு விளைவித்துக்கொண்டவர்களாவார்கள் என்பதை இன்றளவுங்கூட அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த இந்தி எதிர்ப்பு மூலம் இவர்களைப் பதவியிலிருந்து தள்ளிவிட்டு நாங்கள் பதவிக்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் கொண்டு நடத்துவதாக மந்திரிகள் கருதுகிறார்கள். எங்களுக்குப் பதவிபெறும் எண்ணமில்லை என்று பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். எங்களுக்கு அந்த எண்ணமிருந்தால், நாங்களும் கலகமும் காலித்தனமும் நாசவேலையும் செய்து வெற்றிபெற்ற 'வீரர்'களாக ஆங் சமயத்துக்கு ஏற்றாற்போல் பேசி, நடந்து, ஏழைகளையும் ஏய்த்துப் பிழைக்கவேண்டியிருக்கும் அல்லவா? எங்கள் கொள்கையெல்லாம்—திராவிட இனமக்கள் அனைவரும் சாதியாலும், மதத்தாலும், கடவுள் பேராலும், அரசியல் முறையாலும் ஒன்றுபட்டு, ஏற்றத்தாழ்வின்றி இன்புற்று வாழவேண்டுமென்பதே யல்லாது ஒரு சிலருக்குப் பதவி பட்டத்துக்காகவோ, பணம் குவிக்கவோ அல்ல.

இக் கொள்கைக்காகவேதான் நான் காங்கிரஸை விட்டு வெளியேறியதுமாகும். காங்கிரஸின் வெற்றியால் காங்கிரஸார் பதவிபெற்றதால், இன்று மக்களுக்கு வாழ்க்கை நிம்மதி ஏற்பட்டுள்ளதென்று எவராவது கூறமுடியுமா? இன்னும் கூறவேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தினால் ஓரளவு முன்னேறிவந்த நமது இனமக்களுக்குக் கேடுவிளைவிக்கும் முறையில்—அதை ஒழிக்கவும், சட்டம்மூலம் தடுக்கவும் முனைந்து நிற்கிறது, காங்கிரஸ்.

நாங்கள் வகுப்புவாதிகள், துரோகிகள் என்று உங்களாலேயே தூற்றப்பட்டோம்; அதற்காக ஒன்றும் வெட்கப்படவில்லை. என்றாலும், எங்கள் பணியால் ஏழைமக்களுக்கு—வாழ்வில் தாழ்ந்துள்ள பெரும் சமுதாயத்துக்கு ஓரளவாவது உணர்ச்சி வந்திருக்கிறதா இல்லையா?

ஏன் மந்திரிமார்களையே எடுத்துக்கொள்ளுங்கள். 12 மந்திரிகளில் 10 பேர் திராவிடர் தாமே! இரண்டு பேர்மட்டும் ஆரியர்கள். அக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியாரால் செய்யப் பட்ட இக் காரியத்தை, சுயமரியாதை மந்திரிகளாயிருந்த மதிப்பிற்குரிய டாக்டர் சுப்பராயன், தோழர் எஸ். முத்தையா முதலியார் ஆகியவர்கள் காலத்தில்தானே அமுல் செய்யப்பட்டது? அதன் காரணமாகவே தோழர் எஸ். முத்தையா முதலியார் அவர்களை இப் பார்ப்பனர்கள் தலையெடுக்க ஒட்டாமல் செய்தார்கள் என்றாலும், அக் காரியத்திற்கு திராவிட விபீஷண அரசியல்வாதிகளும் துணைசெய்தனர். டாக்டர் சுப்பராயன் அவர்களை

அடிமையாக்கிக்கொண்டுவிட்டார்கள். தோழர் சண்முகஞ் செட்டியார் அவர்களின் விலாசம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையில்—இன்று அரசியல் பரமபத விளையாட்டில் சிக்கிக் கீழேபோய்விட்டார். அகில உலக அறிஞர் என்று கூறப்படும் சர். இராமசாமி முதலியார் வாழ்வுதான் என்ன? தான் பிறந்தநாட்டுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வெளிநாட்டு 'விசிட்டர்' போல் வந்து சென்று, எங்கோ பறந்துபோய் பதவிவகிக்கும் நிலைக்கு ஆகிவிட்டது.

இவ்வாறு இந்தப் பெரியவர்களைத் தொல்லைகொடுத்து அழுத்திவந்தாலும்—நமது கொள்கையை எதிரிகள் அழிக்க முடியவில்லையே! அது வேரூன்றி வெற்றிபெற்றல்லவோ வருகின்றது?

இன்னும் கூறுவேன்: அன்பர்களே! நீங்கள் எந்தக் காலத்தில் பிரதம நீதிபதி திராவிடனாயிருப்பதைக் கண்டீர்கள்? அவர் இராமாயணம், சமஸ்கிருத பஜனை செய்பவராக இருக்கட்டும்—பிறகு பார்த்துக்கொள்ளலாம்; என்றாலும் அவர் திராவிடர். திராவிட மகன் இதுவரை இப் பதவிக்கு வரமுடிந்ததா என்று கேட்கிறேன்? மற்றும், போலீஸ் கமிஷனர் ஒரு திராவிடர்தானே; இன்ஸ்பெக்டர் ஜெனரல் திராவிடர்தானே; நமது பிரதமர் திராவிடர் தானே! இதே போன்று பல முக்கிய இலாக்காத் தலைவர்களும், அதிகாரிகளும், ஒரு அளவுக்கு ஆவது திராவிடர்தானே! இந்தப்படி இந்த 50 வருஷத்தில் கண்டீர்களா? இவைகள் வேண்டுமானால் நாளைக்கு மாற்றப்படலாம்; நாடக மேடை வேஷம்போல மாற்ற முயற்சி செய்யட்டும். அப்போது தெரியப்போகிறது—நாங்கள் அமைதி பூண்டு தொண்டாற்றி வருவதன் எதிரொலி!

எனவே, தோழர்களே! இந்த நிலை யாரால் வந்தது? சாதி உணர்ச்சி, இன உணர்ச்சி, வகுப்பு உணர்ச்சி கொண்ட ஜஸ்டிஸ்—சுயமரியாதை—திராவிடர் கழகத்தார் ஆகிய எங்களால் அல்லாமல், வேறு யாரால் அல்லது காங்கிரஸாலா வந்தது என்று அரசியல் ஞானமும் அனுபவமுடையோர் எவராவது கூறத் துணிவார்களா என்று கேட்கிறேன்.

நாங்கள் ஏற்படுத்தி வைத்த கணக்குப்படி, நாங்கள் ஏற்படுத்திய இடங்களில் காங்கிரஸ் திராவிடர்கள் வந்து உட்கார்ந்தார்கள். நாங்கள் பதவிக்காக ஆசைகொண்டு அதற்காகவே கிளர்ச்சி செய்வதாயிருந்தால் நாங்கள் அல்லவோ அப் பதவிகளில் இருப்போம்! நமது இனத்தவர் பதவிகளில் இருப்பதோடல்லாமல் ஆட்சியும் நல்லவிதத்தில் நடத்தவேண்டுமென்பதே எங்கள் எண்ணமாகும். நாங்கள் துறவிகள் என்று கருதிவிட வேண்டாம். 'பரம தியாக சொரூபி,' ஏழைப் பங்காளன் என்ற எனது நண்பர் ஆச்சாரியாரே 30 ஆயிரம் சம்பளம் வாங்கும்போது—எனக்கும், என்னைப் போன்றாருக்கும் ஆசையில்லாது போய்விடுமா?

என்றாலும், தனிப்பட்ட நலனைவிட இனத்தின் நலனே, தன்மானமே பெரியதென்று கருதி நாங்கள் பதவிப் பட்டங்களை காங்கிரஸ் திராவிடர்களுக்கு விட்டுவிட்டு, இன்னமும் காங்கிரஸ் திராவிடரே வர, தொண்டாற்றி வருகிறோம். இவ்விதமான எங்களை, சுயராஜ்ய விரோதிகள் என்றோ துரோகிகள் என்றோ கூறுவதும், காலிகளை விட்டு வம்புக்கு இழுப்பதும் அறிவுடைமையாகுமா?

சுதந்திரமோ சுயராஜ்யமோ வருவதாயிருந்தால் குறைந்தது காட்டுமிராண்டித் தனத்தை மறந்தவர்களாகவாவது மக்களை ஆக்கியிருக்க வேண்டாமா? இந்த உத்தம புத்திரர்களிடை இந்நாளில் ஓயாமல் கலவரம், கொள்ளை, கள்ள மார்க்கெட், லைசென்ஸ், பர்மிட் போட்டி; அதன் பேரால் மந்திரி சபையைக் கவிழ்த்துவிடுவோம் என்ற பூச்சாண்டி! காங்கிரஸ்காரர்களுக்கு உள்ளாகவே இதே தொல்லையா? காங்கிரஸ் முகாமிலேயா இருக்க வேண்டும்? இதற்குப் பெயரா சுயராஜ்யம்? என்றைக்குத்தான், இந்தக் கீழ்நிலை நம் நாட்டை விட்டு அகலுவது? இதை நாங்கள் எடுத்துக் கூறினால் நியாய புத்தியுள்ள

சர்க்காராயிருந்தால், எங்களுக்கு நன்றியல்லவா காட்டியிருக்க வேண்டும்? தொலைந்தது; நன்றிகாட்ட நேர்மையற்றிருப்பினும்—பேசாமல் இருக்கக்கூடாதா?

அதற்கு நேர் விரோதமாகக் கழக முக்கியஸ்தர்களுக்கு, பார்ப்பனர் பேச்சை, கூப்பாட்டைக் கேட்டுக்கொண்டு தொல்லை விளைவிப்பதா? இன்னும் எத்தனை நாட்களுக்கு இவைகளை நாம் சகித்துக்கொண்டிருப்பது?

நான் இவ்விதக் கொடுமைகளையும் சகித்துக்கொண்டு மேலும் அமைதியாயிருந்தால். என்னைச் சார்ந்த கழக முக்கியஸ்தர்களே—நாம், கனம் ஓமாந்தூராரிடம் இரகசியம் பேசிக்கொண்டு விட்டுக்கொடுப்பதாகக் கருதுகின்றனர். காரணம், திராவிட இனஉணர்ச்சி என்பதாக!

எனவே, பார்ப்பனர்கள் தங்களின் போக்கை, மித்ரபேதத்தை இனியாவது திருத்திக்கொண்டு, மொழிப் போராட்டத்தில், திராவிடநாடு சுதந்திரப் போராட்டத்தில் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுகிறேன். அல்லது, ஒதுங்கி அவர்கள் காரியத்தைக் கவனிக்கட்டும். இடையில் விழுந்து வம்புக்கு வித்திடவேண்டாம்.

இந்நாட்டு மொழிக்காகவும், இந்நாட்டு விடுதலைக்காகவும் நாங்கள் பாடுபட்டால், அது எப்படிப் பார்ப்பனருக்கு விரோதமாகும்? எப்படிப் பிராமண துவேஷமாகும்? எனது அருமை இளைஞர்களே! நமது இயக்கம் செத்துவிட்டது என்று யார் கூறினாலும் நம்ப வேண்டாம். இந்த எண்ணம், கவலை உங்களுக்கு வேண்டாம். அதுபற்றி நான் மனக் கலக்கப்படவேண்டும். ஏன்? நான் நாளைக்கு இறக்கப் போகிறவன்—என் ஆயுளில் கழகம் சாகக்கூடாது என்று. நீங்கள் இன்னும் வெகுநாள் வாழ்ந்து இந்நாட்டை ஆளப்போகிறவர்கள். உங்கள் தூய்மையான மனத்தில் இயக்கம் செத்துப் போகுமோ என்ற அந்த வீண் எண்ணத்தைப் புகுத்திக்கொள்ள வேண்டாம்.

நமது மொழிப் போராட்டம் மட்டும் அல்ல, நமது இயக்கங்கள் இலட்சியங்கள் ஒவ்வொன்றும் இனி ஒன்றன்பின் ஒன்றாக வெற்றியுறப்போகின்றது.

ஏற்கனவே சிலவற்றில் வெற்றிபெற்றுள்ளோம். எனவே, மாணவர்களே, இளைஞர்களே, அருமைத் தாய்மார்களே! காங்கிரஸ் திராவிடர்களே! எதிர்காலம் உங்களுடையதே ஆகும்.

இனி எக்காரணங்கொண்டும் பார்ப்பனீயமோ, வடநாட்டு ஆட்சி முதல்—மற்ற எந்த அன்னிய ஆதிக்கமும் இங்கு நிலைபெற முடியாது.

அந்த அளவுக்குக் கடந்த 25 ஆண்டுகளாக நானும் நமது இயக்கமும் ஆவன செய்தாகிவிட்டது.

எனவே, கலவரத்தால் நாம் வெற்றிபெற வேண்டும் என்ற திருட்டு எண்ணம் நமக்கு வேண்டாம். சற்று காலங்கடந்து வந்தாலும் அமைதியான முறையிலேயே நம் நாட்டுக்கு விடுதலை வரட்டும்.

[சென்னை அய்லண்டு மைதானத்தில், 10-12-1948-ல் சொற்பொழிவு-'விடுதலை' 12-12-1948]

தாய்மார்களே! தோழர்களே!

அகிம்சை என்பதைப்பற்றிக் கேட்டால் அது கோழைத்தனம் என்பேன். பழங்காலத்தில் அது பொருத்தமாக இருந்திருக்கலாம். அதை இப்போது ஏற்று அதன்படி நடப்பதென்பது சாத்தியம் இல்லை. அகிம்சை பிரயோசனப்படாது. இப்போது ஏதோ மற்றவர்களைக் கோழையாக்கி, அடக்கித் தாங்கள் வாழ—தந்திரக்காரர்கள் அகிம்சை என்று பேசுகிறார்கள்.

அகிம்சை என்பது 'தெய்வீகக்' கருத்தின்பேரில் சொன்ன உபதேசம். முதலில் நம் நாட்டில் அகிம்சையைப்பற்றிப் பேசியவர்கள் பவுத்தர்கள், சமணர்கள். இரண்டாவது, மேல்நாட்டில் ஏசுபிரான் பேசினார். அதற்குப் பிறகு யாரும் பேசவில்லை. சமணர்கள் நடைமுறைகளைப் பார்த்தால் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும். சமணர்கள் தலையை மொட்டையடித்துக் கொண்டார்கள்; தலையில் பேன் பிடித்தால் பேனைக் கொல்ல வேண்டிவரும் என்பதற்காகவே மொட்டையடித்துக்கொண்டார்கள். கையில் மயில் தோகையை வைத்து முன்னால் கூட்டிக்கொண்டு நடக்கவேண்டும்; விளக்குமாற்றால் கூட்டக்கூடாது; விளக்குமாற்றால் கூட்டினால் எறும்பு, பூச்சிகள் செத்துவிடும். இப்படி யெல்லாம் என்னென்னமோ செய்து அகிம்சையைப்பற்றிப் பெருத்த உபதேசம் செய் தார்கள். பலன் என்ன? அவர்களுடைய தலைகள் பனங்காயாட்டம் வெட்டப்பட்டன. இதைக் கொண்டாட இன்னும் பண்டிகை நடக்கிறது. 'அன்பே சிவம்'; 'சிவமே அன்பு' என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். இவர்கள்தான் ஆயிரம், பதினாயிரம் என்று சமணர் களை வெட்டிச் சாய்த்தார்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால், சமணர்கள் பேசிவந்த அகிம்சை அவர்களுக்குப் பயன்படவில்லை என்பதைக் காட்டத்தான். அகிம்சை பேசியதன் காரணமாகவே சமணர்கள் அழிக்கப்பட்டார்கள். பலன் என்ன?

ஏசு, 'ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைத் திருப்பிக்காட்டு' என்று சொன்னார். இன்று அதுபோல் நடந்தால், பல் போய்விடும். 'மேல் வேட்டியைக் கேட்டால் இடுப்பு வேட்டியையுங் கொடு' என்று சொன்னார். இப்போது அப்படிச்செய்தால், என்ன ஆகும்? எல்லோரும் நிர்வாண சங்கத்தில்தான் சேர வேண்டும். இன்றைக்கு அந்த கிறிஸ்தவர்கள்தான் வெடிகுண்டு அணுகுண்டு செய்கிறார்கள். இம்சை செய்வதற்கு என்ப தல்ல; எதிரியிடம் ஒரு அணுகுண்டு இருக்கும்போது என்னிடமும் 2, 3 இருக்கிறது என்று சொன்னால்தான், தான் தப்பிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

நாம் அகிம்சையை நம்பிப் பேசி நாசமாய்ப் போய்விட்டோம். இல்லாவிட்டால் 3000 வருடங்களாக தேவடியாள் மகன், சூத்திரன் என்று நம்மை இழிவு செய்கிறபோது இங்கு ஒரே ஒரு பார்ப்பாரக் குஞ்சு இருக்குமா? இது ரொம்பக் கேடு. உலகத்தில் வேறு எந்த ஜீவனும் தன் இனத்தைச் சேர்ந்த மற்றொரு ஜீவனை அடித்துச் சாப்பிடுவதில்லை. மனிதன்தான் தன் இனத்தையே அடிப்பது, கொல்வது, சதி செய்து வாழ்வது எல்லாம். மனிதனை மனிதன் கொலைசெய்வது எவ்வளவு? மனிதனை மனிதன் கொடுமைப்படுத்து வதைக் காண முடியுமே தவிர, மாடு மாட்டைக் கடித்தது, நரி நரியைக் கொன்றது, மான் மானை அடித்தது என்று காண முடியாது. மனிதனை மனிதன் வஞ்சிப்பது, கொடுமைப் படுத்துவது, வதைப்பது வளர்ந்துவிட்டது.

ஆகையினால் நமக்கு அவசியம் கத்திவேண்டும். அரசர்களை எடுத்துக்கொண்டா லும் எந்த அரசன் கையில் கத்தி இல்லாமல் இருந்தான்? முதலாவது செங்கோல் தடி; இரண்டாவது உடை வாள்; இவை இல்லாத அரசனே கிடையாது. கத்தியும் கழுவுமே சைவத்தைக் காப்பாற்றின. கடவுளை எடுத்துக்கொண்டாலும், எந்தக் கடவுள் ஆயுதம் இல்லாமல் இருக்கிறது? குழவிக் கல் மாதிரியான இலிங்கம் தவிர, உருவமாகக் காட்டுகிற சிவனுக்கெல்லாம், கையில் கொழு, மழு, கோடரி, அரிவாள், ஈட்டி, வேல், சூலாயுதம்; அப்புறம் கொஞ்சம் பக்குவப்பட்ட பிறகு திரிசூல ஆயுதம்; அதற்குமேல் பக்குவமேற்பட்ட பின் வில், சக்கரம்—இப்படியாக உள்ளனவே! அகிம்சை எங்கே போகிறது? பேரோ, சைவக் கடவுள்—அதற்குக் கத்தியும், கொழுவும், மழுவும் ஆயுதம். ஆயுதம் இல்லாவிட்டால் ஏது சைவம்? சமணர்களை வெட்டி, குத்தி, கழுவில் ஏற்றித் தீர்த்த பிறகுதானே சைவம் மிஞ்சிற்று? சமணர்களிடம் ஆயுதம் இல்லாத காரணத்தாலேயே சமணம் அழிந்தது. சைவம் ஆயுதத்தினாலேயே மிஞ்சிற்று. 'சைவம்', 'அன்பு' என்பதெல்லாம் தாசியின் காதல் போன்றதே.

[திருச்சியில், 21-10-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 25-10-1956]

12. நம் தோழர்களுக்கு

தேர்தல் முடிவுக்குப் பின்னிட்டு நான் தெரிவித்த எனது கருத்தான 'அறிக்கை' களைப்பற்றி எனது தோழர்களிடையிலும், காங்கிரஸ்காரர்களிடையிலும் ஓரளவு பொது மக்களிடையிலும் ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சிலரை நேரில் பார்த்த அளவிலும், சிலரால் எனக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் பார்த்த அளவிலும் எதிர்க்கட்சித் தலைவர்கள் என்னைக் கண்டு பேசிய பிறகு எனது கருத்து மாறிவிட்டதாகவும், எனது எதிர்ப்பு உணர்ச்சியை நான் கைவிட்டுவிட்டதாகவும் எதிரிகளுக்கு ஆதரவாகப் போவதாகவும், இதனால் எதிர்காலம் மிகவும் மோசமாகப் போய் விடுமென்றும், நாம் ஆதரிக்க ஆரம்பித்துவிட்டால் எதிரிகள் தலைகால் தெரியாமல் ஆடு வார்கள் என்றும், இதனால் சாதாரண மக்களும் நம் கழகத் தோழர்களும் பழிவாங்கப்பட்டு விடுவார்கள் என்றும், என்னை நம்பியவர்களை நான் காட்டிக்கொடுத்துவிட்டதாக ஆகு மென்றும், முடிவாக நானும் எதிரிகளைக்கண்டு பயந்துபோய் வளைந்து கொடுத்துவிட் டேன் என்றும், 'பிளேட்டைத் திருப்பிப் போட்டுவிட்டேன்' என்றும், இந்த நிலைமையை யாருமே எதிர்பார்க்கவில்லை என்றும், தெரிவித்திருப்பதோடு சில கடுமையான பதங் களைப் பிரயோகப்படுத்திக் கீழ்த்தரமான தன்மையில் கையெழுத்தில்லாத கடிதங்கள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

இவற்றைக்கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. என் மனதிலும் இதைப்பற்றி எவ்வித கலக்கமும் கொள்ளவில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட சமயத்தில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதில் யாருடைய யோசனையையும் நான் கேட்க வேண்டுமென்று கருதி இருந்தவனல்ல; அன்றியும் பிறர் என்ன நினைப்பார்கள் என்பது பற்றியும் சிந்தித்து நடக்கவேண்டும் என்ற கவலை கொண்டவனும் அல்ல; மற்றென்னவென்றால், இப்படிப் பட்ட சமயத்தில் மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைத் தெரிவிக்கவேண்டிய பொறுப்பில் உள்ளவனென்றும் அதற்கு நான் ஒருவன்தான் நடுநிலைமையாய் இருப்பவன், இருக்கவேண்டியவன் என்றும் கருதிக்கொண்டிருப்பவன். ஆனதால், எனது கருத்தை தெரிவித்துக்கொண்டதற்கு ஆக மற்றவர் என்மீது ஆத்திரப்பட்டார்களானால் அதற்காக வருத்தப்படுவதோ அல்லது என் கருத்தைத் திருத்திக்கொள்ளுவது, மாற்றிக்கொள்ளுவது என்றால், நான் எனது பதவிக்கு அழகனல்ல என்றுதான் நான் என்னையே கருதிக் கொள்ளவேண்டும்.

இன்றைய நிலைமை மிகமிக அதிசயமானதும் நெருக்கடியுமானதுமாகும்.

ஏன், நம் எதிரிகளின் அடிமைகள் பதவிக்கு வந்திருக்கிறார்கள். இதனால் நமது எதிரிகளின் அடிமைகளை எதிர்த்தால், நம்மை ஒருவர் ஒரு ஆளைவிட்டு அவமானப் படுத்தினால் (கேடு செய்தால்) நாம் அந்த ஆளை அவமானப்படுத்திவிடுவதால், கேடு செய்துவிடுவதால் அவமான நிலை மாறிவிடுமா?

அந்த (ஏவிவிடப்பட்ட) ஆளை எந்த அளவுக்கு சமாளிக்கிறோமோ அந்த அளவுக்கு அவமானம் (கேடு) குறையும். (கேடு என்றால் நமக்கு மாத்திரமல்ல என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்) இராஜாஜி இவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும்போது என்ன சொன்னார்:

I. இவர்களை, இராமன் குரங்குகளைப் பயன்படுத்திக் கொண்டதுபோல் நான் பயன்படுத்திக் கொள்ளுகிறேன்.

II. இவர்கள் கைக்கு ஆட்சிவரும்படியாக காங்கிரசைத் தோற்கடித்தால்தான் எதிர்க் கட்சிக்கு—காங்கிரசுக்கு, காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு வெட்கம்வரும்.

III. காங்கிரசுக்கு, செருப்பால் அடித்தது போன்ற அடி கொடுக்கவேண்டுமானால் இவர்களைக்கொண்டு காங்கிரசைத் தோற்கடிக்கவேண்டும்.

என்பதாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் சொல்லி இருக்கிறார்.

அந்தப்படியே காங்கிரசைத் தோற்கடித்து, இவர்களைக் கொண்டுவந்து பதவியில் வைத்துவிட்டார்! பதவிக்கு வந்தவர்களும் இராஜாஜியால்தான் பதவிக்கு வந்தோம் என்று கருதி, நன்றிமேல் நன்றி தெரிவித்து, ஆசீர்வாதத்தின்மேல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் நமது கடமை என்ன? உட்கார்ந்துகொண்டு அவமானப்பட்டுக் கொண்டிருப்பதாகக் காட்டிக்கொண்டு, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள என்று நாமாகப் போய் அவர்களுக்குத் தொல்லைக் கொடுத்துக்கொண்டு இருப்பதா? கூடுமானவரை தொல்லை கொடுக்கவேண்டிய அவசியம் நேரிடாமல் பார்த்துக்கொள்ள நம்மாலான முயற்சி யாவது செய்து பார்த்து விடுவதா?

எனக்குத் தெரியும், அதாவது நாம் தொல்லை கொடுக்க ஆரம்பித்தால் குதூகலமாய் பின் விளைவைக்கூட எண்ணாமல் தொல்லை கொடுக்க மக்கள் முன் வருவார்கள்; மக்கள் ஆதரவு கிடைக்கும் என்று.

அதனால் பதவியில் இருப்பவர்கள் தொல்லைப்படலாமேயொழிய மாறுதலடைந்து விடமுடியுமா? பார்ப்பனரும், பத்திரிகையாளர்களும், பணக்காரர்களும் அவர்களைப் பாதுகாக்க வருவார்கள். நாம் இவர்கள் நான்கு பேரையும் சமாளிக்க வேண்டியவர்களாக வேண்டும்.

நம்மால் சமாளிக்க முடியும். ஆனால், பொது மக்களுக்கு அதிக சுமையேற்ற வேண்டும். அவ்வளவு அவசியம் இன்று நமக்கு இருக்கிறதா?

இருக்கிறதாகவே வைத்துக்கொண்டாலும், அதற்குமுன் பதவியிலிருப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்வதுபோல் முதலாவது அவர்களை நடுநிலைமையைக் கையாள வாய்ப்புக் கொடுப்போம். அதில் வெற்றி பெற்றோமானால் அதுவே இவர்களை எதிரிகளிடமிருந்து பிரிப்பதற்கு நல்ல வாய்ப்பாகும்.

ஏனென்றால், இவர்களை (பதவியாளர்களை) எதிரிகள் அதிகமாக நம்பி இருக் கிறார்கள். திரு. அண்ணாதுரை தீர்க்கதரிசி அல்லவானாலும் கெட்டிக்காரர். எவ்வளவு சீக்கிரம் அவர்களை (எதிரிகளை) விட்டு வெளியேற முடியுமோ அந்த அளவும் (1927-ல் டாக்டர் சுப்பராயன் மந்திரிசபை இராஜாஜியைவிட்டு வெளியேறி நமது மந்திரியாக ஆனாரோ அதுபோல்) 'நமது மந்திரி' ஆனாலும் ஆகக்கூடும். நமக்கே, அண்ணாதுரை மந்திரிசபையை ஆதரித்து, 'மறுபடியும் அவரே வந்தால் தேவலாம்' என்று கருதும்படி யான நிலைமை வந்தாலும் வரலாம். நாம் காமராஜர் கையைப் பலப்படுத்தவேண்டும் என் கின்ற கொள்கையில் இருந்தோம், இருக்கிறோமே ஒழிய, காங்கிரசின் அடிமை அல்லவே! அதுவும் நிபந்தனையற்ற அடிமை அல்லவே! அப்படி இருந்தால் 'பக்தவத்சலம் கண்டன நாள்' கொண்டாடி இருப்போமா?

தவிர, இன்றுதான் ஆகட்டும்; நாம் எந்த அளவில் இன்றைய மந்திரி சபையை ஆதரிப்பவர்கள் ஆகிவிட்டோம்? கொஞ்ச நாளைக்கு எதிர்ப்புக் காட்டவேண்டாம் என்கிற நிலையில்தானே இருக்கிறோம்?

காங்கிரஸ்காரரை நினைத்துக்கொண்டு நாம் ஒன்றும் செய்யக்கூடாது; நினைக்கக் கூடாது. திரு. பக்தவத்சலமே 6 மாத வாய்தாதான் கொடுத்தார். நான் அப்படி வாய்தாவே கொடுக்கவில்லையே! சமயம் எதிர்பாருங்கள் என்பதாகத்தானே சொன்னேன்? இதனா லேயே நான் பயந்துவிட்டேன் என்று சொல்லப்படுபவனானால் எனக்கு உள்ள மரியாதை எவ்வளவு என்பதுதானே விளங்குகிறது.

ஆகவே, தோழர்களே மனதை விட்டு விடாதீர்கள்! உறுதியான மனதைக்கொண்டு எதையும் சிந்தியுங்கள்!

இன்றைய மந்திரி சபை நமக்கு எதிரானதல்ல. நம் எதிரியின் கை ஆயுதமாக அமைந்திருக்கிறது. ஆதலால், எதிர்ப்பு உணர்ச்சியை விட்டுவிட்டு, எதிர்த்துத் தீர வேண்டிய நிர்ப்பந்தம் வரும் சமயத்தை எதிர்பாருங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—9-3-1967]

13. நாமும் பிறரும்

நமது கட்சி ஓர் அலாதியான தன்மைகொண்டதாகும்; நம் கட்சியைப்போன்ற மற்றொரு கட்சி இந்தியாவிலேயே இல்லை என்று சொல்லலாம்?

நம்மைத்தவிர மற்ற எவரும், எந்தக் கட்சியாரும் நம்மை எதிரிகளாகக்கொள்ளத் தக்க நிலையில் இருக்கிறோம்.

உதாரணமாக, நாம் ஒரு கட்சியார்தான் தேர்தலைப் பகிஷ்கரிக்கிறோம்; தேர்தலில் கலந்துகொள்ளாதே என்கிறோம். நம் கட்சியார்தான் சாமிகள், பூதங்கள், கோட்பாடுகள் மதப் பைத்தியங்கள், சாதித் தன்மைகள், சாஸ்திரங்கள், புராணங்கள், கடவுள்களின் திருவிளையாடல்கள், இராமாயணம், கீதைகள் ஆகியவைகளைக் கண்டித்துப் பேசுகிறோம்.

அனேகத்தை 'கூடவே கூடாது' என்று மறுத்தும், இழித்தும் பேசி பிரச்சாரம் செய்து, மாநாடுகள் கூட்டித் தீர்மானிக்கிறோம்.

இதை, இந்த இந்தியாவில் வேறு யார் செய்கிறார்கள்? நல்ல ஓர் அரசியலுக்கும், நல்ல ஓர் அறிவுத் தன்மைக்கும், மக்கள் ஒற்றுமைக்கும், நல்வாழ்வுக்கும் இந்தக் கொள்கைகள் சிறிதாவது அவசியம் என்று எந்த அரசியல், பொருளாதார இயல், சமய–சமுதாய இயல் கட்சியார் கருதுகிறார்கள்?

நாம் ஏன் இப்படிக் கருதுகிறோம் என்றால், நாம் பொறுப்பை உணருகிறோம்; நம் மக்களை அவர்கள் விழுந்துகிடக்கும் குழியில் இருந்து மேலேற்ற இந்தக்கொள்கைகள் தாம் படிக்கட்டு—ஏணி என்று கருதுகிறோம். நாம் இந்த இழிநிலையில், அதாவது சாதியில் கீழாய், படிப்பில் தற்குறியாய், செல்வத்தில் தரித்திரர்களாய், தொழிலில் கூலியாய், ஆட்சியில் அடிமையாய் இருப்பதற்கு நம்மிடம் இன்றுள்ள மடமையும், மடமைக்கு ஆதாரமான மதத் தத்துவக்கொள்கை, மததர்மம், சாதி, சாதிவகுப்பு பேதம், கடவுள்கள், கடவுள் கதைகள், கல்வித்தன்மைகள் இவைகள் கொண்ட மக்களின் தேசீயம் முதலியவைகளேயாகும். ஆதலால், அடிப்படையாக—பயனுள்ளதான இந்த ஆக்கவேலை செய்ய முயற்சிக்கிறோம். இந்த நமது முயற்சிக்கு, இதனால் பாதிக்கப்படும் எவரும் எதிரிகளாய்த்தான் இருப்பார்கள். இவர்கள் யாவரும் நமக்கு எதிரிகள் என்றால்—இவர்களது கூட்டுறவால், ஆதரவால், ஒப்பந்தத்தால் அரசு செலுத்தி இவர்களுக்குப் பங்களிக்கும் அரசாங்கமும் நமக்கு எதிரியாய் இருப்பதில் அதிசயமென்ன இருக்க முடியும்?

இப்படி எல்லாம் இருந்தும், நாம் நம் முயற்சியில் மேலும் மேலும் ஊக்கம் ஏற்படத் தக்க நிலையில் இருக்கிறோம். நம் கொள்கைகள், திட்டங்கள் எல்லாம் இன்று மக்கள் சிந்தனைக்கு ஆட்பட்டவைகளாக ஆகிவருகின்றன.

[சென்னையில், 11-10-1945-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 27-10-1945]

நாடெங்கும் மண் பிள்ளையார் உருவ உடைப்பு—அதாவது, உருவ வழிபாடு வெறுப்புக் கிளர்ச்சி எதிர்பார்த்த அளவுக்குமேல் வெற்றிகரமாக நடந்தது குறித்து எனது உள மகிழ்ந்த மகிழ்ச்சி.

சில இடங்களில் சிறிய கலவரங்களும் ஓரளவுக்குப் பலாத்காரமும் நடந்ததாகப் பத்திரிகைகளில் சேதிகள் காணப்படுகின்றன. ஆனால், நமக்குக் கிடைத்த தகவல்களி லிருந்து இவை மிகைப்படுத்தி வெளியிடப்பட்ட செய்திகளாகத் தோன்றுகின்றன.

சில இடங்களில் எனது உருவப் படங்கள் கொளுத்தப்பட்டதாகவும், எனது உருவம் என்று சொல்லி 'புல் (வைக்கோல்) கொடும்பாவி' கட்டிக் கொளுத்தியதாகவும் காணப்படு கின்றன. இவை உண்மையாயிருக்கலாம்; இதை வரவேற்கிறேன். கொடும்பாவி கட்டி இழுக்கும் செயலுக்கு இச் செய்கை புத்தி கற்பிக்கும் என்றே கருதுகிறேன். அன்றியும், இப்படிப்பட்ட செய்கை, உருவ வணக்கத்தை ஒழிக்கக் கருதும் உண்மையான மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்றே கருதுகிறேன்.

மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால், நான், 28-ந்தேதி பிற்பகல் திருச்சிக்கு 55 மைல் தூரமுள்ள பாபநாசத்தை அடுத்த கோவில் தேவராயன் பேட்டைக்குக் கழகத் திறப்பு விழாவிற்குச் சென்றுவிட்டு, அன்று இரவு சுமார் 10–30 மணிக்கு திருச்சிக்கு—என் ஜாகைக்கு வரும்போது கழகக் காம்பவுண்டிற்குள் சுமார் 1000 பேர்கள் வரை தடிகள், கத்திகளுடன் இருந்து உற்சாகமாக ஆத்திரப் பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்தனர். நான் குழப்பத்துடன் வண்டியை நிறுத்தினேன். ஆனால்—'பெரியார் வாழ்க!' என்ற ஆரவாரத்திற்கிடையே என்னை வரவேற்றனர். என்ன விஷயம் என்று கேட்டேன்.

ஒரு வாலிபனை இழுத்துக்காட்டி, அவனிடமிருந்த நெருப்புப் பற்றவைக்கத்தக்க ஒரு நெருப்புப் பந்தத்தைக் காட்டினார்கள்.

விஷயம் என்னவென்றால்—என் மாளிகையைக் கொளுத்த ஒரு கூட்டம் திட்டமிட்டு வந்ததாகவும், அந்தச் செய்தி நம் மக்களுக்கு எட்டி, ஊர் திரண்டு வந்ததாவும், அப்போது சிலர் ஓடிவிட்டதாகவும், இந்த வாலிபனை ஓடிப் பிடித்ததாகவும் சொல்லியதுடன், போலீசா ருக்குத் தகவல் தெரியப்படுத்தியிருப்பதாகவும் சொன்னார்கள்.

இது ஒரு பார்ப்பன மிராசுதார் ஏற்பாடு என்றும், சில பார்ப்பன வக்கீல்களின் மூளை வேலையென்றும் கூறி என்னை, உடனே மாடியில் படுத்துக்கொள்ளும்படி தட்டிக் கொடுத்து அனுப்பிவிட்டனர்.

பின்னர் போலீஸ் வந்தவுடன் அவர்களை வைத்து எதிரிகள் ஓடிய வழியை, எதிர் காம்பவுண்டுக்குள் போய்ப் பார்த்தனர். எதிர் காம்பவுண்டு சுவரின் உட்புறம், மற்றும் 2, 3 பந்தங்களும் ஒரு பாட்டில் பெட்ரோலும் இருக்கக் கண்டு எடுத்தார்கள். போலீசார், அந்த வாலிபனை அழைத்துக் கொண்டு, இவைகளையும் எடுத்துப் போய்விட்டனர்.

இதன் விளைவு என்னமோ ஆகட்டும்.

புத்தருக்கும், புத்தர் ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்ட நிலைமைகள் நமக்கும் ஏற்பட்டேதீரும். அது எதிர்பார்த்துத்தான் நாம் இந்தத் தொழிலில் இறங்கியிருப்பதால், நமக்கு இதில் ஏமாற்றம் ஒன்றுமில்லை.

கொலை, இரத்தக்களரி, கொளுத்தல் இல்லாமல்—ஒரு கொள்கை, அதுவும் புரட்சி கரமான கொள்கை ஏற்படுவது என்பது என்றுமே முடியாத காரியமாகும்.

ஆதலால், இது கழகத்திற்கு ஒரு சோதனை; கழகத் தோழர்கள் இதைச் சமாளிக்கத் தயாராயிருக்க வேண்டும்.

நம்மால், எங்கும் எவ்வித சிறு பலாத்காரமான காரியமும் ஏற்படக்கூடாது.

இது விஷயத்தில் அரசாங்கத்தின் ஆதரவையும் அனாதரவையும் ஒன்று போலவே பாவிக்க வேண்டும்.

இதற்குத் தயாராகயிருக்க முடியாதவர்கள் ஒதுங்கிக்கொள்வது வரவேற்கத் தக்கதாகும்.

எனக்குப் பின், எப்படி நடந்து கொள்ளுவது என்பது பற்றித் துணிவுடன் சிந்தித்து முடிவு செய்து கொள்ளவேண்டும்.

['விடுதலை'—தலையங்கம்—30-5-1953]

14. தி. க. தொழிலாளர் நிறுவனமே!

தலைவரவர்களே! தோழர்களே!

எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவேதான். நாங்களும் தொழிலாளிகள்தாம். ஆகவே, வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளல்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தாம் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் உண்மைத் தொழிலாளிகளில் 1000-ல் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்.

தொழிலாளி என்கின்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அர்த்தமாகும். யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படி இருக்க, ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் 'தொழிலாளி' என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன் என்றால், பிறருக்காக தொண்டு செய்து—மனுதர்ம சாஸ்திரப்படி, தொழிலாளியாகவே வாழ்பவர்கள் 'தொழிலாளி' என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால் திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளிகள் அல்லவா?

இயந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரந்தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணார், நாவிதர், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு செய்பவன் முதலிய—சரீரத்தால் உழைத்து, வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து—அன்றாட வாழ்க்கைக்கு அன்றாடம் வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளிகள் அல்லவா?

இன்று இம்மாதிரித் தொழிலாளிகள் யார்? பிராமணர்களா? க்ஷத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தாமே இந்த மாதிரியான தொழிலாளிகளாக இருக்கிறார்கள்! இந்தச் சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம்தானே—சூத்திரர் என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும், காரியத்தில் நடப்புப்படியும் இருந்து வருகிறோம்? இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்கமுடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு பிராமணன் இருக்கிறானா? ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும், ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால், 'திராவிடரியக்கம் தொழிலாளிகள் இயக்கம்' என்று சொல்லுகிறேன்.

எதற்காகத் திராவிடர் இயக்கம் வேலை செய்கிறது என்றால், திராவிடர் 4-வது சாதியாக இருக்கக்கூடாது—தொழிலாளர் சாதியாக இருக்கக்கூடாது என்பதற்கே ஆகும்.

தொழிலாளர் இயக்கம்—திராவிடர் இயக்கம் என்பதற்குப் பதிலாக மற்றவர்கள் இயக்கத்திற்கு இருப்பது போன்ற ஒரு பெயர் இருக்க வேண்டுமானால் நாம் என்ன பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும், உங்களுக்குத் தெரியுமா? பிராமணர்கள் தங்கள்

இயக்கத்துக்கு, 'பிராமணர்கள் சங்கம்' என்றும், வைசியர் தங்கள் சங்கத்திற்கு 'வைசியர் சங்கம்' என்றும், க்ஷத்திரியர்கள் தங்கள் சங்கத்திற்கு 'க்ஷத்திரியர் சங்கம்' என்றும் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்களல்லவா? அந்தப்படிப் பார்த்தால், நாம் நம் சங்கத்திற்கு 'சூத்திரர் சங்கம்' என்று பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், சூத்திரன் என்பதை நாம் இழிவாகக் கருதுகிறபடியால் சூத்திரனின் மறுபெயர் கொண்ட—அதே கருத்துக்கொண்ட, 'வேலையாள்—தொழிலாளி சங்கம்' என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்தப் பெயரை—ஒரு சிறு கூட்டத்தார் பிரித்து வைத்துக் கொண்டதால், தொழில் செய்யும் சாதியாராகிய நாலாவது வருணத்தார்களாக்கப்பட்ட நாம் நம்முடைய இனத்தின்பேரால், 'திராவிடர் கழகம்' என்பது வேண்டாம் என்றால், மற்றபடி அதற்குச் சரியான பெயர் 'சூத்திரர் சங்கம்' என்பதேயாகும்.

ஆகவே, 'திராவிடர் கழகம்' என்பது, 4-வது வருணத்தாராக ஆக்கப்பட்டு—சமுதாயத்தில் இழிவு படுத்தப்பட்டு—சரீரப் பாடுபட வேண்டியதாகக் கட்டாயப்படுத்தித் தாழ்த்தப்பட்டு வைத்திருக்கும் ஒரு 4 கோடி மக்கள் கொண்ட சமுதாயத்தின் விடுதலைக் கழகம் என்றுதான் சொல்லவேண்டும்.

செல்வம் கடவுள் கொடுத்தார்; தொழிலாளிகளைக் கடவுள் சிருஷ்டித்தார்; கடவுள் செயலால் இவை இரண்டும் சிருஷ்டிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்றன; பிச்சை எடுப்பது அவனவன் 'தலைவிதி'—என்று நினைப்பவர் தொழிலாளர் இயக்கத்தில் அங்கத்தினராய் இருக்கவோ, தொழிலாளர் இயக்கத்தை நடத்தவோ சிறிதும் தகுதி அற்றவர் என்றே சொல்லுவேன். அவர் எவ்வளவு பண்டிதராய் இருந்தாலும், பக்தனாய் இருந்தாலும், தொழிலாளி இயக்கத்திற்குப் பதரே—எதிரியேயாவார். இப்படிச் சொல்வது நாத்திகமானால்—இதற்காக நீங்கள் எங்களிடம் சேரக்கூடாது என்றால், உங்கள் சம்பந்தம் இல்லாமல் எங்களால் ஆனதை எங்களுக்கும், உங்களுக்குமாக இருந்துவரும் திராவிடர் கழகத்தின் மூலம் நாங்கள் தொண்டாற்றி வருகிறோம்.

[சென்னை திருவல்லிக்கேணியில், 30-6-1946-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 6-7-1946]

15. திராவிட ஸ்தாபனங்களே வேண்டும்

இப்போது நமக்கு வேண்டியது தன்மானமும், இனப் பற்றும், இன உணர்ச்சியும் தான்.

இதற்கு ஆக அல்லது இதை நினைவூட்ட ஒரு சாதனமும் ஒரு அறிகுறியும் இன்று இல்லை.

இந்த நாட்டில் மற்ற எந்தக் காரியத்திற்கு எந்தச் சாதனம் இருந்தாலும் அவைகளில் ஒன்றுகூட இந்த நாட்டை, இந்த நாட்டவனை, இந்த நாட்டு மக்கள்இனத்தைக் குறிப்பிடும் குறிப்புகள் இல்லவே இல்லை.

எதை எடுத்தாலும் நாட்டைக் குறிக்காததும், இனத்தைக் குறிக்காததும்,—குறிக்க நேர்ந்தால் ஆரிய நாட்டையும் ஆரிய இனத்தையும் குறிப்பதாகவுமே இருந்துவருகிறது. அதற்கு உட்பட்ட கிளை ஸ்தாபனமாகவே குறிப்பிடப்படுகிறது. இதை ஒழிக்க யாரும் துணிவதில்லை. உதாரணமாக,

இந்திய காங்கிரஸ்; இந்திய கம்யூனிஸ்ட்; இந்திய சோஷியலிஸ்ட்; இந்திய இந்து மகாசபை; இந்திய கல்வி காங்கிரஸ்.

இப்படியாகவே, எதை எடுத்தாலும் 'இந்திய' என்கின்ற பெயருடனும்—'இந்தியாவுக்கு'க் கிளையாகவும் இருக்கிறதே தவிர—சென்னைக்கு—திராவிடத்திற்கு—தமிழகத்திற்கு முழு சுயேச்சை, மூல ஸ்தாபனமாக ஒன்றுகூட இல்லை. அப்படி இருப்பது, திராவிடர் கழகமும், சுயமரியாதை இயக்கமுமாகத்தான் இருக்கின்றன.

இவை இரண்டும் எல்லா திராவிடப் பிரபுக்களுக்கும், பதவியாளர்களுக்கும், படித்தவர்கள் என்பவர்களுக்கும் கசப்பாகவும், சிலருக்கு எதிர்ப்பாகவும்தான் கருதப்படுகின்றன. ஏதோ நல்ல சம்பவமாக இன்று தொழிலாளி—பாட்டாளி மக்களிடையே சிறிது உணர்ச்சி காணப்படுகிறது.

இவர்கள் மூலம்தான் இனி திராவிட நாடு சுதந்திரம் பெறுவதும், மனிதத் தன்மை பெறுவதும், அரசியல் பொருளியல் முதலிய துறைகளில் விடுதலை பெறுவதுமான காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. இவர்கள் துணிந்து 'இந்திய' என்ற பெயர் சம்பந்தமுடைய எந்த ஸ்தாபனத்தில் இருந்தும் உடனே பிரிந்துவிட வேண்டும்.

அது மாத்திரமல்லாமல் 'திராவிட' என்கின்ற சொல்லை முன்வைத்தே—'திராவிட நாடு தேசிய காங்கிரஸ்', 'திராவிட கம்யூனிஸ்ட்', 'திராவிட சோஷலிஸ்ட்', 'திராவிட தொழிலாளர்', 'திராவிட நெசவாளர்' என்பது போன்று—யாவும் 'திராவிட' என்ற பெயரையும்—அதற்கும் திராவிட நாடு (சென்னை இராஜ்யம்) அல்லாத எந்த வேறு நாட்டுக்கும் சம்பந்தமோ தலைமை ஸ்தாபனமோ இல்லாத தனி சுதந்திர ஸ்தாபனமாகவே இருக்கும்படியான தன்மையில் அமைக்கப்படவேண்டும். அவற்றில் திராவிடநாடு அல்லாத வெளிநாட்டுச் சம்பந்தமுள்ள ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாக எந்தவிதத்திலாவது சம்பந்தமுடையவர்களாக இருப்பவர்களைச் சேர்க்காமல் இருக்கவேண்டும்.

அந்த முறையில்தான் இனி நாட்டுப் பற்றையும், இனப் பற்றையும் வளர்க்கவேண்டியிருக்கிறது.

அதனாலேயே 'திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்' ஸ்தாபிக்க வேண்டியதாயிற்று. அதனாலேயே, 'தென்பகுதி (திராவிட) இரயில்வே தொழிலாளர் சங்கம்' ஏற்படுத்த யோசனை சொல்லவேண்டியதாயிற்று. இப்பொழுது நெசவாளர் கஷ்டம் தீர, பெரும் கிளர்ச்சி செய்ய ஒரு பொது ஸ்தாபனம் இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குத் திராவிட நெசவாளர் சங்கம் என்றே வைக்க வேண்டும்.

இந்தப்படி செய்வதன் மூலம்தான் இந்த ஸ்தாபனங்கள் பொது மக்கள் ஆதரவைப் பெறமுடியும்.

திராவிட—தமிழக என்ற பேரைக் கண்டு எவனாவது முகம் சுளித்தால் அவன் முகத்தில் காரித் துப்புங்கள்! தனது தாய்நாட்டின்—தனது இனத்தின் பேரைக் கேட்டு முகம் சுளிக்கும் துரோகியின் கூட்டுறவில் நமக்கு என்ன நன்மை விளைய முடியும்?

இந்தச் சிறு காரியத்திற்கு இணங்காத மக்கள் எப்படி மனிதத் தன்மையும் சுதந்திரமும் பெறமுடியும்? இது ஒருநாளும் 'தொழிலாளர் பிளவு' ஆகாது; காட்டிக் கொடுக்கும் துரோகத் தன்மையை ஒழிப்பதேயாகும்.

['விடுதலை'—தலையங்கம்—12-11-1952]

16. திராவிடர் கழகமும் திராவிடரும்

பெரியோர்களே! தோழர்களே!

பெருமையுடன், வரலாறுகளுடன், உண்மையான சம்பவங்களுடன் மனித சமுதாயத்துக்கு இந்நாட்டில் எவரும் ஆற்றியில்லாத பெருந்தொண்டைத் திராவிடர் கழகம் செய்துவருகிறது. இதை மக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இதற்கு நடுநிலைமை அறிவிருந்தால்தான் முடியும். நான் கூறினாலும், யார் கூறினாலும் விருப்பு வெறுப்பு என்பதில்லாமல் யோசிக்க வேண்டும். இந்த உறுதியான சிந்தனா சக்தியில்லாததினால்தான் நாம் மிருகப் பிராயத்தை நோக்கிச் செல்லுகிறோம்.

பொதுவாழ்வில் அல்லது நாட்டு நடைமுறையில் சிலர் சில தவறான உரிமைகளைத் தங்கள் தொழிலுக்கேற்பக் கொண்டுவிட்டனர். வியாபாரியை எடுத்துக்கொண்டால், சரக்கு எப்படியிருந்தாலும் அதை உயர்ந்ததென்றே கூறுவான்; அளந்து போடுவதிலும் குறையிருக்கும்; 'கள்ள மார்க்கெட்' செய்வான். அதில் ஏமாந்துவிட்ட பேர்வழி வீட்டுக்குப்போய், 'வியாபாரி என்னை ஏமாற்றிவிட்டான்' என்றால், கேட்பவர்கள் என்ன கூறுவார்கள்? 'வியாபாரி என்றால் அப்படித்தானே நடப்பார்கள். நீயல்லவோ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், அட, முட்டாளே!' என்பார்களே அல்லாது வியாபாரியைக் குறைகூறமாட்டார்கள். பொதுவாக வியாபாரிக்கு—குறைத்து அளப்பது, பொய்க் கணக்குக் கூறுவதுதான் உரிமைகள் என்றாய்விட்டது.

அது போலவே, வழக்கறிஞர்களும் பொய் என்று தெரிந்தும் அதை நீதிமன்றத்தில் மெய் என்று வாதாடுகிறார்கள். அது அவர்கள் தொழிலுக்கேற்ற உரிமை. தாசிகள் என்போருக்கு—வருபவர்களிடம் ஏமாற்றிக் காசு பறிப்பது தர்மம் அல்லது உரிமையாகி விட்டது. பொருளை இழந்தவன் யாரிடமாவது சென்று முறையிட்டால்கூட, 'அட, முட்டாளே! நீ ஏனப்பா, அங்கு சென்றாய்? தாசி என்றால் அப்படித்தானே செய்வாள்!' என்று கூறுவார்களேயல்லாது, 'அவள் செய்தது மகா பாதகம்' என்று யாரும் கூற மாட்டார்கள். இது போன்று சிலருக்குச் சமுதாயத்தில் சில உரிமைகள் இருந்துவரு கின்றன, அவர்கள் பிழைப்புக்கு. ஆனால், அதில் நாம் ஏமாறாமல் எச்சரிக்கையாயிருந்து பகுத்தறிவைச் செலுத்திச் சிந்தித்து முடிவுகட்டவேண்டும். அந்த நிலையிலிருந்து திராவிடர் கழகக் கொள்கைகளை ஆராய்ந்து பார்த்தால், அதன் உண்மையான தொண்டுகள் விளங்குமேயன்றி எவன் கூறுவதையோ நம்பி, கண்டவாறு பேசுவதால் பயன் ஏற்படாது.

திராவிடர் கழகம் இந்நாட்டு மக்களைத் 'தெய்வத்' தன்மையுடையவர்களாக, பூதேவர்களாக ஆக்காவிட்டாலும், மனிதத் தன்மை உடையவர்களாக ஆக்கிவருகிற தென்பதைத் துணிந்து எவராவது மறுக்கமுடியுமா? இந்நாட்டை ஆண்ட மக்கள், நாகரிகத்தை உலகத்தாருக்குக் கற்பித்த மக்கள்; வீரமும் அறிவாற்றலும் அன்புநெறியும் கொண்ட மக்கள். அவர்கள் இன்று, ஏன்—சூத்திர சாதியாய், பஞ்சம சாதியாய் இருக்க வேண்டுமென்று யாராவது கவலைப்பட்டதுண்டா? பாமர மக்கள் ஒன்றுந் தெரியாமல் சூத்திரன் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள் என்று கருதவேண்டாம். பிரதமர் கனம் ஓமாந்தூரார், பிரதமநீதிபதி இராஜமன்னார் சூத்திரர்தாமே! அகில உலக அரசியல் அறிஞர் சர். இராமசாமி முதலியார், தன்னைச் சூத்திரர் இல்லை என்று மறுக்கமுடியுமா? மகாமகா கெட்டிக்காரர் சண்முகஞ் செட்டியார் இன்றைய சூத்திரர்தானே! ஏன், நாயன்மார்களிலும் ஆழ்வாராதிகளிலும் சூத்திரர் இருக்கின்றனரே! அடியேன் தாசானுதாசன் என்பவர் முதல், அடியேன் நாய்க்குட்டி என்று பக்திப் பிரவாகமெடுக்கும் சைவ–வைணவ பக்தர்களும் சூத்திரர்கள்தாமே, இன்றைய சமுதாய நிலையில்!

இந்நாட்டுக்கு உரியவர்களான 100-க்கு 95 பேர் கல்வியில், பொருளாதாரத்தில் பிரதிநிதித்துவத்தில், சமுதாய வரிசையில் தாழ்ந்தவர்களாக ஆக்கப்பட்டு இருப்பதை யார் மறுக்கமுடியும்? சிலர் கொழுத்திருக்கலாம்—நான் மேலே கூறிய கனவான்களைப் போலொத்தவர்கள். ஆனால், அவர்களும் சமுதாயவரிசையில் 'கீழ்மக்கள்' தாமே! இப்படி ஆவதற்குக் காரணம் என்னவென்று எங்களைத்தவிர யார் யோசித்தவர்கள்? இவைகள் மாற, பணியாற்றுவது யார் என்று கேட்கிறேன்?

இதுவரைதான் இப்படியிருந்தாலும் 1948–லும் ஏன் இவ்வித இழிநிலை என்பதைச் சிந்தித்துக் கவலைப்படமாட்டேன் என்கிறார்களே? கவலைப்படாவிட்டால் தொலைகிறது. நாங்கள் அதுபற்றித் தொண்டாற்ற வந்ததும் நன்றியில்லாமல் எங்களை வசைபாடுவதா? சிறிதேனும் நம் மக்களுக்கு மான உணர்ச்சிவேண்டாமா? நம் இனத்தின் பெருமை என்ன?

நாட்டின் வளப்பமென்ன? அந்த வழியில்வந்த நாமா இன்று, இழிமக்கள்—அதுவும், நமது நாட்டில்? இதைப்பற்றி யாரும் சிந்திப்பது கிடையாது.

அப்படிச் சிந்தித்தாலும், 'பகவானே, என்னை அடுத்த ஜென்மத்திலாவது மேல் பிறப்பாக்கு!' என்று புத்தி போட்டுக் கொள்வானே தவிர, 'இந்த ஜென்மத்தில் ஏன் தாசி மகன்?' என்பதைப்பற்றி எவருமே கவலை கொள்ளவில்லையே!

எனவே, அவ்வித வேலையை மேற்கொண்டிருப்பதுதான் திராவிடர் கழகம். எப்பேர்ப்பட்ட தொல்லைவரினும் அதைச் சமாளித்துக்கொண்டு—எவ்விதத்திலும் இந் நாட்டில் இனி சாதி – மத – கடவுள் – சாஸ்திர – சம்பிரதாயங்கள் பேரால் ஏற்பட்டிருக்கும் சூத்திரன் தாழ்ந்தவன், பறையன், பஞ்சமன் என்ற பிரிவுகளை ஒழிப்பதே எங்கள் வேலை என்று முடிவுகட்டிவிட்டோம். நாங்கள் செய்வதைக் காங்கிரஸ் திராவிடர்களோ மற்றவர்களோ நம்பாவிட்டால், அவர்கள் வந்து இப் பணியை ஆற்றட்டும். யாராலேயோ, எந்த விதத்தாலேயோ சூத்திரன், பஞ்சமன், பார்ப்பனர் என்ற சாதி ஆணவங்கள் அறவே ஒழிந்து தீரவேண்டும்.

திராவிடர்கழகம் யாருக்காக இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தெரியும். அதன் கொள்கை வெற்றிபெற்றால் 100–க்கு 95 பேர் எவ்வளவு நலமுடன் வாழ்வார்கள் என்பது விளங்கும்.

தவிர, நாங்கள் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடவில்லையென்று காங்கிரஸார் கூறலாம். இது முட்டாள்தனம். நாங்கள் சுயராஜ்யத்திற்கு விரோதிகளல்லர். ஆனால், சுயராஜ்யத்தில் சூத்திரன், பஞ்சமன், முகத்தில் பிறந்தவன், காலில் பிறந்தவன் இருக்க மாட்டான்; மனிதன்தான் இருப்பான் என்றால் நாங்கள் உடனே ஒப்புக்கொண்டு வணக்கம் செலுத்துகிறோம். 'அது வேறு சங்கதி; இருக்கட்டும்' என்று கூறினால், 'அந்த வேறு சங்கதியை எங்களிடமே விட்டுவிடுங்கள்—நாங்கள் தீர்த்துவிடுகிறோம்' என்பதாகத்தானே பாடுபடுகிறோம்.

சுயராஜ்யம் வந்து 1½ ஆண்டாகிறது என்று சொல்லப்படுகிறது. இன்னும் மைசூர் இராஜா சூத்திரர்தானே! இராஜா சர். முத்தையா முதல் ஓமாந்தூரார், காமராசர்வரை சூத்திரர்தானே! இல்லையென்று கூறமுடியுமா?

நானாவது நாத்திகன்; கடவுளை நம்பாதவன் என்பீர்கள். மகா மகா பக்திமானாகிய ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நதியைக் கோயிலில் மணியடித்து, பணத்தை இடுப்பில் செருக விடுவார்களா? விடப்படுகிறதா? அவரும் சூத்திரர்தானே! இதை ஒழிப்பதற்கு—இனி வரப்போகும் 'அரசியல் நிர்ணய சபை சுயராஜ்யத்தி'லும் ஒரு வரிகூட இல்லையே! இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் போடும் சுயராஜ்பக் கூச்சலினால் கண்ட பலன் என்ன?

வெள்ளையன் ஆட்சியிலும் பார்ப்பனர் முன் நின்றார்கள். இப்போதுள்ள சுயராஜ்ய ஆட்சியிலும் பார்ப்பனர் தாங்களே முன்நின்று இராஜாவாகிறார்கள்—பார்ப்பன தர்மப்படி. ஆகவேதான், சூத்திரப் பட்டத்தை ஒழித்து எல்லோரையும் மனிதர்களாக்கும் சுயராஜ்யத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம்.

சிலர் கூறலாம், 'இதெல்லாம் முட்டாள்தனம். பொருளாதாரம் வந்தால் எல்லாம் சரியாய்விடும்' என்று. மற்றும் சிலர் சொல்லலாம்—'படிப்பு வந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்' என்று. நான் முன்பு கூறியதுபோல செல்வத்திலும், கல்வியிலும் முன்னிலையில் நிற்கும் இராஜா சர். முத்தையா செட்டியார், சர். இராமசாமி முதலியார், சண்முகஞ் செட்டியார், மறைமலை அடிகள், 'சீப்-ஜட்ஜ்' இராஜமன்னார், 'சீப்-மினிஸ்டர்' இராமசாமி ரெட்டியார், பாரிஸ்டர் எத்திராஜ் போன்றவர்கள் சூத்திரர்களா, அல்லவா?

எனவே கல்வி, பொருளாதார உயர்வு, அறிவு, ஆராய்ச்சி, திறமை ஆகிய எதுவுமே சூத்திரப் பட்டத்தை—சமுதாய இழிவை ஒதுக்கவில்லையே! ஆதலால், சமுதாய அமைப்பை அறவே ஒழித்தால்தான் மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக— சம சந்தர்ப்பத்துடன் வாழ முடியும் என்றே திராவிடர் கழகம் கூறுகின்றது.

இந்த முயற்சிக்காகத்தான் திராவிடர் கழகம் பாடுபடுகிறது. இவ்விதம் தொண்டாற்றி வரும் எங்கள்மீது கம்யூனிஸ்டுகள், காங்கிரஸார், சோஷலிஸ்டுகள், 'புரொக்கரஸிவ் பார்ட்டி', 'நேஷனல் பார்ட்டி', இந்து மகா சபை, ஆர். எஸ். எஸ். ஆகியோர் சீறி விழுவதா? இவர்கள் பிழைப்பில் இடைமறித்தோமா? அல்லது, இதன்மூலம் பிழைக்கிறோமா? இதன்மூலம் பொருள் தேடுகிறோமா? எங்கள் வீட்டுச் சோற்றைத் தின்றுவிட்டுத் தானே தொண்டாற்றுகிறோம்? இவர்கள் யாரிடமும் நாங்கள் ஒரு காசுகூடப் பெற வில்லையே! எங்களுக்குப் பெரும் நிதி இருக்கிறதா? ஏதாவது நிதி என்றால் அதுவும் எனக்கு 70 வயதாகிவிட்டபடியால், 70 காலணா பணமுடிப்புக் கொடுப்பார்கள். நாங்கள் இதை விட்டுவிட்டு வேறு காரியம் பார்த்தால், நல்ல நிலையிலிருக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் தானே! ஆக இப்பேர்ப்பட்ட எங்களுக்கா, வீண் தொந்தரவு கொடுப்பது தேசீயவாதிகள்?

கடவுளிடம்தான் எங்களுக்கு என்ன தொல்லை இருக்கிறது? எங்களுக்குப் பிடிக்காத —எங்களைச் சூத்திரனாக்கிய கடவுளைக் குறைகூறுகிறோம். கடவுளிடம் தினசரி பேசுகிறவர்களையே கேட்கிறேன்—கடவுள் என்பவர் உழைப்பவனை, நாட்டுக்கு உரிமை உடையவனைக் கீழ்சாதியாகவும்; உழைக்காதவனை—நகத்தில் அழுக்குக்கூட சேராமல், எதைப்பற்றியும் கவலை இல்லாமல் இருப்பவனை மேல் சாதியாகவும் வைத்திருப்பாரா? அல்லது எங்கும் நிறைந்தவர், சாதியை அழித்துவிடத்தான் முடியாதா? எனவே, கடவுள் பித்தலாட்டங்களையும் அதற்காகக் கற்பிக்கப்பட்ட மூடப் பழக்க வழக்கங்களையும், அவை பற்றிய புராண இதிகாசமென்னும் குப்பைகளையும் நாங்கள் குறைகூறுகிறோமே யல்லாது வேறு என்ன செய்கிறோம்?

'நான் ஏன் சூத்திரன்?' என்று கேட்டால், 'அது பகவான் செயல்' என்று கூறப் படுகிறது. அப்போதுதான் நாங்களும் கூறவேண்டியிருக்கிறது—'கொடு, அந்த பகவானுக்கு இரண்டு உதை; எல்லாம் சரியாய் விடுகிறது' என்று. அரசாங்கத்தின் பேரால்தான் பித்தலாட்டம் நடக்கிறது. பகவான் பேராலாவது அறிவுரை இருத்தல் வேண்டாமா? பகவான் பேரிலுமா இன்னும் பித்தலாட்டங்கள் என்று கேட்கிறேன்.

நம் முன்னேற்றத்தைத் தடுப்பவர்கள்தாம் நம்மை நாத்திகர்கள் என்றும், தேசத் துரோகிகள் என்றும் கூற முடியுமேயன்றி, சிறிதேனும் நேர்மை, புத்தி, மக்கள் நலனில் அக்கறையுடையவர்கள் அப்படிக்கூற மாட்டார்கள். நாங்கள் சென்ற 30 ஆண்டுகளாகச் செய்துவரும் முயற்சியால் இதுவரை சமுதாயத்துக்குக் கேடு விளைந்துள்ளதா? அல்லது நன்மை விளைந்துள்ளதா? மக்களுக்கு எங்களால் ஒரு சிறு கெடுதியாவது ஏற்பட்டதென்று விரல் மடக்க முடியுமா? சுயமரியாதை இயக்கமோ, ஜஸ்டிஸ் கட்சியோ, திராவிடர் கழகமோ தோன்றியிருக்காவிடில் நம் நாட்டில் மக்களிடத்தில் காணப்படும் ஓரளவு பகுத்தறிவாவது மிஞ்ச வைத்திருப்பார்களா பார்ப்பனர்கள்? எனவே நாஸ்திகப் பட்டம், தேசத் துரோகப் பட்டங்களுக்கு நாங்கள் அஞ்சிவிடவில்லை; இனியும் அஞ்சப் போவதில்லை!

'காளை மாடு கன்று போட்டது' என்றால்—'பிடித்துக் கட்டிப் பால் கறந்து வா' என்று கூறுவதா? யோசிக்க வேண்டாமா—'காளை கன்று போடுமா?' என்று. அதுபோல பூச்சுப் போட்டுக்கொண்டும், கொட்டை கட்டிக் கொண்டும் இருப்பவர்கள் என்பதற்காக அவன் புளுகி ஏமாற்றுவதற்கெல்லாம் தலை வணங்கி அடிமை ஆவதா?

எனதருமைத் தோழர்களே! காங்கிரஸ் திராவிடர்களே! இந்தக் காலத்திலும் நாம் இவைகளைப் பற்றி யோசிக்காது, கவலைகொள்ளாதிருந்து விட்டால், பின்னால் வரப்

போகும் சுயராஜ்யத்தில் பேசமுடியுமா? இப்போது செய்யப்படுகிறதே அரசியல் நிர்ணய சபையில் சுயராஜ்ய சட்டங்கள்—அன்று பார்ப்பனர்கள் ஒன்றுகூடிச் செய்த 'மனுநீதி தர்மத்தைப்போல, இன்று பார்ப்பனர்களும் பார்ப்பன அடிமைகளும் டெல்லியில் கூடிக் கொண்டு மனுதர்மத்தின் மறுபதிப்புக்கொப்பான 'சுயராஜ்ய தர்மநீதியை'ச் சிருஷ்டித்து வருகிறார்களே—அந்த சுயராஜ்யத்தில் நீங்கள் வாய்திறந்து ஒரு வார்த்தை கூறமுடியுமா, 'நான் ஏன் சூத்திரன்? நான் ஏன் உழைத்துப் பலன் இல்லை? நான் ஏன் எனது சொந்த நாட்டில் அடிமைவாழ்வு நடத்தவேண்டும்? ஒரு கூட்டம்மட்டும் உழைக்காமல் வயிற்றைப் பெருகவைக்கிறது'—என்று. அவ்வாறு சிந்திக்கவாவது முடியுமா?

பள்ளிகளில் 'சூத்திரர்' 100-க்கு 80 பிள்ளைகள் என்பதற்காக டெல்லியிலிருந்து, பட்டேல், நேரு மூலமாக நமது பிரதமர் ஓமாந்தூரார் அவர்களுக்கு 'மிரட்டல்' வருகிறது; உடனே பாவம் அவருக்குப் பேதி ஏற்பட்டுவிடுகிறது. டெல்லிக்குப் போய்வரும்போது ஒவ்வொரு முறையும் நோய்வாய்ப்படுகிறார்—அவ்வளவு ஆட்டிப்படைத்து விடுகிறார்கள் அவரை. இரண்டொரு காரியங்களில் சற்றுத் தன்மானத்துடன்—இன உணர்ச்சி கொண்டு, அதுவும் நியாயமான அளவு செய்வதற்கே இந்தப் பாடுபடுகிறார் நமது பிரதமர். இவ்வளவுக்கும் அவர் ரமணரிஷி காலில் விழுந்து வரம் கேட்பதாயிருந்தும் இந்தத் தொல்லை என்றால்—மற்றவர்களைப் பற்றிக் கூறவேண்டுமா? இப்போது வந்துள்ள சுயராஜ்யத்திலேயே இவ்வளவு படாதபாடு! 1950 சுயராஜ்யத்தில் என்ன அலங்கோலமோ, யாருக்குத் தெரியும்?

மேல்நாட்டிலே அணுகுண்டுக்கு மறுப்புக் குண்டு கண்பிடிப்பதிலிருந்து, தினசரி விஞ்ஞான அறிவுமூலம் அற்புதங்களையும், மக்களுக்கு மேலும் மேலும் நன்மை பயக்கக் கூடியவைகளையும் கண்டுபிடித்து வரும் இந்த நிலையில்—நம் நாட்டில், அதுவும் இச் சென்னை நகரில் எங்கு பார்த்தாலும் தினசரி இராமாயண, பாரத, கீதை போதனைகளா? பத்திரிகைகளில், 'நாளைய நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் பார்த்தால், மாம்பலத்திலே வாலி வதை உபதேசம்; அந்த இடத்திலே சீதாஜனனம்; இந்த இடத்திலே கருடகர்வ பங்கம் காலட்சேபம் என்றா காணப்படுவது?

நாம் மக்களுக்கு ஒரு அங்குல அறிவை உயர்த்தி வைத்தால், இந்தப் பார்ப்பனர்கள் அடுத்த நாள் இவ்விதப் பிரச்சாரத்தால் ஒன்றே முக்காலே அரைக்கால் சாண் இறக்கி விடுகிறார்களே! இந்த இராமாயண காலட்சேபத்திற்கும் மான ஈன மில்லாமல் சிலர் தாய்மார்களையும் அழைத்துச் சென்று காலில் விழுகின்றனரே! இதற்குப் பதிலாக 'எலக்ட்ரிசிடி' ஏற்பட்ட விதம்; ஆகாய விமானம் ஏற்பட்ட வரலாறு; கம்பியில்லாத் தந்தி, ரேடியோ ஆகியவைகள் ஏற்பட்ட விதங்களை மக்களுக்குப் போதிக்கக் கூடாதா? இவை களை எதற்காகக் கூறுகிறேன் என்றால், திராவிடர் கழகம் இவ்விதத் தொண்டுகளைச் செய்து வருகிறதேயல்லாது—எவன் மடியில் பணமிருக்கும், அதைப் பொய் புளுகி, மந்திரம் என்ற பேரால் அவிழ்த்துத் தட்சணை பெறலாம் என்பதற்காக அல்ல.

நம் நாட்டு மக்களுக்குச் சமுதாயத் துறையில் புதியதோர் உணர்ச்சி ஏற்படாதவரை நாம் எதற்கும் லாயக்கற்றவர்களாகத்தான் இருக்க நேரிடும். ஏனெனில், இன்றைய சமுதாய அமைப்பே பார்ப்பனர்களின்—இந் நாட்டைச் சுரண்ட வருபவர்களின் பித்தலாட் டங்களுக்கு அஸ்திவாரமாயிருக்கிறது. அதை ஒழித்துவிட்டால் நம்நாடும், மக்களும், ஏன் சர்க்காருங்கூட நல்ல நிலையில் இருக்கமுடியும்.

இப்பேர்ப்பட்ட சமுதாய வாழ்வை நாம் அடையவேண்டுமானால், நாம் மேற் கொண்டுள்ள நீதி நூற்களைப் பற்றியும் கவலை செலுத்த வேண்டும். கடவுளையும், மதத்தையும் எப்படி முட்டாள்தனமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டோமோ, அதேபோன்று நீதி நூற்களிலும் நம்மை இழிவுபடுத்தும் இராமாயணம், பாரதம், கீதை போன்றவை

களை நம்பி வந்திருக்கிறோம். அதே சமயத்தில் உலகிற்கே பொதுவான அறிவு விளக்கத்தையும், அதற்கான அரசியல் முறைகளையும், மக்களின் வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறியுள்ள நமது திருக்குறளை நாம் மதிப்பதில்லை; நாம் படிப்பதுமில்லை.

இராமாயணத்தில் முட்டிக்கொள்ள முந்துகிறோமேயன்றி திராவிடரின் திருக்குறளைப் பற்றிச் சிறிதுகூடக் கவலை கொள்ளுவதில்லை. எனவே, இனி நமக்கு ஒரு நெறிநூல், வழிகாட்டி நூல் இருக்கிறதென்றால் அது திருக்குறளேயாகும். அதை நமது மக்கள் படிக்க வேண்டும்; மாணவர்களும், புலவர்களும் ஓய்வுநேரங்களில் திருக்குறள் பிரச்சாரம் செய்ய வேண்டும். காங்கிரஸ் திராவிடர்களும் இப்பணியை மேற்கொள்ளவேண்டும்.

இராமாயணத்தில், பாரதத்தில் நேர்மையோ, நீதியோ இருக்கின்றனவா? பாமர மக்கள்தான் இராமபஜனைக்குச் சென்று பாழாக்கிக் கொள்கின்றனர் என்றால்—மக்களின் வரிப் பணத்தில் 1500 ரூபாய் சம்பளம் வாங்கும் பிரதம மந்திரி இராமபஜனையைச் சர்க்கார் மாளிகையில் திறந்துவைக்க ஏன் ஓடுகிறார்? திராவிட விபீஷணர்கள் இராமாயணத்தை யானைமீது வைத்து ஏன் அம்பாரி செய்கின்றனர்? கொஞ்சமேனும் மானம், ரோஷம் வேண்டாமா? இராமாயண ஆதாரத்தை அதிலிருப்பதைக்கொண்டே—வால்மீகி எழுதியதைக் கொண்டே நாங்கள் கூறினால், 'முட்டாள்' என்று எங்களைக் கூறுகிறார் மந்திரியார்!

நான் கேட்கிறேன்: இராமாயணத்தில் ஒழுக்க ஈனம், புத்திர துரோகம், சகோதர துரோகம், மனைவிக்குத் துரோகம், பெண்ணடிமை கொள்ளுதல்; மனிதத் தன்மைக் குத் துரோகம், திராவிடரை இழிவுபடுத்துதல் தவிர வேறு யாதாகிலும் அதில் இருக்கிறதென்று—அறிவற்றவர்கள் அல்லது அடிமைப் புத்தியில் ஊறிப்போனவர்கள், இனத் துரோகம் செய்பவர்கள் தவிர, வேறு யாராவது கூறமுடியுமா?

எனவே, அருமைத் திராவிடமக்களே! திருக்குறள் உலகில் உள்ள எல்லா 'இசங்'களுக்கும்—அதாவது லெனினிசம், சோஷலிசம் ஆகியவைகளைவிட உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட—மக்களின் நல்வாழ்வுக்கு ஆன நீதிநூலாகும். அதை இனியேனும் திராவிடர்கள் படித்து அதன்வழிச் சென்று பொதுப்பணி ஆற்றினால் நாம் எவருக்கும் அடிமைப் பட்டிருக்கமாட்டோம் என்பது மட்டுமல்ல; எங்கும் நம்மை ஏமாற்ற முடியாது.

நாங்கள் செய்துவரும் இப் பணிக்கு நீங்களும் ஒத்துழைக்க வேண்டும். காங்கிரஸ் மட்டுமல்ல—கம்யூனிஸ்ட் திராவிடர்களும் கவலை செலுத்தவேண்டும்.

ஆனால், இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் போக்கு அலாதியானது. எந்த உண்மையான கம்யூனிசத்துக்கு நாங்கள் பாடுபடுகிறோமோ அதற்கு இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் நேர்விரோதமான காரியங்களில் ஈடுபடுவதுடன் நில்லாது, எங்களையும் விரோதிகளாகப் பாவித்துப் பிற்போக்காளர்கள் என்று கூறி—பார்ப்பானுக்கு 'ஓட்' செய்கிறார்கள். இதைப் பற்றியும் நான் நமது 'விடுதலை'யில் விளக்கம் எழுதியுள்ளேன். என்றாலும், கம்யூனிஸ்டுகள் என்பவர்களுக்கு இன்று சர்க்காரால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் மத்தியில் அவர்களைப் பற்றிக் குறையிருப்பினும்—அதை எடுத்துக்கூற நான் இஷ்டப்படவில்லை; அது நல்லதுமல்ல. கம்யூனிஸ்டுகளுக்கு இவ்வித புத்தி எங்கள் விஷயத்தில் இல்லாவிட்டாலும்—மனிதத் தன்மைக்காகப் பாடுபடும் திராவிடர் கழகத்தினுடைய கொள்கைக் கேற்ப, இதுசமயம் அதிகம் கூற இஷ்டப்படவில்லை.

தோழர்களே! நாளைமுதல் நடைபெறும் மறியலைப்பற்றி எனக்குமுன் பேசிய நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள், பொதுமக்களும் அமைதியாகவே இன்னும் நடந்து கொள்ளவேண்டும். போலீஸ் அதிகாரிகள் வேண்டுகோளையும் நாம் சற்று மதிக்க

வேண்டும். ஏன்? நாம் பொறுப்புடையவர்கள். திராவிடராகிய யாருக்குக் கஷ்டம், நஷ்டம்வரினும் அது நம்மைச் சார்ந்ததேயாகும்; பயங்காளித்தனமல்ல இவ்வாறு கூறுவது.

மொழிப்போராட்டம் தீர்ந்தவுடன், நாம் நமது நாட்டுப்பிரிவினைப் போராட்டத்தைத் துவக்கப் போகிறோம். நம் திராவிடம் வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து பிரியவேண்டும்; அப்போதுதான் நமக்கு உண்மையான விடுதலை கிடைக்கும்.

வடநாட்டவர்களிடம் நேசப்பான்மையில் இருக்க, நாம் எப்போதும் தயாரா யிருக்கிறோம். ஆனால், 'அவர்கள் நமக்கு கர்த்தாக்கள்' என்பதை அறவே ஒழிக்க வெண்டும். ஆந்திரரும் வடநாட்டு ஆட்சியில் நம்மைவிட வெறுப்படைந்து வருகின்றனர். மைசூர் இராஜ்யத்தில் 'கர்நாடக திராவிடர் சங்கா' என்று நிறுவி உள்ளனர். மகாராஷ்டிரரும் தனிநாடு கேட்கின்றனர்.

தமிழ்நாடு மட்டும் தனியாகப் பிரிவதாக இருப்பினுங் கூட—இங்கிலாந்தைவிட, ஸ்பெயினைவிட, அஸ்ஸாமைவிட, சிந்துவைவிட இன்றைய மேற்கு வங்காளத்தை விடப் பெரியநாடு! பெரியநாடு என்பதுமட்டுமல்ல—எல்லாச் சூழ்நிலைகளும் நிரம்பப் பெற்றநாடு. ஏறத்தாழ துருக்கிக்குச் சம அளவுள்ள நாடு. எனவே, நமதுநாடு தனித்து நின்று நல்லாட்சி நடத்தமுடியும். இதையும் திராவிடமக்களும், பார்ப்பனப் பெரியார்களும் தோழர் களும் கவனத்தில்வைத்து, அவ் வெற்றிக்கு முதற்படியான மொழிப் போராட்டத்தில் பேருதவியும், ஒத்துழைப்பும் தரவேண்டுகிறேன்.

எனதருமைத் தாய்மார்களே! உங்களால்தான் இந் நாட்டின் முன்னேற்றம் விரைவில் ஆவதோ, அல்லது ஒத்திப்போவதோ இருக்கிறது. எனவே, நீங்களும் இப் பணியில், கழகக் கொள்கையில் அருள்கூர்ந்து நம்பிக்கை வைத்து, நம்நாடு எல்லாத்துறைகளிலும் தழைத்தோங்கி, ஏழைப் பாட்டாளிமக்களும், உழைப்பாளிகளும் தாழ்த்தப்பட்ட மக்களும், அடிமைப்படுத்தப்பட்ட பெண்களும் நற்பயனையும், நல்வாழ்வையும் பெறுமாறு செய்ய வேண்டுகிறேன்.

[சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் சொற்பொழிவு—'விடுதலை' 14-11-1948]

சேலம் மாநாட்டு நடவடிக்கைகளில் முக்கியமானதாகவும், சற்று அதிசயமான தாகவும் குறிப்பிடத்தக்க காரியம் என்னுடைய பேச்சாகும்.

தலைமையுரை என்பதாக நான் ஒன்றுமே பேசவில்லை. ஆனால், பேசுவதற்காக மாநாட்டிற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே குறிப்புகள் யோசித்தும் சேகரித்தும் குறித்து வைத்து, அவற்றை 40 பக்க 'எக்ஸைஸ் நோட்டு'ப் புத்தகத்தில் 3 புத்தகத்திற்கு மேலாக எழுதிவைத்திருந்தேன்.

நான் குறிப்புகள் சேகரிக்கும்போதும், யோசித்துக் குறிப்பிடும்போதும் மாநாட்டிற்கு நான் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்படுவேனென்று நினைக்கவேயில்லை. அப்படித் தெரிந்தெடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவுசெய்துகொண்டு, தலைவரைத் தேடுகிற வேலையில் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். அதுபோலவே மற்றொரு விஷயமும்—அதாவது 'ரேஷன்' தொல்லையைப்பற்றி மிக்க மனவேதனையுடன் இந்த ரேஷன் ஒழிபட மக்களுக்கு ஏதாவது ஒரு தக்கவழியைக் காட்டி, ஆச்சாரியார் (காங்கிரஸ்) ஆட்சிக்கு எதிர்ப்பாக இந்தப் பிரச்சினையையே வைத்துக் கிளர்ச்சி துவக்க லாமா என்றும் எண்ணிக்கொண்டிருந்தேன். இரண்டிலும் ஏமாற்றமடைந்துவிட்டேன்.

மாநாட்டிற்கு, 'சென்னை இராஜ்ய திராவிடர் கழகப் பொதுமாநாடு' என்று பெயர் கொடுத்த காரணம் நம் கழகத்தார் அல்லாத வேறு ஒரு தக்கவரைத் தலைமை தாங்கச் செய்யலாம் என்கின்ற ஆசையாலேயேயாகும். இதற்கு இரண்டு கஷ்டங்கள் ஏற்பட்டன,

ஒன்று, மாநாடு வரவேற்புக் கழக முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு என்னையேதான் தலைமை வகிக்கச் செய்யவேண்டுமென்று முடிவுசெய்து கொண்டது; இரண்டு, தற்காலநிலைக்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்ப வெளியார்களில் யாரைத் தலைவராகப் போடலாம் என்கின்ற யோசனையில் நல்ல முடிவேற்படாமற் போனது.

அதாவது, திராவிடர் கழகக் கொள்கைகள் மூன்று. அவை: ஒன்று வருணாசிரம முறை மூடநம்பிக்கை ஒழிக்கப்படவேண்டுமென்பது. இதற்கு, இதை ஒப்புக்கொள்ளக் கூடிய விளம்பரம்பெற்ற குறிப்பிடத்தக்க நபர் என்று சொல்லப்படக் கூடியவர் எவரையுமே தேடிப்பிடிக்க என்னால் முடியவில்லை. ஏனெனில், இந்தப் பிரச்சினை கடவுள், மதம், சாஸ்திர, புராண, இதிகாசங்களையும்; கோயில், குளம், உற்சவம், இலக்கியம் முதலியவை களையும் தொடுகிறபடியால் 'பெரிய ஆட்கள்' என்பவர்கள் யாரும் இதற்கு இணங்க மாட்டார்கள். ஆதலால், அந்தப் பிரச்சினைக்கு ஆள் கிடைக்கவில்லை. அடுத்தது, திராவிடநாடு (சென்னை இராஜ்யம்) பிரிவினைப் பிரச்சினை. இதற்குக் கழகத்தார் அல்லாமல் வெளியில் இருந்து மேற்கண்டபடி ஒரு 'பெரிய ஆள்' கிடைப்பது கஷ்டமாக இருந்தது. நான் சிலரைக் கேட்டுப் பார்க்கலாமா என்று கருதிய தோழர்கள் வெளி நாட்டிற்குப் போய்விட்டார்கள்; இரண்டொருவர் முன்பே தலைமை வகித்துவிட்டார்கள். ஜி. டி. நாயுடு அவர்கள் நீண்டநாட்களாகவே பிரிவினையை ஆதரித்தவர்கள் என்ற எண்ணத்தில் கோயம்புத்தூர் சென்று அவரைத் 'தலைமை வகிக்கிறீர்களா?' என்று கேட்டு அழைத்தேன். அவர், 'நான் மாநாட்டிற்கு வருகிறேன்; எனக்கு ஒரு நிகழ்ச்சியும் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று மறுத்துவிட்டார். அவர் 'மகாநாட்டில் பிரிவினையைப் பற்றிப் பேசியதைக் கேட்டபின், அவர் ஏற்றுக்கொள்ளாமற் போனது நமக்கு நல்லதாய் முடிந்தது என்று தோன்றிவிட்டது.

இந்த மாதிரி நபர்கள் கிடைக்காததற்குக் காரணம் என்னவென்றால், கொள்கைகள் ஒப்புக்கொள்ள முடியாதவை என்பதல்ல; அல்லவே அல்ல. பிரச்சினைகள் மிகக் கஷ்டமானவை; அதாவது, கசப்பு மருந்து. வருணாசிரமம் ஒழிய வேண்டுமென்றால் அது நாத்திகமே என்கிற பயம்கூடப் பெரிதல்ல—'பார்ப்பானுக்கு நாம் விரோதியாகிவிடுவோம்' என்கின்ற பயம்தான். அதுபோலவே, நாட்டுபிரிவினையும். பிரிவதால் கெடுதி ஏற்படுமே என்கின்ற பயம் அல்ல; 'சர்க்காருக்கு நாம் விரோதமாக ஆகிவிடுவோமே' என்கின்ற பயம்தான். இப்படியாக இந்தப் பிரச்சினைக்கும் ஆட்கள் கிடைக்கவில்லை.

மூன்றாவது பிரச்சினை வகுப்புவாரி உரிமை. இதற்கும் 1950-ல் திருச்சியில் நடந்த மாநாட்டிற்கு, புரபசர் இரத்தினசாமி அவர்களும், திருவாளர் எஸ். முத்தையா முதலியார் அவர்களும் வந்திருந்தார்கள். பிறகு அவர்களையே மறுபடியும் அழைக்க வேண்டுமா என்ற எண்ணம் தோன்றிவிட்டது.

ஆதலால், வெளியார்கள் கிடைப்பது சற்றுச் சிரமமாக இருந்தது என்பதுடன் வரவேற்புக் கழகத்தார் கண்டிப்பாக என்னையே முடிவுசெய்து கொண்டுவிட்டார்கள். ஆகவே, இதனால் இதில் நான் ஏமாற்றமடைந்துவிட்டேன்.

['விடுதலை'—தலையங்கம்—22-6-1952]

17. ஒழிக்கப்பட வேண்டியவைகள்

மக்களிடம் உணர்ச்சி, ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால் சினிமா ஒழிக்கப்பட வேண்டும். நீதி, நேர்மை ஏற்படவேண்டுமானால் வக்கீல்முறை ஒழிக்கப்படவேண்டும். நாட்டில் காலிகள், அயோக்கியர்கள் ஒழிக்கப்படவேண்டுமானால் பத்திரிக்கைகள் ஒழிக்கப் படவேண்டும். அரசியலில் நல்ல ஆட்சியும் நாணயமும் ஏற்படவேண்டுமானால் தேர்தல்

முறை ஒழிக்கப்படவேண்டும். வியாபாரத்தில் நாணயக்குறைவும், கள்ளவியாபாரமும் ஒழிக்கப்படவேண்டுமானால், லைசன்ஸ், பெர்மிட் கட்டுப்பாடு முறை ஒழிக்கப்பட வேண்டும்.

தொழில் துறையில் தொழிலாளரிடையே சுமுகமும், நாணயமும், பொறுப்பும் ஏற்படவேண்டுமானால் லாபத்தில் பங்குகொடுத்து, தொழிலாளர் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும். அய்க்கோர்ட்டில் சமூகநீதி வேண்டுமானால் பார்ப்பனரை ஜட்ஜாக நியமிப்பதும், அய்க்கோர்ட் நீதிபதிகளை சுப்ரீம் கோர்ட்டுக்கு ஜட்ஜுகளாக்குவதும் ஒழிக்கப்படவேண்டும்.

[பிறந்தநாள் விழா மலர் 84—17-9-1962]

7. நாமும் பிற இயக்கங்களும்

1. ஜஸ்டிஸ் கட்சியும் சுயராஜ்யக் கட்சியும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பிராமணர்களுக்கோ, அல்லது அவர்கள் கட்சியான காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்கோ—எதற்கு உத்தியோக ஆசை இல்லை? பிராமண 'அய்க்கோர்ட் ஜட்ஜு'க ளெல்லாம் காங்கிரசின் பேரால் உத்தியோகம் சம்பாதித்தவர்கள்தாம். நிர்வாக சபை மெம்பர்கள் ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி அய்யர், சி. பி. இராமசாமி அய்யர் ஆகியவர்கள் காங்கிரசின் பெயரால் உத்தியோகம் சம்பாதித்தவர்களேயாவர். பிராமணரல்லாதவர் கட்சியை மாத்திரம் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்பதன் பொருளென்ன? ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டார்கள் என்று பொறாமைப் பிரச்சாரம் செய்வதில் இவர்களுக்கு ஏதாவது அறிவிருக்கிறதா?

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், சுயராஜ்யக் கட்சிக்காரர்களைப்போல ஏதாவது பொய் சொல்லி—ஓட்டர்களை ஏமாற்றிச் சட்டசபைக்குப் போனார்களா? ஒருகாலும் இல்லை. ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கண்ணியமாக ஓட்டர்களிடம் சென்று, 'நாங்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் அல்லர்; காங்கிரஸ் பிராமணர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது; நாங்கள் பிராமணரல்லாதார் பொருட்டுப் பாடுபடுகிறோம். நாங்கள் பொய்யான ஒத்துழையாமைக் காரர்கள் அல்லர்; சீர்திருத்தத்தை ஏற்று, சட்டசபைக்குச் சென்று, சர்க்காரோடு ஒத்துழைத்து, சர்க்கார் உத்தியோகங்களை ஏற்று, பிராமணரல்லாதாருக்கும் தேசத்துக்கும் எங்களால் கூடியதைச் செய்வோம்' என்று சொல்லிச் சட்டசபைக்குள் நுழைந்தார்கள். ஓட்டர்களும் அதை ஏற்றுக்கொண்டு அவர்களை அனுப்பி வைத்தார்கள். அப்படியிருக்க, அவர்கள் உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டார்கள் என்று சொல்லிப் பொறாமைப் படுவதில் என்ன பிரயோசனம்? சுயராஜ்யக் கட்சியார் பிரயாணப்படிகூட வாங்குவ தில்லை என்று சொல்லி சட்டசபைக்குப் போய், தினக்கூலி பெறக்கூடிய கமிட்டி பதவியும், மாதச் சம்பளம் பெறக்கூடிய உத்தியோகமும் பிரயாணப்படியும் பெற்று, சர்க்காருக்கும் அனுகூலமாயிருந்து—சர்க்கார் எதிர்பார்த்ததற்கு மேல் ஒத்துழைப்பைப் பற்றிக் கொஞ்சமும் வெட்கப்படாமல் மேடைக்கு வந்து ஜனங்களை ஏமாற்றுவது எவ்வளவு பித்தலாட்டமான காரியம்?

சுயராஜ்யக் கட்சி உப தலைவர் ஸ்ரீமான் பட்டேல் மாதம் ரூ. 4000 சம்பளம் வாங்கு கிறார். அது யாருடைய பணம்? இது பொது ஜனங்கள் பணம் அல்லவா? காங்கிரசையும், ஒத்துழையாமையையும், சுயராஜ்யக் கட்சியையும் சேர்ந்த 'தேசபக்தர்'

பட்டேலுக்கு மாதம் 4000 ரூ. எதற்காக வேண்டும்? அவர் உடுத்திக்கொள்ள 6 முழக் கதர் போதும்; குடியிருக்க ஒரு குச்சு வீடு போதும். இப்படிப்பட்ட தேசத் தொண்டருக்கு மாதம் ரூ. 11-4-0 இருந்தால் போதும்! இவருக்கு மாதம் 4000 ரூ. எதற்கு? இது, 'உத்தியோகம் பெறுவதில்லை' என்று போனவர் பெறும் சம்பளம்! இவருக்கே மாதம் 4000 ரூ. வேண்டியிருந்தால், உத்தியோகம் பெறப்போனவர்கள்—பெரிய இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாதம் 4000 ரூபாய் என்றால் எது அதிகம்? யாருக்கு உத்தியோக ஆசை? இதில் யார் யோக்கியர்கள் என்பதை நீங்களே யோசியுங்கள்!

அல்லாமலும், நமது பிராமணரல்லாத மந்திரிகள், 'பணத்தாசை பிடித்தவர்கள்' என்று சொல்லப்படுபவர்கள்—தாங்களாகவே மாதம் 5000 ரூபாய் சம்பளத்தை 4000 ஆக ஆக்கிக்கொண்டார்கள்; வருஷம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்துப் பதினெட்டாயிரம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். 6 வருஷத்துக்கு 7 இலட்ச ரூபாய்—அவர்களுக்கு வருவதை வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். காங்கிரஸ் காரியதரிசியாக இருந்தும், தேசத்துக்காகப் பாடுபடுவதாய்ச் சொல்லியும் நமது ஓட்டுப் பெற்று சட்டசபைக்குப்போய் உத்தியோகம் பெற்ற பிராமணர் சர். சி. பி. இராமசாமி அய்யர் எவ்வளவு ரூபாய் தனது சம்பளத்தில் குறைத்துக்கொண்டார்? பொது ஜனங்களுக்கு, ஏழைகளுக்கு உழைப்பவர்கள் என்றும், தேச விடுதலைக்காக உழைப்பவர்கள் என்றும், பிரயாணப் படி வாங்குவதில்லை என்றும் சட்டசபைக்குப் போன ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார், எம். கே. ஆச்சாரியார் இவர்கள் எவ்வளவு படிப் பணமும், கமிட்டிப் பணமும் குறைத்துக்கொண்டார்கள்? பாமர ஜனங்கள் பைத்தியக்கார ஜனங்களாக இருப்பதால் இவர்கள் பிராமணரல்லாதாரை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு ஊர் ஊராகத் திரிகிறார்கள்.

அல்லாமலும், ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் இனத்தாருக்கு உத்தியோகம் கொடுப்பதாகவும், நாமிநேஷன் செய்வதாகவும், மந்திரிகள் பேரில் குற்றம் சுமத்துகிறார்கள். மந்திரிகள் பிராமணர்களுக்குக் கொடுக்கும் உத்தியோகத்தை, இவர்கள் வெளியில் சொல்லுகிறார்களா? ஸ்ரீமான்கள் தணிகாசலம் செட்டியாருக்கும், சி. எஸ். ரெத்தினசபாபதி முதலியாருக்கும் நாமிநேஷன் செய்தால் அதிகாரத் துஷ்பிரயோகம் என்கிறார்கள். ஸ்ரீமான்கள் வெங்கிடரமணய்யங்காருக்கு கோயமுத்தூர் ஜில்லா போர்டு மெம்பரும், டி. எம். நரசிம்மாச்சாரியாருக்கு கடப்பை ஜில்லா போர்டு பிரசிடெண்டும், சர். டி. தேசிகாச்சாரியாருக்கு திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான பதவிகளுக்கு நாமிநேஷன் செய்தார்களே! இவர்களெல்லாம் பிராமணரல்லாதவர்களா? அல்லது பிராமணரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர்களா? இந்தப் பிராமணர்கள் உத்தியோகம் பெற்றுக்கொண்டதைப்பற்றி எந்தப் பிராமணர்களாவது, பிராமணப் பத்திரிகையாவது ஒரு வார்த்தை சொல்லுகின்றதா?

[கோயமுத்தூரில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-6-1926]

2. காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும்

தலைவரவர்களே! தோழர்களே!

தோழர் இராமசாமி முதலியார் தேர்தல் விஷயத்தில் மிக்க ஊக்கமுள்ள ஏராளமான வாலிபர்கள் இங்கே கூடியிருப்பது, நல்ல அறிகுறியாகும். தேர்தல் பிரச்சாரத்தின் போக்கு உங்களுக்கு நன்றாகத் தெரியும். புதிதாகக் கூறவேண்டியது ஒன்றுமில்லையென்று நினைக்கிறேன். போட்டி ஏற்பட்டுவிட்டாலாயே அபேட்சகர்களும் அவர்களது கோஷ்டியினரும் ஒருவர்மீது ஒருவர் தூஷணையாகப் பேசி வெற்றிபெற தம்மால் இயன்றவரையில் முயற்சி செய்வதென்பது வழக்கமாக இருக்கிறது. நமது எதிர்க்கட்சியினர் பொய்ப் பிரச்சாரம் செய்துவருகின்றனர் என்பது பற்றியும், ஆபாசமான விஷயங்களைப் பறைசாற்றி வருகின்றனர் என்பது பற்றியும் நீங்கள் வருந்தக்கூடாது. தேர்தல் பிரச்சார முறை அப்படியிருக்கிறது.

உண்மையைத் தெரிந்துகொண்டு ஓட்டுப்போட வேண்டுமென்ற நோக்கம் நம் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு இல்லை. பெரும்பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் ஏதாகிலும் விஷயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் புரோகிதர்கள், வக்கீல்கள் முதலியோர் மூலமே தெரிந்துகொள்ளவேண்டி இருக்கிறது. நமது தேச மக்கள் அறிவாளிகளென்று நாம் பெருமை பாராட்டிக்கொண்ட போதிலும் 100-க்கு 2 விழுக்காடு பேர்களே படித்தவர்களாக இருக்கின்றனர். உயர் சாதியினர், பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களது புதல்வர்களே படித்திருக்கின்றனர்; விவசாயிகள் முதலிய பெரும்பான்மையோருக்கு எழுத்து வாசனையே இல்லை. இந்நிலைமையில் ஜனங்கள் உண்மையைத் தெரிந்துகொள்வது எப்படி? யாருக்கு அதிகமாகப் புளுகத் தெரிகிறதோ, யாருக்கு தூஷணம் செய்யத் தைரியமிருக்கிறதோ அவரே தேர்தலில் வெற்றிபெறுவது சகஜமாக இருக்கிறது.

சென்னை மக்களது நிலைமை அப்படி அல்லவென்று நான் கருதுகிறேன். இந் நகரிலுள்ளவர்கள் படித்தவர்கள்; விஷயம் தெரிந்தவர்கள். ஆனால், இவர்களிடம் பெருங்குறை ஒன்று உண்டு. கிராமவாசிகள்—ஆபத்தென்றால் எல்லோரும் ஒன்றுகூடிவிடுவார்கள். படித்ததன் பலனாக நகரவாசிகள் அவ்விதம் ஒன்று சேருவதே கிடையாது. தங்களுக்கு அனுகூலமுண்டா என்பதையே முக்கியமாகக் கவனித்துவிட்டு, 'ஊர் வம்பில் தலையிடக் கூடா'தென்று சும்மாயிருந்துவிடுவார்கள். சிறுபான்மையோர் தங்கள் சமுதாய நன்மையைப் பொறுத்த விஷயத்தில் சிரத்தைகொண்டு ஒத்துழைக்கிறார்கள். பெரும்பான்மையோர் அவ்விதம் சிரத்தை கொள்வதேயில்லை. இதனால் முடிவில் சுயமரியாதையை இழக்கவும் நேரிடுகிறது. இதனை எதற்காகக் கூறுகின்றேனென்றால், தோழர் சத்தியமூர்த்தி கோஷ்டியினர் பிராமண வாக்காளர்களது ஆதரவு நிச்சயமென்பதில் முழுநம்பிக்கை கொண்டிருக்கும்போது, பெரும்பான்மையோரான பிராமணரல்லாதார் தங்களிடம் பதின் மடங்கு அதிக ஓட்டுக்களிருந்தும்—சிரத்தையும், தைரியமும் கொள்ளாமல் இருக்கின்றனர் என்பதுபற்றியே. தேர்தலில் கட்சி குண தோஷங்களைப் பிரச்சாரம் செய்தபோதிலும், போட்டியானது சமூக விரோதத்தையும், சாதி வித்தியாசத்தையுமே அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. இதுவரையில் சமூக உயர்வு, தாழ்வு, அனுகூலம் இவைகளையே குறியாகக்கொண்டு தேர்தல் நடந்துவந்துள்ளது. அவ்வப்போது பெயர்கள் மாறி வந்தபோதிலும் அடிப்படைத் தத்துவம் சம்பந்தமாக வித்தியாசமே இல்லை. பிராமணர், பிராமணரல்லாதாரை நசுக்கிவிட்டு உத்தியோகம் முதல் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெறத் தேர்தலைச் சாதனமாக உபயோகித்து வந்துள்ளனர். வெளிப்படையாக எதையும் சொல்லுவோர் காரியத்தில் கண்ணாக இருப்பதில்லை. பிராமணரோ அப்படியல்ல. அவர்கள் வாய் பேசாமல் காரியசித்தியிலேயே கருத்துடையவர்களாக இருக்கின்றனர்.

இந்நகரில் தோழர் சத்தியமூர்த்தி காங்கிரசின் பெயரால் அபேட்சகராக நிற்கின்றார். தோழர் முதலியார் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்கின்றார். காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரம் எப்படி நடந்து வருகிறதென்பதைக் கவனிப்போம். ஜஸ்டிஸ் கட்சி தேசத் துரோகக் கட்சி என்றும், தோழர் இராமசாமி முதலியார் தேசத் துரோகியென்றும்; காங்கிரஸ் மகாசபையே ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையென்றும், தேச மக்களுக்காகப் பாடுபடுகிறதென்றும், ஆகவே காங்கிரஸ் அபேட்சகருக்கு ஓட்டுப் போடவேண்டுமென்றும் பிரச்சாரம் செய்துவருகின்றனர். காங்கிரஸ் வாதிகள் மட்டுமே தேசபக்தியும் தேசாபிமானமும் உடையவர்களென்றும் கூறி ஓட்டுக் கேட்கின்றனர்.

காங்கிரஸ் பிரச்சாரகர்கள் கூறுவது எவ்வளவு தூரம் உண்மையென்பதை நாம் ஆராய்ச்சி செய்வோம். சமீபத்தில் பம்பாயில் காங்கிரஸ் மாநாடு நடந்ததென்றும், பலத்த விவாதம் நடந்ததென்றும், மாநாடு வெற்றிகரமாக முடிந்ததென்றும், செய்திகளை நாம் பத்திரிகைகளில் படித்தோம். ஆனால், அம் மாநாட்டில் என்ன நடந்ததென்பதைச்

சுருக்கமாகக் கூற இயலுமாவென்று நான் கேட்கின்றேன். என்ன தீர்மானம் நிறைவேற்றி னார்கள்? நாட்டுக்கு அம் மாநாட்டில் என்ன நன்மை ஏற்பட்டது? ஒருவரையொருவர் பாராட்டிக்கொண்டார்களே தவிர, வேறு நடந்ததென்ன? இரண்டொருவருக்குப் பெரும் புகழ் ஏற்படுமாறு ஏற்பாடு செய்தனர்; மற்றவர்கள் காங்கிரசில் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து செய்துகொண்டார்கள்; தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் சிலவற்றைத் தேடிக்கொண்டனர். அம் மாநாட்டில் நடந்தது என்னவென்றால், மகாத்மா காந்தி காங்கிரசிலிருந்து விலகியதுதான். இதற்காக ஒரு பெரிய மாநாடு; இலட்சக் கணக்கில் செலவு. காங்கிரசின் யோக்கியதை என்னவென்று காட்டவே நான் இதைக் குறிப்பிடுகின்றேன். இந் நாட்டில் காங்கிரஸ்தான் பிரதானமான சபையென்ற சமாதானம் மட்டும் போதுமா? அதனால் நன்மை என்ன ஏற்பட்டது? அது சாதித்ததென்ன? இவைகளைக் கவனிக்க வேண்டுமல்லவா?

நான் காங்கிரசில் சேர்ந்து கண்ட அனுபவங்களையே எடுத்துக் கூறுகின்றேன். காங்கிரசிலிருந்தபோது அதன் விதிகளையெல்லாம் முற்றிலும் அனுசரித்தவன். அப்போதே நாலைந்து தடவை சிறைப்பட்டிருக்கின்றேன். அனுபவப்பட்டு அதன் (காங்கிரசின்) குணதோஷங்களைச் சொல்ல வந்தவனே தவிர வேறல்ல. சிறைப்படும்போது நான் வெறும் ஆளாகவிருக்கவில்லை. அப்பொழுது வியாபாரத்தில் மாத்திரம் நான் ரூ. 800 வருமான வரி செலுத்திக்கொண்டிருந்தவன். இதர வரிகள் பலவும் ரூபாய் 3000 செலுத்தினேன். காங்கிரஸ் வேலைத் திட்டத்தை அனுசரித்தால் தேசத்திற்கு நன்மை ஏற்படுமென நம்பித் தொழிலை விட்டேன். கோர்ட்டுகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வாயினால் மட்டும் பேசிவிட்டு நான் சும்மாயிருக்கவில்லை. ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுவதையும் இலட்சியம் செய்யாமல், நான் கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து வந்தேன். நான் ஒரு பத்திரத்தில் ரூபாய் 28,000 வசூல் செய்யாமல் விட்ட விஷயம் பழந் தேசபக்தரான தோழர் விஜயராகவாச்சாரியாருக்குத் தெரியும். அவர், தாம் எனது சார்பில் வக்கீலாக ஆஜராகி அப் பணத்தை வசூல் செய்வதாக என் அனுமதி கேட்டார். அப் பணம் வீணாக விடாமல் வசூல் செய்து காங்கிரசிற்காவது உபயோகிக்கலாமென்றும் கேட்டார். மேற்கண்ட கொள்கையைக் கடைசி வரையில் அனுசரித்தே தீரவேண்டுமென்ற உறுதியால் நான் அதற்கு உடன்படவில்லை.

அதுபற்றி தோழர் விஜயராகவாச்சாரியார் என்னைப் 'பைத்தியக்காரன்' என்று கூறினார். வெளி வேஷத்திற்காகவோ, அதில் சம்பாதிக்கவோ நான் காங்கிரஸ்வாதியாக இருக்கவில்லை. இப்பொழுது என்மீது குறை கூறுவோர்களிடமிருந்தெல்லாம் நான் அப்பொழுது உயர்ந்த நற்சாட்சிப் பத்திரங்கள் வாங்கியிருக்கிறேன். நான் இந்த காங்கிரஸ் வாதிகளுக்கு அடிமைபோலவும், அவர்களது சொல்லைத் தட்டாமலும் நடந்து, பலன் உண்டாவென்பதைப் பரீட்சித்துப் பார்த்தவன்.

காங்கிரஸ் நிர்வாகம் ஒரு சமூகத்தாரின் நன்மையைக் குறித்தே நடக்கிறதென்பதை உணர்ந்தே நான் அதிலிருந்து விலகினேன்; எனக்கு அதில் யோக்கியதையோ, மதிப்போ இல்லையென்று நான் விலகவில்லை. காங்கிரசுக்கு அதிகாரம் ஏற்படுமானால் பொது ஜனங்களுக்கு என்ன பங்கு ஏற்படுமென்பதைத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், நான் தீர்மானம் கொண்டுவரவே இடமில்லாதபடி செய்தனர். காங்கிரசில் நியாயத்திற்கு இடமில்லையென்றும், தந்திரத்திற்கே இடமுண்டென்றும் உணர்ந்து நான் ஆரியா முதலியவர்களுடன் மாநாட்டிலிருந்து வெளியேறினேன். அதன் பிறகுதான் காங்கிரசையே தொலைக்க வேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டது. ஆனால் தற்போது காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதனால் காங்கிரசைத் தொலைக்க வேண்டுமென்ற விருப்பமே எனக்கில்லை. ஏனென்றால், இனி பார்ப்பனருக்குச் சிபாரிசுக்கு அங்கு ஆளில்லை. காஞ்சிபுரம் மாநாட்டிலிருந்து விலகிய பிறகு நான் ஜஸ்டிஸ் கட்சியை

ஆதரித்தேன். இந்தக் கட்சி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவமே கூடாதென்று காங்கிரஸ் மகாசபை கங்கணம் கட்டிக்கொண்டதால்தான், அது தற்போது சீர்குலைந்து விட்டது. சிறுபான்மையோருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு அவர்கள் விலக வேண்டியதாயிற்று. அதுவே காங்கிரசின் பலக்குறைவுக்குக் காரணம்.

எல்லா வகுப்பாருக்கும் சமநீதி வழங்க காங்கிரஸ் ஒருப்படுமானால் தனிப்பட்ட சமூக ஸ்தாபனங்களே தோன்றியிருக்காது. 'வண்டிக்கு முன்பாரம் அதிகமானால் பின்புறம் கற்களைத் தூக்கி வைப்பதுபோலவே'—பிராமணரல்லாதாரில் சிலரை உபயோகித்து வருகின்றனர். ஒரு ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி ஓட்டுக் கேட்கும்போது அந்த ஸ்தாபனத்தால் தேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது பற்றியே நான் இதைக் கூறுகின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சி தனது நோக்கங்களையும், வேலைத் திட்டத்தையும் சரியான பிரச்சாரத்தின் மூலம் ஜனங்களுக்கு அறிவிக்காததாலேயே இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சியைத் தேசத் துரோகக் கட்சியென்று பிராமணர்கள் குறை கூறுகின்றனர்.

ஜஸ்டிஸ் கட்சி செய்துள்ள வேலைபோல, அக் கட்சியில்லாத இதர மாகாணங்களில் வேலை நடந்திருக்கின்றதாவென்று கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சி இம் மாகாண மந்திரி சபையை ஏற்று அரசியல், சமுதாய அபிவிருத்திக்காகப் பாடுபட்டுள்ளது. புரோகித ஆதிக்கம் ஒழிந்து விவசாயிகள், பெண்கள் அரசியலில் கலந்துகொள்ளமுடிந்தது. சென்னையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றில் ஸ்தானமுண்டு. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையும் அமுலிலிருக்கிறது. இதர மாகாணங்களில் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்படவே இல்லை. ஜஸ்டிஸ் கட்சி செய்த பிரதிகூலம் என்னவென்று நான் கேட்கின்றேன்.

ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையிலிருந்ததாலேயே சட்டமறுப்பு இயக்கம் நடந்தபோது இம் மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்களுக்குத் தடியடி, சிறைவாசம் ஏற்பட்டதென்று காங்கிரஸ் பிரச்சாரகர்கள் குறைகூறுகின்றனர். ஜஸ்டிஸ்கட்சி மந்திரிகளில்லாத இதர மாகாணங்களில் தொண்டர்களுக்கு அதிகாரிகள் தேங்காய் பழம் கொடுத்தார்களா அல்லது கலியாணம் செய்து வைத்தார்களா என்று நான் கேட்கிறேன். 'கைதிகளுக்கு மோர் கொடுக்கவில்லை யாதலால் ஜஸ்டிஸ்கட்சி நாசமாகப் போகவேண்டும்' என்று கூறுகிறார்கள். வேறு எந்த மாகாணத்திலாகிலும் சட்ட மறுப்புக் கைதிகளுக்கு ஆடைத் தயிராகக் கொடுத்தார்களாவென்று நான் கேட்கிறேன். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த திவான்பகதூர் முதலியாரால் தெருப்புப்பெட்டிக்கு வரி ஏற்பட்டதென்று கூறுவது எவ்வளவு இழிவானதென்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். சில பெண்கள் அற்பத்தனமாகச் சச்சரவிடுவது போலல்லவா இருக்கிறது காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரம்?

காங்கிரசின் சார்பில் பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானவர்கள் சிறைப்பட்டதால் கண்ட பலன் என்ன? அம்முறை தப்பானதென்று கண்டு பிடித்ததைத் தவிர வேறென்ன? இதற்காக ஆயிரக்கணக்கில் செலவு. காந்தியார் தமது முயற்சி பிரயோஜனமற்றது என்று உணர்ந்து புது முயற்சியில் ஈடுபட உத்தேசித்திருப்பதைப் பாராட்டி 'சுதேசமித்திரன்' பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளது. காந்தியார் தமது கொள்கைகளை நம்பாமலே காங்கிரஸ்வாதிகள் வாசா கைங்கரியமாக நடந்து வருகின்றனரென்றும், காங்கிரசிற்குப் பலமும், பரிசுத்தமும் ஏற்படும் பொருட்டு அதிலிருந்து விலகியதாகவும் கூறுகின்றார். உள்ளேயிருந்து காரியத்தைச் சாதிக்காமல் வெளியே இருந்து எப்படிக் காரியத்தைச் சாதிக்கக்கூடுமென்று நான் கேட்கிறேன்.

காங்கிரசிலிருந்து விலகிய என்னைத் தேசத் துரோகி என்று கூறுகின்றனர். காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட்டாரே, அவரைத் தேசத் துரோகியென்று கூறாமல்,

அவர் பேரால் ஓட்டுக் கேட்கிறார்கள். காங்கிரஸ் பரிசுத்தமாக வேண்டுமென்று நானுந்தான் விரும்புகின்றேன். காங்கிரசைச் சேராதவர்களெல்லாம் தேசத் துரோகிகளென்பது அயோக்கியத்தனமான வார்த்தையேயாகும்.

காங்கிரஸ் வேலைத் திட்டத்தை ஜனங்கள் நம்பி அனுசரித்தனர்; உப்பு சத்தியாக்கிரகத்திலும் சேர்ந்து சிறைப்பட்டனர். இதனால் கண்ட பலன் என்ன? சிறைப்பட்டவர்களை விடுதலை செய்ய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதே தவிர வேறில்லை. இதற்காக ஜனங்கள்மீது குறைகூறிவிட்டு காந்தியார் வெளியேறியது நாணயமாகாது.

தோழர் இராமசாமி முதலியார் காங்கிரஸ்வாதிகள் கூறியதற்கெல்லாம் தக்க பதில் கூறிய பிறகு காங்கிரஸ்வாதிகள் நூதன பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். நான் கோயிலை இடிக்கவேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறவனென்றும், அத் தகையவன் உதவியை நாடும் தோழர் முதலியாருக்கு ஓட்டுப் போடவேண்டாமென்றும் கூறுகின்றனர். கோயிலை இடிப்பதால் கடவுளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமா? அக் கோவில்களால் வயிறு வளர்க்கும் கூட்டத்தார் வாயில் மண் விழுமே தவிர வேறில்லை. ஆயிரக்கணக்கான கோயில்களுக்குக் கோடிக் கணக்கில் ஆடம்பரச் செலவு செய்வதை மிக்க பிரயோஜனமான முறையிலே உபயோகிக்கலாமென்பதே எனது கவலை. உங்களுக்கு உணர்ச்சி வேண்டும். தோழர் முதலியார் பிராமணரல்லாதார். அவருக்கு ஏற்படும் பெருமை உங்களுக்கும் உரியதாகும். நமக்கு ஏதாகிலும் காரியம் நிறைவேற வேண்டுமானால் இத்தகையவர்களாலேதான் அது சாத்தியமாக வேண்டும். நமது சமுதாயத்தில் ஆபாசங்கள் நிறைந்திருக்கின்றன. சீர்திருத்தமே பிரதானமாகும். அதற்குச் சாதகமாக வேலைசெய்வோரை ஆதரிக்கவேண்டியது நமது கடமை. சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு அகலவேண்டும். வெள்ளையர் ஆட்சி மட்டும் சீரழிந்தால் போதாது. சமத்துவம் ஏற்படவேண்டும்.

காங்கிரஸ் பிரச்சாரகர்கள் நாணயமற்றவர்களா யிருக்கின்றனர். காங்கிரஸ் போர்வையை உடுத்திக் கொண்டவர்களுக்கு பொய், பித்தலாட்டம் செய்ய 'லைசென்ஸ்' ஏற்பட்டுள்ளது. சத்தியாகிரகம் செய்த ஒரு பெண்ணின் தாலியை தோழர் இராமசாமி முதலியார் அறுத்தாரென்றும் வீண்பழி கூறுகின்றனர். பாமர ஜனங்களை இவ்விதம் ஏமாற்றி ஓட்டுப் பெற விரும்புகின்றனர். காங்கிரஸ்வாதிகளின் புரட்டுக்குப் பிராமணரல்லாதார் அஞ்சாமல் வேலை செய்து வெற்றிபெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[சென்னை பச்சையப்பன் மண்டபத்தில், 2-11-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 11-11-1934]

3. நாமும் பிறகட்சியினரும்

தலைவரவர்களே! தோழர்களே!

விருதுநகர் மாநாடானது ஒரு குறிப்பிடத்தகுந்த மாநாடாகும். 1926ஆம் வருடம் ஜஸ்டிஸ் கட்சியானது மாகாண சட்டசபைத் தேர்தலில் தோல்வியடைந்தபிறகு தோழர் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் முயற்சியால் மதுரையில் மாநாடு கூட்டி மக்களுக்கு உற்சாகமூட்டியதுபோல், இப்போது இந்திய சட்டசபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்த சமயத்தில் தோழர் வி. வி. இராமசாமி அவர்கள் முயற்சியால் மாநாடு கூட்டி மக்களுக்கு உற்சாகமளித்ததாகும்.

1926-ல் ஜஸ்டிஸ் கட்சி தோல்வி அடைந்தது என்று சொன்னாலும் அதன் பயனாய்ப் பெற்ற உற்சாகத்தால், இழந்துவிட்ட மந்திரிசபையைக் கைப்பற்றியதோடு மாத்திரமல்லாமல் கேபினட் (அரசாங்க கவுன்சில் மெம்பர் ஸ்தாபனங்கள்) சபையையும் கைப்பற்றி விட்டது. அதுபோலவே, இந்திய சட்டசபை ஸ்தாபனங்களை இழந்ததின் பலனால் பெற்ற ஊக்கமானது இந்திய அரசாங்க மந்திரிசபையிலும் ஆதிக்கம் செலுத்தத் தகுந்த சக்தியைப்

பெற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை. நிற்க, இன்று காலை வரவேற்புக் கழகத் தலைவர் சொற்பொழிவிலும், எனக்கு வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரத்திலும் ஜஸ்டிஸ் கட்சியில் ஒழுங்கான கட்டுப்பாடு இல்லை என்றும், தலைவர்கள் என்பவர்களுக்குள் ஒற்றுமை இல்லை என்றும் அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது.

இதைப்பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. எப்படிப்பட்ட கட்சியிலும் இது இயற்கையேயாகும். அதுவும் செல்வாக்குப் பெற்று அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும் இருந்துவரும் கட்சியில் கண்டிப்பாய் அபிப்பிராய பேதம், ஒற்றுமைக் குறைவு என்பது இல்லாமல் இருக்கமுடியாது. காங்கிரசில் உள்ள அபிப்பிராய பேதமும், ஒற்றுமைக் குறைவும் நம்மில் பலருக்குத் தெரியாது. ஏனென்றால், காங்கிரசுக்காரர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) அதை வெளியில் தெரியும்படியாகக் காட்டிக்கொள்வதற்கு நேரமில்லை.

மற்றும், அவர்கள் தாங்களே ஏகபோகமாய் அனுபவித்த ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் இழந்துவிட்டோமே என்கின்ற கவலையின்பேரிலும், அவற்றை நம் மக்கள் (பார்ப்பனரல்லாதார்கள்) அனுபவிக்கிறார்களே என்கின்ற பொறாமையின் பேரிலும், வயிற்றெரிச்சல் கொண்டு ஆத்திரத்தோடு நம்மை எதிர்ப்பதிலும், நம் இயக்கத்தைத் தோல்வி அடையச் செய்து அழிப்பதிலுமே அவர்களுடைய முழுக் கவலையும், நோக்கமும், பிரச்சாரமும் இருந்துவருவதால் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்ளவோ, அதை வெளியில் காட்டிக்கொள்ளவோ அவசியமும் நேரமும் இல்லை.

காங்கிரசுக்குச் செல்வாக்கு ஏற்பட்டு அதன் பயனாய் ஏதாவது ஒரு பதவியோ, அதிகாரமோ அடையத்தக்க யோக்கியதை அவர்களுக்கு வந்துவிடுமானால், அப்போது பாருங்கள் அவர்களுக்குள் ஏற்படும் கலகங்களையும், ஒற்றுமைக் குறைவையும்! அதிலுள்ள ஆட்கள் சில சமயங்களில் பதவி கிடைக்கவில்லை என்று கலகம் செய்து கொண்டு வந்து நம்மோடு சேருவதாகக்கூட வந்து கெஞ்சவில்லையா? ஜஸ்டிஸ் கட்சியும் கூட அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் இழந்துவிடக் கூடுமானால் அப்பொழுது உலகிலுள்ள எல்லாக் கட்சிகளையும்விடக் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையாகவும் பாடுபடும் என்பதோடு, உலகுக்கே ஒற்றுமைக்கு வழிகாட்டியாகக்கூட இருக்கும் என்று சொல்லலாம்.

ஆகவே, அரசியல் முறையின் காரணமாகவும், ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைக் கொள்கையின் காரணமாகவும், அது செல்வாக்குப்பெற்று ஆதிக்கத்துக்கு வந்து அதிகாரம், பதவி வகிக்க நேரிட்டதில் ஏமாற்றமடைந்தவர்களால் முணுமுணுப்போ, அதிருப்தியோ காட்டமுடியாமல் இருக்குமென்று யார்தான் எதிர்பார்க்கக்கூடும்! ஜஸ்டிஸ் கட்சியார் எல்லோரும் துறவிகள் என்றோ, ஆசை, பற்று அற்ற ஞானிகள் என்றோ கருதமுடியுமா? நாளையதினம் காங்கிரசுக்குப் பதவி வகிக்கும் யோக்யதை ஏற்பட்டுவிட்டால் தோழர்கள் சத்தியமூர்த்தியும், இராஜகோபாலாச்சாரியாரும் குடுமியைப் பிடித்துக் கொள்வதை நேரில் பார்க்கலாம். அவர்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதமும், அசூயையும், ஒருவரைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள அபிப்பிராயமும் உள்ளது உள்ளபடி எழுத அகராதியில் வார்த்தைகள் கிடையாது.

ஆதலால், கட்சியில் தலைவர்கள் அபிப்பிராய பேதத்தைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை; கொள்கைகளை ஒழுகவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் முக்கிய கவலையும் கடமையுமாகும். ஜஸ்டிஸ் கட்சியார் அனுபவிக்கும் பதவி, சம்பளம் இவற்றைப் பற்றியே அதன் எதிரிகள் இன்று அதிகமாகக் கூப்பாடு போடுகிறார்கள். இன்றையப் பதவிகளும், சம்பளங்களும் ஜஸ்டிஸ் கட்சியார் உண்டாக்கிக் கொண்டவைகள் அல்ல. காங்கிரசானது (பார்ப்பனர்கள்) இப் பதவிகள் தங்களுக்கே கிடைக்கும் என்கின்ற எண்ணத்தின்மீது, 40 வருஷ காலமாய் 'ஏழை மக்களுக்கு' ஆகப் பாடுபட்டு, தேசாபி

மானத்தின் பேராலும், தேசபக்தியின் பேராலும் ஏற்படுத்தின பதவியையும் சம்பளத்தையும்தான் இந் நாட்டு மக்கள் (பார்ப்பனரல்லாதார்) அனுபவிக்கிறார்களே ஒழிய வேறில்லை. இந்தப்படி பார்ப்பனப் பத்திரிகைகளே எழுதுகின்றன.

அன்றியும், இவை காங்கிரஸ்காரர்களால் வெறுத்துத் தள்ளிவிடப்பட்ட ஸ்தானங்களும் அல்ல; அவர்களும் அடைய, இன்று ஆகாயத்துக்கும், பூமிக்குமாகத் தாளம்போடும் ஸ்தானங்களே ஒழிய மற்றபடி 'தேசத் துரோகிகளுக்கு' ஆக ஒதுக்கப்பட்டவையல்ல. இந்த ஸ்தானங்களுக்குப் பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் நாக்கில் தண்ணீர் ஊறும்படி கத்துகிறார்கள் என்பதற்கு, உங்களுக்கு உதாரணம் வேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். அதாவது, நமது பார்ப்பனர்கள் இந்திய சட்டசபைத் தேர்தல் வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடும்போது ஈரோட்டில் ஒரு கூட்டத்தில் தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள், 'இராசகோபாலாச்சாரியார் அவர்கள் கவர்னராகவும், நான் சீப்-செகரட்ரியாகவும், மற்றவர் மந்திரிகளாகவும் வரப்போகின்றோம்' என்று சொன்னதின் அர்த்தம் என்ன என்று பாருங்கள். சத்தியமூர்த்தி அவர்களின் மனத்தில் பல காலமாய் ஊறிக் கிடக்கும் அபிப்பிராயம் அவரை அறியாமல் வெளியாயிற்று என்றுதானே சொல்லவேண்டும்! பக்கத்திலிருந்த இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தனக்கு வேண்டாமென்றாவது, தான் வரப்போவதில்லை என்றாவது சொன்னாரா?

ஆகவே, உத்தியோகப் பொறாமையால், ஆத்திரத்தில் உளறுவதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகு அரசியல் துறையில் மற்ற மாகாணங்களையெல்லாம் விட நம் மாகாணம் முற்போக்கடைந்திருப்பதோடு, சமூகத் துறையில் எந்த மாகாணமும் நினைப்பதற்குக் கூட தைரியப்படாத பெருங்காரியங்களைச் சாதித்திருக்கின்றது என்பதை உணருங்கள். அதற்கு உதாரணம் வேண்டுமானால், சமூகத் துறையில் கடுகளவு முற்போக்குக்கும் இடம்கொடுக்காதவர்களான—பிறவி எதிரிகளாய் இருக்கும் பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வைவதும், தூற்றுவதும், அதையொழிக்க வேண்டும் என்று சொல்லுவதுமான காரியங்களே போதுமானதாகும். 'ஒருவனுடைய யோக்கியதையைத் தெரியவேண்டுமானால் அவனுடைய சிநேகிதனைப் பாருங்கள்' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் நான் வேறு விதமாகச் சொல்லுகிறேன்.

'ஒருவனுடைய யோக்கியதையைப் பார்க்க வேண்டுமானால் அவனுடைய விரோதியைப் பாருங்கள்' என்று சொல்லுகிறேன். ஏனெனில், நல்லவர்களுடன் சிநேகமாக இருப்பது சுலபமான காரியம்; அதனால் எவனும் வீரனாகிவிடமாட்டான். கெட்டவர்களுடன் விரோதியாய் இருந்து கேட்டை ஒழிக்க முற்படுபவனே அதிக வீரனும் உண்மையான தொண்டனுமாவான்.

ஆகவே, இன்று தென்னாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் தூக்கத்திலும், வாழ்விலும், கலவியிலும், ஜபத்திலும், தபத்திலும், வேள்வியிலும், யாகங்களிலும் இடைவிடாமல் கோரும் காரியம் என்ன என்று பாருங்கள். 'ஜஸ்டிஸ் கட்சி ஒழியவேண்டும், பொப்பிலி ராஜா ஒழியவேண்டும், சுயமரியாதைக் கட்சி ஒழியவேண்டும்' என்பது போன்ற எண்ணம் அல்லாமல் வேறு என்ன என்று கேட்கிறேன். உலகிலே காங்கிரஸ் கொள்கைக்கு முரணானது, பிற்போக்கானது என்று காங்கிரஸ்காரர்களால் சொல்லப்படுகிற கட்சிகள் பல இருந்தும்—அதாவது முஸ்லிம் கட்சி, கிறிஸ்தவர் கட்சி, தாழ்த்தப்பட்ட மக்கள் கட்சி, மிதவாதிகள் கட்சி இன்னும் பல வகுப்புவாதக் கட்சிகள் இருந்தும்—வகுப்புவாரிப் பிரதிநிதித்துவங்கள் பெற்றும் இருக்க, அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, நம் பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை மாத்திரம் வெட்டிப் புதைக்க வேண்டும் என்று ஆசைப்படுவதின் அர்த்தம் என்ன என்று பாருங்கள். சென்ற வாரத்தில் தோழர் பிரகாசம் பந்தலு ஒரு கூட்டத்தில் எவ்வளவு தைரியமாய்த் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார் பாருங்கள்.

'ஜஸ்டிஸ் கட்சியாரைவிட ஆங்கிலேயர்களும், ஆங்கிலேய ஆட்சியும் மேலானது' என்று சொன்னாரே—அதன் அபிப்பிராயம் என்ன? ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியால் இந்த இருநூறு வருஷ காலமாய்ச் செய்யாததையும், செய்யமுடியாததையும் ஜஸ்டிஸ் கட்சியார் செய்துவிட்டார்கள் என்றுதானே அர்த்தம்? அது என்ன என்பதைத் தோழர் பிரகாசம் அவர்களே அடுத்த வரியில் சொல்லிவிட்டார். அதாவது, 'ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பாடு செய்துவிட்டார்கள்; ஆதலால் அதை ஒழிக்கவேண்டும்' என்று சொல்லி இருக்கிறார்.

பல சாதி வகுப்புக்கள் இருக்கிற (இருந்தே தீரவேண்டும் என்று காந்தியார் முதல், பல மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் வற்புறுத்துகிற) நாட்டில்—ஒரு அரசியல் கட்சியார் ஆதிக்கத்துக்கு வந்ததின் காரணமாக பல சாதி வகுப்புக்களுக்கும் அரசியலில் சிறிதாவது பிரதிநிதித்துவம் ஏற்படும்படிச் செய்ததற்காக அக் கட்சியைத் தேசத் துரோகக் கட்சியென்றும், ஒழிக்கப்பட வேண்டிய கட்சி என்றும் (இன்று எல்லாத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும் கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால்) சொல்லு வார்களானால் அதைக் கேட்டுக்கொண்டிருக்கும், பார்த்துக்கொண்டும் இருக்கிற ஒருவன் உண்மையானவனாகவோ, யோக்கியனாகவோ, இந்தத் தேச மக்களிடம் பற்றுக் கொண்ட வனாகவோ இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியார் பெரிய உத்தியோகம் பார்க்கிறார்கள்; பெரிய பதவி அனுபவிக்கிறார்கள் என்று பொறாமைப்படும் பார்ப்பனரல்லாத பொறுப்பற்ற அறிவிலிகள் இதற்கென்ன பதில் சொல்லுகிறார்கள் என்று கேட்கின்றேன். அன்றியும், ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்துவிட்டால் பிறகு அரசியல் அதிகாரத்துக்கும் பதவிக்கும் யார் வருவார்கள், யார் வரக்கூடும் என்று கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சியை வைகின்றவர்களுக்கு வெகு சுலபத்தில் நமது பார்ப்பனர்கள்—'தேசாபிமானப் பட்டம்' கொடுத்து விடுவதால் அப் பட்டத்துக்கு ஆசைப்பட்ட சோம்பேறிகளுக்கு இது அவசியமாய்ப் போய்விட்டது. இந்திய நாட்டுச் சமூகக் கொடுமைகள் நீங்கும்வரை ஜஸ்டிஸ் கட்சி இருந்துதான் ஆக வேண்டும்; அக் கட்சியாருக்குப் பதவி, பட்டம், அதிகாரம் ஆகியவை வரும்படியாகச் செய்துதான் ஆகவேண்டும்.

அதன் தலைவர்களிடம் நடத்தைப் பிசகு இருந்தால், நாணயக் குறைவிருந்தால் தனிப்பட்ட நபர்களை வெளிப்படுத்துவதோ, புத்தி கற்பிப்பதோ தப்பாய்விடாது. ஆனால், கட்சியைப்பற்றி, கொள்கையைப்பற்றிக் குறைகூறுவது, எதிரிக்கு உளவாய் இருப்பது போன்ற இழிகுணமேயாகும்.

இம் மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம்; எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டவையாகும். இன்னும் பல தீர்மானங்களை நிறைவேற்ற நானும், மற்றும் சிலரும் ஆசை கொண்டிருந்தோமானாலும், மந்திரிகள் முன்னிலையில்—அதாவது, அத் தீர்மானங்களில் பெரும்பான்மையானவைகளை நிறை வேற்றிவைக்கும் பொறுப்புக்களை உடையவர்கள் முன்னிலையில், அவர்களது சம்மதம் பெற்று நிறைவேற்றச் சந்தர்ப்பம் இருந்தபடியால்—அவர்களால் நிறைவேற்ற முடியா தென்றதும், ஒரேயடியாய் அதிகக் கஷ்டத்துக்கும், எதிரிகளாகிய பார்ப்பனர்களின் கூப்பாட்டிற்கும் இடமில்லாமல் இருக்கவேண்டுமென்றதுமான பல தீர்மானங்கள் நிறுத்திக் கொள்ளப்பட்டன. ஆனாலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சாமான்யமானவைகள் அல்ல; அவை அமுலுக்குவரும் என்றே நம்பி இருக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் தீர் மானங்கள் நிறைவேற்றுவதற்கும், ஜஸ்டிஸ்காரர்கள் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கும், பொறுப்பு விஷயத்தில் அதிக வித்தியாசம் உண்டு.

காங்கிரஸ்காரர்கள் எதையும் எழுதிக் கூட்டத்தில் நிறைவேற்றி வைக்கலாம். ஏனெனில், அவர்கள் சுலபத்தில் பதவிக்கு வரப்போவதில்லை என்பது அவர்களுக்கே

தெரியும். தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டால், ஏன் நடத்திக் கொடுக்கவில்லை என்று கேட்பதற்கு அங்கு யாரும் இல்லை. ஏனெனில், அவர்கள் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால், ஜஸ்டிஸ்காரருக்குப் பொறுப்பு இருக்கிறது; அவர்கள் பதவியில் இருக்கிறார்கள். தீர்மானங்களை ஏன் நடத்திக் கொடுக்கவில்லை என்று யாரும் கேட்பார்கள். பொறுப்பு இருக்கிறது, நாணயம் இருக்கிறது. ஆதலால், கடுதாசித் தீர்மானம்தானே என்றுகருதி எதையும் செய்துவிடமுடியாது என்பதோடு, போதிய பல மில்லாத கட்சியாய் இருப்பதால், பலபேருடைய இலட்சியங்களையும் கவனிக்க வேண்டி யிருப்பதால், 'இப்போதைக்கு இவ்வளவு போதும்' என்று தலைவரும் மற்ற மந்திரிகளும் சொன்னதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஸ்தல ஸ்தாபனங்களிலும், ஸ்தல ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை உடனே ஏற்படுத்துவதாகவும், ஏற்கனவே அதற்கு ஏற்பாடு செய்துவருவதாகவும் முதல் மந்திரியார் வாக்குக் கொடுத்துத் தெரிவித்ததால் அத் தீர் மானத்தை வாபஸ் பெற்றுக்கொண்டேன்.

இதற்காக நாம் எல்லோரும் பிரத்தியேகமாக முதல் மந்திரியைப் பாராட்டவேண்டும். மற்றும் 4-வது வகுப்புவரை பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களை நியமிக்க வேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானத்தையும் கல்வி மந்திரியார் ஏற்கனவே அந்தப்படி செய்திருப்பதாகவும், அதை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவும் தெரிவித்ததின்பேரில் அதை வாபஸ் வாங்கிக்கொண்டேன்; இதற் காகவும் கல்வி மந்திரியாரைப் பாராட்டவேண்டும். மற்றபடி, நான் ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டமாக இருக்கவேண்டும் என்று, ஜஸ்டிஸ் கட்சி மாகாண மாநாட்டில் ஆஜர்படுத்திய தீர்மானங்கள் சில வாசகத் திருத்தங்களுடன் தீர்மானிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் அபிப்பிராயபேதமின்றி நிறைவேற்றப்பட சில வாசகத் திருத்தங்கள் செய்திருக்கிறோம். என்றாலும் அவற்றின் தத்துவங்கள் எதுவும் அசைக்கப்படவில்லை.

ஆகவே, இனி மந்திரிகளின் பொறுப்பு சிறிது கஷ்டமானது என்பதையும், அவர்கள் வாக்குக் கொடுத்தபடி, இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இவர்கள் ஆதிக்கத் திற்குள் உள்ளவைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். குறிப் பாக, ஒரு விஷயம் சொல்லுகின்றேன். 'கோவாப்பரேட்டிவ்' ஸ்தாபனங்களுக்கும், முனிசி பாலிட்டிகளுக்கும், ஜில்லா போர்டுக்கும் அதிகமான சுதந்திரம் கொடுத்து, சர்க்கார் உத்தி யோகஸ்தர்களை நிர்வாக அதிகாரியாக நியமிக்கவேண்டும் என்ற தீர்மானத்தில் ஜில்லா போர்டை எடுத்துவிடும்படி மாநாட்டுத் தலைவர் கேட்டுக்கொண்டார். ஆனால், முதல் மந்திரியார் கனம். பொப்பிலி ராஜா, தனக்கு அது இருப்பதில் ஆட்சேபணை இல்லை யென்றும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதாகவும், கட்சி அங்கத் தினர்கள் வேண்டாம் என்றால் தான் கட்டாயப்படுத்தப்போவதில்லை என்றும் சொன்னார்.

ஆனால், முனிசிபாலிட்டிக்குக் கமிஷனர்கள் போட்டதாலேயே கட்சி மெம்பர்கள் பலர் கோபித்துக் கொண்டதாகவும், ஜில்லா போர்டுக்குக் கமிஷனர்கள் போட்டால் இன்னும் பலர் கோபத்துக்குக் கட்சி ஆளாக வேண்டிவரும் என்றும், இதனால் கொஞ்ச நஞ்சம் செய்யக்கூடியதும் கெட்டுப்போகும் என்றும் மாநாட்டுத் தலைவர் தெரிவித்தார். ஆதலால், அந்த வார்த்தை நீக்கப்பட்டுவிட்டதேயொழிய வேறில்லை. கட்சித் தலைவர் பொப்பிலி ராஜா அவர்கள் ஒரு சர்வாதிகாரியாய் இருக்கத் தகுந்தவர். அவருக்கு ஸ்டாலினைப் போலவும், கமால் பாட்சாவைப் போலவும் அனேக முற்போக்கான—அவசிய மான காரியங்களைச் செய்யவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. அவரைச் சுற்றியும் சமயோசிதவாதிகள் காவல் வைக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆதலால், அதிகமாக ஒன்றும் அவர்களால் செய்யமுடியவில்லை. என்றாலும், முனிசிபாலிட்டிக்குக் கமிஷனர் போட்டதின் பயனாய் எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்னும் அனேக நன்மைகள் ஏற்பட வசதிகள் உண்டு. ஆனால் நாணயமும், துணிவும். கண்ணியமும் உள்ள கமிஷனர்களைப் போட்டால், முனிசிபாலிட்டிகளுக்கு 100-க்கு 50 'பர்சன்ட்' பண இலாபமும், நல்ல நீதியும் ஏற்படும் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். ஆனால், சில முனிசிபாலிட்டிகளுக்கு ரெவினியு இலாக்காவில் நாணயக் குறைவானவர் என்று சந்தேகிக்கப்பட்ட ஆட்களைப் போட்டு கமிஷனர் ஸ்தானத்துக்குப் பங்கம் வரும்படி செய்திருக்கிறார்கள்.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள் சிலருக்கு ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி நல்லபிப்பிராயம் இல்லை. அதற்குக் காரணம் சிலருக்குத் தேசீயம், தேசாபிமான சுயராஜ்யம் என்கின்ற கற்பனை (அர்த்தமற்ற) வார்த்தைகளிலுள்ள மயக்கமும்; சிலருக்கு மந்திரிமார்களின் ஆடம்பர வாழ்க்கை பிடிக்கவில்லையென்பதும், அது பணக்காரர் இயக்கம் என்பதும்; சிலருக்கு மந்திரிகள் சுயமரியாதை இயக்கத்தை இலட்சியம் செய்யவில்லை என்பதும்; சிலருக்கு ஜஸ்டிஸ் கட்சியை வைவது ஒரு நாகரிகமாய்விட்டதும்—இப்படிப் பல காரணங்கள் உண்டு. இவைகள் எல்லாம் இயற்கை தான். காலதேச வர்த்தமானத்தில் எந்தக் கட்சிக்கும் இம் மாதிரி அபிப்பிராய பேதக் காரர்கள் இருந்தே இருப்பார்கள். இவர்கள் எந்தக் கட்சியை ஆதரிக்கக்கூடும் என்பதும் எனக்கு விளங்கவில்லை.

சுயமரியாதை இயக்க விஷயமாக சமீபத்தில் வெளியான அறிக்கையைப் பற்றிச் சிலர் முணுமுணுத்ததாகத் தெரியவந்தது. அவ் வறிக்கையில் எந்த வாசகத்தைப் பற்றிக் குறை கூறுகிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. அதில் முக்கியமாய்க் காணப்படுவ தெல்லாம் நாம் ஒத்துழையாமைக்காரர் அல்லவென்றும், சட்டத்தை மீறுகிறவர்கள் அல்ல வென்றும், சமாதானத்துக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் அல்லவென்றும் குறிப்பிட்டிருக் கிறோம். ஆனால், நமது சமுதாய இயலில் சாதி மதக் குறைகளையும், கொடுமை களையும், வித்தியாசங்களையும் கண்டிப்பதும் ஒழிப்பதும் என்றும், பொருளாதாரத் துறையில் சமதர்மத் துறையை அனுஷ்டிப்பதென்றும் தெளிவு படுத்தியிருக்கிறேன்.

இன்றைய நிலையில் இதற்குமேல் வேலை செய்யவேண்டுமென்று கருதுகிறவர்கள் நன்றாய்ச் செய்யட்டும்; ஆனால், என்னைப் பொறுத்தவரை நமது இயக்கத்துக்கு இன்று இது போதும் என்று கருதுகின்றேன். இதைக் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளு கிறார்களா? பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? தென்னாட்டுப் பார்ப்பனர்—காங் கிரஸ்காரராவது ஒப்புக்கொள்ளுகின்றார்களா? என்று கேட்கின்றேன்.

வீணாக எதிரிகளின் பேச்சைக் கேட்டு கூப்பாடு போடுவதில் யாதொரு பயனும் விளையப் போவதில்லை; மற்றபடி, ஏதாவதொரு குறை கூறிவிட்டு ஓடிப்போக நினைக்கும் சோம்பேறிகளின், போலி வீரர்களின் கூப்பாட்டிற்கு யாரும் பயப்பட வேண்டியதில்லை.

ஆதலால், ஏதாவது உண்மையான தொண்டு செய்யவேண்டுமென்று இருப்பவர் களுக்கு இது போதும். இந்த அபிப்பிராயத்துக்கு மாறுபட்டவர்கள் அவர்கள் இஷ்டப்படி நடக்க உரிமையுடையவர்களே தவிர, நிர்ப்பந்தத்திற்கு ஆளாக வேண்டியவர்கள் அல்லர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[விருதுநகர் மாநாட்டில், 30, 31-3-1935-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 7-4-1935]

4. காங்கிரஸ்—முஸ்லிம் லீக்—ஜஸ்டிஸ்

தலைவரவர்களே! தோழர்களே!

இந்த ஊருக்கு நாங்கள் ஈ. வெ. ரா. நாகம்மாள் ஞாபகார்த்த வாசகசாலையின் ஆண்டுவிழாவுக்கு வந்திருந்த சமயத்தில் எங்களை மிக ஆடம்பரத்துடன் வரவேற்று உபசரித்துப் பல வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்ததுடன், இன்று இரவு சமீபத்தில்

நாங்கள் கண்டிராத இவ்வளவு பெரிய கூட்டம் கூட்டி எங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்ல அவகாசமளித்ததற்காக எனது மனமார்ந்த நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் இன்று இரவு இங்கு காங்கிரஸ், இந்து—முஸ்லிம் சமூக ஒற்றுமை, அரசியலும் காங்கிரசும் என்பவை பற்றிப் பேசுவேன் என்பதாகத் துண்டு விளம்பரத்தில் விளம்பரப் படுத்தியிருக்கிறீர்கள்.

எனக்கு உடல்நலம் சரியாய் இல்லை. இந்த வாரத்தில் மோட்டார் காரில் மாத்திரம் சுமார் 2000 மைல் கிராமம் கிராமமாய்ச் சுற்றி அலைந்திருப்பதுடன், மதராசில் இருந்து தூத்துக்குடிக்குக் காரிலேயே வந்திருக்கிறேன். அது மாத்திரமல்லாமல், இன்று இரவு இப்பொழுதே புறப்பட்டு, காரிலேயே ஈரோடு போய்ச் சேர வேண்டியவனாய் இருக்கிறேன். ஏனெனில், நாளைக் காலை 10 மணிக்கு ஆஜராகும்படி எனக்கு ஒரு கோர்ட்டில் இருந்து 'சம்மன்' சர்வாய் இருக்கிறது; வாய்தா கிடைக்கவில்லை. ஆதலால், இன்னும் அரைமணி நேரத்தில் நான் சொல்லவேண்டியவைகளைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு இங்கிருந்த படியே ஈரோட்டுக்குப் புறப்பட்டுச் செல்லப்போகிறேன். ஆதலால், அதிக நேரம் பேச முடியாததற்காக மன்னிக்கக் கோருகிறேன்.

தாங்கள் அளித்த வரவேற்புப் பத்திரங்களில் வெறும் புகழ் வார்த்தைகளே நிரம்பி இருக்கின்றன. அப் புகழ்ச்சிகளுக்கு நான் உண்மையிலேயே தகுதி உடையவன் அல்லனா யினும் தகுதி உடையவனாக ஆவதற்கு முயற்சிக்கிறேன். அதோடுகூடவே, அவ் வரவேற் பின் மூலம் எனது அரசியல், சமுதாய இயல், மத இயல் சம்பந்தமான கொள்கைகளையும், கருத்துக்களையும் நீங்கள் ஆமோதித்துப் பாராட்டி இருப்பதற்கு நான் மிகுதியும் மகிழ்ச்சி யும் ஊக்கமும் கொள்கிறேன்.

தோழர்களே! இந்து—முஸ்லிம் விஷயமாய் நான் உங்களுக்குத் தெரியாத எதைப் பேசக்கூடும்? இது விஷயத்தில் எனது அபிப்பிராயம் என்னவென்றால், இந்து—முஸ்லிம் இரு சமூகங்களுக்குள்ளும் என்றும் தீராப் பகைமைக்கு வினையாய் இருந்து இரு சமூகங் களுக்குள்ளும் ஒற்றுமை இல்லாமலும், துவேஷமும் பழிவாங்கும் தன்மையும் வளரும் படியாகவும் இருக்கச் செய்தும் வருவதற்கே இன்று இந்நாட்டில் காங்கிரஸ் ஸ்தாபனம் என்பதாக ஒன்று இருந்துவருகின்றது என்பதாகும். அது மாத்திரமல்லாமல் முஸ்லிம் களிடம் இந்துக்களுக்கு இருந்துவந்த துவேஷம், பொறாமை, அசூயை காரணமாகவும் கீழ்சாதியார் என்பவர்களிடம் மேல்சாதியாருக்கு இருந்துவந்த பொறாமை, துவேஷம், அசூயை காரணமாகவும்தான் காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது என்பதும் எனது திடமான அபிப்பிராயமாகும். நான், இதை சும்மா பொறுப்பற்ற தன்மையிலோ, இன்று மாத் திரமோ சொல்லவில்லை. தக்க ஆராய்ச்சி, பிரத்தியட்ச அனுபவம் முதலியவைகளின் மீதே—10 வருஷ காலமாகவே பேசி வருகிறேன்.

மற்றும், இந்தக் காங்கிரஸ் ஏற்படுவதற்கு சர்க்காரும், அதாவது வெள்ளைக்காரத் துரைத்தனத்தாரும் முக்கிய காரணஸ்தர்கள் என்பதையும் நான் நன்றாய் அறிவேன். இதற்குக் காரணம் என்னவென்றால், இந்நாட்டில் வெள்ளைக்காரர்கள் ஆட்சி ஏற்பட்ட வுடன் வெள்ளையர்களே பார்த்துவர வேண்டியதென்று கருதப்பட்ட பெரிய ஜில்லா உத்தியோகங்கள் தவிர, மற்ற கறுப்பு மனிதர் பார்த்துவர வேண்டிய சாதாரண தாலூகா உத்தியோகங்கள் பூராவுக்கும், சற்று ஏறக்குறைய முஸ்லிம்களையும்—மற்றும் வெள்ளை யர்களுக்கு முன் இந்நாட்டில் ஆட்சிபுரிந்து வந்த அரச வம்சத்தினர்களையுமே நியமித்து ஆட்சி நடத்திவந்தார்கள். இதன் உண்மை உணர வேண்டுமானால், 50 வருஷங்களுக்கு முன்னிட்ட 100 வருஷங்களின் உத்தியோக லிஸ்டை (பட்டியை)ப் பாருங்கள். அதாவது, முஸ்லிம்கள், இராஜபுத்திரர்கள், நாயக்கர்மார்களும் இவர்களிடம் மந்திரிகளாய் இருந்த முதலியார், பிள்ளைமார் ஆகியவர்களுமே தாலூகா, கிராம சில்லறை அதிகாரிகளாய்

இருந்து வந்திருக்கிறார்கள். இராணுவத்திலும் இந்த இனத்தவர்களே வெள்ளையருக்கு அடுத்த பதவியில் இருந்துவந்தார்கள். இந்தக் கூட்டத்தார் அதிகார பதவியில் இருந்தாலும் இவர்களுக்குப் பள்ளிப் படிப்பு கொஞ்சமாகவே இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அக் காலத்தில் சில சாயபு தாசில்தாருக்கும் சில நாயக்கர் தாசில்தாருக்கும் கையெழுத்துக்கூடச் சரியாய்ப் போடத் தெரியாது என்று சொல்லுவார்கள்.

ஆனால், அப்போது அதிகாரம் நேர்மையாகவும் துடிதுடிப்பாகவும் இருக்கும்; அதோடுகூடவே அவர்கள் மிகச் சுயேச்சை வாதிகளாக இருந்தார்கள். வெள்ளைக்கார மேல் அதிகாரிகளைத் தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைத்தார்கள். மனச் சாட்சிக்கு விரோதமாய்க் கீழ்படிந்து நடக்கும் காரியம் அவர்களிடம் மிகமிக அரிதாயிருந்தது. இதனால் இந்தக்கீழ் அதிகாரிகளின் அடங்காமைத் தொல்லை, மேல் அதிகாரிகளுக்கு இருந்துவந்தது ஒருபுறம் இருக்க—முஸ்லிம்கள் அதிகாரியாய் இருப்பது இந்துக்களுக்கு அதிருப்தியாகவும் பொறாமையாகவும் இருந்ததோடு, '4-ஆம் வருணத்தவர்' என்பவர்கள் அதிகாரிகளாய் இருப்பது, முதல் வருணத்தார் (பார்ப்பனர்) என்பவர்களுக்குப் பொறாமையாகவும் ஆத்திரமாகவும் இருந்துவந்தது. இந்தக் காரணங்களால் இந்துப் பிரமுகர்களும், மேல்சாதிக்காரர்களும் வெள்ளையர்களுடன் கலந்து சதியாலோசனை செய்யவேண்டியவர்களானார்கள். அந்தச் சதியாலோசனை பெற்ற பிள்ளைதான்—இந்த இந்திய தேசியக் காங்கிரஸ் ஸ்தாபனமாகும். இதற்குத் தாய், இந்துப் பிரமுகர்களும் பார்ப்பனர்களுமாவார்கள்; இதற்குத் தந்தை, பிரிட்டிஷ் 'சிவிலியன்'களே யாவார்கள்.

இந்த மாதிரியான காங்கிரசின் முதல் கொள்கை என்னவென்றால், 'இந்தியர்களுக்கு இராஜவிசுவாசம் கற்றுக்கொடுத்து—உலகமுள்ள அளவும் பிரிட்டிஷ்காரர்களே இந்தியாவை ஆளும்படியாக அவர்களது ஆட்சியைப் பலப்படுத்தி நிரந்தரமாக்குவது' என்பதாகும்.

நீங்கள் காங்கிரசின் ஆதி சரித்திரத்தையும் அதன் பிறப்பு வளர்ப்பு சரித்திரத்தையும் வாங்கிப் பார்த்தீர்களானால், உங்களுக்கு இந்த விஷயங்கள் நல்ல கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்ப்பதுபோல் தெரியும்.

1885-ஆம் வருஷம் முதல் 1920 ஆம் வருஷம் வரை காங்கிரசின் முதல் தீர்மானம் இராஜவிசுவாசம், இராஜபக்தி தீர்மானமேயாகும். காங்கிரசின் கட்சி மங்களம், 'இந்தியாவின்மீது பிரிட்டிஷ் ஆட்சி,' உலகமுள்ளளவும் இருக்கும்படி கடவுளைப் பிரார்த்திப்பதாகும்'. எந்தக் காங்கிரசுவாதியாவது இல்லை என்று நிரூபித்தால் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

காங்கிரஸ் உற்பவித்த இந்த சதியாலோசனை இந்துக்களில் கீழான சாதியார் என்பவர்களுக்குத் தெரியாமல் போனாலும்—முஸ்லிம்கள், காங்கிரஸ் ஏற்பட்ட ஒரு நான்கைந்து வருஷங்களுக்குள் நன்றாய்த் தெரிந்துகொண்டு 1890-ஆம் வருஷத்திலேயே காங்கிரசை எதிர்க்கவும் சர்க்காரிடம் காங்கிரசால் தங்கள் சமூகத்துக்கு நேரிட்டு வரும் குறைகளையும் கொடுமைகளையும்பற்றி முறையிடவும் 1906-லேயே தனி ஸ்தாபனம் ஏற்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்கள். சர்க்கார் 1890 ஆம் வருஷம் முதலே முஸ்லிம்களுக்கு அரசியலில் சரியான உரிமையும் பிரதிநிதித்துவமும் அளிப்பதாய் வாக்குறுதி கொடுத்து உத்தரவுகளும், சர்குலர்களும் வெளிப்படுத்திய வண்ணமாய் இருந்து வந்தார்கள்.

மேலும், இந்தக் காரணத்தால்—அதாவது முஸ்லிம் லீக் ஏற்படுத்திப் பங்கு கேட்டதால்—முஸ்லிம்களிடம் அக் காலத்தில் இந்துக்கள் எவ்வளவு துவேஷம் கொண்டிருந்தார்கள் என்பதையும், முஸ்லிம்களை அழுத்தவும் ஒழிக்கவும் இந்துக்கள் எவ்வளவு தூரம் துணிந்திருந்தார்கள் என்பதையும் நடுநிலையிலிருந்து உணர வேண்டுமானால் அக் காலத்தில் பங்கீம் சந்திர சட்டர்ஜி என்னும் ஒரு ஹிந்து பென்ஷன் அதிகாரியால்

உண்டாக்கப்பட்ட 'ஆநந்த மடம்' என்னும் ஒரு கற்பனைக் கதையை வாங்கிப் பார்த்தீர்களானால் உங்களுக்கு நடுகண்ட தீர்ப்புக் கிடைக்கும். 'ஆநந்த மடம்' கதை மற்றொரு மனுதர்ம சாஸ்திரமேயாகும். பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனர்கள் அடக்கி ஒடுக்கித் தலையெடுக்கவிடாமல் இருக்கச்செய்வதற்கு ஏற்பட்டது அக்கால மனுதர்ம சாஸ்திரமென்றால்—முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கி அழுத்திவைக்க ஏற்பட்டது 'ஆநந்த மடம்' என்னும் இக்கால மனுதர்ம சாஸ்திரம் என்றுதான் சொல்லவேண்டும். அப் புத்தகத்தைப் பார்த்தால் முஸ்லிம்களை ஒழிக்க, பிரிட்டிஷாருக்கு இந்தியர்கள் அடிமைப்பட்ட விஷயம் விளங்கும்.

அதன் பிறகுதான் முஸ்லிம்கள் தங்கள் நிலை கண்டு உஷார் ஆகிவிட்டார்கள். அதற்காக வங்காளிகள் மக்களுக்கு 'ஆநந்த மடம்' கதையைப் பரப்பி, வந்தே மாதரப் பாட்டு முதலியவைகளைப் பிரச்சாரம் செய்து, மக்களுக்குள் முஸ்லிம் துவேஷம் கற்பித்து வந்தாலும், முஸ்லிம்கள் அக் காலத்தில் ஒரே பிடிவாதமாக ஒற்றுமையாக இருந்து, 1910-லேயே விகிதாசார வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் தனித் தொகுதித் தேர்தலும் பெற்று, ஒரு அளவுக்கு இந்துக்கள் தொல்லையிலிருந்தும் சூழ்ச்சியிலிருந்தும் தப்பித்துக் கொண்டார்கள்.

அதை ஒழிப்பதற்காகவே, இன்று, காங்கிரஸ் தலைகீழாகப் பாடுபடுகிறது. அதாவது, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த தனித் தொகுதி உரிமையை, எப்படிப் பட்டினி வேஷம் போட்டு ஏமாற்றிப் பிடுங்கிக்கொண்டு, இன்று அவர்களை மொட்டை அடித்து, சாணி அபிஷேகம் செய்து மரியாதை செய்கிறார்களோ—அதுபோல் முஸ்லிம்களின் வகுப்புவாரி உரிமையையும் தனித்தொகுதி தேர்தல்முறை உரிமையையும் ஒழிப்பதற்கு காங்கிரஸ்—அதாவது, தோழர் காந்தியார் முதல் சகல இந்துத் தலைவர்கள் என்பவர்களும் செய்யக்கூடாத தந்திரங்கள், சூழ்ச்சிகள் எல்லாம் செய்கிறார்கள். இதற்கு, இனி நம்நாட்டு முஸ்லிம்கள் ஏமாறுவார்கள் என்று கருத இடமில்லை. காங்கிரசின் சூழ்ச்சி—மக்களுக்கு நாளுக்குநாள் காங்கிரசிடம் பற்றுதலும் நம்பிக்கையும் இல்லாமல் போகும்படிதான் செய்து வருகிறதே தவிர, காங்கிரசுக்கு எவ்வித மரியாதையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பது உறுதி.

ஆதலால், இந்திய தேசிய காங்கிரஸ் உள்ளவரை இந்து–முஸ்லிம் ஒற்றுமை ஏற்படப் போவதில்லை.

அல்லது, காங்கிரசுக்குள் ஆதீனகர்த்தாக்களாகவும், சர்வாதிகாரிகளாகவும் இருந்து வரும் வருணாசிரம–இராமராஜ்யவாதிகள் மறைந்து ஒழிந்துபோகும் வரையிலும் இந்து–முஸ்லிம் ஒற்றுமை ஏற்படப்போவதில்லை. இதுதான் இந்து–முஸ்லிம் விஷயமாகவும், இந்து–முஸ்லிம் ஒற்றுமை விஷயமாகவும் எனது அபிப்பிராயமாகும்.

தோழர்களே ! இனி அரசியலும் காங்கிரசும் என்பது பற்றிப் பேசுகிறேன்.

இதுவும் பழைய சங்கதியேதான். அதாவது, நம் நாட்டு அரசியலும் காங்கிரசும் பார்ப்பன ஆதிக்கத்துக்கும்—பார்ப்பனரல்லாதார் அழிவுக்கும் இழிவுக்குமாகவே பிறந்து வளர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகிவருகின்றது.

வடநாட்டில் காங்கிரசின் சூழ்ச்சியும் கொடுமையும் கண்டு சகியாமல் எப்படி முஸ்லிம்கள் விழித்தெழுந்து, முஸ்லிம் லீக் ஏற்படுத்தித் தப்பிப் பிழைத்தார்களோ அது போல்தான்—தென்னாட்டில் காங்கிரசும் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதாருக்குச் செய்துவந்த கொடுமையையும் சூழ்ச்சியையும் கண்டு சகியாமல்—ஒருவருக்கொருவர் நேர் வைரிகளாகவும், பார்ப்பனர்களின் கையாயுதங்களாகவும் இருந்துவந்த தோழர்கள் நாயரும் தியாகராயரும் சேர்ந்து விழித்தெழுந்து, காங்கிரசையும் பார்ப்பனர்களையும் விட்டு வெளிவந்து ஏற்படுத்தியதுதான், பார்ப்பனரல்லாதார் இயக்கமாகும்; அதுதான் ஜஸ்டிஸ் இயக்கம் என்பது.

அவர்கள் அவ்வியக்கத்தைத் தோற்றுவித்ததும், அதற்காகப் போராடினதும் சரியா தப்பா என்பதை நான் சொல்லப்போகும் சில விஷயங்களைக் கண்டு—சில புள்ளிகளைக் கண்டு சற்று ஆராய்ச்சிசெய்து பாருங்கள்.

அதாவது, இந்நாட்டுப் பெருங்குடி மக்கள் பார்ப்பனரல்லாதார்; பாடுபட்டு உழைப்பவர்களும் செல்வவான்களும் அரசாங்கத்துக்கு 100 க்கு 99 பாகம் வரி செலுத்துபவர்களும் பார்ப்பனரல்லாதாராவார்கள். காங்கிரசில் சேர்ந்து பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியெல்லாம் குரங்காட்டம் ஆடி, காங்கிரஸ் விண்ணப்பங்களுக்கெல்லாம் கைதூக்கி வெற்றிதேடிக் கொடுத்தவர்கள் பார்ப்பனரல்லாதார்கள். அப்படிப்பட்டவர்களின் பொது வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை, கவுரவ வாழ்க்கை ஆகியவற்றின் கதி என்ன ஆயிற்று என்று பாருங்கள். இப்படிப்பட்ட தமிழ் நாட்டில் :

கெட்டிக்கார, பிரக்யாதி பெற்ற அய்க்கோர்ட் ஜட்ஜுகள்—முத்துசாமி அய்யர்; மணி அய்யர் ;

கெட்டிக்கார வக்கீல்கள்—பாஷ்யம் அய்யங்கார், சிவசாமி அய்யர், கே. ஸ்ரீநிவாசய்யங்கார், எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், சி. பி. இராமசாமி அய்யர், வெங்கட்டராம சாஸ்திரி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ;

கெட்டிக்கார இங்கிலீஷ் பேச்சாளி—ஸ்ரீநிவாச சாஸ்திரி, பெண் பேச்சாளி—சரோஜினி அம்மாள் ;

உலகமறிந்த இந்திய மனிதன்—ஸ்ரீநிவாச சாஸ்திரி ; மகா உயர்ந்த பட்டம் 'ரைட் ஆனரபிள்' (மகா கனம்) பெற்றவர்—ஸ்ரீநிவாச சாஸ்திரி ;

காங்கிரசால் கிடைக்கப்பெற்ற கவுன்சில் மெம்பர்கள்—வி. கிருஷ்ணசாமி அய்யர், பி. எஸ். சிவசாமி அய்யர், பி. இ. ராஜகோபாலாச்சாரி, கே. ஸ்ரீநிவாச அய்யங்கார் ;

உயர்ந்த பி. சி. எஸ். பரீட்சை பாஸ் பண்ணி கலெக்டர், போர்ட் மெம்பர் முதலிய பதவி பெற்றவர்கள் :

இராமச்சந்திரராவ், இராஜகோபாலாச்சாரி, வி. டி. கிருஷ்ணமாச்சாரி, என். கோபால சாமி அய்யங்கார் ;

'நல்ல கெட்டிக்கார' தமிழ் பண்டிதர்கள்—மகாமகோபாத்தியாய சாமிநாதய்யர், ரா. இராகவய்யங்கார், மு. இராகவய்யங்கார் ;

நல்ல கவி—சுப்ரமணிய அய்யர் (பாரதி) ;

நல்ல பாகவதர்கள்—முத்தய்யா பாகவதர், பஞ்சாபகேச பாகவதர் ;

நல்ல பெண் பாகவதர்—சரஸ்வதி பாய் ;

நல்ல பரத நாட்டியப் பெண்—ருக்மணி அருண்டேல் ;

நல்ல நாடகக்கார ஆக்டர்கள்—கிட்டப்பா அய்யர், சுப்பையா பாகவதர் ;

நல்ல நாடகக்காரப் பெண் ஆக்டர்—டி. பி. இராஜலட்சுமி ;

தென்னாட்டுப் பெரிய மனிதர் யாருக்காவது சிலை வைக்கப்பட்டது என்றால் அது வி. கிருஷ்ணசாமி அய்யர் ;

கெட்டிக்கார பேச்சாளி ; தேசபக்தர்—சத்தியமூர்த்தி சாஸ்திரி ;

இந்திய காங்கிரஸ்அரசியல் சட்ட நிபுணர்—சி. விஜயராகவாச்சாரி ;

சென்னை காங்கிரஸ் சர்வாதிகாரி—தோழர் இராஜகோபாலாச்சாரியார் ;

முதல் மந்திரி—கனம் இராஜகோபாலாச்சாரியார் ... ...

சட்டசபைகளின் தலைவர்கள்—கனம்கள் சாம்பமூர்த்தி அய்யர், இராம ராவ்;

நல்ல பத்திரிகை—'இந்து', 'சுதேசமித்திரன்';

நல்ல பத்திராதிபர்கள்—கஸ்தூரி ரெங்கய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார்;

நல்ல அரசியல் ஞானம் படைத்தவர், நல்ல பொருளாதார ஞானம் படைத்தவர்—எ. ரெங்கசாமி அய்யங்கார்.

ஒரு நாட்டிலுள்ள—இந்தத் தமிழ்நாட்டில் உள்ள இம் மாதிரியான முக்கிய ஸ்தாபனங்களும், பிரபல ஸ்தாபனங்களும், அதிகாரப் பதவிகளும், அரசியல் பிரதானங்களும், கவுரவமும் சமூக வாழ்வில் 100-க்கு 3 பேர்களாய் இருக்கும் சாதியாராகிய பார்ப்பனர்களுக்கே போவதும்—பார்ப்பனரல்லாதவர்களின் சாதாரண நிலை உயிர் வாழ்வுக்குக்கூட, பார்ப்பனர்களுக்கு அடிமையாயிருந்தாலொழிய முடியாத மாதிரியிலும் இருந்தால், அந்த மக்கள் ஒரு நாளாவது விழித்தெழ மாட்டார்களா? விழித்தெழ வேண்டாமா என்று யோசித்துப் பாருங்கள்!

கேசவப் பிள்ளை என்ன கதியாக்கப்பட்டார்? சண்முகம் செட்டியார் வெளி நாட்டுக்குப் போய்ப் பிழைக்கவேண்டியதாயிற்றே!

ஏ. இராமசாமி முதலியார் இந்தியாவைவிட்டே ஓடவேண்டியதாயிற்று; சாதாரண தேர்தலில் மூன்றாந்தர, நாலாந்தர ஆட்களால் போட்டி போடப்பட்டுத் தோற்கடிக்கப் பட்டார்கள்.

பி. வரதராஜுலு, இராமசாமி போன்றவர்களெல்லாம் தேசத் துரோகி லிஸ்டில் சேர்க்கப்பட்டார்கள்.

'காங்கிரஸ் துரோகி' என்று மாகாண காங்கிரஸ் கமிட்டி, வேலைக் கமிட்டி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் தீர்மானிக்கப்பட்டு தண்டிக்கப்பட்ட ஒரு பார்ப்பனர் நாமினேஷன் கொடுக்கப்பட்டு மந்திரியாக்கப்பட்டார். மற்றும், இது போன்ற விஷயங்களையெல்லாம் நேரில் பார்க்கின்ற நீங்கள், 'காங்கிரஸை அரசியல் சபை என்கின்றீர்களா?' என்று உங்களைப் பணிவுடன் கேட்கின்றேன்.

தோழர்களே! பட்டம் விட்டவர்கள் 5 பேர். அதாவது, தோழர்கள் டி. ஏ. இராமலிங்கம் செட்டி, எம். கே. ரெட்டி, சீத்தாராம ரெட்டி, இராமநாதன் செட்டியார், ஒரு ராவ். இதில் பெரிய பட்டங்கள் விட்டவர்கள் பார்ப்பனரல்லாதார்கள்; இவர்கள் பல கவுரவ உத்தியோகம், நிர்வாகம் பார்த்து அனுபவமுடையவர்கள்; ஸ்தல ஸ்தாபன சுயராஜ்யத்தில் தலைவர்களாக இருந்தவர்கள். இவர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, கம்பவுண்டருக்கு 'அண்ணன் உத்தியோகத்தில்' இருந்த ஒரு திக்குவாய் அய்யருக்கு மேல்சபைத் தலைவர் பதவி கொடுத்தது எதற்காக? தேசபக்திக்காகவா, வருணாசிரம தர்ம சத்திக்காகவா என்று உங்களைப் பணிவோடு கேட்கின்றேன்.

[தூத்துக்குடியில், 13-2-1938-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 20-2-1938]

5. நமது இயக்கமும் கம்யூனிசமும்

தோழர்களே!

நமது இயக்கம் எந்த வகையிலும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிர்ப்பான இயக்கம் அல்ல; கம்யூனிஸ்டுகளின் மூலக்கொள்கைக்கு விரோதமான இயக்கமுமல்ல. கம்யூனிஸ்டுகள், 'பொருளாதார சமத்துவம் ஒன்றினால் மட்டுமே நாட்டு நலம் வளர்ந்தோங்கிவிடும், மக்களிடையே உள்ள பேதாபேதம் ஒழிந்துவிடும்' என்று கருதி இருக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் கடவுள், மத, மூடநம்பிக்கைகளைப் பற்றிப் பேசாமலே இருந்து வருகிறார்கள்.

பொருளாதார சமத்துவத்தால் சமுதாய பேதாபேதங்கள் அகன்றுவிடும் என்பது மேல் நாடுகளுக்குச் சற்றுப் பொருத்தமானதாயிருக்கலாம். மேல் நாட்டு மக்கள் எல்லோருமே ஒரே மதத்தை—அதாவது கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்கள் ஆவார்கள். எனவே, இயல்பிலேயே அங்குச் சமுதாயத்தில் பேதாபேதம் இல்லாமலிருந்து வருகிறது. நம் நாட்டு நிலை அப்படி இல்லை. இங்குப் பிறவியிலேயே பேதாபேதம் கற்பிக்கப்பட்டு, மக்கள் பல சாதிகளாகப் பிரிந்து கிடப்பதோடு, உயர்ந்தசாதி–தாழ்ந்த சாதி என்கின்ற பேதமும்; தாழ்ந்த சாதி மக்கள் உழைக்கக் கடமைப் பட்டவர்கள், உயர்ந்த சாதி மக்கள் அந்த உழைப்பின் பயனை அனுபவிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதான கருத்தும்; இன்னும் பற்பல மூடநம்பிக்கைக் கருத்தும் ஆட்சிபுரிந்து வருகின்றன. இந்தப் பகுத்தறிவுக் காலத்திலும் இன்னும் கரும காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, ஏழை மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் பணம் நாளடைவில் உயர்சாதிப் பார்ப்பான் கைக்கு எப்படியோ போய்ச் சேர்ந்துவிடும்; மறுபடியும் மறுபடியும் பொருளாதார பேதாபேதம் ஏற்பட்டுவிடும். ஆகவே, முதலில நம் ஏழை மக்களுடைய உள்ளத்தில் மாற்றம் ஏற்படவேண்டும்; அவர்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சி ஏற்படவேண்டும். அதன் பிறகுதான் கம்யூனிசம் (பொருளாதார சமத்துவம்) அவர்களுக்கு முழுதும் பயன்படும்.

குளிர் நாட்டு உடை எப்படி உஷ்ண நாட்டிற்குப் பயன்படாதோ—அதேபோல், மேல் நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார சமத்துவக் கொள்கை இந்நாட்டுக்கு இன்றைய நிலையில் பயன்படாது. நாமும் மேல் நாட்டினரைப் போல் பகுத்தறிவுள்ள மக்களாக ஆகிவிடுவோமானால், அப்புறம் கம்யூனிசம் நமக்கு முற்றிலும் பயன்படும். இதைக் கம்யூனிஸ்டுகள் உணர்ந்து மக்களுக்கு முதலில் அறிவு பெருகச் செய்யவேண்டும்.

பணக்கார முதலாளி ஒழிவதற்கு முன்னால், புரோகிதப் பார்ப்பன முதலாளிகளும், கல் முதலாளிகளும், மடமுதலாளிகளும் ஒழிய வேண்டும் என்பதை நம் கம்யூனிஸ்டுத் தோழர்கள் உணர்ந்து, முதலில் அவர்களை ஒழிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

தோழர்களே! கம்யூனிஸ்டுகளின் இன்றையக் கிளர்ச்சி நடைபெற்று வந்தாலும், நடைபெறாவிட்டாலும் இந்த நாட்டிற்கும் கம்யூனிசம் வரத்தான் செய்யும். ஏன்? கம்யூனிசம் ஒன்றுதான் உலக அமைதிக்கே, உலக மேம்பாட்டிற்கே உற்ற சாதனமாகும் என்ற அறிவு,—அதுவே சத்தியமானது, அதுவே உண்மையானது என்ற அறிவு எல்லா நாடுகளிலும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்திருக்கிறது. அந்த சுவாலை இன்றில்லையானாலும் நாளை இந்நாட்டையும் கவ்வத்தான் போகிறது. ஆங்கிலேயரின் தந்திரமோ, அமெரிக்கரின் அணுகுண்டோ கம்யூனிசத்தின் பரவலை இனியும் தடை செய்து கொண்டிருக்க முடியாது.

[பம்பாயில், 12-2-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1950]

தோழர்களே!

கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கும், திராவிடர் கழகக் கொள்கைகளுக்கும் அதிகமான பேதம் கிடையாது. அதாவது, இன்றையதினம் ஒரு தற்குறியை அழைத்து அவனிடம் கட்சிகளைப்பற்றிக் கேட்டால், அவன்,

'கம்யூனிஸ்ட் கட்சி என்றால் பணக்காரர்களை ஒழிப்பது; நாட்டைத் தொழிலாளிகள் ஆதிக்கத்தில் ஆக்குவது' என்றும்; 'திராவிடர் கழகம் என்றால் பார்ப்பனீயத்தையும், பணக்காரனை–ஏழையை–பார்ப்பானை–பறையனை உண்டாக்கிய சாமியையும் ஒழிப்பதும், கோவில்களிலே அடைபட்டுக் கிடக்கும் குழவிக் கற்களை உடைத்து எறிந்து அதன் சொத்துக்களைக் கல்விக்கும் தொழிலுக்கும் ஆஸ்பத்திரிக்கும் உபயோகப்படுத்த வேண்டும் என்றும் கூறுவது' என்றுந்தான் கூறுவான். அப்படியேதான் இன்றையத்தினம் பொதுமக்களும்கூட நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சி பணக்காரர்களை ஒழிப்பதில் முதல்படியில் நிற்கிறது. திராவிடர் கழகம் பார்ப்பனியத்தை ஒழிப்பதில் முதல்படியில் நிற்கிறது. என்றாலும், பணக்காரர்களை ஒழிப்பதில் திராவிடர் கழகத்திற்குக் கவலை இல்லை என்று சொல்ல முடியாது. பணக்காரர்களை ஒழிக்க வேண்டியது அவசியந்தான். ஆனால், பார்ப்பனியத்தை, மூடநம்பிக்கையை ஒழிக்கவேண்டியது மிகமிக அவசியம் என்று திராவிடர் கழகம் கருதுகின்றது. பணக்காரத்தன்மைக்கு பார்ப்பனியமும், மேல்சாதி-கீழ்சாதித் தன்மையும், கடவுள் தன்மையும்தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக்கொண்டே இருப்பார்கள். சாக்கடையையும், கொசுக்களையும் ஒழித்தால்தான் அழுக்குத் தண்ணீரையும் மலேரியாக் காய்ச்சலையும் ஒழிக்கமுடியும். ஆகையால்தான், திராவிடர் கழகம், 'பணக்காரத் தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை' என்று கருதி, இதைச் செய்கின்றது.

பணக்காரத் தன்மைக்கு எளிதில் எதிர்ப்புக் கிடைக்கும்; பார்ப்பனியத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. இந்த நாட்டில் இது ஒரு பெரிய கஷ்டம். ஆதலால், முதலில் சுலபமானதைச் செய்து கொண்டு பிறகு கஷ்டமானதைச் செய்து கொள்ளலாம் என்று கருதுகிறார்கள்.

ஆகையால், நாம் இந்த கம்யூனிசத்தை ஏற்பதில் தவறு இல்லை. இதுதான் மக்களின் நல்வாழ்விற்கு வழி. என்றைக்காவது உலகம் அங்கு சென்றுதான் நிற்கும், அதுவும் சீக்கிரம் சென்று நிற்கும்.

[சொற்பொழிவு—'விடுதலை' 4-10-1951]

6. சுதந்தராக் கட்சி

தமிழ்நாட்டில் இன்று பிரபலமாய் விளம்பரம் செய்யப்பட்டு வரும் அரசியல் கட்சி 'சுதந்தராக் கட்சி' என்று சொல்லப்படுவதாகும். இதற்குப் பெயர் அரசியல் கட்சி என்றாலும் அது பெரும் 'இன (வகுப்பு) நலக் கட்சி'யேயாகும்.

இந்தக் கட்சிக்குத் தமிழ்நாட்டில் வகுப்புவளர்ச்சியை இலட்சியமாய்க்கொண்ட பார்ப்பனப் பத்திரிகைகளுடையவும், பார்ப்பனர்களுடையவும் கட்டுப்பாடான பிரச்சாரம் தீவிரமாக நடைபெறுவதாலேயே அதற்கு இந்நாட்டில் இன்று ஒரு பிரபலம் இருந்து வருகிறது.

சுதந்தராக் கட்சி என்பதைச் சரியானபடி புரிந்துகொண்டிருக்கிற மக்கள் தமிழர்களில் மிகக் கொஞ்சம் பேர்களேயாகும். எதனால் இப்படிச் சொல்கிறேன் என்றால், அந்த சுதந்தராக் கட்சியைப் பற்றி மக்கள்—காமராசருக்கு எதிரான கட்சி என்று சிலரும், காங்கிரசுக்கு எதிரான கட்சி என்று சிலருமாகத்தான் கருதிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அதன் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொண்டு இருக்கிறவர்கள் மிகச் சிலரேயாவார்கள். காமராசர் அரசியலில் இந்நாட்டு ஆட்சித் தலைவராக இருக்கிறார். காங்கிரஸ் இந்தியா ஒட்டுக்கும் ஆட்சித் தலைமைகொண்ட ஸ்தாபனமாக இருந்துவருகிறது.

சுதந்தராக் கட்சிக்குக் காமராசர் ஆட்சியைப் பற்றியும் காங்கிரஸ் ஆட்சியைப் பற்றியும் குறை கூறுவதற்கான காரணம், அரசியலைப் பொறுத்தவரை என்ன இருக்கிறது? இராஜாஜியின் கூட்டுயோசனையின்மீது ஏற்பட்ட கொள்கைகளின்படிதான் இன்று அரசியல் நடக்கிறது.

நாட்டில் வேறுபல கட்சிகள் இருந்தாலும் அவைகளில் எதுவும் காமராசர் ஆட்சியையும், காங்கிரஸ் ஆட்சியையும் கைப்பற்றவேண்டும் என்றுதான் பாடுபடுவதாகச் சொல்கின்றனவே அன்றி, சுதந்தராக் கட்சியைப் போல்—காமராசரைக் கவிழ்க்கவும்

காங்கிரசையே ஒழிக்கவும் வேண்டும் என்று எதுவும் கூறவில்லை. அன்றியும் சுதந்திராக் கட்சிக்கு நாட்டிலுள்ள வேறு எந்தக் கட்சிமீதும் பகைமையில்லை என்பதோடு உறவுக்கும் ஆட்சேபணை இல்லை.

தவிரவும், சுதந்திராக் கட்சியோ, வேறு எந்தக் கட்சியோ ஆதிக்கத்திற்கு வந்தாலும் அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் ஆட்சி நடத்தவேண்டி இருக்குமே தவிர, வேறு விதமாய் நடத்தமுடியவே முடியாது. சுதந்திராக்கட்சி ஆதிக்கத்திற்கு வந்து சட்டசபை, பார்லிமெண்ட் சபைத் தலைவர்களைத் தங்கள் இஷ்டப்படி நியமித்துக்கொண்டாலும் இந்தியப் பிரசிடெண்டை (இராஷ்டிரபதியை)யும் தங்கள் இஷ்டப்படி நியமித்துக் கொண்டாலும் கூட, அய்க்கோர்ட், சுப்ரீம்கோர்ட் ஆகியவைகளைத் தங்கள் இஷ்டத்துக்கு அனுகூலமாக இருக்கும்படியும், அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருக்கும்படியும் நியமித்துக்கொள்வது என்பது இனி சாதாரணமாய் முடியக்கூடிய காரியமல்ல.

ஆகவே, சுதந்திராக் கட்சிக்கு காமராசரைக் கவிழ்க்கவேண்டும் என்பதிலும், காங்கிரசை ஒழிக்கவேண்டும் என்பதிலும் அரசியல் காரணம் எதுவும் இருக்கமுடியாது. சுதந்திராக் கட்சி உள்கருத்துப்படியே, ஒருசமயம் காமராசர் ஒழிக்கப்பட்டால் பிறகு தீவிர அடக்குமுறையைக் கொண்டுதான் ஆட்சி நடத்தப்படவேண்டும் என்பதோடு—இன்றைய நிலையில் காங்கிரஸ் ஒழிக்கப்பட்டால் நாட்டில் குழப்பத்தையும், கலவரத்தையும் தான் காணவும் சமாளிக்கவேண்டியும் வருமேயல்லாது—இன்றுபோன்ற அமைதியான ஆட்சிக்கு இடமே இருக்காது. இயற்கையாகவே இராஜாஜி ஆதிக்கத்திற்கு வந்தால் கிளர்ச்சியும் அடக்குமுறையும் இல்லாமல் ஆட்சிநடைபெற முடியாது என்பது அனுபவம்.

இந்த நிலைமையை சுதந்திராக் கட்சி மாத்திரமே அல்லாமல் இன்று வேறு எந்தக் கட்சி ஆட்சி பீடத்துக்கு வந்தாலும் இதை அனுபவிக்கத்தான் நேரிடும். இது சுதந்திராக் கட்சிக்குத் தெரியாத சங்கதி அல்ல. நாட்டில் குழப்பம், கலவரம், பலாத்காரத் தாண்டவம் முதலிய அராஜகம் ஏற்படுமானால், அதுவே சுதந்திராக் கட்சிக்கு நல்ல வெற்றி ஏற்பட்டதாகத்தான் அது கருதும்.

ஏனெனில், 'இன்றைய ஆட்சிப் போக்கு மாறவேண்டும்; மாறாவிட்டால் ஒழிய வேண்டும்; ஒழியாவிட்டால் அராஜகமாக வேண்டும்' என்பதுதான் சுதந்திராக் கட்சியின் தத்துவமே தவிர, 'நாட்டிற்கு இதைவிட ஒரு நல்ல ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டும்' என்கிற கவலையே கிடையாது; இருக்கவும் முடியாது. ஏனெனில், நாட்டின் நிலைமைக்கும் சமுதாய அமைப்புத் தன்மைக்கும் இதற்குமேல் அமைதியாக ஒரு ஆட்சியையோ, ஆட்சி முறையையோ காண்பது என்பதும், அமைப்பது என்பதும் இந்த ஜனநாயகத்தில் எளிதில் முடியக்கூடிய காரியமே அல்ல.

ஏனெனில், இனி வகுக்கும் எந்த ஆட்சித் திட்டமும் இன்றையப் போக்கை மேலும் விரைவாகச் செய்யும்படி தான் அமைக்கமுடியுமே தவிர, நிதானமாக—ஓடாது நடக்கும் படி செய்ய, இயற்கை இடம் தராது. அதனால்தான், மாறினால் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் குழப்பம், கலவரம், அராஜகம் ஏற்படும் என்கிறேன்.

இனி, எந்தக் காரணம் கொண்டும், எப்படிப்பட்ட கொடுமையான ஆட்சியை அமைத்துக்கொண்ட போதிலும் மக்களை மடையர்களாக, மானமற்றவர்களாக, தன் இனத்தைக் காட்டிக்கொடுப்போராக ஆக்கவோ, இருக்கச்செய்யவோ யாராலும் முடியாது. அப்படி ஆக்க எதிர்பார்ப்பதும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும்.

காங்கிரசுக்கு எதிரான மற்றக் கட்சிக்காரர்கள், அக்கட்சி ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு சிலரின் தனிப்பட்ட சுயநல வெறியால் ஏதோ தங்களுக்கே புரியாததை உளறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனதால் அவர்களை மக்கள் மன்னித்து விடுவார்கள் அல்லது ஏமாந்து சும்மா அனுமதித்து விடுவார்கள். ஆனால், சுதந்திராக் கட்சி அப்படிப்பட்டதல்ல. அதில்

தனிப்பட்ட சுயநலம் இல்லை; எளிதில் திருப்தி அடையத்தக்க இலட்சியமும் இல்லை. மனிதன் மனிதனை எவ்வளவு பலமாக அடித்தாலும் மருந்து போட்டு ஒத்தடம் கொடுத்து சரிப்படுத்திக்கொள்ளலாம். நல்ல பாம்பு என்னும் கொடிய விஷப்பாம்பு கடித்தால் மனிதன் பெரிதும் செத்தேயாக வேண்டும். அதிலும் கொம்பேறி மூக்கன் என்னும் பாம்பு கடித்தால் கடிக்கப்பட்டவன் செத்தேயாக வேண்டும்.

சுதந்தராக் கட்சி என்பது அதுபோன்ற இலட்சியத்தைக் கொண்டது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சுதந்தராக் கட்சித் திட்டம்—'தான் இன்பமாக வாழவேண்டும்' என்பதல்ல; மற்றென்னவென்றால், நாம்–நம் இனம் தலைதூக்காமல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். பலர், ஏன் அப்படி என்பதை உணராதவர்களே யாவார்கள்; நான் நல்லபடி உணர்ந்தவனாவேன். அதாவது, இன்று 'சுதந்தராக் கட்சி இனத்துக்கு' (பார்ப்பனர்களுக்கு) நாட்டில் அவர்களது வாழ்வில் என்ன குறை இருக்கிறது? பார்ப்பனரில் யாருக்குக் கல்வி இல்லை? யாருக்குப் பிழைப்பு இல்லை? யார் உடலுழைப்பு வேலையில் இருக்கிறார்கள்? யார் பட்டினியாக இருக்கிறார்கள்? யார் சராசரி வாழ்க்கைத் தன்மைக்குக் கீழே இருக்கிறார்கள்? எந்த உயர் பதவியில், உயர் வாழ்வில், உயர் செல்வத்தில் அவர்கள் இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்?

கல்வி, மேதாவி, பதவி அதிபர், வியாபார அதிபர், தொழிலதிபர், செல்வ அதிபர், நீதி அதிபர், வக்கீல் அதிபர், 'ஆத்மார்த்த'த் துறை அதிபர், ஆட்சி அதிபர் முதலிய எந்தத் துறையில்—அவர்கள் தலையாய நிலையையும், உரிமையையும் பெரும் பங்கு இல்லாமல் குறைபாட்டில் இருக்கிறார்கள்? வாழ்க்கையைப் பொறுத்தவரை அவர்கள் இனம் எந்தத் துறையில் குறையுள்ளவர்களாக இருப்பதாகச் சொல்லக்கூடும்?

குறிப்பாக, சுதந்தராக் கட்சித் தலைவர் இராஜாஜியை எடுத்துக்கொண்டால், இந்த நாட்டில் அவருக்குமேல் பெரிய அந்தஸ்துடன் இருந்தவர் இல்லை; பெரிய பதவியை அனுபவித்தவர்கள் இல்லை. மற்றும், அவர் இனத்தவர்களுக்குமேல் உயர் பதவியில், ஆட்சி ஆதிக்கப் பீடத்தில் யாரும் இல்லை. அவர் இனத்தவருக்கு மேற்பட்ட தொழிலதிபர், வருவாய் ஸ்தாபனக்காரர்கள் இல்லை.

இந்த நிலையில் அந்த இனத்துக்கு, சுதந்தராக் கட்சிக்கு உள்ள குறை என்ன வென்றால், ஒரே ஒரு குறைதான். அதாவது, 'படுபாதாளத்தில் கிடந்த மற்ற இனத் தானும் தனது நிலைக்கு வரும்படியான முயற்சிகளைச் செய்கிறார்களே; சிலர் தங்கள் நிலைக்கு வருவார்கள்போல் இருக்கிறதே! தங்களுக்கென்றே இருந்துவந்த, வருகின்ற உயர்வு மற்றவர்களுடன் சரிசமம் ஆகலாம் போலிருக்கிறதே!' என்ற ஒரே ஒரு குறை; ஆத்திரம், வேதனை ஆகிய இது ஒன்றுதான். இதையெல்லாம் உள்வைத்துத்தான் இரத்தினச் சுருக்கமாக 'சுதந்தராக் கட்சியின் கொள்கை தர்மத்தை நிலைநிறுத்தி, தர்ம ஸ்தாபனம் செய்வதுதான்' என்று அக் கட்சித் தலைவர் தைரியமாகச் சொல்லி, அதற்காக வேலை செய்கிறார்; அதற்காகவே, அக்கட்சியை 'தர்மத்தை நிலைநிறுத்தும் கட்சி' என்றும், 'தர்ம ஸ்தாபனக் கட்சி' என்றும் சொல்லித் தர்மத்தை விளக்கிக்கொண்டு வருகிறார். உலகில் நீதி வேறு, தர்மம் வேறு என்பதாகவேதான் இருந்துவருகிறது.

இன்றைய, 'காமராசர் ஆட்சி காங்கிரஸ்', சமுதாயத்துறையில் பச்சை நீதியை (Bare Justice) இலட்சியமாக வைத்து ஆட்சி செலுத்தி வருகிறது. இதற்கு முதற் படியாகக் கல்வித் துறையில், ஒரு அளவுக்கு இந்நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் எழுத்து வாசனை உண்டாக்கப் பாடுபடுகிறது. இது இந்நாட்டில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக யாரும் செய்ய முன்வராத முயற்சி என்பதோடு, இந்த நிலையே—இந்த நாட்டில் மக்களில் பிறவியில் உயர்வு–தாழ்வுத் தத்துவம் கொண்ட வருணாசிரம முறை பாதுகாக்கப்பட, பெரிய அரணாக இருந்து வந்திருக்கிறது. ஆதலாலேயே, அந்த

அரணை—கோட்டையை இடித்துத் தள்ளும் முயற்சியில் காமராசர் ஆட்சி முனைந் திருக்கிறது.

இந்த முயற்சிக்கு வெடிகுண்டு—ஏன், அணுகுண்டு போட்டுத் தகர்த்து நாசமாக்கும் முயற்சிதான், ஆச்சாரியாரின் (இராஜாஜியின்) சுதந்தராக் கட்சியாகும்.

இந்தக் காரியத்தில், இந்த நாட்டில் எல்லாரைப் பார்க்கிலும் நண்பர் இராஜாஜி அவர்களுக்குத்தான் அதிக அக்கறை இருப்பது அவசியமான காரியமாகும். ஏனெனில், இராஜாஜிதான் இந்த நாட்டில், ஏன், இந்த உலகத்திலேயே ஆயிரக்கணக்கில், பல்லாயிரக் கணக்கில் நடந்துகொண்டிருக்கும் பள்ளிக்கூடங்களை மூடிய மகான்' ஆவார்.

அதுவும் 100-க்கு 83 மக்கள், 90 மக்கள் தற்குறிகளாய்—கைரேகை வைக்கும் குடிமக்களாய் இருக்கும் ஒரு நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்களை மூடினவர் என்பதோடு—இவர் (இந்த இராஜாஜி) செய்த மகத்தான ஏற்பாட்டை இந்த காமராசர் கெடுத்து, சுமார் 30,000 பள்ளிகளையும், 10–20 கல்லூரிகளையும், 3–4 தொழிற் கல்லூரிகளையும் திறந்து வைத்து, ஆகாயக் கப்பல் வேகத்தில் ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் செலவில் 'அட்டூழியமான' காரியத்தைச் செய்கிறார் என்றால்—இந்த ஆட்சியை ஒழித்து மக்களுக்குச் 'சுதந்திரத்தை'—அதாவது, 'மக்களைத் தற்குறி ஆக்கும் ஆட்சியை' ஏற்படுத்த வேண்டியது ஆச்சாரியாருக்கு இன்றியமையாத கடமையாகும். ஆகவேதான், இராஜாஜி தமது கட்சிக்கு சுதந்தராக் கட்சி என்று பெயர் வைத்துக்கொண்டார்.

ஆதலால், இராஜாஜியால் சுதந்தராக் கட்சிக்கு வேறு பெயர் வைக்கவேண்டுமானால், 'கள்ளநோட்டுக் கட்சி' என்றுதான் பெயர் வைக்கவேண்டும். கள்ளநோட்டின் இலட்சியம் மக்களை ஏய்த்துப் பயன் அடைவதேயாகும். அதையேதான், அதற்கும் மேலான தந்திரத்தின் மூலம் ஆச்சாரியார் பயனடையப் பார்க்கிறார்.

இதில் மக்கள் கவனிக்கவேண்டியதொன்று உண்டு. ஆச்சாரியார் பதவிக்கு வந்தால் முதலில் என்ன செய்வார்? இதற்குமுன் பதவிக்கு வந்ததும் என்ன செய்தார்? அதற்கு என்ன சமாதானம் சொன்னார்?

['விடுதலை'-தலையங்கம்—9-6-1961]

7. அகில இந்திய சாதி ஒழிப்பும் நாமும்

தோழர்களே!

சாதி ஒழிப்புக்காக நமது கழகம் ஏன் அகில இந்திய ரீதியில் பாடுபடக்கூடாது என்று கேட்கப்படுகிறது. அகில இந்திய ரீதியில் சாதி ஒழிப்பு என்பது சுலபத்தில் சாத்தியமாயிராது. ஏனெனில், நம்மவர்களைப்போல் பெரும்பாலோருக்குள்ள மான உணர்ச்சி வடநாட்டாருக்கு இல்லை. அவர்கள் யாரும் சூத்திரன் என்பதற்காகவோ, பஞ்சமன் என்பதற்காகவோ, 'தாசி மகன்' என்பதற்காகவோ வெட்கப்படுவதும் இல்லை. இந்து மதத்தை அவர்கள், நம்மைப்போல் வெறுத்து ஒதுக்குவதும் இல்லை. மாறாக, அதைப் பெருமையாகவே கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்நாட்டு மக்களோ ஆதிகாலந்தொட்டே சாதிபேதங்களை—வருணாசிரம தர்மத்தை எதிர்த்திருக்கிறார்கள். எனவே, சாதி ஒழிப்பு நம்நாட்டில் சாத்தியமாயிருப்பது போல் வடநாட்டில் சாத்தியமாயிராது. எந்தச் சீர்திருத்தக் கருத்தும் வடநாட்டவருக்குச் சுலபத்தில் புரியவும் புரியாது. எனவேதான், தோழர் அம்பேத்கார் அவர்களால் கொண்டு வரப்படும் 'இந்துச் சட்ட மசோதா' அங்கு பலமான எதிர்ப்புக்குள்ளாகவேண்டி இருக்கிறது. இதை எல்லாம் உணர்ந்துதான் நாம் நம் கழக முயற்சியை நம் திராவிட நாட்டோடு நிறுத்திக்கொண்டிருக்கிறோம்.

[பம்பாயில், 12-2-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1950]

தோழர்களே!

திராவிடர் கழகம் பேதத்தையும் பிரிவையும் ஒழிப்பதை முக்கியமாகக் கொண்டு இருக்கிறது. இந்தப் பிரிவுக்கும் பேதத்திற்கும்—மதமும், கடவுளும், சாஸ்திரங்களும், சமுதாய அமைப்பும், அதற்கேற்ற பழக்க வழக்கங்களும் காரணமாய் இருப்பதினால்—சுயநலக்காரர்களுக்கு இவை ஆதாரமாய் இருப்பதனால், இவைகளை அடியோடு மாற்றியும் ஒழித்தும் ஆகவேண்டும் என்கின்ற புரட்சித் தன்மையைத் திராவிடர் கழகம் கைக் கொண்டிருக்கிறது.

நம் நாட்டைத் தவிர மற்ற நாடுகளில் இந்தப் பேதம் இல்லையாதலால் மற்ற நாட்டு அரசியல், சமுதாய இயல் காரியங்கள் நமக்குப் பொருத்தமற்றவையாகிவிடுகின்றன. இந்தியாவில் நம் மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணங்களில் உள்ள பெரும்பாலான மக்களுக்குத் தங்கள் கீழ்ப் பிறப்பைப்பற்றி, அதாவது சூத்திரன் என்பதைப்பற்றி கவலையோ, மான அவமானமோ இல்லை. ஆனதால், நம் புரட்சி இயக்கம் அகில இந்திய இயக்கமாக ஆக முடியாமலும் இருக்கிறது.

ஆகையால் நம்முடைய புரட்சி முயற்சியானது நம் மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணக்காரருக்கு வெறுப்பானதாகவும், மனவேதனைக்கு இடம் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கும். ஆதலால், நம் கழகம்—நம் முயற்சி மற்ற மாகாணக்காரருடைய எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. நம் நாட்டிற்கு ஏற்பட்டு இருப்பதாய்ச் சொல்லப்படும் 'குடிஅரசு' ஆட்சி என்பதும்—வெகு ஜாக்கிரதையாக, இந்தக் காரியங்களில் தலையிடக் கூடாத அளவுக்குத் தனது அரசியல் திட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, நமது முயற்சி பிற மாகாணத்தார் எதிர்ப்புக்கு மாத்திரமல்லாமல், நமது 'குடிஅரசு' சர்க்காரின் எதிர்ப்புக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது.

நமது 'குடிஅரசு' அரசாங்கத்தின் அரசியல் நிர்வாக விதிகளை எடுத்துக் கொண்டால் அதில் ஒரு வார்த்தையாவது சாதிபேத அமைப்பையோ, சாதிப் பிரிவையோ மாற்ற வேண்டுமென்பதாகவோ, ஒழிக்க வேண்டுமென்பதாகவோ ஒரு வார்த்தை கூடக் கிடையாது. அதற்கு மாறாக 'அவரவர்களுடைய மத சம்பந்தமான உணர்ச்சியையும், பழக்க வழக்கங்களையும் காப்பாற்றிக் கொள்ளவும், பின்பற்றவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு' என்பதாகச் சட்டம் செய்து கொள்ளப்பட்டு இருக்கிறது.

இதைச் சிந்திப்போமானால், நம்முடைய வேலை எவ்வளவு கடினமானது என்பது விளங்கும். இந்த வேலைக்கு நாம் எவ்வளவு தூரம் பாடுபட வேண்டுமென்பதும், எவ்வளவு பெரிய பிரச்சாரம் செய்யவேண்டும் என்பதும் நமக்குள் எவ்வளவு கட்டுப்பாடும் துணிவும் விடாமுயற்சியும் வேண்டுமென்பதும் விளங்கும். இந்தத் துறையில் நமது முக்கியமானதும் முன்னணியானதுமான வேலையாகக் கடவுள், மத, சாஸ்திர சம்பந்தமான காரியங்களில் தீவிர மாறுதல் ஏற்படுத்தவேண்டும் என்பதைத் திட்டமாகக் கொண்டிருக்கிறோம். ஏறக்குறைய 20, 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் துறையில் நாம் பாடுபட்டு வந்திருந்தாலுங்கூட, அதற்குச் சரிசமமான அளவுக்கு நம் முயற்சிகளைப் பயனற்றதாகச் செய்வதற்கேற்ற நாச வேலைகளை நம் எதிரிகள் செய்து கொண்டுதான் வருகிறார்கள். ஆதலால், நாம் போதிய பலன் பெறவில்லை என்பதோடு, பெறமுடியவில்லை என்பதோடு இத் துறைகளில் இன்னும் தீவிரமாக நாம் வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

[திருச்சியில், 5-3-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1950]

PART III

SOCIAL REFORM
OR
SOCIAL REVOLUTION?

1. ON SOCIETY

1. COMMUNAL CONFERENCE

Pseudo patriots and pseudo nationalists very often condemn communal conferences as being anti-national. The answer has been effectively given by the Nadars' Conference recently held at Porayar. Those who have read the proceedings and the resolutions of the Conference, will know how far the community has advanced in recent years. We suppose the resolutions of the Nadars will come as a surprise to the orthodox section of our people. Community which has been more particular about wearing the 'holy' thread, than the Brahmins themselves, has today passed a resolution for discarding it. The community which was set against the Self-respect movement by some mischief-mongers, has passed a resolution extending its support to the same. It is a matter of delight that the Nadars have also passed resolutions in favour of social reform marriages and abolition of caste marks and titles. The Porayar Conference is indeed a turning point in the history of the Nadar Community. Let those who condemn such conferences think for a while whether such good results can be achieved by any other means. We congratulate the Nadars, especially the conveners of the Conference, for setting a successful example for other communities to follow.

['*Revolt*'—Vol. 1, No. 27, Dated 8th May 1929, Erode.]

2. OUR NORTH INDIAN LEADERS

Pandit Malaviya, in his recent speech at Madras has shone in his true colours. Evidently the face-born gentleman has unmasked his real self. The ring-masters of the Madras political circus have brought in another quadruped from the north, which is performing political feats and social somersaults. The tiger from Allahabad is roaming in its brahminic fury. It is uttering half-hatched, self-contradictory ideas to suit the tastes of the threaded humanity of our province.

Our readers are aware that it is usual for the Brahmins of our province, especially of the city of Madras, to bring some great personalities from North India, whenever they find themselves in trying circumstances. They did the same with reference to men like Swami Vivekananda, Bepin Chandra Pal, C. R. Das, Lala Lajapat Rai and others.

They are playing the same game with Mr. Gandhi, Motilal Nehru and others. When there is any popular movement which directly affects the superiority of the privileged community, when there is any sign of the upliftment of the down-trodden masses, when the monopolists begin to feel the helplessness of their situation,—then, they generally resort to such ingenious methods. Some prominent men of the north are caught hold of and given erroneous informations of all matters which are detrimental to the selfish aims of the opportunists. A few hours stay at Madras is enough to poison the minds of these leaders, who are otherwise sympathetic and large-hearted. Their first speeches at Madras will reflect the hidden Brahminism infused into them. Then, in spite of the Brahmin-guarded tour of these men, they get scent of the real situation, though not in its entirety. They are sometimes forced by circumstances to come face to face with real facts. Then their last speech in the province will bear quite opposite results. And the ring-masters will be not a little sorry for the cat having been let out of the bag. It was only after his South Indian visit that Swami Vivekananda observed that the 'Brahmin cobra must suck out his own poison, if the patient should survive'. Lala Lajapt Rai came to realise the overbearing importance of social reconstruction only when he was denied admission into the Trivandrum temple. It was only then that he proclaimed that 'religion was the real cause of all the abuses of society, that he could find nothing human in the temples; that the Madras presidency is getting suffocated amidst the poisonous atmosphere of religion and God; and that fearless reformers are immediately needed in Madras'. It was only when he was refused entry into the temple at Cape Comerin that Mr. Gandhi understood the A. B. C. of South Indian matters. And his further tours in the Tamil Nad in spite of being guarded by the Chota Gandhi, have brought from his mouth the irrefutable truth that the 'temples are the dens of prostitutes'. More instances of this kind are not wanting. Suffice it to note that those who come from the north give vent to their ideas only when they themselves meet with the opportunity of tasting the bitter truths.

Naturally the Pandit has made his momentous arrival. One of the master-strokes of his brahminic clannishness has been already given out of his recent speech at Madras. He says, 'the caste system had existed and would exist in spite of the frantic efforts which are sometimes made to demolish it'. The Allahabad Pandit 'is surprised to find in this province a movement which not only wants to demolish caste, but also to demolish God Himself'. He says, 'this new evil creeping into their midst should be nipped in the bud. It is a very difficult task to right a wrong which had existed for a long time'. About the admission of the temples the Pandit says, 'it might be that there are certain rules in certain temples not to admit certain people beyond certain place. I can quite understand it, and in such places these rules should be very clearly laid and made known to all, so that there could be no complaint'.

Wise words are these. What else can be expected from a Pandit, and that too a Brahmin Pandit when he is especially surrounded by Varnashramites who take pleasure in fondling child widows? This brings to our memory, a suggestion in the vernacular about the idea of a mischievous, wounded monkey which is at the same time also angry and drunken. The Pandit may be unaware of the full significance of the Self-respect movement. But it is no reason why he should blurt out unauthentic matters resulting from misrepresented facts. His surprise at a movement aiming at demolishing caste, is a surprise to us, and will be a surprise to the learned world. If the Pandit only takes some trouble in touring the province more leisurely, we are sure, he will not venture such hasty observations. If he is only patient enough to know that more than a dozen papers are published in the policy of the Self-respect movement, that they command the largest number of subscribers, and that the 'Kudi Arasu', the chief organ of the movement is commanding the largest circulation in the presidency, he will not indulge in the empty dream of nipping the movement in its bud. Dear Panditji, it is not a bud; it is a tree whose roots have penetrated to an immeasurable depth, and whose branches have extended to the far off Turkey, Russia, Afghanistan, China, Burma and South Africa. Its fragrance is being enjoyed by the youths of the world. And its principles are being inhaled by every freethinker, truthseeker and reasoner.

Now to the Pandit's next remark that the wrong existing for a long time could not be righted. This is certainly an old man's despair. We would advise the despondent Pandit to stop his tours immediately and perform yagas at the foot of the Himalayas, even as his forefathers are said to have done. Let him not spread his poison of despondency in a land where fatalism has already sucked the blood of the people. His remarks about the temples, are the real expressions of his brahminic heart. The saviour of Hinduism is at his pitch when he wants specific rules to be laid up for the various castes to enter the temples. Even in that case, we are sorry that the existing temples should be demolished, and new ones built with more number of rooms for each caste of worshippers. We doubt whether the Pandit means it seriously, or simply wants to be true to his salt. But one thing we know, that even if his commonsense repudiates such inhuman customs, his thread across the body will remind him that he is first a Brahmin, and then only a man. It is really a curse to our country that such big heads as Pandit Malaviya sell their heads to an unscrupulous section of humanity. It is high time the Pandit rids himself away from the land of the lotus-eaters and begins to know facts at first hand. Dear Panditji, we heartily welcome you in our midst as a guest, but not as a preacher or *bashyakar* of Hinduism.

['*Revolt*'—Vol. 1, No. 27, Dated 8th May 1929, Erode.]

3. THE PANDIT AGAIN

We are glad that Pandit Malaviya is engaging our close attention. The learned Pandit is undertaking vigorous tours while the circus masters are busy with their electioneering campaigns. Our Tamil Nad is undergoing the ceremony of purification by the touch of the holy feet of the *bhoo-suras*. The cream of the face-born has turned its attention to the so-called masses. Malaviyas, Murthis, Iyengars, Iyers and Sastris are spending days and nights in their dutiful work 'for the country'. The words of 'Swaraj', 'Independence', 'Mother India' and the like are spread in every atom of the atmosphere. Outbursts of eloquent oratory are ringing our ears. Bashirs and Sabapathis are playing the Vibishana. The very oxygen that is inhaled by us contains cent per cent patriotism. The ever wakeful eyes of the 'Devas' are riveted to our Tamil Nad, and the Seven Chiranjivis (Immortals) are pouring blessings upon the leaders of the intelligentia.

At one corner, there is our Pandit with his newly learnt queer interpretations of caste and untouchability, with his favourite Sanskrit and slogams and quotations from Bhagavat Gita and with his burning anxiety to enthrone the poor God. The Pandit's caste and temple entry have a meaning of his own, just as Mr. Gandhi's *Varnashrama* has got his own meaning. The Rama of these two leaders are quite different from the Rama of the world. The great Pandit from the north is solving the temple-entry problem just in the same way as the Saivites are solving it with the help of their *Periyapuranam*. His surprises at and protests against 'a movement which is out to destroy caste' are undergoing severe tests. His plea for the Hindu religion of which he poses to be an ardent advocate, ought to have come a thousand years back, and that too, in other countries. The Pandit is learning day by day that fresh versions of Sanskrit sayings, which his memory is so capable of, cannot help him any more. The Pandit is painfully made to realise that South India is no longer the suitable ring for his acrobatic feats. He is finding his work unpleasant but not tedious. For, fortunately there are some people still who are unwilling to lose the opportunity of seeing a new tiger in the zoo. People may hate the tiger's yawns, but they pay any amount to see a new animal.

At the other corner there are the South Indian patriots with their crowded programme of active tours and beach-trained oratory. Evidently, the lecture season has come in the Tamil Nad. For the next six months and more there will be a busy trade on God and religion. The traders are already at their work, with a big capital behind them. It is rumoured that a long list of the achievements of these patriots is in the course of preparation. The traders know as a matter of fact, that it is too late to trade on the Hindu Religious Endowments Act. Even in the last elections

it did not pay them as much as they expected. Hence there will be fresh commodities this year. The Chingleput Conference will furnish them with sufficient materials to be misinterpreted and misrepresented to the people, and there is the innocent Justice party with its proverbial 'anti-Congress views', to bear the burden. There is the Self-respect movement to remind them of their long-forgotten God and religion. These facts can be usefully twisted and mended to serve the 'patriotic' purposes of the circus masters. If Gandhi-ki-jai does not serve them as before, they will try Sami-ki-jai or Religion-ki-jai. There will be not a village where 'the sin of untouchability' will not be talked of and there will be not a town where downpours of patriotism will not be showered. Instead of national songs, there will be tried some religious songs this year. If they find it too late to prepare a record of their work in the past, they can safely resort to vituperations on the Justice party which can easily be attributed the business of 'job hunting'. Then the resolutions of the Chingleput Conference can be utilised in the name of God and religion, if not the country. Both the Justice party and the Self-respectors can be mixed up together at least to hoodwink the public and defeat the Justicites in the coming elections. And there are Kalyanasundrams and Varadarajalus who can be cunningly handled for propaganda through the press. It is enough if some more subscribers are promised for the 'Navasakti' and the 'Tamil Nadu'. They will dance to the tunes of the circus masters.

But alas, the public are not to be so easily bamboozled as before, they have had enough of the South Indian patriotism, and its fire-eating promises. The people know how far the bureaucratic lion has been bearded in its own den; how far the 'satanic' British Government has been obstructed from functioning; how far the goal to Swaraj has been reached and how far the Independents are independent of honesty and straight-forwardness. They have seen how far the constructive programme of the Congress has borne results; how far untouchability has gone from the land; and how far they have sincerely attempted to drive away the drink evil. They have seen how far khaddar is feeding the 'dumb millions'. It is no wonder then, that the 'patriots' have hit upon new promises of saving God and religion. 'Vote for the Congress and protect your Gods', will be the election cry. For, are they not, being *bhoo-suras* (Gods on earth) bound to help their powerless heads?

'The Millenium of Swaraj', these nationalists used to say 'will be as happy as Ramaraj'. And it is why Mr. Malaviya enjoins upon the people to utter the 'Narayana' mantram. Thereby he hopes to get Swaraj which is Ramaraj. And an audience of 10,000 at Kottayam shout out 'Ravana-ki-jai!'. For they fear that under Ramaraj, they will have to lose the head of a Non-brahmin for the death of every Brahmin child. They fear the restitution of *suttee*, in the name of chastity. They fear the instalment of *Varnashrama* in the name of religion. They fear more

Brahmin Conferences in the name of Sanatana Dharma. They fear more impaling of the Jains and Buddhists by the worshippers of Siva (the God of Love). If under an alien Raj these orthodox bands of religious bigots are left to masquerade in the land and are allowed to use, in season and out of season, the treacherous weapons of God and religion, and thereby threaten the people into submission socially as well as politically, are not the submerged communities justified in dreading the Brahmin Raj, or worse than that, the Raj of the Vibishnas?

Let us frankly tell these patriots that the public feel it extremely sickening to hear more of these priggish platitudes. It is no longer possible to hide the nakedness of the Swarajist promises. Let them however try their last trump card but let them only play out the game.

['*Revolt*'—Vol. 1. No. 28. Dated 15th May 1929, Erode.]

2. ON MOVEMENTS

1. IS THIS NATIONALISM?

(*By Eaviyar*)

For thousands of years India's wealth has been undermined by the incomers in the name of religion, God, festivals, caste, ceremonials, etc. And as a result, people have been plunged into the mire of ignorance and illiteracy. Similarly, in recent years, in the political arena a section of the people are wasting our wealth and are acting as spies to foreigners and are playing havoc on the country in the name of Nationalism, Swaraj, Independence etc. People are not able to realise this sort of sham. For in our country, however educated a man is, his reasoning faculty is curbed by his religion and his powers of discrimination are arrested. Similarly powers of discretion cease to function in respect of politics. Just as a set of people meet their selfish ends in the name of religion, there are also those that call themselves educated having similar interests in politics. This conclave of people has enshrouded humanity in ignorance which has ultimately brought the country to a calamitous condition. Since 40 or 50 years, the sham of politics has wrought countless wrongs to our country and kept the mass ever under its thumb without allowing it a single chance to raise its head. The selfishness of the educated class and the misguided blind belief resulting from the ignorance of the uneducated people keep us away from search after truth and justice.

Let us examine the present condition of politics in our country. Today in the political world there are two sets of people that are making much noise, viz the Congressmen and the Independents. What are their

qualifications? Let us examine their 'deeds' and sacrifices' in the name of politics. On the Congress platform they would declare that the 'satanic' British Government should be swept off at once. People would also applaud them. But their sons, brothers and relations would be earning Rs. 500, 1000, 2000 & 3000 a month as munsiffs and judges under the same Government. Their heroic declarations would but serve to strengthen the positions of their relations in the various professions and yet they will be masquerading in the name of the country.

The Secretary of the Congress, Mr. Rangasami Iyengar would roar, "we must obstruct the Government from functioning and beard the lion in its own den". But his brother would grawl into the den of Government, bow low to the Britisher, lick at his feet and hold the banner of the bureaucracy. Mr. S. Srinivasa Iyengar, the Independent-wallah would ask others to do away with the British connection, but, every morning he would unconsciously find himself at the feet of the judges addressing the representatives of the 'satanic' Government as "Your Lordship, Your Honour", etc., and would coolly pocket a few thousands. His creed of Independence would also help him in securing fresh appointments for his kith and kin.

And there are other political magnates who are said to be intoxicated with too much of patriotism. Messers Srinivasa Sastri, T. Rangachari, Mani Iyer, V. Krishnasami Iyer, C. P. Ramasami Iyer, C. Vijayaragavachari are names to be conjured with. And surely their sons, nephews, brothers, brothers-in-law and other relations are reaping the fruits of these 'patriotic' brains. Those that are unfit for Government services and those that are retired from service have come out as patriots, but their sons and relations are in the service of the 'satanic' government.

After the advent of the Congress, i.e., since 30 to 40 years, the Brahmins have managed to enter into almost all branches of Government services. And so it is proof positive that the national organisation, the Congress has done nothing but the obtaining of 97% of the appointments to the Brahmins who are but 3% of the entire population.

Year after year resolutions are passed in the Congress demanding provincial autonomy and reforms in the machinery of Government. But the number of new appointments is increasing in geometrical progression resulting in the consequent increase in taxation. The Government are forced to throw loaves and fishes of office to these patriots and if they refuse to do this, there is a big agitation brought about in the name of the illiterate masses. The Government find itself on a bed of roses day by day, by providing appointments for such agitators and their kith and kin. It is why Government also are helping the Congress. The Britishers are here to earn and to enjoy. And there are the Congressmen to secure comforts and conveniences for the Britishers.

A number of political parties have sprung up within the Congress itself, as Independents, Swarajya, Liberal, Home Rule etc. Each of them sings the same chorus of 'amelioration of the distressed' create new appointments, new committees, new delegates-ships to foreign countries and the like. The ultimate result is a heavy taxation on the people and the consequential impoverishment of the nation. For example, today we find thrice the number of officers in each of the departments of Government service as that before the advent of the Congress. Has the population increased thrice after the Congress?

They ask people not to learn English since it is a foreign tongue. But they educate their children in English schools with the help of their earnings got from us by such fraudulent methods as festivals, ceremonials and other rites. And today we find the Brahmins who were fed in chatrams employed as proprietors, and those who studied under municipal lanterns occupying all places in Government services. And this is done again in the name of nationalism.

Before the advent of the Congress i.e., before the Government bribed the monopolist community with appointments, the revenue of our country was about 25 to 30 crores. As a result of the work of the Congress for these 40 years and more, 140 to 150 crores are being collected from us in the shape of taxes. The aggrieved party is not the Independence-wallahs who were once beggars (for that is the verdict of history) but we the agriculturists, traders and labourers. And the result is, there is an increasing flow in the emigration of labourers to foreign countries. Yet nationalism is masquerading the land.

But when we press for communal representation, there is the cry from the so-called nationalists that it is an obstacle to national progress, and we are labelled as 'unpatriotic'. Then, there is no longer the usual pressure for fresh appointments. We are styled as 'Brahmin haters' and the 'nationalists' use this weapon as one of their election tatics when they came to the people with their fire-eating promises. This is again done in the name of patriotism.

The present ministers of our province are condemned, and especially Mr. S. Muthiah Mudaliar is decried as a 'traitor'. Where does the truth lie? The Congress resolution ran that no support should be given to ministers and that diarchy should be broken to pieces. But soon after the last elections, was it not these Congressmen that helped Dr. Subbaroyan in the formation of the ministry? And is it not an open secret that Messrs. Ranganatha Mudaliar and Arogyasami Mudaliar were chosen as ministers on their promise to play to the tunes of the Congressmen? Then Mr. Muthiah Mudaliar fought the Congress members in the Provincial and the All-India Congress Committees. But he was not only denied a chance to speak in the All India Congress Committee, but the 'nationalists' congratulated themselves on their achievement in forming a ministry

from other than the Justice party. Can any one with Non-brahmin blood in his veins continue in the Congress any more? And so Mr. Mudaliar was obliged to resign his seat on the Congress Committee, form a separate party, accept a ministry and do what he can to the cause of the Non-Brahmins.

What the previous ministry for a period of 7 years was not able to achieve, Mr. Mudaliar achieved within a few months after the acceptance of his office. It is he that was responsible for doing the pioneer work in securing communal representation in the services. That is why the Brahmins denounce Mr. Mudaliar and also induce others to do the same. Wherever their interest is affected they appear in their masks of patriotism and stand before the masses, in the name of nationalism. Such a Congress, we do not want; such a patriotism we do not require. Come what may, let us not be perturbed by such terms as 'traitor to the Congress' and 'traitor to the country'. In the coming elections, of course, the Brahmins would move heaven and earth to defeat Mr. Mudaliar. They would even employ agents to dupe the people. If it is a fact that they want to end diarchy, was it not the Congress party that formed the ministry soon after the last elections? When we say this, we are traitors to the Congress!

Then comes the question of the Simon Commission. During the last elections, the Congress candidates promised to co-operate with the Simon Commission and canvassed votes only on that condition. But when they found that the Brahmins and their satellites had no place in it they have raised the 'Boycott' cry. If the members are sincere they should resign their seats in the Council and seek re-election on the boycott ticket. We hope the 'nationalists' would take up this challenge.

['*Revolt*'—Vol. 1, No. 21, Dated 27th March 1929, Erode.]

2. THE SELF-RESPECT LEAGUE

The Self-respect movement ever since its inauguration by us a few years back, has made rapid strides among the masses, and has created a good deal of stir in our province. Thanks to the orthodox section on the one hand, and the unthinking self-depreciating followers of orthodoxy on the other, the movement had its constitution finally fixed on that memorable day of the 18th February of the year of grace at Chingleput. The Self-respect League was given a final shape, with a General Comittee of enthusiastic members.

After the Chingleput Conference, (which by the by, evoked a volley of questions from the interested few at the Legislative Council) the movement took a stronger and more impressive hold of the younger generation, which resulted in the Conference of the Self-respect youths at Pattukkottai. As one aware of the results of all the 'one-man's move-

ments', we thought it wise to shift the burden from our tired shoulders to a committee, whose members have given ample testimony to their selfless work and capacity for sacrifice. We are also prepared to hand over the journals that are under our direct management, to the Self-respect League, when we are convinced of its financial and other equipments.

With a view to give a permanence to the League, in all its aspects, we have determined to enroll members to the League. The object of the League as embodied in the constitution is "social reconstruction so as to secure liberty, equality and justice for the individual". All those who are eligible under, section 2 of the constitution (published on page 100 of '*Revolt*') are entitled to become members of the League. Those who are desirous of becoming members are requested to send the application form, printed in the last page of this issue, or a copy of it, with the annual subscription of annas Two. We expect *everyone* who is after social reconstruction, especially everyone of the youth world to take to the task in right earnest and fulfil the desire of a movement which aims at bringing together the multitudinous sections of humanity.

['*Revolt*'—Vol. 1, No. 34, Dated 7th July 1929, Madras.]

3. FIGHT TO THE LAST

We had occasion to refer in our last article to the impending danger to a movement which has been started by the most foreseeing social workers of South India but which is today unhappily being roughly handled by a politically-intoxicated section of the educated group of the Non-brahmin community. We have been time and again stressing upon the dangers that would inevitably follow the admission of Brahmins into the Federation of Non-brahmins. We have pointed out how the question of the inclusion of Brahmins is nothing but an unwitting attempt to lay the axe at the root of the best of democratic movements. Ours is an organisation purely democratic, in the strict sense of the term. Real democracy hates aristocracy of any kind. Aristocracy by birth is as harmful, and even more harmful than aristocracy in wealth or intellect. A Brahmin is an aristocrat by birth who holds a firm control over the intellect of the masses thereby establishing his superiority over the rest of our people. Even as the French Constitution prohibits any member of the Royal family becoming the President of the French Republic, the originators of the Non-brahmin movement thought it wise and safe to exclude the monopolist element from the organisation. Ever since its birth, the movement has traced its way through the dark paths of thorns and bushes, through the tumultuous waves of political manipulations of self-seeking individuals and through the storm and thunder of the monopolists of the country. In short, the movement has survived, thanks to the social oppressions of the Brahmins, the several onslaughts that were made from within and without.

At the end of the last elections, the political party of the Non-brahmin movement suffered some reverses, which for the nonce, appeared to be greatly discouraging. But that was a blessing in disguise. The defeat showed to them how their work in the past has not been so much satisfactory to the masses, as they hoped to be. It was a period of low tide for the party and indirectly to the movement. Again a fresh start was given to it by the forceful and practical work of the Self-respect movement. The newly started one took fire with the younger generation, and the spirit of the Non-brahmin agitation was diffused throughout the Tamil country, and even beyond. The tremendous achievements of the Self-respect movement within a period of four years took hold of the minds of the masses so firmly that the echo of the movement is heard to-day in far off lands and islands. It is no exaggeration when we say that in Burma and Ceylon, almost all the Tamil speaking people are whole-heartedly in accord with the principles of the Self-respect movement. Thus, as days went on, the old movement began to be little by little merged in the new one, until the one was identified with the other. The first Self-respect Conference has decided not to admit Brahmins into its fold; and what is the S.I.L.F. going to do? We wait for the answer.

By the unbounded enthusiasm and tireless work of the youths, the movement has emerged unscathed from the blazing fire of opposition and suppression. In their selfless work for the amelioration of the down-trodden masses, our youths have carried the noble message of the movement to every nook and corner of the Tamilnad, and have laid the foundation for the growth of a democratic spirit in the country. While some of our elders were playing with fire and making love to it, within the Council and outside, the youths of the movement were making a life-and-death struggle against the forces of orthodoxy and obscurantism. They only can realise what impediments they had to face on their way, in how many ways Brahmins or Brahminisim tried to upset their work, and what methods they pursued to undo their attempts. The ignoble task of setting up our own people against us, the contemptible method of misrepresenting the ideals of the movement, and the despicable manner of misinterpreting the objectives of the movement have not yet vanished from the sights of our youths. If even under the above circumstances, the Brahmins had succeeded to a certain extent in obliterating some of our easy achievements, and in blockading our progress, we know not what else they cannot do, if they are openly admitted into our fold. We are sure, however, the youths of the land will not be so unthinking as to give our *only* sword to our enemy.

In our humble opinion, social reform is not such an easy game as politics. The policy of 'Tickle me Tobby and I will tickle thee', may be fruitful in politics, but never in social reform. The task of social reconstruction is a play with the sword. A slight slip will end in a cut.

A wrong swing will result in a thrust. An intelligent sword-player, however skilled he is, will not agree to have his sword soaked in poison. It is not only deadly to him but to the audience also, whose fate would be final if the hilt of the sword loses his grip. That is the game we are playing now. Are the youths, we ask, going to allow the soaking of their sword in *poison*?

['*Revolt*'—Vol. 1, No. 47, Dated 6th October 1929, Madras.]

4. THE CHOTA GANDHI

Mr. C. Rajagopalachari in his address at the Srivilliputur Taluk Conference, has unfolded some strange and shrewd things. Speaking on the Self-respect movement, he says, "For years I have been wanting to see all artificial and imaginary differences between man and man abolished and a homogeneous nation established in our land......There is no one who more earnestly wishes people to be free from superstitions than myself". Weighty words indeed! What a radical reformer Mr. C. R. has turned into! Can we imagine a greater freethinker than our Chota Gandhi? Let us see what he says further.

"We must bring about reform of customs", says the ideal reformer, "as rapidly as we can, but let us not imagine that our forefathers were one set all fools and another set all rogues. Their children could not be very wise or good if such were the case". This logic of Mr. C. R. plainly shows that he is a believer in the Law of *Varnashram*. He is of opinion that fools and rogues cannot beget wise and good people. Apart from the sharp differences between the pairs of these opposite epithets, we are at a loss to know why the descendants of the Rishis are reduced to the necessity of keeping coffee hotels and laundries without indulging in divine communication with the Omnipotent God, as their forefathers are said to have done.

Mr. C. R. is more funny when he suggests the remedy for 'establishing a homogeneous nation'. "I want every one of you who believe in an Omnipotent God", says he, "to resolve that from this day forward, every morning, the first thing to do on waking up is to pray that hatred between caste and caste, may disappear and that in beautiful South India the atmosphere of love and patriotism may again nourish us to life. I believe in silent, fervent daily prayer. Our evils are of our own making and prayer purifies us and reaches God".

We strongly advise him to adopt the same step in his Khadi and Temperance propaganda. Let him not waste his slender frame by straining himself in composing his two lined mottos and undertaking long tours. We 'pray', meanwhile for the long life of the most radical reformer. Om! Santi, Santi!

['*Revolt*'—Vol. 1, No. 51, Dated 3rd November 1929, Madras.]

5. OURSELVES

Not out of any journalistic tradition or egoistic practice do we write on 'Ourselves', on this day of the dawn of the second year for the *Revolt*. Our intention is to attempt a sort of self-introspection which is possible only in calm moments of one's life, which occurs but very rare in an era like this when human energies are spent in the attempts to conquer space and time. We said 'calm' not without purpose. We are indeed sailing in a calm atmosphere, having spent ourselves in a year of terrific storm coupled with surging billows. But whoever knows our 'calm' is not one before storm?

It was on the 7th day of November 1928, that memorable day in the history of the nations, the day of the anniversary of the immortal Revolution in Russia, the day which is looked upon as the violent explosion of human liberty, the day which is memoralised by millions in Russia for the mighty mixing up of monarchs and the masses,—it was on that day that the *Revolt* saw the light of day at Erode. Even as we pointed out at the outset, we 'unfurled the flag of revolt to destroy tyrannies and to befriend men and women'. Our aim, as we declared, was to put before our people, and humanity in general, how 'social injustice is at the root of our economic bondage and political subjugation'. Our work in this direction, has therefore been, merely educative. But we have been, not once or twice, branded as 'destructive'. "True education" as a writer once remarked, "is more destructive in character, than constructive". For, mankind has to unlearn many things at its various stages of life. The Self-respect movement of which the *Revolt* claims to be a loud-speaking organ, has taught in a period of half a dozen summers, what mankind should unlearn before storing up new stock. In 'ringing out the old, and ringing in the new' ideas, the *Revolt* has carried its banner amongst many odds.

Our country is so saturated with time honoured customs and institutions, not to speak of their protagonists and upholders, that the difficulties on the way of a work like ours, can be more imagined, than described. In proclaiming the aims of the Self-respect movement to places where we could not be heard through our Tamil journal, 'Kudi Arasu' which in spite of its largest and really enviable circulation throughout the Tamil-knowing places in and outside India, is not able to command a sufficiently wide hearing, we have carried our mission successfully through *Revolt*. The limitations to our task are too well-known to our readers to need any enumeration here. In the first place, ours has come to be, by the natural course of circumstances, perhaps the first journal in India to wed itself to a deliberate advocacy of rationalism. Though the *Revolt* was chiefly intended for the task of social reconstruction on a basis of equality and justice, we have come to the painful but inevitable

conclusion that the task of thoroughly revolutionising an age-long system in a country of antiquated culture and habits, cannot be done effectively without taking a rationalistic view of life.

This is no smooth sailing in our country. At the first stage of the *Revolt*, we brought down upon ourselves the fury of the Brahmins, the monopolists of the country, who hated us for our disagreeble task of exposing them to the masses. Then came the Saivites, who though a microscopic community in India, are not a wit worse than the Brahmins in the cruel suppression of the thousand communities below them. Their wrath has almost reached a stage, when it can be safely said, they have exhausted themselves completely. The third stage of *Revolt*, which was not long after its birth, was reached when the Muslims and Christians, hurled their attacks upon us for our anti-religious policy. The final stage has been reached even many months back when the protectors of God took cudgels against us for our repudiation of the necessity for a god. This shall give a fairly good idea of the route which our ship has taken. In fair weather and foul, we have steered ourselves with the help of our readers, who have ever since been a dutiful and helpful crew. Storms assailed us at times and waves threatenad us by turn. Knowing as we do, the initial difficulties on our way, thanks to our learned contributors who have done a voluntary service to humanity, we feel stronger and stronger in the advocacy of a bold view of rationalism, and have never felt the mood of depression or discouragement.

On the other hand, it may be said to the credit of the progressive section of humanity, world currents are taking us farther and farther in our work so as to enable us to have a quick and an easy sail. Apart from the speedy progress outside India made by Russia and Turkey, which in its turn has startled up from their slumber many thinking men and women in other countries also, in our own country, events, like the courageous attacks on Mullaism by the Muslims of Bengal, the dramatic casting off of the Purdah by the Nambudri ladies of Malabar; the surging waves of the depressed communities attempting to roll heavily into the temples and other public places in order to secure equal rights, and last but not least the Acts that have been passed in the sphere of social reform, and the Bills that are yet on the anvil of legislature,—these and innumerable events of a like nature have emboldened us to lift up our banner of *Revolt* higher and higher and march with the army of *Freethinkers* and *Truthseekers* in our onward march. Again we repeat our watchword, 'We will not compromise; we will be heard'.

['*Revolt*' Editorial—Vol. 2, No. 1. Dated 17th November 1929, Madras.]

6. OUR ACHIEVEMENTS

Elsewhere is published the news of the Self-respect inter-caste marriage of the Sub-Editor of our paper, Mr. S. Guruswami with Srimathi T. S. Kunjitham. The Self-respect movement in its manifold activities and all-embracing programme of social reconstruction, has done (all only with the co-operation and sympathy of the thinking public) what little it has been able to do within a short period of about five years. In the abolition of priesthood, which was its first programme of work, thousands of ceremonies and rites, were, within the first two years, either wholly stopped or done without the interference of the priestly classes. Such news of stopping the meaningless rites and ceremonials and doing away with the intermediary either in worshipping 'God' or in either obsequies, came to us in such large numbers, that, as time went on, we were forced, due to want of space, to stop publishing such news in our vernacular weekly, the 'Kudi-Arasu'. Then the next stage came when the Self-respect League demanded its members and sympathisers to encourage widow-marriages and inter-caste marriages. Such marriages besides being devoid of the intermediary, are also conducted without any of the meaningless ceremonies and superstitious observances. And it is unnecessary to inform that inter-dining also becomes a concomitant necessity on such occasions. And the marriage of Mr. Guruswami can be said to satisfy all the above conditions. Inter-caste marriages are looked upon as something of a revolutionary idea or even as a blasphemy especially by certain orthodox castes in our country; and among such castes, the bridegroom's is also one. So it is no wonder that this back numbered community cries, 'blasphemy!' at this event and laid at the time of the marriage, as many hindrances on his way as they could. It is a matter rather, for pity than shame, that all his nearest relations boycotted the marriage *en bloc*. For, has not caste been polluted when a member of the 'Mudaliar' community married a member of the 'Vellala' community!

But the very fact that such prominent men as the Dewan of Mysore, the Members and Ministers of Government, Editors of Newspapers, big businessmen, wealthy landlords, members of the Legislature and other innumerable influential ladies and gentlemen have sent messages of congratulations to the married couple indicates that there is not only a strong support to such reforms, but also there is a remarkable change in the social atmosphere itself. We heartily congratulate the bride and the bridegroom for their bold step, and "eagerly welcome even inter-provincial and inter-racial marriages", as one of the messages of congratulations ran.

['*Revolt*'—Vol. 2, No. 3. Dated 19th January 1930, Erode.]

3

3. SOCIAL REFORM OR SOCIAL REVOLUTION?

1. SOCIAL REVOLUTION

Social reform is a project in which I had much hope but have now lost it. The problem facing the nationalists, self-respectors, and socialists is, to my mind, not social reform, but really what may be called destructive work undertaken with courage and resolution. I may submit that I have come to this conclusion only after deep self-introspection and practical experience.

Let me illustrate my point. Let us suppose that there is a big pond considered holy, with an old and popular purana attached to it which says that even a drop of water from the pond taken into the mouth or smeared over the body would not only save the worst sinner from perdition, but would also take him to heaven. But if the condition of the water in the tank today is such as to cause indigestion if taken by the mouth or to cause itches and sores if smeared over the body, what should we do? First we should try to kill the poisonous bacteria in the pond by spreading insecticide on the surface of the water, and if the position does not improve we should next try to empty the tank and clean it. And if the water is still found to be poisonous, we should decide that the very springs are polluted. In the circumstances would you still have faith in the purana and the holiness attached to the pond and continue to use the water, only to invite disease and death, or choose to close the tank once and for all by filling it with mud and debris?

In the above illustration, social reform is like cleaning the water with insecticide or baling out the water to clean the tank. To close the pond is to destroy it. I am a destructionist only in this sense. I say this only because social reform has had its day in our land. I do not refer to the modern types of reform, which are really not worth the name, as they are indulged in by some educated people and some plutocrats merely to hoodwink the innocent common man. They are not calculated to improve his lot. But yet the common man has been deceived by propaganda, with the result that his position is actually going from bad to worse.

The principal reason for this state of affairs is that the people who are really responsible for the degradation of the masses have come out as reformers for purely political reasons. But the reformers I have in mind are the great Siddhas, Buddha, Thiruvalluvar, Ramanujar and the like, who were reputed to have attempted social reform, but yet failed miserably.

Social reform varies from country to country. In the west, proposals for social reform apply to the whole community in equal measure. But in our country, the measures seem to apply separately to each group or community, involving inequality both in application and in result. The most important item of social reform in our country refers to the inequality based on birth, which is not to be seen anywhere else in the world. The next in importance are the beliefs and practices based on superstition, which are mostly allied to ideas about god, heaven and hell. Reform of these have been sought after great minds as said above like Buddha, Thiruvalluvar, Ramanujar, Siddhas, etc. Yet it cannot be said that anything effective has been achieved at any time. What a little has been done by way of changing our people's habits and thoughts, is the result or reformations in the west, foisted on this country either for the self-interest of our western rulers or in the genuine desire for reform. It is impossible to say that any reform has been done by our reformers genuinely for the benefit of the masses. The obstruction posed by belief in god, religion, Vedas, Sastras, is the main reason for lack of any initiative or effort on the part of our reformers. However, the divisions in Indian society have benefitted and still benefit certain castes, who have all along turned a deaf ear to all talk of reform.

The obstacles to reform have all been met by learned arguments and logic by great seers like Buddha, Kapilar, Thiruvalluvar, and Ramanujar, and it is difficult to say that greater things can either be said or done by any in future. The obstructionists who still happen to benefit by the divisions and superstitions in our society, are still active and flourishing. Yet it must be admitted that conditions in modern days are vastly different from those that obtained in ancient days. But the absence of any change in religious or superstitious beliefs even under modern conditions, is the principal block to all ideas of social reform.

It must be understood that god and religion are erected on the foundation of the superstitious beliefs of the people. Our daily life is regulated by superstition. As such it cannot be said that it is outside the pale of social reform to preach against blind faith and superstitious beliefs. On the other hand these are the targets for destructive attack in social reform. But as destructive tactics are ordinarily considered to be inconsistent with reform, it may be necessary to call the attempt reconstruction, meaning thereby that we destroy first and then reconstruct anew.

To engage in such reconstructive work, one must exhibit courage founded on conviction, as otherwise it will amount to suicide. It would be necessary for the iconoclast to work against serious and severe orthodox resistance which are the fruits of long tradition and selfish vested interests. Whatever are the causes of resistance they must be rooted out of existence. I am firmly of opinion that if anything of old, based on blind faith and superstition is sought to be retained or tolerated,

the result will be the total failure of reform. I am not one of those who feel that social reformers must necessarily be restrained by moderation and patience. I know that this would be distasteful to many. But it must be recognised that none can excel the moderation, patience, and tolerance of great seers like the Buddha, in whom I believe, these virtues were their weaknesses. People who are cautious about themselves and afraid of public opinion and heightened resistance, can never be effective reformers, and their panaceas can never bear fruit. Reformers ought strictly not to be bound down by any traditional rules. Instead they should be ready to sweep away everything before them.

Have not our old reformers tried long enough to change the people by peaceful persuasion, kind sermons and co-operative approaches? What has happened to their great efforts? How long are we to repeat the same processes? It is possible that sermons from the lips of savants like Vivekananda and Gandhi would be quoted against me. I am certainly opposed to their views. We all know that people worship portraits of these savants and glibly quote from their sermons; but what is the condition of our society still, I ask! Value is ascribed to a thing not by what it looks like but by what is obtained by it for posterity.

There are those who beseech that we should not in the name of reform destroy and end symbols and arts. But the fact is that what they regard as glorious in the ancient symbols, arts, and fineries, are to my mind the very things that contributed to the downfall of our people and the humiliation of our land. For instance, Ramanujar, firmly convinced of the validity or utility of the ancient symbols of Namam and Poonool, attempted to corner every pariah, palla and chakkili (cobbler) and invest him with these ancient symbols; and by that queer process he is supposed to have established equality among men. The result was the preservation of the symbols without an iota of change in the inequality of man. Inequality even amongst the wearers of these symbols not only persists, but their dislike of those not addicted to these symbols became more pronounced.

Our temples are the most sacred of our symbols. Almighty god is said to reside in them. They are essentially the places created to worship god. Yet what is the condition of these temples? What is the benefit derived from them by the people? Could any one gainsay the fact that the very evils to eradicate which the temples were created, are being freely perpetrated right in the presence of the mighty god? Have not brothels and drinking dens been compared to the temples? The position is similar in regard to the other arts of old.

One may ask what good have the Vedas, Sastras, Itihasas and Puranas, containing the doings of god on earth—and all ostensibly produced or revealed for the benefit of mankind—achieved so far? What have the Ramayana, Mahabharatha, Sivapurana, Vishnupurana, Periapurana,

etc., so much praised and propitiated by our Pandits and seers, done to the people? Do not these stories of gods contain incidents and characteristics worse than what we see in the lowest strata of our society? Can anyone deny that these puranas have been more a hindrance than an aid to human progress? Yet do we not see the reformers still being resisted by the traditionalists by these ancient so-called divine symbols and arts, and literature? It is not uncommon to find our pandits trot out obscure passages from these puranas in support of certain reformatory ideas. I believe these insertions are only to hoodwink the credulous people, as exceptions are said only to prove the rule. The miraculous incidents with which the puranas are replete, are, as you all know, beyond human comprehension and utterly devoid of reality and practicality, and therefore outside the range of repetition in the modern age.

Instances are related in puranas of a few pariahs being admitted into the temples, where the all-kind god is stated to have given them grace and outright salvation. If it is asked why such things never happen these days, the reply is that those pariahs were different from those we see now. If that is really so, where is the need to preserve these old arts and letters? Untouchability may be pardonable in view of human ignorance, yet we have stories to say that even god recognises untouchability.

What are the Things that Require Reform

Of the things that cry out for reform the principal ones are, to my mind, god and religion, for the very simple reason that these are the two things that are invariably put in opposition to all reforms.

The less I say of god the better it would be. Talk on god may be likened to a dripping pot, which is full when it leaves the water surface but arrives empty at the top of the well. It is a matter for empty discussion and not for substantial results. However the best of prophets have said that god is something that cannot be seen or touched and is beyond human knowledge; and finally that it is something that exists only when believed in. There is really not much to argue about in such a definition of god.

Religion is another thing that does not give much help to understanding. As far as I can see, no religion appears to have given man peace or prosperity. Yet in the name of religion, war and propaganda have filled man's history to the brim. Every particular religionist is convinced that salvation is possible only through his own creed, that his prophet is the only son of god, and that whatever that prophet is said is god's own work. There is also no denying the fact that there are numerous subdivisions or sects in each major religion. It is impossible to find out who is representing the truth, and whose threat of hell is to be feared most. Where is the need for so much competition to gain god's affection, I ask? Do these religious heads really feel so much as to strive to take men to god? If

these questions are calmly given thought, the absurdity and uselessness of religion will be apparent.

Even as one adventurer seizes power to become king ostensibly for the benefit and good of his people, and later, forgetting his mission, oppresses the people and leads them on to war to conquer other people's lands, so do these religious heads begin to lead people apparently for their benefit and later as power increases try to engulf all others in their particular creed as being the only one calculated to give all men salvation, whatever that my mean. Truth is therefore inconsistent with many religions and creeds and numerous agents of god on earth. Hence it is that it is difficult to identify religion with god, though each religion is supposed to be connected with god. If it were said that religion is meant to give a code of conduct to people in each region or country, and variable according to time and age, there might be some excuse for it. Instead of that it is said that the religious prescriptions are divine expressions not susceptible of any change whatsoever. Then it is nothing other than meaningless bigotry, fit only to be destroyed by all reformers. Social reform must go in step with man's change and experience.

Status of Men and Women

Women in general have been treated as sub-humans in society. Woman has been taken for granted as man's slave, even as it is said that cattle have been made to serve as food for the tiger or that rats have been made for the benefit of cats. If this was really god's law, our first duty would be to rid the world of that god.

Chastity : The status granted to women all the world over is bad ; more so in India. The rules of chastity imposed on them make one shudder. Chastity is held up as the sole criterion of their merit. Our puranas glory in a particular type of chastity, which covers implicit and slavish obedience to the husband or lord. If the husband says that cold rice is hot, the wife must simply throw it away. If the lord calls her while she is drawing water from the well, she must leave the pot in mid-air and the pot must also remain suspended in space till her lord sends her back. This means that if the pot drops back into the well, she is not chaste at all. What more is needed to emphasise woman's slavery and nothingness, I cannot say. Have our gods in the puranas treated their wives this way? We see them instead carrying them on their heads or tongues or thighs or shoulders. If women are slaves, their children can only be slave-bred herds. Where woman is a slave, there cannot spring a decent self-respecting society. Woman's freedom and equality with man is therefore a desideratum for civilization, and this is what a reformer should strive for.

In order to ensure freedom for women, all extreme ideas of chastity require to be abrogated. Chastity enforced under compulsion is really no

chastity. Love and companionship should alone condition chastity. One standard for men and another for women is totally reprehensible and cannot survive under the principle of equality. It would be moon-shine to expect men to voluntarily grant equality. It is the duty of women to strive for the goal. Government has also a responsibility in this regard. They can no longer take shelter under the plea of tradition and religion, any more than social reformers. Turkey, Afghanistan and China have already given the necessary lead in this matter. It must be remembered that the eyes of Turkish women and the feet of Chinese women have been freed from fetters.

Widowhood : A few words in regard to widowhood in India may not be out of place here. It must be plain to you that what is against natural instincts has been for long imposed on the unfortunate widows. This imposition not only betrays man's cruelty to women, but his total lack of proportion as well. It is really strange that a land in which goddesses are worshipped, the rivers are named after women, and the male gods are depicted as giving honoured seats to their wives on their heads or thighs, women in actual daily life should be treated as worse than dolls.

There does not appear to be any sense whatever in compulsory widowhood. One does not know who is actually benefitted by this enforcement, unless it be that some sadhus and sannyasins felt the need for the existence of such a group of women. It cannot also be that the ancient State feared a disproportionate growth of women and the consequent difficulty of matrimony among girls. At any rate this is a state that should not be tolerated any longer. Widows should henceforward strive for their freedom, find husbands for themselves, and take lessons from many of the lower castes, in which widows do marry. Social reformers have a special responsibility in this matter.

Caste differences : Caste did not arise by itself in human society. It is an institution that has been deliberately enforced under penal provisions. The basis for caste is that the stronger grind down the weaker. Caste is a proof of a fact that our people are not really a civilised people. Where is the need for caste divisions based on birth ? There is nothing to prove that any man in any caste is incapable of any human avocation or character or culture or intelligence. All men are born equal, and inequality taught and enforced in after life is contrary to nature itself.

All good people have wanted the caste system to end. Efforts in this way have not been wanting down the ages. But yet we do not see any change. I do not hope to witness any change through pious persuasion, searching of hearts, or national need. The institution can be attacked only at government level through representation in all things in proportion to strength in population of each caste. Equality in the enjoyment of material goods will ultimately lead to equality in status and the auto-

matic withering away of all ideas of high and low, on which foundation alone caste has been constructed.

Equality of representation in all things ensures absence of exploitation of the weak by the strong. This demand cannot be outside the range of social reformers. Some nationalists raise the objection that claims based on caste would only perpetuate caste. They patriotically plead for equality of treatment, knowing full well that it is the high-caste man who will benefit by equal treatment amongst unequally developed castes. There are, besides, religious and psychological inhibitions to restrain and pull back the lower castes and push forward and encourage the higher castes. It is for these reasons that representation on a population basis is the panacea, as a first step to ultimately eradicate caste.

Untouchability : A system which says that one man should not touch another man for fear of polluting himself, is horrid to contemplate. One wishes that a country in which such a system obtains should be destroyed by fire or earthquake or floods. How on earth it is possible to credit the mighty god with the attributes of mercy, grace and benevolence, when untouchability as an institution has persisted for ages, passes one's understanding. Would it not be desirable for the untouchables to free themselves by force or violence and perish in the attempt? Can a country that harbours this system, really crave for political freedom, swaraj and a civilised life? There are people, I know, who have said that these injustices will go once political freedom is achieved. They forget that the horrid institution of untouchability was created and preserved when India was free and was ruled by godlike kings like Rama and Harishchandra. The cause of untouchability is not political slavery. It is the Hindu religion, pure and simple. Social reformers have perforce to kill the demon of untouchability if necessary by killing the Hindu religion.

Education : Social reform necessarily covers the subject of education. According to me education should conform to nature and general human character. The rest can only be magic. Let me quote from Tirukkural

> Who knows what's human life's befitting grace,
> He lives ; the rest 'mongst dead man have their place. (214)
> Who know not with the world in harmony to dwell,
> May many things have learned, but nothing well. (140)

What is practicable and natural to the world of men, should be found a place in education. What is taught to-day is contrary to these fundamentals. What would serve the rulers, be they kings or priests, by ensuring the unalloyed subservience of the people to the powers that be, is what is served to our children. The present education, further, is calculated to subserve the interests of the exploiting classes that live on others' labour.

To be brief, I would say that worship of god, practice of religion, propitiation of the rulers, which are all calculated to keep in mental slavery, should never enter the portals of education. Further, education should more particularly be diverted to women, the untouchables and other backward classes; and denied altogether to those who credit themselves with divinity or intelligence through their birth itself. At least for some fifteen years, high caste pupils should be denied admission in all colleges and technical schools. An honest government, I feel, should do this unhesitatingly if it is intent on social equality and destruction of caste; and social reformers should oblige government to act in this way.

Superstition : That blind beliefs and superstitious practices should fall within the targets of social reformers, need hardly be restated, as it is already the general talk everywhere. Except for those who live by exploiting these beliefs and practices, there is no one else to gain by them. But for want of courage and resolution, the others are unable to change the position. God, religion, piety, Vedas are not the only things that encourage superstition. Beliefs about good days and bad days, vows, fasts, theerthas, sacred spots, and tributes to saints, etc., all help to spread superstition, which in addition make men waste their energy, wisdom, wealth and time. Although endowed with natural resources, India is enslaved, poor and primitive only because of our people's blind faith in superstitious practices. Some of the countries of the world that were very backward have within a few decades progressed in all arts and sciences, only because they struck at the root of the superstition that long enslaved their people's mind.

Our people dread to change even a small item of their senseless practices. God, religion, puranas and smiritis stand opposed to them. The objection of "our ancestral ways" is the worst of all. Crores are wasted in these practices. There are temples in India whose annual incomes run into crores, and they are wasted on useless rituals and for the especial benefit and aggrandisement of a few exploiters. To betray the credulous people into these senseless practices and beliefs, we have any number of puranas, agama sastras, legends of achariars, auspicious days and sacred places, ceremonies, etc. Even governments and foreigners are not free from the desire to exploit the people's credulity.

Take the railways in India as an instance. None can say that their authorities have any faith in our sacred places, rituals, pilgrimages, etc. Yet it is interesting to see what the railways do. "Do go for Thula Bath",—"Vaikunta Ekadasi invites you"—"Come to Dhanushkodi for Adi Amavasai"—"Witness Karthikai Deepam at Thiruvannamalai", "Don't you go to Kumbh Mela at Haridwar?"—"Come for Mahamagham at Kumbakonam" are some of the posters that one finds at railway stations and in the newspapers. Pictures of beautiful woman are also sometimes put in the posters to attract and deceive our people. They do

4

not do all this to conduct people to heaven. You all know it is solely to make money. I believe that the amount wasted by the people on these pilgrimages, rituals and talismans, would be more than what they pay to government by way of taxes. People who blame the government for not doing this and that for the good of the people, do not seem to bother at all about the money that people otherwise squander. In fact it is easier for economists, politicians, and journalists to attack the government for their omissions and commissions, than to turn their eyes and ears to the superstitious practices on which fortunes are spent. Experts to flare up at government for the least interference with superstition are also not wanting in this country.

If the money and energy spent on superstitious beliefs had been diverted to popular education, should we have the lowest percentage literacy in this holy land of ours ? The ultimate source of our illiteracy, poverty, and disease, is superstition.

Social reformers who preach on the platform, but do not follow their own teaching in practice are many. They seem to be stunned and deterred on facing facts. To keep up superstitious beliefs, the activities of the exploiters never cease. Almost every religious sect, like the Saivas, Vaishnavas, Siddhantis, etc., conduct conference ; Kalakshepams on Ramayana, Mahabharata, Thevaram etc., are never wanting. Social reformers must steel their minds and reinforce their activities to face these tremendous hostile forces if ever they are to succeed. To minimise the power and strength of the forces of superstition embedded in religion and god, is to court failure ; and to grant omnipotence and permanence to superstition is to betray intellectual bankruptcy. The fact that a practice or belief has lasted for ages and that it has a literature behind it, is no criterion of its truth. The world is full of able efforts of great men and great people who have succeeded in breaking down old and hollowed practices and changing the ways of men.

Since I have lost hope in social reform through constitutional persuasive methods, I feel that a totalitarian government pledged to rationalism and socialism will alone be able to do something. A government pledged to eradicate caste, must be in a position to proscribe all books and literature that glorify caste, division, however ancient and sacred they may be. A public bonfire must be made of all those books that harbour superstition and caste. All those Sankaracharyas and Matathipadhis that still practise caste must be jailed or exiled. The wealth hoarded in the temples by way of jewels and utensils must be confiscated and spent for the education of the illiterate and for finding jobs for the unemployed. It is necessary to prepare the country for a government that can boldly attempt these reforms. It may perhaps be necessary for many reformers to sacrifice their lives in the process. More than all, it is very necessary for reformers not to be afraid of being labelled atheists. The term atheism or the

idea contained in it has no sense in it. The real fact is that all those who lose faith in the Brahmin priests, the Vedas, Sastras, Itihasas and Puranas, are called atheists. If the superstition and exploitation of the priests cannot be destroyed without one becoming an atheist, well, there is nothing wrong in becoming an atheist. Indeed I am convinced that social reformers, if they are to face the world effectively, must straightaway declare themselves atheists. It is only then that the scare about atheism will dwindle and vanish. It must never be forgotten that priests and plutocrats will ever be enemies of socialism and therefore democracy and therefore of all reformers. It must also be remembered that the people who oppose one religion for another, put faith in one prophet as against another, and in consequense invite people to join their narrow fold, are all equally opposed to reform and enlightenment. It is necessary to warn people against such propaganda so that in their innocent credulity they may not be taken in by the false and misguided call for a change of faith. All religionists sail in the same sinister boat. A change of religion is no solution to man's ills. No religion is the solution.

A warning is essential in regard to those Brahmins and other orthodox people who easily seem to establish themselves as great reformers, merely because they have lately taken to meat eating, drinking, or eating in anybody's house. There are others who feel they contribute to social reform merely because they have made no distinction about caste in their marriages or in their concubines. It is wrong to regard these specimens as social reformers. At the same time let it not be made out that Brahmins alone are guilty of caste behaviour. It is found in all other castes, though perhaps not to that pronounced extent. I am aware of the criticism that while the Non-brahmins are bitter about the superiority complex of the Brahmins, they themselves do not grant equality to those below them in the infamous caste hierarchy. There is much truth in this criticism. My only reply is that the Brahmins have to take the greatest blame, because their forebears have been the authors of caste and it is they who have meticulously striven to preserve the system; and that if there were a change of heart in the Brahmins, the top of the ladder, reformation in all other rungs would be easier and smoother. I must repeat that representation in services and schools in proportion to population must be accorded to all castes irrespective of their old status in the hierarchy.

In conclusion, I may say that the ultimate object of social reform should be to teach good habits, extend knowledge, observe the principle of equality in all things, realise self-respect, and practise socialism and secularism in their true senses.

2. CASTE AND HINDUISM

What am I? What do I preach?

First— I speak opposing the god-idea.

Second— I belittle the organised religions of the world.

Third— I denounce the Sastras, Puranas, and their gods, and call upon the people to burn and destroy them.

I have said all these and have gone further and broken the idols of Pillayar or Vinayakar and burnt pictures of Rama. If in spite of these words and acts of mine, there are thousands of people to throng to my meetings, it only indicates that self-respect and wisdom have dawned on the people.

What does the Dravidar Kazagam movement stand for? It stands to do away with the wretched Hindu caste system that divides the people undemocratically into high and low. In doing so the Dravidar Kazhagam condemns the gods and sastras that support caste in one way or the other.

Even in 1958, long after Independence, caste dominates the life of our people only to emphasise the primitive backwardness of the country. In no other country has caste or class divided the people into thousands of watertight compartments. It is strange people do not spend some time in thinking over these matters. The dearth of real selfless leaders is very great in this country. The few who profess to be public men in the name of nationalism or party politics are men who are not in the least interested in the real problems of India. They are men who try to make a living out of the very things that make our country people backward. The advance towards social reform and national progress in other countries after their political independence towers far above what our leaders and government have attempted to do.

Is there any party in this country which categorically demands the abolition of caste, except us in the Dravida movement? There may be people to congratulate or praise our movement in its fight against caste, but they are again men who would scarce to go before the people openly to preach against caste. This is why barbaric practices and superstitious beliefs still rule the lives of our credulous people. Communities that were once barbaric in the west when Indians were civilised have gone so much forward in their civilisation as to leave, the Indians far behind. The white men of Europe not long ago roamed the forests clothed in skins or leaves to gain a miserable livelihood. They fished in the rivers and hunted in the forests. Their sex life was full of incest. Not knowing the art of cooking, they ate vegetables raw like animals. What are they to-day? They have begun to challenge and compete with god in inventing and making great things. Electricity, Radio, Television, Telephone, Railways, Aeroplanes, etc., have all been invented by them. They have sent into space artificial moons and are now trying to make homes for themselves on the moon itself.

In what way are Indians lower than the Europeans? In very ancient times, Indians invented many things, gave free vent to their thinking and lived in tune with nature. But in later times, free thinking was mussled through false beliefs in gods, religion, caste and superstition. The rational attitude was arrested and wisdom got imprisoned in priestcraft. Anybody who stood up against god and the sastras and puranas was immediately denounced as an atheist, anti-Hindu or anti-social anarchist. Until the Self-respect movement arose in the South there has been none so far to speak against the false gods and creeds.

So far as I am concerned I do not speak for or against the existence of god. I do not also ask people to simply accept my thesis without giving much thought themselves to the problems posed by me. Atheism is no easy situation for a man. Any fool can call himself a theist. It does not require a great intellectual to assert the existence of god. But courage and conviction are needed to make a man an agnostic or atheist. This is possible only for intelligent persons with power to reason out and convince themselves about their position. There is no possibility of blind belief in atheism.

I suppose there are about a thousand million people in the world to-day who have lost faith in god. Believers are certainly greater in number. The Christian and Muslim believe in one god. That god has no name and shape and has no desire. Why don't we have one like that? Why should there be thousand of them for us? If one starts writing out their names, the pen would get dried but the names would not get exhausted. What is the origin of these gods? Ask any priest and he will start silly Puranas. Had it not been for the rationalist urge of the modern days, it is not impossible that the milestones on the highways would have been converted into gods and dismay caused to the travellers! It does not take much time for a Hindu to stand a mortar stone in the house and convert it into a great god by smearing red and yellow powders on it. Have people really thought about the cheapness of our gods?

Almost all fine-looking animals and birds have become our gods. Elephants, pigs, fishes, crows and snakes have not only become divine, but have also honoured human bodies with their heads. Why all these half-human and half-animal gods? Ant-hills invite the gift of milk from our women folk. The vulture flying high in the sky calls for the pious to beat their cheeks. The cow on the road is touched and worshipped by the passer-by. Our gods have from one to ten faces and their tummies sometimes cave in or bulge out. What are all these caricatures for? What do they do? Where is the need to exhibit god or ourselves? Why don't people think about these things?

We are told that our ancients made some animals and birds gods in order that people might respect them, treat them well and kindly. The explanation is absurd on the face of it. Are cows, monkeys, dogs and rats

ill-treated in countries where they are not worshipped? Indian cattle are the most famished in the world. Without trying to take care of them, the old cows and bullocks are let loose into the streets to starve and find a slow death. The bulls let loose in the streets as a religious and pious duty add to the misery of the street hawkers and pavement traders. The monkeys worshipped as god Rama's devoted bhakta and emissary cannot be killed in India. The criminal waste perpetrated by the monkey in home gardens in towns and cities is enormous. Nobody has bothered to measure the quantity of food products in the form of both vegetables and fruits that is daily wasted by monkey mischief. The fad about cow slaughter has only added to India's food problem and is an economic drain on the already bankrupt finances of India, which still imports even rice and wheat from America and other countries. But who cares?

More than two thousand years ago, Buddha tried to liberate the mind from the tentacles of the Hindu religion. He asked people to ask the why, how and what of things. He called the Vedas so much humbug. He refused to acknowledge the authority of rishis and mahatmas for anything. He called upon the people to think for themselves in their own living languages and arrive at simple truths of life. What was the result? The people who preached rationalism were killed on the oiled pole, their women dishonoured and their houses burnt down. With the extermination of Buddhism, rationalism took leave of India, Buddhism failed to flourish in the land of the Buddha. It went into China and Japan, not to ruin them but to make them great. Who can excel the Japanese in their national character, in which discipline, cleanliness, honesty and hospitality are of the highest order?

After the Buddha, the great Thiruvalluvar was born in India, about the beginning of the Christian era. He preached what Buddha had taught. His inestimable Tirukkural was thrown into the waste paper basket, to shamelessly hug the Gita and Manu's code.

The Sankaracharyas of our modern times are being propitiated by the people, not knowing that they are really godless. The advaita preaches the oneness of all in god, and the Sankaracharya goes to the extent of identifying himself with god. Where then is god for him? The vibhuti drawn on his body, the worship of the female goddess as Shakti, and the wearing of the saffron cloth are all for deceiving the public and camouflaging his nihilism.

How can god have birth and death? Take all our gods. Rama was born in Navami. Subramanya was born in Sashti. Krishna says he was born in Astami. All these gods die, according to their Puranas. Is it not strange that we should still be worshipping these gods? Why should god be worshipped? Why should one spread food before him? Why should he be undressed, bathed, and dressed daily? Even the female gods are

being undressed and bathed by the male priest! Neither the goddess nor her bhaktas are outraged by the obscenity!

Why do the gods want wives? They are generally not satisfied with one partner. Sometimes they need concubines. Why should the god in Tirupathi want to go to a Muslim concubine by name Nachchiar? And all these gods are to be married every year. What happened to last year's marriage? When were they divorced? Which court granted them divorce? Has all this fun about god made our people wiser, more united, and more clean?

The Christian, Muslim and Buddhist gods are declared to be embodiments of mercy, grace, and benevolence. Christian and Buddhist idolatry bespeaks these characteristics. Take our gods. One god will wear a spear, another a bow and arrow. The mace, dagger and shield adorn other gods. Why all these? The terrible chakra ever swirls about the finger of one god. To kill whom? If love and grace conquer men's hearts, why all these murderous weapons for the gods? Obviously our gods are able to conquer evil only by force, murder and war. And have they succeeded? We live in modern times, and true to it, is it not time that our gods are properly equipped with modern weapons? Should not the bow and arrow be replaced by the machine gun and the hand grenade? Should not Krishna ride a tank instead of the obsolete chariot? I want people to think and see the ridicule and shame still being put on god in this atomic age.

[*Extracts from the speech made by Periyar at Coimbatore in* 1958]

3. CASTE AND CONDUCT

(*Translated from the book* 'Arivin Chudar')

What is good conduct? The caste system has perverted our ideas about human conduct. The principle of different codes of conduct for each caste based on birth, and life led in accordance with it for centuries, have clouded the Hindu mentality almost beyond repair and destroyed the idea of uniformity in conduct. Graded inequality has got so much into the Hindu blood that general intelligence is warped and refuses to mend even after English education and higher standards of living. It is not therefore uncommon to find even college professors, England returned scholars and experts, politicians and lawyers behaving in their homes exactly like the unlettered purohit or peasant in remote villages. The one stock excuse these educated men blurt out for the inconsistencies in their life, is the force of tradition. They are quick to blame their old ladies at home. The fact is these have not the courage to practise their convictions and quietly submit to superstitious tradition in the name of domestic peace and let their education go to waste. Education merely to find a good job and make easy money is no education. This is why all

educated persons are not wise. Wisdom and culture have to be cultivated independently and may be had even without education. Education ought to help man to become wise and cultured. Caste and religion prevent the educated man in India from progressing towards wisdom and culture.

In all the world, chastity and love have been used to subordinate women and subject them to men's control. Likewise, morality has been used to deceive and exploit the poor and the downtrodden. Chastity, love, truth, justice, morals, etc., are all children of the same mother. They have all been put before the proletariat to twist them to a certain line of conduct for the ultimate benefit of clever and strong people. It is said that laws are all man-made and hence the subordinate position accorded to women. It can also be said that laws are all made by the strong and mighty to subjugate the weak and the lowly.

Just as children are kept under control through the fear-complex, the common man is taught virtuous conduct to keep him away from the exploiting classes and if possible to worship them as demi-gods. Children submit to the fear-complex and make-believe only so long as their intelligence is undeveloped. Even so the exploiting classes can keep the privileges to themselves only so long as the common people are kept in darkness in regard to their rights and the truth about conduct preached to them is hidden.

What is prescribed as good conduct or bad conduct is to be measured by the strength and cleverness of the party that lays down the rules, and not by their intrinsic worth.

Ordinarily, prostitution, falsehood, theft, and deceit are declared to be bad conduct, but there is no man who is not subjected to one of these in his daily life. The practice may not be open in some cases and in some others may not be apparent. A dispassionate peep into the past of one's own will disclose periods or occasions when virtue was set at naught for personal benefit. A little analysis of the conduct of our close relatives, friends or acquaintances will show us instances of their bad dealings and dishonest ways.

People in general depend for their livelihood on commerce, agriculture, public services, manufacture, the professions, etc,. Who amongst these conduct themselves virtuously all through their lives? It is not our purpose here to define virtue or good conduct. The purpose is to discuss what people in position and power mean when they talk about virtue and good conduct to others more unfortunate in life than themselves.

A capitalist will be found to scold a worker for an act which he himself would do openly. An officer in government service will find fault with a clerk for offences or lapses from which he (the officer) himself is not free. The only difficulty is that the clerk will not be able to say so in the face of the officer. To whom then is virtue preached? Likewise

a father would be found to condemn his son for acts which the father is himself doing. People given to bad habits are therefore to be found criticising those habits in others. This is not true only of a section of the people. It is true for all people. What I wish to emphasise is that virtue or good conduct is what we wish in others and necessarily in ourselves. It is largely used to deceive others who are low in the social scale and poor in wealth, and not used to really establish an egalitarian socialist society. For inconsistent conduct such as this, the Hindu caste system is a great aid. What is good and virtuous for some castes in bad for others. Bad conduct is permissible for some castes and prohibited for other castes. The principle of do unto others as you would like to be done to you by others is wholly inconsistent with the Hindu caste system.

If it is a fact that there is such a thing as bad conduct, and if theft, falsehood, and deceit are components of it, these characteristics are largely to be found amongst kings, priests, merchants, lawyers, politicians, etc., and certainly not amongst the poor and illiterate peasants and workers. The people who pain and impoverish, deceive and degrade the masses are these groups of exploiters. It would be no exaggeration to posit that bad conduct in general is part and parcel of the blood of these classes. Yet it is strange that these groups do not excite the dislike of the people. Indeed they are their objects of veneration or worship. This is so only because the masses are ill-educated and devoid of wisdom.

Good conduct can only be that which we preach to others and practise ourselves. One should respect another in the way in which he expects to be respected by the other. This is a revolutionary principle for the Hindus. It can materialise not by reform but only by revolution. There are certain things which cannot be mended, but only ended. Brahmanic Hinduism is one such.

—(*Translated by:* Thiru A. M. Dharmalingam M.A., LL.M., Bangalore, 1965.)

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

2

பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shrpj erd; (09-06-2011)
jkpHk; tiy (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

வே. ஆனைமுத்து

வெளியீடு:
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (இரண்டாம் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1–7–1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME II

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume II
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

திருச்சியில், பெரியார் (1970)



தம் முதிர்ந்த வயதிலும், 'விடுதலை' முதலான ஏடுகளுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள், தலையங்கங்கள் தீட்டும் பெரியார் ஈ. வெ. ரா.



திருச்சியில் பெரியார் ஈ. வெ. ரா. வாழ்ந்து வந்த 'பெரியார் மாளிகை' 1951-ல்;
அவர் முதன் முதல் பயன்படுத்திய சொந்த கார்

பதிப்பாசிரியர் முன்னுரை

திருச்சி சிந்தனையாளர் கழகம் தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்புவதைத் தலையாய கடமையாகக் கொண்டு பணிபுரிவதாகும்.

அவ்வகையில் தந்தை பெரியார் அவர்களின் சொற்பொழிவுகளையும் எழுத்துக் களையும் தொகுத்து, 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற பெயரில் மிகப் பெரியதான இந் நூலினை மூன்று தொகுதிகளாக ஒரே சமயத்தில் இக் கழகம் வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலும், பிறவெளியிடங்களிலும் உள்ள சுயமரியாதைத் தோழர்கட்கும், பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கட்கும், பெரியாரை முழுமையாக அறிய விழையும் அன்பர்கட்கும் இத் தொகுதிகள் மிகவும் பயன்பட ஏற்றவை எனக் கருதுகிறோம்.

தமிழ்நாட்டின் கண் உள்ள பல்கலைக் கழகத்தினர், 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனையை'ப் பல்கலைக் கழகங்களில் ஒரு படிப்புத் துறையாக அமைக்க ஆவன செய்வார் களென நம்புகிறோம். அன்றியும் தமிழக அரசினர் நூலகந்தோறும் இத் தொகுதிகள் இடம் பெறச்செய்து, தமிழ் மக்கள் புத்துணர்வுபெறத் துணைபுரிவார்களெனப் பெரிதும் எதிர் பார்க்கிறோம்.

இந் நூலின் மூன்று தொகுதிகளுள், இது இரண்டாம் தொகுதியாகும்.

இவ் இரண்டாம் தொகுதியில் நாட்டுப் பிரிவினை, அரசியல், வகுப்புரிமை, மொழி, தலைவர்கள், தத்துவம், அறிவு வளர்ச்சி, கலைகள், ஆகிய—தமிழில் உள்ள எட்டுப் பகுதிகளும்; Dravidasthan Separation என்ற ஆங்கிலப் பகுதியும் ஆக ஒன்பது பகுதிகள் (Parts) அடங்கியுள்ளன.

'நாட்டுப்பிரிவினை' என்ற எண்ணத்துக்கு இந்திய மண்ணில் முதன் முதலாக 1930-ல் வித்தூன்றியவர் பெரியாரே ஆவார். இக் கோட்பாட்டினை 1938 முதல் விளக்கி அன்னார் ஆற்றிய உரைகளும், வெளிப்படுத்திய எழுத்துக்களும் இப் பகுதியில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

'அரசியல்' என்பது, இந்தியத் துணைக் கண்டத்தில், சமுதாய இயலோடு பின்னிப் பிணைந்ததாகும் என்பதே பெரியாரின் கொள்கையாம். இவ் அடிப்படையில், 'இனநலம்' ஒன்றையே குறியாகக் கொண்டு அன்னார் அவ்வப்போது மேற்கொண்ட அரசியல் நிலை யையும் அதனால் விளைந்த பயன்களையும் 'அரசியல்' என்ற பகுதி நன்கு விளக்கும்.

இந்து மதமும், நெடுங்காலமாக நிலவிய இந்திய ஆட்சிகளும் சாதியைப் பாதுகாப் பதையே இலட்சியமாகக் கொண்டவையாம். ஆதலின், 'சாதி காக்கப்படும் வரையில், வகுப்புவாரியாக உரிமை வேண்டும்' எனக் கோரி 1919 முதல் அன்னார் இடையறாது போராடி வந்ததை 'வகுப்புரிமை' என்ற பகுதி விளக்குகிறது. இதனை 'வகுப்புவாதம்' எனக் குறிப்போர்க்கும் உண்மையை உணர்த்தும் விளக்கங்கள், இப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மொழி என்பது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் கருவியே யாகும் என்பதை அறிவுறுத்தியும், தாய்மொழிப் பைத்தியம் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக ஆகி விடும் என்பதை எடுத்துக் காட்டியும் சிறந்த மொழி ஆய்வுக் கருத்துகளை வெளியிட்டுள்ள பெரியார்தம் கட்டுரைகளும், பேச்சுக்களும் 'மொழி' என்ற பகுதியில் அடக்கப்

பெற்றுள்ளன. தமிழ்மொழியின் வரிவடிவத்தில் 1934-லேயே அன்னார் புகுத்திய 'எழுத்துச் சீர்திருத்தம்' அறிஞர்க்குச் சிறந்த விருந்தாகும்.

பெரியாரவர்களோடு சமகாலத்தவர்களான காந்தியார், ஜின்னா, வினோபா பாவே ஆகியோருடன் அவர் மேற்கொண்ட உரையாடல்களும்; டாக்டர் நாயர், காந்தியார், இராஜாஜி, அம்பேத்கார், திரு. வி. க., பாரதிதாசன் முதலானோர் பற்றிய கருத்துகளும்; சங்கராச்சாரியார், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம், டாக்டர் சி. என். அண்ணாதுரை, டாக்டர் மு. கருணாநிதி முதலானோர் பெரியாருக்கு விடுத்த மடல்களும் 'தலைவர்கள்' என்ற பகுதியில் அடங்கியுள்ளன.

கடவுள், மதம், ஆத்மா, மோட்சம், நரகம், தலைவிதி, தர்மம் முதலான மத மூட நம்பிக்கை எண்ணங்களைத் தகர்த்துப் பெரியார் அளித்த தத்துவக் கருத்துகளும்; பகுத்தறிவு அடிப்படையில் நாத்திகம், பகுத்தறிவு, மனித வாழ்வு பற்றிய உயர் எண்ணங்களும் 'தத்துவம்' என்ற பகுதியில் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

1929-ல் மலேயாவிலும் 1932-ல் ஆப்பிரிக்கா, அய்ரோப்பா, ரஷ்யா, இலங்கை, முதலான நாடுகளிலும் பயணம் செய்தகாலை அவர் ஆற்றிய உரைகளும், எழுதிய அனுபவக் கட்டுரைகளும்; மற்றும் பல்வேறு சமயங்களில் பேட்டியளித்தல், அறிவுரை ஆற்றுதல் வழியாக வெளிப்படுத்திய கருத்துகளும் 'அறிவு வளர்ச்சி' என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

கலை, பாமரரையும் பிணித்துக் கவரவல்லது. அத்தகு கலை இங்கு இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என்ற பெயர்களால் மக்களை அறியாமைக் குழியில் தள்ளிவிட்டதை எடுத்துக் காட்டியும்; அறிவையும் மனிதாபிமான உணர்வையும் முன்னிறுத்தி இக்கலைகளும், இலக்கியமும் மிளிரவேண்டுமென அறிவுறுத்தியும்; வளரும் அச்சுக்கலைத் துறையைக் குறிப்பிட்டும் அன்னார் தந்த அறிவுக் கருத்துகள் 'கலைகள்' என்ற பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இவ் இரண்டாம் தொகுதியின் இறுதியில் உள்ள, 'Dravidasthan Separation' என்ற ஆங்கிலப் பகுதி, கருஞ்சட்டையினரைப் பற்றிப் பிறர் கொண்டுள்ள தவறான எண்ணத்தை அகற்றி, 'திராவிடநாடு' பிரிவினைக் கோரிக்கையையும், வகுப்புவாரிக் கொள்கையையும் ஆணித்தரமாக விளக்கி நிற்பதாகும்.

இந் நூலுக்கான விரிவான முன்னுரை முதல் தொகுதியின் தொடக்கத்தில் வைக்கப் பட்டுள்ளது. நூல் முழுமைக்கும் உரிய பெயர்க் குறிப்பு அகராதியும், பொருட் குறிப்பு அகராதியும், முறைப்படி, மூன்றாம் தொகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

இம் மூன்று தொகுதிகளையும் பெற்றுப் பெரும்பயன் கொள்வதன் வாயிலாக, எங்களுடைய இம் முயற்சியினை அறிஞர் உலகம் ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.

இப் பெருமுயற்சிக்கு உறுதுணை புரிந்த அனைத்துப் பெருமக்கட்கும் சிந்தனையாளர் கழகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதாகும்.

வளர்க பெரியாரிசம்!

திருச்சிராப்பள்ளி,
1—6—1974

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்

இரண்டாம் தொகுதி

பொருளடக்கம்

பக்க எண்

பகுதி II—அரசியல்

1. அரசியல்

பக்க எண்

2. ஜனநாயகம்

3. மதச் சார்பற்ற அரசு

4. உள்ளாட்சி

5. கிராமச் சீர்திருத்தம்

பகுதி III—வகுப்புரிமை

1. வகுப்புரிமை

2. வகுப்பு வாதம், சமூக வாதம்

3. வகுப்புரிமையின் வரலாறு

பக்க எண்

பகுதி IV—மொழி

1. எழுத்துச் சீர்திருத்தம்

2. தமிழ்

பகுதி V—தலைவர்கள்

1. தலைவர்களுடன் சந்திப்பு

2. தலைவர்களைப் பற்றி

3. தலைவர்களின் கடிதங்கள்

பக்க எண்

பகுதி VI—தத்துவம்

1. பிரகிருதி வாதம்

2. பகுத்தறிவு

3. மனித வாழ்க்கை

4. பொது நலம்

பக்க எண்

பகுதி VII—அறிவு வளர்ச்சி

1. கல்வி

2. அயல்நாட்டு அனுபவங்கள்

3. பேட்டி

4. அறிவுரை

5. நமது ஆராய்ச்சி மனப்பான்மை

பக்க எண்

பகுதி VIII—கலைகள்

1. கலைகள்

2. இசை

3. நாடகம்

4. வெளியீடுகள்

PART IX

DRAVIDASTHAN SEPARATION

பகுதி I

நாட்டுப் பிரிவினை

1. நாட்டுப் பிரிவினை

1. இந்தியா ஒரு நேஷனா?

அக்கிராசனரவர்களே! சகோதரர்களே!

இந்தியா ஒரு நாடு என்று ஆனால்தானே, இந்தியா முழுமையும்பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாயிருக்கின்றதா?

இந்தியா—சாதிகள் காட்சி சாலையாக, மதக் கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமா யிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா, விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? மற்ற நாட்டார்கள், தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கின்றார்கள். யார், எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவதென்று போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

[சேலத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 1-6-1930]

தலைவரவர்களே! தோழர்களே!

தோழர் ஜவஹர்லால் கூட சுயராஜ்யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தம் சொல்லவே இல்லை. ஆனால், அவர் சுயராஜ்யம் என்றால் ஒரு சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பார்; மற்றொரு சமயம் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பது என்பார்; மற்றொரு சமயம் தொழிலாளர் ஆட்சி என்பார்; மற்றொரு சமயம் குடியானவர் ஆட்சி என்பார்; மற்றொரு சமயம் சமதர்மம் என்பார்; மற்றொரு சமயம் பூரண சுயேச்சை என்பார்; மற்றொரு சமயம் பட்டினியும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிவதே என்பார்; மற்றொரு சமயம் உலகப் பொதுவுடைமை என்பார். இப்படி இன்னமும் எவ்வளவோ விதமாக வாயில் வந்தபடி, சமயத்துக்குத் தக்கபடிப் பேசுவார்.

தோழர் காந்தியாரோ சுயராஜ்யத்துக்கு அர்த்தம் ஒரு சமயத்தில் ராமராஜ்யம் என்பார்; மற்றொரு சமயம் வருணாசிரம முறையைச் சரிவர அமைப்பதே என்பார்; மற்றொரு சமயம் சுயராஜ்யத்தில் இராஜாக்களுக்கும் ஜமீன்தாரர்களுக்கும் இடம் உண்டு என்பார்; மற்றொரு சமயம் அவரவர் 'சுதர்மத் தொழிலை'ச் செய்யச் செய்வதே என்பார்; மற்றொரு சமயம் இராட்டினமே சுயராஜ்யம் என்பார்; மற்றொரு சமயம் எல்லோரும் கதர் கட்டுவதே சுயராஜ்யம் என்பார். கடைசியாகச் சென்ற மாதத்தில் 'பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் கடுகளவு மனக் கசப்பு ஏற்பட்டாலும் என் உயிரைக் கொடுத்தாவது அம் மனக் கசப்பை ஒழிப்பேன்' என்றார்.

இன்னமும் என்ன என்னமோ இந்த 20 வருட காலமாகப் பேசிவந்திருக்கிறார்.

மற்றபடியான—நமதருமை 'பாரத மாதாவின் புதல்வர்கள்'—தேச பக்தர்களும் தேசிய வீரர்களும் 'சுயராஜ்யத்துக்கு ஆக உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்தவர்' களுமான குட்டித் தலைவர்களும் தொண்டர்களும் போன மாதத்தில்தான் இந்திய சக்கரவர்த்தியான பிரிட்டிஷ் அரசர்க்கும் அவரது சந்ததிக்கும், அவரது ஆக்கினைக்கும் ஆட்சிக்கும் சட்டதிட்டங்களுக்கும் பக்தியாயும் விசுவாசமாயும் இருந்து, கீழ்ப்படிந்து நடப்பதாக சத்தியம் செய்துகொடுத்து, சர்க்கஸ் வளையத்துக்குள் ஆட்டம் போடும் சிங்கங்களைப் போல் இருந்துகொண்டு, அன்னிய ஆட்சி ஏஜண்டுக்கு அடங்கி நடந்து வருகிறார்கள்.

ஆகவே, சுயராஜ்யம் என்றால் என்ன என்று தோழர் கே. பி. பிள்ளை இப்பொழுதாவது சொல்லட்டும் என்று கேட்கின்றேன். அன்றியும், அடுத்தபடியாக பிரிட்டிஷ்

ஆட்சியையே ஒழித்துவிடுவதாலேயே சுயராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிவிட முடியுமா? பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவை ஒரு பாகம் ஆளுகிறார்கள்; போர்ச்சுக் கீசியர்கள் ஒரு பாகம் ஆளுகிறார்கள். இவர்களுக்குத் தனித்தனி தேசங்கள் இருக்கின்றன. இத்தனைபேரும் ஒன்றுசேர்ந்து ஒரு கை பார்க்காமல், இராட்டின ஆயுதத்தைக் கண்டு பயந்துகொண்டு இந்தியாவை விட்டுவிட்டு ஓடிவிடுவார்களா?

சுயராஜ்யத்துக்குப் பொதுமொழி ஒன்று வேண்டும் என்கின்ற அவசியம் என்ன?

ரஷ்யா பொதுஉடைமை தேசம். அங்கு இன்னும் பொதுமொழி இல்லை. நம் நாடு என்பது, அதாவது இந்தியாவானது அன்னிய ஆட்சிக்கு முன்—இராமர் ஆட்சி என்று சொன்ன காலத்திலும் 56 தேசத்துக்கும் ஒரே சக்கரவர்த்தியாகச் சொல்லப்பட்ட காலத்திலும் பொதுமொழி என்று ஒன்று இருந்ததாக ஆதாரமோ சரித்திரமோ ஒன்றும் காணவில்லை.

அதற்கடுத்தாற்போல், இந்தியா நம் தாய்நாடு என்று சொல்வதற்குத்தான் ஆதாரம் என்ன இருக்கிறது? இந்தியா என்கின்ற பெயர் இந்த நாட்டுக்கு எப்போது ஏற்பட்டது? இதற்கு எல்லை என்ன? பர்மா சென்ற வருடம் பிரிந்துவிட்டது. அதற்குமுன் இலங்கை பிரிந்துவிட்டது. அதற்குமுன் மலேயா பிரிந்துவிட்டது. அதற்குமுன் நேபாளம், பூடான் பிரிந்துவிட்டன. அதற்குமுன் காந்தாரம், காபூல் (ஆப்கானிஸ்தானம்) பிரிந்துவிட்டன. இப்படியே எவ்வளவோ பிரிந்து, எவ்வளவோ சேர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் தாய்நாடு எது? தகப்பன் நாடு எது? புராண காலத்தில் 56 நாடுகள் இருந்தனவே, அப்போது ஒரு நாட்டுக்காரன் இன்னொரு நாட்டைத் தாய்நாடு என்று கருதினானா?

மாகாண சுதந்திரம் கொடுத்து மாகாணத்துக்கு மாகாணம் சர்வ சுதந்திரமாய்த் தன்தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு, அய்ரோப்பா தேசத்தைப் போல் மொழிவாரியாகத் தனித்தனி நாடாகப் பிரிந்துகொண்டபின்—இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய்நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லாபோல் உள்ள விஸ்தீரணம்—அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா? சயாமில் பெரிதும் இந்து மதம்தான்—அவர்கள் இந்தியாவைத் தாய் நாடென்பார்களா?

அய்ரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க்கு, ஹாலண்டு, பெல்ஜியம், போர்ச்சுக்கல், கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா, மூன்று ஜில்லா, இரண்டு ஜில்லா போன்ற விஸ்தீரணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டைத் தாய்நாடு என்பார்களே ஒழிய அய்ரோப்பாவைத் தாய்நாடென்பார்களா?

ஆகவே, தமிழ் நாட்டவர்கள்—திராவிட மக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவைத் தாய்நாடென்று கூறவேண்டுமென்பதும், எதற்காக இந்தியா பூராவும் எப்போதும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும் என்பதும் எனக்கு விளங்கவில்லை. முதலாவது, 'பாரத நாடு' என்பதையும், நாம் எல்லாம் 'பரதர்கள்' என்பதையும்கூட நான் ஒப்புக்கொள்ள முடியாது.

இந்தி மொழி தமிழ்நாட்டில் எப்போது இருந்தது? பம்பாயில் எப்போது இருந்தது? வங்காளத்தில் எப்போது இருந்தது? இந்தியா 56 தேசமாய் இருந்தபோது 56 மொழிகளின் பேரால்தானே தேசமாய் இருந்தது! அப்போதும் மொத்தத்தில் 56 மொழிகள் இருந்திருக்கும். நாளாக நாளாக ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும்போதும், ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார்மீது ஆதிக்கம் செலுத்தும் போதும்தான் அன்னிய மொழி புகுத்தப்பட்டுவிடுகிறது. அந்த முறையிலே இன்று இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தப் பார்ப்பது, தமிழனல்லாத அன்னிய வகுப்பான் இன்று தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டதினாலேயே ஒழிய வேறில்லை.

அப்படியானால், இந்தியா ஒரு நேஷனா? அதற்கு மொழி எது? மதம் எது? இந்தியாவில் எத்தனை மதம்? எத்தனை எத்தனை ஆச்சார அனுஷ்டானம்? முதலாவது, இந்து மதம் என்பதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? தோழர் கே. பி. பிள்ளை தன்னை இந்து என்று சொல்லுவாரானால் இந்துமத ஆதாரமாகிய வேதத்தை மனுதர்ம சாஸ்திரத்தையும் கீதையையும் ஒப்புக்கொள்ளுகிறாரா? அதன்படி நடக்க இன்று சம்மதிக்கிறாரா? மற்றவன் நடக்கவாவது இவர் அனுமதிக்கிறாரா? இந்து மதத்தில் கே. பி. பிள்ளையின் இடம் எது? இந்து மதத்தால்தான் இந்தியா நேஷன் ஆயிற்று என்றால், அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவருக்கும், பவுத்தருக்கும், பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா? எதைக் கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது?

மொழியைக் கொண்டு நேஷன் பிரிப்பது என்றால் மாகாணம் ஒன்றுக்கு நான்கு அய்ந்து நேஷன் ஆகிவிடாதா? பொது விஷயங்களில் வகுப்பு மத விஷயங்கள் புகுத்தக் கூடாது என்கிறார்: அன்றியும் அது மிகவும் அற்பமான விஷயம் என்கிறார். யாருக்கு அற்பம் என்று கேட்கிறேன். நாத்திகனுக்கு அல்லவா மதம் வகுப்பு அற்பமாகும்—அது கூடாததுமாகும்.

இந்தியத் தலைவர் தோழர் காந்தியார், 'இந்து மதத்துக்கு ஆக உயிர் வாழ்கிறேன்; எனது மூச்சே இந்து மதம்; நானே இந்து மதமாய் இருக்கிறேன்' என்றார். முஸ்லிம் தலைவர்கள் தோழர்கள் மகமதலி, ஷவ்கத் அலி, ஜின்னா ஆகியவர்கள், 'நாங்கள் முதலில் முஸ்லிம்; இரண்டாவது முஸ்லிம்; மூன்றாவது முஸ்லிம்; அப்புறம்தான் இந்தியன்' என்கிறார்கள். தோழர் ஜவஹர்லால் மதத்தையும் மத ஆதாரங்களையும் மதப் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றிக்கொடுப்பதாக உத்தரவாதம் செய்து, தலைவர் பதவி பெற்றிருக்கிறார். மிகவும் அநித்தியமான இந்த அற்ப இக (உலக) வாழ்வு என்பதற்கு ஆக, நித்தியமான பர (மேல் லோக) வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டு வகுப்பும் மதமும் அற்பமானது என்று எந்த யோக்கியமான ஆஸ்திகன்தான் சொல்லமுடியும்? 'மதம்' 'வகுப்பு' அற்பம் என்று கருதி இருந்தால் ஜின்னாவுக்கும், ஜவஹர்லாலுக்கும், காந்திக்கும், ஷவ்கத் அலிக்கும், இராஜகோபாலாச்சாரிக்கும் நமக்கும் தகராறு ஏன்? இவர்கள் அயோக்கியர்களா? சுயநலக்காரர்களா? பொது வாழ்க்கையில் வயிறு வளர்ப்பவர்களா? வேறு வகையில் யோக்கியதை அற்றவர்களா? என்று யோசித்துப் பாருங்கள்!

பொது மொழி இந்திதான் இருக்கவேண்டும் என்றால்—அதுதான் அதிக மக்களால் பேசப்படுகிறது என்றால், ஒரு பொதுமொழி தெரிந்தெடுக்க மெஜாரிட்டி பலமே போதுமானதாகுமா? மொழி எதற்காக வேண்டும்? பேசுவதற்கு மாத்திரம்தானா? புதிதாக ஒரு மொழியைத் தெரிந்தெடுப்பதனால் அந்த மொழி பழையது என்றோ வெகுபேர் பேசுகிறார்கள் என்றோ காரணம் சொல்லித் தேர்ந்தெடுப்பது அறிவுடைமையாகாது. அந்த மொழியால் தேச மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன என்று பார்க்கவேண்டும். புது அறிவு உண்டாகுமா? ஆராய்ச்சிக்குப் பயன்படுமா? முற்போக்குக்கும் நாகரிகத்துக்கும் பயன்படுமா? சீர்திருத்தத்திற்கு ஏற்றதா என்றெல்லாம் பார்க்கவேண்டாமா? இவர்கள் சொல்லும் இந்தி எதற்காகப் பயன்படும்? தோழர் இராஜகோபாலாச்சாரியாரும்—அதாவது இந்தியைப் பொது மொழியாக ஆக்கவேண்டும் என்று சொல்லுகிறவரும், அவரது சகாக்களும் 'இந்தி மூலம் துளசிதாஸ் இராமாயணம் படிக்கலாம்; சமஸ்கிருதம் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம்; இந்துமத சாஸ்திரம் உணரலாம்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தி மூலம் மோட்சத்துக்குப் போவதற்கு அனுகூலமாக—ஆத்மார்த்த விஷயங்கள் என்பதற்கு அனுகூலமாகக் காரணம் சொல்லுகிறார்களே ஒழிய, இந்த உலக வாழ்க்கைக்கு ஆன காரியம் எதுவும் இந்தியில் இருப்பதாகச் சொல்லவே இல்லை. இராமாயணத்திலும், பாரதத்திலும் ஆகாய விமானம் இருக்கிறது; ஆனால், அது மந்திர

சக்தியால் ஓடி இருக்கிறது. இங்கிலீஷின் ஆகாய விமானம் இருக்கிறது. அது இயந்திர சக்தியால் ஓடுகிறது. நமக்கு எது வேண்டும்? மந்திர சக்தியா? இயந்திர சக்தியா?

ஆங்கிலம் நம்மில் சராசரி 100-க்கு ஒருவர் இருவரே படித்திருக்கலாம் என்றாலும்—அது, 35 கோடி மக்களையும் நடத்துகிறது. இந்நாட்டு மனிதன் இன்று அடைந்துள்ள மேல்நிலைக்கு ஆங்கிலமே காரணம். தோழர் கே. பி. பிள்ளை அவர்கள் பேசிய நேஷன், தாய்நாடு, சுயராஜ்யம், பொதுமொழி என்கின்ற உணர்ச்சியை—எண்ணத்தை ஆங்கில மொழியே உணர்த்தியது. அரசனுக்குக் குடிகள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அரசனே கடவுள் என்றும் கருதி இருந்த 'இந்தி இந்தியனை' —அரசன் குடிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அரசன் குடிகளின் சேவகன் என்றும் 'இங்கிலீஸ் இந்தியா'தான் கற்றுக் கொடுத்தது. இன்று உலகப் பொதுமொழியாக ஆங்கிலம்தான் கருதப்படுகிறது. அது அதிக மக்களால் பேசப்படுகிறது.

இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டாலும் உலக சம்பந்தம் இல்லாமல் இந்தியா வாழ்ந்துவிட முடியாது. வருங்கால உலகம் தேசத்துக்குத் தேசம், நாட்டுக்கு நாடு இப்போது உள்ள தூரத்தில் இருக்காது; கூப்பிடு தூரத்தில் இருக்கப்போகிறது. இந்திக்கு ஆகட்டும்—வேறு இந்திய மொழிக்கு ஆகட்டும் இனி அடுப்பங்கரையிலும், படுக்கை அறையிலும்கூட வேலை இருக்காது.

தொழிலாளிக்கும் தொழில் கருவியும் இயந்திரமும் ஆங்கில மொழியில்தான் இருக்கப் போகின்றன. விவசாயிகளுக்கும் அது போலவேதான். வியாபாரிகளுக்கும் அதுபோலவே தான். அரசியல்காரனுக்கும் அதுபோலவேதான். மோட்சம் போவதற்கு மாத்திரம்தான் இந்தி உதவக்கூடும். ஆனால், மோட்சம் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடப் போகிறது.

இந்தியா, 'இராம ராஜ்யமாக' ஆகும் என்று தோழர் கே. பி. பிள்ளை கருதுகிற போது—இந்தியா ரஷ்யா ஆகும் என்று ஏன் நான் கருதக்கூடாது? ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் அதிகத் தூரமில்லை—250 மைல்கள்தாம்! வகுப்பும் மதமும் வெகு அற்பமானவை என்று உண்மையிலேயே இந்தியர்கள் கருதக்கூடிய நாள் வந்தால், அன்றே இந்தியா ரஷ்யா ஆகிவிடும். அது கூடாது என்பதற்கு ஆகச் செய்யப்படும் சூழ்ச்சிகளில் ஒன்றுதான் இந்தி முயற்சி என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

தமிழ்நாடு ஒரு தனி நேஷனாக இருந்தது; இன்றும் இருக்கிறது; அதுதான் திராவிடம். அதனுடைய நாகரிகம், ஆச்சார அனுஷ்டானம் வேறு. வங்காளம், பம்பாய் வேறு. ஆங்கில ஆட்சியால் ஆங்கில மொழியால்தான் ஒன்றுக்கொன்று நேசபாவமான அறிமுகமாவது ஆகி இருக்கிறது. ஆங்கில ஆட்சியும் மொழியும் ஒழிந்து, இந்தி ஆட்சியும் மொழியும் வந்தால் அன்றே தமிழ்நாடானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நேஷனுடன் கலந்துவிடும்.

இனி பொதுவாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தியா பல மதம், பல வகுப்பு, பல தனிப்பட்ட இலட்சியம் கொண்ட கோரிக்கைகள் உள்ள நாடு. இது உலகில் உள்ள மற்ற நாடுகளைப் போல் மதம், அரசியல், சமூக வாழ்க்கை முதலியவைகளில் ஒரே மாதிரி இலட்சியமுடையதல்ல. கண்டிப்பாய் இந்து—முஸ்லிம் இலட்சியமும் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் இலட்சியமும் வேறு வேறாகவே இருந்துவருகின்றன. செல்வாக்கில்லாத இலட்சியமுடையவர்களை, செல்வாக்குள்ள இலட்சியமுடையவர்கள் இழித்தும் பழித்தும் கூறி கேவலப்படுத்துவதாலோ, கட்டுப்பாடாக உண்மையை மறைத்துப் பிரச்சாரம் செய்வதாலோ, கூலிகளை ஏவிவிட்டுக் காலித்தனம் நடக்கச் செய்வதாலோ எல்லோருடைய இலட்சியமும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக, இன்று பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்துக்கு என்று அனுபவித்து வரும் எந்த உரிமை இலட்சியத்தை விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்?

அதுபோலவே, முஸ்லிம்களும் தங்கள் சமூகத்துக்கு அல்லது மார்க்கத்துக்கு என்று அனுபவித்து வரும் எந்த உரிமை உணர்ச்சியை விட்டுக்கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள்? அதுபோலவே, பார்ப்பனரல்லாதாரோ அல்லது கீழ்சாதியார் என்பவர்களோ அனுபவித்து வரும் இழிவுகளையும் கொடுமைகளையும் நீக்க எந்த அளவுக்குப் பார்ப்பனர்களும் மேல்சாதியாரும் சம்மதிக்கிறார்கள்?

மேல்நாட்டில் இம் மாதிரியான சமூக, வகுப்பு, மார்க்கத் தொல்லை கிடையாது. குறிப்பாக நம் தென்னாட்டில் பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற தொல்லை பல ஆயிரக்கணக்கான வருடங்களாய் இருந்துவந்திருக்கிறது. இன்று சுமார் 50 வருட காலமாய்ப் பச்சையாய்—வெளிப்படையாய் அரசியலிலும், உத்தியோக இயலிலும், சமுதாய இயலிலும் தலைவிரித்து ஆடிவருகிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இன்றைய தினம் நாம் இங்கு வாதம்செய்யும் இந்தி—அதில் பட்டதனாலேயாகும். இந்தி மொழியும் அதன் கலைகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு—குறிப்பாக பார்ப்பனரல்லாத ஏனைய மக்களுக்கு நேர் மாறானதாக இருக்கின்றன. இதை நான் இன்று மட்டும் சொல்லவில்லை.

சுயமரியாதையுடையவன் இந்தியை ஆதரிக்கமாட்டான். 1921-ம் வருடம் நான் பெரிய தேசபக்தனாய், தேசிய வீரனாய் இருந்து சிறைசென்று வந்த உடனே திருப்பூரில் கூட்டப்பட்ட தமிழ் மாகாண மாநாட்டில் நான் சொல்லியிருக்கிறேன். அதாவது, இன்று இந்தியைத் தமிழ் மக்களுக்குள் புகுத்தியாகவேண்டும் என்று பலாத்காரம் செய்யும் தோழர் இராஜகோபாலாச்சாரியார் என்ன காரணத்திற்காகத் தமிழ் மக்கள் இந்தி படிக்கவேண்டும் என்று சொன்னாரோ—அந்தக் காரணமாகிய இராமாயணத்தைப் படிப்பதையும், மனுதர்மத்தை உணர்வதையும் குற்றம் என்று சொன்னதோடு, அவைகளை நெருப்பில் போட்டு பொசுக்க வேண்டும் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். அன்று சொன்னதைப்பற்றிக் கவலை இல்லை, இன்று சொல்லுகிறேன்.

துளசிதாஸ் இராமாயணமானாலும் சரி, வால்மீகி இராமாயணமானாலும் சரி, கம்ப இராமாயணமானாலும் சரி, ஏதாவது ஒரு இராமாயணத்தைத் தோழர் கே. பி. பிள்ளை ஒப்புக்கொள்ளுகிறாரா? அதில் உள்ள தனது நிலையை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறாரா? அல்லது இங்குள்ள யாராவது இராமாயணத்திலும், மனுதர்மத்திலும், மற்றும் இந்தி புராண சாஸ்திரங்களிலும் உங்களுக்கு உள்ள நிலையை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா என்று கேட்கின்றேன். நான் அந்தத் தனிப்பட்ட புஸ்தகங்களில் உள்ள விஷயங்களைப் பற்றிக் கூட இப்பொழுது கேட்கவில்லை. இந்து மதம் என்பதில் இங்குக் கூடியுள்ள உங்களுக்கு உள்ள நிலையை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? அப்படி இருக்க, இராமாயணமும், புராணங்களும், இந்துமத சாஸ்திரங்களும் படிக்க இந்தி உதவும் என்றால் சுயமரியாதை உள்ள எவனாவது அதை ஒப்புக்கொள்ள முடியுமா?

மற்றும், வடநாடும் தென்னாடும் ஒரே இலட்சியமுடையதாகுமா? வடநாட்டாரால் இதுவரை தென்னாட்டாருக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்று யாராவது விரல்விட்டுச் சொல்லட்டும்! நம் மக்கள் ஏமாற்றப்பட, நமக்கு யோக்கியதை தெரியாத வடநாட்டாரைப் பிடித்துவந்து காட்டி வஞ்சித்ததல்லாமல், தென்னாட்டுச் சமூக, சமய, பொருளாதார, அரசியல் முதலிய விஷயங்களுக்கு வடநாடு எதில் பயன்பட்டது? நம்நாட்டுக்கு அழைத்து வரும்போது வடநாட்டவர்களை இந்திரன், சந்திரன், வீரன், சூரன், தியாகி, சத்தியவான், மகான் என்று விளம்பரம் செய்கிறார்கள். அவர்களைப்பற்றி அந்த உள்ளூர்க்காரர்களைக் கேட்டால், 'அவர்களுக்கு மிஞ்சிய மோசமானவர்கள் எந்நாட்டிலுமில்லை' என்கிறார்கள்.

ஆகவே, நாம் ஏமாறுவதற்குத்தான் வடநாடு உபயோகிக்கப்படுகிறது. இன்றைய அரசியலைப் பார்க்கின்றபோது, எக்காரணம் கொண்டாவது—எப்பாடுபட்டாவது நம்

நாட்டை வடநாட்டுச் சம்பந்தத்திலிருந்து தனியாகப் பிரித்துக்கொண்டால் ஒழிய நமக்கு விடுதலையோ மானமோ ஏற்படப்போவதில்லை. இன்று சிறிதாவது நமக்குச் சுயமரியாதை உணர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் இருக்கிறதென்றால் அது நமது தனிப்பட்ட தமிழ்நிலை உணர்ச்சியாலேயும், இந்தி படிக்காததாலேயும்தான் என்று வலிமையாய்க் கூறுவேன். நமது இரத்தத்தில் அடிமை உணர்ச்சியைப் பாய்ச்சவே இன்று பார்ப்பன ஆதிக்கம் நம்முன் பலாத்காரமாய் இந்தியைப் புகுத்துவதாகும். இந்தியில் அரசியல் சுதந்திர ஞானம் கிடையாது; இந்தியில் பொருளாதார ஞானம் கிடையாது; இந்தியில் சமுதாய சமத்துவ ஞானம் கிடையாது; ஏதாவது இருப்பதாகச் சொல்லப்படுமானால் அவை இவையேயாகும். அதாவது :—

'ஒரு நாட்டு மக்களை ஆளவேண்டுமானால், அவர்களுக்கு கல்வி வாசனையும் அறிவுச் சுதந்திரமும் இல்லாமல் மடையர்களாக வைத்திரு.'

'ஒரு நாட்டு மக்களை என்றும் அடக்கி ஆளவேண்டுமானால், அவர்களுக்குப் பொருளாதார உரிமை இல்லாமல் சாமி, பூதம், பிசாசு என்கின்றதான மூடநம்பிக்கையைப் புகுத்திப் பயப்படுத்தி அவர்களது பொருள்களைக் கொள்ளையடி.'

'ஒரு நாட்டு மக்களை அடக்கி மிருகங்களிலும் கேவலமாய் என்றென்றும் அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால், அந்நாட்டு மக்களை ஆயிரம் சமூகமாக ஆக்கி, ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பித்துச் சின்னாபின்னப்படுத்தி வை.'

என்பதல்லாமல் வேறு என்ன இருக்கிறது? நான் சாணக்கிய அரசியல் தந்திரம் முதல் இந்தியில் உள்ள பல அரசியல் நீதி சாஸ்திரங்களைப் பற்றியேதான் தெரிந்தவரை பேசுகிறேன். ஊரார் உழைப்பில் ஒரு சிறு சமூகம் உண்டு, வாழ்வதற்கு உரியதே இந்திக் கலைகளாகும். மற்றும் பாருங்கள்! நம் நாட்டில் மொத்தத்தில் இன்று 100-க்கு 9பேர்களே படித்தவர்கள். இவர்களில் பார்ப்பனர்கள் 100-க்கு 3பேராய் இருந்தாலும், அவர்கள் சமூகம் பூராவும் 100-க்கு 100பேர் படித்திருக்கிறார்கள். ஆங்கிலம் கற்றவர்கள் அவர்களில் 100-க்கு 50பேர் இருக்கலாம். நம்மில் தமிழ்ப் படித்தவர்களே 100-க்கு 5, 6 பேர்தாம் இருப்பார்கள். அதிலும் கிராம வாசிகளில் 100-க்கு 2, 3 பேர்கள் தாம் இருப்பார்கள். சில சமூகங்களில் ஒருவர் இருவரே இருப்பார்கள். பார்ப்பனர்களுக்கோ இந்தி வெகு சுலபமான மொழி. ஏனெனில், அவர்களுக்கு அது பாரம்பரிய மொழி. நமக்கு அது சுலபத்தில் வாயில் நுழையாத மொழி. பார்ப்பனர்கள் 100-க்கு 77பேர் இந்தியில் பாஸ் செய்தால் நம்மில் 100-க்கு 15பேர்கள் கூட பாஸ் செய்ய முடியாது. உத்தியோகத்துக்கு இந்தி ஒரு யோக்கியதையாய் வைத்துவிட்டால், நம்மவர்களுக்குப் பழைபடி 'பங்கா' இழுப்பதும், 'பில்லை' போட்டுக் கொள்வதுமான சேவக வேலைதான் கிடைக்கும்.

உதாரணமாக, அரசியலில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்படும் முன்பு சில படிப்புகளுக்கு—டாக்டர் முதலிய பரீட்சைக்கு சமஸ்கிருதம் படித்திருக்கவேண்டுமென்று பார்ப்பனர்களால் சூழ்ச்சி செய்யப்பட்டு இருந்தது. அதனாலேயே பார்ப்பனரும் மலையாளிகளுமே பெரும்பான்மையாய் டாக்டர்களானார்கள். ஜஸ்டிஸ் கட்சி வந்தபிறகு—பனகல் அரசர் காலத்தில் சமஸ்கிருதம் படித்திருக்கவேண்டும் என்கின்ற நிபந்தனை எடுக்கப்பட்டு விட்டது. அதற்கப்புறமே பார்ப்பனரல்லாத தமிழ்மக்கள் பலர் டாக்டர்களாக முடிந்தது. அதுபோல்தான், இந்திக்கு உத்தியோக யோக்கிதையும் வைத்துவிட்டால்—பழையபடி, நாம் கல்வியில் இன்னும் அதிகமான பிற்பட்ட வகுப்புக்காரர்களாக ஆகிவிடுவோம்.

மாகாணக் கல்லூரியில் சமஸ்கிருதப் போதகருக்கு மாதம் 350 முதல் 500 ரூபாய் சம்பளம். தமிழ்ப் போதகருக்கு அதில் பாதிகூட இல்லை. 'அதிகாரி வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை உடைக்கும்' என்று ஒருவர் சொன்னார். அதுபோல், ஆதிக்கத்தில் உள்ளவர்கள் மொழி ஆனதால்—இந்தியை, தமிழை ஒழிக்கக் கட்டாய பாடமாக்கப்

போகிறார்கள். ஒரு சமயம் '10 ரூபாய் கேட்டால் 5 ரூபாயாவது வராதா?' என்கிறது போல் எண்ணிக்கொண்டு, தோழர் ஆச்சாரியார் கட்டாய பாடமென்றால், 'இஷ்ட பாடமாகவாவது வைத்துத் தொலையுங்கள்' என்று தமிழ் மண்டுகள் சொல்லாதா என்றே இந்த குயுக்தி செய்திருந்தாலும் செய்திருக்கலாம். எந்தப் பாடமாகவும் இந்தி நமக்கு எதற்கு? அதற்காகச் செலவிடும் நேரம், பணம், ஊக்கம் எல்லாம் தேசிய நஷ்டமல்லவா என்று கேட்கின்றேன். இந்த நாட்டில் இந்தி பாடமாக வைக்கப்பட்டால் தமிழர்கள் ஒழிந்தார்கள்—சுயமரியாதைக்குக் குழி தோண்டப்பட்டது என்றுதான் அர்த்தம்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு இதைப்பற்றி அதிகக் கவலையில்லை. அவர்களில் பலர் இராமாயணத்தைப் பூசிப்பவர்கள். அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டாம். நம் தமிழ் மக்கள் இதை நன்றாய் உணரவேண்டும். அதாவது, இது ஒரு நெருக்கடியான சமயம்; இதில் ஏமாந்துவிட்டோமேயானால் தமிழன் தாசி மகனாகத் தானே ஆகிவிடுவான்? இப்பொழுதாவது அதற்கு என்று ஒரு சாதியும், ஒரு நாடும் மாத்திரமிருக்கிறது. இந்தி புகுந்துவிட்டால் தமிழர்கள் பூராவும்—பெண்கள் தாசிகளாகவும், ஆண்கள் தாசி மக்களாகவும், தாசர்களாகவும் ஆகிவிடவேண்டியதுதான். அந்த நிலை ஏற்பட்ட பிறகு நாம் இருப்பதைவிட இறப்பதே மேல். கட்சி உணர்ச்சியை இதில் விட்டுவிடுங்கள்.

[கொல்லம்பாளையத்தில், 19-9-1937-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' மலர் 3 : இதழ் 6]

2. சுதந்திரத் தமிழ்நாடு

தமிழ்நாடு என்பது திராவிடநாடு என்றும், திராவிடநாடு என்பதானது இன்னது என்றும் வெகுகாலமாகவே அய்ரோப்பிய அறிஞர் முதல் பல உலக ஆராய்ச்சிக்காரர்களாலும், இந்திய சரித்திர ஆராய்ச்சியாளராலும் எல்லை காட்டி வகுக்கப்பட்டிருக்கிறது என்றும் நான் இது விஷயமாய்ப் பேசுகிற இடங்களில் எல்லாம் இதைப்பற்றி விளக்கிப் பேசியே வந்திருக்கிறேன்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலாகிய மொழிகளைத் தாய்மொழியாகப் பேசிவந்த மக்களையே மிகுதியாகக் கொண்ட நாடுகள்—இன்று திராவிடம் என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததேயாகும். அந்தத் திராவிடம் என்பது பெரிதும் சென்னை மாகாணமாகவே இருக்கிறதுடன் மற்றும் சிறிது சென்னை மாகாணத்தைத் தொட்ட சுற்றுப்புற நாடாகவும் இருக்கிறது.

இந்த விஸ்தீரணத்திற்குட்பட்ட முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப்பின்கீழ்தான் வருவார்கள். இவற்றை விளக்குவதோ மற்றும் இது சம்பந்தமாக இனியும் விளக்கிச் சொல்லுவதோ, கஷ்டமான காரியம் அல்ல என்பதோடு, இதுவரை சாதாரண நிலையில், ஆராய்ச்சியில், விவகாரத்தில் இவை வழங்காத விஷயங்கள் என்றும் சொல்லிவிட முடியாது என்று கருதுகிறேன்.

மேற்கண்ட விளக்கத்திற்கு உட்படாத, 'தமிழரல்லாதவர்கள் இருந்தால் அதைப் பற்றி என்ன?' என்று கேட்பீர்களானால் அவர்களுக்குள்ள உரிமைகள், அவர்களது முன்னேற்றத்துக்கு ஏதுவான அபிலாசைகள் நியாயப்படி காக்கப்படும்; யாரும் சந்தேகப் பட வேண்டியதில்லை.

திராவிட நாட்டில் பல மொழிகள் இருக்கின்றனவே என்றால், இப்போது காங்கிரஸ் தீர்மானித்து இருப்பதை அடிப்படையாகக் கொண்டே, திராவிடதேசம் என்பது—அவசியப் பட்டால் திராவிட மொழிவாரியான மாகாணங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

உதாரணமாக, பிரிட்டனானது ஒரு தேசமாகவும், ஒரு ஆட்சியாகவும், ஒரு சமயம், ஒரே சமுதாயக் கொள்கை கொண்டதாகவும் இருந்தபோதிலும்—வேல்ஸ், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய மாகாணங்கள் பெரிதும் மொழிவாரியாக இருப்பது போலும், மற்றும்பல மேல்நாடுகளில் இருக்கும் உள்மாகாணப்பிரிவுகள் போலும் திராவிடம் என்ற தலைதேசத்தில் மொழிவாரி மாகாணங்கள் இருக்கும்.

'இதை எப்படிக் காப்பாற்றிக்கொள்ள முடியும்?' என்று கேட்கிறீர்கள். பூரண சக்தி திராவிடத்திற்கு ஏற்பட்டு சர்வதேச சங்கத்தோடு (League of Nations) ஒரு தனி சுயேச்சை நாடாக (Independent Country) ஆகும் வரை, சிலோன், பர்மா போலும் அல்லது சில சுதேச சமஸ்தானங்களான தனி சுயநிர்ணய நாடுகள்போலும் பிரிட்டனுடைய பாதுகாப்பின் மூலம் காக்கப்படும்.

'இந்தியாவின் மற்ற பாகங்களுடன் திராவிடம் வைத்திருக்கும் சம்பந்தம் எப்படியிருக்கும்?' என்று கேட்கிறீர்கள். எப்படியென்றால், மேற்கண்ட பர்மா, சிலோன் ஆகிய நாடுகள் மற்ற நாடுகளுடன் வைத்திருக்கும் சம்பந்தம்போல இருந்து கொண்டு—திராவிடர் அல்லாத வெளிநாட்டார் திராவிடத்தில் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலிய வற்றில் ஆதிக்கம் செலுத்தாமலும் திராவிட செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போகாமலும் பார்த்துக்கொண்டு நேசதேசமாய் இருந்துவரும்.

'திராவிட தேசம் பிரிக்க முடியாதது' என்கிறீர்கள். அதற்குப் பல சரித்திர ஆதாரம், இன்றைய கலை சமுதாய பழக்கவழக்கம் முதலியனவும், பிரத்தியேக ஒற்றுமை எல்லை முதலியவைகளும் திராவிடம் என்பதை மிகச் சுலபமாகப் பிரித்துக் காட்டக்கூடியதாகவே யிருக்கிறது.

'இந்தியா பெரிய நாடாக—ஒரு தேசமாக இருப்பதால் நன்மை' என்கிறீர்கள். இன்று இந்தியா 40 கோடி ஜனத்தொகையும் பல ஆயிரக்கணக்கான மைல் சுற்றளவும்—பல சாதி சமயக் கூட்டுறவுடனும் பல மாகாண மக்களுடன் கலந்து ஒரு நாட்டினராயும் இருந்து வருவதின்மூலமே ஒரு சிறுபான்மையார் கட்டுப்பாடான ஒற்றுமையாயிருந்து கொண்டு தந்திரத்தில் ஒவ்வொரு மாகாணப் பெருங்குடி மக்களையும் அவர்களுக்குள் ஏற்பாடு செய்துவிட்ட பாகுபாடுகளால் சிறுபான்மையினராக ஆக்கி, அவர்கள்மீது சுலபத்தில் ஆதிக்கம் செலுத்தவும்; ஒரு மாகாணத்தானை மற்ற மாகாணத்தானுக்குக் காட்டிக் கொடுத்து, ஆதாயம் பெற்று அதன் பயனாய்ச் சிறுபான்மையினரே மற்ற பெரும் பான்மையானவர்களை அடக்கி ஆளவும் முடிந்து வந்ததுடன், இனியும் அப்படித்தான் முடிகிறதே தவிர தாங்கள் கூறுகிறபடி ஒன்றாயிருந்தால் ஒற்றுமையும் பலமும் நாட்டிற்கு ஒரு நன்மையும் செய்து விடவில்லை.

ஆதலால் பரந்தநாடும், அதன் கலை, சமுதாயம், மதம் முதலியவைகளும் பொருத்த மில்லாத மக்களும் ஒன்றாயிருப்பதால் சுலபத்தில் மற்றவர்களால் ஏமாற்றப்படமுடிகிறதே தவிர முற்போக்கு அடையவோ, உரிமை பெறவோ முடிவதில்லை.

இன்றும் சரித்திரம் பார்க்கலாம். தனித்திருந்த காலத்தில் திராவிடம் முதலிய நாடு களில் மக்களின் நிலைமையும் சமுதாயமும், பொருளியல், அரசியல், வீரம், சுயமரியாதை உணர்ச்சி ஆகியவை எப்படி இருந்தன? இன்று எப்படி இருக்கின்றன? என்று பார்த்தாலே தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் நிலைமை நல்லதா, கெட்டதா என்று விளங்கும். 'அகல உழுவதைவிட ஆழ உழுவது மேலானது' என்பதுபோல், இம் மாதிரி நம்நாட்டைப் பிரித்துக்கொண்டு அதற்கேற்றபடி நடந்து முன்னேற்றமடைவதா லேயே மற்ற மாகாணக்காரர்கள் நம்மைப் பின்பற்றவேண்டியவர்களே யாவார்கள்.

ஏனெனில், இன்று நாட்டில் ஒற்றுமை கெட்டு நலம் குன்றி இழிநிலையில் இருப் பதற்குக் காரணம், இந்நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஒரே சகோதரர்கள் என்ற உணர்ச்சி

இல்லாததேயாகும். இதற்கு முக்கிய காரணம், தமிழர் அல்லது திராவிடர்கள் பிறவியில் உயர்வு–தாழ்வு கொள்கை இல்லாதவர்களாயிருப்பதும், திராவிடத்தில் புகுந்து குடியேறி ஆதிக்கம் கொண்ட ஆரியர் பிறவியில் உயர்வு–தாழ்வு என்பதையே அடிப்படையான கொள்கையாகக் கொண்ட சமய சமூகத்தவராயிருப்பதும் ஆகும்.

'தமிழ் நாடு தமிழருக்கே!' என்று இப்போது நடைபெற்றுவரும் பிரச்சாரத்தைப் பற்றித் தமிழ்நாட்டில் எங்கும் பேசப்பட்டு வருகிறது. நம் எதிரிகளும், தங்கள் சுயநலத்திற்காகவே நம் கூட்டத்தில் இருக்கும் சில வேஷதாரிகளும் இதைத் திரித்துக் கூறுவதும், இதைப்பற்றி விஷமப்பிரச்சாரம் செய்வதும், இதற்கு எதிரான ஒரு கிளர்ச்சியை உண்டாக்க சூழ்ச்சி செய்வதுமான காரியங்களைப்பற்றிக் கேள்விப்படுவதோடு, சில விஷயங்களை நேரிலும் பார்க்கிறோம். இது விஷயமாக நான் தூத்துக்குடியில் பேசிய பேச்சை வைத்து 'மெயில்' பத்திரிக்கை எழுதிய கண்டனத்திற்கு, சென்னை மெமோரியல் ஹாலில் சொன்ன சமாதானம் சமீபத்தில் நம் பத்திரிகையில் வரக்கூடும். ஆனாலும் 'மெயில்' பத்திரிகைக்கு எழுதி அனுப்பிய விளக்கம் 20–11–1939-ந் தேதி 'மெயிலி'ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் அதன் தமிழ்க் கருத்து இன்றுவேறு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், இனி, அப் பிரச்சாரம் தீவிரமாகச் செய்யப்பட விருக்கிறபடியால் அதைப் பற்றிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

'தமிழ் நாடு தமிழருக்கே!' என்ற அபிப்பிராயம் சென்ற வருடம் டிசம்பரில் சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டிலே வாசிக்கப்பட்ட எனது பிரசங்கத்திலே குறிப்புக் காட்டப்பட்டிருக்கிறது. மற்றும், அதற்கு முதல்நாள் வேலூரில் நடந்த தமிழ் மாநாட்டில் தலைமை வகித்த தோழர் சர் ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களும் தலைமைப் பேருரையில் விளக்கி இருக்கிறார்கள். மற்றும், அது பற்றியே பெரிதும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் சொல் இன்று தமிழ் நாடெங்கும், தமிழ் மக்களது இலட்சியக் குறிச்சொல்லாகத் தமிழ்மக்களால் ஒலிக்கப்படுகிறது.

அன்றியும், 'தமிழ்நாடு தமிழருக்கு' என்பதில் யாருக்காவது அதிருப்தியோ, அபிப்பிராய பேதமோ இருப்பதாக இதுவரை நமக்கு எவ்வித தகவலோ, மறுப்போ வந்தது கிடையாது.

பார்ப்பனப் பத்திரிகைகள் சிலவற்றிலும், அவர்களது கூலிகளது வாய்கள் சிலவற்றிலும் ஏதோ பொருத்தமற்ற கூப்பாடுகள் இரண்டொன்றைக் காணவும், கேட்கவும் நேர்ந்தது என்றாலும் அதுவும் எங்கும் மறுமுறை கிளம்பினதாகத் தெரியவில்லை.

ஒரு பார்ப்பனப் பத்திரிகை மாத்திரம், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றால், 'எலி வளை எலிகளுக்கே' என்று எழுதிற்று. மற்றொரு பார்ப்பனக் கூலியின் வாய், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றால், 'கன்னடியனுக்குத் தமிழ்நாட்டில் என்ன வேலை?' என்று கூவிற்று. உள்ளேயிருந்தே உலை வைக்கக் கருதி இருக்கும் ஒரு தோழர் 'தமிழ்நாடு தமிழருக்கே என்றால், ஆந்திர, மலையாளி கதி என்னாவது?' என்று விஷமப் பிரச்சாரம் செய்தார். இவை தவிர வேறு விதமான எதிர்ப்புகளோ அதிருப்திகளோ வந்ததாக நமக்குத் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் சரி, அந்த இலட்சியமே இன்று தமிழ் மக்களின் குறிக்கோளாய் இருப்பதால் அதை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

'தமிழ்நாடு தமிழருக்கே!' என்பதில் நாஸ்திகமோ, மதமொழிப்போ, வகுப்புத் துவேஷமோ தொக்கி இருக்கிறது என்று யாராவது சொல்லி வருவார்களேயானால், அவர்கள்–ஒன்று, விஷயம் அறியாதவர்கள்; அல்லது, வேண்டுமென்றே விஷமப் பிரச்சாரம் செய்யும் அயோக்கியர்களேயாவார்கள். ஏனென்றால் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சொல்லும் தோழர்கள் சர் பன்னீர்செல்வம், குமார ராஜா முதலாகிய தலைவர்கள் நாஸ்திகர்களோ, மதமொழிக்கும் உணர்ச்சி யுடையவர்களோ அல்லர்.

தமிழ்நாடு என்று இதுகாறும் பேசியும், எழுதியும் வருவதெல்லாம், தமிழ்நாடு என்பதற்குத் திராவிடநாடு என்ற பொருளோடு இல்லாமல், தமிழ்மொழி பிரிவினையைக் கொண்ட கருத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், 'தமிழ்நாடு' என்றால், 'திராவிட நாடு' என்றும் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் சிறிதுமில்லாமல் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றியும், 'திராவிடமே தமிழ்' என்று மாறிற்று என்றும் 'தமிழே திராவிடம் என்று மாறிற்று' என்றும் சரித்திர ஆசிரியர்கள் முடிவு கண்டதாகக் குறிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பழங்காலத்து அகராதிகளும் அப்படியே சொல்லுகின்றன.

['மெயில்' பத்திரிகையில் ('The Madras Mail') 20-11-1939-ல் வெளியிடப்பட்ட விளக்க அறிக்கை—'குடி அரசு' 26-11-1939]

3. தமிழ்நாடு தமிழருக்கே

தமிழ் மக்கள், இன்று தங்களை உண்மைத் தமிழரென்றும்—கலப்படமற்ற தனித் தமிழ்ச் சாதி, 'Race' என்றும் ஒருவன் சந்தேகமறக் கருதுவானாயின், அவன் உடனே தன்மீது சுமத்தப்பட்டிருக்கும்—தனக்கு எவ்வகையிலும் எப்போதும் சம்பந்தமிருந்திராத தான—தன்னை (தமிழ்மகனை) சூத்திரன் என்றும், சண்டாளன் என்றும் கூறும்படியான சமயத்தை உதறித் தள்ளிவிடவேண்டியது முதற் காரியமாகும்.

அடுத்தாற்போல், அத் தமிழ் மகன் தமிழ்நாட்டின் விடுதலையும், சுதந்திரமும், செல்வப் பெருக்கும், தொழில் மேம்பாடும்தான் தன்னுடையது என்றும்; இவற்றிற்காக உழைப்பதுதான் தனக்காக—தமிழ் மக்களுக்காக—தமிழ் நாட்டுக்காகச் செய்யும் தொண்டு, கடமை என்றும் கருதவேண்டும்.

இப்படிக் கருதாததாலேயேதான் தமிழன் இன்று முற்கூறப்பட்ட பல இழிவுகளுக்கு ஆளாகி, நிரந்தர இழிமகனாய் இருக்கவேண்டியவனாய் இருக்கின்றான்.

சுருங்கக் கூறின், தமிழன் ஈனநிலைக்குக் காரணம்—இந்துமதத்தைத் தனது மதம் என்று கருதியதும், இந்தியா பூராவையும் தன்நாடு (தேசம்) என்று கருதியதும், இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே மக்கள் தொண்டு, தேசத் தொண்டு (தேசாபிமானம்) என்று கருதி வருவதுமேயாகும்.

'இந்திய தேச அபிமானம்'—என்பது, தமிழன் பல நாட்டாரின் நலனுக்கு உழைத்துப் பல நாட்டாருக்கு அடிமையாய் இருப்பது என்பதாகும்.

இந்த நிலை அடியோடு அழியாமல் தமிழனுக்கு விடுதலை, சுதந்திரம், தன்மானம் என்பவை ஏற்படப் போவதில்லை.

தமிழ்நாட்டுத் தொழில்முறைகளை எடுத்துக்கொண்டோமேயானால், அதுவும் தமிழனுக்குப் பயன்படுவதில்லை என்பது விளங்கும்.

இரும்புத் தொழிலில் பம்பாய்க்காரர், பாரசீகக்காரர் உரிமைபெற்றுப் பயனடைகிறார்கள்.

உலோகத் தொழிலையும் பம்பாய்க்காரர், ஷோலாப்பூர்க்காரர் உரிமையாக்கிப் பயனடைகிறார்கள்.

துணித் தொழிலை பம்பாய், ஆமதாபாத்காரர்கள் கைப்பற்றிப் பயனடைகிறார்கள். இந்தத் தொழில்கள் இயந்திர உதவியினால் செய்யப்படுவதையே இங்குக் குறிப்பிடுகின்றோம். அதனால் தமிழ்த் தொழிலாளிகளுக்கு வேலையில்லை; தமிழ் முதலாளிக்கு இலாபம் இல்லை.

மற்றும், லேவாதேவித் தொழிலை எடுத்துக்கொண்டால், அவை பெரிதும் மார்வாரி நாட்டானும், குஜராத்தி, மூல்தான் நாட்டானுமே ஏகபோக உரிமையாக்கி அவர்கள் கொண்டுபோகும் செல்வம் கொஞ்சமா? அவை எப்படிப் போகின்றன என்பதைப் பார்த்தால் தமிழ்க் கூலிகள், தொழிலாளர்கள், ஏழைகள் ஆகியவர்களின் செல்வத்தைக் கையைத்திருகிப் பிடுங்கிக்கொண்டு போவதுபோல் மார்வாரிகள் கொண்டுபோகிறார்கள்.

மற்றும், தமிழ் வியாபாரிகள், ஏழைக் கிராமக் குடியானவனையும் தொழிலாளிகளையும் ஏமாற்றி வஞ்சித்துத் தேடும் செல்வம் அத்தனையும் பகற்கொள்ளை—வட்டிக் கொள்ளை என்று சொல்லப்படுவதுபோல் கோடி கோடியாய் சிந்து மாகாணத்திற்கு வட்டியின் பேரால் கடத்திச்செல்லப்படுகிறது. அதன் பயனாகத் தமிழ்நாட்டில் உள்ள பெரும் பெரும் வர்த்தகர்கள் மிக மோச நிலைக்கு வந்துவிட்டார்கள். மணல் வீடு கட்டிச் சரிந்து மட்டமாவதுபோல், தமிழ் வியாபாரிகள் தினம் தினம் கடன்காரராகி—பாப்பராகி—'இன்சால்வென்டாகி'த் தற்கொலை செய்து கொள்ளுவதும், நாட்டைவிட்டு ஓடுவதுமான நிலையில் இருந்து வருகிறார்கள்.

வியாபார நிலையக் காரியஸ்தர்கள் என்பவர்களுக்கோ, மாதம் ரூ. 100 சம்பளம் வாங்கின குமாஸ்தாவுக்கோ, இன்று மாதம் 25 ரூபாய் கொடுப்பதற்கு வியாபாரிக்குச் சக்தியில்லை. மாதம் 7 ரூபாய்க்கும், 8 ரூபாய்க்கும் கணக்குப் பிள்ளைகள் தவிக்கிறார்கள்; மூல்தானி, மார்வாரி வீட்டுச் சமையல்காரன் மாதம் 90 ரூபாய் சம்பாதிக்கிறான்.

கம்பளத் தொழிலும் பஞ்சாப் மாகாணக்காரன் கொள்ளைக்கு உதவுகின்றது. இதுபோலவே, மற்றும் அனேகமாக சரீரக் கூலித்தொழில் போக—மற்ற இலாபம் தரும் இயந்திரத் தொழில்கள், மூளைத் தொழில்கள் என்பவைகள் எல்லாம், பெரிதும் தமிழ் நாட்டார் அல்லாதவர்களால்—தமிழரல்லாதவர்களால் கைப்பற்றப்பட்டு, செல்வம் தேடப் பட்டு, திரட்டிய செல்வமனைத்தும் தமிழ் நாட்டைவிட்டு வெளிநாட்டிற்குக் கடத்தப்படுகிறதுடன், தமிழனுக்கு விரோதமாகவும் அவை உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தப்படி பாழாவதும் கடத்தப்படுவதுமானது மேல்நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன? அல்லது கீழ்நாட்டுக்குப் போனால் என்ன?

அரசியல் துறையிலும் நாம் (தமிழன்) வேறு நாட்டானுக்கே அடிமையாய் இருக்க வேண்டுமானால்—அது மேல்நாட்டானுக்கு அடிமையானால் என்ன? வடநாட்டானுக்கு அடிமையானால் என்ன?

தமிழனின் செல்வம்தானாகட்டும், தமிழ்நாட்டை விட்டுக் கடத்தித்தான் ஆகவேண்டுமானால்—அது மேல்நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன?

எனவே தோழர்களே! இக் கட்டுரையில் இக் கருத்து சம்பந்தமான சில விஷயங்களை மட்டுமே வெகு சுருக்கமாகக் குறிப்பிட முடிந்தது. இன்னும் இதைப்பற்றி ஏராளமாகத் தக்க ஆதாரங்களோடு எழுதலாம்; எடுத்துக் காட்டலாம்.

ஒவ்வொரு தமிழ்மகனும் இவைகளை நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பார்த்தபின் ஆரியப் புரட்டு—வடநாட்டுப் புரட்டு ஆகியவைகளிலிருந்து மனிதன் விடுதலையாக முயற்சிக்க வேண்டும். பாழும் தேசியத்தால், தமிழர்களாகிய நாம் 50 ஆண்டுகளைப் பாழாக்கிவிட்டோம். நாட்டையும், மக்கள் சமூகத்தையும் உண்மையாய் மேன்மையடையச் செய்ய முயற்சித்த ஒப்பற்ற பெரியார்களை—'நாத்திகன்', 'தேசத் துரோகி' 'சுயநலக்காரன்' என்றெல்லாம் வைது அவர்கள் பாடு பயன்படாதமுறையில் செய்து விட்டோம்.

உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்; மலத்தை மனமார முகருகிறோம்; மானமிழந்தோம்; பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம்; மாற்

றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத்தானா தமிழன் உயிர் வாழவேண்டும்? எழுங்கள்! நம்மை ஏய்த்து அழுத்தி, நம் தலைமேல் கால்வைத்து ஏறி மேலே போக—வடநாட்டானுக்கும், தமிழரல்லாதவனுக்கும் நாம் படிக்கல் ஆகிவிட்டோம்.

இனியாவது, 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று ஆரவாரம் செய்யுங்கள்!

உங்கள் கைகளில், 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று பச்சை குத்திக்கொள்ளுங்கள்!

உங்கள் வீடுகள்தோறும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்!

நம் வீட்டுக்குள் அன்னியன் புகுந்துகொண்டதோடல்லாது, அவன் நம் எஜமான் என்றால்—நமக்கு இதைவிட மானமற்ற தன்மை, இழிதன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்!

புறப்படுங்கள்! தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்துச் சின்னா பின்னமாக்குங்கள்!

தமிழ்நாடு தமிழருக்கே!

[கட்டுரை—'குடிஅரசு' 23-10-1938; 'விடுதலை' 3-12-1957]

4. இந்து-முஸ்லிம் பிரச்சினை

'முஸ்லிம் இந்தியா' என்றும், 'இந்து இந்தியா' என்றும் பிரிக்க வேண்டுமென ஜனாப் ஜின்னா கூறியுள்ள திட்டம் எனக்கொரு ஆச்சரியத்தையும் தரவில்லை. ஏனெனில், நான், இந்தியாவிலிருந்து 'திராவிடநாடு' தனியே பிரிக்கப்படவேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளாகவே வற்புறுத்தி வருகிறேன்.

ஆரிய ஆதிக்கம் மிகுந்த காங்கிரஸ் ஆட்சியின் இரண்டாண்டு அனுபவம், ஆரியரல்லாதார் உள்ளத்திலே திகைப்பை உண்டாக்காமல் இருந்திருக்க முடியாது. இதனாலேயே பிரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிட்டது. முஸ்லிம்கள் தனி நாட்டைப் பிரித்துக்கொண்டு தனியாட்சி நடத்த விரும்புவது இயற்கையாக எழும்பும் எண்ணமேயாகும். ஜனாப் ஜின்னா இந்தப் பிரிவினைக்குக் கூறும் காரணங்கள் மறுக்க முடியாதன; அவரது கோரிக்கையும் நியாயமானதே. காந்தியார் சதாகாலமும், பச்சையாகவே, தாம் விரும்பும் சுயராஜ்யம் இராமராஜ்யம்தானென்றும்—தமது வாழ்க்கையின் இலட்சியமே இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்வதுதானென்றும் கூறிக்கொண்டிருக்க, தோழர் சவர்க்கார் போன்ற இந்துமகா சபைத் தலைவர்கள், 'இந்துஸ்தானம் இந்துக்களுக்கே' என்ற பேரர் முழக்கம் செய்து கொண்டுமிருக்கக் கண்ட பிறகும்—முஸ்லிம்கள் கைகட்டி, வாய்பொத்தி இருப்பார்கள் என்று யார்தான் எதிர்பார்க்கமுடியும்?

இந்து-முஸ்லிம் பிரச்சினை தீர்க்கப்பட முடியாததோ என்று திகைக்குமளவில் இருக்கிறது. இதனைத் தீர்த்துக்கொள்ள ஜனாப் ஜின்னாவின் திட்டமே அறிவு ததும்புவது. நான் ஜனாப் ஜின்னாவின் கோரிக்கையை ஆதரிப்பதோடு, மற்றொரு முக்கியமான அம்சத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன். முஸ்லிம்கள் 'முஸ்லிம் நாடு' என இந்தியாவில் தனி நாடு பிரித்துக்கொள்ள முடியும்; ஆனால், இந்துக்களால் முடியாது. ஏனெனில், இந்துக்கள் என்று கூறப்படும் தொகுப்பில் பலப் பல வர்க்கத்தார் உள்ளனர்.

நாலு கோடிக்கு மேலுள்ள திராவிடர்களுக்கும்—இந்துக் கொள்கை, கோட்பாடு என்று கூறப்படும் பார்ப்பனீயத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மொழி, கலை, சரிதம், மார்க்கம், பழக்க வழக்கம் ஆகியவைகளில்—ஆரியத்திற்கும், திராவிடத்திற்கும் தீர்மானமான வேறுபாடுகள் உள்ளன. கடவுள்கள் கூட வேறு, வேறு!

எனவே, 'முஸ்லிம் இந்தியா' என ஜனாப் ஜின்னா கேட்பதுபோலவே—தமிழ், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மொழி வட்டாரங்களைக்கொண்ட 'திராவிட நாடு' பிரிக்கப்படவேண்டுமென நாம் கேட்க உரிமையிருக்கிறது. 'இந்து இந்தியா' எனப் பொதுவாகக் கூறுவது முடியாத காரியம். அதை ஒட்டவைத்துக் காட்டினால் அது வெறும் பார்ப்பனீய ஏகாதிபத்தியமாகவே இருக்கும். அதனைத் திராவிடர் கடுமையாக முடிவுவரை எதிர்ப்பர். எனவே, இந்தியாவிலிருந்து திராவிட நாட்டைத் தனியே பிரித்துவிடுவது மிக அவசியமாகவும் அவசரமாகவும் செய்யவேண்டியதாகும். நான் இதனை 1938 டிசம்பர் 28-ல் சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டுத் தலைமையுரையில் கூறியுமுள்ளேன்.

['குடிஅரசு'—அறிக்கை—31-3-1940]

சர். ஆர். கே. எஸ்.

சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் புதுக்கட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதும், அதற்கு ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் கொடுக்கப் பார்ப்பதும், அவரைப் பல தோழர்கள் ஆதரிப்பதும், மற்றும் பலவிதமான காரியங்கள் நடந்துவருவதும் ஏன் என்பதும், எதற்காக என்பதும் இப்போது அதாவது, சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் சென்னையில் சமீபத்தில் சர்வ கலாசாலையில் பேசிய பேச்சிலிருந்து மக்களுக்கு விளங்கியிருக்கலாம்.

என்னவென்றால், சர். ஆர். கே. எஸ். அவர்கள், இந்தியா ஒரு நேஷன் (ஒரு தேசம்) என்றும், இந்தியா துண்டாக்கப்படக்கூடாது (அதாவது பாகிஸ்தான், திராவிடநாடு ஆகிய தனிப்பிரிவினை கூடாது) என்றும், இனத்தின் பேரால், மொழியின் பேரால், மதத்தின் பேரால் மனித சமுதாயம் பிரிக்கப்பட்டு, அதற்கு ஏற்றபடி நாடு பிரிக்கப்படுவது கூடாது என்றும் சொல்லிவிட்டார்.

சரித்திர காலமாக இந்தியா ஒரே நாடாக இருந்துவருகிறது என்றும், இது இயற்கை அமைப்பு என்றும் காட்டுகிறார்.

இது எவ்வளவு அதிசயப்படத்தக்க சேதி என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இந்தியா ஒரு நாடு அல்ல. திராவிடநாடு, பாகிஸ்தான் தனி நாடுகளாகப் பிரிக்கப்படவேண்டும். ஆரிய திராவிட இனங்கள் வெவ்வேறு இனங்களாகும் என்கின்றவையான இந்தப் பிரச்சினைகள் இன்றைக்கு 5, 6 வருஷங்களுக்கு முன்பிருந்தே ஆகாயம் முட்ட சலாடிக் கொண்டிருந்துவந்து, இந்தியா முழுவதிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்து, எல்லா அரசியல் வாதிகளுடையவும், பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த மக்களுடையவும் கவனத்தை இழுத்து நிற்கின்றதான ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

அதோடுகூடவே, இந்தப் பிரச்சினைகளில் கலந்து தொண்டாற்றி வந்த மக்களோடு கூடிக் குலாவிக்கொண்டே இருந்து வந்திருக்கின்றவராவார் சர். சண்முகம் செட்டியார் அவர்கள்.

அப்படி இருக்க, இவைகளுக்கு விரோதமாக இன்று திடீரென்று வெளிவந்து ஒரு பெரிய வெடி குண்டைப்போட்டு, இந்தப் பிரச்சினைக் கிளர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் அழிக்கமுன் வந்து இருக்கிறார் என்றால் இதற்கு என்ன கருத்துக்கொள்வது?

இதுவரை சர். செட்டியார் அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த இடத்திலும் இந்தப் பிரச்சினைகளுக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடப் பேசியதாக நமக்குத் தெரியவில்லை. ஆதலால், இந்த அபிப்பிராயங்கள் இவருக்கு முன்பிருந்தே இருந்து வந்தவைகளா, அல்லது இப்போதுதான் கொள்ளப்பட்டவைகளா என்பது யோசிக்கத்தக்க மற்றொரு விஷயமாகும்.

எப்படி இருந்தபோதிலும், சர். சண்முகம் செட்டியார் அவர்கள் திராவிடர் கழகம் என்னும் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்க முடியாமல் போய், புதிய கட்சியை ஏற்படுத்தவேண்டிய அவசியம் என்ன என்பதற்குக் காரணம், இந்த இந்தியாவைத் துண்டு போடக்கூடாது என்கின்ற இந்திய தேசீயமும், இனத்தின் பேரால் அரசியல் இருக்கக்கூடாது என்கின்ற உலக அரசியல் தத்துவமும்தான் என்பது யாவருக்கும் விளங்கி இருக்கலாம்.

இதற்கு நாம் சமாதானம் சொல்லவேண்டியது அவ்வளவு அவசியமா என்றே இப்போது கருதுகிறோம்.

எதிர்க்கட்சிக்காரராகிய காங்கிரஸ்காரர்களும், காந்தியாரும், டாக்டர் இராஜ கோபாலாச்சாரியார் அவர்களும்கூட இவ்வளவு இந்திய தேசீயம் காட்டவில்லை.

பிரிட்டிஷாரும்கூட பிரிந்துகொள்ளலாம் என்றும், இந்தியா ஒரு தேசமல்ல—அது ஓர் உபகண்டம் என்றும் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திராவிடநாட்டைப்பற்றியும், திராவிட இனத்தைப் பற்றியும் இது தனித்த ஆட்சி உடையதாயிருக்க வேண்டுமென்பது பற்றியும், நாமும் மற்றும் பல அறிஞர்களும் பொதுநல சேவையில் ஈடுபட்டவர்களும் சொல்லிவந்த ஆதாரங்களுக்கு இதுவரை வேறு யாரும் மறுப்போ, சமாதானமோகூட சொல்லாமல் இருக்கும் இந்த நிலையில், நம்மில் ஒருவராய், அதுவும் பிரதானப்பட்டவருள் ஒருவராய்க் கருதிவந்த ஒருவரால் இன்று திடீரென்று சொல்லப்பட்ட கருத்துக்கள் நமக்கு எவ்வளவு பலவீனத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதுதான் முக்கியமாய்க் கருதப்படவேண்டியதாகும். ஆனாலும், திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி துவக்கக் காலத்தில் யார் யார் இதற்கு அனுகூலமாய் இருப்பார்கள்; யார் யார் இதற்கு எதிர்ப்பாய் இருப்பார்கள் என்பதைப் பற்றிய சிந்தனை ஒன்றும் இல்லாமல், அந்தப் பிரச்சினை தோன்றுவதற்கு அவசியமாயிருந்த பலமான காரணங்களைக் கொண்டும் அக் காரணங்களை ஒழிக்கவேண்டும் என்பதின்மீதுள்ள கவலையின் பலத்தைக் கொண்டுமே பலாபலனை இயற்கைக்கு விட்டுத் துணிந்துகொண்ட ஓர் அபிப்பிராயமேயாகும்.

ஆதலால், மற்றவர்கள் எதிர்ப்பும் ஆதரிப்புமே திராவிடநாடு, பாகிஸ்தான் பெறாமல் போவதற்கும் அல்லது, பெறுவதற்கும் முக்கிய துணையாய் இருந்துவிடாது என்கின்ற எண்ணம் நமக்கு உண்டு.

சர். சண்முகம் செட்டியார் அவர்கள் கருத்து நமக்கு எப்படி இருந்தாலும் அதை வெளியாக்கிவிட்டதற்குத் தமிழ்மக்கள் அவருக்கு நன்றிகாட்ட கடமைப்பட்டவர்களாவார்கள்.

நிற்க, அவரது அன்றையப் பேச்சில் நாம் அதிசயப்படக்கூடிய மற்றொரு சங்கதி என்னவென்றால்,

'இந்தியப் பிரச்சினை முடிவுபெற அமெரிக்க, சீன, ரஷ்யத் தலைவர்களைப் பஞ்சாயத்தாராய் நியமித்து அவர்கள் தீர்ப்புக் கூறவேண்டும்' என்பதாகும்.

இது சர். சண்முகம் செட்டியார் போன்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய அபிப்பிராயம் என்றால், இதைவிட அதிசயமான சங்கதி வேறு ஒன்று இருக்கமுடியாதென்றே கூறுவோம்.

இந்தியாவைப் பற்றி (இந்தியாவில் உள்ள தன்மைகளைப் பற்றி, இந்தியப் பிரச்சினைப் பற்றி) இவர்களுக்கு என்ன தெரியும்? இவர்களை நாம் எப்படி நம்பமுடியும்? இவர்கள் பிரிட்டிஷார்களின் தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல், நடுநிலையில் இருந்து தீர்ப்புக்கூறி, தீர்ப்பை நடத்திக்கொடுக்கத்தக்க நிலையை உடையவர்களா?

நமக்காவது இவர்களுடைய யோக்கியதை நன்றாகத் தெரியுமா? இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நம் எல்லோருடைய தேவையும் இலட்சியமும் ஒன்றுபோன்றதா?

இந்தியாவுக்காக இந்தப் பஞ்சாயத்தாரிடம் ஒரு பிராது கொடுப்பதாயிருந்தால், அந்தப் பிராதில் யார் யார் கையெழுத்துப் போடுவார்கள்? திராவிட மக்கள் சம்மதிப்பார்களா? திராவிடர்களை இலட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால், ஆதித்திராவிட மக்கள் கையெழுத்துப் போடுவார்களா? அவர்களையும் இலட்சியப்படுத்த வேண்டியதில்லை என்றால் முஸ்லிம்கள் கையெழுத்துப் போடுவார்களா? முஸ்லிம்களையும் இலட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால், இந்து மகாசபையார் கையெழுத்துப் போடுவார்களா? இவர்களையும் இலட்சியம் செய்யவேண்டியதில்லை என்றால் மற்றும் வேறுயார் இருக்கிறார்கள் பிராது கொடுப்பதற்கு?

காந்தியாரும், சர். சண்முகமும் கையெழுத்துப் போட்டுவிட்டால் அது 45 கோடி மக்களின் பிரதிநிதியாகப் போட்ட பிராதாக அந்த மூன்று ஜட்ஜுகள் ஒப்புக்கொள்வார்களா? என்றெல்லாம் பார்த்தால் என்ன பதில் கிடைக்கும்?

பொதுவில் இதுபோன்ற ஒரு பேச்சு சர். சண்முகம் செட்டியார் அவர்களிடமிருந்து இதுவரை யாருமே கேட்டிருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இயற்கையின் கோலம் இன்னும் என்னென்ன செய்யுமோ?

['குடிஅரசு'–தலையங்கம்—3–3–1945]

6. மாநில சுயாட்சி

தென்னாட்டு விடுதலைக் கோரிக்கையை இதர பகுதிகளில் வாழ்வோருக்கும் திராவிட நாட்டின் மூலை முடுக்குகளில் உறைவோருக்கும் தெரியப்படுத்தவும், தான்தோன்றித் தனமிக்க அரசியலமைப்பு சபையொன்று நமது எதிர்காலத்தை நிர்ணயிக்க முன்வந்து, தென்னாட்டவருக்கு அடிமை மனப்பான்மையூட்டி, புதிய வருணாசிரம முறையாட்சி ஒன்று நிறுவும் எண்ணத்தில் வகுத்துவரும் அரசியலைப் பரிசீலனை செய்யவும்—இம் மாதம் 9-ந்தேதி முதல் 12-ந்தேதி வரையில் கூட்டங்கள் போட்டு அதிதீவிரப் பிரச்சாரம் செய்யுமாறு எல்லாக் கருத்துச் சார்புடைய திராவிடரையும் வேண்டியிருந்தேன். நம் இனத்துக்கும், நம் நாட்டுக்கும் இப்பொழுது கவலைக்கிடமான நெருக்கடி நிலை கிட்டியுள்ளது. திராவிடர்களில் பெரும்பாலோர் கண்விழிப்புற்றுத் தங்களது உள்ளக்கிடக்கையினையும், கோரிக்கைகளையும் தற்போதைய இந்துஸ்தான் அரசியலமைப்புச் சபையிடம் முழு பலத்துடன் வலியுறுத்திக் கூற முனைந்து நிற்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்துஸ்தான் அரசியலமைப்பு சபையின் நடைமுறைகளைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர், அந்த ஸ்தாபனத்தின் முன்னிலையில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதும் பத்திரிகைகளில் வெளியானதுமான அறிக்கைகளை விளக்குவதற்கு முன்னர், இப்பொழுது எய்தப்பெற்றிருக்கும் சுதந்திரத்தின் யோக்கியதை குறித்துச் சிறிது கூற ஆசைப்படுகிறேன்.

ஆகஸ்ட் 15-ல் நடைபெற இருக்கும் கொண்டாட்ட விழாக்களில் திராவிடர்கள் கலந்துகொள்ள வேண்டாமெனக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஏனெனில், தென்னாட்டவராகிய நமக்கு இதனால் இலாபம் என்ன? நம் முன்னிற்கும் வேலை என்ன? பிரிவினை ஏற்றுக்கொள்ளப்பட்டது; இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்பதற்கு மட்டும் நாம் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக்கொள்ளலாமே தவிர, தென்னாட்டவர் தனிச் சுதந்திரம் பெற்று இன்புறும் வகையில் பிரிவினையேற்படாத வரையில், இந்துஸ்தான் 'டொமினிய'னுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரம் அல்லது டொமினியன் அந்தஸ்து என்பது வெறும்

கேலிக்கூத்தே என்பதை நாம் உணரவேண்டும். மேற்படிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளாதிருப்பதின்மூலம் நாம் நமது கண்டனத்தைத் தீவிரமாகக் காட்டிக்கொள்ளலாம்.

கடந்த ஆண்டில் வந்துபோன மந்திரி சபை தூது கோஷ்டி, பாதுகாப்பு, அயல் நாட்டு விவகாரம், போக்குவரத்து ஆகிய மூன்று முக்கியமான விஷயங்களும் மத்திய சர்க்கார் பொறுப்பிலிருக்க வேண்டுமெனக் கூறி, திட்டமொன்றை வகுத்தது. மாகாணங் களுக்கு அதிகபட்ச சுதந்திரத்தை வழங்குவதே அத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. மேற்கண்ட மூன்று விஷயங்களை நிர்வகிப்பதற்குப் பிடிக்கும் செலவுத் தொகையினையே 'ரெவினியு'வாக மத்திய சர்க்காருக்கு மாகாணங்கள் அளிக்கும் வகை யில் நிபந்தனை காணப்பட்டது. இவைகளைத் தவிர்த்த இதர விஷயங்களும் மத்திய நிர்வாகப் பொறுப்புக்கு விடப்படுமேல் அது அந்தந்த மாகாணத்தின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

பிரிட்டிஷ் தூதுவர் திட்டத்துக்குக் கண்டனங்கூற முன்வந்த திராவிடர்கள் பலரும் இரண்டு உதாரணங்கள் காட்டினர். தங்களின் ஆட்சேபத்துக்கு முதலாவதாக மத்திய நிர்வாகத்தின் பொறுப்பு இவைஇவை என்று தெளிவாக விளக்கப்படவில்லை என்றும், இரண்டாவதாக, 'ஏ' பிரிவில் இதர பகுதியினரோடு தாங்களும் பிணைக்கப்பட்டுவிட்டனர் என்றும் எடுத்துக் காட்டினர். புது டில்லியில் சர்க்கார் இயந்திரத்தின் பொறுப்பையேற் றுள்ள சுயநல ஆதிக்கக் கும்பல் செய்யும் அட்டகாசத்தில் 'ஏ' பிரிவிலுள்ள திராவிடரின் கோரிக்கையும், சுயாட்சியும் மறைந்துபடும். பொதுமக்களை அடிமைப் படுகுழியில் ஆழ்த்திவைத்து, தென்னாட்டவர் சுயேச்சையுறுவதை என்றென்றும் தடைசெய்தும் வர, தென்னாட்டுப் பிற்போக்குச் சக்தி சிலவற்றுக்கும், வடநாட்டாருக்குமிடையே ஒப்பந்த மேற்பட்டு வருவதாகவும் திராவிடர் உணரலானார்கள். திராவிடஸ்தான் அல்லது தென் னிந்தியாவை இதர மாகாணங்களோடு இணைத்து 'ஏ' பிரிவில் போட்டு அடைத்து விட்டதால் இவ்வொப்பந்தம் மேலும் வலுப்பெற்றது.

இதெல்லாம் நடந்துபோன சரிதை எனினும், அண்மையில்தான் நடந்ததாகையால் அலட்சியப்படுத்த முடியாது. இன்று முற்றிலும் மாறுபட்ட நிலைமை நேரிட்டு நிற்கிறது. ஜூன் 3-ந்தேதிய திட்டம் பழைய மந்திரிசபை தூதுகோஷ்டி திட்டம் முழுமையும் திருத்தி யமையப்பெற்ற தொன்றாகும். இந்தியா இரு துண்டாக்கப்படுவதை காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஏற்றுக்கொண்டு விட்டன. இப்பிரிவினை ஏற்றுக்கொண்ட நாள் முதற்கொண்டே அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் சிலரிடமிருந்து ஆதிபத்திய அரசியலமைப்பு சபை செய்யக்கூடியது என்னவென்பது குறித்து விளக்கங்கள் வந்த வண்ணமுள்ளன.

அதிகாரங்களனைத்தையும் தன்மாட்டே நிரம்பப் பெற்றுக்கொள்ளும் பலமிக்க மத்திய நிர்வாகமொன்று அமைப்பதே இந்துஸ்தான் (இந்தியா) அரசியலின் முக்கிய குறிக் கோளென அறிவிக்கப்பட்டுள்ளது. அய்க்கியம் வளருவதற்கு, மாகாணங்களை எப்பொழு தும் மத்திய நிர்வாக ஆதிக்கத்தின் கீழேயே அடக்கிவைத்திருந்து, அதன் ஆணைக்கு உட் பட்டு நடந்துவர ஆவன செய்யவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரங்களைப் பிரித்து வழங்கிய மந்திரிசபை தூதுகோஷ்டித் திட்டத்தைத் தற்போதைய அரசியலமைப்புச் சபை கைவிட்டதேன் என்பது எனக்குப் புரியவில்லை. முஸ்லிம் லீகினர் பாகிஸ்தான் பெற்றுவிட்டனர் என்பதற்காக, இவர்களிடையே முதலாளித்துவ ஏதேச்சாதிகார மனோபாவம் ஏற்பட்டுவிடுதல் கூடாது. பாகிஸ்தான் உருவாகி வெற்றிபெற்றதற்கே காரணம், இந்த ஏதேச்சாதிகார எண்ணமேதானென்பதை அவர்கள் நினைவு கூரவேண்டும். அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களுக்கு அறிவு புகட்டுவது எனது வேலையல்ல; மிகமிக மோசமான முறையில் நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டிருப்பதைத்தான் திராவிடர்க்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இத்தகைய நம்பிக்கைத் துரோகச் செயலைத்தான் திராவிடர்கள் நடக்கவிருக்கும் பொதுக் கூட்டங்களில் இடித்துக் கூறிப் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

அரசியல் முறைகள் வகுக்கப்பெற்று நகலாகியதும், அவை மாகாண சட்டசபைகளுக்கு அனுப்பப்பெற்றுக் குற்றங்குறைகளையும், திருத்தங்களையும், யோசனைகளையும் கூறுமாறு கோரப்படுமென முதற்கண் அறிவிக்கப்பட்டது. விரைவில் காரியம் முடிய வேண்டியிருப்பதை அனுசரித்து, மாகாண சட்டசபையின் விவாதத்துக்கு நகலை அனுப்புவதற்கில்லையென அரசியலமைப்பு சபையார் அறிவிக்கின்றனர். இத்தகைய நம்பிக்கைத் துரோகச் செயலைத் திராவிடர்களாகிய நாம் மட்டுமல்ல—பொதுநன்மையில் அக்கறையுடைய சட்டசபைக் கட்சியினரும் கண்டித்தே தீரவேண்டும். நமக்கும் அவர்களுக்கும் உள்ள கருத்துவேறுபாடுகள் ஒருபுறமிருக்க, அரசியல்முறை விஷயத்திலாயினும் அவர்கள் கட்சிக் கொள்கையைக் கடந்து நாம் வதியும்பகுதிகளின் நன்மையை உத்தேசித்து வேலை செய்வரென நம்புகிறேன்.

அரசியலமைப்பு சபை ஒன்று ஆதிபத்திய அதிகாரம் பெற்றுத் திகழ்கின்றதென்பதற்காக, அதற்கு மரியாதை செலுத்தவேண்டியதில்லை. செலுத்தவேண்டுமானால், முன்னால் ஏகாதிபத்திய சர்க்காருக்கும் விடுதலை வீரர்கள் கீழ்ப்படிந்து நடந்து மரியாதை செலுத்தி இருக்கவேண்டும். தோழர் வல்லபாய்படேல் தலைமையில் தயாரிக்கப் பெற்றதான அரசியலமைப்பு சபையின் முடிவும், யூனியன் அரசியல்முறையும் அடிப்படை உரிமைகளும், கொடிமுறை தேர்ந்தெடுப்பும் இவைபோன்ற இதர விஷயங்களும் தென்னிந்திய வட்டாரங்கள் பலவற்றிலும் வெகுவாகக் கண்டிக்கப்பட்டன.

மாகாணங்களுக்கு அளிக்கப்படும் புதிய அரசியலின் அம்சங்களென்ன? மத்திய நிர்வாகம் சர்வ வல்லமையும் சர்வ சக்தியும் கொண்டதென்ற அடிப்படையை வைத்து நாம் ஆராயத் தொடங்க வேண்டும். இப்படி வைத்துத் துவங்குவதால் எழும் விளைவுகள் பல. அன்பு, மரியாதை, மதிப்பு, கீழ்ப்படிதல் என்ற அடிப்படையில் அசைக்க முடியாத யூனியனொன்றை நிறுவுவதென்ற ஆரம்பக் கொள்கைக்குப் பதிலாக, மனமொவ்வாத கூட்டாளிகள் வலுக்கட்டாயமாகப் பிணைத்து இழுத்துக்கொண்டு வரப்படுவதைக் காண்கிறோம். இந்த அரசியல் முறையின் முக்கிய அம்சங்கள் மிகவும் எளிமையானவையே. பலதிறப்பட்ட பத்திரிக்கைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள 'பெடரல்' விஷயங்களின் ஜாபிதா மிகப் பரந்ததொன்றாகும். அதில் 82 பிரிவுகள் அடங்கியுள்ளன. இப்பிரிவுகள் பெரும்பாலும் முக்கிய விஷயங்களை—மாகாணங்களைப் பொறுத்த முக்கிய விஷயங்களையே கவனித்துவரும் வகையில் அமைந்துள்ளன.

உதாரணமாக, பெடரேஷனுடையவும், அதன் ஒவ்வொரு அங்கத்தினுடையவும் பாதுகாப்பும், பாதுகாப்புக்கான தயாரிப்புகளனைத்தும் இன்ன பிறவும் மத்திய நிர்வாகத்தின் கீழ்வருதல் வேண்டுமெனக் கூறப்படுகிறது. மத்திய நிர்வாகத்துடன் ஒத்துப்போகத் தென்னாடு விரும்புகிறதென்றே வைத்துக்கொள்வோமானால், அதனுடைய அதிகாரத்தையும் மத்திய நிர்வாகத்திடந்தான் ஒப்படைத்தாக வேண்டும். இப்படி ஒத்துப்போக ஏற்றுக்கொள்வதால் மத்திய நிர்வாகமென்பது எல்லா வேலைகளையும் தானே கவனிக்க முற்பட்டுவிடுதல் கூடாது. ஆனால், இந்துஸ்தான் டொமினியன் செய்வது இதுவேதான். எப்படியெனில், மத்திய நிர்வாகத்தின் வேலை முறைகள் இவை இவையென விரித்துக் கூறப்படுகையில், மாகாணங்களின் பொறுப்புகளாக எவையும் விடப்படவில்லை. எல்லாவற்றையும் மத்திய நிர்வாகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

பாதுகாப்பு வேலைகளை நன்முறையில் கவனிக்க, பாதுகாப்புக் கைத்தொழில்களும் மத்திய நிர்வாகத்தின் ஆதிக்கத்தின் கீழிருக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. இன்னும் 'ரோட்டு'ப் பாதைகளும், நீர்ப் பாதைகளும் பெடரல் அதிகாரத்தின் கீழ்தான் இருக்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு நீர்ப் பாதைகளில் கப்பல் போக்கு

வரத்தும், சாமான்கள், பிரயாணிகள் போக்குவரத்தும் பெடரல் பொறுப்பின் கீழேதான் இருக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, பெடரேஷன் காரியங்களுக்கான சொத்துக்களனைத்தும் கைப்பற்றப்படுமென்றும், இவை பெடரல் சர்க்காரின் ஆட்சியின்கீழ் இருக்குமென்றும், தான் விரும்பிய எந்த முறையிலும் இது சொத்துக்களைக் கைப்பற்றலாமென்றும் கூறப்படுகிறது.

இந் நிபந்தனைகளைப் பரிசீலனை செய்வோருக்கு நன்கு தெரியவரும்—இந்துஸ்தான் அரசியலமைப்புச் சபை தோற்றுவிக்க முயலும் பெடரேஷனின் மாயத்தன்மை.

உதாரணமாக, பாதுகாப்புக் கைத்தொழில்கள் என்பவை யாவை? அவைகளைப் பற்றித் தெளிவாக, விளங்கக்கூறக் கவலையெடுக்கப்படாவிடில் பாதுகாப்புக் கைத்தொழில்கள் பிரிவின்கீழ் ஒவ்வொரு கைத்தொழிலையும் கொண்டுவந்து விடலாம்—'டெக்ஸ்டைல் மில்'கள் போன்ற இன்றியமையாக் கைத்தொழில்களை ஏற்படுத்திக்கொள்ளவும் மாகாணங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை! நவீன கைத்தொழில்கள், அவை பாதுகாப்புக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி—அவை 'சிவில்' மக்கள் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். உண்மையில், நாடுகள் பலவும் படைக் கலைவுப் பிரச்சினைகளால் சமாளிக்கவேண்டியிருக்கும் பெருந்தொல்லைகளனைத்தும், போர்க்காலக் கைத்தொழில்களைச் சமாதானகாலக் கைத்தொழில்களாக மாற்றுவதிலிருக்கும் தொல்லைகளிலிருந்தே எழுகின்றன.

பெடரல் மத்திய நிர்வாகமென்பது பாதுகாப்புக் கைத்தொழில்கள் இன்னவை என்பதை விளக்காதிருப்பது என்ன நியாயம்? (பெடரல் மத்திய நிர்வாகம் ஒன்றுக்கு அவசியமிருப்பதாகவே வைத்துக்கொள்வோம்)—அவசர காலங்களில் பெடரல் மத்திய நிர்வாகமென்று பலதிறப்பட்ட கைத்தொழில்களையும் ஆதிக்கப்படுத்திக்கொண்டு, அவைகளைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அங்கமாக வைத்துக்கொள்வதிலாவது அர்த்தமிருக்கிறது. ஆனால், இவை அவசரகால அதிகாரங்களாகும்; மிகமிக அவசரமான காலங்களில் மட்டுமே இவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்துஸ்தான் டொமினியன் ஆரம்பத்திலிருந்தே போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இத்தகைய மாபெரும் அதிகாரங்கள் மத்திய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்றனவென்று வாதிக்கப்படமாட்டாதென நம்புகிறேன். இந்துஸ்தான் டொமினியன் போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருக்கவேண்டியது அவசியந்தானென்று கூறுமேல், அது தன் எதிரிகளாக யாரைக் கருதுகிறதென்பதையறிய ஆசைப்படுகிறேன். உடனடியாக இப்படி அது போர்ப் பாதைக்கு ஆயத்தமாயிருப்பானேன்?

பெடரல் மத்திய நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூர்ந்து பரிசீலனை செய்து பார்ப்போருக்கு, அவற்றின் பிற்போக்கு அம்சங்கள் தெரியவரும். அரசியலமைப்பான எவரும் இதுகண்டு வெட்கித் தலைகுனியவே வேண்டும்.

மாகாணமொன்றுக்கு உரிய சொத்தை, பெடரல் சொத்தாக்கிக்கொள்ள, பெடரல் நிர்வாகத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது; மாகாண சட்டசபையைக் கலைக்காமலேயே இதனைச் செய்து கொள்ளலாம். அவைகள் சம்பந்தமாக மாகாண சட்டசபைகளுடன் கலந்து பேச வேண்டியது தகுதியும் முறையுமாக இருக்க, இவ்விதம் செய்யப்பட்டிருப்பது என்ன நியாயம்? பெடரல் சர்க்கார் நிர்ணயித்து வரையறை செய்யும் நிபந்தனைகள்போல் தான், பெடரல் சர்க்கார் காரியங்களுக்கான சொத்துக்களை பெடரல் சர்க்கார் கைப்பற்ற முடியும். பெடரல் முறையில் நிர்வகிக்கப்படும் விஷயங்கள் பெடரல் சட்டத்துக்கே உட்பட்டிருக்கும் பெடரல் சர்வீஸ்களாலேயே நிர்வகிக்கப்படுமென முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக, தங்கள் பகுதிகளைச் சார்ந்த சர்வீஸ்களின் நிர்வாகத்தையேற்று நடத்தும் அதிகாரமும் மாகாணங்களிடமிருந்து பறித்துக்கொள்ளப்படுகின்றது. மாகாணங்

களின் அதிகாரங்களை இப்படிக் களவாடிக்கொள்வதற்குக் கூறப்படும் சமாதானம் என்னவென்றால், நிர்வாக சபையின் அதிகாரம் சட்டசபையின் அதிகாரத்தைப் போலவே சம விஸ்தாரமுடையதாயிருக்க வேண்டுமென்ற விதி எடுத்துக் காட்டப்படுகின்றது.

பதவிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும், இந்நாட்டு மக்கள் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நிற்காவண்ணம் தடைசெய்யவுமே இம்முயற்சி கையாளப்படுகிறதென்பதை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பெடரல் மத்திய நிர்வாகமொன்றின் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் கூட புதிய முறையில் புனராலோசனை செய்து பெடரல் மத்திய நிர்வாகத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள், தென்னாப்பிரிக்க யூனியனில் நிறுவப்பெற்றிருக்கும் ஒற்றையாட்சி சர்க்காரின்கீழ் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்காட்டிலும் மிகப் பரந்தவை என்பதை உணரவேண்டும்.

இதுகிடக்க, எதிர்கால மாகாண சர்க்கார் அமைப்பு முறை பற்றிச் சிறிது பரிசீலனை செய்வோம். மாகாண அதிகாரங்கள் கமிட்டித் தலைவர் தோழர் வல்லபாய் படேல் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையொன்றில் மாகாண அரசியல் முறைக் கொள்கைகள் இவையிவை எனத் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. அவ்வறிக்கையின்படி, ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு கவர்னர் உண்டு; இவருக்கு எதேச்சை யதிகாரம் முற்றிலுமுண்டு; இவரது எதேச்சையதிகாரத்தை அவ்வப்போது குறைக்கவோ தடைசெய்யவோ இராஷ்டிரபதிக்கும், பெடரல் நிர்வாகத்துக்கும் மட்டுந்தான் உரிமையுண்டு. வயது வந்தோரனைவருக்கும் ஓட்டுரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இக் கவர்னருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் எந்த நாகரீக நாட்டு அரசியலிலும் காணப்படமாட்டா.

கவர்னர் என்பவர் சர்வஜன ஓட்டுரிமையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆகையால், அவர் அதிகாரங்களைத் தப்பு வழியில் பயன்படுத்த மாட்டாரெனக் கூற முனைவது அர்த்தமற்றதென்பதோடு, குறும்புத்தனமானதுமாகும். இது உண்மையானால் ஹிட்லர் ஒரு எதேச்சையதிகாரியாக இருந்திருக்க முடியாது.

பொறுப்பாட்சி வேலைகளை அனுசரிக்கவேண்டி, ஜனநாயக அரசியலொன்று தனிப்பட்ட ஒரு நபரை, எல்லா அதிகாரத்தையும் தன்மாட்டே வைத்துக்கொண்டுள்ள ஒரு நபரைத் தலைவராக வைத்துக் கொள்வது சரியானதுமல்ல. கவர்னரே தனது சொந்த அபிப்பிராயத்தையொட்டிக் காரியம் செய்யவேண்டும். அரசியல் முறையில் நிர்ணயிக்கப்பட்டுவிட்ட சந்தர்ப்பங்கள் போக இதர சந்தர்ப்பங்களில் கவர்னர் தனது சொந்த அபிப்பிராயத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

(1) மாகாணத்தினுடையவோ, அதன் எந்தப் பகுதியினுடையவோ சமாதானம், அமைதி குலைந்திடாதவாறு ஆக்கிரமிப்புகளைத் தடுத்து வருவது.

(2) மாகாண சட்டசபையைக் கூட்டல், கலைத்தல்.

(3) தேர்தல்களைக் கண்காணித்து, கவனித்து, தனது பொறுப்பின்கீழ் வைத்துக் கொள்வது.

(4) மாகாண பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிப்பது.

10-வது நிபந்தனையில்தான் விஷயம் உச்சநிலை அடைகிறது. யாதொரு விஷயம், கவர்னர் அபிப்பிராயத்தையொட்டி, தீர்மானிக்கப்பட வேண்டியதா இல்லையா யென்பது குறித்து பிரச்சினையெழுமேல், கவர்னர் செய்யும் முடிவே முடிவானதாகுமென அந் நிபந்தனையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வரசியல் முறையின் நிபந்தனைகளை நான் நுணுக்கமாகப் பரிசீலனை செய்தேன். மத்திய சர்க்காருக்கு உதவிபுரிந்து ஆய்வுரை அளித்துவர ஆலோசகர்களை

நியமிப்பதே மேற்படி அரசியல்முறை வகுப்போரின் எண்ணமாகுமென்பதைப் பாரபட்ச மற்ற எண்ணமுடையோரெவரும் தெள்ளிதின் உணருவரென்பது எனது எண்ணம்.

'கவர்னருக்கு உதவிபுரிந்து, ஆய்வுரையளித்து வருவது' என்ற சொற்றொடர் உபயோகிக்கப்பட்டிருக்கிறதென்பதில் அய்யமில்லை. அதற்கு அரசியல் முக்கியத்துவம் இல்லாமலுமில்லை. ஆனால், கவர்னர் பிரயோகித்துக் கொள்ளக்கூடிய சொந்த அபிப் பிராயத்தை யொட்டிய அதிகாரங்களோடு, அவருக்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வேலை களையும் சேர்த்துப் படிக்கவேண்டுமென்பதைக் குறிப்பிட வேண்டும்.

தனது சொந்த அபிப்பிராயத்தின்கீழ் வரவேண்டியவை எவையெவை என்பன வற்றை நிர்ணயித்துக்கொள்ளும் நீதிபதியாக இருப்பதோடு, பிரதமர் என்பவர் நிர்வகிக்கக் கூடிய உரிமைகள்கூட இவருக்கு அளிக்கப்பட்டன. அரசியல்முறை மாடலின் 18-வது பிரிவு கூறுவதாவது :—'மாகாண சர்க்கார் தங்கள் வேலைகளை எளிதாகச் செய்து முடிக்கவும், மந்திரிகளிடையே வேலைகளைப் பிரித்து வழங்கவும் கவர்னர் விதிகள் செய்வார்' என்பதாகும். இந்நிபந்தனையின் விளைவுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அதாவது, கவர்னரென்பவர் நிர்வாகத்தின் வெறுந் தலைவர் மட்டுமல்லர்; தனது மந்திரிகளிடையே இலாக்காக்களைப் பிரித்து வழங்கவும், ஒரு இலாக்காவிலிருந்து இன்னொரு இலாக்காவுக்கு மந்திரிகளை மாற்றவும் அவருக்கு உரிமை உண்டு. 'மாகாண சர்க்காரின் வேலைகள் எளிதாக நடந்தேற' ஆவன செய்ய அவருக்கு உரிமையுண்டு! அவரது யதேச்சையதிகாரத்துக்கு ஒரே தடை, குற்றச்சாட்டு ஒன்று உண்டெனப் பயமுறுத் தப்பட்டுள்ளது. அவரைத் தடைசெய்ய வேண்டுமானால் மாகாண சட்டசபையைச் சேர்ந்த மூன்றிலிரு பகுதியினர் அவர்மீது எழும் குற்றச்சாட்டுக்கு வோட் அளிக்க வேண்டும்.

மாகாணங்களில் கொண்டுவர முயற்சிக்கப்பெறும் பொறுப்பாட்சி சர்க்காரின் ஏமாற்றுத்தன்மை குறித்துச் சந்தேகமெதுவுமெழுமேல், பெடரல் நிர்வாகம்பற்றி யூனியன் அரசியல் முறையில் கண்டுள்ள நிபந்தனைகளைக் காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னருக்கு மாறாக, இராஷ்டிரபதிக்கு மிகமிகச் சுருங்கிய அதிகாரங்களே கொடுக்கப்பட்டுள்ளன. அவர் மத்திய நிர்வாகத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டவராவார். இவ்வரசியல் முறையில் பிரதம மந்திரி என்ற சொல் காணப்படுவதும் விசித்திரமாகத் தானிருக்கிறது. பிரதம மந்திரியொருவர் இருப்பதால் சர்க்கார் வேலைமுறை சம்பந்தமாக உத்தரவுகள் பிறப்பிப்பதும் மந்திரிகளிடையே வேலைகளைப் பிரித்து வழங்குவதும் இவரால்தான் செய்யப்படுமென்று நாம் நினைக்க வேண்டியவர்களாயுள்ளோம். தலைவ ரென்பவர் தனது கவுன்சிலின் ஆய்வுரையின்பேரில் பணியாற்றிவந்து அரசியல் தலைவராக இருந்து வருவார்.

மாகாணங்களின் அதிகாரங்களை (வேலைகளை) பறித்துக்கொண்டு, அவற்றை அடக்குமுறைக்கு (கீழான நிலைக்கு) ஆளாக்கி வைத்து, பெடரல் மத்திய நிர்வாகத்துக்கு வரையறையற்ற அதிகாரங்களை வழங்கிவிட்ட பிறகும், மாகாணங்களுக்குச் சிறப்பான மந்திரிசபை கவுன்சில்கள் அமையப்பெறாதது கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

பழைய அட்வைசர் ஆட்சியையொத்த ஓர் ஆட்சிதான் ஏற்படப்போகிறது. இதனால் அதிகாரம் பெரிதும் பெடரல் நிர்வாகத்தையும் கவர்னரையுந்தான் சென்றடையும்.

இந்துஸ்தான் அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொண்டிருக்கும் கொடியைப்பற்றி நான் மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கிறேன் என்பதையும் கூற வேண்டியிருக்கிறது. பரந்த இந்த கண்டத்திலுள்ள பல்வேறு இனங்களும் பிரிவுகளும் ஒன்றுசேரக்கூடிய சின்ன மாக விளங்கவேண்டியது இந்தக் கொடி. ஆனால், இந்தக் கொடியின் அமைப்பைப்பற்றிக்

கூறும்போது பண்டிட் ஜவஹர்லால் நேரு அதிகாரபூர்வமாக என்ன கூறியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்: 'இந்தக் கொடி ஒரு கட்சிக் கொடியாகத்தான் இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால், பிறகு தேசியக்கொடியில் கைராட்டினம் இருப்பது பொருத்தமாயிருக்காது என்று கருதியே, அது விலக்கப்பட்டிருக்கிறது' என்று தெளிவாகவே கூறியிருக்கிறார்.

'சர்க்காவும் (இராட்டினம்) சக்கரமும் ஒன்றுதான்' என்கிறார் பண்டிட் நேரு. இந்தக் கொடியைப் பற்றிய தத்துவார்த்தங்களில் ஆளுக்கொருவிதமாகக் கூறினாலும், இந்துஸ்தான் அரசியல் நிர்ணய சபையின் முதன் மந்திரியாகிய நேருவின் அதிகார பூர்வமான வியாக்கியானத்தை அலட்சியப்படுத்த முடியாது. இந்துஸ்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு டொமினியனாக (குடியேற்ற நாடாக) இருக்கும்போது, சுதந்திர ஆதிபத்தியக் குடிஅரசு என்ற ஒரு ஆட்சிக்கு வேண்டிய ஒரு கொடியை அமைப்பதில் அரசியல் நிர்ணயசபை, இவ்வளவு அவசரப்படவேண்டிய அவசியமென்ன என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

சர்வாதிகாரமுடைய ஓர் ஆட்சிக்கும் இதர ஆட்சிகளுக்குமுள்ள வேற்றுமையைக் குறிப்பதற்காகத் தனிக்கொடி ஒன்று இருக்கவேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும், சர்வாதிகாரமுடைய நாடுகள் தனிக்கொடி இல்லாமலும் இருக்கின்றனவே! கனடாவை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இந்நாடுகளிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் எல்லோருமே அன்புடன் ஏற்று வணங்கும்படியானதும், நாளடைவில் ஆட்சியின் நிர்வாகத்தில் இரண்டறக் கலந்து உள் உணர்வோடு ஒன்றுபட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒரு கொடியை இந்நாட்டு ஆட்சியாளரால் இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லை. எல்லாக் கட்சியாளர்களும் ஒன்று சேர்வதற்குத்தான் தேசியக் கொடி அவசியம் என்ற கொள்கை அரசியல் நிர்ணய சபையால் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

'கடந்த போராட்டங்களை நினைவூட்டவும், வருங்கால வெற்றிகளை முன்கூட்டிக் காட்டவும் உண்மைக்கு மாறானவைகளையும், அற்பத்தனமானவைகளையும், தோல்வி மனப்பான்மையை உண்டாக்கக் கூடியவைகளையும் வருங்காலத்தில் நாம் வெல்வதற்கும், இந்தக் கொடியிலுள்ள சின்னங்கள் தேவையாயிருக்கின்றன' என்று பண்டிட் நேருவும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் கூறியிருக்கின்றனர். இவர்கள் கருதியிருப்பது சுத்தத் தவறு என்பதைக் கூற விரும்புகிறேன்.

மேலே கூறிய உணர்ச்சிகளை இந்தக் கொடி பொதுமக்களிடையே உண்டாக்கு மென்று யார்தான் கூறமுடியும்? இந்தக் கொடியின் மூலமாக முன்னர் பெற்ற வெற்றிகள் நினைவுக்கு வருகின்றனவா, அல்லது படுதோல்விகள் நினைவுக்கு வருகின்றனவா என்ற விஷயத்தை எனதருமைக் காங்கிரஸ் தோழர்களே, சாவதானமாக நினைத்துப் பார்க்கட்டும்!

காங்கிரஸ் போராடியது வெள்ளையார் வெளியேறுவதற்காகவே; காங்கிரஸ் விரும்பு வதோ அய்க்கிய இந்தியா. ஆனால், இப்போது கிடைத்திருப்பது என்ன? பிளவுபட்ட இந்தியா; முழு சுதந்தரமில்லாத இந்தியா!

இதுதான் நான் கொடியைப்பற்றிக் கூறவேண்டியது.

இனி, மைனாரிட்டிகளைப் பற்றியும், இந்துஸ்தான் டொமினியன் அரசியல் அமைப்பில் அவர்களது நிலைமையைப் பற்றியும் கவனிப்போம். அரசியல் நிர்ணய சபையில் நிகழ்ந்துள்ள விவாதங்களைக் கவனிக்கும்போது, மைனாரிட்டிகளுக்கு நியாயம் கிடைக்கும் என்று நம்பக்கூடியதாக இல்லை. பிற்பட்ட வகுப்பினர் என்ற காரணத்தினால் இது

வரை தனிச் சலுகைகள் பெற்றுவந்த மைனாரிட்டிகளுக்கு உத்தியோகத்தில் இனிமேல் விசேஷ பிரதிநிதித்துவம் இருக்காது.

இது மட்டுமா? நம் வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத அம்சமாக விளங்கி வருவதும், தென் இந்தியத் திராவிட இனத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாயிருந்து வருவதுமான பிரதிநிதித்துவமுறை ரத்து செய்யப்பட்டு விடுமாம்.

விஸ்வநாதம் என்ற ஆந்திரத் தோழர் தன் எஜமானர்களின் கண்ஜாடையை உணர்ந்து கொண்டு, இதுபற்றிய மசோதா ஒன்றைக் கொண்டுவரப்போகிறாராம். இதன் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்துக் கட்டிவிட்டு, 'தகுதி'யையும் 'திறமை'யையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு முறையைத் திராவிட நாட்டில் திணிக்கப் பார்க்கிறார்கள்.

தகுதியையும், திறமையையும் சாக்காகக் காட்டித்தான், அகில இந்திய சர்வீஸ்கள் ஒரே பார்ப்பன மயமாக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் அதே காரணங்களைக்கூறி, மாகாண ஆட்சியிலும் பார்ப்பனர் உத்தியோகங்களை ஏகபோக உரிமையாக்கிக்கொள் வதற்குத் திட்டம் போட்டுவிட்டனர். முக்கால் பகுதிக்கு மேற்பட்ட வரிகளைக்கொடுப்பது மட்டும் திராவிடர்களாகிய நாம்; ஆனால், இந்துஸ்தானில் இணைக்கப்பட்டிருக்கும் திராவிடநாட்டின் அரசியல், சமுதாய நிர்வாகத் துறைகளில் மட்டும் நமக்குப் பங்கே கிடையாது என்றால், இந்த அக்கிரமத்தை எப்படிச் சகித்துக்கொண்டிருப்பது என்று கேட்கிறேன்.

தோழர் விஸ்வநாதம் வெளிப்படையாகவே தம் எண்ணத்தைக் காட்ட முன்வந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இத்தகைய ஒரு சுயநலக் கும்பலை நம்பி, தங்களுக்கு நன்மைதேடும் பொறுப்பைத் தோழர் விஸ்வநாதம் போன்றவர்களிடம் ஒப்படைத்திருக்கும் தெலுங்கு நாட்டுத் திராவிட மக்கள், இதன்மூலம் இனியாவது கண் திறப்பார்கள் என்பது நிச்சயம்.

தங்கள் சாதி அல்லது சொந்த இனத்திற்கு (ஆரியர்) வேண்டிய வசதிகளை மேலும் மேலும் தேடிக்கொள்ளும் பொருட்டும்—தேசியத்தின் பெயராலும், 'அகில இந்தியா' என்பதின் பெயராலும் பித்தலாட்டஞ்செய்து சுரண்டிக்கொண்டிருந்த ஆரியக் கும்பலின் உயர்வுக்காகவும்—சிறைபுகுந்தும், இன்னும் பல தியாகங்களைச் செய்தும் தொண்டாற்றிய ஆந்திரத் திராவிடத் தோழர்கள் இனியாவது உண்மையை உணர்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

திராவிடர்களாய்ப் பிறந்துள்ள எல்லா மக்களும் சுறுசுறுப்புடன் வீறுகொண்டு எழுங்கள்! எல்லா இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் போடுங்கள்! பொதுஜனக் கருத்தை ஒன்று திரட்டுங்கள்! நான் மேலே கூறியவற்றை நாடெங்கும் பரப்பி, திராவிடச் சக்தியை உருவாக்குங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமக்கு வரப்போகும் ஆபத்தை அலட்சியமாகக் கருதிவிட வேண்டாம். நமது ஆண், பெண், சிறுவர் ஆகிய எல்லோரும் நமக்கு முன் நிற்கும் பயங்கரமான நிலையை உணரவேண்டியது இன்றியமையாததாகும். எந்த ஓர் அரசியல் அமைப்பிலும் இருக்க வேண்டிய சாதாரண ஆரம்ப உரிமைகளைக்கூட நமக்குத்தர மறுத்திருக்கும் இந்தப் புதியவிதமான வருணாசிரம முறையின் அக்கிரமத்தை, நம்மவர்களில் ஒவ்வொரு ஜீவனும் உணரவேண்டியது அவசியமாகும்.

இப்போதுள்ள அரசியல் நிர்ணய சபையானது ஒரே கருத்துக்கொண்ட கட்டுப் பாடான ஒரு கும்பல் என்றும், பொதுஜனக் கருத்தைப்பற்றி அது சட்டைசெய்யப்போவதே இல்லை என்றும் ஒருசிலர் கூறலாம். அரசியல் விவகாரங்களில் இவ்வாறு மனமுடைவது

அவ்வளவு சரியல்லவென்றே கருதுகிறேன். பொதுஜனக் கருத்தைப் பிரமாண்ட அளவுக்கு ஒன்று திரட்டினால், அரசியல் நிர்ணய சபையின் முடிவுகளைக்கூட அது ஓரளவுக்கு மாற்றி விடமுடியும். இப்போது செய்யப்பட்டுள்ள முடிவுகள் தற்காலிகமானவை என்பதை நாம் மறுத்தல் கூடாது.

நம்முடைய இலட்சியங்களுக்குச் செவிசாய்க்கும்படியாகச் செய்வதற்கும் இன்னும் போதுமான காலமிருக்கிறது. அரசியல் நிர்ணய சபை எவ்வளவுதான் கல்நெஞ்சுடையதாக இருந்தாலும், ஒரு மாபெரிய இனத்தின் ஒன்று திரண்ட சக்தியின் முன்பு—தன் உரிமைகளைப் பெறுவது என்ற உறுதியுடனுள்ள ஓர் இனத்தின் உத்வேகத்தின் முன்பு அது வளைந்து கொடுத்தே தீரவேண்டும்.

'பிரதேசவாரியாக சுதந்திரம் தேவை' என்ற அவசியத்தைப் புதுடில்லியிலுள்ளவர்கள் உணரும் வகையில்—சமாதான முறைகள் யாவற்றையும் பயன்படுத்தவேண்டியது குடிமக்கள் என்ற முறையில் நமது நீங்காகக் கடமையாகின்றது. இவ்வாறு செய்யவேண்டுமானால், சுதந்திரம் பெறுவதற்கு விழையும் ஓர் இனமானது தனக்குத் தெரிந்த சமாதான முறைகள் யாவற்றையும் ஒன்றுவிடாமல் கையாண்டு பார்த்தே தீரவேண்டும். அவ்வாறு, நாம் செய்யவில்லையென்று சுய அறிவுள்ள எவரும் நம்மீது குற்றம் சுமத்த முடியாது என்பதை நான் உறுதியாகக் கூறமுடியும்.

ஆகஸ்ட் 9-ந்தேதி முதல் 12-ந்தேதி வரையில் தென்இந்தியாவிலுள்ள திராவிடர்கள் அனைவரும் பெருங்கூட்டங்களைக் கூட்டவேண்டும். பொதுமக்கள் யாவரும் திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தை உணருமாறு செய்யவேண்டும். இருண்டுகிடக்கும் திராவிட சமுதாயத்திற்கு வெளிச்சத்தைத் தரவேண்டும்; சர்வாதிகாரம் பெற்ற அரசியல் நிர்ணய சபைகூட சில ஜீவாதார உரிமைகளைக் கவனிக்கவேண்டியது அவசியம் என்பதை அதற்கு எடுத்துக் காட்டவேண்டும். 'முழு சுதந்திரம் பெற்ற திராவிடத் தனிஅரசே நமது உடனடியான இலட்சியம்' என்பதையும், அதன் இன்றியமையாத அவசியத்தையும் அரசியல் நிர்ணய சபைக்கு விளங்க வைக்கவேண்டும் எனக் கோருகிறேன்.

[அறிக்கை—'விடுதலை' 6-8-1947; 15, 17, 18-8-1972]

7. பேத உணர்ச்சிகள் மறைய வழி

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகம் இன்று நாடெங்கணும் பொதுக்கூட்டங்கள் பல நடத்தித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகிறதென்றால் அது உங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறவோ, அல்லது அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களாகக் காட்டிக் கொண்டு ஏதாவது சில சலுகைகள் இரகசியமாகப் பெற்று வாழவோ அல்ல.

திராவிடர் கழகத்தின் கொள்கைகள் பூராவும் மக்களால் ஒப்புக்கொள்ளப்படும் வரையில் அது தேர்தலுக்குப் போட்டியிடுவதற்கில்லை. ஏனெனில், போட்டியில் ஜெயித்து சட்டசபைக்குச் சென்றாலும் மக்களுக்கு எவை நன்மையானவையோ, எவை அறிவுக்கு ஏற்றவையென்று அது கருதுகிறதோ அவற்றை அவர்கள் நிறைவேற்றி, வைக்கச் சட்டம் செய்வார்களானால், அதை மக்கள் ஏற்றுக்கொள்வது கஷ்டம். ஆகவே, திராவிடர் கழகம் இன்று அரசியலைக் கைப்பற்றும் வேலையில் முயற்சி செய்யாமல், தனது கொள்கைகளுக்கு ஆதரவு தேடுமுகத்தான் மக்களுக்கு அரசியல் ஞானத்தை ஏற்படுத்தி அவர்களைப் பகுத்தறிவுள்ள மக்களாக ஆக்கப் பாடுபட்டு வருகிறது. மக்களின் அறிவு சரியாகப் பயன்படுத்தப்படாத வரையில் யார் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டாலும், அவர்கள், மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்து அவர்களை

ஓர் அளவுக்குத் திருப்தி செய்துவிட்டு, மற்றபடி தம் சுயநலத்திற்கான சகலத்தையும் செய்துகொள்ள முடியுமே தவிர, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய காரியங்களைச் செய்ய முடியாது. சுயநலத்தில் விருப்பமுள்ள கோஷ்டிதான் இன்று அதிகாரத்தில் இருக்க முடியுமே தவிர, பொதுநலத்தில் விருப்பமுள்ள எவரும் அரசியல் அதிகாரத்தில் இருக்க முடியாது.

ஏனெனில், எது தங்களுக்கு நலமானது என்று தெரிந்து கொள்ளும் அளவுக்குக்கூட இன்றைய மக்களுக்குப் பகுத்தறிவு கிடையாது.

இப்படி இவர்கள் பகுத்தறிவற்றிருக்கக் காரணமே இவர்கள் நெடுநாட்களாக ஒரு சுயநலக் கொள்ளைக் கூட்டத்தவரால்—ஆரிய லம்பாடிக் கூட்டத்தவரால் மதம், கடவுள், சாஸ்திரம், மோட்சம், நரகம் என்ற பேரால் ஏமாற்றப்பட்டு, அறிவை உபயோகப்படுத்த முடியாதபடி செய்யப்பட்டு வந்ததுதான். இன்றுள்ள குறைபாடுகளுக்கெல்லாம்—இன்று நமக்குள்ள முன்னேற்றத் தடைகளுக்கெல்லாம் மூலகாரணம் இப் பொல்லாத மதப் புரட்டுகள்தாம். ஆகவே, எந்தப் பொதுநல விரும்பியின் முதற்கடமையும் இம் மதங்களையும், மதக் கடவுளர்களையும், இவற்றிற்கு ஆதாரமாயிருந்துவரும் சாஸ்திர புராணங்களையும் ஒழிப்பதாகத்தான் இருக்கவேண்டும். மக்களுக்கு இவற்றின்மீதுள்ள நம்பிக்கையைக் குறைத்து, இவர்கள் ஏதொன்றையும் தமது பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வரும்படி செய்யப்பட்டால்தான், நாம் உலக மக்களோடு சரிநிகர் சமானமாக—மனிதர்களாக வாழ்க்கை நடத்தமுடியும். ஆதலால்தான், திராவிடர் கழகம் அரசியல் அதிகாரத்தைப்பற்றிக் கவலைப்படாமல் இன்று இம்முதலாவது பணியில் ஈடுபட்டிருக்கிறது. மக்களுக்கு அரசியல் அறிவு ஏற்பட்டுவிட்டாலுங்கூட, திராவிடர் கழகம் மற்றவர்களை அதிகாரம் செய்யும்படி விட்டுவிட்டு, அவர்கள்மூலம் தம் கொள்கைகளை நிறைவேற்றி வைக்கப் பாடுபடுவார்களே ஒழிய தாமே அதிகாரத்தைப் பெறுவதில் ஆசை கொள்ள மாட்டார்கள். ஏனெனில், அதிகாரத்திற்கு வரும் எந்தக் கட்சியும் அதிலிருந்து நல்ல பெயரோடு மீள்வதில்லை, மீளவும்முடியாது என்பதை இவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆதலால், இன்று ஒரு பக்கத்தில் சுயராஜ்யக் கூப்பாடும்—மற்றோர் பக்கத்தில் சுயராஜ்யம் பெற்றுவிட்டதாகக் கூப்பாடும்—வேறோர் புறம் பெற்ற சுயராஜ்யத்தைக் காப்பாற்றுங் கூப்பாடும் கேட்கப்படுகின்றன. ஆனால், இந்த நாட்டைப் பொறுத்த வரையில் இவற்றிற்கும் மேலாக நமக்குச் சுயமரியாதை உணர்ச்சியும், கொள்கையில் கட்டுப்பாடும், ஒருவருக்கொருவரிடையே அன்பு மனப்பான்மையும், ஒவ்வொருவருக்கும் தம் பகுத்தறிவில் நம்பிக்கையும் ஏற்படவேண்டும்.

நமக்குப் பகுத்தறிவுதான் பிரதானமே ஒழிய, சுயராஜ்யம் பிரதானமல்ல. நம் திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் சுயராஜ்யப் பேச்சு ஒரு ஏமாற்றுப் பேச்சு, ஒரு பித்தலாட்டப் பேச்சு, வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய பேச்சு என்றுதான் நான் கூறுவேன். நம் நாட்டுக்கு நல்ல ஒரு ஆட்சி வேண்டுமென்று கேட்பதுதான் பொருத்தமான கோரிக்கையாகும். அதைவிட்டு, சுயராஜ்யம் கேட்பது ஒரு கடைந்தெடுத்த முட்டாள்தனம் என்றுதான் நான் கூறுகிறேன். இந்நாட்டில் சுயராஜ்யம் என்பதற்கே அர்த்தம் இல்லை. இந்நாட்டில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பார்ப்பனர்கள், பறையர்கள், ஏழைகள், பணக்காரர்கள், முதலாளிகள், தொழிலாளிகள், ஜமீன்தார்கள், குடியானவர்கள் என்று பலப்பல பிரிவினைகள் இருக்கும்போது—இவர்களில் யார் ஆண்டால் சுயராஜ்யம் என்று நாம் கூற முடியும்? அல்லது, இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து எப்படி ஆட்சி நடத்தமுடியும்? ஒரு நாட்டில் அனைவரும் முஸ்லிம்களாகவோ அல்லது அனைவரும் கிறிஸ்தவர்களாகவோ அல்லது அனைவரும் இந்துக்களாகவோ இருப்பார்களானால், அவரவர்கள் தனி ஆட்சி செய்து கொண்டு—இது முஸ்லிம்களின் சுயராஜ்யம், இது கிறிஸ்தவர்களின் சுயராஜ்யம்—இது இந்துக்களின் சுயராஜ்யம் என்று கூறிக்கொள்ளலாம். திராவிடநாட்டு மக்கள் ஒரே

மதத்தவர் இல்லையாகையால், இவர்கள் எத்தகைய ஆட்சி தங்களுக்கு வேண்டுமென்று கூறிக்கொள்ளலாமே தவிர சுயராஜ்யம் வேண்டுமென்று கூறிக்கொள்ள முடியாது. இன்றுள்ள ஆட்சியும் சுயராஜ்ய ஆட்சி என்றுதான் கூறப்படுகிறது. இதன் யோக்கியதை யைப் பாருங்கள்.

'திராவிடர் கழகமா? அது நமது பித்தலாட்டங்களை யெல்லாம் வெளியிட்டு வருகிறது; ஆகவே அதைத் தலையெடுக்கவொட்டாமல் தடுங்கள்!'. 'முஸ்லிம் லீக்கா? அவர்களுக்கு உத்தியோகமா? அவர்களெல்லாம் பாகிஸ்தானுக்கு உதவியவர்கள்; அவர்களைக் கண்காணித்து வாருங்கள்; அவசியமானால் ஜெயிலில் அடையுங்கள்' என்று உத்தரவு போடுகிறது—இதற்கா சுயராஜ்ய சர்க்கார் என்று பெயர்?

நான் சொன்னால் நீங்கள் சந்தேகப்படுவீர்கள். சுயராஜ்யம் என்ற வார்த்தை நம் திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பித்தலாட்ட வார்த்தைதான். அது உங்களுக்குச் சற்றுக் கடினமாகப்பட்டால் சுயராஜ்ய ஆட்சி என்பது நம் நாட்டில் சாத்தியப் படாத ஒன்று என்று கொள்ளுங்கள். நமக்கு வேண்டியது நல்ல ஆட்சிதான்; சுய ஆட்சி அல்ல. நம் திராவிட நாட்டில் பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேர் இருக்கிறார்கள்; முஸ்லிம்கள் 7 பேர்; கிறிஸ்தவர்கள் 2 பேர்; ஆதித் திராவிடர்களும் மற்ற சாதியினரும் 88 பேர்.

மொத்தம் 33 மந்திரிகள் இருந்தால்தான் பார்ப்பனருக்கு ஒரு மந்திரி பதவி கிட்டும்; 15 மந்திரிகள் இருந்தால்தான் முஸ்லிம்களுக்கு ஒரு மந்திரி பதவியாவது கிட்டும். 13 பேர் கொண்ட மந்திரி சபையில் ஒரு பார்ப்பானுக்குக்கூட இடமில்லை; வேண்டுமானால் ஒரு முஸ்லிம் இருக்கலாம். ஆனால், இப்படியா இருக்கிறது இன்றைய மந்திரி சபை? பறையனுக்குப் பார்ப்பான் ஆள்வதா சுயராஜ்யம்? எலிக்குப் பூனை ஆள்வது சுயராஜ்யமாகுமா? உழவனுக்கு—மிராசுதாரனும்; தொழிலாளிக்கு—முதலாளியும் ஆள்வது சுயராஜ்யமாகுமா? தேவதாசி என்று மதிப்பாகக் குச்சிக்காரி கூறிக்கொள்வது போலல்லவா இருக்கிறது இந்த சுயராஜ்ய ஆட்சியின் தன்மை! படித்தவர், பணக்காரர், பார்ப்பனர் என்ற ஒரு சுயநலக் கும்பலால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் தன்மை சுயராஜ்யக்காரர்கள் என்று கூறிக் கொள்வது அயோக்கியத்தனமல்லவா? எல்லா அதிகாரத்தையும் வடநாட்டானிடம் ஒப் படைத்துவிட்டு அடிமை ஆட்சி செய்யும் இவர்கள், சுய ஆட்சி செய்வதாகக் கூறுவது அக்கிரமமல்லவா?

ஜனநாயகம் (Democracy) ஜனநாயகம் என்று கூப்பாடு போடுகிறீர்களே—அதன் அர்த்தம் தெரியுமா? 100-க்கு 88 பேருக்கு ஓட்டுரிமை இல்லாத நாடு எங்காவது ஜனநாயக நாடாகுமா? ஏமாந்த சோணகிரிகள் சிலரை உங்கள் கையாளாகக்கொண்டு, நீங்கள் உங்கள் ஆட்சியைப் பொதுஜன (சர்க்கார்) ஆட்சி என்று பிரச்சாரம் செய்வீர்களானால், அதைப் பகுத்தறிவில்லாத மக்கள் சிலரோ பலரோ நம்பி வருவார்களானால்—எத்தனை நாளைக்கு இந்தப் பொய்யை உங்களால் மூடிவைக்க முடியும்? 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குள் வெளியாகும்' என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா? இந்த விஞ்ஞான காலத்தில்—அதுவும் 1948-ல் நீ அதிகார மமதையால் தேள், தேள் என்று பூச்சி காட்டு கிறாயே! அந்தப் பூச்சாண்டிக் காலம் இனிப் பலிக்காது, தம்பி! சுயராஜ்யம் என்பது வெட்டிப் பேச்சு; சுயஆட்சி என்பது முட்டாள்தனம். ஜனநாயகம் என்பது இந்நாட்டு மக்களுக்குப் புரியாத சங்கதி. சுயராஜ்யம் என்பது எப்படியிருக்கும் என்பதை மக்கள் அறியவில்லை. அதனால்தான், பித்தலாட்ட சுயநலக் கும்பலின் சுரண்டல் ஆட்சியை சுயராஜ்யம் என்று கருதிவருகின்றனர்.

நான் சூத்திரன்—அதாவது தேவடியாள் மகன்—ஆரிய அகராதிப்படி. என் நண்பன் ஒருவன் தீண்டாதவன்; அவன் பஞ்சமன், சண்டாளன். மற்றொரு முஸ்லிம் தோழன் ஒரு மிலேச்சன். இன்னொருவன் பிராமணன். இத்தனை பேரையும் நாட்டில் வைத்துக் கொண்டு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறாய், சற்றேனும் மானமின்றி; அறிவின்றி.

உனக்கு அறிவிருந்தால் முதலில் இந்நாட்டில் அனைவரும் சமம்; சாதி வேறுபாட்டிற்கு இங்கு இடமில்லை என்று கூறி விட்டல்லவா—அனைவருக்கும் ஒட்டுரிமை அளித்து விட்டல்லவா நீ ஜனநாயகம் பற்றிப் பேசுவாய்?

இன்றைய ஆட்சியாளரைத்தான் கேட்கிறேன்—உங்கள் ஆட்சியை எங்களது சுய ராஜ்ய ஆட்சி என்று சொல்ல—நீங்கள் எங்களுக்காகச் சாதித்தது என்ன? உங்களாட்சியில் இன்னும் சூத்திரன் இருக்கிறானே! இப்பிரிவையாவது ஒழித்தாயா? எங்களை மதம் என்ற பேரால், கடவுள் என்ற பேரால் பார்ப்பான் ஏய்த்து வருவதை நிறுத்திவிட்டாயா? எங்களைத் தேசியம் என்ற பேரால் வடநாட்டுப் பனியாக் கூட்டம் சுரண்டி வருவதை நீ தடுத்துவிட்டாயா?

எங்கள் மானத்தைப் பற்றித்தான் உனக்குக் கவலை இல்லை. எங்கள் பசியைப் பற்றித்தான் கவலைப்பட உனக்கு நேரமில்லை. எங்களுக்குப் படிக்கப் பள்ளி வைத்துக் கொடுக்கத்தான் உன்னிடத்தில் மனமில்லை. சரி, அத்தனையும் தொலைந்து போகட்டும்! உன்னுடைய ஆட்சியில் சமாதானமோ சாந்தியோ ஏற்பட்டுவிட்டதா? என்றைக்கு, சுய ராஜ்யம் திரை மறைவில்—நடுராத்திரியில், திருட்டுத்தனமாக, நல்ல நாள் பார்த்து வந்ததோ அன்று உருவிய கத்தி இன்றும் தன் உறையில் நுழையவில்லையே! அன்று துவங்கிய கொள்ளையும் கொலையும் கற்பழிப்பும் நிற்க வழிகாணோமே! அன்றாடம் துவேஷங்கள் வளர்ந்து வருகின்றனவே ஒழிய, குறைக்கக்கூடிய ஸ்தாபனம் ஒன்றுகூட நாட்டில் இருப்பதாகத் தோன்றவில்லையே!

எதற்காக இந்து-முஸ்லிம் இருக்கவேண்டும்? எதற்காக முதலாளி-தொழிலாளி இருக்கவேண்டும்? எதற்காக பார்ப்பான்-பறையன் என்ற உயர்வு தாழ்வு இருக்கவேண்டும் என்று யாராவது கேட்டார்களா? இவர்களுக்குள் பேத உணர்ச்சியில்லையானால் சண்டை சச்சரவு இருக்குமா? மனித சமுதாயம் எந்த மாதிரி இருக்கத் தக்கது என்பதையாவது மக்களுக்கு உணர்த்தி வருகிறீர்களா—சுயராஜ்ய வீரர்களான நீங்கள்? காலத்திற்கேற்ப, உள்ள சூழ்நிலைக்கேற்ப, மக்களின் இயற்கை ஆசா பாச உணர்ச்சிகளுக்கேற்ப உங்கள் திட்டத்தை மாற்றிக்கொண்டீர்களா நீங்கள்?

இப் பேத உணர்ச்சிகள் மக்களிடையே இருந்துவரும் வரையில் மனித சமுதாயம் குமுறிக்கொண்டுதான் இருக்கும் என்பதை உணர்ந்து நடவுங்கள். நிரந்தரமான சாந்தி வேண்டுமென்றால் பேதங்களை அகற்ற முற்படுங்கள்; அதற்கு ஆவன செய்யுங்கள்.

'நாங்கள் சுயஆட்சி செய்கிறோம்; ஆகவே, மரியாதையாக நடவுங்கள்' என்று எங்களை மிரட்டுகிறாயே! நாங்கள் ஏன் உங்களுக்கு மரியாதை காட்டவேண்டும்? எங்களது சூத்திரப்பட்டத்திற்கு ஆணி அடிக்கப் பாடுபடுவதற்காக உங்களை வணங்க வேண்டுமா? எங்களை வடநாட்டான் சுரண்ட வழிசெய்துவிட்டு, அவனுக்குக் கையாளாயிருந்து வருவதற்காக உங்களுக்கு மரியாதை செய்யவேண்டுமா? எங்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் உருக்கத்தோடு அளித்து வருகிறீர்களே என்று நாங்கள் மகிழ்ந்து வணக்கம் செலுத்தவேண்டுமா? எங்கள் மனைவி மக்கள் பட்டினிகிடக்க வடநாட்டு அகதிகளுக்குப் பாலுஞ்சோறும், படுக்க அறையும், குளிருக்குப் போர்வையும் கொடுப்பதற்காக நாங்கள் உங்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டுமா? அல்லது, எங்களை நாஸ்திகர்களென்றும், தேசத் துரோகிகள் என்றும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தூற்றி வருவதற்காக நாங்கள் உங்களுக்கு வணக்கம் செலுத்தவேண்டுமா? இந் நாட்டின் ஆண்ட இனத்தை, இந் நாட்டிற்குச் சட்டத்தின்படியும் சரித்திரத்தின்படியும் உரிமையுடைய இனத்தைப் பார்ப்பானின் அடிமைகளாக வைத்திருக்க அவர்களின் அடிவருடிகளாகயிருந்து எங்களைக் காட்டிக் கொடுப்பதற்காகவா, உங்களை நாங்கள் மதித்து நடக்க வேண்டும்? எங்களைச் சூத்திரராக வைத்திருக்கும் மதத்தைக் கேலிசெய்யகூடாது என்று உத்தரவு போட்டதற்காக நாங்கள் உங்களை மரியாதை செய்ய வேண்டுமா? எதற்காக என்று கூறவேண்டாமா?

'சுதந்திர இந்தியாவின் கொடியை அவமதிக்காதீர்கள். அவமதித்தால் சும்மா விடேன்' என்று கூக்குரலிடுகிறாயே! உனக்குத்தான் பதவி கிடைத்தது; பணம் கிடைக்கிறது; கொள்ளையடிக்க வசதியும் கிடைக்கிறது. கூப்பிட்ட நேரத்திற்குக் குரல் கொடுக்க டவாலி பியூன் உனக்குக் கிடைக்கிறான். அதனால் இந்தக் கொடிக்குத் தலை வணங்குகிறாய்; அதற்கு அர்த்தமும் இருக்கிறது. அந்த வசதிகள் எனக்குத் தேவையில்லை; தேவையிருந்தாலும் அக் கொடிக்கு வணக்கம் செலுத்தாமலே என்னால் அவற்றை அடைய முடிகிறது. அப்படியிருக்க, நான் ஏன் 'ஹிந்துஸ்தான்' கொடியை வணங்கவேண்டும்? என்னுடைய சூத்திரப் பட்டத்தைப் போக்குமா அந்தக் கொடி? என்னை ஒரு மார்வாரி சுரண்டாமல் பார்த்துக்கொள்ளுமா அந்தக் கொடி? எங்களுக்கு உங்கள் 'ஹிந்துஸ்தானில்' இருக்கப் பிரியமில்லை. உங்கள் ஆட்சியில் எங்கள் மக்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள். ஆகவே, எங்களைப் பிரித்துவிட்டு விடுங்கள் என்று கூறுகிறோம். எங்களுடைய பாதுகாப்பைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? பேசாமல் பிரித்துவிட்டுவிடுங்கள்.

எங்களை ஆள எங்கள் நாட்டில் அறிவாளிகள் உண்டு. எங்கள் நாட்டில் எங்களைப் பாதுகாக்கும் வல்லமை படைத்த போர் வீரர்கள் உண்டு. நாங்கள் ஆண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால், எங்களுக்குத் தனித்திருக்கச் சகல வசதிகளும் உண்டு.

ஆகவே, 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் கூப்பாடு போடுகிறதாம்' என்பது போல, நீங்கள் எங்களுக்காகப் பரிதாபப்படாமல் பிரித்துக்கொடுத்துப் பாருங்கள்! ஆண்டு பார்க்கிறோம். ஆள முடியவில்லையானால், பாதுகாத்துக்கொள்ள முடியவில்லையானால் உங்களிடமே வந்து சரணாகதி அடைகிறோமே! ஏனப்பா, நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்?

'பிரிவினையை இனி அனுமதிக்க முடியாது. பாகிஸ்தான் பிரிவினையால் பட்டது போதும்' என்று எங்களை ஏய்க்கப் பார்க்கிறாயே—இது அறிவுடைமையா? பாகிஸ்தான் பிரிந்து போனதால் அன்னிய நாடு ஒன்றும் அதைக் கிள்ளிக்கொண்டு போய்விடவில்லையே! நீதானே அதைத் துன்புறுத்துகிறாய்; நீதானே அதன்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறாய்! இல்லையென்றாலும், உங்களுக்குள்ளேதானே அந்த வகுப்புப் போராட்டம் நடைபெறுகிறது? எங்கள் நாட்டில் ஒன்றும் அப்படிப்பட்ட வகுப்புப் போராட்டம் இல்லையே!

இவ்வளவு அக்கிரமம் செய்கிறான் பார்ப்பான்—அவனை, இன்றும் எங்களில் பலர் 'சாமி' என்றுதானே அழைத்து வருகிறார்கள்! பார்ப்பானை என்ன நாங்கள் இந்நாட்டில் இருக்க வேண்டாமென்றா கூறுகிறோம்? தாராளமாக இருக்கட்டும். ஆனால், அவர்கள் மனிதர்களாக இருக்கட்டும்; தேவர்களாக இருக்கவேண்டாம் என்றுதானே நாங்கள் கூறுகிறோம். எங்களுக்கும் மற்ற மதத்தவர்களுக்கும் இடையூறில்லாத எந்த உரிமையும் பார்ப்பனர்க்கும் வழங்க, நாங்கள் தயாராகத்தானே இருந்து வருகிறோம்!

எங்களை வடநாட்டான் சுரண்டிக்கொண்டு போவதால் உங்களுக்கு என்னப்பா இலாபம்? இதைப் புத்தியுள்ள பார்ப்பனத் தோழர்கள் சிந்திக்கவேண்டாமா? இங்குள்ள முஸ்லிம் தோழர்களை என்ன—நாங்கள் உங்கள்மீதா ஏவி விடுகிறோம்? அல்லது, இங்குள்ள கிறிஸ்தவர்களைத்தான் உங்கள்மீது ஏவி விடுகிறோமா? பின் ஏன் எங்கள்மீது சந்தேகப்பட்டு, வடநாட்டானுக்குக் கையாளாய் இருந்துவருகிறீர்கள்? எத்தனை நாள்தான் திராவிடன் தூங்கிக்கொண்டிருப்பான் என்று நீங்கள் கனவு காண்கிறீர்கள்?

திராவிடம் விழித்தெழுந்துவிட்டது. இனி உரிமைப் போராட்டம் விரைவில் துவக்கப்படுவது நிச்சயம். ஆகவே, விரைவில் பார்ப்பனத் தோழர்கள்—ஒன்று, திராவிடர்களோடு சேர்ந்துவிடவேண்டும்; அல்லது, அவர்கள் குடியேற வடநாட்டில் வசதிகள் செய்துகொள்ளவேண்டும். நாங்கள் குடியேறும்படி கூறவில்லை; அவர்களும் எங்களோடு என்றென்றும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும்—ஆனால், மனிதர்களாக வாழவேண்டும்

என்பதுதான் எங்களுடைய உள்ளக் கிடக்கை. இதில் எந்தப் பார்ப்பனத் தோழரும் சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், திராவிடன் என்றுமே விருந்தோம்பல் செய்யத் தவறியதில்லை என்பதை இவர்களுடைய ஏடே இவர்களுக்கு எடுத்துக் காட்டும்.

ஆகவே, பார்ப்பனத் தோழர்கள் சற்றேனும் நன்றியறிதலோடு எங்களோடு ஒத்துழைக்கவேண்டும்; அந்த ஒத்துழைப்பால் தங்களுக்கும் ஏராளமான நன்மை உண்டாகும்; இன்றுள்ள வெறுப்புணர்ச்சிக்கும் ஆளாகவேண்டியிருக்காது என்பதை இவர்கள் அறிந்துகொள்ள வேண்டுகிறேன்.

திராவிடர் கழகத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களைப் பற்றி விளக்கிக் கூறுமாறு ஒரு தோழர் கேட்டுக்கொண்டார். திராவிடர் கழகம் ஜஸ்டிஸ் கட்சியாய் இருந்த காலம் முதற்கொண்டே, அது முஸ்லிம்களையும் சேர்த்துக்கொண்டு தான் இயங்கி வந்தது. சுயமரியாதைக் கழகத்திலும்கூட சில முஸ்லிம்கள் இருந்து கொண்டுதான் இருந்தார்கள். என்றுமே திராவிடத் தோழர்களுக்கும் முஸ்லிம் தோழர்களுக்கும் சண்டையோ சச்சரவோ ஏற்பட்டது கிடையாது. திராவிடநாட்டுப் பிரிவினைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்ததை முஸ்லிம்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். பாகிஸ்தான் கிடைக்கும்வரை திராவிடர் கழகம் அதை ஆதரித்துத்தான் வந்திருக்கிறது; அதற்காக ஆட்சியாளரிடம் சில தொல்லைகளையும் அனுபவித்துத்தான் வந்திருக்கிறது. இன்னும் பாமர முஸ்லிம்கள் எங்களை ஆதரித்துத் தான் வருகிறார்கள். அவர்களைச் சரியானபடி முன்னோக்கி அழைத்துச் செல்லக்கூடிய தலைவர்கள் இன்றில்லை.

அவர்களுடைய இன்றையத் தலைவர்களுக்கு எங்கள் மீது ஏதாவது குறைகூறத் தெரிகிறதே ஒழிய—இவர்களுடைய சமுதாய நலனுக்கு எது உகந்தது என்றுகூட அறிந்து கொள்ள முடியவில்லை.

திராவிடர் கழகம், 'இனி மனுதர்ம ஆட்சிதான் நடக்கும்; ஆகவே சுதந்திர விழா கொண்டாடாதீர்கள்' என்று கூறியபோது—இந்தத் தலைவர்கள் என்ன நேர்ந்துவிடுமோ என்று பயந்து நமக்கு விரோதமாக, ஆகஸ்ட் 15-ந்தேதியன்று வருணாசிரமக் கொடிக்கு வணக்கம் செலுத்திவிட்டார்கள். இவர்களது அடிமைப் புத்தியை அறிந்துகொண்ட அரசாங்கமும் இன்று ஆணவத்தோடு இவர்களைச் சவாலிட்டு அழைக்கிறது. அன்று இவர்கள் ஹிந்துஸ்தான் கொடியை வணங்க மறுத்திருப்பார்களானால் ஆட்சியாளர்கள் இவ்வளவு அக்கிரமமாக நடந்து கொள்ளத் துணிவு கொண்டிருக்கமாட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இன்றைய முஸ்லிம் தலைவர்களும் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளவேண்டி, எங்கள் கழகத்தை சர்வஜாக்கிரதையாக ஒதுக்கிக்கொண்டே வருகிறார்கள். ஏதும் அறியாத பாமர முஸ்லிம் தோழர்கள் என்ன செய்வதென்று புரியாமல் திண்டாடுகிறார்கள். அப்படிப்பட்ட தோழர்களிடமிருந்து எனக்கு ஏறக்குறைய 20, 30 கடிதங்கள் வந்திருக்கின்றன.

திராவிடர் கழகத்தை ஆதரிக்கும்படி, தோழர் ஜின்னா அவர்கள் கூறியிருந்தும்—சுயநலத்தில் விருப்பம் கொண்டுள்ள இத் தலைவர்கள் தங்கள் வாழ்வையே பெரிதென்று கருதி, திராவிடர் கழகத்தை ஒதுக்கிவரப் பார்க்கின்றனர். டெல்லி ஆட்சியாளரின் ஏகாதிபத்தியக் கொட்டத்தைத் தடுக்க திராவிட நாட்டுப் பிரிவினை ஒன்றுதான் தக்க மருந்தென்பதைத் தோழர் ஜின்னா அவர்கள் உணர்ந்துதான் இவர்களுக்குப் புத்தி கூறினார். இவர்கள், எங்கே திராவிடர் கழகத்தோடு சேர்ந்தால் அரசாங்கம் தொல்லை கொடுக்குமோ என்று பயந்து வாளாவிருக்கிறார்கள். தொல்லை ஏறுகிறதா, குறைகிறதா என்று இருந்து பார்க்கட்டும்.

இங்குள்ள முஸ்லிம்களுக்கும் நமக்கும் எவ்வித பெரிய வேறுபாடும் இல்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். திராவிடர் கழகத் தலைவர்களும், முஸ்லிம் கழகத்தோழர் களும் ஒன்றுகூடிப்பேசித் தம் வேலைத் திட்டத்தை வகுத்துக் கொள்வது நலம் என்று ஒரு பொறுப்புள்ள தோழர் குறிப்பிடுகிறார். ஆம், உண்மைதான். முஸ்லிம் தலைவர்கள் திராவிடர் கழகத்தோடு ஒத்துழைக்கத் தயாராயிருந்தால், கூட்டு வேலைத் திட்டம் என்றும் தனித்த வேலைத் திட்டம் என்றும் இரண்டு திட்டங்கள் வகுத்துக்கொண்டு அதன்படி நமது கூட்டுநலன் முன்னேறப் பாடுபடலாம்.

சில முஸ்லிம் தலைவர்கள் மதத்தைப் பற்றியே அதிகக் கவலையுடையவர்களாக இருக்கிறார்கள். மதம் மக்களின் தனிப்பட்ட உரிமையாக இருக்கவேண்டுமே தவிர மதத்திற்காக மக்கள் வாழவேண்டுமென்று நினைப்பது அறிவீனம்.

இம் மாகாண முஸ்லிம் லீக் தலைவர்கள் சிலர் தமது சொந்த இலட்சியங்கள் ஈடேற வேண்டும் என்பதற்காகவும், சர்க்காரை விரோதித்துக் கொண்டு எப்படி வாழ முடியும் என்பதற்காகவும் தம் இனத்தைக் காட்டிக்கொடுத்து வாழும் இழிசெயலில் ஈடுபட்டிருக் கிறார்கள். என்றாலும், இவர்கள் தம் தவற்றை விரைவில் உணர்வார்கள் என்றே நான் கருதுகிறேன். இந்துக்களும், முஸ்லிம்களும் என்றுமே ஒன்றாக வாழமுடியாதாகையால்—இன்றில்லை யானாலும் நாளை இவர்கள் நமது பக்கத்திற்கு வந்துதான் தீரவேண்டும்; அவர்கள் வரும்வரை நாம் பொறுத்துப் பார்ப்போம்.

வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் மனப்பான்மை இருக்கும் வரைக்கும் நாட்டின் சொந் தளிப்பு இருந்து கொண்டுதான் இருக்கும். இந்து—முஸ்லிம் போராட்டம் இன்று அய்க்கிய நாடுகள் சபைவரை சென்றுவிட்டது. தோழர் கிரிப்ஸ் அவர்களும் கூறிவிட்டார்கள், 'ஒரு நாட்டின் வகுப்புவாதப் பிரச்சினை இன்று அகில உலகப் பிரச்சினையாக மாறியது இது தான் முதல் தடவை' என்று. உலக மக்களின் ஆதரவு முஸ்லிம் பக்கம் இருக்கும் என்பது தான் எனது அபிப்பிராயம். ஆகவே, இங்குள்ள முஸ்லிம்கள் தமது பயங்கொள்ளித் தனத்தைக் கைவிட்டுவிட்டு, தோழர் ஜின்னா அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றித் திராவிடநாட்டுப் பிரிவினைக்காக எங்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று நான் முஸ்லிம் களைக் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம் தோழர்களும் இதைத் தமது தலைவர்களுக்கு எடுத்துக்கூறி, தமது நலனைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எனது ஆசை. எது எப்படியானாலும் முழு ஆதரவும் முஸ்லிம்கள் பக்கம் இருக்குமென்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[ஆழியூரில், 10-1-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-1-1948]

8. பிரிவினை எண்ணம் ஏன்?

பெரியோர்களே! தோழர்களே!

நம் நாட்டில் வெளிநாட்டான் எவ்வளவு சுரண்டுகிறானோ அதேபோல் இங்கே ஒவ்வொரு ஆளும் ஆயிரம் வேலி, அய்யாயிரம் வேலி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு வியாபாரிக்கும், மில்காரருக்கும் 10 இலட்சம், 20 இலட்சம், 25 இலட்சம் சொந்தமாக இருக்கும். இவையெல்லாம் திருடுவது அல்லாமல் எப்படி வரும்?

இவைகள் எல்லாம் மாறவேண்டுமானால், முதலாவதாக வெளி நாடுகளுக்குப் போவதைத் தடுக்கவேண்டும். தடுக்கக்கூடாதென உத்தரவு சர்க்கார் போட்டால் கூட தடுத்துத்தான் ஆகவேண்டும். அதில் என்ன நேர்ந்தபோதிலும் பரவாயில்லை என்ற உணர்ச்சி மக்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. என்னைப் பொறுத்தவரையில், இந்தக் கொடுமை ஒழியாவிட்டால் எவ்வளவோ கொலைகள் எல்லாம் ஏற்படுமே—அவைகளில்

எல்லாம் நம்மவர்கள் தாமே இறக்க நேரிடும் என்ற பயம் இருக்கிறது. ஆனால், நம் காலத்திற்கு அப்புறம் கட்டாயம் எப்படியும் இது நடந்துதான் ஆகும். இந்த மாதிரி ஒரு கிளர்ச்சி நடந்தபிறகுதான் எல்லாக் காரியமும் சரியாகும்.

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது என்றால் அந்த நாட்டின் பொருளாதாரம் தானே மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. ஆனால், இப்பொழுது நமது நாட்டிலே நடக்கிற காரியங்களைப் பார்க்கும்போது, நம் நாட்டில் உள்ள செல்வங்கள், பொருள்கள் எல்லாம் அன்னிய நாடுகளுக்குப் போகின்றன. மலேயாவில் உள்ள பொருள்கள் அன்னிய நாடுகளுக்குப் போகா. சிலோன், துருக்கி முதலிய நாடுகளில் உள்ள பொருள்கள் வெளியே போகா. ஆனால், நமது நாட்டில் இருந்தோ ஏராளமான பொருள்களை வடநாட்டான் சுரண்டிக்கொண்டு போகிறான். இங்கிருந்து சுரண்டிக்கொண்டு போய் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கட்டிவிடுகிறார்கள். சுதந்திரம் கிடைத்த நாட்டிலா இவைகள் நடப்பது? இவைகளுக்கு அரசாங்கமும் உதவி அளிக்கிறது. ஆகையால்தான், நாம் பிரிந்தாக வேண்டும் என்று சொல்கிறோம்.

நாம் பிரிந்தால் வடநாட்டானுக்கு இங்கே பிழைப்பதற்கு வழி இல்லை. பார்ப்பானுக்கும் இந்த சோம்பேறி ஆதிக்கப் பிழைப்புக்கும் வழி இல்லை. இதுபோன்ற நிலைமை ஏற்படும் காரணத்தால்தான் வெள்ளைக்காரர்களுக்குப் பணிந்து பேசி 'உங்கள் முதல் இங்கேயே இருக்கட்டும்; இங்கே சுரண்டிக்கொண்டு போக வேண்டியதைச் சுரண்டிக் கொண்டு போங்கள்' என்று பேசி வைத்து இருக்கிறார்கள். ஆகையால்தான், வெள்ளைக்காரர்களுடைய முதல் இந் நாட்டிலே 300 கோடிக்கு மேல் இருக்கிறது. இந்தப் பணத்தின் இலாபத்தை இன்றைக்கும் அவர்கள் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மாறியாக வேண்டுமென்றே சொல்லுகிறோம்.

பாகிஸ்தான் வேண்டும் என்று கேட்டதற்கு 'பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தால், பாகிஸ்தானால் தனித்து வாழ முடியாது; பாகிஸ்தான் சிறிய நாடு' என்று சொன்னார்கள். ஆனால் ஜின்னா, 'நீயாகப் பிரித்துக் கொடுக்காவிட்டால் நாங்கள் ரஷ்யாவிடம் போய் பெற்றுக்கொள்ளுவோம்' என்று பயமுறுத்தவே, ஜின்னாவுக்கு பாகிஸ்தான் கிடைத்தது. தனித்து வாழமுடியாது என்று கூறப்பட்ட அந்த பாகிஸ்தான் இன்று நமக்கு உணவு அனுப்புகின்றது; நம்மை மிரட்டுகின்றது. அதேபோல், நாமும் ஏன் தனித்து வாழ முடியாது? நமது நாட்டில் எதற்குக் குறைவு? வற்றாத நீர் ஓடைகளும், வளம் நிறைந்த வயல்களும் இல்லையா?

அடுத்தாற்போல், நாம் தடுக்கவேண்டியது பார்ப்பானுடைய சுரண்டல். நூற்றுக்கு 3 பேர்கூட இல்லாத கூட்டத்தார் நம்மைக் கீழாக்கி வைத்திருக்கிறார்கள். மதத்தின்பேரால் நாம் கீழ்நிலையில் இருக்கிறோம். இந்துமத சாஸ்திரத்தால் நாம் கீழ்நிலைமையில் இருக்கின்றோம். கடவுளின் பேரால் நாம் கீழ்நிலையில் இருக்கிறோம். இந்த மதம், கடவுள், சாஸ்திரம் என்பவைகளால் பார்ப்பான் நம்மைச் சுரண்டிக்கொண்டே வருகிறான். இந்த சுரண்டல்களை நாம் ஒழித்தாகவேண்டும். இம் மாதிரியான காரியங்களை நாம் செய்வதனால்தான் நம் நாடு பார்ப்பானுடைய ஆதிக்கத்திலிருந்து மீள முடியும்.

வடநாட்டானுடைய சரித்திரத்தை நாம் பார்ப்போமேயானால், நம்மை எல்லாம் காட்டிக்கொடுத்தவர்கள் பார்ப்பனர்கள்தாம் என்று தெரியும். காரணம்? பார்ப்பானுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் யார் செய்துகொடுத்தார்களோ அவர்களுக்கு இவர்கள் தொண்டு செய்கிறவர்கள்தாம்.

இதேமாதிரியாக, இந்த நாட்டிலே இரண்டாயிர, மூவாயிர வருடங்களின் சரித்திரத்திலே பார்ப்பான் நம் நாட்டைக் காட்டிக்கொடுத்து வந்து இருக்கிறான் என்பதை இந்திய

சரித்திரத்திலே காணலாம். வெள்ளையனுக்கு நம்மைக் காட்டிக்கொடுத்தவர்களும் பார்ப்பனர்கள்தாம். இதேபோல்தான், இன்றும் நமது நாட்டை வடநாட்டானுக்குக் காட்டிக் கொடுத்து வருகிறார்கள்.

இங்கே பிழைக்க வழியில்லாமற்போன பார்ப்பனர்கள் அங்கே-வடநாட்டுக்குப் போய்க் கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

[சேலம் விக்டோரியா மைதானத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-7-1951]

9. சகிக்க முடியாத அக்கிரமம்

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) சீக்கிரத்தில் பிரிந்தால் நல்லது என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது.

கன்னடியருக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, சுயமரியாதையோ இல்லை; மத்திய ஆட்சிக்கு அடிமையாக இருப்பதுபற்றி அவர்களுக்குச் சிறிதும் கவலையில்லை. மேலும், சென்னை மாகாணத்தில் 7-ல் ஒரு பாகத்தினராக இருந்துகொண்டு, தமிழ்நாட்டில் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவை கலந்திருப்பதால்—நம் நாட்டைத் தமிழ்நாடு என்றுகூட சொல்வதற்கிடமில்லாமல் தடுத்து ஆண்டுகொண்டிருக்கிறார்கள். ஆதலால், இவர்கள் சீக்கிரம் பிரியட்டுமென்றே கருதிவந்தேன்; அந்தப்படியே பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும், மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டுக் கூடுமானவரை ஒத்துப் போகலாம் என்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனியாக ஆகிவிட்டால், நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்திர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும், இருந்தாலும் அதற்குப் பலமும் ஆதரவும் இருக்காது என்றும் கருதுகிறேன்.

ஆனால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கின்ற குறைபாடு எனக்கு இருக்கிறது.

ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்து போனபின்பு கூட, மீதியுள்ள யாருடைய மறுப்புக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாது என்று, அந்தப் பெயரையே மறைத்து, ஒழித்துப் பிரிவினையில் 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருக்கிறதாகத் தெரிய வருகிறது. இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும்; எந்தத் தமிழனும் இதைச் சகிக்க முடியாது.

இதைத் திருத்தத் தமிழ் நாட்டு அமைச்சர்களையும், சென்னை, டில்லி சட்டசபை—கீழ் மேல் சபை உறுப்பினர்களையும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல், சமுதாய இயல் கட்சிக்காரர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர்கூட இந்நாட்டிற்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாத நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, எனது கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு எதற்காக இருக்க வேண்டும்?

['தனி அரசு'—அறிக்கை—25-10-1955]

10. நாட்டுப் பிரிவினை

நாட்டுப் பிரிவினை என்னும் விஷயத்தை 1938-லேயே முதல்முதலாக நான் துவக்கினேன். பிறகு நான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவனானவுடன் அப் பிரச்சினை ஜஸ்டிஸ் கட்சிப் பிரச்சினையாக ஆகி பிரபலம்பெற்று, ஜின்னா சாயபு, டாக்டர் அம்பேத்கார் ஆகியவர்களுடைய ஆதரவும் பெற்று, யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்திடமும் அது சமர்ப்பிக்கப்பட்டது. இதை (பிரிவினையை)ப்பற்றிப் பல திட்டங்கள் பிரிட்டிஷாரிடமே கொடுக்கப்பட்டன. அத் திட்டங்களில் ஒன்றுதான் பாகிஸ்தான் பிரச்சினையாகவும் முளைத்தது. இத் தகராறுகளைப் பிரிட்டிஷார் தங்கள்மேல் போட்டுக்கொள்ள இஷ்டமில்லாததால் 'காங்கிரசினிடம் நாங்கள் இராஜ்யத்தை ஒப்படைத்துவிடுகிறோம். நீங்கள் பிறகு எப்படியோ போங்கள்' என்று சொல்லிவிட்டார்கள்.

ஜின்னா சாயபு பிடித்த பிடியில் பிடிவாதமாயிருந்து வெற்றிபெற்று பாகிஸ்தானைப் பிரித்துக்கொண்டார்.

இராஜாஜி பாகிஸ்தானுக்கு ஆதரவாக (காங்கிரசுக்கு எதிராக) சுற்றுப்பிரயாணம் செய்து பிரச்சாரம் செய்கையில், 'இராமசாமி நாயக்கர் கேட்கும் திராவிடஸ்தானையும், திராவிட மக்கள் கேட்டால் பிரித்துவிட வேண்டியதுதான்' என்று சொன்னதோடு, அவரது சுற்றுப் பிரயாணத்தில் ஈரோட்டில் என் வீட்டிற்கே வந்து, திராவிடநாடு பிரிவினைக்கு ஆதரவு தருவதாகவும் சொன்னார். அன்று ஈரோட்டில் இரயில்வே ஸ்டேஷன் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளிப்படையாக ஆதரவு தந்து அதன் அவசியத்தைப் பற்றியும் பேசினார்.

1940-ல் திருவாரூரில் நடந்த ஜஸ்டிஸ் கட்சியின் 'மாகாண மாநாட்டில் திராவிடஸ்தான் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அதற்காக எனது தலைமையில் ஒரு கமிட்டியும் போடப்பட்டது.

யுத்தம் காரணமாய் அதை அமல்படுத்தாமல், யுத்த ஆதரவு காரியத்தில் இருந்ததால் அப் பிரச்சினை யுத்தம் முடிவுவரை பிரச்சாரம் இல்லாமல் இருந்து, யுத்தம் முடிந்தவுடன் கிளப்பியதும், மேல் சொன்னபடி 'அதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்; எங்களுக்கு அவசரம்; நாங்கள் இந்த மாதத்திலேயே வெளியேறத் தீர்மானித்துவிட்டோம்' என்று பிரிட்டிஷார் சொல்லிவிட்டார்கள்.

ஜின்னா சாயபு, பாகிஸ்தானுக்கு நமது ஆதரவையும் தேடவேண்டி, நாமிருவரும் இரண்டு டிமாண்டை (demands)யும் (பாகிஸ்தான்—திராவிடஸ்தான் ஆகிய) இரண்டு ஸ்தான பிரச்சினையையும் ஒன்றாகவே வைப்போம் என்று சொன்னார். காந்தி 'உங்கள் காரியத்தை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்; அதை (திராவிடஸ்தானை)ப்பற்றி நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்' என்று சொன்னவுடன், எனக்கு ஜின்னா சாயபு 'நீங்கள் தனியாகக் கேளுங்கள். நான் என்னாலான உதவி செய்கிறேன்' என்று எழுதிவிட்டார்.

பிறகு பிரிட்டிஷார் போய்விட்டார்கள்; இராஜ்யம் காங்கிரஸ் கைக்கு கிடைத்து விட்டது.

காங்கிரஸ் அவசர அவசரமாய் 'இந்தியா ஒரே நாடு; பிரிக்கக்கூடாத நாடு' என்று சட்டம் செய்துகொண்டார்கள். அதன் பிறகு திராவிடர் கழகம் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒன்று வேறாக ஏற்பட்டும் திராவிடநாடு பிரச்சினையை அதுவும் வலியுறுத்தியே வந்தது.

காங்கிரஸ் ஆட்சி பலத்தால் திராவிடநாடு பிரிவினை கேட்பவர்கள் தேர்தலுக்கு நிற்கமுடியாது என்று விதிசெய்து கொண்டவுடன், தி. மு. க. 'நாங்கள் திராவிடநாடு பிரச்சினையை விட்டுவிட்டோம்' என்று சொல்லி, தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்று இன்று ஆட்சிக்கும் வந்துவிட்டார்கள்.

தேர்தலுக்கு அது ஒரு தடைப் பிரச்சினையாக ஆகிவிட்டதால், அவர்கள் அதைப் பற்றிப் பேச்சு மூச்சுகூட விடக்கூடாத நிலையில் இருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கம் காங்கிரசார் கையில் இருப்பதால், அவர்களுக்குப் பயந்து கொண்டு அடிக்கடி தி. மு. க. வினர் காலாகாலம் பார்க்காமல் 'நாங்கள் திராவிடநாடு பிரச்சினையை கைவிட்டு விட்டோம்; விட்டுவிட்டோம்; விட்டேவிட்டோம்' என்று சொல்ல வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள்.

நாமோ தேர்தலுக்கு நிற்கிறவர்கள் அல்ல. ஆனாலும், நமது திராவிடர் கழகத்தில் அது (திராவிடநாடு பிரிவினையே) ஒரு கொள்கையாய் இருந்தாலும், காமராஜர் காங்கிரஸ் தலைவரானவுடன், சமதர்மம்—சோஷலிசம் காங்கிரசின் கொள்கையாக ஆக்கப்பட்டு விட்டதால், அது தக்கபடி அமுலுக்கு வந்தால் திராவிடநாடு பிரச்சினை அவசியமாக இருக்காது அல்லது கூடாததாய் இருக்காது என்றுகருதி, அதிகமாய்ப் பிரஸ்தாபிக்காமல் இருந்தோம்.

என்றாலும், காங்கிரசின் பலக்குறைவையும், பார்ப்பனரின் கட்டுப்பாடு பலத்தையும் பார்க்கும்போது, சோஷலிச அமுலுக்குத் தொல்லை ஏற்படும் என்று பயப்படவேண்டி இருப்பதால், இப்போது திராவிடநாடு பிரச்சினையைப் பிரச்சாரம் செய்யவேண்டியதும் தென்னாடுகளில் அதுபற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டியதும் அவசியமென்றே தெரியவருகிறது.

இன்று மக்களுக்குள் சாதி உணர்ச்சி வலுப்பட்டு வருகிறது என்கின்றது மாத்திரமல்லாமல், பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிரச்சினை நாளுக்குநாள் மிகமிக வலுப்பெற்றுக்கொண்டே போவதுடன், நாட்டு உணர்ச்சியும் தென்னாடு, வடநாடு என்கின்ற பேதத்தோடு பலப்பட்டுக்கொண்டே வருகிறது.

இன்றைய தினத்திலே பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சியும், தென்னாடு—வடநாடு என்கின்ற உணர்ச்சியும் இரண்டும் சேர்ந்து காமராஜர் வலிவைக் குறைக்க இமாலயப் பிரயத்தனம் செய்துவரப்படுகிறது.

காங்கிரசில் பிளவு;

பார்ப்பனர்—அல்லாதார் என்கின்ற பிளவு;

பொது சாதி உணர்ச்சிப் பிளவு;

வடநாடு—தென்னாடு பிளவு;

பணமுதலைகளுடைய ஆதரவால் கூலிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களது தொல்லையால் பிளவு;

காங்கிரஸ்காரர்களுக்குள் பதவி, ஆசையால் பிளவு;

மாகாணத்துக்கு மாகாணம் போட்டியால் பிளவு;

ஒவ்வொருமாகாணத்திலும் பதவித் தலைமைப்போட்டியால் பிளவு;

தனித்தனிக் கட்சிப் பிளவு;

இத்தனை பிரிவுகளிலும் பார்ப்பனர் புகுந்து பிளவை பெரிதாக்கும் தொல்லை.

இத்தனை நோய்களுக்கிடையில சோஷலிசம் என்ற குழந்தை பிழைக்குமா? என்று பயப்படவேண்டி இருக்கிறது.

இவற்றையெல்லாம்விட இந்தியாவில் சோஷலிசத்திற்கு அனுகூலமானவர்கள், முழு மூச்சுடன் பாடுபடுகிறவர்கள் எத்தனைபேர் என்றே கணக்கிட முடியவில்லையே!

மொழிபேதத்தால் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்ள முடிவதில்லை.

கலாச்சார பேதத்தால் நாம் ஒருநாட்டு மக்கள், சகோதரப் பிரஜைகள் என்கின்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை. கூட்டுப்பொறுப்பு என்பதே எதில் என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை.

நான் தமிழ்நாட்டில் கிராமம், பட்டிதொட்டி முதலிய எல்லா ஊருக்கும் எல்லா மக்களுக்கும் தெரிந்தவனாக இருந்தாலும்,

கேரளாவில் 40 ஆண்டுகளுக்குமுன் வைக்கம் கிளர்ச்சியில் தெரிந்துகொண்ட ஒரு சிலர் (1½ கோடி மக்களில் ஒருசிலர்), ஒரு 5000 மக்களுக்குத் தெரிந்திருக்கலாம். மற்றவர் களுக்கு என்னைத் தெரியாது.

கர்நாடகத்தில் 2 கோடி மக்களில் பெங்களூரில் சில ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தெரியலாம்.

ஆந்திராவில் ஓர் ஊரிலும், ஒருவரையும் தெரிய வாய்ப்பில்லை; ஒரு சிலர் இருக்க லாம். பிறகு மற்ற நாடுகளில் என்னைத் தெரிந்தவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? நானே 55 கோடி இந்திய மக்களில் சுமார் ஒரு 55 ஆயிரம் வெளிமாநில மக்கள் தவிர, மற்றவர்களுக்குத் தெரியாதவனாக இருக்கும்போது, இந்தியா எப்படி ஒரே நாடாக இருக்க முடியும்? இந்திய மக்கள் எப்படி ஒரே சமுதாய மக்களாக இருக்கமுடியும்?

இப்படி இருப்பதனால் தனிப்பட்டமாநில மக்களுக்கு இலாபம் என்ன?

நாட்டில் இலாப நட்டங்கள், அழிப்பு, செழிப்பு, கையில் வலுத்த நாட்டிற்கு இலாபமாய் முடியுமே தவிர, கஷ்டப்படும், நஷ்டப்படும் நாட்டுக்கு எப்படிப் பரிகாரம் வர முடிகிறது? 55 கோடி பேருக்கும் ஒரேநாடு, 1000-க்கணக்கான சாதியாருக்கும் ஒரேநாடு, 1000-க்கணக்கான மொழி பேசுகிறவர்களுக்கும் ஒரேநாடு, 100-க்கணக்கான கலாசாரம் கொண்ட மக்களுக்கும் ஒரேநாடு, 50-க்கணக்கான மதம் உடையவர்களுக்கும் ஒரேநாடு, அதாவது இவ்வளவு பேர்களுக்கும் ஆட்சிக்கு ஒரே ஒரு நாடு. இத்தனைபேரையும் அடக்கி ஆள ஒருகட்சி என்றால் இது என்ன நாடா? பாழா? நரகமா? ஜெயிலா? சர்க்கஸ்காரன் வளையத்திற்குள் இருக்கும் மிருகப்பிராணிகள் போல், இப்படி இருக்க என்ன அவசியம் உள்ளது? இதுதான் சுதந்திரமா? மானம், ரோஷம் கண்ணாடி போட்டுக்கொண்டு பாருங்கள்.

உலகில் எங்கே இப்படி ஒருநாடு இருக்கிறது? ஓர் ஆட்சி இருக்கிறது? என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—30-3-1967]

11. திராவிடர்—திராவிடநாடு

பெரியோர்களே! தோழர்களே!

தமிழும், தமிழ் நாடும், தமிழ் மக்களும் இப்படிப் பிரிந்து கிடக்கிற காரணத்தால் தான் ஒற்றுமைக்குப் பாடுபடும் நாங்கள் திராவிட நாடு என்றும், திராவிட மக்கள் என்றும், திராவிட கலாச்சாரம் என்றும் எடுத்துக்காட்டிப் புத்துணர்ச்சி ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறோம். 'தமிழ்' என்பதும், 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப் போராட்டத்திற் குத்தான் பயன்படுமேயொழிய இனப் போராட்டத்திற்கோ, கலாச்சாரப் போராட்டத் திற்கோ சிறிதும் பயன்படாது.

சரி, ஆரியர்கள் முதலில் தம் கலாச்சாரத்தைப் புகுத்தித்தான் நம்மை வெற்றி கொண்டார்கள்; நம் கலாச்சாரத்தைத் தடுத்துத்தான் நம் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம் பித்தார்கள். நாமும் நம் கலாச்சாரத்தை மறந்து ஆரிய கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்ட தால்தான் அவர்களுக்குக் கீழான மக்களாக—அவர்களுடைய வைப்பாட்டி மக்களாக, சூத்திரர்களாக, பஞ்சமர்களாக ஆக்கப்பட்டோம்.

எனவே, அக் கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டுமே வெற்றி பெற்றுவிட முடியாது. கலாச்சாரத்தின் பேரால்—இனத்தின்பேரால் போராட்டம் நடத்தவேண்டும்; அதில் வெற்றிபெற வேண்டும். அப்போது தான் நாம் விடுதலை பெற்றவராவோம்.

மொழிப் போராட்டம், கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதிதானேயொழிய முழுப் போராட்டமாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாகவேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்றுவிடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்துவிடமாட்டா; மேலும், இந்த இழிவால் அவதிப்படுபவர்கள் தமிழ் மொழி பேசுகிறவர்கள்—தமிழர்கள் என்பவர்கள் மாத்திரமல்லாமல்—சென்னை மாகாணத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும், அதாவது, வேறு பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள வங்காளம், பீகார், பம்பாய், மகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இருக்கிறார்கள்.

அங்குள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களும் தம்மைத் திராவிடர்கள் என்றுதான் கூறிக் கொள்கிறார்கள். உண்மையில் அவர்களும் திராவிடர்கள்தாம்.

இவர்கள் எல்லோருமே, இன்றில்லையானாலும் நாளை நிச்சயம் ஆரியத்தை எதிர்க்க–அதற்காகப் புரட்சிசெய்ய ஒன்றுபடப்போவது நிச்சயம். எனவேதான், நாம் பல எதிர்ப்புகளுக்கிடையேயும், திராவிடர் கழகம் என்கிற பேராலேயே தொடர்ந்து பாடுபட்டு வருகிறோம்.

இந்த ஆரியர்–திராவிடர் போராட்டம் புராண காலங்கள் தொட்டே நடைபெற்று வரும் போராட்டம். புராண காலத்தைப்பற்றி நமக்கு விளக்கமாகத் தெரியவில்லை என்றாலும், ஆரிய கலாச்சாரத்தை ஒழிக்க பவுத்தர்கள் வெகு பாடுபட்டிருக்கிறார்கள். இந்து கலாச்சாரத்திற்கு–அதாவது ஆரிய கலாச்சாரத்திற்கு நேர் எதிர்ப்பான இஸ்லாம் கலாச்சாரத்தைக் கொண்டவர்களான முகலாயர்களும் ஆரியத்தை அழிக்க எவ்வளவோ பாடுபட்டார்கள். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றார்களல்லர்.

எனவேதான், 'அவர்களே வெற்றி காண முடியாதபோது இந்தத் திராவிடர் கழகத்தார் எங்கே வெற்றி காணப் போகிறார்கள்!' என்று பார்ப்பனர்கள் நம்மைப் பரிகாசம் செய்துவருகிறார்கள். அவர்கள் பரிகசிக்கட்டும்; நமக்குக் கவலையில்லை!

என்னைப் பொறுத்தவரையில், நம் முயற்சி வெற்றிபெறும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு; திட்டமான உறுதியுண்டு. வெள்ளையனுடைய சுமார் 200 வருடகால ஆட்சியும், நமது 25 வருடகாலப் பகுத்தறிவுப் பிரச்சாரமும், ஆரிய கலாச்சாரத்தினை–ஆதிக்கத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைத்திருக்கின்றன.

[சென்னை ராபின்சன் பார்க்கில், 24-1-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-1-1950]

12. அன்னியன் யார்?

பெரியோர்களே! தோழர்களே!

மில் காவலாளி அன்னியன்; அவன் கூடாது என்கிறீர்களே! ஆனால், மற்ற விஷயத்தில் பாருங்கள். இந்த நாட்டுத் தலைவர்கள் அன்னியர்கள்; இந்த நாட்டு அதிகாரிகள் பெரிதும் அன்னியர்கள்; இந்த நாட்டுப் பிரதம மந்திரி அன்னியர். மற்றும் எவ்வளவோ ஜீவநாடியான முக்கியஸ்தர்கள் அன்னியர்கள். இந்தப்படி—அன்னியர் என்பவர்கள் யார் என்றால், நம் இனத்தவரல்லாதார், நம் மொழியினரல்லாதவர், நம்

வகுப்பினரல்லாதவர், நம்மைச் சமமாகக் கருதுபவரல்லாதவர், நம்மைச் சுரண்டாதவரல்லாதவர், நம்மை இழிமக்களாய்க் கருதாதவர்களல்லாதவர்களும்; நம்மை இந்நாட்டுக் கல்வி, ஆட்சி ஆகியவைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்பவர்களும்; நம்நாட்டுப் பழக்க வழக்கம் நாகரிகம் ஆகியவைகளில் வேறுபட்டவர்களும்; நம் திராவிட நாட்டு இன்றைய எல்லைக்கு வெளிப்பட்டவர்களும் அன்னியர்களேயாவார்கள் என்கிறேன். இந்த உணர்ச்சி நம் மக்களுக்கு வருவதற்காக, குறைந்த அளவு அன்னியன் காவல்காரனாகக்கூட இருக்கக்கூடாது என்கின்ற உணர்வு உங்களுக்கு வந்தது போற்றக்கூடியதேயாகும்.

நம் அரசியல் தலைவர்கள் அன்னியர்கள், நம் பண்டிதர்களும், மகாத்மாக்களும் மவுலானாக்களும், சர்தார்களும் ஏன் நம் நாட்டவராய் இருக்கக்கூடாது? காவல்காரர்கள் கூட நம்மவர்களாய் இருக்கவேண்டும் என்று கருதிய உங்களுக்கோ, உங்கள் ஸ்தாபனங்களுக்கோ, உங்கள் தலைவர்களுக்கோ இந்தக் கவலை எப்போதாவது தோன்றியதுண்டா? உங்கள் நாட்டவரில் ஒருவரை மகாத்மாவாகச் செய்துகொள்ள, சொல்லிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? உங்கள் இனத்தவர் ஒருவரை, உங்கள் வகுப்பினர் ஒருவரை இராஷ்டிரபதியாக ஆக்கிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? இருந்தும் உங்களுக்கு அது விஷயத்தில் கவலையும் மானமும் இல்லையே, ஏன்?

தோழர்களே! இந்த நாடும், இந்த இனமும், சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதைத் தன்மையும் கொண்டதானால் இங்கு 'நேரு பார்க்', 'காந்தி சவுக்', 'திலகர் கட்டம்' இருக்கலாமா? இதற்குப் பெயர்தான் பூரண சுயேச்சை என்பதா? இவைகளைப் பார்த்து உங்கள் மனம் பதறவில்லையே! வயிறு எரியவில்லையே! 'தென்னாப்பிரிக்காவில் வெள்ளையன் அட்டூழியம்' என்கின்ற உங்களுக்குத் திராவிட நாட்டில் ஆரியன் அட்டகாசம்; திராவிட நாட்டில் திராவிடர்களை ஆரியன் சித்திரவதை செய்கிறான்; திராவிட நாட்டில் திராவிடனை ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான்—தாசி மகன், வேசி மகன், அடிமை என்கிறான்—என்று எந்தத் திராவிடனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு உள்ளம் துடிக்கிறது? இரத்தம் துடிக்கிறது? திராவிடர்களுக்கு ஆரியனா குரு சந்நிதானம்? திராவிடனுக்கு ஆரியனா சுவாமி, எஜமான், அதிகாரி, ஜட்ஜ், கலெக்டர், மாஜிஸ்ட்ரேட், குலகுரு? நாம் சிறிதும் மான உணர்ச்சி அற்ற சமுதாயம், நம் நாடு ஒரு காட்டுமிராண்டி அடிமை நாடு என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? தென் ஆப்பிரிக்காவிலே இருக்கிற வெள்ளையன்—திராவிடர்களை இந்திய ஆரியன் நடத்துவதில், கொடுமைப்படுத்துவதில், இழிவு செய்வதில் 100-ல் ஒரு பங்கு செய்கிறானா? தோழர்களே! தென்னாப்பிரிக்க வெள்ளையர்களைக் குறைகூறுபவர்கள், அவர்கள்மீது மக்களுக்குத் துவேஷத்தை உண்டுபண்ணுகிறவர்கள் இதே ஆரியர்கள். ஆனால், அதைவிடக் கொடுமையாகத் திராவிடர்களை நடத்துகிறவர்கள் இதே ஆரியர்கள்! இதை உணராமல் ஆரியனுக்கு வால்பிடித்து, அனுமாராய் அவன் பின் திரிபவர்கள் திராவிடர்கள். இதுதானே இன்றைய நம் நிலைமை? இன்று இந்தத் தமிழ் நாட்டில் ஆரிய அட்டூழியம் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா?

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 20-6-1946-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 6-7-1946]

13. ஆரியத் தரகர்கள்

ஆகஸ்ட் 15-ந் தேதி சுயராஜ்யத்தைப்பற்றி ஏதேதோ கூறப்படுகிறது. பூரண சுயராஜ்யம் என்றும், அதற்காகக் கொண்டாட்டமென்றும் திட்டம் வகுக்கப்படுகிறது. இதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை; வேண்டுமானால், தன்மானமுள்ள காங்கிரஸ் திராவிடர்கள் அன்று வெட்கித் தலை குனிய வேண்டும்; ஏன்? 1929-ம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் எந்த அர்த்தத்தில் தீர்மானிக்கப்பட்டதோ அந்த சுயராஜ்யந்தானே நாளை வரப்போகுது? வெள்ளையர் உறவு சிறிதுகூட இல்லாத

பூரண இந்தியா முழுவதையும் கொண்ட சுயராஜ்யம்—அதாவது, பூரண சுயேச்சை கேட்கப் பட்டது. அதற்காக அன்றுமுதல் இன்றுவரை நமது மக்கள் எவ்வளவு தியாகங்கள் செய்தனர்? குறிப்பாகக் கூறவேண்டுமானால், காங்கிரஸ் திராவிடர் எவ்விதக் கஷ்டநஷ்டங் களுக்கு ஆளானோம்? என்னையும் சேர்த்து நம் இனத்துக்குள்ளாகவே எவ்வளவு போராட்டம்; எவ்வளவு பொருளை வாரிக்கொட்டி இருப்போம்! சுயராஜ்யத்தின்பேரால் அவ்விதமெல்லாம் செய்தும் கடைசியாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் கிடைத்தது.

இந்தக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அன்று மிதவாதிகள் என்று கூறப்பட்டவர் களால் கேட்கப்பட்டபோது—அவர்களைப் பிற்போக்காளர், வெள்ளையர் தாசர்கள் என்று கூறி ஒத்துழையாமை செய்து, நாட்டில் பெரிய கலவரங்களிலிருந்து பல எதிர்ப்புகளை உண்டாக்கி, கடைசியாக அதே குடியேற்ற நாட்டு அந்தஸ்தை—அதுவும் முழு இந்தியா வுக்குமின்றி இந்திய உபகண்டத்தின் மூன்றிலொரு பாகமான இந்துஸ்தான் என்ற பகுதிக்கு மட்டும் பெற்று, அதை சுயராஜ்யம் என்று கொண்டாடுவது என்றால் இதைவிட வெட்கக் கேடான முறைவேறு இருக்க முடியுமா?

இந்துஸ்தான் சுயராஜ்யம் என்று நாளை கொண்டாடப்போகும் வடநாட்டு ஏகாதி பத்திய ஆட்சி, பிரிட்டிஷாருக்கு ஏஜெண்டாக—கையாளாகயிருந்து வெள்ளையருடன் வடநாட்டு பிர்லா, பஜாஜ் கோஷ்டியினர் செய்துள்ள ஒப்பந்த ஆட்சியே யன்றி, சுய ஆட்சி என்று எந்தக் காங்கிரஸ் அரசியல் நிபுணராகிலும் கூறமுடியுமா?

வேண்டுமானால், வடநாட்டுக்காரர்களுக்கு இன்னும் அதிகமாக நம் மாகாணத்தின் பொருளாதாரத்தைச் சுரண்ட அதிகாரம் இந்த சுயராஜ்யத்தின்மூலம் ஏற்பட்டிருக்கிறதற்கு அவர்களுக்குக் கொண்டாட்டம் ஏற்படலாமே தவிர, மானமுள்ள திராவிடன் இனி திண்டாட வேண்டித்தானே இருக்கப்போகிறது? ஆகஸ்ட் சுயராஜ்யம் அநீதிக்கு அடிப்படையானதே தவிர, நம் நாட்டு மக்களின் நேர்மையான உண்மைச் சுதந்திர வாழ்வுக்கு ஏற்றதல்ல.

இந்த இந்திய உபகண்டத்தின் மற்ற மாகாணங்களைவிட நம் மாகாணமே எல்லா வளப்பத்திலும், அறிவிலும் முதன்மையானதென்பது உலகறிந்த சரித்திரச் சான்றாக யிருந்தும், நமக்குள் இன ஒற்றுமையில்லாததாலேயே மற்ற மாகாணத்தவர்களுக்கு, குறிப்பாக வடநாட்டுக்காரர்களுக்கு நாம் தாசானுதாசனாய் இருந்துவருகிறோம்.

இந்துஸ்தான் சுயராஜ்ய மாகாணங்களில் இனி கவர்னராக இருப்பவர்கள் சாதாரண கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்கூட இன்றி, வடநாட்டுத் தாக்கீதுக்கு அடிபணிந்து இருக்கவேண்டுவதோடல்லாமல், வேறு ஏதாவது உண்டா என்று கேட்கிறேன். கவர்னர் களின் கதியே இவ்வாறென்றால் மந்திரிகளைப்பற்றிக் கூற வேண்டுவதில்லை. 'அட் வைசரி' சர்க்காரிலாவது மந்திரிகளுக்குச் சிறிது அதிகாரம் இருந்தது. ஆகஸ்டு சுயராஜ் யத்தில்—பஞ்சாயத்து போர்டு மெம்பர்களுக்கிருக்கும் அந்தஸ்தைவிடக் குறைவான தென்றே கூறலாம்—மாகாண மந்திரிகளுக்குக் கொடுத்துள்ள அந்தஸ்து.

இந்த இலட்சணத்தில் கொண்டாட்டமாம்! காங்கிரஸ் ஆரியன்தான் கொண்டாடு கிறான் என்றால் காங்கிரஸ் திராவிடனுக்கு ரோஷம் இருக்கவேண்டாமா? ஏன், நமது தோழர்கள் அவினாசியோ, பக்தவத்சலமோ, சிவசண்முகமோ, ஆகஸ்டு சுயராஜ்ய ஜனாதிபதியாக, பிரதமராக இருக்க இலாயக்கில்லையா? வடநாட்டான் தேசபக்திதான் அசல் தேசபக்தி; மற்றவர்களுடையது போலியா? இவ்விதப் பித்தலாட்டங்களையெல் லாம் தகர்த்தெறியாமல் வெத்துவேட்டு சுயராஜ்யத்தில் எத்தனை நாளைக்கு மானத்துடன் வாழமுடியும்?

எனவே, தோழர்களே! வடநாட்டுப் பாசிச ஆட்சியை அறவே அழித்து, நம் மாகா ணத்துக்கு—திராவிட நாட்டுக்குப் பூரண சுதந்திரம் கொண்ட விடுதலையை யடைய

வேண்டுமென்ற போராட்டம் எளிதில் கைகூடுமென்று நாம் நம்ப முடியவில்லை. காங்கிரசின் போக்கே குண்டாந்தடி ஆட்சியாக இருந்துவருகிறது. மக்களைத் துன்புறுத்துவதே அகிம்சா மூர்த்தியின் அருளைப்பெற்ற சீடர்களின் சுயராஜ்யத்தின் அடிப்படையாக இருந்துவருகிறது. தொழிலாளர்களைத் துன்புறுத்துவதே இன்றைய பட்டேலின் பாசிச வெறியாகக் காட்சியளிக்கிறது. நம் நாட்டை நாம் ஆளவேண்டும். மற்ற நாட்டினரின் பொதுவான விவகாரங்களில் நட்புக்கொண்டு வாழ்வதே மானமுள்ள வாழ்வு என்றால், அதை எதிர்க்கும் துரோகிகளின்—பட்டம், பதவிக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்கும், வடநாட்டவர்களின் ஆதிக்கச் சுரண்டலுக்குத் துதிபாடும் நமது விபீஷணர்களின் போக்கு ஆகியவற்றிற்கிடையே நாம் போராட வேண்டியிருக்கிறது.

எதிர்காலத்தில் இந்துஸ்தானத்தில், குறிப்பாக நம் நாட்டில் 'நவகாளி'கள் தோன்றுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்மை அவ்வளவு நாசப்படுத்தவே வடநாட்டு ஏகாதிபத்தியம் தயார் செய்துகொண்டிருக்கிறது, சுயராஜ்யம் என்ற பேரால்.

ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். இவ்வளவு எதிர்ப்புக்களையும் அநீதிகளையும் சகித்து வென்று, நம் திராவிடத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டியே தீருவோம். எனவே, அதற்கேற்ப, இளைஞர்களே! திராவிட இனத்தவர்களான தொழிலாளர்களே! விவசாயிகளே! மாணவர்களே! அறிஞர்களே! உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள். திராவிடத்திலும் 'நவகாளி'கள் தோன்றினால் அதற்கு நாம் அல்ல பொறுப்பு; இந்நாட்டு ஆரியர்கள்தாம் என்பதை எதிர்காலம் கூறும். அந்த நிலையிலிருந்து பழிச்சொல் ஏற்படாவண்ணம், இனியாவது, ஆரியம் வடநாட்டு ஆதிக்கத்துக்குத் தரகராயிருந்து நமது திராவிடத்திற்குத் துரோகம் செய்யவேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

நாட்டை ஆண்டதாக சரித்திரச் சான்றுகளில் தனது இனத்தைப்பற்றி இதுவரை பொறிக்கப்படும்படியான நிலையில்லாதிருந்து வரும் ஆரியம்—நாட்டைப் பிறர்க்குக் காட்டி கொடுக்கும் இனம் என்பதையாவது திராவிட நாடு பிரிவினை விஷயத்திலாகிலும், பிற்காலத்தில் எழுதும்படியான நிலையைத் தேடிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன். இதனால்—திராவிடத்தால் ஆரியத்துக்குத்தான் முழுதும் அழிவு ஏற்படும் என்பதை ஆரியம் உணரட்டும்.

எனவே, காந்தியாரல்லர், அவர்தம் சீட கோடிகளல்லர், அல்லது அந்தராத்மா அல்ல, யார் எதிர்த்தாலும், திராவிட நாட்டை அடைந்தே தீருவோம் நாம்! அதற்குப் பல தொல்லைகளைத் தாண்டவேண்டியிருக்கும்—சலிப்படையாதீர்கள்! மானமில்லாது வாழ்வது வாழ்வல்ல. திராவிடன் மானமுள்ளவன் என்பது சரித்திரச் சான்று. அதற்கேற்ப அவன் இனி எந்த நாட்டவனுக்கும், எக்காரணத்தை முன்னிட்டும் அடிமையாயிரான் என்பது உறுதி.

['விடுதலை'-அறிக்கை—27-7-1947]

14. சுதந்திர நாளா?

வெள்ளையர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறிவிடவில்லை. இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்லுவதன் மூலம், இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிருக்கிறார்கள்.

இந்தியர்களில் எல்லாக் கட்சி மக்களிடையேயும் அதிகாரத்தை ஒப்புவிக்காமலும், எல்லோருடைய குறைகளைக் கேட்காமலும், எல்லாக் கட்சியாரையும் சமரசப்படுத்தாமலும், தங்களுக்குப் பல வழிகளிலும் வியாபாரத்திற்கும் பிரிட்டன் நலத்திற்கும் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு காங்கிரஸ்காரரிடம் மாத்திரம் அதாவது, பார்ப்பன

ஆதிக்கமும் வடநாட்டார் சுரண்டல் வசதியும் கொண்ட—ஒரு சுயநல தந்திர சூழ்ச்சி கொண்ட கோஷ்டியார் கைக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் நிபந்தனையோடு அதிகாரத்தை மாற்றி இருக்கிறார்கள்.

எனவே, குடியேற்றநாட்டு அந்தஸ்து என்பது அதிகார மாற்றமே தவிர, நாடு ஒப்படைப்பு அல்ல.

உதாரணமாக, இந்தியாவுக்கு அரசர் ஜார்ஜ்மன்னர் ஆவார். மேற்பார்வையாளர், கவர்னர்-ஜெனரல் மேன்மைதங்கிய மவுண்ட்பேட்டன் ஆவார்.

ஆதலால், வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்திர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மக்களுக்கு நன்மை இல்லை; பிரதிநிதித்துவம் இல்லை. வருணாசிரம தர்மக்கொடுமை ஒழிவதில்லை.

ஏற்படப் போகும் மாகாணஆட்சி என்பது வெள்ளையர் அதிகார ஆட்சிக்காலத்தி லிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் உண்டு.

சில அதிகாரங்கள்தாம் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய, மந்திரிகளுக்கல்ல.

கவர்னர், தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்கட்டுப்பட்டவரல்லர்; மந்திரிகள் வெறும் பொம்மைகள்—அதாவது ஆலோசனை சொல்லுபவர்கள் ஆவார்கள்.

சென்னை மாகாணத்துக்கு 2000 மைல் தூரமான டில்லியில் இருக்கும் பிரஸிடெண்ட் கையில், சென்னை மாகாண மக்களை நடத்தும் ஆட்சி இருக்கிறது.

பிரஸிடெண்டும் மத்திய அரசாங்க மந்திரிகளும் அசெம்பிளி மெம்பர்களும் சேர்ந்த மொத்த கணக்கில் 10-ல் ஒரு பாக எண்ணிக்கைக்குக் குறைவான எண்ணிக்கையாளர்தாம், அங்கு சென்னை மாகாணப் பிரதிநிதிகளாய் இருப்பார்கள். அவர்களும் பெரிதும் ஆரிய அடிமைகளாகத்தாம் இருப்பார்கள்.

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் சமுதாயத்துறையிலும் பொருளாதாரத் துறை யிலும் ஏராளமான பேதம் உண்டு.

வியாபாரத்தில் வடநாட்டார் கொள்ளை இனியும் அதிகப்படுமே ஒழிய, சிறிதும் குறையாது.

ஆத்மார்த்தத்துறை என்னும் மதக்கொடுமையால் சமுதாயக்கொடுமை வடநாட்டார் இஷ்டப்படிதான் பெருகுமே தவிர, சமுதாய சமத்துவம் ஏற்பட வழி இல்லை.

நாம் இன்று திராவிடநாடு கேட்பது முக்கியமாய் வடநாட்டான் பொருளாதாரச் சுரண்டலும், ஆரியன் விளைத்த சமுதாய இழிவும் நீங்கவேண்டும் என்பதற்காகவேயாகும்.

அதாவது—இன்று, நைஜாம், திருவாங்கூர், மைசூர் நாடுகள் விரும்புவதுபோல், சென்னை மாகாண 4½ கோடி திராவிட மக்கள் தங்களது கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவைகளுக்கு ஏற்ற சுயேச்சை நாடாக இருக்கவேண்டும் என்பதே.

ஆதலால், வெள்ளையர் நம்மை மோசடி செய்ததை வெறுக்கவும் அதாவது, வட நாட்டு பனியாக்களுடையவும், ஆரியப் பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சிக்கும், ஏமாற்றுக்கும் உள்ள தந்திரத்திற்கும் நாம் ஏமாந்துவிடவில்லை என்பதைக் காட்டவும்; பூரண சுயேச்சை யுள்ள திராவிடநாடுதான் நமது இலட்சியமே தவிர, அதற்குக் குறைந்த எதைக்கொண்டும்

நாம் திருப்தியடையமாட்டோம், ஓயமாட்டோம், கிளர்ச்சி செய்தே தீருவோம் என்பதைக் காட்டவும் இம் மாதம் 15-ந் தேதி நடக்கும் சுதந்திரத் திருநாள் என்னும் 'ஆரியர்—பனியா' ஏமாற்றுத் திருவிழாவில் நாம் கலந்து கொள்வதில்லை என்கிறோம்.

இதைக் காங்கிரஸ்காரரும், ஆரியர்-பனியாக்கள் அடிமைகளும் திரித்துக்கூறி 'வெள்ளையனை வெளியேற்றுவது, திராவிடர் கழகத்தாருக்கு இஷ்டமில்லை' என்று விஷமப் பிரச்சாரம் செய்வார்களாகில், அது காங்கிரசாரின் மற்றொரு பித்தலாட்டப் பிரச்சாரம் என்று திராவிட மக்கள் கருதவேண்டுமேயொழிய ஏமாந்து போகக்கூடாதென்று வேண்டிக்கொள்கிறேன்.

[ஆதாரம் : அறிக்கை—'விடுதலை' 20-8-1972]

15. சுதந்திரப் போராட்டமா? சாதிமதச் சண்டையா?

1857ஆம் ஆண்டில் நடந்த 'சிப்பாய்க் கலகம்' என்னும் ஒரு கலவரத்தை, 'இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சி' என்று பெயர் வைத்து—'இன்றைக்கு அது நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன; ஆதலால் இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சியின் 100-வது ஆண்டு விழாக் கொண்டாடுவது' என்பதாக ஒரு விழாக் கொண்டாடப்படுகிறது.

1857-ல், 'இந்தியா விடுதலை அடையவேண்டும்' என்பதான ஒரு எண்ணமே இந்தியாவில் யாருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. 1857-ல் மாத்திரமன்று; காங்கிரஸ் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் 1885 ஆம் ஆண்டில் காங்கிரசை ஏற்பாடு செய்த பெருந் தலைவர்கள் என்பவர்கள்கூட இந்தியா விடுதலை அடையவேண்டும் என்ற எண்ணத்தின் மீது காங்கிரசை ஏற்படுத்தவில்லை.

சாதாரணமாக நடுநிலையில் இருந்து, பகுத்தறிவைக் கொண்டு பார்த்தால், வெள்ளையர் இந் நாட்டாட்சியைக் கைப்பற்றிஆட்சி செலுத்த முன்வந்த காலத்தைத்தான், 'இந்தியாவின் விடுதலை நாள்' என்று கொள்ள இடங்காணும்படியாக இருக்கிறது.

இதற்கு ஆதாரம் வேண்டுமானால், காங்கிரசின் துவக்க விழாவையும் அதன்பின் ஒவ்வொரு ஆண்டு காங்கிரஸ் விழாவிலும் இந்தியாவின் பெருந் தலைவர்கள் பேசி இருக்கும் பேச்சுக்களையும், அவற்றில் வெகுகாலம் செய்யப்பட்டு வந்திருக்கும் தீர்மானங்களையும் ஊன்றிப் படித்துப் பார்த்தால் தெரியும். இந்தியாவானது வெள்ளையர் ஆட்சி ஏற்படும் காலம் வரையில் ஒரு அடிமை நாடாக இருந்துவந்ததாகவும், இந்தியப் பெண் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத தன்மையில் 'காட்டாளர் ஆட்சியாக' இருந்ததாகவும், இந்திய மக்கள் கண்ணற்ற குருடர்கள்போல் எழுத்து வாசனை அற்றவர்களாகவும், காட்டுமிராண்டிகள் போல் நல்லறிவு நல்லாராய்ச்சி அற்றவர்களாக இருந்ததாகவும், வெள்ளையர் ஆட்சி ஏற்பட்ட பின்பே நாடு நல்ல மனிதத் தன்மை உள்ள உன்னத நிலைக்கு வந்திருப்பதாகவும் பல தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். மற்றும், ஆங்கிலம் புகுத்தப்பட்டதானது ஒரு 'வரப் பிரசாதம்' என்றும் பல தடவை கூறியிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்லாமல், 'இந்த நாடு வெள்ளையர் ஆட்சிக்கு வந்தது கடவுளால் அருளப்பட்ட அருள் பிரசாதம்' என்றும்; 'வெள்ளையர் ஆட்சியே இந்நாட்டில் என்றென்றைக்கும் இருந்து வரவேண்டும்' என்றும்; 'அப்படி இருந்துவர, கடவுள் அருள்புரிய வேண்டும்' என்றும்; 'வெள்ளையரைக் கடவுள் காப்பாற்ற வேண்டும்' என்றும் பல பிரபல தலைவர்கள் கடவுளைப் பிரார்த்தித்து ஏகமனதாகத் தீர்மானமும் செய்திருக்கிறார்கள்.

இவை ஒருபுறமிருக்க, இந்நாடு என்றைய தினம் சுதந்திர நாடாக இருந்தது; என்றைய தினம் நல்ல ஆட்சி நடந்த நாடாக இருந்தது என்பதற்கு நல்லதொரு எடுத்துக்

காட்டோ, ஆதாரமோ காண முடிவதில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ் நாட்டிற்கு (திராவிட நாட்டிற்கு) ஒரு உண்மையான–ஆதாரபூர்வமான–நடுநிலை கொண்ட தான சரித்திரமே காணமுடிவதில்லை.

இந்த நாட்டு ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக, ஆபாசக் காட்டுமிராண்டித்தனமான கற்பனைப் புராண இதிகாசங்களில் உள்ளவைகளைத்தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அறிவும், ஆண்மையும், நீதியும் கொண்டதான ஒரு ஆட்சியோ, ஆட்சி முறையோ இருந்ததாகக் கருதக்கூட இடமில்லை.

கற்பனைப் புராண இதிகாசகால ஆட்சிக்கு உள்ள பெருமையெல்லாம் வருணாசிரம முறைப்படி மக்கள் நடந்துகொள்ளும்படி ஆளப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன காணமுடிகிறது? அதை விட்டுவிட்டு, உண்மையாகவே தமிழ்நாட்டைத் தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள் என்ற பெருமை எல்லாம்—வருணாசிரம தருமத்தைக் காப்பாற்றி, அதன்படி ஆண்டு வந்தார்கள் என்று பாராட்டுவதைத் தவிர தமிழர்கள் ஆட்சிக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது? சேர, சோழ, பாண்டிய சாதியரான அரசர்கள் யோக்கியதையும்; அவர்கள் மக்கட்குச் செய்த நன்மையையும் சரித்திர ஆதாரப்படி–கவிராயர்களின் கவிப்படி பார்ப்போமானால், நம் தமிழரசர்கள் யோக்கியதையெல்லாம் பெருங்கோவில்கட்டி, சோம்பேறிகளும் அறிவற்ற நபர்களும் மக்களை வஞ்சித்து இங்கு மடையர்களாக ஆக்கி வாழ்ந்து வந்தார்கள் என்பதைத்தான் சரித்திர மூலமாகவும் பிரத்தியட்ச அனுபவமூலமாகவும் காண்கிறோம். மற்றும், தமிழரசர்களின் ஆட்சிக்கு மற்றொரு எடுத்துக்காட்டு வேண்டுமானால், இந்திய உபகண்டத்தில் இந்தத் தமிழ் நாட்டைப்போல் ஏராளமான கோவில்களைக்கொண்ட நாடு வேறு எங்கும் இல்லை என்பதும், தமிழ்நாட்டு மக்களைப்போல் மடமை, மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து மானம் என்றால் என்ன என்பதை ஒரு சிறு அளவுகூட அறிந்திருக்க முடியாத பாமர மக்களை வேறு எங்குமே காணமுடிவதில்லை என்பதும்தான்.

இதுபோலவேதான், தமிழ் அரசர்கள் ஆட்சி முறையையும் அறிவுத் திறனையும் காண, பாண்டிய அரசர் ஆட்சியையும் அறிவுத் திறனையும் காண, அவர்களது சமய நடத்தையைக் கண்டால் தெரியலாம்.

தமிழரசர்கள் கடுகளவு அறிவும் தன்மானமும் உடையவர்களாக இருந்திருந்தால், இந்த நாட்டில் 2000, 3000 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்கள்—பழங்குடி மக்கள் கடைச் சாதியாய், இழி மக்களாய் இருந்திருக்க முடியுமா? எந்த அரசனாவது தானுட்பட—தன்னின மக்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள் கீழ்மக்களாய், இழிமக்களாய் இருக்கிறார்களே என்று சிந்தித்ததாகக் காணப்படுகிறதா? கோவில்களுக்கும் சத்திரங்களுக்கும் மடங்களுக்கும் அவற்றின் விழாக்களுக்கும் விளம்பரங்களுக்கும் விடப்பட்டிருக்கும் சொத்துக்களையும்—அதே நேரத்தில் இந்நாட்டு மக்களின் கல்வியறிவு பெருகுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காதபடி விட்டிருக்கும் தன்மையும், மற்றும் நம் மக்களுக்கு நல்லறிவும் நல்லொழுக்கமும் புகுத்தப் பாடுபட்ட பவுத்தர்களையும் சமணர்களையும் வெட்டியும், சித்திரவதை செய்தும், கழுவேற்றியும், கொடுமை செய்த சரித்திரத்தையும் நடப்பையும் பார்த்தால்—நம் தமிழரசர்கள் ஆட்சி ஒரு கொடுங்கோன்மையும், காட்டுமிராண்டித்தனமும் கொண்ட ஆட்சி என்பதைத் தவிர வேறு என்ன ஆட்சி என்று சொல்லமுடியும்?

ஆகவே, நம் நாட்டிற்கு, நம் மக்களுக்கு ஒரு விடுதலை ஏற்பட்ட காலம் என்று சொல்லவேண்டுமானால்—அந்த விடுதலைக்கு என்ன அர்த்தம் சொல்லுவதானாலும் இந்நாடு அன்னியர் ஆட்சிக்கு வந்த காலமேயாகும். அப்போதுங்கூட, வெள்ளையர் இந்தியாவைத் தன்னாட்டு வளத்திற்காகச் சுரண்டுவதை முதல் நோக்கமாகக் கொண்டனர்; அடுத்தபடியாக, இந்திய மக்களிடையே உள்ள சாதிப் பிரிவு, காட்டுமிராண்டித்தனமான சமயம், கடவுள், கடவுள்–சமய ஆதாரங்கள், நெறிகள் ஆகியவை

களில் நல்ல மாறுதல் ஏற்பட வேண்டுமென்றும், இந்திய மக்கள் கல்வி, அறிவு ஆகியவை களில் தலைசிறந்து விளங்க வேண்டுமென்றும் கவலை கொண்டு, இந்திய 'மேல்சாதிக் காரர்'களின் பலமான எதிர்ப்பையும் சமாளித்து, எவ்வளவோ மாறுதல்களை உண்டாக்கினர் என்பதை மறுக்க முடியாது.

ஆகவே 1857-ல் நடைபெற்ற இந்தக் கலவரமானது, உண்மையில் 'வெள்ளைய னுடைய ஆதிக்கம் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்படுவது கூடாது; அரசியல் ஆதிக்கம் அன்னியரிடத்திலா இருப்பது!' என்ற கருத்திலல்ல என்பதை அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை முன் வைத்துப் பார்த்தால் அறியலாம்.

லார்டு டல்ஹவுசியின் சீர்திருத்தங்கள், ஒரு சிலரான பார்ப்பனர்கட்கு ஏகபோக உரிமையாக இருந்த கல்வியை—நாடெங்கும், எல்லோரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் பரப்பிய முறையையும்; இரயில், நீராவி என்ஜின், தந்தி சாதனம் போன்ற விஞ்ஞான முறைகளைப் புகுத்தியமை போன்ற சீர்திருத்தங்களையும் கண்டு, வைதிக மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் வெகுண்டார்கள். 'இத்தகைய அறிவு வளர்ச்சி தங்களுடைய ஆதிக்கத்திற்கு எங்கு உலை வைத்துவிடுமோ!' என்றஞ்சி, எதைச் செய்தால் இவைகளை ஒழித்துக்கட்டலாம் என நினைத்து, அதைக் கண்டுபிடித்து—பாமர மக்களான, சிப்பாய்களாக இருந்த வைதிக மனப்பான்மையாளர்களை, 'உங்கள் சாதியும், மதமும் ஒழிந்துவிட வெள்ளையன் ஏற்பாடு செய்கிறான்' என்று கூறி, வெள்ளைக் காரர்களை எதிர்க்கச் செய்தனர். இந்தச் சீர்திருத்தங்களும் விஞ்ஞானக் கல்வியும் பரவினால்—எங்கே சாதிமுறையும், அதையொட்டி அமைந்துள்ள 'கீழ் சாதி' மக்களின் பணிவும் அடிமைத்தனமும் மாறிவிடுமோ என்ற சுயநல எண்ணத்தின்பேரில்தான் மற்றவர்களைத் தூண்டினர். 'துப்பாக்கிகளில் கொழுப்பைத் தடவிக் கொடுத்தனர்' என்ற குற்றச்சாட்டிலும்கூட, இந்து சிப்பாய்களிடம் அது பசுமாட்டுக் கொழுப்பு என்றும், முஸ்லிம்களிடம் அது பன்றிக் கொழுப்பு என்றும் பிரச்சாரம் செய்து, அவரவர்களுக்கு உள்ள மத உணர்ச்சியையும் அதனடியாகப் பிறந்த மூடநம்பிக்கையையும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

நெற்றியில் மதக்குறிகளை யாரும் அணியக்கூடாது; எல்லா சிப்பாய்களும் ஒரே மாதிரியான உடைகளையே உடுத்த வேண்டும்; தாடி வைத்துக்கொள்ளக்கூடாது; காதணி அணியக்கூடாது என்பன போன்ற விதிகளின்மூலம் வெள்ளையர்கள் இவர்களுடைய மதத் தத்துவங்களைத் தகர்த்தெறியச் செய்கிறார்கள் என்ற கண்ணோட்டத்துடன்தான் அவைகளை நோக்கினார்கள்.

அதுபோலவே, கடலைத் தாண்டி பர்மா முதலிய நாடுகளுக்குப் போரிடச் செல்ல வேண்டும் என்ற விதி—தங்களுடைய இந்துமத சாஸ்திரத்திற்குப் புறம்பான முறையில் அமைந்துள்ளது என்று நினைத்தே கொதித்தெழச் செய்தார்கள்.

இரயில் வசதியும், படிப்பு வசதியும் மற்ற விஞ்ஞான சாதனங்களின் மூலமும் கிறிஸ்துவ மதத் தத்துவங்கள் பரவ ஏதுவுள்ளது என்றும்—அதனால் இந்துமதம் எங்கு அழிந்துவிடுமோ என்ற பயமும், சிப்பாய்களைத் தூண்டிவிட்ட 'மேல் சாதிக்காரர்களுக்கு' இருந்தது என்பது ஒரு மாபெரும் உண்மையாகும்.

மேற்கண்ட உண்மைகளை வைத்துப் பார்த்தால், 1857 கிளர்ச்சி வெள்ளையனுடைய ஆதிக்க வாழ்வை எதிர்த்து ஏற்பட்டதன்று என்பதும், அவனுடைய சீர்திருத்தங்களினால் விளைந்த பலன்களை எதிர்த்தே ஏற்பட்டது என்பதும் புலனாகும். உதாரணமாக, பெண்கள் உடன்கட்டை யேறும் பழக்கமான 'சதி' என்ற முறையைச் சட்டத்தின் மூலம் வெள்ளைக்காரன் ஒழித்தபோது ஏற்பட்ட வைதிகர்களின் கூக்குரலை—வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளம்பிய விடுதலைச் சங்கொலி என்று கொள்ள முடியுமா? அதுபோலவே தான் இந்த 1857 நிகழ்ச்சியும்.

அப்படியே விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டம் 1857 என்றே வைத்துக் கொண்டாலும், நமது தமிழ் (திராவிட) மக்களைப் பொறுத்த வரையில்—இன்றைய நிலையிலாவது விடுதலை பெற்றவர்களாகத் திகழ்கிறார்களா என்பது சிந்திக்கத் தக்கது. வெள்ளைக்காரன் காலத்தில் எப்படி எதற்கெடுத்தாலும் லண்டனுக்கு ஓடி முடிவுகளைச் செய்தார்களோ, அதே தன்மையில்—இப்போது டெல்லிக்கு ஓடி முடிவுகளுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. தொழிற்கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை போன்ற சிறு சங்கதிகளில் கூட 'டெல்லியின் ஆணையைத் தலையின்மேல் நாம் தாங்கவேண்டி'யுள்ளது என்றால், நாம் எப்படி விடுதலை பெற்றவர்களாவோம்?

வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்து அவனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, எந்தக் கட்டத்தில் அவனால் தங்களினத்திற்கும் சுயநல வாழ்விற்கும் முடிவு ஏற்படும் என்று எப்போது எண்ணினார்களோ—அன்று தான், அவனை வெளிப்படையாக எதிர்க்க முன்வந்தனர் 'மேல் சாதிக்காரர்கள்' என்ற 'பார்ப்பனர்கள்'.

1857ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியில் கலந்து கொண்ட மற்ற சுதேச மன்னர்களும் நானா சாயபு போன்றவர்களும் தங்கள் கையிலிருந்த ஆதிக்கம் மாறிவிட்டதே என்ற சுயநல நோக்கத்தில் தான் சேர்ந்தார்கள்; நாட்டு விடுதலை என்ற பரந்த நோக்கத்தாலல்ல என்று சரித்திரம் படிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

வெள்ளைக்காரனின் ஆதிக்கத்தால் அரசியல் அடிமைத்தனம் ஏற்பட்டது என்பது விவகாரத்திற்கிடமானதாக இருந்தாலும்—'வெள்ளையராட்சியாலேயே சமுதாய எழுச்சி இந்நாட்டில் ஏற்பட்டது' என்பது மறக்கமுடியாத ஒரு உண்மையாகும். 'நாம் சுதந்திரமாக வாழவேண்டும்' என்ற சுதந்திரக் கிளர்ச்சி எண்ணம் நமக்குப் பிறந்ததற்கே அடிப்படைக் காரணம் ஆங்கிலக் கல்வி என்று பண்டித ஜவஹர்லால் அவர்களே பல இடங்களில் பேசியும் எழுதியும் உள்ளார்கள்.

எனவே, 1857 நிகழ்ச்சியை நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முதல் நிகழ்ச்சியாகக் கருத இடமில்லை. மாறாக, வைதிக எண்ணங்களைக் காக்கவும், பழமை, மதம்—இவைகளைப் பாதுகாக்கவும் செய்யப்பட்ட ஒரு முயற்சியாகும்.

நிற்க, மேல் நாடுகளில் 'சுதந்திர நாள்', 'சுதந்திர ஆண்டுவிழா'க் கொண்டாடுவது போல், நம் நாட்டில் சுதந்திர நாள், ஆண்டுவிழாக் கொண்டாடுவது—புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்டதைப் போலாகும்.

மேல் நாட்டார்கள் சுதந்திரம் பெற்றபின் பெற்றநாளைக் குறிவைத்துக் கொண்டாடுகிறார்கள். நாம் அதுபோல் கொண்டாட நமக்குச் சுதந்திரம் வந்துவிட்டதா? நாம் ஏதாவது சுதந்திரத்தை அனுபவிக்கிறோமா? என்பதைப்பற்றி நமக்குக் கடுகளவு யோசனையும் இல்லாமல்—நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களின் சூழ்ச்சிக்கும் வஞ்சகத்திற்கும் ஆளாகி அடிமைத் தளையை இறுக்கிக்கொள்ள நாம் 'சுதந்திர விழா'க் கொண்டாடுகிறோம்.

இந்த நாட்டின் சுதந்திரம் பணக்காரர் மீது ஏழை மூட மக்களை ஏவி விடுவதாக இருக்கிறதே யொழிய—மனிதனை (நம்மை) நாயிலும், பன்றியிலும் கேடாக இழிவுபடுத்தி, கீழ்சாதி ஆக்கிய 'கடவுள்', 'சாஸ்திரங்களையோ', சட்டங்களையோ மக்களையோ—ஏனென்று கேட்க நாதியில்லை.

சுதந்திர நாட்டில் பிராமணன், சூத்திரன், பறையன், சக்கிலி இருக்கலாமா? அப்படி இருக்கும் நாடு சுதந்திர நாடா? 'நரக' நாடா?

இதை ஒழிக்கப் பாடுபட இந்த நாட்டில் ஏதாவது உரிமை இருக்கிறதா? உரிமை கேட்க வழி இருக்கிறதா? சுதந்திரநாட்டில் மனித சமுதாயத்தையே அடிமைப்படுத்தி மடையர்களாக ஆக்கி வைத்திருக்கும் இனத்தினர் (பார்ப்பனர்) மந்திரியாய், தலைவராய் இருக்கின்றார்கள் என்றால் இது சுதந்திர நாடாகுமா?

யோக்கியமான முறையில் பேச்சுரிமையில்லை; கூட்டம் போட உரிமையில்லை; 'லவுட் ஸ்பீக்கரு'க்குப் பணம் கட்டவேண்டும்; 'லைசென்ஸ்' வேண்டும்; கூட்டம்போட உள்ள இடங்கள் இராணுவத்திற்குக் கொடுக்கப்பட்டுவிட்டன என்கிறார்கள்.

தமிழனுக்குப் பார்ப்பான் மாத்திரம் எஜமானனல்லன்; மலையாளியும்—எஜமான்; அதிகாரி. வடநாட்டான்—முதலாளி; சர்வாதிகாரி. இது தமிழ்நாட்டுக்குச் சுதந்திரமா? சுதந்திரத்தை நினைத்துக்கொண்டு எழுத எழுத ஆத்திரம் வருகிறது; இத்துடன் நிறுத்திக் கொண்டேன்.

['விடுதலை'-தலையங்கம்—15-8-1957]

16. சுதந்திர நாள்

ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி 'சுதந்திர தின வெள்ளி விழா'வைக் கொண்டாட அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, இந்தியாவுக்குப் பல நூற்றாண்டு காலமாக இருந்துவந்த அன்னிய நாட்டான் ஆட்சி ஒழிந்து, நம்நாட்டை நாமே ஆளும்படியான சுதந்திர சுயாட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆனதாகவும், அதற்கு ஆக 'சுதந்திர தின வெள்ளிவிழா' கொண்டாடுவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் இதை 'சுதந்திரம் பெற்ற நாள்' என்று சொல்ல மாட்டேன். மற்றென்னவென்றால், அடிமையும், மடமையும், ஒழுக்கக்கேடும், நேர்மைக் கேடும் ஏற்பட ஏதுவான துக்கநாள் துவங்கிய 25-ஆம் ஆண்டு (துக்க) நாள் என்றுதான் சொல்வேன்.

இதை இன்று மாத்திரம் சொல்லவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் என்று என்றைக்கு வெளியிடப்பட்டதோ, அன்றே சொன்னவன் நான்.

சுதந்திரம் என்று முதலில் விஷயம் வெளியானவுடன், உயர்திரு. அண்ணா அதைச் 'சுதந்திர நாள்' என்று பாராட்டினார். அதைக் காங்கிரஸ்காரர்கள் பெரிதாகப் பாராட்டி, துணித் தோரணங்களில் 'இது சுதந்திர நாள்' என்று எழுதி அடியில், 'அண்ணாதுரை' என்றும் எழுதி, அவற்றைத் தெருத்தெருவாகக் கட்டிவைத்தார்கள்; பத்திரிக்கைகளிலும் கொட்டை எழுத்துக்களில் விளம்பரம்போல் பிரசுரித்தார்கள்.

அனேகமாக, அந்தச் சம்பவந்தான் அண்ணாதுரைக்கும் நமக்கும் மாறுபாடு வெளியான சம்பவமாக இருக்கலாம்.

அது மாத்திரமல்லாமல், அடுத்த விஷயத்தை மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு கூட்டத்தில் (பொள்ளாச்சி கூட்டத்தில் என்பதாக ஞாபகம்) 'இது சுதந்திர நாள் என்று பேசினார்' என்பதைக் கேள்விப்பட்டு, நான் கண்டித்தேன். அப்போது, அதற்குப் பதில் என்பதாக நாவலர் அவர்கள், 'ஒரு விஷயத்தில் தலைவர் ஒரு கருத்துக் கொண்டால், அதை மக்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டாமா? தலைவர் கருத்து இப்படிப் பட்டது என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று சொன்னார்.

ஆகவே, இது துக்கநாள் என்பதை சுதந்திர அறிக்கை வெளியிடப்பட்டநாளிலேயே, 'இது துக்கநாள்; நாட்டிற்கும் மனித சமுதாயத்திற்கும் கேடான நாள்'—என்று சொன்னேன். இதை, அந்தநாள் 'குடி அரசு' பத்திரிக்கையில் பார்த்தால் நன்றாக விளங்கும். அது எப்படியோ இருக்கட்டும்.

இன்று இந்த நாட்டில், ஓர் ஆட்சிக்கு இருக்கக்கூடாத எந்த அயோக்கியத்தனமும், ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, புரட்டு, பித்தலாட்டம், மானங்கெட்டதனம், கட்சிமாறல்,

கட்சிக்குத் துரோகம், இழிதன்மையான சுயநலம், அபாண்டமாய்க் குறைகூறல் முதலிய கூடாஒழுக்கக் காரியங்கள் எந்தக் கட்சியில் யாரிடம் இல்லாமல் இருக்கின்றன? இப்படிப் பட்ட காரியத்துக்காக யார் வெட்கப்படுகிறார்கள்?

இன்று அரசியல் கிளர்ச்சி என்றாலே காலித்தனம், அயோக்கியத்தனம், மோசடி, துரோகம் முதலிய தன்மைகள் இல்லாமல் யாரால் நடந்துகொள்ள முடிகிறது?

முதலாவதாக, அயோக்கியத்தனத்துக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன் :—

இந்தத் தேசத்தில் எவன் ஒருவன் தன் நாட்டுக்குச் சர்வ சுதந்திரம் கேட்கிறானோ அவன் ஏழு ஆண்டுகள் வரை தண்டிக்கத் தக்க குற்றவாளியாக ஆக்கப்படுவான்.

என்ற சட்டம் உலகில் எந்த நாட்டில், தேசத்தில் இருக்கிறது?

அடுத்துச் சொல்கிறேன் :—

எவனொருவன் தன் நாட்டுக்குத் தொண்டுசெய்ய, எந்த ஸ்தாபனத்தின் தேர்தலில் ஓர் அபேட்சகராக நிற்பதானாலும், அவன் பத்தாயிரம் ரூபாய் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்துதான் வெற்றி, தோல்வி அடையமுடியும் என்ற நிலை எப்படி யோக்கியமான நிலையாகும்?

காலித் தனத்துக்குப் பெயர் வேலை நிறுத்தம்; அயோக்கியதனத்திற்குப் பெயர் அகிம்சை; சண்டித்தனத்திற்குப் பெயர் சத்தியாக்கிரகம்! தான் பதவிபெற்ற கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு, எதிர்க்கட்சி ஆளாவது முதலிய அயோக்கியத்தனங்கள் எப்படி யோக்கியமான சுதந்திரமாக இருக்கமுடியும்?

மற்றும், இன்றைய சுதந்திரம் என்பதில், எந்த அயோக்கியத்தனமான காரியம் விலக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியும்?

இவைகள் ஒருபுறமிருக்க,

தேசத்துக்குப் பூரண சுதந்திரம் கிடைத்து, இன்றைக்கு 25 ஆண்டுகள் ஆன பிறகும், இந்தப் பூரண சுதந்திரம் உள்ள நாட்டில், 54 கோடி மக்களில் 39 கோடி பேர் தற்குறி என்றால்—100-க்கு 70 மக்கள் கையெழுத்துப் போடத் தெரியாத தற்குறிகளாக இருக்கிறார்கள் என்றால்; அதிலும் மொத்த ஜனத்தொகையில் சரிபகுதிப் பேர்களான பெண்கள் 100-க்கு 82 சதவிதம் தற்குறி என்றால்; அதுவும் தேசம் பூரண சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலை என்றால்; இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா, அடிமை ஆட்சியா என்று கேட்கிறேன்.

இதைச் சுதந்திர ஆட்சி என்று—வயிற்றுப் பிழைப்பு, பதவிவேட்டை தேசியவாதிகளும், மக்களுந்தான் சொல்லிக்கொள்ள முடியுமே தவிர, நேர்மையான, அறிவுள்ள ஜன சமுதாயத்தால் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

இந்த நிலையில், இந்த நாட்டில் இலட்சக்கணக்கான கடவுள்கள்; பல்லாயிரக் கணக்கான தேர்திருவிழாக்கள், கடவுள் கலியாணங்கள், நித்தியமும் 5 வேளையும் பூசைகள் முதலிய ஆடம்பரங்கள் நடந்தவண்ணம் இருக்கின்றனவென்றால், இந்தத் தேசத்தை மக்கள் ஆள்கிறார்களா, 'பிசாசுகள்'—மனிதத் தன்மையற்றவர்கள் ஆள்கிறார்களா? இந்த நாட்டில் சுதந்திரம் இருக்கிறதா, அடிமைத் தன்மைக்கு ஆதிக்கம் இருக்கிறதா என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தவிர, இந்த சுதந்திரத்தின் காரணமாக இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவு மானம், ரோஷம் இருக்கிறது என்றால், இந்த நாட்டு மனித சமுதாயம் இரு பிரிவாகப் பிரிந்து, ஒரு

பிரிவு நூற்றுக்கு 3 பேர் என்கின்ற பார்ப்பனர்; மற்றொரு பிரிவு 100-க்கு 97 பேரான சூத்திரர். பார்ப்பனர் என்றால் மேல்சாதி; சூத்திரன் என்றால் கீழ்சாதி (இழிமகன்) ஆவான்.

இந்தப்படியான நிலை, சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கிறது என்றால், இந்தத் தேசம் ஒரு சுதந்திரம்பெற்ற தேசம்–நாடு ஆகுமா? அடிமை சாசனம் பெற்ற தேசம்–நாடு ஆகுமா?

இதற்கு மேலும் நம் சுதந்திரத்தை, சுதந்திரநாள் விழாவைப்பற்றி விளக்குவது என்றால் நம் மனம் மிகுந்த பரிதாபப்படுகிறது; இரக்கப்படுகிறது.

தோழர்களே! இப்படிப்பட்ட நிலைபற்றி எந்தக் குடிமக்களாவது வெட்கப்படுவதாக இருந்தால் அந்த வெட்கத்தை நமது சமுதாயத்திற்குக் கேடாகவும், தங்கள் சமுதாய உயர்வாழ்வுக்குமாகவே நடத்தப்பட்டுவரும், பார்ப்பனப் பத்திரிக்கைகளை வாங்குவதில்லை, படிப்பதில்லை என்று உறுதி எடுத்துக்கொள்வதன் மூலம் காட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் இன்று பொதுமக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளும் (இன்ஜெக்ஷன்) செய்தியாகும்.

துக்கநாள் ஒழிக! உண்மை சுதந்திரநாள் தோன்றுக!

['விடுதலை'–தலையங்கம்—15-8-1972]

2. திராவிடநாடு திராவிடருக்கே

1. திராவிடநாடு திராவிடருக்கே!

திராவிடநாடு திராவிடருக்கே என்ற எண்ணம் நம் நாட்டிலே இன்று நேற்று தோன்றியதாக யாரும் கருதிவிட முடியாது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னதாகவே டாக்டர் டி. எம். நாயர், சர். பி. தியாகராயப் பெருமான் மனங்களிலும் தோன்றிவிட்டது.

ஆரிய ஆதிக்கத்திலிருந்து திராவிட மக்களை, திராவிடநாட்டைக் காப்பாற்ற வேண்டும்; இந் நாட்டிலிருந்து ஆரியக் களையைக் களைந்தெறிய வேண்டும் என்ற கருத்தின் மீது அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். இந்த எண்ணம் அன்று இருந்ததினாலேதான் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தார் 'திராவிடன்' என்ற பத்திரிக்கையைத் தோற்றுவித்து நடத்தி வந்தார்கள். இப்பொழுது அந்த எண்ணம் கொழுந்துவிட்டு எரிகிறது; திராவிட இரத்தம் கொதிக்கிறது. அதன் காரணமாகவே, சென்ற 10-ந் தேதி நாடெங்கும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் ஒலித்தது. திராவிட நாட்டைத் தனியாகப் பிரித்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு தமிழருக்கே என்றால் சரித்திர அறிவோ, அரசியல் அறிவோ அற்ற ஒரு சிறுகூட்டம் பரிகாசம் பண்ணுகிறது. தமிழ்நாடு தமிழருக்கே ஆய்விட்டால் கன்னடர், ஆந்திரர், கேரளர் என்னாவது என்று கேட்கின்றன அம் முண்டங்கள். தமிழ், தாய் மொழியென்றும் அதிலிருந்துதான் கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பிறந்தன என்றும் மொழி ஆராய்ச்சி வல்லுனர்கள் புகலுகின்றனரே! அப்படியிருக்க, தமிழ்நாடு தமிழருக்கே என்றால் அவர்களைச் சேர்ந்த குழுவினர்களாகிய கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் தனித்துப் பிரிந்து போய் விடுவார்களா? இந்த அற்ப விஷயம் எப்படி, அந்த மர மண்டைகளில் ஏறப்போகிறது? ஆகவேதான், தமிழ்நாடு தமிழருக்கே இருக்கவேண்டும் எனக் கோருகிறேன். இதற்காக எத்தகைய கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கொள்ளத் தமிழன்

நெஞ்சம் உரம் கொண்டுவிட்டது; இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்றே தமிழன் துணிந்துவிட்டான். அதைச் சென்ற 10-ந்தேதி நிகழ்ச்சி நன்கு விளக்கிவிட்டது. தமிழன் தனது இலட்சியம் வெற்றிபெறும் வரை அயரமாட்டான்; அல்லும் பகலும் அதே சிந்தனையாயிருப்பான். தமிழன் இத் துணிச்சலைப் பெற்றிருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. இன்று உலகிலே நடைபெற்றுவரும் சம்பவங்களைப் பார்ப்பவர்களுக்கு இது ஒன்றும் அதிசயமாகத் தெரியாது.

அய்ரோப்பாக் கண்டத்தில் எத்தனை சிறுநாடுகள்—நமது திராவிடநாட்டைவிட ஜனத்தொகையிலும் பரப்பளவிலும் எவ்வளவோ சிறிய நாடுகள் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றன என்பதை யாவரும் அறிவர். ஏன் அவைகள் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றனவென்றால், அப்பொழுதுதான் தங்கள் கலை, நாகரிகம் முதலியவைகள் காப்பாற்றப்படமுடியும் என்ற காரணத்திலேயேயாகும். அய்ரோப்பா எல்லாம் ஒன்றாகிவிட்டால் மெஜாரிட்டியினர்களுடைய நாகரிகத்தைப் புகுத்தி, மற்றவைகளை அழிக்கச் செய்து விடுமென்ற அச்சம் ஒவ்வொரு நாடும் கொண்டிருப்பதால்தான்—இன்று அவ்வாறு போராடுகின்றன. ஆகவே, உலகம் போற்றும் நமது கலை, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகள் வளரவேண்டுமானால்—உலகிலேயே பிரகாசிக்க வேண்டுமானால் முதலில் நமது நாட்டுக்கு, அதாவது திராவிட நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும்.

ஏற்கனவே மாகாணங்களுக்குச் சுய ஆட்சி வழங்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நாம் கோருவதெல்லாம் நமது கலையின் மீதும், நாகரிகத்தின் மீதும், பொருளாதாரத்தின் மீதும் வேறு எந்த மாகாணமும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதேயாகும். இந்தப் பாதுகாப்பைக் கோருவதில் என்ன தப்பு என்று கேட்கிறேன். நிலம் படைத்தவன் தனது நிலத்தைச் சுற்றி, அடுத்த நிலத்துக்காரனது ஆடு மாடுகள் வந்து பயிரை அழித்து விடாமல் பார்த்துக் கொள்வதற்காக வேலி போடமாட்டானா? அப்படி அவன் வேலி போடுவது தவறா என்று கேட்கின்றேன். இதுபோலவேதான், நமது மாகாணத்திற்கு பந்தோபஸ்து தேடுகிறோம். இது எப்படிக் குற்றமாகும் என்பது நமக்கு விளங்கவில்லை.

எனவே, ‘திராவிடநாடு திராவிடருக்கே’ என்ற முழக்கம்—திராவிடநாடு தனி நாடாகப் பிரிக்கப்படுகிறவரை சலிக்காமல் ஒலிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதற்கு ஆவன செய்ய, ஒவ்வொரு தமிழனும் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிடநாடு திராவிடருக்கே!

[‘குடி அரசு’-தலையங்கம்—17-12-1939]

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தியா என்று ஒரு பொதுக் குடும்பம் (நாடு) எப்போதும் இருந்ததில்லை. நம் குடும்பத்தின் (நாட்டின்) பயனை மற்றவன் அனுபவிப்பதற்காகப் பல குடும்பங்களை ஒன்றாகப் பிணைத்து வெள்ளையர் உருவாக்கிப் பயன் அனுபவித்து வருகிறார்கள். குடும்ப மக்கள் கூப்பாடு போடாமல் இருப்பதற்கு—முன்னணியில் இருப்பவனை (ஆரியனை) சுவாதீனப் படுத்திக்கொண்டு அவனுக்குச் சற்று அதிக போஷணை கொடுத்து மற்றவனை மந்த காலத்தில் ஆழ்த்திவைத்துப் பலன் அனுபவிக்கச் செய்த சூழ்ச்சிதான் இன்று ‘இந்தியர் ஏககுடும்பம்’ என்பது.

இந்தியாவில் உள்ள நாம் எல்லோரும் ஒரு குடும்ப மக்கள் அல்லர். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையுமல்லர். நம் எல்லோருக்குமாக ஒரு தகப்பனும் இல்லை; நாம் வேறு வேறு குடும்பத்தவர்கள். நம் தாய் தந்தையர்கள் வேறு வேறு. சிறையில் இருப்பவர்களுக்கு ‘சூப்பிரண்டெண்டும்’, ‘ஜெயிலரும்’ குடும்பத் தலைவனாக முடியுமா? ‘கான்விக்ட்

வார்டர்கள்' நமது காப்பாளர்களாகி விடுவார்களா? அதுபோல், வெள்ளையருக்காவது அவர்களின் சம்பத்திய வர்க்கத்தாரான ஆரியர்களுக்காவது—நமக்குத் தலைவர்களோ, காவலர்களோ ஆக உரிமையில்லை. இதை நான் ஆங்கிலேயர் எழுதிய சரித்திரப்படியும் ஆரியர்கள் எழுதி வைத்திருக்கும் சரித்திரப்படியுமே சொல்லுகிறேன்.

திராவிடர்கள், தங்களுடைய—தாங்கள் பாரம்பரியமாய்ச் சரித்திர காலம் தொட்டு ஆண்டு அனுபவித்து வந்த—திராவிடநாட்டைக் கைப்பற்றிக்கொண்ட வெள்ளையரை, தங்களுக்குப் பிரித்துக் கொடுத்து, தங்கள் தேவைகளுக்கு, பழக்கவழக்கமான உணர்ச்சிக்கு ஏற்றபடி சட்ட திட்டம் செய்துகொண்டு, முற்போக்கடைய சுதந்திரமும் சவுகரியமும் செய்து கொடுக்கும்படி (வெள்ளைக்காரர்களை)க் கேட்கின்றார்கள். இந் நிலையில் குறுக்கே நிற்க ஆரியர்களுக்கு என்ன உரிமை? இவர்கள் இதைப்பற்றிப் பேசவோ கலந்துகொள்ளவோ என்ன பாத்தியம் என்றுதான் நான் கேட்கின்றேன்.

ஆரியனுக்கு வெள்ளையனிடம் உள்ள உரிமையெல்லாம் 'நான் உள்ளாளாயிருந்து சூழ்ச்சி செய்தும், சதி செய்தும், முஸ்லிமிடமிருந்தும், திராவிடனிடமிருந்தும் உன் கைக்கு நாடு வரும்படி செய்தேனே; மறுபடியும் அவர்கள் ஆதிக்கத்திற்கு விடுகிறாயா? பிறகு என் கதி என்ன?' என்று கேட்பதுபோல் தடுப்பதல்லாமல் வேறு என்ன பாத்தியம் என்று கேட்கின்றேன். வெள்ளைக்காரன் இந்தியாவின் பல நாடுகளையும் கைப்பற்றும்போது ஆரியனுக்கு எங்காவது நாடு இருந்ததா என்று கேட்கின்றேன்.

ஆதலால், நாம் வெள்ளையனிடம் நமது நாட்டுச் சுதந்திரத்திற்கும், நமது நாட்டு முற்போக்குக்கும், நமது நாட்டு மக்கள் சுயமரியாதைக்கும் பிரிவினை கேட்டால் இந்த ஆரியன் யார் இதைத் தடுக்க என்கிறேன்.

நாம் கேட்கும் பிரிவினை இன்று நேற்றுக் கிளம்பியதில்லை. குறிப்பாக திராவிடர்—ஆரியர் விஷயமும் இவர்களுக்குள் ஒற்றுமையில்லாத தன்மையும், போராட்டமும் வேத காலம் முதல் இருந்து வருகின்றது. இந்தியாவில் திராவிடம்—ஆரியவர்த்தம் என்ற பிரிவினை வெகு தெளிவாக இன்றும் இருக்கிறது; ஆதாரமும் இருக்கிறது. அப்படியிருக்க, திராவிட நாட்டைப் 'பாரதநாடு' என்று சொல்லவோ, 'பரதகண்டம்' என்று சொல்லவோ, 'பாரததேசம்' என்று சொல்லவோ என்ன உரிமை இந்த ஆரியர்களுக்கு இருக்கிறது என்று கேட்கிறேன். பரதன் திராவிட நாட்டை எப்போது ஆண்டான்? பரதன் என்பவனுடைய ஆட்சி திராவிடத்தில் எப்போதும் இருந்ததில்லை. திராவிட நாட்டைத் திராவிடர்களே ஆண்டிருக்கிறார்கள். முஸ்லிம் ஆட்சிகூட மிகச் சிறிது காலம், சில இடங்களில் இருந்தது என்பதல்லாமல், அதுவும் ஆரியர் குடியேறிய நாடுகளைப் பூரணமாக ஆயிரக் கணக்கான வருடங்களாக ஆண்டதுபோல் ஆண்டதாகச் சொல்லமுடியாது. திராவிட மன்னர்கள் ஆட்சி வேண்டுமானால் ஆரிய நாடுகளிலும் இருந்திருக்கிறது. ஆனால், ஆரியர் சூழ்ச்சியின் பயனாய் இந்த நாட்டை ஆண்ட பழம்பெரும் மன்னர்களின் சமுதாயங்களான திராவிடர்கள் ஆரியர்களுக்கு அடிமை சாதியாகவும், கீழ்த்தர சாதியாகவும் ஆக்கப் பட்டு, திராவிட நாட்டிற்கும் ஆரியர்கள் பெயர்கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

இன்று திராவிடனுக்கு இந்தத் திராவிட நாட்டில் என்ன யோக்கியதை இருக்கிறது? ஆரியர்களையும் திராவிடர்களையும், ஒப்பிட்டுப்பாருங்கள்! ஆரியன் தெருக் கூட்டுகிறானா? மூட்டை தூக்குகிறானா? வண்டி ஓட்டுகிறானா? 'பியூனாய்' இருக்கிறானா? உழுகிறானா? அறுப்பு அறுக்கிறானா? சரீரத்தில் இருந்து ஒரு துளி வேர்வையோ, நகத்தில் கடுகத்தனை அழுக்கோ படியும்படி ஏதாவது உடலுழைப்புச் செய்கிறானா? ஆனால், அவன் வாழ்வையும் திராவிடன் வாழ்வையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஆகவே நானோ, ஜனாப் ஜின்னாவோ இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்பதற்காகக் கவலைப்படாதீர்கள். கண்டிப்பாகப் பிரிக்கப்படத்தான் போகிறது. சிலோன்,

பர்மாக்காரர்கள் பிரிந்ததால்—தங்கள் நாட்டைச் சுரண்டுகிற அன்னிய நாட்டு மக்களை 'வெளியில் போ' என்று சட்டம் செய்யவும், சிலோனியன்தான் அதிகாரியாக இருக்கலாம் என்றும் சட்டம் செய்யவும், இந்தியக் கூலிகளைக்கூட விரட்டவும் முடிந்தது. ஆனால், நாம் பிணைந்து இருப்பதால் திராவிட நாட்டில் ஆதிக்கம் அதிகாரம் பூராவும் ஆரியனிடமே இருக்கிறது. வெளி மாகாணத்தில் இருந்து வந்து கொள்ளையடிப்பவனையும், சுரண்டுகிறவனையும், சகல தொழிலையும் கைவசப்படுத்திக்கொண்டு நம் நாட்டு மக்களை வேறு நாட்டிற்குக் கூலியாகத் துரத்துகிறவனையும்கூட—துரத்துவதற்கு, நமக்கு இன்று அதிகாரம் இல்லை.

இந்த நாட்டில் முல்தானி, மார்வாடி, குஜராத்தி எதற்காக வந்து கொள்ளையடித்துப் போவது? பார்ப்பனர்களாவது தொலைந்துபோகட்டும் என்றாலும், இந்த முல்தானிக் கூட்டங்கள் சுரண்டுவதற்கு ஏன் இடம் கொடுக்கவேண்டும்? இவர்களைப் பார்ப்பனர்கள்தானே அழைத்துவந்து சுரண்டிக்கொண்டு போவதற்கு இடம் கொடுத்து, அவர்களிடம் கூலி வாங்கி நம்மை ஒழிக்கும் இயக்கத்தை நடத்துகிறார்கள்!

'இந்தியை இந்த நாட்டில் பரப்ப—முல்தானி, குஜராத்தி, மார்வாடிகள் இலட்சக் கணக்காகக் கொடுக்கிறார்கள். சென்னை இந்தி மண்டலத்திற்கு வருடம் 20, 30 ஆயிரம் ரூபாய் பார்ப்பனர்கள் செலவு செய்கிறார்கள்; கட்டடங்கள் இலட்சக்கணக்கில் செலவு செய்து கட்டப்படுகின்றன. அங்குள்ள பார்ப்பனர்கள் வாழ்க்கை அரவிந்த ஆசிரமம் போலவும், இராமகிருஷ்ண மடம் போலவும், ரமண ரிஷிகள் ஆசிரமம் போலவும் நடைபெறுகின்றது.

திராவிடன் பம்பாய்க்குக் கூலியாகப் போய்—தோல் கடையில் மயிர் கழிக்கும் வேலையில், நாற்றத்தில் கொசுக்களுக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டு—ஓட்டைக் குடிசையில் தீண்டாத சாதியாய் வாழ்கிறான். பம்பாயிலிருந்து இங்கு வந்த பட்டேல், தேசாய், பிர்லா, பஜாஜ் கூட்டக்காரர்கள் திராவிடர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு, தங்கசாலைத் தெருவில் சலவைக்கல் கட்டடத்தில், 3, 4 மோட்டார்களுடன் 2, 3 பம்பாய்த் தாசிகளுடனும் வாழ்கிறார்கள்.

[சேலத்தில், 19-4-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-4-1940]

தோழர்களே!

திராவிடநாடு தனியாகப் பிரிந்தால்தான் நாம் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேறமுடியும். பர்மா தனியாய்ப் பிரிந்துவிட்டதனால் அதற்கு நன்மையுண்டாகவில்லையா? சிலோன் தனியாகப்பிரிந்து இருப்பதனால் அதற்கு நன்மையுண்டாகவில்லையா? அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அன்னியர் சுரண்டலையும் ஆரிய ஆதிக்கத்தையும் போக்கிக் கொள்வதற்காக, அங்கேயிருக்கும் நமது மக்களை விரட்டுகிறார்கள். நமது கையில் ஆட்சியிருந்தால் நாமும் இங்கிருக்கும் அன்னியச் சுரண்டலையும் ஆரிய ஆதிக்கத்தையும் விரட்டமுடியும். நமது மக்கள் வேலை தேடி அன்னிய நாடு சென்று மானமிழந்து தவிப்பதைத் தடுத்து, அவர்களுக்கு இங்கேயே வேலை கொடுக்க முடியும்.

இந்த சேலம் நகரத்தை எடுத்துக்கொள்வோம். இங்குள்ள முக்கால்வாசி மக்கள் நெசவுத் தொழிலாளிகள். இவர்களெல்லாம் இன்று போதிய வேலையில்லாமலும், போதுமான கூலியில்லாமலும் திண்டாடுகிறார்கள். தங்கள் வாழ்க்கையை மானமுடன் நடத்த முடியாமல் பலர்—பெண்டு பிள்ளைகளுடன் சிலர் பிச்சைக்காரர்களாகவும் வெளியில் கிளம்பியிருக்கிறார்கள். இந்த நிலையைப்போக்க காங்கிரஸ்காரர்கள் அவர்களது 27 மாத ஆட்சியில் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டார்களா?

ஒரு காலத்தில் இங்கிலாந்தில் அன்னிய நாட்டுத்துணி கட்டினால் 30 பவுன் அபராதம் விதிக்கச் சட்டமியற்றினார்களாம். அவர்களுடைய நெசவுத்தொழிலை விருத்தி செய்ய இச்சட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர். இன்று நம்மில் 100-க்கு 60, 70 பேர் ஆமதாபாத் வெளி மாகாணத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம். பெண்களும் ஆமதாபாத் சேலைகளைக்கட்டுகிறார்கள். நெசவாளிகளிடம் காங்கிரசாருக்கு—ஆரியருக்குக் கவலையிருக்குமானால், ஆமதாபாத் துணியை இந்நாட்டுக்கு வராமல் தடுக்க முடியாதா? அதற்குப் பதிலாக இந்நாட்டு மக்கள் இந்நாட்டுத் துணி உடுத்தும்படி செய்ய முடியாதா? காரைக்கால், பாண்டிச்சேரியிலிருந்து இங்கு துணி வருவதனால் நூற்றுக்கு 40, 50, விகிதம் வரிவிதித்து விடுகிறார்கள். அதனால், அதிகமாக நம்மால் அத் துணிகளை வாங்கமுடியவில்லை. அதற்குப் பதிலாக நம்நாட்டுப் பட்டாடைகளை உபயோகிக்கிறோம். இதுபோலவே, ஆமதாபாத் முதலிய வெளிநாட்டு—அதாவது திராவிடநாடு அல்லாத நாட்டுத் துணிகளை நாம் தடுத்துவிட்டால் நமது கைத்தொழில் வளர்ச்சியடையும்; கைத்தறி நெசவாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்துபோய்விடும். இதை ஏன் அவர்கள் செய்யவில்லை? ஆரியர்கள் தங்கள் நன்மைக்கு எவ்வளவு காரியம் செய்து கொள்கிறார்கள்?

[சேலத்தில், 28-6-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 7-7-1940]

பெரியோர்களே! தோழர்களே!

நம் கட்சி நோக்கங்கள், திட்டங்கள் ஆகியவை நிறைவேற்றப்படுவதற்கு ஆகவும், நம் மக்கள் உண்மையான விடுதலையும் சுதந்திரமும் பெறுவதற்காகவும் நாம் செய்யவேண்டிய வேலைகளில் முக்கியமானது ஆரியப் பிணைப்பில் இருந்து—அதாவது 'இந்தியா', 'இந்தியர்' என்ற பிணைப்பிலிருந்து திராவிட நாட்டையும், திராவிட மக்களையும் பிரித்துக் கொள்ளவேண்டியது அவசியமான காரியமாகும்.

என்றாலும், மக்களுடைய ஒழுக்கத்திற்கும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கும் மாறுபாடு இல்லாவிட்டாலும், மதசம்பந்தமான உணர்ச்சியின் பலனாய் 'ஹா! பறையனைத் தொடுவதா?' என்பதுபோல—எப்படிச் சில காரியங்களில் திடீரென்று வெறுப்புக்கொண்டு விடுகிறார்களோ அது போலவே—இவ்விஷயத்தில் 'ஹா! பிரிப்பதா!' என்று மக்கள் ஒரு திகில் அடையும்படி எதிரிகள் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட பிரச்சாரங்களுக்கு ஆதரவெல்லாம், 'தாயை வெட்டுவதா?', 'பிள்ளையை அறுப்பதா?', 'பசுவைக் கொல்வதா?', 'கூரையைப் பிரிப்பதா?' என்பன போன்ற திடுக்கிடத் தகுந்த, பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொள்வதல்லாமல், பிரிப்பதால் என்ன நஷ்டமென்றோ—பிரிக்கப்பட்ட நாடுகள் என்ன கேடுகள் அடைந்திருக்கின்றனவென்றோ ஒரு சிறு ஆதாரத்தையும் எடுத்துக் காட்டினார்களிலர்.

நாம் திராவிடநாடு பிரிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படும் காரணங்களுக்கெல்லாம் ஒரு நாட்டு மக்களுக்கும் ஒரு சமுதாய மக்களுக்கும் முன்னேற்ற உணர்ச்சி ஏற்படவேண்டுமானால், அந்த மக்களுக்கு முதலில் தாங்கள் யார் என்ற உணர்ச்சி பிறந்து தங்களைப்பற்றித் தெளிவாய்த் தெரிந்துகொண்டு, அதன் பயனாக நாட்டுப் பற்றும் சமுதாயப்பற்றும் ஏற்பட்டாக வேண்டும். அது இல்லாத நாடோ, மக்களோ, முன்னேற்றமடைந்ததாகச் சரித்திரச் சான்றுகளே கிடையாது.

உலகில் மற்ற நாடுகளெல்லாம் ஓவ்வோர் அளவுக்காவது முன்னேற்றம் அடைந்து வரவும் நம்நாடும் மக்களும் மாத்திரம் எவ்வித முன்னேற்றமுமில்லாமல் தேங்கி இருப்பதற்கும் இதுவே காரணமாகும். மற்றும், வெளிநாட்டு மக்கள் ஏராளமாய் இந்நாட்டிற்கு வந்து நம்மை அடிமைப்படுத்தியும், நம் செல்வங்களைச் சுரண்டிக்கொண்டு

போகவும், நம் மக்கள் இங்கு பிழைப்பும், போதிய வரும்படியும் இல்லாமல் வெளிநாடு களுக்குப் போய்—கூலியாகவும் அடிமையாயும் இருந்து இழிவுபடவும் இதுவே காரண மாகும். இங்கு நம் நாட்டுமக்கள்—100-க்கு 97 பேர்களாக உள்ள பெருமித எண்ணிக்கை உள்ளவர்களாக இருந்தும், 100-க்கு 3 பேர்களாக உள்ளவர்களும் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறினவர்களுமான ஆரியர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்தும்—அரசியலில், பதவிகளில், உத்தியோகங்களில், சமுதாய உயர்வுகளில், அவர்கள் மெஜாரிட்டி களாகவும் மேன்மையானவர்களாகவும் இருப்பதற்கும், நாம் மைனாரிட்டிகளாகவும் கீழ்மை யாகவும் இருப்பதற்கும்; அரசாங்கத்தார் அரசியல் அபிப்பிராயங்களுக்கு இந்நாட்டுப் பழம் பெரும் மக்களாகிய நம்மை இலட்சியம் செய்யாமல் போவதற்கும், ஆரியர்களை இலட்சியம் செய்வதற்கும்; நம் நாட்டுப் பொது ஸ்தாபனங்கள் என்பவைகள் யாவற்றிலும், தொழில், பொருளாதாரம் யாவற்றிலும் ஆரியர்களே தலைமையும், ஆதிக்கமும் செலுத்துவதற்கும் நாம் அவர்களைப் பின்பற்றுவோராக இருப்பதற்கும் காரணம் இந்த நாட்டுப் பிணைப்பே யாகும்.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 25-8-1940]

தலைவரவர்களே! பெரியோர்களே!

உலக சமுதாயத்தைப் பொதுவாக எடுத்துக்கொண்டால், இவ் இந்திய நாட்டைப் போன்ற நாடு இருந்ததில்லை; இருக்கவுமில்லை. கையிலே வலுத்தவன் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைக்கவும், உண்ண ஒரு கூட்டமும், உழைக்க மற்றவர்களும் இருக்கும்படி யானதுமான சீர்கேடான நிலை ஏற்படத்தான், இப் பெரிய விஸ்தீரணமும், 'இந்தியா' என்கிற பெயரும் பயன்படுகின்றனவே ஒழிய, இந்தக் கண்டத்தின் பல்வேறு இனங்கள் ஒன்றுபடும்படியான அறிகுறிகள் எதுவும் தோன்றவேயில்லை. இவ்வாறு பல்வேறு இனங்கள், 400, 500 மொழிகள், 1000, 2000 வகுப்புகள், பலப் பல கொள்கைகள்—பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரு பெரும் நிலப்பரப்பை ஒரு நாடு (நேஷன்) என்று சொல்வதால் பயன் என்ன என்று யோசிக்க இந் நாட்டு 'மேதாவிகளுக்கு' அவகாசமில்லை. 4 கோடி, 2 கோடி, 50 இலட்சம், 20 இலட்சம் என்பன போன்ற எண்ணிக்கையுள்ள மக்களைக் கொண்ட தனி—சிறு நாடுகள், நமது ஒரு ஜில்லா 2 ஜில்லாக்கள் போன்றவைகள் சுதந்திர நாடுகளாக அய்ரோப்பாவில் இருக்கின்றன. அம்மாதிரி சிறு நாடுகள், சுதந்திர நாடுகளாக இருக்க முடிவது ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை முக்கியமாகக் கருதியதால்தான். அந்தப்படி இந்தியா கண்டத்தில் வாழ்ந்துவரும் தனி இனத்தவராகிய நாம் பிறருடைய சம்பந்தத்தை விட்டு, நமக்குரிய இலட்சியத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு முன்னேற்றமடைய முயற்சி செய்யவேண்டும்.

[விருதுநகரில், 11-6-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 17-6-1944]

திராவிடநாடு என்பதுபற்றிப் பலர் பலவிதமான குறை கூறுகிறார்கள். நம்மவர்கள் என்று சொல்லிக்கொண்டும் சிலர் குறைகூறுகிறார்கள். அதில் சிலர் அறியாமல் சொல்லலாம். சிலர் யோக்கியப் பொறுப்பில்லாமல் விஷமத் தனத்துக்காகவும் சொல்லு கிறார்கள். அவர்களைப்பற்றிக் கவலைப்படவேண்டியகாலம் தீர்ந்துவிட்டது; விளக்க வேண்டிய காலமும் தீர்ந்துவிட்டது; விளக்கவேலை செய்யவேண்டிய காலமும் தீர்ந்து விட்டது. ஏன், நாம் இதுவரை செய்துவந்த வேலையின் பயன் 'திராவிடநாடு கூடாது' என்று சொல்ல இன்று திராவிடநாட்டில் ஓர் ஆளும் இல்லாமல் செய்துவிட்டது. இதற்கு உதாரணம்,

'மெயில்' பேப்பரின் 22-ம் தேதி தலையங்கத்தைப் பாருங்கள்.

'திராவிடநாடு என்பது பூரண சுயேச்சை கேட்பதாகும். அதில் சிறிது குறைந் தாலும் ஒப்புக்கொள்ள முடியாத மாதிரி அந்தப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. பாகிஸ்தான்

விஷயத்தில் தோழர் ஜின்னா அவர்கள் சற்று இறங்ினாலும் இறங்கலாம். ஆனால், தோழர் இராமசாமி சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார்' என்றும்,

'ஆந்திராக்காரர்கள் இதை ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று யாராவது கேட்டால் அவர்களும் திராவிடர்களேயாதலால் அவர்களுக்கு ஆகவும்தான் நான் திராவிடநாடு கேட்கின்றேன் என்றும் பதில் சொல்லி அடக்கிவிடுகிறார்' என்றும்,

'எல்லை புரியவில்லை, விஷயம் புரியவில்லை என்று சொல்லுகிறவர்களுக்கும் தோழர் இராமசாமி சென்னை மாகாணத்தை—அதன் எல்லை வரைந்த கோட்டிற்கு உட்பட்ட பாகத்தைத் திராவிடநாடு என்றும், அதன் திட்டம் என்ன என்பதற்குச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தனது 'திராவிடநாட்டு ஆட்சியானது அதன் சம்பந்தமாக கவர்னர், கவர்னர்-ஜெனரல், மத்திய அரசாங்கத்தார் ஆகியவர்கள் சம்பந்தமில்லாமல் இங்கிலாந்தில் உள்ள அரசரின் பிரதிநிதிகள் கவனிப்பில் இருக்குமென்றும் சொல்லிவிட்டார்' என்றும்,

'இந்தியாவில் சென்னை மாகாணம் தவிர, மற்ற மாகாண மக்கள் வியாபாரம் முதலியவைகள் எப்படி இருக்கும் என்று கேட்பவர்களுக்கும் தெளிவாய், அதாவது ஒரு ஐரோப்பியன், ஜப்பானியன், அமெரிக்கன் திராவிடநாட்டிற்குள் வந்தால் எப்படி பாஸ்போர்ட் (அனுமதிச்சீட்டு) வாங்கிக்கொண்டு வரவேண்டுமோ அது போலவும், அந்நாட்டு சாமான்கள் திராவிடநாட்டுக்குள் வந்தால் எப்படி வரி போடுகிறோமோ அதுபோல் வரி போடப்படும் என்றும் சொல்லிவிட்டார்' என்பதாகவும் குறிப்பிட்டுவிட்டு கடைசியாக, 'இன்று திராவிட நாடு வியாபாரத்திலும், தொழில் முறையாலும், மதம் முதலியவற்றாலும் திராவிடநாடு அல்லாத நாடுகளால் சுரண்டப்பட்டுக் கேடடைந்திருப்பதற்குப் பரிகாரமாகவே இதைச் சொல்லுகிறார்' என்றும் எழுதியிருக்கிறது.

முடிவாக 'மெயில்' மற்ற மக்களுக்கும் ஒரு நல்ல புத்தி சொல்லி இருக்கிறது.

அதென்னவெனில்,

'நல்ல புத்திசாலித்தனமான முயற்சி இல்லாமல் இந்தியாவைப் பிரிக்கக்கூடாது; இந்தியா ஒற்றுமை கெடக்கூடாது என்கிறவர்கள் இந்தப் பல்லவியை மாத்திரம் பாடிக்கொண்டோ, திராவிட நாட்டுப் பிரச்சினையில் அதில்லை, இதில்லை இதற்கென்ன சமாதானம், அதற்கென்ன சமாதானம் என்று கேட்டுக்கொண்டோ, அதைப் பரிகாசம் செய்வதும், முட்டாள்தனமான பிரச்சினை என்று பேசிக்கொண்டிருப்பதுமான காரியங்களால் திராவிட நாடு பிரச்சினையை அடக்கிவிடலாம் என்று கருதினால் அவர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள்' என்றும்,

'நல்ல அஸ்திவாரத்தின் மீது திராவிட நாட்டுப் பிரச்சினை எழுப்பப்பட்டு விட்டதால், மக்களுக்குள் ஆழப் பதிந்துவிட்டதால், இனி அதை அசைக்கப் பார்ப்பதைவிட அதற்கு இணங்கிப் போவதே அதாவது, எதற்கு ஆக அது கேட்கப்படுகிறதோ அதைப் பரிகரிக்க முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்' என்றும் எழுதியிட்டது.

இதை நாம் ஏன் எடுத்துப்போட்டுக் காட்டுகிறோம் என்பதை மக்கள் கவனிக்க வேண்டும். பல எதிர்கூட்டப் பத்திரிக்கைகள் பரிகசிப்பதுபோல் 'மெயிலின் ஆசீர்வாதம்' கிடைத்துவிட்டது என்கின்ற பைத்தியக்காரப் பெருமைக்கோ, திருப்திக்கோ அல்ல; அல்லவே அல்ல. மற்றெதற்கு என்றால்,

1939ஆம் வருஷம் நவம்பர் மாதம் 20ஆம் தேதி இதே 'மெயில்' பத்திரிக்கை, பெரியார் சிறையில் இருந்து வெளிவந்ததும், தலையங்கத்தில் தூத்துக்குடியில் திராவிட நாட்டுப் பிரிவினைபற்றிப் பேசியதைப் பரிகாசமாக எழுதி இருந்ததோடு, ஜஸ்டிஸ் தலைமை ஸ்தானத்தையும் நையாண்டி செய்து இருந்தது. அதன் பிறகு இந்த 5 வருட காலத்தில் செய்துவந்த பிரச்சாரத்தால் மக்கள் அதன் தத்துவத்தையும் தேவையையும்

உணர்ந்து பாகிஸ்தான், சீக்கிஸ்தான், ஆதித் திராவிடஸ்தான், ஆரியஸ்தான் என்பதாக இன்னும் பல ஸ்தான்கள் கேட்கும்படியாகவும் காந்தியார், ஆச்சாரியார் முதல் பல அரசியல் வாதிகளும் அக் காலத்தில் அதன் காரண காரியங்களைப்பற்றி எதிர்த்து வாதாடிய வாதங்களையெல்லாம் விட்டுவிட்டு இன்று 'கேட்டால் கொடுக்க வேண்டியதுதான்' என்றும்; கேட்பது என்றால் ஆச்சாரியார், 'மெஜாரிட்டியாக (வெகுபேர்) கேட்டால்தான் கொடுக்கப்படும்' என்றும்; காந்தியார், 'வெகுபேர் என்பது தப்பு, மெஜாரிட்டி என்றால் ஆட்களின் எண்ணிக்கை அல்ல, புத்தியின் மதிப்புதான். ஆதலால் புத்திசாலித்தனமான ஒருவன் கேட்டாலும் போதும்' என்றும் சொல்லும்படியான நிலைமை வந்ததுடன், இந்த 'மெயில்' பத்திரிக்கையும் இவ்வளவு தூரம் ஒப்புக்கொள்ளவும் அதன் எதிரிகளுக்கு அறிவுறுத்தவும் வந்ததை மற்றவர்கள் அறியட்டும் என்பதற்காகவேயாகும்.

மற்றும், 'திராவிடநாடு கிடைத்தால், அதில் ஆரியர், முஸ்லிம், தீண்டப்படாதார் நிலைமை எப்படி இருக்கும்' என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் 22-ந்தேதி 'மெயில்' பத்திரிக்கையில் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, 'அவர்களது நிலை இன்றுள்ளது போல்தான் இருக்கும். அவர்களது குறைகள் போக்கப்படுவதற்கும் நலம் ஏற்படுவதற்கும் ஒற்றுமைக்கும் ஏற்ற சட்டங்கள் செய்யப்படும்' என்று சொன்னதை எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆகவே, திராவிடநாட்டுப் பிரிவினை ஒரு பாலைவனக் கூச்சல் என்றோ, பயன் அற்றதென்றோ, பரிகசிக்கத் தக்கதென்றோ கருதக் கூடிய நிலைமையைத் தாண்டிவிட்டது.

மற்றொரு விஷயமும் இதுசமயம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் மதுரையில் 20-ந் தேதி பேசியதாக 21-ம் தேதி 'விடுதலை' பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்னவென்றால்,

'இந்தியாவில் மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க காங்கிரஸ் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருப்பதால் திராவிடநாடு பிரிவினையை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் கேட்பது அவசியமில்லை' என்பதாகக் காணப்படுகிறது.

நாம் திராவிடநாடு கேட்கும் முறையையும், அதன் அரசியல் தன்மையையும் அவர் முதலிலேயே குறிப்பிட்டுவிட்டு இப்படிச் சொன்னதாக அப் பத்திரிக்கையில் தெரிவதால், தோழர் முத்தரங்க முதலியார் அவர்களும் அதாவது, சென்னைக் காங்கிரஸ்வாதிகளும் ஒப்புக்கொண்டதாகத்தான் அர்த்தமாகும்.

மற்றொரு விஷயம் என்னவெனில், அதுதான் 23-ந்தேதி 'தினசரி' பத்திரிக்கையின் 'எதற்காக திராவிடஸ்தான்?' என்னும் தலையங்கமாகும்.

அதில்,

'திராவிடஸ்தான் கேட்பதைக் கேலி செய்யக்கூடாது என்று 'மதராஸ்மெயில்' உபதேசம் செய்கிறது......நாயக்கர் குறிப்பிடும் (திராவிடஸ்தான் எல்லைப்) பிரதேசங்கள் தமிழ்நாடு, ஆந்திரா, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்திருக்கின்றன. அந்த நாட்டார் திராவிடஸ்தானை ஆதரிக்கிறார்களா?' என்று கேட்கிறது. அதற்குப் பதில் 'மெயிலி'லேயே இருக்கிறது. அதாவது, அந்த நாட்டாரும் திராவிடர்களே யாதலால் திராவிடர்களுக்காகக் கேட்கப்படும் காரியங்களுக்குத் திராவிடர்கள் எல்லோருமே சேர்ந்து கேட்கவேண்டும் என்பது ஏமாற்றுவதற்காகச் சொல்லப்படும் காரணமாகுமே தவிர, அதில் நியாயம் இருக்க முடியாதென்பதாகும். முஸ்லிம்களுக்காக 'பாகிஸ்தானில் உள்ள எல்லா முஸ்லிம்களும் சேர்ந்து கேட்கவில்லையே?' என்று சொன்ன காந்தியார், ஜின்னா வாயை அடைக்க ஏன் போனார்? 'எல்லோரும் சேர்ந்து கேட்டால்தான்

ஒப்புவோம்' என்று சொன்ன ஆச்சாரியார் தானாகவே, தனிமையாகவே ஜின்னா சாயபு வீட்டிற்கு ஏன் போனார்? ஒரு சமுதாயத்துக்கோ, ஒரு நாட்டுக்கோ நலனைத் தேட ஒரு மனிதன் முயற்சித்தால் அது எந்தச் சட்டப்படியும் தப்பாகிவிடாது. அந்த நாட்டை, அந்த இனத்தைச் சேர்ந்த எந்தத் தனி மனிதனுக்கும் உரிமையுண்டு.

அன்றியும், எல்லோரும் எப்படிக் கேட்கமுடியும்? முதலாவது, இந்தத் திராவிடர்கள் 100-க்கு 90 பேர் எழுத்து வாசனை அற்ற தற்குறிகள்; இரண்டாவது, 100-க்கு 90 பேர்கள் தங்கள் இனத்தின் பிறப்பு வளர்ப்பு அறியாதவர்களும், அல்லாததையும் இல்லாததையும் தங்களுடையதென்றும் கருதிக்கொண்டிருக்கிற பகுத்தறிவு இல்லாத மூடநம்பிக்கை மக்களும் ஆவார்கள். இந்த இலட்சணத்தில் இவர்களில் 100-க்கு 80 பேர் சுயநலத்திற்கு எதையும் விட்டுவிடும்படி பயிற்றுவிக்கப்பட்டவர்கள். இவர்கள் யாவரும் சேர்ந்து, அல்லது மெஜாரிட்டியார் சேர்ந்து ஒரு நல்ல நேரான காரியம் செய்வதென்றால், அமாவாசையன்று சந்திரகிரகணம் இருக்கவேண்டும் என்று கோருவது போலவேயாகும்.

இவ்வளவு தர்க்கம் ஏன்? எந்த ஆந்திர, கர்நாடக, மலையாள மக்களாவது இந்த 5 வருஷகாலத்தில் வெளியில் வந்து, 'எங்களுக்குத் திராவிடநாடு வேண்டாம்' என்று சொன்னார்களா?

அன்றியும், ஜஸ்டிஸ் கட்சி என்பது சென்னை மாகாணத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு நாட்டின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பதை 'தினசரி'யோ மற்றவர்களோ மறக்கிறார்களா? அப்படி இருக்க, இப்படிப் பேசுவது நியாயமா, அறிவுடைமையா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

அன்றியும், 'தினசரி' அதே தலையங்கத்தில் மற்றொரு இடத்தில் வடஇந்தியர் தென்னிந்தியாவில் ஏராளமாய் வந்து கூடி பொருள் சுரண்டிக்கொண்டு போவதை ஒப்புக்கொண்டு, 'அதற்குக் காரணம் தென் இந்தியரே ஒழிய வட இந்தியரல்ல' என்றும் 'தென் இந்தியர்கள் அறிவு பெற்றால் அவர்களாலும் முடியும்' என்பதாக எழுதியிருக்கிறது.

மேலும், தென்னிந்தியர்களுக்குப் பொருளாதார அறிவு இல்லை, கூடிவாழ்ந்து 'கூட்டுக் கம்பெனி நடத்தும் வழக்கமே தென்னிந்தியரிடம் இல்லை, நடத்தினாலும் சதி செய்துவிடுகிறார்கள்' என்று துணிந்து திராவிடநாட்டாரைப் பற்றி எழுதிவிட்டது. இப்படிப்பட்ட அறிவும் நல்ல வழக்கமும் இல்லாதவர்களிடமும், பணம் போட்ட ஒவ்வொருவரும் தம்மிஷ்டப்படி நடக்க வேண்டுமென்கின்றவர்களிடமும், 'சதிகாரர்கள்' இடமும், அதாவது, அறிவற்ற சுயநலக்காரரிடமிருந்து அன்னியரால் சுரண்டப்படும் பொருளாதார சுரண்டலை நிறுத்த மெஜாரிட்டி ஓட்டுப்பெற முடியுமா என்பதையும், எல்லோரும் சேர்ந்து கேட்கும்படி செய்ய முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி 'தினசரி' ஆசிரியரைக் கேட்கிறோம். தவிர, 'தினசரி'யானது 'நாம் அடுத்த வீட்டுக்காரனை அவநம்பிக்கைப் பட்டுவிட்டு, 6000 மைலுக்கு அப்பால் இருப்பவனை நம்பலாமா' என்கிறது. இது பொருளுள்ள வாதமாகாது.

இன்று நடக்கும் யுத்தத்திற்கு காந்தியாரையும் காங்கிரசையும் நம்பி இருந்தால் நம் கதி என்ன ஆகி இருக்கும்? ஜெயிலுக்குப் போய்விட்டு வந்ததைத் தவிர வேறு என்ன செய்ய முடிந்தது? 6000 மைலுக்கு அப்பால் உள்ளவனை நம்பியதால், அவன் கேட்டதை நம்மாலான அளவு கொடுத்ததால் நாம் ஜப்பான் பிரஜை ஆகாமலும், நம் வீட்டின்மீது வெடிகுண்டு விழாமலும், நம் செல்வம், பெண்டு பிள்ளை ஓர் அளவுக்காவது கேடுறாமலும், கவலையற்று இருக்க முடிந்தது. அதை அவன் யாருக்காகச் செய்திருந்தாலும் சரி.

நாமே நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வகை ஏற்பட்டுவிட்டால் 6000 மைல்காரனும் வேண்டாம், அடுத்த வீட்டுக்காரனும் வேண்டாம். அண்ணன், தம்பி, அப்பனும் வேண்டாம் என்கின்ற நிலை எய்துவது இயற்கையேயாம். ஆதலால், இதில் 6000 மைல்காரனைவிட

அடுத்த எல்லையில் இருப்பவன் வேறுபட்டவன் என்பதோடு, உரிமை இல்லாத கொள்ளைக் காரனாக இருக்கிறான் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிட நாட்டைப் பிரித்தால், 'திராவிடநாடு நிரந்தர அடிமையாய் இருக்க நேரிடும்' என்கிறது 'தினசரி'.

அப்படியே (பிரிந்தால் இருக்க நேராது)யிருந்தாலும், 'நாம் ஒருவனுக்கு அடிமை யாய் இருக்கிறதே போதும். இருவருக்கு அடிமையாய் இருக்கமாட்டோம்' என்று தான் சொல்லுகிறோம்.

வெள்ளையனுக்கு அடிமையானதால் அதிக நஷ்டம் இருந்தாலும் சிறிது இலாப மாவது பெற்று நாம் மனிதன் என்பதை உணர்ந்திருக்கிறோம். வடநாட்டானுக்குப் பூராவுமே அடிமையாய் இருந்தால் நாம் 'சூத்திரன்' 'ராட்சசன்' 'சண்டாளன்' 'அசுரன்' 'குண்டகன்' 'கோளகன்' 'பிரதிலோமன்' 'நரகன்'... ஆகத்தான் இருக்க நேரும். இப்பொழுதும் அப்படியே இருக்கிறோம் என்றாலும் அது ஓரளவுக்காவது ஆட்டம் கொடுத்துவிட்டது. திராவிடநாடு ஏற்பட்டவுடன், ஆட்டம் கொடுத்தவைகளைப் பிடுங்கி எறிந்துவிடுவோம். பிறகு 6000 மைலை 60000 மைல் தூரம் ஆக்கி அவனையும் திராவிடநாட்டுக்குப் பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு வரும்படி செய்வோம் என்பதை உலகத்தில் உள்ள மற்ற சிறு சிறு நாட்டின் சரித்திரத்தையும், நிலையையும் கண்டு தெரிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—25-11-1944]

தோழர்களே!

திராவிடநாடு என்பது ஒரு பொருளாதார சமுதாய சீர்திருத்தப் பிரச்சினையே ஒழிய அது ஒரு அரசியல் பிரச்சினை அல்ல. தீண்டாமை ஒழியவேண்டும் என்பது போலவே சுரண்டல் ஒழியவேண்டும் என்கிறோம். அன்னியனுக்கு நம்நாடு சந்தையாய் இருக்கப்படக்கூடாது என்பது போலவே, அன்னிய மாகாணத்தானுக்கு நம்நாடு சந்தை யாய் இருக்கக்கூடாது என்கிறோம்.

வாழ்க்கையில் பகுத்தறிவு வாதியாய், சீர்திருத்த வாதியாய் இருப்பதுபோலவே மதத்தில் பகுத்தறிவு வாதியாய் சீர்திருத்த வாதியாய் இருக்கவேண்டுமென்கின்றோம். இவைகளில் அரசியல் என்ன இருக்கின்றது? நம் அரசியல் நம் நாட்டைப் பொறுத்ததாக மட்டும்—நம்நாட்டு மக்களைப் பொறுத்ததாகமட்டும் இருக்கவேண்டும் என்கின்றோம்.

நம் திராவிட நாட்டுப் பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இருப்பதா போவதா என்கின்ற பிரச்சினையோ, பிரிட்டனுக்கு எவ்வளவு உரிமை, நமக்கு எப்படிப்பட்ட உரிமை என்கின்ற பேச்சோகூடக் கிடையாது. அவை முதலியவை தனிப்பட்ட வேறு விஷயமாகும். அது திராவிடநாடு பெற்றதும் கிளம்பும். அன்னியர் ஆதிக்கமும் அன்னியர் தயவு, உதவியும்கூட தேவை இல்லாமலும், தனித்து இயங்க நாம் வேறுமுயற்சி செய்வோம். அதை வேண்டுமானால் அரசியல் என்று சொல்லிக்கொள்ளட்டும். அதுவும் பிரிட்டிஷ் ஆதிக்கம் மாத்திரம் கூடாது என்பதோடு, நம் அரசியல் தீர்ந்துவிடாது.

பிரிட்டன், அமெரிக்கன், ஜெர்மானியன், ஜப்பானியன், ஆரியாவர்த்தம், காந்தி-நேரு கம்பெனி ஆதிக்கம் முதலிய ஒன்றுமே இல்லாத நம் (திராவிடர்) ஆதிக்கமே இருக்க வேண்டும் என்பது நம் அரசியலாகும். நாம் கேட்கும் திராவிடநாடு நம்மை இப்படிப்பட்ட சுதந்திரத்துக்கு, முழு முழு சுயேச்சைக்குக் கொண்டுபோய்விடும். ஆதலால், திராவிடநாடு பிரிவினை, இன்று அரசியலாகாது. திராவிடநாடு பிரிவினை என்று நாம் என்ன சொல்லு கிறோம் என்றால்,

1. சென்னை மாகாணம்தான் இன்று திராவிடநாட்டு விஸ்தீரண அளவு.

2. மற்ற மாகாணத்தான் திராவிட நாட்டிற்குள் காலடி வைப்பதானால் அனுமதிச் சீட்டு—'பாஸ்போர்ட்' வாங்கிக்கொண்டு வரவேண்டும்.

3. மற்ற மாகாண சரக்கு சுங்கம் கொடுத்துவிட்டு, அதுவும் நாம் அனுமதித்தால் தான் திராவிட நாட்டிற்குள் வரவேண்டும்.

4. விஸ்தீரணம் கூடுவதும் குறைவதும் நம்நாட்டின் சவுகரியத்தையும் இஷ்டத்தையும் பொறுத்தது.

5. வெளிநாட்டார் இங்கு வர்த்தகம், கைத்தொழில் செய்வதும் நம்நாட்டு சவுகரியத்தையும், தேவையையும் பொறுத்ததாகும்.

6. நாடு முழு சுதந்திரமடையும் வரை பாதுகாப்பு இன்றுள்ளது போலவே இருக்கும்.

முஸ்லிம்கள், ஆதித் திராவிடர்கள், கிறிஸ்தவர்கள், பவுத்தர்கள் ஆகியவர்கள் அவர்களும் திராவிடர்களே. ஆனதால், அவரவர்கள் சமயம், ஆத்மார்த்தம் என்பவற்றின் உணர்ச்சி இன்றுள்ளது போலவே அவரவர்கள் இஷ்டப்படி இருக்கும்.

ஆரியர்கள் நிலையும் அதுபோலவே—மற்றவர்கட்கு நட்டமும், கேடும், இழிவும் இருப்பதற்கு இல்லாத நிலையில்—சம உரிமையோடிருக்கும்.

[சென்னையில் 19-11-1944 முதல் 22-11-1944 முடிய சொற்பொழிவு—'குடிஅரசு' 2-12-1944]

தோழர்களே!

நம் சமுதாயத்திலும், சமயத்திலும், நாட்டு உரிமையிலும்—நாம் 'இந்தியர்', 'இந்துக்கள்', 'பாரத மக்கள்' என்று சொல்லிக்கொள்வது தவறு என்றும், நாம் நம்மை 'திராவிடர்', 'பகுத்தறிவுவாதிகள்', 'திராவிட நாட்டவர்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்றும் திருவாரூர் மாநாட்டில் 1940 ஆம் வருடத்திலேயே தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏனெனில், இந்த எண்ணம் நமக்கு இல்லாத காரணத்தாலேயே நாம் குறைகளுக்கும், இழிவுகளுக்கும், முற்போக்குத் தடைகளுக்கும் ஆளாகி இன்றைய ஈனநிலையில் இருக்கிறோம்.

நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்வோமானால் இந்து சமயத்தின் வருணாசிரம தர்ம முறைப்படி—அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அவர்ணர் என்கின்ற 5 பிரிவுகளில் நாம் 4-வது, 5-வது பிரிவுக்கு ஆளாகி—மிகுதியும் தாழ்மையும், இழிவும் இருக்கிற ஈனமக்களாக ஆகிவிடுகிறோம்.

இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்துவரும் நடவடிக்கைக் கிரமப்படியும் நம்மைச் செய்துவிடுகின்றன என்பதோடு—இதை நாமே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொண்டவர்களாகவும், சகித்துக்கொண்டு இருப்பவர்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

[திருச்சியில், சொற்பொழிவு—'குடிஅரசு' 29-9-1945]

கழக இலட்சியத்தை—நீதியும் சமாதானமுமான முறையில் இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதாக, கட்சியின் இலட்சியம் இருந்து வந்தது. பெரியார் நீதிக்கட்சியின் தலைவராக வந்ததும் முதல் மாநாட்டிலேயே (1938-ல்) இந்தியா பூரண சுயேச்சை அடையப் பாடுபடவேண்டியது

என்பதாகத் திருத்தப்பட்டது. இப்போது திருச்சி மாநாட்டில் (1945) இந்தியா என்கிற வார்த்தையே எடுக்கப்பட்டு திராவிடநாடு அரசியல், சமுதாயம், பொருளாதாரம், தொழில் துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூரண சுதந்திரமும் ஆதிக்கமும் பெறவேண்டும் என்பதாகவும்,

திராவிடநாடும், நாட்டுமக்களும் திராவிட நாட்டவர்கள் அல்லாத அன்னியரின் எல்லா விதமான சுரண்டல்களிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, காப்பாற்றப்படவேண்டும் என்றும்,

திராவிடநாட்டு மக்களிடத்தில் சமயம், சமயாசாரம், பழக்க வழக்கம் என்பவைகளின் பேரால் இருந்துவரும் பேத உணர்ச்சி, மூடநம்பிக்கை ஆகிய இவைகள் மறையச் செய்து—மக்களைத் தாராள நோக்கமும் நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற ஒன்றுபட்ட சமுதாயமாகச் செய்யவேண்டும் என்றும்,

இவைகள் வெற்றிபெறுகிற வரை சாதி, சமயம், வகுப்பு, பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் முழு நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டு மேற்கண்ட முயற்சிகளுக்கு நம்மோடு களங்கமற்று ஒத்துழைக்கவேண்டிய அவசியத்திற்காக, அவர்களுக்கு எண்ணிக்கை, அவசியம் ஆகியவைகளுக்குத் தக்கபடி முக்கியமான துறைகளிலெல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்றும் திருத்தப்பட்டிருக்கிறது.

['குடி அரசு'-தலையங்கம்—6-10-1945]

தோழர்களே!

இன்று, நம் நாட்டில் சகல துறைகளிலும் அன்னிய ஆதிக்கமே உள்ளது. நீங்கள் உங்கள் 'மில்' காவலாளி அன்னியன்; அவன் கூடாது என்கின்றீர்கள். ஆனால், மற்ற விஷயத்தில் பாருங்கள்! இந்த நாட்டுத் தலைவர்கள் அன்னியர்கள்; இந்நாட்டு அதிகாரிகள் பெரிதும் அன்னியர்கள்; இந்நாட்டுப் பிரதம மந்திரி அன்னியர்; மற்றும் எவ்வளவோ ஜீவநாடியான முக்கியஸ்தர்கள் அன்னியர்கள்.

இந்தப்படி, அன்னியர் என்பவர்கள் யாரென்றால்—நம் இனத்தவரல்லாதவர், நம் மொழியினரல்லாதவர், நம் வகுப்பினரல்லாதவர், நம்மைச் சமமாகக் கருதுபவரல்லாதவர், நம்மைச் சுரண்டாதவரல்லாதவர், நம்மை இழிமக்களாய்க் கருதாதவரல்லாதவர்களும், நம்மை இந்நாட்டுக் கல்வி, ஆட்சி ஆகியவைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்பவர்களும், நம் நாட்டுப் பழக்க வழக்கம், நாகரிகம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டவர்களும், நம் திராவிட நாட்டு இன்றைய எல்லைக்கு வெளிப்பட்டவர்களும் அன்னியர்களேயாவார்கள் என்கின்றேன். இந்த உணர்ச்சி நம் மக்களுக்கு வருவதற்காகக் குறைந்த அளவு, அன்னியன் காவல்காரனாக இருக்கக்கூடாது என்கின்ற உணர்வு உங்களுக்கு வந்தது போற்றக்கூடியதேயாகும்.

நம் நாட்டாட்சியில் இன்று பிரதம மந்திரி அன்னியர். அதாவது, அவர் நம் இனத்தவரல்லர்; நம் வகுப்பினரல்லர்; நம்மைச் சரிசமமாய்ச் சமுதாயத்தில் கருதுபவரல்லர்; நம் மக்களைவிட எந்தவிதத்திலும் புத்தியில், திறமையில், நேர்மையில் மேம்பட்டவருமல்லர். அப்படிப்பட்ட ஒருவர் இன்று ஆட்சிமன்றத்தில் உங்களுக்குப் பிரதமராய் இருக்கக் காரணம் என்ன? திராவிடரின் மான உணர்ச்சியற்றதனம் என்பதல்லாமல், வேறு என்ன சொல்லமுடியும்?,

நம் அரசியல் தலைவர்கள் அன்னியர்கள். நம் பண்டிதர்களும், மகாத்மாக்களும், 'மவுலானா'க்களும், 'சர்தார்'களும்—ஏன் நம் நாட்டவராய், நம்மவராய் இருக்கக்கூடாது? காவல்காரர்கள்கூட நம்மவராய் இருக்கவேண்டும் என்று கருதிய உங்களுக்கோ, உங்கள் ஸ்தாபனங்களுக்கோ, உங்கள் தலைவர்களுக்கோ இந்தக் கவலை எப்போதாவது

தோன்றியதுண்டா? உங்கள் நாட்டவரில் ஒருவரை மகாத்மாவாகச் செய்துகொள்ள, சொல்லிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? உங்கள் இனத்தவர் ஒருவரை, உங்கள் வகுப்பினர் ஒருவரை இராஷ்டிரபதியாக ஆக்கிக்கொள்ள உங்களுக்கு ஆளில்லையா? இருந்தும் உங்களுக்கு அது விஷயத்தில் கவலையும் மானமுமில்லையே, ஏன்?

தோழர்களே! இந்த நாடும், இந்த இனமும், சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதைத் தன்மையும் கொண்டதானால், இங்கு—'நேரு பார்க்', 'காந்தி சவுக்', 'திலகர் கட்டடம்' இருக்கலாமா? இதற்குப் பெயர்தானா சுயேச்சை யென்பது? இதற்குப் பெயர்தானா சுயமரியாதையுள்ள நாடு என்பது? இவைகளைப் பார்த்து உங்கள் மனம் பதறவில்லையே! வயிறு எரியவில்லையே!

'தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் அட்டூழியம்' என்கின்ற உங்களுக்கு, திராவிட நாட்டில் ஆரியன் அட்டகாசம், திராவிட நாட்டில் திராவிடர்களை ஆரியன் சித்திரவதை செய்கிறான், திராவிட நாட்டில் திராவிடரை ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான்; தாசி மகன், வேசிமகன், அடிமை என்கிறான்—என்று எந்தத் திராவிடனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு உள்ளம் துடிக்கிறது? இரத்தம் துடிக்கிறது? திராவிடர்களுக்கு ஆரியனா குரு சந்நிதானம்? திராவிடனுக்கு ஆரியனா எஜமான், அதிகாரி, ஜட்ஜ், கலெக்டர், மாஜிஸ்ட்ரேட், குலகுரு: நாம் சிறிதும் மான உணர்ச்சியற்ற சமுதாயம், நம் நாடு ஒரு காட்டுமிராண்டி அடிமை நாடு என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தென்னாப்பிரிக்காவிலே உள்ள வெள்ளையன்—திராவிடர்களை இந்திய ஆரியன் நடத்துவதில், கொடுமைப் படுத்துவதில், இழிவு செய்வதில் நூறில் ஒரு பங்கு செய்கிறானா? தோழர்களே, தென்னாப்பிரிக்க வெள்ளையர்களைக் குறை கூறுபவர்கள், அவர்கள்மீது மக்களுக்குத் துவேஷத்தை உண்டுபண்ணுகிறவர்கள்—இதே ஆரியர்கள்தாம். ஆனால், அதைவிடக் கொடுமையாகத் திராவிடர்களை நடத்துகிறவர்கள் இந்த ஆரியர்கள்தாம். இதை உணராமல் ஆரியனுக்கு வால்பிடித்து அனுமாராய் அவர் பின் திரிபவர்கள் திராவிடர்கள். இதுதானே, இன்றைய நம் நிலைமை?

இன்று இந்தத் தமிழ் நாட்டில் ஆரிய அட்டூழியம் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆரிய ஆதிக்க மந்திரி சபை வந்தநாள் தொட்டு நம்மவர்களுக்குக் கண்டகண்ட பக்கமெல்லாம் அடி, உதை, குத்து, வெட்டு, கொடுமை, கொள்ளை, வழிப்பறி நடந்த வண்ணம் இருக்கின்றன. இதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்? இந்தமாதிரி ஆரியர்களுக்கோ, ஆரியப் பெண்களுக்கோ, ஆரியக் கொட்டகைகள், கட்டடங்கள் ஆகியவைகளுக்கோ நடந்திருந்தால்—அவர்கள் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பார்கள்? எவ்வளவு சீக்கிரம் அடக்கியிருப்பார்கள்? இன்று நாம் செல்லும் பக்கங்களில் எல்லாம்—நம் கூட்டங்கள் நடக்கும் பக்கங்களிலெல்லாம் நடக்கும் அட்டூழியங்களைப் பாருங்கள். திராவிட வாலிபர்களுக்கு, மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்குச் சிறிதாவது மான உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்கிறதா என்று கேட்கிறேன். மே மாதம் 12ஆம் தேதி மதுரை காலித்தனம் ஒருபுறமிருக்க—அதற்கப்புறம் பல நடந்திருக்க, சென்ற மாதம் 23ஆம் தேதி சேலம் காங்கிரஸ்காரர்கள் செய்த அட்டூழியத்தால் ஒரு திராவிடனுக்குக் கால் வெட்டப்பட்டுவிட்டது; ஒரு திராவிடனுக்குக் கண் அடிபட்டு நசுங்கி ஒழுகிப் போய் விட்டது; 30, 40 திராவிடர்களுக்கு அடி, உதை, குத்து என்பதுடன் 10, 12 பேர்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். இதே மாதிரியாக நீடாமங்கலத்திலும் காலித்தனம் நடந்திருக்கறது. இதன் காரணமென்ன? மற்றும் பல இடங்களில் கண், மூக்கு போய்—பெண்களுடன் பலர் அடிபட்டு, ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இதுவரை சுமார் 10, 15 திராவிடர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? ஆரிய மந்திரி அரியாசனம் ஏறியதால்—திராவிட மக்கள் அந்த மந்திரிகளின் கால் கழுவித் தீர்த்தம் பருகுவதால் அல்லாமல், வேறு என்ன காரணம்? நம் நாட்டில் நம்மவர்களுக்கு, நம் மக்கள் நலத்

திற்குப் பாடுபடும் தொண்டர்களுக்கு இதுதான் கதியா என்று கேட்கின்றேன். இந்த மந்திரிகள் பதவிக்கு வருமுன் இந்த அட்டூழியம், அயோக்கியத்தனம், காலடித்தனம் இப்படி நடந்ததா என்று கேட்கின்றேன்.

ஆரியர் பதவிக்கு வந்தார்கள். ஆங்காங்குள்ள ஆரியப் புரோகிதர்கள் 'மாமா'க்கள், அர்ச்சகர்கள், அதிகாரிகள் முதல்—ஆணவம் பிடித்துத் தலைகொழுத்து ஆடுகிறார்கள்; மக்களைத் தூண்டிவிட்டு, கள் ஊற்றி, நம்மீது காலித்தனத்துக்கு ஏவுகிறார்கள். அதிகாரிகள் ஆதரவு இருப்பதாலும் எப்படிப்பட்ட அக்கிரமம், அட்டூழியம், கொலை, கொள்ளை, நாசவேலை, சித்திரவதை செய்தாலும் கேட்கமாட்டார்கள் என்றும்; கேட்கப் பட்டாலும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும்; நடவடிக்கை எடுத்தாலும் மந்திரிகள் சிபாரிசால் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்றும்; தண்டிக்கப்பட்டாலும் மந்திரிகளால் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும்; விடுதலை மாத்திரமல்லாமல் வாத்தியம், மாலை ஊர்வலத்துடன் வரவேற்கப்படுவார்கள் என்றும்—காலிகளுக்கும், குழப்பக்காரர்களுக்கும், கூலிகளுக்கும் தைரியம் கொடுக்கப்பட்டு, காரியத்திலும் காட்டப்பட்டு இருப்பதாலும்—ஒன்றும் அறியாத திராவிட மக்கள் வெறியர்கள் போல் நடத்தப்பட்டு விடுகிறார்கள்.

தோழர்களே! நமக்கு, இனிப் பாதுகாப்பு மிக மிகக் குறைவுதான். கேள்வி இல்லை; கேட்பாருமில்லை. ஆரியப் பேய், இன்று தலைவிரித்தாடுகிறது. திராவிட மண்டுகள் பல அதற்கு உடுக்கை அடிக்கின்றன. இந்த நிலையில் அன்னியர் ஒழியவேண்டும்; அவர்கள் ஆதிக்கம் அழிய வேண்டும் என்கின்ற பிரச்சினையில் எங்களுக்கு முழு அனுதாபம் உண்டு. தொழிலாளத் தோழர்களே! நீங்கள் செய்யும் சமாதானமான கிளர்ச்சிக்கு எங்களால் கூடிய எல்லா ஆதரவும் தருகிறோம்.

நீங்கள் திராவிடர்கள்; நாங்கள் திராவிடர்கள். நம்மை இழிவுபடுத்திக் கொடுமைப் படுத்தித் துன்பப்படுத்தி நடத்துகிறார்கள் ஆரியர்கள். இதை நீங்கள் உணர்ந்துவிட்டால் நமக்கு இந்தக் கஷ்டமிருக்காது. ஆகவே, தொழிலாளத் தோழர்களே! இதுவரை நடந்து போனது போகட்டும். இனியாவது, திராவிடர்கள் யாவரும் கட்டுப்பாடாய்—ஆரியர்கள் போல் ஒற்றுமையாய், ஒருமனப்பட்ட இலட்சியமாய் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் தொழிலாளர்கள் என்றாலும், நாங்கள் உங்கள் தொண்டர்கள். உங்களுக்காகவே உயிர் வாழ்பவர்கள், இதை உணருங்கள்!

[திருவல்லிக்கேணியில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1946]

தோழர்களே!

இன்று நீங்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இதை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம். ஆனால், கூலி உயர்வுக்குச் செய்யும் வேலை நிறுத்தத்தை நாங்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை. ஏனெனில், அது தொழிலாளிகளை தொழிலாளர்களாகவே இருக்கவைக்கும் வேலை என்பதே எங்கள் கருத்து. ஏனென்றால், தொழிலாளிக்கு அதிகக் கூலியும், வீடு, வைத்தியம், படிப்பு வசதியும் முதலாளி செய்வது என்பது, ஒருவன் தன் மனைவியை எப்போதும் அடிமையாய் அடைத்துத் தனது நலனுக்கு வைத்திருப்பதில், அவளை அந்தக் காரியத்தில் உற்சாகமூட்டி நல்ல பக்தி விசுவாசமுள்ள அடிமையாகச் செய்ய, தங்க வைரநகைகள், பட்டுச்சேலை, சீப்பு, சோப்பு, கண்ணாடி, வாசனை எண்ணெய், பவுடர் வாங்கிக் கொடுப்பது போலவே தவிர, சம உரிமை அடைவதற்கல்ல என்பது போலவேயாகும்.

தொழிலாளிக்கு வேண்டியது கூலியும், நல்வாழ்க்கை வாழச் செலவுமே அல்ல என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் கவனத்தில் வைக்கவேண்டும். அவனுக்கு

வேண்டியது தொழிலின் பயனை சம உரிமையுடன் அனுபவிக்க வேண்டும். அடைய வேண்டும் என்பதோடு, தான் அந்த இயந்திர சாலைக்கு ஒரு கூட்டாளியாக, பங்காளியாக இருக்க வேண்டுமேயொழிய, ஒரு தொழிலாளியாக, வேலைக்காரனாக இருக்கக்கூடாது என்பதேயாகும். தொழிலாளி–முதலாளி தன்மைமுறை இருக்கவேகூடாது. 'தொழிலாளர் சங்கம்' என்கின்ற பெயரும் இருக்கக்கூடாது. தொழிற்சாலைக்கு— அங்கு வேலை செய்பவர்கள், பங்காளிகளாக இல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பதென்பது—முட்டாள் தனம், அடிமைத்தனம், மானமற்றதனமாகும்.

தொழிலாளி தன் சரீரத்தினால் நேரே பாடுபடுகிறான். முதலாளி என்பவன், வேறு தொழிலாளிகள் பாடுபட்டபாட்டின் பயனாய் மீதப்படுத்தப்பட்ட பணத்தை. முதலாகப் போடுகிறான் என்பதல்லாமல் முதலாளிக்கு முதல் ஏது? சரீர உழைப்பு ஏது? பல தொழிலாளிகளை மோசம் பண்ணி, அவர்களுக்குச் சரி பங்களிக்காது வஞ்சித்த பொருளல்லாமல் எப்படி முதலாளிக்குப் பொருள் வந்தது? பாடில்லாமல் பணம் ஏது? பாடில்லாத பணம் திருட்டுதானே? ஆகவே, மோசம் பண்ணின, வஞ்சித்த, திருடிய பணத்துக்கு இலாபம் பூராவும் தருவதும்; பாடுபட்டவனுக்குச் சோறுமாத்திரம் என்றால்—கொஞ்சம் நல்லசோறு என்றால், இதுவா தொழிலாளர் இயக்க இலட்சியம் என்று கேட்கிறேன்?

பணத்தைப் போட்டு இயந்திரம் வாங்கி, தொழிலாளியைப் போட்டு வேலை செய்தால் தானே இலாபம் வருகிறது? இந்த இலாபத்தில் பெரும்பாகம் வேலைக்காரர்தானே கிடைக்க வேண்டும்? முதலுக்குச் சிறு வட்டிதானே கிடைக்கவேண்டும்? அதுவும் மிஷினுக்கு எண்ணெய் போடுவது எப்படியோ, எஞ்சினுக்கு விறகு போடுவதெப்படியோ—அதுபோல் அதில் வேலை செய்பவருக்கும் அந்த 'மனித மிஷின்' கெடாமல், எண்ணெயும் விறகும் போல் நல்ல சாப்பாடும், நல்ல சுகமும் கொடுக்க வேண்டியது இயற்கைத் தர்மமாகும். ஆகவே, நிர்வாகஸ்தன் சம்பளம், முதலுக்கு வட்டி, மிஷினுக்கு எண்ணெய் விறகு என்பன போல்—தொழிலாளிக்கும் வாழ்க்கைச் சவுகரியம் செய்து கொடுத்து விட்டு, மீதியுள்ள இலாபத்தில் மிஷின் தேய்மானத்திற்கு ஒரு தொகை ஒதுக்குவது போல், தொழிலாளியின் ஓய்வுகால நல்வாழ்க்கைக்கும் ஒரு தொகை ஒதுக்கிவைத்துவிட்டு மீதியையே முதலும், வேலையும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். நாளாவட்டத்தில் இயந்திரசாலை, தொழிற் சாலைகள் தொழில் செய்பவர்களுக்குச் சரிபாக சொந்தமாக ஆகவேண்டும். இதற்காக வல்லவா—இந்தக் காரியத்திற்கல்லவா தொழிலாளர் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகியவை இருக்கவேண்டும்? ஆனால், இன்று இவையிரண்டும் முதலையும் முதலாளி களையும் பெருக்கிக் கொழுக்க வைத்து, தொழிலாளிகளுக்கு மயக்கத்தைக் கொடுக்கும் மதுபோல்—கொஞ்சம் கூலி உயர்வும், சிறிது சவுகரியமும் செய்து கொடுத்து, அவர்கள் என்றும் தொழிலாளிகளாகவே இருக்க வைக்கும் சதிவேலை ஸ்தாபனமாக இருந்து வருகின்றன.

இதிலிருந்து தெரிவதென்ன வென்றால், நம் நாட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங் களுக்கும், தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் இனிவேண்டியது என்ன என்பதே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். காரல் மார்க்சின் காலம் வேறு; லெனின் காலம் வேறு; இந்தக் காலம் வேறு. இந்தக் காலத்துக்கு வேண்டியது பழைய காலத்தில், பழைய காலப் பெரியார்கள் கண்டுபிடித்தும், சொன்னது மாகியவற்றில் இருக்க முடியாது; அவை போதாது. 1946 ஜூன் மாதத்திய இரயில்வே கைடு—ஜூலை மாதத்துக்குச் செல்லாது; இரயில் தவறிவிடும். ஆகவே, தொழிலாளிகள் தங்களை இனி அரை நிமிடமும் தொழிலாளி என்றெண்ணாமல், முதலாளிகள்—சொந்தக்காரர்கள் ஆகப் போகிறவர்கள் என்று எண்ணவேண்டும். இதற்கு அவர்கள் இன்றைய சுயநலப் புலிகளான தலைவர்களிடமிருந்து விடுபட வேண்டும். புராண வாழ்வுக்காரர்களை, பார்ப்பனர் (பிராமணர்)களை விட்டு விலகவேண்டும். பார்ப்பனர்களைவிட—புராணக்காரர்களான

பார்ப்பன அடிமைகளைவிட, முதலாளிகள் அதிகம் கெட்டவர்கள் அல்லர். ஆகவே, தொழிலாளத் தோழர்கள் என்கின்றவர்களே! நீங்கள் முதலில் உங்கள் ஆசாபாசங்களையும் இலட்சியங்களையும், ஸ்தாபனங்களையும், தலைவர்களையும் திருத்திக்கொள்ளுங்கள். இதுவரை நான் உங்களுக்குத் தொழிலாளர்களைப்பற்றிய எனது கருத்தை, திட்டத்தை முகவுரையாகச் சொன்னேன்.

இனி, உங்கள் விஷயமாகிய தற்காலப் பிரச்சினை பற்றிப் பேசுகிறேன்: அதாவது, நீங்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்திருக்கும் விஷயம்பற்றிப் பேசுகிறேன்.

உங்கள் வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம் இருந்தாலும், வெளிநாட்டுப் 'பட்டாணியர்'களைக் கொண்டு வந்து உங்களுக்குக் காவல்காரர்களாகப் போட்டு அவர்கள் மரியாதையில்லாமல் உங்களிடம் நடந்துகொள்ளும் மூர்க்கத்தனத்தைப்பற்றி நீங்கள் வருத்தமடைந்து, இனி, அப்படிப்பட்ட அயலார் ஆதிக்கமும் அத்துமீறின காரியமும் 'மில்'லில் இருக்கக்கூடாது என்கின்ற கருத்தின் மீது வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இந்த உணர்ச்சி உங்களுக்கு ஏற்பட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது இன்னும் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்படவேண்டியது அவசியமாகும். அதற்காக நீங்கள் செய்யும் கிளர்ச்சி பாராட்டத்தக்கதேயாகும். உங்கள் மில் முதலாளிகள் இதற்கு இணங்க வேண்டியது அவசியமும் நேர்மையுமாகும். உங்கள் முதலாளிகள் நிர்வாகிகள் யார்? உங்களுழைப்பால் பயனடைபவர்களேயாவார்கள்.

உங்கள் உழைப்புக்குக் கூலி, அதாவது உங்களுக்குச் சாப்பாடு போட்டுவிட்டதால் அவர்கள் கடன் தீர்ந்துவிட்டதாகக் கருதக்கூடாது. ஒவ்வொரு ஜீவனுக்கும் உணவு என்பது இயற்கை நியதியாகும். அனேக ஜீவன்கள் உழைப்பில்லாமலே உணவு கொண்டு ஜீவிக்கின்றன. அனேக மனித ஜீவன்களும் உழைப்பில்லாமல் பெருவயிறோடு நடமாடுகின்றன. நீங்கள் உழைத்துவிட்டு உணவு கொண்டு ஜீவிப்பதென்பது மற்றவர்களுடைய உதவியாலல்ல; அது இயற்கையாலேயே, நிர்ப்பந்தத்தாலேயாகும்.

உங்கள் உழைப்பால், உங்கள் முதலாளிகள் உணவு கொள்வதுடன் இலாபம் அனுபவிக்கிறார்கள். பொதுமக்கள் இயற்கை நியதிப்படி உணவு கொள்வதுடன் உங்கள் உழைப்பால் ஆடை அணிகிறார்கள். ஆகவே, உங்கள் முதலாளிகளும் பொதுமக்களும் உங்களுக்கு உணவைத் தவிர வேறு காரியங்களுக்கும் அவர்கள் கடமை, கடன்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் முதலாளிகள் உங்களுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியவர்களாவார்கள். இந்தப் பிரச்சினை உங்களுடைய உணவு சவுகரியத்தைப் பற்றியதல்ல; உங்கள் சுயமரியாதையைப்பற்றியது. உங்களுடைய சுயமரியாதையை மாத்திரம் பற்றியதல்ல; திராவிட நாட்டையும், திராவிட சமுதாயத்தையும் பற்றிய சுயமரியாதையைப் பொறுத்தது. ஆகவே, இதில் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் போராடியே தீரவேண்டிய பிரச்சினையாகும். நாடு விடுதலை, நாடு சுதந்திரம், நாடு சுயமரியாதை பெற்றுவிட்டது என்றால் என்ன அர்த்தம்? அன்னியனும், அன்னிய நாட்டான் ஆதிக்கமும், வியாபாரப் பெருமையும், தலைமையும் இந்த நாட்டில் இருப்பது தான் அர்த்தமா என்கின்றேன்.

[திருவல்லிக்கேணியில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1946]

தலைவரவர்களே! தோழர்களே!

எனது கவலை, இலட்சியம் யாதெனில் அன்னியன் என்றால் வெள்ளையன், பனியா, முல்தானி, மார்வாடி, காஷ்மீரி, குஜராத்தி ஆகிய இவர்கள் ஆதிக்கத்திலிருந்து—அதாவது எந்தவித ஆரிய ஆதிக்கத்திலிருந்தும் விலகுவதும், பிரிட்டிஷ்காரன், அமெரிக்கன், ரஷ்யன், மேற்கண்ட மார்வாடி, பனியா, பார்ப்பனன், மேல் லோகத்தான் என்பவன்

எவனும் நம்மைச் சுரண்டக்கூடாது என்பதும் ஆகும். இங்கு உள்ள பார்ப்பனன் சமுதாயத்தின் பேரால், ஆரியத்தின் பேரால் சுரண்டக்கூடாது என்றும், மீறி எவன் சுரண்டினாலும் திராவிட நாட்டை விட்டு வெளியே கொண்டு போகக்கூடாது என்றும் சொல்லுகின்றோம்.

விளக்கமாக—சென்னை மாகாணம் முழு சுயேச்சையுடன் இருக்கவேண்டும்—பிர்லாக்கள், டாட்டாக்கள், மகாத்மாக்கள், நேருக்கள், வெள்ளைக்காரர்கள் யாராயிருந்தாலும் சென்னை மாகாணம் என்னும் திராவிட நாட்டு எல்லைக்குள் நுழையவேண்டுமென்றால், 'பாஸ்போர்ட்'—அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டுதான் உள்ளே நுழைய வேண்டும். எந்த வடநாட்டானும், நமது நாட்டுக்குத் தலைவனாகவோ, இராஷ்டிரபதியாகவோ, மகாத்மாவாகவோ இருக்கக்கூடாது. மனிதரெல்லாம் சமமாக வாழவேண்டும். மனித வர்க்கத்திலே, பறையனோ, சூத்திரனோ, சக்கிலியோ, பிராமணனோ, இழி சாதியானோ இருக்கக்கூடாது. உலகநாடுகள் பெற்றுள்ளதைப்போல நமது நாடு சுதந்திரம் பெற்றுத் தனிநாடாக இருக்கவேண்டும். ஐந்து கோடி மக்களிலே யார் வேண்டுமானாலும் மந்திரியாகவோ, மகாத்மாவாகவோ இருக்கட்டும். நம்மிலே அத்தகைய தகுதியுடையவர்கள் இல்லையா?

நமக்கு அரசியல் தெரியும். பரம்பரை பரம்பரையாகக் கப்பலோட்டி வாணிபம் செய்தவர்கள் நாம். பிறன் ஆதிக்கம், உயர்வு இங்கு வேண்டாம். திராவிடர்கள் இங்கு 'நான்காவது சாதி'யினராக இருக்கின்றார்கள். திராவிடரல்லாத ஒரு கூட்டம், முதலாவது சாதியாக இருக்கின்றது. நூற்றுக்குத் தொண்ணூறு பங்காகவுள்ள திராவிட இனம் இன்று சட்டத்திலே, சாஸ்திரத்திலே சூத்திரனாக பஞ்சம, இழிமகனாக வாழ்கின்றது. திராவிடன் மனிதனாக வாழ வேண்டாமா? திராவிடநாடு, இழிமக்கள் இல்லாத நாடு ஆகவேண்டாமா? இந்தக் காலத்திலே சிம்மாதனத்திற்கோ, மகுடத்திற்கோ மதிப்பில்லை. 'ஜனநாயக ஆட்சியே இக் காலத்திற்குத் தேவை' எனப்படுகிறது. நாணயம், ஒழுங்கு, மனிதத் தன்மையுடன் யார் வேண்டுமானாலும் அதிகாரம் செலுத்தட்டும். இந்தியா என்னும் இப் பரந்த உபகண்டம் சுமார் மூவாயிரம் மைல் நீளம், இரண்டாயிரம் மைல் அகலம் உள்ளதாக இருக்கின்றது. இங்கு மக்களிடையே பண்டைக் காலந்தொட்டு இன்று வரையில் பல பேதங்கள் வளர்ந்துவந்துள்ளன. ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுவதற்கில்லை; மணந்து கொள்வதுமில்லை. பல மொழிகள், பல நாகரிகங்கள், பல உயர்வு—தாழ்வுகள் ஆகிய வித்தியாசங்கள் இருந்துவருகின்றன. இத்தகைய பேதம் உள்ள பிரதேசம் உலகத்தில் எங்குமே இல்லை. இவ்வளவு வேற்றுமைக் கருத்துடைய ஒரு பெரிய உபகண்டத்தை—ஒரே நாடு என்றும், ஒரே ஆட்சியில் இருக்கவேண்டுமென்றும் சொன்னால் இதை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? நாம் கேட்கின்றபடியே உபகண்டத்திலிருந்து திராவிட நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்றால், இதில் யாருக்கு—எந்த இந்தியனுக்கு என்ன அசவுகரியம் ஏற்படுகின்றது? திராவிடநாடு தனியாகப் பிரிந்தால் கிழக்கே கன்னியாகுமரி முதல் பர்ஹாம்பூர் வரையும்; மேற்கே பம்பாய் வரையிலும் ஆயிரம் மைல் நீளமுள்ள கடற்கரை நமக்குக் கிடைக்கின்றது. கீழக்கரை முதல் சிக்மகளூர் வரை அகலமான ஆறுகள், அகண்ட அணைகள், ஏரிகள் உயர்ந்த நன்செய் நிலங்கள், முத்துக் கொழிக்கும் கடல்கள், தங்கம் விளைகின்ற பல கனிகள் மலைகள் நமக்குண்டு. இத்தகைய திராவிட நாட்டை அதிலுள்ள 5 கோடி மக்களுக்காகப் பிரித்தால்—இந்தத் திராவிட மக்களுக்கு என்ன கஷ்டம் இருக்கமுடியும்? சிறிய, சிறிய நாடுகளாகிய துருக்கி, கிரீஸ், ஸ்வீடன், லிதுவேனியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், அயர்லாந்து முதலிய 20, 30 நாடுகள் தனித்தனி வல்லரசுகளாக விளங்கவில்லையா? நாம் தனி ஆட்சியாக ஏன் இருக்க முடியாது? இப்படிப்பட்ட நமது நாட்டுக்குத்தான் நாம் பூரண சுயேச்சை கேட்கிறோம்.

வெள்ளையன் (ஆங்கிலேயன்) எங்களுக்கு வேண்டாம்; அவன் எதற்கும் எங்களுக்குத் தேவை இல்லை. நாட்டை ஆண்டு வந்த நாங்கள், வெள்ளையன் வந்த பிறகு, பியூனாக, பட்லராக, கான்ஸ்டபிளாக இருக்கின்றோம். ஆனால், பிச்சை எடுத்த கூட்டத்தார் இன்று அய்க்கோர்ட் ஜட்ஜாக, அட்வகேட் ஜனரலாக, திவானாக, மந்திரியாக, சங்கராச்சாரியாக, பகவான்களாக இருக்கின்றனர்.

பார்ப்பனர்கள், ஜட்ஜு முதலிய பெரிய பதவிகளில் இருக்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு வெள்ளையன் இருப்பதால் நஷ்டமொன்றுமில்லை. எங்களுக்குத்தான் முதலில் வெள்ளையன் வெளியே போக வேண்டுமென்ற கவலை—ஏனெனில், நாங்கள்தான் வெள்ளையனுக்கும் ஆரியனுக்கும் அடிமைகளாக இருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியார் 'மில்'லிலும் 'எஞ்சினி'லும் வேலை செய்யும் தொழிலாளர்களையே தொழிலாளர்களாகக் கருதுகின்றார்கள். சரீரத்தினால் பாடுபடும் சூத்திரப் பட்டம் தாங்கிய 4 கோடி மக்களும் தொழிலாளர்களல்லவா? 'சூத்திரனைக் கூலி இல்லாமல் பார்ப்பான் வேலை வாங்கலாம்' என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகின்றதே! இது கடவுளின் கட்டளையாம்! 'திராவிடர் சங்கம்' என்றால் சூத்திரன் சங்கம் என்றுதானே கருத்து! இதற்குத்தானே—இப்படிச் சொல்ல வெட்கப்பட்டுத்தானே, 'பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்றும் சொன்னோம். ஏன் இந்த இழிவான பெயர்கள் நமக்கு? பார்ப்பனர் வேண்டுமென்றால் தங்கள் சங்கத்தை, 'சூத்திரரல்லாதார் சங்கம்' என வைத்துக் கொள்ளட்டுமே! 'பிராமணன் உயர்வானவன் என்று யக்ஞவல்க்யர், நாரதர், பராசரர் ஆகியோர் சொன்னது, இன்று இந்து சட்டமாகக் காட்சியளிக்கின்றதே! சட்டத்திலே, சாஸ்திரத்திலே, நடத்தையிலே, பிறவியிலே, நாம் சூத்திரர் ஆயிற்றே! 'கடவுளாலே கொடுக்கப்பட்டது' என்று சொல்லப்படும் இந்தச் சூத்திரப் பட்டத்தைத் தாங்கி நிற்பவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளர்களாகிய திராவிடர்களல்லரோ? நாம் எப்போது இந்தச் சூத்திரப்பட்டத்தை ஒழிப்பது?

கம்யூனிஸ்ட் தோழர்களே! சூதுகள், தந்திரங்கள் ஒழியவேண்டும். நயவஞ்சகமாக இவ்வளவு நாள் நடந்த இந்த ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சியா? இது பிரிட்டிஷ் நாட்டு ஆட்சி அல்ல. இந்தப் பேதங்கள் அங்கே இல்லை. பார்ப்பனர் 100-க்கு 100 படிக்க வசதிசெய்து கொடுத்தது இந்த ஆட்சி. 'சூத்திரன் படித்தால் இராசாவுக்குக் கேடு; பட்டத்துக்குக் கேடு' என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்வதுபடி நடந்தது இந்த ஆட்சி. பிராமணன் உடலால் உழைக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவனுக்கு ஜட்ஜு முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தோழர்களே!

வெள்ளையன் பார்ப்பானுக்கு உடந்தையாக இருக்கிறான். இது வெள்ளை ஆரியனுக்கும் மஞ்சள் ஆரியனுக்கும் உள்ள ஒப்பந்தந்தான். இனி ஏற்படப்போவதுகூட அந்த ஒப்பந்தந்தான். மற்ற பேச்சுகளெல்லாம் தந்திரம். இதை இரண்டு வருடங்கட்கு முன்பே நான் சொல்லிவிட்டேன். ஜின்னாவும் அம்பேத்காரும் இப்போது சொல்கிறார்கள். இன்றையச் சமுதாய அமைப்பைக் காப்பாற்றுவதுதான் சுயராஜ்யம். இதற்கு ஓர் உதாரணம், திருவையாற்றிலே சாப்பாட்டில் பேதம் கூடாது என்று சொன்ன காலத்திலே, மகாகனம் சாஸ்திரியார், பி. எஸ். சிவசாமி அய்யர், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் முதலியோர், 'நாம் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறுகின்றாயே' என வெள்ளையனைக் கேட்டார்கள். இதைத்தான் நாம் உடைக்கவேண்டும்.

வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லுவது (1946-ல்) மற்ற வல்லரசுகளிடம் அவன் செய்துகொண்ட ஒப்பந்தம். 'சண்டை நீங்கினவுடன் அவரவர்கள் நாட்டை அவரவர்களிடம் விட்டுவிட வேண்டும்' என்று நிபந்தனை

செய்துகொண்டார்கள். அந்தப்படியே அமெரிக்கன் பிலிப்பைன் நாட்டை விட்டுவிட்டான். அதைப்போலவே பிரெஞ்சுக்காரனும் விட்டுவிட்டான். ஆனால், நமது நாட்டை நம்மிடம் விடாமல் வெள்ளையன் தந்திரம் செய்கிறான். காங்கிரஸ் அவனை வெளியே விடாமல் தடுத்து நிற்கின்றது. காங்கிரஸ் ஏன் அவனிடம் பேரம் பேசுகின்றது? நாட்டை ஆள நமக்குத் தகுதி இல்லையா? நாட்டின் ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக, ஒற்றுமைக்கு விரோதமாக எவன் சாதிப்பட்டம் வைத்திருக்கின்றானோ—எவன் பெயருக்குப் பின்னால் சாதியைக் குறிப்பிட்டு வால் வைத்திருக்கின்றானோ—அவனுக்கு 6 மாத தண்டனை விதிக்கட்டுமே!

பெருவாரியான சாதிப் பாகுபாடுகள் உள்ள நாட்டிலே—ஒரே கொள்கையுடைய ஒரு இனம் அதுவும் 100-க்கு 60-க்கு மேல் மெஜாரிட்டியாக உள்ள இடத்தைத் தங்களுக்கென முஸ்லிம்கள் தனியே பிரித்துக் கொள்கிறதென்றால் இதில் என்ன தவறு? இது என்ன முட்டுக்கட்டை? நாடு என்ன பிளந்து போகும்? நாடு என்ன வெடித்துப்போகும்? இதற்கு எதிர்ப்பு இருக்கிறதென்றால், இது வெள்ளையனும் ஆரியனும் உண்டாக்குகிற கலகம். இங்கு இருக்கின்ற பிணக்கு, ஆபாசம் வெள்ளையனுக்குத் தெரியாதா! பார்ப்பான் என்று ஒரு சாதியும், பறையன் என்று ஒரு சாதியும் இருப்பதையும்; ஹோட்டலுக்குள் ஒரு சாதி போகக்கூடாது என்பதையும் பார்த்து வெள்ளைக்காரன் சிரிக்கமாட்டானா?

[கும்பகோணத்தில், 18-8-1946-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 19-10-1946]

தலைவரவர்களே! தோழர்களே!

இது திராவிட நாடு பிரிவினை நாள். இன்று 50,000 பேர் இங்குக் கூடியிருக்கிறீர்கள். கடற்கரையாய் இருந்தால் இலட்சம் பேர் கூடியிருப்பீர்கள். இதுபோல ஆண்டுதோறும் கூட்டம் கூடி நமது விருப்பத்தை அரசியலாருக்குத் தெரிவித்துவருகிறோம்.

திராவிடநாடு பிரிவினை வேண்டுமென்று நாம் விரும்புவது, இன்று நேற்றல்ல. இன்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து—அதாவது, பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் இருந்துவந்த காலமாகிய 1938-ம் ஆண்டிலிருந்து திராவிட நாடு பிரிந்து தனிச் சுதந்திர ஆட்சி நாடாக இருக்க வேண்டுமென்று கேட்டுவருகிறோம். இதற்கு இன்றைக்கு 5, 6 ஆண்டுகளுக்கு முன்பே, எனது நண்பரும், இன்றைய இந்திய கவர்னர் ஜெனரலுமான இராஜகோபாலாச்சாரியார் அவர்களது ஆசியும், சம்மதமும் கிடைத்திருக்கிறது. ஜின்னா சாயபு பாகிஸ்தானுக்காகக் கிளர்ச்சி செய்த காலத்தில் அதற்கு ஆதரவாக ஆச்சாரியார் அவர்கள் பிரச்சாரம் செய்துவந்தபோதே—திராவிட நாடு பிரிந்து கிடைக்க வேண்டும் என்று கேட்டதும் நியாயம்தான், என்றும் அந்தந்த நாடு பிரிந்து தனிச் சுதந்திர நாடாய் இருக்கவேண்டுமென்று கேட்க ஒவ்வொரு நாட்டாருக்கும் உரிமை உண்டென்றும் பேசி இருப்பதோடு, என்னிடம் நேரிலும், 'நீ கேட்பது சரி' என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதற்கப்புறம் இந்த 5, 6 வருட காலத்தில் திராவிட நாடு பிரிவினைக்கு அதிகமான தேவையும் ஆதரவும் ஏற்பட்டிருக்கிறது. அய்ரோப்பாவைப் பாருங்கள்! அய்ரோப்பாக் கண்டம் இந்தியாவைப் போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்டது. அது இன்று சுமார் 30 தனித் தனி சுதந்திர நாடுகளாக இருக்கின்றது. அவர்களின் முன்னேற்றம் எந்த வகையிலும் தடைப்பட்டுவிடவில்லை. அதுமட்டுமல்லாமல், அய்ரோப்பாவில் ஏற்படும் மகா யுத்தங்களின் பலனாக மேலும் நாடுகள் பிரிந்து தனித்தனி நாடுகளாக—ஒவ்வொரு சிறு நாட்டாரும் விரும்பி புது இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்களே தவிர, 'பிரிந்தால் கெட்டுப்போவோமே; பாதுகாப்பு இல்லாமல் போகுமே; வியாபாரம் கெடுமே; தொழில் கெடுமே!' என்று ஒரு சிறு நாட்டார்கூடக் கவலைப்பட்டதோ, எண்ணியதோ கிடையாது. உலக அரசியல் ஞானமற்றவர்களும், சுரண்டல் கூட்டத்தாரும், ஒரு

நாட்டை ஒரு நாட்டார் அடக்கிச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி வருகிறவர்களும்தாம் பிரிவினையை ஆட்சேபிப்பார்கள்; அல்லது இப்படிப்பட்டவர்களுடைய கூலிகள், கருங் காலிகள்தாம் ஆட்சேபிப்பார்கள்.

[சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில், 1-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1948]

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்!

மத்திய அரசாங்கப் பிடியில் இருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியாவிடில், சுதந்திரம் இல்லை,—சோறு இல்லை,—மான வாழ்வு இல்லை.

இது உறுதி! உறுதி! உறுதி!

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்.

['விடுதலை'—அறிக்கை—25-2-1949]

தோழர்களே!

இதே போலத்தான் 1935 வரை அகில இந்தியா என்று பேசிவந்த நான், வடநாட்டார் ஆதிக்கத்தை உணர ஆரம்பித்ததும் 1938-ல் திராவிடநாடு பிரிவினைக் கொள்கையை முக்கியக் கொள்கையாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தேன்.

1950 ஜனவரி 26-ம் தேதிய பலம் 1947 ஆகஸ்டு 15-ம் தேதியைப் போல் ஒரு விலாசம் மாற்றும் தினமேயாகும். அதே முதலாளிதான்; அதே பணப்பெட்டிதான்; அதே தராசுதான்; அதே படிக் கல் தான்; அந்த சரக்குதான்; அதே பித்தலாட்டம்தான். ஆனால், விலாசம் அதாவது 'டிரான்ஸ்வர்' செய்யப்பட்டது மட்டும் மாற்றம் அடைகிறது. குடி அரசு ஆட்சி என்கிற புதுப் பெயரால் பழைய கொடுங்கோல் ஆட்சியே மேலும் அதிக பலத்துடனும், மேலும் அதிகப் பாதுகாப்புடனும் 26-ந் தேதி முதற்கொண்டு நடைபெறப் போகிறது.

இந்த உண்மையைத் தெளிவாக உணரும் நாம் இதை ஏன் புரட்டு என்று எடுத்துச் சொல்லக்கூடாது? உண்மையை எடுத்துச் சொல்ல நாம் ஏன் பயப்பட வேண்டும்? அக்கிரமத்தை எடுத்துச்சொல்ல நமக்கேன் அச்சம்?

[சேலம், மாயூரம் ஆகிய ஊர்களில் 14-1-1950 முதல் 18-1-1950 முடிய சொற்பொழிவு—'விடுதலை' 20-1-1950]

பெரியோர்களே! தோழர்களே!

எந்தெந்த நாடுகளில் தங்களுக்கு ஓர் அளவுக்குச் சுதந்திரம் வந்தது என்று கூறினார்களோ—அன்றைய தினத்திலிருந்தே தங்கள் எல்லையைக் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டார்கள். 'எங்களுடைய நாட்டிலேயிருந்து வெளியே பணம் கொண்டு செல்லக் கூடாது; வேறு நாட்டானாகிய நீ வெளியே போ' என்று இலங்கை சர்க்கார் சொல்லி விட்டது. அங்கே கூலி வேலை செய்து வாழ்ந்துகொண்டிருந்த அன்னியர்களையும் வெளியே போகச் சொல்லிவிட்டார்கள் 'ஏன் இப்படி?' என்று கேட்டால், 'எங்களவர்களுக்கே இங்கு வேலை இல்லை; நீ வாழுவதற்காக உழைப்பின் பெயரைச் சொல்லிக் கொண்டு இங்கே இருக்கிறாய்' என்று கூறுகிறார்கள். அங்கிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பணத்தை யாரும் எங்கேயும் கொண்டுபோக முடியாது. சாதாரணமாக ஒருவனுக்கு 10,000 ரூபாய் சொத்து இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த 10,000 ரூபாய் சொத்தை எதற்காக, ஏன் விற்கவேண்டும் என்று காரணம் காட்டி 7500 ரூபாய்க்குத்தான் விற்க முடியும். அப்படி விற்று வந்த பணத்தை இங்கு கொண்டுவர

வேண்டுமென்றால், அதற்கென்று இருக்கும் சிலரிடம் பேரம் பேசி, அதில் பாதியை 3750 ரூபாயை அவனுக்குக் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளவேண்டும். அதன் பிறகு பரிபாஷை மூலம் செய்தி அனுப்பி, தங்கள் ஆட்கள் உதவியால் தன்னுடைய பங்கு 3750 போக, மீதி ரூ. 3750 கொண்டுவந்து சேர்ப்பான். இவ்வளவு கஷ்டப்பட்டும் வழியில் சிக்கிவிட்டால் ரூ. 10,000-த்தில்—தனக்கு வரவிருந்த 3750 ரூபாயும் போய்விடும். எவ்வளவு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது! அங்கே இருந்துகொண்டு சம்பாதிப்பதும் முடியாது; நாம் சம்பாதித்ததைக் கொண்டுவருவதென்றாலும் முடியாது. ஏன்? அந்த நாட்டில் பிறர் கொள்ளையடிக்கக் கூடாது; அடிக்க அவர்கள் விடுவதில்லை.

அதுபோலவே, பர்மாவில் பட்டப்பகலில் கொலை, கொள்ளை, குத்து வெட்டு நடக்கின்றன. சர்க்காரும் அதைப்பற்றிக் கவலை எடுக்காமல் விட்டுவிடுகிறது. கேட்டால், 'அன்னியருக்கு இங்கென்ன வேலை?' என்கிறார்கள். ஆகவே, அங்கு யாரும் போக முடியவில்லை. இன்று இங்கே உள்ள சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது— அந்த நாட்டுச் சர்க்காருடன். அதுபோலவே மலேயாவிலிருந்து பணம் வரவழைக்க முடியாது. 'கொச்சின் சைனா'விலிருந்து நம்மவனுக்கு மாதம் ரூ. 1000, 2000 வரும்படி வரக்கூடிய சொத்து இருக்கிறது. 200 ரூபாய்க்கு மேல் அங்கிருந்து கொண்டுவரக் கூடாது என்று சொல்லிவிட்டான்.

சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகளிலெல்லாம் அப்படியிருக்கும்போது, நமது நாட்டில் என்னவென்றால் மார்வாரி, குஜராத்தி, முல்தானி, பனியாக் கூட்டத்தார்கள்—அவர்கள் நாட்டிலேயிருந்து வந்து, இங்கே கோடிக்கணக்காய்க் கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள். இன்று அவர்கள் இராஜ்யம்! தங்கள் நாட்டுக்காரர்களை இங்கே அனுப்புகிறார்கள். பலப்பல சலுகைகளோடு அவர்கள் இங்கே வந்து கொள்ளையடித்துக்கொண்டு, பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு கவலையற்ற வாழ்வு வாழ்கிறார்கள். சென்னை மவுண்ட் ரோட்டில் முன்பிருந்த வெள்ளைக்காரன் போல்—பனியாக்கள், மார்வாரிகள் முதலியோர் வாழ்கிறார்கள். ஒவ்வொருவனும் கோடிக்கணக்காய், இலட்சக்கணக்காய்ச் சம்பாதிக்கிறான். பல இனங்கள்—நாடுகள் கொண்ட இவ்வளவு பெரிய நாட்டை ஒன்றாக்கி, 'எவன் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் சென்று, எப்படி வேண்டுமானாலும் சம்பாதித்து அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்' என்ற சட்டம் செய்துவிட்டு இங்கே வந்து கொள்ளையடிக்கிறார்கள். இந்தத் தன்மையை மாற்றாவிட்டால் நம்முடைய அத்தனைச் செல்வங்களும் அவர்களுக்கே போய்விடும். நாம் என்றைக்கும் அவர்களுக்கு—வடநாட்டாருக்கு மீளாத அடிமைகளாய், வேலைக்காரர்களாய்த்தான் இருக்க நேரிடும். இரும்பு அவனுக்கு, சிமெண்ட் அவனுக்கு, கப்பல் கட்டும் தொழில் அவனுக்கு; இப்படி 'எல்லாம் அவனுக்கு!' என்றே ஆகிவிட்டது. 1000 ரூபாய் 2000 ரூபாய்க்குத்தான் நம்மவன் லேவாதேவி செய்யமுடியும்.

எவ்வளவு மூலதனத்தையும் நம்மாலேயே உண்டாக்க முடியும். ஆகவே, இந்த வடநாட்டானுடைய மூலதனம் பொருள் இல்லாமல் நாம் வியாபாரம் செய்யமுடியாது என்பது ஒழுங்கான நியாயம் அல்ல. இந்த நாட்டில் உள்ள எல்லாத் தொழில்களையும் வடநாட்டார் கைப்பற்றிக் கொண்டார்கள். 10,000, 20,000 ரூபாய் லேவாதேவியெல்லாம் அவனாலேயே செய்யமுடியும். நம்மவர்களுக்குப் பாதுகாப்பில்லை. கொடுத்த கடனை வசூலிக்க கோர்ட்டுச் செலவு அதிகமாகும். ஆனால், ஒரு காசு செலவில்லாமல் வியாபாரம் நடத்த அவனுக்கு அனுமதி, பாதுகாப்பு!

அவை மட்டுமல்ல; இருக்க இருக்க அவர்கள் வெள்ளம்போல் வந்து உப்புகிறார்கள். அகதிகள் என்ற பேரால் நம்முடைய நாட்டிற்குச் சுமார் 10 இலட்சம் பேர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வெறுங்கையுடன், குடும்பத்தோடு வந்தவர்களுக்கு இந்த மாகாண சர்க்கார் சலுகை காட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதருவதில் தீவிரமாக

ஈடுபட்டு இருக்கிறார்கள். மேலே இருக்கிற டெல்லி—'இந்த அகதிகளுக்கு வீடு, வாசல், வியாபார வசதி செய்துகொடு' என்று உத்தரவு இட்டதின் காரணமாக, சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, மதுரை, பெங்களூர், கள்ளிக்கோட்டை, கொச்சி ஆகிய இடங்களில் எல்லா வியாபாரங்களையும் அவர்களே கைப்பற்றிவிட்டார்கள். நம்மவர்கள் அவர்களுக்கு மூட்டை தூக்குகிறார்கள். பெரிய பெரிய கடைகளிலிருந்து திண்ணை, ரோடு, வண்டி முதலிய கடை வியாபாரம் வரையில் அவர்களே கைப்பற்றிக்கொண்டார்கள்.

வசதிகள் பல உள்ள இந்தப் பெரும் நாட்டில் அவன் இப்படிப் புகுந்து கொள்ளையடிப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதா? இதைப்பற்றிப் பார்ப்பனர்களுக்குக் கவலையே இல்லை; காட்டிக்கொடுத்து பங்கு வாங்குகிறார்கள். இந்தக் கொள்ளையை—கொடுமையை எடுத்துக்காட்டி, 'இத்தகைய தன்மைகள் ஒழியவேண்டும்; எங்கள் நாட்டை நாங்களே ஆள எங்களிடத்தில் விட்டுவிடு' என்று கேட்பது தேசத் துரோகமா? இது தவறா?

'வெள்ளைக்காரன், ஜப்பான்காரன் வரவேண்டும்' என்று கூறினால், அது தேசத் துரோகக் குற்றமாக இருக்கலாம். ஆனால், இருக்கிற அன்னியனையும், 'வெளியே போ!' என்று கூறுவது எப்படிக் குற்றமாகும்? அது 'மாபெரும் தேசாபிமானம்' ஆகும்.

வெள்ளைக்காரன் நம்மவர்களிடத்திலேயிருந்துதானே நாட்டை வாங்கினான்? அப்படி வாங்கிய நாட்டை—நம் நாட்டானிடம் கொடுத்துவிட்டுப் போனான் என்றால், எல்லாவற்றையும் வடநாட்டானே எடுத்துக்கொண்டால் என்ன நியாயம்?

['விடுதலை' 8-4-1950]

பெரியோர்களே! தோழர்களே!

நம்முடைய நாட்டில் வளம் இல்லையா? ஆளும் வாய்ப்புகள் இல்லையா? நம்முடைய நாட்டில் நல்ல வியாபார நுணுக்கங்கள் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் வசதியும் வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. வடநாட்டாருக்கே நல்ல வாய்ப்புகள் கொடுத்து, அவர்களையே விளம்பரப்படுத்தி, சகலத்தையும் அவர்களே கொள்ளையடித்துக்கொண்டு போகும் நிலையில் வடநாட்டு ஆட்சி உண்டாக்கிவிட்டது.

நம்முடைய நாட்டில் வீரர்கள் இல்லையா? உலகமே வியக்கத்தகுந்த முறையில் சென்ற யுத்தத்தில் வீரமாய்ப் போர்புரிந்தவர்கள் சென்னைச் சிப்பாய்கள்தாம்! இன்றுகூட காஷ்மீர் யுத்தத்தில் தீவிரமாய்ப் போரிடும் வீரர்கள் நம் நாட்டவர்கள்தாம். அவர்களைக் கொண்டு நம் நாட்டில் நல்ல பலமான இராணுவத்தை வைத்துக்கொள்ளலாம்.

நம்மிடத்தில் அறிவாளிகள் இல்லையா? நம்மைவிட அறிவாளிகள் வடநாட்டில் ஏது? அய்ந்து பண்டித நேருக்கள் சேர்ந்தால்தானே நம்முடைய ஒரு ஆச்சாரியாரின் அறிவுக்குச் சமமாக முடியும்? அதுபோலவே அய்ந்து பட்டேல்கள் சேர்ந்தால்தான் நம்முடைய சண்முகஞ் செட்டியார், இராமசாமி முதலியார் ஆகியோர்களின் அறிவுக்குச் சமமாக முடியும்?

நான் அஸ்ஸாம், அய்க்கிய மாகாணம், பஞ்சாப், பீகார் மற்றும் எல்லா இராஜ்யங்களுக்கும் போயிருக்கிறேன். வடநாட்டின் பல பகுதிகளிலும் சுற்றியிருக்கிறேன். அங்கு இருக்கிற கோவில்களில் கலைத் தன்மையே கிடையாது. அவர்களுடைய சாமிகள்கூட வெந்த பிணங்கள் போலத்தான் காட்சியளிக்கும். சமீபத்தில்தான் ஏதோ காசி விஸ்வநாதர் கோயிலைக் கொஞ்சம் சீர்திருத்தியிருக்கிறார்கள். ஏன் இவைகளையெல்லாம் கூறினேன் என்றால், அவர்கள் நாகரிகம் அற்றவர்கள்—நம்மைவிட எல்லாவிதங்களிலும் மட்டமானவர்கள், குறைந்தவர்கள், மூடநம்பிக்கைக்காரர்கள் என்பதற்காகத்தான். அப்படியிருந்தும் இன்று அவர்கள் ஆதிக்கம்தான் தலைவிரித்தாடுகிறது.

'சுதந்திர ஜனநாயகக் குடிஅரசு வந்துவிட்டது' என்று கூறுகிறார்கள்! யாரைக் கேட்டு அங்கு போய் உட்கார்ந்து, இந்த நாட்டை ஜனநாயகச் சுதந்திரக் குடிஅரசு ஆகச் செய்தார்கள். ஆகஸ்ட் 15-ந் தேதி முதல், 'இந்த நாட்டை நீ வைத்துக்கொள்!' என்று, வெள்ளையன் தன்னுடைய சவுகரியத்திற்காகக் காங்கிரஸ்காரர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். அவனுடைய பிரதிநிதிகளாகத்தானே அதற்கு முன் இவர்கள் ஆண்டார்கள்!

அந்தப்படியிருக்க, அவனிடத்தில் இருந்து (Made Over) 'மேடோவர்' செய்து ஆட்சி வாங்கிக்கொண்டு இவர்கள் ஆளுவதென்றால், எப்படி இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கமுடியும்? வெள்ளைக்காரன் வெளியே போனபிறகு தேர்தல் வைத்து, அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று இவர்கள் ஆளுவார்களானால், 'மக்கள் ஆட்சி' என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படியில்லாமல், அவன் இவர்களிடத்தில் கொடுத்துவிட்டுப் போனான் என்பதால்—இவர்களே ஆளுவது என்பது என்ன நியாயம்? இந்த ஒரு கட்சிக்காரர்களே கூடிக்கொண்டு, 'சுதந்திரம் வந்துவிட்டது, பார்' என்று கத்தினால் ஒப்புக்கொள்ள முடியுமா? இது வெள்ளையனுடைய பிரதிநிதிகள் ஆட்சிதானே?

200 ஆண்டுகளாக வெள்ளைக்காரனுக்கு வரியைக் கொட்டிக் கொடுத்தோம். நம்மவர்கள் படிக்கவில்லை. பார்ப்பனர்கள் 100-க்கு 100 பேர்கள் படித்தார்கள். ஏனென்றால், வெள்ளைக்காரன் கல்வி இலாக்காவைப் பார்ப்பானிடம் ஒப்படைத்தான். அவர்கள் தங்கள் படிப்பிற்கு ஏற்ற முறையில் எல்லா சவுகரியங்களையும் செய்துகொண்டார்கள். நம்மவர்களில் 10 பேர்தானே படித்தோம்? பெரும்பாலான மக்களை இப்படித் தற்குறிகளாய் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு அரசியல் என்றால் என்ன என்றே தெரியாத நிலையில் வைத்துக்கொண்டு—ஏதோ 4 பார்ப்பனர்கள் கூடிச் சுதந்திரம் வந்துவிட்டது என்று கூப்பாடு போட்டு இன்று அவர்களே ஆள உட்கார்ந்துகொண்டு காரியங்களை நடத்துவதென்றால் என்ன அர்த்தம்?

ஆகவேதான், 'இது குடிஅரசு ஆட்சியல்ல; கொடுமைக்கார, கொள்ளைக்கார ஆட்சி' என்று கூறுகிறோம். இந்தச் சுரண்டல் ஆட்சியிலிருந்து விலகவேண்டும் என்று சொல்லுகிறோம்.

இன்னும், நம் நாட்டில் இவ்வளவு பணக்காரன், சாதி இருக்கக்கூடாது. இந்த இரண்டு வருடமாகத் தயாரித்த அரசியல் திட்டத்தில் இவைகளை ஒழிக்க ஏதாவது ஒரு வரி எழுதினார்களா? இல்லை. ஒருவனுக்குச் சம்பளம் ரூ. 10,000, 8000, 5000; மற்றவனுக்கு ரூ. 30. இந்த வித்தியாசம் ஏன் இன்னமும் இருக்க வேண்டும்? வெள்ளைக்காரன்தான் அவனது 'டாம்பீகச்' செலவுகளுக்காக வைத்துக்கொண்டான் என்றால் பார்ப்பனர்களும் அப்படி வைத்துக்கொண்டு இருக்கலாமா? இந்தப் பேதங்களையெல்லாம் நம்மால் ஒழிக்க முடியும். ஒருவனிடத்தில் ஏராளமாய்ச் சொத்துக்கள் முடங்கியும், மற்றவனுக்குச் சோற்றுக்கு இல்லாத நிலைமையும் இருப்பதனால்தானே நாட்டில் பஞ்சம், பித்தலாட்டம், நாணயமின்மை வளருகின்றன! இது மாறி 'எல்லோருக்கும் ஒரே நிலை' என்று ஆக்கி விட்டால் இந்தப் பித்தலாட்டங்கள் நடைபெற வாய்ப்பு இருக்குமா? கல்வித் துறையிலும் அப்படியே சீர்திருத்தம் செய்ய நம்மால் முடியும். உதாரணமாக '6 மாதத்திற்குள் கையெழுத்துப் போடத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கெல்லாம் 3 மாதம் தண்டனை விதிக்கப்படும்' என்று சட்டம் போட்டால், அவரவர்கள் விழுந்து விழுந்து படிக்க மாட்டார்களா?

இந்தப்படி அனேக சங்கதிகளை நம்மால் செய்ய முடியும். இந்தப்படி, இங்கு எல்லோரும் சமம், எல்லோருக்கும் ஒரே நிலை என்று ஏற்பட்டுவிடுமோ என்றுதான் பார்ப்பனர்களும் வடவர்களும் சேர்ந்து கூட்டுச்சதி செய்கிறார்கள்.

[குன்னத்தில், 2-4-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1950]

பெரியோர்களே! தோழர்களே!

நாம் திராவிட மக்கள். ஏறக்குறைய 10 கோடி மக்கள் இருக்கிறோம். நீங்கள் கணக்குப் பார்த்தால் திராவிடர்களுடைய எண்ணிக்கை பத்துக் கோடி ஆகும்.

இவ்வளவு ஜனத் தொகை கொண்ட ஒரு நாடு, ஐரோப்பாவில் ரஷ்யாவைத் தவிர வேறு ஒரு நாடுகூடக் கிடையாது.

ஐரோப்பாவில் இரண்டு கோடி, ஒரு கோடி, அறுபது இலட்சம் உள்ள நாடுகள் எல்லாம் கூடப் 'பரிபூரண சுயேச்சை'யோடு இருக்கின்றன. அன்னியனுடைய ஆதிக்கத்திற்கு அங்கு இடமே இல்லை. அந்த நாட்டிற்கு 100 மைலுக்கு அப்பால் இருக்கின்றவன் அந்த நாட்டுக்கு வரவேண்டுமானால் 'பாஸ்போர்ட்' வாங்கிக்கொண்டுதான் வரவேண்டும். ஒரு நாட்டு உப்பு இன்னொரு நாட்டுக்கு வராது. ஒரு நாட்டுத் தீப்பெட்டி, உருளைக்கிழங்கு பக்கத்திலே இருக்கிற இன்னொரு நாட்டுக்கு வரக்கூடாது; வரமுடியாது. நம் மாகாணத்தில் உள்ள ஒரு ஜில்லா அளவு உள்ள நாடு, அங்கு பூரண சுயேச்சையோடு இருக்கிறது.

நாம்—திராவிட நாட்டுக்காரர்கள் ஆகிய நாம் 1938-லேயே ஆரம்பித்தோம், 'திராவிட நாடு திராவிடருக்கே', 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று. ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை.

நம் நாட்டில், வடநாட்டானுக்குக் கூலிகள்—அடிமைகள்தாம் அதிகம் ஆகி வருகிறார்கள். நாம் துவக்கிய இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு துவக்கினார்கள் பாகிஸ்தான் கிளர்ச்சியை. அவர்களது வீட்டுவாசலில் கொண்டுபோய்க் கொடுத்தார்கள் பாகிஸ்தானை. 'உயிர் போனாலும் கொடுக்கமாட்டேன்; என் பிணத்தின்மேல் நடந்துதான் பாகிஸ்தானைக் காணலாம்' என்றார் காந்தியார். இராஜகோபாலாச்சாரியார் சொன்னார், 'தாயை வெட்டினாலும் கூட, இந்த பாகிஸ்தானைப் பிரிக்கமாட்டேன்' என்று.

இவர்கள் எல்லோரும் கூடி வெள்ளித்தட்டில் கொண்டுபோய் அவர்கள் வீட்டுவாசலில் வைத்துப் பாகிஸ்தானைக் கொடுத்துவிட்டு வந்தார்கள். பாகிஸ்தானை இல்லை என்று சொல்லமுடியுமா? முடியாது.

காரணம்? இதற்குக் காரணம் முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருந்ததுதான். அவர்கள் ஒற்றுமையாக இருந்ததற்குக் காரணம் அவர்களுக்கு ஒரே மதம். அந்த மதத்தினுடைய முக்கியமான தத்துவம் ஒற்றுமை; கட்டுப்பாடு; ஒரே ஆண்டவன். ஆனால், நமக்கு அப்படி இல்லையே! ஆயிரக்கணக்கான மதம், கோடிக்கணக்கான கடவுள்கள், பல ஆயிரக் கணக்கான சாதிகள்! நாம் எப்படி உருப்படமுடியும்?

அனேகமாக, நம்முடைய பணக்காரர்கள் இன்றைய தினம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். காங்கிரசுத் தோழர்கள் பார்ப்பனர்களுடைய நிபந்தனை இல்லாத கூலிகளாக இருக்கிறார்கள்.

இந்த இரண்டு தரத்தாரும் நமக்கு எதிர்ப்பு என்ற முறையிலே என்ன வேலை செய்கிறார்கள் என்றால், கடவுள் பிரச்சாரம் செய்வது, மதப் பிரச்சாரம் செய்வது—இந்த மாதிரி வேலைகளில்தான் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நம்மவர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், பார்ப்பனர் எவ்வளவு சிறிய பதவியில் இருந்தாலும் அவர்களைக் கண்டதும் நடுங்குகிறார்கள்! இந்த நிலை மாற வேண்டும். அதற்கு ஒற்றுமையாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும். பெருங்கிளர்ச்சிகள் ஆரம்பிக்க வேண்டும்!

அவற்றைச் சகிக்க முடியாமல் வடநாட்டாரும் பார்ப்பனரும் ஓடவேண்டும். ஏன் நாம் அவர்களைப் பகிஷ்காரம் பண்ணக்கூடாது? வடநாட்டான் கடையில் சரக்கு வாங்கத்

கூடாது என்றால் என்ன தப்பு? பார்ப்பானுக்குச் சிரைக்கக் கூடாது; பால் அரிசி கொடுக்கக் கூடாது என்றால் என்ன தப்பு?

பார்ப்பான் நம்மைத் தொட்டால் தீட்டு என்று எட்டி நிற்கிறானே, அவனைத்தானே பகிஷ்கரிக்கச் சொல்லுகிறோம்? அவனைப் பகிஷ்காரம் செய்தால் என்ன தப்பு?

இந்த அடிமைத்தன்மை நீங்கவேண்டும்; இந்தச் சுரண்டல் நீங்கவேண்டும்; அன்னிய ஆதிக்கம் ஒழியவேண்டும் என்ற உணர்ச்சியை நம் மக்கள் பெறவேண்டும்.

[சென்னை கிருஷ்ணாம்பேட்டையில், 10-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-2-1951]

தோழர்களே!

முன்னே பேசிய தோழர்கள் சொன்னார்கள், அரசியல் சுரண்டல் முக்கியமானது; அதை ஒழிக்க வேண்டும் என்று. நாமும் அரசியல் சுரண்டலை முக்கியமாகக் கொண்டு இருக்கிறோம்.

இந்த நாடு பூரண சுதந்திரம் அடைய வேண்டும். இந்த நாடு இந்த நாட்டு மக்களால் ஆளப்பட வேண்டும். இதுதான் முதல் காரியம். இப்பொழுது நாம் பொருளாதாரச் சுரண்டலை முக்கியமாகக் கூறுகிறோம். ஏனென்றால், ஆட்சி என்று சொல்லுவது, ஒரு நாட்டானுடைய அரசாங்கம் என்று சொல்லுவது முன்னே எப்படி இருந்தது என்றால் —ரொம்ப நாளைக்கு முன்பு சுமார் 100, 50 ஆண்டுகளுக்கு முன்னாலே, இன்னமும் சொல்லுவேன்—வெள்ளைக்காரனுடைய ஆட்சிக்கு முன்னாலே ஆட்சி எப்படி இருந்தது என்றால், 'இவ்வளவு விஸ்தீரணம் நம் நாட்டிற்குள் இருக்கிறது. இவ்வளவு விஸ்தீரணத்திற்கு நான் அரசன்; சக்கரவர்த்தி' என்று இருப்பார். மற்றபடி அரசர்கள் எல்லோரும் இருப்பார்கள். அங்கங்கேயுள்ள அரசர்கள் அங்குள்ள மக்களுக்கு ஆவன செய்து கொடுப்பார்கள். அவ்வளவுதான் இருக்கும் முன்னே. நாளாக நாளாக—அந்த விஸ்தீரணம், அதிலே இருக்கிற அதிகாரம் முக்கியம் அல்ல. பின்னே என்ன முக்கியம்? வளப்பத்தை செல்வத்தை அன்னிய நாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறான்; கொள்ளை கொண்டு போகிறான் என்பதுதான் இதன் தத்துவம். இந்தக் கருத்திலேதான் நாம் இன்றைய தினம் நம்முடைய நாடு அன்னிய ஆட்சியில் இருக்கிறது என்று சொல்லுகிறோம்.

ஏன் நம் நாட்டுச் செல்வம் அன்னியனுக்குப் பயன்படுகிறது? நம்முடைய நாடு இன்றைய தினம் விடுதலை அடையவேண்டுமானால், நம் நாட்டுப் பொருளாதாரம் நம் நாட்டைவிட்டுப் போகாமல் இருக்கவேண்டும் என்பது முக்கியமான சங்கதி ஆகும்.

பெயரளவில் சொல்லுகிறார்கள்—நம் நாடு ஏதோ சுதந்திரம் பெற்றுவிட்டது என்றும் அது குடி அரசு என்றும், ஜனநாயக ஆட்சி என்றும் எல்லாம், இப்படியாகப் பித்தலாட்டமாகச் சொல்கிறார்கள். இப்படி ஆரியர்கள் சொல்லுவதிலே அதிசயம் இல்லை; நம் மக்கள் நம்புவதிலும் அதிசயம் இல்லை; ஏன்?

நமக்குச் சில துறைகளிலே அறிவு இருந்தாலும், சில துறைகளிலே அறிவு கிடையாது. அந்தத் தலைப்பு வார்த்தைக்குத்தான் மரியாதை இருக்குமே தவிர கருத்துக்கு மரியாதை இருக்காது.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் தலைமையுரை—'விடுதலை' 19-4-1951]

பெரியோர்களே! தோழர்களே!

காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய தேர்தல் வாக்குறுதியில் என்ன சொன்னார்கள் என்றால், '21 வயதுக்கு மேற்பட்ட மக்களுக்கு ஓட்டுரிமை கொடுத்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்புகின்ற பிரதிநிதிகளைக் கொண்டு இந்நாட்டுக்கு அரசியல் நிர்ணய சட்டம் வகுப்போம்; அத்துடன் ஒவ்வொரு சாதாரண மக்களுக்கும் சுயாட்சி உரிமை அளிப்போம்' என்று சொன்னார்கள்.

ஆனால், இன்று நடப்பது என்ன? வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில்—அதவும் அவனுடைய அதிகாரத்தில் படித்தவனுக்கும், பணக்காரனுக்கும் ஓட்டு உரிமை அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட தேர்தலில் பிரதிநிதியாக வந்தவர்களைக்கொண்டு—அதுமட்டும் அல்லாமல், எந்தத் தொகுதியிலும் நின்று வெற்றி பெறாமல் வெள்ளைக்காரனாகக் கொடுத்த (Nomination) நியமனம் மூலமாகப் பதவி பெற்றவர்களைக் கொண்டு அரசியல் சட்டம் செய்து இருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள்.

இரண்டாவது சந்தியான மாகாண சுய ஆட்சி என்பது இன்று எப்படி இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வெள்ளைக்காரன் காலத்திலே மாகாணங்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்ததோ அதுகூட இன்றைய தினம் இல்லாமல் மாகாணத்து ஆட்சி என்பது வெறும் பொம்மை சர்க்கார் இருக்கும் ஆட்சி என்பதாக ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் டில்லி நோக்கித் தெண்டனிட வேண்டிய மாதிரியில் தான் மாகாண ஆட்சியென்பது இருக்கிறது. இப்படியாக காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய தேர்தல் வாக்குறுதியிலே சொன்னதைச் சிறு அளவுக்குக்கூட நிறைவேற்றவில்லை.

தேர்தல் வாக்குறுதியாக மேற்சொன்ன சங்கதிகளில் சொல்லும்போது உள்ளபடியே அவர்களுக்கு நல்லெண்ணம் இருந்திருக்கலாம். நாம் பதவிக்குப் போனால் செய்யலாம் என்றே கருதி இருக்கலாம். ஆனால், இன்றைய தினம் அவர்களால் அவர்கள் சொன்னது போல் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த இரண்டு காரியங்களையும் செய்தார்கள் என்றால் வருணாசிரமம் அடியோடு ஒழிந்துபோய்விடும். தெளிவாகவே சொல்லுகிறேன், இப்பொழுது நம்முடைய மாகாணத்திற்குச் சுயாட்சி கொடுக்கப்பட்டது என்றால் இங்கு பார்ப்பனர் இருக்கமுடியுமா? அவனுடைய பூணூலும், மேல்சாதித் தன்மையும் இருக்குமா? ஒரேநாளில் மறைந்துவிடாதா? எனவேதான், வருணாசிரமம் ஒழிந்துவிடும் என்கிற பயத்தினால்தான் இன்றையதினம் அந்தக் காரியங்களைச் செய்யவில்லை. இன்னமும் அவர்கள் இன்றைய முறைப்படியே, இன்று நடத்துகிற மாதிரியில் இல்லாமல் வேறு முறையில் சென்றால் நிச்சயமாக அவர்கள் அழிந்துவிடுவார்கள்.

இந்த நாடு நமது கையில் இருக்கவேண்டும். இந்த நிலைமை எப்பொழுது ஏற்பட்டது என்றால் தோழர்களே, இந்தப் பிரிவினை கேட்பது இப்பொழுது ஏற்பட்டது அல்ல. நாடு, வெள்ளைக்காரனிடமிருந்து காங்கிரஸ்காரர்களிடம் வருவதற்கு முன்பே நம்நாடு பிரியவேண்டும் என்றும், அதாவது 1938 ஆம் ஆண்டிலேயே இராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாக இருந்து சென்னையை ஆட்சிசெய்த காலத்தில், இவர்களுடைய ஒரு வருட ஆட்சியைப் பார்த்த பிறகுதான் நாம் பிரிந்தாக வேண்டுமென்று—1938லேயே சொல்லி இருக்கிறேன்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

எங்களின் விடுதலைக் கொள்கை, நம் நாடு விடுதலை அடையவேண்டும் என்பது. நம் நாட்டை, நம் இராஜ்யத்தை (இந்த சென்னை இராஜ்யத்தை), 9 கோடி மக்கள் இருக்கின்ற இந்த இராஜ்யத்தை இதற்கு முன் வெள்ளைக்காரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் இராஜ்யத்தைத்தான், நாம் நம் கைக்கு வரவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால், அவர்கள் இது சுதந்திர நாடுதானே, ஆகையால் இதில் ஒரு வித்தியாசமும், வேற்றுமையும் இல்லையே என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், இன்றைய நிலையில் நம் நாட்டைப் பார்த்தால், 'குச்சிக்காரித்தனம் செய்கிறவளுக்கு எப்படி தேவ—அடியாள்' என்று பெயர் வைத்து இருக்கிறார்களோ, அதே மாதிரிதான் இருக்கிறது—அடிமையாக இருக்கிற இந்த நாட்டைப் பார்த்துச் சுதந்திரநாடு

என்று கூறுவது. இதையே நம்முடைய பொதுமக்களும் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். நமக்கு இன்று நம் நாட்டு ஆட்சியில் எதில் சுதந்திரம் இருக்கிறது?

இன்று நமது நாடு வடநாட்டானின் ஆதிக்கத்திலே, ஒரு ஸ்தல சுயாட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்கிற ஒரு பஞ்சாயத்து போர்டு எப்படி இருக்குமோ—அதுபோல் இருக்கின்றது. நம் மக்களுக்கு அரசாங்கத்திலே ஒரு உரிமையும் கிடையாது.

இன்று நமக்கு மந்திரி பதவிகள் கிடைக்கும் என்றால் அவை எதற்கு உதவும்? வடநாட்டானுக்கு நிபந்தனை இல்லாத கூலியாக இருக்கவும், சொத்து சுயநலத்திலே பூரண சுதந்திரமாக இருக்கவும்தான் உதவுமே தவிர, நம் நாட்டு மக்களின் நலத்திற்கு—முன்னேற்றத்திற்கு—பொருளாதார வளத்திற்கு என்ன சுதந்திரம் இருக்கிறது?

ஆகையினால், இந்த மாதிரியாக நம் நாட்டுக்கு இருக்கிற அடிமைத்தனம் நீங்கி, நியாயமான வரியை நாம் போடவும்—அதை நாமே நாட்டுக்குச் செலவழிக்கவும், நம் இஷ்டப்படி தொழில் செய்யவும், வியாபாரம் செய்யவும்—நம்நாட்டுச் செல்வம் வெளிநாட்டுக்குப் போகாமல் இருக்கவுமான சுதந்திரம் நமக்கு வேண்டும் என்கிறோம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்போல் உரிமை வேண்டும் என்றே கேட்கிறோம்.

இந்த நாட்டை வடநாட்டான் சுரண்டுகிறான் என்று கூறினால் அது தவறா? இந்த நாட்டிலே யோக்கியமில்லாவர்கள் அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்றார்கள் என்று கூறினால் அது தவறா? இந் நாட்டிலே இந்த நாட்டுப் பாதுகாப்புக்குப் பாடுபடும் போலீஸ்காரர்கள் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் கஷ்டப்பட்டுக் கஞ்சிக்கு வழியில்லாமல் தவிக்கின்ற போது மற்ற நாட்டு 'அகதி' மக்கள் இங்கு வந்து கொள்ளை அடிக்கிறார்களே என்று கூறினால் அது தவறா?

[சேலம் விக்டோரியா மைதானத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-7-1951]

இந்த நாட்டு வரிப்பணம் 100 கோடிக்கணக்காய் வடநாட்டுக்குச் சென்றால் அவர்கள் வயிறு வீங்குகிறதே, நம்முடைய வயிறு வாடுகிறதே என்று கூறினால், அது தவறா? இவைகளைச் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது? அல்லது, இவைகளுக்கு ஆக எங்களைத் தவிர வேறு யாராவது பாடுபடுகிறார்கள்; கவலைப் படுகிறார்கள் என்றாவது சொல்ல முடியுமா? சொன்னால் நாங்கள் அதை ஒப்புக்கொள்கிறோம்.

ஜின்னா செய்த மாதிரி இலட்சக்கணக்கான பேர்களின் தலை உருண்டால்தான் நமக்கு விடுதலை கிடைக்கும் என்ற நிலை வருகிறது. ஜின்னா, இதற்கு ஆக எத்தனை முஸ்லிம்களைப் பலி கொடுத்தார்? இதன் பிறகுதான் அவர்கள் நாட்டை அவருக்கு விட்டுக்கொடுத்தார்கள். அதேபோல், நாமும் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டால்தான் முடியும்போல் இருக்கிறது. எப்படியாவது நம் நாடு நம் கையில் வந்தால் ஒழிய நமக்கு நல்ல வாழ்க்கை இல்லை. இல்லையானால், என்றும் நாம் அடிமையாகத்தான் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

நம் திராவிட நாடாகிய சென்னை இராஜ்யமானது சுதந்திரத் தனி அரசு நாடாகப் பிரிந்து ஆகவேண்டும் என்பது திராவிட கழகத்தின் மூச்சு. இந்த மூச்சு நமக்கு இன்றல்ல, நேற்றல்ல, பார்ப்பன துவேஷத்தால் அல்ல, காங்கிரசுக்கு விரோதமாக அல்ல, சுதந்திரத்துக்கு எதிர்ப்பாக அல்ல. ஏனெனில், இன்றைய இந்த நாட்டின் சுதந்திர சுயேச்சை ஆட்சியானது திராவிட நாட்டுக்கு, திராவிட மக்களுக்கு வெள்ளை ஆரியன் ஆட்சியைவிடக் கொடுமையான, புராண கற்பனைகளில் ஆரிய ஆட்சிக் கொடுமைகளைவிட மோசமான மனு ஆட்சியாகவே இருந்துவருகிறது. வடிகட்டின மஞ்சள் ஆரியன் சர்வாதிகார ஆட்சியாகவே இருந்துவருகிறது. அரசியல், பொருளியல், கல்வி இயல், கலை இயல், மொழி இயல், கலாச்சார இயல், பண்பு இயல், சமய இயல், சமுதாய இயல் முதலிய எல்லா இயல்

களும் மஞ்சள் ஆரிய ஆதிக்க இயலாகவும், ஆரியர்களின் சுகபோக இன்ப வாழ்விற்காகவே அமைக்கப்பட்டதாகவும் இருந்துவருகிறது.

['விடுதலை'-தலையங்கம்—27-7-1951, 1-8-1951, 12-11-1952]

2. மொழிவாரிப் பிரிவினை ஏன்?

பெரியோர்களே! தோழர்களே!

முதலாவதாக, நாட்டுப் பிரிவினை என்பதைப்பற்றிப் பேசுகிறேன். பிரிவினை என்பது எதற்காக? ஒரு ஆட்சியின் கீழ் இருப்பவர்கள் பிரிந்து கொள்ள வேண்டும் என்பது எதற்காக? ஆட்சி நலத்திற்காகவா? ஒரே ஆட்சியில் எவ்வளவு பிரிந்தாலும் அந்த ஆட்சியின், அந்த ஆட்சிக் கொள்கையின் பயனைத்தானே அனுபவிப்போம்! இந்தப் பிரிவினையால் என்ன மாறுதல் நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தமுடியும்?

ஒரு குடும்பம் பிரிந்துகொள்ள வேண்டுமானால் பிரிந்துகொள்ள ஆசைப்படுபவர்கள் எதற்காக ஆசைப்படுகிறார்கள்? பிரிந்து போனால் ஏதோ நம் இஷ்டம் போல நலம் அனுபவிக்கலாம் என்பதுதானே கருத்து. மற்றபடி, அப்படிக்கு இல்லாமல் இவன் பயிர் செய்தால் உழவேண்டி இருக்கிறது; தண்ணீர் பாய்ச்சவேண்டி இருக்கிறது. பிரிந்து போனால் உழாமல், தண்ணீர் பாய்ச்சாமல் வெள்ளாமை எடுக்கலாம் என்பதற்கு ஆகவா? வெறும் சுயநலம் தவிர இந்தப் பிரிவினைக்கு அர்த்தமே இல்லை. பிரிந்து வேறு எந்த ஆட்சியில், எந்த ஆட்சிக் கொள்கையின் கீழ் இருக்கப் போகிறார்கள் இவர்கள்? மத்திய ஆட்சியில்—மத்திய ஆட்சி அரசியல் திட்டத்தின் கீழ்தான் வாழவேண்டும்.

பிரிந்தவர்களுக்குப் 'பார்லிமெண்ட்' டில்லியில்தான்; முதல்மந்திரி பண்டித நேரு தான்; குடியரசுத் தலைவர் இராஜேந்திர பாபுதான்—இது இன்று மாத்திரமல்ல—இந்தப் பிரிவினை உணர்ச்சி 1921-லேயே ஏற்பட்டதாகும்.

ஏன்? காங்கிரஸ் கிளர்ச்சியால் சில அதிகாரம் பதவி ஆதிக்கம் ஏற்படும் என்கின்ற எண்ணம் அதில் அக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் தெரியும். அப்போது கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் படித்தவர்களில் பலர். அதிகாரம், பதவி வந்தால் சிலருக்குத்தான் வாய்ப்பு ஏற்படும். அதற்காகச் சிலர் எதிர்பார்க்கிறார்கள்; அதற்கு என்ன செய்வது என்ற எண்ணம் பலருக்குத் தோன்றியது. அதற்காகப் பிரிவினை கோரினார்கள். அப்படிப் பிரிந்தால் பல கவர்னர்கள், பல மந்திரிகள், பல முதல் மந்திரிகள் ஏற்படுவார்கள் என்று கருதி, அந்தப் பிரிவினைக்குக் காரணம் என்ன சொல்லுவது என்று யோசித்து—அதற்கு ஆசைப்பட்ட தலைவர்களும், பலமொழி பேசுபவர்களாக இருந்ததால் 'மொழிவாரி நாட்டுப் பிரிவினை' என்று பிரிந்தால் அந்தந்த மொழித் தலைவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதி, 'மொழிவாரி மாகாணம்' என்றும் பெயர்வைத்து, அப்போதே இந்தியாவை 20 மாகாணங்களாக்கி, இருபது காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் செகரட்டரிகள், முதலியவர்கள் தலைமையை ஏற்படுத்திப் பிரித்துக்கொண்டார்கள்.

அவற்றுள் ஒன்றுதான் எனக்குக் கிடைத்தது. நானும் முதலில் செகரட்டரிஆகி பிறகு தலைவனும் ஆனேன். அப்போதே என்னைப் புகழ்பவர்கள் 'நாயக்கரே! நமக்கு சுயராஜ்யம் வந்தால் நீங்கள்தான் சென்னை (தமிழ்நாடு) கவர்னர்' என்று சொல்லுவார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அந்தப் பிரிவினை உணர்ச்சிக்குக் காரணம் பதவி, சுயநலம் ஆகிய இரண்டேதான்; வேறு ஒன்றுமே இல்லை என்பதைத் தெளிவு படுத்தவேதான்.

இனி, 'மொழிவாரி' என்பதைப் பற்றிச் சில சொல்லுகிறேன். மொழியின்மீது ஒரு நாடு எதற்காகப் பிரியவேண்டும்? சாதியின்மீது, மதத்தின்மீது, இனத்தின்மீது பிரிவது

என்றால் அதற்கு அர்த்தம் உண்டு. ஏனெனில், அவை ஒவ்வொன்றுக்கும் மாறுபட்ட, பொருத்தமற்ற, ஒற்றுமையற்ற கொள்கைகள் திட்டங்கள் உண்டு. அவைகளால் இலாப நஷ்டம், சாதக பாதகம் அடைபவர்கள் இருப்பார்கள். அவர்கள் இலாபத்தைப் பெருக்கவோ, கஷ்டத்தைக் குறைக்கவோ தாங்கள் 'மெஜாரிட்டி'யாய் இருக்கும் நாட்டைப் பிரித்துக்கொண்டால் நல்லது என்று ஆசைப்படுவார்கள், இது இயற்கை.

மொழிகளில் அப்படிக் கொள்கையோ, திட்டமோ, அனுபவமோ, கலாச்சாரமோ—பழக்க வழக்கமோ மாற்றமாய் இருக்கும்படி நமக்குள் எந்த மொழியுமே இல்லை. மொழியினால் பெருமை, சிறுமை, இலாப நஷ்டம் ஒன்றுமே இல்லை. ஆதலால், இதைக் காரணம் காட்டிப் பிரித்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. 'பிரிவினை கூடாது; பேதம் கூடாது; சாதி, மத, வகுப்பு பேதமற்ற தேசியவாதிகள், தியாகிகள் நாங்கள்' என்று பேசுகிற காங்கிரசாருக்கு அல்லது சர்க்காருக்கு மொழிக்காகப் பிரியவேண்டும் என்பதும், மொழிக்காகப் பிரிக்கவேண்டும் என்பதும் சுயநலமல்லாமல் இதில் பொதுநலம் என்ன என்று கேட்கிறேன்.

அப்படித்தானாகட்டும்; மொழிக்காகப் பிரிவதை ஒப்புக்கொள்வதானாலும் நம்மில் இப்போதுள்ள சென்னை இராஜ்யத்தில் பிரிக்கப்படவேண்டிய அளவுக்கு என்ன வேறு வேறு மொழிகள் இருக்கின்றன? இந்திக்கும் இந்துஸ்தானிக்கும் உள்ள பேதம் அளவு கொண்ட பிரிவினை மொழிகூட நம்மிடம் இல்லையே! சென்னை இராஜ்ய மொழி என்ன? எது, எது? எத்தனை? ஒன்றுமில்லையே! ஒரே ஒரு மொழிதானே இருக்கிறது; அதுவும் தமிழ்தானே! உள்ள மக்களில் 100-க்கு 90 பேர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தாமே! ஒரு மொழிக்கு சென்னை இராஜ்யத்தில் நான்கு பெயர்கள் வழங்குகின்றன. அவை முறையே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று சொல்லப்படுகின்றன. இதற்குக் காரணம், ஒருவருக்கொருவர் சம்பந்தமற்ற—சுலபத்தில் போக்குவரவுக்கு வசதியற்ற காலத்தில் தனித்தனியாக வாழ்ந்த கூட்டங்கள் பேசிய தமிழ்மொழியை, நிலத்தை உத்தேசித்து, சீதோஷ்ண நிலைமையை உத்தேசித்து, ஆங்காங்குள்ள தெனிவை உத்தேசித்து, தமிழை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக உச்சரித்த உச்சரிப்பு பேதம் தானே இன்றைய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமாக மாறிவிட்டன! நான் இதைப்பற்றி 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பேசி இருக்கிறேன்; பத்திரிக்கைகளில் எழுதி இருக்கிறேன்; சவால் விடுத்திருக்கிறேன்.

இந்த விளக்கத்திற்காக இந்தக் கூட்டத்தையே பயன்படுத்திக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. உதாரணத்திற்காகச் சிலவற்றை மட்டும் சொல்லுகிறேன். தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளுடைய வயது என்ன என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த எழுத்துக்கள் எப்போது எப்படி ஏற்பட்டன என்று உங்களுக்குத் தெரியாதா? வயது ஒரு பக்கம் இருக்கட்டும். சொற்களை எடுத்துக்கொள்வோம். தமிழுக்கும், தெலுங்கு முதலிய வற்றிற்கும் சொற்களில் என்ன மாறுதல் இருக்கின்றன? இப்பொழுதும் சவால் விடுகிற தன்மையிலே பேசுகிறேன். மலையாளியோ, தெலுங்கரோ, பண்டிதர்களாய் இருப்பவர்கள் விளக்கட்டும்; ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

தோழர்களே! தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்கின்ற மொழிகளை எடுத்துக் கொண்டு அவைகளிலுள்ள வடமொழி முதலிய அன்னியமொழி, சார்பு நாட்டு மொழி முதலியவைகளை அடியோடு நீக்கிவிட்டு, மீதமுள்ள மொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றில் தமிழ் அல்லாத மொழிச் சொற்கள் எவ்வளவு இருக்கின்றன என்று யாராவது கணக்குச் சொல்லட்டுமே, பார்ப்போம்! சுத்த மலையாளம், சுத்தக் கன்னடம், சுத்தத் தெலுங்கு என்று ஒரு பத்துச் சொற்களையாவது காட்டக்கூடியவர்கள் இருக்கிறார்களா? இதுவரையில் யாராவது காட்டினார்களா—இதுதான் சுத்தத் தெலுங்கு என்று; இதுதான் சுத்தக் கன்னடமென்று; சுத்த மலையாளமென்று! தமிழிலேயே இசைப்பாட்டுக்கள் இருக்க

வேண்டுமென்று நான் போராட்டம் துவக்கிய காலத்தில் நான் ரூ. 2-8-0 கிரயம் போட்டு, தியாகராஜ கீர்த்தனை என்ற புத்தகத்தை விலைக்கு வாங்கி, ஒரு கீர்த்தனையிலாவது 50% (விகிதத்துக்கு) குறைந்த தமிழ் வார்த்தைகள் இருக்கின்றனவா, காட்டுங்கள் பார்ப்போம் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் காட்டிக் கேட்டிருக்கிறேன்.

தமிழ், தெலுங்கு முதலிய சொற்களில் என்ன பேதம் இருக்கின்றன? வீடு என்று எடுத்துக்கொண்டால் தெலுங்கில் 'இல்' என்பான்; கன்னடன் 'மனை' என்பான்; மலையாளி 'பொறை' அல்லது 'உள்' என்பான். இதில் எது தமிழ் அல்லாதது?

தண்ணீரை எடுத்துக்கொண்டால் தமிழன் தண்ணீர் என்பான்; தெலுங்கன் 'நீள்' என்பான்; கன்னடியன் 'நீரு' என்பான்; மலையாளி 'வெள்ளம்' என்பான்; இதில் எது தமிழ் அல்லாதது?

சோற்றை எடுத்துக்கொண்டால் தெலுங்கன் 'வன்னம்' என்பான்; கன்னடியன் 'அன்ன' என்பான்; மலையாளி 'ஊணு' என்பான்; இல்லாவிட்டால் 'சோறு' என்பான்; இதில் எது தமிழ் அல்லாதது?

சேலையை எடுத்துக்கொண்டால், தமிழன் 'சீலை' என்பான். தெலுங்கன் 'சீர' என்பான்; கன்னடியன் 'சேலே' என்பான்; மலையாளி 'முண்டு' அல்லது 'வேட்டி' என்பான். இதில் எது தமிழ் அல்லாதது?

மற்றும் நான், நீ, எனக்கு, உனக்கு, வா, போ முதலிய சொற்களையும் எடுத்துக் கொண்டால் என்ன பேதம் காணமுடியும்?

உதாரணமாக, தமிழன் எனக்கு, உனக்கு என்கிறான்; தெலுங்கன் நாக்கு, நீக்கு என்கிறான்; கன்னடன் நதிக்கே, நிதிக்கே என்கிறான்; மலையாளி எனிக்கி, உனிக்கி என்கிறான்; இங்கேயே பல தமிழர்கள் நேக்கு, நோக்கு என்கிறார்கள்; இதில் எது தமிழ் அல்லாதது? என்ன பெரிய வித்தியாசம்? இந்த வித்தியாசத்துக்காக ஒரு நாடு பிரிய வேண்டுமானால், அதுவும் சிறிதும் பேதமல்லாத ஆட்சிக் கொள்கைகளிலிருந்து பிரிய வேண்டும் என்றால், இதில் நாணயமான, யோக்கியமான காரணம் ஏதாவது இருக்க முடியுமா? பிரிகிறவர்கள் நாட்டைப் பிரித்துக்கொண்டு என்ன கொள்கையை மாற்றிக் கொள்ளப் போகிறார்கள்? நமது நாட்டில் அரசியல் வாழ்வில் கலந்தவர்கள் பெரிதும் பதவியையும் சொந்த சுயநலத்தையும் இலட்சியம் கொண்ட மக்களாகப் போய்விட்டதால், இம் மாதிரியான சூழ்ச்சிகரமான காரண காரியங்களுக்கு நம்நாடு ஆளாக வேண்டியதாகப் போய்விட்டது!

தவிர, இந்தப் பிரச்சினைகள் தனிப்பட்ட மக்களின் சுயநலப் பிரச்சினை என்பது ஒருபக்கம் இருந்தாலும், நமது சர்க்காரின் தலைமையில் இருப்பவர்களுடைய சுயநல உணர்ச்சி காரணமாகவே இந்தப் பிரிவினைப் பிரச்சினைகள் இப்போது பொதுமக்களிடை யில் பெரிய விவாதத்துக்கு உரிய பிரச்சினைகளாகப் போய் விட்டன. எதற்கு ஆக நமது மத்திய சர்க்கார் இந்தப் பிரச்சினையை இதுவரையில் தீர்க்காமல் விட்டுக்கொண்டிருந் தார்கள்? இதற்கு நாணயமான காரணம் ஏதாவது சொல்லமுடியுமா?

பிரிவினை, ஆந்திரா—தமிழ்நாடு என்பதுபற்றி 1921-லேயே முடிந்து விட்டது. அதனுடைய எல்லைகளும் அப்போதே தீர்ந்துபோய்விட்டன. இன்றைக்கு 30 வருஷங் களாக அனுபோக பாத்தியதைகளும் ஏற்பட்டுவிட்டன. இந்த 30 வருஷங்களாக எல்லையி லேயே தமிழனோ, தெலுங்கனோ காங்கிரசை, அனுபோகத்தை எதிர்த்தவர்களும் இல்லை. யாராவது எதிர்த்தார்கள் என்றால் காரியம் நடப்பதற்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்பவர்கள் எதிர்த்தார்களே தவிர, மாற்ற வேண்டும் என்பவர்கள் எதிர்க்கவே இல்லை. தமிழர்களில்தான் ஆகட்டும், இன்றைய தினம் தமிழ்நாடு எல்லைக்குப் போராடுகிறோம்

என்று வருகிறார்களே, வீரர்கள்—இவர்கள் இந்த 20, 30 வருடகாலமாக என்ன செய்தார்கள்? இன்றைய தினம் சிலர் தங்கள் விளம்பரத்துக்கு, பிழைப்புக்கு ஒருவகை செய்வது போன்ற சுயநலன்களுக்குக் கூப்பாடு போடுகிறார்களே தவிர, 'குமரி முதல் வேங்கடம்வரை' என்கிற அறிவு இன்றைக்கு வருவானேன்?

இந்தப் பேச்சை இன்றைக்குத்தானே காண்கிறோம்! காங்கிரசார் பிரித்து 30 வருடமாய் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பிரிவினையில் கலந்துகொண்டு கூப்பாடு போடுபவர்களில் ஒருவரும் அந்தக் காலத்தில் பேசினவர்களல்லர். அதற்கப்புறம் 20 வருஷங்களிலும் பேசினவர்களும் அல்லர். அனாவசியமாக—காரணம் இல்லாமல், இருந்துவருகிற அமைப்போடு போராடுவது நியாயமல்லவென்றே கருதுகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் பதவிக்கு வந்தவுடன் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டியது அவர்களுடைய யோக்கியமான கடமை. அவர்கள் இவ்வளவு நாள் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததன் காரணம், பதவியில் உள்ள சிலரின் சுயநலக் காரணமான சூழ்ச்சியே தவிர வேறு இல்லை. ஆந்திரர், தமிழர்கள் கலவரத்தினால் சில வசதிகள் செய்துகொள்ளலாமென்று மத்திய அரசாங்கத் தலைவர்கள் நினைத்தார்கள்; நினைக்கிறார்கள். ஆந்திரர்களும் தங்களுக்கு வாய்ப்பு, பதவிக்கு வசதி ஏற்படுகிற நேரத்தில் பிரித்துக்கொள்ளலாமென்று கருதி அதுவரையில் அழிவழக்கு செய்யலாமென வழக்காடுகிறார்கள்.

பிரிவினைக்குப் பெயர் மொழிவாரி நாட்டுப் பிரிவினை; இதில் பிரிந்துபோக வேண்டுமென்று வாதாடுகிறவர்கள் மொழியை ஆதாரமாகக் கொண்டுதானே பிரிவினை கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, வேறு மொழி 100-க்கு 69, 70, 80 வீதம் பேசுகிற மக்கள் உள்ள நிலையைத் தங்கள் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கேட்பது எப்படி யோக்கியமாகும்? அல்லது, இந்தப் பிரிவினைக்கு, 'மொழிவாரி மாகாணப் பிரிவினை' என்றாவது எப்படிச் சொல்லமுடியும்?

இந்த அழிவழக்குக்குக் காரணம், ஆந்திரர்கள் மாத்திரமே அல்லர்; அதிகப் பங்கு மத்திய அரசாங்கத்தாருக்கே உண்டு. ஆந்திரருக்கு ஒரு கஷ்டம்—ஏதோ சில வசதிகள் போய்விடுகின்றனவே என்ற ஒரே கஷ்டம்தான். மத்திய அரசாங்கத்துக்கு இரண்டு விதமான கஷ்டங்கள். என்னவென்றால், மத்திய அரசாங்கத்தை விட்டுப் பிரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி தமிழ்நாட்டில் இருக்கிறது. இவர்களைத் தனிப்படுத்தி விட்டால் கிளர்ச்சி வலுத்துவிடுமே என்கிற பயம். ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் பலமும், காங்கிரஸ் எதிரிகள் பலமும் அதிகம். இவர்களைத் தனியாகப் பிரித்தால் அங்கு காங்கிரஸ் ஆட்சிக்கு இடமிருக்காதே என்ற பயம். எனவே, கலகத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்ய வேண்டியதெல்லாம், மத்திய அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு வசதி செய்துகொள்ள வேண்டியதுதான்.

நிற்க. ஒரு சங்கதியைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். பிரிவினையின் காரணமாக நம்மிடையில் உரிமை விவகாரம் ஒன்றும் இல்லை. அதாவது, ஆந்திரர்கள் இப்பொழுது அனுபவித்து வருவதற்கு மேலாகக் கேட்பது என்பதற்குக் காரணம் வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், ஆந்திரர்களே ஒரே குரலாக எல்லோரும் இப்போது அனுபவிப்பதற்கு மேலாக எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை என்று சொன்ன பிறகு—நமக்கு விவகாரமேது? அப்படிக் கேட்டாலும், நமக்கு ஆட்சேபம் இல்லை. எந்த அளவில் என்றால், ஆந்திர மொழி பேசுகின்ற மக்களை மெஜாரிட்டியாகக் கொண்ட பகுதிகளை ஆந்திர நாட்டோடு சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபமில்லை. தமிழ்மொழி பேசும் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட நாட்டை ஆந்திராவோடு சேர்க்க வேண்டும் என்பது எப்படி, 'மொழிவாரி மாகாணப் பிரிவினை' என்று சொல்லமுடியும்?

அடுத்தார்போல், அதுபோலவே இன்றைய அனுபவத்தில் தமிழ்மொழி அதிகமாகப் பேசும் மக்களின் பிரதேசம் ஆந்திர நாட்டிலே சேர்ந்தாலுங்கூட, அவர்களுக்கு மொழிவாரிப் பிரதேச உரிமையை உத்தேசித்து எந்த நிமிஷத்திலும் விலகிக்கொள்ள கிளர்ச்சி செய்ய உரிமை உண்டு. அதை நாம் மறுக்கவில்லை; நம்மாலான உதவி செய்யவும் தயாராக இருக்கிறோம். ஆனால், நம்முடைய சொந்தப் பிழைப்பையோ, சுயநலத்தையோ, விளம்பரத்தையோ, கட்சி நலத்தையோ உச்தேசித்து, இன்றைக்குத்தான் இந்தச் சங்கதி தெரிந்ததுபோல் பாவனை காட்டிக் கொண்டு கூத்தாட நமக்கு இஷ்டமில்லை. இது ஏதோ ஒரு அளவில் முடிவுபெறப்போகிற காரியத்தைத் தொல்லைப்படுத்துவதே ஆகும் என்று கருதுகிறேன்.

யோக்கியமான சர்க்காராய் இருந்தால், மொழிவாரிப் பிரதேச அமைப்பு என்பதின் பேரால் செய்யும் எந்தக் காரியத்தையும் இதில் ஜனநாயகம் இருக்கிறதா? பெருவாரியாக தெலுங்கு மொழி பேசுகிற பிரதேசத்தைத்தான் நாம் சேர்க்கிறோமா? அல்லது பெருவாரியாகத் தமிழ் பேசுகிற மக்களைச் சேர்க்கிறோமா? என்பதைச் சிந்திக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். அதில் அவர்கள் தவறுவதை நியாயத் தவறு என்று சொல்ல முடியாது; நாணயத் தவறு என்றேதான் நான் சொல்லவேண்டியிருக்கிறது.

மொழிவாரிப் பிரதேசப் பிரச்சினையின் தன்மை இவ்வாறு இருக்க, இனி மற்ரப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்போம். அவை ஆந்திர இராஜ்யத்தின் தலைநகர் சென்னையில் இருக்கவேண்டும் என்பதும்; பொது கவர்னர், பொது அய்க்கோர்ட் இருக்க வேண்டும் என்பதும்; சிறிது காலத்திற்காவது ஆந்திர அரசாங்கக் காரியாலயம் சென்னையிலேயே இருக்க வசதியளிக்கவேண்டுமென்பதும்; இவை ஒன்றுமே முடியாவிட்டால் சென்னையைத் தனி இராஜ்யம் ஆகச் செய்து அது ஆந்திராவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சம்பந்தமில்லாத, டெல்லியைப் போன்ற ஒரு கமிஷனர் இராஜ்யமாக ஆக்கவேண்டுமென்றும் கேட்கப்படுபவைகளாகும்.

இவைகளைப் பார்க்கும்போது, ஆந்திரர்களுக்கு இந்த விஷயங்களில் பொறுப்புள்ளதும் குறிப்பிட்டதுமான ஒரு யோசனையோ, இலட்சியமோ இல்லை என்பதாகவே தெரியவருகிறது. ஆந்திராவின் தலைநகரம் சென்னையில் எதற்காக இருக்கவேண்டும்? இப்போது ஆந்திர நாடு அமைப்பு என்கிற பிரச்சினை ஒரு விடுதலைப் பிரச்சினையேயொழிய, பாகப் பிரச்சினை அல்ல. எப்படியெனில், சென்னை இராஜ்யம் 4 மொழிவாரிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நாலில் ஒன்றுதான் ஆந்திரா. இப்பொழுது ஆந்திராதான் மற்ற மூன்றையும் விட்டு விலகிக்கொள்கிறது. ஆகவே, இந்த விலகிக்கொள்ளுதல், சென்னை இராஜ்யத்திலிருந்து விடுதலை பெறுதல் என்பது அர்த்தமாகும். விடுதலை செய்துகொண்டு போகிறவர்கள், விடுதலை செய்துகொண்டு போகவேண்டுமே தவிர, மறுபடியும் ஒன்றாக இருக்க வசதி கேட்பது பொருத்தமற்ற காரியமாகும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பிடிக்காமல், ஒருவர் வெளியேறுகிறேன் என்று சொல்லிவிட்டு, அதே அடுப்பிலே நானும் சமையல் செய்துகொள்ளுகிறேன் என்றால் அது கலகத்துக்கு வசதி செய்வதாகுமே தவிர—வாழ்க்கைக்கு வசதியாகாது. அன்றியும், ஒரு இராஜ்யத்திற்குள்ளாக இன்னொரு இராஜ்யத்தின் தலைநகரம் இருப்பது நிர்வாகத்துறையில் நிர்வாகக் குறைவும், இராஜதந்திரக் குறைபாடும் ஏற்படும்.

அதுபோலவே, பொது கவர்னர், பொது அய்க்கோர்ட் இருப்பது என்பதும் அரசியல் சட்டப்படி அனுமதிக்க முடியாததாகும். வேறு வழியில் அனுமதி ஏற்படுத்திக் கொள்ளுவதானாலும் வீண் போட்டிக்கும், நிர்வாகக் கேட்டுக்கும் இடமாகும். சில நாளைக்காவது சர்க்கார் நிர்வாகக் காரியாலயம் சென்னையில் இருக்கவேண்டும் என்று விரும்புவதும் அர்த்தமற்றதேயாகும். இவைகளையெல்லாம் ஒன்றாகவோ—ஒன்றிலேயோ இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் எதற்காகப் பிரியவேண்டும் என்று கருதுகிறார்கள்

என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதாவது ஒரு வகையில் தொல்லை ஏற்படும்படி செய்ய வேண்டும், அல்லது, தந்திரமான வழியில் ஆக்கிரமிப்புச் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தவிர, வேறு உண்மையான எண்ணம் ஒன்றும் இருக்கமுடியாது என்பதுதான் எனது கருத்து.

உண்மையிலேயே, இந்த ஸ்தாபனங்களுக்குப் பிரிக்கப்படும் ஆந்திர இராஜ்யத்தில் இன்று இடமில்லை என்று கருதுவார்களேயானால், ஆந்திரப் பிரிவினை உணர்ச்சி ஏற்பட்ட இந்த 30 வருஷ காலமாக இவர்கள் என்ன செய்தார்கள்? சமீபத்தில் சுமார் 20 வருஷமாகக் கிளர்ச்சி இருந்தும், பிரிந்துகொண்டால் தங்கள் நாட்டு நிர்வாகத்துக்கும், நீதி ஸ்தலத்துக்கும் இடமில்லை என்று இன்று சொல்லுவது இவர்களுக்கு வெட்கக்கேடாக இல்லையா? இன்னமும் தலைநகரையே இன்ன இடத்தில் என்று நிர்ணயிக்காத இவர்கள் இனி என்றைக்கு நிர்ணயிக்கப் போகிறார்கள்? இந்தமாதிரியான காரியங்களுக்கு ஆந்திர இராஜ்யத்தில் இடமில்லை என்று சொல்லமுடியுமா? ஜமீன்தார்கள் அரண்மனைகள் பல இருக்கின்றன; இவை தவிர சினிமா மண்டபங்கள் பல இருக்கின்றன. இவைகளில் ஏதோ சிலவற்றைப் பிடித்துக்கொண்டால், கைப்பற்றிக்கொண்டால் நாளைக்கே எந்தவிதமான கோர்ட்டும், காரியாலயமும் வைத்துக்கொள்ள முடியும். மற்றும், ஆந்திர ஜில்லாக்களில் ஒவ்வொரு ஜில்லாக்காரரும் தங்கள், தங்கள் ஜில்லாக்களிலே, நகரங்களிலே நிர்வாகக் காரியாலயம், அய்க்கோர்ட் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதனால் ஆந்திர நாட்டில் காலி இடங்களுக்கு ஏராளமாக விலையுயர்ந்துவிட்டதாகவும் தெரிகிறது. ஆகவே இடத்துக்கும், கட்டடத்துக்கும் யாரும் கவலைப்படவேண்டியதில்லை. அதுபோலவே, பொது கவர்னர் வேண்டுமென்பதும் தேவையில்லாதது ஆகும். கவர்னர்களுக்கா இப்போது பஞ்சம்!

இவைகளை யெல்லாம்விட நாம் கவனிக்கவேண்டிய சங்கதி ஒன்று இருக்கிறது. ஏதோ காரணம் சொல்லி நாம் இவர்களை உள்ளே இருக்கச் சம்மதிப்போமேயானால், பிறகு இவர்களை எப்படி வெளியேற்றுவது? அதற்கு என்ன சட்டம் இருக்கிறது? ஆகவே, இந்தப் பிரச்சினைகள் பெரும் தொல்லைக்கு இடமான பிரச்சினைகளேயாகும்; இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதே எனது கருத்து.

இனி, சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்குவது என்பது எதற்கு ஆக? ஆந்திரர்களுக்கு இதன் அவசியம் ஏன்? ஒரு இராஜ்யத்தைப் பிரிப்பதும், வேறு இராஜ்யம் ஆக்குவதும், மற்றும் ஒன்றோடொன்று சேர்ப்பதும் அந்த இராஜ்யத்தாருடைய விருப்பத்தைப் பொறுத்ததே ஒழிய, அந்த இராஜ்யத்தார் அல்லாதவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்ததா? ஆந்திர நாடு பிரிந்தது என்றால் ஆந்திரர்கள் சென்னையை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றே அர்த்தம். வெளியேறினவர்களுக்கு இந்த இராஜ்யத்தைப்பற்றிப் பேச என்ன உரிமை? 'மடத்தை விட்டு வெளியேறின ஆண்டிக்கு நந்தவனத்தைப்பற்றிய கவலை ஏன்?' என்று சொல்வதுபோல, சென்னையைப்பற்றி யோசனை கூற இவர்கள் யார்? தமிழ்நாட்டாராவது, சென்னை நகரத்தாராவதுதான் இதைப்பற்றிப் பேச உரிமை உள்ளவர்கள்.

ஒரு சமயம் மத்திய சர்க்காருக்கு இது விஷயத்தில் அதிகாரமிருக்கிறது என்றாலும்— அவர்கள், தமிழ்நாட்டு மக்கள் விருப்பப்படியும், சென்னை நகர மக்களின் விருப்பப்படியும் தான் செய்யக் கடமைப்பட்டவர்களே ஒழிய தாங்களாகவே ஒன்றும் செய்ய உரிமையற்றவர்களே ஆவார்கள்.

இந்த விஷயங்களைப்பற்றி யெல்லாம் ஆந்திரா இராஜ்யத்தார் பேசுகிறார்கள் என்றால், இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசாங்கத்தின் வழவழாத் தன்மையேயாகும்; அல்லது தந்திரமேயாகும்.

இதற்கெல்லாம் மற்றொரு காரணம் என்னவென்றால், தக்க யோசனையும் கிடையாது பலமும் கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் காரியத்தில் நாம் ஏதாவது போராட வேண்டி இருக்குமானால் அது கண்டிப்பாக மத்திய அரசாங்கத்தோடுதான் போராடவேண்டி இருக்கும். அதற்காக இன்றைய தினம் மத்திய அரசாங்கத்துக்கு ஒரு சரியான எச்சரிக்கைத் தீர்மானம் செய்து அனுப்பவேண்டும்.

அவர்களுக்கு ஆதிக்கம் செலுத்த ஆசை இருக்கிறதேயொழிய, அதைக்கொண்டு தங்கள் தனிப்பட்ட சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ள முயற்சி இருக்கிறதே தவிர, ஒழுங்கு முறையான—கெட்டிக்காரத்தனமான ஆட்சி செலுத்தத் தகுதியோ அனுபவமோ சிறிதும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன் மேயர் வீட்டில் நடந்த சர்வ கட்சிக் கூட்டம் என்பதிலும் நான் பேசியபோது இதையே சொல்லியிருக்கிறேன். அதாவது, 'இந்தப் பிரிவினையில் ஏற்படுகிற தொல்லைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தாலும், மத்திய அரசாங்கத்தில் செல்வாக்கு உடையவர்களாலும் ஏற்படுகிற தொல்லைகளே தவிர, வேறு ஆந்திர மக்கள் தொல்லை அல்ல. ஆதலால், இதே சமயத்தில் தமிழ்நாட்டின் நிலைமை இன்னதென்றும், தமிழர் விருப்பம் இன்னதென்றும் தெரிவித்துவிடவேண்டியது அவசியம் என்றும்; அந்தப்படி நடக்காதபட்சம் தமிழர்களுடைய அதிருப்திக்கு மத்திய அரசாங்கம் ஆளாக வேண்டிவருமென்றும் ஒரு தீர்மானம் போட வேண்டும்' என்றும் சொன்னேன்.

பிரிவினை விஷயத்தில் என் கருத்து உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூரண விடுதலை, பிரிவினை வேண்டும் என்பவன் நான். அந்த அளவில் எவ்வளவு எல்லை குறைத்துக் கிடைத்தாலும் கவலை இல்லை என்று சொன்னவன் நான். இன்று காலையிலுங்கூட டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்களிடம், 'எனக்குச் சென்னை நகரம் முக்கியமல்ல; அன்னியன் ஆதிக்கமற்ற, அன்னியன் சுரண்டலற்ற பூரண சுயேச்சையுள்ள பிரதேசம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதுதான் தேவை' என்று சொன்னேன். 'ஒரு சமயம் சென்னைபோய்விடுமானாலும் நான் ஒன்றும் அதிகமாகக் கவலைப்பட மாட்டேன்' என்றும், 'சென்னை ஒழிந்து போனால் பாக்கி உள்ள தமிழ் நாட்டை என் இஷ்டம்போல ஆக்கி நாளைக்கே பூரண விடுதலை பெற்ற பிரதேசமாக ஆக்க விளம்பரம் செய்துவிட முடியும்' என்றும் சொன்னேன். ஆனால், 'நான் விஸ்தீரணத்துக்காகப் போராடுகிறவன் அல்லன்; சுதந்திரத்திற்காகப் போராடுகிறவன் என்றாலும் இதில் ஏன் சம்பந்தப்படுகிறேன் என்றால்—மொழிவாரி என்று சொல்லிக்கொண்டு போகிறவர்கள் மொழிவாரியாகவும் பிரித்துக்கொண்டு, மொழி அல்லாத நாட்டிலும் ஆதிக்கம் செலுத்தப்பார்க்கிறார்களே என்ற ஒரே கருத்துத்தானே அல்லாமல், மற்றபடி சென்னை நகரம் தமிழருக்கோ, தமிழ் நாட்டுக்கோ பெரிய தொண்டு செய்திருக்கிறது—செய்து வருகிறது, அல்லது செய்ய முன்வரும் என்பதற்கு ஆக அல்ல' என்றும் சொன்னேன்.

'மற்றும் இவை ஒரு பக்கம் இருந்தாலும், நாம் பிரயத்தனப்படாவிட்டால் சென்னை நகரம் ஆந்திரர்களுக்குப் போய்விடுமோ என்கிற கவலை சிறிதும் வேண்டியதில்லை. ஏனெனில், அனேகமாகத் தமிழ்நாட்டுப் பிராமணர்கள் சென்னையில்தான் வாழ்கிறார்கள். அவர்கள் ஒருநாளும் சென்னை ஆந்திராவுடன் சேரவோ, தனி மாகாணமாக ஆக்கவோ சம்மதிக்கமாட்டார்கள். அவர்கள் இதில் வெற்றி பெற்றே தீருவார்கள். ஆதலால், நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை' என்று இன்று காலையில் சொன்னேன். மற்றும், இது விஷயமாக என்னிடம் பேசவந்த பாரிடத்திலும் இந்தப்படியே பேசியிருக்கிறேன். அதற்காக அவர்கள் என்னிடத்தில் அதிருப்தி கொண்டதாகவும் சாடை காட்டினார்கள்.

[ராயப்பேட்டை லட்சுமிபுரத்தில், 5-1-1953-ல் தலைமையுரை—'விடுதலை' 7-1-1953, 8-1-1953]

3. தட்சணப் பிரதேச அமைப்பு

இன்று தமிழ் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பது தட்சணப்பிரதேசம் அமைப்பது என்பதே ஆகும். இது தமிழ்நாட்டைப் பொறுத்த விஷயம் என்பதாக மாத்திரம் இருக்குமானால் இதற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் இருக்காது என்பதோடு, எல்லைப் பிரச்சினைக்குப் பிற்பட்டதாகவே ஆகியிருக்கும்.

எல்லைப் பிரச்சினை தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் மாத்திரம், நிலப்பரப்பு—இன உணர்ச்சி ஆகியவைகளை முக்கியமாகக் கொண்ட பிரச்சினையாக இருப்பதுபோல் இருக்கலாம். ஆனால், தட்சணப் பிரதேசம் அப்படிக்கு இல்லாமல்—மலையாளம், தமிழ் நாடு என்பதாக மாத்திரம் இல்லாமல், இந்தியப் பொது அரசியல் தத்துவத்தையும் சேர்த்து அரசியல் ஆதிக்கத்தில் இருக்கும் சிலரின் சுயநலத்தையும், பொதுவாகப் பார்ப்பனர்களின் அடிப்படை நலத்தையும் சேர்த்துப் பிணைத்துக்கொண்டிருப்பதாக இருப்பதால் தட்சணப் பிரதேசப் பிரச்சினை மிகமிக முக்கியத்துவம் கொண்டதாக இருந்துவருகிறது. இந்தப் பிரச்சினைக்கு, அதாவது தட்சணப் பிரதேச அமைப்புக்குத் தமிழ் நாட்டு மக்கள் 100-க்கு 90 பேர் இஷ்டப்படாதவர்களாகவும், எதிர்ப்பாளர்களாகவும் இருந்தாலும் தமிழர்களுக்கு நாட்டுப்பற்று, இனப்பற்று என்பது தங்கள் தங்கள் சுயநலத்தைவிடப் பிற்பட்டதாயிருப்பதாலும், தங்களில் ஒற்றுமை உணர்ச்சி இல்லாமல் இருப்பதாலும் மெஜாரிட்டி பலம் சரியானபடி பயன்படுவதற்கு இல்லாமல் போயிருக்கிறது.

உதாரணமாக, சென்ற 20-ந் தேதி தமிழ்நாட்டில் நடந்த கடை அடைப்பு ஆகிய காரியங்கள் எந்த அளவுக்கு நடந்திருந்தாலும், அதை நடத்த முற்பட்டவர்கள் என்பவர்கள் கட்டுப்பாடாகவோ, அந்தரங்க ஒற்றுமையாகவோ இல்லாமல் அவரவர் தன்னலத்திற்கு, கட்சி நலத்திற்கு ஏற்றபடி நடந்து கொண்டதன் மூலம் தட்சணப் பிரதேச அமைப்பு முக்கியத்துவம் பெறமுடியாமல் போய்விட்டது. ஏனெனில், ஒவ்வொருவர் ஒவ்வொரு பிரச்சினையை முக்கியமாகக்கொண்டு பேசியதன் பயனாய், இந்தக் கடையடைப்பு எதற்காக—எதை முக்கியமாகக்கொண்டது என்பதை மக்களோ, அரசாங்கமோ உணர முடியாமல் போய்விட்டது. பத்திரிகைக்காரர்களும் அந்தப்படியே பிரச்சாரம் செய்து விட்டார்கள்.

இவை எப்படி இருந்தபோதிலும் இப்போது ஒரு விஷயம் நாம் கவலைப்படத்தக்கதாகக் காணப்படுகிறது. அதாவது, காங்கிரஸ் தவிர்த்து வெளியிலுள்ள கட்சிகளும், கோஷ்டிகளும் தங்களுக்குள் தலைவிரி கோலமாய் இருந்தாலும், காங்கிரஸிலும் மந்திரிகளிலுங்கூடக் கட்டுப்பாடில்லாமல்—ஒற்றுமையில்லாமல் தலைவிரி கோலமாய்த் தமிழ் நாட்டுக்கு ஆபத்தைக் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள்.

நமது அரசாங்க முதல் மந்திரி, நேரிடையாக எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் அந்தரங்கத்தில் முழு எதிர்ப்புணர்ச்சி உள்ளவராக இருந்து வருகிறார். மற்றும், அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அமைப்பை ஆதரித்ததாகச் சாடைகூட காட்டவில்லை.

ஆனால், அடுத்த மந்திரியாய் இருப்பவர் கட்டுப்பாட்டையோ ஒழுங்கு முறையையோகூட இலட்சியம் செய்யாமல், தட்சணப் பிரதேச அமைப்பைத் தான் முழு பலத்தோடு ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு, பிரச்சாரமும் செய்துகொண்டு, அதற்கு ஆதரவாகக் கட்சி சேர்த்துக்கொண்டும் வருவதாகத் தெரிகிறது.

இது காங்கிரஸின் பிளவைக் காட்டுவதாக இருப்பது மாத்திரமல்லாமல், அரசாங்க—மந்திரி சபையின் ஒழுங்கு முறையற்ற தன்மையையும் காட்டுகிறது.

அமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்துவரும் மந்திரிக்கு மெஜாரிட்டி இல்லையானாலும், பலம் அதிகமாக இருக்கிறது. எப்படியெனில், (1) மத்திய அரசாங்க ஆதரவு;

(2) பிரதமமந்திரி பண்டித நேருவின் பலம்; (3) பார்ப்பனர்களின் ஆதரவு; (4) பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆதரவு; (5) தன் கட்சி (சி. ஆர். கட்சி) ஆதரவு ஆகிய இவை தவிர; (6) சென்னை முதல் மந்திரி காமராஜரின் எதிரிகளின் ஆதரவு; (7) இவ்வளவுடன் சமய சஞ்சீவிகளின் ஆதரவு—ஆகியவைகள் இருக்கின்றன. காமராஜருக்கு இருக்கும் ஆதர வெல்லாம் பொதுஜனங்களின் ஆதரவுதான் முக்கியமான ஆதரவென்னலாம்.

இந்த நிலையில், காமராஜர் சும்மா இருப்பது ஆபத்தென்பதாக நமக்குத் தோன்று கிறது. காமராஜர் மவுனமாக இருந்தாலும் காங்கிரஸ் தட்சணப் பிரதேச அமைப்புக்கு எதிராயிருப்பவர்களில் யாராவது தைரியமாய் முன்வந்து அமைப்பு எதிர்ப்பை நல்ல வண்ணம் நாட்டி, ஒழுங்கு முறைக்கு விரோதமாக ஆதரிப்பவர்களைக் கண்டித்து அறிக் கைகள் விடவேண்டியதும், தட்சணப் பிரதேசத்தை எதிர்த்தும் காங்கிரஸ் பிரமுகர்கள், காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள், காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள், காரிய கமிட்டி அங்கத்தினர்கள் முதலானவர்களுடைய கையொப்பங்களையும் உடனடியாகப்பெற முயற்சிக்க வேண்டுமென விரும்புகிறேன். இவர்களில் யாராவது ஏதாவது தாட்சண்யத் திற்குக் கட்டுப்பட்டு ஆதரிப்புக்கு வாக்குக் கொடுத்துவிட்டால், பிறகு அவர்களைத் திருப்பு வது கடினமான காரியமாகிவிடும் என்று கருதுகின்றேன்.

தட்சணப் பிரதேச அமைப்பைத் தமிழ் நாட்டவர்கள் முழுமூச்சுடன்—உயிரைக் கொடுத்து எதிர்ப்பார்கள் என்பதையும், அதனால் அண்மையில்வரும் தேர்தலில் தலைகீழ் மாற்றம் ஏற்பட நேரலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

['விடுதலை'—அறிக்கை—1-3-1955]

தட்சணப் பிரதேசம் தற்கொலையானது. இன்றும் நாளையும் பெங்களூரில் தங்கு கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கட்குத் தலைவர் பெரியார் அவர்கள் பின்வரும் அவசரத் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளார்:

'தட்சணப் பிரதேசம் ஏற்படுவதென்பது தமிழர்களுக்கு வாழ்வா? சாவா? என்பது போன்ற உயிர்ப் பிரச்சினையாகும். உங்களுக்கும் மற்றெல்லோருக்கும் இது தற்கொலை யானதும் ஆகும். தட்சணப் பிரதேசம் ஏற்படுமானால் முன்பின் நடந்திராத கிளர்ச்சி செய்வதற்குத் தமிழ் மக்களை நெருக்குவதாகிவிடும். அருள்கூர்ந்து நம் எல்லோரையும் தமிழ் நாட்டையும் காப்பாற்ற வேண்டுகிறேன்.'

['விடுதலை' 1-2-1956]

பெரியோர்களே! தோழர்களே!

தட்சணப் பிரதேசம் வந்தால் தமிழராகிய நமக்குத்தான் ஆபத்து. தமிழ், கன்னடம், மலையாளம் மூன்று நாடுகளும் ஒன்றுசேர்ந்தால், பார்ப்பனர்களால் கழித்து விடப்பட்டு நம்மவருக்குக் கிடைத்துவரும் உத்தியோகங்களெல்லாம் மலையாளிகளின் கைக்குள் போய்விடும். நாமெல்லோரும் போலீஸ், கக்கூஸ் எடுத்தல், ரெயில்வே கூலி முதலிய வேலைகளைத்தான் செய்யவேண்டிய நிலைமை வரும். முழு அதிகாரம் எல்லாம் வடநாட்டவருக்கும், மலையாளிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும்தான் போகும். மத்திய சர்க்கார் சுரண்டல் பெரிதாக உள்ளது. இப்பொழுதே நம்மை அடிமைபோல் நடத்து கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் புகையிலை வரி, போக்குவரத்து, சுங்க வரி முதலிய பெரிய வருமானங்கள் அங்கு போகின்றன. அவர்கள் இஷ்டப்படி சம்பளம் போட்டுக்கொள்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் ஒரு போர்ட்டருக்குக் கொடுக்கும் சம்பளம், இங்கு ஒரு எஸ். அய். க்கும், ஒரு கிளார்க்குக்கும் கொடுக்கப்படுகிறது. காங்கிரஸ் மொழிவாரியில் பிரியவில்லையா? வெள்ளையன் ஆட்சி முறைக்காக அமைத்த அமைப்பைக் காந்தி போன்றவர்கள் குறைசொன்னார்கள். மொழிவாரியாக மாகாணங்

களைப் பிரிக்கவேண்டும் என்று கூறினார்கள். அதன்படி தமிழ்நாடு போன்று 21 மாகாணங்களாகப் பிரித்து, 21 காங்கிரஸ் கமிட்டிகளை உண்டுபண்ணினர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு முதல் செகரட்டரியாக இருந்தது நான்தான். ஆகவே, நாட்டை அப்பொழுதே மொழிவாரியாகப் பிரிக்க ஒப்புக்கொண்டார்கள். இப்பொழுதே தமிழனுக்கு வேலை இல்லை. அன்னியரும் ஆதிக்கம் செலுத்த வந்தால் நிலைமை மிக மோசமாகிவிடும்.

[மதுரையில், 5-6-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-6-1956]

'நாடு பிரிவினைக் கமிட்டி' அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிக்கைபற்றிய சேதிகளின் சுருக்கம் ஒருவாறு எனக்குத் தெரிய வந்தது.

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும் கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால்—இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று, கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இனச் சுயமரியாதையோ, பகுத்தறிவுணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்புக் கிடையாது; சூத்திரன் என்பதுபற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது; அவர்கள் மத மூடநம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு, அவர்கள் இருவருக்குமே—மத்திய ஆட்சி என்னும் வடவராட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாய் இருப்பதுபற்றியும் சிறிதும் கவலையில்லை.

ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங்கொண்டவர்கள்; எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது, இவர்கள்—இருநாட்டவர்களும் பெயரளவில் இருநாட்டவர்களானாலும், அளவில், எஞ்சிய சென்னை இராச்சியம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்களாவார்கள்.

1. சென்னை, 2. செங்கற்பட்டு, 3. வடஆர்க்காடு, 4. சேலம், 5. கோவை, 6. நீலகிரி, 7. திருச்சி, 8. மதுரை, 9. இராமநாதபுரம், 10. திருநெல்வேலி, 11. தஞ்சை, 12. தென்னார்க்காடு, 13. தென்கன்னடம், 14. மலபார்.

அப்படி 14-ல்—7-ல் ஒரு பாகஸ்தர்களாக இருந்துகொண்டு, தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்றுகூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை, நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதிவந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்துவிட்டது. ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும், அதை மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டு, கூடுமானவரை ஒத்துப் போகலாமென்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனி நாடாக ஆகிவிட்டால் நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்திர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும் இருந்தாலும் அதற்குப் பலமும், ஆதரவும் இருக்காதென்றும் கருதுகிறேன்.

நிற்க, இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான்; நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொதுக் குறிப்புச்சொல்லும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங்கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒருசொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், 'திராவிடன்' என்ற சொல்லை விட்டு விட்டுத் 'தமிழன்' என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, 'நானும் தமிழன்தான்' என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான்.

இந்தச் சங்கடத்திற்கு, தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந் தொல்லை நெஞ்சில் இடி விழுந்தது போன்று வந்து தோன்றி இருக்கிறது.

அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டைவிட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட, மீதியுள்ள—யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாதென்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சிசெய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில், 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக்கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்த, தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை, கீழ்-மேல்சபை அங்கத்தினர்களையும் மிகமிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

மற்றும், தமிழ் நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல், சமுதாயஇயல் கட்சிக்காரர்களையும் முயற்சிக்கும்படி அதுபோலவே வேண்டிக்கொள்கிறேன்.

'தமிழ்', 'தமிழ்நாடு' என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சிசெய்து வெற்றிபெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தக் காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு, மாபெரும் சூழ்ச்சிமீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம்நாடு எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்து விடுவதென்றால், பிறகு தமிழன் எதற்காக உயிர்வாழ வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'—அறிக்கை—11-10-1955]

4. திராவிட நாடா? தமிழ் நாடா?

பெரியோர்களே! தோழர்களே!

திராவிட நாடு எது? இதற்கு முன்—1956-க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிடநாடு' என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்க வில்லை. வெள்ளையன் இந்த நாட்டைவிட்டுப் போய்விட்ட, பிறகு வட நாட்டானும், இந்த நாட்டுப் பார்ப்பானும் சேர்ந்துகொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டிவிட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கன்னியாகுமரி கோட்டை, மங்களூர் மாவட்டங்களும் மலையாளம், கன்னட நாடு களுடன் சேரப்போகின்றன. இப்பொழுது நம்முடன் மலையாள, கன்னட நாடுகளின் சம்பந்தமில்லாமல் தனித் தமிழ்நாடாக ஆகிவிட்டோம். ஆகவே, இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால், அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்துபோய்விட்டார்கள். நாம் நிபந்தனையற்ற அடிமைகளாய் உள்ளோம். வெள்ளையர் ஆண்ட காலத்தில் பார்ப்பனரின் அக்கிரமங்களைச் சொல்ல வழி இருந்தது. அவர்களும் நாம் சொல்வதைக் கேட்டுச் சிலவற்றைக் கவனித்துவந்தார்கள். இப்பொழுது நம் நாடு வடநாட்டிற்கு நிபந்தனையில்லா அடிமை நாடாகிவிட்டது. நாங்கள் வெள்ளையரை அப்பொழுதே கேட்டோம்: 'நாங்கள், உங்களை யுத்த காலத்தில் ஆதரித்தோம். பார்ப்பனரும் வடநாட்டுக்காரரும் உங்களை எதிர்த்தார்கள்; எங்கள் இனம் வேறு; அவர்கள் கலை, பழக்க வழக்கங்கள் வேறு' என்று சொன்னோம். அதற்கு வெள்ளைக் காரர்கள், 'நீங்கள் எல்லோரும் ஒன்றுதான் என்று நினைத்து இருந்தோம். இதெல்லாம் உங்கள் குடும்பச் சண்டை; நாங்கள் சீக்கிரத்தில் இந்த நாட்டை விட்டுப் போய்விடப் போகிறோம்' என்று கூறி, முஸ்லிம்களுக்கு சிறு இராஜ்யத்தைப் பிரித்துக்கொடுத்துவிட்டு, நம்மைப் பார்ப்பனருக்கும், வடநாட்டவருக்கும் காட்டிக்கொடுத்துவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுதும் நாம் வடநாட்டு ஆட்சியில் இருந்து பிரிந்து தனி நாடு ஆகவேண்டுமென்று கூச்சல் போடுகிறோம். தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் இருக்குமா என்று கேட்கிறார்கள். இல்லாமல் காக்கை, கழுகு தூக்கிக்கொண்டா போய்விடும்? பக்கத்தில் இருக்கும் இலங்கையும், பர்மாவும் இருக்கும்பொழுது நாம் மட்டும் இருக்க முடியாதா? நமக்குப் போதுமான வசதி இங்கேயே இருக்கிறது. நமக்கு நாடு கிடைத்து வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் இந்த வடநாட்டான் ஓடிவிடுவானே!

[திருவண்ணாமலையில், 19-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 29-8-1956]

5. தமிழ்நாடு தமிழருக்கே!

பெரியோர்களே! தோழர்களே!

நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்றும், திராவிட நாடே—தமிழ்நாடு தமிழருக்கே ஆகவேண்டுமென்றும் சொல்லுகிறோம்.

மலையாளம், ஆந்திரம், கர்நாடகம் பிரிந்துபோய் அவை அவைகளுக்கென தனிச் சட்டசபைகள் அமைத்துக் கொண்டுவிட்டன. நமக்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. என்றைக்காவது நம்நாடு பிரிந்தேதான் தீரும். பலரின் உயிர்த் தியாகத்தின் மூலந்தான் நாட்டைப் பிரிக்கமுடியும். பாகிஸ்தானும் பல வெட்டு, கொலைகள் நடந்து பலர் செத்துத் தான் பிரிந்தது. பாகிஸ்தான் கொடுத்தால்தான் இந்துஸ்தான் நிலைக்கும் என்ற அளவில், ஆச்சாரியார் காந்தியாருக்கு உணர்த்தியே பாகிஸ்தான் தான் கேட்ட பகுதிகளைப் பெற முடிந்தது. நியாயமுறையில் பாகிஸ்தான் கொடுக்கவில்லை—பலரைப் பலியிட்டது; பல தலைகள் உருண்டன. நாம் ஏன் வடவர் காலடியிலிருக்க வேண்டும்? நம்மை ஏன் அவர்கள் கொள்ளையடிக்க வேண்டும்? ஆகவே, நம்நாடு என்றாவது தனியாகப் பிரிந்து தானாக வேண்டும்.

நம் நாட்டைப் பிரிக்கவும், பொதுவாக இந்திய நாட்டைப் பற்றியும் சென்னையிலுள்ள சட்டசபையில் பேசி ஒன்றும் செய்யமுடியாது. மக்களை ஏமாற்றுகிறார்கள்; சிலர் வரி என்று கூச்சல் போடுகிறார்கள். வரி போடுபவன் டில்லியிலிருக்க, இங்கு கலகம் செய்தால் என்ன ஆகும்?

['விடுதலை' 24-7-1957]

1937-லேயே நாடு பிரியவேண்டுமென்றேன். இதை அன்றிருந்த வடநாட்டார் தெரிந்துதான் இருக்கிறார்கள். பதவி ருசியைக் காட்டி நம்மவர்களை ஏய்த்துவிடுகிறார்கள். பார்லிமெண்ட் மெம்பருக்கு ரூ. 500 சம்பளம்; தினம் 30, 40 ரூபாய் படி—இன்னும் பல வகைகளில் வசதி வாய்ப்பு; கட்டடம் உண்டு. பல நாட்கள் சட்டசபைக்குச் செல்லாமலேயே பணம் பெறலாம். இவ்வளவு வாய்ப்பும் வசதியும் தந்து வசியப்படுத்துகிறார்கள்—வடநாட்டார்.

கடந்த தேர்தலில் டில்லி சென்ற 'மெம்பர்'கள் என்ன சாதித்தார்கள்? யாராலும், 'பார்லிமெண்டை' அசைக்க முடியாது. பெரும்பாலும் காங்கிரசே ஜெயிக்கிறது. இப்படிப்பட்ட பாராளுமன்றத்தினால் நாம் ஒன்றும் சாதித்துக்கொள்ளமுடியாது. எல்லா வசதிகளும் அவன் கையில். எல்லாச் சாமான்களும் அவனிடம் கேட்டு வாங்க வேண்டும். வடநாட்டானின் அரசாங்கத்தின் தயவில்லாமல் நாம் ஒன்றும் செய்துவிடமுடியாது என்ற நிலையில் வைத்துக்கொண்டு, நம்மை அடிமைப்படுத்தி வைக்கிறான். நம்நாடு மற்ற நாடுகளைப் போல முன்னேற வேண்டுமானால் நம்நாடு பிரிந்தே ஆகவேண்டும்.

நம் அதிகாரமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக டில்லிக்கே போய்க்கொண்டிருக்கிறது. 'யூனிவர்சிட்டி' பூராவும் டில்லி கையில்; கல்லூரிக்கு இடம் ஒதுக்க அவர்கள் இடும் உத்தரவுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும்.

நம்முடைய மாகாண சர்க்காரின் சிப்பந்திகளுக்குச் சம்பளம் மிகக் குறைவு; டில்லி சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் இரண்டு மடங்கு கிடைக்கிறது. மத்திய அரசாங்கம் பூராவும் பார்ப்பான் கையில்! சுங்கம், எக்சைஸ் இலாக்காக்களில் ஒரே பார்ப்பனர் மயம். பாலம் அணைகட்ட டில்லி உத்தரவு தேவை.

இவ்வளவு நெருக்கடியான பாதுகாப்போடே வளர்ந்துகொண்டே போகும் மத்திய ஆட்சியிலிருந்து—டில்லி தொடர்பிலிருந்து பிரிய, நாம் பலியாகித்தான் பெறமுடியும். கொலை, இரத்தவெள்ளம் ஏற்படவேண்டும். இப்படிப்பட்ட மிகப் பெரிய போராட்டங்களை நடத்த இருக்கும் இளைஞர்களுக்கு 'சினிமா'வைக் காட்டினால் எப்படி எழுச்சி, உணர்ச்சி உண்டாக முடியும்? நம் நாடு பாகிஸ்தானைப் போலப் பிரியவேண்டாமா? பிரிந்த நாடுகள் தாம் என்ன கெட்டுப்போயின?

நீயும் பாகிஸ்தானுக்குப் பயந்து படைச் செலவை ஏராளமாகப் பெருக்கிக் கொண்டுள்ளாய்; உன் யோக்கியதை இப்படி? நீ என்னைப்பற்றிக் கவலைப்படுகிறாய். நம் நாடு பிரிந்தால் இராணுவச் செலவு இத்தனை கோடியாகாதே! 4 கப்பல்கள் இருந்தாலே போதுமே! நாதியில்லாத்தனம் கொண்டது இந்திய சர்க்கார். இந்தச் சர்வாதிகார யூனியனை எங்களைத் தவிர யாரும் எதிர்ப்பதில்லை; மற்றவர்கள் அவர்களுக்குத் துதிபாடுபவர்களாகவே இருக்கின்றனர்; அவர்கள் தயவை நாடியே இருக்கின்றனர்.

சமுதாயத்துறையில், பிச்சை எடுத்துப் பிழைத்த பார்ப்பனர்களால் நாம் ஆளப்படுகிறோம். எண்ணிக்கையில் நாம் அதிகமிருந்தும் நாம் ஏன் இப்படி ஒரு சிறு கூட்டத்திற்கு அடிமையாய் இருக்கவேண்டும்?

['விடுதலை' 25-7-1957]

பாகிஸ்தான் கிடைக்கவில்லையா?

பாகிஸ்தான் கிடைப்பதற்கு முதலில் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்? பிறகு என்ன ஆனது? 'எடு கத்தியை! வெட்டு!' என்றான்.

உடனே ஆச்சாரியார், 'பாகிஸ்தான் பிரித்துக்கொடுக்க வேண்டியதுதான்' என்று சொன்னார். காந்தியார்கூட முதலில் ஒப்புக்கொள்ளவில்லை; ஆச்சாரியார் காங்கிரசை விட்டு வெளியேறிப் பிரச்சாரம் செய்தார். என்னிடம் ஆச்சாரியார் அப்போது சொன்னார்: 'இராமசாமி, இந்த வடநாட்டானுக்குப் புத்தியே இல்லை' என்று.

பாகிஸ்தான் கொடுக்கவேண்டும் என்று ஊர் ஊராய் ஆச்சாரியார் பிரச்சாரம் செய்தார்.

உங்களுக்குத் தெரியாத இரகசியம் ஒன்று சொல்லுகிறேன். அந்தச் சமயத்தில் இராஜகோபாலாச்சாரியின் சட்டையை எல்லாம் கிழித்துவிட்டார்கள்; சட்டை மேலெல்லாம் தார் ஊற்றிவிட்டார்கள்.

பிறகு பாகிஸ்தான் வந்தேவிட்டது. அதேபோல் திராவிட நாட்டை வாங்க முடியும். என்னிடம் திட்டமெல்லாம் இருக்கிறது.

[மேட்டுப்பாளையத்தில், 6-7-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-7-1957]

தலைவரவர்களே! தோழர்களே!

உலக நாடுகளை ஒப்பிடுகையில் தமிழ்நாடு பெரிது. உலகத்தில் 85 நாடுகள் உள்ளன. இவற்றில் 74 நாடுகளுக்குமேல்—பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி—மேலானவர்களாகவே நாம் இருக்கிறோம். மற்ற 74 நாட்டுக்காரர்கள் பிழைக்கும்போது நம்மைத்தானா காக்கை தூக்கிக்கொண்டு போய்விடும்?

பூகோளம் தெரியுமா? சரித்திரம் தெரியுமா உனக்கு? உன் இரத்தம் கொண்டவர் தமிழ் மக்கள்—இலங்கையில் நாய் போலத் திண்டாடுகிறார்கள்! அதைப்பற்றிக் கொஞ்சமாவது கவலைப்பட்டதுண்டா? தமிழனுக்கு ஆளும் வசதியில்லையா? புதுக் குடித்தனமாகவே வைப்பதானாலும் வாழமுடியாதா? மந்திரி எவரும் இதுபற்றிப் பேசமாட்டேன் என்கிறாரே? நமக்கு என்ன மற்றவன் தயவு வேண்டுமா? உட்கார்ந்த இடத்திலேயே கம்பியின்மூலம் வியாபாரம் செய்துவிடலாம். நீ (வடவர் ஆட்சி) என்ன அய்யன்—வீர்த்தகத்துக்கு உதவி செய்ய? இதைப்பற்றி சப்தம் போட ஆளில்லை; நான் சப்தம் போட வேண்டியது; அது செல்வாக்கைப் பெற்றதும் அதை வயிறு வளர்க்க உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது சிலரது வேலையாக உள்ளது. இது என்ன நியாயம்?

இந்த மந்திரிகளை வடவன் பியூன் மாதிரித்தானே நடத்துகிறான்? அவனைப் பிடித்துப்போடு என்றால்—'இதோ ஆய்விட்டது, சாமி' என்றுதானே இவன் சொல்லுகிறான்? சர். இராமசாமி முதலியார் 'முனிசிபாலிட்டி மாதிரி ஆக்கிவிட்டாயே' என்று நன்றாய்க் கேட்டிருக்கிறார்.

நீ (நேரு) பிறந்த நாடு என்பதற்காக அக்கிரமமாக காஷ்மீர் வேண்டும் என்கிறாயே? நீ பிறந்த நாடு என்பதற்காக அக்கிரமமாகப் போகிறாய்! காஷ்மீர் என்ன நேஷன்? என்ன சம்பந்தம் உனக்கும் காஷ்மீருக்கும்? முக்கால் வாசி மக்கள் முஸ்லிம் என்றிருக்கும்போது, அங்குபோய் ரகளை செய்கிறாய்! நீ பிறந்த நாடு என்பதற்காக இவ்வளவு ரகளை செய்கிறாய்.

நான் பிறந்த நாடு எனக்கு வேண்டும் என்று நான் கேட்கக்கூடாதா? 'எதைச் செய்தாலும் சகித்துக் கொள்வேன்—ஆனால் நாடு பிரிவதை மட்டும் சகிக்கமாட்டேன்' என்பது எவ்வளவு திமிர்?

ஆகவே, தோழர்களே! நீங்கள் நன்றாக நினைவு வைத்துக்கொள்ளவேண்டும். நான் போவதற்குள் படம் போட்டுத் தருகிறேன்.

சீக்கிரம் அழைக்கவேண்டும்—எல்லோரையும் அழைக்கிறேன். அழைப்பு அனுப்புகிறேன். அத்தனைபேரையும்—தமிழன் என்பவன் எல்லோரையும் கூப்பிடுகிறேன். நான் தலைவனே அல்லன், தொண்டனாக இருந்து சேவிக்கிறேன். யாராவது தலைவராக இருக்கட்டும். எனது தொண்டர்களையும் சேவிக்கச் செய்கிறேன்—சீக்கிரத்தில் நடக்க வேண்டும்.

இது கண்போன்ற பிரச்சினை—எவ்வளவு மோசமாக நடத்துகிறான்?

நம்நாட்டில் வசூல்செய்யும் பணத்தில் 60 கோடி ரூபாய் எடுத்துக்கொண்டு 8 கோடி நமக்குக் கொடுக்கிறான்—பிச்சை கொடுப்பது போல! யார் கேட்பது? ஏன் என்றால்—'அதிகப் பிரசங்கி' என்பானே என்று இவன் பயப்படுகிறான்! இங்கு சுரண்டிக் கொண்டு போய் வடநாட்டானுக்குத் தருகிறான்.

எலக்ஷனுக்கு தடவைக்கு 25 கோடி வசூல்செய்கிறான். முதலிலே சொன்னான் டாட்டா கம்பெனிக்காரன் என்னும் ஒரு கம்பெனி 10 இலட்சம் கொடுத்தான். ஒரு டைரக்டர் அதைக் கேட்டான். ஒரு கூட்டாளி, 'அரசியல் கட்சிக்கு எதற்குப் பணம் கொடுப்பது?' என்றான். 'அட பைத்தியமே, நான் கம்பெனி நலனை உத்தேசித்துத்தான் கொடுத்தேன்; இதைக் கொடுத்தால்தானே கோடி கோடியாகக் கொள்ளையடிக்கலாம்' என்று பதில் சொல்லியிருக்கிறானே வடநாட்டான்.

வடநாட்டான் 2 பூனையை வைத்துக்கொண்டுகூட ஆண்டுவிடுவானே? இந்த காமராசர் போனால் வேறொரு ராசர் அவனுக்குக் கிடைக்கக்கூடும். இந்தக் கொடுமை ஒழியவேண்டும்.

நம் நாடு தனியாகப் பிரிந்தே ஆகவேண்டும். ஒரு சுண்டைக்காய் 'எகிப்து' உலகத்தையே கலக்கிவிட்டதே! நம்மால் ஆளமுடியாதா? நான் சொல்லுகிறேன்—பிரிந்தால் நாம் சிறந்த வல்லரசாக வாழ்வோம்.

நாம் ஆரம்பித்தால்—பல வெளிநாட்டான் காத்துக்கொண்டிருக்கிறான்; நம்மோடு சேர்ந்துகொள்வான். நேற்று மராட்டியர்கள் 15 ஆயிரம் பேர் சேர்ந்து நேருவை எதிர்த்திருக்கிறார்கள். இதற்கு முன் செருப்பு மாலையை காந்திக்குப் போட்டிருக்கிறான். நாடு பிரியவேண்டுமென்ற ஆத்திரத்தில் நேருமீது கல் போட்டிருக்கிறான்.

ஆகவே, நாம் பெரிய இயக்கம் நடத்தவேண்டும்; ஆதரவு கட்டாயம் இருக்கும். எனக்குப் பிறகு என்ன நடக்குமோ என்ற கவலையாகத்தான் உள்ளது; பாதியிலாவது விட்டுவிட்டுப் போனால் கொள்கையை விற்றுத் தின்னத்தான் ஆள்வரும்.

ஆகவே, தயவு செய்து சிந்தியுங்கள்! காரியம் நடந்து தீரவேண்டும். இந்தியா படம் கொளுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

நாளைக்கு இந்திய யூனியன் படம் கொளுத்தப் போகிறோம். கைது செய்யட்டும். இல்லை அது 'நேஷனல் ஆனருக்குப் பங்கமில்லை' என்றால் விட்டுவிடட்டும். நேரு ஒரு பொறுப்புள்ளவர். உலகம் பூராவும் போய் தோட்டா வாங்கி வருபவர்—'காட்டுமிராண்டித்தனம்' என்று எதற்கெடுத்தாலும் சொன்னால் என்ன அர்த்தம்?

முன்பு கண்ணீர்த் துளிகள் ஏதோ செய்ததற்கு—'காட்டுமிராண்டித்தனம்' என்றார். தமிழரசுக் கழகக்காரரையும் 'காட்டுமிராண்டித்தனம்' என்றார். எதற்கெடுத்தாலும் காட்டுமிராண்டித்தனம் என்று சொல்லுகிறார். இதற்கு ஏற்ற பதில், நாம்செய்கை

யில் அமைதியுடன் நடத்திக் காட்ட வேண்டும். யூனியன் படத்தில் தமிழ்நாடு என்பதற்கு மட்டும் ஒரு கோடு போட்டு, பாக்கியுள்ள பாகத்தை—இந்திய யூனியன் படத்தை எரிக்க வேண்டும்.

['விடுதலை' 1-12-1957]

இந்த இராஜ்ய ஆட்சிக்கு எதில் அதிகாரமிருக்கிறது? இந்நாட்டில் அரிசிப் பற்றாக் குறை இருக்கையில்—நாளுக்கு நாள் விலை விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கையில்—கேரள இராஜ்யத்துக்கு அரிசி ஏற்றுமதியாவதைத் தடுக்க முடிகிறதா? கேரளத்துக்கு வேண்டுமானால் வெளிநாட்டிலிருந்து தருவித்துக்கொடு என்று மத்திய ஆட்சியிடம் கண்டிப்புச் செய்ய முடிகிறதா? இங்கிருந்து 60 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளைக் கொண்டு போகிறான்; அவனிடமிருந்து நீ பிச்சைக் காசு போல் 8 கோடி பெறுகிறாயே, எதனால்? அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதால்தானே? அங்கெல்லாம் பலகோடிக் கணக்கில் செலவிடும் பல திட்டங்கள் நடத்திவருகையில், இங்கு என்ன திட்டம் செய்கிறான்? நாம் வரிப் பணம் அழுவதுதானே மிச்சம்? நெய்வேலியில் ஒரு திட்டம் ஆரம்பித்தனர்; அதற்குள்ளாகவே வடநாட்டார்களை அங்கு அதிகாரத்தில் திணித்துவிட்டான். பெரம்பூரில் ஒரு 'கோச் ஃபாக்டரி' ஆரம்பித்துள்ளான்; அதில் அதிகாரம் எல்லாம் வடநாட்டானுக்கும், பார்ப்பானுக்கும்தானே? இந்த இரண்டு இடங்களிலும் பார்ப்பான்கள்தானே அட்டகாசம் புரிகின்றனர். திராவிடர்கள் வெறும் கூலிகளாகத்தானே இருக்கமுடிகிறது? இதை எதிர்த்து இந்த இராஜ்ய அரசாங்கம் கேட்கமுடிகிறதா?

எனவே நாம் தனியாகப் பிரிந்து கொண்டாலொழிய நம் மக்களுக்கு நன்மை செய்ய முடியாதென்று ஆதார பூர்வமாகக் கூறுகிறேன்.

[எழும்பூரில், 30-11-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-12-1957]

'இந்திய அரசியல் சட்டம் பிடிக்கவில்லையானால் நாட்டைவிட்டு வெளியேறிவிடு' —பண்டிட் நேரு.

இன்றைய ஆட்சி முட்டாள்தனமான காட்டுமிராண்டி ஆட்சி என்றும், இது பார்ப்பன ஆட்சி என்றும், இது திராவிடமக்களை ஆரியர் (பார்ப்பனனும், வடநாட்டானும்) அடிமைகொண்ட ஆட்சி என்றும், இந்த வடநாட்டாராலும் பார்ப்பனராலும் அவர்களது நலனுக்கும் உயர்வுக்கும் ஆகவே செய்யப்பட்டிருக்கும் அரசியல் சட்டம்—மனுதர்ம சட்டத்தின் மறுபதிப்பே என்றும் 1949-லேயே நான் சொன்ன கருத்துக்கு இது எடுத்துக் காட்டாக இல்லையா என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தவிரவும் 'இந்த அரசியல் கொடி உனக்குப் பிடிக்கவில்லையானால்—நாட்டைவிட்டு வெளியேறிவிடு' என்றும் பேசியிருக்கிறார்! யார் என்றால், பண்டித ஜவஹர்லால் நேரு!

அவர் என்ன சாதி என்றால்—பார்ப்பன புரோகித சாதி; எந்த நிலையில் என்றால்—இந்தியாவின் முதல் மந்திரி (அதாவது ஆட்சித் தலைவர்) என்ற நிலையில்.

'தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து மனிதனையே கடிக்க வந்துவிட்டது' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஏற்ப, இந்தப் பார்ப்பனர்கள் சாதி காரணமாகத் தாங்கள் சம்பாதித்துக்கொண்ட உயர் பதவிகளையும், ஆதிக்கத்தையும் ஆதரவாகக் கொண்டு சட்டம் செய்துகொண்டு, 'இந்தச் சட்டம் பிடிக்கவில்லையானால்—அதாவது சாதிமுறைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தச் சட்டம் உனக்குப் பிடிக்கவில்லையானால்—இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டு நீ சூத்திரனாய், பார்ப்பானின் வைப்பாட்டி மகனாய் வாழ உனக்கு இஷ்டமில்லையானால், இந்தத் திராவிடநாட்டை—தமிழ் நாட்டை விட்டு வெளியேறி விடு; இல்லாவிட்டால் ஜெயிலில் வைப்பேன்; இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைப்பேன்' என்பதாகப் பேசியிருக்கிறார்.

எங்கு முழக்கி இருக்கிறார் என்றால், தமிழ்நாட்டின் மார்பு (இருதயம்—மத்திய ஸ்தானம்) போன்ற திருச்சி நகரில்—தமிழ் உணர்ச்சிக்குத் தாயகமான திருச்சி நகரில் சுமார் 20-30 ஆயிரம் பேர் நகர மக்கள் கொண்ட மாபெரும் தமிழ்க் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்.

சொன்னது மாத்திரமல்லாமல், இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பித் தனது ஊருக்கும் பத்திரமாகப் பறந்து சென்றிருக்கிறார்! எப்படிச் சென்றார் என்றால், 8000 பேர் கொண்ட போலீஸ் பாதுகாவலில் சென்றார்.

உண்மையாக உள்ளது உள்ளபடி சொல்லவேண்டுமானால், இந்தப் பனியா-பார்ப்பன ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டில் தமிழன், சிறையில் இருக்கும் சிறைக் கைதி போலவே நடத்தப்பட்டு வருகிறான்; 'கான்விக்ட் வார்டர்களாக' தமிழர் சேவகர்கள், தமிழர் அதிகாரிகள் ஆகியவர்கள் இருந்துவருகிறார்கள்.

தமிழர்கள் மந்திரிகளாக இருந்தாலும், நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இவர்கள் யாவருமே 'கான்விக்ட் வார்டர்களை'ப் போலவேதான் இருந்துவர வேண்டியதாக இருக்கிறது.

(கான்விக்ட் வார்டர் என்றால் நல்ல அடிமையாக இருந்து விடுதலை பெறக் கருதி, சிறையில் தொண்டு செய்யும் நீண்டநாள் தண்டனை பெற்ற கைதி.)

இந்தப் பாதுகாப்பான நிலையில்தான் நேரு பார்ப்பனர் திருச்சி நகரத்தில், திருச்சி மக்கள் முன்னிலையில் 'எங்களுக்கு அடங்கிக் கீழ்ப்பட்டுச் சூத்திரனாக இருந்தால் இரு. இல்லாவிட்டால் நாட்டைவிட்டு வெளியில் போ! போகாவிட்டால் ஜெயிலில் போடுவேன்' என்று எக்காளமிட்டுச் சென்றுவிட்டார்.

இந்தச் சமயத்தில் மந்திரிகளைப்பற்றி, அதிகாரிகளைப்பற்றி, போலீசாரைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட வாழ்வுக்கு ஏற்ப அதைப் பார்த்துக் கொள்ள அப்படி (அதாவது கான்விக்ட் வார்டர்களாக) நடந்துகொள்ள வேண்டியவர்களாவார்கள். அவர்களை மறந்துவிடுங்கள்! மறக்கும்போது அந்த இடங்களில் பார்ப்பனர்கள் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைவில் வைத்து மறந்துவிடுங்கள்.

தமிழ் மக்களே! இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுடைய கடமை என்ன என்பதுதான் இப்போதைய பிரச்சினை.

ஆனால், அரசியல் சட்டம் எதற்காகக் கொளுத்தப்பட்டது? யாருக்காகக் கொளுத்தப்பட்டது? 3000 பேர் எதற்காகச் சிறைபிடிக்கப்பட்டார்கள்? நான் எதற்காகச் சிறைத் தண்டனை இடப்படுகிறேன்?

பார்ப்பனர்களைக் குத்தியதற்கா, கொன்றதற்கா? பார்ப்பனச் சேரியில் நெருப்பு வைத்துக் கொளுத்தினதற்கா? பார்ப்பனப் பெண்களை இம்சித்ததற்கா? இல்லவே இல்லை; இதற்காக இன்று யாரும் சிறையில் இல்லை.

குத்தச் சொன்னதற்காகவோ, கொல்லச் சொன்னதற்காகவோ, கொளுத்தச் சொன்னதற்காகவோகூட இன்று யாரும் சிறையில் இல்லை; என்றாலும், என் ஒருவன் பேரில் மட்டும்தான் அப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதுவும் 'வெள்ளரிப் பழத்திற்குப் பூண்போட்டுக் கெட்டிப்படுத்துவது' போன்ற குற்றம்தான் சாட்டப்பட்டிருக்கிறது; இது எப்படியோ போகட்டும். அதைப்பற்றித் தமிழர்களாகிய உங்களுக்குக் கவலை வேண்டாம்.

'சாதி காப்பாற்றப்படும் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; அதைத் திருத்து; சாதி ஒழிக்கப்பட வசதி செய்துகொடு' என்பதற்கு அறிகுறியாக—சாதியைப் பாதுகாக்க வசதியுள்ள பாகத்தைக் குறித்த ஒரு துண்டுக் காகிதத்தை, அறிக்கை கொடுத்துக் கொளுத்து

வதன் மூலம் வலியுறுத்திக் காட்டியதற்காக குழந்தைகள், குஞ்சுகள், வயோதிகர்கள், பெண்கள், கர்ப்பப் பெண்கள், இளைஞர்கள் உள்பட 3000 மக்களை— அதுவும் கொளுத்தின மக்கள் 10,000 பேர்களில் பலவிதமாக 7000 பேர்களை விட்டுவிட்டு, 3000 பேர்களைச் சிறையில் அடைத்து—ஊசிப்போன சோளக் கஞ்சியையும் களிமொத்தையையும் கொடுத்து, உண்ணச் சொல்லி அடித்து, கடும் வேலை கொடுத்து, கொடுமைப்படுத்துகிற இந்த அட்டூழியத்திற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் ?

சிறையில் கொடுமைப்படுகிறவர்களில் 1, 2, 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்காரர்களும், ஆண்டு ஒன்றுக்கு 1000, 5000, 10,000 ரூபாய்போல் வரும்படி உள்ளவர்களும் ஆன பல செல்வவான்களும், உயர்வாழ்வு வாழ்கின்ற சுக புருஷர்களும், அது போன்ற தாய்மார்களும், பகுதிக்கு மேம்பட்ட மக்களாக இருந்துவருவது அரசாங்கத்திற்கே தெரியும்.

அப்படிப்பட்ட மக்களையும் இப்படிக் கொடுமைப்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ?

வெள்ளையன் ஆன அன்னியன் ஆட்சிக் காலத்தில் 'வெள்ளையனே வெளியேறு !' என்ற கூட்டத்தையும், வெடிகுண்டு ஏந்திய கூட்டத்தையும், தண்டவாளங்களைப் பெயர்த்து, இரயிலைக் கவிழ்த்து, தபாலாபீசுக்கும் நீதிஸ்தலத்திற்கும் இரயில்வே ஸ்டேஷன் கட்டிடங்களுக்கும் நெருப்பு வைத்துக் கொளுத்தி, கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை—ஆயிரக்கணக்கான உயிர்களை நாசப்படுத்தியவர்களையும் மனிதத் தன்மைக்கு மேலாகவே நடத்தினான்.

'உங்கள் நாட்டை நீங்கள் ஆண்டுகொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை' என்று வெள்ளையன் சொன்னான்.

'நாங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால் நாங்கள் மனப்பூர்வமாய்ப் போய்விடுகிறோம். உங்கள் நாட்டை நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள்' என்று சொல்லி ஒப்புவித்தானே தவிர, இந்தப்படி வடகோடியிலிருந்து தென்கோடிக்கு வந்து, தென்கோடி மக்களை—'என்னுடைய ஆட்சி, என்னுடைய சட்டதிட்டம், உங்களுக்குப் பிடிக்கவில்லையானால்—நீங்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறி விடுங்கள்' என்று சொல்லவில்லை.

இந்தப் பேச்சு நேருவின் கெட்டிக்காரத்தனத்தையும் வீரத்தையும் காட்டுகிறதா ? அல்லது, தமிழர்களின் மானங்கெட்ட தன்மையையும், மடமையையும், கோழைத் (சோதா) தனத்தையும் காட்டுகிறதா என்பதுதான் இங்கு சிந்தித்துப் பார்க்கத்தக்கதாகும்.

நேரு சாதியார் இந்த நாட்டில் எவ்வளவு கட்டுப்பாடு, ஒற்றுமை, தங்கள் இன நலத்தில் கவலை, முயற்சி முதலியவைகளோடு இருந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதையும்—நம் சாதியார் என்பவர்கள் எவ்வளவு கவலை ஈனமாய், ஒற்றுமை இன்றி, இனத்தைப் பற்றிய உணர்ச்சியே இல்லாமல் சுயநலவாழ்வு வாழ்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழனைப் பார்த்து,

'ஓ......தமிழர்களே ! நீங்கள் எங்களுக்கு வைப்பாட்டி மக்களாய், இழிமக்களாய் சூத்திரர்களாய், கீழ் மக்களாய் இருந்தால் இந்த நாட்டில் இருங்கள்; இஷ்டம் இல்லாவிட்டால் இந் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்' என்று சொல்ல இந்த நேருகூட வேண்டியதில்லையே ? இன்னமும் பரம முட்டாளும் படு கோழையும், பிழைக்க வழியற்றுத் தெருவில் பிச்சையெடுத்து வயிறு பிழைக்கும் ஒரு பார்ப்பன விதவைகூடப் போதுமானதாகுமே !

இதில் நேருவுக்கு ஒன்றும் கெட்டிக்காரத்தனத்தையோ, துணிவையோ, வீரத்தையோ பொருத்த வேண்டியதில்லை; தமிழனின் மானமற்ற சுயநல ஈனப்பிழைப்பும் கோழைத்தனமும், நாட்டைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் தன்மையும்தான் காரணமாகும்.

கொலைக் குற்றப் பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு, முச்சலிக்கா பாண்டுமீது நான் வெளியில் இருக்கிறேன்; வழக்கு விசாரணை 12-ந் தேதி நடக்க இருக்கிறது; நான் இந் நாட்டுக்கு 100-க்கு 90 பேர்களைக் கொண்ட திராவிடர் கழகத்திற்குத் தலைவன்; இந்த நிலையிலும் சட்டம் எரித்தார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டு இனியும் விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லவேண்டிய 2000-க்கு மேற்பட்ட கழகத் தோழர்கள்—அதாவது என்னைப் பின்பற்றுகிறவர்கள் சிறையிலும் விசாரணையிலும் இருக்கிறார்கள்; இந்த நிலையிலும் ஆட்சித் தலைவன் என்னும் பேரால் ஒரு நபர் இங்கு வந்து—அதாவது, எங்கு விசாரணை நடக்கிறதோ அந்த ஊருக்கு வந்து, எந்த நீதிபதியும் மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்க வேண்டியவர்களோ, விசாரிக்கிறார்களோ—அந்த மாஜிஸ்ட்ரேட்டையும் நீதிபதியையும் அழைப்பு அனுப்பி வரவழைத்து எதிரில் உட்காரவைத்து அவர்களைப் பார்த்து—'இவர்கள் (இந்தக் குற்றவாளிகள்) சிறையிலிருக்க வேண்டியவர்களாவார்கள்! இவர்கள் மன்னிக்கப் படக் கூடாதவர்கள்; மன்னிக்கத் தக்கவர்கள் அல்ல!' என்று இடிமுழக்கம் செய்கிறார் என்றால், இந்த ஆட்சி எவ்வளவு நீதியும், நேர்மையும், நாணயமும் ஆன ஆட்சி என்பதைத் தமிழர்கள்—மானம், ஈனம் பற்றி கவலைப்படாத தமிழர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

இதில் ஒரு குறிப்புக்கு இடமான விஷயம் என்னவென்றால், இதே நேரு, முதல் நாள்—8-ந்தேதி கொலை, கொள்ளை, கொளுத்தல், நாசவேலை, உயிருடன் தூக்கி நெருப்பில் போட்டுப் பொசுக்குதல், சுமார் 100—200 பேர்களுக்கு மேல் உயிரிழக்கச் செய்திருத்தல் ஆகிய காரியங்களைப் பற்றிப் பேசும்போது, விவகாரம் விசாரணையிலிருப்பதால் அதைப் பற்றிப் பேசுவது நீதியாகாது, நேர்மையாகாது என்று சொல்லிப் பேசாமல் வாயை மூடிக் கொண்டு வந்து—மறுநாள் காலையில் விசாரணை நடக்கும் இடத்திற்கே வந்து—நீதிபதி அவர்களிடத்திலேயே நேரில், 'இவர்கள் ஜெயிலிலிருக்க வேண்டியவர்கள் (நல்லபடி கடின மாகத் தண்டிக்கப்படவேண்டும்; இல்லாவிட்டால் உங்களுக்கு உத்தியோகம் நிலைக்காது, பிரமோஷன் இருக்காது)' என்று சொல்லுவதுபோல்—அதுவும் பெரிதும் பார்ப்பன நீதிபதிகளிடமே எக்காளம் போட்டுச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்றால் இந்த ஆட்சி, சட்டம், ஆட்சிக்கொடி மாத்திரமல்லாமல்—ஆட்சிமுறை, ஆட்சி நீதி, ஆட்சிப் பீடம் ஆகியவையும் சுட்டுப் பொசுக்க வேண்டியவை ஆகுமா, ஆகாதா? இதில் நமக்கு நலமான வாழ்வோ நீதியோ கிடைக்குமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள், தமிழர்களே!

['விடுதலை'-தலையங்கம்—11-12-1957]

தலைவரவர்களே! தோழர்களே!

வாமனாவதாரக் கதையில் காணப்படும் அசுரன் மாபலி சக்கரவர்த்தி, ஒரு பெரிய பணக்காரனும் பேரரசனுமான திராவிடன் ஆவான். அவனை ஒழிக்கப் பார்ப்பனர்கள் எண்ணினார்கள். குள்ளப் பார்ப்பானாக வந்து மகாவிஷ்ணு மூன்றடி மண் கேட்டான். உலகத்தையும் வானத்தையும் இரண்டடியால் அளந்துவிட்டான். மூன்றாவது அடிக்கு இடங் கேட்டான். இதோ என்று மாபலி தனது தலையைக் காட்டினானாம். விஷ்ணு காலால் மிதித்து அவனை அழித்துவிட்டான்.

இம் மாதிரியாகவே போராட்டங்களெல்லாம் முறையாக நடந்திருக்கின்றன.

சாதி ஒழியவேண்டுமென்றால் நாம் பார்ப்பான் ஒழியவேண்டும் என்று சொல்கிறோம் என்கிறார்கள். ஆம், சாதிக்கு ஆதாரம் எது என்று சொல்லப்படுகிறதோ—மதமாய் இருந் தாலும் கடவுளாயிருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

இதுவரை பார்ப்பான் ஆண்டது கிடையாது; சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டார்கள் என்றால், அவர்களெல்லாம் பார்ப்பானுக்கு ஆதரவாகவே ஆண்டார்கள். பார்ப்பானுக்கு ஆதரவாக நடக்கவில்லை என்று யாராவது சொல்லமுடியுமா? இன்று

பார்ப்பான் ஆளுகிறான் என்றால் நிலைமை அப்படிக் கொண்டுவந்துவிட்டது. அதாவது, சாதியை ஒழிக்கக் கூடிய தருணம் ஏற்பட்டுவிட்டதுதான் பார்ப்பானே ஆளவேண்டி ஏற்பட்டது! இல்லையென்று சொல்லமுடியுமா?

1885-ல் காங்கிரஸ் துவங்கிற்று என்றால் நாடு வெள்ளைக்காரனிடமிருந்து பிரித்துக் கொண்டு நாம் ஆளவேண்டும் என்றா துவக்கிற்று? பார்ப்பான் ஆதிக்கம் மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்றுதான். பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் என்ன வந்தது? அன்று இந்த நாட்டில் முஸ்லிம் ஆட்சி வலுத்திருந்தது. வெள்ளையனிடம் வாதாடி உரிமை பெற்றார்கள். அன்று வெள்ளையன் ஆதிக்கம் இல்லாத இடங்களில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம் இருந்துவந்தது.

காங்கிரசார் முதல் முதலாக உத்தியோகம் கேட்டார்கள். அதிகாரம், பணம், பதவி இப்படியே படிப்படியாகக் கேட்டார்கள். ஆதாரம் என்ன என்பீர்கள். 1885 முதல் 1920 வரை சுமார் 35, 40 வருடகாலம் வரை, 'பிரிட்டிஷ் ஆட்சி நீடூழி வாழவேண்டும்; பிரிட்டிஷ் அரசர் நீடூழி வாழவேண்டும்' என்று பக்தி விசுவாசத்துடன் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மற்றவர்களாகிய முஸ்லிம்கள், ஜஸ்டிஸ் கட்சியார்—எல்லாரும் பங்கு கேட்கவே ஒரு நெருக்கடி ஏற்பட்டது. வெள்ளையனுக்குத் தொல்லை தர ஆரம்பித் தார்கள். அவனுக்கும் இவர்கள் ஆள்வதில் விருப்பமில்லை. வெள்ளையன் நாணயமாக நடவாமல் பார்ப்பானிடம் சாவியைக் கொடுத்தான்.

பார்ப்பானோடு போட்டியிட்டு வெற்றிபெற முஸ்லிமால்தான் முடிந்தது. ஒரே தலைவரின் கீழ் நின்று ஒற்றுமைப்பட்டனர். உயிரிழக்கவும் துணிந்தனர். ஜின்னாவின் காலத்திலேயே உரிமை பெற்றனர். நாம் அப்படி இல்லாமல் பல சாதி, பல்வேறு உட்பிரிவு காரணமாகவும் ஒற்றுமையில்லாதபடியாலும், சுயநலம் காரணமாகவும் அடிமையாகவே இருக்க நேர்ந்தது; பார்ப்பான் சர்வாதிகாரியானான்.

எப்படி என்றால், சாதியை, மதத்தை, சமுதாயத்தை, அந்தஸ்தை, நிலை நிறுத்துவது அடிப்படை உரிமை (Fundamental Right) யாக ஆக்கிச் சட்டம் செய்து கொண்டான். அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது. அசெம்பிளியில், பார்லிமெண்டில் சத்தியம் செய்வதென்ன? 'இந்திய அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அடங்கி பக்தி விசுவாசத்துடன் நடப்பேன்' என்றுதான் சத்தியம் செய்கிறான். அசெம்பிளியிலோ பார்லிமெண்டிலோ அடிப்படை உரிமைகள் என்பவை பற்றி யாரும் பேசமுடியாது!

ஆகவேதான், எங்கள் முதல் போராட்டம் 'பிராமணாள்' என்று போடாதே என்று துவங்கிற்று. ஏன், பிராமணாள் என்று போடுகிறாய்? அது எங்களை இழிவு படுத்து கிறது! வேறு போடேன்—'சைவ உணவு' என்பது போல. வாய்தா கொடுத்தும், அழிக்கா விட்டால் நாங்கள் அழிப்போம் என்றோம்; மேற்கொண்டு வளர்ந்தது—இப்போது சாதியை ஒழிப்பதுதான் நமது முதல் இலட்சியம்.

சாதி ஒழியக்கூடாது என்று சொல்ல ஆளில்லை. இராசகோபாலாச்சாரிகூட சொல்லிவிட்டார்—ஜனநாயகமும் சாதியும் மாயை, பித்தலாட்டம் என்பதாக! பார்ப்பனர் களைப் பாதுகாக்க இருக்கிற ஒரே ஆள் அவர்தான்.

இந்த ஆட்சியை ஒழிக்காவிட்டால் வேறு எப்படி சாதியை ஒழிக்க முடியும்? அரசாங் கத்தை ஒழிக்க நம்மாலாகுமா? திராவிடர்களான—மற்ற கன்னடர், தெலுங்கர், மலை யாளிகள் யாரும் சொல்லவில்லையே என்று, நாம் டில்லியிலிருந்து விலகிக்கொள்ளாம லிருக்க முடியுமா? இலங்கை, பர்மா, பாகிஸ்தான் பிரியவில்லையா? கிளர்ச்சிமூலம்தான் நம் நாட்டைத் தனியாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

பெங்களூரை மைசூர் நாட்டிலிருந்து பிரிக்க முடியாது; அதுபோல, சென்னையி லுள்ள தஞ்சையைப் பிரிக்க முடியாது. ஆனால், தமிழ்நாடு என்பதை டில்லியிலிருந்து

பிரிப்பது அப்படியல்ல. டில்லி ஆட்சி என்பது கூட்டாட்சிதான். டில்லிக்கு நாம் அடிமைகளல்லவே! பெங்களூர் வேண்டுமானால், மைசூருக்கு அடிமை, கட்டுப்பட்டது என்று சொல்லலாம். சென்னைக்கு சேலம் மாவட்டம் போல, டில்லிக்காரன் நமக்குச் சக்கரவர்த்தி (Emperor) அல்லன். நமக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை. மைசூரும், சென்னையும் ஒரு கூட்டாட்சி நடத்துகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கூட்டாட்சிக்கு யார் எஜமானர்? யாருக்காவது மற்றவரைப் பிடிக்கவில்லை என்றால் பிரிந்து போக வேண்டியது தானே? ஆனால், சட்டத்திலே பிரிவதற்கு உரிமையில்லை; வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

சக்கரவர்த்தி ஆட்சி நடந்த காலத்தில் ஜின்னாவுக்கு நாடு பிரித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைச் சொன்னவன் நான்தான். பிரியவில்லையா?

நாடு பிரிவது, பொதுவாக எந்த அரசியல் சட்டத்திற்கும் விரோதமல்ல. சாதி ஒழிய வேண்டும் என்றார். அதற்கு மதம் இடம் தரவில்லை, பார்ப்பான் இடம் தரவில்லை, சட்டம் இடம் தரவில்லையானால் இவற்றிலிருந்தெல்லாம் பிரிந்து கொள்ள வேண்டியது தானே? பிரிந்தால் ஆபத்து, கஷ்டம் என்கிறார்களே—எப்படி ஆபத்து? பிரிந்துவிட்டால் வடநாட்டிக்குப் போகிற வருமானம் நமக்கு மிச்சமில்லையா? அவனுக்கு வேண்டுமானால் வருமானம் நஷ்டமாகும்.

தமிழ்நாடு தமிழருக்கானது என்றால், அவர்கள் எல்லாம் இங்கு வருவார்கள்; அவர்கள் எல்லாம் வருவார்களானால் இங்கு இருக்கும் அன்னியர்கள் வெளியே போக வேண்டியது தானே? பாகிஸ்தானில் இருக்கும் இந்தியர்களை அவர்கள் 'போ' என்று சொல்லவில்லையா?

நமது தமிழ்நாடு ஏறத்தாழ நாலுகோடி மக்களைக் கொண்டது. ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய 7-8 நாடுகள் நம்மைவிடப் பெரியவை. 25 லட்சம் மக்கள் தொகை கொண்ட நாடெல்லாம் தனி நாடு; அதுவும் ஐ. நா. வில் மெம்பராகவே இருக்கின்றது. 4 கோடி மக்களைக்கொண்ட தமிழ்நாட்டிக்கு என்ன நஷ்டம் வந்துவிடும்? பெரிய நாடாக மட்டுமே இருப்பதால் லாபம் என்ன? பாகிஸ்தான்காரன் இந்திய நாட்டு எல்லையில் சுடுகிறான், உதைக்கிறான்; கிராமம் கிராமமாகச் சேர்த்துக்கொள்கிறானே! என்ன செய்ய முடிந்தது? அதுதான் போகட்டும். கோவாவை என்ன செய்தாய்?

முன்பு நான் இந்த ஊருக்கு வந்திருந்தபோதுதான் சொன்னேன்: கோவாவில் இந்தியர்கள் சுடப்பட்டதற்கு யார் காரணம்? நேருவும் பிரசாதும்தான்; நியாய விசாரணை நடத்த வேண்டுமானால் இவர்களைத்தான் அதற்குக் குற்றவாளிகளாக்கித் தண்டிக்க வேண்டும் என்றேன். போர்ச்சுகீசியர்களுடைய மொத்த ஜனத்தொகை $1\frac{1}{2}$ கோடிகூட இருக்காது. அவனையே ஒன்றும் செய்ய முடியாத போது தமிழ்நாட்டை என்ன செய்து விட முடியும்?

இதற்கெல்லாம் கடுதாசியைக் கொளுத்தினால் தீர்ந்து விடுமா என்பீர்கள். ஆம், தமிழ்நாடு நீங்கிய இந்திய யூனியன் படத்தைத் தீவைத்துக் கொளுத்தினால், நம்முடைய எதிர்ப்பைக் காட்டினதாக ஆகும். முன்பு இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தினோமே என்ன ஆயிற்று? வெளிநாட்டுப் பத்திரிக்கைகளில் எல்லாம் செய்தி வெளியாயிற்றே! இந்திய யூனியன் படத்தைக் கொளுத்தினார்கள் என்பதை வெளிநாட்டார் அறிந்தால் இந்த ஆட்சியை என்னவென்று எண்ணுவார்கள்? இவனுக்கென்ன மதிப்பு வரும்? இது என்ன ஜனநாயக ஆட்சியா, சர்வாதிகார ஆட்சியா, என்று நினைக்கமாட்டானா?

இந்திய யூனியன் படத்தைக் கொளுத்தியும் ஒன்றும் ஆகவில்லையென்றால் வேறு என்ன செய்வது என்பது எனக்குத் தெரியும்.

[குமரி மாவட்டம் ஈத்தா மொழியில் சொற்பொழிவு—'விடுதலை' 20-12-1958]

'நம் தமிழ்நாடு இந்தியக் கூட்டாட்சியில் இருந்து, அதாவது வடநாட்டான் ஆதிக்கத்தில் இருந்து பிரிந்தால் பெரும் கேடு ஏற்பட்டுவிடும்' என்றும்,

'ஒன்று பிரிந்ததே—அதாவது முஸ்லிம்கள் வாழும் நாடு முஸ்லிம்களுக்கு என்று ஆகிவிட்டதே பெரிய கேடாக இருக்கிறது' என்றும் காங்கிரஸ்காரர்கள்—பண்டித ஜவஹர்லால் முதல் அனேகமாக எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் கூப்பாடு போட்ட வண்ணம் இருந்தார்கள்.

ஆனால், பிரிந்தால் என்ன கேடு ஏற்படும் என்று இதுவரை குறிப்பிட்ட எவரும் எதையும் கூறவில்லை.

இந்திய யூனியன் ஏற்பட்ட நாள் முதல் இன்றுவரை தமிழ்நாடு பொருளாதார ஏற்றத்திற்கு, யூனியன் இந்தியா எத்தனை கோடி ரூபாய் கைப்பொறுப்பில் இருந்து செலவு செய்திருக்கிறது? அப்படி ஏதாவது இருந்தாலும் அதைத் தமிழ்நாடு, இந்தியா தவிர்த்த மற்ற நாடுகளில் இருந்து சரிசெய்துகொள்ள முடியாதா?

உண்மையைச் சொல்லவேண்டுமானால், இந்திய யூனியன் காரணமாகத் தமிழ் நாட்டைத்தான்—பஞ்சாப் முதல் பம்பாய், வங்காளம் வரை உள்ள முதலைகள் தமிழ் நாட்டிற்குள் புகுந்து, சிறு மீன்களை விழுங்குவதுபோல் விழுங்கிக்கொண்டு போகின்றனவே அல்லாமல், தமிழ்நாடு எந்தப் பொருளாதார ஏற்றம் பெற்று இருக்கிறது என்று சொல்ல முடியும்?

தமிழ்நாடு பிரிந்தால், அது சிறு நாடு ஆகிவிடுமே என்கிறார்கள். இலட்சக்கணக்கில் மக்கள் உள்ள சிறு சிறு நாடான கொழும்பு, பர்மா முதலிய நாடுகளும், அய்ரோப்பாவில்—ஆப்பிரிக்காவில்—ஆசியாமைனர் முதலியவற்றில் உள்ள சுமார் 100 நாடுகள்—சற்றேறக் குறைய தமிழ்நாடு போன்ற நாடுகள்—இன்று பொருளாதாரம் மாத்திரமல்லாமல், மற்றும் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து பயமற்று மானத்துடன் முழுச் சுதந்திரமாய் வாழுகின்றன.

ஒன்று நான் சொல்லுவேன்; உறுதியுடன் சொல்லுவேன்: வெள்ளையன் சென்றவுடன் தமிழ்நாடு தனி நாடாக ஆகியிருக்குமேயானால், முதலாவது, தமிழனின் சமுதாய இழிவு ஒழிந்திருக்கும்.

இரண்டாவது, தமிழன் பகுத்தறிவின் உச்ச நிலையை அடைந்து, இன்றுள்ள காட்டுமிராண்டித் தன்மையில் தன் தாய்நாட்டில் ஈனப் பிறவி மனிதனாக—கீழ் சாதியாக—வயிற்றுப் பிழைப்புக்கு, பதவிக்கு எதையும் விற்றுப் பிழைக்கும் ஈனத் தன்மை நல்ல அளவுக்கு மறைந்திருக்கும்; பதவிக்காக வடநாட்டானுடையவும் பார்ப்பானுடையவும் பெருவிரலைச் சூப்பும் ஈனத்தனம் ஒழிந்திருக்கும்.

மற்றும், பிறவி உயர்வு தாழ்வு, அயோக்கியத் 'தகுதி—திறமை' விகிதாச்சார உரிமைத்தனம் ஒரு சிறு சின்னஞ் சிறு கூட்டத்திற்கு அபரிமிதமான ஏகபோக உரிமை; பெரும், மாபெரும் கூட்டத்திற்கு இழிதொழிலில் பிழைக்கவேண்டிய மானமற்ற தன்மை முதலிய இவைகள் ஒழிந்திருக்கும்.

இன்று இந்திய யூனியனின் முக்கிய கொள்கைகள் என்னவென்றால், சாதி காப்பாற்றப்படவேண்டும்; மேல் சாதியான் மேல்பதவியில் இருக்கும்படியான தன்மைகள், முறைகள், பரம்பரைப் பழக்க வழக்கங்கள் இவை தவிர, யூனியனில் வேறு எந்த, மற்ற நாடுகளில் இல்லாத சிறப்பான, குறிப்பான 'நன்மை'கள் இருக்கின்றன?

ஒன்று சொல்லுவேன்; யூனியனில் தமிழ் நாட்டுக்கோ தமிழர்களுக்கோ நன்மை இருக்குமானால்—யூனியன் அரசியலில் இருப்பது போதாமல், புலாத்காரப் புணர்ச்சிக்காகத்

தண்டிக்கும் தண்டனைக் காலத்தைவிட அதிக தண்டனை விதிக்கும்படியான அளவுக்கு, பிரிவினைத் தடைச் சட்டம் விதிக்கத் துடிப்பானேன்?

['விடுதலை'-தலையங்கம்—9-6-1972]

6. பதவியா, தனிநாடா?

தலைவரவர்களே! தோழர்களே!

மந்திரி பதவி வந்தாலும் வேண்டாம்; எந்தப் பதவி வந்தாலும் வேண்டாம் என்று தானே நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம்!

கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப், என்னை மந்திரிசபை அமைக்கும்படி மிகவும் கெஞ்சி வேண்டிக் கொண்டாரே! 'இந்த மாகாணத்தில் மந்திரிசபை இல்லாததால் இந்தியா முழுமைக்குமே மந்திரிசபை அமைக்க முடியவில்லை; ஆகவே, தாங்கள் மந்திரிசபை அமைக்கவேண்டும்' என்று அவர் கெஞ்சினாரே! எங்களுக்கு மந்திரி பதவி காத்துக் கிடந்ததே!

இன்னமும் சொல்கிறேன்; எழுதிவேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஆச்சாரியாரே என்னிடத்தில் வந்து, 'இந்தச் சண்டை சமயத்தில் (1936-39) அட்வைசரி சர்க்கார் நியமிக்க அவர்களை விட்டுவிடுவது ஆபத்து; தயதுசெய்து நீங்கள் மந்திரி பதவி ஏற்றுக் கொள்ளுங்கள். வேண்டுமானால் எங்கள் ஆட்களிலும் 2, 3 பேரை அனுப்பி, நானும் ஒரு மந்திரியாக இருந்து உதவி செய்கிறேன்' என்று சொன்னார்.

நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். ஏன்? மந்திரி பதவி ஏற்றால் நம்மால் என்ன செய்யமுடியும்? 8 அவுன்ஸ் அரிசி என்பதை 9 அவுன்ஸாக ஆக்க முடியுமா? ரூபாய்க்கு 3 பைசா விற்பனை வரி என்பதை மாற்றி 2 பைசா வாங்க முடியுமா? ஒன்றுமே செய்யமுடியாதே! சூத்திரக் கயிறு டெல்லியில் அல்லவா இருக்கிறது? இப்போது போனால்—இலஞ்சம், கொள்ளை, உறவினர்களுக்கு உத்தியோகம் தேடித்தர முடியுமே தவிர, வேறென்ன செய்ய முடியும்? இன்றைய நிலையில் பதவிக்குப் போனால் யோக்கியனும் அயோக்கியனாய் விடுவானே!

நாங்கள் பதவி ஏற்கவேண்டுமானால், பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டியைப் போல் மாகாண சர்க்காரை நடத்தும் அளவுக்கு மத்திய சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் ஒழிய வேண்டும்; மத்திய சர்க்கார் ஆதிக்கம் நம்மீது இருக்கக் கூடாது.

பார்ப்பனர்கள் எழுதிவைத்த சரித்திரப்படியே சேர, சோழ, பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் இங்கு ஆண்டதாக இருக்கிறது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் பிற்காலத்தில் ஏற்பட்டவை. தமிழைத் தவிர—வடநாட்டு சம்பந்தமில்லாத இலக்கியமே இல்லையே, மற்ற மொழிகளில்! வெள்ளையன் வரும்வரை நம்மவர்கள் தாமே ஆண்டார்கள்? வெள்ளைக்காரன் நம்மவர்களிடத்திலிருந்துதானே நாட்டை வாங்கினான்?

'கர்ப்ப ஸ்திரீகள் பிட்டுத் தின்றதைத் தவிர—பகைவர்களின் காலடி படாத மண்' என்று அவ்வளவு சிறப்பாக இருந்த நாடுதானே இது!

அடுத்துக் கெடுத்து ஆரியம் வென்றதே தவிர, போர் செய்தா வென்றது?

ஆண்ட அரச பரம்பரையினர் இழிந்தவர்களாய், தேவடியாள் மக்களாய் ஏன் வாழ வேண்டும்? பாடுபடுவது நம்மவர்கள்; கட்டடம் கட்டுபவர்கள் நம்மவர்கள்; உழுகிறவர்கள், நாட்டை அழகு படுத்துகிறவர்கள் நம்மவர்கள். இத்தனை பணிகள் செய்தாலும்—நாம் இழிந்த மக்களாய், கீழ் சாதிக்காரர்களாய் வைக்கப்பட்டிருக்கிறோம் என்றால் என்ன நியாயம்?

தமிழ் நாட்டில் இருக்கும் பெரிய பெரிய கோயில்களையெல்லாம் கட்டி வைத்தது யார்? காணிநிலம் எந்தப் பார்ப்பனனாவது, எந்தக் கோவிலுக்காவது எழுதிவைத்திருக்கிறானா? 'உன் சவுகரியத்திற்காகக் கோயில்களும் அக்கிரகாரமும், கட்டிக்கொடுத்து—உன் சுக வாழ்வுக்கு வழிதேடிக் கொடுத்தவர்கள், சூத்திரர்களா?' என்று ஏன் பார்ப்பானைக் கேட்கக் கூடாது? பார்ப்பான் உழுதால் பாவம் என்று எழுதிவைத்துக்கொண்டு, நிலத்தில் இறங்காமலேயே வாழ வழி வகுத்துக் கொண்டானே? உழுது அறுவடைசெய்ததைத் தின்பது மட்டும் புண்ணியமாகுமா? ஒருவன் உழைக்க, அதன் பலனை மற்றவன் அடையவேண்டும் என்று ஆண்டவன் எழுதிவைத்தான் என்கிறானே, இதுவா வேதம்?

பிச்சைக்கு வந்தவன் பிரபுவாகவும், நாட்டிற்கு உரியவன் பஞ்சையாகவும் ஓட்டாண்டியாகவுமா இருக்கவேண்டும்?

[மணப்பாறையில், 27-3-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 31-3-1950]

7. குடியாட்சி என்றால் என்ன?

தலைவரவர்களே! தோழர்களே!

இது உண்மையில் குடிஆட்சியல்ல. இதற்கு முன் ஆண்டிருந்த வெள்ளையனுக்கு இலஞ்சம் கொடுத்து, அவனுடைய சுரண்டலுக்கு நிரந்தர வசதி செய்துகொடுத்து 'மேட் ஓவர்' (Made over) செய்துகொள்ளப்பட்ட ஆட்சிதான். தங்கள் பேருக்கு மாற்றிக் கொள்ளப்பட்ட ஆட்சிதான்.

காங்கிரஸ்காரர்கள் வெள்ளையனை வெற்றிகொண்டு, இந் நாட்டு ஆட்சியைப் பெற்றவர்களாகார். வெள்ளையன்தான், தான் கொடுத்த வாக்குறுதிப்படி ஆட்சியை இவர்களிடம் ஒப்படைத்தான்.

இக் குடிஅரசுச் சட்டத்தைத் தோற்றுவித்தவர்களும் ஒரே கட்சிக்காரர்கள்தாம். அதுவும் வெள்ளையன் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தாம். நாட்டில் 100-க்கு 10 பேரான பணக்காரர்களுக்கும் படித்த பார்ப்பனர்களுக்குந்தான் இவர்கள் பிரதிநிதியாவார்களே ஒழிய, மற்ற 90 பேருக்கும் இவர்கள் பிரதிநிதிகளாக ஆகமாட்டார்கள்.

குடிஆட்சி என்றால் குடிமக்களின் பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சியாக இருக்க வேண்டும். குடிஅரசுச் சட்டம் என்றால் எல்லாக் குடிமக்களின் பிரதிநிதிகளாலும் தோற்றுவிக்கப்பட்ட சட்டமாயிருக்கவேண்டும். இந்தச் சட்டத்தை உண்டாக்கினவர்களுக்கு அவ்விதம் கூறிக்கொள்ளத் தகுதியில்லை. ஏனெனில், அத்தனை பேருமே காங்கிரஸ் மேலதிகாரத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

எனவே, நமக்குக் குடிஆட்சி என்றால், நம் நாடு தனி நாடாகி நம்மவன் ஒருவன் அக் குடியாட்சியின் தலைவனாக இருக்கவேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களை நாமே வாங்க உரிமை உடையவராக ஆகவேண்டும்; நம் நாட்டு வளப்பம் நமக்கே சொந்தமாக வேண்டும்; இந் நாட்டுப் போக்குவரத்து மூலம் வரும் இலாபம், வருமான வரி மூலம், புகையிலை வரி மூலம் வரும் இலாபம், தபால் தந்தி இலாக்காக்கள் இவற்றின் மூலம் வரும் இலாபம் இவையாவும் இந் நாட்டவரான நமக்கே உரியதாகவேண்டும். அதுதான் உண்மைக் குடியரசாகும். இன்று வடநாட்டான்தான் இத்தனை இலாபத்திற்கும் உரிமையுடையவனாக இருந்துவருகிறான்.

இன்று பிரிவினை கேட்கும் நான் கிழவனாக இருக்கலாம். அதன் காரணமாக பலாத்காரத்தில் நம்பிக்கையற்றவனாக இருக்கலாம். நாளை நம் இளைஞர்களும் இப்படியே இருந்துவிடமாட்டார்கள். இரத்த வெள்ளத்தின் மத்தியில் பிரிவினை கேட்பார்கள்; கத்தி

முறையில் பிரிவினை கேட்பார்கள். ஆட்சியாளர்கள் இப்படியெல்லாம் நடக்கவிடாமல் நம் நாட்டை ஒழுங்காக நமக்குப் பிரித்துக்கொடுத்துவிட வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன்.

[சென்னை சைதாப்பேட்டையில், 25-1-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-1-1950]

8. சட்டசபை நுழைவும் நாட்டுப் பிரிவினையும்

தோழர்களே!

நமது நாடு விடுதலை பெறுவதற்கு—வெளி இராச்சியங்கள் நம்முடைய நாட்டைச் சுரண்டிக்கொண்டு இருப்பதிலிருந்து விடுவிப்பதற்கு ஆகிய இக் காரியங்களைச் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்களா என்று பாருங்கள்.

சிலர் கூறுகிறார்கள், 'நீங்கள் சொல்லுகிற சங்கதிகளெல்லாம் முற்றிலும் உண்மை தான். இந்த நாட்டை வெளியார்கள் ஆதிக்கத்திலிருந்து விடுபடச்செய்து சுதந்திர நாடாக்க வேண்டியதுதான். ஆனால், அதற்கு இப்படி வெளியில் இருந்து பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. தேர்தலில் நின்று சட்டசபைக்குப் போகவேண்டும்' என்று சொல்லுகிறார்கள். அதாவது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி (Power Politics) அதன் மூலம் போராடவேண்டும் என்கிறார்கள்.

நான் கூறுகிறேன், அங்கே நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. நாம் ஒன்றும் செய்ய முடியாதபடியான சட்டதிட்டங்களை அங்கு அமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் போய், திராவிடநாடு தனிநாடாகப் பிரியவேண்டும் என்று என்னதான் ஏகமனதாகத் தீர்மானித்தாலும், சட்டசபைக்குத் தலைவராக இருப்பவர், 'இந்த மாதிரியான தீர்மானம் இங்கு செய்வதற்குச் சட்டத்தில் இடம் இல்லை' என்று கூறித் தள்ளிவிடுவார்கள். இதைச் செய்யமுடியாமல் அங்கு போய் நாம் இருக்கவேண்டும் என்கின்ற அவசியம் ஒன்றும் நமக்கு இல்லை. எனவேதான், அத்தகைய சட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று நாம் வெளியில் இருந்து போராடி வருகிறோம்.

ஒரு வீட்டை இடிக்கவேண்டும் என்றால் அந்த வீட்டுக்கு வெளியில் இருந்து கொண்டுதான் இடிக்கவேண்டுமே தவிர வீட்டுக்குள் இருந்துகொண்டே இடித்தால்—வீடு நம்மீதே விழுந்து, நாமே அழிய வேண்டியதுதான். எனவேதான், நாம் வெளியில் இருந்து மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கும் பணியில் வேலைசெய்கிறோம்.

[ஈரோட்டில், 13-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-2-1951]

9. நாடு கேட்பது தேசத் துரோகமா?

தோழர்களே!

நாம் வேறு எந்த நாட்டானையாவது, 'இந்த நாட்டிற்கு வந்து ஆட்சி செய்!' என்று கூப்பிடுவதாய் இருந்தால்—அது தேசத் துரோகம் ஆகும். ஒரு அமெரிக்கனை, ஜப்பான்காரனை, பிரெஞ்சுக்காரனைக் கூப்பிட்டால், அது வேண்டுமானால் தேசத் துரோகம் ஆகும்.

ஆனால், நாம், இங்கே இருக்கிற அன்னிய இராஜ்யத்தானை 'வெளியே போ!' என்றால், அது எப்படித் தப்பு ஆகும்? எப்படித் தேசத் துரோகம் ஆகும்? சொல்லட்டுமே யாராவது!

எங்கள் நாட்டிலே—சென்னை இராஜ்யத்திலே, சென்னை இராஜ்யத்தார் அல்லாதவர் இருக்கக்கூடாது; அதிகாரம் செய்யக்கூடாது; அவனுக்குச் சுரண்ட உரிமை, வகை இருக்கக்கூடாது என்று சொன்னால் எப்படிக் குற்றம் ஆகும்?

இன்றைய தினம் நமக்குச் சுதந்திரம் இல்லை என்பது மாத்திரம் அல்ல; நம்மை—நம் இராஜ்யத்தை வடநாட்டான்தான் ஆள்கிறான். எனவே, அவர்களுடைய ஆதிக்கம்—அந்த ஆட்சி ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேனே தவிர, இந்த நாட்டிற்கு வேறு ஒருவனை நாங்கள் அழைக்கவில்லை.

அமெரிக்கன் வந்தாலும் இடம் கொடுக்கமாட்டோம், ஜப்பான்காரன் வந்தாலும் இடம் கொடுக்கமாட்டோம்.

நாங்கள் கூறுவது எல்லாம்—எங்கள் நாட்டை, எங்கள் இராச்சியத்தான் அல்லாத அன்னியன் யாரும் ஆளக்கூடாது; நாங்களே இந்த நாட்டை ஆளவேண்டும்; வெளியில் இருப்பவனுக்கு எவ்வித அதிகாரம், ஆதிக்கம் இருக்கக்கூடாது.

இன்றைய தினம் அரசியல் திட்டத்திலே இருக்கிற சென்னை மாநில (Madras State) எல்லைதான் நம்முடைய எல்லை. நாளைக்கு எங்களுக்குச் சக்தி இருந்தால் அடுத்த இராஜ்யங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனதனாலேயே எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று சொல்லுகின்றோம்.

சென்னை திருவல்லிக்கேணியில், 25-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-3-1951]

பகுதி II

அரசியல்

1. அரசியல்

1. சுயராஜ்யம்

சுயராஜ்ய மென்னும் பதம் நமது நாட்டில் பெரும்பான்மையாய் ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் சுயநலத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருவதோடு, பாமர ஜனங்கள் அதை அறியாதபடி சுயகாரியப் புலிகளால் சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றது. சுயராஜ்யம் என்பதைப் பலர் பல விதமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திருடர்கள் தாங்கள் திருடுவதைப் பிறர் கவனியாமல் விட்டுவிடுவதுதான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். சிறையிலிருக்கும் கைதிகள் தங்களை வெளியில் விட்டுவிடுவது தான் சுயராஜ்யம் என்று நினைக்கிறார்கள். குடிகாரர்கள், தாங்கள் தாராளமாகவும் விலை நயமாகவும் வேண்டிய அளவு குடிக்க வசமுள்ளதாய், கலால்வரி எடுபட்டுப் போவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். பாமர ஜனங்கள் பலர் இந்தியாவை விட்டு வெள்ளைக் காரரை விரட்டி விடுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். ஏழைகள் ரூபாய் 1-க்கு 8 படி அரிசி விற்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். தரித்திரர்கள் பணக்காரரின் சொத்துக்களை யெல்லாம் பிடுங்கித் தங்களுக்குச் சரிசமானமாய்ப் பங்கிட்டுக் கொடுப்பதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள்.

இவையெல்லாம் அறியாமையால் நினைப்பதாக வைத்துக் கொண்டாலும் அறிந்த வர்கள், படித்தவர்களென்போரோ, வெள்ளைக்காரர் உத்தியோகங்களை யெல்லாம் தாங்களே அனுபவித்துக்கொண்டு 500, 1000. 5000, 10000 ரூபாய் சம்பளம் பெறுவதுதான் சுயராஜ்ய மென்று நினைக்கிறார்கள். உயர்ந்தோர்கள் என்கின்ற பிராமணர்களோ பாமர ஜனங்களைக் கொண்டு கிளர்ச்சி செய்வித்து மேற்படி சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகங் களையும், பதவிகளையும் தாங்களே பெறுவதும், தாங்கள் பிறவியில் உயர்ந்தவர்கள், மற்ற வர்கள் தாழ்ந்தவர்ளென்பதை நிலைநிறுத்தி ஆதிக்கம் பெறுவதுதான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். இராஜ தந்திரிகளென்போரும் இராஜியவாதிகளென்போரும் சீமையி லிருந்து பார்லிமெண்டார் மூலம் நமக்கு வழங்கப்படும் சில அதிகாரங்களையும் பதவி களையுந்தான் சுயராஜ்யமென்று நினைக்கிறார்கள். காங்கிரசில் தற்காலம் பிரதான ஸ்தானம் வகிப்பதாய்ச் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியார் என்போரும், அரசாங்கத் தாரிடமிருந்து எதையாவது பெறுவதைத்தான் சுயராஜ்யமென்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். (இவற்றையெல்லாம் அறிந்துதான் இங்கிலாந்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிரசங்கம் கேட்ட கர்னல் வெட்ஜ்வுட் துரை இந்தியர்கள் இன்னமும் தங்களுக்கு வேண்டியது என்ன (சுயராஜ்யம்) வென்பதையே தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னார் போலும் !)

மகாத்மா காந்தியடிகள் இவற்றை ஒன்றையும் சுயராஜ்யமென்று கருதவேயில்லை. இவ்வித சுயராஜ்யங்களில் எதுவரினும், நமது நாட்டில் இப்போதுள்ள கஷ்டங்கள் எதுவும் மாறவே மாறாது என்பது அவருடைய அபிப்பிராயம். இப்போது சுயராஜ்யமில்லையென்று சொல்வதற்கு அறிகுறியாக இருப்பது :—

1. மக்கள் சுயமரியாதை இல்லாமலும், சமத்துவமில்லாமலும் ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் எனச் சொல்லிக்கொண்டு, பெரும்பான்மையான மனிதர்களைத் தீண்டாதார்களென்று ஒதுக்கி, இழிவான மிருகங்களிலும் கேடாய் மதித்து, மனித சுதந்திர மில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பது.

2. தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு வழியில்லாமலும், தங்கள் மானத்தைக் காக்க ஆடையில்லாமலும் கோடிக்கணக்கான ஜனங்கள் பட்டினியாலும், மானாபிமானத்தாலும் சாவது.

3. தேசத்தில் பெரும்பான்மையோரான தொழிலாளிகள் தங்களுக்குத் தொழிலில்லாமல் தங்கள் ஜீவனத்திற்காக எதுவும் செய்ய ஒருப்பட்டு ஜீவனத்திற்காக அன்னிய நாட்டிற்குச் சென்று இழிவாய் வாழ்ந்து மாய்வது.

4. நமது தேவைக்கு வேண்டிய சகல வஸ்துக்களும் அன்னிய நாட்டிலிருந்து வருவதாய் ஏற்பட்டு, அதன் பொருட்டு நமது செல்வங்கள் வெளிநாடுகளுக்குப்போய் நமது நாடு தரித்திரத்தில் மூழ்கிக்கொண்டு போவது.

இப்படிப்பட்ட கெடுதிகள் நம் நாட்டை விட்டு என்று அகலுமோ அன்றுதான் நமது நாடு சுயராஜ்யம் பெற்ற நாடு ஆகுமேயல்லாமல், அன்னியர்கள் அரசாட்சி செய்யும் காரணத்தினாலேயே சுயராஜ்யமில்லையென்று சொல்லிவிட முடியாதென்றும் மகாத்மா காந்தி அடிக்கடி கதறி வருவதோடு, இவ்வித சுயராஜ்யத்தை அடையவே ஒத்துழையாமையையும், கதர், தீண்டாமை, மதுவிலக்கு முதலிய நிர்மாணத் திட்டங்களையும் உபதேசித்தார்.

இதனை மேல்சாதியாரென்போரும், படித்தவர்களென்போரும், இவ்விரண்டும் சேர்ந்த சுயராஜ்யக் கட்சியாரென்போரும் ஆதியிலிருந்தே ஒப்புக்கொள்ளவில்லை. இவை ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வந்து பலன் தருவதானால், மேல்சாதியாரென்போருக்கும், படித்தவர்களென்போருக்கும் பெரிய ஆபத்தாய்த்தான் முடியும். ஏனெனில், தீண்டாமையொழிந்தால் மேல்சாதியென்பது போய்விடும். கதர், மதுவிலக்கு வெற்றிபெற்றால் ஏழ்மை நிலையும், தரித்திரமும் மறைந்துவிடும். இவ்விரண்டும் மறைந்தால் படித்தவர்களுக்குப் பிழைப்பிருக்காது.

இந்த இரகசியத்தை அறிந்தேதான், உயர்ந்த சாதியார்கள் என்போரும் படித்தவர்களென்போரும், கூட இருந்தே குடியைக் கெடுத்ததுபோல், மகாத்மாவின் திட்டத்தை அவருடன் இருந்தே ஒழித்துவிட்டார்கள். அது மாத்திரமல்லாமல், இராஜீய சுதந்திரமென்ற பொய்ப் பெயர் வைத்து உத்தியோகம் சம்பாதிப்பதையே பிரதான தத்துவமாய்க் கொண்ட சுயராஜ்யக் கட்சியென்று ஒரு கட்சியையும் சிருஷ்டித்துக்கொண்டு, காங்கிரசிலிருந்து மகாத்மாவை விரட்டிவிட்டு, உத்தியோக வேட்டையாட காங்கிரசை ஓர் ஆயுதமாயும் ஏற்படுத்திக்கொண்டார்கள். சுயராஜ்யக் கட்சியாரின் கொள்கையான இராஜீய சுதந்திரமென்னும் பொய் அதிகாரமும் பதவியும் நமக்குக் கிடைக்கக் கிடைக்க நாடு இன்னும் சீர்கேடடையவும், ஒற்றுமை குலையவும், தரித்திரம் பெருகவும், அடிமைத்தன்மை பலப்படவுந்தான் ஆகுமேயல்லாமல் தேசம் ஒருகாலும் முன்னுக்கு வர முடியவே முடியாது.

உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்னிட்ட காங்கிரஸ்களின் முயற்சியால் நமது அரசாங்கத்தார் இதுவரை இரண்டு தடவைகளில் இராஜீய சுதந்திரமென்னும் இரண்டு சீர்திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, ஒன்று மிண்டோ-மார்லி சீர்திருத்தம்; மற்றொன்று மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம். இவைகளின் பலனாய் தேசம் என்னவாயிற்று? இவற்றால் ஏற்பட்ட பதவியையும், உத்தியோகத்தையும், ஆயிரம் பதினாயிரக் கணக்கான சம்பளங்களையும் நம்மில் யார் அடைவது என்கின்ற சண்டைகளும், பொறாமைகளும் வலுத்து வந்ததும், ஒருவரை ஏமாற்றி ஒருவர் அடைய பொது ஜனங்களை உபயோகித்துக் கொண்டதுமல்லாமல் வேறென்ன கண்டோம்? 5500 ரூபாய் சம்பளமுள்ள நிருவாக சபை மெம்பர் பதவிகளும் மந்திரி பதவிகளும் இந்தியருக்குக் கொடுப்பது என்கின்ற சீர்திருத்தம் பெறாமலிருந்திருப்போமேயானால், இந்து-முஸ்லிம் சண்டைகளும், பிராமணர்-பிராமணரல்லாதார் கட்சிகளும், உட்பிரிவு துவேஷங்களும்

ஏற்பட்டிருக்குமா? சுயராஜ்யக் கட்சியென்று ஓர் கட்சி ஏற்பட்டு, மகாத்மாவின் இயக்கத்தைக் குலைத்து, உத்தியோக வேட்டையாட முன்வந்திருக்குமா? மேற்படி சீர்திருத்தங்களென்னும் இராஜீய சுதந்திரங்கள் கொடுக்குமுன் 70 கோடி ரூபாயாக இருந்த வரி இப்போது 150 கோடி ரூபாயாக மாறியிருக்குமா? 24 கோடியாக இருந்த இராணுவச் செலவு இன்று 60, 70 கோடியாக மாறியிருக்குமா? அரசாங்கத்தாரிடமிருந்து பெற்ற சீர்திருத்தம் என்னும் சுயராஜ்யத்தாலல்லவா இவ்விதக் கஷ்டங்கள் விளைந்தன! மகாத்மாவின் சீர்திருத்தமாகிய நிர்மாணத் திட்டமென்னும் சுயராஜ்யத்தைப் பெற்றிருப்போமேயானால், இக்கெடுதிகள் நமக்கு வந்திருக்குமா? சுயராஜ்யக் கட்சியார் கோருகிறபடி இன்னுமொரு சீர்திருத்தமென்னும் சுயராஜ்யம் சர்க்காரால் கொடுக்கப்பட்டால் நமது கதி என்னவாகும்? இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் வரி அதிகமாகும்? எவ்வளவு சாதிச் சண்டைகளும் வகுப்புத் துவேஷங்களும் வளரும்?

இந்தச் சீர்திருத்தங்களின் பலனால் ஏற்பட்ட உத்தியோகங்கள்தானே இன்றைய தினம் ஸ்ரீமான்களான சி. பி. இராமசாமி அய்யரும், முகமது உஸ்மானும், இராமராயநிங்கரும், பாத்ரோவும், சிவஞானம் பிள்ளையும் ஆளொன்றுக்கு மாதம் 5500 ரூபாய் வீதம் சம்பளம் என்னும் பெயரால் கொள்ளையடிப்பதும், தனி வண்டியில் பிரயாணம் செய்வதுமாயிருக்கிறது. இதைப் பார்த்துப் பொறுக்காமல் ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்கார் நாக்கிலும், சத்தியமூர்த்தி நாக்கிலும், ஏ. ரெங்கசாமி அய்யங்கார் நாக்கிலும் ஊறின தண்ணீர்தானே—நமது நாட்டில் சுயராஜ்யக் கட்சியாய்க் கிளம்பி, தேசத்தையும் சமூகத்தையும் பாழாக்கிக் கொண்டு வருகிறது! இந்த உத்தியோகங்கள் இந்திய மக்களுக்கு வீண் தெண்டத் துக்குத் தானே, குறைக்கும் நாய்க்கு எலும்பு போடுவது போல அரசாங்கத்தாரால் வீசி எறியப்பட்டிருக்கிறது! இந்த உத்தியோகங்களால் ஏழைகள் தலையில் கைவைத்து, வரியை உயர்த்தி வசூல் செய்து, ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒரு சிலர் அனுபவிப்பதல்லாமல் வேறென்ன பிரயோசனம்? இவ்வுத்தியோகங்களில்லாத காலத்தில் இராஜாங்கம் நடக்கவில்லையா? அந்த இராஜாங்கத்திற்கும் இந்த இராஜாங்கத்திற்கும் வித்தியாசம் தானென்ன? இந்த உத்தியோகங்கள் ஏற்பட்டதின் பலனாய் ஒரு வெள்ளைக்கார உத்தியோகமாவது, அதிகாரமாவது குறைந்ததா?

இந்த உத்தியோகத்தின் பலனாய்த் தேசத்தில் செல்வநிலை பெருகிற்றா? வரி குறைந்ததா? தீண்டாத மக்கள் தங்கள் தெய்வங்களைக் காணவாவது, தெருவில் நடக்கவாவது உரிமை பெற்றார்களா? கோடிக்கணக்காய் அன்னிய நாட்டாரால் வியாபாரத்தின் மூலமாய்ச் சுரண்டப்படும் பணத்தில் முக்கால் துட்டாவது நமது நாட்டில் தங்க வழியேற்பட்டதா? கோடிக்கணக்கான மக்கள் மதுபானத்தினால் பாழாவதையாவது நிறுத்த முடிந்ததா? தேசத்துக்கு என்ன பலனைக் கொடுத்தது? சுயராஜ்யக் கட்சியாரென்போர், இந்த இரகசியத்தைப் பாமர ஜனங்கள் அறியாதபடி பத்திரிகைகளில் சதாகாலமும் பொய்யும், புளுகும் எழுதியும், மனதறிந்த பொய்ப் பிரச்சாரங்கள் செய்தும், பொதுஜனங்களை ஏமாற்றி எல்லா உத்தியோகங்களையும் தாங்களே அடைய வேண்டுமென்னும் ஆசைப்பட்டுக்கொண்டும், கூடிக்கூடி எப்படி இந்த உத்தியோகத்தை அடைவது என்று சதியாலோசனை செய்துகொண்டும் இருக்கிறார்களேயல்லாமல், இவ்வித உத்தியோகங்கள் நமக்கு அவசியமா, அவசியமில்லையா என்பதைப்பற்றி ஒரு நாளாவது பேசியதே கிடையாது.

சுயராஜ்யக் கட்சியாரின் சுயராஜ்யம் தேசத்திற்கு உண்மையான சுயராஜ்யம் ஆகாது. இவ்வித சுயராஜ்யம் நமது நாட்டிற்கு வேண்டவே வேண்டாம். சுயராஜ்யக் கட்சியார் கேட்கிறபடி சர்க்காரால் கொடுக்கப்படும் சுயராஜ்யமென்னும் சீர்திருத்தம் மறுபடியும் வருமானால் படித்தவர்களுக்கும் உயர்ந்த சாதியாரென்று சொல்லுபவர்களுக்கும் ஆயிரக்கணக்கான சம்பளமும், உத்தியோகமும் கிடைக்கும். இதற்காக மறுபடியும்

வரியை அதிகப்படுத்த வேண்டும். மக்களுக்குள் உயர்வு, தாழ்வு நிலைத்திருக்கும். குடியை ஒழித்தால் சர்க்கார் வரும்படி குறைவதன் மூலம் தங்களுடைய சம்பளம் குறைந்து போகுமானதால், குடியை நிறுத்த முடியாது. வியாபாரத்தின் மூலமாக அன்னிய நாட்டுக்குப் போகும் செல்வத்தை நிறுத்த இவர்கள் கையில் திட்டமொன்றுமில்லாததால் அதவும் சாத்தியப்படாத. உத்தியோகத்தைக் குறைப்பதால், படித்தவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு மார்க்கமில்லாமல் போய்விடும். ஆகையால் அதையும் இவர்கள் செய்யமுடியாது.

உண்மையான சுயராஜ்யம் நமக்கு வேண்டும். அது மகாத்மாவின் சுயராஜ்யமான கதர் உற்பத்தி செய்வதிலும், அதை உடுத்துவதிலும், தீண்டாமையை ஒழித்து மக்கள் சமமாய் வாழ்வதிலும், மதுபானம் ஒழிந்து மக்கள் ஒழுக்கமடைவதிலுமேதானிருக்கிறது. மகாத்மா சொல்லும் சுயராஜ்யமாகிய, கதர் உற்பத்தி செய்து உடுத்தினால் அன்னிய நாட்டுக்குப் போகும் 70 கோடி ரூபாயும், மில் இயந்திரக்காரர் அனுபவிக்கும் 70 கோடி ரூபாயுமாக 140 கோடி ரூபாயில், குறைந்தது வருடம் 1-க்கு 100 கோடி ரூபாயாவது ஏழைகளுக்குப் பங்கு வீதம் கிடைக்கும். மகாத்மா சொல்லும் தீண்டாமை என்னும் சுயராஜ்யத்துக்குப் பாடுபட்டு வெற்றி பெற்றால், மிருகங்களுக்கும், புழுக்களுக்கும் கேவலமாயிருக்கும் தீண்டாதாரென்று சொல்லப்படும் 7 கோடி பேர்கள் மனிதர்களாவார்கள். இந்திய மனித சமூகத்துக்கு 7 கோடி மனிதர்கள் இலாபமாகும். பிராமணரல்லாதாருக்கு இருக்கும் இழிவான தாசிமக்கள், சூத்திரர் என்கிற பெயரும் நீங்கும். மகாத்மாவின் சுயராஜ்யமாகிய மது விலக்குக்கு வேலைசெய்து வெற்றிபெற்றால், தேசத்தில் மதுபானம் ஒழியும். ஏழைகள் சுகமாய் வாழ்வார்கள். வருடத்தில் 20 கோடி ரூபாய் ஏழைகளுடைய பணம் மதுபான வகையில் சர்க்காருக்குப்போய், உத்தியோகஸ்தர்கள் பங்கிட்டுக்கொள்வதை நிறுத்தும். ஆதலால் சுயராஜ்யக் கட்சியின் சுயராஜ்யம் வேண்டுமா? மகாத்மாவின் சுயராஜ்யம் வேண்டுமா?

['குடி அரசு'-தலையங்கம்—15-11-1925]

2. வரதராஜுலு அறிக்கைக்கு சமாதானம்

'தமிழ்நாடு' பத்திரிக்கையின் ஜூன் மாதம் 3-ந்தேதி தலையங்கமாகிய, 'வரதராஜுலு அறிக்கை' என்னும் விஷயத்திற்கு, நான் ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டும் என்பதாக நமது வாசகர்கள் எதிர்பார்க்கக் கூடுமென்பதாக நினைத்தே, அதே தலையங்கமிட்டு இவ்வியாசத்தைத் தொடங்குகிறேன். ஸ்ரீ வரதராஜுலு அறிக்கையின் முதல் வாக்கிய ஆரம்பத்தில், 'காங்கிரஸ் மகாசபையே தேசத்தில் பிரதானமானது' என்பதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறத. அது எந்த விஷயத்தில் யாருக்குப் பிரதானமானது? எந்தத் தேசத்திற்குப் பிரதானமானது? தேசத்தில் உள்ள 33 கோடி மக்களில் எந்த வகுப்பாருக்கு, எந்தக் கூட்டத்தாருக்குப் பிரதானமானது? தென்னாட்டில் படித்த வகுப்பாரான பார்ப்பனருக்கும், வடநாட்டில் படித்த கூட்டத்தாரான சிலருக்கும் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கும், அவர்களை வாழவைக்கவும் பிரதானமானதேயல்லாமல், வேறுயாருக்கு? எதற்கு? அதனால் என்ன பிரயோஜனம் உண்டென்றும் கேட்கிறேன். காங்கிரஸ் ஏற்பட்டு 40 வருஷத்திற்கு மேலாகியும், தேச மக்களின் பெரும் பாலோரான விவசாயி, தொழிலாளி, குடியானவன் ஆகிய கூட்டத்தாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறது? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? காங்கிரசுக்கு முன் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்த கடன் எவ்வளவு? காங்கிரசுக்குப் பின் விவசாயிகளுக்கு ஏற்பட்ட வரி எவ்வளவு? கடன் எவ்வளவு? காங்கிரசுக்கு முன் தொழிலாளிகளின் நிலைமை, சம்பாத்தியம் முதலியவைகள் சவுகரியம் எப்படி இருந்தது? காங்கிரசுக்குப்பின் தொழிலாளிகளின் நிலைமை, தொழில் சம்பாத்தியம், சவுகரியம் எப்படி ஆய்விட்டது? என்று கேட்கிறேன்.

இனி வகுப்புகள்வாரியாய்க் கவனிப்போம். காங்கிரசுக்குமுன் பார்ப்பனரல்லாதார் நிலைமை, செல்வம், செல்வாக்கு எப்படி இருந்தது? காங்கிரசுக்குப் பின் அவர்களது நிலைமை எப்படி இருக்கிறது? காங்கிரசுக்கு முன் பார்ப்பனர்கள் நிலைமை எப்படி இருந்தது? பின் அவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? ஜஸ்டிஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் ஏற்படாமல், காங்கிரசை நம்பி இருந்தால் 'பஞ்சமர்கள்', 'மகமதியர்கள்' முதலிய சகோதரர்கள் நிலைமை என்னவாயிருக்கும்? இவைகளை எல்லாம் தனது மனதில் கையை வைத்து யோசித்துப் பார்க்கும்படி ஸ்ரீமான் வரதராஜுலு அவர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும், 'சகல சாதியாருக்கும் பொதுவான காங்கிரஸ், சென்னையில் உள்ள இரண்டொரு பார்ப்பனர்களிடம் அகப்பட்டு விட்டதால் பார்ப்பனக் காங்கிரஸ் என்று பெயரெடுத்துவிட்டது' என்று 'தமிழ்நாடு' எழுதி இருக்கிறது. எந்த விதத்தில் அது சகல சாதியாருக்கும் பொதுவானதாகும் என்று கேட்கிறேன்.

கிறிஸ்தவரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? மகமதியரில் எத்தனை பேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? பஞ்சமரில் எத்தனைபேர் காங்கிரசில் இருக்கிறார்கள்? இன்னமும் இந்துக்கள் என்பேர்களில் எத்தனைபேர் காங்கிரசிலிருக்கிறார்கள்? இந்தக் கூட்டங்களில் பெரும்பான்மையோர் காங்கிரசிலிருக்கிறார்களா? விலகி இருக்கிறார்களா? எந்தக் காலத்திலாவது, பார்ப்பனரல்லாத மற்றவர்களிடத்தில் காங்கிரஸ் இருந்து வந்ததா? எந்தக் காலத்திலாவது அது பார்ப்பன காங்கிரசல்லாததாயிருந்ததா?

தவிர, 'அய்யங்கார் கோஷ்டியாரிடமிருந்து காங்கிரசை மீட்கவேண்டும் என்கிற உணர்ச்சி பரவி விட்டது' என்கிறது. அய்யங்கார் பாதார விந்தங்களில், மறுபடியும் மறுபடியும் காங்கிரசையும் தலைமைப் பதவியையும் காணிக்கையாய் வைத்துப் போட்டி போட்டுத் தண்டம் சமர்ப்பித்தது யார்? பார்ப்பனரா, பார்ப்பனரல்லாதாரா? அம் மாதிரி ஆசாமிகள் இப்போது ஒழிந்துபோய் விட்டார்களா? இனி அம் மாதிரி ஆசாமிகளைச் சிருஷ்டிக்க அய்யங்கார் சுவாமிகளால் முடியாதா? என்று கேட்கிறேன்.

தவிர, 'இராஜீய அபிவிருத்தி இந்தியாவுக்கு ஏற்படும்போது, அது ஒரு சாதியாருக்கென்று தனியாக இருக்க முடியாது. ஆதலால், எல்லா சாதியாரும் காங்கிரசில் சேர வேண்டும்' என்று 'தமிழ்நாடு' குறிப்பிடுகிறது. 'இராஜீய அபிவிருத்தி' என்பது என்ன என்று கேட்கிறோம்? 1000, 2000, 5000, 10000 சம்பளமுள்ள உத்தியோகங்களும், பதவிகளும் அல்லாமல் வேறு ஏதாவது உண்டா? அந்த உரிமையையும் நமது நாட்டில் பார்ப்பனர்களான ஒரே சாதியார் ஏகபோகமாய் அனுபவிக்காமல் வேறு எல்லா சாதியாரும் கிரமமாய் அனுபவிக்கிறார்களா என்று கேட்கிறேன். தவிர, 'பார்ப்பனரல்லாதார் நசுக்கப் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற உண்மை ஜஸ்டிஸ் கட்சியாருக்கு இருக்குமானால், அதற்குக் காங்கிரசைவிட வேறு பலமுள்ள ஸ்தாபனம் கிடையாது' என்று 'தமிழ்நாடு' எழுதுகிறது. இதுவரை அதாவது, இந்த 10 வருஷ காலமாகப் பார்ப்பனரல்லாதாரின் நிலைமையும், உரிமையும் ஜஸ்டிஸ் கட்சியினால் உயர்ந்ததாக்கப்பட்டதா? அல்லது காங்கிரசினாலா? மகம்மதிய அய்க்கோர்ட் ஜட்ஜ், நிருவாக சபை மெம்பர், வைசிராய் பிரபு சபை மெம்பர், மைசூர் திவான், கிறிஸ்தவ அய்க்கோர்ட் ஜட்ஜ், மந்திரி, சட்டசபை பிரஸிடெண்ட், திருவாங்கூர் திவான், பார்ப்பனரல்லாத அய்க்கோர்ட் ஜட்ஜ், பஞ்சம அய்க்கோர்ட் ஜட்ஜ், சட்டசபை மெம்பர், இந்தியா கவுன்சில் மெம்பர் இன்னும் இது போன்ற எத்தனையோ 'அரசியல் உரிமைகள்' காங்கிரசினால் இவர்களுக்குக் கிடைத்ததா? காங்கிரசில் சேராமல் வெளியில் இருந்ததினாலும், ஜஸ்டிஸ் கட்சியாலும் இவர்களுக்குக் கிடைத்ததா? என்று கேட்கிறேன்.

இது போன்ற இன்னும் பல விஷயங்கள் எழுதியிருக்கிறவைகளுக்கும் இதில் போலவே பதில் சொல்லலாம். 'தமிழ்நாடு' காங்கிரசில் சேரும்படி எழுதியவற்றில், பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பொறுத்தவரை ஒன்றாவது சரியான காரணம் அல்லவென்பது

நமது பொதுஅபிப்பிராயம். இன்னமும் சொல்லப்போனால், இந்தியாவுக்கு விடுதலையை வாங்கித் தரவேண்டும் என்று நினைப்பதற்கு, தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதாராகிய நாம் ஒரு விதத்திலும் யோக்கியதை உடையவர்கள் அல்ல. நமது யோக்கியதையையே சரிப் படுத்திக் கொள்ள நமக்கு யோக்கியதை இல்லை. நாம் தாழ்ந்த சாதியார் என்று நமது நாட்டில் வேதப்படி, சாஸ்திரப்படி, சட்டப்படி, வழக்கப்படி மதிக்கப்படுகிறோமா, இல்லையா? என்பதை ஸ்ரீமான் நாயுடுவை முதலாவதாக யோசித்துப் பார்க்கும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஸ்ரீ நாயுடு என்ன செய்யப்போகிறார் என்று வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். 40 வருஷத்திய காங்கிரசினால்—'சகல சாதிக்கும் பொதுவான காங்கிரசினால்'—மற்றும் என்ன என்னவோ 'பொறாமை' கொண்ட காங்கிரசினால் நமக்குள்ள இக் குறைவுகளை நீக்க ஏதாவது முடிந்ததா? அதனால் கிடைத்து வந்த பலன் அல்லது இராஜீய உரிமைகளாலாவது முடிந்ததா? என்று கேட்கிறேன்.

'பார்ப்பனரல்லாதாருக்கு தேசாபிமானம் உண்டு, இராஜீய ஞானமுண்டு என்று மற்றவர் அறிய வேண்டுமானால் அவர்கள் காங்கிரசில் சேரவேண்டியது அவசியமாகும்' என்றுகூட அப் பத்திரிக்கை எழுதி இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை தேசாபி மானமும், இராஜீய ஞானமும் எனக்கு உண்டு என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அனாவசியம். என்னுடைய சொந்த சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் தேசாபிமானத்தையும் இராஜீய ஞானத்தையும்கூட விற்கத் தயாராக இருக்கிறேன். என்னு டைய சுயமரியாதையையும் உரிமையையும் ஒப்புக்கொள்ளாத ஒரு ஸ்தாபனம்—அது காங்கிரசாக இருந்தாலும் சரி, அது தேசாபிமானமாயிருந்தாலும் சரி, மோட்ச லோகமா யிருந்தாலும் சரி—அதில் இருக்கநேரும் ஒவ்வொரு விநாடியையும் 'நரகத்திலி'ருப்பதாகத் தான் எண்ணுவேன். 'நமது உரிமையை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு சங்கத்தைப்போய்க் கெஞ்சுவது நமது சுயமரியாதைக்கு அழகல்லவென்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக் காரனை சுயராஜ்யம் கேட்பதும், காங்கிரசை நமது உரிமையை ஒப்புக்கொள்ள நாம் கெஞ்சுவதும் நமக்கு சுயமரியாதை இல்லை' என்பதற்குச் சரியான உதாரணங்களாகும். காங்கிரசை எவனொருவன் அது நம்மைப்போன்ற ஒரு பத்து பேர் சேர்ந்த கூட்டம் என்று நினைக்கிறானோ, எவனொருவன் காங்கிரஸ் அபிப்பிராயத்தை நம்மைப்போன்ற ஒரு பத்து மனிதனின் அபிப்பிராயமென்று நினைக்கிறானோ அவனே சுதந்திர புத்தி உள்ளவ னாவான். அதைவிட்டு, கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுபவன் உரிமைக்கும், சுதந்திரத் திற்கும் யோக்கியதை அற்றவனே ஆவான் என்பது எனது தாத்பரியமான முடிவு.

அதே பத்திரிக்கை, 'காங்கிரசில் ஜஸ்டிஸ் கொடியை நாட்டவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்......அதில் தனிப்பட்டவர்கள் வகுப்பு வாதத்தைப் புகுத்துவது நியாய மல்ல' என்றும் எழுதி இருக்கிறது. அப்படியானால், கீழ் வகுப்பார், தாழ்த்தப்பட்ட வகுப்பார் முதலியவர்களின் கதி என்ன ஆவது என்று கேட்கிறேன். காங்கிரசில் எல்லாருக் காகவுமே உத்தியோகம் வருகிறது என்று வைத்துக் கொண்டால், 'எங்கள் வகுப்புக்கு ஒன்று கொடுங்கள்' என்று கேட்கக் கூடாது என்று காங்கிரஸ் சொல்லுமானால், அல்லது நாயுடுகார் சொல்லுவாரானால் மற்றபடி காங்கிரசினால் லாபம்தான் என்ன? என்று கேட்கி றேன். காங்கிரசில் கேட்பது உத்தியோகம், அதிகாரம், பதவி, சம்பளம் இவற்றைத் தவிர வேறில்லை; இதுயாவரும் அறிந்த விஷயம். அக் காங்கிரசில் உள்ளவர்களோ அனேக வகுப்பார்களாயிருக்கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயம். எல்லா வகுப்பார்களுக்கும் அது கிடைக்கவேண்டுமென்பதோ காங்கிரசுக்குள் வகுப்புவாதத்தைப் புகுத்துவதாகிவிடு கிறது. அப்படியானால், அதன் இரகசியம் என்ன என்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டுகிறேன்.

தவிர, 'காங்கிரசின் சட்டமறுப்பையாவது, சத்தியாக்கிரகத்தையாவது கண்டு ஜஸ்டிஸ் கட்சியாரோ அல்லது எந்தப் பார்ப்பனரல்லாதாரோ பயப்படவேண்டியதில்லை'

என்று 'தமிழ்நாடு' பத்திரிக்கை எழுதியிருக்கிறது. இவ்விஷயத்தில் இப்போது காங்கிரஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், சாமி வெங்கடாசலம், வெங்கிட்டரமணய்யங்கார், ஓ. கந்தசாமி செட்டியார், எம். கே. ஆச்சாரியார், ஆதிநாராயண செட்டியார் முதலியவர்களைவிட எவ்விதத்திலும் இளைத்த ஆசாமிகள், ஜஸ்டிஸ் கட்சிப் பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியின் நன்மையை உத்தேசித்தும், பார்ப்பனரல்லாதாரின் நன்மையை உத்தேசித்தும் அக் கட்சி காங்கிரசில் சேர்வது என்பது புத்திசாலித்தனமான யோசனை அல்ல என்பதோடு, ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாவுமணி என்று கூடச்சொல்லவேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். ஜஸ்டிஸ் கட்சிக்கு இது சமயம் நாட்டில் கொஞ்சம் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. முக்கிய காரணம் என்னவென்றால், காங்கிரசின் யோக்கியதை, அதன் கசுமாலம் முதலியன வெளியாக்கப்பட்டதினால்தான்.

கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்களே, பார்ப்பனரல்லாதாரைக் காங்கிரசில் வந்து சேரும்படி கெஞ்சப்போகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அதாவது, பார்ப்பனரல்லாதவர்கள் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையாகவும் இருந்து ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்த காலத்தில், பார்ப்பனர்கள் பயந்துகொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும் சம்மதித்து தங்கள் சொந்தப் பணமும் செலவு செய்துங்கூட, 'காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார் சங்கம் (சென்னை மாகாண சங்கம்)' என்பதாக ஒன்று ஏற்படுத்தி நம்மில் சிலருக்குத் தந்து அவர்கள் வேலை முடிந்ததும் அழித்துவிட்டதுபோல், செய்யப்போகிறார்கள். முக்கிய காரணம் என்னவெனில், இது சமயம் பார்ப்பனரல்லாதார் கொஞ்சம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். ஆகவே, இக் கட்டுப்பாடு குலையாமல் யார் வேண்டுமானாலும் எந்தக்கட்சிக்கு வேண்டுமானாலும் ஸ்ரீமான் நாயுடுகாரு சொல்வதுபோல், அவரவர்கள் தனித்த ஓதாவில் போய்க்கொள்ளுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் கட்சியே சேருவதானால் தலைவர் யார், உபதலைவர் யார், மந்திரி யார், பிரசிடெண்டு யார்—என்பன போன்ற விஷயங்களின் சண்டையும், அதைக் காப்பாற்றப் பல அயோக்கியத்தனங்களைச் செய்து கொண்டு, அக்கப்போரில் காலம் கழிப்பதிலும் நேரம் சரியாய்ப்போய்விடுமே ஒழிய, உண்மையான வேலைசெய்ய நேரமும், காலமும் இருக்கவே இருக்காது. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும், 'ஜஸ்டிஸ் கட்சியில் சேரும் பார்ப்பனரல்லாதார்களுக்குத் தங்கள் சொந்த ஓதாவில் காங்கிரசில் சேர சுதந்திரமிருக்க வேண்டும்' என்றுதான் கேட்கிறார். நாமும் அதனால் அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்றே சொல்லுகிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியிலும்கூட நிர்மாணத் திட்டமாகிய கதரில் நம்பிக்கையில்லாதவர்களும், தீண்டாமை ஒழிவதில் சம்மதமில்லாதவர்களும், மதுவிலக்கில் இலட்சியம் இல்லாதவர்களும் இரண்டொருவர் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனபோதிலும், அக் கட்சி நிர்மாணத் திட்டத்தை ஒப்புக்கொண்டதால் நாம் நம்மால் கூடிய ஆதரவை அளிக்கிறோமே அல்லாமல், இரண்டொருவருக்கு நம்பிக்கை இல்லை என்கிற காரணத்திற்காகக் கட்சியையே குற்றஞ்சொல்ல முன்வரவில்லை. அதுபோலவே, இஷ்டப்பட்டவர்கள் தங்களது மனசாட்சியைக் கட்சிக் கட்டுப்பாட்டின் பேரால் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை என்று ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியில், 'இராமசாமி நாயக்கரும் அவருடைய சகாக்களும் எதிர்கால நிலைமையைக் கவனித்து மறுபடியும் தீரயோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று 'தமிழ்நாடு' எழுதி இருக்கிறது. உண்மையில், அரசியலில் இது சமயம் எனக்கு சகா யாரும் இல்லை; அன்றியும் எனக்கு என்று இது சமயம் யாதொரு கட்சியும் இல்லை. எனக்கும் சில தனிப்பட்ட நபர்களுக்கும் சில விஷயங்களில் மாத்திரம் அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறதை ஆதாரமாக வைத்துக்கொண்டு தனித்த முறையில் எனது

தொண்டைச் செய்து வருகிறேனே தவிர வேறில்லை. அதுபோலவே, ஜஸ்டிஸ் கட்சியிலும் எனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகிற அளவுவரையில் நான் அக் கட்சிக்கும் தொண்டராயிருந்து எனது கொள்கைக்கு அதை உபயோகித்துக்கொள்ளுகிறேனே தவிர, வேறில்லை. ஆகவே ஸ்ரீ வரதராஜுலு நாயுடு அவர்கள் இவ்விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் தனிச் சுதந்திரம் கொடுத்திருக்கிறதைப் போலவே நமக்கும் கொடுப்பார் என்றே நம்புகிறேன்.

['குடியரசு'-தலையங்கம்—5-6-1927]

மேற்கண்ட தலையங்கமிட்டு சென்ற வாரம் நான் எழுதிய விஷயங்களுக்கு மறுபடியும் 6-6-1927-ந்தேதி 'தமிழ்நாடு' பத்திரிகையில் பதில் எழுதுமுகத்தான் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அப் பதிலின் தன்மையைப் பற்றி விவரிக்கும் முன்பாக அப் பத்திரிக்கை ஏதாவது ஒரு சமாதானம் எழுத முன்வந்ததற்காக அதைப் பாராட்டுவதுடன் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், இதுவரை ஒரு பத்திரிக்கையாவது காங்கிரசைப் பற்றி இவ்வளவு நாளாக நான் எழுதிக்கொண்டு வந்த விஷயங்களுக்குப் பதில் என்பதாக ஒரு வரிகூட எழுத முன்வராமல், வழக்கம்போல் தங்கள் தங்கள் 'தேசாபிமானப் பிரச்சாரத்தை' நடத்திக்கொண்டும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைதுகொண்டுமே வந்திருக்கின்றன. ஆனால், காரைக்குடி 'ஊழியன்' பத்திரிக்கைகூட ஒருசமயத்தில் நம்மைப் பற்றி 'சுயமரியாதைப் பிரச்சாரம் செய்வது தேசத்திற்கு ஆபத்து' என்று மாத்திரம் எழுதிற்றேயல்லாமல், காங்கிரசைப் பற்றி நாம் எழுதியதற்குப் பதில் ஒன்றும் எழுதவில்லை. 'தமிழ்நாடு' துணிந்து எழுத முன்வந்துவிட்டதால் இனி ஒரு சமயம் எல்லாப் பத்திரிக்கைகளும் எழுத முன்வந்தாலும் வரலாம். ஆனாலும், இம் மாதிரி யாராவது சமாதானம் சொல்ல வருவதின் மூலமாகத்தான் அவ்விஷயங்களை இன்னமும் பாமர மக்கள் நன்றாய் அறியும்படி செய்யச் சவுகரியங்கள் ஏற்படும். இல்லாவிட்டால், ஒருதலைப் பட்சமாக நான் எழுதுவதாய்ப் பிறர் நினைக்க ஏது உண்டாகலாம். அதனால்தான் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டேன்.

பதில் எழுத முன்வந்த 'தமிழ்நாடு' பத்திரிக்கையானது நான் எழுதின சமாதானங்களைத் தனது பத்திரிக்கையில் எடுத்துப் போட்டு முறையே நான் எழுதிவருவதுபோல் எழுதி இருந்தால், அது இன்னமும் கொஞ்சம் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும் என்பதுடன் எனது சமாதானத்திற்கும் நியாயம் செய்ததாகும்.

அப்படிக்கில்லாமல் 'குடிஅரசு சமாதானத்தைப் பார்த்து எந்தத் தேசியவாதியும் வருந்தாமலிருக்கமுடியாது' என்றும், 'இம்மாதிரி ஒரு தேசத்துக்குரிய பெரிய தேசிய ஸ்தாபனத்தை முறைதவறிப் பழித்துவிட விரும்பினால், இதை யார்தான் சகித்துக்கொண்டிருக்கமுடியும்' என்றும் வீர கர்ஜனை செய்து எழுதியிருக்கிறது. சாப்பாட்டுப் பந்தியிலே உட்காரக்கூடாது என்று தடைப்படுத்தப்பட்ட ஒருவன், இலை ஓட்டையாய் இருக்கிறது என்று சொல்லுவதில் என்ன பிரயோஜனம்?

அதுபோலவே 'தேசியம்' என்பதும் 'தேசிய ஸ்தாபனம்' என்பதும் அஸ்திவாரத்திலிருந்தே புரட்டு என்றும், சிலர் வயிற்றுப் பிழைப்புக்கும், உத்தியோகத்திற்குமென்றே ஏற்பட்டதென்றும் நமது நாட்டுப் பெரும்பான்மையான மக்களான— அதாவது 100-க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஜன சமூகத்திற்குக் கொஞ்சமும் நன்மை தரத்தக்கதல்லாததோடு, பெருங்கெடுதி தரத்தக்கதென்றும் நான் கணக்குப் புள்ளிகளுடன் விளக்கி எழுதி வரும் போது, அவைகளுக்கு முதலில் கொஞ்சமாவது விபரமாகச் சமாதானம் சொல்லாமல்— எவ்விதம், பார்ப்பனர்கள் அவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால், 'மதம் போச்சுது', 'மதஸ்தாபனம் போச்சுது', 'நாஸ்திகத்தனம் ஆச்சுது' என்று சொல்லுகிறார்

களோ அதுபோல் படித்த கூட்டத்தார், பணக்காரக் கூட்டத்தார் ஆகியவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால், 'தேசம் போச்சுது', தேசிய ஸ்தாபனம் போச்சுது', 'தேசத் துரோகம் ஆச்சுது' என்று சொல்வதால், அதற்குப் பயந்து கொண்டு உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்கமுடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன்.

'சமூக சமத்துவத்தையும், சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் காங்கிரசின் மூலம் அடையாதபடி தென்னாட்டுப் பார்ப்பனர் செய்கிற கொடுமையைச் சகிக்கமுடியாமல் நாயக்கர் இம் மாதிரி எழுதுகிறாரே அன்றித் தாமே முன்னின்று பிரச்சாரம் செய்து சிறை சென்று கவுரவப்படுத்திய காங்கிரஸ் மகாசபையை வேண்டுமென்று தூஷிப்பதாக நாம் நினைக்கவில்லை' என்று 'தமிழ்நாடு' பத்திரிக்கை எழுதி இருக்கிறது.

இந்த இடத்தில்தான் பொது ஜனங்கள் கொஞ்சம் நன்றாய்க் கவனம் செலுத்திப் பார்க்கவேண்டும். என்னவென்றால், நான் இப்போது காங்கிரசைக் கைப்பற்றி இருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்கையை மாத்திரம் கண்டிக்கவில்லை. மற்றும் காங்கிரசின் நடைமுறைகளை மாத்திரம் நான் கண்டிக்கவில்லை. நான் கண்டிப்பது காங்கிரசின் அஸ்தி வாரத்தையே—அதன் அடிப்படைத் தத்துவத்தையே கண்டிக்கிறேன். காங்கிரசை உண்டாக்கினவர்களே—அவர்கள் யாராயிருந்தாலும், வெள்ளைக்காரர்கள் உட்பட உத்தியோகமும், அதிகாரமும், சம்பாதனையும் பெறவேண்டிய கூட்டத்தார்களென்றும்; பெரிதும் அதே நோக்கத்தோடு ஏற்படுத்தி அது ஏற்பட்ட நாள்தொட்டு நாளது வரையும் அவர்கள் அதே காரியத்தில் வெற்றிபெற்றும் வந்திருக்கிறார்களே யொழிய, தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் இந்தக் காரியத்திற்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் யாவரும் உணர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 40 வருஷங்களாக காங்கிரஸ் பிரதிநிதிகள் யார் என்பதைக் கணக்குப் போட்டுப் பாருங்கள். அதன் தலைவர்கள் யார் என்பதைக் குறிப்பிட்டுப் பாருங்கள். அதன் நிர்வாகி யாராயிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இவர்களில் யாராவது, இந்திய நாட்டின் 100-க்கு 95 வீதம் உள்ள மக்கள் கூட்டத்திற்குச் சம்பந்தப்பட்டவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். இது மாத்திரமல்ல. இதுவரை காங்கிரசில் செய்துவந்த தீர்மானங்களையும், அத்தீர்மானங்களின் பலனாய் ஏற்பட்ட சீர்த்திருத்தங்களையும், அதன் அனுபவங்களையும் ஒவ்வொன்றாய் உங்கள் சொந்தப் பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப் பாருங்கள். தேசத்தைக் காட்டிக் கொடுத்து வாழவேண்டியதான ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், தேசத்தைப் பாழாக்கி வாழ வேண்டியவர்களான வக்கீல்களும், கூலிக்காரர்களையும் தொழிலாளிகளையும் குடியானவர்களையும், விவசாயிகளையும் வதைத்து வாழவேண்டியவர்களான முதலாளிகளும், நிலச்சுவான்தாரர்களுமே பிரதிநிதிகளாயுள்ள ஒரு கூட்டம் அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம், 100-க்கு 90 பேர்களாயுள்ள அவர்களல்லாத மேற்கண்ட மக்களுக்கு எவ்விதத்தில் பிரதிநிதி சபையாகும்? பிரதிநிதி ஸ்தாபனமாகும்? என்று கேட்கிறேன்.

இப்போதுள்ள 'இந்துக்கள்' எல்லோருக்கும் பொதுவானது என்று சொல்லப்படும் வருணாசிரம தர்மபரிபாலன சபை எனக்கும், ஸ்ரீ வரதராஜுலுவுக்கும், ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியாருக்கும் பிரதிநிதி சபையாகுமா? அதைக்கூட்டி நடத்தும் ஒருசிலர் அந்த ஸ்தாபனத்தை இந்தியாவிலுள்ள 24 கோடி இந்துக்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டும் இந்துவேதம், சாஸ்திரம், புராணம் என்பவைகளை ஆதாரமாய் வைத்துக் கொண்டும் நடத்துவதாகவேதான் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வழக்கமும் சட்டமும்கூட அதை ஒப்புக்கொள்ளுகிறது. ஸ்ரீமான்கள் ஜெயவேலு, முத்துரங்க முதலியார், ஆதி நாராயண செட்டியார், ஓ. கந்தசாமி செட்டியார் போன்ற சில கனவான்கள் அதை இந்துக்களின் பிரதிநிதிசபை என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அதனாலேயே ஸ்ரீமான்கள் வரதராஜுலு, வீரய்யன், எம். சி. ராஜா, நான் முதலிடவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானா?

ஒரு சபையின் பெயர் பிரதானமா? அல்லது கொள்கையும் நடவடிக்கையும் நடத்தும் ஆசாமிகளும் பிரதானமா? என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்கவேண்டும். நமது மாகாணத்தில் காங்கிரஸ் தலைவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் 4 கனவான்கள் பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீமான்கள் சங்கர நாயர், மணி அய்யர், விஜயராகவாச்சாரியார், சீனிவாசய்யங்கார். இவர்களின் யோக்கியதை என்ன? நான்குபேர்களும் எந்த விதத்தில் தேசமக்களுக்குப் பிரதிநிதியானவர்கள்? இவர்களின் தொழில் என்ன? இவர்களின் காலட்சேபம் என்ன? ஏழைமக்களை வஞ்சித்து, பாமர மக்களை ஏமாற்றித் தாங்கள் மாதம் 1000, 5000, 10000, 20000 என்பதாகக் கொள்ளையடித்து, எந்த சர்க்காரைக் கண்டிப்பது போலும், வைவது போலும், ஒழிப்பது போலும், வேஷம் போட்டு நம்மை ஏமாற்றுகிறார்களோ, அந்த சர்க்காருக்கு அபிமான புத்திரர்களாக இருந்து, நம்மைக் காட்டிக்கொடுத்து வாழ்ந்தவர்கள்—வாழ்பவர்கள்தாமே அல்லாமல் வேறுண்டா? இவர்கள் பிள்ளைகுட்டி, மருமக்கள், அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் முதலியவர்களையும் சர்க்கார் 'தெய்வத்'திற்கு ஒப்படைத்து, அவர்களைக்கொண்டு நம்மைக் காட்டிக்கொடுத்து, அச்சர்க்காரை வாழவைக்கும் முறையில் வயிறுவளர்க்கச் செய்கிறார்களே தவிர, வேறு ஏதாவது நன்மை உண்டா?

ஸ்ரீமான்கள் மணி அய்யர் தலைவரானார்; அய்யர் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். சங்கர நாயர் தலைவரானார்; மலையாளிகளுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். விஜயராகவாச்சாரியார், சீனிவாசய்யங்கார் தலைவர்களானார்கள்; அநேக அய்யங்கார் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார்கள். சர். சி பி. இராமசாமி அய்யர் காங்கிரஸ் காரியதரிசி ஆனார்; இன்று அவரும் 5,500 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு, சமையல்காரப் பார்ப்பன மக்கள், பஞ்சாங்கப் பார்ப்பன மக்கள், தூதுவப் பார்ப்பன மக்கள் வரையில் அய்க்கோர்ட் ஜட்ஜ், ஜில்லா ஜட்ஜ், சப் ஜட்ஜ், சூப்பிரெண்டெண்ட் முதலிய பணம் கொழிக்கும் உத்தியோகங்கள் கொடுத்தார். ஸ்ரீரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் காரியதரிசி ஆனார்; அவர் தம்பி மாதம் ரூ. 2000 சம்பளம் வாங்குகிறார்; அவர் சுற்றத்தார்கள் அதுபோலவே வாழ்கிறார்கள். ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் காரியதரிசி ஆனார்; இப்போது அவர் பேரால் அவர் சிபார்சால் எந்தெந்த உருப்படிகளோ அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதும், கதர் இலாக்காவில் வயிறு வளர்ப்பதுமாய் நடைபெற்று வருகிறது.

இனியும் ஸ்ரீநாயுடுவும், ஸ்ரீகலியாணசுந்தர முதலியாரும் பார்ப்பனரல்லாதாரைக் காங்கிரசில் சேர்த்து, காங்கிரஸ் தலைமைப் பதவி பெற்றுக் காங்கிரசை நடத்தினால் இதைவிட வேறு என்ன செய்துவிட முடியும்? எல்லாவற்றையும்விட ஒன்று கேட்கிறேன். மகாத்மா காந்தி காங்கிரசில் சேர்ந்து, நானும் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான பைத்தியக்காரர்களும் அவர்களுக்கு சிஷ்யர்களாக இருந்தும் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்தும், சிறை சென்றும் அதற்குத் தகுந்த என்ன காரியத்தைச் சாதிக்க முடிந்தது? இதற்குப் பதில் யாராவது சொல்லட்டும்! 'பலகெடுதிகள் ஏற்பட்டன' என்று சொல்லக்கூடியவர்களைத் தடுக்கக்கூட நமக்கு யோக்கியதை இல்லை. மேலும், அப்பத்திரிக்கை 'நாயக்கரே காங்கிரசில் சேர்ந்து உழைத்துப் பிரச்சாரம் செய்து ஜெயிலுக்கும் போய் வந்துவிட்டு, அதே காங்கிரசைத் தூஷிக்கிறார்' என்று எழுதுகிறது. இது வாஸ்தவம். காங்கிரசைப் பற்றிய எனது பரீட்சை முடிந்துவிட்டது.

மக்கள் தனது நாட்டிற்கு ஆக என்னென்ன செய்யவேண்டுமென்று மகாத்மா சொன்னாரோ அவற்றை என்னால் கூடியவரை செய்து காட்டினேன். மகாத்மாவும் செய்து பார்த்துவிட்டார். எங்களது கொள்கைக்கு காங்கிரசை உபயோகப்படுத்தப் பார்த்தோம்; கண்ணியமாகவும் அதை நடத்தினோம். அதைக்கொண்டு நம்நாட்டை விடுதலை செய்விக்க முடியாது; அது விடுதலைக்கான ஸ்தாபனமல்ல; அடிமைத் தன்மைக்கான

ஸ்தாபனந்தான் என்பதாகத் தீர்மானித்து ஆய்விட்டது. ஆதலால் அதை ஒழிக்க வேண்டியது நாட்டின் விடுதலையை எதிர்பார்ப்பவன் கடமை என்கிற முடிவுக்கு வந்து விட்டேன். காங்கிரஸ் ஒழிந்த மறுதினமே மகாத்மாவை சத்தியாக்கிரக உலகத்தில் காண லாம்; தியாக உலகத்தில் காணலாம்; விடுதலை உலகத்தில் காணலாம்; இது உறுதி என்று சொல்லுவேன். மகாத்மா காங்கிரசை விட்டு விலகும்போது என்ன சொன்னார்? என்பதைக் கவனியுங்கள். 'எனது நாட்டின் விடுதலைக்கு ஏற்ற கொள்கைகளைப் படித்த வகுப்பாரை ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கு ஏற்ற ஆற்றலை, கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. ஆனதால் எனது கொள்கைகளை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கிக்கொள்ளுகிறேன். என்னாலானதை நான் வெளியில் செய்து பார்க்கிறேன்' என்று சொன்னதை ஸ்ரீமான்கள் நாயுடுவும், முதலியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? ஆட்சேபிக்கிறார்களா? என்று கேட்கிறேன்.

மகாத்மாவினால் திருப்தி செய்விக்க முடியாத—படித்தவர்களது ஸ்தாபனமான—பணம் சம்பாதிக்கும் காங்கிரசை ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியாரும் கைப்பற்றி, மகாத்மா கொள்கைகளை அப்படிப் படித்தவர்களுக்குள் புகுத்தி, காங்கிரசின் மூலம் விடுதலை சம்பாதித்துக் கொடுக்கப் போகிறார்களா? என்று கேட்கிறேன். ஒருகால் ஸ்ரீமான் நாயுடுவும், முதலியாரும் ஒப்புக்கொள்வதானாலும், வாசகர்களே நீங்கள் முடியும் என்று நம்புகிறீர்களா? என்று கேட்கிறேன். தவிரவும் அப்பத்திரிக்கை எழுதுவதாவது—'சரித்திர ஆராய்ச்சியும் பிரதேச சுதந்திரக் கிளர்ச்சியின் அனுபோகமும் எனக்கு இல்லாத தால் நான் இப்படிச் சொல்லுவதாய்' மிகவும் தாட்சண்யமான பாஷையில் எழுதி இருக்கிறது. பாஷையில் தாட்சண்யம் காட்டியதைப் பொறுத்தவரை நான் நன்றியறித லுள்ளவனாக இருக்கிறேன்.

கருத்தைப் பொறுத்தவரையிலும் மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இதற்காக ஒரு சிறுகதை சொல்லுகிறேன். ஓர் ஊரில் ஒருவன் வீட்டில் அவனது தாயார் இறந்துவிட்டாள். அதற்குத் துக்கம் விசாரிக்கப்போனவர்கள் அச் சிறுவனைப் பார்த்து, 'உன் தாயார் இறந்து போனதைப்பற்றி எங்களுக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது; அந்தம்மாள் உனக்கு மாத்திரம் தாயாரல்ல; எனக்கும் தாயாராயிருந்தாள்; இந்த வீதிக்கே—மற்றும் இந்த ஊருக்கே தாயாராயிருந்தாள்; அப்பேர்ப்பட்ட புண்ணியவதி போய்விட்டாளே என்று மிகவும் வருத்தப்படுகிறோம்' என்று ஆறுதல் சொன்னார்கள். அடுத்த வாரத்தில் பக்கத்து வீட்டிலுள்ள ஒருவரின் மனைவி இறந்துவிட்டாள். இந்த வாலிபன் அந் நண்பர் வீட்டிற்குத் துக்கத்தை விசாரிப்பதற்குச் சென்றவன், துக்கம் விசாரிக்கும் முறை இப்படித்தானாக்கும் என்று நினைத்துக்கொண்டு, வீட்டுக்காரரைப் பார்த்து 'அய்யோ உன் மனைவி இறந்து விட்டதைப்பற்றி நான் மிகவும் துக்கப்படு கிறேன். அப் புண்ணியவதி உனக்கு மாத்திரம் மனைவி என்று இருக்கிறாயா? எனக்கும் மனைவியாய் இருந்தாள்; இந்த வீதியிலுள்ள எல்லோருக்கும் மனைவியாய் இருந்தாள்; இந்த ஊராரிலும் யாருக்கு வேண்டுமானாலும் மனைவியாய் இருந்தாள்; அப்பேர்ப்பட்ட தர்மவதி இறந்துபோனதற்கு நான் மாத்திரமல்ல—இந்த ஊரார் எல்லோரும் துக்கப்படு கிறார்கள்' என்று சொன்னானாம். அதுபோல இருக்கிறது—உலகத்திலுள்ள மற்ற தேசியக் கிளர்ச்சியை நமது இந்தியநாட்டுக்கு ஒப்பிட்டு, அச் சரித்திரங்களின் படிப்பும் கிளர்ச்சி களின் படிப்பும் இந்நாட்டில் நடத்த எத்தனிப்பது. உலகத்திலுள்ள மற்ற தேசமெல்லாம் வேறு; இந்தியா வேறு. அதனாலேதான் 'தமிழ்நாடு' பத்திரிக்கை சொல்வதுபோன்ற அயல்நாட்டுச் சரித்திரங்களையும், கிளர்ச்சியையும் மற்றவர்கள் யாருக்கும் பின்வாங்காத அளவுக்குப் படித்தறிந்த மகாத்மா காந்தி, இந்நாட்டு விடுதலைக்கு அவைகள் எதையும் உபயோகித்துக்கொள்ளாமல் தன் சொந்த முறையில் ஒரு தத்துவத்தைப் புகுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், அயல் நாட்டு விடுதலைச் சரித்திரமும், 'கிளர்ச்சி மாதிரி'யும் நமது நாட்டுக்கு உதவாது என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் அப் பத்திரிக்கை எழுதி இருப்பதாவது: 'நாயக்கர், வரி உயர்ந்ததும், பார்ப்பனரல்லாதார் நன்மை கெட்டு பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்ததும், தொழிலாளர் நிலைமை கேவலப்பட்டதும், இன்னும் பல குறைகளுக்கும் காங்கிரசே காரணம்' என்று சொல்லுகிறார். இது சரியல்ல. மற்ற தேசங்கள் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தின் மூலம்தான் வெற்றி பெற்று இருக்கிறது. காலத்திற்கு ஏற்றபடியும் தேவைக்குத் தக்கபடியும் எல்லா தேசத்திலும்தான் வரி உயர்ந்திருக்கிறது. ஆதலால், இவற்றிற்கு காங்கிரஸ் காரணமல்ல' என்று எழுதி இருக்கிறது. இதற்கும் முன் சொன்ன 'துக்கம் விசாரிப்புக் கதை'யையே சொல்ல வேண்டி இருப்பதற்கு வருந்துவதுடன், மேலும் இரண்டொரு சமாதானம் சொல்லுகிறேன்.

நமது அரசாங்கத்தார் உயர்த்தி இருக்கும் வரி காலதேச வர்த்தமான அதிகச் செலவை உத்தேசித்தா? அல்லது காங்கிரசுக்கு அழகவேண்டிய சில உத்தியோகங்களை உத்தேசித்தா? என்பதையும்; நமது நாட்டு அரசாட்சிக்கு இவ்வளவு உத்தியோகம் வேண்டுமா? என்பதையும் மற்ற தேச உத்தியோகங்களுக்கு இவ்வளவு சம்பளமிருக்கிறதா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

ஒரு கவர்னரும், இரண்டு நிர்வாக சபை மெம்பர்களும், இரண்டு காரியதரிசிகளும் அரசாட்சி புரிந்த சென்னை அரசாங்கத்திற்கு—ஒரு கவர்னரும், 7 நிர்வாக அங்கத்தினர்களும், 7 காரியதரிசிகளும் எதற்காக? இது காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா? என்பதைக் கண்ணியமாய்ச் சொல்லட்டும். 5 அய்க்கோர்ட்டு ஜட்ஜுகள் இருந்து நியாயம் விளங்கின சென்னை உயர்தர நீதி மன்றத்திற்கு 15 அய்க்கோர்ட்டு ஜட்ஜுகள் இருப்பது காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா?

ஸ்ரீமான்கள் சர். சி. பி. இராமசாமிக்கும், சர். சிவஞானத்திற்கும், டாக்டர் சுப்பராயனுக்கும் மற்றும் இவர்கள் போன்றாருக்கும் மாதம் 5500 ரூபாய் கொடுப்பதும்; காரியதரிசிகளுக்கும், ஜட்ஜுகளுக்கும் 2500, 3000 கொடுப்பதும் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத் துரோகத்தை உத்தேசித்தா? இதுபோன்ற ஆயிரக்கணக்கான உத்தியோகங்கள் அதிகமானதும், அவைகளுக்குச் சம்பளங்கள் கொடுக்க வேண்டியதும் நாட்டின் உண்மையின் அவசியத்தை முன்னிட்டா? காங்கிரசின் தேசத் துரோகத்தை முன்னிட்டா? இவர்களுக்கும் இவர்களைப் போலவே வெள்ளைக்காரருக்கும் அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டியதற்காகவே 40 கோடி ரூபாய் வரி செலுத்திவந்த நமது நாட்டுக் குடியானவர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள், கள், சாராயம் குடிக்கவேண்டியவர்களை அதிகப்படுத்த அவசியங்கள் ஆகிய வரிகள்; கார்டு, கவர், இரயில் சார்ஜ், உப்பு வரி, வருமான வரி, சாமான்கள் மீது வரி முதலியவைகளை அதிகமாக்க ஏற்பட்டதா? அல்லது தேசத்தின் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஏற்பட்டதா? என்று கேட்கிறேன்.

தூங்குபவர்களைத் தட்டி எழுப்பலாம்; 'தமிழ் நாடு' போன்று எல்லா விபரமும் தெரிந்த—வேண்டுமென்றே கண்ணைக் கெட்டியாய் மூடிப் படுத்திருப்பவர்களை எப்படி எழுப்புவது?

மற்றும், அப் பத்திரிக்கை எழுதுவதாவது: 'காங்கிரஸ் தோன்றிய பிறகுதான் மக்களுக்கு, தேசாபிமானம் இன்னது என்று தெரிந்தது; சீர்திருத்தங்களைப் படிப்படியாய் அடைய முடிந்தது; அடைந்ததை ஆள முடிந்தது. தேச, சமூக, சமய, வேத, புராண, புரோகித விடுதலைகளில் உணர்ச்சி ஏற்பட்டது' என்று எழுதுகிறது.

இதில் மருந்துக்குக் கூட உண்மை இல்லை. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான் மக்களுக்கு தேசத் துரோகம் செய்யும் ஆசை கற்பிக்கப்பட்டது; தேசத் துரோகம் செய்து வாழ வேண்டிய அவசியமே மக்களுக்கு ஏற்பட்டது. காங்கிரசுக்கு முன் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம், அதுவும் மிகுதியான பார்ப்பன உத்தியோகஸ்தர் மாத்திரம் செய்யமுடிந்தது; இப்போது மக்கள் ஒவ்வொருவரும் வாழவேண்டுமானாலும், சிறப்பாக அயோக்கியர்கள்

வாழவேண்டுமானாலும் உத்தியோகங்களைவிட காங்கிரசுதான் தக்க இடமாக இருந்துவருகிறது. சமய, சமூகவாரிகள் விடுதலைக்கு நமது நாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாய்ப் போராடுகிறது. அது வெற்றிபெறும் நாளையில் காங்கிரசின் பலனாய்ப் பார்ப்பன ஆதிக்கம் வளர்ந்து, அவ் விடுதலைகளுக்கு இடையூறாய் நிற்கிறது. இன்றும் இவ் விடுதலைக்குக் காங்கிரசின் பேரால் உழைக்க இடமிருக்கிறதா என்று கேட்கிறேன்.

காங்கிரசால் வந்த சீர்திருத்தத்தைத்தானே நம் நாட்டுக்கு ஆபத்து என்று சொல்லுகிறேன். அது வந்ததால் கெடுதிதானே ஆயிற்று. 'சீர்திருத்தத்தை நடத்திக்காட்ட முடிந்தது' என்கிறது. எதை நடத்திக்காட்டியதாக அப் பத்திரிக்கை சொல்லுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. மந்திரி பதவிகளில் டாக்டர் சுப்பராயன், பனகல் ராஜா முதலியவர்கள் நடத்திக் காட்டியதையா? தேர்தல்களில் சீனிவாசய்யங்கார் நடத்திக் காட்டியதையா? இந்தியருக்கு உயர்பதவி கொடுத்ததில் சர். சி. பி. நடத்திக் காட்டியதையா? ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்ரீமான் ஈரோடு டி. சீனிவாச முதலியார் நடத்திக் காட்டியதையா? கூட்டுத்தொகுதியில் இந்திய சட்டசபைக்குத் தென்னாட்டில் அய்யங்கார்களே போக முடிந்ததையா? எதைச் சொல்லுகிறது என்று கேட்கிறேன். இதுபோலவே அதன் மற்ற வரிகளும் இருக்கின்றன. மற்றவைகளுக்குப் பதில் விரும்பினால் வரிவரியாய்ப் பிரித்து எழுதத் தயாராக இருக்கிறேன்.

ஒற்றுமையை உத்தேசித்து, கொள்கைகளை விட்டுக்கொடுத்த பலன்தான், மகாத்மா முக்காடிட்டு சங்கராச்சாரி போல் மூலையில் உட்கார நேர்ந்ததும், அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதிகள் சம்பிரதாயம் போல் ஆனதும், மடங்களில் பலர் ஆஷாடபூதித்தனம் செய்து பெருமை அடைவதுபோல் காந்திமடத்திலும் பல 'சாஸ்திரிகள்' போய் அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமைபெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்தி கொள்கைக்கு இருந்த மதிப்புகள் அடியோடு போய், காந்தி மடம் ஏற்பட்டுவிட்டதற்குக் காரணமே, கொள்கையை விட்டுக்கொடுத்து ஒற்றுமையை நாடின பைத்தியக்காரத்தனம் தான். மகான்கள் செயலில் பைத்தியக்காரத்தனமும் ஒன்றாதலால் மகாத்மா காந்திக்கு அது தகும். ஒரு சமயம் அதை மாற்றிக்கொள்ள அவருக்கு நம்பிக்கை பிறந்தாலும் பிறக்கும். நமக்கு அது தகாது. நமக்கு அந்நம்பிக்கை இல்லை. கொள்கையைவிட்டு இராஜியான ஒரு ஸ்தாபனமும், ஒரு மனிதனும், ஒரு நாடும் உருப்படியாகாது என்பது எனது புத்திக்கு எட்டிய உறுதியான முடிவு.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு 'காங்கிரஸ்' பைத்தியம் இருப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்ரீ முதலியாருக்கு அரசியல் விளம்பரம் தேவையில்லை; ஆங்கிலம் படித்த பயனாகத் தேசத் துரோகத்தன்மை தோன்றவும் இடமில்லை; வேறுவிதத்தில் அவர் ஒரு பெரிய இராஜதந்திரியாக வேண்டியதவசியமும் இல்லை. ஆதலால் அவருக்குக் 'காங்கிரஸ்' பைத்தியம் ஏனோ தெரியவில்லை.

எப்படியானாலும் காங்கிரஸ் 'தேசத் துரோக ஸ்தாபன' மென்பதையும், ஏழைகளை வதைக்கும் ஸ்தாபனம் என்பதையும் நாம் கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம். ஆனால் கடைசியாக ஒரு வார்த்தை. அதாவது, யாரொருவர் காங்கிரசைப் பற்றி என்னைப் போல் நினைக்கிறார்களோ—என்னைப் போன்ற முடிவை உறுதியாகக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரம் காங்கிரசில் சேரவேண்டியதில்லை. ஸ்ரீமான் நாயுடுவைப் போலவும், முதலியாரைப் போலவும், மற்றும் ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலர்போலவும் 'காங்கிரஸ் ஒரு தேசீய சபை; அதனால் தேசத்திற்கு நன்மை செய்யலாம்' என்று யாராவது நினைப்பார்களேயானால், அவர்கள் அவசியம் தங்கள் மனசாட்சிப்படியே நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் மனதில் உண்மைதெரிந்து சுய நலத்திற்காகவோ, வாழ்வுக்காகவோ போய்ச் சேர்ந்து, தேசத்தையும் ஏழை மக்களையும் கெடுக்காதீர்கள் என்று பிரார்த்திக்கிறேன்.

['குடி அரசு'-தலையங்கம்—12-6-1927]

3. செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானங்கள்

இரண்டு, மூன்று மாத காலமாய்த் தென்னிந்தியா முழுவதும் ஒரே பேச்சாயிருந்த முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு செங்கற்பட்டில் இம் மாதம் 17, 18ஆம் தேதிகளில் வெகு விமரிசையாகவும், மிக்க ஆடம்பரமாகவும் கூடி, பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுக் கலைந்துவிட்டது. வெகுசொற்ப நாட்களுக்குள்ளாகவே செங்கற்பட்டில் இந்த மாகாண மாநாடு நடத்தத் தீர்மானித்திருந்ததால் போதுமான சாவகாசமில்லாதிருந்தால்கூட, செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் கே. கிருஷ்ணசாமி அவர்கள் முயற்சியாலும், செங்கற்பட்டு சேர்மன் திரு. வேதாசலனார் அவர்கள் ஊக்கத்தாலும், செங்கற்பட்டு பிரபுவும், ஜமீன்தாரருமான அப்பாசாமி வள்ளலாரின் வள்ளல் தன்மையாலும், 'திராவிடன்' பத்திராதிபர் திரு. கண்ணப்பரின் இடையறா உழைப்பாலும், மற்றும் அனேக கனதனவான்களின் உதவியாலும், தென்னிந்தியாவில் இதுவரை எங்கும் நடந்திராத மாநாடுபோல் இம் மாநாடு நடந்தேறிவிட்டதும் மாநாட்டின் பிரதிநிதிகளிலும் இதுவரை எந்த மாநாட்டிலும் கூடாதமாதிரி எல்லா தரத்தவர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்ததும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

முதலாவதாக, வைதீகர்கள் கூட்டமும், இரண்டாவதாக, பண்டிதர்கள் கூட்டமும் மூன்றாவதாக, ராஜாக்கள், மந்திரிகள், ஜமீன்தார்கள், உத்தியோகஸ்தர்கள், ஆங்கிலம் படித்தவர்கள், செல்வந்தர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்களின் கூட்டமும், எதிர்பாராத அளவில் விஜயம் செய்திருந்தது மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும். மற்றபடி பெண்மணிகள், தொழிலாளர்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கொடுமை செய்யப்பட்டவர்கள் ஆகியவர்கள் மற்ற எல்லாரையும்விட அதிகமாகக் கூடியிருந்தாலும் அவர்களே மாநாட்டுக்குச் சொந்தக்காரர்களானதினால் அவர்கள் வந்திருந்ததில் நாம் ஒன்றும் அதிசயப்படுவதற்கில்லை. எனவே, இம் மாதிரி குறிப்பிடத்தகுந்த அளவு மாநாட்டின் பெருமைகள் ஒருபுறம் இருக்க மாநாட்டின் தீர்மானங்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இம் மாநாட்டில் சுமார் இருபது தீர்மானங்கள்வரை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் கூடாது என்றும், நேரு கமிட்டி ரிபோர்ட்டை பகிஷ்கரிக்கவேண்டும் என்றும் செய்யப்பட்ட தீர்மானங்களைப்பற்றி அரசியல் துறையில் இருப்பவர்கள் என்பவர்களில் ஒரு சிறு சாராருக்கு அபிப்பிராயபேதமிருக்கலாம். அதற்கு நம்முடைய சமாதானம் என்னவென்றால், முதலாவதாக, நமது சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் நிர்வாக சம்பந்தமான சீர்திருத்த விஷயங்களைப்பற்றிய பேச்சுகளுக்கு இடமில்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஆனால், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேற்றப்படும்போது ஜனங்களின் உதவியை எப்படி எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றதோ அதுபோலவே அரசாங்க உதவியையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆதலால், அந்த அளவுக்கு அரசியல் தீர்மானம் இருந்துதான் தீரவேண்டி இருக்கின்றது. இன்றைக்கும் சுயமரியாதைக் கொள்கைகளில் அனேக விஷயங்களை நிறைவேற்றவொட்டாமல் செய்ய நமது எதிரிகள் அரசாங்கத்தின் துணையை எதிர்பார்க்கின்றதை நாம் பார்க்கின்றோம். அனேக விஷயங்கள் அரசாங்கச் சட்டத்தின் மூலம் செய்யப்படவேண்டி இருக்கின்றதையும் உணர்ந்து அவைகளுக்குச் சட்டசபைகளின் மூலம் சட்டம் செய்ய முயன்றுகொண்டு இருக்கின்றோம்.

உதாரணமாக, ஆண்களுக்கொரு சட்டம், பெண்களுக்கொரு சட்டம் என்பதாகவும் பார்ப்பனருக்கொரு சட்டம், பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு சட்டம் என்பதாகவும் உயர்ந்த சாதி என்பவர்களுக்கொரு சட்டம், தாழ்ந்த சாதி (தீண்டப்படாதவர்கள், கொடுமைப்படுத்தப்பட்டவர்கள்) என்பவர்களுக்கொரு சட்டம் என்பதாகவும் இருந்து வருவதையும், அவற்றை நாம் தினமும் அனுபவித்து வருவதையும் மாற்றி, எல்லோருக்கும் சமமான நீதி ஏற்படுத்தவேண்டுமானால், நமக்குள்ளாகவே நாம் செய்துகொள்ளும்படியாக

எந்தக் காரியம் செய்தாலும் சரி, எந்தத் தீர்மானம் செய்தாலும் சரி, அவைகளினால் நமது இலட்சியத்தை நிறைவேற்ற முடிவதில்லை என்பதும், அவைகளுக்குக் கண்டிப்பாய் அரசாங்கத்தின் மூலம் பழைய சட்டங்களை மாற்றிப் புதிய சட்டங்கள் செய்தே தீரவேண்டும் என்பதும் யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மைகளாகும். அல்லாமலும், அவைகளில் அனேகவற்றிற்குச் சட்டம் செய்யக்கூட நம்மவர்கள் ஏகமனதாய் ஒப்புக்கொள்வதாயிருந் தாலும்கூட முதலில் அரசாங்க அனுமதியையும் பெறவேண்டியதான நிபந்தனைகளும் இருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, அரசாங்கம் எல்லா மக்களுக்கும் பொதுச்சொத்து என்பதையும் அரசாங்க உத்தியோகங்களும் பதவிகளும் எல்லோருக்கும் பொதுச்சொத்து என்பதையும், அதுபோலவே அரசாங்க வரிப்பணமும் எல்லா மக்களுக்கும் பொதுச்சொத்து என்பதையும் யாராவது மறுக்க முடியுமா? அதுபோலவே, அப் பணத்திலிருந்து செலவு செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் எல்லாருக்கும் பொது என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். எனவே அப் பொதுக் காரியங்கள் உரிமைகள் எல்லாருக்கும் சமமாய் அனுபவிக்க சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டுமல்லவா? ஆதலால், இதற்கு நாம் அரசாங்க உதவி எதிர்பார்க்காமலிருக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கும், பொது உரிமைகளில் அதிகமான பங்கை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களுக்கும், மற்றவர்களை முன்னேற விடாமல் தடுத்து சூழ்ச்சி செய்து முன்னணியில் இருந்துகொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் இக் காரியங் களுக்காக அரசாங்கத்தை எதிர்பார்ப்பது என்பது ஒரு சமயம் தங்களது சுயமரியாதைக்குப் பங்கமாக இருப்பதாகக் காணப்படலாமேயொழிய, வெகு குறைந்த உரிமைகளை அனுபவிப்பவர்களுக்கும் வெகு தாழ்ந்த பதவியில் தாழ்த்தப் பட்டிருப்பவர்களுக்கும் தங்கள் பதவிகளைக் கேட்பதும் விடுதலைபெற முயற்சிப்பதும் ஒருகாலும் அவர்களது சுயமரியாதைத் தத்துவத்திற்கு விரோதமானது என்று எவரும் சொல்ல முடியாதென்றே கூறுவோம்.

ஆதலால், இந்த முறையில் சைமன் கமிஷனிடம் கொடுமைப் படுத்தப்பட்டவர்களும், பிறரால் ஏமாற்றப்பட்டுப் பின்னணியில் தள்ளப்பட்டவர்களும் தங்கள் கஷ்டங்களையும், தேவைகளையும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவது என்கின்ற முறையில் கமிஷனிடம் எடுத்துச் சொல்லுவதிலும், சம சுதந்திரமும், சம சந்தர்ப்பமும் ஏற்படுத்துவதற்கு மார்க்க மில்லாத 'நேரு திட்டம்' என்னும் அரசியல் திட்டத்தைச் சம சுதந்திரமும் சம சந்தர்ப்பமும் இதுவரை அனுபவியாத மக்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதிலும் குற்றமொன்று மில்லையென்றே சொல்லுவோம். ஆகவே, இவை அரசியல் நிர்வாக விஷயத்தைச் சேர்ந்த தல்லவென்றும் ஒரு சமயம் இவை அரசியல் நிர்வாகத்தைச் சேர்ந்தவைதான் என்று சொல்லப்படுவதானாலும் அவை உண்மையான சுயமரியாதைத் தத்துவத்திற்குத் தள்ளப்பட முடியாத விஷயமேயாகும் என்றும் சொல்லுவோம்.

நிற்க, மக்கள் பிறவியில் சாதிவித்தியாச உயர்வு-தாழ்வுக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பது, இது இந்நாட்டு மக்களில் பல துறைகளில் உள்ள எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுவதானாலும் அதற்கு விரோதமாயுள்ள ஆதார விஷயங்களில் உள்ள பிடிப்பை விட்டுவிட அனேகர் சம்மதியாமல் இருப்பதையும், மற்றொருபுறம் அக் கொடுமைகள் நிலைத்திருக்க மதத்தின் பேரால் மாநாடுகளும் பிரச்சாரங்களும் அரசாங்கத்தினிடம் தூது களும் நடைபெறுவதையும் பார்க்கும்போது, நம்நாடு சுலபத்தில் அக் கொடுமைகளை ஒழிக்கத் தயாராயில்லை என்பதும், உயர்வு-தாழ்வுக் கொடுமையின் அஸ்திவாரம் இன்ன தென்று பலருக்குப் புலப்படவில்லை என்பதுமே விளங்குகிறது. அதுபோலவே, வருணா சிரமப் பிரிவுப் பாகுபாடுகள் விஷயத்திலும் தேசாபிமானி மகாத்மா, சீர்திருத்தக்காரர்

என்பவர்கள் முதல்கொண்டு அவற்றை ஆதரிப்பதிலும், அதற்காதாரமான மதம், வேதம் முதலியவற்றைப்பற்றிப் பிரச்சாரம் செய்வதும் அவற்றிற்கு வேறு வியாக்கியானங்கள் செய்வதுமான நிலையிலேயே இன்னும் இருப்பதைச் சற்றுக் கூர்ந்து பார்த்தால், இது சம்பந்தமாக மாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களின் அவசியம் யாவருக்கும் நன்றாய் விளங்கும்.

நிற்க, அடுத்தபடியாக வகுப்புப் பட்டங்களும், குறிகளும் விடப்படவேண்டும் என்னும் தீர்மானத்தின் அவசியமும் அதுபோலவேதான். எப்படியெனில், மக்களுடைய பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே அவர்களது குணம், அறிவு, தன்மை முதலியவைகள் ஒன்றும் தெரியாமலே அவர்களைப் பிரித்து வேற்றுமையாய் நினைக்கத் தகுந்த மாதிரியில் அர்த்தமற்ற பிரிவினைகளைக் காட்டும் வித்தியாசங்கள் ஒழிந்தாலொழிய நமதுநாட்டில் மக்கள் ஒன்றுபட்டு ஒரே இலட்சியத்திற்குழைத்து வாழமுடியாதாகையால் அவ்வித்தியாசங் காட்டும் பெயர்களும் குறிகளும் ஒழிக்கப்படவேண்டும் என்பது ஒற்றுமையையும் சமத்து வத்தையும் விரும்பும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதேயாகும். மற்ற தீர்மானங் களைப்பற்றிய கருத்துக்கள் தொடரும்.

[' குடிஅரசு '—தலையங்கம்—24-2-1929]

சாதி வகுப்பு வித்தியாசத்தைக் காட்டும் பட்டங்களையும் சமய வித்தியாசத்தைக் காட்டும் குறிகளையும் விட்டுவிடவேண்டும் என்று செய்த தீர்மானம் நாட்டின் ஒற்றுமைக்கு மிகுதியும் அத்தியாவசியமானது என்பதைப்பற்றி முன் தலையங்கத்தில் குறிப்பிட் டிருந்தோம்.

இத் தீர்மானத்தில் பொறாமை கொண்ட சில விஷமக்காரர்கள் ' வகுப்புப் பட்டம் நீங்க வேண்டும் என்கின்றவர்கள் வகுப்பு மாநாடுகளில் கலந்துகொள்ளலாமா ?' என்கின்ற ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கின்றார்கள். இதற்கு நாம் சொல்லும் சமாதானம் என்னவென்றால், ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்பு மாநாடுகள் கூட்டி, அவற்றில் இவ்விதத் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அவற்றை முதலில் தங்கள் தங்கள் வகுப்புகள் என்பவைகளுக்குள் அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம் வகுப்பு வித்தியாசங்களை ஒழியுங்கள் என்றுதான் கேட்கின்றோம். அதற்காகத்தான் வகுப்பு மாநாடுகள் கூட்டுங்கள் என்கின்றோமேயொழிய வேறில்லை. உதாரணமாக, ஒரு வாணிய வைசிய மாநாட்டில் நாம் பேசும்போது அவர்களுடைய பூணூலை எடுத்துவிடும் படியும், தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டோம். அதுபோலவே, நாடார் க்ஷத்திரிய வகுப்பார் கூட்டத்தில் பேசும்போது தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக்கொள்ள வேண்டாம் என்றும், பூணூலை எடுத்து விடும்படியும் பேசினோம்.

அதுபோலவே, நாயுடுமார்கள் மாநாட்டில் பேசும்போது தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக்கொள்வதை விட்டுவிடும்படியே கேட்டுக்கொண்டோம். இம் மாதிரி சிறிதாவது விட்டுவிடவும் செய்தோம். ஆதலால், வகுப்புப் பிரிவுகள் எத்தனை உண்டோ அத்தனை வகுப்பும் மாநாடுகள் கூட்டி, வித்தியாசங்களை ஒழிக்கத் தீர்மானங்கள் செய்து கொள்ளாவிட்டால் எப்படி இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் போய்ப் புகுந்து வகுப்பு நோயைத் தீர்க்க முடியும் என்பது நமக்கு விளங்காது. மற்றும், இப் போது ஆதித்திராவிட மாநாடுகள் கூடுவதால் எவ்வளவு தூரம் அச் சமூகத்திற்கு உணர்ச்சி வந்து அவைகள் முன்னேற இடமேற்பட்டிருக்கின்றது என்பதைக் கவனித்தால், வகுப்பு மாநாட்டின் அவசியம் விளங்கும். ஒரு பெரும் சமூகம் ஒற்றுமையும், சீர் திருத்தமும் பெற வேண்டுமானால் அதிலுள்ள பிரிவுகளான ஒவ்வொரு சிறு சமூகமும் தங்களுக்குள் முதலில் ஒற்றுமையையும், சீர்திருத்தத்தையும் பெற்றாக வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த உண்மை உலகத்திலுள்ள எந்த யோக்கியனுக்கும் விளங்கியே தீரும்.

உதாரணமாக, தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் மாநாடு கூட்டப்படாமல் இருந்திருக்குமானால் பார்ப்பனர்களின் கொடுமையை நாடு அறிந்து, அதிலிருந்து விடுதலையடைய மார்க்கம் ஏற்பட்டிருக்க முடிந்தே இருக்காது என்றே சொல்லுவோம். அன்றியும், வகுப்பு மாநாடுகள் அடிக்கடி கூடுவதால் தாங்கள் மற்ற வகுப்பார்களால் அடையும் துன்பமும், அதிலிருந்துவிடுபட்டு மற்ற வகுப்பார்களும், தாங்களும் ஒற்றுமையாயிருக்க மார்க்கமும், அவசியமும் தானாகவே ஏற்பட்டுவிடும். எனவே, வகுப்பு வித்தியாசங்களால் வயிறு வளர்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் சுயநல சோம்பேறிகளைத் தவிர, பொதுநலத்தில் கருத்துள்ள மற்ற யாவருக்கும் வகுப்பு வித்தியாசங்களை ஒழித்து ஒற்றுமைப்பட வகுப்பு மாநாடுகள் கூட்டப்படுவது எந்த விதத்திலும் ஆபத்தாய்த் தோன்றாது.

சாதிபேதத்தை ஆதரிக்கின்ற மதம், வேதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைப் பின்பற்றக் கூடாது.

இந்தத் தீர்மானத்தை எந்தவிதமான தீர்மானத்தைக்கொண்டும் யாரும் எதிர்க்க முடியாதானாலும், சமயத்தின் பேராலும், வேதசாஸ்திர புராணத்தின்பேராலும் தங்களது நித்திய வயிறு வளர்ப்பு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கும் இத் தீர்மானம் ஒருகாலும் திருப்தியை அளிக்காது என்பதோடு, அவர்களது சூழ்ச்சி விஷமப் பிரச்சாரம் இரகசியமாய் நடந்துதான் தீரும்.

இத் தீர்மானத்தின் கருத்துப்படி பார்த்தால், முக்கியமாக இந்துமதக் கொள்கைகளையும், அவற்றின் ஆதாரங்களையும் பின்பற்றக்கூடாது என்பதாகக் காணப்படுகின்றது என்றுதான் ஒவ்வொருவருக்கும் தோன்றும். ஏனெனில், உலகத்திலுள்ள எல்லா முக்கிய மதங்களைவிட இந்துமதம் என்பதிலும் அதன் ஆதாரங்கள் என்பதான வேதசாஸ்திர புராணங்களில்தான் சாதி வகுப்புப் பிரிவும், பிறவியில் உயர்வு உண்டு என்பதையும் அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது. ஆதலால், இத் தீர்மானம் மிகுதியும் இவற்றைக் குறை கொள்வதாக நினைப்பதில் அதிசயமில்லை. ஆனால், நம்மைப் பொறுத்தவரை உண்மையில் இந்துமதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும், இருப்பதாகக் கருதிக்கொண்டிருப்பதும் அதன் ஆதாரங்கள் என்று சொல்லப்படுவதும் ஒரு சிலருடைய சுயநலத்தாலும், நமது மக்களுடைய அறியாமையினாலும் வழங்கிவரும் ஒரு வெறும் மயக்க உணர்ச்சியே தவிர வேறில்லை என்றும் அம் மயக்க உணர்ச்சி ஒழியவே இந்துமதமும் அதன் ஆதாரங்களும் ஒழியவேண்டுமென்கிறோமே ஒழிய வேறில்லை.

உதாரணமாக, இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்று சொல்லிவந்திருக்கும் புஸ்தகங்களுக்கும், விஷயங்களுக்கும் இதுவரை யாரும் பதில் சொன்னவர்களே கிடையாது. 'ஞானசூரியன்' புஸ்தகத்தில் காணப்படுவதுபோல, ஒரு நாட்டின் இழிமக்களுக்கு அந் நாட்டு பாஷையில் சொல்லப்பட்ட ஓர் இழிவான பெயரே 'இந்து' என்பது.

அப் பெயர் பெரும்பாலும் மகமதியர்களால் தங்கள் மதஸ்தர்கள் அல்லது தங்கள் நாட்டவர்கள் அல்லாத இந்திய நாட்டவர்களுக்கு அளிக்கப்பட்டது. எப்படி அய்ரோப்பியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுகிறார்களோ, அதுபோலவே மகமதியர்கள் நம்மைச் சுதேசிகள் என்று கூப்பிடுவதற்குப் பதிலாக இந்தியன் என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் சொல்வதுபோல இந்தி, அரபி, உருது முதலிய பாஷைகளில் இந்து என்று சொல்லி அழைத்தார்கள். இந்த நிலையில் இந்திய மக்கள் எல்லோரையும் குறிப்பிட வேறு பெயர் சமயத்தின்பேரிலோ, நாட்டின்பேரிலோ, சாதியின்பேரிலோ ஒரு குறிப்பும் இல்லாதிருந்ததால் இந்து என்கின்ற பெயரே எல்லோரையும் சேர்ப்பதற்கு ஒரு பொதுப் பெயராகவும் ஏற்பட்டதோடு, ஆரியர்கள் கொள்கைகளுக்கே இந்து சமயம் என்னும் பெயர் தரப்பட்டு, அது இந்தியர்கள் எல்லோர்கள் தலையிலுமே சுமத்தப்பட்டுவிட்டது. உதாரணமாக, இந்துமதம் என்கின்ற வார்த்தை உச்சரிப்புகூட சுமார் ஒரு 400, 500 வருஷங்களுக்கு

முன்னால் இருந்ததாக எண்ணுவதற்கு ஒரு ஆதாரத்தையும் காணோம். சைவம் என்கின்ற பெயரும், சிவன் என்றால் அன்பு என்கின்ற வியாக்கியானமும்கூட ஆரியக் கொள்கைகளைச் சிறப்பாகவே ஆபாசங்களையும், வேள்விக் கொடுமைகளையும் முறையே வெளியாக்கியும் அழிக்கவும் வந்த புத்த இயக்கத்தை எதிர்த்து அவரது கொள்கையை ஒழிக்கவே சைவம் என்பதாக ஒன்று கற்பிக்கப்பட்டதே தவிர, மற்றபடி அச் சைவம் என்பதற்கும் அதன் கொள்கைகளுக்கும் அதில் காணப்படும் பலவேறு கடவுள்களுக்கும் தமிழ் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்வித சம்பந்தமும் இருப்பதாகவோ இதுவரை எவ்வித ஆதாரமும் வெளிப்படுத்தப்படவில்லை. நாளாக நாளாக சைவ ஆரியக்கொள்கை கொண்ட சமயம் தமிழ் மக்களுக்குப் பொருத்தமில்லாமல் போவதை அறிந்த சில தமிழர்கள், ஆரிய சைவ சமயம் என்பது வேறு, தமிழர் சைவசமயம் என்பது வேறு என்று பிரித்து, ஆரியக் கொள்கைகளைக் கண்டித்து ஒதுக்கி, அதற்குப் பதிலாகத் தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது என்பதாகச் சிலவற்றைத் தாங்களே நினைத்து வேறு சில கொள்கைகளையும் வியாக்கியானங்களையும் புகுத்தித் தமிழ்ச் சிவன், தமிழ்வேதம், தமிழ்க் கடவுள் என்பதாக, வெள்ளரிக் காய்க்குப் பூண் போடுவதுபோல், இழுத்துப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். அன்றியும், சைவசமயத்திற்குச் சாதி, மத, வகுப்புப் பேதங்கள் கிடையாது என்று சொல்லி, சமரசத்தைப் பற்றிப் பேசுவதிலும் குறைவில்லை. ஆனால், உட்புகுந்து பார்த்தால், சமயாச்சாரிகள் எல்லோருக்கும் சாதி உண்டு. இது மாத்திரமல்ல; சைவக் கடவுள்கள் எடுத்த மனித ரூபங்கள் எல்லாவற்றுக்கும் சாதி உண்டு. இது மாத்திர மல்ல, சைவப் புராணங்கள் எல்லாவற்றிலும் அவற்றைச் செய்தவர்கள், செய்யப்பட்டவர்கள் உள்பட சாதி உண்டு. எனவே, சைவசமயம் சாதிகள் ஏற்பட்டதற்குப் பின்பு உண்டான தென்றும், அதுவும் சாதி மத பேதங்களை ஒழிக்கப் புறப்பட்ட பவுத்த, சமணக் கொள்கை களுக்குப் பின் உண்டானதென்றும் சொல்லித் தீரவேண்டியிருக்கின்றது. அதுபோலவே, வைணவ சமயம் என்பதும், அதுபோலவே ஆரியக் கொள்கைகள் நாட்டில் பெரும்பாலோ ரால் வெறுக்கப்பட்ட காலத்தில் அதனுடைய அடிப்படைகளை மாத்திரம் நிறுத்திக்கொண்டு சற்று திருத்தப்பட்ட கொள்கைகளை வைத்து வெளியாக்கப்பட்ட சமயமாகும். ஆனாலும், அதுவும் வார்த்தை அளவில் சில நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் வைணப் புராணங் களும், கடவுள்களும், ஆச்சாரியார்களும், ஆழ்வார்களும் சகலமும் சாதி வித்தியாசம் கற்பிக்கக்கூடியதாகவேதான் இருந்துவருகின்றது.

இச் சமயத்தைச் சேர்ந்த சில பெரியார்கள் என்பவர்கள் மாத்திரம் சாதி வித்தியாச மில்லை என்று சொன்னதாகக் காணப்பட்டாலும் அதற்கும் பல நிபந்தனைகள் சொல்லப் பட்டிருப்பதையும் காணாமல் இருக்கமுடியாது. எனவே, சாதி வித்தியாசம் இயற்கை என்பதும் அதை ஒழிப்பதற்கு நிபந்தனைகள் வேண்டியிருப்பதால் அவ்விரு சமயங்களும் சமரசம் செயற்கை என்றும் விளங்குகின்றது.

['குடி அரசு'-தலையங்கம்—3-3-1929]

4. இரண்டுவகை மாநாடுகள்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு நமது நாட்டில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டா யிருப்பதோடு, அவ்வியக்கத்திற்குச் சில எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன என்பதையும் மறுக்கமுடியாது.

இவ்வெதிர்ப்புகளில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் சில கூலிகளுடையவும் வயிற்றுப் பிழைப்புக் காலிகளுடையவும், சமயபுராண வியாபாரிகள் வயிற்றுப் பிழைப்புப் பிரசங்கிகள், பண்டிதர்கள் ஆகியவர்களுடையவும் எதிர்ப்புக் கூச்சல்களை இலட்சியம் செய்து எவரும் பதில் சொல்லவேண்டியதில்லையானாலும், வருணாசிரமத்தின் பேரால் பார்ப்பனர்களும் சைவ சமயத்தின் பேரால் சைவர்கள் என்பவர்களும் வருணாசிரம மாநாடு

களும் சைவசமயக் கூட்டங்களும் கூட்டி, அதில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களைப் பற்றிக் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சாதி வித்தியாசம், தீண்டாமை ஆகியவற்றை விலக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்ட காலம் முதல் பார்ப்பனர்கள் வருணாசிரம மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்டி, தீண்டாமை இருக்கவேண்டும், அது கடவுளால் ஏற்பட்டது என்று சொல்லிக் கொண்டுதான் வந்திருக்கின்றார்கள். அதுபோலவே, பாலிய விவாக விலக்குக்கும், விதவா விவாக ஆதரிப்புக்கும் சிலர் தோன்றிய காலம் முதல்கொண்டும் பார்ப்பனர்கள் வருணா சிரம மாநாடுகள் கூட்டி, 'பாலிய விவாகம் செய்யாவிட்டால் பாபம், அது மதத்திற்கும் வேதத்திற்கும் விரோதம்' என்றும், 'விதவா விவாகம் செய்வதால் மதமும் ஒழுக்கமும் கெட்டுப்போகும்' என்றும் சொல்லி ஆட்சேபித்த தீர்மானங்கள் செய்துகொண்டு வந்திருப் பதுடன், இது விஷயங்களில் சட்டத்தின்மூலம் ஏதாவது செய்யலாம் என்று யாராவது முயற்சித்தால் 'அரசாங்கத்தார் மதவிஷயங்களில் தலையிடக்கூடாது' என்று தீர்மானங்கள் செய்துகொண்டும் வந்திருக்கின்றார்கள். பொதுஜனங்களுக்குச் சீர்திருத்த விஷயங்களில் எவ்வளவுதான், அறிவும், ஆசையும் இருந்தாலும் காரியத்தில் வரும்போது பார்ப்பனர் களும் பண்டிதர்களும் மதப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு விடுவதால், பாமர மக்கள் உடனே மதத்திற்குப் பயந்து மூலையில் ஒதுங்கிவிடுகின்றார்கள். இந்தக் காரணத் தாலேயேதான் மதத்தை வைத்துக்கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று புறப் பட்ட ஒருவர்கூட இதுவரையில் ஒரு சிறிதும் வெற்றிபெற முடியாமலே போய்விட்டது. இந்த அனுபவத்தைக்கண்ட பிறகே மதத்தின் யோக்கியதைதான் என்ன என்பதாக அதைக் கிளறப் புறப்பட்டோம். எனவே, அதைக் கிளறக் கிளற நாவிதன் குப்பையைக் கிளறுவதுபோல் உபயோகமற்ற குப்பைகளையே காணமுடிந்ததே அல்லாமல் ஒரு சிறிதாவது பயன்படத் தக்கதாக ஒன்றையுமே காணமுடியவில்லை.

உதாரணமாக, மதங்கள் என்பவைகள் பலப் பல; அவற்றுள் உள்மதங்கள் பலப் பல. உள்மதங்கள் ஒவ்வொன்றினுள்ளும் பிரிவுகள் பலப்பல. அப் பிரிவுகளுக்கும் வியாக்கியா னங்கள், அகச் சான்றுகள், புறச் சான்றுகள், தத்துவார்த்தங்கள் பலப் பல. இப்படி கரைகண்டு முடிவு செய்ய முடியாத மாதிரியில் கையில் வலுத்தவன், வாயில் வலுத்தவன், செல்வத்தில் வலுத்தவன், சூழ்ச்சியில் வலுத்தவன், மானமற்ற தன்மையில் வலுத்தவன் என்கின்றதை அனுசரித்து மக்களை மக்கள் ஏமாற்ற மாத்திரம் பயன்படுகின்றதே ஒழிய எதற்காக அவைகளை ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றதோ அதற்காக அவை சற்றாவது பயன்படாமல், ஒரு சில சோம்பேறிகளுக்கும் சுயநலமுள்ள நாணயமற்றவர் களுக்கும் மாத்திரம் பயன்பட்டுவருவதை நன்றாய்ப் பார்த்துவருகின்றோம். ஆதலால், அவைகளை அழிப்பதைத் தவிர, வேறு வேலையின்மூலம் ஒருகாலமும் இப்போது மதங் களின்மூலம் நாட்டிற்கும், மக்கள் வாழ்க்கைக்கும், ஒழுக்கத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளை ஒழிக்கமுடியாது என்று கருதி, அவற்றைத் தைரியமாக வெளியாக்கிவிட்டோம்—வெளியாக்கிக்கொண்டும் வருகின்றோம்.

இதைக்கண்ட பிறகுதான் பார்ப்பனர்களும் அவர்களின் எதிரிகளாகிய சைவ சமயிகளும் இது சமயம் தங்கள் இருவர்களின் அடிப்படையான வித்தியாசத்தைக்கூட மறந்துவிட்டு, எப்படியாவது அடியோடு அழிக்க வந்திருக்கும் ஆபத்திலிருந்து தப்புவித்துக் கொண்டால் பின்னால் அவரவர்கள் தனித்தனிக் காரியத்தைப் பார்த்துக்கொள்ளலாம் என்று கருதி, தினம் ஒரு வருணாசிரம மாநாடும் வாரம் ஒரு சைவ சித்தாந்த மாநாடும் கூட்டிய வண்ணமாகவே இருக்கின்றார்கள். இவ்விரண்டு வகை மாநாடுகளுக்கும் இரண்டு வகை மடாதிபதிகள் என்பவர்களும் உள் ஆதரவாய் இருந்து, பண சம்பந்தமான உதவி களைத் தாராளமாய்ச் செய்தும் வருகின்றார்கள். ஏனெனில், அப்படிச் செய்யவில்லையா னால் முதல் பிடிமண் அவர்கள் வாயில்தான் விழவேண்டிவரும். ஏனெனில், பார்ப்பன

மடாதிபதிகள் சுமார் 2, 3 டஜன், (உலக குருக்களான) சங்கராச்சாரியார்களும் 2, 3 டஜன், மகந்துகள், ஜீயர்கள் மற்றும் பல மடச் சுவாமிகள் ஆகிய பார்ப்பனர்களும், ஒரு டஜனுக்கு மேற்பட்ட பார்ப்பனரல்லாத சைவ மடாதிபதிகளும் சேர்ந்து வருஷத்தில் கோடிக்கணக் கான ரூபாய்களின் வருவாய்களால் அனுபவித்துக் கொண்டுவரும் அதிகாரங்களையும் போகபோக்கியங்களையும் துறக்கவேண்டிவரும். அன்றியும், இவர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டும் இவர்களது போகபோக்கியத்திற்கு உதவிசெய்துகொண்டும் இருக்கும் பல ஆயிரக்கணக்கான மக்களது அனுபவமும் வயிற்றுப் பிழைப்பும் ஒழிந்துபோகும். அன்றியும், இவர்கள் ஆதீனத்தில் உள்ள பல கோயில்களின் வரும்படிகளும் ஆதிக்கங்களும் ஒழிந்துபோகும். ஆதலால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நமது நாட்டைவிட்டு தாங்க ளாகவே ஒதுங்கிப்போவதற்கு ஒரு காலம் யோக்கியமாக வந்தாலும் வரக்கூடுமே தவிர, இந்தக் கூட்டங்கள் ஒழிந்துபோக ஒருகாலமும் சம்மதிக்கவுமாட்டார்கள். அல்லது, யோக்கியமான முறையில் ஒழிக்கப்படுவதற்கும் இலக்காகவுமாட்டார்கள். ஆதலால்தான், இவர்கள் இம் மாதிரிக் கூட்டங்கள் கூட்டவும், கூட்டச் செய்யவும், கூட்டுபவர்களுக்கு உதவி செய்யவும் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, இந்த மாதத்தில் மாத்திரம் 3, 4 வருணாசிரம மாநாடுகளும் 3, 4 சைவ சமாஜக் கூட்டங்களும், ஒரு பெரிய சைவசித்தாந்த மாநாடும் கூட்டப்பட்டுவிட்டது அதிசயமல்ல. ஆகவே, அதன் யோக்கியதைகளைச் சற்றுக் கவனிப்போம்.

முதலாவதாக, சைவப் பெரியார் மாநாட்டைப்பற்றிக் கவனிப்போம். இம் மாநாடு கூடிக் கலைந்த விவரம் ‘ திராவிடன் ’ பத்திரிகையில் உள்ளபடி வேறு பக்கத்தில் குறிப்பிட் டிருக்கின்றோம். சைவப் பெரியார் மாநாட்டுத் தீர்மானங்கள் என்னவென்றால், முதல் தீர்மானமானது,

‘ நல்ல ஒழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டு என்னும் கொள்கை இன்றியமை யாதது ’ என்பதாகும்.

இந்தத் தீர்மானம் மலையைத் தோண்டி எலியைப் பிடித்தது போன்றதாயிருக் கின்றது. சைவசமய மாநாடு கூட்ட முயற்சித்தபோது கடவுள் இல்லை என்னும் நாஸ்திகம் நாட்டில் வளர்ந்துவிட்டதாகவும் கடவுளை நிர்த்தாரணம் செய்யவேண்டிய அவசியத்திற்கும் நாஸ்திக இயக்கத்தை ஒழிப்பதற்கும் என்று வெகு அவசரமாக மாநாடுகூட்டி எவ்வளவோ பேர்கள், இரண்டு மூன்று நாள் மெனக்கெட்டு, பலபொருளும் செலவிட்டு, பலரை மாநாட்டில் கலந்துகொள்ளாமலும் செய்து, கடைசி கடைசியாகக் கடவுளைப்பற்றிய தீர்மானம் என்ன வென்றால், கடவுள் உண்டு என்ற கொள்கை நல்ல ஒழுக்கத்திற்கு அவசியமானது என்பதோடு நின்றுவிட்டதே ஒழிய, கடவுள் உண்டு என்றாவது இல்லை என்றாவது யாதொரு முடிவும் கட்டமுடியாமல் போய்விட்டது.

எனவே, இந்தவிதமான கடவுள் முடிவு, சுயமரியாதை இயக்கத்தின் முடிவைவிட, புத்த சமண இயக்கங்களின் முடிவைவிட எந்த விதத்தில் மேலானதென்று கேட்கிறோம்.

மேற்கண்ட இயக்கங்களும், எல்லாவற்றையும்விட ஒழுக்கத்தையே பிரதானமாய்ச் சொல்லுகின்றனவே ஒழிய அவற்றுள் எதாவது விட்டுக்கொடுக்கின்றதா? ஒழுக்கம் எது என்னும் விஷயத்தில் அபிப்பிராயபேதமிருந்தால் அதற்காக ஒழுக்க மகாநாடு கூட்டி ஒரு முடிவுக்கு வருவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதற்காகக் கடவுளை ஏன் பொருத்தவேண்டும்? ‘நெருப்பைத் தொட்டால் கடவுள் தண்டிப்பார்’ என்பதைவிட, ‘ கைசுடும் தொடாதே ’ என்று அனுபவமுறையில் நன்மை தீமைகளைக் கற்பிப்பதின் மூலம் சீக்கிரம் சுலபத்தில் கண்டிப்பாய் ஒழுக்கமான வாழ்க்கைகளை உண்டாக்க முடியாதா என்று கேட்கின்றோம்.

வியாதியை மருந்து சாப்பிடுவதின் மூலம் சவுகரியம் செய்வதைவிட, நேராய் இரத்தத்தில் கலக்கும்படி மருந்தை (இன்ஜக்ட்) ஊசிவழி ஏற்றுவதன் மூலம் சவுக்கியப் படுத்துவது சீக்கிரமாகவும், சுலபமாகவும் முடியக்கூடியதா அல்லவா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், கடவுள் உண்டு என்னும் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் மக்களில், மடாதிபதிகளில், பண்டிதர்களில் 1000-ல் எத்தனைபேர் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும், ஒழுக்கத்திற்குக் கடவுளைச் சம்பந்தப்படுத்தாமலும், ஒழுக்கத்தையே ஒழுக்கத்திற்காகக் கொண்டவர்களில், அதாவது பவுத்தர்கள், சமணர்கள், நிரீச்சுரவாதிகள் என்பவர்களில் ஆயிரத்திற்கு எத்தனை பேர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்றும் கேட்கின்றோம்.

எனவே, சைவப் பெரியார்கள் தாமாக தாங்கள் ஒழுக்கமாக நடக்கமுடியாதவர்கள் என்றும், கடவுள் உண்டென்ற கொள்கை மூலம்தான் தாங்கள் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்தமுடியும் என்றும் முடிவைக் கொண்டவர்கள் என்றுந்தான் இத் தீர்மானத்தால் விளங்குகின்றது.

இரண்டாவது தீர்மானம், 'சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ள தாகவும் அன்பு நெறியையே அடிப்படையாகக் கொண்டதாகவும் இருத்தலினால் அது எக் காலத்திற்கும் எச் சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கின்றது' என்பதாகும்.

இது சுத்தப் பைத்தியக்காரத் தீர்மானம் அல்லது மதப்பித்துகொண்ட தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். முதலாவது, சைவசமயம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமாயிருந்தால் அறிவும், ஆராய்ச்சியும்பெற்ற மக்கள் என்று நம்மாலேயே ஒப்புக் கொள்ளுகின்றவர்களிடம் சைவ சமயம் இருக்கின்றதா? உலகத்தில் இருக்கும் சுமார் 150 கோடி மக்களில் பவுத்தர்களும் பவுத்தசமய சார்புடையவர்களும் 54 கோடி மக்களாவார்கள். அடுத்தாற்போல் கிறிஸ்தவ மதத்தவர்கள் சுமார் 50 கோடி மக்களா வார்கள். முகமதியர்கள் 20 கோடியாவார்கள். இந்துக்கள் என்பவர்களும் 21 கோடி மக்களாவார்கள். மற்றபடி 2, 3 கோடி மக்கள் சில்லறை மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும். இவற்றுள் மேற்கண்ட 21 கோடி இந்துக்களில் 5, 6 கோடி மக்கள் தீண்டாதவர்கள். இவர்கள் சைவக் கொள்கைப்படி சைவர்களாக இருப்பதாகச் சைவர்களே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மீதி 15 கோடி மக்களில் அனேக மதங்கள் உண்டு. அனேக மாக வடநாட்டில்தானே கடவுள் என்கின்ற சங்கர மதமும், விக்கிரக வணக்கமில்லாத ஆரிய சமாஜமும், வேத புஸ்தகத்தை வணங்கும் சீக்கிய மதமும், வைணவ மதமுமே சிறப்பாக உள்ளவை. எனவே, தென்பாகத்தில் அதிலும் தென்னாட்டில் உள்ள மக்களில் 'பேய்த் தெய்வ' வணக்கக்காரர்கள், சமணர்கள், ஜெயினர்கள் இதுபோன்ற மற்றும் மத வித்தியாசமில்லாதவர்கள், ஸ்மார்த்தர்கள் ஆகியவர்களையெல்லாம் கழித்து மீதியுள்ள விபூதி பூசாதவர்களையும், விபூதி பூசுபவர்களையும், மாமிசம் சாப்பிடுபவர்களையும், இயற்கை வணக்கக்காரர்களையும் கழித்துக் கணக்குப் பார்த்து, இதில் சைவர்கள் எவ்வளவு பேர் இருக்கக்கூடும் என்பதை யோசித்துப் பார்த்தால், உமியை ஊதினால் என்ன மீதியாகுமோ அதுதான் மீதியாகலாம். இந்த மாதிரியான ஒரு சிறு கூட்ட மக்கள் ஓர் இடத்தில் கூடி ஒருவரை ஒருவர் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, சாப்பிடாமல் இருந்துகொண்டு 'சைவ மதம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்த மதம். எத்தேசத்திற்கும் எக் காலத்திற்கும் பொருத்தமானது' என்று தீர்மானிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா என்பதை யோசித்து முடிவு கட்டும்படி பொதுஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம்.

மூன்றாவதாக, சாதாரணமாய் இந்த நாட்டில் சைவர்களது குறுகிய புத்தியும் அவர் களது சமய அகம்பாவமும் சமீப காலத்தில்தான் அதாவது, திரு. வேதாசலம் அவர்களது

ஆராய்ச்சியும், திரு. சுப்ரமணியப் பிள்ளை அவர்களது ஆராய்ச்சியும் மேநாட்டு முறையை ஒட்டிச் செய்துகொண்டு போனதின் பலனாய் சைவர்கள் கண்ணுக்கு மற்ற மனிதர்களைப் பார்த்தால் அவர்களும் மனிதர்கள்தான் என்று எண்ண முடிந்தது. இதற்குமுன் அவர்களது குறுகிய புத்திக்கும் ஆணவத்திற்கும் அனேக உதாரணம் சொல்லலாம். அவர்களது தீட்சையும் பஞ்சாட்சர மகிமையும், ஜபமும் மற்றவர்களை நாயினும் கடையாய் மதிக்கச் செய்தாலும் சுமார் 20 வருடத்திற்குமுன் அவர்களை மனிதப் பிறவி என்று சொல்லுவதற்குக்கூட யோக்கியதை இல்லாமல் இருந்தது என்பதை நாம் நேரில் அறிவோம். ஏன்— இப்போதுகூட எத்தனையோ பதர்கள் தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக்கொண்டு மனிதனைத் தொட்டால் பாவம் என்றும், ஒரு மனிதனோடு வேறு ஒரு மனிதன் கூட இருந்து உணவு கொண்டால் அது உணவு அல்லவென்றும், மற்ற சமயக்காரர்கள் எல்லாம் மக்கள் அல்லவென்றும், சாம்பலும் கொட்டையும் தவிர, வேறு கொள்கை சைவத்திற்கு இல்லை என்றும் கருதும்படி நடப்பவர்களையும் தாராளமாய்க் காணலாம்.

நான்காவதாக, 'சைவ சமயத்திற்கு ஆதாரம் 12 திருமுறைகளும் 14 மெய்கண்ட சாத்திரங்களும் வேத சிவாகமப் பகுதிகளும்' என்று தீர்மானித்திருக்கிறார்கள். சைவ சமயம் மிகுதியும் மோசமானது என்பதற்கு இதைப்போல வேறு உதாரணம் தேவையில்லை. திருமுறைகளில் அனேகம், எல்லாம் புராணக் குப்பைகளை ஆதாரமாகக் கொண்டவையே ஒழிய வேறில்லை. அவற்றுள்ளும் பிற சமயக்காரர்களை பார்ப்பனர்களைப் போல் இழிமுறையில் வையும்படியும், சொல்லும்படியும் வைததாகவும் கொன்றதாகவும் ஒவ்வொரு பதிகத்திலும் மிதக்கக் காணலாம். ஆகமங்களோ எந்த அளவில் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மனிதத் தன்மைக்கும் பொருத்தமானவை என்று கருதினார்களோ தெரியவில்லை.

இவ்வளவும் போதாமல், வேத சிவாகமப் பகுதிகளும் ஆதாரமாம். எனவே, சைவ சமய ஆராய்ச்சி 'பிள்ளையார் பிடிக்க அது குரங்காய் முடிந்தது' என்பதுபோல் முடிந்தது.

அய்ந்தாவதாக, சைவச் சின்னம் சிவன்தான். பதி சரியை, கிரியை, மோகம், ஞானம் என்பவைகள் எப்படி ஆராய்ச்சிக்குள் அடங்கின என்பது விளங்கவில்லை. இதை விளக்கினால் 10 பக்கம் போதாது.

இது இப்படி இருக்க, வருணாசிரம மாநாடுகளின் தீர்மானங்களோ சைவப் பெரியார் மாநாட்டிற்குக் கொஞ்சமும் பின்வாங்கியவையல்ல. உருண்டைக்கு நீளம், புளிப்பிற்கு அவன் அப்பன் என்பதுபோல் சைவப் பெரியார்கள் தீர்மானங்களைத் தோற்கடித்துவிடக் கூடியவையாகவே இருக்கின்றன. இவற்றைப்பற்றி அடுத்த வாரம் விளக்குவோம்.

['குடி அரசு'–தலையங்கம்—7-4-1929]

5. வருணாசிரம மாநாடு

சென்றவாரம் 'இரண்டு மாநாடுகள்' என்னும் தலைப்பின்கீழ் நமது முன்னேற்றத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளைப்பற்றி எழுதி, முதலாவதாக சைவப்பெரியார் மாநாட்டைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, இந்த வாரம் வருணாசிரம மாநாடு, பார்ப்பனர்கள் மாநாடு ஆகியவைகளைப்பற்றி எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தோம். அதோடு இந்த வாரம் சென்னையில் திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவரான திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் சீர்திருத்தம் சம்பந்தமாகவும் சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங்கள் சம்பந்தமாகவும் தமது அபிப்பிராயத்தை ஓர் உபன்யாசமூலமாகத் தெரிவித்திருக்கின்றார்.

அதுவும் ஏறக்குறைய பார்ப்பனர்கள் மாநாடு, வருணாசிரம மாநாடு, சைவப் பெரியார் மாநாடுகள் போன்றவைகளின் அபிப்பிராயத்தையே வர்த்தகயுக்தி முறையில் பேசியிருக்கின்றார். அதன் சாரமும் அதற்கு திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் விளக்கமான சமாதானமும் வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

திரு. சாமி வெங்கிடாசலமவர்கள் வவ்வாலைப் போல் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன ரல்லாதாருக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள வேண்டும் என்னும் முறையில் எவ்வளவோ சாமர்த்தியமாகப் பேசியிருந்தாலும் தன்னைப் பொறுத்தவரை தான் சூத்திரன் அல்லவென்ற எண்ணத்தினால் வருணாசிரமத்தைக் காப்பாற்ற எண்ணி, அதை மக்களிடம் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

திரு. சாமி அவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனீயத்தை ஆதரித்தாலும் பார்ப்ப னர்கள் திரு. சாமியையும் சூத்திரர்கள் என்பவர்களின் கணக்கில்தான் சேர்த்து வாழ்க்கை யில் கோவில், ஓட்டல் முதலியவைகளில் சூத்திரன் மரியாதையைத்தான் கொடுத்து வருகின் றார்கள் என்பதை மறுக்கமுடியாது. அன்றியும், திரு. சாமி வெங்கிடாசலம் அவர்களின் வருணம் என்பதான வைசிய வருணத்திற்கு வருணாசிரம தர்ம வியாக்கியானமொன்றில் 'பிராமண அணும் க்ஷத்திரியப் பெண்ணும் சேர்ந்து பிறந்த பிள்ளை வைசியனாகின்றான்' என்று எழுதி இருப்பது தெரியுமா, தெரியாதா? அல்லது, தெரிந்தே வருணாசிரமத்தை ஆதரிக்கின்றாரா என்பது விளங்கவில்லை.

நிற்க, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய பார்ப்பன மாநாடுகளில் அதன் தலைவர்கள் பேசியிருப்பதைப் பார்த்த பிறகாவது திரு. சாமி வெங்கிடாசலம் செட்டி யாரவர்களுக்கு ஏதாவது மாறுதல் உண்டாகுமோ அல்லது பழைய எண்ணமேதான் இருக்குமோ என்பது குறிப்பிடமுடியாதது. மேற்படி மாநாட்டுத் தலைவர்கள் பேசியிருப் பதின் சாரமாவது :—"மோட்சத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தை அப்யசிக்கின்றவர்கள் பிராமணர்கள். கிரேக்கர், பார்சி, டச்சு, போர்ச்சுகீசு, பிரஞ்சு, முகமதியர் ஆகிய நம்மத துவேஷ ராஜாக்கள் காலத்திலும் இம் மாதிரி ஒரு மாநாடு கூட்டவேண்டிய அவசிய மில்லாமல் நமது மதம் நிலை நின்றிருக்கின்றது.

நாம் தினமும் செய்துவரும் பிரார்த்தனை பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் க்ஷேமம் உண்டாகவேண்டும், ராஜா (இதற்கேற்றபடி) நீதியாய் நடக்கவேண்டும் என்பவை களாகும். இம் மாதிரிப் பிரார்த்தனை எந்த மதத்திலாவது உண்டா?

இப்பொழுது நாடார், சுயமரியாதைக்காரர், ஸ்திரீகள், விதவைகள், யுவர்யுவதிகள் முதலியவர்கள் சங்கங்கள் விருத்தி அடைந்து வருகிறது. நமது அப்பிராமணர்கள் (சூத்தி ரர்கள்) நம்மீது துவேஷங் கொள்ளுகின்றார்கள். இவைகள் எல்லாம் நாம் ஈடேறவிடாமல் செய்யத்தக்கதல்லவா?

சூத்திரர்கள் அவர்களுடைய கடமைகளைக் கடந்ததால் பிராமணர்கள் சுயநலக்காரர் களாக வேண்டியதாயிற்று.

மத விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் சட்டசபைகள் பிரவேசிக்கக் கூடாது. (அவர்கள் யார்?) சதிகாப்பு, விதவா விவாகம், சாதிபேத விலக்கு, தர்ம சொத்து ஆகியவை களைப்பற்றிச் சட்டம் கொண்டுவந்து இருக்கின்றார்கள். இன்னும் ருதுமதி, கல்யாண ரத்து, பெண்களுக்குச் சொத்து உரிமை ஆகியவைகளுக்கும் சட்டம் வேண்டுமாம்.

தேவதாசிகளை நீக்கவும், பாலிய விவாகத்தைத் தடுக்கவும் வந்துவிட்டார்கள். இவைகள் எல்லாம் இந்துமதத்தையே வேரறுக்கச்செய்வதே தவிர, இதனால் ஒரு பலனும் விளையாது. (இவைகள் இந்துமதக் கொள்கை ஆனால் இந்துமதம் இருக்கவேண்டுமா?)

பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கற்பித்தல் கூடாது. அப்படிச் செய்வதால் அவர்களும் ஆண்களாகி விடுகிறார்கள். பெண்களுக்குக் குடும்ப காரியம், கற்பு, புத்திராபிவிர்த்தி செய்வதற்கும் இராமாயண பாரதம் கற்பித்தல் ஆகியவைகளே போதுமானது.

சூத்திரர்கள் வேதம் படிக்கக்கூடாது என்பதுபற்றியும், சூத்திரன், பஞ்சமன் என்று அழைப்பதைப்பற்றியும் ஆட்சேபித்துச் சிலர் கிளர்ச்சிசெய்து வருகின்றார்கள். சூத்திரன் என்ற சொல் மிகப் பரிசுத்தமானது. யாக எக்யாதிகளுக்கு சூத்திரன் அவசியமானவனாகிறான்.

பஞ்சமர், தீண்டாதார் என்று வித்தியாசப்படுத்திக்கொண்டு அப்படி ஒரு சாதி இருப்பதாய் வித்தியாசம் கற்பிப்பது கொடிதான காரியமாகும்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகியவர்கள் அவரவர்கள் கடமையிலிருந்து தவறும்போதுதான் பஞ்சமர்களாகின்றார்கள். அப்படி தன் வருண தர்மத்திலிருந்து தவறினவன் மறுபடியும் அந்த வருணத்தை அடையமுடியாது.

தினமும் ஸ்நானம் செய்யாததினாலேயே தீண்டாதவர்களாகின்றார்கள். தீண்டாமையை விலக்கத் தீண்டாதவர்களே சம்மதிக்கமாட்டார்கள். ஏனென்றால், தீண்டாதவர்களிடம் உயர்குணம் இருக்கிறது. உள்ளதுபோதும் என்று திருப்தியடைகின்றார்கள்."

தலைவர் உபன்யாசத்தின் சாரம்: "துவேஷமும் தெய்வ தூஷனையும் ஏற்பட்டுவிட்டதால் பிராமண சபை கூட்டவேண்டியதாயிற்று. ஒவ்வொரு வருணத்தாரும் அவரவர்கள் தர்மப்படி நடந்தால் எல்லோரும் நன்மையடையலாம். சூத்திரர்கள் வேதம் படிக்காததால் ஒன்றும் முழுகிப்போய்விடாது. அவர்களுக்குப் புராணங்கள் இருக்கின்றன. சூத்திரன் என்கின்ற பதம் நல்ல பதம்.

ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தர்மம் இருக்கின்றது. அதுபோல், இங்கும் அவனவன் தருமப்படி நடக்கவேண்டும். பிராமணர்களை அப்பிராமணர்கள் (சூத்திரர்கள்) ஏன் தூஷிக்கவேண்டும்? சூத்திரர்களில் நாயக்கர், வேளாளர் ஆகியவர்கள் எவ்வளவோ ஆசாரமாயிருக்கின்றார்கள்.

சூர்ப்பனகை எதிரில் வந்ததால் சீதை அக்கினிப் பிரவேசமாக நேர்ந்தது. ஸ்திரீகளைப் பத்திரமாகக் காப்பாற்றவேண்டியது ஆண்கள் கடமை. ஸ்திரீகள் உத்தியோகத்திற்கு லாயக்கில்லை. மேலதிகாரிகளுக்கு என்னவெல்லாம் செய்ய நேரிடுமோ?"

எனவே, பிராமணன்தான் இந்து மதத்திற்கு ஆதாரமானதென்னும் வேதம் படிக்கலாம் என்பதும்; தாங்கள்தான் பிராமணர் என்பதும்; இந்துமதத் தத்துவப்படி மற்றவர்களைச் சூத்திரர்கள் என்பதும்; வெகுகாலமாக அனேக இந்து மகமதிய ராஜாக்கள் காலத்தில்கூட தாங்கள் அவர்களை ஏமாற்றி தங்களது ஆதிக்கங்களை நிலைநிறுத்தி வந்திருப்பதும்; பிராமணனும் அவனது ஆகாரத்திற்கு மாடுகளும் க்ஷேமமாக இருந்தால் போதும், மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் கவலை இல்லை என்பதும்; இதை நிலைநிறுத்தத் தக்கவன்தான் அரசனாக இருக்க வேண்டும் என்பதும்; நாடார் முதலிய சமூக மாநாடுகளும் சுயமரியாதை மாநாடுகளும் தங்கள் ஆதிக்கத்திற்கு விரோதமானவை என்பதாகக்கருதி இருக்கின்றார்கள் என்பதும்; சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாய் இருக்க வேண்டியதும் சூத்திரப் பெண்கள் அவர்களுக்குத் தாசிகளாக இருக்க வேண்டியதுமான சூத்திர தர்மம் தவறினதாலேயே பிராமணர்கள் சுயநலக்காரர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லுவதன் மூலம் பார்ப்பனர் தங்கள் சுயநலத்திற்குச் சமாதானம் சொல்லுவதும்;

சமத்துவம் இருக்கக்கூடாது, தர்ம சொத்துக்களின் கணக்குக் கேட்கக்கூடாது, குழந்தைப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யவேண்டும், பெண்களுக்குச் சொத்துக்கள் இருக்கக் கூடாது, படிப்பு கூடாது, சுதந்திரம் கூடாது, தாசிகள் இருக்கவேண்டும், விதவைகள் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது—என்பது போன்ற கொள்கைகளே இந்துமதம் என்பதும்; மேற்கண்ட கொள்கைகளில் எதைத் திருத்துவதானாலும் இந்து மதத்தை அழித்ததாகுமாதலால் சர்க்கார் அதற்கு இடம்கொடுக்கக்கூடாது என்பதும்; பெண்கள் வீட்டு வேலை செய்வதும் பிள்ளை பெறுவதும் தவிர வேறு உரிமைக்கு லாயக்கில்லை என்பதும்; கற்பு பெண்களுக்கு மாத்திரமேயொழிய ஆண்கள் விஷயத்தில் கவலை இல்லை என்பதும்; இராமாயணம், பாரதம் ஆகியவைகளே தர்மத்திற்கு ஆதாரமானதென்பதும்; சூத்திரன், பஞ்சமன் என்று அழைப்பது மிகவும் சரியானதென்பதும்; அவை அவர்களுக்கு மிகவும் மேன்மையானதென்பதும்; சூத்திரன் என்றசொல் மிகவும் பரிசுத்தமானதென்பதும்; பிராமணர்களின் யாகத்திற்குப் பயன்படவே சூத்திரன் இருக்கின்றான் என்பதும்; சூத்திரன் அவனுக்குள்ள கடமையைச் செய்யாததால் பஞ்சமனாக வேண்டியதாகின்றதென்பதும்; தினமும் ஸ்நானம் செய்யாததால் தீண்டாதவர்களானார்கள் என்பதும்; தீண்டாதவர்கள் அப்படியேயிருக்க விரும்புவதுதான் உயர்குணமென்பதும்; சூத்திரர்கள் புராணங்கள் படித்து அதன்படி நடத்தலே அவர்கள் வேதம் படித்ததற்குச் சமானமென்பதும்; வேளாளர் நாயக்கர் முதலியவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்பதும்—ஆகிய விஷயங்கள் வியக்தமாகவும் நன்றாகவும் பொருள்படும்படி பேசி இருக்கின்றார்கள்; இதற்கேற்ற தீர்மானங்களும் செய்திருக்கின்றார்கள்.

சைவமத சைவப் பெரியார் மகாநாடு தீண்டாதவர்களுக்குத் தனிக்கோவில் கட்டிக் கொடுப்பதின்மூலம் தீண்டாமையை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றது. வருணாசிரம மாநாடும் பிராமண மாநாடும் ஒரே அடியாய் இருக்கின்றபடியே இருக்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டன. இதிலிருந்து வாசகர்களை நாம் ஒன்று கேட்கின்றோம்.

அதாவது, மேற்கண்ட கொள்கைகளையுடைய இந்து மதமும் அதற்கேற்ற கடவுள்களும், சைவ மதமும் அதற்கேற்ற சிவனும் இருக்கவேண்டுமா, அல்லது அவற்றைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமா என்பதேயாகும். இதுவரை எந்த ஆஸ்திக சிகாமணியும் தேசிய வீரர்களும் மேற்கண்ட இந்துமத ஆதாரத்தையும் சைவ சமய ஆதாரத்தையும் மறுத்துப் பேசவோ, வேறு ஆதாரம் காட்டவோ சிறிதாவது முற்பட்டவரல்ல. ஆனால், இந்து மதத்தையும் வேதத்தையும் ஆகமத்தையும் புராணங்களையும் காப்பாற்ற மாத்திரம் வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்து இருக்கிறார்கள். சிலர் தங்களைச் சூத்திரன் என்று சொல்லிக்கொள்ளப் போவதாகவும் தாங்கள் உண்மையிலேயே சூத்திரர்கள்தான் என்றும், அதிலும் 'சூத்திரர்கள்' என்றும் சொல்லி ஆனந்தப்படுகிறார்களாம். பார்ப்பனச் செல்வாக்கும் அவர்களது பணமும் நமது மக்களை என்ன வேண்டுமானாலும் செய்யத்தக்க வலுவுடையதாக இருக்கின்றது என்பதை நாம் சுலபத்தில் மறுக்கமுடியாதவர்களாக இருக்கின்றோம். பார்ப்பனரல்லாத மக்கள் பலருக்குச் சுயமரியாதை மாநாடு விஷயமாய் இருக்கும் ஆத்திரத்தில், அதிருப்தியில் ஒரு பங்குகூட இந்த வருணாசிரம மாநாட்டிலும், பிராமண மாநாட்டிலும் ஏற்படாதிருப்பதற்கு நமக்குக் காரணமே விளங்கவில்லை. எப்படியான போதிலும் இந்த மாநாடுகளும் எதிர்ப் பிரச்சாரங்களும் நமது கொள்கைகளையும் உத்தேசங்களையும் முயற்சிகளையும் உறுதிப்படுத்துகின்றனவே தவிர, சற்றாவது தளர்ச்சியாக்கவில்லை என்பதையும் நமது வாலிபர்கள் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட மதங்களையும் சாமிகளையும் ஒழிக்கத் தயாராயிருக்க வேண்டியதுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—14-4-1929]

6. நியாயம் வழங்கும் முறை

இந்திய அரசியல் பிழைப்புக்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றி, தாங்கள்தாம் இந்திய ஜனப்பிரதிநிதிகள் என்று காட்டிக்கொண்டு அரசாங்கத்தாரிடம் பதவி பட்டம்பெற, வரியைப் பற்றியும், வெளிநாட்டு வியாபாரத்தைப்பற்றியும், கள்ளைப்பற்றியுமே எடுத்துச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அறிவோடு கூடி நடுநிலைமையில் இருந்து ஒரு மனிதன் யோசித்துப் பார்த்தானேயானால், இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமாய் இருக்கும் குறைகள் தாமாகவே புலப்படும்.

அதாவது, வக்கீல் தன்மைகளும் உத்தியோகத் தன்மைகளுமேயாகும். இவை இரண்டும் இந்த நாட்டில் பிறப்புத் தன்மையைக் காப்பாற்ற இருக்கின்றனவேயொழிய, நியாயத்தைச் சொல்லவோ, ஏழைகளைக் காப்பாற்றவோ இல்லவே இல்லை. அரசியல் துறையில் சம்பந்தப்பட்டதான வக்கீல் முறையும், உத்தியோக முறையும் இந்தியாவில் இம்மாதிரி இல்லாதிருந்திருக்குமானால் இந்த நாட்டில் இவ்வளவு ஒழுக்கக் குறைவும், நாணயக் குறைவும், தரித்திரமும், மக்களுக்குக் கஷ்டமும் அலைச்சலும் இருக்க முடியவே முடியாது என்பதோடு, இவ்வளவு தூரம் வித்தியாசப்படும்படியான ஏழைத் தன்மையும், பணக்காரத் தன்மையும்கூட இருக்க முடியாது.

ஏழைகளையும் மத்தியதரத்தாரையும் இந்த நாட்டில் தலை எடுக்க ஒட்டாமல் செய்து வருவது இந்த வக்கீல் முறையும் உத்தியோக முறையுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

சாதாரண மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதோடு, பணக்காரனாயிருப்பவன் தனது பணத்தின் மகிமையினால் 100-க்கு 90 விஷயங்களில் தன் இஷ்டப்படியே நியாயம் பெறுகின்றான். நியாயாதிபதிகள் என்பவர்களும் வக்கீல்களும் ஏழை மக்கள் நீதி பெறுவதற்கு இடையூறாகவும், பணக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நீதி பெறுவதற்கு அனுகூலமுமாகவே இருக்கின்றார்கள்.

இன்றைய வக்கீல் முறையே மனித சமூகத்தின் ஒழுக்கத்திற்கும் நாணயத்திற்கும் சாந்திக்கும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் நேர் விரோதமானதாகும். அது மாத்திரமல்லாமல், தேசத்தின் ஒழுக்கமும், நாணயமும், சுயமரியாதையும் கெட்டுப்போனதற்கு வக்கீல்களே காரணஸ்தர்கள் என்று சொல்லுவது சிறிதும் மிகைப்படக் கூறுவதாகாது.

நமது நாட்டுப் பணக்காரர்களில் அனேகருக்கு அயோக்கியத்தனமும், ஆணவமும், நாணயக் குறைவும் ஏற்படவும்; அவர்கள் நாட்டின் நலனுக்குப் பொறுப்பற்ற தன்மையாய் நடந்துகொள்ளவும் காரணமே நமது வக்கீல்கள் ஆவார்கள்.

இந்த நாட்டு விவசாயக்காரர்கள் பெரிதும் கடன்காரர்களாக இருக்கவேண்டி ஏற்பட்டதற்குக் காரணமும் இந்த வக்கீல்களே! மக்களுக்கு விவகாரத்தில் அதிக நம்பிக்கையும் ஆசையும் ஏற்படுவதற்குக் காரணம் வக்கீல்கள்தாம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், நாளுக்கு நாள் வழக்குகள் அதிகரித்துக்கொண்டு போவதற்கும் நியாய ஸ்தலங்கள் அதிகமாவதற்கும் வக்கீல்கள்தாம் காரணஸ்தர்களாவார்கள். இன்னும் உண்மையை ஒளிக்காமல் சொல்லவேண்டுமானால், தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் மக்கள் அயோக்கியர்களாவதற்கும், நாணயக்குறைவாய் இருப்பதற்கும்கூட நமது வக்கீல்களே பெரிய பொறுப்பாளிகளாவார்கள்.

இதற்குக் காரணம் பிரிட்டிஷ் அரசாங்கமா? இந்திய மக்களா? என்று பார்ப்போமேயானால் இந்திய மக்களே அதிகப் பொறுப்பாளர்கள் ஆவார்கள்.

ஏனெனில், பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் இந்திய மக்களுக்குச் சம்பந்தமும், பங்கும் இருக்கவேண்டும் என்று கேட்க ஆரம்பித்த காலத்திலேயே, இந்த வக்கீல் கூட்டங்களேதாம்

இந்திய மக்களின் பிரதிநிதிகளாய் இருந்து, வக்கீல் தொழில் விருத்தியாகி, வக்கீல்கள் தாராளமாய்ப் பிழைப்பதற்கு ஏற்றதான திட்டங்களையே இந்திய சுதந்திரத்திற்கும், அரசாட்சியில் பங்கும் சம்பந்தம் பெறுவதற்கும் அனுகூலமான கொள்கை என்று பாமர மக்களுக்குச் சொல்லி, நம்பச்செய்து, ஏமாற்றி, அரசாங்கத்தாரையும் ஒப்பச்செய்து அரசாங்கச் சீர்திருத்தம் மூலமாகவும் சட்டம் மூலமாகவும் அவைகளைப் பெற்றுக்கொண்டு, தங்கள் தொழிலில் மிக்க தாராளமாகவும் தைரியமாகவும் அயோக்கியத் தனங்களையும், நாணயக் குறைவுகளையும் உபயோகித்து வந்து, நாளுக்குநாள் அது முதிர்ந்து, இன்று நாட்டிற்கும் சமூகத்திற்கும் இந்தநிலை ஏற்பட்டுவிட்டது. இந்தமாதிரி வக்கீல் ஆதிக்க மானது இன்றைக்கும் நமது பாமர மக்களுக்கு யோக்கியமாகவும், நாணயமாகவும் இருக்க முடியாத வக்கீல்களின் பிரதிநிதித்துவம் தான் பிடிக்கச் செய்கின்றதேயொழிய—உண்மை யான பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொள்ள யோக்கியதை இல்லாமல் செய்துவிட்டது.

அதுமாத்திரமல்லாமல், ஒழுக்கமும் நாணயமும் உள்ளவர்கள் வக்கீலுக்கும் உத்தி யோகத்திற்கும் அருகதையற்றவர்களாகி விட்டார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டு மானால், சிவில் இலாக்கா என்று சொல்லப்படும், அதாவது சொத்துக்களின் உரிமைகளைப் பொறுத்த விவகார இலாக்காக்களை எடுத்துக்கொண்டால், கீழே இருந்து அதாவது ஒரு ‘சம்மன் சர்வு’ செய்யும் சேவகன் முதல் குமஸ்தா—இலாக்கா உட்பட உள்ள சிப்பந்திகள் வரை, அவர்களது ஒழுக்கமும், நாணயமும் யோக்கியப் பொறுப்பும் மிகமிக மோசமான தாகவே நடைபெற்றுவர வெகு காலமாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதென்றே சொல்ல வேண்டும். இவ்விலாக்காவில், இலஞ்சமும், மாமூலும் மோசமும், அய்க்கோர்ட் ஜட்ஜுகள், இலாக்காத் தலைவர்கள் என்பவர்கள் ஆகிய எல்லோருக்கும் தாராளமாய்த் தெரிந்து வேண்டுமென்றே அனுமதித்துக் கொண்டு இருக்கும் அளவை மனிதனால் சொல்லத் தர முடையவைகள் அல்ல. வக்கீல்கள் தொல்லைகளும், நீதிபதிகள் தொல்லைகளும் ஒரு பாகம் என்றால்—மேற்கண்ட சிப்பந்திகள், நடுத்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களின் தொல்லைகள் சகிக்கமுடியாதவையாகும். இந்தத் துறைகளில் சீர்திருத்தமோ ஒழுங்கோ செய்ய இன்றையதினம் இந்த நாட்டில் ஒரு அரசியல்வாதியாவது, ஒரு தேசியவாதியாவது கிடையவே கிடையாது. இதனால், வலுத்தவன் இளைத்தவனை நேருக்கு நேராய் உதைத்துத் தொல்லைப்படுத்தி அவனை ஒழிப்பதோ மிகவும் சுலபமானதும் சட்டபூர்வ மானதுமான காரியமாகவே இருந்துவருகின்றது.

ஆகவே, இந்த முறையானது பணக்காரர்களுக்கு மிகவும் அனுகூலமாய்ப் போய் விட்டதால், அவர்களும்—அதாவது, நம் நாட்டுப் பணக்காரர்களும் சந்தோஷமாகத் தங்கள் முழு பலத்தோடு ஆதரிக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

உலகத்தார் எல்லோராலுமே ஒழுக்கமற்றதென்றும், நாணயமற்றதென்றும் வெளிப் படையாய்த் தெரியும்படியாக நடந்துகொள்ளும் ஈனத்தன்மையுடைய ஒரு தொழிலில் சட்ட பூர்வமாகவே இந்தப்படி கொள்ளை அடிக்க இடமிருந்தால்—இந்த அரசாங்கத்தின் வேறு எந்த வரியை, யார் செய்யும் காரியத்தை நாம் அக்கிரமம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத் தொழில்களில் இவ்வளவு அக்கிரமம் செய்வதற்கு இவர் களுக்கு எப்படி வழி கிடைத்தது என்று பார்ப்போமானால் :

1. வக்கீல்களும் நியாயாதிபதிகளும் ஒரே கூட்டத்தினராயிருப்பது. அதாவது, வக்கீலே நியாயாதிபதியாகவும், நியாயாதிபதி வக்கீலாவதும் ஆன முறை இருப்பது முதல் குற்றமாகும்.

2. சட்டமானது ஒரு வர்ஜாவர்ஜமில்லாமல் பத்ததி, நிர்ணயம் ஆகியவை இல்லாமல் ஒவ்வொரு மனிதனுடைய இஷ்டமும் ஒரு சட்டமாவதும்; ஒருவனுடைய இஷ்டத்தை மற்றொருவன் இஷ்டப்பட்டால் பின்பற்றலாம், இல்லாவிட்டால் பின்பற்றவேண்டியதில்லை

என்பதும்; மற்றும் தனக்கு இஷ்டமானவர்கள் அபிப்பிராயத்தைப் பின்பற்றலாம் என்பதும்; அவற்றை எல்லாம் விட்டுவிட்டுத் தன் இஷ்டப்படி நடக்கலாம் என்று இருப்பதுமான 'லா ரிப்போர்ட்டு'களை— அதாவது வேறுபல ஜட்ஜுகளின் அபிப்பிராயங்களைச் சட்டமாக ஏற்றுக்கொள்ள வசதி இருக்கும் முறைகளே, சட்ட உலகத்தில்–நீதி உலகத்தில் இவ்வளவு ஒழுக்க ஈனங்களைக் கற்பித்து, நீதிபதிகளையும் வக்கீல்களையும் இவ்வளவு ரூபாய்களைக் கொள்ளை அடிக்க வசதி செய்து கொடுத்து வருகின்றது.

நியாய உலகம் சீர்பட வேண்டுமானால், அதில் ஒழுக்கத்திற்கும் சிரமத்திற்கும் சிறிதாவது இடமிருக்க வேண்டுமானால் முக்கியமாக மேற்கண்ட இரண்டு முறைகளையும் ஒழித்துவிட வேண்டும்.

மேலும், ஏராளமாக வக்கீல்கள் உற்பத்தி செய்யப்படுவதையும் கணக்கில்லாமல் வக்கீல்களைத் தொழில் நடத்த அனுமதி கொடுக்கப்படுவதையும் நிறுத்திவிட வேண்டும்.

இந்தக் காரியங்கள்—அதாவது இந்தமாதிரி வக்கீல்கள் பெருகுவதான காரியங்கள், இந்த நாட்டின் நியாயத்தையும் ஒழுக்கத்தையும் சாந்தியையும் கெடுப்பதற்கு ஏற்பட்ட விஷக்கிருமிகளை வளர்ப்பதற்கே ஒப்பாகும்.

இனி விவகாரமுறையில் உள்ள அக்கிரமங்களைச் சொல்லவேண்டியதில்லை. ஒரு விவகாரம் கொடுத்து 20 வருஷங்களுக்கு மேலாகியும் இன்னமும் முடிவு பெறாத விவகாரங்கள் பல இருக்கின்றனவென்றால் விவகார முறையின் யோக்கியதையைச் சொல்ல வேண்டுமா?

['குடிஅரசு'-தலையங்கம்—10-5-1931]

7. ஆட்சி முறை

நமது நாட்டு அரசாங்கத்தாரைத் தனிப்பட்ட முறையில் பார்த்தோமானால் நமது நலத்தைப்பற்றிப் பொறுப்பு ஒரு சிறிதும் அற்றவர்கள் என்பதையும் அவர்கள்—தங்கள் சாதி, தங்கள் நாடு ஆகியவைகளின் நன்மையையே பெரிதும் கவனித்து, அதற்காகவே இந்திய நாட்டின் ஆட்சி நடத்தும் உரிமையை அடைந்து ஆட்சிபுரிந்து வருகின்றார்கள் என்பதையும் நாம் வெகுநாளாய் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். அந்த ஆட்சியானது—அதாவது பிரிட்டிஷ் ஆட்சியானது, இந்தியாவில் அன்னிய ஆட்சிக்குமுன் வெகுகாலமாய் இருந்து வந்ததாகச் சரித்திரங்களில் காணப்படும் இந்திய மன்னர்களின் ஆட்சியைவிட—இந்திய 'தெய்வ அவதார' ஆட்சிகளைவிட எவ்வளவோ பங்கு மேலானதும் மனிதத் தன்மை பொருந்தியதுமாகும்.

மேலும், இந்தியாவில் இருந்ததாகச் சொல்லப்படும் யோக்கியமான ஆட்சிமுறைகள் என்பவைகள் எல்லாம் இன்றையதினம் நம்மால் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்று சொல்லப்படும்படியான மனுதர்ம ஆட்சிமுறையாகத்தான் இருந்து வந்ததாகக் காணப்படுகின்றனவே தவிர, 'மனிதத் தன்மை ஆட்சிமுறை'—சமதர்ம ஆட்சிமுறை ஒரு நாளும் இருந்ததாக எங்கும் எதிலும் காணப்படவே இல்லை.

இன்னும் பார்க்கப்போனால், பழைய தர்மத்தை அனுசரித்து செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுவரும் இன்றைய இந்தியக் கிரிமினல் சட்டமும், 'இந்து சிவில் லா' சட்டமும் கூட மனுதர்ம (பார்ப்பன) சாஸ்திரத்தை அனுசரித்திருக்கின்றதையும்; அவை மனித தர்மத்தை—சம தர்மத்தைச் சிறிதும் லட்சியம் செய்யப்படாமல் இருந்து வருதையும் பார்த்தால், மேற்காட்டிய தத்துவம் யாவருக்கும் எளிதில் விளங்கும்.

வெள்ளைக்கார ஆட்சிகூட—வெள்ளைக்கார நாட்டில் இரண்டொன்று தவிர மற்றபடி அனேகமாய் மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், அவர்களால்

நடத்தப்படும் இந்திய ஆட்சியானது மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாயில்லை என்பதையும் நாம் சிறிதும் தயங்காமல் சொல்லுவோம். ஆனால், இந்தப்படியான ஆட்சிக் கொடுமை—அதாவது, மனித தர்மத்திற்கு விரோதமான—சமதர்மமற்ற ஆட்சிக் கொடுமைக்கு வெள்ளைக்காரர்களே பொறுப்பாளிகள் அல்லவென்பதையும் நாம் எங்கும் தைரியமாய்ச் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

ஏனெனில், வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் தங்களது ஆட்சி என்றும் நிலைத்திருக்கவும், இந்த நாட்டுச் செல்வத்தைத் தாராளமாய்த் தங்கள் நாட்டுக்குக் கொள்ளை கொண்டு செல்லவும் உத்தேசித்து இந்த நாட்டில் யாருடைய தயவு தங்களுக்கு இருந்தால் தங்களது மேற்படி எண்ணம் தாராளமாய் நிறைவேறுமோ அவர்களது தயவைப் பூரணமாய்ச் சம்பாதிக்கவேண்டியே, அவர்கள் மனித தர்ம ஆட்சி என்பதை அடியோடு மறந்து—முழுவதையும் கைவிட்டு 'மனு தர்மப்படி' ஆட்சி முறையை வகுத்து நடத்தவேண்டியவர்களானார்கள். இன்றைய தினமும் இந்த நாட்டின் ஆட்சிமுறை மனித தர்மப்படி நடக்க வேண்டுமானால், மனுதர்ம ஆட்சியை அடியோடு ஒழிப்பதற்கு இந்திய மக்கள் சம்மதப்பட்டால் ஒழிய ஒரு நாளும் இந்த நாட்டில் மனித தர்ம ஆட்சி சாத்தியப்படவே படாது.

இன்னும் தைரியமாயும் வெளிப்படையாயும் சொல்லவேண்டுமானால் இன்றைய வெள்ளைக்கார ஆட்சியோ ஆதிக்கமோ ஒழியவேண்டும் என்று சொல்லுகின்றவர்களில் திரு. காந்தி அவர்கள் உட்பட 100-க்கு 90 பேர்களின் உள் எண்ணமெல்லாம், மனித தர்ம ஆட்சியை இந்த நாட்டில் தலைகாட்டச் செய்யாமல் இருக்கச் செய்யவும், மனு தர்ம ஆட்சியை நிலைநிறுத்தவும் செய்யப்படும் முயற்சியில்தான் உள்ளது என்று சொல்ல வேண்டும். இதைப் பாமர மக்கள் சரிவர உணராமல் மோசம்போய்க் கொண்டிருப்பதனால் இந்த நிலை வளர்ந்துகொண்டேயிருக்கின்றது.

உதாரணமாக, மனுதர்மத்திற்கு எதிரானதாகக் கருதப்பட்ட இந்துமத பரிபாலன சட்டமும், தேவதாசிகள் ஒழிப்புச் சட்டமும், குழந்தை மணத் தடுப்புச்சட்டமும் செய்யப்பட்ட—புறப்பட்ட காலத்தில் அதற்கு எதிராய் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்புகள் எல்லாம், 'இச் சட்டங்கள் செய்யப்படுவதே வெள்ளைக்கார ஆட்சியின் கொடுமை' என்பதாக மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதும் மக்கள் அதை நம்பி அச் சட்டங்களுக்கு எதிராய் இருந்ததும் கடைசியாக, 'சர்க்கார் தாசர்கள்', 'தேசத் துரோகிகள்', அரசாங்கத்தார் ஆகியவர்கள் தயவில் இச் சட்டங்கள் நிறைவேற்ற முடிந்ததும், முடிந்த பிறகும் சரியானபடி அமுலில் இல்லாததுமே போதிய காரணங்களாகும்.

ஆகவே, இந்தியாவுக்கு ஏதாவது அரசியல் மாறுதல் ஏற்படுத்த வேண்டுமானால் அதில் மனுதர்மக் கொள்கைகள், வருணாசிரமக் கொள்கைகள், பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள் ஆகியவைகள் இல்லாத ஆட்சி ஏதாவது ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கை சிறிதாவது இருந்தால்தான் இந்த ஆட்சியை மாற்ற முயற்சிக்கலாமே ஒழிய, மற்றபடி செய்யும் அரசியல் முயற்சிகள் பாமர மக்களின் தற்கொலை முயற்சிகளேயாகும். இந்த இரகசியத்தை நமது மக்களில் பலர் அறிந்திருந்தும்கூட அவர்களில் பலரைத் தற்கால நிலைமையானது மனுதர்மத்தை ஸ்தாபிக்கும் அரசியல் முயற்சியில் கலந்துகொள்ளவே தூண்டுகிறது.

['குடிஅரசு'—தலையங்கம்—17-5-1931]

8. இந்திய சுதேச சமஸ்தானங்கள்

இவ்வாரம் சிம்லாவில் நடந்த இந்திய சட்டசபைக் கூட்டத்தில் இந்திய சுதேச சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காக என்று, 'இந்தியாவில் அரசர் பெருமானின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட சமஸ்தானங்களின் பாதுகாப்புச் சட்டம்' என்பதாக ஒரு புதிய சட்டம் அரசாங்கத்தாராலேயே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் இப்போது கொண்டுவருவதற்குள்ள அவசியத்தை இந்திய அரசாங்க ஹோம் மெம்பர் எடுத்துச் சொல்லும்போது, 'இந்தியாவில் அரசர்பெருமானின் சர்வாதிகாரத்திலுள்ள சமஸ்தானங்களின் நிர்வாகத்தைக் கவிழ்க்கவோ, அச் சமஸ்தானங்கள் விஷயமாய்ப் பிறர் துவேஷங்கொள்ளும்படி செய்யவோ செய்யப்படும் முயற்சிகளைத் தடுக்க இச்சட்டம் செய்யப்படுகின்றது' என்று சொல்லியிருக்கிறார்.

சுதேச சமஸ்தானங்கள் என்பவைகள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்த காலம் முதற்கொண்டே இருந்துவருபவையாகும்; சில அதற்கு முன்பிருந்தே இருந்து வருவனவுமாகும். அப்படியிருக்க, இத்தனை காலம் பொறுத்து இப்பொழுது அவைகளைக் காப்பாற்ற என்பதாகப் புதிய சட்டம் ஒன்று ஏன் செய்யப்படவேண்டும் என்பதைக் கவனித்தால், அதில் ஏதோ ஒரு இரகசியம் இருக்கவேண்டுமென்பது விளங்காமல் போகாது. இதுபோலவேதான், சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால், 'மதத் தலைவர்களைக் காப்பாற்ற' என்று ஒருசட்டம் செய்யப்பட்டது. மதங்களும், மதத் தலைவர்களும் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகி இருக்கலாம். அப்படியிருக்க, 1927-ம் வருஷத்தில் மேற்கண்டபடி, 'மதத் தலைவர்கள்மீது துவேஷம் உண்டாகும்படியோ, ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மனவருத்தம் உண்டாகும்படியோ செய்யப்படும் காரியங்களைத் தடுக்க' என்பதாக ஒரு சட்டம் செய்துகொண்டார்கள். இது, சமஸ்தான ஆதிக்கங்களைக் காப்பது போலவே மத ஆதிக்கத்தைக் காப்பாற்றவே செய்யப்பட்டதாகும். ஆனால், அந்தக் காலத்திலேயே இதைப்பற்றி நாம், 'மதக் கொள்கைகள் அறிவுக்கும், மனிதனுடைய சுயேச்சைக்கும் விரோதமாய் இருக்குமானால் அதை ஆட்சேபிக்கவோ, கண்டிக்கவோ எவருக்கும் உரிமை இருக்கக்கூடாது என்று சட்டம் செய்வதானது பகுத்தறிவைத் தடுத்து மூடநம்பிக்கையையும், அடிமைத்தனத்தையும் வளரச்செய்வதாகும்' என்று சொல்லிப் பலமாக ஆட்சேபித்திருந்தோம். அதுசமயம் இந்தியா முழுவதிலுமே நம்மைத் தவிர வேறு யாரும் இவ்விதமான கொடுங்கோன்மை அடக்குமுறைச் சட்டத்தை ஆட்சேபித்ததாகத் தெரியவில்லை. இந்திய சட்டசபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் அச் சட்டத்தை ஆதரித்தார்கள் என்றாலும் நம் ஆட்சேபணையின் பயனாக ஏதோ சில மாறுதல்கள் மாத்திரமே செய்யப்பட்டது.

ஒருவரையொருவர் தூஷித்தால், ஒருவர்மேல் ஒருவருக்குத் துவேஷம் உண்டாகும்படி நடந்துகொண்டால் அதைத் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருந்து வந்தும் திடீரென்று 'மதத் தலைவர் பாதுகாப்பு' சட்டத்தை உண்டாக்கி விட்டார்கள். அந்தப்படி ஒருசட்டம் செய்ய வேண்டுமென்று அந்தக் காலத்தில் சர்க்காருக்கு முதன்முதலில் யோசனை சொன்னவர் ஒரு சென்னை மாகாணத்துத் தமிழ்நாட்டுப் பார்ப்பனரேயாகும். சுயமரியாதை இயக்கத்தின் போக்கைப்பற்றி அனேக பார்ப்பனர்கள் அக் காலத்தில் பத்திரிக்கையில் ஓலமிட்டதைப் பார்த்தே ஒரு சட்டநிபுணப் பார்ப்பனர், 'ரங்கிலா ரசூல்' என்ற துண்டுப் பிரசுரத்தைச் சாக்காக வைத்து, இம் மாதிரி யோசனை சொன்னவுடன் அரசாங்கத்தார் இதே சாக்கென்று ஒரு வாரத்தில் சட்டம் கொண்டுவந்து எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றிக்கொண்டார்கள்.

போதாக்குறைக்கு இப்பொழுது இந்திய சுதேச சமஸ்தானங்களைப்பற்றி யாரும் அந்த சமஸ்தானங்கள் மீதோ, சமஸ்தானாதிபதிகள் மீதோ துவேஷம் உண்டாகும்படி பேசவும், எழுதவும் கூடாது என்பதாக ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை எந்தத் தேசியவாதிகளும் எதிர்த்துச் சரியாக ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேசத்தை, அல்லது ஒரு சமூகத்தை ஒருவர் ஆட்சி புரிவது என்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவே ஒழிய, ஆட்சிபுரிவோரின் நன்மைக்காக அல்லவென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயமாகும். அப்படியிருக்க, ஒருவருடைய நன்மைக்காகச் செய்யப்படும் ஆட்சியில் உள்ள குறைகளைத் திருத்தவோ,

மாற்றவோ ஒரு தேச மக்களுக்கோ, ஒரு சமூக மக்களுக்கோ உரிமை இல்லை என்று சொல்வதானால் அந்த ஆட்சியை மனிதத்தன்மை கொண்ட ஆட்சி என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்? ஒரு ஆட்சியின் குறைகளை, கொடுமைகளை உண்மையாய் உள்ளபடி வன்மையாய் எடுத்துச் சொல்லும்போது குற்றமிருக்கிறவர்கள் மீது—அதாவது குறை ஏற்படும்படியான ஆட்சி செலுத்துபவர்கள்மீது யாருக்கும் அதிருப்தியோ, துவேஷமோ, வெறுப்போ உண்டாவது இயற்கையேயாகும். அப்படியிருக்க, ஒருவர்மீது துவேஷம் உண்டாகும்படி ஒருவர் பேசினால், அது குற்றமென்றால், யார் என்ன செய்தாலும், எப்படி ஆட்சியை நடத்தினாலும் பேசாமல் சகித்துக் கொண்டு அடங்கி இருக்க வேண்டுமென்பதுதான் அதன் கருத்தாகும். அனாவசியமாய், பொய்யாய் ஒருவர்மீது துவேஷம் உண்டாகும்படி ஒருவர் நடந்துகொண்டால் அதற்கு ஏற்கனவே சட்டமிருந்து வருகின்றது என்பதை மேலே காட்டி இருக்கிறோம். அது போதாது என்று இப்போது தனிச்சட்டம் செய்வதானது யோக்கியமான முறையல்லாமல், அடக்குமுறைமூலம் மக்களை அடக்கி ஆள சவுகரியம் செய்து கொள்வதேயல்லாமல் இதை நியாயமென்றோ, நல்ல அரசாட்சி முறையென்றோ சிறிதும் சொல்லமுடியாது.

இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான சுதேச சமஸ்தானங்களின் யோக்கியதையானது அனேக விஷயங்களில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியைவிட அனேக மடங்கு மோசமானதென்று தைரியமாய்ச் சொல்லுவோம். தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால், அனேக சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியானது கொள்ளைக் கூட்டத்தாரின் காட்டு ராஜாங்க ஆட்சிபோல் நடந்து வருகிறது.

குடிகளுக்காக, குடிகளின் நன்மைக்காக நாம் ஆட்சி செலுத்துகின்றோம் என்கின்ற உணர்ச்சியே இல்லாமலும், உணர்ச்சி ஏற்படுவதற்கே இடமில்லாமலும் அனேக சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

இந்தியாவில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு விஸ்தீரணத்துக்கு மேலாகவே சுதேச சமஸ்தான ஆட்சிகளின்கீழ் இருந்து வருகின்றது. அதாவது, இந்தியாவின் மொத்தப் பரப்பு (விஸ்தீரணம்) 17,73,000 சதுர மைலாகும். இதில் 6,75,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள தேசம் சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியின்கீழ் ஆளப்பட்டு வருகின்றது.

சுமார் 8,00,00,000 (எட்டுக்கோடி) இந்திய ஜனங்கள் அவ்வாட்சியில் இருந்து வருகின்றனர்.

மேற்கண்ட 6¾ இலட்சம் சதுர மைல் விஸ்தீரணத்தையும் 8 கோடி ஜனத்தொகையையும் கொண்டதான பரப்புகள் 562 இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை 562 சுதேச சமஸ்தானங்களாகி, 562 அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இந்த இராஜ்யங்களில் எல்லாம் பெரியது ஹைதராபாத் இராஜ்யமாகும். இதற்கு விஸ்தீரணம் 82700 சதுர மைல். இதன் ஜனத்தொகை 1,25,00,000. இதன் மொத்த ரெவின்யூ வருமானம் 6,50,00,000 (ஆறரைக்கோடி) ரூபாயாகும். இதில் இராஜாவாகிய ஹைதராபாத் நவாப்பு தன் சொந்த செலவிற்காக எடுத்துக்கொள்ளும் தொகை 50,00,000 (அரைக்கோடி) ரூபாயாகும். இது தவிர அந்த நவாப்புக்கு 400 கோடி ரூபாயுள்ள சொந்த சொத்திலிருந்து வரும் வரும்படி வருஷம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாயாகும். ஆகவே, வருஷம் ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி ரூபாயை வரும்படியாக உள்ள ஒரு பெரிய முதலாளியால் (பூஷ்வாவால்) ஹைதராபாத் தேசம் ஆளப்பட்டு வருவதாகும்.

மற்ற சமஸ்தானங்களில் சுமார் 40 சமஸ்தானங்கள்தாம் வருஷம் ஒன்றுக்கு மொத்த ரெவின்யூ வருமானம் 10 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டவைகளாகும்; மற்றவைகள் எல்லாம் அதைவிடக் குறைந்த வரும்படி உடையவைகளேயாகும். சுமார் 400 சமஸ்தானங்கள்

வருஷம் ஒன்றுக்கு ரெவின்யூ வருமானம் ஒரு இலட்ச ரூபாயைவிடக் குறைந்த வருமான முடையவைகளாகும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இவற்றுள் 15 சமஸ்தானங்கள் ஒரு மைல் விஸ்தீரணத்துக்குக்கூட குறைந்த பரப்பளவுள்ளவைகளாகும். மூன்று சமஸ்தானங்களில் ஒவ்வொன்றிலும் 100 பிரஜைகளைவிடக் குறைவாக இருக்கின்றார்கள். அய்ந்து சமஸ்தானங்களுக்கு ஒவ்வொன்றின் வருஷ வரும்படி ரூபாய் 100 வீதம் கூட இல்லாமல் இருக்கிறது.

உதாரணமாக, அவாச்சார் (Avachar) என்கின்ற சமஸ்தானம் 1 மைல் விஸ்தீரணமும், 32 பிரஜைகளும் 72 ரூபாய் வருஷ ரெவின்யூ வருமானமுடைய தேசமாகும்.

இப்படிப்பட்ட இராஜாக்கள் தங்கள் தேச ரெவின்யூ வரும்படியில் 12-ல் ஒரு பாகம் முதல், சரிபகுதி வரையில் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக்கொண்டு, மீதியையும் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடியே பிரஜைகளுக்கென்று செலவழித்துக்கொண்டு இருந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சுதேச சமஸ்தான இராஜாக்களின் யோக்கியதைகளை, அதாவது இந்தூர், ஆள்வார், மிஸ்டர் 'A' முதலிய இராஜாக்களின் யோக்கியதையை நினைத்துப் பார்ப்போமேயானால், அவர்களது ஆட்சியின்கீழ் மக்கள் குடிகளாய் வாழ்வதைவிட மானங்கெட்ட வாழ்க்கை வேறு ஒன்றும் இல்லை என்றே தோன்றும். உலகில் உள்ள கூடா ஒழுக்கங்கள் எல்லாம் ஒருருவாய்த் திரண்டுவந்தது போன்ற அரசர்கள் எத்தனையோ பேர்கள் நமது சுதேச சமஸ்தானங்களில் இருந்து வருகிறார்கள் என்பது யாரும் அறியாததா?

இவர்களில் சில அரசர்கள் தங்கள் பெண்சாதிகளுக்குச் செலவிடும் அளவில் மூன்றில், நான்கில் ஒரு பாகம் தொகைகூட, தனது பிரஜைகளின் கல்விச் செலவு செய்யாதவர்களும்; தங்களது மோட்டார் கார்களுக்காகச் செலவு செய்யும் தொகையில் பகுதி அல்லது 3-ல் ஒரு பாகம்கூட தனது தேசப் பிரஜைகளின் சுகாதாரம், வைத்தியம் ஆகியவைகளுக்குச் செலவு செய்யாதவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சுதேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு அவர்கள் தங்கள் தேச வரும்படியில் இத்தனையில் ஒரு பாகந்தான் தன் சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளலாம்; இத்தனை பெண்டாட்டிகள் தாம் கட்டிக்கொள்ளலாம் என்பதான நிர்ணயமே இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

'இந்திய சக்கரவர்த்தியின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட சமஸ்தானங்கள்' என்று வெகு பெருமையாய்ப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சொல்லிக்கொள்ளுகிறார்களேயொழிய, அந்தச் சர்வாதிகாரத் தன்மையை ஒரு சிறிதாவது இந்திய சமஸ்தான அரசர்களின் ஒழுக்கத்துக்கோ, அவர்களது வாழ்க்கை நிலையின் தன்மைக்கோ, குடிகளின் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டிய அவசியத்துக்கோ செலவழித்ததாகச் சொல்லுவதற்கு இடமே காண முடியாமல் இருந்துவருகின்றது. இந்திய சமஸ்தான அரசர்களில் பெரும்பான்மையானவர்களுடைய நடவடிக்கையும், யோக்கியதையும் அரசாட்சி முறையும் பார்த்த ஒருவன் எந்த விதத்தில் அவர்கள் நிலையை வெளியில் எடுத்துச் சொல்லாமல் இருக்கவோ அவர்களை ஒழிக்க முயற்சி செய்யாமலிருக்கவோ முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. 562 பேர்களில் யாரோ ஒன்று இரண்டு சமஸ்தான அரசர்கள் ஒருசமயம் 'யோக்கியர்களாக' இருந்தாலும் இருக்கலாம்; அதுவும் 'கூரை வீட்டின்மீது இருந்துகொண்டு கொள்ளிக்கட்டையை எடுத்து விளையாடிக் கொண்டிருக்கின்றானே அவனே எல்லோரிலும் யோக்கியன்' என்று சொல்லுவது போன்ற யோக்கியமாய் இருந்தாலும் இருக்கலாம். இதற்காக அரசர் பெருமானின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட 562 'சமஸ்தான நிர்வாகத்தைப்பற்றித் துவேஷங் கொள்ளும்படி யாரும் செய்யக்கூடாது' என்று சட்டம் செய்வது என்றால், லார்டு வெல்லிங்டன்துரைமகனாரின் அடக்கு முறைச்சட்டம் என்பவைகளிலெல்லாம் இதுவே தலைசிறந்த உண்மையான அடக்குமுறைச் சட்டம் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ்

இந்தியாவின் வரி, ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் ஆகின்றது என்றால் அனேக சுதேச சமஸ்தானங்களின் வரி ஆள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகின்றது. ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் வரிவசூலிக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில், படிப்புக்காக நபர் ஒன்றுக்கு 8 அணா வீதம் செலவழிக்கப்படுகின்றது என்றால், ஆள் ஒன்றுக்கு 20 ரூ. வீதம் வரி வசூலிக்கப்படும் சில சுதேச சமஸ்தானங்கள், படிப்பு விஷயத்தில் ஆள் ஒன்றுக்கு ஆறு அணா வீதமும் 3 அணா வீதமும்தான் செலவு செய்கின்றனர். இவர்கள் பெயரை வேண்டுமானாலும் பொது நலத்தை உத்தேசித்து வெளியிட நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆதலால் முறையே நவநகர், கட்சு முதலாகிய சமஸ்தானங்களாகும். இதுபோல் இன்னும் பல சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

தவிர, இந்திய சுதேச சமஸ்தானத்தில் உள்ள எல்லா இராஜாக்களுமே தங்கள் சொந்த செலவுக்கென்று எடுத்துக்கொள்ளும் தொகையானது, அய்ரோப்பிய அரசர்களும், சக்கரவர்த்திகளும் எடுத்துக்கொள்ளும் விகிதாச்சாரத்தைவிட 60 பங்கு. 70, 100, 200, 1000 பங்கு அதிகமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக, அய்ரோப்பாக் கண்டத்தில் டென்மார்க் தேசத்து அரசருக்கு இருபத்தி மூன்றரைக்கோடி ரூபாய் வரி வருஷ வருமானம். நமது பிக்கானியர் சமஸ்தான அரசருக்கு வருஷம் 60 இலட்சம் ரூபாய் வரி வருமானம். ஆனால், டென்மார்க்கு தேச அரசர் வருஷம் 7 இலட்சம் ரூபாயே தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார். பிக்கானியர் தேசத்து அரசர் வருஷம் பதின்மூன்றரை (13½) இலட்ச ரூபாய் தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார். இதை விகிதாச்சாரம் பார்த்தால் டென்மார்க்கு அரசர் தனது தேச வருமானத்தில் 350-ல் ஒருபாகம் எடுத்துக் கொள்ளுகிறார்; பிக்கானியர் சமஸ்தான அரசர் தனது தேச வரும்படியில் 4-ல் ஒருபங்கு தனது சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொள்ளுகிறார் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

பொதுவாகப் பார்க்கப்போனால், அய்ரோப்பிய அரசர்கள் தங்கள் வரும்படிக்கும், அவர்கள், தங்கள் சொந்தச் செலவுக்கு எடுத்துகொள்ளும் தொகைக்கும்; இந்திய சமஸ்தான அரசர்கள் வரும்படிக்கும் அவர்கள் தங்கள் சொந்தச் செலவுகளுக்கு எடுத்துக் கொள்ளும் தொகைக்கும் வித்தியாசத்தையும் மற்ற விஷயங்களையும் கணக்குப் பார்த்தால், இந்த சமஸ்தானங்களையும் சமஸ்தானாதிபதிகளையும் பாதுகாக்கச் சட்டம் வேண்டுமா அல்லது மாற்றவோ, கவிழ்க்கவோ சட்டம் வேண்டுமா என்பது நன்றாய் விளங்கும்.

அதற்காகவே சில புள்ளி விவரங்கள் கீழே தருகிறோம். இது சர்க்கார் கணக்கேயாகும். அதாவது :—

தனது தேச மொத்த வரும்படியில் இங்கிலாந்து தேச ஜார்ஜ் அரசர் 1600-ல் ஒரு பங்கும், பெல்ஜியம் அரசர் 1000-ல் ஒருபங்கும், நார்வே, அரசர் 700-ல் ஒருபங்கும், நெதர் லேண்டு அரசர் 600-ல் ஒருபங்கும், இட்டாலி அரசர் 500-ல் ஒருபங்கும், ஜப்பான் சக்கரவர்த்தி 400-ல் ஒருபங்குந்தான் தங்கள் சொந்தச் செலவுக்குப் பெறுகிறார்கள்.

ஆனால், இந்திய சமஸ்தானாதிபதிகளோ என்றால், தங்களது மொத்த ரெவின்யூ வரும்படியில் திருவாங்கூர் மகாராஜா 17-ல் ஒரு பாகமும், மைசூர் மகாராஜா 14-ல் ஒரு பாகமும், ஹைதராபாத் நவாப் 13-ல் ஒரு பாகமும், பரோடா மகாராஜா 12-ல் ஒரு பாகமும், காஷ்மீர் மகாராஜா 5-ல் ஒரு பாகமும், பிகானீர் மகாராஜா 4-ல் ஒரு பாகமும், இன்னும் சிலர் 3-ல் ஒரு பாகமும், சிலர் 2-ல் ஒரு பாகமும் தங்கள் சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொண்டு, அக்கிரமமான போக போக்கியங்களை அனுபவிக்கிறார்கள். ஆதலால், இந்திய சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிகளென்பவை ஒரு 'பக்கா' முதலாளித் தன்மை ஆட்சிகள் என்பதில் யாருக்குமே ஆட்சேபணை இருக்காது. இவர்களுக்கு ஏழை மக்கள், சரீரத்தால் கஷ்டப்பட்டு வாழும் தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கையைப்பற்றியோ அவர்களது மனிதத் தன்மையைப்பற்றியோ ஒரு சிறிது ஞாபகமாவது, கவலையாவது இருக்கவே இருக்காது; இருக்க இடமுமில்லை.

இந்த இராஜாக்கள் என்பவர்கள் ஒருவித சுகபோகங்களை அனுபவிக்கவே தோன்றியவர்கள் என்பதும், அவர்களது பிறப்பும், பதவியும் ஏதோ முன்ஜென்ம கர்ம வசத்தால், புண்ணியத்தால், பூஜாபலத்தால் கிடைத்தது என்பதும் தவிர—மற்றபடி அவர்களுக்கு ஆட்சியிலிருக்கும் பொறுப்பு என்ன? தங்கள் நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும்? என்பனவாகியவைகள் தெரியவே தெரியாது. இந்த இலட்சணத்தில் இந்த சுதேச சமஸ்தானாதிபதிகளான இராஜாக்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்களென்றும், விஷ்ணு அம்சமே உலகில் அரசனாய் அவதரிக்கின்றது என்றும் சொல்லப்படுவதோடு ஒவ்வொரு இராஜாங்கமும் ஒவ்வொரு கடவுளுக்குச் சொந்தமானதென்றும், அக் கடவுளின் பிரதிநிதிகளாகவோ தாசர்களாகவோ இருந்து இந்த இராஜ்யங்கள் அரசாளப்படுகின்றன என்றும் சொல்லிக்கொள்ளவும் படுகின்றன.

இந்தப்படியெல்லாம், ஊரார் உழைப்பில் வயிறு வளர்க்கும் சோம்பேறிக்கூட்டப் பார்ப்பனர்கள் கற்பித்து, பிறருக்கும் அந்தப்படி பிரச்சாரமும் செய்து எப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஆட்சியிலும் தாங்கள் மாத்திரம் நோகாமல், சரீரத்தால் எவ்வித பாடும் படாமல் சோம்பேறி வாழ்க்கையை நடத்திக்கொண்டு, அவ்வயோக்கிய அரசர்களுக்கு அடுத்த படியில் இருந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

நமது தேச பக்தர்களுக்கோ, தேசியவாதிகளுக்கோ, தேசியத் தலைவர்களுக்கோ இவைகளை எல்லாம் பற்றி ஒரு சிறிதுகூடக் கவலையே கிடையாது. அவர்களுடைய கவலையெல்லாம் ‘அன்னியன் ஏன் நமது தேசத்தை ஆளுகிறான், வைசிராயிக்கு ஏன் இவ்வளவு சம்பளம், இவ்வளவு அதிகாரமேன்!’ என்கின்ற பல்லவியும் பேச்சுந்தான் தெரியுமே ஒழிய வேறு ஒன்றையும் பற்றிய விவரமும் தெரியாது; கவலையே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். தேசியப் பத்திரிக்கைகளோ பெரிதும் இம் மாதிரி இராஜாக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களையும், அவர்களது நிர்வாகத்தையும் புகழ்ந்து எழுதுவதும், பணம் கொடுக்காதவனை வைவதும் தவிர வேறு ஒரு கவலையுமில்லை.

மேற்கண்ட யோக்கியதை கொண்ட இராஜாக்கள் தங்கள் தங்கள் சமஸ்தானங்களைப் பாழாக்கி அந் நாட்டு மக்களை மிருகங்களாகப் பாவித்து அக்கிரம, அனியாய ஆட்சிபுரிவது உலகம் அறிந்திருந்தும், போதாக்குறைக்கு இந்த ‘தர்ம ராஜாக்களை’ பிரிட்டிஷ் இந்திய ஆட்சியிலும் கொண்டுவந்து கலக்கி—அதுவும் எப்படி என்றால் அவர்களைப்பற்றியும், அவர்கள் தேசத்தைப்பற்றியும், அவர்கள் நிர்வாகத்தைப்பற்றியும் பேச நமக்கு எவ்வித அதிகாரமில்லாமலும், நம் தேச ஆட்சியின் தலையில் அவர்கள் வந்து உட்கார்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்தும்படியாகவும் கொள்கை கொண்ட சமஷ்டி (பிடரல்) ஆட்சியைக் காங்கிரசும், அதன் ஏக தலைவரான ‘மகாத்மா’க்களும் ஒப்புக்கொண்டு, அதைப்பற்றி ஆட்சேபிப்பதில்லை என்கின்ற நிபந்தனையின்மீது வட்டமேஜை மகாநாட்டில்போய் கலந்துகொண்டார்களென்றால், தேசியத்தின் அயோக்கியத்தனத்துக்கும், சூழ்ச்சிக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

பழைய பழக்க வழக்கங்களையும், மதக் கொள்கைகளையும் வருணாசிரமத்தையும் காப்பாற்றும் விஷயத்தில் வெள்ளைக்கார அரசர்கள் அசார்சமாய் இருந்துவிடுவார்கள் என்கின்ற கருத்துக்கொண்டே காங்கிரசுக்காரர்கள் அம் மகாநாட்டுக்குச் சென்றார்கள் என்றும், நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இந்திய ஆட்சியில் கருப்பு சமஸ்தானாதிபதிகளையும் கொண்டுவந்து கலக்கினதுமான காரியங்கள் செய்தார்கள் என்றும் இந்திய ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் ஆகியவர்களின் கிளர்ச்சிகள் வலுத்துவிடுமேயானால் அதை அடக்க அதிகச் சிரமப்பட்டு நாம் ஏன் கெட்ட பேரை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கருதி கருப்பு சமஸ்தானாதிபதிகள் மூலமே அடக்கச் செய்யலாம் என்கின்ற சூழ்ச்சி மீதே பிரிட்டிஷாரும் இந்தத் தந்திரம் செய்திருக்கிறார்கள் என்றுந்தான் நாம் நினைக்கவேண்டி இருக்கிறது.

எப்படி இருந்தபோதிலும், பிரிட்டிஷ் முதலாளித்தன்மை ஆட்சியும், அவர்களது ஏகாதிபத்திய ஆணவமும் ஒழிவதற்கு முன், இந்திய சமஸ்தான முதலாளித்தன்மை ஆட்சியும் அவர்களது பொறுப்பற்ற கொடுங்கோன்மை, கூடா ஒழுக்க ஆட்சியும் அழிந்து மறைந்து ஒழியவேண்டியது அவசரமும் அவசியமுமான காரியமாகும் என்பதே நமதுஅபிப்பிராயம். அப்படி இருக்க, இப்போது அவர்களையும் சமஸ்தானங்களையும் காப்பாற்றப் புதிதாக ஒரு சட்டம் செய்வது மிகமிகக் கொடுமையான காரியம் என்றே சொல்லுவதுடன், இச்சட்டம் அச் சமஸ்தானாதிபதிகளை, 'இன்னும் என்ன வேண்டு மானாலும் செய்யுங்கள்' என்று சொல்லி லைசென்சு அனுமதிச்சீட்டு கொடுத்தது போலவும் ஆகிறது என்பதே நமது அபிப்பிராயம்.

['குடிஅரசு'—தலையங்கம்—3-9-1933]

9. நமது வெற்றி

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

பிரிட்டனிலோ, பைபிளிலோ, இங்கிலாந்திலோ, அவர்கள் இராஜரீகத்திலோ பறையன், சூத்திரன், பிராமணன் இருக்கிறார்களா? இல்லையே. அப்படி இருக்க இங்கு சட்டம், நடப்பு, கோவில், குளம், உண்ணல், அருந்தல், கொடுத்தல், கொள்ளல், செல்வம், தொழில், கல்வி, கடவுள் எல்லாவற்றிலும்—பிராமணன், சூத்திரன், பறையன் இருக்கக் காரணமென்ன?

வெள்ளை ஆரியர் (பிரிட்டிஷார்), இந்தப் பேதத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதாக மஞ்சள் ஆரியர் (பார்ப்பனர்)களுக்கு வாக்குறுதி கொடுத்து, இங்கு தங்கள் சுரண்டலைப் பலப்படுத்திக்கொண்டார்கள். அதற்குக் குறைவில்லாத அளவும், அதிகமாகவும், நம்மை மேலும் சுரண்டிக்கொள்ள மஞ்சள் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) வெள்ளையர் சன்னது—சட்டபூர்வமான அனுமதி கொடுத்துவிட்டார்கள். அதுதான் இந்துமதப் பிரச்சாரமும் இந்து வருணாசிரம தர்ம சட்டமும் காப்பும் கோவில்கள், மோசடி சடங்குகள் முதலியனவும் காப் பாற்றப்பட்டு வருவதாகும்.

ஆதலால், நாம் இன்றையக் கொடுமையான ஆட்சி என்பதை ஒழிக்கவேண்டுமானால் வெள்ளை ஆரியர்—மஞ்சள் ஆரியர் ஒப்பந்தத்தை உடைத்துச் சுக்கல் ஆக்கவேண்டும். ஜின்னா சாயபு வெள்ளையரை உணரச் செய்ததுபோல், நாமும் உணரச் செய்யவேண்டும்.

ஜின்னா சாயபு என்ன செய்தாரென்றால், 'ஓ, வெள்ளையனே! பார்ப்பான்தான் உனக்குத் தொல்லை கொடுப்பான் என்று கருதி அவனை சரிப்படுத்திக்கொண்ட தைரியத்தில் நீ மகாமஸ்தாய் இருந்துவிடாதே; (என்னாலும் (முஸ்லிம்களாலும்) உனக்குத் தொல்லை கொடுக்க முடியும். இந்தியாவில் மாத்திரமல்ல, வெளியிலுங்கூடத் தொல்லைப்படுத்த முடியும்' என்று சொன்னதால், அதற்கேற்றபடி முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்ததால், இதை வெள்ளையர் (பிரிட்டிஷார்) ஒப்புக்கொண்டது மாத்திரமல்லாமல்—மஞ்சள் ஆரியரும் வழிக்கு வந்து, 'உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்; என்னை நம்பிய இரண்டொரு சாயபுகளிடம் என் மரியாதையைக் காப்பாற்று' என்ற அளவிற்கு வந்துவிட்டார்கள்.

அந்த நிலை நமக்கு ஏற்படவேண்டுமானால், நாம் என்ன செய்யவேண்டும்? அதைத் தெளிவாக்கத்தான் திராவிடர் கழகம் தொண்டாற்றுகிறது. நமக்கு இன்று நம் நாட்டில் இருந்துவரும் கஷ்டத்திற்குக் காரணம் நம் மக்கள் தங்கள் பிறவியையும், இனத்தையும் தங்களுக்கிருக்கவேண்டிய சுயமரியாதையையும் உணராத் தன்மையே ஆகும்.

இதனால்தான் நம்மில் அனேகர் பிறவி-இன—சுயமரியாதையைப்பற்றி இலட்சியம் இல்லாமல், சுயநலம் என்னும் பெயரால் தங்கள் மானத்தைவிட்டு அல்லது விற்றும்

பிழைப்பதைப் பெருமையாகக் கொண்டு வாழக் கருதுகிறார்கள். உலகத்தில் வேறு எந்த மக்களும் நம்மைப்போல் இழிவுக்கு ஆளாகி, அதைப்பற்றிக் கவலையற்று வாழவில்லை. நம்மில் இராஜாக்களையும், ஜமீன்தார்களையும், கோடீஸ்வரர்களையும், 'சர்'களையும் பாருங்கள்! யாருக்காவது இன உணர்ச்சி, இழிவுபற்றிய துடிப்பு இருக்கிறதா?

இவர்கள் எல்லோரும் இன இழிவுக்கு, பிறப்பு இழிவுக்கு ஆகவும், மனிதத் தன்மை—மானத்திற்குக் கேடு விளைவிக்கவும் நம் எதிரிகள் கற்பித்த சாதனமாகிய இந்து மதம் (கொள்கை) என்பதைத் தங்கள் மதம் (எங்களது கொள்கை) என்று சொல்ல வெட்கப்படவில்லை; வீரம் பேசுகிறார்கள். அதைப் பின்பற்றி, எதிரிக்கு நல்ல பிள்ளையாகிப் பயன் பெறுகிறார்கள்.

மகாராஜாக்கள், பிரபுக்கள், கோடீஸ்வரர்கள், படித்தவர்கள் என்பவர்களே இப்படி இருந்தால் மற்றவர்களைப்பற்றி, அதுவும் வயிற்றுப் பிழைப்புக்கும், வாய் ருசிக்கும் எதையும் விற்றுப் பிழைப்பவர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா என்று கேட்கிறேன்.

ஆதலால், நமது பிறப்பையும், இனத்தையும் ஞாபகமூட்டுவதே திராவிடர் கழகத்தின் முக்கிய வேலையாகும். 1. முஸ்லிம் மதம் (கொள்கை), 2. முஸ்லிம் சாதி, 3. முஸ்லிம் நாடு, 4. முஸ்லிம் மானத்தோடு வாழ்வதா? சாவதா? ஆகிய இவைகளை ஞாபகப்படுத்தி, இவைகளைக் குறிக்கோளாகக் கொண்டதாலேயே 40 கோடி மக்கள் உள்ள இந்திய நாட்டில், 10 கோடி மக்கள் கொண்ட முஸ்லிம்களுக்குச் சரிபங்கு உரிமை, 'தனி ஆட்சி நாடு' என்கின்ற வலியுறுத்தல், யாராலும் ஆட்சேபிக்க முடியாத—ஆட்சேபிக்கப் பயப்படும்படியான பிரச்சினையாக இருந்து வருகிறது.

அது போலவே, (1) இந்துமதம், அதாவது (ஆரியக் கொள்கை) மதம், (2) இந்து (ஆரிய) இனம், (3) இந்து (ஆரிய) ஸ்தானம் (4) இந்து (ஆரியராம) ராஜ்யம், (5) இந்து (பார்ப்பன) ஆதிக்கம் என்ற குறிச்சொல்லே ஆரியர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) இவ்வளவு, அதாவது அவர்களது எண்ணிக்கை 100-க்கு 4, 5 ஆக இருந்தும் ஆதிக்கம் முழுவதும், நாடு முழுவதும், வளம்முழுவதும் அவர்களுடையதாகவும் மற்றவர்கள் அவர்களது 'வைப்பாட்டி மக்கள்,' சூத்திரர்கள், தீண்டப்படாதவர்கள் என்பதைத் தாங்களாகவே ஒப்புக் கொள்ளும்படியாகவும் செய்யப்பட்டுவிட்டது.

இதுபோன்ற உணர்ச்சியும், நிலையும் நமக்கும் ஏற்படவேண்டும். அதற்கேற்ற குறிச்சொல் நமக்கு வேண்டும் என்பதற்காகவே திராவிடர்கழகம் வேலை செய்கிறது. இந்தப் பெயர் பிடிக்காவிட்டால் வேறு எந்தப் பெயரைவைத்தாலும் சரி. இழிநிலையை வெட்டித்தள்ளும் புரட்சி உணர்ச்சி வரும்படியாக இருக்கவேண்டும். மற்ற எந்தப் பெயராலும் இதுவரை பயன் ஏற்படவில்லை. ஆதலால், இந்தப் பெயரைச் சொல்லுகிறேன். இதுவும் மறந்ததை நினைவுறுத்துவதே தவிர, புதிய கற்பனை அல்ல.

நாம் யாவரும் திராவிடர்; திராவிடர்யாவரும் ஒன்று. ஆரியருக்கும் ஆரியத்திற்கும் நாம் எந்த விதத்திலும், எந்தத் தன்மையிலும் சம்பந்தப்பட்டவர்கள் அல்லர் என்று கருதி (1) திராவிடநாடு, (2) திராவிட இனம், (3) திராவிட மானம், (4) திராவிடர் இருப்பதா—இறப்பதா என்ற உணர்ச்சி நமக்கு வந்துவிட்டால், திராவிடர்க்கு நிகர் இந்த நாட்டில் மாத்திரமல்ல—இந்தியா கண்டத்திலேயே யார் என்று கேட்கின்றேன்!

இன்னமும் சொல்லுவேன்: ஆரியஸ்தானுக்கும்—பாகிஸ்தானுக்கும் நம் நாட்டில் இடமில்லை. நமக்கு இரண்டு சம்பந்தமும் தேவையற்றதேயாகும். ஏன்? நமக்கும் முஸ்லிம்களுக்கும் நம் நாட்டில் சண்டை இல்லை. நாமும் அவர்களும் ஒரு இனம், ஒரு சாதிமத உணர்ச்சியில்—அதுவும் நாம் ஆரியமத உணர்ச்சி கொண்டதால் வேறுபட்டவர்களாகக் கருதிக் கொள்கிறோம்; அப்படியிருந்தும் நாம் உடன்பிறப்பாளர்களாக வாழ்கின்றோம்.

ஆரியம் நம்மைவிட்டொழிந்தால், மதத்திலும் பேதமிருக்காது; அங்குள்ள முஸ்லிம்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவாழுவோ, நம்மை இழிவுபடுத்தி வாழுவோ சிறிதும் நினையார்கள். ஆதலால், அவர்களுக்கும் நமக்கும் பேத உணர்ச்சி இல்லை; கண்டிப் பாய்ப் பேதம் வேண்டாததுமாகும்.

ஆதலால், திராவிடர் என்றதால் முகமதியர்களைப் பிரித்துக் காட்டுவதல்ல; பாகிஸ் தானை எதிர்ப்பதோ, இந்த நாட்டுக்குக் கூப்பிடுவதோ அல்ல. ஆனால், திராவிடர் என்றால் ஆரியர் வேறு என்பதைக் காட்டுகிறது. திராவிட நாடு என்பது ஆரியர்களின் சுரண்டலிலிருந்தும் ஆரிய ஆதிக்கத்திலிருந்தும் மீளவேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே, திராவிடர் ஒன்றுபடவேண்டும், ஒரு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். திராவிடக் கட்டுப்பாடும், ஒற்றுமையும் ஏற்படுவதற்குத் தடையாய் உள்ள எதுவும் தள்ளப்பட வேண்டும்.

இன்றைய அரசியலில் நமக்குப் பதவிப் பங்கு வேண்டியதில்லை. நம்மை வேவல் பிரபு கூப்பிடாததால் எனக்குச் சிறிதும் சங்கடமில்லை; கூப்பிட்டிருந்தால் அவர்தான் ஏமாற்றம் அடைந்திருப்பார். நம் கட்சியில் இடைக்காலப் பதவி ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று 1940ஆம் வருடத்திலேயே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. பதவிக்காக—யோக்கியமான ஜஸ்டிஸ் கட்சி ஒருநாளும் ஆசைப்படுவதில்லை. அது மாத்திரமா? நான் தேர்தலைக்கூட பகிஷ்கரிக்கவேண்டும் என்று சொல்லி வருகிறேன். இப்படியிருக்க, வேவல் கூப்பிடவில்லை என்று நினைப்பேனா? ஆனால், வேவல் பிரபுவுக்குச் சரியான எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, பதவி விஷயம் என்னை ஏய்த்து விடாது; ஏமாற்ற மடையவும் செய்யாது.

ஆனால், வேவல் திட்டத்தால், வேவல், ஜின்னா சாயபு, அம்பேத்கார், காங்கிரசார் நான் ஆகிய அய்ந்துபேரும் வெற்றி பெற்றுவிட்டோம்.

வேவலின் வெற்றி என்னவென்றால்–வேவல் பிரபு நல்லவர்; அவரால் குற்றமில்லை; சுயராஜ்யத்திற்கு வழிகாட்டினார்; நல்ல எண்ணத்தோடு வேலைசெய்தார் என்ற பெயரைக் காங்கிரசாரிடம் வாய்நிறையப் புகழ்ச்சி வாங்கிக் கொண்டதோடு, நாங்கள் இனி சட்டம் மீற மாட்டோம்; சண்டை முயற்சிக்கும் எதிர்ப்புச் செய்யமாட்டோம் என்ற உறுதி மொழியை யும் வாங்கிக்கொண்டார். இதை மெய்ப்பிக்க மவுலானா ஆசாத் அவர்கள், 'எனக்கும் வேவலுக்கும் நடந்த சங்கதி பரம இரகசியம்' என்று சொல்லிவிட்டதே போதுமானது. காங்கிரஸ் பத்திரிகைகளும் தலைவர்களும் இதை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக, வேவலைப் பாராட்டிவிட்டனர்.

ஜின்னாவின் வெற்றி என்னவென்றால்—முஸ்லிம்களுக்கு, இந்துக்களுக்கு உள்ளது போல், சம உரிமை பங்கில் உண்டு என்பதல்லாமல், முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக் தவிர வேறு யாரும் பிரதிநிதித்துவம் அல்ல என்பதை உறுதிப்படுத்திவிட்டார்.

அம்பேத்காருக்கு வெற்றி என்னவென்றால்—ஷெட்யூல்டு வகுப்புக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் அம்பேத்கார்தான் பிரதிநிதி என்பதோடு, காங்கிரஸ் பிரதிநிதித்துவம் கொண்டாடுவது சரியல்ல என்று செய்யப்பட்டுவிட்டது.

காங்கிரசாருக்கு என்ன வெற்றி என்றால்—முதலாவது தலைவர்கள் விடுதலை யானார்கள்; காங்கிரசை இயக்க, மேலால் பிரச்சார வேலை நடக்க இடம் செய்துகொண் டார்கள்; வேறு யாரும், எந்தக் கட்சியாரும் சுலபத்தில் நாட்டின் பேரால் பதவிக்கு வராதபடி பந்தோபஸ்து செய்துகொண்டார்கள்; காங்கிரஸ் ஆட்கள் காங்கிரசை விட்டு ஓடாமல் இருக்க வசதி செய்துகொண்டார்கள்; பிரிட்டிஷாரோடு போராடுவதை விட்டு விட்டதன் மூலம் பிரிட்டன் உதவிகொண்டு முஸ்லிம் லீகுடன் போர் தொடுக்க வசதி செய்து கொண்டார்கள்.

1686—99

இனி, நமக்கு வெற்றி என்னவென்றால்—இனப்படி, மதப்படி, வகுப்புப்படி எந்த அரசியல் பிரதிநிதித்துவமும் இருக்கவேண்டும் என்று போராடினவர்கள் இந்நாட்டில் நாமேயாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காகவே, காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் ஸ்தாபனத் தலைமையை உதறித் தள்ளிவிட்டு, நடு மாநாட்டில் நாலாயிரம் பேர் இடையில், ‘காங்கிரஸ் இங்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொள்ளாததினால், நான் கவலைப்படவில்லை. இதற்காகவே வெளியேறி வேறு ஸ்தாபனம் ஆரம்பித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ளச் செய்கிறேனா இல்லையா, பார்!’ என்று பந்தயம் கூறி, மீசையை முறுக்கிக் காட்டிவிட்டு வந்த என் பந்தயப் பிரச்சினை, சிம்லா மாநாட்டில் ஏகமனதாய் ஒப்புக்கொண்டு கல்சாசனமாக்கப்பட்டுவிட்டது என்பதேயாகும்; அதுவும் நம் விகிதப்படி என்றால் இன்னும் மகிழ்ச்சி அல்லவா?

[சேலத்தில், 20-7-1945-ல் சொற்பொழிவு—‘குடி அரசு’ 28-7-1945; ‘விடுதலை’ 8-10-1972]

10. சுயராஜ்ய ஆட்சி எது?

தோழர்களே!

திராவிடர்கள் அத்தனை பேரும் இந்து மத வருணாசிரமப்படி சூத்திரர்களாக்கப் பட்டதுதான் அவர்கள் தொழிலாளிகளாயிருக்கக் காரணம் என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும். அதுதான் போகட்டும், இந்தத் தொழிலாளிகள் இழி மக்களாகக் கருதப்பட்டு வருவதற்குக் காரணம் இவர்கள் இந்து மத தர்மப்படி இழி மக்களாய் இருப்பதால்தான். சிலர், அறியாமை காரணமாக—‘நாம் இழி தொழில் செய்கிறோம்; அதனால் இழிமக்களாக இருக்கிறோம்’ என்று நினைத்து வருகிறார்கள். இது முற்றிலும் தவறாகும்.

எந்த ஒரு தொழிலும் மற்ற நாடுகளில் உள்ளதுபோல் ஒரு தனிக் கூட்டத்திற்கென்று ஒதுக்கப்படாமல் பொதுவாகவே கருதப்படுமானால், அந்தத் தொழிலுக்கு இழிவோ, பெருமையோ இருந்து வராது.

செருப்புத் தைக்கும் தொழில் ஒரு கூட்டத்திற்கே—அதுவும் இந்து மத தர்மப்படி 5-வது சாதிக்கே ஒதுக்கப்பட்டுவிட்டதால்தான் அது நம்நாட்டில் இழி தொழிலாகக் கருதப் பட்டுவருகிறதே ஒழிய, அத்தொழில் இழி தொழில் என்பதற்காக அல்ல. அதேபோல்தான் வீதி கூட்டும் தொழிலும், கக்கூஸ் கழுவும் தொழிலும். மணியடிக்கும் தொழிலுக்குப் பெருமை இருந்துவருவதற்கும் இதுதான் காரணம். அத்தொழில் உயர்சாதிப் பார்ப்பானுக் கென்றே ஒதுக்கப்பட்டு விட்டதால்தான் உயர்வாகக் கருதப்பட்டு வருகிறதே ஒழிய அத் தொழில் உயர்வானது என்பதற்காக அல்ல. ஆகவே, தொழில் காரணமாக இவர்கள் இழி மக்களாக இருக்கின்றார்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. இந்தத் தொழிலாளிகளுக்கு உணர்ச்சி வரவேண்டும். ‘நாங்கள் மட்டும் ஏன் உடலுழைப்பு செய்தே வாழவேண்டும்? அப்படியிருந்தும் நாங்களேன் இழிசாதி மக்களாக வாழவேண்டும்?’ என்று தொழிலாளிகள் கிளர்ச்சி செய்யவேண்டும். இன்றையத் தொழிலாளர்கள் கூலி உயர்வுக்காகக் கிளர்ச்சி செய்கிறார்களே ஒழிய, தமது இழிவு நீங்கக் கிளர்ச்சி செய்யக் காணோம். கூலி உயர்வால் பொருள் விலை ஏறுகிறது. விலை ஏற்றத்தைத் தொழிலாளிகள்தாம் சாமான் வாங்கும்போது கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற பொருளாதாரத்தை இவர்கள் உணரவில்லை; இவர்கள் தலைவர்களும் இவர்களுக்கு இதை உணர்த்துவதில்லை.

மேலும், இத்தொழிலாளிகளுக்கு மதப் பைத்தியமும், கடவுள் பைத்தியமும், முன் ஜென்ம, பின்ஜென்மப் பைத்தியமும், தலைவிதிப் பைத்தியமும் அதிகம் இருந்து வருகின்றன. இவற்றிலுள்ள நம்பிக்கைகள் அறவே ஒழியவேண்டும். ஊரார் உழைப்பால் உண்டு உடல் பெருத்து உருளுகிறான் ஒரு சோம்பேறிப் பார்ப்பான். அவனை, ‘ஏனப்பா இப்படிச் சோம்பேறி வாழ்வு வாழ்கிறாய்?’ என்று கேட்டால், ‘நான் என்ன பண்ணட்டும்?

கடவுள் கொடுக்கிறார்; நான் உண்டு புரளுகிறேன். அதுதான் கொடுத்துவைத்தது!' என்கிறான் அவன், ஆணவமாக! அடுத்த வீட்டுக் குப்பனைப் பார்த்து, 'ஏனப்பா, ஒருநாள் முழுவதும் ஓயாமல் உழைத்தும் உனக்கு அரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூடப் போதிய ஊதியம் கிடைக்கவில்லை?' என்று கேட்டால்—அவனும், 'அது என் தலைவிதி; நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; பகவான் செயலுக்கு நன்றி; என்ன பண்ணட்டும்? வஞ்சனையின்றி உழைக்கத்தான் என்னால் முடியும்?' என்கிறான், அழுகுரலோடு. நீங்கள் நினைக்கிறீர்களா, பகவான் செயலுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமென்று? இல்லை, இல்லை!

இது, ஒரு சோம்பேறிக்கூட்டம் தம் சுகவாழ்வுக்காக ஏற்படுத்திக்கொண்ட ஒரு வஞ்சகத் திட்டம் என்றுதான் திராவிடர் கழகம் கூறுகிறது. இதற்கும் பகவான் செயலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமானால், அந்தப் பகவான் பாடுபடும் பாட்டாளி மகனுக்கு முதலில் படியளக்கட்டும்; பிறகு மீதியிருந்தால் சோம்பேறிப் பார்ப்பானுக்கும் கொஞ்சம் அழுது தொலைக்கட்டும் என்றுதான் திராவிடர் கழகம் கூறுகிறது.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று தேசிய கீதம் பாடுகிறார்கள்—இன்றையத் தேசியத் தோழர்களும் பொதுவுடைமைத் தோழர்களும். இது பார்ப்பனப் பாரதி காட்டியவழி. ஜெகத்தை இவர்கள் எப்படி அழிக்கப் போகிறார்கள்! சமுத்திரத்தைப் பூமியின்மீது வெட்டிவிடப் போகிறார்களா? அல்லது, சூரியனை அடுப்பிலிட்டுக் கொளுத்திவிடப் போகிறார்களா? ஜெகத்தினை அழிப்ப தென்றால் தொழிலாளியும் அதனுடன் சேர்ந்துதானே மடிய வேண்டியதிருக்கும்! என்னே இவர்கள் மடமை!

இன்றையச் சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு அத்தனையும் மாற்றி யமைக்கத் தொழிலாளர்களான திராவிடர்கள் அத்தனைபேரும் பாடுபடவேண்டும். மக்களை ஏய்ப்பவன் செல்வவான் ஆகின்ற இக் கொடியநிலை மாறியே ஆகவேண்டும்.

அரசாங்கம் வரிவசூல் செய்து ஏதோ நிர்வாகம் நடத்திவருகிறது என்பதுதான் நம் மக்களுக்குத் தெரியுமேயொழிய—அது யாருக்காக நிர்வாகம் நடத்திவருகிறது என்பதோ, அந் நிர்வாகத்திற்கான செலவு யாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதோ இவர்களுக்குத் தெரியாது. தெரியாதது மட்டுமல்ல, இவர்களுக்குள்ள குறை; தெரிந்து கொள்வதற்கான ஆசைகூட இவர்களுக்கிருப்பதில்லை. தோழர்களே, சற்றுக் கவனமாகக் கேளுங்கள்.

நான் கூறுகிறேன், இன்றைய அரசாங்கம் பணக்காரர்களைக் காப்பாற்றத்தான் இருந்துவருகிறதென்று. அரசாங்கத்தின் போலீஸ் இலாக்காவும், கோர்ட்டும், ஜெயிலும், பட்டாளமும் ஏழைப் பாட்டாளி மக்களைக் காப்பாற்ற இருக்கின்றனவா அல்லது பணக்காரர் களைக் காப்பாற்றுவதற்காக இருக்கின்றனவா என்பதை நீங்கள் சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் பாட்டாளி மகனிடம் ஏது பொருள், போலீஸ்காரனால் காப்பாற்றப்படுவதற்கு? ஒருவனுக்கு அதிகப்படியாக மற்றொருவன் பொருள் சேமித்து வைத்தில்லாவிட்டால்—நாட்டில் திருட்டு எப்படி இருக்க முடியும்? பணக்காரன்–ஏழை என்ற பாகுபாடு இல்லாவிட்டால்—நாட்டில் இத்தனை கோர்ட்டுகளுக்கு வேலை ஏது? முதலாளி–தொழிலாளி என்ற பாகுபாடு இல்லாவிட்டால்—நாட்டில் இத்தனை தொழிலாளர் கிளர்ச்சிக்கு இடமேது? இவற்றிற்கு இடமில்லையானால் நாட்டில் இத்தனை ஜெயில்கள் தான் இருக்கவேண்டிய அவசியமென்ன? மற்ற நாடுகளில் எல்லாம் ஜெயில் நிர்வாகத்தால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறதென்றால், நம் நாட்டில் அரசாங்கத்திற்கு அதனால் வருடா வருடம் நஷ்டமேற்பட்டு வருவதற்குக் காரணமென்ன? நாட்டு மக்களுக்கெல்லாம்

போர்முறைப் பயிற்சியளிக்கப்பட்டிருந்தால் நிரந்தரமாக ஒரு பெரிய பட்டாளம் இருக்க வேண்டிய அவசியம் இருக்காதல்லவா? ஒரு பட்டாளந்தான் இருக்கிறதென்றாலும் அதுவும் அரசாங்கத்தைக் காப்பாற்றத்தானே இருந்து வருகிறது. அரசாங்கமும் முதலாளி கையி லிருக்கும்போது—அப் பட்டாளம் தொழிலாளிகளின் உரிமைப் போராட்டத்தைத் தடுக்க அவ்வப்போது உபயோகப்படுத்தப்பட்டு வரும்போது—போலீஸ் இலாக்காவும் நீதி இலாக் காவும் அரசாங்கத்தால் தொழிலாளிகளை அடக்கப் பெரிதும் பயன்பட்டு வரும்போது, இன்றைய அரசாங்கம் முதலாளிகளைக் காப்பாற்றத்தான் இருந்து வருகிறது என்பதை யும்—தொழிலாளிகளையோ, ஏழைப் பாட்டாளிகளையோ காப்பாற்றுவதற்காக இருக்க வில்லை என்பதையும் யார்தான் மறுத்துக் கூறமுடியும்?

பணக்காரர்களைக் காப்பாற்றுவதற்காக இருந்துவரும் இந் நிர்வாகங்களுக்குண் டான வரிப்பணம் யாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது? தேசியத் தோழர்கள் கூறுவார்கள், இவ்வரிகள் பணக்காரர்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகின்றனவென்று. நான் கூறு கிறேன், இவ்வரிகள் ஏழைப் பாட்டாளி மக்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகின்றன. வென்று. பணக்காரன் வரி கொடுக்கிறான் என்கிறாய் நீ; சரி, ஒப்புக்கொள்வோம். அப் பணம் அவனுக்கு எப்படி வந்தது? ஏழை மக்களை ஆனமட்டும் ஏய்த்துத் தான் அடித்த கொள்ளையின் ஒரு சில பகுதியைப் பணக்காரன் சேமித்து வைத்துக்கொள்ளவும் அதைக் காப்பாற்றிக்கொள்ளவும், தானும் தனது பெண்டு பிள்ளைகளும் போக போக் கியத்துடன் சுகமாக வாழவும் தரகாக அரசாங்கத்திற்குக் கொடுத்து வருவதைத்தானே நீ வரி என்று கூறுகிறாய்? அவன் செலுத்தும் வரிப்பணம் அவனுடைய கொல்லையில் தானாக விளைந்துவிடுவதில்லையே! நான் கூறினால் ஏதோ விடுகதை கூறுவது மாதிரி இருக்கும். உண்மையாகக் கேட்கிறேன்—அரசாங்கம் நடத்த வரி என்று ஒன்று இருப்பா னேன்? மடையர்கள் இராஜ்யத்தில் அன்றோ வரி இருக்கும்! அறிவாளிகள் இராஜ்யத்தில் வரி எப்படி இருக்கும்? வரி கொடுத்து வாழும் இராஜ்யத்திற்கா சுயராஜ்யம் என்று பெயர்? வாடகை கொடுத்து வாழும் வீட்டிற்கா சொந்த வீடென்று பெயர்! எந்த மடையன்தான் இதைச் சுயராஜ்யம் என்று ஒப்புக்கொள்வான்?

அரசாங்கம் நடத்த வரி வேண்டுமென்றால், அதை நேரிடையாகவே ஏழைகளிட மிருந்து வசூல் செய்துகொள்ளுங்களேன். அதற்கேன் மறைமுகமான திட்டம் போடு கிறீர்கள்? அதற்காக முதலாளி என்றொருவரை நியமித்து அவர்களை ஆனமட்டும் கொள்ளையடிக்கும்படி அனுமதித்துவிட்டு, அவர்கள் அடையும் இலாபத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு அணாவோ, இரண்டணாவோ பெற்று அரசாங்கம் நடப்பானேன்? உனக்கு வேண்டிய ஒரு அணாவுக்காக, ஏஜெண்ட் அல்லது எஜமானனுக்கு ஏழை மகன் 15 அணாவா அழவேண்டும்? நீயே சகல நிர்வாகங்களையும் எடுத்துக்கொண்டு, அந் நிர்வாகத்திற்கான செலவை மட்டும் இலாபமாக வைத்து மக்களுக்கான வசதிகளை அளித்து வருவதற்கென்ன தடையிருக்க முடியும்? இன்று நாட்டில் ஒவ்வொரு வியாபாரியும் அடித்துவரும் கொள்ளைக்குக் கணக்கு வழக்கைக் காண முடியவில்லையே! ஒவ்வொரு முதலாளியும் கணக்குக் காட்டாமல் அடிக்கும் கொள்ளையே பல இலட்சக்கணக்கில் ஆகி விடுகிறதே!

ஒரு பிர்லா வருடந்தோறும் வரி இல்லாமல் 1½ கோடி ரூபாய் கொள்ளையடிப்பதாகக் கூறப்படுகிறதே! அவர் வீட்டிலேயே காந்தியார் போய்த் தங்குவாரானால் அவரை எப்படி அரசாங்க உத்தியோகஸ்தர் கணக்குக் கேட்க முடியும்? இவர்கள் யோக்கியமானவர்களா யிருந்தால் ஊரைக் கொள்ளையடிப்பவன் வீட்டிலா இவர்கள் போய்க் கூட்டம் போடுவார்கள்

இவர்களுடைய அரசாங்கம் யோக்கியமானதாயிருந்தால் முதல் நம்பர் முதலாளி யாகிய சண்முகம் செட்டியாரை நிதி மந்திரியாக வைத்திருப்பார்களா? கொள்ளை இலாபம் அடிக்கும் கொழுத்த வியாபாரியல்லவா அவர்? அப்படிப்பட்ட முதலாளிகள் இன்று ஆட்சி

செலுத்தி வரும்போது அவர்களுடைய ஆட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்று சமதர்மத் தோழர்களும், பொது உடைமைத் தோழர்களும் அன்றாடம் கூப்பாடு போட்டுவிட்டு, அந்த ஆட்சி யாருக்காக நடந்து வருகின்றதோ—அந்த ஆட்சி யாருடைய ஆதரவில் நடந்து வருகிறதோ—அவர்கள்மீது தொழிலாளிகளின் கவனத்தைத் திருப்பி வருவது எவ்வளவு போக்கிரித்தனம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! நாட்டில் சுயராஜ்ய ஆட்சியில் எத்தனை தொழிலாளர் கிளர்ச்சிகள் இதுவரை நடைபெற்றிருக்கின்றன? இவை தோல்வி அடையக் காரணமான சதிகாரர்கள் முதலாளிகளா? அல்லது, அவர்களின் கூலிகளான அரசாங்கத் தலைவர்களா? அல்லது, உங்கள் தலைவர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள்!

உங்கள் தலைவர்கள்—ஒன்று, அறியாமையால் அல்லது தமது சுயநலத்தால் உங்களை முதலாளிகள்மீது ஏவி விடுகிறார்கள். நீங்களும் உண்மை உணராமல் மந்தை ஆடுகளைப்போல் தலைவர்களைப் பின்பற்றிக் கிளர்ச்சி செய்கிறீர்கள். அதனால் நீங்கள் காணும் பயன் என்ன? உங்கள் முதலாளிகளின் ஆதரவால் வாழும் அரசாங்கம் உங்கள் முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காக உங்கள்மீது தனது அடக்கு முறையைப் பிரயோகம் செய்கிறது; உங்களைத் தடியால் அடிக்கிறது; துப்பாக்கியால் சுடுகிறது; உங்கள் தலைவர்களை ஜெயிலில் அடைக்கிறது; ஒரு தலைவரை நாட்டை விட்டுக்கூட வெளியேற்றச் செய்தது; உங்களைப் பல நாட்கள் பட்டினி போட்டு வீதியில் பிச்சை எடுக்கச் செய்கிறது. அதோடு நிற்கிறதா? உங்களில் சிலரை உங்கள்மீது ஏவிவிட்டுக் கலகத்தை உண்டாக்குகிறது. அது மட்டுமா? உங்கள் வீடுகளைச் சோதனை போடுவதாகக்கூறி உங்கள் பெண்டு பிள்ளைகளை வேறு அவமானப்படுத்துகிறது. இத்தனையும் ஆன பிறகு கூட, உங்கள் கவனம் இன்னும் உங்கள் முதலாளிகள் மீதே செல்லுமானால்—உங்கள் தலைவர்கள் உங்களை இன்னும் அந்தப் பக்கமே திருப்ப முயற்சிப்பார்களானால், அவர்கள் முதலாளிகளுக்குக் கையாட்களாக, அரசாங்கத்தின் கையாட்களாக, சுயநலக்காரர்களாக இருக்கிறார்கள்; அல்லது, அவ்விதமே ஆக்கப்பட்டு விட்டார்கள் என்பதுதானே இதன் அர்த்தம்? அரசாங்கம் முதலாளிகளுக்கு அனுசரணையாக இல்லையானால், தொழிலாளிகள் சமூகத்தை எதிர்த்துத் தனிப்பட்ட முதலாளிகள் எத்தனை நாள் வாழமுடியும்?

இந் நாட்டில் முதலாளி என்றொரு வர்க்கம் இருந்துவரவும் அவ்வர்க்கம் அன்றாடம் தழைத்தோங்கவும் வழி செய்து கொடுப்பதும் இன்றைய ஆட்சிதான்.

ஆகவே, உங்கள் திரண்ட சக்தியை அரசாங்கத்தின்மீது திருப்புங்கள். அரசாங்கத்தைத் தொழிலாளர்களாகிய நீங்கள்—இந்த நாட்டிற்கு உரியவர்களாகிய நீங்கள்—இந்த நாட்டின் வளப்பத்திற்கு உழைப்பால் உரிமை பெற்றுள்ள நீங்கள் கைப்பற்றுங்கள்.

திராவிடர் கழகத்திற்குத் தொழிலாளரைப் பற்றிய திட்டமில்லை என்று சில சுயநலமிகள் துர்பிரசாரம் செய்து வருகிறார்கள். நாங்கள், உங்கள் கவனத்தை அரசாங்கத்தின் பக்கம் திருப்புங்கள் என்று கூறினால்—உங்கள் தலைவர்கள், நாங்கள் ஏதோ முதலாளிகளின் கையாட்களாகிவிட்டோம் என்று கூறி உங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நீங்கள் இதை நம்பாதீர்கள். எங்கள் கட்சியில் ஒரு முதலாளிகூட இல்லை; அவர்கள் ஆதரவும் எங்களுக்குத் தேவையில்லை.

உங்களுடைய 1948ஆம் வருடத் திட்டம் ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருக்கட்டும். பாடுபடாத சோம்பேறிகளின் ஆட்சியை இருக்கவிடாதீர்கள்.

ஒரு இராமசாமி ரெட்டியார் ஏன் முதன் மந்திரியாயிருக்கவேண்டும்? அவர் உழுதவரா? அல்லது, விதைத்தவரா? ஒரு டாக்டர் இராஜன் ஏன் உணவு மந்திரியாக இருக்க வேண்டும்? அவர் என்றாவது கலப்பையைத் தொட்டிருப்பாரா? உடலுழைப்பு வேலையென்றால் அது என்ன வென்றாவது அவருக்குத் தெரியுமா? அயலார் உழைப்பில் வாழும் அக்கிரமக்காரர்கள் ஏன் உங்களை ஆள வேண்டும்? கேவலம், கூலி உயர்வுக்காக நீங்கள்

உயிரை அர்ப்பணம் செய்வதைக் காட்டிலும்—உங்கள் ஆட்சியை ஏற்படுத்துவதில் அர்ப்பணம் செய்வது மேலல்லவா? ஆட்சி உங்கள் கைக்கு வராதவரை என்னதான் நேர்மையான ஒருவர் ஆட்சிக்கு வந்தாலும்கூட—ஏன், 'பர மண்டலத்திலிருந்து உங்கள் பிதாவே' வந்து ஆட்சி புரிந்தால்கூட உங்களுக்குச் சுக வாழ்வு கிட்டாது; உங்கள் இழிவு நீங்க வழிபிறக்காது.

['விடுதலை'-சொற்பொழிவு—20-1-1948]

11. சுயராஜ்யத்தின் தன்மை

தலைவரவர்களே! தோழர்களே!

காந்தியாரைக் கொன்றதெது? காந்தியாரைக் கொன்றவனைத் தூக்கிலிடுவதோ அல்லது அவனுடைய சாதியையே பகிஷ்காரம் செய்துவிடுவதோ அல்லது அதற்கு ஏற்பட்ட சதி ஸ்தாபனத்தை அடக்கிவிடுவதோ அதற்கேற்ற பரிகாரமாகிவிடாது. அத்தகைய ஒரு பெரியாரைக் கொல்வதற்கான மனிதனை,—சமுதாயத்தை, ஸ்தாபனத்தை ஏற்படுத்த வெறியையூட்டிய மதத்தை—அதனுடைய அடிப்படையை ஒழிப்பதுதான் சரியான அடிப் படையாகும்.

சாதாரண மக்கள்கூட காந்தியார் கொலைக்குக் காரணம் மதவெறிதான்; அதை ஒழிக்கவேண்டியதும் அவசியம்தான் என்பதை உணர ஆரம்பித்துவிட்டதும், வெறும் தர்க்கத்துக்காயினும்—ஆட்சியாளர்கள், 'இந்த இராஜ்யம் மத சம்பந்தமற்ற இராஜ்யமாக இருந்துவரும்' என்று கூறி வருவதும், ஒரு அளவு கொலைபாதகர்களைக் காப்பாற்ற என்று இருந்தாலும், மதம் ஒரு அளவுக்கு வெறுக்கப்படுகிறது. சர்க்கார் அரசாட்சி ஏற்படுத்தப்படுமென்பது முடியக்கூடிய காரியமா? மதம், மதஉணர்ச்சி ஆட்சி என்கின்ற இலட்சியமில்லாவிட்டால் மற்றபடி சர்க்கார் ஆட்சிக்கு ஒரு இலட்சியம் என்ன என்பது தெரியவேண்டாமா? மக்களை ஆள ஏதாவது ஒரு கொள்கை இருந்துதானே ஆகவேண்டும்? அந்தக் கொள்கை என்பது மதத்தை அடிப்படையாகக் கொண்டதாகத்தானே இங்கு இருக்க முடியும்?

நாட்டில் பல மதங்கள் இருக்கும்போது ஒவ்வொரு மதக்காரனுக்கும் ஆட்சி இடம் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? இந்து, மாடு அடிக்கக்கூடாது என்கிறான்; முஸ்லிம் பொது ரோட்டில் மேளம் அடிக்கக்கூடாது என்கிறான். கிறிஸ்தவன் ஞாயிற்றுக்கிழமை லீவு வேண்டுமென்கிறான்; மூன்றையும் அனுமதித்துத்தானே ஆகவேண்டும்? மதத்தின் பேரால் சொத்து நாசமாக்கப்பட்டுவருவதை அனுமதித்துத்தானே ஆகவேண்டும்? மதத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் கோயில்கள், சர்ச்சுகள், பள்ளிவாசல்கள் ஆகியவை பொதுச் சொத்துதானே? அவைகள் நூற்றுக்கணக்கான கோடி பெறாதா? அவற்றுக்குப் பாதுகாப்பு வேண்டும்; மதபரிபாலன போர்ட் வேண்டும். இவை இல்லாத ஆட்சி என்றா லும், மதம் அற்ற ஆட்சி என்றாலும்—நாஸ்திக அரசு ஆட்சி என்று தானே ஆகிவிடும்? அப்படியிருக்க, ஆட்சியாளர்கள் ஒப்புக்கொண்டுதான் இப்படிச் சொல்லுகிறார்களா? மதத் திற்கும் ஆட்சிக்கும் சம்பந்தமில்லையானால் 'மதஉணர்ச்சி புண்படுத்தப்பட்டால்' என்ற செக்ஷனை நீக்கிவிடுவார்களா? சர்க்காரில் கிறிஸ்டியன் காலேஜ், இஸ்லாமிய காலேஜ், இந்து காலேஜ் போன்றவை ஏற்பட்டுவிடுமா? வகுப்புரிமை கோரும்போது மாத்திரம் 'வகுப்பு சங்கதிகளை சர்க்கார் கவனிக்காது' என்று நாகரிக பாஷையில் பதிலளித்துவிட்டு சட்டத்தில், சாஸ்திரத்தில், பழக்கத்தில் இருக்கும் வகுப்புத் தன்மையை எடுத்துவிடு வார்களா?

வகுப்புபற்றிக் கூறும் சாஸ்திரங்கள் ஏன் உங்கள் ஆட்சியில் இருக்க வேண்டும்? வகுப்பில்லையானால், எங்கள் மக்கள் ஏன் கோயிலில் மணி அடிக்க அனுமதிக்கப்படுவ தில்லை? எங்கள் மக்கள் இன்னும் ஏன் சூத்திரர்களாகக் கருதப்பட்டு வருகிறார்கள்?

இவற்றையெல்லாம் ஒழிக்க முடியாதபோது, ஏன் மதம் அற்ற ஆட்சி நடத்தப்போவதாக ஜம்பம் அடிக்கிறீர்கள்? மதம் இன்றேல் இந்து ராஜ்யம் ஏது? முஸ்லிம் ராஜ்யம் ஏது? கிறிஸ்துவ இராஜ்யம் ஏது? மதம் இல்லை என்று கூறப்படுமானால், நீங்கள் ஒரு முசல் மானே இந்தியாவை ஆண்டுகொள்ளட்டும் என்று ஏன் விட்டிருக்கக்கூடாது? பெரும் பான்மை இந்துக்களைச் சிறுபாலரான முஸ்லிம்கள் ஆளுவதா என்பதுதானே இன்றைய காங்கிரஸ் கேள்வி? முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள இடங்களில் ஏன் சிறுபான்மை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற மனப்பான்மையால்தானே பாகிஸ்தான் பிரிய நேர்ந்தது? ஹைதராபாத், காஷ்மீர் பிரச்சினை எதை அடிப்படையாகக்கொண்டது? மதவெறியை ஒழிக்க வேண்டாமா? நம் நாட்டுத் தகராறும் அதுதானே? பெரும்பான்மை யான திராவிட மக்களாகிய நம்மைச் சிறுபான்மை ஆரியர் ஏன் ஆளவேண்டும் என்று தானே நாம் பிரிவினை கோரி வருகிறோம்.

மதத்தை அன்பாலும், சத்தியத்தாலும், அகிம்சையாலும் காப்பாற்றப் பாடுபட்ட தற்காகக் காந்தியாருக்கு வெடிகுண்டும், 'ரிவால்வர்' வெடியுமா பரிசாகக் கிடைக்க வேண்டும்? மதவெறி காரணமாய் அவரது போதனைகள் பலனற்றுப் போனதைக் கண்டேனும், மேலால் இது நடவாமல் இருக்க இச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மதவெறியை ஒழிக்க வேண்டாமா? மதம் இன்றுவரை வெறியை ஊட்ட, வெறுப்பை ஊட்டப் பயன்பட்டு வந்திருக்கிறதே ஒழிய, யாரையும் சீர்திருத்தப் பயன்பட வில்லையே! காந்தியார் போதித்த அன்பும் அகிம்சையும் கவைக்குதவாத சங்கதிகளாய்ப் போய்விட்டனவே! காந்தியார் வாக்குப்படி நடப்பதாயிருந்தால் அவரைக் கொன்ற கோட்சேயைச் சிறைப்படுத்தியிருக்கவேண்டியதில்லையே! அவர்தான், 'நான் கல்லடி பட்டோ, கத்திக்குத்துப் பட்டோ அல்லது வெடிகுண்டு போட்டோ, இறக்க நேரிட்டால் அதுவே பகவானுக்குச் சம்மதமாகத்தான் இருக்கும். ஆதலால், என்னைக் காப்பாற்ற மற்றவர் எவராலும் முடியாது' என்று தெளிவாகக் கூறியிருந்தும், அவரை, 'பகவான் தனது பொன்னடிக்கு அழைத்துக்கொண்டு விட்டார்' என்று யாரும் சும்மா இருந்துவிட வில்லை. கோட்சேயையும் அவனுடைய கூட்டத்தையும் சிறைபடுத்தத் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள் அல்லவா? அப்படித் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்டபோதிலும் மதவெறி அழிந்துவிடக் காணோமே!

அதற்கு மாறாக, மதவெறிக்குப் பயந்தன்றோ இந்திய முதன்மந்திரியார்கூட முள் வேலி, பட்டாளம் இவற்றின் பாதுகாப்போடு வாழவேண்டி இருக்கிறது? வகுப்பு வெறியால், சென்னைப் பிரதமர் கவிழ்க்கப்பட சதிவேலைகள் நடக்கின்றன. மதவெறியால் விளைந்த கேடுதானே, காஷ்மீர்ப் போராட்டம்? மதவெறியால் நேரும் கேடுகளைத் தவிர்க்க சுமார் 1000 கோடிக்குமேல் படைக்காகச் செலவழிக்கத் திட்டம் போடப்பட்டு இருக்கிறதே! அங்கு தினம் 10, 15 இலட்ச ரூபாய் செலவாகிறதே; அதனால் ஏதாவது பயன் உண்டா?

இன்றைய மதத்தில் பித்தலாட்டக்காரர் பிழைக்க வழியேற்பட்டிருக்கிறதே ஒழிய உண்மையாக யாருக்காவது மதக் கொள்கைகள் பயன்பட்டுள்ளனவா? மதம் மட்டுமல்ல; இன்றையக் கடவுள் தன்மையும், மடாதிபதிகள் தன்மையும், சாஸ்திரங்கள் புராணங்கள் இவற்றின் தன்மையும், இவற்றின் உபதேசத் தன்மையும் இன்றைய மக்களுக்குச் சிறிதும் பயன்படவில்லை. இதைத்தான் காந்தியாரின் துர்மரணம் நமக்குத் தெளிவாக வலியுறுத்து கிறது. காந்தியார் எந்தக் கருத்துக்காகக் கொலைசெய்யப்பட்டாரோ, அந்தக் கருத்துக்கு ஆதாரமாயிருந்த மதத் தத்துவங்களால் மக்களுக்குப் பயன் ஏற்படவில்லை. தான் போதித்த சத்தியமும், அகிம்சையும் தனக்கே பிரயோசனப்படாமற் போய்விட்டன. அவற்றை மக்களால் கடைப்பிடிக்க முடியாமற் போய்விட்டது.

கடவுளும் மதமும் மனித சிருஷ்டியே; கடவுளும் மதமும் மக்களால் தோற்றுவிக்கப் பட்டனவே ஒழிய, தாமாகத் தோன்றியன அல்ல என்பதை நீங்கள் அறியவேண்டும்.

'கடவுள், கடவுள் என்று கூறுகிறாயே, உனக்கு எப்படியப்பா, அது இருப்பது தெரிந்தது?' என்று கேட்டால், தனக்கு, மற்றொருவர் கடவுள் இருப்பதாகக் கூறினார் என்று கூறுவாரே ஒழிய, கடவுள் நேரில் வந்து கூறியதாகவோ, தன் உள்ளம் கூறியதாகவோ கூறமாட்டார். 'இல்லை இல்லை, என்னுடைய உள்ளம்தான் கூறுகிறது கடவுள் இருப்பதாக' என்று ஒருவர், கூறுவாரானால் அதென்ன அவருடைய உள்ளம் மட்டும் நெய்யில் பொரிக்கப் பட்டது? நம்முடைய உள்ளம் மட்டும் என்ன கடலெண்ணெயில் பொரிக்கப்பட்டதா? என்று நாம் சிந்திக்கவேண்டும்.

நம்முடைய உள்ளம் அவ்வளவு விசாலமில்லையானால் நம் எல்லோருடைய உள்ளங் களைவிட விசாலமான ஒரு யானையினுடைய உள்ளம் ஏன் அப்படிக் கூறக்கூடாது என்று நீங்கள் சிந்திக்கவேண்டும். இன்றைய மதமும், கடவுளும் வேறு இறந்த எந்தக் காலத் துக்கோ தோற்றுவிக்கப்பட்டவை. அப்போது மக்கள் சக்கிமுக்கிக் காலத்தில் இருந்தனர். ஆகவேதான், அவை இன்றைய 'எலக்டிரிசிடி' காலத்திற்குப் பயன்படாமல் போய் விட்டன.

இன்றைய கடவுள் கருத்தும் மதக் கருத்தும்—ஆகாயத்தில் இரண்டு இராட்சதர்கள் சண்டையிட்டுக் கொள்வதால், பாணம் உராய்வதால் இடி ஏற்படுகிறது; மின்னல் ஏற்படு கிறது என்று நம்பிய காலத்தில் தோற்றுவிக்கப்பட்டனவாகும். எங்காவது இடி விழுமானால்—அங்கு யாரோ கெட்டுப்போனவர்கள் இருந்தார்கள்; அவர்களை அழிக்கத் தான் கடவுள் இடியை அங்கு விழும்படி செய்தார் என்று நம்பிய காலத்தில் தோற்றுவிக்கப் பட்டனவாகும். இன்று கோயில்கள்மீது இடிவிழுவதைப் பார்த்து எவனாவது இக் கருத்துக் களை நம்புவானா? அந்தக் காலத்திற்குத் தோற்றுவிக்கப்பட்ட மதமும் கடவுளும் அன்றையப் பாதுகாப்புக்குப் போதுமானதாய் இருந்தன. அந்தக் காலத்திய பாதுகாப்புக்கு இன்று யாரும் பயப்படுவதில்லை. அந்தக் காலத்தில் ஒரு 5 ரூபாய் நோட்டை வைத்து அதன்மீது ஒரு பளுவையும் வைத்து, நாலு பக்கங்களிலும், ஏசுநாதர், முகம்மது நபி, சிவன், மகாவிஷ்ணு என்று எழுதிவிட்டுப் போய்விட்டால் ஒருவன்கூட அதை எடுக்கத் துணியமாட்டான்; இன்றையக் காலத்திலோ அதை ஒருவன்கூட எடுக்காமல் இருக்க மாட்டான். அந்தக் காலத்தில் சாந்தி கழிக்க முச்சந்தியில் வைக்கப்பட்ட இடியாப்பத்தை எவனும் தொட அஞ்சுவான்; இன்றோ எவனும் அதைத் தாராளமாக எடுத்துத் தின்று விடுவான்—நானும் தின்று இருக்கிறேன். மனிதன் நிலை அவ்வளவு மாறிவிட்டது. அந்த மாறுதலுக்கேற்ப மற்றவைகளையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியம்.

அர்ச்சகன் பொறுக்கித் தின்ன மதம்; அதிகாரி பொறுக்கித் தின்ன இராஜ்யமா? காந்தியார் போனதுமல்லாமல், அதன்பயனாக நாட்டில் நாசவேலைகள், கொலைகள், கொள்ளைகள் அதிகம் நடைபெற ஆரம்பித்துவிட்டன. இதைத் தடுக்க ஆட்சியாளர்கள் சரியான நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்வதாகக் காணோம்; மாறாக, இதைத் தங்கள் கட்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாதுகாப்பற்ற மக்கள் சர்க்கார் கட்சிக்கு அடிமையாகி விடுகிறார்கள். ஆகவே, கடவுள் மதம் யாருக்கும் பயன்படாவிட்டாலும் சில சோம்பேறி அர்ச்சகர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக எப்படிப் பயன்பட்டு வருகின்றனவோ அதேபோல்—இன்றைய இராஜ்யபாரமும் மக்களுக்குச் சிறிதும் பயனற்ற முறையில், அர்ச்சகர்களைப்போல்—சில அதிகாரிகள், கட்சியாளர்கள் பொறுக்கித் தின்னமட்டுமே பயன்பட்டு வருகிறது. மக்களை நல்லொழுக்கத்தில் நடத்திச் செல்லவென்பதாகச் சொல்லி ஏற்படுத்தப்பட்ட மடங்கள், எப்படி மடாதிபதிகளின் உல்லாச வாழ்க்கைக்காகவும் அவரு டைய பெருமைக்காகவும், அவர்களுக்கு இன்பமூட்டுபவருக்கும் பயன்படுத்தப்பட்டு வரு கின்றனவோ அதேபோல்—சர்க்கார் அமைப்பும் மந்திரிகள், அவர்கள் பிரியர்கள், அதி காரிகள் ஆகியவர்களது பெருமைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறதே ஒழிய, மக்களை நல்ல முறையில் நடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்டு வரவில்லை. கடவுளுக்குச் செய்யப்

படும் உற்சவமும் ஊர்வலமும் எப்படி நம் நல்வாழ்வுக்குப் பயன்படாமற் போனதோடு நமக்கு மேலும் மடமையையும் தொல்லையையும் விளைவிக்கப் பயன்பட்டு வருகின்றனவோ, அதேபோல்—சர்க்காருக்கு நாம் அழுதுவரும் வரிப்பணமும் நமக்குப் பயன்படாமற் போவதோடு நமக்கு மேலும் பல தொல்லைகள் கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு தொல்லைக்கும் போகாதவனுக்குக்கூட இன்றைய இராஜ்யத்தில் தொல்லை ஏற்பட்டு விடுகிறது.

இந்து—முஸ்லிம் கலவரமென்றால், யாதொரு பாவமும் அறியாமல், பீடிபிடித்துக் கொண்டே குதிரையை அதட்டிக்கொண்டு போகும் ஜட்கா வண்டிக்காரனுக்குக்கூடவா தொல்லை வர வேண்டும்? அவன் வீடும் வாசலுமா அக்கினிக்கு இரையாவது? காந்தியார் கொல்லப்பட்டார் என்பதால் சும்மா கிடக்கிற கிழவிகள்கூடவா—அரிசி பருப்பு இல்லாமல் தெருவில் திண்டாடவேண்டும்? ஆட்சியாளர்கள் இதைக் கவனித்தார்களா? அன்னியன் செய்த வழியால் ஏதோ உங்கள் இராஜ்யத்தில் சிக்கிக்கொண்டோம் என்றால்—எங்களை இப்படியா நீங்கள் வாட்டவேண்டும்? விடுதலை கிடைத்துவிட்டதென்றால், 'மோட்ச லோகமும்', 'பகவான் திருவடி நிழலும்' ஒரு முழத் தூரத்திற்கா வந்துவிட வேண்டும்? இன்றைய ஆட்சியில் யாருக்கேனும் பாதுகாப்பு உண்டா? முதன் மந்திரியாருக்கு முள்வேலியும், பட்டாளமும் பாதுகாப்பு! அவருடைய அடுத்த மந்திரியாருக்கு அவருடைய தந்திரமே பாதுகாப்பு. மற்றவர் நிலை என்ன ஆவது? மிருகங்கள் மாதிரி சண்டையிட்டுக்கொண்டு மடியவா, நாம் மக்களாய்ப் பிறந்தோம்? இவ்வளவு திக்கற்ற நிலைக்கு நாம் வந்துசேர நமது உணர்ச்சிதானே காரணம்? இது ஒழிக்கப்படவேண்டுமென்று கூறுவதற்காகவா நாங்கள் விரோதிகள் ஆகவேண்டும்?

மற்ற நாடுகளில் நாகரிகம் வலுக்க வலுக்க, நம் நாட்டில் அநாகரிகம் வலுக்கிறதே! மற்ற நாடுகளில் அறிவு பெருகப் பெருக, தொழில் பெருகவும் செல்வம் பெருகவும் திட்டம் தீட்டப்படுகிறது. நம் நாட்டில் அறியாமை அப்படியே இருக்க—விரோதமும் துவேஷமும் வளர—பணக்காரன், பணக்காரனாகவே இருக்க—ஏழை ஏழையாகவே இருக்கத் திட்டம் தீட்டப்படுகிறது! 'எல்லா மாகாண மக்களுக்கும் அதிகாரம் இருக்குமானால் ஆட்சி சரிவர நடக்காது; ஆகையால் ஒரு மாகாணத்தில்—அதுவும் ஒரு சிலருக்குத்தான் அதிகாரம் இருக்கவேண்டும்; அதுவும் 2000 மைல் தூரமுள்ள டில்லியில்' என்று தைரியமாகக் கூறப்படுகிறதே இன்று. இதுவா, சுயராஜ்யம்?

'இந்த நாட்டுத் தொழிற்சாலைகளை எல்லாம் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டும் என்று மக்கள் நினைப்பது தவறு; சர்க்கார் எடுத்து நடத்துமானால் நிர்வாகம் சரியாக இருக்காது; ஆகவே தனிப்பட்ட முதலாளிகளே தொழில் நடத்த அனுமதிக்கப்படுவார்கள்' என்று இன்றைய ஆட்சிபீடம் அதுவும் முதலாளி உருவாரம், தெரிவித்துவிட்டதே! சுயராஜ்யம் வேண்டும், விடுதலை வேண்டும் என்று இதற்காகவா நாமெல்லோரும் கூப்பாடு போட்டோம்? சுயராஜ்யம் வந்ததும் எங்கள் நாட்டை ஆள எங்களுக்கு உரிமைவேண்டும் என்று கேட்டால் அதுவே இராஜ துரோகமாகக் கருதப்படும் என்று தைரியமாக 'கான்ஸ்டிடியூஷனில்' கூறப்படுகிறதே இன்று! வெள்ளையன் ஆண்டபோது எதை உரிமையோடு கூறலாமோ அதைக் கூறுவதற்கு இன்று உரிமையில்லாமற்போய்விட்டதே!

விடுதலை வந்தால் பிறவி இழிவு நீங்குமென்று நினைத்தோம். ஆனால், விடுதலை கிடைத்த பிறகு, அந்தப் பிறவி இழிவு நீங்க வேண்டுமென்று பேசக்கூட நமக்கு உரிமையில்லாமற்போய்விட்டதே! அப்படிச் சொன்னதற்காகவே நான் சிறைப்படுத்தப்படப் போகிறேன். இதன் அர்த்தம் என்ன? 'இழிவு இருக்கலாம்; சூத்திரன் இருக்கலாம்; அதனால் ஏற்பட்ட தொல்லைபற்றி மட்டும் பேசக்கூடாது' என்றால் அதன் அர்த்தம் என்ன? அயல்நாடுகளிலெல்லாம், 'அடுத்த 50 ஆண்டில் நாம் எவ்வளவு முன்னேற்றமடைய வேண்டும்' என்றெல்லாம் திட்டம் தீட்டப்படுகிறது. நம் நாட்டில், 1900 ஆண்டில் நாம்

எப்படி இருந்தோம்? 1800, 1700, 1600 இவ்வாண்டுகளில் நாம் எப்படி இருந்தோம்? அப்போதைய நம் நிலை என்ன? அப்படி இருப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று திட்டம் தீட்டப்படுகிறதே! அசோகர் காலத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டதே நம்மை!

அந்த அசோகனுக்கும் நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? அவன் காற்று, மழைக்காவது இத் திராவிட நாட்டில் ஒண்டியிருப்பானா? மற்றவர்களெல்லாம் தேசிய முன்னேற்றத் திட்டம் வகுக்க, இவர்கள் தேசியப் பின்னேற்றத் திட்டம் வகுக்கிறார்களே! இப்படிப்பட்ட பரிதாபகரமான தன்மைக்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம்! பாமர மக்களை வைத்துக்கொண்டு விளையாட்டுத் தன்மையில் ஆட்சிபுரிகிறார்களே; சிந்திக்க வேண்டாமா?

பண்டைய நாகரிக மென்று கூறி பாமர மக்களை ஏய்த்து, பழமைக்குக் கொண்டு செல்கிறார்களே, நம்மை.

இந்த நிலையை மாற்ற அறிவுள்ள மக்களாவது சிந்திக்க வேண்டாமா? அதற்கான முயற்சிகளை கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டேனும் செய்ய வேண்டாமா? யாருக்கும் பயன் படாதமுறையில் சில தந்திரசாலிகளால், தம் சுயநலத்திற்காக நடத்தப்பட்டு வரும் முறையில் நாம் இருப்பதா என்று சிந்தித்து இதை மாற்றியமைப்பதில், உங்கள் கவனமும், கவலையும் செல்ல வேண்டாமா? நீங்கள் எல்லோரும் ஒற்றுமையோடு இழிவு நீங்கப் பாடு படுங்கள். ஒரு குடும்பத்தினரைப்போல் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ளுங்கள். பார்ப் பனரைப் பார்த்தேனும் ஒன்றுபடுங்கள். பிரகாசத்தை ஒழிக்க அரும்பாடுபட்ட பார்ப் பனர்கள் எல்லோரும் இன்று ஓமாந்தூராரைக் கவிழ்க்கப் பிரகாசம் பந்துலுவோடு கூடிக் குலாவ வில்லையா? இதை யாராவது தவறு என்று கூறுவார்களா? ஒரு சிறு பார்ப்பனக் குஞ்சுகூட இதைத் தவறு என்று நினைக்காதே!

அதுபோல், நீங்களும் உங்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து, திராவிடர்கள் யாவரும் பேதாபேதமற்று, பொருளாதார சமத்துவம் பெற்று, அன்னியன் சுரண்டலற்று இன்ப வாழ்வு வாழ வழி செய்துவரும் திராவிடர் கழகத்தையும் அதன் திட்டங்களையும் ஆதரியுங் கள்; அனைவரும், கறுஞ்சட்டை அணியுங்கள்.

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 7-3-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1948]

12. யோக்கியமான ஆட்சி

அன்புள்ள பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே!

'நாதசுரக் குழாயாய் இருந்தால் ஊதியாக வேண்டும்; தவுலாயிருந்தால் அடிபட்டுத் தானாக வேண்டும்' என்பது போல்—எனக்குத் தொண்டை, குரல் உள்ள வரையில் பேசியாக வேண்டும்; பிரசங்கம் செய்தாக வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காண்பதால் ஏற்பட்டுள்ள உள்பூரிப்பும் ஒரு தனியான அகம்பாவமும், என் உள்ளம் பூராவையும் கவர்ந்து நிற்கிறது. இருந்தாலும் முயற்சித்து ஏதோ சொல்கிறேன்.

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில புரட்சிகரமான தீர்மானங்களால் சர்க்கார் சம்பந்தம் நீங்கப்பெற்று, கழகத்தில் பெரும் மாற்றமடைந்து திராவிட நாடு பிரிவினையும் இலட்சியமாக்கப்பட்டதிலிருந்து நமது செல்வாக்கு அனுதினமும் பெருகிக்கொண்டே வருகிறது. இதைக் காணும் சில பொறாமைக்காரர்களும், மேதாவிகள் என்று தம்மை நினைத்துக்கொண்டிருக்கும் சில புத்திசாலிகளும் நம்மீது ஏதேதோ குற்றங் குறை கூறி வருகிறார்கள். நம் கழகத்தைப் பின்பற்றி நடந்துவருபவர்களை, இவர்கள் பைத்தியக் காரர்கள் என்றுகூடக் கருதிவருகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் என்னைப்

பின்பற்றி நடந்துவருபவர்கள் புத்திசாலிகளாய் இருக்கவேண்டுமென்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. தங்கள் அறிவை ஆற்றலை மறந்து, என் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய ஆட்கள்தாம் எனக்குத் தேவையே ஒழிய, அவர்கள் புத்திசாலிகளா, முட்டாள்களா, பைத்தியக்காரர்களா, கெட்டிக்காரர்களா என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மதிப்பிற்குரிய நண்பர் மாணிக்க நாயகர் அவர்கள் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அவர் ஈரோட்டில் 'எக்ஸிகியூட்டிவ் என்ஜினீயராய்' இருந்தபோது அவர் எங்கள் வீட்டில் குடியிருந்தார். மாடுகளுக்குச் சுலபமாய் இருக்கக்கூடிய பதுமாதிரியான கவலை ஒன்று செய்யத் தனக்கு இரண்டு கொல்லர்களைத் தருவித்துக்கொடுக்கும்படி சொன்னார். நான் யோசித்து இரண்டு கெட்டிக்காரக் கொல்லர்களின், அதாவது துப்பாக்கி செய்யக்கூடியவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களை அழைத்துவரும்படி என் காரியஸ்தர்களுக்குக் கூறினேன். அப்போது அவர் சொன்னார், 'Brother, கெட்டிக்காரன் என்பவர்களை அனுப்பிவைப்பாயானால், அவர்கள் இருவருக்குள்ளும்—கெட்டிக்காரத்தனப் போட்டி வேலையைக் கெடுத்துவிடும். அவர்களே எனக்கு யோசனை சொல்ல முந்துவார்கள். என் திட்டம் ஆட்டம் கொடுத்து வேலை நடவாது. ஆகவே, நான் சொல்வதைப் புரிந்துகொண்டு, அதன்படி வேலை செய்யக்கூடிய ஒரு படிமானமுள்ள—சொன்னபடி நடக்கக்கூடிய, சம்மட்டியும் சுத்தியும் பிடித்துப் பழகிய இரண்டு ஆளை அனுப்பிவைத்தால் போதுமானது. அவர்கள் முட்டாள்களாயிருந்தாலும் சரி; அவர்களைக் கொண்டு சுலபத்தில் வேலையை முடித்துக்கொள்ளலாம்' என்று கூறினார். புத்திசாலிகள் சண்டையிட்டுக் கொள்வது எப்பொழுதுமே இயற்கைதான். ஆகவேதான், நான் நீடாமங்கலம் மாநாட்டின்போதே மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறேன்: 'என்னைப் பின்பற்றுபவர்கள் தங்கள் சொந்தப் பகுத்தறிவைக்கூடக் கொஞ்சம் தியாகம் செய்யவேண்டும்' என்று. யாராவது ஒருவன்தான் 'நடத்தக்கூடியவனாக' இருக்க முடியுமே தவிர, எல்லோருமே தலைவர்களாக இருக்க முடியாது. மற்றவர்கள், தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்க வேண்டியவர்கள்தாம். தோழர்களே! நான் இப்போது கூறுகிறேன்; நீடாமங்கலத்தைவிட ஒரு படி மேல் சொல்லுகிறேன்—கண்மூடிப் பின்பற்றுங்கள்!

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவைமட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சி என்பதைக்கூட நீங்கள் கொஞ்சம் மூட்டைகட்டி வைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேருமுன்பு உங்கள் பகுத்தறிவுகொண்டு, கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம்; உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்று நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆற அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம். ஆனால், எப்போது உங்கள் மனச்சாட்சியும், பகுத்தறிவும் இடங்கொடுத்து—கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்போதிலிருந்தே உங்கள் பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, கழகக் கோட்பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான் முறை.

ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து 'அந்தப் பெட்டியைக் கொஞ்சம் எடப்பா' என்று கூறினால் 'என் மனச்சாட்சி என்னை அதற்கு அனுமதிக்கவில்லையே' என்று கூறினால்—அது முறையாகுமா? ஒரு டிஸ்டிரிக்ட் சூபரின்டென்டென்ட் 'சுடு!' என்று போலீஸ்காரனுக்கு உத்தரவுபோட, அவன், 'என் மனச்சாட்சி அதற்கு இடங்கொடுக்கவில்லையே' என்று கூறினால் அந்த சூபரின்டென்டென்ட் கதி என்ன ஆவது? கசாப்புக் கடையில் வேலைபார்க்க ஒப்புக்கொண்டவன், 'அந்த ஆட்டை வெட்டுடா' என்று எஜமான் உத்தரவிடும்போது, 'அய்யோ, என் மனச்சாட்சி மாட்டேன் என்கிறதே, நான் என்ன

செய்யட்டும்!" என்று கூறினால், 'ஏண்டா, மடப் பயலே முன்னாடியே உனக்கு இது தெரியாமற் போனதென்னடா? அப்போது உன் மனச்சாட்சி எங்கேயடா போயிருந்தது?' என்று கேட்பானா இல்லையா, அவன்? ஆகவே மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ, கழகக் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுக்குமானால் உடனே விலகிக்கொள்வதுதான் முறையே ஒழிய உள்ளிருந்துகொண்டே குதர்க்கம் பேசித்திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறேன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்குச் சர்வாதிகாரம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தோழர்களே! சிந்திக்கவேண்டும், இந்த சர்வாதிகாரம் எதற்குப் பயன்படுகிறது என்று. என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக இலட்சியத்தின் வெற்றிக்காக, பொதுநன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே தவிர, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு சிறு கடுகளவாவது சொந்த நன்மைக்காகவோ, பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன். என் சொந்த விளம்பரத்திற்காக, என் சொந்தப் பெருமைக்காக இதுபோன்ற மாநாடுகள் கூட்டப்படு கின்றன என்று சிலர் கருதுவதற்கொப்ப, இம்மேடையின்கண் பேசநேரும் தோழர்களும் என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலேயே, தமது சொற்பொழிவுக்குக் கொடுக்கப்படும் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவுசெய்கிறார்கள். இதை நான் அறவே வெறுக்கின்றேன்; சிறிதும் விரும்பவில்லை. ஆகவே, சொற்பொழிவாளர்கள் என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாநாட்டிற்குப்பின் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் முதன்மையாகப் பேசப்படவேண்டியது காந்தியாரின் மறைவைக் குறித்தாகும். காந்தியார் உயிரோடிருந்த வரை அவருடைய போக்கைப் பெரும் அளவுக்குக் கண்டித்துவந்த எனக்கு காந்தியார் மறைவுக்குத் துக்கப்படவோ, அவரது மறைவுக்குப்பின் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசவோ என்ன உரிமை உண்டென்று சிலர் கேட்கலாம். சிலர், காங்கிரஸ்காரரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொள்ளவே நான் இவ்விதம் சூழ்ச்சி செய்வதாகவும் கருதி இருக்கலாம். ஆனால், தோழர்களே! இவை உண்மையல்ல. காந்தியார் மறைவுக் காக எந்தக் காங்கிரஸ்காரர் துக்கப்பட்டார்? அழுதார்? வேதனைப்பட்டார்கள்? காங்கிரஸ் காரர்கள் பண்டிகை கொண்டாடினார்கள்; காங்கிரஸ் முக்கியஸ்தராக இருந்த பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கினார்கள். எனக்கு உண்மையிலேயே இப்பொழுதும் துக்கம் மேலிடுகிறது. காந்தியார் மறைவுக்கு அனுதாபப்பட, மற்றவர்களைக்காட்டிலும் அதிகத் துக்கப்பட வேறு பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, காங்கிரஸ்காரர்கள் பலரும், பார்ப்பனர்களும் கருதி இருக்கிற காந்தியார் வேறு; இறந்த காந்தியார் வேறு என்று நான் கருதுகிறேன். 'இருந்த காந்தியார் ஆரியர் காந்தியார்; ஆரியரால் உண்டாக்கப்பட்ட காந்தியார்; நம் எதிரிகளின் காந்தியார். ஆனால் 'இறந்த காந்தியார்' நம் காந்தியார்; ஆரியம் அழிந்துவிடுமே எனப் பயந்து ஆரியரால் கொல்லப்பட்ட கொலையுண்ட காந்தியார். அதனால்தான், நாம் மற்றவர்களுக்கும் மேலாகத் துக்கப்படுகிறோம். அதனால்தான் மற்றவர்களைவிட நமக்குத்தான் அவர் மறைவுக்காகத் துக்கப்படவும் உரிமை உண்டு என்றும் கூறிக்கொள்கிறோம். ஒருவர் தம் மறைவு காலத்தில் எந்த நிலையில் இருக்கிறாரோ அதைப் பொறுத்துத்தான் அவருடைய மறைவுக்குத் துக்கப்படுபவர்களும், சந்தோஷப்படுபவர்களும் அமைவார்கள். உதாரணமாக நான், 'காங்கிரஸ் இராமசாமி' யாக ஒரு காலத்திலும், 'சுயமரியாதை இராமசாமியாக' ஒரு காலத்திலும், 'திராவிடர் கழக இராமசாமியாக' தற்காலத்திலும் இருந்துவருகிறேன். காங்கிரஸ் இராமசாமியாக இருந்த காலத்தில் இறந்திருந்தால் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் உள்பட, 'இந்து' ஆசிரியர் உள்பட பல காங்கிரஸ்காரர்களும், அய்யர், அய்யங்காரர்களும் துக்கம் கொண்டாடி யிருப்பார்கள். ஒரு சில சுயமரியாதைக்காரப் பார்ப்பனர் தவிர்த்து மற்ற பார்ப்பனர்கள்,

வைதீகர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டபடி இருப்பார்கள். ஆனால், இன்று மறைய நேர்ந்தாலோ திராவிடர்கள் அனைவரும் துக்கம் கொண்டாடலாம் என்று கருதுகிறேன்.

இதேபோல், காந்தியாரும் தம் மறைவின்போது திராவிடர் கழகக் கொள்கைகளை ஒப்புக்கொண்ட காந்தியாராகத்தான் இறந்தாரே ஒழிய, ஆரியதர்மத்தை ஒப்புக்கொண்ட காந்தியாராக மறையவில்லை. இந்து மத தர்ம அநீதியைக் கண்டிக்கப் புகுந்ததால், அதற்கான பயனை அடைந்தார். 'சூத்திரன் தலையெடுத்தால் பார்ப்பானுக்கு ஆபத்து' என்ற மனுதர்ம விதிப்படி, அவர் பார்ப்பனனால் கொல்லப்பட்டார். இராமாயணக் கதையில் சம்புகன் அடைந்த கதியை அவர் அடைந்தார். சம்புகன் கொல்லப்பட்டதற்கு ஆரியப் பார்ப்பனர்கள் அகமகிழ்ந்ததாக—இறந்த பார்ப்பனர்களெல்லாம் உயிர்த்தெழுந்ததாகக் கதையில் காணப்படுகிறது. காந்தியார் கொல்லப்பட்டமைக்குப் பார்ப்பனர்கள் மிட்டாய் வழங்கியதை நாம் நேராகப் பார்த்தோம். காந்தியார் மறைவுக்குப் பார்ப்பனர்களே காரணம் என்று வடநாட்டில் பார்ப்பனர்களின் வீடுகள் சூறையாடப்பட்டதையும், பார்ப்பனத் தாய்மார்கள் அவமானப் படுத்தப்பட்டதையும், பார்ப்பனர்கள் தங்க இடம் இன்றி ஓடித் தவித்ததையும் நாம் பத்திரிக்கையில் பார்த்தோம். அதற்கு நஷ்டஈடாக பம்பாய் மாகாண சர்க்கார் ஒவ்வொரு பார்ப்பனனுக்கும் ரூ. 2000 இனாமாகவும் ரூ. 25,000/- வரை ரொக்கக் கடனும் கொடுத்துதவியதாகவும் நாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். இங்கு பார்ப்பனர்களுக்கு அத்தகைய கேடு நேரவில்லை. இதற்கு நம் கழகம்தான் காரணமே யொழிய காந்தியார் மறைவுக்குத் துக்கப்படுபவர் இந்நாட்டில் இல்லாமல் போனதால் அல்ல.

இதை அறியாத பார்ப்பனர்கள் ஆணவத்தோடு அந்தணர் மாநாட்டைக் கூட்டி நமக்குச் சவால் விடுகிறார்கள். இந்தப் பார்ப்பனர்களை இன்றுமட்டுமல்ல, என்றுமே காப்பாற்றி வருபவர்கள் நாம்தாம். இந் நாட்டிலிருந்து பார்ப்பனர்களை அறவே ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த (ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியில்) ஒரு காலத்தில் பார்ப்பனர்கள் தெருவில் வரக்கூடிய யோக்கியதையற்றுக் கிடந்தார்கள். அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியை இருந்த இடம் தெரியாமல் ஒழிக்க நான் தேசியத்திற்கு முதல் அடிமையானேன். தோழர் பி. வரதராஜுலு நாயுடு அடுத்த அடிமையானார். தோழர் கலியாணசுந்தர முதலியார் மூன்றாவது அடிமையானார். இராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனுவாசய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்களுக்கு மேடையில் இடம் வாங்கிக் கொடுத்தவர்களும், அவர்களுக்குத் தமிழ் பேசக் கற்றுக்கொடுத்தவர்களும் நாங்கள்தாம்.

அக் காலத்தில் தோழர் இராஜகோபாலாச்சாரியார் 'வீடு பிரித்துப்போட்டுக் கிடக்கு' என்று கூறுவார். சத்தியமூர்த்தி அய்யருக்கு–நேக்கு, நோக்கு, அம்மாஞ்சி, அம்மாமி, அவா இவா–இவை தவிர வேறு தமிழ் வார்த்தைகள் பேசத் தெரியாது. ரெங்கசாமி அய்யங்கார், டாக்டர் இராஜன், 'சுதேசமித்திரன்' ஆசிரியர்கள் ஒரு சிலர் தவிர்த்து அந்தக் காலத்தில் பார்ப்பனர்களில் தமிழ் பேச ஆள் கிடையாது. கூட்டத்தில் பார்ப்பனர்களுக்குப் பேச உரிமை வாங்கிக் கொடுத்தவர்களும் அவர்களுக்குத் தியாகம் செய்ய (ஜெயிலுக்குப்போக)க் கற்றுக்கொடுத்தவர்களும் நாங்கள்தாம். இராஜகோபாலாச்சாரியாரை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள், இது உண்மையா, அல்லவா என்று! அவர் நாளை கவர்னர் ஜெனரலாகப் போகிறார்; என்னையும் காண்பார்; கண்டால் வெட்கப்படப்போகிறார். கட்டியழப் போகிறார். 'நான் இப்படியானேன்; நீ அப்படியே இருக்கிறாயே' என்று கேட்பார். நாங்கள் இல்லாதிருந்தால் இந்த நாட்டில் இராஜகோபாலாச்சாரி ஏது? கவர்னர் ஜெனரல் பதவிதான் ஏது? சர்வம் பார்ப்பனீய சுயராஜ்யம் ஏது? பெற்ற பதவியில் நான் பங்கு கேட்கவில்லை.

உங்களுக்குச் சுயராஜ்யம் வந்துவிட்டது; பதவி வகிக்கிறீர்கள் என்றால் எங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லக்கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக்கூடாது? சுய

ராஜ்யம் வந்துவிட்டதென்றால் சுயராஜ்யத்தில் பதவி வகிக்க நேர்ந்த சுயராஜ்யப் புலிகள் மற்றவர்களை ஆடுகளைப்போல் கொன்று அழித்துத்தான் தீரவேண்டுமா? கொள்ளைக் காரர்களும் வஞ்சகர்களும், காலிகளும் எப்போதும்போல் சாதுக்களை, யோக்கியர்களை ஏழைகளை வஞ்சிக்கத்தான், கொள்ளை அடித்துத்தான் வாழ்ந்துவர வேண்டுமா? சுய ராஜ்ய சர்க்கார் இதைத் தடைசெய்ய வேண்டாமா? சுயராஜ்ய சர்க்காரில் ஏழைகள்தாம் அதிக வரி செலுத்தவேண்டுமா? சுயராஜ்யம் வந்து ஏழைகள் பட்டினி கிடக்கவேண்டுமா? சுயராஜ்யம் வந்துவிட்டதென்றால் ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு $\frac{3}{4}$ படியும், ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு $2\frac{1}{2}$ படியுமா விற்பது? உண்மையாகக் கூறுகிறேன், தோழர்களே உங்களுக்கும் கேட்க அதிசயமாயிருக்கும்.

நமது மாநாட்டிற்குத் தேவையான அரிசியை விலை சரசமாயுள்ள (அதாவது ரூபாய்க்கு $2\frac{1}{2}$ படி விலையுள்ள) தஞ்சை ஜில்லாவிலே வாங்கிக்கொள்ள அனுமதி தரவேண்டுமென்று மந்திரியாருக்கு விண்ணப்பித்துக் கொண்டோம். அதற்கு மந்திரியார் பதில் எழுதியிருக்கிறார்: இந்த மாகாணத்தில் இந்த ஒரு ஜில்லாவில்தான் நெல் அதிகமாக விளைந்துவிட்டது. ஆகவே, அந்த அரிசியை வாங்கிக்கொள்ள உங்களுக்கு அனுமதி கொடுக்க மாட்டோம்; வேறு எந்த ஜில்லாவில் வேண்டுமானாலும் 50 மூட்டை வரைக்கும் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று எழுதியிருக்கிறார். அதிகமாக விளைந்துள்ள ஊரில் நெல்லும் அரிசியும் மக்கிப் புழுக்கவேண்டுமாம்! பற்றாக்குறை ஜில்லாவில் மேலும் அரிசி வாங்கி, மேலும் அந்த ஊரில் பஞ்சத்தை அதிகமாக்க வேண்டுமா? சுயராஜ்ய சர்க்காரின் புத்தி சாலித்தனத்திற்கு இதை விடச் சான்று ஒன்று வேண்டுமா? எவ்வளவு கவலையற்ற முறையில், அறிவற்ற முறையில் சுயராஜ்ய ஆட்சி நடப்பது? சுயராஜ்ய ஆட்சியில் 'கள்ள மார்க்கெட்' கொள்ளைக்கும், இலஞ்சத்திற்கும் ஒரு அளவே காணோம்! பணத்திற்கு மிஞ்சிய மோகினியைக் காண முடியவில்லையே? எதையும் பணம் கொடுத்துச் சாதித்துக் கொள்ள முடிகிறதே! மந்திரிகளே பணக்காரன் காலடியில் வீழ்ந்துகிடக்கிறார்களே! பணக்கார முதலாளிகளுக்குச் சாதகமாக, தொழிலாளிகளுக்குக் கூடுமான அளவுக்குத் தொல்லை கொடுக்கிறார்களே! இந்தக் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதுகூட குற்றமாகக் கருதப்படுமானால், ஆட்சி என்று ஒன்று இருக்கவேண்டுமா? நேற்று முளைத்த காளான்கள் தானே நீங்கள்? அதன் தன்மையை நீங்கள் அறியாமற் போனதேனோ? காளான்கள் வெயிலில் கருகிப்போகும்; மழை பெய்தால் துளிர்க்கும். அதுபோல், இந்த சுயராஜ்ய காலம் உங்களுக்கு மழைக்காலமாயிருக்கிறது; நீங்கள் துள்ளிக் குதிக்கிறீர்கள். நாளை மக்கள் அறிவு பெற்றெழுவார்களானால் (வெயிற்காலம் வருமானால்) நீங்கள் காளான்களைப்போல் கருகவேண்டியவர்கள்தாமே? இதைச் சிந்திக்க வேண்டாமா, நீங்கள்? ஒரு காமராசரோ, ஒரு வைத்தியநாதய்யரோ, ஒரு டாக்டர் இராஜனோ எங்களைவிட எப்படி எந்தக் காரியத்தில் தகுதி பெற்றவர்கள்?

நாங்கள் நம்பிக்கைக் குறைவாக நடந்து கொண்டதாக ஒரு உதாரணமாவது உங்களால் காட்டமுடியுமா? உங்களிடம் பண்டிதர்களும், பி. ஏ.க்களும், எம். ஏ.க்களும் இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் பெருமையடித்துக் கொள்ளலாம். என்றாலும், நேற்றுப் பள்ளியைவிட்டு வந்து எங்கள் கழகத்தில் சேர்ந்து ஒரு 10 நாளைக்குக் கறுப்புச் சட்டை போட்டுக்கொண்டிருந்த மாணவர்களுள் ஒருவனுக்குப் பதில் சொல்லமுடியவில்லையே உங்களால்! அவன் கூறுவானே பதில்—நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும்! உங்கள் பெரிய பெரிய தலைவர்கள் பேச வந்தால்கூட ஒரு 2, 3, ஆயிரம் பேரைக் கூட்ட முடியவில்லையே! எங்கள் கழக மாணவன் ஒருவன் பேசுவதாயினும்கூட ஆயிரக்கணக்கில் கூட்டம் சேர்ந்துவிடுகிறதே! ஒரு கறுப்புச் சட்டைக்காரனைத் தொலைவில் பார்த்தால்கூட உங்கள் தலைவர்கள் கூட்டத்தை முடித்துக்கொண்டு ஓடி விடுகிறார்களே! இதன் அர்த்தம் என்ன?

வரப்போகிற அரசியல் சட்டம் எப்படி இருக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லக் கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக்கூடாது? எங்கள் உரிமையை எத்தனை நாள் மறுத்து வரமுடியும்? வெடிகுண்டை மூடிவைத்தால் அது எத்தனை நாளைக்கு வெடிக் காமல் இருக்கும்? நீங்கள் மூடிவைக்க மூடிவைக்க எங்களுக்கு எங்கிருந்தோ ஆதரவு வந்து கொண்டிருக்கிறதே! மராத்தி தேசத்திலிருந்து ஆதரவு வருகிறது; ஹைதராபாத்தி லிருந்து ஆதரவு வருகிறது; இன்னும் எங்கெங்கிருந்தெல்லாமோ ஆதரவு வந்துகொண்டி ருக்கிறதே! திராவிட நாட்டுப் பிரிவினைக்குத் தம் கழுத்தைக் கொடுக்க மக்கள் வரக் காத்திருக்கிறார்களே! இப்படி இருக்க, மக்கள் ஆதரவில்லையென்று எத்தனை நாளைக்கு எங்கள் கோரிக்கையைத் தட்டிக்கழித்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்.

[தூத்துக்குடியில் 8, 9-5-1948-ல் நடந்த மாகாண மாநாட்டில் தலைமையுரை—'விடுதலை' 18–5–1948]

13. இது சுதந்திர நாடா?

தோழர்களே!

சுதந்திரம் பெற்றுள்ள எந்த நாட்டிலாவது—இன்று பார்ப்பான், பறையன் இருக்க நீங்கள் பார்க்கிறீர்களா? வரலாற்று ஏடுகளிலாவது கண்டிருக்கிறீர்களா? மேல்சாதி முறையும், கீழ்சாதி முறையும், மடையர்களும், முட்டாள்களும், மான ஈனமற்ற மக்களும், காட்டுமிராண்டிக் கால மக்களும், மிருகப் பிராய மக்களும் வாழும் நாடுகளிலன்றோ இவை இருக்கக் கடமைப்பட்டவை! அப்படி இருக்க, இந்த சுயராஜ்ய பூமியில், இந்தப் புண்ணிய பூமியில், இந்த ஞானபூமியில், பாரதமாதாவின் கை விலங்கும் கால் விலங்கும் அறுக்கப் பட்டு அவள் ஆனந்தக் கூத்தாடும் இந்தக் காலத்தில் என்னத்துக்காகப் பறையன் இன்னும் இருக்கின்றான்? என்னத்துக்காகப் பார்ப்பான் இருக்கின்றான்?

வெள்ளையன் ஒழிந்ததுபோல் வடநாட்டானும் ஒழியவேண்டாமா, இந்நாட்டை விட்டு? இந் நாட்டிற்குச் சுதந்திரம் வந்துள்ளது உண்மையாயின் எதற்காக ஒரு 'இமய மலைப் பார்ப்பான்'—ஒரு வடநாட்டவன் எங்கள் நாட்டிற்குப் பிரதம மந்திரியாயிருக்க வேண்டும்? எதற்காக வடநாட்டவர்கள் இங்கிருந்து நம்மைச் சுரண்டிவர வேண்டும்? கேட்பாரில்லையே இத் தமிழ் நாட்டில்! எதற்காக 23 ஜில்லாக்களையும் 1500 மைல் சமுத்திரக் கரையையும், ஏராளமான நன்செய், புன்செய்களையும் ஆறுகளையும், ஏரி குளங்கள் வாய்க்கால்களையும், எண்ணிறந்த சுரங்கங்களையும் கொண்ட நம் நாடு—அன்னிய, வடநாட்டவனுக்கு ஆட்பட்டிருக்க வேண்டும்? எதற்காக இந் நாட்டை வட நாட்டவன் ஆதிக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டு, இந் நாட்டவர்கள் அவர்களின் சிப்பந்தி களாக, ஏவலாட்களாகப் பணியாற்றிவர வேண்டும்? வேறு சுதந்திரம் பெற்ற நாடுகளைப் பார்த்தாயினும் உங்களுக்குப் புத்தி வரக்கூடாதா?

பர்மாவைப் பாருங்கள்! பர்மா நம் நாட்டைவிட எவ்வளவு சிறிய நாடு! அதற்குள்ள வசதிகள் நமக்குள்ள வசதிகளைவிட எவ்வளவு குறைந்தவை; அங்குள்ள மக்களின் அறிவு வசதிகூட, நம் மக்களின் அறிவு வசதியைவிட எவ்வளவோ குறைந்ததாயிற்றே! அப்படி யிருந்தும், அவர்கள் இன்று சுதந்திரமாக வாழவில்லையா? சுதந்திரம் வந்ததும் 'பர்மாக் காரன் அல்லாத மற்ற நாட்டவனுக்கு இங்கென்ன வேலை?' என்று அவர்கள் கேட்க ஆரம்பித்துவிடவில்லையா? பர்மாவில் ஏராளமான சொத்துக்கள், நிலபுலன்கள் வைத்திருந்த எத்தனையோ பணக்காரர்களின் தலைகளெல்லாம் பனங்காய்களைப் போல் உருளவில்லையா? 'தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று சிலர் ஓடிவந்துவிட வில்லையா? இன்று 1000 ரூபாய் மாதச் சம்பளத்திற்குக்கூட ஆள் கிடைக்காமல் நம் செட்டிப் பிள்ளைகள் திணறவில்லையா? அந்நாட்டில் சுமார் 2 கோடி பெறுமான சொத்துள்ள இராஜா முத்தையா செட்டியார்—இன்று ஏஜெண்டாக அனுப்பிவைக்க ஆளில்லாமல் திணறுகிறாராமே: தலைகொடுக்கத் தயாராயிருந்தாலொழிய, அந்நாட்டிற்குச்

செல்லமுடியாது என்கின்ற நிலை இன்று ஏற்பட்டுவிடவில்லையா? 'பர்மா நாட்டுப்பூமி இன்று ஏன் வேறு நாட்டவனுக்குச் சொந்தமாயிருக்க வேண்டும்? உடனே பறிமுதல் செய்ய வேண்டும்' என்று பர்மா சர்க்கார் தீர்மானம் கொண்டு வரவில்லையா? சுதந்திரம் பெற்ற நாடுகளிலெல்லாம் அந்நாட்டு மக்களைத் தவிர்த்த அன்னியர்கள் துரத்தப்பட்டு வரும்போது—சுதந்திரம் பெற்றதாகக் கருதப்பட்டுவரும் திராவிட நாட்டில் மட்டும் அன்னிய ஆரியர்கள் கோலாகலமாகக் கும்மாளம் அடித்துவரவும், மேலும் மேலும் வடநாட்டவர்கள் குடியேறிக்கொண்டே வரவும் அனுமதிக்கப்பட்டு வருவானேன்?

சுயராஜ்யம் வந்தாலும் வந்தது—இந்நாட்டில், இதுவரை இல்லாதவர்களெல்லாம் வந்து புதிது புதிதாகக் குடியேறுகிறார்களே! மவுண்ட் ரோடிலுள்ள பெரிய பெரிய கட்டடங்களெல்லாம் வடநாட்டவர்களுடையதாக ஆகிவருகின்றனவே! வியாபாரம், கைத்தொழில் இவைகள்—யார் கையில்? இந்நாட்டு வியாபாரமும் கைத்தொழிலும் பெரும்பாலும் வடநாட்டவர்களின் கையில்தானே இன்று இருந்துவருகின்றன?

இன்னுங்கூட ஒன்று சொல்லலாம். அது வெட்கப்படத்தக்கதுதான் என்றாலும், உண்மையை மறைப்பானேன்? சில ஊர்களிலெல்லாம் விபசாரித்தனம் வடநாட்டவர் கைக்குச் சென்றுவிட்டதாமே! ஒரு முக்கிய நகரத்தில் மாலைக் கடைத்தெரு வழியே நான் போய்க்கொண்டிருந்தபோது வடநாட்டுடையணிந்த பெண்கள் கூட்டங் கூட்டமாக வரக் கண்டு—'இவர்கள் யார்?' என்று பக்கத்திலிருந்த அவ்வூர்த் தோழரைக் கேட்டேன். அவர், 'இவர்கள் வடநாட்டிலிருந்து வந்த அகதிகள்; இவர்கள்தான் இப்போது இவ்வூர் விபச்சாரத் தொழிலை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்' என்று தெரிவித்தார். கடைத்தெருவுக்கு வந்திருந்த அத்தனை பேர்களும் விபச்சாரிகளாக இருக்கமாட்டார்கள் என்பது உண்மை என்றாலும், இதற்காகவே அகதிகளாக வடநாட்டவர்கள் இந்நாட்டிற்கு வருவதென்றால் இது கேவலம் அல்லவா; வருந்தத்தக்கது அல்லவா?

இந் நாட்டுக் காப்பிக் கடைகளெல்லாம் சேட்டுகளுடையவை. இந் நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் பெரும்பாலும் வடநாட்டவருடையவை. ஒரு கோயங்காவுக்கு மட்டும் இந்நாட்டில் 50 இலட்சம், 60 இலட்சம் ரூபாய் சொத்து; இரும்பு வேண்டுமானால் அவருக்குத்தான் கிடைக்கும்; 'நியூஸ் பிரிண்ட்' வேண்டுமானால் அவருக்குத்தான் கிடைக்கும் என்கின்ற நிலை; பத்திரிகைக்காரர்களின் பிரதிநிதியாக அவர் அமெரிக்கா சென்று அவ்விடத்து வியாபாரிகளிடம் 'கான்ட்ராக்ட்' பேசிக்கொண்டு வந்துவிட்டார். அவரது தேவைக்கு மேற்பட்ட பேப்பரை எல்லாம் பவுண்டு ஒன்றுக்கு இரண்டணா இலாபம்வைத்து விற்று வேண்டுமானாலும் சம்பாதிக்கட்டும். சம்பாதிக்கும் பணத்தை இந் நாட்டிலாவது விட்டுவைக்க வேண்டாமா? கோயங்கா சம்பாதிக்கும் பணம் இந்த நாட்டில் இருக்க இயலுமா? வடநாட்டிற்கன்றோ ஆண்டுதோறும் ஏற்றுமதியாகிவிடும்! இந்த நாட்டில் என்ன, செல்வவான்கள் இல்லையா, இந்தத் தொழிலை நடத்த! பர்மிட் கிடைத்தால்தானே, இந் நாட்டவர்களுக்கு?

பரம்பரை யோக்கியர்கள் மாதிரி—இந்த நாட்டுப் பார்ப்பனர்களும் காங்கிரஸ் காரர்களும்—வெள்ளையனை அயோக்கியன் என்று தூற்றினர். அவர்கள் அயோக்கியர்களா யிருந்தாலும் 'கான்ட்ராக்ட்' கொடுப்பதாயிருந்தாலும், பர்மிட்டோ, லைசென்சோ கொடுப்பதாயிருந்தாலும்—சட்டம் செய்யும் போது, அதில், எப்போதும் பரம்பரையாகத் தொழில் நடத்தி உரிமை பெற்றவர்களுக்குத்தான் பர்மிட் வழங்கப்படும் என்று ஒரு வரியும் சேர்த்து எழுதி விடுவான். அதனால், அவன் காலத்தில் கூடுமான அளவுக்குப் பரம்பரை வியாபாரிகளுக்குத்தான் புது லைசென்ஸ் கிடைத்து வந்தது. ஆனால், சுயராஜ்ய சர்க்காரிலோ, சர்க்காரில் செல்வாக்குள்ள எவனுக்கும்—சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வசப் படுத்தக்கூடிய சாமார்த்தியமுடைய எவனுக்கும்—லைசென்சும் பர்மிட்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

புதிதாக வழங்கப்படும் நூல் லைசென்சுகளில் 100-க்கு 25 விகிதமாவது காங்கிரஸ் காரர்களுக்கு ஒதுக்கித் தரப்படவேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட்டுள்ளதாம். 'ஜவுளி லைசென்சு'கள் அந்த வட்டார சட்டசபை மெம்பர்களின் சிபாரிசுகளின் பேரிலேயே கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறதாம். உணவு நிலையை எடுத்துக் கொண்டாலோ, வெள்ளையன் காலத்தில் நமக்குக் கிடைத்தது 16 அவுன்ஸ், 12 அவுன்ஸ்; சுயராஜ்ய காலத்தில் கிடைப்பது 6 அவுன்ஸ். ஏனய்யா குறைந்து விட்டது ? பூமியைத் தண்ணீர் கொண்டு போய் விட்டதா ? அல்லது, ஜனத் தொகையாவது ஒன்றிரண்டு ஆகப் பெருகிவிட்டதா ? என்றால், 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது—இத்தனை ஜனங்கள் இருக்கிறார்கள். இவ்வளவு தானியம் விளைகின்றது; எனவே இவ்வளவுதான் ஆளொன்றுக்குக் கொடுக்க முடியும்' என்கிறார்கள்.

உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு மக்களைப் பற்றிய கவலை இருக்குமானால், இப்படி வாளாயிருக்குமா ? எப்படி இந்தக் குறையைச் சரிக் கட்டுவது என்று யோசித்து ஏதாவது முடிவு செய்திருக்காதா ? இக் குறைவு ஏற்பட நேர்ந்ததன் காரணம் கூட நாம் சொல்கிற வரையில், இந்த சர்க்காருக்குத் தெரியாமல் போய் விட்டதே ! உணவு தானியங்களுக்கு சர்க்காரால் தீர்மானிக்கப்பட்ட விலை மிகக் குறைவாக இருந்ததால் குடியானவர்கள் நெல், கேழ்வரகு, போன்ற தானியங்களை விளைவிப்பதை விட்டு விட்டு, கரும்பும் புகையிலையும் கடலையும் உற்பத்தி செய்யத் துவங்கி விட்டார்கள். ஆகவே, நெல் சாகுபடி வெகுவாகக் குறைந்து விட்டது என்று நாங்கள்தான் காரணம் காட்டினோம். நெல்லுக்குப் பஞ்சம் ஏற்படவே ஆங்காங்குள்ள காங்கிரஸ்காரர்கள் 4000 மூட்டை, 5000 மூட்டை சேமித்து வைத்துக்கொண்டு கள்ள மார்க்கெட்டில் விற்று, ஏராளமான பொருள் சேர்த்துக்கொண்டனர். அப்படிப் பட்டவர்கள் மீது புகார் கிடைத்து, அவர்களை ரேஷன் உத்தியோகஸ்தர்கள் கையுங் களவுமாய்ப் பிடித்தாலும், அந்த உத்தியோகஸ்தர்களுக்குத் தான் ஊர் மாற்றம் கிடைக்குமே தவிர—கள்ள மார்க்கெட்கார காங்கிரஸ் பேர்வழி தண்டனைக்குள்ளாக்கப் படமாட்டார்.

இவ்வளவு நாதியற்ற முறையில் ஆட்சி நடை பெற்று வருகிறது. முன்பு நீதிக் கட்சியார் ஆட்சி செய்தபோது எங்காவது ஓரிருவர் நாமினேஷன் செய்யப்பட்டால், 'ஜனநாயகம் சாகடிக்கப்படுகிறது; கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள தம் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்' என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் கூச்சல் போட்டார்கள். இன்றோ ஆங்காங்குள்ள சட்டசபை மெம்பர்களே 'ஜில்லா போர்டு' மெம்பர்களாக வேலை பார்க்கலாம் என்று கூற முன்வந்து விட்டனர். இப்படியெல்லாம் படுமோசம், பித்தலாட்டம் செய்துவரும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, பார்ப்பன-பனியா-ஆரிய ஆட்சி, நமக்கு நன்மை செய்யாது என்பதால்தான், திராவிட மக்கள் யாவரும் இன உணர்ச்சி பெற்றுநெழுந்து எப்படியும் காங்கிரஸ் ஆட்சி ஒழிய, வடநாட்டான் ஆட்சி ஒழியப் பாடுபட வேண்டுமென்று நாம் கூறி வருகிறோம்.

நம் மக்களைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாத ஒரு ஆட்சியிலிருந்து நாம் பிரிந்து கொள்ள வேண்டுமானால் அது எப்படிப் பாவமாகிவிடும் ? 'இந்தியாவைத் துண்டு போடலாமா ?' என்றால்—'நாம் இந்தியாவுடன் இணைந்திருந்து, பட்டினியால் வாடிச் சாகலாமா ?' என்றுதான் திருப்பிக் கேட்க வேண்டியிருக்கிறது. நமக்குப் போதிய அளவுக்குச் சோறுபோட வக்கில்லாத மந்திரிகள்—பொழுது விடிந்தால், பொழுது முடிந்தால் நம்முடைய முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் முறைகளிலேயே பேசித் திரிகிறார்களே, ஏன் ?

[சென்னை அயன்புரத்தில், 16-10-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-10-1948]

14. திராவிடரே ஒன்றுபடுவீர்!

பெரியோர்களே! தோழர்களே!

காங்கிரஸ் மிகவும் கெட்டுப்போய்விட்ட காரணத்தால்தான் திரு. வி. க. அவர்கள் தமக்கு எவ்வளவுதான் அதன்மீது பற்றுதல் இருந்தபோதிலும்—தாம் கண்ணீர்விட்டு வளர்த்த காங்கிரஸ் என்று பெருமையோடு கூறிக்கொண்டிருந்த போதிலும்—இன்னமும் கதரே கட்டிக்கொண்டிருக்கின்ற போதிலும் அந்தப் 'பாசிச'க் காங்கிரசை ஒழிப்பதே தமது பணியென்று கொண்டு, இன்று நம்மிடையில் இருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர் டாக்டர். அம்பேத்கார், 'காங்கிரஸ் எரிந்து கொண்டிருக்கும் வீடுபோன்றது' என்றும், 'விரைவில் சாம்பலாகி அழிந்துபோகக் கூடியது' என்றும் குறிப்பிட்டுவிட்டுத் தம் தோழர்களை—'அதில் சேரவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டுள்ளார். அவர் முன்னைய அம்பேத்காராயிருந்து சொல்லியிருந்தாலும், அவர் வேண்டுமென்றே சொன்னதாக நாம் தள்ளிவிடலாம். ஆனால், காங்கிரஸ் தயவால் பதவியேற்று அதை வகித்துவரும் காலத்தில்தான் அவர் இம் மாதிரி சொல்லியிருக்கிறார். எனவே, நாட்டு மக்களின் நன்மையைக் கருதி, காங்கிரசின் பிற்போக்கையும் கொடுங் கோன்மையையும் எதிர்த்து நின்று பணியாற்றிவர நமது கழகம் ஒன்றுதான் கழகமாக இருந்து பணியாற்றி வருகிறது. இதை யான் சுயநலத்திற்காகவோ தற்பெருமைக் காகவோ சொல்லவில்லை என்பது, யோசித்துப் பார்க்கும் எவருக்கும் நன்கு தெரியவரும்.

நாங்கள் பதவிக்கு வரவேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தால் காங்கிரசிலிருந்து கொண்டே சுலபத்தில் பதவி பெற்றிருக்கலாம். பெற்றிருக்கமுடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நமது மாகாண பிரதமரை நான் சந்திக்க நேர்ந்தபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நீங்களெல்லாம் எங்களை இப்படிப் பரிதவிக்கவிட்டுப் போய் விட்டீர்களே!' என்றுதான் சொன்னார். 'போகாமல் என்ன செய்வது?' என்று திருப்பிச் சொன்னேன். 'நீங்கள் காங்கிரசில் இருந்திருந்தால் நீங்களல்லவோ இந்த ஸ்தானத்தில் இருந்திருக்கவேண்டியிருக்கும்' என்றார். 'இருக்கலாம்; ஆனால், இப்போது மக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்குமா? இப்போது கேட்பதுபோல் 'திராவிட நாடு' பிரிவினை கேட்க வாய்ப்பிருந்திருக்க முடியுமா, அப்போது?' என்றேன். 'இதில் இருந்துகொண்டேகூட அதைச் செய்திருக்கலாமே!' என்றார். 'நீங்கள் நினைக்கிறீர்களா அப்படி? அது ஒருபோதும் முடியாத காரியம். நீங்கள் மனத்தால் திராவிடர்க்குச் சாதக மாக ஏதேனும் செய்யவேண்டும் என்று நினைக்கும்போதே உங்களைக் கவிழ்க்கப் பார்த்துவிட்டார்களே! அப்புறம் நான் நினைக்கிறபடி செய்வதாயிருந்தால் என்ன ஆகி யிருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்' என்றேன். ஓமாந்தூரார் சுலபத்தில் ஏமாறக் கூடியவர் அல்லர்; பதவிப் பித்துப் பிடித்தவரல்லர் என்றாலும், குறிப்பிட்ட இலட்சியத்தை முன்வைத்துக்கொண்டு அதற்காக எதையும் தியாகம் செய்யக்கூடியவர் அல்லர் அவர்.

இம் மாநாட்டில் கறுப்புச்சட்டை போடாதவர்களும் கலந்துகொள்கிறார்களே என்று சிலர் கவலைப்பட்டு எனக்குப் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். 'நான் நபர்களுக்குத் தகுந்தாற்போல் நடக்கிறேன்' என்று குறைகூறப்படுகின்றது. திரு. வி. க. அவர்கள் எனக்காக வேண்டி 22 வருடகாலமாக காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். அவர் கூறியது போல், சர். சண்முகம் அவர்கள் முன்னிலையில்—'இனி இருவரும் கலந்துபேசி முடிவுசெய்து கொள்ளாமல் காங்கிரசில் சேருவதில்லை' என்று நாங்கள் ஒப்பந்தம் செய்துகொண்ட தினத்திலிருந்து இன்றுவரை—அதன்படியேதான் நடந்துவந்திருக்கிறார். 20 ஆண்டுகளுக்கு முன் கோவை ஜஸ்டிஸ் மாநாட்டின்போது காங்கிரசில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததென்றாலும் நான் சேர ஒப்புக்கொள்ளவில்லை. சேரவேண்டும் என்று விரும்பியவர்களுக்கு மட்டும் அனுமதி அளித்தேன். அப்போது திரு. வி. க. அவர்கள், 'காங்கிரசில் சேருவது நலம்' என்றார்.

என்றாலும் நான் சேரவில்லை; சிலர் சேர்ந்தார்கள்; பிறகு விட்டுவிட்டார்கள். திரு. வி. க. அவர்கள் திராவிடர் கழகத்தின் உறுப்பினர் அல்லர்—கறுப்புச் சட்டை போடவேண்டும் என்று அவரை நிர்ப்பந்தப்படுத்த. அவர் நம்முடைய அழைப்பின்பேரில், அதுவும் பல நாள் வேண்டுகோளின்பேரில், தாம் செய்துகொள்ள வேண்டிய 'ஆபரேஷனையும்'—நமது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வேண்டி ஒத்திவைத்துவிட்டு—என்னிடமும் திராவிட நாடு பிரிவினையினிடமும் உள்ள பற்றுதலால் இவண்வந்து கலந்துகொண்டார். எனவே, அவருக்குக் கறுப்புச்சட்டை இல்லையென்று எவரேனும் குற்றம் காண்பது விசித்திரமாகவே இருக்கிறது. நாம் அவ்வளவு அனுபவ சாத்தியமற்ற பைத்தியக்காரர்களல்லர், இம் மாதிரி சில அற்பக் காரணங்களுக்காகச் சிலருடைய ஒத்துழைப்பைக் கைவிட. அன்போடும், ஆர்வத்தோடும் நம்மோடு கலந்துகொள்ள விரும்புவர்களை நாம் நிபந்தனையின்றி நம்மோடு இருக்கச் செய்துகொள்ள வேண்டியதுதான்.

திராவிடர் கழகத்தில் இருப்பவர்கள் கறுப்புச் சட்டை போடாமல் இருப்பதுதான் கண்டிக்கத் தக்கதே ஒழிய, கழகத்தில் சேர்ந்திராதவர்களைப் போட்டுக்கொள்ளும்படி வற்புறுத்துவதென்பது விரும்பத்தகாத காரியமாகும். மேலும், பெரியார் திரு. வி. க. கலந்துகொள்ளுவதால் நமது மாநாட்டிற்குத்தான் பெருமை ஏற்படுமே ஒழிய, அவருக் கொன்றும் இதனால் பெரிய பயன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. நம்முடன் கலந்து கொள்வதாகக் காட்டி, ஆட்சியாளரை மிரட்டி, ஏதாயினும் சலுகைகள் பெறவேண்டிய அவசியங்கூட இல்லாதவர் அவர்; பெண்டு பிள்ளை அற்றவர்; சாதாரண வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர். எனவே, எவ்வித ஆசையும் சுயநலமும் அற்றவர். அப்படிப் பட்டவர் நமக்கு ஆதரவு அளிக்கின்றார் என்றால், நமது இயக்கத்தின் உயர்ந்த தன்மையின் காரணமாகத்தானே ஒழிய, பேரும் பெருமையும் அடைய அல்ல என்பதைத் தோழர்கள் உணரவேண்டும்.

காங்கிரஸ் இந்நாட்டிற்குப் பெருங் கேட்டை விளைவித்துவிட்டது; மக்களிடையே ஒழுக்கம், அன்பு, மனிதத் தன்மை இவை இருக்க இடமில்லாமல் வழி செய்துவிட்டது. அகிம்சை, அகிம்சை என்று காந்தியார் கூறி வந்தது—முடிவில் கலகத்தில், காலித்தனத் தில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. அவரது இந்து—முஸ்லிம் ஒற்றுமை முயற்சி நிரந்தர வேற்றுமைக்கும், நாட்டுப் பிரிவினைக்கும் அடிப்படை போட்டுவிட்டது. அவரது தீண்டாமை ஒழிப்பு முயற்சி—பார்ப்பனர்களின் ஆணவத்தையே வளர்க்கப் பயன்பட்டுப் போய்விட்டது. காங்கிரசின் திட்டங்கள் யாவும் பெரும்பாலும் நேர்மாறான பயன்களையே அளித்துவிட்டன. ஏன்? காங்கிரஸ்காரர்கள் அத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக வகுத்துக்கொண்ட வழிகள் யாவும் குற்றமுடையனவாக அமைந்துபோய் விட்டமைதான்.

பொதுவாக 1920-லிருந்து 1948-வரை நாம் இந்நாட்டு அரசியல் சரித்திரத்தைத் தொடர்ந்து படித்துப் பார்த்தால், அரசியலில் ஈடுபட்ட தலைவர்களில் ஒருவரிடத்தாவது ஒழுக்கமோ, நாணயமோ இருந்திருக்க முடியாமல் செய்துவிட்டது என்பதைத் தீர்மான மாகக் கண்டு கொண்டு விடலாம்.

அருமைத் தோழர் இராஜகோபாலாச்சாரி முதல் குள்ளநரி வைத்தியநாதய்யர் வரை யாவரும் இந்தக் காங்கிரசில் நேர்மை, நாணயமற்றவர்களாக முறையே ஆக்கப்பட்டு விட்டார்கள். காங்கிரஸ்காரர் தவிர மற்றவர்கள் மட்டும் என்ன மகா யோக்கியர்களா என்று நீங்கள் கேட்கலாம். கேட்பது நியாயம் என்றாலும், நாணயக்காரர்கள் என்றோ ஒழுக்க முடையவர்கள் என்றோ வேஷம் போட்டுக்கொண்டு நம் முன் வரவில்லை. காங்கிரஸ்காரர்கள் தான் மகா மகா சத்தியசீலர்கள் என்றும் நீதியும், அகிம்சையும் கொண்டவர்களென்றும் நம்முன் கூறிக்கொண்டு அரசியலில் ஈடுபட்டார்கள். எப்படி பண்டார சன்னதிகள், 'அன்பே சிவம்' என்று கூறிக்கொண்டு அக்கிரமமாகப் பிறரை வஞ்சித்து வருகிறார்களோ, அதேபோல்—காங்கிரஸ்காரர்களும் சத்தியம், அகிம்சை என்கிற பேரால் நாட்டு மக்களைக்

கொள்ளைக்கும், வஞ்சகத்திற்கும், பித்தலாட்டத்திற்கும் ஆளாக்கிவிட்டனர். காட்டுமிராண்டிக் கால, கொள்ளைக்காரர் கால அறிவில், மக்களை வைத்துக்கொண்டு, அவர்களின் பிரதிநிதிகள் என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் செய்துவரும் பித்தலாட்டங்களுக்கு அளவே காணமுடியவில்லை. காங்கிரஸ் திராவிடர்களோ—தாம், தம்மின எதிரிகளின் கூட்டத்தில் சேர்ந்திருக்கிறோம் என்பதைச் சிறிதும் உணராதவராய்த் தாம் விபீஷணர்களாவதன்மூலம் பெறக்கூடிய சிறு நன்மையோடு திருப்தி அடைந்து—ஆரிய ஆதிக்கத்திற்கு உற்ற தூண்களாக அமைந்திருக்கிறார்கள். ஒரு காங்கிரஸ் திராவிடனிடத்திலாவது,.திராவிட இன உணர்ச்சி குடிகொண்டிருப்பதாக நம்மால் காணமுடியவில்லை.

தோழர் இராமசாமி ரெட்டியாரின் உடலில் ஒரு காலத்தில் திராவிட உணர்வுள்ள இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததென்றாலும், அது எப்படியோ தற்போது மாறிவிட்டது; அதில் ஏதோ விஷங்கலந்து விட்டது.

முதன் மந்திரி ரெட்டியார் ரமண ரிஷியின் சீடர்; அவர் பார்த்துச் சொல்கிறபடி இவர் ஆடுகிறாராம். அவர் மிக யோக்கியராக இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில் சந்தேகம் வேண்டாம் என்றாலும், யோக்கியதை ஒன்று மட்டுமே பதவி வகிக்கப் போதுமா? திறமையும் அனுபவமும் கொஞ்சமாவது வேண்டாமா? கை சுத்தமாக இருந்தால் மட்டும் போதுமா? புத்தித் தெளிவும் அனுபவமும் கொஞ்சமாவது இருக்க வேண்டாமா? இவரும் தொலைந்தால் இவரைவிட மோசமான ஆள் வந்து விடப் போகிறான் என்றுதானே இவருடைய ஆட்சியை நாம் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. நம்மைக் கொஞ்சமாவது மனிதர்கள் என்று நினைத்து ஆட்சி புரிகிறார்களா, இந்த மந்திரிகள்? உணவுக் குறைவு, உடைக் குறைவு, கல்வி வசதிக் குறைவு, பாதுகாப்புக் குறைவு—எல்லாம் குறைவு; நிறையுடையது ஒன்றுமே இல்லை. என்றாலும், இவை பற்றிச் சிந்திக்கிறார்களா, இம் மந்திரிகள்—சிந்திக்க நேரம் இருந்தால்தானே!

பார்ப்பனர்களின் ஈட்டிக்குப் பயந்து—அவர்கள் ஆட்டியபடியெல்லாம் ஆடிவரத் தானே இவர்களுக்கு நேரம் இருக்கிறது. எப்போதும் மந்திரிசபை ஆடிக்கொண்டே இருக்கிறதே! பார்ப்பனர்கள் எல்லோரும் ஒருமுகமாகச் சேர்ந்துகொண்டு ஒரு நல்ல காரியத்தைக்கூட நடக்க விடமாட்டேன் என்கிறார்களே! அந்தப் பார்ப்பனர்களுக்குப் பயந்துகொண்டு மந்திரிகள் எங்கு சென்றாலும் பார்ப்பனீயப் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறார்களே! ரமண ரிஷி சீடர் இராமாயணப் பிரச்சாரம் செய்யத் துவங்கிவிட்டாரே!

நாம் எவை எவை இந் நாட்டு மக்களை நாசம் செய்யப் பயன்பட்டுவருகின்றன என்று கூறி வருகிறோமோ, அவற்றை வளர்ப்பதையே இவர்கள் கண்ணுங் கருத்துமாகக் கொண்டு திரிகிறார்களே! இராமாயணப் பிரச்சாரம் செய்வது அவசியம் என்று தோன்றினால் மந்திரி பதவியை இராஜிநாமா செய்துவிட்டுத் தாராளமாய்ச் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்யட்டுமே! மந்திரியாக இருந்து பல பொறுப்புகளைச் சுமந்துகொண்டு, இவ் வேலையைச் செய்துகொண்டிருப்பானேன்? இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று நாம் பிரச்சாரம் செய்துவரும்போது, இராமாயணத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யும் ஒருவர் நமக்கு முதன்மந்திரியாக வாய்த்திருக்கிறார் என்றால், அதைவிடக் கெட்ட வாய்ப்பு வேறு நமக்கு என்ன வேண்டியிருக்கிறது?

இந் நாட்டுப் பத்திரிகைத் தொழில் பூராவும் 100-க்கு 3 பேராயுள்ள—ஒரு பொறுப்பற்ற, உழைக்காமலே பிறர் இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்து வரக்கூடிய—ஒரு வஞ்சகக் கூட்டத்தினிடம் சிக்கிக் கொண்டுவிட்டது. ஆயிரமாயிரம் மக்கள் இறந்து கொண்டிருந்தாலும் கடுகளவாவது துயரமடைய வேண்டிய அவசியமில்லாதவர்களும், அதற்கு மாறாகப் 'பிறர் சாகச் சாகத் தம் வாழ்வு உயரும்' என்று மகிழ்ச்சி அடையக்கூடியவர்களுமான புரோகிதப் 'பைசாசக்' கூட்டங்களிடத்தே பத்திரிகைத் தொழில் சிக்கிக்கொண்டிருக்கிறது. எனவேதான், நமது சமுதாய வாழ்வு பாழடைந்து கொண்டே வருவது கண்டும் பார்ப்பனப்

பத்திரிகைகளும் பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசும் வாளாவிருந்து வருகின்றன. இதன் காரணமாகத்தான், நாமும் இக் காங்கிரஸ் ஸ்தாபனம் ஒழியவேண்டும் என்று கூறி வருகிறோம்.

எவை எவை நம் நன்முயற்சிக்கு, நமது முன்னேற்ற முயற்சிக்கு ஊறு செய்கின்றனவோ அவையெல்லாம் ஒழியவேண்டும் என்கிறோம். ஒழிக்கப்பட வேண்டியவைகள் தாமே அவைகளும்! நம்மைக் கடிக்க வரும் பாம்பை நம்மால் அடிக்காமல் இருக்க முடியுமா? அல்லது, தேளைப்போலொரு துஷ்டப் பிராணியைக் கொல்லவேண்டாம் என்றுதான் நம்மால் கூறமுடியுமா? பாம்பைவிட, தேளைவிடப் பன்மடங்கு விஷம் பொருந்தியவைகளாயிற்றே பார்ப்பனப் பத்திரிகைகள்! நமக்குள் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது; நாம் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளக்கூடாது. அப்படி அடித்துக்கொண்டால் நாமே தோற்றவராவோம் என்றல்லவோ நாம் கூறுகிறோம்.

இராவணன் எப்படித் தோற்றதாக இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது? படித்துப் பாருங்கள்; இவ்வுண்மை விளங்கும்! இராவணனுடைய சேனைகள் முடிவில் தமக்குள்ளாகவே மோதி முட்டிக்கொண்டு சண்டையிட்டு அழிந்து போனதுதான் இராமனுடைய வெற்றிக்குக் காரணம் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நமது கழகம் உயிரோடிருக்க வேண்டுமானால் நாம் எப்போதும் நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளக்கூடாது. அதாவது, திராவிடர்கள் தம்மில் ஒருவரை ஒருவர் எப்போதும் மோதிக்கொள்ளக் கூடாது. அப்படி மோதிக்கொண்டால் நாம் அழிந்துபோக நேரிடும் என்பதற்காகத்தான் காங்கிரஸ் திராவிடர்கள் நமக்கு என்னதான் துரோகம் செய்துகொண்டிருந்தாலும், என்னதான் நமது கூட்டத்தில் கல் போட்டுக்கொண்டிருந்தாலும் நீங்கள் அவர்களோடு சண்டைக்குப் போகாதீர்கள்; அவர்கள் அடித்தாலும் திருப்பி அடிக்காதீர்கள் என்று கூறிவருகிறேன். போலீஸ்காரன் அடித்தால்கூட அவனும் திராவிடன் என்கின்ற காரணத்தால் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் கூறியிருக்கிறேன். போலீஸ்காரன்—ஆட்சியிலுள்ள காங்கிரஸ் சிப்பந்தி. எனவே, அவர்கள் உத்தரவுப்படித்தான் அவர் நம்மை அடிக்க முன்வருகிறாரே ஒழிய, தானாக நம்மிடம் போராட வருகின்றார் இல்லை. எனவே, பொறுத்துக்கொண்டு அவரை ஆட்டிப் படைக்கும் அந்த ஆட்சியை ஒழிக்க முற்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாய்மார்கள் யாவரும் இந்த ஆட்சியை எதிர்த்தே தீருவதென்று திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். அன்பர் திரு. வி. க. அவர்கள் 'இன்பப் பெருக்கம்—இனப் பெருக்கம்' என்றார். நான் சொல்லுகிறேன்—'இன்பச் சுருக்கம் இனச் சுருக்கம்' என்று. அறிவுள்ள குழந்தைகளைப் பெறவேண்டும்; வீரர்களைப் பெறவேண்டும் என்று ஆசைப்பட வேண்டியதுதான். ஆனால், அதிகம் பெறவேண்டியதில்லை. அதற்காக நான் இன்பம் துய்ப்பதை விட்டுவிட வேண்டும் என்று கூறவில்லை. குழந்தைகளை அதிகமாகப் பெற்றுவிட்டால் இன்பம் அனுபவிக்க—இனத் தொண்டாற்றப் போதிய அவகாசம் இராது. இனியும், 'குழந்தைகளைக் கடவுள்தான் கொடுத்து வருகிறார்' என்று நினைத்துக் கொண்டிருப்பதும் சுத்த முட்டாள்தனமாகும். உண்மையாகக் கடவுளே கொடுப்பதாயிருந்தால் இவ்வளவு முட்டாள்தனமாக, தேவைக்கும் மேலாகக் குழந்தைகளைக் கொடுத்துக்கொண்டிருப்பாரா? இனிப் பிறக்கும் குழந்தைகள், சமுதாய முன்னேற்றத்திற்காகச் சண்டை போடும் குழந்தைகளாக—கூர்மையான பகுத்தறிவு நிறைந்த குழந்தைகளாக அமையவேண்டும்; உண்மைத் திராவிட இரத்தம் ஓடும் குழந்தைகளாய் அமையவேண்டும். அதற்கு நீங்கள் முதலில் உங்களிடமுள்ள ஆரியப் பண்புகளை விட்டுத் தொலைக்க வேண்டும்; ஆரிய மூட நம்பிக்கைகளைப் பொசுக்கிவிட வேண்டும்; விபூதி பூசுவதை நிறுத்திவிட வேண்டும்; நாமமிடுவதை வெறுக்க வேண்டும்; தீபாவளி போன்ற ஆரியப் பண்டிகைகளைக் கொண்டாடக்கூடாது; கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது செய்வதா

யிருந்தால் காலையில் தங்கள் வீட்டில் ஏதோ 'பெரிய காரியம்' ஏற்பட்டிருப்பதுபோல் நினைத்துக்கொண்டு துக்கப்பட வேண்டும். பட்டாசு கொளுத்துவதற்குப் பதிலாக இராமா யணத்தையும், பாரதத்தையும், புராணங்களையும் கொளுத்தவேண்டும். இம் மாதிரி மாறுதலைப் புகுத்திக்கொண்டு வருவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

பெரிய பெரிய உற்சவ காலத்தில் நாம் இம் மாதிரி மாநாடுகளைக் கூட்டவேண்டும். மக்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடியதும், அறிவு ஊட்டக்கூடியதுமான பொருட்காட்சி களுக்கும், நாடகங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். நமக்கும் இதுதான் வேலை. இனி ஜெயிலுக்குக் கொண்டுபோகப்படும் வரையிலும் அடிக்கடி இம் மாதிரி மாநாடுகள் நடந்து கொண்டுதானிருக்கும். நீங்களும் வசதி ஏற்படும்போதெல்லாம் வரவேண்டியது தான். வெற்றிக்குக் காலம் நிர்ணயிப்பது என்பது என்னால் முடியாத காரியம். வெற்றி வருகிறபோது வரட்டும்—நாம் தொடர்ந்து, வெற்றியில் நம்பிக்கை வைத்து நமது காரியத்தைச் செய்துவருவோம்; நல்லறிவு பெறுவோம்.

பெரியார் திரு. வி. க. சொல்லுகிறார், 'இன்னும் 10 வருடத்தில் திராவிடம் கிடைத்து விடும்' என்று. வரட்டும் அது! அதற்குள் நமக்கு நல்லறிவு வரட்டும்; நமக்குள் ஒழுக்கம் ஏற்படட்டும்; பற்றுதலும் அன்பும் உண்டாகட்டும்; நம் மக்கள் மனிதத் தன்மையோடு வளரட்டும். இழிவுநீங்கப் பாடுபடட்டும். தாய்மார்கள் ஆண்களைப்போல் முன்னேற்றப் பாதையில் நடக்க முன்வரட்டும்; சமையல் வேலையைக்கூட புருஷனிடம் வேண்டுமானால் ஒப்படைத்துத் தொலையட்டும். நான்கு குடும்பங்கள் சேர்ந்து சமையல்காரனை வைத்துச் சமைத்துச் சாப்பிட்டுக்கொள்ளட்டும். எல்லோருடைய முயற்சியும் நாட்டுமக்களின் பொது நன்மைக்காகப் பயன்படட்டும். பெருமைதரும் உத்தியோகங்களுக்கும், பணிகளுக்கும் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளட்டும்.

பெண்களைக் கூண்டுக் கிளிகளைப்போல் வீட்டில் அடைத்து வைக்கத் தாய் தந்தையர் முயற்சிக்காதீர்கள்! தாராளமாகப் பழகவிடுங்கள். பெண்களுக்கு 20 வயது வரை, கண்டிப்பாகத் திருமணம் செய்யாதீர்கள்.

உங்கள் பெண்மக்களிடம் 20 வயதிற்குப் பிறகு கேளுங்கள்—'திருமணம் செய்து கொள்ள இஷ்டமா? பொதுச்சேவை செய்ய இஷ்டமா?' என்று. 'திருமணத்தில் இஷ்டம்' என்றால்—நல்ல வரனைத் தேடிப்பிடிக்கும் வேலையை அவர்களுக்கே விட்டுவிடுங்கள்; வேண்டுமானால் ஆலோசனை மட்டுமே கூறுங்கள். 'பொதுச் சேவையில் பிரியம்' என்றால்—அதற்குத் தாராளமாக வசதி செய்துகொடுங்கள். பிறர் என்ன சொல்லுவார் களோ என்று கவலை கொள்ளாதீர்கள்; பெண் எங்கே கெட்டுப்போய் விடுவாளோ என்று அஞ்சாதீர்கள்! குழந்தைகளின் உற்பத்திப் பீடமாயுள்ள பெண்கள் திருந்தினாலொழிய அவர்களிடமிருந்து உற்பத்தியாகும் குழந்தைகளும் திருந்திய குழந்தைகளாயிருக்க முடியாது என்பதை மனத்தில் கொள்ளுங்கள். வளம் செய்யப்பட்ட மண்ணில் எப்படி நல்ல நெல் மணிகள் தோன்றுமோ, அதுபோலவே சீர்திருத்த மனம்படைத்த அறிவுள்ள பெண் களிடமிருந்துதான் சீர்திருத்த அறிவுள்ள செம்மல்கள் தோன்றக்கூடும் என்பதைத் தாய் மார்கள் உணர்ந்து, முதலில் தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ளட்டும்! கோயிலுக்குப் போய் அனாவசியமாய்க் குழவிக் கல்லுக்குத் தெண்டனிடுவதால் பயனில்லை என்பதை உணர்ந்து கொள்ளட்டும். வெறும் சமையல்காரிகளாகவும், கட்டிலறைப் போகப் பொருள் களாகவும், காட்சிப்பொருள்களாகவும் மட்டுமே இருப்பதில் பயனில்லை என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

திராவிட நாட்டை விரைவில் காணக்கூடிய தகுதியும், திறமையும் தம்மிடத்துத்தான் இருக்கின்றனவென்பதையும் தாய்மார்கள் உணரட்டும். கவர்னர் ஜெனரல் இங்குவரும் போது, தாய்மார்களை, 'தலை மயிரை விரித்துவிட்டுத் தெருவில் படுத்துக்கொள்ளுங்கள்;

உங்கள் தலையின்மீது வேண்டுமானால் அவர் நடந்து செல்லட்டும்' என்று கூறினேன். அதனால் எங்களைச் சிறைபிடித்தார்கள் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். இனியும் நீங்கள் எதற்கும் தயாராயிருக்கவேண்டும். நாம் விடுதலை அடையவேண்டு மானால் பெண்கள் முதலில் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். தாம் விதவைகளாயிருக்க தமது விதிப்பயன்தான் காரணம் என்பதை விதவைகள் விட்டொழிக்க வேண்டும். விதவைகளாயிருப்பவர்கள் சமூகத்தொண்டாற்ற முன் வரவேண்டும். நம் நாட்டுச் சரித்திரத்தில் பெண்களுக்கென்று தனி அத்தியாயம் எழுதப்படும் அளவுக்கு நீங்கள் விதவைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொள்ள வேண்டும். உங்கள் வாழ்வுக்கும், பெருமைக்கும், நலத்துக்கும் உழைத்து வருவது திராவிடர் கழகம் ஒன்றுதான் என்பதை யும், உங்கள் வாழ்வைக் கெடுத்துவருவது பார்ப்பனீயத்திடம் நீங்கள் வைத்துள்ள மூடப் பற்றுதல்தான் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த மாநாட்டில் பெண்களுக்குப் பேசவோ, பாடவோ, சரியான வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. போதிய கால வசதி கிடைக்குமானால் அடுத்த மாநாட்டைப் பெண்களிடமே சகல பொறுப்புக்களை யும் கொடுத்து நடத்த ஆசைப்படுகிறேன். அவ்வாசை உங்கள் ஒத்துழைப்பால் நிச்சயம் வெற்றி பெறும் என்றே நம்புகிறேன். வரவேற்புக் கமிட்டித் தலைவர், காரியதரிசி, மாநாட்டுத் தலைவர், கொடி ஏற்றுபவர் திறப்பாளர், தீர்மானங்கொண்டு வருபவர்கள், முன்மொழிபவர்கள் யாவரும் பெண்களாகவே இருக்கும்படி அம் மாநாட்டை நடத்த நினைக்கிறேன்.

அறிவுள்ள பெண்கள் சிலர் பதவி மோகங்கொண்டு அல்லலுறுகிறார்கள்; சிலர் தம் புருஷர்களிடம் மாட்டிக்கொண்டு அல்லல் படுகிறார்கள். விரைவில் இவற்றினின்று அறி வுள்ள பெண்கள் விடுதலை பெற்று, சமூகத் தொண்டாற்ற முன்வரவேண்டும். குழந்தைகள் போதுமென்றால் தாய்மார்கள் சிலர் கடைசிக் குழந்தைக்கு 'சாலம்மா' என்று பெயர் வைத்துவிட்டுப் பிறகு தமக்குக் குழந்தை பிறக்க வேண்டாமென்று நினைத்துக்கொண்டு விடுவார்கள். அதுபோல் தாய்மார்கள் இரண்டாவது, மூன்றாவது குழந்தைகளுக்கே—'போதுமம்மா', 'போதுமப்பா' என்று பெயர் வைத்துவிட்டுச் சமூகத் தொண்டாற்ற வந்துவிடவேண்டும்.

ஒவ்வொரு தாய்மாரும் இந்தக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து திராவிடநாட்டை விடுவிப்பதையே முக்கிய வேலையாக—முதல் வேலையாகக் கொள்ள வேண்டும். உங்களின் பிற்காலச் சந்ததிகளின் வாழ்வை—உங்கள் சகோதர சகோதரிகளின் வாழ்வை நலம் செய்யத்தான் நாங்கள் உங்களை இத் தியாகத்திற்கு அழைக்கிறோம்! உங்கள் யாவரையும் ஒழுங்காக நடத்துவோம்; மரியாதையாக நடத்துவோம்; எங்களுக்குற்ற அருமைத் தலைவி களாக—விடுதலைப் போராட்டம் நடத்தவந்த வீராங்கனைகளாக மகிழ்வுடன் போற்றிப் புகழ்வோம்! எல்லோருமாகச் சிறைச்சாலை செல்ல இம் மாநாட்டிலேயே உறுதி எடுத்துக் கொள்வோமாக! அவரவருக்குள்ள சிறு தொல்லைகளிலிருந்து விடுதலை செய்துகொள் வார்களாக! தாம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சகல காரியங்களும் ஒழுங்குறக் கவலை யற்று நடக்கும்படியான வகையில், ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்துவைத்துக் கொள்வார்களாக! எப்போதும்—நீண்ட சிறைவாசத்திற்கே ஆயினும் புறப்படத் தயாராக இருப்பார்களாக! ஒவ்வொருவரும் 'எப்போதும் தயாராக' (Ever-Ready) ஆகி இருப்பார்களாக!

எல்லோருமே இணங்கி வராவிட்டாலும், ஆதரவு கிடைத்தவரை போராட்டம் நடந்து கொண்டு வரும். ஆதரவே இல்லாது போயினும் என்னைப் பொறுத்தவரையில் நான் சிறிதும் வருத்தப்பட மாட்டேன். என் கடமையைச் செய்யத் தவறேன்; அடக்குமுறையை எதிர்த்தே தீருவேன்; விடுதலை பெற்று வெளிவரினும் மீண்டும் எனது வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டுதான் இருப்பேன். இன்றுள்ள ஆட்சியைத் தொடர்ந்து

எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தைச் சொல்லிவிட்டேன். போராட்டத்தின் தன்மையைச் சொன்னேன்; போராட்டத்தின் பலனையும் சொன்னேன்; போராட்டத்தி லுள்ள கஷ்ட நஷ்டங்களையும் சொன்னேன். எனவே என்ன செய்வதென்பதை மனிதத் தன்மையில் விருப்பமுள்ள உங்களின் முடிவுக்கே விட்டு விடுகிறேன். கஷ்டம் அதிகந்தான்.

கஷ்டம் அதிகமாயிருக்கிறது என்று சிலருக்குத் தோன்றலாம் எனினும், என்ன செய்யமுடியும்? வந்துள்ள நோயின் தன்மையைப் பொறுத்துத்தானே மருந்தும் அமையக் கூடும்? கொடூரமான நோய்க்கு மிகக் கசப்பான மருந்தைத்தானே கொடுக்கவேண்டி யிருக்கும். நோய் போகவேண்டுமென்று விருப்பப்படுபவர்கள் அம்மருந்தை உட்கொண்டு தானே ஆகவேண்டும்? 100-க்கு 80 தற்குறியாயுள்ள இந்த நாட்டில் இதைவிட நம்மால் வேறு என்ன செய்ய முடியும்? 'கல் குவியலில் அரிசி பொறுக்கும்' காலமன்றோ இது? எதிர்காலம் வேண்டுமானால்—'அரிசிக் குவியலில் கல் பொறுக்கும்' காலமாக இருக்கலாம்! அதுபோது, போராட்ட முறையும் வேறு விதமாக அமையலாம். இன்றைய நிலைக்கு இதுமாதிரிப் போராட்டத்தில் இறங்குவது தவிர வேறு வழியில்லை. எனவே, உதவியும் ஆதரவும் அளிக்கவல்ல தோழர்கள் விரும்பி அளியுங்கள்—உங்களால் ஆன உதவியை!

சட்டசபைக்குப் போகமாட்டோம் எனக் கருதிக் கொள்ளாதீர்கள். போனாலும் ஒன்றும் செய்யக்கூடாத நிலையில் சட்டசபை இருப்பதால்தான் நாம் ஒதுங்கியிருக் கிறோம்—என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்ய இயலாதே என்கின்ற காரணத்தால்—வெளியில் இருந்தால் அதிகம் செய்யலாம் என்ற எண்ணத்தால் ஒதுங்கியிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எவனெ வனோ சட்டசபையை அடைத்துக்கொண்டு கொள்ளையடிக்கிறானே என்றால்—நாமும் அவனுடன் சேர்ந்து கொண்டு கொள்ளையடிக்கலாமா? என் சதையைப் பிறர் அறுத்துத் தின்கிறார்களே என்று பொறாமை கொண்டு—நானும் கொஞ்சம் என் சதையைக் கடித்துக் கொள்வதா? நம் மக்கள்தாம் கொள்ளையடிக்கப்படுகிறார்கள் என்று அறிந்திருந்தும் நாமும் சேர்ந்து கொண்டு கொள்ளையடிக்க நினைக்கலாமா?

ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பாருங்கள்—பதவியிலுள்ளவர்களுக்கு உள்ள கெட்ட பேரை! அப்படிப்பட்ட கேவல பதவிகளையா நாம் விரும்புவது? முதலில் மக்களெல்லாம் அறிவு பெற்று விளங்க நாம் பாடுபடுவோம். அவர்கள் அறிவாளிகளாக ஆக்கப்பட்டதும்—பிறகு வேண்டுமானால் செல்லலாம், சட்டசபையை நோக்கி! நமக்கு நல்லது செய்ய வசதி இருந்தால் செல்லலாம்; மக்களும் உணருவார்கள்—நன்மை செய்யப்படுகிறதா, தீமை செய்யப்படுகிறதா என்று. இன்னும் ஒரு வருடம் இம் மாதிரி ஆட்சி நடைபெறு மானால் இம் மந்திரிகளெல்லாம் பர்மா மந்திரிகளைப் போல்தான் ஆகவேண்டி வரலாம். நாம் மட்டுமே இல்லை இந்த உலகத்தில் என்பது, உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்! நம்மவர்களாயிற்றே என்று நாம்தான் சும்மாயிருக்கிறோம் என்றால், அகிம்சை, அன்பு என்று மக்களை நாம் அடக்கி வைத்திருக்கிறோம் என்றால்—இதர கம்யூனிஸ்டுகள், 'கோட்ஸே' கூட்டங்கள் இல்லையா? சோஷலிஸ்டுகள் இல்லையா? 'அனார்கிஸ்டு'கள் இல்லையா? அவர்கள் யோக்கியதை உங்களுக்குத் தெரியாதா? காந்தியாரையே ஒழித்த வர்கள், பார்த்துக்கொண்டிருப்பார்களா? அந்த நிலைக்கு மக்களைக் கருதவிடாமல்—தம்மை திருத்திக்கொள்ள வேண்டும் என்றுதான் ஆட்சியாளருக்கு நான் வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[ஈரோட்டில் 23, 24-10-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-11-1948]

15. சமுதாயமும் அரசியலும்

தோழர்களே!

சமுதாயம் வேறு; அரசியல் வேறு என்று கூறுவது தவறாகும். சமுதாய அமைப்பைச் சரிவர நடத்துவதுதானே அரசாங்கத்தின் கடமை ஆகும்? சமுதாய அமைப்புக்கு வழிவகை அமைப்பதே மதத்தின் தத்துவமாகும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தங்களது மதங்களை அவ்விதமே கையாண்டு வருகின்றனர். ஆனால், நமது மதம் இருக்கிறதே, அது நமது சமுதாய அமைப்பின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது. நம் அரசாங்கம் என்பதோ மக்களுக்காக அல்லாமல், அரசாங்கத்தாருக்காக மக்கள் வாழவேண்டிய தலைகீழ்த் தத்துவத்தில் நாம் உழன்று வருகின்றோம்.

எனவே, நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால், சமுதாயத்துறையிலே பெரும் மாறுதலை உண்டாக்கவேண்டுவது அவசியமாகும். அதன் பின்னரே, நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். அவ்வாறு இல்லாது, இன்றைய சமுதாய அமைப்பைக்கொண்டே, யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒருசிறிதும் நீங்குவதற்கு வழி இல்லை; வழிவகையும் இருக்க முடியாது.

[பொன்மலையில், 22-5-1949-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 28-5-1949]

தோழர்களே!

அரசியல் என்று தனியாக ஒருவிஷயம் இல்லை; அரசியல் என்பது மக்கள் வாழ்வில் சுமத்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கூறுவதுதான் அரசியல். அதாவது, சமுதாயம், பொருளாதாரம், கல்வி, வியாபாரம், கைத்தொழில், பகுத்தறிவு இன்னும் மற்றும் அனேக காரியங்களைக் கொண்டதுதான் அரசியல். ஆனால், இன்றையதினம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அரசியல் என்பது வேறு, சமுதாயம் வேறு என நினைத்துக் கொண்டு, தனித் தனியாகப் பிரித்துப் பேசுகிறார்கள்.

ஆகவே, சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று நினைத்துக்கொண்டு பிரிப்பதின் காரணம் என்ன? அதாவது, அரசியல் விஷயமாகப் பேசுவதாய் இருந்தால் அது 'பொலிடிக்கல்' என்றும், சமுதாய விஷயமாக இருந்தால் அது 'சோஷியல்' என்றும் பிரித்து மக்களுடைய சமுதாயத்துறை சீர்படுவதற்கு இல்லாமல் செய்வதற்காகவே செய்த ஒரு தந்திரம் இது என்றுதான் சொல்லவேண்டும். இந்த நாட்டிலேதான் இப்படிச் சொல்லுகிறோமே தவிர, வேறு எந்த நாட்டிலும் இப்படித் தனியாகப் பிரித்துக் கையாளுவது கிடையாது.

ஏன் அப்படி அமைந்தது என்றால், இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பு பெரும்பாலும் ஒரு சிறிய கூட்டத்தாருடைய பிழைப்புக்காகவே அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, சமுதாயத் துறையில் ஏதாவது மாறுதல் பண்ணவேண்டுமெனக் கருதினால்கூட அதனால் பிழைக்கிற கூட்டத்தார், 'இது தவறு, இதைத் தவிர வேறு ஏதாவது பேசு' என்று சொல்லித் தடுத்துக்கொண்டே வருகிறார்கள். அப்படி வந்ததாலேதான் இந் நாட்டில் வெள்ளைக்காரருடைய ஆட்சி ஏற்பட்டும்—அவர்கள் அரசியல் துறையில் சரியாக நடந்து வந்தும்–சமுதாயத்துறையில் கைவைப்பதற்குத் துணியவில்லை. அப்படியே துணிந்தாலும் அன்றையதினம் பெரிய எதிர்ப்பு இருந்துதான் வந்தது. வெள்ளைக்காரனுடைய ஆட்சியிலே ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டபோது, 'நாங்கள் அரசியல் துறையில் மாத்திரம் பிரவேசிக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் எவ்விதமாகவும் பிரவேசிக்கவில்லை' என்று சொன்னார்கள். அதைத்தான் இப்பொழுது, 'பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி' என்று சொல்லிக் கொள்வது. ஏதாவது ஒரு வார்த்தை பேசவந்தால், அதைப்பற்றி உடனடியாக 'சர்க்கார் சமுதாயத்துறையில் பிரவேசிக்கக் கூடாது' என்று சொல்லி இருக்கிறது. ஆகையால், ஒருவரும் சமுதாயத்துறையில் பிரவேசிக்கக்கூடாது' என்று சொல்லி விட்டார்கள். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் அதை வெவ்வேறாகப் பிரிப்பது இல்லை.

எங்களுடைய முக்கியமான சங்கதிகளெல்லாம் சமுதாயத்தைப்பற்றிய சங்கதிதான். இதற்காக நீண்ட நாட்களாக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். இந்த 25 ஆண்டுகளாக நாங்கள் செய்த வேலைகள் எல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படும் முறையில்தான் செய்து வருகிறோம். எங்களுடைய கொள்கைகள் எல்லாம் சமுதாய சம்பந்தமாகவேதான் இருக்கும்.

[பாண்டமங்கலத்தில், 10-10-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-10-1951]

16. அரசியல் நிர்ணய சபை

இன்றைய அரசியல் நிர்ணய சபை ஆரிய எதிர்ப்புக்காரர்களுக்குச் சிறிதுகூட இடமில்லாத சபையேயாகும். ஏனெனில், அரசியல் நிர்ணய சபையோரைத் தேர்ந்தெடுத்தவர்கள், அரசியல் நிர்ணய சபையின் வேலைத் திட்டம் இன்னது என்று தெரிந்த மக்கள் ஒருவர்கூட அல்லாதவர்கள். அரசியல் நிர்ணய சபையாரைத் தேர்ந்தெடுத்தவர்களைத் தெரிந்தெடுத்தவர்கள்—மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 10 பேர்களே. ஆனாலும், அந்தப் பத்துப் பேர்களும் அரசியல் நிர்ணய சபை கர்ப்பத்தில்கூட இல்லாத காலத்தில்—அப்படி ஒன்று ஏற்படும் என்று எவருமே அறிந்திருக்க முடியாத காலத்தில் வேறு எதையோ ஓட்டர்களுக்குச் சொல்லி ஓட்டுக் கொடுத்தவர்களாவார்கள்.

அதாவது, சில பொதுநல வாழ்வுக்காரர்கள், 'இது வரி குறைக்க எழுதப்பட்ட விண்ணப்பம்' என்று கூறிப் பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கி, அந்த விண்ணப்பத்தை கையெழுத்து வாங்கியவர்கள், 'வரி போடும்படி கேட்டுக்கொள்வதாக' திருத்திக் கொண்டதுபோல்—தங்கள் பொறுப்பை, கடமையை மாற்றிக்கொண்டதுபோல் மாற்றிக்கொண்டார்கள். அப்படிப்பட்ட அரசியல் நிர்ணய சபை இப்போது நாட்டு மக்களின் நிலைக்கேற்ற காரியத்தைச் செய்யாமல்—பார்ப்பனர்களும் அவர்கள் அடிமைகளான செல்வவான்களும் நிரந்தரமாய் மக்களைத் தங்களுக்குள் அடிமைப்படுத்தி வைத்திருக்கவும் சுரண்டவுமே 'சிமிண்ட் ஜல்லியால்' கட்டடம் கட்டிக்கொள்கிறது.

நாம் முன்னமே கூறியிருக்கிறோம்: 'இந்த அரசியல் நிர்ணய சபையால் செய்யப்படும் விதிகளில்—இனிமேல் சுதந்திர சமதர்ம இந்தியாவில் மக்கள் பிறவியில் பிராமணன், சூத்திரன், பஞ்சமன், அரிஜனன் என்பதான பிரிவுகள் இருக்கக்கூடாது; இப் பிரிவுகள் கொண்ட ஆதாரங்கள் இருக்கக்கூடாது; இருக்கப்படவுமாட்டாது; இல்லாமல் செய்யப்படும்' என்று ஒரு வாக்கியம் இருக்கவேண்டும் என்று.

அப்படிப்பட்ட வாக்கியத்தை, தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள்—நேரு, ஆச்சாரியார், முன்ஷி, சந்தானம், கோபாலசாமி அய்யங்கார், அனந்தசயனம், கிருஷ்ணமாச்சாரி முதலிய பார்ப்பனர்கள் பிரேரேபிக்காவிட்டாலும்—முனுசாமிப் பிள்ளை, சுப்பராயன், குமார ராஜா, பாரதி, இராமசாமி ரெட்டியார் போன்ற 4-வது, 5-வது வர்ணத்தைச் சார்ந்தவர்களாவது சேர்க்க முயற்சித்து இருக்கலாம். முயற்சிக்காத காரணம், தங்களுடைய கீழ்சாதி நிலை மாறவேண்டும் என்கின்ற ஆசை அவர்களுக்கு இல்லை என்று யாராவது கூற முடியுமா? ஒருநாளும் அப்படிச் சொல்லமுடியாது. பின் ஏன் அவர்கள் அங்கு இதைச் சொல்லவில்லை என்றால், 'சாதி இழிவைப்பற்றி நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம்' என்பதாக வாக்குறுதி அல்லது நம்பிக்கை கொடுத்து அரசியல் நிர்ணய சபை மெம்பராகத் தங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டவர்களாதலால்—அவர்களை அரசியல் நிர்ணய சபை மெம்பர்களாக ஆகும்படி பார்ப்பனர்கள் செய்திருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் சூத்திரப் பட்டத்தையும் அரசியல் நிர்ணய சபையில் காப்பாற்றி இருக்கிறார்கள்.

இது போலவேதான், அரசியல் நிர்ணய சபையில் இதுகாலம் வரையில் இந்தியா முழுமையிலும்—பஞ்சாப், லாகூர் முதல் திருநெல்வேலி வரையும்; கொச்சி முதல்

அஸ்ஸாம் வரையும் இருந்துவந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை நிலைநிறுத்த ஆளில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது, 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஒரு சென்னை மாகாண மெம்பர் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இதனால் அபிப்பிராயபேதம் கடுமையாகி, கட்சிக் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை காரணமாக அத்தீர்மானம் நிறுத்தப்பட்டுவிட்டது' என்று காணப்படுகிறது. ஆகவே, அங்குள்ள கட்சிக் கட்டுப்பாடு எதுவும், மற்ற விஷயங்களில் தீர்மானம் கொண்டுவருவதும், பேசுவதும், வாதிப்பதும் தடுக்கப்படவே இல்லை.

எனவே, இன்றைய அரசியல் நிர்ணய சபை திராவிட சமுதாயத்தை இராமாயண காலம் முதல் இருந்துவந்த மனு முறைக்கு ஆளாக்கும் ஒரு 'பூதேவர்களின்' (ஆரியர்களின்) சபையே ஒழிய—இந்நாட்டு மக்களின் அரசியல் சபை அல்ல என்பதை விளக்கி, அந்த அரசியல் நிர்ணய சபை நடவடிக்கையால் உருவாக்கப்படும் நூல்—ஒரு மனுதர்ம நூலேயாகும் என்று கூறுகின்றோம்.

['விடுதலை'-தலையங்கம்—2-12-1948; 7-8-1950]

17. அரசியல் சட்டம் ஒழிக

தோழர்களே!

இந்திய அரசாங்கமானது அநியாயம் நிறைந்து விளங்கும் அரசியல் சட்டத்தைக் கொண்டிருக்கின்றது. மேலும் அரசியல் நிர்ணய சபையாவது ஒழுங்கானது என்று சொல்ல முடியுமா? உண்மையான முறையில் அதைப் பார்த்துச் சொல்லவேண்டுமானால்,

'நான்கு பார்ப்பனர்கள் சேர்ந்துகொண்டு எழுதிய மனுதர்ம சாஸ்திரம்' என்றுதான் சொல்லமுடியும். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உரிமைகளை—அதிகாரங்களை—சுயதேவைகளை, ஆட்சி உரிமையைப் பறிப்பதற்காகத் திட்டம் போட்டுச் செய்யப்பட்டதுதான் அரசியல் சட்டம் என்றுதான் கூறமுடியும். இது நம்முடைய நல்வாழ்வுக்காக அமைந்தது அல்ல என்று நான் முன்னாலேயே கூறிவிட்டேன்.

இன்றைய தினம் உள்ள அந்தச் சட்டம் எப்படி இருக்கிறது? அது யாரால் செய்யப்பட்டது? அவர்கள் கணக்குப்படி இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது என்றும், குடிஅரசு ஆகிவிட்டது என்றும் கூறுகிறார்களே, அதன்படியாவது அமைந்ததா?

இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்துவிட்டது என்று அவர்கள் வாயில்தான் கூறுகிறார்களே தவிர, உண்மையில் இந்தச் சட்டம் மக்களால் அமைந்ததென்று சொல்ல முடியுமா? இந்த நாட்டின் மக்களுடைய பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டது என்றுதான் சொல்ல முடியுமா? இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள்தாம் என்று சர்க்கார் கூறுகிறதே, அதன் அர்த்தம் என்ன? 'இந்த நாட்டில் உள்ள 21 வயது நிரம்பிய எல்லோருக்கும் 'ஓட்டுரிமை கொடுத்துவிட்டோம்; ஆதலால், நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்' என்று சொல்கிறார்கள். மேலும் இதுதான் ஜனநாயக ஆட்சி எனவும் கூறுகிறார்கள்.

இது, உண்மையான குடியரசு நாடாய் இருந்தால்—உண்மையான ஜனநாயக நாடாய் இருந்தால்—உண்மையான சுதந்திரம் பெற்ற நாடாக இருந்தால், இவர்கள்தாம் இன்றையதினம் ஆட்சியில் இருக்கமுடியுமா? அல்லது, இவர்களாலே இவர்களின் மனத்திற்குத் தகுந்தபடி அரசியல் சட்டம் செய்துகொள்ள முடியுமா?

ஆகவே, இது வெறும் பித்தலாட்டமான சொல்; மக்களை ஏய்ப்பதற்கு உபயோகிக்கும் வார்த்தை. ஆகவே, இது குடிஅரசு நாடாய் இருந்து—அதன் மக்களால் செய்யப்பட்ட சட்டமாய் இருக்காமல், ஒரு சிலரால் செய்யப்பட்ட சட்டமாக இருக்கிறது. இந்தச் சட்டம்

ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணய சபையிலே இருக்கிற பிரதிநிதிகள் எல்லாம், பிரிட்டிஷ் அரசாங்கத்தினரால் எடுக்கப்பட்டவர்கள். இந்தியாவின் மக்களால் ஜனநாயக முறையில்—குடிஅரசு முறையில் அமையப்பெற்ற பிரதிநிதிகள் அல்லர். இவர்களுக்கு ஓட்டுக் கொடுத்து அனுப்பியவர்கள் பணக்காரர்களும், பார்ப்பனர்களும், படித்தவர்களும்தாம்; இவர்களுக்கு மட்டுமே அந்தக் காலத்தில் ஓட்டுரிமை கொடுத்திருந்தார்கள். ஆகையினாலே, மேற்கூறிய (ஓட்டுக்கொடுத்த) நபர்களைக் கவனிக்காமல் பொதுமக்களைக் கவனிக்க முடியுமா? ஆகவே, இவர்கள் பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லமுடியாது.

இவர்களின்மேல் நம்பிக்கையில்லாமல்—இன்றைய சர்க்கார் அந்த வெள்ளைக்காரன் காலத்திலே வைக்கப்பட்டவர்களைத் தங்கள் இஷ்டம்போல் நடக்கவும், தங்களுடைய வாக்கின்படி மாறுபடாமல் நடப்பதற்கும், தாங்கள் சொல்லியவற்றிற்குக் கைதூக்கும்படியும் இன்னும் ஒருசிலபேரை நம் சென்னை மாகாணத்திலிருந்து அனுப்பச் சொன்னார்கள். அதுவும் அவர்கள் கைவசப்படுத்தி வைத்திருக்கிறவர்களைக்கொண்டு தெரிந்து எடுக்கச் சொன்னார்கள். அந்த அளவிலாவது விடவில்லை. சென்னை (தமிழ்நாட்டு)க்கு மாத்திரம் 47 பேர்கள் அரசியல் நிர்ணய சபைக்குத் தெரிந்து எடுக்கப்படவேண்டும் என்று சொல்லி விட்டு—கூடவே, அந்த 47 பேர்களின் 'லிஸ்டும்' அனுப்பிவிட்டார்கள். அது மத்திய அரசாங்கத்திலிருந்து அனுப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 47 பேர்களையாவது இஷ்டம்போல் எடுத்து அனுப்பும்படியும் கூறவில்லை. அந்த 'லிஸ்டிலே'யே அந்த 47 பேர்களின் பெயர்களையும் எழுதி அனுப்பிவிட்டார்கள்.

அவர்கள் அத்தனைபேரும் அவர்களின் பாதவருடிகளாகத்தான் காட்சி அளித்தனர். அதுவும் தவறிப்போகாமல் இருப்பதற்காக, ஒரு நபர் ஒன்றுக்கு 3½ பேர்கள் வீதம் ஓட்டுச் செய்து அனுப்புங்கள் என்றும் கூறி அனுப்பிவிட்டார்கள். 'வேறு யாருக்காவது ஓட்டுச் செய்தால், உங்கள் பேரிலே நடவடிக்கையெடுக்கப்படும்' என்றும் சொன்னார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தின்படி எடுத்து அனுப்பியும்விட்டனர். ஆனால், இதில் ஒரு ஆள் தவறுதலாகப் போய்விட்டார். அவர்தான் திரு. N. சிவராஜ். இப்படித் தவறு நடந்ததால் இவர்களின்பேரில் நடவடிக்கைகூட எடுத்துவிட்டார்கள்.

இதன் பெயர்தான் தேர்தல்; இதன் பெயர்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பது; இதன் பெயர்தான் குடியரசின் மக்கள் பிரதிநிதிகள் என்பது. ஆகவே, அரசியல் நிர்ணய சபைக்குப் போனவர்களில் சுயநலக் கும்பல்களையும், பார்ப்பனர்களையும் தவிர மீதி அத்தனைபேரும், மடையர்கள்தாம். பார்ப்பனர்கள் மாத்திரம் தன் சாதிக்கு வேண்டிய நன்மைகள் எது வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து கொண்டனர். இங்கிருந்து போனவர்களுக்கு மாதம் 250 ரூபாய் கிடைக்கிறது. இதுவே இவனுக்குப் போதும். ஆகவே, இவன் என்ன செய்யமுடியும்? இவனால் செய்ய முடிந்தது ஒரே ஒரு காரியம்தான். அதாவது, இவர்களுக்கு என்று ஒதுக்கிக் கொடுக்கின்ற அறையை இன்னொருவருக்குக் (பிரயாணம் வருகின்றவர்களுக்கு) கொடுத்துக் கூடுதல் பணம் வாங்கிக் கொள்வது. இதுதான் இவர்கள் முறை தவறாமல் நடத்திவந்தது. இது மிக மிகக் கேவலமானது என்று இப்பொழுதாவது புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்களே—அது தான் அதிசயம்.

ஆகவே, இங்கிருந்து போனவர்கள்—தலைவருடைய கண்ணைப் பார்த்துக்கொண்டு கை தூக்குவதுதான் இவர்களுடைய முழுக் கடமையாக முடிந்தது. ஆனால், பார்ப்பனர்கள் மாத்திரம் தங்கள் இஷ்டம்போல்—தங்களுக்கு வேண்டிய சலுகைகளைக் கவனிக்கும்பொருட்டு அதற்கான சட்டங்களை எல்லாம் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

இதன் பின்னர் ஒரு கமிட்டி அமைத்தார்கள். அதிலும் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் முதலாவதாக நான்கு பேர்கள்; அத்தனை பேரும் பச்சைப் பார்ப்பனர்கள்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே. எம். முன்ஷி, திருமலை ராவ். இன்னும் மேலே மூன்று பேர்கள் எடுத்தார்கள். அவர்களில் டாக்டர் அம்பேத்கார் ஒருவர். முஸ்லிம்களுக்காக சாயபு ஒருவர்; கிறிஸ்தவர்களுக்கு ஒருவர். ஆகவே டாக்டர் அம்பேத்காரைத் தவிர மீதி அத்தனை பேர்களும் தங்கள் தங்கள் இஷ்டம் போல் செய்து கொண்டனர்.

ஆனால், டாக்டர் அம்பேத்கார் மட்டும் ஏதோ ஆதித் திராவிடர்களுக்காகப் போராடினார். இவரிடம், ' உம் சங்கதிக்கு மட்டும் தடையில்லாமல் எதுவேண்டுமானாலும் சொல்—செய்கிறோம்; ஆனால், மற்றவர்கள் விஷயத்தைப் பற்றிப் பேசாதே' என்று கூறிவிட்டனர். அதன்படியே அம்பேத்காரும் தன் சமூகத்தாருக்கு வழிதேடிக் கொண்டார். ஆகவே, ஆதித் திராவிடர்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி விகிதாச்சாரம் கொடுப்பதாகக் கூறிச் சட்டமும் செய்துவிட்டனர். அந்தச் சட்டத்திலே ஆதித் திராவிடர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி சகலவற்றிலும் பங்கு கொடுக்கவேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் கேட்டபடி, மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி ஸ்தானங்கள் கொடுத்துவிட்டனர். ஆகவே, அவராவது அவ்வளவு பெற்றுவிட்டார். ஆனாலும், நம்மவர்களுக்காக (நான்காம் சாதி) எவனாவது இதுவரை ஏதும் கேட்டது கிடையாது. ஆதித் திராவிடர்களுக்கு இவ்வளவு ஒதுக்கிவிட்டு, நாம் விகிதாச்சாரம் கேட்பது தப்பு என்று சொல்லுகிறார்கள். ஆகவே, யாராவது இதைப்பற்றிக் கேட்டால், அவரை 'வகுப்புவாதி' என்று கூறிவிடுகிறார்கள்.

எனவே இந்த அரசியல் சட்டம் என்பது சட்டப்படி ஏற்பட்டதல்ல; காங்கிரஸ்காரர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி ஏற்பட்டதல்ல.

அதாவது, அவர்கள்—காங்கிரஸ்காரர்கள் 1946-லே தேர்தலுக்கு நின்றபோது விட்ட அறிக்கை என்ன? 'நாங்கள் தேர்தலில் நின்று வெற்றி பெறுவோமானால் ஒவ்வொரு மாகாணத்திற்கும் போதிய சுதந்திரம் கொடுக்கும்படியான அரசியல் சட்டம் அமைப்போம்; மேலும், அந்தச் சட்டமும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கும்' என்று கூறினார்கள். ஆனால், அப்படி நடந்தார்களா? அது தான் இல்லை.

ஒவ்வொரு காரியமும் நாட்டுக்குக் கேடுகளை விளைவிப்பதும், சொல்லுகின்ற ஒவ்வொரு காரியமும் பித்தலாட்டம் நிறைந்ததாகக் காணப்படுவதும்தான் இவர்களுடைய யோக்கியதையும் திறமையும்.

எனவே, இவர்களால் செய்யப்பட்ட அரசியல் சட்டம் நமக்குத் தேவையில்லை என்று நாம் கூறுவது மட்டும் போதாது; அதை ஒழித்துக்கட்ட—தோழர்கள் கேட்டபடி, ஒரு நாளை நாம் கைக்கொண்டு ஒழிக்கும் வழி தேடித்தான் ஆகவேண்டும்.

எனவே, நாம் என்ன செய்யவேண்டும்? அந்த அரசியல் சட்டம் நமக்குத் தேவை இல்லை; ஆகையால் அதன்கீழ் நாம் சட்டசபைக்குப் போவது சரியில்லை என்பதை உணர வேண்டும்.

ஆகவே, வருகின்ற தேர்தலில், எப்படியாவது, காங்கிரஸ் வெற்றிபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் செய்வது எல்லாம் அவர்களுடைய ஓட்டுப் பெட்டியில் நம்முடைய ஓட்டைப் போடாமல், மண்ணைக்கொண்டு நிரப்பவேண்டும். நீங்கள் காங்கிரசுக்காரர்களுக்கு ஓட்டுப் போடுவீர்களானால்—அது உங்கள் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், உற்றோர்க்கும் செய்த பெருங் கேடாய்த்தான் முடியும்.

[திருச்சி டவுன் ஹாலில், 17-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-9-1951]

18. அரசியல் சட்டத்தை எரிப்போம்—ஏன்?

தாய்மார்களே! தோழர்களே!

வெள்ளைக்காரன் வருவதற்கு முன் இந்தியா ஒன்றாக இருந்தது என்று யாராவது சொல்லமுடியுமா? திராவிட நாட்டைத் திராவிடன் அல்லாமல் வேறு யாராவது ஆண்டதாகச் சொல்லமுடியுமா? வெள்ளையன் அவன் ஜெயித்த பல நாடுகளை அவனது ஆட்சி சவுகரியத்துக்காக ஒன்றாகக் கட்டினான். முஸ்லிம் வைத்த பெயரை அவன் பயன் படுத்திக்கொண்டான். அது எப்படியோ உண்மைக்கு வந்துவிட்டது என்றவுடன், எந்த விதத்திலும் உனக்குச் சம்பந்தமில்லாத இந்த இராஜ்யத்தை, நீ மொகலாயர்கள்—வெள்ளையர்கள் ஆகியவர்களைவிட மோசமாகச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி ஆளுவது என்றால்—என்ன அர்த்தம்? அவர்கள் தங்கள் மொழியைப் புகுத்தியதுபோல் நீயும் புகுத்துகிறாய்

அரசியல் சட்டம் என்பதாக—மனுதர்ம சாஸ்திரம் போன்ற ஒரு அநாமதேய, 'ஆகா வழிச் சட்டத்தை' ஏற்பாடு செய்துகொண்டு அதன் பெயரால், நாங்கள் எது செய்தாலும் அடக்குவது, ஒடுக்குவது என்று ஆரம்பிக்கிறாய். அரசியல் சட்டத்தின்படி—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல் செய்வது தவறு; நாடு பிரிவினை கேட்பது தவறு; வகுப்புவாரி உரிமை கேட்பது தவறு—இப்படியாக எங்கள் எல்லா முயற்சிகளையும், 'சட்டப்படி தவறு' என்கிறாய்.

நான் சொல்கிறேன், 'இந்த அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்கமாட்டோம். இந்த அரசியல் சட்டம் எங்களுக்குத் தீங்கிழைப்பது ஆகும்; இது எங்கள் பிரதிநிதிகளால் செய்யப்பட்டதல்ல; இதை நெருப்பில் போட்டுப் பொசுக்குவோம்' என்று.

இந்த அரசியல் சட்டத்தை, நீ யார் சம்மதத்தின்பேரில்—யாரைக்கொண்டு செய்தாய்? வெள்ளைக்காரன் காலத்திலே—அவன் நலனுக்காக, அவன் வகுத்த தேர்தல் விதிகளின்படி, படித்தவனுக்கும் பணக்காரனுக்கும் ஓட்டு என்கிற அடிப்படையில் நடத்திய தேர்தலில் வந்தவர்களை வைத்துக்கொண்டு, அரசியல் சட்டத்தை நிறைவேற்றிவிட்டாய். வெள்ளையன் இந்தப் பிரதிநிதிகளைக் கொண்டு செய்த சட்டத்தை எதிர்த்து, நீயே சட்ட மறுப்புச் செய்திருக்கிறாய் என்பது—வடவனே, உனக்கு ஞாபகமிருக்கட்டும்!

100-க்கு இரண்டேமுக்கால் பார்ப்பானும், 100-க்கு 5 பணக்காரனும் அவர்கள் கூலி களும்தான் இந்த நாட்டின் பிரதிநிதிகளா? இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் சமுதாயத்தின்—ஏழைகளின் பிரதிநிதிகளைக் கொண்டா நீ அரசியல் சட்டம் செய்தாய்? 1946 தேர்தலின்போது, நீயே என்ன சொன்னாய்? '21 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளித்து, அந்தப்படி வாக்குரிமை அளிக்கப்பட்டு நடத்தப்பெறுகிற தேர்தலில் வந்த பிரதிநிதிகளைக்கொண்டு அரசியல் சட்டம் செய்யப்படும்' என்றுதானே சொன்னாய்? அந்தப்படி செய்தாயா?

ஏதோ வெள்ளைக்காரன் ஓடுகிற ஓட்டத்திலே உன்னிடத்திலே நாட்டைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டான் என்பதனால், எதுவும் செய்யலாம் என்று கருதிச் செய்து கொண்டாய்! உன் ஆதிக்கத்திற்கான முறையில் எங்களை நிரந்தரமாய் அடிமைப்படுத்திச் சுரண்டிக்கொண்டிருக்கும் தன்மையில் அரசியல் சட்டம் செய்துகொண்டு, அதை எங்கள் தலையில் வலுக்கட்டாயமாகப் புகுத்துவது என்றால், நாங்கள் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? இப்படி எங்களைக் கொலை பாதகம் செய்வதாகச் சொல்லியா, நீ வெள்ளைய ரிடம் அரசுரிமை பெற்றாய்?

எனவே, எப்படி இராமாயணம், பாரதம், கீதை, பிரபந்தம் போன்றவைகள் எல்லாம் நம்முடைய சமுதாய இயல்வாழ்வுக்கு ஏற்றதல்ல என்று கருதி அவைகளைக் கொளுத்தி னோமோ—கொளுத்துகிறோமோ, அதுபோலவே—இந்த நாட்டை அடிமைப்படுத்திச்

இரு இனத் தலைவர்கள்
சி. இராசகோபாலாச்சாரி அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

கொழும்பில் ஈ. வெ. இராமசாமிக்கு வரவேற்பளித்த
பொதுக்கூட்டக்காட்சி. பதினாயிரம் பேர் கூட்டம்.
("தினகரன்" பிரஸ் போட்டோ.)

1932-ல் அய்ரோப்பாவிலும், ரஷ்யாவிலுல் சுற்றுப்பயணம் செய்து
இலங்கை வழியாகத் திரும்பியபோது, கொழும்பில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு
அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி—'குடிஅரசு' 11-12-1932

சுரண்டி வாழ்வதற்கு என்றே ஆக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டத்தைக் கொளுத்து வோம்—கொளுத்துவோம்—கொளுத்துவோம்! (பெரிய கைதட்டல்).

திராவிட நாடு திராவிடர்களுக்கு என்று இருந்தால்—இன்று நடைபெறுகிற அக்கிர மங்கள், அதாவது—எல்லாம் வடநாட்டுக்காரனுக்கும் பார்ப்பானுக்கும்தான்; அவன் கழித்துப் போட்டது 'நமக்கு' என்கிற இந்த நிலைமை இருக்குமா? திராவிட மக்கள் என்ன மரக் கட்டைகளா? அவர்களுக்கு உணர்ச்சி, உரிமை வேட்கை இல்லையா?

[சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், 3-8-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-8-1952]

19. ஆச்சாரியாரும் நானும்

காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தாகிவிட்டது! அதை எதிர்த்து ஒழிக்கவேண்டியது அவசியம்! எதிர்ப்பு நிச்சயம்! ஆனால்—எதிர்ப்பு என்பது கூட்டு முயற்சியாலா, அல்லது, தனி முயற்சியாலா என்பதுதான் யோசிக்கப்படுகிறது.

சென்னை இராஜ்யத்தில் காங்கிரஸ் ஆட்சி மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டது.

இராஜ்ய மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் காங்கிரஸ் ஆட்சியை வெறுத்து, எதிர்த்து ஓட்டுச் செய்திருக்கிறார்கள்.

இந்த நிலையைக்கொண்டு கிரமமாகப் பார்த்தால், தேர்தலில் தோல்வியுற்ற கட்சி மந்திரிசபை அமைத்திருக்கிறது. அதிலும் காங்கிரசுக்கு எதிராக நின்று காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகள் பெற்று, வெற்றி பெற்ற கட்சியை இலஞ்சம் கொடுத்தும், காங்கிரஸ் ஒழுங்குமுறை விதிகளுக்கு விரோதமாகப் பதவி கொடுத்தும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மந்திரிசபை அமைத்திருக்கிறதானது—மாபெரும் அரசியல் நாணயக் குறைவான காரியமாகும்.

இது, நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக அல்ல; இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். காங்கிரசுக்கு எதிர்ப்பாக என்று ஒரு மந்திரிசபை அமைப்பதில் எனக்கு இஷ்டமும் இல்லை; நம்பிக்கையும் இல்லை. ஏனெனில், நிலைமை அதற்கு ஏற்ற தாக இல்லை. ஆனால், 'எதிர்ப்பு மந்திரிசபை' அமைக்கவேண்டுமென்றும், அமைக்கப் படலாம் என்றும் பேசிவந்தேன்.

அந்தப்படிப் பேசியது பெரிதும் காங்கிரசுக்கு எதிராக வெற்றிபெற்று வந்தவர்கள், காங்கிரஸ் வலையில் விழுந்துவிடக் கூடாது என்பதற்கும், பதவிக்கு ஆசுவே யாராவது நின்று வெற்றிபெற்று வந்திருப்பார்களானால் அவர்கள் ஏமாற்றமடைந்து விட்டதாகக் கருதி வேறு யோசனை செய்யாமலிருப்பதற்கும் ஆகவே எதிர்ப்பு மந்திரிசபை பற்றிப் பேசிவந்தேன். எதிர்ப்பு மந்திரிசபை அமைப்பு எப்படி முடிவு பெற்றிருந்தாலும், இனி அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அது சுலபத்தில் நடக்கப் போவதில்லை. ஏனெனில், இந்தக் காங்கிரஸ் மந்திரிசபை ஒழிந்தால்தானே அது முடியும்.

எனவே, இந்த மந்திரிசபை ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு நாம் சொல்லுகிற காரணங்கள் தவிர்த்து, வேறு பல காரணங்கள் சொல்லி காங்கிரசையும் காங்கிரஸ் மந்திரி சபையையும் எதிர்த்து வந்த, எதிர்க்க வேண்டும் என்று கருதுகிற மக்களின் முக்கியமான கடமையும் இந்த மந்திரி சபையை ஒழிக்கவேண்டியதேயாகும். ஆதலால், அந்தப்படியான மக்கள் கூட்டம் நாணயமான கூட்டமானால் அதனின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நமக்கு இருக்கலாம் என்பதில் எவ்வித ஆட்சேபமிருக்க முடியாது.

எதிர்ப்பு என்றால் கூட்டத்தில் பேசுவது, பத்திரிகையில் எழுதுவது, சொந்தப் பெயரில் அல்லது கட்சிப் பெயரில் அறிக்கை விடுவது ஆன காரியத்தோடு முடிந்துவிடுகிற காரியம் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டே, ஒவ்வொரு கட்சியும் தனிநபர் களும் எதிர்ப்பைப்பற்றிச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்.

காங்கிரசை எதிர்த்தவர்களில் இரண்டுதரமான கட்சிகளும், மக்களும் இருந்திருக்கிறார்கள்.

ஒன்று: பல காரணங்கள் கொண்டு காங்கிரஸ் ஆட்சியின் கேடுகளையும் கொடுமைகளையும் நாணயக்குறைவான சுயநலக் காரியங்களையும், அதனால் மக்களுக்கு விளைந்த பயன்களையும் கொண்டு காங்கிரஸ் ஆதிக்கத்தை—அமைப்பை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துடைய கட்சிகள், கருத்துடைய மக்கள் ஆவார்கள்.

இரண்டு: பதவிகளுக்காக, பயனுக்காக அதாவது—'காமன் வீல்' கட்சி போன்ற தோழர். மாணிக்கவேலு நாயக்கர் (Type)போன்ற மக்கள்; இவற்றுள் தனது சுயநலத்துக்காக ஒரு தனி மனிதர் அல்லது ஒரு கோஷ்டி அமைத்துக்கொண்ட கட்சிகள் எதிர்ப்புக்குப் பயன்படா என்பது நமக்குத் தெரியும். அவர்கள், 'சுவர்மேல் பூனையாக' இருந்து வருவார்களே தவிர, எதிர்ப்பு வேலைக்குப் பயன்பட மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஆச்சாரியார் வீசி இழுத்துக் கட்டியிருக்கும் வலை இன்னமும் சுருட்டப்படாமல் இருந்துவருகிறது.

ஆனால், முதலாவது தரத்தில் கூறப்பட்ட மக்களின் ஒத்துழைப்பு எதிர்ப்புக்கு இருக்கலாம் என்றாலும், அவர்கள் மேற்சொன்ன மாதிரி பேச்சு, எழுத்து அறிக்கையோடு மாத்திரம் நில்லாமலும், 'காங்கிரசில் சேருவதில்லை' என்கின்ற பிரதிக்கினையோடு மாத்திரம் இல்லாமலும் தீவிரமான கிளர்ச்சிக்கு—அதாவது நேரிடை நடவடிக்கை என்பதற்குத் தயாராய் இருக்கிறார்களா? அடி, உதை, கண்ணீர்ப் புகை, ஜெயில், துப்பாக்கிக் குண்டு ஆகியவைகள் பெறத் தயாராய் இருக்கிறார்களா? இருக்க முடியுமா? என்பவைகள் முன்கூட்டியே நன்றாய் ஆலோசித்து, தங்கள் நிலையையும் தாங்கள் எதற்காகப் பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டவர்கள்போல் இருந்து வருகிறார்கள் என்பதையும் சிந்தித்து முடிவுகட்ட வேண்டியவர்களாவார்கள்.

இந்தக் கிளர்ச்சியில் நமது கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள், மந்திரிசபை எதிர்ப்புக்கு ஆன கொள்கைகளில் சிறிது மாறுதல் இருப்பதாய் இருந்தாலும்—எதிர்ப்புக் காரியத்திற்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டியவர்களே ஆவார்கள். ஆனால், அவர்களது மேலிடம் எந்த விநாடியில், எந்த ஆக்கினை இடுகிறதோ அதைப்பொறுத்தே நடக்க வேண்டியவர்களானதால்—கிடைத்தவரையில் நல்ல வாய்ப்பு என்றுதான் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஏனெனில், கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்னாட்டுத் தலைவர்கள் கையில் இல்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அதிலும், அந்தக் கட்சி மிகவும் கட்டுப்பாடான கட்டுத்திட்டங்களுக்கு அடங்கிய கட்சி என்பதையும் நான் சொல்லித்தான் மக்கள் உணரவேண்டும் என்பதும் இல்லை.

அடுத்தாற்போல் பிரகாசம் கட்சி. இது காங்கிரஸ் எதிர்ப்பில் எந்த அளவுக்குத் தீவிரக் கிளர்ச்சியில் ஒத்துழைக்கவோ, கலந்துகொள்ளவோ, ஆதரவளிக்கவோ முடியும் என்பதைக் காண்பது சிரமமான காரியமாக இருக்கிறது.

அதைப்பற்றி அதிகம் குறிப்பிடாமல் கிடைத்தவரை அனுகூலம் என்றுதான் கொள்கிறேன்.

காங்கிரஸ் மந்திரி சபைக்கு விரோதமாக இந்தி எதிர்ப்பை மூன்று முறை நடத்தினேன். வெற்றி பெற்றேனா, தோல்வியுற்றேனா என்பது ஒருபுறமிருந்தாலும்—அவற்றால் ஒரு அளவுக்கு அனுபவம் பெற்றிருப்பதோடு, கழகமும் பொது மக்களிடம் நம்பிக்கையும் செல்வாக்கும் பெற்றிருக்கிறது.

நமது கழகத் தோழர்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒரு நல்ல கிளர்ச்சிக்கு—தீவிர கிளர்ச்சிக்கு, இதற்கு மேலான நல்ல நிலைமை எதிர்பார்ப்பது அதிகமேயாகும்.

எப்படியிருந்தாலும் கிளர்ச்சி செய்தாக வேண்டியது அவசியம் என்கிற நிலையில்— நான் மாத்திரமல்லன் ; திராவிடர் கழகம் மாத்திரமல்ல; நாடு முற்றும், மக்கள் முழுமையும் எதிர்பார்க்கிற—தங்கள் கடமை என்று எண்ணுகிற சமயம்; அதுவும் நெருக்கடியான சமயம். ஆனதால், கடைசிப்பட்சம் என்னையே எண்ணியாவது, கிளர்ச்சி துவக்க இருக்கிறேன். இதற்காக, மாநாடு கூட்டப்போகிறேன்; மக்கள் கருத்தை மேலும் அறியப் போகிறேன்; மக்களிடம் கையெழுத்து வாங்க முயற்சிக்கிறேன்; பல பெரியவர்களுடையவும், கட்சித் தலைவர்களுடையவும் கருத்தையும் அறிகிறேன்.

ஆச்சாரியார் நிர்வாகம், கிளர்ச்சியில் எப்படி நடந்து கொள்ளும் என்று நம்மால் முடிவு செய்யமுடியாது; விட்டுப்பிடித்தாலும் பிடிக்கும்; உடனடியாக அடக்குமுறை துவக்கினாலும் துவக்கும். நமக்கும், இரண்டும் ஒன்றுதான்.

என் விஷயத்தில் ஆச்சாரியார் தனது கொள்கையில் எந்த மாறுதலும் செய்து கொள்ளமாட்டார். அவர் கடமையை அவர் செய்துதான் தீருவார். அவர் என்ன செய்தாலும் அவர் கடமையை அவர் செய்கிறார், செய்தார்—என்றுதான் எண்ணுவேனே தவிர, நானும் வேறுவிதமாய் எண்ணமாட்டேன். அன்றியும், அவருங்கூட என் கடமையை நான் செய்கிறேன்; அதுவும் வேறு நிவர்த்தி இல்லாத நிலையில் செய்கிறேன்—என்றுதான் என்னைப்பற்றிக் கருதுவாறே தவிர, தனிப்பட்ட விருப்பு-வெறுப்பு காரணமாய் நடத்துகிறேன் என்று எண்ணமாட்டார்; எண்ணவுங்கூடாது என்றே தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, இந்தி எதிர்ப்பின்போது, ஓமாந்தூர் ரெட்டியார் என்னை நேரில் அழைத்துக் கேட்டபோதும், நான் இதையே சொன்னேன்; அவரும் இதையே சொன்னார். அவரால் கூடியதைச் செய்தார்—நம் பிள்ளைகளின் கால், கை ஒடியும்படி மலபார் போலீசை விட்டு அடித்தார். அதன் பிறகு, அவர் நடத்தைகள் பலவற்றை மக்கள் சந்தேகப்படும்படியான அளவுக்கு நான் ஆதரித்தேன்; பலர் அவரிடம் காரியம் சாதிக்க என்னிடம் சிபாரிசுக் கடிதம் கேட்கும்படியான அளவுக்கு நான் ஆதரித்தேன்.

இப்போது மக்கள் பலர் என்னை நம்புவதில்லை. நான் ஆச்சாரியாருக்கு வேண்டியவன்; அவர் அன்புக்குப் பாத்திரமானவன் என்றெல்லாம் கருதி—நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்று கருதுகிறார்கள்; எனக்கு அந்தப்படி சிலர் எழுதியுமிருக்கிறார்கள்; சிலர் நேரில் சொன்னார்கள். மணியம்மைகூட என்னை, 'நீங்கள் இருவரும் திருடர்கள்' என்று சொன்னார்கள் என்றால், மற்றவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்; நினைக்க மாட்டார்கள்!

உண்மையில் நான் ஆச்சாரியாருக்கு விரோதியல்லன்; அவரிடம் எனக்கு விரோதமோ குரோதமோ கிடையாது; அவருக்கும் இருக்காது; இருக்க நியாயமில்லை என்றுதான் கருதுகிறேன்.

நாணயத்தில், அவர் பார்ப்பனர் விஷயத்தில் தவிர, மற்ற காரியங்களிலும், நிர்வாகத்திலும் மற்ற காங்கிரஸ்காரர்களைவிட எவ்வளவோ மேலானவர்தான். ஆனால், அவர் பார்ப்பன சமுதாயத்திற்கு, 'தேவர்களுக்கு மகாவிஷ்ணு எப்படியோ' அப்படிப் போன்ற ஆபத்பாந்தவர்.

நான் பார்ப்பனரல்லாத திராவிட மக்களுக்கு அவரைப்போல் ஆபத்பாந்தவனாய் இல்லாவிட்டாலும், அவர்களுக்காகப் பாடுபடப் பார்ப்பனரல்லாதாரில் வேறு யாரையும் வெளிப்படையாகக் காண முடியவில்லையே! பெரும்பாலான மக்கள் சுயநலமிகளாகவும், சமயசஞ்சீவிகளாயும் இருக்கிறார்களே என்று சரியாகவோ, தப்பாகவோ கருதிக்கொண்டு அல்லல்பட்டு, அவர்களுக்காக ஏதோ செய்யவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறவன்.

எனக்கு இன்னும் எத்தனையோ துறைகளில் எவ்வளவோ வேலை இருக்கிறது; மற்றும் என் வேலையின் பயனைத் தனிப்பட்ட முறையில் அனுபவிக்க எதிரிக்கு உள் ஆளாக இருந்து கவிழ்க்கப் பார்க்கும் துரோகிகள் சிலர் 'நம்மிலேயே' இருந்து தொல்லை கொடுப்பதால் அவர்களோடு மாரடிக்க வேண்டிய வேலை இருந்தாலும்—இது முக்கியமென்றே கருதுகிறேன்.

ஆதலால், திராவிடத் தோழர்களே! இளைஞர்களே! மாணவர்களே! என் வாழ்வில் இது கடைசிப் போராட்டமாக இருந்தாலும் இருக்கலாம். அதைப்பற்றிக் கவலைப்படா தீர்கள்! உங்கள் திராவிட சமுதாயம் உங்கள் கடமையைச் செய்ய அழைக்கிறது!

'திராவிட சமுதாயம் இனஉணர்ச்சி அற்ற துரோக சமுதாயம்' என்று கருத இடங் கொடுக்காமல் உங்கள் கடமையைச் செய்ய வாருங்கள்!

['விடுதலை'-தலையங்கம்—11-4-1952]

20. பெரியார் அறிக்கை

காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டு 23 நாள் ஆகிவிட்டது. இந்த மந்திரிசபை இந் நாட்டிலிருப்பது இந் நாட்டு மக்களுக்கே பெருத்த அவமானமாகும். எந்தவிதத்திலும் இம் மந்திரிசபை அரசியல் தர்மத்துக்கோ, நாணயத்துக்கோ, ஒழுக்கத்துக்கோ கட்டுப்பட்ட மந்திரிசபை என்று சொல்ல முடியாததாகும். இது காங்கிரஸ் மந்திரிசபையாக இருக்கிற தென்று கருதியோ—அல்லது ஆச்சாரியார் மந்திரிசபையாக இருக்கிறதென்று கருதியோ நான் முக்கியமாக இதைக் குறைகூறவில்லை; ஒழிக்கப்படவேண்டும் என்று ஆசைப்பட வில்லை.

நமது அரசியல் சட்டமென்பதே மக்கள் பிரதிநிதித்துவமல்லாத தனிப்பட்ட சுயநலமி களாகிய பார்ப்பனர், பணக்காரர், வடநாட்டார் ஆகியவர்களுடைய பாதுகாப்புக்காக அவர் களாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பது ஒருபுறமிருந்தாலும்—இன்றைய மந்திரிசபை யானது, அந்த அரசியல் சட்டத்துக்கும்கூட ஏற்றதல்லாததாக இருக்கிறது. ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், அரசியல் சட்டத்தைச் செய்தவர்கள் மக்கள் பிரதிநிதிகளல்லர்; மக்களில் ஒரு சாராராகிய படித்தவர்களுக்கும், வரி கொடுப்பவர்களுக்கும் மாத்திரம் பிரதி நிதிகளாவார்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன். படித்தவர்களென்றால்—பார்ப் பனர் யாவரும்; வரி கொடுப்பவர்களென்றால்—செல்வமுடையவர்கள் யாவரும். இவர்கள் தாம் அரசியல் சட்டம் செய்தவர்களுக்கு 'வோட்' செய்திருக்கிறார்கள்.

அப்படியிருந்தும், அந்த அரசியல் சட்டப்படி அதற்குப் பின்னாலேற்பட்ட பொது ஜன வோட்டுரிமையின்கீழ் தேர்தல் நடந்திருக்கிறது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் பெரு வாரியாகத் தோல்வியடைந்திருக்கிறது. அதாவது 375 ஸ்தானங்களில் காங்கிரஸ்காரர்கள் 371 ஸ்தானங்களுக்கு ஆட்களை நிறுத்தியும், 152 பேர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். காங்கிரசுக்கு எதிரானவர்கள் 223 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதோடு, 'வோட்டு'ச் செய்த கணக்கும் காங்கிரசுக்கு 66,77,588 வோட்டுகளும், காங்கிரசுக்கு எதிர்ப்பாக 1,26,65,126 வோட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

இப்படியிருக்க, ஒரு மோசமான 'மைனாரிட்டி'க் கட்சியான காங்கிரஸ்தான் மந்திரி சபை அமைத்திருக்கிறது. இப்படி அமைத்திருப்பதில் காங்கிரஸ் கட்சி கவர்னருக்குக் கொடுத்த எண்ணிக்கையில் 156 பேர்களும், காங்கிரசுக்கு எதிர்ப்பானவர்கள் கொடுத்த எண்ணிக்கையில் 166 பேர்களும் இருந்திருக்க, கவர்னர் அவர்கள் குறைந்த எண்ணிக்கை யுடைய காங்கிரஸ்காரரையே மந்திரிசபை அமைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இப்படிச் செய்ததற்குக் கவர்னரவர்கள் சொல்லும் சமாதானம் என்னவென்றால், காங்கிரஸ்

ஒரே கட்சி என்றும் காங்கிரஸ் அல்லாதவர்கள் பல கட்சிக்காரர்கள் என்றும், 'ஆதலால், ஒரு கட்சிக்காரரையே மந்திரிசபை அமைக்கச் சொல்லிவிட்டேன்' என்றும் சொன்னதாகும்.

என்றாலும், இதுவும் நேர்மையான சமாதானமல்ல. ஏனெனில், காங்கிரஸ்காரர்களும் தங்கள் கட்சியோடு வேறு கட்சிக்காரர்களையும், கட்சியே இல்லாத தனிப்பட்ட நபர்களையும் சேர்த்துத்தான் மந்திரிசபை அமைத்திருக்கிறார்கள். அப்படி அமைத்திருப்பதிலும் நாணயமற்றவர்களையும், வோட்டர்களுக்குத் துரோகம் செய்தவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சர்க்கார் தங்களுடைய அக்கிரமமான இந்தக் காரியத்துக்குத் துரோகிகளையும், சுயநலக்காரர்களையும் தங்களோடு சேர்த்துக்கொண்டு இந்த இராஜ்ய பாரம் செய்வதானது—அரசியல் துறையை மகா ஒழுக்கக்கேடானதாகவும், நாணயக்கேடானதாகவும் ஆக்குவதற்கு வழிகாட்டுவதேயாகும் என்பதோடு, பொது அரசியல் நாணயத்தை முன்னிட்டு இந்தக் காரியம் சிறிதும் மன்னிக்க முடியாததுமாகும்.

இதுதவிர, மந்திரிசபை அமைப்பதற்குக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராக ஏற்படுத்தப்பட்ட தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அரசியல் சட்டத்திற்கேற்ப, அல்லது ஜனநாயக முறைக்கேற்ப எந்தவிதத்திலும் பொருத்தமில்லாதவரேயாவார். ஏனெனில், அவர் ஒரு 'வோட்டரா' என்பதே சந்தேகம்! அன்றியும் அவர் தேர்தலில் மக்கள் பிரதிநிதியாக வந்தவராக இல்லாமல், 'நாமினேஷனில்' காங்கிரஸ் சர்க்கார் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர். அந்த நியமனமும்கூடப் பொருத்தமற்றதும், நியமன சட்ட விரோதமுமான நியமனமாகும். இப்பொழுது இருந்துவரும் காங்கிரஸ் சர்க்கார் தலைமையானது மக்கள் பிரதிநிதித்துவமுள்ளவர்களுடைய தலைமையாக இல்லாமல்—நியமனக்காரர்களுடைய தலைமையிலிருப்பதாகும். மந்திரிசபையில் 15 மந்திரிகள் இருந்தாலும், ஆச்சாரியார் அவர்கள்தான் பொறுப்புடையவராயிருக்கிறார். மற்ற மந்திரிகள் ஆச்சாரியார் சொல்லுகிறபடி கேட்கிறவர்களே தவிர, சுதந்திரமுடையவர்களல்லர்.

இப்படிப்பட்ட ஒரு சட்ட விரோதமானதும், ஏதேச்சாதிக்காரத் தன்மையுடையதுமான ஒரு காரியம் நடைபெற சர்க்கார் ஏற்பாடு செய்வதானால், இந்த சர்க்கார் எலக்ஷனை எதற்காக நடத்தியிருக்க வேண்டும்? எலக்ஷன் நடந்ததில் சர்க்காருக்குச் சுமார் ஒரு கோடி ரூபாயாவது இந்த இராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் செலவாகியிருக்கும். பத்தாயிரக் கணக்கான சர்க்கார் சிப்பந்திகளுக்கும் வேலைத் தொந்தரவு ஏற்பட்டிருக்கும். விடுமுறை காரணத்தினால் அரசாங்கத்திற்கும் எவ்வளவோ வேலை நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது.

இதைத் தவிர, மக்களுக்கும் இந்த எலக்ஷனால் இந்த இராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 2 கோடி ரூபாயாவது செலவாகியிருக்கலாமென்பதோடு, எவ்வளவோ மக்களுக்குத் தொல்லை, அலைச்சல், பலவிதங்களில் நஷ்டம் முதலியவை ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வளவு நடந்தும் 'மெஜாரிட்டி' அல்லாத, மக்கள் பிரதிநிதித்துவமல்லாத—ஏதேச்சாதிகார நியமன மெம்பரின் மந்திரி ஆட்சி இருக்கிறதென்றால் இதை என்ன ஆட்சி என்று சொல்லுவது? இந்த ஆட்சியை ஏற்றுக்கொண்டு, இதை ஒழிக்காமலிருப்பதென்பது இந்த இராஜ்ய மக்களுக்கு ஒரு பெரிய மானக்கேடான காரியமல்லவா? இதற்குத்தானா இந்த இராஜ்ய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி ஒழியவேண்டுமென்றும், மக்களாட்சி ஏற்படவேண்டுமென்றும் பாடுபட்டதும், பல்லாயிரக்கணக்கான மக்கள் பலதடவை சிறை சென்று கிளர்ச்சி செய்ததும்?

காங்கிரஸ் ஏதேச்சாதிகார சர்க்காரின் இந்தக் காரியமானது—இந்த நாட்டையும், காங்கிரசுக்கு எதிராக வோட்டுச் செய்த $1\frac{1}{2}$ கோடி மக்களையும் அலட்சியமும் அவமானமும் இழிவும் செய்ததாகும் என்பதே எனது கருத்து.

அதனால், எக்காரணத்தினாலாவது இந்த 'மைனாரிட்டி—நியமன மந்திரி ஆட்சி' ஒழிக்கப்பட்டு மக்களின் உரிமையைக் காப்பாற்றவேண்டியது இந்த இராஜ்யத்தின் ஒவ்வொரு மனிதனுடையவும் கடமையாகும்.

இதற்காகச் செய்யப்படும் கிளர்ச்சிகளை இந்த அரசாங்கமோ, அல்லது அரசாங்கத் தலைமை மந்திரியான ஆச்சாரியாரவர்களோ, தனிப்பட்ட முறையில் விருப்பு வெறுப்புக் காரணமாகச் செய்யப்படும் கிளர்ச்சி என்று கருதுவது தவறான கருத்தாகும்.

இந்தக் கிளர்ச்சியை எப்படி நடத்துவது என்பது ஒரு பெரிய பிரச்சினைதான். என்றாலும், பயன்தரத்தக்க மாதிரியில் நடத்தப்பட்டாக வேண்டும். கிளர்ச்சி வெற்றி பெறுவதானாலும் தோல்வி அடைவதானாலும் சரி—கிளர்ச்சியில் எந்த உருவத்திலும் பலாத்காரம் இருக்கக்கூடாது என்பது எனது உறுதியான முடிவு.

இந்தக் கிளர்ச்சியானது அரசியல் ஒழுக்கத்தையும், நாட்டினுடைய-மக்களுடைய சுயமரியாதையையும் பொறுத்ததுமானதினால், இதற்கு இந்த நாட்டு மக்கள் எல்லோருமே ஆதரவளிக்க வேண்டியதும், கிளர்ச்சியில் கலந்துகொள்ள வேண்டியதும் மிகமிக முக்கிய மான கடமையாகும். கிளர்ச்சியின் முறையும் தன்மையும் சீக்கிரம் வெளியிடப்படும். ஓட்டர்கள், குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் தயாராய் இருக்கவேண்டும்!

['விடுதலை'–தலையங்கம்—4-5-1952]

21. என்னைப்பற்றி ஆச்சாரியார்

என்னைப்பற்றி மதிப்பிற்குரிய சி. ஆர். ஆச்சாரியார் அவர்கள் திருநெல்வேலி யிலும், சென்னை சட்டசபையிலும் பேசின பேச்சைப்பற்றி நான் ஒன்றும் பதில் சொல்ல வில்லை என்பதாகப் பல தோழர்கள் கவலைப்படுகிறார்கள்.

ஆச்சாரியார் அவர்கள் என்னைப்பற்றி, என் பெயரை உச்சரிக்கும்போது காட்டிய அன்புக்கும், மரியாதைக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். இது சம்பிரதாய நன்றியே யாகும்.

அவரது பதவித் துறையில், அவர் உணவுக் கட்டுப்பாட்டை—கண்ட்ரோலை— எடுத்துவிட்டதற்கு ஆக நான் நன்றி காட்டுகிறேன். இது பொதுநலத்தை முன்னிட்டு உண்மையாகக் காட்டும் நன்றியாகும்.

ஆச்சாரியாருக்கும், எனக்கும் அரசியல் துறையில் சில கருத்து வேற்றுமைகள் உண்டு. அவைகளில் ஒரு சிறியதையும் அவரும் விட்டுக்கொடுக்க மாட்டார்; நானும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்றே கருதிக்கொண்டிருக்கிறேன். இப்படிச் சொல்லுவது கடவுளைப்பற்றியது அல்ல; அது எனக்கு மிகச் சிறிய விஷயம். ஏனெனில், நாங்கள் தனிப்பட்ட தங்கள் தங்கள் சுயநலத்திற்காகப் பொதுவாழ்வில் இறங்கியிருந்தால் சுய நலத்தை முன்னிட்டு விட்டுக்கொடுப்பது 'சகஜ'மாகும். இரண்டு பேருக்கும் சுயநல மில்லை—ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும்? பொதுநலத்திற்கு ஆக விட்டுக்கொடுக்க நேரிட்டால், அது விட்டுக்கொடுத்தது ஆகாது; சம்பாதித்ததுமே ஆகும். ஆதலால், கருத்து வேற்றுமைக்குப் போராட்டம் நடக்கும் என்பதில் அய்யமில்லை.

என்னைச் சுற்றிலும் திராவிட மக்களிலேயே, என்னால் பலன் அடைந்தவர்களி லேயே துரோகிகளையும், சுயநல சமயசஞ்சீவிகளையும் வைத்துக்கொண்டிருக்கிற நான்— சில போராட்டங்களில் நல்ல யோக்கியர்கள், நம்பத் தகுந்தவர்கள் என்று கருதிய தோழர்கள் பலர் கழுத்தறுக்கும்படியான துரோகம் செய்துவிட்டுப்போன அனுபவத்தைக்கண்ட நான், அப்படிப்பட்ட துரோகிகளையும் பொதுமக்களும் இளைஞர்களும் ஆதரிப்பதையும் கண்டு கொண்டிருக்கிற நான், பெரும் போராட்டங்களைத் துவக்குவதானால் மிகவும் யோசிக்க வேண்டியதாகும்.

என்றாலும், துரோகம் எவ்வளவு பெரிதானாலும், துரோகிகளுக்கு எவ்வளவு ஆதரவாக இருந்தாலும், எனக்குப் பொதுமக்கள் ஆதரவு இருக்கிறது என்கின்ற நம்பிக்கை உண்டு என்பதோடு, என்னிடத்திலும் எனக்கு நம்பிக்கை உண்டு. உண்மையான நண்பர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதிலும், கஷ்ட நஷ்டங்களுக்கு உடன் இருந்து ஒத்துழைக்கச் சில பெரியவர்களும் பல இளைஞர்களும் இருக்கிறார்கள் என்பதிலும் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. இதைக்கொண்டு எப்படிப்பட்ட போராட்டம் துவக்குவது என்பதுபற்றித்தான் யோசனை செய்துகொண்டிருக்கிறேன். ஆதலால், சிலர் நினைக்கிறபடி ஆச்சாரியாரை எதிர்க்கவோ, ஆச்சாரியாருக்கு எதிராகப் போராட்டம் துவக்கவோ பயமோ தாட்சணியமோ கொண்டிருக்கிறேன் என்று யார் கருதுவதும் அதர்மமேயாகும். அன்றியும், ஆச்சாரியாருக்குக் கறுப்புக்கொடி பிடிக்கவில்லையென்றும் மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி பிடிக்கவில்லையென்றும் என் மீது சிலர் குறைகூறுகிறார்கள்.

ஒழிக்கப்பட்ட காங்கிரசை, ஒழிக்கப்பட்ட மந்திரிசபையை, ஒழியப்பட இருந்த ஆச்சாரியாரை நம்மவர்கள் என்கிற துரோகிகள் ஆதரித்து உயிர்கொடுத்தால், அதற்காக யாருக்குக் கொடி பிடிப்பது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டாமா? சிந்திப்பதோடு கறுப்புக்கொடி பிடிக்கவும் மக்கள் மதிக்கத் தகுந்த ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமா?

நம் வீட்டுப் பெண், 'விபசாரத்தனம்' செய்து நம் எதிரிக்கு, 'வைப்பாட்டி'யாகப் போய் அமர்ந்து கொண்டால், அந்தப் பெண்ணை இழிவுபடுத்தாமல், அதற்காக அவளைப் பெற்ற நாம் வெட்கப்படாமல், வைப்பாட்டியாகக் கொண்டவன்மீது கோபங்கொண்டு, அவர்களுக்குப் பிறந்த குழந்தையை வெறுப்பது என்றால், அது எப்படி மானமுள்ள காரியமாகும்? முதலாவது, அந்தப் பெண்ணை இழிவுபடுத்தி வீட்டைவிட்டுத் துரத்தவேண்டாமா? ஆதலால், வேறு குற்றம் காண்கிறபோது அதைக் காட்டிக் கறுப்புக்கொடி பிடிக்கலாம். 'நம்மவர்கள்' செய்த துரோகத்தை, அதுவும் கும்பல் கும்பலாகச் செய்த துரோகத்தைப் பார்க்கும்போது 'எதிரிக்கு'க் கறுப்புக் கொடி பிடிப்பது சாதாரண காரியமாகிவிட்டது.

நாளைக்கு, பஸ்கட்டண வரி சட்டசபையில் நிறைவேறப்போகிறதென்றால், அதற்கு ஆச்சாரியார் என்ன செய்வார்? காங்கிரஸ்காரர்கள் என்ன செய்வார்கள்? பஸ்கட்டண வரி நிறைவேறினால் காங்கிரசுக்கு எதிராகப் பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் சில அயோக்கியர்கள் கொடுக்கும் ஆதரவு காரணமாகுமே என்பது தவிர, ஆச்சாரியாரும் அவரது மந்திரிசபையுமே எப்படிக் காரணமாகும்? அல்லது காங்கிரசே எப்படிக் காரணமாகும்?

இதை ஏன் எழுதுகிறேன் என்றால், நாம் நம்பிய—நாம் பிடித்து வைத்த ஆட்களே நமக்குத் துரோகம் செய்கிறமாதிரியாக நமது அரசியல் வாழ்வு இருந்து வருமானால், இதற்குப் பரிகாரம் செய்யாமல் காங்கிரசைக் குறைசொல்லிக்கொண்டே வீண் உழைப்பு உழைப்பதால் மாத்திரம் என்ன பயன் ஏற்படக்கூடும்?

இந்த எலக்ஷனில் நான் பட்டபாடு எவ்வளவு? அனுபவித்த கஷ்டம் எவ்வளவு? ஏற்பட இருந்த ஆபத்து எவ்வளவு? இதற்கெல்லாம் பரிகாரம் இந்தத் துரோகச் செயல்தான் என்றால்—இந்த இழிசெயல்கள் இனிமேலாவது ஏற்படாமல் இருக்கும்படி நாம் ஏதாவது செய்யத் தகுதியுடையவர்களாக இல்லாவிட்டால், இனியும் இப்படிப்பட்ட அரசியலைப் பற்றிக் கவலைகொள்வது பயனுடையதாகுமா? வேறு நாடுகளில் இப்படிப்பட்ட துரோகிகள் என்ன பலன் அடைகிறார்கள் என்பது யாருக்குத் தெரியாது?

துரோகம் செய்தவர்களில் பலர், 'திராவிடநாடு பிரிவினை'க்கு ஆதரவாளர்களாக இருக்க எழுத்துமூலம் வாக்களித்தவர்கள் என்று கருதும்போது—அந்தப் பிரச்சினையைக் கூட விற்றுத் தின்னும்படியான அவ்வளவு துணிவுள்ள மக்களாக 'நம்மவர்கள்' ஆகிவிட்டார்களே என்று வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

துரோகிகளின் நடத்தையை, அவர்கள் தேர்தலில் நாம் அவர்களுக்கு ஆதரவளிப்பதைப்பற்றி அவர்கள் யோக்கியர்களாக நடந்து கொள்ளவேண்டும் என்று கருதும்படியான உரிமை இல்லாவிட்டாலும், அவர்கள் ஓட்டர்களுக்கும் நமக்கும் கொடுத்த வாக்குறுதிப்படி நடக்காத அயோக்கியத்தனத்தைக் கண்டிக்கிற உரிமை இல்லை என்று யார் சொல்லமுடியும்? 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்' என்ற சொல்லை, இதைவிட வேறு எந்த விதமான அயோக்கியத்தனத்திற்குப் பயன்படுத்த முடியும்?

இனி ஸ்தல ஸ்தாபனத் தேர்தலும் பக்கத்தில் வரப்போகிறது. இதுபோன்ற துரோகிகளும்—மூன்றாந்தர, நாலாந்தர மக்களும் வாயில் தண்ணீர் ஊற்றெடுத்துத் திரிகின்றனர். நம் ஆதரவால்—நம் பேரால் பதவிக்குப் போனவர்களில் யார் யோக்கியர்களாக, நன்றி விசுவாசமுள்ளவர்களாக, நாணயமுள்ளவர்களாக நடந்து கொண்டார்கள் என்று பார்த்தால், இந்த விஷயங்களில் காங்கிரஸ்காரர்களிலேயே—பார்ப்பனர்களிலேயே நம்மவர்களில் உள்ளவர்களைவிட அதிகமான யோக்கியர்கள் உண்டு என்று கருதலாம்போல் தோன்றுகிறது. ஒரே 'ஸ்டாக்கிலி'ருந்து—சுயநலவசதி ஒன்றேயே கருதி, காங்கிரசுக்காரர்களாகவும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களாகவும் மக்கள் பிரிகிறதனால், காங்கிரஸ்காரர்களைவிட—எதிர்ப்பாளர்கள் சுபாவத்தில் யோக்கியர்களாக, நாணயஸ்தர்களாக இருக்கமுடியும் என்று எதைக் கொண்டு கருதமுடியும்?

எனவே, இந்த யோக்கியர்களால் நாட்டில் காங்கிரஸ் எதிர்ப்புக்கு நல்ல அளவுக்கு இருந்த சக்தி இப்போது மிகவும் குறைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த இலட்சணத்தில் மாணிக்கவேலு நாயகரின் துரோகத்தை எடுத்துச் சொன்னால் வன்னியகுல க்ஷத்திரிய சாதிக்குக் கோபம்வந்து, அவர்கள் நம்மை வைவதும், இரத்தினத்தின் துரோகத்தையும் அவர் போன்றோரின் துரோகத்தையும் எடுத்துக் கூறினால் அந்த சமூகத்துக்குக் கோபத்தை உண்டாக்கி, அவர்கள் நம்மைக் குறைகூறுவதும் என்று ஆகி, முடிவில் இப்படிப்பட்ட பெரும் ஜனத்தொகை கொண்ட சமுதாயங்களின் தன்மை இப்படி ஆகிவிட நேருமானால் மற்ற சிறுபான்மை ஜனத்தொகை கொண்ட மக்களுக்கு இந்த நாட்டில் அரசியல் நல்வாழ்வோ, பாதுகாப்போ எப்படி இருக்கமுடியும்?

தோழர்களே! இப்பொழுது ஆச்சாரியாரை, ஆச்சாரியார் மந்திரி சபையை, ஆச்சாரியார் ஆதிக்கத்தை ஒழிக்க முடியுமா? முடிந்தாலும் அதை ஒழிப்பது பயன்படுமா? ஒழித்த பிறகு என்ன? அப்போது இந்தத் துரோகிகள் எங்கு போய்விடுவார்கள், என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி முன் யோசனையோடு யோசித்துப் பாருங்கள்.

எனது போராட்டம் இந்திய யூனியன் ஆட்சியையே ஒழித்துக்கட்டி, சென்னை இராஜ்யத்தை விடுவித்து சுதந்திர நாடாக்க வேண்டியதற்காக நடத்தப்படும் போராட்டமானதால்—ஆச்சாரியார் ஆட்சியை, காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்கிற காரியம் இந்தத் துரோகிகள் செயலால் சிறிதும் தடைப்பட்டு விடாது என்பது மாத்திரமல்லாமல், ஆச்சாரியாருக்கு நான் நண்பனாக இருந்தாலும் எனக்கு ஆச்சாரியார் நண்பனாக இருந்தாலும்கூடப் போராட்டம் எந்த அளவுக்கும் தடைப்பட்டுவிடாது. ஏனெனில், எங்கள் போராட்டம் தனிப்பட்டவர்கள் போராட்டம் அல்ல என்பதை மேலேயே கூறிவிட்டேன்.

['விடுதலை'-தலையங்கம்—9-7-1952]

22. அரசியலில் ஒழுக்கக் கேடு

மனித சமுதாயத்தில் இன்று ஒழுக்கம் மிகமிகக் குறைந்துவிட்டது; சுமார் 50, 60 வருஷங்களுக்கு முன்பு இருந்த ஒழுக்கம் இன்று இல்லை.

காந்தி காங்கிரஸ் ஏற்படுவதற்குமுன் (1920-ஆம் ஆண்டிற்குமுன்) இருந்த ஒழுக்கம் இன்றில்லை. அன்று மோசமும் வஞ்சகமும் துரோகமுமே கொண்ட வியாபாரி, வக்கீல், வேசி (தேவடியாள்) ஆகியவர்களுக்குள்ளாக நல்ல யோக்கியர்கள்—ஒழுக்க சீலர்கள் என்பவர்கள் இருந்தார்கள். மற்றும் பொதுமக்களிலும், பக்திமான்கள் என்பவர்களிலும், மதத்துறையிலும், அதிகாரிகள் என்பவர்களிலும், அரசியல் துறையிலும் நல்ல யோக்கியர்கள்—ஒழுக்க சீலர்கள் என்பவர்கள் இருந்தார்கள்.

ஏதோ தொழில் முறைக்காக—ஒழுக்க ஈனமாக யோக்கியமற்ற தன்மையாக நடந்து கொள்வது என்பதல்லாமல், அது தவிர்த்த மற்ற துறைகளில் யோக்கியர்களாக அனேகம் பேர் இருந்தார்கள். சொல்லப்போனால் ஏழைகளில்—கஷ்ட ஜீவனக்காரர்களில் பெரும் பாலோர் யோக்கியர்களாகவே இருந்தார்கள்.

இப்படி இருந்ததற்குக் காரணம் என்னவென்றால், அயோக்கியத்தனங்களை—நாணயமற்ற தன்மைகளை, ஒழுக்க ஈனமான காரியங்களை மக்கள் வெறுத்தார்கள். அயோக்கியர்கள், சமூகத்தில்—சமுதாயத்தில் வெறுக்கப்படுவார்கள். எந்தக் கூட்டத்திலும் யோக்கியன், நாணயஸ்தன் என்று கருதப்பட்டவன்தான் மதிக்கப்படுவான்; அவன்தான் முதலில் பேசத்தொடங்குவான். மற்றவன் பின் அணியில் இருப்பான்—அயோக்கியர்கள் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்ட (குலப்பெண்)—விபசாரிபோல் தலைமறைவாக இருக்கவே ஆசைப்படுவார்கள்.

ஆனால், இன்று அந்த நிலை இல்லை. காங்கிரசுக்கு செல்வாக்கு, ஆதிக்கம் ஏற்பட்ட வுடன் அயோக்கியர்களே பெரிய மனித ஸ்தானத்தையும், பிரதிநிதித்துவ ஸ்தானத்தையும் அடைந்துவிட்டார்கள். நாணயத் தவறுதலையும், ஒழுக்க ஈனமான நடத்தைகளையும், நம்பிக்கைத் துரோகங்களையும்—'சாமர்த்தியம்' என்பதாகக் கருதத் தலைப்பட்டு விட்டார்கள். இப்படிப்பட்டவர்களைப் பொதுமக்கள் வெறுப்பது இல்லை.

இதற்கு முக்கிய காரணம், பத்திரிகைக்காரர்கள் இமாலய அயோக்கியர்களாக ஆகி விட்டார்கள். அயோக்கியர்கள் சுலபமாகப் பிழைப்பதற்குப் பத்திரிகைத் தொழில் நல்ல வாய்ப்பாக ஆகிவிட்டது. இதனாலும், வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டு, மேல் வகுப்பார் என்ப வர்களுடைய நிலைமைக்குச் சிறிது கேடு ஆரம்பமானவுடன் அவர்கள் செய்கிற அயோக் கியத்தனங்களாலும், நாணயக் குறைவான காரியங்களாலும்—அயோக்கியர்கள், காலிகள், கீழ்மக்கள் ஆகியவர்களுடைய ஆதரவினாலும் கூட்டுறவினாலும் வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டவுடன், அவர்கள் (பத்திரிகைக்காரர்கள்) அயோக்கியர்களுக்கும் கீழ்மக்களுக்கும் விளம்பரம் கொடுத்துவர, அவர்களைத் தூக்கிவிடத் துவங்கியவுடன்—'யோக்கியனாக இருக்கவேண்டும்' என்கிற ஆசையே, பின் சந்ததிக்கும்—பெரிய மனுஷன் ஆகவேண்டும் என்று எண்ணுகிற மக்களுக்கும் தேவை இல்லாமல் போய்விட்டது. உண்மையில் யோக்கியர்களாகவும் நாணயஸ்தர்களாகவும் இருந்துவந்த மக்கள் சமயத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ள முடியாமல் மறைந்துகொள்ள வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்; புதிதாக முன்னுக்கு வரும் அயோக்கியத்தனத்தில், துரோகத்தில் பயிற்சிபெற்றே வர வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.

இந்தமாதிரி நிலை மனித சமுதாயத்தில் சகஜமாக ஏற்பட்ட பிறகும்—அதாவது, எவ்வளவு அயோக்கியனும் துரோகியும் வஞ்சகனும் மோசக்காரனும் மக்களால் வெறுக்கப் படாமல் இருக்கவும்; எவ்வளவு ஈனத்தனமான காரியம் செய்து துரோகியாக ஆகிவிட்டவ னானாலும் அவனுக்குச் சமுதாயத்தில் மரியாதையும் பதவியும் பெருமையும் ஏற்பட்ட பிறகும்—இனி எவன்தான், எதற்காகத்தான் மனிதன் யோக்கியனாக இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியவனாவான்.

சாதாரணமாக, மதத் துறையை, கடவுள் துறையை விட்டுவிடுவோம்; அவை இரண்டின் அஸ்திவாரமே புரட்டும், மடமையும் கொண்டதாகும்.

அவற்றை விட்டுவிட்டு, அரசியல் துறையை எடுத்துக்கொள்ளுவோம். அது உண்மையிலேயே இருந்தாகவேண்டும்; சமுதாய அமைப்பு இருக்கிறவரையில் அரசியல் அமைப்பும் இருந்தாக வேண்டும்.

வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மாறுதலில் அரசர்கள் ஒழியப்படவேண்டியவரானார்கள். அதற்குப் பதிலாக சமுதாய வாழ்க்கை மக்களே அந்த இடத்திற்கு வரவேண்டியவர்களாக ஆனார்கள். அந்த மக்கள் தரமானது, மேலே சொன்ன வகுப்பு உணர்ச்சி காரணமாகப் பிரதிநிதித்துவத்தைப் பெரிதும் அயோக்கியர்களே பெறவேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள். இந்தப்படியான அயோக்கியர்களுக்குத் துரோகமே, நாணயக் குறைவே, ஒழுக்கக் குறைவே 'வெல்வெட்டு' மெத்தைமீது நடத்தும்படியான அவ்வளவு சுலபமான வழியாக ஆகிவிட்டது. ஒவ்வொரு பிரதிநிதியும் இந்த வழியில் பயனடையவே முயற்சிக்கிறானே ஒழிய, அதுவும் அவனவன், அவனவனுக்கு, அவனவனுடைய வாழ்வுக்குப் பிரதிநிதியாக வந்ததாகக் கருதுகிறானே ஒழிய—அவனவன் தந்திர சாமர்த்தியத்தால் பதவி பெற்றதாகக் கருதுகிறானே ஒழிய, 'இந்தப் பதவிக்கு மக்களின் ஓட்டுகளையோ, மற்றவர்கள் ஆதரவையோ பெற்று வந்தோம்' என்று 100-க்கு 5 பேர் கூடக் கருதாமல், எவ்வளவோ கீழ்த்தரமான காரியத்திற்கும், கொலை பாதகத்திற்கும் போட்டி போடத் தயாராக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அரசியல் மூலம் மக்களுக்கு என்ன பலன், என்ன பாதுகாப்பு ஏற்பட முடியும் என்பதுதான் நமது கவலை.

இந்த அயோக்கியர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நின்றால் பதவி பெற முடியாது என்கின்ற நிலையாவது இல்லையானால்—அரசர் இல்லாத அரசியலானது அயோக்கியர்கள் ஆட்சியாக முடியுமே அல்லாமல், சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய அரசியலாக ஏற்பட முடியுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

மக்கள் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் ஒரே ஒரு காரியம்தான். அதாவது, அயோக்கியர்களை, துரோகிகளை, நாணயம், ஒழுக்கம் கெட்ட கீழ்மக்களை வெறுக்க வேண்டும். எந்தத் துறையில் அயோக்கியர்களானாலும் துரோகிகளானாலும் பொது வாழ்வில் பிரதிநிதித்துவத்தில் கண்டிப்பாக வெறுக்கவேண்டும். மக்களிடம் இந்தக் குணம் இல்லாததாலேயே அயோக்கியர்களும், கீழ்மக்களும் சமுதாயத்தில் தலைநீட்டவும் பிரதிநிதித்துவம் பெற முன்வரவும் துணிகிறார்கள்.

அயோக்கியர்கள் எப்படியோ பணம் சம்பாதிக்கட்டும். 'குடும்ப விபச்சார வியாபாரத்தில்' மக்கள் பணம் சம்பாதிக்க நம் சமுதாயத்தில் வாய்ப்பு அனுமதிக்கப்பட்டிருப்பதால், பணம் சம்பாதிப்பதில் நமக்கு இன்று கவலை வேண்டியதில்லை. ஆனால், மக்கள் பிரதிநிதிகள் ஆவதற்கு மக்களுக்குத் தரம் வேண்டாமா?

அயோக்கியர்களையும், மக்களைக் காலித்தனத்தினால் மிரட்டி வயிறு வளர்க்கிறவர்களையும், மான ஈனம் சிறிதுமில்லாமல் சமயம்போல் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருப்பவர்களையும் பொதுமக்கள் வெறுக்காவிட்டால், மற்ற துறைகள் எப்படியோ போனாலும்—அரசியல்துறை, அதாவது ஆட்சித்துறை சிறிதும் சீர்படமுடியாது; கண்டிப்பாய்ச் சீர்படமுடியாது.

அரசியல் துறை—ஆட்சித்துறை எவ்வளவு கீழ் நிலைக்கு, ஈனநிலைக்குப் போக வேண்டுமோ அந்த நிலைக்கு இப்போது போய்விட்டது. இதில் எந்த மதமும், எந்தக் கடவுள் பக்தியும், எந்தச் சாதியும், எந்தத் துறையும் பின்வாங்கி இருக்கவில்லை.

மனித சமுதாயத்தில் ஒழுக்கமும் நல்ல அரசியலும் ஏற்படவேண்டுமானால், அயோக்கியத் துரோகிகளை, மானஈனமற்ற இழிமக்களை, நாணயம், ஒழுக்கம் அற்ற ஈனமக்களைப் பொதுவாழ்வில் தலைகாட்டாமல் அடித்து விரட்டி வீழ்த்துவதேதான் சரியான வழியாகும்.

வேறு வழியிருந்தால் சொல்லுங்கள்!

['விடுதலை'—தலையங்கம்—7-7-1952]

யோக்கியர்களே அரசியல் பொது வாழ்வுக்கு வரும்படியான நிலையை இன்னமும் நம்முடைய நாடு எய்தவில்லை. பணக்காரனுக்குப் போனதுபோக மீதிதான் பணக்காரன் அல்லாதவர்களுக்குக் கிடைக்கிறது. அப்படி மற்றவர்களுக்குக் கிடைக்கும் ஸ்தானங்களும் பணக்காரத் தன்மைக்கு எவ்வளவு அயோக்கியத்தனம், நாணயக் குறைவு, துரோக புத்தி வேண்டி இருக்கிறதோ அவ்வளவும், அதற்கு மேலும் உள்ளவர்களுக்குத்தான் பெரிதும் கிடைக்கிற மாதிரியில் இருக்கிறது. ஏதோ ஒரு சிலர் யோக்கியர்களும் இருக்க நேரலாம்; என்றாலும், அவர்கள் யோக்கியமாய் நடந்துகொள்ள முடியாத சூழ்நிலையும், யோக்கியமாய் நடந்துகொண்டாலும் பயன் ஏற்படாத சூழ்நிலையும், இருந்துவருவதால் யோக்கியமாய் நடந்துகொள்வது முட்டாள்தனம் என்று அவர்கள் கருதும்படியாக நேரிட்டுவிடுகிறது.

['விடுதலை' 23-7-1952]

23. புதிய சகாப்தம் காண வாரீர்!

தமிழகமாகிய—'திராவிடநாடு' தனி அரசு நாடாக, அதாவது தமிழகத்தான் அல்லாத வேறு எந்த நாட்டினது சுரண்டலும் ஆதிக்கமும் இல்லாத, முழு உரிமை நாடாக ஆக்கப்பட வேண்டும் என்பது நமது—அதாவது, திராவிடர் கழகத்தினது (ஜஸ்டிஸ் கட்சி என்பதனது) 15 ஆண்டுக்கு முற்பட்டிருந்தே செய்துவருகிற முயற்சி ஆகும். இம் முயற்சி துவக்கத்தில் தமிழக மக்களுக்குச் சற்றுப் புரியாததாகவும், அதிசயமாகவும் இருந்துவந்த போதிலும், இன்று தமிழகத்தில் காங்கிரஸ் தவிர்த்த மற்ற யாருடைய எதிர்ப்பும் இல்லாததாகவும், யாவருடையவும் சம்மதம் பெற்றதாகவும் இருந்துவருகிறது. காங்கிரஸ்காரர்களிடையிலும் 100-க்கு 75 வீதமுள்ள மக்கள் உள்ளத்தில் தமிழகம் தனி அரசு பெற வேண்டியதுதான் என்கின்ற கருத்துத் தோன்றி வளர்ந்து வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால்,

தமிழகம் தனித்தியங்கி தனியரசு நாடாக இருக்கக் கூடாது—இருக்கவே கூடாது என்று கருதிக்கொண்டு, தமிழகத்தை—திராவிட நாட்டை வடவன் ஆட்சிக்கு உட்படுத்தி, அதை டெல்லியின் ஏகபோக சர்வாதிகார ஆட்சியாக்கினது நமது நாட்டுப் பார்ப்பனர்களே யாவர். இந்தப் பார்ப்பன மக்கள் தமிழகத்திற்கும், தமிழர் இனத்திற்கும் அய்ந்தாம் படையாக இல்லாதிருப்பார்களேயானால், தமிழகம் இந்த அளவுக்கு வடவர்களுக்கும் டெல்லிக்கும் இவ்வளவு அடிமைப்பட்ட நாடாகவும், அடிமைச் சமுதாயமாகவும் ஆக்கப்பட்டிருக்க முடியவே முடியாது எனபதாகும்.

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரஸ்காரர்களிடம் வெள்ளையர், 'பிரிட்டிஷ் இந்தியா'வின் ஆட்சியை ஒப்படைக்கும்போது,

'இந்தியாவில் உள்ள சகல கட்சிகளுடைய முக்கிய கோரிக்கைகளையும் திருப்திப் படுத்தும் வண்ணம் நியாயமான ஒரு திட்டமாக இந்தியாவுக்குப் பலமும், காரியசாத்திய மானதுமான அரசியல் அமைப்பை ஏற்படுத்தித் தருவதாக இருப்பதற்கு நாங்கள் ஒரு திட்டத்தை உங்களுக்கு ஒப்படை செய்கிறோம். அதாவது, பிரிட்டிஷ் இந்தியாவையும், சமஸ்தானங்களையும் அய்க்கியமாய்க் கொண்டதாகவும் அது வெளிநாட்டு விவகாரம்,

பாதுகாப்பு, போக்குவரத்து இவைகளை மாத்திரம் கவனித்துக்கொள்ளக் கூடியதான ஒரு யூனியனாகவும் இருக்கவேண்டும்.'

'மேற்படி விஷயங்கள் தவிர்த்த இதர விஷயங்களும், மற்றும் எல்லா அதிகாரங்களும் மாகாணங்களிடையே இருக்கவேண்டும்.'

'இதுவும்—இந்த அமைப்பும், 10 ஆண்டுக்கு ஒருமுறை அந்தந்த மாகாண மக்கள் சம்மதம் பெறவேண்டும்' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இதைக் காங்கிரசார் அப்படியே ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகவே 1946-47-ம் ஆண்டில் நடந்த சட்டசபைத் தேர்தலின்போது ஓட்டர் மக்களுக்கு அளித்த வாக்குறுதியில், 'இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றிபெற்றால், இராஜ்யங்களுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்து—அப்படிப்பட்ட இராஜ்யங்களின் கூட்டுள்ள ஒரு யூனியன் என்னும் படியான அரசியலை, அந்தந்த இராஜ்யத்தில் வயதுவந்த எல்லா மக்களுக்கும் ஓட்டுக் கொடுத்து, அந்த ஓட்டின்மீது தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட சட்டசபைமூலம் அமைப்போம். அதன் பின்தான் அரசியல் சட்டம் செய்யப்படும்' என்பதாகவே வெளியிடப்பட்டது.

ஆனால், காரியத்தில் காங்கிரசார் என்ன செய்தார்கள் என்றால், இந்தப்படி வாக்குறுதி கொடுத்துத் தேர்தலில் வெற்றிபெற்று வந்ததுடன், வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டு விட்டு, உடனே அரசியல் சட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நிலையிலாவது காங்கிரசார் யோக்கியமாக நடந்துகொண்டார்களா என்றால், அப்போதுதான் மகா மகா அயோக்கியத்தனமாக நடந்துகொண்டார்கள்.

என்னவென்றால், அந்தத் தேர்தலில் வந்த மக்களிடத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லாததாலும், இவர்களுக்கு ஏற்ற சூழ்ச்சி தந்திர அறிவுள்ள மக்கள் அதில் இல்லாததாலும் ஒரு தந்திரம் செய்து, அதாவது—'இந்த சட்டசபை அங்கத்தினர்கள் எண்ணிக்கை போதியதாக இல்லை; இன்னும் பலபேர் சேர்க்கப்பட்டால்தான் எண்ணிக்கை விகிதம் சரியாக இருக்கமுடியும்' என்று சொல்லி, நமது மாகாணத்திற்கு இனியும் 47 பேர்கள் வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லி, அந்த 47 பேரையும் மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டும் என்று திட்டம் செய்து, அந்த தெரிந்தெடுக்கப்படவேண்டிய 47 பேரும் இன்னின்னார்தான் என்ற உத்தரவையும்—ஜாபிதாவையும் காங்கிரஸ் மேலிடம் மாகாண சட்டசபை மெம்பர்களுக்கு அனுப்பிவிட்டது.

பொதுவாகவே மாகாண சட்டசபையில் அப்போது காங்கிரஸ்காரர்களே 100-க்கு 75-க்கு மேலான 'மெஜாரிட்டி'யாக இருந்தார்கள். என்றாலும், அவர்களையும் நம்பாமல் தங்களுக்கு வேண்டிய ஆட்களைக் குறிப்பிட்டே, தாக்கீது அனுப்பிவிட்டார்கள். மாகாண சட்டசபை என்பது அந்த மேலிடத்தார் கொடுத்த 'ஜாப்தா'வின்படிக்குள்ள ஆட்களையே தெரிந்தெடுக்கப்பட்டதாகச் சடங்கு செய்து, 'லிஸ்ட்' அனுப்பிவிட்டார்கள்.

இந்த மாதிரியான ஆட்களை வைத்துக்கொண்டு இவர்கள், அதாவது—காங்கிரஸ்காரர்கள், பார்ப்பனர்கள், வடவர்கள் சர்வாதிகாரமாக அரசியல் சட்டத்தைச் செய்து கொண்டார்கள்.

இப்படிப்பட்ட அரசியல் சட்டம் பொது மக்களால் செய்யப்பட்ட அரசியல் சட்டம் ஆகுமா? இதை நமது அரசியல் சட்டம் என்பதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதுவும், இந்த அரசியல் சட்டத்தின்படி இந்த 3-4 ஆண்டுகளாக நடந்த ஆட்சித் தன்மையைப் பார்த்த பிறகும்கூட, என்றுதான் கேட்கிறேன்.

இதைப் பார்க்கிறபோது, இந்தச் சூழ்ச்சிக்கு அஸ்திவாரம் போல் ஐந்தாம் படையாய் இருந்த பார்ப்பனர்கள், ஒன்று, இந்த நாட்டை விட்டு வெளியேறவேண்டும். அல்லது, அவர்கள்

இந்தச் சூழ்ச்சி செய்ததற்கு வருந்தி, இந்த அரசியல் சட்டத்தை நெய்யாகக் கொண்டு ஓமம் வளர்க்கவேண்டும்.

பார்ப்பனர்கள் சரித்திரம் ஒரு காலத்திலாவது யோக்கியமானதாக இருந்திருக்க வில்லை. அவர்களது சமய சம்பந்தமான கடவுள், சாஸ்திர, புராண, இதிகாசம் என்பவற்றில் எதிலும் நாணயமோ, யோக்கியமோ காணப்படவில்லை என்பதோடு, அவர்களால் இந்த நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு எந்தக் காலத்திலும் எதிலும் தீமையே அல்லாமல், சிறு நன்மையும் ஏற்பட்டதாக இல்லை.

இவைகளை யெல்லாம்விட, பார்ப்பனர்கள் இந்தக் காரியத்தில் நடந்துகொண்டது, நமது பிற்கால சந்ததிகளைப் பல தலைமுறைகளுக்குப் பழி வாங்கும் எண்ணம் கொண்டதாக இல்லாமற் போகாது என்றே கருதுகிறேன்.

ஏன் ? இப்படிப்பட்ட அருமையான ஒரு நாட்டை வடநாட்டு மலைவாசி ஆதிக்கத் திற்கு அடிமைப்படுத்திய கொலை பாதகத் தனத்தை நினைத்தால்—என் வயிற்றை எரிப்பதால், என் இரத்தத்தைக் கொதிக்கச் செய்வதால், மனம் குமுறிச் சொல்கிறேன்.

இன்று தமிழகம் மாத்திரமல்லாமல், 'இந்தியா'வையே உத்திரப் பிரதேசமும் (நேரு நாடும்) பீகார் (பிரசாது நாடும்) நாடுந்தானே ஆளுகின்றன ! மற்றவர்களுக்கு இதைப் பற்றிக் கவலை இல்லாவிட்டாலும், தமிழகத்தானுக்கு—திராவிடனுக்கு இதைப் பற்றி மானம், வெட்கம், உரிமை சிறிதும் இல்லாமற் போகுமா ?

பார்ப்பனர்களை மன்னிப்போம் ! மன்னிப்போம் ! மன்னிப்போம் !

எப்போது ? நம்மை மாட்டி வைத்த இடுக்கில் இருந்து நம்மை விடுவித்து விட்டால் அப்போது.

அதுவரை—வடநாடும், வடவரும் போலவேதான் நம் பார்ப்பனர்களும்—நமக்கு என்பேன்.

நம் பார்ப்பனர் நம் நாட்டை, 'நம் நாடு' என்று—அதாவது தங்கள் நாடு என்று சொல்லிக்கொண்டே, சர்வத்தையும் அன்னிய மயமாக்கி நம்மையும் கீழாக்கியதோடல் லாமல் நம்மையும் நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக்கொடுத்து, நம்மை அடிமை யாக்குவதென்றால், இதை யார் பொறுக்கமுடியும் ?

நம்மை, நம் தமிழகத்தை வடவனுக்கு அடிமையாக்கி மாட்டிவைத்ததை, இந்தப் பார்ப்பனர்—தாங்கள் அல்லர் என்று சொல்லமுடியுமா என்பதாகக் கேட்கிறேன்.

பார்ப்பனரிடம் அன்பாய் இருக்க எனக்கு வெகு வெகு ஆசை. ஆனால், சுதந்திர மற்று, அன்னியனுக்கு அடிமையாக, என் நாட்டை அன்னியன் சூறையாடிக் கொள்ளை யடிக்க இசைந்து அன்பு காட்ட முடியுமா ? பார்ப்பனத் தோழர்களே ! இளைஞர்களே ! சிந்தியுங்கள் !

போதும் ! போதும் ! உலகம் உங்களை நகைக்கிறது ; வடநாட்டானும் உங்களை வெறுக்கத் தொடங்கிவிட்டான் ; டெல்லிக்குப் போய்வந்த நண்பர் ஒருவர் சொன்னார்— என்னவென்றால், டெல்லியில் 'சவுத் இண்டியன்', 'சென்னையான்' என்றால் எவனுக் கும் முகம், துர்வாடையைக் கண்டால் சுளிப்பதுபோல் சுளிக்கிறதாம்.

இது அவர்களின் 'வினையின் பயன்' என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, இந்த அரசியலைக் கொளுத்த, அழிக்க ஆதரவாக இருங்கள், ஒத்துழையுங்கள்.

இருவர் நலத்திற்கே சொல்லுகிறேன். மற்ற தோழர்களையும் அழைக்கிறேன் ; யாவற்றையும் மறந்துவிடலாம்.

எனக்கு யார் செய்த தீமைகளையும் மறந்துவிடும் சுபாவம் அதிகம் உண்டு. நன்மையை மறக்கவே மாட்டேன். புதிய சகாப்தத்தை உண்டாக்கலாம்.

['விடுதலை'-தலையங்கம்—10-8-1952]

24. காமராசர் ஆதரிப்பு ஏன்?

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! படைத் தலைவர் அவர்களே! தளபதி அவர்களே! படை வீரர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தக் கூட்டம் ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்புப் படையை வரவேற்கும் கூட்டமாகும். (படைத் தலைவரையும், தளபதியையும், படை வீரர்களையும் தந்தை பெரியார் அவர்கள் மேடைக்கு முன் நிறுத்தி கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.)

இந்தப் படையினர் சென்ற மாதம் 29 ஆம் தேதி புறப்பட்டவர்கள். கால் நடையாகவே ஏறக்குறைய 600 மைல் நடந்து சுற்றி இங்கே வந்தார்கள். வந்ததும் இங்கு வெற்றி கிடைக்கும் என்று கருதி வந்தவர்கள் அல்லர். 'இங்கே வந்ததும் சிறைக்கூடம் திறந்திருக்கும்; நாம் போய் 'ஜம்' மென்று உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளலாம்' என்று வந்தவர்கள். எப்படியோ இவர்கள் ஏமாந்துபோகும்படியான நிகழ்ச்சி நடைபெற்று எல்லோரும் மகிழும்படியாக ஆகிவிட்டது. அடுத்தாற் போல் காமராசர் மந்திரிசபை பாராட்டப்படவேண்டியது.

உங்களுக்குத் தெரியும்—நண்பர் ஆச்சாரியார் பதவிக்கு வந்ததும் நான் அவரைப் பாராட்டினேன்; மற்றவர்களைவிட ஆச்சாரியார் எவ்வளவோ மேல் என்று பேசினேன். கம்யூனிஸ்டுக்காரர்களைவிட, பிரகாசத்தைவிட, ஆச்சாரியார் பரவாயில்லை என்று துணிந்து எழுதினேன்; அவரை ஆதரித்தேன். அப்படி அவரை நான் ஆதரித்தேன் என்ற கோபத்தில் தோழர் ஜீவானந்தமும், தோழர் இராமமூர்த்தியும் அவர்களுடைய தோழர்களும் தாங்கள் போகுமிடங்களிலெல்லாம் மக்களிடம், 'இப்போது ஆச்சாரியார் மட்டுமல்ல நாட்டை ஆளுவது; ஆச்சாரியாரும், இராமசாமியும் பேசிக்கொண்டு இந்த நாட்டை ஆளுகின்றார்கள்' என்று பேசினார்கள். நானும் அதை மறுக்கவில்லை. அவர் வந்ததும் கண்ட்ரோலை எடுத்தார், நான் அதைப் பாராட்டினேன். மக்களிடம் ஓட்டுக்குச் சென்றபோது கண்ட்ரோலை எடுக்கவேண்டும் என்பதாக நாம் பேசினோம்; அப்படிப்பட்ட நல்ல காரியத்தை அவர் செய்தாரே என்று அவரைப் பாராட்டினேன். ஏனென்றால், அப்படிப்பட்ட நல்ல காரியம் செய்தால் பாராட்டி மேலும் பல நன்மைகளை நம் மக்களுக்குப் பெறல் வேண்டும் என்கின்ற எண்ணத்தில் பாராட்டினேன். அடுத்தாற்போல், அவர் கைத்தறியாளர் பிரச்சினையில் அவர்களுக்காகப் பாடுபட்டார்; அதையும் நான் ஆதரித்தேன். பிறகு தஞ்சைக்கு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்; அதையும் ஆதரித்தேன்.

நாம் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டியதில்லை. திராவிடர் கழகத்தைப் பொறுத்த வரை சட்டசபைக்குப் போவதில்லை; மந்திரியாக முயல்வதில்லை; தேர்தலில் நிற்பதில்லை என்பது அனைவருக்கும் தெரியும். 'இதெல்லாம் இல்லாமல் உன்னால் என்ன முடியும்?' என்றார்கள். அதற்குப் பதில் சொன்னேன்—'யார் வந்தாலும் நமக்கான காரியங்களைச் செய்யும்படி பார்த்துக்கொண்டாலே போதும்' என்று. ஆச்சாரியார் இந்தக் கல்வித் திட்டம் குறித்து மிகவும் பிடிவாதமாக இருந்தார். அதனால்தான் நானும் மிக உண்மையாகக் கண்டித்தேன் நானே வருந்தும்படியாக, அவர் பதவியை விட்டுப் போகும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இன்றைக்குக் காமராசர் இந் நாட்டின் முதலமைச்சராக வந்துள்ளார். இனிப் பலரும் சொல்லப்போகின்றார்கள், 'காமராசரும், பெரியாரும் ஏதோ ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்

கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் அடிக்கடி இரகசியமாகச் சந்தித்துப் பேசுகிறார்கள்' என்றெல்லாம் கூறுவார்கள். இன்றைய தினம் இக் கல்வித் திட்டம் எடுபடும்படியான செய்தி வந்தது குறித்து நாம் பெருமைப்பட வேண்டியதுதான். நாடு முழுவதும் பாராட்டுக் கூட்டம் போடவேண்டியுள்ளது. பெரும்பாலும் அந்தப் புகழ் எல்லாம் காமராசருக்கே போகும்.

நாமும் இந்தத் திட்டத்தை எதிர்த்தோம்; மற்ற எல்லாக் கட்சிக்காரர்களும் இத் திட்டத்தை எதிர்த்தார்கள்; இது குறித்துக் காமராசரும் எதிர்த்துச் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லிய அதே காமராசர், தான் பதவிக்கு வந்ததும் அதை எடுக்காமல் இருப்பாரானால் என்ன ஆகியிருக்கும்? அவரும் இந்த சுப்பிரமணியம், பக்தவத்சலம் முதலியவர்களுடன் சேர்ந்துகொண்டு கல்வித் திட்டத்தை ஆதரித்துக்கொண்டு இருந்தால், என்ன ஆகியிருக்குமோ, என்னால் சொல்லவே முடியாது. இதற்குள் அடுத்த முதன் மந்திரிப் பதவிக்கு யாராவது முயன்றுகொண்டிருப்பார்கள் என்றால் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லாத மாதிரி நிலைமை இருந்திருக்கும்.

நமக்கு மகிழ்ச்சிக்குக் காரணம் திராவிடன் முதல் மந்திரியாக வந்ததாகும். காமராசர் வந்ததும் ஆச்சாரியாரின் சீடர்களுக்கு எப்படியோ இருக்கும். அதோடு, இந்த நாட்டில் இருக்கிற பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும், பார்ப்பனக் கூலிகளுக்கும் எப்படியோ இருக்கும். அவர்களுக்கெல்லாம் இந்த மந்திரி சபையே பிடிக்காது. ஆகவே, நாம் காமராசர் மந்திரி சபையை ஆதரித்துத்தான் தீரவேண்டும். எப்போதுமே ஆதரிக்க வேண்டியதுதானா என்பதுபற்றி இப்போது ஒன்றும் யோசிக்கவேண்டியதில்லை.

நான் எப்போதுமே சொல்லிக்கொண்டிருக்கிறேன்: 'இது சுயராஜ்யமல்ல; பார்ப்பன ராஜ்யம்' என்று; 'இது ஜனநாயகமல்ல; பார்ப்பன நாயகம்' என்று. எப்படியோ நாம் இந்த ஜனநாயகத்தின் யோக்யதையைக் கண்டுகொண்டோம். இந்த ஜனநாயகத்தின் யோக்கியதையைப் பற்றிப் பல இடங்களில் சொல்லியிருக்கின்றேன். இலண்டனில், பெர்னார்ட் ஷா என்ற அறிஞரிடம் பலர் சென்று ஜனநாயகம் என்பதற்கு விளக்கம் தரும்படி கேட்டார்கள். அவர் அதற்குக் அழகான விளக்கம் தந்தார். என்ன விளக்கம் தந்தார் என்றால்—'ஜனநாயகம் என்பது முட்டாள்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அயோக்கியர்கள் ஆளும் ஆட்சி' என்பதாக விளக்கிக் கூறினார். அது ஏறக்குறைய (கிட்டத்தட்ட) நம் நாட்டுக்கு ஏற்ற மாதிரியில் அமைந்துபோய்விட்டது. ஒருவர் கூறினார், 'இரண்டு உழக்குப் பொரிக்கு ஓட்டு வாங்கினார்கள்' என்று. ஜனங்கள் என்ன முட்டாள்களா, இல்லையா? இல்லவே இல்லை. ஜனங்களை அந்தப் பக்குவத்தில் வைத்துக்கொண்டு ஜனநாயகத்தை ஆரம்பித்தார்கள்—ஜனநாயகம் என்றால் என்ன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல்.

திடீரென்று அதிகாரம் செய்கின்றார்கள். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் ஜனநாயக ஆட்சி என்றால், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தானா ஆட்சி செய்தார்? இந்தக் கல்வித்திட்டத்தை நீக்குவதற்கு ஒரு மந்திரி சபையே மாறவேண்டுமா? இந்தக் கல்வித் திட்டத்தை எல்லா எம். எல். ஏ.க்களும் எதிர்த்தார்கள்; ஜில்லா போர்டுகள் எதிர்த்தன; நகரசபைகள் எதிர்த்தன; இந்த ஊரில் நடைபெற்ற பஞ்சாயத்து மாநாட்டில் வந்திருந்த 4500-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்காரர்கள் எதிர்த்தார்கள். அந்த மாநாட்டில் இந்தக் கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேச வந்தவரை, 'போ, வெளியே!' என்று சொல்லித் துரத்தினார்களே! அதற்குத் தலைமை வகித்த சுப்பராயன் என்ன சொல்லியும், அவரைப் பேசவிடவேயில்லையே! இவ்வளவுக்கும் மதிப்புத் தராமல், 'நீங்களாக இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. இதை அந்த இராமசாமி சொல்லி நீங்கள் சொல்கின்றீர்கள்' என்றல்லவா சொல்லித் தட்டிக் கழித்தார்.

இன்றைக்கு இந்த மந்திரி சபையினரும் நடுங்கிக்கொண்டேயல்லவா சொல்லியிருக்கின்றார்கள். இன்றே இந்த அரசாங்கம் இந்தத் திட்டம் ஒழிந்தது என்று சொல்ல வேண்டாமா? பத்திரிகைக்காரர்கள் எல்லாம் இதை ஒரு சிபாரிசு என்றே கூறுகிறார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் முதன் மந்திரி. அங்கேயே இருந்தவர் கல்வி மந்திரி. அப்புறம் என்ன? யாருக்கு இவர்கள் சிபாரிசு செய்கிறார்கள்? இதை அந்தக் கூட்டத்தில்தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் இவர்கள் எல்லாம் மனிதர்களா என்கிறேன். முதலிலேயே ஏழுபேர் கொண்ட கமிட்டியில் ஆறுபேர் ஆதரித்துள்ளார்கள். பிறகு கல்வி மந்திரி சகல கட்சித் தலைவர்களையும் கூட்டியதில், அதிலேயும் இத் திட்டத்தை எடுக்கவேண்டும் என்று சொல்லியாயிற்று. இப்படி எல்லோரும் ஒப்புக்கொண்டபின் இன்னும் தாமதத்திற்குக் காரணம் விளங்கவில்லை. இத் திட்டம் நீடித்திருந்தால் நமக்கு நல்ல வேட்டைதான். இந்தத் திட்டத்தினால்தான் நாம் ஓராண்டு வேறெதிலும் கவனம் செலுத்தாமல் இருக்கவேண்டியதாகிவிட்டது.

ஆச்சாரியார் அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக மட்டுமல்லாமல், வேறு பல வகையிலும் தீங்குகள் செய்ய இருந்தார். இந்தச் சுயமரியாதைத் திருமணம் பற்றி அவர் பெரிய தீங்கிழைக்க இருந்தார். அவருக்குச் சுயமரியாதைத் திருமணம் பிடிக்காது என்பதல்ல; பார்ப்பானுக்கு வரும் வரும்படி போய்விடுமோ என்பதில்தான் அவருக்குக் கவலை.

அடுத்தது, கல்லூரியில் நம் மாணவர்களைச் சேர்ப்பதில் கைவைத்தார். நம் மாணவர்களுக்கு குமாரசாமி ராஜா காலத்தில் கொஞ்சம் வசதியிருந்தது. பிறகு, இந்தக் கல்லூரியில் சேர்ப்பதில் எவ்வளவு கெடுதல் உண்டுபண்ண முடியுமோ அவ்வளவும் செய்தாகிவிட்டது. இது பற்றிக் காமராசரிடம் யாரோ சொன்னபோது அவர், 'நானும் தமிழன்தான்' என்று சொன்னாராம். ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் பார்ப்பானில் இருந்த கூன், குருடு, நொண்டி, முடம் எல்லோருக்கும் பதவி கொடுத்துவிட்டார். பார்ப்பானில் வேலைக்கு ஆள் கிடைக்காத மாதிரி எல்லாப் பார்ப்பனர்களும் பதவியில் நிரம்பிவிட்டார்கள். நாடு நம்முடைய நாடு—இதில் பார்ப்பனர்களுக்கா பதவி? சட்டத்திற்குப் பெரிய மதிப்புக் கொடுத்தவன் நான்தான். இனி அதற்கு மரியாதை கொடுத்துப் பயனில்லை என்று கருதும்படியாக ஆய்விட்டதே! அதனால்தான், 'குத்து, வெட்டு, தீ வை!' என்று சொன்னேன். அதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. என்பேரில் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. அரசாங்கத்தார் சும்மா இருக்க மாட்டார்கள்; பார்ப்பனர்களும் சும்மா இருக்க மாட்டார்கள். ஆனால், நாம்தான் கட்டாயம் வெற்றிபெறுவோம் என்கின்ற உறுதியில் இருக்கின்றோம். அதற்கெல்லாம் வேண்டிய சாதனம் இருக்கின்றது. நீங்கள் இதற்கெல்லாம் ஆதரவு தரவேண்டுமென்று விரும்புகிறேன். ஆதரவு என்றால்—நீங்களெல்லாம் நெருப்புப் பெட்டி, தீப் பந்தம் முதலியவற்றுடன் வரவேண்டும் என்பதல்ல; எங்களோடு சாதாரணமாக ஒத்துழைத்தால் அதுவே போதும்.

நீங்கள் ஒன்று நினையுங்கள்! பார்ப்பான் எவ்வளவு அக்கிரமம் பண்ணியும், கொடுமை செய்தும் எல்லாவற்றிலும் வெற்றிபெற்றே வருகின்றான். எதனால் அப்படி வெற்றி பெறுகின்றான்? அவர்கள் எல்லோரும் ஒரே மனதாக ஒற்றுமையாக இருந்து வருகின்றார்கள். அவர்களோடு போராடுவது மிகவும் கடினந்தான். திராவிடர் கழகம் தவிர, 'பார்ப்பான் ஒழியணும்' என்று எவனும் சொல்லமாட்டேன் என்கிறானே! பார்ப்பான் ஒழியணும் என்று சொல்ல நடுங்குகின்றார்களே! 'பார்ப்பானே! நாட்டை விட்டுப் போ!' என்றால்—அவன், 'எங்கே போவது?' என்று கேட்கிறான். அதற்கு, 'நீ எங்கேயாவது போ!' என்று சொல்கிறோம் நாம். 'நான் இங்கேயிருந்து எங்கே போவது?' என்றால், 'நீ எதுக்கப்பா இங்கே இருக்கவேண்டும்?' என்று கேட்கிறேன். இந்த நாட்டில் கக்கூசு எடுக்கிறவன் இருக்கணும்; சலவை செய்பவன் இருக்கணும்; ஆனால் நீ எதுக்கப்பா இருக்கணும்? இதை, 2000 ஆண்டுகளாகப் பார்த்துவிட்டுத்தானே சொல்கிறோம்?

உள்ளபடியே இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி, நேற்று வந்திருந்த தீர்ப்பு வராமல், வேறுவிதமாக வந்திருந்தால் நடப்பே வேறுவிதமாக அல்லவா நடந்திருக்கும்! ஒரு பத்துப் பார்ப்பனர் தலை விழுந்திருக்கும்! அப்படி விழுந்தால் நம்மவரில் ஒரு அய்ம்பது பேரைச் சுடுவான். ஆனால், நம் பிணம் சுடுகாடு சேருவதற்குள் எல்லாப் பார்ப்பானும் ஓடி விடுவானே!

இந்த இராஜ்யம் நல்ல இராஜ்யமாக இருந்தால் என்ன ஆகணும்? நேற்று நடந்த தீர்ப்புக்குக் கல்வி மந்திரி இராஜிநாமா கொடுத்தாகணும். அவர் அப்படி இராஜிநாமா கொடுத்தால் என்ன ஆவார்? பழைய கவுண்டர்தான்; முக்காடு போட்டுக்கொண்டு போக வேண்டியதுதான். இன்னொருவர் சொன்னாராம், 'இந்தக் கல்வித் திட்டத்தை எடுக்கா விட்டால், ஜில்லா போர்டு தேர்தலில் நமக்கு நாமம்தான்' என்று. இப்படி இந்தத் திட்டத்தை எடுத்ததற்குக் காரணம் நம்முள் இருக்கும் ஒற்றுமைதான்.

இவ்வளவோடு இல்லை, நம்முடைய முயற்சி. நாமும் இந்த மந்திரிசபையைக் கூடுமான அளவு ஆதரிக்கலாம். நாம் ஏதோ நமக்குச் சொந்தக் காரியத்திற்காக ஏதாவது கேட்கிறோமா? இன்னும் கொஞ்ச நாளைக்காவது அவர்கள் இருக்கவேண்டும் என்றால், நாட்டு மக்களது எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.

1924 முதல் 1954 வரை ஒரு தமிழன்கூட முதன் மந்திரியாக வர முடியவில்லை. சுப்பராயன், சுப்பராயலு ரெட்டியார், பிரகாசம், ஓமாந்தூர் ரெட்டியார், இராசகோபாலாச்சாரியார்—இந்த மாதிரியாக பார்ப்பானும், ஆந்திராக்காரனும் தான் இருந்திருக்கின்றார்கள். அப்படிக்கில்லாமல் முதன் முதலாகத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழன் முதலமைச்சராக வந்திருக்கின்றார். இவர் மந்திரி சபையும் 15 நாளில் தீர்ந்து போகாத மாதிரி—இவர் வாய்தா பூராவும் இருக்கிற மாதிரி இருக்கவேண்டும்.

இரண்டாவது, முதன்முறையாகப் பார்ப்பானே இல்லாத மந்திரிசபை இது. இந்தக் காரியம் மிகமிகப் பெருமையானது. இன்றைக்கே அக்கிரகாரம் பேசுகிறது, 'நம்முடைய ஆச்சாரியார் எங்கே? இந்தச் சாதாரண காமராசர் எங்கே?' என்று. நான் சொல்லுகிறேன் —போய்ப் பாரேன்; இப்போது எங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று! 'காமராசர் இந்தத் திட்டத்தை எடுத்தால் அவரை எதிர்ப்போம்' என்று சில காங்கிரஸ் காரர்கள் பேசினார்களாம்! நாளைக்கு அவர்கள் யாரை எதிர்க்கின்றார்களோ பார்க்கலாம். சட்டசபையில் இப்போதுள்ள 'திராவிடப் பார்லிமென்டரி கட்சி'யில் 23 பேர் இருக்கின்றார்கள். நாளைக்கு அவர்கள்தாம் எதிர்க்கட்சியாய் இயங்கப் போகின்றார்கள். காமராசர் ஆட்சி இந்தக் கம்யூனிஸ்டுகளுக்குத்தான் பெரிய மண்டைக் குடைச்சல்! இந்தக் கம்யூ னிஸ்டுகள் ஆச்சாரியாரிடம் நல்ல முறையில் பல பலன்களை அடைந்துவந்தார்கள். இந்தக் கம்யூனிஸ்டுகள் இந்த மந்திரி சபை மாற்றத்தைப்பற்றிச் சொன்னார்களாம், 'குடுமி போய், கிராப் வந்திருக்கிறது' என்று. 'இதனால் என்ன இலாபம்?' என்றார்களாம். இவர்களும்தானே இந்தக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பதுபோல் காட்டிக்கொண்டார்கள்? இப்போது, குடுமி போய் கிராப் வந்தால் என்ன செய்யும் என்று தெரிகிறதா?

ஆச்சாரியார் இப்போது அடிக்கடி எங்களை எதிர்ப்பதாகக் காட்டிக்கொள்வதன் அர்த்தம்—அவர் இந்து மகா சபைக்கு அனுகூலமாக இருக்கிறார்; அது வடநாட்டில் தற்போது சற்று வளர்ந்து வருகின்றது. அதன் மூலம் ஏதாவது பதவி அடைய முயற்சிக்கிறார். வடநாட்டில் ஏற்படப்போகும் மாறுதலுக்கு—தனக்கு ஒரு 'சான்ஸ்' கிடைக்க வேண்டும் என்பதற்காக இப்படிப் பேசுகிறார்.

இந்த நாட்டில் இருக்கும் பத்திரிகைக்காரர்களுக்குப் பெரிய வேதனை. எப்படி இந்தப் பார்ப்பான் இல்லாத மந்திரி சபையைக் கவிழ்ப்பது என்றுதான் யோசித்து வருகிறார்கள். 'தினமணி' இன்னும் ஒரு மாதத்தில் எதிர்க்கும்; 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

எதிர்க்கும். எல்லாவற்றிற்கும் பிறகு மெதுவாக 'இந்து' எதிர்க்கும் என்பதாகக் கூறி, படையினருக்குப் பாராட்டுகள் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

[திருவல்லிக்கேணி கடற்கரையில் சொற்பொழிவு—'விடுதலை' 15-5-1954]

தோழர்களே !

இந்த மாநாடு நல்ல, குறிப்பிடத்தகுந்த நேரத்தில் மக்கள் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சி நிறைந்திருக்கும்போது நடைபெறுகிறது. முதலாவது, இந்த மாநாடு அய்ந்து வருடத்திற்கு அசைக்கமுடியாதபடி இருந்த ஆச்சாரியாரின் ஆட்சி ஒழிந்த சந்தர்ப்பத்தில் நடைபெறுகிறது. இரண்டாவது, ஒரு தமிழரது மந்திரிசபை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நடைபெறுகிறது.

கடந்த 34 வருடத்தில் இல்லாத மாதிரி இப்போதுதான் மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் இருந்த மந்திரிகளெல்லாம் பார்ப்பனர்களாக, ஆந்திரர்களாகத்தான் இருந்தார்கள். தமிழ் நாட்டில் ஒரு பச்சைத் தமிழனுடைய மந்திரிசபை ஏற்பட்டிருப்பது நமக்கு ஒரு பெருமை ! என்னைக்கூடக் கேட்டார்கள், 'நீ ஒரு கன்னடியன் ; எப்படித் தமிழனுக்குத் தலைவனாக இருக்கலாம் ?' என்று. அதற்கு நான் சொன்னேன், 'தமிழனுக்கு, எவனுக்கும் யோக்கியதை இல்லையப்பா' என்றேன். இதற்குக் காரணம், ஒரு தமிழன், இன்னொரு தமிழன் உயர்ந்தவனாக இருப்பதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கவே மாட்டான். இன்னொரு அதிசயம்—இது பார்ப்பானே இல்லாத மந்திரி சபை. 1937-ல் ஆச்சாரியாருடைய மந்திரிசபையில் பாதிப்பேர் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட மந்திரிசபைகளிலேயும் 2, 3 பார்ப்பனர்கள் இருந்தார்கள். இப்பொழுதுதான் முதன்முதலாகப் பார்ப்பனர்களே இல்லாத மந்திரிசபை ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு அதிசயம், எந்த ஆச்சாரியாருக்குத் தாங்கள் நல்ல அடிமைகள் என்பதாகக் காட்டிக்கொண்டிருந்தார்களோ, அதே ஆட்களை காமராசர் தன்னுடைய அடிமையாக ஆக்கிக்கொண்டார். ஆச்சாரியாருடைய ஆட்களைக்கொண்டே அவரது கண்ணைக் குத்த ஏற்பாடு செய்துவிட்டார். இந்தக் கல்வித் திட்டத்தை யார் கொண்டுவந்தார்களோ, அவர்களது வாயாலேயே சொல்லி எடுக்கவைத்தார்.

இது நமக்குப் பெரிய வெற்றி. இந்த மகிழ்ச்சியினால், நாம் இந்த மந்திரிசபையைக் காப்பாற்றுவோம் என்று கருதுகின்றேன். இதைப் பார்த்துச் சிலர், எனக்குக் கொள்கையே இல்லை என்று சொல்லுகிறார்கள். இதைப் பத்திரிகையிலும் மொச்சைக்கொட்டை அளவு எழுத்துக்களில் போடுகிறார்கள் ; இப்போது ஒரு பத்திரிகை—இப் பந்திப் பத்திரிகை—அதற்குப் பெயர் 'தினத் தந்தி'—அது நல்ல நாட்டிலிருந்தால் அதை சாக்கடைப் பத்திரிகை என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள் ; அந்தப் பத்திரிகை நம்மை அடிக்கடி கேலிசெய்து, மக்களை வேறு கருத்தில் திருப்புவதில் ஈடுபட்டுள்ளது. எந்தச் செய்தியிலேயும் நமக்குச் சம்பந்தமே இல்லாத மூன்றாவது ஆளையும் இழுத்துப் போட்டுத் தப்புப் பிரச்சாரம் செய்கிறது.

இந்த மந்திரி சபையைப் பற்றிப் பெரியகுளம் மாநாட்டில் அறிக்கைவிட இருந்தேன். அன்று வந்த செய்தியில் பல மந்திரிகள் பழைய மந்திரிகளாகவும், ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்தவர்களே இருப்பதையும் கண்டு நிறுத்திக்கொண்டேன். ஏன் என்றால், இந்தக் காமராசர், அவர் வெளியில் சொன்னதையெல்லாம் செய்யமுடியுமோ என்று நான் கருதியதாகும். அதனால்தான், இந்த மந்திரிசபையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, 'இது, புதிய மொந்தையில் பழைய கள் !' என்று சொன்னேன். ஆனால் காமராசர், நல்ல முறையில் இவர்களைச் சமாளிப்பேன் என்கிற மாதிரி, கல்வித் திட்டத்தை எடுத்துள்ளார்.

எங்களுக்கு இரண்டொரு காரியம் செய்தாலே போதும். அது என்னவென்றால், கல்வித்திட்டம் கேடுபயப்பது என்று பலரும் பலவிதத்தில் ஒப்புக்கொண்ட காரியத்தை—

உடனே கவனிக்க வேண்டும் என்பது. இரண்டாவது காரியம், ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து வந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை—சட்டப்படி இருந்ததை—அல்லாடி கெடுத்து விட்டார். அதைப்பற்றிப் பெரிய கிளர்ச்சி செய்தோம். அதைக்கண்டு அப்போதிருந்த மந்திரிகள் நடுங்கி, அதற்காக அரசியல் சட்டத்தையே திருத்தும்படியாக ஆகிவிட்டது. அதன்படி ஏதோ ஒரு அளவுக்கு நம்முடைய மக்களுக்கு விகிதாச்சாரம் கிடைக்கும் வசதி ஓரளவுக்கு இருந்தது. அதை மீண்டும் இராஜகோபாலச்சாரியார் நன்கு கெடுத்துவிட்டார். அதை மீண்டும் மாற்றவேண்டுமென்று சொன்னேன். அதற்கு, காமராசரிடமிருந்து என்னிடம் வந்தவர், தனக்கும் அதில் அக்கறை இருப்பதாகவும், தனக்காகவே அதைக் கவனிப்பதாகவும் சொன்னார்கள். அதனால் இதை ஆதரிக்கவேண்டும்.

இப்பொழுது இதை ஆதரிக்க இன்னொரு காரணமும் சேர்ந்துகொண்டது. இது தமிழன் மந்திரி சபை; பார்ப்பானே இல்லாத மந்திரி சபை. திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை அது ஒரு கட்சி அல்ல என்று வெகுநாட்களாகவே சொல்லி வருகிறேன். அந்தக் கொள்கையை யார் ஆதரித்தாலும் அவர்களை நம்முடைய ஆட்களாகவே கருத வேண்டும் என்று சொல்லிவந்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலும் நான் என்றும் 'கட்சிக்காரனாக' இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் 'கொள்கைக்காரனாக'வே இருந்தேன்.

காங்கிரசிலிருந்தபோதே நான் இந்த ஜில்லா போர்டு, சட்டசபை முதலியவற்றுக்கு நிற்கக்கூடாது என்று சொன்னேன். ஆனால், சத்தியமூர்த்தி அய்யரும், சீனிவாசய்யங்காரும்—'இது நல்ல சந்தர்ப்பம்' என்று கூறி, அதைப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தலில் நிற்க ஆரம்பித்தார்கள். நான் அப்போது கோயம்புத்தூரில் பேசுகையில், 'காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதே!' என்று சொன்னேன். அதற்கு என்பேரில் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. மற்றபடி, இன்றுகூடப் பலர், வ. வே. சு. அய்யரைப்பற்றிக் காங்கிரஸ் காரர்கள்—'அவர் பெரிய தேசபக்தர்' என்பார்கள். ஆனால், அவரைப்போல பெரிய வகுப்புவெறி பிடித்தவன் எவனுமே இல்லை. காங்கிரசில் இருந்துகொண்டே நான் அவரது வகுப்பு வெறியை எதிர்த்தேன். மற்றும், இந்த பாரதியைப்பற்றி அளப்பார்கள். இந்த ஆளும் பெரிய வகுப்புவெறி பிடித்தவர்; எதை எடுத்தாலும் 'ஆரியர்!' என்றே பாடி இருக்கிறார்.

இவர்களையெல்லாம் காங்கிரசில் இருந்துகொண்டே எதிர்த்தேன். பிறகு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காகப் பாடுபட்டேன். அதில் ஓட்டு எடுத்திருந்தால் 100-க்கு 75 பேர் என் பக்கம் இருந்திருப்பார்கள். அதை, திரு. வி. க. விடம் சொல்லி ஏமாற்றிவிட்டார்கள். அந்தத் தீர்மானத்தை திரு. எஸ். இராமநாதன்தான் கொண்டுவந்தார்; நான் அதை ஆதரித்தேன். அதை நிர்வாகக் கமிட்டியில் விடாவிட்டாலும், பொதுக் கூட்டத்திலாவது விடுங்கள் என்றேன்; சரி என்றார்கள். அப்படி அனுமதிப்பதற்கு 30 பேருடைய கையெழுத்துத் தேவை என்றார்கள்; உடனே இராமநாதன் 50 பேருடைய கையெழுத்தை வாங்கி வந்துவிட்டார். அதை எப்படிச் சமாளிப்பது என்று விழித்தார்கள். திரு. வி. க.வுக்கு என் முன்னிலையில் அந்தத் தீர்மானத்தை நிராகரிக்க முடியவில்லை. நான் தண்ணீர் குடிக்கப்போனபோது இந்த திரு. வி. க. அதை நிராகரிப்பதாகச் சொல்லிவிட்டார். நான் வந்ததும் மக்கள் சிரித்தார்கள்; ஏன் என்று கேட்டேன். 'இப்படி—நீ கொண்டுவந்த தீர்மானத்தை நீ இல்லாதபோது நிராகரித்துவிட்டார்கள்' என்று சொன்னார்கள். உடனே நான் சத்தம் போட்டேன். பிறகு அங்கிருந்து வெளியேறினேன்.

அதே மாதிரி, நான் காங்கிரசிலிருந்தபோது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். யாரையும் கலந்துகொள்ளாமலும், கேட்காமலும், திடீரென்று அதைக் காங்கிரஸ் பார்ப்பனர்களான சத்தியமூர்த்தி அய்யர், சீனிவாச அய்யங்கார் முதலியவர்கள் எதிர்த்து எழுத ஆரம்பித்துவிட்டார்கள். உடனே, நான் பதறி,

இந்தப் பார்ப்பனர்களின் செயலை எதிர்க்க வேண்டுமென்று தீர்மானித்தேன். உடனே நானும் வரதராஜுலுவும், திரு. வி. கவும், இராமநாதனும் சேர்ந்து யோசித்து, ஒரு அறிக்கை எழுதினோம். அப்பொழுது அதை வெளியிட எங்களுக்குச் சாதகமாக எந்தப் பத்திரிகையும் கிடையாது. ஆகவே, அப்போதிருந்த 'நவசக்தி' என்கிற பத்திரிகையில் மட்டும்தான் அதை வெளியிட்டோம். அதைக் கண்டதும் இராசகோபாலாச்சாரியார் ஓடிவந்து, 'இந்த மாதிரி அறிக்கைவிடுவது கூடாது' என்றார். அதற்கு நான், 'சத்தியமூர்த்தியும், சீனிவாசய்யங்காரும் செய்தது சரியா?' என்று கேட்டேன். பிறகு இருவருக்கும் அமைதி ஏற்படுகின்ற தன்மையில் அவர் சமாதானம் செய்து ஒரு அறிக்கை விட்டார். அதன் பிறகு தான் அந்தப் போராட்டம் நின்றது.

மற்றபடி, சமீபத்தில் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஓமாந்தூரார் கொண்டு வந்த போது அதை ஆதரித்தோம். காங்கிரஸ்காரர்கள் போட்ட கூட்டத்தில் நாங்கள் பேசினோம்; எங்களுடைய கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். உடனே, 'இந்த இராமசாமி—கறுப்புச் சட்டை போடாத இராமசாமி' என்று சொல்லி ஒழித்துக்கட்டினார்கள்.

பிறகு, தேர்தலில் கம்யூனிஸ்டுகளை ஆதரித்தோம்; நாம் படாத பாடுபட்டு, கஷ்டப்பட்டு உழைத்து வெற்றி தேடித் தந்தோம். அவர்கள் வெற்றி கிடைத்ததும் நம்மைப்பற்றி எந்தவிதமான கவலையும் படாமல், ஆந்திரப் பார்ப்பனர் பிரகாசத்திடம் போய்க் கெஞ்சினார்கள். இது கூடாது என்று நான் எண்ணினேன். இந்தச் சமயத்தில் எழுதினேன் தைரியமாக—கம்யூனிஸ்ட் மூலம் பிரகாசம் வருவதைவிட, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆச்சாரியார் வருவது நல்லது என்றேன். ஆச்சாரியாருக்கு என் ஆதரவு முழுவதும் கிடைக்குமென்றேன். மற்றவர்கள் திட்டும் பொழுதுகூட, அவரை நான் ஆதரித்தேன்; அவர் இலஞ்சத்துக்கு வழிவிட மாட்டார் என்றேன்; இந்த எம். எல். ஏ. க்களை வாலாட்ட விடமாட்டார் என்றேன்.

உடனே அவரும் கண்ட்ரோலை எடுத்தார். அதனால், எது இல்லையென்றாலும் நாட்டிலே பொது ஒழுக்கம் குறைந்து வந்ததாவது நிறுத்தப்பட வசதியாயிற்று என்று புகழ்ந்தேன். அதனால்தான், அவருக்கு நம்பேரில் சந்தோஷம் ஏற்பட்டது. அவரும் நம் பத்திரிகையைப் பார்த்துத்தான், 'தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை'க் கொண்டுவந்தார். நம்முடைய சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை அப்படியே எடுத்துக் கொண்டு, நெசவாளருக்கு நன்மைகள் செய்தார். அதைப் பார்த்து இந்த ஜீவானந்தமும், இராமமூர்த்தியும், 'இந்த நாட்டை இராசகோபாலாச்சாரியார் ஆளவில்லை; இந்த ஈரோடு இராமசாமிதான் ஆளுகிறார்' என்றார்கள்.

இதற்கும், நான் ஆச்சாரியாரை ஆதரிப்பதில் என்ன தப்பு என்று கூறிக் கொண்டு தான் போய்க்கொண்டிருந்தேன்.

இந்தியா மந்திரி பட்டேல் சென்னைக்கு வந்தார். அப்போது, எல்லா இந்தியா மந்திரிகளுக்கும் நாம் கறுப்புக்கொடி பிடித்துக் கொண்டிருந்த நேரம். நான் அப்போது, 'பட்டேலுக்குக் கறுப்புக்கொடி பிடிக்காதே!' என்றேன். அப்போது சிலர்கூட—நான் ஏதோ பணம் வாங்கிக்கொண்டு அப்படிச் செய்ததாகச் சொன்னார்கள். நான் ஏன் அப்படிச் செய்தேன் என்றால், பட்டேல், 'தென்னாட்டில் இருக்கும் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் நியாயமானது' என்கின்ற கருத்தைக் கொண்டிருப்பவர். இது அவர் ஓமாந்தூராரிடம் சொன்ன செய்தியாகும். அதை ஓமாந்தூரார் ஒரு ஆளிடம் சொல்லி அனுப்ப, அவர் அதை என்னிடம் சொன்னார். இப்படி நம்முடைய வாழ்க்கையில், நம்முடைய சமுதாயத்திற்கு அனுகூலமானதை எல்லாம் ஆதரிப்பதில் என்ன தப்பு?

காமராசரை என்ன கடைசி வரைக்குமா ஆதரிக்கப் போகிறேன்? அது என்னவாக முடியும்? ஆச்சாரியாரை ஆதரித்த நானே—ஆச்சாரியார் ஒழியவேண்டும் என்றதோடு, ஆச்சாரியார் சாதியே ஒழியவேண்டும் என்றல்லவா சொல்லிவிட்டேன்!

நம்மைப் பொறுத்தவரையில் இலட்சியம்தான் முக்கியம். யாருடைய போக்கும் எங்களுக்கு நன்கு தெரியும். எந்தெந்தக் காரியத்தில் காமராசருக்கு உற்சாகம் கொடுக்க வேண்டுமோ அதிலெல்லாம் அவருக்கு உற்சாகம் கொடுப்பதாக இருக்கிறேன்.

[சிதம்பரம் மாநாட்டில், 22-5-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-6-1954]

25. மந்திரிமார்களுக்கு வேண்டுகோள்

என்னுடைய வாழ்நாளில் அரசாங்க மந்திரிகளில் பொப்பிலி அரசரைத் தவிர இன்று வரை எந்த மந்திரிகளிடமும் நேரில் சென்றோ, எழுத்து மூலமாகவோ என் கழகத்துக் காவது, பொது நலத்திற்காவது எந்த விதமான வேண்டுகோளும் செய்துகொண்டது இல்லை.

திருவாளர்கள் முத்தையா முதலியார், டாக்டர் சுப்பராயன் ஆகியவர்கள் மந்திரி களாய் இருந்த காலத்தில், அதாவது சுமார் 1928–'29 ஆம் ஆண்டுகளில் அவர்களிடம் பொது விஷயங்களைப் பற்றி ஏதாவது கேட்டுக்கொண்டிருப்பேன். அவர்களும் 100-க்கு 90-க்கு மேற்பட்ட வேண்டுகோள்களை மதித்திருப்பார்கள். மற்றபடி, இதுவரை எந்த மந்திரிகளிடமும் என் சொந்த விஷயம் உள்பட எந்தக் காரியத்திற்கும் நெருங்கினது இருக்காது.

இப்பொழுது நான் மந்திரிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக்கொள்ள வேண்டிய வனாய் இருக்கிறேன். அதாவது, தமிழ்நாட்டிலே பாமர மக்கள் மொழியாகிய தமிழ் மொழியை அரசியல், சமுதாயஇயல் காரியங்களில் அரசாங்கம் சிறிதும் இலட்சியம் செய்வ தில்லை. இது தவிர, இந்தியை நுழைத்துப் பள்ளிக்கூடங்களிலும், பரீட்சைகளுக்கும் பாடமாக ஏற்பாடு செய்து, படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் தொல்லைகள் ஒருபுற மிருக்க, உத்தியோகத் தகுதியைக் கொண்டுவந்து புகுத்திப் பெரும்பாலான தமிழ் மக்களை உத்தியோகத் தகுதி அற்றவர்களாக ஆக்குவது மற்றொருபுறமிருக்க, இவையெல்லாம் போதாது என்று கருதியோ என்னமோ, தமிழ் எழுதப் படிக்கப் பேசத் தெரியாத மலை யாளிகளையும், கன்னடியர் (மங்களூர்க்காரர்) களையும் தமிழ் நாட்டிலே மாகாணத் தலைமை உத்தியோகம், ஜில்லாத் தலைமை உத்தியோகம், மற்றும் கெஜட் பதிவு அதி காரிகள், கெஜட் பதிவு இல்லாத அதிகாரிகள், கமிஷனர்கள் முதலிய உத்தியோகங்களில் நியமிப்பது என்பது சர்வசாதாரண காரியமாக இருந்துவருகிறது. ஜனநாயக நாடு, சுதந்திர நாடு, மக்கள் ஆட்சி என்கின்ற அலங்காரப் பெயர்களைச் சொல்லிக்கொண்டு நடை பெறுகிற ஆட்சியில் 100-க்கு 80 பேர்களுக்கு மேற்பட்டுக் கல்வியறிவில்லாத பாமரமக்கள் நிறைந்திருக்கும் நாடு இது என்பதைச் சிறிதும் உணராமல், மேற்கண்ட மாதிரியான—நாட்டுமொழி தெரியாத அன்னிய மொழியாளர்களை அதிகாரிகளாக நியமிப்பதென்றால் குடிமக்கள் அதிகாரிகளிடம் எப்படிப் பேசமுடியும்? அதிகாரிகளுக்குக் குடிமக்கள் எந்த மொழியில் விண்ணப்பங்களையும் வேண்டுகோள்களையும் எழுத முடியும்? பெயரளவிலே, 'நாட்டில், நாட்டு மொழியை வளர்க்கிறோம்; வளர்க்கிறோம்' என்று சொல்லிக்கொண்டு அகராதி, கலைக் களஞ்சியம், பள்ளிப் பாடப்புத்தகங்கள் முதலியவைகளின் பேரால் தமிழை நாசப்படுத்தினது மாத்திரமல்லாமல் தமிழ் தெரியாத அதிகாரிகளைக் கொண்டுவந்து வைத்து, அவர்களிடம் நீதி, நிர்வாக அதிகாரங்களைக் கொடுத்து நிர்வாகம் செய்யச் செய்வது என்றால், எந்த விதத்தில் இந்த நாட்டில் இந்த நாட்டு மொழியை அரசாங்கம் ஆதரிக்கிறது என்று சொல்ல முடியும்? இங்கு, கன்னடியர்களுக்கு கன்னட ஜில்லா ஒன்று இருக்கிறது; மலையாளிகளுக்கு மலையாள ஜில்லா ஒன்று இருக்கிறது. ஆதலால், அவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவில் உத்தியோகங்கள் கொடுத்து அவர்களை அந்தந்த ஜில்லாக்களில் உத்தியோகங்களில் போடுவதில் ஆட்சேபணை இல்லை. இப்படியிருக்க,

இந்தக் கன்னடியர்களையும், மலையாளிகளையும் தமிழ்நாட்டிலே கொண்டுவந்து ஏராளமாகப் புகுத்துவதற்கு என்ன காரணம்?

வெள்ளைக்காரன் ஆட்சியிலும், பார்ப்பனர்கள் ஆட்சியிலும் இதற்குக் காரணங்கள் இருக்கலாம். என்னவென்றால், பார்ப்பனர்களுடைய ஏகபோக ஆதிக்க நலத்திற்காகத் தங்களுக்குக் கிடைத்த உத்தியோகங்களைத் தவிர மீதி உத்தியோகங்களுக்குத் தமிழ், தமிழன் (திராவிட இன) உணர்ச்சி இல்லாதவர்களைப் போட்டால் தங்கள் நலனுக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாது என்று கருதி, அவர்கள் பெரிதும் தங்கட்குக் கிடைக்காத இடங்களுக்கெல்லாம் கிறிஸ்தவரையாவது, முஸ்லிம்களையாவது, அதுவும் முடியாவிட்டால் மலையாளிகளையாவது, கன்னடியர்களையாவது நியமிக்கச் செய்துவந்தார்கள். இவர்களுக்குத் தமிழர் (திராவிட) இன உணர்ச்சி ஏற்படுவதற்கு அவசியம் இல்லை; நியாயமும் இல்லை. ஆதலால், அந்தக் காலத்திற்கு அது அவர்களுக்கு நியாயமாகவும் சாத்தியமாகவும் இருக்கலாம். இப்பொழுது சென்னை அரசாங்க மந்திரி சபையில் ஒரே ஒரு கன்னட மந்திரியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் தமிழர்களாக—அதுவும் ஒரு ரெட்டி, ஒரு நாயடு, ஒரு செட்டிகூட இல்லாத தனித் தமிழர்களாக இருக்கும்போது, இத்தனை மலையாளிகளும் இத்தனை கன்னடியர்களும் இந்த நாட்டில் எப்படி வரமுடிந்தது என்பது மிகவும் யோசிக்கத் தகுந்ததும் கண்டிக்கத் தகுந்ததும் ஆகும்.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், பார்ப்பனர்களும் மந்திரி சபையில் இல்லை என்றாலும் அதனால் அவர்களுக்கு ஒன்றும் முழுகிப் போகவில்லை. ஏனென்றால், இவர்கள் எல்லோரும் தங்கள் விகிதத்திற்கு மேல் அதிகமான அளவு—அதுவும் கிறிஸ்தவர்களை எடுத்துக்கொண்டால் தங்கள் விகிதத்துக்கு மேல் 2, 3 பங்கு அதிகமான அளவிலும்; பார்ப்பனர்களை எடுத்துக் கொண்டால் தங்கள் விகிதத்துக்கு மேல் 5, 6 பங்கு அதிகமாகவும் பதவி முதலிய சலுகைகள் அனுபவிக்கிறார்கள். இவர்களுக்கு மந்திரி பதவி இல்லை என்றால் அது தனிப்பட்டவர்களுக்கு ஏமாற்றமாய் இருக்கலாமே தவிர, அந்த மதத்தார்4கு எந்த விதத்திலும் குறைவில்லை. தமிழர்களுக்கு மந்திரி பதவி மாத்திரம் தாராளமாக இருந்தும், அவர்கள் இனத்துக்கு இவர்களால் நியாயம் செய்யப்பட்டது என்று சொல்லுவதற்கு இடமில்லாமல் இருக்கிறது.

நாட்டிலே இவ்வளவு தூரம் இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும், மொழி எழுச்சியும் ஏற்பட்ட காலத்திலும் இந்த மந்திரிகள் இவ்வளவு அலட்சியமாக இருந்துகொண்டு, தங்கள் வாழ்வின் வளப்பத்தையும் பெருமையையும் மாத்திரம் கவனித்துக்கொண்டு, தங்களுக்குச் சொந்தத்தில் வேண்டியவர்களுக்கு மாத்திரம் ஏதோ ஒரு சில பதவியை அளித்துக்கொண்டு, காலம் தாழ்த்தி வருகிறார்கள் என்றால்—தமிழர் இனத்துக்கே இது அவமானமும் கேடும் ஆன காரியமாகும் அல்லவா? தமிழை வளர்க்கிற சர்க்கார், தமிழுக்கு நல்லது செய்யாவிட்டாலும் தமிழர்களுக்கு மொழித் துறையில் தொல்லையாவது கொடுக்காமல் இருக்க வேண்டாமா?

சிற்சில ஜில்லாக்களுக்கு, ஆட்சியில் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவது என்று பரீட்சை பார்ப்பது என்று அனுமதித்து உத்தியோகங்களுக்குக்கூட—ஜில்லாக்களில்கூட மலையாளிகளையும், கன்னடியர்களையும் உத்தியோகங்களில் நியமிப்பதென்றால், இதைக் 'கவலை ஈனம்' என்று சொல்லுவதா. அல்லது 'சுயநல தாட்சண்யம்' என்று சொல்லுவதா என்று புரியவில்லை. தமிழ்நாட்டில் தமிழன் பதவி வகிக்கவேண்டும் என்று கேட்பது ஒரு பெரிய காரியமாய் இருந்தால், எந்த விதத்தில் தமிழ் இராஜ்யம், 'தமிழர் ஆட்சியாய்' இருக்கிறது என்று சொல்ல முடியும்?

உயர்திரு காமராசர் அவர்களை முதல்வராகக் கொண்ட சென்னை இராஜ்ய மந்திரி சபை இனியாவது இது விஷயத்தில் கவலை கொள்ளுவது பெருமைக்குரியதாகும். இது

விஷயம் பற்றி எனது பிறந்தநாள் விழா அறிக்கையின்போது குறிப்பிட்டிருந்தேன். அது முதல் இதுவரையிலும் முன்னிருந்த நிலைமை வளர்ந்ததே தவிர, சிறிதாவது கவனித்த தாகக்கூடத் தெரியவில்லை.

குறிப்பு :—கொச்சி இராஜ்யத்திற்கு திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களை திவானாகப்போட்ட காலத்தில் கொச்சியில் உள்ள மலையாளிகள் எல்லோரும் ஒன்றுகூடி எதிர்த்தார்கள். அதே கொச்சி இராஜ்யத்தில் அனேக பார்ப்பனர்கள் திவான்களாய் இருந்த காலத்தில் யாதொரு பேச்சுமூச்சும் இல்லாமல் ஏற்றுப் பெருமை அடைவதாகக் காட்டிவந்தார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

[' விடுதலை '—அறிக்கை—22-4-1955]

26. காங்கிரசில் சேர ஆலோசனை

திராவிடர் கழகச் சார்புடையவர்களானாலும் சரி; தி. க. ஆதரவாளர்களானாலும் சரி; அவர்கள் காங்கிரசில் சேர்ந்து தொண்டாற்ற ஆசைப்படுவார்களேயானால் தாராள மாய் அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம்.

இன்றையத் தமிழ்நாடு காங்கிரஸ் ஆட்சியை இந் நாட்டிற்கு, மக்களுக்கு நல்வாழ்வு ஏற்படப் பாடுபடும் ஆட்சி என்று சொல்லலாம். என் அனுபவத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கு—இந்த, அதாவது இன்றைய அளவிற்காவது நலம் ஏற்படும்படியான ஆட்சி இதற்குமுன் எப்போதுமே இருந்ததில்லை; எந்த ஆட்சியாலும் இவ்வளவு பலன் கிடைத் ததும் இல்லை; ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியினால் செய்ய முடியாத பல நலன்கள் நாட்டிற்கும்—குறிப்பாக நம் சமுதாயத்திற்கும் செய்யப்பட்டு வருகின்றன.

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி தமிழர் சமுதாயத்திற்கு அனுகூலமாக இருந்தது என்பதற்கு உதாரணம்—இந் நாட்டுப் பார்ப்பன சமுதாயம் அத்தனையும் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாய் இருந்து, அந்த ஆட்சியைக் கவிழ்த்து, அதைத் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்துவந்ததையே உதாரணமாகக் கூறலாம்.

அதுபோலவே, இன்றையத் தமிழ்நாடு காங்கிரஸ் ஆட்சியும், தமிழர் சமுதாயநலனைக் கருத்தில் வைத்துத் தமிழர் சமுதாயத்திற்கு இதுவரை ஏற்பட்டில்லாத நலன்களைக் கவனித்துச் செய்துவருகிறது என்பதற்கு உதாரணம்—பார்ப்பன சமுதாயம் முழுவதுமே தமிழ்நாடு காங்கிரசை ஒழித்துக்கட்டி—கவிழ்த்து, மறுபடியும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் அதைக் கொண்டுவரவேண்டும் என்று பாடுபடுவதே போதுமானதாகும்.

ஆனதனாலேயே, இன்றையக் காங்கிரஸ் ஆட்சியைப் பார்ப்பனர் கைக்குச் செல்ல விடாமல் காப்பது, இன்று ஒவ்வொரு தமிழனின் கடமையும் முயற்சியுமாகும்; செய்ய வேண்டிய தொண்டுமாகும்.

ஆதலாலேயே நான் கூறுகிறேன்: 'எந்தத் தமிழர் வேண்டுமானாலும்—அவர் காங்கிரசில் சேர்ந்தால் தமிழர்களுக்குத் தொண்டுசெய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று கருது வாரானால் தாராளமாய்க் காங்கிரசில் சேரலாம்' என்று.

பதவிக்காகவே காங்கிரசில் சேருவதும், பதவி கிடைக்கவில்லை யென்று ஏமாற்ற மடைந்தால் காங்கிரசை வெறுப்பதுமான தன்மையுள்ள தி. க. ஆதரவாளர்கள் எவரும் அதில் சேராமலிருப்பது நலமும் மானமுடையதுமான காரியமாகும்.

இன்று தமிழர் சமுதாய நலன் உணர்ச்சியுள்ள எந்தத் தமிழருக்கும் காங்கிரசை ஆதரித்து, காங்கிரஸ் ஆட்சியை வலுவோடு அமரச்செய்வதே சமுதாயக் கடமை என்று கூறுகிறேன்.

காங்கிரசுக்கும் நமக்கும் கொள்கையின் கருத்து வேற்றுமையிருந்தாலும், அதன் இன்றையச் செயல் முறையில் கருத்து வேற்றுமைக்குப் பெரிதும் இடமில்லை என்று கருதியே இப்படிக் கூறுகிறேன். நான் காங்கிரசை எதிர்த்துவந்ததற்கு முக்கிய காரணங்கள்—முதலாவது, நாம் பதவியில், உத்தியோகத்தில், நிர்வாகத்தில் மிகமிக மானக் கேடான தன்மையில் புறக்கணிக்கப்பட்டுத் தகுதி, திறமையற்றவர்கள் என்று கூறப்பட்டு, ஒதுக்கப்பட்டு வந்தோம்; வருகிறோம் என்பதேயாகும். மேலும், காங்கிரஸ் ஆட்சியில் தமிழர் 'சிறை பிடிக்கப்பட்ட அடிமை' போலவே நடத்தப்பட்டு வருகிறார்களே என்ற கவலையாலும் வெட்கத்தாலும், கல்வித் துறையில் நாம் ஒதுக்கப்பட்டு வந்த தன்மையாலுமேயாகும்.

இந்த இழிவுகளும் குறைபாடுகளும் ஒழிக்கப்படும் வழியில் நம் நாட்டுக் காங்கிரஸ் ஆட்சி திரும்பி இருக்கிறது. ஆதலால், தமிழர் எவரும் இந்தத் திருப்பத்திற்கு முட்டுக் கட்டை போடாமல் தோள்கொடுத்து ஆதரிக்கவேண்டும்.

தமிழ்நாடு காங்கிரசும் தன்னை மேலும்மேலும் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தி. மு. கட்சித் தலைவர்கள்போல் நடந்துகொள்ளாமலும், 'ஆதரவாளர்கள்' என்னும் பேரால் தி.மு.க. ஆதரவாளர்களைச் சட்டிப் பிடித்துக்கொண்டிருக்காமலும்—கட்டுப்பாடும் ஆதிக்கமும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இனியும் காங்கிரஸ் ஒரு கோஷ்டிக்கு குடும்பச் சொத்தாகவும், சிலருக்குப் பரம்பரை மான்யமாகவும் இல்லாமல், அது பாரபட்சமற்ற—கட்டுப்பாட்டிற்கு அடங்கிய பொதுச் சொத்தாக ஆக்கப்படவேண்டும்.

புது நபர்களைச் சேர்க்கவேண்டும்; புது நபர்கட்குப் பதவி கொடுப்பதில் தாராளம் காட்டவேண்டும். தலைவரை (லீடரை)த்தவிர, மற்றவர்கள் இரண்டு முறை—மிக அவசிய மானால் 3 முறை மட்டும் பதவி வகித்தால் போதாதா? இப்படிக்கு இல்லாமல், ஒரு சிலரே 'சிரஞ்சீவிகளாக இருந்து வருவது என்றால் அதுவே ஸ்தாபனத்திற்கு நாளுக்குநாள் பலவீனத்தை உண்டாக்கி விடுகிறது. அன்றியும், அது எப்படி ஜனநாயகமாக முடியும்? கொள்கையை எதிர்க்காமல், செயல்முறைக்கு ஒத்துவருபவர்களை, அவர்கள் மனமொப்பி வந்தால் ஏற்றுக்கொள்வது நலமாகும்.

பதவி இல்லாததாலேயே பலர் எதிரிகளாக இருக்கிறார்கள்; எதிரிகளாக ஆகிறார்கள். அப்படிப்பட்டவர்கள்—'வேண்டாம்' என்று வாயால்தான் சொல்லலாம்; காரியத்தில் 100-க்கு 75 பேர் அப்படிப்பட்டவர்கள்தாம் இருக்கிறார்கள். இது சாதாரண மனித சுபாவம். இதை யறிந்து, தலைவர் நடந்து கொள்வது நலம். 'ஜெயிலுக்குப் போனதே ஒரு யோக்கிய தாம்சம்' என்றால் அது மூன்றாந்தர மக்கள் யோக்கியதாம்சமாகும்.

ஜெயில் என்பது ஒரு பூச்சாண்டி. ஜெயிலுக்குப் போன பலர் தங்கள் தரத்துக்குமேல் வாழ்வும் சுகமும் அனுபவித்தவர்களாகவே இருப்பார்கள். நான் ஜெயிலுக்குப் போன சுமார் 19 முறைகளில் 4 தரம் A, B கிளாஸ் ஏற்படாத—'C' கிளாஸ் கைதியாக மண்சட்டியிலே கஞ்சியும், சோற்று மொத்தையும் வாங்கி, கல்லையும் புழுவையும் பொறுக்கி எறிந்துவிட்டுச் சாப்பிட்டவன். இன்று காங்கிரசில் அப்படிப்பட்டவர் ஒருவர்கூட இல்லை.

இராஜாஜி அவர்களின் பக்கத்து அறையில்—நான் கம்யூனிஸ்ட் பிரச்சாரம் செய்த தற்காக சுயமரியாதைக் கைதியாக இருக்கும்போது, அங்கிருந்த காங்கிரஸ் தோழர்கள் தாங்கள் உள்ளே இருக்கிறோமே என்று கருதி மனக் குறை பட்டிருப்பார்களே யொழிய, மற்றபடி வீடு போன்ற சகல வசதிகளுடன்—ஒரு நாளைக்குப் பொங்கல், ஒரு நாளைக்கு ததியோதனம், அக்காரவடிசல் (சர்க்கரைப் பொங்கல்), பாயசம், பலகாரம் முதலிய நல்ல உணவுடன்தான் இருந்தார்கள்; எனக்குக்கூட அதில் நல்ல பங்கு கிடைத்தது. ஜெயிலுக்குப் போனதற்காகவே—காங்கிரசில் ஒருவர்கூடச் சாகவில்லை. என் இயக்கத்தில் 10, 15 பேர்

செத்தார்கள்! ஆகையால், ஜெயிலுக்குப் போனதே யோக்கியதாம்சம் என்றால்—அது மூன்றாந்தர யோக்கியதாம்சமென்று மறுபடியும் சொல்கிறேன். ஜெயிலுக்குப் போகாத பார்ப்பனர்—காங்கிரசையும் காந்தியாரையும் ஆபாசமாய் வைத பார்ப்பனர்கள் எத்தனை பேர் காங்கிரஸ் ஆட்சியில் பதவி வகிக்கிறார்கள்? காங்கிரசை வைததோடு இல்லாமல், நேருவையே ஒழிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு கட்சி நடத்தும் பார்ப்பனருக்கு—கவர்னர் விருந்து கொடுக்கிறார்; இந்திய பிரசிடெண்ட் போய் அவரிடம் இரகசியம் பேசுகிறார் என்றால், மற்றவர்களுக்குக் கட்டுப்பாடு என்பது சந்தைக்கடைக் கட்டுப்பாடுதானே?

ஆகையால், இந்தச் சமயத்தில் கூடுமானவரை வெளியாட்களை இழுத்துக் கொள்வது எதிர் காலத்துக்கு நலனாகும்.

என்னைப் பொறுத்தவரை நான் காங்கிரசுக்கு எதிரியாய் இருந்தபோது எனக்கு இருந்த 'பெருமை' இப்போது எனக்கு இல்லை. கழகத்தில் கோஷ்டியும் உட்பூசலும் சதி காரியங்களும் மலிந்து வருகின்றன.

என் ஆயுள் வளருவதை ஆசைப்படுபவர்களைவிட, குறுகுவதை எதிர்பார்க்கிறவர்கள் அதிகமாகிறார்கள். முன்னைய அனுபவங்களைக் கொண்டு, இதை இயற்கை என்றே கருதி என் இஷ்டப்படி நடத்துகிறேன்.

தமிழ்நாடு காங்கிரசின் இன்றைய நிலைமையும் போக்கையும் பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஆசையாலேயே இதை எழுதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—18-8-1961]

வரப்போகும் சட்டசபைத் தேர்தல்களில் திராவிடர் கழகத்தின் நிலை என்ன என்பது பற்றி முக்கியமாக நம் தோழர்களுக்கும், மற்றும் காங்கிரஸ் மாற்றுக்கட்சித் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கவேண்டியது இச் சமயத்தில் அவசியம் என்று கருதுகிறேன்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு, 'திராவிடர் கழக ஆதரவாளர்களும், திராவிடர் கழகச் சார்புடையவர்களும் தங்களுக்கு அவசியம் என்றோ, சரியென்றோ பட்டால் அவர்கள் காங்கிரசில் சேர்ந்துகொள்ளுவதில் நமக்கு ஆட்சேபணையில்லை' என்று எழுதியிருந்தேன். அதைச் சில பத்திரிகைகள் சரியானபடி புரிந்துகொள்ளாமலோ, அல்லது வேண்டுமென்றே விஷமத்தனமாகவோ, 'திராவிடர் கழகத்தினர் காங்கிரசில் சேர்ந்துகொள்ளலாம்' என்று பொருள் கொள்ளுகிற முறையில் தங்கள் பத்திரிகைகளில் வெளியிட்டுக் கொண்டார்கள். அதைப்பார்த்துப் பொதுமக்களில் சிலர் குழப்பமடைந்தார்கள் என்பது ஒருபுறம் இருந்தாலும், கழகத்திலுள்ள ஒரு கோஷ்டியார் தவறுதலாக மக்களிடையில் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

நான், இதைப்பற்றி மக்களுக்கு உடனடியாக விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கருதவில்லை. ஏனெனில், கழகத்தார்கள் சேர்ந்துகொள்ளலாம் என்று நான் கருதியிருந்தால்—தெளிவாக, விளக்கமாக, சந்தேகத்திற்கிடமில்லாமல் 'கழகத்தார் இஷ்டப்பட்டவர்கள் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியிருப்பேன். அந்தப்படி நான் எழுதாமல், 'கழகத்தின் ஆதரவாளர்களும், சார்புடையவர்களும் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியிருக்கிறபோது கழகத்தாரோ, மற்றவர்களோ அதைப்பற்றிச் சந்தேகப்படுகிறார்கள் என்றால்—போதிய அளவு அறியும் தன்மைஇல்லை; அல்லது, வேண்டுமென்றே விஷமத்தனம் குறியாய் இருக்கவேண்டும் என்று அப்பொழுதே நான் நினைத்துப் பொதுக் கூட்டங்களில் இதைக் கண்டித்து விளக்கமும் சொல்லிவிட்டேன்.

நான், 'ஆதரவாளர்களையும், சார்புடையவர்களையும் இஷ்டப்பட்டால் காங்கிரசில் சேர்ந்துகொள்ளலாம்' என்று எழுதியதற்குக் காரணம், வரப்போகும் தேர்தலில் நல்ல அளவுக்கு பலத்தோடு காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும் என்கிற ஆவலால்தான் எழுதியதாகும்.

உள்ளபடியே, இப்போதைய வரப்போகும் தேர்தலாகிய பொதுத்தேர்தலில் காங்கிரஸ் சார்பாக மக்களுக்கு விளக்கமாகப் பிரச்சாரம் செய்ய காங்கிரசில் போதிய ஆட்கள் இல்லை. மாற்றுக்கட்சிக்காரர்களுக்குச் சரியானபடி பதிலுக்குப் பதில் எடுத்துச் சொல்லவோ, அவர்களது குற்றச்சாட்டுகளுக்குத் தக்க சமாதானங்கள் சொல்லவோ, காங்கிரஸ்காரர்களில் சிலரைத்தவிர மற்றவர்களுக்குப் போதிய சக்தியும், வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்றாலும், இந்த நிலை காங்கிரசுக்கு பலக் குறைவாகக்கூடும்; இந்த நிலையில் கழக ஆதரவாளர்களும் சார்புடையவர்களும் காங்கிரசில் சேர்ந்தால் நல்லபடி விளக்கம் கொடுக்கலாம்; காங்கிரசிற்கும் பலவிதத்தில் உதவிகள் செய்யலாம்; அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக்கொள்ளலாம் என்று கருதி காங்கிரஸ் நன்மைக்காகவேதான் இதைச் சொன்னேன்.

நம் கழகத் தோழர்கள் கழகச் சார்பிலேயே நல்லபடி விளக்கம் கூறலாம். ஆனதனாலே, அவர்கள் இதற்காகக் காங்கிரசுக்குப் போகவேண்டும் என்கிற அவசியம் இல்லை. தவிரவும், கழக ஆதரவாளர்கள், சார்புடையவர்கள் என்றால் ஒரு அளவுக்காவது சுயநலமில்லாதவர்கள் என்றேதான் குறிப்பிடவேண்டும்.

நிற்க, தேர்தலில் கழகத்தின் நிலைமை என்னவென்றால், வரப்போகும் தேர்தலிலேயே கண்ணை மூடிக்கொண்டு காங்கிரசை ஆதரிப்பதுதான் இன்றையக் கழக நிலை.

காங்கிரசில் எலெக்ஷனுக்காகக் காங்கிரசார் யார் யாரை நிறுத்துவது என்பது பற்றியோ, யார் யாரை நிறுத்துகிறார்கள் என்பதுபற்றியோ கழகத்திற்குச் சிறிதும் கவலையோ, இலட்சியமோ அடியோடு கிடையாது. அந்தப் பொறுப்பு 100-க்கு 100 காங்கிரசையே சேர்ந்ததாகும். அவர்கள் அதில் அனுபவசாலிகள்; மக்களைப் பற்றிக் கூடுமானவரை விசாரித்த உணரக்கூடியவர்கள்; உணர்ந்திருப்பார்கள்; நல்ல அளவுக்குப் பொறுப்பும் உடையவர்கள். இத்துறைகளில் அவர்களுக்குமேல், எவரைப்பற்றியும்—தெரிந்தவர்கள் என்றோ, பொறுப்புடையவர்கள் என்றோ சொல்லிக்கொள்ள முடியாது.

மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள்மீது ஆதிக்கம் செலுத்த அவர்களுக்கே (காங்கிரசுக்காரர்களுக்கே) முழு உரிமையும் இருக்கவேண்டும். அதன் பலன் 100-க்கு 100 அவர்களையே சேர்ந்ததாய் இருக்கவேண்டும். ஆகவேதான், காங்கிரஸ்காரர்கள் 'களிமண்ணையோ', 'மரக் கட்டையையோ' நிறுத்தினாலும் நபரைப்பற்றிச் சிறிதும் சிந்தியாமல், நமக்காக நாம் வேலை செய்வதுபோலவே பாடுபட வேண்டியவர்களாவோம். நாம், எப்படிப்பட்ட நபர்களானாலும் ஒருவரைப்பற்றிச் சிபாரிசு செய்வது என்பது பொறுப்பற்ற தன்மையும், வேண்டாத (அதிகப் பிரசங்கித்) தன்மையுமேயாகும். நிறுத்தப்பட்ட ஆட்களால் ஏற்படும் நன்மை, தீமைகளுக்குக் காங்கிரஸ்காரரையே பொறுப்பாக்குவதால் தான் தேர்தலுக்குப் பிறகு நமக்கு ஒரு நிம்மதி ஏற்பட முடியும்.

பொதுவாகவே, அரசியல் உலகம் எப்படிப்பட்டது என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். மக்கள் யாராய் இருந்தாலும் அரசியலில் சுயநலமற்று, நேர்மையாய், நாணயமாய் நடந்துகொள்ளுவார்கள் என்பது இயற்கைக்கு விரோதமான காரியமாகும். மனித சுபாவத்தைப் பொறுத்தே நான் சொல்லுகிறேன். பெரிய பெரிய 'தலைவர்களையும்', 'மகான்கள்', 'மகாத்மாக்கள்' என்பவர்களையும் குறிப்பில் வைத்துக்கொண்டுதான் இந்தக் கருத்தைச் சொல்லுகிறேனே தவிர, சாதாரண இரண்டாந்தர, மூன்றாந்தர மக்களையே மனதில் வைத்துக்கொண்டு சொல்லும் கருத்தல்ல இது. அரசியலில் யாவருக்கும் பதவிதான் இலட்சியம். இது, 'பெரிய ஆட்கள்' என்பவர்களுக்கு; மற்றபடி, 'சின்ன ஆட்கள்' என்பவர்களுக்குப் பணமும், பிழைப்பு வசதியும்தான் இலட்சியம். இதற்கு இலக்காகாதவர்கள் யார் என்பது என் கண்ணுக்குப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தும்கூடத் தென்படவில்லை.

சாதாரணமாக காமராசர் என்னைப் பார்த்து, 'உன் கழகத்திலிருந்து இரண்டு ஆட்களைக் கொடு' என்று கேட்டாலும் யாரைக் கொடுப்பது என்பதில் அனேகமாய் யாரிடமும் எனக்கே நம்பிக்கை வரமாட்டேன் என்கிறது. சிலரிடம் நம்பிக்கை வரலாமென்றால் அவர்கள் என் பேச்சை மீறவாவது துணிவார்களே யொழிய ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்க மாட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், நாம் ஏன் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது? நமக்கு என்ன அவசியம்? எந்த அளவில் எந்தக் காரியங்களை நாம் மதிக்கிறோம் என்று கருதுவதுதான் இன்று நமது கவலை. சாதாரண மக்கள் என்னைக் கேட்கலாம்: 'காமராசரிடம் மாத்திரம் எப்படி நம்பிக்கை வைத்துக் கண்மூடி ஆதரிக்கலாம்?' என்று. 'காமராசரின் இயற்கை வாய்ப்பு—என்னுடைய திட்டப்படி மனித சுபாவத்தில் 100-க்கு 90 பங்கு சுயநல நலத்துக்கு மாறுபட்டவர்கள்' என்பதாகும். மக்கள் யாவருக்கும் சுயநலம் இயற்கையே என்றாலும்—அந்தச் சுயநலம்— தேவையை, அவரவர் வாழ்க்கை நிலையைப் பெரிதும் பொறுத்தது. ஆனதால், 'காமராசர் சுயநலம்' அதிகத் தேவையையோ, சூழ் நிலையையோ, வாழ்க்கைத் திட்டத் தன்மையையோ பொறுத்திருக்க வேண்டியதில்லை என்கிற காரணம்தான்.

சாதாரண மனிதனுடைய நாணயம், ஒழுக்கம், நேர்மை என்பதெல்லாம் நூற்றுக்குத் தொண்ணூறு அவனவனுடைய இலட்சியத்தையும், தேவையையுமே பொறுத்ததாகும். காமராசரின் இலட்சியம் இப்போது இருக்கும் நிலைமைக்கு மேல் போக முடியாது; அவரது தேவை இப்போதிருக்கும் வாய்ப்புக்குமேல் ஏற்பட அவசியமே இல்லை. இந்த நிலையில், அவரது சுயநலம்—ஒழுக்கம், நேர்மை, நாணயம் இவைகளைக் கடக்கவேண்டிய அவசியமே இல்லை என்று கருதுகிறேன்.

ஒரு மடாதிபதி எப்படிக் குடும்பம் இல்லாதவனாய், கலியாணமில்லாதவனாய், பெண்டு பிள்ளைகள் இல்லாதவனாய், சொந்த வீடு, வாசல், சொத்து தேவை இல்லாதவனாய் இருக்கவேண்டும் என்று சாதாரணமாய்க் கருதப்படுகிறதோ, அதுபோல—அதிலும் சற்று மேலான நிலைமையில்—இப்படிப்பட்ட ஜனநாயகத் தன்மைக்கு ஆளைப் பொறுக்க வேண்டியது அவசியமாகும். இந்த எண்ணம், அறிவு—ஆட்சிக்காக ஆளைப் பொறுக்குபவர்களுக்கு 100-க்கு 99 பேருக்கு இருப்பதில்லை. அதனால்தான் ஜனநாயகத்தை, 'அறிவில்லாதவர்களால் பொறுக்கப்படும் சுயநலக்காரர்கள் ஆட்சி' என்று சொல்லுகிறோம்.

ஜனங்களுக்கும் அறிவிருந்து, சுயநலத்துக்கு அவசியமில்லாதவர்களாயும் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் தன்மை கொண்டதானால்தான் அதை நாம் ஓரளவுக்கு ஜனநாயகம் என்று சொல்லலாம். காமராசர் விஷயத்திலும் இப்படிப்பட்ட அறிவுகொண்டவர்களாக பெரும்பாலோர் இல்லாததனால், 'இருக்கிறதிலே இது தேவலாம்' என்றுதான் சொல்ல முடிகிறது. இந்த நிலையிலும் காமராசர் முழு பலத்தோடு—சாதாரணத்தில் அசைக்க முடியாத தன்மையோடு ஆட்சியில் அமரநேர்ந்தால், நாம் அடையமுடியாத பெரும்பேற்றை அடைந்தோம் என்று நன்றாகச் சொல்லலாம். அப்பொழுதும் ஜனநாயகம் என்கிற பேரால் ஒரு சர்வாதிகாரியைத் தெரிந்தெடுத்தோம் என்று மகிழ்ச்சியடையலாம்.

ஆட்சிக்கு எப்போதும் இப்படிப்பட்ட சர்வாதிகாரிகள் வேண்டும். அவர் ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தனக்கு ஏற்படும் பலத்தின் காரணமாக சாதாரணமாகவே சர்வாதிகாரி ஆகிவிடலாம். ஆனதினாலேதான், நம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சர்வாதிகாரித்தன்மைக்கு வரக்கூடிய ஒரு சுயநலமுள்ள நபராக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

இப்போது வரும்தேர்தல் இதுவரையிலும் நடந்த தேர்தல்போல அல்லாமல், ஒரு குறிப்பிடத் தகுந்த முக்கியமான தேர்தல் ஆகும். இதில் வெற்றிபெற்றால் வாழ்வோம்; தோல்விபுற்றால் வீழ்வோம் என்பதைத் தவிர இடையில் வேறு ராஜிக்கு இடமேயில்லை.

ஆகவேதான், காமராசரையே நம்பி—எல்லாப் பொறுப்புக்களையும் அவர்மீதே போட்டு—அவரால் நிறுத்தப்படுகிற ஆட்களில் 100-க்கு 90 பேருக்குக் குறையாமலாவது வெற்றி பெறும்படி செய்யவேண்டியது நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—17-11-1961]

27. இராஜாஜி உண்மையைக் கக்கிவிட்டார்

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்ததற்கு 'காங்கிரசின் கிளர்ச்சியும் தியாகமும் காந்தியின் ஆத்ம சக்தியும் காரணம்' என்றும், சுதந்திரம் வாங்கிக்கொடுத்தவர் காந்தியா ரென்றும் பார்ப்பனர் பித்தலாட்டமும் பிரச்சாரமும் மக்களை நம்பச் செய்துவிட்டது.

இந்த எண்ணம் தவறு என்றும், சுதந்திரத்திற்கும், காங்கிரசுக்கும் அதன் போராட்டத்திற்கும் 'தியாகத்திற்கும்' சம்பந்தமில்லை என்றும், வெள்ளையன் தானாகவே வீசி எறிந்து விட்டுப்போன சுதந்திரத்தை எடுத்துக்கொள்ள இந்தியாவில் கட்டுப்பாடான வேறு கட்சிகள் இல்லாமல் காங்கிரசும், முஸ்லிம் லீகும் மாத்திரம் இருந்ததால் முஸ்லிம் லீகுக்குப் பயந்து இணங்கி, ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள். அதாவது அனாதியாய்க் கிடந்ததைப் பங்கு போட்டுக்கொண்டார்கள். இதுதான் சுதந்திரத்தின் சரித்திரம். இதை நான் ஆயிரக்கணக்கான தடவை சொல்லிவந்திருக்கிறேன். சர். ஆர். கே. சண்முகமும் சொன்னார். ஆனால், மக்கள் அதை ஏற்கவில்லையென்றாலும், அதை மறுக்க இதுவரை யாரும் முன்வரவில்லை என்பதோடு, இந்த விஷயம் வெளியில் மக்களுக்குத் தெரியும்படி எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை.

இன்று சுதந்திரம் பார்ப்பனர் கைவிட்டு தமிழரிடம் வந்ததும், பார்ப்பனர் இப்போது உண்மையை ஒப்புக்கொண்டதோடு வெளியிலும் தெரியும்படி கக்கிவிட்டார்கள்.

அதாவது இராஜாஜி அவர்கள் 8-ந்தேதி கோகலே ஹாலில் பேசும்போது உண்மையைக் கக்கி (வெளியிட்டு) விட்டார்.

'காங்கிரஸ் போராட்டத்தாலும், நம் போராட்டத்தாலும் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று நாமெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். சுதந்திரம் கிடைத்ததற்கு வேறு காரணம் இருக்கிறது. அது என்னவென்றால், வெள்ளைக்காரர்கள் உலக யுத்தம் காரணமாய் அவரவர் கைவசமிருந்த எல்லா அன்னிய நாடுகளுக்கும் சுதந்திரம் அவர்களாகவே கொடுத்துவிட்டார்கள். அதனால் நமது நாட்டுக்கும் சுதந்திரம் வந்துவிட்டது' என்று சொல்லி இருக்கிறார்.

ஆகவே, காங்கிரசினால், தியாகத்தால் காங்கிரஸ்காரர்களுக்குப் பதவி கிடைத்து, பதவி உரிமையாகிவிட்டது என்பது உண்மை. சுதந்திரம் கிடைத்தது என்பது உண்மை அல்ல. இதை வெளியிட்டுச் சொன்னதற்கு இராஜாஜிக்கு நன்றி.

['விடுதலை'-தலையங்கம்—16 2-1965]

28. டாஷ்கண்ட் ஒப்பந்தம்

டாஷ்கண்ட் சமரச முடிவினால் இந்தியாவுக்கு ஓரளவு தொல்லை நீங்குகிறது; பாகிஸ்தானுக்குத் தோல்வி நீங்கிற்று. கோசிஜினுக்கு உலகப் பிரசித்தியான பெருமை கிடைத்தது.

['விடுதலை'-அறிக்கை—11-1-1966]

29. சிந்தியுங்கள்

தோழர்களே!

உலகிலேயே தான்பிறந்த இனத்தை அன்னிய இனத்தானுக்குக் காட்டிக்கொடுத்து உயிர் வாழ்கின்ற மக்கள் நம் இனத்தில்தான் இருக்கிறோம்.

நம்மில் பலருக்கு இன உணர்ச்சி என்பதே கிடையாது.

இன உணர்ச்சியினால் பார்ப்பான் வெகு சிறு இனமாக இருந்தாலும் அவன் மேல் மகனாய் வாழ்ந்தான்; வாழ்கிறான்; வாழ்ந்து வருகின்றான். இனத்தைக் காட்டிக் கொடுத்து வாழும் பார்ப்பான் உலகில் எங்குமே இல்லை.

'மனைவியை அயலானுடன் கூட்டி அனுப்பியாவது உன் இனத்தைக் காப்பாற்றிக் கொள்' என்று பார்ப்பனருக்கு அறிவுரை கூறுவதுதான் இராமாயண புராணம்.

சங்கராச்சாரியார் அவர்களே பார்ப்பனருக்கு அறிவுரை கூறுகையில், 'நமக்கு எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும்—இராமாயணக் கதையை எடுத்து, அப்படிப்பட்ட கஷ்டம் வந்த காலத்தில் இராமன் எப்படி நடந்துகொண்டான் என்று பார்த்தோமானால், எப்படிப் பட்ட கஷ்டத்திலிருந்தும் மீளுவதற்கு மார்க்கம் கிடைக்கும்' என்று கூறியிருக்கிறார்.

ஆனால், நாமோ, நமக்குக் கஷ்டம் வந்திருக்க வேண்டியதே இல்லை; வயிற்றுப் பிழைப்புக்கு இராமாயணக் கதைப்படி நடந்துகொள்கிறோம்.

இதற்குக் காரணம் 'மனுதர்மம்' என்று சிலர் சொல்லலாம். ஆனால் நாம் இன்று மனித தர்மம் வரப்போகிற, வளருகிற காலத்தில் இராமாயணக் கதையை வழிகாட்டியாய்க் கொள்ளுகிறோமே, நம் இனத்தின் பெருமைதான் என்ன?

புத்தர் காலத்திற்குப் பின்பு இப்போதுதான் காமராசர் காலம் வந்திருக்கிறது. புத்தன் கையில் ஆட்சி இருந்தும் புத்தன் பிரச்சாரத்தினாலேயேதான் சில காரியங்களைச் சாதித்தான். ஆனால், காமராசர் தன் கையில் சர்வாதிகார ஆட்சி இல்லாதிருந்தும், ஆட்சியினாலேயே காரியம் சாதிக்கத் திட்டமிட்டு, மனித தர்மம் செழிக்கக் காரியம் செய்து வருகிறார்.

இதற்கு எதிர்ப்பு என்ன? எங்கிருந்து வருகிறது? என்றால் நம் இனத்தவர்களாலேயே செய்யப்படும் இனத் துரோகக் காரியமாகத்தானே இருந்துவருகிறது? இப்படிப் பட்ட இனத் துரோக ஆட்களுக்கு நம் இனத்தவர்களிலேயே சிலர் ஆதரவளிப்பது என்றால் அவர்கள் நம் மனிதர்கள்தானா? கலப்பற்ற இனந்தானா? என்று சிந்திக்க வேண்டாமா?

இத்தருணம் தவறினால் மறுதருணம் நமக்கு எப்போது வரும்? இனி வரும் தருணம் உயிரைக் கொடுக்கவேண்டிய 'பலி ஈடு' தருணந்தானே வரமுடியும்?

அதற்குள் தமிழனைப் பற்றி மற்றொரு இராமாயணம் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமே!

சிந்திக்க வேண்டாமா?

தமிழா சிந்தி! சிந்தி! சிந்தி!

['விடுதலை'-தலையங்கம்—15-10-1966]

30. இன்று நடப்பது 1857-ன் சிப்பாய்க் கலகமே

இன்று இந்தியாவில் நடப்பது 1857-ல் இந்தியாவில் நடந்த 'சிப்பாய்க் கலகம்' போன்றதேயாகும்.

சிப்பாய்க் கலகமென்பது, வெள்ளையர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக 'வைதிக வெறியர்' (பார்ப்பனர்)களால் பாமர மக்களைத் தூண்டிவிட்டு நடத்திய 'சீர்திருத்த விரோதக் (குழப்பமே) கலகமே'யாகும்.

அக் கலகக் காரணங்களில் அரசியல் (பொலிடிகல்) சம்பந்தமான வாசனைகூடக் கிடையாது என்றே சொல்லலாம். இன்றையக் கலகத்திற்கு, அதாவது 'அரசியல் கிளர்ச்சி'க்கு எப்படிப் பார்ப்பனனும், பணக்காரனும், முஸ்லிம்களும் காரணமாய்—பின்னால் தாங்குபவர்களாய் இருக்கிறார்களோ அதுபோலவேதான், அன்றையக் கலகக் காரணங்களுக்கும் பார்ப்பானும், வைதிக மனப்பான்மைகொண்ட சுயநல மராட்டிய சிற்றரசர்களும், ஜமீன்தாரர்களும், முஸ்லிம்களும் காரணமாய் இருந்திருக்கின்றார்கள். இன்றையக் காங்கிரஸ் எப்படி ஜமீன்தாரர்களை ஒழித்து, சிற்றரசர்களை ஒழித்து வந்து, சமுதாயத் துறையில் தீவிரமான சீர்திருத்தம் செய்து வருகிறதோ, அதேபோல்தான் 1857 ஆம் ஆண்டு வாக்கில் ஆங்கிலேய ஆட்சி ஜமீன்களைப் பெரும்பகுதியை அரசாங்க ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்து விட்டதுடன், சிற்றரசர்களையும், சிறிது சிறிதாக அரசாங்க ஆதிக்கத்திற்குக் கொண்டு வருவதாய் இருந்ததுடன்—தீவிரமான சமுதாய சீர்திருத்தக் காரியங்களையும் செய்யத் தொடங்கி சில காரியங்களை அமுலுக்கும் கொண்டுவந்து விட்டது.

இந்த உண்மைகளை இன்று அரசாங்கச் சார்பில் பதிப்பிக்கப்பட்ட இந்திய வரலாறு (சரித்திர) நூல்களைப் பார்த்தால் நன்கு விளங்கும்.

இந்திய வரலாறுகள் பெரிதும் பார்ப்பனர்களாலேயே எழுதப்படுவதால், அவர்கள் தங்களுக்கு எதிரான உண்மைகளை மறைத்தும், தங்கள் நலனுக்கு ஏற்றபடி உண்மையல்லாத விஷயங்களைப் புகுத்தியும், தப்பும் தவறுமாகக் கற்பனை செய்தும் எழுதி வந்ததால், இதுவரை இந்திய மக்களுக்கு இந்திய வரலாற்று உண்மைகளை அறிய முடியாமலே போய்விட்டது.

மற்றும், அக் காலப் பார்ப்பனர்களால் எழுதிக்கொள்ளப்பட்ட சமய சம்பந்தான விஷயங்கள்கூட, இன்றுவரை 100-க்கு 100 பார்ப்பனர்களே மொழிபெயர்ப்பாளர்களாய் ஆகிவிட்டதால்—சமய நூல்களில் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசங்கள் முழுவதும் அவைகளில் உள்ள ஆபாசங்கள், காட்டுமிராண்டித்தனங்கள் முதலியவற்றை விட்டும், திருத்தியும், கற்பிதம் செய்தும் 'மொழிபெயர்த்து'ப் பிரசுரித்து வெளியாக்கிவிடுகின்றார்கள்.

நம் புலவர்கள் அப்படிப்பட்ட விஷயங்களைத்தான் நம் மக்கள் இடையில் பரப்பி, அவைகளை நம்பி மதிக்கும்படி செய்துவிடுகிறார்கள் என்றாலும், நம் மக்கள் உண்மை அறியவேண்டுமென்ற ஆவலால், இப்போது நான் சிறப்புக் கட்டுரை எழுதுவதற்கு ஆதாரமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நூல், இன்று நடைபெறும் 1966-ம் ஆண்டில் பதிப்பித்து, நமது முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுடைய அணிந்துரைபெற்று தமிழ்நாடு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 'இந்தியாவின் சிறப்பு வரலாறு' (An Advanced History of India) என்னும் 11 ரூபாய் விலைபோட்ட 600 பக்கமுள்ள புத்தகத்தில் உள்ள விஷயங்களாகும்.

இதை ஆங்கிலத்தில் எழுதியவர்கள் 1. டாக்கா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஆர். சி. மஜூம்தார் எம். ஏ; பி. எச். டி., 2. திரு. எச். சி. ராய் சவுதிரி எம். ஏ; பி. எச். டி., வரலாற்றுத் துறைப் பேராசிரியர், கல்கத்தா பல்கலைக் கழகம்; 3. திரு. கே. தத்தர். எம். ஏ; பி. எச். டி., ஆவார்கள். இதைத் தமிழில் மொழி பெயர்த்தவர். திரு. ஏ. பாண்டுரங்கன் எம். ஏ., ஈரோடு மகாஜன கல்லூரி வரலாற்று விரிவுரையாளர். வெளியிட்டது தமிழ்நாடு அரசாங்கம்.

இப்படிப்பட்ட இந்த நூலில் காணப்படும் விஷயங்களையே, ஆதாரமாய் வைத்து எழுதுகிறேன். நம் நாட்டு 'அரசியல்' பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும் பார்ப்பனப் பத்திரிகைகளும் இந்த 1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தை, 'இந்தியாவின் முதலாவது அரசியல் போராட்டம்' என்று பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்தும் வருவதால், அதன் உண்மை மக்களுக்கு விளங்க வேண்டுமென்பதற்கு ஆகவும், அதே கூட்டம்

இன்று இந்த நாட்டில் நடந்துவரும் குழப்பங்களையும், கலகங்களையும், நாச வேலைகளையும், 'அரசியல் கிளர்ச்சி' என்று பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்து வருவதால் பொதுமக்களுக்கு விளக்க ஆசைப்பட்டு எழுதுகிறேன்.

அதாவது, மேலே குறிப்பிட்ட 'இந்தியச் சிறப்பு வரலாறு' என்னும் புத்தகத்தில், 'இந்தியப் பெருங் கலகம்' என்னும் தலைப்பில் 1-வது பாராவாக, 'கலகத்தின் முன்குறிகள்' என்ற தலைப்பில் 1816 முதல் 1855 வரை நடந்த சிறு கலவரங்களைக் குறிப்பிட்டுவிட்டு, 2-வது பாராவில் 'கலகத்தின் காரணங்கள்' என்ற தலைப்பில் அன்றைய அரசாங்கத்தின் நாடு இணைப்புக் கொள்கையாலும், வாரிசு அற்ற சொத்துக்களை, நாடுகளை அரசாங்கத்துடன் சேர்த்துக்கொண்டதாலும்-மராட்டியர் மனதிலும், முஸ்லிம்கள் மனதிலும் அதிருப்தி ஏற்பட்டது காரணம் என்று காட்டிவிட்டு,

196-ம் பக்கத்தில் 2-வது வாக்கியமாக, 'பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இந்தியாவில் மிக வேகமாகப் பரவிய மேற்கு நாடுகளின் நாகரிகத்தைக் கண்டு, இந்தியாவிலிருந்த பழமைப் பற்றாளர்கள் (Conservatives) மிக அச்சமடைந்தார்கள். இரயில் தந்தி போன்ற புதியன புனைதல்(Inventions), மேற்கத்திய கல்வியைப் பரப்புதல், சதி, சிசுக் கொலை ஆகிய வழக்கங்களை ஒழித்தல், இந்துமதத்தைவிட்டு விலகியவர்களின் சிவில் உரிமையைப் பாதுகாப்பதற்காக 1856-ஆம் ஆண்டில் உண்டாக்கப்பட்ட 'சமயக் குறைபாடுகளை நீக்கும் சட்டம் (Religious Disabilities Removal Act of 1856)', விதவைகள் மறுமணம் செய்துகொள்வதைச் சட்டபூர்வமாக ஆதரித்து 'இந்து விதவைகள் மறுமணச் சட்டம் 1856 (Hindu Widows Remarriage Act of 1856), சில கிறிஸ்தவ மிஷனரிகள் நேர்மையற்ற விதத்தில் வலியத் தலையிடும் போக்கு ஆகியவைகளினால் அரசாங்கம் இந்தியர்களுடைய சமூக அமைப்பை அழிக்கவும், இந்த நாட்டில் பல காலமாக இருந்துவரும் பழக்கங்களையும் முறைகளையும் மாற்றி, மேற்கத்திய முறைகளை புகுத்தவும், இந்திய மக்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றவும் முயற்சிக்கிறது என அவர்கள் எண்ணினார்கள். வஹாபி மதப்பிரிவின் (Wahabi sect) நடவடிக்கைகள், முஸ்லிம்களின் உணர்ச்சிகளைக் கொழுந்துவிட்டு எரியுமாறு செய்தன.

'வங்காளப்படை என்ற படையில் உயர் சாதியினர் அதிகமாகச் சேர்க்கப்பட்டதால், அவர்கள் சமூக உரிமைகளைப் பெரிதாக நினைத்ததால் அவர்கள் ஒழுங்கு முறைக்கு அடங்கி நடக்கவில்லை.

'அரசாங்கம் மேற்கத்தியக் கொள்கைகளைப் (மக்களிடம்) புகுத்துகிறது என்று அவர்கள் நம்பினார்கள்.'

இப்படியாகவும், மற்றும், 'இந்தியப் படைகளை இந்தியாவிற்கு வெளியில் செல்லும்படியும் அரசாங்கம் கட்டளை இட்டது; இதனால் படைக்கு அதிருப்தி அதிகமாயிற்று' என்பதாகவும் கண்டிருக்கிறது.

குறிப்பு : மனுதர்மத்தில் பார்ப்பனர் கப்பல் ஏறுவது (கடல் தாண்டுவது) கூடாத காரியம் ஆதலால் அதிருப்தி ஏற்பட்டது.

மற்றும், அதில் காணப்படுவது என்னவென்றால், 'இராணுவத்தில் இந்தியர்கள் அதிகமாக 2,33,000 பேராகவும், அய்ரோப்பியர் 45,322 பேராகவும் இருந்ததால் இந்திய அரசாங்கம் இந்திய சிப்பாய்கள் தயவில்தான் இருக்கிறது' என்கின்ற எண்ணம் இந்திய சிப்பாய்கள் கொண்டு விட்டார்கள்.

இந்த நிலையில் துப்பாக்கித் தோட்டாக்களில் மிருகக் கொழுப்பு பூசப்பட்டிருக்கிறதென்ற உண்மையற்ற கதை, காய்ந்த சருகில் விழுந்த நெருப்புப் பொறிபோல் ஆகிவிட்டது என்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனால் சிப்பாய்கள் சிறைச்சாலைகளுக்குள் புகுந்து சிறைகளை நீக்கி கைதிகளை விடுவித்துப் பல அய்ரோப்பியர்களைக் கொன்று, அவர்களது வீடுகளையும் கொளுத்தினார்கள் என்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1857ஆம் ஆண்டு கலகத்திற்குக் காரணங்கள் இவையே போதுமென்று கருதுகிறேன். மற்றும் பல, இந்திய சரித்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனாலும், இன்று இந்தியாவில் நடைபெறும் கிளர்ச்சி என்னும் குழப்பத்திற்குக் காரணங்கள் என்ன? அதுவும் இந்தியாவின் ஆட்சிப்போக்கு, ஆட்சிக்கொள்கை, சமதர்மம், சோஷலிசக் கொள்கையேயாகும் என்று பிரகடனமானவுடன்—ஜெயில் உடைபடுவது, அதிகாரிகள் கொல்லப்படுவது, அரசாங்க காரியாலயக் கட்டடங்கள் கொளுத்தப்படுவது. பஸ்கள் கொள்ளையிடப்படுவது, மந்திரிகளும், அதிகாரிகளும் அய்க்கோர்ட் ஜட்ஜுகளும் ஆட்சிக்கு, ஆட்சிக் கொள்கைகளுக்கு விரோதமான கருத்துக் கொள்வது, காரியங்கள் செய்வது—முதலிய காரியங்களின் தத்துவம் என்ன? 1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தை விடப் பலமடங்கு அதிகமாக, அதே காரியத்திற்காக, உயர் சாதிக்காரர்களால்—வைதிக வெறியர்களால் செய்யப்படும் யுத்தம் அல்லவா? என்று கேட்கிறேன்.

ஆனால், அன்று வெள்ளையன் துணிச்சலுடன் எதிர்த்து நின்று வெற்றிபெற்றான்.

இன்று சேனாதிபதி இருக்கிறாரேயொழிய, விஸ்வாசமுள்ள சேனை இல்லையே? சிப்பாய்க் கலக நாளில் இருந்த சிப்பாய்கள் போல்—பல துரோக மந்திரிகளும், துரோக உணர்ச்சி உள்ள அதிகாரிகளுந்தான் மிதந்து காணப்படுகிறார்கள்.

சிப்பாய்க் கலகத்தின்போது சிப்பாய்கள் பேரால் ஒரு கிழட்டுத் துலுக்கனை சிம்மாசனம் ஏற்றியமாதிரி, இன்றையச் சிப்பாய்கள் மிகமிகக் கீழ்த்தரமான மக்களை சிம்மாசன மேற்றப் பார்க்கிறார்கள்.

முடிவில் வெற்றி நமதே என்றாலும், பல தொல்லைகளுக்கு நாம் ஆளாகவேண்டி இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உறுதியுடனிருக்க, தோழர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

['விடுதலை' 16-10-1966]

31. தேர்தல் படிப்பினை

1. பார்ப்பனர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்; பார்ப்பனர் ஆதரவில் பணக்காரரும் வெற்றி பெற்றுவிட்டனர்.

2. சோஷ்யலிஸம், சமதர்மம் பற்றி நம் மக்கள் கவலையற்றவர்களாக நடந்து கொண்டார்கள்.

3. எதிரிகளும் பொய்யும், புரட்டையும் ஆயுதமாகக்கொண்டு போராடினார்கள்.

இவைகளுக்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஆட்சி தெரிந்தோ, தெரியாமலோ நல்ல ஆதரவளித்து வந்திருக்கிறது. தங்கள் தங்களை முக்கியப்படுத்திக்கொண்டு, காங்கிரஸ் வெற்றி பெறவேண்டும் என்பது பற்றி காங்கிரஸ்காரர்களில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு வேலையில்லாமலேயே இருந்துவந்தது.

பொதுவாக, காமராசர் தோல்வியைத் தவிர, மற்ற தோல்வி எதுவும் எனக்கு அவ்வளவாகக் கவலை தரவில்லை. நமது மக்கள் ஜனநாயக உரிமைக்குத் தகுதியற்றவர்கள் என்பது எனது வெகுநாளைய கருத்து. இப்போதைய வெற்றியை மாற்றவேண்டும் என்பதில், இந்த வெற்றியை அளித்த மக்களின் யோக்கியதையைச் சரிவர நிர்ணயிப்போமானால், நாம் ஒன்றும் தனி முயற்சி எடுத்துப் பாடுபட வேண்டியதில்லை.

17–9–1967-ல் திருச்சியில் நடைபெற்ற பெரியார் ஈ. வெ. ரா. சிலை திறப்பு விழாவில்
பேருரையாற்றிய முதலமைச்சர் C. N. அண்ணாதுரை அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா.

மற்றும், நம் உயிர் போன்ற கொள்கைகளுக்கு இந்த ஆட்சியில் கேடு நேராதவரை, ஆட்சியின் போக்கைப்பற்றி நாம் கவலைப் படவேண்டிய அவசியமில்லை என்றே கருது கிறோம். பொதுவாக, இதுபோன்ற பார்ப்பனர் வெற்றி (பார்ப்பனரல்லாதார் தோல்வி)பற்றி எனக்கு இதற்குமுன் மூன்று அனுபவங்கள் உண்டு. மூன்றிலும் பார்ப்பனர் வெற்றி நிலைத்தபாடில்லை. ஆதலால், இன்றையப் 'பார்ப்பனர் வெற்றி' பற்றியும் ஒன்றும் மூழ்கிப் போய்விடவில்லை என்றே நம் மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நானும் அதிகக் கவலைப்படவில்லை.

பார்ப்பனரின் வெற்றியான இந்த வெற்றி நமக்குக் கேடாக அமையுமாதலால், அதை மாற்றுவதற்கு நம் மக்கள் இயற்கையாக. நமக்குக் கிடைக்கப்போகும் ஆதரவுகளை எதிர்பார்த்துச் சற்றுப் பொறுமையாக இருக்கவேண்டும் என்றே கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, நம் நாட்டுக்கு இப்படிப்பட்ட ஓர் நிலை வரக்கூடும் என்று கருதியே, 1963-லேயே காமராசர் தமிழ்நாட்டின் முதல் மந்திரி பதவியை விட்டு, அகில இந்தியக் கட்சிப் பணிக்குச் செல்ல முடிவு செய்தபோதே, நான் பத்திரிகையில் எழுதி இருப்பவை அல்லாமல் காமராசருக்கே ஒரு தந்தி கொடுத்திருக்கிறேன். அந்தத் தந்திக் குறிப்பு:

'Either of your own accord or on the advice of others, your resignation of Chief-ministership will be suicidal to Tamilians, Tamilnadu and yourself!'

'தாங்களாகவோ, பிறர் ஆலோசனையின் பேரிலோ தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவியைத் தாங்கள் ராஜினாமா செய்வதானது தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், தங்களுக்கும் தற்கொலைக் கொப்பானதாகும்!' என்பதாக, பதவி விலகுவதற்கு முன்னதாகவே கொடுத்திருக்கிறேன்.

அவர் விலகியதின் பயனாகத் தமிழ்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமான ஆட்சி ஏற்படுவதுடன், பொறுப்புள்ள ஆட்சி அமைவதற்கில்லாமலேயே போய்விட்டது. வடநாட்டிலும் பொறாமை, துவேஷம், கோஷ்டி ஏற்பட இடம் ஏற்பட்டுவிட்டது.

காமராசர் தோல்வியைப்பற்றிப் பலர் என்னிடம் வந்து துக்கம் விசாரிக்கும் தன்மை போல தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் அளித்த ஆறுதல் 'பிப்ரவரி 23-ந்தேதி தோல்விச் செய்தியைப்பற்றிக் கவலைப் படுவதைவிட 1966 நவம்பர் 7-ந்தேதி டெல்லியில் நடைபெற்ற கொலை முயற்சியில் அவர் உயிர் தப்பினதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்' என்று சொல்லி அனுப்பினேன். நானும் அப்படியே நினைத்துத்தான் சரிப்படுத்திக்கொண்டேன்.

இனி, நமது வேலை நமது கொள்கைகளைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யவேண்டியதும், அதனால் ஏற்படும் பலாபலன்களுக்கு நாம் தயாராக இருக்க வேண்டியதுமே நமது கடமையாகும்.

['விடுதலை'-தலையங்கம்—27-2-1967

32. என் ஆதரவு

இன்றைய தி.மு.க. மந்திரிசபை ஆட்சிக்கு நான் (சு.ம.-தி.க.) 'எதிர்ப்பு தெரிவிக்க மாட்டேன்' என்றால், 'வம்புச் சண்டைக்குப் போக மாட்டேன்' என்பதுதான் கருத்து. இந்தக் கருத்து எனது அறிக்கையிலேயே புதைந்து இருக்கிறது. தி.மு.க. வெற்றி பெற்றவுடன் என்னைக் காணவந்த எல்லோரிடத்திலும், நமது கழகத் தோழர்களிடமும் இதைத் தெரிவித்து இருக்கிறேன்.

உண்மையாகச் சொல்லுகிறேன், காமராசரைத் தவிர்த்து காங்கிரசில் இருக்கும் எவரையும்விட தி.மு.க.வின் தலைவர் தரத்தில் இருக்கும் எல்லோரிடமும் எனக்குக் கவர்ச்சி இருக்கிறது. அவர்கள் (தி.மு.க.) என்னிடம் துவக்கம் முதல் இன்றுவரை தாட்சண்யமாக (நாகரிகமாக) நடந்து வந்திருக்கிறார்கள். நான் அவர்களை (ரிசர்வேஷன்) மீதி இல்லாமல் எவ்வளவு கண்டித்து சுடும், குறைவான வார்த்தைகள் பயன்படுத்திய காலத்தும் இவர்களில் (தி.மு.க. தலைவர்கள்) ஒருவர்கூட என்னைக் கடிந்தோ, குறைகூறியோ, எந்தவிதமான குற்றம் சாட்டியோ, தரக் குறைவாகவோ ஒரு வார்த்தைகூடச் சொன்னது கிடையாது. இதை நாங்கள் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களில் (தி.மு.க.) சிலர் அதிகமாக சந்திக்கப்பட நேரவில்லை என்றாலும், நேர்ந்தபோது பழைய முறையிலேயே நடந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய மந்திரிகளில் யாரும் திருவாளர் பக்தவத்சலத்தைவிடக் கேடாகவும், மோசமாகவும் நடந்துகொள்ள மாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

எனது கொள்கை—சாதி ஒழிப்பு, பகுத்தறிவு ஜாதி ஒழிப்பு பூரணமாக ஏற்படும் வரை வகுப்புவாரி உரிமை. இவற்றிற்குக் காங்கிரஸ் ஆட்சி எனக்குக் கூடிய உதவிகூடச் செய்யவில்லை என்பதோடு, ஆட்சியில் காங்கிரஸ் குழுவில் பலர் எதிரியாகவும் இருந்தார்கள்.

இவர்கள் (தி.மு.க.) உதவி செய்வார்களா என்றால், இன்றுவரையில் இவர்கள் இந்தக் கொள்கைக்கு மாறாகப் பேசியதாகக் காணவில்லை. இனியும் உதவி செய்யா விட்டாலும் எதிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

இப்படியே (தி.மு.க.) இருப்பார்களேயானால் நான் ஏன் அவர்களோடு மோதிக் கொள்ள வேண்டும்?

தி.மு.க.வைச் சேர்ந்த தலைவர் தரத்திலில்லாதவர்களில் ஆங்காங்குள்ள சிலர் தரக்குறைவாய் நடந்து கொள்ளலாம். அதைப்பற்றி நம்மவர்கள் இலட்சியம் செய்யாமல் நமது பிரச்சாரத்தை நடத்தவேண்டும். இந்தக் காரியம் செய்யமுடியாமல் எதிர்ப்பு வரும் போது பார்த்துக்கொள்ளலாம்.

ஏனென்றால், தி.மு.க. தலைவர்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதிகள். எல்லோருமே தமிழர்கள் (பார்ப்பனரல்லாதார்). இவர்கள் எளிதில் நம் கொள்கை விஷயத்தில் நம்மை எதிர்க்கவோ, தொல்லை கொடுக்கவோ வரமுடியாது.

நாம் காங்கிரசைக் கொள்கைக்காகத்தான் ஆதரித்தோம்; ஆதரிக்கிறோம்; ஆதரிக்கப் போகிறோம் என்பது பெரும் அளவுக்கு உண்மையானால், இன்றைய (தி. மு. க.) ஆட்சியையும், நம் கொள்கைக்கு மாற்றம் இல்லாதவரை, எதிர்ப்பு இல்லாதவரை அவசரப் பட்டு (ஆதரிக்காவிட்டாலும்) எதிர்க்காமலாவது இருக்கவேண்டியது நம் கடமையா, அல்லவா, என்று நம் கழகத் தோழர்களைச் சிந்திக்கவேண்டுகிறேன்.

மற்றும், சமதர்மத்திற்கு—சோஷ்யலிசத்திற்கு எதிராக தி.மு.க.வினர் பேசமாட்டார்கள்; பேசமுடியாது. பேசினால், அவர்களே எதிர்ப்புக்கு இடம் கொடுக்கிறார்கள் என்பதுதானே அதன் முடிவாகும். ஆகவே, தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது பார்ப்பனருக்கு ஒரு பெரிய நெருக்கடியும், தர்ம சங்கடமுமான நிலையாகும் என்பதோடு, தி.மு.க.வுக்கும் ஒரு பெரிய சோதனைக் காலம் என்றுதான் சொல்லவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் இந்த நிலையில் எப்படி நடந்து கொள்வார்களோ நமக்குத் தெரியாது. பொதுவாக காங்கிரசில், காங்கிரஸ் ஸ்தாபனத்திலும், கொள்கையிலும் உண்மைப் பற்றுள்ளவர்கள்—ஒரு சிலர் (வெகு சிலரைத்) தவிர மற்றபடி தலைமைத் தரத்தி லாகட்டும், மந்திரி தரத்திலாகட்டும், முக்கிய பணியாளர் தரத்திலாகட்டும் யார் இருக் கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு சமயம் காமராசர் கண்களுக்குப் பலர் தென்படலாம். அதைப்பற்றி இப்போது இதில் நான் ஒன்றும் சொல்ல இஷ்டப்படவில்லை.

பொதுவாகச் சொல்லுகிறேன். இன்றைய மந்திரிகளுக்குப் பார்ப்பனர்களால்தான் நெருக்கடியும், கெட்ட பெயரும், காலாவதியும் வந்தால் வரலாமே தவிர நம்மால்—மக்களால் வராதென்றே கருதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—6-3-1967]

33. மந்திரிகள் சிந்தனைக்கு

புதிய மந்திரிகள் அனுபவமில்லாதவர்கள்; அவசரப்படுபவர்கள்; எதையாவது சொல்லி மக்களை ஏய்க்கப் பார்ப்பவர்கள் என்பதைப் பதவிக்கு வந்த நான்கைந்து நாட்களுக்குள் காட்டிக்கொண்டார்கள்.

அரிசி விஷயத்தில், நிலவரி விஷயத்தில், லெவி விஷயத்தில் இவர்கள் வாக்குறுதிகளுக்குப் பத்திரிகைக்காரர்கள் ஆதரவில் தப்பிப் பிழைக்க வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

இது மாத்திரமல்லாமல், 'ஏற்கனவே இந்தப் பிரச்சினைகளில் பொறுப்பு வகித்திருந்தவர்களையும் கலந்து பேசி, பலதரப்பட்ட ஆலோசனைகளையும் பரிசீலனை செய்யும் முன் அவர்கள் அவசரப்பட்டு எதுவும் சொல்ல விரும்பவில்லை' என்று ஜாடையாக மந்திரிகளுக்கு அறிவுறுத்தி இருக்கிறது 'தினமணி' [10-3-1967]

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் கொடுப்பது என்பது எப்படி இருந்த போதிலும், நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிலையில் மேலும் பல புது வாக்குறுதிகளைத் தாராளமாகத் தருவது புத்திசாலித்தனமான காரியமாகுமா?

தி. மு. க. மந்திரிகள் வாக்களித்து மக்களுக்கு ஆசைகாட்டிய, வண்டி வண்டியான வாக்குறுதிகளில் இதுவரை ஒன்றைக்கூட நிறைவேற்ற முடியாமல் தத்தளிப்பதுடன், 'பதவிக்கு வந்தவுடன் மறுநாளே செய்வோம்' என்று வாக்களித்தவற்றில் எல்லா விஷயங்கள் பற்றியும் பேசி இருப்பதில் ஒன்றைக்கூட நிறைவேற்றியதாகவோ, நிறைவேற்றுவதாகச் சொன்னவைகளில் புத்திசாலித்தனமாகவோ சொன்னதாகவும் இல்லை.

அரிசி விஷயத்தில், மலையாளம் போகும் அரிசியைத் தடுப்போம் என்றார்கள். பிறகு 'தினமணி' அதற்குச் சொன்ன வியாக்கியானத்தில் 'இந்த அரசாங்கத்தால் அதைத் தடுக்க முடியாது; அரிசியை வெளி மாகாணங்களுக்கு அனுப்புவதும், தடுப்பதும் மாகாண அரசாங்கத்தின் கையில் இல்லை; இது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது' என்று பளீரென்று எடுத்துக்காட்டிவிட்டது.

மற்றும், நெல் (லெவி) கொள்முதல் விஷயம் பெரிய குழப்பத்திற்குள்ளானது என்று காட்டப்பட்டுவிட்டது. பூமியை-உற்பத்தியைத் தரம்பிரிப்பது மிகமிகக் கடினம் என்று காட்டப்பட்டுவிட்டது. கிராமாதிகாரிகளையும் கீழ்ப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளையும் நம்பி ஆகவேண்டும். இவர்கள் மாமூல் பரம்பரையினராவார்கள். ஏனெனில், இவர்கள் சம்பளம் ஒரு பியூன் சம்பளத்தைவிடக் குறைவானது. வாழ்க்கையோ தாசில்தார் வாழ்க்கைக்கு இளைக்காதது! இவர்களுக்கு மேலதிகாரிகளுக்கு சப்ளை முதலிய தொல்லைகளுமிருக்கின்றன. இதையெல்லாம் விட மந்திரிகளுக்கு இந்த விஷயங்களில் ஏ, பி, சி கூடத் தெரியாது. 'லெவி'யில் என்ன சீர்திருத்தம் செய்தாலும் சிப்பந்திகளுக்கு வழியாகுமே தவிர, பிள்ளை பிழைக்காது என்றுதான் சொல்லி ஆகவேண்டும்.

பூமிகளுக்கு நிலவரி முறையிலும் பெரும் குழப்பத்திற்கு உள்ளான காரியமாகும்.

கிரமப்படி பொறுப்புள்ள, நாணயமான அரசாங்கமானால் நிலவரியை உயர்த்த வேண்டும்.

நான்கு, ஐந்து ஏக்கராக்களுக்கு உட்பட்ட நிலமுடையவர்களுக்கு வரிகூடாது என்று சொன்ன காலம் ஒரு ரூபாய்க்கு 6 படி, 5 படி விற்றகாலம். ஒரு கலம் $1\frac{1}{2}$ ரூபாய், 2 ரூபாய் விற்ற காலம்! போலீசாருக்கு 7 ரூபாய் சம்பளமும், பியூனுக்கு 6–7 ரூபாய் சம்பளமும், டிப்டி கலெக்டருக்கு 250 ரூபாய் சம்பளமும் இருந்த காலம். இன்று ஒருபடி $1\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கிறது. அது, பூமி விலைகளும் ஒரு ஏக்ரா புஞ்சை ரூ. 250, நஞ்சை ரூபாய் 3000 வரை இருந்த காலம். இன்று புஞ்சை ரூ. 1000, நஞ்சை 10,000 ரூபாய் வரை-சில இடங்களில் நஞ்சை ஏக்கர் 20,000 ரூபாய்க்கு விற்கும்போது, எதற்காக நிலவரியைக் குறைக்கவேண்டும்? ஓட்டு வாங்கவைக்குமே யல்லாமல் இதில் அறிவுடைமையோ நாணயமோ என்ன இருக்கின்றது?

கிராமத்திற்கு ரீசெட்டில்மெண்ட் வைத்து, நில வரும்படியைக் கணக்குப் பார்த்து, வரி நிர்ணயிக்கவேண்டும். இதையெல்லாம்விட, உச்சவரம்பைத் திட்டப்படுத்தி அதில் கண்டிப்பாய், உஷாராய் இருந்து திட்டப்படுத்தினால் வரி விஷயத்தில் நாம் தலையிட வேண்டிய அவசியமே இராது. மந்திரிகள் நிர்வாகத்தில் புத்தி செலுத்தாமல், இன்னமும் மக்களை எப்படி ஏய்க்கிறது என்பதிலேயே முழுக் கவலையும் செலுத்திவந்தால் இந்த பத்திரிக்கைகாரன்கள் திடீரென்று கவிழ்த்து விடுவான்கள்.

மற்றும், அண்ணாதுரை சொன்னார் என்று ‘தினமணி’ ஒரு வாக்கியம் குறிப்பிட்டிருக்கிறது. அது என்னவென்றால், ‘ஏற்கனவே (பழைய மந்திரிகளை—இந்த நிர்வாகத்தில் இருந்தவர்களை) இந்தப் பிரச்சினைகளில் பொறுப்பை நிர்வகித்தவர்களையும் கலந்து பேசி பலதரப்பட்ட ஆலோசனைகளையும் பரிசீலனை செய்யும்முன் அவசரப்பட்டு அவர் (அண்ணாதுரை) எதுவும் செய்ய விரும்பவில்லை’ என்று குறிப்பிட்டு இருக்கிறது. இதன் கருத்தென்ன? இந்த நிலையில் இருந்துகொண்டு வீரம் பேசுவதில் பயன் என்ன? இவர்கள் எந்தக் காரியத்திலும் பழைய ஆட்சியை, கொள்கையைப் பொறுத்தோ, பெரிதும் திட்டத்தைப் பொறுத்தோ எளிதில் குற்றம் சொல்லிவிடவோ, மாற்றி நடந்துவிடவோ முடியாது; கண்டிப்பாய் முடியாது.

ஆனால், உத்தியோகம், பதவி வசதி அளிப்பதில் பக்தவத்சலம் நடந்துகொண்ட முறைதான் அவரைக் கவிழ்த்தது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவர் காங்கிரசைத் தோல்வி அடையச் செய்தார்.

புது மந்திரிகளின் இந்த ‘அதைச் செய்வோம், இதைச் செய்வோம்’ என்கின்ற மாபெரும் வாக்குறுதிப் பேச்சுகள் ஒன்றும் பயன்தரப்போவதில்லை. ஏன் என்றால், அதன் பயன் 8 நாளையில் விளங்கிவிடும். இந்த நாட்டு மக்களுக்கு இவர்கள் என்ன பங்கு அளிக்கப்போகிறார்கள் என்பதைத்தான் பொறுத்திருக்கிறது இவர்கள் பிற்காலம். இன்றைக்குத் தங்களுக்கு வரும் கூட்டத்தையும் நடைபெறும் ஆரவாரத்தையும் நம்பி ஏமாந்துவிடக்கூடாது.

சரித்திரத்தை—புராணத்தை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் எவனையும் வாழ வைத்ததாக ஆதாரமே இல்லை. மனிதனுக்கு எவ்வளவுதான் பேராசை இருந்தாலும் ஆசை, நிராசையானால் பின் விளைவு என்ன என்பதைப்பற்றிய கவலை இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பதவி வழங்குதலிலும், நியமனத்திலும், ஒவ்வொரு மந்திரிக்கும் நாட்டு மக்கள் நிலைமையைப் பற்றிய கவலை இருக்கவேண்டும். எல்லா இன மக்களையும், ஒன்று போல் பாவித்துப் பாரபட்சமில்லாமல் நடுநிலைமை சிந்தனையுடன் நடந்துகொள்ள வேண்டும். இதைத்தான் பெரும்பாலான பொதுமக்கள் எதிர்பார்ப்பார்கள்.

‘அரிசி’ ‘வரி’ முதலிய பிரச்சினைகள் இன்றைய நிலையில் இயற்கைப் பிரச்சினைகள் அல்ல; செயற்கைப் பிரச்சினைகளேயாகும். இதை நம்பியே நாம் நம் வெற்றி

திருச்சியில் 17–9–1967-ல், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சிலையைத் திறந்து வைத்த
கு. காமராசர் அவர்களுடன் மேடையில் பெரியார் ஈ. வெ. ரா.

யைக் கணித்துக் கொள்ளக்கூடாது என்றே சொல்லுவேன். விபூதி வீரமுத்துசாமிக்கு ஒரு காலத்தில் இருந்த மரியாதை, பெருமை யாரும் அறியாததல்ல. இன்று கிருபானந்தவாரியார் ஸ்வாமிக்கு இருக்கும் பெருமை யாரும் அறியாததல்ல. சங்கராச்சாரிகளுக்கு இன்றுள்ள பெருமை யாரும் அறியாததல்ல.

அதுபோல்தான் மந்திரிகளுக்கு இன்றுள்ள பெருமைகளும் என்பது எனது கருத்து.

அரிசிப் 'பஞ்சம்' (பஞ்சமல்ல—கஷ்டம்) காரணமாக வந்த வெற்றிக்கு எவ்வளவு பலம் இருக்கக்கூடும்? இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அதற்கு மந்திரிகளால் என்ன பரிகாரம் (சொன்னபடி) செய்ய முடிந்தது? முடிகிறது? தலையை மொட்டை அடித்து விடுவதானால், ஆள் பாரம் (எடை) குறைந்துவிடுமா?

போக்குவரத்து மந்திரி 'பஸ் சார்ஜ்' குறைக்கப் போவதாக, அதுவும் சிந்திக்கப் போவதாகச் சொல்லுகிறார்! குறைத்தால் பெரும் நஷ்டம்தான் வரும். பஸ் புதுச் சாமான்கள் திருட்டுப் போவதற்கும், டயர்கள் மாற்றப்படும் நஷ்டத்திற்கும் சரிக்கட்டவே வருமானம் திண்டாட்டமாகிவிடும். மற்ற தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்கும்கூட 'உங்கள் பஸ் சார்ஜ் சத்தத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கிறேன். அவர்களும் குறைத்துக்கொள்ளத்தான் போகிறார்கள். காரணம், வருமானவரி விகிதம் குறையலாம் என்பது. ஆனால், அரசாங்கத்தார் அடிக்கடி 'நன்கொடை' கேட்பார்களே—அதற்கு என்ன செய்வது? என்று கேட்கிறார்கள்' என்கிறார்.

அரசாங்க பஸ் கட்டணம் குறைவதால் ஒரு சிலருக்குப் பயன் ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

எதிர்காலம் மந்திரிகளுக்குப் பெரிய சங்கடகாலமாகும். பழைய மந்திரிகளின் ஏற்பாட்டின்படி, வருஷந்தோறும் ஒரு இலட்சம் அல்லது 50 ஆயிரத்துக்குக் குறையாது படித்துத் தேர்வில் வெற்றிபெற்று வேலைக்கு அலையும் மக்கள் வெளிவரலாம். இவர்கள் சர்க்காரில் வந்துதான் முட்டிக்கொள்ளுவார்கள். ஏராளமான சிபாரிசுகள் வரலாம். தள்ள முடியாத சிபாரிசுகளும் வரலாம்.

இவற்றையெல்லாம் 'அரிசிப் பிரச்சினை வெற்றியே' தீர்வு கண்டுவிட முடியாது. அல்லது, பார்ப்பனர் ஆதரவே தீர்வு கண்டு கொடுத்து விடாது.

மந்திரிகள் குறைந்த அளவு தங்கள்மீது தவறில்லை என்றாவது காட்டிக்கொள்ள முன் வரவேண்டும்.

மற்றும், இந்த மந்திரிகள் வந்தவுடன் அதிகாரத்தில் பெரும்பான்மையாய் இருக்கும் வகுப்பாருக்கு லஞ்சம் வாங்குவதில் (இப்போதே துணிவு அதிகம்) பெரும் துணிவு வந்து விடும். இதற்குத் தள்ளமுடியாத சிபாரிசுகள் வரும். இப்படிப் பல ஏற்படலாம். இதற்கெல்லாம் மருந்து தாங்கள் நேர்மையாய் நடந்து கொள்ளுகிறோம் என்று பெரும்பாலான மக்களுக்குக் காட்டிக்கொள்வதுதான்.

ஆகவே, அவசரப்பட்டுத் தடபுடலான வாக்குறுதிகள் கொடுத்து, பிறகு பார்ப்பனர் தயவை எதிர்பார்த்தாகவேண்டிய நிலைமைக்கு ஆளாகாமல், அறிவாளிகளாக மந்திரிகள் சிந்திக்க வேண்டும்!

['விடுதலை'—தலையங்கம்—10-3-1967]

34. ஜனநாயகம்

ஜனநாயகம் என்பது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களால் நடத்தப்படும் ஆட்சி என்பதுதான் பொருள்.

மக்கள் அதற்குத் தகுதி உடையவர்களா என்கின்ற பிரச்சினை இதில் எழுவதில்லை.

அது மாத்திரமல்லாமல், நாட்டின் அமைப்பு அதற்கு ஏற்றதா என்கிற பிரச்சினை பற்றிய சிந்திப்பும் அதில் எழுவதில்லை. இவ்விரண்டு சிந்தனையும் இல்லாமல் பொதுவாக ஜனநாயகம் என்கின்ற சொல்லைக்கொண்டே மக்கள் ஜனநாயகத்திற்குப் பலி ஆகி விடுகிறார்கள்.

நமதுநாடு இன்றைக்கும் சாதி அமைப்பின்கீழ் இருந்து வருகிறது.

அதுபோலவே, நமதுநாடு இன்றும் மதஅமைப்பின்கீழ் இருந்துவருகிறது.

அதுபோலவே, நமதுநாடு இன்றும் பொருளாதார பேத அமைப்பிலேயே இருந்து வருகிறது.

இவற்றையெல்லாம்விட மோசம், மிகமிகக் கீழ்த்தரமான மூடநம்பிக்கை அமைப் பிலேயே நம்நாடு இருந்துவருகிறது.

இந்த நிலையில், மக்களுக்குப் போதிய கல்வி இல்லாத அமைப்பில், கல்வியிலும் பேதநிலை உள்ள கல்வி அமைப்பில் நமதுநாடு இருந்து வருகிறது.

இவ்வளவு பேதநிலை அமைப்பு உள்ள நாட்டில்—ஜனநாயகம் என்றால் இதன் பொருள் என்ன?

நாட்டில் ஒரு பெரும் சூதாட்டம் நடந்துவருகிறது. சூதில் வலுத்தவன் ஆட்சியாக நடந்துவருகிறது என்பதாகத்தானே கொள்ளவேண்டும்?

இந்த நாட்டிற்கு ஜனநாயகம் வந்து இன்றைக்கு 16 ஆண்டு ஆகிறது. நான்கு (அய்ந்தாண்டு) தேர்தல் நடந்துவிட்டது. மூன்று (அய்ந்தாண்டு) ஆட்சி நடந்துவிட்டது, ஆனால் இன்னமும்,

பார்ப்பான்—பறையன் இருக்கிறான்!

இந்து–முஸ்லிம்–கிறிஸ்தவன் இருக்கிறான்!

இன்றைக்கும் பணக்காரன்—ஏழை இருந்துவருகிறான்!

இன்றைக்கும் கடவுளுக்குச் சோறூட்டி, கலியாணம் செய்துவைப்பவனும் பார்ப் பான் காலில் விழுந்து கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுபவனுமாகப் படித்த மேதாவியும், படிக் காத முட்டாளும் இருந்துவருகிற இந்த நிலையில், இது எப்படி உண்மையான யோக்கிய மான, நாணயமான ஜனநாயகம் ஆகும்?

அதுமாத்திரமா? இன்று இந்நாட்டில் உள்ள 50 கோடி மக்களில் ஒருவர்கூட இது எப்படி ஜனநாயகமாகும் என்கின்ற பிரச்சினையை கிளப்ப முன்வரவில்லையே!

மேலும், இதில் உள்ள பெரும் மடமை என்னவென்றால், ஜனநாயகத் தேர்தலில் அபேட்சகராய் நின்ற அபேட்சகர்களுக்கு நபர் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் முதல் சிலருக்கு 50 ஆயிரம் ரூபாய்வரை செலவாகி இருக்கிறது என்று எல்லோருமே—50 கோடிப் பேர்களுமே பேசிக்கொள்ளுகிறார்கள். மற்றும், பெரிய குறிப்பு தேர்தலில் ஒரு மனிதன் 10,000 ரூபாய்வரை செலவு செய்யலாம் என்கின்ற அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த நாட்டில் ஒரு வாரத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் 25 கோடிக்குக் குறையாமல் இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் 37½ கோடிக்குக் குறையாமல் இருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்குமேல் சாப்பாட்டிற்கு இல்லாத மக்கள் 35 கோடிக்குக் குறையாமல் இருப்பார்கள். இப்படிப்பட்ட இந்நாட்டில்,

ஒரு மனிதன் தேர்தலுக்கு நிற்பதானால் ரூ. 250, ரூ. 500 டெபாசிட் கட்டிவிட்டு அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும் என்ற நிபந்தனைக்கும் ஆளாகவேண்டும்.

இந்த அளவுக்கே எடுத்துக்கொண்டு மற்றதையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு இப்போது சொல்லுங்கள். இன்று நடப்பது ஜனநாயகமா? அல்லது, மேல்சாதிக்காரன்—பணக்காரன்—பித்தலாட்டக்காரன் நாயகமா? என்று.

இது ஒருபுறம் இருக்கட்டும். இப்படிப்பட்ட ஜனநாயக இராஜ்யத்தில் இந்த ஆட்சிக்கும் ஆட்சி முறைக்கும் கட்டுப்பட்டு யோக்கியன், நாணயஸ்தன் என்ற பெயரை வாங்கிக் கொண்டு,

1. சாதியை ஒழிக்கவேண்டும்;

2. மூடநம்பிக்கையை ஒழிக்கவேண்டும்;

3. பணக்காரனை ஒழிக்கவேண்டும்;

4. ஆட்சியில், பதவியில், சேவையில், கல்வியில் எல்லா சாதி வகுப்பாரும் விகிதா சார சம உரிமை ஏற்படச் செய்யவேண்டும்.

என்று பாடுபடுவது என்றால், பாடுபடுபவனுக்கு நல்லபேர் கிடைக்குமா? அவனுக்கு அரசாங்க ஆதரவோ மக்களின் ஆதரவோ இருக்கமுடியுமா? அவன் எதைத் தியாகம் செய்தால்தான் ஏதாவது பலன் ஏற்படமுடியுமா?

இது ஒருபுறமிருக்கட்டும். இன்று இந்த ஜனநாயகம் ஏற்பட்ட இந்த 16 ஆண்டுக் காலத்தில் மக்களிடத்தில், அதிகாரிகளிடத்தில், சிப்பந்திகளிடத்தில் ஏற்பட்ட குணங்கள் ஜனநாயகத்திற்கு முன்பு இருந்ததைவிட உயர்ந்திருக்கிறதா? என்றுபார்த்தால் நமக்கு எது தென்படுகிறது?

எல்லாத் துறையிலும் எல்லாத்தர மக்களிடத்திலும் பொய், புரட்டு, நாணயக் குறைவு, ஒழுக்கக் குறைவு, பலாத்காரம், நாசவேலை, கொள்ளை, மானவெட்கத்தைச் சிறிதுகூட லட்சியம் செய்யாமல் எல்லாவித அயோக்கியத்தனத்திற்கும் மக்கள் துணிவது ஆகிய காரியங்கள் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமாகத்தானே இருந்து வருகிறது! இந்த நிலையில் நமதுநாட்டை நாம் ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ள (தத்துவத்தில்) வெட்கப்படவேண்டியதாகத்தானே இருக்கிறது?

நிற்க, லவுகீய முறைப்படி பேசிக்கொண்டால், இன்றைய ஆட்சி மற்றவர்களுக்கு எப்படி இருந்தாலும், நம்மைப்பொறுத்தவரை நன்மை இல்லாவிட்டாலும் கேடு ஏற்படாத ஆட்சியாக இருக்கலாம் என்றே கருதுகிறேன்.

நேற்று ஒரு பார்ப்பனப் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். அதாவது:—

மந்திரிகள் பிரமாணம் எடுத்துக்கொண்டதில் முஸ்லிம் மந்திரி உட்பட, பைபிளும் குரானும் கீதையும் இராமாயணமும் பக்கத்தில் இருந்தும் அவற்றைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் கடவுள் பெயரையும் உச்சரிக்காமல் 'எங்கள் மனப் பூர்வாக' என்ற பதத்தையே பயன்படுத்திப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள் என்றும், குறிப்பாய் இந்துமத பரிபாலனத் துறை மந்திரிகூட கடவுள் பெயரை உச்சரிக்கவில்லை என்றும் ஆத்திரப்பட்டு எழுதி இருக்கின்றதைப் பார்த்தேன். திரு. அண்ணாதுரையும் மற்ற மந்திரிகளும் பிரமாணம் எடுத்த வாசகங்கள் பின்வருமாறு:

'சி. என். அண்ணாதுரை என்னும் நான் சட்டவிதிகளுக்கு இணங்க அமைக்கப் பட்ட, இந்திய அரசியல் அமைப்பில் நான் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருக்கிறேன் என்றும், இந்தியநாட்டின் முழு முதல் ஆட்சியையும் ஒருமைப்பாட்டையும் என்றும் நிலைநிறுத்துவேன் என்றும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அமைச்சராக என் கடமைகளை உண்மையாகவும் உளச்சான்றின்படியும் நிறைவேற்றுவேன் என்றும்,

அரசியல் அமைப்புக்கும், சட்டவிதிகளுக்கும் இணங்க அச்சமும் ஒரு வழிப்பற்றும் இன்றி காய்தலும், உவத்தலும் அகற்றி, பல்வேறான மக்கள் அனைவருக்கும் நியாயம் வழங்குவேன் என்றும் உளமாற உறுதி கூறுகிறேன்'.

இதன் தத்துவம் எப்படி இருந்தாலும், இராஜாஜி இவர்களை (இந்த மந்திரிகளை)ப் பற்றிப் பார்ப்பனருக்கு அறிமுகப்படுத்துகிற நிலையில் 'இவர்கள் (தி.மு.க) தி.க. விலிருந்து, இராமசாமி நாயக்கரிடமிருந்து வந்தவர்கள் ஆனாலும் அந்த தி. க. வாசனையை அடியோடு விட்டுவிட்டு, பெருங்காயம் இருந்த டப்பாவில் அந்த வாசனை இருக்கும் என்பார்களே அதுகூட இல்லாமல், சுத்தமாகத் தேய்த்துக் கழுவிவிட்டு வந்திருக்கிறார்கள். தி. க. வாசனையே இவர்களிடமிருக்காது. நம்புங்கள்' என்று அறிமுகப்படுத்தினார்.

அப்படி இருந்தும், அந்த தி. க. வாசனை—ஏன், சு. ம. இயக்க வாசனை உலகமெல்லாம் அள்ளி வீசும்படி 15 நாள் காலத்திலேயே காட்டிவிட்டார்களே! இதைப் பார்த்தாலே தெரியவில்லையா, நம் இயக்கக் கொள்கைகளுக்கு இவர்களால் கேடு ஏற்பட முடியாது என்று கருதலாம் என்பதற்கு?

இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?

மற்றும், அந்தப் பார்ப்பனப் பத்திரிகையிலேயே இராஜாஜியின் உத்திரவாதத்தை நினைத்துக் கொண்டு மற்றொரு பார்ப்பனர் தி. மு. க.வை கேட்கிறார். என்னவென்றால்,

நீங்கள்தாம் திராவிடர் கழகத்தை விட்டுவிட்டு, சுத்தமாக கழுவிக்கொட்டி விட்டு வந்தவர்களாயிற்றே; உங்கள் கழகத்திற்கு ஏன் இன்னமும் 'திராவிட முன்னேற்ற கழகம்' என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

'திராவிடர்' என்ற சொல்லை எடுத்துவிட்டு, அந்தச் சொல்லுக்குப் பதிலாக, 'தர்மம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி 'தர்ம பாதுகாப்பு முன்னேற்ற சங்கம்' என்ற பெயர் தொனிக்கும்படி D. M. K. என்று ஆங்கிலத்திலும் 'அற வளர்ச்சிக் கழகம்' அ. மு. க. என்று தமிழிலும் போட்டுக் கொள்ளுங்கள் என்று உபதேசம் செய்திருக்கிறார்.

மற்றொரு பார்ப்பனர்,

அது மாத்திரமல்லாமல், தி. மு. க. கொடியில் உள்ள இரண்டு நிறத்தில் கருப்புநிறம் இருப்பதை எடுத்துவிட்டு, கருப்பு சிவப்பு என்கிற பேதமே இல்லாமல், ஒரே நிறமாக ஆக்கி விடுங்கள். அப்போதுதான் உங்களுக்குப் பேத உணர்ச்சி இல்லை என்கின்ற கருத்து நிஜமாகும் என்ற கருத்து ஏற்படும்படி எழுதி இருக்கிறார்!

இவற்றிலிருந்து தி. மு. க. காரர்களைப் பார்ப்பனர் எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்று இருந்தார்கள் என்பதையும், இவர்கள் (தி. மு. க) அவர்களை எந்த அளவுக்கு ஏமாற்றமடையச் செய்து வருகிறார்கள் என்பதையும் பொதுமக்கள் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

எனவே, பொதுமக்கள் எந்தக் கட்சியாரானாலும் தி. மு. க. சிறிதளவு நன்மை ஏற்படும்படி நடந்தாலும் அதைப் பெரிதாய்க் கொண்டு, அவர்கள் மனம் திருந்தும்படியாக நடந்துகொள்ள வேண்டுமென்றே விரும்புகிறேன்.

கோர்ட்டில் வாதாடும்போது வழக்கின் தன்மை ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். பஞ்சாயத்தாரைக் கொண்டு ராஜி பேசுகிறபோது வழக்கின் தன்மை ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். இதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—11-3-1967]

நாம் இன்று ஜனநாயகம் என்று சொல்லுவதெல்லாம்—மூட்டாள் மக்கள் 'எல்லாம் கடவுள் செயல்' என்று சொல்லுவதுபோல்தானே அல்லாமல், அதில் வேறுபொருள் என்ன இருக்கமுடியும்?

'அரிசிப் பிரச்சினை காரணமாக மக்கள் காங்கிரசைத் தோற்கடித்துவிட்டார்கள்' என்றால் இது உண்மையாய் இருந்தாலும் இது ஜனநாயகமாகிவிடுமா?

சமதர்மப் பிரச்சினை என்ன ஆவது? நூற்றுக்கு 9 பேராகவே இருந்த படித்த மக்களை அம்பது பேராக ஆக்கியதன்மை என்ன ஆவது? சராசரி 32 வயதில் செத்துக் கொண்டிருந்த மக்களை 50 வயதுவரை வாழும்படி செய்த 'பிரம்ம' பிரயத்தனம் என்ன ஆவது? வருடம்தோறும் 70 ஆயிரம் மக்களையே எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு அனுப்பி அதில் 100-க்கு 30 பேரையே பாசாக்கிக்கொண்டு 70 பேரை ஃபெயில் ஆக்கிவந்து இருந்த நிலைமாறி, வருடம் ஒன்றுக்கு இலட்சத்து அம்பதாயிரம், இலட்சத்து அறுபதாயிரம் என மக்களை பரீட்சைக்கு அனுப்பி அதில் 100-க்கு 50 பேருக்கு மேல் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த மக்களாக அதிகப்படுத்திய நிலை என்ன ஆவது? மாணவர்களிடம் சம்பளம் வசூலித்துக் கொண்டும், 15 இலட்சம் மக்களையே படிப்பித்துக்கொண்டும் இருந்த நிலைமை மாறி, 65 இலட்சம் மக்களை இன்று சம்பளம் இல்லாமலும், இதில் 20 இலட்சம் மக்களுக்குச் சோறும் போட்டு படிப்பளித்திருக்கும் நிலை என்ன ஆவது? மொத்தம் 30 கல்லூரிகளே இருந்து, பெரிதும் பார்ப்பனர் அல்லாத மக்களுக்கு காலேஜில் சேர இடம் இல்லாமல் இருந்தது போய், இன்று 110 காலேஜ்கள் ஏற்பட்டு, ஏறக்குறைய படிக்க இஷ்டம் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்லூரி வாய்ப்புசெய்து இருக்கும் நிலை என்ன ஆவது?

இப்படி இன்னும் பல துறைகளில் பல விஷயங்கள் மேலும் பல பக்கம் வரும்படி எழுதலாம்.

'இது இயற்கையாக யாரும் செய்யமுடியும்' என்றால் ஆச்சாரியார் (பார்ப்பனர்) ஆட்சிக் காலத்தில் இத் துறைகளில் இக் காரியங்களில் எந்த விகிதத்தில் இக் காரியங்கள் வளர்ந்தன? அன்று இயற்கை எங்கு போயிற்று? அன்று காமராசர் வரும் முன்பு ஒரு நாளைக்கு 9 மணிநேரம் வேலை செய்ததற்கு ரூபாய் ஒன்று வரும்படி (கூலி) சம்பாதித்தவன், இன்று 6 மணி, 7 மணி நேரமே வேலை செய்வதற்கு ரூ. 3, ரூ. 5, ரூ. 7 வரை சம்பாதிக்கும்படியான வேலைவாய்ப்பு, வரும்படிவாய்ப்பு இருக்கிறதே! இது பொருளாதார வளர்ச்சி அல்லவா? பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின்விளக்கு, இலட்சக்கணக்கான நிலங்களுக்கு பம்புசெட்டு இவ்வளவும் ஏற்பட்டபிறகு, இவற்றிற்கு எதிரியாய் இருந்த ஆச்சாரியார் (பார்ப்பனர்) முயற்சியால் காங்கிரஸ் தோல்வி அடைந்தது என்றால், இதற்குப் பெயர்தான் ஜனநாயகமா? வெளிநாட்டுக்காரன், பகுத்தறிவுவாதி ஒருவன் இந்த விஷயத்தைத் தெரிந்தால் வாயால் சிரிப்பானா? அல்லது, இந்த மக்களை ஜனநாயகத்திற்குத் தகுதியான மக்கள் என்று சொல்லுவானா?

மக்களை மதிக்காத, தலைக் கனம் பிடித்த 100-க்கு 100-ம் சுயநலமே உருவாய் அமைந்த கோரரூபங்கள் பெரிதும் ஆட்சிக்காரர்களாய்—மந்திரிகளாய் அமைய நேரிட்டதால் ஆட்சி கவிழவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அவ்வளவுதானே ஒழிய, இதை எந்த நிலையிலும் ஜனநாயகம் என்று நான் சொல்லவேமாட்டேன்.

ஆனால், காங்கிரஸ் தோல்வி அடைந்து விட்டதாலேயே அதை இனி நாட்டிற்குத் தேவை இல்லை என்று ஒதுக்கிவிட முடியுமா? அதற்குப் புத்திபெற ஒரு வாய்ப்புக் கொடுத்ததாகக் கருதி, நமது கவனத்தை வேறு பக்கம் திருப்பி, காங்கிரசினால் நாம் பெற்ற நன்மைகள், வசதிகள், வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு இம்மியும் குறைவு வராதபடி, வெற்றி பெற்றவர்களைக்கொண்டு பலன் பெறுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

நாமும் இந்த நிலை ஏற்படுமென்று கருதவில்லை. வெற்றி பெற்றவர்களும் இப்படிப் பட்ட வெற்றி கிடைக்கும் என்று கருதவில்லை.

எப்படியோ ஏற்பட்டுவிட்டது. ஏற்பட்டதை இருவரும் அதை இருவருக்கும் நன்மை ஏற்படும்படி நடந்துகொள்வதுதான் புத்திசாலித்தனமா? அல்லது, இருவரும் இருவருக்கும் தொல்லை ஏற்படும்படி நடந்துகொள்வது புத்திசாலித்தனமா? இருவர் நலனையும் பொறுத்தவரை நான் எந்த அளவுக்கும் ஒத்துப்போகத் தயாராய் இருக்கிறேன்; தயாராகி விட்டேன். யார் என்னைப்பற்றி எவ்வளவு தாழ்மையாகக் கருதினாலும் இலட்சியம் செய்யாமல் ஒத்துப்போய் இம் மந்திரிகளிடம் நற்பணி பெறத்தயாராய் இருக்கிறேன்.

என் சொந்த (ஈ. வெ. ரா.) வாழ்வின் நலம் கருதியல்ல: நான் துறவி—எனக்கு (குடி செய்வார் மானம் பார்த்தால் இலட்சியம் கெடும்—என்பதுபோல) இதில் 'அவமானம்' வருமே என்கின்ற கவலையோ சிந்தனையோ கிடையாது.

எனக்கு நாடு முன்னேறவேண்டும்; மக்கள் மேம்பாடு அடையவேண்டும்; மந்திரி களும் பழிக்கு ஆளாகாமல் வாழவேண்டும்; என் மானத்தைக் கவனித்து மக்களுக்குத் தொல்லை கொடுக்கமாட்டேன்; மந்திரிகளுக்கும் தொல்லை கொடுக்கமாட்டேன்; கூடுமான வரை பொறுப்பேன்.

ஏன்? மக்கள் அவ்வளவு மோசமானவர்கள்; மக்களைவிட மந்திரிகள் கொஞ்சம் தேவலாம். நாம் இன்று பகுத்தறிவுவாதிகள் என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும், மூட நம்பிக்கைக்காரர்கள் அல்ல. பகுத்தறிவு இன்னது என்று தெரிந்தவர்கள். அதில் சந்தேகம் வேண்டாம். இவர்கள், காங்கிரஸ் மந்திரிகள் நடந்துகொண்டதைவிட மேலாகவே நடந்து கொள்வார்கள். ஒவ்வொருவரும் நடந்துகொள்வார்கள்.

'ஒரு ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி அளப்பார் என்று நான் ஓட்டுச்செய்தேன்' என்று ஒருவன் சொன்னால், எதிர்பார்த்தால் அப்படிச்சொன்னவன் எப்படியோ இருந்தாலும் நம்பினவன் பத்தரைமாற்று முட்டாளா, இல்லையா? இவர்கள் ஓட்டுகளை ஜனநாயக ஓட்டு என்றால், அப்படிக் கருதுகிறவன், ஓட்டர்களைவிட முட்டாள் என்றுதானே கருத வேண்டும்? மந்திரி மூன்றுபடி அளக்கவில்லையே? என்று அந்தச் சாக்கை வைத்து நாம் மந்திரிகளுக்குத் தொல்லை கொடுத்தால் நம்மையும் அந்த வரிசையில்தானே சேர்க்க வேண்டும்?

இந்த மந்திரிசபை கவிழ்ந்தால் மறுபடியும் நமக்கு இந்தத் தொல்லைதானே ஏற் படும்? ஆகவே, நமக்கு இதே வேலைதானா?

ஸ்தாபனத்தை விட்டுவிட்டு ஸ்தாபன மந்திரிகளை எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் மந்திரிகளைவிட இன்றைய மந்திரிகள் மக்களிடம் பயம் உள்ளவர்கள். மக்களை எப்படி யாவது வசப்படுத்திப் பயன்பெற மக்களை மதிப்பவர்கள். 'மக்களுக்கு ஏதாவது செய்து அவர்களை வசப்படுத்தவேண்டுமே' என்கின்ற கவலை உள்ளவர்கள். இவர்களைக் கண்டு மக்கள் பயப்படவேண்டியதில்லை.

காங்கிரஸ் மந்திரிகளோ அப்படி இல்லை. மந்திரிகளுக்கும் மக்களுக்கும் மத்தியில் மலைபோல ஒரு அகம்பாவம் படுத்திருந்தது. அது அவர்களுக்கு இயற்கைதான்.

ஆகவே தோழர்களே! இந்த ஜனநாயக ஓட்டர்களை நம்பி மோசம்போய் விடாதீர்கள். இந்த மந்திரிகளை ஓடும்படியாகவும் செய்துவிடாதீர்கள். அவர்களாக ஓடினால் ஓடட்டும்; வேறு யாராவது ஓட்டினால் ஓடட்டும்; அந்தப்பழி உங்களுக்கு வேண்டாம்.

பணநாயகமும், சூழ்ச்சி நாயகமும்தான் இந்த 15 வருடகாலத்தில் ஜனநாயகத்தில் வளர்ந்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி எவ்வளவோ நன்மை அளித்திருந்தும், உண்மை ஜனநாயகத்தை வளர்க்கவில்லை. மத்திய அரசாங்கத்திலும் அது இல்லை.

ஆகவே, நம் கொள்கை இலட்சியம் நிறைவேற காங்கிரசைவிட இது நல்ல வாய்ப்பு என்று கருதுகிறேன்.

மந்திரிகளைப்பற்றி நீங்கள் ஒன்றும் இலட்சியம் செய்யாதீர்கள். அவர்கள் நம்மைப் போன்ற மனிதரேயாவர். மனிதனுக்குக் கொடுக்கவேண்டிய மார்ஜினை, இடைவெளியைக் கொடுத்து, கொஞ்ச நாளைக்குக் கவனித்து வாருங்கள். நம் தலைக்குமேல் பார்ப்பான் என்கின்ற—ஒருபெரிய எதிரி இருப்பதை மறந்து 'ஜனநாயகத்தை' நம்பி ஏமாந்து போகாதீர்கள்.

['விடுதலை'-தலையங்கம்—20-3-1967]

35. நாத்திகர் ஆட்சி

இந்தியாவில் இன்று 100-க்கு 100 நாத்திகர்களே மந்திரிகளாய் இருந்து நடத்தப் படும் நாடு தமிழ் நாடே ஆகும்.

இந்த மந்திரிகள் முழு நாத்திகர்கள் என்பதும், அவர்கள், தலைவர்கள் 1940ஆம் ஆண்டிலிருந்தும் மற்ற பலர் 1957ஆம் ஆண்டிலிருந்தும் சிலர் 1960ஆம் ஆண்டிலிருந்தும் நாத்திகர்களாகவும், இராமாயணத்தை நெருப்பில் போட்டவர்களாகவும் இராமனைக் கொளுத்தியவர்களாகவும், பிள்ளையார் 'சிலை' உடைத்தவர்களாகவும் இருந்துவந்த நிலை 1967 பிப்ரவரி 15-ந் தேதி வரையிலும் தமிழ்நாட்டு மக்கள் யாவருக்கும், குறிப்பாக காங்கிரஸ்காரர்களுக்கும், அதை விடக் குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கும் தெரிந்த காரியம்.

அதைவிட முக்கியமான சங்கதி என்னவென்றால், ஓட்டர் மகாஜனங்களும், இவர்கள் பக்கா நாத்திகர்கள் என்று தெரிந்தே, ஆத்திக அபேட்சகர்களுக்கு 'நாமத்தைச் சாத்தி' படுபாதாள தோல்வியைக் கொடுத்து, 10 ஆயிரம், 20 ஆயிரம், 30 ஆயிரம் கணக்கு வித்தியாசத்தில் இவர்களுக்கு அதிக ஓட்டுக்கொடுத்து, ஆத்திகர்களை ஆட்சிக்கு லாயக் கில்லை என்று இமாலயத் தோல்வி அடையச் செய்த காரியமாகும்.

இந்த நிலையில் இருக்கும் மக்களில் ஒரு கூட்டத்தார், அதுவும் தோல்வி அடைந்த கூட்டத்தினர், இன்று வெற்றிபெற்ற கூட்டத்தினரைக் குறைசொல்ல வேறு ஒரு சாக்குகூட கிடைக்காமல், ஆட்சியாளரை நாத்திகர்கள் என்று மேலும் மக்களுக்கு விளம்பரப்படுத்து வதற்காக, கொஞ்சம்கூட யோசனை இல்லாமல்—தாங்கள் செய்யப்போகும் காரியத்தின் பின் விளைவு என்ன ஆகும் என்றுகூட சிந்தியாமல், பொய்யான ஒரு செய்தியைக் கற்பனை செய்துகொண்டு 'கடவுள் பிரசாத'மாகிய விபூதியை (சாம்பலை) மந்திரி கையில் வாங்கிக் கீழே எறிந்துவிட்டதாகவும், அதனால் பக்தர்கள், மத உணர்ச்சி உள்ளவர்கள் மனம் புண்பட்டதாகவும், குற்றம் சாட்டிக் கேள்வி கேட்டிருக்கிறார் ஓர் ஆத்திகக் காங்கிரஸ்காரர். அதிலும் 'விபூதி பூசிக்கொள்வதை அவமானம் என்று கருதுகிறவர்கள் ஏன் கோவிலுக்குப் போகவேண்டும்?' என்றும் கேட்டிருக்கிறார். இதில் எவ்வளவு புத்திசாலித்தனம் இருக் கிறது என்பதை வாசகர்கள் சிந்திக்கவேண்டும்.

இதற்கு மந்திரி பதில் சொல்லுகிறார்: 'நான் கோவிலுக்குப் போகவில்லை. கோவில் குடியார்களாகிய தீட்சதர்கள் தாம் என்னைக் கூப்பிட்டார்கள். கோவிலில் எனக்கு யாரும் விபூதி கொடுக்கவில்லை. நான் வாங்கிக் கீழே எறியவில்லை. அவர்கள் கொடுத் திருந்தால் நான் வாங்கி உடனே வேறு ஒருவர் கையில் கொடுத்திருப்பேன்' என்று மரி யாதையாகப் பதில் சொல்லி இருக்கிறார்.

இதனால், மந்திரி நாத்திகர் என்பதும், ஆத்திகர்கள் அவரை 'நீங்கள் நாத்திகரானாலும் உங்கள் பாதம் கோவிலுக்குள் வந்து கோவிலை மிதித்துவிட்டுப் போனால் போதும்' என்று அழைத்தார்கள் என்றும்தானே விளங்குகிறது?

சாத்திரத்தின்படி, நாத்திகர் முகத்தில் ஆத்திகர் விழித்தாலே, ஆத்திகர்கள் உடுத்தின வேட்டியுடன் ஸ்நானம் செய்தாக வேண்டும். அப்படி இருக்க, வலுவில் வந்து நாத்திகரை அழைத்துக்கொண்டு போனார்கள் என்றால், ஆத்திகத்தின் பரிதாபத் தன்மைக்கு வேறு சாட்சி என்ன வேண்டும்?

மனம் புண்பட்ட ஆத்திகரை ஒன்று கேட்கிறோம்; திருச்செந்தூர்க் கோவிலுக்கு ஓர் ஆத்திக மந்திரி போனபோது, அங்குள்ள கோயில்குடியான ஒருவன், கடவுள் பிரசாதமான' விபூதியை நிலத்தில் வீசி எறிந்து எடுத்துக்கொள்ளச் சொன்னானே அதைக் கேட்டவுடன் இந்துமத பக்தர் மனம் ஏன் புண்படவில்லை? என்று கேட்கிறோம்.

மத பக்தர்கள் இக் காலத்தில் வாயை மூடிக்கொண்டிருந்தால்தான் மதத்தின் யோக்கியதை பறிபோகாமல் இருக்கும். வாயைத் திறந்தால் தூர்வாடைதான் வீசும்.

ஆத்திகர் என்றால், அவர்களுக்கு மானம், வெட்கம், அறிவு இருக்கக்கூடாத, இல்லாத கொழுக்கட்டையாய்த்தான் இருக்கவேண்டுமா?

இந்தக் கேள்வி கேட்ட ஆத்திகர் அந்தக் கோவிலுக்குள் போனால் அவரைக் கோவில் குடியான் 'கடவுள்' இருக்கும் அறைக்குள் நுழையக்கூடாது என்கிறானே, ஏன் சொல்லுகிறான்? 'நீ கீழ்சாதி, சூத்திரன், தீண்டத்தகாதவன்; ஆதலால் வெளியில் நில்' என்கின்றானே, இதில் பக்தர் மனம் புண்படுவதில்லை என்றால் அந்த மனம் எவ்வளவு மானம், வெட்கம்கெட்ட கல் மனம்? என்று கேட்கிறேன். ஆத்திகனுக்கு அறிவில்லாமல் போனாலும் மானம் கூடவா இருக்கக்கூடாது?

நண்பர் தியாகராஜன் இதெல்லாம் தெரியாதவரல்ல; அவர் சுயமரியாதை இயக்கத் துவக்க காலத்தில் இயக்கத்தில் கலந்திருந்தவர்தான். ஆனால், இன்று காங்கிரஸ்காரராய் இருப்பதால், ஆத்திக வேடம் போடவேண்டி இருப்பதால் இதைப் பயன்படுத்திக்கொண்டார்!

இவருக்கு மாத்திரமல்ல; எல்லாக் காங்கிரஸ்காரருக்குமே வேண்டுகோள் விடுகிறேன்.

இப்படிப்பட்ட கற்பனைப் போலிக் காரியங்களால் மந்திரிசபையை அசைக்கலாம் என்று கருதி கேலிக்காளாகாமல் நல்ல பிரச்சினைகளைக் கொண்டு மந்திரிசபையை அசைக்க, ஆட்ட முயற்சிக்கவேண்டும்.

நாத்திகம் என்பதற்காக அவர்களை அசைக்க நினைத்தால் இன்னும் பலர் நாத்திகராய்விடுவார்கள். பிறகு காங்கிரஸ் ஆத்திகர் ஸ்தாபனம் என்பதற்காகவே தலை எடுக்க முடியாமல் போய்விடும்!

காங்கிரசார் சமதர்மம் பேசிக்கொண்டு 'பிரசாதத்தை (சாம்பலை) ஏன் கீழே எறிந்தாய்?' என்று கேட்பதானால் இவர்கள் சமதர்மவாதிகளாவார்களா? இவர்களை சமதர்மவாதிகள் என்று மக்கள் நம்புவார்களா?

சமதர்மத்திற்கு A, B, C தான் கோவில்களை ஒழிப்பதாகும். இதை உணராதவர்கள் காங்கிரசில் அதிகம் பேர் இருப்பதால்தான் சமதர்மத்திற்கு இன்று வெற்றி கிடைக்காமல் போனதற்கு ஒரு காரணமுமாகும். நான் மறுபடியும் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேண்டும் என்று கருதுகிறவன்.

['விடுதலை'-தலையங்கம்—27-3-1967]

36. என் நிலை

நான் அரசியலில் கலந்து கொள்ளாவிடினும், அதாவது அரசியல் சம்பந்தமான பதவிகள் எதிலும் நான் ஈடுபடாமல், வலியவந்த பதவிகளை எல்லாம் நான் வெறுத்து ஏற்காமல் இருந்து வந்தாலும், பதவிபெற்று ஆட்சி நடத்துகிற அரசாங்கம் ஒவ்வொன்றி லும் நான் சில கடமைகள் ஏற்று, ஆதரித்தும், எதிர்த்தும் வந்திருக்கிறேன். இதற்குக் காரணம் நல்ல ஆட்சி, கெட்ட ஆட்சி என்பதைக்கூட அதிகம் சிந்திக்காமல் பார்ப்பனர் ஆட்சி; பார்ப்பனர் அல்லாதார் (தமிழர்) ஆட்சி என்கின்ற தத்துவத்தை அடிப்படையாய் வைத்துத் தீவிரமாகக் கலந்து கொண்டு வந்திருக்கின்றேன்.

1920-ல் நான் காங்கிரஸ்காரனாக இருந்து அன்று இராஜாஜியின் சிஷ்யன் போலவே நான் நடந்து கொண்டிருந்ததால், அவரது கருத்துக்கு இணங்கி ஜஸ்டிஸ்கட்சி ஆட்சியை நான் நேரிடையாய் எதிர்க்காவிடினும் அக்கட்சி தேர்தலில் தோல்வி அடையத்தக்க காரியத் திற்கு உதவிசெய்து வந்தேன்.

அந்தக் காலத்தில் இராஜாஜியிடம் மாத்திரம் அல்லாமல் எல்லாப் பார்ப்பனரிடமும் நெருக்கமாகப் பழக ஏற்பட்டதாலும் காங்கிரசின் அந்தரங்கக் கருத்து, ஆட்சியைப் பார்ப் பனர் ஆட்சியாக மாற்றவேண்டும், ஆக்கவேண்டும் என்பதே என்றும் நான் உண்மையாய் உணர்ந்ததால் காங்கிரசை எதிர்த்தும் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியை ஆதரித்தும் தொண் டாற்றினேன். ஜஸ்டிஸ் கட்சி இழந்த ஆட்சியை மறுபடியும் கைப்பற்றவும் பாடுபட்டுச் செய்தேன்.

அந்தக் காலத்தில், 1927 முதல் 1937 வரை ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி பார்ப்பனரல்லாத மக்கள் நலனுக்கு நல்ல அளவு நன்மை செய்துகொண்டே வந்தது.

அந்தக் காலத்தில், காந்தியின் பெயரை வைத்துக்கொண்டு சி. பி. சுப்பையா, அண்ணாமலைப் பிள்ளை, உபயதுல்லா, கோடைஇடி குப்புசாமி, தேவநாகய்யா—போன்ற தகரப் போகணிகளைப் படையாக வைத்துக்கொண்டு காங்கிரஸ் (பார்ப்பனர்) ஆடிய ஆட்டத்தின் பயனாய், இன்று 1967-ல் எப்படிக் காங்கிரஸ் இங்கு கவிழ்ந்ததோ அதேபோல் அன்று 1937-ல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

இரண்டிற்கும் முக்கிய காரணம், பார்ப்பனர் மிகமிகக் கட்டுப்பாடான சாதி, சூழ்ச்சி யில் தேறிய சாதி; இவை இரண்டிலும் பரம்பரையாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அனுபவம் பெற்ற சாதி ஆனதனாலாகும்.

பார்ப்பனரல்லாதவர் (தமிழர்) இதற்கு நேர் விரோதம் என்பதோடு, புத்தி மூட நம்பிக்கையால் விளைந்ததனால் கட்டுப்பாடு அறவே கிடையாததும், இன உணர்ச்சியும் கிடையாததுடன் சூழ்ச்சி அறிவு என்பது, தங்களுக்குள் சூழ்ச்சி செய்து, தம் இனத்தைத் துணிவாய்க் காட்டிக்கொடுத்து, ஒருவனை ஒருவன் ஒழித்துக்கட்டத்தான் கற்றிருப்பார்களே தவிர, பார்ப்பான் நமது சமுதாயத்திற்கு பிறவி எதிரி என்பதை 10,000-ல் ஒரு தமிழனுக்குக் கூடப் புரிந்திருக்காது. புரிந்திருந்தாலும் தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து, பார்ப்பான் காலில் விழுந்து ஆசீர்வாதம் (பதவி) பெறுவதில்தான் கெட்டிக்காரர்களாக இருப்பார்களே தவிர, தன் இன உணர்ச்சி உள்ளவர்களைக் காண்பதோ கருத்தில் கொள்ளுவதோ அரிது; அரிதரிது!

இந்தக் காரணங்களால் பார்ப்பனர் ஆதிக்கம் 'வெட்டவெட்டத் தழையும்' மரம்போல் வளர்ந்துகொண்டே வருகிறது. நம் ஆதிக்கம் எவ்வளவு உயர்ந்தாலும் அடிக்கடி சறுக்கி நழுவிக் கீழ்நிலைக்கே வந்துவிடுகிறது.

என்றாலும், என்னைப் பொறுத்தவரை சரிந்தபோதெல்லாம் அரசியல் கொள்கை என்பவற்றைப்பற்றிச் சிறிதும் கவலை செலுத்தாமல், இன உணர்ச்சியை முக்கியமாக

வைத்துப் பார்ப்பனரல்லாதார் ஆட்சி என்றால், அதைப் பார்ப்பனருக்கு அடிமைப்பட விடாமல் வலியப்போய் ஆதரித்தே வந்திருக்கிறேன்.

உதாரணத்திற்கு அதிகதூரம் போகவேண்டியதில்லை. இன்றைய தி. மு. க. ஆட்சிக்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியை 1937 முதல் 1954 வரை நான் எதிர்த்து வந்தவன்! முழு மூச்சாய் 'பலாத்காரத்தில் இறங்குவேன்' என்று மிரட்டியும் மந்திரிகள் தாராளமாய் நடமாடமுடியாத அளவுக்கும் எதிர்த்து வந்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் காமராசர் அவர்களைப்பற்றி எனக்கு அதிக அறிமுகம் கூட இல்லை. அவரோடு நான் கலந்து ஒரு இரண்டு நிமிடம் பேசிய வாய்ப்புக்கூட எனக்கு ஞாபகம் இல்லை. ஆச்சாரியார் (பார்ப்பனர்) ஆட்சி ஒழிந்து, தமிழர் கைக்கு ஆட்சி வந்தது என்கின்ற ஒரே எண்ணத்தில் வலிய ஆதரித்தேன்; தொடர்ந்து 13 ஆண்டு ஆதரித்தேன்.

இதற்குக் காங்கிரஸ்காரர்களால் (காமராசரைத் தவிர) ஒரு தொண்டரிடம் இருந்தும் கூட ஒரு பாராட்டுதலையோ ஒரு சொஸ்தி (முகஸ்துதி) வார்த்தையோகூட நான் நாளது வரை அடைந்ததில்லை; பெற்றதில்லை. மாறாக பல அலட்சியக் குறிப்பை—வெறுப்புக் குறிப்பைத் தாராளமாய்ப் பெற்று இருக்கிறேன்.

இன்றைக்கும் காங்கிரஸ்காரர் என்கின்ற முறையில் ஒரு தலைவரோ, மந்திரியோ, தொண்டரோ, எம்.பி.யோ, எம்.எல்.ஏ.யோ எனக்கு நட்போ கலந்து மனம்விட்டுப் பேசும் படியான சலுகையோகூடக் கிடையாது. பல அலட்சியங்களையும் அடைந்து வந்திருக் கிறேன். ஆனாலும், காங்கிரஸ் ஸ்தாபனத்தை, காங்கிரஸ் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்கின்ற தன்மையில் சிறிதுகூடத் தவறாமல் நான் தொண் டாற்றி ஆதரவு காட்டி வந்திருக்கிறேன்.

காரணம், காங்கிரஸ் ஆட்சி இந்த 14 ஆண்டு காலத்தில் மக்களுக்கு அபார நன்மை செய்திருக்கிறது. நாடு அபார வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் தலைவர்களும் மந்திரிகளும் தொண்டர்களும் காரணம் அல்ல என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும்—அதாவது, காமராசர்தான்—காமராசர் ஒருவருடைய முயற்சியேதான் என்று தெரிந்திருந்தாலும் காங்கிரசுக்கு முழு மரியாதை கொடுத்து ஆதரித்து வந்திருக் கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் பார்ப்பனரல்லாதார் சமுதாயத்திற்குக் கேடாகவும், எதிர்ப் பாகவும் காரியங்கள் செய்யப்பட்ட, வேதனை தரப்பட்ட காலங்களில்கூட தனிப்பட்ட நபரையும், தனிப்பட்ட அதிகாரியையும் மாத்திரந்தான் குறைகூறி இருப்பேனே தவிர, கிளர்ச்சி செய்து காட்டி இருப்பேனே தவிர, எந்தச் சந்தர்ப்பத்திலும் காங்கிரசுக்கு ஒரு சிறு அசவுகரியம் ஏற்படும்படிகூட நடந்திருக்கமாட்டேன்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், என் எண்ணத்தை, நடத்தையைக் காட்டிக் கொள்ளவே அல்லாமல் இதற்கு ஆக நன்றி பெறுவதற்கு அல்ல!

எப்போதும் நான் நன்றி பெறுவதில் கவலைப்படுவதே இல்லை. அது மனித சமுதாயத்திற்கு அவ்வளவு எளிதான காரியமல்ல; துஷ்டமிருகங்களால் மக்களுக்கோ அல்லது எந்த ஜீவனுக்கோ நன்றிகாட்டமுடியுமா?

அதுபோல்தான், மனிதஜீவனிடம் நன்றி எதிர்பார்ப்பது அறிவில்லாத தன்மையே யாகும். ஏன் எனில், மனிதஜீவன் துஷ்டஜந்துக்கள் இனத்தில் சேர்ந்த ஜீவனாகும்.

மனிதன் என்பவன் தன்னலத்திற்கு என்பதாக வாழவேண்டியவனே ஆவான்.

உலகில் எனக்குத் தோன்றிய அளவில் நாய் ஒன்றுதான் நன்றி காட்டும், விசுவாசம் காட்டும் ஜீவன். இதைப்பற்றி இங்கு அதிகமாக விவரிக்க நான் விரும்பவில்லை.

எப்படி இருந்தாலும், காமராசர் உயிர் உள்ளவரை நான் காங்கிரஸ் பதவிக்கு வரவேண்டுமென்றுதான் மனதார ஆசைப்படுகிறேன்.

இன்றைய நிலையில் காங்கிரஸ் ஒன்றினால்தான் நாட்டில் அமைதியான ஆட்சி நடத்தமுடியும். மற்ற கட்சிகள் எதுவானாலும் கிளர்ச்சி, கேடு, நாசவேலை, துரோகம் முதலியவைகள்தாம் செய்யமுடியும். ஏனெனில், காங்கிரஸ் ஒன்றுதான் இன்று எல்லா இந்திய ஸ்தாபனமாக இருக்கிறது. மற்றவை அந்தந்த நாட்டுக்குள்தான் ஆளமுடியும்!

வேறு ஆட்சி வந்தால் தமிழனுக்கு நல்லாட்சியாய் இருந்தால் ஆளட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை.

எப்படியோ இன்று தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோல்வி அடைந்து மாற்றான்—எதிரி ஆட்சியாகவே ஏற்பட்டுவிட்டது. அந்தப்படியே எதிரிகளும் நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்கள்; நானும் நினைத்துக் கவலைப்பட்டேன்; துக்கப்பட்டேன். என்னமோ நமது நல்ல வாய்ப்பின் காரணமாய், எதிரியின் புத்தி இல்லாத தன்மையின் காரணமாய் பெரிதும் தங்களால், தங்கள் முயற்சியால் ஏற்பட்ட ஆட்சியை அனுபவிக்க வாய்ப்புப் பெறாமல் ஒரே முழுக்கில் மண்ணெடுக்க ஆசைப்பட்டு, ஆட்சியாளர்களைச் சங்கடமான நிலைக்கு கொண்டுவர ஆசைப்பட்டதால், ஆட்சியாளர் நேர்மையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்ததும் ஆட்சியாளர்களை ஒழிக்கத் திட்டம் போட்டுவிட்டார்கள்.

இது நமக்கு ஒரு நல்வாய்ப்பாய் வாய்த்தது என்று கருதி, இந்த ஆட்சியைக் கவிழாமல் செய்து, அது உள்ளவரையிலாவது மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும்படி செய்ய முடியுமா என்று சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பெரிதும் பார்ப்பனர் முயற்சியால் ஆட்சி தி.மு.க.வுக்கு கிடைக்கும் வாய்ப்பு வந்தது என்றாலும் தி.மு.க. பார்ப்பனர் அல்லாதார் என்பதையும், அதிலும் அவர்கள் பகுத்தறிவு வாதிகள் என்பதையும் இவர்கள் பதவிக்காகப் பார்ப்பனர் ஆதரவைத் தேடினார்களே ஒழிய, பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருக்க அல்ல என்பதையும், பார்ப்பனர் மறந்து தடபுடலாக அடிமைகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

தி.மு.க. பார்ப்பனர்களை வாழவைக்க என்று பதவியை விரும்பினவர்கள் அல்லவே! அவர்களுக்குப் பதவிவேண்டும்; அதுவும் நிலைக்கவேண்டும்; தொல்லை இல்லாமலும் நடைபெறவேண்டும் என்கின்ற எண்ணமுடையவர்கள்.

அதோடு தி. மு. க.வுக்கு நாட்டில் பார்ப்பன செல்வாக்கு எவ்வளவு, பார்ப்பனரல்லாதார் செல்வாக்கு சக்தி—எவ்வளவு என்பதும் தெரியும். பார்ப்பனருக்குப் பத்திரிகைகள் அனுகூலம்; கோர்ட்டுகள் அனுகூலம்; அயோக்கியத்தன்மை பொருந்திய வக்கீல் கூட்டம் அனுகூலம் உண்டு.

ஆனால், பார்ப்பனரல்லாதவர்களுக்கு இவற்றைப்பற்றிக் கவலைப்படாத மக்கள் ஏராளமானபேர் இருக்கிறார்கள்; காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள்; கிளர்ச்சிக்காரர்கள் இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்குக் கிளர்ச்சிக்கு ஆட்கள் வேண்டுமானால் பார்ப்பனரல்லாத ஆட்களைக் கொண்டுதானே கிளர்ச்சி செய்யவேண்டும். இந்த நிலையில் மோதல் ஏற்பட்டால் யார் வெற்றி அடையமுடியும்? இதை ஆட்சியாளர்கள் சிந்திக்கமாட்டார்களா?

1927-ல் சுயேச்சை (காங்கிரஸ்) மந்திரி சபை கவிழ்ந்து சுயமரியாதை மந்திரி சபை ஆயிற்று.

1937-ல் புயல்போல் வெற்றிபெற்ற காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்ந்து, ஏன் பெரியார் சொல்லுகிறபடி நடக்கிற (ஜஸ்டிஸ் கட்சி) அட்வைசர் மந்திரி சபை ஆயிற்று.

1947-ல் காங்கிரஸ் (பிரகாசம்) மந்திரி சபை மாறி, இராமசாமி ரெட்டியார் மந்திரி சபை ஆயிற்று.

பிறகு 1954-ல் இராஜாஜி மந்திரி சபை மாறி, காமராசர் மந்திரி சபை ஆயிற்று.

அப்படிப் போல்தானே 1967-லும் பார்ப்பனர் வெற்றிபெற்ற மந்திரிசபை, லேபிள் மாற்றியதுபோல், பார்ப்பனரல்லாதார் மந்திரிசபை ஆயிற்று.

இவ்வளவுக்கும் நான் பங்காளியாகச் சம்பந்தப்பட்டவனுக்கு—பாடுபட்டவனுக்கு இருந்துவந்திருக்கிறேன். என்னாலாயிற்றா, இயற்கையாக ஆயிற்றா? என்பது வேறு விஷயம். ஆனால், இவற்றிற்கு என் பங்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நிலையில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்னை தி. மு. க. மதித்தாலும் சரி, மதிக்காவிட்டாலும் சரி.

காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் மந்திரி சபை என்னை மதித்ததா? அழைத்ததா? புன்முறுவலாவது காட்டிற்றா?

'பட்டுச் சேலையை இரவல் கொடுத்துவிட்டு, ஜமுக்காளம் எடுத்துக்கொண்டே, இரவல் வாங்கியவள் பின்னால் திரிந்து தொடர்ந்தது' போல்.

அதாவது, பட்டுச்சேலை, அதை இரவல் கேட்டார்கள்; கொடுத்துவிட்டோம்; அதை வாங்கிக் கட்டிக்கொண்டவள் நினைத்த பக்கத்தில் போய் உட்கார்ந்தாளேயானால், சேலை அழுக்குப்பட்டுப் போகும்; கறைபட்டுப் போகும்; எண்ணெய் பட்டுப்போகும்; கட்டிக் கொண்டவளுக்குக் கவலை இல்லை; ஊரார் வீட்டுச் சேலைதானே என்று அலட்சியமாய் உட்காருவாள். கவலை சேலைக்காரிக்குத்தானே இருக்கும்? ஆதலால், வாங்கிக் கட்டிக் கொண்டவள் பின்னாலேயே சொந்தக்காரி ஒரு ஜமுக்காளம் எடுத்துக்கொண்டு, அவள் பின்னாலேயே போய், அவள் உட்கார ஆரம்பித்தால் உடமைக்காரி உடனே ஜமுக் காளத்தை விரிப்பாள்.

அதுபோலவே, நமது கதி; மந்திரி பதவி தி. மு. க.-வுக்கு. கவுரவம், அதன் பயன் நமக்கு! நம்முடையது.

அது கறைபடாமல், அழுக்குப் படாமல் பாதுகாக்க வேண்டிய காரியம் நமக்கு இருக் கிறது; அது எல்லோருக்கும் இருக்காது. உடமைக்காரியாகிய நமக்கு—தி. க. காரர்களுக் குத்தான் இருக்க முடியும்.

மற்றவர்களோ அது நமக்கு வராதோ என்கிற கவலைக்காரர்கள் ஆகத்தானே இருக் கிறார்கள்? பார்ப்பனர் (கம்யூனிஸ்ட்), பார்ப்பனர் (சுதந்திரா) மற்றும் பல பார்ப்பனர் பல கட்சி பேரால் இருக்கிறார்கள்.

கடைசியாக யாராவது கவிழ்ந்து மறுபடியும் நம்ம கைக்கு வராதா என்கிற கருத்தில் காங்கிரஸ் உள்ளது.

நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லவே! தி. மு. க. கவிழ்வதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. அதுவரையில், மற்றும் அப்புறம் என்ன ஆகும்? இது இரண்டையும் பற்றி 'பட்டுச் சேலைக்காரியான' நாம்தானே பாடுபட வேண்டும்? ஆட்சி நமக்குத்தானே சொந்தம்? மற்றவன், சுரண்டினவரை லாபம் என்பவன்தானே? காங்கிரசும் அப்படித் தானே? அது பார்ப்பனரல்லாதார் ஸ்தாபனம் அல்லவே? காமராசர்தானே நம்முடையவர்; நம்மவர்.

இதே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைக்கு பக்தவத்சலனார் வரலாம்; அவர்தாமே வரலாம். காங்கிரசில் டிக்கெட் இல்லையென்றவுடன் சுதந்திரா டிக்கெட் கேட்பவனே

வரலாம்; இப்படியானவர்கள் யாருக்காவது பார்ப்பனரல்லாதார் என்கின்ற கவலையோ, உணர்ச்சியோ உண்டா?

நமது இலட்சியத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டால் நாம் யாராவோம் என்பது எனது நண்பர்களுக்கும் பொது மக்களுக்கும் கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன். வழமைபோல் எப்படிப்பட்ட ஆட்சியானாலும் எதிர்த்தே தீருவோம்! எதிர்த்தே தீருவோம்!

['விடுதலை'–தலையங்கம்—29-3-1967]

37. தமிழர்களின் முக்கிய கவனத்திற்கு

பார்ப்பான் உயிர் கடவுள் பொம்மையிலும், கல்லிலும்தான் இருக்கிறது. அவை ஒழிந்தால் பார்ப்பானைப் பிராமணன் என்றோ, சாமி என்றோ, மேல் சாதியான் என்றோ எவனும் மதிக்கமாட்டான்.

இப்போதே பார்ப்பனர் தங்களுக்குக் கூண்டோடு அழிவுகாலம் வந்துவிட்டது என்று கருதி, எந்தப் பாதகத்தைச் செய்தாவது, அதாவது யாரைக் கொன்றாவது மக்களையெல்லாம் காலிப் பயல்களாகச் செய்தாவது, தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்து இக் காரியத்தில் ஒவ்வொரு பார்ப்பானும் தங்களாலான கைங்கரியத்தைச் செய்து பார்த்து விடத் துணிந்து விட்டார்கள். இதற்கு ஆதாரம் இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் நடந்து வரும் அயோக்யத்தனங்களும், காலித்தனங்களுமே போதுமானதாகும். இந்த நிலைக்குப் பூணூல் இல்லாத பார்ப்பனர்களாகிய காங்கிரஸ்காரர்களும் பெரும் காரணஸ்தர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்கு அவர்களது பார்ப்பனத்தன்மை இறங்கிக்கொண்டு வருகின்றது; காங்கிரஸ்காரர்களுக்கு இந்த நாட்டில் அவர்கள் ஆதிக்க வாழ்வு இறங்கியே விட்டது.

ஆகையால், இரு சாராரும் சேர்ந்து தங்களால் செய்யக்கூடிய எல்லாப் பாதகச் செயல்களையும் செய்து பார்த்து விடுவது என்று துணிந்துவிட்டிருக்கிறார்கள். இப்போது வேலை நிறுத்தம், தொழிலாளர் என்று கூச்சல் போடுவதெல்லாம் பார்ப்பனக் கூட்டு முயற்சிதான். இன்னும் பல பெரிய கேடுகள் ஏற்படலாம். இன்றைய திராவிட முன்னேற்ற (பகுத்தறிவு)க் கழகத்தைக் கவிழ்க்கும் வரை (அதை அவ்வளவு எளிதில் செய்ய முடியாது) ஓயாமல் பல கேடுகளைச் செய்துதான் வருவார்கள். மக்கள் சகித்துக்கொண்டுதான் தீர வேண்டும். ஏன் என்றால் பார்ப்பான் ஒழிவதும், காங்கிரஸ் ஒழிவதும் இலேசான காரியம் அல்ல.

எளிதில் பிரிக்கமுடியாதபடி அவை ஒன்றுக்கொன்று ஆதரவில் பெரிய முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கின்றன. இரண்டு பேரும் தங்கள் ஆதிக்கக் கட்டடத்தை கடவுள், மதம், கோவில், உருவம் இவை சம்பந்தமான கட்டுக் கதைகள் ஆகிய அஸ்திவாரத்தின் மீதே கட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்றால் மக்களுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டு, பகுத்தறிவுக்கு மாறான எதையும் ஒழித்துக்கட்டுவது என்ற துணிவு தமிழர்களுக்கு ஏற்பட்டால்தான் முடியும்.

இதை மனதில் வைத்துத்தான் காந்தியாரும் "காங்கிரஸ் ஒழிக்கப்படவேண்டும்" என்றும், ஆட்சி–செக்குலர், மதச்சார்பற்ற–பகுத்தறிவு ஆட்சியாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார். இதனாலேயே அவர் கொல்லப்பட்டு விட்டபடியால் காங்கிரஸ் கலைக்கப்படாமல் போய் விட்டதோடு 'செக்குலர் ஆட்சி' என்று சட்டம் செய்தும், அது அமலுக்குக் கொண்டுவர முடியாமலே போய்விட்டது. இப்போது அதை மதச் சார்பற்ற ஆட்சியாகச் செய்யக்கூடிய தி.மு.க. ஆட்சி நல்வாய்ப்பாக ஏற்பட்டிருந்தும் அதைக் காங்கிரசாரும் பார்ப்பனரும் ஒழிக்கப் பார்க்கின்றார்கள்.

செக்குலர்—மதச் சார்பற்ற சொல்லுக்கு இவ்விரு சாராரும் என்ன வியாக்கியானம் கூறுகிறார்கள் என்றால், 'ஒரு பெண் கன்னியாய் இருக்கவேண்டுமென்றால் அதற்கு ஆண் சம்பந்தமே இருக்கக்கூடாது என்பது பொருள் அல்ல; எல்லா ஆண்களையும் சமமாகக் கருதி, கூப்பிட்டவனிடமெல்லாம் கலவி செய்யவேண்டும் என்பதுதான் கன்னி என்பதற்குப் பொருள்' என்பதுபோல் பொருள் சொல்லுகிறார்கள். எல்லா மதங்களையும் சமமாகப் பார்க்கவேண்டும் என்கின்ற கொள்கை மதவிஷயத்தில் 'காலம் காணாததற்கு' முன்பு இருந்தே இருந்து வருகிறபோது அதைப் புதிதாக வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏன் வரும்?

'செக்குலர்' என்ற சொல்லை ஆங்கிலச் சொல்லாகத்தான் சட்டத்தில் புகுத்தினார்களே ஒழிய, வேறுமொழிச் சொல்லாகப் புகுத்தவில்லை. ஆங்கிலச் சொல்லுக்கு வியாக்கியானம் அந்தச் சொல்லை உற்பத்தி செய்தவர்கள் சொல்லுவதைப் பொறுத்ததேயொழிய, அதன் கருத்துக்கு விரோதிகளான பார்ப்பனர்களும் காங்கிரஸ்காரர்களும் சொல்லுவது பொருத்தமாக முடியுமா?

அந்தச் சொல்லும்கூட அரசாங்க காரியத்திற்குத்தான் பொருந்தும் என்று இன்றைய ஆட்சியாளர்கள் சொல்லுகிறார்களே ஒழிய, அது எல்லா மக்களுக்கும் வலியுறுத்தும் பொருள் என்று சொல்லவில்லையே! அப்படி இருக்க, இதில் பார்ப்பனருக்கும் காங்கிரசாருக்கும் ஏன் ஆத்திரம் வரவேண்டும்.

ஏன் என்றால், தங்கள் வாழ்வு அதில்தான் இருக்கிறது. அதில்தான் மக்களுடைய முட்டாள்தனத்தில் கிளைத்து எழுந்த கடவுள், மதம், கோவில், அதிலுள்ள கற்சிலைகள், அவற்றின் பொம்மைகள், சித்திரங்கள், படங்கள் தட்டிகள் முதலியவைகள் இருக்கின்றன. அதனால்தான் அவர்களுக்கு ஆத்திரம் வருகின்றது.

எதை எதையோ சொல்லி, எதை எதையோ செய்து எப்படியோ போகட்டும்; நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை; அதற்குப் பெரும் கூட்டம் தயாராய் இருக்கிறது. ஆனால், பார்ப்பனரும், காங்கிரஸ்காரர்களும் (காங்கிரசிலும் தனித்தன்மையுள்ள ஒரு கூட்டம் இருக்கிறது. ஆனால் அவர்கள் வெளிப்படையாய் வரப் பயப்படுகிறார்கள்) அல்லாத பொதுமக்கள் (தமிழர்கள்) கடமை என்ன?

நம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊரில் பொதுக்கூட்டம் போட்டு அரசாங்கக் காரியங்களை ஆதரித்துப் பாராட்டி தீர்மானங்கள் போட்டு, அத் தீர்மானங்களை முதலமைச்சருக்கும், மத இலாகா அமைச்சருக்கும் அனுப்பிய வண்ணம் இருக்க வேண்டியது அவசியம்.

பார்ப்பனர்கள் தினந்தோறும் தங்கள் பத்திரிகைகளில் யார் யாரோ அநாம தேயங்கள் பேரால் பல கடிதங்கள் வெளியிட்டு வருகிறார்கள். நாம் அப்படிச் செய்யாவிட்டாலும் பொதுக்கூட்டங்கள் போட்டுப் பேசித் தீர்மானங்கள் செய்து அனுப்ப வேண்டாமா?

இப்படிச் செய்வது ஒருவகையில் பார்ப்பனர் யோக்கியதையையும், காங்கிரசார் யோக்கியதையையும் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்கு வசதியாகும்.

பொதுவாக, நம் தமிழ் மக்கள் தாங்கள் என்றென்றும் சூத்திரர்களாக, கீழ் சாதி மக்களாக இருக்க ஆசைப்படுகிறார்களா? இல்லாவிட்டால், அதை மாற்றத் தமிழர்கள் செய்யும், செய்யப்போகும் காரியம் என்ன என்று கேட்கிறேன். தாங்களாகச் செய்யாவிட்டாலும், ஆட்சியையாவது ஆதரிக்க வேண்டாமா?

ஒவ்வொரு தமிழனும் தன் வீட்டில் உள்ள கடவுள்—மதசம்பந்தமான படங்களை எடுத்து எறியவேண்டும்; எடுத்து எறிந்துவிட்டுத் தகவல் கொடுக்க வேண்டும்; பொதுக்



தஞ்சையில், 17–9–1971–ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சிலையைத் திறந்து வைத்த முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களுடன் மேடையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

கூட்டத்தில் காட்டிக் கிழித்து எறியவேண்டும். இவற்றாலும், இப்படிப்பட்ட காரியங்களாலும்தான் தமிழர் இழிவு நீங்கும்.

['விடுதலை'—தலையங்கம்—3-12-1971]

38. கொள்கை ஆதரவு மாற்றம்

நான் 1920-ல் காங்கிரசில் சேர்ந்தேன். அதற்கு முன்பு 1900 முதல் பார்ப்பனரல்லாதவர் நல உணர்ச்சி கொண்டவனாக இருந்துவந்தேன்.

நான் 1900-க்கு முன்பே கடவுள், மத, சாதி விஷயங்களில் நம்பிக்கை இல்லாதவனாகவே இருந்துவந்தேன்.

நான் அக் காலத்தில் சிறிது செல்வாக்குள்ள குடும்பத்தவனாகவும், வியாபார விஷயத்தில் ஈடுபடுபவனாகவும் இருந்துவந்ததால் யாரிடமும் தர்க்கமும், விவகாரமும் பேசுவதில் பிரியமும் உற்சாகமும் உடையவனாக இருந்துவந்தேன்.

மாடு, எருமை கன்றுபோட்ட நேரங்களைக் குறித்துவைத்துக்கொண்டு ஜோசியர்களிடம் கொடுத்து ஜோசியம் கேட்பேன்.

1900-ல் இருந்தே எனக்கு ஜோசியம், முகூர்த்தம், சகுனம் முதலியவைகளில் நம்பிக்கை இருந்ததில்லை. அப்போது என்னிடத்தில், 'வாய்கொடுத்து மீளமுடியாது' என்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள்.

நான் எனது 5, 6, 7 வயது முதற்கொண்டே 'தறுதலைப் பிள்ளையாகத் திரிந்தாலும், அந்த வயது முதற்கொண்டே நான் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும், எந்தக் கூட்டத்தில் சேர்ந்தாலும் (நான்) தலைவனாகவே, மற்றவர்கள் என் சொல் கேட்பவர்களாகவே இருக்கும்வண்ணம் இருந்து வந்திருக்கிறேன்.

இன்றுவரையிலும்கூட எந்தக் குழுவிலும், எந்தக் கட்சியிலும் நான் தலைவனாகவே இருந்துவந்திருக்கிறேனே ஒழிய, ஒரு சாதாரண அங்கத்தினனாக எதிலும் இருந்ததில்லை.

அதுபோலவே, எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் குழுவிலும், கட்சியிலும் எதாலும் நான் பிறத்தியாருக்கு ஆதரவு கொடுப்பவனாகவே இருந்து வந்திருக்கிறேனே ஒழிய, நான் யாரிடமும் எதற்கும் ஆதரவு உதவி கேட்டதே இல்லை. அதுபோலவே, நான்தான் எனது ஆயுளில் யாருக்கும் பணஉதவி செய்திருக்கிறேனே ஒழிய, யாரிடமும் எந்தக் காரியத்திற்கும் பண வசூலுக்குப் போனதே கிடையாது; யாரிடமும் எந்தக் காரியத்திற்கும் பண வசூல் செய்ததும் கிடையாது.

சுயமரியாதை இயக்கம், திராவிடர்கழகம் முதலியவற்றிற்குக்கூட பணம் வேண்டுமென்று பத்திரிக்கையில் போடுவேன்; கழகத் தோழர்கள் வசூல் செய்வார்கள்; அல்லது பொதுமக்கள் அனுப்பிக்கொடுப்பார்கள்; அவ்வளவுதான். நான் நேரில் யாரையும் கேட்டது கிடையாது; கேட்டு வாங்கியதும் கிடையாது.

எனக்குப் பணத்தாசை ரொம்பவும் உண்டு; செலவு செய்யவும் மனம் வராது; யாரையும் கேட்கவும் மாட்டேன்.

ஆனால், பணம் வந்துகொண்டே இருக்கும்; சேர்த்துக் கணக்குப்பார்த்து மகிழ்ச்சி அடைந்துகொண்டே இருப்பேன். சரியாகக் கணக்கு வைக்கமாட்டேன். அடிக்கடி இருப்பைக் கணக்குக் கூட்டிப் பார்த்துக்கொள்வேன்.

எனக்கு ஆசை எல்லாம்—மக்கள் பகுத்தறிவாளர்கள் ஆகவேண்டும்; சாதி ஒழியவேண்டும்; உலகில் 'பார்ப்பனர்' இருக்கக்கூடாது. இதுதான் எனது கொள்கை. இதற்காகத்தான், காங்கிரஸில், கூப்பிட்டவுடன் சேர்ந்தேன்.

நான் காங்கிரசை விட்டதற்கும் இதுதான் காரணம்.

ஜஸ்டிஸ் கட்சி என்னும் பார்ப்பனரல்லாத கட்சியில் சேராமலே அதற்கு நான் ஆதரவளித்ததும் இதற்காகத்தான்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைமை ஏற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் இதற்காகத்தான். அக் கட்சித் தலைமை ஏற்றவுடன் அக் கட்சிக் கொள்கையாக இம் மூன்றையுமே ஏற்படுத்தி விட்டு, அரசியலில் (எலக்ஷனில் நிற்பதில்லை; பதவி ஏற்பதில்லை) பிரவேசிப்பதில்லை என்ற திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டதும் இதற்காகத்தான். காங்கிரஸ் கட்சி பதவியிலிருந்து விலக்கப்பட்டபோதும், பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளினதும் இதற்காகத்தான்.

வெள்ளையன் போனபின்பு 1952-ல் நடந்த தேர்தலின்போதுகூட, நான் காங்கிரசை எதிர்த்து வேலை செய்தபோதுகூட என் கழகத்தில் இருந்து ஒரு நபரைக்கூட நிறுத்தாமல், கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸ் எதிரிகளுக்கும் ஆதரவளித்து, காங்கிரசைத் தோற்கடித்ததும் இதற்காகத்தான்.

1952-ல் காங்கிரஸ் தோற்றம், மேற்கண்ட எனது கொள்கைப்படி வேறுகட்சி பதவிக்கு வரமுடியாமல் போனதால், காங்கிரஸ் பதவிக்கு வந்து எனக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறியும் நான் மறுத்துவிட்டு, காங்கிரசை எதிர்த்து இராஜாஜியை காங்கிரசைவிட்டுப் போகும்படி செய்ததும் இதற்காகத்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் காமராசரை ஆதரிக்கும் முறையில் காங்கிரசை ஆதரித்ததும் இதற்காகத்தான். அதாவது, காமராசர் பதவிக்கு வந்தவுடன் பார்ப்பனர்களும், அவர்களது சில கூலிகளும் காங்கிரசை (காமராசரை) எதிர்த்தபோது, நானாகவே மேல்விழுந்து காங்கிரசை (காமராசரை) ஆதரித்ததும் இதற்காகத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரர்கள் என்னை விரும்பவில்லை என்று தெரிந்தும், நானாகவே காங்கிரசை ஆதரித்துக்கொண்டிருந்ததும் இந்தக் கொள்கைக் காகத்தான்.

இந்தச் சந்தர்ப்பங்களில் தி. மு. க. வை எதிர்த்துக்கொண்டு இருந்ததும் இதற்காகத் தான். அதாவது, இந்தச் சந்தர்ப்பத்தில் தி. மு. க. வுக்கு பார்ப்பனர்கள்—அவர்களது பத்திரிக்கைகள் ஆதரவாக இருந்ததாலும் தி. மு. க. வும், 'நாங்கள் பார்ப்பனர் கைப் பொம்மைகள்தான்' என்று பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு இருந்ததாலும் தி.மு.க.வை எதிர்க்கவேண்டி வந்தது. 1967 தேர்தலில் காங்கிரஸ் தோற்று, தி.மு.க. பதவிக்கு வந்தது. பார்ப்பனர் தி. மு. க. வை ஒழிக்கப் பாடுபடுவதாலும், காங்கிரஸ் பார்ப்பனருடன் சேர்ந்து கொண்டு தி. மு. க. வை ஒழிக்கப் பாடுபடுவதாலும் நான் தி. மு. க. வுக்கு ஆதரவாளனாக இருக்கவேண்டியதாகியதும் இதற்காகத்தான்.

ஆகவே, எனது பொதுவாழ்வு துவங்கியதுமுதல் இன்றுவரை மேற்கண்டபடிதான்—பல கட்சிகளை எதிர்த்தும், பலகட்சிகளை ஆதரித்தும் தொண்டாற்றிக்கொண்டு வந்திருக்கிறேன்; வருகிறேன். எல்லாம் ஒரே காரியத்திற்கு (கொள்கைக்கு) ஆகத்தானேயொழிய, கொள்கை மாற்றத்திற்காக அல்ல என்பதை மக்கள் உணரவேண்டும்.

இவ்வளவு மாத்திரம் அல்ல; இனியும் எந்தக் கட்சியை எதிர்ப்பேனோ, எதை எதை ஆதரிப்பேனோ எனக்கே தெரியாது!

பொதுவாக, நான் சாகும்வரை இந்த மேற்கண்ட கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று நான் உறுதியாய் இருக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—26-8-1972]

39. சுதந்திரமும் சமுதாயமும்

நம் தேசம், நாடு, சுதந்திரம் பெற்று இன்றைக்கு (25) இருபத்தைந்தாண்டு ஆகிறது என்றாலும், இந்தக் கால் நூற்றாண்டில் அரசியலில்தான் மாறுதல் பெற்று வருகிறோமே ஒழிய சமுதாய அமைப்பில், கல்வியில் கீழ் நிலையில்—மிகமிகக் கீழ் நிலையில் இருந்து வருகிறோம்.

அரசியலில் நாம் பெற்ற மாறுதல் என்பது 'கெட்டதிலிருந்து கழிசடைக்கு'ச் (From bad of worse) சென்று கொண்டிருக்கிறோம். ஒரு எடுத்துக்காட்டு வாக்கியம் சொல்ல வேண்டுமானால், 'அவன் போனால் கலகமாகிவிடும்; நான் போய் செருப்பாலடித்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று ஒரு சமாதானம் செய்ய வருகிறவன் சொன்னானாம்; அது போல இருக்கிறது நமது அரசியல் வளர்ச்சி.

நம் நாட்டு அரசியலில் வளர்ந்துவரும்—இருந்துவரும் மானங்கெட்ட, அயோக்கிய காலித்தனங்களும், கூலித் தன்மைகளும், யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகளும் வேறு எங்கும், எந்த நாட்டிலும் இல்லை என்கின்ற தன்மையில்தான் இருந்தும் வளர்ந்தும் வரு கிறது. நமது சுதந்திரமானது ஒரு யோக்கியன் ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு ஒரு ஆள்கூட நமது தேசத்தில், நாட்டில் இல்லாமல் செய்து விட்டது. அது மாத்திரமா?

நம் நாட்டில் காலித்தனம், அயோக்கியத்தனம், கயவாளித்தனம், புரட்டு, பித்தலாட்டம், மோசடி, துரோகம், வஞ்சனை முதலிய குணங்கள், தன்மைகள் இல்லாத மக்களையோ, அரசியல் கட்சிகளையோ, தலைவர்களையோ, அரசியல் வாதிகளையோ காண முடியவே முடியாதபடி செய்துவிட்டது. பெரிய பித்தலாட்டம் துரோகம், வஞ்சனை இவைகளில் தேர்ச்சி பெற்றவர்கள்தாம் தலைவர்களாகிறார்கள்; தேசியவாதிகளாகிறார்கள்; தேச பக்தர்களாகிறார்கள்.

இவை வர வர நம் நாட்டுப் பெண்களையும் தழுவிக்கொள்ளும் நிலை வளர்கிறது. அவ்வளவு மாத்திரமா? மாணவர்களையும் இழுத்துக் கொள்ளும் என்பதோடு அதிகாரிகளையும், அரசியல், சிப்பந்திகளையும் சூழ்ந்துகொள்ளும் என்று உறுதி கொள்ளவேண்டிய அளவுக்கு வளர்ந்து வருகிறது.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், மக்களுக்கு இருக்கவேண்டிய மானம்—அவமானமற்ற தன்மை, கண்ணியம், நேர்மை முதலிய சாதாரண குணங்களை நமது சுதந்திரம் எரித்துச் சாம்பலாக்கி வருகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த சுதந்திரம் உள்ளவரை மக்களில் நேர்மையுள்ள யோக்கியன் இருக்கமாட்டான் என்பதோடு, தோன்றவே மாட்டான் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், இந்தச் சுதந்திரம் ஏற்பட்டதே பித்தலாட்டக்காரர்கள், நாணயமற்றவர்கள், மக்களை ஏமாற்றி வஞ்சித்துப் பழக்கப்பட்டுத் தேறினவர்கள், பொறுப்பற்ற காலிகள் முதலியவர்களது முயற்சியினால், தந்திரத்தினால் என்றால்—இதில் யோக்கியம், நேர்மை, உண்மை எப்படி இருக்கமுடியும்?

ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்; ஒரு கல்லுருவத்திற்கு அயோக்கியத்தனங்களைப் பரப்பும் ஸ்தாபனமான ஒரு கோவிலுக்கும், ஒரு மடத்திற்கும், ஒரு சபையாருக்கும் ஒரு சாமியாருக்கும், சங்கராச்சாரிக்கும் ஒரு கோடி ரூபாய் வருமானம் இருந்தாலும், சொத்து இருந்தாலும் வரவு-செலவு இருந்தாலும் அனுமதிக்க வேண்டியது; கணக்கு, வரி கேட்கக்கூடாது.

ஆனால், உழைத்துப் பாடுபட்டு, திருடாமல், ஏமாற்றாமல் தேடிய சொத்துக்களுக்கு அதாவது, ஒருவனுக்கு இவ்வளவுதான் உரிமை என்பது ஆட்சிக் கொள்கைத் திட்டம் என்றால் இந்த ஆட்சியின் தன்மை எப்படிப்பட்டது? முன்னவன் செல்வம் எப்படி நாசமாகிறது? யாருக்குப் பயன்படுகிறது? பின்னவன் செல்வம் யாருக்குப் பயன்படுகிறது?

கார்த்திகை என்கிறான்—குடம் குடமாய், பீப்பாய் பீப்பாயாக நெய், வெண்ணெய், எண்ணெய் பாழாகின்றன. இலட்சத் தீபம் என்கிறான், டின் டின்னாக எண்ணெய் பாழா கிறது. அபிஷேகம் என்கிறான்—நெய், எண்ணெய், பால், தயிர், வெண்ணெய் படிப்படி யாக ஜலதாரைக்குப் போகின்றன. மற்றும் இவை போன்றவைகளுக்கெல்லாம் கேள்வி கேட்பாரே கிடையாது.

இந்தப் பார்ப்பனர் வாழும் நாட்டைவிட வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட பழக்கமோ, வழக்கமோ, சர்க்கார் அனுமதியோ கிடையாதே! இங்கு சுதந்தரத்தில் கேள்வி கேட்பாரும் கிடையாது. ஆனால், மனித சமுதாயத்தில் உலகத்திற்கே மாறுதலாக நம் நாடு, தேசம் தவிர வேறு எந்த நாட்டிலும், தேசத்திலுமில்லாத மாதிரி, மனிதனில்—முதல் வன் (பார்ப்பான்), நாலாமவன் (சூத்திரன்), அய்ந்தாமவன் (பஞ்சமன்) என்கின்ற பிரிவு கடவுளில், மதத்தில் உள்ள ஆதாரங்களின் பெயரால் அதாவது, சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் 4ஆம், 5ஆம் சாதி; 100-க்கு 3 பேர் ஒன்றாம் சாதி என்று பிரிக்கப்பட்டு, அதைக் காப்பாற்றுவதே சுதந்திரத்தின் சட்டம் என்றும் ஏற்பாடு செய்து, சுதந்திர ஆட்சியும் சட்டமும் அமுல் செய்து ஆதரித்து வருகிறது. இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.

அதுமாத்திரமா? கீழ்மக்கள் என்று சொல்லப்படுகிற சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் இருக்கும் நாட்டில், மேன்மக்கள் என்று சொல்லப்படுகிற 100-க்கு 3 பேரையே கொண்ட 'முதலாவது' சமுதாயமாகிய ஒரு பார்ப்பனப் பெண்ணின் ஆட்சியில், சமுதாய அமைப் பைக் காப்பாற்றுகிற சட்டத்தை வைத்து ஆளுகிற ஆட்சியில் குடிகளாயிருப்பது என்பது சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியில் மானங்கெட்டு, ஈனத்தனமாகக் குடிகளாக இருக்கிறோம்; இருக்கவேண்டும் என்பதும் ஈன அடிமைத் தன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.

சுதந்திரம் கிடைத்தவுடனே பார்ப்பான் சட்டம் செய்தான்; அந்தச் சட்டப்படியே தேர்தல் வைத்தான்; யார் வெற்றிபெற்றாலும் அந்தச் சட்டப்படியே ஆளவேண்டும் என்று அமுல்படுத்திவிட்டான். பரம்பரையாய்ப் பார்ப்பானே ஆட்சித் தலைவராய் வரும்படி ஆட்சி அமைப்பைச் செய்துகொண்டான்.

தேசத்தில் உள்ள மற்ற மக்கள் ஒன்றுசேர முடியாத நிபந்தனைகளைக் கட்டாய மாகச் சட்டமாக ஆக்கிக்கொண்டான். 50 கோடி மக்கள் உள்ள தேசம் ஒன்று சேராதபடி 16 பிரிவுகளாகப் பிரிந்து, இது உலகம் உள்ளவரை நிரந்தரமாகப் பிரிந்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமும், பிரிந்துகொள்ள விரும்புகிறவனுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இல்லை என்றும், கிரிமினல் தண்டனை என்றும் ஆக்கிக்கொண்டு, மேல் சாதியானுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டு, பரம்பரை உரிமைபோல் நடத்தப்பட்டு வரும் ஆட்சியில் இருக்கிறோம். இதை அடிமை ஆட்சி என்றோ அன்னிய ஆட்சி என்றோ சொல்லக்கூடாத நிலையில் இருக்கிறோம்.

மற்றும் இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டு ஆன பின்பும் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள், வெறும் கையெழுத்து மாத்திரம் போடத்தக்க மக்களையும் சேர்த்து எண்ணிப்பார்த்தால்—100-க்கு 39 மக்களே இருக்கிறார்கள். அதாவது, இன்னும் 100-க்கு 61 மக்களுக்கு எழுத்து வாசனையே இல்லை. அதாவது, இந்த 39 பேர் பெரிதும் நகரவாசிகளேதாம்; அதிலும் பெண்கள் சமுதாயத்தில் 100-க்கு 27 பெண்கள்தாம் படிக்கத் தெரிந்தவர்கள். அப்படி யானால், இனியும் நமது நாட்டில் பெண்கள் 100-க்கு 73 பேர் படிக்கத்தெரிய வேண்டிய வர்கள் ஆவார்கள். இவர்களும் கிராமங்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பெண்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்றே சொல்லலாம்.

தஞ்சையில், 17–9–1971-ல் நிகழ்ந்த பெரியார் ஈ. வெ. ரா. சிலை திறப்பு விழாப் பொதுக் கூட்டத்தில், வேலூர் C. M. C. மருத்துவமனை வளர்ச்சிக்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் துணைவியார் ஈ. வெ. ரா. மணியம்மையார் நிதி வழங்கினார்

இந்த இலட்சணத்தில் இந்த நாட்டு மக்களாகிய நாம் நமக்கு வேண்டிய ஒரு நீதிபதியை நியமித்துக்கொள்ள உரிமையில்லை; பார்ப்பானாகவும், பார்ப்பானுக்கு வேண்டியவனாகவும், மூடநம்பிக்கையில் ஈடுபட்டுப் பார்ப்பானுக்கு அடிமையாய் இருப்பவனாகவுந்தான் நியமிக்கப்பட முடியும்.

உதாரணம் வேண்டுமானால், இந்தநாட்டு நீதிபதிகளிடம் பார்ப்பனருக்கு நம்பிக்கை இல்லாமலே போய்விட்டது. தொட்டதற்கெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுக்கே போய் பிராது கொடுக்கிறார்கள்; வேறு மாகாணத்துக்கு மாற்றுதல் கேட்கிறார்கள்; யார் என்றால், சாதி மதம் முதலிய மூடநம்பிக்கை சலுகையால் வாழ்பவர்கள்.

எனவே, நம் நாட்டின் சுதந்திரத்தின் யோக்கியதை இந்த நிலையில் இருக்கிறது என்பதுடன் நமக்கு உண்மையான சுதந்திரம் வேண்டுமானால் பார்ப்பனர் கருதுவது போலவே, தமிழ்நாடு தனித்த ஏகபோக ஆட்சியாய் இருக்கவேண்டும். அப்படிக்கு இல்லையானால், அது முடியாது என்பதானால் அன்னிய தேசத்தான் ஆட்சிதான் வேண்டும் என்று நினைக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இதுதான் நமது இன்றைய சுதந்திரம்.

['விடுதலை'-தலையங்கம்—23-9-1972]

40. இன்றைய இழிநிலை

தமிழ் நாட்டின் இன்றைய நிலை மிகவும் பரிகசிக்கத்தகுந்த, பரிதாபப்படத் தகுந்த நிலையில் இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், எங்கு பார்த்தாலும் கலகம், காலித்தனம், நாசவேலை முதலிய கேடான காரியங்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன.

இந்த நாட்டில் என்றைய தினம் பார்ப்பனரல்லாதாருக்குப் பெரிதும் மான உணர்ச்சி ஏற்பட்டு அவர்கள் செயலில் இறங்கினார்களோ, அன்று முதலேதான் நாட்டில் இந்தப் படியான காலித்தனம் முதலிய இழிநிலைகள் ஏற்படுத்தப்பட்டன. இதற்குக் கர்த்தாக்களாகப் பார்ப்பனர்களே இருந்துவருகிறார்கள். இன்றைய நிலையில் எப்படியிருந்தாலும்—இந்தநாட்டில் சமுதாயத்துறையிலாகட்டும், அரசியல் துறையிலாகட்டும், கடவுள்—மதத் துறையிலாகட்டும் பார்ப்பனர்கள் ஒதுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர்களாகிவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் வந்து இத்துறைகளில் புகுந்துகொள்ள முடியாவிட்டாலும் மனிதர்களாக வாழுவதற்காவது ஏதாவது செய்து தீரவேண்டியவர்களாகி விட்டார்கள்.

கல்வித் துறையில் நம்மவர்கள் பார்ப்பனரை மிஞ்சி விட்டார்கள்; உத்தியோகத் துறையில் அவர்களைவிட எண்ணிக்கையில் எத்தனையோ மடங்கு கீழ்நிலையிலிருந்தவர்கள் இன்று பலமடங்கு அதிக எண்ணிக்கை கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள்.

சமுதாயத் துறையில் அவர்களுக்கிருந்த மதிப்பு அடியோடு போய்விட்டது. மதத் துறையில் அவர்களுக்கிருந்த மதிப்பும், செல்வாக்கும் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. மத்திய ஆட்சியின் தயவில்தான் பேர்சொல்லிக் கொள்ள முடிகிறது.

இந்த நிலையில் அவர்கள் உயிர்வாழவேண்டுமானால் நமது மக்களில் போதிய அறிவும், இன உணர்ச்சியுமற்ற மக்களைப் பிடித்து ஏதாவது காலித்தனம், கலகம் முதலியவைகளை நடத்தச்செய்து, பார்ப்பனர்மீது இருக்கும் வெறுப்பை—வேறு பக்கம், அதாவது தங்களுக்குள்ளாகவே செலுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டியதாகி விட்டது.

அதற்கேற்றாற்போல், இன்று பார்ப்பனருக்கு ஆயுதமாக ஏராளமாகப் பத்திரிக்கைகள் அவர்கள் கைவசமும்—நமது இன—மானங்கெட்ட, எது செய்தாவது வயிறு வளர்த்தால்

போதும் என்கின்ற ஈனமக்களிடமும் சிக்கிக்கொண்டதாலும்; நம்மிலும் அப் பத்திரிக்கைகளைப் பார்க்கவும், அவைகளை நம்பவுமான கீழ்த்தர மக்கள் ஏராளமாக இருப்பதாலும் கலகம், காலித்தனம் ஏற்பட வசதி ஏற்பட்டுவிட்டது.

1916 ஆம் ஆண்டில் நம் நாட்டில் ஏற்பட்ட பார்ப்பனரல்லாதார் (திராவிடர்) கழகம், பார்ப்பனரல்லாத சமுதாயத்தை விழிக்கச்செய்து, 1920-ல் அரசியலைக் கைப்பற்றச்செய்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது; இன்று மகா பலத்துடன் அரசோச்சி வருகிறது. இதன் மத்தியில், இந்த 50 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாகப் பார்ப்பனர் செய்த, செய்யச்செய்த காலித்தனம், கலகம், நாசவேலை, கொலை, கொள்ளை முதலிய கொடுஞ் செயல்கள் எவ்வளவு? கொஞ்சமா? சிந்தித்துப்பாருங்கள்!

சட்டம் மீறுதல், சத்தியாக்கிரகம், மறியல், தண்டவாளம் பெயர்த்து இரயிலைக் கவிழ்த்தல், வெடிகுண்டு எறிதல், கட்டடங்களைக் கொளுத்துதல்–இடித்தல், அதிகாரிகளைக் கொல்லுதல்–சுடுதல், கார்களை–பஸ்களைக் கொளுத்துதல், நாசமாக்குதல், தபாலாபீசு, இரயில்வே ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன், நீதி ஸ்தலங்கள் கொளுத்தப்படுதல் முதலிய காரியங்களைச் செய்தல்; இத் தொழிலில் ஈடுபட்டவர்களை வீரர், சூரர், தியாகி என்று விளம்பரப்படுத்துதல்—முதலிய காரியங்களைச் செய்ய மக்களைத் தூண்டிவிட்டுத் தங்கள் நிலையைக் (பார்ப்பனர்) காப்பாற்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அந்தச் சம்பவங்கள்தாம் இன்றும் வேறு பல உருவங்களில் பார்ப்பனரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை, இந்த நாட்டில் பார்ப்பனப் பூண்டு இருக்கும் வரையிலும்–நம் மக்களுக்குமான உணர்ச்சி ஏற்படும் வரையிலும் நடந்துகொண்டுதான் இருக்கும். இதற்குக் காரண காரியம் தேடுவது பயனற்ற காரியம்.

['விடுதலை'–அறிக்கை—23-10-1972]

41. நம் இன உணர்ச்சி

பொது மக்கள் சிந்திக்க வேண்டும்; சிறப்பாகத் தமிழ் மக்களில் பார்ப்பனரல்லாத—திராவிடத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். நம் நாட்டு ஆட்சியைப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்தும் பார்ப்பனர் கையிலிருந்தும் திருப்பி, நமது (தனித் தமிழர்) கைகளுக்கு வரும்படி செய்து, தமிழர் நலத்துக்கு—தமிழர் ஆட்சியாகவே ஆக்குவதற்கு எவ்வளவு பாடுபட்டோம் என்பதும், இதில் எவ்வளவு கஷ்டநஷ்டங்களிருந்தன என்பதும் இன்றைய இளைஞர்களுக்கு விளங்காது.

பார்ப்பனர் கையில்தான் வெள்ளையராட்சி இருந்தது; அவர்கள் இஷ்டப்படிதான் ஆட்சி நடந்துவந்தது. அந்த ஆட்சியின்போது நம்மவர்கள் (தமிழர்கள்) கல்வி கற்றிருந்தது 100-க்கு 5 விகிதத்தினர் ஆவார்கள்; நம்மவர்கள் பதவியிலிருந்தது மாதம் ரூபாய் 8-க்குட்பட்ட சம்பளமுள்ள பதவிகளில்தான் 100-க்கு 100 வீதம் இருந்து வந்தார்கள். இந்த நிலை எப்படி மாறிற்று? அரசியலாலும் மாறவில்லை; சமூக இயலாலும் மாறவில்லை; பார்ப்பனரல்லாதார் இனம் என்கின்ற இன உணர்ச்சியால்தாம் மாற்றமடைந்தது.

இந்த மாதிரியான இன உணர்ச்சிக்குப் பார்ப்பனர்—வகுப்புத் துவேஷம், தேசத்துரோகம், நாட்டைக் காட்டிக்கொடுத்த கூட்டம், கடவுள்–மதம்–சாஸ்திரங்களை எதிர்க்கும் நாத்திகக் கும்பல் என்றெல்லாம் கட்டுப்பாடாக எல்லாப் பத்திரிகைகளும், சர்க்கார் அதிகாரிகள், பார்ப்பனர்களெல்லோரும்; மற்றும் பார்ப்பனரல்லாதாரில் வயிற்றுப் பிழைப்பு–பதவியாசை உள்ள பலரும் கூடி விஷமப் பிரச்சாரம் செய்தும்; பொதுக் கூட்டங்களில் சொல்லடி, கல்லடி, செருப்படி, கலவரம், காலித்தனம் முதலியவை எல்லாவற்றிற்கும் ஆளாகியும் மனங்கலங்காது, மானாவமானத்தைப் பற்றிச் சிந்திக்காது

பாடுபட்டதன் பயனாலேயே, நாம் இன்று நமது இன ஆட்சியை ஏற்படுத்தி, அதன் மூலம் பயன்பெற்று இன்றைய நிலையிலிருக்கிறோம்.

இன்றைய நம் நிலை, சர்வ சக்தியுள்ள இந்திய இயக்கமாகிய காங்கிரசை மூலையில் உட்காரவைத்துவிட்டோம்; சர்வ சக்தியுள்ள பார்ப்பனர்களை அரசியலில் இருந்தே வெளியாக்கி சமுதாயத்துறையில் வெளியில் தலைகாட்டுவதற்கு—அதாவது 'புர்க்கா' (முக்காடு) இல்லாமல் வெளிவருவதற்கு யோக்கியதையில்லாமல் செய்துவிட்டோம். உலகப் பிரசித்தி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி என்னும் கூட்டத்தைத் தங்கள் பெயரைச் சொல்லிக்கொள்ள யோக்கியதையில்லாமல், நாதசுரக் கச்சேரியில் ஒத்து ஊதுகிற—கூலிக்கு அலையும் கீழ்த்தர நாதசுரக்காரனையும் தவுல், மத்தளங்களையும் சுமந்து கிடக்கும் கீழ்த்தரக் கூலிபோல் ஆக்கிவிட்டார்கள்.

எதிர்க் கட்சிகளில் மந்திரிகளாய், முதல்வர்களாய் இருந்தவர்கள் எல்லாம் இன்று விலாசம் சொல்லமுடியாமல் பெயர்களை மட்டும் விளம்பரம் செய்யச்செய்துவிட்டுப் படுக்கையிலிருக்கிறார்கள். பார்ப்பனர்—சுதந்திரா என்றும் ஜனசங்கமென்றும் கவர்ச்சி ஏற்ற பெயரை வைத்துக் கட்சிகள் ஏற்படுத்திக் கொண்டு, யாராவது ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் தலையைக் காட்டி மறைந்து கொண்டு திரிகிறார்கள்.

['விடுதலை'-தலையங்கம்—25-10-1972]

42. மகா அயோக்கியர்

அரசியலில் கட்சி மாறுகிறவர்கள் அயோக்கியர்கள், அயோக்கியர்கள், மகா அயோக்கியர்கள்!

அரசியலில் ஒரு கட்சித் தலைவர்களிடம் பல்லைக்காட்டிக் கெஞ்சி, சிபாரிசு பிடித்து, தனக்கு ஒரு இடம் கிடைக்கும்படி கெஞ்சித் தன்னை ஏற்றுக்கொள்ளச் செய்து, தேர்தலில் தனக்காக ஆயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் போன்ற கணக்கில், கட்சிப் பணச் செலவில் பதவிக்கு வந்து, கை தூக்குவதைத் தவிர வேறு ஒரு தொண்டும் கட்சிக்குச் செய்யாமல், பொதுமக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, சர்க்காருக்குப் பல சிபாரிசுகள் செய்து பணம் சேர்த்துக்கொண்டு—கட்சிப் பெயரால், பதவிப் பெயரால் பல சலுகைகள் பெற்று அவற்றாலும் பணம், சொத்து, தகுதிக்கு மேற்பட்ட அந்தஸ்தும் வருவாய்க்கு வழியும் சம்பாதித்துக் கொண்டதைத் தவிர, வேறு காரியத்திற்குப் பயன்படாத அனாமதேயங்கள், சுயநலத் துச்சு என்றே கட்சியைக் காட்டிக்கொடுக்க, விலை பேசி வாங்கி—வேறு கட்சி என்னும் பேரால், தானிருந்த கட்சிக்கு மனதறிந்து கேடு செய்யும் கட்சிக்குப் போய்த் தன்பெயரைக் கொடுப்பதும், தான் ஆளான கட்சியைக் குறைகூறுவதும், அக்கட்சியை ஒழிக்கப் பாடுபடுவதும், அதற்குத் தன் பெயரைக் கொடுப்பதுமான காரியத்தில் ஈடுபடுவதைத்தான்—நான், அயோக்கியம்—அயோக்கியத்தன்மை என்றும், அயோக்கியர் என்றும்; மேலும் அப்படிப்பட்டவர் மகா அயோக்கியர் என்றும் பொது நன்மையை உத்தேசித்துக் கூறுகிறேன்.

ஏன் என்றால், இம் மாதிரிக் கண்டிக்காவிட்டால்—இப்படிப்பட்டவர்களை மக்கள் வெறுக்கும்படி செய்யாவிட்டால், நாளாவட்டத்தில் யோக்கியமான பலருக்கும் நாக்கில் தண்ணீர் வடிய ஆரம்பித்துவிடுமே என்ற காரணத்தாலும், வேறுவகை இல்லாமையாலுமே யாகும்.

நாம் இப்படி அயோக்கியர், மகா அயோக்கியர் என்று கூறுவது முக்கியமாய் யாரை என்றால்—கட்சி மாறுகிறவர்கள், தமது தேர்தலுக்குக் கட்சி செய்த செலவுத் தொகைகளைக் கொடுத்துவிட்டு, கட்சியால் தாம் பெற்ற பதவியையும் இராஜினாமா செய்துவிட்டு வெளியேறாதவரைத்தான். அப்போதுங்கூடச் சொல்வேன்—தானிருந்த கட்சிக்

கொள்கைகளில் எற்பட்ட மாற்றம் என்னவென்பதையும், அக் கட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட கெடுதி என்ன என்பதையும், இவற்றிற்காகத்தாம் இருந்த கட்சியில் இருக்கும்போது செய்த முயற்சிகள் என்ன-தெரிவித்த யோசனைகள் என்ன என்பனவற்றையும் விளக்கிக் காட்டிவிட்டு, தான் புதிதாகச் சேரப்போகிற கட்சியின் யோக்கியதை என்ன, நாணயம் என்ன, அதனால் மக்களுக்கு-நாட்டுக்கு விளையப்போகும் நன்மை என்ன என்பதையும் விளக்கி, கட்சிக்கும் தனக்கு ஓட்டளித்த ஓட்டர்களுக்கும் தெரிவித்துவிட்டு விலக வேண்டும்.

'ஓட்டர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை; அவர்களுக்குப் பணம் கொடுத்துத் தான் ஓட்டு வாங்கியது; ஆதலால் அவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை' என்று சொல்லுவதானால் கட்சிக்குத் தெரிவித்துவிட்டு, எச்சரிக்கை செய்து பார்த்துவிட்டு விலக வேண்டும்—வேறு கட்சிக்குப் போகவேண்டும். அப்படிச் சொல்லாமல், செய்யாமல் கட்சி மாறுகிறவர்களைத்தான், நான்—அயோக்கியர், மகா அயோக்கியர் என்றும்; சிலரை மகா மகா அயோக்கியர் என்றும் இன்றியமையாத காரணத்தால் கூறுகிறேன். இந்தப்படி, துண்டுப் பிரசுரம் அடித்து, சுவரொட்டி ஒட்டி, கல்லில் அடித்து நாலுபாதையில் புதைக்கலாம் என்றும் கருதுகிறேன்.

ஏன் என்றால், இந்த அயோக்கியர்கள் தாங்கள் செய்யும் இப்படிப்பட்ட காரியத்தைப் பொது நலனுக்கு ஏற்றதா என்று கருதாமல், 'தங்கள் அப்பன் வீட்டுப் பரம்பரைச் சொந்தக் காரியம்' என்று கருதுகிறார்கள்.

இப்படிப்பட்ட அயோக்கியர்களால், தாங்கள் விலகும் கட்சிக்கு ஓர் ஆபத்து வருமானால், அதைச் சமாளிக்க இப்படிப்பட்ட அயோக்கியர்களை நம்பினால் நம் முயற்சிக்கு, ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு பெரியகேடு, ஏமாற்றம்; பொதுமக்களுக்கும் எவ்வளவு கேடு ஏமாற்றம் ஏற்படலாம்?

'அரசியல் வாழ்வு அயோக்கியத்தனம்' என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பல அறிஞர்கள் சொல்லியிருந்தாலும், 'ஜனநாயகம் என்பது நம் நாட்டுக்குக் கடைந்தெடுத்த அயோக்கியத்தனத்துக்கும், காலித்தனத்துக்கும் பிறப்பிடமாகும்' என்று, நம் நாட்டைப் பற்றி—இது பிரஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே, நானும் பல அறிஞர்களும் சொல்லியிருந்தாலும்—அவை நேரிடும்போது சொல்லிக் காட்டிப் பரிகாரம் தேடாமல் இருக்கமுடியுமா?

உதாரணமாக, 'அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும்' என்று, ஜோசியத்தில் நம்பிக்கையுள்ளவன் கருதினாலும்—அவன் வீட்டில், 'ஒரு அமாவாசையில் பிறந்த ஒருவன் திருடியிருந்தால் அவன் வெளியில் சொல்லாமல், போலீசில் பிராது செய்யாமல் இருப்பானா? அதுபோல்தான், நான்—'இன்று, இது சுபாவம்' என்றாலும், மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன்.

இந்த மாதிரி நம்பிக்கைத் துரோகம் செய்யும் அயோக்கியர்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டே வந்தால் பொதுநலம், பொது வாழ்க்கை என்ன கதி ஆவது?

நாட்டில் இப்படிப்பட்ட அயோக்கியர்களைக் காப்பாற்ற, மூடிமறைக்கப் பல பத்திரிகைக்காரர்களில் மகா மகா மகா அயோக்கியர்கள் பலர்—பிறவி அயோக்கியர் பலர் இருக்கிறார்கள்.

நம் நாட்டில்தான் இந்தப்படி பத்திரிகைத் தொழிலில் மகா மகா மகா இமயமலை அயோக்கியர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மானாவமானம் இல்லை என்றாலும், வேறு பத்திரிகைகள் ஏதாவது இருக்கும்போது இப்படிப்பட்ட பத்திரிகைகளைப் படிக்கும் மானங்கெட்ட மக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். பொது வாழ்வில், பொதுத் தொண்டில் ஈடுபட்ட சிலர், தொண்டின் நலனுக்காக அவற்றைப் படிக்க நேர்ந்தாலும்

பொதுமக்கள் தங்கள் இனத்தின் கேட்டுக்காக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு மானங்கெட்ட ஈனத்தனம் என்பதை நான் வலியுறுத்திக் காட்டவேண்டியவனாக இருக்கிறேன்.

'யோக்கியமான காரணம் மேற்கண்டபடி காட்டாமல்—பதவியை இராஜிநாமா செய்யாமல் கட்சி மாறுகிறவர்கள் அயோக்கியர்கள்'—என்று சுவரில் எழுதுங்கள்; துண்டுப் பிரசுரம் போடுங்கள்; கல்லில் இவற்றை அடித்து (செதுக்கி) முச்சந்தியில் நடுங்கள் என்று கேட்டுக்கொண்டு இப்போதைக்கு முடிக்கிறேன்.

மனவேதனைப்பட்ட வேதனையாளன்.

['விடுதலை'-அறிக்கை—1-11-1972]

2. ஜனநாயகம்

1. இன்று உண்மையான சுதந்திரமா?

இன்று இந்தியாவில் எங்காவது உண்மையான சுதந்திரமும், ஜனநாயகமும் இருக்கின்றன என்று யாராவது அறிவு பூர்வமாக, ஆதார பூர்வமாகச் சொல்லமுடியுமா? இன்றைய சுதந்திரத்தில் 100-க்கு 90 மக்கள் அடிமை வாழ்வில்தான் வாழ்கிறார்கள். தெளிவாகச் சொல்லவேண்டுமானால், 100-க்கு 90 பேர்கள் 'சேவகாவிர்த்தி'—அதாவது சம்பள ஆளாகவும் கூலி ஆளாகவும் இருந்து (எஜமானனுக்கு அடங்கி) தொண்டு செய்துதான் வாழ்கிறார்கள்.

'அடிமை' என்பதற்கு என்ன அர்த்தம்? சொன்னவேலையைச் செய்து, கொடுத்த கூலியை வாங்கிப் பிழைப்பதுதானே? இந்த மாதிரி அடிமையாக இல்லாதவர்கள் இந்தியாவில் 100-க்கு 10 பேர் ஆவது இருப்பார்களா?

எஜமானன்-சம்பளக்காரன், முதலாளி-தொழிலாளி, பண்ணையார்-கூலிக்காரன் என்கின்ற முறை அமுலில் இருக்கும் நாட்டில் சுதந்திரம், சமத்துவம் என்று பேசுவதெல்லாம் புரட்டும் மோசடியும் அல்லாமல், அதில் உண்மை இருக்கமுடியுமா? அதுபோல் தானே ஜனநாயகமும் நடந்து வருகிறது.

இன்றைய இந்தியாவின் ஜனநாயகம் எப்படி இருக்கிறதென்றால், 100-க்கு 97 பேர் கீழ்சாதி, ஈனசாதி, 4-வது சாதி, 5-வது சாதி, சண்டாள சாதி என்பதாகத்தானே—மதத்தில் சாஸ்திரத்தில், சட்டத்தில் இருந்து வருகிறது. இது மாத்திரமா? 100-க்கு 3பேராய் இருக்கும் மக்கள் மேல்சாதி—கடவுளுக்குச் சமமான சாதி—பிராமணர் என்பதாகத்தானே இருந்து வருகிறது? இதுதானே இன்று மதக்கட்டளை—கடவுள் கட்டளை என்று சொல்லிச் சட்டமும் இருந்து வருகிறது?

இதை ஜனநாயகம் என்றால், இதுவும் மோசடியும், புரட்டும் அல்லாமல் வேறு என்ன என்று சொல்லக்கூடியதாகும்? சுதந்திரம் பாதுகாப்பு என்பவை இந்த இரண்டு நிலைகளையும் அதாவது எஜமானன்-அடிமை நிலையையும் பாதுகாப்பது என்பதுதானே? இது சுதந்திரம்-ஜனநாயகம் என்பது மாத்திரமல்லவே; இன்றைய மத அரசியல் சட்ட தர்மமும் இதுதானே!

ஒவ்வொரு மனிதனும் கூடிய அளவு வேலை செய்யவேண்டியது; வேலையின் பயனைக் கிடைத்த அளவு அனுபவிக்க வேண்டியது என்பதுடன் தனி உடைமை உரிமை இவ்வளவுதானே?

இன்றைய நாட்டு அமைப்பில்—மக்கள் சமுதாய அமைப்பில் இந்தியாவில் சோசலிசம் ஏற்பட்டால் சமுதாயத் துறையில் 100-க்கு 3 பேராயிருக்கும் பார்ப்பனருக்கும், அதுபோலவே 100-க்கு 3 பேரிலும் குறைவாயிருக்கும் சில செல்வவான்களுக்குமல்லாமல் வேறு யாருக்கு என்ன கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டு விடும்? மனித சமுதாயத்திலுள்ள 100-க்கு 99 மக்களிடம் உள்ள உயர்வு தாழ்வு உணர்ச்சி, திருட்டு, புரட்டு, மோசடி, கவலை, கள்ளம், ஆத்திரம், பொறாமை, பலாத்காரம், சண்டித்தனம், காலித்தனம் முதலியவை பெரும் அளவிற்குக் குறைந்து விடுமே! தனிநலம் குறைந்து பொதுநலம் வளர்ச்சியடையுமே! இந்திய ஜனத்தொகையில் பார்ப்பன சாதி 100க்கு 3 பேர்தானே! சைவன் 100-க்கு ½ கூட இருக்கமாட்டானே! பஞ்சமன் 100-க்கு 16 பேர்; பிற்படுத்தப்பட்டவன் 100-க்கு 75 பேர்; மற்ற வேஷக்கார சாதி 100-க்குச் சுமார் 7 பேர் இருக்கலாம். இவ்வளவு பேரையும் அந்த மூன்று சதவிகித பார்ப்பன ஆதிக்கம் ஆட்டிப் படைப்பதுதானே இன்றைய சுதந்திரம்!

['விடுதலை'-தலையங்கம்—15-3-1872; 30-4-1973]

2. ஜனநாயகம்

கேள்வி: உலகத்தில், மகா பித்தலாட்டமான சொல் எது?

பதில்: அதுவா, அதுதான் ஜனநாயகம் என்கின்ற சொல்.

கேள்வி: அது என்ன, கடவுள் என்பதைவிட மகா பித்தலாட்டமான சொல்லா?

பதில்: அய்யய்யோ, கடவுள் என்பது ஒரு பொதுப் பித்தலாட்டமான சொல்; இந்தப் பித்தலாட்டத்தில் எல்லோருக்கும் பங்கு வரும். ஜனநாயகம் என்கின்ற பித்தலாட்டச் சொல் அப்படி அல்ல; தந்திரக்காரனுக்கு-அயோக்கியனுக்கு-இவர்களோசேர்ந்த கோஷ்டிக்குத்தான் பங்கும், பயனும் உண்டு. போக்கற்ற ஆளுக்கெல்லாம், பித்தலாட்ட வாழ்வு கோஷ்டிக்கெல்லாம் பிழைக்கும்வழி—ஜனநாயகம்தான்.

கேள்வி: இதுவே இப்படியானால்—ஜனநாயக முன்னணி, ஜனநாயக அய்க்கிய முன்னணி, ஜனநாயக முற்போக்கு முன்னணி, ஜனநாயக தீவிர முன்னணி, ஜனநாயக அதிதீவிர முன்னணி, ஜனநாயக சுயேச்சை முன்னணி, சுயேச்சை ஜனநாயக முன்னணி, ஜனநாயகக் கூட்டணி—என்பது போன்ற சொற்களின் தன்மை என்ன ஆவது?

பதில்: அவைகளா? துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல்—அது மகா பித்தலாட்டமானால், இவை மகாமகா பித்தலாட்டமாகும்; ஏன்—பித்தலாட்டத்தின் எல்லையென்றே சொல்லலாம். சந்தேகமிருந்தால் இவைகளில் இருக்கின்ற—இவைகளில் சேர்ந்த தனித்தனி ஆட்களை எடுத்துக்கொண்டு, அவர்களது சென்றகால, நிகழ்கால, எதிர்கால பல்லனைக்கொண்டே 'சாதக'த்தையும், அவர்களது கொடிவழிப்பட்டியையும் பார்.

எங்கேயோ போகிற பனாதி; பிழைப்புக்கு எத்தனையோ வழியில் வகைபார்த்து உதைபட்டு வந்த உதவாக்கரை; மற்றும் சகலவிதமான அயோக்கியத்தனங்களுக்கும் புகலிடமாக இருக்கிற பரம அயோக்கியர்கள்; தினம் ஒரு கட்சி புகுகிறவர்கள்; சமயத்திற்கேற்ற கொள்கைகளைப் பேசுகிறவர்கள்; எதைச் சொன்னால் மக்கள் ஏமாறுவார்களோ அதைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறவர்கள்; கலவரம் உண்டாக்குவதாலேயே பிழைக்கக் கூடியவர்கள்—இவர்களும், இவர்களைப் போன்றவர்களையும் பெரிதும் கொண்ட ஸ்தாபனங்கள்தானே! எந்தப் பெயர் இருந்தாலும்—அதற்குச் சொந்தப் பெயர், 'பித்தலாட்ட மோசடி ஸ்தாபனம்' என்பதுதானே சொல்லவேண்டும்?

கேள்வி: சிலர்—இரண்டொரு, அப்படிப்பட்டவர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்களே?

பதில்: இருக்கலாம் என்றே வைத்துக்கொள்ளுவோமே! இருந்தால் அவர்களை மோசடிப் பித்தலாட்ட அயோக்கியர் என்று சொல்லவேண்டாம்; முட்டாள்கள் என்று சொல்லு!

கேள்வி: இப்படிச் சொன்னால் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?

பதில்: யாரும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள். தேவடியாளை, 'விலை மாதர்' என்றால் கோபிப்பார்களா? நியாயவாதியைப் பொய் விற்பனையாளர்கள் என்றால் கோபிப்பார்களா? வாணிபர்களை ஏமாற்றுக்காரர்கள் என்றால் கோபிப்பார்களா? அதுபோல் தானே இதுவும். ஆதலால், கோபித்துக்கொள்ளுபவர்கள் யாராய் இருந்தாலும்—அவர்கள் தலைக்கு இந்தக் குல்லாய் சரியாய் இருக்கிறது என்று அவர்களே ஒப்புக்கொள்ளுவதாகத் தான் அர்த்தமாகும்.

கேள்வி: சரி.

பதில்: சரி!

கேள்வி: வணக்கம்.

பதில்: வணக்கம்; வணக்கம்!

[சித்திரபுத்திரன் என்ற பெயரில் எழுதியது—'விடுதலை' 4-10-1952]

3. இந்திய ஜனநாயகம்

இது ஜனநாயக ஆட்சி என்றாலும், ஆட்சியில் ஆட்சியாளராக இருப்பவர்கள் மூட நம்பிக்கைக்காரர்களாக இல்லாமல் பகுத்தறிவு வாதிகளாகவும்; குறைந்தது கடவுள்கள், கடவுள் கதைகள், கடவுள்களின் கொலை, புரட்டு, பித்தலாட்டம், பெண்டாட்டி, வைப்பாட்டி, கலியாணம் முதலிய செய்கைகள் கொண்ட தன்மைகளில் நம்பிக்கை இல்லாதவர்களாகவும்; எந்த நிலையிலும் மக்கள் யாவரும் பிறவியில் சமமானவர்கள் என்றும், எல்லா மக்களும் ஒரு தர தகுதி பெற, தகுதி உடையவர்கள் என்றும், அந்தப்படி ஆக்கப்பட வேண்டியவர்களே என்றும் கருதும்படியானவர்களும்; ஆட்சியின் சமுதாய சீர்திருத்தப் பணியென்பது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் 'தகுதியின்மை' என்று சொல்லும்படியான எந்தத் தன்மையையும் ஒழித்து உச்சத் தகுதிக்கு அருகர்களாக ஆக்குவதையே முதல் பணியாகக் கொள்வதுதான் என்று கருதுபவர்களாகவும்; எந்தத் தன்மையிலும் சமுதாய பேதம் ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்று எண்ணத் தகுதி உடையவர்களாகவும் இருக்க வேண்டும்; இருந்தாக வேண்டும்.

பிறவி காரணமாகப் பல மதம், பல சாதி, பல பிரிவு உள்ள தன்மைகள் கொண்ட—இருக்க உரிமையளிக்கப்பட்ட நாட்டை, சமுதாயத்தை ஜனநாயகமாக்குவது என்றால், கண்டிப்பாய் மேற்கண்ட விஷயங்களை மனதிற்கொண்ட ஆட்சி அமைந்தால்தான் நாடும், மனித சமுதாயமும் முன்னேற முடியும்.

உலகில் (இந்தியா தவிர்த்த) மற்ற ஜனநாயக நாடுகளிலெல்லாம் மேலே குறிப்பிட்ட இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டுதான் ஆட்சி நடத்தப்படுகின்றது.

நம் நாட்டில் செயற்கையின் பயனாக 'முயற்சியால்' ஏற்பட்ட பொருளாதாரத் துறையைத்தான் சமத்துவமாக்க, சம நிலைக்குக் கொண்டுவர ஆட்சி—ஜனநாயக ஆட்சி என்பது முயற்சிக்கிறதே ஒழிய, 'இயற்கையினால்' என்றும், 'பிறவியினால்' என்றும் அக்கிரம முறையில் உலகில் எங்கும் இல்லாத மாதிரியில், எந்தக் காரணமும் எந்த அவசியமும் எந்தத் தகுதியும் எந்த முயற்சியும் இல்லாமல் பித்தலாட்ட முறையில், ஒரு

சிலர் அதுவும்—மிகமிகக் குறைந்த (மைனாரிட்டி) எண்ணிக்கையுள்ள 100-ல் 3 விகிதத்தினர் (100 நயா பைசாவில் 3 விகிதத்தினர்) ஏற்பாடு செய்துகொண்ட முறையைத் தகர்த்தெறியத் துணிவில்லாத முறையில் ஜனநாயகம் இருக்கிறதென்றால், இது எப்படி ஜனநாயகமாகும்?

நம் நாட்டில் நடைபெறும் இன்றைய ஜனநாயக முறையில் திருத்தப்பாடு ஏற்பட முடியவில்லையானால், நாடு எதிர்காலத்தில் கொலைக்களமாகிவிடும் என்பதில் அய்யம் இல்லை.

இன்றைய ஜனநாயக முறையென்று எதைச் சொல்லுகிறேனென்றால்,

1. பொருளாதாரத்தில் நம்நாடு (தமிழ்நாடு) அல்லாத மற்ற நாடுகளுக்கு நம் செல்வம் கொள்ளை போகிறது.

2. வெளி நாட்டான் (தமிழ் நாட்டான் அல்லாதவன்) இங்கு வந்து பதவிகளில், வேலைகளில், கூலித்தன்மையில், வியாபாரத்தில், அடகு பிடிப்பதில், தொழிற்சாலை வைத்துத் தொழில் நடத்துவதில், பத்திரிகைத் தொழிலில் ஏராளமாகப் புகுந்து கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள்.

3. ஆட்சித் தலைமையில், எந்தக் காலத்திற்கும் ஒரு தமிழன் இராஷ்டிரபதியாகவோ, பிரதமராகவோ வர வாய்ப்பில்லாத தன்மையில்தான் ஜனநாயகம் இருந்து வருகிறது.

4. ஆட்சி முறைச் சட்டம் என்பது இரண்டாந்தர, மூன்றாந்தரப் பார்ப்பான் செய்வதும், அவன் செய்த சட்டத்திற்கு அந்தப் பார்ப்பனர்களே வியாக்கியானம் செய்வதும் தான் சட்டமாக இருந்துவருகிறது.

5. ஆட்சியின் மூலாதாரக் கொள்கை என்பது சாதியையும், சாதி அந்தஸ்தையும் காப்பாற்றுவது என்பதையே அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது.

6. இராஜாஜி போன்ற, பஞ்சமா பாதகத்திற்குத் துணிந்த ஒரு பார்ப்பான் தன் னிஷ்டப்படி தனக்கு வேண்டிய சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள பார்லிமெண்டில்—பாராளுமன்றத்தில் இடமும் வசதியுமிருக்கிறது. ஒரு தமிழனுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கே 100-க்கு 100 பேரும் விரும்புகிற ஒரு காரியத்தைச் செய்துகொள்ள, நினைக்கக்கூட அதில் இடமில்லை.

உதாரணமாக, தமிழன் ஆட்சியைக் கைப்பற்ற பார்ப்பான் சூழ்ச்சி செய்து 'தீண்டாமை ஒழிக்கப்பட்டது; எந்த உருவத்திலும், எந்த நடத்தையிலும், தீண்டாமை அனுஷ்டிக்கப்படக்கூடாது; அது எதில் அமுலிலிருந்தாலும் தண்டிக்கப்படத் தக்கது' என்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

இது, மக்களை ஏய்க்கச்செய்த சட்டம். எப்படியென்றால், சாமி (சிலை) இருக்கும் இடத்திற்குச் செல்லப் பார்ப்பானுக்குத்தான் உரிமை, சூத்திரன் செல்லக்கூடாது என்று அந்தச் சட்டத்திற்கு கோர்ட்டில் வியாக்கியானம் செய்யப்பட்டுவிட்டது.

7. அதுமாத்திரமா? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜனத்தொகை விகிதாச்சாரப்படி படிப்பு, உத்தியோகம் பெற உரிமை உண்டு என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாநில அரசாங்கம் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிற அளவு ஒதுக்கி வைக்கலாம் என்றும் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு வியாக்கியானம் என்கின்ற முறையில் கோர்ட்டில், 'எல்லா ஒதுக்கிடமும் 100-க்கு 50-க்குள்தான் ஒதுக்கவேண்டும்' என்று வியாக்கியானம் செய்யப்பட்டுவிட்டது. இதுபோன்ற பல பித்தலாட்டங்கள் செய்து, தமிழன் எந்த விதத்திலும் சமத்துவம், சம உரிமை அடையக்கூடாது என்கின்ற தன்மையில் ஆட்சிமுறையும் சட்டமும் செய்யப்பட்டு வருகின்றன.

8. இந்தி மொழி விஷயத்தில் இந்தி பேசாத மக்களை அவமதித்து இழிவுபடுத்திய தாகும் என்பதோடு, இந்தியக் கூட்டாட்சி என்கின்ற மத்திய அரசாங்கமானது சிறிதுகூட ஈவு, இரக்கம், மானம், மரியாதை இல்லாமல் பார்ப்பன பாஷை (மொழி) என்பதற்காக— இந்தி மொழியை 6, 7, 8 மாநிலத்தாருக்கு மேலாக உள்ள மக்களுக்கு, அது அன்னிய மொழியாக இருந்தும், ஆரிய உணர்ச்சியை—சாதி முறையைப் பாதுகாக்க, மூடநம்பிக்கை களைப் புகுத்தும் சூழ்ச்சி எண்ணத்துடனேயே இந்தியைப் பொது மொழியாக, கட்டாய மொழியாக, தேசிய—கட்டாய மொழியாக ஆக்கச் சட்டம் செய்து புகுத்திவிட்டார்கள்.

இந்த இந்தியை இராஜாஜி (ஆச்சாரியார்) சென்னை இராஜ்யமாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நாலு மாகாணங்களும் ஒன்றாக இருந்த காலத்தில் முதலமைச்சராயிருந்தபோது, கட்டாய பாடமாக, மொழியாகப் புகுத்தியபோது, நான்கு மாகாண மக்களால் பெரிய கிளர்ச்சி நடந்து 2000 பேர் சிறைப்படுத்தப்பட்டு, பல ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பலரை சிறையிலே மடியும்படி செய்து, அதன் பயனாய்க் காங்கிரஸ்—இராஜாஜி ஆட்சி பதவியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டு, வெளியேறிய பின் ஒழிக்கப்பட்ட இந்தியை, இன்று கட்டாய மொழியாகப் பெரிய எதிர்ப்புக்கிடையில் ஒரே ஒரு ஓட்டின் பலத்தால் புகுத்தப்பட்டிருக்கிறது.

9. அடுத்து, திரு. ரெங்கராஜன் (உயர் நீதிபதி) நியமனம். இது நீதியைக் கொலை செய்த பாதகமேயாகும். திரு. ரெங்கராஜன் என்கின்ற ஒரு பார்ப்பனரை, சாதி உணர்ச்சி யால் அய்யங்கார் சாதி என்கின்ற தன்மையில், திரு. இராஜாஜி அய்யங்கார் அவர்கள் திரு. ரெங்கராஜ அய்யங்கார் என்கின்ற சீரங்கத்துப் பார்ப்பனரைத் திடீரென்று ஜில்லா ஜட்ஜாக நியமித்தார்.

அவர் 'சட்டம் தெரியாதவர்', 'திறமை அற்றவர்', 'பதவியில் சட்ட விரோதமான பல காரியங்களைச் செய்தவர்' என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர் நீதிபதி பதவிக்கு அருகதையற்றவர் என்று மேல் கோர்ட்டுகளால் முடிவு செய்யப்பட்டு, அவருக்கு மேலால் நீதிபதி—அதாவது ஜில்லா நீதிபதி பதவிகூடக் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்து, நீதிபதி பதவியில் இருந்து கிளப்பி, சட்டக்கல்லூரி மாணவர்கள் பள்ளி நிர்வாகியாக சென்னை அரசாங்கமும் சென்னை உயர்நீதி மன்றமும் முடிவு செய்து, ஜில்லா நீதிபதி பதவியிலிருந்து கிளப்பிவிடப்பட்டவர்.

அப்படிப்பட்ட அவர், ஒரு உயர்நீதி மன்ற பார்ப்பன சீப் ஜட்ஜாலும், மற்றும் ஒரு பார்ப்பன அடிமை, பார்ப்பனர் தயவில் மந்திரி பதவி பெற்ற அடிமை மந்திரியாரின் சூழ்ச்சியாலும் அய்க்கோர்ட் ஜட்ஜாக நியமிக்கக் கருதி பல முயற்சிகள் செய்தும், அவை பலியாமல் போனதோடும், கண்டிப்பாய் அவர் அய்க்கோர்ட் ஜட்ஜ் பதவிக்குத் தகுதி அற்றவர் என்றும் அதற்குப் பல அத்தாட்சிகளும் ஒரு அய்க்கோர்ட் சீப் ஜட்ஜின் பலமான அபிப்பிராயமும் இருக்கிறது என்ற அத்தாட்சியையும் மேலிடத்திற்கு, அதாவது டில்லி ஆட்சிக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும் இன்றைய சென்னை அரசாங்கம் பலதடவை எடுத்துக் காட்டி நேரில் விளக்கிக் கூறியும், ஒன்றையும் இலட்சியம் செய்யாமல், அவர் ஒரு பார்ப்பனர்—இராஜாஜிக்கு வேண்டியவர் என்கின்ற காரணத்திற்காகச் சிறிதும் மானம், வெட்கம், நேர்மை இல்லாமல் டில்லி மாகாணத்தின் அய்க்கோர்ட்டுக்கு ஜட்ஜாக நியமித்தது, பொது மக்களை அலட்சியப்படுத்தி ஏமாற்றி இருக்கிறது டில்லி ஆட்சி. இப்படியான நிலைமை ஜனநாயகமானால், எடுத்ததற்கெல்லாம் ஜனநாயகம், ஜனநாயகம் என்றும், 'இப்படிச் செய்தால் ஜனநாயகத்திற்குக் கேடு' 'அப்படிச் செய்தால் ஜனநாயகத்திற்குக் கேடு' என்றும் சொல்லி, பாமர மக்களை மிரட்டிக் காரியம் சாதித்துக் கொண்டு, தமிழனின் இழி நிலையைப் பாதுகாப்பதுதான் ஜனநாயகம் என்கின்ற தன்மையில் ஜனநாயகம் நடந்தால், தமிழன் இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுத்துக் கொண்டு இருக்கமுடியும்?

சட்டங்கள் செய்வதே வஞ்சகக் கருத்துடன்; அதற்கு வியாக்கியானம் செய்வது 'கொலை பாதக' உணர்ச்சியுடன் என்றால்—'ஜனநாயகம்' எப்படி நடக்கும், எப்படி வாழும் என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

நான் எப்போதும் சட்டம், அமைதியைக் கெடுக்க விரும்புகிறவன் அல்லன் ஆனால், கிளர்ச்சியில்தான் இன்று எந்த நியாயத்தையும் பெற முடியும் என்று கருத வேண்டியவனாக இருக்கிறேன்.

எனவே, அமைதிக்குப் பங்கமில்லாமல், வன்முறைக்குச் சிறிதும் இடமில்லாமல், வைக்கம் தெரு தீண்டாமைக்கு 1924-ல் நான் கிளர்ச்சி செய்ததுபோல்—தமிழ் நாடு கோயில் தீண்டாமை ஒழிப்புக்காகக் கிளர்ச்சி செய்வது என்று கருதியிருக்கிறேன். இது 'இந்துக்கள்' என்பவர்களில் 100-க்கு 97 பேர்களின் மான உணர்ச்சிக்காக, மனித உரிமைக்காக, ஜனநாயகத்திற்காகச் செய்யப்பட வேண்டியதாக, செய்யாமல் இருக்க முடியாததாகக் கருதி, இந்தச் 'சுயமரியாதைப் பாதுகாப்புக் கிளர்ச்சி'யில் ஈடுபடப் போகிறேன் என்பதை மக்களுக்கும் ஆட்சிக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—24-1-1969]

எந்த நாட்டிலும் எந்த ஒரு அரசும் நிலையாக வாழவேண்டும் என்பதாலேயோ, வாழ்ந்துவிடுவதாலேயோ மக்களுக்குப் பயன் ஏற்பட்டுவிடாது.

மேலும், மேலும் மக்கள் அறிவில், மானத்தில், வாழ்வில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏற்ற அரசு ஆண்டுக்கு ஒன்றாக மாற்றமடைந்தாலும் அது மேலான ஆட்சியேயாகும்.

உதாரணமாக, 'காந்திவழி' என்று சொல்லிக்கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற இன்றையக் காங்கிரஸ் ஆட்சி இனியும் ஒரு (100) நூறு ஆண்டுகளுக்கு யாராலும் அசைக்கமுடியாத நிலையில் நடந்து வந்தாலும் இதனால் மக்களுக்கு அறிவோ, மானமோ, வாழ்வில் மேன்மையோ ஏற்படக்கூடும் என்று யாராவது சொல்லமுடியுமா?

அல்லது 1950 முதல் இன்று 1969 வரை காங்கிரஸ் ஏகபோக ஆட்சி நடத்திவருகிறதே, இதனால் மக்களுக்கு, நம் சமுதாயத்திற்கு அறிவோ, மானமோ, வளர்ச்சியோ ஏற்பட்டதாக யாராலாவது சொல்லமுடியுமா?

இந்தியாவுக்கு 'சர்வ சுதந்திர ஆட்சி' என்னும் பெயரால், மக்களாட்சி என்பதாக அசைக்கமுடியாத காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டு இன்றைக்கு 20 ஆண்டுகள் ஆகின்றன.

இந்த இருபது ஆண்டுகளில் இந்திய மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? காமராசரால் கல்வி விரிவடைந்தது என்றாலும், மக்கள் அறிவில் வளர்ந்தார்களா? மானத்தில் வளர்ந்தார்களா? கவலையற்ற வாழ்வில் வளர்ந்தார்களா? இன்பவாழ்வில் வளர்ந்தார்களா? உரிமையில் வளர்ந்தார்களா? எதில் வளர்ந்தார்கள்?

ஒழுக்கத்தில் வளர்ந்தார்களா? நாணயத்தில் வளர்ந்தார்களா? நேர்மையில் வளர்ந்தார்களா? எதில் வளர்ந்தார்கள்? இதே சுதந்திரத்துடன் இந்தியாவில் இன்று ஒரு இஸ்லாம் ஆட்சியோ, ஜப்பான் ஆட்சியோ, இங்கிலாந்து—அமெரிக்க—ரஷ்ய ஆட்சியோ ஏற்பட்டிருக்குமானால் இந்த இருபது ஆண்டில் இந்திய மக்கள் நிலை—குறைந்த அளவுக்குத் தமிழ்நாட்டு மக்கள் நிலை—எந்த அளவுக்குப் பெருகி இருக்கமுடியும் என்பதை. யோக்கியமான முறையில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இன்றைய நம் மானங்கெட்ட 'ஜனநாயக ஆட்சி' என்பது மதத்தையும், சாதியையும், அவரவர்களுக்கு உள்ள அந்தஸ்தையும் காத்துக்கொள்வதில் சர்வ உரிமையை மூலாதாரக் கொள்கையாகக் கொண்ட ஆட்சி என்பதோடு, பொருளாதார உரிமையையும் மூலாதார உரிமையாகக்கொண்ட ஆட்சியேயாகும்.

இந்த ஆட்சியில் மக்களுக்கு அறிவு வளருமா? மானம் வளருமா? சமவாழ்வு வளருமா? ஏழ்மை, தரித்திரம், 'கோட்டீஸ்வரத் தன்மை', 'பகற்கொள்ளை' அடிக்கும் தன்மை மாறும் நிலை ஏற்படுமா? அல்லது, 'முதல் சாதி', 'நாலாம் சாதி', 'அய்ந்தாம் சாதி' என்கின்ற தன்மை மாறுமா என்று கேட்கிறேன்.

இன்றைய ஆட்சி ஒழியுமானால் இந்த நாட்டில் 100-க்கு 90 பேர்களுக்கு என்ன நட்டம் ஏற்படக்கூடும்? ஒழியாவிட்டால் 100 க்கு 90 பேருக்கு என்ன லாபம் ஏற்படக்கூடும்? நடுநிலைமையிலிருந்து ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

வெள்ளையன் போனவுடன் காங்கிரஸ் (பார்ப்பனன்) ஆட்சி வராமல்—இந்தியாவில் அல்லது தமிழ்நாட்டுக்கு ஜப்பான் ஆட்சியோ, ரஷ்ய ஆட்சியோ ஏற்பட்டிருக்குமானால், இன்று இந்தியா அல்லது தமிழ்நாடு, இதைச்சேர்ந்த 100-க்கு 90 மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும்? சிந்தித்துப் பாருங்கள்.

சுதந்திரம் கிடைத்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் ஜனநாயக நாட்டில் 100-க்கு 90 மக்களுக்குப் பதவி வேண்டுமானால், சாதி சொல்லிக் கேட்கவேண்டியிருக்கிறது; உத்தியோகம் வேண்டுமானால் சாதி சொல்லிக் கேட்கவேண்டியிருக்கிறது; ஆட்சி வேண்டுமானால் சாதி சொல்லிக் கேட்க, முயற்சிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த 100-க்கு 90 மக்களை இழிசாதி, சண்டாள சாதி என்று கூறி, தங்களுடைய வைப்பாட்டி மக்கள் என்று அழைத்துக்கொண்டிருக்கும் 100-க்கு மூன்று பேராக உள்ள ஒரு கூட்டத்தினருக்கு தங்கள் 'திறமை'யைச் சொல்லி பதவி—உத்தியோகம்—ஆட்சி கேட்க, அதுவும் கேட்காமலே அடையவேண்டி இருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த நிலையை உண்டாக்கி இருக்கும் ஆட்சித்தன்மையை ஜனநாயகம் என்று நம்மைத் தவிர உலகில் வேறு எந்த மடையனாவது சொல்வானா? சொல்ல முடியுமா?

இதுமாத்திரமல்லவே! இன்றைய ஜனநாயகம் நமக்குக் கற்பிப்பது என்னவென்றால்:

இந்திய நாட்டுக்கு (தமிழ்நாட்டுக்கு) இந்தியனல்லாதவன் ஆட்சி—அன்னிய நாட்டான் ஆட்சி ஏற்பட்டாலொழிய இந்தியனின், தமிழனின் இன்றைய இந்த (இழிநிலை) நிலை மாறாது என்றல்லவா கல்லில் பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இந்த ஆட்சி நிலையாக இருக்கவேண்டுமானால், இருக்க நேரிட்டால் இந்த நாட்டு 100-க்கு 90 பேராக உள்ள மக்களின் நிலை என்ன ஆவது என்று கேட்கிறேன்.

சில மேதாவிகள் 'பிரகஸ்பதிகள்', 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்' என்று கேட்கிறார்கள்.

இதன் கருத்தென்ன?

'வெறும் செருப்பாலடிக்காதே. அந்தச் செருப்புக்குப் பட்டு ஜரிகை கொண்டு குஞ்சங்கள் கட்டி அதனால் அடி' என்று கேட்பது போல்தானே இருக்கிறது?

இன்றைய அரசியல் சட்டப்படி இப்போது கேட்பவர்களுக்கு மாத்திரமல்லாமல் என்னிடமே அதிக அதிகாரங்களை ஒப்புவித்தாலும் அதைக்கொண்டு நான் இந்த நாட்டு மக்களில் 100-க்கு 90 பேர்களாக உள்ளவர்களுக்கு அவர்களது இழிவை, மடமையை, மானமற்ற தன்மையை, குறையை, கவலையைத் தீர்க்க 'அந்த அதிக அதிகாரத்தை'க் கொண்டு என்னால் என்ன செய்யமுடியும்?

அரசியல் சட்டத்தில் 'எந்தத் தன்மையிலும் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. தீண்டாமை பாராட்டுவது சட்ட விரோதம்; தண்டிக்கத் தக்கதாகும்' என்று இருக்கிறது. அப்படி இருந்தும் அதற்கு நிபந்தனை கூறுவதில், 'தீண்டாமை விலக்கு என்பது மதத்தைப் பாதிக்காத அளவுக்குத்தான் அமுல் படுத்தத் தக்கதே ஒழிய எல்லாவற்றிலும் அல்ல' என்று விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, தீண்டாமை என்பதே பார்ப்பானைத் தவிர்த்த மற்ற மனித சமுதாயத்திற்கு இழிவு கற்பிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். இதுதான் தீண்டாமைக்கு மூலாதாரம் என்பதோடு தத்துவமுமாகும்.

ஆனதால், இந்த மூலாதாரத்திற்கு விரோதமில்லாமல் மனிதன் இழிவை நீக்கிக்கொள்ளப் பயன்படுத்தாமல், மற்றதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் அந்தச் சட்டத்தின்—தீண்டாமை விலக்கின் தத்துவமாகும்.

இது காங்கிரஸ் ஆட்சி ஒழிந்தால் மாத்திரம் போதாததோடு, வேறு அன்னியன் ஆட்சி வந்தால்தானே முடியும்?

'கடவுளைத் தொட்டால் தீட்டு; கடவுள் இருக்கிற 'உள் அறை'க்குள் வந்தால் தீட்டு' என்ற நிபந்தனை உள்ள இந்தத் தீண்டாமை ஒழிக்கப்பட மாட்டாது என்றால், கோயிலும் கடவுளும் ஒழிந்தால் அல்லாது தீண்டாமை 100-க்கு 97 பேருக்கு மனித இழிவு எப்படி ஒழியும்? முஸ்லிம் முதலிய மற்ற சமுதாய ஆட்சி வந்தால் இந்த நிபந்தனை இருக்க முடியுமா? இந்த நிலையில் இன்றைய இதே ஆட்சி நிரந்தரமாய் இருக்கவேண்டும் என்பது மடமையும், மானமற்ற தன்மையும், முட்டாள்தனமும், மூட நம்பிக்கையுமல்லாமல் வேறு என்னவென்று சொல்லத்தக்கதாகும்?

ஆகவே, இன்றைய ஆட்சி ஒழியவேண்டும்; ஒழிக்கப்பட வேண்டும் என்பது, 'வெள்ளையன் ஆட்சி ஒழிக' என்பதைவிடப் பல மடங்கு உரத்துக் கூறவேண்டியது முக்கியமாகும் என்பதோடு, இன்றைய ஆட்சிக்கு, ஆட்சியின் அரசியல் திட்டத்திற்கு உட்பட்ட எந்த ஆட்சியின் கீழும் சுதந்திரமோ, சுய ஆட்சியோ, அதிக சுதந்திரமோ கிடைத்து விடுவதால் 'மனித சுதந்திரம்' ஏற்பட்டுவிடாது என்பது எனது கருத்து.

['விடுதலை'-தலையங்கம்—27-3-1969]

4. அரசியல் வாழ்வு

அரசியல் வாழ்வு நாளுக்குநாள் மனிதப் பண்பைக் கெடுத்துவருகிறது. அரசியல் போட்டி என்பது மிகமிகக் கீழ்த்தரத்திற்கே போய்க்கொண்டிருக்கிறது. இது நமது பின்சந்ததிகளைப் பாழாக்கிவிடும்போலத் தெரிகிறது.

இன்றையச் சமுதாயத்திற்குக் கிளர்ச்சி—அதாவது சட்டம், அமைதி, ஒழுங்குத் தன்மைகளை அலட்சியமாய்க் கருதிப் போராட்டம் நடத்துவதைத்தான் உற்சாகமாய்க் கருதும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, மனிதப் பண்பு பற்றிய கவலையே சிறிதும் இல்லாமல் போய்விட்டது. இதற்கு அரசியல் போட்டியாளர்களே காரணமாவார்கள்.

ஜனநாயகம் என்பதுதான் இதற்குக் காரணம் என்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

சட்டம்-ஒழுங்கு மீறுதல், பலாத்காரச் செயலில் ஈடுபடுதல் முதலிய காரியங்கள் நம்நாட்டில் முதல் முதல் அரசியலின் பேரால்தான் துவக்கமானதாகத் தெரிகிறது. இதற்குக் காரணஸ்தர்கள் பார்ப்பனர் என்றுதான் சொல்லவேண்டும். பார்ப்பனர்களுக்குத் தூண்டுகோல் மனுதர்ம சாஸ்திரம்தான்.

பார்ப்பன சாதி என்பதாக ஒரு வகுப்பு நாட்டில் இருக்கும்வரை—சட்டம், ஒழுங்கு, அமைதி, பலாத்காரமற்றதன்மை முதலியவை இருப்பது என்பது முடியாத காரியமாய்த் தான் இருந்துவரும். பொதுவாகச் சொல்லப்படுமானால், அரசியலில் காலித்தனம் பொது மக்கள் செயலாக ஆக்கப்பட்டது—காந்தியால்தான் என்று சொல்லலாம்.

சட்டசபைகளில் காலித்தனம் என்பது சத்தியமூர்த்தி அய்யர், மோதிலால் நேரு முதலிய பார்ப்பனர்களாலேயேயாகும். சட்டசபையின் கவுரவமும் ஒழிக்கப்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் பக்தர்கள் (காலிகள்) என்றுதான் சொல்லவேண்டும். இந்த நிலைமை வளர்ச்சிக்கு உற்சாகம் கொடுத்தவர்கள் பார்ப்பனப் பத்திரிகைக்காரர்களே யாவார்கள்.

பொதுவாழ்வில் பார்ப்பனர்களுக்குள்ள ஆதிக்கம் குறைந்ததுடன் அவர்கள் காலித் தனத்தை வளர்த்து, நாட்டில் அமைதியையும் பொது ஒழுக்கத்தையும் பாழாக்கிவிட்டார்கள். பார்ப்பனர்கள் தங்களுக்குப் பார்ப்பனரல்லாதார்களில் மானம், ஒழுக்கம், நேர்மை ஆகிய வற்றில் பற்றும் அருகதையும் உள்ள பெரிய மனிதர்கள் என்பவர்களின் ஆதரவு இல்லை என்று தெரிந்தவுடன் அயோக்கியர்கள், காலிகள், பொறுப்பற்ற கீழ்மக்கள் ஆகியவர் களையே பெரிதும் வேட்டையாடி விளம்பரங் கொடுத்து, உண்மையில் பெருமையும் கவுரவமுள்ள பெரியவர்கள் என்பவர்களை எல்லாம் மூலையில் ஒடுங்கும்படி செய்து விட்டார்கள். நல்ல பாரம்பரியத்தின் மதிப்பையெல்லாம் கெடுத்துவிட்டார்கள்.

நபர்களின் தன்மையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், பண்பைப் பற்றிக் கவலைப்படவில்லையானால் மனித சமுதாயத்திற்குப் பாதுகாப்பு எப்படி இருக்கமுடியும்?

சமதர்மம் பேசுகிறோம். எப்படிப்பட்ட சமதர்மம் ஏற்பட்டாலும்—நம் சமுதாயமும் நாடும் பொது உடைமைச் சமுதாயமாகவும், பொது உடைமை நாடாகவும் ஆகும் வரையில் ஏழை-பணக்காரர் இருந்துதான் தீருவார்கள்; மற்றும் முதலாளி-தொழிலாளி இருந்து தான் தீருவார்கள்; எஜமான்-வேலைக்காரர்கள் இருந்துதான் தீருவார்கள். இந்த நிலை இருக்குமானால், இருக்கும் வரை—ஒரு கட்டுத் திட்டம், ஒழுங்கு முறை இருந்தால்தானே மனித வாழ்வும் காரிய நடப்பும் சரிவர நடந்தேற முடியும்? மனிதனுக்கு இன்று சொத்துரிமை இருக்கிறது; இதில் மற்றவன் தனது பலாத்காரத்தைப் பயன்படுத்தி உரிமை பெறுவதென்றால்,—கையில் வலுத்தவன் பயனடைவது என்றால் மனித சமுதாயத்தில் அமைதியும் சமாதானமும் ஆன வாழ்வு எப்படி இருக்கமுடியும்?

கட்டுப்பாடும் சமாதானமும் அற்ற தன்மையை 'சத்திய சோதனை' என்னும் பேரால் உண்டாக்கிவிட்டு, ஜனநாயகத்தையும் உண்டாக்கிவிட்டால்—எந்தக் குணம், எந்தத் தன்மை கொண்ட மக்கள் பெருவாரியாய் இருக்கிறார்களோ அந்த மக்கள் ஆட்சிதானே நிலவும்! 'தொழிலாளர் தொல்லை', 'கூலிக்காரர்கள் தொல்லை', 'இவர்களைத் தூண்டி விட்டு வாழும் காலிகள் தொல்லை' என்றால் நாட்டில் இந்த இனம்தானே மெஜாரிட்டியாக உள்ளனர்!

இந்த நிலையில் சமதர்மம், ஜனநாயகம் என்றால் நாடும் மனித சமுதாயமும் எக் கதி ஆகும் என்பதைச் சிந்திக்க வேண்டாமா? ஆகவே, நமது 'அரசியல் வாழ்வு' என்பதைப் பொது உடைமை வாழ்வாக ஆக்கிக் கொண்டால்தான் மக்கள் சமுதாயம் கவலையற்று—சாந்தியும் சமாதானமும் பெற்று வாழமுடியும். இல்லாவிட்டால், மக்கள் சித்திரவதைக்கு ஆளாகத்தான் நேரிடும்.

['விடுதலை'-தலையங்கம்—6-7-1972]

3. மதச் சார்பற்ற அரசு

1. மதச் சார்பற்ற அரசு

இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளை விளக்குவதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டுகிறோம் :—

இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்பவர்களில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்பதாக மூன்று பிரிவுகள் சட்டத்திலும் அனுஷ்டானத்திலும் பல ஆதாரங்களிலும் இருந்து வருகிறது. இந்தப் பிரிவின்படி—பண்டித நேரு பிராமணராகவும், காந்திஜி சூத்திரராகவும், அம்பேத்கார் ஹரிஜனாகவும் கருதப்படுகிறார்கள்.

இந்திய அரசாங்கம் சாதிப் பிரிவு, சாதிச் சலுகை, சாதித் தொகுதி, சாதிப் பிரதிநிதித்துவம் இல்லாத அரசாங்கமாக இருக்கும் என்று அடிக்கடி பிராமண வகுப்பில் வருகிற தலைவர்களாலும், காங்கிரஸ் பிரமுகர்—பிரச்சாரகர்களாலும் சொல்லப்பட்டு வருகிறது.

இப்போதுள்ள பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கின இந்திய யூனியன் அமைப்பு முறையிலும் சாதி வகுப்பு விஷயமாய்ச் செய்யப்படப்போகும் விதிகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகளுக்கு இடம் அளிக்கப்படுமா? சட்டங்கள், இந்துமத சமுதாய ஆதாரங்கள், இடங்கள் முதலியவைகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வார்த்தைகள் இருக்க இடம் அளிக்கப்படுமா? அந்தப்படி இருப்பவைகளை சர்க்கார் அங்கீகரிக்குமா? என்கின்ற விஷயம் இதுவரையில் தெளிவாக்கப்படவில்லை.

இந்த விஷயங்கள் தெளிவாக்கப்படாமல், சாதிகளின் பேரால் தொகுதியில்லை, பிரதிநிதித்துவமில்லை, சலுகையில்லை என்று சொல்லப்படுவது—பிரிவினையின் காரணமாகக் கீழ் நிலையில் இருக்கும் மக்களுக்குப் பெருத்த அநீதியாகவும், குறைபாடாகவும், அசவுகரியமாகவும், முன்னேற்றத் தடையாகவும் இனியும் இருக்க இடமாகிறது.

ஆகவே, இந்திய யூனியன் கான்ஸ்டிடியூஷனிலும், இந்திய தேசியக் காங்கிரஸ் கான்ஸ்டிடியூஷனிலும்—'இந்திய யூனியனில் உள்ள மக்களில் அல்லது இந்துக்கள் என்கின்ற சமுதாயத்தில்—அரசியலின் பேராலும், மத இயலின் பேராலும், சமுதாய இயலின் பேராலும் பிராமணர், சூத்திரர், ஹரிஜனன் என்கின்ற பிரிவு எந்த முறையிலும் அனுஷ்டிக்கப்படமாட்டாது; இந்த வார்த்தைகள் அரசியல், மத இயல், சமுதாய இயல் கொண்ட எந்த ஆதாரங்களிலும் உபயோகிக்கப்படமாட்டாது என்பதோடு, இவைகள் இருக்கவும் இடம் கொடுக்கப்படமாட்டாது; அப்படிப்பட்ட வார்த்தைகள் இருக்கும்படியான ஆதாரங்களைச் சர்க்கார், காங்கிரஸ் மரியாதை செய்யாது; ஆதரிக்காது; கல்வி, கலைத் துறையிலும் இவ் வார்த்தைகளுக்கு-பிரிவுகளுக்கு இடம் இருக்க அனுமதிக்கப்படமாட்டாது'—என்பவை தெளிவாக விளங்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு விட்டால், இந்த யூனியனில் வகுப்பு வாதங்களோ, வகுப்பு ஸ்தாபனங்களோ, வகுப்புக் கலவரங்களோ என்பவை இருக்க இடமில்லாமல் போய்விடும்; வகுப்புக் குறைகளைச் சொல்லிச் சலுகைகளோ, பிரதிநிதித்துவங்களோ, உரிமைகளோ கொண்டாடவும் கேட்கவும் இடமில்லாமல் போய்விடும். இந்திய யூனியனும் பிறவியின் பேரால் பிரிவு, சாதிப் பிரிவு, வகுப்பற்ற ஒரே சமுதாயமாக விளங்க முடியும்.

அந்தப்படிக்கில்லாமல், பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற பிரிவுகளை, சாதிகளை வைத்துக் கொண்டு—இதன் காரணத்தால் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் குறை நீங்கத் தக்கதாக சலுகைகள், பிரதிநிதித்துவங்கள் இல்லையென்று தடுப்பது கொடுமையான அநீதியாகும்.

ஆகவே, இதை அரசியல் நிர்ணய சபையும், காங்கிரஸ் விதிமுறை அமைப்புச் சபையும் கவனிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

['குடிஅரசு'—அறிக்கை—24-4-1948]

நம் மக்களின் இழிவிற்கும் மானமற்ற தன்மைக்கும் அடிப்படை, அவர்களால் கொண்டாடப்படுவதும் போற்றிக் காக்கப்படுவதுமான கடவுள், மத சாஸ்திரங்களானதால் அவற்றை ஒழிக்க வேண்டுமென்கிறோம். 'நீ ஏன் சூத்திரன்?' என்றால், 'கடவுள் அமைப்புப்படி, மதப்படி, சாஸ்திரப்படி' என்கிறான். அதுபோல்—'அவன் எப்படிப் பார்ப்பான்?' என்றால் இந்தக் கடவுள், மத, சாஸ்திரப்படிதான் என்று கருதிக்கொண்டு இருக்கிறான். ஆகவே அடிப்படைக் காரணமாக இருக்கிற இந்த இழிநிலை மாறாததற்குக் காரணம்—நமக்குச் சரித்திரம் தெரிந்த காலம் முதல் நேற்றுவரை நடைபெற்ற ஆட்சிகள் அத்தனையும் நம் சூத்திரத் தன்மையையும் இழிவையும் பாதுகாக்கக் கூடியதாகவும், மனுதர்மப்படி ஆட்சிசெய்யக் கூடியதாகவும் இருந்ததேயாகும்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த ஆட்சியானது பகுத்தறிவாளர்கள் ஆட்சியான தால்—நமது இழி நிலையை ஒழிக்கவேண்டும் என்கின்ற கவலையுடைய ஆட்சி ஆனதால் இப்போது ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அதுவும் இரகசியமான உத்தரவு. அதாவது, 'அரசாங்க அலுவலகங்களில் சாமி படங்களோ, மத சம்பந்தமான மூட நம்பிக்கைப் படங்களோ இருக்கக்கூடாது' என்று உத்தரவு போட்டிருக்கிறது. இந்த இரகசியமான உத்தரவை இவர்களாகப் போடவில்லை. திரு. பக்தவத்சலம் ஆட்சியிலிருந்தபோது—நம்மிடம் இருந்து பிரிந்துசென்ற திரு. குருசாமியும் மற்றவர்களும், 'சுயமரியாதை இயக்கம்' என்பதாக ஒரு ஸ்தாபனம் வைத்தார்களல்லவா? அவர்கள், 'இது மதச் சார்பற்ற ஆட்சியானதால் அரசாங்க அலுவலகங்களில் இருக்கும் மதசம்பந்தமானவர்கள்—கடவுள்கள் முதலிய படங்களை எடுத்துவிட வேண்டும்' என்று தீர்மானம் போட்டு, சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. பக்தவத்சலம் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கட்டிவைத்துவிட்டார். இவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் அதற்குமுன் ஆட்சியிலிருந்த வர்கள் 'பைசல்' செய்யாமல் விட்டுவிட்டுப் போனவைகளை யெல்லாம் பைசல்செய்து கொண்டு வரும்போது, இதையும் பைசல்செய்தல் வேண்டியிருந்தது. அதனால், இந்த உத்தரவைப் போட்டார்கள். இதுபோன்ற ஓர் உத்தரவு 1950-ல் போட்டிருந்ததைக்கொண்டு இந்த உத்தரவைப் போட்டார்கள். இதை எப்படி நான் உறுதியாகச் சொல்கிறேன் என்றால், அதிலுள்ளபடியே இதையும் அமைத்திருக்கின்றார்கள். 'படங்களை அகற்றுவதில் எவ்வித முன்னறிவிப்போ, ஆர்ப்பாட்டமோ, விளம்பரமோ இன்றி சாதாரணமாக அகற்றப்பட வேண்டும்' என்று பழைய உத்தரவில் இருந்தது. அதையே இந்த உத்தரவிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பழைய உத்தரவில் அப்போதிருந்த 'கவர்ன்மெண்ட் செகரட்டரி' கையெழுத்துப் போட்டிருக்கிறார். இப்போது வந்த உத்தரவிலும் 'கவர்ன்மெண்ட் செகரட் டரி'தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

சாதாரணமாக வழக்கம் என்னவென்றால், இதுபோன்ற உத்தரவுகளுக்கு கவர்னரோ, மந்திரியோதான் கையெழுத்துப் போடவேண்டும். பழைய உத்தரவில் அதுபோல் இல்லாமல் செகரட்டரியே கையெழுத்துப் போட்டிருந்ததால் அதைப் பின் பற்றியே இதிலும் செகரட்டரி கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கிறார். அந்தப் பழைய உத்தரவு எப்போது போடப்பட்டது என்றால், வெள்ளைக்காரன் இந் நாட்டை விட்டுப்போய்— பூரா பொறுப்புகளையும் ஒப்படைத்தபின், 1950-ல் போடப்பட்டிருக்கிறது. அதைப் போடவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்றால், அரசாங்க அலுவலகங்களில் இராஜாவின் படமும், இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் படங்களும் இருந்துவந்தன. 'வெள்ளைக்காரர்களின் படங்களை எல்லாம் அகற்றவேண்டும்' என்கின்ற எண்ணத்தில் தான் அந்த உத்தரவைப் போட்டார்கள். அந்த உத்தரவானது 1950-வது வருஷம் மே மாதம் போடப்பட்டதாகும். அந்த உத்தரவில், 'கோர்ட்டு அறைகளின் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் அரசர், அரசி, அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களின் படங்கள் எது வானாலும் அவைகளையெல்லாம் அகற்றிவிடவேண்டும்; அவைகள் நீதி ஸ்தலங்களில் இருப்பது நீதி ஸ்தலங்களுக்கு இழுக்காகும்; வேண்டுமானால், காந்தியார் படம் இருக்

கலாம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவின்மீது பெல்லாரி டிஸ்டிரிக்ட் ஜட்ஜூம், தென் கனரா கலெக்டரும் 'எல்லாப் படங்களையும் எடுக்கவேண்டுமென்றால் இப்போதுள்ள கவர்னர், பிரதம மந்திரி ஆகியவர்கள் படங்களை என்ன செய்வது?' என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு, 'அவைகளையும் சேர்த்து எடுத்துவிடவேண்டும்; வேறு இடங்களில் வேண்டுமானால் மாட்டிக்கொள்ளலாம்' என்று 1950-ல் நவம்பர் 2ஆம் தேதி ஒரு உத்தரவை அரசாங்கம் அனுப்பி இருக்கிறது. அந்த உத்தரவை அப்போது கவர்ன்மெண்ட் செக்ரட்டரியாக இருந்த புல்லா ரெட்டி என்பவர் கையெழுத்திட்டு அனுப்பி இருக்கிறார். ஆகவே, இந்த உத்தரவு 1950 முதல் அமுலில் இருந்துவருகிறது. இப்போது இவர்கள் புதிதாக ஒன்றும் செய்துவிடவில்லை.

அரசியல் சட்டத்தில் இது மதச் சார்பற்ற சர்க்கார் என்பது ஆகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மதச்சார்பற்ற அரசாங்கம் என்று காந்தியே சொல்லி இருக்கிறார்; திரு. ஜவஹர்லாலும் சொல்லி இருக்கிறார். திரு. காந்தி, 'அரசாங்கப் பணத்திலிருந்து சிறிதுகூட மத சம்பந்தமான காரியத்திற்குச் செலவிடக்கூடாது. மத சம்பந்தமான எந்தக் காரியத்திலும் அரசாங்கம் சம்பந்தப்படக்கூடாது' என்று சொல்லி இருக்கிறார். இந்த காந்தி முதலில், 'இந்து மதந்தான் என் உயிர்; வருணாசிரமத்தைக் காப்பதற்காகவே நான் சுதந்திரம் கேட்கிறேன்; இந்து மதத்தில் கை வைக்க ஒருநாளும் சம்மதிக்கமாட்டேன்; என் உயிரைக் கொடுத்தாவது மதத்தைக் காப்பாற்றுவேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தவர்தான். அதற்காகவேதான் பார்ப்பனர்கள் அவரை 'மகாத்மா' வாக்கினார்கள். அவர் எதனால் மாறினார் என்றால், வெளிநாட்டார்கள், 'இந்தியன் என்றால் காட்டுமிராண்டி' என்று சொல்லிவந்தனர். அதற்கு ஆதாரமாக இந்து மதத்தைக் காட்டினர். சுதந்திரம் பெற்றபின், 'நாங்கள் காட்டுமிராண்டிகள் அல்லர், உங்களைப் போன்ற மனிதர்கள்தாம்' என்பதைக் காட்டிக்கொள்வதற்காக, மேல்நாடுகளின் அரசாங்கங்களைப்போல அதைப் பார்த்து 'செக்குலர் ஸ்டேட்' (Secular State) என்ற பெயரை இந்தியாவிற்கும் உபயோகித்துக்கொண்டார்.

அதோடு மட்டுமல்ல; அவர், 'காங்கிரசில் உள்ளவனெல்லாம் அயோக்கியனாகிவிட்டான்; இலஞ்சம் வாங்குகிறான்; திருடர்கள் கையில் காங்கிரஸ் சிக்கிவிட்டது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. முக்கியமானவர்களாக இருப்பவர்களும் என்னிடம் வந்து சொன்னார்கள். ஆகையால், இனி காங்கிரசைக் கலைத்துவிட வேண்டியதுதான்' என்று சொன்னார். அவர் உயிரோடிருந்தால் இந்நேரம் காங்கிரசைக் கலைத்திருப்பார். காங்கிரசைக் கலைத்துவிட்டால் அதனால் பெருமையும் புகழும் பெற்றிருந்த—அதன் மூலம் சுக போகமாக வாழ்ந்துகொண்டிருந்த பார்ப்பனர்கள் எல்லாம்—இனி, 'காங்கிரஸ் போனால் நமது வாழ்வே போய்விடும்; இந்த மனிதனை வைத்திருந்தால் நிச்சயம் கலைத்தாலும் கலைத்துவிடுவான்; இப்போதே மதமற்ற அரசாங்கமென்கிறான்; இனியும் இந்த மனிதனை உயிரோடு வைத்திருப்பது நம் குலத்திற்கே பெரிய ஆபத்தாக முடியும்' எனக் கருதி, பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, காந்தியையே ஒழித்துவிடுவது என்று தீர்மானம்போட்டு அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

இவர்கள் எந்த நாட்டைப் பார்த்து எந்த மொழியில்—'செக்குலர் ஸ்டேட்' என்று குறிப்பிட்டார்களோ, அந்த நாடுகளில் அந்த மொழிக்கு—'செக்குலர்' என்பதற்கு என்ன பொருள் இருக்கிறதோ—அவர்கள் எந்தப் பொருளில் அதைப் பயன்படுத்தியிருக்கிறார்களோ, அந்தப் பொருளில்தானே நாமும் பயன்படுத்தவேண்டும்? அதை விட்டுவிட்டு சொல்லைமட்டும் வைத்துக்கொண்டு, 'செக்குலர் என்றால் மதச் சார்பற்றது என்று பொருளல்ல; எல்லா மதங்களையும் ஒன்றுபோலக் கருதவேண்டும் என்றுதான் பொருள்' என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.

பெண்கள் ஒரு மாநாடு நடத்துகிறார்கள். அந்த மாநாட்டில் உள்ள பெண்கள் அத்தனைபேரும், 'பெண்கள் பதிவிரதைகளாக நடந்துகொள்ள வேண்டும்' என்று தீர்மானித்துவிட்டு—'பதிவிரதை என்றால் எல்லா ஆண்களையும் தங்கள் கணவனைப் போலக் கருதி நடந்துகொள்ள வேண்டும். அதுதான் பதிவிரதத் தன்மை' என்று அர்த்தம் சொல்வது எவ்வளவு அயோக்கியத்தனமானதோ, அதைவிட, அயோக்கியத்தனமாகும்—'மதச் சார்பற்ற' என்பதற்கு எல்லா மதங்களையும் ஒன்றுபோலக் கருத வேண்டுமென்பது! எனவே, 'மதச் சார்பற்ற' என்றால், 'எந்த மதத்தையும் சாராத' என்பதுதான் பொருள். இந்த சர்க்கார் மதச் சார்பற்ற சர்க்காரானதால், அரசியலில் மதச்சார்புள்ள சாதனங்களான கடவுள் முதலிய படங்களை நீக்கவேண்டுமென்கிறது.

[புத்தகம் : 'மதச்சார்பின்மையும் நமது அரசும்'—பதிப்பு 1968]

4. உள்ளாட்சி

1. நகர அமைப்பு

நகரசபை அங்கத்தினர்களே! பெரியோர்களே!

'நகர பரிபாலன சபை அமைப்பும் வேலையும்' என்பது பற்றிப் பேச விழாப் பிரமுகர்கள் விழைவதாகத் தலைவரவர்கள் அறிவித்துள்ளார்.

இவ்விஷயம் பற்றிப் பேச எனக்கு மிக மகிழ்ச்சியே.

நகர பரிபாலன சபை என்பது நகரில் வாழும் மக்களின் நலனைக் குறித்துக் கவலை கொண்டு, அவர்கட்கு வேண்டுவன செய்யும் கடமையை ஏற்ற சபை என்பது பொருள் என்றே கருதுகிறேன். அச் சபையை நிர்வகிப்பவர்கள் அந் நகர மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டு, நகரமக்களின் பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகின்ற மக்கள் ஆவார்கள். இதுபோலவே, ஜில்லா பரிபாலன சபை, தாலுக்கா பரிபாலன சபை, கிராம பரிபாலன சபை, மாகாண பரிபாலன சபை போன்றவைகளுமாகும். ஆனால், நாம் காணும் இப் பரிபாலன சபைகள் என்பவை எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றால், நகர் முதலியவைகளில் வாழும் செல்வவான்களது பரிபாலன சபைகளாகவே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

எப்படியெனில், இச்சபைகளில் அமருகின்றவர்களுக்கென ஏற்படுத்தியுள்ள யோக்கிய தாம்சம் என்ன? அவர்களைத் தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சம் என்ன? என்று யோசித்துப் பார்ப்போமேயானால், அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு சொத்துடைமையைப் பொறுத்தே அத் தகுதிகள் இருந்துவருவதைக் காணலாம். சொத்துடமை இல்லாத எவருக்காவது தகுதி இருக்கக் காணுவோமேயானால் அத் தகுதியும் அந்நகர, தாலுக்கா, ஜில்லா, மாகாண மக்களில் 100-க்கு ஒருவருக்குக்கூட இருக்க முடியாததான—'படிப்பு உடைமையை'ப் பொறுத்தே ஏற்படுத்தப்பட்டுள்ள தகுதியேயாகும். அதாவது, ஒன்று, ஒரு குறிப்பிட்ட சொத்து இருக்கவேண்டும்; அல்லது, ஒரு குறிப்பிட்ட படிப்புப் பட்டம் இருக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாதார், தகுதி இல்லாதாராகவே கருதப் பட்டிருக்கிறது. ஆதலால், மேற்கண்ட பரிபாலன சபைகளின் அமைப்புகளானது பொது மக்களது சபையாக அமைக்கப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

பிரத்தியட்ச அனுபவத்தில் காண வேண்டுமென்றாலும் நீங்கள் காணலாம். எந்தப் பரிபாலன சபைகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; அவற்றில் வீற்றிருப்போர் யாவர் என்று நோக்குங்கள்; அவற்றின் தலைவர்கள் யாவர் என்று நோக்குங்கள்; மற்றும் அவர்கள் எல்லோரையும் தெரிந்தெடுப்பவர்களும், தெரிந்தெடுக்கப்

படுபவர்களும் தங்கள் கடமைகளை, பொறுப்புகளை உணர்ந்தவர்களாய் இருக்கின்றார்களா என்று பாருங்கள். சொத்துடைமையைத் தகுதியாகக்கொண்ட மக்களின் சபைப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் சொத்துடைமையைப் பெருக்குவதைக் கடமையாகக் கொள்ளுவார்களா, அல்லது சொத்தில்லாதவர்கள், படிப்பில்லாதவர்களாகிய ஏழைப் பாமரமக்களின் நலன் பெருக்கத்தைக் கடமையாகக் கொள்ளுவார்களா என்பதை இயற்கைத் தத்துவம் என்னும் கண்ணினால் பாருங்கள்!

ஆகவே, நகர பரிபாலன அமைப்பே பொதுமக்களின் நலனுக்கேற்றதாய் இருக்க முடியாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒழுக்கத்தையோ, நாணயத்தையோ காண்பதென்பது மிகமிக அரிதாகவே இருக்கத்தக்கதாய் இருக்கிறது. தெரிந்தெடுத்தல்கள் (எலக்ஷன்கள்) என்பவைகளைப்பற்றி யாவரும் வெளிப்படையாய் அறிந்த விஷயமே யாகும். தெரிந்தெடுப்பவர்கள் எவருக்குமே—ஏறக்குறைய 100 க்கு 99 பேருக்குமேல் தெரிந்தெடுப்பவர்களின் கடமை என்ன என்பதே தெரியாது. ஒவ்வொரு தெரிந்தெடுப்பவனும் அவனவன் சுயநலம், தாட்சண்யம் ஆகியவைகளைக் கவனித்தே வியாபார முறையில் தெரிந்தெடுக்கிறான். தெரிந்தெடுக்கப்படுபவனும் தனது சுயநலம், தற்பெருமை, தற்காப்பு ஆகியவைகளைக் கருத்தில் வைத்தே தெரிந்தெடுக்கப் பாடுபட்டு தெரிந்தெடுக்கப்பட்டவனாகின்றான். ஆகவே, தெரிந்தெடுப்புமுறை பெரிதும் சுயநலத்தையே அஸ்திவாரமாய்க் கொண்டு உலவுகின்றது.

பொதுஜனங்கள் பேரால், சில ஜனங்கள் புகழ் பெற்றுச் செல்வம் பெருக்கி மகிழ்வது என்பதே நகர பரிபாலன சபையின் அமைப்பாகவும் வேலையாகவும் இருந்து வருகின்றது.

இதேபோல்தான் ஜில்லா, தாலுக்கா பரிபாலன சபைகளுமாகும். ஜில்லா, தாலுக்கா என்பது நகரங்கள் தவிர்த்த கிராமங்களையே பொறுத்தது. கிராமங்களிலுள்ள பெரும்பான்மை மக்களான விவசாயக் கூலிகளுக்கு இந்தச் சபைகள் பிரதிநிதி சபையாகுமா? சின்னக் குடியானவர்களுக்கு இது பிரதிநிதி சபையாகுமா? பூமி இல்லாதவனுக்கும், ஒரு ஏக்கர், அரை ஏக்கர் பூமி உள்ளவனுக்கும்—1000 ஏக்கர், 10,000 ஏக்கர் பூமி உள்ளவர்கள் பிரதிநிதிகளானால், இது எதற்குப் பயன்படும்? அந்த ஒரு ஏக்கர், அரை ஏக்கர் பூமியையும் பிடுங்கி, 1000–ஏக்கர்காரன் 1500–ஏக்கர்காரனாகவும்; 10,000 ஏக்கர்காரன் 15,000 ஏக்கர்காரனாகவும், மற்றவர்களை ஏழையாகவும், பாப்பர்களாகவும் ஆக்கத்தான் பயன்படும். மற்றும், தங்கள் அதிகார ஆணவங்களைக் கொண்டு விவசாயக் கூலி மக்களை அடக்கி ஒடுக்கி, துஷ்ட மிருகங்கள் மாதிரி நடத்தத்தான் பயன்படும்.

இந்தப்படி நாடு முழுவதும் நடக்கிறதா, இல்லையா பாருங்கள். நகர பரிபாலன சபையின் செல்வங்கள் அவற்றில் உள்ள உத்தியோகஸ்தர்களும், காண்ட்ராக்டர்களும் சாப்பிடவும்; அவற்றில் பரிபாலன சபையார்களுக்கும் பங்கு இருக்கவுமே பெரிதும் பயன்படுகின்றன. ஒரு பாகம் பொதுஜனங்களுக்கும் பயன்படுகிறது என்று சொல்லப்பட்டாலும் அதுவும் செல்வவான்களுக்கும், படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற சோம்பேறிகளுக்குமே போய்ச் சேருகின்றன.

மாகாண பரிபாலன சபைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளில் ஜமீன் பேரால் மக்கள் இரத்தத்தை உறிஞ்சும் கொள்ளைக்காரர்கள்; லேவாதேவியின் பேரால் மக்கள் இரத்தத்தையும் எலும்பிலுள்ள ஊன்களையும் உறிஞ்சும் கொள்ளைக்காரர்கள்; மிராசுதார்கள் பெயரால் விவசாயக் கூலிகளின் இரத்தத்தையும், எலும்பு ஊன்களையும், மனிதத் தன்மையையும் கொள்ளைகொண்ட துஷ்ட மிருகங்களுக் கொப்பானவர்கள்; வன்னெஞ்ச வியாபாரிகள்; படித்தவர்கள் என்னும் ஈவு இரக்கமற்ற சோம்பேறிக் கூட்டங்கள் ஆகியவைகளே நிறையப் பெற்றிருக்கின்றன. இவர்களது எண்ணமென்ன, கடமை என்ன, செய்கை என்ன, என்பவைகளை நான் விவரிக்க வேண்டுமா? பிரத்தியட்சத்தில் நீங்கள் அறியாத எதை நான் சொல்லவேண்டும்?

ஆகவே, இச் சபைகளின் அமைப்பையும், வேலைத் திட்டத்தையும் நடவடிக்கைகளையும் கண்ட ஒருவன் யோக்கியனாய் இருப்பானாயின், இவைகளைக் கலைக்கவேண்டுமென்றுதான் சொல்லுவானே ஒழிய சீர்திருத்தவேண்டுமென்று சொல்லுவதுகூட மிகக் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனால், சிறிது காலமாகவே நான் கொண்ட அபிப்பிராயப்படிதான் நகர பரிபாலனங்களின் ஆதிக்கங்கள் நாளாவட்டத்தில் குறைந்து வருவது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன். என்னவெனில், நகரபரிபாலன சபைக்கு இருந்துவந்த அதிகாரங்கள் இந்த 20 வருட காலத்தில், அதாவது பாமர மக்களுக்குச் 'சுயாட்சி' உணர்ச்சி ஊட்டி, செல்வவான்களும் படித்த சோம்பேறிகளும் ஏமாற்ற ஆரம்பித்த காலம் முதல், நாளுக்குநாள் ஏற்கனவே இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டே வருகின்றன. இனி, ஜில்லா, தாலுக்கா சபைகளின் அதிகாரங்களும் பறிக்கப்பட வேண்டுமென்ற விருப்பங்களும் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. இதிலிருந்தே பரிபாலன சபையின் அமைப்பும் வேலையும் ஒழுங்காக இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும். நம் நாட்டில் நகர பரிபாலன சபைகள் ஏற்பட்டு 50 வருஷங்களுக்கு மேலாகியும் இன்னமும் மக்களுக்கு அவற்றின் கடமையும் பொறுப்பும் தெரியவில்லை என்றால், நாம் நம் சமூகத்தின் பேரால் வெட்கப்பட வேண்டாமா என்று யோசித்துப் பாருங்கள்.

எப்படிப்பட்ட நகரத்திலும் ஒரு வீட்டுக்காரன் பொது இடத்தில் ஒரு அடி நிலமாவது சேர்த்துக் கட்டிக்கொள்ளவே பார்க்கிறான்; அதில் அவன் வெட்கப்படுவதில்லை. பொதுச் சொத்து என்றால் கொள்ளை அடிக்கத் தகுந்தது என்பதே ஒவ்வொருவனுடையவும் எண்ணமாய் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள் ஒருநாளும் பொது நிர்வாகத்துக்கு அருகதையுடையவர்களாக மாட்டார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் பிரதிநிதிகளும் தன்வீட்டுக் குப்பை, கூளம், அசிங்கம் ஆகியவற்றைப் பக்கத்து வீட்டுப் புறம் கொட்டுவதிலும், தன் வீட்டுப் பிள்ளையை எதிர்வீட்டுப்புறமோ அல்லது பக்கத்து வீட்டுப்புறமோ இருத்தி மலஜலம் கழிக்கச்செய்வதையுமே கடமையாகவும் நீதியாகவும் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை 50 வருஷமாய்த் திருத்தமுடியாத பரிபாலனசபை அமைப்பும், வேலையும் இனி எப்பொழுது திருந்தப்போகின்றது ?

மேல்நாடுகளில் இவ்விஷயங்கள் ஓரளவு கவனிக்கப்படுகின்றன என்றாலும் அங்கும் போதிய வேலைகள் செய்திருப்பதாய்க் காணப்படவில்லை.

உண்மையான நகரபரிபாலன சபைகள் என்பவைகள் ஒரு அரசாங்கம் என்பதின் வேலைகள் எல்லாவற்றையுமே மேற்போட்டுக்கொண்டு வேலை செய்து வரத் தக்கதாய் இருக்கவேண்டும். அவைகள் நகரில் பெரும்பான்மையான மக்களான—தொழில் செய்து வாழும் மக்களுடைய முழுப் பிரதிநிதிகளாகவே இருந்து, அவர்களுடைய நன்மையையே பெரிதும் கவனிக்கத் தக்கதாய் இருக்கவேண்டும். பொது ஜனங்களை உத்தேசித்துப் பொது ஜனங்களுக்காக நடைபெறும் எந்தக் காரியத்தையும், வியாபாரத்தையும் தனிப்பட்ட மனிதன் நடத்திப் பயன்பெற இடமே இருக்கக்கூடாது. உதாரணமாக வியாபாரங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மக்களுக்கு வேண்டிய ஆதார சாமான், போகபோக்கிய சாமான், போக்குவரவு வசதி, கல்வி முதலிய எல்லா நிர்வாகங்களும் நகரபரிபாலன சபையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு, அதன் இலாபங்கள் முழுமையும் நகரமக்களின் வாழ்க்கைக்கும் கல்விக்கும் சுகபோகத்துக்கும் சரிசமமாய்ப் பயன்படத் தக்கதாகவே இருக்கவேண்டும். உற்பத்தி செய்பவனுக்கும் அனுபவிப்பவனுக்கும் மத்தியில் 'மிடில்மேன்' கூடவேகூடாது. நகர சிவில், கிரிமினல், போலீஸ் முதலிய காரியங்களும் நகர பரிபாலனத்துக்குள்ளாகவே அடங்கியதாய் இருக்கவேண்டும். ஜட்ஜுகள், போலீஸ் அதிகாரிகள், சிறைக்கூடத் தலைவர்கள் முதலிய எல்லா அதிகாரிகளும் நகர பரிபாலன சபையின் அதிகாரிகளாகவே இருக்க வேண்டும்.

இந்த முறையில்தான் ரஷ்ய தேசத்தில் நகரசபைகள் நடப்பதைப் பார்த்தேன். அங்கு ஓட்டர்கள் சங்கக் கூட்டத்தில் ஜட்ஜுவை நிறுத்தி, கேள்விகள் கேட்கப்பட்டதை நேரில் பார்த்தேன். ஜட்ஜு நகர ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவராவார். அவரும் ஒரு தொழிலாளியேயாவார். ஒவ்வொரு தெரிந்தெடுக்கப்படவேண்டிய ஸ்தானத்திற்கும் தெரிந்தெடுக்கப்பட்டவரிடமிருந்து வேலை வாங்கவும், அவர் கடமையைச் சரியாய் உணர்ந்து பொறுப்புடன் நடக்கின்றாரா என்பதைக் கவனிக்கவும் ஒரு தனிக் கமிட்டி உண்டு. அக் கமிட்டிக்கு அவர்கள் என்றும் பொறுப்பாளிகளாய் இருக்கவேண்டும் என்கின்ற முறையிலே எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும், வேலைமுறைகளும் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. நிற்க,

நமது நாட்டு ஸ்தாபனங்களில் ஸ்தாபன சிப்பந்திகளின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும். சிப்பந்திகளுக்குச் சர்க்கார் சிப்பந்திகள்போல பென்ஷன் இல்லை; அவர்கள் ஒரு எஜமானருக்கு திருப்தியாய் நடக்க முடியா விட்டால் வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளவோ, மாற்றப்படவோ மார்க்கமில்லை. இந்தக் காரணங்களால் மனச்சாட்சிப்படி நடக்கமுடியாமலும் சுதந்திரத்துடன் இருக்க முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நகரபரிபாலன சபை அங்கத்தினர்களும், தலைவர்களும் எப்படிப்பட்ட யோக்கியதை உடையவர்கள் என்று முன்னாலேயே சொன்னேன். அப்படிப்பட்டவர்களிடமிருந்து காலந்தள்ள வேண்டிய அவசியத்தில் மனிதன் வாழ்வது மிகவும் கொடுமையான வாழ்வேயாகும். ஒரு எஜமானன் காலாவதியாகி, அவனது மறு தேர்தலுக்கு ஒரு சிப்பந்தி ஏதாவது அபிமானம் காட்டினால்—அடுத்து வருகிற எஜமானன் கல் நெஞ்சுடன் அவனை நசுக்கி விடுகிறான்; அபிமானம் காட்டவில்லையானால்—அதே எஜமானன் திரும்பவும் வந்தால் அப்படியே செய்துவிடுகிறான். மற்றும், சிப்பந்திகள் தங்கள் கடமையை நிர்த்தாட்சண்யமாய்—ஒரு நிலையாய் செலுத்துவதானால் எஜமானாய் இருப்பவன் பொது ஜனங்களின் 'சாடி'யைக் கேட்டுக்கொண்டு கொடுமைப் படுத்தி விடுகிறான்.

ஆதலால், சிப்பந்திகள் சமயத்துக்குத் தகுந்தபடி தங்கள் பணத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே கருத்துள்ளவர்களாகி விடுகிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்கள், நகரபரிபாலன சபைகள் ஒழுங்குபட வேண்டுமானால், சிப்பந்திகள் எல்லாம் சர்க்கார் சிப்பந்திகள் ஆகவேண்டும். சிப்பந்திகள் விஷயத்தில் நகரபரிபாலன சபைத் தலைவர்களுக்குச் சிறிதும் அதிகாரம் இருக்கக் கூடாது. இதுபோல் இத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்படவேண்டியிருக்கிறபடியால் பொதுவில்—இன்றைய நிலையில். ஸ்தல ஸ்தாபனங்களை எடுத்துவிட்டு, சர்க்கார் மேற்பார்வையில் பொதுஜனங்களுக்கு ஜவாப்தாரித்தனமுள்ள முறையில் நடத்தப்படுவதே கூடியவரை மேலானது என்று சொல்லலாம்.

[திருப்பூரில், 10-12-1933-ல் சொற்பொழிவு—'புரட்சி' 17-12-1933]

2. நகராட்சியின் தன்மை

நகரசபை அங்கத்தினர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தச் சந்தர்ப்பத்தில் நகரசபையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நகரசபைகளைப்பற்றி இனிமேற்பட நாம் சற்று நல்ல கருத்துக்கள், முற்போக்கான கருத்துக்களைக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த நகரசபைகள் என்கிறதான ஒரு ஸ்தாபனத்தை வெள்ளைக்காரர்கள் ஏற்பாடு செய்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, 'இந்தப்படியாக ஒவ்வொரு

ஊர்களுக்கும் நகரசபைகளை ஏற்பாடுசெய்து, அவைகளில் அங்கம் வகிப்பதற்காகப் பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வேண்டும் என்று ஏற்பாடு செய்தால், தெரிந்தெடுக்கப்படுதலில் போட்டா போட்டிகள், கட்சிகள் ஏற்பட்டு, ஒருவருக் கொருவர் கட்சிகளாகப் பிரிந்து விரோதம் பாராட்டிக்கொள்வார்கள். இந்தக் கோஷ்டிகளில் ஏதாவது ஒரு கோஷ்டி சர்க்காருக்கும், அதனுடைய ஆட்சிக்கும், நடப்புக்கும் அனுசரணையாக, ஆதரவாக இருக்கும்; அதனால் சர்க்கார் நடத்துவதற்கு சற்றுச் சவுகரியமாய் இருக்கும்' என்றே ஜனங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அந்தப் பிரிவுகளினால் அவர்களுக்கு உண்டாகும் பலவீனத்தின் துணையைக்கொண்டு, அவர்களே ஆட்சி புரிவது என்பது ஒரு காரணம். இதை வெளிப்படையாகச் சொல்லாமல், வெள்ளைக்காரர்கள் வெளிப்படையாக வேறு ஒரு காரணம் சொன்னார்கள்.

அதாவது, 'இந்திய மக்களை சுய இராஜ்யத்திற்குத் தகுதியுடையவர்களாக ஆக்குவதற்காக—அதாவது, ஆட்சி புரிகிற அனுபவத்தை அவர்கள் பெறுவதற்காக அவர்களைத் தயார்செய்ய வேண்டும் என்பதால் இந்த மாதிரி நகர சபைகளை ஏற்பாடு செய்து, அதன் மூலம் இந்திய மக்கள் ஆட்சி அனுபவம் பெறும்படி செய்வதற்கு ஆகும்' என்றார்கள். இந்தப்படி இரண்டு காரணங்கள்தாம் நகரசபைகள் ஏற்பாடு செய்ததற்கும், நடந்து வருவதற்கும் சொல்லப்பட்ட காரணங்களாகும். இவை தேவையில்லாத காரணங்கள்.

இன்றையதினம் இந்த இரண்டு காரணங்களும் நகரசபை இருக்கவேண்டும் என்பதற்குத் தேவையில்லாத காரணங்களாகிவிட்டன. எப்படி என்றால், முதலாவதாக ஜனங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைத்து அதன் மூலம்தான் ஆளவேண்டும் என்கின்ற அவசியம் நமக்கு வேண்டியதில்லை. இன்றையதினம் ஆளுகிறவர்கள் 'இந்தத் தேசத்துக்காரர்கள்'—'நம்மவர்கள்' என்று சொல்லப்படுவதோடு, 'ஆளுகிறவர்கள் நம்மால் தெரிந்தெடுக்கப்பட்டு நம்முடைய பிரதிநிதிகளாகப் போய் ஆளுகிறார்கள்' என்றும் சொல்லப்படுகிறது. இன்றையதினம் இருக்கிற இந்திய முதல் மந்திரி என்பவரும், மற்ற மந்திரிகளும் இந்த ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு மேலாக இந்த நாட்டின் தலைவர் என்று இருக்கிறவரும் இந்த மக்களால் தெரிந்தெடுக்கப்படுகிறவர் என்று சொல்லப்படுகிறது. இந்தப்படி 'இந்தத் தேசத்தவரே இந்த மக்களால தெரிந்தெடுக்கப்பட்டு ஆளுகிறவர்கள்' என்றும் சொல்லப்படும் போது—ஆளும் போது ஜனங்களைப் பிரித்துவைத்து அதன்மூலம் ஆட்சியை நடத்தவேண்டும் என்ற அவசியம் எப்படி உள்ளவர்கள் ஆவார்கள்?

இரண்டாவதாக, இந்தத் தேசத்து மக்களைச் சுயராஜ்யத்துக்கு அருகதை உள்ளவர்களாக ஆக்குவதற்காக நகரசபைகள் ஏற்படுத்தப்படுவது என்பதும் இன்றையதினம் தேவை இல்லாததாகும். ஏனென்றால், இந்த நாடு வெள்ளைக்காரரிடமிருந்து சுதந்திரம் பெற்று, சுதந்திர ஆட்சிதான் இன்று நடைபெறுகிறது என்றும் சொல்லப்படுகிறது. எனவே சுதந்திரம், சுயராஜ்யம் பெற்ற மக்களுக்கு—சுயராஜ்ய ஆட்சியே புரிகிற மக்களுக்கு, சுயராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்குவது என்பது பொருந்துமா? எனவே, இந்த இரண்டு காரணங்களுக்காகவும், அதாவது எந்தக் காரணங்களைச் சொல்லியும்—மனத்தில் வைத்தும் இந்த நகரசபைகள் என்பவைகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ, அந்தக் காரணங்கள் என்பவைகள் இன்று தேவையில்லாத, அவசியமில்லாத காரணங்களாகிவிட்டன. எனவே, அவைகளின் அடிப்படையில் இன்றைய தினமும் நகரசபைகள் இருக்க வேண்டும் என்பது தேவையில்லை. பின் எப்படி என்றால், இன்னும் சற்றுப் பாதுகாப்போடும், பலமான அஸ்வாரத்தோடும், வேறு முறையோடும்தான் இன்று நகரசபைகள் இருக்கவேண்டும்.

அதாவது, நகரமக்கள் பிரதிநிதிகளுக்கு நகர ஆட்சி, சுதந்திரம் முழுவதும் இருக்க வேண்டும். இன்று நகர ஆட்சிக்குப் பொறுப்பானவர் கமிஷனர். அவருக்கும் கவுன்சிலர்

களுக்கும் ஆட்சியில் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதனாலேயே இது தேவை இல்லை என்று நான் எப்போதும் வலியுறுத்திக் கூறுவது—அதாவது, இந்த புதுக்கோட்டை நகர சபைக்கு, இந்த புதுக்கோட்டை நகரத்தைப் பொறுத்தவரையில் முனிசீபு, மாஜிஸ்ட்ரேட்டு, போலீஸ், ஜட்ஜு முதலிய சகல அதிகாரத் தலைமைகளும் நடப்புகளும் புதுக்கோட்டை நகரசபையைப் பொறுத்ததாய் இருக்கவேண்டும்; பொதுப் பாதுகாப்பு, மேல்பார்வை, பொது சம்பந்த நிர்வாகப் பாதுகாப்பு போன்றவைகளை வேண்டுமானால் பொதுத் தன்மைக்கு—அதாவது, இராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் என்பதாக ஏற்பாடு செய்துவிட்டு, மற்றபடி இந்த ஊரைப் பொறுத்தவரையான காரியங்களுக்கு இந்த நகரசபையே அதிகார முடையதாக இருக்கவேண்டும் என்பது ஆகும். அப்போதுதான் 'நகர சுய ஆட்சி' என்று சொல்வதற்கு அர்த்தமேதவிர, இப்போது இருக்கிறதுபோல சும்மா—பேருக்கு அதாவது, நமது இராஜ்யத்திற்கு இருப்பதுபோல், அங்கத்தினர் நலம், கவுரவம் என்ற பெருமைக்கு, நகராட்சி என்ற பெருமைக்கு நகராட்சி என்று இருப்பது கேலிக்கூத்தாகும். சாதாரணமாக, இன்று நகராட்சி என்பவைகள் எப்படி இருக்கின்றன என்றால், சிலருடைய வசதிக்கும், பெருமைக்கும், இலாபத்துக்கும் பயன்படுவது என்கிற மாதிரியான தன்மையில் இருக்கின்றன. இது மாறவேண்டும்.

இந்த என்னுடைய கருத்தைப் பலர் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்; இந்தப்படியே செய்யவேண்டும் என்று ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பதவியில் இல்லாதபோது, அதிகாரத்தில் இல்லாதபோது இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டார்களே தவிர, அதிகாரத்துக்குப் போனவுடன், தங்களுடைய வசதிக்காக—தம்மை நிலைப்படுத்து வதற்காகப் பழையபடியே நடந்துகொள்கிறார்கள்.

தோழர்களே! நமது நாடு எப்படி இருந்தாலும் இந்தச் சாதி வகுப்புணர்ச்சியினால் மிகவும் சீரழிகிறது. அவனவன் தன் சாதி, தன் வகுப்பு பதவிக்கு வரவேண்டும், மற்றவர்களை அடக்கி ஒடுக்கிவருவது என்று கருதுகிறான். ஒவ்வொரு ஊரிலும் இந்த மாதிரியான தகராறு இருக்கிறது; இது ஒழியவேண்டும்.

நகரசபைக்குப் போகிறவர்கள் அங்குபோய் என்ன செய்யப்போகிறார்கள்? இவர்களுக்கு அங்கு என்னவேலை இருக்கிறது? நகரசபைகளில் பணம் இருக்கிறது; அந்தப் பணத்தைச் செலவு செய்வதற்கு ஏற்கனவே சர்க்காரால் செய்யப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. இவைகள் சரியானபடி நடத்திக்கொள்வதற்காக சர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரிகள், சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்களை நிர்வாகம் செய்யவும், மோசடி நடவாமல் இருக்கவும் முழுப்பொறுப்புள்ள கமிஷனர் இருக்கிறார். இப்படி இருக்க, இவர்கள் அங்கு போய் என்ன செய்யப் போகிறார்கள்? இதற்குத்தானா இவ்வளவு தகராறுகள், போட்டா போட்டிகள், சண்டைகள்! சிந்தித்துப் பாருங்கள்!

'அப்படியானால், இந்த ஸ்தாபனமே தேவையில்லை என்று நீ சொல்லுகிறாயா?' என்றால், மற்ற இலாகாக்களுக்கு ஸ்தாபனங்கள் இருப்பதுபோல், 'நகர நிர்வாக ஸ்தாபனம்' என்று ஒன்று தேவைதான். ஆனால் ஒப்புக்கு, ஏதோ சிலரின் வசதிக்கும், பெருமைக்கும், பலம் பார்ப்பதற்கும் என்கிற மாதிரியில் இல்லாமல்—உண்மையிலேயே நகராட்சி சபையாக நகரத்தைப் பொறுத்தமட்டில் போலீஸ், நிதி, பொதுநிர்வாகம் போன்ற ஸ்தாபனங்கள் போல—ஒரு நிர்வாக அதிகாரம் படைத்ததாக இருக்கவேண்டும் என்பேன்.

மற்றும், இந்த நகரசபைகள், நகர நிர்வாகத்திற்கு என்பதாக ஜனங்களிடமிருந்து தனிவரிகள் வாங்கக் கூடாது; அது நகர மக்களுக்குத் தொல்லையாகும். தனிவரி இல்லாமல் நிர்வாகம் நடைபெறவேண்டும். அப்போதுதான் அதை 'நகர சுய ஆட்சி' என்று சொல்ல முடியும். அந்தந்த நகரத்தைப் பொறுத்தவரையிலும் நிர்வாக அதிகாரம் நகரசபைக்கும், ஜில்லாவைப் பொறுத்தவரை ஜில்லாபோர்டுகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். அப்படிப்

பூரண உரிமை, அதிகாரம் கொடுக்கப்பட்டால், நான் சொல்லுகிறேன்—ஜனங்களிடமிருந்து வரி வாங்காமலேயே ஆட்சியை நடத்திக்கொண்டு போக முடியும் என்று. எப்படி எனில், இரயில், தபால்–தந்தி, டெலிபோன், ரோட்டு விளக்கு, முதலியவைகளுக்கு வரி போடுகிறோமா? செலவுக்கு 'சார்ஜ்'—கூலி பெற்றுக்கொள்கிறோம்; அதிலும் இலாபம் பெறுகிறோம். ஆனால், வரி என்பதாக ஒன்றும் இல்லாமலே அவை நன்றாக இலாபத்தில் நடைபெறுகின்றன. அவைகளால் மக்களுக்கு வரிக் கஷ்டமே இல்லை.

அதாவது, வரி என்றால் அவரவர்களின் வருமானத்திலிருந்து வாங்கப்படுகிறது. வீட்டுவரி, தொழில்வரி, வருமானவரி, மற்றும் இதுபோன்ற வரிகள் எல்லாம் ஜனங்கள் தங்கள் தங்கள் தொழிலைச் செய்து அந்தப்படி செய்த தொழிலில் வரும் இலாபத்தில் ஒரு பங்கை வரியாக சர்க்கார் நடப்புக்கு, செலவுக்குக் கொடுக்கிறார்கள். இந்த இலாபத்தில் பெரும்பகுதி தனிப்பட்டவர்கள் அடைகிறார்கள் என்பதுதானே! இப்படி நகர பொது ஜனங்களிடம் இருந்து மற்ற தனிப்பட்டவர்களைச் சம்பாதிக்கவிட்டு, அந்தப்படி சம்பாதித்த சம்பாதனையிலிருந்து வரி வாங்குவது என்பதற்குப் பதில்—இப்படி வருவாய் உள்ள தொழில்களைப் பூராவும், அதாவது மில்கள், ஜவுளிக் கடைகள், நாடகம், சினிமாக் கொட்டகைகள், பஸ் மற்றும் இதுபோன்ற தொழில்களை சர்க்காரே ஏற்று இரயில், தந்தி, தபால், விளக்குபோல் நடத்தினால்—இவைகளின் பூரா இலாபமும் இன்று தனி மனிதனுக்குப் போய்ச் சேர்ந்து, அவனுடைய சொத்துக்கு சுகவாழ்வுக்கு, தேவைக்குப் பயன்படுகிறது என்கிறதல்லாமல், நகரத்தின் பொதுவாழ்வுக்கு, பூரா இலாபமும் சேர்க்கப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்கு, பொதுநிலைமைக்குப் பயன்படாதா? இந்தப்படி செய்தால் இவைகளின் மூலம் வருகிற வருமானத்தின் மூலமாகவே ஜனங்களிடமிருந்து வரி வசூல் செய்யாமல் காரியங்களை நடத்தலாம். இப்படிச் செய்தால்தான் ஏதோ பயன்படுமே தவிர, சும்மா அவர்களின் வசதிக்கு, 'மைனர் வாழ்வுக்கு' 'இலட்சாதிபதி' 'கோடீஸ்வரன்' என்கிற தன்மைக்குப் போய்க்கொண்டிருந்தால் என்ன பிரயோசனம்?

இன்றைய நிலைமையில் சாதாரணமாக ஒரு ஊரில் வசூலிக்கப்படும் பணத்தின் பெரும் பகுதி—அதாவது விற்பனை வரி, வருமான வரி, மற்றும் இதுபோன்ற வரிகள், பெருத்த பண வருவாய் வரக்கூடியவைகள் எல்லாம் சென்னை சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் போய்விடுகின்றன. இவர்கள் வீட்டு வரியையும், விளக்கு, சாக்கடை வரியையும் வைத்துக்கொண்டு பணம் பற்றாமல், சென்னை சர்க்காரிடம் பல்லைக் காட்டிக், கெஞ்ச வேண்டி இருக்கிறது; அவர்கள் டெல்லி சர்க்காரிடம் பிச்சை கேட்கவேண்டி இருக்கிறது. இதோடு மட்டுமல்ல; பொதுமக்களும் மேற்கண்ட மூன்று பேருக்கு வரி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்புறம் இலஞ்சம், 'மாமூல் வகையரா' இருக்கிறது. இப்படி இருப்பது என்றால், இது எப்படிச் சுதந்திரமுள்ள சுயராஜ்யம் என்று சொல்ல முடியும்? சுயராஜ்யத்தின் பேரால் சிலர் சர்வாதிகாரமாய், தங்கள் வசதிக்கு நடந்துகொள்வது; மற்றவர்கள் வேதனைப்படுவது என்கிற மாதிரி இருப்பது என்றால் என்ன நியாயம்?

மற்றபடி, நகர சபையார் இப்போதுள்ள அளவில் தங்கள் நகரத்தைப் பொறுத்தவரையில் முடிந்த அளவு சமுதாயத் தொண்டு புரியலாம். இன்று ஜனங்களிடத்தில் இருக்கிற மூடக் கொள்கைகள், அறிவுக்கு ஆராய்ச்சிக்கு நிற்காத நினைப்பு–நம்பிக்கை, உயர்வு–தாழ்வு பேதம் இவைகளைப் போக்கி மக்களை அறிவுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் ஆக்கும் சமுதாயத் தொண்டு புரியலாம். இதை அவர்கள் தங்கள் தங்கள் நகர மக்களுக்குச் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அதுதான் இன்று நகர மக்களுக்குத் தேவையானது.

[புதுக்கோட்டையில், 27-10-52-ல் சொற்பொழிவு—'விடுதலை' 31-10-1952; 2-11-1952]

5. கிராமச் சீர்திருத்தம்

1. கிராமச் சீர்திருத்தம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

கிராமம், நகரம் என்ற பேதத்தை முதலில் ஒழிக்க முயற்சிக்க வேண்டும். அந்தப் பேதம் கற்பித்து, கிராம மக்களை நகர வாசிகள் மிக இழிவாக நடத்தி வருகிறார்கள். நான் கேட்கிறேன், சென்னையைவிட ஈரோடு எந்த விதத்தில் குறைந்தது? இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் இருந்து வருகிறது? இரண்டும் தன்மையில் ஒன்றாகத்தான் இருந்து வருகின்றன. தனி சவுகரியங்கள் மட்டும் தனித்தனியாக இருக்கலாம். அது ஜனத்தொகை, பொருளாதார வசதி இவைகளைப் பொறுத்திருப்பது. இதனால் எப்படி ஒன்று மேலாகவும் ஒன்று தாழ்வாகவும் இருக்க முடியும்? அப்படி இழிவாக எண்ணுவதை ஒழிக்க வேண்டும். கிராமங்களை எல்லாம் ஒழித்து நகரமாக்க வேண்டும். நகர மக்களைப்போல் கிராம மக்களையும் சுகமனுபவிக்கச் செய்யவேண்டும். நகரம் போலவே வரிகள் விதித்து, பல திட்டங்கள் வகுத்து, பல சவுகரியங்கள் அனுபவிக்க வழி செய்யவேண்டும். இவற்றைச் செய்யாமல் கிராமங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கூறி வருவதால் ஒருவிதப் பயனும் ஏற்பட்டுவிடாது. நான் இன்னும் கூறுவேன்—'கிராமச் சீர்திருத்தம் என்னும் வார்த்தையே சூழ்ச்சியான வார்த்தை' யென்று! கிராமச் சீர்திருத்தம் என்ற பேரால் இரண்டு மூன்று பேர்கள் கிராமங்களுக்குச் சென்று வீதி கூட்டி—இரண்டொருவருக்கு அரி, வரி என்று எழுத்துப் படிப்பு சொல்லிக்கொடுத்து விடுவதால் கிராமம் சீர்திருத்தமாகிவிடுமா? இவையெல்லாம் கிராமவாசிகளை ஏமாற்றித் தாழ்மையாக்கி இழிவு செய்வதென்றே நான் கருதுகிறேன்.

மற்றும், கிராமம்—நகரம் என்று பிரித்துக் காட்டுவதே வருணாசிரம முறைப்படியே தான். சமதர்மம் பேசுகின்றவர்களே கிராமம்—நகரம் என்ற பிரிவினை இருக்கவேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறார்கள்.

தோழர் காந்தியார் சில வருடங்களுக்கு முன் ஒரு சமஸ்தான கிராம வாசிகள் இடையில் பேசும்போது கீழ்க்கண்டவாறு பேசியுள்ளார்: 'கிராம மக்களாகிய உங்கள் கையில் வெள்ளிக் காசுகள் இருக்கக்கூடாது; நகரத்திலுள்ளவர்களுக்கு ஊழியம் செய்யவே உங்களைக் கடவுள் படைத்திருக்கிறார். ஆதலால், நகரத்திலுள்ள மக்கள் சவுகரியமாக வாழும்படி அவர்களுக்குப் பால், நெய், காய்கறி, செருப்பு ஆகியவைகள் தயார்செய்யும் ஊழியம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.' இதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சிந்தியுங்கள்.

கிராமம் நகரம் என்ற வித்தியாசம் தொழில் முறையாலும் விளையாட்டுமுறையாலும் இருக்கிறது. இம் முறையை மாற்றவேண்டும். இந்த முயற்சியை சர்க்காரே எடுக்க வேண்டும்; இதற்காகப் பணமில்லை என்று கருதவேண்டாம்.

இதற்கு வழி செய்யலாம். திருவிழாக்களால் ஒரு கிராமத்தில் எவ்வளவு செலவாகி வருகிறது! வக்கீல்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் கிராமத்தார் எவ்வளவு அழுகிறார்கள்! அதனால் எவ்வளவு சுகாதாரக் கேடுகள், ஒழுக்கக் கேடுகள், மக்களுக்குப் பண விரயங்கள் ஏற்படுகின்றன! அவைகளைப் போக்க சர்க்கார் வழிகளைச் செய்யவேண்டும். உதாரணமாக, கோட்டை மாரியம்மன் திருவிழாவை எடுத்துக்கொள்ளுங்கள். அதனால் மக்களுக்கு ஏதாவது நன்மை உண்டாகிறதா? இதைவிட விவசாயக் கண்காட்சிகளை ஏற்படுத்தி விவசாயம் செய்யும் விதம், எப்படி—எப்படி விவசாயம் செய்தால் பலன் முன்னேறும்—விவசாயம் பெருகுவதற்கு விவசாயிகள் செய்யவேண்டிய வேலைகள் ஆகியவைகளைப் பற்றி மக்கள் நன்கு உணருமாறு காட்டவேண்டும். அதுபோலவே, சுகாதாரக் கண்காட்சி

களை ஏற்படுத்தவேண்டும். அந்தக் கண்காட்சி மூலம் கிராம மக்கள் எவ்வாறு சுகாதார முறைப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றியும் திருவிழா முதலிய இடங்களில் சுகாதார முறைக்கு விரோதமாக நடப்பதைப்பற்றியும் விளக்கவேண்டும். அதுபோலவே, கூட்டுறவு வியாபார முறைகளால் ஏற்படும் நன்மைகளைப்பற்றியும், அந்த முறையல்லாது—வியாபாரிகள் ஒழுங்கான முறையில் வியாபாரம் செய்யாது மக்களை ஏமாற்றுவதைப்பற்றியும் மக்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். தொழிற் காட்சி வைத்து இயந்திரத் தொழில், கைத்தொழில் முறைகளை விளக்கவேண்டும். இவைகளை சர்க்காரே செய்யவேண்டும். இதனால் வரி உயர்ந்தாலும் மக்கள் கவலைப்படமாட்டார்கள்.

[ஈரோட்டில், 18-9-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 22-9 1940]

2. கிராமங்கள் ஒழிய திட்டம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

நான் 'பழமை', 'வழமை' பெரியோர் கருத்து, சாஸ்திரம், ஆதாரம் என்பவைகளைக் கண்மூடிப் பின்பற்றாத ஒரு பகுத்தறிவுவாதி என்று சொல்லப்படுபவன். நானும் என்னைப் பொதுவாக ஒரு சீர்திருத்த உணர்ச்சி உள்ளவன் என்று உரிமை பாராட்டிக் கொண்டாலும், என்னுடைய சீர்திருத்தம் என்பதானது பழைய அமைப்பு, மத அடிப்படை என்பவைகளைக்கூட இலட்சியம் செய்யாமல், அநேக காரியங்களை அடியோடு அழித்து நிர்மாணிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவன். இதனால் என்னை நாச வேலைக்காரன் என்று பலர் சொல்லும்படியானவனுமாவேன். நாடகத்தில் நகைச்சுவை என்பதின்மூலம் எப்படித் தலைகீழான, வெறுப்பான, பல மாறான கருத்துக்களைக் கண்டு உடல் துடிக்காமல் அவைகளை நகைத்துக்கொண்டு அனுபவிக்கிறோமோ, அதுபோல் நான் சொல்லுவதைச் சற்று கவனமாகக் கேட்டு, நகைச் சுவையாய் அனுபவித்து, வீட்டுக்குச் சென்று நடுநிலையில் இருந்து ஆலோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். ஆத்திரப்படாமல் ஆலோசனையில் இறங்கினால்தான் நல்ல முடிவு கிடைக்கும்.

எனது கிராமச் சீர்திருத்தத் திட்டம் என்பது என்ன என்றால், நாட்டில் கிராமங்களே எங்கும் இல்லாமல் அவற்றை ஒழித்து விடுவதேயாகும். அது மாத்திரமல்லாமல், கிராமங்கள் (Villages) என்கின்ற வார்த்தை அகராதியில் கூட இல்லாதபடி செய்து விடவேண்டும். அரசியலிலும் கூட கிராமம் என்கின்ற வார்த்தை இருக்கக்கூடாது என்றே சொல்லுவேன். கிராமம் என்கின்ற எண்ணத்தையும் பெயரையும் அதற்கு ஏற்ற பாகுபாட்டையும் பாகுபாட்டு முறையையும் வைத்துக்கொண்டு நீங்கள் என்னதான் கிராமச் சீர்திருத்தம் செய்தாலும், 'பறையன், சக்கிலி' என்பவர்கள் எப்படி 'அரிசனன்' ஆனானோ அது போலவும் 'ஆதித் திராவிட'னானானோ அதுபோலவுந்தான் மாற்றம் ஏற்படுமே ஒழிய, பறையன் மற்ற மனிதர்களைப்போல மனிதனானான் என்கின்ற மாற்றம் எப்படி ஏற்படாதோ அது போல, கிராமச் சீர்திருத்தம் செய்யப்படுவதால், 'நல்ல கிராமம் ஆயிற்று' என்றுதான் ஏற்படுமே ஒழிய மற்றபடியான நகரத்தன்மையும், நகர மக்கள் அனுபவிக்கும் உரிமையும் அனுபவிக்க முடியவே முடியாது. ஏனெனில், நகரத்தின் அமைப்பும் அவசியமும் வேறு; கிராமத்தின் அமைப்பும் அவசியமும் வேறு.

எப்படியெனில், கிராமம் என்கின்ற வார்த்தையே இன்று மனித சமுதாயத்தில் எப்படி பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற வருணாசிரம தர்ம முறையில் பஞ்சமன் இருக்கின்றானோ, அது போல்தான் 'ஊர்' தன்மையில்—'ஊர் வரிசை'யில் பஞ்சமன் நிலையில் கிராமம் இருக்கின்றது.

வருணாசிரமத்தின் கருத்து என்ன? ஒருவன் மேல் சாதி, இன்னொருவன் கீழ் சாதி; ஒருவன் பாடுபடுவதற்காக இருக்கவேண்டியவன், மற்றொருவன் சரீரப்பாடு படாமல்

வாழ்வதற்காக இருக்கவேண்டியவன்; ஒருவன் உழைக்க வேண்டியவன், மற்றொருவன் அந்த உழைப்பை அனுபவிக்க வேண்டியவன். இதைத் தவிர, வருணத்தின் தத்துவம் என்ன? உதாரணம் என்னவென்றால், 'முதன் மூன்று வருணத்தார் வாழ்வுக்காக நான்காவது அய்ந்தாவது வருணத்தானைக் கடவுள் சிருஷ்டித்தார்.'

'ஆகையால், நான்காவது அய்ந்தாவது வருணத்தார் முதல் மூன்று வருணத் தாருக்குத் தொண்டு செய்து திருப்தி செய்வதன் மூலம் மோட்சமடைய வேண்டுமே ஒழிய நேரே மோட்சத்தை அடையக் கருதக்கூடாது.'

'நான்காவது அய்ந்தாவது வருணத்தான், பணம் காசு கையிலே வைத்திருந்தால் முதல் வருணத்தார் அவற்றைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொள்ளலாம். முதல் வருணத் தார்தான் படிக்கலாம்; நான்காவது, அய்ந்தாவது வருணத்தார் படிக்கக்கூடாது. படித்தால், உலகம் நடைபெறாது' என்பது போன்ற மனுதர்ம முறைப்படிதானே—அனுபவத்தில், கிராமத்திற்கும் நகரத்திற்கும் 'வருணமுறை ஊர் தர்மம்' இருந்து வருகின்றது! இது உண்மையா, இல்லையா என்று யோசித்துப் பாருங்கள்!

கிராமம் என்றால் என்ன? அதில் பள்ளிக்கூடம் இல்லை; ஆஸ்பத்திரி இல்லை; டிராமா இல்லை; பார்க்கு இல்லை; நீதிஸ்தலம் இல்லை; போலீஸ் காவல் இல்லை; நல்ல ரோடு வசதியில்லை; விளக்கு இல்லை; நல்ல தண்ணீர் இல்லை; உயர்ந்த நாகரிகம் என்பது இல்லை. பெரும்பாலும் வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதைவிட, வாழ்வு ஆசைக்குப் பணம் சம்பாதிக்கும் வசதி இல்லை, ஓய்வு இல்லை; புத்தியைச் செலவழித்து முற்போக்கடைய வழி இல்லை. இப்படி இன்னும் பல வசதிகள் (நகரத்தானுக்கு இருப் பவைகள்) கிராமத்தானுக்கு இல்லை என்பதல்லாமல் கிராமம் என்றால் வேறு என்ன?

ஆனால், 'நகரங்களுக்கு ஆதாரம் கிராமங்கள்தாம்' என்று சொல்லப்படுகின்றது. சொல்லுவது மாத்திரமல்லாமல் கிராமத்தாரின் உழைப்பும், உழைப்பில் ஏற்பட்ட விளை பொருளும், உற்பத்திப் பொருள்களுமே நகரத்தார் அனுபவிக்கவும், நகரத்தார் செல்வவான் களாக ஆகவும், அரசாங்கம் நடக்க வரி கொடுக்கவும், அரசாங்கம், நகரமக்கள் ஆகியவர்கள் மாத்திரமல்லாமல்—கடவுள்கள் கோவில்கள்கூட அங்கிருப்பவர்களும் சேர்ந்து தேவஸ்தான சட்டப்படி ஒழுங்காய்ச் சகல இன்பங்களும் அனுபவிக்கவும் வசதியாக இருந்து வருகின்றன.

உதாரணமாக, லேவாதேவிக்கு வட்டி கொடுத்து வரும் கிராமங்களான—நஞ்சை, புஞ்சை நில வசதிகளுள்ள—நீர்ப்பாசனமும் பருவம் தவறாமல் மழை பெய்யும் கொழுத்த நீர்வசதியும் உள்ள நிலப்பரப்புக்கு மத்தியில் உள்ள கிராமங்களின் நிலைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் பொட்டல் காடு, கானல் காடு, பாலைவனங்கள் ஆகியவைகளில் குடியிருக்கும் லேவாதேவித் தொழிலாளர்களான நாட்டுக்கோட்டையார், மார்வாடிகள் ஆகியவர்கள் வீடுகள் எப்படி இருக்கின்றன? அவர்கள் வாழ்க்கை நிலைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் பாருங்கள்! இதற்குக் காரணம் என்ன? இது வருணாசிரம தர்ம முறையா அல்லவா? யோசித்துப் பாருங்கள்! மற்றும் பாடுபட்ட மிராசுதார், குடியானவன் ஆகியவர்களின் வீடுகள் எப்படி இருக்கின்றன? இவர்களிடம் சரக்கு வாங்கி விற்ற நகர வியாபாரிகள் வீடு, அவர்களது வாழ்வு எப்படி இருக்கின்றன பாருங்கள்.

கிராமத்தானுக்குக் கல்வி இல்லாமல் இருந்தால்தானே—பயிரிட்டு, உழைத்து, அறுத்து, மூட்டையாகத் தைத்து, வண்டியில் போட்டு நகரத்துக்கு அனுப்பிவிட்டு, சாவியாய்ப்போன தானியத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய், கஞ்சியாகக் காய்ச்சி, கலயத்தில் ஊற்றி, பிள்ளை குட்டிகளைச் சுற்றிலும் உட்கார வைத்துக்கொண்டு, 'இன்று, கடவுள் நமக்கு இவ்வளவு கொடுத்தார்' என்று வாழ்த்தப்பாடி, எருமை மாடு தவிட்டுத் தண்ணீர் குடிப்பதுபோல் வயிறுமுட்ட குடிக்க முடியும்! அதோடு அவன் திருப்தியடையவும் முடியும்!

அப்படி இல்லாமல், கிராமத்தானுக்குக் கல்வி கொடுத்து விட்டால், ' நாம் உழைக்கிறோம், நாம் விளைவித்தோம், நாம் உருப்படி பண்ணினோம்; அப்படியிருக்க நாம் கஞ்சி குடிப்பதும்—உழைக்காதவன் தறித்துப் புடைத்து ஆக்கிப் படைத்துக்கொண்டு இப்படித் தொப்பை வெடிக்க அழுக்குவானா?' என்கின்ற எண்ணம் ஏற்பட்டுவிடாதா? அதனால்தான், கிராமம் ஒரு 'பஞ்சமனுடைய' நிலையில் வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையை நிலைக்கவைக்க, 'கிராமச் சீர்திருத்தம்' என்கின்ற பித்தலாட்டப் பெயரை வைத்துக்கொண்டு ஒரு கூட்டம்—அதுவும் வருணாசிரம தர்மத்தில் மேல்படியில் இருப்பவர்கள் சீர்திருத்தக்காரர்களைப் பார்த்து—'கிராமத்திற்குச் செல்லுங்கள்' (Go to the Village!) என்று வாயில் கத்திக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு வியாபாரத் திற்கும் வக்கீல் வேலைக்கும் (கட்சிக்காரர்களைச் சேர்க்கும் நோக்கத்தோடு) கிராமங்களுக்குச் சென்று, விளக்குமாற்றால் (துடைப்பத்தால்) ஒரு வீதியைக் கூட்டிவிட்டு, அதற்கு ஒரு பஜனைப் பாட்டைப் பாடி, ஒரு கூடையில் அக் குப்பையை வாரித் தூக்கிக் கொண்டு போய் நத்தத்தில் கொட்டிவிட்டு, ஒரு சிறு பிரசங்கம்—'இராமாயணத்தில் இராவணக் கொடுமையும், அனுமன் பெருமையும்' பற்றிப் பேசிவிட்டு வந்துவிட்டால், கிராமம் சீர்பட்டு விடுமா என்று யோசித்துப் பாருங்கள்.

கிராமம் என்ற ஒன்று—ஒரு குப்பைக்காடு—எதற்காக இருக்கவேண்டும்? ஆடு, மாடு, எருமை மேய்ப்பதும்; அவைகளைக் காப்பாற்றி பால், தயிர், நெய், மோர் உற்பத்தி செய்வதும் கிராமத்தான். அவ்வளவையும் அனுபவிப்பது நகரத்தான். இதற்கு என்ன ஆதாரம்? கிராமவாசி கிராமத்தில் இரவு 3 மணிக்கு எழுந்து, மாட்டுக்குத் தண்ணீர் வைத்து, கொட்டத்தைக் கூட்டிச் சுத்தம்செய்து, 4 மணிக்குப் பால் கறந்துவிட்டு, கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு, 5 மணிக்குப் புறப்பட்டு—3, 4, 5 மைல் நடந்து 6 மணிக்கு வந்து, நகரத்து மக்களை, 'அய்யா, பால்காரி நான்!' என்று சொல்லிக் கதவைத் தட்டி எழுப்பி விட்டுப் பால் ஊற்றி விட்டுப் போகிறார்கள். தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு பால், நெய் ருசியே தெரியாமல் செய்துவிடுகிறார்கள். இதற்கு 'நகரத்தார்' பணம் கொடுக்கிறார்கள் என்பது உண்மைதான். கிராமத்தான் கையில் கிடைத்த இந்தப் பணம்தான் என்ன ஆகிறது? போலீசுக்கு ஒரு பங்கு; முனிசிபல் சிப்பந்திகளுக்கு ஒரு பங்கு; கள்ளுக் கடைக்கு ஒரு பங்கு போனது போக கனமாக ஏதாவது மீதி இருந்தால் அது வக்கீலுக்கும், அதிகாரிகளுக்கும் போகிறது.

நல்ல பெரிய விவசாயி என்பவனும் கிராமத்தில் இருந்தால் இதுபோல்தான். கிராமத்தான் பாடுபட்டுப் பயிராக்கி, தானியமாக்கி நகரத்துக்குக் கொண்டுவந்தால் நகர வியாபாரி, கிராமத்தானின் பயிர் செலவு, மூட்டுவழிச் செலவுக்குக்கூடப் பத்தும் பத்தாமல் கணக்குப் போட்டு விலை பேசி, ஒன்றுக்கு ஒன்றேகாலாக ஏமாற்றி அளந்து வாங்கிக் கொண்டு, மொத்தக் கிரயத்தை 'தரகு, மகிமை, சாமி காசு, நோட்டு வட்டம், வாசல்காரிக்கு, கலாஸ்காரனுக்கு வெற்றிலைப் பாக்குச் செலவு' என்றெல்லாம் பல செலவுக் கணக்குப் போட்டுப் பிடித்தம் செய்துகொண்டு, மீதி ஏதோ கொஞ்சம் கொடுக்கிறான். பணத்தை மொத்தமாகக் கண்டறியாத கிராம விவசாயி 'தன்மீது கருணை வைத்துக் கடவுள் இவ்வளவு ரூபாய் கைநிறையக் கொடுத்தார்' என்று கருதிக்கொண்டு வாங்கி, துணியில் முடிந்து கொண்டு, காப்பி சாப்பிட்டு சினிமா பார்த்துவிட்டு ஊருக்குப் போகிறான். வியாபாரியோ இந்தச் சரக்கை வாங்கி, இருப்பு வைத்து, அதிக விலை வரும்போது விற்று, இலாபமடைந்து இலட்சாதிபதியாகி, மாடமாளிகை கட்டிக்கொண்டு—கிராமவாசியை வண்டி ஓட்டவும், மாடுமேய்க்கவும் வீட்டு வேலை செய்யவும், உடம்பு பிடிக்கவும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறான்.

சர்க்காருக்கும் கிராமவாசிகள் என்றால் கசாப்புக் கடைக்குப் போகும் ஆடுகள் போலக் காணப்படுகிறார்கள்.

ஆகவே, கிராமம் என்பது தீண்டப்படாத மக்கள் நிலையில்தான் இருந்து வருகின்றது; கிராமத்தார் அல்லாத மற்றவர்களுக்கு உழைப்பதற்கு ஆகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு கிராமத்தை எவ்வளவு சீர்திருத்தினாலும் கிராமம், 'சூத்திரன்—தீண்டப்படாத சாதியான்' நிலையில்தான் இருக்கும்.

எனவே, சமுதாயத்தில் மக்கள் மனிதத் தன்மை பெறவேண்டுமானால் பிராமணன் என்று ஒரு சாதியும், பறையன் என்று ஒரு சாதியும் அடியோடு இல்லாமல், மனிதன் என்கின்ற ஒரு சாதிதான் இருக்கவேண்டும் என்று எப்படிக் கருதுகிறோமோ அதுபோல், ஊர்களிலும் பட்டணம், நகரம் என்று சில ஊர்களும், கிராமம்—குப்பக்காடு என்று பல ஊர்களும் இல்லாமல் பொதுவாக ஊர்கள்தான் இருக்க வேண்டும் என்று ஆக்கப்பட வேண்டும்.

வருணாசிரம தர்மத்தைப் போல்தான் கிராமங்களும் என்பதற்கு மற்றொரு உதாரணம் பாருங்கள்! ஜனத்தொகைப் படி 100-க்கு 90 பேர்கள் நான்காவது அய்ந்தாவது வருணத்தார்கள்; 10 பேர்கள்தான் மேல் வருணத்தார்களாக (முதல் மூன்று வருணத்தார்களாக) இருப்பார்கள். 'அதுபோலத்தான் மொத்த ஊர்களில் 100-க்கு 90-க்குமேற்பட்ட ஊர்கள் கிராமங்களாக இருக்கின்றன. அதாவது, இந்தியா பூராவும் 7 இலட்சம் கிராமங்கள். ஆனால், பட்டணங்கள் நகரங்கள் 75,000 கூட (100-க்கு 10 கூட) இருக்காது.

மற்றும் பார்க்கப்போனால் பட்டணத்தில் உள்ள ஒரு கைவண்டி இழுப்பவன், ஒரு கோர்ட்டு பியூன், ஒரு பிச்சை எடுக்கும் புரோகிதன், மணியாட்டும் அர்ச்சகன், ஆகிய இவர்கள் பிள்ளைகள்—S.S L C., B.A., இஞ்சினியர், டாக்டர், I.C S. கூடப் படிக்க முடிகின்றது. ஆனால், கிராமத்தில் 100 ஏக்கரா, 200 ஏக்கரா உள்ள குடியானவன் மகன்கூட எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமானால்—வரும்படியில் பகுதி செலவாகிறது. ஏழைக் குடியானவன் மகனுக்கு நடக்கத் தெரிந்ததும், மாடு மேய்க்கவேண்டியதாகத்தான் முடிகிறது. பட்டணங்களில் இருப்பதால் ஒரு கக்கூசு எடுப்பவர், வீதி கூட்டுபவர் குழந்தையும் கட்டாயமாகப் படித்து ஆகவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடும்; இலவசப் பள்ளியும் வைக்கும். ஆனால், கிராமத்தான் தன் மகனைப் படிப்பிக்க நகரத்துக்கு அனுப்பவேண்டும். அங்கு மேற்பார்வை இல்லாமல் சிகரெட்டு, பீடி, 'டாடி', 'பிராண்டி' குடித்து நாசமாக வேண்டும்—இதற்கு அர்த்தம் என்ன?

இவ்வளவு சங்கதிகள் ஏன்? ரேஷனை எடுத்துக்கொள்ளுங்கள். பட்டணத்திலே இருப்பவர்கள், கடவுள்களுக்கு நாட்டுக்கோட்டையார் படி அளப்பதுபோல், ஆளுக்கு இவ்வளவு என்று சர்க்காரால் அளவு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தாருக்கு, அதுவும் தானியங்களை உற்பத்தி செய்யும் கிராமத்தார்களுக்கு ரேஷன், 'கடவுளிடம்தான்' ஒப்படைக்கப்பட்டு விட்டது. 'கடவுள்'தான் அவர்களுக்குப் படி அளக்கவேண்டும்; அதாவது, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி நகரத்தானிடம் திருட்டுத்தனமாய் வாங்கிக் கொண்டு போகிறார்கள். பாடுபட்டு விளைவித்ததைக் கொண்டுவந்து வியாபாரியிடம் கொடுத்துவிட்டு—அதுவும் திருட்டுத்தனமாக வாங்கிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது.

மேலும், நகர வாழ்க்கை—நகரத்தில் இருந்தால் 100-க்குத் 90-க்கு மேம்பட்ட மக்களுக்கு உடலுழைப்பு இல்லாத சுகவாழ்வு வாழமுடிகின்றது. கிராம வாழ்வு—கிராமத்தில் இருந்தால் 100-க்கு 90 பேர் உடலுழைப்பு வேலையே செய்தாக வேண்டும். அவர்களுக்குள் ஒரு சிறு தகராறு, சண்டை விவகாரம் ஏற்பட்டாலும், விவகாரப் பெறுமானத்தை விட அதிகமாகச் செலவு செய்து, நகரத்துக்குப் பல தடவைகள் நடந்து, நீதி பெற வேண்டும். இதன் பயனாய் போக்கிரிக்கும் செல்வவானுக்கும் அடங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

தந்தை பெரியார் அவர்களுடன், தமிழகக் கல்வி அமைச்சர் டாக்டர் வி. ஆர். நெடுஞ்செழியன். (1973)

தந்தை பெரியார் அவர்களுடன்—இந்நூல் வெளிவரத் துணைபுரிந்த அமைச்சர் திரு. என். வி. நடராசன்.
(நவம்பர்–1973)

விவசாயம் 200 வருஷ காலத்திற்கு முன் இருந்த மாதிரிதான் இன்றும் இருக்கின்றது. அதில் நீர்ப் பாய்ச்சல் வசதி, நீர் நிலை, தேக்கம் ஆகியவை ஏற்பட்டு சில நிலங்களுக்குப் புதிதாய் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது என்பதல்லாமல்—விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. சர்க்காரின் விவசாய இலாக்காவானது சில பேருக்கு உத்தியோகத்தைத்தான் கொடுத்தது; அதுவும் விவசாயத்தைத் தொழிலாகக் கொள்ளாத பரம்பரைக்கே பெரிதும் உத்தியோகமாய் முடிந்தது என்பதல்லாமல் மற்றபடி விளைபொருளில் மாறுதல் இல்லை. விளைவு அளவில் கூடுதல் இல்லை; விவசாய முறையில் மாற்றம் இல்லை; விவசாயிகள் விளைபொருளின் சரியான விலையை அனுபவிக்க வழியில்லை; விவசாயி விவசாய ஞானம் பெற வழியில்லை. விவசாயிகள் விஷயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்ட மற்ற முயற்சி என்ன என்று பார்ப்போமானால், மேல்நாட்டாரைப்போல் இந்நாட்டு விவசாயிகள் எல்லோரும் படித்த மக்கள் என்று கருதிக்கொண்டு, அவர்களுக்கு அறிவுறுத்தத் துண்டுப் பிரசுரம் மூலம் சில முறைகள் கையாண்டார்கள் என்பதைத் தவிர, அவர்கள் பெரும்பாலோர் படிப்பும் நாகரிகமும் இல்லாதவர்களாகப் பட்டணங்களுக்கு வெகு தூரத்தில் இருக்கிற—நாகரிகமும், பகுத்தறிவும் அற்ற மக்கள் என்கின்ற எண்ணமே இல்லாமல் அவர்களுக்கு நலம் செய்யும் வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

உண்மையில் கிராமங்களைச் சீர்திருத்த வேண்டுமானால் நான் சொல்லப்போகும் முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயம் உடலுழைப்பில் நடைபெறுவதை மாற்றி, அதை ஒரு தொழில் முறையாக, அதுவும் இயந்திரத் தொழில் முறையாக (Industrial) ஆக்கிவிட வேண்டும்.

உழுவதும், விதைப்பதும், அறுப்பதும், இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். கிணறு வெட்டுவதும், தண்ணீர் இறைப்பதும் பாய்ச்சுவதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும்.

அந்த அளவுக்குப் பூமிகளைத் திருத்தி இணைக்கவேண்டும்; அதற்குப் பயன்படாத பூமியைத் தனிப்படுத்தி அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியம் இல்லாத பயிர் செய்ய வேண்டும்.

விளைபொருளால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகளால் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு, அந்தப் பயன் விவசாயிகளுக்கே கிடைக்கவேண்டும்.

பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி, அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க்கு, சினிமா, டிராமா, தமாஷ் அறை, வாசகசாலை, ரேடியோ ஒலிபெருக்கி நிலையம், நல்ல ரோடு, கால அளவுப்படி போக்குவரத்துள்ள பஸ் ஸ்டாண்டு, போலீஸ் ஸ்டேஷன், நன்றாய்ப் படித்த ஒரு நீதிபதி, சகல சாமான்களும் கிடைக்கத் தக்க கடைகள் ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டும்.

இயங்கும்படியான (சுற்றுப்பிரயாண) கண்காட்சிச் சாலைகள் அடிக்கடி பற்பல விதங்களில் ஊர்கள்தோறும் சுற்றிச்சுற்றி வரும்படியாகவும் ஆன காரியங்கள் செய்ய வேண்டும்.

ஆங்காங்கு அப்பீல் கோர்ட்டுகள், குறை தெரியும் அதிகாரிகள் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு வாராவாரம் முகாம் போடவும் ஆன ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதோடுகூடவே அந்த இடங்களில் அவற்றிற்குத் தகுந்தபடி இயந்திரத்தால் செய்யப்படும் சிறுசிறு தொழிற்சாலைகளை நிறுவி, அவர்கள் வேறு ஊருக்குப் பிழைப்புக்குப் போகாதபடி பிழைப்பு ஏற்படுத்த வேண்டும்.

கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பக்காட்டான் என்கின்ற பெயர் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்கவேண்டும்? அதுவும் பாடுபட்டு உழைக்கும் மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்! ஆதலால், அப் பெயர்கள் இல்லாமல் செய்யப்பட்டுவிட வேண்டும்.

மேல்நாடுகளில் பெரும்பான்மைக் கிராமங்கள் நான் விரும்புகின்ற முறைப்படிதான் இருக்கின்றன. அய்ரோப்பாவில் கிராமங்கள் என்ற நிலை இல்லவே இல்லை. இருந்த போதிலும், அது அந்த இடத்திற்கு ஏற்ற வாழ்வாய் இருக்கலாமே தவிர, 'பிராமணனுக்குத் தொண்டு செய்வதற்கே கடவுள் சூத்திரர்களை, பஞ்சமனைப் படைத்தார் என்பது போல, 'நகரத்தார்கள் நல்வாழ்வு வாழ்வதற்கே கிராமங்கள் ஏற்பட்டன' என்கின்ற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்று இரண்டு கிராமங்கள் இருந்தபோதிலும் இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லுவேன்.

அப்படியானால், விவசாயம் யார் செய்வது, யார் பூமியைப் பயிர் செய்வது என்று கேட்கப்படலாம். இது, 'கக்கூசு' எடுக்கும் சக்கிலி, பறையர், ஒட்டர் என்பவர்களுக்குப் படிப்புக் கொடுத்து மேன்மக்களாக ஆக்கிவிட்டால், கக்கூசு எடுப்பவர்கள் யார் என்று கேட்பதுபோலக் கேட்கப்படுவதாகும். அதற்கு எனது பதில், 'அந்தத் தொழில்களை நாம் எல்லோரும் (எல்லா இடத்தில் உள்ளவர்களும்) விகிதாசாரம் பங்கு போட்டுக்கொண்டு செய்யவேண்டும்' என்பதுதான்.

கீழான தொழில், ஈனமான தொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிகமாகவும் பயன் மிக்க அற்பமாகவும், குறையாகவும், வாழ்வில் இழிவாகவும் இருக்கும்படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். அதுதான் நாட்டு முன்னேற்றமாகும்.

கப்பல் கட்டி எவனோ ஒருவன் கோடீஸ்வரனாவது முன்னேற்றமாகாது. எங்கேயோ ஒரு இரும்புத் தொழிற்சாலை வைத்து யாரோ கோடீஸ்வரனானால் நாட்டுக்கு முன்னேற்றமாகாது.

நான் கூறுகின்ற முன்னேற்றம் செய்ய முடியவில்லையானால்—அதற்கு, அதாவது அப்படிப்பட்ட இழிவான, கீழான, பிரயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக இலாபமும், சலுகையும், மேன்மையும் இருக்கும்படியான பிரதி பலன் அடையச் செய்யவேண்டும். இரசாயன முறை, விஞ்ஞான முறை, இயந்திர முறை முதலியவைகளைக் கையாண்டு— அவைகளைக் கிராமங்கள் என்பவைகளில் இருந்து தொடங்குவோமேயானால் இந்தப் பிரச்சினைகள் சுலபத்தில் தீர்ந்துவிடும். கிராமம் என்கின்ற பெயரும் நிலையும் தானாக மாறிவிடும்.

இதைப் பொதுவுடமை என்றோ, சமதர்மம் என்றோ முட்டாள்தனமாய்க் கருதாமல், முற்போக்கு என்ற முறையில் சிந்தித்தால்தான் இதில் உள்ள நியாயமும் உண்மையும் விளங்கும்.

[ஈரோட்டில், 30-10-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-11-1944]

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

2

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shrr¡ erd; (09-06-2011)
jkpHk;tiy (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

வே. ஆனைமுத்து

[illegible]
இணைய தளத்தில் வைக்க இந்
நூலை அளிக்கிறோம்.
[illegible]
5-6-2011.
தலைவர்.

வெளியீடு:
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (இரண்டாம் தொகுதி)
முதற் பதிப்பு, வெளியீடு 1–7–1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME II

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume II
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

பகுதி III

வகுப்புரிமை

1. வகுப்புரிமை

1. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புவாரி உரிமைபற்றிக் கொஞ்ச காலத்துக்கு முன்பு நமது 16-8-1925 'குடி அரசு' இதழில், 'சித்திர புத்திரன்' எழுதிய ஒரு கட்டுரையை வாசகர்கள் பார்த்து இருக்கலாம். இன்று நடக்கப்போகும் காஞ்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் வருகிறதாய்த் தெரிகின்றபடியால், அதன் அவசியத்தைப்பற்றி வாசகர்கள் மறுபடியும் அறியுமாறு சில வாக்கியங்கள் எழுதுகின்றோம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு தேசத்தின், ஆட்சியின் பொது உரிமையும், அந் நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும் எல்லா வகுப்பாரும் ஏற்றத் தாழ்வின்றி சமமாய் அடையவேண்டியதென்பதுதான். இதை அரசாங்கத்தாரும் குடிமக்களுக்குச் சரியாய் வழங்குவதாய் 1840-ம் வருடத்திலேயே ஒப்புக்கொண்டு (போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 125 மூலமாய்) வெளியிட்டிருக்கிறார்கள். ஆதலால், இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் ஏற்பட்டதன் பிறகோ, சீர்திருத்தங்கள் ஏற்பட்டதன் பிறகோ. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற பேச்சு பிறந்ததல்ல. ஆனால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டால் யாருடைய செல்வாக்கும், போகங்களும், ஆதிக்கங்களும் குறைந்துவிடுமோ, அவர்கள் வசமே அரசாங்கத்தின் ஆதிக்கமிருந்து, அவர்களே அனுபவித்துக்கொண்டே வந்ததினால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமென்பது சர்க்கார் உத்தரவளவிலும், காகித அளவிலும் நின்றுபோய்விட்டது. அதன் பலனாய் பிரிவுகளும், வேற்றுமைகளும், துவேஷங்களும், தந்திரங்களும், பகைமைகளும் வளர்ந்துகொண்டே வந்து, இப்போது அதுகள் பலனளிக்க ஆரம்பித்திருக்கின்றன. ஆரம்பித்து இருக்கும் முறையைப் பார்த்தால் இதனுடைய முடிவு என்னவாகுமோ என்று எண்ணுகிறபோது பயமாகவே இருக்கிறது.

இந்தியா ஒழிந்த மற்ற நாடுகளுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக அவசியம் இல்லாதபோதிலும் சிற்சில இடங்களில் தொகுதிகள் பேராலும், வகுப்புக்களின் பேராலும் இருந்துகொண்டுதான் வருகிறது. குடியேற்ற நாடுகளிலும் இவ்வழக்கம் இருந்துகொண்டு தான் வருகிறது. நமது நாட்டில் சிலர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வந்தால் ஜனங்களைப் பிரித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டில் முகம்மதியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டதின் பிறகு என்ன பிரிவினை புதியதாய் ஏற்பட்டுப்போய்விட்டது? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 150 வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் தீண்டாதாராகிய ஏழு கோடி மக்களுக்கு இராஜீய வாழ்வில் சுதந்திரம் பெற யோக்கியதையில்லையென்றுதானே சொல்லவேண்டி இருக்கிறது. அதன் பலனாய் அவர்கள் அத்தனை பேரும் அரசாங்கத்தைத்தானே நத்திக்கொண்டிருக்க வேண்டியதாய்ப் போய்விட்டது.

பிராமணரல்லாதார் என்னும் 24 கோடி இந்துக்கள் இராஜீய வாழ்வில் சம உரிமை பெறுவதற்கில்லாமல், பிற்போக்கான வகுப்பில் சேர்க்கப்பட்டு அரசாங்கத்தாரையும், பிராமணர்களையும் நத்திக்கொண்டிருதானே இருக்கவேண்டியதாய்ப் போய்விட்டது; இதற்குக் காரணமென்ன? பிறவியிலேயே அவர்களுக்கு இவ்வுரிமையைப் பெற யோக்கியதை இல்லாததா? அல்லது, அவர்கள் இவ்வுரிமை பெறவொட்டாமல் உயர் பதவியிலிருக்கிறவர்கள் தங்கள் செல்வாக்கால் கொடுமைப்படுத்தி முன்னேறவொட்டாமல் அடக்கி வைத்திருப்பதா? குறைந்தது 50 வருடங்கட்கு முன்புவரை பிராமணரல்லாதாருக்கும் தீண்டாதா

ரென்போருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தால் இன்றைய தினம் இவர்களிருவரின் நிலைமையும் இப்படியிருக்குமா? ஸ்ரீமான்களான பி. என். சர்மாவுக்கும், சி. பி. இராமசாமி அய்யருக்கும் கொடுத்திருக்கும் உத்தியோகங்களை ஸ்ரீமான்களான எம். சி. இராஜாவுக்கும், ஆர். வீரய்யனுக்கும் கொடுத்தால் பார்க்கமாட்டார்களா? சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் இருக்கும் உத்தியோகத்தில் ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் இருந்தால் பாலக்காடு தெருவில் நடக்க 144 ஏற்பட்டிருக்குமா? கோயிலுக்குப் போனதற்காகத் தண்டனை அடைந்திருக்க முடியுமா? என்ன காரணத்தால் இவர்களுக்கு அந்த உத்தியோகம் கிடைக்காமல் போய்விட்டது? யோக்யதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா? ஜனாப் சர். முகமது அபிபுல்லா சாயபுக்கும், டாக்டர் முகமது உஸ்மான் சாயபு அவர்கட்கும் 5000, 6000 சம்பளம் கிடைக்கக்கூடிய பதவிகள் எப்படிக் கிடைத்தது? இப்பொழுதுதான் அந்த ஸ்தானத்திற்கு அவர்கள் யோக்யதை உடையவர்களாகிவிட்டார்கள் என்கிற காரணத்தாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையின் வாசனையினாலா? இவற்றைப் பொதுமக்கள் சிந்தித்துப் பார்த்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பார்கள் என்று கருதப்பட்டவர்களுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் எப்படிச் சமத்துவம் ஏற்படும் என்பதை அறிவார்கள். இப்போது பிற்பட்ட வகுப்பார் என்று அழைக்கிற வகுப்பாரெல்லாம், பிரிட்டிஷார் நம் நாட்டுக்கு வரும்போது பிற்பட்ட வகுப்பாராகவா இருந்தார்கள்? பல பிராமணர்கள் அரசாங்கத்திற்கு அனுகூலமாயிருந்ததாலும் மற்றவர்கள் அப்படியில்லாததாலும் அரசாங்கத்தார் பிராமணர்களுக்கே சகல சவுகரியமும் உரிமையும் கொடுத்ததனால் பிராமணர்கள் முற்பட்ட வகுப்பாராகவும் பிராமணரல்லாதவர்கள் பிற்பட்ட வகுப்பார்களாகவும் ஏற்பட்டுப் போய்விட்டது.

இந்தப் பிற்பட்ட வகுப்பார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் வேறு எந்த வழியில் முற்பட்டவர்கள் ஆகக்கூடும்? இப்போது அவர்களுக்குப் புத்தி இல்லையா? சக்தியில்லையா? கல்வியில்லையா? ஏன் தங்கள் தொகைக்குத் தகுந்த உரிமை அடையாதிருக்கிறார்கள்? இந்தியர்கள் அனேக சாதியார்கள்; நாள் போகப்போக உரிமை வளர்ந்து கொண்டே போகும்; பிறகு எத்தனை பேருக்குக் கொடுப்பது? என்று சிலர் பேசுவார்கள். ஆனால், தற்காலம் அரசாங்கத்தில் தென்னாட்டில் அய்ரோப்பியர் ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர், முகமதியர், பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் என இவ்வெட்டு வகையாய்த்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் அய்ரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர், முகமதியர் இவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தாய்விட்டது. இவர் நீங்கிய மற்றவர்களான பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் என மூன்று வகுப்பாரையும் முகமதியரல்லாதார் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு மாத்திரம் வகுப்புவாரிப் பிரதிநிதித்தும் வழங்கப்படாமலிருக்கிறது. இம்மூன்று வகுப்பாருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்ட பிறகு, மறுபடியும் உள்வகுப்புக்கள் ஏற்படுமே என்கிற பயமிருக்குமானால் அதற்கும் நாம் தயாராயிருக்கவேண்டியதுதான். உத்தியோகங்களுக்குப் பெருத்த சம்பளங்கள் கொடுப்பதை நிறுத்திக் கொண்டோமேயானால் எத்தனை வகுப்புக்களுக்கு வேண்டுமானாலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் நமக்குக் கஷ்டம் ஏற்படாது. மேல் நாடுகளில் பார்லிமெண்ட் முதலிய சபைகளுக்கு 500, 1000 என்கின்ற கணக்குள்ள மெம்பர்கள் இருந்து காரியம் நடத்தவில்லையா? அது செய்வது நமக்குக் கஷ்டமே இருக்காது. சண்டை வருவதெல்லாம் பெரும் சம்பளத்தை உத்தேசித்துத்தானே? சம்பளமில்லாத அதிகாரத்தை அனேகமாய் எல்லோரும் விரும்பமாட்டார்கள். ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளமாட்டார்கள்; ஒருவரைக் கெடுக்க ஒருவர் தந்திரங்கள் செய்யமாட்டார்கள். தேசம் நம்முடையது என்கின்ற எண்ணமும் தேசத்தின் பொது நலத்திற்கு எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும் என்ற எண்ணமும் தானாகவே ஏற்படும். இப்போது ஜனங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் ஒழியும். சர்க்காரும்

ஒருவரைவிட்டு ஒருவரைக் கொடுமைப்படுத்தச் சொல்லமுடியாது. ஆதலால், தேச நலத்திலும், சமூக நலத்திலும் அக்கறையுள்ளவர்கள் காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்புவாரித் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுகிறோம்.

['குடிஅரசு'–அறிக்கை—22-11-1925]

2. ஆதி முதற்கொண்டே சூழ்ச்சி

காஞ்சிபுரம் மாநாடு நடந்து 2 வாரங்களாகிவிட்டது. மாநாட்டின் சம்பவங்களும் பழைய கதைகளாகி விட்டன. ஆனால், அம் மாநாட்டின் சம்பவங்களால் ஒவ்வொரு நிமிஷமும் புதிய எண்ணங்களே தோன்றிக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ராஜீய நாடகத்தில் பிராமணரல்லாதார்களின் சார்பாக, ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கலியாணசுந்தர முதலியார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஆகிய இம்மூவர்களின் வேஷமும், விளம்பரங்களுந்தான் அடிக்கடி விசேஷமாய்த் தோன்றும். இம் மூவர்கள்தான் காங்கிரசில் பிராமணரல்லாதாருக்கு உள்ள பற்றுதலுக்கும், காங்கிரசைப் பிராமணரல்லாதார் ஆமோதிக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்.

அது மாத்திரமல்லாமல், காங்கிரஸ் என்பது பிராமண ராஜ்யம் ஸ்தாபிக்கத்தகுந்த சாதனம் என்றும், சுயஆட்சி என்பது பிராமண ஆட்சிதான் என்றும் கருதிய பெரியார்களான டாக்டர் டி. எம். நாயர், ஸர். பி தியாகராயச் செட்டியார் போன்ற தேசாபிமானமும், அனுபவமும் வாய்ந்த பல பெரியோர்களால் சொல்லி, காங்கிரசை ஒதுக்கி, தென்னிந்திய மக்கள் நலவுரிமைச் சங்கம் என்பதாக ஓர் சங்கத்தைக் கண்டு, அதன்மூலமாய் பிராமணரல்லாதார் நன்மைக்கென ஜஸ்டிஸ், திராவிடன் என்கிற இரண்டு பத்திரிகைகளையும் தோற்றி, தீவிரப் பிரச்சாரங்களைச் செய்து, அதுகாலையில் பிராமணர்கள் வயப்பட்டுக்கிடந்த பெருவாரியான பல அதிகாரங்களையும், பதவிகளையும் பிராமணரல்லாதார் தங்கள் உரிமைக்குத் தகுந்த அளவு அடையவேண்டும் எனக் கருதிப் பிரச்சாரமும் தொடங்கினார்கள்.

அச்சமயத்தில், மேற்படி சங்கமும் பிரச்சாரங்களும், தென்னிந்திய மக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், ஏதோ சிலர் அரசாங்கத்தின் வயப்பட்டு அவர்கள் தூண்டுகோலால் நடைபெறுகிற சங்கமென்றும், இதில் பிராமணரல்லாதார் கலந்து கொள்ளக்கூடாதென்றும், தென்னிந்திய பிராமணரல்லாத மக்களுக்கு நன்மை செய்யவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை அளிக்கவும் சென்னை மாகாணச் சங்கமென்பதாக ஒரு சங்கத்தைத் தோற்றுவித்திருக்கிறோம்; அதில் பிராமணர்கள் யாரும் கலப்பில்லை. அதன் தத்துவமே காங்கிரஸ் மூலமாகச் சுயராஜ்யம் பெறுவதும், பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதும்தான் முக்கியமானது என்றும். அதின் அக்ராசனாதிபதி திவான் பகதூர் பி. கேசவப் பிள்ளையாகவும், உப அக்ராசனாதிபதி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோராகவும், காரியதரிசி ஸ்ரீமான் டாக்டர் பி. வரதாராஜுலு நாயுடு அவர்களாகவும், இதற்குப் பிரச்சாரப் பத்திரிகைகள் 'இந்தியன் பேட்ரியட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் 'தேசபக்தன்' என்கிற தமிழ்ப் பத்திரிகையையும், இவற்றிற்கு திவான்பகதூர் சி. கருணாகர மேனன், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியவர்கள் முறையே பத்திரிகை ஆசிரியர்களாகவும் இருந்து நடத்தி வரப்பட்டதோடு, இதன் பலனால் ஜஸ்டிஸ் கட்சிக்குப் பிராமணரல்லாத பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்கில்லாமல் செய்ததுடன், காங்கிரஸ்தான் தேச விடுதலைக்குச் சாதனமென்றும், சென்னை மாகாணச் சங்கம்தான் பிராமணரல்லாதாரின் நன்மையைக் கருதக்கூடியதென்றும் சென்னை மாகாணத்திலுள்ள பிராமணரல்லாத மேற்கண்ட முக்கியஸ்தர்கள்தாம் தென்னாட்டுப் பிராமணரல்லாதார் பிரதிநிதிகளென்றும் சன்னது கிடைத்தாய் விட்டது.

இதோடு மாத்திரமல்லாமல், தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரும் சென்னை மாகாணச் சங்கத்தாரும் போட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கூச்சல்களினால், கிறிஸ்தவர், முகமதியர், ஆங்கிலோ இந்தியர் முதலிய வகுப்பாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், விவசாயிகள், லேவாதேவிக்காரர், இந்திய வியாபாரிகள், அய்ரோப்பிய வியாபாரிகள் முதலிய தொழிலாளிகளுக்குத் தொழில்வாரிப் பிரதிநிதித்துவமும், தேர்தல்களில் கொடுக்கப்பட்டதோடல்லாமல், பிராமணரல்லாதாருக்கெனப் பல ஸ்தானங்களையும் ஒதுக்கி வைக்கப்பட அரசாங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது இப்படி இருக்க, ராஜீய சபைகளான காங்கிரஸ் முதலிய சபைகளிலும் முகமதியர், கிறிஸ்தவர் முதலியோருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று அவர்களோடு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. இதுமாத்திரமேயல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும், உதாரணமாக, எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம்; கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம்; தீண்டாதாருக்கு இத்தனை ஸ்தானம்; இவை நீங்கிய மற்றவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என மாகாண வாரியாக ஒதுக்கிவைக்கப்பட்டு, அந்தப்படி இப்பொழுது காங்கிரசிலும் அமுலில் நடந்து வருகிறது. இவ்வளவிருந்தும் மேலும் மேலும் இவை போதாதென்றும் இன்னும் சில ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டுமென்றும் ராஜீய காங்கிரசிலும், கான்பரன்ஸ்களிலும் கிளர்ச்சிகளும், முயற்சிகளும் செய்துகொண்டே வரப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, காக்கிநாடா காங்கிரசில் ஸ்ரீமான் தாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்ட 'கல்கத்தா பேக்டி'னாலும், (அது தோற்றத்திற்கும் ஒரு காரணம் உண்டு; ஆனால் இரகசியம்) டாக்டர் அன்ஸாரி, லாலா லஜபதிராய் முதலியோர்களை இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிகாண ஓர் ஏற்பாடு கண்டுபிடிக்கும்படி காக்கிநாடா காங்கிரசில் ஏற்படுத்திய கமிட்டியினாலும், அதன் குறிப்புகளினாலும் நன்றாய் விளங்கும்.

இன்னமும் தமிழ்நாட்டில் நடந்த மாகாண கான்பரஸ்களின் போதெல்லாம் நடந்த பிராமணரல்லாத தனிக் கூட்டங்களாலும் நன்றாய் விளக்கலாம். அதாவது:—

1919-ம் வருடத்தில் திருச்சியில் நடைபெற்ற 25-வது ராஜீய மாகாண கான்பரன்சின் போது, அதே கொட்டகையில் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரின் அக்கிராசனத்தின்கீழ் இதைப்பற்றிப் பேசி, ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தை நடத்தவேண்டுமென்றும், அதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு, அதுபோலவே தீர்மானமும் நிறைவேற்றியுமிருக்கிறது.

1920-ம் வருடம் திருநெல்வேலியில் நடந்த 26-வது ராஜீய மாகாண கான்பரன்சின் போது பிரதிநிதிகள் சாப்பாட்டு விடுதியில் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கருடைய அக்கிராசனத்தின்கீழ் 'பிராமணரல்லாதார் கூட்டம்' ஒன்று கூடி, 'சட்டசபைகள் முதலிய தேர்தல் ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவதோடு, அரசாங்க உத்தியோகத்திலும் வகுப்பு ஜனசங்கைக்குத் தகுந்தபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்கிற தீர்மானத்தைக் காலஞ் சென்ற ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை, ஸ்ரீமான்கள் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை மற்றும் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலிய ஸ்தலங்களிலுள்ள சில வக்கீல்களும் ஆகச் சேர்ந்து, உடனே விஷயாலோசனைக் கமிட்டிக்கு அனுப்பிய அத் தீர்மானத்தை—ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர் பிரேரேபிக்க, ஸ்ரீமான்கள் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, தண்டபாணி பிள்ளை முதலியோர்கள் ஆமோதிக்க, காலஞ் சென்ற ஸ்ரீமான் எஸ். கஸ்தூரி ரெங்கய்யர் எழுந்து விதாசாரம் (Percentage) என்கிற

வார்த்தைக்குப் பதிலாக 'போதுமான' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத்தகுந்த (Adequately) 'அடிகுவேட்லி' என்கிற பதத்தைப் போட்டுக்கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரேபணை கொண்டுவந்தார். இந்த 'அடிகுவேட்லி' என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் அம் மாநாட்டுக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தந்தான்; ஆனால் பெர்சன்டேஜ் என்பதைவிட அடிகுவேட்லி என்பது நல்ல வார்த்தையென்று சொல்லித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்.

இது சமயம் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும் அக்கூட்டத்தில் ஆஜராகித்தானிருந்தார்கள். அதோடு, இராஜாங்கக் கல்வித் துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும், செய்முறையும் தமிழ்க் கல்விக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் வி. ஒ. சிதம்பரம் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனால், விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து ஸ்ரீமான் ஈ. வே. இராமசாமி நாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக்கண்டு 'அடிகுவேட்லி' என்பதற்கும் 'பெர்சன்டேஜ்' என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது, அவர்கள் அடிகுவேட்லி என்பது இருபொருள் கொண்டதென்றும் அதாவது, 'யோக்கியதைக்குத் தகுந்த' என்ற பொருள்கூடக் கொள்ளலாமென்றும் பெர்சன்டேஜ் என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன்னார்கள். பிறகு மாநாட்டில் இத்தீர்மானம் வரும்போது பெர்சன்டேஜ் என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ள வேண்டுமென்று, ஸ்ரீமான்கள் நாயக்கரும், தண்டபாணி பிள்ளையும் அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டார். கடைசியாக மாநாட்டில் இது தவிர மற்ற தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்ராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்துவிட்டார். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை தன்னுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்கிராசனரைக் கூட்டத்தில் கேட்டார். அக்கிராசனர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமானதால் அதை ஒழுங்கு தவறானதென்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டார். உடனே ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை எழுந்து விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத் தவறு என்று கேட்டார். அப்போது அங்கிருந்த பிராமணர்கள் ஸ்ரீமான் பிள்ளையை உட்காரும்படி கூச்சல்போட்டு அடக்கி விட்டார்கள். கடைசியாக முடிவுரையில் ஸ்ரீமான் அய்யங்கார் காஞ்சி மாநாட்டில் ஸ்ரீமான் முதலியாரைக் கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னது போல் வருத்தப்படுவதாகப் பொய் வேஷம் போட்டு மறைத்து விட்டார்.

பின்னர் 1921-ம் வருஷம் தஞ்சையில் நடந்த 27-வது தமிழ் மாகாண மாநாட்டில் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதிகள் கொட்டகையில் ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் அக்கிராசனத்தில் தமிழ்நாடு பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்றுகூடி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசி, ஸ்ரீமான்கள் சென்னை சிங்காரவேலு செட்டியார், கலியாண சுந்தர முதலியார், சர்க்கரைச் செட்டியார், வரதராஜுலு நாயுடு, இராமசாமி நாயக்கர் ஆகியவர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு வேண்டிய வேலை செய்யவும் ஜஸ்டிஸ் கட்சிக்குப் போட்டியாய் ஆரம்பித்த சென்னை மாகாண மாநாட்டைக் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

1923ஆம் வருஷம் திருப்பூரில் கூடிய 28-வது மாகாண மாநாட்டிலும் நாடார்கள் முதலியோர்க்கு ஆலயப் பிரவேசம் கொடுக்கவேண்டும் என்றும், அதற்கு விரோதமான சாஸ்திரங்களையும் பழைய ஆசார வழக்கங்களையும் மாற்றவேண்டும் என்றும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு விஷயாலோசனைக் கூட்டத்தில் தீர்மானமானதை வெளி. மாநாட்டில் பிரேரேபிக்க முடியாதபடி பல பிராமணர்கள் செய்தும்

கடைசியாக பெரிய தகராறின் பேரில் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார் பிரேரேபிக்க ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஆமோதிக்க அதன்பேரில் ஸ்ரீமான்கள் எஸ். சத்திய மூர்த்தி, மதுரை ஏ. வைத்தியநாதய்யர், கும்பகோணம் பந்துலுவய்யர் முதலியோர் ஆட்சேபித்து கூச்சல்களையும், கலகத்தையும் உண்டாக்கி, எப்படியோ அத் தீர்மானத்தை அப்படியே ஓட்டுக்கு விடாமல், அதன் ஜீவநாடியை எடுத்துவிட்டு, ஒரு சொத்தைத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதுசமயம், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு 'மதில்மேல் பூனை போலவே நடந்து கொண்டார்' என்கிற பழியும் வந்தது.

1923-ம் வருஷத்திய மதுரை இராமநாதபுரம் மாநாட்டிலும் பிராமணர்-பிராமண ரல்லாதார் தகராறு ஏற்பட்டது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் இதில் சிக்கிக்கொண்டு வெகு பாடுபட்டார்.

பிறகு 1923-ம் வருஷத்தில் திருச்சியில் டாக்டர் இராஜன் வீட்டில் கூட்டிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாய் ஸ்ரீமான். பி. வரதராஜுலு நாயுடு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அத் தீர்மானத்தை அடுத்த மீட்டிங்கில் வைத்துக்கொள்ளலாம் என்று ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் தந்திரமாய்த் தள்ளி வைத்துவிட்டார்.

1923-ம் வருஷம் சேலத்தில் கூடிய 29-வது தமிழ் மாகாண மாநாட்டுக்கு விஷயா லோசனைக் கமிட்டியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அதுசமயம் இல்லா விட்டாலும் அவருக்காக அவர் நண்பர்கள் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையோ, அல்லது பவானி சிங்கோ இதே தீர்மானத்தைப் பிரேரேபித்தபோது ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் 'இது சமயம் ஒத்துழையாமையே போய்விடும்போல் இருக்கிறது; டெல்லி மாநாடு தீர்ந்த பிறகு வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லி அதை நிறுத்தச் செய்து விட்டார்கள்.

பின்னர் கூடிய 1924-ம் வருடத்திய திருவண்ணாமலையில் கூடிய 30-வது தமிழ் மாகாண மாநாட்டில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கருடைய அக்கிராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பெல்காமில் கூடிய ராஜீய காங்கிரசின் போதும் பிராமணரல்லாதாருக்கெனத் தனி யாக ஒரு மாநாட்டைக்கூட்டி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றிப் பேசியதோடு ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றியும் தீர்மானம் செய்திருக்கிறது. அதேசமயம் மகாத்மாவினிடமும் இதைப்பற்றி விரிவாய் எடுத்துச்சொன்னதோடு ஸ்ரீமான்கள். ஆர். கே. சண்முகம் செட்டியார், பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றிச் சொல்லியும் இருக்கிறார்கள். மகாத்மா காந்தியும் யோசித்துத் தக்கது செய்வதாய்ச் சொல்லியுமிருக்கிறார்.

இவ் வருடம் தஞ்சையில் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் உட்பட பிரதிநிதிகளா யிருந்த தேசிய பிராமணரல்லாதார் மாநாட்டிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலி யுறுத்தி இருக்கிறது.

இன்னும் எத்தனையோ விஷயங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவச் சரித்திரத்தைப் பற்றியும் தலைவர்கள் என்று சொல்லப்படுவோரின் தந்திரம், சூழ்ச்சி, குட்டிக் கரணம், குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புத்தன்மை முதலியவற்றைப் பற்றியும் விரிவாய் எடுத்துச்சொல்ல அடுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறோம். அல்லாமலும், பிராமண ரல்லாதார் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தொண்டர்கள் என்ன செய்யவேண்டும் என் பதையும் அடுத்தாற் போல் எழுதலாம் என்று இருக்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—6-12-1925]

3. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏன்?

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

'தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்தும், தேசிய ஒற்றுமையை உத்தேசித்தும் அரசியல் சம்பந்தமான சகல பதவிகளிலும், இந்து சமூகத்தில் பிராமணர், பிராமணர் அல்லாதவர், தீண்டாதார் என்போர் ஆகிய இந்த மூன்று சமூகத்தாருக்கும் அவரவர் ஜனத்தொகையை அனுசரித்துப் பிரதிநிதி ஸ்தானம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாகாண மாநாட்டைக் கேட்டுக் கொள்வதோடு, இத் தீர்மானத்தை மாகாண மாநாடு மூலமாய் காங்கிரஸையும் வலியுறுத்தும்படியும் தீர்மானிக்கிறது' என்னும் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியதாவது :

நாம் ஒவ்வொருவரும் சுயராஜ்யம் அடையப் பாடுபடுவதாய்ச் சொல்கிறோம். அதற்காக எவ்வளவோ கஷ்டத்தையும் அனுபவிக்கின்றோம். சுயராஜ்யம் கிடைத்தால் அது 'பொதுமக்கள் ராஜ்யமாய்' இருக்கவேண்டாமா? நாட்டின் தற்கால நிலைமையைப் பார்த்தால், சுயராஜ்யம் என்பது பிராமண ராஜ்யம்தான் என்னும் பயம், இப்பொழுது மக்களிடையே உண்டாகிவருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி புரிகிற இக் காலத்திலேயே மனிதர்களைத் தெருவில் நடக்கவிடக் கூடாது, குளம் குட்டைகளில் தண்ணீர் எடுக்க விடக்கூடாது என்னும் பல கொடுமைகள் நடைபெறுகிறபோது—இராஜ்ய அதிகாரம் ஒரு வகுப்பார் கைக்கே வந்துவிடுமானால் இனி என்ன கொடுமைகள் செய்ய அஞ்சுவார்களென்று, ஜனங்கள் பயப்படுகின்றார்கள். தேச விடுதலைக்குத் தியாகம் தேவையாய் இருந்த காலத்தில் புறமுதுகு காண்பித்து ஓடிப்போன ஆசாமிகள் எல்லாம், ஏதோ சிலர் செய்த தியாகத்தினால் ஏற்பட்ட பலனை அனுபவிக்க வெட்கமில்லாமல் முன்வந்து சூழ்ச்சிகள் செய்து பலன் அடைவதைப் பார்க்கின்றபோது இவர்களை எப்படி நம்பமுடியும்? 'வெட்கங்கெட்டவன் சொந்தக்காரன்' என்பதுபோல் விவஸ்தையற்ற ஒரு கூட்டத்தார் தேசத்திலிருந்துகொண்டு, தேசத்தைப் பாழ் பண்ணிக்கொண்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். சாதுக்களான ஏழு கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு பெரிய கூட்டம் மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்படுவதையும் பார்த்துவருகிறோம். இப்படி ஏன் இருக்கவேண்டும்? அந்தந்தக் கூட்டத்திற்குத் தகுந்த அளவு, அவரவர்களுக்கு அரசியல் முதலிய உரிமைகளை ஒதுக்கி விடுவோமேயானால், சாதுக்களெல்லாம் மிருகங்களாகவும் அயோக்கியர்களெல்லாம் சுவாமிகளாகவும் ஆகிவிடமுடியுமா? கட்டுதிட்ட அளவில்லாததனால், கையில் வலுத்தவன் காரியமென்பதுபோல, ஏமாற்றச் சக்தியுள்ளவனும், செல்வாக்கு உள்ளவனும் மேலே வந்துவிடுகிறான். இதனால் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையில்லாமலும், ஒற்றுமையில்லாமலும், இவர்களை எப்படி ஏமாற்றலாம் என்பதே ஒரு கூட்டத்தாருடைய ஜென்மக் கூறாகவும், இவர்கள் தந்திரத்திலிருந்து எப்படித் தப்புவது என்பது மற்றக் கூட்டத்தாருடைய கவலையாகவும் போய்விடுகிறது. இந்த நிலைமை, அரசாட்சி புரிபவர்களுக்கு வெகு அனுகூலமாய் ஏற்பட்டுப் போய்விடுகிறது. அதோடு மாத்திரமல்லாமல், அரசாங்கத்தை நடத்துவிக்க வகுப்புகளுக்கு வகுப்பு போட்டிபோட்டுக்கொண்டு ஒற்றர்களாகவும், அடிமைகளாகவும் அரசாங்கத்தையே நாடுவதாய் ஆகிவிடுகிறது. இக் குணங்கள் நமது நாட்டைவிட்டு அகல வேண்டுமானால், ஒரு வகுப்புக்கு மற்றொரு வகுப்பு நம்பிக்கை ஏற்படும்படியும், ஒருவர் பாத்தியத்தில் மற்றொருவர் பிரவேசிக்காதபடியும் பந்தோபஸ்து ஏற்பட்டுப் போக வேண்டும். அவ்வித பந்தோபஸ்துதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது. நான் பிரேரேபித்திருக்கின்ற தீர்மானத்தில் இந்தத் தத்துவம்தான் அடங்கி இருக்கிறது. அது இப்பொழுது மாத்திரம் ஏற்பட்டதல்ல. நீண்ட நாளாகவே இக் கிளர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் எப்படி எப்படியோ அதை ஒரு வகுப்பார் கட்டுப்பாடாய்ச் சூழ்ச்சிகள் செய்து, சமயத்திற்கேற்றவாறு நடந்து, பாமர ஜனங்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு, வெளிக்குத் தெரியாமல் அடக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், நீங்களெல்லோரும் நன்றாய் யோசித்துப் பார்க்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[காஞ்சிபுரத்தில், 21-11-1925-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 6-12-1925]

4. வகுப்புவாரி உரிமை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி வலியுறுத்த ஆரம்பித்த பிறகு தமிழ்நாடு இராஜ்ய உலகில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதோடு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு அனுகூலமாய் இருக்கும் சில தேச பக்தர்களுக்குக் காங்கிரசில் செல்வாக்கு இல்லாமல் அடிப்பதோடு காங்கிரஸையே பிராமணமயமாக்க அவசியம் ஏற்பட்டதும், பிராமணரல்லாதாரில் யாருக்காவது காங்கிரஸில் பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் பிராமணர்கள் தயவுபெற வேண்டியிருப்பதால் பிராமணர்களுக்குப் பயப்பட்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே ஆகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒரு நாளும் பிராமணர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எங்கு ஏற்பட்டுப் போகுமோ என்கிற பயத்தால்தான் பிராமணர்கள் சர்க்காரைத் தாங்கிக் கொடுத்துக் கொண்டிருப்பதும், ஒரு சர்க்கார் இவர்களுக்கு விரோதமாய் இருந்தால் வேறொரு சர்க்காரைத் தயார் செய்வதுமாய் இருந்தார்கள். அதற்குப் பயந்துகொண்டுதான் வரும் சர்க்காரும், பிராமணர்களுக்குச் சுவாதீனமாய்ப் போய்விடுகிறார்கள். நம் நாடு ஏதாவது ஒரு காலத்தில் 'இயற்கைக்கு விரோதமாய்' நம் நாட்டார்களாலேயே ஆளப்படுகிறது என்கின்ற யோக்கியதை அடையுமானால், அது கண்டிப்பாய் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டால்தான் முடியும் என்று வைரக்கல்லில் எழுதிவைப்போம்.

அது ஏற்படும்வரை இந்தியாவை இந்தியர் ஆட்சி புரிவதென்பதைத் தூரத் தள்ளி வைத்துவிட வேண்டியதுதான். நமது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பிராமணர்கள் மாத்திரம் விரோதிகளல்லர். அன்னிய அரசாங்கத்தாரும் விரோதிகள் என்பதை உணர வேண்டும். ஏனென்றால், எவ்வளவுக்கெவ்வளவு நமக்குள் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு ஒற்றுமைக் குறைவாய் இருக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அன்னிய ஆட்சியின் எல்லை நீண்டுகொண்டிருக்கும். நமக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்து, நாம் எல்லோரும் உத்தியோகத்திற்கும் பதவிக்கும் சண்டை போட்டுக்கொள்ளாமல், அவரவர்களுக்குள்ளது அவரவர்கள் அடையும்படிசெய்து, ஒருவரை ஒருவர் தின்னாமல் செய்து விட்டால் பிறகு எல்லோரும் ஒற்றுமையாய்ப் போய்விடுவார்கள். இதனால் அன்னிய ஆட்சிக்கு ஆபத்து. ஆதலால், இந்தத் தத்துவம் எப்பொழுதும் அன்னிய அரசாங்கத்திற்கு விரோதமானது. 'பெருங்கூட்டத்தைச் சிறு கூட்டம் ஆளவேண்டுமானால், சிறு கூட்டத்தார் பெருங்கூட்டத்தை ஒருவருக்கொருவர் பொறாமையும் துவேஷமும் ஏற்படும் படிசெய்து, பிரித்துவைத்துக் கலகத்தை உண்டாக்கிவிட்டால் தாராளமாய் ஆளலாம்' என்று ஒரு பழமொழி உண்டு. அதுவே சர்க்காரின் நடவடிக்கை; அதுவே நமது பிராமணர்களின் நடவடிக்கை. இதை நம்மில் பலர் அறிவதில்லை. அறிந்தாலும் எப்படிப் பிராமணர்களுக்கு நல்ல பிள்ளையாகலாம் என்பதில்தான் அதிகக் கவலை. ஆங்கில அரசாங்கத்தின் 150 வருடத்திற்கு மேற்பட்ட ஆட்சியின் பலனாய், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததின் பலனாய்ப் பிராமணரல்லாத வகுப்புகள் எவ்வளவு மூற்போக்கு அடைந்து இருக்கிறது என்று பார்த்தால், உண்மை பிராமணரல்லாத இரத்தம் ஓடும் மனிதன் துடிக்காமல் இருக்க மாட்டான். நம் தென்னாட்டு அரசாட்சியில், பிராமணரல்லாதவர் நிலை எப்படி இருக்கிறது, பிராமணர்கள் நிலை எப்படி இருக்கிறது என்பதுபற்றிக் கீழ்க்கண்ட கணக்குகளால் அறிந்துகொள்ளக் கோருகிறோம்.

நமது அரசாங்கத்தில் 35 ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட உத்தியோகங்களில், அதாவது வாசல் கூட்டுவது, மேஜை துடைப்பது, பங்கா இழுப்பது, அதிகாரிகளுக்குக் கைகால் அழுத்துவது முதலிய வேலைகளில் பிராமணரல்லாதவர்கள் 37,125 பேர்கள் இருக்கிறார்கள். பிராமணர்கள் 1810 பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களும் சம்பளம் குறைவாய் இருந்தாலும் தளுக்காய் மேலதிகாரிகளை ஏமாற்றி, மேலே கண்ட வேலைகள் பார்க்காமல் அதிகாரம் செலுத்திவருகிறார்கள். ரூ. 35-க்கு மேற்பட்டு 100 ரூபாய் வரை சம்பளம் உள்ள

உத்தியோகத்தில் பிராமணரல்லாதவர் 7003 பேர்கள். பிராமணர்களோ 10,934 பேர்கள். இந்த இடத்திலே நம்மைவிடப் பிராமணர்கள் 4000 பேர்கள் அதிகமாகிவிட்டார்கள். ரூபாய் 100-க்கு மேற்பட்டு சுமார் 250 ரூ. வரை உத்தியோகங்களில் பிராமணர்கள் 2679 பேரும், பிராமணரல்லாதவர் 1666 பேருமாய் இருந்தனர். இந்த இடத்தில் பிராமணரல்லாதாரை விடப் பிராமணர்கள் 1000 பேர் அதிகமாய் இருக்கிறார்கள். 250 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்களில் பிராமணர்கள் 594; பிராமணரல்லாதவர் 280 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு இருமடங்குகளுக்கு மேல் போய்விட்டார்கள். கலெக்டர் உத்தியோகத்தில் 11 பேர் இந்தியர்கள் வகிப்பதில், 9 பேர் பார்ப்பனர்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு அய்ந்தாய் விட்டார்கள். ரிவின்யூபோர்டில் உள்ள ஒரு இந்திய மெம்பர் உத்தியோகத்தில் பிராமணர்தான் இருக்கிறார். இந்தியருக்குக் கொடுக்கப்பட்ட கைத்தொழில் டைரக்டர் வேலையில் பிராமணரே இருக்கிறார். அரசாங்கக் காரியதரிசி வேலையில் உள்ள இந்தியரும் பிராமணரே.

200 ஜில்லா முன்சீப்களில் 150 பேர் பிராமணர்கள். 61 சப் ஜட்ஜுகளில் 45 பேர் பிராமணர்கள். ஜில்லா ஜட்ஜுகளில் 7 பேர் பிராமணர்கள். அதாவது, எடுபிடி உத்தியோகங்களில் பிராமணரல்லாதவரும் ரூ. 100, 500, 1000, 2000, 3000 மாதச் சம்பளம் உள்ள உத்தியோகங்களில் பிராமணர்களும் அனுபவிக்கிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது:

இவ்விதம் 1000, 2000, 3000 ரூபாய் சம்பளம் உள்ள உத்தியோகங்கள் பிராமணரல்லாத இந்துக்கள் என்போராகிய 100-ல் 70 பேருக்கு மேலாக இருக்கும் பிராமணரல்லாதாருக்குக் குறைவாய் இருப்பதற்கும், 100-ல் 3 பேராயிருக்கும் பிராமணர்களுக்கு ஏகபோகமாய் இருப்பதும் யோக்கியதை இல்லாததாலா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா, என்று கேட்பதோடு—ஸ்ரீமான் முதலியார் கோரும் சுயராஜ்யமோ, சீர்திருத்தமோ பிராமணர்களுக்கு உத்தியோகப் பெருக்கமாகுமா, அல்லது ஏழைகளுக்கு வரி குறைந்து தொழிலாளிக்குத் தொழில் கிடைக்குமா என்று கேட்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—18-4-1926]

அக்கிராசனர் அவர்களே! சகோதரர்களே!

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமைக் காங்கிரஸ்காரன், அதிலும் வைதிக ஒத்துழையாமைக்காரன், மாறுதல் வேண்டாதவன் என்று சொல்லப்பட்ட ஒருவன், வகுப்பைப் பற்றிப் பேசுவது பொருத்தமா என்று சிலருக்குத் தோன்றலாம். வைதிக ஒத்துழையாமைக்காரன் என்றால், ஒருவன் கழுத்தை ஒருவன் அறுக்கும்போது பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பவனல்லன்; ஒருவன் சொத்தை ஒருவன் கொள்ளையடித்துக் கொண்டு போனால் வழியைத் திறந்துவிட்டு வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்பவனல்லன் என்பதை முதலில் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அல்லாமலும், மகாத்மாவின் காங்கிரஸும் அவரது ஒத்துழையாமையும், நிர்மாணத்திட்டமும் காங்கிரஸிலிருந்து வெளிப்பட்டு மறைந்துகொண்டும் வருகிறது. நிர்மாணத் திட்டங்கொண்ட ஒத்துழையாமைக் காங்கிரஸின்போது வகுப்பு விஷயத்தைப்பற்றி யாரும் யோசிக்கவேயில்லை. அதில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமே இல்லாமல், எல்லா வகுப்புக்கும் சமத்துவமும் சுயமரியாதையும், ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசமே இல்லாமல் எல்லோருக்கும் சமயோக்கியதையும் உண்டாக சவுகரியம் இருந்ததால், என்போன்றவர்கள் வகுப்பு எண்ணத்தை மறந்து மகாத்மா காங்கிரசிலும், ஒத்துழையாமையிலும், நிர்மாணத் திட்டத்திலும் உழைத்துவந்தோம்.

மகாத்மா காங்கிரசுக்கு முன்பே நான் வகுப்பு முன்னேற்றத்தில் கவலை உள்ளவனாகத்தான் இருந்தேன். அதாவது, பிராமணரல்லாதாருக்காக இப்பொழுது உள்ள

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பது போன்ற, ஏறக்குறைய இதே கொள்கை உடைய 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற ஒரு சங்கம் இருந்ததும் அதில் என்போன்றவர்கள் முக்கிய பங்கெடுத்து உழைத்ததும் உங்களுக்குத் தெரியும். அது எதற்காக இருந்தது? பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குக் காங்கிரஸ் போதாது என்றும், நமக்கென்று தனி யான இயக்கம் இருக்கவேண்டுமென்றும் இப்பொழுது காங்கிரஸிலுள்ள பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்று கூடித்தான் அச் சங்கத்தின் மூலம் பிராமணரல்லாதார் முன்னேற்றத் திற்கு உழைத்ததும், நமது முன்னேற்றத்திற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முதலிய வைகளை நாம் வலியுறுத்தி வந்ததும் உங்களுக்குத் தெரியும்.

இன்னும் என் அபிப்பிராயம் என்னவென்றால், நமது நாட்டில் காங்கிரஸ் என்கிற ஒரு இயக்கம் இல்லாவிட்டால் நமக்கு வகுப்பு முன்னேற்ற இயக்கமே தேவையில்லை என்றே சொல்லுவேன். நமது நாட்டில் என்று காங்கிரஸ் ஏற்பட்டதோ அன்றே பிராமணரல்லா தாருக்குச் 'சனியன்' பிடித்தது. உதாரணமாக, தமிழ்நாட்டில் காங்கிரஸ் வருவதற்கு முன் பெரிய மனிதர்கள் என்போரும், படித்தவர்கள் என்போரும், தலைவர்கள் என்போரும், தேசபக்தர்கள் என்போரும் பிராமணரல்லாதார்களாகவே இருந்தார்கள். ஜில்லா முனி சீப்புகள், சிரஸ்தார்கள், தாசில்தார்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகிய இவ்வுத்தியோகங்கள் தாம் அக் காலத்தில் இந்தியர்களுக்கு அதிகமாய் வழங்கப்பட்டன.

இவைகளில் நூற்றுக்கு 99 பேர் நாயுடு, முதலியார், பிள்ளை, சாயபு ஆகிய இவர்கள் தாம் இருப்பார்கள். இவர்கள் உத்தியோக கண்ணியமும், தர்பாரும் இக் காலத்திலுள்ள ஒரு கலெக்டருக்காவது, நிர்வாக சபை மெம்பருக்காவது கிடையாது. எனக்குத் தெரிய ஒரு நாயுடு இந்த ஜில்லா சிரஸ்தாராயிருந்தார், அவரை, 'கலெக்டர் கூப்பிடுகிறார்' என்று யாராவது கூப்பிட்டால், 'பத்து நிமிஷத்தில் வருகிறேன்' என்றுதான் சொல்வார். 15 நிமிஷம் கழித்து மெத்தைக்குப் போவார்; காலில் ஜோடும், ஒரு கையில் தடியும், மற்றொரு கையில் சுருட்டுமாய் மெத்தை ஏறுவார். கலெக்டர் முன்னால் மேஜையின்மேல் தடியையும், சுருட்டையும் வைத்துவிட்டு, 'என்னைக் கூப்பிட்ட விஷயம் என்ன?' என்று கேட்பார். காரியம் முடிந்ததும் சுருட்டையும் தடியையும் எடுத்துக்கொண்டு கீழே வருவார். போலீஸ் எட்குவாட்டர் இன்ஸ்பெக்டராக நாயுடு ஒருவர் இருந்தார். அவர், கலெக்டர் சூப்பரின்டெண்டு முதலிய வெள்ளைக்கார அதிகாரிகளுடன் சினேகிதர் போலப் பேசுவார்; உறவாடுவார். நாயுடுவைத் திடீரென்று கூப்பிடமுடியாது. நாயுடுவின் சந்தர்ப்பம் தெரிந்துதான் கூப்பிட வேண்டும். இதுபோலவே, அக் காலத்தில் தக்க குடும்ப பரம்பரை யும், யோக்கியமும், அந்தஸ்தும், கண்ணியமும் உள்ளவர்கள் பெரிய உத்தியோகம் வகிப் பார்கள். அப்போதைய உத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதை இதுதான்.

காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு உத்தியோகத்தின் யோக்கியதை அடியோடு மாறிவிட்டது. முனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தவனானாலும் சரி, பஞ்சாங்கம் சொல்லிப் பிச்சை எடுத்தவன் மகனானாலும் சரி, தூது சென்று பிழைப்பவன் மகனானாலும் சரி, உருப்போடத் தெரிந்து, கிராமபோன் மிஷின்போல பார்த்ததை உருப்போட்டு எழுதத் தெரிந்து மற்ற விஷயத்தில் எப்படிப்பட்டவனானாலும் சரி, அவன்தான் உத்தியோகத்திற்கு இலாயக்கு உள்ளவனாகப் போய்விட்டான். இதனால் தெருப்பிச்சை எடுப்பவர்களெல்லாம் உத்தியோகத்திற்கு இலாயக்குள்ளவர்களாகப் போய்விட்டார்கள். பரம்பரையாய்ப் பெருங் குடும்பமாய், தேசத்தையே கோட்டை கொத்தளங்களோடு அரசாண்டவர்களாய், சுயமரி யாதையோடு உள்ள பிராமணரல்லாதார் குடும்பங்கள் பின்னடைய ஏற்பட்டுவிட்டன. இதன் பலனாய் உத்தியோகங்களுக்கும் மதிப்புக் குறைந்துவிட்டது.

காங்கிரஸின் ஆதி சூழ்ச்சியே, பிராமணர்கள் எவ்வாறு உத்தியோகம் சம்பாதிப்பது என்கிற அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டதாகும். அதற்கு ஏற்றாற்போல் அந்தச் சாதிக் குச் சுபாவமாய் உள்ள உருப்போடும் வித்தையை உத்தியோகத்திற்கு யோக்கிதையாய்

வைத்து, அதற்கேற்ற பள்ளிக்கூடங்களை விருத்தி செய்தார்கள். இதன்மூலம் உத்தியோகம் பெற்ற பிராமணர்களால் வெள்ளைக்காரர்களுக்குப் பலவிதத்திலும் உபயோகமிருந்ததால் அவர்களும் இந்தப் பிராமணர்களுக்கு அனுகூலமான உத்தியோக யோக்கியதையையே பரப்பிவிட்டார்கள். இப்போது வரவர மேற்படி உத்தியோகங்களின் யோக்கியதையும் குறைந்துவிட்டது.

பெரும்பாலும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குள்ள சகல தேவைகளையும் நிறை வேற்றி வைக்கக்கூடியவர்களும், சுயமரியாதை அற்றவர்களும், மனச்சாட்சியை இழந்தவர்களுந்தான் நல்ல டிப்டி கலெக்டர், நல்ல முன்சீபு, நல்ல தாசில்தார், நல்ல மாஜிஸ்டிரேட், நல்ல இன்ஸ்பெக்டர்களாக விளங்குகிறார்கள். இந்த உத்தியோகத்திற்கே இவ்வளவு யோக்கியதை வேண்டுமானால் இன்னும் பெரிய உத்தியோகத்திற்கு எவ்வளவு யோக்கியதை வேண்டும்? இந்த முறையில் பிராமணரல்லாத வகுப்பார் உத்தியோகம் பெற அஞ்சுகிறார்கள். துணிந்து யாராவது ஒப்புக்கொண்டாலும் மேற்படி யோக்கியதை இல்லாத காரணத்தால் நல்ல உத்தியோகஸ்தர்களாக ஆகமுடிவதில்லை.

இம் மாதிரி காங்கிரஸ் நம் நாட்டில் ஏற்படாதிருந்தால் நமது ஜனங்களின் யோக்கியதை இவ்வளவு கேவலமாய்ப்போய் இருக்காது. உத்தியோகங்களின் யோக்கியதைகளும் இவ்வளவு இழிவான நிலைமைக்குப்போய் இருக்காது. வெள்ளைக்காரர்களும் இவ்வளவு கொடுமையான முறையில் ஆளத்துணிந்திருக்க மாட்டார்கள். ஆதலால், பிராமணரல்லாதார் நிலைமையை இவ்வளவு கேவலத்திற்குக் கொண்டுவந்துவிட்டதற்கு முக்கிய காரணங்களில் இந்தக் காங்கிரஸும் பிரதானமானது. காங்கிரஸ் என்பதே உத்தியோகம் பெற ஏற்பட்டதுதான். அது நமது நாட்டுப் பிராமணர்களால் வளர்க்கப் பட்டதால் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தக்க வழியில் நிலைநின்று விட்டது. எந்த அந்தஸ்தும், எந்த உத்தியோகமும், எந்தப் பதவியும் எந்தப் பெரிய உத்தியோகங்களையும் எடுத்துக் கொண்டீர்களேயானால் அந்தப் பதவியும் உத்தியோகமும் காங்கிரசின் பலனாக ஏற்பட்டதாகத்தானிருக்கும்.

இனி பிராமணரல்லாதார் சமூகத்திற்கு ஏதேனும் யோக்கியதை உண்டாகவேண்டுமானால், இந்தக் காங்கிரஸ் ஒழியவேண்டும். இது உள்ளவரை பிராமணரல்லாதார் உருப்படியாக முடியாது. மகாத்மா காங்கிரஸ் உண்டாக வேண்டும்.

[கோயம்புத்தூரில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-6-1926]

5. வகுப்பு உரிமையை ஒழிக்கச் சதி

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது, இந்திய மக்களில் பார்ப்பனர் தவிர மற்றெல்லா வகுப்பார்களும் வெகுகாலமாக, அதாவது இந்தியப் பிரதிநிதித்துவம் என்கிற வார்த்தை என்றைக்கு ஏற்பட்டதோ அதுமுதல் அரசாங்கத்தாரிடம் கேட்டு வரப்படும் ஒரு கோரிக்கை ஆகும்.

இக் கோரிக்கை ஏற்பட்ட காலம் முதல் இந்நாட்டுப் பார்ப்பனர்கள், குறிப்பாய் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பல வழிகளிலும், தந்திரங்களிலும், சூழ்ச்சிகளிலும் அது கிட்டாமலிருப்பதற்காக வெகு பாடுபட்டு வந்திருக்கிறார்கள். என்ன பாடுபட்டும் அரசியல் இயக்கங்களான காங்கிரசும், அரசாங்கமும் இதை ஒப்புக்கொண்டு அது ஒரு அளவு அமுலில் வரவும் ஏற்பாடு செய்தாகிவிட்டது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள இந்திய மக்களில் முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர் அல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம் என்றும், சீக்கியர்களுக்கு இத்தனை ஸ்தானமென்றும், கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர் அல்லாதாரில் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும், பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதாருக்குப் பொதுவில்

இத்தனை ஸ்தானங்கள் என்றும் பிரிக்கப்பட்டு, 6, 7 வருஷ காலமாய்—அதாவது மூன்று தேர்தலாய் அமுலுக்கு வந்தாகிவிட்டது. அதுபோலவே, காங்கிரஸிலும் கிறிஸ்தவர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், முகமதியர்களுக்கு இத்தனை ஸ்தானம் என்றும், தீண்டாத வகுப்பார் என்று சொல்லப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்றும் ஒதுக்கப்பட்டு அதுவும் சுமார் 5, 6 வருஷமாக அமுலில் இருந்து வருகிறது என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. இப்போது அதில் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்கிற விஷயத்தில் வகுத்திருக்கும் முறையானது காரியத்தில் பிரயோசனப்படாததையும், ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருப்பதால் அதையும் தெளிவுபடுத்தி விடுவதே இப்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதன் பொருளேயல்லாமல், புதிதாக ஒன்று ஏற்பாடு செய்யவோ அல்லது கண்டுபிடிக்கவோ யாரும் கோரவில்லை. இக் கொள்கைகளை அரசாங்கத்தாரும் சுமார் 85 வருஷங்களுக்கு முன்னாலேயே ஒப்புக் கொண்டு, 1840-ம் வருஷத்தின் 125ஆவது ஸ்டாண்டிங் ஆர்டரில் விவரமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால், சகல உத்தியோகங்களும் பதவிகளும் அரசாங்கத்தார் கைவசமாக இருந்து அவர்களே ஏறக்குறைய சரிவர வினியோகித்து வந்ததால் அதற்காக யாரும் கொள்கை ஒன்று ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியமே இருந்துவரவில்லை. ஆனால், காங்கிரஸ் என்பதாக ஒரு ஸ்தாபனத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு, அதை தேசப் பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்லி, அரசாங்கத்தை மிரட்டி, அவர்கள் மூலம் சில பதவிகளும் பிரதிநிதித்துவங்களும் அதிகமாய் வினியோகிக்கச் செய்ததில் அவைகள் காங்கிரசில் உழன்று கொண்டிருக்கிற பார்ப்பனர்களான ஒரு கூட்டத்திற்கே போய்ச்சேருவதைப் பார்த்தவுடனும் மற்றவர்கள் காங்கிரசில் ஆதிக்கம் பெற முடியாமலும் மற்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாமலும் கட்டுப்பாடாய்ப் பிராமணர்கள் சூழ்ச்சி செய்ததின் பலனாகவும் காங்கிரசில் விசேஷ தீவிரவாதிகளாயிருந்த பார்ப்பனரல்லாதார்களில் வடநாட்டில் முகமதியர்களும், தென்னாட்டில் முகமதியரல்லாதாருமான பார்ப்பனரல்லாதாரும் காங்கிரசில் ஏற்படும் உத்தியோகங்களையும் பதவிகளையும் பிரதிநிதித்துவங்களையும் எங்களுக்கும் சமமாய் விகிதாசாரம் பங்கு கொடுக்கவேண்டும் என்றும், இல்லாவிட்டால் காங்கிரசுக்கு விரோதமாயிருந்து அரசாங்கத்திடமிருந்தே நேரிடையாகப் பெறப் பிரயத்தனம் செய்வோம் என்றும் வாதாடியதில், காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் முகமதியர்களுக்கு மாத்திரம் ஒப்புக் கொண்டு மற்றபடி முகமதியரல்லாத பார்ப்பனரல்லாதாருக்கு ஒப்புக்கொள்ளாமல் ஆட்சேபணை செய்தார்கள். இதன் பலனாய் அப்போது அரசியல் வாழ்விலும் காங்கிரசிலும் பிரதான ஸ்தானங்களிலும் அனுபோகத்திலும் இருந்த ஸ்ரீமான்கள் டாக்டர் நாயர், தியாகராசச் செட்டியார் போன்றவர்கள், 'தென்னிந்தியர்களின் நல உரிமைச் சங்கம்' என்பதாக ஒன்றை ஏற்பாடுசெய்து, அதில் தென்னிந்தியாவிலுள்ள எல்லாப் பார்ப்பனரல்லாத மக்களையும் ஒன்றுசேர்த்து, காங்கிரஸ் என்பது பார்ப்பனர் முன்னேற்றத்திற்கு ஏற்படுத்திய ஆயுதமேயொழிய ஜனப் பிரதிநிதித்துவம் பொருந்தியதோ அல்லது எல்லா மக்களும் சமஉரிமை அடையத்தக்கதானதோ அல்ல என்றும்; சுயராஜ்யம் என்பது பார்ப்பன ராஜ்யமேயல்லாமல் பொதுமக்கள் ராஜ்யம் அல்ல என்றும் பிரச்சாரம் செய்ததின் பலனாய்க் காங்கிரஸ் ஆதிக்கமும் குலையத் தலைப்பட்டது. இதை அறிந்த பார்ப்பனர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து ஒரு தீர்மானம் செய்தார்கள். அதென்னவென்றால், ஸ்ரீமான்கள் சர்க்கரைச் செட்டியார், ஆரியா, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலிய காங்கிரசிலீடுபட்டிருந்தவர்களின் அபிப்பிராயத்தையும், அவர்களது பத்திரிகைகளையும் எதிர்க்க எப்படி ஸ்ரீமான்கள் மயிலை இரத்தினசபாபதி முதலியார், பாவலர் குப்புசாமி முதலியார் என்கிற பெயருள்ளவர்களைத் தலைவர்களாக்கியும், 'தேசபந்து' என்கிற பேர்கொண்ட பத்திரிக்கையை உண்டுபண்ணவும் முயற்சி செய்தார்களோ, அதுபோலவே அப்போதும் ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரும், டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும் பார்ப்பனர்கள்

மேல் பிணக்குக்கொண்டு காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்து விலகுவதாய் மிரட்டியும். 'நீங்கள் போனால் வேறு ஒரு முதலியாரையும், நாயுடுவையும் சேர்த்துக்கொள்ளத் தெரியும்' என்று சொல்லி வெளியிலேயே அனுப்பிவிட்டுத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருவதையும் உலகம் அறியும்.

இதுபோல, பார்ப்பனரல்லாத சங்கத்திற்கு அனுகூலமாய் சாட்சி சொல்ல சீமைக்குப் போன டாக்டர் நாயர், ஸ்ரீமான் எல். கே. துளசிராம் இவர்களுக்கு மாறாக ஸ்ரீமான்களான ஒரு சர்க்கரைச் செட்டியாரையும், ஒரு செஞ்சையாவையும் சீமைக்குப் பணம் கொடுத்து அனுப்பிவைத்தார்கள். இப்போது இந்தப் பார்ப்பனர்கள் யோக்கியதையை அறிந்து ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் அவர்களை விட்டு விலகியதும் அதற்குப் பதிலாக ஒரு ஓ. கந்தசாமிச் செட்டியார் என்பவரையும், முன் பார்ப்பனரல்லாதாருக்குச் சாட்சி சொல்ல சீமைக்குப் போயிருந்த எல். கே. துளசிராம் என்பவரையும் ஆசைவார்த்தைகள் சொல்லி தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு, அப்போது ஸ்ரீமான் சர்க்கரைச் செட்டியார் செய்த வேலையை இவர்களைக்கொண்டு செய்துவருவதோடு, அவருக்குப் பதிலாய் இவர்களை உபயோகித்துக் கொள்ளப்போகிறார்கள். இவ்வளவு தீவிரமாகவும், இவ்வளவு பிரயத்தனமாகவும், இவ்வளவு செலவு செய்துகொண்டும் இதுசமயம் இந்தப் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத இயக்கத்திற்கு விரோதமாய்க் கட்சி சேர்த்திருக்கிறதன் முக்கிய நோக்கம் என்னவென்றால், 1920 ஆம் வருடத்தில் 'சில சீர்திருத்தங்கள்' அரசாங்கத்தார் நமக்கு வழங்கியிருப்பதாய்ச் சொன்ன யாதாஸ்தில், 'இன்னும் 10 வருஷம் சென்றவுடன் இப்போது கொடுத்த சீர்திருத்தத்தை எப்படி உபயோகித்திருக்கிறீர்கள்; மேற்கொண்டு உங்களுக்கு சீர்திருத்தம் கொடுத்தால் அதைச் சரியாய் உபயோகித்துக் கொள்ளக்கூடிய யோக்கியதை உங்களுக்கு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பரீட்சித்துப் பார்த்து, இன்னும் சில சீர்திருத்தங்கள் கொடுப்போம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி சர்க்கார் வழக்கம்போல் 1928-லோ, 1929-லோ ஒரு கமிஷனை நியமிக்கப் போகிறார்கள். அந்தக் கமிஷனில் நமது பார்ப்பனருக்கு மேற்கொண்டு 'சீர்திருத்தம்' கொடுத்தாலும் சரி, கொடுத்திருப்பதையும் பிடுங்கிக்கொண்டாலும் சரி, அதைப் பற்றியெல்லாம் நமக்குக் கொஞ்சமும் கவலையில்லை. எப்படியாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை ஒழித்துவிட்டால் அதுவே பார்ப்பனர்களுக்குச் சுயராஜ்யமளித்த மாதிரியாகையால், அதை ஒழிக்கக் கட்சியும் பலத்தையும் சேர்க்கத்தான் இவ்வளவு தந்திரங்களும் சூழ்ச்சிகளும் பணச் செலவும் செய்வதே தவிர வேறில்லை. அதனால்தான் பார்ப்பனர் என்கின்ற கூட்டமே அடியோடு ஆண், பெண் அடங்கலும் கட்சிபேத-அபிப்பிராய பேதமின்றி ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள். இதற்காகவே ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரும் அடிக்கடி பட்டணம் போவதும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் வெற்றிக்காகக் காத்திருப்பதும், அவர்கள் கூட்டங்களில் பேசுவதும், வகுப்பு வாதங்கள் மாத்திரம் கூடாதென்பதும் ஆகிய தந்திரங்களைச் செய்துவருவதும், ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் வகுப்புவாதம் கூடாதென்பதும் பார்ப்பனரல்லாதாரிலும், முகமதியர்களிலும், கிறிஸ்தவர்களிலும், தீண்டாதார் என்னும் வகுப்புகளிலும் கூலிகொடுத்து ஆட்களைப் பிடித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அரசியலில் பேசக்கூடாதென்று சொல்லச் செய்வதுமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆதலால், தமிழ்மக்கள் இது சமயம் ஏமாந்துபோகாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தையும், அதற்கெதிராய்ப் பார்ப்பனர் செய்யும் பிரசசாரத்தின் நோக்கத்தையும் அவர்களுடைய யோக்கியதைகளையும் முன்பின் அபிப்பிராயங்களையும் பாமர மக்கள் சரியாக உணரும்படி பிரச்சாரங்களைச் செய்து, எப்படியாவது அதை அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டி வற்புறுத்துகிறோம்.

['குடி அரசு'–தலையங்கம்—21-11-1926]

நமது நாட்டில் தற்சமயம் உண்மையானதும் சுயநலமற்றதுமான பொதுநலசேவை செய்கின்றவர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது, நமது நாட்டு மக்களுக்குள் கற்பிக்கப்

பட்டிருக்கும் பிறப்பு உயர்வு—தாழ்வை ஒழித்து, சமத்துவத்தை ஏற்படுத்தி, அவர்களைச் சுயமரியாதையுடன் வாழச் செய்யவேண்டியதாகும். இதை நாம் பல தடவைகளில் எடுத்துக் காட்டி வந்திருக்கின்றோம்.

எனினும், மக்களுக்குள் சமத்துவமும், சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்பட்டு விட்டால் வாழமுடியாத நிலையில் நமது நாட்டில் சில சமூகமும், சில தனிப்பட்ட மக்களும் இருப்பதால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை இவ்வித்தியாசத்தின்மீதே நிலைநிறுத்திக் கொண்டதால், அவர்கள் மற்றவர்களின் சமத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் விரோதமாக இருந்தே தங்கள் வாழ்நாளைக் கழிக்கவேண்டியதான நிலைமை, அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டு இருப்பதை நாம் மறைத்துப் பேசுவதில் பயனில்லை.

எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் இருந்தேவந்து தங்கள் சுயநலத்தின் பொருட்டு மக்களின் நலத்தைப் பாழ்படுத்தி வந்திருப்பது சரித்திர வாயிலான உண்மையேயாகும்.

எனினும், சமத்துவமும் சுயமரியாதையும் பெற்று முன்னேற்றமடைந்து வரும் நாடுகளின் சரித்திரங்களைப் பார்ப்போமேயானால், முதலில் இக் கூட்டத்துடன் போர் புரிந்து அவர்களை அழித்தபிறகுதான், நாட்டினுடைய மக்களுக்குச் சமத்துவம் கொடுத்து, சுயமரியாதையைக் காப்பாற்றி, தங்கள் தங்கள் நாட்டை முன்னுக்குக் கொண்டுவந்து இருப்பதாக அறியக்கிடக்கும். ஆதலால், நம்நாட்டிலும் பொதுநலத்தொண்டில் ஈடுபடுபவர்கள் இக் கூட்டத்தின் தொல்லைக்குத் தலைகொடுத்துத்தான் ஆகவேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

அனேகமாக, மற்ற நாட்டின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் தடை வேலைக்காரர்களாயிருந்து தீரவேண்டியவர்கள் பெரிதும் மதத்தின் பேரிலேயே தங்கள் தடை வேலைகளைச் செய்துவந்ததாகக் காணலாம். ஆனால், நமது நாட்டில் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் எதிர்த்து நிற்பவர்கள் பெரிதும் அரசியலின்பேரால் தடைக் கல்லாய் நிற்கின்றார்கள். மதக்காரர்கள் என்பவர்களைவிட அரசியல்காரர்கள் என்பவர்களே தொல்லை கொடுக்கின்றார்கள் என்பதற்கு உதாரணம் என்னவென்றால், நமது நாடு இப்போது மதத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதைவிட அரசாங்கச் சட்டத்திற்கே அதிகமாய்க் கட்டுப்பட்டிருப்பதாகும்.

எனவே, எந்தச் சமத்துவமும் சுயமரியாதையும் இப்போது பெரிதும் அரசாங்கச் சட்டத்தைக் கொண்டே செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றது. அதனால் நாம் அரசாங்கச் சட்டமுறையில் சமத்துவம் கேட்கும்போது, எதிரிகள் அரசியலின் மூலமாகத் தான் எதிர்த்தாக வேண்டும். எனவே, அதை அரசியலின் பேரால் வாழ்பவர்கள்தாம் எதிர்த்தாக வேண்டும். அன்றியும், மதக்காரர்களின் எதிர்ப்புக்கு நமது நாட்டில் மதிப்பும் குறைந்துவிட்டதால், அரசியலின் பேரால் தடைவேலை செய்பவர்களுக்கு மதக்காரர்களின் பின்பலமும் தாராளமாய் இருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

நிற்க, நம்முடைய நாட்டிலுள்ள உயர்வு—தாழ்வு முதலிய வித்தியாசங்களைப் போக்க நம்மவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அதற்காகப்பட்ட கஷ்டங்களும் இந்நாட்டில் உள்ள யாவரும் அறிந்ததேயாகும். அவர்கள் வேறு எந்த விதத்திலும் முயற்சி செய்து முடியாததனாலேயேதான் நம்நாட்டு முதிர்ந்த அனுபவசாலிகளும் சுயநலமற்ற பெரியார்களுமாகிய பலர் சேர்ந்து, சமத்துவத்தையும் சந்தர்ப்பத்தையுமே முக்கிய கொள்கைகளாகக் கருதி, அதற்காக நமது நாட்டு அரசியல் தொகுதிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதே முக்கிய நோக்கமாகக்கொண்டு, பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயருடன் ஒரு ஸ்தாபனங் கண்டு, அதற்காகவே பலர் தங்கள் தங்கள் உயிரையுங் கொடுத்து வேலை செய்துவந்தார்கள் என்பதும், பலர் உயிரைக் கொடுக்க இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலை.

அதுபோலவே, அவ்வியக்கத்தை, நாம் மேலே சொன்னதுபோல் உயர்வு—தாழ்வு வித்தியாசத்தாலேயே தங்கள் வாழ்வையும் பிழைப்பையும் நிலை நிறுத்திக்கொண்ட சமூகமும் அவர்களுக்கு அனுகூலமாயிருந்து வாழவேண்டியவர்களான சில தனி நபர்களும் சேர்ந்து அக் கொள்கைகளை ஒப்புக்கொண்டதுபோல் வேஷம் போட்டுப் பல சூழ்ச்சிகள் செய்து எதிர்த்தும், இப்போது நேராகவே வெளிவந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அரசியலின் பேராலும் எதிர்ப்பதும் வெள்ளிடைமலை. இவ்வளவு எதிர்ப்புகளையும் தாண்டி அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதும் ஒருவாறு வெற்றிபெற்று இந்தியா முழுவதிலும் அமுலில் இருப்பதும் தெரிந்ததே.

அதனால் அவ்வுரிமை பெற்ற சமூகங்கள் ஒவ்வொன்றும் ஒருவாறு சமத்துவமும், சம சந்தர்ப்பமும், சுயமரியாதையும் உணர்ச்சியும் பெற்றிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். ஆனாலும், இப்போது அதை மேலும் கேட்பதை மறுப்பதற்கும் உள்ளதையும் ஒழிப்பதற்கும் மேற்கண்ட கூட்டமே அரசியலின் பேரால், அதாவது, சர்வகட்சி மாநாட்டின் பேராலும் தேசத்தின் பேராலும் செய்யும் சூழ்ச்சியும் நமக்குத் தெரிந்ததாகும்.

நிற்க, தற்காலம் இந்தியாவுக்கு அளிக்கப்படப் போகும் அரசியல் சுதந்திரம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதை விசாரித்தறிவதற்கென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டார் நியமித்தனுப்பிய சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பது என்கின்ற ஒரு சூழ்ச்சியையும் குறிப்பாக இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டே ஆரம்பித்து மக்களை ஏமாற்றுவதும், தாங்கள் மாத்திரம் தங்களுடைய இஷ்டப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்க ஒரு அரசியல் சுதந்திரத் திட்டத்தை ஏற்பாடு செய்துகொண்டு, அதைப் பொதுஜனங்களின் பேரால் சைமன் கமிஷனுக்குத் தெரியப்படுத்துவதான வேலையில் ஈடுபட்டிருப்பதும் வெள்ளிடை மலையேயாகும். இந்த நிலையில் இந்திய மக்களின் பொது அபிப்பிராயம் என்ன என்பதை அக் கமிஷனுக்கு வெளிப்படுத்தப் பொதுஜனங்களும் குறிப்பாக முகமதியர்களும், கிறிஸ்தவர்களும், பார்ப்பனரல்லாதார்களும், தாழ்த்தப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும், தீண்டப்படாதவர்கள் என்று விலக்கப்பட்ட மக்களும் மிகுதியாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும் இதுவரை அது கூடாது என்பதற்குச் சரியான காரணமோ அல்லது எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படியான வேறு மார்க்கமோ எடுத்துச் சொன்னவர்களும் இல்லை.

பல கூலிகள் மாத்திரம், மக்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதைப்பற்றி, 'தென்னாட்டில் ஒரு பகுதியில் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேரால், யாரோ சிலர் மாத்திரம்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்கள்; பொது மக்கள் கேட்கவில்லை' என்கின்ற ஒரு மந்திரத்தையே சொல்லிக்கொண்டு, இதைப் பொதுமக்கள் நம்பும்படி பிரச்சாரம் செய்து, இதனாலேயே சைமன் கமிஷன் கண்ணிலும், பொதுமக்கள் கண்ணிலும் மண்ணைப் போட்டுத் தெரியாமல் செய்துவிடலாம் என்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு, நமது நாட்டில் ஒரு வயிற்றுப் பிழைப்புப் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். ஆனால், இவர்களுக்குத் தக்க பதில் கீழ்க்கண்ட வார்த்தைகள்தாம்.

அதாவது, எட்டுக் கோடி மக்கள் கொண்ட முகமதியர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்களா, இல்லையா என்பதும்,

அய்ந்து கோடி ஜனசமூகங் கொண்ட தீண்டாதவர்கள் என்பார்கள் எல்லோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கிறார்களா, இல்லையா என்பதும்,

பார்ப்பனரல்லாதார் இயக்கம் வகுப்புவாரி இயக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டதா, இல்லையா என்பதும்,

கிறிஸ்தவர்களும், அய்ரோப்பியரும், ஆங்கிலோ இந்தியரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்கின்றார்களா, இல்லையா என்பதுமேயாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—16-12-1928]

இந்தியாவில் முதன்முதலாக அரசியல் கிளர்ச்சி உண்டாக்கப்பட்டதன் உத்தேசமே இந்திய ஆட்சி உத்தியோகம் முழுவதும் ஆங்கிலேயர் கையிலே இருப்பதால், இந்தியர்களுக்கும் இந்திய அரசாட்சியில் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டேதான் ஏற்படுத்தப்பட்டது என்பது எல்லா அரசியல் வாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இப்படிக் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டதென்றால், ஆங்கில அரசாட்சியின் பயனாக நமக்குச் சற்று கல்வி, அன்னியநாட்டு வர்த்தமானம் முதலியவைகள் மூலம் அரசியல் விஷயங்கள் அறிய வசதி ஏற்பட்டதேயாகும். ஆகவே, அவர்களது ஆசையானது அரசாட்சி உத்தியோகங்களில் புகுந்து அதை அடைவதற்கு அரசியல் ஸ்தாபனம் என்பதை ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலமாய்த் தங்களுக்கு இன்ன இன்ன உத்தியோகங்களில் உரிமை கொடுக்க வேண்டும் என்றும், பிறகு அதில் இத்தனை இத்தனை இடங்கள் தங்களுக்கே (இந்தியர்களுக்கே) வேண்டுமென்றும், அதற்குப் பிறகும் அது இன்ன இன்ன மாதிரியில் கிடைக்கக்கூடியதாய் இருக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டது போலவே, அரசாங்கத்தாரும் சம்மதித்து நாளா வட்டத்தில் கொடுக்கப்பட்டும் வந்திருக்கின்றது. அது போதாதென்று கேட்கப்பட்டு வருகின்றது.

எனவே, மேற்கண்டமாதிரியான பிரதிநிதித்துவமும் சுதந்திரமும் மக்களுக்குக் கிடைத்ததில் அவைகள் பெரும் பெரும் பதவிகளாகவும், பெரும் பெரும் வருவாய் உள்ளதாகவும், பெரும் பெரும் அதிகாரங்கள் உள்ளவைகளாகவும் மக்களுக்கு அவை கவுரவமும் புகழையும் உடையவைகளாகவும் ஏற்பட்டுவிட்டதால் அவைகள்மீது எல்லா மக்களுக்கும் ஆசை ஏற்பட்டு, ஒவ்வொருவரும் அதை அடைய முயற்சிசெய்ய வேண்டியதாய்விட்டது. இதன் பயனாய்ப் பதவிகள் எல்லாம் அரசியல் ஸ்தாபனங்களில் முன்னணியில் இருப்பவர்களுக்குக் கிடைக்கக் கூடியவைகளாய்விட்டபடியால், அரசியல் ஸ்தாபனத்தின் மூலமாய்த் தங்களுக்குக் கிடைக்காது என்று கருதினவர்களுக்கும், அந்த ஸ்தாபனங்களில் செல்வாக்குப் பெற முடியாமல் தடுக்கப்பட்டிருந்தவர்களுக்கும் தங்களுக்கென்று தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியங்கள் ஏற்பட்டு விட்டன. ஆனதினால், அதற்காகப் பதவி—அதிகாரம், உத்தியோகம் ஆகிய ஆசை கொண்டவர்கள் ஒரே ஸ்தாபனத்தை நம்பிக் கொண்டிருக்க முடியாமல், தனித் தனியாகப் பிரிந்துபோய் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இவர்கள் தங்கள் ஸ்தாபனங்களுக்கு ஏதாவது ஒரு கொள்கையும் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் ஆனார்கள். இதனால் அவசியமில்லாத கொள்கைகளை உண்டாக்கவும், அவசியமான கொள்கைகளை மறுக்கவும், மறைக்கவும் வேண்டிய அவசியம் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது. ஆகவே, இந்த வேலைகள் சற்றுப் படித்தவர்களுக்கே வேண்டியிருந்ததாலும், படித்தவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவே இருந்ததாலும், பார்ப்பனரல்லாத படித்தவர்கள் மிகச் சுருக்கமாக இருந்ததாலும், பார்ப்பனரல்லாத பொதுமக்கள் பாமர மக்களாக இருந்ததாலும் பார்ப்பன சூழ்ச்சியை வென்று அரசியல் ஸ்தானத்தின் உத்தியோகங்களிலும் பதவிகளிலும் பங்குபெற முடியாத பார்ப்பனரல்லாதார்கள் அரசியல் துறையை விட்டு, சமூகத்துறையின் பேரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலம் மக்களைத் தங்கள் வசப்படுத்த, அரசியலில் பங்குபெற முயற்சிக்க வேண்டியவர்களானார்கள்.

இந்தக் காரணத்தால் ஏற்பட்டதுதான் பார்ப்பனரல்லாதார் இயக்கம். இந்த ஸ்தாபனக்காரர்கள் முன்கூறியதுபோல் தங்களுக்கும் ஏதாவது ஒரு கொள்கையைக் கண்டு

பிடிக்கவேண்டியிருந்ததால் தங்களுக்குக் கிடைக்கும் உத்தியோகத்தையும், பதவியையும் எல்லா வகுப்பு மக்களுக்கும் எண்ணிக்கைப்படி பங்கு போட்டுக் கொடுப்பதாவும் தங்களுடன் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை என்றும் சொன்னதோடு, புதிதாக ஏற்படுத்தப் பட்ட இயக்கமாதலால் அதற்குச் சற்று பலம் வேண்டும் என்று கருதி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட சுயராஜ்யம் அடைவது என்கின்ற பேரையும் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திலும் இராஜவிசுவாசப் பல்லவியும் பாடிவரலாயினர்.

இராஜ விசுவாசம் என்பது காங்கிரஸ் ஆரம்பித்த காலம் முதற்கொண்டே எந்தக் கூட்டத்திலும் முதன் முதல் செய்யுந் தீர்மானமும், கூட்ட முடிவில் பாடும் இராஜ வாழ்த்துப் பாட்டுமாகும். ஆகையால், பார்ப்பனரல்லாதார் கட்சியாரும் அதையே பின்பற்ற வேண்டியதாயிற்று.

எனவே, இந்தப் புதிய கட்சி எல்லோருக்கும் பங்கு கொடுக்கச் சம்மதித்துப் பார்ப்பனர்களை விலக்கியதாகத் தெரிந்தவுடன் எல்லோரும் இதில் சேர்ந்தனர். இதைக் கண்ட பார்ப்பனர்கள் இதை ஒழிக்கக் கருதி, வகுப்புத் துவேஷக் கட்சியென்றும், தேசத் துரோகக் கட்சி என்றும், உத்தியோக வேட்டைக் கட்சி என்றும் தூற்ற ஆரம்பித்தார்கள். என்ன தூற்றியும் புதிய கட்சிக்குக் கூட்டம் அதிகமாகிவிட்டதால் அதை வேறு விதத்தில் ஒழிக்கக் கருதி, பார்ப்பனரல்லாதார்களிலே சிலரை—உத்தியோகத்திற்குத் தகுதி இல்லாத ஆட்களையும் தனி சுயநலவாதிகளையும், போதுமான புத்தியில்லாத ஆட்களையும் பிடித்து மற்றொரு பார்ப்பனரல்லாதார் கட்சியொன்று ஆரம்பித்து— அதாவது அவர்கள் 'தென் இந்தியர் நல உரிமைச் சங்கம்' என்று பேர் வைத்தால், இவர்கள் அதை வேறு வார்த்தையில் 'சென்னை மாகாண மக்கள் சங்கம்' என்று பேரிட்டு, இதிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்தவம் கொடுப்பதாயும், பார்ப்பனர்களைச் சேர்ப்பதில்லை என்றும் கொள்கைகள் வைத்து, இராஜவிசுவாசத்தை மாத்திரம் மாற்றி, சங்கத்தை நடத்தினார்கள். கடைசியாக அந்தப் புதிய இயக்கமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பலமாக வலியுறுத்தியவுடன் பார்ப்பனர்கள் தாங்களாகவே அதை அழித்துவிட்டு, அதிலிருந்த சில ஆட்களைக் கொண்டே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய வைத்தார்கள். இதிலிருந்துதான் காங்கிரசில் ஒத்துழையாமையில் இருந்த பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் அபிப்பிராய பேதம் தொடங்கலாயிற்று.

['குடி அரசு'—தலையங்கம்—19-4-1931]

இந்தியர்களின் அடிமைத் தன்மைக்கும், இழிநிலைக்கும், மதமும், சாதியும், வகுப்பும் அவை சம்பந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும். சடங்குகளும் இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கைகொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும். இதன் காரணமாய் மக்கள் வலுவிழந்து, சுயமரியாதை யிழந்து, சுதந்திரமற்று, நடைப் பிணங்களாகவும் பகுத்தறிவற்ற மிருகத்தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக சென்னை மாகாணத்தை எடுத்துக் கொண்டால், சுமார் $3\frac{3}{4}$ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 385 சாதிகளாகவும் மற்றும் பல உள்பிரிவு சாதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாளேற நாளேற நாகரிகத்தின் காரண மாகவும் செல்வநிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான சாதிப் பிரிவுகளும் ஏற்படும் நிலையிலேயே தேசம் போய்க்கொண்டிருக்கின்றதே தவிர, ஒன்றுபடத்தக்க முயற்சியோ அறிகுறியோ இல்லை.

இந்தியாவில் 8-ல் ஒரு பாகம் கொண்ட சென்னை மாகாணத்திலேயே 385 சாதிகள் என்றால், மீதி 7 பாக மக்கட்தொகையில் எத்தனை சாதிப் பிரிவுகள் இருக்கக்கூடும்!

இந்த சாதிப் பிரிவுகள் மாத்திரமல்லாமல் உயிரினும் தேசத்தினும், முக்கியமாய் கருதவேண்டியதான 'தாய் பாஷை'ப் பிரிவுகள் எவ்வளவு!

இவ்வளவு சாதியும் தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல், தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு-தாழ்வு என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற உள் எண்ணமும், வெளி நடவடிக்கைகளும், வெறுப்பும், துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும் யாரோ சில சோம்பேறிகளும் சுயநலக்காரரும் 'தேசியம்' என்று சொல்லி, மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால், நாடு எப்படி க்ஷேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம்தான் இந்தத் தேசிய வயிற்றுப் பிழைப்பு, வியாபாரம், நடத்த முடியுமே யொழிய இது என்றும் நிலைத்திருக்க முடியாது.

வகுப்புவாதம் சொல்லக்கூடாது என்பதன்மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வழியற்ற தேசியவாதிகளையும், உத்தியோகம்-பதவிப் பிரியர் களையும் மிரட்டலாமேயொழிய, வகுப்புப் பிரிவுகளாலும் உயர்வு-தாழ்வு வித்தியாசங் களாலும் உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா?

வகுப்பு வாதம், மதவாதம், சாதிவாதம் பேசி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப்போகின்றது என்று திப்பிலி, தேசாரம், சதகுப்பை இவைகளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டதைக் கண்டு நாம் சிறிதும் இலட்சியம் செய்யவில்லை.

அந்தப்படி பேசும், எழுதும் யோக்கியர்களில் 100-க்கு அரைப் பேராவது தங்கள் மதத்தையும், உள் மதத்தையும், சாதியையும், வகுப்பையும் விட்டுவிட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

ஆகவே, தேசியம் என்பதும், தேசியப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும் செய்து விடுகிறது?

எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று ஒரு மதம், ஒரு சாதி, தனி வகுப்பு என்பதாகப் பிரிக்கப்பட்டதோ, பின்பு—அவன் தனது மதம், சாதி, வகுப்புக்கு என்று உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ, அயோக்கியத்தனமோ இருக்க முடியும்?

வகுப்பு வாதம், மதவாதம், சாதிவாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவ ராவது மதத்தையும், சாதியையும், வகுப்பையும் அழிக்கச் சம்மதிக்கிறார்களா? அது மாத்திரமல்லாமல், பார்ப்பனர் முதல் பறையர் வரை அவரவர் வகுப்புக்கு உயிரைவிட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கிறார்களே ஒழிய, ஒருவராவது சாதிமத வகுப்புகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

வகுப்பையும், மதத்தையும், சாதியையும் ஒருபுறம் காப்பாற்றிக்கொண்டு—மற்றொரு புறத்தில் சாதி, மத, வகுப்புப் பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம் என்று சொன்னால், அப்படிச் சொல்வது ஆயிரம் மடங்கு அயோக்கியத்தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத் தன்மையும் துரோகத் தன்மையும் ஆகாதா என்பதோடு இது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ்மக்கள் தன்மையல்லவா அது?

தேசம், உயிரினங்களுக்குப் பொதுவானதாகும்; தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும். எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தைத் தெரிவிக்கவும், ஆட்சியில் பங்குபெறவும் உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்க முடியாததாகும், ஏதோ சில வஞ்சகக்காரர்களது செல்வாக்குக் காலத்தில் அவர்களது ஏய்ப்பில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுக்க ஈனமுள்ள அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட அக்கிரமங் களாலும், கொடுங்கோன்மைகளாலும் சாதிமத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு, ஒரு சாதி மத வகுப்பை, மற்றொரு சாதிமத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு சாதிமத

உழைப்பில் மற்றொரு சாதிமத வகுப்பு சோம்பேறியாய் இருந்துகொண்டு உண்டு வாழும் படியாயும் செய்யப்பட்டு விட்டதனாலேயே, எல்லாக் காலங்களிலும் எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு உதவியாகவே இருக்க வேண்டுமா என்றும், யாரோ சிலருக்குப் பிழைப்பதற்கு வேறு வழியில்லாததனாலேயே அந்த ஈனர்களுக்குக் கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடைய வேண்டுமா?

ஏதாவது ஒரு மனிதன், தன்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், தன்னுடைய சாதி வலுவிழந்த சாதி என்றும், தன்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டதென்றும் சொல்லி, அதன் காரணமாக ஆட்சியில் தனக்குள்ள பங்கு இன்னது என்பதைத் தெளிவாய்ச் சொல்லி, 'என்னை நீ அடக்கியாள முடியாதபடி செய்து விடு' என்று சொல்வதில் என்ன தப்பு? இதற்குப் பதில் சொல்லாமல் அப்படிக் கேட்பது 'குலாம் தன்மை' என்றும், தேசத் துரோகத்தனம் என்றும் சொல்லுவதானால் அப்படிச் சொல்லுகின்றவர்களை எப்படிச் சொல்லுவது? 'வயிற்றுப் பிழைப்புக்கு எச்சில் இலை பொறுக்கும் இழி தன்மை' என்று ஏன் சொல்லக்கூடாது? தன் பங்கைத் தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே, எந்த மத, சாதி, வகுப்பாருடைய பங்கையானாலும் மறுத்து ஏமாற்றப் பார்த்தால் கண்டிப்பாக அந்த நாடு கேடுறுவது திண்ணம்.

['குடிஅரசு'-தலையங்கம்—8-11-1931]

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோருவதே பார்ப்பனரல்லாத சமூகங்களின் (ஜஸ்டிஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதே பார்ப்பன சமூக (காங்கிரஸ் கட்சி) அரசியல் கிளர்ச்சியாகவும் இருந்துவருகின்றது என்பதை அனேக ஆதாரத்துடன் எடுத்துச்சொல்லலாம்.

இன்று இந்நாட்டின் மதங்களின் பேரால் உள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, சீக்கிய ஸ்தாபனங்களும் வகுப்புக்களின் பேரால் உள்ள மேல் சாதி, நடு சாதி, கீழ் சாதிகள் என்று சொல்லப்படும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப் பட்ட வகுப்பு ஸ்தாபனங்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே கண்ணாகக்கொண்டு கிளர்ச்சிகள் செய்வதை யாரும் மறுக்கமுடியாது.

['குடிஅரசு'-தலையங்கம்—1-9-1925]

1939 ஆம் வருஷத்தில் காங்கிரஸ் ஆட்சியில் தயாரிக்கப்பட்ட இம் மாகாண சர்க்கார் நிர்வாக அறிக்கையில் உள்ள உத்தியோகப் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் புள்ளி விவரம்:

சம்பளம் (உத்தியோகம்)	பார்ப்பனர்	பார்ப்பனரல்லாதார்
1. கெஜட்டட் ஆபீசர் என்னும் சற்றேறக்குறைய மாதம் ரூ. 300-க்கு மேல் 5000 ரூபாய் வரை சம்பளமுள்ள நீதி நிர்வாக இலாக்கா பெரிய உத்தியோகங்களில்	609	398
2. மாதம் ரூ. 100-க்கு மேற்பட்ட உத்தியோகங்களில்	3667	2492
3. மாதம் ரூ. 35-க்கு மேற்பட்ட குமாஸ்தா முதலிய உத்தியோகங்களில்	9183	8042
4. மாதம் ரூ. 35-க்குக் கீழ்ப்பட்ட பியூன், பங்கா இழுத்தல், எடுபிடி வேலை ஆகிய உத்தியோகங்களில் மாத்திரம்	1513	33662

ஆகவே, இப் புள்ளி விவரங்களிலிருந்து மேல் வேலைகளில் கொழுத்த சம்பளங்கள் உள்ளவைகளில், 100-க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனர்கள் சரி பகுதிக்கு மேலாகவும்,

ஒன்றுக்கு இரண்டாகவும் இருந்துவருவதும் கீழ்த்தர, இழிவான, குறைந்த சம்பள உத்தியோகங்களில் பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதாரே ஆயிரக்கணக்காக இருந்துவருவதும் விளங்கும். இப்படி இருந்தும் நாம்தாம் உத்தியோக வேட்டைக்காரராகவும், பார்ப்பனர்தாம் தேசியவாதிகளாகவும் தேசத்திற்காகச் சகலமும் தியாகம் செய்த துறவிகளாகவும் விளம்பரம் செய்யப்படுகிறது.

[திருவாரூரில், 24, 25-8 1940-ல் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டுத் தலைமையுரை—'குடிஅரசு' 25-8-1940]

கடைசியாக நான் கூறுவது நமக்கு அழிவையும் கீழ்த்தன்மையையும் வசதியின்மையையும் கொடுக்கிற இந்த சாதிகள் ஒழிந்து, மக்களுக்குச் சமமான தன்மை வரும்வரை, இப்போதைய பிற்பட்ட வகுப்பினருக்கு அறிவு வளர்ந்து நாகரிகம் அடைந்து அரசியலில் கலந்துகொள்வதற்காகக் கல்வி, உத்தியோகம் முதலியவைகளில் அவரவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்பதுதான்.

இந்த நாட்டில் பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேராயும் ஆதித் திராவிடர்கள் 16 பேராயும், பார்ப்பனரல்லாதார் 100-க்கு 72 பேராயும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கைப்படிதானே அவரவர்களுக்கு உத்தியோக விகிதாச்சாரம் கொடுக்கவேண்டும்? அதை விட்டுவிட்டுத் தகுதி, திறமை என்ற பேரைச் சொல்லி பல துறைகளில்—'எல்லாவற்றையும் நானே எடுத்துக்கொள்வேன், உனக்கு ஒன்றுமில்லை' என்று பார்ப்பனர்கள் கூறினால், அதை நாம் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? ஒரு கூட்டு வியாபாரத்தில் கடைசியில் வருகிற இலாபத்தில் அவரவர்கள் போட்ட முதலுக்கு ஏற்றவாறுதானே பங்கு பிரிக்கவேண்டும்? அதைவிட்டு, எல்லாவற்றையும் ஒருவனே எடுத்துக்கொள்வது என்பது என்ன நியாயம்? நம்மவர்களுக்குள்ளேயும் சாதியின்படியே வேண்டுமென்றால் எடுத்துக்கொள்ளட்டும். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், சாதிகளை ஒழிக்காமல் அவைகளை விட்டு வைத்துக்கொண்டு, இதிலே மட்டும் சாதித் தன்மை கூடாது என்பதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? நாம் வரி கொடுக்கின்றோம். நமக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டும் என்று கேட்பது வகுப்புவாதமா? சுயராஜ்யம் வந்தபின் உத்தரவு போட்டுடுமே—சாதி இல்லையென்று. அதை விட்டுவிட்டு, மதச் சார்பற்ற சர்க்கார் என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, ஸ்டாம்பில் கோபுரத்தை, நடராசர் உருவத்தை வைத்துக்கொண்டிருப்பது என்றால் என்ன நியாயம்?

100-க்கு 80 பேராக இருக்கும் நமக்கு 45 விகிதம்தான் உத்தியோகம். ஆனால் 100-க்கு 3 பேராய் இருக்கும் பார்ப்பனருக்கு 15 விகிதம் கொடுக்கிறார்கள். நமக்கு ஆளுக்கு ½ வீதம், பார்ப்பனருக்கு மட்டும் ஆளுக்கு 5 வீதமா? இதைக் கேட்பது வகுப்புவாதமா?

[குன்னத்தில், 2-4-1950 ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1950]

நாம் நம்முடைய உரிமைகளைப் பெறுவது என்றாலே என்ன அர்த்தம் என்றால், நம்முடைய உரிமைகளைப் பறித்து அனுபவித்து வருகிற எதிரிகளின் ஆதிக்கம் அழிவு என்றுதான் அர்த்தம் ஆகும். அவர்களுடைய அழிவின்மீதுதான் நாம் நம்முடைய உரிமைகளைப் பெறமுடியும். அந்த அளவுக்கு அவர்கள் நம்மீது நம் உரிமைகளைப் பெறுவதற்கில்லாமல் ஆதிக்கம் பெற்று இருக்கிறார்கள்.

ஆனால், இந்தக் காரியம் சுலபமானதல்ல; சாதாரணமாகச் சாதித்து விடலாம் என்கிறதான தன்மையில் இல்லை. இது மிகப்பெரிய காரியம் என்பதோடல்லாமல் மிகமிகப் பயங்கரமான—பலர் பலியாக வேண்டிய காரியமாகும். நம்முடைய எதிரிகளுக்கு இருக்கிற வசதிகளும், பக்கபலமும் மிகமிக ஏராளமானவைகள். மதமும், கடவுளும், சாஸ்திரங்களும்; ஆட்சியும், அதனைச் சார்ந்தவைகளும் அவர்கள் பக்கம் இருக்கின்றன என்பதுடன்,

நம்முடைய எதிரிகளைப் பாதுகாப்பதற்கு ஆகவே, நம்முடைய எதிரிகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக வென்றேதான் அவைகளோடுகூட சர்க்காரும் இருந்துவருகிறது.

எதிர்த்துப் போராடுகிற நம் எதிரிகளுக்கு ஒற்றுமை அதிகம்; நமக்கு எவ்வித பலமும் கிடையாது; நமக்குள் ஒற்றுமையும் கிடையாது; துரோகிகளும் அதிகம். ஆனாலும் நாம், பலமிக்க வலுவுற்றிருக்கும் நம்முடைய எதிரிகளை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இதற்கு மனத்துணிவு வேண்டும்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

இந்தியா சாதிப் பிரிவாக அமைந்த நாடு. இந்த சாதி, மதத்தின் அடிப்படையிலும், மத தர்ம அடிப்படையிலும் இருந்து வருவதுடன், ஆட்சிக்கொள்கையும் 'சாதி–மத–தர்ம அடிப்படையில் கைவைக்கக்கூடாது' என்ற தன்மையில் இருந்து வருகிறது.

இது மாத்திரமல்லாமல், பல நாடுகள் சேர்ந்த உபகண்டமாக இந்தியா இருப்பதால், நாடுகளின் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டியதாய் இருக்கிறது.

வெகுகாலமாக இந்திய மக்களுக்குக் கல்வி அறிவும், உரிமை உணர்ச்சியும் இல்லாம லிருந்த காரணத்தினால் கையில், சூழ்ச்சியில், ஏமாற்றும் சக்தியில் வலுத்த கூட்டத்தினர் சகல துறைகளையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டு சாதியில், கீழ்த் தரத்தில் உள்ள 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்களை 100-க்கு 3 பேராக உள்ள மக்கள் மத தர்ம காரணமாய் மேல்சாதி ஆக நேர்ந்த வாய்ப்பை வைத்துக்கொண்டு, எந்த விதத்திலும் தலைதூக்கவிடாமல் அழுத்தி வைத்துக்கொண்டே வந்தார்கள்.

அன்னியன் ஆட்சி காரணமாய் ஏதோ ஒருவகையில் கல்வியும் உரிமையும் பெறத் தக்க உணர்ச்சி கொண்டுவிட்டபடியால், போராடிப் பெறவேண்டிய தகுதிக்குத் தமிழர்கள் வந்துவிட்டார்கள்.

தமிழருக்கு என்றைய தினம் இந்த உணர்ச்சி ஏற்பட்டதோ அன்று முதல் பார்ப் பனர் அறிவிழந்து துள்ளிக்குதித்து, அவர்கள் வசமிருந்த எல்லா ஆதிக்கத்தையும் பாழாக்கி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில், தமிழர்கட்கு வகுப்பு உணர்ச்சி ஏற்பட்ட காலமான 1920ஆம் ஆண்டு முதல் நாட்டில் ஒழுக்கம், நாணயம், அமைதி, கண்ணியம், நீதி, நேர்மை முதலிய எல்லா நற்குணங்களையும் ஒழியும்படி செய்துவிட்டார்கள். யோக்கியன், அயோக்கியன் என்ற பேதமே இல்லாமல் செய்துவிட்டார்கள். மனிதனுக்கு மனிதன் தான் எப்படிப்பட்ட ஈனத் தன்மையான காரியங்களைச் செய்தாவது வாழவேண்டியதுதான் மனிதப் பண்பு என்று ஆக்கிவிட்டார்கள். ஆண்களோ, பெண்களோ யாரும் ஒழுக்கத்தைப்பற்றியோ, நாண யத்தைப்பற்றியோ சிந்திப்பது முட்டாள்தனமென்றே ஆக்கிவிட்டார்கள்.

இன்றைய நிலைமைச் ஒரு இராணுவ ஆட்சி ஏற்பட்டுச் சர்வாதிகார அரசு ஏற் பட்டால் ஒழிய, மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படாது; நல்வாழ்வு ஏற்படாது என்கின்ற நிலையை உண்டாக்கிவிட்டார்கள்.

காரணம், 'தங்கள் நிலை பாதுகாப்பாய்விட்டது; மற்ற எவன் எக்கேடு கெட்டால் தான் நமக்கென்ன?' என்கின்ற முடிவுதான். இப்பொழுது இந்த இரண்டு ஆண்டு காலமாக இந்தியாவில் நாடு முற்றும் ஒவ்வொரு நாட்டிலும் எளிதில் அடக்கமுடியாத காலித்தனங்கள் தாண்டவமாடுகின்றன. அதுவும், உலக அறிவு அற்ற, பொறுப்பு அற்ற இளைஞர்களைக் கொண்டு துவக்கச்செய்து, காலிகளை ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு காலித்தனங்கள் நடைபெறச் செய்துவருகிறார்கள்.

மனுதர்மத்திற்கு மாறான தன்மையைக் காங்கிரஸ் கொள்கையாகக் கொண்டவுடன் நாட்டை அந்நியன் வசப்படுத்தியாவது, தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். நாட்டில் இமயம் முதல் குமரிவரை உள்ள எல்லாச் செல்லாக் காசுகளையும், கீழ்த்தர மக்களையும், சமுதாய எதிரிகளையும், எதைச் செய்தாவது வயிறு பிழைக்குந் தன்மையில் உள்ளவர்களையும் தேடிப்பிடித்துத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, பேடி யுத்தம் நடத்துகிறார்கள்.

இந்த நிலையில் பொறுப்பும், நேர்மையும் உள்ள மக்கள் எல்லாம் பயந்துகொண்டும் மறைந்துகொண்டும் வாழவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

நாட்டின் நிலைக்கு ஒரு சின்ன எடுத்துக்காட்டு காட்டுவதானால், அண்மையில் நடந்த தேர்தலையே பார்க்கலாம். தேர்தலில் அபேட்சகர் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம், இரண்டு லட்சம் ரூபாய்வரை செலவு செய்து இருப்பதுடன், இப்படிச் செலவு செய்தவர்கள் சிலர் தோற்றும் போயிருக்கிறார்கள் என்பதும், சில காலிகள் தேர்தலில் நின்றதன்மூலம் 10, 20, 30 ஆயிரம் ரூபாய், ஒரு லட்ச ரூபாய்வரை பணம் சேர்த்துக்கொண்டார்கள் என்று கூடச் சொல்லும்படியான அளவுக்குக் காரியம் நடந்திருக்கிறது என்கிறார்கள். காமராசரைத் தோற்கடிப்பதற்காக இரண்டரை இலட்சம், மூன்று இலட்சம் செலவு ஆயிற்று என்று சொல்லுகிறார்கள்!

இந்த நிலைபற்றி நான் சொல்லுவது அபேட்சகர்களைப் பொறுத்தோ, கட்சிகளைப் பொறுத்தோ, அரசியல் தன்மையைப் பொறுத்தோ மாத்திரம் அல்ல; மக்களைப் பொறுத்துமேதான் கூறுகிறேன். இப்படிப்பட்ட நாட்டில் பொதுத்தொண்டு, அரசியல் தொண்டு, சமுதாயத்தொண்டு என்று எதைச் செய்கிறது என்பது நமக்குத் தோன்றவில்லை.

முதலாவது, நம்மைத் திருத்திக்கொண்டுதான் எந்த வேலையையும் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

இந்த நிலை இப்படியே இருக்குமானால், நமது எதிர்காலம் மிகமிக மோசமாகப் போய்விடும். ஆனதால், இப்போது உள்ள வசதியைக்கொண்டு நமது வகுப்பு விகிதாச்சார உரிமையை நாம் முதலில் பெற்று ஆகவேண்டும். அதற்குப் பல சங்கடங்கள் ஏற்படலாம் என்றாலும் எதிரிகள் கையாளும் எல்லா முறையையும் நாம் கையாளப் பின்வாங்கக்கூடாது.

மற்றும், மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் வேலையில் நாம் தீவிரமாய், அதிதீவிரமாய் ஈடுபட்டாகவேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன் நாம் சென்ற அளவில் நமது சுய மரியாதைக் கொள்கைகளைப் பரப்புவதில் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம்தான் பாமர மக்கள், இளைஞர்கள் நம்மிடம் பற்றுக்கொள்ளுவார்கள்.

அரசியல் பணிக்குக் கருத்து வேற்றுமை, கொள்கை வேற்றுமை போட்டி உண்டு. மூடநம்பிக்கையை ஒழிப்பதற்கு இவை குறுக்கிடாது; பார்ப்பனரும், இமிடேஷன் பார்ப்பனரும் தவிர, மற்ற மக்கள் யாவரும் நம்முடன் சேருவார்கள்; ஆதரவளிப்பார்கள்; அதற்கு இது தக்க சமயம்; தக்க வாய்ப்பு என்றே கருதுகிறேன்.

நாம் இந்த எண்ணம் கொண்டுதான் காங்கிரசை ஆதரித்தோம். ஆனால், காங்கிரஸ் நம்மை ஆதரிக்கவில்லை; சிறிதுகூட ஆதரிக்கவில்லை. அரசியல் தன்மையில் நெருங்கினதால் பாமர மக்கள் நம்மீது பற்றுக்கொண்டிருந்தும் நம்மை ஆதரிக்கவில்லை. கடைசியாய்ச் சொல்லுகிறேன். எனக்கு வயது 88. இனி நான் எவ்வளவு நாளைக்கு இருக்க ஆசைப்படமுடியும்? எவ்வளவு நாளைக்குத்தான் இருக்க முடியும்? என் நிலை எனக்குத் தெரியும். அதனால்தான் சொல்லுகிறேன், வகுப்புரிமை பெற்றே ஆகவேண்டும் என்று.

['விடுதலை'-தலையங்கம்—18-3-1967]

பதவிகள் வழங்குவதில், உத்தியோகம் வழங்குவதில் அரசாங்கம் எந்தச் சாதியாருக்கும், எந்த மதத்தினருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது.

ஒவ்வொரு சாதிக்கும், ஒவ்வொரு மதத்திற்கும் அதைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அந்த எண்ணிக்கை விகிதப்படி பதவி, உத்தியோகம் முதலியவைகளை வழங்கவேண்டும்.

தகுதி, திறமை என்பதெல்லாம் எல்லா சாதி-மத வகுப்பிலும் சமமாக இருந்து வருகின்றன. ரொம்பவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கள் என்பவைகளுக்குத் தகுதியிலேயே சலுகை காட்டப்பட்டு வருகிறது; அதுவும் சட்டப்படியே காட்டப்பட்டு வருகிறது. இப்படிக் காட்டப்பட்டு வருவதால் அதன் காரணமாய் நிர்வாகம், நாணயம், பண்பு, நேர்மை ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று பேதம் காணும்படியாக எதுவும் தென்படவில்லை.

மேல் சாதியாரில், மேல் நிலையில் ஐ. சி. எஸ். (I.C.S)ல் உள்ளவர்களில் நாணயக் குறைவு, ஒழுக்கக் குறைவு, பண்புக் குறைவு இருந்திருக்கிறது என்றால், அது பெருவாரி எண்ணிக்கையுள்ள மற்ற சாதி வகுப்பாரை விடச் சிறு எண்ணிக்கையுள்ள பார்ப்பனச் சாதியில்தான் அதிகமாக இருந்துவந்திருக்கிறது. அதுபோலவே, கூடுதலாக எண்ணிக்கையுள்ள இந்து மதக்காரர்களைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்கின்ற மதஸ்தர்களில்தான் அதிக விகிதாச்சாரப்படி நடந்திருக்கிறது.

சலுகை, சிபாரிசு, அந்தந்த இனத்தாரின் பிரவேசம், மேல் பதவிகளில், நீதிபதிகளில் அந்த இனத்தார் இருப்பது ஆகிய காரணங்களால் பெருமளவு அவை மறைக்கப்பட்டு விடுகிறதானாலும், பெருவாரியாக உள்ள மக்கள் விகிதாச்சாரத்திற்கும் அதிகம் என்று சொல்லலாம் ஆனாலும், தயவாய்க் கொள்வதனால் குறைந்ததல்ல என்றே சொல்லலாம்.

இவை ஏன் சொல்லப்படுகிறதென்றால், மொத்த ஜனத்தொகை விகிதத்தில் தகுதி-திறமை, நாணயம், நேர்மை, ஒழுக்கம் காரணமாக எந்த சாதி, மத வகுப்பு மக்களும் ஒரு சதம், அரை சதவிகிதம் கூட அதிகமாகவோ குறைவாகவோ பெறத் தக்கவர் யாரும் இல்லை என்பதற்காகவே சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் மிகச்சிறு எண்ணிக்கையுடைய 100-க்கு 2, 3 என்கின்ற கிறிஸ்தவர்களும், பார்ப்பனர்களும் விகிதாச்சார எண்ணிக்கைக்கும் மேல், கொள்ளை விகிதத்தில் ஒன்றுக்குப் 'பத்தாக', 'இருபதாக' என்கின்ற அளவில் பெற்றிருப்பதும்; அது போலவே முஸ்லிம்களும் தங்கள் எண்ணிக்கை விகிதத்திற்குக் குறைவில்லாமல், அதுவும் உயர்—டாப் (Top) பதவிகளை அடைந்திருப்பதும், நாட்டிற்கு உடையவனான தமிழன் அதுவும் மொத்தத்தில் 100-க்கு 60, 70 விகிதத்திற்கு மேற்பட்டவன் தன் விகிதத்திற்குப் பகுதிகூட எட்டமுடியாமல் தவித்துக்கொண்டிருப்பதும் என்றால், பதவி வினியோகத்தில், உத்தியோக வினியோகத்தில் எவ்வளவு மோசடி, வஞ்சகம், சூது, வாது நடக்கிறது என்று சொல்ல வேண்டி இருக்கிறது?

தமிழனே மெஜாரிட்டியாக, பெருவாரியாக வெறும் தமிழனாகவே ஆட்சித் தலைமையிலிருக்கும் ஆட்சியில் இப்படி நடக்கின்றது என்றால், தமிழனின் இழிதன்மைக்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன வேண்டியிருக்கிறது?

பதவி, உத்தியோகம் வழங்குவதில் சாதி, மதம் பார்க்கக்கூடாது என்பதாகச் சட்டம் இருக்கிறது என்றால் அந்தச் சட்டத்தின் கருத்து குறைந்த சாதி, மத வகுப்புக்கு அதிக எண்ணிக்கை கொடுக்கவேண்டும் என்பதும் சாதி-மத வகுப்பில் அதிக எண்ணிக்கை உள்ளவர்களுக்குக் குறைந்த விகித பதவி-உத்தியோகம் வழங்க வேண்டுமென்பதும்தான் அர்த்தமா?

அப்படியில்லாவிட்டால், பார்ப்பனர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் என்பவர்களுக்கு மாத்திரம் இவ்வளவு அதிகமாகவும், குறைவில்லாமலும் எப்படிக் கிடைக்க முடிகிறது? இது ஆட்சியிலிருப்பவர்களின் கவலையற்றதும், சுயநலத்திற்கு எதையும் விட்டுக் கொடுக்கலாம் என்கின்ற தன்மையுமல்லாமல் வேறு என்ன?

இவற்றையெல்லாம்விடத் தமிழனுக்கு ஒரு பெரும் கேடு என்னவென்றால், தமிழர்களிலேயே பாடுபடாத ஒரு வகுப்பு 'நாங்கள் மாமிசம் சாப்பிடமாட்டோம்; மண்வெட்டி தொடமாட்டோம் ஆனதால் நாங்கள் சைவர்கள்; பார்ப்பனருக்கு அடுத்தவர்கள்; நாங்கள் சமுதாயத்தில் 100-க்கு ½ (நூற்றுக்கு அரை) பேராக இருந்தாலும் எங்களுக்கும் பார்ப்பனர் போல் அதிகப் பங்கு இருக்கவேண்டும்' என்று உரிமை கொண்டாடி, பார்ப்பனருக்கு அடுத்தபடியாக பதவி, உத்தியோகம் பெற்றிருப்பதாகும்.

இந்தக் காரணத்தால்தான் இந்தக் கூட்டம் இன உணர்ச்சி அற்று இருப்பதுடன், இவர்களுக்கு வாய்ப்பு வந்தால் பார்ப்பனர், கிறிஸ்தவர் கிடைக்காவிட்டால் மலையாளிகள் ஆகியவர்களுக்குப் பதவி வழங்கி உழைப்பாளித் தமிழனை அழுத்திவைப்பதுமாகும்.

என்னைப் பொறுத்த வரையில் நான் ஒரு சமுதாய சீர்திருத்தத் தொண்டன்.

இன்றல்ல, நேற்றல்ல 60, 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பார்ப்பனரை வெறுத்து வருபவன்; அதாவது, திரு. பா. வெ. மாணிக்க நாயக்கர் ஈரோட்டில் இன்ஜினியராயிருந்த 1902-ல் இருந்தே; இது நாமக்கல் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கே நன்றாய்த் தெரியும்.

நான் அரசியலில் பல மாறுதலில் ஈடுபட்டிருக்கலாம் என்றாலும் சமுதாயத் துறையில் பார்ப்பனீய வெறுப்புள்ளவன் நான். அதுதான் என்னைப் பகுத்தறிவுவாதியாக (நாத்திகனாக) ஆக்கியது.

இந்தச் சமுதாய சீர்திருத்தம் என்பதற்கு முதற்படி பார்ப்பன ஆதிக்கத்திலிருக்கும் பதவி, உத்தியோகங்களை விகிதாச்சாரம் கைப்பற்ற வேண்டியது என்பதைத்தான் A. B, C, D-யாகக் கொண்டேன்—கொண்டோம். ஆனதினாலேயேதான் நான் வகுப்பு வாதி என்று சொல்லப்பட்டேன் என்பதல்லாமல் நானும் வகுப்புவாத உருவமாகவே இருந்துவருகிறேன்.

50, 60 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழர், முழுத் தமிழர் ஆட்சி ஏற்படும் வாய்ப்புக் கிட்டிய பிறகு கூட தமிழன் தன்னாட்டுப் பதவி, உத்தியோகம் முதலியவைகளில் தமிழன் ஏகபோகமாக, அதிகமாக அனுபவிக்காவிட்டாலும் அவனது விகிதாச்சாரம்கூட அனுபவிக்க முடியவில்லையானால், தமிழன் எதில், எங்கே முன்னேறி இருக்கிறான் என்று கேட்கிறேன்? மான உணர்ச்சி பெற்றா இருக்கிறான்?

ஆதலால், இன்றைய மந்திரிகள் இதுபற்றிக் கூடிப் பேச வேண்டும்; என்னென்ன முறையை, வழியைக் கொண்டால் தமிழன் தன் உரிமை பெற்றவனாக ஆகமுடியும் என்று சிந்திக்கவேண்டும்.

உண்மையான காங்கிரஸ்காரன் யாராய் இருந்தாலும் அவன் தமிழனாகவே இருக்க முடியாது; அது மாத்திரமல்லாமல் பார்ப்பானின் கூலியாகத்தான் இருக்கமுடியும்.

இன உணர்ச்சி இல்லாதவனுக்குத்தான் காங்கிரஸ்காரன் என்று பெயர். தேச பக்தன், தேசியவாதி என்றாலே (என் அகராதிப்படி) இனத் துரோகி என்பதுதான் பொருள்.

காங்கிரஸ்காரர்களால்—காங்கிரசினால் தமிழன் ஒருநாளும் சமுதாயத்தில் உயர முடியவேமுடியாது. காங்கிரஸ் என்றால் பதவிவேட்டை என்றுதான் சொல்லியாக

வேண்டும். அதன் தோற்றத்தில் இருந்து சிந்தித்தால்தான் இது விளங்கும். நான் சொல்லுகிறேன்: இந்தத் துறையில் தி.மு.க. ஆட்சிகூட மக்களை ஏய்க்கலாம்; ஆனால், அதன் பலனை அடையாமல் இருக்கமுடியாது.

ஆதலால், தி.மு.க. ஆட்சி ஒவ்வொரு பதவி, உத்தியோகம் பற்றிக் கையெழுத்துப் போடும்போதும் பார்ப்பானா, கிறிஸ்தவனா, முஸ்லிமா, சைவனா, மலையாளியா, தமிழனா என்பதைப் பார்த்துத்தான் கையெழுத்துப் போடவேண்டும். கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டால், தமிழனைப் பலி கொடுத்ததாகத்தான் பொருள். காமராசர் தமிழனுக்குக் கண் கொடுத்தார்; தி.மு.க. தமிழனை எழுந்து நடக்கச் செய்யவேண்டும்.

கண்ணிருந்தும் குருடனாய் இருப்பதில் ஜீவனுக்குப் பயன் என்ன?

நான் இவ்வளவு வேண்டுகோள் செய்வது முதல் மந்திரிக்கு மாத்திரமல்ல; முக்கிய மாக மற்ற பத்து மந்திரிமார்களுக்குமேயாகும்.

ஆகவே, கவனிக்கவேண்டும்; கவனிக்கவேண்டும்; கண்டிப்பாய்க் கவனிக்க வேண்டும்.

['குடி அரசு'—தலையங்கம்—5-3-1969]

கல்வித் துறையில் அரசாங்கம் பெரிய 'பார்ப்பனீயம்' செய்துவருகிறது. அடுத்த ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேருவதற்கு நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதாம்! எதற்காக?

பாஸ் செய்த சர்ட்டிபிகேட்டில், 'காலேஜில் சேர—சேர்த்துக்கொள்ளத் தகுதி உடையவன் (Eligible for College Course)' என்று எழுதிக் கையெழுத்துச் செய்து கொடுத்துவிட்டு, காரியத்தில் 'மார்க்கு' பார்த்து—திறமை பார்த்துப் புகுமுகப் பரீட்சை வைத்துச் சேர்க்கவேண்டும் என்று உத்தரவு போடுவதும், தராதரம் பார்க்காமல் சேர்க்கக் கூடாது என்பதும் பார்ப்பனீயமா, அல்லவா? ஏனென்றால், இவை பார்ப்பானின் மூளையில் தோன்றியவைதானே?

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பவர்களைக் கல்வி விஷயத்தில் குழியில் தள்ளி மூடுவதுதானே இந்த யோசனையின் பலன்?

கல்வித்துறை அதிகாரம் பிற்படுத்தப்பட்ட வகுப்பார்—தாழ்த்தப்பட்ட வகுப்பார் கையில் இருந்தால் இந்த எண்ணம் அவர்களது ஞாபகத்துக்காவது வருமா? மொத்த ஜனத்தொகையில் முற்பட்ட வகுப்பு மக்கள் எவ்வளவு? பிற்படுத்தப்பட்ட வகுப்பார் ஜனத் தொகை எவ்வளவு? வரி கொடுப்பதில் யார் 1-க்கு 3 ஆக, 4 ஆக வரி கொடுக்கிறார்கள்? ஓட்டர்களில் அதுபோல் யார் அதிகம்? நாளைக்கு பதவிக்கு நிர்வாகிகள் ஆசைப்பட்டால் ஓட்டர்கள் இதை எண்ணிப் பார்க்கமாட்டார்களா? கல்வித் துறையில் பார்ப்பன ஆதிக் கத்தை உயிருக்குத் துணிந்து ஒழித்ததன் பலன் இதுதானா? இராஜாஜி, பக்தவத்சலனார் உத்தரவுகளுக்கும்—இதற்கும் என்ன பேதம்? இதனால் யார் பயனடைவார்கள்?

உத்தியோகத்திற்குத் 'தகுதி—திறமை' பார்ப்பதே யோக்கியமற்ற காரியம் என்று, 40 ஆண்டுகளாகச் சொல்லிப் போராடிவருகிற நான், பாஸ் செய்தவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்குத் தரம் பார்க்க வேண்டுமென்றால், பெரிதும் 'சாதி தரம்' தவிர வேறு தரம் என்ன என்று கேட்கிறேன். 'நாம்தான் பாஸ் பண்ணாதவனை 'பெயில்' ஆக்குகிறோமே! 'தகுதி திறமை' பார்த்துச் சேர்க்கப்பட்டவனும் பெயில் ஆகிறானே?

நான், மனித சமுதாயத்தின் 'தகுதி', 'திறமை', 'தரம்' என்பவைகளைப் பார்த்து வந்த அனுபவமுடையவன். அவைகளைப் பற்றி நான் எழுதிவந்த கருத்துக்கள் இன்னமும்

இருக்கின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்காக, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்காக உழைத்து வந்தவன்—வருபவன் நான். மந்திரிகள் முதல்—அவர்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகித் தீர வேண்டும் என்பவன்.

கல்வி விஷயத்தில்—இந்த ஆட்சியைவிடக் காமராசர் ஆட்சி மிக்க தேவலாம் என்று ஆகிவிடக்கூடாது.

பாஸ் செய்த பின்பு—'தகுதி, திறமை, தரம்' எதற்காகப் பார்க்கப்படுகிறது? அது எதற்காக வேண்டும்? அதன் அர்த்தம் என்ன? அதன் பலன் என்ன? மந்திரி சபையில், பெரிய பதவியில், அதிகாரத்தில் 'தரமுள்ளவர்'களால், 'திறமை' உள்ளவர்களால் ஏற்பட்ட நன்மை, பெருமை என்ன? 'தகுதி, திறமை, தரம்' அற்றவர்களால் ஏற்பட்ட கெடுதி என்ன? அதிகாரம், உத்தியோகங்களிலும் வகுப்பு, உள்வகுப்பு, உட்பிரிவு, சாதி வகுப்புரிமை வேண்டும். சர்க்காருக்கு 50 கோடி ரூபாய், மது இலாக்கா மூலம் வருவாய் கிடைத்திருக்கிறது. இது யார், எந்த வகுப்பார் தந்த பணம்? இந்த வருவாய் கொடுத்தவர்களை வடிகட்டுவது தான் பலனா? இதைக் கவனிக்க வேண்டும்.

கண்டிப்பாய் அரசாங்க அகராதியில் 'தகுதி, திறமை, தரம்' என்ற சொற்களை எடுத்து விடவேண்டும்.

இது என் சொந்தக் கருத்து.

['விடுதலை'-தலையங்கம்—18-7-1972]

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பானுக்கு விரோதமாகிவிடுகிறது என்பதற்காக சர்க்காரில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பதை 1950-ல் எடுத்துவிட்டார்கள். பிறகு நாங்கள் செய்த கிளர்ச்சிகளின் பயனாகச் சட்டத்தில் கொஞ்சம் திருத்தம் செய்திருக்கிறார்கள். படிப்பு, உத்தியோகம், சமுதாயம் ஆகியவற்றில் பின்தங்கியவர்களுக்குச் சலுகை காட்டத் திட்டம் ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று அரசியல் சட்டத்தில் எழுதியிருக்கிறார்கள். அரசியல் திட்டத்தால் ஆதித் திராவிடருக்கு மாத்திரம் அவர்களுக்குரிய விகிதாச்சாரம் கிடைத்திருக்கிறதே ஒழிய, மற்ற திராவிட மக்களுக்கு விகிதாச்சாரம் கிடைக்கவே இல்லை. இப்படி நாங்கள் கூறுவதை ஆதித் திராவிடர்கள் தங்களுக்கு விரோதமானது என்று கூறிக்கொள்கிறார்கள். மற்ற திராவிட மக்களுக்கு அவர்களால் (ஆதித் திராவிடர்களால்) ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. ஆனாலும், நாம் எவ்வளவோ செய்தோம். அப்படி இருந்தும் 'பிராமணர்கள் தேவலை, சாதி இந்துக்களால்தான் எங்களுக்குத் தொல்லை'—என்று ஆதித் திராவிடர்கள் கூறுகிறார்கள். இது நன்றியற்ற பேச்சு. அவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்தவர்கள் யார்? பார்ப்பனர்களா? நாங்கள் செய்த கிளர்ச்சியாலும், முயற்சியாலும்தான் இன்று அவர்கள் சமுதாயத்தில் தலையெடுக்க முடிந்தது. அவர்கள் படிப்புத் துறையில் முன்னேற வழிகாட்டியவர்கள் நாங்களே. ஆதித் திராவிடர்களின் கோயில், தெரு நுழைவுக்கு முதல் முதல் போராடியவர்கள் நாங்கள் தாம். ஆதித் திராவிடர்கள் படித்தவர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும், சட்டசபை உறுப்பினர்களாகவும், மந்திரிகளாகவும் ஆனார்கள் என்றால், பார்ப்பனர்களாலா? இதற்கெல்லாம் அவர்கள் நன்றி செலுத்தவில்லை என்றாலும், நமக்கு விரோதிகளாகவாவது ஆகாமல் இருக்கவேண்டாமா?

[சென்னை பெரியார் நகரில், 17-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-9-1956]

2. வருப்புவாதம், சமூகவாதம்

1. இந்துமகாசபையும் வகுப்புவாரி உரிமையும்

இந்து மகாசபை ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே, இது பிராமண ஆதீனத் திற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும், பிராமணரல்லாதாரின் பிறவி இழிவைப் பலப்படுத் துவதாய் முடியும் என்றும், இந்தியாவின் ஜன சமூகத்தின் நான்கில் ஒரு பாகத்திற்கு மேலாய் இருக்கும் முகமதிய சகோதரர்களின் அதிருப்திக்கும், சந்தேகத்திற்கும் இடமளிக்கக் கூடியதாகும் என்றும், இந்து மகாசபை ஆரம்பித்ததற்கே, முகமதிய சகோதரர்களின் நடவடிக்கைகளைத்தான் முக்கிய காரணமாகச் சொல்லிவருவதால் வெகுகஷ்டப்பட்டு மகாத்மாவினால் ஏற்பட்ட இந்து—முஸ்லிம் ஒற்றுமை அடியோடு மறைந்துபோகுமே என்றும், நமது 'குடிஅரசி'ன் பத்திராதிபர் பல தடவைகளிலும், பல பிரசங்கங்களிலும் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார்.

அது மாத்திரமல்லாமல், நமது தமிழ்நாட்டில் இந்து மகாசபைக்குக் கிளைகளாக ஏற்படுத்தப்பட்ட சபைகளிலெல்லாம், வருணாசிரம தர்மிகளும், பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களுமே, அக்கிராசனாதிபதிகளாகவும், காரிய தரிசிகளாகவும் நியமுகம் பெற்றிருக்கிறார்கள் என்பதும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக, இந்து சபையிலிருக்கும்போது தீண்டாமை ஒழிய வேண்டும் என்று ஓர் போலித் தீர்மானத்தை ஏற்படுத்திக்கொள்வதும், அதே ஆசாமிகள் மறுபடியும் வருணாசிரம சபையென்று கூட்டி, அதிலும் உட்கார்ந்துகொண்டு தீண்டாமை வேத சம்மதமென்றும், மனுதர்ம விதி என்றும், இதற்கு விரோதமாய் இருக்கும் மகாத்மா காந்தியை ஒழிக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் செய்வதையும் நாம் பார்க்கின்றோம்.

சென்னை மாகாணத்தில் இந்து மகாசபையின் கிளைத் தலைவர் ஸ்ரீமான் டி. ஆர். இராமச்சந்திர அய்யர் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அவர் வருணாசிரம தர்மத்தி னுடையவும், பிறவியில் தான் உயர்ந்த பிராமண சாதி என்பதினுடையவும், தீண்டாதான் என்பவன் தெருவில் நடக்கக் கூடாது, கண்களில் படக்கூடாது என்பதினுடையவும் அவதாரம். அதே மாதிரி கும்பகோணம், தஞ்சை, நாகப்பட்டினம், கோயமுத்தூர் முதலிய இடங்களில் உள்ள இந்து மகாசபைத் தலைவர்களும், சென்னைத் தலைவருக்கு இளைத் தவரல்லர். கும்பகோணம் இந்து மகா சபையிலேயே தீண்டாமை சாஸ்திர சம்மதமான தென்றும், அதை ஒழிக்கக் கூடாதென்றும் ஓர் தீர்மானம் செய்திருப்பதாக நமக்கு ஞாபகம் இருக்கிறது. இப்படி இருக்க, இந்து மகாசபையை நாட்டில் பரப்புவது, எப்படி இந்து மதத்திற்கு நன்மை பயப்பதாகும்? ஓர் கொள்கைக்காக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டால், அந்தக் கொள்கைப்படி நடப்பவர் கிடைக்காவிட்டாலும், அந்தக் கொள்கையை நம்புகிறவர் களாவது அந்த ஸ்தாபனத்தை நடத்துகிறவர்களாய் இருக்க வேண்டாமா? ஸ்ரீமான் இராமச் சந்திர அய்யர் தீண்டாமையை ஒழிப்பதைக் கொள்கையாகக் கொண்ட ஒரு சபைக்குத் தலைவராக அங்கம் வகிப்பதானது, வாஸ்தவத்திலேயே அச் சபையின் யோக்கியதையைக் காட்டுவதாகுமா? அல்லது, அச்சபையின் புரட்டுகளைக் காட்டுவதாகுமா?

நமது நாட்டிலுள்ள சில வைதிகர்கள் எப்படிப் பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறலாம் என்கிற கொள்கைக்கு ஸ்தாபனங் கண்டுபிடிக்கக் கருத்தாய் இருக்கின்றார்களே யல்லாமல், உண்மையாக ஓர் காரியத்தைச் செய்வதற்கு ஒருவரும் இல்லை. இந்து மகா சபையின் ஸ்தாபகர் ஸ்ரீமான் மாளவியா அவர்களே, தீண்டாதாரைப்பற்றிப் பேசும்போது, கண்களில் ஜலம் விடுகின்றாரேயல்லாமல், பிறவியில் தனக்கும் தீண்டாதாருக்கும் வித்தி யாசம் இல்லை என்பதை ஒப்புக்கொள்வதே இல்லை. தன்னைப் பெரிய வருணாசிரம தர்மியாகத்தான் ஒப்புக்கொள்கின்றார். முஸ்லிம்களின் உபத்திரவங் காரணமாக இந்து

மகாசபை ஏற்படுத்துவதாயிற்று என்று சொன்ன காரணத்தால், பஞ்சாபில் முஸ்லிம்கள் செய்கையால் அதிருப்தி கொண்ட லாலா லஜபதி ராய் அவர்களும், இந்து மகாசபையில் சேர்ந்து, இந்து மகாசபைக்கு உழைக்க முன்வர வேண்டியதாயிற்று.

இந்துக்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், இந்துக்களல்லாதவர்களைத் தாழ்மையாகக் கருதுவதும், இந்துக்களில் பிராமணர்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், பிராமணரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், முகமதியர்கள் அதிகமாக இருக்கிற பாகங்களில் முகமதியரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும் கிறிஸ்தவர்கள் அதிகமாய் இருக்கிற பாகங்களில், கிறிஸ்தவர்களல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும் பெரும் பாலும் உலக சுபாவமாகவே கருதுகிறோம். அதோடு கொஞ்சம் செல்வாக்கு உள்ளவர் களும், செல்வாக்கு இல்லாதவர்களைத் தாழ்மையாகவே கருதுவதும் சுபாவமாகத்தான் இருக்கிறது. உதாரணமாக, இந்துக்கள் முகமதியர்களையும், கிறிஸ்தவர்களையும் மிலேச்சர்கள் என்று சொல்லுவதையும், முகமதியர்களைத் தொட்டால், தொட்டபாகத்தை வெட்டியெறிய வேண்டுமெனச் சொல்லிவந்ததையும்; இந்துக்களுள் பிராமணரல்லாதவர் மிலேச்சர் என்று அகராதியில் எழுதியிருப்பதையும்; பிராமணர் பிராமணரல்லாதாரை விபசாரி மகன், வேசிமகன், சூத்திரன் என்று எழுதிவைத்துக் கொண்டிருப்பதையும்; முகமதியர் இந்துக்களை 'காபிர்' அதாவது, 'நாத்திகர்' என்று சொல்வதையும்; கிறிஸ்த வர்கள் இந்துக்களை 'அஞ்ஞானிகள்' என்று சொல்லுவதையும் தினமும் பார்த்தும் கேட்டும் வருகின்றோம். இந்தத் தத்துவத்தினாலேதான், இன்றைய தினம் நாம் நமது இராஜ்யத்தை இந்திய அரசாங்கமாகச் செய்து கொள்ளாமல், பிரிட்டிஷ் அரசாங்கமாகச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது பொய்க் கிளர்ச்சியின் பலனாக ஒருசமயம் பிரிட்டிஷ் அரசாங்கம் தொலைந்தாலும், ஜெர்மனி அரசாங்கமோ, ஜப்பான் அரசாங்கமோ, அல்லது வேறு எந்த வெளிநாட்டு அரசாங்கமோ ஏற்படுமேயல்லாமல், ஒருகாலும் இந்திய அரசாங்கம் ஏற்படும் என்று கருதுவதற்கே வகையில்லாமல் இருக்கிறது. லாலா லஜபதி ராய் அவர்கள் தமது பிரசங்கத்தில், முஸ்லிம்கள், முஸ்லிம் இராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டும் என்று ஏதோ ஒரு பத்திரிகை எழுதுவதாகவும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதாகவும் ஆதலால் இடங்கொடுக்கக்கூடாதென்றும் வெகு எளிதில் சொல்லிவிட்டார்.

இந்திய அரசாங்கத்தில், இந்திய ஜனங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தாராகிய முகமதிய சகோதரர்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா?

அவர்கள் ஏழரைக்கோடிப்பேரும் இனிமேல் இந்தியாவை விட்டுப்போக முடியுமா? அவர்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால்,' இராஜ்ய விஷயத்திலும், மத விஷயத் திலும் நமக்குச் சரியான அந்தஸ்துப் பெற்றுத்தானே ஆகவேண்டும்?

வகுப்புப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால், அவர்களுக்குச் சம உரிமை கிடைத்து விடுமா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் முகமதியர்களுக்கு ஏற்படாததற்கு முன், முகமதி யர்கள் கொஞ்சமாய் உள்ள எந்தப் பிரதேசத்திலாவது, தேர்தல்களில் ஒழுங்கான பிரதி நிதித்துவம் பெற்று இருக்கிறார்களா? உதாரணமாக, நம் நாட்டிலுள்ள தீண்டாதார் என்று சொல்லப்படுவோரை நாம் எப்படி வைத்திருக்கிறோம்? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 200 ஆண்டுகளாகியும், ஒரு தீண்டாதானாவது தேர்தல்களில் நின்று, இந்தியனுடன் போட்டி போட்டு ஜெயம்பெற சக்தியுண்டாகி இருக்கின்றானா? எந்த ஒரு தீண்டாதானல்லாத இந்தியனாவது, தீண்டாதவனும் நமது சமூகத்தில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை உள்ளவன்தானே—அவனை நிறுத்தி அவனுக்கு நம்முடைய வோட்டைக் கொடுத்து, நமது அரசியல், சமூகவியல் இவைகளில் அவனுக்குள்ள பங்கைக் கொடுக்கவேண்டுமென்று ஸ்ரீமான்கள் மாளவியா, லஜபதி ராய் போன்ற யாராவது அனுபவத்தில் காட்டியிருக் கிறார்களா? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சம சுதந்திரம் அடைவதோடல்லாமல், உயர்ந்த நிலைமையையும் அடைய ஆசைப்படுவது, ஒவ்வொரு ஜீவனின் சுபாவமாகும்

அப்படி இருக்க, 'உன்னுடைய சமத்துவத்திற்கு நானும் பிரயத்தனப்படமாட்டேன். நீ பிரயத்தனப்பட்டால் அதையும் ஒழிப்பதற்கு நான் பிரயத்தனப்படுவேன்' என்று சொல்லுவது சமத்துவ மனித தர்மமாகுமா? இந்தியாவில் இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களும், இந்துக்களினால் தீண்டப்படாதவர்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையும், சம உரிமையும் பெற்றால் அல்லாது, இந்தியா விடுதலை அடையும் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனம் என்றே சொல்லுவோம். சம உரிமையும், நம்பிக்கையும் ஏற்படவேண்டுமானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மனம் ஒப்பிக் கொடுப்பதுதான் ஏற்ற மருந்தாகும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உணர்ச்சியை அடக்கி மழுப்பிவிடலாம் என்று நினைப்பது, சரீரத்தில் ஏற்பட்ட ஒரு புண்ணை மருந்து போடாமல் மூடிவைத்து விடுவதனால் அது ஆறிப்போகும் என்று நினைப்பது போல்தான் முடியும். இந்துமகா சபைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் விரோதம் என்று சொல்வதனால் அவ் இந்துமகா சபை, நமது தேசத்தின் ஒற்றுமைக் குறைவுக்கும், துவேஷத்திற்கும் ஏற்பட்ட மற்றொரு சாதனமென்றுதான் சொல்லவேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி 'இந்து' பத்திரிகை என்னும் பிராமணப் பத்திரிகை எழுதியிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். அதாவது :—

'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனங்களிடையே சுயமதிப்பை உண்டுபண்ணி யிருக்கிறதென்பதையும், சமுதாய முன்னேற்றத்திற்குக் காரணமாய் இருக்கிறது என்பதையும், அது ஏற்படுவதற்குமுன் இராஜ்ய வாழ்வில் அலட்சியமாய் இருந்த வகுப்பினர்களுக்கு இராஜ்ய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டுபண்ணி யிருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது' என்று எழுதியிருக்கிறது.

இந்தக் குணங்களை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் உண்டாக்கி இருக்குமேயானால், இந்தியாவிலுள்ள மற்ற எல்லா ஸ்தாபனங்களையும்விட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதிக பலன் அளித்து இருக்கிறது என்பதில் சந்தேகம் உண்டா? ஆதலால், இந்துமகா சமூகமானது ஒரு கூட்டத்தாரின், ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு அனுகூலமானதே யல்லாமல், தேசப் பொது நன்மைக்கு உற்றதல்ல என்பதையும்; வகுப்புவாரிப் பிரதிநிதித் துவந்தான் தேச ஒற்றுமைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் சஞ்சீவி என்பதையும் நாம் உறுதியாகச் சொல்லலாம்.

[குடி அரசு'-தலையங்கம்—13-12-1925]

2. நாட்டுநலம் வேறு; வகுப்புநலம் வேறா?

தற்கால இராஜீய உலகத்தில் எவனாவது ஒருவன் தன் வகுப்பு முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதும், மற்றும் தாழ்ந்த வகுப்பு முன்னேற்றத்தைப்பற்றிப் பேசுவதும் தேசத் துரோகமெனவும், ஆண்மைத் துரோகமெனவும் மதிக்கப்பட்டுப் போகிறது. இந்நிலை நமது நாட்டின் பிற்பட்ட வகுப்பாருடையவும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடையவும் ஈன ஸ்திதியை விளக்குவதோடு, முற்பட்ட வகுப்பாருடையவும் உயர்ந்த வகுப்பாருடையவும் ஆதிக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் நல்லாண்மைக்கென ஏற்பட்ட பத்திரிகைகள் மிகுந்திருந்த போதிலும், அவைகள் முற்பட்ட வகுப்பாருக்கும், உயர்ந்த வகுப்பாருக்கும் பயந்துகொண்டு வகுப்பு நலனை நாடுவதும், இல்லாண்மையாக்கிக் கொள்ளுவதும், நல்லாண்மை ஆகாதென்றும் சொல்லித் தங்கள் பத்திரிகைகளை நடத்தி வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட ஒவ்வொரு வகுப்பாருக்கும் தங்கள் தங்கள் ஆண்மைகளை அடையவும் நாட்டு நலன்களில் சமஉரிமை அடையவும் மார்க்கமில்லாதிருக்கும்போது தேச உரிமையும், நாட்டு உரிமையும் யாருக்கு? வகுப்புரிமை பெற்றால் வகுப்புச் சச்சரவுகளை உண்டாக்கும் எனச் சொல்லிக்கொண்டு பல வகுப்புரிமைகளையும் நாசமாக்கி ஒரு வகுப்பார் சகல உரிமைகளையும் அடைந்து முன்னிற்பதை, மற்ற வகுப்பார் பார்த்துக்கொண்டு அவர்கட்கு அடிமையாயிருக்கவேண்டும் என்று சொல்லுவதில் எவ்வளவு யோக்கியமிருக்கும்?

நமது நாட்டில் பல வகுப்புக்களிருந்தபோதிலும் ஒவ்வொரு வகுப்பையும் கவனித்து அதற்கு வேண்டிய சுயமரியாதை ஏற்பட்டிருக்கின்றதா? தேசத்தில் வரும் ஆக்கம் பல வகுப்புக்களுக்கும் சரிவரப் போய்ச் சேர மார்க்கமிருக்கின்றதா என்பதைக் கவனித்து, வேலை செய்தால், அது தேசத்தையே முன்னுக்குக் கொண்டு வந்ததாகும். அப்படிக்கின்றி, முன்னாலிருக்கிற வகுப்பாரை மாத்திரம் கூட்டிக்கொண்டு அவர்கள் மெச்சும்படி அவர்கள் பின்னாலும் திரிந்துகொண்டு நாட்டுநலம், நாட்டுநலம் என்று சொல்லிக்கொண்டும், வகுப்பு நலத்தைத் தேடினால் நாடு கெட்டுப்போகும் என்றும், சொல்லிக்கொண்டு திரிந்தால் ஒரு நாடு எப்படி முன்னுக்கு வரும்?

ஒரு நாடு என்பது ஒரு நாட்டிலுள்ள பல வகுப்பாரின் நலத்தையும் பொறுத்ததா? ஒரு வகுப்பாரின் நலத்தை மாத்திரம் பொறுத்ததா? உண்மையான நாட்டு நலத்தைத் தேடுவோர், தாழ்ந்த வகுப்பாருடைய நலத்தையும் பிற்பட்ட வகுப்பாருடைய நலத்தையும் தேடுவதைத்தான் நாட்டு நலமென்று நினைப்பார்கள். நாடு என்பது சகல வகுப்பாருக்குமே யொழிய, வலுத்த வகுப்பாருக்கென்று மாத்திரம் ஏற்பட்டதல்ல. 'வகுப்பு நலன் தேடுவது என்றால், நமது நாடு பல வகுப்புக்களையுடையதாயிருக்கிறது; ஆதலால், பல வகுப்பாருடைய நலனையும் தேடுவதாய் ஏற்படும்; அப்போது அது முடியாத காரியமாகிவிடும். ஆதலால், நாட்டு நலம், நாட்டு நலம் என்று பொதுவாய்ச் சொல்லிக்கொண்டிருப்பதுதான் அனுகூலமானது' என்று சிலர் சொல்லுகிறார்கள். நமது நாடு பல வகுப்பாரைக் கொண்டதாகவே எந்தக் காரணத்தினாலோ ஏற்பட்டுப்போய் விட்டது. பல வகுப்பாருக்கும் நம்பிக்கை உண்டாகும்படியாக நடந்துகொள்ள வேண்டியதுதான் நாட்டின் நலன் தேடுவோரின் கடமை!

நாட்டு நலன் தேடுவோரின் ஒவ்வொரு திட்டமும் சகல வகுப்பாரின் நம்பிக்கைக்கும் ஏற்றதாய்த்தான் இருக்கவேண்டும். தற்போது நமது நாட்டில் வகுப்பு என்று சொல்லக் கூடிய மாதிரியில், வகுப்புரிமைக்கு ஆவலாயும், ஒன்றுக்கொன்று அவநம்பிக்கையாயும் இருப்பது மூன்றே வகுப்புக்கள்தாம். அவை பிராமணர், பிராமணரல்லாத இந்துக்கள், பஞ்சமர் என்று சொல்லக்கூடிய மூன்று வகுப்பார்கள்தாம். இதை எல்லோருமே—சர்க்கார் உட்பட, நாட்டு உரிமை தேடுவோர் உட்பட—எல்லோரும் ஒப்புக்கொண்டாய்விட்டது. ஆந்திரர், தமிழர், கர்நாடகர், கேரளர் என்கின்ற பிரிவைச் சொல்லி ஜனங்களை ஏய்க்க வேண்டியதில்லை. இவற்றைத் தனித்தனியாகவே பிரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஏற்பாடு செய்தாகிவிட்டது. காங்கிரசிலும் அதுபோலவே பிரித்தாகிவிட்டது. ஆதலால், அதைப்பற்றிக் கவலையில்லை.

எனவே, மேற்சொன்ன மூன்று வகுப்பார்கள்தாம் ஒருவருக்கொருவர், அவநம்பிக்கையுடனிருக்கிறார்கள். 'இவர்களுக்கு உரிமை வழங்கிவிட்டால் இவர்களுக்குள்ளாகவே பல வகுப்புக்கள் கிளம்பும்' என்று சொல்லி, ஜனங்கள் புத்தியைக் கலைக்கக்கூடும். அப்படியிருந்தாலும் சகல வகுப்பாரின் நலனையும் கவனிக்கத் தகுந்த திட்டம் போடுவதற்கு முடியாதென்று பயப்பட வேண்டியதில்லை. வகுப்புக்களுக்குத் தகுந்தபடி உத்தியோகங்களும், ஸ்தானங்களும் அமைக்கவும் சவுகரியமிருக்கிறது. $3\frac{1}{2}$ கோடி ஜனங்களுள்ள இங்கிலாந்து பார்லிமெண்டில் 700 மெம்பர்கள் இருந்து இராஜ்யபாரம் செய்கிறார்கள். ஆதலினால், நமது நாட்டிலும் சகல வகுப்பாரையும் இராஜ்யபாரத்தில் சேர்ப்பது கஷ்டமல்ல. இரட்டை முதல் வகுப்புப் படியும், 5000, 6000 ரூபாய் சம்பளமும் கொடுக்காமல், 3-வது வகுப்புப் படிச்செலவும், 400, 300 சம்பளமும் கொடுத்தால் எல்லாம் சரிக்கட்டிப்போகும். அப்போது அதிகப் போட்டியிருக்காது. ஆதலால், வகுப்புரிமையைப்பற்றிப் பயப்பட வேண்டியதில்லை.

அல்லாமலும், நமது நாட்டில் அதிகமாகப் பிரிவினைகள் இருக்கின்றதாக நினைத்துக் கொள்ளுகின்றோமேயல்லாமல், வாஸ்தவத்தில் அளவுக்கு மிஞ்சினதாக ஒன்றுமில்லை.

பிராமணர்களும், தாங்கள் ஒரு வகுப்பென்றும், தங்களைத் தவிர மற்றவர்களில் சூத்திரர்–பஞ்சமர் என இரண்டு வகுப்புக்கள் தான் இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிராமணரல்லாதாரும், மேற்சொன்ன பிராமணரல்லாதார் எல்லாம் ஒரு வகுப்பென்றும், தங்களுக்குக் கீழ் பஞ்சமர் என்று ஒரு வகுப்பும் இருப்பதாகத்தான் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பஞ்சமர்கள், தாங்கள் ஒரு வகுப்பென்றும், மற்றவர்கள் தங்களுக்கு மேற்பட்ட வகுப்பென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இம் மூன்று வகுப்பாரும் தங்களில் ஒருவருக்கொருவர் வித்தியாசமிருப்பதாகக் கற்பித்துக் கொள்ளுவதால், இம் மூவருக்கும்தான் ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாகும்படி தக்க உரிமைகள் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமானதாகும். இம் மூவரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உயர்வு–தாழ்வு இல்லை; எல்லோரும் சமம்தான்; மனித உரிமையை அடைவதில் நாம் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர்கள்–தாழ்ந்தவர்களல்ல என்கிற உணர்ச்சி வருகிற காலத்தில் வகுப்புரிமையைப்பற்றிய கவலையே வேண்டியதுமில்லை; வகுப்பின் பேரால் உரிமையும் கேட்க அவசியம் ஏற்படாது. அப்படிக்கில்லாமல், பல வகுப்பாரும் சேர்ந்து கஷ்டப்பட்டு ஒரு பதவியைச் சம்பாதித்தால் அதை ஒரு வகுப்பாரே அனுபவிப்பதற்கு அனுகூலமாகவும், மற்ற வகுப்பார்கள் சூத்திரர்கள் என்றும், பிற்பட்டவர்கள் என்றும், தீண்டாதார்கள் என்றும், தெருவில் நடக்கவும்—கண்ணில் தென்படவும் அருகர்களல்லவென்றும், ஒரு வகுப்பார் ஒரு வகுப்பாரால் கருதப்படுகின்றபோது, வகுப்புரிமையைக் கவனிக்காமல் நாட்டுரிமையைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லுவது நல்லாண்மையல்லாததும், அர்த்தமில்லாததும், பித்தலாட்ட உரிமையாகவுமேதான் முடியும்.

['குடி அரசு'–தலையங்கம்—14-2-1926]

3. வகுப்புவாதமா? சமூகவாதமா?

வகுப்புவாதம் எல்லா வகுப்புக்கும் சம சந்தர்ப்பமும், சம சுதந்திரமும் வேண்டும் என்கின்றது. சமூகவாதம் தங்கள் சமூகம் மாத்திரம் எப்போதும் உயர்வாகவே இருக்க வேண்டும் என்கின்றது. நமது 'குடி அரசு' தோன்றியபின் இதன் இரகசியங்கள் வெளியாகி, இவைகள் எல்லாம் மறைந்து, இப்போது வகுப்புவாதிகளை ஒழிப்பது என்பது தவிர, வேறு எவ்விதக் கொள்கையும் திட்டமும் இல்லாமல் போய்விட்டது. வகுப்புவாதிகள் யார், அல்லாதவர்கள் யார் என்று பார்த்தாலோ அது இவைகளை எல்லாம்விட மிகயோக்கியமானதாக இருக்கும். அதாவது, வகுப்பு வித்தியாசம், சாதி உயர்வு–தாழ்வு, ஒரு வகுப்புக்கு ஒரு நீதி ஆகியவைகள் அடியோடு கூடாது என்றும், எல்லா வகுப்புக்கும் சமஉரிமையும் சம சந்தர்ப்பமும் இருக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பவர்கள்தாம் இக்கூட்டத்தாருக்கு வகுப்புவாதிகளாகத் தென்படுகின்றார்கள்.

உயர்ந்த வகுப்பு என்பதாக ஒன்று உயர்ந்திருக்கவேண்டும், தாழ்ந்த வகுப்பு என்பதாக ஒன்று தாழ்ந்திருக்கவேண்டும்; பார்ப்பனர்கள் உயர்ந்த வகுப்பு, மற்றவர்கள் அவர்களைவிடத் தாழ்ந்த வகுப்பு; சூத்திரர், பஞ்சமர் என்கின்ற வித்தியாசம் இருக்க வேண்டும். இந்த வித்தியாசங்களை ஒழிக்க யாரும் முயற்சிக்கக்கூடாது; எவ்வித சட்டமும் செய்யக் கூடாது—என்பவர்கள் இவர்களுக்கு வகுப்புவாதிகள் அல்லாதவர்கள். சுருங்கச் சொன்னால், அவர்கள் கொள்கைப்படி பார்ப்பனர்களும் அவர்களை நத்திப் பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களும் அவர்களது கூலிகளும் தவிர மற்றவர்கள் எல்லோரும், அதாவது பார்ப்பனரல்லாதவர்கள் எல்லோரும் வகுப்புவாதிகள் ஆவார்கள்.

எப்படியென்றால், நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். அதாவது, சர்க்காரையும், தேசத்தையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சமூகவாதிகளை முதலில் அழிக்க வேண்டும் என்பதேயாகும். இந்தத் தேசம் பாழாய்ப் போவதற்கும், இந்த சர்க்கார் இங்கு இவ்வளவு அநீதியான ஆட்சி புரிவதற்கும், சமத்துவக் கொள்கை பரவாதிருப்பதற்கும் எந்த

சமூகத்தார் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து எதிரிகளாய் இருக்கின்றார்களோ அந்தச் சமூகத்தார் முதலில் அழிக்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—19-5-1929]

4. வகுப்புரிமையா? வகுப்புத் துவேஷமா?

வகுப்புவாரி உரிமை வேண்டாதவன் தன் வகுப்பை உணரமுடியாதவனோ, தன் வகுப்பைப்பற்றிச் சந்தேகப்படத் தக்கவனோ ஆவான். ஒரு வகுப்பான், தன் வகுப்புரிமை கேட்பது தேசத் துரோகம் என்று சொல்லப்படுமானால் அப்படிச் சொல்லுகிறவன் ஒரு தேசத்தையும் சேர்ந்திராத நாடோடி, லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க முடியும். நம்மவர்களுக்கு உண்மையான வகுப்புணர்ச்சி இல்லாததாலேயே, நாம் நாடற்ற நாடோடிகளால் அடக்கி ஆளப்பட்டு வருகிறோம்.

இங்கிலீஷ்காரன் இன்று, அவன் நாட்டின்மீது இத்தனை ஆயிரக்கணக்கான ஆகாயக் கப்பல்கள் பறந்து, பதினாயிரக்கணக்கான வெடிகுண்டுகள் வீழ்ந்து, குழந்தைகளும், குட்டிகளும், மாடங்களும், மாளிகைகளும் நாசமானாலும் கூட, 'ஓர் உயிர் உள்ள வரை போராடியே தீருவேன்' என்று சொல்லுவதன் கருத்து, அவன் வகுப்பு உணர்ச்சியின் —வகுப்புவாதத் தன்மையின் உச்சநிலையேயாகும். நம் நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்களுக்கு வகுப்பு உணர்ச்சியோ, நாட்டு உணர்ச்சியோ ஏற்படுவதற்கு நியாயமில்லை. ஆகவேதான், 'ஏன் சண்டை போடவேண்டும்? விட்டுவிட்டுப் போகலாமே' என்கின்ற ஞானமும், 'யார் ஜெயித்தால்தான் என்ன?' என்கின்ற ஞானமும் உதயமாகின்றன. அப்படிப்பட்ட ஆட்களுக்கு ஆதிக்கம் வந்ததாலேயே நம் நாட்டிற்கு இப்படி அடிக்கடி படையெடுப்புகளும், ஆபத்துகளும் நேருவது மாத்திரமல்லாமல், இந்நாட்டு மக்களாகிய நாம்—நாடோடிகளால், சூத்திரர்களாகக் கருதப்படுகிறோம்.

மூன்று தலைமுறையோ அல்லது ஒரு நூற்றாண்டோ ஒரே ஊரில் இருந்ததாக ஏதாவது ஓர் ஆரியக் குடும்பத்தை நீங்கள் காட்ட முடியுமா? பிழைப்பு கிடைத்த இடத்தில் வாழ்க்கையும், சவுகரியம் கிடைத்த இடத்தில் ஒய்வும் என்பதில்லாமல்—ஊர் பாத்தியமோ, குலமுறை பாத்தியமோ சொல்லிக்கொள்ள அவர்களுக்கு வசதி உண்டா? அப்படிப்பட்டவர்கள்—நம்மை, நாம் நமது வகுப்புரிமை கேட்பதால் 'வகுப்புவாதி' என்றும்—'தேசத் துரோகி' என்றும்—'உத்தியோக வேட்டைக்காரர்கள்' என்றும் சொல்வார்களானால், அது நமது கோழைத்தன்மையும், வாழ்க்கையின் மானமற்ற ஈனத்தன்மையின் பயனுமே ஆகும்.

நாம் உத்தியோக வேட்டைக்காரர்களாம்! 'ஆம்' என்றே வைத்துக்கொள்வோம். நாம் உத்தியோக வேட்டை ஆடுவதில் தப்பு என்னவென்று கேட்கிறேன்? திராவிடநாட்டில் ஒரு பார்ப்பானோ—ஓர் ஆரியனோ உத்தியோக வேட்டையாடுவதும், ஒரு திராவிடன் உத்தியோக வேட்டையாடுவதும் என்றால், யாருக்கு உத்தியோக வேட்டை ஆட உரிமை இருக்கிறது என்று கேட்கிறேன். உத்தியோக வேட்டையாடாத வகுப்பானுக்கு அவன் நாட்டினிடமும், அவன் வகுப்பினிடமும் பொறுப்பில்லை என்பதோடு, அவனை வகுப்புத் துரோகி என்றுகூடச் சொல்லத் துணிவேன். ஒவ்வொரு வகுப்புக்கும் அவனது வகுப்பு எண்ணிக்கை அளவுக்கு உத்தியோகம் கொடுக்க ஆட்சேபித்தால்—ஆட்சேபிக்கப்பட்ட வகுப்பை இழிவுபடுத்தியதாகவும், கோழைத்தனமுள்ள, மானமற்ற, யோக்கியதையற்ற வகுப்பாகக் கருதியதாகவும் அர்த்தமாகும். எந்த வகுப்பார் தன்னுடைய வகுப்பு எண்ணிக்கை அளவுக்குத் தனது நாட்டில் உத்தியோக வேட்டையாடிப் பெறவில்லையோ, அந்த வகுப்பான் மானமற்ற கோழை வகுப்பானே ஆவான். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன்?

உத்தியோகம் யார் அப்பன்வீட்டுச் சொத்து? உத்தியோகத்துக்குத் தரப்படும் சம்பளம் யார் தாய்-தந்தையார் பாடுபட்ட சொத்து? உத்தியோகம் யாருக்காக, எந்த வகுப்புக்காக நிர்வாகம் செய்யப்படுவது என்பதை ஒரு நாட்டானோ, வகுப்பானோ தெரிந்து கொள்வானேயானால்—மற்ற நாட்டானோ, மற்ற வர்க்கத்தானோ, மற்ற வகுப்பானோ நம் நாட்டில் வந்து உத்தியோகம் பார்ப்பதைப் பிராணனை விட்டாவது தடுக்கமாட்டானா என்று கேட்கிறேன்.

[சென்னையில், 8-9-1940-ல் சொற்பொழிவு—'விடுதலை' 29-8-1950]

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது வகுப்பு நீதி வழங்குதல் என்ற கருத்தைக் கொண்டதே தவிர, தேசியத்துக்கு விரோதமானதோ, சுதந்திரத்துக்கு எதிரானதோ, விடுதலையைக் கெடுப்பதோ அல்ல என்பதே அறிவுள்ளவர் கருத்தாகும்.

இந்த இந்திய உப கண்டமானது பல சாதி, பல மதம், பல வகுப்புக்கள் கொண்ட பிரதேசமாக இருந்துவருவதால் இந்திய அரசியல் தத்துவம் என்பது சாதியை, மதத்தை, வகுப்பை அடிப்படையாகக் கொண்டதாக இருந்துவருகிறது.

உதாரணமாக, காங்கிரஸ் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டதன் காரணமே மத அடிப்படையைக் கொண்டதேயாகும். காங்கிரசிற்கு முன் வடநாட்டில், பெரிதும் உத்தியோகம் ஆதிக்கம் முதலியவை பெரும்பாலும் முஸ்லிம்களின் கையில் இருக்க நேர்ந்தது. அதை மாற்றவே காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, சுயராஜ்யத்துக்காகவோ, வெள்ளையனை விரட்டுவதற்காகவோ, சமுதாய-பொருளாதார நலனுக்காகவோ அல்ல என்பது காங்கிரஸ் சரித்திரம் தெரிந்த அறிவாளிகளுக்குத் தெளிவாய் விளங்கும்.

மற்றும், காங்கிரசைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் காங்கிரஸ் பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழவும், பிரிட்டிஷாருக்கு இந்தியர்கள் நன்றி செலுத்தி இராஜவிஸ்வாசம் காட்டவும், பிரிட்டிஷ் ஆட்சியே இந்தியாவில் நீடூழிகாலம் இருந்து வருவதும்தான் காங்கிரசுக்கு முக்கிய கொள்கையாய் முக்கிய தீர்மானங்களாய், காங்கிரஸ்காரர்களின் முக்கிய கடமையாய் இருந்துவந்தது எனலாம்.

இந்தியரின் இந்தக் கடமைக்குப் பரிகாரமாக முஸ்லிம் அல்லாதாருக்கு ஏராளமான புதுப்புது, பெரிய பெரிய உத்தியோகங்கள், பதவிகள் கிடைத்துவந்தன.

பிறகு நாளாக, நாளாக இந்த உத்தியோகங்களில், பதவிகளில் பங்குபெற ஆசைப்பட்டே இந்திய அரசியலின் பேரால் நாட்டில் பல கட்சிகள் தோன்றின.

இத்தனைக் கட்சிகளுக்கும் பதவியும் உத்தியோகமும் பங்குபோடவேண்டி இருந்தாலும், காங்கிரஸ் முதல்முதல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனமானதால் அது மற்ற கட்சிகளைக் குறைகூறும் தன்மையில் தனது இலட்சியத்தையும் திட்டத்தையும் வெறும் தந்திரத்தையே அடிப்படையாய் வைத்துப் பித்தலாட்டமாக மக்களுக்குக் காட்டியதோடு, அந்த மாதிரியான பித்தலாட்டத்தன்மைகளை மற்றவர்கள் பின்பற்ற முடியாமல் இருக்கும்படி மிக்க கீழ்த்தரமான காரியங்களைக் கையாடி, மற்ற கட்சியாருக்குத் தொல்லை கொடுப்பதையே முக்கிய காரியமாகச் செய்துவந்தது. இதன் பயனாகவே, இன்று நாட்டில் சுமார் 40, 50 வருடங்களுக்கு முன்பு இருந்த நாணயம் ஒழுக்கம், அன்பு முதலியவைகள் ஒழிந்து பலாத்கார-மிருகப்பிராயத்துக்கு மக்கள் ஆளாக்கப்பட்டுவிட்டனர்.

எது எப்படியானாலும், இந்திய மக்கள் இலட்சியம் உத்தியோகம், பதவி என்பது வளர்ந்து, பெருகி நிலை நின்று விட்டது என்பதுடன், அதற்காகப் போராடி ஜனசமூகம் மடியப்போகின்றது என்கின்ற நிலையை அணுகிக் கொண்டு போகிறது.

சாதி, மத வகுப்புகளால் இந்நிலை ஏற்பட்டவைகள்தாமே ஒழிய, அரசியல் சுதந்திரமோ, சுயராஜ்யமோ இல்லாததால் ஏற்பட்டவைகள் அல்ல. ஒரு சமயம் பூரண சுய

ராஜ்யம் இல்லாததால் என்று யாராவது சொல்லுவதானாலும் அந்தப் பூரண சுயராஜ்யம் என்பதும் இந்த சாதி மத, வகுப்புத் தொல்லைகளாலேயே தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அய்ரோப்பிய யுத்தம் நேசக் கட்சியாருக்கு வெற்றியாக முடிந்தவுடன், நேசக் கட்சியாராகிய பிரிட்டன், அமெரிக்கா, பிரெஞ்சு ஆகியவர்கள் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் அன்னிய நாடுகளை விட்டுத் தங்கள் ஆதிக்கத்தை—ஆட்சியை விலக்கிக் கொள்கிறோம் என்று உலகத்தாருக்கு வாக்குக் கொடுத்தபடி விலகிக் கொள்ளுகிற வேலையில் முனைந்து விட்டார்கள். அமெரிக்கர் பிலிப்பைன் முதலிய தீவுகளைப் பூரண சுயேச்சையுள்ள நாடுகளாக ஆக்கிவருகிறார்கள். இதில் பிலிப்பைன் தீவுக்காரர்களே நம்பிக்கை கொண்டு திருப்தி அடைந்து வருகிறார்கள். பிரெஞ்சுக்காரர்களும் அதைப் பின்பற்றுகிறார்கள். பிரிட்டிஷாரும் அதற்குத் தக்க ஏற்பாடுகளை உண்மை உள்ளத்தோடு நாணயமாக நடத்தி வருகிறார்கள்.

நாட்டுக்கு நாடு அதிகார ஆதிக்கப் பேராசை இல்லாமல் அதைத் தனித்தனியாய்ப் பிரித்து விட்டுவிடுவதாய் இருந்தால் கலகமே விளைய இடமில்லை என்பதும்; வகுப்புக்கு வகுப்பு—சாதிக்குச் சாதி ஆதிக்கம், அதிகாரம் செய்யச் சூழ்ச்சி செய்யாமல் விகிதாசாரம், கல்வி, பொருளாதார வசதி, உத்தியோகம், பதவி இருக்கும்படி செய்து விட்டால், உள்மாகாணக் கலவரங்கள், கட்சிப் போராட்டங்கள், அரசியல் பித்தலாட்டங்கள் நடப்பதற்கு இடமே ஏற்படாமல் போய்விடும் என்பதும் உறுதியாகும்.

உதாரணமாக, திராவிட நாட்டை எடுத்துக் கொண்டால் இங்கு நடப்பது அரசியல் கட்சிப் போராட்டமா? அல்லது, ஒரு சாதியின் பேராசை, சூழ்ச்சிப் பித்தலாட்டத்தால் விளைந்த விளைவுப் போராட்டமா?

திராவிட நாட்டில் பதவிகள், பெரும் உத்தியோகங்கள் பாடுபடாமல் சராசரி வரும்படிக்கு 100-க்கு 100 பங்குக்கு மேலாகக் கொள்ளை அடித்து உயர் வாழ்வு வாழும் வாழ்க்கைப் போகபோக்கியங்கள் ஆகியவை பார்ப்பனர்கள் என்கின்ற ஒரு சாதியாருக்கே பெரிதும் ஏகபோகமாய் இருந்து வருவது தேசியமாய் இருக்கக் காரணம் என்ன? இப்படி இருந்தால் மற்ற சாதி வகுப்பார்கள் ஆத்திரப்பட மாட்டார்களா? கட்சி ஏற்படுத்த மாட்டார்களா?

வங்காளம், பீகார், நவகாளி போல் திராவிட நாடும் ஒரு நாளைக்குப் பார்ப்பனர்—திராவிடர் என்கின்றதான கலவரங்களுக்கு அடிமை ஆகாதா? அந்தந்த சாதி வகுப்புக்கு எண்ணிக்கைக்குத் தக்கபடி அதிகாரம், பதவி, உத்தியோகம், கல்வி, வருவாய் முதலியவைகளைப் பிரித்து விடுவதனால் எப்படித் தேசியம் கெட்டுப்போகும்? இன்று தமிழ்நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் திராவிட மக்களேயாகும். அவர்களுடைய புத்தி, திறமை, சக்தியாவும் திராவிடர்களுக்குச் சராசரி எவ்வளவோ, அவ்வளவையே கொண்டதாகும். அப்படி இருக்க, இங்கு சென்னை மாகாணத்தில் இந்த இரு கூட்டத்தாருக்கு மாத்திரம் அவர்கள் ஜன எண்ணிக்கைக்குத் தகுந்தபடியும்—மேலாகவும் முறையே அனுபவிக்கக் கொடுத்துவிட்டு, திராவிட மக்களை ஏமாற்றி, ஆதித் திராவிடர்களை வஞ்சித்து, அடியோடு அவ்வளவையும் பெரும்பாகமாகப் பார்ப்பனர்கள் மாத்திரம் அனுபவிக்கக் காரணம் என்ன?

மக்கள் எண்ணிக்கைப்படியும் மேலும் விகிதாசாரம் பெற முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சக்தி, திறமை, தகுதி இருக்கும்போது, திராவிடர்களுக்கு ஏன் இல்லாமல் போய்விட்டது?

['குடி அரசு'–தலையங்கம்—30-11-1946]

5. சுதந்திரத்தால் பார்ப்பனர் இலாபக்கொள்ளை

சுதந்திரம் வந்தாலும் வந்தது—பார்ப்பனர்களுக்குத்தான் இலாபத்துக்குமேல் இலாபமாக வந்துகொண்டிருக்கிறது! வெள்ளைக்காரர்கள் இருக்கும்போது நிர்வாகத்திற்காக என்று அய். சி. எஸ். பரீட்சை வைத்திருந்தார்கள். அந்தப் பட்டம் பெறுவதற்கு இலண்டனுக்குச் சென்று படித்துவிட்டு வரவேண்டும். அப்போதெல்லாம் அந்த அய்.சி.எஸ். பட்டதாரிகளில் 50, 60 பேர் பார்ப்பனர்களாகத்தான் இருப்பார்கள். இங்கிருந்து இலண்டனுக்குப் போய்ப் படிக்க அனுப்பப்படுபவர்கள் பெரும்பாலும் அவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் படிப்புச் செலவுக்கு சர்க்கார் பணம் கொடுக்கும். ஆதலால், பார்ப்பனர்களே அதைக் கைப்பற்றி விடுவார்கள். அதைப் பெறப் பார்ப்பனர்கள் என்னவேண்டுமானாலும் செய்வார்கள்.

மற்ற வகுப்பாரைச் சேர்க்கவேண்டுமென்றால்—ஒரு மலையாளி, ஒரு கிறிஸ்தவர், ஒரு முஸ்லிமைச் சேர்த்துக்கொள்வார்கள். இவர்களையெல்லாம் சேர்த்துத்தான், 'பார்ப்பனரல்லாதார்' என்று கணக்குப் போடுவார்கள். அவர்களை மட்டும் சேர்த்துக் கொள்கிற காரணம் என்னவென்றால், அவர்கள் பதவிக்கு வந்தால் அவர்களுக்குப் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இருக்காது. தங்கள் இன நலத்தோடு இருந்துவிடுவார்கள்; பார்ப்பனர்களுக்கு விரோதமாக இருக்கமாட்டார்கள்; இருக்கவேண்டிய அவசியமுமில்லை. ஆனால், நம்மவர்கள்—திராவிடர்கள் வந்தால் அவர்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்டுவிடும்; அதனால், அவர்கள் தங்களுக்குத் தொல்லையைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள் என்றுதான் நம்முடைய ஆட்கள் வரமுடியாமல் செய்தார்கள்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை உத்தியோகங்கள்தாம் என்று திட்டவட்டமாக வரையறுத்துவிட வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு எவராவது, எந்த வகுப்பினராவது ஓர் ஆள் அதிகமாக உத்தியோகம் பார்த்தால் அவர்மீது துராக்கிரத ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டப்பட்டு, அவனுக்கு வேலை கொடுத்தவனுக்கு நாணயக் குறைவுக் குற்றம் சாட்டியும் அதற்கான தண்டனையும் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அனைவரும், எல்லா வகுப்பினரும் சமநிலை எய்தமுடியும்.

இல்லையேல், மேலே இருப்பவர்கள் இன்னும் உயர உயரப் போய்க்கொண்டே இருக்க—தாழ்ந்த நிலையில், சமுதாயத்தின் அடித் தளத்திலே வாதனையுறுவோர், மேலும் மேலும் தாழ்ந்து அழிந்து போகவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

[பெரம்பூரில், 13-8-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 17-8-1950]

6. எஸ். முத்தையா முதலியார் வாழ்க!

நம்து மந்திரி திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தமது ஆதிக்கத்தில் உள்ள முக்கிய இலாக்காவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை நிலைநாட்டிவிட்டார். அதாவது, பத்திரப் பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நபர்களை நியமிப்பதில், அடியிற் கண்ட வகுப்புவாரிப்படி தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்பதாக ஒரு விதி ஏற்படுத்தி, அதை கவர்னர் பிரபுவாலும், மற்ற மந்திரிகள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களாலும் சம்மதம் பெற்று, அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதான சட்டமாக்கி விட்டார். அதாவது, பத்திரப் பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நியமிக்க வேண்டிய ஸ்தானங்கள் 12 இருக்குமானால் அவைகளில்: பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களிலிருந்து 5; பார்ப்பனர்களிலிருந்து 2; முகமதியர்களிலிருந்து 2; அய்ரோப்பிய, ஆங்கிலோ-இந்தியர்கள் அடங்கிய கிறிஸ்தவர்களிலிருந்து 2; தாழ்த்தப்பட்டவர்களிலிருந்து 1 ஆக 12 நபர்களை வகுப்புவாரி முறையில் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்கின்ற சட்டம் செய்திருக்கிறார். எனவே, மேற்படி இலாக்காவுக்கு எவ்வளவு பேர் தேவை இருந்தாலும்,

இந்த விகிதப்படியே நியமிக்கப்படவேண்டும் என்பதாகும். இந்தத் திட்டத்தின் விகிதங்களில் 100-க்கு 3 வீதம் ஜனத்தொகை உள்ள பார்ப்பனருக்கு 100-க்கு 16 உத்தியோகம் வீதமும், 100-க்கு 20 வீதத்திற்கு மேற்பட்ட முகமதியர்களுக்கு 100-க்கு 16 வீதமும், 100-க்கு 20 வீதம் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற வகுப்பாருக்கு 100-க்கு 8 வீதமும் உத்தியோகங்கள் பங்குபிரித்துக் கொடுத்திருப்பதானது மிகவும் அநியாயமானதென்றே சொல்லுவோம். ஒருசமயம் உத்தியோகத்திற்கு ஏற்ற நபர்கள் குறைவான பங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வகுப்புகளில் கிடைக்கவில்லை என்று யாராவது சமாதானம் சொல்ல வருவார்களானால்—அது, அந்த வகுப்பார்களுக்கு உத்தியோகங்கள் கொடுப்பதில் அவர்களுக்குச் செய்திருக்கும் கொடுமையைவிடப் பலமடங்கு மேற்பட்ட கொடுமையாகும். என்னவெனில், உத்தியோகப் பங்கில் மண்ணைப் போட்டதல்லாமல், அந்த வகுப்புகளை உத்தியோகத்திற்கு இலாயக்கில்லை என்று அவமானப்படுத்தியதாகும். இந்தத் திட்டத்தை முகமதியர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் ஒப்புக்கொள்வதானது—'பிச்சை போடாவிட்டாலும் கவலையில்லை, தயவு செய்து நாயைப் பிடித்துக் கட்டுங்கள்!' என்றபடி—ஒரு வீட்டில் பிச்சைக்குப்போன ஒருவர்மீது வீட்டுக்காரர் நாயை அவிழ்த்துவிட்டுக் கடிக்கச்சொன்ன போது—எஜமானனைப் பார்த்து அந்தப் பிச்சைக்காரர் கெஞ்சினதுபோல்தான் ஆகும்.

எனவே, யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் விஷயத்தில் சற்றுக் கஷ்டமோ அதிருப்தியோ இருந்தாலும், சர்க்கார் உத்தியோகம் என்பவைகள் பொதுச் சொத்தென்பதையும் அதில் எல்லோருக்கும் பங்குண்டு என்பதையும் ஒப்புக்கொண்டு பங்கு பிரித்துக் கொடுக்கவும், பங்கு பிரித்துக்கொள்ளவும் ஒரு ஆதாரம் ஏற்படுத்திக்கொள்ள இடம் கிடைத்ததே—இது சமயம் நமக்கு ஒரு பெரும் வெற்றியாகும். இதுபோலவே, மற்ற இலாக்காக்களுக்கும் ஒரு விதி ஏற்பட்டுவிடுமானால் நமது நாட்டைப் பிடித்த கேட்டில் பெரும்பாகம் தொலைய மார்க்கமேற்பட்டுவிட்டதென்றே சொல்லுவோம். இந்த முறைக்கு ஒரு சமயம், அதிகப் பங்குகளுக்குப் பல வழிகளிலும் முயற்சித்துக் கொள்ளை அடித்து அனுபவித்துவரும் பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டாலும், நமது அரசாங்கத்தார் ஒப்புக்கொள்வது என்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். நமது நாட்டில் வெள்ளைக்கார ஆட்சியானது இந்நாட்டு மக்களின் இவ்வளவு அதிருப்தியின் மீதும் கவலையற்று, பொருத்தமற்ற கொடுங்கோன்மை முறையில் நடைபெற்று வருவதற்குக் காரணமே—ஒரு வகுப்பை இன்னொரு வகுப்பார் ஏய்த்து, 'கையில் வலுத்தவன் காரியம்' என்பதுபோல்—வலுத்தவன் ஏகபோக உரிமை அடையும் படியான மாதிரியில் அமைக்கப்பட்டிருக்கும் தன்மைதான் என்றே சொல்லுவோம்.

இத்தன்மையே உள் கலகங்களுக்கும், வகுப்புச் சச்சரவுகளுக்கும், ஒற்றுமையின்மைக்கும் இடமாய் இருந்துவருகின்றது. எனவே, அவர்களுக்குள்ள இந்த சவுகரியமான தன்மையை மாற்றிவிடக் கூடியதும், அடியோடு கவிழ்த்துவிடக் கூடியதுமான வகுப்பு உரிமை கொடுத்துவிட்டால் எப்படி ஏகபோக உரிமை போய்விடுமோ அதைப் போல்,—ஏகபோக ஆட்சியும் போய்விடும். ஆதலால், ஏகபோக ஆட்சியை எதிர்பார்க்கும் எந்த அரசாங்கத்தாரும் இந்த வகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். இருந்தாலும் எப்படியோ சாமர்த்தியமாகவோ, தந்திரமாகவோ, நமது திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் விதி ஏற்படுத்திக் கொண்டதுபோல் மற்ற மந்திரிகளும், நிர்வாகசபை அங்கத்தினர்களும் ஒரு விதி செய்துகொண்டார்களானால், அதிலும் முக்கியமாக—திருவாளர்கள் கிருஷ்ணன் நாயர் அவர்களும், மகமது உஸ்மான் அவர்களும் தங்கள் தங்கள் இலாக்காவுக்கு திரு. முத்தையா முதலியாரைப் பின்பற்றி இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்து வைப்பதில் கவலை எடுத்து வெற்றி பெறுவார்களானால்—அதுவே அவர்களது உத்தியோக காலத்தை வெற்றி பெற நடத்தியதாகும் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம். அப்படிக்கில்லாமல், 30 நாளை எண்ணிக் கொண்டிருப்பதும், அது எண்ணி முடிந்தவுடன் ரூ. 5333-5-4 எண்ணுவதும், ரூ. 5333-5-4 எண்ணி ஆனவுடன்

மறுபடியும் 30 நாட்களை எண்ணுவதும்; மீதி ஏதாவது கொஞ்சநஞ்சம் நேரமிருக்குமானால் தங்கள் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், சிநேகிதன், அடிமை முதலியவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலும்; மறுபடியும் தங்களுக்கு மேல் உத்தியோகங்கள் கிடைப்பதற்குத் தந்திரமும் சூழ்ச்சியும் கண்டு பிடித்துக் கொண்டிருப்பதில் செலவழிப்பதுமான காரியத்தைச் செய்து கொண்டிருந்தால், அவர்களை என்னவென்றழைப்பது என்பதைப் பொது ஜனங்களுக்கே விட்டுவிடுகிறோம்.

இந்த நிலையில் பச்சைப் பார்ப்பனப் பத்திரிகையாகிய, 'சுதேசமித்திரன்' 8-11-1928 தேதி தலையங்கத்தில், 'வகுப்புப் பித்தம் தலைக்கேறி விட்டதா?' என்கின்ற தலைப்புக் கொடுத்து தனது ஆத்திர விஷத்தைக் கக்கியிருக்கின்றான்.

அதாவது எடுப்பிலேயே, 'ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளாக இருந்த காலத்தில் செய்யத் துணியாத அக்கிரமத்தை.........கனம். எஸ். முத்தையா முதலியார் செய்யத் துணிந்து விட்டார்' என்று ஆரம்பித்து, 'இது சட்ட விரோதமான காரியமாகும்' என்று முடித்திருக்கிறான்.

'மித்திரனின்' சாதிப் புத்தி இதுதான் என்பது ஏற்கனவே எல்லோரும் அறிந்தது தான். என்னவெனில், பார்ப்பனருக்கு இஷ்டமில்லாத எந்தக் காரியமானாலும் அதைப் பற்றி உலகமே முழுகிப்போய்விட்டதுபோல முதலில் கூப்பாடு போடுவார்கள்; அது பலிக்கவில்லையானால், பிறகு சட்டத்தைக் கொண்டுவந்து சட்டம்பேச ஆரம்பித்துவிடுவார்கள். மனுதர்ம சட்டத்தைப் போலவே வெள்ளைக்காரர் சட்டமும் பார்ப்பனர்கள் பிழைப்புக்குத் தக்கபடி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது என்ற தைரியம் அவர்களுக்கு இருப்பதால் அவர்களுக்குச் சட்டம் என்கிற ஆயுதத்தைக் கொண்டு எப்படியும் பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இனி இந்த நினைப்புக்கு இடம் கொடுக்கக்கூடாது. நம் நியாயத்திற்கு விரோதமாய் இருக்கும் எந்தச் சட்டத்தையும் மண்டையில் அடித்து உடைத்துச் சுட்டுப் பொசுக்கத் தயாராயிருக்கவேண்டும்.

'மித்திரன்' ஜஸ்டிஸ் கட்சியைப் புகழ்ந்ததற்கும் ஆதாரம் இல்லாமற் போகவில்லை. ஏனென்றால், சென்ற தேர்தலில் பார்ப்பனர்களின் விஷமப் பிரச்சாரத்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு நல்ல சூடு கிடைத்துவிட்டதால், இந்தத் தேர்தலிலும் அப்படி ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயத்தில் சூடு பட்டவர்கள்—பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆகலாம் என நினைத்துக் குட்டிக்கரணம் அடித்து வருகின்றார்கள். இதன் பலன்களில் ஒன்றுதான் திரு. இராமசாமி முதலியாரவர்கள், தலை ஒருவருக்கும் வால் ஒருவருக்கும் காட்டுவது; இதன் பலன்தான்—திரு. பாத்ரோ அவர்கள் சமூக சீர்திருத்தத்திற்குச் சட்டம் செய்யக் கூடாது என்றது. இதன் பலன்தான்—இப்பேர்ப்பட்ட திரு. பாத்ரோ அவர்களை, பனகல் அரசர் சைமன் கமிட்டி மெம்பராக்கினதும் அவரை அக் கமிட்டிக்குத் தலைவராக்கினதும் ஆகும். இதன் பலன்தான்—தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட விஷயத்தில் சற்றும் கவலை கொள்ளாமல், தங்கள் ஆதிக்கத்தின் பெருமையில் அலட்சியமாயிருந்ததும் இன்னும் இதுபோன்ற பல இரகசியங்களும் ஆகும். எனவே, இதன் சக்தியில் இன்னும் நடப்பதைப் பார்க்கலாம் என்றுதான் காத்திருக்கிறோம். எது எப்படியானாலும், 'மித்திரன்' சாதி என்ன சொன்னாலும், ஜஸ்டிஸ் கட்சி எப்படி 'அந்தர்' அடித்தாலும் நமது மக்கள் தைரியத்தை விடாமல் அதிகாரத்திலும் பதவியிலும் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நமது வீரர் முத்தையா முதலியார் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்.

['குடிஅரசு'—தலையங்கம்—11-11-1928]

7. ஜஸ்டிஸ் கட்சி சாதனை

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை வேண்டும் என்பதற்காகவே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது.

அதிதீவிர காங்கிரஸ்வாதியாகவும், அதிதீவிர தேசியவாதியாகவும் இருந்த டாக்டர் நாயர், சர். பி. தியாகராயர் ஆகியவர்களின் முயற்சியே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதற்குக் காரணமாகும். அக்கட்சி கல்வியில், அறிவில், உத்தியோகங்களில் பிரதிநிதித்துவத்தில் பிற்பட்டும், ஒதுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும் கிடந்த மக்களுக்குப் பாடுபடுவதை முக்கிய கொள்கையாகக் கொண்டதால் அதற்குப் பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும் ஜஸ்டிஸ் கட்சி என்றும் சொல்ல வேண்டியதாயிற்று.

இந்தக் கட்சியின் முன்னேற்றமும், இம்முயற்சியின் வெற்றியும், வெகு காலமாய்க் கல்வியிலும், உத்தியோகத்திலும், பிரதிநிதித்துவத்திலும் முன் அணியில் இருந்த பார்ப்பனர்களுக்கும் அவர்களது ஆதிக்கத்திற்கும் சிறிது தடையும் ஏமாற்றமும் செய்வதாக இருந்ததால், ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களுடைய எதிர்ப்பிற்கும், துவேஷத்திற்கும், விஷமப் பிரச்சாரத்திற்கும் ஆளாகவேண்டியதாய் இருந்ததோடு, பார்ப்பனர்களின் சூழ்ச்சியானது பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் பிரிவினையையும் கட்சி பேதங்களையும் உண்டாக்கித் தொல்லைப்படுத்த வேண்டியதாயிற்று.

எது எப்படி இருந்தபோதிலும், பல காரணங்களால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இன்று சென்னை அரசாங்கத்தில் ஒரு அளவுக்காவது நிலைநிறுத்தப்பட்டு விட்டதுடன், அது இந்திய அரசாங்கத்தையும் எட்டிப் பார்க்கச் செய்துவிட்டது.

இந்த நிலையானது இனி எப்போதாவது ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியின் ஆதிக்கம் (ஒழியாது) ஒழிந்துவிட்டாலுங்கூட, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அவசியம் என்பதை அரசாங்கத்தார் உணர்ந்துவிட்டார்கள். ஆதலால், அக் கொள்கை இனி மாற்றப் படுவது என்பது சுலபத்தில் சிந்திக்க முடியாத காரியமாகிவிட்டது. பிரிதிநிதித்துவங் களிலும், உத்தியோகங்களிலும் இன்று இருந்துவரும் விகிதாச்சார எண்ணிக்கை பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு மிகவும் குறைவாக இருக்கின்றது. என்றாலும், அந்தக் கொள்கை பார்லிமெண்ட் வரை ஒப்புக்கொள்ளப்பட்டாகிவிட்டது என்பதும் எவரும் மகிழ்ச்சியடையக்கூடிய செய்தியே ஆகும்.

அய்க்கோர்ட்டு ஆட்சிக்குட்பட்ட இலாக்காக்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை கையாளப்படாததற்குக் காரணம், ஜஸ்டிஸ் கட்சியின் பலமற்ற தன்மையேயாகும்.

ஜஸ்டிஸ் கட்சி பலமுள்ளதாக இருந்து, அக் கட்சித் தலைவர்கள் பொதுநலத்தைவிட சுயநலத்தைப் பெரிதாக எண்ணாதவர்களாக இருந்து, தங்களது சுயமரியாதைக்கு மதிப்புக் கொடுத்திருப்பார்களேயானால் 4,5 வருஷங்களுக்கு முன்பாகவே, அய்க்கோர்ட்டு இலாக்கா விலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அமுலுக்கு வந்திருக்கும்.

கட்சிக்குப் பலமும் ஒற்றுமையும் இல்லாது இருந்ததால் அய்க்கோர்ட்டாரை வகுப்பு வாரி முறையைக் கையாளும்படி கட்டாயப்படுத்தத் தைரியம் இல்லாமல் போய்விட்டது.

என்றாலும், இப்பொழுது பொதுஜனங்களுடைய உணர்ச்சியானது அது விஷயத் தில் பலப்பட்டு விட்டதாலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை இனி யாராலும் தடுக்க முடியாத மாதிரியில் செல்வாக்குப் பெற்றுவிட்டதாலும் இனி அதை யாராலும் அசைக்க முடியாது என்ற நிலை பெற்றுவிட்டதாலும், இப்போது அய்க்கோர்ட்டாரையும் இந்த முறையைக் கைப்பற்றித் தீரவேண்டும் என்கின்ற நிலையில் கொண்டுவந்து விட்டுவிட்டது.

அதாவது, தென்னிந்திய இரயில்வே நிர்வாகத்திற்கு 84 கிளார்க்குகள் வேண்டியிருக் கிறது. அவற்றுள்: பார்ப்பனரல்லாதார் 42, முகமதியர் 17, இந்தியக் கிறிஸ்தவர்கள்,

ஆங்கிலோ இந்தியர், அய்ரோப்பியர் ஆகியவர்கள் 17, தீண்டப்படாத வகுப்பார் உட்பட மற்ற வகுப்பார் 8. ஆக 84 பேர்களுக்கு விண்ணப்பங்கள் வேண்டியதாயிருக்கிறது என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

[இது 11-6-1935-ந்தேதி ஜஸ்டிஸ் பத்திரிக்கையில் இருக்கிறது.]

'ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்தது? சுயமரியாதை இயக்கம் என்ன செய்தது?' என்று கேட்பவர்கள், இதைச் சிறிது கவனித்துப் பார்த்துவிட்டு அப்புறம் கேட்கட்டும் என்று ஆசைப்படுகிறேன்.

['குடி அரசு'-தலையங்கம்—23-6-1935]

8. கேபினட் மெம்பர்கள் கவனிப்பார்களா?

சென்னை அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களை அமைக்கும் பொறுப்பும் அதிகாரமும் சென்னை அரசாங்க கவர்னர் பிரபுவைச் சேர்ந்தது என்று சொல்லப்படுமானாலும்—அவை பெரிதும் கவர்னர் பிரபுவின் ஆலோசனை சபை அங்கத்தினர்களான போலீஸ், லா, ரெவினியூ ஆகிய இலாக்காத் தலைவர்களுக்கே நேரிட்ட பொறுப்பும், மேற்பார்வையும், அதிகாரமுமாக இருந்து வருகின்றன.

மந்திரிமார்களோ, உத்தியோக நியமன விஷயங்களில் யாதொரு அதிகாரமும் இல்லாமலே இருந்து வருகிறார்கள். மந்திரிமார்கள் கையிலுள்ள உத்தியோகங்களோ மிகச் சிலவேயாகும். அதுவும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா சம்பந்தப்பட்ட வரையில்தான் அவர்களது அதிகாரம் செல்லலாம். எனினும், இந்த இலாக்காவிற்கும் செக்ரட்டரிகள் என்னும் அய்ரோப்பியர்களும், பார்ப்பனர்களும் குறுக்கிட்டு, அவற்றை மந்திரிகள் இஷ்டப்படி நடைபெறாமல் செய்யவும் இடம் வைக்கப்பட்டிருக்கின்றபடியால், அந்த அதிகாரமும் பலனற்றது என்றே சொல்லவேண்டும்.

மற்றபடி, போலீஸ்-லா-ரெவினியூ இலாக்காக்களுக்கு முன்னைய மந்திரி சபையின் பயனாய் ஒரு அளவுக்கு பல வகுப்புக்களையும் கவனித்து நியமனம் செய்யும்படியான வகுப்புவாரி முறை புகுத்தப்பட்டிருந்தும், மேற்படி இலாக்காத் தலைவர்களின் இலட்சியக் குறைவால் அம் முறையாலும் தக்க பயன் ஏற்படாமல், பழையபடியே அரசியல் உத்தியோகம் ஒரு வகுப்பாரின் கைக்கே—அதாவது, பார்ப்பனர் கைக்கே போகும்படியாய் இருந்து வருகின்றது. இதை நாம் துவேஷத்தின்மீதோ, பொறாமையின்மீதோ சொல்ல வரவில்லை. உண்மை நிலையைக் கண்டு புள்ளி விவரங்களைக் காட்டியே சொல்லுகிறோம்.

அன்றியும், சுமார் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு பிரஞ்சு பாதிரியாகிய ஆபே டுபாய் என்பவர் இந்திய அரசாங்க உத்தியோகத்தைப்பற்றியும், பார்ப்பனர்களின் யோக்கியதையைப்பற்றியும் கூறி இருப்பதைப் பார்த்தால், இன்றைய நிலையைப்பற்றி நாம் எடுத்துச் சொல்லுவதை எவரும் துவேஷம் என்று சொல்லிவிட முடியாது. அவர் குறிப்பிடுவதாவது :—

'இந்தியாவைத் தற்போது ஆண்டுவரும் அய்ரோப்பியர்களைப் பார்ப்பனர்கள் வெகு சாமர்த்தியமாகத் தம் வசப்படுத்திக்கொண்டார்கள். பல ஜில்லாக்களிலுமுள்ள சர்க்கார் உத்தியோகங்களில் உயர்ந்தவைகளையும், அதிக வருமானம் வரக்கூடியவைகளையும், நீதி இலாக்காக்களையும் மற்றும் சகல பதவிகளையும் பார்ப்பனர்களே கைப்பற்றி இருக்கிறார்கள். உண்மையில் சர்க்கார் உத்தியோகங்கள் எதுவும் அவர்கள் இல்லாவிட்டால் நடவாது என்கின்ற தன்மையை உண்டாக்கிக்கொண்டார்கள்.'

'மேலும் சப்-கலெக்டர்களாகவும், குமாஸ்தாக்களாகவும், மொழிபெயர்ப்பாளர்களாகவும், கஜான்சிகளாகவும், மற்ற சிப்பந்திகளாகவும் பெரும்பாலும் பார்ப்பனர்களே நிரம்பி இருக்கிறார்கள். இவர்கள் உதவி இல்லாமல் எதையும் செய்வது கஷ்டமான

காரியமாக அவர்கள் சாமர்த்தியத்தால் செய்துகொண்டார்கள். மேலும், இந் நாட்டு மக்களின் அபிப்பிராயத்தையும், அதைத் திருப்புவதற்குள்ள வழிகளையும் பார்ப்பனர்கள் நன்கு அறிந்திருப்பதும், பிறப்பினால் பார்ப்பனர்களுக் கேற்பட்ட உயரிய அந்தஸ்தும் பார்ப்பனர்களுக்கு எளிதில் உத்தியோகங்களைக் கைப்பற்றிக்கொள்வதற்கு அனுகூலமாக இருந்து வருகின்றன. மற்ற சாதியார் பார்ப்பனர்களுக்கு மதிப்பையும், கவுரவத்தையும் கொடுப்பதனால், இவர்களை உத்தியோகத்துக்கு நியமிப்பதால் அரசாங்கக் காரியம் பெருமையாக நடக்கும் என்ற அபிப்பிராயம் ஏற்பட இடமுண்டாயிற்று; இப் பார்ப்பனர்களின் தன்மையை ஊன்றிக் கவனிக்காமல் அவர்கள்மீது பூரண நம்பிக்கை வைப்பதால் அய்ரோப்பியர்கள் இடர்ப்படப் போகிறார்கள் என்பதில் அய்யமில்லை. இவ்வளவு தூரம் பார்ப்பனர்களுக்கு அய்ரோப்பியர்கள் இடம் கொடுப்பதால் தங்கள் உத்தியோகங்களுக்கே ஆபத்து தேடிக்கொண்டவர்களாகித் தங்கள் உத்தியோகங்களை இழக்கக்கூடிய நிலைமைக்கு வரப் போகின்றார்கள்.'

(என்று 1816ஆம் வருஷத்திலேயே பிரெஞ்சுப் பாதிரியாரான ஆபேடுபாய் எழுதியிருக்கிறார். இது ஆலயப்பிரவேச உரிமை, 8 ஆம் அத்தியாயம், 52-வது பக்கம்)

இவை போதாமல், சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் 6, 7 வருடங்களுக்கு முன் லா மெம்பராகவும், போலீஸ் மெம்பராகவும் இருந்த காலத்தில் அந்த இரண்டு இலாகாக்களையும் பரிசுத்தமான அக்கிரகாரமாகவே ஆக்கிவிட்டுப் போனார். ரெவினியூ இலாக்காவில் அய்ரோப்பியர் இருந்துவந்தும் அந்த இலாக்கா முக்காலே மூன்றுவீசம் அக்கிரகாரமாகவே ஆக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்குக் காரணம், பெரிதும் செக்கரட்டேரியேட்டில் உள்ள பார்ப்பன ஆதிக்கமும், சூழ்ச்சியும் என்று சொல்லப் பட்டாலும், மந்திரிமார்கள் எவரும் இதைப்பற்றிக் கவனிக்காத குற்றம் ஒரு அளவுக்குக் காரணம் என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

ஆறு, ஏழு வருடம் சர். கிருஷ்ணன் நாயர் லா மெம்பராய் இருந்தார். ஏழு, எட்டு வருட காலம் சர் மகமத் உஸ்மான் சாயபு அவர்கள் போலீஸ் மெம்பராகவும், ஹோம் மெம்பராகவும் இருந்தார். இவர்கள் சர். சி. பி. இராமசாமி அய்யர் கட்டி விட்டுப் போன அக்கிரகாரக் கோட்டை அஸ்திவாரத்தைக் கடுகளவாவது அசைத்தார்கள் என்று சொல்லுவதற்கு யோக்கியதை இல்லாமலே—ஆள் ஒன்றுக்கு 3 இலட்சம், 5 இலட்சம் என்பதாக ரூபாய்களைச் சேர்த்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

சர். கே. வி. ரெட்டி நாயுடு, லா மெம்பராகி ஒரு வருடத்திற்கு மேலாகிறது; இவர் போகிற இடங்களில் எல்லாம் வகுப்பு நீதி, இராஜபக்தி ஆகியவைகளைப்பற்றிப் பேசுவதில் சிறிதும் குறைவில்லை. ஆனால், இந்த ஒரு வருட காலத்தில் நீதி இலாக்காவில் எங்கும் அக்கிரகாரமயமாய் இருப்பதை மாற்ற ஒரு கடுகளவு முயற்சியாவது எடுத்ததாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் சப் ஜட்ஜுகளாகவும், ஜில்லா ஜட்ஜுகளாகவும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளாகவும் வக்கீல் கூட்டங்களிலிருந்து நேரடியாக நினைத்தபடி பார்ப்பனர்களை நியமிக்கப் படவில்லையா? மாதம் 200, 300 ரூபாய்கள் கூட வரும்படி இல்லாத வக்கீல்கள் பார்ப்பனர் என்கின்ற காரணத்தைத் தவிர வேறு எவ்வித யோக்கியதையும் இல்லாமல் இருந்தும், ஜில்லா ஜட்ஜாகி இன்று அய்க்கோர்ட் ஜட்ஜாக ஆக்கப்படவில்லையா? இன்று லா டிபார்ட்மெண்டில், நீதி இலாக்காவில் ஜில்லா ஜட்ஜுகள் இந்துக்கள் 18 பேர்களில் 11 பேர்கள் பார்ப்பனர்கள், 4 மலையாளிகள், 3 பார்ப்பனரல்லாத தமிழர்களே இருப்பதும்; சப்-ஜட்ஜுகள் இந்துக்கள் 66 பேர்களில் 51 பார்ப்பனர்களும், 11 மலையாளிகளும், 4 பேர்களே பார்ப்பனரல்லாத தமிழ் மக்களாக இருப்பதும்; 169 இந்து முன்சீப்புகளில் 115 பார்ப்பனர்கள், 17 மலையாளிகள் போக 37 பேர்களேதான் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களாய் இருப்பதும் பார்த்தால்—வகுப்பு நீதிக்காக உத்தியோகம் பார்க்கும் மெம்பர், வெட்கப்பட வேண்டிய காரியமா, அல்லவா என்று கேட்கின்றோம்.

லா மெம்பர் தோழர் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் 5 வருடம் மந்திரியாகவும், 3 வருடம் சவுத் ஆப்பிரிக்கா ஏஜெண்டாகவும் மற்றும் இப்போது இன்னும் 2, 3 வருடங்களுக்கு மாதம் ரூ. 5333-5-4 சம்பளம் வாங்கும் லா மெம்பராகவும் இருந்தும் இவரால் இந்த சமூகம் அடைந்திருக்கும் நிலைமை இதுவானால், 'பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று சொல்லப்படுவதானது அச் சமூகத்தில் ஏதோ இரண்டொருவர் தொப்பையை நிரப்புவதற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது' என்று சொல்லுபவர்களின் கூற்றை எப்படி மறுக்க முடியும் என்று கேட்கின்றோம். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், சமீப காலத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தல்களில் பார்ப்பனரல்லாத வக்கீல்கள் 100-க்கு 97 பேர்கள் பார்ப்பனர்களுக்கு (காங்கிரசுக்கு) அனுகூலமாகவே வேலை செய்தார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பார்ப்பனர்களின் உள் எண்ணமும், காங்கிரசின் சூழ்ச்சித் தன்மையும், நாணயக் குறைவான தன்மையும் பார்ப்பனர்களுக்கு வேலைசெய்த பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குத் தெரியாது என்று யாரும் சொல்லிவிட முடியாது. அந்தப்படி யாராவது சொன்னால், அது பார்ப்பனரல்லாத வக்கீல்களை மூடர்கள் என்று சொல்வதற்கு ஒப்பாகும். மற்றபடி இவர்கள் ஏன் பார்ப்பனர்களுக்குக் கூலிகளாக இருந்தார்கள் என்பதற்கு நாம் காரணம் சொல்ல வேண்டியதில்லை.

எனவே, லா மெம்பர் பார்ப்பனரல்லாத கட்சியின் நன்மையைக் கருதினவர் என்று சொல்லப்படுமானால், இந்த சர்வ வல்லமையுள்ள நீதி இலாக்காவில் பார்ப்பனரல்லாதார்களுக்கு நீதி வழங்கினாலொழிய மற்றபடி எப்படி அந்த வார்த்தை உண்மையாகும் என்று கேட்கின்றோம். ஆகவே, கனம் லா மெம்பர் அவர்கள் குறைந்தது ஒரு 50 சப் ஜட்ஜையும், 10 ஜில்லா ஜட்ஜுகளையுமாவது நேரே தெரிந்தெடுக்கும்படியான ஒரு சட்டத்தைச் செய்து, பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்குச் சுதந்திர புத்தியை உபயோகிக்க இடம் கொடுக்காத வரையில், அடுத்த பொதுத் தேர்தலில் தோல்விக்குக் கனம் லா மெம்பர் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களே முக்கிய காரணஸ்தராகிவிடுவார் என்பதை இப்பொழுதே எச்சரிக்கை செய்துவிடுகிறோம்.

அது போலவே, போலீஸ் மெம்பர் கனம் பன்னீர் செல்வம் அவர்கள் போலீஸ் மெம்பர் ஆனதும் அனேக தோழர்கள் அவர் அந்த இலாக்காவில் ஏதோ பிரமாதமாய்ச் சாதித்துவிடுவார் என்று எதிர் பார்த்தார்கள். ஏனெனில், அவர் தஞ்சை ஜில்லா போர்ட் பிரசிடெண்டாய் இருந்த காலத்தில் வேறு எந்தப் பிரசிடெண்டும் செய்யமுடியாத அவ்வளவு பெரிய காரியங்களில் பார்ப்பனரல்லாதார்களுக்கு நீதி செய்திருக்கிறார். தஞ்சை ஜில்லா பார்ப்பன ஆதிக்கம் உள்ளது என்பதோடு, அனேக தர்ம சொத்துக்களைப் பார்ப்பனர்களே ஏக போகமாய் வெகுகாலமாக அனுபவித்து வந்ததுமாகும். அந்த ஜில்லா, இந்த மாகாணப் பார்ப்பனர்களுக்கே ஒரு கோட்டையாகவும் இருந்தது. அப்படிப்பட்ட ஜில்லாவில் கனம் செல்வம் அவர்கள் பெரிய மாறுதல்கள் செய்து ஒரு அளவுக்கு பார்ப்பனரல்லாதாருக்கு மனிதத்தன்மையை உண்டாக்கினார். இதை யாரும் மறுக்க முடியாது. சுயமரியாதை இயக்கம் கிறிஸ்துவ மதத்தைப்பற்றிப் பேசாதிருந்த வரையில் அச்சங்கத்துக்கு உபதலைவராகவும் இருந்தார். இவைகளை எல்லாம் உத்தேசித்தே அவர் போலீஸ் இலாக்கா தலைவர் ஆனவுடன் ரொம்பக் காரியம் செய்துவிடுவார் என்று கருதினார்கள். ஆனால், அவர் வந்து சுமார் 10 மாத காலமாகியும் இனிக் கொஞ்ச காலமே ஆயுள் இருப்பதை உணர்ந்தும் போலீஸ் இலாக்கா பலமான ஒரு அக்கிரகாரமாகவே மேலும் மேலும் ஆகிக்கொண்டு வருவதைத்தான் பார்க்க முடிகின்றதே யொழிய, சிறிதாவது நியாயத்துக்கு ஒத்து இருக்கிறது என்று சொல்லுவதற்கே இடம் ஏற்படவில்லை.

வரவர 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போல்—அதாவது, ஒரு ஊரில் டிப்டி சூபரிண்டெண்டெண்ட் பார்ப்பனர், இன்ஸ்பெக்டர் பார்ப்பனர்,

சப் இன்ஸ்பெக்டர் பார்ப்பனர் என்பதாகி மும்மூர்த்திகளும் அவர்களாகவே ஆகிக்கொண்டு வருகிறார்கள். இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் சிறியதேயாயினும் அவர்களுக்கு இந்த வகுப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டால், அவர்களால் எவ்வளவு விஷயங்கள் செய்யக்கூடும் என்பதை நினைத்துப் பார்த்தால், எவருக்கும் அதன் தொல்லைகள் நன்றாய் விளங்கும்.

இந்த இலாக்கா ஒரு சாயபு இடம். அதுவும் வேறு எவ்வித யோக்கியதையும் முக்கியமாய் இல்லாமல் பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர் என்கின்ற ஒரு யோக்கியதையை முன்னிட்டே அடைந்த ஒரு சாயபு இடம் 6, 7 வருட காலம் இருந்து வந்தும்—இன்று இவ்வளவு மோசமான யோக்கியதையில் அந்த இலாக்கா இருக்குமானால் அக்கட்சி உருப்படாததற்கு இவர்கள் போன்றவர்கள்தாம் காரணம் என்று சொல்லப்படுவதை எப்படி மறுக்க முடியும் என்றும் கேட்கின்றோம். பொதுஜனங்கள் மாத்திரம் அல்லாமல், சர்க்காரும்—'ஜஸ்டிஸ் கட்சி ஒரு கட்டுப்பாடில்லாத (டிமாரலைஸ்டு)-Demoralised கட்சி' என்று சொல்லவேண்டிய நிலைக்கு வந்ததற்குக் காரணமும் இந்த—கனம் மெம்பர்களாவார்கள். பார்ப்பனர்கள் ஒரு சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும் ஊசி விரியன் பாம்புபோல் தங்கள் விஷத்தைப் பரப்பிக் காரியத்தைச் சாதித்துத் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பார்ப்பனரல்லாதார்களோ மலைப் பாம்புகள்போல் இரை பொறுக்க மாத்திரம்தான் கவலையே ஒழிய, எதிரிகளைப்பற்றிக் காரியத்தில் கவலையே கிடையாது.

அவர்கள் வயிறு நன்றாக நிரம்பிவிட்டபடியால் மற்றவர்கள் பசியைப் பற்றிக் கவலையே இல்லாமல் அஜீரணத்தோடு வீடுபோய்ச் சேர்ந்துவிடுகிறார்கள். தோழர் கனம் பன்னீர்செல்வத்தின் காரியம் அப்படியிருக்காது என்றும், ஏதாவது செய்வார் என்றும், பார்ப்பனரல்லாதாரில் அவருடைய எதிரிகள்கூட நினைத்தார்கள். இப்படி ஆகிவிட்டது வருந்தத் தக்கதாகும்.

ரெவினியூ மெம்பர் என்று சொல்லப்படும் அய்ரோப்பிய மெம்பர்களோ இராஜதந்திர முறைப்படி தங்கள் காரியம் தவிர அதாவது, சர்க்காருக்கு எவ்விதக் கஷ்டமும் அசவுகரியமும் இல்லாமல் எப்படி நடக்க வேண்டுமோ அதைத் தவிர, மற்றபடி ஜனங்களின் கஷ்ட நிலைமை அவர்களுக்கு முக்கிய இலட்சியமாக இருப்பதில்லை. உதாரணமாக, அய்.சி.எஸ். கலெக்டர்கள் உத்தியோகம் 57 இந்துக்கள் பார்ப்பதில்—40 பார்ப்பனர்களும், 10 மலையாளிகளும் போக, ஏழே பேர்கள்தான் பார்ப்பனரல்லாத தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அதுபோலவே டிப்டி கலெக்டர்களிலும் 81 உத்தியோகங்கள் இந்துக்கள் பார்க்கிறார்கள் என்றால், அவற்றில் 45 பேர்கள் பார்ப்பனர்களாகவும், 9 பேர்கள் மலையாளிகளாகவும் போக, 27 பேர்களேதான் பார்ப்பனரல்லாத தமிழர்களாக இருக்கிறார்கள். மற்றும் இந்த இரண்டு உத்தியோகமும் பொது ஜனங்கள் மீது எவ்வளவு ஆதிக்கத்தை உண்டாக்கிக் கொள்ளமுடியும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

இந்தப்படி ரெவினியூ இலாக்காத் தலைமை ஸ்தானங்களில் பார்ப்பனர்கள் இருப்பார்களானால் அந்த இலாக்காவில் பார்ப்பன ஆதிக்கம் இல்லாமல் வேறு என்ன இருக்கமுடியும்? கணக்குப்பிள்ளை, மணியக்காரர்கள் எந்த சாதியானாலும் பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பார்கள். ஆகவே, இந்த மூன்று மெம்பர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியுடையவும் கிளர்ச்சியினுடையவும் ஆதரவிலும் ஆமோதிப்பிலும் இருந்துகொண்டு–அந்தச் சமூக விஷயத்தில் இவ்வளவு அலட்சிய புத்தியுடன் இருந்தால் இந் நாட்டில் ஜஸ்டிஸுக்கும், நீதிக்கும் சுதந்திரத்துக்கும் எப்படி இடமேற்படும்? மத விஷயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தில் இருந்து விலகவேண்டும் என்று 'ஊசிமேல்' நின்று தவஞ்செய்யும் இந்தியாவானது பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகுகூட அரசியல் விஷயத்திலும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிமையாகும்படியாக ஏற்பட்டால், மக்களுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம் என்பதை இந்த மெம்பர்களே யோசித்துப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

ஆகவே, கனம் ரெவினியூ மெம்பர் குறைந்தது ஒரு 50 பேர்களையாவது பார்ப்பன ரல்லாதாரிலிருந்தே நேராக டிப்டி கலெக்டர்களாகவும், 100 பேர்களையாவது தாசில்தார் களாகவும் தெரிந்தெடுத்து, தற்சமயமுள்ள குறைகளையாவது உடனே சரிப்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க, மூன்று மெம்பர்களும் ஒன்றுசேர்ந்து அவரவர்கள் இலாக்கா உத்தியோகங்களுக்கு ஒரு ஜாபிதா தயாரித்து, ஒவ்வொரு டிவிஷனிலும், தலைநகரங்களிலும் எல்லா உத்தியோகமும் ஒரே வகுப்பாராய் இல்லாமல்— உதாரணமாக டிப்டி கலெக்டர் பார்ப்பனராய் இருந்தால் தாசீல், மேஜிஸ்ட்ரேட் ஆகிய வேலைகளில் பார்ப்பனரல்லாதாராயும்; பார்ப்பனர் போலீஸ் டிப்டி சூபரிண்டென்டாய் இருந்தால் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் பார்ப்பனரல்லாதாராகவும்; மற்ற இலாக்காவும் இதுபோல் கலந்து இருக்கும்படியும்; வகுப்பு எண்ணிக்கையை அனுசரித்தும் சரியானபடி பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்ய வேண்டியது அவசரமானதும் முக்கிய மானதுமான கடமையாகும்.

பல ஊர்களில் இருந்துவரும் உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை விவர ஜாபிதாக் களில் நமக்கு வந்திருக்கும் கணக்குகளைப் பார்த்தால், சரீரத்தால் பாடுபடுகின்ற உத்தியோகங்கள் போக பாக்கி எழுத்துவேலை, மூளைவேளை முதலிய—ஜனங்களிடம் செல்வாக்குப்பெறும் உத்தியோகங்களில் 100-க்கு 25 கூட பார்ப்பனரல்லாதார்களுக்கு இல்லை என்று சொல்லும்படியான நிலையில் இருக்கின்றன. இதைக் கவனித்துப் பார்த் தால் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு மூளையில்லையென்றோ அல்லது பார்ப்பனரல்லாதாரை நம்பக்கூடாதென்றோ கருதி இருக்கிறார்களா என்ன என்று தான் கேட்கவேண்டி இருக்கிறது.

பார்ப்பனரல்லாத சில பெரிய பதவிக்காரர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் அவர்கள் சமூகத்திற்கு விசுவாசமில்லாத துரோகிகளாய் ஆகிவிட்டார்கள் என்று வேண்டு மானால் சொல்லலாமேயொழிய—மூளை இல்லை என்றும், நம்புவதற்கு இல்லையென்றும் ஒழுக்கமில்லை என்றும் சொல்லும்படி பார்ப்பனர்களைவிட அதிகமாக இதுவரை பார்ப்பன ரல்லாதார் எவரும் நடந்துகொள்ளவில்லை.

அரசாங்கத்தாரும் மெம்பர்களும் இதைக் கவனித்துத் தக்கது செய்யவில்லையானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் வேறு வழியில் திரும்ப வேண்டிவரும் என்பதை எச்சரிக்கை செய்கின்றோம்.

மந்திரிமார்களும் இதைக் கவனித்துத் தக்கது செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

['குடிஅரசு'—தலையங்கம்—19.5.1935]

3. வகுப்புரிமையின் வரலாறு

1. பார்ப்பனரல்லாதார் இயக்கமும் தேசத் துரோகமும்

பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்டு சுமார் 15 வருட காலமே ஆகியிருந்தாலுங் கூட, அது ஏற்பட்ட பிறகு இந்த நாட்டுக்கு 100-க்கு 97 பேர்களாய் உள்ள நம் பார்ப்பன ரல்லாதார் சமூகத்திற்கும், சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கும் எவ்வளவு பயன் அளித்து வந்திருக்கின்றது என்பதை உணர்ந்தால், பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் அவர் களுக்கு உதவி செய்யும் மூடர்களுடையவும், கூலிகளுடையவும், குலத் துரோகிக ளுடையவும், யோக்கியதையும் சிறிதாவது விளங்காமல் போகாது.

தென்னிந்தியாவில் போலீஸ் இலாக்காவிலும், முன்சீப் இலாக்காவிலும் (நிர்வாகம், நீதி என்கின்ற இரண்டு இலாக்காவிலும்) பார்ப்பனர்கள் ஆதிக்கம் இல்லாமல் இருந்திருக்குமானால், நேற்று நடந்த இந்திய சட்டசபைத் தேர்தல்களின் முடிவு இப்படி ஆகியிருக்காது என்பதற்கு அனேக ஆதாரங்கள் காட்ட நம்மால் முடியும். இது ஒருபுற மிருக்க, இந்த நாட்டுக்குப் பழம்பெரும் குடிமக்களாகிய பார்ப்பனரல்லாதார் நிலை இந்த இருபதாம் நூற்றாண்டிலும், சூத்திரராயும் சண்டாளர்களாயும் மதிக்கப்படவே முடியாது. ஆகவே, கப்பலுக்கு சுக்கான் எப்படி முக்கிய கருவியோ அதுபோல—மக்களுக்கு மக்களை நடத்துவதற்கு போலீசும், முன்சீப்பும், சுக்கான் மாதிரியாய் இருந்து வருகின்ற அவ்வளவு முக்கியமானவையாகும்.

ஆனால், உத்தியோகம்தான் பெரிதா? தேசம் பெரிதா? என்று பார்ப்பனர்கள் நம்மைப் பார்த்துக் கேள்விகள் கேட்பார்கள்; பார்ப்பனர்களது கூலிகளும், அடிமைகளும் இதற்குப் பின்பாட்டும் பாடுவார்கள்.

உத்தியோகத்தை மனத்தில் வைத்தே தேசம், தேசாபிமானம் என்று பார்ப்பனர்கள் பேசி வரும் இரகசியம் பார்ப்பனரல்லாத 'தேசாபிமானிகள்' பலருக்குத் தெரியாது என்பதோடு, பலர் தெரிந்தும் தங்கள் பிழைப்புக்கு வேறு விதியில்லாமல் பின்பாட்டுப் பாடுகின்றார்கள் என்றே நினைக்கின்றோம்.

இன்று தமிழ் நாட்டிலுள்ள தேசபக்திப் பார்ப்பனர்களை எடுத்துக் கொண்டால் அவர்களது பிள்ளை குட்டிகள் பேத்துப் பிதிர்கள் எல்லாம் எதை எதிர்பார்த்து இன்று வாழ்கின்றார்கள்—வளர்க்கப்படுகின்றார்கள்? S.S.L.C.; F.A.; B.A.; M.A.; B.L.;M.L. முதலிய படிப்புக்கள் படிக்கவைக்கிறார்கள் என்பவைகளைப் பார்த்தால், பார்ப்பனர்கள் தேசாபிமானத்தைப் பிரதானமாகக் கருதுகிறார்களா? அல்லது, உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதுகின்றார்களா? என்ற சூழ்ச்சி விளங்காமல் போகாது. பார்ப்பனர்கள் சர்க்கார் உத்தியோகத்தை எதிர்பார்க்காமலும்—வெறும், புத்திக்காகவும் அறிவுக்காகவும், தேசபக்திக்காகவும் படிக்கின்றார்கள் என்று, இன்று எந்த முட்டாளாவது கருதியிருக்கின்றார்களா என்று கேட்கின்றோம்.

ஆகவே, உத்தியோகத்தையே நம்பி உயிர் வாழும் ஒரு கூட்டம்—உத்தியோகத்திலேயே 100-க்கு 70, 80, 90 கணக்கில் புகுந்து கொண்டும், நத்திக் கொண்டும் மற்றவர்களை உள்ளே விட ஒட்டாமலும் சூழ்ச்சி செய்து வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம்—அதற்காகவே தங்கள் பிள்ளைகுட்டி, பேத்துப் பிதிர்களைத் தற்புத்தி செய்து கொண்டு அரசாங்க ஆதிக்கத்தைக் கைப்பற்ற எவ்வித இழி தொழிலையும் கையாளும் ஒரு கூட்டம், 'உத்தியோகம் பெரிதா? தேசம் பெரிதா?' என்று உத்தியோகத்தில் 100-க்கு 25 பேர்கள் கூட இல்லாத நம்மைக் கேட்பதாயிருந்தால், இதில் யோக்கியப் பொறுப்போ, நாணயமோ, கடுகளவாவது இருக்க முடியுமா என்று கேட்பதோடு, இதைக் கடுகளவு அறிவாவது இருக்கும் மனிதன் நம்பமுடியுமா என்றும் கேட்கின்றோம்.

இந்தச் சூழ்ச்சிகளை வெகு காலமாக அனுபவத்தில் தெரிந்து அனுபவித்து வந்த சர். தியாகராயர், டாக்டர். நாயர் போன்ற மேதாவி அறிஞர்கள்தாம் உத்தியோகத்தில் விகிதாச்சாரம் கிடைக்கவேண்டும் என்கின்ற கொள்கையோடு இந்த ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்தார்களே ஒழிய, மற்றபடி வெள்ளைக்காரர்களே எல்லா உத்தியோகத்திலும் இருக்க வேண்டும் என்றோ, இந்த நாட்டை என்றைக்கும் வேறு நாட்டாரே ஆள வேண்டும் என்றோ கருதி அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இந்த இயக்கத்தின் பயனாய்ப் பார்ப்பனர்களின் ஏகபோக (உத்தியோக) அனுபவிப்பு குறைந்த பிறகுதான் பார்ப்பனர்கள் உத்தியோகம் வேறு, தேசாபிமானம் வேறு என்று சொல்ல ஆரம்பித்தார்களே தவிர, அதற்கு முன்பு வரை உத்தியோகங்களே தேசாபி

மானமாய் இருந்துவந்தது யாரும் அறியாததல்ல. உதாரணமாக, ஜஸ்டிஸ் கட்சி ஏற்படும் வரை, காங்கிரஸ் பிரசிடெண்டுகளும் காரியதரிசிகளும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளாகவும், நிர்வாகசபை மெம்பர்களாகவும் இருந்து வந்ததே போதுமானதாகும்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன்பு, தீண்டப்படாதார் நிலை எப்படியிருந்தது என்பது இப்பொழுது கூலிக்கு மாரடிக்கும் பச்சோந்திகளுக்கும் தேசபக்தர்களுக்கும் 'அரை-டிக்கட்' தேச பக்தர்களுக்கும் தெரியாவிட்டாலும்—ஒரு நாற்பது வயதிற்கு மேற்பட்ட பார்ப்பனர்—பார்ப்பனரல்லாத தேசபக்தர் எவரும் அறிந்ததேயாகும்.

ஆகவே, நமது பார்ப்பனரல்லாதார் சமூகம் அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப விகிதாச்சாரம் உத்தியோகத்தில் பெறும் வரையிலும், அல்லது பார்ப்பனர்கள் தங்கள் விகிதாச்சாரத்துக்கு மேற்பட்ட விகித உத்தியோகம் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லும் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சி இருந்து தீர வேண்டியதே என்பதே நமது அபிப்பிராயம்.

அது தேசத் துரோகக் கட்சியாக ஆயினும் சரி, சர்க்கார் தாசர்கள் 'குலாம்கள்' கட்சியாயினும் சரி, அதனுடைய பிறப்புரிமையைப் பெற்ற பிறகுதான் அது வேறு வேலையில் இறங்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டுப் பார்ப்பனர்களுக்குப் பயந்து கொண்டு 'எங்களுக்கு வகுப்புவாரித் திட்டம் வேண்டியதில்லை, யாரோ ஒருவர் இருவருக்கு மந்திரிப் பதவியோ, பெரிய சர்க்கார் உத்தியோகப் பதவியோ மாத்திரம் இருந்தால் போதும். நாங்களும் பெரிய தேசபக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள்தாம்' என்றால் அதைவிட ஈனத் துரோகமான கட்சி உலகில் வேறு இல்லையென்றுதான் சொல்லுவோம்.

['பகுத்தறிவு'-தலையங்கம்—23-12-1934]

2. தென்னாட்டில் அரசியல் கிளர்ச்சி

எப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சியும் போரும் மதம், வகுப்பு, சாதி ஆகியவைகளில் எதையாவது ஒன்றின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நடந்திருக்கின்றன—நடைபெறுகின்றன என்றுதான் சொல்லவேண்டுமேயொழிய, மற்றபடி எல்லாப் பொது மக்களின் நன்மையைப் பொறுத்தும், விடுதலையைப் பொறுத்தும் நடந்திருப்பதாகச் சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக, நம் நாட்டில் சிறப்பாகத் தென்னாட்டில் நடக்கும் கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சி என்பதாக முன்சொன்னேன். ஆனால், அது இன்று மாத்திரமல்லாமல் சரித்திர காலம் முதல் நடந்துவருகிறது. அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால், வேதம், ஸ்மிருதி. புராணம் முதலியவைகளைப் பாருங்கள். வேதம், வேதகாலம் பெரும்பாலும் வெள்ளையர்—கறுப்பர் சண்டையாகவே இருந்துவந்து இருக்கிறது என்பதை வேதம் அறிந்த யாரும் உணரலாம்.

வேதத்தில் கடவுளையோ அல்லது ஆரியர் தலைவரான இந்திரனையோ பிரார்த்திக்கும் பிரார்த்தனைகள்—மந்திரங்கள் எல்லாம் கறுப்பு நிறக்காரர்கள் தங்களுக்குக் கொடுமைகள் செய்கின்றார்கள் என்றும், தங்கள் சுகபோகங்களுக்குப் பங்காளிகளாய் இருக்கின்றார்கள் என்றும், தங்கள் ஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கின்றார்கள் என்றும், ஆதலால் கறுப்பர்களை அடியோடு அழிக்கவேண்டும் என்றும், ஒழிக்கவேண்டும் என்றும் பிரார்த்திப்பதாகவே காணலாம்.

மற்றும், ஸ்மிருதி என்பவைகளைப் பார்த்தாலும் பார்ப்பனர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உயர்வும் சவுகரியமும், பார்ப்பனரல்லாதவர்கள் அல்லது

கறுப்பு நிறக்காரர்கள் என்பவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் இழிவும் கொடுமையும், அதை ஆதரிக்கும் அரசர்களைத் தவிர, மற்றவர்களைப் பார்ப்பனர்கள் அழித்து வந்திருக்கிறதும் காணலாம்.

அது போலவே, புராணங்களைப் பார்த்தாலும் எங்கும் பூசுரர்கள்—அசுரர்கள் சண்டையும், தேவர்கள்-இராட்சதர்கள் சண்டையும், பூதேவர்கள்—அரக்கர்கள் சண்டையும் மலிந்து கிடப்பதைக் காணலாம்.

அதே சண்டைகள், கிளர்ச்சிகள் ஆகியவைகள்தாம் இன்று தேச பக்தர்கள்—தேசத் துரோகிகள் என்னும் பேரால் நடைபெறுகின்றன.

அந்தக் காலத்தில் புராணங்களில் நடந்ததாகச் சொல்லப்படும் சூழ்ச்சிகள் எல்லாம் இந்தக் காலத்திலும் இக் கிளர்ச்சிக்கு நடைபெறுகின்றன.

இந்திரப் பட்டம் பெறவோ (பார்ப்பனர்களைத் தவிர) வேறு யார் தவம் (பாடு பட்டாலும்) செய்தாலும், அவர்களை ஒழிக்க எவ்வளவு சூழ்ச்சிகள்—இழிவான வஞ்சனை யான காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், இன்றையக் காரியங்களைப் பார்த்து யாரும் ஆச்சரியப்பட முடியாது.

தவம் செய்பவர்களின் தவத்தைக் கெடுக்க அனேக தடவைகளில் பெண்களை விட்டே மயக்கிக் கெடுத்திருக்கிறார்கள். இராவணனுடைய தபசின் மகிமையை எவ்வளவு சூழ்ச்சி செய்து கெடுத்தி நக்கின்றார்கள். இரணியன் தபசின் மகிமையை எவ்வளவு சூழ்ச்சி செய்து கெடுத்திருக்கிறார்கள். பத்மாசூரன் தவத்தின் மகிமையை எப்படிப்பட்ட தந்திரத்தால் கெடுத்திருக்கிறார்கள்!

இவைகளெல்லாம் உண்மையல்ல என்றும், பொய்க் கதைகள் என்றும், மிகைப்படுத்தி மாற்றிக் கூறப்பட்டவை என்றும் சொல்லப்படுவது உண்மையானாலும் கூட—பார்ப்பன ரல்லாதாரை எப்படி நடத்தவேண்டும், எப்படி வஞ்சிக்க வேண்டும், எப்படி அவர்களைத் தலையெடுக்க வொட்டாதபடி அழுத்திவைக்க வேண்டும், தலை எடுத்தவர்களை எப்படி ஒழிக்கவேண்டும் என்பதற்கு இவை வழி காட்டியாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அந்த முறையில்தான் இன்று பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சி அரசியலின்பேரால் தேச பக்தி, தேசாபிமானம் என்பதின்பேரால் நடைபெறுகிறது.

இந்திய சரித்திரங்களினாலும் சரி, புராணங்களினாலும் சரி, முன்காலத்தில் தேசாபி மானம் என்கின்ற பேச்சோ, கிளர்ச்சியோ இருந்துவந்ததாகக் காண்பதற்கில்லை. தேச பக்தி, தேசாபிமானம் என்கின்ற வார்த்தை மேல்நாட்டிலிருந்து வந்ததாகும்.

நம் நாட்டில் இராஜாக்களுக்கும்-இராஜாக்களுக்கும் மகத்தான சண்டைகள் நடந் திருக்கின்றன. அது விஸ்தீரணத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும், ஒரு வகுப்பாரை ஒழிக்கவுமேயல்லாது தேச நன்மைக்கு என்று, தேசபக்தி பூண்டு அரசர்களுடன் பொது மக்கள் போர் புரிந்ததாகச் சரித்திரம் இல்லை.

மேல்நாட்டுத் தேசாபிமானத்துக்கும் நாம் இங்கு இன்று கற்பிக்கிற அர்த்தம் இருந்த தில்லை. அங்குள்ள தேசாபிமானத்தாலும் தேச பக்தியாலும் எந்தத் தேச மக்களுக்கும் விடுதலை ஏற்பட்டதாக ஆதாரமோ, அனுபவமோ இருந்ததும் இல்லை.

சாதாரணமாக, இந்த நாட்டைப் பாரத தேசம் என்று சொல்லுவதுகூட யோக்கிய மான பெயராகாது. பரதன் என்கின்றவன் ஆண்டதால் பாரத தேசம் என்று சொல்லப்படு மானால், அதற்கு முன் ஆண்டவர்கள் பெயர் ஏன் சொல்லக்கூடாது? அதற்குப்பின் ஆண்டவர்கள், ஆளுகின்றவர்கள் பெயர் என்ன கதியாவது? எந்தத் தேசத்திலாவது, எப்போதோ ஒரு காலத்தில் ஆண்டவன் பெயர் சொல்லப்படுகின்றதா? இந்தப் பெயர் ஆரிய

ஆதிக்கத்தைக் குறிப்பதே தவிர வேறில்லை. அக் காலத்திய அரசர்களை நாம் மதிப்பதாகவோ பாராட்டுவதாகவோ சொல்லுவதும், பழங்கால அரசர்கள் ஆட்சி போன்ற அரசியல் முறை வேண்டுமென்று சொல்லுவதும் பெரிதும் சுயமரியாதை அற்றதும் முட்டாள்தனமானதுமான காரியமாகும்.

பழங்கால அரசர்களின்—இராஜ விசாரணை, இராஜநீதி என்பவை என்ன என்பதற்கு அக் கால ஆதாரங்கள் சரித்திரங்கள் அல்லாமல், அவர்களைப்போல் நடிக்கும் நாடகங்களைப் பார்த்தாலும் நன்றாய் விளங்கும். உதாரணமாக, ஒரு அரசன் இராஜசபைக்கு வந்தவுடன் மந்திரியை என்ன கேட்கிறான்?

'பிராமணர்களுக்கு மான்யம், அன்ன சத்திரம், வேத பாடசாலை (இலவசப் படிப்பு) ஆகியவைகள் தாராளமாய் வழங்கியிருக்கிறாயா? அவர்கள் மனம் நோகாமல் சந்தோஷத்தோடு வாழ உதவி செய்து வருகிறாயா?' என்று கேட்டுவிட்டு, 'மற்ற வகுப்பார் பிராமணர்களுக்கு இட்ட கருமப்படி நடந்து வருகிறார்களா'' என்றுதான் கேட்கிறானேயொழிய, வேறு என்ன? அதாவது, வருணாசிரம இராஜ்ய பாரந்தானே இதுவரை நடந்துவந்திருக்கிறதே ஒழிய, வேறு என்ன?

[திருச்சி, திண்டுக்கல், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் பேசிய சொற்பொழிவின் சுருக்கம்
—'குடிஅரசு' 8-9-1935]

நம்முடைய கட்சியாகிய இந்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கமானது 25 வருடத்திற்கு முன்பாகவே, முக்கியமாய்த் தென்னாட்டுத் திராவிட மக்கள் அரசியல், சமுதாயம், கல்வி, பொருளாதாரம் முதலிய துறைகளில் தலையெடுக்க முடியாமல் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் நிலையிலிருந்து மீட்கப்படச் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். அக்கட்சியினுடைய முக்கியமான கொள்கைகள் எல்லாம் அரசியல் சமுதாய விடுதலையும், அரசியல் தனித் தொகுதிப் பிரதிநிதித்துவ உரிமையும், அரசாட்சி, உத்தியோகம், பதவி ஆகியவைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஆகும்.

[திருவாரூரில், 24, 25-8-1940-ல் நடந்த ஜஸ்டிஸ்கட்சி மாநாட்டின் தலைமையுரை—'குடிஅரசு' 25-8-1940]

3. வகுப்புரிமை—தோன்றிய வரலாறு

நம்முடைய நாட்டிலே 1916, 1917-ல் தான் வகுப்புவாரிக் கோரிக்கை ஆரம்பமானது என்றாலுங்கூட, வடநாட்டில் வகுப்புவாரி உரிமை முழக்கம் 1900-லிருந்தே எழுப்பப்பட்டது. தங்களுடைய வகுப்பின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு தங்களுக்கு விகிதாசாரப்படி எல்லாத் துறைகளிலேயும் சேர்க்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் 1900-லிருந்தே கிளர்ச்சி செய்து வந்தார்கள். நம்மில் பலருக்கு இந்தச் சங்கதி தெரியாதிருந்திருக்கலாம். கொஞ்சம் வயதானவர்களுக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரி முஸ்லிம்கள் செய்து வந்த கிளர்ச்சியைக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்ப்புச் சற்றும் பயன்படாமல் போய்விட்டதோடு மாத்திரமல்லாமல், முஸ்லிம்களுக்காக வகுப்புவாரித் திட்டத்தையும் நிறைவேற்றினார்கள். அப்போது இந்தியாவின் மத்திய சர்க்கார் கல்கத்தாவில் இருந்து வந்தது. கல்கத்தாவில் பெருவாரியானவர்கள் முஸ்லிம்கள் என்பதால், வெள்ளையர்களால், முஸ்லிம்களுடைய கோரிக்கைகளை மறுக்கமுடியாமற் போயிற்று. எனவே அவர்கள் காங்கிரஸ் எதிர்ப்பைப் பற்றிச் சிறிதும் இலட்சியம் கொள்ளாமல் முஸ்லிம்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தார்கள்.

எனவே, காங்கிரஸ்காரர்கள் 1907-ல் 'சுதேசி இயக்கம்' என்ற பேரால் முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக என்றே—அதாவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தனித் தொகுதி

முறை, அவர்களுக்காகச் செய்த வங்காளப் பிரிவினை கூடாது என்பதற்காகவே, ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

நம்முடைய மக்களும் பிரமாதமாக அந்த இயக்கத்தால் சாதித்து விடமுடியும், தங்களுக்கு ஏதோ பெரிய இலாபம் ஏற்படும் என்று கருதி, 'சுதேசி இயக்கத்தில்' பெரும் பங்கு கொண்டார்கள். ஆனால், அவர்களுக்கு இந்த இயக்கத்தின் உள்நோக்கம் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தனித்தொகுதி முறையை—பிரிவினையை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது என்று தெரியாது. ஏனென்றால், இன்றைய தினம் நம்முடைய மக்கள் எப்படிப் பாமர மக்களாய், அரசியல் என்பதே இன்னது என்று தெரியாதவர்களாய், யார் எதைச் சொன்னாலும் நம்பிக்கொள்வது என்ற தன்மையில் இருப்பது போலவேதான் அன்றைய தினமும் இருந்து வந்தார்கள். அவர்களுக்கு 'சுதேசி இயக்கம்'—அது 'தேச பக்தர்கள்' இயக்கம் என்றுதான் தெரியுமே தவிர, அந்த இயக்கத்தினுடைய உட்கருத்தும், நோக்கமும் தெரியாது. ஆனாலும், முஸ்லிம்கள் கட்டுப்பாடாக நின்று காங்கிரஸ்காரர்களுடைய பல தொல்லைகளையும் எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு தங்கள் கொள்கையில் வெற்றிபெற்றார்கள்.

1910 ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்களுக்கு என்று தனித் தொகுதியும், இந்துக்களுக்கு என்று தனித் தொகுதியும் பிரிக்கப்பட்டது. அந்தப்படி பிரிக்க நேர்ந்தபோது 'இந்துக்கள்' தொகுதி என்று பிரிக்க முடியாமற் போய்—'முஸ்லிம்கள் தொகுதி', 'முஸ்லிம்கள் அல்லாதார் தொகுதி' என்று பிரித்தார்கள். முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி கொடுப்பதை எதிர்த்துவந்த காங்கிரஸ் இந்தக் காரியத்தினால் படுதோல்வியுற்றது. ஆனாலும், தங்களது தோல்வியை வெளியே சொல்லுவதற்கு காங்கிரஸ் வெட்கப்பட்டது. இந்த நேரத்தில் வெள்ளையர்களுக்கு ஒரு புதிதான யோசனை சொன்னார்கள். அதாவது, காங்கிரசார் முஸ்லிம்களுடைய தனித் தொகுதி முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதற்குப் பதிலாக, வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரிக்கும் திட்டத்தை வெள்ளையர்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு காங்கிரஸ் ஒத்துக்கொண்டது. எனவே, 1910 ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்கள் செய்த கிளர்ச்சியின் பயனாய் அவர்களுக்குத் தனித்தொகுதி முறை ஏற்பட்டது. அதன் பின்னரும் காங்கிரஸ் முஸ்லிம்களை மறைமுகமாக எதிர்த்து வந்தது; எது சொன்னாலும் அதை மறுத்து ஒரு பலமிக்க எதிர்க் கட்சியாக விளங்கியது.

முஸ்லிம்களுக்கு எதிராகக் காங்கிரஸ் செய்த எத்தகைய முயற்சிகளும் பலிக்கவில்லை என்பதோடு, முஸ்லிம்கள் கட்டுப்பாடாக மேலும் மேலும் பலமடைந்துவந்தார்கள். இதனால், காங்கிரஸ் கட்சியிலேயே அந்தக் காலத்தில் இந்திய அரசியலில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய அன்னி பெசன்ட் அம்மையாரின் மூலமாக முஸ்லிம்களிடம் சரணாகதி அடைந்தது. அதற்குப் பெயர்தான் 'லக்னோ பாக்ட்' (லக்னோ உடன்படிக்கை) என்று நினைக்கிறேன். இதுதான் 'இந்து-முஸ்லிம் ஒப்பந்தம்' என்பதாகும். அந்த ஒப்பந்தம் இன்று முஸ்லிம்களுக்குத் தனி நாடு அளித்துவிட்டது.

இந்தப்படியாக, வடநாட்டில் முஸ்லிம்கள் வெற்றிபெற்று தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டதைக் கண்ட பிறகுதான், நம்முடைய நாட்டவர்களுக்கும்—நமக்கும் வகுப்புவாரி விகிதாச்சாரம் வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்களே ஒரே மூச்சாக, கட்டுப்பாடாகப் போராடியதன் மூலமாக எல்லாத் துறைகளிலேயும் அவர்களுக்கு இவ்வளவு என்று பங்கு பிரிக்கப்பட்டது. அவர்கள் தனித் தொகுதியும் பெற்றுவிட்டனர்.

அந்தப்படி இருக்கும்போது, இந்த நாட்டில் 100-க்கு 90 பேராய் இருக்கக்கூடிய நாம் எல்லா உத்தியோகங்களையும் சகல அதிகாரங்களையும் 100-க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்கள் அடையும்படி விட்டுவிட்டு நாய் வாடுவதா? எல்லாத் துறைகளிலேயும் பிற்பட்ட

மக்களாய், பார்ப்பனர்களுக்கு அடிமைகளாய் இருந்து வரவுமான நிலைமையிருக்கலாமா என்று தியாகராயச் செட்டியார், நாயர் போன்றவர்கள் எண்ணினார்கள்.

தியாகராயர் காங்கிரசிலே மிகப் பிரபலமிக்கவராய் இருந்து வந்தார். சென்னையிலே நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

1916 ஆம் ஆண்டுவரை தியாகராயரும், நாயரும் எதிர் எதிர்க் கட்சியாய் இருந்து கொண்டு, ஒருவரையொருவர் மிக மோசமாகத் தாக்கிக்கொண்டு இருந்தார்கள்.

இப்படி இருந்தவர்கள்தாம், தாங்கள் இரண்டுபேரும் போட்டுக்கொள்கிற சண்டையினால் மற்றொரு கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் நலம் அடைகின்றார்கள்; தங்கள் இருவருக்கும் சண்டை ஏற்படுத்தி விட்டுவிட்டு அதன் மூலம் தங்கள் நலத்தைத் தேடிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்தார்கள். அதன் பின்னர்தான், அவர்கள் 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்ற பெயரால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் துவக்கினார்கள். அப்போது திராவிடர் என்கின்ற பெயரையோ அல்லது வேறு எந்தப் பெயரையோ சொல்லத் தைரியமில்லாததால் அவர்கள் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்கிற பேரால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்திற்கு அந்த இயக்கத்தினுடைய நியாயமான கொள்கையின் காரணத்தால் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. அப்போது நடந்த தேர்தலிலேயும் அந்த இயக்கம் வெற்றிபெற்றது. அப்போதெல்லாம் நான் காங்கிரசிலேயே இருக்கிறேன்.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கு கண்டு இங்குள்ள பார்ப்பனர்கள் வெகுவாக அஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தை ஒழிப்பதற்காக முயற்சிசெய்ய வேண்டியவர்களாகி காந்தியாரிடத்தில் சரணாகதியடைந்தார்கள்.

[சென்னை பெரம்பூரில், 13-8 1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-8-1950]

இந் நாட்டில் நீண்ட நாட்களாகப் பார்ப்பனரும், பார்ப்பனரல்லாதாரும் எவ்வளவோ ஒற்றுமையாகத் தங்கள் சாதி இழிவைக்கூடக் கருதாமல்—பார்ப்பனர்களிடம் எவ்வளவோ அமைதியாகவும், பக்தியாகவும், மரியாதையாகவும் இருந்துவந்த நிலையானது இந்தப் படிப்புக் குறைவையும், உத்தியோகக் குறைவையும் கருதியே கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்து, அதற்காக ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்ய முற்பட்டதாலும்; அந்த முயற்சியைப் பார்ப்பனர் எதிர்த்துத் தடுத்துவந்ததாலும் இரு சமூகத்தாருக்கும் வேற்றுமை உணர்ச்சி ஏற்பட்டு—அது இன்று இரு வகுப்புகளுக்கும் வகுப்புத் துவேஷமாயும் ஒருவருக்கொருவர் சாதி வகுப்புக் காரணமாகவே வெறுப்பும், அதிருப்தியும் கொள்ள வேண்டியவர்களாகவும் ஆக்கியிருப்பதை இந்தக் கனவான்களும், மற்றும் பார்ப்பனத் தலைவர்களும் அவர்களது பத்திரிகை ஆசிரியர்களும் பார்ப்பன சமுதாயமும் அறியாத விஷயமா?

இப்படியிருக்க, இந்தத் துவேஷமும், வெறுப்பும், அதிருப்தியும் வளரும்படியாகவே பார்ப்பனத் தலைவர்கள் மேலும், மேலும் அகம்பாவமாகவும், ஆணவமாகவும், தந்திரமாகவும் சூழ்ச்சியாகவும், வஞ்சகமாகவும் காரியங்களைச் செய்து வருவது பார்ப்பன சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் காரியமாக இருக்கமுடியுமா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

சாதாரணமாக, இந்த நாட்டைப் பிரிட்டிஷ்காரன் ஆளும்போது இருந்த நிலையை விட இன்று அவன் ஒழிந்து, இந்த நாட்டை இந்த நாட்டார் ஆளுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டவுடன்—திராவிடர்களுக்குப் பார்ப்பனர்களிடம் துவேஷமும் வெறுப்பும், பார்ப்

பனர்களுக்குத் திராவிடர்களிடம் துவேஷமும் வெறுப்பும் அதிகமாக வளர்ந்தவண்ணமாகவே இருந்து வருகின்றதே ஒழிய வேறு என்ன?

உண்மையைச் சொல்லவேண்டுமானால், பார்ப்பனர்கள் இன்று இந்த நாட்டில் தங்களுக்கு ஒரு ஆதரவும் இல்லாமல் செய்துகொண்டார்கள். சகலத்திற்கும் வட நாட்டாரையே நம்பி, தங்கள் பாதுகாப்புக்காக இந்த நாட்டை வடநாட்டான் ஆதிக்கத்திற்கு விட்டுக் கொடுத்து. இந்த நாட்டு ஆட்சி ஆதிக்கம் முழுமையும் அவன் காலடியில் ஆக்கி, இந்த நாட்டுச் செல்வம் யாவற்றையும் அவனே சுரண்டிக் கொண்டு போகும்படி விட்டு, அதன் மூலம் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுகிறார்கள். இதன் பின்விளைவைச் சற்றும் கவனியாமல், தங்களது இன்றைய மேன்மையையும் நலத்தையுமே கருதுகின்றார்கள்.

இதன் பின்விளைவை நினைக்கும்போது நமக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது. இதுவரை இந்தப் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக இருந்து வந்த காங்கிரஸ் திராவிடர்கள் சிறிதுசிறிதாக வேறுபடுவதாகத் தெரிகிறது. மற்றும், இந்தப் பார்ப்பனர்களுக்கு ஆதரவாக இருக்கும் கடவுள்கள், வெகு சீக்கிரத்தில் அழிந்துவிடப் போகின்றன என்பது நமது உறுதி. அவற்றுள் ஏதோ சிறிது மீதியானாலும் அவைகளில் பார்ப்பனர்களுக்குச் சிறிதும் ஆதிக்கம் இல்லாமல் ஆகிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. அன்றியும், பார்ப்பனர்களுக்கு அவர்களது ஆதிக்கத்திற்கு அனுகூலமாக இருந்துவரும் சாஸ்திர, மத, புராண, இதிகாச சம்பந்தமான மூடநம்பிக்கைகளும் அவற்றின் வாழ்வும் வெகு சீக்கிரத்தில் —இனி ஒரு 5 வருடங்களுக்குள்ளாக அனேகமாக ஒழிந்துபோகும் என்பது உறுதி.

ஏன் இப்படி உறுதி கூறுகிறோம் என்றால், பார்ப்பனர்கள்மீது திராவிடர்களுக்கு இன்று உள்ள துவேஷமும் வெறுப்பும், மக்களை அவர்களது (பார்ப்பனர்களது) மதம், கடவுள், சாஸ்திரம் வகையரா தங்கள்மீது சுமத்தப்பட்டிருப்பதையும்; அதனால் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட ஆதிக்கத்தையும், தங்களுக்கு ஏர்பட்ட இழிவையும் நன்றாய் அறியச் செய்து விட்டதுடன், கடவுளுக்கும், கோவிலுக்கும், அதிலுள்ள உருவங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதையும், பக்திக்கும் சாஸ்திர புராண இதிகாசங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் இன்றைய இளைஞர்களையும், இள மங்கையர்களையும் நன்றாக உணரச் செய்து விட்டது.

இன்று துவக்கப்பட்டிருக்கும் இந்த வகுப்புவாரி உரிமைக் கிளர்ச்சியானது வகுப்புரிமையை மாத்திரம் பொறுத்த கிளர்ச்சி அல்ல என்பதே நமது கருத்து. மற்றும், எதைப் பொறுத்தது என்றால்—இந்த நாட்டில் பார்ப்பனரல்லாதார்—திராவிடர் 100-க்கு 90-க்கு மேம்பட்டிருந்தும் இந்த நாடு திராவிடர்களுடையதாக இருந்தும், இந்த நாடு திராவிடர்களுடைய உழைப்பின்மீதும் அவர்களது தானதருமத்தின்மீதும் இருந்து வந்தும், இந்த நாட்டை வெள்ளையனுக்குமுன் ஆண்டு வந்தவர்களும் திராவிடர்களாகவே இருந்திருந்தும், இன்று அப்படிப்பட்ட பார்ப்பனரல்லாத திராவிட சமுதாயம் பார்ப்பனர்களிடம்—அதுவும் இந்த நாட்டுக்குப் பிழைக்கவந்து இந்நாட்டு மக்கள் தானதருமங்களாலேயே மனிதர்களான பார்ப்பனர்களிடம் சிக்கிக்கொண்டு இந்தப்படி அல்லற்படவும், இழிவு படவும், தங்கள் உரிமைக்கு விகிதாச்சாரத்துக்கு பார்ப்பனர்களைத் தொங்கவும்—பார்ப்பனர்கள் திராவிடர்களைப் பார்த்து, 'உங்களுக்குத் தகுதி இல்லை, திறமை இல்லை; நீங்கள் அடிமை வேலைக்குத்தான் தகுதி' என்று சொல்லவுமான நிலை எதனால்—எது எதனால் ஏற்பட்டதோ அதைஅதையெல்லாம்—அவைகளையெல்லாம் வேரோடு கண்டுபிடித்து அழித்து ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே இந்தக் கிளர்ச்சி தோன்றியதாகும்.

1939-ல் இந்திக் கிளர்ச்சி தோன்றிய காலத்தில் இம்மாகாணத்தில் பார்ப்பன ஆதிக்கம் இருந்த நிலை என்ன! அப்போது ஆச்சாரியார்—C. R. அவர்கள் முடிசூடா மன்னராக இருந்தார். 'திராவிட மக்களை இப்படிக் கொடுமைப் படுத்தலாமா?' என்று கேட்ட

17–9–1961-ல் சென்னையில் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாவில் சர். ஏ. இராமசாமி முதலியார்,
ராஜா சர். எம். ஏ. முத்தைய செட்டியார் ஆகியோருடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

தற்கு அவர், 'நடு இரவில் திருடன் புகுந்து விட்டால் கையில் கிடைத்ததை எடுத்து அடிக்க வேண்டியதுதானே!' என்றார். அந்த ஆணவச் சொல்லானது தமிழுக்கு எவ்வளவோ ஆக்கத்தைக் கொடுத்தது; தமிழர்களை ஒரு அளவுக்காவது பார்ப்பனச் சூழ்ச்சியை உணரச் செய்து, நல்ல அளவுக்குப் பார்ப்பன வெறுப்பை உண்டாக்கிற்று. அதனால் மந்திரி சபையில் அவர்களுக்கு மரியாதையே இல்லாமல் செய்துவிட்டது. கடைசியாக, அந்த ஒரு காரணமே ஆச்சாரியாருக்கு இந்த நாட்டில் மரியாதையுடன், பெருமையுடன் வாழ இடமே இல்லாமல் போய்விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் 'கட்டாய இந்தி'யும் ஒழிந்தது.

அதுபோலவேதான்—ஏன், அதற்கு மேலாகவேதான் இந்த வகுப்புவாரி உரிமைக் கிளர்ச்சி பயன்படப் போகிறது. அதில் யாருக்கும் எந்தப் பார்ப்பனருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

பார்ப்பனர்களுக்கு அவர்களுடைய சூழ்ச்சியும், தந்திரமுமே ஆயுதமாக இருக்கிறதே ஒழிய, மற்றபடி அவர்களுக்கு வேறு ஆயுதம் கிடையாது; நல்ல பின் புத்தியும் (Fore sight, கிடையாது. திராவிடர் நிலை அப்படி அல்ல. திராவிடர் மாத்திரம் 100-க்கு 25 பங்கு ஒன்றுபட்டுவிட்டால் பார்ப்பனீயத்தைச் சித்திரத்தில் கூட, கண்காட்சிக் கூடத்தில் கூடக் காணமுடியாது 'திராவிடர்கள் ஒன்றுசேரமாட்டார்கள்' என்கின்ற தைரியம்—இனி பார்ப்பனருக்கு வேண்டாம் என்றே சொல்லுகின்றோம்.

இனி, காங்கிரஸ் திராவிடர்களுக்கும்—திராவிடர் கழக திராவிடர்களுக்கும் இன வேற்றுமை உணர்ச்சி இருக்கவேண்டிய அவசியமே இல்லை. அதுபோலவே கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட் திராவிடர்களும் வேற்றுமை உணர்ச்சி கொள்ளவேண்டியதில்லை. அது போலவே, தொழிலாளத் தோழர்களும் எந்த விதத்திலும் வேற்றுமை உணர்ச்சி கொள்ள வேண்டியதில்லை. தொழிலாளத் தோழர்கள் உலகம் உள்ள வரை தாங்கள் தொழிலாளர்களாகவே இருக்கப்போவதாகக் கருதிக் கொண்டு இருக்கிறார்களா என்று கேட்கிறோம்.

இந்தக் கிளர்ச்சி தொழிலாளர்களுக்கே அதிகமான பயன் கொடுக்கக் கூடியதாகும். தொழிலாளி—முதலாளி ஆகிய இரு வகுப்பையும் இந்தக் கிளர்ச்சி ஒழித்துவிடும். ஆதலால், அவர்கள் முழு மூச்சுடன் இதில் கலந்துகொள்ள வேண்டும்.

['விடுதலை'-கட்டுரை—14-8-1950]

4. பிறந்தநாள் அறிக்கை

என்னுடைய 76ஆவது பிறந்த நாளாகிய இன்று ஒரு அறிக்கை விடவேண்டுமென்று என் தோழர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு முக்கியமான பிரச்சினையென்றும், இனி நாம் அதிகமாகக் கவலை செலுத்தவேண்டிய பிரச்சினையென்றும் கருதுகிற ஒரு விஷயத்தைப்பற்றிப் பொதுமக்களுக்கு எனது வேண்டுகோளாகத் தெரிவிக்கலாமென்று கருதுகிறேன்.

தோழர்களே! தமிழ்நாட்டை வடநாடு பொருளாதாரத்துறையில் பெருங்கொள்ளையடிப்பதோடு, தமிழ்நாட்டைப் பொருளாதாரத் துறையிலும், தொழில் துறையிலும் தலையெடுக்கவொட்டாமல் மட்டந்தட்டிக்கொண்டு வருகிறது. இந்த ஒரு முக்கியமான காரியத்துக்காகவே-வடநாட்டான், அரசியலிலும் தமிழ்நாட்டைத் தனக்கு அடிமைப்படுத்தி, தனது காலடியில வைத்திருக்கிறான்.

இதற்கு அனுகூலமாக இந் நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களுக்கு இனி இந் நாட்டில் ஆதிக்கம் பெறவோ, இதுவரையிலும் வாழ்ந்ததுபோன்ற ஆதிக்க வாழ்வு வாழவோ முடியாதென்று கருதி, வடநாட்டானுக்கு அவனது அரசியல்-பொருளாதார ஆதிக்கத்துக்குத் தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு உடந்தையாகவும் உள் ஆளாகவும் இருந்துவருகிறார்கள்.

இந்தக் காரணங்களுக்காகவே வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டை விலக்கி, சுதந்திரத் தமிழ்நாடாக ஆக்கவேண்டுமென்றும், நாட்டைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் சமுதாயமாகிய பார்ப்பன சமுதாயத்தைத் தமிழ்நாட்டிலிருந்தே வெளியாக்கிவிட வேண்டுமென்றும் நான் உறுதியாகக் கருதி என்னாலான முயற்சிகளைத் திராவிடர் கழகத்தின் மூலம் தொண்டாற்றி வருகிறேன்.

இது ஒருபுறமிருக்க, இந்தச் சந்தர்ப்பத்தையும் நடப்புகளையும் ஆதரவாகக்கொண்டு உள்நாட்டிலேயே சில கொள்ளைக் கூட்டங்கள் தோன்றி—வசதிப்பட்ட அளவுக்குக்கூட, தமிழனைத் தலையெடுக்கவொட்டாமல் செய்துவருகின்றன.

இங்குச் சற்று விவரமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாட்டு அரசியலில் வெள்ளையன் இருந்த காலம் முதற்கொண்டே பார்ப்பனர்கள் ஏகபோக ஆதிக்கம் பெற்று, தமிழர்களுக்குச் சிறிதும் நல்வாய்ப்பில்லாமல் தமிழர்கள் அமுத்தப்பட்டு வந்திருப்பதைக் கண்டிக்கும் முறையில் இந் நாட்டுத் தமிழ் மக்களால்—நான் அறிய, 1890-ஆம் ஆண்டி லிருந்தே பெருங்கிளர்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக, 1892-லும், 1893-லும் சென்னை மாகாணத்தில் கவர்னராயிருந்த லார்டு வென்லக் துரையவர்களுக்கு இந் நாட்டுத் தமிழ் (திராவிட)ப் பெருங்குடி மக்களின் பெயரால், 'கவர்னருக்குப் பகிரங்கக் கடிதம்' என்பதாகக் குறிப்பிட்டு இரண்டு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை களின் நகல் என் கைவசமிருக்கின்றன. அக் கடிதங்களில், சமுதாயத் துறையிலும் அரசியல் துறையிலும் பார்ப்பனர் ஆதிக்கத்தையும் கொடுமையையும் ஆதாரபூர்வமாகப் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. மற்றும், அக் கடிதத்தில் அவற்றை அனுசரித்து 'மெயில்' முதலிய பத்திரிகைகளின் கருத்துக்களையும், டாக்டர் மில்லர் போன்ற பெரியோர்களின் கருத்துக்களையும் எடுத்துப்போட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

இதை எதற்காகக் குறிப்பிட்டேனென்றால்—பார்ப்பன ஆதிக்கமும் கொடுமையும் பற்றிச்சொல்வது ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகோ, அல்லது சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகோ அல்லவென்றும் 1890-லேயே நம்மவர்கள் உணர்ந்து முறையிட்டிருக் கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே.

நிற்க, இத்தொல்லைகள் அல்லாமல் தமிழர்களுக்குத் தமிழ் நாட்டிலே மற்றொரு தொல்லை வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. அதென்னவென்றால், உத்தியோகத் துறையில்—தமிழன், 'பார்ப்பனரல்லாதான்' என்கிற பெயரால் தனக்குரிய பங்கை வலி யுறுத்த ஆரம்பித்த பிறகு, பார்ப்பனர் அதை எதிர்த்து ஒடுக்கும் வகையில் தங்களால் ஆனவற்றையெல்லாம் செய்து ஒடுக்கிய பின், மீதி—அதாவது பார்ப்பனரல்லாதவருக்கு ஏதாவது சலுகை காட்டிப் பதவி கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற நிலைமை— நிர்ப்பந்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில், பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிகொண்டு சில பதவிகளை வெள்ளையனுக்குக் கொடுப்பதும்; அவனுக்குக் கொடுப்பது மக்களுக்கு இஷ்ட மில்லையென்றால் வெளி மாகாணக்காரர்களுக்குக் கொடுப்பதும்; அவர்களுக்குக் கொடுப் பதும் சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்—முஸ்லிம்கள் ஆகியவர்களுக்குக் கொடுப்பதும்; அது சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் ஆந்திரர், மலையாளி, கர்நாடகர் ஆகியவர்களுக்குக் கொடுப்பதுமாய்ச் சூழ்ச்சி செய்து, தமிழர்களுக்கு எவ்வளவு கொடுமை யும் குறைபாடும் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்துவந்தார்கள். வெள்ளையன் அரசாங்கமும் இவர்களுக்கு ஆதரவு கொடுத்தே வந்திருக்கிறது.

இப்போது வெள்ளையன் ஆட்சி ஒழிந்துவிட்டது; இந்தியன் ஆட்சி என்று ஏற்பட்டு விட்டது. அதோடு, நாடும் பலவிதத்திலும் வடநாடு—தென்னாடு என்று பிரிந்துவிட்டது. அது மாத்திரமேயல்லாமல், மொழிவாரி நாடு என்னும் பேரால் ஆந்திர நாடும் தமிழ்நாட்டை விட்டுப் பிரிந்துவிட்டது.

இதனால் ஆந்திரர்கள் தொல்லை அரசியலிலும் உத்தியோகங்களிலும் ஒரு அளவுக்கு ஒழிந்துவிட்டது என்றாலும், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், மலையாளிகள், கர்நாடகர்கள் என்பவர்களது தொல்லை அரசியல் ஆதிக்கத்திலும் உத்தியோகங்களிலும் ஒழிந்த பாடில்லை.

இதை ஏன் சொல்கிறேனென்றால், தமிழ்நாடு மொத்த ஜனசங்கியையில் பார்ப்பனர் 100-க்கு 2¾-ம், கிறிஸ்தவர் 100-க்கு 4-ம், முஸ்லிம்கள் சுமார் 100-க்கு 5-ம், மலையாளிகள் சுமார் 100-க்கு 8-ம், கர்நாடகர்கள் 100-க்கு 5-ம் (இவைகள் உத்தேசமான புள்ளிகள்) இவ்வளவு பேரும் சேர்ந்து, ஜனசங்கியையில் தமிழ்நாட்டார்—தமிழர் அல்லாதவர்கள், 100-க்கு 25 பேர்களுக்கு உட்பட்டவர்களாகவே யிருந்தாலும், இந்தக் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் சாதாரண உத்தியோகங்களில்—நீதி நிர்வாகத் தலைமை உத்தியோகங்களில் சுமார் 100-க்கு 60 பேர்களாகவும், முக்கியமான உயர்ந்த உத்தியோகங்களில் 100-க்கு 75 பேர்களாகவும் இருக்கிறார்கள்.

இதை ஏன் பிரித்துக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்றால், தமிழ்நாட்டிலே தமிழர்களைத் தவிர—அதாவது மேற்படி கூட்டத்தினர் தவிர்த்த, தமிழர்களைப் பற்றியாவது தமிழர்களின் பழக்க வழக்க-கலாச்சாரக் குறைபாடுகளைப் பற்றியாவது, சமுதாயத் துறையில் அவர்களுக்குள்ள இழிவைப்பற்றியாவது, அரசியல், கல்வி, பொருளாதாரத் துறையிலாவது மேலே காட்டிய இந்தக் கூட்டத்தாருக்குச் சிறிதும் கவலையில்லை என்பதோடு, பெரிதும் மாறுபட்டவர்கள் என்றும் சொல்லவேண்டியிருக்கிறது. தமிழர்கள் சமுதாயத் துறையில் கீழான சாதியாராக-'சூத்திரர்களாக' இருப்பதைப்பற்றி இவர்கள் யாருக்கும் கவலையில்லை. எப்படியாவது தங்களுக்கு, தங்கள் விகிதத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கை யளவு பதவிகள் கிடைப்பதனால், தமிழன் கதி எக்கேடு கெட்டாலும் இவர்கள் இலட்சியம் செய்பவர்களல்லர்; அவரவர்கள் தங்கள் தங்கள் சமூகத்துக்கு எப்படி நடந்து பயன்பெறுவது என்பதையே பெரும்பாலும் இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆவார்கள்; அப்படியே இருந்தும் வந்திருக்கிறார்கள். அதனால்தான், எந்த விதத்திலும் தங்களை விடத் தனிப்பட்ட மேலான யோக்கியதை இவர்களுக்கு இல்லாமலிருந்தும் தமிழர்களைவிட இவர்கள் மூன்று பங்கு ஆதிக்கத்தில்—பதவியில் இருந்து வருகிறார்கள்.

இதில் குறிப்பாகக் கூறவேண்டுமேயானால், மலையாளிகளின் தொல்லையே மாபெரும் தொல்லையாகும். அவர்கள் பெரும்பாலும் ஆரிய கலாச்சாரத்தையும், ஆரிய மொழியையும், ஆரிய வருணாசிரம தர்மத்தையும் ஆதரிக்கிறவர்கள். ஆனதனால், வகுப்பு வாரி உரிமையில் மலையாளிகளைப் பார்ப்பனரல்லாத 'இந்துக்கள்' என்கின்ற பிரிவில் பார்ப்பனர்கள் சேர்த்துக்கொண்டு, பார்ப்பனரல்லாதாருக்கு என்கின்ற கணக்கில் ஏராளமான மலையாளிகளுக்குக் கொடுப்பதையே—அவர்கள் தாராளமாக வந்து புகுவதையே பார்ப்பனர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்; அனுமதிக்கிறார்கள். அதன் காரணத்தால், ஏறக்குறைய பார்ப்பனர் இல்லாத பெரும் பதவிகளிலும் மலையாளிகளே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். முதலில் ஒரு சில உதாரணங்கள் கூறுகிறேன்.

சென்னை அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பீடாதிபதியான,

சீப் செக்ரட்டரி: திரு. கே. ராமுண்ணி மேனன்

சீப் எஞ்சினியர்: திரு. கே. கே. நம்பியார்

சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர்கள்:—(1) திரு. நாயக் (2) திரு. காமத்

வைத்திய இலாக்கா:—எழும்பூர் பிள்ளைப்பேறு ஆஸ்பத்திரி சூப்பரின்டெண்டெண்டு: திரு. ஆர். கே. கே. தம்பான்; அசிஸ்டெண்ட் சூப்பரின்டெண்டெண்ட்: திரு. கிருஷ்ணமேனன்; ஸ்டான்லி ஆஸ்பத்திரி சூப்பரின்டெண்டெண்ட்: திரு. கே. என். பிஷரொட்டி; பெண்கள் ஆஸ்பத்திரி, திருவல்லிக்கேணி, சூப்பரின்டெண்டெண்ட்: திருமதி. பாருகுட்டிராமன்.

கல்வி இலாக்கா :—பிரசிடென்சி கல்லூரி பிரின்ஸ்பால் : திரு. பாலகிருஷ்ண நாயர் : குவீன் மேரீஸ் கல்லூரி : திருமதி. கோமன் ; லேடிவெலிங்டன் : திருமதி. வர்கிஸ்; சட்டக் கல்லூரி டைரெக்டர் : திரு. குன்னிராமன்.

இவை—ஒரு சில நிர்வாக அடிப்படைப் பதவிகளிலுள்ள மலையாளிகளை உதாரணத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டன.

இனி மாவட்டத் (ஜில்லா) தலைமைப் பதவிகளிலுள்ள மலையாளிகள் எண்ணிக் கையைக் காட்டுவதற்குப் போலீஸ் இலாக்கா ஒன்றை மாத்திரம் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன். இவைகளிலிருந்து மற்ற இலாக்காக்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

போலீஸ் இலாக்கா :—இதில் 13 ஜில்லாக்களோடு சென்னையைச் சேர்த்தால் 14 ஆகும். இவற்றில், சென்னையில் கமிஷனர் : திரு. பார்த்தசாரதி அய்யங்கார் என்ற ஒரு பார்ப்பனர் இருப்பது மாத்திரமல்லாமல் அடுத்த பதவியான டிப்டி கமிஷனர் என்பதில் மூன்றிலும் மூன்று மலையாளிகள் இருக்கிறார்கள் அவர்கள் :—

(1) திரு. அடிகை (லா அண்டு ஆர்டர்), (2) திரு. தாமோதரன் (கிரைம்), (3) திரு. சுகுமாரன் (ட்ராஃபிக்).

அய். ஜி.க்கு அசிஸ்டெண்ட் :—திரு. வி. பி. நாயர்

அசிஸ்டெண்ட் கமிஷனர்கள் :

1. திரு. சேதுமாதவ.மேனன் (லா அண்டு ஆர்டர்), 2. திரு. சேதுமாதவ நாயர் ; (புரொகிபிஷன்)

இனி ஜில்லாக்களில் போலீஸ் சூப்பரின்டெண்டெண்டுகள் :—திருச்சி : திரு. விஸ்வ நாத நாயர்; மதுரை (வ): திரு. ஏ. சி. நம்பியார்; திருநெல்வேலி : திரு. மாப்ளா அப்துல்லா; வடஆர்க்காடு : திரு. ஷெனாய்; சேலம் : திரு. பாலகிருஷ்ணமேனன்; நீலகிரி : திரு. மாப்ளா ரூக்கி. இவை தவிர மற்ற ஜில்லாக்களிலும் அய்யர், அய்யங்கார்கள்.

அதாவது :—மதுரை (தெ): திரு. கிருஷ்ணசாமி அய்யர்; இராமநாதபுரம் : திரு. நரசிம்ம அய்யங்கார்; மலபார் : திரு. இராமானுஜ அய்யங்கார்; தென் கன்னடம் : திரு. முத்துசாமி அய்யர்.

மீதியுள்ள ஜில்லாக்களில் இரண்டில் ஆங்கிலோ கிறிஸ்தவர்களும், ஒரே ஒரு ஜில்லாவில் தென்ஆர்க்காட்டுக்கு மட்டும் திரு. பாலகிருஷ்ண உடையார் என்ற தமிழரும் இருந்து வருகிறார்கள். இவர் பதவியும் ஆட்டத்தில் இருக்கிறது.

இவை தவிர, அரசாங்க போலீஸ் இலாக்கா (போர்ட்போலியோ) நிர்வாகத் தலைமையில், செக்ரட்டரி : திரு. ஆர். ஏ. கோபால்சாமி அய்யங்கார் ; டிப்டி செக்ரட்டரி : டி. ஏ. சுப்புசாமி அய்யர் ஆகிய இரண்டு பார்ப்பனர் இருப்பது போக, மற்றும் இரண்டு டிப்டி செக்ரட்டரிகள் :—

1. திரு. ஒய். சிவராம மேனன், 2. திரு. சி. ஆர். பணிக்கர்.

மற்றும் பப்ளிக் (பொலிடிகல்) என்று கூறப்படும் இரகசிய நிர்வாகத் தலைமை ஸ்தானங்களில் :—தலைமை டிப்டி செக்ரட்டரி : திரு. டி. என். இலட்சுமி நாரயண அய்யர்; அண்டர் செக்ரட்டரி : திரு. ஆர். பாலசுப்ரமணிய அய்யர்.

அரசாங்கத் தலைமை ஸ்தாபனங்கள் இந்தப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை உதாரணங்களாக எடுத்துக் காட்டப்பட்ட ஒரு சிலவேயாகும். மற்ற இலாக்காக் களிலும் 100-க்கு 90 பேர்களான தமிழர்களைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களே அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமை இதற்கு முன்பே இருந்து வந்தாலும் இவ்வளவு மோசகரமான நிலைமை, அதாவது செக்ரிட்டேரியட், போலீஸ்—முதலியவற்றில் இவ்வளவு மோசகரமான நிலைமை—திரு. ஆச்சாரியார் அவர்கள் காலத்தில் ஏற்பட்டதாகவே தெரிகிறது. இங்கே பொதுமக்கள் சிந்திக்கவேண்டும்—தமிழனுக்கு ஆட்சியில் இடமெங்கே? தமிழன் வாழ்வில் ஆட்சியின் உதவி தேடுவதற்கு வழி எங்கே? தமிழனைப் பழிவாங்கும் தன்மையிலே இந்த நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு காரணம் ஒன்றும் காணோம்.

ஆகையால், ஒவ்வொரு இனத்தாரும், ஒவ்வொரு ஜில்லாக்காரர்களும் பிரிந்து மொழிவாரி மாகாண நாடு பெறும் வரையில், பதவிகள் ஜில்லா விகிதமாவது அந்தந்த ஜில்லா அடையும்படி செய்யவேண்டியது அவசியமாகிறது. சமீப காலத்தில் திருவாங்கூர்—கொச்சி இராஜ்யத்தில் தமிழர் உரிமை கேட்டதற்காக, தமிழர்களை அந்நாட்டு மலையாளிகள் நடத்திய மாதிரியைப் பார்த்தால், குறைந்த அளவு நாம் நமது உரிமைக்காவது பாடுபடக்கூடாதா என்று தோன்றுகிறது. இந்த உணர்ச்சியின் பெயரால்தான் இந்த எண்ணங்கள் நமக்குத் தோன்றுகின்றன.

ஆகவே, தமிழர் இவற்றைப்பற்றி நல்ல வண்ணம் யோசித்து, கட்டுப்பாடான கிளர்ச்சி செய்வதன்மூலம் பரிகாரம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இதுவே என்னுடைய பிறந்தநாள் விழா வேண்டுகோள்.

['விடுதலை'—அறிக்கை—17-9-1954]

பகுதி IV

மொழி

1. எழுத்துச் சீர்திருத்தம்

1. தமிழ் எழுத்தில் சீர்திருத்தம்

தமிழ்ப் பாஷை எழுத்துக்கள் வெகுகாலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன.

உலகிலுள்ள பாஷைகள் பெரிதும் சப்தம், குறி, வடிவம், எழுத்துக்கள் குறைப்பு, அவசியமான எழுத்துக்கள் சேர்ப்பு ஆகிய காரியங்களால் மாறுதல் அடைந்துகொண்டே வருகின்றன.

கால வர்த்தமானங்களுக்கு ஏற்ப சப்தங்களும், பாஷைகளும், உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும்.

வார்த்தைகள் கருத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பது போலவே, எழுத்துக்கள் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும்.

ஆனால், நம் பண்டிதர்களுக்குத் தாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல் மதம், பழக்க வழக்கம் ஆகியவைகள் குறிக்கிட்டுவிட்டதால், எழுத்துக்களுக்கும், அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்துவார்த்தம் கற்பிக்கவேண்டிய அவசியமேற்பட்டு, எழுத்துக்களையே தெய்வமாகவும்–தெய்வ வடிவமாகவும் கருதவேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது.

தற்காலம் எத்தனையோ புதியவார்த்தைகள் வந்து நமது தமிழ்ப் பாஷையில் புகுந்து கொண்டன. அவைகளை இனி விலக்க முடியவேமுடியாது; விலக்குவதும் புத்திசாலித் தனமாகாது. அப் பேர்ப்பட்ட வார்த்தைகளைச் சரியானபடி உச்சரிக்க நமக்குப் பழக்கத்தில் எழுத்துக்கள் இல்லாமல் பாஷையையும், உச்சரிப்பு அழகையும் கொலை செய்கின்றோம். விஷ்ணு என்பதை விட்டுணு என்றும், விண்டு என்றும் உச்சரிப்பதில் பெருமை அடைகின்றோம்; பாஷாபிமானப் பட்டமும் பெறுகின்றோம்; அதற்கு இலக்கணம் இருக்கிறது என்கின்றோம்; அதோடு, சப்தங்கள் மாறிவிடுவதால் கருத்தும், அர்த்தமும் மாறுவதில்லை என்றும் கருதுகிறோம். அதுபோலவே, சில எழுத்துக்கள் பழைய பழக்கம், வழக்கம் என்பதற்காக மாற்றக்கூடாது என்று இல்லாமல், சவுகரியத்துக்காக மாற்றவேண்டியது அவசியம் என்றால், அறிஞர்கள் அதற்கு இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். சுமார் 70, 80 வருடங்களுக்கு முந்திய பதிப்புகளிலும், எழுத்துக்களிலும் 'ஈ' என்கின்ற எழுத்தானது 'இ' எழுத்தையே மேலே சுழித்த—வட்ட வடிவத்தில் இருந்து வந்திருக்கிறது.

இன்னும் 400, 500 ஆண்டுகளுக்கு முந்தின 'கல் எழுத்துக்கள்' அனேகம், வேறு வடிவத்தில் இருந்துவந்திருக்கின்றன. இப்பொழுது அவைகள் மாற்றமடைந்ததற்குக் காரணங்கள் கேட்பாருமில்லை; சொல்லுவாருமில்லை. அதனால் சப்தமோ, அர்த்தமோ, பாஷையின் அழகோ கெட்டுப்போனதாகக் குறை கூறுவாரும் காணப்படவில்லை.

அதுபோலவே, இப்போதும் சில எழுத்துக்களை மாற்றவேண்டியதும், சில எழுத்துக்களைக் குறைக்கவேண்டியதும், சில குறிகளை மாற்றவேண்டியதும் அவசியம் என்றும், அனுகூலமென்றும் பட்டால் அதைச் செய்யவேண்டியதுதான் அறிவுடைமையே ஒழிய— அதன் தத்துவார்த்தத்துக்கு ஆபத்து வருகின்றதே என்பது அறிவுடைமையாகாது என்பது நமது கருத்து.

ஆகவே, இப்போது ஞு, ரு, ஞூ ஆகிய எழுத்துக்களும் ணே, லே, ளே, னே ஆகிய எழுத்துக்களும் மற்ற கா, நா, ரா முதலாகிய எழுத்துக்களைப் போலும் டை, நை, ழை முதலிய எழுத்துக்களைப் போலும்—ஆகாரத்துக்கு 'ா' குறியையும், அய்காரத்துக்கு 'ை' குறியையும் பெறாமல் தனி வடிவத்தைக் கொண்டு இருப்பதை மாற்றி, ணா, றா, னா; ணை, லை, ளை, னை போல உபயோகித்துப் பிரசுரிக்கலாம் என்று கருதியிருக்கின்றோம். இதன் பலனாய் அச்சுக் கோப்பதற்கு எழுத்துக் கேசுகளில் (அறைகளில்) 7 கேசுகள் (அறைகள்) குறைகின்றன என்பதோடு, பிள்ளைகளுக்கும் இந்த ஏழு எழுத்துக்களுக்குத் தனி வடிவம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லாமல்போகும் சவுகரியம் ஏற்படுகின்றன.

இன்னமும், தமிழ்ப் பாஷை எழுத்துக்களில் அனேக மாறுதல்கள் செய்யவேண்டியிருந்தாலும், இப்போதைக்கு இந்தச் சிறுமாறுதலை அனுபவத்திற்குக் கொண்டுவரலாம் என்று கருதி, அந்தப்படியாகவே எழுத்துக்களை உபயோகித்து, அடுத்தாற்போல் பிரசுரிக்கப்போகும், 'குடி அரசு' பத்திரிகையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்.

இதை வாசகர்களும் மற்றும் தமிழ் மொழி பத்திரிகைக்காரர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் ஆதரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

['பகுத்தறிவு'—கட்டுரை—30-12-1934]

தமிழ்ப் பாஷை எழுத்துக்கள் விஷயமாய்ப் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது அனேகருக்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே ஏற்பட்டிருந்த அபிப்பிராயங்களாகும். தோழர் குருசாமி அவர்கள் எழுதியதுபோல் பெருத்த பண்டிதர்களில் கூடப் பலர் எழுத்துச் சீர்திருத்த விஷயமாய் வெகு காலமாகவே பேசி வந்திருக்கிறார்கள்.

தமிழ் எழுத்துக்களைப்பற்றி அழுக்கு மூட்டைப் பண்டிதர்கள் எவ்வளவு தத்துவார்த்தம் சொன்னாலும், அது எவ்வளவோ விஷயத்தில் சீர்திருத்தமடைய வேண்டும் என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

ஒரு பாஷையோ, ஒரு வடிவமோ, அல்லது வேறு பல விஷயமோ எவ்வளவு பழையது, தெய்வீகத் தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்ளுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றில் சீர்திருத்த வேண்டிய அவசியமிருக்கின்றது என்பது அதன் உண்மைத் தத்துவமாகும்.

உதாரணமாக, நெருப்புக்கு—சுமார் நூறாயிரம், பதினாயிரம் வருஷங்களுக்கு முந்தி சக்கிமுக்கிக் கற்கள்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இது ஒரு 'கடவுளால்' ஆதியில் பொதிய மலையில் இருந்தோ, கைலாசமலையில் இருந்தோ கண்டு பிடிக்கப்பட்டதாகவோ, உபதேசிக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால், இன்று நெருப்புக்கு ஒரு பொத்தானை அழுத்துவதோ, ஒரு முளையைத் திருப்புவதோ ஆகிய காரியத்தில் வந்துவிட்டது.

இதுபோலவே, பஞ்ச பூதங்களிலும். அவைகள் உற்பத்தி, சேர்க்கை, அனுபவம் ஆகியவைகளிலும் நாளுக்குநாள் எவ்வளவு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பது, இன்னும் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கின்றன என்று மக்கள் கருதுகிறார்கள் என்பதும் தெரிந்தால்—கேவலம்; ஒரு புராதன பாஷை எழுத்துக்கள் என்பதில் எவ்வளவு சீர்திருத்தம் அவசியமிருக்கும் அல்லது செய்யக்கூடும் என்பது தானாய் விளங்கும்.

சாதாரணமாய், 500 வருஷத்திற்கு முந்தி இருந்த மக்களின் அறிவிற்கும் அவர்களுடைய வாழ்க்கை சவுகரியத்திற்கும்,—இன்று இருக்கும் மக்களின் அறிவுக்கும், வாழ்க்கை அவசியத்துக்கும் எவ்வளவோ மாறுதலும், முற்போக்கும் இருந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதனால், பூர்வீக மக்களை மடையர்கள் என்றே சொல்லியாக வேண்டும் என்பதாக நான் சொல்லவரவில்லை. ஆனால், பூர்வீக மக்கள் என்பவர்கள் விஷயங்களையும் ஞானங்களையும் அல்லது திருத்தங்களையும் எவ்வளவு தூரத்தில் கொண்டுவந்துவிட்டுப் போனார்களோ—அதிலிருந்தே, அதற்குப் பிற்காலத்து மக்கள் அவ்விஷயங்களை ஆரம்பித்துவைக்க ஏது இருந்ததால் அதைவிடச் சற்று அதிக முற்போக்கு நிலமைக்கு அவ்விஷயங்களைக் கொண்டுவந்து விட்டுப்போக முடிந்தது.

அதுபோலவே, இப்போதும் அதிலிருந்தே ஆரம்பிக்கின்றபடியால், அது இன்னும் விசேஷமான மாறுதல்களாக முடிகின்றது. அதுபோலவே, இன்னும் ஒரு 100 ஆண்டு அல்லது 500 ஆண்டுகள் சென்றால் இன்றைய நிலையிலிருந்து இன்னமும் எவ்வளவோ தூரம் மாற்றம் அடைந்த முன்னேற்றங்கள் என்பவை ஏற்படலாம். அதனால், இந்த நூற்றாண்டு மக்களைக் காட்டுமிராண்டிப் பிராயமுள்ள மக்கள் என்றுகூடச் சொல்லும்படி ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதற்காக வேண்டி இன்னும் அய்நூறு வருஷத்திற்குப் பின் எப்படி இருக்கவேண்டிவரும் என்று கருதி இப்பொழுதே கண்டுபிடித்துச் செய்துவிட முடியாது.

முன்னேற்றம், மாறுதல் என்பவை கால தேச வர்த்தமானத்தையும், அன்று உள்ள அறிவு விருத்தியையும் பொறுத்ததே ஒழிய—மதவெறியர்கள் சொல்லுவது போன்ற தீர்க்க தரிசனத்தைப் பொறுத்ததல்ல என்பதே நமது அபிப்பிராயம். முக் காலத்துக்கும் ஏற்ற தீர்க்கதரிசனம் என்பது ஆராய்ச்சியற்ற அறிவீனர்களின் வசனமேயாகும். 'வீபூதி வைத்துக்கொள்ளுவதற்காகக் கடவுள் மனிதனுக்கு நெற்றியை நீளவசத்தில் மூன்று விரல் உயரத்தில் 6 அங்குல அகலத்தில் ஏற்படுத்தினார்' என்று சொல்வது எவ்வளவு தீர்க்க தரிசனமும் தத்துவார்த்தமும் கொண்டதோ, அதுபோல்தான் முக் கால தீர்க்க தரிசனமும் ஆகும். ஆதலால், உலக விஷயங்களில், மனித சமூகவாழ்க்கை சம்பந்தப்பட்டவைகளில்—தீர்க்க தரிசனத்தையும், தெய்வீக தத்துவார்த்தங்களையும் கொண்டுவந்து கலக்கிக் கொண்டு, குரங்குப் பிடியாய்ப் பழமையையே கட்டிக்கொண்டு அழுவதினாலோ அல்லது மாறுதல்கள் வரும்போதெல்லாம் சீறிவிழுந்து கோபிப்பதினாலோ யாதொரு பிரயோசனமும் ஏற்பட்டுவிடாது என்பதோடு, அது சாத்தியப்படக்கூடியது என்றும் சொல்லமுடியாது.

பழையதை மாற்றக்கூடாது என்பதும், பழையவைகள் எல்லாம் தெய்வாம்சத்தால் ஏற்பட்டவை என்பதும்—பழைய செய்கைகளோ, பழைய தத்துவங்களோ, பழைய மாதிரிகளோ, பழைய உபதேசங்களோ முக் காலத்துக்கும், முடிவு காலம் வரைக்கும் இருப்பதற்கும், பின்பற்றுவதற்கும் தகுதியான தீர்க்கதரிசனத்துடன் தெய்வீகத் தன்மையில் ஏற்பட்டவை என்று சொல்லப்படுமானால்—அவைகளை மத வெறியர்களுக்கும், பழமையில் பிழைக்கக் காத்துக் கொண்டிருக்கும் சோம்பேறிச் சுயநலக் கூட்டங்களுக்கும் விட்டு விடவேண்டுமே ஒழிய, அவற்றைப் பொதுஜன—சாதாரண நித்திய வாழ்க்கையில் கொண்டு வந்து கலக்கி—முற்போக்குக்கும், சவுகரியத்துக்கும் தொல்லை விளைவிக்கக் கூடாது.

எவ்வளவு மதவெறியனும், குரங்குப் பிடிவாதக்காரனும் இன்றைய வாழ்க்கையில் மாற்றமடைந்துகொண்டும், மாற்றத்தை ஏற்றுக்கொண்டுந்தான் இங்கு வாழ்ந்துவருகிறானே ஒழிய, எவனும் தெய்வீகத்துக்கு மாறுபட்டதென்றோ, தத்துவங்களுக்கு மாறுபட்டதென்றோ கருதி எதையும் விட்டுவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போகவில்லை; அல்லது தற்கொலை செய்துகொண்டு 'ஆண்டவனை' அடைந்துவிடவும் இல்லை.

ஆகையால், மாறுதலைக்கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும், ஆண்மையோடும் நின்று விஷயங்களை நன்றாய் ஆராய்ச்சிசெய்து, காலத்துக்கும் அவசியத்துக்கும் தக்க வண்ணம் தள்ளுவன தள்ளி, கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்யவேண்டியது பகுத்தறிவு கொண்டவன் என்னும் மனிதனின் இன்றியமையாத கடமையாகும் என்பதை அனேகர் உணர்ந்திருந்தாலும்—அதன் பயனாய் இன்றையத் தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட

வேண்டிய மாற்றங்கள் பல என்பதைப்பற்றிப் பலருக்கு அபிப்பிராயம் இருந்தாலும் எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கிறார்கள். 'இவ்வளவு பெரிய காரியத்திற்கு பாஷா ஞானம், இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா?' என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம்; அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், தகுந்த புலமையும், பாஷா ஞானமும், இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என்செய்வது? தவம் செய்வதா? அல்லது ஜெபம் செய்வதா?

தமிழ் ஏற்பட்டது இன்று நேற்றல்ல; எழுத்துக்கள் ஏற்பட்டது இன்று நேற்றல்ல. ஆனால் எழுத்துக்கள் கல்லிலும், ஓலையிலும் எழுதும் காலம் போய்க் காகிதத்தில் எழுதவும், அச்சில் வார்த்துக் கோக்கவும் ஏற்பட்ட காலந்தொட்டு இன்றுவரை, அவற்றில் யாதொரு மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால், யாராவது ஒருவர் துணிந்து இறங்க வேண்டியதாயிற்று.

புதிய மாறுதல்களால்—அதாவது, போக்குவரத்து வசதியின் காரணத்தால் ஏற்பட்ட பலதேச மக்கள் கூட்டுறவாலும், பலதேச பாஷைச் சொற்களும, பலதேசப் பொருள்களும் கலரும்படி ஏற்பட்ட சம்பவங்களாலும் இன்று அனேக வார்த்தைகள் உச்சரிப்புகள் தமிழில் சர்வசாதாரணமாய்க் கலந்துவிட்டன. அவைகளை உச்சரிக்கும் போதும் எழுதும்போதும் தமிழ்ப் பாஷையும் தமிழ் எழுத்தும் விகாரமாய் வெட்கப்பட வேண்டியிருக்கிற தன்மையில் இருக்கின்றன (அதற்குத் தத்துவார்த்தமும், விதியும் இருக்கலாம்). ஆதலால், சில எழுத்துக்கள் வேறுபாஷைகளில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதுகூட மிக அவசியமாகும். அதற்குவெட்கமாய்' இருக்கும் பட்சத்தில் புதியதாகவாவது எழுத்துக்களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

இவைகள் ஒருபுறம் இருக்க, இப்போது உயிர்மெய் எழுத்துக்கள் என்று சொல்லப்படும் 18 எழுத்துக்களிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இ—கரம், ஈ—காரம், உ—கரம், ஊ—காரம் ஆகிய நான்கு சப்தங்கள் கலந்த எழுத்துக்கள் தனித்தனி வடிவம் கொண்டு அதாவது கி, கீ; கு, கூ என்பது மாதிரியே 18 எழுத்துக்களும் தனித்தனி உருவம் பெற்று 18 × 4 = ஆக மொத்தம் 72 எழுத்துக்கள் அதிகமாக, அனாவசியமாக இருந்து வருகின்றன.

இந்தத் தனித்தனி வடிவங்கள் எதற்காக இருக்கவேண்டும்? எல்லா உயிர்மெய் எழுத்துக்களுக்கும் ஆ—காரம், ஏ—காரம் ஆகிய சப்தங்களுக்கு ா, ே, ஆகிய குறிப்புக்களைச் சேர்த்து எப்படி கா, கே, என்று ஆக்கிக் கொள்ளுகின்றோமோ அதுபோலவே, மேற்கண்ட கி, கீ; கு, கூ முதலிய சப்தங்களுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை ஏன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது மிகவும் யோசிக்கத்தக்க விஷயமாகும்.

உதாரணமாக ஜ, ஷ முதலிய கிரந்த அட்சரங்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கு, இன்றும் உ—கரம், ஊ—காரம் சப்தங்களுக்கு கு, கூ என்கின்ற மாதிரி தனி எழுத்துக்கள் இல்லாமல், உ—காரத்துக்கு ு இந்த மாதிரிக் குறிப்புகளையும், ஊ காரத்திற்கு ூ இந்த மாதிரிக் குறிப்புகளையும் சேர்த்து ஜு, ஜூ; ஷு, ஷூ; ஸு, ஸூ; ஹு, ஹூ என்பதாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதுபோல், தமிழ் எழுத்துக்களிலும் கி, கீ, கு, கூ ஆகியவைகளுக்கு ு, ூ என்பது போன்றவைகளையோ அல்லது வேறு விதமான குறிப்புகளையோ சேர்த்தால்—அச்சில் 72 தனி எழுத்துக்கள் தேவையில்லை என்பதோடு—பிள்ளைகள் தமிழ் கற்பதற்கும் 72 எழுத்துக்களைத் தனியாக ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லாத சவுகரியமும் ஏற்படும்.

மற்றும், எழுத்துக் குறைவால் அச்சில் சவுகரியம் ஏற்படுவது போலவே தமிழ் எழுத்து 'டைப்ரைட்டிங்' என்ற அச்சடிக்கும் இயந்திரம் செய்வதிலும் மிகுந்த சவுகரியமும், விலை சகாயமாய்ச் செய்யக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

எழுத்துக்கள் உருவம் மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது, புதிய எழுத்துக்களைச் சேர்ப்பது என்பது போலவே சில எழுத்துக்களை, அதாவது அவசியமில்லாத எழுத்துக்களைக் குறைக்வேண்டியதும் அவசியமாகும்.

உதாரணமாக, உயிரெழுத்துக்கள் என்பவைகளில் ஐ, ஔ என்கின்ற இரண்டு எழுத்துக்களும் தமிழ் பாஷைக்கு அவசியமில்லை என்பதே எனது வெகுநாளைய அபிப்பிராயமாகும். ஐ-காரம் வேண்டிய எழுத்துக்களுக்கு ை, இந்த அடையாளத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக—ய் என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால், ஐ-கார சப்தம் தானாகவே வந்துவிடுகிறது. உதாரணமாக 'கை' என்பதற்குப் பதிலாக 'கய்' என்று எழுதினால் சப்தம் மாறுவதில்லை என்பது விளங்கும்.

அதுபோலவே, ஔ-காரத்துக்கும் 'கௌ' என்பதற்குப் பதிலாக 'கவ்' என்றோ 'கவு' என்றோ எழுதினால் சப்தம் மாறுவதில்லை. கௌமதி—கவ்மதி—கவுமதி என்கின்ற சப்தங்கள் ஒன்று போலவே உச்சரிப்பதைக் காணலாம். இந்த வகையில் ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களை உயிரெழுத்துக்களிலேயே குறைத்துவிட்டால் அதனாலும் பெரிதும் அனுகூலம் உண்டு.

ஆகவே, கி-கீ, கு-கூ என்கின்ற சப்தங்களுக்குத் தனிக் குறிப்பு வடிவங்கள் ஏற்படுத்துவதன் மூலம் குறிப்புகள் அதிகமானாலும், ஐ, ஔ குறிப்புகள் குறைவுபடுவதன் மூலம் கிட்டத்தட்ட சரிப்பட்டுப் போக இடம் ஏற்படும். கையெழுத்து எழுதுவதற்கும் அசவுகரியமிருக்காது.

தமிழ் எழுத்துக்களில் மேலே குறிப்பிட்ட இந்தப்படியான சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுமானால் அப்பொழுது தமிழில் மொத்த எழுத்துக்கள் 46-ம், 7 குறிப்பு எழுத்துக்களும் ஆக 53 எழுத்துக்களில் தமிழ்ப் பாஷை முழுவதும் அடங்கிவிடும்.

அதாவது உயிர் எழுத்து 10; உயிர் மெய் எழுத்து 18; ஒற்றெழுத்து 19; எழுத்துக்களின் குறிப்புகள் (அதாவது ா, ு, ூ, ெ, ே இவைகள் போல) 7; ஆக மொத்தம் 54 எழுத்துக்களுள் அடங்கிவிடும்.

அச்சுக்கும் 54 அறைகள் (கேஸ்கள்) இருந்தால் போதுமானதாகும். பிள்ளைகளுக்கும் இந்த 54 எழுத்துக்கள் ஞாபகமிருந்தால் போதுமானதாகும்.

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்கின்ற கிரந்த அட்சரங்களான எழுத்துக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அதில் குற்றெழுத்து உட்பட ஒரு பத்து எழுத்து அதிகமாகி 64 எழுத்துக்களாகலாம்.

ஆனால், இப்பொழுதோ மேற்படி 64 எழுத்துக்களுக்குப் பதிலாக, சுமார் 150-க்கு மேல் 160 எழுத்துக்கள் வரை இருந்துவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாஷையின் பெருமையும், எழுத்துக்களின் மேன்மையும் அவை சுலபத்தில் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும், கற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருப்பதைப் பொறுத்ததே ஒழிய, வேறல்ல. ஆதலால் இந்த மாற்றங்கள் நாளாவட்டத்தில் செய்யக்கூடியவை என்று சொல்லுவதானாலும் ணு, ணை முதலிய 7 எழுத்துக்களைப் பொறுத்த வரையில் உள்ள மாற்றத்தை வாசகர்கள் இப்போது முதலே அனுமதிப்பார்கள் என்று கருதுகின்றோம்.

இதுவரை பல தோழர்கள் ஆதரித்ததோடு மற்ற மாறுதல்களையும் எழுதியிருப்பதும், இப்பொழுதே செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதும் நமக்குத் தைரியத்தைக் கொடுக்கின்றது. அவர்களுக்கு நமது நன்றியும் பாராட்டுதலும் உரியதாகுக.

['குடி அரசு'—தலையங்கம்—20-1-1935]

2. மொழி–எழுத்து

தலைவர் அவர்களே! தோழர்களே!

'மொழி' என்பது பற்றிப் பேச, சிறிதும் அதற்கான அறிவோ, ஆராய்ச்சியோ, ஆற்றலோ அற்ற நான்–'மொழி' என்பது குறித்துப் பேசத் துணிந்தது, மொழித் தத்துவத்திலுள்ள என்னுடைய ஆசை மிகுதியின் பொருட்டேயாகும். நான் கூறப்போகும் தத்துவங்களை இலக்கண, இலக்கிய ஆதாரங்களுடன் விளக்குவது என்பது எனது தகுதிக்கு மேற்பட்ட காரியம். அதற்கு வேண்டிய இலக்கிய, இலக்கணங்களில் பாண்டித் தியமோ, ஆராய்ச்சியோ எனக்கில்லை. ஆராய்ச்சியாளர் மேற்கோள்களையும் என்னால் காட்ட இயலாது. எனக்குத் தோன்றிய, என் அனுபவத்துக்கு எட்டிய விஷயங்களைத்தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லப்போகிறேன். அவற்றில் பெரும்பாலும், உங்களுக்குக் குற்றமாகப் படலாம். ஆகவே, நான் கூறுவதை நீங்களும், உங்கள் அறிவையும், அனுபவத்தையும், மற்றும் இது விஷயத்தில் அனுபவமும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்கள் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்கக்கூடியதை ஏற்றும், ஏற்கக் கூடாததைத் தள்ளியும் தெளிவுபெற வேண்டுகிறேன்.

'மொழி' என்றால் என்ன? அது எதற்காகப் பயன்படுகிறது? என்று முதலில் கவனிக்கவேண்டும். ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க மொழி முக்கிய சாதனமாக இருந்துவருகிறது. அது ஒலி மூலமாகவே பெரிதும் இருக்கிறது. மேலும், இச் சாதனம் மனிதர்களுக்கே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. மிருகங் களும், பட்சிகளும்கூட சில செய்கைக் குறிப்புகளாலும், சிலவித சப்தங்களாலும் தம் கருத்தைத் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றன. ஆனால், அவற்றை 'மொழி' என்று கூறாவிட்டாலும், 'ஒலிக் குறிப்பு' என்று கூறலாம். பறவை, மிருகம், சிறு பிராணி ஆகியவை பேசிக்கொள்வது எனக்குத் தெரியும்.

உதாரணமாகக் கோழியை எடுத்துக்கொள்வோம். தன் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு போகக்கூடிய அடப்பான், கழுகு, கருடன் இவை சமீபத்தில் பறப்பதைக் கண்டதும் தாய்க் கோழியானது ஒருவிதமான ஒலியைக் கொடுக்கிறது. அந்த ஒலியைக் கேட்டதும் குஞ்சுகள் தமக்கேதோ ஆபத்தென்று உணர்ந்து ஓடோடியும் வந்து தாய்க் கோழியின் விரிந்த சிறகுகளின் கீழ்ப் பதுங்கிக்கொள்ளுகின்றன. குரங்குகளையும் நான் கவனித்திருக்கிறேன். தாய்க் குரங்கு தொலைவிலுள்ள தன் குட்டியைத் தானாக அடையக் கூடாதபோது அதைத் தன்னருகில் அழைக்க நினைத்தால், அது சிறிது தன் பற்களைக் காட்டித் தன் மேல்உதட்டையும், கீழ்உதட்டையும் சேர்த்து ஏதோ முணுமுணுப்பதுபோல் குறிப்பும், சிறிது இலேசான சப்தமும் கொடுக்கும். அதைக் கண்டதும் குட்டியானது நேரே தன் தாயை வந்தடையும். இது போலவேதான், ஒரு ஆண் குரங்கின் இப்படிப்பட்ட சைகையால் பெண் குரங்கும் வந்து சேருகிறது. இதுபோல், காக்கைக்கு நல்ல சோறு வைக்கும்போதும், 'பிதிர்'ச் சோறு வைக்கும்போதும் கவனித்திருக்கிறேன். நல்ல சோறு வைக்கும்போது நாம், 'கா! கா!' என்று கூப்பிடுகிறோம். முதலில் ஏதோ ஒரு காகம் வருகிறது; சிறிது பயந்துகொண்டே சாதத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு தன் இனத்தைக் கூவி அழைக்கிறது. அவையும் சப்தம் கேட்டுவந்து சாதத்தை உண்ணுகின்றன. பிதிர்ச் சோறாயிருந்தால் அக் காகம் வேறுவிதமான சப்தம் போட்டதும், மற்றக் காகங்களும் அதை ஏதோ ஒரு 'பொறி' என்று நினைத்து அதே ஒலி கொடுத்து, எந்தக் காகமும் அந்தச் சாதத்தை உண்ணாதபடி செய்கின்றன. பிறகு ஒரு காகம் கிட்டவந்து மோந்து பார்த்து, ஆபத்து இல்லை என்று தெரிந்தால் மற்றவைகளும் கலந்து சாப்பிடுகின்றன. எறும்புகளைக்கூடக் கவனித்திருக்கிறேன். எறும்பு சரமாகப் போய்க்கொண்டிருக்கும் போது நாம் ஒன்றிரண்டு எறும்புகளைக் கொன்றுவிட்டு, மற்றொரு எறும்பைச் சிறிது நசுக்கிவிட்டால், அது வேகமாகச் சென்று தனக்கு எதிர்ப்படும் எறும்புகளுக்கெல்லாம் அந்த இடத்தில் உள்ள ஆபத்தை எப்படியோ தெரிவிக்கிறது. மற்ற எறும்புகள் யாவும்

எவ்வளவோ வேகமாக வந்துகொண்டிருந்தாலும் உடனே வந்த வழியே திரும்பிப்போய் எறும்புக் குழியில் இருக்கும் எறும்புகளுக்கும் தெரிவித்து அடங்கி விடுகின்றன.

இப்படி ஏதோ சில குறிப்புகளின் மூலம் மற்றும் சில ஜீவராசிகளும் தம் கருத்தை ஒன்றுக்கொன்று பரிமாறிக்கொள்வதுதான் தெரிகிறதே ஒழிய, நமக்கிருப்பதுபோல் அவற்றிற்கு 'மொழி' என்று ஒன்று இருப்பதாகத் தெரியக் காணோம். ஒருவரைப் பார்த்து, 'உங்கள் மொழி என்ன?' என்று கேட்பதற்கு, 'நீங்கள் எந்த மொழியில் உங்கள் கருத்தைப் பரிமாறிக்கொள்கிறீர்கள்?' என்றுதான் பொருள். ஆக, மேலே தெரிவித்ததிலிருந்து மொழி என்பது ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உபயோகப்படுத்தும் சாதனம் என்று நன்கு விளங்குகிறது.

மக்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் சாதனம் மொழி என்றால், அம் மக்களிடையே பல மொழிகள் வழங்கப்படக் காரணம் என்னவென்று நீங்கள் கேட்கலாம். பலமொழிகள் வழங்க வேண்டுமென்று யாரும் விரும்பியதில்லை என்றும், தற்போது வழங்கப்பட்டு வரும் எம்மொழியும் கற்பனை செய்யப்பட்டதல்லவென்றும் உங்களுக்கு விளக்கிக்காட்ட விரும்புகிறேன்.

தர்மபுரியானும், கொங்குநாட்டுக் கிராமத்தானும், யாழ்ப்பாணத்தானும்—இவர்கள் யாவரும் பேசுவது தமிழ்தான். ஆனால் தர்மபுரித் தமிழன், யாழ்ப்பாணத்தான் கூறுவதை இரண்டு முறை திருப்பிக் கூறினால்தான் தெரிந்துகொள்ளுவான். அதேபோல், கொங்கு நாட்டுக் கிராமத் தமிழன் தான் கூறுவதை மூன்றுமுறை திருப்பிச் சொன்னால் தான், தர்மபுரியான் அறிந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக, யாழ்ப்பாணத்தான், 'அவர்கள் அப்பொழுதே வந்துவிட்டார்கள்' என்று கூறுவதை, திருநெல்வேலியான், 'அவா அப்பமே வந்தா' என்பான்; கிராமத்தான், 'அவியொ அப்பளையே வந்தாங்கோ' என்பான். இப்படி ஒரே மொழி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகப் பேசப்படக் காரணம் என்ன? அவர்கள் ஒருவருக்கொருவர் சுலபத்தில் கலந்துகொள்ள வசதியான போக்கு வரத்துச் சாதனங்கள் இல்லாமையும், அவர்களைப் பிரித்துவைக்கும் மலைகள், ஆறுகள், சமுத்திரங்கள் உள்ளமையும் ஆகிய இவைதான் காரணம்.

நம் நாட்டில் சில மலைவாசிகள் இருக்கிறார்கள்; அவர்கள் பேசுவதும் தமிழ் என்கிறார்கள். ஆனால், அவர்கள் கூறுவதைக் குறிப்புகளின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறதே தவிர, விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் ஆயிரம் ஆண்டுகளாக நம் நாட்டில்தான் இருந்து வந்திருக்கிறார்கள். பின் ஏன் அவர்கள் நம்மைப் போல் பேச முடியவில்லை? அவர்களை நம்மோடு தொடர்பு கொள்ள முடியாமற் செய்த—அம் மலைவாசம்தானே காரணம்? அவர்களுக்கு வேண்டிய அளவு ஏதோ குறிப்புகள் வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்; நமக்கு வேண்டிய அளவு நாம் ஏதோ குறிப்புகள் வைத்துக்கொண்டு நாம் வாழ்க்கை நடத்துகிறோம். இதுதானே நமக் குள் உள்ள வித்தியாசம்? நம்முடன் தொடர்பு வைத்துக்கொண்டு அம் மலைவாசிகள் கொஞ்ச காலம் வாழ்ந்தால் நம்மைப்போல் அவர்களும் பேசுவார்கள் அல்லவா?

மற்றும், மொழியானது அந்தந்த நாட்டுச் சீதோஷ்ணத்திற்கேற்பவும், அவரவர் களுக்கு வேண்டிய வாழ்க்கைப் பழக்க, வழக்க, பண்பு, குறிப்புகளுக்கேற்பவும் அமைந் துள்ளன. சில மொழிகள் அதிக சக்தி (Energy) செலவிடாமல் சுலபமாய்ப் பேசக்கூடிய ரீதியிலும், சில அதிக சக்தியைச்செலவிட்டுச் சிரமத்தோடு பேசக்கூடிய ரீதியிலும் அமைந் திருக்கக் காண்கிறோம். உதாரணமாக, வடமொழியிலுள்ள 'ஹ' போன்ற சப்தங்கள் அடிவயிற்றிலிருந்து ஆள் துளைத்துக் கொண்டு வருவதுபோல் ஒலிக்கிறது. அவர்கள் கொஞ்சிப் பேசிக்கொள்வதுகூடச் சில சமயங்களில் ஏதோ சண்டை போட்டுக்கொண்டு கோபமாய்ப் பேசிக்கொள்வதுபோல் நமக்கு ஒலிக்கிறது. சீதோஷ்ண நிலையானது

மக்களின் மொழியை அவ்விதம் மாற்றியமைத்து வருகிறது. ஒரே மொழியைக் குளிர்ப் பிரதேசத்திலுள்ளவன் ஒரு விதமாயும், உஷ்ணமான பாலைவனத்திலுள்ளவன் ஒரு விதமாயும் பேசுவதைக் காணலாம்.

உதாரணமாக, ஆங்கிலேயனை எடுத்துக்கொள்வோம். அவன் சாதாரணமாகக் குளிர் தேசத்தில் வாழ்பவன். குளிரானது அவனுக்கு 'ஹா', 'ஹு' என்கின்ற—பெரும் காற்றைத் தள்ளிக்கொண்டு உச்சரிக்கவேண்டிய சப்தத்தை இயற்கையாக உண்டாக்கச் சுலபமாக அம்மொழியும், ஏன்—அதுபோன்ற வடமொழியும் பேசமுடிகிறது. ஆனால், என்னதான் அவன் தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும், சுத்தமான தமிழில் இலக்கணக் குற்றமில்லாமல் பேசினாலும் ழ, ள—இந்த சப்தங்களைச் சரியாக உச்சரிக்க முடிவதில்லை. எங்களூரில் தமிழில் வித்துவான் பட்டம் பெற்ற பாதிரியார், பாப்ளி என்று ஒருவர் இருக்கிறார். அவரால் 'மகா ஜனங்கலே'! என்றுதான் கூறமுடிகிறதே தவிர, 'மகாஜனங்களே!' என்று உச்சரிக்க முடியாது. இந்த சப்தத்திற்கு அவருக்குப் பழக்கமான அந்தச் சீதோஷ்ணம் சரிப்படாமற் போவதுதான் காரணம். அந்தச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைக்கப்பட்ட அவர் நாக்கு, இந்த சப்தத்தை உச்சரிப்பதற்கேற்பச் சுலபத்தில் திரும்பமுடியவில்லை என்பதுதான் காரணம்.

நம்மூரிலிருந்து சிலர் வடநாடு சென்று நான்கு, ஐந்து ஆண்டுகள் சுற்றிவிட்டு 'பைராகி'போல் வேஷம் போட்டுக்கொண்டு இங்கு வந்து சுற்றுவார்கள். அவர்களின் வடமொழி உச்சரிப்பைக் கவனித்தால் அவர்கள் இவ்வூர்க்காரர் என்று சுலபமாய்க் கண்டு பிடித்து விடலாம். நான் சிலரைக் குறிப்பாகக் கண்டுபிடித்து, 'ஏம்பா, இந்த ஊரிலிருந்து போனவன்தானே நீ?' என்று கேட்டதுண்டு. அவர்களும், 'ஆமாம், எஜமானே' என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஏற்பப் பழகிய—அமைக்கப் பட்ட நாக்கால் வடமொழிச் சப்தத்தைச் சரிவர உச்சரிக்க முடிவதில்லை. அந்தந்த நாட்டு மக்கள் அந்தந்த நாட்டு மொழிகளைச் சரிவர உச்சரிக்க முடிகிறதென்பதும், வேற்று நாட்டு மொழிகளைச் சரிவர உச்சரிப்பது அனேகருக்குக் கஷ்டமாயிருக்கிறதென்பதும், தம் நாட்டிற்கு ஒப்பான சீதோஷ்ணமுள்ள வேறு ஒரு நாட்டு மொழியைச் தம்மால் சரிவர உச்சரிக்க முடிகிறதென்பதும் எதைக் காட்டுகிறது? அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அந்தந்த நாட்டு மக்களின் மொழி ஒலி அமைந்திருக்கிறது என்பதைத் தானே காட்டுகிறது?

அந்தந்த இடத்திற்கேற்பவும், அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்பவும் மொழிகள் பிரிந்திருக்கின்றன என்பது மேலே கூறியதிலிருந்து பெறப்படுகிறது.

இனியும் கவனிக்கும் பட்சத்தில் ஒரு மொழியில் சுலபமாக விளக்கக்கூடும் ஒரு கருத்தை, மற்றொரு மொழியில் விளக்குவது வெகு கஷ்டமாயிருக்கும். அதாவது, அந்தக் கருத்தை வெளியிடுவதற்கு வேண்டிய வார்த்தைகள் அம்மொழியில் இருக்காது. காரணம் என்ன? அந்த மொழி பேசும் மக்களிடத்து, அந்தக் கருத்து இருந்ததில்லை என்பதுதான். அந்தக் கருத்து அவர்களிடத்து ஏற்படவேண்டிய அவசியமோ, தேவையோ இருந்ததில்லை என்பதுதான் அதற்குக் காரணம்.

எந்த ஒரு மொழியின் சிறப்பும், பெரும்பாலும் அம்மொழியின் மூலம் அறியக்கிடக்கும் கருத்துக்களைப் பொறுத்துத்தான் இருக்கும். அந்தந்த மொழியிலுள்ள கருத்துக்களைக் கொண்டுதான் பெரும்பாலும் அந்தந்த மொழிபேசும் மக்களின் நாகரிகத்தைக் கூட, அறிவைக்கூட ஒருவாறு அறிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக, ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள சில பிரபலமான புத்தகங்களை வாங்கிப்படித்தால், அவற்றில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டே அம்மக்களின் நாகரிகத்தின் முன்னேற்றத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலும் அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு மொழியை ஏற்பதும், தள்ளுவதும்கூட, பெரும்பாலும் அந்தந்த மொழியின்பாற்பட்ட முன்னேற்றக் கருத்துக்களைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

ஒரு மொழியின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மற்றொரு காரணமும் உண்டு. ஒரு மொழியை எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகக் கற்றுக்கொள்ள முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் சுலபமாகிறது. சுலபமாகக் கற்றுக்கொள்ளப்படுவதற்கு எழுத்துக்கள் சுலபத்தில் எழுதக்கூடியனவாகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதுவுமன்னியில், மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் சலுகையும் ஆதரவும் மிக முக்கியமாயிருக்கிறது. அரசாங்கத்தின் ஆதரவின்றேல் ஒரு மொழி எவ்வளவு சிறப்புடையதாயினும். அதன் வளர்ச்சி மிகவும் தடைப்பட்டே நிற்கும் என்பது கண்கூடு. ஆங்கில மொழிக்கு நம் நாட்டில் செல்வாக்கு ஏற்படக் காரணமே, அது அரசாங்க மொழியாய் இருந்து வருவதுதான். இதுவரை பொதுவாக 'மொழி' என்பது பற்றியும் அதன் அமைப்பு, சிறப்பு, வளர்ச்சி என்ற பலவான தன்மைகளைப் பற்றியும் ஒரு சிறிது ஆராய்ந்து பார்த்தோம். இனி நமது தகைமைசால் தமிழைப்பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

'தமிழ்' என்றால் என்ன? மக்களா? நாடா? மொழியா? நாட்டைப் பொறுத்து, மக்களைப் பொறுத்து—மொழிக்குத் தமிழ் என்கின்ற பேர் வந்ததா? அல்லது மொழியைப் பொறுத்து நாட்டுக்கும், மக்களுக்கும், தமிழகம், தமிழ்நாடு, தமிழர் என்கின்ற பேர் வந்ததா?' என்ற கேள்விகள்—தமிழைப் பொறுத்தவரை வித்து முந்தியதா? மரம் முந்தியதா? என்ற தர்க்கத்தைப் போன்றதாகவே எனக்குத் தோன்றுகின்றன. எப்படி இருந்தாலும், தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி என்று மூன்று பண்டங்கள் இருக்கின்றன. இந்த மூன்றையும் முதல் பொருளாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் தமிழ், தமிழ்நாடு, தமிழ்மொழி என்கின்ற சொற்களைக் காண்பதற்கு முன்பிருந்தே, இவற்றைக் காணாதவர்களிடமிருந்து இந்த மூன்றையும் குறிக்கும்படியாக திராவிடம், திராவிடர் திராவிடமொழி என்பதாகச் சொற்கள் இருந்து வந்ததையும், வருவதையும் பார்க்கிறோம். தமிழ்மொழியும், அதன் சிதைவுகள் என்று சொல்லப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளும், மக்களும், நாடுகளும்கூடத் தமிழைச் சேர்ந்ததே என்றும்; அந்தக் கருத்தைக் கொண்டே 'திராவிடம்' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது என்றும் அகராதிகளும், ஆராய்ச்சி உரைகளும் கூறுகின்றன. நாட்டிலும் இதை வெகு காலமாகவே ஒப்புக்கொண்டு வழக்கத்திலும் கொண்டுவந்திருக்கிறோம்.

வடமொழி ஆதாரங்களான இலக்கியம், இதிகாசம், புராணம் ஆகியவற்றிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழ் மொழியையும், நாட்டையும், மக்களையும் குறிக்கப் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தேச சரித்திரங்களிலும் திராவிடர், திராவிடம் என்ற சொற்கள் தமிழர், தமிழ்நாடு என்பவற்றிற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறதையும் காண்கிறோம். ஆனால், தெலுங்கு நாட்டாராகிய ஆந்திரர்களும், கன்னட நாட்டாராகிய கன்னடியர்களும், மலையாள நாட்டாராகிய மலையாளிகளும் இதை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள். தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பதுபோல்—தமிழும் ஒரு மொழி என்றுதான் சொல்லுகிறார்களே ஒழிய, இவையாவும் தமிழ்தான் என்பதை ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள்; சிலர் மறுக்கவும் செய்கிறார்கள். காரணம், அவர்களது மொழிகளில் ஆரியச்சொற்கள் பெரும்பான்மையாகக் கலந்துவிட்டன. ஆதியில் ஒரே கூட்டமாக வாழ்ந்த திராவிட மக்கள், இட நெருக்கத்தால் பல பிரிவுகளாகப் பிரிந்துசென்று ஆங்காங்கு குடிவாழவும், அந்தந்த இடத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அவர்களது மொழியில் சில நீட்டலும், குறுக்கலும் ஏற்படவும், அக் காலத்திய போக்குவரத்து வசதிக் குறைவு காரணமாக ஒரு பகுதிக்கும் மற்றோர் பகுதிக்கும் தொடர்பில்லாமல் போனதால், நாளடைவில் அந்தந்த இடத்தில் வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தமது மொழிக்குக் கடவுள் பேரால் பல மகத்துவங்களை எடுத்துக் கூறி, அந்தந்தப் பிரதேச மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வடமொழியை

அதிகமாக உபயோகப்படுத்தும்படி செய்து, அதன்மூலம் தமது கலை, ஆச்சார அனுஷ்டானம் ஆகியவைகளைப் புகுத்திவிட்டனர். அந்த வடமொழிக் கலப்புக் காரணமாகவும், அந்தக் கலாச்சாரப் பண்புகளினால் ஏற்பட்ட பற்றுதல் காரணமாகவும், அந்தந்த மக்களுக்குத் தமது மொழி தமிழ் அல்லாத வேறு மொழியேயாகும் என்ற கருத்தும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், என் சிற்றறிவிற்கு, என் அனுபவத்திற்கு, ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ, அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை. ஒரேமொழி அதாவது தமிழ்தான் நான்கு இடங்களில் நான்கு விதமாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். உதாரணமாக, இங்கு (சென்னையில்) 'தோட்டத்திற்குப் போகிறேன்' என்றால், 'வயலுக்கு, விளை நிலத்துக்குப் போகிறேன்' என்று அர்த்தம். 'கொல்லைக்குப் போகிறேன்' என்றால், 'கக்கூசுக்குப் போகிறேன்' என்று அர்த்தம். சோழநாட்டில் தோட்டத்துக்குப் போவதென்றால், கக்கூசுக்குப் போவதாகவும், கொல்லைக்குப் போவதென்றால் வயலுக்குப் போவதாகவும் அர்த்தம் செய்து கொள்ளுவார்கள். ஒரே தமிழ்ச்சொல் இரண்டு இடங்களில் வெவ்வேறு பொருளில் வழங்குகிறது. ஒரு பொருளுக்குப் பல சொற்கள் இருந்தால், ஒவ்வொரு சொல்லும் ஒரு மொழியாகிவிடுமா?

முன்பு—சுமார் 50 ஆண்டுகட்கு முன்பு, நான் மலையாளத்துக்கு வியாபார விஷயமாய்ச் சென்றபோதெல்லாம் நான் சிறிது அழுத்தியும், குறுக்கியும், மடித்தும் பேசிய தமிழை அங்குள்ளவர்கள் புரிந்துகொண்டுதான் இருந்தார்கள். நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களைக் கொண்டு, அந்தந்த மொழியிலுள்ள வடமொழி வார்த்தைகள் அத்தனையையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், எஞ்சி நிற்கும் வார்த்தைகள் அத்தனையும் அனேகமாகத் தமிழ்ச் சொற்களாகவே இருக்குமென்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும்; அகராதிகொண்டு மெய்ப்பிக்கவும் முடியும். சமீபகாலம் வரையிலும் கூட அவைகளுக்கு எழுத்தோ, இலக்கியமோ இருந்ததில்லை. தெலுங்கு வைணவர்கள் சமீப காலம்வரை தமிழ்ச் சப்தத்தில்தான் நாலாயிரப் பிரபந்தத்தையும், திருப்பாவையையும், தெலுங்கு எழுத்தில் படித்துப் பாடி வந்திருக்கின்றனர். அந்தப் புத்தகங்கள் தெலுங்கெழுத்தில், தமிழ்ச் சப்தத்தில்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. கன்னடியர்களுக்கும், மலையாளிகளுக்கும் முதல் நூலே கிடையாது. வடநாட்டு ஆதிக்கமும், வடமொழி மோகமும் குறையக்குறைய ஆந்திரர்களும், மலையாளிகளும், கன்னடியர்களும் தம் தாய்மொழி 'தமிழ்'தான் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொள்வார்கள் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. அந்தந்த மொழி வல்லுனர்கள், பண்டிதர்கள் சிலர் இன்று ஓரளவு இந்த உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது நமக்கு மேலும் நம் கருத்துக்கு வலிமை ஊட்டுகிறது. இத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த ஒரு பெரிய இயக்கத்தை நான் நடத்தினேன். அதாவது, 'தமிழ் மொழி தாய்மொழியாக உள்ள இந்நாட்டில், இந்தியைப் புகுத்தக்கூடாது' என்று கிளர்ச்சி செய்தேன்.

அது என் தாய்மொழிப் பற்றுதலுக்காக என்று அல்ல; அது என் நாட்டு மொழி என்பதற்காக அல்ல; சிவபெருமானால் பேசப்பட்டது என்பதற்காக அல்ல; அகத்திய முனிவரால் திருத்தப்பட்டதென்பதற்காக அல்ல; மந்திரசக்தி நிறைந்தது; எலும்புக் கூட்டைப் பெண்ணாக்கிக் கொடுக்கும் என்பதற்காக அல்ல; பின் எதற்காக? தமிழ் இந்நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்திய நாட்டுப் பிற எம்மொழியையும்விடத் தமிழ் நாகரிகம் பெற்று விளங்குகிறது. தூய தமிழ் பேசுதல்—மற்ற வேற்று மொழிச் சொற்களை நீக்கிப் பேசுவதால் நம்மிடையேயுள்ள இழிவுகள் நீங்குவதோடு, மேலும் மேலும் நன்மையடைவோம் என்பதோடு, நம் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப நம்

மொழி அமைந்திருக்கிறது. வேறு மொழியைப் புகுத்திக்கொள்வதன் மூலம் நம் அமைப்புக் கெடுவதோடு, அம் மொழியமைப்பிலுள்ள நம் நலனுக்குப் புறம்பான கருத்துக்கள், கேடுபயக்கும் கருத்துக்கள் நம்மிடைப் புகுந்து நம்மை இழிவடையச் செய்கின்றன என்பதால்தான்.

வடமொழியில் நம்மை மேலும் மேலும் அடிமையாக்கும் தன்மை அமைந்திருப்பதால்தான் அதையும் கூடாதென்கிறேன். நமது மேன்மைக்கு, நமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்றமொழி—தமிழைவிட மேலான ஒரு மொழி இந் நாட்டிலில்லை என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர, அது அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல. இம்மொழியில் பாடி அதிசயங்கள் விளைவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், அந்தக் கருத்து நமக்குத் தேவையில்லை. ஏன்? ஆயிரம் முதலையை வைத்துக்கொண்டுதான் பாடிப் பாருங்களேன்; அவைகளில் எதுவாவது, தான் தின்ற ஒரு மீனையாவது கக்குகிறதா என்று! தாழ்ப்பாளிட்ட சிற்றறையின் முன்னின்றுதான், இலக்கணப்படியே மனம் உருகிப் பாடுங்களேன்—சிறிதாவது தாழ்ப்பாள் அசைகிறதா என்று! அற்புத சக்திகள் நிறைந்த மொழி என்று பிடிவாதம் செய்வது அறியாமைதான்; அது தமிழ்ப்பண்புகூட அல்ல. தமிழில்—அதிசயம், மந்திரம், சக்தி முதலிய சொற்களே இல்லை.

இதேபோல், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமைதான். ஏன்? நம் தாய் நம்மைப் பெற்றெடுத்ததும் நம்மைத் தெலுங்கன் வீட்டிலோ, துருக்கியன் வீட்டிலோ விட்டிருந்தால் நாம் தெலுங்கோ அல்லது உருதுமொழியோ பேசுவோமா? அல்லது, நம் தாய் தமிழ் பேசியதன் காரணமாக, நம்மைப் பிறிட்டுக்கொண்டு நம் நாவிலிருந்து தமிழ் தானாக வெளிவருமா? இன்னும் கவனிப்போம். நம் தாய் குழந்தையாக இருந்தபோது பேசியதென்ன? 'பாய்ச்சி குடிக்கி', 'சோச்சி தின்னு', 'மூத்தா பேய்', 'ஆய்க்கு போ' என்றுதானே பேசியிருப்பாள்! இப்போது நாம் பாச்சி, சோச்சி, மூத்தா, ஆயி—என்றா பேசுகிறோம்? இந்தக் காலத்தில் நம் தாய்கள் பேசுகிற மொழியே அதிசயமாயிருக்கும். ஆதலால், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமை என்று தோன்றவில்லையா?

ஆதலால், ஒரு மொழியின் தொடர்பு நமக்கு நல்லதா கெட்டதா என்று சிந்திக்கும்போது நமது இடத்திற்கும், சீதோஷ்ணத்திற்கும் பொருந்தியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பிறகு அம்மொழியிலுள்ள கருத்துக்கள் நம் தன்மானத்தையும், மேன்மையையும், நலத்தையும், தகுதியையும் காக்கக்கூடியதா? அதிகப்படுத்தக்கூடியதா? அவற்றைக் கெடுக்கக்கூடியதா? என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, தமிழ்மொழியின் வடமொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள, ஏற்படப்போகும் கெடுதிகளைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள சாதிப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுவோம். 'சாதி' என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால் அதற்குச் சரியான தமிழ்ச்சொல் ஒன்று கூறுங்களேன்! பண்டிதர்கள்தான் கூறட்டுமே. வார்த்தை இல்லையே! ஆதலால், நம் மக்களிடையே ஆதியில் சாதிப் பிரிவினை இல்லை என்பதும், இது வடநாட்டுத் தொடர்பால்தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா? அந்த வார்த்தையே இல்லாவிட்டால் சாதிபேத உணர்ச்சி அற்றுப்போகுமா, இல்லையா? கூறுங்களேன். இதேபோல் திவசம், திதி, கலியாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம்; சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய என்ற இவ் வார்த்தைகள்—வடமொழியா? தமிழா? இவ்வார்த்தைகளின் தொடர்பால் நம் புத்தி தெளிந்ததா? இருந்த புத்தியும் போனதா? சிந்தித்துப்பாருங்கள்.

தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்த பிறகுதானே நம்பெண்கள் கணவனின் கைப்பொம்மைகள் ஆனார்கள்? அதன் பிறகுதானே, சிறிது சச்சரவு நேர்ந்து

தன் வீட்டுக்கு வந்த தன் மகளைப் பார்த்து, 'ஆமாம்மா! உன்னைக் கன்னிகாதானம் செய்தாயிற்றே! உன்னை உன் புருஷனுக்குக் கொடுத்துவிட்டோம்; தானம் செய்து விட்டோமே! இனி, உனக்கு இடம் அவன் இருப்பிடம் தானம்மா' என்று கூறும் தகப்பன்மார் தோன்றினார்கள்! கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ் வார்த்தை ஒன்று கண்டுபிடியுங்களேன். திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை' என்றுதானே கூறுகிறார். அதாவது, புருஷனும் மனைவியும் சிநேகிதர்கள், நண்பர்கள் என்றுதானே அதற்குப் பொருள். எவ்வளவு கருத்து வேறுபாடு பாருங்கள். 'மோட்சம்' என்பதற்குத் தமிழ் வார்த்தை ஏது? மோட்சத்தை நாடி எத்தனை தமிழர் காலத்தையும், கருத்தையும், பொருளையும் வீணாக்குகிறார்கள், கவனியுங்கள். மதம் என்பதற்குத் தமிழில் மொழியேது? மதம் என்ற வார்த்தையால் ஏற்பட்டதுதானே மதவெறி? நெறி, கோள் என்றால்—வெறி ஏது?

'பதிவிரதாத் தன்மை' என்பதற்காவது தமிழில் வார்த்தையுண்டா? 'பதிவிரதம்' என்ற வார்த்தை இருந்தால்—'சதி விரதம்' அல்லது 'மனைவி விரதம்' என்கின்ற வார்த்தையும் இருக்கவேண்டுமே! இதுவும் வடமொழித் தொடர்பால் ஏற்றவினைதான். 'ஆத்மா' என்ற வார்த்தைக்குத் தமிழில் மொழியேது? ஆத்மாவால் எவ்வளவு மூட நம்பிக்கைக் களஞ்சியங்கள் நம் புலவர்கள், அறிஞர்களிடையேயும் புகுந்து விட்டன? தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலார்க்கும் சம உரிமை என்ற அடிப்படையின் மீதும், பகுத்தறிவு என்ற அடிப்படையின் மீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

நம் நாட்டுச் சீதோஷ்ண நிலையைப் பொறுத்தும் கருத்துக்களின் செழுமையைப் பொறுத்தும் நமக்குத் தமிழ்தான் உயர்ந்த மொழியாகும். வடநாட்டானுடைய ஆசாரங்கள், தர்மங்கள், ஆசாபாசங்கள் முற்றிலும் நமக்கு மாறுபட்டவை. அவற்றிற்கேற்ப அமைக்கப் பட்டுள்ள அவர்களது மொழியே அவர்களுக்கு உயர்வானதாகவும் நமது மொழி அவர்களுக்குத் தாழ்வானதாகவும் தோற்றுவது சகஜம். ஆனால், நாமும், அவர்கள் நம் மொழியை மட்டமாகக் கருதுகிறார்களே என்பதற்காக நம்மொழியை மட்டம் என்று கருதி விடலாமா? அப்படிக் கருதி வடமொழியை ஆதரிக்கப் புகுந்துதானே நாம் பல மூட நம்பிக்கைகளுக்கும், பல இழிவுகளுக்கும் ஆட்பட்டுத் தவிக்கிறோம். வடமொழியில் நமக்குப் பெயர் சூத்திரன். நாம் ஏன் சூத்திரர்கள் என்று, இன்று கேட்க ஆரம்பித்திருக்கிறோம். இதற்கு நம் தமிழ் மொழியிலிருந்து ஒரே ஒரு ஆதாரமாவது காட்டட்டுமே! ஒன்றுகூட இல்லையே! வடமொழியை எடுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு ஆதாரங்கள்? கடவுள் வாக்குகளே அதற்கு ஆதாரமாய் வந்துவிடுமே! தற்போது தமிழில் வந்து புகுந்து கொண்ட வடமொழி வார்த்தைகளை எடுத்துவிட்டால் நம் குறைகள், தொல்லைகள் எவ்வளவு நீங்குமென்பதும்; தொடர்பை ஏற்றுக்கொண்டால் எவ்வளவு இழிநிலைக்கு ஆளாகவேண்டியிருக்கிறதென்பதும் புரிகிறதல்லவா?

வடமொழித் தொடர்பால் ஏற்பட்ட இன்னல்கள் ஒருவாறு மேலே விளக்கப்பட்டன. அதற்கு மாறாக ஆங்கில மொழித் தொடர்பால் நடக்கேற்பட்டுள்ள நன்மைகளையும், அம் மொழியிலுள்ள கருத்துச் செறிவுகளையும் பாருங்கள். ஆங்கில மொழி நூல்களில் முன்னேற்றக் கருத்துக்கள் மலிந்துகிடக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன. நமது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள் வதற்கான பல அரிய மார்க்கங்களை ஆங்கல நூல்களிலிருந்தே நாம் பெரும்பாலும் அறிந்துவருகிறோம். சுருங்கக்கூறின், 'அடிமை வாழ்வே ஆனந்தம்' என்று நினைத்திருந்த இவ் இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கில மொழி அறிவு தான் என்று கூறினால் மிகையாகாது. இராஜா வேண்டாம், குடியரசு தான் வேண்டும் என்கின்ற அறிவு; சமதர்மம் வேண்டும், சனாதனம் ஒழியவேண்டும் என்கின்ற

அறிவு; ஆணும் பெண்ணும் சமம் என்கின்ற அறிவு ஆகிய சகல அரசியல்-பொருளாதார முன்னேற்ற அறிவுக் கருத்துக்களையும் ஆங்கில மொழிதான் நமக்குத் தந்தது.

தந்தியையும், மின்சாரத்தையும், படக் காட்சியையும், ஆகாய விமானத்தையும், ரேடியோவையும், எக்ஸ்ரேயையும் அதுதான் அறிமுகப்படுத்தியதேயொழிய, நமது தமிழ் மொழியோ அல்லது அதை அழிக்கவந்த வடமொழியோ அல்ல. வடமொழித் தொடர்பு சாஸ்திர, புராண, இதிகாச மூடநம்பிக்கைகள் நம் பகுத்தறிவை அடிமைப்படுத்தின. ஆங்கில மொழி நம்மை அவ்வடிமைத் தளையிலிருந்து விடுத்து, எதையும் நம் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கப் பார்க்கும்படி செய்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத, பிரத்தியட்ச அனுபவத்திற்கு ஒவ்வாத, சரித்திர காலத்திற்கு உட்படாத எதையும் ஒதுக்கித் தள்ளும்படி செய்தது ஆங்கில மொழிதான்; அதைப் பேசிய மக்களைத் தமிழைக் காட்டிலும் வெகு வேகமாக அறிவு உலகத்தை நோக்கி அழைத்துச் செல்கிறது. ஆங்கிலேயன் சந்திரகிரகத்தினிடமிருந்து ஒலி கேட்கிறான்; வடமொழியாளன் இங்கு அதில் ஈரேழு பதினாலு லோகங்களைக் காட்டித் திவச மந்திரம் படிக்கிறான். எவ்வளவு வேற்றுமை பாருங்கள்! காரணம் என்ன? நம் மக்களுக்குப் புத்தியில்லையா? அல்லது, நம் மூளை களிமண்ணால் செய்யப் பட்டதா? அப்படியொன்றும் இல்லையே!

அறிவு வளர்ச்சிக்குப் பெரும்பாலும் சுற்றுச் சார்புதான் காரணம். ஒரே தகப்பனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றை இந்நாட்டிலும், ஒன்றை இங்கிலாந்திலும் வளர்த்துப் பாருங்கள்; இதனுண்மை விளங்கும். இங்கிலாந்தில் வளர்ந்த மகன் இந்தியாவில் வளர்ந்த மகனைவிடப் பல மடங்கு அறிவு விசாலம் அடைந்தவனாயிருப்பான் என்பது திண்ணம். அவன் எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பான்; இவன் எதையும் மதக் கண்கொண்டு பார்ப்பான். அவனவன் வளர்ந்த இடத்தில் உள்ள பழக்கவழக்கங்களை ஒட்டி அவனவனுடைய அறிவுத் தன்மையும் மாறுபட்டிருக்கிறது.

உதாரணமாக, நமது இரண்டு கைகளை எடுத்துக்கொள்ளுவோம். இரண்டுக்கும் நரம்பு, தசை, எலும்பு இவற்றின் அமைப்பும் இரத்த ஓட்டமும் ஒரே மாதிரி தன்மையாகத் தான் அமைந்திருக்கின்றன. இவை இரண்டும் ஒரே தாயின் கர்ப்பத்தில்தான் உண்டாயின; இரண்டும் ஒரே தகப்பனுடைய சுக்கிலத்தால்தான் உண்டாயிருக்கின்றன. என்றாலும், ஒரு கையால்தான் எழுத முடிகிறது; மற்றொரு கையால் எழுத முடியவில்லையே; ஏன்? ஒரு கையை எழுத்து வேலைக்கே—மற்றும் மேலான செய் திறம் வேலைக்கே பயன்படுத்திவிட்டோம். மற்றொரு கையைக் கேவலமான வேலைக்கே, மலம் அலம்பும்—வேலைக்கே பயன்படுத்தி, வேறு வேலைக்குப் பயன்படுத்தாமல் வலிவற்றதாக ஆக்கிவிட்டோம். எது எந்த வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த வேலையில் அது பழக்கப்பட்டுப் போயிற்று; வலிவற்றதாகவும் ஆகிவிட்டது. ஆகவே, எதற்கும் பழக்கம்தான் காரணமே ஒழிய அமைப்பல்ல முக்கிய காரணம்.

தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வட மொழிக் கலப்பால் இடது கைபோல் பிற்படுத்தப்பட்டுவிட்டது. இந்நோய்க்கு முக்கிய காரணம், மதச் சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக்கொண்டதுதான். தமிழ் சைவமொழி ஆக்கப்பட்டதால்தான் சைவத்திற்காக வேண்டி வடமொழியும், வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ் நாட்டில் புகத் தொடங்கின. தமிழ் மன்னர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக் கொண்டதால், அம்மதக் கருத்துகளை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லாது போகவே அதிகமாக வடமொழிச் சொற்களைக் கையாள ஆரம்பித்தனர். தமிழிலிருந்து சைவத்தையும், ஆரியத்தையும் போக்கிவிட்டால் நம்மை அறியாமலே நமக்குப் பழந்தமிழ் கிடைத்து விடும். மதத்திற்கு ஆதாரமாயிருந்து வருவனவெல்லாம் வடமொழி நூல்களே ஒழிய, தமிழ்மொழி நூல்களில், தற்சமயம் நம் நாட்டில் இருந்துவரும் மதத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இம்மதம் ஒழிய, பெரும்பாலும் பழமை விரும்பிகளான பண்டிதர்களே பெருத்த தடையாக இதுகாறும் இருந்து வந்திருக்கிறார்கள். தமிழைக் கெடுத்தவர்கள், தமிழன் அறிவுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இந்தத் தமிழ்ப் பண்டிதர்களும், அவர்களின் சைவ மும்தான். பண்டிதர்கள் பார்ப்பானைப்போல் உச்சிக் குடுமி வைத்துக்கொண்டு, பட்டை, விபூதியும் பூசிக்கொண்டு, கவைக்குதவாத கட்டுக் கதைகளை நம் குழந்தைகளுக்குப் போதித்துவிட்டனர். திருக்குறள் அறிவைப் பரப்புவதை விட்டு—நம் குழந்தைகளுக்கு திருவிளையாடற் புராண அறிவையும், தேவார–திருவாசக அறிவையும், பாரத–இராமாயண அறிவையும் பரப்பிவிட்டனர்; சிந்திக்கத் தவறினார்கள். சிலப்பதிகாரத்தைத் தலை சிறந்த நூலென்று இன்றும் போற்றி வருகிறார்கள். அதில் கண்ணகி என்ற மாது மதுரை மாநகர் மீது தனது முலையைத் திருகி எறிகிறாள், கோபாவேசத்தோடு! உடனே மதுரை பற்றிக்கொள்கிறது. இதுதான் அவளுடைய கற்புக்கு எடுத்துக்காட்டு. இன்று எந்த ஒரு பெண்ணாவது அவள் எவ்வளவுதான் கற்புடைய கன்னிகையாயிருந்த போதிலும் இந்தக் காரியத்தைச் செய்யமுடியுமா? எங்காவது இம் மாதிரிக் காரியம் நடந்திருக்குமா? நடக்குமா? அந்தச் சமயத்திலும் அவள் நெருப்புக்கு ஆணையிடுகிறாள், 'பார்ப்பனரை அழிக்காதே' என்று. பார்ப்பனரை அழிக்காதே என்று ஆணையிடுபவள் ஆரியப் பெண்ணாக இருப்பாளா? தமிழ்ப் பெண்ணாக இருப்பாளா? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

தமிழில் ஆரியம் புகுந்ததால்தான், மற்ற மக்களெல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி வாணிபம் நடாத்திய தமிழர் மரபில்–இன்று, ஒரு நியூட்டன் தோன்றமுடியவில்லை; ஒரு எடிசன் தோன்ற முடியவில்லை; ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். பழமையிலுள்ள மோகத்தை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புதுமொழியாக்கச் சகல முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம் மொழியில் இல்லாத ஒரு கருத்தை, நம் மொழியில் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அக் கருத்துக்குண்டான வார்த்தைகளைத் தோற்றுவிப்பதில் நாம் மிக ஜாக்கிரதையாகப் பணியாற்ற வேண்டும். நாம் கண்டுபிடிக்கும் அல்லது உண்டாக்கும் வார்த்தை, நாம் கூறவேண்டிய கருத்தைத் தெளிவாகவும் விளக்கம் செய்வதாகவும், சுலபமாக உச்சரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, 'காப்பி' என்ற வார்த்தையை எடுத்துக்கொள்வோம். இப்போது நம்மில் பெரும்பாலோர்க்கு இந்தப் பானம் அவசியமாகி விட்டது. நமது மொழியில் இதற்கு வார்த்தை கிடையாது. இப்போது அதற்கு வேறு வார்த்தை உண்டாக்குவதைவிட வழக்கிலிருந்துவரும் அதே வார்த்தையை நாம் தமிழில் ஏற்றுக்கொள்ளலாம். நமக்குத் தேவையான விஞ்ஞானக் கருத்துகளுக்கு வேறு வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும்போதும் ஆங்கில வார்த்தைகள் தமிழ் மொழி உச்சரிப்புக்குச் சுலபமாக இருக்குமானால், அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் நலமாகும்.

கலைச்சொல் நிர்மாணக் கமிட்டியார் கண்டுபிடித்துள்ள வார்த்தைகளைப் பாருங்கள். Electrolysis, Hydrogen, Disinfectant, என்பவற்றிற்கு, முறையே—வித்யுக்தி யோகம், ஆப்ஜனகம், பூதி நாசினி என்று புது வார்த்தைகளைத் தோற்றுவித்துள்ளார்கள். ஆங்கில வார்த்தைகளுக்குப் பதிலாக வடமொழி வார்த்தைகளைத் தோற்றுவித்துள்ளனர். இதைவிட சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் கண்டுபிடித்துள்ள, முறையே–மின் பருக்கை நீரகம், நச்சு நீக்கி என்ற வார்த்தைகளே சிறந்தனவாக இருக்கின்றன. காரணம், சென்னைத் தமிழ்ச் சங்கத்தாருக்குள்ள தமிழ்ப் பற்று, கலைச்சொல் நிர்மாணக் கமிட்டியாருக்கு இல்லாமற்போனதுதான். நமது மேன்மைக்கும், அந்தஸ்துக்கும் ஏற்றதும் நம் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டக்கூடியதும், நம் இழிவைப் போக்கக் கூடியதுமான

எம்மொழியிலிருந்தும்—நம் மொழிக்கு ஆக்கம் தரக்கூடியதும், அவசியமானதும் ஆகிய சொற்களை எடுத்துக்கொள்ளலாம். எம்மொழித் தொடர்பிருந்தாலும் பரவாயில்லை. நமக்கு வடமொழித் தொடர்பு மட்டும் கூடவேகூடாது. தமிழ் ஒன்றுதான் இன்றுவரைக்கும் வடமொழிக் கலப்பை ஓரளவுக்காவது எதிர்த்து வந்திருக்கிறது. வேற்றுமொழிக் கலப் பின்றித் தனித்துச் சிறப்புடன் வாழக்கூடிய தன்மையைத் தமிழ் பெற்றிருக்கிறதென்று மேனாட்டு மொழி வல்லுனர்களே எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

கடைசியாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்காக, அதில் செய்யப்படவேண்டிய சில சீர் திருத்தங்களைக் குறித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும்; மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும்; பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். 'இன்றையத் தமிழ் மிகவும் பழைய மொழி; வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது; மற்ற மொழிகளைப்போல் திருத்தப்படாதது' என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறைவாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அனேகமாக மாற்றமாகி இருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்து வதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாத மாய்ப் பாட்டி காலத்திய—பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால், கழிபட்டுப்போவோம்; பின் தங்கிப்போவோம்.

மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க் கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ளவேண்டும். நம் பண்டிதர்கள் இந்த இடத்திலும் நம்மொழிக்கு மிக்க அநீதி விளைவித்துவிட்டார்கள். தமிழ்—சிவனும், சுப்பிரமணியனும் பேசிய மொழி; உண் டாக்கிய மொழி என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள்: அதே சிவனும், சுப்பிரமணியனும் உபயோகித்த போர்க் கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது, அவர்களே இன்று போரிட நேர்ந்தால்—அவை களைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள்! இயற்கையின் தத்துவம் நமது அறிவு வளர்ச்சிகளுக்கேற்ப மாறுதல்களுக்கும் செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக் கூடியதே யாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், ஆயுதமும் கொண்டுதான் சண்டை பிடித்து இருக்கிறாராம். விஷ்ணு வந்தபிறகே வில் வந்திருக்கிறது. அதன்பிறகே துப்பாக்கியும், அதிலிருந்து பீரங்கியும், மிஷின் பீரங்கியும் ஏற்பட்டு இன்று அணுகுண்டு வரை போர்க் கருவிகள் முன்னேற்றமாகி இருக்கின்றன. இன்று நாமோ நம் கடவுள்களோ போரிடநேர்ந்தால்—வில்லும், வேலுமா உபயோகிப்போம்? ஆகவே, போர்க் கருவிகள் மாற்றமடைந்திருப்பது போல், நமது மொழியும் மாற்றம் அடையவேண்டாமா? போர்க் கருவிகளில் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள்—மொழி மாற்றத்தைமட்டுமா அனுமதிக்க மாட்டார்கள்?

ஆகவே, பிறர் சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோக்கவும், டைப் அடிக்கவும் தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப் படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்தவேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனியாக ஞாபகத்தில் வைக்கவேண்டியிருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அன்னியமொழி எழுத்துக்களைவிட, எழுத்துக் கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைக் கொண்ட

தானாலும் எழுத்துக்களைக் கற்கவேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5; மெய்யெழுத்துக்கள் 20 எனலாம்; அவை எல்லாம் தனி எழுத்துக்களே; உயிர்மெய் எழுத்துக்கள்—அதாவது, உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது; வெகு சுலபமாக அவ்வெழுத்துக்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால், இலக்கணமுறை, உச்சரிப்புமுறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழில், அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும், உச்சரிப்பும், அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை, நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக் கூடாது?

சாதாரணமாக, தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம்; இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும், இவைகள் கூட்டெழுத்துக்களே ஒழிய தனி எழுத்துக்கள் அல்ல. இவை இல்லாமல் எந்தத் தமிழ்ச் சொல்லையும் எழுதலாம்; உச்சரிக்கலாம். இவைகளை எடுத்துவிட்டால் சொற்களின் உச்சரிப்பிலோ, பொருளிலோ இலக்கணத்திலோ எவ்விதக் குறையும், குற்றமும் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை. சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் இருந்தே நான் இதை கவனித்துவருகிறேன்: இந்தப்படி எழுத்துக்கோத்து அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு குறள் புத்தகத்தையும் நான் 40 வருடத்திற்கு முன்பே பார்த்திருக்கிறேன். இப்படிச் செய்வதில் மொத்தத்தில் 38 எழுத்துக்கள் (அதாவது உயிரெழுத்து ஐ, ஔ ஆகிய 2-ம்; அவை ஏறும் மெய்யெழுத்துக்களில் 2×18=36-ம் ஆக 36+2=38) ஞாபகத்திற்கும், பழக்கத்திற்கும் தேவை இல்லாத எழுத்துக்கள் ஆகிவிடும். (ஐ=அய்; ஔ=அவ் என எழுதலாம்). இவை தவிர உயிர்மெய் எழுத்துக்களில் தனிமாற்றம் பெற்றிருக்கிற ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துக்களுக்கும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல்—ஆக்கிவிடலாம்.

மற்றும், மெய்யெழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில், நெடில் எழுத்துக்கள் கொண்ட (4×18=72) தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டுத் தனிச் சிறப்புக் குறிப்பை—அதாவது ககரத்திற்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு 'ா' (கால்) போட்டு விடுவதுபோல், ககரத்துக்கு எகரம், ஏகாரம் காட்ட ஒற்றைச் சுழிக் கொம்பு, இரட்டைச் சுழிக்கொம்பு 'ெ, ே' போடுவதுபோல—மற்ற, இகர, ஈகாரத்துக்கும், உகர, ஊகாரத்துக்கும் சில குறிப்புக்களை உண்டாக்கி, உயிர் 10, மெய் 18, குறில், நெடில் குறிகள் 9, ஆய்தம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

இதைப்பற்றி மற்றொரு சொற்பெருக்கில் தெளிவாக்க இருக்கிறேன். இந்த மாறுதல்கள் செய்வதால் நம் மொழிக்கோ, பொருளுக்கோ, இலக்கணத்துக்கோ எவ்விதக் குறை பாடோ, கேடோ செய்தவர்களாக ஆகமாட்டோம்.

துருக்கியில் கமால் பாட்சா அவர்கள் எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றி விட்டார். அதாவது, இருந்த எழுத்துக்களையே ஒழித்துவிட்டு வேற்றுமொழி (ஆங்கில) எழுத்துக்களை எடுத்துக்கொண்டார். அதனால் கற்க மிக வசதியும், இலகுவும் ஏற்பட்டு விட்டது. அய்ரோப்பாவில் நான் சுற்றுப்பிரயாணம்செய்த ரஷ்யா முதல்—போர்ச்சுகல் வரை, சுமார் 10, 15 நாடுகளிலும் எத்தனையோ மொழிகள் இருந்தும், அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள்தாம் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி 'ஒலி' கொண்ட மொழிகள் இருக்குமானால், அவற்றிற்கு ஏற்ப 2 அல்லது 3 புதிய உருவ எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் சமீப காலத்தில் 'எழுத்துக்கூட்டும் முறை'யை மாற்றிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மேல் நாடுகளில் எழுத்துக்கள், எழுத்துக்கூட்டும் முறைகள் இவைகளில் மாற்றம் செய்வதால், இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படுவதாயிருந்தாலுங்கூடத் துணிவாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் சொல்லும் மாற்றங்களுக்கு அப்படிப் பட்ட குற்றங் குறைகள் இல்லையென்றே கருதுகிறேன்.

நமது தமிழ்ப் பண்டிதர்கள் இம் மாற்றங்களுக்கு ஒப்புக்கொள்ள வேண்டுமே,—அதுவன்றோ பெரிய கஷ்டம்! மேல்நாடுகளில் பண்டிதர்கள் என்றால் புத்துலகச் சிற்பிகளாயிருப்பார்கள். நம் நாட்டிலோ பண்டிதர்கள் என்றால் பழமைக்கு இழுத்துக்கொண்டு போகும் பாட்டிக் கதை வீரர்களாக இருக்கிறார்கள். 'பண்டு' என்ற சொல்லிலிருந்து—அதாவது பண்டையர்கள் என்பதுதான் பண்டிதர்கள் என்ற சொல்லாகத் திரிந்தது என்று மூலம் கண்டுபிடிக்கத் தக்கவர்களாக இருக்கிறார்கள்! எழுத்து, மொழிச் சீர்திருத்தத்தில் எனக்குத் தெரிய எந்தப் பண்டிதரும் பாடுபட்டிருப்பதாகக் காண முடியவில்லை. காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் அக் காலத்தில் சிறிது பாடுபட்டார். ஆனால், அவர் சமயத்தை (ஓங்காரத்தை)த் தலையாக வைத்துக்கொண்டு பாடுபட்டார். ஆதலால், அக் காலத்தில் அவரிடம் எனக்குப் பற்றிருந்தும், எனக்கு ஓங்காரத்தில் இருந்த வெறுப்பு அவரது முயற்சியையும் அறிவுத் திறனையும் அனுபவிக்க முடியாதபடி செய்துவிட்டது. அவர் இப்போது இருந்திருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்.

அடுத்தபடியாக, மெய்யெழுத்துக்களில் 'ந, ங, ஞ' ஆகிய மூன்று எழுத்துக்களையும் எடுத்துவிடலாம். 'ன்+த=ந'; 'ன்+க=ங'; 'ன்+ச=ஞ' என்று ஆக்கிவிடலாம். எனவே மெய்யெழுத்தில் ந, ங, ஞ ஆகிய மூன்றையும் குறைக்கலாம்; இவை தனித்தனியாகத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. உயிரெழுத்துக்களில் 'ஐ'யும், 'ஔ'வும் எப்படிக் கூட்டெழுத்துக்களோ, அப்படி—உயிர் மெய்யிலுள்ள கூட்டெழுத்துக்கள்தான் இந்த ந, ஞ, ங என்ற மூன்றும். பந்து என்ற வார்த்தையையும், பங்கு என்ற வார்த்தையையும், பஞ்சு என்ற வார்த்தையையும் எடுத்துக்கொள்ளுவோம். ந, வையும், ங, வையும், ஞ, வையும் எடுத்துவிட்டால் 'பன்து', 'பன்கு', 'பன்சு' என்று எழுதவேண்டியிருக்கும். இந்தச் சொற்களின் உச்சரிப்பை முதலில் சொல்லிக் கொடுத்துவிடலாம்; அல்லது, சாதாரணமாக உச்சரிப்புப் பழக்கத்திலேயே இருந்துவரும். பொதுவாகவே 'த'வுக்கு முன்வந்தால்—இப்படி உச்சரிக்கவேண்டும்; 'க'வுக்கு முன் வந்தால்—அப்படி உச்சரிக்கவேண்டும் என்று சொல்லிக்கொடுத்துவிட்டால், பிறகு உச்சரிப்பதில் கஷ்டமிருக்காது. ஆங்கிலத்தில் இம் மாதிரி பல உச்சரிப்புகள் இருக்கின்றன. உதாரணமாக Put (பி-யு-டி) 'புட்' என்றும், But (பி-யு-டி) 'பட்' என்றும்தான் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைகள் முதலில் அறிமுகமாகாதிருந்தால், ஒரே மாதிரிதான் உச்சரிக்கவேண்டியிருக்கும். ஒரு எழுத்துக்கு பல சப்தங்கள் இருப்பது தமிழுக்குப் புதிதல்ல. 'த' என்னும் எழுத்து 'தடி' என்ற சொல்லில் ஒருவிதமாகவும், 'பதம்' என்ற சொல்லில் வேறுவிதமாகவும் ஒலிக்கவில்லையா?

அதேபோல் 'ன' என்ற எழுத்துக்கே 'ந' சப்தமும், 'ங' சப்தமும், 'ஞ' சப்தமும் இருந்தால் ஒன்றும் கெட்டுவிடாது. இந்தச் சீர்திருத்தங்களைச் செய்தால் தமிழ்த் தனி உருவ எழுத்துக்கள் வெகு சொற்பமாகிவிடும். உயிர் எழுத்துக்கள்—10. நெட்டெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும், 'ா' (காலை) போட்டுவிடுவதால் அய்ந்து உருவ எழுத்துக்கள் தாம் இருக்கும். அதாவது (ஆங்கில 'வவ்வல்கள்' போல்) அ, இ, உ, எ, ஒ நெட்டெழுத்துக்கள்—அா, இா, உா, எா, ஒா என்றே எழுதலாம். மெய்யெழுத்துக்கள் 18-ல் 3 எழுத்துக்கள் (ந், ங், ஞ்) எடுக்கப்பட்டால் 15 எழுத்துக்களையும், மேலே புள்ளி வைக்காமல் பக்கத்தில் ஒரே ஒரு கோடு இழுப்பதன் மூலம் காட்டலாம். அதாவது, க |, ச |, ட |, ண |, த | ....ன | என்றபடி எழுதினால்—க், ச்......என்று அர்த்தப்படுத்திப் படிக்கலாம். ஆக சிறப்புக் குறிகளில் இந்தக் கோடு 1, ஆ—ா=1, இ—ி=1, ஈ—ீ=1, உ—ு=1, ஊ—ூ=1, எ—ெ=1, ஏ—ே=1.

ஆக 8 சிறப்புக் குறிகளில் இகர, இகாரத்திற்கும்; உகர, உகாரத்திற்கும் 4 குறிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்படவேண்டும். ஒகரத்திற்கும் ஓகாரத்திற்கும் எகர, ஏகாரக் குறிப்புக்களே பயன்பட்டு விடுவதால் அவற்றிற்காகத் தனிக் குறிப்பு வேண்டியதில்லை. அல்லது ெ, ே, என்ற இந்தக் கொம்புகளை வேறு வகையில் மாற்றிப் போட்டுக் கொள்ளலாம். கடைசியாக, ஆய்தம் 1 இருக்கலாம்.

இப்போது உயிர் 5, மெய் 15, சிறப்புக்குறி 8, ஆய்தம் 1—மொத்தம்—29.

29 உருவ எழுத்துக்களிலேயேகூட தமிழ் எழுத்துக்களுக்கு எண்ணிக்கையையும் (தமிழ் மொழியை) அடக்கிவிடலாம். அல்லது, சிலர் கருதுவதுபோல், 12 உயிரெழுத்துக்களில் ஐ, ஔ தவிர மற்ற பத்தில் 'அ' வை அப்படியேயும் 'ஆ'வுக்குப் பதிலாக 'ா' வையும், 'எ', 'ஏ' வுக்குப் பதிலாக 'ெ', 'ே' என்ற குறிப்புக்களையும் வைத்துக்கொண்டு இ, ஈ, உ, ஊ, ஒ, ஓ என்ற ஆறு எழுத்துக்களுக்கு, ஆறு புது எழுத்துக்களை உற்பத்தி செய்துகொண்டு, இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படிப்பதானால் அப்போது உயிர் 10, மெய் 15, ஆய்தம் 1, மெய்குறிப்பு 1 ஆக 27 எழுத்துக்களாகும். இந்த 27 எழுத்துக்களைக் கொண்டே நமது சகல சொற்களையும் அதி சுலபமாக எழுதி விடலாம். பிறமொழிச் சொற்களை நம் மொழியால் எழுதுவதற்குத் தேவைப்பட்டால் ஒன்றிரண்டு வேறு எழுத்துக்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம். அறிஞர்களும் பண்டிதர்களும் தீர்க்கமாய்ச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

எப்படியும் தமிழ்மொழி எழுத்துக்கள் குறைக்கப்பட்டாக வேண்டும்; அச்சுக்கோப்பதற்கும், டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப்போல் இலகுவாக்கப்படவேண்டும் என்பதும், கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவக்கலாம் என்பதும்தான் நமது ஆசை. இப்போது இதோடு முடிக்கின்றேன்.

இது முடிவல்ல, அறிஞர்களுக்கு விண்ணப்பம்.

['மொழி', 'எழுத்து' என்னும் பொருள்கள்பற்றி கும்பகோணம் அரசினர் கல்லூரியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு—நூல்: 'மொழி-எழுத்து' (தமிழன் பிரஸ், ஈரோடு)]

2. தமிழ்

1. தமிழ் மொழி

தலைவர் அவர்களே! தோழர்களே!

நான் தமிழில் எந்த அளவும் பள்ளியில் பயின்றவனல்லன். தமிழைப்பற்றித் தமிழ் மக்கள் நலம், தமிழ் மக்கள் தன்மதிப்பு என்பதல்லாமல் வெறும் பாஷையைப் பற்றியே நான் எவ்வித பிடிவாதம் கொண்டவனுமல்லன். தமிழுக்காக என்று எவ்விதத் தொண்டும் புரிந்தவனுமல்லன்.

முதலாவதாக, தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்கவேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்துவிடவேண்டும்; தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளிவைக்க வேண்டும்.

மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது.

உதாரணமாக, 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?

இனி, பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கியங்களுக்குப் புத்தகங்கள் எவை? கம்பராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம், தேவாரம், திருவாய்மொழி போன்ற மதத் தத்துவங்களும், ஆரிய மதத் தத்துவம் என்னும் ஒரு தனிப்பட்ட வகுப்பின்

உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக் களஞ்சியங்களும் அல்லாமல்—வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படுகின்றனவா? இன்றையப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிடப் புராண ஞானங்கள்தானே அதிகமாய் இருக்கின்றன.

மேல்நாட்டு அறிவாளிகள் செய்த இலக்கியங்களை மத சம்பந்தமன்னியில்—கடவுள் சம்பந்தமன்னியில் பெரிதும் செய்துவைத்தார்கள். அதனால் நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும், பண்டிதர்களும் போற்றப்படுகிறார்கள்.

கீழ்நாட்டில்—குறிப்பாக இந்தியாவில் எத்தனை இலக்கியங்கள் உலகத்தால் மதிக்கப் படுகின்றன? எத்தனை பண்டிதர்கள் உலகத்தால் போற்றப்படுகிறார்கள்! தாகூர் அவர்கள் கவிக்காகப் போற்றப்படலாம்.

மதம்—கடவுள் சம்பந்தமற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை ஞானத்தைப்பற்றிய இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத விஞ்ஞானத்தைப் பற்றிய இலக்கியம்—ஆகியவைகள் மூலந்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மையடைய முடியும் என்பது மாத்திரமல்லாமல், அதைக் கையாளும் மக்களும் ஞானமுடையவர்களாவார்கள்.

கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இருந்து என்ன பயன்? ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும், மலத்திலிருந்து அரிசி பொறுக்குவானா? அது போல்தானே, கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது? அதில் தமிழ் மக்களை எவ்வளவு இழிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது? தமிழரின் சரித்திரகால எதிரிகள் எவ்வளவு மேன்மையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்? சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்பராமாயண இலக்கியத்தைப் படிப்பான்? இன்று கம்பராமாயணத்தால் தமிழ்மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா, இழிவு பரவிற்றா என்று நடுநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள்!

தமிழ்ப் பாஷையின் பெருமை பரமசிவனுடைய டமாரத்திலிருந்து வந்ததென்றோ, பரமசிவன் பார்வதியிடம் பேசிய பாஷையென்றோ சொல்லி விடுவதாலும்—'தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததாலும்', 'முதலை உண்ட பாலனை அழைத்ததாலும்', 'எலும்பைப் பெண்ணாக்கினதாலும்', 'மறைக் கதவைத் திறந்ததாலும்'—தமிழ் மேன்மை உற்றதாகிவிடாது. இந்த ஆபாசக் கதைகள் தமிழ் வளர்ச்சியையும், மேன்மையையும் குறைக்கத்தான் பயன்படும்.

பரமசிவனுக்கு உகந்த பாஷை தமிழ் என்றால், வைணவனும் துருக்கனும் தமிழைப் படிப்பதே பாவமல்லவா? அன்றியும் அந்தப்படியிருந்தால், பார்ப்பான் தமிழ் மொழியைச் சூத்திர பாஷையென்றும், அதைக் காதில் கேட்பதே பாவம் என்றும் சொல்லுவானா என்று யோசித்துப்பாருங்கள்!

மேல் நாட்டு மொழிகள் எவ்வளவு மாற்றமடைந்து வருகின்றன? எழுத்துக்களில் எவ்வளவு மாறுதல் செய்து வருகிறார்கள்? ரஷ்யாவில் சில பழைய எழுத்துக்களை எடுத்து விட்டார்கள்; புதிய எழுத்துக்கள் சேர்த்தார்கள். அமெரிக்காவில் எழுத்துக் கூட்டுவதாகிய 'ஸ்பெல்லிங்' (Spelling)' முறையை மாற்றிவிட்டார்கள். துருக்கியில் துருக்கி மொழிக்கு உண்டான எழுத்துக்களையே அடியோடு எடுத்துவிட்டு ஆங்கில எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். தமிழர்கள், தமிழுக்காக—நமக்கு விவரம் தெரிந்த காலமாய் என்ன காரியம் செய்தார்கள்? காலத்துக்கு ஏற்ற மாறுதலுக்கு ஒத்து வராதவன் வெற்றிகரமாய் வாழ முடியாது. மாறுதலுக்கு மனிதன் ஆயத்தமாய் இருக்கவேண்டும். 'முன்னேற்றம் என்பதே மாறுதல்' என்பதை உணர்ந்த மனிதனே உலகப் போட்டிக்குத் தகுதியுடையவனாவான்.

தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். அனேக பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களே யல்லாமல், ஒருவராவது அம் முயற்சிக்கு ஆதரவு அளித்தவர்கள் அல்ல.

இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நான் தகுதியற்றவன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் தகுதியுள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் என் செய்வது? என்னைக் குறைகூறவோ, திருத்தவோ முயற்சிப்பதன் மூலமாகவாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்றுதான் துணிந்தேன். இதுவரை யாரும் அதை இலட்சியம் செய்ய வில்லை.

ஆனாலும், நான் அம்முறையிலேயே இரண்டு, மூன்று பத்திரிக்கைகள் நடத்து கிறேன்; அம் முறையிலேயே 10, 20 புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறேன். இன்னமும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில், 13-1-1936-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 26-1-1936

2. திராவிட மொழிகள்

தமிழன், தெலுங்கன், கன்னடியன், மலையாளி இவர்கள் பேசுவதெல்லாம் தமிழ் தான். இவர்கள் பேசுவது வெவ்வேறு மொழியென்று கூறுபவன் தமிழ் மகனல்லன்; தமிழை அறியாதவன்; ஆரியத்திற்குச் சோரம் போனவன்; நம்மைக் காட்டிக் கொடுத்து ஆரிய ஆதிக்கத்திற்கு ஆக்கந்தேட முயற்சிப்பவன். இவை நான்கும் வேறுவேறு மொழி என்று கூறுபவர்கள் 'தமிழர் என்று தம்மை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; கருதிக் கொண்டிருக்கிறார்கள்' என்று கூறலாமே தவிர—இவர்களைத் தமிழறிந்தவர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படப் போகிறது. அதுதான் பிரிந்து போகட்டும் என்றால், மொழிவாரிக் கவிஞர்கள் நியமிக்கப்பட்டு, மொழிவாரி இலக்கணங்களும் செய்யப் பட்டு, திராவிட மொழியைப் பாழாக்கத் திட்டம் தீட்டியாகிவிட்டதே! இந் நான்கு மொழி களும் ஒரே மொழிதான் என்ற கருத்து மக்களிடையே செல்வாக்குப் பெறத்தொடங்கியதும், ஆரிய ஆதிக்கம் அதைக் கெடுக்க—'அவை ஒன்றல்ல, தனித்தனி' என்று பிரித்துக் காட்ட முற்பட்டுவிட்டதே!

நமது பண்டிதர்களில் சிலர், இவை நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை; ஒரே தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்த நான்கு அக்கை, தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து. இத் திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான்; அதுதான் தமிழ். அந்த ஒன்றைத்தான் நாம் நான்கு பெயரிட்டு அழைக்கிறோம். நான்கு இடத்தில் பேசப்படுவதால் நான்கு பெயரில் வழங்குகிறதே ஒழிய, நான்கிடத்திலும் பேசப்படுவது தமிழ்தான். நான்கும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவது தான் தவறு; ஒன்று தான் நான்காக, நமது அறியாமையால் கருதப்பட்டுவருகிறது. இதை நிரூபித்துக் காட்டவும் என்னால் முடியும்.

நான்கு தனியிடங்களில் வாழ்ந்துவந்த மக்களுக்குள் போக்குவரவும், அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பமும் முன் காலத்தில் இல்லாததால், ஆங்காங்குள்ள மக்கள் தமிழைப் பேசி வந்த முறை சிறிது வேறுபடவும், அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு, நம்மை நான்கு சாதியாகப் பிரித்துவைத்த ஆரியம், நம் மொழியையும் நான்காகப் பிரித்து, வேண்டு மளவும் வடமொழியை அவற்றுள் புகுத்தி, அதற்கேற்ற வண்ணம் எழுத்து இலக்கணம் முதலியவற்றை உண்டாக்கி, சிறிது வேறு உச்சரிப்பாக இருந்த தமிழைத் தனித்தனி மொழியென்று சொல்லும்படி செய்துவிட்டது. தமிழ் மக்கள் தங்களுக்குள் உள்ள வகுப்பு

வேற்றுமையால், இக் குறைபாட்டைப் பற்றிச் சிந்திக்காமல், இதன் உட்காரணத்தையும் கண்டுபிடிக்காமல், தமிழ் நாட்டிலுள்ள தமிழைத் தவிர, மற்றைய மூன்றும் கிளைமொழிகளென்றும், நாட்டுப் பெயரையே மொழிக்குக் கொடுத்துப் பிரித்துவிட்டார்கள். அன்றைய தமிழ்ப் பண்டிதர்கள் ஆரியத்திற்கு அடிமைப் பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்களல்லர். இன்னும் நமது பண்டிதர்களுக்கு அந்த ஆரியமோகம் தீர்ந்தபாடில்லை.

ஒன்று நான்காக வகுக்கப்பட்டது என்பதற்கும், ஒன்றிலிருந்து நான்கு பிறந்தன, கிளைத்தன என்பதற்கும் வேற்றுமையுண்டு. ஆகவே, தமிழ், நீண்ட தொடர்பற்ற காரணத்தால் நான்காகப் பிரிந்திருக்கிதே அல்லாமல், தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தோன்றியவை அல்ல; உண்டாக்கப்பட்டவை அல்ல என்று திராவிடர் உணரவேண்டும். இந்த உண்மை தெரிந்துகொண்டாலொழிய, இந்த நான்கு நாட்டாருக்குள்ளும் வேற்றுமையுணர்வு தோன்றாமலிருக்காது. இந்நான்கும் தமிழ் மொழியேதான் என்பதற்குச் சிறிதும் அய்யமில்லை.

ஆரிய மோகமற்ற நான்கு மொழிப் பண்டிதர்களும் ஒன்றாக உட்கார்ந்து, நான்கு மொழியகராதிகளையும் வைத்துக்கொண்டு, ஆரியனல்லாத ஒரு வடமொழிப் பண்டிதனை நீதிபதியாய் வைத்துக்கொண்டு, தமிழ் தவிர்த்த மற்ற மூன்று அகராதிகளிலுமுள்ள வடசொற்களையும், பிறசொற்களையும் நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பவை அத்தனையும் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். நூற்றுக்கு அய்ந்துகூட, ‘தமிழ் அல்லாத’ சொல்லாக இருக்காது அதற்குள்ள நீட்டலையோ, குறுக்கலையோ நீக்கி விட்டுப் பார்த்தால், அவையும் தமிழாகவே முடியும். அவ்வாறு அயற்சொற்களை நீக்கிய பிறகு நூற்றுக்கு எண்பது, இன்றுள்ள வழக்கத் தமிழ்ச் சொற்களாகவும்; பத்து தற்போது வழக்கத்திலில்லாமல் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்துவரும் சொற்களாகவுந்தான் இருக்கும்.

இன்று வேண்டுமானால் நீங்கள் 50 ஆண்டுகளுக்கு முன் அச்சிட்ட ஒரு மொழிவாரிச் சொன்னூலை (ஒக்காபுலேரி) எடுத்துப் பாருங்கள். எல்லாம் தமிழ்ச் சொற்களாகவே இருப்பதைக் காணலாம். அதைச் சுருக்கமாகச் சில உதாரணங்களால் விளக்குகிறேன்.

நாம் குடியிருக்கும் இடத்திற்குத் தமிழில் ‘வீடு, இல், மனை, பொறை’ என்று பெயர். ஒரு தெலுங்கனும் ‘இல்’ என்றுதான் சொல்லுகிறான்; ஒரு கன்னடியன் ‘மனை’ என்கிறான்; ஒரு மலையாளி ‘பொறை’ என்கிறான். தமிழன் தாகத்துக்குக் குடிப்பதை ‘நீர்’ என்கிறான்; தெலுங்கன் ‘நீளு’ என்கிறான்; கன்னடியன் ‘நீரு’ என்கிறான்; மலையாளி ‘வெள்ளம்’ என்கிறான்; ‘ஆற்றுவெள்ளம்’; எனவே, வெள்ளம் என்பதும் தமிழ்ச் சொல்தான். வீடு, இல், மனை, பொறை, நீர், நீளு, நீரு, வெள்ளம் இவை எல்லாம் தமிழ்ச் சொற்கள்தானே!

நாம், ‘எனக்கு’ என்று தமிழில் கூறுவதைத் தெலுங்கில் ‘நாக்கு’ என்றும்; கன்னடியன் ‘நெனக்கி’ என்றும்; மலையாளி ‘எனக்கி’ என்றும் கூறுவான். பார்ப்பான் ‘நேக்கு’ என்று கூறுவான். அதைப்போலவே, ‘உனக்கு’ என்பது தமிழ்; ‘நீக்கு’ என்பது தெலுங்கு; ‘நோக்கு’ என்பது பார்ப்பனத் தமிழ்.

‘அவர்கள்’, ‘அவர்’ என்பதைத் தெலுங்கர் ‘வாள்ளு’, ‘வாரு’ என்கிறார்கள்; கன்னடியர் ‘அவரு’ என்கின்றனர்; பார்ப்பனர் ‘அவா, இவா, வந்தா, போனா’ என்று மொண்ணையாகவே, மொக்கையாகவே பேசுகிறார்கள். நம்மில் பலரும் அதைப் பெருமையாக நினைத்து அம் மாதிரியே பேசிவருகிறார்கள்.

‘அகத்துக்கு’ என்பதைப் பார்ப்பனர் ‘ஆத்துக்கு’ எனத் திரித்துக் கூறி வருகிறார்கள். இந்த நேக்கையும், நோக்கையும், ஆத்தையும், அவா, இவாவையும் தமிழென்று கூறும்போது—இல், மனை, பொறை, நீளு, நீரு, வெள்ளம், நாக்கு, நெனக்கி,

எனக்கி என்று கூறும் மக்களைத்தானா—'வேறுமொழி பேசுவோர்' என்று ஒதுக்க வேண்டும்? தமிழ்நாட்டுப் பார்ப்பனரையெல்லாம் ஒரு தனியிடத்தில் வைத்துவிட்டால் இவர்கள் பேசுவது தெலுங்கு, கன்னடம், மலையயாளத்தைவிட வேறு மொழியாகத்தானே கொள்ளவேண்டியிருக்கும் !

நாம் 'அங்கே' என்பதை ஒருவன் 'அக்கடே' என்றும், ஒருவன் 'அவடே' என்றும் கூறுகிறான். இச் சிறு வேறுபாட்டின் காரணமாக இவை வெவ்வேறு மொழியாக்கப் படலாமா? 'அங்கிட்டு' என்று வழங்கும் தமிழர் வேற்று மொழியாளரா?

நாம் 'ஆ' என்பதைத்தான் தெலுங்கர் 'ஆவு' என்றும்; கன்னடியன் 'அசு' என்றும்; மலையாளி 'ஆல்' என்றும் கூறுகிறான். 'ஆன்' என்பதுதான் 'ஆல்' என்று திரிந்திருக்கும். இச்சிறு மாறுபாட்டினாலா இவை நான்கு மொழிகளாக்கப்பட வேண்டும்?

தமிழ்நாட்டில் ஒரு கோட்டத்தில் (ஜில்லா) இருக்கும் சொல், மற்றொரு கோட்டத்தில் இல்லை; ஒரு கோட்டத்தில் ஒரு பொருளுக்குப் பயன்படுத்தும் சொல்லை மற்றொரு கோட்டத்தில் வேறு பொருளுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரே கோட்டத்தில் வெவ்வேறு ஒலியாக உச்சரிக்கிறார்கள். வழிக்கு – வெட்டி, பாட்டை என்னும் சொற்கள் கோவையில் இல்லை. 'கொல்லை' என்ற சொல் தமிழ்நாட்டில் சில இடங்களில் 'கக்கூசு'க்கு வழங்கப்படு கிறது; சில இடங்களில் வீட்டின் பின்வாசலுக்கு வழங்கப்பட்டு வருகிறது; சில இடத்தில் விளை நிலத்தைக் குறிக்கிறது. தமிழ்நாட்டில் கோவைக் கோட்டத்தில் நகர மக்கள் பேச்சு, நாட்டு மக்களால் எளிதில் புரிந்துகொள்ள முடிவதில்லை. தமிழிலுள்ள ஒரு பொருட் பல சொற்களே ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனியாக வழங்கி வெவ்வேறு மொழியாக நிற்கின்றன.

எனவே, இவை நான்கும் ஒரே உதரத்திலிருந்து உதித்து எழுந்தவையல்ல. அந்த உதரமேதான் இவை நான்கும். 'என்னருந் தமிழே! நீயேதான் தெலுங்கு! நீயேதான் கன்னடம்! நீயேதான் மலையாளம்!' என்றுதான் நான் கூறுவேன். இதை நமது மக்களுக்கு உணர்த்தி ஒரேநாடு, ஒரேமொழி, ஒரேமக்கள் என்ற ஒன்றுபட்ட நிலையை உண்டாக்க வேண்டும்.

தமிழர்களுக்கு, குறிப்பாகத் தமிழ்ப் பண்டிதர்களுக்குச் சிறிதாவது இனப்பற்று இருந்திருக்குமானால் ஆரியர்களுடைய இந்தத் தந்திரம், சூழ்ச்சி வெற்றி பெற்று—நம் மக்கள் இவ்வளவு பிரிவினைக்கும், வேற்றுமைக்கும் ஆட்பட்டிருக்க முடியாது. தெலுங்கர், கன்னடியர், மலையாளிகட்குள்ள மொழிப் பற்றில், உணர்ச்சியில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு நூற்றில் ஒரு பங்கு கூட இல்லை.

அவை வெவ்வேறு மொழிகளாய் இருப்பதால் நமக்கென்ன கேடு எனின், தமிழகத்தைச் சுற்றி மூன்று புறத்திலுமுள்ள மக்கள் ஆரியமயமாய் இருந்தால் அது நமக்குத் தொல்லையாகவும், பல துறைகளில் தடையாகவும் இருக்காதா? 'திராவிட நாடு திராவிடருக்கு' ஆனால் இந்தக் குறைபாடுகளை எளிதில் தீர்த்துக்கொள்ள முடியும். மற்றும் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளைத் தமிழர்களாக்க வேண்டுமானால், 'திராவிடர்' என்று சொல்லித்தான் ஆக்க முடியும். 'திராவிடமே தமிழ்; தமிழே திராவிடம்' என்னும் புத்துணர்ச்சியைத் திராவிட மக்கள் பெறுவார்களாக!

[நூல்: 'மொழியாராய்ச்சி'—(1948) வள்ளுவர் பதிப்பகம், பவானி]

3. திராவிட மொழி தமிழே!

நான் மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் திராவிட மொழி என்பது, தமிழ்மொழி என்பதுதான் என்றும், தமிழ் தவிர்த்த கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பதாகத் தனி மொழியோ, சார்பு மொழியோ கிடையாதென்றும், தனி

மொழி என்று கருதிக்கொண்டு சொல்லப்படுவதும், பேசப்படுவதுமான மேற்கண்ட தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று சொல்லப்படும் மொழிகள் தமிழ் மொழிதானே ஒழிய வேறு மொழி அல்லவென்றும், இட பேதம், போக்குவரத்து வசதிக் குறைவு காரணமாக ஆங்காங்குள்ள மக்கள் தமிழைப் பேசிய முறைதான், அதாவது தமிழ் மொழியை உச்சரித்த மாதிரிதான் இப்போதைய சிறு பேதத்துக்குக் காரணமேயொழிய, அவை தனித் தனியாக உண்டாக்கப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட மொழிகள் அல்லவென்றும் பல நாட்களாக வலியுறுத்தித் தொடர்ந்து பேசி வந்திருக்கிறேன்.

அதன் விளக்கம் என்னவென்றால்—இப்பொழுது நமது நாட்டிலே பார்ப்பனர்கள் தமிழ் பேசும்போது எனக்கு உனக்கு என்பதை 'நேக்கு', 'நோக்கு' என்று பேசுவதையும், அவர்கள் இவர்கள் என்பதையும், வந்தார்கள் போனார்கள் என்பதையும், 'அவா, இவா', 'வந்தா', 'போனா' என்றும் உச்சரிப்பதையும் பார்க்கிறோம். நம்மில் சிலரும், சில தாசிகளும் பார்ப்பனர்போல் பேசி பெருமை சம்பாதிப்பதற்காக அந்தப்படியே உச்சரிப்பதையும் காண்கிறோம். ஆனால், சொற்களின் அடிப்படையிலே மாற்றமில்லை.

அன்றியும், சில சொற்களில் மாற்றம் இருக்கிறது என்று காணக்கூடியதாய் இருந்தாலும்—அதாவது தமிழில் 'வீடு' என்பது கன்னடத்தில் மனை என்றும், தெலுங்கில் இல்லு என்றும் சொல்லப்பட்டாலும் அவையும் நம் தமிழ், தனித் தமிழ் மொழியே தவிர வேறு மொழி அல்ல. ஒரு சமயம் ஏதாவது ஒரு பொருளுக்கு, ஒரு காரியத்திற்கு, ஒரு குணத்திற்கு தமிழ் அல்லாத வேறு சொல் இருக்கிறது என்று எடுத்துக் காட்டப்படுமானால் அவையும், பெரிதும் வடமொழிச் சொற்களை, தமிழில் எப்படிப் பலவற்றைக் கலக்கிப் பேசுகிறோமோ அதுபோல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்கிற மொழிகளிலும் வடமொழியைக் கலக்கி அல்லது புகுத்தப்பட்டுப் பேசப்படும் சொற்களாகவும், அல்லது அப்போதுள்ள அரசாங்கம், சமயம், ஆரிய செல்வாக்கு அல்லது பக்கத்துச் சார்பு, நாட்டு மொழிக் கலப்பு ஆகியவைகளால் கலந்து பேசப்பட நேர்ந்த சொற்களே தவிர, அப்படிப்பட்டவை கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளுக்கு ஏற்பட்ட தனிச் சொற்கள் ஆகமாட்டா.

மற்றும் ஒன்று, இரண்டு, மூன்று, மாதம், வாரம், நாள் ஆகியவைகளுக்கும்; வண்டி, வாகனம் முதலியவைகளுக்கும் தமிழ்ச் சொற்களே பிற திராவிட மொழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, இந்த நமது கூற்றுக்கு எடுத்துக்காட்டுக்காக இந் நான்கு மொழிகளிலும் இருந்துவரும், வழங்கிவரும் சில சொற்களை இதன் கீழே குறிப்பிட்டிருக்கிறேன். இதை வாசகர்கள் ஊன்றிப் படித்து, மற்றும் மேலே கண்ட நமது கூற்றுக்கு ஏற்றவண்ணமே மற்ற மொழிகளும் பெரிதும் இருக்கின்றனவா, இல்லையா என்பதையும் கூர்ந்து, ஆராய்ந்து சிந்திக்க வேண்டுகிறேன்.

திராவிட மக்களைப் பிரித்துப் பாழ்படுத்தியதுபோலவே திராவிட மொழியையும் பலவாறாகப் பிரித்துப் பாழ்படுத்தி, அதற்கு எழுத்து, இலக்கணம் எல்லாம் ஆரியமயமாக்கி, திராவிட மக்களுக்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இல்லாமல் போகும்படி ஆரியர்கள் செய்துவிட்டதோடு, திராவிட நூல்களையும், கலாச்சாரங்களையும் பாழ்படுத்தி ஆரிய நூல்களும், ஆரிய கலாச்சாரங்களுமே திராவிடர்களிடையில் தலைசிறந்து விளங்கும்படி, திராவிடம் அடிமைப்படுத்தப்பட்டாகிவிட்டது.

இதைப் பற்றிப் பாமர மக்கள் சிந்திப்பதைவிட, திராவிடப் புலவர்களையே சிந்தித்துப் பார்க்கும்படி மிகவும் தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ்	தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
தாய்	தல்லி	தாய்	தள்ளே
தகப்பன்	தன்றி	தந்தை	அச்சன்
அண்ணன்	அன்ன	அண்ணா	சேட்டன்
தம்பி	தம்புடு	தம்பி	அனுசன்
கணவன்	மொகுடு	கெண்ட	பர்த்தா
மகன்	குமாருடு	மகனு	ஆண்குட்டி
பாட்டன்	தாத	தாத	மூப்பன்
உடல்	ஒள்ளு	மய்யி	தேகம்
மனைவி	பெண்ட்லாமு	எண்டத்தி	பாரியா
மகள்	குமாரத்தி	மகளு	பெண்குட்டி
அக்காள்	அக்க	அக்க	சேட்டச்சி
மாமன்	மாம	மாவ	அம்மாவன்
மருமகன்	அல்லுடு	அளிய	மருமான்
பாட்டி	அவ்வ	தாத்தி	முத்தி
எது	எதி	எது	எது
அது	அதி	அது	அது
இது	இதி	இது	இது
இங்கே	இக்கட	இல்லி	இவடே
அங்கே	அக்கட	அல்லி	அவடே
எங்கே	எக்கட	எல்லி	எவடே
இப்போது	இப்புடு	ஈவாக	இப்போள்
அப்போது	அப்புடு	ஆவாக	அப்போள்
எப்போது	எப்புடு	ஏவாக	எப்போள்
சிறிய	சின்ன	சிக்க	சிறிய
பெரிய	பெத்த	தொட்ட	வலிய
நெருப்பு	நிப்பு	பெங்கி	தீ
கொடு	ஈய்	கொடு	கொடு
மழை	வான	மளெ	மழ
இரவு	ராத்திரி	ராத்திரி	ராத்திரி
பகல்	பகலு	அகலு	பகல்
யார்	எவரு	யாரு	யாரானு
ஊர்	ஊரு	ஊரு	ஊரி
ஊருக்கு	ஊரிக்கி	ஊரிக்கே	ஊரிலே
சோறு	அன்ன	ஊண்ட	ஊணு
சேலை	சீர	சேலை	முண்டு
நீர்	நீள்ளு	நிறு	வெள்ளம்
கண்	கன்னு	கண்ணு	கண்ணு
மூக்கு	மூக்கு	மூங்கி	மூக்கு
காது	செவ்வு	கிமி	செவி
வாய்	நோரு	பாயி	வாயி
தலை	தல	தலெ	தலை
வா	ரா	பா	வரி
பசு	ஆவு	அசுவு	பசு
எருது	எத்து	எத்து	காள
சொல்லு	செப்பு	ஹேளு	பற

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தனித்தனி மொழியா? இந்தப்படி மொழி பேசுகிறவர்கள் தனித்தனித் தேசிய இனமா? இதற்காக அவர்கள் பிரிந்து வாழ வேண்டுமா? அறிஞர்கள் சிந்திக்க!

['விடுதலை'-தலையங்கம்—27-11-1948; 2-2-1953]

4. தமிழ்

நமது நாட்டில் வேறுவழியில் பிழைக்கமுடியாதவர்கள் தமிழின் பெயரால் பிழைக்கத் துடிக்கிறார்கள். அவர்கள் துடிதுடிப்புத்தான் 'தமிழைக் காக்கவேண்டும், தமிழுக்கு உழைப்பேன், தமிழுக்காக உயிர் விடுவேன்' என்பது போன்ற கூப்பாடுகள்.

இதில் மற்ற மக்கள் சிக்குண்டு ஏமாந்து போகக்கூடாது.

நான் தமிழை அறியாதவனல்ல; தமிழ்ப் புலவர்களை, மேதாவிகளைத் தெரியாதவன் அல்ல; தமிழ் இலக்கியங்களின் தன்மையை உணராதவனல்ல.

இன்றையப் புலவர்கள் தமிழ் அபிமானிகள் தியரிடிகல் (Theoretical) புத்தகம் படித்த புலவர்கள் என்றால், நான் (Practical) பிராக்டிகல் (அனுபவ) தமிழ் அறிவு உடையவன் என்று கருதி இருப்பவன். 1920 வரை என்னிடம் வந்து வாதம் செய்யாத, கைநீட்டாத தமிழ்ப் புலவர்கள் குறைவென்றே சொல்லுவேன்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையை எனக்குத் தெரியாது; சாமிநாத அய்யரை எனக்கு நன்றாய்த் தெரியும்; சாமி வேதாசலத்தையும் தெரியும்; கலியாணசுந்தர முதலியார் தரத்திலுள்ள 'பிரபல' தமிழ்த் 'தென்றல்'களையும் தெரியும்.

ஒரு சமயத்தில் நாங்கள், காங்கயம் சேஷாசல நாயுடு, முத்துசாமிக் கவிராயர் (சங்கரம் பிள்ளை சங்கரதாஸ் ஆனபின்) சங்கரதாஸ் இவர்களுடன் பேசிக்கொண்டு இருந்த போது 'வள்ளுவரை மன்னிக்கலாம். மற்ற எந்தப் புலவனையும், எந்த இலக்கியத்தையும் மன்னிக்க முடியாது. படிப்படியாக ஆயுள் தண்டனை, தூக்குத் தண்டனை வரையில் தண்டிக்கப்படவேண்டியவர்கள் ஆவார்கள்' என்று சொன்னேன். அவர்கள் பெரும் சிரிப்பு சிரித்து, கை தட்டினார்கள்! இது சுமார் 1900 முதல் 1920 வரை உள்ள காலத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

ஒரு வேடிக்கை நிகழ்ச்சி: வே சாமிநாத அய்யர் நான் 'பிரபு'வாயிருக்கும்போது வந்து புலவர் முறைப்படி என்னைப் பார்த்துவிட்டுப்போன சில நாட்களுக்குப் பின், ஒருநாள் இரயில் பிரயாணத்தில் அவர் இருக்கும் வண்டியில் நான் ஏறி ஒருபுறம் உட்கார்ந்தேன். வண்டியில் இருந்த மக்கள் என்னைக் கவனித்தார்கள். அப்போது அவரிடம் 'நாயக்கர் வந்து ஏறினார்' என்று சொன்னார்கள். அது ஈரோடு ஸ்டேஷன் ஆனதால் 'இராமசாமி நாயக்கர்'தான் என்று கருதி என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். உட்கார்ந்த உடன் நான் வணக்கம் தெரிவித்தேன். அவர் என்னை உற்றுப் பார்த்தார். பார்த்ததும் பொருளாதாரத்தில் எனது நிலை தாழ்ந்துவிட்டதாகக் கருதிக் கண் கலங்கினார். கலங்கி 'வியாபாரத் தொழில் அப்படித்தான், சகடக் கால் போல்' என்று கூறிக்கொண்டு 'சவுகரியமா?' என்று கேட்டார்.

அவர் ஏன் அப்படி நடந்துகொண்டார் என்றால், அவர் என்னிடம் வந்து பேசிய காலம், என்னைப் பிரபு என்று கருதி வந்து பயன்பெற்ற காலம். அடுத்தாற்போல் இரயிலில்,—பிரயாணத்தில் என்னை அவர் சந்தித்த காலம் நான் காங்கிரசில் சேர்ந்து கதர் கட்டிக்கொண்டு, சட்டை போடாமல் ஒரு மடிசஞ்சி மூட்டையை வைத்து, அதன்மீது உறைந்துகொண்டிருந்த காலம். பிறகு நான் அன்றைய எனது நிலையைப்பற்றிப் பேசிய

பிறகு மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு இருந்து, ஈரோட்டுக்கு அடுத்த ஊத்துக்குழி ஸ்டேஷனில் இறங்கிக் கொண்டார். அந்தச் சம்பவம் அவர் அவினாசியில் நடந்த ஒரு சமய மாநாட்டுக்கு தலைமை தாங்க சென்ற சமயம்.

சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பெல்லாம் புலவர்கள் யாராயிருந்தாலும் 'பிச்சை' எடுத்தே தீருவார்கள். பெரிய புலவர்களுக்கு எல்லாம் மாதம் ரூ. 15 முதல் ரூ. 30 வரை சம்பளம்தான் சாதாரணமாக இருக்கும். அவர்கள் தகுதி எல்லாம் 'இலக்கியங்களை' உருப்போட்டு ஒரு சொல்லுக்குப் பல பொருள் சொல்லி, மக்களை மருளச்செய்து, காசு வாங்குவதுதான் உயர்ந்த தொழிலாகும். அந்தக் காலத்தில் எங்கள் குடும்பத்தையும் என்னையும் அறியாத புலவர்கள் தமிழ்நாட்டில் அருமை. புலவரைப்பற்றி என் கருத்து 'புலவர் என்றால் சொந்த பத்தி இல்லாதவன், புளுகன்' என்றுதான் உரை கூறுவேன். நா. கதிரைவேற்பிள்ளை என்கின்ற ஒரு தமிழ் வாயாடிப் புலவர் என்னிடம் வந்தபோது, ஒரு நிகழ்ச்சியில் 'புலவர்களுக்குப் பகுத்தறிவு கிடையாது என்பது என் கருத்து. அதை உங்களிடமும் கண்டேன்' என்று சொன்னதற்கு 'உன்னிடம் வந்ததே தவறு' என்று சொல்லி என்னிடம் வாங்கிக் குடித்த பாலை விரலைவிட்டு வாந்தி எடுத்துவிட்டார்.

இதுவரை நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்கு இந்த நாட்டில் எந்தப் புலவனாலும் வளர்ச்சி, அபிவிருத்தி காரியமும் ஆனது கிடையாது; அதற்குத் தகுதியான புலவன் இன்று இங்கு யாரும் இல்லை. பெரிய பெரிய பேர் வாங்கி இருப்பார்கள். ஆனால், அவர்களால் சின்ன கடுகத்திய காரியம்கூட ஆனதில்லை. எல்லாப் புலவர்களும் பழமையைப் பிரச்சாரம் செய்பவர்களே.

எந்தப் புலவராலும் இதுவரை நமது நாட்டுக்கு ஒரு சிறு மதிப்பிற்குரிய முன்னேற்ற நூல்கூட உண்டாக்கப்பட்டதில்லையே! கம்பராமாயணத்திற்கும் பெரிய புராணத்திற்கும் புதிய பொருள் எழுதிப் பணம் சம்பாதிப்பார்கள்.

இன்று தமிழில் 'மேதாவிகள்' டாக்டர்கள் ஏராளமாக ஆகிவிட்டார்கள். பூச்சும், பொட்டும், நாமமும்தான் அவர்கள் தலையில் விளங்குகிறதே தவிர, தலையில் இருக்க வேண்டியது அறவே இல்லை. புலவரை இடித்துரைக்க இந்த நாட்டில் என்னைத் தவிர வேறு எவரும் முன்வரப் பயப்படுகிறார்கள்.

தமிழின் 'பெருமை'யை உணரவேண்டுமானால் இன்று புலவருக்கு உறு துணையாய், பெருமைக்கு ஆதாரமாய் கம்பராமாயணமும், சிலப்பதிகாரமும்தானே முதல் வரிசையில் இருக்கின்றன. குறளை 'தீக்குறளாக்கி' விட்டார்களே புலவர்களும், பக்தர்களும்! புலவர்களுக்குக் கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் இனத் துரோகம், முட்டாள் தனம், மூடநம்பிக்கை, பகுத்தறிவுக்குப் பூட்டுப் போடுதல் ஆகிய காரியங்கள் தவிர வேறு என்ன பலனைத் தருகிறது?

கம்பராமாயணத்திற்கும், சிலம்புக்கும் இந்த நாட்டில் மதிப்பு இருக்கிறது என்றால் இந்த நாட்டு மக்களுக்கு அறிவும் இல்லை; மானமும் இல்லை; இன உணர்ச்சியும் இல்லை என்றுதானே பொருள்?

இவைகளின் தன்மையே இப்படி இருந்தால், இவைகளைத் தாங்கி நிற்கும் தேவாரம், திருவாசகம், திருமுறை, பிரபந்தம், பெரியபுராணம் முதலிய குப்பைக் கூளங்களின் யோக்கியதை எப்படி இருக்கும்? இவைகளைக் கொண்டாடும் மக்கள் இன்னமும் பத்தாம் பசலி மக்களாக இருக்கிறார்கள் என்றுதானே பொருள்கொள்ள வேண்டும்? நம் நாட்டுக்கு மீளமுடியாத பெரும்கேடு என்னவென்றால், இந்தக் குப்பைக் கூளங்கள் எல்லாம் சமய நூல்களாக, பக்திக்குச் சாதனங்களாக, இலக்கியங்களாக ஆக்கிவிட்டதுதான். இதன் பயன் என்ன? இந்தக் கடவுள்களும், சமயங்களும் உள்ளவரை இந் நாட்டு மனிதர்கள் உருப்படப்போவதில்லை என்பதுதானே முடிந்த முடிபு; முதலாவது பெரும் கேடு.

இதைச் சொல்லக்கூட இந்த நாட்டில் (என்னைத் தவிர) ஆளே இல்லையே! எவனைப் பக்குவப்படுத்தினாலும் மரியாதை, விளம்பரம் வந்தவுடன் 'தமிழைக் காக்க' அல்லவா புறப்பட்டுவிடுகிறார்கள்! புலவன் பொறுக்கித் தின்ன இலக்கியங்களைக் காப்பதுபோல் 'பொதுத்தொண்டு' மக்களும் இப்போது பலன் அடையத் தமிழைப் பயன்படுத்திக் கொண்டு, வெட்கமில்லாமல் 'தமிழைக் காக்கிறேன்' என்கிறார்கள்.

என்னைக் குடிகாரர்போல் வைவதில் சமாதானம் ஏற்பட்டுவிடாது. கையிலுள்ள சரக்கைக் காட்டவேண்டும்.

திரு. கி. ஆ. பெ. தமிழைக் காக்கவேண்டும் என்று சொல்கிறார் என்றால், அவர் தானாகவே தன்னை ஒரு அனாமதேயம் என்று சொல்லிக்கொண்டு, அந்தப்படி அய்க் கோர்ட் தீர்ப்பும், சட்டமும் செய்துகொண்டு 'நான் எதையும் உளறுவேன்; யாரும் அதை லட்சியம்செய்து என்னை மதிக்கக்கூடாது' என்ற நிலை எய்திவிட்டார்!

அட பாவமே! மந்திரி கலைஞர் கருணாநிதி 'தமிழுக்குக் கேடுவந்தால் மந்திரி பதவியை விட்டுவிடுவேன்' என்று எதற்காகச் சொல்லவேண்டும்? ஏன் அனாவசியமாய் முட்டாள்கள் வைத்த கண்ணியில் மாட்டிக் கொள்ளவேண்டும்? அப்துல் காதருக்கும் ஆடி அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்?

'ஒழுக்கம், நாணயம் கெட்டால், நீதி கெட்டால், நம்பிக்கை கெட்டால், நன்றி கெட்டால் என்பதுபோன்ற மனிதத் தன்மை எங்களிடம் இல்லையானால், எங்களால் காப்பாற்ற முடியாவிட்டால் பதவியை விட்டுவிடுவேன், (ஏன்) உயிரையும்கூட விட்டு விடுவேன்' என்று கூறலாம். 'கப்சா'வும் விடலாம். அதை விட்டுவிட்டு, 'தமிழைக் காப்பாற்றாவிட்டால், அதற்குக் கேடுவந்தால் பதவியை விட்டுவிடுகிறேன்' என்றால் அதற்கா மக்கள் ஓட்டுக்கொடுத்தார்கள்? ஒவ்வொன்றுக்காகவும் மந்திரி பதவியை விட்டு விடுவேன் என்றால் அப்படி ஒரு மனிதனுக்கு எத்தனை மந்திரி பதவி இருக்கிறது?

நாம் வீட்டில் தமிழ் பேசுகிறோம். கடிதப் போக்குவரத்து நிர்வாகம், மக்களிடம் பேச்சு இவைகளைத் தமிழில் நடத்துகிறோம். சமயத்தை, சமயநூல்களை, இலக்கியத்தைத் தமிழில்கொண்டு இருக்கிறோமே! சரி! இதற்குமேலும் சனியனான தமிழுக்கு என்ன வேண்டும்?

தமிழ் காட்டுமிராண்டிக் காலத்து மொழி. நாகரிக காலத்திற்கு, பகுத்தறிவு காலத்திற்கு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற காலத்திற்கு, 'யாயும் யாயும் யாராயினரோ' என்ற காலத்திற்குத் தமிழ் பயன்படுமா? வேஷத் தமிழரை அல்ல; உண்மைத் தமிழரைக் கேட்கிறேன். சொல்லுங்கள் (நீங்கள் சொல்லும் சமாதானத்தைப் பல ஆயிரம் புத்தகமாக அச்சுப்போட்டு வெளிப்படுத்துகிறேன்). எவ்வளவோ வேலை செய்ய வேண்டி இருக்கிற மந்திரி பதவியில் உட்கார்ந்துகொண்டு, 'தமிழுக்குக் கேடுவந்தால் பதவியை விட்டுவிடுகிறேன்' என்கின்ற மந்திரிக்கும், ஊர் ஊராய்த் திரிந்து குட்டிச்சுவராக வேண்டிய கோயில்களை எல்லாம் கட்டிமுடிக்கும் திருப்பணியில் இருந்த மந்திரிக்கும் தரத்தில் என்ன வித்தியாசம்? நான் இதை மந்திரிமீது குறைகூற எழுதவில்லை. மந்திரிக்கு உள்ள பகுத்தறிவு எனக்கு நன்றாய்த் தெரியும்.

ஏன், பாமர மக்களுக்கு வழியல்லா வழியில் பயப்படவேண்டும்? என்பதற்காகவே எழுதுகிறேன். தமிழ்பற்றிய இந்தக் கருத்து இன்றையக் கருத்தல்ல. இந்தி எதிர்ப்புக் காலம் தொட்டு எனக்கு இந்தக் கருத்துதான். இது மந்திரிகளுக்கும் தமிழுக்காக இன்று பாடுபடுபவருக்கும் தெரியும்.

'அட கெடுவாய் பல தொழிலு மிருக்கக் கல்வி (தமிழ்)
அதிகமென்றே கற்றுவிட்டோம்; அறிவில்லாமல்
திட்ட்முளமோ கனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோமில்லைத்
தடமுலை வேசையராகப் பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டு தையலார் தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்து உலகிலிரக்கின்றோமே'

தமிழ் படித்ததால் பிச்சைகூட கிடைக்கவில்லை; தமிழ் படித்தது பிச்சை எடுப்பதைத் தவிர வேறு உயிர்வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை என்பதோடு, இதற்காகச் செலவு செய்த காலத்தை வேறுதுறையில் செலவிட்டால் வாழ்வில் பயன் ஏற்பட்டிருக்கும் என்பதையும் 100 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தமிழ்கற்ற அனுபவப் புலவர் மேற்கண்ட பாடல் மூலம் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

['விடுதலை'—தலையங்கம்—16-3-1967]

5. மொழி

மொழி என்பது ஒரு மனிதனுக்கு அவ்வளவு முக்கியமான சாதனம் அல்ல; அது இயற்கை ஆனதும் அல்ல; அதற்கு ஒரு கட்டாயமும் தேவையில்லை.

மொழி, மனிதனுக்குக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு—விஷயங் களைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் அளவிற்குத் தேவையானதேயொழிய பற்றுக் கொள்ளுவதற்கு அவசியமானதல்ல.

மொழியானது சமுதாயத்திலுள்ள சூழ்நிலைக்கு ஏற்றதேயொழிய பொதுவாழ்விற்கு, உணர்ச்சிக்கு ஏற்றதல்ல. இந்தக் கருத்துக்களைக் கொண்டுதான் நாம் நமக்கு எந்த மொழி வேண்டும் என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நமக்குச் சொந்த மொழி என்பது—பிறந்த சாதியின் காரணமாக எனக்குக் கன்னடம்; சிலருக்குத் தெலுங்கு; பெரும்பாலானவர்களுக்குத் தமிழ்; நாட்டுக்கு உரியது தமிழ்.

தமிழ்நாட்டில் இருந்துகொண்டு—தமிழ்நாட்டைப்பற்றி நினைத்துக் கொண்டு, தமிழ்நாட்டுக்கு அரசியலுக்கானாலும், இலக்கியத்திற்கானாலும், போதனைக்கானாலும் ஒரு மொழி வேண்டுமானால் நாம் தேர்ந்தெடுக்கவேண்டியது தமிழ்மொழி என்பதாகத்தான் தோன்றும். அது ஓரளவிற்கு நியாயமாகும். ஆனால், நாடு நம்முடைய சொந்த நாடு ஆனாலும் ஆட்சி தமிழர்களல்லாத—அன்னியர்களுடைய ஆட்சியாக இருப்பதால், அந்த அன்னியர்கள் பல நாடுகளை ஒன்றுசேர்த்து அடக்கி ஆள்பவராக இருப்பதனால், அவர்களுடைய ஆட்சி நிலைப்பிற்கும், வசதிக்கும் ஏற்றபடி ஏதோதோ காரணங்களைச் சொல்லிக்கொண்டு, அன்னிய மொழியாகிய இந்தி மொழி என்பதுதான் ஆட்சி மொழியாகவும், கல்லூரி போதனா மொழியாகவும், பள்ளிகளில் கட்டாய மொழியாகவும்கூட இருக்கவேண்டும் என்று ஆட்சியாளர்களால் வலியுறுத்தும்படியான நிலைமை நம் நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது. இது நமக்கு ஒரு மாபெரும் கெட்ட வாய்ப்பும் வெட்கப்படத் தக்கதான சம்பவமுமாகும்.

இந்த நாட்டில் மேற்கண்டபடி இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப் (மொழியாக்க) படவேண்டும் என்பதற்கு அரசாங்கமும், இந்த நாட்டுப் பார்ப்பனர்களும், அவர்களின்

அருளால் பிழைக்கவேண்டும் என்ற நிலையிலுள்ள பெரும்பாலோரும் எந்த அளவிற்கு வேண்டுமானாலும் இந்தியைப் புகுத்தவும் கட்டாயப்படுத்தவும் இவைகளுக்காகத் தந்திர மான பல வழிகளைக் கோலவும் துணிந்து முன்வந்திருக்கிறார்கள்.

அதுபோலவே, தமிழ்மொழியை அரசியல் மொழியாகவும், கல்லூரி போதனா மொழி யாகவும், பள்ளிகளில் கட்டாய மொழியாகவும் இன்னும் இலக்கிய மொழியாகவும் இருக்க வேண்டுமென்று தமிழர்களிடையே அரசியல்வாதிகள் என்போர்களும், மற்றும் புலவர்களும் இலக்கிய வாழ்வுக்காரர்களும், மற்றும் மொழிப்பற்று என்பதை சமயப் பற்றுபோல் முக்கிய பற்று என்று கருதுகின்றவர்களும் வலியுறுத்துகிறார்கள். கிளர்ச்சி வயப்பட்டவர்கள் இதற்காகக் கிளர்ச்சிகளும் செய்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு மொழிகள் பற்றியும் கவலையில்லை; பிடிவாதமுமில்லை. இவற்றுள் இந்தி எந்த வகையிலும் நமக்குத் தேவையில்லை என்ப தோடு கண்டிப்பாக நம் நாட்டிற்குள் இந்தியைப் புகவே விடக்கூடாது என்பது எனது கருத்தாகும். எந்தத் துறையில் நமது நாட்டிற்குள் இந்தி புகுந்தாலும், சமஸ்கிருதத் தினால் தமிழர்களும் தமிழ்நாடும் இன்று என்ன நிலைமைக்கு வந்து தொல்லையும் மடமையும் இழிவும் அனுபவிக்கிறார்களோ–சற்றேக்குறைய அந்த நிலைமைக்குத்தான் நம்மைக் கொண்டுபோய்விடும் என்பது எனது துணிபு. இந்தி, தமிழ்நாட்டையும் தமிழனை யும் வட நாட்டானுக்கு–பார்ப்பனருக்கு அடிமைப்படுத்துவதல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் பயன்படாது.

இந்தி ஆட்சிமொழியாய் இருக்கிறதே என்றால், நாம் உலகம் உள்ள அளவும் வட நாட்டானுக்கு அடிமை ஆக இருப்பது என்று முடிவு செய்துகொண்டோமா? தமிழ்நாடு ஒருநாளைக்கும் அன்னியன் ஆதிக்கம் இல்லாத சுதந்திர நாடாக இருக்கக்கூடாது என்பது தான் தமிழ்நாட்டின் நிலையா? அப்படி இல்லை என்றால், இன்றைய அன்னியநாட்டான் ஆதிக்க ஆட்சியைத் தற்கால (தற்காலிக) ஆட்சி என்றுதானே சொல்லவேண்டும்?

மற்றும் இந்திமொழி, கலாசாலை போதனைக்கோ, இலக்கிய போதனைக்கோ, ஆட்சிமுறை போதனைக்கோ வேறுமொழியில் இருந்து இந்திமொழியில் மொழிபெயர்த்து நம் நாட்டிற்குள் புகுத்தவேண்டிய அளவில்தான் இருக்கிறதே தவிர–மற்றபடி மூலநிதி (பொக்கிஷம்) அதில் என்ன இருக்கிறது? இன்று சட்ட அறிவோ, கலை அறிவோ, பொறியியல் அறிவோ, வைத்திய அறிவோ, விஞ்ஞான அறிவோ அளிக்கத் தக்க நேரிடைச் சாதனம் இந்திக்கு என்ன இருக்கிறது?

நிற்க, தமிழை எடுத்துக்கொண்டாலும் இன்று உலக ஞானத்தில் முற்போக்குத் தன்மையில் தமிழுக்கு என்ன சிறப்பு இருக்கிறது? தமிழனுக்கு முதலாவது தெளிவான நேரான சரித்திரம் இல்லை.

தமிழனுக்கு அதுபோலவே சமய ஞான சாதனமும் இல்லை. இவை மாத்திரமல் லாமல், தமிழனுக்கு என்று—ஆரிய ஆதிக்கமும் கலப்பும் அற்ற இலக்கியமும் இல்லை. அதாவது, ஆரியர் வரவுக்கு முந்தியது என்று சொல்லத்தக்க வண்ணம் விவகாரத்திற்கு இடமில்லாத தன்மையில் எதுவும் கிடைப்பது மிக்க அருமையாகத்தான் இருக்கிறது. தமிழ்மொழி வேண்டுமானால் ஆரியத்திற்கு முந்தியது என்று ஒப்புக்கொள்ளலாம். அதுவும் தமிழனுக்கு இன்றளவும் என்ன பலனைக் கொடுத்திருக்கிறது? விஞ்ஞானத்திற்குச் சிறிதும் பயன்படத் தக்கதாய் இல்லை; அறிவுக்கும் தக்கபடி பயனளிக்க முடியவில்லை. தமிழ்மொழி ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அதைத் தாய்மொழி யாகக் கொண்ட தமிழன் இன்னும்—இந்த விஞ்ஞானப் பரவல் காலத்திலும் உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு மூட நம்பிக்கை உடையவனாகவும், மான உணர்ச்சி என்பது 100-க்கு 75 பாகம் இல்லாதவனாகவும் இருந்துவருகிறான். மனித வாழ்விற்கு மொழி முக்கியம்

என்றால்—உலகில் மற்ற மொழி நாடுகளைக் காணும்போது தமிழ் நாட்டுக்குத் தமிழ் என்ன பயன் அளித்திருக்கிறது?

தமிழை வளர்க்கவேண்டும் என்பதெல்லாம் கலைத்துறையிலோ, விஞ்ஞானத் துறையிலோ, மற்றும் சில துறைகளிலோ வேறு மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்கின்ற நிலைதானே தமிழுக்கு இருந்துவருகிறது?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மொழியானது, மொழியில் ஆகட்டும், பொருளிலாகட்டும், எழுத்திலாகட்டும், வேறு முறையிலாகட்டும் எவ்வித முன்னேற்றமும் மாறுதலும் அடையவில்லை. உலகத்திலே நீதிசிறந்த இலக்கியம்-குறள் தமிழில் உள்ளது. அது துருப்பிடித்துவிட்டது. என் அனுபவத்திற்கு எட்டியவரையில் உலகத்திலே சிறந்த துறை அறிவு, தமிழிலுள்ள கணக்குமுறை, அதாவது இளஞ்சுவடி என்றும் எண் கணக்கு என்றும் சொல்லக்கூடிய இலக்க முறை. அது குப்பைக்கே போய்விட்டது. இவை இரண்டையும் கழித்துவிட்டால் தமிழில் இருந்து—தமிழன்தெரிந்துகொள்ளத் தக்கதோ தமிழனுக்குப் பயன்படக் கூடியதோ எதுவும் தென்படவில்லை. தமிழும் தமிழனும் பெரும்பாலும் பழங்காலச் சின்னமாகக் காணப்படுகின்றன.

தமிழனின் பேச்சுமொழி, தாய்மொழி—தமிழ் என்பதைத் தவிர, தமிழருக்கு வேறு உலக முக்கியத்துவம் எதுவும் எனக்குத் தென்படவில்லை. மற்றபடி, தமிழ் நாட்டிற்கு, தமிழருக்கு வேறு எந்த மொழி தேவையானது-நல்லது; அரசியல், விஞ்ஞானம், கலை முதலியவைகளுக்கு ஏற்றது—பயன்படக்கூடியது என்று என்னைக் கேட்டால்—எனக்கு, ஆங்கில மொழிதான் சிறந்தது என்று தோன்றுகிறது. இது எனக்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னமேயே தோன்றிய எண்ணமாகும்.

நான் 1939-ல் கோவைக்கல்லூரியில் அதன் பிரின்ஸிபாலின் தலைமையின்கீழ் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசும்போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தச் சமயம் நான் இந்தி எதிர்ப்புக்காகச் சிறைசென்று—சிறையினின்று விடுதலையாகி வந்த பிறகு, கல்லூரி மாணவர்களால் அழைக்கப்பட்டு 'மொழி' என்னும் தலைப்பில் பேசிய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தத் தலைப்பில் மொழியின் பயன் என்ன? பயனுக்கேற்ற மொழி எது? என்று 2 பிரிவுகளாய்ப் பிரித்துக்கொண்டு பேசியிருக்கிறேன். அப்பேச்சில் ஆங்கில எழுத்துக்களையே தமிழ் எழுத்துக்களுக்கு நெடுங்கணக்காக—அகர வரிசையாக எடுத்துக்கொள்ளலாம் என்றும், தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ற எழுத்து ஆங்கிலத்தில் ஏதாவது ஒன்றிரண்டு குறையுமானால் அதற்கேற்ற தமிழ் எழுத்தையே எடுத்துக்கொள்ளலாமென்றும் சொன்னதோடு, மற்றும் ஆங்கிலமே தமிழனின் பேச்சுமொழியாக ஆகும்படியான காலம் ஏற்பட்டால் நான் மிகமிக மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவேன் என்றும் பேசியிருக்கிறேன். சமீபத்தில் (1957) நுங்கம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டப்பட்ட காலத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் பேசிய திருவாளர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழ் நாட்டுக்கு ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்றும் பேசினார்; ஆங்கிலமே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்றும் பேசினார். பிறகு நான் பேசும்போதும் அதுபோலவே பேசிவிட்டு, ஆங்கிலம் பேச்சு மொழியாக இருந்தாலும் மிகவும் பயன்படும் என்றும் சொன்னேன். அதே சமயம் இப்படி நான் சொல்வதால், மொழி வெறியர்கள் சிலர் என்னை, 'நீ யாருக்குப் பிறந்தாய்?' என்றுகூடக் கேட்டார்கள். 'அந்த மொழியைப் பேச வேண்டும் என்று சொல்வதனால் நாம் ஆங்கிலேயனுக்குப் பிறப்பதானால், மற்றபடி காப்பி குடிப்பது முதற்கொண்டு இரயில், ரேடியோ, ஆகாய விமானம், டெலிபோன், மருந்து முதலியவை ஆங்கிலேயனுடையவை என்று தெரிந்து அனுபவிக்கிற நாம்—எத்தனை தடவை ஆங்கிலேயர்களுக்குப் பிறந்தவர்களாவோம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், மொழி பேசுவதனால் ஆங்கிலேயனுக்குப் பிறந்தவனாகமாட்டோம்' என்று

சொன்னேன். கடைசியாகத் தமிழின் மூலமோ தமிழ் இலக்கியத்தின்மூலமோ, தமிழ்ச் சமயம், தமிழ்ப் பண்பாடு மூலமோ நாம் உலக மக்கள் முன்னிலையில் ஒருநாளும் இருக்க முடியாது.

தமிழ் வடமொழியைவிட, இந்தி மொழியைவிடச் சிறந்தது என்பதிலும், பயன்படத் தக்கது என்பதிலும் எனக்கு அய்யமில்லை என்றாலும், நாம் இன்றைய நிலைமையைவிட வேகமாக முன்னேற வேண்டுமானால்—ஆங்கிலந்தான் சிறந்த சாதனம் என்றும், ஆங்கிலமே அரசியல் மொழியாகவும், போதனா மொழியாகவும் இருந்தாக வேண்டு மென்றும், ஆங்கில எழுத்துக்களே தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களாவது அவசியம் என்றும், ஆங்கிலமே நம் பேச்சு மொழியாவது நலம் பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[நூல்: 'மொழியும் அறிவும்' (1957, 1962)]

'இந்தி வேண்டாம்' என்பதை நான் 1926ஆம் ஆண்டிலேயே 'இந்தியின் இரகசியம்' என்னும் தலைப்பில் 'குடி அரசி'ல் எழுதினேன்.

அந்தத் தலையங்கம்தான் தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியாவிற்கே இந்தி எதிர்ப்புக்காக எழுதப்பட்ட, தெரிவிக்கப்பட்ட முதலாவது எதிர்ப்புக் கருத்தாகும்.

பிறகு 1938-ல் இராஜாஜி இந்தியைப் புகுத்திய காலத்தில் இந்தியாவிலேயே முதல் முதல் கிளர்ச்சி ரூபமாக எதிர்ப்புக் காட்டியது சுயமரியாதை இயக்கம்தான். 2000 பேரை சிறைக்கனுப்பியதோடு நானும் 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை தண்டிக்கப்பட்டேன்.

அதனால் காங்கிரசும் பதவியிலிருந்து விலகியது; இந்திக் கட்டாயமும் ஒழிந்தது. பிறகு 'சுதந்திரம்' கிடைத்தது என்னும் பேரால் 'இந்தி' தேசிய அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டது என்றாலும், அதையும் தொடர்ந்து எதிர்த்துவந்தது நமது இயக்கம்தான்.

எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்கோ, தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல என்பதைத் தோழர்கள் உணரவேண்டும். மற்றெதற்கு என்றால், ஆங்கிலமே பொதுமொழியாக, அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டு மொழியாக, தமிழன் வீட்டுமொழியாக ஆகவேண்டும் என்பதற்காகவேயாகும்.

தமிழன் பழைய தமிழனாகவே இருக்கவேண்டும் என்று கருதுவது—தமிழன் காட்டு மிராண்டியாகவே இருக்கவேண்டும் என்று கருதுவதற்கொப்பாகும்.

நாம் இவ்வாறு கூறுவது, தமிழன் உலக மனிதனாக—விஞ்ஞான உருவாக—ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் மக்களை விஞ்ஞானத்தில் தோற்கடிக்கத் தக்கவனாக ஆகவேண்டும் என்பதற்கேயாகும். நாம் இன்று கிணற்றுத் தவளைகளாக இருக்கிறோம். நமக்கு கம்பனுக்குமேல் புலவன் இல்லை; வள்ளுவனுக்குமேல் தீர்க்கதரிசி இல்லை. இக் கருத்தில் நாம் உலக மனிதனாக ஆகமுடியாது என்பது எனது பலமான கருத்து. ஆகையால் தமிழர் தோழர்களே! உங்கள் வீட்டில் மனைவியுடன், குழந்தை களுடன் வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள்; பேசப் பழகுங்கள்; பேச முயலுங்கள். தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள். என்னை வையாதீர்கள்; மனிதனாக வாழ முயலுங்கள்.

['விடுதலை'—அறிக்கை—27-1-1969]

6. தாய்ப்பால் பைத்தியம்

தொட்டதற்கெல்லாம் பழமைப் பைத்தியமே—'சனாதனமே' தலைவிரித்தாடும் போது அந்த மோகத்தில் ஆழ்ந்த மக்களிடையில் பொதுவான முன்னேற்றம்—மாறுதல் ஏற்படுத்த வருகிறவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் மிக மிகக் கஷ்டமும் தொல்லையும் அனுபவிக்கவேண்டிவரும் என்பதில் மறுப்புக்கு இடம் இருக்காது.

இதற்குச், சுருக்கமான ஓர் உதாரணம் எடுத்துக்காட்ட ஆசைப்படுகின்றேன். அதாவது, இதே தமிழ்நாட்டில் தமிழ் மொழியான் அல்லாத ஆங்கில மொழிக்காரன் ஆட்சி வந்த பிறகுதான், அவனது 200 ஆண்டு ஆட்சியில் தமிழ் மக்களில் 100-க்கு 15 பேர்களாவது எழுத்துக்களையே அறிய முடிந்தது.

இந்த இங்கிலீஷ்காரன் ஆட்சி உச்சநிலையில் இருந்தபோது அதற்கு மந்திரியாக இருந்தவர்கள் இந்நாட்டுப் பார்ப்பனர்களேயாவார்கள். எப்படி எனில், இந்தப் பார்ப்பனர் கருத்துப்படிதான் சட்டம், சம்பிரதாயம் முதலியவைகளைக்கொண்டு அவர்கள் மனம் கோணாமல் நடத்திவந்தான். அதன்பயனாக எல்லா நீதி நிர்வாகப் பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தாற்போல் பார்ப்பானிடம்தான் இருந்தன. இதனை அறியாதவர்கள் உண்மை தெரிந்துகொள்ள முடியாதவர்களேயாவார்கள். இதனை வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமானால், இவர்கள் இந்தப்படியான ஆட்சியை எதிர்க்கவோ, வேறு மாற்றத்தைச் சொல்லவோ வகை அறியாதவர்களாகவே இருந்தார்கள், மற்றவர்கள். இப்படிப்பட்ட தன்மையில், நம்மில் மாத்திரம் அல்லாமல், பொதுவாகவே எழுத்து வாசனை உடைய மக்கள் 100-க்கு 15 பேர்களுக்கு உள்ளாகவேதான் இருந்திருக்கிறார்கள். இந்த 15 பேர்களில் இங்கிலீஷ் கற்றவர்கள் 100-க்கு 2 பேர்கள் இருக்கலாம். இந்த 2 பேர்களில் ஒன்றே முக்காலே மூன்றுவீசம் பேர் பார்ப்பனர்களே ஆவார்கள். இதிலிருந்து, இங்கிலீஷ் படித்த சமுதாயத்தின் வாழ்வு அன்றும் இன்றும்கூட எப்படி இருக்கின்றது? இங்கிலீஷ் படிக்காதவர்களின் வாழ்வு எப்படி இருக்கின்றது? என்று பார்த்தால், அதோடுகூடவே தமிழ் படித்தவர்கள் வாழ்வு எப்படி இருக்கின்றது? படிக்காதவர்கள் வாழ்வு எப்படி இருக்கின்றது? ஏதாவது பேதம் உண்டா? என்று பார்த்தாலும் 'இங்கிலீஷின் தன்மை' விளங்கும். அதாவது, இங்கிலீஷ் படித்தவர்கள் தன்மையும், ஒன்றுமே படிக்காதவர்கள் தன்மையும் விளங்கும்.

மற்றும், இந்தத் தமிழ்நாட்டிலேயே நம் தன்மையும் பார்ப்பனரின் தன்மையும், இருவரின் வாழ்வின் பேத அளவும் விளங்குவதோடு அந்தப் பேதத்துக்குப் பெருங்காரணம் வேறு எது எதுவோ இருந்தாலும், பெரிதும் அந்த ஆங்கிலம் படிக்காததுதான் காரணம் என்பது விளங்கும்.

இன்றைய தினம் ஆட்சி நம்முடையது என்று சொல்லப்பட்டாலும், இதில் இங்கிலீஷ் படித்தாலொழிய, அந்த இங்கிலீஷிலும் 'திறமையான படிப்பாளி' என்கின்ற தகுதி இருந்தால் ஒழிய ஆட்சியில் பங்குபெற முடியாது என்கின்ற நிலை இருந்துவருவதை யாராவது மறுக்கமுடியுமா?

மற்றும், இன்றைய உலகச் சூழ்நிலைக்கு ஏற்ப—விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஏற்ப—எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் இங்கிலீஷைத் தவிர வேறு எந்த மொழியிலாவது நாடோ, மனிதனோ முன்னேறுவதற்கு ஏற்ற வசதியோ வாய்ப்போ இருக்கிறதா என்று கேட்கிறேன். இந்த அளவைப் பொறுத்த அளவிலாவது தமிழ் மக்கள் என்னும் 'குழந்தைகளுக்கு'—தாய்ப் பால் என்னும் தமிழானது முன்னேற்றம் என்னும் உடல் தேறுவதற்கோ வளருவதற்கோ பயன்பட்டு இருக்கின்றதா? பயன்படுமா?

'தாய்ப் பால் சிறந்தது' என்பதில் தாய்ப் பாலில் சக்தியும் சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே சத்தற்றவள் என்பதோடு, நோயாளியாகவும் இருக்கும் போது, அந்தப் பாலைக் குடிக்கும் பிள்ளை உருப்படியாகமுடியுமா?

தாய்க்கு நல்ல உணவு இருந்தால்தானே அவளுக்குப் பாலும் ஊறும் ; அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும் ? தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது ?

நண்பர் சிவஞானம் கூறும் தமிழ்த் தாய் உண்ட உணவெல்லாம் சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பாரதம், இராமாயணம், பாகவதம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய இவைகள்தானே ? இவைகளில் சுவை இருக்கலாம் ; அழகு இருக்கலாம் ; முன்னேற்றத்துக்கான 'அறிவு' இருக்கிறதா ?

இப்படிப்பட்ட இந்தத் தாய்ப் பாலைக் குடித்து வளர்ந்த பிள்ளைகள், இந்நாட்டிலேயே நடைப் பிணமாய் இருப்பதைத் தவிர அதுவும் மற்றவன் கை, காலில் நடப்பதைத் தவிர, உழைப்புக்கு—காரியத்துக்குப் பயன்படும்படியான, தன் காலால் தாராளமாய் நடக்கும் படியான பிள்ளை—ஒரு ஒற்றைப் பிள்ளை—தமிழ் நாட்டில் இருக்கின்றதா என்பதை அன்பர்கள் காட்டட்டுமே என்றுதான் பரிவோடு கேட்கிறேன்.

இன்றைய தினம் கூட மேற்கண்ட தமிழ்த் தாயின் பாலை நேரே அருந்தி வளர்ந்த பிள்ளைகள் இங்கிலீஷ் புட்டிப் பாலை அருந்தி இருப்பார்களேயானால் இந்த அன்பர்கள் உட்பட எவ்வளவோ சக்தியும், திறமையும் உடையவர்களாக ஆகி, இவர்கள் வாழ்க்கை நிலையே வேறாக, அதாவது அவர்கள் நல்ல பயன் அடைபவர்களாக ஆகி இருப்பார்கள் என்பதோடு, மற்றவர்களுக்கும் பயன்படும்படியான நல்ல உரம் உள்ள உழைப்பாளிகளாகி இருப்பார்கள் என்று உறுதியோடு கூறுவேன்.

தாய்ப் பாலைக் குடிக்கவேண்டும், தாய்ப் பாலுக்கு வகை செய்யவேண்டும் (அதாவது சமஸ்கிருதம் கட்டாயமாக்கவேண்டும்) என்று வரட்டுக் கத்தல் கத்துகிற எந்தப் பார்ப்பனராவது, 'புட்டிப் பால் (இங்கிலீஷ்) வேண்டாம்' என்று தள்ளுகின்றனரா ? சொல்கின்றனரா ? அப்படிச் சொல்கிறவர்கள் சங்கராச்சாரியார்கள், மகான்கள் கூட்டத்திலாவது யாராவது ஒருவர் இருக்கிறார்களா ? தாய்ப் பாலை (தமிழை) எதற்காகப் படிக்கவேண்டும் ? படித்த பிறகு, அது எதற்குப் பயன்படுகிறது ?

ஒருவருக்கு ஒருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளத்தானே பேச்சு (மொழி) வேண்டும் ? பேசப் பழக வேண்டுமானால் அது தானாகப் படிக்காமலேயே வந்துவிடுகிற சாதனமாகுமே ! தமிழ் மக்களில் 100-க்கு 60 பேர்களுக்குமேல்—தாய்மார்களில் 100-க்கு 80 பேருக்குமேல் படிப்பு வாசனை அற்ற தற்குறிகளாக இருக்கிறார்கள். என்றாலும் இவர்களில் யாருக்குத் தமிழ் பேசத்தெரியாது ? ஓர் ஆணையோ, பெண்ணையோ நண்பர்கள் காட்டுவார்களா ? எனவே, எதற்காகத் தமிழ் வேண்டும் ? மேலும், தாய்ப் பால் குடித்துத் தமிழில் மேதாவிகளாகிய நபர்கள் முதல்—தமிழில் அரைகுறையாக 'பஜாரி' இலக்கியங்கள் கற்றவர்கள் உட்பட அவர்களுக்கு ஏற்பட்ட உடல்நலமெல்லாம் மூட நம்பிக்கை என்ற நோய்களுக்கு ஆளாகியதே ! அந் நோயைத் தீர்க்க எவ்வளவோ பேதி மருந்து கொடுத்து அவைகளை வெளியாக்கிப் போக்கவேண்டி இருக்கிறது. இன்றைய முற்போக்குக்கு முதல் எதிரி தாய்ப் பால் குடித்த மக்கள்தானே !

அப்பப்பா, இந்தத் தாய்ப் பால் குடித்த மக்களிடம் கடவுள், மதம், புராணம், சம்பிரதாயங்கள், பழமை முதலிய நோய்கள் தொத்துநோய்கள் போலவே விளங்குகின்றன என்பது மாத்திரமல்லாமல், பக்கத்தில் உட்கார்ந்தாலே சகிக்கமுடியாத வாடை (வெறுப்பு) அல்லவா தோன்றுகின்றது !

எவ்வளவு தமிழ்ப் பற்று, தமிழ் மேதைத் தன்மையுள்ள கலைஞர்களை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் இடத்தில் அவர்களில் 100-க்கு 5 பேர், 10 பேர்கள் இடத்திலாவது—முன்னேற்ற உணர்ச்சி இருக்கின்றதா என்று பார்த்தால் எல்லாம் பழங் குப்பைகளும், அவைகளுக்கு ஏற்ற கற்பனைகளும், ஒழிக்கப்படவேண்டியவைகளும், அழிக்கப்படவேண்டியவைகளும் உருவமாய்க் காணப்படுகின்றன என்பதைத் தவிர, வேறு என்ன இருக்கிறது ?

மரியாதைக் குரிய-பாராட்டத்தகுந்த தமிழ்ப் பெரியார்கள் மறைமலை அடிகள் முதல் திரு. வி. க. வரை உள்ள பெரியார்களிடம்-அவர்கள் கருத்துக்களிடம், அவர்கள் நடந்து கொண்ட முறைகளில் இருந்து, இன்றைய நாட்டு முன்னேற்றத்துக்கு என்றோ, மக்கள் முன்னேற்றத்திற்கென்றோ எடுத்துக்கொள்ளத்தக்க சாதனங்கள் என்ன இருக்கின்றன என்று அன்பர்கள் தோள்தட்டிக் கூறமுடியுமா?

தாய்ப் பால், தாய்ப் பால் என்ற மாத்திரத்தில் மக்கள் ஏமாந்துவிடுவார்களா? தமிழ்த் தாய் யாரிடமாவது அவர்களது பாலைக்கறந்து எடுத்து இரசாயன பரிசோதனை ஸ்தாபனத்தில் கொடுத்துப் பரீட்சித்துப் பார்த்தால், உடலுக்கு உரம் ஊட்டும் சாதனம் அதில் என்னென்ன இருக்கின்றது என்று கண்டுபிடித்துச் சொல்லச்சொன்னால், அப்போது தெரியும்-தாய்ப் பால் யோக்கியதை! அன்றியும், தாய்ப் பாலைப்பற்றிப் பேசுபவர்களாவது அதில் உடலுரத்துக்குள்ள அம்சம் என்ன என்ன என்பதை விளக்கி அதைப்பற்றிப் பேசுவது தான் தர்மமாகும். அப்படி ஒன்றுமே இல்லாமல், மக்களுக்குத் தாய்ப் பாலால் (தமிழால்) ஏற்பட்ட பழமை என்னும் முட்டாள் தனத்தைக் கைமுதலாக வைத்துக்கொண்டு, 'தாய்ப் பால்' என்ற சொல்லை மட்டும் பயன்படுத்துவதனால் மக்கள் ஏமாற்றப்படுவது அல்லாமல், வேறுயாருக்கு என்ன பலன் ஏற்படும்? மற்றும், நமக்கு இனி வேண்டி இருக்கும் அறிவு என்னும் உடலுரத்திற்குத் தாய்ப் பால் கண்டிப்பாகப் போதாதென்று மாத்திரமல்ல, பயன்படாது என்றும் உறுதியாகக் கூறுவேன்.

இப்போது நாம் உலக அந்தஸ்தில் மிகமிகத் தாழ்வான நிலையில் இருக்கிறோம். மனிதன் இன்றைய ஆசாபாசங்களுக்கு, அனுபவங்களுக்கு, இன்றியமையாத தேவைகளுக்கு, மற்ற நாட்டாரோடு தலை நிமிர்ந்து நடப்பதற்கு நம்மிடம் (தாய்ப் பாலில்) என்ன இருக்கிறது? எதற்குத் தமிழைப் பயன்படுத்துகிறோம்? நமது வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் இதுவரை நாம் அனுபவியாததை, காணாததை, நினைக்காததை அனுபவிக்கிறோம், காண்கிறோம், நினைக்கிறோம். இதன் அடிப்படைகளை ஊமையன் மாதிரி கைஜாடை அல்லது கண்ஜாடை அல்லது புட்டிப் பாலால் (அயல் மொழியால்) உணருகிறோம்; அறிகிறோம். செய்யத் தெரிகிறோமே அல்லாது, தாய்ப் பால் சக்தி பயன் தருகிறதா?

பார்ப்பனர்களும் அரசாங்கமும் இந்தத் துறையில் செய்கின்ற அக்கிரமங்கள் சொல்லி முடியாது. ஒரு பண்டத்துக்கு—தமிழ்ப் பெயர் உண்டாக்கி, தமிழில் சொல்லிவிட்டால் போதுமா? அதன் செயல் முறைக்கும், அதன் பாகங்களுக்கும், அதை ஊடுருவி அறிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படைக்கும் சொற்கள் வேண்டாமா?

மற்றும் மருத்துவம், பொறி இயல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளின் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு நமக்குத் தக்க அறிவும், அனுபவமும், செய்முறையும் வேண்டுமானால் நமது தாய்ப் பாலில் (தமிழ் மொழியில்) என்ன இருக்கிறது?

இன்றைக்கும் எந்தத் துறையிலானாலும் நமக்குத் திறமை ஏற்பட வேண்டுமானால் அதற்காக நம் மக்களை மேல் நாடுகளுக்கு அனுப்பி (இங்கிலீஸ்) புட்டிப் பாலில் தானே எண்ணங்கள், செயல்முறைகள், பண்டங்களின் பெயர்கள், பாகங்களின் பெயர்கள், நடைமுறைகளின் பெயர்கள், அடிப்படைத் தத்துவம் முதலியவைகளை அறிந்து வரும்படி செய்யத்தான் நம்மால் முடிகிறதே தவிர, நமது தாய்ப் பால் (தமிழ்) இவற்றில் எதற்காவது பயன்படுகிறதா?

நாம் மொழியால்தானே தமிழனே தவிர-3000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழைப் பேசுகிறோமே ஒழிய—பேச ஆசைப்படுகிறோமே ஒழிய,-வாழ்க்கையில், ஆசாபாசங்களில், வளர்ச்சியில், போக போக்கியங்களில், நாம் தமிழன் அல்லரே! பேச்சில் 'நான் பழந் தமிழன்' என்பதுபோல—நடப்பில், வாழ்வில், பழக்க வழக்கங்களில், 'நான் பழந் தமிழன்' என்று யாராவது சொல்லிக் கொள்ளமுடியுமா?

ஒரு ஊருக்குப் போக நினைப்பவன், 'பஸ்'ஸில் போகவேண்டும்; 'இரயிலி'ல் போகவேண்டும்; 'டெலிபோன்' பேசவேண்டும் என்றால்—'பஸ் ஸ்டேண்டு'க்குப் போக வேண்டும்; 'இரயில்வே ஸ்டேஷனு'க்குப் போகவேண்டும்; 'பப்ளிக் போனு'க்குப் போக வேண்டும் என்றுதான் தமிழ்ப் புலவனும், எந்தத் தமிழ் அனுதாபியும் நினைக்கிறானே ஒழிய இவைகளைச் செய்யவேண்டுமானாலும்—புட்டிப் பால் குடிக்காதவனாலே (இங்கிலீஷ் படிக்காதவனாலே) ஒரு நாளும் செய்யவே முடியாது.

வண்டி என்பதும் 'பஸ்' என்பதும் எப்படி நடைமுறையில் மணிக்கு 6 மைலும் 60 மைலும் போகக்கூடிய வித்தியாசத்தில் இருக்கின்றதோ, அதுபோலவே இந்தச் சாதனை களின் செயல்முறைக்கும் தாய்ப் பாலும் புட்டிப் பாலும் அவ்வளவு தூரம் வித்தியாசத்தில் பயன்படுபவையாய் இருக்கின்றன. இதை மறைத்துப் பேசுவதில் என்ன பயன்? இதற்குச் சமாதானம் சொல்ல குதர்க்க வழியைப் பின்பற்றுவதால் என்ன பயன்?

மேலே குறிப்பிட்டபடி, மொழி என்பது ஒருவர் கருத்தை ஒருவர் அறியப் பயன்படு கின்றதே தவிர, வேறு எதற்குப் பயன்படுவது? இதைத் தவிர, மொழியில் வேறு என்ன இருக்கிறது? இதற்காக—தாய்மொழி என்பதும், தகப்பன் மொழி என்பதும், நாட்டுமொழி என்பதும், முன்னோர் மொழி என்பதும், மொழிப் பற்று என்பதும் ஆகியவைகளை யெல்லாம் எதற்கு மொழிக்குப் பொருத்துவது?

நாம், நமக்கு ஒரு 200 மைல், 300 மைல் தூரத்தில் இருக்கிற கன்னட நாட்டுக்கோ, தெலுங்கு நாட்டுக்கோ போனால், நம் தாய்மொழி நமக்குப் பயன்படுமா? நமது நாட்டை விட்டு நாம் வேறு எந்த வெளிநாடுகளுக்குப் போனாலும் எப்படி நம் தாய்மொழி நமக்குப் பயன்படமாட்டாதோ, அது போலவே இன்றைய 'நமது நாடு' என்பதே இன்று வேறு நாடாகவே ஆகிவிட்டதே!

உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். 100 வருடத்துக்குமுன் ஈரோட்டிலிருந்து செத்துப்போன எனது பாட்டன், மேல் லோகத்தில் இருந்து இன்று தொப்பென்று ஈரோட்டி லேயே குதிப்பதானால்—அவனும் அவன் முன்னோர்களும் பிறந்து வளர்ந்த வீட்டைக் கண்டுபிடிக்க முடியுமா? அவன் தனது சாதி ஜனங்களைக் கண்டுபிடிக்க முடியுமா? மற்ற வாழ்க்கை முறை, வாழ்க்கை வசதிகளைக்கண்டு அனுபவிக்க முடியுமா? எல்லாம் யாரோ ஒருவராலாவது சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியவனாகத்தான் இருப்பான். காரணம் நாடே, மக்களே, வாழ்க்கையே மாறிவிட்டது. ஆகவே, இங்கு மொழி மாறிவிட்டது என்பது மாத்திரமல்லவே; ஊரே மாறிவிட்டது என்பதுதானே பொருள்! அதுபோல்தானே, இன்று நமது நாடே மாறியாகிவிட்டது. அதற்கேற்றவண்ணம் மொழி மாறுதலடைய வேண்டியது தான் நியதி ஆகும்.

நம் நாட்டுப் பார்ப்பனர்கள் முன்னேற்றத்தின் பயன்களை எல்லாம் அனுபவிக்கவும், தாங்கள் முன்னேறவும் இங்கிலீஷ் மொழியை நல்லவண்ணம் பயன்படுத்திக்கொண்டு, மற்ற வர்கள் எங்கு தங்களைப்போலவே முன்னேறிவிடுவார்களோ என்ற பொறாமையினால், கெடுதல் புத்தித் தன்மையால் நமக்கு இந்தியைக் கொண்டுவந்து புகுத்தி, அதை வேண்டாம் என்று சொல்லுவதற்காக நமக்குத் தாய்மொழி, தாய்மொழி என்று பைத்தியம் பிடித்து அதிலேயே அழிந்துவிடுவோமே ஒழிய, இங்கிலீஷ் என்ற உணர்ச்சி ஏற்படாது என்ற 'ஞானதிருஷ்டி'யினால், நமக்கு இந்தத் தாய்மொழிப் பைத்தியம் ஏற்படும்படி செய்துவிட் டார்கள். உதாரணமாக, இந்தி கட்டாயம் என்றதனால்தான் தமிழ்மொழிப் பைத்தியம் நமக்கு ஏற்பட்டது. இது பார்ப்பனர்களின் திறமையேயாகும். யாராவது சொல்லட்டுமே— பார்ப்பனர்களில் யாருக்காவது, எங்காவது தாய்மொழிப் பைத்தியமோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறதா? அவனுக்கு முதலாவதாக தாய்மொழி என்பதாக ஒரு மொழியே கிடையாது என்பது மாத்திரமல்லாமல்—தாய்நாடு என்பதாக ஒரு நாடே கிடையாதே! அவர்கள் மொழிப் பற்று, நாட்டுப் பற்று எல்லாம்—அவர்கள் 'சாதி ஆதிக்கப்பற்று'தானே?

உதாரணமாக, தமிழ்நாட்டுப் பார்ப்பானுக்குத் தாய்மொழிப் பற்றோ, தாய்நாட்டுப் பற்றோ இருந்தால் நாட்டுப் பற்றுக்காக 'ஜேய் ஹிந்த்' என்பானா? 'ஜனகணமன' என்பானா? தாய்மொழிக்காக, 'வந்தே மாதரம்' என்பானா? வணக்கத்துக்கு, 'நமஸ்காரம்' என்பானா? 'பாரத தேசம்' என்பானா? இதெல்லாம் எப்படித் தாய்நாட்டுப் பற்றாகவும், தாய்மொழிப் பற்றாகவும் விளங்குகிறது என்பதை அறிவைக்கொண்டு சிந்தித்துப் பார்க்கட்டுமே!

பார்ப்பான் மாத்திரம் என்ன? நமக்குத்தான் உண்மையான (தாய்ப் பால்) மொழி, நாட்டுப் பற்று இருக்கிறதா? எதையோ பேசி எவனையோ காப்பியடித்து நாம் சுத்த சாம்பிராணிகளாகிவிட்டோம். இதுதான் தாய்ப் பாலின் பலன்!

[நூல்: 'தாய்ப் பால் பைத்தியம்']

7. சமஸ்கிருதம் ஏன்?

இன்று இந் நாட்டில் நடைபெறும் ஆட்சியானது, 'ஜனநாயகக் குடியரசு' என்ற போலிப் பெயரைக் கொண்டதாயினும், உண்மையாக இது பார்ப்பன நாயகம் என்பதையும், பார்ப்பனர்களது நலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் அவர்களால் நடத்தப்பெற்று வருவதாகும் என்பதையும், நான் பல தடவைகள் எடுத்துக்காட்டி வந்திருக்கிறேன்; இன்றும் அதைத்தான் செய்துகொண்டு வருகிறேன். இந்த நாட்டில் உள்ள மற்ற அரசியல் கட்சிகள் என்கின்ற யாவும், 'இந்த அரசாங்கத்தில் நமக்கு ஏதாவது பங்கு கிடைக்கிறதா? நாமும் பொறுக்கித் தின்று வாழ்வதற்கு வகை கிடைக்காதா?' என்கின்ற தன்மையில்தான்—அதனை ஒழிக்கவே போட்டி போடுவதைப்போல் நடித்து மக்களிடம் ஓட்டு வாங்கிக் கூட்டுக் கொள்ளைப் பங்குபெறத் துடித்துக்கொண்டு இருக்கின்றன.

அரசாங்கத்தினரும் இவர்களுக்கும் பங்கு கிடைக்கவே பல ஏற்பாடுகள் செய்து வைத்து ஆசைகாட்டுகிறார்கள். ஆகவே, அவர்களால் (இதில் பங்கு பெறுபவர்களால்) இதைப் 'பார்ப்பன நாயகம்' என்பதை ஒருநாளும் ஒப்புக்கொண்டதாகக் காட்டிக்கொள்ள முடியாது. நெஞ்சார உணர்ந்ததை வெளியே சொன்னால் 'வயிறு கழுவுவது', 'காலட்சேபம் நடத்துவது'—கொள்ளைப்பணம் சேர்ப்பது-பதவி பெறுவது பாதிக்கப்பட்டுவிடுமே என்று கருதி அஞ்சி, பயந்து ஒடுங்கி, பார்ப்பான் பாடுகிற—'ஜனநாயக சங்கீதக் கச்சேரி'க்கு இவர்கள் பக்கமேளம் வாசிப்பவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில், இதை ஜனநாயகம் என்று இவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் இவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது; பதவிக்குப் போட்டிபோடமுடியாது.

இது பகுத்தறிவைப் பயன்படுத்துகிற அறிவாளிகளுக்கு விளங்காமற் போகாது. இதை எவன் புரிந்து கொள்கின்றானோ அவனால்தான் திராவிடர் கழகத்தின் மகத்தான தொண்டின் சக்தி, மகத்துவம், பெருமை என்னவென்று உணர முடியும்.

இன்று நடைபெறும் ஆட்சி பச்சைப் பார்ப்பன ஆட்சி என்றும், சூத்திரனை—பிராமணன் மேல் சாதி-கீழ்சாதிக்காரன் என்பவன் அப்படியே நீடித்து நிலைத்து என்றென்றும் 'சிரஞ்சீவி'யாக இருக்கவேண்டும் என்று பாடுபட்டுவரும் ஆட்சி என்றும் காட்டுவதற்கு இதுவரை பலவித ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்றாலும், இன்றும் ஒரு எடுத்துக்காட்டு காட்டுகிறேன்.

இந்த நாட்டில் பல காலமாக 'சமஸ்கிருதம்' என்கின்ற ஒரு வடமொழியை (ஆரிய மொழியை) ஆரியர் இந் நாட்டில் புகுத்தி, அதற்குத் 'தேவ பாஷை' எனப் பெயரிட்டுக் கடவுள்கள்—தேவர்கள், சமயம், சாத்திரம் ஆகியவைகளுக்கு அதில் சொன்னால்தான் புரியும்—பயன்படும் என்று காட்டி, நமது பரம்பரை இழிவிற்கு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்படுத்திவருகிறார்கள்.

இந்நாடு நம்முடைய நாடு; இந்நாட்டில் நாம் தமிழர்கள் 100-க்கு 97 பேர்கள் வாழ்கிறோம். நமது நாட்டு மொழி தமிழ் மொழி. இந்த நிலையில் நமது மொழிக்கும், நம் கலாச்சாரத்திற்கும், நம் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமில்லாத—நம் நாட்டு மக்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 பேராக உள்ள—இந் நாட்டிற்குப் பிழைக்க வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களுடைய தாய்மொழியாக உள்ளதும், எழுத்தே இல்லாததுமான சமஸ்கிருதம் என்னும் மொழிக்கு இன்று இருந்துவரும் செல்வாக்கு, தமிழுக்கு உண்டா? இவ்வாரியர் புகுதலுக்குப் பின் இருந்திருக்கிறதா? இன்றைய இளைஞர்கள், வாலிபர்கள் பலருக்கு ஒரு முப்பது, நாற்பது வருடங்களுக்கு முந்திய நிலைமை எப்படி? தமிழுக்கு அப்பொழுது இருந்த மரியாதை, அந்தஸ்து என்ன? பார்ப்பன 'மேலோர்' மொழியாக-சமஸ்கிருதத்திற்கு இருந்த அந்தஸ்து என்ன? என்பது பற்றிய பல விஷயங்கள் தெரியுமா? தெரியாது என்றே நினைக்கின்றேன். சுமார் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வேளை தெரியக்கூடும்.

முன்பெல்லாம் ஒரு காலேஜில் ஒரு சமஸ்கிருத புரோஃபசர் வாங்கும் சம்பளத் துக்கும், தமிழ்ப் பண்டிதர் (புரோஃபசர்) வாங்கும் சம்பளத்துக்கும் மலை அளவு வித்தியாசம் இருக்கச் செய்தது. அரசாங்கத்தில் சமஸ்கிருதம் படித்தவனுக்கு அவ்வளவு சலுகை! சமஸ்கிருத புரோஃபசருக்கு 350 ரூபாய் சம்பளம்! தமிழ்ப் பண்டிதருக்கு (புரோஃபசருக்கு) 75 ரூபாய்தான் சம்பளம். சமஸ்கிருத ஆசிரியருக்குப் பெயர்—'புரோஃபசர்'; தமிழ் ஆசிரியருக்குப் பெயர்—ஆசிரியர்.

காலஞ்சென்ற பேராசிரியர் திரு. கா. நவச்சிவாய முதலியார் அவர்கள் பிரசிடென்ஸி காலேஜில் புரோஃபசராக இருந்தபோது வாங்கின சம்பளம் ரூபாய் 81 என்பதாகத்தான் ஞாபகம். அதே நேரத்தில் அங்கு சமஸ்கிருத புரோஃபசராக இருந்த திரு. குப்புசாமி சாஸ்திரி (என்ற ஞாபகம்) என்பவர் வாங்கின சம்பளம் சுமார் ரூ. 300-க்கு மேல்! ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கத்தில் முதல் மந்திரியாக இருந்த திரு. பனகல் இராஜா அவர்களே இதைக் கண்டு மனம் கொதித்து என்னிடத்தில் நேரில் சொல்லி, 'நீங்கள் இதைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதுங்கள்' என்றும் சொன்னார். அவர் சமஸ்கிருதம் படித்தவர்; புலமை வாய்ந்தவர். என்றபோதிலும்கூட அந்தமாதிரி—அந்தஸ்திலும், சம்பளத்திலும் வேறு படுத்திய கொடுமையைக் கண்டித்தார். பிறகு அரசாங்க உத்தரவு போட்டு அதன்மூலம் இவ்வேற்றுமையை ஒழித்தார். அன்று நாங்கள் போட்ட கூப்பாடும், ஜஸ்டிஸ் மந்திரி சபையின் உத்தரவும் இல்லாதிருந்தால் இன்றும் தமிழ்ப் பண்டிதர்கள் இதே நிலைமையில் தான் இருக்கக்கூடும்.

பிறகு, திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1937-ல் இந்தியைக் கொண்டு வந்ததன் உள்நோக்கமே சமஸ்கிருதத்துக்குச் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகக் சரிந்து வருவதைத் தடுத்து அதை உயர்த்தவும், அந்த சமஸ்கிருத எதிர்ப்பு உணர்ச்சியை அழிக் கவுமேயாகும். இதை அவர் வெளிப்படையாகவே பல கூட்டங்களில் பல சொற்பொழிவு களின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். இதை நாம் இப்பொழுது விட்டால் நமது இனத் திற்கும், தன்மானத்திற்கும், உரிமைக்கும் பேராபத்து என்று கருதித்தான், ஆச்சாரியாரின் கட்டாய இந்தித் திணிப்பைப் பலமாக எதிர்த்துப் போராட்டம் துவக்கி சுமார் 2000 பேர் களைச் சிறைக்கு அனுப்பியதோடு, நானும் மூன்று ஆண்டு கடின காவல் தண்டனை பெற்றேன்.

இன்று தமிழ்நாட்டில் 'சமஸ்கிருதம்' என்ற ஒரு மொழி உண்மையிலேயே தேவை தானா? எதற்காவது பயன்படுகிறா? அதற்கும் நமக்கும் கடுகத்தனையாவது, எதி லாவது, ஒற்றுமை—பொருத்தம் எவ்வகையிலாவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழர்களின் வாழ்வில், சமயத்தில், சமுதாயத்தில், அரசியலில், விஞ்ஞானத்தில் மற்றும், ஏதாவது ஒரு காரியத்திற்கு இந்த சமஸ்கிருதம் பயன்படுகிறதா?

மற்றும், தமிழ் மக்கள் தமிழில் எவ்வளவுதான் மேதாவிகளாய் இருந்தாலும், அவர்களால் சமஸ்கிருதத்தைச் சரியானபடி உச்சரிக்க முடிகிறதா? தமிழர் யாராய் இருந்தாலும் சமஸ்கிருதம் உச்சரிப்பது என்றால் அது சிறிதாவது கஷ்டமானதும் சரிவர உச்சரிக்க முடியாததுமானதாகவே இருக்கிறது. தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்குப் பொருந்தாது—உச்சரிப்பதானால் சரியானபடி உச்சரிக்க முடிவதில்லை; மனிதனின் சக்தி (Energy)யை அதிகம் பயன்படுத்தி ஆகவேண்டும். குளிர் நாட்டு மொழி, சமஸ்கிருதம்; ஆகவே, அது நமக்குப் பேச்சு வழக்குக்கு உதவாததாகும்.

ஒரு மொழியின் தேவை—முக்கியத்துவமெல்லாம் அது பயன்படுகின்ற தன்மையைப் பொறுத்ததே ஆகும். அது எவ்வளவு பெரிய 'இலக்கிய காவியங்களையும்', 'தெய்வீகத் தன்மையும்' தன்னிடத்தே கொண்டது என்று சொல்லிக்கொள்ளப்படுவதானாலும்—அது மக்களது அன்றாட வாழ்க்கையில், அவர்களது அறிவை வளப்படுத்தும் தன்மையில் எந்த வகையில் உபயோகப்படும்படி இருக்கிறது என்பதையே அளவுகோலாகக் கொண்டு அளக்கவேண்டும்.

உதாரணமாக, இன்று இங்கிலீஷ் மொழி சிறந்த மொழி என்று பல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றதென்றால், அது 'புராதன மொழி' என்பதோ அல்லது 'தெய்வாம்சம் உள்ள மொழி' என்பதோ அதற்குக் காரணம் அல்ல. அதனுடைய உலக உபயோகமும், அது உலக மக்களது அறிவை, வாழ்வை வளப்படுத்த உதவிய, உதவுகின்ற தன்மையையும் பொறுத்ததேயாகும்.

1. ஒருவன் ஆங்கில மொழியைச் சுலபமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

2. ஆங்கில மொழியை அறிந்தவன் உலகத்தின் எந்தக் கோடிக்கும் சென்று அறிவைப் பெற்றுத் திரும்பிவர இயலும்.

3. ஆங்கில மொழியானது அறிவைத் தூண்டும் உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறதே தவிர, அது சுதந்திரமாகச் சிந்திக்கின்ற தன்மைக்கு விலங்கிட்டதாக ஒரு போதும் கிடையாது.

இம் மாதிரிக் காரணங்களால் அது சிறந்த மொழி என்று கருதப்படுகிறது. வெறும் அழகை மாத்திரம் (Beauty) வைத்துக்கொண்டு இப்படிச் சொல்லாமல், அதன் பயனைக் கணக்கிட்டு (Utility)த்தான் அதனைப் பாராட்டித் தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதற்குரிய யோக்கியதாம்சங்களில் ஏதாவது ஒன்றாவது நம் நாட்டில் உள்ள மொழிகளுக்கு இருக்கிறதா? அதிலும் குறிப்பாக—'தேவ பாஷை'யான சமஸ்கிருதத்துக்கு உண்டா? என்ற கேள்விக்கு இன்றல்ல—பல ஆண்டுகளுக்கு முன்பே, 'இல்லை' என்ற பதில் கிடைத்துவிட்டது. அது, 'பேச்சு வழக்கு இல்லாத' ஒரு பாஷை ஆகும். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள சுமார் 40 கோடி மக்களில் எத்தனை பேர்களுக்கு சமஸ்கிருதம், 'தாய்பாஷை'? எத்தனை பேர்கள் பேசுகிறார்கள்?

பார்ப்பனர்கள் வகுத்த அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 14 மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்று என்று சர்வ ஜாக்கிரதையாக எழுதிவைத்துக் கொண்டு இருக்கின்றனர்; இதுவே பெரிய மோசடி எண்ணத்தின் விளைவு என்பேன். 'சமஸ்கிருதம் பேசுகின்றவர்கள் இந்தியாவிலேயே மொத்தம் 441 பேர்—அதாவது சுமார் 500-க்கும் குறைந்தவர்கள்' என்ற புள்ளி விவரத்தை திரு. பி. ஜி. கேர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஆட்சி மொழிக் கமிஷனின் 'ரிப்போர்ட்' (Official Language Commission Report) தெரிவிக்கிறது. இதுகூடப் புரட்டு என்றுதான் கூறவேண்டும். சமஸ்கிருதத்தை வழக்கில் பேசுகின்றவர்கள் இந்த நாட்டில் யாருமே இல்லை.

இந்திய சர்க்காரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும், 'இந்தியா ஆண்டு வெளியீட்'டில் (India Year Book 1960) உள்ள புள்ளி விவரம்—பக்கம் 45-ல் தரப்பட்டிருப்பதானதைக் கீழே பாருங்கள் :—

மொழி	எண்ணிக்கை இலட்சத்தில்	மொத்தத்தில் சதவிகிதம்
இந்தி உருது இந்துஸ்தானி பஞ்சாபி	1,499	46·3
தெலுங்கு	330	10·2
மராத்தி	270	8·3
தமிழ்	265	8·2
வங்காளி	251	7·8
குஜராத்தி	163	5·0
கன்னடம்	145	4·5
மலையாளம்	134	4·1
ஒரியா	132	4·1
அஸ்ஸாமி	50	1·5
காஷ்மீரி	0·05	—
சமஸ்கிருதம்	0·01	—

இந்தப் புள்ளிவிவரங்களின்படி மிகமிகக் குறைந்த மக்கள்—'மைக்ராஸ்கோபிக் (பூதக்கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய அளவு) மைனாரிட்டியினர்' மொழியாகத் தான்—(நாம் இந்தப் புள்ளிவிவரத்தை ஒப்புக்கொண்டே பேசுவதானாலும் கூட) அது இருக்கிறது.

அப்படி இருந்துங்கூட, மேலே பலநூறு இலட்சக் கணக்கான மக்களால் பேசப்படும் பல மொழிகளுக்குக் கிடைக்காத சலுகை இன்று இதற்குத் தரப்படுகிறதே, காரணம் என்ன?

சமஸ்கிருதமொழி ஒரு செத்தமொழி என்ற உண்மை (Dead language) பல்லோராலும் மறுக்காமல் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். அதை உயிரூட்டுவதற்காகப் பார்ப்பனர்களைக் குடியாட்சித் தலைவர்களாகவும், மந்திரிகளாகவும், நீதிபதிகளாகவும் கொண்டுள்ள இந்த ஆட்சியினர், சமீபகாலமாகச் செய்துவரும் 'பகீரதப்' பிரயத்தனங்களும் அதற்காக மற்ற மக்களிடத்தில் கசக்கிப் பிழிந்துவாங்கும் வரிப் பணத்தைக் கரியாக்குவதையும் பற்றி இந்த நாட்டில் உள்ள 'பொதுமக்கள் தலைவர்களோ', மொழிவல்ல டாக்டர்களோ யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவே இல்லை.

எடுத்துக்காட்டாக, அக்டோபர் 1956-ல் 'சமஸ்கிருதக் கமிஷன்' என்ற ஒன்றை இந்திய சர்க்கார் நியமித்தார்கள். இந்தக் கமிஷனின் நோக்கங்கள் யாவை என்பதையும் அரசாங்கத்தினர் சொன்னார்கள். அதன் நோக்கம் பல்கலைக்கழகங்களிலும், வெளியிலும் சமஸ்கிருதத்தை—சமஸ்கிருதக் கல்வியைப் பரப்புவதும், அதற்கு மீண்டும் புத்துயிரூட்டுவதுமேயாகும். இந்தக் கமிஷன் தனது அறிக்கையை டிசம்பர் மாதம் 1957-ல் சமர்ப்பித்தது. இதன் சிபாரிசுகளை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொண்டு, அதைத் தனது திட்டமாகச் செயல் படுத்திக் கொண்டுவருகிறது. இந்த ஆட்சிக்குப் பெயர் ஜனநாயகமாம்!

நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு கமிஷன் என்றால் அதற்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு—வீண்விரயம் என்று அர்த்தம். இதனால் யாருக்காவது 'காதொடிந்த ஊசியளவாவது' பிரயோசனம் உண்டா? விரயம் செய்யப்பட்ட பணம் அத்தனையும் நம்மிடத்திலிருந்து வரியாகக் கோடிக்கணக்கில்—டில்லி சர்க்காரால்—பகற்கொள்ளையரைப்போல் எடுத்துச் செல்லப்படுவதுதானே? பார்ப்பனரிடம் இருந்து போகும் வரிவிகிதாசாரம் என்ன? நம்மிடம் இருந்துபோகும் வரியின் விகிதாசாரம் என்ன? 'அண்டைவீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே' என்கின்ற தன்மையில், இலட்சக் கணக்கில் இப்படி வாரியிறைத்துப் பதறப் பதற நாசமாக்கிக் கொண்டிருப்பதை—நாம் இன்னமும் சகித்துக்கொண்டுதான் இருக்கிறோம். இவ்வாறுதான் இருக்கவேண்டுமா?

'சமஸ்கிருதக் கமிஷன்' சிபாரிசுப்படி மத்திய சர்க்காரிலேயே 'மத்திய சமஸ்கிருத போர்டு' (Central Sanskrit Board) என்ற ஒரு அமைப்பு 1957 ஆகஸ்ட் முதல்தேதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு, முன்னாள் சுப்ரீம்கோர்ட் சீப்ஜஸ்டிஸ், திரு. பதஞ்சலி சாஸ்திரி தலைவர்; மற்றும் 8 பேர் உறுப்பினர்கள், மூன்று வருடங்களுக்கு இவர்கள் பதவியில் இருப்பார்கள். ('மெயில்' தேதி 1-7-1959)

இந்தப் போர்டினது பிரதான நோக்கம் எல்லாம்—சமஸ்கிருதத்தை இந்தியா முழுவதிலும் எப்படிப் பரப்புவது என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து மத்திய சர்க்காருக்கு அவ்வப்போது ஆலோசனை கூறவேண்டியதுதானாம். சமஸ்கிருதக் கமிஷனின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல இலட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டதாம். (Bhavan's Journal 14-6-1959)

இப்படிப் பல இலட்ச ரூபாயைக் கரியாக்குவதன் மூலம் யாருக்கு என்ன நன்மை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; அரசியல் சட்டத்தில் உள்ள மற்ற 13 மொழிகளுக்குக் காட்டாத சலுகை, சமஸ்கிருதத்திற்கு மட்டும் என்ன தேவை? அப்படிச் சமஸ்கிருத இலக்கியத்திற்கும் மொழிக்கும் ஊக்கம் அளிப்பது என்றால், அதைத் தனிப்பட்டவர்களான பிர்லா, கே. எம். முன்ஷி போன்றவர்களால் அதற்கெனவே ஏற்படுத்தப்பட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டுவருகின்ற—பாரதீய வித்யாபவனம், பாரத இதிகாச சமிதி, சமஸ்கிருத விசுவ பரிஷத் போன்றவைகள் செய்துகொள்ளலாம் அல்லவா? மத்திய சர்க்கார் மாத்திரம் இதற்கு ஏன் இவ்வளவு சலுகை காட்டவேண்டும்? இது மாத்திரம் அல்ல. மத்திய சர்க்காரின் ஆதரவுள்ள, 'சாகித்திய அகடமி'யின் ஆதரவில் சமஸ்கிருதத்தைப் பரப்புவதற்கென்றே ஒரு பத்திரிகையும் (Journal) துவக்கப்பெற்றுச் சில மாதங்களாக நடந்து வருகின்றது.

இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்ன? இவ்வளவு ஆர்வம் செலுத்துவதன் உள்நோக்கம் என்ன? என்று ஆராய்ந்தால்தான் பார்ப்பான் தனது ஆதிக்கத்தையும் ஏகபோக உரிமையையும் பாதுகாப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறான் என்பது விளங்கும்.

சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்; சுரண்டமுடியும்; நம்மைக் கீழ்சாதி மக்களாக ஆக்கமுடியும்; அவன் பிராமணனாக இருக்கமுடியும். அதன் நலிவு, பார்ப்பன ஆதிக்கத்தின் சரிவு என்பதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக—விழிப்போடு காரியம் செய்துவருகிறார்கள்.

இல்லாவிட்டால், உலகம் பூராவும் சுற்றி வருகிற 'சசிவோத்தம' சர். சி. பி. இராமசாமி அய்யர், 'சமஸ்கிருதந்தான் இந்தியாவின் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்' என்று பேசிவருவாரா? அதுமட்டுமா? தமிழைத் தாய்மொழி என்று கூறுகின்ற பார்ப்பனரைக்

காணமுடிவதில்லையே! தப்பித் தவறி எங்காவது ஒன்று இரண்டு சுட்டிக்காட்டுவீர்க ளானால் அது வயிற்றுப்பிழைப்பைக் கருதி அப்படி உதட்டளவில் கூறிய பார்ப்பனனாக இருக்கும், அவ்வளவுதான்.

'சமஸ்கிருத விஸ்வ பரிஷத்'தின் கூட்டம் புதுடெல்லியில் பாபு இராஜேந்திரபிரசாத் தலைமையிலே, அதுவும் இராஷ்டிரபதி பவனத்தில் நடக்கிறது. அதில் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்: 'அரசாங்கத்திடம் சொல்லி–சமஸ்கிருதப் படிப்புக்கு என ஒதுக்கி இருக்கும் தொகையைச் செலவழிக்காவிட்டாலும்கூட, அதை சமஸ்கிருதமல்லாதவற்றிற்குச் செலவிடக் கூடாது; அது சம்பந்தமாகச் சட்டங்கள் செய்யப்படுவதோ, உத்தரவு போடப் படுவதோ தடுக்கப்படவெண்டும்' என்று கூற ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதில் உறுப்பினர் களாக, இந்திய பார்லிமெண்டின் சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார், இன்றைய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி திரு. பி. பி. சின்ஹா போன்ற சிலர் நியமிக்கப்பட்டு உள்ளனர். (பவன்ஸ் ஜர்னல், 23–3–1959)

சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்படும் பணம் செலவாக வழியில்லை என்றால்கூட, வேறு காரியத்திற்குச் செலவிடப் படக்கூடாதாம்! எவ்வளவு பரந்த மனப்பான்மை! இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, பார்ப்பனரின் காலைக் கழுவிய திரு. இராஜேந்திர பிரசாத்—குடியாட்சித் தலைவரின் தலைமையின் கீழாகும். இதைப் போய்—மதச் சார்பற்ற அரசாங்கம் என்றும், பார்ப்பன அரசாங்கம் அல்ல என்றும் சொல்லுவது, மனிதன் உடனே சாகக்கூடிய மாதிரியில் கடிக்கின்ற பாம்புக்கு 'நல்ல பாம்பு' என்று பெயர் வைத்திருப்பது போன்றதல்லவா?

'ரிட்டயரான' ஒவ்வொரு பார்ப்பன ஜட்ஜ், அதிகாரி, தலைவர் எல்லோருக்கும் எப்படி சமஸ்கிருதத்தைப் பரப்புவது என்பதில்தான் கவலை. அது பரவினால், ஆழ வேரூன்றினால்தான் பார்ப்பன சாதித் திமிருக்கு உரம் போட்டதுபோலவாகும் என்பதை நன்றாக உணர்ந்துதான் அவர்கள் இவ்வாறு தீவிரமாக இதில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

நம்முடைய மக்களோ இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், 'நாம் எவனுக்கு வைப்பாட்டி மக்களாக இருந்தால்தான் என்ன? வயிறு நிரம்பவேண்டியதுதானே!' என்று இருக்கிறார்கள்.

நம்முடைய புலவர்கள், அறிஞர்கள் எல்லோரும் இதைப்பற்றியே நினைக்க நேர மில்லாத மாதிரி காட்டிக்கொண்டு, பார்ப்பானின் காலைக் கழுவி 'கதி மோட்சம்' பெறுவதில் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அரசியல்–ஓட்டு–பதவி வேட்டைக்காரர்களோ, 'நாய் விற்ற காசு குலைக்காது', 'கருவாடு விற்ற காசு நாறாது' என்கின்ற தன்மையில்—'எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்று எண்ணித் தமிழ் மக்களது மானத்தைப் பார்ப்பனரிடம் அடகுவைத்துக் கூலிபெற்றுக்கொண்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் இதையெல்லாம் எடுத்துக்கூறிப் பேசித் திரிவதற்கு—அதன் விளைவு களைச் சந்தோஷத்தோடு ஏற்பதற்கு என்னைத் தவிர, எனது கழகத்தைத் தவிர இன்று இந்த நாட்டில் யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்?— எனக்குப் பிறகு; எங்களுக்குப் பிறகு, சிந்தியுங்கள்!

['விடுதலை'–கட்டுரை—15-2-1960]

8. மொழித் தொல்லை

நமது நாட்டில் சாதித் தொல்லை பெருந் தொல்லையாக நீண்டநாளாகவே இருந்து வருகிறது. மதத் தொல்லையும் இருந்து வந்தாலும் அது இந்தியா தேசம் என்று கருதப் படுகிறபோதுதான் ஏதோ காணப்படுகிறதே அல்லாமல் சாதித் தொல்லைபோல், தமிழ் நாட்டைப் பொறுத்து என்று சொல்லப்படுகிற அளவுக்கு இந்தியாவில் மற்ற நாடுகளில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அதன்கேடு, அதாவது சாதித் தொல்லையால் ஏற்படும் கேடு இந்திய தேசிய நலத்தைக்கூட பெரும் அளவிற்குப் பாதித்து வளர்ச்சியைக் கெடுத்துவருகிறது.

இப்போது மொழித் தொல்லையைப்பற்றி எழுதத் தொடங்கியதால் சாதித் தொல்லையை ஒத்தி வைத்துவிட்டு மொழித் தொல்லையைப் பற்றியே சிந்திப்போமாக!

இந்த மொழித் தொல்லை—இந்திய தேசம் முழுவதிலும் பலநாடுகளுக்குச் சேர்ந்து ஒரே ஆட்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கிறதே யல்லாமல் இயற்கை யாக ஏற்பட்ட தொல்லை அல்ல என்றே சொல்லலாம்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் மொழித் தொல்லை இல்லை என்று சொல்லப் படுமானால் அவன் ஒருமொழியை ஆட்சிக்காகப் பொது மொழியாக்கி வைத்துவிட்டான். ஆதலால் மொழித் தொல்லைக்கு இடமில்லாமல் போய்விட்டது.

அந்த மொழி வெள்ளையனுடைய சொந்த மொழியாக இருந்தாலும், இந்திய மக்கள் அதை விரும்பி மேல்விழுந்து கற்கவும், பயன்படுத்திக்கொள்ளவும் போட்டிபோட ஆரம் பித்ததால், அம்மொழியினால் மக்கள் நன்மை அடைந்தார்கள் என்பதைத் தவிர, சிறிதும் தொல்லையடையவில்லை.

வெள்ளையனுக்குப் பிறகும் முன்பு இருந்த பொதுமொழியையே, பொதுமொழியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால் இன்று இந்தியா ஒட்டிலும் (முழுவதும்) காணப் படுகிற பிளவு நிலையும், பேத உணர்ச்சியும் பெரும் அளவுக்கு இல்லாமலிருக்கும் என்றே சொல்லலாம்.

ஆனால், வெள்ளையன் ஆட்சி இந்த நாட்டில் இருக்கும்போதே அன்னிய மொழியை, அதாவது (இந்தியாவில் அந்தந்த நாட்டில் இருந்துவந்த மொழியைத் தவிர்த்துப் பொது மொழியாய் இருந்துவந்த ஆங்கிலத்தின்மீது துவேஷத்தை ஏற்படுத்தி) பெரும்பாலான நாட்டுக்கு அன்னிய மொழியாய் இருந்துவந்த இந்தியைக் கொண்டுவந்து பலாத்காரமாய் புகுத்தியது (ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து) ஆங்கிலத்தினால் பிழைத்து வந்த இந்தப் பார்ப்பனர்களே யாகும்.

பொதுவாக, இந்தியாவில் உள்ள மக்கள் 100-க்கு 99 பேர் மூடநம்பிக்கைக்காரர்க ளாய்,முட்டாள்களாய் இருப்பதற்கே காரணம் அவரவர்கள் மொழியேயாகும் என்பது எனது பலமான கருத்து. நம் மனிதருக்கு இதுவரை படிப்பு இல்லை என்பது ஒரு காரண மானாலும், அவரவர் பேசும் மொழியிலாவது அறிவிற்கான சொற்கள் இருக்கிறதா என்றால் கிடையாது. படிப்பதாக இருந்தாலும் அறிவிற்கான நூல்கள், இலக்கியங்கள், மத சம்பிரதாய ஆதாரங்கள் எதுவுமே கிடையாது! பிறந்த குழந்தை பேசவேண்டுமானாலே தாய் தந்தையர் கற்றுக்கொடுத்துத்தானே ஆகவேண்டும்!

அறிவுக்கு ஏற்ற சொல் இல்லை; மொழி இல்லை; நூல் இல்லை; சமயமில்லை. இப்போது இருப்பவை எல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டவை. இவைகளில் எதையும் மாற்றக்கூடாது என்பது 'குரங்குப் பிடிவாத'மேயாகும். மக்களுக்குள் செலுத்துவதிலும் மூடநம்பிக்கையோடும் 'கற்பு'க்கு இருக்கிற நிபந்தனையோடுமே செலுத்தப்பட்டு வருகிறது! இவற்றுள் சாதி உணர்ச்சி வேறு, மக்களுக்குள் புகுந்து

வக்கீலுக்கு எப்படி புரட்டு, பித்தலாட்டம் அவசியமோ, அதுபோல சாதி உணர்ச்சிக்கும் மக்களுக்கு புரட்சி, பித்தலாட்டம் அவசியமாகி, அவைகள் மூலமே காப்பாற்றப்பட வேண்டியது ஆகிவிடுகிறது.

சர். இராதாகிருஷ்ணன், சர். சி. வி. இராமன் ஆகிய 'படித்த' பெரியோர்களைப் பார்த்தாலே சாதி உணர்ச்சி எவ்வளவு தூரம் பகுத்தறிவைக் கெடுத்துவிடுகிறது என்பது தெரியும்.

இப்படியாக இந்தத் தன்மையில் உள்ள மொழிகளை இந்த முறையில் புகுத்தப்பட்டு வந்தால் மனிதனுக்கு மொழியினால் அறிவு எப்படி வளரமுடியும்?

புதிய உலகில் வாழ்கின்ற, வாழவேண்டிய மக்களுக்கு மொழிப் பைத்தியம் எதற்கு? அதுவும் சாதிபோன்ற, மதம்போன்ற மொழிப் பைத்தியம், மொழிவெறி என்பது எதற்காக இருக்கவேண்டும்?

பார்ப்பனர்கள் தாங்கள் மைனாரிட்டி (Minority) என்கின்ற காரணத்தால் தங்கள் பாதுகாப்புக்கென்று இந்தியாவை, இந்திய யூனியன் ஆட்சியை நமது நாடாகவும், நமது ஆட்சியாகவும் செய்ததை நாம் ஒப்புக்கொண்ட, ஏற்றுக்கொண்ட மாபெரும் முட்டாள்தனத்தால், ஏமாளித் தனத்தால் இந்தியும், மூடநம்பிக்கை மடமையால் இருந்து வரும் தாய்மொழி வெறியும் என்றென்றைக்கும் நாம் அறிவுபெற முடியாமலும் செய்து விட்டது; செய்துவருகிறது. உலகம் உள்ளவரை நாம் இந்த இந்திய யூனியன் என்னும் நரகக் குழியில் இருக்க வேண்டியவர்களா?

போதாக்குறைக்கு, 'பெரியார் கல்லூரியில் படித்தவர்கள்' என்றும், நாங்கள் 'பகுத்தறிவுவாதிகள்' என்றும் சொல்லிக்கொள்ளும் இன்றைய மந்திரிகள் 'தமிழுக்கு, தமிழ்மொழிக்குக் கேடுவந்தால் நாங்கள் பதவியைவிட்டு வெளியேறிவிடுவோம்' என்று சொல்லுகிறார்கள் என்றால், இதில் என்ன பகுத்தறிவு இருக்கிறது? என்ன 'பெரியார்' வாசனை இருக்கிறது? 'உயர்தரப் படிப்புக்களையெல்லாம், கல்லூரியிலும்கூட தமிழிலேயே ஆக்குகிறோம்' என்றால் 'மக்களை முட்டாள்களாக்குகிறோம்' என்றுதானே பொருள்?

இப்படியான நிலை ஏற்பட்டால் இது முக் கொலை என்றுதானே ஆகும்? தமிழ் மொழியும் கெட்டு, பாடவிஷயமும் பொருளும் கெட்டு, ஆங்கிலமும் கெடும்படி ஆவதால் மூன்று கொலை செய்ததாகத்தானே முடியும்? இதுதானா இந்த சிப்பாய்கள் வேலை?

இந்த நாடு முன்னேற வேண்டுமானால், எந்த மொழியிலானாலும் சரி, விஞ்ஞான அறிவு, விஞ்ஞான வாழ்வு இவற்றால்தான் முடியும்!

இந்தியோ, தமிழோ காப்பாற்றப்படவேண்டும் என்ற கூப்பாடு எந்த அடிப்படையில் கிளப்பப்படுகிறது? 'நமது முன்னோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பண்பாடுகளை கலாசாரங்களைப் பாதுகாக்கவேண்டும்' என்பதற்காகவே அல்லாமல் வேறு எதற்காக?

இன்று இந்தியாவிலேயே ஆயிரத்துக்கு ஒரு மனிதன்கூட பேசாத, எங்கும் பேச்சு வழக்கில் இல்லாத, எந்த ஒரு காரியத்திற்கும் பயன்படாத சமஸ்கிருதத்திற்காக பார்ப்பனர் இமாலயப் பிரயத்தனம் செய்து பள்ளிகளில், கல்லூரிகளில் எல்லாம் பாடமாக, பரீட்சையாக வைத்து, பல கோடிக்கணக்கான ரூபாய்களை இவற்றிற்காகச் செலவுசெய்து பாழாக்குவது எதற்காக? பார்ப்பான் 'மேல்சாதி மகன்' என்பதைப் பாதுகாக்க, அதற்கேற்ற கலாசாரத்தையும் பண்புகளையும் நிலைநிறுத்தத்தானே அல்லாமல் வேறு எதற்காக? 'அவன் தம்பி அங்கதன்' என்ற கருத்திற்கு இணங்க தமிழ், இந்தி, வெங்காயம் என்பதும், ஆங்கிலம் விலக்கப்பட வேண்டும் என்பதும் அல்லாமல் வேறு என்ன கருத்து அதில் இருக்கிறது?

நம்மைத் தமிழும் இந்தியும் படிக்கச் செய்துவிட்டு, பார்ப்பானும் பணக்காரனும் ஆங்கிலமும் ஆங்கில கான்வென்டிலும் படித்துப் பதவிக்குப் போய்விடுவார்கள். பிறகு நம் கதி என்ன?

தமிழ்மொழிக் களஞ்சியங்களான 'மாணிக்கவாசகர் காலம்' எழுதிய காலஞ்சென்ற மறைமலை அடிகள், பெரிய புராணத்திற்கு புது உரை எழுதிய திரு. வி. கலியாணசுந்தரம் முதலியோர் வாழ்வில், முக்கியத்துவத்தில் என்ன தரத்தில் இருந்து சென்றார்கள்? 'சைவத்தை நிலைநிறுத்திய' மூடநம்பிக்கைக் களஞ்சியங்களாகத்தானே முடிவெய்தினார்கள்!

காலம் செல்லாத இன்றையத் தமிழ்க் களஞ்சியங்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர்கள் சிதம்பரநாதன் செட்டியார், மு. வரதராசனார், இராஜமாணிக்கனார் மற்றும் ஒரு டஜன் உருப்படிகளின் இன்றைய நிலை என்ன? அவர்களால் அவர்கள் ஓர் அளவுக்கு நன்றாய்ப் பிழைக்கிறார்கள் என்பதைத் தவிர நாட்டிற்கோ, மனித சமுதாயத்திற்கோ என்ன பயன்? அன்னக்காவடி பஞ்சாங்கப் பார்ப்பான் மகன் ஆங்கிலம் படித்து சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஆகிறான்!

பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சிப் போராட்டம் இல்லாதிருந்தால் இந்த மேதாவி டாக்டர்கள் 'மகான்'கள் நிலை இன்று எப்படி இருக்கும்? கிறுக்கன் பாரதிக்கு இருக்கிற மதிப்பில் நூற்றில் ஒன்றுகூட இவர்களில் எவருக்கும் இன்று இல்லையே!

இவர்கள் தரத்தைவிடக் குறைந்த தரமுள்ள ஆங்கிலத்தில் பேர் பெற்றவர்கள், சாதாரண அளவு ஆங்கிலப் படிப்பாளிகள் எவ்வளவு மேல்நிலையில் இருக்கிறார்கள்!

எதிர்காலத்திலாவது இந்த நிலை மாறும் என்று கனவு காண முடியுமா? கல்விக்கு ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் இந்த மந்திரி சபையினால்தான் ஏற்படவேண்டும். இதுவே 'உருண்டைக்கு நீளம், புளிப்புக்கு அவனப்பன்' என்றால் நம் கதி என்ன?

இது (இவர்கள்) ஒழிந்தால் பக்தவத்சலம், வெங்கட்ராமன் அல்லது கக்கன், மன்றாடியார் மந்திரி சபை அல்லது அவர்கள் போன்றோர் மந்திரிசபைதானே ஏற்படும்?

ஆதலால், நான் வேண்டிக்கொள்கிறேன், இன்றைய தினம் ஆங்கிலத்திற்குள்ள எந்த நிலையிலும், எந்த அமைப்பிலும் கை வைக்காதீர்கள் என்று!

5 வருடமானால் உங்களை யாரும் எந்த மந்திரியாய் இருந்தீர்கள் என்று கேட்க மாட்டார்கள். என்ன செய்தீர்கள் என்றுதான் கேட்பார்கள். 'நாங்கள் காலேஜ்களில் ஆங்கிலத்தை ஒழித்தோம்' என்றால் என்ன ஆகும்? இதே கேள்வி 10 வருஷத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், காமராசர் என்ன சொல்லுவார்? நாங்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளந்தோம் என்றா சொல்லுவார்? 'உன் மகனைக் கேள்; உன் மகளைக் கேள்; அவன் உத்தியோகத்தைப் பார்; அவர்கள் பேசுகிற பேச்சைப் பார்' என்பார்!

['விடுதலை'-தலையங்கம்—5-4-1967]

பகுதி V

தலைவர்கள்

1. தலைவர்களுடன் சந்திப்பு

1. காந்தியாரும் பெரியாரும்

1927ஆம் ஆண்டு பெங்களூரில் காந்தியார் விடுதியில் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்களும், தோழர் தேவதாஸ் காந்தியவர்களும் கீழே இருந்து வரவேற்று, காந்தியாரிடம் தனி அனுமதிபெற்று தந்தை பெரியார் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவ்வமயம் அங்கு காந்தியாருக்கும், பெரியாருக்கும் நடந்த சொல்லாடலின் ஒரு பகுதி :—

பெரியார் : இந்துமதம் ஒழிந்தாகவேண்டும்.

காந்தியார் : ஏன் ?

பெரியார் : இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை.

காந்தியார் : இருக்கிறதே !

பெரியார் : இருக்கிறதாகப் பார்ப்பனர் கற்பித்து, அதை மக்கள் மனத்தில் அப்படி நினைக்கும்படி செய்திருக்கிறார்கள்.

காந்தியார் : எல்லா மதங்களும் அப்படித்தாமே ?

பெரியார் : அப்படி அல்ல; மற்ற மதங்களுக்குச் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களும், மதக்காரர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய கொள்கைகளும் உண்டு.

காந்தியார் : இந்துமதத்துக்கு அப்படி ஒன்றும் இல்லையா ?

பெரியார் : என்ன இருக்கிறது ? ஒருவன் பிராமணன், ஒருவன் சூத்திரன், ஒருவன் பஞ்சமன் என்கிற இந்தப் பேத, பிரிவுத் தன்மையல்லாமல் வேறு என்ன பொதுக் கொள்கைகள், பொது ஆதாரங்கள் இருக்கின்றன ? அதுவும், பிராமணன் உயர்ந்தவன் ; சூத்திரன், பஞ்சமன் தாழ்ந்தவன் என்கிற தன்மை நடப்புத் தவிர வேறு என்ன இருக்கிறது?

காந்தியார் : சரி, அந்தக் கொள்கையாவது இருக்கிறதே !

பெரியார் : இருந்தால் நமக்கு இலாபமென்ன ? அதனால் பார்ப்பனர் பெரியசாதி ; நீங்களும் நாங்களும் சின்னசாதி என்பதாக அல்லவா இருந்துவருகிறது ?

காந்தியார் : நீங்கள் சொல்வது தவறு. வருண தர்மத்தில் சின்னசாதி, பெரிய சாதி என்பது இல்லை.

பெரியார் : இது தாங்கள் வாயால் சொல்லலாம் ; காரியத்தில் நடவாது.

காந்தியார் : காரியத்தில் நடத்தலாம்.

பெரியார் : இந்துமதம் உள்ளவரை ஒருவராலும் நடத்தமுடியாது.

காந்தியார் : இந்துமதத்தின் மூலம்தான் செய்யலாம்.

பெரியார் : அப்படியானால் பிராமணன், சூத்திரன் என்பதாக உள்ள மத ஆதாரங்கள் என்ன ஆவது ?

காந்தியார் : நீங்கள்தான், இந்துமதத்துக்கு ஆதாரங்கள் இல்லை என்கிறீர்களே !

பெரியார் : நான் மதமும் இல்லை ; குறிப்பிட்ட ஆதாரமும் இல்லை என்றேன். மதத்தை ஒப்புக்கொண்டால், ஆதாரத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டாமா ?

காந்தியார் : மதத்தை ஒப்புக்கொண்டு, ஆதாரங்களை நாம் ஏற்படுத்தலாமே ?

பெரியார் : அதுதான் முடியாது. மதத்தை ஒப்புக்கொண்டால் அப்புறம் நாம் ஒன்றும் மாற்றமுடியாது.

காந்தியார் : நீங்கள் சொல்லுவது மற்ற மதங்களுக்குச் சரி; இந்துமதத்துக்கு அது பொருந்தாது. மதத்தை ஒப்புக்கொண்டு, மதத்தின் பேரால் நீங்கள் என்ன வேண்டு மானாலும் செய்யலாம்; உங்களை ஆட்சேபிக்க எவனாலும் முடியாது.

பெரியார் : அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அப்படி என்றால் யார் சம்மதிப்பார்கள், அதற்கு என்ன ஆதாரம் என்று சொல்லவேண்டாமா?

காந்தியார் : நீங்கள் சொல்வது எல்லாம் சரி. அதாவது, இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை. உண்மைதான் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குக் குறிப்பிட்ட கொள்கை இல்லை என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆதலால்தான், நாம் ஒரு இந்து மதஸ்தன் என்பதை ஒப்புக்கொண்டு, நம் இஷ்டம்போல் அதற்குக் கொள்கை ஏற்படுத்திக்கொள்ளலாம். இன்று இந்த நாட்டில், ஏன்—உலகத்திலேயே சொல்லுகிறேன்— மக்களை நாம் கருதுகிறபடி நல்வழிக்குக் கொண்டுவர வேண்டுமானால், இந்துமதம் ஒன்றினால்தான் முடியும்; மற்ற மதங்களால் முடியாது. ஏனென்றால், மற்ற மதங் களுக்குச் சரித்திர ஆதாரம், கொள்கை ஆதாரம் உண்டு. அவற்றில் கை வைத்தால் கையை வெட்டிவிடுவார்கள். கிறிஸ்துநாதர் என்ன சொன்னாரோ, அவர் சொன்னதாகச் சொல்லும் பைபிள் என்ன சொல்லுகிறதோ, அந்தப்படிதான் கிறிஸ்தவர்கள் என்பவர்கள் நடந்தாக வேண்டும்.

முகமது நபி அவர்கள் என்ன சொன்னாரோ, குரான் என்ன சொல்லுகிறதோ, அப்படித்தான் முஸ்லிம்கள் என்பவர்கள் நடந்தாக வேண்டும். மாறுபட்டு ஏதாவது ஒரு திருத்தம் சொன்னால், அது மத விரோதமாகிவிடும். சொல்லுகிறவர் மதத்திற்கு வெளியில் வந்துதான் சொல்லவேண்டும். உள்ளே இருந்து சொன்னால் ஒழித்து விடுவார்கள். இதுதான் உண்மையான மதம் என்பவைகளின் தன்மை.

ஆனால், இந்து மதம் என்பது இல்லாத மதம் ஆனதால் அந்த மதத்தின்பேரால் யாரும் மகான்களாக ஆகி எதையும் சொல்லலாம். அப்படியே இந்து மதத்தில் ஏற்பட்ட பல பெரியோர்கள், மகான்கள் பலவற்றைச் சொல்லி இருக்கிறார்கள். ஆதலால், நாமும் அந்த மதத்தை வைத்துக்கொண்டே அனேக சீர்திருத்தங்களை இந்தக்கால மனிதவர்க்கத் தேவைக்கு ஏற்றபடி செய்யலாம்.

பெரியார் : மன்னிக்கவேண்டும்—அதுதான் முடியாது.

காந்தியார் : ஏன்?

பெரியார் : இந்துமதத்தில் உள்ள சுயநலக் கும்பல் அதற்குச் சற்றும் இடம் கொடுக்காது.

காந்தியார் : ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? 'இந்து மதத்தில் தீண்டாமை இல்லை' என்று சொல்லுவதை இந்துமதத்தினர் யாவரும் ஒப்புக்கொள்ளவில்லையா?

பெரியார் : ஒப்புக்கொள்வது என்பது ஒன்று, ஒப்புக்கொண்டபடி நடப்பது என்பது வேறு. ஆகையால், இது காரியத்தில் நடக்காது.

காந்தியார் : நான் காரியத்தில் செய்கிறேன். இந்த 4, 5 வருஷங்களில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணரவில்லையா?

பெரியார் : உணருகிறேன். அடிப்படையில் மாறவில்லை. தங்களுக்கு உள்ள செல்வாக்கைக் கண்டும், தாங்கள் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது என்ற சுயநலத்துக்கு ஆகவும் ஒப்புக்கொண்டதாக நடிக்கிறார்கள். அதைத் தாங்கள் நம்புகிறீர்கள்.

காந்தியார் : (சிரித்துக்கொண்டே) யார் அப்படி நடக்கிறார்கள்?

பெரியார் : பார்ப்பனர்கள் யாவரும்தான்.

காந்தியார் : எல்லாப் பார்ப்பனருமா?

பெரியார் : ஆம். ஏன்? தங்கள்கூட இருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும்தான்.

காந்தியார்: அப்படியானால் உங்களுக்கு ஒரு பார்ப்பனரிடம்கூட நம்பிக்கை இல்லையா?

பெரியார்: நம்பிக்கை ஏற்படமாட்டேன் என்கிறது.

காந்தியார்: இராஜகோபாலாச்சாரியாரிடம்கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

பெரியார்: அவர் நல்லவர்; உண்மையானவர்; தியாகி; சுயநலமில்லாதவர். ஆனால், இவையெல்லாம் அவர்களது வகுப்பு நலனுக்கு, அவர் உண்மையான தொண்டர், நல்ல தியாகி, அத்தொண்டில் சுயநலமில்லாதவர். ஆனால், என் வகுப்பு நலத்தை அவரிடம் ஒப்படைத்துவிடச் சுலபத்தில் எனக்கு மனம் வராது.

காந்தியார்: இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அப்படியானால், உலகத்தில் ஒரு பிராமணன்கூட யோக்கியன் இல்லை என்பது உங்கள் கருத்தா?

பெரியார்: இருக்கலாமோ என்னமோ? எனக்குத் தென்படவில்லை.

காந்தியார்: அப்படிச் சொல்லாதீர். நான் ஒரு பிராமணனைப் பார்த்திருக்கிறேன். சந்தேகமற நான் இன்னும் அவரை நல்ல பிராமணன் என்றே கருதுகிறேன். அவர் யார் தெரியுமா? அவர்தான் கோபால கிருஷ்ண கோகலே.

பெரியார்: அப்பாடா! தங்கள் போன்ற மகாத்மாவினுடைய கண்ணுக்கே இப் பெரிய உலகில் ஒரே ஒரு பிராமணன் தென்பட்டு இருந்தால், எங்களைப்போன்ற சாதாரண பாவிகள் கண்களுக்கு எப்படி உண்மைப் பிராமணன் தென்பட்டிருக்க முடியும்?

காந்தியார்: [சிரித்துக்கொண்டே] உலகம் எப்போதும் 'இன்டெலிஜன்ஷியா' [படித்த கூட்டத்தார்] ஆதிக்கத்தில் இருக்கும். பிராமணர்கள் படித்தவர்கள். அவர்கள் எந்தக் காலத்திலும் ஆதிக்கமுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். ஆதலால், அவர்களைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை. மற்றவர்களும் அந்த நிலைக்கு வரவேண்டும்.

பெரியார்: மற்றமதங்களில் அப்படி இல்லை. இந்துமதத்தில் மாத்திரம்தான், பார்ப்பனரே யாவரும் இண்டலிஜன்சியாவாக—படித்தவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் அனேகமாக 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள் படியாதவர்களாக, ஏமாளிகளாக இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சமுதாயத்தில் ஒரு சாதி மாத்திரமே 'இண்டலிஜன்ஷியாவாக'—ஆதிக்கக்காரர்களாக இருக்கமுடியும் என்றால், அந்தமதம், அந்த சாதி தவிர்த்த மற்ற சாதியாருக்குக் கேடானதல்லவா? ஆதலால்தான், நான் அந்த மதம் பொய் மதம் என்பதோடு, அந்த மதம் மற்றவர்களுக்குக் கேடானது. ஆதலால், ஒழியவேண்டும் என்கிறேன்.

காந்தியார்: உங்கள் கருத்து என்ன? இந்துமதம் ஒழியவேண்டும், பிராமணர்கள் ஒழியவேண்டும் என்பதாக நான் கருதலாமா?

பெரியார்: இந்துமதம், அதாவது இல்லாத-பொய்யான-இந்துமதம் ஒழிந்தால் பிராமணன் இருக்கமாட்டான். இந்து மதம் இருப்பதால் பிராமணன் இருக்கிறான். நானும் தாங்களும் சூத்திரர்களாக இருக்கிறோம். எல்லாவித ஆதிக்கமும் பிராமணர்கள் கையில் இருக்கிறது.

காந்தியார்: அப்படி அல்ல. நான் இப்போது சொல்லுவதை பிராமணர்கள் கேட்கவில்லையா? இந்தச் சமயத்திலேயே நாம் யாவர்களும் சேர்ந்து, நீங்கள் கருதுகிற குறைபாடுகளை இந்து மதத்தின் பேராலேயே நீக்கி விடலாமல்லவா?

பெரியார்: தங்களால் அது முடியாது என்பது எனது தாழ்மையான கருத்து. முடிந்தாலுங் கூடத் தங்களுக்குப் பிறகு மற்றொரு மகான் தோன்றி, முன்பு இருந்துவருவதை இப்போது தாங்கள் மாற்றுவதுபோல், இன்று தாங்கள் செய்ததை அந்த இன்னொரு மகான் மாற்றிவிடுவார்.

காந்தியார் : எப்படி மாற்றக் கூடும்?

பெரியார் : தாங்கள்தான் இந்துமதத்தின் பேரால் எதையும் சொல்லி மக்களை நடக்கச் செய்யலாம் என்று சொன்னீர்களே! அதேபோல் நாளைக்கு வரப்போகும் மகானும் இந்துமதத்தின் பேரால் எதையும் செய்யலாமல்லவா?

காந்தியார் : இனி வரும் காலத்தில் அந்தப்படி மாற்ற எவராலும் சுலபத்தில் முடியாது.

பெரியார் : நான் சொல்லுகிறேன். தாங்கள் மன்னிக்க வேண்டும். இந்துமதத்தை வைத்துக்கொண்டு இன்று தங்களாலேயே நிரந்தரமாக ஒன்றும் செய்துவிட முடியாது. பிராமணர்கள் அவ்வளவு தூரம் விட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள். தங்கள் கருத்து அவர்களுக்கு விரோதமாகச் சற்றுப் பலிதமாகிறது என்று கண்டால் உடனே எதிர்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இதுவரை ஒரு பெரியாராலும் இந்தத் துறையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டதில்லை என்பதோடு, அப்படிப்பட்ட ஒருவரையும் பிராமணர்கள் விட்டுவைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

காந்தியார் : உங்கள் மனத்தில் பிராமணர்மீது ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அதுவே உங்களுக்கு முன்னணியில் நிற்கிறது. இதுவிஷயமாய் இவ்வளவு நேரம் நாமிருவரும் பேசியதில் இதுவரை நாம் எவ்வித ஒற்றுமை முடிவுக்கும் வரவில்லை என்பதாக நான் நினைக்கிறேன். ஆனாலும், இனியும் 2, 3 தடவை சந்திப்போம். பிறகு நாம் என்ன செய்யலாம் என்பதைப்பற்றிச் சிந்திக்கலாம்—என்று சொல்லிக்கொண்டு படுக்கையில் இருந்தபடியே ஒரு கையால் தன் தலையை உருட்டித் தடவினார்.

[1927-ல், பெங்களூரில் காந்தியார்–பெரியார் சந்திப்பு— நூல் : 'இந்து மதமும் காந்தியாரும் பெரியாரும்' (1948)—வள்ளுவர் பதிப்பகம், பவானி]

2. பெரியார்–ஜின்னா–அம்பேத்கார் சந்திப்பு

பம்பாயில் 8-1-1940ஆம் தேதி ஜனாப் ஜின்னா அவர்களையும், டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் பெரியார் கண்டு பேசியது பற்றிய அறிக்கை :

நான் பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முகமதுஅலி ஜின்னாவையும், ஆதித் திராவிட சமூகத் தலைவர் டாக்டர் அம்பேத்காரையும் சந்தித்துச் சில மணி நேரங்கள் அவர்களுடன் மனம்விட்டுத் தாராளமாகச் சம்பாஷித்தேன்.

நாங்கள் காங்கிரஸின் ஆரம்பம் முதல், அரசியல் நிர்வாகத் திறமையின்மை வரை–பல்வேறு விஷயங்கள்பற்றிச் சம்பாஷித்தோம். ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் காங்கிரசைப்பற்றிக் கூறிய அபிப்பிராயங்கள் என் சொந்த அபிப்பிராயத்தை ஒத்தனவாகவே இருந்தன. நாங்கள் மூவரும் காங்கிரஸ் செல்வாக்கினால் ஏற்படும் தீங்குகளை அகற்ற ஒன்றுகூடி முயற்சிப்பதென முடிவு செய்தோம்.

'காங்கிரசின் செயல்களும், அதில் அங்கம் வகிப்பவர்களும், கொள்கைகளும், தீவிர மாறுதலும் காங்கிரஸ் எப்போதும் ஓர் அரசியல் ஸ்தாபனமெனக் கூறமுடியாதென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன' என்று ஜனாப் ஜின்னா கூறினார்.

காங்கிரஸ் சுயநலங்கொண்ட சில தனிப்பட்ட நபர்களடங்கியது. அது பொது மக்களின் உணர்ச்சியில் விளையாடும் முறையில் நடந்துவருகிறது. காங்கிரசாரும் பொது மக்களின் பிரதிநிதிகளெனத் தங்களைக் கூறிக்கொண்டு, அவர்களிடம் கிடைத்ததையெல்லாம் விழுங்கி, தங்கள் குலப்பெருமையை பலப்படுத்திக்கொள்ளுகின்றனர்.



பம்பாயில் 8-1-1940-ல் முகமது அலி ஜின்னா அவர்களுடன், தம் தனி நாடு கொள்கைபற்றிப் பெரியார் ஈ. வெ. ரா. கலந்துரையாடினார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் இடப் பக்கம் அமர்ந்துள்ளவர் டாக்டர் B. R. அம்பேத்கார் அவர்கள்

காங்கிரஸ் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொள்ளும் முறைகள் பற்றியும் விவாதம் நடைபெற்றது. பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரசைத் தட்டிக்கொடுப்பதையே இலாப கரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதுகின்றதென்று நாங்கள் ஏகமனதாக அபிப் பிராயப்பட்டோம். ஏனெனில், வேறெந்த ஸ்தாபனமும் காங்கிரசைப்போன்று இராஜ விஸ்வாசமாகவும் பூரணமாகவும் பிரிட்டிஷ் சர்க்காரின் பாட்டுக்குத் தாளம்போட முடியாது. மேலும், காங்கிரசைப்போல் வேறெந்தக் கட்சியும், பிரிட்டிஷாரின் வசதிக்காகப் பொது மக்களின் உணர்ச்சிகளைக் கருணையற்ற முறையில் புண்படுத்த முற்படாது.

பிரிட்டிஷ் நலன்களுக்குத் தீங்கு செய்யாததும், அவ்வாறு செய்ய நினையாததுமான ஒரே ஒரு கட்சி காங்கிரஸ்தான். ஒருக்கால் பிரிட்டிஷ் சர்க்காரின் கருத்தும் இவ்வாறுதான் இருக்குமெனக் கருதவேண்டியிருக்கிறது. அவ்வாறில்லாவிடில், காங்கிரசிடம் பிரிட்டன் இப்போது நடந்துவரும் தோரணையில் நடந்துவராது.

பிரிட்டிஷார் காங்கிரசின் செல்வாக்கு க்ஷீணமடைந்து வருவதை நன்கறிவர். ஆனால், அவர்கள் 'குரைக்கும் நாய்களுக்கு எலும்பு போடும்' பழைய கொள்கையை இப்போது அனுஷ்டித்து வருகின்றனர்; அயல்நாட்டு ஆதிக்கத்தை உண்மையில் வெறுப்ப வர்களைக் கருணையின்றி ஒழித்துவிடும் கொள்கையும் பிரிட்டிஷார் அனுசரித்து வருகின்றனர்; ஒருவேளை அவர்கள் இதர சில கட்சித் தலைவர்களையும், சமூகத் தினரையும்கூடப் புறக்கணித்துவிட முயற்சிப்பர்.

முஸ்லிம் லீக் மதப் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஒரு ஸ்தாபனமன்று. இஸ்லாத்திற்கு இத்தகைய உதவியொன்றும் தேவை இல்லை. இஸ்லாம் மதம் தன் சுயபலத்தோடு நின்று, தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் வல்லமையுடையது.

ஆனால், அரசியல் முஸ்லிம்களுக்காகப் பேசவும், செயல்கள் புரியவும் முஸ்லிம் லீக் ஒரு ஸ்தாபனத்துக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம்களின் சுயமரியாதைக்குக் கண்கண்ட பூரண சின்னமாகும். அரசியல் முஸ்லிம்களுக்காக முஸ்லிம் அல்லாதார் பேசுவதை, முஸ்லிம் லீக் ஒருபோதும் சகித்துக்கொண்டிராது.

முஸ்லிம் லீக் ஒன்றே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விஷயங்களில் பிரதிநிதித்துவம் வாய்ந்தது. முஸ்லிம் சமூகத்தின் சார்பாகப் பேசவும், முஸ்லிம் சமூக நன்மைகளை உத்தேசித்து எத்தகைய அரசியல் மாற்றத்தையும் அனுமதிக்கவும் முஸ்லிம் லீக் ஒன்றுக்கு மட்டுமே உரிமையுண்டு. இந்த உண்மை உணரப்படவேண்டும்; அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் முஸ்லிம் லீக், தனது அரசியல் கோரிக்கைகளை இதர அரசியல் கட்சிகள்முன்னும் பிரிட்டிஷார்முன்னும் சமர்ப்பிக்கும்.

'முஸ்லிம் லீக் தனது உரிமைகளைக் கோருவதற்காக அன்னியருக்குப் பணிந்து விடாது. நமது சமூகத்தின் 'இஜ்ஜத்' (கண்ணியத்தை)தை அங்கீகரிக்கக்கூடிய அந்தஸ்தையே—முஸ்லிம் லீக் கோருகிறது. இத்தகைய கண்ணியமான 'இஜ்ஜத்'தைக் கொண்டுவரும் எவரையும் வரவேற்க லீக் தயாராயிருக்கிறது' என்று ஜனாப் ஜின்னா கூறினார். இந்தப் பெருந்தன்மை வாய்ந்த, நியாயமான கூற்றை யாராவது மறுக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் சிறுபான்மையினர் நிலைமை சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்களாகவே இருக்கிறோம்.

'எந்த வகையிலாவது காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வர முயற்சிக்குமாயின், அம்முயற்சியொன்றே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டுவதன் அவசியத்தை உணர்த்திவிடும். இப் பாதுகாப்புகளில்லாமல் எந்த அரசியல் முறையும் திருப்திகரமாக நடைபெறாது' என்று ஜனாப் ஜின்னா அபிப்பிராயப்படுகிறார்.

காங்கிரசின் ஆட்சி, உலக மக்களுடையவும், பிரிட்டிஷாருடையவும் கண்களைத் திறந்துவிடும்; அப்போது காங்கிரசின் எதேச்சாதிகாரச் செயல்களிலிருந்து சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டுவதவசியமென்ற உண்மை ஸ்வரூபத்தைக் கண்டுகொள்வர்.

சட்டாய இந்தி சம்பந்தமாக என் கருத்துக்களை ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் ஆதரித்தனர். கட்டாய இந்தித் திட்டம், நமது கலைகளுக்கு விரோதமாக—பிராமண மதத்தையும், கலைகளையும் பலப்படுத்தி விஸ்தரிக்கும் ஒரு குறுகிய நோக்குள்ள திட்டாகுமென்று நான் அபிப்பிராயப்படுவதுபோன்றே, ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் அபிப்பிராயப்பட்டனர். நான் நமது மாகாணத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட விஷயமாகப் பிரஸ்தாபித்தபோது ஜனாப் ஜின்னா அவர்கள், 'நீங்கள் என் பூரண ஆதரவையும் பெறுவீர்கள்' என்று கூறினார். இவ்விஷயத்தில் டாக்டர் அம்பேத்காரும் என் அபிப்பிராயத்தை ஆதரித்தார். இந்தி சம்பந்தமாக எனது கொள்கையை ஜனாப் ஜின்னா அங்கீகரித்ததிலிருந்து, நான் மீண்டும் ஆரம்பிக்கப்போகும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் இம் மாகாண முஸ்லிம்கள் தாராளமாகக் கலந்து உதவி செய்வார்களென நான் நம்புகிறேன். நம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிசபையின் செயல்களைப்பற்றி என்னிடமிருந்து முதல் தரமான தகவல்களைக் கேள்விப்பட்டவுடன் அவ்விரு தலைவர்களும், 'காங்கிரசாட்சியின் கீழ் நீங்கள் மிக சகிப்புத் தன்மையோடு நடந்துகொண்டதைப் பாராட்டுகிறோம். நீங்கள் இதர மாகாணங்களிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்து, அங்குள்ள பொதுமக்களுக்கு இவ்வுண்மையை உணர்த்தவேண்டும்' என்று ஏகோபித்துக் கூறினார்கள்.

இந்நாட்டிலுள்ள எல்லா காங்கிரஸ் எதிர்ப்பு ஸ்தாபனங்களையும் ஒன்றுதிரட்ட, நாங்கள் ஏகமனதாக வேலைசெய்வதென முடிவு செய்தோம். இதனைக் 'கட்டுப்பாடான வேலை'யென அவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஜனாப் ஜின்னாவும், டாக்டர் அம்பேத்காரும் அரசியல் நிர்ணய சபையைப் பலமாக எதிர்க்கின்றனர். மாஜி காங்கிரஸ் மந்திரிசபையால் ஏற்படுத்தப்பட்ட படுமோச வரிகளை ஒழிக்கக் கிளர்ச்சிசெய்யும் விஷயத்தைப்பற்றியும், வேலையற்றிருக்கும் சட்டசபைகளின் அங்கத்தினர்களுக்குச் சம்பளங்கள் அளிக்கப்படக்கூடாதெனக் கிளர்ச்சி செய்யும் விஷயத்தைப்பற்றியும் நாங்கள் மேற்கொண்டு சம்பாஷணை நடத்தினோம். கூடிய சீக்கிரத்தில் இதற்காக ஒரு கூட்டுக் கிளர்ச்சி செய்யத், திட்டம் வகுப்பதென உத்தேசித்துள்ளோம்.

நாம் நியாயமாகக் கருதுபவைகளை எல்லாம் அழித்துக்கொண்டுவரும் விபரீத குணமுள்ள ஸ்தாபனமாகிய காங்கிரசை, கடைசிவரை எதிர்த்துப்போராட—'காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கம்' ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்படுமென அந்த மாபெருந் தலைவர்களிருவரும் வாக்குறுதிகளும், நம்பிக்கையுமளித்தனரென்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்ளுகிறேன். சீக்கிரத்தில் நான் மீண்டும் பம்பாய் செல்வேன்; அதுசமயம் அரசியல் நிலைபற்றி இன்னும் விரிவான விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, ஒரு திட்டம் வகுக்கப்படுமென நம்புகிறேன்.

என் சுற்றுப்பிரயாணம் மிகப் பயன்படத் தக்கதாகவும் பேருதவியாகவுமிருந்தது. இதுபோன்ற சந்தோஷமான சந்திப்பு—நமது நண்பர்கள் எதிர்பார்ப்பதைவிடவும், நம் எதிரிகள் பயப்படுவதைவிடவும் வெகு சீக்கிரத்தில்—ஏற்படுவதற்கு என் நன்றியையும், வந்தனத்தையும் செலுத்திக்கொள்கிறேன்.

[பம்பாயில், 8-1-1940-ல் ஜின்னா அவர்களையும் டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் பெரியார் கண்டு பேசியது பற்றிய அறிக்கை—'குடிஅரசு' 28-1-1940]

1957-ல், திருச்சியில் வினோபா பாவே அவர்களுடன் இராமாயணம் பற்றி
உரையாடி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தம் கருத்தை விளக்கினார்.

அய்ரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய பெரியார்
ஈ. வெ. ரா. அவர்கட்கு 1932 டிசம்பரில் சென்னையில்
நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில்—‘ குடிஅரசு ’ 18-12-1932

3. பெரியார்-விநோபா பாவே

வினோபா பாவே: சாதி ஒழிப்பும் என்னுடைய முக்கியக் கொள்கைகளில் ஒன்று. தேர்தல் சண்டையில் கலந்து கொள்ளாமல் சமுதாயப் பணி செய்வதைப் பாராட்டுகிறேன். நான் இராமாயணம்—எந்த நூலையும் பிரமாதமாகக் கொள்வதில்லை. தவறான கருத்துக்கள் இருந்தாலும் ஒரு சில நல்ல கருத்துக்களும் இருக்கின்றன. தவறான கருத்துக்களை விட்டுவிட்டு நல்ல கருத்துக்களை எடுத்துக்கொள்ளலாம். இராமாயணத்தைச் சாதாரண நூலாகவே நான் கருதுகிறேன். சாதியை ஒழிக்கும் பணியில் உள்ள நீங்கள், இதுபோன்ற நூல்களையும், கடவுள்களையும் ஒழிக்கிறேன் என்கிறீர்கள். நமக்கு முக்கியமான கருத்துக்களை மாத்திரம் வற்புறுத்தி, மற்றவைகளில் தளர்த்திக் கொடுப்பதன் மூலம் அதிகக் கூட்டமான மக்கள் நம் பக்கம் திரும்பக்கூடும். நமது குறிக்கோள் சாதியை ஒழிப்பது. அதை மாத்திரம் வற்புறுத்தினால் போதும். கடவுள்களையும் புராண ஆதாரங்களையும் (சாதி ஒழிய வேண்டுமென்பதற்காக) ஒழிக்கக் கிளம்பினால் புராண ஒழிப்பு, கடவுள் ஒழிப்பு வேலையாகவேதான் இருக்க நேரிடும். புராண, இதிகாசங்களில் உள்ள நல்ல கருத்துக்களை வைத்துக்கொண்டே சாதியை ஒழிக்கலாம்.

பெரியார்: இராமாயணம் நீதிநூல் என்பதற்கு அதில் ஒன்றும் இல்லை; நீதி கற்பிக்கக்கூடிய தன்மையில் அதில் ஒன்றுமே கிடையாது; நல்ல கருத்துக்கள் இருப்பதாக ஒன்றும் இல்லை. இரண்டொருவருக்கு வேண்டுமானால் நல்ல கருத்துக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளமுடியலாம். நாம் பொதுமக்கள் என்பவர்களை மனத்தில் வைத்துப் பார்க்கவேண்டும். விஷத்தின்மீது சர்க்கரை பூசிக்கொடுத்தால் எத்தனை பேருக்கு—சர்க்கரையை மட்டும் சாப்பிட்டுவிட்டு விஷத்தைத் துப்பிவிடக்கூடிய சக்தி இருக்கும்? மக்களுக்கு நீதிநூல் தேவையென்றால், உங்களைப் போன்றவர்கள் புதிதாக எழுதித் தரலாம். அந்த இதிகாசங்களை எழுதியவர்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தானே? அதுவும் அந்தக் காலத்து மனிதர்கள்!

சாதியொழிய வேண்டுமானால், அதற்கு ஆதாரமாக இருக்கின்ற இராமாயணம், பாரதம், மனு போன்ற புராண இதிகாசங்கள், கடவுள்கள் எல்லாம் ஒழிந்தே தீரவேண்டும். ஒரே ஆண்டவன் என்பவன்கூட சாதிக்கு ஆதாரமாயிருந்தால் ஒழிந்தே தீரவேண்டும். இராமாயணம், பாரதம் போன்ற புராணங்களிலும், இராமன், கிருஷ்ணன் போன்ற கடவுள்களிடத்திலும் மற்றும், பதிவிரதை என்று சொல்லப்படுகிறவர்களிடத்திலும் கொஞ்சங்கூட யோக்கியத் தன்மையோ, நாணயமோ காணப்படவில்லை. அதைப் படிக்கின்ற மக்களுக்கும் அதிலிருந்து நாணயமோ, ஒழுக்கமோ வந்ததாகவும் இல்லை. நான் கடவுள் என்று ஒன்று உண்டு என்று புரிந்து கொள்ளவும், அந்த ஒரு கடவுளை நம்பவும் முடியாவிட்டாலும், ஒரு கடவுள் உண்டு என்கிறவர்களிடம்—இல்லையென்று மறுத்துப்பேச வரவில்லை. ஆனால், சாதிக்கு ஆதாரமாக இருக்கிற மனுதர்மம் போன்ற சாஸ்திரங்களையும், சாதிக்கு ஆதாரமாக இருக்கிற இதிகாசங்களையும், சாதிக்கு ஆதாரமாயிருக்கிற இராமன், கிருஷ்ணன், பிரம்மா, விஷ்ணு போன்ற கடவுள்களையும் வைத்துக்கொண்டு சாதியை ஒழிக்க முடியாது. நான் வால்மீகி, கம்பராமாயணம் போன்ற நூல்களைப் படித்தே கூறுகிறேன்.

[இராமாயணத்திலுள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டியபோது]

வினோபா: நான் துளசி இராமாயணமும், மராட்டி இராமாயணமுந்தான் படித்துள்ளேன். அவைகளில் அப்படி இல்லை.

பெரியார்: நீங்கள் ஏழெட்டு மாதங்களாகத் தமிழ்நாட்டில், எனது சமுதாய மக்களுக்கு, சாதியொழிய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிவருவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். இதைப் பத்திரிகைக்காரர்கள் போடுவதேயில்லை; சாதியொழிய வேண்டுமென்ற கருத்தை மறைக்கவே பார்க்கிறார்கள்; அவரவர்களுக்கு வேண்டிய சங்கதிகளை

மாத்திரம் போடுகிறார்கள். நான்தான் எனது பத்திரிகையில் நீங்கள் சொல்லும்—'சாதி யொழிய வேண்டும்' என்ற கருத்துக்களைப் போடுகிறேன்.

வினோபா: தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செய்யவேண்டும். அதிக நிலதானம் கிடைக்க உதவி செய்யவேண்டும்.

பெரியார்: என்னால் கூடுமான உதவிகளைச் செய்கிறேன். நான் கொண்டுள்ள வேலை அதாவது, சாதி ஒழிப்பு முக்கியமானது. நான் அரசியல் பற்றிக் கவலைகொள் ளாதவன். அரசியலில் ஈடுபடமுடியுமானால் நீங்கள் செய்துவரும் வேலையையும், இனி செய்யப்போகும் வேலையையும் சேர்த்து, சட்டத்தின் மூலம் ஒரே வரியில் உத்தரவு போட்டு விடலாம். ஆனால், சாதி ஒழிப்பு வேலை அவ்வளவு இலேசானதல்ல. அதனால்தான், அந்த முக்கியமான வேலையை நான் மேற்கொண்டு செய்கிறேன். நான் அதையே எல்லா வற்றையும்விட முக்கியமானதாகக் கருதுகிறேன்.

(திருச்சி மாவட்டத்தில் கால்நடையாகச் சுற்றுப்பயணம் செய்துவரும் ஆச்சார்யா வினோபா பாவே அவர்களும், பெரியார் அவர்களும் இன்று (19-1-1957) காலை 10-45 மணிக்கு திருச்சி தேசியக் கல்லூரியில் சந்தித்தார்கள். சுமார் 2 மணி நேரம் உரையாடினார்கள்.)

['விடுதலை' 20-1-1957]

4. அமைச்சர் எஸ். சந்திரசேகர் (வானொலிப் பேட்டி)

டாக்டர் சந்திரசேகர்: குடும்பநலத்திட்டப் பிரச்சாரப் பணியில் தாங்கள் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறீர்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால்—1920 லேயே குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டு இருந்தீர்கள். இந்தப் புத்தகத்தை எழுத வேண்டும் என்ற கருத்து தங்களுக்கு எப்படித் தோன்றியது என்று கூறினால் பரவாயில்லை.

பெரியார்: எனக்கு சின்ன வயசிலேயே ரொம்ப செல்லப்பிள்ளை மாதிரி எல்லாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. அதிலே, எனக்குக் கொஞ்சம் ரொம்ப வேகமான கருத்துக்களெல்லாம் தோணும். 'அது தப்பு, இது தப்பு'ன்னு கருத்துக் களெல்லாம் எனக்குத் தோணும். அதை நான் சாதாரணமா, தைரியமா வெளியிடுவேன். அந்த முறையிலே மதசம்பந்தமா, இலக்கிய சம்பந்தமா—அதது சம்பந்தப்பட்டவங்க கிட்டே வாதாடி, வாதாடி ஒரு மாதிரி—பொதுவா சொன்னா, ஒரு வாயாடி என்ற நிலைமைக்குப் பேரு வர்றபடி வாதாடிட்டு இருந்தேன். அதே போக்குலேதான் ஜனங்களண்டை பழகும்போது இந்தப் பிள்ளைகுட்டி அதிகமாக பெத்துகிட்டு இருக்கிற வங்க படற கஷ்டம், நம்மகிட்ட வந்து முறையிடுகிற முறை, புருஷன்—பெண்சாதி சண்டை போட்டுகிட்டா வர்ற கலவரம் இதுகளையெல்லாம் நான் 'சீரியஸா' (Serious) கவனிக்கிறபோது, இந்தப் புள்ளைங்களாலே பெரிய தொல்லை படறாங்க, இயற்கையா இருக்கிற தொல்லை தவிர, புள்ளை குட்டிகளால் வேற தொல்லை படறாங்கண்ணு கண்டேன்.

வேடிக்கையா சொல்றேன். 'குடி அரசு' ஆபீசிற்கு எதிர்த்தாப்பலே ஒரு வீடு. அவங்க நம்ம சாதியில்லே. எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு மாதிரியான முறை. அண்ணன்—தம்பி, மாமன்—மச்சான்னு கூப்பிடுவோம். அந்த முறையிலே எதிர்த்த வீட்டுக்காரன் ஒருவன் அவன் எனக்கு மாப்பிள்ளையா வேணும். அவன் மனைவிக்கு நான் அண்ணனாவேணும். இந்தமாதிரி இருக்கும். அவனுக்கு நாலு குழந்தை; கைக்குழந்தை ஒன்னு. அந்த நிலையில் அவன் கோவம் வந்து பொண்டாட்டியைப் போட்டு அடிச்சுப்புட்டான்.

அப்ப நான் இங்கிருந்து சிபாரிசுக்குப்போய், 'என்னடா! இந்த மாதிரி பண்றியே, கொள்றியே? குழந்தை குட்டிகளுக்கு இந்தமாதிரி பண்ணுறியே?' அப்படின்னு ரொம்பக் கடினமா கேட்டதுக்கு, 'இதைப் பத்தியெல்லாம் நீ கேக்காதே'ங்குற அளவுக்கு வந்துட்டான், அந்தக் கோபத்தினாலே. அந்தம்மா அழுதுபுட்டு சொல்றபோது ஒரு வார்த்தை சொன்னா—'இந்த மாதிரி இவருகிட்டே இன்றைக்கு நேத்திக்கல்ல—நான் படற அவஸ்தை; கொஞ்ச நாளாகவே ஒதை தின்னு தின்னு எனக்கு ரொம்ப வேதனையா போச்சு; அதனாலே போயி எங்காவது ஆத்தில்—குளத்தில் இறங்கிடலாம்னு முடிவு; இதுகளை வச்சி கிட்டு நான் என்ன பண்ணட்டும்? இல்லாட்டா இதுகளையும் தள்ளிப் போட்டுல்ல நான் விழவேணும். இந்தக் கொலைக்கு நான் ஏன் பாகப்படணும். இந்த ஆள் கிட்டே உதை தின்னுகிட்டிருக்கேன். இல்லாட்டா நான் போய் விழுந்திடுவேன் ஆத்திலே' அப்படின்னு அவ சொன்னா.

வாய்துடுக்கு முறையிலே, 'சரி ஏன் இப்படி பெத்தே நீ? உன்னை யாரு இவ்வளவு பெத்துக்கச் சொன்னா? பெத்துக்கிட்டியே, வேதனைப்படறியே' அப்படின்னேன்.

அப்ப, அந்த அம்மா பேச்சோட பேச்சா, 'அது நம்ம செயலில்லே, அது பகவான் செயல் அப்படி பண்ணிட்டது. நான் என்ன பண்ணட்டும்?' அப்படின்னு சொன்னா. அப்பதான் அந்த பகவான் செயலைக் கண்டிச்சுப் போட்டு, நான் அன்னிக்கே வந்து எழுதி யிருக்கிறேன். இந்த மாதிரி குழந்தைகளைப் பெத்துகிட்டு சங்கடப்படறாங்க. இப்படி கிணத்துலே விழுந்துட துணிஞ்ச பொம்பளைகூட, 'இந்தப் புள்ளைகளை வெச்சுகிட்டு எப்படி நான் விழுகிறது? இதையும் போட்டுட்டு விழுறதுன்னா புள்ளையைக் கொல்ற துன்னா, எனக்கு இதா இருக்குதே'ன்னு விசனப்படறாண்ணு வேடிக்கையா அப்ப வந்தது தான்.

வந்ததுக் கப்புறம், நாம 'சீரியாசா' எழுதிட்டு இருந்தமா, 'பிரிட்டிஷ் நியூசிலே' வந்தது இந்த சங்கதி—இங்கிலீஷ் பத்திரிகையிலே; அதை எடுத்துத்தான் எழுதிகிட்டி ருக்கேன். நம்ம கருத்துக்குச் சரியா இருந்தது; அப்ப எங்கிட்ட இருந்த கிளார்க் ஒருத்தர் கொஞ்சம் இங்கிலீஷ் தெரிஞ்சவர். அவருகிட்டே சொன்னேன்—இதை மொழி பெயர்த்திட லாம்னு. அதைத்தான் முதல் முதல்லே செய்தோம். அப்படியே எண்ணம் வளர்ந்து போச்சு.

எனக்கு முதல் மனைவியாயிருந்த நாகம்மை கல்யாணமாகிக் கொஞ்ச வருஷம் ஆன உடனே ஒரு குழந்தை பொறந்து செத்துப்போச்சு. இந்தக் குழந்தையை நான் பார்க்கவு மில்லை; அய்ந்து மாதம் ஆச்சு; அய்ந்து மாசமா நான் அதைப் பார்க்கக்கூட இல்லை. எனக்கு அவ்வளவுதான். மறுபடியும் அந்தம்மாகிட்டே சொன்னேன்.

'எனக்குக் குழந்தை இல்லேன்ற பேச்சே நாம வைச்சுக்கக் கூடாது இங்கே; அப்படி—இப்படின்னு அந்தம்மா கெஞ்சுவாங்க, 'ஒரு புள்ளே மாத்திரம் இருக்கட்டும்; வேறு இல்லாட்டிப் போகட்டும்'னு. நம்ம குடும்பத்துக்கு ஒண்ணு என்னா—நூறு புள்ளே நாம எடுத்து வளர்த்திடலாம்னு சொன்னேன். அதனாலே ரெண்டு, மூன்று பிள்ளை வளர்த்தேன். அதுக்கு நான் ரொம்ப உபதேசம் பண்ணினேன், 'நம்மளுக்குக் குழந்தை வேண்டாம்'னு. அப்படியே அந்த எண்ணம் வளர்ந்தது. அந்த—குழந்தை பெக்கிறது ஒரு 'நியூசன்சு'ன்னு எனக்குப்பட்டது. என்னை இராமேஸ்வரத்துக்கெல்லாம் கூட்டிக் கிட்டுத்தான் வந்தாங்க—குழந்தைக்காக; ஆமா. எங்க ஊரிலேகூட கணபதி, அரசமரம்—வேப்பமரம் கல்யாணம் இதெல்லாம் பண்ணியிருக்காங்க. எனக்கு புள்ளே வேண்டாம்னது அப்படியே பழகிப்போச்சு. அது என்னவோ 'பிராக்டிகலா' (Practical) ரொம்ப வளர்ந்து போச்சு அந்த எண்ணம்.

அமைச்சர்: அந்தக் காலத்திலே குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்னமாவது எதிர்ப்பு இருந்திருக்கும், இல்லையா?

பெரியார் : எங்க ஜனங்க சொல்வாங்க—'அவனுக்குப் புள்ளையில்லே; அதனாலே அவன் எல்லாத்தக்கும் வேணாம், வேணாம்னு சொல்றான்—அவன் 'ரிசி'னு—அவ்வளவு தான் சொன்னாங்க. கலியாணம் ஆனவங்களையெல்லாம் நான் கேலிபண்ணுவேன்; புள்ளைதாச்சி ஆனவங்களையெல்லாம் 'அதுக்குள்ளவா ஆயிடுச்சு? அப்படி இப்படின்னு' பரிகாசம் பண்ணுவேன். அப்ப, சின்னவங்க எதிர்த்துப் பேசமாட்டாங்க; பெரியவங்களா இருக்கிறவங்க 'அவன் வரடன், வரடன்'னு சொல்லுவாங்க, அதுக்கு.

அமைச்சர் : சர்க்காருடைய 'புரோகிராம்' இருக்கிறது, பாருங்க. இந்த 'பேமிலி பிளானிங்', உலகத்திலேயே பெரிய 'புரோகிராம்' இதுதான். பணம் செலவு பண்றதி லேயோ, ஆபீசர்சிலேயோ, வேலை பண்றதிலையோ ஒரு 130 நாடுகளை 'சம்பேர்' பண்ணி னாக்கா—நம்முடைய புரோகிராம்—டெல்லி கவர்ன்மெண்ட் புரோகிராம்தான் பெரிய புரோகிராம். அதுக்கு உங்க 'ஒப்பீனியன்' வேணும். உங்க அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன்?

பெரியார் : ரொம்ப நல்ல காரியம்தான்—இந்தமாதிரி அரசாங்கம் ஆரம்பித்திருக் கிறது. சமுதாயத்திலேயே ஒரு பெரிய, ஒரு நல்ல காரியம். ரொம்ப ஜனங்களுக்கு தொந்தரவு இல்லாம, மனசுக்கு சந்தோஷமா வாழ்வு கொடுக்கக்கூடிய ஒரு காரியம்தான். அதுலே இன்னொன்று எனக்கு என்ன தோணுதுன்னா—இந்தப் பெண்களை—இதிலே பிரச்சாரம் பண்றதுக்கு ரொம்பப் பக்குவப்படுத்திச் சொன்னா நல்லா இருக்கும் அப்படின்னு. பொம்பளைக்கு ரொம்ப ஆசை புள்ளைபெக்க வேணும்னு. ஆம்பிளைக்கு ஒரு அளவிலிருந்தாலும் பொம்பளைக்குக் கூடுதலா இருக்கும் அது. அவங்களண்டை போயி நெருங்கி, அந்த விஷயங்களை எடுத்துச் சொல்றாப்பிலே கொஞ்சம் நல்ல பொம்பிளைங்களைவிட்டு அதிகமா பழகிச் சொன்னால், கொஞ்சம் அவங்க கேப்பாங்கன்னு நினைக்கிறேன்.

அமைச்சர் : நாங்க வந்து பெண்களுக்கு சொல்றதுக்கு பொம்பிளைங்களைத்தான் 'டிரெயின்' பண்ணி 'பேமிலி பிளானிங்' ஆபீசர்சுன்னு அனுப்புகிறோம்—அவங்க கிராமத்துக்கும், டவுனுக்கும் போயி சொல்லுவாங்க. ஆண்களை அனுப்பறதில்லை.

பெரியார் : அதோடு கூடவே இந்த 'ரிலிஜியஸ் பெயித்' (மத நம்பிக்கை) இல்லாத பொம்பளைங்களையே அனுப்பணும். ஆம்பளைகளைப் போட்டாலும் கூடுமான வரைக்கும் அவனை பகுத்தறிவுவாதியாகவே போடணும். பெண்ணா போட்டாலும், ஆம்பிளையா போட்டாலும்—மதநம்பிக்கையில்லாதவங்களா பார்த்துப் போடணும்.

அமைச்சர் : இவ்வளவு பெரிய புரோகிராமிலே, மதநம்பிக்கையில்லாத 'ஆபீசரை' கண்டுபிடிக்கிறது கொஞ்சம் கஷ்டம் எங்களுக்கு; ரெண்டாவது, ஒண்ணு பண்றேன் இப்போ. இப்போ ஆண்கள், பெண்கள் கலியாணம் பண்றதுக்கு ஒரு வயது 'லிமிட்' ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஏஜ் ஆப் கன்சென்ட்' (Age of consent)னு சொல்றோம். அதுக்குவந்து ஆண்களுக்கு 18; பெண்களுக்கு 15. இது வந்து 1956-லே, இந்த, 'ஹிண்டு கோட்பில்' ரெய்ஸ் பண்ணினது. எனக்கு அது திருப்தியா இல்லை. ஆண் களுக்கு 21, பெண்களுக்கு அட்லீஸ்டு 18ஆவது இருக்கணும்னு பண்ணணும். அதுக்கு ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு எழுதுகிறோம். 17 ஸ்டேட் கவர்ன்மெண்டும் ஒத்துக்கணும். ஒத்துக்கொண்டால்தான் எங்க மத்திய சர்க்காரிலே சட்டம் உண்டாக்க முடியும். அதுக்கு ரொம்ப வாதம் நடக்குது. 'யெஸ்', 'நோ'; 'யெஸ்', நோ' சொல்லிக்கொண்டே யிருக்காங்க, 'வேண்டாம்' 'இருக்கணும்'னு. உங்க அபிப்பிராயம் என்னனு கேக்கறேன்.

பெரியார் : அய்யா, சொல்றது ரொம்ப சரி. 18 வயதுகூட பத்தாது; பெண்களுக்கு 20 வயசு இருந்தாதான், அது ஏதாவது பயன்படும். 18 வயசுன்னா ஏதோ ஜனப் பெருக்கத்துலே கொஞ்சம் குறையுதுன்னு சொல்றீங்க.

அமைச்சர்: இப்ப இருக்கிறதுலே 5 வயசு கூடுது. இப்ப 15 இருக்குது. நான் 18 ஆக ஆக்கணும்னு பார்க்கிறேன். உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இந்தி பேசும் நாடுகளிலெல்லாம் 12, 13, 14 வயதில் கலியாணம் பண்ணிடறாங்க.

பெரியார்: அதெல்லாம் பெண்களை ரொம்ப அடக்கவேணும்கிறதுக்காக ஏற்பட்ட 'ஏஜ' (வயது) தவிர. அது வேறே எந்த ஒரு காரணத்தையும் கொண்டு அது ஏற்படலே. 20 வைத்தோமானால் ரெண்டு காரியம் 'சால்வ்' (Solve) ஆகும். அவுங்களா பார்த்து ஒரு சுதந்திரமான புருஷனைப் பார்த்துக்குவாங்க.

அமைச்சர்: பெண் வந்து 20 வயசாச்சுன்னா, படிச்சுட்டு அவளா பார்த்து இஷ்டப் பட்டு கலியாணம் செய்துக்கிடுவா. இப்ப வந்து அப்பா—அம்மா யாராவது தேடிப்புடிச்சுக் கலியாணம் பண்றாங்க.

பெரியார்: அந்தமாதிரி தேடிப்பிடிப்பாங்க; பெண்களுடைய வாழ்க்கைத்தரம் கொஞ்சம் உயரும். 20 வயசு வரைக்கும் அவங்க படிச்சாங்கன்னா—வேலைக்கு லாயக்கு ஆகறாப்பலே ஒரு படிப்பு அவங்களுக்கு வந்து சேரும். இந்த 18-லே கொண்டு போயிட்டா எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணியும், பெயில் ஆகியும் இருக்கிற நிலைமை வரும். அவங்க, புருஷனுக்கு என்னமா பாடுபட முடியும்? அவங்களுக்கு தொழில்தான் என்ன வரும்? எனக் கென்னமோ, எவ்வளவு நாளைக்குக் கலியாணத்தைத் தள்ளிப்போடறமோ அவ்வளவும் நல்லதுதான்; பின்னாலேயும் ரொம்ப உபயோகப்படுவாங்க அவங்க. இப்ப என்ன பண்றது? 18-லியே கலியாணம் பண்ணினா 19-லியே குடும்பப் பொம்பிளையா போயிடறா; குடும்பத்தைக் காப்பாத்தற வேலையே அவளுக்குச் சரியாப் போகுது; 20-லே ரெண்டு புள்ளையாகிப்போகுது. புருஷனுக்கும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குத்தான் வேலை வேண்டியிருக்குது. சம்பாதனையும் குடும்பத்தைக் காப்பாத்தறதுக்குத்தான். இதுக்குத் தகுந்தபடி தன்னுடைய ஒழுக்கத்தையும் கெடுத்துக்கிறான் அவன். அவன் 'கேரக்டரும்' (Character) கெட்டுப்போகுது. அதெல்லாம் இல்லாம இருக்கணும்னா ஒரு 20, 22 வயதாவது இருக்கணும்.

அமைச்சர்: அப்புறம் முன்னே என்ன பண்ணினோம்? ஒரு 4 வருஷத்துக்கு முன்னே ஒரு தம்பதிகளுக்கு 2, 3, 4 குழந்தை பெத்துக்கலாம்; அவங்களுக்குப் பண மிருந்தால், சவுகரியமிருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி கொடுத்து காப்பாத்த முடியுமானா, 5, 6 குழந்தைகூட பெத்துக்கலாம்னு ஒரு தடவை சொன்னோம்.

அப்புறம் சொன்னோம்; அதெல்லாம் முடியாது; ரெண்டு குழந்தைங்க, இல்லேன்னா மூணு. இப்ப நான் கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தா அதுவும் கொஞ்சம் சாஸ்தியா போச்சு.

அப்புறம் நாங்க சொன்னோம்—ஒரு ரெண்டு குழந்தை போதும்னு சொல்றோம். அதிலே என்ன கஷ்டம்னா, இப்போ ஒரு ஆண்—ஒரு பெண் குழந்தை பொறந்துட்டுதானா கஷ்டமில்லே. ரெண்டும் பெண்ணா போயிட்டதுன்னா இன்னும் ஒன்றுக்கு 'டிரை' (Try) பண்றாரு ஆளு, ஆண் குழந்தை வேணும்னு. அதுக்கு எப்படி அவங்களை 'எஜுகேட்' பண்றதுன்னு எனக்குத் தெரியலே. பெண் குழந்தை பொறந்தாலும் அதோடு நிறுத்திக் கலாம்; ஒண்ணும் கஷ்டமில்லே. பெண்ணும் ஆணும் ஒண்ணுன்னு சொல்றதுக்கு நம்மாலே முடியலே; நான் சொல்றது என்னன்னா, 2 குழந்தை இருந்தா போதும். 2 ஆண் குழந்தை இருந்தாலும் நிறுத்திடணும்னு சொல்லணும். அதை எப்படி சொல்றது மக்களுக்கு?

பெரியார்: நான் சொல்றேன். அந்த எண்ணம் மக்கள் மனசிலேருந்து மாற வேணுமானா 50 சதவீதம் பெண்களுக்கு உத்தியோகம்; 50 சதவீதம் ஆம்பிளைக்கு உத்தியோகம். ஒரு ஆபீஸ்லே 100-பேர் உத்தியோகஸ்தர் இருந்தா—50 பெண் இருக்காங்

களான்னு கேக்கணும்; இல்லாவிட்டா அதை போடுன்னு சொல்லணும். அப்ப பெத்தவங்களுக்கு—ஆண் இருந்தாலும் ஒண்ணு, பெண் இருந்தாலும் ஒண்ணுன்னு ஆகும். இப்ப ஆம்பிளையெல்லாம் உத்தியோகம் பாக்கறாங்க; பொம்பளைங்க எல்லாம் வீட்லே இருக்காங்க. அதனாலேயே நமக்கு ஆம்பிளைப்புள்ளை ஒண்ணு வேணும்னு தோணுது; அவன் சம்பாதிக்கிறான்னு தோணுது. அதனாலே நாம் 'ஈக்வலைஸ்' பண்ணிட்டா உத்தியோகத்தை ஆளுக்குப் பாதின்னு?

அமைச்சர்: அப்போ, ஆம்பிளைங்க கொஞ்சம் 'அப்போஸ்' பண்ணுவாங்களே, எதிர்ப்பாங்களே?

பெரியார்: ஏன்? எப்படி 'அப்போஸ்' பண்ணுவாங்க? எப்படி நீங்கதான் அப்போஸ் பண்ணமுடியும்? உங்க மகளுக்கும், உங்க தங்கச்சிக்கும், உத்தியோகம் வரும்போது, நீங்க ஏன் 'அப்போஸ்' பண்றீங்க?

அமைச்சர்: ரொம்ப சரி.

பெரியார்: இல்லாது போனாதானே வரும்; யாருக்கோ வருதுன்னா! உங்களுக்கு வேலையில்லை. உங்க பொண்ணுக்கும் வருது—உத்தியோகம்; உங்க தங்கச்சிக்கும் வருது.

அமைச்சர்: ரொம்ப சரி.

பெரியார்: அதனாலே அப்படின்னு சட்டமே போட்டுடுங்க—இப்போ ஆதித்திராவிடருக்கு போட்டமாதிரி. 50 சதவீதம் 'பீமேலுக்கு' (பெண்ணுக்கு) உத்தியோகம் ஒதுக்கிவைக்கணும் அப்படின்னு கொஞ்சம் 'மார்ஜின்' விடலாம்.

அமைச்சர்: இந்த 'சஜஷன்' (யோசனை) நல்லா இருக்குது. 'ஒரிஜினல் சஜஷன்'. இதை நாங்க எக்சாமின் (பரிசோதனை) பண்ணிப் பார்க்கிறோம், இதை பண்ண முடியுமான்னு. இன்னொன்று கேக்கணும் உங்களை! இப்ப வந்து, 'அபார்ஷன்' இருக்குது பாருங்க 'கருச்சிதைவு'. இதுபற்றி பெரிய 'காண்ட்ரவர்சி' (வாக்குவாதம்). சர்க்காரிலே—நாம் 10 வருஷமா இதைப்பத்தி எழுதிக்கொண்டே வர்றோம். அவங்க சொல்றாங்க, இது 'அபார்ஷன்' லீகலைஸ் (சட்டபூர்வமாக) பண்ணிட்டா—

பெரியார்: அது எப்படி? லீகலைஸ்னு எப்படிச் சொல்றது? அபார்ஷன்னா நேச்சுரல் அபார்ஷனா? மருந்து சாப்பிட்டா?

அமைச்சர்: மருந்து சாப்பிட்டு—அதாவது 'இன்ட்யூஸ்டு அபார்ஷன்'. அது வந்து தப்புன்னு சொல்லியிருக்காங்க. ஆனா வருஷத்துல 40 லட்சம் பெண்கள் இந்த மாதிரி சரியான டாக்டர்கள் இல்லாத—கெடுதி டாக்டர்கள்கிட்டே போயிட்டு அவங்க உடம்பை கெடுத்துட்டு கொலைகூட ஆயிடுது. அந்த மாதிரி ஆகாம 'லீகலைஸ்' பண்ணிட்டா.

பெரியார்: ஆனா, வேணுங்கிறவங்க செய்துக்கலாம்.

அமைச்சர்: 'தட் இஸ் குட்' (That is good) அதுதான் இருக்கணும். 'வாலண்டிரியா', தெரியாம கர்ப்பமாயிட்டா, குழந்தை வேண்டாம்னு சொன்னா, சர்க்கார் ஆஸ்பத்திரியிலே போயி, அந்த ஆபரேஷன் பண்ணிக்கலாம்.

பெரியார்: அதை 'லீகலைஸ்' பண்ணலாமே. அதுல யாருக்கும் தகராறு இல்லே.

அமைச்சர்: அதுதான். சர்க்காரில் ஒரு 'பில்' (மசோதா) கொண்டு வந்திருக்கோம். அது வந்து ராஜ்ய சபையில் 'அப்ரூவல்' ஆயி செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது; அப்புறம் லோக் சபாவிற்கு வரும். அப்புறம் பில் வந்து, 'ஆக்ட்' (சட்டம்) ஆயிடும்.

பெரியார்: என்ன மாதிரி பதில் சொல்லலாம்னா, அட நாம செய்யாவிட்டா அவுங்க செய்துக்க போறாங்க. அதுலே அபாயத்துக்கு ஆளாவாங்க. இப்ப நாம செய்யறதினாலே நல்லதனமா குற்றத்துக்கு இடமில்லாம செய்து—

அமைச்சர் : சரியான டாக்டர்களை வைத்து சரியான ஆஸ்பிடலை (ஆஸ்பத்திரி) வைச்சு ஒண்ணும் கெடுதியாகாம சரியாக பண்ணனும்னா, 'லீகலைஸ்' பண்ணணும்.

பெரியார் : ஆம். அந்த மாதிரி செய்யணும்.

அமைச்சர் : ரொம்ப நன்றி உங்களுக்கு.

[8-3-1970-ல், சென்னை வானொலி ஒலிபரப்பு—
பேட்டி : டாக்டர் S. சந்திரசேகர், மத்திய அரசு அமைச்சர்
நூல் : வானொலியில் தந்தை பெரியார், பதிப்பு 1970]

2. தலைவர்களைப்பற்றி

1. டாக்டர் நாயர்

தலைவர் அவர்களே! தோழர்களே!

இன்று, நமது காலஞ்சென்ற தலைவர் டாக்டர் நாயர் அவர்கள் உயிர்துறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்றாலும் அத் தலைவரவர்கள் இறக்கவில்லை என்று சொல்லுவேன். அவர் கொள்கைகளும், தொண்டுகளும் இன்னும் இந் நாட்டில் வேலை செய்துகொண்டு வருகின்றன. ஆதலால், அவர் இன்னும் உயிருடனிருக்கிறார்.

டாக்டர் நாயர் ஒரு புரட்சிவீரர்; சுயமரியாதை வீரர்; அவரை ஒரு திராவிட லெனின் என்று சொல்லவேண்டும். நாயர் நாளில் பிறந்திருக்காதவர்களுக்கும், அவர் நாளில் கோவணம் கட்டாத சிறுபிள்ளையாய் இருந்தவர்களுக்கும்—இன்று, நாயர் பெருமை யையும் அவரால் தாங்களடைந்த மேன்மையையும் அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில், நாயர் தொண்டாற்றத் தொடங்கிய நாளில் இந்நாட்டு மக்கள் நிலை எப்படியிருந்தது என்பது அப்போது போதிய அறிவுபெற்றிருந்த மக்களுக்கே விளங்கியிருக்கும். அவர் தொண்டின் பயனாய் இப்போது யோக்கியதைபெற நேர்ந்த மக்கள், 'நாயர் தேசத் துரோகி' என்றும் 'வகுப்புவாதி' என்றும் பேசலாம்.

அப்படிச் சொல்லும் ஒவ்வொரு திராவிடனும் இன்றும் தன்னைப் பற்றி யோசித்துப் பார்ப்பானானால், சிறிது சுயமரியாதை இருந்தாலும், 'நாயர் இனியும் கொஞ்ச காலமிருந்து வகுப்புவாதத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்யாமல் போய்விட்டாரே!' என்று வருத்தப் படுவான். எப்படியெனில், இன்று எவ்வளவு பெரிய பதவியிலிருந்தாலும், எவ்வளவு பெரிய தேசியவாதியாயிருந்தாலும், வகுப்புவாதத்தை எவ்வளவு வெறுத்த மகானாயிருந்தாலும் அவன் திராவிடனாய் இருப்பானானால்—ஆரியனுக்குக் கீழ்ச்சாதியாயும், சூத்திரனாயும் இழிவுபடுத்தப்படுகின்றானாகக் கருதப்படுகின்றானா, நடத்தப்படுகின்றானா, இல்லையா என்பது விளங்காமல் போகாது.

இன்று—இந்த 20-வது நூற்றாண்டில், உலகில் எவ்வளவோ அற்புதங்கள் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான வயதில், திராவிடர்களிலேயே மாபெரும் தலைவர்களும், மகான் களும், தேச பக்தர்களும், தியாகிகளும், தேசியத் தலைவர்களும் இருக்கிறார்கள் என்று ஆரியர்களாலேயே கொண்டாடப்படும் இக் காலத்தில்—இன்றும், இப்போதே–இதோ, தெருக்கள் தோறும் ஒவ்வொரு சோற்றுக் கடை, இட்லிக் கடை, தண்ணீர்ப் பந்தல், கடவுள் சன்னிதானம் என்று சொல்லப்படும் இடம் ஆகியவைகளில் ஆரியனுக்கு வேறு, திராவிடனுக்கு வேறு என்று இடம் பிரித்துவைத்து, ஆரியனுக்குப் பிரித்துவைத்த இடத்தில் திராவிடன் பிரவேசித்தால் தோஷம், தண்டனை முதலிய இழிவுகள் ஏற்படுத்திவைக்கப் பட்டிருக்கிறதா, இல்லையா என்று பாருங்கள். இதைப் பார்த்த—மானமும் மனிதத்

தன்மையுமுள்ள மனிதனுக்குத் தேசம், அரசியல், சுதந்திரம் என்னும் தேசியத் தன்மையைவிட—சுயமரியாதை, சுதந்திரம் என்னும் சாதீயத் தன்மையே பிரதானம் என்கின்ற உணர்ச்சி ஏற்படாதா? ஏற்பட வேண்டாமா? என்று கேட்கிறேன்.

டாக்டர் நாயர், இதுவரை உயிருடன் இருந்திருப்பாரானால், இந்தத் துறையில் வெகுதூரம் நாம் முன்னேறியிருப்போம். அவருக்குப் பிறகு சமுதாய சுயமரியாதையுள்ள சரியான தலைவர்கள் திராவிட சமுதாயத்தில் காணுவது மிகக் கஷ்டமாகப் போய்விட்டது. அதனால்தான், டாக்டர் நாயருக்குப் பிறகு அவருடைய இடத்தைப் பூர்த்திசெய்ய ஆளில்லாமல் போய்விட்டது என்று நான் அடிக்கடி சொல்லுகிறேன்.

இன்று, அவருக்குப்பின் நமக்கு அரசியல் சுதந்திரம் எவ்வளவோ கிடைத்தது. இதன் பயனாய் நம் மக்கள் பலர், தாங்கள் கனவிலும் நினைத்திருக்க முடியாததும், தங்களுக்குச் சிறிதும் தகுதியில்லாததுமான பல பெருமையும், பதவியும், பணமும், செல்வாக்கும் பெற்றார்கள். என்றாலும், சமுதாயத்தில் அவர்கள் எல்லோருமே கீழ்ச் சாதியாய் இருப்பது கடுகளவாவது மாற்றமடைந்ததா? அதற்காக என்று எந்தத் தலைவராவது பாடு பட்டார்களா? இன்னும் பெரிய பதவிகளும், அதிகாரங்களும், அரசியல் சீர்திருத்தங்களும் சர்க்காரால் அளிக்கப்பட்டு அவை நமக்குக் கிடைத்துத்தான் என்ன பயன் என்று கேட்கின்றேன்.

நாம் தலைவராகி என்ன பயன்? மகாத்மாவாகி என்ன பயன்? அரிவரி எழுத்துக்கள் எல்லாம் நம் பெயருடன் தொடர்ந்து வரும்படியான பட்டங்கள் கிடைத்து என்ன பயன்? மகாராஜாவாகி என்ன பயன்? கவர்னராகி என்ன பயன்? சூத்திரனாகக் கீழ்ச்சாதியாகத் தானே இருக்கிறோம்? இருப்போம்! அதுவும், நாம் ஆண்ட—நாம் வாழ்ந்த—நம்முடைய நாட்டில், அதுவும் பிழைக்கவந்த-பாடுபடாத சோம்பேறிக் கூட்டத்தால்–3½ பேர்வழிகளால் அம் மாதிரி அழைக்கப்படுகிறோம்; நடத்தப்படுகிறோம். ஆனால், யோக்கியதையற்ற, நாணயமற்ற, ஒழுக்கமற்றவன் என்று தீர்ப்பளிக்கப்பட்ட அயோக்கியன் ஆரியனாயிருப்பதால் பிராமணன்—மேல்சாதிக்காரன் என்று அழைக்கப்படுகிறான்; நடத்தப்படுகிறான். இன்று, இந்த நாட்டில் நாமே இப்படி இழிவாய் நடத்தப்படுகிறோம் என்றால், இது ஒழியாமல் நமக்குப் பதவியா, உத்தியோகமா, பட்டமா என்று கேட்கிறேன். இந்த நூற்றாண்டில் இந்த இழிவு நீக்கப்படாவிட்டால் இனி என்று நீக்கப்படப்போகிறது என்று கேட்கிறேன்.

காங்கிரசுக்கு (ஆரியர்களுக்கு) பூரண சுயேச்சை கிடைத்த பின்பா, அல்லது இவர்கள் ஆசைப்படுவதுபோல்—பிரிட்டிஷார் போய், வேறுசாதியார் இந்தியாவை ஆளுகின்றபோதா என்று கேட்கிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி என்றால், இந்த மாதிரியான இழிவுகளை ஒழிக்கவே தோன்றிய கட்சி என்கின்ற எண்ணம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தோன்ற வேண்டும்; மற்றும் கட்சியிலுள்ள ஒவ்வொருவருக்கும் அதுவே முதன்மையும் முக்கியமுமான கடமை என்றும் தோன்றினால் அல்லவா—ஒவ்வொருவரும் அதற்காகப் பாடுபட முற்பட்டால் அல்லவா—இக் கட்சியினால் மக்கள் மானமும் சுயேச்சையும் அடைய முடியும் என்று கேட்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் வைசிராய் நம் கட்சித் தலைவர்களைக் கூப்பிடவில்லையென்றும், மற்றக் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டார்கள் என்றும் மிக்க கோபமாகப் பேசினார்கள். அந்தக் கோபத்தில் எனக்குக் கலந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், வைசிராய் நம்மைக் கூப்பிட்டுக் கேட்கும்படியான ஒரு கட்சியாக நம்முடைய கட்சியில்லை என்பது என் அபிப்பிராயம். எதனால் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், நம் கட்சிக்குப் பலமில்லை; ஒற்றுமையில்லை; கட்டுப்பாடில்லை; நம்மைக் கூப்பிடா விட்டால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்று வைஸ்ராய் நினைத்திருக்கிறார். நம்

கட்சியும் அரசியல் பதவிகளுக்கு இருக்கிறதேயொழிய—மற்றபடி ஒரு பெரிய சமுதாய மாறுதலுக்கு இல்லையென்று அவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. நம் கட்சியார் பலரும் இதை உணரவில்லை. அதனாலேயேதான் வைசிராய் கூப்பிடாததைப்பற்றியும், பதவியைப்பற்றியும் இலட்சியம் செய்யக்கூடாது என்கிறேன்; பதவியில் இலட்சியம் வைத்தால் நமது இலட்சியம், கொள்கையெல்லாம் பறந்துபோக வேண்டிவரும்.

சமுதாயக் கட்டுப்பாட்டின் பலத்தாலும் மேன்மையாலும் கிடைக்கும் பதவியால்தான் நாம் ஏதாவது பயனுள்ள காரியம் செய்துகொள்ள முடியும். அப்படி இல்லாதவரை, பதவியே நமக்குக் கேடாய் முடிந்தாலும் முடியலாம்.

நமக்குள் போதிய பலமும் கட்டுப்பாடும் இல்லாத காலத்தில் கிடைக்கும் பதவியால் தனிப்பட்ட நபர்கள் பதவியை அனுபவிக்க நேரிடுவதைத் தவிர, சமுதாயத்துக்கு வேலை செய்யும்படியான பலம் ஏற்படாது. அதனால்தான் நான், அப்படிப்பட்ட அதிகாரமில்லாத பதவிகூடாது என்கின்றேன். மற்றும், பலமும் கட்டுப்பாடுமில்லாத பதவி நமக்குள் கலகத்தை உண்டாக்கிக்கொண்டே யிருக்கும்; நம் எதிரிகளுக்கும், விஷமத்தையும் தொல்லையையும் விளைவிக்க சவுகரியத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி 17 வருடகாலம் ஆட்சியிலிருந்தது; அதற்கு எதிரிகள் தொல்லையைச் சமாளிக்க வேண்டிய வேலையே சரியாயிருந்தது. அத் தொல்லை யில்லாதிருக்குமானால் அனேக வேலைகள் செய்திருக்கும். அது, நமக்குச் செய்யவேண்டிய வேலையெல்லாம் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது. பதவியின்மூலம் எதிரிகளை அடக்கலாம், ஒழிக்கலாம் என்பது முடியாத காரியம். அதற்குப் பதிலாக, பதவி பெறுவதின் மூலம் எதிரிக்கு ஆக்கம்தான் அதிகம் ஏற்படும். உதாரணமாக, நாம் 17 வருஷகாலம் பதவி வைத்திருந்தது எதிரிகளுக்குப் பலம் சேர்த்துக்கொள்ள மிக சவுகரியமாயிற்று. அது போலவேதான் எதிரிகள் 27 மாத பதவி வைத்திருந்தது, நமக்குச் சற்றாவது பலம் ஏற்பட உதவிற்று. எதிரிகள் பதவி வகித்ததால் நமக்குச் சில கெடுதிகள் ஏற்பட்டது என்றாலும் அதைவிட இலாபம் என்று மதிக்கத் தகுந்த சில கட்டுப்பாடும் உணர்ச்சியும் ஏற்பட்டது.

இப்போது எதிரிகள் பதவியிலில்லாததால் நம் கட்சிக்கு ஒரு உற்சாகமோ உணர்ச்சியோ இல்லாமல் சப்பையாக இருக்கிறது தெரியவில்லையா?

அதுபோலவே, நாம் பதவியிலில்லாததால் நம் எதிரிகள் (காங்கிரஸ்) மதிகெட்டுப் பைத்தியம் பிடித்துக் கண்டபடி உளறித் திரிய வேண்டியதாயிற்று. இருவரும் பதவியி லில்லாததாலேயே மக்களுக்கு, இன்று யார் நிர்வாகம் நடத்துகிறவர்கள் என்பதும், அவர் களுக்கு என்னென்ன அதிகாரமென்பதும்கூடத் தெரியாது. இந்த மாதிரி சர்க்கார் இருக்கிற காலத்தில் யுத்தம் இல்லாதிருக்குமானால் நாம் பல காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக் கலாம்: அல்லது, நம் எதிரிகள் பதவியிலிருந்தாலும் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டிருக்கலாம். இல்லாவிட்டாலும் நமக்குள் இனியும் கட்டுபாடும் உணர்ச்சியுமாவது ஏற்பட்டிருக்கும். எப்படியெனில், அப்போதுதான் நமக்குக் கிளர்ச்சி செய்ய உற்சாக மேற்படும்.

ஆதலால்தான் இப்போது—இதுசமயம் மத்திய அரசாங்கமாகிய வைஸ்ராய் நிர்வாக சபையிலாவது, மாகாண அரசாங்கமாகிய கவர்னர் நிர்வாக சபையிலாவது, இப்போது ஜனப்பிரதிநிதிகள் என்கின்ற—உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்கள் என்கின்ற நபர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்றும்; இப்போதிருக்கிறபடியே சர்க்கார் உத்தியோகஸ்தர் களைக் கொண்டே நடத்தப்படட்டும் என்றும் சொல்லுகிறேன். சர்க்கார் தங்கள் இராஜதந்திர புத்தியின் பயனாய் பொது ஜனங்களிலிருந்து பொறுக்கி எடுத்து இந்த இடங் களில் சிலரைப் போட்டுவிட்டால் அவர்கள் ஒருவருடன் ஒருவரும் பதவியிலிருப்பவர்களும் வெளியில் இருப்பவர்களும் போராடிக் கொண்டிருப்பதில் கவனம் இழுக்கப்பட்டுவிடும்

என்றும், இந்தப் போராட்டத்தில் தங்களை (சர்க்காரை)ப் பற்றி எவரும் கவனிக்காமல் இருப்பார்கள் என்றும், அந்தச் சமயத்தில் தங்களுக்கு வேண்டிய காரியத்தை ஜனப்பிரதிநிதிகள் பேரால் செய்து கொள்ளலாம் என்றும் கருதக்கூடும். ஆனால், அது புத்திசாலித்தனமான யோசனை அல்ல என்பதே எனது அபிப்பிராயம். ஏனெனில், இந்தக் காரியம் சர்க்காருக்கும் தொல்லை கொடுக்கக்கூடிய காரியமாகலாம். எந்தக் கட்சியார் பதவிக்கு வந்தாலும், அவர்கள் தங்கள் கட்சிக்கோ, சமுதாயத்திற்கோ நன்மை செய்யாமல் வெறும் மந்திரியாயிருந்தும் சம்பளம் பெறுவதைக் கட்சியார் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். மற்றும், தங்கள் கட்சிக்கோ, சமுதாயத்துக்கோ ஏதாவது நன்மை செய்துகொள்ள முற்பட்டால் அதனால் பாதகமடையும் மற்றக் கட்சியார் கிளர்ச்சியும் தொல்லையும் செய்யாமல் இருக்க மாட்டார்கள். ஆதலால், இந்தச் சமயத்தில் இப்போது இருக்கிறபடி நடந்து, சீக்கிரம் யுத்தத்தை வெற்றி காணும்படியான முடிவிற்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

நம் கட்சிக்குப் பதவி கிடைக்காமல் போகுமே என்கின்ற பயம் வேண்டாம்; கட்சி பலமாகவும் கட்டுப்பாடாகவும் இருந்து செல்வாக்குப்பெற்றால் பதவி காலடியில் வந்துவிழும். நாம் தேடிப்போய் அடையும் பதவியைவிட நம்மைத்தேடி வந்தடையும் பதவியே பயனுள்ளதாகும். தவிரவும், நாம் மாத்திரம் கட்டுப்பாடாயிருந்தால் பதவியில்லாமலே அனேக காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்.

நம் மக்களுக்கு இன்னமும் தங்களைப் பற்றிய அறிவும், தங்கள் சுயமரியாதையைப் பற்றிய கவலையும் சரியாக இல்லை. நாம் வேறு; ஆரியர் வேறு என்கின்ற உணர்ச்சி வர வேண்டும். ஆரியர் சமயம், கடவுள், சாஸ்திரம், கலை, பழக்கவழக்கம் வேறு; திராவிடன் சமயம், கடவுள், சமயாதாரம், கலை, பழக்க வழக்கம் வேறு என்கின்ற எண்ணம் ஏற்பட வேண்டும்.

நம் மக்கள் ஆரிய சமயத்திற்கு அடிமையாய் இருக்கிறவரையில் நம் சமுதாயத்திற்குச் சுயமரியாதை ஏற்படப்போவதில்லை; விடுதலையும் ஏற்படப்போவதில்லை. நாம் முதலில் சமய சமுதாயத் துறையில், ஆரிய ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும். ஆரியத்திற்கு அடிமைப் பட்டதாலேயே—நமக்குச் சூத்திரப் பட்டம் கிடைத்திருக்கிறது; அதனாலேயே நாம் அரசியல் அடிமைகளாய் வாழ்கிறோம்; கல்வி முதலிய எந்தத் துறையிலும் முன்னேற முடியாமல் தடைப்படுத்தப் பட்டிருக்கிறோம். இன்று திராவிடர்கள் சொல்லிக்கொள்ளும் வைணவம், சைவம் எனப்பட்டதும், மற்றும் பலவுமான சமயங்கள் என்பதெல்லாம்—முதலில் எப்படியிருந்தாலும், இன்று ஆரிய ஆதிக்கத்திற்கும் திராவிடர் அடிமைத் தன்மைக்கும், இழிவுக்கும் பயன்படத் தக்கதாகவே இருந்து வருகிறது.

நமது அடிமைப் புத்தியின் தடிப்பானது, ஆரிய ஆதிக்க சாதனங்கள் எல்லாம் நம்முடையதென்று உரிமை பாராட்டி, அவற்றிற்கு அடிமைப்படத் துணிந்துவிடச் செய்து விட்டது. ஆரியக் கடவுள்கள் என்பவைகள் இருக்குமிடங்களில் நமக்கு எவ்வளவு இழிவு ஏற்பட்டாலும் சிறிதும் வெட்கம், மானமின்றி அவைகளிடம் சென்று இழிவை அனுபவிக்க முந்துகின்றோம். ஆரியர்கள் கற்பித்துக் கொண்ட கடவுள்களுக்கு, ஆரியர்கள் கற்பித்து வைத்த கதைகளைத் தமிழில் எழுதிவைத்துக்கொண்டு, அக் கதைகளைச் சொல்லிப் பாடிப் பிரார்த்தனை செய்கின்றோம். இது ஆரிய மதப் பிரச்சாரமா, இல்லையா என்று கேட்கின்றேன். இப்படி ஒரு கூட்டம் நாட்டிலிருக்கும்போது திராவிடர்களுக்கு விமோசனம் எப்போது, எப்படி வரும்? ஆகவே, இப்போது நம் மக்களுக்கு, ஆரியர்—திராவிடர் சமய, சமுதாய பேதங்களை விளங்கச் செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இதற்காக ஒரு தனிப் பிரச்சாரமும் ஒரு தனி ஸ்தாபனமும் ஒரு தனிப் படையும் வேண்டும். நமது நிலையை நாமுணர்ந்து, நமது இழிவை நீக்கிக்கொள்ளப் பாடுபடுவது குற்றமாகாது. இதனால் யாரும் குற்றம் சொல்லவும் முடியாது.

யுத்தம் முடிந்ததும் நமது வேலை இதுவாகத்தான் இருக்கவேண்டும். முக்கியமாய்—இதற்காக வேண்டியுமே, ‘திராவிட நாடு திராவிடருக்கு’ என்கின்றோம். சர்க்கார் நம் நாட்டைப் பிரித்து நமக்கு ஒரு தனி அரசியல் ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால், நாம் அப் போராட்டத்தில் மடியத் தயாராய் இருக்க வேண்டும். ஒருவனுடைய நாட்டில் வேறு ஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும்படியாகவும், நாட்டுக்குடையவனைச் சூத்திரனாகவும்—கீழ்ச் சாதியாகவும் செய்திருக்கும், செய்துவரும் ஆட்சி எப்படிப்பட்டதானாலும் அது கொடுங்கோன்மை ஆட்சியேயாகும்.

இன்று நமக்குத் ‘திராவிடர்’ என்கின்ற பெயரேயில்லை; ‘தமிழர்’ என்கின்ற பெயரேயில்லை. சூத்திரர், தீண்டப்படாதவர், நாலாம் சாதி, அய்ந்தாம் சாதி என்கின்ற பெயர்கள்தானிருக்கின்றன. இது சரியா? இது உங்களுக்குச் சம்மதமா? இது மாற்றப் பட வேண்டாமா? அதற்காவன செய்யப்பட வேண்டாமா? வைசிராய் நமது கட்சித் தலைவனைக் கூப்பிடவில்லை என்பது அவமானமாகக் கருதுவதானால் நம் சமுதாய 3½ கோடி மக்களை ஒரு அன்னக் காவடி உஞ்சவிருத்திக் கூட்டம்—சூத்திரன், கீழ்ச் சாதி, தொடக்கூடாத சமூகம் என்று கூப்பிடுவதையும், ஒதுக்கிவைப்பதையும் பற்றி எவ்வளவு அவமானப்பட வேண்டும்? இதையெல்லாம் விடவா மந்திரி பதவி, வைசிராய் சபை மெம்பர் பதவி, ஆலோசனையாளர் பதவி, கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவை என்று கேட்கிறேன்?

வயது சென்ற பெரியவர்கள், மானமற்ற செல்வப் பித்தர்கள், பதவிப் பித்தர்கள் நிலை எப்படியோ இருக்கட்டும். வாலிபர்களாகிய நீங்கள்—உறுதியுடனும் துணிவுடனும், நம்பிக்கையுடனும் முன்வாருங்கள்! ஒரு பத்து வருஷத்திற்குள் பெரியதொரு சமுதாயப் புரட்சி நடத்தி, மானமும் விடுதலையும் பெற்றுவிடலாம்.

[சென்னை கோகலே மண்டபத்தில், 20-7-1940-ல் நடந்த டாக்டர் நாயர் தினக்கொண்டாட்டத்தில் சொற்பொழிவு—‘குடி அரசு’ 28-7-1940]

2. திரு. வி. க.

தோழர்களே!

அன்பர் கலியாணசுந்தரனார் அவர்களின் தமிழ்த் தொண்டை நானே நன்றாய் அறிந்தவன். அவரது தமிழ்த் தொண்டிற்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால், நானே யாவேன். நான் தமிழ் பேசுவதும், எழுதுவதும் தப்பாக இருந்தாலும், நான் பல பத்திரிகைகள் நடத்துவதும், சுமார் 50, 60 புத்தகங்கள் வெளியிட்டதும் அன்பர் கலியாண சுந்தரனார் அவர்கள், தமிழ் மொழியில் ‘தேச பக்தன்’, ‘நவ சக்தி’ முதலிய பத்திரிகை களின் தொண்டாலேயாகும். திரு. வி. க. அவர்களின் ‘தேச பக்தன்’ பத்திரிகைக்குப் பிறகே தமிழ், அரசியல் மேடைகளைக் கைப்பற்றிற்று என்று சொல்லுவேன். அரசியல் தலைவர்களையும் தமிழ் அடிமை கொண்டதற்குக் காரணம் அவர்களது பத்திரிகைகளே யாகும். அப் பத்திரிகைகள் என்னைவிட மோசமானவர்களையும் தமிழ் மொழியில் உணரவும், தமிழ் பேசவும் செய்துவிட்டதால்—‘தமிழ் மொழியைக் காதால் கேட்டால் தோஷம்’ என்று கருதும் சாதியாரும் தமிழில் கலந்து கொள்ளவும், தமிழை ஒப்புக்காவது மதிக்கவும் செய்துவிட்டது.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில், 13-1-1936-ல் நடந்த தமிழ்த் திருநாளின்போது சொற்பொழிவு—‘திராவிட நாடு’ 22-8-1943]

8. காந்தியார்

மதவெறிகொண்ட மாபாதக் கூட்டம் சதிச்செயல் புரிந்து, தந்திரமும் வஞ்சனையும் போர்த்து, உலகப் பெரியாருள் ஒருவரான பெரியார் காந்தியாரைப் பலிகொண்டுவிட்ட செய்தியைக் கேட்டுத் திகைத்தவர் பலர்; திகைப்பால் செத்தவர்கள் சிலர்; சாக விரும்பிய வர்கள் சிலர் என்ற செய்திகளையெல்லாம் அவர் மறைந்ததிலிருந்து நாள்தோறும் கேட்டு வந்திருக்கின்றோம். மனிதத் தன்மை படைத்த எவருமே விரும்பாத, இழிவான இந்தப் படுகொலையைக்கண்டு, கேட்டு எவருமே பதறாமல் இருக்கமுடியாது. கோட்ஸே கும்பல்கூட அல்ல; கோட்ஸே கூட மனம் பதறித்தான் இருப்பான்—தன்னால் கொல்லப் பட்ட காந்தியார் குலைந்து மண்ணில் வீழ்ந்ததைக் கண்டு! ஏன்? அவனும் மனித உடல் போர்த்தவன்தானே!

சுயநலம் கொஞ்சமும் இல்லாமல், தனது முப்பது ஆண்டு வாழ்க்கையையும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் நன்மைக்காகவே, தன் மனதில் எது நன்மை என்று பட்டதோ அவ்வழியிலேயே உழைத்த பெரியார் காந்தியார். பலாத்கார முறைகளில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லாமல் அகிம்சையையே தன் கருவியாகக் கொண்டவர். மத இயலில், மதத்திற்கு மதம் வேறுபாடில்லை என்றும், மத முடிவுகள் எல்லாம் ஒன்றுதான் என்றும் வற்புறுத்தியவர். கடவுள் இயலில், கடவுள் ஒன்றுதான் என்றும் அந்த ஒன்றைத் தான் பலரும் பலவாறு கூறிப் போனார்கள் என்றும், ஆனால் எல்லாவற்றையும் ஒன்றாகவே தான் நான் மதிக்கிறேன் என்றும் விளக்கிக் கூறி, கடவுள் வழிபாட்டிற்காக அமைந்த கோவில்களை 'விபச்சார விடுதிகள்' என்று கூறி, அங்குத் தாகனோ, அந்தக் கடவுளுக்குப் பால், பழம், சோறோ வேண்டியதில்லை; திறந்த வெளியே போதும் என்றவர். அதாவது, விக்கிரக ஆராதனை கூடாது, பிரார்த்தனையே போதும் என்று வற்புறுத்தியவர். சமுதாய இயலில் ஒருவரை ஒருவர் சுரண்டுதல் கூடாது; பரம்பரையாக ஒருவர் உறிஞ்சிப் பிழைக்கவும், அதற்காக மற்றொருவர் நைந்து வாழ்க்கை கசந்து வாழவும், அதற்காக ஒரு கூட்டம் ஒடுக்கப்பட்டவர்களாய்—தாழ்த்தப்பட்டவர்களாய் இருந்துவருவது ஈனம் என்றும் வற்புறுத்தியவர். தேச இயலில் இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே நாடு என்றும், இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாட்டினர் என்றும் வற்புறுத்தியவர்.

இவ்வாறான காந்தியாருடைய பல கொள்கைகள், மத வேறுபாடு, சாதி வேறுபாடு நிரம்பிய இந்த நாட்டிற்கு அவைகளைத் தீர்க்க ஓரளவிற்குப் போதுமானவைகள் என்று கூறத் தகுந்ததாயினும் அக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அவர் கையாண்டுவந்த முறைகள் நிச்சயமாக விபரீதமான பலனைத்தான் கொடுக்குமெனை நாம் அடிக்கடி வற்புறுத்தி விளக்கிக்கூறி வந்திருக்கின்றோம் என்பதையும், அதே நேரத்தில் அவரின் பல கொள்கைகள் இந்தப் பிற்போக்கான நாட்டிற்குத் தேவையானவை என்று உணரத் தவற வில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவ்வாறு இந்தியத் துணைக் கண்டத்தின் நன்மைக்காக, பெருமைக்காக, முன்னேற் றத்திற்காக உழைத்துவந்த பெரியார் காந்தியார் என்று சொல்லிக்கொள்ளத் தகுந்த நிலையிலிருந்தாலும், அவருடைய மறைவுக்குப் பிறகும் இந்த நாட்டில் வாழ்ந்தேயாக வேண்டிய மக்கள் எவ்வளவுதூரம் நன்மை, பெருமை, முற்போக்கு அடைந்திருக்கிறோம்? அடையாவிட்டால் அதற்குக் காரணம் என்ன? அடைவதற்கு நாம் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்பவைகளைப்பற்றி எண்ணவேண்டுமல்லவா? அவைகளையடைந்தால் தானே உண்மையில் காந்தியாரின் கொள்கைகள் நிறைவேறியதாக, வெற்றி பெற்றதாக நாமும் சொல்லிக்கொள்ள முடியும்; உலகமும் ஒப்புக்கொள்ளும்? இந்த நாட்டின் பிற் போக்குச் சக்திகள் என்று காந்தியார் எவற்றைக் குறிப்பிட்டாரோ, அவற்றையொழிப்பது தானே உண்மையாக அவரை மரியாதை செய்வதாக இருக்கமுடியும்? இதைத் தேசியத் திராவிடர்கள் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள, தேசியப் பல்வேறு இனங் களும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

காந்தியாரை எந்த இந்து மதம் ஒழித்ததோ—அதாவது, எந்த இந்து மதம் காந்தியார் உயிருடன் வாழ்வது தான் அழிந்துபோவதற்கு ஏது என்று கருதியதோ—அந்த இந்து மதத்தின் வளர்ச்சிக்காகவா அவருடைய மறைவு பயன்படுத்தப்படவேண்டும்? தான் பெரிய சாதியாய் இருந்துகொண்டே மற்ற சாதியெல்லாம் தனக்குக் கீழ்ப்பட்ட சாதியென்று சொல்லி அவைகளைத் தலை நிமிரவொட்டாமல் தந்திரத்தாலும் வஞ்சகத்தாலும் சதிச் செயல் புரிந்து, சாஸ்திரம் என்றும் சடங்கென்றும் கூறி ஏமாற்றி வாழ்ந்துவரும் எத்தர்கள் பிழைப்புக்காகவா, இந்தப் பெரியாருடைய மறைவு பயன்படுத்தப்பட வேண்டும்? அறிவற்ற மக்களின் மூடத் தனத்தைப் பெருக்கி, அவர்கள் அந்த மூடத்தனத்தில் இருந்து என்றும் மீளாத வழியாகப் பார்ப்பனீயத்தின் காலைக் கழுவிக் குடித்து வாழும் சாதியாக என்றைக்கும் இருப்பதற்காகவா இந்தப் பெரியாரின் வஞ்சகமான படுகொலையை மறைத்து, வேறுவகையில் ஆடம்பரமாக, அனாவசியமாகப் பயன்படுத்தப்படவேண்டும்?

காந்தியார் முடிவிற்குப் பிறகு நாம் நாட்டிலே என்ன பார்க்கின்றோம்? உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் அவரைப் பாராட்டி அவர் முடிவுக்கு வருந்தி, அவரைச் சுட்ட கொலை பாதகப் பார்ப்பனனைக் கண்டித்து ஏராளமான செய்திகள் வெளியாகிவிட்டன. ஒருவன் குற்றம் செய்தால் அவனும் அவனைச் சார்ந்த சொந்தக்காரர்களும், அவன் குலத்தினருமே ஒழிக்கப்படவேண்டும் என்ற இந்து மதத்தின் பழங்கால நீதியை இப் பார்ப்பனன் விஷயத்திலும் கையாளப்படவேண்டும் என்று நாம் கூறவில்லை; விரும்பவுமில்லை; அது நியாயமுமில்லை. ஆனால், அவனை யொழித்துவிட்டு, அவன் அந்தச் சதிச் செயலைச் செய்ய எந்த இந்துமத வெறியுணர்ச்சி காரணமாக இருந்ததோ, அந்த இந்து மதச் செழிப்புக்கான காரியங்களைச் செய்வதுதான் நீதியா, நியாயமா என்று கேட்க ஆசைப்படுகின்றோம். இந்தப் படுகொலைக்கு—எந்த, 'இந்து மத சாம்ராஜ்ய வெறியுணர்ச்சி' காரணமாக இருந்ததோ—அந்த உணர்ச்சியை ஆழக் குழி தோண்டிச் சுட்டுப் பொசுக்கிச் சமாதி வைப்பதல்லவா நீதியான செயலாக இருக்கமுடியும் என்று கூறவும் ஆசைப் படுகின்றோம்.

அவர் மறைந்த பதின்மூன்றாம் நாள், அவருடைய சாம்பல்களை எல்லாம் இந்த நாட்டின் 'புண்ணிய' நதிகளில் கரைத்துவிடப்பட்ட ஒரு சடங்கையும், அதைப் பக்தி விசுவாசமாகப் பலர் பார்த்துத் தரிசித்துச் சென்றனர் என்ற விளம்பரச் செய்திகளையும், அதை அங்கங்கே உள்ளவர்கள் அவை கொண்டுபோகப்பட்டபோதும், கரைத்தபோதும் ஏராளமாகக் கண்டு வணங்கிச் சென்றனர் என்ற செய்திகளையும் பார்க்கும்போது நாம் பெரிதும் வருத்தமடைகின்றோம். காந்தியாரின் படுகொலை விளைவித்த வருத்தத்தைக் காட்டிலும், அவருடைய முடிவு இந்தப்படி சித்திரவதை செய்யப்படுவது—நமக்குமட்டு மல்ல, பகுத்தறிவுடைய எவருக்கும் அதிக வருத்தத்தையே உண்டுபண்ணும் என்னலாம்.

இந்தச் செயலால் மக்களுடைய காலமும் பொருளும் வீணாகக் கழிந்தன என்றுகூட நாம் குறிப்பிட ஆசைப்படவில்லை. ஆனால், விலைமதிக்க முடியாததான மக்களின் அன்புணர்ச்சி; காந்தியார் படுகொலையைக் கேட்டுத் திகைப்படைந்து, இதற்கு ஏதாவது வழிசெய்ய வேண்டும் என்று பிறந்த தெளிவுணர்ச்சி; காந்தியாரிடத்தில் நாம் மரியாதையுடையவர்கள் என்று காட்டவேண்டும் என்று தோன்றிய நன்றியுணர்ச்சி; பரிதாபமான முடிவைக்கேட்டு நம்மீது அதிகமான சுமை ஏற்றப்பட்டிருக்கிறது, சமுதாய முன்னேற்றத்திற்கு நம்மாலான தொண்டைச் செய்தேயாகவேண்டும் என்று உண்டான வீர உணர்ச்சி; 'காந்தியார் எலும்பைக் கண்டு தரிசித்தோம்', 'ஆற்றில் சாம்பலைக் கரைக்கும்போது அந்த அருமையான காட்சியைக் கண்டு களிப்படைந்தோம்', 'இதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு எப்படியெப்படியெல்லாமோ போய் ஏதோ ஒரு மாதிரியாய்ப் பார்த்து வணக்கத்தைச் செலுத்திவிட்டோம்' என்று எண்ணி மனதிருப்திப்படும் அளவிலா மனத்திலுண்டான நல்லுணர்ச்சிகள் எல்லாம் கரைத்துவிடப்படவேண்டும் என்று கேட்கிறோம். 'காந்தியார்

எலும்பையே காவிரி நதியிலும் மற்ற நதிகளிலும் கொண்டுபோய்க் கலப்பது புண்ணிய மென்றால்—அந்த நதிகளில், நம் முன்னோர்களின் எலும்பையும், சாம்பலையும் கொண்டு போய்க் கலப்பதுதானே நமக்கும் புண்ணியமான தாகும்—இந்த ஏற்பாடுதானே புனிதமானது' என்கின்ற முடிவைத்தானே இந்தச் செயல்—மக்களைக் கொள்ளச்செய்யும்? அஸ்தியை ஆற்றில்கரைக்க அய்யருடைய உதவி தேவை என்கிற முடிவில், பார்ப்பனர் வகுத்த சாஸ்திரங்களும், அவர்களின் வயிற்றுப் பிழைப்பும் பராமரிப்பதற்குத்தானே இந்த நடவடிக்கை பயன்படுவதாக இருக்கமுடியும்? 'இந்திய யூனியன் மதமற்றது' என்று கூறப்பட்டாலும், அது இந்து மதத்தைப் பின்பற்றியே நடக்கக் கூடியது என்கிற உண்மையைத்தானே அரசாங்கம் காட்டும் ஆதரவிலிருந்து மக்கள் தெரிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கமுடியும்?

இதுதானா காந்தியாருக்குச் செய்யும் நன்றி, மரியாதை? இவ்வாறு தரிசிப்பதும், மலர்மாலை சாத்துவதும் ஆன காரியங்களால் அவருடைய கொள்கைகள் நிறைவேறி விட்டன என்று கூறமுடியுமா?

இயற்கையை ஏவல்கொண்டு, விரும்பியபடி எல்லாம் ஆட்டிவைக்கும் விஞ்ஞான முறையும், அதன் பயனாய்த் தோன்றிய இயந்திரங்களும் இங்கு இன்றைக்கும் வணக்கத் திற்குரியவையாக இருக்கின்றனவேயன்றி, வாழ்வின் நலனுக்காகக் கொள்ளப்பட்டவை என்று சொல்லமுடியாத நிலையிலேயே இருக்கின்றோம். அறிவு உயர்ந்தது; அறிவைப் பெருக்குவது கல்வி; கல்வியைத் தருவது ஏடு; அந்த ஏடு வணக்கத்திற்குரியதாகவே இந்த நாட்டில் இருந்துவருகிறது என்று சொல்லலாமே தவிர, அந்த ஏட்டின் பயனைக் கண்டு அறிவு பெருகி வாழவேண்டும் என்ற போக்கைக் காணோமே! எது எது உயர்ந்தது என்று சொல்லப்படுகின்றதோ அதெல்லாம் வணக்கத்திற்குரியது; பூசைக்குரியது என்கிற மனப்பான்மை இந்த நாட்டில் வேரூன்றி—வாழ்வில் அவைகளை ஏற்று நடக்கும் தன்மை இல்லாமல் போனதால்தானே, இந்தப் பழம்பெருமை வாய்ந்த நாடு கேடுகெட்ட நாடாக மாறிவிட்டது! சாரத்தை விட்டுவிட்டுச் சக்கையை ருசிபார்க்கும் நடவடிக்கைதானே பல காலமாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது! அந்தப் போக்கைத்தானா இப்பொழுதும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்கிறோம்.

பார்ப்பனீய மதமான இந்து மதம் என்கிற கொடிய பாம்பிற்குக் காந்தியார் பாலூற்றி வளர்த்து வந்தார். அப் பாம்பின் கொடுமையைப்பற்றி நாம் அவருக்கு அதிகமாகவே எடுத்துக் கூறினோம். சுயராஜ்யம் என்ற மகுடியை ஊதிவந்ததால், அதுவும் ஆடிப்பாடிக் குதித்ததால், அதையடக்கித் தன்வழிச் செலுத்தலாம் என்றே காந்தியார் முழுக்க முழுக்க நம்பினார். சுயராஜ்ய மகுடியை ஊதாத நேரத்தில்—ஊதத் தேவையில்லை என்று அவர் கருதிய வேளையில், அப் பாம்பு தன் விஷப் பற்களுக்கு அவரையே இரையாகக் கொண்டு விட்டது. இப்பொழுது, 'அந்தப் பாம்பை என்ன செய்வது?' என்பதே கேள்வி. அதை நாம் நசுக்கி அழித்துவிட வேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை. அதனுடைய விஷப் பற்களைமட்டும் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். இதைத்தான் இங்கு வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறோம். இதற்கு வழி என்ன?

அவருடைய நினைவாகப் பெரும் பொருளை நிதியாகச் சேர்த்து, 'கஸ்தூரிபாய் நிதி'போலவும், 'கமலாநேரு நிதி'போலவும் சில பொதுக் காரியங்களுக்குச் செலவு செய்து விட்டால், அது உண்மையாகவே அவருக்குத் தகுந்த ஞாபகார்த்தமாக ஆடுவிடுமா? அவருடைய உருவச் சிலைகளை அங்கங்கே வைத்துப் பூசை நடத்திவருவதினால் அது அவருடைய தொண்டைச் செய்ததாக முடியுமா? காந்தியார் கழகம் என்று பெயர்வைத்து அவர் எழுதியவைகளையெல்லாம், ஒன்றுசேர்த்து (காலப்போக்கில் பார்ப்பனீயப் பிடியில் சிக்கி, நல்லதையெல்லாம் சுட்டெரித்துவிட்டு, மாற்றித் திருத்தி வைத்துக்கொண்டு) வெறும் வேதாந்த விசாரணையில் ஈடுபட்டால் அது அவருடைய கொள்கைகளைப் பரப்பியதாக

ஆகுமா? அவர் எப்படி உண்ணாவிரத மிருந்தாரோ, மவுனவிரத மிருந்தாரோ அவைகளை நாங்களும் எங்கள் வாழ்க்கையில் பின்பற்றப் போகின்றோம் என்று சிலபேர் முடிவு கட்டுவதால் அது அவருக்கு உண்மையாகவே நன்றி காட்டியதாக ஆகுமா? அவருடைய நினைவுக்கு அறிகுறியாக 'போஸ்டல்' முத்திரைகளை அச்சிட்டு வெளியிடுவதோ, அதைப் போன்ற மற்ற செயல்களைச் செய்வதோ காந்தியாரின் கொள்கைகள் இந்த நாட்டில் நிலைபெறுவதற்கு வழிசெய்யும் காரியங்களாகுமா? வெறும் பஜனைபாடும் அளவிலும், பால், பழம், பூ வைத்து நைவேத்தியம் செய்யும் அளவிலும் நின்றால்—அவர் உயர்ந்தவர், ஒரு பெரியார், ஒரு மகாத்மா, ஒரு மகான் என்று பெருமையாகப் பேசிக்கொள்வதற்குப் பேருதவியாக இருக்குமேதவிர அவரால் இந்த நாட்டிற்கு நிலையான பயனேற்பட வழிசெய்ததாகுமா? அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

['குடிஅரசு'-தலையங்கம்—14-2-1948

4. காந்தியார் மரணம்

பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகத்தின் நேர்மையான பகுத்தறிவு விளக்கத்தால் தம் சோம்பேறிச் சுக வாழ்வுக்குக் கேடு நேர்வதைப் பொறுக்க முடியாத பார்ப்பனீயம்—இன்று அதை அழிக்கத் தனது வஞ்சம் நிறைந்த சூழ்ச்சிகளை எல்லாம் கையாள ஆரம்பித்து விட்டது.

காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பனன் என்ற உண்மையை வெளியிட்டதற்காகப் பார்ப்பனீயம் இன்று நம்மீது பாய்கிறது. காரணம், எந்த மக்களுடைய வாழ்வுக்காக அவர் அல்லும் பகலும் உழைத்து வந்தாரோ, எந்த மக்கள் அவர் பேரைச் சொல்லிப் பல பதவிகளைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து வந்தார்களோ, எந்த மக்கள் அவர் பேரைச் சொல்லிச் சுலபமாய் மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வந்தார்களோ—அதே இனத்தைச் சேர்ந்த ஒருவன்தான் காந்தியாரைக் கொன்றான் என்பதையும் அவன் ஒரு பார்ப்பனன் என்பதையும் வெளியிடும்போது அவர்கள் உண்மையாகவே வெட்கப் படுகிறார்கள். எங்கு மக்கள் தம்மீது பாய்ந்து விடுவார்களோ என்று கவலைப்படுகிறார்கள். அதனால், அவ்வுண்மையை வெளியிடும் நம்மை அழிக்கப் பார்க்கிறார்கள்.

ஆனால், இதே பார்ப்பனர்கள்—இந்தக் கொலைக்கு ஒரு முஸ்லிம் காரணஸ்தராயிருப்பாரானால் அதையே காரணமாக வைத்துக்கொண்டு முஸ்லிம்கள் அத்தனை பேரையும் அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பார்கள் அல்லவா? கொலை செய்தவன் ஒரு இந்துப் பார்ப்பனன் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுங்கூடப் பல இடங்களில் மிகமிகக் கேவலமான முறையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டு அவர்கள் சொத்துக்கள் அழிக்கப்பட்டு இருக்கும்போது, கொன்றவன் ஒரு முஸ்லிமாகவே இருந்திருப்பானானால் இதற்குள் முஸ்லிம் சமூகமே இவ்விந்திய யூனியனைப் பொறுத்தமட்டிலுமாவது அழிக்கப்பட்டு இருக்கும். ஆனால், சர்வ சக்தி படைத்த பார்ப்பனீயக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் கொலைசெய்து விட்டதால், இன்னான்தான் கொன்றான் என்று கூறி ஆசை தீர அழுவதற்குக்கூட வசதி இல்லாமல் உத்தரவு இடப்பட்டிருக்கிறதாம்.

சுட்டவன் பார்ப்பான் என்பதை எடுத்துக் காட்டுவது இன்றைய அடிமை அரசாங்கத்திற்கு வகுப்புவாதம் பேசுவதாகப் படுகிறது. ஆனால், சுட்டவன் ஒரு முஸ்லிம் ஆகவோ ஒரு கறுஞ்சட்டைக்காரனாகவோ இருந்திருந்தால், இதே அரசாங்கம் அவர்களை வேண்டும்படி தாக்க இந்தப் பார்ப்பனர்களையும் அவர்கள் கூலிகளையும் யாதொரு தடையுமின்றி அனுமதித்து இருக்கும். ஆனால், அவன் ஒரு பார்ப்பனனாகப் போய்விடவே, கொலையுண்ட காந்தியார் இனித் திரும்பி வரப்போவதில்லை; ஆகவே, இனி அவரைப்பற்றிப் பேசாதீர்கள்; பேசினால் வகுப்புத் துவேஷமாகக் கருதப்படும் என்று கூறிவருகிறது. இது எவ்வளவு கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

வகுப்பு இருக்கலாம்—சட்டப் புத்தகத்தில், வகுப்புக்கோர் நீதி வழங்க. வகுப்பு இருக்கலாம்—சாஸ்திரப் புத்தகத்தில், மக்களைப் பல வகுப்பினராக்கி உயர்வு தாழ்வு கற்பிக்க. வகுப்பு இருக்கலாம்-கடவுள் தன்மையில், ஒருவன் தலையிலிருந்து தோன்றினான், ஒருவன் காலிலிருந்து தோன்றினான் என்று கூற. ஆனால், ஏன் அப்படிப் பல வகுப்புகள் இருக்கவேண்டும்? ஒரு வகுப்பு மக்கள் ஏன் மற்ற வகுப்பு மக்களின் உழைப்பால் உண்டு கொழுக்கவேண்டும் என்று கேட்டால் அதுதான் வகுப்புத் துவேஷமாகக் கருதப்படுகிறது.

வகுப்பு இருக்கலாம், நாட்டில் அந்த வகுப்பு முறையில் தாழ்த்தப்பட்ட சூத்திரர்களாய், பஞ்சமர்களாய், சண்டாளர்களாய் இருக்கலாம்—ஒரு பெரும்பான்மை சமூகத்தார். 'ஏன் அய்யா, நாங்கள் உழைத்தும் படிக்கப் பள்ளியின்றி, குடிக்கக் கூழின்றி, இருக்கக் குடிலின்றி, உடுக்கத் துணியின்றி அநாகரிக வாழ்வு வாழவேண்டும்?' என்று கேட்டால் அது வகுப்புத் துவேஷமாம். 'அய்யா, நாங்கள் பஞ்சமர்கள்—சேரியில் வாழ்ந்து இடமின்றி இன்னல் படுகின்றோம். ஆகையால், எங்களுக்கு மேலும் இருக்க வசதி செய்து கொடுங்கள்', 'அய்யா நாங்கள் இந் நாட்டை ஆண்டவர்கள்; இந் நாட்டுக்கே உரியவர்கள்; இந் நாட்டின் பூர்வீகக் குடிகள். அப்படிப்பட்ட நாங்களோ இன்று மத்திய ஆசியாவிலிருந்து வந்து குடியேறிய லம்பாடிக் கூட்டத்தாரால் பல சாதிகளாக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு அவர்களுடைய தாசி மக்களாய் வாழ்ந்து வருகிறோம். இக் குறைபாடுகளைப் போக்க ஏதாவது வழி செய்யுங்கள்' என்று அரசாங்கத்தை நோக்கிக் கூறினால், 'அதெல்லாம் பேசக்கூடாது; மீறிப்போனால் உங்களை வகுப்புத் துவேஷியாய்க் கருதி ஜெயிலில் அடைப்போம்—ஜாக்கிரதை' என்று ஆட்சியாளர் கூறினால், அதெப்படி நியாயம் ஆகும்? அப்படித்தான் இன்றைய அரசாங்கம் கூறுகிறது. இதென்ன நியாயம்? ஒரு திருடனைப்பற்றிப் பேசாதே என்று கூறப்படுமானால் அத் திருடனைக் காப்பாற்றத்தானே அம் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுவதாகக் கருதப்படும். அதேபோல், வகுப்பு பற்றிப் பேசாதே என்றால் அந்த வகுப்பைப் பத்திரமாகக் காப்பாற்ற முயற்சி செய்யப்படுகிறது என்றுதானே நாம் கொள்ளவேண்டும்? நாட்டில் வகுப்புப் பேதா பேதங்கள் இருக்கலாம்; வகுப்பின் பேரால் இருந்துவரும் கொள்ளைகளும், ஏய்ப்புகளும், சுரண்டல்களும் இருக்கலாம்; ஆனால், அவற்றைப்பற்றி மட்டும் பேசக்கூடாது என்றால்—அதென்ன நியாயம்? நாங்கள் செய்த தீமை என்ன?

[நாகூரில், 28-2-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-3-1948]

5. காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை:

1. இந்தியாவுக்கு, 'ஹிந்துஸ்தான்' என்கிற பெயருக்குப் பதிலாக—'காந்தி தேசம்' அல்லது 'காந்திஸ்தான்' என்று பெயரிடப்படலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாக—'காந்தி மதம்' அல்லது 'காந்தினிசம்' என்பதாக மாற்றப்படலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக-'மெய்ஞ் ஞானிகள்' அல்லது 'சத்ஞானஜன்' என்று பெயர் மாற்றப்படலாம்.

4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு; வருணாசிரம தர்மமுறை அனுசரிக்கப்படமாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக்கொண்டது; சத்து அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக—'காந்தி ஆண்டு' என்று துவக்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலிய பெரியார்களுக்கு காந்தியார் ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஓர் சீர்திருத்த மகானாகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும்; உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம்; இந்தியாவுக்கு சாபக்கேடு எது எது சொல்லிவரப்பட்டதோ அதெல்லாம் மறைந்துவிடும். ஆரியசமாஜ், சீக் சமாஜ், பிரம்ம சமாஜ் என்பது முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. ஆனால், பவுத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதம் ஆகியவை வெற்றிபெற்றுவிட்டன. இதன் காரணம், இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதே யாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாக—'காந்தியம்' என ஏற்பட்டுவிடுமானால், கண்டிப்பாக வெற்றிபெற்றே தீரும். இன்றைய முட்டாள்தனமும், மூர்க்கத்தனமும் ஆன கொலைபாதகப் பேயாட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

பெயர் மாறுதல்கள் காரணமாய் மதங்களுக்கும் தேசங்களுக்கும் கொள்கை, பெயர் மாற்றங்கள் ஏற்படுவது சகஜமாகவே இருந்து வந்திருக்கிறது.

உதாரணமாக, புத்தர், அசோகர் காலத்தில் ஏற்பட்ட மதக்கோட்பாடு மாறுதல்களும்; ரஷியா, ஸயாம் முதலிய நாடுகளுக்கு ஏற்பட்ட 'சோவியத்லேண்ட்', 'தாய்லேண்ட்' போன்ற பேர்களும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மற்றபடியாக, சிறு ஊர்களுக்குப் பெயர் மாற்றுவதும் பெருந்தொகையாகப் பணம் வசூல்செய்து அதன்மூலம் சில பொதுநலக் காரியங்கள் செய்வதும் காந்தியாருக்கு நாம் ஏதோ நன்றி காட்டினதாகத்தான் வந்து முடியுமே தவிர, காந்தியாரால் உலகத்துக்கு, நம் நாட்டுக்கு—அதாவது, மற்ற நாட்டாரால் தாழ்மையாகக் கருதப்பட்ட சரித்திரப் பிரசித்தமுள்ள நாட்டுக்கு ஏற்பட்ட மகா மேன்மையான காரியம் என்னவென்பதற்கு நல்ல ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஒருவரை மகான்—'கிரேட் மேன்' (Great Man) என்றால்—அவரால் ஏற்பட்ட நிரந்தரமான பெரிய காரியம் ஒன்று இருந்தாகவேண்டுமேயொழிய, அவர் காலத்தில் இன்னின்ன காரியம், அற்புதம், அதிசயம் நடந்தன என்பவை பிற்கால மக்களுக்குப் பயன்படுவதானதாக ஆகிவிடாது. இது எனது தாழ்மையான அபிப்பிராயம்; கொள்ளவும், தள்ளவும், திருத்தவும், மாற்றவும் உங்களுக்குப் பூரண உரிமையுண்டு.

இதற்கு இது ஒரு நல்ல சமயம்; நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒரு பாகமாகிய 'சிந்து'வுக்கு இன்று பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டிருப்பதுபோல்—இந்தியாவின் பெயரும் மாற்றப்படலாம். இந்து என்பதும் இந்தியா என்பதும்—அன்னியர்கள் நமக்கும், நம் நாட்டிற்கும் கொடுத்த பெயர். (அதுவும் சிந்து நதி காரணமாக ஏற்பட்ட பெயர்) என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; காந்தியாரும் இதைச் சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இந்து மதம் என்பதாக ஒரு மதமும் இல்லை. ஆகவே, இந்தப்படியான மாற்றம் காந்தியார் உயிர்ப் பலியின் காரணமாக ஏற்பட்டுவிடுமானால் இனி இங்கு மத, சமுதாய, சாதி சம்பந்தமாக எந்தப் பிரச்சினையும் சுலபத்தில் காணமுடியாது. 30 கோடி மக்களும் 'ஞானவான்களாக'—ஒரே சமுதாய மக்களாக உலகத்தின்முன் திகழ்வார்கள்.

['குடி அரசு' 14-2-1948]

6. காந்தியார் நினைவாக

காந்தியாரின் ஞாபகார்த்தமாக, இந்தியா தேசத்திற்கு 'காந்தி தேசம்' என்று பெயரிடலாம் என்றும்; கிறிஸ்து ஆண்டு, முகம்மது ஆண்டு என்பதுபோல் 'காந்தி ஆண்டு' துவக்கலாம் என்றும்; கிறிஸ்து மதத்தைப்போல், பவுத்த மதத்தைப்போல், 'காந்தி மதம்' என்ற ஒரு புது மதத்தைத் தோற்றுவிக்கலாம் என்றும்—நான் யோசனை கூறியிருக்கிறேன். நமக்குத் தெரியாத கலியுக ஆண்டு, பசலி ஆண்டு, கிறிஸ்து ஆண்டு—

விவரம், தெளிவு கண்டுபிடிக்க முடியாத பிரபவ ஆண்டு முதலியவைகளை ஒப்புக் கொண்டு இருப்பதைவிட, நமக்குத் தெரிந்த ஒரு பெரியாரின் பேரால்—அதுவும் ஆயிரம் ஆண்டுகளாக இல்லாத ஒரு பெருமாறுதல் ஏற்பட, ஆண்டு துவக்குவது எப்படித் தவறாகக் கருத முடியும்? இந்த நாட்டுக்கு என்று ஒரு ஆண்டு வேண்டாமா? அது அவர்பேரில் இருக்கட்டும்.

காந்தியாரின் கொள்கைகளை வைத்து ஒரு மதத்தைத் தோற்றுவிப்பதுதான் எப்படித் தவறாகும்? சத்தியமும், அகிம்சையும்தானே அவருடைய முக்கிய தத்துவங்கள்? சத்தியமே கடவுள் என்பதுதானே அவருடைய முக்கிய சித்தாந்தம். தனியாக, வஸ்துவாக ஆளாக ஒரு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்று பலதடவை சொல்லி இருக்கிறார். சத்தியம்தான் கடவுள் என்று அவர் கொண்டு நடந்திருக்கிறபடியால் மக்கள் சத்தியமே கடவுள் என்று நம்பிப் பயப்பட்டு நடந்தால் இன்றையக் கடவுள்களால் ஏற்படும் பயனைவிட—எவ்வளவோ நலம் ஏற்படும். பிறகு மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம். அகிம்சையையும், அன்பையும் முக்கியத் தத்துவமாகக் கொண்டதுமான ஒரு மதத்தையும், சத்தியத்தையே கொண்டதான ஒரு கடவுளையும் ஏற்பாடு செய்து துவக்கினால் அதை மக்கள் எல்லோரும் போற்றித் தழுவ மாட்டார்களா? அதன் மூலம் இன்று மக்களிடையே இருந்துவரும் சாதி வேறுபாடுகளும், மதவெறி உணர்ச்சியும் அடியோடு அழிய மார்க்கம் பிறக்காதா? அதன் மூலம் இன்று வரைக்கும் சாதிமத பேதங்களை உண்டாக்கவும், மக்களைக் காட்டுமிராண்டி காலத்திற்கு அழைத்துச் செல்லவுமே பெரிதும் பயன்பட்டு வந்த இந்துமதம், போலிக் கடவுள் அழிய வழி பிறக்காதா?

மதம் என்பதென்ன—மாற்றியமைக்கக் கூடாததொன்றா? மதம் என்பதே மக்களின் நல்வாழ்வுக்காகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்படும் நெறி அல்லது மார்க்கம் தானே? என்றாவது மொட்டையடித்துக் கொள்வதும் சாம்பல் பூசிக் கொள்வதும் மதம் என்றாகி விடுமா? ஆகவே, என்ன காரணம் முன்னிட்டேனும், இன்றையக் கடவுள் தன்மையும், மதத் தன்மையும் மாற்றப்பட்டாக வேண்டும். இன்றைய ஏற்பாடுகள் இன்றைய 'ஆர்டர்' எப்படியும் மாற்றப்பட்டாக வேண்டும். மாற்றப்படாத வரையிலும் இன்றைய மக்கள் வாழ்வு பாழாகத்தான் (Waste) போய்க்கொண்டிருக்கும்.

['விடுதலை' 11-3-1948]

தோழர்களே!

காந்தியாருக்குப் பாமர மக்கள் ஆதரவு அதிகம் இருக்கிறது. அவர் பேரைச் சொல்லி இந்த மாறுபாடுகளைச் சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வதும் சுலபம். ஆக இத் தத்துவங்களோடு காந்தி மதத்தை ஏற்படுத்துவது இன்றையத் தேவைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதோடு, காந்தியாரை—புத்தருக்கும் மற்ற பெரியாருக்கும் சமமாகக் கருதிய தாகவும், ஆக்கியதாகவும் ஏற்படும் என்பதையும், இந்த நிலைக்கு இதுவாவது இன்று செய்யவேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காந்தி மதத்தை ஏற்படுத்துவதால் இந்துமதம் அழிந்துபோகுமே என்று சிலர் வருந்தக்கூடும். அதற்கு காந்தியாரே பதில் அளித்திருக்கிறார். மறைவுக்கு ஒன்றிரண்டு மாதங்களுக்கு முந்தியே அவர், 'இந்து' என்பது இந்நாட்டில் வழங்கிவந்த புராதனச் சொல் அல்லவென்றும்; அன்னியர்கள் சிந்து நதிக் கரையில் வாழ்ந்துவந்த மக்களை 'சிந்து' வென்று கூறியது, நாளடைவில் திரிந்து 'இந்து'வாகியது என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார். அதேபோல் 'இந்தியா' என்ற பெயரும் தோன்றியிருக்கிறது.

ஆகவே, இந்தியா என்று இந் நாட்டை அழைப்பதைக் காட்டிலும்—சரித்திரம் அறியாத பரதன் பேரால் 'பாரதபூமி' என்று இந் நாட்டை அழைப்பதைக் காட்டிலும்— உலக மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தவரும், பாராட்டப்பட்டு, புகழப்பட்டு

வந்தவரும், நாம் நன்கு அறிந்தவருமான காந்தியார் பேரால் இந் நாட்டை அழைப்பது மேலல்லவா? சந்துகளுக்கும், பொந்துகளுக்கும், கட்டடங்களுக்கும், பூங்காக்களுக்கும் இவர் பெயரை இடுவதைக் காட்டிலும்—இந் நாட்டிற்கே இவர் பெயரை இடுவது பொருத்த மல்லவா? 'பார்க்கின்' பெயரையாவது அவ்வப்போது மாற்றிவிடலாம்; தேசத்தின் பெயரைச் சுலபமாக மாற்ற முடியாதே! காந்தியாருக்கு ஆங்காங்கு சிலைகள் ஏற்படுத்து வதைவிட, அவர் பேரால், அவர் கொள்கைகளைக் கொண்ட மதத்தை ஏற்படுத்துவது மேலல்லவா? சிலைகளை எடுத்துவிடலாம்; அல்லது, சிலைக்கு ஒரு அர்ச்சகராக உட்கார்ந்து கொண்டு சுலபமாக மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கலாம். காந்தி தேசம், காந்தி மதம், சத்திய கடவுள் இவற்றைச் சுலபமாக அழித்துவிடமுடியாது. இன்று புத்தர் சிலையை யாராவது மதித்துக் கன்னத்தில் போட்டுக்கொள்கிறார்களா? புத்தர் கொள்கைகளை மதிக்காதவர்கள் யாராவது இருக்கிறார்களா? அதைப் பார்த்தேனும் காந்தி சீடர்களும், காந்தியார் கொள்கை வாழ்வு வாழ்பவர்களுமான நீங்கள் காந்தி மதத்தை உண்டாக்கப் பாடுபடுங்கள்!

[திருவல்லிக்கேணி கடற்கரையில், 7-3-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-3-1948]

7. காந்தியார் மறைவுபற்றி

தோழர்களே!

இன்று இந்த ஸ்தானத்தில் இருக்கும் நான் முதலாவதாகப் பேசவேண்டியது பெரியார் காந்தியாரின் மறைவுபற்றி—கொலைபற்றி. பேசவேண்டியது, சம்பிரதாயப்படி மாத்திரம் அல்லாமல் உண்மைப்படியும், கடமைப்படியும் பேச வேண்டியதாகும். காந்தியார் மறைவு திராவிட நாட்டுக்கும், திராவிட மக்களுக்கும் மகத்தான நட்டமும், மாபெரும் ஏமாற்றமடையத்தக்க வாய்ப்புமாகும். காந்தியார் கொலை திராவிட மக்களின் எல்லையற்ற ஆத்திரமும், இரத்தக் கொதிப்பும், திடுக்கிடும்படியான விறுவிறுப்பையும் கொள்ளத்தக்க காரியமாகும். இதைச் சொல்லுகிறபோது என் மனம் பதைக்கிறது; கை நடுங்குகிறது; நா வறட்சியடைகிறது; இதயம் துடிக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதரை எப்படித்தான் கொல்ல, இப்படிப்பட்ட ஒரு பார்ப்பனனுக்கு எண்ணம் வந்தது, கை வந்தது என்பதை நினைத்தால் இராமாயணக் கதையில்வரும் ஒரு இடம்தான் சற்று அதை விளக்குகிறது.

அதாவது, சம்புகன் என்ற ஒரு சூத்திரன் பிரார்த்தனை (தபஸ்) செய்ததற்காக—'சூத்திரனுக்குத் தபசு செய்ய உரிமை இல்லை' என்கின்ற காரணங் கற்பித்து பார்ப்பனர் களின் தூண்டுதலின்மேல் இராமன் என்கின்ற ஒரு ஆரியனால் கண்டதுண்டமாக்கப் பட்டான் என்கின்ற இடம்தான் இக் கொலையின் காரணத்துக்குச் சிறிது விளக்கத்திற்குரிய தாகிறது. ஆகவே, காந்தியார் கொலையானது, ஒரு தனிப்பட்ட அல்லது ஒரு புதிய சம்பவமல்ல என்பதும்; இது ஆரியர்–சூத்திரர் (திராவிடர்), அல்லது ஆரியர்–ஆரிய ரல்லாதவர் என்கின்ற இனப் போராட்ட முறை என்றும்; அதுவும் இந்துமதப் புராணத் தத்துவங்களைப் பின்பற்றியதுதான் என்றும் நிச்சயிக்க வேண்டியதாகிறது. 'காந்தியார் சம்புக இனத்தாராகவும், கொன்றவன் இராமன் இனத்தானாகவும்' இருந்ததுதான் இக் கொலைக்குக் காரணமே ஒழிய—மற்றபடி தனிப்பட்ட மக்கள்மீதோ, தனிப்பட்ட குணங்கள் மீதோ குறைகூறுவது பொருத்தமற்றதாகும்.

காந்தியார் மறைவை—நான் ஏன் திராவிட நாட்டுக்கு, திராவிட மக்களுக்கு எல்லை யற்ற நட்டம் என்று சொல்லுகிறேன்? இப்படிச் சொல்லுவதன் மூலம் ஏதாவது இலாபம், நலம் அடையலாமென்கிற சமயோசித புத்தியாலா? இல்லவே இல்லை! ஒருக்காலும் இல்லை! இப்போது இப்படிச் சொல்லுவதால் எனக்கோ, நம் கழகத்துக்கோ எவ்வித நன்மையும் ஏற்படாது; நம்மவர்களிலேயே சிலர் என்னை வெறுக்கக்கூடும்; மற்றும், ஒரு கூட்டத்தார், அதுவும் செல்வாக்குள்ள ஒரு கூட்டத்தாரின் வெறுப்புக்குத்தான் நான்

ஆளாக நேரிடும். பின்னை ஏன் சொல்லுகின்றேன் என்றால், என்னைப் போலவே காந்தியாரும் தாம் ஒரு 'சூத்திரன்' என்பதை நன்றாய் உணர்ந்து கொண்டார்; இந்து மதம் திருத்தமுடியாதது என்பதையும் உணர்ந்து கொண்டார். இந்தியா, இந்தியர், இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை என்றும்; சிந்து நதியால் இந்தப் பெயர் ஏற்பட்டதென்றும்; இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குக் கேடாக இருப்பது மத உணர்ச்சியே என்றும்; தீண்டாமை, அரிஜனன் என்பது இந்துமத உணர்ச்சி உள்ளவரை மாற்றமடைய முடியாதது என்றும்; ஒரே கடவுள்தான் உண்டு—அதுதான் அல்லா, 'காட்' (God) ராம் என்றும்; குரான் இந்துக்கள் படிப்பதற்குரியதென்றும், அதைப் பாராயணம் செய்ய வேண்டுமென்றும்; இந்துக்கள் முஸ்லிம்களுக்கு மிக்க தீங்கு இழைத்துவிட்டார்கள் என்றும்; அவற்றைப் பரிகரிக்காமல் மேலால் ஒரு காரியம் செய்யத் தன்னால் அனுமதிக்க முடியாதென்றும் பச்சையாகக் கூற ஆரம்பித்து விட்டார்.

பார்ப்பனர்களின் உண்மையான தன்மையை நன்றாய் அறிந்து கொண்டார். தன் பெயரைச் சொல்லிப் பதவிக்கு வந்தவர்களையும், அவர்களின் அக்கிரமங்களை, கொள்ளையை, ஒழுக்க ஈனமான—நாணய ஈனமான காரியங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தான் பல தவறுகள் செய்துவிட்டதாகவும், அவற்றிற்குப் பரிகாரம் செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்றும் கருதிப் பரிகாரத்தில் பிரவேசித்தார். அப் பரிகாரமானது அவரால் நடைபெற்றே தீரும். அப்பொழுது திராவிடர் கழகக் கொள்கையும், திட்டமும்தான் இந்தியா முழுவதற்கும் ஏற்படவேண்டியதாகும். நமக்கும் சட்டப்படி, சாஸ்திரப்படி, மதப்படி—சூத்திரப் பட்டம் ஒழியும்; நம் நாடும் பிரிந்து நமக்குக் கிடைக்கும்; இதில் சந்தேகமில்லை. காந்தியார் திடீரென்று தமது பழைய கருத்துக்களிலிருந்து இப்படித் திரும்பியதற்குக் காரணம், பார்ப்பனர் தன்மையும், தனது முக்கிய சிஷ்யர்கள் யோக்கியதையும் அவருக்கு நன்றாய் விளங்கிவிட்டதுதான்.

அன்றியும், 'இந்துக்கள் யாவரும் குரான் படியுங்கள்' என்றதிலிருந்தும், தானும் குரான் படித்துக்கொண்டு 'ராம்—ரஹீம்' (அல்லாஹ்) பஜனை செய்ததிலிருந்தும், மற்றவர்களையும் செய்யச் செய்ததிலிருந்தும்—சாதிமத சம்பந்தமாக அவர் அடைந்த மாற்றத்திற்கு அளவு காட்ட வேண்டுமா என்று கேட்கிறேன்.

தவிரவும், காந்தியார் விக்கிரக ஆராதனைக்கு மாத்திரம் குறை சொல்லாமல், கடவுள் என்பதை மனித உருவாக, வஸ்துவாக, ஒரு தனிப் பொருளாகக் கற்பித்துக்கொண்டு இருக்கிறவர்களுக்குப் படும்படியாக, 'எனக்கு, கடவுள் ஒரு வஸ்துவாக—தனிப்பட்ட பண்டமாக இருக்கிறது என்பதில் நம்பிக்கையில்லை' ('I have no belief in personal God') என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லிவிட்டார். அதாவது, கடவுள் என்பதை நான் ஒரு செயலாக, சக்தியாகக் கருதுகிறேனே ஒழிய, ஒரு மனிதன் செய்கை போலவோ, ஒரு ஜீவன் செய்கை போலவோ கருதவில்லை என்பதாகச் சொல்லிவிட்டார். இதற்கு, 'இயற்கை நடப்புதான் கடவுள்' என்பது பொருளாகும். இந்த எண்ணம் அணு அளவாவது மக்களுக்குள் வருமேயானால் கோவில், விக்கிரகம், உண்டைக் கட்டி, படையல்; அவைகளுக்குக் கலியாணம், உற்சவம் முதலியதான வழிகளில் பார்ப்பனர் பணம் பறிக்கும் தந்திரமும், சோம்பேறி வாழ்வும் அடியோடு நின்றுவிடும்; அப்புறம் 'மேல் உலக—கீழ் உலக'ப் பித்தலாட்டங்களும், அவற்றால் பார்ப்பனர்களுக்கு ஏற்படும் கொள்ளை வருவாய்களும் ஒழிந்துவிடும். சுருக்கமாகச் சொன்னால், பார்ப்பனீயமே பட்டு அழிந்துவிடும். ஆகவே, நமக்கு மாத்திரம் அல்லாமல் 'இந்திய நாடு' முழுவதுமே சமய, சமுதாயத் துறையில் ஏற்பட இருந்த புரட்சிகரமான அனேக மாறுதல்கள்தான் காந்தியார் பார்ப்பனரால் கொலை செய்யப்பட நேர்ந்ததற்குக் காரணம். அப்படிப்பட்ட மாறுதலை விரும்பும் நாம் அதற்காக மிகமிகத் துக்கமும் துயரமும் அடைகிறோம்.

[தூத்துக்குடியில், 8, 9-5-1948-ல் நடந்த 18-வது மாகாண தி. க. மாநாட்டில் தலைமை உரை—
'குடி அரசு' 15-5-1948]

8. காந்தியார் மாற்றமும், கொலையும்

தோழர்களே!

சுதந்திரம் வந்துவிட்டதாக விளம்பரப்படுத்தப்பட்டு வெள்ளையனும் போய் விட்டதாகக் கூறப்பட்ட அந்தத் தினத்திலிருந்து, காந்தியாரின் எண்ணங்களில் பல குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுவந்ததை நான் கண்டேன். காங்கிரஸ்காரர்கள் விரும்பியபடி சுயராஜ்யம் கிடைக்குமானால், நம் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் என்னென்ன கேடுகள் விளையக்கூடும் என்று நான் இடைவிடாது கூறிவந்தேனோ, அக் கேடுகள் விளைய நேரிட்டதை உணர்ந்து, காந்தியார் அதை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார்; அக் கேடுகளையும் அனுபவிக்க ஆரம்பித்தார்; அவசரப்பட்டு சுயராஜ்யம் கேட்டது எங்கு ஆபத்தாக முடியுமோ என்று கவலைகொள்ள ஆரம்பித்தார்; தமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று தாம் கருதிவந்தவர்களில் பெரும்பாலோரைப் பற்றி, நான் என்ன மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தேனோ அதேபோல அவரும், அவர்களைப் பற்றிக்கொள்ள ஆரம்பித்தார்; சுருங்கக் கூறவேண்டுமானால், உண்மையை உணர ஆரம்பித்தார்; தாம் செய்த பல தவறுகளை உணர ஆரம்பித்தார்; அத் தவறுதல்களைத் திருத்திக்கொள்ளவும் ஆரம்பித்தார் என்று கூறலாம்.

அத் திருத்தங்களைச் செய்யப் புகுந் தறுவாயில், தமது எண்ணங்களுக்கேற்பச் செயலாற்ற முற்பட்ட தறுவாயில், அவரது முற்போக்கு எண்ணங்களால் தமக்குக் கேடு சூழும் என்று அஞ்சிய சுயநல சோம்பேறிக் கூட்டத்தாரால் கொலை செய்யப்பட்டார். இதுதான் நமக்கு மனவேதனையாக இருக்கிறது. அப்படிப்பட்ட துர்மரணத்திற்கு மட்டும் அவர் ஆளாகாமல் இருந்திருப்பாரேயானால், இதற்குள்ளாக இந்நாட்டில் எத்தனையோ புரட்சிகரமான காரியங்களை அவர் செய்து இருப்பார். இன்று ஏற்பட்டுள்ள கொள்ளைகள், கொடுமைகள், பல அட்டூழியங்கள், அநீதிகள் இவற்றையெல்லாம் நிறுத்தியிருப்பார்; அல்லது, அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும், இவற்றிற்கெல்லாம் சரியான பரிகாரமாவது தேடியிருப்பார். குற்றம் பல கண்டதால் காங்கிரஸின் அமைப்பு முறையையே மாற்றியமைக்க ஆரம்பித்தார். நமது கொள்கைகளை நேர்முகமாக ஆதரிக்காவிட்டாலும், மறைமுகமாகவாவது ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார்; அதுவும், மறுபடியும் நான் அவருடைய சிஷ்யனாக ஆக வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் ஆசை கொள்ளும் அளவுக்கு ஆதரிக்க ஆரம்பித்தார். அப்படி நான் ஏங்கியிருந்த சந்தர்ப்பத்தில் அவர் கொல்லப்பட நேர்ந்ததுதான் எனக்கு அளவிடற்கரிய துக்கம் உண்டாகக் காரணமாயமைந்தது.

அவர் நமது கொள்கையை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார் என்பதற்குப் பல காரணங்கள் காட்டமுடியும் என்றாலும், உதாரணமாக ஒன்றிரண்டு காரணங்களை மட்டும் இங்கு கூற ஆசைப்படுகிறேன். 'காங்கிரஸ்காரர்கள் தமது தியாகத்திற்குக் கூலி கேட்க ஆரம்பித்துவிட்டனர்; பதவி வேட்டை துவங்கிவிட்டனர்; காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் நீதி நிர்வாகத்தில் அடிக்கடி தலையிடுகின்றனர்' என்றெல்லாம் குற்றம் கூறினார். இதையெல்லாம் தாமாகக் கூறுவது அழகாக இருக்காதென்று கருதி, தமது நம்பிக்கைக்கும் நன் மதிப்புக்குமுரிய தோழர் கொண்டா வெங்கடப்பையா அவர்களால் எழுதப்பட்ட கடிதத்தை அப்படியே வெளியிட்டு, அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவற்றையும் தாம் உண்மையென்றே நம்புவதாகவும், மேற்படி குற்றங்களுக்காக ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் அவமானப்படவேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டிருந்தார். இவைதான்— நான் காங்கிரஸ் பிரமுகர்களைப்பற்றி அடிக்கடி கூறிவந்த கருத்துக்களாகும்.

இங்கு திராவிடர் கழகம் வலுப்பெற்று வருவது கண்டு பொறாமை கொண்ட சில பார்ப்பனர்கள் காந்தியாரிடம் காவடி தூக்கிச் சென்றனர். தென்னாட்டில் திராவிடர் கழகம் என்றொரு கழகம் வளர்ந்து வருகிறதென்றும், அதைக் கண்டு காங்கிரஸ் மந்திரிகளே பயப்

படுகிறார்கள் என்றும், காங்கிரஸ் ஆட்சியில் தம் மக்களுக்குப் பள்ளிக்கூடங்களில் படிக்க இடம் கிடைப்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறதென்றும் கூறினார்கள். அதைக் கேட்ட காந்தியார் கூறிய பதிலில்தான், நான் கூறிய மனமாற்றம் இருக்கிறது.

கவனித்துப் பாருங்கள் : 'என்னருமை பிராமணத் தோழர்களே! நீங்கள் கடவுளோடு நேர்தொடர்பு வைத்துக் கொண்டுள்ளவர்களாயிற்றே! அதிலும் மகா புத்திசாலிகளாயிற்றே! அப்படியிருக்க, உங்களுக்கு எதற்குப் படிப்பு வேண்டும்? கடவுளை நம்பி, சதா கடவுள் பணிசெய்து கொண்டிருங்களேன்! படியாத முட்டாள்களான அவர்களுக்குத் (திராவிடர்களுக்கு) தானே படிப்பு அவசியம்; அவர்கள் படிக்கட்டுமே! உங்கள் பிள்ளைகளுக்கு இடமில்லாமற் போனால் வருத்தப்படாதீர்கள். உங்கள் விகிதாச்சார இடங்களைக்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்காக விட்டுக்கொடுத்து உதவுங்கள்' என்று அவர் கூறினார். இதைத்தானே நாமும் இன்றுவரை கூறிவந்தோம்.

எனவேதான், அவரது மறைவால் நாம் வருத்தப்பட நேரிட்டதே ஒழிய, அவரது பேரைச் சொல்லி உங்களது நன்மதிப்பைப் பெறுவதற்காக அல்ல என்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்தவே இவ்வளவும் கூற நேரிட்டது.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1948]

9. காந்தியே காரணம்

தோழர்களே!

காந்திதான் நமது நாட்டை வடநாட்டானுக்கும் பார்ப்பானுக்கும் ஒப்படைத்து, நம்மை அடிமையாக்கியதற்குக் காரணம். சாதி ஒழிப்புக்கு சாஸ்திரம் புராணம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுபோல—நாட்டுப் பிரிவினைக்குக் காந்தி ஒழிய வேண்டும்.

நம் மக்களும் மற்ற மக்களும் பாடுபட்டு மக்கள் பலம் ஏற்பட்ட பிறகும், வெள்ளைக்காரன் தன் அவசியத்தை முன்னிட்டும் போகவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததால், காந்தி கையில் நாட்டைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

நாங்கள் அந்தக் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்சி 'ரெகக்னைஸ்டு பார்ட்டி' என்பது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். சட்டசபை, பார்லிமெண்ட் வரை திறமை, நாணயம் நன்றாகத் தெரியும்.

இந்த ஒரு நாட்டை முன்னிட்டு அவர்கள் பிரிவினை செய்தால், அவர்களுக்கு மேலும் பல நாட்டுத் தொல்லை வந்து சேரும். அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது மாத்திரமல்ல, தங்கள் காரியமும் ஆகவேண்டும் என்ற நிலை இருந்தது. அதற்குப் பல பேர்களிடம் ஒப்படைத்தால் தங்கள் காரியம் ஆகாது என்று எண்ணினார்கள், வெள்ளையர்கள்.

ஆகவே, தங்களுக்கு ஒப்பந்தமாக இருந்து, தங்கள் நாட்டுக்கு வேண்டிய காரியங்களை முடித்துக்கொள்ள ஒரே ஆளாக இருந்தால் நல்லது என்று எண்ணினார்கள். அதற்கு, இந்த காந்திதான் உதவியாக இருந்தார். ஆகவே, அவரிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள், வெள்ளையர்கள்.

இப்போது ஒவ்வொரு அன்னிய நாட்டானுக்கும் சுரண்டுவதற்கு ஒவ்வொரு நாடு வேண்டியதாக இருக்கிறது. இதில் ஒன்றும் இரகசியமில்லை. இன்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வேண்டியவன்; இந்தியாவுக்கு பிரிட்டன் அந்தரங்கத்தில் நண்பன்.

தங்கள் ஏகாதிபத்தியத்திற்கு ஆபத்து வந்துவிடாமல் இருக்கவே வெள்ளைக்காரர்கள் காந்தியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு அவரிடம் நாட்டை ஒப்படைத்தார்கள்.

ஒப்படைக்கும்போது நீதி சொல்லிவிட்டு—அதாவது இன்னின்ன மாதிரி சட்டம் செய்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

பர்மாவில் 1954 நவம்பரில் நடைபெற்ற 'உலக பவுத்த மாநாட்டில்'
பங்கு பெற்றபோது டாக்டர் B. R. அம்பேத்கார் அவர்களுடன்
பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் (3–12–1954)

அவர்கள் போகிறவரையில் ஆமாம் போட்டுவிட்டு—அவர்கள் போனதும், உடனே வடநாட்டுக்குச் சாதகமாக அரசியல் சட்டம் செய்துகொண்டுவிட்டார்கள்.

காந்திக்குச் செலவுக்குப் பணம் கொடுத்தவன் வடநாட்டான்; மனிதனுக்கு மேற்பட்ட தெய்வீக சக்தியுடையவர் என்று விளம்பரம் செய்தவன் பார்ப்பான். ஆகவே, அவர்கள் இருவருக்கும் எது சரியோ அந்தப்படி நடக்க காந்தி ஒப்புக்கொண்டுவிட்டார்.

[சேலத்தில், 18-8-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-8-1957]

10. டாக்டர் அம்பேத்கார்

தலைவரவர்களே! தோழர்களே!

1925ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல; மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்துவந்திருக்கிறது என்பதால். ஆனால், வடநாட்டில் அப்படியல்ல.

வடநாட்டில் இருக்கிற இந்த பேதத்தைப்பற்றி, இழிசாதித் தன்மையைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. சூத்திரன், பஞ்சமன் என்றால் ஏதோ 'திவான் பகதூர்', 'ராவ்பகதூர்' பட்டம் என்பது போன்ற பட்டம் என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிற மக்கள் வாழும் நாடு அது. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியமாகும். ஆனால், அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கார் சுயமரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார். நாசிக்கில் கூடிய ஒரு மாநாட்டிலே இராமாயணத்தைப் போட்டுக் கொளுத்தியிருக்கிறார். 1930-லே என்று நினைக்கிறேன்—'தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்திலே இருப்பது தவறு; இந்து மதந்தான் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கியது' என்பதாகச் சொல்லி, 'அனைவரும் முஸ்லிம் ஆகவேண்டும்; நானும் முஸ்லிம் ஆகப்போகிறேன்' என்று அவர் சொன்னார். எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதைக் கண்டித்தார்கள். மாளவியா, விஜயராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம், 'அம்பேத்கார் அவர்களே, உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்' என்பதாகத் தந்தி கொடுத்தார்கள்.

அப்போது தோழர் அம்பேத்கார் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், 'நீங்கள் ஒண்டியாகப் (தனியாகப்) போகக்கூடாது; குறைந்தது ஓர் இலட்சம் பேரோடு மதம் மாறவேண்டும்; அப்போதுதான் முஸ்லிமும் மதிப்பான். இல்லாவிட்டால், தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்கமாட்டான். உங்கள் தாழ்த்தப்பட்ட இனம் நசுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கும். முஸ்லிம் ஆகிவிட்டால் இந்துமதத்தின் இழிவுபற்றி நீங்கள் பேசினால், 'முஸ்லிம் இந்துமதத்தைப்பற்றிப் பேசுவதா?' என்பதாகக் கிளப்பிவிடுவார்கள். ஆகையால், ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் போகும்போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்' என்பதாகத் தந்தி கொடுத்தேன்.

அதற்கப்புறந்தானே—பயந்துகொண்டு, ஆதித் திராவிட மக்களுக்கு காங்கிரஸ்காரர்களும் ஏதோ நன்மை செய்வதாக வந்தார்கள்! 'மதம் மாறுவேன்' என்று மிரட்டிய தோழர் அம்பேத்கார் அவர்கள் ஆதித் திராவிட மக்களுக்குப் பெரும் அளவுக்கு நன்மை செய்து கொடுத்திருக்கிறார். உள்ளபடி சொல்லுகிறேன், இந்துக்கள் யாரிடமாவது வசமாக மாட்டினார்கள் என்றால், அது தோழர் ஜின்னா அவர்களிடமும், தோழர் அம்பேத்கார் அவர்களிடமும்தான். தோழர் ஜின்னாவிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள்; ஆனால் அம்பேத்காரிடமிருந்து விடுதலை பெறமுடியவில்லை; அவர் அடிக்கடி ஓங்கி அடித்துக் கொண்டேயிருக்கிறார்.

இன்னும், தோழர் அம்பேத்கார் அவர்களின் தைரியத்துக்கு ஒரு உதாரணம் சொல்லு கிறேன். இலண்டனில் காந்தியார், 'நான் இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னபோது, 'நீங்கள் எங்கள் இனத்தின் பிரதிநிதியல்ல' என்று அம்பேத்தார் அவர்கள் சொன்னார். காந்தியார் திரும்பவும், 'இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக் கிறேன்' என்று சொன்னவுடன், அம்பேத்கார் அவர்கள், 'பத்துத் தடவை சொல்லுகிறேன், நீங்கள் எங்கள் பிரதிநிதி அல்ல என்று; திரும்பத்திரும்ப வெட்கமில்லாமல் பிரதிநிதி என்று சொல்லுகிறீர்கள்; நீங்கள் உங்களுடைய மகாத்மா பட்டத்தைத் துஷ்பிரயோகம் செய் கிறீர்கள்' என்பதாகச் சொன்னார். காந்தியார் பேசாமல் உட்கார்ந்துவிட்டார். பின்பு, இந் நாட்டுப் பத்திரிகைகள் அம்பேத்காரைக் கண்டபடி தாக்கின. ஆனால், அவர் ஏதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அவருடைய தைரியத்திற்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அவர் மந்திரியாக இருக்கும்போது ஒருதடவை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'கீதை-முட்டாள்களின் பிதற்றல்' என்று சொன்னார். கீதைக்கு இந்த நாட்டில் எவ்வளவு விளம்பரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காந்தியாரி லிருந்து, ஆச்சாரியாரிலிருந்து—பெரிய பெரிய அய்கோர்ட் ஜட்ஜுகள், இன்னும் பெரிய மனிதர்கள் என்பவர்களெல்லாம் கீதையைப் புகழ்வதே வேலையாகக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; கீதைக்கு வியாக்கியானம் கூறுவது, கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது என்பது ஒரு மதிப்பு, கவுரவம் என்பதாக இந்த நாட்டில் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரும் விளம்பரமான நிலையிலிருக்கிற கீதையை, 'முட்டாள்களின் பிதற்றல்' என்று அம்பேத்கார் சொன்னார். முட்டாள்களுடையது என்றாலே மோசம்; அதிலும் அந்த முட்டாள்களுடைய பிதற்றல் என்று கீதையை மிகவும் இழிவுபடுத்திக் கூறினார். யார்யாரை இதுபோய்ப் பாதிக்கிறது பாருங்கள்! அவர் அந்தப்படி பேசியபின் பார்ப்பனப் பத்திரிகைகள் அவருடைய பேச்சுக்கு மறுப்பு ஒன்றும் சொல்லாமல், 'ஒரு மந்திரியாய் இருப்பவர் இப்படியெல்லாம் பேசலாமா?' என்று எழுதின. அவ்வளவு தான் அவைகளால் முடியுமே தவிர, அவர் சொல்லுவதை எப்படி எந்த ஆதாரத்தின்மீது மறுக்கமுடியும்?

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பவுத்தக் கொள்கையில் சேரப்போவதாகச் சொல்லிவருகிறார். உண்மையில் பவுத்தம் ஒரு உயர்ந்த மார்க்கமாகும். அது ஆரியத்தை—அதன் கலாச்சாரத்தைக் கண்டிப்பதற்கு என்றே எழுந்ததாகும். ஆரியத்தின் சாதிப்பிரிவையும், வேத, புராண, இதிகாசத்தைப்பற்றியும் பவுத்தம் கண்டிக்கிறது; அவைகளை ஒத்துக்கொள்வதில்லை. அதே மாதிரி, பவுத்தம் கடவுள் என்பதாக ஒன்றைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அதுபோலவேதான் 'ஆத்மா' என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லி, 'ஆத்மா'வை மறுத்திருக்கிறது.

அம்பேத்கார் பவுத்தத்தில் சேருகிறேன் என்று சொன்னவுடன், எப்போதும் போலப் பலர் எதிர்த்தார்கள். ஆனாலும், இஸ்லாம் ஆவது என்றால் பயப்படுகிற அளவுக்கு பவுத்தர் ஆகிவிடுவது என்று சொல்லுவதற்கு, இந்துமதத்தார்கள் (பார்ப்பனர்கள்) பயப்பட மாட்டார்கள். ஏனென்றால், பவுத்தத்தை இந்துமதத்தோடு ஏறக்குறையக் கலரவைத்து விட்டார்கள்.

[சென்னையில், 13-5-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-5-1952]

தலைவரவர்களே! தோழர்களே!

மறைந்த பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் நானும் நெடுநாட்களாக நண்பர்கள் என்பது மாத்திரமல்ல; பல விஷயங்களில் எனது கருத்தும் அவரது கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

சாதி ஒழிப்பு என்ற விஷயத்தில் மாத்திரமே நாங்கள் ஒத்த கருத்துடையவர்கள் என்பது அல்ல. இந்துமதம், இந்து சாஸ்திரங்கள், இந்துக் கடவுள்கள், தேவர்கள் என்பவர்கள்பற்றிய—இந்துமதப் புராணங்கள் இவைகளைக் குறித்தும்கூட எங்கள் இரண்டு பேர்களின் கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அதுமட்டுமல்ல, அவைகளைப் பற்றி நான் எவ்வளவு உறுதியாகவும் பலமாகவும் எனது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறேனோ அவ்வாறுதான் அவரும் மிகவும் உறுதியாகவும் பலமாகவும் இலட்சியங்களைக் கடைப்பிடித்தார். உதாரணமாக, பார்ப்பனர் போற்றிப் பிரச்சாரம் செய்யும் கீதை என்பதை, 'முட்டாளின் உளறல்' என்று சொன்னவர் டாக்டர் அம்பேத்கார்!

இப்படிச் சில விஷயங்களில் மாத்திரமல்ல; பல விஷயங்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரோ அதே அபிப்பிராயம்தான் எனக்கும் இருந்துவந்தது. பல விஷயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் கலந்துகொள்ளாமலேயே— அந்தப்படி அபிப்பிராயம் கொண்டவர்களாக இருந்துவந்தோம். சந்தர்ப்பம் கிடைத்த போது நானும் அவரும் எங்கள் இருவருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வதும் உண்டு.

உதாரணமாக, பர்மாவில் நடந்த உலக பவுத்தர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள நாங்கள் போயிருந்தபோது அம்பேத்கார் அவர்கள் என்னைப் பார்த்து, 'என்ன இராமசாமி, நாம் இப்படிப் பேசிக்கொண்டே இருப்பதால் என்ன பலன் ஏற்படமுடியும்? வாருங்கள், நாம் இரண்டு பேரும் புத்தமதத்தில் சேர்ந்துவிடுவோம்!' என்றார். நான் சொன்னேன், 'ரொம்ப சரி; இப்போது முதலில் நீங்கள் சேருங்கள்; நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால், தமிழ்நாட்டில் நான் இப்போது சாதி ஒழிப்பைப்பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவருகிறேன். இந்துக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமன் சிலைகளை உடைத்தும், படங்களை எரித்தும், இந்து மதத்திலுள்ள பல விஷயங்களைப்பற்றியும் மக்களிடம் எடுத்துச்சொல்லி இப்போது பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் நான் செய்யமுடியாது; ஒரு இந்துவாக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும், 'நீ அதைச் சொல்லக்கூடாது' என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால், நான் 'இன்னொரு மதக்காரனாக' இருந்தால் அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்கமுடியாது. ஆகவே, நான் வெளியிலிருந்து கொண்டு புத்த மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்துவருகிறேன்' என்பதாகச் சொன்னேன்.

என் பிரச்சாரத்தில் சாதி ஒழியவேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லிவரவில்லை. அதற்கு முக்கிய அடிப்படையான சாதி, மதம்—ஆகாரம் ஒழியவேண்டும் என்றுதான் நானும் சொல்லி வருகிறேன்; அவரும் அப்படித்தான் சொன்னார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் புத்த மார்க்கத்தில் சேரும்போது என்னென்ன பிரமாணம் எடுத்துப் படித்தாரோ, [இராமனையும், கிருஷ்ணனையும் கடவுள்களாக வணங்க மாட்டேன் என்பன போன்றவைகள்] அவைகளைத்தான் நான் கூறுகிறேன். அதன்படி தான் எங்கள் நாட்டில் பத்தாயிரக்கணக்கான மக்கள் இராமனையும் பிள்ளையாரையும் கொளுத்தினார்கள்; உடைத்தார்கள். இந்தப் பிரமாணத்தில் உள்ள பல விஷயங்கள் எனக்குப் பல வருடங்களுக்கு முன்பே தோன்றித்தான், அவைகளை நாங்கள் பிரச்சாரமாகச் செய்து வருகிறோம். இதைப் படித்துவிட்டு நான் சொல்லவில்லை. எப்படியோ எங்களுக்கு அப்படித்தான் அபிப்பிராயம் தோன்றியது.

[டெல்லி பகார்கஞ்சில், 15-2-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1959]

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது.

இன்றுமட்டுமல்ல; முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

நமது 'குடிஅரசு' ஏட்டில் என்னென்ன கருத்துக்கள் வருமோ அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டிவந்தேன்.

நமது 'குடி அரசி'ல் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

டாக்டர் அம்பேத்கார் ஆரம்பத்தில் இந்து மதத்தை ஏதாவது திருத்தலாமா என்று எண்ணினார்; பிறகு அதனைத் திருத்தமுடியாது—அதனை ஒழித்தால் ஒழிய வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

[சென்னையில், 29-5-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-6-1972]

11. இராஜாஜி

நாட்டில் அரசியலில் ஆகட்டும், பொது வாழ்வில் ஆகட்டும் (பெருவாரி மக்களால் பாராட்டப்படும்) பெரிய மனிதர் என்பதற்கு ஒரு நபர் கூட இல்லாமல் போய்விட்டார்கள்! இந்த நிலைமையை நாட்டின் பொதுவளர்ச்சிக்கு ஒரு உதாரணம் என்று சொல்லலாம். என்றாலும், அரசியல் வாழ்வில் நமது நாட்டில் பெரியவராகத் தன்னைக் காட்டிக் கொண்டும், தனது இன மக்களால் விளம்பரம் செய்யப்பட்டுக்கொண்டும் இருக்கும் பெரியவர் உயர்திரு. இராஜாஜி (இராஜகோபாலாச்சாரியார்) அவர்கள் ஒரு பெரியவர் என்பதாக இருந்து வருகிறார். அவரைத் தவிர்த்து மற்றொரு விரலை நீட்ட நபரே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

என்றாலும், அவரை ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு, அவருடைய வயதைத் தவிர வேறு ஏதாவது தன்மை இருக்கிறதா என்றால் ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். என்றாலும், அவரிடம் பொதுத் தொண்டு என்பதாக நேர்மையான தொண்டோ, குணமோ, தன்மையோ எதுவுமில்லை. அவரும் அதைப் பற்றி இலட்சியம் செய்யவில்லை.

அவரிடமிருக்கும் தொண்டின் தன்மையெல்லாம்—முதலாவது அவருடைய சமுதாய எதிரிகளை ஒழிக்கவேண்டும்; தமது சமுதாயம் ஒன்றே உயர் நிலையில் வாழவேண்டும் என்ற தன்மையையுடைய தொண்டு ஒன்றுதான் அவரிடம் இருக்கின்றது. இதற்காக அவர் செய்திருக்கும் தியாகம் மகத்தானது. என்னவென்றால் உண்மை, யோக்கியம், நேர்மை, நாணயம், மானம் முதலிய உயிர்போன்ற அருங் குணங்களை எல்லாம் வெகு எளிதில் தியாகம் செய்து விட்டார்.

தன்னைப்பற்றி மக்கள் என்ன சொல்லுகின்றார்கள்; எப்படிக் கருதுகின்றார்கள் என்பது பற்றி இலட்சியம் செய்வது என்பதைச் சிந்திப்பதையே அடியோடு தியாகம் செய்துவிட்டார். இந்தத் தியாகம் சுயநலத்திற்காகவே அல்ல; தமது சமுதாயத்திற்காகவே ஆகும். என்றாலும், செல்வத்தைச் சேர்ப்பதில் மாத்திரம் வெகு பிடிமானமாக இருந்து வளர்ந்துகொண்டே வருகிறார். இந்த இலட்சணத்தோடு இப்போது அவரது தொண்டெல்லாம்—அவரது சமுதாயத்தின் எதிரிகளாகிய நமது சமுதாயத்தை அழித்து ஒழித்துக் கட்டுவது என்பதுதான். இந்தக் காரியத்திற்கு இன்றைய நிலையில் மேற்கண்ட தியாகங்களை எல்லாம் செய்தாக வேண்டும் என்பதாகக் கருதி, துணிந்து செய்துவிட முனைந்து இருக்கிறார்.

எனக்கு அவரைச் சற்றேறக்குறைய 1910-லிருந்தே தெரியும். 1917-ல் நான் ஈரோடு முனிசிபல் சேர்மன்; அவர் சேலத்தில் சேர்மன். அதற்கு முன்னால் அவர் வக்கீலாக இருக்கும்போது முதலே சமுதாய சம்பந்தமான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுவார்.

C. RAJAGOPALACHARI

60, BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS-17

11 8.64

'விடுதலையும் பெரியாரும் என்
அன்பார்ந்த எதிரிகள்! என் நண்பரின்
86-ம் ஆண்டு பிறந்த நாளன்று என்
வாழ்த்துக்களை பெரியார் அன்புடன்
பெற்றுக் கொள்வார்களாக

[signature]

அப்போது அவருக்குள்ள தனிப்பெருமை, சமபந்தி போஜனங்களில் கலந்துகொள்வது தான். அன்றைக்கு (50, 60 ஆண்டுகளுக்குமுன்) அது பெரிய யோக்கியதாம்சமாக இருந்தது. மேற்கண்ட தன்மைகளால் எங்களுக்குள் நட்புரிமை வளர்ந்தது. அரசியலில் காங்கிரசிலும் கலந்தோம்; அவரிஷ்டப்படி காங்கிரசுக்கு அவரைப்போலவே முழு நேரத் தொண்டனானேன்; பிறகு இருவரும் அத்தியந்த நண்பர்களானோம்; அனேக இரகசியங்களைத் தைரியமாய் மனம்விட்டுப் பேசிக்கொள்வோம். இருவரும் சேர்ந்து காந்தியாரின் முட்டாள்தனங்களையும், பித்தலாட்டங்களையும்பற்றிப் பேசுவோம். காந்தியார் புத்திசாலித் தன்மையையும், இராஜாஜியின் புத்திசாலித் தன்மையையும்பற்றி சங்கோஜம் இல்லாமல், பயம் இல்லாமல் அவரும் நானும் பேசுவோம்.

அவர் என்னைப்பற்றி, 'அதிசயமான யோக்கியர்' என்று கருதிப் பேசி இருக்கிறார். நானும் அவரைப் பற்றி, 'என் ஆயுள் உள்ளவரையிலும் அவரைத் தலைவராகக்கொண்டு நடப்பது' என்றும் முடிவு பண்ணிக்கொண்டு பேசி இருக்கிறேன். ஜனங்களும் பெரிதும் அவரை அப்படிக் கருதினார்கள். சர்.பி. தியாகராசச் செட்டியாரே, 'பார்ப்பனர் எல்லோரும் இராஜகோபாலாச்சாரியார்போல் இருந்தால், பார்ப்பனர் அல்லாதார் இயக்கமே தேவையில்லை' என்று பேசியிருக்கிறார். அவர் வேஷத்திற்காக அப்படி நடக்கவில்லை; நானும் உண்மையாகவேதான் நடந்துகொண்டேன்.

பிறகு எங்களுக்கு உண்மையாகவே சாதி அபிமானம் ஏற்பட்டுவிட்டது, அவர், பார்ப்பனர் நன்மையையே எல்லாக் காரியத்திலும் பேச்சிலும் கருத்தாய்க் கொண்டார்; நானும் பார்ப்பனரல்லாதார் நன்மையையே கருத்தாய்க் கொண்டு நடந்துவந்தேன். இந்த எங்கள் இருவரின் கருத்துக்கள்தான் நம் நாட்டின் அரசியல், சமுதாயஇயல் —தத்துவமாக, தொண்டாக, கட்சியாக, மக்கள் கடமையாக நடந்துவருகின்றன. இதில் நியாயம், மறுக்கக்கூடாத தன்மை நம்மிடமிருப்பதால், இராஜாஜி ஓர் அடாவடிப் போக்கில் நடந்து கொள்கிறார். இந்த நடப்புக்குத்தான் இராஜாஜி சகலத்தையும் பரித் தியாகம் செய்ய வேண்டியவராகி விட்டார். எப்படி என்றால், நாடகத்தில்—ஒரு விபச்சாரி (தாசி) பதிவிரதை வேடம் போட்டால் ஒரு குடும்பப் பெண் எப்படி நடந்துகொள்வாளோ— அதுபோல் தனது இலட்சியத்தில் நடந்துகொள்கிறார். இதில் அவருக்கு வெட்கமோ, அவமானமோ, பழிக்கு ஆளாகவேண்டிய தன்மையோ ஏற்பட அவசியமோ இல்லை. என்ன செய்தாவது நம்மை ஒழிக்க வேண்டியதுதான் அவரது தலையாய கடமை.

ஆகவே, இராஜாஜிக்கு என்னதான் 'புகழ்' இருந்தாலும், அவரைப் பெரியவர் என்று நாம் கருதினால்—பிறர் கருத இடங்கொடுத்தால் நமக்கு அழிவு நெருங்கிவிடும்.

['விடுதலை'-தலையங்கம்—15-11-1972]

இராஜாஜி—காங்கிரஸ் ஆட்சியில், பொதுமக்கள் 100 க்கு 7 பேர் படித்திருக்கும் நாட்டில், சுமார் 6000 பள்ளிக்கூடம் உள்ள நாட்டில் 2200 பள்ளிகளை மூடின யோக்கியர் தான் இவர்! 1952-ல் மெஜாரிட்டி இல்லாமல் பதவியில் வந்து உட்கார்ந்துகொண்டு 100-க்கு 15 பேர் படித்திருக்கும் நாடான நம் நாட்டில் 12,000 பள்ளிகள் இருந்ததில் 6000 பள்ளிகளை மூடி—அதுவும், 'மாணவர்கள் ஒரு வேளைதான் படிக்க வேண்டும்; மறு வேளை சாதித்தொழில் செய்யவேண்டும்' என்று உத்தரவு போட்டு, அதனால் அரசியல் வாழ்விலிருந்தே வெளியேற்றப்பட்டவர்தானே இவர்!

இவரது அரசியல் நாணயத்தை எடுத்துக்கொண்டாலும், 'மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கமாட்டோம்' என்று கட்சிக் கொள்கையைச் செய்துகொண்டு— அதனால் பதவிக்கு வந்து, மாதம் 20,000 ரூபாய் சம்பளம் வாங்கிப் பல இலட்ச ரூபாய் சொத்துக்காரராக இருக்கும் தியாகிதானே இவர்! இவர் அரசியல், சமுதாய வாழ்வில் எதில் நேர்மையாய், யோக்கியமாய் நடந்துகொண்டிருக்கிறார்? இவர் வந்து பொதுமக்களுக்கு

அறிவு சொல்ல, இவருக்கு எதில் என்ன யோக்கியதை இருக்கிறது? அயோக்கியத்தனமான பத்திரிகைகளின் ஆதரவு இருக்கிறது என்பதாலும், தன்னிடம் பத்திரிகைகள் இருக்கின்றன என்பதாலும் ஒரு மனிதன் எந்த அயோக்கியத்தனத்தையும் செய்யலாமா? செய்தாலும்—மடையனும், அயோக்கியனும், துரோகிப் பயல்களுமாக இருக்கும் மக்கள்தாம் சரி என்று சொல்வார்கள்; யோக்கியர்கள் இழித்துத்தான் கூறுவார்கள். ஏன் இவ்வளவு வேதனைப் பட்டு எழுதுகிறேன் என்றால், 'கருணாநிதி ஆட்சி விலகிவிட வேண்டும்; அல்லது விலக்கப்பட வேண்டும்' என்று அவர் சொன்னால், அப்படிச் சொல்லும் கருத்தையும் தெரிந்தால் மனம் பதறுமா, பதறாதா?

அயோக்கியத்தனத்திற்கு எல்லை இல்லையென்றால், மனித சமுதாய நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களுக்கு மனம் பதறாதா? வெடிக்காதா? என்றுதான் கூறுகிறேன். எனவே மக்களே, நீங்கள் அவற்றை மதிக்க மாட்டீர்கள் என்று இருந்தாலும் உங்கள் வெறுப்பை அவர்களுக்குக் காட்டுங்கள் என்று வேண்டி இதை முடிக்கிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—16-11-1972]

12. பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப்பற்றித் தெளிவாகப் பேசவேண்டுமானால் பகுத்தறிவுக் கூட்டத்தில்தான் பேசமுடியும். அப்படிக்கில்லாது கடவுள், மதம், மூடநம்பிக்கைக்கு ஆட்பட்ட இடங்களில் பேசுவதென்றால் வழவழா கொழகொழா என்றுதான் பேச வேண்டிவரும்.

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் தோன்றுகிறவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான் ஆகும்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்லுவதற்கு இல்லை.

நமது தமிழ்ப் புலவர்கள் வள்ளுவரைக் கூறுவார்கள்; அடுத்தது சாதிச் செல்வாக்கும் அரசியல் செல்வாக்கும் கொண்ட பாரதியாரைக் கூறுவார்கள். இவர்கள் எல்லாம் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்; பெரிதும் மக்கள் இன்று ஒத்துக்கொள்ளத் தக்கவோ, பின்பற்றத் தக்கவோ கூடிய கருத்துக்களைக் கூறவில்லை.

பாரதிதாசன் அப்படி அல்லவே; அவர் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார். அவருக்கு அனுசரணையாகச் சுயமரியாதை இயக்கமும் திராவிடர் இயக்கமும் இருந்தன.

சுருங்கச் சொன்னால், அவர்போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

அவர் கடவுள், மதம், சாஸ்திரம், பெண்ணடிமை, மூடநம்பிக்கைகள் இவைகளைக் கண்டித்து நன்றாகப் பாடியுள்ளார்.

பாரதியாருக்கோ, வள்ளுவருக்கோ கொடுக்கின்ற மரியாதை நமது பாரதிதாசனுக்கு நம் மக்கள் கொடுக்கத் தவறிவிட்டார்கள். காரணம், பாரதிதாசன் புதுமைக் கவிஞர்; புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவர் என்பதால்தான்.



கவிஞர் பாரதிதாசன் அவர்களுடன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

மற்ற கவிஞர்கள் பழைமை விரும்பிகள் ஆனதினால், பழமையில் பற்றுக்கொண்ட மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றார்கள்; போற்றுகின்றார்கள். நமது முட்டாள் தனத்துக்கு உதாரணமே வள்ளுவரைப் பாராட்டுவது ஒன்றே போதுமே!

வள்ளுவர், 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றும்

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்றும் பாடியுள்ளார். எனவே, அவர் பகுத்தறிவுவாதி; யார் எதைச் சொன்னாலும் அறிவு கொண்டு ஆராய்ந்து உணரவேண்டும் என்று சொல்லி இருக்கின்றார் என்று கூறுவார்கள்.

தோழர்களே! வள்ளுவர் இப்படிக்கூறி இருந்தாலும் அது அவர் கொள்கையல்ல; ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார், அவ்வளவுதான். மற்றபடி, அந்தப் பழைமை விரும்பியே 'உலகத்தார் உண்டென்பதை இல்லென்பான் வையத்தில் அலகையா வைக்கப் படும்' என்று கூறியுள்ளாரே! எனவே மூடநம்பிக்கை முதலியவைகளில் நம்பிக்கை உடையவரே வள்ளுவர்.

பாரதியாரை எடுத்துக்கொண்டாலோ, அவர் தாவாத சொள்கை இல்லை; கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் நடப்பு முதலிய எல்லாவற்றையும் கூறியுள்ளார். எனவேதான் பழைமை விரும்பிகள் இவர்களை எல்லாம் போற்றுகின்றார்கள்.

பாரதிதாசன் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களை எடுத்துப் பாட முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக் களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவருக்குப் பாராட்டும், பெருமையும் அளிக்கவேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவுவாதி யானபடி யால் அவருடைய பணிக்குக் கிடைக்கவேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப்போன்று புதிய கருத்துக்களை எடுத்துச்சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன்போல நமது நாட்டில் புரட்சிப் புலவர்கள் தோன்றி இருந்திருப் பார்களேயானால், நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்துவரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

[சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில், 8-3-1973-ல் சொற்பொழிவு]

3. தலைவர்களின் கடிதங்கள்

ஸ்ரீமுகம்

திரு. ஈ. வெ. இராமசாமியாருக்கு ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம்.

ஸ்ரீசங்கராச்சாரி சமஸ்தானம்–நிஜசிருங்கேரி க. நெ. 53. (முகாம் புஷ்பவனம்)

அஸ்மத் பிரிய முக்கிய சிஷ்யரான கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு கஸ்பா வெங்கிட்ட சாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் இராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த்த அய்ஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டு திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசீர்வதித்து எழுதிவைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆற்காடென்னும் சடாரண்ண க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஷ்பவனம் என்னும் புதுப்பட்டி கிராமத்திய ஸ்ரீபரத்துவாஜ மகாரிஷி ஆசிரமத்தில் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் குறித்து தபஸ் செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பியிருக்கிறோம்.

சம்பாதி–லோககுரு ஸ்தானமாகிய இதில் பரதகண்டத்திலுள்ள சனாதன தர்மத்தை கெடுக்காமலும் எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும்படிக்கும் பாரபக்ஷம் இல்லாமல் படிக்கும் சாஸ்திர எல்லைகள் கடவாமல்படிச்கும் பிபீலகாதி பிரம்மம் பரியந்தம் (எறும்பு முதல் பிரம்மாதிகளிலும்) எல்லாவற்றிலுமிருப்பது ஒரே பிரம்மமென்று எல்லோருக்கும் பிரம்மானந்தத்தை அடையச்செய்யவே ஜெகத்குருபீடம் இருக்கிறது. காமகாண்டத்தில் அவரவர்கள் நன்றாய் கடமைகளைச்செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்டபிரமானந்த சாக்ஷாத்காரம் அடையச்செய்வதே விரதமாகக்கொண்ட இந்த குரு பீடமானது ஸ்ரீஆதிசங்கரபகவான் அவதாரம் பரம்பரைக் கிரமமாய் வந்துகொண்டும் குருவாயிருக்கும்போதே சிஷ்யர்களை ஏற்படுத்தி சன்மார்க்க சதாச்சாரத்தில் பழக்கி பீடாதிபதியம் சன்யாசம் அளிப்பது வழக்கமாயிருக்கிறது. காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து சாத்தியமான வரையில் சிஷ்யர்களை சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாயிருக்கச் செய்துகொண்டு வருகிறது. இன்னம் காலதேச வர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலைமையை அனுசரித்து சிஷ்யர்களுக்கு சில சுவதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்கவேண்டியது அவசியமாகத் தோன்றி இருக்கிறது.

நீங்கள் நெடுநாளையப் பாரபக்ஷமின்றியிலும் தாட்சண்யங்களுக்கு உட்படாமலும், ஜீவகாருண்யமுள்ளவராயும் சுவயநன்மையைக் கருதாமல் லோகநன்மையையே முக்கியமாகக்கருதி சுகதுக்கங்கள் பாராமல் மானாவமானத்தைக் கவனியாமல் ஜென்மமெடுத்தற்கு பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினிசமேதராய் பாடுபட்டுவருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கி இருக்கிறது. உங்களை நேரில் பார்த்து, உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயங்களையும் உங்களுக்குச்சொல்லி தக்க சகாயமும் செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று குருதேவதாப்பிரேரணை உண்டாயிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தர்மபத்தினியும் அனாதியாய் உங்களுக்குச் சொந்தபாத்தியமான இந்த ஜகத்குருபீடத்தை சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு வந்து ஸ்ரீசாரதாசந்திரமவுளீதரவாமிகள் பிரசாத அனுக்கிரகம்பெற்று இப்போதிலும் அதிகமான சிரேயசை அடைவீர்கள் என்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதிவைத்து அனுப்பலாயிற்று. விவேகிகளுக்கு என்ன எழுதவேண்டி இருக்கிறது. —ஸ்ரீபிரஸ்தாவித்தியானந்தநாத பாரதஸ்வாமி சங்கராச்சாரியூ, பு. அ. வெங்கட்டரமணம் சர்வாதிகாரி (என்று கன்னடத்தில்)

['குடிஅரசு' 2-3-1930]

பெரியார் அவர்களின் முதல் துணைவியார்
அன்னை ஈ. வெ. ரா. நாகம்மையார்

சிருங்கேரி மடாதிபதி உயர்திரு ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களிடமிருந்து நமக்கு வந்த ஸ்ரீமுக அழைப்பை இவ்விதழில் வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். திரு மடாதிபதி அவர்கள் அந்த ஸ்ரீமுகம் நமக்கு அனுப்பியதற்காகவும் மற்றும் அதில் நம்முடைய நமது மனைவியாருடையவும் ஒரு சிறு தொண்டை மிகுதியும் பாராட்டி, தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவும் நாம் நம் சார்பாகவும் நமது மனைவியாரின் சார்பாகவும் மனப் பூர்த்தியான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நிற்க, அந்த ஸ்ரீமுகத்தில் சனாதன தர்மத்தைக் கெடுக்காமல் கருமகாண்டத்தில் உள்ள அவர்கள் கடமைகளைச் செய்து; சாத்திரங்கள் இடம் கொடுக்கும் வரையில் என்கின்ற நிபந்தனைகள் கண்டு அதற்கு விரோதம் இல்லாமல் சில சுதந்திரங்கள் அளிக்கப் படும்—என்கின்ற வாசகங்கள் காணப்படுகின்றபடியால் நான் அங்கு செல்வதால் ஏதாவது பயன் ஏற்படுமா என்கின்ற விஷயம் நமக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது. ஆயினும், பொறுப்புள்ள ஒரு பதவியை வகிப்பவரும் பல கொள்கைகளுக்கு அபிப்பிராய கர்த்தாவாய் இருப்பவரும் பல மக்களால் விளங்கிக் கொண்டாடி மதிக்கத் தக்கவராக இருப்பவருமான ஒரு பெரியாரின் அழைப்பை மதித்து அதற்கு இணங்கி அங்குச் சென்று வரவேண்டியது மிக்க நியாயமாகுமென்றே நமக்குத் தோன்றுகின்றது. ஆயினும், நமது நண்பர்களின் விருப்பத்தை அறிந்து சென்று வரலாமென்றே கருதியிருக்கின்றோம்.

['குடி அரசு' 2-3-1930]

நாகம்மாள் அறிக்கை

நமது பத்திரிகையின் ஆசிரியர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின் பொருட்டுப் புறப்பட்டுச் சுமார் நான்கு மாதங்களாகின்றன; இந்த நான்கு மாதங்களாக நமது 'குடி அரசு'க்குக் கட்டுரைச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் ஒருசிறிதும் வறுமை தோன்றாதபடி இரண்டையும் வழங்கி ஆதரித்து வந்த நமது இயக்கத் தோழர்களாகிய கட்டுரையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்த வாரம் நமது பத்திரிகைக்கு எட்டாவது ஆண்டு பிறக்கப் போவதால் நமது இயக்கத் தோழர்களாகிய கட்டுரையாளர்களும் வாசகர்களும் சிறந்த கட்டுரைகளை வழங்கியும், எண்ணற்ற சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும் பத்திரிகையின் வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்.
பிரிண்டர் அண்டு பப்ளிஷர்.

['குடி அரசு' 24-4-1932]

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் உடல் மெலிவினால் இப்போது ஒரு நிமிஷம் சேர்ந்தாற்போல் ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசினால் தொண்டை சப்தம் குறைந்து இளைப்பு எடுக்கின்றது. எதையாவது சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நிமிஷம் எழுதினாலும், படித்தாலும் உடனே தலை வலியும், மயக்கமும் உண்டாகிவிடுகின்றன. ஆகாரம் மிகச் சிறுசிறு அளவே சாப்பிடவேண்டியிருக்கின்றது. சற்று அதிகமாகச் சாப்பிட்டால் வயிறு வலிக்கின்றது. ஆகையால், அவர் வெளியில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளுவதால் 'குடிஅரசு' பத்திரிகை ஆசிரியர் பொறுப்பை திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் கவனித்து வருகின்றார். குறைந்தது 2, 3 மாத காலத்துக்காவது சந்தாதாரர் களும் வாசகர்களும் பத்திரிகையை ஆதரித்து திரு. சாமி சிதம்பரனார் அவர்களை உற்சாகப்படுத்திவைக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்

['குடிஅரசு' 15-11-1931]

சர். பன்னீர்செல்வம் கடிதம்

Air Port,
Karachi, 29–2–1940

எனது அன்புள்ள தலைவர் அவர்கட்கு,

நேற்று மாலை பம்பாயிலிருந்து இங்குவந்து சேர்ந்தேன். இன்று காலை நான் எந்த பிளேனில் போகிறதாயிருந்தேனோ, அந்த பிளேன் இன்னும் இங்குவந்து சேரவில்லை. அனேகமாய் இன்று மாலை இங்கு வந்துசேரும். நாளைக் காலை 7 மணி சுமாருக்கு நான் இங்கிருந்து கிளம்புவேன். ஆகவே, வரும் திங்கட்கிழமை லண்டன் போய்ச்சேருவேன் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு,
தங்களன்புள்ள,
(A. T. பன்னீர்செல்வம்)

['குடிஅரசு' 7-4-1940

ஜின்னா பாராட்டு

New Delhi,
Feb. 26, 1940

President,
S. I. L. F., Pycrofts Road,
Royapetta, Madras.

Congratulate you on behalf of Muslim League Party, Central Legislature Assembly on your success in getting Government of Madras remove compulsory study of Hindi.

Your efforts to prevent Congress Government to enforce Hindi upon unwilling people and your sufferings and sacrifices in that struggle have met with well deserved success.

I am sure that those who suffered will have satisfaction that their great sacrifices were not in vain.

M. A. JINNA

மொழிபெயர்ப்பு :

கட்டாயப் பாடமாக இந்தி கற்கவேண்டுமென்றிருந்ததைச் சென்னை சர்க்கார் ரத்து செய்யும்படி செய்து, தாங்கள் வெற்றி பெற்றமைக்கு, மத்திய அசெம்பிளி முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் தங்களைப் பாராட்டுகிறேன்.

விரும்பாத மக்கள்மீது இந்தியைக் கட்டாயமாகப் புகுத்திய காங்கிரஸ் சர்க்காரின் செய்கையைத் தடுக்கத் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், பட்டபாடுகளும், அப் போராட்டத்தில் தாங்கள் செய்த தியாகங்களும் வெற்றி பெற்றுவிட்டன. மேலும், அப் போராட்டத்தில் கலந்து பலவித கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர்கள் இப்போது மனங் குளிர்ந்திருப்பார்கள் என்றும், அவர்களின் மகத்தான தியாகங்களெல்லாம் வீணாகவில்லை யென்று உணருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

புதுடெல்லி
26–2–1940

எம். ஏ. ஜின்னா

['குடிஅரசு' 3-3-1940]

சென்னையில் செல்வத்துக்கு உபசாரம்



இந்திய மந்திரியின் ஆலோசனையாளராக பதவிப் பொறுப்பேற்க லண்டனுக்குப் பயணமான சர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களைப் பாராட்டிச் சென்னையில் நடந்த தேநீர் விருந்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்—'குடி அரசு' 25-2-1940



சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு 29–2–1940-ல் பம்பாயிலிருந்து விடுத்த கடிதம்

'குடி அரசு'—7–4–1940

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு குன்றக்குடி அடிகள் விடுத்தமடல்

குன்றக்குடி, டிச. 26, 1956

அன்புள்ள பெரியார் அவர்களுக்கு!

திருவருள் இன்பம் யாண்டும் மலர்க!

தாங்கள் 15-12-1956, மதுரையில் நடந்த திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் அறிவித்திருக்கும் போராட்டச் செய்தியைப் படித்தோம். இது சம்பந்தமாக நாம் இருவரும் திருப்பரங்குன்றிலிருந்து திருநெல்வேலி போகும்வரை பேசிக்கொண்டதும் நினைவிருக்கலாம். இது சம்பந்தமாகப் பின்னீடு, தாங்கள் வெளியிட்டதாக வந்துள்ள செய்திகள் அவ்வளவு திருப்தியாக இல்லை.

மேலும், இது சம்பந்தமாக ஆஸ்திகத்தின் பேரில் சிலர் வெளியிட்டுள்ள அருவருக்கத்தக்க அறிக்கையை மறந்து விடுவதற்கில்லை.

இது சம்பந்தமாக ஒரு வரையறுத்த முடிவிற்கு வருவது நம்மிருவருடைய கடமையாக இருக்கிறது; அவசியமாகவும் இருக்கிறது.

1. தாங்கள் நடத்த இருக்கும் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையையும் திருக்கோயில் வழிபாட்டையும் அடிப்படையாக வைத்திருக்கின்றீர்களா? அல்லது, சிலர் கருதுவது போல இனம் அல்லது சாதியின் அடிப்படையில் கிளர்ச்சிதான் நோக்கமா?

2. 'தமிழன் வழிபாட்டிற்கு நியமிக்கப் பெறவேண்டும்' என்று நிபந்தனை கூறியுள்ளீர்கள்; 'தமிழன்' என்றால், தாங்கள் யாரைத் தமிழர் என்று கருதுகின்றீர்கள்? இதில் சாதி அல்லது இனம் உணர்ச்சி தலை காட்டுகின்றதா? இது சம்பந்தமாகத் தாங்கள் தெளிவுபடுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

தெய்வசிகாமணி, 26-12-1956

குன்றக்குடி அடிகளாருக்கு பெரியாரவர்கள், விடுத்த பதில் மடல்:

போற்றுதற்குரிய தவத்திரு அடிகளார் அவர்கட்கு! ஈ. வெ. ராமசாமி வணக்கம்.

அடிகளாரது 26-ஆம் தேதிய கடிதம் பெற்றேன். செய்தி உணர்ந்தேன். 'ஒரு வரையறுத்த முடிவிற்கு வருவது நம்மிருவருடைய கடமையாயிருக்கிறது' என்று எழுதியிருக்கிறீர்கள்.

எனது கருத்தை என் பிறந்த நாள் விழாவில், அடிகளார் தலைமையில் நான் பேசும்போது விளக்கியிருக்கிறேன். அதுவேதான் எனது நிலைமையும். மற்றும், திருநெல்வேலி செல்லும்போதும் அடிகளாருக்குத் தெரியும்படி சொல்லியிருக்கிறேன். நிற்க.

போராட்டத்தின் இலட்சியம் இரண்டு.

ஒன்று: தமிழ்நாட்டில், தமிழன் கோவிலில் உள்ள கடவுள் என்பவைகளுக்குத் தமிழில் பூசை செய்யப்பட வேண்டும்.

இரண்டு: தமிழ்நாட்டில், தமிழன் கோயிலுக்குள் தமிழரால் பூசை செய்யப்பட வேண்டும்.

இந்த இரண்டு காரியமும் கடவுளையும், வழிபாட்டையும் பற்றியது மாத்திரமல்ல; தமிழ் மொழியின் தன்மானத்தையும், தமிழனின் தன்மானத்தையும் பற்றியதுமாகும்.

கோவிலிலுள்ள கடவுள் என்பதைத் தமிழில் பூசை செய்யாததற்குக் காரணம், வட மொழியிலேயே பூசை செய்வதற்குக் காரணம்—'தமிழ் மிலேச்ச மொழி' என்பதும், வடமொழி 'தேவமொழி' என்பதுமேயாகும்.

அதுபோலவே, தமிழன் பூசை செய்யக்கூடாது என்பதற்கு, 'தமிழன் சூத்திரன், இழிமகன்' என்பதும்; பார்ப்பான் மேல்மகன் 'பிராமணன்' என்பதுமே காரணம். இதை அடிகளார் ஒப்புக் கொள்ளாதிருக்கலாம்; ஒப்புக்கொள்ள மறுக்கலாம்.

அடிகளார் மன்னிக்க வேண்டும். நான், நாம் குறிப்பிடும் கடவுள்களைப் பற்றியதை மத, சம்பிரதாய ஆதாரங்களிலிருந்தும், நடப்பிலிருந்தும் அறிந்ததைச் சொல்லுகிறேன்.

இவை எப்படியோ இருக்கட்டும். தமிழ் மொழியில் பூசை நடக்கவேண்டுமென்று அடிகளாரும் கூறுகிறார்கள்; நானும் கூறுகிறேன். இதற்காகக் கிளர்ச்சியோ, போராட்டமோ நடத்த வேண்டுமென்பதில் அடிகளாருக்கும் மறுப்பு இருக்க நியாயமில்லை.

தமிழன் பூசை செய்யவேண்டும் என்பதிலே அடிகளார் கருத்து எப்படியிருந்தாலும் நான் தீவிரமான ஆசையுள்ளவனாகவே இருக்கிறேன்.

இவைகளுக்காக நடைபெறும் போராட்டங்களில் அடிகள் எந்த அளவுக்கு அருள் கூர்ந்தாலும் அது எனது பேறு ஆகவே கருதுவேன்.

மற்றபடி, நாம் இருவரும் நட்பு முறையில் அன்பர்கள் ஆவோம். கொள்கைகளில் ஒன்றுபட்டவர்களாக இருக்க வாய்ப்பில்லாதவர்கள் என்றாலும்—ஒன்றுபட்ட இலட்சியங்களுக்கு மக்கள் நலனையும் தமிழர் தன்மானத்தையும் முன்னிட்டுக் கூடியதைச் செய்வோம்.

இப்படி எது செய்யினும், அடிகளார் அருளையும் ஆணையையும் முன்வைத்தே கூடியதைச் செய்ய வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

'இந்தப் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையும் வழிபாட்டு நம்பிக்கையும் அடிப்படையா? அல்லது இனம், சாதி அடிப்படையா'? என்று அடிகளார் கேட்டிருக்கிறார்கள். அடிகளார் அருள்கூர்ந்து முன்னின்று செய்யும் போராட்டத்திற்குக் கடவுள் நம்பிக்கையும் வழிபாட்டு நம்பிக்கையும் உடையவர்களையே கலந்து கொள்ளும்படி பார்த்துக்கொள்கிறேன்; அதில் அடிகளாருக்குச் சங்கடம் வேண்டியதில்லை.

தவிர, 'தமிழன் என்று யாரைக் கருதுகிறீர்கள்?' என்று அடிகளார் கேட்டிருக்கிறார்கள். நான் 'தமிழன்' என்று கருதுவது—பெரிதும் நம் நாட்டில் 'சூத்திரர்கள்' என்று சொல்லப்படுகிறவர்களையே யாகும். இப்பொழுது கோயில்களில் பூசை செய்கிறவர்கள் சூத்திரர்கள் என்று ஒரு சாரார் சொல்லக்கூடும். அதாவது 'குருக்கள் சூத்திரர்கள்' என்பதே.

அது வெறும் பேச்சு. காரியத்தில் குருக்கள் எல்லாம் நம்மைத் தீண்டாதவர்களாகவும் கருதுவதோடு, நம்முடனிருந்து உண்ணக்கூடாதவர்கள் என்றே இருந்து வருகின்றார்கள்; பூணூல் அணிந்திருக்கிறார்கள்.

அவர்கள் சூத்திரர்கள் அல்லது நம்மவர்கள் ஆனால், நாம் பூசை செய்வதற்கு என்ன தடங்கல்? நமக்கேன் அந்த உரிமை கிடைக்கும்படி பாடுபடக்கூடாது?

எனவே, அருள்கூர்ந்து எனது முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டுகிறேன். குற்றமிருப்பின் மன்னித்தருள்க.

ஈ. வெ. ராமசாமி

['விடுதலை' 7-11-1957]



பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 90-வது பிறந்தநாள் செய்தியினை 'விடுதலை' மலரில் (17–9–1968) கண்ணுற்று, அமெரிக்காவில், நியூயார்க் மருத்துவமனையிலிருந்து C. N. அண்ணாதுரை எழுதிய மடல்



அய்ரோப்பிய சுற்றுப் பயணத்தின்போது முதலமைச்சர் மு. கருணாநிதி,
பெரியார் ஈ. வெ. ரா அவர்கட்கு விடுத்த மடல்.

முதல்வர் கருணாநிதியின் கடிதம்

மு. கருணாநிதி, நியூயார்க்.

அன்புமிக்க அய்யா பெரியார் அவர்கட்கு, தங்கள் கருணாநிதி வணக்கம். இன்று நயாகரா நீர்வீழ்ச்சி பார்த்துவிட்டு, அமெரிக்காவில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படும் (Thanksgiving day) 'நன்றி அறிவிப்பு நாள்' விழாவில் 'நயாகரா கிளப்' விருந்தினராக இருந்துவிட்டு நியூயார்க் செல்லும் வழியில் இந்த மடல் எழுதுகிறேன்.

தாங்களும் அம்மையாரும் நண்பர் வீரமணியும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். தங்களுக்குத் தேவைப்படும் ஓய்வுபற்றி நான் அதிகம் கூறவேண்டியதில்லை.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் அரசியல் பிரிவில் அரசியல் கருத்தரங்கில் கலந்து உரையாற்றினேன். அங்கு தங்களைப் பற்றியும், நமது இயக்க வரலாறு பற்றியும், அண்ணாவைப் பற்றியும், இன்றையத் தமிழக அரசு பற்றியும் அமெரிக்க மாணவர்களும் பேராசிரியர்களும் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நம்மவர்கள்தாம் தமிழகத்தில் நமது வளர்ச்சியை, சூரியனை மேகத்தால் மூடநினைப்பதுபோல இருட்டடிப்புச் செய்ய முனைகிறார்களே தவிர, உலகின் பல்வேறு நாடுகளில் நமது பணியின் பயன்பற்றிப் பேசப்படுகிறது.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சி, தங்கள் ஓயாத தொண்டு, தங்கள் காலத்திலேயே கொள்கைகள் பெற்றுவரும் வெற்றி குறித்தெல்லாம் குறிப்பிட்டேன். பேச்சுக்குப் பிறகு தங்களைப்பற்றியும், தன்மான இயக்கவளர்ச்சி பற்றியும் நிறைய வினாக்கள் எழுப்பினார்கள். பதில்களை விளக்கமாக அளித்தேன்.

கண்ணில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. பயணத்தை முடித்துக் கொண்டு தங்களையும், தமிழகத்து அன்பு முகங்களையும் காண டிசம்பர் முதல் வாரத்தில் வந்து சேருகிறேன். அமெரிக்காவில் விஞ்ஞானக் கூடங்கள் பலவற்றையும் கண்டேன். அவைகளின் சிறப்புக்களை நேரில்தான் விளக்கவேண்டும்.

தங்கள் அன்பு மறவாத,
(ஒ-ம்) மு. கருணாநிதி
வணக்கம்

['விடுதலை' 3-12-1971]

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

2

பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்

திருச்சிராப்பள்ளி-2.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shrr; erd; (09-06-2011)
jkHk; t i y (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

வே. ஆனைமுத்து

வெளியீடு:
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (இரண்டாம் தொகுதி)
முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME II

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume II
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

பகுதி VI

தத்துவம்

1. பிரகிருதிவாதம்

1. மெட்டீரியலிசம் (பிரகிருதிவாதம்)

சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்த பிறகு, அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்றுச் செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு, மக்களுக்குள் தானாகவே ஒருவிதக் குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை நாம் நன்றாய் உணர்ந்து வருகின்றோம். அதோடு கூட பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதார்களில் அரசியல் தேசியம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்ப்பதற்கு, கடவுளையும் மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக்கொண்டும் விஷமப் பிரச்சாரம் செய்து வருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர் இவ் விஷமப் பிரச்சாரத்தைக் கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர் களும் சமய சம்பந்தமாக மனத்துடிப்புக் கொள்வதாலும் நமது நிலையையும் கடவுள், மதம் என்பது பற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டு மென்பதாகக் கருதி இதனை எழுதப் புகுந்தோம்.

இவைகளைப்பற்றி இதற்குமுன் பல தடவைகள் பேசியும், எழுதியும் இருக் கின்றோம். ஆயினும், அவைகளைவிட இது சற்றுத் தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவு செய்து இதைச் சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

இந்த முதல் பகுதியானது, இதே தலைப்பின்கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண் டாவது சுயமரியாதை மாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப் பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கி எழுதும்படி சொன்னதை ஆதரித்தும் எழுதப்பட்டதாகும்.

முதலாவதாக, நமக்குக் கடவுளைப் பற்றியாவது, மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து, விடுதலையை உண்டாக்கவேண்டும் என்பதே முக்கிய கவலை என்பதாகவும் அனேக தடவைகளில் வெளியிட்டு இருக்கிறோம். அதுவும், பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும் மதத் தையும் கொண்டுவந்து குறுக்கே போட்டுவிட்டதால்தான் நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதாயிற்றே ஒழிய, உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேச வேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்க வில்லை. அதுபோலவேதான், சைவ சமயத்தைப் பற்றியும் நாம் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படியெனில், சில சைவத் தலைவர்கள் நமக்கு எதிராகத் தம்மால் கூடிய சூழ்ச்சிகளெல்லாம் செய்து பார்த்தும் ஒன்றிலும் பயன் தராததால், கடைசியாகச் சமயமென்றும் சமயப் பெரியார் என்றும் கூறிக்கொண்டு, அவ் வார்த்தைகளையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில பைத்தியக்காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக்கொண்டு, அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப்பிவிட்டுச் சூழ்ச்சிப் போர் தொடுக்க ஆரம்பித்ததன் பலனாய், சைவ சமயம் என்பதும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் சந்திக்கு வரவேண்டியவர்களானதோடு சைவப் பெரியார்கள் என்பவர் களின் சாயமும் வெளுக்கவேண்டியதாய்விட்டது.

இன்றையதினம் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், இராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி, முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும், சமயப் பற்றும் கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்திகர்கள், சமயத் துரோகிகள் எனவும் தீர்மானிக்கப்பட்டு, அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப் பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள்-மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயின என்பதுபற்றியும், இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா, அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக் கினார்களா, அல்லது அறியாமையினால் உண்டாக்கினார்களா என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது, அதாவது மக்கள்—கடமை என்ன என்பதுபற்றியும் சற்று ஆலோசித்துப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கின்றோம். அதைப்பற்றி முதலாவதாக, இங்கு குணம், உருவம், பெயர் அற்ற தன்மைகளையுடைய கடவுள் என்பதைப் பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப் பற்றியுமே இங்கு விவரிக்கக் கருதியுள்ளோமே தவிர, மற்றபடி பல கடவுள்களின் தன்மை யையும், மதப் பிரிவுகளான கிறிஸ்துவ, இஸ்லாமிய, ஜைன, பவுத்த, சீக்கிய, சைவ, வைணவ, ஸ்மார்த்த, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப் பற்றியும் நாம் இங்கு தனித் தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு, ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்து வார்த்தம் என்கிறதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமேதான்—ஒவ்வொருவரும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியர்களையோ— காப்பாற்றிக் கொள்ள முடிந்ததே ஒழிய, அறிவின் மீதோ, நியாயத்தின் மீதோ நிலைநிறுத்த முடியாமற் போய்விட்ட விஷயம் உலகம் அறிந்ததாகும். ஆதலால், இப் பகுதியில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

முதலாவது, மக்களுக்குக் கடவுள் எப்பொழுது, எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து, வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில், இப்பொழுதுகூட மக்களுக்குப் பிறர் சொல்லிக் கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும், நினைப்பும் ஏற்படுகின்றதே தவிர, தானாக ஏற்படுவதில்லை. எப்படியெனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு—ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி, சாமியென்றும் அதைக் கைகூப்பிக் கும்பிடு என்றும் சொல்லிக்கொடுத்த பிறகே குழந்தை சாமியைக் கும்பிட அறிகின்றது. அது போல, ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனத்திற்குக் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்க வேண்டும். அது எப்படி என்றும் எப்போதென்றும் பார்ப்போமானால், சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில் தான் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்கவேண்டும். கடவுள் என்பது—கடவுள், ஸ்வாமி, அல்லா, 'காட்' என்ற—தமிழ், சமஸ்கிருதம், அரபி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும், குறியில், அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும், நடப் பிற்கும், அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால் அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்ச பூதக் கூட்டு என்று சொல்லப்படுமானால் அக் கூட்டின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதும்—அந்த சக்திதான் கடவுள், எல்லாம்வல்ல ஆண்டவன், அல்லா, 'காட்' என்று சொல்லப்படுகிறதென்று சொல்லுவதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனத்திற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதாய் இருக்கிறது.

ஆகவே, அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படி இருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டில் உள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணரமுடியும். அதாவது, இப்பொழுது நமது நாட்டில் உள்ள கடவுள்கள் எவை என்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், பயங்கரமான மிருகங்கள் ஆகியவைகளெல்லாம் கடவுள்களாகக் கருதப்படு கின்றன. இவைகளெல்லாம், இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவைகள். அதிலும் இமயமலையே 'கயிலயங்கிரி' யாகவும், அதுவும் வெள்ளி மலையாகவும், அங்குக் கடவுளிருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீர் அம் மலையில் உள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும் கருதப் பட்டதோடு, இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும்; மேல் லோகம் என்றும், கீழ் நாட்டைப் பாதாளலோகம் நரகலோகம் என்றும் இப்படிப் பல வாறாகக் கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது, அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவைகளைக் கடவுள் என்றும், அவற்றின் இயங்குதலைக் கடவுள் சக்தி என்றும் சொல்லவேண்டிய அவசியம் தானாகவே ஏற்பட்டது.

இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக, முடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள், ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனா சக்தி என்றும் கருதுகிறார்கள். சிறுவனாய் இருக்கும்போது நாமும் அப்படியே கருதி இருந்தோம். இப்போது அறிவு வளர்ச்சி பெற்ற பின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும், அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியா விட்டாலும் கூட, நாம் அவற்றை ஒருக் காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வ சக்தி என்றோ சொல்லாமல், 'இது ஏதோ தந்திரம்தானே ஒழிய வேறில்லை; ஆனால், அது இன்னது என்று கண்டுபிடிக்க நம்மால் முடியவில்லை' என்று சொல்லி விடுகிறோம். எனவே, ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும் தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு, அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியின் பலனுமேயாகும். அதுபோலவே, நமக்கு இப்பொழுது தெய்வ சக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம், மேல் நாட்டாருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய–சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டு பிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி, அச் சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத் தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வான சாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட கருத்தாகும். இப்பொழுது வான சாஸ்திரம் தெரிந்தவர்கள், பூமி–சூரியன் இவற்றின் இயங்குதல், அதன் கால அளவு ஆகிய வைகளைக் கண்டுபிடித்த பின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணர்ந்து இருக்கிறோம். அதுபோலவே, எங்கிருந்து எப்படி மழைத் தண்ணீர் வருகிறதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும், வருண பகவானும் சிறிது சிறிதாக நம் மனத்தை விட்டு மறையத் தொடங்கி விட்டன. அதுபோலவே, வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற் கூற்று ஆராய்ச்சியும் நமக்குத் தெரியவந்த பின்பு, பேதி, மாரி, அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே, காற்று, நெருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்துவருகின்றன. துப்பாக்கி, பீரங்கி முதலிய

ஆயுதங்கள் கண்டுபிடித்த பின் யானை, புலி, சிங்கம் முதலிய தெய்வங்களைப்பற்றிய பயமும் மறைய ஆரம்பித்துவிட்டன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமேயானால், காரண காரியம், ஆதாரம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்குநாள் மனிதன் அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்துகொண்டேதான் வரும். மேலும், இப்பொழுது ஒருவருக்குக் கடவுள்சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள், மற்றொருவருக்குக் கடவுள்சக்தி என்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு, ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்பொழுதும் நம் மனத்திற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும், அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியம் பெற்றுவிட்டோம் என்றாலும் நமக்குப் பூரண அறிவும், ஆராய்ச்சி முடிவும் ஏற்படும் வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலகமுடியாது. அன்றியும், வாழ்க்கையில் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி சிறிதுகாலம் வரை இருந்தே தீருகிறது. அதாவது, கஷ்டப்பட்டு ஏமாற்றமடைந்தவனுக்கும், ஈடு செய்ய முடியாத நஷ்டம் அடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லி ஆறுதலையும் திருப்தியையும் அடையச் செய்கிறார்கள். நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்குக் காரண காரியம் எட்டாத இடத்திலும் ஈடு செய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக் கொண்டு திருப்தி அடைகின்றார்கள். அப்பொழுது தங்கள் அறிவுக்கு மேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், உறுதியான பக்குவம் அடைந்தவர்கள், எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக்கொண்டு சமாதானம் அடைவதும், தெரியாததாய் இருந்தால், ' நமக்கு எட்டவில்லை ' என்றோ அல்லது ' இதுதான் இயற்கை ' என்றோ கருதித் திருப்தி அடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே, சாதாரண மக்களின் கடவுளுக்கும், சற்று அறிவு உடைய மக்களின் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்களின் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திற்கும் வித்தியாசங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும் கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் வித்தியாசங்கள் உண்டு.

[' குடி அரசு '—கட்டுரை—16-4-1949]

கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்பொழுது, எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையும் இருக்கமுடியும் என்பதைப் பற்றியும் சுருக்கமாக இதன் முன்னர் எழுதியிருந்தோம். அதாவது, மனிதன் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில், கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக்கொள்வதும், உதாரணமாக, அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு, அந் நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த முறையிலேதான் கொஞ்ச காலத்திற்குமுன், அனேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சயின்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு, அனேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டுவிட்டார்கள். உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தி இருக்கும் விஷயமும், அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற ' சயின்ஸ் ' உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால், நாம் இன்னமும் அதை ' ஒரு தெய்வீகச் சக்தி ' என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக் கொண்டு இருந்ததாய்ச் சொல்லப்படும், ' ஞான சிருஷ்டிச் சம்பாஷணை ' என்றுமே சொல்லித் தீருவோம். ஆதலால், மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர, வளர கடவுள்

உணர்ச்சியின் அளவும் குறைந்துகொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே, அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய கடவுள் உணர்ச்சி வளர்ந்துகொண்டே வரும் என்பதும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இப்பொழுதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமே தான் அனேகமாக, தொட்டதற்கெல்லாம் கடவுளும், அவர்தம் செயல்களும் தாண்டவ மாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே 'கடவுள் வருவதை'க்கூடப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அனேகமாகக் கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும் புராணங்கள் என்பவைகளும் மதிப்புப் பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக் கதைகளை அப்படியே—அதாவது, கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக்கொண்டு இருந்தவர்கள்கூட இப்பொழுது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு, தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக்கொண்டு, 'சயின்ஸ்' மூலம் அக் கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டு கஷ்டப்படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால், மக்கள் வரவர இப்பொழுது 'சயின்ஸுக்கு'ப் பொருத்தமில்லாதவைகளை ஏற்க மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டு இருக்கின்றார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுக்களையும், நாட்டியங்களையும் இயந்திரங்களில் பிடித்துக் காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்க பாமர ஜனங்களுக்குக்கூட இவையெல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை குறைந்துவருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எனவே, ஒரு காலத்தில்—அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீரவேண்டுமா என்றால், அது இருந்து தான் வருகிறது. எப்படியும் அது ஒரு அளவுக்காவது—கொஞ்சமாவது இருந்துவரக்கூடும் என்றே சொல்லுவோம்.

ஏனெனில் மனிதன், தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனாதலால் தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு—அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது—அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல; பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும், சுயநலமோ மூடப்பிடிவாதமோ காரணமாகத் தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே, அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதனால்தான். எது எப்படி இருந்தபோதிலும், உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வரவரக் குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார் மீதாவது குற்றம் சொல்வதிலோ பயனில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும் மூடப்பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான், உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் இன்பமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

['குடிஅரசு'-கட்டுரை—23-4-1949]

2. மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததே ஆகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகள் கட்டிக்கொண்டு குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகிவிட்டன. எப்படியெனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால், உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறதோ, அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது; அதேபோல் தீர்மானிக்க வேண்டியதாகிவிட்டது. அக் கொள்கைகள்தாம் இட்பொழுது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம் மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக்கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி, அந் நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடியாத நிலையிலோ, அல்லது தண்டிக்கவேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ, அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ வேறு விதத்தில் ஏமாற்றிப் பிழைப்பதற்காக வேண்டியோ, அக் கொள்கைகளைக் கடவுள் என்பவற்றுடன் சம்பந்தப்படுத்துவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணங்கொண்டோ, அவற்றைக் 'கடவுள் உண்டாக்கினார்' என்றும், அவற்றிற்கு மீறி நடந்தால், 'கடவுள் தண்டிப்பார்' என்றும் சொல்லவேண்டியதாய்விட்டது. (இந்த இடந்தான் முதன் முதலாக மனிதன் தவறு செய்த இடமாகும்.)

ஆனால், இந்தக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி, எந்த ஆதாரங்களைக் கொண்டு என்று பார்ப்போமேயானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் ஆகிய நிலையில்—அதாவது கால தேச வர்த்த மானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேச வர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால், யாராவது அறிஞர், அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது பாமர மக்கள் மூட நம்பிக்கையின் பலனாய், தங்கள் பிடிவாதத்தைக் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில் பிரிந்துபோய்ப் புதிய கொள்கைகளை வகுத்து—அதாவது முன்னையதைத் திருத்தியோ, அல்லது சிலவற்றை மாற்றியோ, அல்லது சில புதியனவற்றைச் சேர்த்தோ ஏதாவது ஒன்றைச் செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டு விடுவதும் உண்டு. இதனால் பாமர மக்கள்—அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், 'என் மதம் பெரிது,' 'உன் மதம் சிறிது' என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டு விடுகின்றது.

இந்தச் சண்டையில்லாமல் திருத்தப்பாடு செய்யலாமா என்று நினைத்த பெரியோர்கள், அக் கொள்கைகளை மாற்றாமல், பழைய கொள்கைகளுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து, திருப்திசெய்ய முயற்சித்து இருக்கின்றார்கள். ஆனாலும், அம் முயற்சிகளின் பலனும், முடிவில் உட்சமயங்களாகவும், சார்புச் சமயங்களாகவும் மாறிற்றே யொழிய, கொள்கைகளின் முக்கியங்கள் திருத்தப்பட முடியாமலேயே போய்விட்டன. இப்படியேதான் மதங்கள் வெகுகாலமாய் மாறி மாறியும், திரிந்து திரிந்தும், பெருகிக் கொண்டும் வந்ததனாலேயே, மதங்களின் உண்மைத் தத்துவமும் அவசியமும் அறிவதிற்கில்லாமல் போனதோடு, அதை ஒரு சடங்காகவே கொள்ளவேண்டியதாகியும் விட்டது. இன்றைய தினம் எந்த மதக்காரனையாவது கண்டு, 'உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன?' என்றால், சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம்—அதாவது, எந்தக் கருத்தைக் கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அதைக் கூறமாட்டான்; அறிந்திருக்கவும் மாட்டான். அதோடு, அம் மூலக் கொள்கைக்கு நேர்விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும்

புகுந்துவிட்டதன்றி, சிலர் அவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் கருவியுமாய்விட்டது. சிறப்பாக, இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக் கொடுமைப்படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும் அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்கும் மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றிப் பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்விதப் பலனும் இல்லாமற் போய்விட்டது. மற்றும், மதத்தினால் ஏற்பட்டுவரும் கெடுதிகள் என்ன என்று பார்ப்போமானால், முதலாவது, மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்துவிடுகிறது. எப்படி எனில், ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி கடவுள் உண்டு என்று நினைப்பதோடு, தனது மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும், மற்றொரு மதக்காரனும் அப்படித்தானே சொல்லுகிறான்! ஆதலால், அவர்களுக்கு வேறு மதத்தையும், நமக்கு வேறு மதத்தையுமா கடவுள் செய்து இருப்பார் என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ, அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படியானால், இது ஒன்றுக்கொன்று முரண்பாடல்லவா என்று எவருமே நினைப்பதில்லை. எவருமே என்றால், மத ஆச்சாரியார்கள், மத அபிமானிகள் என்பவர்கள் முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே, மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்து இருக்கின்றது என்பது விளங்கும். இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக்காட்டவே மதம் உதவுகிறது. மூன்றாவதாக, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தி அடையச்செய்கின்றதே ஒழிய, ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடம் இல்லை. ஏனென்றால், எவ்வளவு நல்ல மதமானாலும், முதலில் ஏதாவதொன்றை—அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்திற்கும் எட்டாததைக் குருட்டுத் தனமாய் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்லாமல் இருப்பதில்லை. அப்படியானால், அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு, அதேபோன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமுமில்லை. ஐந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத் தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும்—அது எவ்வளவு அசம்பாவிதம் ஆனாலும், சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச்செய்கிறது. அன்றியும், மதமானது பணச்செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும் வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச் செய்வதால், மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன்மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கின்றது.

மதம் மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டும், உலக சம்பவங்களின் உண்மைக் காரண காரியங்கள் உணர்வதற்கு இல்லாமல் நிர்ப்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர, ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை வாழும்படி செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு அயோக்கியனானாலும் ஒரு துளி சாம்பல் அவன் மேல் பட்டுவிட்டால் உடனே அவனுடைய சகல பாவமும் தீர்ந்து, நேரே 'கயிலயங்கிரி'க்குப் போய்விடலாம் என்கிறான். சுருக்கமாகச் சொன்னால், வக்கீல் தொழில் செய்பவனும், பொய்ப் புராணப் பிரசங்கம் செய்பவனும் விபூதி பூசிக் கொள்ளுகிற காரணத்தினாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறான். பிறரும் அப்படியே எண்ணவேண்டுமென்றும் ஆசைப்படுகிறான் என்றால், சைவனின் யோக்கியதைக்கும், சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறு சாட்சியம் தேவையா? அதுபோலவே, ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை 'ராமா' என்று சொல்லிவிட்டால் சகல பாவமும் தீர்ந்துவிட்டது என்கிறான். இராமனைவிட உலகில் வேறு தெய்வம் இல்லை

என்கிறான். அதுபோலவே, ஒரு உண்மைக் கிறிஸ்தவன் என்கிறவனும் 'ஏசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும்' என்கின்றான். அன்றியும், 'ஏசுவின்மூலம் அல்லாமல் பாவமன்னிப்பு என்பது கிடையவே கிடையாது' என்கிறான். அதுபோலவே, ஒரு முஸ்லிம், 'குர்-ஆனில் சொல்லப்பட்டதெல்லாம் கடவுள் வாக்கு; அது எந்தத் தேசத்திற்கும் எந்தக் காலத்திற்கும் பொருந்தியது. அதில் உள்ள ஒரு கோடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய்விடும்' என்கின்றான். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பெருமையைக் கூறி, அதுவேதான் உண்மையான மதம்; முறையே கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள்.

['குடி அரசு'-கட்டுரை—23-4-1949]

8. கடவுள்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

'கடவுள்' என்னும் விஷயம் அற்பமானதாகவும் கருதப்படலாம்; பிரமாத மானதாகவும் கருதப்படலாம். எப்படி எனில், சாதாரண மக்களுக்குக் கடவுள், மதம், அரசியல் விஷயங்களின் தத்துவம் மிகவும் அலட்சியமானதாகும். பெரிய அறிஞர்களுக்கு இந்த விஷயங்கள் அபாரமானதும் மிக நுணுக்கமாக அறிந்து பேசத் தக்கதுமாகும்.

நான் எனது தத்துவத்தை எடுத்துச் சொல்லப் பயப்பட்டால், அல்லது பித்தலாட்டம் செய்தால் நான் என்னையே வெறுத்துக்கொள்ள வேண்டியவனாவேன்.

ஆகவே, என்னை நாஸ்திகன், மதத் துவேஷி என்று ஆஸ்திகன் சொல்லுவது மகா மகா அறியாமையும் அலட்சிய புத்தியும் ஆகும்.

இதை ஓர் உதாரணம் காட்டி விளக்குகிறேன். ஓர் ஊரில் ஒரு 'பிச்சைப் பிழைப்புப் பார்ப்பனன்', ஒரு நல்ல காரியம் நடந்ததற்காகப் பிச்சை கொடுக்கும் ஒரு வீட்டிற்கு வந்து பிச்சை கேட்டான். அவ் வீட்டுக்காரர் மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோல் இவனுக்கும் 4 அணா கொடுத்தார். அதற்கு அந்தப் பிச்சைக்காரப் பார்ப்பான் அந்த வீட்டுக்காரரைப் பார்த்துக் கோபித்துக்கொண்டு, 'ஏ! ஓய்! தற்பெருமை, அன்னியர்களைக் குறை கூறுதல், பணத்தாசை ஆகிய மூன்றையும் துறந்து 4 வேதம், 6 சாஸ்திரம், 18 புராணம், தர்க்கம் மீமாம்சம், தத்துவஞானம் ஆகியவைகளைக் கற்ற மிக மேதாவியும், மகா பண்டிதனுமான எனக்கும் 4 அணா, இந்த ஒன்றும்தெரியாத முட்டாள் கழுதைக்கும் 4 அணாவா? வெகு யோக்கியமாய் இருக்கிறதே உம்முடைய தர்மம்!' என்று கேட்டான்.

அதுபோல் இருக்கிறது ஓர் ஆஸ்திகன் என்பவன் ஒருவனைப் பார்த்து நாஸ்திகன் என்று சொல்லுவது என்கிறேன்.

ஏனெனில், இந்த ஆஸ்திகன் கடவுளை எப்படி அறிந்திருக்கிறான் என்றால், 'கடவுள் சர்வ வல்லமை உள்ளவர்; சர்வ வியாபி; சர்வத்தையும் நடத்துகிறவர்; அவருக்கு மேம்பட்டவர் எவரும் இல்லை; அவர் அன்றி ஒரு காரியமும் நடைபெறுவதில்லை' என்பதாக அறிந்திருப்பதாகச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை நான் இல்லை என்பதாகவோ, மறுப்பதாகவோ சொல்லுகிறார் என்றால் இது அந்தப் பார்ப்பனன் சொன்னதற்கே சமமானதாகும்.

அந்தப் பார்ப்பனன் முதலில் தன்னிடம் ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய அபேட்சை இல்லை என்றும் தான் அவைகளை வெறுத்துவிட்டவன் என்றும் சொல்லிவிட்டு, உடனே, 'நான் 4 வேதம், 6 சாஸ்திரம் முதலியவைகளைப் படித்துக் கரைகண்ட மேதாவியாகிய மகா பண்டிதன்' என்கிறான். இதில் அவன் தற்பெருமையை வெறுத்த யோக்கியதை தெரிகிறது.

அதுபோலவே, பரநிந்தை—அன்னியனை இழிவாக்குவது, வைவது தன்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு, 'இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் மடையனுக்குமா நாலணா? என்கிறான்.

அடுத்தபடியாகத் தனக்குப் பண ஆசையே இல்லை என்று சொல்லிவிட்டு, 'இந்த 4 அணாதானா கொடுப்பது?' என்கிறான். எனவே, தன்னைப்பற்றி அவன் சொன்னது அத்தனையும் பொய் என்பதும், கற்பனை என்பதும் பின்னால் சொல்லியதிலிருந்து வெளியாகிவிட்டன.

அதுபோலவே, எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, யாவற்றையும் செய்விக்கிற கடவுளை—ஒரு மனிதன் இல்லை என்று சொல்லுகிறான் என்று சொன்னால், ஒன்று அந்த ஆஸ்திகன் கடவுளுக்கு மேற்கண்ட குணங்கள் இருப்பதாகச் சொன்னது பொய்யாகவும், கற்பனையாகவும் இருக்கவேண்டும்; அல்லது, மற்ற மனிதனைப் பார்த்து, 'நாஸ்திகன், கடவுள் இல்லை என்பவன்' என்று சொன்னது தவறாக, அறியாமையாக, யோசனை அற்றதாக இருக்கவேண்டும்.

இருக்கிற கடவுளை—இல்லை என்று சொல்வதில், சொல்பவனுக்கு என்ன இலாபம்? அல்லது, சர்வத்தையும் செய்விக்கிற—சொல்லச் செய்கிற ஒரு கடவுள் இப்படியாக ஒருவனைச் சொல்லவும், நினைக்கவும் செய்வதில் கடவுளுக்குத்தானாகட்டும் என்ன இலாபம் வரும்? ஆகவே, ஒரு மனிதன் இப்படி முட்டாள்தனமான காரியத்தைச் செய்வானா? அல்லது, ஒரு கடவுள் இப்படிப் பைத்தியக்காரத்தனமான காரியத்தைச் செய்விப்பாரா என்பதையாவது ஒருவன் கடுகளவு நினைத்தாலும், சிந்திக்கும் சக்தியைப் பயன்படுத்தினாலும் மற்றவனை—நாஸ்திகன், கடவுளை மறுக்கிறவன் என்று குறையோ, குற்றமோ சொல்லமாட்டான்.

ஒருவனைப் பார்த்து, 'அவன் நாஸ்திகன்; கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன்' என்று சொல்லுவதே நாஸ்திகமாகும்; கடவுளைச் சரியாக அறியாததேயாகும். அந்த வார்த்தையை உண்டாக்கினவர்களே நல்ல நாஸ்திகர்களாவர். கடவுள் இருந்தால், ஒரு மனிதன் 'கடவுள் இல்லை' என்று சொல்லமுடியுமா? அல்லது, ஒருவன் இல்லை என்று சொல்லுகிறான் என்று, மற்றவன் நினைக்கவாவது முடியுமா? ஆகவே, நாஸ்திகம், நாஸ்திகன் என்பன கடவுள் வியாபாரக்காரர்கள் தங்கள் வியாபாரத்திற்கு ஆதரவாகக் கண்டு பிடித்த உப கருவிகளேயாகும். கடவுள் வியாபாரக்காரனுக்கு அல்லாமல் மற்றவனுக்கு இந்தக் கவலையே இருக்க நியாயமில்லை.

கடவுள் பற்றிய தத்துவ விளக்கம் என்றால்—கடவுள் நிர்வாணமாய், பட்டாங்கமாய்க் காணப்படும் வரையில் ஆராய்ச்சி செய்வது என்பதாகும். ஒரு விஷயத்தைத் தத்துவ விசாரணை செய்ய முதலில் என்ன, ஏன், எதற்காக, எப்படி, எங்கே, எப்போது என்பன போன்ற கேள்விகளைப் போட்டு திருப்தியான பதில் பெறவேண்டும். தயவு தாட்சண்யமற்ற கேள்வி போடவேண்டும். தத்துவ விசாரணை என்பதும், தர்க்க வாதம் என்பதும் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையவையாகும். ஆகையால் சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வத்தையும் நடத்துதல் ஆகிய அபார குணங்களைக் கொண்ட ஒரு 'பரம்பொருளை'ப் பற்றித் தத்துவ விசாரணை செய்கிறவர்கள் இந்த 6, 7 கேள்விகள் மாத்திரமல்லாமல் இன்னும் 60, 70 சோதனைகள் செய்து பார்க்கவேண்டும். பக்தனுக்கு இது தேவை இருக்காது; தத்துவ விசாரணைக்காரனுக்கு இது அவசியமாகும்.

கடவுள் மூட பக்தியால், குருட்டு நம்பிக்கையால் விளங்குபவராக இருக்கக்கூடாது. வேறு யாருக்காகிலும் அப்படி விளங்கினாலும், பகுத்தறிவுள்ள மனிதனுக்கு—அதிலும் தத்துவ விசாரணைக்காரனுக்கு அப்படிக் குருட்டு நம்பிக்கையில் விளங்கக் கூடாது என்பேன்.

எதற்காகக் கடவுள்? ஏன் கடவுள்? எது கடவுள்? என்கின்ற விளக்கம் அவசியம் ஒவ்வொரு தத்துவ விசாரணைக்காரனுக்கும் விளங்கியாகவேண்டும். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர கண்மூடித்தனமான மிருகத் தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாகப் பயன்படுத்தி, அதிகமான தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளைச் சிருஷ்டித்துக்கொண்டான். அரசன் ஏன்? குடிகள் ஏன்? ஏழை, பணக்காரன் ஏன்? மேல் சாதி, கீழ்சாதி ஏன்? உழைப்பாளி அடிமையும், சோம்பேறி எஜமானும் ஏன்? பிச்சைக்காரன், பிரபு ஏன்?

இந்தத் தன்மைகளை ஏற்படுத்தவும், நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் அல்லாமல் கடவுளால் கண்ட வேறு பயன் என்ன? அவர் செய்த நல்ல காரியம் என்ன? இந்த வேலைகளுக்குக் கடவுள் வேண்டுமா?

பகுத்தறிவு கொண்ட மனிதன் சாந்தி, அன்பு, திருப்தி இல்லாமல், கவலை இல்லாமல், அதிருப்தியில் குறையோடு சாவதற்குக் காரணம், கடவுள் அல்லாமல் வேறு என்னவாய் இருக்கக்கூடும்?

அவனவன் முட்டாள்தனம் காரணம் என்றால், பகுத்தறிவு இருப்பது எதற்காக? முட்டாள் தனத்தை உண்டாக்கவா? பகுத்தறிவு இல்லாத ஜீவன்களுக்கு இல்லாத கெட்ட குணங்கள், கவலைகள், குறைபாடுகள், இனவெறுப்புகள், துரோகங்கள், பகுத்தறிவுள்ள ஜீவனான மனிதனுக்கு ஏற்படுவானேன்? பகுத்தறிவற்ற துஷ்ட ஜந்துக்களிடம் இல்லாத கெட்ட குணங்கள் பகுத்தறிவு உடைய மனிதனிடத்தில் இருப்பானேன்? கடவுளைக் கண்டதாலா? கடவுளைக் கற்பித்துக்கொண்டதாலா? கடவுள் தன்மையை, கடவுள் சக்தியைத் தவறாகக் கொண்டதாலா? எதனால் என்பது, பகுத்தறிவுக்குக்கூட எப்படிப் பரிகாரம் செய்து கொள்வது என்பது முடியவில்லையானால், பகுத்தறிவின் பயன்தான் என்ன? கடவுளின் தன்மைதான் என்ன?

கடவுள் எதற்காக? அது மனிதனுக்குத் தானாகத் தோன்றியதா? அல்லது, வேறு மக்களால் தோற்றுவிக்கப்பட்டதா? தானாகத் தோன்றியிருக்குமானால் ஏன் எல்லோருக்கும் தோன்றவில்லை? தோன்றியவர்களுக்கும் ஏன் பலவிதமாய்த் தோன்றவேண்டும்? அதன் தன்மைகளும் சக்திகளும்கூட பலவிதமாய்த் தோற்றப்படுவானேன்?

தோற்றுவிக்கப்பட்டவையானால், எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டன? எந்தக் காரணத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்தக் காரணம் நிறைவேறிற்றா? தோற்றுவித்தவர்கள் வெற்றி கண்டார்களா? கடவுள் காணப்பட்டும் அல்லது கடவுள் கற்பிக்கப்பட்டும் மனிதன் ஏன் கடவுள் தன்மைக்கு—கடவுள் விரும்புகிற தன்மைக்கு மாறாக நடக்கிறான்?

கடவுளால் சர்வமும் நடைபெறுகின்றன. கடவுள் சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளவர் என்பதாக இருந்தும் கடவுளால் என்ன காரியம் நடக்கிறது? எதையும் கடவுள் பெயரைச் சொல்லி மனிதன்தான் செய்கிறான்; கடவுளை அலட்சியப்படுத்திவிட்டு, கடவுளுக்கு இஷ்டமில்லாத காரியம் என்பதைக்கூட மனிதன் செய்கிறான். மனிதனுக்கு வேண்டாததும், மனிதனுக்குக் கேடான காரியமும் நடந்தவண்ணமாய் இருக்கின்றன. ஒரு காரியமாவது கடவுள் உணர்ச்சி உள்ள உலகில் பூரணத்துவம்—அதாவது, திருப்தி உள்ளதும் குறை இல்லாததுமான காரியம் என்பதாகக் காணக்கூடியதாகவே இல்லை. மனித எத்தனப் பாதுகாப்பு இல்லாவிட்டால், வாழ்க்கையில் ஒரு காரியமும் பத்திரப்படாது என்பதோடு—கடவுளுக்குக்கூடப் பத்திரமில்லை என்றே சொல்லலாம்.

[சேலம் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவு—'குடிஅரசு' 23-11-1946]

கடவுள் விஷயமாய் இக் கட்டுரையின் நோக்கம் என்னவென்றால், கடவுள் என்பதைப் பற்றி—கடவுள் என்பதற்காக, மனிதர்கள் இன்று நடந்துகொள்ளும் தன்மை, பான்மை சரியா, அவை அவசியமா என்பதேயாகும்.

முதலாவது, இக் கட்டுரையின் நோக்கம்—கடவுளைக் காப்பாற்ற, கடவுள் ஒருவரோ பலரோ உருவமாகவோ, அருவமாகவோ, மற்றெப்படியாகவோ கடவுள் இருக்கிறார் என்பதாக மக்களுக்கு மக்கள் எடுத்துச் சொல்லவேண்டியதும் பிரச்சாரம் செய்ய வேண்டியதும் அவசியம்தானா?

இரண்டாவதாக, கடவுள் எண்ணம் மக்களுக்கு மறைந்துபோய்விட்டது. அதை ஞாபகப்படுத்த பிரச்சாரக்காரர்களைச் சம்பளத்திற்கு வைத்து-பாதிரிகளை, குருமார்களை ஏற்படுத்தி, கடவுள் தத்துவத்தைப் போதிக்க ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டியது அவசியந்தானா?

மற்றும், நாத்திகர்கள் பலர் தோன்றி, கடவுள் இல்லை என்று நாத்திகப் பிரச்சாரம் செய்துவருவதால் கடவுள் கரைந்து வருகிறார். ஆதலால், கடவுளைக் காப்பாற்றவேண்டியது மிக மிக அவசியம் என்று பலர் கருதி, ஆத்திகப் பிரச்சாரம் செய்து கடவுளைக் காப்பாற்ற வேண்டியது அவசியந்தானா?

மற்றும், கடவுளுக்குக் கோயில் வேண்டுமா?

கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டுமா?

கடவுளுக்குக் காம விகாரம் உண்டா?

கடவுளுக்குக் குழந்தைகள் வேண்டுமா?

கடவுளுக்குத் தாசி, போக மாதர்கள் வேண்டுமா?

கடவுளுக்குப் படைப்பு, சாப்பாடு, நகை, துணி, மணி, கல்யாணம், உற்சவம், ஊர்வலம் வேண்டுமா?

இவை ஒருபுறம் இருக்க, கடவுள் சக்திக்கு—செய்கைக்கு ஏதாவது அளவு உண்டா? அல்லது, அவர் எல்லாம் வல்லவரும் எல்லாவற்றிற்கும் பொறுப்பானவருமா?

அவருடைய சக்திக்கும் செயலுக்கும் எல்லை உண்டா? இல்லையா?

கடவுள் சக்தியை உணர்ந்தவன் கடவுளைக் காப்பாற்றக் கவலை கொள்ளுவானா?

உண்மையிலேயே, 'சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவனன்றி ஒரு அணுவும் அசையாது' என்று மனப்பூர்வமாய் நம்பி இருக்கும் ஒருவன் கடவுளைக் காப்பாற்ற முற்படுவானா? கடவுள் இல்லை என்று ஒருவன் சொன்னால் அவன்மீது பாய்ந்து கோபிப்பானா?

இந்தப்படி கடவுளைப்பற்றிக் கவலைப்படுகிறவர், கடவுள் பிரச்சாரம் செய்கிறவர்களில் யாராவது தங்களது எண்ணத்தில், நடத்தையில் கடவுள் சித்தப்படி நடப்பவர்களாகவோ, கடவுளுக்குப் பயந்து நடப்பவர்களாகவோ, அல்லது கடவுள் தன்மையில் மதிப்பும்நம்பிக்கையும் பயமும் கொண்டவர்களாகவோ எங்காவது காணப்படுகிறார்களா?

கடவுள் நம்பிக்கை உடையவன் எவனாக இருந்தாலும் அவன் கடவுளைத் தொழ வேண்டுமா? பூசிக்க வேண்டுமா?

தொழுதாலும், பூசித்தாலும் அதற்கு ஒரு நேரம், ஒரு இடம், ஒரு உருவம், ஒரு வாக்கியம், பாட்டு வேண்டுமா?

மற்றும், அதற்குப் பண்டம் படைப்பு வேண்டுமா? உண்மையாகக் கடவுள் இருப்பதானாலும், இருப்பதாக நம்புவதானாலும் பல மதக்காரர்களும் இன்று கடவுள் சம்பந்தமாய்

நடந்துகொள்ளும் நடத்தைகள் அவசியமா ?—என்பனவாகியவைகள் ஒருபுறம் இருக்க, தங்களைப் பெருத்த அறிவாளிகள் என்றும், எல்லாம் அறிந்த மேதாவிகள் என்றும் கருதிக் கொண்டிருக்கும் சிலர் கூறுகிறபடி, அதாவது—‘கடவுள் இருக்கிறதோ, இல்லையோ அது வேறு விஷயம்; கடவுள் என்பதாக ஒரு சர்வ சக்தி உள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்று மக்கள் நம்பும்படி செய்தால்தான் மக்கள் யோக்கியமாய், பிறருக்குத் தீங்கிழைக்காமல் நடந்துகொள்ளுவார்கள்; ஆதலால், கடவுள் பயம் மக்களுக்கு இருக்கவேண்டும்; அந்தப் பயத்தைத் தெளியவைக்கக்கூடாது’ என்று சொல்லுகிறார்களே—அதைப்பற்றிச் சிறிது சிந்தித்தால், அவர்கள் கருதுவதுபோல், கடவுள் உணர்ச்சியையும்; கடவுள் தன்மை களையும்; நியாயத் தீர்ப்புகளையும்; பயப்படத்தக்கக் கொடூர ரூபம் உள்ள நரக வேதனைகள், செக்கில் போட்டு ஆட்டுதல் முதலிய பலமான தண்டனைகளையும்; பின் ஜென்மத்தில் பல கஷ்டமான இழிவுகளையும் துன்பங்களையும் தரத்தக்க தலைவிதி களையும்; மற்றும் பலவித மோட்ச சுகங்களையும், உயர் பிறவிகளையும், சுகபோகங் களையும் தரத்தக்க முன் ஜென்ம புண்ணிய கருமங்களையும்; அவைகளுக்கு ஏற்ற கடவுள் வாக்கு, வேதம், சாஸ்திரம், புராணம் முதலிய கற்பனைகளையும் எவ்வளவோ கெட்டிக் காரத்தனமாய் கற்பனைசெய்து மக்களுக்குள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் புகுத்தி வந்தும்கூட, இன்று வரையில் மக்களில் பெரும்பாலோர்—ஏறக்குறைய எல்லா மக்களும் யோக்கியமாய், மனிதனை மனிதன் ஆட்கொல்லாமல், சராசரி மனிதனுக்கு மேம்பட்ட பொருளை அனுபவியாமல் இருக்கமுடியவில்லையே—அது ஏன் என்றும், கடவுள் உணர்ச்சியை இவ்விதமாக எல்லாம் மக்களுக்குள் ஊட்டியதால் ஏதாவது பயன் ஏற்பட்டு இருக்கிறதா என்றும் பார்த்தால், ‘மனிதன் ஒழுக்கத்திற்குக் கடவுள் உணர்ச்சி வேண்டும்’ என்கின்ற வாதமும் அடிபட்டுப்போகின்றதே!

ஏன் எனில், உலகில் அறிவில்லாத பாமர ஏழை மக்கள் மாத்திரந்தான் ஒழுக்கமற்று, நாணயமற்று, உண்மையற்று நடந்துகொள்கிறார்கள் என்பது அல்லாமல், கற்ற மக்கள், செல்வவான்கள், பெரும் பதவியில் உள்ளவர்கள், மிகமிகப் பக்திமான்கள், குருமார்கள் உட்பட எல்லோருமே பெரிதும் விதிவிலக்கு இல்லாமல், கீழ்மக்கள் தன்மையாய் நடந்து கொள்கிறதைப் பார்க்கிறோமே! ஆகவே, கடவுள் உணர்ச்சிக்கும், ஒழுக்கத்திற்கும், உயர் குணத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்று தெளிவாகிவிடவில்லையா? கடவுளுக்கு உருவம் எதற்கு என்றால் அதற்கு ஒரு சமாதானம் கூறப்படுகிறது; அது என்னவென்றால்,

‘பாமர முட்டாள் ஜனங்களுக்கு, கடவுளின் அருவ-(உருவமற்ற) தன்மை விளங்காது. ஆதலால், கடவுளை ஒரு உருவமாகக் காட்டி, அந்த உருவம் மக்கள் உள்ளத்தில் பய ரூபமாய், அடிமை ரூபமாய் விளங்க, கடவுள் உருவங்களுக்குப் பல கோர கொடூரச் செயல்களைக் கற்பித்து, அதோடு கடவுளை மேல்சாதியாகக் கற்பித்து, அவைக ளிடத்தில் பக்தி உண்டாகும்படி செய்வதற்காக, கடவுளுக்கு உருவம் அறிவாளிகளால் கற்பிக்கப்பட்டதாகும்’ என்று சொல்லப்படுகிறது. இதையும் சிறிது சிந்தித்தால் இதன் பயனற்ற தன்மையும் அறியாமையும் சூழ்ச்சியும் விளங்காமல் போகாது.

சாதாரணமாக, நம் நாட்டில் கடவுளுக்கு உருவங்கள் ஏற்படுத்தி, வழிபாடு செய்யத் துவங்கிய காலம் 2000, 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவே இருக்கலாம். அதாவது, ஆரியர் நம் நாட்டிற்கு வந்து, அவர்களது (ஆரிய) மதத்தைப் புகுத்தி, அதன் மூலம் கடவுள்களைக் கற்பித்து, அவற்றிற்கு உருவங்கள் ஏற்படுத்தின காலத்தில் இருந்தே, நம் நாட்டில் உருவக் கடவுள்கள் காட்சியளித்துவருகின்றன எனலாம். அதற்கு ஆதாரம் என்னவெனில், எந்தக் கடவுளது உருவத்தை எடுத்துக்கொண்டாலும் ஆரிய மதக் கதை சம்பந்தமும், ஆரியத் தோற்ற சம்பந்தமும் இல்லாமல் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆகவே, இந்தப்படி 3000, 4000 ஆண்டுகளாகக் கடவுளை உருவமாக்கி, மக்களுக்குக் காட்டி, கடவுள் தன்மை ஊட்டிவந்தும், இன்றைக்கும் பாமர மூடஜனங்கள் மாத்திரம்

அல்லாமல் பண்டிதர்கள், ஞானிகள் என்பவர்கள் முதல், பெரும் மேதாவிகள் என்பவர்களுக்குக்கூட உண்மையான கடவுள் பக்தி, அவரவர் நடப்பில் கடவுள் தன்மை, பகுத்தறிவு ஆகியவை ஏற்படவில்லை என்றால்,—மூடர்களுக்குக் கடவுள் பக்தி ஏற்படுவதற்காக உருவம் (விக்கிரகம்) கற்பிக்கப்பட்டது என்பதில் ஏதாவது உண்மையோ, பலனோ, அறிவுடைமையோ உண்டு என்று யாராவது கொள்ளமுடியுமா?

மற்றும், நித்தியமான சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால், கடவுள் என்பதாக ஒன்று உண்டா இல்லையா என்பதாக மக்களுக்குச் சந்தேகம் ஏற்படுவானேன்? சிலருக்குக் கடவுள் இல்லை என்றும்—இருக்க முடியாதென்றும் தோன்றுவானேன்? ஏதோ 'அறிவிலி'களுக்கு இப்படித் தோன்றுகிறது என்று கொள்வதானாலும், 'அறிவாளி'களுக்குக் கடவுளைக் காப்பாற்றவேண்டும், கடவுள் பிரச்சாரம் செய்யவேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றுவானேன்? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று குழந்தைகளுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கும் கற்பிக்க முயற்சிசெய்வானேன்?

அவைதாம் போகட்டும் என்றாலும், கடவுள் அவதாரம் என்றும், கடவுள் தன்மை அடையப்பெற்ற பெரியார்கள் என்றும், கடவள் மனித ரூபமாய், பன்றி ரூபமாய், மற்றும் ஏதேதோ ஆபாச ரூபமாய்க் காணப்படுவானேன்? கடவுளுக்குக் குமாரரும், தூதுவரும், அசரீரியும், மக்கள்மீது மருளும்—அதாவது சாமியாடுதலும் ஏன்?

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மெய்யாய் இருந்தாலும், பொய்யாய் இருந்தாலும், இவைகள் கடவுள் இருப்பதை ஊர்ஜிதம் செய்யவோ அல்லது மக்களுக்குக் கடவுளால் பயன் ஏற்படவோ, அல்லது உலக நடப்புக்காவது, மனித சமுதாய நல்வாழ்வுக்காவது ஏதாவது பயன் ஏற்படுமா என்பது மிகவும் சிந்திக்கவேண்டியதாகும்.

இதுவரையில் காலம் எப்படிக் கழிந்து இருந்தாலும், இனிமேலாவது மனித சமுதாயம் பயமும் கவலையுமற்று, சாந்தியாய், திருப்தியாய் நல்வாழ்வு வாழவேண்டியது அவசியமாகும். அதற்கு ஏற்றவண்ணம் இனி சமுதாய ஒழுங்குகள், ஒழுக்கங்கள் அமைக்கப்படவேண்டும். வருங்காலம் பயங்கரமான ஆபத்துக்குள்ளாகும் காலம்.

எப்படி எனில், மக்கள் இனி சுலபத்தில் சாக மாட்டார்கள். இதுவரை நம் மக்களுக்கு சராசரி ஆயுள் 25 என்றால், இனி, மக்கள் சராசரி ஆயுள்—வயது 50-க்கு மேற்பட்டுத்தான் இருக்கமுடியும். சுகாதாரம் அதிகம்; வைத்திய வசதி அதிகம். மனிதன் நோய்களையும் துன்பங்களையும் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு அற்பாயுளாகப் போய்க்கொண்டு இருந்தவன், தன் முயற்சியில் நம்பிக்கை வைத்துப் பரிகாரம் தேடி மீளுகிறான். மனிதனுக்குப் பல துறைகளில் அறிவு உணர்ச்சி ஏற்பட்டு, வாழ்வை நீட்டிக்கொள்ள வசதி பெற்றுவிட்டான்.

இதுபோலவே, மக்கள் பிறப்பும் அதிகமாகிவிட்டது. கர்ப்பச் சிதைவு, சிசு மரணம், பிரசவ மரணம் இனி சுலபத்தில் ஏற்படாத மாதிரி பாதுகாப்புகள், பரிகாரங்கள் ஏற்பட்டு விட்டன. இனி மலடும் இருப்பதற்கு இல்லாமல் நிவர்த்தி மார்க்கங்கள் ஏற்பட்டுவிட்டன. இனி விதவைகளாகவும் எவரும் காலம் கழிக்க முடியாமல் விதவை மணம், சுதந்திர காதல் முதலியன செல்வாக்குப் பெற்று, சாதாரணமாய் நடப்பில் வருவதின்மூலம் அவற்றாலும் பிறப்பு அதிகமாகின்றது.

பொதுவாக, பிறப்பு விகிதங்களும் பலவகை சவுகரியங்களால் நபர் 1-க்கு 2, 3, 4 என்பதாகக் குழந்தைகள் இருந்து வந்தது மாறி, இப்பொழுது நபர் ஒன்றுக்கு 6, 8, 10, 12 என்பதாகக் குழந்தைகள் பிறப்பதும், அவைகளும் நீண்ட நாள் வாழ்வதுமாக இருக்கின்றன. இவர்களுக்கு எல்லாம் உணவு, போக போக்கியப் பொருள், பிழைப்பு, நல்வாழ்வு ஆகியவை தேவைப்படுவதுடன் உணவுப் பஞ்சம் ஏற்பட்டே தீரும். இவைகளில் பெரும் போட்டியும் அதன் பயனாய் வெறுப்பு, வஞ்சம், துரோகம், கொள்ளை, கொலை முதலிய

வைகள் மலிந்துவிடும். சாதுவும் யோக்கியருமான மக்கள் மிகமிகத் துன்பமடைய நேரிடும். அயோக்கியர்களும் காலிகளுமே நல்வாழ்வு வாழ்வார்கள். அதற்கேற்ற அரசாங்கந்தான் ஏற்படமுடியும்.

['குடி அரசு'-கட்டுரை—7-5-1949]

மதம் என்பது ஒரு கட்டுப்பாடு. மதத்தில் ஈடுபட்ட ஒரு மனிதன் அவன் எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும் அந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பதைத் தவிர, மற்றபடி அந்த மனிதனுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப் போவதில்லை. ஒரு மத வாதிக்கு மதம் காரணத்தால் ஏற்பட்ட கடவுள், மோட்சம், நரகம், வேதம், மததர்மம் மதத் தலைவன் என்பனவெல்லாம் அந்த அதாவது, அவன் சார்ந்திருக்கிற மதக்கட்டுப் பாட்டினால் ஏற்பட்டவையே ஒழிய, உண்மைப் பொருளோ, உண்மைத் தத்துவமோ அல்ல என்பதோடு, அவை எல்லாம் செயற்கையே ஒழிய இயற்கையுமல்ல.

ஒரு மதவாதிக்கு அவன் எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவனுக்கு கடவுள், அது எப்படிப்பட்ட கடவுளானாலும் அது செயற்கைக் கடவுளே ஆகும். இதில் இயற்கை, செயற்கை என்பதற்கு என்ன விளக்கம் என்றால், இயற்கை என்பது உணவு உட்கொள்வது, மலஜலம் கழிப்பது, பார்ப்பது, கேட்பது, மூச்சுவிட்டு இழுப்பது, பேசுவது, வலி காண்பது, பசி தோன்றுவது, தூங்குவது, விழித்திருப்பது, காம உணர்ச்சி, துக்கம், சுகம், சூரியன், சந்திரன், வெளிச்சம், இருட்டு, பஞ்ச பூதங்கள் முதலியவை இயற்கை ஆகும். இவை எல்லா மக்களுக்கும் பொது என்பதோடு யாராலும் மறுக்க முடியாதவை. மற்றபடி, இத் தன்மையவை அல்லாத கடவுள், மதம், மோட்சம், நரகம், சன்மானம், கண்டனை, செல்வம், பெருமை, சிறுமை, பக்தி, பிரார்த்தனை, வேதம் முதலியவை அடியோடு கற்பனையேயாகும்.

இந்த இயற்கை, செயற்கைகள் அறிபப்படுவதற்கு ஆதாரம் முறையே பிரத்தியட்ச அறிவும்—பிரத்தியட்ச அறிவுக்குப் புறம்பான நம்பிக்கையுமேயாகும்.

ஆகவே, இன்று உலகில் உள்ள எப்படிப்பட்ட மதக்காரனும் கடவுள் உணர்ச்சிக் காரனும் நம்பிக்கைவாதி ஆவானே ஒழிய, அறிவுவாதி ஆகவேமாட்டான். உதாரணமாக, 'கிறிஸ்து' என்றால் 'பைபிள்' என்றால், கிறிஸ்துவை ஏற்று அவரில் நம்பிக்கை வைத்து பைபிளை ஒப்புக்கொண்டவருக்குத்தான் 'கிறிஸ்துவே' தவிர-'பைபிளே' தவிர, அவை நம்பிக்கையில்லாதவருக்கு உண்மையாய், தத்துவமாய் இருக்கமுடியாது.

அதுபோலவே 'முகம்மது நபி' என்றால் 'குரான்' என்றால், முகம்மது நபியை ஏற்று, அவரின்மீது நம்பிக்கை வைத்து குரானை ஒப்புக் கொண்டவருக்குத்தான் நபியே தவிர-குரானே தவிர, நம்பிக்கை இல்லாதவருக்கு எப்படி நபியாகவும், குரானாகவும் இருக்க முடியும்? இப்படியேதான் மற்ற மதங்களும் வேத சாஸ்திரங்கள் முதலியவையு மாகும். ஆகவே நம்பாதவனுக்கு, ஏற்காதவனுக்கு எது எது இல்லையோ அவை எல்லாம் பெரிதும் செயற்கையே ஆகும். கடவுளும், கடவுள் நம்பிக்கையும் அதில் பட்டதுதான்.

ஒரு மனிதனை மற்றொரு மனிதன் 'நீ கிறிஸ்துவை நம்பித்தான் ஆகவேண்டும்; பைபிளை நம்பித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் நரகத்தில் அழுந்துவாய்' என்று சொல்லுபவனும், 'நீ நபியை நம்பித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் எரி நரகில் அழுந்துவாய்' என்று சொல்லுபவனும் எவ்வளவு அறிவற்றவனாவானோ அவ்வளவு அறிவற்றவனே ஆவான்—ஒரு மனிதனைப் பார்த்து, 'நீ கடவுளை நம்பித்தான் ஆக வேண்டும்; மோட்ச—நரகத்தை நம்பித்தானாகவேண்டும். இல்லாவிட்டால் நீ நரகத்தில் அழுத்தப்படுவாய்' என்று சொல்லுகிறவனும், என்பதை மதவாதிகளும் உணரவேண்டும். கடவுளும் மதமும் அறிவற்றவனைத்தான் ஆட்டும் என்பதோடு நம்பிக்கைக்காரனை வெறியனாகவும், பைத்தியக்காரனாகவும்கூட ஆக்கிவிடும்.

ஆனால், எப்படிப்பட்ட தன்மையுள்ள கடவுளும் மதமும் பகுத்தறிவுவாதி இருக்கிற பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமுடியாது.

எப்போதுமே நான் கடவுளையும் மதத்தையும் அவை சம்பந்தப்பட்டவை எவற்றையுமே 'வெங்காயம்' என்றுதான் சொல்லுவேன். வெங்காயம் என்றால் வித்து இல்லாதது; வெறும் சதை. அச்சொல்லின் பொருள் வெங்காயம்—வெறும் காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாதது; உரிக்கஉரிக்கத் தோலாகவே—சதையாகவே வந்து முடிவில் சூனியமாய்—விதை இல்லாத தன்மையதாய் முடிவது என்பது பொருள்.

ஆகவே, விதை, வித்து இல்லாத காரணத்தால் தான் அதற்கு வெங்காயம் என்ற பெயர் உண்டாயிற்று. அது போன்றவை தான் கடவுளும் மதமும் ஆகும். இச்சொற்களுக்கு இயற்கைப் பொருளே இல்லை; கற்பிக்கிறவர்கள் சொல்லும் பொருள்தான்.

ஆனால், சூரியன், சந்திரன் முதலானவைகளை அப்படிச் சொல்லமுடியுமா? முடியாது. ஏன் என்றால், அவை உண்மையானவை. எவ்வளவு மடையனும், எப்படிப் பட்ட பகுத்தறிவுவாதியும் அவைகளை மறுக்கமாட்டான் என்பதோடு 'எனக்கு அவை இல்லை; என் கண்ணுக்கு—என் புத்திக்கு அவை தென்படவில்லை. ஒப்புக்கொள்ள மாட்டேன்' என்று சொல்லவேமாட்டான். இதுதான் இயற்கைக்கும்—உண்மைப் பொருளுக்கும்; செயற்கைக்கும்—கற்பனைக்கும் ஏற்ற உதாரணமாகும். மற்றும், கடவுள் மதவாதியாக இருப்பவர்கள் 'ஒரு மனிதன் மதத்தை ஏன் மறுக்கிறான்?' என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுபோலவே, 'ஒரு மனிதன் கடவுளை ஏன் மறுக்கிறான்?' என்பதையும் (கடவுள் வாதி) சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மற்றும், கடவுள் மதவாதிகள், கடவுள்-மத மறுப்பாளர்களைவிட எந்தவிதத்தில் உயர்ந்தவர்கள்? எந்த விதத்தில் அறிவாளிகள்? எந்த விதத்தில் உயர்ந்த இந்திரியங்களை (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளை) உடையவர்களாக இருக்கிறார்கள்? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனிதனுக்கு மிக அருமையான அறிவும் பகுத்தறியும் சக்தியும், ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையும், அனுபவத்திற்கு ஏற்ப நடக்கும் உரிமையும், இருக்கும்போது கடவுள் எதற்கு ஆக வேண்டும்? என்பதையும் நல்லவண்ணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கடவுள் என்ற பொருளுக்கு மனிதன் கற்பித்து இருக்கும் குணம் என்னவென்றால்,

கடவுள் யாவற்றையும் படைத்து (படைத்ததோடல்லாமல்) யாவற்றையும் நடத்துகிறவன் என்பதாம்.

அதாவது, 'நன்றோ செய்வேன், தீதோ செய்வேன், நானா அதற்கு நாயகன், நீ நடத்துகிறபடி நடத்தப்படுகிறவன்தானே?' என்பதுதான் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் கடவுளைப்பற்றி மக்களுக்குச் சொல்லும் இலட்சணம்.

இந்தக் கருத்து ஒரு கடுகளவாவது மனிதனுக்குப் பயன்படுகிறதா? மற்ற மனிதர்களுக்குத்தான் சொல்லப்படுகிறதே ஒழிய, எவனுக்கு ஆவது தன் விஷயத்தில் நம்பவோ, நம்பி நடக்கவோ வாழ்க்கையில் கொள்ளவோ பயன்படுகிறதா?

மக்கள் மடையர்களாக இருந்தவரையிலும், அதாவது சிந்திக்கும் தன்மை இல்லாதவர்களாக இருந்தவரையில்—இருக்கிறவரையில் கடவுளுக்கு சர்வ சக்தி சர்வ செயல் 'இருந்திருக்கலாம்.' இன்று—அறிவாளிக்கு அறிவுவாதிக்கு, அந்த எண்ணம் சரி என்று தோன்ற முடியுமோ?

தவிரவும், கடவுளும் மதமும் மனிதனுக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்பிக்கப்பட்டவை அல்லது தோன்றியவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அக் காலக் கற்பனையானது காலக் கிரமத்தில் மாறுதலடைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதையும் யாராலாவது மறுக்க முடிகிறதா?

இந்த நிலையில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய கிறிஸ்தவ மதமும், கிறிஸ்தவக் கடவுளும், 1500 ஆண்டுக்கு முந்தைய நபி மதமும், முகம்மது நபி கடவுளும் மாத்திரம் சீர்திருந்தி மாற்றமடைந்துள்ளபோது, பலப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய ஆரியக் கடவுள்களும் ஆரிய மதமும் மாற்றமடையக்கூடாது என்றால் அது எப்படிப் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருக்கமுடியும்?

இவைகள் எல்லாம் மனிதர்களால் அமைக்கப்பட்டனவே அன்றி மனிதப் பிறவியில் மனிதத் தன்மைக்கு மேற்பட்ட சக்தி கொண்ட ஒரு மனித உருவால் அமைக்கப்பட்டது என்று சொல்லப்படுமானால், அது பெரும் புரட்டாகத்தான் இருக்கமுடியுமே ஒழிய, அப்படிச் சொல்லுவதில் சிறிதாவது உண்மையோ அறிவுடைமையோ இருக்காது என்பதுடன், அதில் யோக்கியப் பொறுப்பும் இருக்கமுடியாது என்று வலியுறுத்திக் கூறுவேன். ஏன் என்றால், இன்றைய மக்கள் தன்மை, இன்றைய விஞ்ஞான அறிவு சக்தித் தன்மை 10000, 5000, 2000, 1500 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எத்தனையோ மடங்கு அதிகமானது.

அக்காலக் கடவுளும் மதமும், இவைகளைக் கற்பித்தவர்களும், அக்கால மனிதத் தன்மைக்கு மேற்பட்டவர்களும் 'ஏழைகளுக்கு உதவி செய்தால் உனக்கு மோட்சம், சன்மானம் கிடைக்கும்' என்று சொன்னார்கள். அவர்களால் சொல்லப்பட்ட வேதசாஸ்திரங்களும் அப்படியே சொல்கின்றன. இன்றைய வெகு சாதாரண விஞ்ஞான அறிவு, 'ஏழைகள் ஏன் இருக்கவேண்டும்? அவர்கள் பிறப்பிக்கப்பட என்ன அவசியம்! அவர்கள் யாரால் எதனால் பிறப்பிக்கப்பட்டாலும் சரி, இன்று அவர்கள் கண்டிப்பாக மனிதஉலகத்தில் இருக்கக்கூடாது' என்று கூறுகிறது. இதற்கு யாரால்தான், எந்தத் தெய்வீக புருஷனால் தான் ஆகட்டுமே என்ன பதில் சொல்லமுடியும்? ஆகவே, கடவுள், மதம், தெய்வீகப் புருஷர்கள் என்பவற்றை எப்படிப்பட்டவர்களானாலும் பாதுகாக்க வேண்டுமானால் அவரவர்களைப் பொறுத்தவரை அடக்கமாக வைத்திருந்தால் காக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அப்படிக்கின்றி, தான் பெரிய கடவுள் பக்தன், மத பக்தன் என்கின்ற கர்வங் கொண்டு அவற்றைக் காப்பாற்ற வெளிக்கிளம்புவானேயானால், அவன் கண்டிப்பாக அவைகளை ஒழிக்க, அவற்றின் 'பெருமை'யை அழிக்கப் புறப்பட்டவனே ஆவான். கடவுள், மதம், தெய்வீகப் புருஷர்கள் என்பவற்றில் கடவுளைவிட மோசமானது, மக்களை அலைக்கழித்து வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்குவது மதமாகும். மதத்தைவிட, மக்களுக்கு மடமையையும் அகம்பாவத்தையும் உண்டாக்குவது தெய்வீக சக்தி. அதாவது, மனிதத் தன்மையைவிட மேற்பட்ட சக்தி உள்ள மனிதன், மனிதப் பிறவி என்பதாகும்.

எனவே, பெரிய ஆட்கள், அதாவது 30 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இந்தக் கடவுள் மத உணர்ச்சி இருந்தாலும், 24 அல்லது 30 வயதிற்கு உட்பட்ட மக்களிடம் கண்டிப்பாக இந்த உணர்ச்சி இருக்கவே கூடாது என்பது என் ஆசை. அப்படி, இந்தக் கடவுள் மத உணர்ச்சி இல்லாமல் இருந்தால்தான் மனிதப் பண்பு, மக்கள் யாவரையும் ஒன்றுபோல் கருதும் உணர்ச்சி, நேர்மை, நல்லதைப் போற்றவும் தீயதைக் கண்டிக்கவுமான துணிவு, யாவரையும் ஒன்றுபோல் கருதிச் செய்யும் பொதுத்தொண்டு உணர்ச்சியும் ஏற்படமுடியும். இன்று இவை சுத்தசுத்தமாய் இல்லாததற்குக் காரணம்–இந்தக் கடவுள், மதம், மனிதத் தன்மைக்கு மேற்பட்ட தன்மையுள்ள மனிதப் பிறப்பு என்கின்ற உணர்ச்சிதான் என்பது எனது தாழ்மையான முடிந்த முடிபு!



பெரியார் ஈ. வெ. ரா. வழங்கிய நாத்திகக் கட்டளை

4. ஆத்மா

ஆத்மா என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர்—'இது ஒரு தத்துவ விசாரணை விஷயம்; இதைப்பற்றிப் பேசவோ எழுதவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத்தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக் காரர்கள் அனாவசியமாய் கண்டகண்ட விஷயங்களில் எல்லாம் தலையிட்டுச் சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக்கொள்வானேன்?' என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால், இப்படிப் பட்ட நண்பர்கள் சமுதாய சீர்திருத்தம் என்பது என்ன என்பதைச் சரிவர உணராதவர்கள் என்று நினைத்துவிட்டு, நம் பாட்டுக்கு நாம் மேலே செல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில், சமுதாய சீர்திருத்தம் என்றால் ஏதோ அங்கும் இங்கும் ஆடிப்போன, சுவண்டுபோன, இடிந்துபோன பாகங்களைச், சுரண்டி, கூறுகுத்தி, மண்ணைக் குழைத்துச் சந்துபொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அனேகர் கருதி யிருக்கின்றார்கள்.

ஆனால், நம்மைப் பொறுத்தவரை, நாம் அம் மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரனல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றபடி நாம் யார் என்றால், என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் ஏன் சீர்திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடியும் அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில், அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கிறபடி யால், சமுதாய சீர்திருத்தம் என்பதைப்பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு நாம் மாறுபட்ட கொள்கையையும் திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப் படவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயேதான், பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும்; சரி என்பதைத் தப்பு என்றும்; தேவை என்பதைத் தேவையில்லை என்றும்; கெட்டது என்பதை நல்லது என்றும்; நல்லது என்பதைக் கெட்டது என்றும்; காப்பாற்றப்படவேண்டும் என்பதை ஒழிக்கவேண்டும் என்றும்; மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறுவோராக, செய்வோராகக் காணப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல்-குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும்.

உதாரணமாக, இது விஷயமாய் நாயனார் தம் குறளில், 'உலகத்தார் உண்டென்பது இல் என்பான் வையத்து அலகையா வைக்கப்படும்' என்று ஒரு குறள் காணப்படுகிறது. இதன் பொருள் அக் குறளில் காண்கின்றபடி பார்த்தால் 'உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை, இல்லை என்று சொல்லுபவன், உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்' என்பது பொருளாகும்.

இதிலிருந்து, 'உலகத்தார்' என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? உலகத்தார் என்றால் 'உயர்ந்தோர்' என்று சொல்வதானால் 'உயர்ந்தோர்' என்பதற்கு இலட்சண மென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? 'வையத்து அலகை' என்பதற்குத் திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பனபோன்ற பல தர்க்க விவகாரங்கள் அக் குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும், அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக் குறளின் கருத்து, 'அனேக மக்களால் உண்டு என்று சொல்லப்படும் விஷயத்தை, இல்லை என்று சொல்லுபவன் அறிவில்லாதவன்' என்று பொருள்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். இப்படி இருந்தாலும், இதிலிருந்து அவன்

அதாவது, உலகத்தாரால் உண்டு என்று சொல்வதை இல்லை என்பவன் எதனால் அறிவில்லாதவன்? எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுவதற்காக அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லது, பலர் அனேகர், மற்றவர்கள் எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு—அது எப்படி இருந்தாலும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றாமல், தனது சொந்த அபிப்பிராயத்தைத் துணித்து சொல்ல வந்துவிட்டானே, அந்த அடங்காத, கீழ்ப்படியாத, ஊருடன் ஒத்துப்போகாத, ஆணவமான தன்மையுடைய அந்தச் செய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே, உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக் கூறியதற்கு ஆதாரமாக அவன் கொண்ட அபிப்பிராயம் குற்றம் என்று ஏற்படுமானால், இங்கு உலகத்தார் சொல்வதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு, நாயனார் சொல்லியிருக்க வேண்டும். அல்லது, அப்படி உலகத்தார் அபிப்பிராயத்திற்கு விரோதமாக அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்வது என்கின்ற தன்மை குற்றமானதென்று கருதி நாயனார் சொல்லி இருந்தால், மனிதனுக்கு அவனவன் அபிப்பிராயத்திற்குச் சுதந்திரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச் சொல்லி இருக்கவேண்டும். ஆகவே, அக் குறளானது உலக மக்களில் பொதுவாகப் பெரும்பான்மையோரையோ—அல்லது அறிவாளிகளாகிய பெரும்பான்மையாரையோ—யாரைக் குறிப்பில் வைத்துக்கொண்டு நாயனார் சொல்லி இருந்தாலும், இக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமது அபிப்பிராயம்.

ஆதலால், ஆத்மா என்கின்ற விஷயத்தைப்பற்றி யார் என்ன சொல்லி இருந்தாலும் உலகமே என்ன கருத்துக்கொண்டிருந்தாலும் அதை இலட்சியம் செய்யாமல் நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம். அதாவது, ஆத்மா என்பது ஒரு பொருள் அல்ல. அது சுதந்திரம், அறிவு, உணர்ச்சி ஆகியவைகளை உடையதல்ல என்பதோடு, அது பெரிதும் அர்த்தமற்ற ஒரு வார்த்தை என்றே நமக்குக் காணப்படுகிறது. இங்கிலீஷ் – தமிழ் அகராதியில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்கிலீஷில் (Soul) 'சோல்' என்றும், 'சோல்' என்றால் அறிவு - யோசனை - ஆசை பிறக்குமிடம், ஊக்கம், உள் சக்தி, மனித வர்க்கம், உயிர் என்ற பொருள்கள் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை, முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்படவேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும். பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டியிருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாயிருக்கின்றன.

ஆகவே, பிராணன் என்பது என்னவென்று பார்த்தால், அது ஒரு காற்று—பிராண வாயு, இருதயத்தில் இயங்கிக்கொண்டிருப்பது என்பதாகத்தான் அகராதியில் காணப்படுகிறது.

இது இங்ஙனமிருக்க, இப்போது பழக்கத்தில், ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்து என்றும்; அது சூட்சும வஸ்து என்றும்; அதற்குப் பிறப்பு, இறப்பு இல்லை என்றும்; அது மனிதன் இறந்தபின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும்; மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை—சரீரத்தை விட்டுப்பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கிறதென்றும்; மற்றும் எத்தனையோ விதமாக அதைப்பற்றிப் பல மதங்களில் பலவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால், அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் 'என் சரீரம்' என்று சொல்வதன் மூலம்—சரீரத்திற்கும் வேறுபட்டதென்றும்

சொல்லுவது போன்ற ஏதேதோ பிரிவுகள் காட்டி, அந்த ஆத்மா சரீரம் விட்டுப் பிரிந்த பிறகு அடையவேண்டிய, அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி அதற்குத் தகுந்தபடி, அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப் பட்டு—அந்த மாதிரி, ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன என்றும், அதற்காகவே உலகத்தில் மனிதகோடிகளுக்கு மதம் அவசிய மென்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே பவுத்தம், இஸ்லாம், கிறிஸ்து, இந்து ஆகிய மதங்களில் பவுத்தம் தவிர மற்ற முக்கியமான மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில்தான் ஆத்மாவையும், ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட ஆத்மா என்பதில் (1) மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மத சம்பந்தங்களுக்கு–அதாவது, கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்குச் சேர்ந்ததா—அல்லது, புல், பூண்டு, அணு, ஐந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர்வாழ்வன முதலிய ஐந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

(2) இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்ற ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது, எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

(3) மனித ஆத்மா மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே, மற்ற புல் பூண்டு, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, அணு, ஐந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தைவிட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

(4) இந்த ஆத்மாக்களில் மேற்கண்ட ஐந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள், தன்மைகள் முதலியவைகள்—அதாவது, புலன் வித்தியா சங்கள், அறிவு வித்தியாசங்கள் உள்ளதுபோலவே, மனித ஜீவனும் மற்ற ஆத்மாக்கள் போலவே இருப்பதோடு புலன் அறிவு விஷயத்தில் சற்றுக் கூடுதல் வித்தியாசம், மாறுதல் முதலியவைகள் உடைய ஐந்துவா?

(5) உலகத்தில் உள்ள மேற்கண்ட ஐந்துக்கள் எல்லாம் வேறு, மனித ஐந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படி வேறுபாட்டை உடைய ஐந்துவா மனிதன்? என்பன போன்ற—இன்னும் அனேக கேள்விகள் இருந்தாலும் மனிதன் என்ன என்பதை நாம் முதலில் ஆராய்வோம்.

மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (Self), என்பதான 'தான்' 'நான்', 'என்' என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளேயாகும். அக் குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை, 'நான்' என்று சொல்லிக் கொள்ளும்போதும், 'எனக்கு', 'என்னுடைய' என்று சொல்லிக் கொள்ளும்போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகிறது? என்பதைக் கவனித்தால் ஆத்மத் தன்மை என்பது தானாகவே விளங்கும்.

அதாவது, ஒரு மனிதன் 'நான்' என்பதில் அந்த மனித சரீரத்தின் எந்தப் பாகம் தனித்து இருந்து நான் என்கின்றது? அல்லது, அந்த உடல் மொத்தமுமா அல்லது சரீர மில்லாமலா? சரீரத்தில் எதுவரை 'நான்' என்கின்ற உணர்ச்சி இருக்கிறது? சரீரத்தி லிருந்து எது போய்விட்டால் 'நான்' என்பது போய்விடுகின்றது? என்கின்ற கேள்வி களுக்குப் பதில் கிடைத்தால் ஒழிய 'நான்' என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதைக் கவனிக்கும்போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம்,

என் சித்தம், என் கடவுள், என் ஆண்டவன், என் பிராணன், என் பிராணவாயு, என் சூட்சம சக்தி என்பன போன்ற—அதாவது, மனிதன் அல்லது ஆத்மா அல்லது ஜீவன் என்பவைகளாகிய எது எதை நாம் மனிதனாக, ஆத்மாவாக இருக்கக்கூடும் என்று கருது கின்றோமோ அவைகளை எல்லாந்தன்னில் இருந்து தனிப்படுத்தி அவைகளோடு கூட 'என்' என்பதைப் பேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே, என் (நான்) வேறு; மேற்கண்ட மற்ற வைகள் எல்லாம் வேறு—என்பதாக நினைக்கும்படியாக இருக்கின்றது. ஆதலால், இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை உணர்ச்சி ஆகிய 'நான்' என்பது அல்ல என்றே சொல்லவேண்டி யிருக்கின்றது.

இந்த நிலையில் மனிதனாகிய நான் என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங் களுக்காக—நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ, ஒரு ஜீவனோ, ஒரு சக்தியோ, ஆகிய சூட்சம ஜீவன் என்பது எப்படி அந்தப் பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பதுதான் எப்படி நியாயமாகும்? நான் செய்த காரியத்திற்கு என் ஆத்மாவைத் தண்டிப்பதோ, கண்டிப்பதோ, சன்மானமாகியவைகளைக் கொடுப்பதோ எப்படிக் கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக்கத் தக்கதாகும்.

இந்த மாதிரியான பிரச்சினைக்குச் சமாதானம் சொல்பவர்கள் பெரிதும் ஒரே சமாதானந்தான் சொல்வார்கள். அதாவது, 'இம் மாதிரியான பிரச்சினை வெகு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே பலரால் கேட்கப்பட்டாய்விட்டது. இவை சாதாரண மக்க ளுக்குப் புரியும்படியானவைகள் அல்ல. சொன்னாலும் உங்களைப் போன்றவர்களால் கிரகித்துக் கொள்ளமுடியாது. வேண்டுமானால் கைவல்யம், ஞானவெட்டி, வாசிஷ்டம், கீதை, வேதாச்சாரம், தத்துவ கீதை முதலியவைகளைப் பாருங்கள். அதற்கு வேறுபல பக்குவங்கள் வேண்டும்' என்பது போன்ற பதிலைச் சொல்லிவிடுவார்கள்.

சாதாரணமாக, கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் தீர்ப்பு நாளை உத்தேசித்து, தாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு பலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடு விட்டுவிட்டார்கள். ஆதலால், அவர்களிடம் அதிக சிக்கலோ, புரட்டோ கிடையாது. பவுத்தர்கள், 'ஆத்மா என்பதே கிடையாது, நித்திய வஸ்து என்பதே கிடையாது' என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இந்தக் கசமுசாக்கள் கிடையாது.

ஆனால், இந்து மதக்காரர்கள் ஆத்மா, சூட்சும சரீரம், மோட்சம், நரகம், மறுபிறப்பு, அதுவும் பலவிதமாய், அதாவது புல்லாகி, பூண்டாகி என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும்; இவைகள் எல்லாவற்றையும்விட வேறொரு விதமாய், அதாவது ஆத்மாக்கள், பிதிர்த் தேவதைகள் ஆகி பிதிர்லோகம் என்பதில் இருந்துகொண்டு பிள்ளைகள், சந்ததி யார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தில் பிராமணனுக்குக் கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய்ப் பெற்று அடைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய்ச் சொல்லப்படுகின்றன. ஆகவே, இவை தாமாகவே ஒன்றுக் கொன்று முரண்படுகின்றனவாக உள்ளன.

['குடி அரசு'—தலையங்கம்—3-5-1931]

5. மோட்சம்—நரகம்—கர்மபலன்

மனிதன் உடல், உயிர், மாயை என்னும் முப்பொருளாக ஆக்கப்பட்டு இருக்கிறான் என்று சைவர்களும், பிரம்மமே மாயா சம்பந்தப்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றி யிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும், 'ஆன்மா' என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தி இருக்கிறான் எனச் சில மதங்களும், இவ்வாறு

ஒன்றிற்கொன்று முரணாக நாம் விளக்கிக் காட்டியபடி கூறிவருகின்றன. ஆனால், எல்லா மதங்களும் 'ஆன்மா' செய்த நன்மை தீமைக்குத் தகுந்தவாறு மோட்சமும் நரகமும் எய்தும் என்பதை அபிப்பிராய பேதம் இன்றி ஒத்துக்கொள்ளுகின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றன. எந்த நாட்டான் நரகத்தைப்பற்றி எழுதி இருந்தாலும், தம்தம் நாட்டில் உள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களும்தாம் நரகத்தில் இருப்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தம்தம் நாட்டில் உள்ள உயர்ந்த பிராணிகளும், மரம், செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெண்கள் முதலிய போகபோக்கியங்களும் இருப்பதாகவே எழுதிவைத்து இருக்கிறான்.

நரகமும், மோட்சமும் பணம் பறிப்பதற்குப் புரோகிதர்களால் கட்டப்பட்ட ஒரு கற்பனை உலகம் என்றே யாம் கருதுகின்றோம். சிறு பிள்ளைகளை, 'அய்ந்து கண்ணன் வருகிறான்; பூச்சாண்டி வருகிறான் அழாதே! அப்படிச் செய்யாதே; இப்படி நடவாதே' என்று ஏமாற்றுவதுபோலவே, மனிதர்களை நரகத்தைக் காட்டிப் புரோகிதர்கள் மிரட்டுவதும், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய், சாக்லெட் முதலியவைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திருப்புவதுபோல, மக்களிடம் மோட்சத்தைக் காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும், முதலாளிகள் தொழிலாளிகளையும், அரசன் குடிகளையும் விளித்து, 'ஜாக்கிரதை, நீ எஜமானத் துரோகம், இராஜத் துரோகம் செய்தால், என்றும் மீளாத கொடு நரகிலே வீழ்ந்து, என்றும் துன்புறுவாய்' என்று மிரட்டி, அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே ஏமாற்றிவிடுவதற்குத் தக்க பேராயுதமாய் நரகம் விளங்கி வருகின்றது.

பொதுவாக எம் மதத்தை உற்றுநோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாம்பல் (விபூதி), சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எளிதில் பெற வழி காணலாம்.

மக்களுலகில் வறுமையும், ஏமாற்றும், அக்கிரமங்களும் இந்த மோட்ச—நரகப் பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும் பெருகி வளர்ந்து வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மோட்சமும் சுவர்க்கமும் கள்ளுச்சாராயக் கடைகளைவிட, தாசிவேசிகள் வீடுகளை விட மோசமானவை என்பதை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். மோட்சம், நரகம் என்பது எப்படித் திருடர்கள் பிரயாணிகளை வழிப்பறி செய்வதற்குத் தனிவழியில், ஆள் அடையாளம் தெரியாத வகையில் வேஷம் போட்டுக்கொண்டு வந்து வழி மறித்து, மண்டையை உடைக்க, தடிக் கம்பையும் ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்கிறார்களோ, அதுபோலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழி மறித்துப் பொருள் பறித்துப்போகச் செய்துகொண்ட ஆயுதங்களே ஆகும். ஆகையால், அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலக வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும், மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப்படாமலிருக்க வேண்டியதையே மோட்சம் என்றும் மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும் தேவைக்கும்மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்வதையே மக்களை 'மோட்சத்திற்கு அனுப்பும்வேலை' என்று நாம் கருத வேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படித் தனது தேவைக்கும், அளவுக்கும் தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ, அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவர்களது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசைகாட்டி, இங்கு தட்டிப் பிடுங்கிக் கொள்கிறார்கள். மூடர்களும் பேராசைக்காரர்களும் தாம் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்தையும் தேவலோகத்தையும் பற்றிப் பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களைச் சற்று

கவனித்துப் பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக் கூடுமோ, அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது, இங்கு உள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும்; பெண் வேண்டும்; தேவையானவை எல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்கவேண்டும்; நல்ல வாலிபப் பருவம் வேண்டும்; சதா இடைவிடாத போக்கியம் பெறவேண்டும்; சாகாமல் இருக்க வேண்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்குச் சாகும் வரையிலும், செத்த பிறகும் அனுபவிக்கக் கூடியதாய், ஆசைப்படக் கூடியதாய் இருக்கின்றன என்பது யாரும் அறிந்ததே.

ஆகவே, இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும், அதை அடையக்கூடும் என்னும் ஆசை உண்டாகும்படி, அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும், இரத்தினங்களும் நிறைந்து கிடக்கும் என்றும், உலகமே பொன்னுலகம் என்றும், அங்கு அரம்பை, ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்துகொண்டு நமக்கு சதா போகங் கொடுத்துக்கொண்டிருப்பார்கள் என்றும், காமதேனு, கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ அதை உடனேயே கொண்டுவந்து கொடுக்கும் என்றும், நரை, திரை, மூப்பில்லை என்றும், நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இருப்போம் என்றும் சொல்லி ஏற்பாடு செய்து விட்டதால், அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி, இந்த உலகத்தையும், இங்குள்ள போக போக்கியங்களையும், அநித்தியமாய் எண்ணி, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்களை எல்லாம் இந்த மோட்சத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது, இதற்காக என்று பலவித அக்கிரமமான வழிகளிலும், மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காகச் செலவு செய்யவேண்டி இருக்கின்றது. உதாரணமாக, ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும்போது, குடம் குடமாய்ப் பால் குடங்களைத் தினமும், கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாற வைப்பதன் கருத்து என்ன என்று பாருங்கள்! குடி இருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும் பாறைகளையும் உடைத்துக் கோட்டைகள்போல்—மக்கள் கோவில்கள் கட்டுவதன் கருத்து என்ன என்று பாருங்கள்! எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும், தொழில் இல்லாமலும் மக்கள் வயிறு வளர்க்கக் கப்பலேறி வேற்று நாட்டிற்குக் கூலிகளாய்ப் போய் சொத்துப் பொத்தென்று மாண்டு மடிந்துகொண்டிருக்கும்போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற்றிற்குப் பத்து இலட்சம், ஒருகோடி, பத்துக் கோடிக்கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துக்களும் சேர்த்து வைப்பதன் கருத்து என்ன என்று பாருங்கள்! நாளுக்கு நாள் வாழ்க்கை துன்பகரமாக மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய், ஏன் இலட்சக்கணக்காய் ரூபாய் செலவு செய்து கும்பாபிஷேகங்கள் செய்வதன் கருத்து என்ன என்று யோசித்துப் பாருங்கள்! பூமியை உழுது கஷ்டப்பட்டுப் பயிர் செய்யும் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூடப் போதுமான ஆகாரம் இல்லாமல் கஷ்டப்படும்போது குழவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளைப் பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிபோட்டுப் பொங்கி, நைவேத்தியம் செய்து, பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும்பத்துடன் போட்டுக்கொண்டு இருக்கும் கருத்து என்ன என்பதை எண்ணிப் பாருங்கள்! மக்களில் 100-க்கு 5 பேர்களுக்குக்கூட அதாவது சராசரி படிப்பு—எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள்–பொம்மைகள் பின்னால் நின்றுகொண்டு, ஆயிரத்திற்கு ஒருவருக்குக்கூடப் புரியாத வேத பாராயணம் முதலியவைகள் செய்யப்படுவதற்கும் இலட்சக்கணக்காய் செலவு செய்ததையும், செய்யப்படுவதன் நோக்கம் என்ன என்பதையும் யோசித்துப் பாருங்கள்! இப்படியாக நமது நாட்டில் இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நோக்கினால், மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது,

அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தாலாவது சிறிதும் இலட்சியம் செய்யாது—நாம் மோட்சத்திற்குப் போகவேண்டும்; நாம் பிரபுவாய் இருக்க வேண்டும்; இலட்சுமி புத்திரராய்—இராஜாவாய்—நிரந்தர செல்வனாய்—சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும் என்கின்ற பேராசையல்லாமல், வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்! இந்த மாதிரி மோட்சம் கற்பிக்கப்பட்டு, அதை அடைவதே மனிதனின் முக்கிய இலட்சியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்ற, பேராசையுள்ள ஜனங்கள் மலிந்து இருக்கும் இந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம் நம்மால் செய்ய முடியும் என்பதையும் யோசித்துப் பாருங்கள். ஆதலால்தான், முதலில் மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப்போலவே, நரக உணர்ச்சியும் அழிக்கப்படவேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அது போலவே நரக உணர்ச்சியும் அடிமைத் தனத்துடையவும், பயங்காளித் தனத்தினுடையவும் பிரதிபிம்பமாகும். நரகத்திற்குப் பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியம் இல்லாத கோழையாய் இருக்கிறான். இவைகளை எல்லாம்விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால், சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும்விட மனிதனுக்கு விதி, கர்மபலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதி, கர்மபலன் என்கின்ற வைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டு இருக்கவில்லையானால், இன்றைய தினம் இந்நாடு அனேக விஷயங்களில் ரஷியர்களுக்கு—ஏன், இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து, அனேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும், சம இன்பத்தையும், இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து, சர்வ சுதந்திரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால், இந்தக் கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச, நரக நம்பிக்கைகள் மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரிகள் என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள்தாம் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்த நாடு சுயமரியாதை பெற்றுவிடும்; சுதந்திரம் பெற்றுவிடும்; மனிதத் தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோதரர்களே! நீங்கள் இந் நாட்டின் முற்போக்கிற்கும், உண்மை விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபடவேண்டுமானால், மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

['குடிஅரசு'—கட்டுரை—25-1-1949]

6. ஆத்மா, மோட்சம், நரகம்

தோழர்களே!

நாம் செத்த பிறகு ஒன்றுமில்லை. நாம் வைத்த பெயர் செத்துப்போய்விட்டது என்பதேயாகும். மரம், செடி, கொடி செத்துப்போயிற்று என்கிறோம். அதாவது, இவைகளுக்குச் சத்துப் போய்விட்டது என்பதாகும். மரம் செத்துப்போனால் அடுப்பிற்கு இரண்டு வண்டி விறகாவது ஆகிறது. மனிதன் செத்துப்போனால் ஒன்றும் பிரயோசனமில்லை. இரண்டு நாள் அப்படியே வைத்திருந்தால் நாற்றமடிக்க ஆரம்பித்துவிடும்; அவ்வளவு கேவலமானவன் மனிதன். புதைத்துவிடவேண்டும்! அல்லது நெருப்பு வைத்துக் கொளுத்திவிட வேண்டும்; இதுதான் சரியான காரணம்.

செத்துப் போய்விட்டதென்றால், மனிதனுக்குத்தான் இந்தவிதச் சடங்கு. மற்றபடி காட்டிலே வசிக்கின்ற புலி, சிங்கம், கரடி மற்ற விலங்கினங்கள் ஆகியவற்றிற்கெல்லாம்

இப்படிச் செய்ய ஆளில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நாம் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து மடிகிறோம். ஏன் மடமையில் மூழ்கிக்கொண்டு, சுயநலத்தையே பிரதானமாகக்கொண்டு, சாதாரணமாகத் தள்ளவேண்டிய சடங்குகளை, காரியங்களைத் திரும்பத் திரும்பச் செய்துகொண்டு, தப்பான முறையில் வைத்துக்கொண்டு அலைகிறோம்.

நான் நிர்வாணமாகச் சொல்லுகிறேன். அதாவது, மறைவில்லாமல், அப்படியே மனத்தில் பட்டதைப் பச்சையாகப் பார்த்தால் எப்படித் தோன்றுகிறதோ, அப்படியே உள்ளது உள்ளபடியே கூறுவதுதான் நிர்வாணமாக என்பதன் அர்த்தம். அந்த நிர்வாணத்தைத்தான் சிலர் முத்தி என்றும், ஞானம் என்றும் கூறுவார்கள். அதற்குமேல் எதுவுமில்லாததால் முக்தியடைந்து விட்டார் என்பது. அதாவது, நிர்வாணசக்தியடைந்து விட்டார் என்பது. நிர்வாணசக்தி என்றால் முடிவு அடைந்துவிட்டார் என்பது. வேதாந்தம் அல்லது வைகுந்தம், மோட்சம் அடைந்துவிட்டார் என்பது முட்டாள்தனம். அதுபோல் தமிழ்மொழியில்கூட இல்லை. நிர்வாணம் என்பது நம் உள்ளத்தில் தோன்றிய உண்மையான காரணங்களை எடுத்துக்கூறும் நிலை—ஸ்தானமாகும். புத்தநெறியினர்கூட நிர்வாண ஸ்தாபனம் என்பார்கள். செத்துப்போனார், முடிவெய்திவிட்டார் என்பதுபற்றி நிர்வாணமாகப் பேசுகிறோம்; அது சம்பந்தமாய்ப் பல காரியங்களை எப்படிச் செய்ய வேண்டுவது என்பனவற்றைச் சொல்கிறேன். இம் முறையென்றால், இதுபோல உலகத்தில் ஒன்றுகூடக் கிடையாது. ஒரே மாதிரிக் காரியத்தில் பல கருத்துக்களைப் பல மதக்காரர்கள் முட்டாள்தனமாகக் கூறியிருக்கிறார்கள். ஒருவன்கூடச் சரியாகக் கூறவில்லை. மரம்கூடச் சாகவேண்டியதுதான்; புலி, சிங்கம், கரடி இவைகளும் மற்ற விலங்கினங்களும் சாக வேண்டியவைதான்; மனிதனும் சாகவேண்டியவன்தான். இப்படி எங்கும் நிறைந்து எங்கும் நடந்துவரும் ஒரு காரியத்தில் ஒன்றாவது ஒற்றுமையான கருத்தில்லை. நிர்வாணமாக உள்ளவர்களைத்தவிர மற்றவனெல்லாம், மத சம்பந்தக்காரனெல்லாம் ஆளுக்கொரு மாதிரிக் கூறுவான்.

செத்துப் போவதென்றால் என்ன? செத்துப்போனால், உயிர் போய்விட்டால் கீழே மண்ணில் போட்டுப் புதைத்துவிடுவான். அதைப் பாதுகாப்பதாக அவனது நினைப்பு. ஆனால், அது மூன்று நாளில் மக்கி மடிந்து அழிந்துவிடும். முஸ்லிமும் இம் மாதிரியே பாதுகாப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறான். மற்றும் சிலர் உடலை ஒரு மண்டபத்தில் மேலே கொண்டுபோய் நிர்வாணமாகப் போட்டுவிடுவார்கள். பக்கத்தில் தண்ணீரும் வைத்திருப்பார்கள். காக்கை, கழுகுகள் கொத்தித் தின்றுவிட்டுப் போய்விடும்.

புதைத்தவனுடைய கருத்து கொஞ்ச நாள் கழித்து எழுந்திருக்கும். கொஞ்ச நாள் போய் ஆண்டவன் விசாரித்துத் தண்டனை தருவான் என்பது முஸ்லிம், கிறிதஸ்வர்கள் பழக்கம். ஆண்டவன் தணிக்கை பார்த்துத் தண்டிப்பான் என்றும் இதற்குத் தணிக்கை பார்க்கிற நாள் இருப்பதாகவும் கருத்து.

நம்மவன், என்னத்தைத்தான் செய்வது என்ற விதியொன்றும் கிடையாது.

செத்துப் போய்விட்டான் என்றால் அது எங்கேயோ போய்விட்டது என்று கூறுகிறான். பார்ப்பான் மதப்படி இன்றைய மக்களுக்கு என்ன காட்டுகிறானென்றால், ஜீவன் அல்லது மனிதன் செத்துப் போய்விட்டான் என்றால், அப்படிச் செத்துப் போனதற்கு ஆதாரம் உள்ளே உள்ள ஆத்மா பிரிந்து போய்விட்டது; வேறு இடம் தேடிக்கொண்டது. இதிலுள்ள தத்துவப்படி பார்த்தோமானால் இந்த உடம்பிலிருந்து பிரிகிற ஆத்மா சும்மா பிரிவதில்லை; இன்னொரு உடம்பைப் பிடித்துக் கொண்டு அதில் இந்த ஆத்மாவை விடுவான் என்பான். அங்கொரு காலை வைத்துக் கொண்டுதான் இங்கிருந்து அது பிரிந்து போகும். சும்மா போவது, பிறகு இடமின்றித் திண்டாடுவது என்பதில்லை. சும்மா பிரிந்திருக்கிறதென்றால் எங்கே போயிருக்கிறது?

செத்தும் சும்மா விடுவதில்லை. அது பண்ணின தப்புக்குத் தண்டனை தர வேண்டும். செத்தபிறகு நரகத்திற்கோ, மோட்சத்திற்கோ போகிறதாம். அது அவர்கள் செய்த புண்ணிய தர்மப்படி நடக்கிறதாம்.

பார்ப்பானுக்குத் தங்கத்தால் தட்டு, வெள்ளியால் தட்டு செய்து தந்தால் அவ்வப்போது சுடச்சுட தோசை கிடைக்கும். பக்கத்திலே வயதுவந்த பெண் பிள்ளைகள் இருப்பார்கள், என்றைக்கும் இருப்பதைப்போல் சொர்க்கத்தில் சுகமாக இருக்கலாம் என்பர்.

நரகம் எங்கு பார்த்தாலும் மலமாகத்தானிருக்கும். எத்தனை முனிசிபாலிடியில் வாங்கியிருப்பானோ தெரியவில்லை. தேள், நண்டு, பாம்பு முதலிய பயங்கர ஜந்துக்கள் இருக்கும். அதில் போட்டுத் தினம் துன்பப்பட வைப்பதுடன், அங்கு செக்கில் போட்டு ஆட்டுவான், நெருப்பால் சுடுவான், ஈட்டியால் குத்துவான், கழுவேற்றுவான்.

இது ஒரு பக்கம் நடக்கும். உயிர் அங்கு திண்டாடும். அதற்காக நீ என்னென்ன தானம் எப்படியெப்படி செய்யவேண்டும் என்று ஒரு முடிவு சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்னதுதான் செய்வது என்று கிடையாது.

எங்கம்மாவுக்கு நானும் என் அண்ணனுமாக இரண்டு பிள்ளைகள். எங்கம்மாவுக்கு என்மேல்தான் அதிக ஆசை. ஆனால் என்னைத் தொடமாட்டார்கள். தொட்டுவிட்டால் குளிப்பரர்கள். காரணம், நான் கண்ட இடத்தில் சாப்பிடுகிறேன் என்பதால். ஆசையுடன் என்னை ராமு என்று கூப்பிட்டு, எட்ட நின்று சோறு போடுவார்கள். அத்தனைக்கும் என்மேல்தான் ஆசை. என் அண்ணனைக் கண்டால் பிடிக்காது. அண்ணனும் அதை இலட்சியம் பண்ணுவதில்லை. அந்தம்மாளுக்குக் காசுமேல் நிரம்பக் குறி. சாப்பிடாமல்கூட சேர்த்துவைப்பார்கள். வருடம் எப்படியும் ஆயிரம் ரூபாயாவது மீதமிருக்கும். அண்ணனுக்குப் பணம் தேவையாயிருக்கும். அம்மாவிடம் போய் உட்கார்ந்து கொண்டு பணம் கேட்பார். அம்மாவோ, 'என்னிடம் ஏது பணம்?' என்பார்கள். என்னவெல்லாமோ கூறிப் பார்ப்பார். பணம் தரமாட்டார்கள். கடைசியில் 'இந்தாம்மா நீ செத்தால் நான் தான் கருமம் செய்யணும். அவன் கொள்ளிவைக்கமாட்டான். முனிசிபாலிடி நாய் மாதிரி உன்னைச் செய்துவிடுவான். நான்தான் உனக்கு எல்லாம் செய்யணும். நீ பணம் கொடுத்தால்தான் செய்வேன். இல்லாவிட்டால் நீ செத்தவுடன் நான் எங்கேயாவது ஊருக்குப் போய்விடுவேன்' என்பார். உடனே எங்கம்மா, 'ஏதோ ஒரு பிள்ளைதான் அப்படிப் பிறந்துவிட்டது. நீ அப்படியெல்லாம் போகக்கூடாது' என்று கூறிப் பணம் கொடுத்துவிடுவார்கள்.

எங்கய்யாவிற்கு நோய் வந்தால் சர்வ பிராயச் சித்தம்—அதாவது, உயிர் போய்விடும் என்று நினைத்து மாடு வாங்கி, பார்ப்பானுக்குச் சடங்குகள் செய்து தருவார்கள். அவன் வாங்கிக்கொண்டு போனவுடன் இங்கு பிழைத்துக்கொள்வார். சாதாரணமான நெஞ்சுவலி; சில பேர் உயிர்போய்விட்டதென்றால் கணக்குப் பார்த்துத் திருப்பியனுப்பிவிட்டான் என்பார்கள். இப்படி 2, 3 மாடுவேறு; தனியாகக் காசுவேறு கொடுத்திருக்கிறார்கள்.

எப்போதும் தனியாக ரூபாய் அய்ம்பது தந்து, 'ஒரு மாடு வாங்கிக் கொடு அப்பா' என்று கூறித் தருவார்கள். இதை 16-ஆம் நாள் செய்வோம். அதையெங்கள் வீட்டில் தப்பாது செய்வார்கள். எங்கள் பார்ப்பான் என்ன செய்வான் தெரியுமா? சும்மா அவனுக்கு மாடு வாங்கிக் கொடுத்தால் என்ன செய்வது? நாங்கள் கொடுத்த மாட்டை விற்றுவிட்டால் ஏசுவோம்; கோபித்துக்கொள்வோம். அதனால், அவன்கிட்டே ஒரு மாடிருந்தால் அதை எவனையாவது ஒருவனைப் பிடித்துக் கொண்டு போய்விடும்படி செய்வான். பிறகு எங்களிடம் வந்து 'இது நல்ல மாடு; இதைத்தான் வாங்கித் தந்து விடுங்களேன்' என்பான். நாங்களும் சரியென்று வாங்கிக்கொடுத்து விடுவோம். அவன் மாடும் அவனுக்கே வந்து விடுகிறது; பணமும் ரூபாய் அய்ம்பது கிடைக்கிறது! பித்தலாட்டம் செய்திருப்பான்.

இதிலிருந்து தப்ப மோட்சம் வேண்டும். அதற்கு வேண்டியது செய் என்பான். மாடு தருவது எதற்காக என்றால், இந்த ஆள் மோட்சத்திற்குப் போகும் வழியில் ஒரு ஆற்றைத் தாண்டுவதற்காக. அதாவது, நெருப்பு ஆறு ஒன்று இருக்கிறது. அதன்மேல் மயிர்ப் பாலம் கட்டியிருக்கிறது. அந்த மயிர்ப் பாலத்தின்மேலே, சர்க்கஸ்காரப் பெண் பிள்ளைகள் கம்பியிலே நடக்கிறார்களே, அதுமாதிரி இந்த ஆத்மா மயிர்ப் பாலத்தின் மேல் போகணும். கீழே நெருப்பு; மேலே மயிர்ப் பாலம். தனியாகப் போகமுடியாது. அதற்காக இவன் கொடுத்தனுப்புகிற மாடு அந்த மயிர்ப்பாலத்தின் மீது செல்லும். அப்படி அந்த மாடு செல்லும்போது அந்த மாட்டின் வாலைப் பிடித்துக்கொண்டே ஆத்மா போகணும். சாவதற்குச் சற்றுமுன் கொடுத்தால்தான் இது உதவும்; செத்த பிறகு வேண்டுமானால் இரண்டு மாடுகள் தரவேண்டும். இது எவ்வளவு பித்தலாட்டமான காரியம்?

நெருப்பின்மேல் மயிர் கருகிப் பொசுங்கிவிடாதா? தனி மனிதன் போகமுடியாத மயிர்ப் பாலத்தின்மீது மாடும் மனிதனும் சேர்ந்து எப்படிப் போகமுடியும்? மடத்தனத்திற்கு அர்த்தம் வேண்டாமா? என்று கேட்டால், இவனை வெளியில் போகச் சொல் என்றால் என்ன அர்த்தம்? இது எத்தனை முட்டாள்தனம்? காட்டுமிராண்டித்தனம்?

முதல் பித்தலாட்டம் ஆத்மா என்பது. இது இல்லாவிட்டால் மற்ற பித்தலாட்டங்களுக்கெல்லாம் இடமேயில்லை. இந்த மனிதனை உண்டாக்கிய சக்தியின் வேலை என்னவென்றால், மனிதனைக் கவனிப்பது; தண்டனை தருவது என்பது போன்றவையாம். சாதாரணமாக ஒரு வரிவசூல்செய்யும் தாசில்தாரைக்கண்டு யாராவது பயப்படுகிறார்களா? ஆனால் இது ஒரு மாஜிஸ்ட்ரேட், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருந்தால் கொஞ்சம் பயப்படுகிறோம்; நடுக்குகிறோம். காரணம், அதிகாரம் இருக்கிறது. தப்பும் தவறுமாகக் கேஸ் கொண்டுவந்து தண்டித்துவிடுவார்கள் என்பதால். காலிப் பசங்களை விட்டுத் திட்டச் சொல்வது; நான் பார்த்துக் கொள்கிறெனென்று சொல்லி கேசில் வரும் லாபத்தில் பங்கு பெறுவது என்றால் என்ன நியாயம்?

எங்கள் ஊரில் ஒரு மாஜிஸ்ட்ரேட் இருந்தார். நூறு ரூபாய்தான் சம்பளம். இருந்தும் நல்ல வசதி. சில காலிப் பசங்களைக் கையில் வைத்திருப்பார். அவர்கள் ஊரில் சென்று வீண் வம்பு செய்து கேஸ் கொண்டு வருவார்கள். இவர்களை வீட்டிற்கு வரச்சொல்லுவார். தன் பெண்டாட்டியை விட்டு தோசை, பலகாரம் கொடுக்கச் சொல்லுவார். அவர்களில் ஒருவனுக்கு மொட்டையன் என்று பெயர். 'ஏண்டா! மொட்டையா, இந்த வாரத்தில் ஒரு கேஸ்கூட வரவில்லையே' என்பார் மாஜிஸ்ட்ரேட். 'நானும் போய்த்தான் பார்க்கிறேனுங்க. மாட்டமாட்டேங்குறான்க. எப்படியும் கொண்டு வருகிறேன்' என்பான். இவன் எப்படியாவது நாலுபேரை வம்புக்கிழுத்து கலாட்டா செய்துகொண்டு வந்து விடுவான். இவரும், 'வா, ரொம்பநாளாய் நீ தப்பித்துக்கிட்டிருந்தாயா?' என்று கேட்பார். அதாவது காசு கொடுக்காமல் ரொம்பநாள் தப்பித்துக் கொண்டிருந்தாய் என்பது பொருள். ஓரிருதடவை வாய்தா போட்டு, ஏதாவது பணம் வந்தவுடன், 'சரி, இனி நீ இப்படியெல்லாம் செய்யக் கூடாது' என்றுகூறி இருவரையும் கண்டிப்பது போல் கூறி அனுப்பிவிடுவார். காசு வராவிட்டால் ஏதாவது காரணங்காட்டி இழுத்தடித்துக் கொண்டே போவார். இத் தொல்லையெல்லாம் சீக்கிரம் விட்டால்போதும் என்று காசு கொடுத்துவிட்டுப் போய்விடுவான். அந்த வரும்படியில் காலிப் பசங்களுக்குச் சிறிது கொடுத்துவிடுவார்.

இம் மாதிரி விரட்டியே, பெண் பிள்ளைகளைக் கடவுளைக்காட்டிப் பயமுறுத்துகிறான். கடவுள் தாசில்தாரைப் போலிருந்தால் யார் கவனிப்பார்கள்? அவன் பிடிப்பான், நாசம் செய்வான், கண்டிப்பான் என்றால்தான் பயப்படுவார்கள். இல்லாவிட்டால் அதுவும் ஒரு கல்லுதான்; இருக்கும் வரைதானே என்றால் என்ன செய்வது? எதற்காக உடம்பு செய்தது என்று கருதாமல் ஆத்மா செய்தது என்று கருதி, இதைச் செக்கில்போட்டு ஆட்டுவான்; கழுமரத்திலேற்றுவான்; மலத்தைத் தின்னும்படி செய்வான்; நெருப்பில் போட்டுப்

பொசுக்குவான்; நண்டு, தேள், பாம்பு இவற்றின்மீது படுத்துத் தூங்கவைப்பான் என்பது? ஆத்மா எது? உயிர்தான் செத்து விடுகிறதேயென்றால், 'உனக்குத் தெரியாது; உன்னிட மிருந்து அதுபோகும்; போனவுடன் பகவான் உன்னுடைய உடம்பைப்போல் செய்து அதிலிருந்த உயிரை உள்ளே செலுத்திக் கொடுமைப் படுத்துவான். அதற்காக, நீ இதெல் லாம் செய்துதான் தீரவேண்டும்' என்பான்.

யானை, நாய், பூனை, கரடி இவையெல்லாம் செத்தால் என்ன செய்கிறோம்? கருமாதியா செய்கிறோம்? இவனுக்கும் ஆத்மா இருக்கிறது; இவைகளுக்கும் ஆத்மா இருக் கிறது. ஏன் மனிதனுக்கு மட்டும் கருமாதி? மற்றவைகளுக்குக் கிடையாது? நல்லது கெட்டது தெரிந்துதான் இவனைத் தண்டிப்பார். பார்ப்பானுடைய மதத்தைத்தவிர ஆத்மா என்ற சொல் வேறு மதத்தில் கிடையாது. கிறிஸ்து மதம், முஸ்லிம் மதம், தமிழ் மதம் ஆகிய எந்த மதங்களிலும் ஆத்மா என்பதே கிடையாது. ஆனால், இந்தப் பார்ப்பனர் வந்த பிறகு அவர்களுடைய வாழ்க்கை வசதிகளுக்காக ஏற்படுத்திக்கொண்ட ஏற்பாடே இந்த ஆத்மா என்பதாகும். புத்தர்கூட ஆத்மா என்பது ஒன்று இல்லை. அதற்கு எஜமான் என்று ஒரு கடவுளில்லை என்றுதான் கூறியிருக்கிறார்.

பார்ப்பனர்கள் கூறும் ஆத்மாவுக்கு ஆயுசே கிடையாது. எத்தனையோ ஜன்மங்கள் எடுத்திருக்கிறது. அதற்கு வயது எல்லையே இல்லை. இங்கு நாம் பார்ப்பனர்களுக்குத் தானம் கொடுக்காவிட்டால் அங்கு சரியானபடி சாப்பாடு தரமாட்டார்கள். இங்கு நாம் என்னென்ன தருகிறோமோ அதுவெல்லாம் அங்கு தருவார்கள். சிலர் செருப்பு வாங்கித் தருவார்கள். ஏனெனில், அங்கு கரடுமுரடான பாதையில் நடக்கச் சொல்லுவார்களாதலால் அதற்காக. செருப்பு இங்கு தந்தால் அது அங்கும் அவனுக்குக் கிடைக்கும். அங்கு வசதி யான வீடு வேண்டுமானால், தனக்கு இங்கு ஒரு நல்ல வீடு தந்தால் அங்கு அவனுக்குத் கிடைக்கும் என்று கூறி வாங்கிக் கொள்கிறான். வெள்ளித்தட்டு கல்யாணப் பெண்ணைத் தானம் கேட்கிறான். என்னடாவென்றால், இதெல்லாம் அங்கு உனக்குக் கிடைக்கும் என்கிறான். சிலர் இதற்காக ஒரு இலட்சம் வரை செலவு செய்கிறார்கள். இப்படி ஒரு சிறு கூட்டம் வாழ வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

காலமான பிறகு ஒரு வருடம் கழித்துத் திவசம் செய்யாதவரை, பெயரெல்லாம் கேட்டுக் 'குடி அரசி'ல் போட்டோம். ஏராளமாகத் தொடர்ந்து வந்தது. அதில் எங்காவது ஒரு குமாஸ்தா இருந்திருப்பான். அதைக் கண்டுபிடித்து, நீ என்ன திவசம் செய்யமாட் டேன் என்று 'குடி அரசி'ற்குப் பெயர் கொடுத்தாயா? என்பான். அய்யய்யே, அது நானில்லை வேறு யாரோ என்று கூறிவிடுவான். 1926-27லேயே இப்படி மதுரையில் இந்தக் கருத்தைக் கூறித் துவக்கினோம். பத்து சதவீதம் பேர்தான் திருந்தினார்கள். மீதி தொண் ணூறு சதவீதம் பேர்கள் திருந்தவில்லை.

சிந்திக்கவேண்டும். கடவுள், மத, சாஸ்திர சம்பிரதாயப்படி, உலக வழக்கப்படி போகிறது என்கிற மாதிரி முட்டாள்தனத்திலும் அடிமுட்டாள்தனத்திலுமாக நடந்தால் என்ன அர்த்தம்? எப்படிச் செத்து எப்படி வருகிறோம்? என்பது தனி நிர்வாணமாக இருந்து சிந்திக்க வேண்டும். எந்தவிதமான பற்றும் கவலையும் இருக்கக்கூடாது. நம் ஆராய்ச்சி அறிவைக்கொண்டு நாம் சிறிது சிந்திக்கவேண்டும்.

சிந்திக்க ஆரம்பித்தால்தான் உண்மை தெரியும். சிந்திக்காததுதான் குறை.

2500 வருடங்களாக புத்தர் கூறினாரே 'யார் எதைக் கூறுகிறார்கள் என்பதற்காக எதையும் நம்பாதே! சிந்தித்துப்பார்! பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்! உன் புத்தி என்ன சொல்லுகிறதோ அதன்படி நட!' என்றார். புத்திப்படி நட என்றதால்தான் அவருக்கு புத்தர் என்று பெயர் வந்தது.

புத்தியால் சிந்தித்துப் புத்தியின்படி நட! என்றதால்தான் புத்தர் எனப்பெயர் என்று வெள்ளைக்காரன் எழுதி வைத்திருக்கிறான். நமது தமிழ் அகராதியிலும் புத்தியை ஆதாரமாகக் கொண்டவன் புத்தன் என எழுதியிருக்கிறது.

புத்தர் சொன்னபடி சிந்தித்தால் இது விளங்குமே தவிர, நம்மிரு மதமும் என்ன கூறுகிறது என்று பார்த்து, மதத்தில் கூறியிருக்கிறது என்று கூறி நடப்பானேயானால் அவன் மடையன்; புத்திப்படி நடந்தால் மட்டும் எல்லாம் நன்மையாகும். அதற்குமேல் அவன் ஆராய்ச்சி வேறு இருக்கிறது.

மனிதன் பிறக்கும்போதே பெரிய மனிதனாகப் பிறப்பதில்லை. சின்னக் குட்டியாகத் தான் பிறக்கிறான். சிறிதாகப் பிறந்து பிறகு பெரியவனாக வளருகிறான். பெரியதாகத் தோன்றும் யானையும் பிறக்கும்போதே பெரிதாகப் பிறப்பதில்லை. சிறிதாகத்தான் பிறக்கிறது. பெண்டாட்டி சினையாகிறாள்; பிள்ளை பெறுகிறாள். யானை சினையாக வேண்டுமானால் அதற்கு விதை கடுகத்தனையாகும். பெண் சினையாவதற்கு, அந்த சினை (யானை) உருவத்திற்கு ஆகும் ஒரு கடுகத்தனையிலே நான்கில் ஒரு பங்குதான். அவ்வளவுதான்; அதிலிருந்து வருவது சிறு உருவமாகும். அப்புறம் உணவு உண்டு வளர்ந்து மனிதனாகிறான். இதுதான் மனிதன்; இதில் எப்படி ஆத்மா என்பது பொருந்தும்?

சாதாரணமாக, ஒரு மரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 10டன் எடை இருக்கிறது. ஒரு ஏக்ரா அளவு ஒரு ஆலமரம் இருந்தது. விழுது எங்கும் இறங்கியிருந்தது. இதெல்லாம் எங்கிருந்து வருகிறது? ஒரு சிறு கடுகத்தனை முனையிலிருந்துதான். மற்றபடி காற்று, தண்ணீர், மண்ணின் சாரம், இவையெல்லாம் சேர்ந்து மளமளவென்று வளருகிறது. சிலது நூறு, இருநூறு, அய்நூறு வருஷம் இருக்கிறது. பட்டுப் போய்விட்டால் பகவான் சீட்டுக் கிழித்து விட்டான் என்பான்.

எத்தனை நாளைக்கு இருப்பது, வாழ்வது என்பன சுற்றுப்புறச் சார்புப்படிதான். மனிதனும் அப்படித்தான். வயிற்றிலேயே இறப்பதுமுண்டு; பிறந்ததும் இறப்பதுமுண்டு. பள்ளியில் படிக்கும் போதும் இறப்பான். திருமணமான பிறகும் இறப்பான். இப்படி எந்தச் சமயத்திலும் மனிதன் சாகிறான். சுற்றுப்புறச் சார்புப்படி சிற்சில சிகிச்சைகள் செய்வதை முன்னிட்டு விபத்துக்களைத் தவிர்ப்பதுமுண்டு. வளப்பமான முறையிலிருந்ததால் இந்தக் குறைகள் அதிகமில்லை.

எனக்கு வயது 80 ஆகிறது. எந்த விதத்திலும் உணவு மற்ற விஷயங்களிலும் கவலைப்படுவதில்லை. ஏதோ வாய்த்தபடி, நினைத்தபடி, பிடித்ததைச் சாப்பிடுவேன். நேற்று ஒரு பண்டத்தை தின்று அது ஜீரணிக்காமல் கஷ்டப்பட்டிருப்பேன். இன்று அது கிடைத்துவிட்டால் சாப்பிட்டு விடுவேன். பத்து நாளைக்கொருதரம் குளிப்பேன். அதுவும் யாருடையவாவது தொந்தரவினால்தான். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதென்றால் அது ஒன்றரை மாதத்திற்கு ஒரு தடவை கூட கஷ்டம். அதுவும் லேசில் தேய்க்கவிட மாட்டேன். இதற்காக என் முதல் மனைவி நாகம்மையாரும் என் தங்கையும் சேர்ந்து பேசிக் கொள்வார்கள். 'நான் பேச்சுக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறேன். நீ பின்னால் வந்து எண்ணெயைத் தலையில் ஊற்றித் தேய்த்துவிடு' என்று; அதன்படி என் மனைவி என்னிடம் ஏதாவது பேசிக்கொண்டிருப்பார்கள். என்னுடைய தங்கை பின்னால் வந்து தலையில் எண்ணெய் ஊற்றி விடும். நான், அட நாசமாபோறவங்களே, என்று திட்டி விட்டுப் பின்னால் திரும்புவேன். தங்கையாக இருக்கும், கோபம் வராது. சரியாகத் தூங்குவது கிடையாது. மற்றபடி ரொம்பப்போனால்தான் டாக்டரைக் கூப்பிடுவேன். கொடுக்கும் மருந்தைக் குடிப்பேன்.

மனிதனாகப் பார்த்து நல்லதாக அமைப்பதும் உண்டு; தானாக அமைவதும் உண்டு. எல்லா வசதிக்கும் அபாயம் என்பது உண்டு. இயற்கை நிகழ்ச்சிகள்!

ஒரு நல்ல கெட்டியான வீடு 100 வருஷம் இருப்பதும் உண்டு. நாலு வருஷம் இருப்பதும் உண்டு. நல்ல கெட்டியான வீடு இது; நூறு வருஷம் வரை தாங்கும் என்கிறோம். ஆனால் நான்கு வருஷத்திலே நெருப்புப் பிடித்துக்கொண்டு இடிந்து விடுகிறது.

100, 150 வருஷம் இருக்கும் என்றாயே, 4 வருஷத்தில் போய்விட்டதே என்றால் என்ன அர்த்தம்? எப்படியெப்படியிருந்தால் இருக்குமோ அப்படியிருந்தால் இருக்கும். ஒரு இடி அதன்மேல் விழுந்தாலோ அல்லது ஒரு லாரி வந்து வீட்டின்மேல் மோதினாலோ அது இருக்குமா? சாதாரணமாக இருந்தால் 100, 150 வருஷம் இருக்கும்.

காந்தி கூடத்தான் 150 வருஷம் இருப்பேன் என்றார். என்னவாயிற்று? அதற்கேற்றபடி சாப்பிட்டு வந்தார். எனக்கு அதைப்பற்றியெல்லாம் நன்கு தெரியும். அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன். எத்தனை பாதாம் கொட்டை, எத்தனை பழம் என்று எண்ணித்தான் சாப்பிடுவார். என்ன டாயில் என்ன சத்து என்று பார்த்துச் சாப்பிடுவார். உடல் வளர்ச்சிக்கானவற்றை உண்பார். இதற்காகப் பட்டினியுமிருப்பார். ஆனால், அதே சமயத்தில் அந்தப் பட்டினியைக் காட்டிக் காரியமும் சாதித்துக் கொள்வார். என்ன ஆயிற்று? 80 வயதிலேயே தீர்ந்து போனார். என்னைவிட பத்து வயது முந்தி. அவ்வளவுதான். என்ன நடந்தது? சாகவில்லையா? ஏதோ பார்ப்பனர்களுக்கு அபாயம் வந்தது; எனவே, பார்க்காமல் சுட்டான். செத்துப்போனார். நான்கு தென்னங் கன்றுகளை நட்டால் எல்லாம் நன்றாகவா பயன் தருகிறது? இல்லை; ஏன்? எல்லாம் ஒரு விதை தானே! மனிதனாக இருந்தால் ஜாதகம் சொல்லுவார்கள். மரத்திற்கு என்ன காரணம் சொல்லுவார்கள்? என்னமோ, அது அவ்வளவுதான் என்பார்கள்.

அயோக்கியன் என்று ஒரு பிள்ளை பிறப்பதில்லை. சுற்றுப்புறச் சார்புகளின்படி, பழக்கப்படிதான் கெட்டவனாக, பித்தலாட்டக்காரனாக, கொலைகாரனாக மாறுகிறான். இதன்படி உடம்பு அமைப்பு ஏற்பட்டுவிடுகிறது. வயிற்றிலிருக்கிறபோதே, உருவ வளர்ச்சியடைகிறபோது காற்று, உஷ்ணம் வந்து ஒவ்வொரு அவயங்களையும் தாக்குகிறது. அதனால்தான் சிலர் நொண்டியாகவும், முடமாகவும் மற்றும் பலர் அங்கஈனமாகவும் பிறக்கிறோம். நம் உடம்பில் சிரிக்க, கோபப்பட, சிந்திக்க, நடக்க, ஆத்திரப்பட என்று ஒவ்வொரு அவயவம் இருக்கிறது. இது சுற்றுப் புறத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும்.

முன்கோபக்காரன் ஒருவன், நண்பன் ஒருவனைப் பலர் முன்னிலையில் முன் கோபத்தால் திட்டினால், அது ஆணவத்தால் வருவது இல்லை. உள்ளேயுள்ள அவயவத்தால் வருவது. கார் ஓடுகிறது; ஒன்று கோளாறாக இருந்தால் வண்டி கோளாறு காண்பிக்கிறது.

ஒரு மடையனுக்குப் படிக்கும்போதே மறந்துவிடுகிறது. வரிசையாக எண்ணிக் கொண்டே வரும்போது 59, 60 என்று கூறிவிட்டுப் பின் 59 என்று கூறுவான். அவயவத்திலுள்ள ஒரு கூட்டுச் சக்திதான் காரணம்.

செத்துப் போய்விட்டது, சாறு போச்சு; சத்துப்போய்விட்டது என்கிறோம். என்ன அர்த்தம்? எதன்மூலம் எப்படிப் பார்த்து செத்துப் போயிற்று என்கிறோம். எப்படிப் பார்க்கிறார்கள்? நாடி பிடித்தா? பெண்களும் பாட்டிகளும் போயிட்டது என்கிறார்கள். எப்படி? மூக்கில் கை வைத்துப் பார்க்கிறார்கள். மூச்சு எழும்பவில்லையா? உடனே செத்துப்போச்சு என்பார்கள். எப்படி? காற்றை வாங்கிவிடுகிற இயந்திரம் இருந்து, அதன் வேலை தீர்ந்து போச்சு. மற்ற எந்த அவயவமும் நன்றாக இருந்தாலும் பயனில்லை. காற்றை வாங்க முடியவில்லை, விடமுடியவில்லை என்றால் சத்துப் போய்விட்டது; அதுதான் காரணம். நல்லா உடம்பு குண்டாகத்தானிருக்கும். வண்டியிலேறி கோர்ட்டுக்குப் போவார். போகும் வழியில் இறந்து விடுவார். இறங்கும்போது பார்த்தால் இறந்து கிடப்பார்.

காற்றை விடுகிற, வாங்குகிற சக்தி குறைந்தால் தீர்ந்தது. பிறகு எரித்து விடுகிறோம். அதில் சேர்ந்திருந்த பொருட்கள் காணாமல் போய்விடாது. அதுவெல்லாம்

வெளியில்போய் அதுகளுடன் சேர்ந்துவிடுகிறது. என்னுடம்பில் 1000 எடை தண்ணீர் இருக்கிறதென்றால் உடம்பை எரிக்கும்போது தண்ணீர் ஆவியாகிறது. மூலப்பொருளுடன் சேர்ந்து கொள்கிறது. முன்பு கூறுவார்கள்: ஒரு மெழுகுவர்த்தி எரிவதால் ஒன்றும் நஷ்டமில்லை என்று. மெழுகுவர்த்தி எரிகிறது. புகைச்சலாக வந்து காற்றுடன் சேர்ந்து அது அதன் மூலப்பொருள்களுடன் சேர்ந்து கொள்ளுகிறது. பிறகு நாம் அந்த மூலப் பொருளை எடுத்துக் கொள்ளுகிறோம். இப்படி அதன் மூலப்பொருள் நஷ்டமாவதில்லை.

ஒரு அண்டா நிறைய தண்ணீர் சுடவைக்கிறோம். எரிய எரிய தண்ணீர் குறைந்து ஆவியாகி, அது கனம் குறைந்த வஸ்துவாக ஆகிறது. மேலே போக, காற்றாகிப் பின் குளிர்ந்து மழையாகப் பெய்கிறது. அது எங்கேயும் போகவில்லை. மூலப்பொருளாகிய தண்ணீரோடு தண்ணீராகச் சேருகிறது. தண்ணீர் ஆவியாகி, ஆவி தண்ணீராக மாறுகிறது. அது உயிரோடுதான் இருக்கிறதே தவிர எங்கேயும் போய்விடவில்லை. எத்தனை தடவை அப்படித் தண்ணீர் மாறி மாறி வருகிறதோ, அதுபோல்தான் மனிதன் உயிரும் என்பர்.

எனவேதான், இந்த ஆத்மா என்பதும், மோட்சம், நரகம் என்பவைகள் எல்லாம் இந்தப் பார்ப்பனர் நம்மை ஏமாற்றி நம்மிடம் பணம் பறிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதுதான் கருத்தே தவிர, இதில் உண்மை இருக்கிறது என்று கூற இடமில்லை.

இதையெல்லாம் எடுத்துக்கூற நாதியில்லை, எங்களைத் தவிர. ஏமாற்றிப் பிழைக்கத்தான் வசதியிருக்கிறதே தவிர, உண்மையை எடுத்துக்கூற வசதியில்லை. இந்தப் பத்திரிகைக்காரன் யோக்கியமாக நடப்பதில்லை. மக்களையும் யோக்கியமாக நடக்க விடுவதில்லை. தன் சுயநலத்திற்காகப் பித்தலாட்டம் செய்கிறான். ஒரு பக்கம் ஜோதிடம் போடுகிறான். உள்ளபடி அவன் பக்தனாக இருந்தால் அந்த ஜோதிடத்தை அவன் நம்புகிறானா? அதன்படி நடக்க சம்மதிக்கிறானா? எனவே, தோழர்களே நீங்கள் நன் முறையில் சிந்தித்துப் பார்த்து நடக்க வேண்டும்.

[சீர்காழியில், 29-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1959]

7. தலைவிதி

தோழர்களே!

இன்று இவ்வூர் யூனியன் போர்டார் அழைப்புக்கு இணங்கி வந்தசமயம் உற்சவக் கூட்டத்திற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்டவேண்டுமென்று சொன்னதால் இங்குப் பேச ஒப்புக்கொண்டேன்.

கடவுளைப்பற்றிய எண்ணங்களும் பக்திகளும் நமக்கு என்ன பலனைக் கொடுக்கின்றன? அதிக பக்திக்காரன் தனக்கு வேண்டியதெல்லாம் கடவுள் கொடுப்பார் என்று எண்ணுகிறான். கடவுளைப்பற்றி அதிகமாய் அறிந்தவன் சகலமும் அவன் (கடவுள்) செயல்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று எண்ணுகிறான். மனிதனது முற்போக்கையும் அவனது கஷ்டத்தையும் கொடுமையையும் நிவர்த்திசெய்துகொள்ளுவதையும் இந்த எண்ணங்கள் தடைப்படுத்துகின்றன.

பல ஆயிரம் வருஷங்களாக ஒருவன் கீழ்ச் சாதியாய் இருப்பதற்கும், கல்வி அறிவு பெறாமல் இருப்பதற்கும், சதா உழைத்து உழைத்துப் பாடுபட்டும் பட்டினியாய்ப் போதிய ஆகாரமும் வசதியும் இல்லாமலும் இருப்பதற்கும் இந்த எண்ணங்களே காரணமாகும். இதுபோலவே பாடுபடாத சோம்பேறிகள் கோடீஸ்வரர்களாகவும், தலைமுறை தலைமுறையாய்ப் பிரபுக்களாகவும் மேல்சாதிக்காரர்களாகவும் இருப்பதற்கும் இந்த எண்ணங்கள்தாம் காரணம். இந்த எண்ணங்கள் பணக்காரனுக்கும் சோம்பேறிக்கும் (பார்ப்பானுக்கும்) தாம் அனுகூலம்; தொழிலாளிக்கும், கூலிக்காரனுக்கும், பண்ணையாளுக்கும் கெடுதியே ஆகும்.

ஏழைகள் தங்கள் தரித்திரத்திற்கும் கஷ்டத்துக்கும் கடவுளும், தலைவிதியும்தாம் காரணம் என்று சொல்லிவிடுவானேயாகில் அவர்கள் எப்படித் தரித்திரத்தை நீக்கிக்கொள்ள முடியும்? அவன், தன் பாட்டின் பயனை எவன் அனுபவிக்கிறான்? ஏன் அனுபவிக்கிறான்? என்று பார்த்து அவைகளைத் தடுக்கவேண்டும். இந்தக் காரியம் செய்ய ஒரு கடவுளும் ஒப்பாது. ஏனென்றால், கடவுளையும் தலைவிதியையும் பணக்காரனும், சோம்பேறியும் தாம் உண்டுபண்ணுகிறார்கள். ஆகையால், அவைகளைத் தங்களுக்குத் தகுந்தமாதிரி யாகத்தான் உண்டுபண்ணிக்கொள்வார்கள். இதில் உங்களுக்குச் சந்தேகம்வேண்டாம். இங்கு மாத்திரமல்லாமல் எல்லாத் தேசங்களிலும் பணக்காரர்கள் தங்கள் நன்மைக்கும், அது ஸ்திரமாய் இருப்பதற்கும் இந்த மாதிரியாகத்தான் கடவுளைச் சிருஷ்டித்து, அதைப் பிரச்சாரம் செய்யப் பாதிரிகளை ஏற்படுத்தி—அவர்களுக்குப் பணம் கொடுத்துக் காப்பாற்றி வருகிறார்கள். இந்தப் புரட்டுகளை உலகில் வெகுபேர் அறிந்திருந்தாலும், ரஷியா தேசத்தார்கள்தாம் முதன்முதலில் இதை அழித்து நிர்த்தூளியாக்கி, பணக்காரத் தன்மையையும், பாதிரித்தன்மையையும் ஒழித்தார்கள். ரஷியா தேசமானது இந்தியாவைப் போலவே பணக்காரனுடையவும் பார்ப்பனர் (பாதிரி)களுடையவும் ஆதிக்கத்தில் இருந்து ஏழை மக்களை வாட்டி வதைத்து வந்தது. ஆனால், அவர்கள் அதற்குக் காரணம் கடவுள் புரட்டும் மதப்புரட்டும் என்பதை உணர்ந்து, அந்த இரண்டையும் ஒழிக்கத் தொடங்கி, இன்று எல்லோரும் சமமாய் வாழுகின்றார்கள். அங்கு சோம்பேறியோ, பிரபுவோ, பணக்காரனோ, முதலாளியோ, மிராசுதாரனோ, ஜமீன்தாரோ கிடையாது. எல்லோரும் பாடுபட வேண்டியது. அதன் பயனை எல்லோரும் சமமாய் அனுபவிக்கவேண்டியது; ஒருவனை ஒருவன் ஏய்க்கவோ, ஒருவன் பாடுபட்டதை ஒருவன் அனுபவிக்கவோ அங்கு முடியாது.

[சென்னிமலை ஸ்கூலில், 9-2-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1933]

8. ஒழுக்கம்

தோழர்களே!

வாழ்க்கையில் ஒழுக்கத்தில், புருஷனுக்கு வேறு சட்டம், பெண்ணுக்கு வேறு சட்டம் வைத்திருக்கிறோம்.

ஆனால், ஒழுக்கத்தைப்பற்றி சதாகாலமும் பேசுகிறோம்; ஒழுக்கம் என்பதை எழுத்தில், சப்தத்தில் பார்க்கின்றோமே ஒழிய காரியத்தில் பார்ப்பதே இல்லை.

விபச்சாரித் தனம் என்பதை எவ்வளவோ கண்டிக்கிறோம். அதற்கு எவ்வளவோ நிபந்தனைகள், நிர்ப்பந்தங்கள் சட்ட மூலமாய், சமூக மூலமாய், சாஸ்திர மூலமாய், இயற்கை மூலமாய் எல்லாம் வைத்திருக்கிறோம். அப்படி எல்லாம் இருந்தும், அதை இருவருக்கும் சமமாய் வைக்கவில்லை. ஆண் விபச்சாரத்தைப்பற்றிப் பேசுவோரே கிடையாது. அப்படி இருந்தாலும் அதற்குப் பெயர் பலக் குறைவு (Weakness) என்று சொல்லி விடுகிறோம். பெண் விபச்சாரத்தை நாணயக் குறைவு, ஒழுக்கக் குறைவு, கெட்டகுணம், இகழத் தக்கது, கண்டிக்கத் தக்கது, வெறுக்கத் தக்கது என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆணும் பெண்ணும் சேர்ந்தால்தான் விபச்சாரமாகுமே தவிர ஒரு பெண்ணும் மற்றொரு பெண்ணும் சேர்ந்து விபச்சாரம் செய்துவிட முடியாது. இதை யாரும் விபச்சாரம் என்று சொல்லவும் மாட்டார்கள்.

ஒருவருக்கொரு நீதி என்கின்ற முறையாலேதான் உலகில் பெரிதும் விபச்சாரம் இருந்து வருகிறதே தவிர, பெண்களின் கெட்ட குணங்களால் இருந்து வருவதாகச் சொல்லி விட முடியாது.

அன்றியும், இவ்வளவு தூரம் மதத்தாலும், சட்டத்தாலும், சமூகத்தாலும், நிபந்தனையாலும், வெறுக்கப்பட்ட விபச்சாரம் என்பது ஏன் இன்று உலகில் சர்வ சாதாரணமாய் இருந்துவருகின்றது. இதற்கு என்ன காரணம் என்பதை யாராவது யோசிக்கிறார்களா?

ஒவ்வொருவரும் விபச்சார தோஷத்திற்கு ஆளாகிவிட்டே மற்றவர்களைக் குறை கூறுகிறார்கள் என்பது அவரவர்கள் நெஞ்சில் கையை வைத்து—குழந்தைப் பருவமுதல் தாங்கள் நினைத்தது, செய்தது ஆகிய காரியங்களை ஞாபகப்படுத்திப் பார்த்தால் தங்களுக்கு விளங்கும்.

நம்முடைய கடவுள்கள் என்று சொல்லப்படும் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவைகள்கூட விபச்சார தோஷத்திலிருந்து விலக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய பெண்சாதிமார்களைக்கூட விபச்சார தோஷத்திலிருந்து விலக்கவில்லை.

ஏன் இப்படி இருக்கவேண்டும்? விபச்சாரம் மக்களுக்கு இயற்கையா என்று பாருங்கள். ஒரு நாளும் அல்லவே அல்ல. செயற்கைக் குணங்களாலேயே விபச்சாரம் நடக்கின்றது. அதாவது, கலியாணங்களே பெரிதும் விபச்சாரத்திற்குச் சமானமானவையாகும்.

தனக்கு இஷ்டமில்லாமல், காதல் இல்லாமல், பணம், காசு, சொத்து, வேறுவித நிர்ப்பந்தம் ஆகியவைகளுக்காக இணங்குவதே விபச்சாரம் ஆகும்.

நமது மணமக்கள் பெரும்பாலோர் தாய் தகப்பன்மார்கள் தங்களை ஜோடி சேர்த்து விட்டார்களே என்பதற்காகவே இணங்கி இருக்கிறார்கள். மற்றும் பலர் தங்களுக்குள் வேற்றுமை உணர்ச்சியும் (அன்பு) ஆசை இன்மையும் ஏற்பட்டும் பிரிந்துகொள்ள முடியவில்லையே என்பதற்கு ஆகவே இணங்கி இருப்பதுபோல் இருக்கிறார்கள். இதுபோன்றவைகள் எல்லாம் நிர்ப்பந்த விபச்சாரங்களேயாகும். மற்றும் பலர் செல்வத்தையே பிரதானமாய்க் கருதி, இன்ப உணர்ச்சியைப் பறிகொடுத்து இணங்கி இருக்கிறார்கள். இது போன்றவை காசு, பணம், சொத்துக்களுக்காகச் செய்கின்ற விபச்சாரங்களேயாகும்.

இவை ஒருபுறமிருக்க, இன்று உலக வழக்கில் இருக்கின்ற விபச்சாரத் தன்மைகள் தாம் ஆகட்டும் ஏன் ஏற்படவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். பால்ய மணங்களை ஒழித்துக் காதல் மணம், கல்யாண ரத்து, விதவை மணம், சமஉரிமை ஆகியவைகள் ஒரு சமூகத்தில் இருக்குமானால், இன்றுள்ள விபச்சாரங்களில் 100-க்கு 90 பாகம் மறைந்து போகும் என்றே சொல்லுவேன். அதோடு, பெண்மக்களை நன்றாகப் படிக்கவைத்து, அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, சொத்து உரிமையையும் வழங்கிவிடுவோமானால் விபச்சாரம் என்பது எப்படி நேரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

[கீழையூர், திருபுவனம், திருச்சி ஆகிய இடங்களில் 9-6-1935 முதல் 13-6-1935 முடிய சொற்பொழிவுகள்—'குடிஅரசு' 16-6-1935]

தாய்மார்களே! தோழர்களே!

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்ற இவ்வாண்டு துவக்க விழாவிற்குத் தலைமை வகித்து நடத்தும் பெருமையை எனக்களித்ததற்கு நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன்.

ஒழுக்க விஷயங்களிலும், அதுபோலவே மக்களிடம் மக்கள் நடந்து கொள்ளுகிற ஒழுக்கத்தைப் பற்றித்தான் சுயமரியாதைக்காரருக்குக் கவலையே ஒழிய—எப்படிக் குடுமி வைப்பது, எப்படி வேட்டி கட்டுவது, எப்படிப் பொட்டுப் போடுவது; எப்படிப் பிரார்த்தனை செய்வது, யாரைத் தொடுவது, யார் வீட்டில் சாப்பிடுவது, எது சாப்பிடலாம், எது சாப்பிடக் கூடாது, எத்தனை கடவுள்கள், எந்தக் கடவுளைக் கும்பிடுவது, எதைக் கும்பிடக் கூடாது, எது வேதம், எது சாஸ்திரம்—என்பனவாதிகளில் சுயமரியாதைக்காரருக்குக் கவலை இல்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், எந்த மனிதனும் அன்னியனுக்கு உபகாரியாயும், கடைசிப் பட்சம் அன்னியனுக்குத் தன்னால் துன்பம் கொடுக்காதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள்.

சுயமரியாதைக்காரர்களாகிய நாமும் தனிப்பட்ட எந்த வகுப்பாருடையவும், சுய நலத்துக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும், தனிப்பட்ட மதவாதிகளுக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும் ஒப்புக்கொள்ளாமல் எல்லா மக்களுக்கும்—எந்த வகுப்பாரானாலும், எந்த நிலையிலுள்ளவர்களானாலும், எந்த மதக்காரரானாலும் யாவருக்கும் ஒன்றுபோல் பயன்படும்படியான காரியங்களையே நாம் 'ஒழுக்கம்' என்கிறோம். இதனால் சுயநலத்தையே பிரதானமாய்க் கருதிக் கற்பித்துக்கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை என்பது விளங்கும்.

தாசிக்கு ஒழுக்கம்–ஒரு புருஷனையே நம்பி ஒருவனிடத்திலேயே காதலாய் இருக்கக் கூடாது என்பதாகும்.

'குல ஸ்திரீ' என்பவளுக்கு ஒழுக்கம்–அயோக்கியனானாலும், குஷ்டரோகியானாலும் அவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தில்கூடச் சிந்திக்கக்கூடாது என்பதாகும்.

இதுபோலவே, முதலாளிக்கு ஒழுக்கம் – எப்படி வேண்டுமானாலும் யாரையும் ஏமாற்றலாம் என்பதாகும்.

தொழிலாளிக்கு ஒழுக்கம் – ஒரு விநாடி நேரம்கூட வேலை செய்யாமல், முதலாளிக்குத் துரோகம் செய்யலாகாது என்பதாகும்.

இந்துவுக்கு ஒழுக்கம் – பசுவை இரட்சிக்க வேண்டும் என்பதாகும்.

முஸ்லிமுக்கு ஒழுக்கம் – பசுவைப் புசிக்கலாம் என்பதாகும். இந்து வட்டி வாங்கலாம். முஸ்லிம் வட்டி வாங்கக்கூடாது என்பவை ஒழுக்கம்.

சைவனுக்கு ஒழுக்கம் – விபூதி பூசவேண்டும் என்பதாகும்.

வைணவனுக்கு ஒழுக்கம் – நாமம் போட வேண்டும் என்பதாகும்.

மாத்துவனுக்கு ஒழுக்கம் – முத்திரை அடித்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

இந்துவுக்கு – அக்காள் மகளை, அத்தை மகளைக் கட்டிக்கொள்வதும்; சிற்றப்பன் மகள் தங்கை என்பதும் ஒழுக்கம்.

முஸ்லிம், சிற்றப்பன் மகளைக் கட்டிக்கொள்வது ஒழுக்கம்; அக்காள் மகளைக் கட்டக்கூடாது என்பது ஒழுக்கம்.

ஆகவே, இன்று உள்ள ஒழுக்கங்கள் என்பவைகள் எல்லாம் சட்டம்போல்—சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பொருந்தியவைகளே தவிர, எல்லோருக்கும் பொருந்தியவைகள் அல்ல.

ஆதலால், சுயமரியாதைக்காரர்கள் பொதுவாக மனித சமுதாயத்திற்கும், சமூக சமத்துவ வாழ்வுக்கும் ஏற்றதையே ஒழுக்கமாகக் கொண்டு—முக்கியமாய் மனித சமுதாயத்திற்கு ஏற்ற வண்ணம் அன்னியனுக்கு உதவி செய்தும், அன்னியனுக்குத் தொந்தரவில்லாமல் நடந்துகொள்வதையே ஒழுக்கமாய்க் கருதுவார்கள்.

[சென்னையில், 17-11-1940-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 24-11-1940]

உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப் படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும்—எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி, மற்றவர்கள் வாழப் பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது, குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள், 'பூச்சாண்டி, பூச்சாண்டி' என்பது போல், இவை எளியோரையும் பாமர

மக்களையும் வலுத்தவர்களும் தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியே ஆகும்.

எப்படிக் குழந்தைப் பருவம் உள்ளமட்டும் பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அதுபோலத்தான் அறிவும், சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை—மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத்தீர வேண்டியிருக்கிறது.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்க ஈனமான காரியம் என்பனவெல்லாம் அவைகளைச் செய்கின்ற ஆட்களின் வலிமையையும், அறிவையும் கொண்டு மதிக்கப் படுகிறதேயல்லாமல், வெறும் காரியத்தைப்பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை.

சாதாரணமாக, உலகில், 'விபச்சாரம்', 'பொய்', 'களவு', 'ஏமாற்றம்' முதலிய காரியங்கள் ஒழுக்கங்கெட்ட காரியங்கள் என்று சொல்லப்படுகிறது. என்றாலும், இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இது வரையில் உலகத்தில் காண முடியவே இல்லை.

ஒரு சமயம் நம் கண்ணுக்குத் தென்படவில்லை என்று சொல்வதானால், அப்படிச் சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப் பற்றியே நினைத்துப் பார்த்துத் தங்களுடைய சிறுபிராயம் முதல் இன்றுவரை உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட 'ஒழுக்கங் கெட்ட' காரியங்கள் என்பவைகளில் எதையாவது ஒன்றை மனோ வாக்குக் காயங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா, அல்லது செய்யாமல் இருக்கிறார்களா என்று நினைத்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும். மற்றும், தங்களுடைய சுற்றத்தார், நண்பர், சுற்றியுள்ள அறிமுகமான ஜனங்கள், நன்றாய்த் தெரிந்த அன்னியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன் கற்புடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இருவித முடிவைக் கண்டுகொண்ட பிறகு உலகத்தை நினைத்துப் பாருங்கள்.

மற்றும், உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்துவருகின்ற தொழில்களில் முக்கியமானவைகளாகக் காணப்படுவன விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலைமாதர் தொழில் ஆகியவைகள் முதல், குருத்துவம், சன்னியாசம், துரைத்தனம், தேசியம் ஈறாக உள்ள அனேக துறைகளாகும். இவற்றின் மூலமே மக்கள் பெரும்பாலும் வாழ்கிறார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இந்த மக்களில் யாராவது ஒருவர், ஒழுக்கமாக நடந்துகொள்வதை நாம் பார்க்கிறோமா? ஒழுக்கம் என்றால் என்ன, அது எது என்கின்ற விஷயத்தில் நாம் இப்போது பிரவேசிக்கவில்லை; அதற்கு இந்த வியாசத்தில் இடம் வைக்கவும் இல்லை. மற்றபடி, நாம் 'ஒழுக்கம்' என்பதாக உலக வழக்கில் எதை எடுத்துக்கொண்டு பேசுகிறோமோ, மேற்கண்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தந்தத் துறைக்கும் எதை எதை ஒழுக்கம் என்று அவர்களாகவே சொல்லிக்கொள்கிறார்களோ அதையும், அவரவர்கள் மற்றவர்களைப் பார்த்து எதை எதை ஒழுக்கம் கெட்ட காரியம் என்று சொல்கிறார்களோ அதையும் மாத்திரமே—இங்கு ஒழுக்கம் என்பதாக வைத்துக் கொண்டு யாரிடமாவது இந்த 'ஒழுக்கத்தை'க் கண்டுபிடிக்க முடிகிறதா என்றுதான் கேட்கிறோம்.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலையிலேயே எஜமான் செய்துவிட்டு, வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங் கெட்டவன் என்று சொல்லுகிறான்.

ஒரு குமாஸ்தா செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை, மேல் அதிகாரி அந்தக் குமாஸ்தா முன்னிலையிலேயே பல தடவைகள் செய்துவிட்டு, குமாஸ்தாவை ஒழுக்கங் கெட்டவன் என்று கூறுகிறான்.

ஒரு மகன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தைத் தகப்பன் செய்துவிட்டு, மகனை ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லுகிறான்.

இது போலவே, எல்லாத் தொழில் துறையிலும் உள்ள மக்களும், அவரவர்கள் வாழ் நாட்களில் ஒழுக்க ஈனமாக நடந்துகொண்டே மற்றவர்களை ஒழுக்க ஈனர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவை நாம் ஒரு குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மாத்திரம் இருப்பதாய்ச் சொல்ல வரவில்லை. 'ஒழுக்கமாய்' மக்கள் யாராலும் நடக்க முடியாது என்றும்; ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும்; ஒழுக்கம் என்று சொல்லி வருவதெல்லாம் எளியோரையும், பாமர மக்களையும், அடிமைத்தனத்தில் இருத்தி வரப் பயன்படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்திற்குப் பயன் படக்கூடியது அல்லவென்றும் சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகின்றோம்.

உண்மையிலேயே 'ஒழுக்க ஈனம்' என்பது ஒன்று உண்டு என்றும்; அது— திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய குணங்கள்தாம் என்றும் சொல்வதாய் இருந்தால், அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய்க் குடிகொண்டிருக்கும் இடங்கள் அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

மனிதர்களுக்குத் துன்பம் இழைத்து, அவர்களது அமரிக்கையைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்து வாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களே ஆகும்.

இது அந்தந்தத் துறையைக் கைக்கொண்ட ஆட்களை மாத்திரம் அல்லாமல், அந்தந்தத் துறைகளுக்கே இரத்தமும், சதையும், எலும்பும் போலக் கலந்து இருக்கும் காரியங்களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக் கண்டு எந்த மகனும் அருவருப்படுவதே இல்லை. இவர்க ளிடத்தில் மக்கள் வெறுப்புக் காட்டுவதும் இல்லை. அதற்குப் பதிலாக, இந்தக் கூட்டத் தாருக்குத்தான் நாட்டிலே மக்களிடம் செல்வாக்கும், மதிப்பும் இருந்து வருகின்றது. மனித சமூகத்திற்கு எலும்புருக்கி வியாதி போன்ற இந்தக் கூட்டம், மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி வருவது என்பது மக்களின் அறிவீனத்தையும் பலமற்ற தன்மையையும் காட்டு வதேயல்லாமல் வேறில்லை.

வாழ்க்கைத் துறையின் ஒழுக்கம்தான் இம் மாதிரி இருக்கிறதென்றால் மற்றபடி, பக்தி, பரமார்த்திகம், ஆத்மார்த்தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதைக் காணமுடிகின்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நமது அபிப்பிராயம்.

['குடிஅரசு'–கட்டுரை—4-6-1949]

பெரியோர்களே! தோழர்களே!

மேல்நாட்டில் ஒருவனைப் பார்த்துப் பாதை கேட்டால் அவன் சும்மா இருக்க மாட்டான். நாம் எங்கே போக விரும்புகிறோமோ அதுவரை நம்கூடவே வந்து காண் பித்துப் போவான். இதை அன்றி அவன் நாம் கேட்பதற்குச் சரியாகப் பதில் கூறவில்லை என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவன் அவனைப் பார்த்து 'உனக்கு சென்ஸ் இருக்கிறதா? ஒழுக்கம் கெட்டவனே!' என்று தூற்றுவான். இம்முறையில்கூட மேல்நாட்டில் ஒழுக்கத்திற்கு ஒவ்வொருவரும் மதிப்புக் கொடுக்கின்றனர். இங்கு அப்படி இல்லை. ஒழுக்கமுள்ளவன் மூலையில் கிடப்பான். ஒழுக்கம் கெட்டவன் பலராலும் போற்றப்படுவான். தனிப்பட்ட ஒவ்வொருவனும் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதில்லை. முதலில் ஒழுக்கத்திற்கு மதிப்பிருந்தால் அல்லவா ஒவ்வொருவரும் ஒழுக்கத்தைக் கடைப்

பிடிக்க ஆசையாகவும் இருக்கும்? எனவெ, இப்படிப்பட்டவர்கள் நிறைந்த நாட்டின் தலைவனாக வருபவன் எப்படி ஒழுக்கசீலனாக இருக்கமுடியும்? அதுவும், ஒழுக்கமற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயகத்தின் தலைவன் பித்தலாட்டத்தில் கைதேர்ந்தவனாக இருக்க வேண்டும். ஆனால், எனக்கு மட்டும் உண்மை யின்மீது மிகப்பற்று உண்டு. ஒழுக்கத்துக்கே மதிப்பளிப்பேன். ஒழுக்கத்திற்கு மரியாதை கொடுக்க நான் தவறுவது இல்லை. இன்றைக்கில்லையானாலும் என்றைக்காவது உண்மையின் மேன்மையை மக்கள் உணரத்தான் போகிறார்கள். எனவே, என்னைப் பொறுத்தமட்டிலும் நான் ஒழுக்கமுடன் நடந்தால், உண்மையை ஒளிக்காமல் எதையும் நேர்மையுடன் கடைப்பிடித்தால் அதற்குத் தனி சக்தி உண்டு என்பது என் நம்பிக்கை. அதைப் போன்றே ஓரளவு பலன் கிடைத்துக் கொண்டும் வருகிறது.

நான் என்னுடைய மனத்திற்குத் தோன்றியவைகளை யாருடைய தயவு தாட்சண்யத்திற்கும் பயப்பட்டுக் கூறுகிறவன் அல்லன். எது உண்மை என்று தோன்றுகிறதோ அவைகளை மறைக்காமல் அப்படியே வெளியிட்டு விடுவேன். என் நோக்கங்கள் அவ்வளவும் பல பேர்களுக்கு இடையூறாக இருக்கலாம். பல பேர்களின் வாழ்க்கைக்கே வழி இன்றிச் செய்துவிடலாம். அதனால்தான், ஆரம்பத்தில் பெரும் எதிர்ப்புகள் எல்லாம் இருந்து, இப்போது ஓரளவு யாவரும் நம்பி ஆதரவு தரும் அளவுக்கு வந்துவிட்டது.

[அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-3-1956]

ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

மனித வாழ்க்கை மற்ற ஜீவன்களைப் போல் தனித்துவாழும் தன்மை கொண்டதல்ல. சமுதாய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் கூடிவாழும் வாழ்க்கையைக் கொள்வது இயல்பும் அவசியமும் ஆனதாகும். இதற்கு மனிதன் ஒழுக்கத்தைப் பின்பற்றுவது மிக அவசியமாகும். மனிதனிடம் சுலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால் மாணவப் பருவத்தில்தான் முடியும். மாணவப் பருவம் தாண்டியபின் இவன் மாணவனாக இருந்தபோது பின்பற்றியவைகளையே பிறகும் பின்பற்றி நடக்கிறான். எனவே, இப் பருவத்திலேயே நல்லொழுக்கத்தைப் புகட்டவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு முயற்சிக்கவேண்டும். நல்லொழுக்கம் என்பது மிகவும் கஷ்டமான காரியம் இல்லை. ஒருவன், மற்றவன் தன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறானோ அதைப்போன்றே அவனும் மற்றவனிடம் நடந்துகொள்வதுதான் ஒழுக்கமாகும். மற்றவன் தன்னிடம் நடந்துகொள்வதால் தனக்கு மனக் கஷ்டமும், மனவேதனையும், துன்பமும் உண்டாகுமானால், அதனைப்போன்று தானும் மற்றவனிடம் நடந்துகொள்வானாகில் அதுவே தீயொழுக்கம் ஆகும். பிறர் தன்னிடம் நடந்துகொள்ளும் முறையில், தான் இன்பமும், மன சந்தோஷமும், நிம்மதியும் அடைவானாகில் அதைப்போன்றே மற்றவனிடம் நடந்தால், அதே நல்லொழுக்கத்தின்பால் பட்டதாகும். எனவே, தமது வாழ்க்கையால் பிறர் துன்பம் அடையாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும். இதையே மனித வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் வாழ்க்கை நடத்த முயற்சிக்கவேண்டும்.

[திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 17-3-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-3-1956]

தோழர்களே!

மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பரப்பவேண்டும். ஒழுக்கத்தில் ஏற்படும் இலாப நஷ்டங்களை அவன் மனத்தில் படும்படியாகச் சொல்லவேண்டும். மேல்நாடுகளில் வழிதெரியாமல் விழித்துக்கொண்டு போனால், நம் அருகில் வந்து, 'May I help you? Which way you wish to go?' என்று கேட்கிறான். 'நான் வழிகாட்டட்டுமா? எங்கே

1932 பிப்ரவரி முதல் மே வரை ரஷ்ய நாட்டில் தங்கியிருந்தபோது, ரஷ்யாவில் டிப்லிஸ் மாகாண நாத்திக சங்கத் தலைவர், செயலாளர், மொழி பெயர்ப்பாளருடன் பெரியார் ஈ. வெ.ரா.

போகவேண்டும்; கூறுங்கள்!' என்று கேட்கிறான். இதெல்லாம் எதனால் வருகிறது? மதத்தினாலா? ஒழுக்கத்தினாலா? அறிவுப் பெருக்கத்தினாலா? பண்பாட்டினாலா? என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

[திருப்பத்தூரில், 30-5-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-6-1956]

தோழர்களே!

சீதை, திரவுபதை, அகலிகை, தாரை இவர்கள் எல்லாம் பத்தினிப் பட்டியலில் சேர்ந்துவிட்டார்கள்! நம் பெண்களை, 'என்னம்மா இப்படி நடக்கிறாயே? என்று கேட்டால் திரவுபதை போனாளே! தாரை படிக்க வந்தவனுடன் கூடினாளே? அவர்கள் எல்லோரும் பத்தினிப் பட்டியலில் சேர்ந்து இருக்கிறார்களே'! என்று திருப்பி நம்மைக் கேட்கமாட்டார்களா? இது எவ்வளவு ஆபாசம்?

இதைவிட மோசமாக இருந்த நாடுகள் இல்லை என்று சொல்லவில்லை. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் திருந்திவிட்டனர். கிறிஸ்தவர்கள் இன்று நாகரிகமானவர்களாக ஆகிவிட்டார்கள். முற்காலத்தில் கிறிஸ்தவர் தங்கள் அக்காள்—தங்கைகளைத்தானே கட்டிக்கொண்டார்கள்? வேட்டி கட்டத் தெரியாதே அவர்களுக்கு! பச்சை மாமிசம் தின்று இருந்தவர்கள்தாமே அவர்கள்! இயேசு தோன்றிய பிறகு அவர்களை முடிந்த அளவு சீர்திருத்தினார்.

அதுபோலவே, 1500 வருடங்களுக்கு முன் இஸ்லாமியர்கள் அராபிய நாட்டில் எப்படி இருந்தார்கள்? காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள். நாம் எப்படிப் பெண்களை வெறுக்கிறோமோ அதுபோலவே அவர்களும் வெறுத்தார்கள். நாம் குழவிக் கல்லைக் கும்பிடுவதுபோல அவர்களும் கல்லைக் கும்பிட்டார்கள். பிறகு, முகமது நபி தோன்றி ஒரே கடவுள், அதுவும் உருவம் இல்லாதவர் என்று சொல்லிச் சீர்திருத்தம் செய்தார்; சாதிகளை அழித்தார்.

[பெத்துநாயக்கன் பேட்டையில், 22-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 31-8-1956]

9. ஒழுக்கம், பக்தி, இன்பம்

தோழர்களே!

நம்மிடத்தில் ஒழுக்கம் இருக்கவேண்டும்; பக்தி இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒழுக்கம் இருக்க வேண்டும். பக்தி தனி மனிதனைப் பொறுத்தது. ஒழுக்கம் இல்லாது ஒருவன் இருந்தால், அது பிறரையும் பாதிக்கும்; ஒழுக்கமில்லாதவனால் அயலானுக்குத் தொல்லை ஏற்படும். எனவே, சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம்—பக்தியைவிட முதன்மையானது; இன்றியமையாதது. ஒழுக்கம் என்றால் என்ன? மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு எதைச் செய்யவேண்டுமென்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

தனக்குப் புகழ் வேண்டும்; தன்னை மற்றவர்கள் பெருமையாகக் கருதவேண்டும் என்று கருதுவது மனித இயற்கை. இதற்காகவே மற்றவருக்கு உதவுவது, மற்றவருக்குப் பயன்படுவது, பொதுத்தொண்டு ஆற்றுவது என்பன எல்லாம். சமுதாயத்தில் தன் கடமையை உணர்ந்து பிறருக்குப் பயன்படுதலே அறம்; அந்த அறத்தால் வருவது இன்பம்.

[பொன்மலையில், 22-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-9-1956]

10. ஒழுக்கம் கெட்டுவரக் காரணம்?

தோழர்களே!

கடவுளும், மதமும் நன்மைக்கென்றே ஏற்பட்டவையாயினும் ஒழிக்கப்பட வேண்டியவையே. சமுதாயத் தொண்டை வலியுறுத்தவும், அதில் உண்மையையும், அன்பையும், ஒழுக்கத்தையும் ஏற்படுத்தவும் என்பதாகச் சொல்லிக்கொண்டே, மேற்கண்டவைகள் (கடவுள், மதம், பார்ப்பான், சாதி முதலியன) ஏற்பட்டு, இப்போது அவை தேவை இல்லாதவைகளாக ஆகிவிட்டதோடு, ஒழிக்கப்பட வேண்டியவையாகவே ஆகிவிட்டன. மிருகப் பண்புகளே தெய்வீகப் பண்புகளாய் அமைந்தன. கடவுள், சமயம், பார்ப்பான் முதலியவைகளாலேயே மனிதனுக்கு, சமுதாயத்திற்குத் தேவை இல்லாதவைகள் எல்லாம் கடமை ஆக்கப்பட்டு. மனிதனை மனிதன் இம்சிப்பது, வஞ்சிப்பது முதலிய துஷ்ட ஜந்துக்கள் குணமே தெய்வீகக் குணங்களால் அமைந்துவிட்டன. மத சாஸ்திர புராண இதிகாசத் தத்துவங்களைப் பார்த்தால் இவை விளங்கும். நெறியற்ற வாழ்வே மலிந்து காணப்படுகிறது. உயிர் வாழ்வில் எனக்கு 78 ஆண்டு அனுபவமுண்டு (1956). 65 ஆண்டுகளாக உலக நடப்பும் மனித வாழ்வின் தன்மையும் எனக்குத் தெரியும். அறிவு எவ்வளவோ வளர்ச்சி பெற்று இருக்கிறது என்றாலும், மனித வாழ்வு மிகமிகக் கீழான நிலைக்குப் போய்விட்டது. வஞ்சகத்திற்கும், துரோகத்திற்குமே அன்பு, ஒழுக்கம் என்றும், திருட்டுக்கும் புரட்டுக்குமே நாணயம் என்றும் அகராதிகளில் விளக்கம் எழுதவேண்டிய நிலைக்கு மனிதன் வந்துவிட்டான். இதில் என்ன அதிசயம் என்றால், இந்த விதிக்கு விலக்களிக்க இன்று இந்த நாட்டில் ஒரு ஆளைக்கூடக் காண முடியவில்லை என்பதுதான். கடவுளும் சமயப் பிரசாரங்களும் நற்பயனளிக்கவில்லையே! கடவுள்களுக்கும், சமயங்களுக்கும்—இவைகளுக்குக் கோவில்களுக்கும், உற்சவங்களுக்கும் குறைவில்லை; சமயப் பிரசாரகர்களுக்கும் கடவுள், சமயம் பற்றிய ஆதாரங்களுக்கும் குறைவில்லை; இவைகளில் தேர்ந்த புலவர்களுக்கும் குறைவில்லை; மற்றும் கடவுள் சமய நம்பிக்கைக்காரர்களுக்கும், பக்தர்களுக்கும், பக்தி செலுத்துபவர்களுக்கும் குறைவில்லை. இந்நிலையில் மனிதனிடம் அன்பு, ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை இல்லாமல், துரோகத்தினால், ஒழுக்கக் கேட்டால், நாணயக் குறைவால், ஏமாற்றுதலால் அல்லாமல் வேறு வழியில் மனிதன் வாழ முடியவில்லை என்கின்ற நிலை மக்களுக்கு ஏற்பட்ட காரணம் என்ன?

மனிதனின் வாழ்க்கைத் திட்டத்தையே ஏமாற்றுதல் மீதும், துரோகத்தின் மீதும் அன்னியன் உழைப்பின் பயனை அநியாயமாய் அனுபவிப்பதன் அஸ்திவாரத்தின்மீது அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன? துரோகிகள், போலிகள், ஏமாற்றுக்காரர்களுடன் இணைந்திருப்பதெப்படி? இவைகள் எல்லாம் இரண்டாவது குணம் என்கின்ற தன்மையில் கொள்ளும்படியான அளவுக்கு, அயோக்கியர்களையும் துரோகிகளையும் நாணயக் குறைவானவர்களையும் நம்பிக்கை மோசம் செய்பவர்களையும் வெளிப்படையான போலிகளையும் வெறுக்காமல், அவர்களிடம் வெறுப்புக் காட்டாமல், மக்கள் அப்படிப்பட்ட காரியங்களில் நிபுணர்களிடம் இணைந்தாவது வாழ வேண்டும் என்று கருதுவதும், அவர்களோடு இணைந்திருப்பதில் வெட்கப்படாமல் இருப்பதுமான நிலையில், மனிதன் இருக்கக் காரணம் என்ன?

கடவுள் சமயத்துறை ஒழுக்க ஈனங்களும், வியாபாரம் நிர்வாகத்துறை ஒழுக்க ஈனங்களும் நீண்ட நாட்களாகவே இருந்து வருவதாக சமய, வியாபாரத்துறை ஆதாரங்களில் காணப்பட்டாலும், இப்போது அரசியல் துறையின் நடப்புக்கள் ஒழுக்கக் கேட்டின்—துரோகத்தின் எல்லையை அடைந்து விட்டன. அயோக்கியர்களுக்கும், துரோகிகளுக்கும் முதலிடமா? இவைகள் எல்லாம் மனித சமுதாயத்திற்கு எவ்வளவு கேடு பயக்கின்றன? பயக்க இருக்கின்றன? என்பதை எண்ணினால், நெஞ்சம் பிளக்கும்படியான வேதனை ஏற்படுகின்றது. அயோக்கியர்களும் துரோகிகளும் நாட்டில் தைரியமாய் உலாவவும் அவர்களை மக்கள் வெறுக்காமல் இருப்பதையும் பார்த்தால், இக் கூட்டத்தில் நாம் வாழ்வதே

ஒழுக்கக்கேடு என்று தோன்றுவதுடன், அப்படியாவது ஏன் வாழவேண்டும் என்றே தோன்றுகிறது. ஒழுக்கக் கேட்டைக் களைந்தே ஆகவேண்டும். ஆகவேதான், நாம் இனி ஒரு வினாடி வாழ்வதானாலும் இதற்கு ஒரு பரிகாரம் செய்து வாழவேண்டுமே யொழிய, மற்றபடி வாழ்வது இழிவு என்றே தோன்றுகிறது. இவ்வித பரிகாரத்திற்கு இனி எந்த விதத்திலும் கடவுளும் சமயமும் பயன்படாது என்றும் தோன்றுகிறது.

ஒழுக்கக் கேட்டிற்கு இதுவரை காரணமாக இருந்தவைகளை, ஒழுக்க வளர்ச்சிக்குப் பயனில்லாமல் இருக்கின்றவைகளை ஒழித்துவிட்டு, ஒழுக்கப் பிரசாரமும், ஒழுக்க ஈனராய் துரோகிகளாய் இருப்பவர்களை ஒழிக்கும் பிரசாரமும் செய்ய வேண்டியதுதான் தனக்கென வாழாதவர்களுக்கு முக்கியமும் முதன்மையுமான கடன் என்றே கருதுகிறேன். ஒழுக்கமும் அன்பும் இல்லையானால் மனித சமுதாயமே வேண்டாம் என்று தோன்றுகிறது.

[குன்றக்குடியில், 6-6-1956ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-6-1956]

11. தர்மம் அல்லது பிச்சை

தர்மம்—அதாவது, ஏழைகளுக்குப் பிச்சை இடுதல் முதல், மற்றவர்களுக்குப் பல உதவிகள் செய்வது என்பதுவரை அனேக விஷயங்கள் தர்மத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த மாதிரி தர்மத்தைப்பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன. இந்து, முஸ்லிம், கிறிஸ்துவம் முதலிய மதங்களில் இந்தத் தர்மத்தை- பிச்சை கொடுத்தலை மிக நிர்ப்பந்தமாகக் கட்டாயப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படியெனில், தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும், அவன் நரகத்துக்குப் போவான் என்றும், கடவுள் அவனைத் தண்டிப்பார் என்றும், இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாகக் கற்பித்து, 32 தர்மங்களையும் ஒருவன் செய்யவேண்டும் என்றும், அந்தப்படி செய்தால் அவனுக்கு இன்னின்ன மாதிரிப் புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32. ஒரு மனிதன்—சரித்திரம் படிப்பவர்களுக்குச் சாப்பாடு, சத்திரம் கட்டுதல், பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்குச் சாப்பாடு, இரப்பவர்களுக்குப் பிச்சை, தின் பண்டம்; அனாதைகளைக் காத்தல், பிள்ளைப் பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதைப் பிள்ளைகள் வளர்த்தல், தின்பண்டம், பிள்ளைகளுக்குப் பால் வார்த்தல், அனாதைப் பிணம் சுடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்குச் சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், நாவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண் போகம் வேண்டுவோருக்கு போகப்பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்து விடுவித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோடு போடுதல், சாலை மரம் வைத்தல், மாடு-எருமை ஆகியவை தங்கள் தினவுகளைத் தீர்த்துக்கொள்ளச் சொரி கல் நடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலை கொடுத்து உயிர் மீட்டல், பெண்தானம் செய்தல் ஆகிய 32 தருமங்கள் செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோலவே, இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்குப் பிச்சை கொடுத்தாக வேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷ வரும்படியில் அவனுடைய செலவுபோக மீதி உள்ளதில் 40-ல் 1 பாகம் வருஷந்தோறும் பிச்சையாகப் பணம், சாப்பாடு, துணி

முதலியவைகளாய்க் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்படி செய்யாவிட்டால் மதத் துரோகம் என்றும், இந்தப்படி செய்யாதவன் இஸ்லாம் ஆக மாட்டான் என்றும்கூடக் கூறப்படுகிறது.

அதுபோலவே, கிறிஸ்துவ மதத்திலும் தர்மம் கொடுக்க வேண்டியது மிக முக்கிய மானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும்,—உதாரணமாக ஓர் ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய, பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலமும் மோட்சத்துக்குப் போகமாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இத்தப்படிக்குத் தர்மங்கள் செய்யவேண்டிய அவசியங்களை வற்புறுத்தி அந்த வற்புறுத்தல்களைப் பகவான் சொன்னான், ஆண்டவன் சொன்னான் என்று வேதங்கள் என்பவைகளிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம், இருக்கிறவர்கள் – அதாவது செல்வவான்கள்— இல்லாதவர் களுக்கு, ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இதன் தாத்பரியமாகும்.

செல்வவான்களுக்குச் செல்வம் கடவுளால் கொடுக்க வேண்டும் என்பதுதான் இதன் தாத்பரியமாகும்.

'செல்வவான்களுக்குச் செல்வம் கடவுளால் கொடுக்கப்பட்டதாகும். ஆகையால் கடவுள் கொடுத்ததைக் கடவுளின் சிருஷ்டியாகிய—கடவுளின் பிள்ளைகளாகிய ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்' என்பதே அந்தத் தாத்பரியத்தின் உள்கருத்தாகும். செல்வவான்களுக்குக் கடவுள் செல்வங்களைக் கொடுத்தார் என்றால், செல்வமில்லாத ஏழை தரித்திரவான்களுக்குச் செல்வமில்லாமல் செய்ததும் கடவுள்தான் என்பதை எந்த மதவாதியும் ஆஸ்திகனும் மறுக்கமாட்டான் என்றும், மறுக்க முடியாது என்றும் சொல்வேன்.

செல்வம் என்பது உலகத்தின் பொதுச்சொத்து. அதை யார் உண்டாக்கி இருந்தாலும், உலகத்தில் உள்ளவரை எந்த ஜீவனுக்கும், அது பொதுச் சொத்தாகும். ஆனால், அந்தப் பொதுச் சொத்தானது, பலாத்காரத்தாலும், சூழ்ச்சியாலும், ஆட்சியாலும், கடவுள் பேராலும் ஒருவனுக்கு அதிகமாய்ப் போய்ச் சேரவும், மற்றொருவனுக்குச் சிறிது கூட இல்லாமல் தரித்திரம், பசி முதலியவை அனுபவிக்கவும் ஆன தன்மை உண்டாக்கப்படுகிறதே ஒழிய மற்ற எந்தக் காரணத்தாலும் எவனுக்கும் இல்லாமல் போக நியாயமே இல்லை.

ஆனபோதிலும், கடவுளே ஒருவனைச் செல்வவானாக ஆக்கினார் என்றும், கடவுளே ஒருவனை ஏழையாக ஆக்கினார் என்றும் வைத்துக் கொள்வதானாலும் தர்மம்–பிச்சை கொடுக்கிற அதிகாரத்தை மாத்திரம் ஏன் பணக்காரனுக்குக் கொடுத்து, அவனுக்கு இஷ்ட மிருந்தால் பிறத்தியானுக்குப் பிச்சைபோட்டு மோட்சத்துக்குப் போகும்படியும், அவனுக்கு இஷ்டமில்லையானால் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்துக்குப் போகும்படியும், எதற் காகக் கற்பிக்க வேண்டுமென்பது நமக்குப் புலப்படவில்லை. அன்றியும், ஏதோ இரண்டொரு பணக்காரன், பிச்சை கொடுத்து, தர்மம் செய்து மோட்சத்திற்குப் போவதற்காகவும்—பலர் பிச்சை கொடுக்காமலிருந்து நரகத்திற்குப் போவதற்காகவும் எத்தனையோ கோடிக் கணக்கான பிச்சைக்காரர்களை ஏன் சிருஷ்டித்தார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. செல்வம் கடவுளால் உண்டாக்கப்பட்டதானால் ஏழையும் பணக்காரனும் கடவுளால்தான் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப்படி ஒரு கடவுள் மூன்றையும் படைத்து— ஏழைக்கும், பணக்காரனுக்கும் வாங்கும்—கொடுக்கும் உத்தியோகம் கொடுத்து, இதற்குக் கணக்கு எழுதி வைத்து, அவனவனுக்குத் தகுந்த மோட்ச–நரகத்துக்கு அனுப்பும் வேலையில் கடவுள் ஈடுபட்டிருக்கிறார் என்றால், கடவுள் பக்தர்கள் கடவுளைப் பரம முட்டா வாகவும் பரிசுத்த மடையனாகவும் சிருஷ்டிக்கிறார்களா? அல்லது, கடவுளைப் பரம கருணா

நிதியாகவும், பாரபட்சமற்ற தந்தையாகவும் சிருஷ்டிக்கிறார்களா? என்று கேட்கிறேன். ஏழையைச் சிருஷ்டிப்பானேன்? பணக்காரனைச் சிருஷ்டிப்பானேன்? ஏழையைப் பணக்காரனிடம் போய்க் கெஞ்சும்படி செய்வானேன்? பணக்காரன் தனக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பதும் இஷ்டமில்லாவிட்டால் கொடுக்காமல் ஆளைவிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச்சொல்வதும் ஏன்? என்பவைகளை யோசித்துப் பார்த்தால் முதலில் இந்தத் தத்துவம் உண்மையாய் இருக்குமா என்பதே பெரிய சந்தேகமாய் இருப்பதோடு, பரிசுத்த ஆஸ்திகத் தன்மையுடன் கடவுளைச் சிருஷ்டித்துப் பிரச்சாரம் செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடை மலையாகும்.

கடவுள் பார்த்து ஓர் உத்தரவில் அல்லது ஒரு சங்கற்பத்தில், 'எல்லாப் பொருளும், எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது' என்று செய்துவிட முடியாதா என்று கேட்பதோடு, எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து தானே நடத்துகின்றவனாய் இருக்கிறபடியால்—ஒன்றை ஒன்று துன்புறுத்தவோ, ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று நிர்ணயித்துவிட முடியாதா என்று கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதைச் செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார்களானால். ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்தரவு போட்டுப் பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்துவிட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம்—பிறத்தியானுக்குப் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத் தன்மைக்கு அனுகூலமானதே தவிர—பணக்காரத் தன்மையைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டதே தவிர, அவை ஒரு நாளும் ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானவையல்ல.

ஏனெனில், பிச்சைகொடுப்பது, மற்றவர்களுக்கு உதவிசெய்வது என்கின்ற காரியங்களால்தாம், இல்லாத ஏழை மக்களை—தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தாளமுடியும். ஏழைமக்கள் பிரிந்திருந்தால்தான் பணக்காரர்கள் வாழமுடியும். அன்றியும், பணக்கார மக்கள்மீது ஏழை மக்களுக்குக் குரோதமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கவேண்டும் என்கின்ற காரியத்திற்காகவே தர்மம் என்பதும், 'ஜக்காத்' என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய, பிச்சைக்காரர்களுக்கு உதவிசெய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும் அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜன சமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு, ஒரு கடவுள் இருந்தால்—அக் கடவுளுக்கு மிகுந்த அவமானமும், அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக் கருத்தைவைத்தே திருவள்ளுவரும் 'பிச்சை எடுத்து வாழவேண்டிய மனிதனைக் கடவுள் சிருஷ்டித்திருப்பானேயானால், அக் கடவுள் இல்லை என்றுதான் அர்த்தம். அவன் இருந்தாலும் ஒழியவேண்டியதே அவசியம்' என்று சொல்லி இருக்கிறார்.

திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப்பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனியுடைமைக்காரரேயானாலும் இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லி இருக்கிறார்.

ஆனாலும், இதற்கு முரணாக, மற்றொரு இடத்திலும் சொல்லியிருக்கிறார். அதாவது, 'தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்க்கவேண்டுமானால்—பல்லக்கில் போகிறவனையும், பல்லக்குச் சுமப்பவனையும் பார்' என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, இதிலிருந்து தர்மம் செய்ததனாலேயே பல்லக்கில் போகும்படியான செல்வவானாகப் பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததனாலேயே பல்லக்குத் தூக்கும் தரித்திரனாகப் பிறந்தான் என்றும் சொல்லுகிறார்.

அப்படியானால், ஏழை—பணக்காரத் தன்மையை திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒருபுறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் மயக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்குக் கடவுள் தன்மையில், ஆத்மார்த்தத்தில் இருக்கும் நம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது, 'மனிதத் தன்மைக்கு மீறின ஒரு சக்தி இருக்கிறது—அதற்கும் உலக நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் உண்டு' என்று எவன் கருதினான் ஆனாலும் அப்படிப் பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனிஉடைமைக்காரனாகவும், உயர்வு தாழ்வுகளை ஆதரிக்கிறவனாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்தபோதிலும், உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழவேண்டுமானால் பிச்சை கொடுப்பதும், பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமான காரியங்களாய்க் கருதப்படவேண்டும். அப்படியானால்தான், மனிதன் சுயமரியாதையோடு வாழமுடியும். பிச்சை கொடுக்கும் வேலையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணம் வேண்டுமானால் பணக்காரரிடமிருந்து 'பிச்சை வரி' என்று ஒரு வரியை கிறிஸ்து சொன்ன கணக்குப்படியோ, முகமதுநபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார் வசூலித்து, அதற்கு ஒரு இலாக்காவை வைத்து வினியோகிக்கவேண்டும். அந்தப் பிச்சையை—சர்க்கார் தொழிற்சாலைகள் வைத்து அதன்மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலையை வாங்கிக்கொண்டு வினியோகிக்கவேண்டும். அந்தக் காரியத்துக்காகச் சர்க்கார் எந்தத் தொழிற்சாலையை வைக்கிறார்களோ அம் மாதிரித் தொழிற்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிடவேண்டும்.

இப்படிச் செய்தால், பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும், பிச்சைக் காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத் தன்மை ஆட்சி இல்லாத தேசம் எதிலும் இந்தக் காரியம் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே, தர்மம் செய்வது அக்கிரமம் என்றும், ஜனசமூகத்துக்குத் தொல்லை என்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு சூழ்ச்சி என்றும் சொல்லுகிறேன்.

['குடி அரசு'—தலையங்கம்—21-4-1945]

12. தர்மமும் பாவ புண்ணியமும்

உலகிலுள்ள எல்லா மதங்களையும்விட இந்து மதத்தில்தான் தர்மம் என்பது இது, இது என்று தெளிவாய் வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதனால், கண்மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாய் இருக்கின்றன. இது சம்பந்தமாக இந்து மதமும், கோட்பாடுகளும், தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால், அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமே தவிர, அதைத் தாண்டிப்போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடியாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்குவாரியாக—அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாம் என்று வகுத்து எழுதி வைத்திருக்கிறார்கள். இதைக் கேட்டபிறகுதான் இத்தகைய தர்ம சம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம் மாதிரியான காரியங்களினால் உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தகம் ஏற்படுகின்றது என்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இவற்றால்தான், நாடு முன்னுக்கு வருங் காரியங்கள் தடைப்படுகின்றன. எந்தத் தேசத்திலும் தர்மம் இல்லாமலிருக்கவில்லை. வெள்ளைக்காரத் தேசத்தின் தர்மம் நம் நாட்டுத் தர்மத்தைவிடப் பன்மடங்கு உத்தமமாயும், தேசத்திற்கும், சமூகத்திற்கும் உண்மையான நன்மையளிப்பதாயும் இருக்கின்றது. வெள்ளைக்கார நாட்டுத் தர்மம், கிணறு நிரம்பி வழிவதுபோல, அவன் இராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்ன வழக்கம் என்றால், ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக் கொண்டுபோவான். அங்கு

பிச்சையிடுவது சோம்பேறிகளை வளர்க்கும் முறை என்பதை நன்கு அறிந்து கொண்டார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் படிக்காதவன் என்றால் அவன் வெட்கித் தலை குனிந்துவிடுவான். நம் நாட்டிலோ தர்மம் என்று வந்தால் 'நமக்கென்ன நம்மாலான சாப்பாடு போட்டுவிடுவோம்; பிறகு அவன் தலைவிதி போலாகிறது; சரஸ்வதி அவன் நாக்கில் இருந்தால் எப்படியும் படித்துவிடுவான்' என்ற தர்மம்தான் நமக்குக் கற்பிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் முன்னேறும்போது நாம் இக் கதிக்கு ஆளாகி இருக்கக் காரணம் என்ன? நமது மதங்கள், தர்மங்கள் என்ற பல தத்துவங்கள்தாம் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும், பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக மருத்துவ ஆஸ்பத்திரிகளும் உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரிகளும் அவர்களுடையதாகத்தான் இருக்கக் காண்கிறோம். தப்பான வழிகளில் பிள்ளைகளைப் பெற்று கள்ளியில் போட்டு விட்டால், அவற்றை எடுத்து வளர்த்து சம்ரக்ஷிக்கும் அனாதை ஆஸ்ரமங்களும் அவர்களுடையதாகத்தான் இருக்கின்றன. தெருவிலும் நடக்கக்கூடாது; அருகிலும் வரக் கூடாது என்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும், அவர்கள் சேர்த்துக் கல்வி அளித்து, சமத்துவம் பாராட்டி, மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கி வருவதையும் காண்கின்றோம். இவற்றையெல்லாம் நாம் எளிதில் மறக்கமுடியாது; அல்லது மறைக்கவும் முடியாது. அவர்கள் நொண்டியை, முடத்தை, குருடர்களைக் கொன்றுவிடுகிறார்களா? அத் தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்வளவுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கு உதவிபுரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன்தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக்கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிடமுடியாது. எந்தக் கொள்கையும், நீதியும், தர்மமும், காலத்திற்கும், இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வாறுதான் இருக்கும். இராமேசுவரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும், சுக்கும் மட்டும் கொடுக்கிறார் என்றால், அதுபோல நாமும் இங்கு சாணியைக் குவியலாகக் கொட்டிக்கொண்டு வாரிக்கொடுப்பது தகுதி ஆகுமா? அவ்விடத்திற்கு அவசியத்திற்கு ஏற்றவாறு அது முக்கியமான தர்மமாக இருக்கலாம். அதற்காக நாம் அவன்மீது குறைசொல்ல முடியுமா? முன்னூறு, நானூறு வருடகாலத்துக்கு முந்திய காலத்துத் தர்மம் என்ற காரியங்கள் இப்பொழுது செய்யமுடியாதவைகளாகத்தான் இருக்கின்றன. அப்போது அவை அவசியமாகச் செய்யவேண்டியனவாகத்தான் இருந்திருக்கும். அக்காலத்தில் தற்போது இருப்பதைப்போன்று துரிதமான போக்குவரத்துச் சாதனங்களோ மற்ற வசதிகளோ கிடையாது. அந்த நாட்டு மக்களுக்கு அந்தந்த ஊரே சொர்க்கம். அக் காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போலத்தான் இருந்திருக்க முடியும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு விளைச்சலும் அபரிதமாய் விளைந்துகொண்டிருந்தது. அக் காலத்தில் மழை பெய்வதற்கு அவசியமான காடு முதலியவை அடர்ந்திருந்ததால் பருவ மழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல்விட்டாலும் அறுவடைக்குக் குறைவில்லை. அப்பொழுது அதிகமாக விளைந்தாலும் தற்போதைப்போல விளைந்த தானியம் முழுவதையும் வெளியூருக்குக் கொண்டுபோகப்படாமல் பெரும் குழிகள் வெட்டி, அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாய் இருந்துவந்தது. அன்றியும், அக் காலத்தில் பிச்சைக்காரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளிநாட்டுக்கு அனுப்புவது என்ற முறை அக் காலத்தில் கிடையாது. அதற்குச் சாதனமும் கிடையாது. அதனால்தான், இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியம் என்றும் எழுதிவைக்க இடம் இருந்தது. அதனால் நம் நாட்டில் காலக் கிரமத்தில் பிச்சை எடுக்கும் சாதிகள் என்றே பல சாதிகளும் தோன்றிவிட்டன.

ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு வந்தாலும், சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமாய் இருக்கிறார்கள் என்பதை அறிந்துதான் பிச்சைக்காரர்

களும் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றனர். இத்தனை கோயில் இருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசியமா என்று கேட்டால், 'பாவி தடுக்கிறான். அவன் சொல்லைக் கேட்ட காதை 'லோஷன்' போட்டுக் கழுவவேண்டும்' என்கிறார்கள். அக் காலத்தில் செல்வ மிகுதியினால் செலவிடுவதற்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் விளைபொருள்களுக்குச் செலவு வேண்டும் என்ற முறையில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு மென்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக் காலத்தில் எத்தனை கடவுள் இருந்தாலும் பூசை போட்டு—எவ்வளவு பேர் வந்தாலும் சோறு போடும் செல்வமும் செழிப்பும் இருந்தது. அதனால் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடம் இருந்தது. ஆனால், இப்போதைய கொள்கையும், மதக்கோட்பாடுகளும் காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறும் இருக்கவேண்டும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் எல்லா மதத்தவர்களுந்தாம் பாவம் செய்யக் கூடாதென்கிறார்கள். ஆனால், பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு அர்த்தம் வேறாகத்தானிருக்கிறது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில், சுத்தம் என்றால் மூன்று வேளையும் குளிப்பதுதான் சுத்தம் என்று எழுதிவைக்க முடியாது. அங்கு மணலை, உடம்பில் தேய்த்துக்கொண்டாலும் குளித்துச் சுத்தம் ஆவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால், அந்தச் சுத்தம் தப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்குள் வெளிக்குப்போனால் நான்கு செம்பு தண்ணீர் விட்டுக் கழுவுபவர்களும் போதாக் குறைக்குத் தலை முழுகுபவர்களும் இருக்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் அதனைச் சுத்தம் எனக் கருதப்படுகிறது.

ஆனால், இவர்களைவிடப் பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன்—'காகிதத்தில் பாதியும் கால்சராயில் பாதியுமாக'த் துடைத்துவிட்டுப் போகிறான். அவன் நாட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்காவிட்டால் பாவி என்கிறான். அங்கு குளித்தாயா என்று கேட்பதே மரியாதையல்ல எனக் கருதப்படுகிறது. இங்கு வியர்வையினால் குளிக்கவேண்டிய அவசியம் உண்டு. அங்குக் குளிரினால் அத்தகைய அவசியம் இல்லை. அவ்வாறே இந்து மதத்தில் எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம்; அவன் சங்கதியோ அதைப்பற்றிக் கவலையே இல்லை. இங்கு நாம் பசுவை அடித்தாலும் மகா பாவம் என்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிடில் வேறு மார்க்கம் இல்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாம் என்கிறான்; மற்றவன் அதைப் பாவம் என்கிறான்.

இப்படி, சவுகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும், கோட்பாடுகளும் இருக்கக் கூடும். ஆதலால், அனைத்தும் கால தேச வர்த்தமானத்திற்கேற்றவாறு இருக்க வேண்டும் என்பது நன்கு விளங்கும். அன்றியும், அந்த அந்தக் காலத்தில் திறமைக்கு ஏற்றவாறு ஏமாற்ற ஏதேதோ எழுதி வைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலை இல்லை. ஆனால், நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது இன்றைய நிலைமையில் எப்படி இருக்கவேண்டும் என்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழி உண்டா என்றும் பார்க்கவேண்டும். நாம் நமது செல்வம், அறிவு, ஒழுக்கம் முதலியவை பிரயோஜனமான வழியில் செலவிடப்பட வேண்டும் என்பதனால், அது தர்மத்திற்கு விரோதமானது என்று சொல்லிட முடியாது. இப்பொழுது நாம் இருக்கும் நிலையில் தர்மத்தின் பேரால் சத்திரமும், சாவடிகளும் கட்டிக்கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்ன ஆகும்? நமது நாட்டின் நிலைமைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவாறுதான் எந்தத் தர்மமும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண்டியதில்லை. இப்பொழுது நமது நாட்டில் 22 கோடி இந்துக்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள்களோ புராணங்களின் கணக்குப்படி 33 கோடி கடவுள்கள் இருக்கின்றன. இதனைப் பங்கிட்டால்

ஒரு ஆசாமிக்கு ஒன்றரைக் கடவுள் வீதம் வரும். உலகிலே மதங்களைவிட கடவுள்கள்தாம் அதிகமாய் இருக்கின்றன. இவ்வளவு கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும்! நாட்டின் பெருமையை வளர்க்க, மக்கள் கஷ்டத்தைப் போக்க, அறிவை வளர்க்க கல்வி அத்தியாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழில் அபிவிருத்தி அவசியம். எந்தத் தேசத்திலும் இவை இரண்டும் இன்றியமையாத அவசிய மான அம்சங்கள். நம் நாட்டிலோ நூற்றுக்கு 93 பேர் படிப்பில்லாத தற்குறிகளாய் இருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அதுபோலவே சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு வெளிநாடுகளுக்குப் பிழைப்புக் காகத் துறைமுகங்கள்தோறும், கப்பல்கள்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுவதான கோரக் காட்சியைத் துறைமுகங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும் சாப்பாட்டுக்கு வகை இன்றியும் கடல் கடந்து ஜீவிக்கச் செல்லும் ஏழை மக்கள் தொகைகளை, இச் சென்னை மாகாணத்தில் மட்டும் (1949ஆம் ஆண்டு) மாதம் ஒன்றுக்கு இலட்சத்துக்கு அதிகமாகக் காணலாம். இவர்கள் குழந்தை குட்டிகளுடனும், வயோதிகர்களுடனும், கர்ப்பிணிகளுடனும் செல்வ தான பரிதாபத்தை என்னவென்று சொல்வது! இங்குள்ள கஷ்டத்தைவிட அங்கு போய்ச் சாகலாம் என்றுதான் மனம் முறிந்து போகிறார்கள். இக் கொடுமைகளைக் கவனித்துப் பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத் தான் இருக்கின்றன.

இங்கு சாமிகளுக்கும், சடங்குகளுக்கும், உற்சவ வேடிக்கைகளுக்கும், சதிர் ஆட்டங் களுக்கும் இலட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றது. திருப்பதி போன்ற தேவஸ் தானங்களுக்கும், முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமாக மாதா மாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய ஒரு சட்டி அரணைப் பூசைக்குச் சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறு இருக்க அச் சாமியின் பிள்ளைகள்—சாமியே கதியென இருக்கும் மக்கள் கஞ்சிக்கு அலைந்து கொண்டு—பிழைக்க வழி இல்லாது ஆயிரக்கணக்காகக் கப்பலேறி வெளிநாடு சென்று துன்புறுகிறார்கள். இவை இரண்டினையும் சேர்த்துப் பார்த்தால், அந்தச் சாமிக்குத்தான் அதிக அவமானம் என்பது நன்கு விளங்கும். அத்தகைய சாமிகளுக்கிருக்கும் சொத்துக் களுக்கும், ஆடம்பரங்களுக்கும், வாணவேடிக்கைகளுக்கும், சதிர்க் கச்சேரிகளுக்கும் ஒரு விதமான அளவில்லை. இராஜாவுக்குக்கூட அவ்வளவு ஆடம்பரம் இல்லை. இராஜா வாயினும்—கொடுங்கோன்மையினால், அந்த சுகங்களை ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கிறான் என்று சொல்லலாம். ஆனால், கருணை வள்ளல் என்ற கடவுள் இப்படி வீணாக்குவதற்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கலாமா?

சாமிக்கு இன்றைக்கு யாராவது தங்கக் காரைக் போட்டால், பேசாமல் போட்டுக் கொள்கிறது. யாராவது கழற்றிக்கொண்டு போனாலும் கல்லுபோல் பேசாமல் சும்மா இருக் கிறது! சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழற்றிக் கொண்டு போய்விட்டதாயும் பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள். ஏன் இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர்கள் தற்குறிகளாய் இருக்கவேண்டும்? இதற்கும் வறுமைக்கும் காரணம் என்ன? ஆனால், நான் உங்களைச் சந்தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிடலாம்: வெள்ளைக்கார நீச அரசாங்கத்தார் நம் பணத்தைக் கொள்ளையிட்டுப் போனதாகக் கூச்சலிடுகின்றார்கள். அந்த நீச அரசாங்கத்தால்தான் 'சரஸ்வதியும் நம் நாட்டைவிட்டு ஓடி விட்டாள்' என் கின்றனர், மற்றும் சிலர். ஆனால், நம் நாட்டைவிட்டு ஓடிய சரஸ்வதி அந்த நீச நாட்டுக்குத் தான் போய்ச்சேர்ந்திருக்கிறாள். வெள்ளைக்காரன் கொள்ளையிட்டுப் போவதையும், சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் செலவிடுவதையும் கணக்குப் பார்த்தால், சாமிகளுக்குச் செலவானதுதான் பன்மடங்கு அதிகமிருக்கும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பெயரால் செலவாகும் பணமும், கஷ்ட நஷ்டமும், அசவுகரியங்களும் கணக்கிடமுடியாது.

பணம் சம்பாதிப்பதில் எத்தனையோ தந்திரமும் சூழ்ச்சியும் செய்யும் அறிவாளிகளுங்கூட இவ்வாறு செலவிடுவதில், அந்தத் தந்திரம் ஒன்றும் இல்லாமல் முட்டாள்களாகத் தான் நடந்துகொள்கின்றனர். அபிஷேகத்தில் ரூபாய் 150 கொடுத்தால் என்ன, 10 ரூபாய் கொடுத்தால் என்ன? வித்தியாசம் என்னவென்று யாராவது சிந்திப்பது உண்டா? சென்னை சர்க்காரின் கணக்குப்படி சாமிக்கு வருமானம் (1949) 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர, கணக்கில் வராத கொள்ளைகளும், போக்குவரத்து, தரகர் செலவும், சொல்ல வேண்டியதில்லை. கணக்குப் பார்த்தால் சாமிகளுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வருமான வரியைவிட அதிகமேயன்றி ஒருவிதத்திலும் குறையாது. 'தர்மம் என்றால் சாப்பாடு போடுவதுதானா?' என்று கேட்டால், 'அப்படிக் கேட்பது பாவம்' என்ற தர்ம முறை தான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்குச் செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி சுமார் 25 வருடங்களுக்கு நம் சுவாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தால், பிறகு நம்நாட்டில் ஒருவன்கூட மருந்துக்கும் தற்குறியாய் இருக்கக் காண முடியாது என்பது திண்ணம்.

உள்ளது உள்ளபடி உண்மையைச் சொன்னால், 'அவன் தப்பு சொன்னான்; இவன் நாத்திகம் பேச்சுப் பேசுகிறான்' என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்குக் குறைவில்லை. மேடைமீதேறி வெள்ளைக்காரர்களைத் துரத்திடுவோம் என்று பயமுறுத்தலாம். மிரட்டினாலும் அர்த்தத்தோடல்லவா மிரட்டவேண்டும்? 'ஜேபியில் எலிக்குஞ்சு இருக்கிறது; எடுத்துவிட்டால் செத்துப் போவாய்' என்றால் எவன் பயப்படுவான்? 'எடுத்துவிடு! ஒரு கை பார்ப்போம்' என்றுதான் சொல்லுவான். மார்க்கத்துக்கும் தகுந்த வழிக்கும் நமது அறிவையும், செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாரையும் வெல்லமுடியாது. ஒரு கூட்டத்தார் நம்மைத் தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக்கொண்டு இருக்க முயல்வது சரித்திர பூர்வமாய் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. மத விஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக்காரன் நம்மைவிடக் சேவலமாக இருந்திருப்பதை அவர்கள் தேச சரித்திரமே நன்கு விளக்குகின்றது. அங்கு இருந்த புரோகிதமும், சாமிகளும் இப்பொழுது எங்கு போயின? எல்லாம் இங்குவந்து சேர்ந்தன. அவர்கள் எல்லாவற்றையும் இங்கு மூட்டை கட்டி அனுப்பிச் செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு, அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் இறங்கி இருப்பதால், நாளுக்கு நாள் அந் நாட்டார் முன்னேற்றம் அடைந்துவருகிறார்கள். அவர்கள் சாமிக்கு உற்சவம் இல்லை; தேர் இல்லை; திருவிழா இல்லை. அப்படி இருந்தும் அந்தச் சாமி அவர்கள் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாய் இருக்க, நம் சாமிகளுக்கு இலட்சக்கணக்கான பணம் செலவிட்டு, தேர்த் திருவிழா நடத்தியும் நாம் இந்தக் கதியில் இருக்கிறோம்.

நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டிற்குப் போகின்றன என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேற முயற்சி செய்வதில்லை. அண்மையில் ரஷ்யாவில் செத்தவர்களைப் பிழைக்கவைக்கும் நூதன முறையை ஒருவர் கண்டு பிடித்ததாகப் பத்திரிகையில் படித்து இருப்பீர்கள். இத்தனைக்கும் அது நாத்திகம் நிறைந்த நாடு. நாத்திகருக்கு நரகம் வேண்டுமானால் ரஷ்யாவில் இருப்பவர்களுக்கே இருப்பிடம் சரியாய்ப் போய்விடும். ஆதலால், வேறு எந்த நாத்திகர்களுக்கும் நரகத்தில் இடமிராது. அவ்வளவு நாத்திகமாய் இருக்கும் ஊரில் செத்தவனைப் பிழைக்கவைத்து, சாமியோடுபோட்டி போடுகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுகூட செலவு இல்லை. முஸ்லிமும் அப்படித்தான். வெள்ளைக்காரன் கோயிலுக்குப் போனால் துணி அழுக்கை வெளுப்பதற்குச் செலவிடுவதைவிட வேறு செலவு இல்லை. விவசாயத்திலும் அவர்கள் எந்தப் பழத்தை—எந்த நிறத்துடன்—எந்தச் சுவையில் பயிரிடவேண்டும் என்று ஆராய்ச்சி செய்து, அதற்குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவுகட்ட வேண்டுமானாலும் பார்ப்பானைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து,

அந்தந்த ஏருக்கும் மாட்டுச்கும் பூசைபோட்டு உழுவதனால்தான் நாம் இந்தக் கதியில் இருக்கின்றோம். நமக்கு இவ்வளவு கோடி சாமிகளும், இவ்வளவு பணச் செலவுமிருந்தும் நாம் கடுகளவாவது முன்னேறமுடியாமல் இருக்கின்றோம்.

பூகோள சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரின் தகப்பனும், கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக்கொண்டு சமுத்திரக் கரைக்குத் தர்ப்பணம் செய்து வைக்க வந்து விடுகிறான். இவன் பேச்சைக் கேட்டுக் குளிக்கப் போனால் நம்மை முதலை இழுத்துக் கொண்டு போய்விடுகிறது. கிரகண ஸ்நானத்திற்குப் போவோம் என்று சொல்லும் எம். ஏ.க்களும், பி. ஏ.க்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக் காலத்திலும் சந்திர சூரியனை ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன் மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்தபாடில்லை. தேச முன்னேற்றத் திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத்திற்கோ முட்டுக்கட்டையாய் இருக்கும் எவற்றையும் ஒழிக்க முயலவேண்டும். அம் மாதிரி செய்யும் தேசமும், மதமும், சமூகமுந் தான் முன்னுக்கு வரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்து இருந்த துருக்கி, தற்போது அதனை இருந்த இடம் தெரியாமல் மூட்டை கட்டி அனுப்பிவிட்டு, முன்னேற்றத்துக்கு வழி தேடியதனால்தான் தற்போது அய்ரோப்பாவில், மற்றைய நாடுகளைப்போல் நல்ல நிலைமையை அடைந்துவருகிறது.

நம் மதத்தில் உள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து, பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அதைச்செய்து, மக்களுக்குள் சமத்துவமும், சகோதரத்துவமும், சத்தியமும், ஜீவகாருண்ணியமும் பரவச்செய்வதற்கு வழிதேட வேண்டும் என்றுதான் நாம் சொல்லு கிறோம். வீண் செலவிடும் பணங்களை உண்மையாகக் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்து உபகாரம் செய்வதில் செலவிடுங்கள் என்றுதான் சொல்கிறோம். பழைய குருட்டு நம்பிக்கைகளைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக் கொண்டு சுகமாய் இருந்த கூட்டத்தார் இப்பொழுது கூலிகளையும் குறும்புப் பிரசாரத்தில் ஏவி விடுகின்றனர். எந்தக் காலத்திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம் நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந் திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கு அறியப்படும். அர்த்தமற்ற கொள்கைகளை ஒழித்து ஒழுக்கமே பிரதானம் என்றும் சீர்திருத்தி, மற்றவனுக்கு உபகாரம் செய்வதுதான் 'மோட்சம்' என்று புகட்டவேண்டுவது அவசியமாகும். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி அளித்துத் திருப்தி செய்வதுதான் மேலான 'புண்ணியம்'. இவற்றைச் சொன்னால் என்ன நாத்திகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக் குழப்பி அவர்கள் அறிவைக் கட்டிப் போட்டு, 'நான் சொல்லுவதை நம்பு, இல்லாவிட்டால் பாவம்!' என்று நான் சொல்ல வில்லை. எதிலும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு முன்னேற்றமடையுமே யன்றி, 'என்னுடைய பாட்டன், முப்பாட்டன் போன வழியில்தான் போகிறேன்' என்ற மூடக்கொள்கையினால் நாடு நாளுக்கு நாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை எடுத்துக் காட்டினேன். அதில் சரியானது எனத் தோன்றியதை ஒப்புக்கொண்டு அதன்படி நடக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்லுவதில் பிசகிருந்தால் என் அறியாமைக்குப் பரிதாபப்படும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

['குடிஅரசு'-கட்டுரை—28-5-1949]

14. 'நான்'

இப்பொழுது மனிதன் தன்னை உணர்த்தும் வகையில் 'நான்' என்று சொல்லிக் கொள்வது எது என்பதே இப்பொழுது விளக்கப்படவேண்டிய விஷயமாகும். முன்பு ஆத்மா என்பதைப்பற்றி சொன்னதுபோலவேதான் இப்பொழுது 'நான்' என்பதைப் பற்றியும் சொல்லவேண்டி இருக்கிறது.

மனிதன் தன்னை 'நான்' என்று சொல்லிக்கொள்வது எதனால், அது எது என்னும் ஆராய்ச்சியானது, இந்துமதம் என்பதின் கடைசி—அதாவது 'வேதாந்த' தத்துவமாகப் பாவிக்கப்பட்டு, 'அதைக் கண்டுபிடிப்பதே' கடவுளைக் கண்டுபிடிப்பதாகும் என்று சொல்லப்பட்டு வருகின்றது.

உதாரணமாக, 'தன்னை அறிந்தவனே கடவுளை அறிந்தவனாவான்' என்றும், 'தன்னைத் தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டியதில்லை,' 'தன்னை அறிந்தவனே ஞானி' என்றெல்லாம் சொல்லப்படுவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

ஆகவே, இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை 'நான்' என்று சொல்லிக் கொள்கிறானே, அது எது என்று கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ, அது சுலபத்தில் மனத்துக்கு எட்டாதது என்று கருதியோ இப்படிச்சொல்லி இருக்கக்கூடும் என்பதாகவும், மற்றும் 'நான்' என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால், பிறகு அவன் 'ஞானி'யாகவும், 'துறவி'யாகவும் அல்லது கடவுளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவனல்லாத-இலட்சியம் செய்யப்பட வேண்டியவனல்லாத 'நாத்திகனாகவும்' ஆகி விடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாகவும் முடிவுசெய்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

எப்படி இருந்தாலும், ஒரு மனிதன், தான் யார்? தனக்குள் இருக்கும் 'நான்'—'என்' என்று வரும் உணர்ச்சி எது? அது எப்படி உண்டாகின்றது? எதுவரையில் அவ் வுணர்ச்சி இருக்கின்றது? என்பதான உண்மையை உணர்ந்தால், அவன் நாத்திக அபிப் பிராயத்தை—அதாவது ஆத்மாவோ கடவுளோ இருக்கின்றது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ளவேண்டியவனாகி விடுவான் என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம்.

உலகத்தில் பெயரும் உருவமும் உள்ள பொருள்கள் எல்லாம் ஒருவித சேர்க்கையால் —அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில், உலகத்தில் உள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடையாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது. ஏனெனில், எந்தப் பெயரும் ஒரு தோற்றத்திற்கு, உபயோகிக்கப்பட்டு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்துவுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக, நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக்கொண்டு அதற்குப் பெயர் என்ன என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி, அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக் காட்டும்படி அம் மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக்காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை—அதாவது அவன் முன்சொன்ன பெயரை உடையதாக அது காணப்படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம். அதாவது,

ஒரு லாந்தர், ஒரு மேசை, ஒரு கடிகாரம், ஒரு புத்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டால் முறையே முன்சொன்ன பெயர்களைத்தான் சொல்வான். ஆனால், ஒரு லாந்தர் என்பது எது என்று தொட்டுக்காட்டச் சொன்னால் லாந்தர் என்பதில் அவன் தொட்டுக்காட்டிய பாகம் ஒரு சிம்னியையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோதான் தொட்டுக் காட்டப்பட்டதாய் இருக்கும். அதுபோலவே, ஒரு மேசையைத் தொட்டுக் காட்டச் சொன்னால் தொட்டுக் காட்டியபாகம் ஒரு பலகையோ,

அல்லது காலையோ, ஆணியையோ, குமிழையோ, கைப்பிடியையோதான் தொட்டுக் காட்டியதாய்க் காணப்படும். இப்படியேதான் ஒரு கடிகாரம், புத்தகம் ஆகிய பொருள் களிலும் ஒரு பாகத்தையே தொடமுடியும்.

இப்படியே மற்றும் அதன் உட்பிரிவுப் பெயர்களும்—அதாவது மேல் சொல்லப்பட்ட பெயர்களும் சரியானபடி தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில், அவன் லாந்தர் என்பதாகக் காட்டியது கம்பி என்பதானாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக்காட்டியதாக இல்லாமல், இரும்பைத் தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும். இரும்பு என்பதைக் காட்டும்போது ஏதோ ஒரு வகையான மண்ணின் சேர்க்கையைக் காட்டியதாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூபமாத்திரத்திற்கு—ஒரு உருவத்திற்கு—ஒரு மாதிரியான தோற்றத்திற்கு அந்தப் பெயர் சொல்லப்படுவதாகக் காணப்படுமே அன்றி, அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு, அந்த வஸ்துக்கள் வேறு எந்த ரூபத்தை அடைந்தாலும், வேறு எந்தக் குணத்தை அடைந்தாலும், அந்தப் பெயரையே உடையதாகக் காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்படமுடியாது என்பது இவற்றிலிருந்து நன்றாய் உணரக் கிடக்கின்றது.

ஆகவே லாந்தர், மேசை, கடிகாரம், புத்தகம் என்றதும் ஒருவித வடிவத்தில் காணப் படும் ஒரு தோற்றத்தின் பெயரே தவிர ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத்தக்கதாகும்.

எப்படியெனில், மேசை, நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல் என்று சொல்லப்படுவதான வஸ்துக்கள் மரம் என்னும் ஒரே மூலப்பொருளாலும், இரும்பு என்னும் ஒரே உபமூலப் பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும்—தனித்தனி வடிவத் தோற்றத்தினால் தனித்தனி பெயரை உடையதாகி இருப்பதுபோலவே, உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால் பலவிதப் பெயர்களை உடையதாக இருந்து பலப்பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறுபல பெயர்களையும் அடைந்தாலும் முடிவில் அவற்றின் மூலப்பொருள்களின் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்து வாகவேதான் இருக்கும்!

இதுபோலவேதான், ஜீவன்கள் என்கின்ற 'உயிர்'ப்பிராணிகள் எல்லாம்கூட உருவத் தில், தோற்றத்தில் வேறுவேறு வகையாய்—பெயராய்ச் சொல்லப்பட்டாலும் அவற்றின் மூலப் பொருள்களும் ஒன்றேயாகும். அதாவது, மரத்தையே மூலப்பொருளாய்க் கொண்ட மேசை நாற்காலி, பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம், தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பது போல, அணுக் கிருமி, பூச்சி, புழு, பட்சி, மிருகம், குரங்கு, மனிதன் முதலாகிய பல ஜந்துக்களுக்கும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய்ப் பல பெயர்கள் சொல்லப்பட்டாலும், தொட்டுக்காட்டும் பாகங்களானவை எல்லா ஜீவ வர்க்கத் திற்கும் ஒரே மாதிரியான, ஒரே பெயர் கொண்டதான மூலப்பொருளாகத்தான் இருக்கும். ஆகவே, ஜீவ வர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப்பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவை தவிர அவற்றின் மூலப்பொருள்களும், தத்துவமும் ஒன்றே யாகும்.

எனவே, எத்தனையோ கோடிவித ஜீவப்பிராணிகள் என்பதில் மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய உருவத்திற்குச் சொல்லப்படும் பெயரேயொழிய—மனிதன் என்கின்ற ஒரு தத்துவத் தனிப்பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில், மனிதன் என்று குறிப்பிடுவதற்குத் தொட்டுக்காட்டக்கூடிய ஒரு வஸ்து மனித சரீரத்தின் எந்தப் பாகத்திலும் கிடையாது என்பதாலேயேயாகும். உதாரணமாக, ஒரு மனித உருவத்தைக் காட்டி அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக்காட்டச் சொன்னால் அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில் ஏதாவது ஓர் அவயவத்தைத்தான் தொட்டுக்காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால், வயிறு, மார்பு,

முதுகு, தோள் என்பவை முதலாகிய ஏதாவது ஒரு பெயரையுடைய அவயவமாகத்தான் இருக்கமுடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ வஸ்துவையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால் அது தசை, தோல் முதலாகிய பெயர்களையுடைய பொருளாகத்தான் காணப் படும். இப்படி எல்லாம் இருந்தாலும்கூட, அப்படிக் காட்டப்பட்ட மனிதனும் இயங்குதல்—அதாவது, அசைகின்ற சக்தி இருக்கும்போதுதான் அந்தத் தோற்றத்திற்கு மனிதன் என்கின்ற பெயரையுடையதாகவும்—அதாவது, அசைகின்ற சக்தி இல்லாது போய்விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதேதோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாகவும் ஆகிறது.

அன்றியும், மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும்வரை அந்த சரீரத்தில் எந்தப்பாகம்—அதாவது முன்சொல்லப்பட்ட அவயவங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எந்தப் பாகம் போய்விட்டபோதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. எனவே, அசையும் சக்தி உள்ள ஒருவிதத் தோற்ற உருவிற்குத்தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்து வருவதைப் பார்க்கின்றோம். இந்தப்படியான மனிதன் அசையும் சக்தியையுடைத்தாய் இருக்கும்வரைதான், அவனுக்குள் உயிரோ, ஜீவனோ, ஆத்மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகின்றார்களே ஒழிய வேறில்லை.

இந்த அசையும் சக்தியிருக்கின்ற ஜீவன்கள் எல்லாவற்றிற்குமேதான் 'ஆத்மா' என்பதாக ஒன்று இருக்கின்றது என்பது ஆத்மவாதிகளின் கொள்கையாகும். அதாவது, 'சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்துவிட்டால் அசைவு நின்று விடும்'; அதாவது, மனிதன் செத்துப்போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தாலும், 'சரீரத்திற்கு அசையும் சக்தியைக் கொடுப்பதுதான் ஆத்மா' என்பது ஆத்மவாதிகள் கொள்கை என்பதும் இதனால் புலப்படும்.

ஆகவே, இந்த அசையும் சக்தி சரீரத்துக்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்று போகின்றது? என்பதைச் சரிவர உணர்ந்தோமானால் ஆத்மாவின் யோக்கியதை இன்னதென்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்குமுன் ஆத்மாவைப் பற்றிச் சில கேள்விகள் எழுகின்றன. அதாவது, சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா—கழுதை முதலிய மிருக சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா அணுக் கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைகின்றது? ஜீவன்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நடவடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா? அல்லது, அதனதன் சரீர அமைப்பு காரணமா?—என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. இவை ஒருபுறம் நிற்க, இனி எடுத்துக்கொண்ட விஷயமாகிய 'நான்' என்பதைப்பற்றிப் கவனிப்போம்.

ஒரு மனிதன் தான் 'நான்' என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய 'ஆத்மா' என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால் அது வேறு பொருளா அல்லவா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே ஆத்மா என்பது 'நான்' என்று சொல்வதல்ல என்பதானது சீக்கிரத்தில் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில், ஒரு மனிதன் பேசும்போது, 'என் ஆத்மா' என்றும், 'நான் என் ஆத்மாவை விடமாட்டேன்' என்றும், இந்தமாதிரி 'நான்' 'என்' என்பது வேறு என்றும், 'ஆத்மா' என்பது வேறு என்றும், பிரித்துப் பேசுவதையும், பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம். ஆகவே, சரீரத்தின் அசையும் சக்தி 'ஆத்மா' என்றால், இந்த 'நான்' என்பது அதைவிட்டு வேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருதவேண்டியதாக இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறு புலப்படும்.

ஆனால், ஒரு மனித சரீரத்தில் 'ஆத்மா' என்பதாக ஒரு வஸ்துவும், 'உயிர்' என்பதாக ஒரு வஸ்துவும் 'நான்' என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும் என்று நினைப்பது சரியான நினைப்பாகாது என்பதோடு அப்படி நினைத்தாலும் அவைகளில் எது மனிதனை நடத்துகின்றது அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப்தாரித்தனமுடையது என்னும் விஷயம் மயக்கத்தையும் முரண்களையும் விளைவிக்கக் கூடியதாகிவிடும். ஆதலால், 'நான்' என்று சொல்லப்படுவதும், எண்ணப் படுவதும் தனிப்பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது.

மற்றபடி பின்னே அது என்னமாய்த்தான் இருக்கக்கூடும்? என்ற கேள்விக்கு நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவு பெரிய பிசகாகவும், ஆத்மாவுக்குக் குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத்துவதற்கு யாவருக்கும் உரிமை கொடுத்தே நமது அபிப்பிராயத் தைத் தெரிவிக்கின்றோமேயொழிய, இதுவே சரியான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ் விஷயத்தில் சொல்ல வரவில்லை.

ஆகவே, 'ஆத்மா என்பதாகத் தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்று இல்லை' என்றே சொல்லுகிறோம்.

['குடி அரசு'—கட்டுரை—17-5-1931]

15. ஆத்திகம்—நாத்திகம்

பெரியோர்களே! இளைஞர்களே!

ஆத்திக—நாத்திகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் இது ஒரு பயனற்ற விஷயம் என்றே தெரிகிறது. ஏனெனில், ஆத்திகமும் நாத்திகமும் 100-க்கு 90 பேர்களின் அபிப் பிராயங்கள், பழக்க வழக்கங்களால், பிறர் சொல்லிக்கொடுப்பதால், சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய, ஒரு இயற்கை உணர்ச்சி அல்ல. அன்றியும் பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவைகளைப்போல் இயற்கையால் ஏற்படும் எண்ணமல்ல. அதைப்பற்றி மனிதன் கவலைப்படவேண்டியதேயில்லை; அது இன்று ஒரு ஆராய்ச்சி விஷயமாகி நாகரிக விஷயமாகவும் பேசப்பட்டு வருகின்றது. மனிதனுக்குக் கட்டும், காவலும், சட்டமும், போலீசுமாகத்தான் இருக்கின்றனவே ஒழிய கடவுளோ, நரகமோ, சாஸ்திரமோ, ஒழுக்கமோ கட்டிக் காப்பாற்றிவிடவில்லை; அனுபவத்திலும் எவனும் அவற்றின்மீது எவ்வித பொறுப்பையும் சுமத்துவதுமில்லை.

ஆதலால், ஆத்திக—நாத்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும், அது அவனுடைய சொந்த புத்தி, யோசனையைப் பொறுத்ததாகும்.

ஆதலால் நமது வாழ்வில் ஏற்படவேண்டிய இன்ப—துன்பங்களுக்கும், முற் போக்குக்கும், மாறுதலுக்கும் ஆத்திக—நாத்திகத்தைக் கொண்டுவந்து குறுக்கே போட்டுக் கொண்டு யாரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

நம்மைப் பொறுத்தவரை எந்த அளவில் ஆத்திகத்தில் பிரவேசிக்கின்றோம் என்று நினைப்பீர்களானால் வாழ்க்கையின் நலன்களைக் கடவுளின்மீது பொறுப்பேற்றுவதும், கடவுளுக்காகச் செல்வங்களை, மக்களின் வாழ்க்கைக்குரிய பொருள்களைப் பாழாக்கு வதையும் பொறுத்த அளவில்தான் பிரவேசிக்கின்றோம்.

மற்றபடி, எவன் எத்தனை கடவுளை எந்த விதமாக நினைத்துக் கொண்டாலும், வணங்கினாலும், அவற்றோடு பேசினாலும், அதுவாகவே ஆய்விட்டாலும் நமக்கு அக்கறை இல்லை.

உலகத்தைப் பொது என்றும், உலகப்பொருள்கள் போக போக்கியங்கள் யாவருக்கும் சமம் என்றும் மனிதன் எண்ணவேண்டும். இதற்குக் கடவுள் குறுக்கிடாமல் இருந்தால் கடவுளைப்பற்றிய வேலை நமக்கு இல்லை; அதைப்பற்றிய கவலையும் நமக்கில்லை. ஆகையால், அதை ஒரு பெரிய பிரச்சினையாக வைத்துக்கொண்டு எவரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

[புதுக்கோட்டையில், 7-10-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 14-10-1934]

தோழர்களே!

மக்களுக்கு ஆத்திகம் – நாத்திகம் என்பதற்குப் பொருள் தெரிவதே இல்லை. நாத்திகன் என்றால் கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் அல்ல; நான் கடவுள் இல்லை என்று சொல்கிறவன் அல்ல; இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. என்னால் கடவுள் என்பது என்ன? எப்படிப்பட்டது? என்று புரிந்துகொள்ள இன்றைக்கும் முடியவில்லை. புரிந்துகொண்டிருப்பதாகக் கருதுபவரிடத்தில் எனக்கு ஏன் சண்டைவேண்டும்? நான் (1956) கண்டிப்பதெல்லாம்—பேசுவதெல்லாம் கடவுள்களைப்பற்றிய சேதியே அன்றி, கடவுளைப்பற்றிய சேதியல்ல. போலிக் கடவுள்களை மக்களிடத்தில் புகுத்திவிட்டார்கள்; போலிக் கடவுள்களால் மக்கள் சீரழிகிறார்களே என்பதுதான் என் கவலை. நாத்திகன் என்பதற்குக் கடவுள் இல்லை என்பவன் என்று பொருள் இல்லை. புராண, இதிகாச, வேத சாஸ்திரங்களை ஒப்புக்கொள்ளாதவர்களையே—அவற்றைப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்பவர்களையே—பார்ப்பனர்கள் நாத்திகர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இராமாயணத்தில், பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் புத்தர் முதலானவர்களை —பகுத்தறிவைப் பயன்படுத்தியதற்காக—நாத்திகர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. யார் ஒருவன் பார்ப்பன ஆதாரங்களில் கை வைக்கிறானோ அவனுக்கு நாத்திகப் பட்டம் சூட்டியிருக்கின்றார்கள். இராவணன் பெரிய சிவபக்தன். ஆனால், பார்ப்பன ஆதாரங்களை எதிர்த்ததால் நாத்திகன் எனப்பட்டிருக்கிறான். அப்படியே இரணியனும். குறைபாடுகளை நீக்கப் பல முறைகள் உண்டு. பல வைத்தியங்கள் உண்டு; அதில் ஒரு வகையே சமுதாய இழிதன்மையையும் சாதியையும் ஒழிக்க நாங்கள் கையாளும் முறை.

மதத்தின் மேல் குற்றமில்லை; மதத்தைச் சார்ந்தவர்கள் மேல்தான் குற்றம் என்று கூறுகிறார்கள். சார்ந்தவர்களைத் திருத்தும் பொறுப்பு மதத்தினுடையது இல்லையா? சார்ந்தவரைத் திருத்த முடியாத மதத்தை எப்படி நல்ல அமைப்புடையது என்று சொல்ல முடியும்? மதத்தில் காலத்துக்கு ஏற்ற மாறுதல் வேண்டாமா? ஏசு, 'ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டு' என்று சொல்லியிருக்கிறார்! இது இன்று சாத்தியப்படுமா?

'மேல் துணியைக் கேட்டால் இடுப்புத் துணியையும் கொடுத்துவிடு' என்று சொல்லி இருக்கிறார். இப்படி இக் காலத்தில் இருக்க முடியுமா? அப்படிச் செய்தால் எல்லோரும் நிர்வாணமாய் இருக்க வேண்டியதுதான். இப்படிக் காலப்போக்குக்குப் பொறுத்தமில்லாதவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும்; திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும்.

[பொன்மலையில், 22-9-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 26-9-1956]

தலைவரவர்களே! தோழர்களே!

சாதாரணமாக, மக்கள் முடிவெய்திய காரியங்களில் தங்கள் தங்கள் சாதிமத சம்பிரதாயங்களை அனுசரித்துக் காரியம் செய்வார்கள். அதற்குப் பல பெயர்கள்—தீட்டுக் கழிப்பது, கருமாதி–இப்படி ஏதேதோ உண்டு.

இங்கே அந்தப் படியான காரியம் நடைபெறவில்லை. மறைந்தவர் முடிவெய்திய நாளை நினைவில் வைத்து அறிவுரை கூறும் நாளாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது

போன்ற சந்தர்ப்பங்களில் சாதாரணக் கூட்டமாக இருந்தாலும் அங்குதான் தத்துவம் முழங்கும். 'அவர் இப்படி வாழ்ந்தார்; அப்படி வாழ்ந்தார். இப்போது என்னத்தைக் கொண்டு போய்விட்டார்; வாழ்வே அநித்தியம்' என்று இப்படித் தத்துவம் பேசுவார்கள். ஆனால், இதைப் பிறகு மறந்துவிடுவார்கள். இதை வேடிக்கையாக—'மயான வைராக்கியம்' என்று சொல்லுவார்கள்; 'பிரசவ வைராக்கியம்' என்று சொல்லுவார்கள். அதாவது, ஒருவர் இறந்துபோனதும் மயானத்தில் 'வாழ்வு மாயம், அநித்தியம்' என்று பேசுகிற தத்துவம்—பின்னால் மறந்துபோகிறது. அதேபோல், பிரசவ வேதனைப்படுகின்ற சமயத்தில், 'இனிமேல் குழந்தையே வேண்டாம்' என்று கருதுவார்கள். குழந்தை பிறந்து சந்தோஷமானவுடனேயே, 'எல்லோரும் இங்கேயே கூடிக்கொண்டிருக்கின்றீர்களே! அவரைக் கவனித்தீர்களா? சாப்பிட்டாரா? போய்ப் பாருங்கள்' என்று சொல்லுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பேசப்படும் தத்துவம் உண்மை.

ஆனால், அப்படிப் பேசப்படும் தத்துவங்களுக்கு வலிமை இருப்பதில்லை. ஒருவர் இறந்துபோகிறார் என்றால்—கட்டை மண்ணுக்குத்தான் போகப்போகிறது என்று நன்றாகத் தெரியும். என்றாலும் குளிப்பாட்டி, 'நல்ல வேஷ்டியாகப் போடு; இதைச் செய்—அதைச் செய்' என்பதெல்லாம் எதற்காக? அந்தந்த மத, சாதி சம்பிரதாயப்படி—'வெள்ளிக்குடம் வைத்தாயா?' '16 இலை போட்டாயா?' 'தானம் கொடுத்தாயா?' என்பதெல்லாம்—அவனவன் அனுஷ்டிக்கும் சாதி மத சம்பிரதாயப்படியும், சாஸ்திர சம்பிரதாயப்படியுமே தவிர, வேறு ஒன்றும் கட்டாயம் இல்லை. அவன் சார்ந்துள்ள மத, சாஸ்திர சம்பிரதாயப்படி இவற்றையெல்லாம் செய்யவேண்டும். 'ஏன் செய்கிறாய்?' என்றால், 'இது எங்கள் சாதிப் பழக்கம்; சாஸ்திரம் சொல்லுகிறது; புராணம் சொல்லுகிறது' என்பார்கள். இதைத் தவிர வேறொன்றும், செய்பவனும்—செய்யச் சொல்லுகிறவனும் சொல்லமாட்டார்கள். இந்தக் காரியங்களெல்லாம் ஏறக்குறைய ஒரு கூட்டத்தாரிடம்—கட்டாயம் எந்தக் கூட்டத்தார் என்றால் ஆத்திகர்கள் என்ற கூட்டத்தாரிடம், அவர்கள் சாயபுவாக இருந்தாலும், கிறிஸ்தவனாக இருந்தாலும் கண்டிப்பாக உண்டு; ஏதோ ஒரு விதத்தில் நடக்கும். மற்ற ஒரு கூட்டத்தார் ஆத்திகரல்லாதார்கள்—நாத்திகர் என்று சொல்லலாம்; அவர்களிடம் இந்தக் காரியம் இருக்காது. வேறுமுறையில் மனத் திருப்திக்காக சில காரியங்கள் செய்வார்கள்.

நாம் ஆத்திகம் என்றால் என்ன, நாத்திகம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தச் சொற்கள் மக்களை மயக்கி வருகின்றன. ஏன்? பொருள் சரியாகத் தெரிவதில்லை; அது விளங்கி விட்டால் கருத்து வேற்றுமைகள்கூட சகிக்கக் கூடியதாக ஆகிவிடும். இப்போது சாயபு ஒரு காரியம் செய்கிறார். அதைப் பார்த்து மற்றவர்கள் ஏதோ அவர் மதப்படி அவர் காரியம் செய்கிறார் என்று சகித்துக் கொள்கிறார்கள். அதேபோல, சாயபு மற்றவர்கள் ஒரு காரியம் செய்யும்போது, 'ஏதோ, அவர்கள் சாஸ்திரப்படி செய்கிறார்கள்' என்று கருதிப் போவாரே தவிர, கோபிப்பதில்லை. அதுபோலத்தான், ஆத்திக-நாத்திகம் விளங்கிவிட்டால் கருத்து வேற்றுமை சகித்துக் கொள்ளக் கூடியதாகிவிடும்.

ஆத்திகம் என்பது வெறும் நம்பிக்கையின்பேரில், நம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்ட காரியம்.

இப்போது ஒருவர் சந்தைக்குப் போய்விட்டு வந்து குளிக்கிறார். 'ஏன்?' என்று கேட்டால், 'சந்தைக்குப் போய்விட்டு வந்தேன்; பறையன் என்மேல் பட்டிருப்பான்; அதனால் குளிக்கிறேன்' என்பார்.

'பறையன் தொட்டிருந்தால் என்ன? அதற்கு ஏன் குளிக்க வேண்டும்?' என்றால், 'இதென்னப்பா, இப்படிக் கேட்கிறாய்; சாஸ்திரத்தில் சொல்லியிருக்கவில்லையா? பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அதன்படி குளிக்காமல் வீட்டிற்குப் போனால் தீட்டு'

என்று சொல்லுவார். அதேபோல ஒரு நாத்திகர் என்பவர் சந்தைக்குப் போய்விட்டு வந்து குளிக்கிறார். 'ஏன் குளிக்கிறாய்'? என்றால், 'சந்தைக்குப் போனேன்; அங்கு எவ்வளவு அசிங்கம், தூசி; பல கொடுமையான நோயாளிகளெல்லாம் முட்டியிருப்பார்கள்; அதனால் குளிக்கிறேன்' என்பார். காரண காரியத்தைத் தெரிந்து அதன்படி நடப்பவன் நாத்திகன். வெறும் நம்பிக்கையை ஆதாரமாக வைத்து—சாஸ்திரம் சொல்லுகிறது, பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்பதை நம்பி அந்த நம்பிக்கையின்படி நடப்பவன் ஆத்திகன்.

'சாஸ்திரம் சொல்லுகிறது; பெரியவர்கள் சொல்லுகிறார்கள் என்றாயே—அதை நிஜம் என்று தெரிந்துகொண்டாயா?' என்றால், 'பெரியவர்கள் சொல்லுகிறார்கள்; சாஸ்திரம் சொல்லுகிறது என்றால் நிஜமில்லாமல் வேறென்ன?' என்பான்.

'நிஜமென்று கண்டு பிடித்தாயா?' என்றால் 'பெரியவர்கள்தாம் சொல்லிவிட்டார்களே—பிறகு என்ன கண்டு பிடிப்பது?' என்பான். இன்னும் ஏதாவது கேட்டால், 'பார்த்தாயா, பெரியவர்கள் சொல்வதை நம்பமாட்டேன் என்கிறாய்; நீ நாத்திகன்' என்பார்கள். அவ்வளவுதான்—அதாவது என்ன சொல்லியிருக்கிறதோ அதை அப்படியே—கண்ணைமூடிக் கொண்டு நம்பி அதன்படி நடப்பவன் ஆத்திகன்.

அந்தக் காரியங்களை அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துக் காரண காரியங்களைத் தெரிந்து நடப்பவன் நாத்திகன்.

உதாரணமாக, ஆத்திகர் என்பவர்களில் ஒருவர் செத்து விட்டால் பந்தோபஸ்தாகப் புதைக்கிறார்கள். 'மறுபடியும் உயிர்பெறும் நாள் வரும்; அதுவரையில் பந்தோபஸ்தாக இருக்கவேண்டும்' என்கிறான். இது என்ன நம்பிக்கை? அதுபோல சாயபு பத்திரமாகப் புதைக்கிறான். 'ஜட்ஜ்மெண்ட் நாள்வரும்; அப்போது ஆண்டவன் அவர்களை எழுப்பித் தண்டனை தருவான்; அதனால் புதைக்கவேண்டும்—எரிக்கக் கூடாது' என்கிறான்.

நம்மிடம், 'அவர் உடல்தான் அழிந்தது; அவர் நேரே மோட்சத்திற்குப் போயிருக்கிறார். அங்கே அவர் சவுக்கியமாக நல்ல சாப்பாடு சாப்பிட்டு ஆனந்தமாக இருக்க எதை எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். நம்மைப் பெற்று வளர்த்ததற்கு இதைக்கூடச் செய்யவேண்டாமா?' இப்படி இன்னும் சிலர் கூறுவர்.

'அவர் எங்கும் போய்விடவில்லை; இன்னொரு உடலில் புகுந்து உடனே எங்காவது பிறந்திருப்பார்' என்பர் சிலர்.

இன்னும், 'அவர் அனாதையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறார்; குறைபாடுகளை நீக்கி, மோட்சத்திற்கு அனுப்பவேண்டும்' என்று கூறிச் சிலர் வருஷா வருஷம் துணி, அரிசி, செருப்பு கொடுக்கிறார்கள்—பார்ப்பனர் சாப்பிட்டுச் சந்தோஷமாயிருக்க!

நீங்கள் சிந்திக்கவேண்டும். கொடுக்கும்போது பார்ப்பானுக்குக் கொடுப்பதாகவே கருதவில்லை; அவனிடம் கொடுத்தால் அங்குபோய்ச் சேரும் என்று கருதிக் கொடுக்கிறார்கள். தபால் ஆபீஸ் மாதிரி பார்ப்பான்! இவனிடம் கொடுத்தால் அங்கு போய்ச் சேர்ந்துவிடும்! 'ஏனப்பா, இதற்கெல்லாம் ஏதாவது ருஜு உண்டா? பெற்றுக்கொண்டதாக ரசீது வந்ததா? அட! கனவிலாவது வந்து பெற்றுக்கொண்டேன் என்பதாகச் சொன்னதுண்டா?' என்றால், 'நீ என்னப்பா, புராணத்தில் சொல்லியிருக்கிறது; அப்புறம் என்ன?' என்பார். புராணம் யார் சொன்னது?—'பார்ப்பான் சொன்னான்; ரிஷிகள் சொன்னார்கள்' என்பார். யார் அந்த ரிஷிகள்? 'நீ என்னப்பா, தெரியாததுபோல் கேட்கிறாய்? அவர்கள் தெய்வீக சக்தியுடையவர்கள்; அதெல்லாம் என்ன இலேசு என்று நினைத்தாயா! பெரிய புராணத்தில் இருக்கிறது; காசி புராணத்தில் இருக்கிறது; காசி புராணத்தில், ஒரு சொட்டுத் தண்ணீர் மேலே பட்டுவிட்டால் எப்படிப்பட்ட பாவமும் நிவர்த்தியாகி மோட்சத்திற்குப் போகலாமென்றிருக்கிறதே!' என்பான். 'என்னப்பா இதெல்லாம் நிஜமாக இருக்குமா?' என்றால், 'நீ என்ன இப்படிக் கேட்கிறாய்? காசி புராணம் நாரதர்

சொல்லி நந்தி எழுதியது—தெரியுமா? என்பான். 'நீ பார்த்தாயா?' என்றால், 'நம் முதுகை, நாம் பார்க்க முடிகிறதா? அதனால் முதுகு இல்லையென்றா அர்த்தம்!' என்பான்.

'இவற்றையெல்லாம் அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டாமா?' என்றால், 'காசி புராணத்தில், இதை அறிவைக்கொண்டு ஆராய்ந்தால் காராம்-பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாகவேண்டும் என்று போட்டிருக்கிறதே' என்பான். இப்படி, பகுத்தறிவைக் கொண்டு ஆராயப் பயப்படுகிறவன் எல்லாம் ஆத்திகன். ஆராய்வது பாவம் என்று சொல்லிவிட்டதால் பெரும்பாலான மக்கள் நம்பி, அந்த நம்பிக்கையில் வாழ்வதே வாழ்வாகி விட்டது. அவைகள் 'ஆர்க்யூமெண்டிற்கு'–விவாதத்திற்கு–அறிவு ஆராய்ச்சிக்கு ஒத்துக் கொள்ள முடியாதவை; வெறும் நம்பிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டவை; அதுதான் ஆத்திகம்.

அதுபோல, இன்னொரு கூட்டம் தங்கள் சொந்த அறிவு ஆராய்ச்சிமேல் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் இந்த மாதிரிக் காரியங்களில் தேவையில்லாத—தங்கள் அறிவுக்கு அவசியமென்று தோன்றாத சடங்குகளைச் செய்யமாட்டார்கள். நான்கும் நான்கும் எட்டு என்று புரிகிறபோது, நான்கும் நான்கும் ஒன்பது என்று புராணத்தில் எழுதியிருப்பதாலேயே நம்பி, நாமும் ஒன்பது என்று சொல்லவேண்டுமா என்று கேட்பவர்கள். அறிவைக் கொண்டு எதையும் செய்பவர்கள்; அறிவுதான் அவர்களுக்கு ஆதாரம்; அவர்களே நாத்திகர்கள்.

ஒரு பிரிவு—பெரியவர்கள் சொன்னார்கள், புராணம் சொல்லுகிறது என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட ஆத்திகம்; மற்றொரு பிரிவு—தனது சொந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட நாத்திகம்.

ஆத்திகர்கள் ஆராய்ச்சி செய்வதே பாபம் என்று சொல்லுபவர்கள். ஆராய்ச்சி செய்தால் உலகமே மூழ்கிப் போய்விடும் என்று, நம்பிக்கைக்கு ஆதாரமான தங்கள் கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். நம் நாட்டில் மாத்திரமல்ல, உலகெங்கும் அப்படி வலியுறுத்தப்பட்டு வருகிறது. உலகெங்கும் நம்பிக்கை போதிக்கப்பட்டு ஆராய்ச்சிக் காரர்கள் வலுப்பதற்கில்லாமல் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அதனால் ஒரு அறிவு ஆராய்ச்சிக்காரனைப் பார்த்தால் மட்டம்தட்ட நினைக்கிறார்கள். 'நான்கும் நான்கும் ஒன்பது என்று சொல்லுவதை—இவன் ஆராய்ச்சியால் மறுத்து, நான்கும் நான்கும் எட்டு என்பது—தப்பு. அப்படி ஆராய்ச்சி செய்வது கடவுளுக்கு விரோதம்; சாஸ்திர விரோதம்' என்று சொல்லி அவனை மதிப்பதில்லை. ஒருவன் நீட்டாக நாமம் போட்டிருக்கிறான்; கொட்டை கட்டி இருக்கிறான். 'ஆகா, ஆத்திகன்! கவுரவிக்கத் தகுந்தவன்' என்கிறார்கள். 'இவன் கருப்புச் சட்டைக்காரனா?—நாத்திகன்!' என்று வெறுக்கிறார்கள்.

'இவன் இந்து மகா சபைக்காரனா .... ஆகா......... ஆத்திகனாயிற்றே! யார் இரத்தினசாமி முதலியாரா? ஆத்திக சிகாமணியாயிற்றே! எழும்போதும் சிவசிவா; உட்காரும்போதும் சிவசிவா—என்பாரே!' என்பர். அவன் 'சாதக'த்தைப் பார்த்தால் 7, 8 கொலைகள் செய்திருப்பான். இருந்தாலும் ஆத்திகன்; அதனால் மதிக்கத்தான் வேண்டும்.

ஆராய்ச்சிக்காரர்களை மட்டம்தட்ட வேண்டுமென்பதில் பலருக்குச் சொந்தத்தில் கவலை (Personal Interest) இருக்கிறது. பார்ப்பான் மேல்சாதிக்காரன்; முதல் வெற்றிலை பாக்கு மரியாதை அவனுக்குத்தான். அவனைப் பார்த்து, 'நீ எதனால் உயர்ந்தவன்; உன் உடம்பில் ஓடுவது இரத்தம்—எங்கள் உடம்பில் ஓடுவது சீழா? நீ என்ன, மூத்திரம் பெய்தால் பன்னீர் வாசனையா வீசுகிறது?' என்று கேட்டால், உடனே—அவன், 'அட, நாத்திகப் பயலே!' என்பான். ஏன்? அந்த ஏற்பாடு ஒழிந்தால் தனது இலாபம், மேல் சாதிக் கவுரவம் போய்விடும். அதனால், அந்த அறிவு ஆராய்ச்சிக்கு இடம் தரக்கூடாது என்கின்றான்.

அதுபோல, ஒரு பணக்காரன் கள்ள மார்கெட்டில் இலட்சம் இலட்சமாகச் சாம்பாதித்திருப்பான்; கேட்டால் என்ன சொல்வான்—'எல்லாம் பகவான் கொடுத்தார்' என்பான். 'எதற்காக உன்னிடம் மாத்திரம் கொடுக்கிறார்?' என்றால், 'போன ஜென்மத்தில் செய்த புண்ணியம்!' என்பான். இப்படிச் சொல்ல வாய்ப்பிருந்தால்தான்—சொல்வதை நம்பும் மக்கள் இருந்தால்தான்—வெளியில் வரும்போது வெறுப்பு இருக்காது. அறிவு ஆராய்ச்சிக்காரர்கள் அதிகமாய் விட்டால்—'இதோ பார் மோசடிக்காரன்!' என்று கூறக்கூடிய நிலைமை வந்துவிடும். அதற்காக அறிவு ஆராய்ச்சி பெருகாமல் பார்த்துக்கொள்வதில் அவர்களுக்குக் கவலையிருக்கிறது.

இன்னொன்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்; 'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்' என்பவை தமிழ்ச் சொற்கள் அல்ல. தமிழில் அந்தப் பொருளுடைய சொல்லும் கிடையாது. அந்த இரு சொற்களும் ஆரிய மொழி, பார்ப்பன மொழிச் சொற்கள். அதில்—அதாவது வடமொழியில், 'ஆஸ்தி' என்றால்—'உடையது' என்று பொருள். நாம், 'அவன் ஆஸ்திக்காரன்' என்பதில்லையா?'—அதாவது பொருளுடையவன் என்பது. அதுபோல, 'நாஸ்தி' என்றால் 'இல்லாமை'—'அவன் நாஸ்தியாகப் போய்விட்டான்' என்றால் என்ன? ஒன்றும் இல்லாதவனாகிவிட்டான் என்று பொருள். இப்படி 'உடையது', 'இல்லாதது' என்ற பொருளை உணர்த்த வடமொழியில் ஏற்பட்ட சொற்கள்தாம்—'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்' என்பவை. இந்தச் சொற்களை எப்படிக் கடவுளுக்குச் சம்பந்தப்படுத்தினார்களோ தெரியவில்லை.

புராண இதிகாசங்களில் இராமாயணத்தை எடுத்துக்கொண்டால், இராமன் வாயினாலேயே வரும்படியாக, ஒரு ஆளைப்பற்றிக் குறிப்பிடும்போது—அதாவது பவுத்தனைப் பற்றியும் இன்னும் இரண்டொருவரைப்பற்றியும் குறிப்பிடும்போது, 'பவுத்தனா? சார்வாகனா? அவன் நாஸ்திகனாயிற்றே!' என்று சொல்லுவதாகக் காட்டியுள்ளார்கள். இன்னும் பரதனிடம் நாட்டைப்பற்றிப் பேசும்போது, 'பவுத்தர்களை நாட்டில் வைத்திருக்கக் கூடாது' என்று கூறுவதுபோல் சொல்லும்போது, 'நாஸ்திகன்' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. பெரியோர்கள் சொன்னதை—புராண இதிகாசங்களை அறிவைக்கொண்டு தர்க்கம் செய்கிறவன் நாஸ்திகன். அது தவிர, 'கடவுள் உண்டு'; 'இல்லை' என்கின்ற பிரச்சினையே அங்கில்லை. இதேபோல், பாரதத்திலும் இரண்டொரு இடங்களில் இதே அர்த்தத்தில்தான் வருகிறது.

'ஏனப்பா, கும்பகோணத்திற்குப் போய், அந்த மூத்திரக் குட்டையில் மூழ்க வேண்டும்? கடவுள் அந்த இடத்தில் வந்துதானா தீர்த்தம் கொடுக்கவேண்டும்? அது எப்படிப் பொருத்தம்?' என்றால் உடனே, 'உனக்கு யார் பதில் சொல்லுவது? நீ நாஸ்திகன்' என்று—அதாவது 'கடவுள் இல்லை என்பவன்' என்கிற அர்த்தத்தில் சொல்லி விடுகிறான். 'கடவுள் இல்லையென்பவன்' என்கிற ஆயுதத்தை உபயோகித்துத் தப்பித்துக்கொள்கிறான்.

எங்கேயும், 'கடவுள் உண்டா? இல்லையா?' என்கிற விவகாரத்திற்கு இடம் இருக்க முடியாது. இன்றுகூட யார் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்—'கடவுள் உண்டா? இல்லையா?' என்று சொல்ல, தமிழில் வார்த்தையே இல்லை. தமிழ் மூத்தமொழி; அதுகூட வேண்டாம்—நமக்கென்று இருக்கிற சொந்த மொழி. கடவுள் என்பது உலகத்துக்கே பொதுவான ஒன்று. அதைக் குறிப்பிட—'கடவுள் உண்டா? இல்லையா?' என்று சொல்ல ஒரு சொல் தமிழில் இருக்க வேண்டுமா, இல்லையா? தமிழில் இல்லை. 'ஆஸ்திகம்', 'நாஸ்திகம்', 'நிரீச்சுர வாதம்', 'உலகாயத வாதம்' என்று இப்படி வடமொழி வார்த்தைகள்தாம் உண்டே தவிர, தமிழில் வார்த்தை இல்லை. இதைப் பிடித்துக்கொண்டே போனால் தமிழனுக்கே கடவுள் இருந்ததா, இல்லையா என்பதே சந்தேகம்தான்.

'கடவுள் என்பவர் எங்கும் உள்ளவர்; வல்லவர்; எல்லா சக்தியும் படைத்தவர்; எதையும் அசைப்பவர்; வாயை அசைப்பவர் கூட அவர்தான்' என்பதாகச் சொல்லு கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை ஒருவன் இல்லையென்கிறான் என்றால் அந்த வார்த்தையே பொருத்தமாக இல்லையே!

உள்ளே இந்த அறையில் 200 'கேண்டில் பவர்' உள்ள விளக்கு இருக்கிறது; உள்ளே போய்ப் பார்த்தால் கண்ணுக்குத் தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம்? இந்தப் பெட்டி நிறைய சாமான் இருக்கிறது; கையை விட்டுப் பார்த்தால் கைக்கு ஒன்றும் சிக்க வில்லை என்றால் அர்த்தம் என்ன? 'உள்ளே 200 கேண்டில் பவர் விளக்கு இருக்கிறது' என்பது பொய்யாக இருக்க வேண்டும்; 'பெட்டியில் நிறைய சாமான் இருக்கிறது' என்பதும் பொய்யாக இருக்க வேண்டும்; அல்லது 'கைக்குச் சிக்கவில்லை' என்பது பொய் யாக இருக்கவேண்டும்.

கடவுளை, 'எல்லாம் வல்லவர், எல்லா சக்தியும் படைத்தவர், அவர்தான் எல்லா வற்றையும் அசைக்கிறார்' என்று சொல்லிவிட்டு—'கடவுள் இல்லை என்கிறான்' என்றால் என்ன அர்த்தம்? புத்தியுள்ளவனாக இருந்தால், 'அட கடவுளே! என் மனதில், என் கருத்தில் கடவுள் உண்டு என்று தோன்றும்படி செய்கிறாய்—அவன் கருத்தில் கடவுள் இல்லை என்று கருதும்படி செய்கிறாயே; என்னே உன் திருவிளையாடல்!' என்று கடவுளைப் பார்த்தல்லவோ கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு மனிதன்மேல் கோபித்துக் கொண்டால் என்ன நியாயம்?

சூரியனை, பகல் 12 மணிக்கு நின்றுகொண்டு, ஒருவன் பார்த்து 'ஆகா எவ்வளவு பிரகாசம்; கண்ணைக் கூசுகிறதே'! என்கிறான். பக்கத்தில் நிற்பவன், 'சூரியனா? எங்கே இருக்கிறது? காணோமே!' என்று கேட்க முடியுமா? கேட்டால் புத்தியில்லை; பைத்தியம் என்றுதானே சொல்வார்கள். ஏன்? இருக்கிறது என்று சொல்கிற பண்டம்—அதாவது சூரியன்—அவ்வளவு தெளிவாக இருக்கிறது. அதைவிட அதிகச் சக்திவாய்ந்த கடவுள் கண்ணுக்குப் படாவிடினும், கருத்துக்காவது படவேண்டாமா? கடவுள் இருக்கிறது என்பதுகூட ஒரு எல்லைக்குத்தான்! இன்னின்னாருக்குத்தான் கடவுள் உண்டு என்ற எல்லை இருக்கிறது. ஞானிக்குக் கடவுள் இல்லை; பகுத்தறிவுவாதிக்குக் கடவுள் இல்லை.

சங்கராச்சாரியைக் கேளுங்கள்; அவர் லோக குரு; அவருக்குக் கடவுள் இல்லை. அவரைப் பார்த்து, 'கடவுள் உண்டா?' என்றால், 'கடவுள் எப்படியிருக்கும்?; ரூபாய்க்கு எத்தனைபடி?' என்பார். ஏன்? அவர் உயர்ந்தவர், ஞானியாகிப் போனவர்;—'நான்தான் கடவுள்' என்பார். அவரது தத்துவப்படி அவருக்குக் கடவுள் கிடையாது—அவரேதான் கடவுள். அவ்வளவு உயர்நிலைக்குப் போனவர்களுக்குக் கடவுள் கிடையாது. இது சங்கராச்சாரியின் தத்துவம்; அவர்கள் தத்துவப்படி கடவுள் இருக்கிறதா என்றால்— இல்லை.

ஆளுக்குத் தகுந்தமாதிரி கடவுள்! உனக்குக் காளி அது, இது கடவுள்! ஏன்? உன் பக்குவத்திற்குத் தகுந்தாற்போல்—புத்திக்குத் தகுந்தாற்போல். இன்னும் கொஞ்சம் சாதாரண புத்தியுள்ளவனுக்கு உருவம் உள்ள கடவுள்; நீ உருவத்தையே கும்பிடு! இன்னும் பெரிய புத்திக்காரனுக்கு அவனேதான் கடவுள்! நிலைமைக்குத் தகுந்தாற்போல் இப்படிச் சில தந்திரங்களைச் சொல்லிக் கொள்ளை அடிக்கிறான்; அவ்வளவுதான்!

நினைவுநாள் காரியம் ஒரு பணக்காரன் வீட்டில் நடப்பதானால் எவ்வளவு கூத்தடிப் பார்கள்? 'இன்று எட்டாம் நாள்; இன்று சோடசம், வெள்ளி இலை போட்டாயா? வெள்ளிக் குடம் வைத்தாயா? பார்ப்பானுக்குத் தானம் எத்தனை?' என்று கூறி என்னென்ன காரியம் நடக்கும்!

இலட்சாதிபதிகள் வீட்டில் ஒரு காரியம் என்றால் எவ்வளவு நடக்கும்? பத்து இலட்சம்! இருபது இலட்சம்! எதற்காக என்று சிந்திப்பதே இல்லை. பணம் இருக்கிறது—

ஜம்பமாகச் செலவழிக்கிறார்கள். இவர்கள் செலவழித்து நாசமாகப் போகட்டும்; இவர்களைப் பார்த்து எத்தனையோ பேர் கெட்டுப்போகிறார்களே!

மேல் நாடுகளில் பகுத்தறிவாளர் சங்கம்; சிந்தனையாளர் சங்கம்; உண்மை நாடுவோர் சங்கம் என்பன போன்ற சங்கங்களும் உண்டு. அவர்கள் வேதம், சாஸ்திரம், அவதாரம் இவற்றையெல்லாம் நம்புவதில்லை.

தமிழ்நாட்டிலும் சரித்திரப்படி ஆரியர்கள் வருவதற்குமுன் தமிழர்கள் பகுத்தறிவு வாதிகளாகவே இருந்திருக்கிறார்கள். பார்ப்பான் வருவதற்குமுன், தமிழன் என்பவனுக்கு ஒரு கடவுளும் இருந்ததில்லை. ஆரியம் வருமுன் அந்த எண்ணமும் கருத்தும் கிடையாது. அன்று மாத்திரமல்ல; இன்றும் தமிழனைப் பொறுத்தவரையில் ஏதாவதொரு கடவுள் இருக்கிறதென்று சொல்லச் சொல்லுங்கள், பார்க்கலாம்! கோவில், குளம், பொம்மையைக் காட்டினால் போதாது. கடவுள் என்கிற தத்துவப்படி, தமிழனுக்கு அன்றும் இன்றும் எது கடவுள்? பார்ப்பதற்கு மாய்கையில் இருப்பதாகத் தோன்றுமே தவிர, உண்மையில் கடவுள் கிடையாது.

மறைமலையடிகளாருக்கும், எனக்கும் ஒரு போராட்டம். இவராவது வாதாடி, 'தமிழனுக்கு ஒரு கடவுள் இருக்கிறார்; அது இன்னதுதான்' என்று சொன்னவர் அல்லர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், 'நீங்கள் சொல்லுவது சரி; ஆனால், என்றுமே இருந்ததில்லை என்று சொல்லாதீர்கள்; தமிழர்கள் இயற்கையைக் கடவுள் என்றனர். இயற்கை என்றால் அழகு. அழகு என்றால் முருகு' என்றார்.

சரி; அந்த முருகன் எங்கே போய்விட்டான்? இன்றுள்ள முருகன் அந்த அழகு முருகன் அல்லன்; கொழுக்கட்டை—கல் முருகன். இந்த முருகன் தமிழனின் முருகனல்லன்! சிவன் மகன் என்ற முறையில்—ஆரியப் புராணப்படி கற்பனை செய்யப் பட்ட ஒரு உருவம்.

இன்னொருவர், 'சிவன் தமிழர் கடவுள்' என்கிறார். 'அது அன்பின் உருவம்; அன்பே சிவம்; அன்பே உருவானவன் சிவன்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள்; இன்று இருக்கும் சிவன் அன்பு சிவனா? அன்பே உருவான சிவன் கையில் ஏன் அரிவாள், கொடுவாள், வேலாயுதம், சூலாயுதம் எல்லாம்? கேட்டால், காலப்போக்கில் கெட்டுப்போய்விட்டது; ஆரியர் வந்ததால் தமதாக்கிக்கொண்டார்கள் என்பார்கள். பின், நீ ஏன் கும்பிடு போடு கிறாய்? அன்றும் இன்றும் கடவுள் என்பது ஆரிய ஆதிக்கத்தினால் ஏற்பட்ட கற்பனை. இதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்?

முதல் முதல் சரித்திரச் சான்றுப்படி புத்தர்கள்தான் அறிவைக்கொண்டு ஆராய்ந்து சொன்னவர்; அறிவைக்கொண்டு பார்த்ததனாலேயே பெரிய நாத்திகரானவர். புத்தர் அறிவு வாதி; ஆராய்ச்சிவாதி. அதனால்தான் அவர் கொள்கைகளையும் முயற்சிகளையும் பார்ப் பனர்கள் அழித்துவிட்டார்கள்.

புத்தர் மக்கள் உள்ளத்தில் விதைத்த விதை முளைத்து வளர்ந்து கொடி படர ஆரம் பித்தது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் அதை எதிர்த்துக் கொடுமை செய்து ஒழித்து விட்டார்கள். உலகில் அறிவுவளர்ச்சி, வாழ்க்கை முயற்சிக்கு ஏற்ப இப்போது புத்தருடைய கொள்கையே செலாவணியாகிறது. இப்போது மக்களிடம் பொறுமையிருப்பதால் சகித்துக் கொள்ள முடிகிறது.

இதுதான் இன்று ஏற்பட்டுள்ள நிலை. முன்போல இன்று நாத்திகம் அவ்வளவு கொடுமையானதாகக் கருதப்படவில்லை. அதனால்தான், இன்றைய தினம் மற்றவர்கள் செய்கிற முறைப்படி கருமாதிச் சடங்குகள் செய்யாமல் நினைவு நாள் காரியத்தை—மறைந்தவருடைய நடத்தை, பண்பைப்பற்றிச் சொல்லி நடத்தும் நினைவு விழாவாக, ஏதோ அவர்கள் இஷ்டப்படி நாம் நடக்கிறதென்கிற முறையில் நடத்த முடிந்தது.

எனது தாயார் உடம்பு சவுக்கியமில்லாமல் படுக்கையில் இருந்தார்கள். அப்போது வடஆர்க்காடு பகுதியில்தான் 4, 5 கூட்டங்கள் ஏற்பாடு செய்துகொண்டு வரவேண்டி யிருந்தது. தாயாரிடம் போய்வர அனுமதி கேட்டேன். 'மகராசனாகப் போய்விட்டு வா' என்றார்கள். எனது அண்ணார் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு இன்னும் ஒரு வாரத்திற்குப் பயமில்லை என்றார். ஜோலார்பேட்டை வந்து படுத்தேன். உடனே ஊரில் இருந்து ஆள் வந்து எனது தாயார் இறந்துபோய்விட்டதாகச் சொன்னான்; ஊருக்குப் போய், காரியத்தைப் பார்த்துவிட்டு அன்று சாயந்திரமே வந்துவிட்டேன்.

அதுபோலத்தான் நாகம்மையார் இறந்தபோதும்; அவருக்குக் காய்ச்சலாக ஆஸ்பத்திரியில் தடபுடலாக இருந்தது; வியாழக்கிழமை நாளில் வெளியூருக்குப் புறப்பட்டுப் போனேன்; வெள்ளிக்கிழமை இறந்துவிட்டதாக ஆள் வந்தது. வெள்ளிக்கிழமை இரவு 4 மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். காரியத்தை முடித்துவிட்டு சனிக்கிழமை இரவு திருச்சியில் ஒரு திருமணம் நடத்திவைக்கப் போய்விட்டேன்.

அது கிறிஸ்தவர்கள் திருமணம். பாதிரிமார்கள் ரகளை செய்தார்கள். முதலில் குறிப்பிட்ட இடத்தைக் கொடுக்கமாட்டேன் என்றார்கள். வேறு இடத்தில் திருமணம் நடந்தது. முடித்துவிட்டு இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, போலீசார் வந்து என்னைக் கைது செய்திருப்பதாகச் சொன்னார்கள். மணமக்களையும் கைது செய்தனர். மறுநாள் பேப்பரில் நான் கைதான செய்தியும் நாகம்மையார் இறந்த செய்தியும் ஒன்றாக வெளிவந்தது. பிறகு போலீஸில் 'ஸ்டேட்மெண்ட்' கொடுத்தோம். திருமணம் செய்து கொண்டவர்கள்—'நாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பே கிறிஸ்துவ மதத்தைவிட்டு வெளியேறிவிட்டோம்' என்று சொன்னார்கள். போலீஸ்காரர்கள் பாதிரியுடன் 'டெலிபோனில்' பேசினார்கள்; பிறகு எங்களை விட்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

1910-ல் எங்கள் தகப்பனார் உடம்பு சவுக்கியமில்லாமல் இருந்தார். அவர் உயிருடனிருக்கும்போதே நானும் என் அண்ணனும் அவர் உடலைப் புதைப்பதா எரிப்பதா என்ற விவாதத்தில் இறங்கினோம். நான் ஊருக்குள் புதைத்து சமாதி கட்ட கலெக்டருக்கு மனு கொடுத்து, முனிசிபாலிடியில் பர்மிஷன் வாங்கி வைத்திருந்தேன். என் அண்ணன், 'புதைப்பது வைணவ சம்பிரதாயத்திற்கு விரோதம்; ஆதலால் எரிக்கத்தான் வேண்டும்' என்றார். நான் வைணவர்களிலேயே பெரிய ஆட்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஆதாரம் காட்டி வாதாடினேன். மத்தியஸ்தர்கள் எங்கள் அய்யாவையே கேட்டுவிடலாம் என்று கூறி அவரையே கேட்டார்கள். பிறகு ஒரு சாமியார் வந்தார். 'சன்னியாசம் வாங்கிக் கொண்டால் புதைக்கலாம்' என்றார். சன்னியாசம் வாங்குவதென்றால் கோவிலில் கொண்டு போய்க் காஷாய வேட்டிகளை வைத்து ஏதேதோ செய்து சாமியே காஷாயம் கொடுப்பதாகச் சம்பிரதாயம். அதற்கு 300 ரூபாய் செலவு ஆகும் என்றார்கள். 300 ரூபாய் கொடுத்தோம். காஷாயம் வாங்கிக் காவி வேட்டியைக் கட்டிக்கொண்டு எங்கள் தகப்பனார் இரண்டு நாள் படுத்திருந்தார்; இறந்தார்; புதைத்தோம். எனது அண்ணியார் செத்தபோதும் மறுநாள் யாருக்கும் வேலையில்லை.

தத்துவ விசாரணையோடு இந்தக் காரியங்களைச் சிந்தித்துப் பார்த்தால் விளங்கும். இன்று மாத்திரம் சொல்லவில்லை; நான் காங்கிரசில் இருந்தபோதே 1929-ல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் 'இறந்து போனவர்களுக்காகத் திதி, திவசம் கொடுப்பதில்லை' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.

[திருப்பத்தூரில், 29-12-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1957]

16. நாத்திகம்

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னை நாத்திகன் என்று சொல்கிறவர்கள் 'நாத்திகம்' என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகின்றார்களோ அந்த அர்த்தத்தில் நான் நாத்திகன் என்று வலியுறுத்திச் சொல்கிறேன்.

நாத்திகத்திற்குப் பயந்தவனால் ஒன்றும் செய்யமுடியாது. அதிலும் சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் நாத்திகனால்தான் முடியும். அதனால் ரஷ்யாவையும் நாத்திக ஆட்சி என்கிறார்கள். புத்தரை அப்படிச் சொல்லுவதற்குக் காரணம் அவர் சமதர்மக் கொள்கையைப் பரப்ப முயன்றதால்தான். நாத்திகம் என்பதற்கு அர்த்தம் சமதர்மக் கொள்கை மாத்திரமல்ல. சீர்திருத்தம்—அதாவது, பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும், ஏன்–எவ்வித சீர் திருத்தத்தையுமே நாத்திகம் என்று யதாப் பிரியர்கள் சொல்லித் திரிவார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ—அங்கெல்லாம் இருந்துதான் நாத்திகம் முளைக்கிறது.

கிறிஸ்துவையும், நபியையும்கூட நாஸ்திகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கு—அவர்களது சமதர்மமும் சீர்திருத்தமுந்தான் காரணமாகும். துருக்கியில் பாட்சாவும், ஆப்கானிஸ்தானில் அமீரும் நாஸ்திகர்கள் என்று அழைக்கப்பட்டதற்கும் அவர்களது சீர்திருத்தந்தான் காரணம். ஏனென்றால், இப்போது வழக்கத்தில் இருக்கும் கொள்கை களும் பழக்கங்களும் எல்லாம் கடவுள் செய்ததென்றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளைகள் என்றுமேதான் யதாப் பிரியர்கள் சொல்லுகின்றார்கள்.

ஆகவே, நாம் இப்போது எதை எதை மாற்றவேண்டுமென்கிறோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும், அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ தூதுவர் களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால்—அவைகளைத் திருத்தவோ அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின—அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

உதாரணமாக, மக்களில் நாலு சாதிகள் கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டன என்று சொல்லப்படுகையில், மேற்படி சாதி ஒழிய வேண்டுமென்றால் அவன் கண்டிப்பாகக் கடவுளை மறுத்தோ, அலட்சியம் செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும் மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டவை என்று சொல்லப்படுகையில், அம் மத வித்தியாசங்கள் ஒழியவேண்டும் என்றும், மதக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டுமென்றும் சொல்லும்போது அப்படிச் சொல்பவன் அந்தக் கடவுள்களை, அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான், கிறிஸ்தவர் அல்லாதார் 'அஞ்ஞானி' என்றும், முகமதியர் அல்லாதவர் 'காபிர்' என்றும், இந்து அல்லாதார் 'மிலேச்சர்' என்றும் சொல்லப்படுகின்றனர்.

அன்றியும், கேவலம்–புளுகும், ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே இந்துமதக் கொள்கைப்படி 'நாத்திகம்' என்று சொல்லப்படும்போது, சாதியையும் கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாத்திகம் என்று சொல்லமாட்டார்கள்?

சாதி உயர்வு–தாழ்வு, செல்வம்–தரித்திரம், எசமான்–அடிமை ஆகியவைகளுக்குக் கடவுளும் கர்மமும்தான் காரணம் என்று சொல்லுவதானால், பிறகு, மக்களுக்கு விடுதலையும் முன்னேற்றமும் எங்கே இருக்கின்றன? கடவுளையும் கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படிப் பாடுபடமுடியும்? மேடும், பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போடுவது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமேயாகும். மனிதனுக்கு முகத்தில்–தலையில் மயிர் முளைப்பது கடவுள்செயலானால்

சவரம் செய்வது கடவுள் செயலுக்கு எதிராகவே ஆகும்—அதாவது, ஓரளவுக்கு நாத்திகமே யாகும். அதிலும், செய்யச் செய்ய மறுபடியும் மயிர் முளைப்பதைப் பார்த்துச் சவரம் செய்வது வடிகட்டின நாத்திகமேயாகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதும் நாத்திகமேயாகும். ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது 'கர்மத்'திற்காகப் பட்டினி போட்டிருக்கும்போது நாம் அவனுக்குச் சோறுபோடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது, கடவுளை நம்பாத—கடவுள் செயலை நம்பாத செயலேயாகும்.

இப்படியே பார்த்துக்கொண்டுபோனால், உலகத்தில் ஆத்திகர் என்பதாக ஒருவரும் இருக்கமுடியாது. ஆதலால், நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாத்திகமேயாகும். நாத்திகமும் சாத்திர விரோதமும், தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும், ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்ய முடியவே முடியாது.

[திருச்சியில், 1-9-1930-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 7-9-1930]

உலகத்திலேயே நாத்திகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அனேகமாய் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக்கூடியதாக இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால், அவ்வார்த்தையில் 'கடவுள் என்பது இல்லை' என்கின்ற பொருள் அடங்கி இருப்பதாகக் கொள்வதேயாகும்.

மக்கள், கடவுள் இல்லை என்று சொல்வதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும் வெறுப்புக் கொள்ளவும் புரோகிதர்கள், பாதிரிகள், மவுல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப் பற்றிய விளக்கம் யாருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு, அது மனத்திற்கும் புத்திக்கும் எட்டாதது என்பதாகவும் அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தான் ஆகவேண்டும் என்றும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டு விட்டது. இப்படி இருந்த போதிலும், என்றைய தினம் கடவுள் என்கின்ற வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதமும் ஏற்பட்டு, வெகு காலமாகவே இவ் வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு, நாளது வரை முடிவுபெற முடியாமலே இருந்துவருகின்றது.

உதாரணமாக, கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும் கூட, உதாரணமாக சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயத மதம், நாத்திக மதம் என்பவை போன்ற பல உண்டு என்றாலும், கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற கிளர்ச்சி வலுத்து, அதை அமுலுக்குக் கொண்டுவந்து, மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்பப் பிரச்சாரமும் செய்ய ஏற்பாடுகள்—சாதாரணமாக, இந்த இருபதாவது நூற்றாண்டில் தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிகின்றது.

ஏனெனில், இதுவரை உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும் கடவுள் பிரச்சாரத்தின்பேரால் கவுரவமும் வயிற்றுப்பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும் கடவுளுடனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும், கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்திற்கோ, கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு, அவர்கள் மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு, அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும் பரவ முடியாமலும் போய்விட்டது. ஆனால், இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும் அதிருப்தியும் தரக்கூடியதாயிருந்தாலும், மற்றும் கடவுள் பேரால் அல்லது கடவுள் சம்பந்தமான மோட்சம், சாஸ்திரம், கதை, புராணம், பிரச்சாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்க்கை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் நடுநிலையுள்ள அறிஞர்களால் இவ் விஷயம் ஆராய்ச்சி செய்யப்படத் தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும், அவ்வித

அபிப்பிராயக்காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும், ஞானவான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் இன்றும் அனேகர்கள் நாத்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ரஷ்யா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும் நாத்திகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டு, அவற்றிற்காகப் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகள் வெளியிடப் பட்டும் வருகின்றன.

குறிப்பாக, அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் 'நாத்திகத்தை உலக மெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்' என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து, அதன்மூலம் 3, 4 வருடங்களாக நல்ல வேலைகள் மும்முரமாகச் செய்யப் பட்டுவருகின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின்படி, அச் சங்க மானது பிரச்சாரத்திற்காகவும், துண்டுப் பிரசுர வினியோகத்திற்காகவும் வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து வந்திருக்கின்றது. இப்போது இந்த வருடத்தில் 'கிறிஸ்துவ மதம் வெடிப்புக் கண்டுவிட்டது'—என்கின்ற பேராலும் 'மதம் என்றால் என்ன? கடவுள் என்றால் என்ன? கடவுள் இல்லாத முற்போக்கு' ஆகிய இவை போன்ற தலைப்புக்களிலும் பல இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டிருக்கின்றன. சங்க அங்கத்தினர்கள் வருடத்திற்கு வருடம் 100-க்கு 50 வீதம் உயர்ந்துகொண்டு வருவதுடன் பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலும்கூட பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருவதாய்க் காணப்படுகின்றது. வேறு மொழிகள்மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இதுபோன்ற பிரச்சாரமும் நடைபெறுவதுடன், ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக் கொண்டுள்ளதால் திருப்தி தரத்தக்க அளவு பிரச்சாரம் செய்யப்படுகிறது. இதன் தலைமைக் காரியாலயம் நியூயார்க்கில் 14-வது வீதி 307-E என்ற கட்டிடத்தில் நிறுவப் பட்டிருக்கிறது. இதில் சேரவிரும்பும் அங்கத்தினருக்கு வருட சந்தா ஒரு டாலர் அதாவது மூன்று ரூபாயாகும்.

இப்படியே லண்டனிலும் 'தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்,' 'அறிவாளிகளின் சங்கம்,' 'உண்மை நாடுவோர் சங்கம்' என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அது போலவே பிரச்சாரமும் செய்யப்பட்டு வருகின்றது. இச் சங்கங்களின் வயது 40, 50-க்கு மேல் ஆகியிருந்த போதிலும், அவைகள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும் செல்வாக்காகவும் நடைபெற்று வருகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலேயே மிக்க அறிவாளிகள், இராஜ தந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியார்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, நாத்திகப் பிரச்சாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக்காகவும் நடைபெறுகின்றது.

இனி, அதனால் ஏற்படும் நன்மை என்ன, கெடுதி என்ன எனப் பார்ப்போம். சாதாரணமாக, மனிதன் நாத்திகனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க மாட்டான் என்றும், திருட்டு, பொய், மோசம், ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறிக் கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்கள் செய்யப் பயப்பட மாட்டான் என்றும் சொல்லப்படுகிறது. இதைப்பற்றிக் கவனிக்குமுன், உண்மையான கருத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கிறானா என முதலில் யோசிப்போம்.

கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர் கருதிக் கொண் டிருக்கும் கருத்து என்னவெனில்—சர்வ சக்தியும், அதாவது ஜீவராசிகள் புல், பூண்டு, தாவரங்கள் யாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு, தனது சக்தியால் இயங்கச்

செய்கின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதும், சர்வ ஜீவராசிகளையும் இரட்சிக்கும் தன்மையுடையதானதும், எல்லாவற்றையும் சமமாய்ப் பார்ப்பதானதும்—சுருக்கமாய்ச் சொல்வதானால் அவனன்றி ஓர் அணுவும் அசையாததான சக்தியுடையதானதும் ஆன ஒரு கடவுள் உண்டு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இது சரியா, தவறா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக் கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா, தீமையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மையில் நம்பிக்கொண்டிருக்கின்றானா, அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா, அதாவது எந்த மனிதனுடைய நடவடிக்கையில் இருந்தாவது மேற்கண்ட சக்தியும் குணமும் கொண்ட ஒரு வஸ்துவை நம்பி நடக்கின்ற மனிதனின் நடவடிக்கைகள் இவை என்று கருதும்படியாக இருக்கின்றனவா என்பதை யோசிப்போமானால், இதுவரை ஒரு மனிதனையாவது அம் மாதிரி நம்பிக்கையின் மீது நடக்கின்றான் என்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன்கூட தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றுந்தான் சொல்லவேண்டி இருக்கின்றது.

இப்படிச் சொல்வதானது, சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல், கடவுள் பிரச்சாரம் செய்பவர்களிலாவது, கடவுளைக் கண்டவர்களாகச் சொல்லப்பட்டவர்களிலாவது, கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத்தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலியவர்களுக்குள்ளாவது, நாத்திகத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித் துயரப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் ஆத்திகப் பண்டிதர்கள், சாஸ்திரிகள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை: ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒருதனி மனிதனென்றும், தனக்காகத் 'தான்' செய்யவேண்டிய காரியம் பல உண்டு என்றும், அவற்றைத் தினமும் செய்வதாகவும்—அவனவன் இஷ்டப் பட்டபடி செய்து கொண்டும், அதனதன் பலனை அடைந்து கொண்டும், அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டும், மற்றவர்கள் செய்வதில் குணதோஷ்ம் கற்பித்துச் சொல்லிக்கொண்டும், அதற்காக விருப்பு-வெறுப்புக் காட்டிக்கொண்டும், மகிழ்ச்சி-துக்கம் அடைந்து கொண்டுந்தான் இருக்கின்றானே ஒழிய—கடவுளின் சர்வ சக்தியைப் பற்றியோ, சர்வ வியாபகத்தைப் பற்றியோ, சர்வ தயாபரத் வதைப்பற்றியோ, சர்வ சமத்துவத்தைப் பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல்லை.

ஆகவே, இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பி இருக்கவில்லை என்றும்தான் முடிவுகட்ட வேண்டியதோடல்லாமல், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச் செய்வதனாலாகிலும் காரியத்தில், அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக்கூடும் என்று கருதுகின்ற முன்சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா என்று பார்த்தால்—திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக்காதவன், முறைதவறிக் கலவி செய்யாதவன், பிறர்க்குத் துன்பம் தராதவன் முதலிய காரியங்கள் செய்யாதவன் ஒருவனைக்கூடக் காணமுடிவதில்லை. அன்றியும், திருட்டு, வஞ்சகம், பொய், முறைதவறிக் கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமாயிருக்கின்றது என்றாலும், மக்கள் எதை, எதை மேற்கண்டமாதிரி குணங்கள் என்று கருதுகின்றார்களோ அதைச் செய்யாமலிருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதாலோ நிலை நிறுத்துவதாலோ முடிகின்றதா ?

இது ஒருபுறமிருக்க, மேற்கண்ட—அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது– அந்தப்படி கருதிக்கொண்டிருக்

கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்றவர்களிடத்திலாவது—முன் சொல்லப்பட்ட திருட்டு, பொய், வஞ்சகம் இச்சிப்பது முதலிய குணங்கள் கடவுள் நம்பிக்கைக்காரர் களைவிட அதிகமாக இருப்பதாகவாவது, அல்லது பிறமக்களுக்கு ஆஸ்திகர்களைப்போன்ற நன்மை செய்யவில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால், அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சியும், முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில் மேற்கண்ட விதமான காரியங்களைப் பற்றியெல்லாம் யோசனைசெய்து பார்ப்பதை விட்டுவிட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக் கொண்டு, 'கடவுள் உண்டா? இல்லையா?' என்று கேட்பதும், 'கடவுளை ஒப்புக்கொள்ளு கின்றாயா? இல்லையா?' என்று கேட்பதும், 'கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் ஏன் வித்தியாசமாக இருக்கவேண்டும்? ஒருவர் பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் ஏன் இருக்கவேண்டும்? ஒருவர் கூன், குருடு, நொண்டி, குஷ்டரோகியாகவும்; ஒருவன் திடகாத்திர உருவமாகவும் ஏன் இருக்கவேண்டும்? ஒருவனுக்கு ஏன் பத்துப் பிள்ளைகள்? ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?' இருவர் ஒரே காலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் இலாபமும் இன்னொருவர் நட்டமும் ஏன் அடையவேண்டும்?—என்பன போன்ற கேள்விகள் கேட்டு, அதன்மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டென்றும் மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம் மாதிரிக் கேள்விக்காரர்களைப் பகுத்தறிவு இல்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்லமுடிவதில்லை.

இவற்றிற்கெல்லாம் ஒரே விடை-அதாவது, 'இம் மாதிரியாகத் தோற்றங்களில் ஒன்றுக் கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில், சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருந்து, சர்வத்திலும் புகுந்து, சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால் சர்வத்தையும் ஒன்று போலவே சிருஷ்டிக்கலா மல்லவா? வேறு வேறாகக் காணப்படுவதாலேயே சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்றும் இல்லை.

ஏனெனில், நொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும் கஷ்டப்படுத்துகிறவனுக்கும் கடவுளே காரணஸ்தனாயிருந்தால் கடவுளை சர்வ தயாபரத் துவமுடையவனென்றும் பாரபட்சமில்லாத சர்வசமத்துவ குணமுடையவனென்றும் எப்படிச் சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக்கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒருபுறமிருக்க, ஆராய்ச்சியைக் கொண்டு அறியக்கூடிய சமாதானங்களைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

ஒரே கையால் கை நிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய்வைத்து, ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனியாய் எண்ணிப் பார்த்தால், அவற்றுள் ஒன்றுக்கொன்று எண்ணிக்கை வித்தியாசமாயிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படுகின்றன?

ஒரே பூமியில் ஒரே வினாடியில் விதைக்கும் ஒரேமாதிரி விதைகள் சில முளைத்தும், சில முளைக்காமலும், முளைத்தனவைகளில் சில வளராமல் கூழையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிக மணிகள் கொண்டவையாகவும், சில குறைவான மணிகள் கொண்டவையாகவும், சில முளைத்து நன்றாய்த் தழைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன? ஒரு வினாடியில் ஒரு பூமியில் நட்டசெடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சொற்பக் கிளைகளுடனும் வளருவதும், ஒன்று பதினாயிரக் கணக்காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக் கணக்காகக் காய்ப்பதும், ஒன்று பூவிட்டு எல்லாம் கருகி உதிர்ந்துவிடுவதும், ஒன்று பூவிடாமலும் பிஞ்சுவிடாமலும் வறடா

யிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்றுபோல் இருக்கக்கூடாது?

ஒரு சமயம் கடவுள் இந்தப்படி செய்திருப்பாரானால் அம் மரம், செடி, தானியம் முதலானவைகள் இப்படிப் பலன் அடைவதற்குக் காரணம் என்ன? என்பதுபோன்ற கேள்விகளுக்கு எது சமாதானமோ அதுதான் மனிதர்களைப் பற்றிய – மனிதர் சம்பந்தமான கேள்விகளுக்குச் சமாதானம் என்பது தானாகவே புலப்படும்.

['குடி அரசு'–தலையங்கம்—28-9-1930]

கடவுள், மதம், ஆத்மா, நான், பாவ-புண்ணியம், மோட்சம், நரகம், ஒழுக்கம் என்பனவெல்லாம் மனிதனால் கற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டுக் கதையே யொழிய வேறல்ல. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒருசில சுயநலக் கூட்டத்தார்—ஊரார் உழைப்பில் உடல்நோவாது உண்டு வாழவேண்டுமென்று விரும்பும் மனிதப் புல்லுருவிகள்—புரோகிதர்கள் இத் தகைய கற்பனைகளைச் செய்து மக்களை மூடர்களாக்கி, அறிவிற்குப் பகைவர்களாக்கி, தன்னம்பிக்கையை இழக்கும்படி செய்து, இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை மக்கள் வெறுக்கும்படி தூண்டி, தாங்கள் இவ்வுலக வாழ்க்கையில் பூரண இன்பம் துய்த்துக்கொண்டு, மற்ற மக்களுக்கு மறு உலக வாழ்க்கையில் போகங்கொள்ளும்படி செய்துவிட்டனர். எனவே, பகுத்தறிவுவாதிகள்—மனிதஜீவ அபிமானிகள் தங்கள் பகுத்தறிவினால், சுயநலப் புரோகிதர்களால் கட்டப்பட்ட இந்த மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, மக்களை இவ்வுலக வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாகச் செய்யவேண்டும். விஞ்ஞான அறிவு நாளடைவில் லோகாயதவாதிகளுக்கு (Materialist) அனுகூலமாக வளர்ந்துகொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி என்னும் சம்மட்டியினால் கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், பாவ-புண்ணியம், ஒழுக்கம் என்னும் கற்பனைகள் நிர்த்தூளி செய்யப்பட்டுக்கொண்டேதான் வருகின்றன. ஆனாலும், நாம் ஒவ்வொருவரும் இவ்விஞ்ஞான முறையைக் கைக்கொண்டு சுயநலப் புரோகிதர்களால் நிறுவப்பட்ட மறு உலக வாழ்க்கையின் நம்பிக்கையை விரைவில் உலகைவிட்டோட்டி இவ்வுலக வாழ்க்கையை இன்பமாய்ச் செய்ய முயலுவோமாக!

['குடிஅரசு'–கட்டுரை—11-6-1949]

பெரியோர்களே! தோழர்களே!

மனிதனுக்கு ஆறறிவு இருக்கின்றது. பகுத்தறிவுவாதி என்றும், மனித இலட்சணம் உடையவன் என்றும் கூறவேண்டுமானால் அவன் புத்தியை ஆராய்ச்சித் துறையிலேயே செலுத்தவேண்டும். அவன்தான் பகுத்தறிவுவாதி.

'நாத்திகோ வேதநிந்தகா' என்று வடமொழி கூறுகிறது. அதாவது, புராணத்தையும், சாஸ்திரத்தையும், வேதத்தையும், மனுதர்மம், வருணாசிரமம் முதலியவைகளையும் குறை சொல்லுபவன்—தர்க்கம் செய்பவன் 'நாத்திகன்' என்று எழுதி வைக்கப்பட்டு இருக்கின்றது.

[மயிலையில், 3-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]

2. பகுத்தறிவு

1. பகுத்தறிவு

பெரியோர்களே! தோழர்களே!

பகுத்தறிவு என்றால் என்ன? ஜீவப் பிராணிகளின் சிந்தனா சக்தியும் சிந்திப்பின் உணர்ச்சியுந்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச் சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று சொல்லலாம்.

ஆனால், அப் பகுத்தறிவைப் பெரிதும் மனிதனுடைய சிந்திக்கும் தன்மைக்கும் சிந்திப்பின் கூர்மைக்குமே குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றது.

உலகில் உள்ள பல கோடி ஜீவராசிகளில் மனிதன் என்கின்ற ஜீவப் பிராணியும் ஒன்று என்பது மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயமாகும். மரம், புல், பூண்டு, செடி, கொடி ஆகியவைகளும் ஜீவ வர்க்கத்தில் சேர்ந்தவை என்பது நவீன ஆராய்ச்சியால் மெய்ப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

மற்றும் மண், கல், மலை ஆகிய அசேதனப் பொருள்கள்கூட வளருவதும் சேதிக்கப்பட்டால் வளர்ச்சி தடைப்படுவதும் முதலிய காரணங்களால் அவைகளின் இயங்குதல்கள் விளங்குகின்றன.

இப்படிப்பட்ட காரியங்கள் மனிதன் நேரே காணமுடியாமலும், மிக மிக மந்த கதியிலும் இயந்திரங்கள் மூலமல்லாமல் அறியமுடியாததாகவும் இருப்பதால் மக்கள் அவற்றைச் சுலபத்தில் ஒப்புக்கொள்ள முடியாதவர்களாக இருந்துவருகிறார்கள்.

அவ் வறிவின் மேலான தன்மைக்குப் பகுத்தறிவு என்ற பெயர் கொடுத்து—அது மனிதனுக்கே உரித்தானது என்றும், அதனாலேயே மனிதன் ஜீவப் பிராணிகளிலெல்லாம் உயர்ந்தவன் என்றும் சொல்லுகிறார்கள்.

அறிவின் தன்மையும் அவற்றின் படிகளும் எப்படி இருந்தாலும் பரிணாம வாதக் கொள்கைப்படி (அதாவது, ஒன்று மற்றும் ஒன்றாக மாறிக்கொண்டிருப்பது) பிரபஞ்சத் தோற்றங்கள் எல்லாம்—ஒவ்வொரு வஸ்துவின் ஆரம்பத் தோற்றமே இன்றிருப்பது போன்றல்ல. ஒன்று மற்றொன்றாக மாறி மாறி வருவதாலேயே பல்வேறு தோற்றங்கள் காணப்பட்டு, நாளடைவில் ஜீவப் பிராணிகள் என்று சொல்லப்படுவனவாகக் காணப்படுகின்றன.

ஜீவராசிகளில் ஊர்வனவற்றில் பாம்புக்கு இல்லாத கால்கள் எப்படி பல்லி, ஓணான், பாம்பரணை முதலியவைகளுக்கு இருக்கின்றனவோ அதுபோலும்—நாய், கழுதைகளுக்கு இல்லாத கை சவுகரியங்கள், விரல்கள் முதலியவை எப்படிக் குரங்கு, தேவாங்கு முதலிய சாதிகளுக்கு இருக்கின்றனவோ அதுபோலும்—மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத ஒரு அளவு அறிவின் சிந்தனாசக்தி மனிதனுக்கு இருக்கின்றது—என்கின்ற அளவு வித்தியாசம் மாத்திரந்தான் உண்டே தவிர, மற்றபடி தனிப்பட்ட மேன்மை ஏதும் சொல்லுவதற்கில்லை. ஏனெனில், மனிதனுக்கு இல்லாத பல சக்திகள், விசேஷ குணங்கள் முதலியவை மற்ற ஜீவராசிகளிடம் இருப்பதைக் காணலாம்.

அதுபோலவே, மற்ற ஜீவராசிகளிடம் இல்லாத சில கெட்ட குணங்களும், பல அசவுகரியங்களும், துன்பங்களும், கவலைகளும், திருப்திஅற்ற தன்மைகளும் பகுத்தறிவுடைய மனிதனிடத்தில் இருப்பதையும் காணலாம்.

உதாரணமாக, மனிதனுடைய ஆசை எல்லையற்றது; அவசியமில்லாதது; வெறும் கற்பனையையும், மூடநம்பிக்கையையும், பொறாமையையும் பலவீனத்தையும் அஸ்தி

வாரமாகக் கொண்டதாகும்; தனது தேவைக்கு மேலும் எவ்வளவு இருந்தாலும் தனது பின் சந்ததிக்கும், தான் இறந்த பிறகு மோட்சலோகம் என்பதில் பயன்படவும் வேண்டும் என்கின்ற அவிவேகமான ஆசையுமாகும்.

உதாரணமாக, நாடுபிடித்து ஆட்சிசெய்ய வேண்டும் என்று கருதுகிறவனுக்கு எவ்வளவு நாடு இருந்தாலும், உலகமே அவனது ஏக சக்ராதிபத்திய சர்வாதிகாரத் தன்மைக்குக்கீழ் வந்து விட்டாலும்கூட மேல் லோகமும் கீழ் லோகமும் தனது ஆட்சிக்குள் வந்தால் நல்லது என்று மூட்டாள்தனமான கற்பனைக்கு அடிமையாகி, திருப்தியற்றவனாகிறான். எவ்வளவு பூமி இருந்தாலும், சமுத்திரப் பரப்பெல்லாம் பூமியாகி அதற்கும் தானே மிராசுதாரனாக இருந்தால் நல்லது என்கின்ற ஆசைக்கு அடிமையாகி, குறைபாட்டுக்குக் கட்டுப்பட்டவனாகிறான்.

அதுபோலவே, செல்வம் எவ்வளவுதான் கோடிக்கணக்காக இருந்தாலும், எண்ணிக்கைக்கு எப்படி ஒரு அளவு கிடையாதோ அதுபோல், எவ்வளவு பெருகினாலும் மேலும் மேலும் சொத்து சேரவேண்டும் என்கின்ற ஆசையிலிருந்து விலக முடியாதவனாகி, போதவில்லையே, போதவில்லையே என்கின்ற தரித்திரத்திற்கு அடிமை ஆகிறான். இந்தக் குணங்களைப் பகுத்தறிவில்லாத ஜீவராசிகள் என்பவைகளிடம் காணமுடியாது.

தன் பிள்ளை குட்டி, பேத்து, பிதிர் ஆகிய பின் சந்ததிகளைப் பற்றிய மூட்டாள்தனமான கவலை பகுத்தறிவுள்ள மனிதனுக்குத் தான் இருக்கிறதே ஒழிய, பகுத்தறிவில்லாதவைகளுக்கு இல்லை. அனேக ஜீவராசிகள் தம் பிள்ளை குட்டிகளைக் கவனிப்பதே இல்லை. அனேக ஜீவராசிகள் தம் பிள்ளை குட்டிகள் தனியே இரை தேடிக்கொள்ளும் பருவம் வந்தவுடன் வெறுத்துத் தள்ளி விடுகின்றன. எவையும் அவைகளைப்பற்றிச் சதா கவலைப் படுவதில்லை.

பகுத்தறிவில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை. தன் இனத்தைக் கீழ்மைப் படுத்துவதில்லை; தன் இனத்தின் உழைப்பாலேயே வாழ்வதில்லை; தன் இனத்தின்மீது சவாரி செய்வதில்லை.

பகுத்தறிவுள்ள மனிதன் தன் இனத்தைக் கீழ்மைப்படுத்துகிறான். வாகனமாய் உபயோகப்படுத்துகிறான். சோம்பேறியாயிருந்து தன் குலத்தின் உழைப்பிலேயே வாழ்கிறான். பாடுபட ஒரு கூட்டமாகவும்—பயன் அனுபவிக்க இன்னொரு கூட்டமாகவும் பிரிந்து கொள்ளுகிறான்.

உதாரணமாக, நாய், கழுதை, பன்றி என்கின்ற 'இழிவான' மிருகக் கூட்டத்தில், பார்ப்பன சாதி, பறை சாதி, நாயுடு சாதி, முதலி சாதி என்கின்ற பிரிவுகள் கிடையாது. ஆனால், மனித வர்க்கத்தில் தன் இனத்தையே பிரித்து இழிவுபடுத்தப்படுகின்றது.

மனிதன்மீது மனிதன் சவாரி செய்கிறான். மனிதன் உழைப்பை மனிதன் கொள்ளை கொள்கிறான். மனிதனை மனிதன் வஞ்சிக்கிறான்.

பகுத்தறிவின் பயன் இதுவாயிருக்கும்போது, பகுத்தறிவு இருப்பதாலேயே மனிதன் மேன்மையானவன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

பொதுவாகவே, மனித வாழ்க்கையின் தன்மை மிக்க குறைபாடும் கவலையும் அதிருப்தியும் கொண்டதாகவே இருக்கிறது. இந்தக் குணம் எல்லா தேசத்திலும் எல்லா மனிதர்களிடையும் அரசன், குடிகள், பணக்காரன், ஏழை, மேல் சாதிக்காரன், கீழ் சாதிக்காரன், முதலாளி, தொழிலாளி என்கின்ற பேதங்களாக, தாரதம்மியங்களாக இல்லாமல் எல்லா மக்களிடமுமே இருந்துவருகின்றது,

அறிவில்லாதவன் கஷ்டப்படுகிறான் என்று சொல்வதற்கு இல்லாமல், பகுத்தறிவு என்பது இருந்தும் மனிதன் ஏன் இத்தன்மையில் இருக்கவேண்டும்? மனிதன் காட்டு

மிராண்டியாயும் சமூக வாழ்க்கை இல்லாமலும் காட்டில் தனித்தனியாய்த் திரியும்போது இல்லாத கஷ்டங்கள்—கெட்ட எண்ணங்கள் எல்லாம், சமூக வாழ்க்கைக்கு வந்த பின்பு அனுபவிக்கின்றவனாகவும் உடையவனாகவும் இருந்துவருகிறான்.

மனிதன் காட்டுமிராண்டித்தன வாழ்க்கைக்கு வரும்போது ஒவ்வொரு மனிதனும் சமுதாய வாழ்க்கையில் ஒருவனுக்கொருவன் உதவி செய்து, வாழ்க்கை நிலையை மேம் படுத்திக்கொள்ளலாம் என்று கருதி வந்திருப்பானே ஒழிய, மற்ற மனிதனைக் கொடுமைப் படுத்தி, இழிவுபடுத்தி, கஷ்டப்படுத்தி அதன் பயனாய்த் தான் வாழலாம் என்று கருதி இருக்கமாட்டான். அப்படிக் கருதியிருந்தால் சமூக வாழ்க்கை ஏற்பட்டே இருக்காது.

பரஸ்பர உதவிக்காக ஏற்பட்ட சமூக வாழ்க்கை, பரஸ்பரத் தொல்லைக்கும் உபத்திர வத்துக்கும் ஆளாக ஏற்பட்டுவிட்டது.

சமுதாயத் துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேஷம், இழிவு, தரித்திரம், மடமை முதலிய குணங்கள் மனிதன் அறிவுக் குறைவினால்—பகுத்தறிவு இல்லாததினால் அல்லது பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாததினால் ஏற்பட்டவை என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய, காலக் கொடுமையாலோ, கடவுள் தன்மையாலோ, அரசாட்சியாலோ ஏற்பட்டது என்று எவரும் சொல்லிவிட முடியாது.

ஏனெனில், சமூக வாழ்க்கையின் சரித்திர ஆரம்ப காலம் எதுவோ அக் காலத்தி லிருந்தே இக் குணங்கள் மனித சமூகத்தில் இருந்துவந்திருப்பதைச் சரித்திர ஆதாரங்களில் பார்க்கலாம்.

கடவுள் தன்மை என்பதிலும், எப்படிப்பட்ட கடவுள் காலத்திலும் அவதாரங்களின் காலத்திலும், கடவுள் தன்மை பெற்ற தூதர்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், சமய குரவர்கள் என்பவர்கள் காலத்திலும் இக் கொடுமைகளும் குறைகளும் இழிகுணங்களும் நிலவி வந்திருக்கின்றன.

அதுபோலவே, அரசாங்க விஷயத்திலும், இன்றுள்ள அன்னியர்—வெள்ளைக்காரர் வியாபார உணர்ச்சியோடும் பொறுப்பில்லாமலும் ஆளுகின்ற 'ஆட்சி' என்பது மாத்திரம் அல்லாமல், கடவுள் அவதார ஆட்சி, தர்ம தேவதைகள் ஆட்சி, மனுநீதி ஆட்சி, மற்றும் சேர, சோழ, பாண்டியர், பார்ப்பனர், நாயக்கர், முகமதியர் ஆகிய எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்துவந்த குறைகளேதான் இன்றும் காணப்படுகின்றன.

எந்தக் காலத்திலும் எப்படிப்பட்ட கடவுளாலும் யாருடைய ஆட்சியிலும் இக் குறை பாடுகள் நீங்கி இருந்ததாகவோ, நீக்கப்பட்டதாகவோ காணமுடியவில்லை.

ஆகவே, இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிப்பதாய் இருந்தால், இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

ஒன்று, மனிதனுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டதனாலேயே மனிதன் இத்தியாதி கொடு மைக்கும் துக்கத்துக்கும் இழிவுக்கும் ஆளானான் என்று சொல்லவேண்டும்.

இதை அறிஞர் ஒப்புக்கொள்ள முடியுமா? முடியாது. மற்றென்னவென்றால், மனிதன் அறிவைத் தப்பாய்ப் பயன்படுத்தி, இயற்கையையும் மனித சுபாவத்தையும் தவறுதலாகக் கற்பித்துக்கொண்டு, மனித ஜென்மமே அளவற்ற ஆசைக்கு அடிமைப்பட்ட தென்றும் மனித ஜென்மமே துக்கம் அனுபவிக்கவும் கவலையால் மூழ்கவும் ஏற்பட்ட தென்றும் மனிதனது சமூக வாழ்க்கையே (சம்சாரம், சாகரம்) துக்கம் என்றும் கருதி, அதையே இயற்கையாக்கிவிட்டதால் இந்நிலையில் இருக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

மனித வாழ்க்கைநிலை முழுவதையும் கட்டுப்படுத்திக் கட்டுப்பாட்டுக்கு அடிமைப் படுத்திக்கொண்டான். மனிதனுடைய இந்த சிந்தனா சக்தியையுங்கூட கட்டுப்படுத்தி

விட்டான். இயற்கைக்கு மாறாக இன்னின்னபடிதான் நடக்கவேண்டும்; இன்னின்ன படிதான் சிந்திக்கவேண்டும் என்கின்ற கட்டுப்பாட்டுக்குங்கூட ஆளாகிவிட்டான். மனிதன் தனக்கு என்று ஏற்படுத்திக்கொண்ட கடவுள் மதம், மதக் கட்டளை கடவுள் கட்டளை என்பவைகள் எல்லாவற்றையும் பெரிதும் இயற்கைக்கும் உண்மைக்கும் விரோதமாகவும், அனுபவத்திற்கு முடியாததாகவுமே கற்பித்துக்கொண்டான்.

இந்தத் தவறுதலோடு மாத்திரம் நிற்காமல் மனித சமூகத்தையே தேசம், மொழி, மதம், சாதி என்பவைகளால் பிரித்து வேற்றுமைப்படுத்திக்கொண்டான். அதோடு நிற்காமல், பல மதங்கள், பல கடவுள்கள், பல வேதங்கள் என்பதாக ஒன்றுக்கொன்று மாறுபட்ட குணங்களுடன் கற்பித்துக்கொண்டான். இவற்றில் ஒன்றுக்காவது பகுத்தறிவைச் சுதந்திரமாய்ப் பயன்படுத்த உரிமை இல்லாதவனாகிவிட்டான். வஸ்துக்களை உனது-எனது எனப் பிரித்துக்கொண்டான். மனிதனின் ஓய்வு எல்லாம் மனிதனின் பகுத்தறிவைப் பாழ்படுத்தி, அடிமைத்தனத்திற்குப் போவதற்கே பயன்பட்டதே தவிர, பகுத்தறிவால் பயன்படவோ மேன்மை அடையவோ முடியவில்லை.

மனித சமூக நன்மைக்காக—அதாவது மக்கள் சமூகம் சரீர உழைப்பினின்றும், காலதாமதத்தில் இருந்தும் காப்பாற்றப்படவும் அதிகப் பயன் அடையவும் கண்டுபிடிக்கப் பட்ட இயந்திரங்கள் எப்படி முதலாளிமார்கள் ஆதிக்கத்திற்கு ஆளாகி, உழைப்பாளி பாட்டாளிகளுக்கும் பட்டினியாக இருக்கப் பயன்படுகின்றனவோ அதுபோலவே, மனிதனுக்கு மேன்மையையும் திருப்தியையும் கவலையற்ற தன்மையையும் உண்டாக்கித் தரவேண்டிய பகுத்தறிவானது, சிலருடைய ஆதிக்கத்திற்கு அடிமையாகி, மக்களுக்குத் துக்கத்தையும் கவலையையும் தரித்திரத்தையும் கொடுக்கப் பயன்பட்டுவருகிறது. இவற்றாலும், இன்னும் இவை போன்ற காரணங்களாலேயும் மனிதன் பகுத்தறிவு பெற்றதால் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத தொல்லையும், கவலையும், குறைவும், அதிருப்தியும், தரித்திரமும் அடையக் காரணமாகிவிட்டான் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

எனவே, மனிதன் இப்படிப்பட்ட கீழ்மைநிலையில் இருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால் முதலாவதாகத் தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்கவேண்டும்.

இன்று மனிதனிடம் தன்னம்பிக்கை இல்லை. தன்னைத் தான் நடத்துவதாக அவன் நினைப்பதில்லை. தனது காரியத்திற்குத் தானேதான் பொறுப்பாளி என்பதில் நம்பிக்கையில்லை. மனிதன் தான் கற்பித்துக்கொண்ட கடவுளையும், கடவுள் கட்டளை யையும், கடவுள் சித்தாந்தத்தையும் வெகு குளறுபடி ஆக்கிக்கொண்டான்.

அதோடு மாத்திரமல்லாமல், தனது சவுகரியத்திற்கு ஏற்றபடியெல்லாம் மாற்றிக் கொள்கிறான். பெரிதும் சோம்பேறி வாழ்க்கைக்கே கடவுளைப் பயன்படுத்துகிறான். இவ்வளவோடு அல்லாமல் தலைவிதி, முன் ஜென்மம், கர்மபலன் என்பவைகளைக் கற்பித்துக்கொண்டு தனது முட்டாள்தனத்துக்கும் அயோக்கியத்தனத்துக்கும் பரிகார மாக்கிக்கொண்டான்.

மனிதன் முதல் முதல் தவறிப்போன இடம் இதுவேயாகும். கடவுளும் கருமமுமே மனிதனின் பகுத்தறிவைப் பாழ்படுத்தி, பகுத்தறிவற்ற ஜீவராசிகளைவிடக் கேவலமாக்கி, இன்று மனிதனை துக்க ரூபகமாகவும் கவலைக் களஞ்சியமாகவும் ஆக்கிவிட்டன.

பகுத்தறிவுக்குக் கடவுளும் கருமமும் நேர் விரோதிகளாகும். ஏனெனில், கடவு ளுக்கும், கருமத்துக்கும் அடிமைப்பட்டவனிடம் சொந்தமாக ஒன்றுமே கிடையாது. அவன் மரக்கட்டை, தண்ணீர் அலையில் அலைவது போன்றவனே ஆவான்.

ஆதலால், இந்த உணர்ச்சிகளிலிருந்து விடுபடுவதே பகுத்தறிவின் வெற்றிக்கு முதல் படியாகும்.

இந்தப்படி சொல்லுவதை மக்கள் நாஸ்திகம் என்கிறார்கள். இதனாலேயே பகுத்தறிவுவாதிகள் நாஸ்திகர்கள் என்று உலகமெங்கும் பழிக்கப்படுகிறார்கள். பகுத்தறிவு மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கமானது நாஸ்திகப் பழிப்புக்குப் பயன்படக்கூடாது.

[திண்டிவனத்தில், 18-5-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 26-5-1935]

2. அறிவுச் சுதந்திரம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

மனிதன் என்பதற்கே பொருள், விஷயங்களை ஆராய்ந்து, நன்மை தீமை என்பதை உணர்ந்து, சகல துறைகளிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைகிற தன்மை உடையவன் என்பதேயாகும்.

மற்ற ஜீவப் பிராணிகளை எடுத்துக்கொண்டால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அவை எப்படி இருந்தனவோ அப்படியேதான் இன்னும் இருக்கின்றன. பட்சி—காகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்ததோ அதேமாதிரியாக இன்னும் இருக்கிறது. அதேமாதிரி ஆடு, மாடு, குதிரையை எடுத்துக்கொள்ளுங்கள்—ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தனவோ அதே மாதிரித்தான் அவைகளின் சுபாவமும் தன்மையும் இருக்கின்றன. ஆனால், மனிதன் அப்படி அல்லன்.

மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறான்; நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட எவ்வளவோ மாற்றமடைந்திருக்கிறான்; இன்னும் சொல்லப்போனால், அம்பதாண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட எவ்வளவோ மாறுதல் அடைந்திருக்கிறான்; அறிவிலே, வளர்ச்சியிலே, அற்புதங்களைக் கண்டுபிடிப்பதிலே எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறான். அதற்கு எல்லாம் காரணம் மனிதனுக்கு உண்டான அறிவு மேன்மைதான்.

அப்படிப்பட்ட மனிதன் சில துறையிலே முன்னேற்றமடைந்து, வேறு சில துறைகளிலே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கொஞ்சங்கூட முன்னேற்றம் அடையாத நிலையிலேதான் இருக்கிறான். ஒரு சில துறைகளிலே முன்னேற்றம் ஏற்படுவானேன்? சில துறைகளிலே முன்னேற்றம் அடையாமல் இருப்பானேன்?

சக்கிமுக்கிக் கல்லிலே இருந்தவன் முதலிலே திரிவிளக்கு, பிறகு 'காஸ்' விளக்கு, அதன் பிறகு 'எலக்டிரிக்' விளக்கு என்று—சில ஆயிரம், பத்தாயிரக்கணக்கான விளக்கினுடைய வெளிச்சம் ஒரு சிறு கம்பியில் தெரியும்படி, அவ்வளவு முன்னேற்றம் எப்படி அடைந்தான்? அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்ததனாலேதான்!

மணிக்கு மூன்று மைல் நடந்துகொண்டிருந்த மனிதன் முதலிலே மாட்டு வண்டி, குதிரை வண்டி, சைக்கிள், மோட்டார் இவைகளில் சென்று இன்றைய தினம் மணிக்கு 600 மைல் பறக்கும்படியான ஆகாயக் கப்பலை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலேதான்! ஒரு மைல், இரண்டு மைல் கேட்கும்படியான ஒலிபெருக்கியை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலே! அய்ந்தாயிரம், பத்தாயிரம் மைலுக்கப்பால் இருந்து பேசினால், அதைக் கேட்கும்படியான தொலைபேசியை எப்படிக் கண்டுபிடித்தான்? அறிவினாலே! மனிதனுடைய அறிவு அவ்வளவு வேலைகளைச் செய்து இருக்கின்றது. இது எல்லாம் கதை அல்ல—நாம் நேரிலே அனுபவிக்கின்றோம். நாளைக்கு வேண்டுமானாலும் பம்பாயில் புறப்பட்டால் மறுதினம் சீனாவுக்குப் போய்விடலாம்; அடுத்த நாள் இங்கு வந்து சேரலாம்; இது எல்லாம் இன்று நடக்கிறது. சாதாரணமாக ஒரு மனிதன் கக்கூசுக்குப் போய், கால் கை கழுவி சுத்தமாக்கிக்கொண்டு குளித்துவிட்டு வருகிற நேரத்திற்குள் காசிக்குப் போய் வந்துவிடலாம்; அவ்வளவு வேகமாகப் போக முடியும்.

அப்படி அறிவினாலே அவ்வளவு அதிசயங்கள், அற்புதங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதை நாம் அனுபவிக்கின்றோம்.

அப்படிப்பட்ட அறிவுடைய மனிதன் எல்லாத் துறைகளிலும் அறிவு பெற்று இருக்கின்றானா என்றால், சில துறைகளில் மாத்திரம்தான் பெற்றிருக்கிறான். ஆனால், சில துறைகளிலே பயன்படுத்தமாட்டான். பயன்படுத்தினால் பாபம் என்று சொல்லிவிட்டனர். அதனால் பயந்து சில துறைகளில் பயன்படுத்தவே மாட்டான்; பயன் படுத்தவே இல்லை. அந்தக் காரணத்தினாலேதான் நாம் சூத்திரர்களாக, பஞ்சமர்களாக—கீழ்மக்கள், பிற்பட்ட மக்கள் என்று சொல்லும்படியாக இருக்கிறோம். அந்தத் துறையில் நாம் ஆராய்வது இல்லை; ஆராய்ந்தால் பாபம் என்று சொல்வார்கள். அப்படி ஆராய்வதாலே தண்டனை ஏற்பட்டுவிடும்; தண்டனை கிடைத்துவிடும் என்று நம்பி ஆராயாமல் இருக்கிறார்கள். ஆனால், மனிதனுக்கு அறிவு இல்லை என்று சொல்ல முடியுமா? அறிவு இருக்கிறது; சில காரியங்களிலேதான் அந்த அறிவைப் பயன்படுத்துகிறார்கள்; சில காரியங்களில் பயன்படுத்துவதே இல்லை.

விருந்துக்கு அழைக்கப்பட்டவன் கால் கைகளைக் கழுவிக்கொண்டு இலையில் உட்கார்ந்ததும், சாணி உருண்டையை உருட்டி வைத்துச் சாப்பிடுங்கள் என்று சொன்னால் அவன் என்ன செய்வான்? 'என்ன, அயோக்கியப் பயல்! நம்மை மடையன் என்று நினைத்தானா? அல்லது, அவன் மடையனா? என்று ஆத்திரம் அடைந்து எழுந்து போய் விடுவான். ஏன்? அவனுக்கு அறிவு இருக்கிறதனாலே, எந்த மடையனாவது சாணியைச் சாப்பிடுவானா என்று கருதியே ஆகும். ஆனால், அதே மனிதனிடத்தில் அதே சாணியை கொழுக்கட்டை மாதிரிப் பிடித்து வைத்து, அதன் தலையிலே அருகம் புல் குத்தி வைத்து, குங்குமத்தை இட்டு, 'விழுந்து கும்பிட்டுவிட்டு வா, சாப்பிடப் போகலாம்!' என்றால், உடனே கும்பிடுவான். சாணியைச் சோறாக வைத்தபோது கோபம் அடைந்த மனிதன்—அதைச் சாமியாக வைத்தால் விழுந்து கும்பிடுகிறான்; தலையில் குட்டிக்கொள்கிறான். இது ஏன்? அவனுக்கு அறிவு இல்லையா? அறிவு இருக்கிறது. அந்த அறிவைச் சோற்றுச் சங்கதியில் செலுத்தலாம்—ஆனால், கடவுள் சங்கதியில் செலுத்தினால் அழிந்தே போய் விடுவோம் என்கிற பயம் உண்டாகி இருப்பதால், அவன் சிந்திப்பது இல்லை. இரண்டும் அறிவுதான். ஆனால், சிந்தித்தால் பாபம், தோஷம் என்கிற தடைகள் குறுக்கே நிற்கின்றன.

'ஏன் நெற்றியில் சாம்பல் அடித்துக்கொள்கிறாய்?' என்றால் கோபம் வந்துவிடுகிறது.

'அது சிவபிரானை வணங்கும் பக்திச் சின்னம்; முன்னோர்கள் காலம் முதற்கொண்டு செய்துவருகிறோம். அது மேலே பட்டால் பாபம் போம்; அதைக் குற்றம் சொல்லுகிறாயே!' என்று கேட்பார்கள். அந்தச் சாம்பலை அடுப்பிலிருந்து முறத்தில் வாரி வந்து தெருவிலே நின்று அவன் முகத்திலே வாரி அடித்தால்—உடனே, 'என்ன என் முகத்தைக் குப்பைத் தொட்டி என்று நினைத்துக்கொண்டாயா?' என்று சண்டைக்கு வந்துவிடுவான்.

மற்றும், அதே சாம்பலை ஒரு தட்டிலே வைத்துக்கொண்டு, 'இந்தப் பெண்ணுக்குப் பேய் பிடித்திருக்கிறது; பேய் ஓடக் கடவது!' என்று சொல்லி ஒரு பெண்ணின் முகத்தில் அடித்தால், பக்கத்தில் யாராவது பாட்டிகள் இருந்தால், 'இன்னும் கொஞ்சம் போடுங்கள்' என்று சொல்லுவார்கள். வெறும் சாம்பலை ஒருவனுக்குத் தெரியாமல் அள்ளி வந்து, 'இது சாமி பிரசாதம்' என்று கொடுத்தால் பக்தியோடு இரண்டு கைகளையும் நீட்டி வாங்கி வாயிலும் போட்டுக்கொள்கின்றான்; அதற்காக விழுந்தும் கும்பிடுகிறான்; தட்டிலே தட்சிணையும் போடுகிறான். ஆனால், இவற்றைப்பற்றிச் சிந்திக்கிறதே இல்லை.

ஆனால், நான் சொல்வதென்னவென்றால்–எந்தச் சங்கதியாக இருந்தாலும் நன்றாகச் சிந்திக்க வேண்டும்; ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது கடவுளாச்சே; இது சாஸ்திர

மாச்சே; இது பகவான் வாயில் இருந்து வந்ததாச்சே; பெரிய புராணம் சொல்லுகிறதே; சின்னபுராணம் சொல்லுகிறதே; கழறுகிறதே—என்று எல்லாம் நினைக்கக்கூடாது.

நமக்கு அறிவு இருக்கிறது; அனுபவம் இருக்கிறது; ஆராயும் திறன் இருக்கிறது. அவற்றைக்கொண்டு எந்தச் சங்கதி ஆனாலும் ஆராய்ந்து பார்த்துத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துகொள்ள வேண்டும்.

[பெரம்பூரில், 21-3-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-3-1951]

3. மறுத்தலும் பகுத்தறிவும்

நாம் மாறுதலுக்குக் கட்டுப்பட்டவர்களும், ஆசைப்பட்டவர்களும் ஆவோம். ஆதலால், அந்த மாறுதலேதான்—அதுவும் அறிவு, ஆராய்ச்சி ஆகிய காரணங்களைக் கொண்டு இந்தத் திருமண முறையில் காணப்படுகிற மாறுதல்கள் ஏற்பட்டவைகளாகும்.

பகுத்தறிவு என்று சொல்வதும் மாறி மாறி வருவதாகும். இன்று நாம் எவை எவைகளை அறிவுக்குப் பொருத்தமானவை என்று எண்ணுகிறோமோ அவை நாளைக்கு மூடப் பழக்க வழக்கங்கள் எனத் தள்ளப்படலாம். நாம்கூட பல பொருள்களை, ஏன்—மகான்கள் என்று புகழப்படுபவர்கள் சொன்னவற்றையே ஒதுக்கிவிடுவோம். அதுபோலத் தான், நமது பின்னோர்கள் என்னைக் குறித்துக்கூட, ஒரு காலத்தில், 'இராமசாமி என்ற மூடக் கொள்கைக்காரன் இருந்தான்' என்று கூறலாம். அது இயற்கை; மாற்றத்தின் அறிகுறி; காலத்தின் சின்னம். பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காக நாம் குறை கூற வில்லை. அவர்கள் காலத்திற்கு அவர்கள் செய்தது சரி என்பதானாலும், அப்பொழுது அவ்வளவுதான் முடிந்தது என்பதானாலும் இன்று மாறித்தான் ஆகவேண்டும். சக்கிமுக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து 'எடிசன்'. அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம்! எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது. எத்தகைய வைதிகரும் மாற்றத்திற் குள்ளாகித்தான் தீரவேண்டும். இப்பொழுது நாம் எவ்வளவு மாறி இருக்கிறோம்? 50 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட கடவுளைப்பற்றிய எண்ணம்—தெய்வீக சக்தி படைத்தவர்கள், பெரிய மனிதர்கள் என்பவர்களைப்பற்றிய எண்ணம்—வீடு, வாசல், உடை, உணவு, தெருக்கள், வண்டி, குடுமி வைத்தல் ஆகிய எண்ணங்களில், பொருள்களில் பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். பெண்களின் புடவை, இரவிக்கை, நகைகள், புருஷன்-பெண்சாதி முறை ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களைப் பாருங்கள்! அடுத்தபடியாக பொருட் செலவும் அதிகமில்லை; நேரமும் பாழாவதில்லை!

மனிதனுடைய அறிவுப் பெருக்கமும் அனுபவ முயற்சியும் இந்த அதிசயங்களுக்குக் காரணம் என்றும், அதனாலேயே அக்கால மனிதர்களைவிட இக்கால மனிதர்கள் அறிவு, அனுபவம் பெற்றவர்கள் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தக் காலத்தில் நாம் மற்ற காரியங்களில் ஏற்பட்ட அறிவுத் திறனையும், அதிசய சக்திகளையும் அனுபவித்துக் கொண்டு, இந்தக் கேடுகெட்ட—மானம் கெட்ட இழிநிலைக்குக் காரணமான அர்த்தமற்ற, சூழ்ச்சிகரமான, காட்டுமிராண்டிக் காலத்தில் ஏற்பட்ட மதம், கடவுள்கள், சாத்திரம், சடங்கு, சாதி, மதக்குறி, உயர்வு-தாழ்வு பேதம், அறிவுக்குப் பொருந்தாத அர்த்தமற்ற கொள்கைகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்துக்கொண்டு ஈன வாழ்வு வாழ்வது, எப்படி அறிவுடையவர் ஒப்புக்கொள்ளக்கூடிய காரியமாகும்?

அறிவுதான் கடவுள் என்பான் பண்டிதன். ஆனால், அவன் கற்பிக்கிற-வணங்குகிற கடவுள், உலகில் உள்ள எல்லா அயோக்கியத்தனங்களும் கொண்டதாக இருக்கும்.

அழகுதான் கடவுள் என்பான். ஆனால், அவலட்சணமான தோற்றங்கள் எல்லாம் அவன் கற்பித்துள்ள கடவுள்களில் பிரதிபலிக்கும்.

உயர்ந்த மக்கட்கு வழிகாட்டும் நல்ல நடத்தைகளும் உபதேசங்களும் நிறைந்தனவே புராணங்கள், சாத்திரங்கள் என்று கூறுவான். ஆனால், அவைகளில் கூடா ஒழுக்கங்களும் இழி தன்மைகளும் ஏராளமாக இருக்கும். அவைகளுக்குக் காரணம், அவைகள் ஏற்பட்ட காலத்தைச் சிந்திக்காமல்—ஏற்படுத்தியவர்களின் தன்மைகளை அறியாமல், தங்களின் பெருமைகளைக் காட்டிக்கொள்ளவும், தங்கள் பிழைப்புக்கு வழி தேடவும் அவைகளைப் பயன்படுத்த வேண்டியதாகிவிட்டதால் அவர்களின் நிலைமை பரிதபிக்கத் தக்கதாகி விட்டது.

[புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது]

4. முட்டுக் கட்டைகள்

இன்று தமிழர் சமுதாயம்தான் உலகிலேயே காட்டுமிராண்டி வாழ்வு வாழ்ந்து வருகிற சமுதாயமாக இருக்கிறது! உலகிலுள்ள 280 கோடி மக்களில் யாரும் இவ்வளவு பிறவி இழிவான நிலையில் – முட்டாள்தனமாக வாழ்பவர்களில்லை.

நமது நாட்டைப் பிடித்துள்ள 'பேய்கள்' மூன்று. அவை: 1. கடவுள்–மதம்–சாஸ்திரங்கள், 2. சாதி, 3. ஜனநாயகம் என்பன. நம்மை அரித்துவரும் நோய்கள்: 1. பார்ப்பான், 2. பத்திரிகைகள், 3. அரசியல் கட்சிகள், 4. தேர்தல்கள், 5. சினிமா—ஆகிய இவைகள் ஒழிக்கப்பட்டாலொழிய நமது வாழ்வு சீர்படாது என்று, நான் இங்கு மட்டுமல்ல—வடநாட்டிலும், கன்னட, கேரள மாநிலங்களிலும் இலட்சக்கணக்கான பொது மக்கள் கூடிய கூட்டங்களில் ஆண்டுக் கணக்காக எடுத்துரைத்து வந்திருக்கிறேன்.

அதுபோலவே, நமது வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தடையாக மேலும் முட்டுக் கட்டைகளாக மேலும் மூன்று சாதனங்கள் இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டி வருகிறேன். அவை – அம் மூன்று முட்டுக் கட்டைகள்:

1. முன்னோர்கள் சொன்னபடி நடக்கவேண்டும்;
2. முன்னோர்கள் (பெரியவர்கள்) எழுதியபடி நடக்கவேண்டும்;
3. பெரியவர்கள் நடந்தபடியே நாமும் செல்லவேண்டும் என்பவைகளாகும்.

இவை, 'முட்டுக் கட்டைகள்' என்று சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் சொன்னார் என்றாலும், அதற்குப் பிறகு, இன்று—இந்த 'இருபதாம் நூற்றாண்டின் புத்தர்களாக' விளங்கும் கருஞ்சட்டைக்காரர்கள்தாம் சொல்லுகிறார்கள்.

ஆனால், இந்த நாட்டிலுள்ள பெரும் 'பிரபல' பார்ப்பனத் தலைவர்கள்—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், திரு. இராசகோபாலாச்சாரியார், கே. எம். முன்ஷி, சங்கராச்சாரியார் போன்றவர்கள் எங்கு—எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும், இம் முட்டுக்கட்டைகளை ஆதரித்து, வலியுறுத்தி—அதாவது 'நாம் எக் காரியத்திற்கும் நமது முன்னோர் சொன்ன, காட்டிய, எழுதிய வழிப்படியே நடக்கவேண்டும்' என்று பேசிவருகிறார்கள்.

இப்படி இவர்கள் பேசுவது ஏதோ, நமது முன்னோர்கள் எக் காலத்திற்கும்–எந்த நிலைமைக்கும் பொருந்தக்கூடிய வகையில் 'சர்வரோக நிவாரணி' தயாரித்து வைத்துள்ளதைப்போன்று சொல்லி வருகிறார்கள்.

மக்களுக்குச் சிந்தனாசக்தியும், அறிவும், விஞ்ஞான உணர்வும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் இவர்கள் இப்படிப் பேசிவருவதன் உள்நோக்கமாகும்.

'முன்னோர்கள், பெரியவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?' என்று கேட்டால்—'ரிஷிகள், மகான்கள், தெய்வீக புருஷர்கள், ஆதர்சன ஆச்சாரியர்கள் இவர்கள் தாம்' என்பார்கள்; மற்றும் அவதாரங்களையும் குறிப்பிடுவார்கள்.

இவர்களெல்லாம் யார்? எப்போதிருந்தார்கள்? எங்கிருந்தார்கள்? அதற்கென்ன ஆதாரம்? சரித்திரத்திற்கும் இவர்களுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? என்றெல்லாம் ஆராய்ந்தால் இது மாபெரும் புரட்டு—அதுவும் இமாலயப் புரட்டு என்பது தெளிவாக விளங்கும்.

இஸ்லாமியர்களின் முன்னோர்கள் என்றால் அவர்களுக்குக் காலம் உண்டு; சரித்திரம் உண்டு. கிறிஸ்தவர்களின் முன்னோர் என்றால் அவர்களுக்கும் காலம் உண்டு; சரித்திரம் உண்டு. அதுபோல் இந்த ரிஷிகள், தெய்வீகர்கள், மகான்கள் ஆகியவர்களுக்கு ஏதாவது உண்டா ஆதாரம் என்றால்—புராணங்கள், வேதங்கள், ஸ்மிருதிகள், சுருதிகள் என்று ஏதோ கறையான் பிடித்த சிலவற்றைக் காட்டக்கூடும். அதை நுணுகி ஆராய்ந்தவர்களுக்குத்தான் தெரியும், அதிலுள்ளவைகள் எல்லாம், 'பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றினால் அவன் எப்படியெப்படி உளறுவானோ அப்படியே இருக்கின்றன'வென்று.

உதாரணமாக, ரிஷிகளில் பெரியவரான நாரதர், மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவைக் (ஆணும் ஆணும்) கூடிப் பெற்றெடுத்த குழந்தைகள்தாம் இன்றைய 60 'தமிழ்' வருடங்கள் என்பவை. இதற்குப் பாகவதம், புராணம், இதிகாசம் ஆகியவைகளில் ஆதாரம் உண்டு என்றால், இது எவ்வளவு பெரிய ஆபாசம்? முட்டாள்தனமான கருத்து? இதை நம்புவதைவிடக் கடைந்தெடுத்த காட்டுமிராண்டித்தனம் வேறு இருக்க முடியுமா?

இப்படி முன்னோர்கள் சொன்னது, எழுதியது, நடந்தது என்பதை வெறும் வாயினால் மாத்திரம் பார்ப்பனர்கள் கூறிக்கொண்டிருக்கவில்லை. இந் நாட்டில் 100-க்கு 84 பேராக உள்ள 'இந்துக்களுக்கு' உரிய சட்டமாகிய இந்து 'லா'விலும் நுழைத்துப் பலப்படுத்திப் பாதுகாத்து வருகிறார்கள். இந்து 'லா'வின் அடிப்படைகளில் ஒன்று, சுமார் 20 ரிஷிகள் (**Smirithikaras**—ஸ்மிருதிக்காரர்கள்) சொன்னதாகும். நாரதர், பராசரர், யாக்ஞவல்கியர், விஸ்வாமித்திரர், வசிஷ்டர், மனு போன்றவர்கள் என்ன கருத்துக்கொண்டார்களோ—அதைக் காட்டித்தான் இன்று அய்க்கோர்ட், சுப்ரீம் கோர்ட் போன்ற நீதிமன்றங்களில் தீர்ப்புகள் எழுதப்படுகின்றன.

இந்த ரிஷிகள் சுத்த அனாமதேயங்களாகவே இருக்கிறார்களே; இவர்களைப்பற்றி ஆதாரங்கள் உண்டா என்று தேடினால், அவை அறிவிற்கொவ்வாத ஆபாசக் களஞ்சியங்களாகவே இருக்கின்றன.

'வச்சிர சூசிப் பிரமாணம்' என்ற நூலிலுள்ளபடி—கலைக்கோட்டு முனி மான் வயிற்றிலும், கவுசிகர் காதிராஜாவுக்கும், ஜம்புகர் நரி வயிற்றிலும், கவுதமர் பசு வயிற்றிலும், வால்மீகி வேடனிடத்திலும், அகஸ்தியர் குடத்தினிடத்திலும், வியாசர் செம்படச்சி வயிற்றிலும், வசிஷ்டர் ஊர்வசி என்ற தாசி வயிற்றிலும், கவுடல்யர் முண்டச்சி வயிற்றிலும், நாரதர் வண்ணாத்தி வயிற்றிலும், மதங்கர் சக்கிலிச்சி வயிற்றிலும், மாண்டவியர் தவளை வயிற்றிலும், சசங்கியர் பறைச்சி வயிற்றிலும், காங்கேயர் கழுதை வயிற்றிலும், சவுனகர் நாயின் வயிற்றிலும் பிறந்திருக்கிறார்கள்.

'இப்படி—நாய், நரி, கழுதை, தவளை, குடம் இவைகளின் வயிற்றிலிருந்து எங்கள் முன்னோர்கள் பிறந்தார்கள்; அவர்கள் வாக்குத்தான் எங்களுக்குச் சட்டம்' என்று நாம் சொன்னால்—செயற்கை நிலா செய்து பறக்கவிடும் மற்ற நாட்டுக்காரர்கள் நம்மைக் காட்டுமிராண்டித்தனத்தின் சின்னம் என்று கருதமாட்டார்களா?

இத்தனை ரிஷிகள், முனிவர்கள், தெய்வீக புருஷர்கள், ஆண்டவனின் அவதாரங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், மகாத்மாக்கள் தோன்றி 'மகிமைகள்' புரிந்திருந்தும் கூட, நாம் இன்றைக்கு வளையாத குண்டூசி செய்யக்கூடக் கற்றுக்கொள்ளவில்லையே, ஏன்—என்றால் என்ன பதில் கூறமுடியும்?

எனவே, பெரியோர்கள் சொன்னது, பெரியோர்கள் எழுதியது, பெரியோர்கள் நடந்தது என்பதாகிய பிரச்சாரம் செய்வது, நம்மை முழு மூடர்களாக நிரந்தரமாக இருக்கச் செய்வதற்குத்தானேயொழிய, வேறில்லை.

ஆகவே, இம்மூன்று முட்டுக் கட்டைகளை ஒழித்தாலொழிய நாம் முன்னேற முடியாது என்பது உறுதி. இல்லாவிடில் தேங்கிய சாக்கடையாக நமது சமுதாயமும்—அதில் புரண்டு இன்பங் காணும் பன்றிகளாக நம் மக்களும் இருக்கவேண்டியிருக்குமென்பது உண்மை. எனவே, முட்டுக் கட்டைகளை ஒழிக்கவேண்டியது தமிழ் மக்களின் முக்கிய—முதற் பணியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—22-5-1959]

5. நாம் அஞ்ஞானிகள்

ஞானம் என்றால் அறிவு என்று பொருள்; அஞ்ஞானம் என்றால் (பகுத்து அறியும்) அறிவற்ற தன்மை என்பது பொருள். இன்றைய மக்களாகிய நாம் பெரும்பாலோர் (பகுத்தறிவற்ற) அஞ்ஞானிகளேயாவோம். இதன் காரணம், நாம் இயற்கைத் தன்மையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், இயற்கைக்கு மாறுபாடான கடவுள், மதம், தெய்வீகம், தெய்வீக முன்னோர் கண்ட முடிவு என்பனவாகியவற்றிற்கு அடிமைகளாகிவிட்ட காரணத்தால் மெய்ஞ்ஞானம் என்பது நம்மை அணுகாமலே போய்விட்டது.

மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம் என்ற சொற்களுக்கு உண்மையான பொருள் என்னவென்று பார்த்தால் மெய்ஞ்ஞானி கவலை அற்றவனாகவும் அஞ்ஞானி கவலை கொண்டவனாகவுமே இருப்பான் என்பதுதான்.

கவலை என்பதன் பொருள்—பேத நிலை.

கவலையற்ற என்பதன் பொருள்—பேதமற்ற (அபேத) நிலை என்பதேயாகும்.

மனிதன் பகுத்தறிவு உரிமையுடையவனானதால் அவன் கண்டிப்பாக-கட்டாயமாக அபேத நிலையில் உள்ள மெய்ஞ்ஞானியாகவே இருக்கவேண்டியவன் ஆவான். ஆனால், அப்படிக்கில்லாமல் பேத நிலைக்கு ஆளாகி அஞ்ஞானியாக இருந்துவருகிறான்.

மனிதருக்குள் (சமுதாய வாழ்வில் வாழ்ந்துவரும்) மனித சமுதாய ஜீவியத்தில் பேதநிலை ஏன் இருக்கவேண்டும் என்பது சிந்திக்கத் தக்கதாகும். அதிலும் மனித சமுதாயத்தை அடக்கி ஆட்சிபுரியும் அரசு என்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களிடையில் பேத நிலை ஏன் இருக்கவேண்டும்? ஏன் இருக்கிறது? என்று சிந்திப்போமானால்,

அதன் விடை என்னவென்றால், மனித சமுதாயத்தை அடக்கி ஆளும் ஆட்சி அஞ்ஞான ஆட்சியாய் இருக்குமானால், அது கண்டிப்பாய்ப் பேதநிலை உள்ள ஆட்சியாய்த்தான் இருக்கும்.

மனித சமுதாயத்தை அடக்கியாளும் ஆட்சி மெய்ஞ்ஞான (பகுத்தறிவு) ஆட்சியாய் இருக்குமானால், அது கண்டிப்பாய் வாழ்வில் பேதநிலை அற்ற அபேதநிலை ஆட்சியாகத்தான் இருக்கவேண்டும், இருந்துதான் தீரும்.

நம் நாட்டில் இதுவரை இருந்துவந்த ஆட்சி முறையானது அஞ்ஞான ஆட்சி; அதாவது, பேதத்தை நிலை நிறுத்துவதும் மக்கள் 100-க்கு 100 பேரையும் கவலைக்கு, போதாமைக்கு உட்படுத்துவதுமான ஆட்சியே நடந்து வந்திருக்கிறது.

இன்று ஒவ்வொரு மனிதனும் மற்றவனைவிட மேலான நிலையில் இருக்கவேண்டும் என்ற அவாவினால் போட்டி போடுவோனாகி, சதா கவலைக்குள்ளாகி, பல தொல்லைகளுக்கும் ஆட்பட்டவனாகவே இருந்து வருகின்றான். இதுதான் 'பகுத்தறிவு' ஆறறிவு உடைய மகனுக்கு அழகு.

மற்றும், இத் தொல்லைக்கு ஆக்கம் கொடுத்து, மேலும் மேலும் மனிதனை கீழ்த்தர மனிதனாக ஆக்குவதற்கு அரசாங்கம் கடவுளைப் பயன்படுத்திக்கொண்டால், அதற்காகவே அரசாங்கம் கடவுளைக் காப்பாற்றினால், பிரச்சாரம் செய்தால் அது அஞ்ஞான ஆட்சி என்பதையே தெளிவுபடுத்துவதாகும்.

இதனால் மக்களுக்குக் கவலையும், கேடும், போட்டியும், போராட்டமும் மாத்திர மல்லாமல் ஆட்சிக்கும் பல தொல்லையும், தொந்தரவும் ஏற்பட வழியாகிறது.

நாடு வளர்ச்சி பெறாமல் போனதற்கும், மக்கள் கீழ்மக்களாகவும், ஒழுக்கம், நாணயம் அற்றவர்களாகவும் ஆனதற்கும் இதுவே காரணமாகிறது.

உண்மையான நல்ல ஆட்சி, சமநிறை ஆட்சி என்றால், துலாக்கோல் முள்ளும் தட்டும் போல், ஒவ்வொரு மனிதனும் மற்ற மனிதனுக்கு சமநிறை போல் ஆக்கப்படும் ஆட்சியாக இருக்கவேண்டும்.

மனிதன் பிறக்கும்போது மேல் சாதிப் பிறவியாய்ப் பிறப்பதில்லை; மனிதன் பிறக்கும்போது செல்வவானாகப் பிறப்பதில்லை. அதுபோல் மனிதன் பிறக்கும்போது கீழ் சாதியானாகவும், தரித்திரனாகவும் பிறப்பதில்லை. அப்படியிருக்க, மனிதரில் கீழ்சாதி, தரித்திரன், மேல்சாதி, செல்வவான் என்பதாக ஏன் இருக்கவேண்டும்? மற்றும், மக்களை சமமாய், நீதியாய் ஆட்சி புரிய ஒரு அரசாங்கம் இருந்தும் இப்படிக் கீழ்–மேல் நிலை ஏன் இருக்கவேண்டும்? ஏன் இருக்க விடவேண்டும்?

பேதமற்ற நிலையுடைய மக்களையும், பேதமற்ற தன்மையுடைய மக்களையும் கொண்ட ஒரு ஆட்சியையும் காணவேண்டுமானால் அரசர்களையும், கடவுள்களையும், தரகர்களையும் கொன்று குவித்துத்தான் காணமுடிந்திருக்கிறது என்ற நிதர்சனமான எடுத்துக்காட்டுதனை இப்படிப்பட்ட நிலையைக் கண்ட நாடுகளில் காண்கிறோம்.

இப்படிப்பட்ட நிலையைக் காண்பதும் குற்றமல்ல என்று தோன்றும்படியாகவே அதாவது, இம் மாதிரிப் பேத நிலையை உண்டுபண்ணியவர்களுக்கும், அதை ஆதரிப்பவர் களுக்கும், அதனால் நலம் அனுபவிப்பவர்களுக்கும் தண்டனை கொடுப்பதை ஒக்குமே தவிர, கொன்று குவித்தல் என்பது கொலைபாதகமானது என்ற கருத்தில்தான், இம் மாதிரி மரண தண்டனைகள் நடைபெற்றிருக்கிறது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

ஆதலால், அஞ்ஞான ஆட்சியை ஒழித்துக்கட்டி, பேதமற்ற மெய்ஞ்ஞான ஆட்சியை ஏற்படுத்துவது என்பது வியாதிக்காரன் பிழைக்க, அவனுக்கு இரண சிகிச்சை (ஆபரேஷன்) செய்வது போன்றுதான் ஜீவகாருண்ய செய்கையாக ஆகுமே ஒழிய, ஒரு நாளும் இம் முயற்சிக்குத் தவறான காரியமாக ஆகாது என்பது நமது கருத்து. இந்தக் கருத்தில்தான் இந்நிலை அடைய பல நாடுகளில் பெரும் பெரும் புரட்சிகள் ஏற்பட்டிருக் கின்றன என்று சொல்லலாம்; ஏற்படக்கூடும் என்றும் சொல்லலாம். மக்கள் ஞானிகளாக, பகுத்தறிவுவாதிகளாக ஆக்கப்பட்ட நாடுகளில் இம் முயற்சிகள் துவக்கப்படுமானால் இம்சைக்கு இடமில்லாமல் இஷ்டபூர்வமான முறையில் வெற்றியடையலாம்.

ஏன் அஞ்ஞான ஆட்சியில் பேதம் ஏற்பட்டது என்று சொல்லவேண்டியதாகிறது என்றால், ஆட்சியின் அனுமதியினாலும், பாதுகாப்பினாலும்தான் மேல்சாதியானும் செல்வவானும் வாழ முடிகிறதே தவிர, இயற்கைக்கு–நீதிக்கு–சமத்துவத்திற்கு விரோத மான நிலை தானாக ஒரு விநாடியும் வாழமுடியாது.

பேதநிலை எதற்காக இருக்கவேண்டும்?

பகுத்தறிவு காரணமாக துக்கமற்று, கவலையற்று, குறைவற்று, உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்து வாழவேண்டிய உரிமை உடையவர்களே ஆவார்கள்.

இந்தப்படி மக்கள் கவலை, துக்கம், குறைவற்று வாழ்கிறார்களா என்பதை மேற்பார்வை செய்வதுதான் மெய்ஞ்ஞான ஆட்சி என்பதாகும்.

['விடுதலை'–தலையங்கம்—21-9-1964; 8-2-1969]

6. நம்பிக்கையாளரும் நம்பிக்கை மறுப்பாளரும்

ஒருவனை 'நாத்திகன்' என்று அழைப்பதனால் அவன் நன்னெறியற்றவன் என்று பிறர் கருதவேண்டும் என்பது அழைப்பவர்களின் கருத்து.

கொஞ்ச காலத்துக்குமுன் 'நாத்திகர்' எனப்படுவோர், 'சமுதாயப் பிரஷ்டர்'களாகக்கூட மதிக்கப்பட்டனர்.

அதற்கும் கொஞ்ச காலத்திற்குமுன் நாத்திகர் எனப்படுவோரை அரசர்கள் இம்சித்தும் வந்தனர். அதற்கும் வெகு காலத்திற்குமுன் நாத்திகர் எனப்படுவோருக்கெல்லாம் சித்திரவதையும், மரண தண்டனையும் விதிக்கப்பட்டுவந்தன.

இப்பொழுதோ அந்த நிலைமை முற்றிலும் மாற்றம் அடைந்துவிட்டது என்றாலும், சாமான்ய ஜனங்களால் மதம் என்று கூறப்படுவதை மறுப்பவர்களையெல்லாம் தூஷித்துச் சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதுவதும், அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி ஞானமுன்னேற்றத்துக்கும் தடை உண்டுபண்ணி, வைதிகத்துக்கு ஆதரவளிப்பதுமாயிருந்து வருகிறதானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது.

நிற்க, வேதங்களெல்லாம் தெய்வ வாக்கென்றும், வேதங்களை மறுப்பது 'கடவுள் இல்லை' என்று மறுப்பதற்கு ஒப்பாகும் என்றும் மக்கள் பொதுவாகக் கருதி இருக்கும் நம்பிக்கையே, சாமான்ய மதக் கோட்பாடுகளை மறுப்பவனைக்கூட நாத்திகன் என்று பழிக்கப்படுவதற்கு மூலகாரணமாய் இருக்கிறது.

ஆனால், வேதங்களெல்லாம் தெய்வத்தின் சொந்த வாக்கென்று நம்புவதென்பது நாத்திகனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது.

ஆகவே, நாத்திகன் கடவுள் வார்த்தைகளையாவது, கடவுள் கட்டளைகளையாவது ஒருபோதும் மறுக்கவில்லையென்பதும், மனிதனுடைய வார்த்தைகளையும் கட்டளைகளையும் மட்டுமேதான் அவன் மறுக்கிறான் என்பதும் யோசித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வமும் அறியும் தன்மையும், சர்வ தயாபரத்துவமும் உடைய கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று நம்பின—அறிந்த எவனும் அப்படிப்பட்ட கடவுள் ஒருவர் இல்லை என்று மறுக்க முன்வரவே மாட்டான். இதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏனெனில், அப்படிப்பட்ட கடவுளை இல்லையென்று மறுப்பதால் அவனுக்கு என்ன இலாபம்?

கடவுள் தண்டனையை அலட்சியம் செய்தாவது இப்படிச் சொல்லவேண்டும் என்கின்ற அவசியம் அவனுக்கு என்ன வந்தது?

அன்றியும், வேதங்களெல்லாம் கடவுளாலேயே கூறப்பட்டன என்று மனப் பூர்வமாக அறிந்த எவனும்—சந்தேகத்துக்காவது ஆளான எவனும், 'வேதங்கள் கடவுள் வாக்கல்ல' என்று மறுக்கவும் துணியமாட்டான்.

வேதங்கள் எல்லாம் தெய்வ வாக்கு என்று கூறுவதற்கு வெறும் குருட்டு நம்பிக்கையும் நிர்ப்பந்தமுமே ஆதாரமாக இருக்கின்றனவே ஒழிய, எவ்வித ருசுவோ, பிரத்தியட்சப் பிரமாணமோ ஒன்றும் இல்லை.

எனவே, ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் வித்தியாசம் என்ன என்று பார்ப்போமானால்—முதலாவது, ஆத்திகன் புராணங்கள் கூறுபவையெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டும் என்கின்றான். நாத்திகன் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இவ்வளவுதான் ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம்.

ஒருவன் ஒன்றை உண்டு என்று நம்புவதனாலே உயர்ந்த நெறியுடையவனாக ஆகிவிடமாட்டான்; இல்லை என்று மறுப்பதனால் அதனாலேயே நெறிகெட்டவனும் ஆக மாட்டான். ஏனெனில், நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அதனதன் ருசுவைப் பொறுத்தது.

வேதங்களெல்லாம் கடவுள் வாக்கென்றெண்ணி ஆத்திகன் அவைகளை நம்புகிறான் என்றாலும், யாரோ சிலர் வேதங்களெல்லாம் கடவுள் வாக்கு என்று சொன்னதை நம்பித்தான் அவனும் வேதங்களைக் கடவுள் வாக்கென்று நம்புகிறானே அல்லாமல் தனக்குத் தேவையான ருசு வெல்லாம் கிடைத்து விட்டது என்று அல்ல.

ஆனால், அவன் அவ் விஷயத்தைச் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், 'வேதங்கள் கடவுள் வாக்கு' என்று கூறுவது கடவுள் அல்ல என்பதும், மனிதன்தான் என்பதும்; வேதங்களுக்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதும் அவனுக்கு நன்கு புலனாகாமல் போகாது.

ஏனென்றால், என் ஆத்திக நண்பர்களில் எவரும் ஒருபொழுதும் கடவுளைக் கண்டதே கிடையாது. கடவுளிடமிருந்து வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ யாதொரு செய்தியும் அவர்களுக்கு வந்ததும் இல்லை.

வேதங்கள் எல்லாம் 'கடவுள் வாய்ப் பிறப்பு' என்பதற்குக் கடவுளிடம் இருந்து நேர்முகமான தெளிவு எதுவும் அவர்களுக்குக் கிடையவும் கிடையாது.

எல்லாம் கடவுள் வாய்மொழி என்று நம்புவதற்கு ஆதாரமாய் இருப்பதெல்லாம், 'ரிஷி வாக்கியங்கள்' என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும், கடவுள் அருள் பெற்றவர்கள் என்பவர்கள் சொன்னார்கள் என்று எழுதிவைக்கப்பட்டவைகளும்தாம். ஆனால், அவை நம் கண்ணெதிரே மனிதர்களாலேயே எழுதப்பட்டு, மொழிபெயர்க்கப் பட்டு, அச்சிடப் பெற்றதையும், பெறுவதையும் பார்க்கிறோம்.

ஓ! ஆத்திக நண்பனே! வேதங்கள் எல்லாம் கடவுள் ரிஷிகளுக்கு உபதேசம் செய்ததாக நீ நம்புகிறாயே ஒழிய, கடவுள் அவ்வாறு உபதேசம் செய்ததாகக் கடவுள் உன்னிடம் நேரில் சொன்னது கிடையாதே! நீ பார்த்ததும் கிடையாதே; வேதங்கள் எல்லாம் கடவுள் வார்த்தை என்று யாரோ சொன்னதைத்தானே நீ நம்பிக்கொண்டு இருக்கிறாய்?

ஆனால் உண்மையில், 'ரிஷிகள்' யாரென்று உனக்குத் தெரியாது! வேதங்களை எழுதியவர் யாரென்றும், எப்பொழுதென்றும் நீ அறிவாயா? வேதங்களை மொழி பெயர்த்ததும், தொகுத்ததுங்கூட இன்னார் என்றும் உனக்கு நேரில் தெரியாது.

எனவே, உனக்குத் தெரியாத—யாரோ சிலர் சொல்வதை ஆதாரமாகக் கொண்டு, 'வேதங்கள் எல்லாம் தேவ வாக்கு' என்று நீ நம்புகிறாய். ஆகவே, வேதங்கள் தேவ வாக்கு அல்ல என்று நான் மறுப்பதனால் அது தேவ வாக்கை நான் மறுத்ததாக எப்படி ஏற்படும்? ஒருக்காலும் ஏற்படவே மாட்டாது; மனித வாக்கை மறுப்பதாகவேதான் ஏற்படும்.

ஆனால், நாத்திகர்கள் வேண்டுமென்றே ஏதோ துர்எண்ணத்தின்பேரில் வேத சாஸ்திரங்களை மறுப்பதாக ஆத்திகர்கள் பழிசுமத்துகிறார்கள். அதிலுள்ள உண்மை என்னவெனில், நாத்திகன் தனது பகுத்தறிவுக்குச் சரி என்றும், உண்மை என்றும் பட்டதை மாத்திரந்தான் நம்புகின்றான். மற்றபடி, சாமான்ய ஜனங்கள் கைக்கொண்டொழுகும் 'மதங்கள்' அவனது பகுத்தறிவுக்குப் பொய் என்று தோன்றுவதனாலும், அந்தப்படி

தோன்றும் மதம் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்காது என்றும், தீமையே பயக்கும் என்றும் அவன் நம்புவதாலும், அனுபவத்தில் காண்பதாலும், நாத்திகன் அவற்றை அடியோடு மறுப்பதோடு எதிர்க்கவும் செய்கிறான்.

அன்றியும், தன் பகுத்தறிவுக்குச் சரி என்று தோன்றுபவைகளை வெளிப்படையாகக் கூறி, அவைகளைப் பகிரங்கமாய்ப் பிரச்சாரம் செய்யும் நாத்திகன் மிக ஒழுங்காகவே நடக்கிறான். இவ்விஷயத்தில் ஒரு 'போப்'புக்கோ அல்லது ஒரு மதாச்சாரிக்கோ உள்ள பெருமை அவனுக்கும் உண்டு.

தவிர, நாத்திகர்கள் எல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள் என்று குறை கூறுவதானது சிறிதும் புத்தியற்றவர்கள் கூறும் கூற்றாகும்.

ஏனெனில், அப்படிச் சொல்லுதலானது 'அபேதவாத (சோஷியலிஸ்ட்) தலைவர்கள் எல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள்' என்று குறைகூறுவதற்கு ஒப்பாகவே இருக்கிறது.

உண்மையில், நாத்திகர்களையும், சோஷியலிஸ்ட் தலைவர்களையும் ஜனங்கள் ஆதரிப்பதில்லை; மதிப்பதும் இல்லை; அன்றியும் பழிக்கவும் வெறுக்கவும் செய்கிறார்கள். ஆகவே பொதுஜன மதிப்பில்லாத இந்தப் பழியினாலும், வெறுப்பினாலும் நாத்திகர்களுக்கு என்ன விதமான சுயநலமோ, இலாபமோ, பெருமையோ இருக்க முடியும்?

'ஜாதிப் பிரஷ்டனாகவோ, பொதுஜன மதிப்பை இழக்கவோ பொருள் நஷ்ட மடையவோ, இழக்கப்படவோ நீ இஷ்டப்பட்டால் மாத்திரம் நாத்திகன் அல்லது சோஷியலிஸ்ட் எனப் பெயர் எடுப்பாயாக!' என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, இதில் ஒரு மனிதனுக்கு சுயநலம் இருக்குமா?

எனவே, நாத்திகத்தினால் ஒருவன் எத்தகைய இலாபமும் அடையமாட்டான்; நாத்திகன் எனப் பெயர் எடுப்பது ஒரு மனோகரமானதும் கீர்த்தி அளிப்பதுமான செயலும் அல்ல.

'வேத உண்மை'யை மறுப்பவர்களுக்கெல்லாம் நாத்திகப் பட்டம் சூட்டுவது, தன் நீங்காக் கடமையென ஆத்திகன் நம்புகிறான்.

கடவுளைக் காப்பாற்றுவதும், நாத்திகர்களைப் பழி வாங்குவதும் தன் கடமையென ஆத்திகன் கருதுகிறான். எல்லா மதக்காரர்களும் அவ்வாறே எண்ணுகிறார்கள்.

இந்தக் குரூர நம்பிக்கையினால் உண்டான போர்கள் எத்தனை! கடவுளைக் காப்பாற்றப் புறப்பட்டவர்களால் கொல்லப்பட்டவர்கள் எத்தனை! சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எத்தனை! இம்சிக்கப்பட்டவர்கள் எத்தனை!

இந்த 'மூடச் சாம்பிராணி'களின் பாதுகாப்பை விரும்புமாறு 'கடவுள்' அவ்வளவு பலவீனமானவரா? தன்னை எதிர்த்தவர்களைக் கொல்லவும் பழிவாங்கவும் இயலாது—கூலிகளை நியமிக்க வேண்டியவாறு அவர் அவ்வளவு சக்தியற்றவரா?

கடவுளைக் காப்பாற்ற ஆத்திரம் கொள்ளும் ஆத்திக நண்பனே! நாத்திகரிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும் நீ கொண்டுள்ள வெறுப்பு எவ்வளவு கொடுமையானது என்று நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உலக நாகரிகத்தின் உண்மைச் சரித்திரந்தான் யாது? அவிசுவாசிகளுடையவும், நாத்திகர்களுடையவும் வெற்றியே உலகத்தின் உண்மைச் சரித்திரமாகும். அவர்கள் பொய் நம்பிக்கைகளை மறுத்ததினாலேயே உண்மை வெளியாகி உலகம் நாகரிகம் பெற்று வருகிறது.

அக் காலத்தில் வாழ்ந்த ஆத்திகக் கொள்கை உடைய 'புண்ணிய சீலர்கள்' உண்மையை வெளியாக்கப் பாடுபட்ட அவிசுவாசிகளையும் நாத்திகர்களையும் நிந்தனை செய்தார்கள்; சித்திரவதை செய்தார்கள்; இம்சித்தார்கள்; கன்னெஞ்சத்தோடு கழுவேற்றினார்கள்; கொலை புரிந்தார்கள். அந்த ஆத்திகர்களின் சந்ததிகளோ கர்ண பரம்பரைச் செய்திகளை யெல்லாம் உண்மையென நம்பினார்கள். ஆனாலும், அவைகளைத் தைரியமாய் மறுத்துக்கூறி இறந்துவிட்ட 'அவிசுவாசிகளை' யெல்லாம் இப்பொழுது வாழ்த்துகிறார்கள். ஆனால், இப்பொழுது உண்மையை விளக்குவதற்குப் பாடுபட்டுக் கொண்டு உயிருடன் இருக்கும் 'அவிசுவாசிகளை'யெல்லாம் குற்றம் சொல்ல முயற்சிக் கிறார்கள்.

சூரியமண்டல உண்மைகளை முதன்முதலில் வெளியிட்ட கோபர்நிக்கஸ் சமுதாயப் பிரஷ்டரானார். இப்பொழுதோ பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். முன் நிந்திக்கப்பட்ட கோபர்நிக்கஸ் பெயரும் இப்பொழுது போற்றப் படுகிறது.

ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் ஒவ்வொரு சூரியனுக்கு ஒப்பானது என்று முதன்முதலில் கூறிய புரூனோ தீக்கிரையாக்கப்பட்டார்.

வானசாஸ்திர உண்மைகளை வெளியிட்டு, பாதிரிகளின் குருட்டு நம்பிக்கைகளை யொழித்த கலிலியோ சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார்.

இப்பொழுது அதே கிறிஸ்தவர்கள் கலிலியோ கூறியவைகள் எல்லாம் உண்மை யென்று ஒப்புக்கொள்கிறார்கள். அவரது பெயரும் இப்போது உலகத்தில் மதிப்புப் பெற்றிருக்கிறது.

இவ்வண்ணம் ஆராயப் புகுந்தால் அவிசுவாசிகள்—நாத்திகர்கள் என்பவர்கள் கூறியவைகளே உண்மையென்றும்; விசுவாசிகள்—ஆத்திகர்கள் என்பவர்கள் கூறுப வைகள் பொய்யென்றும் விளக்கப் பதினாயிரக் கணக்கான திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டலாம்.

இப்பொழுது நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாக வைதிகர்கள் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

காலம் செல்லச் செல்ல சாத்திர உண்மைகளை (சயின்ஸ்) ஆத்திகர்களும் வைதிகர் களும் ஒப்புக்கொண்டுதான் வருகிறார்கள்.

எனினும், 'உண்மை நம்பிக்கையுடையவர்கள்' அல்லது ஆத்திகர்கள், நாத்திகர் களை வெறுக்கிறார்கள்; நாத்திகர்களைத் தூற்றாமல் இருப்பதில்லை; தூற்றுவதைத் தம் முக்கிய கடமையென்றும் நம்புகிறார்கள்.

டார்வின் கொள்கைகளை நாத்திகக் கொள்கை, மூடக்கொள்கை என்று வெறுத் தவர்கள் இப்போது அந்தப் பரிணாம வாதத்தைச் சந்தோஷமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உண்மை ஆராய்ச்சியாளரை 200 வருஷங்களாகச் சித்திரவதை செய்தும், கொலை புரிந்தும் வந்த ஆத்திகன் இன்னும் திருப்தி அடையவில்லை.

மதப் புரட்டுகளையும், வேதப் புரட்டுகளையும், புராணப் புரட்டுகளையும் ஒழிக்க முன் வருகின்றவர்களை நாத்திகர்கள் என்று ஆத்திகன் இப்பொழுதும் கூறிக்கொண்டே தான் இருக்கிறான்.

உதாரணமாக, 'கிறிஸ்தவர் அல்லாத பெண்களும் புருஷர்களும் எரி நரகத்திலாழ்ந்து தவிப்பார்கள்' என்று கிறிஸ்தவர்கள் கூறுவது வழக்கமாக இருந்தது. அது மூட நம்பிக்கை என்று எடுத்துக் காட்டினால் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

'ஞான ஸ்நானம் பெறாத குழந்தைகள் எல்லாம் நரகம் புகுவார்கள்' என்று கிறிஸ்தவர்கள் நம்பி இருந்தார்கள். அது மூடநம்பிக்கை என்று கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

மந்திரவாதத்திலும் சூனியத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது. ஆயிரக் கணக்கான மந்திரவாதிகளையும், சூனியக்காரர்களையும் அவர்கள் நெருப்பில் இட்டுக் கொளுத்தினார்கள்.

இப்பொழுது மந்திரவாதத்தைப் பற்றிப் பேசினால் அதே கிறிஸ்தவர்களுக்கு வெறுப்புண்டாகிறது; மந்திரவாதிகளை அஞ்ஞானிகள் என்கிறார்கள்.

'ஆதாம்', 'ஏவாள்', 'பிரளயம்' முதலிய புராணக் கதைகளை அவர்கள் நம்பினார்கள். இப்பொழுதோ அவைகள் எல்லாம் உபமான கட்டுக்கதை என்றுகூற முன்வந்து விட்டார்கள்.

ஆறுநாட்களில் உலகம் உண்டுபண்ணப்பட்டதென்று அவர்கள் நம்பினார்கள். இப்பொழுது பூகர்ப்ப சாத்திரக் கொள்கைகளை மெல்ல மெல்ல ஒப்புக்கொள்கிறார்கள்.

ஓ! ஆத்திக நண்பர்களே! நாத்திகம் எனப்பட்டவைகளே இப்பொழுது 'வைதிகமாக' இருக்கின்றன என்று நீங்கள் உணரவில்லையா? நாத்திகன் என இம்சிக்கப் பட்டவர்கள் கூறியவைகள் எல்லாம் இப்பொழுது உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டுவிட வில்லையா? இன்று அவைகளைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாகப் பாதிரிகளாலேயே கற்பிக்கப்படவில்லையா?

தற்காலம் உண்மையென நம்பப்படுபவைகள் முன்னூறு வருடங்களுக்கு முன் யார் கூறியிருந்தாலும் அவர்கள் அப்பொழுது கொல்லப்பட்டே இருப்பார்கள் அல்லவா? எனினும், ஒரு நூற்றாண்டுக்குப் பின் உண்மையென ஒப்புக்கொள்ளப்படுபவைகளை முன்னாடியே கூறுவோரை நீ நாத்திகன் என்று அழைக்கிறாய்!

சரித்திரத்திலிருந்தும், விஞ்ஞான சாஸ்திரத்திலிருந்தும் நீ ஒரு படிப்பினையும் கற்றுக்கொண்டாயில்லை!

நேற்று நம்பத் தகாததாய் இருந்தது இன்று நம்பத் தக்கதாய்விட்டதை நீ உணர்கிறாயில்லை!

இன்று நம்பத் தகாததாய் இருப்பது நாளை நம்பத் தக்கதாவதும் நிச்சயம்.

சுதந்திரமாகச் சிந்தனை செய்து சுதந்திரமாகப் பேசிய 'அவிசுவாசிகளாலே'யே உலக நாகரிகம் உருப்பெற்று இருக்கிறது; உருப்பெற்றும் வருகிறது.

அவர்கள் உயிருடன் இருந்தபோது அவிசுவாசிகள் என்றும், நாத்திகர் என்றும் வெறுக்கப்பட்டனர். ஆனால், இப்பொழுதோ அவர்கள் எல்லாம் உலக நன்மைக்காக உழைத்த 'புண்ணியாத்மாக்களாக' மதிக்கப்படுகிறார்கள். இன்றைய நாத்திகர்களும் பெரிதும் அப்படித்தான் ஆனவர்கள்.

['குடிஅரசு'–கட்டுரை—23-7-1949]

7. பகுத்தறிவுக்குத் தடைகள்

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு ஜீவநாடி உயிர்நாடி ஆகும். ஜீவராசிகளில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இதில் மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள்.

பகுத்தறிவு பெறும்படியான சாதனம் நமக்கு நீண்டநாட்களாகவே தடைப்படுத்தப் பட்டு வந்துள்ளது. நம்மை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய பார்ப்பனர்கள் நாம்

பகுத்தறிவு அடையமுடியாமல் தடை செய்துகொண்டு வந்தார்கள். மக்களிடையே பகுத்தறிவைத் தடைப்படுத்த கடவுள், மதம், சாஸ்திரம் முதலியவைகளைப் புகுத்தி, அவைகளை மக்கள் நம்பும்படி செய்துவிட்டார்கள். கடவுள் என்றால் ஒத்துக்கொள்ளவேண்டும். எங்கே? ஏன்? எப்படி? என்று கேட்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள். இதைப்போலவே மதத்திற்கும்–என்ன? எப்படி? என்று சிந்திக்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள். இதைப் போலத்தான் சாஸ்திரமும்.

இதில் நாம் பகுத்தறிவு என்றால் என்ன என்பதற்கு விளக்கம் காண்கிறோம். பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக்கொண்டு தெளிவடைவது; மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக்கொள்வது என்பது பொருள். நமது இழிநிலை, நமது முட்டாள்தனம் மாறவேண்டுமானால் நாம் ஒன்றும் பெரிய கஷ்டப்பட்டு முயற்சி செய்யவேண்டியதில்லை. பகுத்தறிவு கொண்டு தாராளமாகச் சிந்தித்தால் போதும்.

நமது கொள்கை பகுத்தறிவு; பகுத்தறிவு என்றால் நாத்திகம் என்பது பொருள். அறிவுகொண்டு சிந்திப்பதுதான் நாத்திகம் ஆகும். கடவுள் மனதுக்கும், வாக்குக்கும் எட்டாதது என்று கூறப்பட்டாலும் அதுதான் உலகத்தை உண்டாக்கி நம்மை எல்லாம் நடத்துகின்றது; எல்லாவிதமான சர்வசக்திகளும் உடையது என்று கூறப்படுகிறது.

அப்படிப்பட்ட கடவுள் நம்மைத் தவிர்த்து மற்ற உலகுக்கு ஒன்றுதான். ஆனால் நமக்குத்தான் ஆயிரக்கணக்கில் கடவுள்கள்!

நம்மைத் தவிர்த்த மற்ற உலகிற்கு,—கடவுளுக்கு உருவம் இல்லை; நமது கடவுள்களுக்கோ பல்லாயிரக்கணக்கான உருவங்கள். மற்ற நாட்டுக் கடவுள்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை; நமது நாட்டுக் கடவுள்களுக்கோ மனிதனுக்கு வேண்டியது எல்லாமுமே வேண்டும். மற்ற நாட்டுக்காரர்கள் கடவுள்—யோக்கியம், நாணயம், ஒழுக்கம் உடையது என்று உண்டாக்கி இருக்கிறார்கள். நமது நாட்டுக் கடவுள்களுக்கோ இந்த ஒழுக்கம், நாணயம் எதுவும் கிடையாது. மனிதனில் கீழ்த்தரமானவனுக்கு என்னென்ன குணங்கள் இருக்குமோ அவைகள் அத்தனையும் கடவுளுக்கு ஏற்றிவிட்டிருக்கிறார்கள். இப்படி ஏராளமான பேதங்களையும் நடப்புக்கு ஒவ்வாத காரியங்களையும், காரியத்திற்குக் கேடான குணங்களையும் கடவுளுக்குக் கற்பித்திருக்கிறார்கள்.

இவைகளை எல்லாம் நம்புவதுதான் மூடநம்பிக்கை. நல்லவண்ணம் சிந்தித்து ஆராய்ந்து, ஏற்கவேண்டியதை ஏற்றுக்கொண்டு, மற்றதைத் தள்ளிவிடுவதுதான் பகுத்தறிவு.

நாம் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால், பகுத்தறிவுக்கு ஏற்ற கடவுள் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால், இல்லவே இல்லை; உண்மையில் ஒரு கடவுள் இருக்குமானால் நமக்குத் தெரியாமல் இருக்கவேண்டிய அவசியம் என்ன? அந்தக் கடவுள் தாம் இருப்பதாக நமக்காவது ஏன் தெரியப்படுத்தக்கூடாது?

ஆகவே, மக்கள் இவற்றை எல்லாம் அறிவுகொண்டு சிந்தித்தல் வேண்டும். அறிவு கொண்டு சிந்திப்பதுதான் பகுத்தறிவு. பகுத்தறிவுக்குத் தடையாக இருப்பதும், சிந்திக்கவொட்டாத நிலையை ஏற்படுத்தி வைப்பதும் கடவுள் பற்றிய மூடநம்பிக்கைதான் என்பதையும் இவற்றிற்கெல்லாம் முன்னோடிகளான பார்ப்பனர்களின் சதியையும் மக்கள் உணரவேண்டும்; சிந்திக்கவேண்டும்.

சிந்தனைதான் அறிவை வளர்க்கும்; அறிவுதான் மனித வாழ்வை உயர்த்தும்.

['விடுதலை'–தலையங்கம்—20-6-1973]

3. மனித வாழ்க்கை

1. மனிதராசி உயர்வானதா ?

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் தன்தன் சரீரத்தில் பற்றுக்கொண்டவைகளாகவே இருந்துவருகின்றன. அந்தச் சரீரப்பற்று என்பது, சரீரமானது ஜீவித்திருப்பதற்கு ஆதார மானது என்கின்ற தத்துவத்தினாலேயே ஏற்பட்டதாகும். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்காத ஜீவன் கிடையவே கிடையாது எனலாம். ஆனால், எல்லா ஜீவராசிகளும் என்றைக்காவது ஒருநாள் ஜீவிதப்பற்று அற்று செத்தேபோகும் என்பது மாத்திரம் அனுபவ சிந்தாந்தமாகும்.

உலகிலுள்ள மற்ற ஜீவராசிகளைப் போலவே மனித வர்க்கம் என்னும் ஜீவராசியும் ஒன்றாகும். ஒரு மனிதனும், ஒரு யானையும், ஒரு எறும்பும், ஒரு சிறு பேனும், பூதக் கண்ணாடி மூலம் பார்த்தறியத்தக்க அதிநுட்பமான ஒரு கிருமியும் எல்லாம் ஒரே தத்துவத்தைக்கொண்ட ஜீவராசிகளேயாகும்.

ஆனால், அவை தோற்றதிலும், செயலிலும் வேறுபட்டிருக்கலாம். 'அப்படியானால் மனிதனுக்கும் கழுதைக்கும் வித்தியாசமில்லையா?' என்று ஒருவர் கேட்கலாம். ஜீவ தத்துவத்தில் வித்தியாசமில்லை என்றுதான் பதில் சொல்லுவேன். ஏதாவது வித்தியாசம் உண்டு என்று சொல்லவேண்டுமானால், ஒரு நாய் ஜீவனுக்கும், ஒரு கழுதை ஜீவனுக்கும் என்னவிதமான வித்தியாசமோ அந்தவிதமான வித்தியாசம்தான் உண்டு என்று சொல்ல லாம். ஆனால், அவ்வித்தியாசம் அளவில் டிகிரியில் (Degree) ஜாஸ்தியாகவோ கம்மியா கவோ இருக்கலாம் என்றுதான் கொள்ளவேண்டும்.

இன்னும் பேசப்போனால், தாவர வர்க்கங்களும், ஜீவ வர்க்கங்களும்கூட தத்து வத்தில் அதாவது—உற்பத்தித் தத்துவத்திலும், வாழ்வுத் தத்துவத்திலும், அழிவுத் தத்து வத்திலும் ஒரே தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு இருந்துவருகின்றன என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

வித்தின் மூலம் எப்படி மரம், செடிகள், புல் பூண்டுகள், உற்பத்தியாகின்றனவோ அதுபோல ஆண்-பெண் சேர்க்கை விந்துமூலம் ஜீவப் பிராணிகள் உற்பத்தியாகின்றன. வித்தில்லாமல் எப்படி சில தாவர வர்க்கங்கள் உற்பத்தியாகின்றனவோ, அதுபோல்தான், ஆண்-பெண் சேர்க்கையில்லாமல் பல ஜீவ வர்க்கங்களும் உற்பத்தியாகின்றன.

தாவர வர்க்கங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருப்பது போலவே, ஜீவ வர்க்கத்தினிடமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமும், மாறுபட்ட சக்தியும் இருந்துவருகின்றது.

மனித ஜீவ வர்க்கத்திடமுள்ள சில குணங்கள் எப்படி மற்ற ஜீவராசிகளுக்கு இல்லையோ, அதுபோன்றே—மற்ற ஜீவராசிகளுக்கு உள்ள சில குணங்கள் மனித ஜீவ வர்க்கத்திற்கு இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு கழுதைக்கும் ஒரு குரங்குக்கும் உள்ள வித்தியாசத்தைக் கணக்குப் பார்த்து, ஒரு குரங்குக்கும் ஒரு மனித னுக்கும் உள்ள வித்தியாசத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், பின்கண்ட வித்தியா சத்தின் அளவு அதிகமாய்க் காணமுடியாது. ஆகவே, மனித ஜீவன், ஜீவப் பிராணிகளி லெல்லாம் மேலானதென்றும், தனிப்பட்டதென்றும், அதற்கு மாத்திரமே சில தனித் தத்துவங் களுண்டு என்றும், கருமம், மதம், மேல் லோக வாழ்வு, கடவுள், கடவுள் தண்டனை, மன்னிப்பு, சன்மானம் ஆகியவை சொந்தமென்றும், மனிதனுக்கே சில தத்துவங்கள்— கடமைகள், பிரார்த்தனைகள் முதலியவை உண்டென்றும் சொல்லுவதில் ஏதாவது அர்த்த மிருக்க இடமுண்டா என்று பார்த்தால், இவை வெறும் கற்பனைகளென்றே விளங்கும். மற்றும், கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்கும் சம்பந்தமும், பொறுப்பும் மற்ற ஜீவராசி

களுக்கு இல்லை என்று சொல்லமுடியுமா என்பதும் விளங்கும். அதுபோலவே, பாவமும் புண்ணியமும், சொர்க்கமும், கடவுள் பதத்தை அடையக்கூடிய தன்மையும் மற்ற ஜீவ ராசி களுக்கு இல்லையென்று சொல்லமுடியுமா என்பதும் விளங்கும்.

ஒரு பூச்சியின் செய்கைக்குப் பாவம், புண்ணியம் உண்டானால்தான் ஒரு மனித னின் செய்கைக்குப் பாவம், புண்ணியம் உண்டாக முடியும். மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் தனிப்பட்ட காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக் குள்ள தும்பிக்கை, ஒரு நாரைக்குள்ள நீண்ட மூக்கு, ஒரு முள்ளம்பன்றிக்கு இருக்கும் செதில் முட்கள், தேளுக்குள்ள கொடுக்கு, பாம்புக்குள்ள விஷம் போன்றவைக ளெல்லாம் கடவுளால் தனிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டவை என்றுதானே சொல்லவேண்டும்? ஆதலால், ஒரு யானைக்குத் தும்பிக்கை விசேஷ உறுப்பாகவும் நீண்ட அவயவமாகவும் இருப்பதுபோலவே, மனிதனுக்குப் பகுத்தறிவுக்குள்ள நரம்புக்கூட்டும் மூளையின் பரிமாண—அதாவது அதிக சிந்தனா சக்திக்குள்ள உறுப்புக்கள் என்பவை விசேஷ உறுப்பாகவோ விசேஷ சக்தியாகவோ இருக்கின்றதென்பதே யல்லாமல், அதற்கு மாத்திரம் ஒரு தனி விசேஷத்துவம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

உதாரணமாக, ஜீவப் பிராணிகளுடைய இந்திரியங்களின் விசேஷத்தை எடுத்துக் கொள்வோமானால் ஒரு எறும்புக்கு இருக்கும் மூக்கு மோப்ப சக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக, சர்க்கரையோ, பிஸ்கோத்தோ, ஒரு பெட்டிக்குள் இருக்கு மானால் அதை மனிதனால் மோப்பத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், ஒரு சிறு எறும்பு கண்டுபிடித்துவிடும். அதுபோலவே, பட்சிகளின் (கண்)பார்வை சக்தி ஒரு மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக, சமீப தூரத்தில் இருந்தும் மனிதனுக்குத் தென்படாத ஒரு வஸ்துவானது, பூமிக்குமேல் ஒரு மைல், இரண்டு மைல் உயரத்தில் பறக்கும் பட்சியின் மிகச் சிறிய கண்களுக்குத் தென்பட்டு, அப் பட்சியால் அது தூக்கிச் செல்லப்படுகின்றது. மீனுக்கு இருக்கும் நீந்தும் சக்தி மனிதனுக்கு இல்லை. உடும்புக்கு இருக்கும் பிடித்துக்கொள்ளும் அவயவ சக்தி மனிதனுக்கு இல்லை. இது போலவேதான், ஒரு விஷயத்தில் மனிதனுக்குள்ள மூளை அவயவத்தின் சக்தி மற்ற ஜந்துக்களுக்கு இல்லையென்று சொல்லவேண்டும். இந்த வித்தியாசங்களெல்லாம் அமைப்பில் ஜீவனுக்கு ஜீவன் மாறுபட்டிருப்பது போன்ற ஒரு வித்தியாசமே தவிர, மனிதனுக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு தனித் தத்துவ உயர் குணம் என்று சொல்லிவிடமுடியாது.

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு மாத்திரந்தான் உண்டு. அது தனிக் காரியத் திற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுமானால், பகுத்தறிவு இருக் கின்றது என்கிற காரணத்திற்காக மனிதன் எந்த விதத்தில் மேலான நிலையில் உள்ளவனாய் இருக்கிறான் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மற்ற பகுத்தறி வில்லாத ஜீவனுக்கு உள்ள என்ன குறைகள், பகுத்தறிவுள்ள மனிதனிடம் இல்லாமல் இருக்கிறதைக் காண்கின்றோம்?

ஆகாரம், நித்திரை, ஆண்-பெண் சேர்க்கை ஆகிய தேவைகளில் மற்ற ஜீவன் களிடமுள்ள தேவைகளே மனிதனிடமும் காணப்படுகின்றன. இன்னும் பேசப்போனால் மற்ற ஜீவன்களைவிட அதிகமாகவும் காணப்படுகின்றன. ஆசை என்கிற ஒரு கெட்ட குணம் மற்ற ஜீவன்களைவிட மனித ஜீவனிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. அதிருப்தி என்கிற கெட்ட குணம் மனிதனிடமே அதிகமாய் இருக்கின்றது. கவலை என்கின்ற கெட்ட குணமும் மனிதனுக்கே அதிகமாய் உண்டு. தன் இனத்தை அடிமைப்படுத்தி அதைக் கொடுமைப்படுத்தி வாழும் கெட்ட குணம் மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. மற்ற ஜீவன்களுக்கு உள்ளது போன்ற வஞ்சகம், ஏமாற்றம் முதலிய குணங்கள் மனிதனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றன. தனக்குத் தெரியாத தையும், புரியாததையும் பற்றி நம்புதல், பேசுதல், நம்பச் செய்தல் முதலிய 'மூடத்தன்மை

குணம்' மனித ஜீவனிடத்திலேயே அதிகமாய் இருந்து வருகின்றது. நம்பிக்கைக்கும், நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லாத குணம் மனித ஜீவனிடமே இருந்து வருகின்றது. ஒரே விஷயத்தை இரண்டுவிதமாய் நம்பும் சுயபுத்தியற்ற தன்மையும் மனிதனிடமே இருந்து வருகின்றது.

இதுபோன்ற எத்தனையோ 'கெட்ட' குணங்கள் மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடையதாயிருக்கின்றது. ஆகையால் பகுத்தறிவின் 'மேன்மையால்' மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும் என்பதே நமது கேள்வியாகும். மேலும், மேற்கண்ட காரணங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் மனித ஜீவன்களில் பெரும்பான்மையானவை, மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத் தன்மையுடையவை என்பதும் நமது அபிப்பிராயமாகும். சாதியின் பேரால் உயர்வு-தாழ்வு, மதத்தின் பேரால் வேற்றுமை உணர்ச்சி, தேசத்தின் பேரால் குரோதத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும், கடவுளின் பேரால் மேல்-கீழ்நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனித ஜீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட-தீய-இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற 'பகுத்தறிவில்லா' ஜீவராசிகளைவிட மனித ஜீவன் மூளை விசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்காகப் பிரயோகித்துக் கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அதில்லாத நிலையில், எவ்விதத்திலும் மனித ஜீவன் மற்ற ஜீவப் பிராணிகளைவிட உயர்ந்ததல்ல என்பதோடு—பல விதத்திலும் தாழ்ந்தது என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.

['குடிஅரசு'-கட்டுரை—3-9-1933]

2. எப்படிப்பட்ட மனிதன் உயர்ந்தவன்?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

பணத்தால் ஒரு மனிதனை மதிப்பதென்றால்—ரிசர்வ் பேங்கைத்தான் மதிக்க வேண்டும். படிப்பால் ஒரு மனிதனை மதிப்பதென்றால்—பெரிய 'லைப்ரெரி'யைத்தான் மதிக்கவேண்டும். அறிவால் ஒருவனை மதிக்கவேண்டுமானால்—'என்சைக்கிளோபீடியா', 'ரேடியோ' ஆகியவற்றை மதிக்கவேண்டும். இப்படியாக அனேகவற்றை, ஜீவனில்லா தவைகளிலும் காணலாம். ஆதலால், நாம் மனிதனை மதிப்பது, பேசுவது, நினைவுறுவது என்பவையெல்லாம் இவைகளை உத்தேசித்தல்ல.

உலகிலுள்ள எல்லா ஜீவப் பிராணிகளுக்கும்—மனிதர்கள் என்பவர்கள் உட்பட உருவத்தில் பேதம் இருந்தாலும், குணத்தில் பேதம் இருந்தாலும் நடப்பும் பயனும் அனேகமாய் ஒன்றுதான்.

ஜீவன் என்றால் பிறத்தல், தன் நலனுக்காக வாழ்தல், இனத்தைப் பெருக்குதல், இறத்தல் ஆகியவைகளைக் கொண்டதேயாகும். இந்தத் தத்துவங்களைப் பார்த்தால் செத்த மனிதர்களும், இருக்கும் மனிதர்களும் 'முக்காலே மூன்று வீசம் முக்காணி அரைக்காணி' பேரும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை உடையவர்களும், மேற்கண்ட குணங்களை யுடைய ஜீவப் பிராணி என்பதில் சேர்ந்தவர்களாகாமல்—அவைகளினின்றும் உயர்ந்தவர் களாகக் கருதப்பட வேண்டிய மனிதத் தன்மை உடையவர்களாக இருக்க நியாயம் எங்கே இருக்கிறது?

ஜீவன் என்றால் சுய உணர்ச்சி என்றுதான் கருத்து. சுய உணர்ச்சி என்பது தன்னைப்பற்றிய, தன் வாழ்வைப்பற்றிய, தன் பாதுகாப்பைப் பற்றிய உணர்ச்சி என்பதாகத்தான் முடியும். இத் தன்மையை உடையவர்களை ஜீவப் பிராணிகளில் நத்தை,

சங்கு, ஈ, எறும்பு, பாம்பு, தேள், குயில், கழுகு, புலி, சிறுத்தை, குதிரை, யானை, ஆடு, மாடு, குரங்கு, மனிதன் என்பதாக—மனிதனை மற்றவைகளோடு சேர்த்துச் சொல்லு வதற்கு அல்லாத தனிக் குணம் வேறு என்ன பெரும்பாலான மனிதர்களிடம் இருக்கிறது என்று கருதிப் பாருங்கள்.

மனிதனுக்கு ஆறு அறிவு இருக்கிறது என்று சொல்லுவது மனிதனை ஜீவப் பிராணி களிடமிருந்து பிரிப்பதற்குப் போதுமான காரணமாகாது. சிந்திக்கிற குணம் எல்லா ஜீவப் பிராணிகளிடமும் இருக்கிறது. 'ஜீவத் தன்மை' எந்தெந்த ஜீவனுக்கு இருக்கிறதோ அவற்றிற்கெல்லாம் சிந்திக்கும் தன்மை உண்டு. ஆனால், அதில் அளவு வித்தியாசம் இருக்கிறது உண்மை. அதனால் எதுவும் வேறுபட்ட உயர்ந்த ஜீவனாக ஆகிவிடாது. அதன் பலனாலும் ஏதும் உயர்ந்ததாக ஆகிவிடாது.

தேன் ஈக்களால், மக்கள் தேன் சாப்பிடுகிறார்கள். மாடுகளால், மக்கள் பால் சாப்பிடு கிறார்கள். ஆடு, கோழிகளால்—மக்கள் ஆகாரம் அடைகிறார்கள், நாய்களால் காக்கப் படுகிறார்கள்; கழுதை, குதிரை முதலியவற்றால் பொதி சுமக்க வைத்தும் சவாரி செய்தும் பயனடைகிறார்கள். இப்படி எத்தனையோ ஜீவன்களால் எத்தனையோ பலன் அடைகி றார்கள். இவற்றால் இவை உயர்ந்த ஜீவனாகக் கருதப்படுகின்றனவா? இல்லை. அப்படித்தான், மனித ஜீவனும், பல வழிகளில் பல காரணங்களால், வேறுபட்ட தன்மை களால் ஒரு ஜீவனிடமிருந்து பிரிந்து காணப்படலாமே ஒழிய உயர்ந்த ஜீவனாகிவிட மாட்டான்.

மற்றபடி, எதனால் மனிதன் மற்ற ஜீவப் பிராணிகளுடன் சேராத உயர்ந்தவ னாகலாம் என்று கேட்கப்படலாம். அதைச் சொல்லத்தான் இவ்வளவும் சொன்னேன்.

ஜீவசுபாவ உணர்ச்சியான—தன்மை உணர்ச்சியும் தன்னல உணர்ச்சியும் உள்ள மனிதன் இவற்றை (தன்னலத்தை) அலட்சியம் செய்து—அதாவது தன்னைப் பற்றிய கவலையும் தனது நலத்தையும், தன் மேன்மைபற்றிய கவலையும், தனது மேல்வாழ்வின் தன்மை என்பதையும் அடியோடு மறந்து, மனித சமுதாய வாழ்வின் மேன்மைக்காகப் பணியாற்றவே மற்ற மனித ஜீவன்களுக்கு இருக்க முடியாத வசதி என்னும் தன்மை, தொண்டாற்றும் சக்தி ஆகியவை இருக்கின்றன என்று கருதி—தன்னலத்தையும் தன் மானாபிமானத்தையும் விட்டு, எவன் ஒருவன் தொண்டாற்றும் பணியை வாழ்வாகக் கொண்டிருக்கிறானோ, அவன்தான் மற்ற ஜீவப் பிராணிகளிடமிருந்து வேறுபட்ட மனிதத் தன்மை கொண்ட மனிதனாவான். மனித உரு ஜீவப்பிராணி என்பதில் எந்த மனிதனை மதிப்பதானாலும், நினைவு நாள் கொண்டாடுவதானாலும் இந்தக் குணத்திற்காகத்தான் இருக்கலாமே ஒழிய வேறொன்றுக்கும் ஆக இருக்கமுடியாது.

[திருச்சி, தஞ்சை, கும்பகோணம் ஆகிய இடங்களில் 1945 மார்ச், ஏப்ரல் மாதங்களில்
சொற்பொழிவு—'குடி அரசு' 14-4-1945]

ஒரு மனிதனுக்கு அவனது மலமும் மூத்திரமும் உயர்ந்த நறுமணமுள்ளவையாக இருந்தாலும், அதனால் மனிதன் மேன்மையானவனாகவோ, மதிக்கத் தகுந்தவனாகவோ ஆகிவிட மாட்டான். சிற்சில புல் பூண்டுகளுக்கு நறுமணம் உண்டு. சில ஜந்துக்களின் மலங்களுக்கு நறுமணமுண்டு. அவற்றை நாம் மதிக்கிறோமா? போற்றுகிறோமா?

அரசர்களை மதிக்கிறோமா? பெரிய மனிதர்களை, ஆழ்வார்களை மதிக்கிறோமா? அல்லது, தெய்வங்கள் என்பவர்களையாவது மதிக்கிறோமா? மகான்கள் அல்லது ஆச்சாரி யார்களை—மடாதிபதிகளை மதிக்கிறோமா? இவர்களையெல்லாம் அவரவர்களிடத்தில் சம்பந்தமும் தனிப்பட்ட நலமும் பெறுகிறவர்கள்தாம் மதிப்பார்கள்; மற்றவர்கள் ஏன் மதிப்பார்கள்? ஏன் என்றால், வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பவனை யார் எதற்காக மதிப்பார்கள்?

ஓட்டல்காரன்—அன்னதானப் பிரபு ஆவானா? சம்பள உபாத்தியாயர்—குருநாதனாவானா? தாசி—காதலியாவாளா? என்பதுபோல்தான் தன்தன் நலனுக்கு, தன்தன் பொறுப்புக்கு ஆகக் காரியம் செய்யும் எவனுடைய காரியம்—எப்படிப்பட்டதாயினும் அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக்கூடியதாகாது. அப்படியில்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள்—அதாவது தன்னைப் பற்றிய கவலையில்லாமல், பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்துக்கொண்டு தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத் தொண்டரால் பாதகமடையும் தனிப்பட்டவர்கள்—தனிப்பட்ட வகுப்புகள், கும்பல்கள் அவனை மதிக்காமல் இருக்கலாம்; அவமதிக்கலாம். அது, பொதுவாக மதிக்காததாகாது.

['விடுதலை'—கட்டுரை—8-4-1950]

3. மனித வாழ்க்கை இலட்சியமற்றது

பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

என்னைப் பொறுத்தவரை நான் கூறுவேனாகில், மனிதப் பிறவியானது ஒரு இலட்சியமற்ற பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான்; பற்பல எண்ணங்களை எண்ணுகிறான்; பல வகைகளை இச்சிக்கிறான்; எவ்வளவோ காரியங்களில் விருப்பம்கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான். ஒரு சிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது; மற்றவைகளில் ஏமாற்றம் அடைகிறான்; இறுதியில் செத்துப்போகிறான். மனிதன் பிறந்ததுமுதல் செத்துப்போகும்வரை இடையில் நடைபெறுகிறவைகள் எல்லாம் அவனின் சுற்றுச்சார்பு, பழக்கவழக்கம் இவைகளைப் பொறுத்து நடக்கின்றன. எனவே, மனித வாழ்வு இலட்சியமற்ற வாழ்வு என்பது என் கருத்து. இதை அனேக அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். மேலும், இக் கருத்து யாராலும் மறுக்க முடியாததும் ஆகும்.

பிறப்பும் இறப்பும் இயற்கையே. மனிதன் ஏன் பிறக்கிறான் என்று யாராவது கூறமுடியுமா? பிறந்து எதற்காக வாழ்கிறான், எதற்காக இறந்துபோகிறான்—என்று யார் கூறமுடியும்? இதைக் கேட்டால், 'அது கடவுள் செயல்; கடவுள் பிறப்பிக்கிறார்; காப்பாற்றுகிறார்; சாகடிக்கிறார்' என்றுதான் கூறமுடியுமே தவிர, வேறு சரியான காரணம் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது பிள்ளை வேண்டுமென்று பிள்ளையைப் பெறுகிறான் என்றால்—எதற்காகப் பிள்ளை வேண்டும் என்பதைக் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது தனக்குப் பிள்ளை வேண்டும் என்று முயற்சிக்கிறான் என்று அவனைக் கேட்டால்கூடத் தெரியாது. குழந்தையை அடைந்ததும் அதை ஏன் காப்பாற்றவேண்டும், அதற்கு ஏன் கல்வி புகட்டவேண்டும்—என்ற இலட்சியத்தைக் கூறமுடியாது. ஏதோ, தம் பிள்ளை படிக்கவேண்டும் என்பார்களே தவிர, எதற்காகக் கல்வி கற்கவேண்டும் என்றே தெரியாது. எல்லோரும் படிப்பதற்கு விரும்புகிறார்கள். அவரவர்கள் தங்கள் மக்களைப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்க வைக்கிறார்கள். அந்தப் பெற்றோர்களுக்கே தமது மக்கள் ஏன் படிக்கவேண்டும் என்பதற்குச் சரியான பதில் கூறமுடியாது. படிக்கும் பிள்ளையோ நாம் எதற்காகப் படிக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே படிக்கிறான். அவனை, 'நீ ஏன் படிக்கிறாய்?' என்று கேட்டால் அவனுக்கே பதில் கூறமுடியாது. அப்படி எதாவது பெற்றோர்களோ அல்லது பையன்களோ கூறுவார்களேயானால் 'படிப்பது பணம் சம்பாதிக்க' என்று கூறுவார்கள். படிப்பானது பொருள் திரட்ட வழிதேடுவதற்கு என்பதாகமட்டும் கூறுவர்.

ஆனால், அந்தப் பணம் எதற்காக என்றால், அதுவும் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது சேர்க்கப்படுவதில்லை. ஏதோ செல்வத்தை மென்மேலும் சம்பாதித்து அதைச் சேர்த்து வைத்துக்கொண்டே போகவேண்டும். அதற்கு அளவே கிடையாது. நாளுக்குநாள் மென் மேலும் சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போகவேண்டும் என்ற ஆசைமட்டும் உண்டே தவிர, அது எந்த அளவுக்குப்போய் நின்றால் போதும் என்ற அளவே கிடையாது. இப்படிச் சொத்துச் சேர்ப்பது என்பதும் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீதோ, குறிப்பிட்ட எல்லையின்மீதோ சேர்ப்பதில்லை. ஆசைக்கும் எல்லையில்லையே! படித்துப் பாஸ்செய்த பின் வேலைக்குத் திண்டாட்டம். வேலை ஏதாவது கிடைத்துவிட்டால், அந்த வேலை கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிய வேலையாக வரவேண்டும்; மென்மேலும் பிரமோஷன் கிடைத்துக்கொண்டே போகவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அந்த வேலை கிடைத் தாலும் அதில் திருப்தி கிடையாது. அதற்கும் மேலான ஸ்தானத்தைத் தாவிப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. அதையும் தாவிக் குதித்து எப்படியோ பிடித்து விட்டால், அடுத்தபடியாக மேலே உள்ள உத்தியோகம் வேண்டும். அதற்காகப் பலவழி களிலும் முயற்சிக்க ஆரம்பிக்கிறான். இப்படியே ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தின்மீதுதான் உத்தியோகம் அடைதல் என்பது இல்லாமல் போய்விடுகிறது. இவ்விதமே—எல்லாம் ஒரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் இருக்கின்றன.

வாழ்க்கை என்ற ஏணியின் அடிப்படையில் கால்வைக்கும்பொழுது நாம் எங்கே ஏறுகிறோம், கடைசியாக எங்கே போவோம் என அறியக்கூடவில்லை. நாம் ஏறிமுடித்தால் போதும் என்பதைக் கொண்டிராமல், ஒவ்வொரு படியாக ஏறிக்கொண்டே போகவேண்டும்; அதற்குமேல் என்ன தெரிகிறதோ அதைப் பிடிக்கவேண்டும்; அதைப் பிடித்தவுடன் அதற்குமேலே என்ன தெரிகிறதோ அதைப் பிடிக்கவேண்டும்—என்று எல்லையே இல்லாமல் இலட்சியமற்ற முயற்சியிலேயே காலத்தைக் கடத்துகிறோம். இறுதியில் காலம் முடி வடைந்து இறந்து போகிறோம். இப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் ஒருவிதப் பலனும் கிடையாது. சமுதாயத்துக்குப் பயன்தரும் வாழ்க்கையே சிறந்த இலட்சியம். மனிதன் பிறந்து இறக்கும்வரை இடையில் உள்ள காலத்தில் ஏதாவது பயனுள்ள காரியம் செய்ய வேண்டும். அவன் வாழ்க்கை மற்றவர்களின் நலனுக்கும், சமுதாயத்தின் சுகத்திற்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும். ஒருவன் வாழ்வதென்பது அவனுடைய வாழ்க்கையால் பிறர் நன்மையடைந்தார்கள்; மற்றவர்கள் சுகம் கண்டார்கள் என்று அமையவேண்டும். இதுதான் முக்கியமானதாகும். இதுவே அவசியமும் பொருத்தமும் ஆனதுமன்றி மனித வாழ்க்கை என்பதன் தகுதியான இலட்சியம் இது என்றும் கூறலாம். ஆனால், நாம் இதை யாரிடமும் காண்பது கிடையாது. கண்டுபிடிப்பதென்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரைக் காண்பதே மிகக் கஷ்டமான காரியமாகும். நாம் மட்டும் வாழ்ந்தால் போதாது; நமது சமுதாயமும் வாழவேண்டும்; மற்றவர்களின் பிள்ளைகளும் வாழவேண்டும். நம் பிள்ளைகள் மட்டும் சுகம் அடைந்தால் போதாது; ஏனையவர்களின் வாழ்வு சுகம் அடைய வேண்டும். இதற்கு ஏதாவது நம்மால் ஆனமட்டிலும், நம் வாழ்க்கை அவர்களின் நன்மைக்கு அமையும் முறையில் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. இந்த வேலையைச் செய்பவர்கள் மிகக் குறைவு; காண்பதும் அரிது.

[திருச்சி, பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 17-3-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 21-3-1956]

4. பொதுநலம்

1. சுயநலம்–பிறநலம்

சுயநலத்துக்கு அறிவே தேவை இல்லை. உணவுக்கு அலைவதும், உயிரைக் காப்பதும் எந்த ஜீவனுக்கும் இயற்கை.

ஒவ்வொரு ஜீவனிடத்திலும் சில அருமையான, அற்புதமான குணங்கள் உண்டு என்றாலும் அவையெல்லாம் அந்தந்த ஜீவனின் சுயநலத்துக்கேதான் பயன்படுகின்றன.

மனித ஜீவன் என்பது மற்ற ஜீவப் பிராணிகளை விட அறிவில் பெரும் பேதம் உடையதாகும்; அதாவது, பகுத்தறிவு உடைய ஜீவன் என்று சொல்லப்படுவதாகும். என்றாலும்—அதாவது மனித ஜீவன் பகுத்தறிவுடையது ஆனாலும், அதுவும் கூட சுய நலத்தையும், புகழையும், தன் உயிர் வாழ்வையுமே முக்கியமாய்க் கொண்டதாகும்.

மனிதன் தன் சுயநலம் என்பது மாத்திரமல்லாமல் தன் தாய், தகப்பன், பெண்டு, பிள்ளை முதலிய மனித ஜீவன்களின் நலத்தைப்பற்றியும் கவலை கொள்ளுகிறான் என்றால், அதுவும் பெரிதும் சுயநலத்தை உத்தேசித்தே ஆகும். மனிதன் தான் பயன் படுத்தும் மாடு கன்றுகளின் நலத்தை எதற்காகக் கவனிக்கிறான்? தன் மனைவியை எதற்காக அழகுபடுத்துகிறான்? தனது நாய்க்கு எதற்காக நல்ல போஷணை கொடுக் கிறான்? எதற்காகத் தான் குடியிருக்கும் வீட்டைப் பாதுகாக்கிறான்? எதற்காகத் தனது பணத்தை, பொருளை, பத்திரப்படுத்திப் பெருக்குகிறான்? ஓட்டல்காரன் எதற்காக வாடிக்கைக்காரர்களுக்கு நல்ல சாப்பாடு போடுகிறான்? பத்திரிகைக்காரன் எதற்காக நல்ல, அதிசய, புதிய செய்திகளைக் கண்டுபிடித்துப் பிரசுரிக்கிறான்? வைத்தியர்கள் எதற்காகத் தன்னிடம் வரும் நோயாளிகளையெல்லாம் சவுக்கியப்படுத்த வேண்டுமென்று கவலைப்படு கிறார்கள்? வக்கீல்கள் தங்களிடம் வரும் கட்சிக்காரர்களுக்கு அனுகூலம் ஏற்பட வேண்டு மென்று பலவழிகளிலும் பாடுபடுவது எதற்கு? எதற்காகத் தாசிகள் தங்களிடம் வருபவர் களுக்கு எல்லாம் தங்களுக்குக் காமம் இல்லாவிட்டாலும் மேல் விழுந்து இன்பமளிக் கிறார்கள்? இவர்கள் எல்லோரும் பிறர் நலத்தைப் பேணுவதாக நமக்குக் காணப் பட்டாலும், அவற்றின் பயனாய் சுயநலம் அடைவதற்கேயாகும் என்பதில் அய்யமுண்டோ? இது தெளிவாய்த் தெரிகிறதல்லவா? ஆதலால், ஜீவனின் சுபாவமே சுயநலந்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

சாதாரணமாக, எவ்வளவு பகுத்தறிவு உள்ள மனிதனாக இருந்தாலும் அவன் அறிவின் பிரயோகம் எல்லாம் தன் நலத்துக்காகத்தானே ஒழிய, மற்றபடி அதில் எவ்விதத் தனிப் 'பிறநலம்' என்பது இருக்கவே மாட்டாது.

ஆனால், ஏதோ தனிப்பட்ட மக்களிடம் 'பிறநலம்' என்பதைத் தவிர வேறு ஒன்றும் காணமுடியாமல் இருக்கலாம். அல்லது, சுயநலத்தைவிட அதிகமான பிறநலம் இருப் பதைக் காணலாம். இது இப்படி இருப்பது நமக்கும் பிறநலமாகக் காணப்படலாமே ஒழிய உண்மையில் அது அப்படி நடப்பவருக்குச் சுயநலமாகவே இருக்கும். எப்படியெனில், அவன் பிற நலத்துக்காக உழைப்பதும், தொல்லைப்படுவதும், அல்லற்படுவதும் அவனுடைய சுயநலத்துக்காகவே முடிவுறும். அந்த இரகசியம் அவனுக்குத்தான் தெரியும்.

சுயநலம் என்பது பணம் சேர்ப்பது, உயர்வாழ்வு வாழ்வது, பிரபலமடைவது ஆகியவை மாத்திரமே அல்ல. இவையெல்லாம்—இவற்றிற்கு எதிரானதும் மாறுபட்டதும் கூட சுயநலமாகும்.

மனிதனுக்கு நலம் என்பவற்றுள் எல்லாம் தலைசிறந்த நலம் அவன் மனத் திருப்தியே யாகும். அவனுடைய மனத்திற்குப் பூரண திருப்தி அளிக்கக்கூடியது எதுவோ அதுதான் அவனுக்கு (சுய) நலமாகும்.

பிற நலத்துக்காகச் செய்யப்படும் காரியம் என்பது, செய்பவனுடைய மனத்துக்கு நல்ல திருப்தியை அளிக்கக்கூடுமானால், அவனுடைய ஆசை நிறைவேறுமானால் அது சுயநலத்தின் தன்மையேயாகும். ஒரு மனிதன் அவனுடைய ஆசை நிறைவேற அவனது மனம், வாக்கு, காயங்களால் பாடுபடுவது சுயநலம். அதில் அதிக சுயநலம்; சிறிது சுயநலம் என்று இருந்தாலும் பேராசை, சாதாரண ஆசை, மித ஆசை, நிராசை என்று இருந்தாலும் அவைகளுக்கு மூலம் அல்லது காரணம் மனத் திருப்தியே ஆகும்.

ஒரு மனிதன் ஒரு தெருவில் நடக்கிறான். அத் தெருவின் ஓரத்தில் ஒரு அழிந்த வேலிக்குள் பூஞ்செடியில் 6 அங்குல சுற்று வட்டமும் பல இதழ்களும் கொண்ட ஒரு ரோஜா மலர் இருக்கிறது. 'அது அவனுக்கு அதிசயமும் அழகும் கொண்ட காட்சியாகக் காணப்படுகிறது.

அந்த மனிதன் அதைப் பறித்துக்கொண்டு போனால் யாரும் கேட்கமாட்டார்கள்; யாரும் அங்கு இல்லை. பறித்துக்கொண்டு போய்த் தன் காதலிக்குக் கொடுத்து மகிழலாம். ஆனால், அவன் நினைக்கிறான்: ‘இதைப் பறித்துக்கொண்டு போனால் நானும் காதலியுந் தானே மகிழ்வோம்? இந்தச் செடியிலேயே இதை அப்படியே விட்டுவிட்டு, இதை வேறு யாரும் பறிக்க முடியாதபடி வேலியையும் செப்பனிட்டு விட்டுப் போய்விட்டால், இந்தத் தெருவில் நடக்கும் பதினாயிரக்கணக்கான மக்கள் இதைக் கண்டு மகிழ்வார்கள் அல்லவா?' என்று கருதி அப் பூவைப் பறிக்காமல், வேலியை நன்றாய் அடைத்துவிட்டுப் போய் விடுகிறான். இதில் அவன் இவ்வளவு கஷ்டப்பட்டு வேலியை அடைத்துவிட்டு வெறுங் கையுடன் சென்றதானது, பல பேர் அப் பூவைக் கண்டு மகிழ்வதைக் கண்டு அவன் இன்பம் அனுபவிப்பதானது, சுயநலம் அனுபவித்ததாகிவிடவில்லையா? ஒரு மனிதன் பசியால் கஷ்டப்படுகிறான். அவனுக்குத் தனது—அதாவது, தனக்குப் போதுமானதாக மாத்திரம் இருக்கும் உணவில் பகுதி கொடுத்துப் பசியாற்றிவிட்டுத் தான் சிறிது பசிக் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தாலும், ‘ஒரு மனிதனின் பசியை ஆற்றினோம்' என்று ஒரு இன்பத்தை அடைவதில் திருப்தி அடைகிறான். இதில் சுயநலம் இல்லையா?

ஒரு மனிதன் இரயிலில் போகும்போது, கதவை மற்றொருவன் மூடும்போது பக்கத்தில் இருந்த வேறு ஒருவனின் விரல்கள் அதில் சிக்கி நசுங்கி விடுகின்றன. இவன் அதைப் பார்த்து மனம் பதறி, வேதனை அடைந்து, அவன் பக்கத்திற்குச் சென்று தனது நல்லதொரு வேட்டியை—மற்றவர்கள் துணி கொடுப்பதற்குள்—கிழித்து விரலுக்குச் சுற்றி, தான் குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீரையெல்லாம் ஊற்றி நனைத்துக் கட்டி விடுகிறான். இவன் யார் என்று அவனுக்குத் தெரியாது, அவன் யாரென்று இவனுக்குத் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் இவன்—அதாவது வேட்டியைக் கிழித்துக் கட்டியவன் பயணம் சொல்லிக் கொள்ளாமல் இறங்கித் தான் போகவேண்டிய இடத்திற்குப் போய்விடுகிறான். போனவுடன் வேட்டியைப் பார்க்கும்போதெல்லாம் அது பயன்பட்ட நல்ல காரியத்தை நினைத்து மகிழ்ச்சி அடைகிறான். இதில் சுயநலம் இல்லையா?

இன்பமடைவது, மனத் திருப்தி அடைவது, இயற்கை உணர்ச்சிகள் சக்தி அடைவது, பழிவாங்குவது, எதிரியைத் தண்டிப்பது மூலம் திருப்தி அடைவது முதலியவை எல்லாம் சுயநலமேயாகும்.

மனிதன் தன்னலம் அல்லாத காரியத்தை மேல் விழுந்து செய்து திருப்தி அடைகிறான். திருட்டு என்பது கெட்ட காரியமாகும். இதனால் பணம், பொருள் கிடைக்கிறது. அதனால் திருடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், எந்த விதத்திலும் இலாபம் இல்லாத காரியமாகிய தாசி வீட்டிற்குச் செல்லுகிறான்; அதற்குப் பணம் செலவழிக்கிறான்; குடும்பத்திற்குத் தொல்லை விளைவிக்கிறான்; தன் காரியத்தையும் கெடுத்துக்கொள்ளுகிறான்; உடலையும் கெடுத்து நாணயத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறான். மேலும்,

இதற்காக முறை தவறின காரியத்தை எல்லாம் செய்கிறான். அதாவது, ஒரு மிக மிகச் சுயநலக்காரன் செய்யும் காரியத்தை எல்லாம் செய்கிறான். இதனால் அவனுக்கு ஏற்படும் நலம் என்ன என்று பார்த்தால், அவன் இன்பம் அடைகிறான். அதனால் அவனுக்குத் திருப்தி ஏற்படுகிறது. ஆகவே, மனத் திருப்திதான் சுயநலமாகிறது.

இன்பமும் திருப்தியும் ஏற்படுகிற காரியம் எல்லாம் சுயநலமாகிறபடியால், இவை இல்லாத காரியம் எதையும் மனிதன் தானாகச் செய்வதில்லை; செய்யவும் முடியாது. ஆதலால், மனிதனுக்குப் பிற நலம் பேணி தன்னலம் இல்லாமல் செய்யும் காரியம் எதுவும் இல்லை.

[புத்தகம் : 'சுயநலம்-பிறநலம்'—1971]

2. பொதுநல உணர்ச்சி

மக்களின் நன்மைக்கான காரியம் என்பதாக ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்து அதைச் செய்யலாமா என்கின்ற கவலையோ இலட்சியமோ இல்லாமல், வெறும் 'கலாட்டாவில்' பத்திரிகைகளில் பிரமாதப்படுத்தப்படுகின்றனவே அல்லாமல், உருப்படியான காரியம் எதையும் காண எவராலும் முடியவில்லை. வீணான வழியில் ஊக்கமும் உணர்ச்சியும் போய்க்கொண்டிருக்கின்றன.

படித்தவர்கள், படிக்காதவர்கள், தேச பக்தர்கள், அரசியல் வாதிகள் ஆகியவர்களின் காரியங்கள்தான் இப்படி இருக்கின்றன என்று பார்த்தால், இவர்களைத் தவிர மற்றவர்களான, பொது நலத்தில்—ஜீவகாருண்யத்தில்—தர்ம காரியத்தில் கவனம் கொண்ட மற்ற கனவான்களின் செயல்களும் இதைவிட மோசமான காரியங்களாகவே இருக்கின்றன.

பொதுக் காரியம் என்பதே நமது நாட்டில் கோவில் கட்டுவது, கும்பாபிஷேகம் நடத்துவது, பழைய கோவில்களைப் புதுப்பிக்கும் திருப்பணி செய்வது, அந்த சாமிகளுக்கு வாகனம், இரதம், தேர், உற்சவங்கள் செய்வது, சத்திரங்கள் கட்டி—வருகின்ற பக்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் சாப்பாடு போடுவது, வேத பாடசாலை, தேவார பாடசாலை முதலியவை கட்டுவது, இலட்ச பிராமண சமாராதனை, இலட்சத் தீபம் முதலியவைகளைச் செய்விப்பது ஆகிய காரியங்களே பொதுத் தர்மங்களாக நடைபெறுகின்றன.

ஏதாவது மக்களுக்குப் பிரச்சாரம் செய்வது என்றாலோ, ஆடு மீன் கோழி சாப்பிடக் கூடாது—சாப்பிட்டால் நரகம் என்றும்; திருநீறு பூசினால் பாவமெல்லாம் போம் என்றும் மற்றும் இதுபோல் பிரச்சாரம் செய்வதும்; பொதுமக்களுக்கு ஏதாவது ஒழுக்கம் கற்பிக்க வேண்டுமானால் இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடல் புராணம் முதலிய புராணங்கள் படிப்பதன்மூலம் ஒழுக்கங்கள் கற்பிப்பதும் ஆகிய காரியங்களே மற்றவர்கள், பிரபுக்கள், நாகரிகமடைந்தவர்கள் ஆகியவர்களின் 'பொதுநல சேவை'யாக இருக்கின்றன.

இந்த நிலையில் இந்தியாவுக்கு இன்று வேண்டியது இன்னது என்று அறிந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா என்பதை வாசகர்களையே யோசித்து உணரவிட்டு விடுகின்றோம். ஆகவே தேச பக்தியும், கடவுள் பக்தியும் மனிதனை சுயநலஸ்தனாகவும், கண் மூடித்தனமாய்ப் பின்பற்ற வேண்டியதாகவும் செய்கின்றதே தவிர, மனித சமூகத்தின்—நாட்டின் முன்னேற்றத்தின் ஏ, பி, சி, டி-யைக்கூட காணச் செய்ய முடிவதில்லை.

தேசபக்தி என்கின்ற வார்த்தையே வெள்ளைக்காரன் இராச்சியத்தில் உத்தியோகம் சம்பாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதல்லாமல் வேறு எதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டு—வேறு ஏதாவது பலன் கொடுத்தது என்று யாராவது ஒற்றை விரலை நீட்ட முடியுமா? தேச பக்தியும், கடவுள் பக்தியும் மனித சமூகத்திற்கு என்ன பலனைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கின்றன, அல்லது கொடுத்தன என்றாவது யாராவது சொல்ல முடியுமா? மற்ற தேசத்

தாரெல்லாம் விடுதலையடைய, சுதந்திரமடைய இந்த மாதிரிதான் நடந்தார்களா ? மக்கள் முன்னேற்றம் அடையவும் அவர்களது கஷ்டமும் சரீரப் பிரயாசையும் அடிமைத்தனமும் ஒழியவும், மனிதத் தன்மை இன்னது மனிதனுடைய இயற்கைத் தன்மை இன்னது என்ப வைகளை உணர்த்தி அவைகளை அடையச் செய்து கவலையற்று வாழச் செய்வதற்கு இதுவரை யார் என்ன கவலை எடுத்து என்ன காரியம் செய்திருக்கின்றார்கள் ?

ஒவ்வொரு மனிதனும், 'பொது நலத்திற்குப் பாடு படுகின்றேன்' என்கின்ற ஏணியின் மூலம் சுயநலத்திற்குப் போகின்றானேயல்லாமல், உண்மையான பொது நலத் துக்காக வேலை செய்வதற்கு யார் இருக்கின்றார்கள் ? இருந்தார்கள் ? அல்லது அதற்காக வேண்டியது என்ன என்றாவது யார் அறிந்தார்கள் ? வீணே சுய நலமும் குருட்டு நம்பிக் கையும் கொண்டவர்கள் செய்கையானது பல வழிகளிலும் இன்றைய தினம் நம் நாட்டை— ஜன சமூகத்தைப் பாழாக்கிக்கொண்டு வருகின்றதைத் தவிர வேறு ஒரு காரியமும் காண முடிவதில்லை. இந்த இலட்சணத்தில் யாராவது உண்மையைச் சொல்ல வந்தால் அவர்களை—தேசத் துரோகி என்றும் நாத்திகன் என்றும் மூளாவண்ணம் பேசுவதிலும் குறைவில்லை.

['குடி அரசு'–தலையங்கம்—21-12-1930]

3. பொதுநல வாழ்வு

இது, பொதுநல வாழ்வு என்று சொல்லப்படுவதை, அதாவது ஒரு மனிதன் தனக்கென வாழாமல் பிறர் நலத்துக்காக வாழுந் தன்மை என்பதைப்பற்றி ஒருவாறு ஆராயும் பொதுக் கட்டுரையாகும்.

மனிதன் என்பவன் ஒரு ஜீவப் பிராணியேயாவான். ஜீவப் பிராணிகள் என்பவைகள் எல்லாம் சுபாவத்தில் தன்னலமுடையவைகளேயாகும். எப்படியெனில், ஒவ்வொரு ஜீவனும் தான் உயிர்வாழவேண்டும், தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும். அப்படிப்பட்டவையுள் மனிதனும் ஒரு ஜீவனாகும்.

ஆனால், மனிதவாழ்வு என்பது சமுதாயவாழ்வு, அதாவது மற்ற மக்களோடு சேர்ந்து வாழ்வதாயும், அப்படிப்பட்ட மனிதவாழ்வுக்கு வேண்டிய ஒவ்வொரு சாதனமும் தன் ஒருவனாலேயே செய்துகொள்ளக்கூடியதாய் இல்லாமல் மற்றவர்களது கூட்டுமுயற்சியால், கூட்டுச்செயலாலேயே முடிக்கக்கூடியதாயும் இருக்கிறபடியால் மனிதவாழ்வு என்பது தனக் கெனவே என்பதாயில்லாமல் பிறருக்காகவும் பாடுபட்டே வாழவேண்டிய வாழ்வாக இருக்கிறது.

ஆகவே, மனிதன் மனம் ஒப்பி பிறர்நலனுக்காக உழைப்பது என்பது இன்றி யமையாத இயற்கை விதியாக இருந்துவருகிறது.

ஏதோ ஒரு சிலர் திருட்டு, விபச்சாரம் முதலிய கூடாத தொழிலில் ஈடுபட்டவர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம் என்றாலும், பொதுவாக எல்லா மனிதர்களின் வாழ்வும், தொழிலும் பிறருக்குப் பயன்படுவதற்குச் செய்யப்படுவதாக இருந்துவருகின்றன. அதன் பயனாய்த் தானும் வாழ்கிறான் என்பது உண்மைதான்.

ஒரு விலை மாது, வக்கீல், வியாபாரி, உத்தியோகஸ்தன், விவசாயி, கூலியாள் முதலியவர்கள் எல்லோரும் தங்கள் சுயநலத்திற்கே வாழ்கிறார்கள். என்றாலும் அவர்கள் செய்யும் பணி பிறருடைய நலத்திற்கே, பிறருடைய தேவைக்கே, பிறருடைய திருப்திக்கே அல்லாமல் தமக்காகவேதான் என்று சொல்லுவதற்கில்லை.

இந்தத் தத்துவத்தை விட்டுவிட்டு மற்றும் ஒரு மனிதன் உழுகிறான், நூற்கிறான், நெய்கிறான், வீடு கட்டுகிறான், ரோடு போடுகிறான், கிணறு வெட்டுகிறான், கணக்கு

எழுதுகிறான், பலகாரக் கடை, ஓட்டல் வைக்கிறான், பத்திரிகை நடத்துகிறான்; மற்றும் பல பணிகள் உடலுழைப்பாலும் மூளை உழைப்பாலும் செய்கிறான்.

இவைகள் யாருக்குப் பயன்படுகின்றன? அவனுக்கேயா? இல்லை; மற்ற மக்களுக்கும் பயன்படுகின்றன. ஆனால், அதனால் செய்பவனின் குடும்பமும் உயிர்வாழுகின்றது.

மற்றும், இன்றைய பிரத்தியட்ச நடப்பையும், அனுபவத்தையும்கொண்டு 'பொது நலப் பணியில்' ஈடுபட்டிருப்பவர்களது தன்மையைப் பார்ப்போமேயானால், அவை 100-க்கு 90 சுயநலத்திற்காகச் செய்யப்படும், அதாவது முன்னால் கூறப்பட்டவர்கள் செய்வதுபோல செய்யப்படும் ஒருமாதிரி வியாபாரம், வாழ்வுக்கான தொழில் என்பதாகத்தான் பெரிதும் காணப்படுமேயல்லாது, சுயநலமற்றது என்று காணுவதற்கு எளிதில் முடியாததாகவே இருந்துவருவதைக் காணலாம்.

சுமார் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது மக்களுக்குப் போதிய தெளிவு இல்லாத காலத்தில் 'பொதுநலம்' என்பது வேறுதுறையில் வாழ்கிறவர்கள் அத்துறையைப் பெருக்கிக்கொள்ள, பெருமைபெற ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது மக்களுக்கு ஓரளவு தெளிவு ஏற்பட்டபின்பு மனத் துணிவும், பிறர் பழிப்பை லட்சியம் செய்யவேண்டிய அவசியமில்லாத தன்மையும் ஏற்பட்டபிறகு தன் வாழ்வுக் காகவும், தன் தகுதிக்கு, நிலைமைக்கு மேற்பட்ட வாழ்வு வாழவேண்டும், பொறுப்பற்ற, கவலையற்ற, பாடுபடாத வாழ்வு வாழவேண்டும் என்று கருதுகிறவர்களுக்கெல்லாம் முதல் தோற்றமாயும் நிலவுவது 'பொதுவாழ்வில் இறங்கிவிடுவது' என்பதேயாகிவிட்டது.

தன் தொழிலை, உழைப்பை 'பொதுநல வாழ்வு' என்பதில் பயன்படுத்தி இருக்கிற தாகச் சொல்லிக்கொள்ளுபவர்கள், அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்பவர்கள் இன்று பெரிதும் சுகவாழ்வும், சுகபோகமும், மேன்மையான வாழ்வும் வாழுகிறார்கள்.

அதாவது, கைமுதல் இல்லாமலும், உடலுழைப்பு இல்லாமலும் மேலும் சொல்வ தானால், ஒழுக்கம், நாணயம்பற்றிய கவலை இல்லாமலும் சுகஜீவியாய் இருந்து வருகிறார்கள்.

மற்றும், தெளிவான, உதாரணம் வேண்டுமானால் இன்று 'பொதுவாழ்வு' என்பதில் ஈடுபட்டுள்ளவர்களாகக் காணப்பட்ட, காணப்படுகின்ற மக்களில் 100-க்கு 90 பேர்களுக்கு மேம்பட்ட மக்களை எடுத்துக்கொண்டு தனித் தனியாக துருவிப் பார்த்து வருவோமே யானால், அவர்களில் 89 பேர்களும் தங்களைப் 'பொதுநல வாழ்வில்' ஈடுபடுத்துவதற்கு முன் தாங்கள் இருந்துவந்த நிலையைவிடப் பன்மடங்கு பணத்தில், அந்தஸ்தில், வாழ்வில், போக போக்கியங்களில் வளர்ச்சிபெற்றவர்களாகவே காணப்படுவர் என்பதோடு தங்கள் தேவைக்குமேல், தகுதிக்குமேல் அடைந்து அனுபவிப்பவர்களாகவே காணப்படுவார்கள்.

அதிலும், பொதுநலவாழ்வில் இறங்குபவர்களுக்கு மான அவமானம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்குப் பொதுமக்கள் கணிப்பு ஆகிவிட்டதால், அதற்கேற்றாற் போலவே மதச் சேவையும், அரசியல் சேவையும், சமுதாயச் சேவையும் ஆகிவிட்டதால் எவ்வளவு இழிதன்மையும், ஒழுக்கக் குறைவும், துரோகத் தன்மையும் உள்ளவனுக்கும் 'பொதுநல வாழ்வு' என்பது வாழ்க்கை வளர்ச்சிக்குப் பயனளிக்கக்கூடியதாக ஆகிவிட்டது.

இப்படிப்பட்ட 'பொதுநல வாழ்வு' என்பது, ஈடுபட்டவர்களுக்கு வாழ்க்கை வளர்ச்சியும், சுகபோக வாழ்வும் அளித்துவருவது ஒருபுற மிருந்தாலும், இது மனித சமுதாயத்தில் பொது ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை ஆகியவைகளைப் பெரிதும் கெடுத்து விட்டது. எப்படியெனில், 'பொதுநல வாழ்வு' என்பதானது எப்படிப்பட்டவரும் அதில் ஈடுபட்டுவிட்டால் அவருக்கு இவ்வளவு மேலான வாழ்வு அளித்து வருவதால்—அவர்களுக்கு மானஅவமானம், ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை தேவை இல்லாமலிருப்பதால்—மேலும்,

இதனால் மானஅவமானம் இழிவுகூட அவர்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லாதிருப்ப தால்—இனி வாழ்க்கையில் பிரவேசிக்கவேண்டிய வயது வந்தவர்களும், அவசியமுடையவர் களும் இந்தப் 'பொதுநல வாழ்வு'க்காரர்களைப் பார்த்து இவர்களைப் பின்பற்ற முனைந்து விடுகிறார்கள். பொதுமக்களையும் இத்தன்மை ஆட்கொண்டுவிடுகிறது. 'பொதுநல வாழ்வு' என்பதுபற்றி இப்படிக் கூறுவதானது யாரோ ஒரு சிலரை மாத்திரம் கண்டு கூறுவதாக யாரும் கருதிவிடக்கூடாது.

பொதுவாகவே, முன் கூறியபடி 'பொதுநல வாழ்வில்' ஈடுபட்ட 100-க்கு 90 மக்களைக் கண்டும், 30 ஆண்டு அனுபவத்தைக்கொண்டும் 'மதிப்பிற்குரிய—பெரிய பெரிய ஆட்கள்' என்பவர்களது உள்ளும் புறமுமான கருத்து, நடத்தை ஆகியவைகளை உணர்ந்தும்தான் 'பொதுநல வாழ்வு' என்பதற்கு இந்த விளக்கம் தர நேர்ந்தது.

இதற்கு விலக்கான 'பொதுநல வாழ்வுக்காரர்கள்' இருக்கலாம் என்பதை இந்த விளக்கம் மறுக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் மரியாதைக்கு உரியவர்களேயாவார்கள். ஆனால், அரிது; மிகமிக அரிது.

['விடுதலை'—கட்டுரை—17-1-1954]

4. பொதுத் தொண்டு

ஊராட்சித்தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

ஏதோ மனிதனாகப் பிறந்தோம்; சுயநலத்திற்கு ஏற்ப வாழாமலிருக்க வேண்டு மென்று கருதுகிறோம். நம் வாழ்வின் பயனாகத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தொண்டாற்றி வருகிறேன். பலர் கருதுகிறார்கள்—நான் பொதுமக்களுக் காகத் தொண்டாற்றுகிறேன் என்று; ஒரு மாதிரியில் அந்தக் கருத்து சரி. இந்த நாட்டில் பார்ப்பானைத் தவிர மற்றவர்களெல்லாம் பொதுமக்களுக்குப் பாடுபடுகிறவர்கள்தாம். உலகத்தில் மனிதனாக உள்ள அனைவரும், பார்ப்பானைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிறவர்கள்தாம்.

சாதாரணமாக அருவருப்பாகத் தோன்றும் கக்கூஸ் சுத்தம் செய்யும் (மலம் எடுப்பது) வேலை முதல், அரசனாக இருந்து ஆட்சிபுரிகிற வரையில் எல்லோருடைய வேலையும் பொதுத்தொண்டுதான்.

கக்கூஸ் எடுக்கிறான் என்றால் தனக்கு மட்டுமா எடுக்கிறான்? வேலைகள் எல்லா வற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். உத்தியோகம் செய்பவன், விறகு வியாபாரம் செய் பவன், மற்றும் பல வியாபாரிகள், தொழில் செய்வோர்கள் இவர்களை எடுத்துக்கொண்டால் அவனவன் செய்கிறதெல்லாம்—அது அவனுக்கு மட்டுமல்ல. உயர்வு—தாழ்வு என்ன வென்றால், அதன் மூலம்தான் தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறான் என்கிறோமே தவிர வேறு வகையில் அதுதொண்டுதான். மற்றவனுக்குள்ள வசதி வாய்ப்பு, அமைப்பு இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, இலாபம் பார்த்துக் கூலி பார்த்துச் செய்கிறார்கள் என்று சிலரைக் கூறலாமே தவிர, அவர்கள் இறக்கும்போது எடுத்துக்கொண்டா போகிறார்கள்? அவைகளை விட்டுவிட்டுத்தான் போகிறார்கள்; மற்றவர்கட்குத்தான்; 'அது நம் மகனுக்கு', 'அல்லது நம் மனைவிக்கு' என்று நினைப்பார்கள். கணக்குப் பார்த்தால் அவர்களும் (மனைவி, மக்களும்) மற்றவர்கள்தாம். தனக்கு என்று ஒன்றும் இல்லை. பொதுத் தொண்டில், தனக்கு என்று ஒன்றைச்செய்கிறவர்கள் சிலர்தான்.

தேடி வைத்தவர்கள் யாரென்றால், மற்றவர்களைத் தேடாமல்—எதிர்பாராமல் தொண் டாற்றிப் போகும் அத்தனைபேரும்; அவர்கள்தாம் தமக்கென்று புகழைத் தேடிக்கொண்டு போகிறார்கள்; பிரதியுபகாரம் இல்லாமல் தொண்டு செய்பவர்கள் என்ற பெயரைத் தம்மோடு

எடுத்துப் போகிறார்கள். உலகத்தில் அது இருக்கிற வரையில் தம் பெயர் நிலைக்கும்படி செய்துவிடுகிறார்கள். நிலம், காணி இவையெல்லாம் எவ்வளவுதான் சேர்த்து வைத்திருந் தாலும் அவன் செத்துப் போனதும் அவனது என்று சொல்லமாட்டார்கள். இவனுடைய மகனது என்றுதான் கூறுவார்கள்; இது இயல்பு. தனது என்று கூறும்படியானது தொண்டு ஒன்றுதான். மற்றவர்களுக்காகப் பலனை எதிர்பாராமல் தொண்டு செய்வதுதான்.

[தேரெழுந்தூரில், 31-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-4-1959]

5. தியாகம்

தியாகம் என்பதுபற்றி அறிஞர் ஆச்சாரியார் தமது இராமநாதபுரம் சொற்பொழிவில் குறிப்பிட்டு இருக்கும் கருத்தானது மிகவும் சரியானதும், பொருத்தமானதுமாகும்.

ஏனென்றால், எனக்கு இது சுமார் 30 ஆண்டுகளாக இருந்துவரும் கருத்தாகும். மக்களிடையில் மூடநம்பிக்கை காரணமாகவும், சுயநலம் காரணமாகவும் யோசனையும், பொருளுமற்ற அனேக சொற்கள் பழக்கத்தில் இருந்துவருகின்றன.

'தியாகம்' என்ற சொல்லைப்பற்றி ஆச்சாரியார் அவர்கள் குறிப்பிடுகையில், 'தியாகம் என்பது பத்திரிகைகள் ஏதோ அவசரத்தில் சிருஷ்டித்த வார்த்தை; பத்திரிகைகள் எவ்வளவோ பதங்களை இப்படிச் சிருஷ்டித்திருக்கின்றன' என்று கூறி இருக்கிறார். இதைக் குறிப்பிடும்போது இதற்கு முன்னும் பின்னாலும் கூறியிருப்பவை எப்படி இருந்தாலும், தியாகம் என்பதைப்பற்றிக் கூறியது மிகவும் சரியான தத்துவக் கொள்கைக் கருத்தாகும்.

நான் சில மாணவர்களுக்கு எனது கையெழுத்தைப் போட்டுக்கொடுக்கும்போது, அவர்கள் அதில் 'ஏதாவது இரண்டு வார்த்தைகளை எழுதிக் கொடுங்கள்' என்று கேட்கப் பட்ட காலத்தில், 'கடவுள் என்பதும், தியாகம் என்பதும், நிஷ்காமிய கர்மம் என்பதும், மோட்சம், நரகம் என்பதும் பொருளற்றதும், விளக்கமுடியாததுமான சொற்கள்' என்று எழுதிக் கொடுத்து வந்திருக்கிறேன்.

மற்ற சொற்களை விட்டுவிட்டு-'தியாகம்' என்பதைப் பற்றியே இதில் எழுதுகிறேன்.

தியாகம் என்றால் தமிழ் அகராதிகளில் கொடுப்பது, கொடை, (உரிமையை) விடுதல், விட்டுக் கொடுத்தல், உபகாரம் என்பன போன்ற பொருள்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கில அகராதிகளில் 'சாக்ரிபைஸ் (Sacrifice)' என்ற சொல்லுக்கு பலி, தியாகம், பரித்தியாகம் என்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவை எப்படி இருந்தாலும், தியாகம் என்பதற்குச் சுயநலம் இல்லாமல் தொண்டாற்றுதல், கஷ்டநஷ்டம் அடைதலோடு தானே பெரிய காரியங்களைச் சாதித்தல், பரிகரிக்கமுடியாத துன்பம், தொல்லையை மனப்பூர்வமாக ஏற்றல் என்பதைத்தான் பொருளாகக் கொண்டு மக்கள் அச்சொல்லைப் பயன்படுத்து கிறார்கள் என்று கருதிக்கொண்டு அந்தப் பொருள்களைப் பற்றிச் சிந்திப்போம்.

மனிதனுக்குச் சுயநலம் என்பது என்ன? மண், பெண், பொன் ஆசை என்பது மாத்திரந்தானா? மனிதன் சுயநலத்திற்காக மேற்கண்டவைகளையும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கிறானே என்று பார்த்தால், இவற்றையும்விட சுயநலம் என்பதாக வேறு ஒன்று இருக்கிறதாகத் தோன்றுகிறதா, இல்லையா? சாப்பிடுவது, தூங்குவது, போக போக்கியம் அனுபவிப்பது என்றால் சுயநலத்திற்கு ஆக இவைகளையும் விட்டுவிட்டுப் பட்டினி, ஏழ்மை, துறவிவாழ்வு வாழ்கின்றானே அப்போதும் இவைகளைவிடச் சுயநலம் என்பதாக வேறு ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறதா, இல்லையா? சில 'பெரியவர்களும்' 'சிறியவர்களும்' நரகம் புகத் துணிந்து சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதாக அறிகிறோம். அதன் கருத்தென்ன?

எவ்வளவு இம்சையை, மிடிமையை அனுபவித்துக் கொண்டாவது வேறு ஒரு காரியத்தைச் செய்ய முன்வருகிறான் என்றால் அப்போது அவனுக்கு வேறு ஏதோ ஒரு சுயநல உணர்ச்சி இருக்கிறது ; அதற்காகத்தான் இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறான் என்றுதானே அறியக் கிடக்கிறது ?

சுயநலம் இல்லாவிட்டால் மனிதன் ஒரு ஜீவனாகவே இருக்கமுடியாது. ஆகவே, இங்கு சுயநலம் என்றால் என்ன என்பது தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியதாகும்.

இது 'தத்துவ' ஆராய்ச்சி அல்ல—அறிவு ஆராய்ச்சி; மக்களை மயக்கத்திலிருந்து, ஏமாற்றத்திலிருந்து தெளிவிக்கும் ஆராய்ச்சியேயாகும். இதை ஒரு வரியில் ஆச்சாரியார் சொல்லிவிட்டார் என்றாலும், விளக்கினால் மக்களுக்குள் இருக்கும் அசம்பாவமான தியாகக் கருத்து மாற்றமடையலாம். அதாவது, 'மனிதனுக்குச் சுயநலம் என்பது அவனது மனத்துக்குத் திருப்தி ஏற்படுத்துவதும் இன்பமளிப்பதுமேயாகும். சுயநல காரியம் என்பது 'தியாக'மானாலும் 'பாக்கிய'மானாலும் செய்பவனுக்கு மனத் திருப்தி ஏற்படுவதுதான். அதுதான் தூக்குக் கயிற்றைக் கழுத்தில் தானாக மாட்டிக்கொள்ளுவதானாலும் அவனுக்கு இன்பம் பயப்பதாம்.

மனித வாழ்வில் வெற்றி என்னவென்றால் அவனவன் மனத் திருப்தியோடு வாழ்வதுதான்.

30 ரூபாய் சம்பளத்திலுள்ள ஒரு குடும்பஸ்தன் தன் அயலான் வீட்டுப் பிள்ளை படிக்க மாதம் 5 ரூ. கொடுத்துவிட்டு, தான் 25 ரூபாயில் கஷ்டஜீவனம் செய்து வருகிறான் என்றாலும், அந்த அயலான் பிள்ளை நன்றாகப் படிப்பதையும் அயல் வீட்டார் இவனை (மாதம் 5 ரூ. கொடுத்து உதவுபவனை) சதா போற்றிப் புகழ்ந்து ஆசி கூறுவதையும் கேட்டுக்கொண்டிருப்பதில் அவனுக்கு எவ்வளவு இன்பம் உண்டாகும்? ஆகவே, அந்த 5 ரூ. செலவில் அவன் மனம் எவ்வளவு திருப்தியடையும் என்பதைச் சிந்தித்தால்—5 ரூபாய் தியாகம் அவனுக்கு எவ்வளவோ திருப்தியும் இன்பமும் தரும் பாக்கியத்தை அளித்ததா, கஷ்டத்தை அளித்ததா என்பது விளங்காமல் போகாது.

ஒரு மனிதன் ஒரு கோயில் உற்சவத்திற்குப் போவதற்காக இரயிலில் இடமில்லாமல் மக்கள் நெருக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நசுங்கிக்கொண்டு தொல்லைப்படுகிறான். இது தியாகமா? அவன் 'புண்ணியம் பெறப்போகிறோம்' என்ற மனத் திருப்தியினால் நசுங்கப் படுகிறான்; அவ்வளவுதானே! இதில் தியாகம் என்ன? இது ஒரு வியாபாரம் தானே! அதுபோல் அவன் ஏறியிருக்கும் இரயில் வண்டியில் ஒரு பெரியார் வந்து ஏறுகிறார். அவன் முன்னமேயே நெருக்கத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தாலும் பெரியாரைக் கண்டவுடன், தான் எழுந்து பெரியாரை உட்காரவைத்துவிட்டு, நின்றுகொண்டே மேலும் நெருக்கப்பட்டுக்கொண்டு வருகிறான். இந்த நிலையில் அவன் மனம் வழிந்தோடும்படியான திருப்தியடைந்து எல்லையற்ற இன்பத்தை அனுபவிக்கிறான். என்ன திருப்தி? என்ன இதயம்? கிட்ட நெருங்கிப் பார்த்தறியாத, வெகு காலமாகப் பார்க்கக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியாரை, தான் கைதொட்டு உட்காரவைத்து, பக்கத்திலேயே நின்று கொண்டு அவருக்கு வேண்டியதைத் தன் கைகளால் வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கும் படியான ஒரு வாய்ப்பைப் பெற்றோமே என்று ஆனந்தக் கூத்தாடுகிறான்.

இதில் அந்த நெருக்கடி பட்டது 'தியாகமா', 'பாக்கியமா'? எந்த மனிதன் எவ்வளவு பெரிய 'தியாகம்' என்பதைச் செய்தாலும் அவனுடைய திருப்திக்கு, இன்பத்திற்குத்தான் செய்கிறானே ஒழிய, நட்டத்திற்கு அல்ல; அதிருப்திக்கு அல்ல.

சிலர் தனக்கு இஷ்டமில்லாமலும், துக்கத்துடனும், நட்டக் கருத்துடனும் சில 'தியாகம்' செய்தார்கள் என்று சொல்லப்படுவதாலும் அவர்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமே என்கின்ற ஆசைக்கும், திருப்திக்கும்—அதாவது, தான்

அந்தப்படி அந்தக் கஷ்டத்தை, நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவனை மற்றவர்கள் இழிவாய்க் கருதுவார்கள் என்று பயந்து செய்கிறார்களே ஒழிய, பலன் எதிர்பாராத முட்டாள்தன, பைத்தியப் புத்தியால் அல்ல.

கடுகளவு புத்தி உள்ளவனும் பலன் இல்லாத—ஏதாவது ஒருவகையில் தனக்கு திருப்தி அல்லது பெருமை, அல்லது புகழ், அல்லது மானம் கெடாமல், இழிவு ஏற்படாமல் தப்பித்துக்கொள்ளுதல் என்ற கருத்துக்கள் இல்லாத காரியத்தைச் செய்யவே மாட்டான். அது முட்டாள்தனமாகவும் இருக்கலாம். அல்லது புத்திசாலித்தனமாகவும், கெட்டிக்காரத் தனமாகவும் இருக்கலாம்; அதுவேறு விஷயம்.

நான் மந்திரி வேலை கொடுக்கப்பட்டும், 'வேண்டாம்' என்று சொன்னதாக வைத்துக் கொள்ளுங்கள். இது தியாகமா? புத்திசாலித்தனமா? வேலை ஏற்பதைவிட ஏற்காமலிருப்பதால் திருப்தியும் இன்பமும் அல்லது தொல்லை இல்லாத தன்மையும் இருக்கிறதாகக் கருதித்தான் மறுத்திருப்பேன்.

நான் கோயில் கட்ட இலட்ச ரூபாய் கொடுக்கிறேன்.

இது வியாபாரமா, தியாகமா? தர்மம், பிச்சை கொடுப்பது, மோட்சத்திற்கு இல்லா விட்டால், பெருமைக்கு இல்லாவிட்டால்—மனத் திருப்திக்கு, இன்பத்திற்கு ஆகவாவது —தொல்லை சகிக்கமாட்டாமலாவதுதான் இருக்கும். இதில் தியாகம் என்ன இருக்கிறது?

அதுபோல், சில இளைஞர்கள் ஆவேசத்தில் சுற்றுச்சார்பு சகவாசத்தில் தனது பெருமைக்கு, புகழுக்கு, திருப்திக்கு என்று ஏதாவது குருட்டாட்டம், நல்ல ஆட்டம் ஆடிவிட்டு, 'நான் தியாகி—எனக்குக் கூலி என்ன?' என்றால், இதைவிட முட்டாள்தனமான காரியம்—என்ன இழிவான காரியம் வேறு இருக்க முடியும்?

ஆனால் இந்த முட்டாள்தனமான வியாபார வேண்டுதலாலேயே பண்டித ஜவகர்லால் முதல் மந்திரி பதவியும், அவர் குடும்பம் பெரும் பெரும் சம்பளமுள்ள பதவியும், பாபு இராஜேந்திர பிரசாத் சர்வாதிகாரத் தலைவர் பதவியும் பெற்றிருப்பதைக் கண்ட சிறு 'தியாகிகள்'—தங்களுக்கும் ஏதாவது ஒரு வழியில் பங்கு கேட்பதில் தவறு என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. காங்கிரஸ் பதவி, பெருமை, பண இலாபம் ஆகிய காரியங்களுக்கு இவர்கள் (தியாகிகள்) செய்தது போன்ற காரியங்கள்தாமே பல இளைஞர்களுக்கும் பண்டமாற்றாக இருந்துவருகிறது? 'விபூதி பூசி இருப்பவர்களுக்கெல்லாம் கோயில் பிரசாதம் கொடுக்கப்படும்' என்று ஆன பிறகு, விபூதி பூசினவன் எல்லாம் கையை நீட்டினால், நெருக்கடி சமாளிக்க முடியாமல், 'உனக்கு வெட்கமில்லையா? இப்படி மேலே விழுந்து கையை நீட்டுகிறாயே!' என்றால் இதில் வெட்கமென்ன? முன்னால் இருந்தவனுக்குக் கிடைத்துவிட்டது; கொடுக்கப்பட்டாய்விட்டது என்றால், பின்னால் இருப்பவன் வேறு என்னதான் சொல்லிக் கையை நீட்டுவது?

ஆனால், இந்த நிலைக்குத் தியாகம் என்பது பொருளற்றதும், முட்டாள்தனமானதும், மானமற்றதுங்கூடத்தான். ஆனால், மற்றவர்கள் பெரியவர்கள் 'தியாக பலன்' அனுபவிக்கும்போது இவர்களுக்கு மாத்திரம் எப்படி இந்தத் தன்மைகள் பொருத்தமற்றவையாகும்?

விஷயப் பொருத்தம், சந்தர்ப்பம் எப்படி இருந்தாலும், 'தியாகம்' என்ற சொல் பொருளற்றது; பித்தலாட்டமானது; சுயநலத்திற்கு வழியானது. ஆச்சாரியார் சொன்னபடி 'பத்திரிகைக்காரர்கள் (பார்ப்பனர்கள்) சிருஷ்டித்த சொல்' என்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இப்படி இன்னும் பல சொற்களைச் சிருஷ்டித்து மக்களை ஏய்க்கிறார்கள் என்பதையும் ஆதரிக்கிறேன். என்னுடைய வெகுநாள் கருத்தும் இதுவே.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே நானும் கைவல்ய சாமியும் சேர்ந்து பாலக்காடு வித்வான் நடேசம் பிள்ளை என்ற ஒரு பெரும் புலவரிடம், 'நிஷ்காமிய கர்மம் என்பதே பொருள் அற்ற, அல்லது பித்தலாட்டம் ஆன சொல்' என்று வாதாடி இருக்கிறோம்.

அதாவது, பலனை எதிர்பாராமல் அல்லது இலட்சியம் இல்லாமல் தியாகம்—கர்மம்—வினை—செயல் செய்வது என்பதைப்பற்றி வாதாடி இருக்கிறோம்.

இதைப்பற்றி மற்றொரு சமயம் விளக்கலாம்.

['விடுதலை'-தலையங்கம்—2-7-1953]

6. ஜீவகாருண்யமும், யாகமும்

தலைவரவர்களே! தோழர்களே!

ஜீவகாருண்யம் என்ற வார்த்தைக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். சிலர் மாமிசம் சாப்பிடாமல் இருந்தால் அதுவே பெரிய ஜீவகாருண்யம் என்றும், மற்றபடி ஜீவனுக்கு எவ்வித மனவ்ருத்தத்தையும், உடல் வருத்தத்தையும் செய்தால் குற்றமில்லை என்றும் கருதியிருக்கிறார்கள். சிலர் ஜீவன்களை இம்சைப்படுத்தாமல் இருந்தால் போதும் என்றும், மாமிசம் சாப்பிடுவதைப் பற்றிக் குற்றமில்லை என்றும் கருதி யிருக்கிறார்கள். சிலர் சில ஜந்துக்களை மாத்திரம் இம்சைப் படுத்தக் கூடாதென்றும், மற்ற ஜந்துக்களைப் பற்றிக் கவலை இல்லை யென்றும் கருதி யிருக்கிறார்கள். ஜீவகாருண்யத்துக்கு இந்தப்படி எத்தனையோ விதமான கருத்துக்களும் தத்துவங்களும் இருக்கின்றன.

விவரமாய்ச் சொல்ல வேண்டுமானால், ஜீவகாருண்யம் என்பது ஒவ்வொரு தேசத்துக்கும், ஒவ்வொரு மதத்துக்கும், ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு விதமாய் கருதப்படுகின்றது.

இந்துக்கள் என்பவர்கள் பசுவை வணங்குவார்கள்; அதனிடத்தில் அளவுக்கு மீறிய மரியாதையும், ஜீவகாருண்யமும் காட்டுவார்கள்; யாராவது பசுவைக் கொன்றால்—சாப்பிட்டால் அவர்களிடம் குரோதமும், வெறுப்பும் கொள்ளுவார்கள். இந்தக் காரணத்தினாலேயே, இந்துக்களுக்கு முகமதியர்கள் மீது வெறுப்பும் அசூசமும் இருந்து வருகின்றன. இதனாலேயே பல இடங்களில் இந்து–முஸ்லிம் கலகங்களும் கட்சிகளும் உண்டாகின்றன. இந்துக்களிலேயே பறையர், சக்கிலியர் என்று அழைக்கப்படும் வகுப்பார் மாட்டு மாமிசம் உண்பதினாலேயே அவர்களைக் கீழ் சாதிக்காரர்கள் என்று கருதுவதாகவும், அதனாலேயே அவர்களைத் தொடுவதற்கு அஞ்சுவதாகவும் சொல்லப்படுகின்றது. இதை அனுசரித்து பல சாஸ்திரங்களும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இப்படிப்பட்ட இந்துக்கள் பசுமாடு விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று பார்த்தால் வண்டியிலும், உழவிலும், ஏற்றத்திலும், செக்கிலும் கட்டி அதைச் சாகும் வரை உபத்திரவிக்கிறார்கள். மாட்டை நல்ல காளைப் பருவத்தில் கட்டிப் போட்டு, விதர்களை நசுக்கிக் கொட்டாப் பிடியால் தட்டிக் கரைத்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். பசுவின்பாலை அதன் கன்றுக்குக் கொடுக்காமல், அதற்கு வெறும் புல்லைப் போட்டுவிட்டு, தாங்கள் சாப்பிடுகிறார்கள். இப்படி அர்த்தமற்ற ஜீவகாருண்யம் பலப் பல ஜீவர்கள் பெயரால் எத்தனையோ விதத்தில் உலகத்தில் வழங்கிவருகிறது. பறவை, மிருகம், ஊர்வன ஆகிய விஷயங்களில் காட்டப்படும் ஜீவகாருண்யத்தில் ஒரு சிறு பாகம்கூட, மனித ஜீவனிடத்தில் மக்கள் காட்டுவது அருமை என்றே சொல்லலாம்.

மக்கள் சமூக வாழ்க்கைத் திட்டத்தின்பயனாய் ஒருவரை ஒருவர் எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள், எவ்வளவு கொடுமைக்கும் துக்கத்துக்கும் ஆளாக்குகிறார்கள்

என்று பார்த்தால் நடைமுறையிலுள்ள ஜீவகாருண்யங்கள் முட்டாள்தனமானவையென்றே சொல்லலாம்.

நான், ஏன் இங்கு இந்த ஜீவகாருண்யக் கூட்டத்திற்கு வந்தேன் என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே இங்கு கடலாடியில் நடக்கும் யாகத்தில் ஏதோ சில அய்ந்தோ, பத்தோ ஆடுகள் கொல்லப்படுவதை நான் பிரமாதமாகக் கருதி இங்கு வரவில்லை. இலட்சக் கணக்கான ஆடுகள் மாடுகள் மற்றும் சில ஜீவர்கள் தினமும் கொல்லப்படுவது எனக்குத் தெரியும். அப்படி இருக்க பின் ஏன் நான் இங்கு வந்தேன் என்றால், யாகத்தின் புரட்டையும்–அது செய்யப்படுவதன் உள் எண்ணத்தையும்–அதனால் ஏற்படும் பலன்களையும், 'உயர்ந்த சாதியார்–அகிம்சா தர்மமுள்ள அந்தணர்' என்று கர்வமுடன் தங்களைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களின் யோக்கியதையையும் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டவும், கொல்லப்படும் பிராணிகள் யாகத்தின் பேரால் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பதையும் ஜனங்களுக்கு அறிவித்து, இப்படிப்பட்ட கொடுமையான சித்திரவதை இனி நிகழாமல் இருக்கும்படி செய்ய சர்க்காரைத் தூண்டுவதற்காகவுமே வந்திருக்கிறேன்.

முதலில், கொலைக் கொடுமைகளைப்பற்றிச் சொல்லுகிறேன். யாகத்தில் கொல்லப் படும் ஆடுகள் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பது தங்களுக்குச் சிலருக்காவது தெரிந் திருக்குமென நினைக்கிறேன். நான் அறிந்தமட்டில் ஆட்டைக் கால்களைக் கட்டிக் கீழே தள்ளி, கொம்பைப் பிடித்து ஒருவர் அமிழ்த்திக்கொண்டு வாய்க்குள் மாவைத் திணித்துக் கொண்டிருக்க—ஒருவர் நன்றாகக் கட்டி மூச்சுவிடாமல் சப்தம் போடாமல் செய்து—ஒருவர் விதர்களைக் கிட்டிபோட்டு நசுக்க—மற்றவர் வயிற்றில் ஆயுதங்களால் இடித்துக் கிழித்து அதன் சிற்சில உறுப்புகளைத் தனித் தனியாய் அறுத்து எடுப்பதன் மூலம் கொல்லப்படு கிறது. இது சகிக்கக்கூடியதா? உயிர்களிடத்தில் அன்பு காட்டக்கூடிய சாதியார் செய்யக் கூடியதா? அகிம்சைக்காரர்களுக்கு ஏற்றதா? இப்படிப்பட்டவர்கள் மேல் சாதிக்காரர்களா? இவர்களுக்கு பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமையுண்டா? யோசித்துப் பாருங்கள்! ஆடு, கோழிகளைத் தலைகீழாகப் பிடிப்பதையும், தரதரவென்று இழுப் பதையும் ஜீவ இம்சை என்று சட்டஞ்செய்து அம் மனிதர்களைத் தண்டிக்கும் சர்க்கார்—இவர்களை என்ன செய்யவேண்டும்? ஆலையிலிட்டு நசுக்கும்படி சட்டம் செய்தால் அதைத் தப்பு என்று சொல்லமுடியுமா? யோசித்துப் பாருங்கள்!

இந்த யாகம் ஆட்டுக்கு மாத்திரமில்லையாம். மாடு, மனிதர், குதிரை முதலியவை களுக்கும் உண்டாம். இப்படியே விட்டுவிட்டால் நாளைக்கு இந்த ஆடுகளின் கதியேதான் மனிதர்களுக்கும் ஏற்படும். மத சம்பந்தத்தில் அரசாங்கம் நுழைவதில்லை என்று சொல்லி அரசாங்கம் சுலபமாய்த் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால், நாளைக்கு நாமே தியாகம் செய்து 10, 20 மனிதர்களை இந்தப்படி சித்திரவதையான கொலைபாதகம் செய்தால், மதத்தில் பிரவேசிக்காமல் அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்குமா? அதுபோலவே இப் போது கருதி, இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான சித்திரவதைக் கொலைகளையும், இம்சை களையும் அரசாங்கம் ஏன் நிறுத்தக்கூடாது? பார்ப்பனர்களுக்குப் பயந்தோ, மதத்திற்குப் பயந்தோ தாங்கள் சும்மா இருப்பதாகச் சொல்வார்களானால், இப்படிப்பட்ட கொலையும் சித்திரவதையும் தங்கள் மதத்துக்கு விரோதம் என்று கருதி அதற்காக வேதனைப்படும் ஜயின மதத்தினுடையவும், ஜயினர்களுடையவும் கொள்கையும் மரியாதையும் உணர்ச்சி யும் காப்பாற்றப்பட வேண்டாமா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இந்தக் கொடுமைகளை உருவகப்படுத்திப் பார்க்கும்போது இராமா யணக் கதையின் தத்துவம் இதில் தாண்டவமாடுகின்றது. இராவணனையும் அவன் குடும்பத்தையும் ஆரியர்கள் இழித்துப் பழித்துக்கூறி, அவன் அரசை நாசமாக்கியதாகக் காணப்படும் கதையை இப்போது நினைத்துப் பாருங்கள்! இராமாயணக் கதைக்கு அஸ்தி வாரமே இந்தச் சித்திரவதைக் கொலைபாதகச் செயல்களான யாகமேயாகும். தாடகை

என்கின்ற ஒரு பெண் யாகத்தைக் கெடுத்ததற்காகத்தானே கொல்லப்பட்டிருக்கிறாள்? இந்த மாதிரிக் கொலைபாதக யாகத்தை யார்தான் கெடுக்கத் துணியமாட்டார்கள்? யாகத்தைக் கண்டு மனம் வருந்தி, பரிதாபப்பட்டு, அதை நிறுத்த முயற்சித்ததல்லாமல் அந்த அம்மாள் செய்த கெடுதி என்ன?

நமக்குச் சக்தியில்லாததாலும், நம் உணர்ச்சிக்கு அனுகூலமான ஆட்சி இல்லாததாலும் நாம் எல்லோரும் இங்கு வந்து கத்துகிறோம். சக்தியும் ஆட்சி உரிமையும் இருக்குமானால் நாம் தாடகையைப்போல்தானே நடந்துகொண்டு தீருவோம்? யாகத்தை வெறுத்ததற்காக அந்த அம்மாளைக் கொன்று விட்டதுமல்லாமல் அந்த அம்மாளை இழித்துக்கூறும் முறையில்—அந்த அம்மாள் மூத்திரம் பெய்து யாக நெருப்பை அணைத்துவிட்டாள் என்றும்; மிருகங்களையும், பறவைகளையும் பச்சையாய்ச் சாப்பிட்டாள் என்றும், பொருத்த மற்றதும், போக்கிரித்தனமுமான ஆபாசக் கதைகளையும் கட்டிவிட்டார்கள். இதிலிருந்தே இராமாயணத்தை ஜீவகாருண்யம் காரணமாய் ஏற்பட்ட ஆரியர்-திராவிடர் கலகம் என்றும்; ஆரியர் தங்களை உயர்த்தியும் திராவிடர்களைத் தாழ்த்தியும், திராவிடர்களுக்கு என்றும் பழி இருப்பதற்காக எழுதிவைத்துக் கொள்ளப்பட்டது என்றும்; இராம—இட்சுமணர்கள் ஆரியக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்றும்; இராவணாதியோர் திராவிட—அதாவது ஜீவகாருண்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளங்கவில்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்!

அக் கதையில் மிருகங்களையும் ஜீவர்களையும் கொல்லும் விஷயங்களிலும், மது மாமிசம் சாப்பிடும் விஷயங்களிலும், சூது வாது செய்த விஷயங்களிலும், பெண்களை இழிவாய் நடத்திக் கொடுமைப்படுத்தின விஷயங்களிலும் சிறிதும் தயங்காத இராம—இலட்சுமணக் கூட்டங்களை இவ்வளவு தூரம் புகழ்ந்திருப்பதுமல்லாமல், அவர்களைக் கடவுளாகக் கருதச் செய்து, திராவிட மக்களைக் கொண்டே பூஜிக்கவும் வணங்கவும் புகழவும் செய்து விட்டார்கள். அதுபோலவே இராவணாதியர்கள் இந்த யாகத்தை வெறுத்ததல்லாமல் வேறொரு கெடுதியும்—இராம—இலட்சுமணாள் செய்த அளவுகூடச் செய்யாதவர்களை—திராவிட மக்களைக் கொண்டே இகழச் செய்துவிட்டார்கள். ஒரு வயிற்றில் பிறந்த இருவரில் ஒருவன் (இராவணன்) இராட்சதனாம்; ஒருவன் (விபீஷணன்) தேவ கணத்தைச் சேர்ந்தவனாம் (ஆழ்வானாம்)! என்ன புரட்டு? யோசித்துப் பாருங்கள்! ஒரு பெண்ணின் மூக்கையும் முலையையும் அறுத்த பாவிகள் கடவுளின் அவதாரங்களாம்! ஆயிரக்கணக்கான ஆடு, குதிரை, மாடு முதலியவைகளை மேற்கண்டபடி சித்திரவதை செய்து கொன்று தின்றவர்கள் தேவர்களாம்! இதிலிருந்து கடவுள்கள், தேவர்கள், பிராமணர்கள் ஆகியவர்களின் யோக்கியதைகளைச் சற்று நினைத்துப் பாருங்கள். திராவிட மக்களின் யோக்கியதைகளையும் ஏமாளித்தனத்தையும் எண்ணிப் பாருங்கள்!

இது நிற்க; இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம்! சொர்க்கத்திற்குக் காரணமானவைகளாம்! புண்ணியம் சொர்க்கம் என்கின்ற புரட்டைப் பாருங்கள்! ஜீவர்களைச் சித்திரவதை செய்தல் புண்ணியமாகவும், சொர்க்க லபிதமாகவும் இருந்தால் இனி பாவத்துக்கும் நரகத்துக்கும் காரணமான காரியம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. நமக்குப் புண்ணியம் சொர்க்கம் வேண்டுமானால் நமக்கு இஷ்டமானவர்களைப் பிடித்துக் கால் கைகளைக் கட்டிப்போட்டு, வாயில் மண்ணை அடைத்து, விதரைப்பிடித்து நசுக்கிக் கொன்றுபோட்டால்—புண்ணியமும் சொர்க்கமும் கிடைத்து விடும்போல் இருக்கிறது! வேண்டுமானால் சில மந்திரங்களையும் சொல்லிவிடலாம். இதில் நமக்கு இரண்டுவித இலாபம் போதும்! சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்புச் சாதனங்கள் என்று பல தடவைகள் நான் சொல்லி வந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத்தவன் பொருளைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக, சொர்க்க நரகங்கள் எனும் பூச்சாண்டிகளைக் காட்டிப் பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றது.

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்திற்கு உண்மையான அர்த்தம் நல்ல விதத்தில் செய்யவேண்டு மானால், மனிதனின் மூர்க்க சுபாவமும், பழிவாங்கும் தன்மையும் சொர்க்கம் நரகம் என்னும் வார்த்தைகளால் கற்பனைகளாகப் பிரதிபலிக்கின்றன என்பதாகும்.

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்தைப் பிரச்சாரம் செய்யவே யாகங்கள் முதலியன செய்யப்படுகின்றன.

யாக சம்பந்தமான வேத சாஸ்திர ஆதாரங்கள் நமக்குப் பொருத்தமானவைக ளாகுமா? நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியுமா? இப்படிப்பட்ட கொடுமைக்கும் கொலைபாதகத்துக்கும், சித்திரவதைக்கும் ஒரு கடவுள் சொர்க்கத்தைக் கொடுப்பதாக இருந்தால் கடவுளின் தன்மையாகக் கூறப்படும் கருணை என்று சொல்வது உண்மையாய் இருக்க முடியுமா? கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் சித்திரவதை செய்து ஆகுதி கொடுப்பதைக் கடவுள் விரும்புகிறார் என்றால்—ஜீவர்களை எல்லாம் கடவுள் உற்பத்தி செய்தார் என்பது உண்மையாக இருக்க முடியுமா? கடவுள் பேராலேயே இப் பேர்ப்பட்ட காரியங்கள் நடப்பதை ஒரு கடவுளோ—அரைக் கடவுளோ அணுவளவு கடவுளோ இருந்தால் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அல்லது, கடவுளுக்கு இது தெரியாது என்று சொல்லிவிட முடியுமா? இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றுவதற்குச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரச்சாரமே யொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்குச் சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக்கிறாராம்; பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்களுடைய யோக்கியதைகளையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த யாகங்கள் இப்பொழுது ஏன் செய்யப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? சனாதன தர்மங்கள் கெட்டுப்போய் விட்டனவாம்! எதனால் என்று கேட்டீர் களானால், சாரதா சட்டம் செய்யப்பட்டு விட்டதாம். தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், கோவில் பிரவேசச் சட்டமும் இப்போது இந்திய சட்டசபையில் இருக்கின்றனவாம்! அவை நிறைவேறிவிடும் பட்சத்தில் சனாதன தர்மத்துக்குப் பெரிய ஆபத்து வந்துவிடுமாம்! ஆதலால், யாகங்கள் செய்வதன் மூலம் அவைகளைத் தடுத்து, சனாதன தர்மத்தை நிலை நாட்டவேண்டுமாம்! ஆகவே, சனாதன தர்மங்கள் என்பவை பார்ப்பனரல்லாத மக்களுக்கு, பார்ப்பனர் ஒழிந்த மற்ற மனித சமூகத்திற்கு எவ்வளவு மோசமானதும், கெடுதியானதும், சுயமரியாதைக்கு விரோதமான காரியம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இதிலிருந்து பார்ப்பனர் புரட்டுகளை நீங்கள் தெரிந்து கொள்ளக்கூடும் என நினைக் கிறேன். சில பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதும், சில பார்ப்பனர்கள் கோவில் பிரவேசம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதும்; மற்ற பார்ப்பனக் குருமார்கள், மடாதிபதிகள், சாதித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து—சட்டம் ஒழியவும், பிரயனத்தப்படுபவர்கள் ஒழியவும் யாகம் செய்வதும், யாகத்தை ஆதரிப் பதுமாயிருந்தால் இதற்கு என்ன அர்த்தம் சொல்லுவது என்று உங்களையே கேட்கிறேன்!

நான் இங்கு வரப்போவதாய்ப் பத்திரிக்கையில் தெரிந்துகொண்டவுடன், இரண் டொரு பார்ப்பன நண்பர்கள் என்னைப் பரிகாசம் செய்தார்கள். அது என்னவென்றால், 'நீங்கள் இப்பொழுது உலக மக்கள் பொது விஷயங்களில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கும்போது, எங்கோ இரண்டொரு பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு வியாபாரமாய் யாகம் செய்து பிழைக்கிற காரியத்தைப் பிரமாதமாய்க் கருதி, அதற்காக நீங்கள் போகலாமா?' என்று கேட்டார்கள். இந்த யாகங்களை யாரோ இரண்டொரு பார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்பு வியாபாரம் என்று எண்ணிவிட முடியுமா? இதற்கு எல்லாப் பார்ப்பனரும் பணம் கொடுத்திருக்கிறார்கள். சங்கராச்சாரி

முதலியவர்கள் ஆதரவளித்து இருக்கிறார்கள். அய்யங்கார்ப் பார்ப்பனர்களுக்கு யாகம் விரோதமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்போதைய யாகத்தில் அய்யங்கார்ப் பார்ப்பனர்களும் கூடச் சேர்ந்து ஆதரவளித்தும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியிருக்க, இரண்டொரு பார்ப்பனர்கள் என்று எப்படிச் சொல்லிவிட முடியும் ?

அப்படியானால், இவ்வளவு கூச்சல் ஏற்பட்ட பிறகாவது சில முக்கியமான பார்ப்பனர்கள் ஏன் ஒன்றுகூடி ஒரு அறிக்கையை வெளியிடக் கூடாது? "இந்த யாகம் பார்ப்பன சமூகத்தின் சார்பாகவோ, மதத்தின் தத்துவப் பிரகாரமோ நடப்பதல்ல; நாங்கள் அதை ஆதரிப்பதில்லை என்பதோடு வெறுக்கவும் செய்கிறோம்" என்று தோழர்கள் மகாகனம் சாஸ்திரியாரும், சர். சிவசாமி அய்யரும், சர். சி. பி. இராமசாமி அய்யரும், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியாரும், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஒரு அறிக்கை வெளியிடட்டுமே? இவர்களெல்லாம் தங்களைப் பெரிய சீர்திருத்தவாதிகளென்றும், தாங்களே இந்தியமக்களின் பிரதிநிதிகள் என்றும், எல்லா விஷயங்களுக்கும் தாங்களே அபிப்பிராயம் கொடுப்பவர்கள் என்றும் தாராளமாய் விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்ததுடன் போதிய விளம்பரமும் பெற்றிருக்கிறார்கள். ஏன் இவர்கள் வாய்திறக்கக் கூடாது என்று கேட்கிறேன். காங்கிரஸ்கட்சிப் பார்ப்பனராவது ஏன் அறிக்கை வெளியிடக் கூடாது? தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் முந்திரிக்கொட்டைபோல் உலக விஷயங்களுக் கெல்லாம் முன்னால்வந்து அபிப்பிராயம் கொடுப்பவர்—இதற்கு ஏன் வாய்மூடிக்கொண் டிருக்கிறார் என்று கேட்கிறேன்.

தீண்டாமைவிலக்கு மசோதாவையும், கோயில் பிரவேச மசோதாவையும் காங்கிரசின் சார்புடைத்ததல்லவா என்றும், தோழர் காந்தியார் இம் மசோதாக்கள் நிறைவேறவேண்டி கவலை எடுத்துக்கொண்டு, இந்திய சட்டசபை அங்கத்தினர்களிடம் பிரச்சாரம் செய்து, ஆதரவும் தேடிவருகிறார்களா இல்லையா என்றும் கேட்கிறேன். இப்படிப்பட்ட காங்கிரஸ் அனுமதிபெற்ற—காங்கிரஸ் சார்பான மசோதாக்களை ஒழிப்பதற்கு யாகம்செய்தால் காங்கிரஸ்வாதியான தோழர் சத்தியமூர்த்தியின் கடமை என்ன என்று கேட்கின்றேன்.

தஞ்சை ஜில்லா பார்ப்பனர்கள் வருணாசிரமக்காரர்கள்; அவர்கள் தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் கோயில் பிரவேச மசோதாவுக்கும் எதிராகவும், சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கும் தகுதியுடையவர்களையும் அந்தப்படி செய்வதாக வாக்களிப்பவர்களையும் தான் தேர்ந்தெடுப்பார்கள். அப்படியிருக்க, தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரி அவர்கள் அந்தத் தொகுதியில் நிற்பதென்றால் அவர்கள் எப்படிப்பட்டவராய் இருக்கக்கூடும் என்று யோசித்துப் பாருங்கள்! தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த இரண்டு மூன்று மசோதாக்களையும் ஆதரிப்பதாக இதுவரை எங்கும் சொல்லவே இல்லை. அன்றியும் தீண்டாமை விலக்கு, கோயில் பிரவேசம் ஆகிய காரியங்களுக்குச் சட்டம் செய்யக்கூடாது என்று தஞ்சை, திருச்சி ஜில்லாவில் பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட பார்ப்பனர்கள்தாம் காங்கிரஸ் தலைவர்கள் மாத்திரமல்லாமல், தோழர் காந்தியால் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைப் போன்று சில பார்ப்பனரல்லாதாரும் இருக்கிறார்கள்.

உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால்—இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோட்சம், கர்மம், முன்ஜென்மம், கடவுள் செயல் என்கின்ற பித்த லாட்டங்களுக்கு அடிமைப்படக் கூடாது.

எத்தனையோ வருஷ காலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கி இருக்கிறது? யாகம், எக்கியம் கிரமமாய்ச் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான இராமன், அரிச்சந்திரன் ஆகியவர்கள் காலத்தில் இருந்த அக்கிரமம், அயோக்கியத்தனம், கொலை

பாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆகையால், நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!

[சென்னையில், 3-6-1934-ல் சொற்பொழிவு—'புரட்சி' 10-6-1934]

7. நாகரிகம் எது?

தலைவரவர்களே! தோழர்களே! மாணவர்களே!

நாகரிகம் என்ற வார்த்தைக்குப் பொருளே பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் 'நாகரிகம்' என்பதற்கு ஒரு தனிப் பொருள் கூறிவருகிறார்கள். 'கண்ணோட்டம்' என்ற தலைப்பின் கீழ், குறளில் நாகரிகம் என்ற வார்த்தை வள்ளுவரால் உபயோகிக்கப்பட்டிருப்பதாக நான் 10, 20 வருஷங்களுக்கு முன் பார்த்ததாக ஞாபகம். அது தாட்சண்ணியம், அடிமை என்கின்ற பொருளில் உபயோகப்பட்டிருப்பதாகவும் எனக்கு ஞாபகம்

நாகரிகம் என்கின்ற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக்கொண்டு பேசினாலும் மக்கள், சமூகம், நடை, ஆகாரம் மற்றும் எல்லா பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால் இவைகள் வேறுபட்டிருக்கின்றனவென்று கூறமுடியாது. எப்படியோ, எல்லாம் மாறுதலில்தான் போய்க்கொண்டிருக்கிறது.

நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்துவந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடியும் கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க்கொண்டிருக்கிறது. மேல்நாட்டுப் பெண்களும் தெருக்களில் தெருக் கூட்டுவது போன்ற ஆடைகளை முன்பு அணிந்துவந்தார்கள். அந்தக் காலத்தில், துணிகளைத் தூக்கிப் பிடித்துக்கொள்ள, பணம் படைத்தவர்கள் ஆட்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரிகம். இப்பொழுது என்னவென்றால் ஆடை விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களும் எல்லாம் சுருக்கிக்கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரிகம் என்றுதான் கருதுகிறோம்.

நாம் இவைகளைப் பற்றியெல்லாம் பேசும்பொழுதும் யோசிக்கும்போதும் எந்தவித மாறுதலும் இல்லாமல்—அதாவது சாதி, மதம், தேசம் என்ற பற்றுதல்களை விட்டு விட்டு, Freeயாக சுயேச்சையாகச் சீர்தூக்கிப் பார்த்தால்தான் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுதுதான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு 'சிவ, சிவ,' என்று ஜெபிப்பதுதான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்தமானங்கள் மேற்சொன்ன விஷயத்தைக் கேலி செய்கிறது.

கணவன், மனைவி என்கின்ற இரு சாரார்களை எடுத்துக்கொண்டாலும், முன்பு—கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடுப்பூதுவதே ஒரே கடமை என்று நடந்துவந்த பெண்களைப்பற்றிப் பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால், இன்றோ, கணவனிடம் மனைவியானவள், 'நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப் பட்ட மாடா? ஜாக்கிரதையா யிருந்தால் சரி; இல்லாவிட்டால் எனக்குச் சம அந்தஸ்தும், சம உரிமையும், சர்வ சுதந்திரமும் உண்டு!' என்று கர்ஜனை செய்யும் பெண்களையே நாகரிகம் வாய்ந்தவர்கள் என்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப்பற்றியும் மதத்தைப்பற்றியும் பேசுவதுதான் வித்வத் தன்மையாக இருந்தது. ஆனால், அது இன்று குப்பையாகி பரிகசிக்கத் தக்கதாக ஆகி விட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத முரட்டுப் பிடிவாதத்தில் முன்பு

நம்பிக்கையிருந்ததை சிலாகித்துப் பேசினோம். ஆனால் இன்றையதினம் பிரத்தியட்சமாக எதையும் எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்துவதையும் விஞ்ஞானம் போன்ற அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்களையுமே நாம் பெரிதும் மதித்துவருகிறோம்.

நாகரிகம் என்பது நிலைமைக்கும், தேசத்துக்கும், காலப்போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. கால தேசவர்த்தமான வழக்கத்தையே ஒட்டி நாகரிகம் காணப்படுகிறது.

காலப்போக்கானது எந்தவிதத் தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை; ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும் புரட்சி ஏற்படவும் செய்கின்றது.

மீசை, தலைமயிர் இவைகளைப்பற்றிப் பலர் பேசினார்கள். எது நாகரிகம் என்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீரணத்துக்கு வந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக்கொண்டு போகத்தான் செய்கின்றது.

ஒரு விஷயமானது வாய்ச் சாமர்த்தியத்தினால் செலாவணியாகிவிடும். அது மெய்யோ பொய்யோ—சரியோ தப்போ எப்படியும் இருக்கலாம்.

நாம், ஏன் எதற்காக உழைத்துப் பாடுபடவேண்டும்? பகுத்தறிவு படைத்த நாம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டுமா? நாகரிகம் என்பது சதா உழைத்துத்தான் உண்ண வேண்டுமா? என்ற கேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம், தியாகமின்றி—நலம்பெற முயற்சிக்கலாம். இது நாகரிகமாகக் கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரிகமாகப் பாவிக்கப்பட்டிருந்தது; பின்பு குப்பையில் தள்ளப்பட்டது. பிறகு அது மீண்டும் வெளிப்படுத்தப்பட்டு, அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு, இராட்டை சுற்றுவதும் தக்ளி நூல் நூற்பதும் நாகரிகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுவும் ஒழிந்துபோயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்த விதமான (தேசம், மதம், சாதி) பற்றுகளுமில்லாத பொது மனிதன் பொது நோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

நாம் ஒரு காலத்தில் தேசம், தேசியம், தேசப் பற்று என்பதை நாகரிகமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால், இன்றோ அவைகளையெல்லாம் உதறித்தள்ளி மனித ஜீவகாருண்யம், உலக சகோதரத்துவம், மக்கள் அபிமானம் (Citizen of the World Humanism) என்று கருதுவதையே பெரிதும் நாகரிகமாகக் கருத முன்வந்துவிட்டோம்.

ஒரு காலத்தில் நாகரிகமாகக் கருதிவந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக்கொண்டு, ஒவ்வொருவரும் தாங்கள் அதிக மேல்சாதிக்காரனாவதற்குச் சைவ, வைணவப் போக்கைப் பற்றிக்கொண்டு, பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தங்கள் மதத்தைச் சிலாகித்துப் பிதற்றிக்கொண்டும் வந்தான். ஆனால், இன்றைய தினம் இவைகளையெல்லாம் புத்திகெட்டதனமென்றும், முற்போக்குக்கு முரணான செயல் என்றும் கூறி, வெகுவாகக் கண்டனம் செய்து வருவதைக் காண்கிறோம்.

ஒரு காலத்தில் தனித் தனித் தத்துவம் நாகரிகமாகக் கருதப்பட்டது. உதாரணமாக, ஒரு தனித் தனிச் சாதி நன்மையும், தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால், ஒரு சாதியின் அனுகூலம் பிறசாதியானுக்குப் பாதகம் என்பதையும், ஒரு தேச நன்மை மற்றொரு தேசத்துக்குப் பொல்லாங்கு என்பதையும் நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்து விட்டோம்.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப் பற்றி வற்புறுத்தி இங்குகூற விரும்புகிறேன். அதாவது, நாம் அனுபவ முதிர்ச்சியால், அறிவு ஆராய்ச்சியால் நாம்

முற்போக்காகக் கொண்டு வருகிறோம் என்பதேயாகும். நாம் எல்லா மனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக்கிறோம். உதாரணமாக, வியாபாரிகளை மக்கள் சமூகத்தின் நலனைக் கெடுத்து இலாபமடையும் கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும், லேவா தேவிக்காரர்களை மனித சமூக நாச கர்த்தாக்களென்றும், மத ஆதிக்கங்கொண்ட வர்க்கத்தினர்களை மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக்கிறோம்.

நாகரிகம் என்பது பிடிபடாத விஷயம் என்று முன்பே கூறினேன். நம் நாட்டுப் பெண்கள் எப்படி (Belt பெல்ட்) கட்டாமல் சேலை கட்டுகிறார்கள் என்றும், அது இடுப்பில் எவ்வாறு தங்கி இருக்கிறது என்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர்களைச் சேர்த்து முடிந்து கொள்கிறார்கள் என்றும், நாம் சாப்பாட்டுக்குத் தினம் ஓர் இலை (Plate) எப்படி செலவு செய்கின்றோம், என்ன மகத்தான நஷ்டம் என்றும் மேனாட்டார் ஆச்சரியப்பட்டு நம்மவர்களைக் கேட்பதையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையைச் சரியாக உணராததினால், சிலதை ஆச்சரியமாகக் கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ள சாதி அபிமானம், சொந்தக்கார அபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலைய வேண்டும். இல்லாவிட்டால் எந்த நல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு—போதிய ஆடையின்றிப் போன பெருமையைப்பற்றி ஒரு நண்பர் குறிப்பிட்டார். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமாகும்? சவுகரியத்திற்காகவும்—நன்மைக்காகவும் அங்கு அதிக ஆடைகளை பந்தோபஸ்துக்காக அணிந்து கொள்ளாமல் பிடிவாதத்தோடு—கேவலம், இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத்திற்காகக் குளிரால் விரைத்துப்போக இங்கிலாந்து வாசம் செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

புதிய எண்ணங்களும், புதிய எழுச்சிகளும், புதிய காரியங்களும் நிகழ்கின்றன. நீங்களும் காலப் போக்கின் உயரிய பலனை வீணாக்காது, பகுத்தறிவை மேற்போட்டுக் கொண்டு, ஜனசமுதாய நன்மையைத் தேடிப் பாடுபட முன்வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு.

[ஈரோட்டில் சொற்பொழிவு-'புரட்சி'—31-12-1933]

8. மக்கள் துயரம் நீங்க வழி

தலைவரவர்களே! தோழர்களே!

இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் மக்கள் சமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியில்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின்மீது கட்டக்கூடிய எந்த அமைப்பும் மக்கள் சமூகத்துக்கு நன்மையளிக்கக்கூடியது அல்ல.

ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படி சம அந்தஸ்தும், சம உரிமையும் உண்டோ அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும். அப்போதுதான், மக்கள் சுகமாக வாழமுடியும். ஏதோ தான் பிறந்த வேளையின் பலன் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான், மற்றொருவன் சுகத்தை அனுபவிக்கப் பாத்தியதை உடையவன்தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபடவேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணாகாது.

மக்களின் மனோபாவமும் வாழ்க்கை நடத்தும் முறையும் மாறினால் ஒழிய வேறொரு முறையாலும் நன்மையுண்டாகாது என்பது திண்ணம். தற்போதிருக்கும்

நிலைமையில் சுயராஜ்யம் வந்தால் குருட்டு நம்பிக்கையும் வைதிகமும்தான் வலுக்கும். தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக்கொள்ளுங்கள்; ஏழைகள் நிலைமை அங்கு எப்படியிருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்கா உலகின் செல்வத்திற்கே இருப்பிடமாய் இருந்தும்—அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித் தவிக்கிறார்கள்.

ஜெர்மனி நிலைமை என்ன? சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை உடையதென்று சொல்லும் இங்கிலாந்து சுயராஜ்ய தேசமேயாகும். ஆனால், அங்கு ஏழைகள் படும் துயரம் கொஞ்சநஞ்சமல்ல. சுயராஜ்யமுள்ள ஒவ்வொரு தேசமும் இப்படித்தான் இருக்கிறது. சுயராஜ்யமோ, அன்னிய ராஜ்யமோ, குடியரசோ, முடியரசோ எந்தவிதமான முறையாலும் மக்கள் சுகம் பெறமுடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்துவருகின்றது. ஆகையால், ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருதப் படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். சம தர்மத்தையும் பொதுவுடமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட அமைப்பு ஒன்றே மக்கள் சுகவாழ்க்கைக்குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராய் இருக்கக் கூடாதென்று கேட்கிறேன்.

உலகத்தில் பல வகைகளில் ஜீவராசிகள் மரணமடைகின்றன. பல நோய்களால் இறக்கிறவர்களின் தொகை சாதாரணமல்ல. மதத்தின் பெயரால் யாதொரு விவேகமுமில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். இன்னும் பல வழிகளில் மரணம் அடையும்போது மக்களின் உன்னத வாழ்க்கை அமைப்பை உத்தேசிக்கச் சிலரோ, பலரோ உயிரைத் தியாகம் செய்வதுகூட பெரிய காரியமாகுமோ?

மனிதனுக்கு மனிதன் எதற்காக வித்தியாசம் காண்பிக்கப்படவேண்டும்? அறிவுள்ள எவரும் இனி இந் நிலைமையைச் சகித்துக்கொண்டு ஒருகணமாவது வாழமுடியாது. பலாத்காரம் கூடாது. இம் முறைகளை மாற்ற பலாத்காரம் ஒருபொழுதும் வெற்றியடைய முடியாது. பலாத்காரம் பலாத்காரத்தையே பெருக்கும். உண்மையை மறைத்துவிடும். ஆகையால், மக்களுடைய மனத்தை மாற்றப் பாடுபடவேண்டியதுதான் முறையே ஒழிய, பலாத்காரத்தினால் சாதித்துவிடலாமென்று எண்ணுவது மனித இயற்கைக்கு விரோதமான தத்துவமாகும். இந்தத் தேசத்திலும் முன்னேற்றமுள்ளவர்களென்றும், பிற்போக்கானவர்களென்றும் இரண்டு கட்சிகளே இருக்கமுடியும். இப்படிப் பிரிக்கப்பட்டால் ஒழிய மக்கள் அபிவிருத்தியடைய மார்க்கமில்லை. நமது மக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய பகுத்தறிவு விருத்தியடைந்தால் ஒழிய மற்ற எந்த ராஜ்ய முறையாலும் ஒரு நன்மையும் விளைந்துவிடப் போவதில்லை.

[குடந்தையில், 8-7-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 9-9-1934]

9. மாறுதல்

தலைவரவர்களே! தோழர்களே!

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மனிதனும் அவனவன் வாழ்வில் முற்போக்கும், மாறுதலும் அடைந்துகொண்டே வருகின்றான். இதற்காகத் தனி இலட்சியம் தேவையில்லை. மரக்கட்டைபோல் உணர்ச்சியற்றவனாய் இருந்தாலும் அவன்கூட காலப்போக்கில் தானாகவே மாறுதலும் முற்போக்கும் அடைந்துதான் தீருவான்.

ஆனால், அப்படிப்பட்ட விஷயங்களில் நம்போன்றவர்கள் செய்யும் விசேஷ காரியம் என்னவென்றால், எப்டிப்பட்ட மாறுதல்—எப்படிப்பட்ட முற்போக்கு அவசியம் என்பதில் செலுத்தும் கவனமேயாகும்.

தானாகப் போய்க்கொண்டிருக்கும் முற்போக்குக்கும் மாறுதலுக்கும் தடையாயிருந்து அவற்றை வேறு வழியில் திருப்புவதனால் சில சமயங்களில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டு விடுகின்றது. அதற்கு எதிர்ப்பும் பழிப்பும் பலமாய் ஏற்பட்டுவிடுகின்றது. இப்படிப்பட்ட சமயங்களில் சிலர் பழமையை—யதாஸ்திதியைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு உபத்திரவப்படுகிறார்கள்; தொல்லைகளை விளைவிக்கிறார்கள்; இத் தொல்லையும் உபத்திரவமும் தங்கள் அறியாமையால் செய்வதுண்டு.

எப்படியிருந்தாலும் அபாயமான வழியில்—கெடுதி உண்டாக்கும் வழியில் மாறுதலும் முற்போக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமையாகும். மாறுதல் வரும்போது அதைக் கையாளுபவர்கள் துன்பத்துக்கும் பழிப்புக்கும் ஆளாவது என்பது புதிதல்ல; சரித்திரகால இயற்கையாகும். சாக்ரடீஸ், புத்தர், கிறிஸ்து, முகமதுநபி ஆகிய பெரியார்கள் இன்று எவ்வளவோ மக்களின் வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரியவர்களானாலும், அவர்கள் காலத்தில் எவ்வளவோ தொல்லைக்கும், இழிவுக்கும் பழிப்புக்கும் ஆளானதாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

அதுபோலவே, சில மாறுதல்கள் தற்கால மக்களுக்குக் கசப்பாய் இருந்தாலும், பிற்கால மக்களால் மதிப்பும் பெருமையும் பெறும் என்ற துணிவு எனக்குண்டு. அந்த நம்பிக்கையின்பேரில்தான் நாம் எந்த மாறுதலையும் திருத்தத்தையும் செய்யத் துணிய வேண்டுமே ஒழிய, நாம் இன்றே பாராட்டப்படவேண்டும் என்று கருதிக்கொண்டு செய்வது பயன்படாது.

கலியாணம், இழவு, வாழ்வு முதலிய துறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கந்தான் என்று முழுவதும் கூறுவது தகாது. கால தேச வர்த்தமானம் மக்களை அப்படிக் காலத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளச் செய்கின்றது. அதில் சிலவற்றிற்குச் சுயமரியாதை இயக்கம் துணை புரிந்தது என்று சொல்லலாம்.

[புதுக்கோட்டையில், 7-10-1934-ல் சொற்பொழிவு—' பகுத்தறிவு ' 14-10-1934]

பகுதி VII

அறிவு வளர்ச்சி

1. கல்வி

1. கல்வி விடுதலை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

விடுதலை என்பதை நாம் அடையவேண்டுமானால், அதற்கு நாம் எப்படி உழைக்க வேண்டும்? எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்க வேண்டும்? முற்போக்குக்கு எவ்வாறு பாடுபடவேண்டும் என்பதைப்பற்றி நாம் அவசியம் அறியவேண்டும்.

மக்கள் விடுதலையடைவதற்குரிய மார்க்கங்கள் என்று யோசித்தால் பல இருக்கின்றன என்பது விளங்கும். பொதுவாக மக்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியம் வேண்டியிருப்பவைகள் கல்விச் செல்வம், தொழில், சமூக சமத்துவம், பெண்கள் சமத்துவம், பெண்கள் விடுதலை ஆகியவைகளிலேயே நமக்கு முதன்முதலாக விடுதலை வேண்டியிருக்கின்றது. மற்ற தேசத்தாருடைய கல்விச் செல்வம், தொழில் சமத்துவம், விவாகம், விவாகரத்து ஆகியவைகளுடன் நமது தேசத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால்தான் நமது நாட்டின் தன்மை நமக்குச் சுலபமாக விளங்கும். அதோடு நமது நிலை இவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் அறிந்து அவைகளினின்று விடுதலையடையும் படியான மார்க்கங்களைத் தெரிந்து அதற்கெனப் பாடுபட்டோமானால் நமக்கு நிச்சயமாக வெற்றி ஏற்படும்.

தற்காலம் கல்வியானது நமது நாட்டில் மிக்க மோசமான நிலைமையில் இருக்கிறது. புள்ளிவிவரங்களின்படி 100-க்கு 10 பேரே படித்தவர்கள். இவர்களிலும் பிராமணர்களைத் தள்ளி, பிராமணரல்லாதார்கள் 100-க்கு எத்தனை படித்த மக்கள் இருக்கின்றார்கள் என்றால் 100-க்கு 5 பேர்கூட படித்தவர்கள் இருக்க மாட்டார்கள். அரசாங்க அறிக்கையிலும் பார்ப்பனரல்லாதாரில் அனேக வகுப்பார் கல்வியில் பின்னடைந்திருப்பதால், அவர்களுக் கென்று கல்விச் சம்பளம்கூடக் குறைத்திருக்கிறார்கள். பெண்களுக்குச் சம்பளமே இல்லை என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், மற்ற நாடுகளில் 100-க்கு 50, 60, 70 வீதமும், இன்னும் சில நாடுகளில், நமது நாட்டுப் பார்ப்பன சமூகம் போல 100-க்கு 100 பேர் படித்தவர்கள் உள்ளார்கள். நமது நாட்டில் மட்டும் 100-க்கு 90 பேர் தற்குறிகளாக இருப்பதேன்? அதுவும் பார்ப்பனரல்லாத சமூகம் 100-க்கு 95-ம், தீண்டாதார் சமூகம் 100-க்கு $99\frac{3}{4}$-ம், பெண்கள் 100-க்கு $99\frac{1}{2}$-ம் தற்குறிகளாக இருப்பதற்குக் காரணம் என்ன? இதற்கு அரசாங்கமா காரணம் என்பதை யோசித்துப் பாருங்கள்! இதற்குக் காரணம் கண்டுபிடிக்க இதுவரை நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்கிறோம்? அரசாங்கம் நமக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவில்லையா? அல்லது, அரசாங்கத்தில் பணமில்லையா? அல்லது, மக்களுக்குக் கல்வி கற்க வேண்டுமென்கின்ற ஆசை இல்லையா? என்பவைகளைக் கவனித் தோமானால் ஏன் மக்கள் கல்வி கற்கவில்லை என்பது விளங்கும்.

சகோதரர்களே! நமது சமூகம் இதற்குமுன் என்றைக்காவது கல்வி அறிவுடன் இருந்ததாகச் சொல்லக்கூடுமா என்பதை யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். சர்க்காரார் பார்ப்பனர்களுக்கு மட்டுந்தானா படிப்பு சொல்லிக் கொடுக்கின்றார்கள்? இல்லவே இல்லையே; எல்லோரையும் ஒன்றாய்த்தானே பாவிக்கிறார்கள்? ஆதலால் இதிலுள்ள சூழ்ச்சியை அறிந்தீர்களானால் விடுதலையின் உண்மைத் தத்துவம் விளங்கும். நமது மதத் தத்துவப்படிக்கு ஆதிகாலத்தில் இன்னின்ன சாதிதான் கல்வி கற்கவேண்டு மென்று சட்டங்களிருந்தன. படிக்க ஒருசாதியும், படிப்புச் சொல்லிக்கொடுக்க ஒருசாதியும்

இருந்து வந்ததோடு—அதிலும் இன்னது இன்னதுதான் படிக்கவேண்டுமென்பது ஆகிய திட்டங்களும் ஆதியிலிருந்தன. இவைகளை நாம் வெளியில் எடுத்துரைத்தால் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்; ஆட்சேபணை செய்பவர்கள் ஒருவருமில்லை.

ஆண் மகனின் நிலையைவிடப் பெண் மகளின் நிலைமை படிப்பு விஷயத்தில் மிக்க மோசமானதாகவே இருக்கின்றது. இதிலும் தீண்டாதார் எனப்படுவோர் நிலைமையே இன்னும் இதைக்காட்டிலும் மிக்க மோசமானதாகவேயிருக்கிறது. மக்களுக்குக் கல்வி அவசியமென்பதை அறிந்து மக்கள் ஒத்துக் கொண்ட போதிலுங்கூட, மேல் சாதிக்காரர்கள் என்பவர்கள் மற்றவர்கள் படிக்காமலிருப்பதற்குரிய பல தந்திரங்கள் இன்னமும் செய்துகொண்டு தானிருக்கிறார்கள். சில இடங்களில் தீண்டப்படாதாருக்குப் பள்ளிக்கூடங்களே இல்லை; அப்படிச் சில இருந்த போதிலுங்கூட, போதுமான உபாத்தியாயர்கள் அப் பள்ளிக்கூடங்களுக்கு அகப்படுவதில்லை. அப்படியொருசமயம் பள்ளிக்கூடமும் உபாத்தியாயரும் இருந்த போதிலுங்கூட தீண்டாதாரின் மக்கள்—சில தெருக்களில் நடந்து அப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல உரிமை இல்லை. அவர்கள் அத் தெருக்களில் நடமாடக்கூடாதெனத் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் மீறிப் படிக்க ஆரம்பித்தாலோ அவர்கள் படிப்பதற்குப் போதிய பணம் இல்லை. அவர்களுக்குப் போதுமான சாப்பாடு இல்லை. இத்தகைய கஷ்டங்களை நாம் எப்படி நீக்கவேண்டும் என்று பார்த்தால், நமது சமூகத்திற்கு மத விஷயத்தில் உள்ள முட்டுக் கட்டைகளை முதலில் நீக்குவதுதான் எல்லோரும் படிக்க முயற்சி செய்வதாகும். மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு எல்லோரும் படிக்க வேண்டுமென்பது அறியாமையேயாகும். ஆதலால், மதக் கட்டுப்பாட்டை ஒழிக்க முதலில் முயற்சிக்கவேண்டும். அவ்வாறு முயற்சிப்பதற்கும் நமக்குத் தைரியம் வேண்டும். அவ்வித தைரியம் நமக்கு ஏற்பட்டால்தான் கல்வி விடுதலையுமேற்படும்.

இவைகளைவிட்டு, சரஸ்வதி கடாட்சமில்லை; பணமில்லை; அரசாங்கத்தார் கல்வி கற்பிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால் நாம் விடுதலை அடையத் தகுந்த புத்தியில்லாதவர்கள் என்றுதான் சொல்லிக்கொள்ள வேண்டும். ஏனெனில், பிராமணர்களும் இந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டும், சாதாரண வரும்படியுள்ளவர்களுமாயிருப்பதோடல்லாமல், வேறு அரசாங்கத்தில் உள்ள பணக்காரர்களல்லர். அவர்கள் குமாஸ்தாக்களாகவும், காபி கிளப்புக்காரர்களாகவும், புரோகிதர்களாகவும், தட்சணை வாங்குபவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருந்தும்கூட அவர்களில் 100-க்கு 99 பேர் எப்படி வாசிக்க முடிந்தது என்பதை யோசித்தோமானால், அப்பொழுதுதான் சூட்சுமம் புலப்படும். ஆகவே, நம் நாட்டில் இப்பொழுது இருந்துவரும் மத தர்மங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் சிலரைத் தவிர்த்துப் பெரும்பாலான மக்கள் படிக்கவே முடியாது. நமது மத தர்மப்படி இன்னின்னவர்கள் கற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் இருக்கிறது. அந்த முறையை அஸ்திவாரமாக வைத்தே இன்றைய உபாத்தியாயர்கள் எல்லாம் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் படிக்கும் பிள்ளைகள் 100-க்கு 90 பேர்கள் தலை எடுக்கமுடியாமல் போகின்றது. ஆகையால், இந்த முறைகள் நடைபெறும்படி அனுமதித்துக் கொண்டிருப்பதா, அல்லது இவைகளை அழிப்பதுதான் நமக்கு விடுதலையை அளிக்குமா?

[மதுரை மாவட்டம், சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 28-6-1931]

கல்வி விஷயத்தில் நம்நாட்டு மக்களுக்கு இரண்டு முக்கிய விஷயம் கையாளப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஒன்று, கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படவேண்டும்.

மற்றொன்று, மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்படவேண்டும்.

['குடி அரசு'—தலையங்கம்—22-8-1937]

உ. குழந்தைகள் கல்வி

இந்நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நாம், நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ள ஏதாவது சாதனமிருக்கிறதா என்று பார்ப்போம். நாம் எப்படித் தெரிந்துகொள்ளுவது?

பள்ளியில் படிக்கும்போது ஏதாவது தெரிந்துகொள்ளலாமா என்றால் அங்கு தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் கிடையாது; எவ்விதப் பாடப் புத்தகமும் கிடையாது. 'அரிவரி' பாலபாடம் படிக்கும்போதும் 'அய்யர்'-'பிராமணன்' போன்ற வார்த்தைகள்தாம் காணப்படுகின்றனவே அன்றித் தமிழர்-திராவிடர் என்கின்ற வார்த்தைகளுக்கு அங்கு இடமோ, அவகாசமோ கிடையவே கிடையாது.

மேல் வகுப்புக்கு வந்து அங்கு ஏதாவது தெரிந்துகொள்ளலாம் என்றாலோ அதற்கும் இடம் இல்லை. தமிழ் நாட்டுக்குச் சரித்திரமே இல்லை. இந்து தேச சரித்திரம் என்பதை எடுத்துக்கொண்டால் இராமாயண-பாரதமும், அசோகன்-மவுரியன் ஆட்சியும், முஸ்லிம்-வெள்ளையர் ஆட்சியும்தான் விளக்கப்படுமே ஒழிய சேர, சோழ, பாண்டியரைப் பற்றியோ, திராவிடர்-தமிழர் என்கின்ற ஆட்சியைப் பற்றியோ காண்பது மிகவும் அருமையேயாகும். அவைகள் எந்த வகுப்புக்கும் பாடமாக இல்லை. அப்படி ஏதாவது எங்காவது காண முடிந்தாலும் அது பெரும் பித்தலாட்டமும், மோசடியுமாகத்தான் காணப்படலாமே தவிர, யோக்கியமாய், சரித்திர ஆதார முறையாய்க் காண்பதற்கு இடமே இல்லை.

ஆகவே, நமது பிள்ளைகள் நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள இடமும் இல்லை, வசதியும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

இன்றும், சொல்லுகிறோம்—தமிழன் ஆரியருக்கு முன் என்ன சமயத்தவனாய் இருந்தான், அவன் கடவுள் எப்படிப்பட்டது, அவனது வாழ்க்கை முறை எப்படிப்பட்டது—என்பன போன்றவைகளைக் காட்ட, சரியான சரித்திர ஆதாரம் ஒன்றும் காணப்படுவதில்லை.

'தமிழர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள்' என்பதற்கே ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பள்ளிக்கூடத்திலோ, சரித்திரங்களிலோ நம்மைப்பற்றித் தெரிந்கொள்ள ஆதாரங்கள் இல்லை என்பதோடு-தமிழ் நூல்கள் என்பவைகளிலாவது தனித் தமிழர் நிலை எப்படி இருந்தது என்றும், அனுபவ பூர்வமான அவர்களது வாழ்க்கை எப்படி இருந்தது என்றும் தெரிந்துகொள்ளப் போதிய ஆதாரங்கள் கிடையாது.

இன்று நம் கண்முன் காணப்படும் தமிழர் வாழ்க்கை என்பதெல்லாம் ஆரியரைப் பார்த்து அதுபோல் வேஷம் போட்டுக்கொண்டு, அவர்களது சாதனங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களைப் பின்பற்றுவது என்பதல்லாமல், வேறுஒன்றும் காண்பதற்கு இல்லை. ஆரியர் கடவுள்கள், அவர்களது சமயங்கள், அவை சம்பந்தமான ஆரியர் கதைகள், அவர்களது ஆகமங்கள், அவர்கள் சாஸ்திரங்கள், அவர்களது நீதி நூல்கள் ஆகியவைகளை நம் பண்டிதர்கள் கற்றுக்கொண்டு, அவை நமக்குப் போதிக்கப்படுவனவாக இருக்கின்றன.

இவைகளை மாற்றித் தமிழர்களுக்கு என்று மற்ற நாட்டாரையும் மற்ற இனத்தாரையும் போல் ஏதாவது பாடங்கள், சரித்திரங்கள் முதலியவை கண்டுபிடித்து அல்லது உண்டாக்கி நம் பிள்ளைகளுக்குப் பாடமாகக் கீழ்வகுப்பில் இருந்தே படிப்பிக்கப்பட்டால் ஒழிய, எப்படி அவர்கள் தங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளமுடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப்படி இல்லாததாலேயே, நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள நம் பண்டிதர்களே வழிகாட்டிகளாய் இருந்துகொண்டு—அவர்களது உச்சிக் குடுமியையும் சாம்பல் மண் பூச்சுக்களையும்—அவர்கள் பாராயணம் செய்யும் புராணக் கதைகளையும் நாம் பின்பற்றிக் கடைந்தெடுத்த முட்டாள்களாக நேர்ந்ததோடு ஆரியருக்கும், ஆரியத்துக்கும் மீளா அடிமைகளாக ஆகியிருக்கும்படி நேர்ந்திருக்கிறது.

தமிழர்களின் படிப்புக்குக் கீழ்வகுப்புகளிலாகட்டும், இராமாயண–பாரதக் கதைகள் ஏன் சேர்க்கப்படவேண்டும்—அதுவும் தேச சரித்திரத்தில் ஏன் சேர்க்கப்படவேண்டும்?

பஞ்ச காவியங்களைவிட இராமாயணம், பாரதம் எப்படிச் சரித்திர சம்பந்தமான கதைகளாகும்?

பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ள தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்குமானால் இராமாயண–பாரதக் கதைகள் சரித்திரத்திலும், வசன பாடத்திலும் சேர்க்கச் சம்மதித்து இருப்பார்களா? பண்டிதர்கள், உபாத்தியாயர்கள், தமிழ்ச் செல்வர்கள் இக் குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக நம்மீது பாய்கின்றார்களே தவிர, புராண இதிகாசங்கள்—அதுவும் தமிழர்களுக்குச் சம்பந்தமில்லாததும், தமிழர்களுக்கு இழிவைத் தரக்கூடியதும், தமிழர் முற்போக்கைத் தடுக்கக் கூடியதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமான விஷயங்கள் கொண்ட புராண இதிகாசங்கள்—சமய ஆதாரங்கள் போலவும், புண்ணிய சரித்திரங்கள் போலவும், தேச சரித்திரங்கள் போலவும் நம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

இவ்விஷயத்தில் இனியாவது தமிழ்ப் பண்டிதர்கள், தமிழ் உபாத்தியாயர்கள், உண்மைத் தமிழ்ப் பெற்றோர்கள் ஒன்று கூடி மாநாடு கூட்டி—இம்மாதிரி விஷயங்கள் பள்ளிப் படிப்பில் நுழையாமல் இருக்கும்படி செய்யக்கூடாதா என்று கேட்கின்றோம்.

தமிழிலே, தமிழ் மொழி இலக்கியத்திலே, தமிழர் நல்வாழ்விலே, தமிழர் தன்மானத்திலே, தமிழர் தனி ஆட்சியிலே கவலையுள்ள நம் செல்வர்களுக்கு—இந்தக் காரியமெல்லாம் முக்கிய கடமை அல்லவா என்றும் கேட்கிறோம்.

தலைமுடி எடுத்துக்கொண்டு, காவடி தூக்கி ஆடி, பழனிக்கும் திருச்செந்தூருக்கும் சென்று வந்துவிட்டால் தமிழர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்று அர்த்தமா—அல்லது, தாங்கள் பிறந்ததற்குப் பயன் ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தமா? பட்டம், பதவி, நிர்வாகப் பெருமை பெற்றுவிட்டால் தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தாய்விட்டது என்று அர்த்தமா?

நிலை குலைந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி, அவர்களுக்குத் தன்மான உணர்வும் ஊட்ட வேண்டாமா? தமிழ் மக்களை—அவர்கள் படித்தவர்களானாலும், பண்டிதர்களானாலும், மந்திரி, கவர்னர்–வைசிராய் நிர்வாகசபை மெம்பர் ஆனாலும் பகுத்தறிவு விஷயத்தில் மரக் கட்டையாக்கிவிட்டு, தமிழரல்லாதவர் அடிமைப் படுத்திச் சுரண்டிக் கொள்ளைகொள்வதைத் தடுக்கவேண்டாமா?

தமிழ் மக்களின் நலத்தில் கவலை உள்ளவர்கள் எது எதற்கு என்றுதான் அழுவது? தமிழர்க்குத் தொண்டாற்றுவது என்றால் என்னதான் அர்த்தம்?

ஆகவே, பள்ளிகளில் உள்ள சுத்தத் தமிழாசிரியர்களை, இனியாவது இப்படிப்பட்ட புத்தகங்களைப் பாடமாக வைக்காமல் இருக்கக் கேட்டுக்கொள்வதோடு, பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ளவர்கள் இனியாவது இவ்விஷயங்களைக் கவனித்து, புத்தகங்களை அனுமதிக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். நமக்குச் சுதந்திரம் வந்த இலாக்காக்களின் கதியே இப்படி இருக்குமானால், இத் தமிழர்கள் எந்த முகத்தைக் கொண்டு எல்லா இலாக்காக்களிலும் முழுச் சுதந்திரம் கேட்க முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

['குடிஅரசு'–தலையங்கம்—12-2-1944]

3. அறிவும் படிப்பும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

கல்வி என்பதைப் பற்றி நமது மக்கள் பெரும்பாலும் புத்தகப் படிப்பையும், குருட்டு உருப்போட்டுத் தேர்வுகளில் தேறிவிடுவதையுமே கல்வி என்று கருதிக்கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, ஆங்கிலத்தில் பி.ஏ., எம். ஏ. படித்துப் பட்டம் பெற்றவர்களையும் தமிழ்ச் சங்கத்தில் படித்து வித்துவான்பரீட்சை பாஸ்பண்ணி பட்டம் பெற்றவர்களையும் கல்வியாளர் என்று சொல்லிவிடமுடியாது. அவர்கள் ஏதோ ஒரு வித்தையில், அதாவது குருட்டு உருப்போட்டு ஒப்புவிக்கக் கூடிய ஒரு வித்தை அல்லது ஒரு சாதனத்தில் தேர்ந்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது, அலமாரியில் உள்ளபுத்தகங்களைப் போல், இவர்களும் தங்கள் மனத்தில் பல விஷயங்களைப் பதியவைத்திருக்கும் 'ஒரு நகரும் அலமாரி' என்றுதான் சொல்லவேண்டும்.

படிப்பு வேறு, அறிவு வேறு என்பதை ஞாபகத்தில் பத்திரமாய் வைத்துக் கொள்ளுங்கள். படித்த மூடர்களுக்கு எத்தனை உதாரணம் வேண்டுமானாலும் சொல்லலாம். உதாரணமாக, பூகோள சாஸ்திரத்தில் எம். ஏ. பட்டம்பெற்ற ஒரு உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் சூரிய, சந்திர கிரகணத்தைப் பற்றி வானசாஸ்திர பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, 'பூமியும் சூரியனும், சந்திரனும் ஒன்றுக்கொன்று சுற்றுவதன் பயனாய் ஒன்றால் ஒன்று மறைக்கப்படுவதால் அதன் ஆகுருதியும் ஒளியும் மறைவுபடும். அதைத்தான் சந்திரகிரகணம் என்றும் சூரியகிரகணம் என்றும் சொல்லுவது' என்று பாடம் சொல்லிக்கொடுப்பான். ஆனால், சந்திரகிரகணமோ, சூரியகிரகணமோ வந்துவிட்டால், 'சூரியன் என்கின்ற ஒரு தேவதையை இராகு, கேது என்கின்ற தேவதைகள் துன்பப்படுத்துவதாகவும், இது அவைகளுக்கு ஏற்பட்ட சாபத்தீடு என்றும், அதற்காக மக்கள் தோஷ பரிகாரம் செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு, கிரகணம் பிடிக்கும்போது ஒரு ஸ்நானமும், விடும்போது ஒரு ஸ்நானமும் மத்தியில் மந்திரங்களும் ஜபங்களும் செய்வான்; சாப்பிடாமல் பட்டினியாகவும் இருப்பான். மற்றும் தான்பிறந்த நேர கிரக நட்சத்திரமும் கிரகண நேர நட்சத்திரமும் ஒன்றாயிருந்தால் நெற்றியில் பட்டங் கட்டிக்கொண்டு முழுகுவான். ஆகவே, அவனது படிப்பு வானசாஸ்திரப் பரீட்சையில் தேறத்தான் உபயோகப்பட்டதே தவிர, அந்த எம். ஏ. பட்டம் பெற்றவனுக்கு அது அறிவுக்குச் சற்றும் பிடிக்கவேயில்லை. ஆனால், நமது தமிழ்ப் பண்டிதர்கள் நிலையோ அப்படிக்கூட இருக்க முடிவதில்லை. அவர்களுக்கு உள்ள படிப்பே முட்டாளாவதற்கு முதல் தர மருந்து போன்றது. புராணங்களைத் தவிர, அவர்களுக்கு வேறுபடிப்பே கிடையாது. இலக்கணம், நீதிநூல் என்று சிலவற்றைப் படிப்பார்கள். ஆனால், அவைகளும் ஆரம்பமும் மூடத்தனமாகவே இருக்கும்; முடிவும் மூடத்தனமாகவே இருக்கும். மத்திய பாகமோ உலக வாழ்க்கைக்குப் பயன்படாததாகவும் அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமானதாகவுமிருக்கும். ஆங்கிலம் படித்த பட்டதாரிகள் என்பவர்களுக்காவது அறிவாளர்களாவதற்கு ஏற்ற பல நூல்கள் உண்டு. தமிழ்ப் பட்டதாரிகளுக்கோ மடையர்களாவதற்கேற்ற நூல்களே உண்டு. அதாவது, அவை பெரிதும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்பன போன்றவைகளைத் தவிர இலக்கணம், இலக்கியம் என்று சிலவும் கூட்டி இவைகளை உருப்போட்டுப் பரீட்சை கொடுத்தவர்களாவார்கள். ஆகவே, ஆங்கிலப் பட்டதாரிகளிடம் எதிர்பார்க்கும், அதாவது அறிவியல் புத்தகங்கள் படிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்த அளவுகூடத் தமிழ்ப் பட்டம்பெற்ற பண்டிதர்கள் என்பவர்களிடம் எதிர்பார்க்கமுடியாது. ஆகவே, மனிதன் முழுமூடனாக வேண்டுமானால் புராணங்களையும் இதிகாசங்களையும் படித்துப் பண்டிதனாகவேண்டியதுதான் என்பதற்கிணங்கித்தான் நமது படிப்பும், அறிவும் இருக்கின்றது. தமிழ்ப் பண்டிதர்கள் என்பவர்களுடைய யோக்கியதையை நான் பார்த்த பிறகு, மக்களை அறிவுக்காக—தமிழைப் படி என்று சொல்லுவது மிக்க மோசமான காரியம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால், அவர்களுக்குப் பொது அறிவு

ஏற்படும்படியான படிப்புக்குத் தமிழில் ஆதாரங்களே இல்லை என்பதுதான். வடமொழி ஆதாரங்களேதான் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல வேஷங்களுடன் திகழ்கின்றனவே யன்றி, மக்களுக்கு அறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் உண்டாகும்படியானவைகள் அல்ல. ஆகவே, மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படவேண்டுமானால், உலக இயலை அறியச் சந்தர்ப்பங்கள் அளிக்கப் படவேண்டும். அதற்கு ஆதாரங்கள் பத்திரிகைகள் படிக்கவும், பல மக்களிடம் சேர்ந்து பழகிப் பேசவும் சவுகரியமுள்ளதுமான வாசகசாலைகளேயாகும்.

[கொடைக்கானலில், 20-7-1930-ம் நாள் காஸ்மாபாலிட்டன் வாசகசாலைத் திறப்புவிழாவில் சொற்பொழிவு—'குடி அரசு' 27-7-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

கல்வி விஷயத்தில் தற்போதுள்ளவர்கள் மிகவும் மேன்மை பெற்றவர்கள். ஏனெனில், முந்திய சகாப்தத்திற்கும் பிந்திய சகாப்தத்திற்கும் கல்வி கற்பிப்பதில் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. நம் சகாப்பதத்திற்கு முந்தைய காலத்தில், இன்னார் இன்னார் தான் கல்வி கற்பிக்க உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனை இருந்தது. இன்ன இன்ன விஷயந்தான் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் இருந்தது. இதோடு மாத்திர மல்லாமல், இன்ன இன்னார்தான் கல்வி கற்பிக்கப்பட உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனையும், இன்ன இன்னவர்களுக்கு எழுத்து வாசனையே கற்பிக்கப்படக் கூடாது என்கின்றதான நிர்ப்பந்தமும் இருந்துவந்தது. இந்த மாதிரியான நியமங்களினாலும், நிர்ப்பந்தங்களினாலும் கல்வி என்பது 'மூடுமந்திரம்' போன்று ஒரு இரகசியப் பொருளாகவே இருந்துவந்தது. இந்தக் காரணங்களினால் முற்காலங்களில் ஆயிரத்தில் ஒருவர் இருவரே கல்வி கற்றவர்கள் என்று சொல்லும்படியான மாதிரியில் இருந்து வந்ததோடு, கல்வி கற்றவர்கள் என்பவர்களே எல்லா மக்கள்மீதும் எல்லாக் காரியத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்துவந்தார்கள். அன்றியும், மேல் சொல்லப்பட்ட இந்த நிபந்தனைகளும் ஆதிக்கங்களும் எல்லாம் மக்கள் பிரிவில் ஒரு தனிப்பிரிவார் மாத்திரம்—அதுவும் பிறவி காரணமாய் உரிமைகொண்டாடத் தக்கதாய் இருந்துவந்ததே அல்லாமல், மற்றபடி பொதுத் தகுதியைக் கொண்டதாகவோ, எல்லோருக்குமே சம உரிமை கொண்டதாகவோ சிறிதும் இருந்துவரவில்லை.

சாதாரணமாய் நமது இந்தியாவை முழுவதும் எடுத்துக்கொண்டு, பழைய கல்வி போதனாமுறை என்பதை ஒரு முறையாக வைத்துப் பார்ப்போமானால், இந்தியாவில் உள்ள 35 கோடி (1931) மக்களில் 17½ கோடி மக்களான பெண்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வி கற்பிக்க முடியாததாகும். மற்றொரு பிரிவில் 7 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்திலும் படிப்பு என்பது நினைப்பதற்கே முடியாத காரியமாய் இருக்கும். மற்றும் பார்ப்பனர்கள், அரசர்கள், வியாபாரிகள் என்கின்ற வெகு சிறிய கூட்டத்தார்கள் மாத்திரம் கல்வி கற்க உரியவர்களாவார்கள். அவர்களிலும் கல்வி கற்பிப்பதில் பிரிவுக்குப் பிரிவு வித்தியாசம் இருக்கும்.

ஆனால், இன்றைக்கு இவ்வித வித்தியாசங்கள் ஏதுமில்லாமல் யாருக்கும், யாவராலும் கல்வி கற்பிக்கப்படலாம். ஆனபோதிலும், கல்வியின் இன்றைய இலட்சியமும், கற்பிக்கும் போதனாமுறையும் பாராட்டத்தக்கவையாக இல்லை.

ஏனெனில், கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்படவேண்டிய அவசிய மெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு தகுதிப்படுத்துவது என்பதேயாகும். அல்லது, உலகில் நல்வாழ்க்கை வாழத் தகுதியுடையவனாக்குவது என்பதாகும்.

அதாவது, ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டக்கூடிய நிலையிலோ

மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடு—சுய அறிவோடு வாழத் தகுதியுடையவனாக வேண்டும். அன்றியும், கல்வி கற்பிக்கும் கடமையில் இருக்கும் ஒவ்வொருவரும், கல்வியின் அவசியத்திற்கு இந்தக் காரணங்களைத்தான் சொல்லுகின்றார்கள். கற்பிக்கப்படுபவர் களும் அந்த எண்ணத்தின்மீதுதான் தாங்கள் கற்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கல்வியின் பயன் இந்த இலட்சியத்திற்கு அனுகூலமாக இருக்கின்றதா?

பொதுவாக எந்தத் தேசத்திலுமே மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பில் இருப் பவர்கள் எல்லோரும் கல்வி போதிக்கும் விஷயத்தில் ஒருவிதமான உள்கருத்தை வைத்துத் தான்—அதைக் கல்வியின் மூலம் போதிக்கும் முயற்சியில் இருந்து வருகின்றார்கள். அந்த மாதிரியான உள்கருத்தைப் போதிப்பதில் கல்வியானது மக்களுக்கு அறிவுக்கும், வாழ்க்கையில் சுதந்திரமாய் வாழ்வதற்கும் பயன்படுகின்றது என்பதைவிட—தாங்கள் கொண்ட உள் எண்ணத்தையே மிக முக்கியமாய்க் கருதுகின்றார்கள். உதாரணமாக, ஒரு தேசத்தார் தேச பக்திக்கு ஏற்ற கல்வி இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். மற்றொரு தேசத்தார் மத பக்திக்கான கல்வி வேண்டும் என்றும், மற்றொருவர் வீரம் ஏற்பட வேண்டு மென்றும், இன்னொருவர் அந்த நாட்டுப் பழமையான பழக்கவழக்கம் இருக்கவேண்டும் என்றும், மற்றும் சிலர் கடவுள் பக்தி புகட்டுவதற்கு அனுகூலமாய் இருக்கவேண்டும் என்றும் பார்க்கிறார்கள். இப்படியாகவே, பல உட்கருத்துக்களைப் பிரமாதமாய்க் கருதிக் கல்விமுறை ஏற்படுத்துவதில் கல்வியின் உண்மையான பிரயோசனம் ஏற்படாமலே மறைந்துபோய் விடுகின்றது.

இந்தக் காரணங்களால் கல்வி கற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளாய் இருக்க முடியாமல், எந்த உள் காரணத்தை வைத்துக் கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மாத்திரமே பயன்படுகின்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். கல்வி கற்பிப்பதில் இக் குறைபாடுகள் தவிர, மற்றொரு பலமான கெடுதி என்னவென்றால், கல்வி கற்பிப்பதில் மதத்தின் ஆதிக்கம் வந்து புகுந்து—அறிவுக்காகக் கல்வி என்பது மாறி—முட்டாள்தனமும், விசாரணையற்ற தன்மையும் வருவதற்கே கல்வி பயன்படும்படியாக ஆகின்றது. இது இன்று உலகத்தில் சில தேசங்கள் தவிர மற்ற தேசங்களிலெல்லாம் நடந்துவரும் சம்பவமேயாகும்.

இதற்குக் காரணம் என்னவென்றால், கல்வியின் பொறுப்பு எல்லாம் மத ஸ்தாபனங் களிடையே சிக்கி, மதபோதகர்கள் ஆகியவர்களால் நடத்தப்பட்டு வருகின்றவைகளாய் இருப்பதே காரணமாகும்.

மதத்திற்கும் உலக இயற்கைக்கும் எப்போதும் சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில், அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழி மறித்துத் திருப்புவதையே ஜீவநாடியாய்க் கொண்டிருக்கின்றன. அதனால் மதம் கலந்த படியால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய்விடுகின்றது. எப்படி எனில், மதங்கள் என்பவைகள் எல்லாம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இருந்தே காணப்படுபவை ஆகும்.

ஆகவே, மத சம்பந்தமான கொள்கைகள், அபிப்பிராயங்கள் முதலியவைகள் எல்லாம் அந்தக் காலத்திய உலக நிலை, அறிவு நிலை, ஆராய்ச்சி சவுகரிய நிலை, கல்வி நிலை ஆகிய வைகளுக்கு ஏற்றவைகளாகவே இருக்கும். ஆதலால், அவை இந்தக் கால அறிவு, ஆராய்ச்சி, சவுகரியம் முதலியவைகளுக்கு ஏற்றதாக இருக்க முடியாது. இந்தக் குறைபாடானது உலகத் தோற்றத்தில் மனித வாழ்க்கையில் ஒவ்வொரு தன்மையிலும் இருக்க வேண்டியதாகி விட்டது. ஆகையால் கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதே தவிர வேறில்லை.

உதாரணமாக, தற்கால ஆராய்ச்சி சவுகரியத்தைக் கொண்ட ஒரு வான சாஸ்திரி, கிரகணத்திற்குக் காரணம் சொல்லுவதாய் இருந்தால் அவன், பூமியுடையவும் சூரிய

னுடையவும் நடப்பைக் கொண்டு கணக்குப் போட்டுப் பார்த்து, ஒன்றின் நிழலால் மற்றொன்றின் ஒளி இன்ன காலத்தில் இன்ன அளவுக்கு மறைக்கப்படுகின்றது என்று சொல்லுவான். இதே விஷயத்தைப்பற்றி மத சாஸ்திரியைக் கேட்டால் அவன் சூரியன், சந்திரன்களுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாய் இராகு, கேது என்ற இரண்டு கெட்ட கிரகங்களால் ஏற்படும் பீடைகள் என்று சொல்லுவான்.

இதில் இருக்கும் மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், ஒரே ஆசாமி வான சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது பூமியின் நிழலால் சந்திரன் மறைக்கப் படுகிறதென்றும், மத சாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது சூரியன், சந்திரன் என்கின்ற தேவர்களை இராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குகின்றன என்றும் சொல்லுவான்.

இது மாத்திரமல்லாமல், வானசாஸ்திரியாய் இருந்து சூரிய கிரகணத் தன்மையைப் பிரத்தியட்சப் பாடமாக சில சாதனைகளைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்து விட்டு, வீட்டுக்குப் போனவுடன் இராகு, கேது என்கின்ற, பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி 'தோஷப் பரிகாரத்திற்கு' ஸ்நானம் செய்யவும், தர்ப்பணம் செய்யவும், சங்கல்பம் செய்து கொள்ளவும், சாந்தி செய்யவுமான காரியத்தில் ஈடுபடுகின்றான். ஆகவே, கல்வியுடன் மதத்தையும் கலப்பதால் மனிதனுடைய பகுத்தறிவும் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது!

இன்றையக் கல்வியில்—முக்கியமாக நமது நாட்டுக் கல்வியில் இருக்கின்ற ஆபத்தும் பயனற்ற தன்மையும் எதனால்? நமது கல்வி போதகர்கள் எல்லாம் மதத்தின் சாக்கினால் மேன்மையடைந்து வருகின்றவர்களாகவே ஏற்பட்டுவிட்டதேயாகும். மதம் என்னும் உலோகத்தினால் ஒரே அச்சில் உருக்கி வார்க்கப்பட்ட உருவங்களேதான் இன்று பெரிதும் உபாத்தியாயர்களாக அமைந்து இருக்கின்றார்கள். இம் மாதிரி உபாத்தியாயர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்வியினால் எப்படி அறிவும், சுதந்திர அறிவும் உண்டாக முடியும்?

அறிவு வேறு; மதம் வேறு என்று பிரித்துவிடவேண்டும். அறிவை உண்டாக்கி விட்டு, பிறகு அந்த அறிவின் மூலம் மதத்தைக் கொள்ளும்படி செய்யவேண்டும். அப்படிக் கில்லாமல், மதத்தைப் புகுத்தி அதன்மூலம் அறிவை வளரவிடாமல் செய்துவிட்டால் சுதந்திர ஞானம் எப்படி ஏற்படும்?

இரண்டும் இரண்டும அய்ந்து என்றால், 'எப்படி அய்ந்து?' என்று கேள்வி கேட்கக் கூடிய உரிமை இல்லாத முறையில் கல்வி கற்பித்தால், கணக்கில் ஒரு மனிதன் தேர்ச்சிபெற முடியுமா? அதுபோலவே, இயற்கை விஷயங்களில் காட்டுமிராண்டிக் காலம் முதல் கர்ண பரம்பரையாகக் கேட்டுவந்த செய்தியையே சொல்லிக்கொண்டு, அதையே போதித்து வந்தால் அதன்மூலம் எப்படி இயற்கை அறிவை ஏற்படுத்த முடியும்?

பிள்ளைகளுக்காகச் சரித்திர ஞானம் பரவச் செய்யும் கல்விக்காகச் சில தப்புகள் செய்யவேண்டி வந்தாலும் அனுமதிக்கத்தான் வேண்டும். ஆனால், அத் தப்பிதத்தை அனுமதிக்கும் முறையில் வேண்டுமானால் நாம் சற்று ஜாக்கிரதையில் இருந்து அத் தப்பிதத்தினால் ஏற்பட்ட பயனைக் கொண்டு, பிரத்தியட்ச அனுபவ அறிவு பெறத் தகுதி யாக்க வேண்டும். உபாத்தியாயர்களின் புத்திசாலித்தனத்தை இங்குதான் பார்க்க வேண்டுமேயொழிய, எதிரொலிபோல் கூப்பாடு போட்டு உருப்போடவும், கண்மூடித் தனமாய் விஷயங்களைப் பதியவைக்கவும் சிறிதும் இடம்கொடுக்கக்கூடாது. ஆகவே, நமது கல்வியின் ஜீவநாடி எல்லாம் இலட்சியத்திலும், போதனா முறையிலுந்தான் இருக் கின்றது. உபாத்தியாயர்கள் பகுத்தறிவாளர்களாய் இருக்கவேண்டும். அறிவின் முடிவின்படி நடப்பவர்களாய் இருக்கவேண்டும்.

கடவுள், பக்தி, பிரார்த்தனை முதலியவை எல்லாம் எவ்வளவு முக்கியமானதாகவும் உண்மையானதாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லி வருகின்றீர்களோ, அந்த முறையெல்லாம் பிரார்த்தனையில் நடைமுறையில் உள்ளனவா? சாதாரணமாக கிராமபோன் போன்று சிறுவர்கள்—அவர்களுக்கும், இந்தப் பிரார்த்தனைப் பாட்டைச் சொல்லிக் கொடுப்பவர்களுக்கும் புரியாத பாட்டை நாடகத்தில் வந்து சொல்விட்டுப்போவது என்றால் இதற்குச் சமமாக எதைச் சொல்லுவது?

அனேகமாக நமது பிரார்த்தனைகள் என்பதெல்லாம் புரியாத மொழி, புரியாத சொற்கள், புரியாத கருத்துக்கள் கொண்ட பாடல்களாகவும், வாக்கியங்களாகவும் இருக்கின்றன. எந்த பக்திப் பாட்டும், சங்கீதப் பிரதானியத்திலும், இலக்கண இலக்கியப் பிரதானியத்திலும், வேஷப் பிரதானியத்திலும், சடங்கு பிரதானியத்திலும் இருக்கின்றனவே தவிர, உண்மைப் பிரதானியத்தில் சிறிதாவது இருக்கிறதா? இந்த மாதிரி வேஷமுறையில் இவ்வளவு சிறுகுழந்தைப் பருவத்தில் இருந்தே புகுத்தப்பட்ட இந்த பக்திக்கு, ஏதாவது ஒரு துரும்பளவு யோக்கியதையாவது இவர்கள் பிற்கால வாழ்வில் உண்டாகிறதா?

மற்றும், இதிலிருந்து அக் குழந்தைகளுக்கு ஒரு பித்தலாட்டத்தையும் நாணயக் குறைவையும் பக்தி என்னும் பேரால் புகட்டினவர்களானோமா, இல்லையா—என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த மாதிரியான மதம் கலந்த கல்வியானாலும், வேஷத் தன்மையானாலும் இதனால் நமது பெண்கள் நிலையும் மிகவும் மோசமாகிவிடுகின்றது. அவர்கள் மதத்தையும் பக்தியையும் வாழ்க்கையில் பிரமாதப்படுத்தி, அதனால் பெண் சமூகம் முன்னேறவே மார்க்கம் இல்லாமல் செய்துகொள்ளுகின்றார்கள். பெண்களை இன்றைய தினம் ஒரு உபாத்தியாயராகவாவது இருக்கக்கூடிய நிலைக்குக் கொண்டுவந்தது மதமும் பக்தியும் அல்லவே அல்ல. ஆனால், மதமும் பக்தியுந்தான் அவர்களை இதுவரை அடிமைகளாக்கி வைத்திருந்தன. அவையெல்லாம் மாறி, அவர்களுக்குச் சிறிதளவாவது சுதந்திரம் ஏற்படக் காரணம், மதத்தை அலட்சியம் செய்து செய்யப்பட்ட சீர்திருத்தப் பகுத்தறிவு உணர்ச்சி அல்லவா? அப்படிப்பட்ட பெண்மக்கள் இப்போது சிறிது விடுதலை பெற்று உபாத்தியாயரான பிறகு, தங்கள் அடிமைத் தனத்திற்குக் காரணமாய் இருந்த மதத்தை—பிள்ளைகளுக்குக் கல்வியுடன் புகுத்துவார்களானால்—அவர்களை மத சம்பிரதாயத்தில் ஈடுபடுத்துவார்களேயானால்—நமது பிள்ளைகளை ஒப்புவிக்கலாமா என்பது பயமாகவேயிருக்கின்றது.

இப் பெண்கள் கண்மூடித்தனமாய் மதத்தில் ஆழ்ந்து கல்வியோடு அதைக் கலக்கிக் குழப்புவதிலிருந்து, அவர்கள் மறுபடியும் அடுப்பூதவும் சட்டிசுரண்டவுமான உலகத்திற்குப் போக ஆசைப்படுகிறார்கள் என்றுதான் விளங்குகிறது. இனிப் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் வேலை முழுவதும் பெண்களுக்கே கொடுக்கவேண்டும் என்று எண்ணிய என் போன்றவர்கள் மனதெல்லாம் பெண் உபாத்தியாயர்கள் நிலைமையைப் பார்த்ததும் பயப்படுகிறது.

ஆகவே, பெண் உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமே யொழிய ஆண் உபாத்தியாயர்களைப் பின்பற்றக் கூடாது.

இந்த இலட்சணத்தில் உள்ள கல்வியோடு இப்போது வரவர தேசபக்தி என்பதாக ஒன்று புகட்டப்பட்டுவிடுகின்றது. இது அறிவு வளர்ச்சிக்கு மற்றொரு ஆபத்தான காரியமாகும். கடவுள்பக்தி, மதபக்தி ஆகியவைகள் போலவே, இந்தத் தேசபக்தியும் மனிதனின் அறிவு வளர்ச்சியை நாசமாக்கிவிடுகின்றது. அதிலும் நமது நாட்டுத் தேசபக்தியோ நினைப்பதற்கே பயங்கரமானதாக இருக்கின்றது. தேசபக்தியும், தேசியமும் பழமையைப் பார்த்துக்கொண்டு பின்னால் போகப் பார்க்கின்றனவே தவிர முன்புறம் பார்ப்பதற்கில்லை. தேசியத்துக்கும் புதுமைக்கும் ஜென்மப் பகையாய் இருந்து வந்திருக்கின்றது. தேசியம்

என்றாலே பழமை என்று கருதப்பட்டுவிட்டது. புதுமை என்றாலே தேசத் துரோகம் ஆகிவிட்டது.

ஆகவே, கல்வி என்று பெயர்வைத்து, அதன் சாக்கில் மதத்தைப் போதித்து, தேசியம் என்ற உணர்ச்சியையும் அதன் மூலமாகவே ஏற்றிவிட்டால், குரங்குக்குக் கள் வார்த்தது போல்தான் ஆகுமே தவிர, அங்கு பகுத்தறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், முற்போக்குக்கும், சுதந்திரத்திற்கும் இடமே இல்லாமற் போய்விடும். இந்தக் காரணத்தால்தான் உலகத்தில் இந்தியாவுக்கு மாத்திரம் கீழ்ப்படியில் முதலிடம் கிடைத்திருக்கிறது.

ஆகவே, கல்வி கற்பிப்பதைவிடக் கல்வியின் இலட்சியத்தையும் போதனையின் தன்மையையும் மாற்றவேண்டியது இந்தியாவுக்கு மிகவும் அவசியமானதாகும்.

[ஈரோடு மகாஜன ஸ்கூலில், 17-9-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 27-9-1931]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

முதலாவது, உங்கள் படிப்புக்கு இலட்சியமே இல்லை. இலட்சியமற்ற படிப்பு என்பது ஒருபுறம் இருந்தாலும், என்ன படிப்புப் படிப்பதென்பது பள்ளிக்கூடத்தாருக்கும் ஆசிரியருக்கும்கூட சம்பந்தமற்றதாகும். இதனால், இப் படிப்பினால் ஏற்படும் பயன் என்ன என்றாலோ, அதுவும் தானாக ஏதாவது ஏற்பட்டால் அதுதான் பயனேயொழிய மற்றபடி நிச்சயமான பயன் என்ன? என்ன ஏற்படும்? என்பதைக் கருதுவதற்கில்லை. படிப்பது என்பது வெறும் பேச்சளவிற்கு, 'அறிவுக்காக, அறிவு விருத்திக்காக' என்று சொல்லப்படுகிறது.

ஆனால், படித்தவர்களுக்கு அறிவு விருத்தியாகிறதா? படித்தவர்கள் அறிவாளிகளாக இருக்கிறார்களா என்றால், ஆம் என்று சொல்ல முடிவதில்லை. இந்த அறிவு என்பது கூட ஒரு பொது அர்த்தத்திற்குக் கட்டுப்பட்டதாய் இல்லாமல் எதைப் படித்தானோ அதில் அறிவுள்ளவன் என்றுதான் சொல்லக்கூடியதாய் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட படிப்பில் அதாவது படித்த படிப்பின் அறிவாவது சரியாக இருக்கிறதா என்றால், அதுகூட சரியாக இல்லாமல், ஒன்றுக்கொன்று முரணான அறிவு ஏற்படும்படியாக இரண்டு கருத்துள்ள— அதாவது முரண்பட்ட கருத்துள்ள படிப்பேதான் கொடுக்கப்படுகின்றது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் மாணவர்களுக்கு அறிவுப் படிப்பும், மூடநம்பிக்கைப் படிப்பும் இரண்டும் தரப்படுகின்றன. இதனால் மாணவர்கள் பகுத்தறிவும், அதற்கு மாறான மூடநம்பிக்கையும்—இரண்டும் கொண்டவர்களாகி விடுகிறார்கள். மாணவர்கள் மாத்திரமல்லாமல், படிப்பைமுடித்த பெரியவர்களும், உபாத்தியாயர்களும் கூட மூட நம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

உதாரணமாக, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், வானசாஸ்திரம், உடற்கூறு, உலோக விஷயம் முதலியவைகளில் படித்துத் தேறியவர்களில், யாருக்காவது இது சம்பந்த மான மூடநம்பிக்கைக் கொள்கை இல்லாத சரியான அறிவு இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

சரித்திரம் படித்தவன் இராமாயண-பாரதம் முதலிய புராணக் கதைகளையும் சரித்திரத்தில் சேர்த்துப் படித்து, இராமனும் பரதனும் இந்த நாட்டை ஆண்டார்கள் என்றும், அது இன்னகாலம் என்றும், இந்த நாட்டுக்குப் பாரததேசம் என்பது பெயர் என்றும் கருதிக்கொண்டு, அனுபவத்திலும்—அதற்கு ஏற்றவண்ணம் பாரதமாதாவை வணங்கிக்கொண்டு நிற்கிறான். நிஜமாக நடந்த சரித்திர உண்மைகள், நிஜமான போர்கள், நபர்கள், அதன் காலங்கள் ஆகியவை சரித்திரம் படித்தவர்களுக்குச் சரியாய்த் தெரிவதில்லை. நடவாததும், நடந்ததாக நம்பமுடியாததும், அதற்கும் காலம்நிர்ணயிக்க முடியாததுமான—அறிவுக்குப் பொருந்தாத காரியங்களுக்கு அதிக விவரம் தெரிகிறது. ஆனால், நடந்தவைகளுக்குச் சரியான விவரம் தெரிவதில்லை. சேர, சோழ, பாண்டியர்,

நாயக்கர் ஆகிய மன்னர்களும் அவர்களது வாரிசு, அண்ணன் தம்பிகளும், மனைவி மக்களும் ஆண்ட நாட்டு எல்லைகளும், முறைகளும் சரித்திரம் படித்த 100-க்கு 90 மாணவர்களுக்கு விவரம் சொல்லத் தெரியாது. தசரதனுக்கும், இராமனுக்கும், கிருஷ்ணனுக்கும், பாண்டவருக்கும், துரியோதனாதியர்களுக்கும், இரணியனுக்கும், பலிச் சக்கரவர்த்திக்கும், மனுநீதி கண்ட சோழனுக்கும் அண்ணன் தம்பிமார்கள், மனைவிமார்கள், அவர்கள் கணவர்கள் இவ்வளவு என்று 100-க்கு 99 மாணவர்களுக்குத் தெரியும்.

பூகோளம் படித்தவனுக்கு உலகப் பரப்பு, அதன் பிரிவுகள் சரியாக ஞாபகத்தில் இருக்காது. ஆனால் இல்லாததும்—இருக்க முடியாததுமான மேல் ஏழுலோகம், கீழ் ஏழு லோகம், அதன் வர்ணனை, பலன், தன்மை இருப்பதாக முழு ஞாபகமாகத் தெரியும். வான சாஸ்திரம் படித்தவனுக்கு சூரிய, சந்திரனின் உண்மைத் தன்மை, கிரகணங்களின் உண்மைத் தன்மை, இயக்கம், அதன் சீதோஷ்ண நிலைக்குக் காரணம் ஆகியவை சரிவரத் தெரியாது. ஆனால், சூரியனுக்கு 16 குதிரை, சந்திரனுக்குக் கலை வளரவும் தேயவும் சாபம், இவர்களது மனைவி மக்கள், அவர்களது விபச்சாரம், இராகு, கேது விழுங்குவதால் கிரகணம், அதற்குப் பரிகாரம்—என்பது போன்ற கற்பனைக் கதைகள் யாவருக்கும் உண்மை என்ற எண்ணமும், அதை அனுசரித்த அனுபவமும், அதற்கு ஏற்ப நடப்பும் தெரியும். விஞ்ஞானத்தைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உதாரணமாக, விஞ்ஞானப் படிப்பின் இன்றைய நிபுணர்களைப் பார்த்தாலே விஞ்ஞானப் படிப்பின் தன்மையும் பயனும் நன்றாய் விளங்கும். இப்படியாக, படிப்புக்கும் அறிவுக்கும் பெரும்பாலும் உண்மைக்கும், நடப்புக்கும் சம்பந்தமில்லாத மாதிரியான படிப்புதான் இன்று பள்ளிப் படிப்பாகப் போய்விட்டது.

இது தவிர, இனிப் படிப்பினால் ஏதாவது ஒழுக்கம், நாட்டுப்பற்று, இனப்பற்று, சமரச ஞானம் முதலியவை ஏதாவது ஏற்படுகிறதா? அல்லது, படித்த மக்களிடம் இவை ஏதாவது இருந்து வருகிறதா என்றால், அதுவும் சிறிது சரியானபடி இல்லாமல் வெறும் கற்பனைக் குணங்களும், பற்றுகளுந்தான் பெரிதும் காணப்படுகின்றனவே தவிர, உண்மையானதும் இருக்கவேண்டியதுமானவைகள் அருமையாகவே இருக்கின்றன.

[ஈரோட்டில் 9-7-1945-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 14-7-1945]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

ஒருவன் எவ்வளவோ படித்திருக்கலாம். பட்டம் படிப்பு எல்லாம் படித்திருக்கலாம். பலே அறிஞன், புத்திசாலி என்று பேசப்படலாம். எல்லாம் அனுபவப் படிப்பைவிட மட்டரகமானவைகளே. வக்கீல் படிப்புப் படித்து விட்டால் அறிவாளி என்று கூறமுடியாது. வக்கீலுக்கு எதை எதை எப்படி எப்படிப் புளுகினால் கேஸ் ஜெயிக்கும் என்பதில்மட்டும்தான் சாமர்த்தியம் இருக்கலாம். ஒரு வழக்கு பொய்யானது என்று தனக்கே தெரியும். அந்த வழக்கை மெய் என்று தீர்ப்புக் கூறும்படி என்னென்ன தில்லுமுல்லுகள், புரட்டுகள் செய்ய வேண்டுமோ அவைகளைமட்டும் கற்றிருந்தால் போதும். பொய் கூறுவதைத் துணிந்து ஓங்கி அடித்து உண்மையைப்போல் கூறுகிற வக்கீல்கள்தாம் பெரிய வழக்கறிஞர்கள் என்று போற்றப்படுகிறார்கள். ஆதலால், வக்கீல்களும் அறிவாளிகள் என்று கூறுவதற்கில்லை. அதேபோல், பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் வாத்தியார்களும் புரொபசர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அறிவும்—ஏட்டுக்குள் இருப்பதைமட்டும் தெரிந்திருப்பார்கள்; உலக விஷயம் தெரியாது! உலக அறிவே முக்கியமானது.

உலகத்துடன் பழகியவர்க்குத்தான் பொது அறிவு வளரமுடியும்.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-3-1956]

4. கல்வித் திட்டம்

பெரியோர்களே ! மாணவத் தோழர்களே !

இப்போதுள்ள கல்விக்கூடம் எதற்காக இருக்கிறது ? மக்கள் அறிவு பெற வேண்டும், ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்குக் கல்வி கற்கவில்லை; கல்வித் திட்டமும் இவைகளைப் போதிப்பதாக இல்லை; அவர்கள் படிப்பதெல்லாம் பிழைப்பதற்கு, மண்வெட்டி எடுக்காமல் ஓரளவு பேனா பிடித்தெழுதிச் சம்பாதிக்கும்படியான வழியைத் தேடுவதற்கேயாகும். இந்த வழியை அடையத் தாமதம் ஏற்படவே, பொது வாழ்வில் புகுவதற்கு ஆரம்பிக்கின்றனர். அதில் இறங்கி அதன் மூலம் எப்படியாவது மேலே போய் விட முயற்சிக்கின்றனர். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க வைப்பதன் காரணம், தன் பிள்ளை புத்திசாலி ஆகவேண்டும், அறிவாளியாக வேண்டும் என்று வெளியில் மட்டும் கூறுவார்களே தவிர, உள் நோக்கமெல்லாம் பையன் உத்தியோகத் திற்குப் போய்ச் சம்பாதித்தால் நம் வாழ்க்கையைக் கஷ்டமின்றிக் கழிக்கலாம் என்ப தற்குத்தான்.

பையன் படித்து முடிந்தவுடன் உத்தியோகத்தில் அமர்ந்தால் அவன் தன் பகுத்தறி வுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள முடியாது. பாதிரி வேலையில் அமர்ந்தால் எப்பொழுதும் கடவுளின் பெருமையை பரப்புவதிலேயே இருக்கவேண்டும். போலீஸ்காரனாக அமர்ந்தால் அவன் சாத்வீகனாக இருந்தாலும், எதிலும் ஆத்திரத்துடன் தயவு தாட்சண்யமின்றிப் பிறரைக் கண்டிப்பவனாக இருக்கவேண்டும். அதைப்போன்றே, வேலையைப் பொறுத்து அவன் ஒழுக்கமும் அமைகிறது. யோக்கியன், நாணயஸ்தனாக இருப்பவன் குறைந்த சம்பளம் வரும் உத்தியோகத்திற்கு வந்தால், அதைக்கொண்டு அவனுடைய குடும்பஜீவனம் நடப்பதற்கு வழி இல்லை. ஆகவே, பகவான் இவ்வளவுதான் கொடுத்தார் என்று சும்மா இருப்பானா ? இவன் சும்மா இருந்தாலும் இவன் பெண்டுபிள்ளைகள் சும்மா இருப்பார் களா ? அடிக்கடி ஏதாவது தொல்லை கொடுத்துக்கொண்டே இருப்பர். இவன் அத் தொல்லை பொறுக்காமல் முதலாளியிடம் போனஸ் கொடுக்கும்படி கேட்பான். அதிகச் சம்பளம் கொடுத்தால் நல்லதுதான் என்பான். இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்து அதுவும் போதவில்லையென்றால் எங்கே கிடைக்கிறதோ அங்கங்கே கை நீட்டி வாங்குவதற்கு ஆரம்பித்து விடுகிறான். பிறகு அவன் வாழ்க்கை இலஞ்சத்திலேயே கழிகிறது. ஒருவன் யோக்கியன், நாணயஸ்தனாக இருக்கவேண்டியது என்ன அவசியம் ? கடவுள் தண்டிப்பார் என்பதற்காகவா ? இவைதான் பித்தலாட்டம் என்று கூறுகிறோம். எனவே கடவுளும், மோட்சமும் நரகமும் பித்தலாட்டம் என்று தெரிந்தவன் எதற்காக யோக்கியனாகவும் நாணயஸ்தனாகவும் இருக்க வேண்டும் என்றால், வாழ்க்கையில் நல்ல பெயர் எடுக்க வேண்டும்; பிறர் இவனைப் பார்த்து இவனுடைய நற்குணங்களைப் புகழ்ந்து பேச வேண்டும்; சுற்றிலும் உள்ளவர்கள் இவனுடைய பெருந் தன்மைகளையும் நல்லொழுக்கங் களைப்பற்றியும் பாராட்டிப் பேசினால் இவனுக்கு ஒரு மகிழ்ச்சி உண்டாகும். இதற்கென்று நல்லவனாக நடக்கவேண்டியதாக இருக்கிறது.

வீதியில் ஒருவனிடம் சாமான் வாங்குகிறவன் ரூபாய்க்கு 5 படி தானியம் வாங்கு வதாக வைத்துக்கொள்வோம். சாமானை விற்பவன் கண் கொஞ்சம் குருடானவனாக இருக்கிறான். வாங்குகிறவனுக்கு அந்தத் தானியமும் அதிகம் தேவையாக இருக்கிறது. எனவே சும்மா தருவானா ? அவனும் குருடன்; நமக்கும் தேவை; அண்டை அயலாருக்குத் தெரியாமல் முடிந்தவரை பார்க்கலாம் என்ற ஆசை வருவது யாருக்கும் இயற்கை. இதைப் பிசகு என்று கூற முடியாது. இது மனிதனுடைய இயல்பாகவே போய்விட்டது. இதை யாராவது தப்பு என்று கூறுவானாகில் அது அறிவீனம் என்றுதான் கூற வேண்டும்.

இவன் செய்தது குற்றம்; இவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கடவுள் சொல்வார் என்று யாராவது சொன்னால்—முதலில், சொல்பவன் முட்டாள் என்று

தான் கூறுவேன். ஏன்? கடவுள்தானே விற்பவனையும், வாங்குகிறவனையும் படைத்ததாக அந்தப் பக்தனே கூறுவான். ஏன் விற்பவனைக் குருடனாகவும் வாங்குகிறவனை இப்படி திருட்டுத்தனம் செய்யும் அவசியமுள்ள தரித்திரவானாகவும் படைக்கவேண்டும்?

இந்த நாட்டில் யோக்கியன், நாணயஸ்தன் இருப்பதாகக் காணமுடியவில்லை. படிப்பாளி என்று கூறப்படும் அத்தனை பேரும் அறிவாளி என்று கூற முடியுமா? அவர்கள் எல்லாம் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருக்கலாம்; அதிகச் சம்பளம் வாங்கலாம்; கொழுத்த பணக்காரர்களாக இருக்கலாமேயன்றி அறிவில் சிறந்தவர்கள் என்று கூற முடியுமா? எனவே, கல்வியென்பது மனிதனைப் பெரிய உத்தியோகஸ்தனாக்கவும், பணம் சம்பாதிக்க ஒரு வழியாகவும் மட்டும்தான் உள்ளது; ஆனால், அறிவாளியாக்கப் போதிய தாக இல்லை. மனிதனுக்குக் கல்வி அவன் அறிவாளியாகும் இலட்சியத்திற்கு அடிப்படை யாக அமையவேண்டும்.

மாணவர்கள் பகுத்தறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அதற்குப் பள்ளி நேரங்களில் தங்கள் மனம்போன போக்கில் நடத்தல் கூடாது. முதலாவது, வயிற்றுப் பிழைப்பைத் தேட, பரீட்சையில் பாஸ் செய்ய வேண்டும். அதன் பிறகு தங்கள் அறிவை அத்துடன் வைத்துக் கொள்ளக்கூடாது. தானே எதையும் சிந்தித்து உணரும் பகுத்தறிவைப் பின்பற்ற வேண்டும். நான் கூட மாணவர்களை என் கழகத்திற்கென்று எதிலும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது—கல்விக்கு இடையூறாக எதிலும் ஈடுபடக் கூடாது என்று அடிக்கடி கூறுவதுண்டு. மாணவர்கள் பொதுக் காரியங்களில் சேர வேண்டாம். நாங்கள் செய்யும் போராட்டங்களில் சம்பந்தப்படக்கூடாது. அரசியல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சேரக்கூடாது என்றும் கூறுவேன். ஏதாவது உங்களிட மிருந்து கழகம் எதிர்பார்க்குமானால் உங்களால் ஆன மறுப்பைக் காட்டுவதற்கென்று மட்டும் அவசியமுள்ள நேரங்களில் உங்களிடம் கேட்டுக் கொள்வதுண்டு. இந்த அளவில் மட்டும் மாணவர்கள் எங்களுக்கு ஆதரவு தந்தால் போதுமானது.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் நடந்த திராவிட மாணவர்கள் கழகக் கூட்டத்தில் சொற்பொழிவு—‘விடுதலை’ 9-3-1956]

5. கேள்வி கேட்கும் பழக்கம்

தலைவரவர்களே! தோழர்களே!

உங்களுக்குக் கூட்டங்கள் ஒரு சர்வகலாசாலை போன்றதாகும்; உலக நடப்பையும் மக்கள் யோக்கியதையையும் கண்டறிய ஒரு பரீட்சைக் கருவியாகும். பள்ளிக்கூடத்தில் இவைகளைப் படித்துவிடமுடியாது. பெரிய கலாசாலைப் பட்டம் பெற்றுவிடுவதானாலும், இந்தப் படிப்பு வந்துவிடாது.

உலகக் கல்வி வேறு; பகுத்தறிவு வேறு; பட்டம் வேறு. பெரிய டாக்டராய் இருப்பான்;—ஆனால் அவனும், மூத்திரமும் சாணியும் சாப்பிட்டால் ஒருவன் மோட்சத் துக்குப் போகலாம் என்று நினைப்பான். பெரிய வானசாஸ்திர நிபுணனாய் இருப்பான்—அவனும் பார்ப்பான் மூலம் தன் இறந்த தந்தைக்கு அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு அனுப்புவான். ஒருவன் பெரிய உடற்கூறு சாஸ்திரியாய் இருப்பான்—அவனும் தன் மனைவியையும், மகளையும் வீட்டுக்குத் தூரம் என்று வீட்டுத் திண்ணையில் தள்ளி மூடி வைத்துவிட்டு, உள்ளே தாழ்ப்பாள் போட்டுத் தூங்குவான். ஆகையால், மனிதனுக்குப் பகுத்தறிவும் உலகக் கல்வியும் அறிய, பள்ளிக்கூடமும் பட்டமுமே போதுமானதாகிவிடா.

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—‘குடிஅரசு’ 19-12-1937]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

கூட்டங்களில் கேள்வி கேட்பதுபற்றி நான் சில விஷயங்களைக் கூற ஆசைப்படு கிறேன். பொறுப்பற்ற முறையிலும் கூட்டத்திற்குச் சம்பந்தப்படாத விஷயங்களைப் பற்றியும் பல கேள்விகள் கேட்கப்படுவதால், இதுபற்றி விளக்கம் கூறுவது மிக அவசிய மாகிறது. சொற்பொழிவாளர் பேசிய விஷயங்களைப்பற்றி மட்டும் கேட்கப்படும் கேள்விகள்தாம் 'ரெலவென்ட்' (Relevent)—பொருத்தமான, சம்பந்தப்பட்ட கேள்வி களாகக் கொள்ளப்படும். மற்ற கேள்விகள் நாகரிகமற்றவர்களால்கூட ஞானமற்றவர்கள், காலித்தனமாகக் கேட்பவர்கள், குழப்பத்துக்காகக் கேட்பவர்கள், சுலபத்தில் விளம்பரம் பெற ஆசைப்படுபவர்கள், மானத்தைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் ஆகிய தன்மை கொண்டவர்களின் கேள்விகள் என்றுதான் சொல்லப்படக்கூடும்.

இப்படிப்பட்ட மக்களுக்கெல்லாம் புத்தி கற்பிக்கவே, ஒழுங்காக நடந்துகொள்ளும் வழியைக் காட்டிக்கொடுக்கவே திராவிடர் கழகம் வேலைசெய்து வருவதால், அதிகப் பிரசங்கித்தனமான கேள்விகளைப்பற்றி இங்கு நான் விளக்கிக் கூறவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பொருத்தமற்ற கேள்விகளைச் சாதாரணமாகத் தலைவர் அனுமதிக்க மாட்டார். எந்தக் கேள்விக்கும் ஏதாவது பதில் சொல்லிச் சமாதானம் செய்யவேண்டு மென்று கருதுவதாலும், இல்லாவிட்டால் கேள்வி கேட்டவர் நம்மை ஜெயித்துவிட்டதாகவோ அதற்குச் சமாதானம்கூற நம்மால் இயலவில்லையென்றோ தப்பாக நினைத்துக்கொண்டு போவார் என்பதற்காகவும் திராவிடர் கழகம் ஒன்றுதான் இதுவரை எப்படிப்பட்ட கேள்விகளையும் அனுமதித்துப் பதில் சொல்லி வருகிறது. நீங்கள் பத்திரிகையில் பார்க்கலாம்—சொற்பொழிவாளர் பேசியது சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட்டால்கூட காங்கிரஸ் தோழர்களும், கம்யூனிஸ்ட் தோழர்களும், மந்திரிகள் உட்பட, பதில் சொல்லாமல் கூட்டத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு நழுவி விடுவதை!

கேள்வி கேட்பதும் அதற்குப் பதில் கூறப்படுவதும் மேல்நாட்டுப் பழக்கம். அங்கு மன்னரைத் தவிர்த்த யார் பேசினாலும், சொற்பொழிவாளர் தனது பேச்சை முடித்து உட்கார்ந்ததும், தலைவர் கேள்விக்கு 10 நிமிஷம் அல்லது ஒரு நேரம் ஒதுக்கப்பட்டிருப்ப தாகக்கூறி, கேள்வி கேட்கும்படி சொல்வார். கூட்டத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றிக் கேட்பதுதான் ஒழுங்கான கேள்வி என்று கருதப்படும். உதாரணமாக, இப்போது நான் பேசியதைக் கேட்ட பின்பு, என் சொற்பொழிவு முடிந்ததும், 'திராவிட நாட்டு ஜனத் தொகை 5 கோடி என்றீரே, 4¾ கோடிதானே!' என்றும், 'திராவிடரை எப்படிப் பிரிப்பது?' என்றும் நீங்கள் கேட்கலாம்; இது பொருத்தமானதாகக் கருதப்படும். அல்லது, 'முன்பு, கோவைக் கூட்டத்தில் திராவிட நாடு ஒரிஸ்ஸா மாகாணத்திலும் ஒரு பகுதியையுடையது என்று கூறினீர்களே; இன்று சென்னை மாகாணம்தான் என்று கூறுகிறீர்களே, எது சரி?' என்று கேட்கலாம். இதுவும் பொருத்தமான கேள்விதான். இதைவிட்டு, 'உங்களுக்குத் தாடி ஏன்?'; 'அது ஏன் வெளுப்பு?' என்று நீங்கள் இந்தக் கூட்டத்தில் கேட்பீர்களானால் இது பொருத்தமற்றதாகவும், குறும்புத்தனமானதென்றும் கருதப்படும். அல்லது, எவனுக்காவது தவறான வழியில் மதிப்பு, விளம்பரம் வாங்கிக் கொடுக்க, 'குப்பனை ஏன் கூட்டிவரவில்லை?', 'சொக்கன் எங்கே காணோமே?' என்று கேட்பது வெட்கங்கெட்டு விளம்பரம் தேடும் கேள்வியாகும்.

ஆகவே, தோழர்களே! இனி, கேள்விகேட்கும்போது சற்று யோசித்து, கூட்டத்தில் பேசப்பட்ட விஷயத்தைப் பொறுத்திருக்கிறதா—உங்கள் கேள்வி என்பதை முடிவு செய்து கொண்டு, கேள்வித்தாளை அனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கேள்வி உரிமையைப் பாழாக்கிவிடாதீர்கள்; கேள்வி உரிமை இருந்தால்தான் பேசுகிறவர்கள் நாணயமாகப் பேச முடியும். அதைக் கெடுத்துவிடாதீர்கள்.

நான் கூட்டத்தில் பேசாத விஷயங்களைப்பற்றி உங்களுக்குச் சந்தேகங்கள் இருக்குமானால் அவற்றைத் தனிமையில் கேட்டு அறிந்து தெளிவடையவேண்டுகிறேன். மாணவர்கள் கனவான்களாக ஆகவேண்டும்; தறுதலைகளாக, அதிகப் பிரசங்கிகளாக ஆகக்கூடாது. கூட்டத்தின் மதிப்பைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது. நான் எந்தக் கேள்விக்கும் எனக்குப் பட்டதைப் பதிலாகச் சொல்லிவிடுகிறேன். அதனால் பலர் பாதிக்கப்படக்கூடும்; அதனால் அவர்களுக்கு வேண்டியவர்கள் மனம் புண்படும். ஆதலால், சொற்பொழிவுக்குப் பொருத்தமற்றதைக் கேட்காதீர்கள்!

[சென்னையில், 26-10-1947-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 29-11-1947]

2. அயல்நாட்டு அனுபவங்கள்

1. நமது மலாய்நாட்டு விஜயம்

நாம் இவ் வாரம் மலாய்நாடு போகும் விஷயம் பத்திரிகைகள் மூலம் வெளி வந்திருப்பதை வாசகர்கள் அறியலாம். மலாய்நாட்டிலுள்ள சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட அன்பர்களும் தொண்டர்களும் வெகுநாட்களாக விரும்பியதற்கும் நாமும் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள் உலகில் உள்ள எல்லா மக்களிடையிலும் பரவி நன்மை பயக்க வேண்டுமென எதிர்பார்த்திருந்ததற்கும் ஏற்ப, நாம் மலாய்நாடு செல்கிறோம். நாம் இப்போது அங்கே போவது நமது நாட்டிலுள்ள வேலைகளை எல்லாம் நாம் முடித்துவிட்டோம் என்ற கருத்திலல்ல. பின் என்னவெனில், இந்த அய்ந்தாறு ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தின் மூலமாக, மக்களிடையில் இருக்கின்ற புரட்டுகளையும் மூடநம்பிக்கைகளையும் எப்படி இங்கு எடுத்துரைத்தோமோ அதேபோல் மலாய்நாட்டில் குடியேறியுள்ள தமிழ் மக்களிடத்திலும் நமது இயக்கத்தின் கொள்கைகளை நேரில் எடுத்துச் சொல்லவேண்டுமென்ற ஆசையினால்தான், நாம் இப்போது மலாய்நாடு செல்கிறோம். தாய்நாட்டிலிருந்து இதர இடங்களாகிய மலேயா, தென்னாப்பிரிக்கா முதலான அயல்நாடுகளுக்கு ஜீவனத்திற்காகக் குடியேறிய நமது ஏழை மக்களோடு கூடவே பார்ப்பனீயமும் குடியேறி இருக்கிறது என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைக்கும்படி கோருகிறோம். தேக உழைப்பினால் பாடுபட்டுச் சம்பாதித்தும் பாமர மக்களுடைய ஊதியத்தை மதம், கடவுள், வேதம், சாத்திரம், புராணம் என்ற பெயர்களினால் கொள்ளையடித்து, நகத்தில் அழுக்குப்படாமல் ஏமாற்றி, வயிறு வளர்க்கக் கூடிய பார்ப்பனர்கள் நமது நாட்டில் எவ்வளவு தீங்குகளை இழைத்திருக்கின்றார்களோ அதேமாதிரி ஏனைய நாடுகளில் குடியேறிய மக்களையும் முன்னேறவிடாமல் அழுத்திக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

உதாரணமாக, நான் இப்போது போகக்கூடிய மலேயாநாடுகளில் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகப் பார்ப்பனர்கள் செய்துவரும் இடைஞ்சல்களை நாம் அடிக்கடி கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், தெளிவாய் அறிந்திருக் கிறோம். சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களையும் அதன் முற்போக்கான கருத்துக் களையும் மக்கள் நன்குணர்ந்து அதன்படி நல்லறிவுபெற்று மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்கங்களையும் கொஞ்சங்கொஞ்சமாய் ஒழித்து, சகலசாதி மக்களும் ஒற்றுமைப்பட்டு வருவதைப் பொறுக்காத பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் சில மாதங்களாகத் தவறான முறைகளில் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். உதாரணமாக, பார்ப்பனீயமும், புரோகிதமும், அர்த்தமற்ற சடங்குகளும் இல்லாமல் சுயமரியாதை இயக்கத்தின் முறைப்படி நடக்கும் எண்ணிறந்த

திருமணங்கள் சட்டப்படி செல்லாதவைகள் என்று ருசுப்படுத்துவதற்கும் தங்களுடைய ஆதிக்கத்தை எப்போதும்போல் மக்களிடத்தில் நிலைநாட்டுவதற்கும் பார்ப்பனர்கள் செய்துவரும் முயற்சிகள் கொஞ்சமல்ல. அவர்களுடைய முயற்சிகள் பலன்தரலாம் என்று எதிர்பார்த்த நாட்களெல்லாம் போய் மக்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால் இத்தகைய சூழ்ச்சிகளை மக்களே எதிர்த்துப் போராடி வென்றுவிடுவார்கள் என்ற பூரண நம்பிக்கை நமக்குண்டு. ஏனெனில், வெகுநாட்களாக ஏமாற்றிக்கொண்டே வந்த ஒருவன் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பின்னுங்கூட, மேலும் மேலும் ஏமாறிக்கொண்டே இருப்பதற்கு அவனது அறிவு இடங்கொடாது என்பது நமக்குத் தெரியும்.

இந்தமாதிரி சூழ்ச்சிகள் ஒருபக்கம் இருக்க, சுயமரியாதை இயக்கத்தை அழிப்பதற்கு என்றே சில இந்துமதச் சங்கங்கள் எனப்படுபவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றால் சுயமரியாதை இயக்கம் எவ்வளவு தூரம் மலாய் நாட்டுப் பார்ப்பனர்களையும் அவர்களது கூலிகளையும் பாதிக்கிறது என்பதை நன்கு உணரலாம். இதர தமிழ் ஆங்கிலப் பத்திரிகை களைவிட மிகவும் அதிகமாக நமது 'குடிஅரசு' மலாய் நாடுகளில் பரவி இருந்தாலுங்கூட அதுமாத்திரம் போதாமல், அவ்விடத்திலேயே 'முன்னேற்றம்' போன்ற பத்திரிகைகளை நமது அன்பர்கள் ஆரம்பித்து, அவைகளும் ஏற்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே ஆயிரக் கணக்காய்ப் பரவ ஆரம்பித்திருக்கின்றன என்றால், சுயமரியாதை உணர்ச்சி மக்களிடத்தில் எவ்வளவு தூரம் செலாவணி ஆகியிருக்கிறது என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

நமது இயக்கத்திற்கு இத்தகைய எதிர்ப்புகள் வருவதால் நமக்குச் சற்றும் கவலை யில்லை. அவைகளினுடைய கதி என்னவாகும் என்பது நமது நாட்டில் செவ்வாய்க்கிழமை தாலிகட்டி புதன்கிழமை அறுத்துப்போன ஆத்திகச் சங்கத்தை உணர்ந்தவர்களுக்கு நன்கு தெரியும். செங்கற்பட்டில் கூடிய முதலாவது சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங் களையும் அவைகளை நடைமுறையில் நடத்தி ஆதரவளித்த எண்ணிறந்த மக்களையும் பார்த்துத் திகிலடைந்த பார்ப்பனர்கள், சில கூலிகளைப்பிடித்து ஆத்திகச் சங்கம் என்பதாக ஒன்று ஸ்தாபித்து, அவர்களது கைகள் ஒயும்வரையும் நம்மையும் நமது அன்பர்களையும் கண்டவாறெல்லாம் தூஷித்தும் அவதூறாகத் தூற்றியும் பார்த்து, ஒருவாறாக அடங்கி ஒடுங்கி அமிழ்ந்து விட்டார்கள். கடவுள் உண்டு என்பதை ஸ்தாபிப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு சங்கத்தின் நிலைமை இவ்வாறு ஆகியிருக்கிறது என்பதை வாசகர்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்குமாறு விரும்புகிறோம்.

இதே மாதிரியாகத்தான் மலாய் நாட்டிலும் இந்துமதம் என்பதைக் காப்பாற்று வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்கங்களைப்பற்றியோ அவைகளின் கர்த்தாக்களைப் பற்றியோ நமக்குச் சற்றேனும் கவலையில்லை. ஏனெனில், இந்து மதம் யாருக்காக ஏற்பட்டது, யார் ஏற்படுத்தியது, எப்போது, எந்தக் கருத்தினால் ஏற்படுத்தப்பட்ட தென்பதை நமது மக்கள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்துகொண்டு விட்டார்களாதலால், 'மதம் போச்சு' என்ற பொய்க் கூச்சலின் மூலமாய் இனி மக்களை ஏமாற்றவோ அடிமைப் படுத்தவோ ஒருவராலும் முடியாது என்ற உறுதியான நம்பிக்கை நமக்குண்டு. பராசரஸ்மிருதி, மனுஸ்மிருதி முதலியவைகளிலும் இந்து மதத்திற்கு ஆதாரமான வேதங் களிலும் தற்காலத்திற்கு ஏலாததும் மனிதனது பகுத்தறிவுக்கு முரண்பட்டதுமான கருத்துக்களே அடங்கி இருக்கின்றன என்பதை நிச்சயமாய் அறிந்துகொண்ட நமது மக்களிடம் இந்து மதம் என்ற பூச்சாண்டியைக் காண்பித்து இனியும் ஏமாற்றலாம் என்று யாராவது எண்ணியிருப்பார்களானால் அவர்களுக்காக நாம் பெரிதும் இரங்குகிறோம்.

இந்துமதம் என்பதற்கு அடிப்படையாகச் சொல்லப்படுகின்ற வேதங்கள் ஸ்மிருதிகள் இவைகளின் நிலைமையே தத்தளித்துக்கொண்டு இருக்கும்போது, அவைகளின் மேற் கட்டடமாகிய இந்து மதத்தின் கதி என்னவாகுமென்று நாம் சொல்லவேண்டியதில்லை.

ஆகையால், இந்து மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கப் புறப்பட்டிருக்கும் கூட்டத்தார்கள் இனியாகிலும் காலதேச வர்த்த மானத்தை உணர்ந்து, யோக்கியமான முறையில் உழைத்துத் தங்கள் வாழ்க்கையைப் பரிசுத்தமான வழிகளில் நடத்தவேண்டும். தவறுவார்களானால் மக்களுக்குள் அனாவசிய மான வேறுபாடுகளும் மதப் பூசல்களும் சாதிச் சண்டைகளும் உண்டாகி, அதனால் மனித சமூகத்தின் முன்னேற்றமும் தடைப்படும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

கடைசியாக, நமது மலாய் நாட்டுப் பிரயாணத்தைப்பற்றிய விஷமப் பிரச்சாரங் களைப் பற்றியும் சிறிது உறுதியாய்க் கூற விரும்புகிறோம். நாம் மலாய் நாடு போவதாலும் அவ்விடத்தில் நமது இயக்கத்தின் கொள்கைகளை எடுத்து மக்களுக்குச் சொல்வதாலும் சில சுயநலக் கூட்டத்தார்க்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த சிலர், தங்களுடைய ஆதிக்கத்திற்கு அழிவுகாலம் கிட்டிவிட்டதென்று பயந்து, நம்மை அவ்விடம் வரவொட்டாது தடுக்கவேண்டிய முயற்சிகளைப் பல வழிகளிலும் செய்யத் தொடங்கி இருப்பதாகவும் அறிகிறோம். இந்த நாட்டில் உள்ளதுபோலவே அங்கும் சர்க்காருக்கு உள் உளவாய் இருக்கின்ற பார்ப்பனர்கள், சர்க்கார் மூலமாக நம்மைப்பற்றிப் பொய்யும் புரட்டும் சொல்லி நம்மைத் தடுப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து வருகின்றார்கள் என்று கேள்விப்படுகிறோம். இவைகளெல்லாம் உண்மையாய் இருக்கு மாயின், இத்தகைய மேல்மிரட்டல்களால் நமது இயக்கத்தின் இலட்சியங்களை நாம் சொல்லாமலோ அல்லது அதன் நன்மைகளை மக்களுக்கு விளக்காமலோ இருக்கப் போவ தில்லை என்பதை மாத்திரம் உறுதியாய்க் கூறுவோம். ஆனால், நான் வெகுநாட்களாகச் சொல்லி வந்தபடி அரசியலைவிடச் சமூக மத விஷயங்களைப் பிரதானமாகக்கொண்டு, நமது சுற்றுப்பயணத்தை முடித்துவருவதாக நாம் உத்தேசித்திருக்கிறோம். அரசியல் சம்பந்தமான பிரச்சினைகள்பற்றி நமக்குத் தற்போது அதிகக் கவலையில்லை. ஆதலால் அது சம்பந்தமாக நாம் ஒன்றும் பேசப்போவதுமில்லை. ஆனால், சமூக மதச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகச் செய்யப்போகும் நமது பிரச்சாரத்திற்கு மாத்திரம், பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு மலேயா கவர்ன்மென்டார் ஏதேனும் முட்டுக் கட்டையாக இருக்க முயலுவார்களேயானால், அதற்காக நாம் நமது வேலையில் சற்றேனும் பின்வாங்கப்போவதில்லை என்பதை மாத்திரம் நிச்சயமாய்க் கூறுவதோடு, அதனால் ஏற்படக்கூடிய எவ்விதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்பதை வாசகர்களுக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—15-12-1929]

உ. மலேயா இந்தியர்க்கு

சகோதரர்களே!

இன்று இங்கு நடந்த மாநாட்டின் நடவடிக்கையைப் பார்த்தேன். இது எங்கள் நாட்டில் காங்கிரசின் ஆரம்பகால நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றது. அதாவது, இந்தியப் பொது மக்களுடையவும், பாமர மக்களுடையவும் நன்மைக்காகவென்று தான் ஆதியில் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதை ஆரம்பித்தவர்களில், அரசாங்க உத்தியோகத்தை நம்பி ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகத்திற்கும், தங்கள் சொந்த வயிற்றுப் பிழைப்புக்கும் வகை எதிர்பார்த்த மக்களே முதன்மையாய் இருந்தார்கள். அம் மாநாடுகளில் தங்கள் உத்தியோகத்திற்கு ஏற்ற பல தீர்மானங்கள் செய்துவிட்டு, பாமர மக்களை ஏமாற்ற—ரோடுகள் போடவேண்டும்; வரி குறைக்கவேண்டும்; காடு திருத்த வேண்டும்—என்பனபோன்ற சில காகிதத் தீர்மானத்தையும் செய்வார்கள். காரியத்தில் சீர்திருத்தம் என்ற பேரால் கொழுத்த சம்பளமுள்ள சில உத்தியோகங்களை அந்தப் படித்த கூட்டத்தினர் அனுபவிக்கவும் அதற்காக வரிகள் உயர்த்தவும் நேர்ந்ததைத் தவிர, அதற்குத்

தகுந்தபடி வரிகளும் உத்தியோகங்களும் அரசாங்க அதிகாரங்களும் மற்றும் தொல்லைகளும் பெருகினவே தவிர, வேறு யாதொரு பலனும் ஏற்படவில்லை.

சம்பளமும் உத்தியோகமும் பெருகினதின் காரணமாய்க் கட்சிகளும் உட்பிரிவுகளும் ஏற்படவேண்டியதாகிவிட்டது. ஏனென்றால், ஸ்தாபனங்களில் முக்கியஸ்தர்களாக இருக்கின்றவர்கள் அதனால் ஏற்படும் உத்தியோகங்கள் எல்லாம் தாங்களே சுயமாக அனுபவிக்க ஆசைப்படுவதாலும், மற்றவர்களுக்கும் பங்கு கொடுக்காமல் ஏமாற்ற சூழ்ச்சி செய்வதாலும், மற்றவர்கள் பிரிந்துபோய் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் தலைவர்களாவதும், பிறகு அதுபோலவே அதிலிருந்து பலர் பிரிந்துபோவதும், சாத்தியப்படாதவர்கள் சாதி, மத வகுப்புக்களின் பேரால் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டு பாத்தியம் கேட்பதுமாகிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. எங்கள் நாட்டில் உள்ள இவ்வளவு அரசியல், மதவியல், சாதி வகுப்பியல், சமூகவியல் ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டதான கட்சிகளும் ஸ்தாபனங்களும், காங்கிரஸ் ஏற்பட்டதினாலும் அதில் உள்ளவர்களின் சூழ்ச்சியாலும் அவர்களைப் பின்பற்றியும் ஏற்பட்டதேயொழிய வேறில்லை. ஆகையால், இந்த மாநாடு எங்கள் நாட்டுக் காங்கிரசைப் பின்பற்றாமல், அரசாங்கத்தாரே–உத்தியோகமும் பதவியும் கேட்காமல், நாட்டின் நலனுக்கும் பொதுமக்கள் நன்மைக்குமான முறையில் ஆட்சி செலுத்தும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தும் மாதிரியில் நடந்துகொள்ளவேண்டும். அதற்கு மார்க்கம், மக்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு அறிவையும் சுயமரியாதையையும் உண்டாக்குவதே தவிர, உத்தியோகங்களை இந்திய மயமாக்கவேண்டும் என்பதல்ல என்பதே எனது அபிப்பிராயம்.

இந்தியர்கள் என்பவர்களாகிய நாம் ஒரு மதம், ஒரு சாதி, ஒரு வகுப்பு, ஒரு கொள்கை, ஒரு இலட்சியம் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலாவது, இலட்சியத்தை ஒன்றுபடுத்திக்கொண்டாலொழிய ஒரு காரியமும் செய்ய முடியாது. ஆதலால், நீங்கள் ஏதாவது எங்கள் காங்கிரசைப் பின்பற்றி, எங்கு இந்த நாட்டையும் இந்தியாவைப்போல் பாழாக்கி, ஏழைகளை வதைத்து, இனி வரும் ஏழைகளுக்கும் தொல்லை விளைவித்து, அவர்களை இங்கிருந்து இனி வேறு வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுவீர்களோ என்று பயப்படுகிறேன்.

[சிங்கப்பூர் டவுன் ஹாலில், 26-12-1929-ல் நடந்த மலேயர் இந்தியன் அசோசியேஷன் மாநாட்டில் சொற்பொழிவு—'குடி அரசு' 2-2-1930]

3. அயல் நாட்டு அனுபவங்கள்

மலாய் பிரயாணத்தைப்பற்றி நாம் சிறிதும் நினைத்திருக்காத நிலையில் திரு. சாமி அற்புதானந்தா அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்தில் மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கக் கொள்கை உணர்ச்சி விசேஷமாய் பரவி வருகின்றதெனினும், சில விஷமக்காரர்கள் சுயநலத்தின் காரணமாய் இந்துமதத்தின் பேரால் தொல்லை விளைவிக்கின்றார்கள் எனவும், சுயமரியாதைக்காரர்களுக்கு, 'இந்துக்களைப் புதைக்கும் சுடுகாட்டில்கூட இடம் கொடுக்கக்கூடாது' என்று இந்துமதச் சங்கத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்ததாகவும், சுயமரியாதைக் கல்யாணங்களைச் சர்க்கார் ஒப்புக் கொள்ளக்கூடாது என்று விஷமம் செய்கின்றார்கள் எனவும், ஒருமுறை வந்துபோனால் மிக்க அனுகூலமாய் இருக்குமென்றும் பொருள்பட எழுதி இருந்தார். இதைப் பார்த்ததும் அதுசமயம் போய்த்தான் பார்க்கலாமா என்பதாக ஒரு எண்ணம் தோன்றியதால், இது சமயம் சிறிது வேலை இருக்கின்றதென்றும், ஒன்று இரண்டு மாதம் பொறுத்து முயற்சிப்பதாகவும் ஆனால் அங்குள்ள 'முன்னேற்றம்' பத்திராதிபரையும் திரு. காளியப்பனையும் கலந்து, அவர்களைக்கொண்டு எழுதும்படியும் பதில் எழுதினோம். இப்படி இருக்க ஒரு மாதம் கழித்து, திடீர் என்று 15 நாள் சாவகாசத்தில் புறப்படும்படி நிகழ்ச்சிக் குறிப்புடன்

ஒரு கடிதம் வந்தது. அக் கடிதத்திற்கு, வர முடியாது என்று எழுதியதுடன் அந் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் மற்ற பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டதாய்த் தெரிந்ததால் அதை பிரசுரிக்க வேண்டாம் என்று தகவலும் அனுப்பிவிட்டோம். தவிர, திருவாளர்கள் சாரங்க பாணி, காளியப்பன் இவர்கள் கடிதமும் இதை அனுசரித்துப் புறப்படும்படியாகவே கிடைத்தது. எல்லாவற்றிற்குமாக ஒரு நீண்ட தந்தி ஒன்றை—சென்னையிலிருந்து 'குடிஅரசு' ஆபீசு ஈரோட்டிற்கு மாற்றப்படவேண்டி இருப்பதாகவும் நாகர்கோவில் மாநாட்டிற்காகவும், பார்ப்பனர் அல்லாதார்க்குள்ளாகவே கட்சிப் பிளவு-தகராறுகள் இருப்பதாலும், இதுசமயம் கண்டிப்பாய் வருவதற்குச் சவுகரியம் இல்லை என்பதாகத் தந்தி கொடுத்தோம். இதற்குப் பதிலாக, '6000 டாலர்கள் (பதினாயிரம் ரூபாய்கள்) செலவழித்துச் செய்த மாநாட்டு ஏற்பாடுகளும், வரவேற்பு ஏற்பாடுகளும் வீணாய்விடும். வராவிட்டால் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய நிலைமை நெருக்கடியாகிவிடும்' என்று திருவாளர்கள் சாரங்கபாணியும் காளியப்பனும் தந்தியடித்தார்கள். அதைப்பார்த்த இவ் விடத்திய நமது நண்பர்கள் கண்டிப்பாய்ப் போகவேண்டுமென்றும், இவ் விடத்திய காரியங் களை எல்லாம் தாங்கள் சரியாய்ப் பார்த்துக்கொள்வதாகவும் சொன்னதோடு, கைவல்ய சாமியாரும் கண்டிப்பாய்ப் போகவேண்டுமென்று சொன்னார்கள். இவைகளை அனுசரித் துப் போவதாகத் தீர்மானித்து, ஒரு தந்தியை சிங்கப்பூருக்கு திரு. சாரங்கபாணிக்குக் கொடுத்துவிட்டோம். அதற்குப் பதிலாக திரு. சாரங்கபாணி அவர்களால், நமது வருகைக்கு அவ்விடம் இந்துசபையார் பெரிய எதிர்ப்பு செய்கிறார்கள் என்றும், அதனால் அவ்விடத்திய சர்க்கார் நம்மைக் கப்பல் விட்டு இறங்க அனுமதிக்கமாட்டார்கள்போல் இருக்கின்ற தென்றும், இறங்கவிட்டாலும் பேசவிடமாட்டார்கள் என்றும், தகுந்த ஏற்பாட்டுடன் கண்டிப் பாய் வரவேண்டும் என்றும் தந்தி கொடுத்திருந்தார். இது டிசம்பர் மாதம் 9ஆம் தேதி கிடைத்தது. அதைப் பார்த்தபிறகு, கப்பல் ஏறும்நாள் மிகச் சமீபத்தில் இருந்ததால், அதாவது 11ஆம் தேதியாய் இருந்ததால் ஒன்றும் செய்யமுடியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். இந்த நிலையில் 'மாநாடு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. கப்பல் ஏற வேண்டாம்; கடிதம் பார்' என்பதாக மாநாட்டு வரவேற்புத் தலைவரான திரு. அய்யாறு அவர்கள் பெயரால் பினாங்கிலிருந்து ஒரு தந்தி கிடைத்தது. இதைப் பார்த்ததும் கஷ்டம் ஒழிந்தது என்று மெத்த சந்தோஷமாக இருந்தோம். ஆனால், இங்குள்ள நண்பர்களும் நமது தமையனாரும் இந்தத் தந்தி பொய்யாய் இருக்குமென்றும், மறுபடியும் தந்தி கொடுத்துக் கேட்கவேண்டுமென்றும் சொன்னதால் மறுபடியும், 'இப்படி ஒரு தந்தி கிடைத் தது; அது உண்மையா?' என்று கேட்டோம். அதற்குப் பதில், 'பினாங்கு தந்தி பொய்; கண்டிப்பாய்ப் புறப்படு; பயணத்தை உறுதிப் படுத்து' என்று பதில் 11ஆம் தேதி கிடைத்தது. இதைப் பார்த்தபிறகு மறுபடியும் கவலை ஏற்பட்டது. ஏனெனில், அவ் விடத்திய சர்க்கார் நம்மைக் கப்பலைவிட்டு இறக்காமல் பாரிஸ்டர் திரு. மணிலால் அவர் களைச் செய்ததுபோல் செய்துவிட்டால் நாம் என்ன செய்வது என்கின்ற கவலை தவிர வேறு இல்லை. இதன்பேரில் சென்னை அரசாங்க பிரதம அதிகாரிகளைக் கேட்கச் செய்த தில், அவர்கள் மலாய் அரசாங்கத்தில் தாங்கள் பிரவேசிக்க முடியாது என்று ஒரே வார்த்தை யால் முடித்து விட்டார்களாம். பிறகு எப்படியானாலும் சரி, இவ்வியக்கம் காரணமாக வந்ததை அனுபவிப்போம் என்றே புறப்பட்டோம். நாள் சுருக்கமாக இருந்ததால் 11ஆம் தேதி சென்னையில் கப்பலேற முடியாமல் 13ஆம் தேதி நாகைக்குப் புறப்பட்டு அங்கிருந்து 15ஆம் தேதி கப்பலேறிவிட்டோம்.

கப்பலில் கம்பியில்லாத் தந்தி மூலமாய் பல வரவேற்புத் தந்திகள் கிடைத்துக்கொண் டிருந்தாலும் சற்றுக் கவலையுடனேயேதான் கப்பல் பிரயாணம் செய்தோம். நாங்கள், பினாங்கு துறைமுகத்திற்கு 4 மைல் தூரத்தில் கப்பல் நின்றிருக்கும்போதே ஒரு வெள்ளைக்காரச் சாதாரண அதிகாரியும் மற்றொரு இராணுவ உடை தரித்த வெள்ளைக்கார அதிகாரியும் சில போலீசுக்காரரும் நம்மிடம் வருவதைப் பார்த்ததும், 'சரி, நமக்குத் தடை

உத்தரவு வந்துவிட்டது' என்று முடிவு செய்துகொண்டு, மனதில் நம்மையறியாமல் ஏற்பட்ட ஒருவிதத் திகிலுடன், முகத்தை மாத்திரம் சிரிப்பாகக் காட்டிக் கொண்டு நின்றோம். அவர்கள் இருவர்களும் கிட்ட வந்ததும் சலாம் செய்து, ஒருவர் அசிஸ்டண்ட் கண்ட்ரோலர் என்றும், மற்றவர் சார்ஜண்ட் என்றும் தாங்களே அறிமுகம் செய்து கொண்டார்கள். பிறகு பேச ஆரம்பித்ததும் என்னிடம் பேசவேண்டியவைகளைத் திரு. இராமநாதன் அவர்களிடம் சொல்லும்படி சொன்னோம். பிறகு அவர் பேசும்போதே ஒருவிதத் தைரியம் வந்தது. அதற்குள் பினாங்கிலிருந்து சில சங்கத்து நண்பர்கள் வந்து ஒரு கடிதம் கொடுத்தார்கள். அதில் இதைப்பற்றிய காரியம் ஒன்றுமில்லாமல் நிகழ்ச்சிக் குறிப்பு இருந்ததால் அந்தக் கவலை நீங்கிவிட்டது. இதற்குள் மற்றொரு படகில் சாமி அற்புதானந்தா, சுப்பிரமணியம் முதலியவர்களும் மற்றும் சில இந்து, முகம்மதிய கனவான்களும் வருவதைப் பார்த்தோம். இறங்கவிடமாட்டார்களே என்று நினைத்த எண்ணம்போய், இவ்வளவு ஆடம்பரம் வேண்டாம் என்று சொல்லவேண்டிய நிலைமை வந்துவிட்டது.

பினாங்கில் இறங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன. அவற்றுள் ஒன்று, நம்மைக் கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும், நாம் போகும் இடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும் துண்டுப் பிரசுரங்கள் போட்டு வழங்கி வருவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்து இருப்பதாகவும், மற்றும் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பேசினதாகவும் சொன்னதாகவும், முகம்மதுநபிக்கு விரோதமாய்ப் பேசினதாகவும், இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை முகம்மதிய மதத்தில் சேர்ப்பிக்க முகம்மதியரிடம் பணம் வாங்கிக்கொண்டு மலாய் நாட்டிற்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமைப் பிரச்சாரம் செய்ய வருவதாகவும், போல்ஷிவிசம் பிரச்சாரம் செய்ய வருவதாகவும் இன்னும் பலவிதமாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் பிரச்சாரம் செய்திருந்த விஷயம் நேரில் பார்த்தோம். தவிரவும் அவ்விடத்திய ஓர் ஆங்கில தினசரிப் பத்திரிகை, அரசாங்கத்திற்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரர் என்றும், நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜன சமூகத்தின் சாந்த குணம் கெட்டு, சர்க்காருக்குத் தொல்லை ஏற்படுமென்றும், எச்சரிக்கை செய்வதாக ஒருவாரம் தவறாமல் தலைபங்கமும், உபதலையங்கமும் எழுதி வந்தது. இதுநிற்க, 'தமிழ்நேசன்' பத்திரிகைக்காரரான ஓர் அய்யங்கார் ஊர் ஊராகச் சுற்றிப் பிரச்சாரம் செய்ததுடன், தனது பத்திரிகையில், கடவுளுக்கும் மதத்துக்கும் ஆபத்து என்று தினப்படி எழுதிக்கொண்டே வந்தார். தவிர இவ்வளவும் பேசாமல் திரு. வரதராசலு நாயுடுவின் பேப்பரும், மருந்து விற்கும் ஆட்களும் கூலிகளும் விஷமப் பிரச்சாரம், அதாவது, 'தோட்டக்கூலிகளைக் கிளப்பிவிட்டுத் தோட்டக்காரருக்குத் தொல்லை விளைவிப்பான்; இவன் காந்தி மனிதன்' என்றும் சொல்லிவந்தார்களாம்.

மற்றும் ஒரு விசேஷம். அதாவது 'இந்து மகாசபைத் தலைவர், அவ்வூர் போலீஸ் கமிஷனரிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்துப் பேசுகையில், 'இந்தியாவிலிருந்து வரும் ஈ. வெ. ராமசாமி என்பவர் எங்கள் கடவுளான இராமரை விபசாரத்தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றார்; ஆதலால் அவரை இங்கே வரவிடக் கூடாது' என்றாராம். அதற்கு அந்த போலீஸ் கமிஷனர், 'அதற்கு நாம் என்ன செய்யலாம், எங்கள் வெள்ளைக்காரர்களில் சில பேர் இயேசு கிறிஸ்துவையும் இப்படித்தான், அதாவது, அவர் தாயார் விவாகம் ஆவதற்கு முன் அவரைப் பெற்றதால் விபசாரத்தில்தான் பிறந்திருக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். கேட்டால், 'சயின்சுப்படி ஒரு ஆள் கூடாமல் எப்படி பிள்ளை பிறக்கும்' என்கின்றார்கள். ஆகவே, மத விஷயங்களில் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகவே இருந்துவருகின்றது. அதற்காக யாரையும் தூக்கில் போட முடியாது' என்றும் சொன்னாராம். இப்படியாகப் பலவிதத்திலும் எதிர்ப் பிரச்சாரங்கள் செய்தார்கள் என்பது மாத்திரம் நமது காதுக்கு எட்டியதே தவிர, காரியத்தில் பலன் ஒன்றும் காண முடியவே இல்லை. 'தமிழ் நேசன்' பத்திராதிபரான ஒரு அய்யங்கார்,

சர்க்காரால் நம்மை மலாய் நாட்டில் இறங்கக்கூடாதென்று உத்திரவு போட்டுவிட்டதாகக் கட்டுக் கட்டிவிட்டதால், அதை நம்பி அனேகம் பேர் கப்பலில் இருந்து நாம் இறங்கமாட்டோமென்று நினைத்துக்கொண்டு, இறங்கினால் குத்திவிடுவதாயும் கலகம் செய்வதாயும் பேசி விட்டார்கள். நாம் பினாங்கில் இறங்கியதும் அங்கு துறைமுகத்தில் ஜனங்கள் நடந்து கொண்டதைப் பார்த்த பிறகுதான் யாரும் எவ்வித எதிர்ப் பிரச்சாரங்கள் செய்யாமல் இருந்து விட்டார்கள்.

நிற்க, எதிர்ப் பிரச்சாரங்கள் செய்வதற்கு ஏற்பட்ட காரணங்கள் என்னவென்று பார்த்ததில், பினாங்கில் இந்து மகாசபை என்று ஒரு சபை இருப்பதாகவும், அதைச் சர்க்கார் இந்துக்களுடைய பிரதிநிதி சபை என்று ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், அச் சபை பிரமுகர்களுக்கு அங்குள்ள இந்துக்களால் சில மரியாதைகளும் வரும்படிகளும் இருப்பதாகவும், நமது இயக்கத்தால் அவற்றிற்கு மரியாதை குறைந்து வரும்படி குறைவதாகவும், அதனால் நமது இயக்கத்திற்கு விரோதமாய் வேலை செய்யவேண்டி வந்ததாகவும் தெரிய வந்தது. ஆனால் அந்த இந்து மகாசபையில் இந்துக்கள் என்பவர்களிலேயே பல வகுப்பாரை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்வதில்லை என்கின்ற நிபந்தனை உண்டு. அதாவது, ஆதித் திராவிடர்கள், மருத்துவர்கள் முதலியவர்களை மாத்திரமல்லாமல், சமீப காலம் வரை நாடார்களையும் சேர்க்க மறுத்து வந்தார்களாம். முதல் முதலில் நாடார்களைச் சேர்க்கும்போதும் அதிகமான பணம் கொடுத்ததால்தான் சேர்த்தார்களாம். இந்த யோக்கியதை உள்ள இந்து மகாசபை கெட்டுப் போகுமென்று சிலர் சத்தம் போட்டதால் தான் அதை யாரும் அந்நாட்டில் மதிக்கவில்லை. தவிர, 'தமிழ்நேசன்' அய்யங்கார் நாம் போகும் ஒவ்வொரு ஊருக்கும் முதல்நாள் போய் வரவேற்புக்கு எவ்வளவோ இடையூறு செய்துகொண்டு போனதாக அனேகமாய் ஒவ்வொரு ஊர்களிலும் பிரஸ்தாபம் வந்து கொண்டே இருந்தது. இது தவிர, மலாய் நாட்டிலுள்ள சங்கங்களில் எதில் எதில் பார்ப்பனர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்களோ, அதிலெல்லாம் வரவேற்புக்குக் கூடியவரை எதிர்ப்புகள் செய்து பலமான தோல்விகள் அடைந்ததுடன், இரண்டொரு சங்கத்தில் இது விஷயமாய்ச் செய்த விஷமத்திற்குப் பார்ப்பனர்களிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியிருந்ததை எங்களுக்குக் காட்டினார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் நமது மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணம், நாம் எதிர் பார்த்ததற்கு மேலான அளவு வெற்றிகரமாகவே முடிந்தது. முகம்மதிய கனவான்களும், கிறிஸ்தவ கனவான்களும் அவர்களில் அய்ரோப்பியர்களும், மற்றும் இந்துக் கனவான்களும் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் சிறிதும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரும் கலந்து கொண்டதும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் போல் தலைமை வகித்து உபசாரங்கள் செய்ததும் நடவடிக்கைகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். திருவாளர்கள் சுவாமி அற்புதானந்தர், கே. சுப்பிரமணியம், காளியப்பன், அய்யாறு, சாரங்கபாணி, ஓ. இராமசாமி நாடார், கோவிந்தசாமி, தாமோதரன், பழனியப்பச் செட்டியார், ஜனாப்புகள் முகம்மது ராவுத்தர், சீனிராவுத்தர், முகம்மது யூசுப் முதலிய கனவான்கள் சிங்கப்பூரிலும், பினாங்கிலும் செய்த ஏற்பாடுகள் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த இரண்டு ஊர்களில் 7500 ரூபாய்க்கு மேலாகவே செலவுசெய்து இருக்கின்றார்கள். எவ்வளவு சொல்லியும் அவர்கள் சிறிதும் இலட்சியம் செய்யாமல் எதிர்ப் பிரச்சாரக்காரர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்கின்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டே வீண் செலவு செய்தார்கள். எனவே, நமது மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாக முடிந்தது என்பது வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன், மலாய் நாட்டிலுள்ள இந்தியச் சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—9-2-1930]

4. கெய்ரோ கடிதம்

போர்ட் சைட்டிலிருந்து எழுதிய வியாசம் கிடைத்திருக்கலாம். அதில் 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' என்கின்ற கப்பல் விஷயத்தைப் பற்றி மாத்திரம் எழுதமுடிந்தது. மற்றபடி கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட்டதற்குப்பின் கண்ட விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுகிறேன்.

டிசம்பர் 17-ந் தேதி காலை புறப்பட்ட கப்பல் 24-ந் தேதி காலை 10 மணிக்கு ஜிபுட்டி என்கின்ற பிரஞ்சு துறைமுகம் வந்து சேர்ந்தது. இது ஏடனுக்கு எதிர்ப் பாகத்தில் இருப்பதும் பிரஞ்சுக்காரருடைய துறைமுகமுமாகும். நாங்கள் பிரஞ்சுக் கப்பலில் பிரயாணம் செய்ததால் பிரஞ்சுக் கப்பல் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. பிரஞ்சுக் காரருக்குச் சொந்தமான தீவாகிய மடகாஸ்கர் என்னும் தீவுக்கு அனுப்பப்படும் சாமான் களும், அத் தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களும் ஜிபுட்டி என்ற துறைமுகத்தின் வழியாகத்தான் வரவேண்டும். இந்தத் துறைமுகத்தில் நாங்கள் இறங்கினதும் கமாலியர் என்கின்ற ஒரு சாதியார்—நீக்ரோவர்களைப் போல் அதிகக் கறுப்பும், மிகவும் சுருண்ட தலைமயிரும் உடையவர்கள்தாம் இந்தத் தேசத்தில் அதிகமாய் இருக்கிறவர்கள்; இவர்கள் பாஷை அரபு—மதம் இஸ்லாம்; மிகவும் இளைத்த சரீரமுள்ள வர்கள், பார்வைக்கு விகாரமானவர்கள், ரொம்பவும் ஏழைகள், அழுக்குத் துணியுடைய வர்கள்; இவர்கள்தாம் இவ்விடத்திய கூலிகள். பெண்கள் விகாரமாய், மலை லம்பாடி சாதியாரைப்போல் நகை அணிந்துகொண்டு, நீண்ட குப்பாயம் போட்டுக்கொண்டிருக் கிறார்கள். இங்கு சில அரபியரும், நம் பக்கத்திய—அதாவது மரைக்காயர்கள், இராவுத்தர் மார்களைப்போல் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் நல்ல உடை உடுத்திக்கொண்டு சுத்தமாகவும், நல்ல தோற்றமாகவும் இருக்கிறார்கள். இவர்கள் முதலாளிகளாகவும், சற்று நாகரிக வாழ்க்கைக்காரராகவும் காணப்படுகிறார்கள்.

ஜிபுட்டி துறைமுகப் பாகம் மாத்திரம் நல்ல உயர்தரக் கட்டடங்களும் நல்ல உயர்தர ஷாப்புக் கடைகளும், பிரஞ்சுக்கார வெள்ளையர்களால் மிகுதியும் குடியிருக்கப்பட்ட மாளிகைகளும் உடையதாகக் காணப்படும். மற்றப்படி ஊருக்கு ஒரு பெண்கூட முகத்தை மூடிக்கொண்டு போனதை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால், முக்காடு மாத்திரம் போட் டிருக்கிறார்கள். இங்கு பம்பாய், குஜராத்தி வியாபாரிகள் சிலரைப் பார்த்தோம். இங்கு தபால் எழுதிவிட்டு, சில சாமான்கள் சாப்பாட்டுக்கு வாங்கினோம். பிறகு 24-ந் தேதி மாலை 5 மணிக்கு ஜிபுட்டிலிருந்து கப்பல் புறப்பட்டு 29-ந் தேதி சூயஸ் துறைமுகத்துக்கு வந்தது. அத் துறைமுகம் மிக்க அழகானதாகவும், ஊர் மிகவும் புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. ஜிபுட்டியிலிருந்து செங்கடலில் கப்பல் புறப்பட்ட வுடன் தினம் 1-க்கு 3, 4 கப்பல் வீதமும், சூயசுக்குப் பக்கத்தில் வரவர ஒருமணி ஒன்றுக்கு ஒரு கப்பல் வீதமும், கடலில் போவதையும் வருவதையும் பார்த்துக்கொண்டே இருந்தோம். சூயசுக்குப் பக்கத்தில் வந்தவுடனே சிறிது சிறிதாய் குளிர் அதிகப்பட்டு, சூயசில் நடுங்கும் படியான குளிர் ஏற்பட்டது. ஏனெனில், அங்குதான் முதலில் குளிர் கண்டோம். கப்பலில் எங்களுடைய இடம் 4-வது வகுப்பு (மேல்தட்டு) ஆனதால் அங்கு—சென்னையில் கப்பல் ஏறினது முதல் 4, 5 நாள் வெயிலாலும் மழையாலும் மிகவும் கஷ்டப்பட்டதுடன், சாமான்களுடன் அடிக்கடி மூட்டைகள் இறக்கும் போதும் ஏற்றும் போதும் இடம் மாற வேண்டியதாயும் இருந்தது.

புதுச்சேரித் துறைமுகத்தில் எனக்குச் சிறிது காய்ச்சலும், மயக்கமும், தலைவலியும் அதிகத் தொந்தரவு செய்ததுடன், வெயிலிலே இருக்கவேண்டி இருந்ததாலும் சற்று மன வருத்தமும் உடல்நிலையைப் பற்றிக் கவலையும் ஏற்பட்டதால் 4-வது வகுப்பிலிருந்து 3-வது வகுப்புக்கு மாற்றலாம் என்று தீர்மானித்து, புதுச்சேரியிலிருந்து எங்களைக் காண வந்திருந்த திரு. பாரதிதாசன், திரு. நோயேல், திரு. செல்வம் அவர்களுடைய காரியதரிசி

ஆகியவர்கள் மூலமாய்க் கப்பல் கமிஷனரிடம் சென்று மாற்றும்படிக் கேட்டதில், அவர் சென்னையில் 3-வது வகுப்புக்காகச் சொல்லப்பட்ட சார்ஜைவிட 2 பவுன் அதிகமாகக் கூட்டி 1 டிக்கெட்டுக்கு ரூ. 120 வீதம் அதிகம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். அதற்கும் சம்மதித்ததில் இங்கிலீஷ் பவுன்நோட்டு எடுக்கமாட்டேன் என்று சொல்லி, இந்திய நாணய நோட்டே வேண்டுமென்று கேட்டார். எங்களிடம் இருந்த தொகைகள் எல்லாம் இங்கிலீஷ் நாணய நோட்டாகவே மாற்றப்பட்டு இருந்ததால் புதுச்சேரி டவுனுக்கு இங்கிலீஷ் பவுன் நோட்டை அனுப்பி, இந்திய நாணயமாக மாற்றிக் கொண்டுவந்து கொடுப்பதாகச் சொல்லி, நாணயம் மாற்ற திரு. பாரதிதாசன் அவர்களை புதுச்சேரி ஊருக்குள் அனுப்பினோம். அவர் இந்தியநாணயத்தையும் சில தின்பண்டங்களையும் ஒரு டாக்டர்வசம் அனுப்பிக் கொடுத்தார். அதற்குள் எனக்குச் சற்று குணமாயிருந்ததாலும், டாக்டர் பரீட்சை பார்த்து சில பக்குவம் சொன்னதாலும் 3-வது வகுப்புக்கு மாறாமல் 4-வது வகுப்பிலேயே இருந்து கொண்டோம். பிறகும் 2, 3 நாள் கஷ்டப்பட்டோம். கப்பலில் நாங்கள் மூட்டைகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டோமானாலும் 4-ம் நாள் ஒரு கீழ்த்தட்டில் சாமான்களை வைத்துக் கொள்ள கப்பல் கமிஷனர் அனுமதிகொடுத்தார். அந்தக் கீழ்த் தட்டானது மூட்டைகள் போடவும் ஒரு பக்கம் பிரஞ்சு சோல்ஜர்கள் இருக்கவும் ஏற்பட்டது. அதில் 50 சோல்ஜர்கள் இருக்க இடமுண்டு. 50 சோல்ஜர்கள் ஏற்கனவே இருந்தார்கள். நாங்கள் மூட்டைகளின்மேல் இருந்தோம். இரண்டொரு நாள் சோல்ஜர்கள் எங்களுடன் பழகிவிட்டதாலும், 3 தமிழ் பிரஞ்சு இந்திய சோல்ஜர்கள் மிக்க பழக்கமாகிவிட்டதாலும் பிரயாணம் சிறிதுகூட கஷ்டமாகத் தோன்றவில்லை. ஆகாரம் இந்த சோல்ஜர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரமேதான் எங்களுக்கும் கொடுக்கப்பட்டது. அதாவது, தினம் 2 வேளை வேகவைத்த உருளைக்கிழங்கும் கொள்ளு அல்லது அவரை, கடலை முதலிய ஏதாவதொரு தானியமும் வேகவைத்துக் கொடுப்பதுடன், உருண்டை ரொட்டி 3-ம், இதுகளும் மாட்டு மாமிசத் துண்டும் சாராயமும் கொடுக்கப்படுவது பழக்கம். காலையில் பால் இல்லாத காப்பியும் ரொட்டியும் உண்டு. இவற்றுள் சாராயம், மாட்டு மாமிசம் ஆகியவைகளை நாங்கள் உபயோகிக்கவில்லை. மற்றதுகளுடனும் கொளும்பிலும், சென்னையிலும், புதுச்சேரியிலும் வாங்கின பிஸ்கட், ஆரஞ்சுப் பழம் ஆகியவைகளுடனும் காப்பி, டீயுடனும் சரிப்படுத்திக் கொண்டோம்.

சூயசிலிருந்து 29-ந் தேதி பகல் 2 மணிக்குக் கப்பல் சூயஸ்கால்வாய் வழியாக போர்ட் சைட்டுக்குப் புறப்பட்டது. இந்தக் கால்வாயானது செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்குமாக சுமார் 100 மைல் நீளம் மணல்தரையில் வெட்டப்பட்ட கால்வாயாகும். இதன் அகலமெல்லாம் சுமார் 150 அடிதானிருக்கும். நமது வாய்க்கால் போலவே இரு பக்கம் கரையில் நடக்கும் ஜனங்களுடன் பேசிக்கொண்டே கப்பலில் போகலாம். ஆனால், 40 ஆயிரம், 50 ஆயிரம் டன் கனமுள்ள கப்பல்கள் எல்லாம் தாராளமாய்ப் போகத்தகுந்த ஆழம் வெட்டப்பட்டிருக்கின்றது. கால்வாய் வேலைகள் இன்னமும் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. எதிரில் கப்பல் வந்தால் ஒதுங்கி நிற்க ஆங்காங்கு வசதி இருக்கின்றது. கால்வாய்க்கு நெடுக வாட்சுமேன்களும், காவல்களும், பந்தோபஸ்துகளும் உண்டு. இந்தக் கால்வாய் 'சூயஸ் கால்வாய் கம்பெனியார்' என்கின்ற ஒரு கம்பெனி யாரால் முதல்போட்டு வெட்டப்பட்டு, ஒவ்வொரு கப்பலுக்கும் சுங்கம் வாங்குவதன் மூலம் பங்குக்காரர்களுக்கு இலாபம் கிடைத்து வருகின்றது. ஒரு கப்பலுக்கு சுமார் 10000 (பத்தாயிரம்), 15000 ரூபாய் போல் சுங்கம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டோம். சூயசிலிருந்து போர்ட் சைட்டுக்குப் போவதற்குள் குளிர் அதிகப்பட்டுக் கொண்டே வந்துவிட்டது.

29-ந்தேதி இரவு 10 மணிக்கு கப்பல் போர்ட்சைட்டுக்கு வந்தது. இரவு 11 மணிக்கே பிரயாணிகளைக் கப்பலை விட்டு இறக்கிவிட்டார்கள். துறைமுகம் சென்னையைப் போலவே கப்பலிலிருந்து தரையில் கால் வைக்கலாம். ஸ்தல யாத்திரைகளில் எப்படிப் பண்டாரங்களும், அர்ச்சகர்களும், யாத்திரை வழிகாட்டிகளும் இரயிலிலேயே வந்து

தொந்தரவு செய்வார்களோ அதுபோல், Guide என்று சொல்லப்படும் வழிகாட்டிகள் கப்பலுக்குள்ளாகவே வந்து சூழ்ந்து கொண்டு இம்சைப்படுத்திவிட்டார்கள். பிறகு ஒருவன் எங்களுடன் விடாப்பிடியாய்த் தொடர்ந்து வந்து எங்கள் சாமான்களைக் கப்பலிலிருந்து 'போட்'டில் ஏற்றிக்கொண்டு எங்களை கஸ்டம் ஆபீஸ், டாக்டர் சோதனை, சாமான் சோதனை முதலியவைகளை நடத்திக்கொடுத்து 'அக்ராப்போல்' என்கின்ற ஒரு ஒட்டலில் கூட்டிக்கொண்டுவந்து இரவு 12 மணிக்கு விட்டான். இங்கு ஒட்டல் என்பது தங்குமிடம் மட்டுந்தான். அதாவது, ஓர் அறையில் சாமான் வைத்துப்படுத்துக்கொள்ளலாம். கட்டில், நாற்காலி, மேசை உண்டு. சாப்பாட்டுக்கு வேறு ஏற்பாடுதான் செய்துகொள்ளவேண்டும். இந்த ஒட்டலில் நாள் ஒன்றுக்கு 3 பேருக்கு தங்குவதற்கு தினம் 3 ரூ. வீதம் பேசி ஒரு வாரம் இருந்தோம். சாப்பாடு சொந்தத்தில் செய்து கொண்டோம். வழிகாட்டி 7 ரூ. வாங்கிவிட்டான். வழிகாட்டிகளின் கஷ்டத்தைத் தவிர வேறு கஷ்டமில்லை. பாஷை தெரியாதவர்கள் இந்தக் கஷ்டம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

போர்ட் சைட் ஊரானது சூயசைப்போலவே புதிதாக உண்டாக்கப்பட்ட சிறிய பட்டணம்; மூன்று புறமும் தண்ணீர் சூழ்ந்தது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் எகிப்தியர்கள். அனேகமாக 100-க்கு 90 இஸ்லாம் மதக்காரர்கள். மற்ற பல தேசத்தாரும் இங்கு இருக்கிறார்கள். துறைமுகம் என்பதைத் தவிர இதற்கு வேறுபெருமை கிடையாதானாலும் பெரியபெரிய ஷாப்புகளும் அலங்கார சாமான் கடைகளும் தாராளமாய் உண்டு. சரிபகுதி காப்பிக் கடைகள் இருக்கும். சாமான்கள் நிலவரம் எல்லாம் நமது ஊர்களில் உள்ளது போலவேயொழிய அதிகமில்லை. ஆனால், கடைகளில் சாப்பிட்டால் செலவு அதிகம். ஜனங்கள் பார்வைக்கு வெள்ளைக்காரர்களைப்போலவே இருக்கிறார்கள். எகிப்திய இஸ்லாம் பெண்களுக்கும் அய்ரோப்பியப் பெண்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது கடினம். கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குங்கூட அடையாள வித்தியாசம் கிடையாது. 3-ல் 2 பாகம் பெண்கள் அய்ரோப்பிய உடையுடனும் தொப்பியுடனுமே திரிகிறார்கள். ஆண்கள் எல்லாம் அய்ரோப்பிய உடைதான். சில ஏழைக் குடும்பப் பெண்களும் சில கிராமக் குடும்பப் பெண்களும் மாத்திரம் உள்ளே அய்ரோப்பிய உடை அணிந்து, மேலே கருப்புத் துணியினால் போர்த்துக் கொண்டு, வாய் மாத்திரம் மறையும்படி ஒருவித வலைத் துணி கட்டிக்கொள்ளுகிறார்கள். (நெற்றி, கண், மூக்கு எல்லாம் தெரியும்). ஆண்கள் அய்ரோப்பிய உடையுடன் சிலர் அய்ரோப்பியத் தொப்பியும் துருக்கித் தொப்பியும் அணிகிறார்கள். தாடி என்பது கிடையவே கிடையாது. கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் இங்கு அடையாளம் கண்டுபிடிக்கவே முடியாது. இந்த ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் இந்தத் துறைமுகத்திற்கு வந்துபோகும் பிரயாணக்காரர்களால்தான் வியாபாரமும் பிழைப்பும் நடக்கவேண்டியதே தவிர வேறில்லை. எகிப்திய இஸ்லாம் பெண்களின் டான்சு தினமும் நடக்கும். பலர் உடம்பெல்லாம் பலவித பச்சை குத்திக் கொள்ளுகிறார்கள்.

போர்ட்சைட்டில் ஒருவாரம் இருந்துவிட்டு ஜனவரி மாதம் 5-ந் தேதி காலை 8 மணிக்கு கெய்ரோவுக்குப் புறப்பட்டு இரயிலேறி 5-ந்தேதி பகல் 1 மணிக்கு கெய்ரோவுக்கு வந்தோம். 150 மைல் தூரம் 3-வது வகுப்புக்கு மைலுக்கு அரையணா இரயில் சார்ஜ் விகிதம். இரயில் வண்டிகள் எல்லாம்—S.I.R. சின்ன வண்டிகளில் இரண்டு இரண்டு பேருக்குப் பெஞ்சுகள் இருப்பதுபோலவே, எல்லா வண்டிகளிலும் இருக்கின்றது; வண்டிகள் எல்லாம் பெரிய வண்டிகள்.

முதல் வண்டியிலிருந்து கடைசி வண்டிவரை வண்டி நடுவில் நடந்து போகலாம். கெய்ரோ பட்டணமானது ஆப்பிரிக்கா தேசத்திலேயே பெரிய பட்டணமாகும், இதில் 10 இலட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இது ஈஜிப்ட் தேசத்தின் தலைநகரமாகும். எகிப்திய தேசம் என்பது உலகத்தில் உள்ள பழமையான தேசங்களில் எல்லாம் மிகப் பழமையானது.

நாகரிகங்களிலும் எகிப்திய நாகரிகமே மிகப் பழமையானது. இது உலகுக்கு மத்திய தேசமு மாகும். இவ்விடத்திய சீதோஷ்ண நிலை குளிர்காலத்தில் பெங்களூரைப் போலவும், வெயில் காலத்தில் நமது ஊர்களைப்போலவும் இருக்கும். இங்குள்ள மலைகள் அனேகமாய் மணல் மலைகளேயாகும். நிலங்கள் பெரும்பாகம் வெறும் மணல் பூமிகளாகவே இருக்கும்.

கெய்ரோவில் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அதற்குப் பெயர் நைல் (Nile) நதி என்பது. இது உலகத்திலேயே பெரிய நதியாகும். இதன் நீளம் 3500 மைல். இதில் கப்பல்கள் தாராளமாகப் போகின்றன. இதற்குப் பல வாய்க்கால்களும், தாராளமாகப் பாசனங்களும் உண்டு. இங்கு மழை என்பதே கிடையாது. ஒட்டகம், குதிரை, கோவேறு கழுதை, கழுதை ஆகியவைகளால்தாம் எல்லாவேலையும் செய்யப்படுகின்றது. பசுமாடு பால்கறக்கவும், காளைமாடுகள் சாப்பிடவும்தான் பயன்படுகின்றன. உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், முதலிய குளிர் தேசக் காய்கறிகளேதான் அதிகம். எல்லோரும் கோதுமை ரொட்டியும், சப்பாத்தியும் தான் அதிகம் சாப்பிடுகிறார்கள். உடை விஷயங்கள் நம்மூர் உடைகளைவிட அதிகம் தேவை இருக்கிறதுடன் அதிசமாகவே உபயோகிக்கிறார்கள். அவற்றின் விலைகள் எல்லாம் நமது பக்கத்தைவிட நயமாகவே இருக்கின்றன.

பொதுவாகக் கிராமங்கள் எல்லாம் மண்சுவர் வீடுகளாகவும், மேற்கூரைகள் எல்லாம் மரம்போட்டு, பலகை போட்டு, மண் பரப்பியதாகவுமே இருக்கின்றன. மழை இல்லாததால் கூரையைப்பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. பட்டணங்களில் வீடுகள் 3, 4, 5, 6, 7 மாடி வரையில் இருக்கின்றன; 3, 4 மாடிகளே அதிகம். பொதுவாக, பம்பாய் கட்டடங்கள் போலவே காணப்படும்.

நிற்க, நான் இதுவரை உடைகளை மாற்றிக் கொள்ளவில்லை. தலைக்கு மாத்திரம் ஒரு கம்பளி குளிர் (மங்கி கேப்) குல்லாய் போட்டுக்கொண்டேன். ஆகாரம் ரொட்டி, முட்டை, காப்பி இவைகள்தாம் முக்கியமாய் உபயோகிக்கிறேன். முட்டை இவ்விடம் மிக மலிவு. 2 அணாவுக்கு 5 முட்டை கிடைக்கின்றது. இந்தப் பக்கத்துக்காரர்களுக்கு நான் ஒருவனே தாடி வைத்தவனாகவும், ஒரு புதுமாதிரி மனிதனாயும் காணப்படுவதால் யாரும் குறிப்பாய்ப் பார்ப்பதும், மற்றும் மரியாதை செய்வதுமாய் இருக்கிறார்கள். கூடுமானவரையில் ஜனங்கள் நமது ஜனங்களைவிட நல்ல குணமுள்ளவர்களாகவும் விவேகிகளாகவும் இருக்கிறார்கள்; 'இந்தியன்' என்றால் மிகப் பிரியமாய்ப் பேசுகிறார்கள்; அய்ரோப்பியரிடம் வெறுப்பாய் இருக்கிறார்கள். இவ்விடத்திய பெண்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், சுதந்திர உணர்ச்சியும், தைரியமும், துணிவும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். குழந்தைகள் சிறுவர்கள் ஆகியவர்களுக்கு நமது பக்கத்திய குழந்தைகளைவிட அதிக புத்தியும் சுதந்திர உணர்ச்சியும் துணிவும் இருக்கின்றன. மற்ற அரசியல், மதவியல் சம்பந்தமான விஷயங்கள் பின்னால் எழுதுகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினத்தில் 'ஏதன்சு'க்குப் (கிரீஸ் தேசம்) போவோம்.

['குடி அரசு'–கடிதம்—7-2-1932]

5. ஈஜிப்ட் கடிதம்

சூயஸ் துறைமுகத்தில் ஒரு பெரிய கப்பலை 29-12-1931 தேதியில் நாங்கள் பார்த்தோம். அதன் பெயர் 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' (Empress of Britain). நேற்றைக்கு முந்திய தினம் கனடியன் பசிபிக் ரெயில்வே கம்பெனியாரால் அக் கப்பலின் மேல் தளத்தில் ஒரு விருந்து கொடுக்கப்பட்டது. அதுசமயம் மேன்மை தங்கிய பிரதம மந்திரியவர்களும், மேன்மை தங்கிய ஹை கமிஷனர் அவர்களும் பிரதம விருந்தினராய் இருந்தனர். மேற்படி கப்பலைப் பற்றிய சில ருசிகரமான விவரங்கள் கீழ்வருமாறு :

உலகத்திலேயே அதிசயமானதும், பெரியதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே பெருமை தரக்கூடியதுமான கனடியன்–பசிபிக் போக்குவரவுக் கப்பலான 'எம்பரஸ் ஆப்

பிரிட்டன்' என்ற இந்தக் கப்பலைத் தவிர, வேறு ஒன்றையும் கூறமுடியாது. பிரிட்டிஷார் கடல் வியாபாரத்தில் மிகவும் கியாதி வாய்ந்தவர்கள் என்ற பரம்பரைப் புகழை இந்த அதி உன்னதக் கப்பல் ஒருபடி அதிகம் உயர்த்தி இருக்கிறதென்றே சொல்லலாம். இது 800 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளது; மணி 1-க்கு 20 மைல் வேகம் போகக்கூடியது; மொத்தம் 42,500 டன் எடையுள்ளது; பிரகாசமான வெள்ளை வர்ணத்தால் பூசப்பட்டும், மேல்தட்டின் பகுதிகளில் நீலநிறப் பட்டைகள் அழகாகத் தீட்டப்பட்டும், இதனை ஊடுருவிச் செல்லும் மூன்று பெரிய புகை போக்கிகள் பழுப்பு நிறத்தோடும் திகழ்வது கண்ணைக் கவரத்தக்க காட்சியாகும். அதன் அடிப் பாகத்தில் தீட்டப்பெற்றுள்ள பச்சை நிறப் பட்டைகள் அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைகளின் நிறத்தைத் தோற்கடிப்பனவாய் இருக்கின்றன. மேல் தளத்திலிருந்து சுமார் 208 அடி உயரத்தில் பறக்கும் கொடிகளும், கப்பல் அசையும்போது காற்றினால் அலைக்கப்பட்ட அக் கொடிகள் அசையும் கம்பீரமும் தூரத்திலிருந்து காண்போருக்கு ஓர் மிகப் பெரிய, உன்னத, நவீன இராஜமாளிகையே தண்ணீரில் மிதப்பதுபோல் தோன்றும். 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' முதல் வகுப்பும் பிரயாணிகள் மூன்றாம் வகுப்பு அறையும் உடையதாயிருக்கிறது. இதை உண்டாக்கும் போதே ஒன்று மட்டும் முக்கியமாய்க் கவனிக்கப்பட்டது. அதாவது, மற்ற எந்தக் கப்பலிலும் இல்லாத மாதிரி ஒவ்வொரு பிரயாணிக்கும் அதிகமான இடவசதி அளிக்கத் தக்கதாய் இருக்க வேண்டுமென்பதே. மற்ற அதிக எடையுள்ள கப்பல்களைக் காட்டிலும் இதில் குறைந்த பிரயாணிகளே இருக்கக் கூடியதாய் இருக்கிறது. சுமார் 1195 பிரயாணிகள் மட்டும் இதிலிருக்கலாம். ஆனால், கப்பல் மாலுமிகள் 714 பேர் இருக்கிறார்கள்.

பிரயாணிகளது உபபோகத்திற்காக ஒன்பது தட்டுகள் விடப்பட்டிருக்கின்றன. சலூன் பிரயாணிகளின் உபயோகத்திற்காக 11 பொது அறைகளும், ஒரு சிசு போஷண சாலையும் யாத்ரீகர்களுக்கு 3 பொது அறையும் ஒரு சிசு போஷண சாலையும், 3-ம் வகுப்புப் பிரயாணிகளுக்கு 2 பொது அறைகளும் ஒரு சிசு போஷண சாலையும் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

'ஏ' தட்டிலும் 'பி' தட்டிலும் பிரயாணிகள் உலாவவும், காற்று வாங்கவும் தகுந்த திறந்தவெளிகள் இருக்கின்றன. மற்றும் 'ஏ' தட்டில் ஒரு பாகம் நடனத்திற்காக ஒதுக்கி விடப்பட்டிருக்கிறது. 'பி' தட்டு மிகவும் அலங்காரமாகவும், முதல் வகுப்புப் பிரயாணிகள் சவுகரியமாய் இளைப்பாறத் தக்கதாயும் இருக்கிறது. சலூன் பிரயாணிகளின் சவுகரி யத்தை முன்னிட்டு டென்னிஸ் முதலிய விளையாடுமிடங்கள் கொண்ட படகுதட்டு ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கிறது. 'டி' தட்டில் இரண்டு பெரிய சாப்பிடும் அறைகளும், அதிலிருந்து ஏணி வழியாக மேலே 'எப்' தட்டுக்குச் சென்றால் அங்கு நீந்தும் குளமும், சிற்றுண்டிச் சாலையும் தேகாப்பியாச இடங்களும், மனோரம்மியமான காட்சியளிப் பனவாய் இருக்கின்றன.

ஜனங்கள் சவுகரியமாய் உட்கார்ந்து பார்க்கத் தக்க காலரிகள் நிறைந்த டென்னிஸ் பந்து விளையாடுமிடமும், அதன் சமீபத்திலேயே சிற்றுண்டிச் சாலையும் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன. 'எம்பரஸ் ஆப் பிரிட்டனின்' இன்னொரு முக்கிய காட்சி என்னவெனில், ஒவ்வொரு தட்டிலுள்ளவர்களும் நீந்துவதற்குக் கொண்டுள்ள ஆர்வமே. தண்ணீர் மட்டத்தில் அவர்கள் எல்லோரும் நீந்துவது கண்டுகளிக்கவேண்டிய ஆச்சரியக் காட்சியே யாகும். கை, கால் முதலிய அங்கங்களைப் பரீட்சை செய்து, வேண்டிய சிகிச்சை செய்ய ஏற்பட்ட தனி அறைகள் 'பி' தட்டின் மத்தியில் இருக்கிறது. 'ஜி' தட்டில் பற்பல புதிய காட்சியளிக்கும் பல அறைகள் சுமார் 30 அடி அகலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்சொன்ன பல நவீனங்களோடு 'எப்' தட்டில் டர்கிஷ் பாத் (Turkish Bath) என்று சொல்லப்படும் ஒருவித ஸ்நானத்திற்குரிய சாதனங்களெல்லாம் அமைக்கப்பெற்றிருக் கின்றன.

இத்தகைய பெரிய கப்பலின் அலங்காரம் மிகவும் நூதனமானவை. ஒவ்வொரு இடத்திலும் அலங்காரங்கள் ஒழுங்காயும், நவீனமாயும், மேனாட்டுப் புராதன சித்திர வேலைப்பாட்டுடன் நவீன கொள்கைகளைப் புகுத்தி எங்கும் வளைவுகளாகவும், கோணங்களாகவும், சரி கோடுகளாகவும் உள்ள அலங்காரம் பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருக்கிறது.

பல கற்றுத்தேர்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் எவ்விதக் குறைபாடுமில்லாது செவ்வனே அலங்கரிக்கப்பட்ட தோற்றம் போற்றக் கூடியதே.

முதல் முதல் நமது கண்களைக் கவர்வது 'எம்பரஸ் அறை' என்ற நடன அறையேயாகும். இதை மிகவும் பிரக்யாதி பெற்ற எம்பயர் நடனசாலைக்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இருண்ட நீலநிற மேற்கூரையும் அதன் வழியாக மின்சார சாதனத்தால் தோன்றி மறையும் நட்சத்திரங்களின் ஒளியும், அவற்றைச் சுற்றிய வெண்ணிறமான சுவாகச் சதுரத் தூண்களும், மெல்லிய சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தம்பத்தின் பீடங்களும், சரிகை வேலைப்பாடமைந்த இளஞ் சிவப்பான வெல்வட் பட்டினால் தொங்கவிடப் பட்ட சன்னல் திரைகளும், மற்றொரு மூலையில் மேடையின் பின்புறம் சன்னல் திரைகளையும் தோற்கடிக்கக்கூடிய சிங்காரத்தோடு தொங்கவிடப்பட்ட திரையின் பிரகாசமும் ஒருங்கே சேர்ந்து மனோரம்மியமான காட்சியளிப்பதோடு இஃதோர் வாத்தியக்காரர் மேடையோ, அன்றிப் பேசும் படக்காட்சி சாலையோவென்ற அய்யத்தை உண்டாக்காதிராது.

அடுத்தாற்போல், பசும் சலவைக் கல் தூண்களும், கண்ணாடியில் கூரையும் கொண்டு சிவப்பும் நீலமும் கலந்த வெல்வெட் பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டதுமான இளைப் பாறும் கூடம் காணப்படுகிறது.

விலையுயர்ந்த மரத்தினால், தூண்களே இல்லாது நுண்ணிய வேலைப்பாடுகளமைந்து இரண்டு பாகமாகத் தடுக்கப்பட்ட சாப்பிடும் மண்டபத்தின் சுவரில் காணப்படும் சித்திரங்கள் ஆச்சரியப்படத் தக்கனவாய் இருக்கின்றன. ஒருபுறம் புஷ்பங்கள், பறவைகள் முதலிய சித்திரங்களும் மற்றொரு புறம் வானமும் நட்சத்திரங்களைப் போலும் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. சுமார் 40 அடி அகலமும் தூண்கள் தாங்கிய கண்ணாடிக் கூரையும் பளிங்கு போன்ற தண்ணீரும் கொண்ட நீந்தும் குளமும் மிகவும் அழகானது. அக் கண்ணாடிக் கூரையின் வழியாகச் செயற்கைச் சூரிய ஒளி செலுத்தப்படுகிறது. அதன் ஒரு பாகத்திலிருந்து படிக்கட்டுகளின் வழியாக மேல் தளத்துக்கும், சிற்றுண்டிச்சாலைக்கும், உடைமாற்றிக்கொள்ளும் அறைக்கும் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' பிரயாணிகள் இரண்டு கண்டத்திலிருந்தும் ஆகாய வசனியின் உபயோகத்தால் ஆனந்தமடைகிறார்கள். சேமிக்கப்பட்ட ஓரிடத்திலிருந்து சுமார் 10 அல்லது 12 ஒலிபெருக்கும் கருவியின் மூலம், மேல் தட்டுகளுக்கும் முக்கியமான பொது அறைகளுக்கும் நிகழ்ச்சிகள் கேட்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' உள்ள பிரயாணிகள் வெளியேவிடும் சுவாசக் காற்று ஒவ்வொரு 7 நிமிஷத்துக்கு ஒரு தரம் சுத்தமாக்கப்பட்டு, புதிய ஆரோக்கியக் காற்று நிரப்பப் படுகிறது. ஓர் நூதன சாதனத்தால் கடற்காற்று ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, பின்னர் கால நிலைக்குத் தக்கவாறு உஷ்ணமோ அல்லது குளிர்ச்சியோ ஆக்கப்பட்டு, பொது அறைகளிலும், மண்டபத்திலும் பொருத்தியிருக்கும் விசைகளை அழுத்துவதின் மூலம் எல்லாவிடங்களிலும் சுத்தக் காற்று நிரப்பப்படுகிறது. மற்றும் தனிப்பட்ட நபர்களின் விருப்பத்திற்கேற்றவாறு இளங் காற்றாகவோ அல்லது பெருங் காற்றாகவோ, தாங்கள் விரும்பிய அறைகளுக்கும் இடத்திற்கும் வரவழைத்துக் கொள்ளலாம்.

'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' எல்லா வகையிலும் இணையற்றதாகும். 42,500 டன் எடையுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் இக் கப்பல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துறைமுகங்களின் மத்தியில் செல்லும் கப்பல்களுக்கெல்லாம் பெரியது; அய்ரோப்பாவுக்கு செயின்ட்

லாரென்ஸ் வழியாகப் பிரயாணம் செய்யும் கப்பல்களிலெல்லாம் பெரியது; உலகப் போக்கு வரவுக் கப்பல்களிலே பெரியது. இலண்டன் துறைமுகத்திலேயே பெரியதெனப் பதிவு செய்யப்பட்டது. மகா யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ இது போன்று கட்டப்படாத இணையிலாதது; செயின்ட் லாரென்ஸ் வழியிலேயே அதிக வேக மானது; இக் கப்பலின் முக்கிய அம்சமாகக் கவனிக்கப்பட்ட கரைக்கும் கப்பலுக்கும் டெலிபோன் சம்பந்தம் இணைக்கப்பட்டது; ராயல் கழகத்தினராலேயே அலங்கரிக்கும் பெருமை வாய்ந்த முதல் கப்பல் இது ஒன்றே. இன்னும் சில்லரை விஷயங்களைப்பற்றி எழுதவேண்டுமானால் விரிந்துகொண்டே போகும். மேற்கூறப்பட்ட காரணங்களால் இக் கப்பலின் தனிச் சிறப்பு தெள்ளென விளங்குகிறது.

['குடிஅரசு'-கடிதம்—24-1-1932]

6. அயல்நாட்டு நடப்புக்கள்

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் சிலோன் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைப் பிரதிநிதி யொருவருக்குப் பேட்டி கொடுத்துப் பேசியபோது குறிப்பிட்டதாவது:—

'நான் ஓர் நாத்திகனல்ல; தாராள எண்ணமுடையோன். நான் ஒரு தேசிய வாதியுமல்ல; தேசாபிமானியுமல்ல; ஆனால் தீவிர ஜீவரக்ஷா எண்ணமுடையவன். எனக்கு சாதி என்பதோ, சாதியென்பதின் பேரால் கற்பிக்கப்படும் உயர்வு தாழ்வுகளோ கிடையாது. அத் தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன்; ஆதரிப்பவனல்ல. தாங்கள் மேல் சாதியார், உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, மனிதரது ஜீவாதாரமான உரிமை களாகிய தெருவில் நடத்தல், கோவிலுக்குள் செல்லல் முதலியவற்றை மறுத்துக்கொண்டு, ஏனையோர்க்கும் சமத்துவம் வேண்டுமென்று செய்கிற முயற்சியைக் கண்டிக்கிறேன்.

காலமெல்லாம் பண்டையப் பழக்க வழக்கங்களும், மூடக்கொள்கைகளும் நிலைத்தே நிற்கவேண்டுமென்றால் ஒரு பறையன் என்று சொல்லப்படுகின்றவனோ, அல்லது சக்கிலி என்று சொல்லப்படுகின்றவனோ மிருகத்தைவிடக் கேவலமாக நடத்தப்பட்டே வர, எப்படி இந்தியா அவன் தாய்நாடுதான் என்று எண்ணமுடியும்? ஒரு பொதுச் சேவைக்கு அவர்களை நம்மோடு ஒத்துழைக்க எதிர்பார்க்க முடியுமா?

கஷ்டப்படுகின்ற தொழிலாளிகள் அரசாங்கத்தை நடத்துகின்றவர்களாயிருக்க வேண்டும். ஜனங்களின் நன்மைக்காக, ஜனங்களாலேயே நடத்தப்படுகின்ற அரசாங்கமா யிருத்தல் வேண்டும்; இந்தியாவைப் பற்றியுள்ள வறுமையை அகற்றக்கூடிய அரசாங்கமா யிருக்கவேண்டும்.

பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், அய்க்கிய தேசம் முதலியனவெல்லாம் குடியரசு நாடு களாகவே இருக்கின்றன. ஆனால், எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடு கிறது. ரஷ்யா ஒன்றில்மட்டும் வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாது. ஒரு சில பிச்சைக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வயது சென்றவர்களும், அங்க வீனர்களுமே. அவர்களை அரசாங்கம் போஷிக்கிறது. உண்மையில் அது ஒரு புதிய உலகம். அதுபோல் முன்னொருபோதும், எந்நாட்டிலும் சீர்திருத்தம் நடந்தேறியதே யில்லை. அந்நாடு தொழிலாளர் மயமாகவே இருக்கிறது. தோட்டி முதல் தொண்டமான் ஈறாக எல்லோரும் அரசாங்கத் தொழிலாளராகவே கருதப்படுகின்றனர். அங்கு எல்லா மனிதரும் சமமாகவே கருதப்படுகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது. வியாபாரம், தொழில், வர்த்தகம், கல்வி முதலிய சமூக அபிவிருத்திக்கான தொழில்களெல்லாம் அரசாங்கப் பொறுப்பிலேயே நடைபெற்று வருகின்றன. விவசாயம் அய்க்கிய முறையில் அரசாங்கப் பொறுப்பில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

அங்கு சமயமென்பது ஒன்றுமே கிடையாது. ஜனசமூக நன்மையே சமயம்; அதுவே சன்மார்க்கம். கிறிஸ்துவக் கோயில்களுண்டு; அதற்கு அரசாங்கத்தார் எவ்விதப் பண உதவியும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ கவலையோ, விசாரமோ கிடையாது.

குற்றம் செய்தவர்களை அரசாங்கம் ஒரு நவீனமுறையில் தண்டிக்கிறது. அவர்களுக்குச் சகல சவுகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டாலும் அவர்கள் சம்பளத்தில் ஒரு பாகம் அபராதத் தொகையாகப் பறிமுதல் செய்யப்படுகிறது. பலமுறை குற்றம் செய்தவர்களைச் சுகாதார நிலையத்திற்கனுப்பி அங்கு அவர்களது மனோநிலை மாறத்தக்க சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

பாடசாலைகள் மூலமாயும், சினிமாக்கள் மூலமாயும், இதுவரை கற்றிராத பாமர மக்களுக்கும் தொழில் முயற்சியை அஸ்திவாரமாகக்கொண்ட கல்வி கற்பிக்கப்படுகிறது. ஒரு மதத்தையும் பின்பற்றாத அரசாங்கம் மத எதிர்ப்பு சங்கத்திற்குப் 'போதிய உதவி யளித்து வருகிறது.

நான் இத் தேசத்தைப் பார்வையிடச் சென்றதின் நோக்கமெல்லாம், அங்குள்ள நிலைமைகளைச் சரிவர அறியவும், அத் தேசத்தைப்பற்றிப் பெருமிதப்படுத்திக் கூறும் கதைகள் உண்மையாவென்று அறியவுமேயாகும். அரசாங்கம்தாம் தேசத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பதிலேயே தீவிர கவனம் செலுத்துவதால், கடவுளைப் பற்றியோ மதத்தைப்பற்றியோ நினைப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை.

எகிப்து நாட்டில் பர்தா (கோஷா) முறை அனேகமாக அழிந்துவிட்டதென்றே சொல்லலாம்; சில வயோதிகக் கிழவிகள் மட்டும் அதை விடவில்லை. எகிப்தியப் பெண்கள் ஆங்கில மாதரைப் போலவே ஆடை அணிந்து கொள்ளுகிறார்கள். துருக்கி தேசத்தில் அதிதீவிரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. சமூக முன்னேற்றத்தில் துருக்கி மாதர் அதிகப் பிரயத்தனம் எடுத்து வருகிறார்கள். சமீபத்தில் ஒரு துருக்கி மாது போலீஸ் சூப்பரெண்டெண்டாக நியமனம் பெற்றிருக்கிறார்.

['குடி அரசு' 30-10-1932]

7. 'தோழர்' என விளியுங்கள்!

தோழர்களே, எனது மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் ஒருவாறு வெற்றியுடன் முடிந்து, 11-11-1932-ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்திருக்கிறேன். நீண்ட பிரயாணத்தினால் நான் சிறிது களைப்புற்றிருந்தாலும் சமீபத்தில் களைப்பு நீங்கி, இயக்க வேலையை மும்முரமாய்த் தொடங்க உறுதிகொண்டிருக்கிறேன். என்னுடன் கூடவந்த தோழர் இராமநாதன் அவர்கள், என்னை மார்செயில்ஸில் இந்தியாவுக்குக் கப்பலேற்றி விட்டு ஜினிவாவுக்குச் சென்று இருக்கிறார். அங்கு சில விஷயம் அறிந்து 2 அல்லது 3 மாதத்தில் இந்தியா திரும்புவதாகச் சொல்லிப் போயிருக்கிறார். அதற்குள், கூடிய சீக்கிரம் நமது இயக்கத் தோழர்கள் பலரைக் கூட்டிக் கலந்துபேசி ஒரு வேலைத் திட்டத்துடன் தீவிரப் பிரச்சாரம் நடத்த உத்தேசித்திருக்கிறேன்.

சீக்கிரத்தில் எனது சுற்றுப்பயணத்தின் விருத்தாந்தங்களையும், காட்சிகளையும், அதனால் நான் கொண்ட கருத்துக்களையும், அதை எந்த அளவுக்குப் பின்பற்றவேண்டும் என்பதையும் விளக்கிப் பத்திரிகைகளில் வெளியிடவும் உத்தேசித்து இருக்கிறேன். நான் இங்கு இல்லாதபோது இயக்கத்தைத் தொடர்ந்து முன்னிலும் பல மடங்கு அதிகமாக எழுத்தாலும், உபன்யாசங்களாலும், மாநாடுகள் கூட்டியும் மக்களுக்கு உண்மையுணர்ச்சிகளை ஊட்டித் தீவிரமாய் வேலை செய்துவந்த தோழர்கள் யாவருக்கும் நான் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இயக்கத் தோழர்களும், இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக்கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக—'தோழர்' என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ா.ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பனபோன்ற வார்த்தைகளைச் சேர்த்துப் பேசவோ—எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். 'குடி அரசி'லும் அடுத்த வாரம் முதல் அந்தப் படியே செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

['குடி அரசு'–குறிப்பு—13-11-1932]

8. நானும் நண்பர்களும்

தோழர் இராமநாதன் அவர்கள் ஐரோப்பாவிலேயே தங்கிக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பல பத்திரிகைகள் பலவிதமாக எழுதிப் பொதுஜனங்களுக்குள் ஒருவித தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ண முயற்சிப்பதாகத் தெரியவருகின்றது. அது என்னவெனில் :

1. தோழர் இராமநாதனின் கையில் ஒரு காசுகூடக் கொடுக்காமல், அவரைக் காயலாவுடன் பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டதாக ஒரு கூற்று.

2. தோழர் இராமநாதனை மார்சேய்ல்ஸ் நடுத் தெருவில் கையில் ஒரு காசுகூட இல்லாத நிலையில் விட்டுவிட்டு வந்ததாக மற்றொரு கூற்று.

3. தோழர் இராமநாதனை மார்சேய்ல்ஸ் தெருக்களில் ஒரு காசுகூடக் கொடுக்காமல் விட்டுவிட்டு வந்துவிட்டதாகவும், ஆனால் தன் கையில் தன் தங்கை எவ்வளவோ கஷ்டப் பட்டுச் சேர்த்து வைத்திருந்ததை அனுப்பியிருப்பதாகவும் அது, சிறுதொகை—செலவுக்குப் போதாதது போலவும் குறிப்பிட்டு, இங்கு ஒரு கனவானால் தனக்குக் கடனாக 300 ரூபாய் அனுப்பும்படி கேட்டுக்கொண்டிருப்பதாய் மற்றொரு கூற்றும், இன்னும் பல.

மேற்கண்ட இவைகளையெல்லாம் நிரூபிக்க தோழர் இராமநாதனால் எழுதப்பட்ட கடிதங்கள் என்பதாகச் சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கடிதங்களேயாகும். அவை யாவன :

1. 4-11-1932ஆம் தேதி 'தாருல் இஸ்லாம்' உப தலையங்கம் :

'எமது நண்பர் ஒருவருக்கு திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதிய கடிதத்தி லிருந்து, அவர்கள் ஜினிவாவில் (ஸ்விட்ஜர்லாந்து) இருப்பதாகவும், பிரான்சில் அவரை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, தோழர் ஈ. வெ. ரா.-வும் ராமுவும் ருஷியா போய்விட்ட தாகவும் செய்தி எட்டியது.'

மற்றொன்று ஜினிவாவிலிருந்து,

2. 'நாயக்கரது வருகையைப் பற்றித் தெரிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன். கையில் ஒரு காசுகூட இல்லாத நிலைமையில் அவர் மார்சேய்ல்ஸ் வீதிகளில் என்னை விட்டுவிட்டு வந்துவிட்டார் ; அது அவருடைய சுபாவம் ; ஆகையால் அதைப்பற்றிக் குறை கூறுவதற்கில்லை. என்னுடைய சகோதரி சேகரித்து அனுப்பக்கூடிய சிறிய தொகையைக் கொண்டு கஷ்டத்துடன் நாட்களைக் கழித்து வருகிறேன். தங்களுக்கு வேறு பலவித செலவிருக்குமென்பது தெரிந்தாலும், தாங்கள் இதுசமயம் ரூ. 300 கடனாகக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளீர்களென்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகையைத் தங்களால் அனுப்ப முடியாதிருந்தால் கூடுமானதையாவது அனுப்ப வேண்டுகிறேன்' என்பதாகும்.

இவற்றைச் சிலர் நம்பியும், சிலர் நம்பாமலும், இதன் உண்மைதான் என்னவாய் இருக்கக்கூடும் என்பதை அறிய ஆசைப்பட்டும் இருப்பதாகத் தெரியவருகிறது.

இதைப்பற்றி இதுசமயம் மிகச் சுருக்கமாகவே விளக்கினால் போதும் என்று கருது கிறேன். ஏனெனில், தோழர் இராமநாதன் இங்கு பக்கத்தில் ஆஜர் இல்லை என்பது ஒருபுற மிருந்தாலும், மேற்கண்ட கூற்றுக்களைப் பொறுத்தவரையில்தான் பொதுஜனங்களும் உண்மை அறிய ஆசைப்படுவார்கள் ஆனதினாலும், பத்திரிகைகளில் காணப்பட்ட மேற் கண்ட கூற்றுக்கள் அவை தானாகவே ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனித்தாலே ஒருவாறு உண்மை உணரலாம் ஆனதினாலும் மற்றும் அதைப் பரப்ப முயற்சிக்கின்றவர்களின் மனப்போக்கைக் கவனித்துப் பார்த்தால் என்ன கருத் துடன் இந்தப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது என்பது தெளிவாகுமானதினாலும் வெகு சுருக்கத்திலேயே இருப்பது நலம் என்று கருதுகிறேன்.

தோழர் இராமநாதன் காயலாவுடன் எந்த ஆஸ்பத்திரியிலும் விட்டுவிட்டு வரப்பட வில்லை என்பது, அவர் கடிதங்கள் என்பவைகள் ஒன்றிலிருந்தே வெளிப்படுகின்றது. அவர் கையில் ஒரு காசுகூட இல்லாமல் விட்டுவிட்டு வரப்படவில்லை என்பதும் அவரது கடிதங்கள் என்பவைகளில் மற்றொன்றில் இருந்து விளங்குகின்றது. ஆகவே, பிரசாரத்திற்கு ஆதாரமான இரண்டு கூற்றுக்களும் உண்மை இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆனால் தோழர் இராமநாதனால் எனக்கு எழுதப்பட்ட இரண்டு கடிதங் களை இதில் பிரசுரிக்கிறேன்.

அவ்விரண்டு கடிதங்களையும் பார்த்தால், ஒன்று தோழர் இராமநாதன் இந்தி யாவுக்கு வர இஷ்டப்படவில்லை என்பதும், நாம் அழைத்தும் அதை மறுத்திருப்பதும், என்னை மாத்திரம் தனியாய் இந்தியாவுக்குப் போகும்படி வலியுறுத்தி இருப்பதும் விளங்கும். (இதன் காரணம் அவரது குடும்பத்தாருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் தெரியும்.) மற்றொன்று, நான் இந்தியா வந்து சேர்ந்த பிறகு தோழர் இராமநாதனால் ஜினிவாவில் இருந்து எழுதியிருப்பது விளங்கும்.

அவையாவன :—

I

Madrid

Hospital

17—8—32

நமஸ்காரம்,

எனக்கு உடம்பு கொஞ்சம் சவுக்கியமாய்விட்டபடியால் உடுப்பு தேவையாய் இருக் கிறது. அதற்கு சவுக்காரம் போடாதவைகளை வீட்டுக்காரியிடம் கொடுத்து போடச்சொல்லி காயவைத்து ஒரு செட்பூட்ஸ் Socks உடன் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். கைப் பையில் Brush, Paste, சவரம் பண்ணிக்கொள்ள கத்தி, பெட்டி, சோப்பும், கடிதம் எழுத காகிதம், கவர், பென்சில், ஸ்டாம்பும் அனுப்பவேண்டுகிறேன். அவ்விடமுள்ள என் புஸ்தகத்தில் Bertrand Russel அனுப்புவது நலம்.

தாங்கள் எனக்காகக் காலம் கடத்தாமல் மேற்கொண்டு போவதே சரி என்று மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கு வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுப்பது வழக்கமாகையால் சில்லரை கொஞ்சம் அனுப்பவேண்டுகிறேன்.

இராமநாதன்

குறிப்பு:—இந்த ஆஸ்பத்திரி மாட்ரிட்டுக்கு 6 மைல் தூரத்தில் 'Tetuau Victorias' என்ற இடத்தில் கட்டப்பட்டது. அங்கிருந்து மாட்ரிட்டுக்கு எழுதப்பட்டது.

II

S. RAMANATHAN,
C/o Thomas Cook
Geneva, Switzerland
26—10—32

அன்புள்ள அய்யா,

மேற்கண்ட எனது விலாசத்திற்கு, 'குடி அரசு' பத்திரிகை அனுப்பிவர வேண்டுகிறேன். மதத்தைப்பற்றிய புத்தகம் வெளியிட்டிருந்தால் நான்கு பிரதிகள் அனுப்பவும். பர்னிலில் இருந்த ராமு, இந்தியாவுக்குத் திரும்புவதாகச் சொல்லிவிட்டு இங்கிலாந்து போனதாகக் கேள்விப்படுகிறேன். அவ்விடம் திரும்பிவந்த விபரம் எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்
இராமநாதன்

இந்தக் கடிதம் நான் இந்தியாவுக்கு வந்தது மேல் 13-11-1932 தேதியில் ஈரோடு விலாசத்திற்குக் கிடைத்தது.

இந்தக் கடிதங்கள் தோழர் இராமநாதனின் நிலையையும், என்ன நடந்திருக்கக் கூடும் என்பதையும் தானாகவே சொல்லும்.

தவிர, தோழர் இராமநாதன் கையில் பணமில்லை என்பது உண்மை அல்ல என்பதை அவர் மற்றொரு நண்பருக்கு எழுதியிருப்பதாகச் சொல்லப்படும் கடிதங்கள் ஒன்றின் மூலமாகவே விளங்குமானாலும் அதைப் பற்றியும் சற்று விளக்குவோம்.

அவர் இந்தியாவுக்குத் திரும்புவதில்லை என்கின்ற விஷயத்தைத் தனது சகோதரிக்கு சூசனையாய்க் காட்டி எழுதி, செலவுக்கு அனுப்பும்படி எழுதிய கடிதத்தின்மீது அவ்வம்மையார் வருத்தப்பட்டு அவசியம் திரும்பி வரும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் மற்றும் அவர் கேட்டபடி 300 ரூபாய் அனுப்பியிருந்த தொகையின் செக்கு ஒன்று என்னை அவர் பயணம் அனுப்பும் முதல் நாள் வரையில் மாற்றாமல் வைத்திருந்து அன்றுதான் மாற்றிக்கொண்டார். இதோடு அவர் இந்தியாவுக்கு வருவதில்லை என்று சொன்ன பிறகும் அவர் தனக்குப் பணம் தேவையில்லை என்று சொன்ன பிறகும், அவர் கப்பலை விட்டு இறங்கும்போது நான் கொடுத்த 5 பவுனும் மற்றும் அவரிடம் சில்லரையாய் இருந்த தொகையும் சேர்த்துச் சற்றேறக்குறைய ரூ. 400 (நானூறு) போல் அவர் கைவசம் இருந்தது. அவரது தங்கை அனுப்பிய ரூபாய் சுமார் ஒரு மாதகாலமாய் செக்கு மாற்றாமலும் அதிலிருந்து செலவழிக்கச் செய்யாமலும் இருக்கும்படி வற்புறுத்தியவன் நானேயாகும்.

அன்றியும், அவர் ஜினிவாவுக்குப் போவதாய்ப் பயணம்சொல்லிக் கொண்டு கப்பல் விட்டு இறங்கும்போது, 'எப்பொழுதுதான் இந்தியாவுக்கு வருவதாக உத்தேசம்?' என்று நான் கேட்டதற்கு 'அதைப் பற்றி நான் முடிவு செய்யவில்லை; இரண்டு மூன்று மாதத்தில் திரும்பலாம் என்று யோசித்திருக்கிறேன்' என்று சொன்னார். 'எப்படியாவது இந்தியாவுக்குத் திரும்பி வருவதுதான் கிரமமாகும்' என்றும் சொன்னேன். கப்பல் புறப்பட இருந்ததால் என்னிடம் ரூபாய் பெற்றதும், 'ஆகட்டும்' என்று சொல்லிக் கொண்டு அவசரமாய்க் கப்பலை விட்டு இறங்கினார்.

ஆகவே, கையிலும் பணமிருக்க, நானும் கொடுத்து வந்திருக்க, இந்தியாவுக்கு வருவதானால் இனியும் பணம் அனுப்பச் செய்கிறேன் என்று சொல்லியும் வந்திருக்க, தோழர் இராமநாதனை கையில் ஒரு காசு இல்லாமல் நோயுடன் ஆஸ்பத்திரியில் விட்டு வந்ததும் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கக்கூடும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

நேரில் நடந்த வார்த்தைகள் என்பது எப்படி இருந்தாலும் இதில் பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கடிதங்களிலிருந்தும் பொது ஜனங்கள் கருத வேண்டிய விஷயம் மூன்றேயாகும்.

1. தோழர் இராமநாதன் அவருடைய இந்திய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் என்பவை கற்பனைக் கடிதங்களாக இருக்குமா ?

2. அல்லது, எனக்கு எழுதப்பட்ட கடிதங்கள் என்பவை கற்பனையாக இருக்குமா ?

3. எல்லாக் கடிதங்களும் தோழர் இராமநாதன் அவர்களால் உண்மையாகவே எழுதப்பட்டிருக்குமானால் அவர் நிலைமைதான் என்னமாய் இருக்கக்கூடும் என்பவைகளே யாகும்.

இது விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் கருதிக் கொள்ளவோ முடிவு செய்து கொள்ளவோ வாசகர்களுக்குப் பூரண சுதந்திரமும் போதிய அனுபவமும் உண்டு என்றே கருதி இது சமயம் இத்துடன் முடிக்கின்றேன்.

ஈ. வெ. ரா.

[' குடிஅரசு ' 27-11-1932

9. இங்கிலாந்தில் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

தலைவரவர்களே ! தோழர்களே !

இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம். ஆனால், நாங்கள் பிரிட்டிஷ் தொழிற்கட்சியை மிகமிகப் பரிகசிக்கத் தக்க விஷயமாய்க் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏனெனில், தொழிற்கட்சித் தலைவராகிய தோழர் லான்ஸ்பரி அவர்கள் சிப்பாய்கள் சுடுவதையும், கொல்லுவதையும் தான் சிறிதும் விரும்புவதில்லை என்று பெருமை பேசிக் கொள்ளுகின்றார்கள். ஆனால் எங்கள் கார்வாத் (Gharwath) சேனைகள் நிராயுதபாணி களான மக்களைச் சுடுவதற்கு மறுத்ததற்காக, தோழர் லான்ஸ்பரியின் தொழிற்கட்சி கவர் மெண்டானது—அந்தச் சிப்பாய்களுக்கு 15 வருஷ கடினகாவல் தண்டனை விதித்திருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

2. தொழிலாளர் சங்கமாகிய டிரேட் யூனியனை (Trade Union) ஆதரிப்பதாகவும், அதில் சேர்ந்து உழைப்பதாகவும் பறைசாற்றுகிறீர்கள். ஆனால், எங்கள் ஏழை இந்தியச் சுரங்க வேலைக்காரர்களும், மற்றும் தொழிலாளிகளும் சேர்ந்து ஒரு 'டிரேட் யூனியன்' சங்கம் ஸ்தாபிப்பதற்காக அதன் அதிகாரிகளையும், அதற்கு உதவிசெய்த பிரிட்டிஷ் தோழர்களையும் வெளியில் இருக்கவிடாமல் உங்கள் தொழிற்கட்சி அரசாங்கமானது மீரத்து சிறையில் அடைத்துப் போட்டுவிட்டது.

3. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க அனுதாபம் இருப்பதாகவும், இந்தியர்கள் சுடப்படுவதையும், அடிக்கப்படுவதையும், சிறையில் அடைக்கப்படுவதையும் தாம் விரும்புவதில்லையென்றும் சொல்லிக்கொள்வதாகக் கேள்விப் பட்டேன். ஆனால், தோழர் லான்ஸ்பரியுடைய தொழிற்கட்சி அரசாங்க 'கேபினட்'டானது சுமார் 80 ஆயிரம் பேர் வரை இந்திய ஆண் பெண்களை ஜெயிலில் அடைத்திருக்கிறது ; ஆயிரக்கணக்கான மக்களைச் சுட்டுத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

ஆப்ரிக்கன் கிராமங்களின்மீது ஆயிரக்கணக்கான தடவை ஆகாயப் படை மூலம் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான பர்மியர்களையும் கிராமத்தாரையும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள் ?

4. இந்தியச் சுரங்கங்களில் பத்துமணி நேர வேலைக்கு எட்டணா கூலிக்கு இந்தியர்களிடம் வேலை வாங்கப்படுகின்றது. சுமார் நாற்பதாயிரம் பெண்கள் தினம் அய்ந்தணா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடுமையையும் ஆபாசத்தையும் நிறுத்தத் தொழிற்கட்சி அரசாங்கம் என்ன செய்தது ?

5. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இங்கிலாந்தில் தொழிலாளிகளை ஆதரிக்க வேண்டுமென்று பேசுகிறார்; ஆனால், இந்தியா விஷயத்தில் தோழர் காந்தியையும் இர்வின் பிரபுவையும் கொடுமையான வட்டமேஜை மாநாட்டையும் ஆதரிக்கிறார். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவானது இந்திய அரசர்களும், ஜமீன்தார்களும், முதலாளிமார்களும், அய்ரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும்படியானதும்—தொழிலாளிகளுக்கும், குடித்தனக்காரர்களுக்கும் பாத்தியமும், பொறுப்பும் இல்லாததுமான ஒரு அரசியல் சபை மூலம் இந்திய நிர்வாகம் நடக்கும்படியான காரியத்திற்கு உதவி செய்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள் ?

6. தோழர் லான்ஸ்பரி அவர்கள் யுத்தத்தையும், யுத்த முஸ்தீபையும் வெறுக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்களையும், பிரிட்டிஷ் 'வைசிராயை'யும் திருப்பி அழைத்துக் கொள்ள மறுக்கிறார்.

7. கடைசியாக, இந்தத் தொழிற்கட்சி அரசாங்கமானது இரண்டு வருஷகாலத்தில் அனுப்பிய ஆகாய சண்டைக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், மோட்டார் பீரங்கி வண்டிகளையும், கவசம் செய்த மோட்டார் வண்டிகளையும், எந்திரத் துப்பாக்கிகளையும், பிரிட்டிஷ் பட்டாளங்களையும் கணக்குப் பார்த்தால், பால்ட்வின் அரசாங்கமானது தனது அய்ந்து வருஷ ஆட்சியில் அனுப்பப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கிறது. தோழர்களே! இவற்றிலிருந்து பிரிட்டிஷ் 'தொழிலாளர் பார்ட்டி' என்று சொல்லப்படும் சமதர்ம பார்ட்டியின் யோக்கியதையை அறிந்துகொள்வது என்பது எங்களுக்கு மிகக் கஷ்டமாகவே இருக்கிறது.

ஆதலால்—யார்க்ஷையர் தொழிலாளர்களே! நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும், கொள்கைகளையும் நம்பாமல் மனித சமூக விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராட உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர்நோக்கிக்கொண்டிருங்கள் !

இங்கிலாந்தில் மேக்ஸ்பரோ (பான்சிலே) 'லேக் பார்க்'கில், [20-6-1923ல் கூடிய கூட்டத்தில்,
சொற்பொழிவு—'குடி அரசு' 18-12-1932]

10. ரஷ்ய நீதி

ரஷ்ய தேச ஆட்சியின் கொள்கை உலகம் முழுவதிலுமே வெறுக்கப்பட வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு பிரச்சாரம் செய்துவருவதாய்க் காணப்பட்டு வருகின்றது. எது போலவென்றால், சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பெரிதும் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் இருந்ததால்—பார்ப்பனர்களின் செல்வாக்கால் அது ஒரு காலத்தில் எப்படி எல்லா மக்களாலும் வெறுக்கப்படவேண்டுமென்று பிரச்சாரம் செய்வதாய்க் காணப்பட்டதோ அதுபோல்.

ரஷ்ய ஆட்சிக் கொள்கையானது, சுருக்கமாகச் சொல்லப்படவேண்டுமானால்—அது, உலகப் பணக்காரர்களுக்கு விஷம் போன்றதும்—ஏழை மக்களுக்குச் 'சஞ்சீவி' போன்றதுமாகும். இன்றைய உலகம் பணக்காரர்கள் கையில் சிக்குண்டு, பணக்காரர்களுக்கு அடிமைப்பட்டு, பணக்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதால் பணக்காரர்கள்

100-க்கு 10 பேர்களேயாயினும், அவர்களே உலக மக்களாகக் காணப்படுவதும், ஏழை மக்கள் 100-க்கு 90 பேர்களாயினும் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாக உலகுக்கு ஞாபகத்துக்கே வரமுடியாமலும் இருந்துவருகின்றது.

ஆனால், ரஷ்யாவிலோ அப்படிக்கில்லாமல் பணக்கார ஆதிக்கம் ஒழிந்து, ஏழை மக்கள் பணக்காரர்கள் கையினின்று விடுபட்டுச் சுதந்திரம் பெற்று, ஏழை-பணக்காரன், முதலாளி–தொழிலாளி என்கின்ற வேற்றுமையில்லாமல் எல்லோரும் ஒரே இனம் (அதாவது மனித இனம்) என்கின்ற தலைப்பில் எல்லோரும் ஓர் குடும்ப மக்களாய் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலை பணக்காரர்கள், புரோகிதர்கள் ஆதிக்கமுள்ள நாடுகளுக்கு எதிரான நிலையானதினால், பணக்கார உலகம் ரஷ்யாவைத் தூற்றவும், பழிக்கவும், வெறுக்கவும், விஷமப் பிரச்சாரம் செய்யவும் ஆன காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதில் அதிசய மொன்றுமில்லை. இந்த நான்கைந்து வருட காலமாக ரஷ்யாவைப் பற்றிப் பலவாறு—அதாவது ரஷ்ய மக்களுக்குப் போதிய ஆகாரமில்லையென்றும், கோடிக்கணக்கான மக்கள் அங்குப் பட்டினியால் வாடி மடிகின்றார்கள் என்றும், கொடுங்கோன்மை முறையால் ஆளப்பட்டு வருகிறதென்றும், அந்நாட்டு ஆட்சியில் நீதியென்பதே கிடையாது என்றும், மற்றும் பலவிதமாக அதைத் தூற்றிப் பழித்து, இழித்துப் பிரச்சாரங்கள் செய்யப் பட்டு வந்தன. அங்குள்ள நன்மைகள் மேன்மைகள் எவையாயினும் அவற்றைப் பரிசுத்தமாய் வடிகட்டினாற்போல் மறைத்தும் வந்தன. அப்படி இருந்தும்—எவ்வளவு விஷமப் பிரச்சாரம் செய்தும், சூரிய வெளிச்சத்தை உள்ளங் கையால் மறைக்க முடியாதது போல, ரஷ்ய நிலைமை இப்போது உலக மக்களுக்கு வெளியாகின்றது. வரவர ரஷ்யச் சேதிகளின் உண்மையை வெளிப்படுத்தும் விஷயத்தில் ஜனங்களுக்குள்ள பயம் நீங்கியும் வருகின்றது. அது மாத்திரமில்லாமல், இந்த 4, 5 மாத காலமாக ரஷ்யச் சேதிகளின் உண்மையை வெளிப்படுத்துவது ஒரு நாகரிகமாயும், ரஷ்யச் சேதிகளைப் பற்றிப் பேசுவது ஒரு சத்காலட்சேபமாகவும் ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய், இப்போது ரஷ்யச் சேதிகள் இல்லாத பத்திரிகைகளும், ரஷ்யப் பிரஸ்தாபமில்லாத பிரசங்கங்களும் மிக மிக அருமையாகப் போய்விட்டன என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே, ரஷ்யப் பூச்சாண்டித் திரை நீக்கப்பட்டு, வெட்ட வெளிச்சத்தில் வெள்ளைக் கண்ணாடி மூலம் பார்க்கக்கூடியதாக இருந்துவருகின்றது.

சமீப காலத்தில் ரஷ்யாவைப்பற்றி ஒரு பரபரப்பு இருந்துவந்தது நேயர்களுக்குத் தெரிந்திருக்குமென்றே எண்ணுகின்றோம்.

அதாவது, ரஷ்ய ஆட்சியானது சில பிரிட்டிஷ் பிரஜைகளின்மீது குற்றம் சாட்டிச் சிறைபிடித்து வைத்திருப்பதாயும், அது பழிவாங்கும் எண்ணத்துடன் கற்பனையாய்ச் செய்யப்பட்டிருப்பதாயும், ஆனதினால் ரஷ்யாவுடன் பிரிட்டிஷ் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், வியாபாரத்துறையில் ரஷ்ய வியாபாரத்தை நிறுத்தி அந்தச் சரக்கு பிரிட்டிஷுக்குள் வராமல் தடுத்துவிட வேண்டுமென்று பல புதிய சட்டங் களைச் செய்தும்—அதன் மூலம் ரஷ்ய வியாபாரத்தைப் பகிஷ்கரிக்கவும் முயற்சித்து வந்தது யாவருமறிவார்கள்.

விஷயம் என்ன வென்றால், ரஷ்யாவில் இயந்திரத் தொழில்முறை விருத்திக்கு அனுகூலமான மின்சாரவிசை நிலையங்கள் கொஞ்ச காலமாக ஒன்றன்பின் ஒன்றாய்ப் பழுது ஆகிக்கொண்டு வந்ததுடன், அதனால் ரஷ்யத், தொழில்முறை கெட்டுப் பெரிய நஷ்டம் ஏற்பட்டும் வந்தது. ரஷ்ய ஆட்சி நிர்வாகிகள் இதைப்பற்றிச் சந்தேகப்பட்டு அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றதில், சில பிரிட்டிஷ் கம்பெனிக்காரர்களின் நன்மைக்காக, ரஷ்யாவிலுள்ள சில பிரிட்டிஷ் இன்ஜினீயர்கள், சில ரஷ்யர்களுக்கு இலஞ்சம் கொடுத்து அவர்களைக் கைவசப்படுத்தி, அதன்மூலம் அங்குள்ள மின்சார

நிலையங்களுக்குக் கெடுதியை விளைவித்து வந்தார்கள் என்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த பிரிட்டிஷ் இன்ஜினீயர்களையும், அதற்கு உளவாயிருந்த ரஷ்யச் சதிகாரர்களையும் கண்டுபிடித்துச் சிறைசெய்து, அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த விஷயத்தைப் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் அறிந்து, இதனால் தங்களுக்குப் பெரிய உலகப் பழியும் அவமானமும் வந்துவிட்டதே என்று கருதி, இச் செயல்களை மறைக்க ஆசைப்பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் ரஷ்யரை மிரட்டிப் பார்த்ததல்லாமல் ரஷ்யாவின் மீது பழியும் சுமத்தினார்கள்.

ஆனால், ரஷ்யர்கள் இவை எதற்கும் பயப்படாமல் தைரியமாய் அது விஷயத்தில் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து, உலகத்தின் முன்பு தங்களுடைய திறனையும், தைரியத்தையும், நியாயம் வழங்கும் முறையையும் காட்டிக்கொண்டார்கள். எப்படி என்றால், இந்தச் சதிக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட 18 குற்றவாளிகளில் 6 பேர்கள் பிரிட்டிஷ்காரர்கள் (இவர்கள் ஆறு பேர்களும் பிரிட்டிஷ் இன்ஜினீயர்களாவார்கள்); மீதி ரஷ்யக் குற்றவாளிகள் 12 பேர்கள். இந்தப் பதினெட்டுப் பெயர்களையும் நீதிமன்றத்தில் நிறுத்தி வெளிப்படையாய் எதிரிகளுக்குத் தகுந்த வக்கீல்களை வைத்து வாதாடச் சந்தர்ப்பம் கொடுத்து, அந்த வக்கீல்களுக்கு யோசனை சொல்லவும் விசாரணையின் யோக்கியதையைக் கவனிக்கவும் தக்கவண்ணம் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் வந்து கோர்ட்டில் ஆஜராகச் சம்மதித்தும் விசாரணை நடத்திவந்தார்கள். இந்த விசாரணையால் பிரிட்டிஷ் இன்ஜினீயர்களான குற்றவாளிகளில் சிலர் தங்கள் குற்றங்களைத் தங்கள் வாய்மூலமாக ஒப்புக் கொள்ளவும் நேர்ந்துவிட்டதுடன், சாட்சிகள்மூலம் குற்றங்கள் தாராளமாய் ருஜுவும் ஆகிவிட்டன.

இதன்மீது ரஷ்ய நீதிபதியானவர், பிரிட்டிஷ் குற்றவாளிகள் 6 பேர்களில் ஒருவருக்கு விடுதலையும், இருவருக்கு முறையே 3 வருஷம், 2 வருஷம் வீதம் தண்டனையும், மூவருக்கு தேசப் பிரஷ்டமும் செய்துவிட்டு—ரஷ்யக் குற்றவாளிகள் பன்னிருவர்களில் ஒருவரை விடுதலை செய்துவிட்டு பாக்கிப் பேர்களை 10 வருஷம், 8 வருஷம், 3 வருஷம், 2 வருஷம் வீதமும்—இதில் ஒரு பெண்ணும் இருந்ததால் அவளுக்கு $1\frac{1}{2}$ வருஷமும்—தண்டனை விதித்தார்கள்; அப்பீலுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து ரஷ்ய ஆட்சி நீதி வழங்கும் முறையை ஒருவாறு உணரலாம். இந்தக் குற்றங்களைச் சாதாரணக் குற்றம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இதன் உள் எண்ணமும், இதனால் ஏற்படக்கூடிய நஷ்டமும் எவ்வளவு கடுமையானது என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட குற்றம் ரஷ்யர்கள் பிரிட்டிஷுக்குள் வந்து செய்திருந்தால் அது எப்படிப் பாவிக்கப்பட்டு எவ்விதத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கும் என்பதை அவரவர்கள் சொந்தமுறையில் யோசித்துப் பார்த்தால் தெரியவரும். இப்படிப் பட்ட இந்தக் கடுமையான சதிக் குற்றத்திற்கு இருவருக்கு 2 வருஷம், 3 வருஷம் தண்டனை யும், மற்ற மூவருக்கும் தங்கள் நாட்டைவிட்டு அவர்களது சொந்த நாட்டிற்குப் போய்விடும் படியும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள் என்றால், இதற்கு மேலான காருண்யமும், அருளும் உள்ள நீதி இந்த உலகத்தில் எங்காவது கிடைக்கமுடியுமா என்பதை யோசித்தால்—ரஷ்ய நீதியின் பெருமை விளங்கும். இந்த நீதி 'இராம ராஜ்ய'த்திலோ அல்லது சுயாட்சி தேசத்திலோகூட எதிர்பார்க்க முடியுமா என்பதும் யோசிக்கத் தக்கதாகும்.

இது இப்படியிருக்க, இதன் உண்மையையும் யோக்கியதையும் பார்த்தபிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்கின்ற யோசனை சிறிதுமின்றி, வேண்டுமென்றே அவசரப்பட்டு ரஷ்யர்கள்மீது உலக மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி தூற்றிப் பழித்து, சில பகிஷ்கார முறைகளைக் கையாடினதும் பிரிட்டிஷாரின் புத்திசாலித் தனத்தையோ, இராஜதந்திர முறையையோ, நல்ல எண்ணத்தையோ காட்டுவதாக இல்லாமல்போனது குறித்தும் யாரும் வருந்தாமல் இருக்கமுடியாது.

எப்படியிருந்தபோதிலும், இந்தத் தடபுடல் விஷமப் பிரச்சாரத்தின் பயனாய் ரஷ்யாவுக்கு நன்மையே ஏற்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில், ரஷ்யாவின் நீதியை உலகம் அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதேயாகும்.

நிற்க; ரஷ்யாவின்மீது எப்படியாவது ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு சாக்கை வைத்து, ('நீ இல்லாவிட்டாலும் உன் தந்தையாவது செய்திருப்பான்' என்கின்ற ஆட்டுக்குட்டி–ஓநாய் கதையைப்போல்) ஒரு குற்றம் சுமத்தி, அதனிடம் வம்புச் சண்டைக்குப் போயாவது ரஷ்யாவில் இன்று நடைபெறும் பொதுவுடைமை ஆட்சியை—ஏழை மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அனுகூலமான ஆட்சியை ஒழித்து—மற்ற நாடுகளில் நடைபெறுவதுபோன்ற பணக்கார ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த உலகில் இன்று பிரிட்டிஷாருக்கு மாத்திரமல்லாமல் எல்லாத் தேசத்து ஆட்சியாளர்களிடமும் இருந்துவருகின்றது; அதற்கு ஆங்காங்குள்ள முதலாளிகளாலும், பாதிரி, புரோகிதர்களாலும் தண்ணீர் விடப்பட்டுப் பாதுகாத்தும் வரப்படுகின்றது. ஆனாலும், ஏழை மக்கள்—சரீரத்தால் பாடுபட்டுத் தொழில்செய்து வாழும் மக்கள் கண்விழித்துச் சுயமரியாதை உணர்ச்சி பெற்றுவிட்டதால் முதலாளி ஆட்சியின் எண்ணங்கள் கருகிவாடி வருகின்றன.

அன்றியும், ரஷ்ய ஆட்சி, 'முதலாளித்துவ ஆட்சிகளின் தயவினாலோ அல்லது கருணையினாலோ நாம் வாழலாம்' என்கின்ற எண்ணத்தின்மீது ஒரு சிடுக்கை நேரம்கூட இல்லை. ஆனால், அதற்குப் பதிலாக, இந்த உலக முதலாளிகள் மாத்திரமல்லாமல் இன்னும், 'செவ்வாய் மண்டல' முதலாளிகளின் எதிர்ப்பையும், அவர்களது சக்தியையும், சூழ்ச்சியையும் நன்றாய் அறிந்து, எந்த நேரமும் எதிர்பார்த்து நின்றுகொண்டு இருக்கின்றது. அது எப்படிப்பட்ட யுத்தத்தையும் வரவேற்று, ஒரு கை பார்த்துவிடத் துணிந்து இருப்பதுடன், உலகம் முழுமைக்கும் தன்னுடைய ஆட்சிக் கொள்கையை உவந்தளித்து உதவிபுரியக் காத்தும் இருக்கின்றது.

ஆனால், ஏழை மக்களுக்கும், கஷ்டப்பட்டுப் பாடுபடும் தொழிலாளி மக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உண்மையான சுயமரியாதை உணர்ச்சி உண்டாக்கவேண்டியதுதான் இப்பொழுது பாக்கியிருக்கின்றது.

['குடி அரசு'–தலையங்கம்—23-4-1933]

11. மேல்நாடும் கீழ்நாடும்

தலைவரவர்களே! தாய்மார்களே! சகாக்களே!

நான் இந்த ஊருக்கு வந்து எதிர்பாராத விதமாய் இங்கு அய்ந்து, ஆறு நாட்கள் தங்கும்படி நேர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அகஸ்மாத்தாகச் சந்திக்க நேர்ந்த இந்தக் கலைஞான சங்கக் காரியதரிசி, தோழர் சங்கர் அவர்களும், நண்பர் சர்தார் சோம்நாத் அவர்களும், இந்த ஊரில் நான் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று சொன்னார்கள்.

'மிகவும் வைதிகத் துறையில் பேர்பெற்ற இந்தப் புண்ணிய சேத்திரம் என்பதில், சன்னியாசிகளாலும், சாதுக்களாலும், வானப்பிரஸ்தாஸ்ரமத்தில் இருப்பவர்களாலும் நிறைந்துள்ள மக்கள் முன்—நான் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசமுடியும்?' என்று சொன்னேன். அதற்குத் தோழர் சோம்நாத் அவர்கள், 'இங்குக் கூட்டம் போட்டுப் பேசியதே கிடையாது. ஆதலால், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எதுபற்றி வேண்டுமானாலும் பேசலாம்!' என்று சொன்னார்கள். நான், குறிப்பிட்ட எந்த விஷயத்தையும்பற்றிப் பேசாமல், 'மேல்நாடும் கீழ்நாடும்' என்பதைப்பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னேன். அவர் சரியென்று ஒப்புக்கொண்டார். ஆகவே, இன்று அதைப்பற்றி நான் பேசுவதில்

நீங்கள் ஏதோ ஒரு கதை கேட்பதுபோல் கருதவேண்டுமே ஒழிய, நான் எதையும் வலியுறுத்திச் சொல்வதாகக் கருதக்கூடாது. ஏனெனில், மிக வைதிகப் பற்றும், தமிழ்ப்பற்றும் உள்ள உங்களுக்கு, அங்கு நடக்கும் விஷயங்கள் பல, திருப்தியில்லாதவைகளாகத் தோன்றலாம். ஆதலால், நான் அதை வலியுறுத்துவதாகக் கருதாமல்—'அங்கு அப்படி நடக்கிறது, இங்கு இப்படி நடக்கிறது' என்கின்ற அளவில் மாத்திரம் கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் பேசப்போகும், 'மேல்நாடும் கீழ்நாடும்' என்ற தலைப்பின் கருத்து, அய்ரோப்பாவும் இந்தியாவும் என்பதாகும். இரண்டு நாட்டு நடப்புகளையும் எடுத்துச் சொல்லுவதில் இரண்டு நாட்டிலும் இருந்துவரும் மதம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமுதாயம், தொழில், வாழ்க்கைத் திட்டம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அய்ரோப்பிய நாடு என்பது சற்றேறக்குறைய இந்தியாவைப்போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்ட நாடாகும். அதோடு மதம், கலை, நாகரிகம், சீதோஷ்ண நிலைமை, நடை, உடை, ஆகாரம் முதலியவைகளில் பேதம் இல்லாமல் இருக்கும் நாடாகும். இப்படியெல்லாம் இருந்தும் இப்போது சுமார் 30 தனித் தேசங்களாகப் பிரிக்கப் பட்டு, தனித்தனிச் சுதந்திர நாடுகளாகவும், ஒன்றுக்கொன்று எவ்வித சம்பந்தமுமில்லாத பூரண சுயேச்சை நாடுகளாகவும் இருந்து வருகின்றன. அப்படிப் பிரிக்கப்பட்டிருப்ப தற்குக் காரணம்—நான் அறிந்த வரையில் பாஷையைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஒரு பாஷை பேசும் நாட்டுக்கும் மற்றொரு பாஷை பேசும் நாட்டுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. மதம் ஒன்றாக இருந்தாலும், ஒரு நாட்டான் மற்றொரு நாட்டானை 'ஒரு சமுதாயத்தான்' என்று அங்குக் கருதுவதில்லை. அந்த மக்களை உண்மையில் எந்த நாட்டினர் என்றுகூடக் கண்டுபிடிக்க முடியாது. அங்கு எந்த நாட்டிலும் மக்களுக்குள் உயர்வு-தாழ்வு என்பது இல்லவே இல்லை. எந்த நாட்டானும் எந்த நாட்டுப் பெண்ணையும் மணம் செய்துகொள்ளுவான். இப்படி எல்லாம் இருந்தும், அவர்கள் ஒரு நாட்டுக்கு ஒரு நாடு எவ்வித சம்பந்தமுமில்லாமல், பிரவேசிக்க முடியாதபடியும், ஒரு நாட்டுச் சாமான் மற்றொரு நாட்டுக்குள் சுங்கமில்லாமல் வரமுடியாதபடியும், தனித்தனி இராணுவ முஸ்தீபுகளுடனும் இருந்து வருகிறார்கள். அனேகமாக அந்தந்த நாட்டுக்குத் தேவையான வஸ்துக்களை அங்கங்கு உற்பத்தி செய்துகொள்வதையே 'தேசியம்' என்று கருதுகிறார்கள்.

ஒரு மொழிக்காரன் மற்றொரு மொழிக்காரன்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ, ஒரு நாட்டான் மற்றொரு நாட்டான்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ அடிமைத்தனம் என்று கருதுகிறான்.

உதாரணமாக, இங்கிலாந்துக்காரன் அயர்லாந்து மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதையும், இங்கிலாந்துச் சாமான் அயர்லாந்தில் இறக்குமதி ஆவதையும் அடிமைத்தனம் என்றும், வியாபாரக் கொள்ளை என்றும் அயர்லாந்துக்காரன் கருதுகிறான். ஜெர்மன் குடியாய் இருந்துகொண்டு ஜெர்மன் மக்களை யூதர்கள் சுரண்டுவதை 'யூதர் கொள்ளை' என்று ஜெர்மானியன் கருதுகிறான். இப்படியே நாட்டுக்கு நாடு—மொழிக்கு மொழி—இனத்துக்கு இனம் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் தனித்து நின்று தங்கள் சமுதாயத்தையும், தங்கள் நாட்டையும், தங்கள் பொருளாதாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

இந்த விஷயங்களில் இந்தியாவுக்கு ஒரு கொள்கையும் இல்லை. இந்தியாவின் சீதோஷ்ண நிலை வெவ்வேறு; இந்திய மக்கள் பல இனத்தினர்; பல மதத்தினர். அம் மதங்களும் ஒன்றுக்கொன்று மாறானவை. இந்தியாவின் தனிப்பட்ட மொழிகள் பல; நடை, உடை, ஆகாரம் பலவிதம். இந்திய மக்களுக்குள் சாதி வகுப்புக்கள் பல; இந்தியாவில்

மனிதனுக்கு மனிதன் உயர்வு-தாழ்வு என்பது சொல்லமுடியாததும் சகிக்கமுடியாததும் ஆகும். ஒரு வகுப்புக்குள் ஒரு வகுப்பு மணம் செய்துகொள்ள முடியாத பேதமும், ஒரு சாதியாரை ஒரு சாதியார் ஆதிக்கம் செலுத்துவதும், ஒரு சாதியை ஒரு சாதி சுரண்டுவதும், ஒரு நாட்டை மற்றொரு நாடு வற்ற அடிப்பதும், சுரண்டுவதும் அளவிட முடியாததாகும். ஒரு நாட்டுக்கு ஒரு நாடு, எதில் ஒற்றுமை என்றும், எந்த விஷயத்தில் பொது இலட்சியம் கொண்டது என்றும், எதில் ஒன்றுபோல் நடக்கிறார்கள் என்றும், எதில் பொது உணர்ச்சி கொண்டவர்கள் என்றும் சொல்லி ஆதாரம் காட்டுவது சுலபத்தில் முடியாது.

இந்தியா சுமார் 500 வருஷங்களுக்குமுன் வரையில்—ஏன் வெள்ளையன் வருகிற வரையில் சில சந்தர்ப்பங்கள் தவிர இனம், மொழி, சீதோஷ்ணநிலை, பூர்விகநாடு முதலியவைகளுக்கு ஏற்றபடி தனித்தனி நாடுகளாக இருந்து வந்த நாடாகும்.

இப்படி எல்லாம் இருக்கக்கூடிய இந்தியநாடு, எவ்வித நன்மைக்கும் பயன்படாத வகையில் ஒரே நாடாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. பிணைக்கப்பட்டிருப்பதும் அல்லாமல்—எவ்வித அவசியமும் இல்லாமல் ஒரு மொழி, ஒரு இனம் ஒரு நாகரிகம்—கலை உள்ள நாட்டைப் பல நாடுகளாகப் பிரித்து வேறுபடுத்தியும் இருக்கிறது. இம் மாதிரிப் பொருத்தமில்லாதவற்றை ஒன்றுபடுத்தி இருப்பதற்கும், பொருத்தமுள்ளதை வேறுபடுத்தி இருப்பதற்கும் சரித்திர சம்பந்தமானதோ, அல்லது அவசிய சம்பந்தமானதோ ஆகிய காரணம், அவ்வப்போது படையெடுத்து வந்து வென்ற அரசர்கள் ஒன்று சேர்ந்ததும் பிரிந்ததும் தவிர வேறு ஒரு காரணமும் தென்படவில்லை.

ஜெர்மனியும் இங்கிலாந்தும் ஒரு மதம், ஓர் இரத்தக் கலப்புள்ள நாடுகள். அவை—ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் ஒன்றின் ஆதிக்கம் ஒன்றின்மேல் இருக்கக்கூடாது என்பதற்காக—அழிந்து போகிறவரையில் போராடிப் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இன்று யுத்தகளத்தில் மடிகின்றன. இதன் பயனாய் மற்றும் பல நாடுகளும் இதே காரணத்துக்காகப் போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன.

நம் நாட்டின் சில ஜில்லாக்களைப் போன்ற விஸ்தீரணம் உள்ள நாடுகள் தம்நாட்டு உணர்ச்சியின் பயனாகவே போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன. அவைகளுக்கு நல்ல ஆட்சியை விட தம் நாட்டு உணர்ச்சியே பிரதானமாய் இருந்து வருகிறது. இதனால் அவைகள் கல்வி, செல்வம், கைத்தொழில், பாதுகாப்பு, தனி நாட்டு நன்மைக்கு ஏற்ற ஆட்சி முதலியவை உலகிலேயே யாருக்கும் இளைத்திருக்காத சமநிலை அடையமுடிகிறது. பழைய கால ஆட்சி முறை எப்படி இருந்தது என்பதைப் பற்றிச் சிந்திக்கக்கூட அவர்கள் நேரம் செலவழிப்பதில்லை. பிற்கால ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதே அவர்கள் சிந்தனையாக இருந்துவருகிறது.

மேல் நாட்டில் மக்கள் மதத்துக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடை, உடை, ஆகாரம், கல்வி, பாவனை, மணம், சடங்கு முதலிய காரியங்களில் மதத்துக்குப் பெரிதும் இடமில்லை. மதம் சரீரத்துக்கு உள் பக்கமே தவிர, சரீரத்துக்கு வெளியில் ஒன்றும் தெரியாது. வாழ்க்கையில் மதத்தைப் புகுத்தமாட்டார்கள். ஐரோப்பா பூராவும் ஒரு மதந்தான்; அதற்கு ஒரு 'பைபிள்'தான்; அதற்கும் 'ஒரே கர்த்தர்'தான்; அதைப்பற்றி அவர்களுக்குள் சண்டை இல்லை. அவற்றைக் காப்பாற்ற அவர்கள் தொல்லைப்படுவதுமில்லை.

கீழ்நாட்டில் மதம் அப்படி இல்லை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு முறையையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. தலை மயிர் முதல் கால் செருப்பு வரை, மதத்துக்குச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நடை, உடை, ஆகாரம், பாவனை, கல்வி, மரணம், வாழ்வு, தொழில், பணம் சேர்த்தல், பணம் செலவழித்தல், தர்மம் எல்லாம் மத ஆதிக்கத்தில்—மதப் பிரவேசத்தில் இருக்கின்றன. இங்கு ஒரு மனிதனைக் கண்டவுடன் இவன் இன்ன

இன்ன மதத்தவன் என்று சொல்லும் வண்ணம்—அவனுக்கு ஒரு தனி வேஷம் வேண்டியிருக்கிறது. சரீரத்துக்குள் இருக்கும் மத உணர்ச்சியைவிட, சரீரத்தின் வெளியில் காட்டப்படும் மத உணர்ச்சியே சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. நம் நாட்டு—அதாவது கீழ்நாட்டு மதத்துக்குப் பெயரிலேயே தர்க்கம்; அந்தப் பெயருக்கும் ஆதாரம் கிடையாது. மத ஆதாரத்துக்கும் தர்க்கம்; அவை எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை. மத கர்த்தர் ஒருவரல்லர்; மதக் குறி ஒன்றல்ல; மதப் பிரார்த்தனை ஒன்றுபோல் இல்லை.

மதக் கடவுள்கள் பல! அவைகளின் சரித்திரங்கள் விபரீதம். அதன் பயனாய் மனித சமூகம் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஒன்றுபடுத்தப்படவில்லை. சடங்குகள் பிரார்த்தனைகள் முதலியவை பொருளாதாரக் கேட்டுக்கும், ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கும் ஏற்ற வண்ணமே வழங்கப்பட்டு வருகிறதனால்—ஒரு வகுப்பு உயர்வும் ஒரு வகுப்பு தாழ்வும் ஆகி வருகிறது; மதத்தால் நாடு கெட்டது. மனித சமுதாயம் கீழ் நிலை அடைந்தது என்று சொல்லும்படியான நிலை அதிகரித்து வருகிறது.

மதத்தைக் காப்பாற்றுவதன் பயனாய் மக்கள் ஜீவனை இழக்கும்படியான தொல்லை அனுபவிக்கின்றனர். சுருங்கச் சொன்னால், மதத்தால் வேறுபாடும், குரோதமும் ஏற்பட்டு மனிதாபிமானம் இல்லாமல் நாடு துன்பத்தை அனுபவிக்கிறது.

மேல் நாட்டின் கல்வி பெரிதும் பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும், ஆராய்ச்சியையும் பொறுத்து உள்ளது என்பதோடு, அவைகளுக்கு அனுகூலமான கல்வியே அங்கு நடைபெறுகிறது. அதுவும் அங்கு 100-க்கு 65 முதல் 80 பேர் வரை கல்வி பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கற்றிருப்பதிலும் மதத்தையோ மத பக்தியையோ கொண்டு வந்து அக் கல்வியில் புகுத்துவதில்லை. அங்கு, படித்தவன் என்று சொல்லப்படுபவன் ஒரு பகுத்தறிவாளியாகவும், உலக ஞானமுள்ளவனாகவும், விஞ்ஞானியாகவும், ஆராய்ச்சிக்காரனாகவும் இருப்பானே ஒழிய—மத பண்டிதனாகவும், மூட நம்பிக்கைக்காரனாகவும், மத ஆராய்ச்சிக்காரனாகவும், குறுகிய புத்தி உள்ளவனாகவும் இருக்கவே மாட்டான். படிப்பின் மூலம் பொது ஞானத்தை விருத்தி செய்து கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்படியான படிப்பே பெரிதும் கொடுக்கப்படும். அங்குள்ள கலாசாலை, சர்வ கலாசாலை என்பவை உலகப் பொது அறிவு, பண்டிதத் தன்மைக்குப் பயன்படுபவைகளாகவே இருக்கும். பாடப் புத்தகங்களில் மூட நம்பிக்கைச் சரித்திரங்களோ, மத பக்திக் கலைகளோ ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும்படியாய் இருக்கும். எப்படிப்பட்ட கல்வி ஆனாலும் அறிவுக்கும், வாழ்க்கைக்கும் எவ்வளவு பயன்படும் என்பதைப் பொறுத்து இருக்குமே ஒழிய இது ஆத்திகமா, நாத்திகமா; மத உணர்ச்சி இருக்குமா, போகுமா; இது பழைய கால நிலையை அனுசரித்ததா, புதிய முறையைப் புகுத்துவதா–என்கின்ற கவலை கொண்டதாக இருக்காது. பழைய கால நிலையைப் போதிக்கும் கல்வியானது விஷயத்தைத் தெரிந்து கொள்ள மாத்திரம் பயன்படத்தக்கதாக இருக்குமே ஒழிய, பழைய கால நிலைக்கு நம்மைக் கொண்டுபோகும்படியானதாக இருக்காது. கல்வியின் தொகுப்பே பெரிதும் பரிசுத்தமான பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். அங்கு கொடுக்கப்படும் கல்வி புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்கத் தக்கதாய் இருக்கும்; மனித வாழ்க்கையை நாளுக்கு நாள் சவுகரியப்படுத்துவதாகவும், முற்போக்கு, அளிக்கத்தக்கதாகவும், மனிதனுடைய அறிவிலும் முயற்சியிலும் நம்பிக்கை அளிக்கத் தக்கதாகவும் இருக்கும். அதனால் அறிவாளிகளும், முயற்சியாளர்களும் அங்கு அதிகம். அவைகள் அந்நாட்டுக்குப் பல நன்மைகள் உண்டாக்கின. பல அற்புதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் கல்வி, பகுத்தறிவை இலட்சியம் செய்வதில்லை. உலகப் பொது ஆராய்ச்சிக்கு மதிப்பு வைப்பதில்லை. அவைகளுக்கு ஏற்ற கல்வி இங்கு தொகுக்கப்படவே இல்லை; கல்வி கொடுக்கப்பட்டிருப்பதும் பெரும்பான்மை மக்களுக்கு 6, 7 பேர்களுக்குத்

தான். அப்படிப்பட்ட கல்வியின் ஒவ்வொரு துறையிலும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத மதம் தாண்டவமாடும். மதத்துக்காகக் கல்வி என்றும், கல்வியினால் மத பக்தி ஏற்பட வேண்டுமென்றும் கருதப்பட்டு, அவைகளின் தத்துவங்களே கல்வியில் பெரிதும் புகுத்தப் பட்டிருக்கின்றன.

இங்கு மத சம்பந்தமான நிபுணத்துவமும் உணர்ச்சியும் உள்ளவன்தான் படித்தவனாகவும், பண்டிதனாகவும் கருதப்படுகிறான். இந்த நாட்டுப் பண்டிதனுக்கு, உலக சரித்திர ஆராய்ச்சியோ விஞ்ஞான அறிவோ பெறவேண்டும் என்கின்ற கவலை இல்லை. அது இல்லாமலே பண்டிதனாகி விடுகிறான். நல்ல பண்டிதன் என்பவன் பெரிதும் நல்ல மூட நம்பிக்கைக்காரனாகவும், பகுத்தறிவில் இலட்சியமில்லாதவனாகவும், குறுகிய பிடிவாதக்காரனாகவுமே இருக்கிறான்.

படிப்புத் திட்டத்தைத் தொகுப்பவர்களுக்குப் படிப்பின் மூலம் பொது அறிவும் பகுத்தறிவும் ஏற்பட வேண்டும் என்கின்ற கவலை இருப்பதில்லை. தங்களுக்கென்று ஏற்பட்ட பழைய வழக்கம், மதத் தத்துவம் முதலியவைகள்தான் மிகுதியும் கவனிக்கப்பட்டு, அவைகளுக்கு ஏற்றபடி பாடங்கள் தொகுக்கப்படுகின்றன.

சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாடப் புத்தகங்களிலேயே மூட நம்பிக்கை கொண்ட புராணக் கதைகள் புகுத்தப்பட்டு விடுகின்றன.

இங்கு கல்வி கொடுப்பவர்கள், இந்தக் கல்வியானது பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கோ, வாழ்க்கைக்கோ எவ்வளவு பயன்படும் என்பதை முக்கியமாய்க் கவனிப்பதில்லை. எந்தக் கல்வியை எடுத்தாலும் இது ஆத்திகமா, நாத்திகமா? இதனால் மத உணர்ச்சி அதிகம் உண்டாகுமா, குறையுமா? இது நம் பழைய கால நிலை—நாகரிகத்திற்கு ஏற்றதா, அல்லது இது புதிய உலகமாக்கிவிடுமா, என்று பயந்து நடுங்கி ஆத்திகம் மதம், பழைய காலநிலை ஆகியவைகளை முக்கியமாய் நினைத்து, அதற்கேற்ற கல்வியையே மக்களுக்குள் புகுத்தப் பார்ப்பார்கள். இங்கு, கல்வி கற்றவன்—விஞ்ஞானக் கல்விப்பட்டம் பெற்றவன் உடனே பழைய கால நிலைக்குப்போக ஆரம்பிக்கிறான். 'அது சரியா, தப்பா?' என்று ஆராயுங் கல்வி, 'கூடாத கல்வி'யாக மதிக்கப்படுகிறது.

சகலத்திலும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் துணிவும் சுதந்திரமும் உண்டாக்கும் கல்வியை இங்கு நாத்திகமாகவும், மத விரோதமாகவும், தேசியத்துக்கு விரோதமாகவும் கருதுகின்றனர்.

இந் நாட்டுப் பழங்கால நிலை, பழங்கால மதம், பழங்காலப் பெருமை முதலியவைகளில் நிபுணர்களான எந்தப் பண்டிதர்களிடம் இருந்தும் நாளது வரை ஒருவிதமான புதிய உணர்ச்சியோ, அற்புதங்களோ, முன்னேற்றத்துக்கான சாதனமோ ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கு கண்டுபிடிக்கப்பட்டவைகள் எல்லாம் முன்னோர்கள் செய்த நூல்கள் என்பவைகளுக்குப் புதிய உரைகளும், புதிய கருத்துக்களும், புதிய தத்துவார்த்தங்களும், புதிய பெருமைகளுமே அல்லாமல்—எவ்விதப் புதிய கருத்துக்கள் கொண்டதாகவோ, புதிய கருத்துக்கள் கண்டுபிடிக்கும் எண்ணத்தைக் கொண்டதாகவோ காணப்படவில்லை.

இந்த நாட்டுக் கல்வியின் பயனாய் வாழ்க்கையின் எந்தத் துறையிலும் பழமையிலிருந்து எவ்வித மாறுதலோ, எவ்வித சவுகரியமோ, சுருக்கமோ ஏற்படவில்லை. ஏதாவது ஏற்பட்டிருந்தால் அது புரட்சியின் பயனாலேயே ஒழிய கல்வியால் என்று சொல்லத் தக்கதாய் இல்லை.

இவ்விடத்திய கல்வி மனிதனுடைய சொந்த அறிவுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. 'முன்னோர்கள் சொன்னதைப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்யக் கூடாது' என்பதே பல விஷயங்களில் கல்வியின் பயனாக இருக்கிறது. இவ்விடத்திய படிப்பின் நிலை, தொட்டதை எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி முயற்சியை அலட்சியப்

படுத்தவும், சோம்பேறியாக உட்காரவுமே பயன்படுகிறது. அதனால் சோம்பேறிகளும், சாதுக்களும், சன்னியாசிகளும் இங்கு அதிகமாக ஆகிவிடுகிறார்கள். இவர்களால் பொருளாதார வீண் செலவும் முன்னேற்றத் தடையும் அல்லாமல் வேறு காரியம் ஆவதில்லை.

மேல் நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் ஏதோ சில கொள்கையின்மீது அரசியல் கட்சிகளும், போராட்டங்களும் நடைபெறுகின்றன. ஏனெனில், அங்கு வேறு வகுப்புகள், மதங்கள், கீழ்–மேல் பிறவி பேதங்கள் முதலியவை இல்லாததால்—வெறும் அரசியல் கொள்கைகளை மாத்திரம் வைத்துக் கட்சிகள் நடத்தவும்; கட்சிகள் பதவிக்கு வந்தாலும் அங்கு அந் நாட்டுக்கு, நன்மையான கொள்கைகளைப் பற்றி மாத்திரம் ஆட்சிநடத்தவும்; வாதம் பிரதிவாதம் உண்டாகவும்; வெளிநாட்டான் சுரண்டலும், வெளிநாட்டான் கைப் பற்றாமலும் இருக்கும்படியான பொருளாதாரம், கைத்தொழில், இராணுவம் முதலியவை களைப்பற்றிச் சிந்திக்கவும்; பொதுமக்களின் பொருளாதாரம் வாழ்க்கைநலம் ஆகியவை களைப் பற்றித் திட்டங்கள் வகுக்கவும், தேடவுமான காரியங்கள் நடைபெறுகின்றன. யாவரும் ஒரே இனம்; யாவர்க்கும் ஒரேமொழி; அவைகளுக்கேற்ற கண்டிப்பான எல்லை ஆகியவை இருப்பதால், பிறவி–வகுப்புஉணர்ச்சி முதலியவைகளுக்கு இடமில்லாமல் ஆட்சி நடந்து, பொருளாதாரமும் வாழ்க்கை நலமும் யாவர்க்கும் ஒன்றுபோலவே பெருகிக் கொண்டேவருகின்றன. இதற்கான கொள்கைகளே கட்சிப் போராட்டத்திற்கு அஸ்திவாரமாய் இருந்துவருகின்றன. ஒவ்வொரு நாட்டாரும் மிக்க சிறு தொகையினராக இருந்தும் மற்ற நாட்டு ஆதிக்கம், மற்ற நாட்டான் தலைமை எதிலும் இல்லாமல் பார்த்துக்கொள்வதும் அரசியல் காரியமாக இருந்துவருகிறது.

இந்நாட்டு அரசியல் கிளர்ச்சி என்பது ஏற்பட்டு 50 வருடகாலமானாலும்—அது, பெரிதும் உத்தியோகம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடம் வருவதற்காகவே செய்யப்பட்டதாக இருந்து, அதன் பயனாக மத, வகுப்பு, சாதிச் சச்சரவுகள் ஏற்பட்டு, இன்று அரசியல், வகுப்புக்கொள்கையைப் பற்றியதும், பிறவி சாதியைப்பற்றியதும், மதத்தைப்பற்றியதுமாக விளங்கிவருகிறது. அரசியல் கட்சிகளைப்பற்றிப் பேசும்போது, சாதிமத வகுப்புக்களைப் பற்றித்தான் பேசமுடிகிறதே தவிர, கொள்கைகளைப் பற்றிய பேச்சு முக்கியமானதாக இல்லை.

இங்கு காங்கிரஸ் என்று சொல்லப்படுவதை இந்துக்களே பொதுமக்கள் சபை என்று ஒப்புக்கொள்ளாமல், 'இந்து மகா சபை' ஒன்றை இந்துக்கள் பொது அரசியல் சபையாகக் கொண்டாடுகிறார்கள். இந்த இரண்டையும் ஒப்புக்கொள்ளாத பார்ப்பனரல்லாதார் சபை, 'திராவிடர் கழகம்' என்று ஒன்று சென்னை, பம்பாய், மத்தியமாகாணம் ஆகியவைகளில் இருந்து வருகிறது.

இதன் மத்தியில் ஆதித் திராவிடர் என்று தாழ்த்தப்பட்ட தீண்டாத வகுப்பைச் சேர்ந்த பல கோடி மக்களுக்கு, ஒரு தனி அரசியல் சபை இருக்கிறது. வருணாசிரமக் காரர்கள்—அதாவது, பெரிதும் பார்ப்பனர்கள், தங்களுக்கு வேறு ஒரு அரசியல் சபை வைத் திருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் முதலியவர்களுக்குத் தனித்தனியே அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவ்வளவும் தவிர்த்து, இவ்வளவுக்கும் மாறுபட்டவராக 9, 10 கோடி முஸ்லிம்களுடைய சபை—ஒரு தனி அரசியல் ஸ்தாபனமாக இருக்கிறது. இவற்றின் கொள்கைகளில் பெரிதும் மற்ற ஸ்தாபனங்களுடன் தங்களுக்கு உள்ள சாதி, மத முரண் பாடுகளைக் காட்டுவதுதான் முக்கியமானவைகளாக இருக்கின்றன. அவற்றுள் மதம், சாதி, வகுப்பு உணர்ச்சிகளே தலைசிறந்து நிற்கும்.

காங்கிரஸ்காரர்கள் தங்கள் ஸ்தாபனத்தைப் பொது அரசியல் ஸ்தாபனம் என்று பாத்தியம் கொண்டாடினாலும், காங்கிரஸ்காரர்கள் வேண்டுவது 'ராம ராஜ்யம்' அல்லது 'இந்து ராஜ்யம்' என்று சொல்லப்படுகிறது. இந்து மகா சபையாரும் அதையே சொல்லு

கிறார்கள். இதன் பயனாகத் திராவிடர்கள் தனித்துக் கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். முஸ்லிம்களும் அப்படியே தனித்துக்கொள்கிறார்கள். தீண்டப்படாத மக்கள் சங்கத்துக்குப் பணம், படிப்பு, சமுதாய சமத்துவம் இல்லாததால் அது சரியான வகுப்புரிமை அடிப்படையின்மேல் இருந்தாலும்—போதுமான செல்வாக்கு இல்லாமல் இருக்கிறது. இது போலவே கிறிஸ்தவர்களும் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள் ஆனதால் தனிச் சங்கம் வைத்திருந்தாலும் சமயம்போல் ஒவ்வொரு சமயம் ஒவ்வொன்றைத் தழுவிப் பயன் அடைவது நல்லது என்று கருதுகிறார்கள். வருணாசிரமக்காரரும், மிகச் சிறு கூட்டக் காரராகக் கருதப்பட்டாலும் இந்து மகாசபை, காங்கிரஸ் இவற்றின் மறைவான ஆதரவால் சமுதாயத் துறையில் தங்களுக்குள்ள உயர்வைக் காப்பாற்றிக் கொள்வதையே அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளனர். இவற்றில் ஒன்றாவது 'பிரிட்டிஷ் கவர்மெண்ட்' இந்த நாட்டை விட்டுப்போய்விட வேண்டுமென்று சொல்ல முன் வருவதில்லை.

ஏனெனில், பிரிட்டிஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விட்டால் உள்நாட்டில் மத, வகுப்புத் தொல்லை ஏற்படாமலும், வேறு ஒரு நாட்டான் இந்தியாவைக் கைப்பற்றாமல் காப்பாற்றிக்கொள்ளவும் முடியுமா என்பதற்கும் எந்தக் கட்சியும் பதில்சொல்ல முடிவதில்லை.

பிரிட்டிஷாரிடமிருந்து சில அதிகாரங்களைத் தங்களுக்கு மாற்ற வேண்டும் என்பதிலுங்கூட, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேருவதற்கில்லாமல், கொடுக்கும் அதிகாரங்கள் ஒரு வகுப்புக்கு—மதத்திற்குப் போய்விட்டால், மற்ற மத, வகுப்புக்காரர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமே என்கின்ற பயத்தால், அதையும் யாரும் நியாயமாய்க் கேட்பதில்லை. 'தங்கள் தங்கள் வகுப்பு மதங்களுக்குச் சரியானபடி அதிகாரம் வேண்டும்' என்று கேட்கிறார்கள். இதற்கு, சிறுபான்மையாக இருந்து அதிக பாகம் அனுபவிப்பவர்கள் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

ஆதலால், பாமர மக்களை வசப்படுத்த மாத்திரம் 'பிரிட்டிஷ் கவர்மெண்டை'க் குற்றம் சொல்லிவிட்டு, காரியத்தில் தங்கள் தங்கள் வகுப்பு, மதத்துக்கு ஆதிக்கம்—உத்தியோகம் வரும்படியான நடப்பு முறைகளாலேயும், வேண்டுதல்களாலேயும் ஒருவருக் கொருவர் போராடிக் கொள்ளும் முறைகளையே கொள்கைகளாகக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே பெரிதும் இந்தியா எந்தத் துறையிலும் முன்னேற்றமில்லாமலும், பொது இலட்சியம் இல்லாமலும் இருந்துவருகிறது.

இந்தச் சங்கங்களால் பிரிட்டிஷாரிடமிருந்து இதுவரை இந்த 50 வருடமாகப் பெறப் பட்ட இலாபமோ, சுதந்திரமோ—'சில வகுப்புக்காரர்கள் பெருத்த சம்பளமுள்ள பதவிகள் அனுபவிக்கிறதை'த்தவிர வேறு நன்மை கிடைத்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

இன்றுள்ள மாகாண நிர்வாக நிலை 1910ஆம் வருஷத்துக்கு முன் எப்படி இருந்ததோ அந்த நிலைக்குப் போய்விட்டது. பொறுப்பும் செல்வாக்கும் உள்ள எந்த ஸ்தாபனமும் இன்று அதை மாற்றும்படி கேட்க முன்வர முடியாமல் இருக்கிறது.

இதன் காரணமெல்லாம், இந்திய அரசியல் கொள்கை என்பது வகுப்பு, மதவாதக் கொள்கைகளே என்பதல்லாமல் வேறொன்றுமின்றி இருப்பதேயாகும்.

மேல் நாட்டின் பொதுமக்கள் சமுதாயநிலையை எடுத்துக்கொண்டால் அங்கு சமுதாயத்தில் பிறவி பேதமே இல்லை; யாவரும் சமமேயாகும். அங்கு பொதுமக்களை மதிப்பதில் பிறவி உயர்வு, தாழ்வு என்கின்ற உணர்ச்சியே கிடையாது. யாவருக்கும் எவ்வித சமுதாய உரிமையும் உண்டு; எவனுக்கும் பிறவி காரணமாக எவ்வித அசவுகரியமோ இழிவோ ஒன்றும் கிடையாது. மனிதனை மனிதன் தீண்டக்கூடாது என்றும் கிட்டே வரக்கூடாது என்றும் கருதுகின்ற—சொல்லுகின்ற கொடுமை அங்கு இல்லை. கோவிலானாலும், உண்டிச் சாலையானாலும் வேறு எந்தப் பொது ஸ்தாபன மானாலும் எல்லோருக்கும் சம உரிமையே தவிர, வித்தியாசம் பாராட்டுவதே கிடையாது.

பிறவியின் காரணமாகக் கல்வியோ, அந்தஸ்தோ, புரோகிதம், பூசாரி, மதகுருவோ, ஏற்பட்டு ஒருவரை ஒருவர் சுரண்டும் வழக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. யாரும் எந்தக் கல்வியும், எந்த வேலையும், எந்தப் பதவியும் அடையலாம்.

இந்தக் காரணங்களால் அங்கு ஒரே சமுதாயமாகவும், மக்கள் யாவரும் சம உரிமை உடையவர்களாகவும் இருப்பதால் அந்த நாட்டாருக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் பொது இலட்சியமும் வளர்ச்சிபெற்று, அந் நாடு சமுதாயத்தால் முன்னேற்றமடைந்து பூரண சுயேச்சை சமூகமாக இருக்கிறது.

இந்த நாட்டின் சமுதாயம் பிறவியின் பேரிலேயே வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த நாட்டில் பல வகுப்புகளாக மக்கள் பிரிக்கப்பட்டு விட்டார்கள். யாரை மதிப்பதிலும் அவனுடைய பிறவியைப்பற்றிக் கருதுவதே இங்கு முதல் வேலையாக இருக்கிறது. சமுதாயத்தில் பிறவியைப் பார்த்து அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறவி காரணமாக மனுதனுக்கு அனேக அசவுகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யோக்கியதையில் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பிறவி காரணமாக இழிவுபடுத்தப்படவும் உயர்த்தப்படவும் ஆகிவிடுகிறான்; வேறு எவ்வித காரணமும் இல்லாமலே மனிதன் பிறவியையும் சாதியையும் உத்தேசித்து, தீண்டப்படாதவனாகவும் பார்க்கப்படாதவனாகவும் மதிக்கப்படுகிறான். ஒரு மனிதன் தொடுவதோ சாப்பிடுவதோ பாவமாகக் கருதப்படுகிறது. ஒரு மதத்தைச் சேர்ந்த கோவில், குளம் உண்டிச்சாலை ஆகியவற்றில் அவற்றை ஏற்படுத்தியவனுக்குக்கூட சம உரிமை இல்லை. இந்திய சமூகத்தில், கல்விகூட வகுப்புக்குத் தகுந்தபடி பிரிக்கப்பட்டுவிட்டது. உத்தியோகம்கூட இதை அனுசரித்தே பிரிந்துவிட்டது. ஒரு வகுப்புக்கு மேல் உத்தியோகம்; ஒரு வகுப்புக்குக் கீழ் உத்தியோகம். பொது இலட்சியம் என்பதாக ஒன்று இந்நாட்டில் இல்லவே இல்லை. எதைப் பொது இலட்சணமாகக் கருதினாலும்—அது, ஒரு வகுப்புக்கு நலனையும், மற்ற வகுப்புக்குக் கேட்டையும் கொடுக்கக்கூடியதாகவே வந்து முடிகிறது. ஒரு மனிதனை ஒரு மனிதன் பிறவியின் காரணமாகத் தொடக்கூடாது என்றால், மக்களிடையே அன்பும், ஒற்றுமையும் எப்படி வளரும்? பிறவி வெறுப்பும், பிறவி வேற்றுமையும் ஒவ்வொரு வகுப்புக்குள் தோன்றி, வேறுபாடு வளர்ந்த வண்ணமாக இருக்கிறது. ஒருவன் பிற மதத்தவனை மதிப்பதைவிட தன் மதத்தவனையே இழிவாகவும், கேவலமாகவும், எதிரியாகவும், வஞ்சகமாகவும் மதிக்கிறான்.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே—ஒரு சாதி இன்னொரு சாதியைச் சுரண்டும்படியான ஏற்பாடுகள் அனேகம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் ஒரு சாதி மேன்மையும் செல்வமும் வாழ்வும் அடையவும், மற்ற சாதிகள் கீழ்மையும், தரித்திரமும், கஷ்ட வாழ்வும் அடையவுமான நிலைமை ஏற்பட்டு இருந்துவருகின்றது.

இந்தப் பேதங்களால் ஒற்றுமை இல்லை என்பது மாத்திரமல்லாமல் பொது இலட்சியம் இல்லாமல் இருப்பதோடு—பொது முன்னேற்றம் என்பது வகுப்புத் துவேஷமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே, இந்நாடு அனேக காலமாகத் தேக்கம் அடைந்திருப்பதோடு, கேடும் அடைந்து வருகிறது. ஆகவே, இந்த நாட்டு முன்னேற்றத் தடைக்கும், விடுதலைத் தடைக்கும் ஜன சமுதாய அமைப்பே முக்கிய காரணம் என்று சொல்லத்தக்க வண்ணம் இந்நாட்டுச் சமுதாயம் இருந்து வருகிறது.

மேல்நாட்டு வாழ்க்கைத் திட்டமானது அனுபவத்தை ஒட்டியும், முன் யோசனைப்படியும், மக்கள் மனத்திருப்திக்கு அனுகூலமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மனிதன் வாழ்க்கையில் தினப்படி சாதாரணமாய் நேரிடும் சம்பவங்களையும் அசவுகரியங்களையும் கவனித்து, அவைகளால் எந்த விதத்திலும் எதிர்பாராத அசவுகரியமோ மனக் கசப்போ தாட்சண்யக் கேடோ யாருக்கும் ஏற்படுவதற்கு இடமில்லாமல், கூடியவரை யோசித்துத் தக்க திட்டங்கள், பழக்க வழக்கத்திலேயே புகுத்தப்பட்டிருக்கின்றன.

எவ்வளவு ஏழைக் குடும்பமானாலும், சாதாரண மனிதக் குடும்பமானாலும், உயர் குடும்பமானாலும் ஒருவர் வீட்டுக்கு முன்னதாகச் சொல்லி அனுப்பாமல் வரமாட்டார்கள்; அசவுகரியமான சமயத்தில் வரமாட்டார்கள்; தாங்கள் போவதால் அந்த இடத்துக்கோ, வீட்டுக்கோ திடீரென்று எவ்வித அசவுகரியமும் ஏற்பட இடம் கொடுக்க மாட்டார்கள்; தாட்சண்யத்துக்காக எவ்வித அசவுகரியமும் ஏற்படச் சம்மதிக்கமாட்டார்கள். தன்னால், பிறருக்கு எவ்வித ஏமாற்றமோ, மனத் தாங்கலோ வரும்படி நடந்துகொள்ள மாட்டார்கள். அதாவது, ஒருவன் ஒரு காரியத்துக்காக ஓர் இடத்திற்குப் போகிறான், அல்லது காத்திருக்கிறான் என்று வைத்துக்கொண்டால், அடுத்தாற்போல் அதுபோல் போகிறவன் முன் சென்றவனுக்குப் பின்னால்தான் நிற்பானே ஒழிய, அந்த இடத்துக்காரனுக்குத் தெரியும் படியாகக்கூட நிற்கமாட்டான். முன்னே போவதோ, அவசரப்படுவதோ அநாகரிகமாகக் கருதப்படும். இரயிலில் டிக்கெட் வாங்கப் போனால் முன்னால் இருப்பவனுக்குப் பின்னால், ஒருவர் முதுகை ஒருவர் பார்த்த வண்ணமாகவே நிற்பார்கள். ஆயிரம் பேரானாலும் அப்படியே ஒருவருக்குப் பின்னால் ஒருவர்தான் நிற்பார்கள். சாமான் வாங்கும் கடையானாலும், 'பாங்கி' ஆனாலும் 'தபாலாபீசு' ஆனாலும், நாடகம், வேடிக்கை பார்க்க 'டிக்கட்' கொடுக்கும் இடமானாலும் அப்படியேதான்—வந்த வரிசைக் கிரமப்படியே நிற்பார்கள்.

'டிராம்' வண்டி, 'பஸ்' முதலியவை வரும் இடத்தில் நிற்பவர்கள் அந்த இடத்தில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள 'நெம்பர் சிட்'டை வந்தவுடன்எடுத்துக் கொண்டு நிற்பார்கள். பஸ், கார் வந்தவுடன் அந்த வரிசை எண்படிதான் வண்டியில் ஏறுவார்கள். ஒருவர் மீது ஒருவர் மோதமாட்டார்கள். ஏதாவது சாமான் வினியோகிக்கும்போதும் 'நோட்டீசு' பட்டுவாடா செய்யும்போதும் இடம்விட்டு இடம் நகரமாட்டார்கள்; கைநீட்ட மாட்டார்கள். ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது மத்தியில் யாரும் பேச ஆசைப்பட்டு, பேசுபவர்கள் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப முயலமாட்டார்கள். எவ்வளவு அவசரமிருந்தாலும் அந்தச் சம்பாஷணை முடிந்தபின் தாங்கள் பேச ஆரம்பிப்பார்கள். மிக்க அவசரமாய் இருந்தால் தங்களுக்கு முந்திய உரிமைக்காரனைக் கேட்டுக் கொண்டு—அவன் சம்மதம் பெற்று, அவனுக்கு நன்றி செலுத்திவிட்டுத்தான் தாங்கள் முன் போகவோ, பேசவோ ஆரம்பிப்பார்கள்.

எதிர்பாராத விருந்தாளியோ, போதிய அவகாசம் கொடுக்காத விருந்தாளியோ, சிநேகிதனோ, பந்துவோ, தாய், தகப்பன், மகன், சகோதரர்கள் யாருமே எந்த வீட்டுக்குள்ளும் வரமாட்டார்கள். எவ்வளவு கஷ்டம் வந்தாலும், வாக்குத் தவறவோ, சொன்னபடி நடந்து கொள்வதைத் தவறவோ இசையவே மாட்டார்கள். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதைச் செய்வார்கள்; குறிப்பிட்ட காலத்தில் வந்து விடுவார்கள். வந்த கிரமப்படி அமருவார்கள்.

'இரயில்வே ஸ்டேஷன்' முதலிய பொது இடங்களில் நிற்கும் கூலி ஆள், வண்டி வாகனக்காரர் முதலியவர்கள், பிரயாணிகளை வரிசையாகத்தான் அமர்த்திக்கொள்வார்கள். தன் வரிசை வரும்வரை எவனும் பேசவோ, கூப்பிடவோ, முன்வரவோ மாட்டான். கூலி, வாடகை எல்லாம் முன்னமையே ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட விகிதமாகவே இருக்கும். அதிகம்-குறைவு என்கின்ற பேச்சே இருக்காது. கடைகளிலும் சாமான்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்குமே ஒழிய, வியாபாரம் பேச இடம் வைக்க மாட்டார்கள். சில காரியங்களுக்கும் 'முனிசிபாலிட்டியார்' விலையும் விகிதமும் ஏற்படுத்தி விடுவார்கள். கூலி வண்டி அமர்த்திக் கொண்ட பிறகு தகராறுக்கு இடமிருக்காது. எந்த விஷயத்திலும் தாட்சண்ய சங்கடமோ, தயவுக் குறைவோ ஏற்பட இடம் தரவே மாட்டார்கள். அப்படி இடம் தருவது எல்லாவற்றையும் விட அநாகரிகமாய் மதிக்கப்படும். பெண்கள், வயதான கிழவன்மார்கள், சிறுபாலர்கள் ஆகியவர்கள் விஷயத்திலும் யாவரும் சலுகை காட்டி முன் இடம் கொடுத்துச் சவுகரியம் செய்வார்கள்.

பெண்களிடத்தில், மனைவியானாலும், வேலைக்காரியானாலும் நயமாய் நடந்து கொள்வதைக் கொள்கையாய் அனுசரிப்பார்கள். ஒருவர்க்கொருவர் மரியாதையாய்ப் பேசுவார்கள் ; ஒருவர்க்கொருவர் உதவி செய்ய ஆசைப்படுவார்கள்.

ஒரு மனிதன் தனியாய் ஏங்கி நிற்பதைத் தெருவில் போகிற ஒருவன் பார்த்து விட்டால், ' என்ன ? உமக்கு ஏதாவது உதவி செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா ?' என்று கேட்காமல் போகமாட்டான். எவ்வளவு அவசரமாய்த் தெருவில் போகிற ஆணாக இருந்தாலும்—பெண்ணாக இருந்தாலும், ஓர் அன்னியன் ஏதாவது விஷயம் கேட்டால் நின்று, பொறுமையாய் இருந்து பதில் சொல்லுவார்கள். அதை ஒரு பெருமையாகவும் நினைப்பார்கள். ஏதாவது ஒரு தெருவையோ, இடத்தையோ காட்டும்படி ஒருவனைக் கேட்டால், உடனே கூட வந்து காட்டுவான். அல்லது, தன்னால் கூடிய அளவு அதற்கு உதவி செய்துவிட்டு, தெரிந்த மற்றவனிடம் ஒப்புவித்து, அந்த வேலையைச் செய்யும்படி சொல்லிவிட்டுப் போவான்.

அவ்விடத்திய கிராம ஜனங்களின் வாழ்க்கைத் திட்டமானது இதைவிடத் தாராளமாக இருக்கிறது. தங்களுக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றி யாராவது கேட்டுவிட்டால் தெரிந்தவனைப் பிடித்து ஒப்புவித்து விட்டுப் போவார்கள். தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தாங்களாகச் சிறிதும் கவலை செலுத்தமாட்டார்கள் ; காதும் கொடுக்கமாட்டார்கள்.

ஆனால் நம் நாட்டு மக்களுக்கு வாழ்க்கையில் எவ்விதத் திட்டமும் கிடையாது. அவ்வப்போது சம்பவிப்பதை அனுபவிக்கப் பழகி இருக்கிறார்களே ஒழிய, அசவுகரியமோ, அதிருப்தியோ, தாட்சண்யக் கஷ்டமோ நேராமல் இருக்கும்படி முயற்சி செய்வதே இல்லை. முன்பின் தகவல் கொடுக்காமல், எதிர்பாராத நிலையில் வந்து இறங்கிவிடுவார்கள் ; அகாலத்தில் வந்து கதவைத் தட்டுவார்கள் ; சாப்பாட்டு வேளையில் வந்து சாப்பாட்டு விஷயத்துக்கு வீட்டுகாரர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தி விடுவார்கள் ; வீட்டுக்காரர் சாப்பிடப் போகும்போது வந்து உட்கார்ந்துகொண்டு தொல்லை தருவார்கள். தாங்கள் யாரிடம் போகவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவருடைய சவுகரியம் எப்படி இருக்கும், அவர் வேறு வேலையில் ஈடுபட்டு இருப்பாரோ என்பதைப் பற்றிக் கவனிக்காமல் அங்கு போய்ச் சங்கடத்தை உண்டுபண்ணுவார்கள். இங்கு, இரண்டு பேர் ஏதோ தனி விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் அதில் போய்க் கலந்து கொள்வார்கள் ; அல்லது, அங்கு உட்கார்ந்து தங்கள் காரியமும் நடக்காமல், அவர்கள் பேச்சும் நடக்கவொட்டாமல் மூன்று பேருமாய்ப் பேசாமல் உட்கார்ந்திருப்பார்கள் ; அல்லது, அனாவசியமாய்க் கலந்து கொண்டு சங்கடத்தை உண்டு பண்ணுவார்கள். எதிரி சொல்லுவதைக் கேட்காமல் தாங்களே பேசிக்கொண்டு இருப்பார்கள். ஒருவரை ஒருவர் கேட்டால், மற்றொருவர் பதில் சொல்லித் தன் பக்கம் இழுத்துக்கொள்வார். இரண்டு பேர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர்களுக்குத் தொந்தரவு உண்டாகும்படியும் அவர்கள் பேசுவது ஒருவருக்கொருவர் காது கேட்காதபடியும் வேறு இரண்டு பேர் உரக்கப் பேசிக் கஷ்டம் கொடுப்பார்கள்.

பேசுவதில் ஒழுங்குமுறை அனுசரிக்கிற வழக்கம் இங்கு மிகமிக அருமை. முன்னால் சென்றவர், பின்னால் சென்றவர் என்கின்ற வரிசை ஒழுங்கைக் கவனிக்காமல், ஒருவன் ஒரு இடத்துக்கு முன்னதாகவே சென்று காத்திருப்பவனாய் இருந்தாலும் அதை இலட்சியம் செய்யாமல் அவனுக்கு முன்னால்போய் நின்றுகொண்டு தங்கள் காரியத்தை முதலில்செய்து கொள்ளப் பார்ப்பார்கள். இரயில், கார், பஸ் முதலிய பிரயாண இடங்களில், முன்னால் வந்தவன்-பின்னால் வந்தவன் என்கின்ற முறையில்லாமல், பின்னால் வந்தவன் முன்னால் வந்தவனைத் தள்ளிவிட்டு ஏறிக்கொண்டு, முன்வந்தவனுக்கு இடமில்லாமல் செய்து விடுவான். இரயில்வே டிக்கட் வாங்குகிற இடத்தில் உள்ள டிக்கட் கொடுக்கும் துவாரத்தில் 2 பேர், 3 பேர் கையை விட்டுக்கொண்டு எடுக்கமாட்டாமல் தொந்தரவுபடுவார்கள். இரயில்

வண்டியில் 2 பேர், 3 பேர் உட்காரும் இடத்தை ஒருவன் எடுத்துக்கொண்டு, மற்றவன் இடமில்லாமல் நிற்பதைப் பார்த்துக்கொண்டே அவனை நிற்கவைப்பான். குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் என்கின்ற கவலையில்லாமல் தாராளமாய்த் தாங்களே அதிக இடத்தையும் அதிக சவுகரியத்தையும் அனுபவிப்பார்கள். மக்கள் உட்கார இடமில்லாத போது சாமான்களை இருக்கைகளின்மீதும் பரப்பி வைத்துக்கொள்வார்கள். மற்றொரு அன்னியன் வண்டியில் ஏறும்போது, உட்கார்ந்திருப்பவன் சட்டென்று நீட்டிப் படுத்துக் கொண்டு தூங்குகிறவன்போல் கண்ணை மூடி, குறட்டைவிட ஆரம்பிப்பான். உட்கார்ந் திருக்கும் வண்டியில் காரி உமிழ்வதும், குழந்தைகளை மலஜலம் கழிக்கவிடுவதும், குப்பை செத்தைகள் ஆக்குவதும், தண்ணீரைக்கொட்டி ஆபாசமாக்குவதும் நம்மவர்களால் வெகு சகஜமாகச் செய்யப்படும்.

நாடகம், வேடிக்கை பார்க்குமிடம், பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் முதலியவை களில் பின்னால் இருப்பவர்களுடைய சவுகரியத்தை அனுசரிக்காமல், தலைதூக்கி மறைப் பதும், நின்று கொண்டு மறைப்பதும், பேசிக்கொண்டு தொந்தரவு செய்வதும் ஆகியவைகள் சாதாரணமாக நிகழும். ஏதாவது சாமான் வினியோகிக்கும் போதும், 'காகித நோட்டீஸ்' முதலியவை வினியோகிக்கும் போதும், கும்பலாக எழுந்து கொள்வதும், எனக்கு உனக்கு என்று சப்தமும் கலாட்டாவும் செய்வதும், 10, 20 கைகள் நீட்டப்படுவதும், கொடுப்ப வனுக்கும் சபைக்கும் தொல்லை உண்டாகும்படி செய்வதும், வினியோகிக்கப்படும் சாமான் கீழே கொட்டப்படும்படியும், நழுவி விழும்படியும் செய்வதும் 100-க்கு 75 வினியோக இடங்களில் பார்க்கலாம்.

தான் வருவதாகச் சொன்ன காலத்தில் வரமாட்டார்கள்; காத்திருக்கச் செய்து ஏமாற்றமடையும்படி செய்வதைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள். கூலிகள், வாடகை வண்டிகள் அமர்த்தப்படும் இடங்களுக்கு ஒரு மனிதன் போனால், அவனைச் சூழ்ந்து கொண்டு, பிய்த்துப் பிடுங்கிவிடுவார்கள். சாமான்களைப் பிடுங்குவார்கள்; கண்டபடி கூலி விகிதம் கேட்பார்கள். போட்டி போட்டு வாடகையை மிகக் குறைத்துச் சொல்வார்கள். கூலி, வாடகை பெறும்போது கலகம், அதிருப்தி, ஏகதேசமாய்ப் பேச்சு இல்லாமல் இருக்கவே முடியாது. கடைகளில் சாமான்களில் சாமான் தெரிந்தெடுத்து வாங்கும் நேரத்தைவிட விலைகளைப் பற்றி வியாபாரம் பேசும் நேரமே அதிக நேரமாய் இருக்கும். விலைகளில் ஒரு ஒழுங்கில்லாமல், 'ஏமாற்றிய வரையில் இலாபம்' என்றே வியாபாரிகள் கருதுவார்கள்.

ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்வது என்பது மிக அருமையாக இருக்கும். மக்க ளிடம்—மக்கள் அதிகாரமாகவே பேசிப் பெருமை கொள்ளப் பார்ப்பார்களே ஒழிய, தன்மை யாகவோ நயமாகவோ பேசவே மாட்டார்கள். அப்படி நயமாகப் பேசுவதைக் கவுரவக் குறைவாக நினைப்பார்கள். ஒருவனுக்கு—அவன் போகுமிடத்துக்கு வழி காட்டுவதோ, கேட்ட விவரங்களுக்குப் பதில் சொல்வதோ, பிறர் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்ப வனை விசாரித்து உதவி செய்வதோ இங்கு சிறிது கூட நாகரிகமாய்க் கருதப்படுவதில்லை; அலட்சியப்படுத்துவதுதான் நாகரிகமும், கவுரவமுமாகக் கருதப்படுகிறது.

ஒரு மனிதனிடம் மற்றொரு மனிதன், 'இது கேட்டால் வருத்தப்படுவானே, தாட்சண் யத்தால் சங்கடப்படுவானே' என்கின்ற யோசனையில்லாமல் தன் காரியத்தையே பிரதான மாகக் கருதி மற்றவர்களின் சமய சந்தர்ப்பத்தைக் கவனிக்காமல் கண்ட விஷயங்களைக் கேட்டுச் சங்கடப்படுத்துவது, பல விஷயங்களில் அன்னியனை ஏமாற்றமும் அதிருப்தியும் அடையும்படி செய்வது இங்கு மிக சகஜமாக நடக்கும்.

பெண்களை நயமாக நடத்தாமல் முரட்டுத்தனமாக நடத்துவார்கள். பெண்களிடம் பேசுகையில் மரியாதைப் பதங்களை உபயோகிப்பதில்லை. பொதுவாகச் சொன்னால்,

ஒருவருக்கொருவர் உதவி செய்கிற உணர்ச்சியோ, நயமாக நடந்துகொள்ளுவதோ, நம்மைப் போல்தானே அன்னியன் என்கின்ற எண்ணமோ, மற்றொருவனைச் சங்கடப்படுத்தக் கூடாது-ஏமாற்றம் அடையச் செய்யக்கூடாது என்கின்ற கவலையோ, மற்றவர்கள் சவுகரியத்தைப் பற்றி யோசிப்பதோ நம்மில் மிக அருமையாகவே இருக்கும்.

பொதுவாகப் பேசுமிடத்து, நாகரிகம் என்பதெல்லாம் ஒரு மனிதனிடம் ஒரு மனிதன் நடந்துகொள்ளும் விதத்திலேயே பெரிதும் அடங்கியிருக்கும். அதை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் நம் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் ஏராளமான வித்தியாசம் இருந்து வருகிறது.

[வடநாட்டுச் சுற்றுப்பிரயாணம் சென்றகாலை, அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில், அரித்துவாரம் குருகுல காங்கிரி கம்பேரடிவ் ரிலிஜன் புரபசர் (Comparative Religion Professor) அரிதத் வித்யாலங்கரர் தலைமையில், 'மேல்நாடும் கீழ்நாடும்' என்பதுபற்றி ஆற்றிய சொற்பொழிவு—'குடிஅரசு' 9-11-1946; நூல்: மேல்நாடும் கீழ்நாடும்; குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு]

12. வெளிநாட்டு அனுபவம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

நான் தற்சமயம் சென்றுவந்த பர்மா, மலேயா நாடுகளைவிட அதிக தூரத்திலுள்ள நாடுகள் பலவற்றிற்கும் சென்றிருக்கிறேன். ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும், எகிப்து, கெய்ரோ, துருக்கி போன்ற நாடுகளுக்கும் சென்றிருக்கிறேன். இந்திய நாட்டில் வட கோடியிலிருந்து தென் கோடி வரை மூன்று நான்கு தடவைகள் பிரயாணம் செய்துள்ளேன். இவைகளைவிட அதிசயமல்ல—நான் இப்பொழுது சென்றுவந்த நாடுகள். இருந்தாலும், இதை ஒரு காரணமாகக் கொண்டு உங்களின் எல்லை மீறிய உள்ளத்தின் ஆர்வ உணர்ச்சியானது இப்படிப் பல இடங்களிலும் வரவேற்பளிக்கவும், புகழ் மாலைகள் சூட்டவும் காரணமாய் உள்ளது. இதிலிருந்து பெரும்பான்மை மக்கள் என்னுடைய கழகத்தின் கொள்கைகளை உணர்ந்து விட்டார்கள் என்றும், அதன்படி நடக்கச் சித்தமாயுள்ளனர் என்பதும் விளங்குகிறது.

வெளிநாடுகள் பலவற்றிற்கும் நான் சென்று வந்ததால் பெரும்பலனை அடையும்படியான வாய்ப்பும் ஏற்படுகிறது. இந் நாட்டிலேயே இருந்துகொண்டு, இங்குள்ள பழக்க வழக்கங்களையே கைக்கொண்டு இருப்பதால்தான், நான் கூறும் கருத்துக்கள் யாவும் மக்களுக்குப் பெரும் புரட்சியாகத் தோன்றுகின்றன. ஆனால், எனக்கு அக் கருத்துக்கள் சர்வ சாதாரணமாகத் தோன்றுகின்றன. ஏனெனில், நான் வெளிநாடுகளின் நிலைமையையும், அங்குப் பல துறைகளிலும் மக்கள் வாழும் விதங்களையும் அறிந்தவன். சுமார் 150 கோடிக்கு மேற்பட்ட மக்கள் கொண்ட உலகத்தில் மிகச் சிறிய அளவாகிய 6, 7 கோடி மக்கள் உள்ள இந் நாட்டிலேயே பழகிக்கொண்டிருக்கும் நம் மக்களுக்கு மற்ற மக்களின் வாழ்க்கைத் திறனை எப்படி உணர முடியும்? நேரில் சென்று பார்த்தாலன்றி வேறு எவ்வித வழிகளிலும் உலக அனுபவத்தை உணர முடியாது. என் போன்றவர்களைத் தவிர வேறு யாரும் கூறமுடியாது.

எத்தனையோ பேர்கள் பற்பல துறைகளில் கல்வி கற்கவும், அரசாங்க அலுவலாகவும், உல்லாசப் பிரயாணத்திற்கென்றும் வெளி நாடு செல்கின்றனர். அவர்களெல்லாம் அவரவர்களுக்கு வேண்டியவைகளை மட்டும் கற்று, அதன் சம்பந்தமாய்ப் பட்டம் பெற்று வருகிறார்கள். அன்றியும் அரசாங்க சம்பந்தமாகச் செல்கின்றவர்களும் அங்குள்ள மக்கள் எவ்விதம் வாழ்கிறார்கள்? சமுதாயத்துறை எப்படி நடக்கிறது? கடவுள், மதம் இவைகள் அங்கு எப்படி உள்ளன?—என்பதை அறிந்து வருவதில்லை. ஏதோ ஒரிரு அரசியல் உத்தியோகஸ்தர்களைப் பேட்டி கண்டதாகவும் வரவேற்புப் பெற்றதாகவும்தான் அங்கு

சென்றதன் பலன் கிடைக்கிறது. இதைத் தவிர வேறு பொது நலத்திற்கென்றும்—அந் நாடுகளில் உள்ளதைப்போல் இந்நாட்டு மக்களும் வாழ்வதற்கு எவை வழிகளோ அவைகளை உணர்ந்து வருவதில்லை.

அப்படி உணர்ந்துவரும் ஓரிருவரும் அங்குள்ள மதம், சாஸ்திரம், புராணம் இவைகளைப்பற்றிப் பேசுவதே கிடையாது. ஏதாவதொன்று கூறவேண்டுமானால், 'இலண்டனில் கூட பிள்ளையார் கோயில் உள்ளது; அமெரிக்காவில்கூட அனுமார் கோவில் இருக்கிறது' என்றுதான் கூறுவார்கள். ஆனால், அதன் யோக்கியதை அங்கு எப்படி உள்ளது என்பதை விவரமாகக் கூறமாட்டார்கள்.

நான் சென்று பார்த்தேன்—ரஷ்யாவில் நம்முடைய கடவுள் ஒன்றின் யோக்கியதையை. ரஷ்யாவில் உள்ள 'மியூஸியம்' ஒன்றில் கிருஷ்ண லீலையின் சின்னம் ஒன்றை, பொம்மை உருவத்தில் செய்துவைத்துள்ளனர். குளித்துக்கொண்டிருக்கும் பெண்களின் ஆடைகளைத் தூக்கிக்கொண்டு புன்னை மரத்தில் உட்கார்ந்திருக்கும் கிருஷ்ணன் சிலையும், அம் மரத்தடியில் பல கோபியர்கள் நிர்வாணமாகக் கைகளை உயர்த்தி, அங்கங்கள் யாவும் தெரியும்படி நின்றுகொண்டு உள்ளதும், அந்தக் காட்சியைக் கண்ட கண்ணபிரான் புன்முறுவலுடன் இருக்கும் காட்சியும் போதாது என்று—அதன் அடியில், 'இதுதான் இந்திய நாட்டு இந்துமதக் கடவுள் கண்ணபிரானின் திருவிளையாடல்களில் ஒன்று' என்று அடிக் குறிப்பும் எழுதப்பட்டிருக்கிறது.

அதைக் காண்கின்ற அந் நாட்டு மக்களும், அயல்நாட்டு மக்களும் நாம் எவ்வளவு 'முட்டாள்கள்' என்பதை உணரத்தான் அது வழியாக இருக்கிறது.

இவ்விதம் நம் கடவுள்களின் யோக்கியதையும் நம்முடைய முட்டாள்தனமும் அயல் நாடுகளிலும்கூடப் பரவிவிட்டன. ஆனால், இதைக் கண்டுவரும் பார்ப்பனரோ 'ரஷ்யாவில் கிருஷ்ணன் கோயில் உள்ளது' என்று கூறுவார்களே தவிர, அதன் யோக்கியதை எப்படி உள்ளது என்பதைக் கூறமாட்டார்கள்.

எனவே, உலகத்தைச் சுற்றி வருவதால் மட்டும் உலக விஷயங்களை உணர்ந்தவர்களென்று கூறமுடியாது. அங்குள்ள மத சம்பந்தப்பட்டவைகளையும், அரசியல், சமுதாய இயல், பொருளியல் முதலியவைகளையும் ஆராயவேண்டும். அவைகள் அந் நாடுகளில் உள்ள நிலைமையையும், நம் நாடுகளில் உள்ள நிலைமையையும் ஒப்பிட்டு, இரண்டிற்கும் உள்ள தாரதம்மியத்தை உணரவேண்டும். இதனால்தான், மனிதனின் அறிவு வளர்ச்சியடைய முடிகிறது.

இவ்விதம் எல்லாத் துறைகளின் நிலைமையையும், சந்தேகமின்றி உணருபவனே அறிவாளி எனப்படுவான். உலகத்தின் விஷயங்களையும் எங்கிலுமுள்ள இயற்கையின் நிலைமையையும் ஆராய்ந்து உண்மையை உணர்ந்தவன்தான் அறிவாளி.

இதன்றி ஒருவன் பி. ஏ. படித்தாலும், எம். ஏ. படித்தாலும் அறிவாளி ஆகமுடியாது. டாக்டர் தொழிலிலும், இஞ்ஜினியர் தொழிலிலும் வெற்றியடைந்து பட்டம்பெற்றதாலும், மந்திரித் தொழில் பார்ப்பதாலும் அறிவாளி என்று கூறமுடியாது.

பட்டம் என்பது பாராயணம்தான். தொழில்துறைப் பட்டம் பெறுவதனால் அந்தத் துறையில்மட்டும் ஓரளவு அறிவுபெற்றிருக்கலாம். ஆனால், உலகப் பொதுவிஷயத்தில் அறிவுபெற, அவர்களுக்கு வாய்ப்புக் கிடையாது. எனவே, பட்டம்பெற்றவர்களும் கூட, பார்ப்பனரின் பித்தலாட்டத்தைச் சிறிதும் ஆராய்வதில்லை. கல்வியறிவில்லாத பாமர மக்கள் ஒருபுறமிருந்தாலும், 'நான் படித்தவன்; பட்டம்பெற்றவன்' என்று கூறிக் கொள்பவர்கள்கூடக் கோயிலைக் கண்டதும் கால்பூட்சைக் கழற்றிக்கொண்டே கன்னத்தில் அறைந்துகொள்கின்றனர்.

இங்குள்ளதைப் போன்று மேல்நாடுகளில் மூடப் பழக்க வழக்கங்கள் கிடையா. இதைப்போன்று பார்ப்பனரின் பித்தலாட்டங்களால் அநாகரிகம் அங்கு வளரவில்லை. அவ்வித நிலையை உணர்ந்தவர்கள் 'நாமும் அப்படி மனித உணர்ச்சியுடனும் பகுத்தறிவுடனும் வாழவேண்டும்' என்று ஆசைப்படுகிறார்கள். நான் பிள்ளையாரை உடைப்பதும், இராமனைத் தூளாக்குவதும், இராமாயணத்தைச் சாம்பலாக்குவதும் எதற்காக? இதைப் போன்ற ஆபாசங்கள் விஞ்ஞானிகள் நிறைந்த நாட்டில் இல்லாததை உணர்ந்ததால்தான். அவர்களுக்கில்லாத பிள்ளையாரும், இராமனும் நமக்கிருந்து என்ன நன்மைகள் செய்தன? ஆயிரக்கணக்கான கடவுள்கள் இருந்தும் எந்தவிதத்தில் நாம் அவர்களைவிட உயர்ந்தவர்களாக இருக்கிறோம்? அல்லது, அவர்களுக்குச் சமமான அறிவையாவது அடைந்திருக்கிறோமா?

இவைகளையெல்லாம் சிந்திக்கும்பொழுது ஒரே ஒரு காரணந்தான் தென்படுகிறது. இங்குள்ளதைப்போன்று பார்ப்பனர்கள் அங்கே கிடையாது. இவர்கள் ஏற்படுத்திய மதம், சாஸ்திரம், புராணம், கடவுள்களைப்போன்று அந் நாடுகளில் கிடையாது.

ஆகவே, இங்கும் இவர்கள் இல்லாமல் ஒழிக்கப்படுவரேயானால், அந் நாடுகளின் நிலைமை—இங்கும் ஏன் உண்டாகாது? எனவே, நம்மை இழிவுபடுத்தவந்த மதமும், அதற்கு ஆதாரமாய் உள்ளவைகள் யாவும் அழிக்கப்பட வேண்டும்.

[சின்னசேலத்தில், 18-4-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-5-1955]

13. கண்காட்சியின் பயன்

பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ ஆசிரியர்களே!

முதலாவதாக, கண்காட்சி என்கின்ற பெயர் பொருத்தமாக இருக்கிறதா அல்லது வேறு பெயர் வைக்க வேண்டுமா என்கின்ற விஷயம் வேறு இருக்கிறது. ஏன் என்றால், கண் அழகுக்காக இது வைக்கப்படவில்லை; இதிலிருந்து மனிதன் தனக்குத் தேவையான பல அருமையான கருத்துக்களை அறிந்துகொள்ள வைக்கப்படுவதாகும். மனிதனுடைய அறிவுக்கு, ஆராய்ச்சித் திறனுக்கு, நல்ல படிப்பினைக்கு, வாழ்க்கைக்கு, மற்றும் பல வகையிலும் பயன்படுவதற்குக் கண்காட்சியானது பயன்படுகிறது. இத்தனை நல்ல காரியங்களையும், மக்களின் அறிவையும் கெடுத்து மக்களைக் கெடுப்பதற்காகவே, இதற்கு நேர்மாறாக ஏற்படுத்தப்பட்டவைகள்தாம் இந்தக் கோயில்கள், விழாக்கள், உற்சவங்கள், பண்டிகைகள் என்பவைகள் ஆகும். இவைகள் மக்களுக்கு ஒன்றும் பயன் தருவதில்லை. ஏதோ பல காரியங்களை முன்னிட்டுக் கூட்டம் சேர்கிறது. ஆண்கள் பெண்களைப் பார்க்கவும், பெண்கள் ஆண்களைப் பார்க்கவும்தான் இவை பயன்படுகின்றன. இதைத் தவிர எவனும் அங்கு போய்ப் பார்த்துப் புதிதாக—வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற அறிவுக்கேற்ற புதிய சங்கதி ஒன்றும் தெரிந்துகொண்டு வரமாட்டான்; இவற்றின் மூலம் அறிந்துகொள்ளவும் முடியாது. ஆனால், கண்காட்சியைப் பார்ப்பதின் மூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு அறிவை விருத்தி செய்து கொள்ளலாம். நாம் அறிந்திருக்க முடியாத பல புதிய விஷயங்களையும்—நாம் வாழ்க்கையில் பல பொருள்களை அனுபவித்து, அதனால் நன்மைகள் அடைந்து வந்தும் அவை எப்படிச் செயல்படுகின்றன என்பது நமக்குத் தெரிந்திருக்காமல் இருப்பதையும் இந்தக் கண்காட்சி என்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், நம்மவர்கள் பெரிய புண்ணிய சேத்திரங்களுக்குச் சென்று பார்க்கிறார்களே தவிர, இது மாதிரியான அறிவுக் கண்காட்சியை அவ்வளவு சிரத்தையுடன் சென்று பார்ப்பது கிடையாது.

உலகத்தில் உள்ள கண்காட்சிகளை எல்லாம் பார்ப்பவன் உலக அறிவு பெற்றவனாவான். உலகத்தில் இருக்கும் பல்வேறு கண்காட்சிகளும் ஒரு பல்கலைக் கழகம்போல் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அங்கு (வெளிநாடுகளில்) இதைக் கண்காட்சி என்பதற்குப் பதிலாக, 'மந்திராலயம்' 'தந்திராலயம்' என்று கூறுவார்கள். மந்திராலயம் என்றவுடன் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். இங்கு 'மந்திரம்' என்ற சொல் தப்பாகப் பயன்பட்டுத் தவறான அர்த்தம் கூறப்பட்டு வருகிறது. உண்மையில் மன் என்பது மனிதன் என்பதாகும்; திரம்—என்பது மனிதனுடைய வல்லமை—மனிதனுடைய சக்தி என்பது ஆகும். அதாவது, மந்திரம் என்பதற்குப் பொருள் மனிதனுடைய சக்தி, அவனுடைய வல்லமை எவ்வளவு உள்ளது என்பதை அறிவதுதான் ஆகும். அதுபோல் அடுத்தது தந்திரம்; அது தனி மனிதனுடைய வலிமையைக் காட்டுவதாகும். தன்—என்பது தன்னுடைய—தனி ஒரு மனிதனுடைய என்றும், 'திரம்' என்பது அவனுடைய சக்தி, வலிமை எவ்வளவு என்பதைக் காட்டும் அளவுகோல் என்றும் ஆகும்.

மந்திரம் என்பது ஒரு பொதுவான சொல். எல்லா மனிதர்களுடைய அறிவை, திறமையை, சாமர்த்தியத்தைக் காட்டுவதாகும். ஒரு மனிதனுடைய அறிவு வலிமையால் ஒரு புதிய கண்டுபிடிப்பு நடக்கிறது என்றால், அதைப் பிற மக்களும் அறிந்து தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ளலாம், பயன் பெறலாம்.

ஒரு இரயில் கண்காட்சியைப் போய்ப் பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். முதலில் போனவுடன் மொத்தமாகக் குவித்துக்கிடக்கும் மரங்களையும், இரும்புத் துண்டுகளையும் பார்க்கலாம். அடுத்தபடிச் சென்றால் ஆணி அடிப்பதும் பலகைகளை வெட்டுவதும் போன்று இருக்கும். இப்படி ஒவ்வொன்றாக, வரிசைக் கிரமமாக இருக்கும்; பார்த்துக் கொண்டே சுற்றி வந்தால், அங்கு இரயில் தயாராக இருக்கும். மனிதனுடைய மூட நம்பிக்கைத் தன்மையானது ஒழிந்து அறிவு வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகவே கண்காட்சி வைத்து இருக்கிறார்கள். எவ்வளவுதான் முரட்டுத்தனமான மூடநம்பிக்கை யுள்ளவனும் இம் மாதிரி ஒரு கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியில் கீழே இறங்கிப் போகும்போது, அவனுடைய மனம் சிறிது சிந்திக்கத்தான் செய்யும். அவனுடைய மனத்தில் மாற்றம் அடைய வேண்டியதன் காரணமும் சிறிது காணமுடியும்.

'ஒர்க்ஷாப்' கண்காட்சிகளைப் பார்த்தால் இரும்பை வைத்து ஒரு பக்கம் ஆணி அடிப்பான்; இன்னொரு பக்கம் 'போல்ட்' செய்வார்கள். இப்படியாக எஞ்சின் என்றால் அதற்கு என்ன தேவையோ அதையெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்றாகச் செய்வார்கள். பின்னர் இணைக்கும் இடங்களில் எஞ்சினை உருவாக்குவார்கள். கட்டை வண்டிகள் கண்காட்சியைப் பார்த்தால் நன்றாகத் தெரியும்—100 வண்டிப் பட்டறைகளில் செய்யக் கூடிய வேலையை ஒரு இயந்திரம் செய்யும்.

நம் நாட்டில் உழைக்கிறார்களே தவிர உழைப்பைச் சுருக்கிப் பயனை அதிகரித்துக் கொள்ள எண்ணுவதில்லை. அம் மாதிரியான காரியங்களிலும் நம் மக்கள் ஈடுபடுவதில்லை. மனிதன் உழைக்கத்தான் பிறந்தான் என்று கருதி, பெரிய பெரிய கடின வேலைகளை எல்லாம் செய்கிறார்கள். பெரிய கல்லையும், பாறையையும் மனிதன் கஷ்டப்பட்டு உடைப் பதைவிட இயந்திரத்தின் மூலம் அதிகக் கஷ்டம் இல்லாமல் சுலபத்தில் உடைக்கலாம்.

இங்கெல்லாம் ஏதோ ஒரு மாதம் இரண்டு மாதம் என்றுதான் கண்காட்சி இருக்கும். ஆனால், இலண்டன் போன்ற இடங்களில் பொருட்காட்சியானது ஆண்டுக் கணக்கில்—எப்பொழுதும் இருந்துவரும். தினம் போய்ப் பார்த்து அறிவுபெற்று வரலாம்.

தினம் கோயிலுக்குச் சென்றால் நாம் தினசரி அங்கு காண்பது அந்த ஒரே சாமி யைத்தான்; வேறு ஒன்றும் காண முடியாது. ஆனால், இலண்டன் போன்ற இடங்களில் உள்ள பொருட்காட்சியில் தினம்—அடிக்கடி வேறுபல புதிய கண்டுபிடிப்புகள் இடம்பெறும். இந்த வாரம் இருந்தது, அடுத்த வாரம் இருக்காது; வேறுபல—புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட பொருள்கள் வரும். அம் மாதிரிப் புதிதாக வந்தவுடன், என்ன என்ன வந்திருக்கிறது என்பதை விளம்பரம் மூலம் தெரிவிப்பார்கள். மக்களும் தினம்போய்ப் பார்ப்பார்கள்.

இங்கு எப்படி சினிமா பைத்தியம் பிடித்துத் தினமும் போய் அதைக் காண்கிறார்களோ—அதுபோல் அங்கு பொருட்காட்சி. ஆனால், அதைக் காண்பதின் மூலம் அவர்களது அறிவு வளர்வதுடன் வாழ்க்கைக்கு வேண்டிய பல விஷயங்களை அறிந்து கொள்கிறார்கள்.

நான் அங்கு பார்த்தேன், பழைய இரும்புகளை எல்லாம் மலைபோல் கொட்டி வைத்திருக்கிறான். இருபதுக்குப் பதினைந்து (20×15) அடி அளவில் பெரிய உலை கட்டி வைத்திருக்கின்றான். பெரிய 'கிரேன்' ஒன்று கீழே இறக்கப்படுகிறது; அதில் தட்டம்போல் பரவலாக வைத்துள்ளான்; ஒரு விசையை அழுத்தி, அத் தட்டத்தை இரும்புக் குவியலின் மேல் விடுகிறான். அது அந்த இரும்பின்மேல் விழுந்ததும், கொட்டிக் கிடக்கும் இரும்பு எல்லாம் டக், டக் என்று அந்தத் தட்டத்திலே ஒட்டிக்கொள்கிறது—அதாவது ஒன்றன்கீழ் ஒன்றாக ஒட்டித் தொங்குகிறது. அவ்வளவு சக்தி உள்ள காந்தம் அதிலே வைத்து இருக்கிறான். ஒரு அந்தர், ஒன்றரை அந்தர் எடை உள்ள இரும்புகள்கூட ஒட்டிக்கொண்டு, ஆடிக்கொண்டே மேலே போகின்றன. மேலே தேவையான இடத்திற்குப் போனவுடன் மற்றொரு விசையை அழுத்தி அந்தத் தட்டிலே உள்ள காந்த சக்தியை 'வாபஸ்' வாங்குகிறான். உடனே அதிலே ஒட்டிக்கொண்டிருக்கும் இரும்புத் துண்டுகள் தொப், தொப் பென்று அங்கே இருக்கும் உலையில் விழுகின்றன. அப்புறம் ஒரு பொத்தானை அழுத்தினால் அவ்வளவு இரும்பும் தண்ணீராய் உருகிவிடுகிறது. அதிலே உள்ள குழாயில் அந்தத் தண்ணீர் விழுந்து, அதற்குரிய இடத்தில் போய் 'மோல்டு' பண்ணி அச்சு வார்ப்பில் அது உருவமாக ஆகிறது. அது ஆறியவுடன் அதைவிட்டு எடுக்கிறான். ஆயிரம் மனிதன் செய்யக்கூடிய காரியமானது ஒரு மனிதனுடைய வல்லமையால்–சக்தியால் அறிவின் திறமையால் நடைபெறுகிறது.

சமுத்திரத்தை ஆழமாக வெட்ட வேண்டும் என்று கருதி வெட்டுகிறான். எப்படிச் செய்கிறான்? படகின் கீழே 'கிரேன்' வைத்து விசையை அழுத்துகிறான். பலகை போன்று இருந்தது, வாயைத் திறப்பது போல இரண்டாகப் பிரிந்து செல்கின்றது. ஆழமாக்க வேண்டிய பகுதியில் செலுத்தி, பிறகு ஒரு விசையை அழுத்தினால் பிளந்துள்ள இருபகுதிகளும் ஒன்றாகச் சேருகின்றன. அப்படிச் சேரும்போது அதற்கிடையில் உள்ள மண்ணை மேலே கொண்டுவந்து போடுகிறது. இப்படி இரண்டு மூன்றுதடவை வெட்டினால் ஒரு படகு நிரம்பிவிடுகிறது. இப்படியாக, பள்ளமாக்க வேண்டிய இடத்தில் வெட்டி—மேடாக்க வேண்டிய இடத்தில் அதைக் கொட்டி மேடாக்குகிறார்கள். இரண்டுமணி நேரத்தில் 20 'வாகன்' மண் வெட்டி எடுக்கிறார்கள். இது அய்ந்நூறு ஆள் செய்தாலும் இரண்டு மணி நேரத்தில் செய்யமுடியாது. இது நம்முடைய அறிவுக்கு அற்புதமாக—அசாத்தியமாகத் தெரியுமே தவிர, அறிவாளிகள் கண்ணுக்கு இது சாதாரணமானதாகும்.

ஒரு பஞ்சாலையை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு பக்கம் பஞ்சுகளைக் கொட்டுகிறான்; மறுபக்கம் அதை ஆவி ஆவியாக அடித்துவிடுகிறது. அந்த ஆவியானது ஒரு சந்திலேபோய்க் காற்றில் கலந்து முறைப்படி சுற்ற, அதற்கேற்ற மெல்லிய நூலாக ஆகிறது.

மற்ற நாடுகள் வளர்வதற்குக் காரணம் இதுதான். அவர்கள் அதிசய அற்புதங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அந்த எண்ணம் நமக்கு வரவேண்டும். அந்த எண்ணம் நமக்கு வரவேண்டுமானால், அதற்கு மாறான காரியங்களை நாம் வெறுக்கவேண்டும். இம் மாதிரியான கண் காட்சிகளைப் பார்த்து நாம் அறிவு பெறவேண்டும்.

பட்டிக்காட்டில் உள்ளவனுக்கு, தாலுக்கா ஒரு கண்காட்சி; தாலுக்காவை விட்டு வெளியே வராதவனுக்கு, ஜில்லா ஒரு கண்காட்சி; ஜில்லாவில் இருப்பவனுக்கு, மாநிலத்தின் தலைநகர் ஒரு கண்காட்சி ஆகும்; தலைநகரில் இருப்பவனுக்கு, பம்பாய் – இலண்டன் போன்ற பெரிய நகரங்களைப் பார்ப்பதும் ஒரு கண்காட்சி போன்றதுதான் ஆகும். இரயிலை விட்டு இறங்கி, வண்டியில் ஏறி, தாஜ் மகால் ஓட்டலில் இறங்கித் தங்கிவிட்டு வந்தால் விஷயம் தெரியாது.

விஷயம் தெரிய வேண்டுமானால், வீதியில் நன்றாகத் திரியவேண்டும். அப்போது தான் அந்த நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள், அவர்களது நிலை என்ன? வாழ்க்கை முறை எப்படி?—என்பவைகள் தெரியும். அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவன் பி.ஏ. படிப்பாளிக்குச் சமமாவான்; வேண்டுமானால் ஆங்கிலம் பேச எழுத காலேஜில் பயிலவில்லை எனலாம். ஆனால், இச் சுற்றுப் பயணத்தி னால்—தானே, சிறிது சிறிதாக அந்த அறிவு ஏற்பட்டுவிடும். பி.ஏ. படிப்பாளிகூட இவ னுக்குச் சமமாக மாட்டான். இங்கு நம் நாட்டில் கண் காட்சியைப் பார்த்து அறிவு பெறு வதும் கிடையாது; அதற்குச் செல்வாக்கும் இல்லை. ஆனால், அதற்கு மாறானவற்றிற்குத் தான் செல்வாக்கு இருக்கிறது.

ஆசிரியர்கட்கு இதுபோன்ற கண்காட்சிகள் மிகவும் அவசியமானவையாகும். இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் நாளை மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லித் தரப்போகிற வர்கள் ஆவார்கள். இங்கேயே இதைப் பார்த்து அறிந்து சென்றால் நாளை நல்ல வண்ணம் மாணவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியும்.

இந் நாட்டில் பல கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அதில் பார்த்தால் 'ரிப்பன்' தான் இருக்கிறது. பெண்கள் பார்த்து ஆசைப்படுகின்ற சாமான்கள்தான் இருக்கின்றன; சட்டிப் பானை, சோப்பு, பாத்திரங்கள் இவைதாம். இதற்குத்தான் கண்காட்சி என்று கூறுவதா? தப்பித் தவறி ஒன்றிரண்டு நல்லதாக வந்தாலும் அதை எல்லோரும் பார்க்க முடியாமல் போய்விடுகிறது. நல்ல கண்காட்சி வந்தால் பள்ளிக்கூடத்தை ஒருநாள் விடு முறை விட்டாவது மாணவர்களை அழைத்துச் சென்று காண்பிக்க வேண்டும். இது ஒரு நல்ல படிப்பினை ஆகும். எப்படி ஒரு மாணவனை இரண்டும் இரண்டும் எத்தனை என்று கேட்டால் விடை அளிக்கும் நேரத்தைவிட—முதலில் இரண்டு கோலிகளையும் பிறகு இரண்டு கோலிகளையும் போட்டு எத்தனை என்று கேட்டால் விரைவில் நான்கு என்று விடை அளிப்பானோ, அதுபோல்—கண்காட்சியானது மாணவர்கள் விஷயங்களை நல்ல வண்ணம் அறிந்துகொள்ளப் பயன்படும்.

[திருச்சி, பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 31-1-1960-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-2-1960]

14. பார்வைக் குறிப்பு

"பாய்லர் தொழிற்சாலை இந்தியாவிலேயே மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று என்பதையும் அதன் நிர்வாகமும், திறமையும் மேல்நாட்டு வாய்ப்புகளுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்லாத அதி சயப்படும் தன்மையில் நடந்து வருவது கண்டு மிகமிக மகிழ்ச்சியும், அந்த வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெருமையும் அடைகிறேன்."

[திருச்சி, "உங்கள் தொழிற்சாலை செய்தி"–ஏப்ரல், 1973]

Periar visits the Plant:

"The Boiler Plant is one of India's biggest achievements. I am very very happy and proud to have had the opportunity to see this plant which with its wonderful management and efficiency is equal to Western standards in every aspect......"

An extract from EVR's entry in the Visitor's Book on 6th March, 1973
["Boiler Plant & You" April, 1973]

3. பேட்டி

1. பெரியாரின் பதில்கள்

கேள்வி: நேருவின் நடுநிலை அவரோடு மறைந்து போயிற்று எனச் சிலர் கூறி வருகிறார்களே! அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இதைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை.

கேள்வி: நமது நாடு விடுதலை பெற்றபின் பொருளாதார ரீதியில் முன்னேறி இருக்கிறதா, இல்லையா?

பதில்: நம்நாடு விடுதலை பெற்றபின் பொருளாதாரத்துறை 100-க்கு 200 முதல், 300-க்கு மேற்பட்ட சதவீதம் முன்னேறி இருக்கிறது.

கேள்வி: நேரு, கென்னடி ஆகியோரின் மறைவிற்குப் பின்னும், குருச்சாவின் பதவித் துறப்பிற்குப் பின்னும் உலகில் சமாதான ஆர்வம் அதிகரித்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா?

பதில்: நேரு, கென்னடி ஆகியோரின் மறைவிற்குப் பின்னும், குருச்சாவின் பதவித் துறப்பிற்குப் பின்னும் உலகில் சமாதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது.

கேள்வி: நமது நாட்டில் நின்று நிலவும் சாதிக்கொடுமையை அறவே ஒழிக்கச் சிறந்த வழி என்ன?

பதில்: சரியான அளவுப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சர்க்கார் துறைகளிலும், சர்க்கார் ஆதரவு, அனுமதி, மேற்பார்வை உரிமைகள் உள்ள எல்லாத் துறைகளிலும் அளித்து விட்டால் நம் நாட்டில் நின்று நிலவும் சாதிக் கொடுமை அறவே ஒழிந்து போகும்.

கேள்வி: சமுதாயத்தின் பல துறைகளிலும் இலஞ்சம், ஊழல், கள்ள வணிகம் போன்ற ஒழுக்கக் கேடுகள் வேகமாகப் பரவி வருகின்றனவே—அவற்றைத் தடுத்து நிறுத்தத் தாங்கள் கூறும் யோசனைகள் என்ன?

பதில்: பார்ப்பனருக்கு உத்தியோகங்கள் கொடுப்பதை நிறுத்திவிட்டால் இலஞ்சப் பழக்கம் நின்றுபோகும். ஏனென்றால், பார்ப்பனர்களுக்குத் தேவை அதிகம்; சலுகை அதிகம்; அதனால் அவர்களுக்கு இலஞ்சம் வாங்கித்தீர வேண்டியிருக்கிறது. அவர்களைப் பார்த்து மற்றவர்களும் வாங்கிப் பழகிவிடுகிறார்கள்.

சனநாயகத்தின் பேரால் பதவிக்கு வரும் மந்திரிகள் ஆட்சியில் ஊழல்கள் இருந்து தான் தீரும். கண்ட்ரோல், லைசென்சு முறை இருக்கும் இடங்களில் கள்ளவணிகம் தவிர்க்க முடியாததாகும்.

கேள்வி: வகுப்புவாதக் கட்சிகள் தடைசெய்யப்படவேண்டும் எனச் சிலர் கூறி வருகிறார்களே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: வகுப்புப் பிரிவுகளையும், பிரிவினைபேதங்களையும், அவற்றின் ஆதாரங்களையும் ஒழிக்காமல் வைத்துக்கொண்டு—வகுப்புவாதத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுவதும், கட்சிகளைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லுவதும் பித்தலாட்டம்—அல்லது, அறியாமையேயாகும்.

கேள்வி: சமீபகாலமாக நமது மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை அதிகரித்து வருகிறதே, அதற்குக் காரணமென்ன?

பதில்: அரசாங்கத்தின் பலவீனமும், தாட்சண்யமுமே நமது மாணவர்களிடையே கட்டுப்பாடின்மையும், காலித்தனமும் பெருகுவதற்குக் காரணமாகும்.

கேள்வி: தமிழில் ஆக்க இலக்கியங்கள் (Creative literature) போதுமான அளவு தோன்றவில்லை என்று கூறப்படுகிறதே, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: தமிழில் ஆக்க இலக்கியங்கள் தோன்றவில்லை என்பது மட்டுமல்ல; ஆக்க இலக்கியங்கள் அனேகமாக இல்லவே இல்லை. காரணம், புலவர்களுக்குப் பகுத்தறிவு பெறும் வாய்ப்பும், பகுத்தறிவு பெற்றவர்களுக்கு வயிற்றுப் பிழைப்புக் காரணமாக துணிவும் இல்லாமல்போகும்படியான நிலைமை இருப்பதால்—தமிழில் ஆக்க இலக்கியங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாமற்போய்விட்டது.

கேள்வி: நமது இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் திரைப் படங்களும் ஒரு காரணம் என்று கூறப்படுவதை ஏற்கிறீர்களா?

பதில்: ஓரளவிற்கு இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் திரைப்படங்கள் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

கேள்வி: 'கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும்' என்ற கோரிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டுமென்றால் இன்றைய ஆங்கிலக் கல்லூரிகள் தேவை இல்லை. தமிழ்க் கல்லூரிகளை விரிவுபடுத்தி அதில் கலைத் துறைப் பாடங்களைப் புகுத்திவிட்டாலே போதும். புலவர், வித்வான் என்கின்ற பட்டங் களும் போதும். B.A, M.A பட்டங்கள் தேவை இல்லை.

[மதுரை, 'குறிஞ்சி' வாரஇதழ்—15-1-1965]

2. செயற்கரிய செய்தார்

நிருபர்: (மாறன்) வணக்கம் அய்யா.

பெரியார்: வணக்கம்.

மாறன்: உங்களைப் பார்த்ததிலே ரொம்ப மகிழ்ச்சி. நம்முடைய தமிழகத்திலே செயற்கரிய காரியம் செய்து, இந்த சமுதாயத்தினுடைய உருவத்தையே மாற்றியிருக்கீங்க.

பெரியார்: உம்.

மாறன்: ஒரு முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னாலே பார்த்தோமானால், பிறப்பினால் உயர்வு தாழ்வு எல்லாம் ரொம்ப மிஞ்சியிருந்தது. அந்த விதமான ஒரு நிலை மாறி, இப்போ ஒரு நல்ல சூழ்நிலையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பெரிய மாறுதலைச் செய்த தங்களைக் கண்டு பேசுறதிலே ரொம்ப மகிழ்ச்சி. தங்களுக்கு இந்த மாதிரியான புரட்சி செய்யும் நோக்கம் எப்படித் துவங்கியது? தாங்கள் எப்படிப் பொதுப் பணியில் ஈடுபட்டீர்கள் என்று சொன்னால் நல்லது......

பெரியார்: உங்களுடைய பாராட்டுதலுக்கு மிகவும் நன்றி.

மாறன்: வணக்கம், அய்யா.

பெரியார்: ஏதோ நான் செய்ததாகச் சொல்லப்படுவதெல்லாம் காலப்போக்கிலே நடைபெறுகிறது என்றுதான் கருதுகிறேனே தவிர, நானே செய்தேன் என்றில்லை. ஆனாலும் என் பிரச்சாரத்திற்கு மூலப்பொருள் பகுத்தறிவேயாகும்.

மாறன்: அதுதானே முக்கியம்.

பெரியார்: அதாவது—மக்களை எதையும் பகுத்தறிவோடு சிந்திக்கும்படி வேண்டிக் கொள்வதும், மூடநம்பிக்கையைக் கைவிடும்படிக்கேட்டுக்கொள்ளுவதுமே என் பிரச்சாரத் தின் தத்துவமாகும்.

மாறன் : ஆமாம்.

பெரியார் : இப்போ, மக்கள் ஏராளமாகப் படிக்கிறார்கள். ஏராளமாக எங்கள் பிரச்சாரத்தைக் கேட்கிறார்கள்.

மாறன் : அப்போது அப்படியில்லை.

பெரியார் : அப்போது கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது. என் பிரச்சாரம் வெளிநாடுகளுக்குப் பயன்படாவிட்டாலும் தமிழ்நாட்டுக்கு நல்ல வண்ணம் பயன்படுமென்று கருதுகிறேன். எங்கள் பிரச்சாரத்தால் சில மக்கள் மூடநம்பிக்கைகளைக் கைவிட்டாலும், அவற்றால் ஏற்படும் சில உணர்ச்சியைப் பெறாமல்—சுயநலம் காரணமாக மூடநம்பிக்கையில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் இயற்கைப் போக்கும், விஞ்ஞான வளர்ச்சியும் விரைவில் எங்கள் கொள்கைக்கு வெற்றியளிக்கும் என்று கருதித் தொண்டு செய்து வருகிறேன்.

மாறன் : ஆமாம், அய்யா. இப்படி நீங்கள் திரும்புவதற்கு ஏதாவது முக்கிய சம்பவம் உண்டா? அதாவது, தமிழகத்திலே இப்படித் தீவிரமாக இந்தப் புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்று...

பெரியார் : சாதாரணமாகச் சொல்கிறேன். நான் வந்து நல்ல குடும்பத்திலே பிறந்திருந்தாலும்கூட, என் தாயார்–தகப்பனார், எனக்கு முன்னே பிறந்த குழந்தையை—வெகுநாள் பிள்ளையில்லாமல் பிறந்ததினால் ஆதரிப்பதற்காக வேண்டி, என்னை என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்குக் கொடுத்துவிட்டார்கள்.

மாறன் : உங்கள் சரித்திரத்திலே வருது இது.

பெரியார் : அந்த அம்மாள், தம் பிள்ளையாகவே என்னை வளர்த்தார்கள். அந்த வீட்டுக்கு நாதியில்லே; அந்தம்மாள் மட்டுந்தான். அதனாலே நான் கேள்வியற்ற தறுதலைப் பிள்ளையாய்ப் போய்விட்டேன்; இரண்டு நாள், மூன்று நாள்கூட வீட்டிற்கு வரமாட்டேன்; கண்டபடி சாப்பிடுவேன்; எச்சில், கிச்சில் ஒன்றும் எனக்கு இலட்சியமில்லை. அந்தச் சின்னப் பருவத்திலேயே முஸ்லிம் வீட்டிலே சாப்பிடுவேன்; குறவர்கள் வீட்டில் சாப்பிடுவேன்; கண்டபடி சாப்பிட்டுவிட்டேன். அப்புறம் எங்க வீட்டிற்குப் போனேன். மறுபடியும் என்னைக் கூப்பிட்டுக்கொண்டார், என் தாயார். போனவுடன் நான் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு பத்தாவது வயதிலேயே கடைக்குப் போய்விட்டேன்; அவ்வளவுதான்.

மாறன் : அவ்வளவுதான் படிப்பு...

பெரியார் : ஆமாம்; திண்ணைப் பள்ளிக்கூடம் தான்; ஏடு எடுத்துக்கொண்டுதான் எழுதுவோம்; அப்புறம் முனிசிபாலிடி பள்ளிக்கூடம்; இரண்டு வருடம் அதில் படித்தேன். உடனே கூப்பிட்டுக்கொண்டார்கள். எங்க வீட்டிற்கு நிறையப் புலவர்கள், பரதேசிகள், சன்னியாசிகள் வருவதுண்டு. அது சர்வ சாதாரணம். காரணம் என்னவென்றால், அவர்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டவங்க...எங்களுக்குப் பணம் அதுபாட்டுக்கு மளமளன்னு வர ஆரம்பிச்சுது. அதுபோல பக்தி வேறே அவங்களுக்கு வளர்ந்துபோச்சு.

மாறன் : அய்யாவோடே தகப்பனாரெல்லாம் ரொம்ப பக்திமான்கள்னு கேள்விப் பட்டிருக்கிறேன்.

பெரியார் : ரொம்ப பக்தி! ரொம்ப பக்தி! இவாளோட பேசறதும், வீட்டிலே வந்து கதை பேசறதும், புராணம் படிக்கிறதும், இதெல்லாம் எனக்கு விரோதம். நான் அவங்களையெல்லாம் கேள்வி கேட்பேன்.

மாறன் : உங்க மனப்பான்மையே அப்படி...

பெரியார் : அதேதான். அந்தக் கேள்விமூலமே எனக்கும் அறிவு வளர்ந்துபோச்சு; எண்ணங்களும் உறுதியாய்ப் போச்சு. அவங்கள்லே எவனும் சரியான பதிலே சொல்லற தில்லே.

மாறன் : நீங்க விடாம கேள்வி கேட்பீங்க?

பெரியார் : ஆமா...நான் சும்மா அவங்களைக் கேள்வி கேட்பேன். கடவுளைப் பத்தி—மதத்தைப் பத்தி...இதைப்பத்தி யெல்லாம் கேள்வி கேட்டா, சிரிச்சுகிட்டே, 'கெட்டிக்கார பிள்ளேப்பா'ன்னு சொல்வானே தவிர—பதில் சொல்லமாட்டான்.

மாறன் : சமாளிச்சுக்கிறது...

பெரியார் : அவ்வளவுதான்; அப்படியே இருந்தது.

மாறன் : அப்படி ஆராய்ச்சி பண்ணினீங்க நீங்க.

பெரியார் : தானா வந்தது ஆராய்ச்சி, நான் பண்ணவேண்டியது மொதல்லே இல்லை; நான் அவ்வளவா ஆராய்ச்சிலே கவலைகொள்ளலே. அவங்களோடு பேச ஆரம்பிச்சதுதான் பிறகு தர்க்கம், கிர்க்கம்னு ஆரம்பிச்சவுடனே, ஆதாரங்கள் தெளிவாப் போச்சு.

மாறன் : அதைப் பிரச்சாரம் பண்ணனும்னு நினைச்சீங்க?

பெரியார் : அதுவேதான். பிறகு அரசியலுக்கு வந்தபிறகு, இந்தச் சாதியேதான் இன்னைக்கு நம்மை ஆளுதே தவிர—உள்ளபடி ஒரு அரசாங்கமோ அல்லது அரசியல் கொடியோ நம்மை ஆளலே; சாதியைக் காப்பாதுறதை அடிப்படையாவைத்து, ஆட்சிமூலம் நடத்துறாங்க.

மாறன் : சமுதாயத் தொண்டுவந்து...அப்படி இந்தக் கட்சிக்குப் போனவுடனே மேல், கீழ்ன்னு அதிகமாகத் தோன்ற ஆரம்பிச்சிட்டுது.

பெரியார் : ரொம்ப ஆச்சு... மேலே மேலே வளர்ந்து வந்தது. பிறகு அதைக் கேட்டபடியே நான் என் அரசியல் கொள்கைகளை ஏற்பாடு பண்ணிக்கிட்டு—நான் ஒன்றும் அரசியலுக்குப் போறதில்லே, எந்த எலக்ஷனுக்கும் நிக்கிறதில்லே. இவுங்க 1939–40-லே மந்திரி சபையை விட்டுவிட்டுப் போனபோது கவர்னரும், வைஸ்ராயும் என்னைப் பதவியை ஏற்கச் சொன்னாங்க. மந்திரி சபையை அமைக்கச் சொன்னாங்க.

மாறன் : பத்திரிகையிலே யெல்லாம் வந்தது அப்போ.

பெரியார் : ஆமா... அதுக்கு நான் சொன்னேன்—மந்திரி சபை அமைச்சா என் வேலை கெட்டுப் போகும்னு. அதைக் காப்பாத்துற வேலைதான் எனக்குச் சரியாய் இருக்கும்னேன்.

மாறன் : உங்களுடைய இலட்சியமெல்லாம் வேறே.

பெரியார் : ஆமா. ஆனால், நான் உதவி செய்றேன்—அப்படின்னு சொன்னேன்; ரொம்ப நல்ல உதவி பண்ணினேன், அரசாங்கத்துக்கு... சைமன் கமிஷனை உலகமே எதிர்த்தது; நான்தான் ஆதரிச்சேன்; அதற்கு வரவேற்புக் கொடுக்கிறேன்னு போய் நின்னேன். நான் ஆதரவு தந்த ஜஸ்டிஸ் கட்சி என்னைக் கெஞ்சாத கெஞ்சு கெஞ்சியது— 'நீ சைமன் கமிஷனை ஆதரிக்கிறாயே. நாளைக்கு ஓட்டே வராதே. எங்களுக்கு உதவி பண்ணுவேன்னுதானே வந்தாய். நீ இப்படி பண்ணுறியே'ன்னாங்க. உங்களுக்காக நான் வரலே: பொது நலத்துக்காகத்தான் வந்தேன்—அப்படின்னு சொல்லி, அப்படியெல் லாம் புரட்சி செய்துகிட்டே வந்தேன்.

மாறன் : உங்களுடைய சுயநலமற்ற சேவையினாலேதானே எல்லோரும் முன்னேறி யிருக்காங்க.

பெரியார் : முன்னேறினாங்களோ என்னவோ... இல்லாட்டா சாதிகள் இன்னும் வளர்ந்திருக்கும் அவ்வளவுதான்; அவ்வளவுதான் சொல்லுவேன். அதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா மாத்தினேன்—ஜனங்கள் எண்ணத்திலே.

மாறன் : நானறிய முப்பது, நாப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே—'தீண்டாதவன்—தூர எட்டிப் போ'ன்னு சொல்லக்கூடிய நிலைமையெல்லாம் இருந்தது.

பெரியார் : அய்யா, நாங்களே தண்ணிப் பந்தல் வைப்போம், வெயில் காலத்திலே. அப்போ அது ஒரு பெருமை; தர்மம்னு பேரு. என்ன தர்மம்! அதிலே திருடுறது எங்களுக்குத் தெரியும். நானே வியாபாரியாயிருந்து எவ்வளவு திருடியிருக்கேன்னு எனக்குத் தெரியும். ஆனால் தண்ணிப் பந்தல் வைக்கிறது ஒரு பெருமை. அப்படித் தண்ணிப் பந்தல் வைத்தால் சாதிக்குத் தகுந்தபடி மூங்கில் குழாய் வைப்போம்—அதிலே குடிச்சுட்டுப் போகணும்னு; சாதிக்குத் தகுந்தபடி 'டம்ளரை' வைப்போம்.

மாறன் : இப்போ அதைக் கற்பனை கூடப் பண்ண முடியலையே!

பெரியார் : தடையில்லியே! இப்படிக் கொடுமை யெல்லாம் இருந்தது. இதை யெல்லாம் அழிக்கிறதுன்னு ஆரம்பிச்சோம். அப்புறம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் 'பிராமணாள்—சூத்திரான்' போர்டை அழிக்கிறதுன்னு ஆரம்பிச்சோம். ஓட்டல்லே சாதிப் பெயரெல்லாம் இருக்கக்கூடாதுன்னு சொன்னோம்.

மாறன் : எவ்வளவு துணிச்சலான காரியம் அதெல்லாம்.

பெரியார் : ஏதோ செய்தோம்.

மாறன் : பிறராலே முடியல்லையே!

பெரியார் : முடியுதா, முடியவில்லையோ, அவ்வளவு ஆசையிருந்தது; அவ்வளவு ஆத்திரம் இருந்தது.

மாறன் : ஆசைமட்டும் இருந்தாப் போதாதில்லே; துணிச்சலும் வேண்டுமல்லவா? அது உங்களிடத்திலே மாத்திரம்தான் இருந்தது. அதனாலேதான் நாடு முன்னேறிச்சு.

பெரியார் : முன்னேறணும்—முன்னேறிச்சுன்னு சொல்றதுக்கில்லே. இல்லாவிட்டா இன்னும், இப்பவும் எவ்வளவோ ஆகியிருக்கும்.

மாறன் : அப்போ தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் என்னென்ன வெல்லாம்? சில முக்கியமான எதிர்ப்பெல்லாம் சொல்ல முடியுமா?

பெரியார் : எல்லாம்தான்.

மாறன் : அதாவது சமுதாயத்திலே எதிர்ப்பு.

பெரியார் : ஆமா. பத்திரிகையிலே எதாவது என்னைப்பத்தி வந்தா எனக்கு விரோதமாகத்தான் எழுதுவாங்களே தவிர, அனுகூலமானது வராது. இப்படி விளம்பரத்துக்கு இடமில்லாம ஏதோ ஒண்டியாய் இருந்து செய்துவர்றோம். இதுக்காகத்தான் அரசாங்கத்தையும் கொஞ்சம் ஆதரிச்சு, நம்ம எண்ணம் உள்ளவனோ அல்லது நமக்கு எதிரியாக இல்லாதவனோ வருகிற அரசாங்கத்தை ஆதரிக்கலாம் என்று நான் ஆதரிக்கிறது. நமக்கு ஒன்றும் அரசியலிலே பற்று இல்லை.

மாறன் : அந்தக் காலத்திலே உங்களுக்கு ஆதரவு அபூர்வமா இருந்ததே. முக்கியமான ஆதரவு எது?

பெரியார் : பிள்ளைகள்ளத்தான் சேர்த்துக்கொண்டு சத்தம் போட்டேன். பெரிய மனுசங்க ஒருத்தரும் எங்களுக்கு ஆதரவில்லே; உண்மையா எல்லாம் பையங்கதான். மத்தவங்க, ரொம்ப 'ரிலிஜியஸ்' வேஷம்; பயந்தவங்க—அரசியலிலே தங்களுக்கு ஓட்டு

வேணும் என்கிறவங்க. ஆகையினாலே ஆதரவு கம்மிதான். பிள்ளைகள் உற்சாகமா பின்னாலே வருவாங்க. இப்ப பணம் கொடுத்து கூப்பிடறாங்களே—அப்படி, எங்க பணம் தான் செலவு; கல்லடியெல்லாம் அடிச்சிருக்காங்க. இங்கே அடிச்ச அடி இந்தக் கையை ஆட்டி விட்டுட்டுது.

மாறன் : எந்த இடத்திலே, எந்த ஊரிலே அய்யா?

பெரியார் : ம்......சின்னாளப் பட்டின்னு, தேவாங்கர் இருக்கிற ஓர் ஊரு.

மாறன் : ஆமா. அது நெசவுக்குப் பேர்போன இடம்.

பெரியார் : அடியோட அவங்க காங்கிரசு அப்போ........நான் பிரச்சாரம் பண்ணப் போனேன்.

மாறன் : ஆமா. இது எத்தனை வருஷத்துக்கு முன்னாலே இருக்கும்?

பெரியார் : நாற்பத்தி அஞ்சு, நாற்பத்தி நாலு.........நாற்பத்தி அஞ்சாயிருக்கும். நல்லா அடிச்சுட்டாங்க.

மாறன் : அப்போகூட நல்லா பகுத்தறிவு பரவலே?

பெரியார் : ஜனங்களுக்கு எங்கே பரவிச்சு. சட்டுன்னு சொல்றான் பாருங்க—'சாமி இல்லேங்கிறான்; கடவுள் இல்லேங்கிறான்; மதம் இல்லேங்கிறான்; பறையனோட ஒண்ணா சாப்பிடணுங்கிறான்'! அப்படின்னு சொன்னா—நம்ம ஜனங்களுக்கு ஒரு வெறுப்பு.அப்படியெல்லாம் பண்ணினாங்க.

மாறன் : இப்ப அதெல்லாம் சொல்ல முடியாது?

பெரியார் : இப்ப சில பெரியவங்க பேசறபோது, 'மன்னிக்கணும்.........எனக்குக் கொஞ்சம் கடவுள் நம்பிக்கையிருக்குது' அப்படின்னு என்னை மன்னிப்புக் கேட்டுட்டு பேசறாங்களே.

மாறன் : ஒரு கேள்வி கேட்கலாமா?

பெரியார் : கேளுங்க அய்யா......நல்லா கேளுங்க.

மாறன் : அதாவது, இப்ப மத நம்பிக்கை உடையவங்ககூட, உங்களிடத்திலே உங்களுடைய கொள்கைகளை நம்பி உங்களுக்கு ஆதரவாக இருக்காங்க.

பெரியார் : சிலபேர் இருக்காங்க உண்மையிலேயே.

மாறன் : ஆகையினாலே மத நம்பிக்கையைப் பத்தி, நீங்கள் அதைப்பற்றி அதிகமாகப் பிரச்சாரம் செய்யாமல், அது பற்றி அவநம்பிக்கை எதிர்ப்பு சொல்லாமல் இந்த சாதி ஒழிப்பை மட்டும் செய்து வந்தா?

பெரியார் : அது பிரிக்க முடியாதுங்களே, அய்யா. மதம் வேறே, சாதி வேறேன்னு பிரிக்கவே முடியாதே.

மாறன் : இன்னொரு கேள்வி. இப்போ இந்தக் காலத்திலே ஒழுக்கம் குறைஞ்சு வருது, அப்படின்னு எல்லோரும் சொல்றாங்க. அரசாங்கத்தின் தண்டனைக்குப் பயமிருக்கணும்; அல்லது ஒருவிதமான ஆண்டவன் நம்பிக்கையிருந்து பயப்படணும். இந்த ரெண்டும் இல்லாமப் போயிட்டுதே இப்போ. இந்த ஒழுக்கம் நல்லா இருக்கிறதுக்கு என்ன வழி?

பெரியார் : மன்னிக்கணும், அய்யா. இதை ஒன்றும் கட்டுப்படுத்தமுடியாது. இனிமேல் எந்தக் காரணம் சொல்லியும் மக்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஒரு மட்டம் தாராளமாகப் போயி, மறுபடியும் அவங்க ஏதாவது இதுக்கு என்ன பண்றதுன்னு திரும்பினா உண்டே தவிர, இப்ப ஒழுக்கமா, நாணயமா, நேர்மையா மனுசன் யாராவது

சிந்திக்க இப்ப வாய்ப்பு இல்லை...எல்லோருக்கும்தான். அரசியலிலே ஒழுக்கமா இருக்க முடியலே. எவனாயிருந்தாலும் மதத்திற்கும்கூட, காட்டிக்க முடியுதே தவிர, தத்துவப்படி நடக்க எவனாலும் முடியலே. ஒழுக்கம்னு இன்னொருத்தனுக்குச் சொல்றமே தவிர, அந்த வாய்ப்புக் கிடைச்சா நாமும் அந்தத் தவறு பண்ணத் தயாராயிருக்கோம். அனுபவத்தில் சொல்றேன். நான் அப்படியிருக்கிறபோது சும்மா ஒழுக்கம்னு சொல்லி, இன்னொருத்தனை ஏய்க்கிறதிலே என்ன லாபம், சொல்லுங்க.

மாறன் : ஒரு சமுதாய நல்வாழ்வுக்கு.

பெரியார் : என்ன நல்வாழ்வு? சமுதாயத்திற்கு என்ன நல்வாழ்வு வரும்? நீங்க பணக்காரன்; நான் ஏழை. இவங்களுக்கு நல்வாழ்வு எங்கேவரும்? இதையெல்லாம் காப்பாத்துறதா இருந்தா அதைத்தான் ஒழுக்கம்னு நினைக்கிறோம். உங்ககிட்டே, பணம் திருடக்கூடாது நான். நீங்க வியாபாரி; என்னை மோசம்பண்ணிப் பணம் சேர்த்திடலாம்னு நினைக்கிறீங்க. அப்ப எப்படி ஒழுக்கம் வரும்?

மாறன் : அதனாலே, உங்களைப்போல சுயநலமற்றவாதியாக இருந்தா நல்லாயிருக்கும்.

பெரியார் : எங்கே முடியுது, அய்யா?

மாறன் : ஒரு வழி...

பெரியார் : வழியில்லே. நாடு இன்னும் கீழேபோகும்; ரொம்பக் கீழேபோகும். நாமெல்லாம் இவ்வளவு பந்தோபஸ்தா இருக்கமுடியாது. இன்னும் பதினைந்து வருஷத்திலே பாருங்களேன். இப்போ கென்னடியைச் சுட்டான்; வீதியிலே போனா அடிக்கிறான்; தெருவிலே போனா உதைக்கிறான்; மந்திரிங்க போனா காவாலிப்பசங்க எல்லாம் கருப்புக் கொடியைத் தூக்கிக்கிட்டு ஒழிக என்கிறான்; அரசாங்கத்துக்கிட்டே அத்து இல்லேன்னா எப்படி ஒழுக்கம் வரும்?

மாறன் : ஆனா நம்முடைய தமிழ்நாடு வந்து பழைய காலத்திலேருந்தே நல்ல பண்பாட்டோட இருக்கிறதினாலே சுய சிந்தனை அதிகமாயிருக்கு.

பெரியார் : வரணும். தமிழ் நாட்டிலே தமிழனைக் கெடுத்துட்டுதே—இந்தத் தமிழ் இலக்கியங்கள்! மற்ற நாட்டானைப்போல முன்னேற வேண்டிய அளவுக்கு முன்னேற விடாம தமிழ் இலக்கியங்கள் நம்மைப் பாழாக்கிட்டுது.

மாறன் : இலக்கியம் வந்து...

பெரியார் : ஒண்ணுமில்லே!

மாறன் : தமிழ் இலக்கியம் எந்த வகையிலே கெடுக்குதுன்னு சொல்றீங்க?

பெரியார் : இலக்கியமே இல்லியே நமக்கு. இன்றைக்குப் பயன்படும்படியா என்ன இருக்கு? நீங்க தெரிஞ்சுகொள்ளாதது என்னயிருக்கு? நாளைக்கு நம்ம நடந்துக்க வேண்டியதுக்கு என்ன இருக்கு? அப்படி ஆகிப் போச்சுங்க, அது. வெள்ளைக்காரனுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் என்னன்னா, அவன் பழசை நினைக்காம, புதுக் கருத்தோட புதுசு, புதுசா எங்கெங்கேன்று போவான். இங்கே எவ்வளவு பெரிய புலவனாயிருந்தாலும் பழைய குப்பையைத்தேடி அதிலேருந்து பெரியவனா ஆயிடலாம்னு பார்க்கிறானே தவிர, தன் கருத்துன்னு சொல்றது ஒண்ணுமே கிடையாதே.

மாறன் : அது உண்மை தாங்க.

பெரியார் : இல்லே நமக்கு. எந்தக் கருத்தைச் சொல்றதுக்கு எந்தப் புலவன் இருக்கிறான்?

மாறன் : சமாதிக்குத்தான் கும்பிடு போட்டுக்கிட்டே இருக்கான்?

பெரியார் : அவ்வளவுதான். இன்றையவரைக்கும் ஒருத்தன்கூட புதுக் கருத்தை சொல்லவே இல்லையே.

மாறன் : அய்யாவைத் தவிர...

பெரியார் : என்னமோ வச்சுக்கங்க. சொல்லப் பயப்படறான். ஒரு புலவனைக் கேட்டா அவன் படிச்சதைத்தான் சொல்றான்—இராமாயணம் படிச்சேன், பாகவதம் படிச்சேன், புராணம் படிச்சேன் அப்படின்னு. அதிலேதான் அவன் புலவனானேதவிர, அறிவிலே அவன் ஒண்ணும் புலவன் ஆகலே. என்னமோ பல தொல்லைகள் இருக்குது; வளர்ச்சிக்குப் பல தடங்கல் இருக்குது நம்ம நாட்டிலே.

மாறன் : ஆனால் ஒரு காரியம் அய்யா! பல நாடுகளிலே பகுத்தறிவுவாதிகள் தோன்றியிருக்காங்க. ஆனா மதவாதிகள் வந்து அவங்களுடைய பிரச்சாரம் வெளிவர விடாமல் செய்திருக்காங்க. பொதுமக்களின் அறிவுக்கு திரையிட்டிருக்காங்க. ஆனால், நம்முடைய தமிழ் நாட்டிலே உங்களுடைய பிரச்சாரம் நல்ல பலன் அளிச்சிருக்கிறது. அது மட்டுக்கும் தமிழக மக்கள் நல்ல பகுத்தறிவு உடையவர்கள். நல்ல பண்பாடுடையவர்கள். அதனால்தான் முன்னேற முடிஞ்சுதுன்னு நினைக்கிறேன்.

பெரியார் : யாரு முன்னேறியிருக்கிறாங்க? ஒரு மனுசனைச் சொல்லுங்க நம்ம நாட்டிலே...மன்னிக்கணும்—நீங்க கோவிச்சுக்கக் கூடாது. இந்த நாட்டிலே முன்னேற்றக் கருத்துள்ளவர் யாரு?

மாறன் : அதாவது, முன்னேயிருந்த நிலைமையைவிட இப்போ இருக்கிற நிலைமை.

பெரியார் : அதிலே வித்தியாசம்னு சொல்லிக்கலாமே தவிர, இன்னாருடைய கருத்து ஏற்கத் தகுந்ததுன்னு சொல்ல ஒரு ஆளைச் சொல்லுங்க; எவன் இருக்கிறான்? சொல்றதுக்கே பயப்படறான். ஒவ்வொருத்தருக்கும் ஒரு இலட்சியம்; அந்த இலட்சியத்துக்கு மாறில்லாமல் இருக்கவேணும்னா அவனுடைய வாழ்வு அப்படித்தான் இருக்கும். நாம் என்ன கதியானாலும் சரி, சொல்வோம்ங்ற மாதிரிக்கு, ஒரு ஆள்கூட இல்லையே! அது மாத்திரமில்லே. இப்ப நம்ம நிலைமை எப்படி ஆயிப்போச்சுன்னா, தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஒரு பெரிய மனுஷனே இல்லியே. நீங்க ஒரு காரியம் நடத்தணும்னா, ஒரு பெரிய மனுஷனைக் கூப்பிட்டு வைக்கணும்னா உங்களுக்கு யார் இருக்கிறா? இல்லியே!

மாறன் : அப்படி ஒருவன் உண்டாகணும். அதற்கு ஒருத்தன் முயற்சிபண்றான்னு வையுங்க. அதுக்கு என்ன செய்யணும்?

பெரியார் : அவனுக்கு சர்வாதிகாரம் வேணும். அவன் ஒண்ணுக்கும் கட்டுப்படாத சர்வாதிகாரியா வரணும். கேட்டா கேளு, கேட்காட்டி போடான்னு சொல்ற மாதிரி இருக்கணும். அவனுக்கு ஒரு காலத்திலே 'சான்ஸ்' அடிச்சா அடிக்கும்.

மாறன் : சுயநலம் இருக்கக்கூடாது; ஒருத்தருக்கும் கட்டுப்படக்கூடாது; அப்படிப்பட்ட சிந்தனை உள்ளவன் வந்து ஒரு நல்ல பெரிய காரியம் செய்யறவனாகலாம்.

பெரியார் : ஆகலாம். ஆனா இப்ப ஒண்ணும் அப்படி ஆக முடியலே. அப்போ பெரிய மனுஷன் என்கிற உலகமே வேறே. அவன் பணக்காரனா, அவன் ஏதாவது தர்மம் பண்றானான்னு...அப்ப வேற மாதிரி இருந்தது. இப்ப பணக்காரனைக் கண்டா சுத்த மோசம்னு நினைக்கிறோம். தர்மம் பண்ணினான்னா, பெரிய திருட்டுப் பய, பெருமைக்காகப் பண்றான்னு சொல்றோம்.

மாறன் : ஆமாம். அப்படித்தானே இருக்கு. பெரும்பகுதி அப்படியிருக்கு.

பெரியார் : எப்படியோ வைச்சுக்கிங்க. அது தெரியாதிருந்த காலத்திலே ஏற்பட்டானுங்க பெரிய மனுஷன். இன்னைக்கு நமக்கு ஆளே இல்லியே! எந்த புஸ்தகம் படிச்சா

தேவலே? ரொம்ப நாம் சண்டை போட்டுக்கணுமானா, குறள் ஒன்று என்னமோ இருக்கு. அதை எடுத்து வைச்சிட்டா, வேறே எது படிச்சா தேவலே? வளர்ச்சிக்கு என்ன இருக்குது? அந்தமாதிரி ஆயிப் போச்சுங்களே.

மாறன் : கல்வி முன்னேறணும்.

பெரியார் : கல்வி முன்னேறணுமானால், அதனுடைய போக்கையே தடுத்துக் கிட்டிருக்காங்களே!

மாறன் : இப்ப அய்யா பெயராலே கல்லூரியெல்லாம் வந்திருக்கு. அப்படிப்பட்ட நல்லகாரியம் செஞ்சிருக்கீங்க.

பெரியார் : நானும் ஏதோ செய்யறேன். நிறைய கட்டிடம் கட்டிகிட்டு ஜனங்களுக்கு ஏதோ செய்யறேன். என்ன செய்யறதுன்னே தோணலியே. ஒரு பிச்சை கொடுக்கிறதா இருந்தா, என்னடா சோம்பேறியை வளர்க்கிறோமேன்னு கருதறோம்.

மாறன் : அய்யா, ஏதாவது பிச்சை கிச்சை கொடுத்திருக்கீங்களா? அப்படிக் கேள்விப்பட்டதே இல்லையே!

பெரியார் : அது சரி...உள்ளபடியே அப்படித்தான்.

மாறன் : உங்களைப் பத்தி ஜி. டி. நாயுடு இருக்காங்களே—விஞ்ஞான மேதை; அவங்க உங்களைப் பத்தி ஒண்ணு சொன்னாங்க. சிக்கனத்துக்கு ஒரு மாபெரும் உதாரணம் வேணும்னா அய்யாவைப் பற்றித்தான் சொல்லணும் அப்படின்னு சொன்னாங்க. இப்போ, ஒரு மனிதன் சிக்கனமா வாழ்க்கை நடத்தணும்னா, அப்படி வாழ்க்கை நடத்து வதற்கு என்னென்ன செய்யணும், ஒரு தனி மனிதன்?

பெரியார் : சிக்கனம்ங்கறது ஒண்ணுமில்லே. எல்லோருக்கும் பணக் கவலை இருக்குது. வியாபார முறையா, தாராளமா இருக்கிறாங்களே தவிர, வேறே இல்லை. நமக்கு எப்படின்னா, பணத்தை என்ன பண்றதுன்னு தெரியலே. எதுக்குக் கொடுக் கிறதுன்னு தோணலே. தவிர, நாம வியாபாரத்திலே பத்து வயசிலேயே இருந்துட்டோம்; ரொம்ப 'சுக்காஞ்செட்டியா' இருந்துட்டோம்; அதனாலே காசை இழுத்துப் பிடிக்கிறோம். இழுத்துப் பிடிக்கத்தான் தெரியுமேதவிர, அதை என்ன பண்றதுன்னு இன்னும் நான் முடிவு பண்ணலே. இதை நான் எழுதியிருக்கிறேன்—அது ஒரு 'ஹேபிட்' (Habit) அவ்வளவுதான். அது ஒரு புத்திசாலித்தனம்னு நான் நினைக்கலே.

மாறன் : அந்த மாதிரி மத்தபேருக்கு நீங்க புத்தி சொல்லலே. அதாவது, மத்த பேரும் சிக்கனமா இருக்கணும்னு?

பெரியார் : சிக்கனம்னு எதை சொல்றேன்னா—வரவுக்கு அடங்கி நடப்பா; வரவுக்குமேலே போகாதே; அவ்வளவுதான். அதுதான் சிக்கனம்.

மாறன் : அய்யா, இன்னொரு கேள்வி கேக்கணும்னு ஆசை. இப்ப தற்காலத்துலே இந்த மாணவர்கள் இருக்கிறாங்கல்ல, அவங்க கட்டுப்பாடு இல்லாமே ஒரு குழப்பமான நிலைமையிலே இருந்து வர்றாங்க. நாம் பார்க்கிறோம்; பல கல்லூரிகளிலே பார்க்கிறோம், இந்தக் கட்டுப்பாடு குலைஞ்சதுக்குக் காரணம் என்ன?

பெரியார் : என் கருத்து, உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோ? இந்த ஜனநாயகம் வந்தபிறகுதான் எல்லோருடைய ஒழுக்கமும் கெட்டுப்போச்சு. பள்ளிகூடத்துப் பிள்ளைங்க மாத்திரமல்ல; தொழிலாளிகளெல்லாம் கெட்டுப்போயிட்டாங்க; அதிகாரிகளெல்லாம் கெட்டுப்போயிட்டாங்க. இவனுங்கமட்டும் என்ன? பதவிக்கு வர்றவனும் கெட்டுப் போயிட்டான். அவன் தன் இஷ்டத்துக்குத் தகுந்தபடி நடக்கிறான்.

மாறன் : வருங்காலத்திலேகூட நல்ல மாறுதல்...

பெரியார் : ஜனநாயகம் உள்ளவரை முடியாதுங்க.

மாறன் : அப்போ, ஜனநாயகம் அவ்வளவு நல்லதில்லேங்கிறீங்களா?

பெரியார் : நல்லதில்லேன்னு நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்—'காலிகள் நாயகம்தான் ஜனநாயகம்'னு பெயர் அப்படீன்னுட்டு. இது...வந்து ஜனநாயகம்னு நினைக்கிறதுக்கு முன்னே—சிலபேரு அதைப்பத்திப் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்பவே சொல்லியிருக்கேன்.

மாறன் : ஜனநாயகம் வந்ததினாலே கட்டுப்பாடு குலைஞ்சுதுன்னு சொல்றீங்க.

பெரியார் : கட்டுப்பாடு குலைஞ்சது.

மாறன் : எல்லாத் துறைகளிலேயும்....

பெரியார் : எல்லாத் துறைகளிலும் இப்ப இருக்கிறதுக்கு எல்லாம். ஒழுக்கம்னா என்னா? கீழே இருக்கிறவங்க மேலே இருக்கிறவங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கணும். உங்களிடத்திலே உண்மையான அன்பு வச்சிருக்கணும்; அது இல்லையே! மேலே இருக்கிறவனைக் கவுக்கப் பார்க்கிறான், கீழே இருக்கிறவன்.

மாறன் : உண்மை. அய்யா...

பெரியார் : தனக்கு வேண்டியபடி நடக்கவில்லையானா எதிரியாகவே நினைக்கிறான்.

மாறன் : அல்லது சூழ்ச்சி பண்ணி...

பெரியார் : அதுதான் சொல்றேனே. அப்பறம் என்ன பண்றது? மாணவங்க கெட்டுப்போனதுக்குக் காரணம் அரசியல்காரங்க. தங்களுக்குப் பயன்படுத்திக்கிறாங்க.

மாறன் : ஆமா...

பெரியார் : அப்ப எப்படி வரும் ஒழுக்கம்?

மாறன் : அதான் காரணம். அவங்க சீர்திருந்துவதற்கு உங்களுடைய யோசனை என்ன?

பெரியார் : அவன் படிக்கவந்தவன்; அவனை நாம் உபயோகப்படுத்திகிட்டா, அவன் கெட்டவன் ஆயிடறான்.

மாறன் : நம்ம பிள்ளைங்கதானே?

பெரியார் : யாரு சொல்றாங்க அப்படி? நான்தானே சொல்லவேண்டியதாயிருக்கு? நம்ம பிள்ளைகளாக நினைக்கிறவன் நான்தான். நீங்க என்ன நினைக்கிறீங்க, உங்க மகனைப்பத்தி மாத்திரம் நினைக்கிறீங்க—மத்தவங்களைப்பத்திக் கவலையே இல்லை.

மாறன் : அய்யா. உங்களைப் போல அவ்வளவு பரந்த மனப்பான்மை எல்லாருக்கும் வருமா?

பெரியார் : இல்லே, சொல்றேன். அதனாலே பலன் அவ்வளவு ஆயிருக்கு. இப்ப இருக்கிற அரசியலை நம்பித்தான் மாணவங்க நடந்துக்கிறாங்க; வண்டியிலே கல்லு போடறாங்க. என்னையே ரகளை பண்றாங்க.

மாறன் : அதனாலே திருத்தறது எப்படி?

பெரியார் : முடியாது. இந்த ஜனநாயகம் இருக்கிறவரைக்கும் நாடு இன்னும் கீழேதான் போயிக்கிட்டு இருக்கும்.

மாறன் : இன்னொரு கேள்வி அய்யா. தாழ்த்தப்பட்டவர்கள்னு முன்னாலே சொல்லப்பட்டவர்கள் இப்போ கொஞ்சம் முன்னேறி வர்றாங்க.

பெரியார் : ஆமாங்க.

மாறன் : அவர்கள் எப்படியெப்படி நடந்துகொள்ளணும் ?

பெரியார் : அவங்க முன்னேறி வர்றாங்கன்னா, அவர்களாலே முன்னேற முடியலே.

மாறன் : சரி.

பெரியார் : தாழ்த்தப்பட்டவங்க முன்னேர்றாங்கன்னா ஏதோ அவங்களுக்கு ஏற்பாடு பண்ணின சில நல்ல வாய்ப்புகளினாலே சிலபேரு முன்னேறினாங்க.

மாறன் : அவங்களுக்கு அரசாங்கம் வாய்ப்பு அளிக்குது ?

பெரியார் : வாய்ப்பு அளிக்குதுன்னா, அரசாங்கம் தயவினாலேதான் வாய்ப் பளிக்குது.

மாறன் : ஆமா.

பெரியார் : இப்ப ஒருத்தனுக்கு ஒரு உத்தியோகம் கொடுக்கணும்னா, அவன் தன்னைப் பறையன்னு ஒத்துக்கிட்டாத்தானே உத்தியோகம் கொடுக்கிறாங்க? தன்னை சக்கிலியன்னு ஒத்துகிட்டாத்தானே கொடுக்கிறாங்க ? அதற்கு அவன் வேணும்னே பறையன் ஆகறான். வேணும்னே சக்கிலியன்னு சொல்லிக்கொள்கிறான். அந்த மாதிரியான நிலைமையில்லாம, எல்லோரையும் சமமாகக் கருதும்படியா—வாய்க்கால் தண்ணி எல்லாருக்கும் சமமா, தானாகப் பாயற மாதிரி அரசியல் அமைப்பிலே வச்சுட்டோமானா, ஒருத்தன் இன்னொருத்தன் தயவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் வராது. அதைப் பண்ணவே மாட்டாங்க. எல்லோரும், தங்களை வந்து கெஞ்சிக்கிட்டிருக்கிறவங்களுக்குத் தான் ஏதாவது செய்யணும்கிறாங்களே தவிர, வேறே இல்லே. அப்ப யாரு அதுலே பக்குவம் உடையவங்களாக ஆவாங்க ? எத்தனை நாளைக்குத்தான் இவங்களுக்கு சுதந்திரம் கொடுத்துக்கிட்டே இருந்தாலும் இவங்க எப்படி 'இண்டிபெண்டன்டா' வளர்றதுக்கு வாய்ப்பிருக்கு ?

மாறன் : வந்திருக்காங்களே ; எவ்வளவோ முன்னேறி இருக்கிறதைப் பார்க் கிறோமே நாம.

பெரியார் : சில பேர் வந்துக்கிட்டிருக்காங்க. அவ்வளவுதான் சொல்வேன்.

மாறன் : ஆகையினாலே படிப்படியா...

பெரியார் : அதிலே பாருங்க இப்ப. நேத்து சொன்னான். உதவி பத்து வருஷத் துக்குன்னான் ; பத்து வருஷம் ஆச்சு. இன்னும் ஒரு பத்து வருஷம்னான். இவங்க எல்லாம் ரகளை பண்றதினாலே மறுபடியும் ஒரு பத்து வருஷம்னு சொல்றான். இப்படியே பத்து வருஷம், பத்து வருஷம்னு இவங்களுக்குப் போனாத்தான் வாய்ப்பே தவிர, நிறுத்திப் போட்டா என்ன ஆகறது அவங்களுக்கு ? இப்ப ஒருத்தர் தயவினாலேதான் வாழ முடியறதே தவிர, தாங்களாகவே வாழும்படியான வாய்ப்பு இல்லே...

மாறன் : அந்த நிலை வரணும்.

பெரியார் : ஆமா. அந்த நிலை வரணும்.

மாறன் : அய்யா ! தொழிலாலேதானே உயர்வு தாழ்வு இருக்குது ?

பெரியார் : ஆமா !

மாறன் : இப்ப, அந்த தாழ்த்தப்பட்டவர்கள்னு சொல்லப்படுகிறவங்களுக்கு சலுகை இருக்கு. அதே போல, மேலே உள்ளவர்களுக்கு சாதாரண வேலைகளுக்கு ஒரு சலுகை கொடுத்தால் ? அவர்கள் இறங்கி வந்தால் ?

பெரியார் : அவங்க இறங்கவே மாட்டாங்க.

மாறன் : இறங்கிவர்றதுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால்?

பெரியார் : அவங்க இறங்கி வர்றதுக்கு என்ன பண்ணணும்னா, அவங்களுக்கு இவ்வளவுதான்னு சொல்லிடணும். 'நீங்க இவ்வளவுதான் இருக்கிறீங்க. உங்களுக்கு இவ்வளவுதான் உண்டு' அப்படீன்னு, அந்த விகிதாச்சாரம்னு சொல்லிட்டா இறங்குவாங்க—அன்னிக்கு முதற்கொண்டு மத்தமத்த தொழில்களை எல்லாம் கைப்பத்தறதுக்கு.

மாறன் : அப்புறம், ஒரு தனிப்பட்டவர் வந்து பொதுநலப்பணி செய்யணும்னு இறங்குகிறார். அவருக்கு நீங்க சொல்லக்கூடிய யோசனை?

பெரியார் : அதுதான் சொன்னேனே—தனிப்பட்டவர்கள் பொதுநலப் பணிகள்ங் கிறது இப்போ ரொம்ப அருமையாப் போச்சு. ஏன்னா, எல்லாரும் பொழைப்புக்குப் பொது நலப் பணியையே உபயோகப்படுத்திக்கிறாங்க; பதவிக்கு, சம்பாத்தியத்துக்கு.

மாறன் : ஆமா, ஆமா. சுயநலம்தான் வருது.

பெரியார் : பொதுநலப் பணின்னா, அது இப்ப வாழ்வுக்கு ஒரு வழின்னு ஆயிப் போச்சு.

மாறன் : ஆனா உண்மையாக ஒருத்தர்......

பெரியார் : உண்மையாக ஒருத்தன் வரவேணும்னா, அவன்கிட்டே ரெண்டு குணம் இருக்கணும். பொதுநலத்தினாலே பிழைக்கிறோம்னு....

மாறன் : லாபம் சம்பாதிக்கக் கூடாது.

பெரியார் : ஊஹூம்! அதிலே சாப்பிடறோம் என்கிற நிலைமை இருக்கக்கூடாது. இரண்டாவது, பொதுநலத்தினாலே ஒரு சின்ன பலன்கூட அடைந்ததாக இருக்கக்கூடாது.

மாறன் : அவனுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இருக்கணும்.

பெரியார் : அதுக்கு வேறே ஏற்பாடு பண்ணிக்கணும். அதுலே சாப்பிடறதுன்னு ஆரம்பிச்சா வழுக்கிவிட்டுடும் அவனை.

மாறன் : நல்ல புத்திமதி. ஆகையினாலே தனக்குச் சாப்பாட்டுக்கு இருக்கிறவன் தான் பொதுநலப் பணியிலே இறங்கணும்; ஒண்ணு. அடுத்தது, இந்தப் பொதுநலப் பணியினாலே லாபம் சம்பாதிக்கணும்னு நினைக்கக் கூடாது.

பெரியார் : பயன் அடையணும்னு நினைக்கக்கூடாது. லாபம் மாத்திரம் இல்லே, ஒரு பதவிக்குப் போகணும்; அந்தஸ்து சம்பாதிக்கணும்; குடும்பத்துக்கு ஒரு பெருமை உண்டாக்கணும்னு பார்க்கக்கூடாது. எல்லாம் அது மூலமாகத்தான் ஒவ்வொருத்தனும் எதிர்பார்க்கிறான்.

மாறன் : அய்யா, இத்தனை காலமா பணி செய்து வர்றீங்க. இந்தப் பதவி என்கிற போது வெறுத்துத் தள்றீங்க. இந்த மாதிரியா இருக்கணும்?

பெரியார் : சுயநலத்துக்குப் பயன்படுத்தக் கூடாதுன்னுதான் சொல்றேன். பதவிக் குப்போனா அது வந்திடுமேன்னு பயப்படுகிறோமே நாம்! மத்தவங்களும் அதைப் பயன் படுத்தாமப் பார்த்தாத்தான் நல்லாயிருக்கும்.

மாறன் : அப்படிப்பட்டவர்கள் நல்ல பொதுநலப் பணி செய்யலாம்.

பெரியார் : முடியுது. அது செய்ய முடியுது. அவங்களும் சுதந்திரத்தோடு இருக்க முடியும். சுதந்திரமாகப் பேசிக்கொள்ள எல்லாம் முடியும். இல்லாவிட்டால் காற்றடித்த பக்கம் சாயவேண்டியதுதான்.

மாறன் : அப்படிப்பட்டவங்க தமிழ்நாட்டிலே?

பெரியார் : நம் நாட்டிலே யாரு இருக்காங்க, அய்யா? யார் இருக்காங்கன்னு சொல்லட்டும் நான்? முடியலையே. எவனைப் பக்குவம் பண்ணினாலும் ரெக்கை முளைச்சா ஓடிடறான்.

மாறன் : இந்தக் காலத்து சமுதாயம் நல்ல வழிக்குத் திரும்பணுமானா—ஒருத்தன் என்னென்ன முறைகளைக் கையாளணும், அய்யா?

பெரியார் : முதல்ல அவன் பகுத்தறிவுவாதியாக ஆயிடணும்; அப்படி ஆயிட்டான்னா அவனுடைய போக்குக்கெல்லாம் நியாயம் கிடைக்கும்.

மாறன் : ஓகோ.

பெரியார் : அப்படி ஆகாமெ நமக்காக அவன் இருக்கான்னா, சும்மா ஏதோ வேப்பெண்ணை குடிக்கிறாப்போல ஏதோ சாப்பிட்டுக்கிட்டு–இந்த வேஷம் போட்டுக்கிட்டுத் தான் இருக்கமுடியும்; மனசு தெளிவாயிடணும் அவனுக்கு. வேறே ஒண்ணும் கிடையாது.

மாறன் : நாம் நல்லது செய்தால் அதைத் துணிஞ்சு செய்யணும், ஒண்ணுக்கும் பயப்பட்டோ அல்லது ஆசைப்பட்டோ செய்யவேண்டியதில்லை.

பெரியார் : செய்யவேண்டியதில்லே. இன்பமும் இல்லே, துன்பமும் இல்லே; பெருமையும் இல்லே, சிறுமையும் இல்லே—காரியம்தான், அப்படின்னு எண்ணம் வந்ததுன்னா அவனாலே ரொம்பத் தாராளமாய் முடியும்.

மாறன் : அதனாலே இந்த சமுதாயமும் பயன்பெறும்!

பெரியார் : அதான்; பொதுத் தொண்டுன்னா சமுதாயத் தொண்டுதானே? அதில்லாம சும்மா, அலங்காரமா வெளிப்பார்வைக்கு நானும் செய்யறேன்னா?

மாறன் : அது வேடிக்கைக் கூத்தாயிடும்.

பெரியார் : அவ்வளவுதான்.

மாறன் : அய்யா, ரொம்ப முக்கியமான கருத்துக்களெல்லாம் சொன்னீங்க. எத்தனையோ விஷயங்கள் சொன்னீங்க.

பெரியார் : ஒண்ணுமில்லே.

மாறன் : ரொம்ப நன்றிங்க.

பெரியார் : நான் சொல்றேன். இது என் கருத்துன்னு சொல்றேனே தவிர, இதுதான் முத்திரைன்னு கொள்ளக்கூடாதுன்னு கேட்டுக்கொள்கிறேன்.

மாறன் : இல்லை அய்யா. இந்தத் தலைமுறையிலே நீங்கள்தான் பகுத்தறிவு வாதத்தை இப்படி நல்லாச் சொல்றீங்க.

பெரியார் : என்னமோ சொன்னேன் (சிரிப்பு)

மாறன் : அய்யா, இந்தத் திருமண முறைகளிலே எல்லாம் ரொம்ப மாறுதல் பண்ணி எவ்வளவோ புரட்சிகள் செய்திருக்கீங்க. அந்தக் காலத்திலே எத்தனையோ பணத்தை செலவழிச்சு, எத்தனையோ குடும்பங்கள் கெட்டுப்போச்சு. அதோடுகூட அந்த மூடநம்பிக்கைகளை எல்லாம் சேர்த்து வைச்சிருந்தாங்க—விழாக்கள், குடும்பத்தில் நடக்கிற கைங்கரியங்களிலே எல்லாம். இப்ப அதெல்லாம் நீங்கிவருது. ஆக, பல விதத்திலே தாங்கள் இந்த நாட்டுக்குப் பணி செய்து, நல்லா முன்னேறி இருக்கிறோம்; நாடும் முன்னேறியிருக்குது.

பெரியார் : அது சரி. அப்படி ஒண்ணும் இல்லே.

மாறன் : அவர்களுடைய சார்பிலே உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் : ரொம்ப என்னுடைய வாழ்த்துக்கள்.

மாறன் : வணக்கங்க!

[5-1-1970-ல் திருச்சி வானொலி ஒலிபரப்பு]

3. பெரியாருடன் பேட்டி

[எழும்பூர் பெரியார் திடலிலுள்ள 'விடுதலை' அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள இருக்கையில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கட்டிலில் அமர்ந்திருக்கிறார். 'கலைமகள்' பற்றி அருகிலுள்ள 'விடுதலை' நிருவாகி திரு. சம்பந்தத்திடம் விசாரித்தவாறு என்னை அன்புடன் வரவேற்று, 'உட்காருங்க' என்றார். பனியனுக்குமேல் தமக்குப்பிடித்த கறுப்புச் சட்டை அணிந்திருக்கிறார். வெண்மையான முடியும், தாடியும் இவரது சிவந்த மேனிக்கு அளிக்கும் கம்பீர்யமே அலாதிதான். வட்டமான மூக்குக் கண்ணாடியின் வழியே ஊடுருவிப்பார்த்து, 'என்ன கேக்கப்போறீங்க? கேளுங்க' என்கிறார்.]

'நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?' என்று கேட்கிறேன்.

'எட்டு, ஒன்பது வயசு வரைக்கும் ஈரோட்டிலே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படிச்சேன். அப்புறம் ஒரு ரூபாய் கொடுத்து அம்மை குத்திக்கொண்டு 'மாடல் ஸ்கூல்'லே சேர்ந்து படிச்சேன். நாலாவது அதாவது போர்த் ஸ்டாண்டர்ட் வரைக்குந்தான் படிச்சேன். அதுக்குமேலே படிக்கமுடியல்லே. கடைக்கு வந்துட்டேன்.'

'உங்கள் தகப்பனாரின் கடையா?'

'ஆமாம். கடையிலே மூட்டைக்கு விலாசம் போடறது முதலான எல்லா வேலைகளையும் கவனிச்சுக்கிட்டிருந்தேன்.'

'உங்கள் அண்ணா அதிகம் படித்தாரா?'

'அவரு படிச்சாரு. லோயர் போர்த் பாரம் வரை படிச்சாரு. அந்தக் காலத்திலே 'அப்பர் போர்த் பாரம்' படிச்சிருந்தா தாசில்தார் பதவி வரைக்கும் போகலாம்.'

'தினமும் குளிப்பதில் உங்களுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்று சொல்லுகிறார்களே; அது மெய்தானா?'

'குளிக்கவேணுங்கிற ஞாபகமே எனக்கு வர்றதில்லை. அதை ஒரு தொந்தரவாகவே நினைக்கிறேன். இப்ப நான் குளிச்சு ஆறுநாள் ஆச்சு. அந்தக் காலத்திலே, நான் சின்னப் பையனா இருந்தப்போ, எங்க வீட்டிலே எல்லாரும் தவறாமே குளிப்பாங்க. சந்தைக்குப் போய் வந்தா குளிப்பாங்க. போன இடத்திலே பல பேர்மேலே பட்டிருப்போமே, தீட்டாயிருக்குமே என்று குளிப்பாங்க. ஏன்? கக்கூஸ் போயிட்டு வந்தாக்கூடக் குளிப்பாங்க. 'தீட்டு' 'தொடக்கூடாது' என்பதிலெல்லாம் அவ்வளவா லட்சியமில்லை எனக்கு. வீட்டிலே என்னை அடக்கிப் பாத்தாங்க. முடியல்லை.'

'நீங்கள் எவ்வாறு நாத்திகரானீர்கள்?'

'நான் அதுக்காகன்னு ஒண்ணுமே படிக்கல்லே; ஆராய்ச்சி பண்ணலே. பக்குவம் அடையல்லே. என் பகுத்தறிவுக்கு எட்டினதைச் சொல்றேன்.'

'கடவுள் இல்லை' என்று சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கிற மாதிரி, ஆத்திகர்களுக்குக் 'கடவுள் இருக்கிறார்' என்று சொல்லவும் உரிமை உண்டல்லவா? பின் எதனால் 'கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி' என்றெல்லாம் கூறுகிறீர்கள்?'

'எதனாலே கடவுள் இருக்கிறார்னு நீங்க சொல்றீங்க? சம்பாதிச்சவன், லாபம் அடைஞ்சவன் எவனும் 'எல்லாம் கடவுளாலே கிடைச்சுது'ன்னு சொல்றதில்லையே! தன்னுடைய திறமையாலே கிடைச்சுதுன்னுதானே நினைக்கிறான்? கடவுளை நம்பி மேன்மை அடைஞ்சவன், 'இதெல்லாம் கடவுள் சக்தி'ன்னு சொல்லுறானா? திருட்டுப் போனால் போலீசுக்குத் தகவல் சொல்லுகிறோம். பணம் இருந்தால் பெட்டியிலே வச்சுப் பூட்டறோம். இதெல்லாம் கடவுள் செயலா? இதுக்கெல்லாம் கடவுள் எதுக்கு? கடவுள் இருக்காருன்னு சொல்ல உரிமை உண்டுங்கிறீங்க. சோறு திங்க உரிமை உண்டு; சாணி

திங்க உரிமை உண்டான்னு கேட்கிறேன். இருக்கிறவரைக்கும் கடவுள், சாமின்னு சொன்னவங்க என்ன சுகத்தைக் கண்டாங்க ?'

'கடவுள் உண்டா, இல்லையா' என்ற வாதத்துக்கு முடிவேது? எனவே இதைத் தொடர்ந்து வாதிப்பது உசிதம் அல்ல என்று கருதி, இந்தப் பிரச்சினையை விடுத்து அடுத்த கேள்விக்கு வருகிறேன்.

'ஈரோட்டில் உள்ள ஒரு பிள்ளையார் கோயிலுக்கு நீங்கள் 'டிரஸ்டி' என்று சொல்கிறார்களே; அது உண்மைதானா?'

'ஆமாம். அது முதல்லே பிள்ளையார் கோயிலா அமையலே. எனக்குக் குழந்தை இல்லையே என்று பெரியவங்க நாகப் பிரதிஷ்டை செய்தாங்க. 1898ஆம் வருஷம். அரச மரத்துக்கும் வேப்ப மரத்தக்கும் கலியாணம் செய்து வச்சாங்க. குழந்தை பிறக்கல்லே. அங்கே அப்புறந்தான் பிள்ளையார் வந்தது.'

'உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் யார்?'

'எல்லாருமே; என்னோடு நெருங்கிப் பழகிய எல்லாரும் எனக்கு நண்பர்கள். நண்பர்கள் கூட்டத்திலே நான் தலைவன். ராஜாஜியுடனும் நெருக்கம் அதிகம். அப்புறம் ஜஸ்டிஸ் கட்சியோடு தொடர்பு ஏற்பட்டது. அதிலே பலபேர் நண்பர்கள். குறிப்பிட்டு யாரைச் சொல்றது? நான் எல்லாருக்குமே நண்பன்தான்.'

'சமீபத்திலே, கல்லூரிகளையெல்லாம் மூடிவிடவேண்டுமென்று சொன்னீர்கள் இல்லையா?'

'ஆமாம். சொன்னேன்.'

'நீங்களே லட்சக்கணக்கிலே பணம் உதவி, திருச்சியிலே ஒரு கல்லூரி ஏற்பட உதவி செய்தீர்கள். அதை எல்லாருமே ஒருமுகமாகப் பாராட்டுகிற நிலையிலே, கல்லூரிகளை மூடிவிடவேண்டுமென்று ஏன் சொன்னீர்கள்?'

'நான் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. படிச்சவனுக்கு வேலை கிடைக்கல்லியே! ஒரு பையன் எட்டாம் வகுப்பு வரைக்கும் படிச்சா, உடல் உழைப்பிலே அவன் நம்பிக்கை இழக்கிறான். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிடுத்து. உதாரணம் சொல்றேன். 1940-ல் கம்மாளுக்கு 9 அணா, 10 அணா கூலி கொடுத்தேன். கொல்லத்துக்காரனுக்கு ஒரு நாள் சம்பளம் 12 அணா. பெண் பிள்ளைக்கு ஒரு அணாதான் கூலி. இன்னிக்கு எட்டு ரூபாய், 10 ரூபாய் கூலி கேட்கிறாங்க. காரணம், ஜனங்க எண்ணம் படிப்பிலே ஈடுபட்டது. கொஞ்சம் படிச்சவன் மண்வெட்டி கையிலே எடுக்கிறது கவுரவக் குறைச்சல்னு நினைக்கிறான். வேலைக்கு ஆள் இல்லை. இன்னொரு பக்கம் படிச்சவனுக்கு வேலை இல்லை; வேலையில்லாத் திண்டாட்டம். காலேஜ் இருந்து என்ன உபயோகம்?' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்கிறார் பெரியார்.

(அப்பொழுது எங்கள் இருவருக்கும் காபி வழங்கப்படுகிறது. 'சாப்பிடுங்க' என்கிறார் பெரியார்.)

'நீங்கள் தினமும் எவ்வளவு தடவை காபி சாப்பிடுவீர்கள்? உங்களுடைய அன்றாட உணவுப் பழக்கம் எப்படி?'

'காலையிலே 'பெட்காபி' சாப்பிடுவேன். ஆறரை மணிக்கு எழுந்திருப்பேன். யாராச்சும் வந்தாப் பேசிக்கிட்டு இருப்பேன்; இல்லேன்னா படிப்பேன். அப்புறம் இரண்டு இட்லி சாப்பிடுவேன். ரெண்டு மலைப்பழம் சாப்பிடுவேன். காபி சாப்பிடமாட்டேன். மத்தியானம் புலால் உணவு; ஒரு கப் தயிர். இரண்டு வாழைப்பழம். மாலையிலே ஒரு கப் காபி சாப்பிடுவேன். ஒரு நாளைக்கு ரெண்டு வேளை காபி. அப்புறம் இரவிலே இரண்டு

இட்லி; மலைப்பழம். ஒரு நாளைக்கு ஆறு மலைப்பழம் சாப்பிடுவேன். கூட்டம் ஏதும் இல்லாதபோனா எட்டு எட்டரை மணிக்குப் படுப்பேன்.'

'நீங்க எப்பொழுதுமே, எந்தக் கட்சி பதவிக்கு வருகிறதோ அதைத்தான் ஆதரிக்கிறதென்று ஒரு கொள்கை வைத்துக் கொண்டிருப்பதாகப் பலர் கருதுகிறார்கள். அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?'

'ஆளும் கட்சியை நமக்கு வசப்படுத்தப் பார்ப்பேன். நம்ம கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டால் தொடர்ந்து ஆதரிப்பேன். எதிர்த்தால் ஒழிக்க முயற்சி செய்வேன்.' ஒளிவுமறைவின்றிக் கூறுகிறார்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி வினவுகிறேன். பளிச்சென்று பதில் வருகிறது திராவிடத் தந்தையிடமிருந்து.

'குடிப்பது தவறில்லை. கள் குடிச்சுச் செத்தவங்க எவ்வளவு பேர், சொல்லுங்களேன்? நான் குடிக்கிறதில்லை. எப்படியோ அந்தப் பழக்கம் எனக்கு ஏற்படாமே இருந்திருக்கு. ஆனால் நண்பர்களுக்கு வாங்கிக்கொடுத்திருக்கிறேன். கள்ளுக்கடை எல்லாம் மூடி இருந்தாங்களே, அப்போ குடிக்காம இருந்தாங்களா? குடிச்சுக்கிட்டுதான் இருந்தாங்க. ஒருத்தரும் அப்போ குடியைத் தடுக்கல்லே. வருமானம் குறைஞ்சதுதான் மிச்சம். திருட்டுத்தனமாகக் குடிச்சாங்க. திருட்டுப் போறதைத்தான் நான் சொல்லுவேன். பிடித்துக் கொடுக்கிறது என் வேலையில்லையே! ஜனங்க சோம்பேறியாய் ஆனதற்குக் காரணமே மது ஒழிப்புத்தான். கூலி உயரக் காரணம் இதுதான். சினிமாவுக்குப் போறதைவிட இது நல்லதுதான்.'

'வரதட்சிணைக் கொடுமை இப்போது எல்லாச் சாதியினரிடத்திலும் மிகவும் பரவியுள்ளதே, இதை ஒழிக்க நீங்கள் ஏன் பிரசாரம் செய்யக்கூடாது?'

'படிச்சவன், படிக்காதவன் என்ற பேதம் உள்ளவரைக்கும் இந்த நிலை மாறாது. பெண் படிச்சவனை விரும்புகிறாள். ஆண் பிள்ளை படிச்ச பெண்ணைத் தேடறான். படிச்சவங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டுப் போச்சு. போட்டி உண்டாயிடுத்து. அதனாலே வரதட்சிணை வாங்குறது இயற்கையாயிடுத்து. பணம் வாங்கக் கூடாதுன்னா, முப்பது பவுன் நகை போடச் சொல்லுகிறான். நம்ம பொருளாதார அமைப்பு அப்படி ஆயிட்டுது. அப்போதெல்லாம் பார்ப்பனர்களுக்கு மட்டுந்தான் வரதட்சிணை கொடுக்க வசதி இருந்தது. இப்ப எல்லாரும் படிக்கிறாங்க. பெண்களும் இப்போ நிறையப் பேர் படிக்கிறாங்க. வேலைக்குப் போறாங்க. கொடுக்க வசதி இருக்கிறதாலே இது பரவலாயிடுச்சு. 22 வயசு வரைக்கும் பெண்களுக்குக் கலியாணம் செய்யாமல் இருந்தால் வரதட்சிணைக் கொடுமையும் குறைஞ்சு போயிடும். வயசு ஆயிட்டாப் பெண்களே புருஷனைத் தேடிப்பாங்க. வரதட்சிணை மறைஞ்சு போயிடும். முன்னெல்லாம் ரொம்பச் சின்ன வயசிலே பெண்களுக்குக் கலியாணம் செய்து வந்ததாலேதான் இது வளர்ந்து பெருகிப் போச்சு. பெண்கள் ஆண்களை நம்பித்தான் வாழணுங்கிற நிலைமை மாறணும். அப்போ இது சரியாயிடும். சட்டம்போட்டா மட்டும் போதாது. அதைக் கண்டிப்பாய் நிறைவேத்தணும். அமுலாக்க வேணும்.'

'இன்றைய சமுதாயம் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பிருந்த நிலையிலிருந்து மாறுபட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இளைஞர்களிடையே முற்போக்கான கொள்கைகள் பரவி வருகின்றன. சாதிவேறுபாடுகள் குறைந்து வருகின்றன. இருந்தும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையே அவர்கள் பிராமணர்கள் என்ற காரணத்துக்காகத் 'தமிழர் அல்லர்' என்று சொல்லுகிறார்கள். 'கைபர் கணவாய் வழி வந்தவர்கள்' என்றுகூடப் பேசுகிறார்களே! இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?'

இதைக் கேட்ட பெரியார் சிரித்தவாறு, 'ஏன் என்னையே தமிழன் இல்லேன்னு சொல்றாங்களே? என் தாய்மொழி கன்னடம் என்பதாலே சொல்றாங்க. பெரும்பாலானவங்க என்னைத் தெலுங்கர்—நாயுடு என்றே நினைக்கிறாங்க. ஜஸ்டிஸ் பார்ட்டியை ஆரம்பிச்சது சுயமரியாதைக் கொள்கைக்குத்தானே? அதை ஆரம்பிச்சது யார்? சர். பி. டி. செட்டியார்—தெலுங்கர். டி. எம். நாயர்—மலையாளி. நான்—கன்னடக்காரன். தமிழன் யார் இதைச் செய்தான்?' என்று கேட்கிறார்.

பெரியாருக்குத் தமிழ் தவிரக் கன்னடமும் தெலுங்கும் நன்றாகத் தெரிந்த மொழிகள். கன்னடமொழியில் பேச இவருக்கு அதிக வாய்ப்பில்லை. 'நான் தெலுங்கில் பிரசங்கம் செய்வேன். ஆனால் அந்த அளவுக்குத் தாய்மொழி கன்னடத்தில் பிரசங்கம் செய்ய முடிவதில்லை' என்கிறார்.

'விடுதலை' இதழை நீங்கள்தானே துவக்கினீர்கள்? எந்த வருஷம்?

'விடுதலை ஆரம்பித்து முப்பத்தஞ்சு வருஷம் ஆச்சு. 1936-ல் காலணா விலையில் 'விடுதலை'யை ஆரம்பிச்சேன். அதற்கு முன்னால் 'திராவிடன்' நானே நடத்தினேன் (1920). பிறகு, 1925-ல் 'குடி அரசு' ஆரம்பிச்சேன். 'விடுதலை' ஆரம்பிச்ச காலத்திலே பொப்பிலி ராஜா மாசம் ரூ. 250 கொடுத்துவந்தார். நஷ்டஈடு மாதிரி. மாதம் மாதம் செக் கொடுத்துவிடுவார். சில மாதங்களிலேயே பத்திரிக்கை நல்லா ஓடவும் அப்புறம் அது தேவைப்படலே.'

'விடுதலை'யை 'விடுதலை' என்று நீங்கள் எழுதக் காரணம்...?

'தமிழில் எழுத்துக்கள் அதிகம். 'லை', 'னை', 'ணை' இந்த மாதிரி பல எழுத்துகள் தேவையே இல்லாதவை. இதுமாதிரி எழுத்துக்கள் அதிகமா இருக்கிறதாலே தான் தமிழ் மற்ற மொழிகளைவிடக் கஷ்டமாயிருக்கு. இங்கிலீஷ்காரன் சமஸ்கிருத சுலோகங்களைக்கூட ஒப்பிக்கிறான்; ஆனால் தமிழ்ப் பாட்டுகளை அவனாலே படிச்சு ஒப்பிக்க முடியல்லே. எனக்குத் தெரிந்த கலெக்டர் ஒருத்தர்—இங்கிலீஷ்காரர்—தெலுங்கு நல்லாப் பேசுவாரு. ஆனால் அதுமாதிரி அவராலே தமிழ் பேசமுடியாது. தமிழ் எழுத்துக்களில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். எழுத்துக்களின் எண்ணிக்கை கொறைஞ்சால் படிக்கிறது சுலபமாகும்.'

'தமிழைக் 'காட்டுமிராண்டி பாஷை' என்று நீங்கள் குறிப்பிட்டீர்களே...?'

'ஆமாம், சொன்னேன். என்ன தப்பு? ஒருத்தனோடு ஒருத்தன் சண்டை போட்டுக்கிட்டுத் தமிழிலே திட்டறானே...எப்படித் திட்டறான்? சண்டைக்காரனைமட்டுமா திட்டறான்? அவன் அம்மா, அக்கா, பொண்டாட்டி—எல்லாரையும்னா இழுக்கிறான்? (இந்த இடத்தில் சில நடைமுறைத் தமிழ் வசவுகளை உதாரணத்துக்குக் குறிப்பிடுகிறார் திரு. பெரியார். அவற்றை நான் எழுதாமலே வாசகர்கள் புரிந்து கொள்ளக் கூடுமே?) அதேமாதிரி சண்டைவந்து இங்கிலீஷ்லே திட்டினா 'பூல்'னு திட்டலாம்; 'இடியட்'னு திட்டலாம். தமிழிலே திட்டறமாதிரி அவ்வளவு கேவலமாகத் திட்டறதுண்டா? அதுவும், கிராமங்களிலே பெண்பிள்ளைங்க சண்டைபோட்டுக்கிறதைக் கேட்டா நான் சொல்லறது புரியும்' என்று பெரியார் கூறும்போது, அருகிலுள்ள திரு. என். என். சம்பந்தம், 'ஏன் அய்யா! இங்கே சென்னையிலேமட்டும் என்ன வாழுது? அதைவிட மோசமாயிருக்கு!' என்கிறார்.

பெரியார் தலையாட்டியவாறே, 'உம்; அப்படியா? அப்போ நான் சொன்னதிலே என்ன தப்பு? இந்திமேலே இருந்த துவேஷம் தமிழ்மேலே அன்பா மாறித்து. அதுதான் உண்மை. குழந்தைகளெல்லாம் வீட்டிலேயே இங்கிலீஷில் பேசவேணும். அது நல்ல நாகரிகத்தையும் கொண்டு வரது. ஏன் 'குறளை' எடுத்துக்குங்க! நான் மட்டுந்தான் குறளைக் கண்டிக்கிறேன்.'

'ஏன் கண்டிக்கிறீர்கள்?'

'குறளோடு நின்னுட்டா வளர்ச்சியே குன்றிவிடுமேன்னுதான். குறள் இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தினது. பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கிவிட்டது. பெண் ஒழுக்கம் பற்றி எவ்வளவு சொல்லி இருக்கு 'குறள்'லே? ஆண் ஒழுக்கம்பத்தி...? '...தாம் வீழ்வார்' ...என்ற குறளைப் பாருங்க அதுதான் மோட்சம் என்கிறார் வள்ளுவர். அந்தக் காலத்து நாகரிகம் அப்படி. இந்தக் காலத்துக்குக் குறள் கருத்துக்கள் எல்லாமே ஒத்துவர முடியுமா? நான் குறள்மாநாடு நடத்தியதாலே சில பேர் என்னைக் கண்டிச்சாங்க. கலைஞர் கூட 'அதை (குறள்) ஒண்ணையாவது விட்டுவிடக் கூடாதா'ன்னு கேட்டாரு. குன்றக்குடி அடிகளாரும் கேட்டுக்கிட்டாரு. இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியது குறள். அதை அப்படியே இப்பவும் நாம் ஏத்துக்கணும்னா...?' தம் மனதுக்குச் சரியென்று படாத எந்தக் கருத்தையும் யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளுவதில்லை பகுத்தறிவுத் தந்தை. கட்டுப் பாடுகளை அறவே வெறுப்பவர் திரு. ஈ. வெ. ரா.

அதுபற்றி அவர்கூறுகிறார்: 'கட்டுப்பாடு எதுவுமே தேவை இல்லை என்பவன் நான். இளமையிலேயே நான் எதிலும் கட்டுப்பட்டதில்லை. திருடக்கூடாதுன்னா, ஏன்? என்று யோசிப்பேன், அப்பவே. திருடறது 'பாவம்'னா ஒப்புக்கமாட்டேன். மதத்தின் பேராலே மக்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிச்சிருக்காங்க. அதனாலே ஜனங்கள் பிரீயாக (சுதந்திரமாக) இருக்கமுடியல்லே. என் வீட்டிலே வளர்ற இந்த சின்னப் பிள்ளைங்க, என்னை 'அப்பா'ன்னு கூப்பிடறாங்க. அன்பா இருக்காங்க. நாளைக்கு இவங்க வளர்ந்து பெரியவங்க ஆனா, சாமி கும்பிடுவாங்களா? மாட்டாங்க! எந்தக் கட்டுப்பாடும் தேவை இல்லை. உணவுக் கட்டுப்பாடுந்தான்! உடம்புக்குக் கெடுதி செய்கிற எதையும் திங்க வேண்டாம். ஆனா ஆடுதின்னறவன் மாடுதின்னக் கூடாதா? ஆடும் புல்தான் தின்னறது. மாடும் புல்தான் தின்னறது. மாடு தின்னாப் 'பாவம்'னு சொல்றாங்க. காரணம், மதக் கட்டுப்பாடுதானே! மனித சமுதாயத்தின் மனத்தை மாத்தவேணும். திருடினாப் பாவம்னு சொன்னாப் போதாது. திருடவேண்டிய அவசியம் இல்லாத வகையிலே சமுதாய நிலையை மாத்தணும்.' ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்து அவர் கூறும் கருத்துக்கள் நம்மையும் சிந்தனையில் ஆழ்த்துகின்றன.

தமது சொற்பொழிவுகளில் அவர் 'சாதி'யைக் குறிப்பிடுவதுண்டு. அதுபற்றிக் கேட்டதற்கு 'மதம், கடவுள் எல்லாம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே ஏற்பட்டது. அதையே பின்பற்றுவதால் இன்றைய உணர்ச்சி ஜனங்களுக்கு வரவில்லை. நாளடை விலே மக்கள் அதிகம் சிந்திப்பாங்க. அவங்க சீர்திருந்தவேண்டுமே என்பதுதான் என் நோக்கம். துவேஷம் இல்லை. துவேஷ அடிப்படையில் சொன்னால்தான் ஜனங்கள் சிந்திப்பாங்க; சீர்திருந்துவாங்க' என்றார் பெரியார்.

'இராஜாஜிபற்றி உங்கள் கருத்து என்ன?' என்று வினவுகிறேன். இராஜாஜி அவர்கள் அமரர் ஆகிய மூன்றாவதுநாள் நிகழ்ந்த பேட்டி இது.

'நான் 'விடுதலை'யிலே நேத்து தலையங்கம் எழுதி இருக்கேன். அதைப் பாருங் களேன்' என்று பெரியார் கூறுகிறார். விடுதலை நிருவாகி திரு. சம்பந்தம் 26-12-72 தேதியிட்ட 'விடுதலை' இதழ் ஒன்றினை என்னிடம் கொடுத்து 'அய்யா கைப்பட எழுதிய தலையங்கம் இது' என்கிறார்.

'அந்தக் கையெழுத்துப் பிரதி இருக்கிறதா?' என்று கேட்டு அதனையும் வாங்கிப் பெரியாரின் கையெழுத்தைப் பார்க்கிறேன். அமரர் இராஜாஜிபற்றிப் பெரியார் எழுதிய தலையங்கத்தின் கையெழுத்துப் பிரதியில் முதல் பக்கத்தை வாசகர்களின் பார்வைக்கு அப்படியே சமர்ப்பிக்கிறோம். அதனைப் படித்துப் புரிந்துகொண்டு அச்சுக் கோப்பது 'விடுதலை' அலுவலகத்தினருக்கு எளிது என்று கூறுகிறார் திரு. சம்பந்தம். ஆனால் நமது வாசகர்களுக்கு அப்படி இராதெனத் தோன்றுவதால் அதன் வாசகம் இதோ:

இராஜாஜியின் மறைவு: 'தமிழ்நாட்டில் ஒப்பிலா மணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் இராஜாஜி 95ஆம் வயதில் முடிவெய்தி மறைந்துவிட்டார். அவரது பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு தெரிவிக்கவேண்டுமானால் இராஜாஜி இல்லாது இருந்திருந்தால் மகாத்மா காந்தியே இருந்திருக்கமாட்டார். இது மாத்திரமல்ல. இந்திய தேசிய காங்கிரசே இருந்திருக்க மாட்டாது.'

தலையங்கத்தின் இறுதியில் பெரியார் கையெழுத்திட்டுள்ளார். இது போன்ற முக்கியமான சந்தர்ப்பங்களில் அவரே கைப்பட எழுதுகிறாராம். நிரம்பப் படிப்பதும் உண்டாம்.

இராஜாஜி வயதில் பெரியவரா அல்லது நீங்களா? என்று பெரியாரைக் கேட்கிறேன். பலருக்கு இந்த அய்யம் உண்டல்லவா?

'அவர்தாம் பெரியவர். அவர் கவர்னர் ஜெனரலா இருந்தபோது ஒரு சமயம் நான் அவருடைய வயதைக் கேட்டேன். அப்போ தெரிஞ்சுது அவர்தான் மூத்தவர்னு. அவர் டிசம்பர் 1878. நான் பிறந்தது 17-9-1879. கிட்டத்தட்ட ஒன்பது மாசம் அவர் என்னை விடப் பெரியவர்' என்று விளக்குகிறார் பெரியார். அமரர் இராஜாஜி 'பெரியவர்'; திரு. ஈ. வெ. ரா 'பெரியார்.'

விடைபெறுமுன் 'மக்களுக்கு நீங்கள் கூற விரும்பும் சேதி ஏதாகிலும் உண்டா?' என்று கேட்கிறேன்.

'இன உணர்ச்சி, காலித்தனம் கூடாது' என்கிறார் பெரியார்.

பெரியாருடன் உரையாடுவது ஒரு சுகமான அனுபவம். என்ன கேள்வி கேட்டாலும் 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்ற வகையில் எதையும் பூசி மெழுகாமல் நறுக்குத் தறித்தாற்போல் பதிலிறுக்கிறார். 'சிந்தனைக்குத் தெளிவாகாத விஷயங்களை நம்புவதை நான் ஏற்க முடியாது' என்று கூறும் இந்தப் பகுத்தறிவாளர், குழந்தை உள்ளம் படைத்தவர். தொண்ணூற்று நான்கு வயதிலும் தெளிவாக ஆழ்ந்து, சிந்தித்துத் தடுமாற்றமோ, குழப்பமோ இல்லாமல் கருத்துக்களை வெளியிடுகிறார். இப்படிச் சொன்னால் எதிராளி என்ன நினைப்பானோ என்று அவர் கவலைப்படுவதே இல்லை.

இவருடைய மேடைப் பேச்சுக்களில் அடிக்கடி 'வெங்காயம்' என்ற சொல் அடிபடுவது வழக்கம். இந்தப் பேட்டியின்போது ஒருமுறைகூட அந்தச் சொல்லினை அவர் கையாளவில்லை. நூறு நிமிஷங்கள் ஓடினதே தெரியவில்லையே!

[27-12-1972-ல் திரு. பாணன் அவர்களின் பேட்டி—'கலைமகள்' பிப்ரவரி, 1973]

4. என் வாரிசு யார்?

கேள்வி: உங்களுடைய அரசியல் வாரிசு யார்?

பதில்: எனக்கு அரசியல் வாரிசு என்று யாரும் கிடையாது; என்னுடைய கொள்கைகளும் கருத்துக்களும்தான் வாரிசு; வாரிசு என்பது தானாகவே ஏற்படவேண்டும்.

கேள்வி: உங்களுடைய கொள்கைகள், கருத்துக்கள், எண்ணங்கள், கோட்பாடுகள் இவைகளைப் பரப்ப ஊர் தோறும் பகுத்தறிவுப் பிரச்சார நிலையங்கள் அமைக்கப் போகிறீர்களா?

பதில்: இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் என்னென்னவோ செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தேன். ஆனால், இப்போதுள்ள சூழ்நிலையில் விடுதலைப் போராட்டம்தான் முக்கியமாகத் தெரிகிறது.

கேள்வி : முன்பு ஒரு முறை திருச்சியில் நடந்த 'சிலை திறப்பு விழாவில்' 'தமிழ்' காட்டுமிராண்டி மொழி என்று சொன்னீர்களே! அப்படியானால் தமிழர்கள் காட்டுமிராண்டிகளா?

பதில் : 'தமிழ்' காட்டுமிராண்டி மொழி என்று சொல்லக் காரணம்-இன்றைக்கும், 2000 ஆண்டுகளுக்கு முன்பு எந்த மூடப் பழக்கவழக்கங்களில் இருந்து வந்தோமோ, அதில் தானே இன்னும் இருந்து கொண்டு இருக்கிறோம். அந்தப் பழக்க வழக்கங்களில் இருந்து நம்மை இன்னும் நாம் மாற்றிக்கொள்ளாமல், 2000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவற்றையே உதாரணங்கள் காட்டிக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வந்தால் அதற்கு என்ன பொருள்?

கேள்வி : தமிழ் இலக்கியங்களை நீங்கள் குறை கூறுவது ஏன்?

பதில் : தமிழ் இலக்கியங்களை எழுதிய புலவர்கள் அவற்றைக் கடவுளோடும், மதத்தோடும் இனத்தோடும் இணைத்து எழுதி வைத்திருக்கிறார்களே தவிர, தமிழ் வளர வேண்டும் என்பதற்காக என்ன செய்து வைத்திருக்கிறார்கள்? தமிழ் என்றாலே சைவம், மதம், கடவுள் என்று நினைக்கிறானே தவிர, மக்கள் வாழ்க்கைக்கு, வளருவதற்கு எவனும் எதுவுமே சொல்லவில்லையே!

அதை எப்படி நம்முடைய வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும், ஏற்றுக்கொள்ள முடியும்? இன்னமும் அரசியல் சட்டத்திலும்கூட, மதமும் இனமும் சாதியும் வளர்க்கப் படுகிறதே தவிர, அதை மாற்ற எவன் என்ன வழி சொல்லியிருக்கிறான்?

['மாலை முரசு'—16-9-1973]

5. என் பழக்கங்கள்

கேள்வி : தங்களைப் போல் 95 வயது வரையிலும் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில் : எப்போதும் 'ஆக்டிவாக' (சுறுசுறுப்பாக) இருக்கவேண்டும்.

கேள்வி : இந்த வயதிலும், தாங்கள் பல மைல்கள் சுற்றுப் பயணம் செய்கிறீர்களே, உடல்நலம் பாதிக்காதா?

பதில் : வயதிற்கும், இதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. என்னைப் பொறுத்த வரை சும்மா இருக்கப் பிடிக்காது. சுற்றுப்பயணம் செய்தால்தான் நன்றாக இருக்கிறது.

கேள்வி : எத்தனை மணி நேரம் தூங்குகிறீர்கள்?

பதில் : சாதாரணமாக இரவு 8, 9 மணிக்குத் தூங்கிவிடுவேன். பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் இருந்தால், இரவு 11 மணிக்கு, 12 மணிக்கு மேல் தூங்குவேன். எப்படியும், 8 மணி நேரம் தூங்கிவிடுகிறேன்.

கேள்வி : தங்கள் உணவுப் பழக்கம் என்னென்ன?

பதில் : எப்பொழுதும், காலை 6 மணிக்கு எழுந்துவிடுவேன். 8 மணிக்கு 2 இட்டிலி, ஒரு வாழைப்பழம் சாப்பிடுவேன். முன்பெல்லாம், 4, 3 வாழைப் பழங்கள் சாப்பிட முடிந்தது. ஆனால் இப்போது ஒரு பழத்திற்கு மேல் சாப்பிட முடியவில்லை. அதன் பிறகு, பார்வையாளர்களைச் சந்திப்பேன். இடையிடையே சிறிது காப்பி, பால் அருந்துவேன். மதியம் 12 – 1 மணிக்குள் ஒரு கரண்டி சாதம், சிறிதளவு மாமிசம், தயிர், குருமா, ஒரு வாழைப் பழம் இதுதான் ஆகாரம். மாமிசம் சாப்பிடாவிட்டால், அவ்வளவு திருப்திகரமாக இருக்காது.

நிருபர் : மாமிசம் சாப்பிடுவதால் ஜீரண சத்தி பாதிக்கப்படவில்லையா?

பதில் : என்னைப் பொறுத்தவரை, மற்ற உணவுப் பதார்த்தங்களைவிட மாமிசம் சாப்பிட்டால் ஜீரணமாகிவிடுகிறது. அதனால் எந்தவிதத் தொந்தரவும் கிடையாது. மாமிசம் இல்லாவிட்டால்தான் தொந்தரவு. இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள் 2 இட்டிலி, ஒரு வாழைப் பழம், ஒரு டம்ளர் பால், அத்துடன் சரி. காப்பியும், பாலும்தான் முக்கிய உணவு.

கேள்வி : பொதுக்கூட்டங்கள், மற்ற நிகழ்ச்சிகள் உள்ள நாட்களில் என்ன செய்வீர்கள்?

பதில் : பொதுக்கூட்டங்கள், இரவு 10 – 11 மணிக்கு முடிந்ததும் அதன் பின்பு தான் சாப்பிடுவேன்.

கேள்வி : ஒரு நாள் பொழுதை எப்படிக் கழிக்கிறீர்கள்?

பதில் : முன்பெல்லாம் நிறையப் புத்தகங்கள் படிப்பேன்; எழுதுவேன். ஆனால் இப்போது படிக்கக் கஷ்டமாக இருக்கிறது. எழுதுவதற்குச் சலிப்பாக இருக்கிறது.

யாராவது கட்டுரைகள் கேட்டால் எழுதித் தருவேன். அத்துடன் முன்பு மாதிரி மூளை தெளிவாக இல்லை. கஷ்டப்பட்டுச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. முன்பெல்லாம் ஒன்றைப் பற்றித் தொடர்ச்சியாக வரும். ஆனால் இப்பொழுது நினைவாற்றல் குறைந்துவருகிறது.

கேள்வி : மது அருந்தும் பழக்கம் பற்றித் தங்கள் கருத்து என்ன? தங்களுடைய அனுபவத்தை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

பதில் : இது நாள் வரை நான் மதுவை அருந்தியதே யில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரை பலருக்கு வாங்கிக்கொடுத்து இருக்கிறேன். மது அருந்துவதால் கெடுதி இல்லை. அளவுக்கு மேல் போனால்தான் எதுவுமே கெடுதலே தவிர, அளவோடு இருந்தால் எந்தவிதக் கெடுதலும் இல்லை. 100-க்கு 90 பேர் அளவோடுதான் குடிக்கிறார்கள்.

கேள்வி : முன்பெல்லாம் மாலை நேரங்களில் கார் மூலம் உலாவப் போவீர்களே, இப்போது போவதுண்டா?

பதில் : என்றைக்காவது ஒரு நாள் போவேன். முன்புபோல் இப்போது போக முடிவதில்லை. பொழுது போகவே கஷ்டமாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட சமயங்களில் போவதுண்டு.

கேள்வி : கிளர்ச்சி, போராட்டம் நடத்த வேண்டும் என்கிறீர்களே, அது எப்படி இருக்கும்?

பதில் : என் உடல் வேண்டுமானால் தளர்ந்திருக்கலாம். ஆனால், நான் அவற்றில் நேரடியாகவே ஈடுபட நினைக்கிறேன். நான் என்ன சொல்லுகிறேனோ, அதை நானே முன்னின்று செய்தால்தானே நன்றாக இருக்கும்? ஒதுங்கிக்கொள்வது என்பது எனக்குப் பிடிக்காது.

கேள்வி : ஒரு குறிப்பிட்ட இனத்தார்மீது தங்களுக்கு வெறுப்பு ஏற்படக் காரணம், தாங்கள் அரசியலில் ஈடுபட்ட சமயத்தில் முதல் முதலாக ஒரு விருந்தில் தாங்கள் அலட்சிய மாக நடத்தப்பட்டதுதான் என்று சொல்லப்படுகிறதே, அதுதான் உண்மையா?

பதில் : எனக்கு, யார் மீதும் வெறுப்புக் கிடையாது. நான் எதையும் லட்சியம் செய்யாமல், முரட்டுத்தனமாக யதேச்சையாகத் திரிந்தேன். அந்தச் சமயத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும் சமுதாயத்தில் இருந்த மூடப்பழக்க வழக்கங்களும்தான் காரணமே தவிர, வேறு காரணம் எதுவுமில்லை. ஆனால், அந்தக் காலத்தில் விருந்துகளில்கூட நம்மை மிக இழிவாகவும், தரக் குறைவாகவும் நடத்தி ஒதுக்கியே வந்தார்கள்.

['மாலை முரசு'—16-9-1973]

4. அறிவுரை

1. ஆசிரியர்களுக்கு

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று நீங்கள் எனக்குச் செய்த வரவேற்பு, ஆடம்பரம், உபசாரம், வரவேற்புப் பத்திரம் முதலியவைகளைக்கண்டு எனது மனம் மிகவும் வெட்கப்படுகிறது. இவ்வித ஆடம்பரங்களுக்கு நான் எந்த விதத்தில் தகுந்தவனென்பது எனக்கே தெரியவில்லை. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் என்று சொல்லப்பட்ட பெருத்த கல்விமான்களாகிய உங்களது மாநாட்டுக்கு, அக் கல்வியை ஒரு சிறிதும் பயிலாத நான் எவ்விதத்தில் தகுதியுடையவனாவேன்? உங்களின் அன்பான வேண்டுகோளை மறுக்கப் போதிய தைரியமில்லாத காரணத்தாலேயே ஒருவாறு இப் பதவியை ஏற்கவேண்டியவனாக இருக்கிறேன். என்னுடைய வாழ்நாளில் சுமார் 2 வருஷ காலந்தான் நான் பள்ளியில் படித்திருப்பேன். அவ்விரண்டு வருஷமாகிய எனது 8 வயதுக்கு மேல்பட்டு 11 வயதுக்குள்பட்ட காலத்தில் நான் பாடம் படித்த காலத்தைவிட உபாத்தியாயரிடம் அடிபட்ட காலந்தான் அதிகமாயிருக்கும். இதையறிந்த என் பெற்றோர்கள், 'இவன் படிப்புக்கு இலாயக்கில்லை' என்பதாகக் கருதித் தாங்கள் செய்துவந்த தொழிலாகிய வர்த்தகத்தில் என்னுடைய 11-வது வயதிலேயே ஈடுபடுத்திவிட்டார்கள். இந்த 2 வருஷக் கெடுவிலேயும் என் கையெழுத்துப் போடத்தான் கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். ஆகவே, கல்வி முறையிலும் உங்கள் குறைகளைப்பற்றியும் நான் உங்களுக்கு எந்த விஷயத்தையும் சொல்லக்கூடிய சக்தி என்னிடத்தில் இல்லை. ஏதோ என் புத்தி அனுபவத்திற்கெட்டியவரையில் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன்.

தற்கால ஆசிரியர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியத் தொழிலை ஒரு புனிதமான கடமையென்பதாகக் கருதிப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாலும், அத் தொழிலுக்குரிய கடமைகளைச் சரியானபடி உணர்ந்து நடப்பதற்கில்லாத நிலையில் இருந்துகொண்டு, அத் தொழிலைத் தங்கள் வயிற்றுப்பாட்டிற்கு நடத்தி வருவதே வழக்கமாய் இருக்கிறது. ஆசிரியர்கள் இம் மாதிரி மகாநாடுகள் கூடிப் பேசுவதும், தீர்மானிப்பதும், தங்களுக்குச் சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும், தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்ளவுமே யல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவோ, தேச முன்னேற்றத்திற்கு அனுகூலமான கல்வியைப் போதிக்கும் சக்தியை யடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவே இல்லை.

முதலாவது, நீங்கள் படித்த கல்வியும் நீங்கள் கற்றுக்கொடுக்கப்போகும் கல்வியும் வயிற்றுப் பிழைப்புக்கு ஓர் ஆதாரமாகக் கருதிக் கற்கவும், கற்பிக்கப்படவும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல், மக்கள் அறிவுத் தத்துவத்திற்கோ, தேசத்திற்கோ, ஒழுக்கத்திற்கோ ஒரு பலனையும் அளிக்க முடியாததாய் இருக்கிறது என்பது நீங்கள் அறிந்த விஷயமேதான். ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி, சகலகலா கல்வி என்பது வரையிலும் கவனித்தால், தற்காலம் அடிமைத் தன்மையையும், சுயமரியாதையற்ற தன்மையையும் உண்டாக்கிக் கொடுமையான ஆட்சிமுறைகொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவிசெய்து வயிறு வளர்க்கும் தேசத் துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகத்தானே இருக்கிறதேயல்லாமல் வேறென்ன இருக்கிறது?

சாதாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்ற பெயரையே யாருக்கு உபயோகப் படுத்தலாமென்றால், முதலில் நமது பெண்மக்களுக்குத்தான் உபயோகப்படுத்தலாம். ஏனெனில், நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களுடைய தாய்மார்களாகிய

நமது பெண்களேயாவார்கள். அக் குழந்தைகளுக்கு 6, 7 வயதுவரையிலும் தாய்மார்களே தான் உபாத்தியாயர்களாக இருக்கிறார்கள். மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களிலும் இவைதான் காணப்படுகின்றன.

எனவே, இரண்டாவதாகத்தான் நீங்கள் ஆசிரியர்கள் ஆவீர்கள். நீங்களிருவரும் எப்படிப் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றீர்களோ அப்படியே அவர்கள் தேசத்திற்கும், தேச நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும் உரிய மக்களாய் வாழக்கூடும். எனவே தேசம் மக்களாலும், மக்கள் ஆசிரியர்களாலும் உருப்பட வேண்டி இருக்கிறது. ஆனால், அப்பேர்ப் பட்ட ஆரம்ப ஆசிரியர்களாகிய பெண்களோ நமது நாட்டில் பிள்ளைபெறும் இயந்திரங்க ளாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது அறிவுண்டாக நாம் இடங்கொடுத்தா லல்லவா, பிள்ளைகளுக்கு அறிவுண்டாக்க அவர்களால் முடியும்? ஆகவே, அந்த முதலாவது ஆரம்ப ஆசிரியர்களின் யோக்கியதை இப்படியாய்விட்டது!

அடுத்தாற்போலுள்ள, இரண்டாவது ஆரம்ப ஆசிரியர்களாகிய உங்கள் யோக்கிய தையோ உங்கள் வயிற்றுப்பாட்டுக்கு 'கான்பரன்ஸ்' கூட்டவேண்டியதாகப் போய் விட்டது. உங்கள் இருவர்களாலும் கற்பிக்கப்படப்போகிற பிள்ளைகள், எப்படித் தக்க யோக்கியதை அடையமுடியும்? கல்வியென்பது வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரமல்ல; அது அறிவுக்காகவும் ஏற்பட்டது என்பதாக நாம் எடுத்துக்கொண்டால், மக்கள் சுயமரி யாதையோடும், சுதந்திரத்தோடும், மற்ற மக்களுக்கு இன்னல் விளைவிக்காமலும், அன்பு, பரோபகாரம் முதலியவைகளோடும் கண்ணியமாய் உலக வாழ்க்கையை நடத்தத் தகுந்த ஞானமும் உண்டாகத் தக்கதாக இருக்கவேண்டும். இவைகளை அறிந்தே வள்ளுவரும் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்' என்றும், 'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்றும், 'ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்' என்றும் சொல்லி இருக் கின்றார். இதற்கேற்ற கல்விக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நாய்க்கு நாலு கால், பூனைக்கு வாலுண்டு, கண்ணில்லாதவன் குருடன், திருடாதே, அடிக்காதே என்று சொல்லிக்கொடுப்பதினால் என்ன பலன் ஏற்பட்டுவிடக்கூடும்? இவைகள் எல்லாம் குழந்தைகள், தானாகவே படித்துக்கொள்ளும். ஒருவனை அடித்தால் அவன் திரும்பி அடித்துவிடுவான்; ஒருவனை வைதால் அவன் திரும்பி வைதுவிடுவான்; திருடினால் பிடித்து நன்றாக உதைத்துவிடுவார்கள் என்பதும், நாயும் பூனையும் கண்ணில் பார்க்கும் போதே கால் எவ்வளவு என்பதும், வாலுண்டென்பதும் தெரிந்துகொள்ளுவார்கள். இதற்காக இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டமும், பணச்செலவும், மெனக்கெடும் வேண்டிய தில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

நீங்கள் முதலில் மக்களுக்குச் சுயமரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்; மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்; சமத்து வத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும்; மக்களிடத்தில் அன்பு இருக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்; தேசாபிமானத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும். இவைகளில் ஏதாவது உங்களால் கற்பித்துக் கொடுக்கப்படுகிறதா? என்பதை உங்கள் மனதையே கையை வைத்துக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் மாத்திரமல்ல, உங்களைவிடப் பெரிய சகலகலா வல்லபர்களிடத்தில் படித்து, எம். ஏ., டாக்டர் முதலிய பட்டங்கள் பெற்ற பையன்களும், ஒரு காப்பிக் கடைக்குப் போனால் தனது சுயமரியாதையற்று அங்கு எச்சில் கிண்ணம் தூக்குபவனைக் கண்டு 'சாமி ஒரு கப் காப்பி கொண்டு வா' என்று கூப்பிடுகிறான். தான் மோட்சத்திற்குப் போவதற்கு மற்றொருவன் கையில் பணத்தைக் கொடுத்து அவன் காலில் விழுந்து கும்பிடுகிறான்; தன் தேசத்தையும், மக்களையும் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பதில் போட்டி போடுகிறான். இந்தப் பட்டமெல்லாம் கல்வியாகுமா? இதைப் பெற்றவர்களெல்லாம் படித்தவர்களாவார்களா? வண்ணான், அம்பட்டன், தச்சன்,

கொல்லன், சக்கிலி முதலியோர் எப்படித் தங்கள் தங்கள் தொழிலைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார்களோ, அப்படியே தற்காலம் பி.ஏ., எம்.ஏ., என்ற படித்தவர்கள் என்போர்களும் அந்தப் பாடத்தைக் கற்றவர்களாவார்கள். வண்ணானுக்கு எப்படிச் சரித்திர பாடம் தெரியாதோ, அப்படியே பி.ஏ. படித்தவர்களுக்கு வெளுக்குந் தொழில் தெரியாது. அம்பட்டனுக்கு எப்படிப் பூகோளப் பாடம் தெரியாதோ, அப்படியே எம்.ஏ. படித்தவனுக்குப் பிறருக்குச் சவரம் செய்யத் தெரியாது. சக்கிலிக்கு எப்படி இலக்கண இலக்கியங்களும் வேத வியாக்கியானங்களும் தெரியாதோ, அப்படியே வித்வான்களுக்கும் சாஸ்திரிகளுக்கும் செருப்புத் தைக்கத் தெரியாது. ஆகவே வண்ணான், அம்பட்டன், சக்கிலி முதலியோர்களைவிட பி.ஏ., எம்.ஏ., வித்வான், சாஸ்திரி முதலிய பட்டம் பெற்றவர்கள் ஒரு விதத்திலும் உயர்ந்தவர்களுமல்லர்; அறிவாளிகளுமல்லர்; உலகத்திற்கு அனுகூலமானவர்களுமல்லர். இவைகளெல்லாம் ஒரு வித்தை அல்லது தொழில்தானே தவிர, அறிவாகாது. இவ்வளவும் படித்தவர்கள் முட்டாள்களாகவும், சுயநலக்காரர்களாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும் இருக்கலாம். இவ்வளவும் படியாதவர்கள் பரோபகாரிகளாகவும், அறிவாளிகளாகவும், சுயமரியாதையுள்ளவர்களாகவும் இருக்கலாம். எனவே, இவைகளல்ல கல்வியென்பது நமக்கு விளங்கவில்லையா?

நமது நாட்டின் கேட்டிற்கும் நிலைமைக்கும் முதல் காரணம் தற்காலக் கல்வி முறை என்பதே எனது அபிப்பிராயம். முற்காலத்தில் பனை ஓலையில் எழுதித் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து படித்த படிப்பைவிடத் தற்காலப் படிப்பு மக்களுக்கு என்ன நன்மை செய்துவிட்டது? ஓலைச் சுவடியும் எழுத்தாணியும் ஆற்றுமணலும் போய், காகிதக் குப்பைகளுக்கும் பெரும்பெரும் புத்தகங்களுக்கும் இங்கி, பெட்டி, பேனா, பென்சில்களுக்குமாக நமது பணங்கள் சீமைக்குப் போக ஏற்பட்டிருக்கிறதே யல்லாமல் வேறு பலனுண்டா? 'படிப்பில்லாத' என்கிற முற்காலத்து மக்களைவிட, 'படிப்புள்ள' என்கிற தற்காலத்து மக்கள் ஒழுக்கத்தில் எவ்விதம் உயர்ந்திருக்கிறார்கள்? படிப்பில்லாத காலத்தைவிட அன்பில், அன்னியோன்யத்தில், நம்பிக்கையில் படிப்புள்ள மக்கள் என்ன ஒத்திருக்கிறார்கள்? முன்காலத்தில் ஒருவன் வாங்கின கடனைக் கொடுக்காவிட்டால் அவன் வீட்டு வாயிலில் ஒரு பசுவையும் அதன் கன்றையும் தீனி போடாமல் கட்டிவிடுவது வழக்கம். இந்தப் பட்டினியின் பாவத்திற்கு அஞ்சி பெண்சாதியின் தாலியை விற்றாவது கடனைக் கொடுத்துவிட்டுத்தான் வீதிப்புறம் நடப்பான் என்று எனது தகப்பனார் சொல்லி இருக்கிறார். கல்வி ஏற்பட்ட காலமாகிய இப்பொழுது அம் மாதிரிச் செய்தால் படித்தவர்கள் என்கின்ற வக்கீல்கள், 'பாலைக் கறந்துவந்து நமக்குக் கொடுத்து விடு; பாவம் வந்து உன்னை என்ன செய்துவிடும் பார்க்கலாம்' என்று தைரியம் சொல்லி ஏமாற்றி வழிகாட்டி வருவார்கள். இதனாலேயே தற்காலம் எத்தனை மாஜிஸ்ட்ரேட் கச்சேரி, எத்தனை முன்சீப் கோர்ட்டு, எத்தனை செஷன்ஸ், அய்க்கோர்ட், எத்தனை போலீஸ் கச்சேரி ஏற்பட்டிருக்கிறது, பாருங்கள்! இவைகளெல்லாம் 'படிப்பில்லாத' என்கிற முற்காலத்தில் இருந்தனவா? படிப்பு என்னும் தற்காலக் கல்வி முறையல்லவா மக்களை இவ்வளவு ஒழுக்க ஈனமாக நடக்கத் தூண்டி, அல்லல்படுத்தி, நாட்டையும் சமூகத்தையும் பாழ்படுத்திவருகிறது!

அறிவுக் கல்வியின் யோக்கியதை இப்படியானால் தொழிற் கல்வியின் யோக்கியதை இதைவிட மோசமாக இருக்கிறது. தொழிற்கல்வி என்னும் பெயரால் தற்காலம் நமது பணமும், நேரமும் மக்களின் அறிவும் வீணாவதல்லாமல் வேறென்ன பலனைக் கண்டோம்? தற்காலப் பள்ளிக்கூடங்களில் தொழிற்கல்வி என்ற பெயருடன் கற்றுக்கொடுக்கும் தொழிற் கல்வி முறையும் கொஞ்சமும் சரியானதல்ல. கொஞ்ச காலமாகத் 'தேசியக் கிளர்ச்சி' ஏற்பட்டதின் பலனாய் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் தொழிற்கல்வி என்பதாகச் சொல்லி, தச்சுவேலையும், விவசாயமும், இராட்டினம் சுற்றுதலும், நெசவு நெய்தலும் முதலிய வேலைகளுக்கென்று அனாவசியமாய்ப் பணத்தையும் நேரத்தையும் பாழ்படுத்துகின்றனர். வக்கீல் மகனுக்கும், ஜட்ஜ் மகனுக்கும், மிட்டாதார் மகனுக்கும், வியாபாரி மகனுக்கும்,

பெரிய நிலச்சுவான்தார்கள் மகனுக்கும், ஒருங்கே உட்காரவைத்து சில மணி நேரம் தச்சு வேலை கற்றுக் கொடுப்பதாலும், இராட்டினத்தைச் சுற்றச் சொல்வதாலும், என்ன பயன் விளையக்கூடும் ? எல்லாத் தொழிலும் கற்றிருக்கட்டும் என்பதற்காகவே சொல்வோமானால், இந்த இரண்டு மூன்று தொழிலாலேயே உலகத் தொழில்எல்லாம் தெரிந்து விடுமா ? ஜீவனோ பாயத்துக்கு என்று சொல்வோமானால் மேற்கண்ட பிள்ளைகளெல்லாம் இந்தத் தொழிலை ஜீவனோபாயத்திற்காக ஏற்று ஜீவிக்க முடியுமா ? ஆகவே, அறிவுக்காவது, ஜீவனத்திற் காவது இந்தத் தொழில்கள் இப் பிள்ளைகளுக்கு உபயோகப்படுகிறதா ? உயர்தரப் பாடசாலை என்பவைகளில் 'சயன்ஸ்' என்றும், சரித்திரம் என்றும் எதைஎதையோ பணத்தையும், காலத்தையும் செலவழித்துச் சொல்லிக் கொடுத்து, உருப்போடச் செய்து கற்றுத் தேர்ந்த பிறகு, 30 ரூபாய்க்கு ஏவினவேலைசெய்து, படிப்பினுடைய சக்தியையும் அறிவையும் கொண்டல்லாமல் மேல் எஜமானனுக்கு மானத்தையும் மனச் சாட்சியையும் விற்று நல்ல பிள்ளையாவதன்மூலம் சம்பளத்தை உயர்த்தி, வாங்கிய சம்பளத்தில் வாழ்ந்து தன் காரியத்தைப் பார்த்துக் கொண்டதோடு சாவதல்லாமல், வேறு ஏதாவது பல் குத்துகிற துரும்புக்காவது உதவப்படுகிறதா ? அல்லது, அந்தத் தொழிலுக்காவது இந்தப் படிப்புகள் உபயோகப்படுத்தப்படுகிறதா ? அதுபோலவே, இக் கைத்தொழில்களும் வாழ்வுக்கோ, பிழைப்புக்கோ உபயோகப்படாமல் போகிறது. கைத்தொழில் கற்றுக் கொடுப்பதென்றால் கூடுமானவரையில் பிள்ளைகளின் இயற்கை அறிவிற்கும், வாழ்விற்கும், வாழ்க்கைக்கும் தக்கபடி தரந் தரமாகப் பிரித்து, அதனதுகளுக்குத் தகுந்த தொழில்களைச் சொல்லிக் கொடுத்து அதை அவர்களுக்கு உபயோகப்படும்படி செய்யவேண்டும்.

பெண்களுக்கு இராட்டினம் சொல்லிக்கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆண் பிள்ளைகளுக்குக் கதரைக் கட்டச்செய்வதும், கதரை ஆதரிக்கவேண்டிய அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பதும் இராட்டினத்தைவிட முக்கியமானதாகும். அதை விட்டுவிட்டு, உபாத்தியாயரும் கதர் கட்டாமல் பிள்ளைகளையும் கதர் கட்டச் செய்யாமல், இவர்களின் எஜமானர்களாகிய தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலிய தலைவர்களும் அங்கத்தினர்களும் கதரைக் கட்டாமல் பொதுமக்களின் வரிப் பணத்தை அள்ளி வெறும் இராட்டினத்தை வாங்கி, பிள்ளைகளின் நேரத்தையும் பஞ்சையும் வீணாக்கி நூலைக் குப்பையில் போடுவதில் இலாபமென்ன? கதர் கட்டுவதின் அவசியத்தை அறியாத ஒரு பையன் இராட்டினம் சுற்றுவதில் பிரயோஜனமென்ன ? கதரைக் கட்டாத உபாத்தியாயர்கள் கதரைக் கட்டும்படி உபதேசம் செய்வதில் பிரயோஜனமென்ன ? 1000 பொய் இராட்டினம் சுற்றி நூல்களைக் குப்பையில் போடுவதை விட, 100 பிள்ளைகள் கதர் கட்டுவது மேலான தர்மம். ஆகவே, இம் முறைகள் காரியத்துக்கு உதவாததாகவும், உண்மைத் தொழில் தத்துவமற்றதாகவும் நடைபெறுகின்றது.

அறிவும் தொழிலும் இப்படியானால், உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கிற பொறுப்பும், பற்றுதலும், பக்தியும் இதைவிட மோசமானதென்றே சொல்ல வேண்டும். சாதாரணமாய், ஒரு உபாத்தியாயருக்கும் ஒரு மாணாக்கனுக்கும் உள்ள பற்று தலையும் பக்தியையும்விட, ஒரு தாசிக்கும் அவளுடைய அன்றன்றைய நாயகனுக்கும் உள்ள பக்தியும், பற்றுதலும் மேலான தென்றே சொல்லலாம். எப்படியெனில், ஒரு தாசிக்கு ஓர் இரவு முழுவதாவது ஒரு நாயகன் இருக்கக்கூடும். நமது மாணாக்கர்களுக்கோ மணிக்கு இரண்டு உபாத்தியாயர்கள் வருகிறார்கள். ஒரு நிலையான உபாத்தியாயரிடமிருந்து ஒரு பொறுப்பான விஷயங்களை உணரக் கூடிய சந்தர்ப்பங்களே கிடையாது. உபாத்தியாயர் களும் சம்பளம் உயர்ந்த பள்ளிக்கூடங்களுக்குப்போவதும், மாணாக்கர்களும் தங்களுக்குச் சவுகரியப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப்போவதும் சுயேச்சையாகி விட்டது. பிள்ளை படிக்க வேண்டியதும், உபாத்தியாயர் அவனைத் தேறச்செய்ய வேண்டியதும் அவரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்ததாகவே போய்விட்டதே யல்லாமல், பொறுப்பும் கவலையும் ஒரு வருக்கும் கட்டுப்பட்டதல்லாததாகவே இருந்து வருகிறது.

கல்வி, அறிவு, தொழில்முறை, குருபக்தி ஆகியவற்றின் யோக்கியதை இப்படி என்றால் உபாத்தியாயர்களின் காலட்சேபமோ நினைப்பதற்கே பரிதாபமாக இருக்கிறது. முன்காலத்தில் உபாத்தியாயர்களுக்கு காலட்சேபத்தைப்பற்றிய கவலையே இருந்ததில்லை. உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறுகுடிசை இருந்தால் போதும். பிள்ளைகளுக்கு அக் குடிசைக்கு முன்னால் ஒரு பந்தலோ, கொட்டகையோ இருந்தால் போதும். பிள்ளைகள் படிப்பதற்கு அய்ந்தாறு மட்டை பனை ஓலையும், அரை வண்டி மணலும் இருந்தால் போதும். எழுது கோலாக ஒரு கூர்மையான ஆணி இருந்தால் போதும். மற்றபடி உபாத்தியாயர்களுடைய காலட்சேபத்தைப்பற்றி உபாத்தியாயர்களுக்குக் கவலையே இருந்தது கிடையாது. வெள்ளாமை காலத்தில் பையன்களிடம் சொல்லிவிட்டால் கூடைகூடையாய்த் தானியங்கள் வந்து குவிந்து விடும். உபாத்தியாயரே போட்டுவைக்க இடமில்லாததால்—'போதும்' என்று சொல்லி விடுவார். எண்ணெய், விறகு முதலியவைகள் மாதத்துக்கு ஒருதடவையும், காய்கறி பதார்த்தங்கள் தினமும் தானாகவே பிள்ளைகள் மூலம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விடும். பண்டிகைகளுக்கு வேஷ்டித் துணிகளும், மேற்செலவுக்கு இனாம் பணங்களும் தானாகவே வந்து சேர்ந்து விடும். உபாத்தியாயர் வீட்டில் நடக்கும் கல்யாணம், கார்த்திகை, நன்மை, தீமை முதலிய சடங்குகளுக்கு அவ்வப்போது பெற்றோர்களும், பையன் களுடைய சுற்றத்தார்களும் தாராளமாகக் கொடுத்து நடத்தி விடுவார்கள்.

பையனுடைய படிப்புக்கு உபாத்தியாயர் ஜவாப்தாரியாகவும், உபாத்தியாயர் களுடைய காலட்சேபத்திற்குப் பிள்ளைகளின் பெற்றோர்கள் ஜவாப்தாரிகளாகவும் பரஸ்பரம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஒரு பையன் வீட்டில் ஏதாவது குற்றஞ்செய்து விட்டாலும், அவன் படித்ததாகச் சொல்லும் பாடங்களில் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லா விட்டாலும் உபாத்தியாயருக்குக் கொடுப்பதில் குறைத்து விடுவார்கள். உபாத்தியாயர்கள் பெயரைச் சொன்னால் பையன்கள் நடுங்குவார்கள். சாப்பாட்டுக் கவலை யென்பதே உபாத்தியாயர்களுக்குத் தெரியவே தெரியாது. உபாத்தியாயர் வீட்டுப் பெண் களோடு குடும்பக் கவலை நின்றுவிடும். எவ்விதத்திலும் அவைகள் உபாத்தியாயர் காதுக்கு எட்டவே எட்டாது. அக் காலத்திய படிப்புச்செலவு இப்போதைய செலவுகளில் பதினாறில் ஒரு பங்குகூட இருக்காது. இப்பொழுதோ பிள்ளைகள் கொடுக்கிற பணம் கணக்கு வழக்கில்லை. புத்தகம், காகிதம், பேனா, பென்சில், சித்திரசாமான், விளையாட்டுக் கருவி, இரசாயன சாமான், பெஞ்சு, நாற்காலி, மேசை கட்டடங்கள் இவைகளுக்காகும் செலவுகளே மக்கள் தாங்க முடியாததாகப் போய்விடுகிறது. இதன்மேல் உபாத்தியாயர்களுக்குக் கொடுப்பதும் தாங்கமுடியாததாகவே ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்போருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் சில ஆபீஸ்களில் பியூன்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்கப்படுவதைவிடக் குறை வாகத்தானிருக்கிறது. குழந்தை குட்டிகளோடு வாழ்கிற ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாயாவது இருந்தால்தான் கவலையில்லாமல் தன் காரியத்தைக் கவனிக்கக்கூடும். அதுகூட இல்லாமல் கஷ்டப்படுகிறதைப் பார்க்கும்பொழுது நமக்கு மிகவும் பரிதாபகரமாகத்தானிருக்கிறது.

'பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதுபோல்' நமது அரசாங்கத்தார் கள், சாராயத்தை விற்று அதில்வரும் இலாபத்தை எடுத்து கல்விக்காகச் செலவு செய்கிறார்கள். ஆகவே இன்னும் கொஞ்சம் கல்வி சவுகரியமும், சம்பளச் சவுகரியமும் வேண்டுமானால் இன்னுங் கொஞ்சம் அதிகமாகக் கள், சாராயம் குடித்து, அதனால் அதிக வரும்படியை உண்டாக்கும் பொறுப்பை நம் தலையில் வைத்திருக்கிறார்கள். இம் மாதிரிக் குடியில் வரும் இலாபத்தினால்தான் படிப்புக்குச் செலவு செய்யவேண்டும் என்று ஏற்படுமானால், மக்கள் படிக்காமல் தற்குறியாக இருந்தாவது, உபாத்தியாயர்களெல்லாம் தெருவில் கல்லுடைத்து ஜீவனம் செய்து கொண்டாவது, கள் குடியை நிறுத்துவதே மேலானதென்பது என் அபிப்பிராயம்.

இம் மாதிரிப் படிப்பு வலுத்ததின் பலனாய் படிப்பின் அவசியமில்லாமல் வேறு வழியில் வாழக்கூடிய பெருத்த குடும்பங்களெல்லாம் பாழாகிப் போய்கொண்டே வருகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உயர்தரப் பள்ளிக்கூடங்களென்பது அதிகமாய்க் கொண்டு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் படித்த பெரும்பான்மைப் பிள்ளைகளின் குடும்பங்கள் கெட்டுக்கொண்டே வருகின்றன.

உதாரணமாக, பூமிகளின் சொந்தக்காரர்களின் பெயர்களைக் காட்டும் 'செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர்' என்னும் பதிவுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தீர்களானால், அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 40, 50 வருஷங்களுக்கு முந்திய 'செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரி'லுள்ள பூமிக்குச் சொந்தக்காரரின் பெயர்களை 10 வருஷத்துக்கு முன்னுள்ள புத்தகத்தைப் பார்ப்பீர்களானால் 100-க்கு 75 பாகம் மாறிப்போய்த்தானிருக்கும். அக் காலத்தில் கவுண்டர், நாயக்கர், பிள்ளை, படையாட்சி, ரெட்டி, நாயுடு என்றிருப்பது போய், இப்பொழுது அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், செட்டியார் முதலிய உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள் ஆகியவர்கள் பெயருக்கே மாறியிருக்கும். காரணமென்னவென்றால், உயர் தரப் பள்ளிக்கூடம் வந்தவுடனே எல்லாப் பிள்ளைகளும் அதில் படிக்கச் சேர்ந்து விடுகிறார்கள். குடியானவர்களும் தங்கள் பிள்ளைகளை அதிலேயே சேர்த்துவிடுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்குப் படித்துத்தான் ஜீவனம் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லாததாலும், 'இந்தக் கூட்டங்களும் படித்து விட்டால், உத்தியோகங்கொண்டே வாழவேண்டியவர்களாகிய நம்ம கூட்டத்தார் வாயில் மண் விழுந்து விடுமே' என்கிற பயங்கொண்ட உபாத்தியாயர்களாலும், இப் பிள்ளைகள் சரியாகப் படிக்க முடியாமல் 5, 6 வருஷம் பெஞ்சுக்கு வாடகை கொடுத்ததோடு தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டும், சிகரெட், பீடி பிடித்துக் கொண்டும், வேடிக்கை உடைகள் தரித்துக் கொண்டும், பொறுப்பும் ஒழுக்கமுமற்ற சம்பாஷணைகள் பழகிக்கொண்டும், உல்லாசமாய்த் திரிந்து 2, 3 தடவை பரீட்சையில் தோல்வியுற்று கடைசியாய், 'இனி படிப்பு வராது' என்கிற முடிவுடன் வீடுபோய்ச் சேருகின்றார்கள்.

இந்தப் பட்டணவாசப் பள்ளிப் பழக்கமானது பட்டிக்காட்டு வாசத்துக்குச் சவுகரியமில்லாமல் வீடு, வாசல்களும், விவசாயப் பண்ணைகளும் தங்களுக்குப் பிடித்தமில்லாததாகி, நோக்கமெல்லாம் பட்டணங்களிலேயே கொண்டுபோய் விடுகிறது. அல்லது, சிலருக்குப் பட்டிக்காட்டிலேயே பட்டணங்கள்போல் வீடுவாசல் கட்டி சுகமனுபவிக்க ஆசை ஏற்பட்டு விடுகிறது. இதன்மூலம் தங்கள் விவசாயம் கெடுவதோடும் தங்களுக்குக் கிரமமாய் வரும் பொருள் வருவாயும் கெடுவதோடு, அதிகச் செலவும் ஏற்பட்டு அதன்மூலம் கடன்காரர்களாகி வீண் விவகாரங்களில் ஈடுபட்டுக் கடைசியாய் இக் குடும்பச் சொத்தானது விவகாரத்தில் அதிகாரிகளுக்கு இலஞ்சத்தின் மூலமாகவும், வக்கீல்களுக்குப் 'பீசி'ன் மூலமாகவும், லேவாதேவிக்காரர்களுக்கு வட்டியின் மூலமாகவும் போய்ச்சேர்ந்து விடுகிறது. இந்தக் காரணங்களால் இவர்கள் பூமிகள் அவர்கள் பேருக்குப் பட்டா மாறுவதும் அல்லது அவர்கள் விலைக்கு வாங்குவதுமாய் முடிந்து விடுகிறது. இனியும் ஒரு 50 வருஷத்திற்கு இக் கல்வி முறை இப்படியே இருக்குமானால் நமது பூமிகளெல்லாம் உத்தியோக வக்கீல் கூட்டத்தாருக்கும், லேவாதேவிக் கூட்டத்தாருக்குமே போய்ச் சேர்ந்துவிடும். இப்பொழுதுள்ள மிராஸ்தாரர்களின் பிள்ளைகளெல்லாம் அந்தக் கூட்டத்தாரிடம் பண்ணையாட்களாகவும், குடிவாரக்காரர்களாகவும் போய்ச் சேரவேண்டியதுதான்.

அரசாங்கத்தாரும் கல்விக்காகக் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு பண்ணுகிறார்கள். அவ்வளவும் உபாத்தியாயர்களுக்குப் போவதாயிருந்தால் உபாத்தியாயர்களுக்குக் கஷ்டமே இருக்காது. பணத்தையெல்லாம் கல்வியின் பெயரால் மேற்சொன்னபடி சாமான்களுக்கும், கட்டடங்களுக்கும், மற்றும் பாதிரிமார்களுக்கும் உயர்ந்த சம்பளம் பெறும் உபாத்தியாயர்களுக்கும், இவற்றை மேற்பார்வை பார்ப்பது என்பதாகப் பல பெரிய

பெரிய சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குமே போய்விடுகிறது. இவ்வளவு செலவு களையும் அனாவசியமாய்ச் செய்துவிட்டு, ஆரம்ப ஆசிரியர்களையும் பட்டினி போட்டு விட்டு, இந்த ஆசிரியர்களை ஆடுமாடுகளைவிடக் கேவலமாகவும் மதிக்கிறார்கள்.

ஜனப் பிரதிநிதிகள் என்கின்ற சட்டசபை அங்கத்தினர்கள் முதலிய அரசியல் வாழ்வுக்காரர்களோ உங்களிடம் வரும்போது உங்களிடத்தில் ரொம்பவும் அனுதாபம் உள்ளவர்கள்போல் காட்டிக்கொண்டு, 'உங்களுக்குச் சம்பளம் 40 ரூபாய் வேண்டும்; 50 ரூபாய் வேண்டும்' என்ற ஆசை வார்த்தை சொல்லி உங்களைத் திருப்திசெய்து, உங்களால் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு போய்விடு கிறார்கள். பொது ஜனங்களிடம் போகும்போது அவர்களைப் பார்த்து, 'சர்க்காரார் அதிக வரி வசூல் பண்ணுகிறார்கள். அனாவசியமாய் அதிகமான ஆள் அம்புகள் வைத்து அரசாங்கச் செலவைப் பெருக்கி விட்டார்கள்; நாங்கள் போய்ச் சம்பளத்தையும் செலவையும் குறைத்து உங்களுக்கு வரியைக் குறைக்கிறோம்' என்று மேடைமேல் நின்று பேசிவிடு கிறார்கள். உங்களிருவரையும் ஏமாற்றி, சட்டசபையில் போயிருந்துகொண்டு, சட்டசபையில் உட்கார்ந்துகொண்டு, உங்களுக்கும் அவர்களுக்கும் திருப்தி ஏற்படும்படியாக ஏதோ இரண்டு கேள்வி கேட்டதாகப் பாவனை காட்டிவிட்டு, உங்களையும் பொது ஜனங்களையும் வஞ்சிக்கிற காரியங்களுக்காகச் சர்க்காருக்கு உள் உளவாய் இருந்து தங்களுக்குப் பெரு மையும், உத்தியோகங்களும், பதவியும் கிடைப்பதற்கும் தங்கள் சொந்தக் காரியங்கள் ஏதாவது சாதித்துக் கொள்ளுவதற்கும் ஆளாகி விடுகிறார்கள். வரி குறைப்பதும், சம்பளம் கூட்டுவதும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விஷயம். வரியையும் குறைத்து, உங்கள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமானால் பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத் தையும், நான்மேலே சொன்ன வீண் செலவுகளையும் குறைக்கும்படி சொல்லுவதற்கு இவர்களுக்குத் தைரியம் வேண்டும். இவர்களே மாதம் 2000, 3000, 4000, 5000 சம்பளம் வாங்கிக்கொண்டு மந்திரி, தலைவர் முதலிய பதவிகளுக்கு ஆசைப் பட்டுக்கொண்டும், இவர்களே இப்பேர்ப்பட்ட பதவிகளை மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்து, அவர்களை ஆதரித்தும் அதன்மூலம் தாங்கள் பிழைக்கப் பிரயத்தனப் பட்டுக்கொண்டும், இவர்களுடைய செலவுக்கே தினம் 10, 15, 40, 50 வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், இவர்கள் போக்குவரத்துக்கே முதலாவது, இரண்டாவது வகுப்பு, இரட்டைப் படிகள் வாங்கிக் கொண்டும், இவர்கள் நடவடிக்கை நடத்தும் கூட்டங்களுக்கே 2 இலட்சம், 3 இலட்சம், 2 கோடி, 4 கோடி அனுமதித்துக்கொண்டு இராஜபோகமனுபவிப்பவர்கள்; வேறுயாருடைய எந்தச் செலவைக் குறைத்து, வரி உயர்த்தாமல், உங்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தக் கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே, இவ்வித அரசியல் புரட்டுகள் நமது நாட்டிலுள்ள வரையிலும், உங்களைப் போன்றவர்கள் இவைகளை ஆதரித்து இப் புரட்டர் களை மரியாதை செய்கிறவரையிலும் உங்களுக்கு மாத்திரமல்ல—இந்த நாட்டுக்கே விமோ சனம் இல்லையென்பதுதான் என் அபிப்பிராயம். இனியாவது இந்த அரசியல் புரட்டர்களின் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

எனவே, இவை ஒவ்வொன்றையும் இன்னமும் கிளற, கிளற மிகவும் மோசமாகவேதான் வந்து கொண்டிருக்கும். இம் மகாநாட்டைப் பொறுத்த வரையிலும் இதிலேற்பட்டிருக்கிற சில தீர்மானங்களைப் பொறுத்த வரையிலும் உங்களுக்கிருக்கும் கஷ்டங்களையும், குறை களையும் அறிந்து நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். உங்களுக்கு இன்னும் சம்பளம், மரியாதை முதலியன உயரவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக நீங்கள் செய்யும் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ள எனக்கும் ஆசையிருக்கிறது. ஆனால் அந்நோக்கங்களையும் கிளர்ச்சிகளையும் உங்கள் சுய நன்மைக்கு மாத்திரமென்றில்லாமல், நமது மக்களின் உண்மையான ஆரம்ப ஆசிரியராய் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். கல்வி விஷயத்தில் நமது நாட்டுக்கு ஏற்படவேண்டிய திருத்தத்தில் உங்களுடைய உதவியும், தாலுக்கா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலியவற்றின்

உதவியும் ரொம்பவும் வேண்டியிருக்கிறது. உண்மையான தேசாபிமானக் கண்ணோடு பார்ப்பீர்களானால், உங்களுக்கு இவைகளெல்லாம் விளங்காமற்போகாது. இங்கு விஜயம் செய்திருக்கும் தாலுக்கா, ஜில்லா போர்டு அங்கத்தினர்களையும் தலைவர்களையும் இவ் விஷயங்களை யெல்லாம் கவனித்து உங்களுக்கு அனுகூலமாய் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை நீங்கள் ஒருபொருட்டாய் மதித்துத் தலைவனாகத் தேர்ந்தெடுத்த தற்கு என் மனதில் சரியென்று பட்டதை உங்கள் முன் கொஞ்சமும் ஒளிக்காமல் பேசியிருக் கிறேன். இவற்றுள் கொள்ளத் தக்கதும், தள்ளத் தக்கதும் இருக்கலாமென்றே நினைக் கிறேன். ஆதலால் உங்களுடைய அறிவையும், ஆற்றலையும் இவைகளுள் செலுத்தி, தள்ளத் தக்கதைத் தள்ளி, கொள்ளத் தக்கதைக் கொண்டு அமுலில் கொண்டுவர வேண்டுகிறேன்.

[போளூரில், 24-4-1927-ல் நடந்த ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டில் சொற்பொழிவு
—'குடி அரசு' 1-5-1927]

2. மாணவர்களுக்கு

பெரியோர்களே! தோழர்களே!

நான் அடிக்கடி மாணவர்களுக்குச் சொல்லுவேன், 'மாணவர்களே! நீங்கள் படிப்பை ஒழுங்காகக் கவனித்துப் படியுங்கள்; உங்கள் பெற்றோர்கள் கடன் வாங்கி, எப்படியாவது நீங்கள் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்கிற ஆசையால் செலவழித்து, உங்களைப் படிக்கவைக்கிறார்கள்; மற்ற மேல்சாதிக்காரர்களைப்போல—பார்ப்பனர்களைப்போல உங்களுக்கு யாதொருவிதமான வசதியும் இல்லை; நீங்களாகவேதான் படித்து முன்னுக்கு வரவேண்டும்; அப்படி இருக்கும்போது நீங்கள் படிப்பைத் தவிர வெளி விஷயங்களில் கலந்துகொள்ளாதீர்கள்; அவைகளில் எப்போது வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். முதலில் உங்கள் படிப்பில் முழுக்கவனம் செலுத்தி நன்றாகப் படியுங்கள்' என்றெல்லாம் சொல்லுவேன்.

எந்தக் காரியத்திற்கும், அனேகமாக நான் மாணவர்களையே அழைக்கமாட்டேன். அவர்களைக் கூப்பிடுவதென்றாலே மிகவும் யோசிப்பேன். ஏனென்றால், அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் எதிர்ப்பையும் தாண்டிப் படிக்க வேண்டியவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாமும் புகுந்து அவர்களைக் கெடுப்பது என்றால் என்ன நியாயம் என்ற கருதித்தான், மாணவர்களை வெளி விஷயங்களில் கலந்துகொள்ள வேண்டாமென்று கூறுவேன்.

ஆனால், இன்று அவர்களின் படிப்புக்கே ஆபத்து வந்துவிட்டது என்கிறபோது அவர்களின் படிப்பையே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஒரு இராஜ்யத்து முதல் மந்திரியும், கல்வி மந்திரியும், வாத்தியார்களும் முயல்கிறார்கள் என்கிறபோது என்ன செய்வது? இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி செய்து தானே ஆகவேண்டும்?

சாதாரணமாக, மாணவர்களைக் கிளர்ச்சிக்கு அல்லது மற்ற காரியங்களுக்குத் தூண்டுவதே தவறு. அவர்கள் உலக அனுபவம் இல்லாதவர்கள்; எதையும் எளிதில் நம்பிவிடுவார்கள்; இளம் உள்ளத்தின் வேகத்தில் எதுவும் செய்துவிடுவார்கள். அவர்களை இந்த முறையில் பழக்கி அவர்களைச் சிலர் கேடு அடையச் செய்யக்கூடாது. அது பஞ்சுக்குப் பக்கத்தில் 'பெட்ரோல்' வைத்து நெருப்புப் பற்றவைப்பதுபோல ஆகும். மாணவர்களை, மாணவர்களுடைய காரியத்தின் அளவுக்குமட்டும் பயன்படுத்திக்கொண்டு—அதிலும் அளவுக்குமீறிப் போகாமல் கட்டோடு இருக்கச் செய்துகொண்டு, மற்றபடி அவர்கள் கலந்துகொள்ளாதிருக்க விட்டுவிடவேண்டும்; இப்படித்தான் செய்யவேண்டும்.

[சென்னையில், 5-12-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-12-1952]

பெரியோர்களே! மாணவத் தோழர்களே! வணக்கம்.

திராவிட மாணவர்களுக்குப் பகுத்தறிவு ஊட்டப்பட வேண்டும் என்பதற்காக இக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. மேலும், இன உணர்ச்சியைத் திராவிட மாணவர்களுக்கிடையே புகுத்தவும் இது மாதிரியான கழகம் அவசியமாகும்.

பொதுவாக, நம் நாட்டு மாணவர்கள் கல்விப் படிப்பினால் எந்தவிதமான பகுத்தறிவையும்—எதையும் ஆராய்ந்து அறியும்படியான தன்மையையும் அடையமுடிவதில்லை; அவர்கள் படிக்கின்ற படிப்பினால் பிற்கால வாழ்க்கையைத் தரித்திரமின்றி நடத்தவேண்டும். அதற்காக, ஏதாவது உத்தியோகத் துறையிலோ, வேறு பணம் சம்பாதிக்கின்ற வழியிலோ பயன்பட வேண்டும் என்பதற்காகவே படிக்கிறார்கள். பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைக்கு அறிவு வளரவேண்டும் என்ற காரணத்திற்காகப் பள்ளிக்கு அனுப்புவதில்லை; படித்துப் பட்டம் பெற்று வந்ததும் ஜீவனத்துக்கு வேண்டிய முறையில் எங்காவது உத்தியோகம் கிடைக்குமா என்ற நோக்கத்தோடேயே பெற்றோர்கள் முயற்சிக்கிறார்கள். இவர்களும் இதற்குத்தான் முயற்சிக்கிறார்கள் என்றால் மாணவர்களும் அந்த நோக்கத்தைத் தான் எதிர்பார்த்துத் தம்முடைய பள்ளிப் படிப்பைக் கற்றுப் பட்டம் பெறவேண்டும் என்ற ஒரே எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், அவர்கள் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் கூறுகின்ற ஒவ்வொன்றையும் அப்படியே மனப்பாடம் செய்து, அதையே பிறகு அவர்கள் கேட்கும்பொழுது சொல்லுவதாலும், எழுதுவதாலும் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். இந்த முறையில் ஒரு மாணவன் எவ்வித உயர்ந்த பட்டத்தை அடைந்த படிப்பாளி என்று கூறப்பட்டாலும், அவனுக்குப் போதிய பொதுஅறிவும், உலகியலில் தகுந்த ஞானமும் அடைந்தவனாகக் கருதப்பட மாட்டான். ஏனெனில், அம் மாணவன் தனது புத்தகத்தைப் படித்து, அதில் உண்டாகும் சந்தேகங்களையும், மற்றும் அறிவுக்குப் பொருத்தமற்றதான செய்திகளையும், தனது ஆசிரியர்களிடம், ஏன்? என்ன? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வதில்லை. அப்படிக் கேட்டாலும் அம் மாணவன் வகுப்பில் 'மிகவும் அதிகப் பிரசங்கியாக நடந்துகொள்கிறான்' என்பதாக ஆகிவிடும். ஆகவே, ஆசிரியர் சொல்லுவதைத்தான் கேட்கவேண்டும்; புத்தகத்திலுள்ளதைத்தான் மனப்பாடம் செய்து திரும்பவும் ஒப்புவிக்கவேண்டும் என்பது நம் நாட்டுக் கல்வி முறை. இக் கல்வி முறையினால் மாணவர்களுக்கு அறிவு புகட்டப்படுவதால் அவர்கள் பிற்காலப் பழக்கவழக்கங்களுக்கும், நல்லொழுக்கத்திற்கும் தகுதியுடையவர்களாக ஆகமாட்டார்கள்.

ஆனால், பலர் பலவிதமாக அறிவு, ஞானம் என்பதைக் கருதுகிறார்கள். பெரும்பாலோர் ஞானம் என்பதும், அறிவு என்பதும் கடவுளைக் காண்கிறதும், மோட்சத்தை அடைவதும்தான் என்று நினைக்கிறார்கள். இந்த எண்ணம் குழந்தையிலிருந்தே நம் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட்டு வருவதால், மேன்மேலும் ஒரு மாணவன் தெளிவற்றவனாகவே ஆக்கப்படுகிறான். பொதுவாகவே மாணவன் அதற்கு இடம் கொடுக்காமல் தன்னை இன்னான் என்றுணர்ந்து—'நம் பருவம் எதையும் அறிந்துகொள்ளுகின்றதும், தெரியாதவைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறதுமான மாணவப் பருவம்' என்பதை உணரவேண்டும். இவ்வித எண்ணமுள்ள மாணவன்தான் பிற்காலத்தில் எதையும் அறிந்த அறிவாளியாக விளங்கமுடியும்.

மேல்நாட்டு மாணவர்கள் எல்லோரும் இவ்வித எண்ணம் கொண்டவர்களாக இருப்பதாலும், அவர்களுக்கு இந்தப்படியே பயிற்சி அளிப்பதாலும்தான் அவர்கள் எதையும் ஆராயும் தன்மையுள்ளவர்களாகவும், மென்மேலும் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு இது ஏன்? எப்படி? எதற்காக? இதனால் என்ன செய்யமுடியும்? என்று இப்படிப் பலவிதமான கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொண்டே பார்த்ததால்—இன்றைக்கு அவர்கள் அறிவாளிகளாகவும், விஞ்ஞானிகளாகவும் விளங்குகிறார்கள். மற்றும், பல பொது விஷயங்

களிலும் நம் நாட்டு மக்களைப்போல் இல்லாது, எவ்விடத்திலும் பிறருடன் நன்முறையில் பழகுகிறார்கள். குறிப்பாகப் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றால், அங்கு டிக்கட் கொடுக்குமிடத்தில் அதிக மக்கள் வரிசைக் கிரமத்தில் சுமார் ½ பர்லாங் வரையில் காத்திருந்தாலும் அங்கு வருகின்ற தலைநரைத்து வயதுசென்ற கிழவருக்கும், சிறு குழந்தைக்கும், பெண்களுக்கும் முதலில் டிக்கட் வாங்குவதற்கு அத்தனை பேர்களும் அனுமதிப்பார்கள். நான்கு பேர்கள் ஏறுகின்ற வண்டியில் 5-வது ஆள் ஏறுவதற்கு வெட்கப்படுவான். ஒருவன் ஆடையின்றி நிர்வாணமாகக் கடைவீதியில் செல்லுவதற்கு எவ்வளவு வெட்கமடைவானோ, அன்றியும் அவன் பிறரால் எப்படி ஏளனம் செய்யப்படுவானோ, அதற்குச் சமானப்பட்டவனாய் அச் சமயம் தன்னைக் கருதுவான்.

பொது இடங்களிலும் அன்றி, தனிப்பட்ட கணவன்-மனைவி இருவருக்கும் உள்ள பழக்கத்தில்கூட நம் நாட்டிற்கும் மேல்நாட்டிற்கும் வித்தியாசமுண்டு. அயலூர் சென்ற கணவனோ, மற்றும் குடும்பத்தவர்களோ, உறவினர்களோ தன் வீடு வருவதாய் இருந்தால், முதலில் தாங்கள் வரும் நேரத்தையும், தேதியையும் முன்பாகவே தந்தி மூலமோ, கடிதம் மூலமோ தெரிவித்துவிட்டுத்தான் வருவார்கள். வீடுவந்து சேர்ந்ததும் வீட்டினுள் இருப்பவள் தன் சொந்த மனைவியாக இருந்தாலும், உடனே அவன் உள்ளே நுழைய மாட்டான். முதலில் அவன், தான் வந்திருப்பதைத் தெரிவித்து அவள் 'எஸ்' (yes) என்று அனுமதித்தவுடன்தான் உள்ளே நுழைவான். இந்த முறையில் ஒவ்வொன்றிலும் மேல்நாட்டார் பழகுகிறார்கள் என்றால் மாணவப் பருவத்தில் அடைந்த அறிவின் குணமென்பதே காரணம்.

ஆனால், நம் நாட்டு மாணவர்களுக்குப் பொது அறிவைப் புகட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் ஒன்றும் இல்லாததாலும், நம் நாட்டுக்கல்வி முறையில் இவை கற்பிக்கப்படாததாலும் அவர்கள் வயதுவந்தவர்களானதும் பொதுவிடங்களிலும், உலகத்தோடும் நன்முறையில் பழகுவது கிடையாது. புகைவண்டி நிலையம் சென்றால் எவன் ஒருவன் முதலில் டிக்கட் வாங்குகிறானோ, அவன்தான் சமர்த்தன் என்று புகழப்படுகிறான். புதிய சினிமா இன்றுதான் முதலில் வெளியிடப்படுகிறது என்றால்—அன்றைக்கு முதல் படத்திற்கு, முதல் டிக்கட் வாங்குகிறவன் அதிபராக்கிரம புத்திசாலி என்று போற்றப்படுகிறான். ஏதாவது ஒரு உண்மையை மறைக்க ஆயிரம் பொய்களைக் கூறித் தப்பித்துக் கொண்டால்—அவன் அறிவிற் சிறந்தவன்; அவன் கூறியது பொய்யானாலும் தன் புத்தியின் யூகத்தால் வெகு சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொண்டான் என்றுதான் கூறுவர்.

நன்னடத்தை என்பது என்னவென்று பார்த்தால்—ஒரு மனிதனிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ, நீங்கள் மகிழ்ச்சியடையவும், திருப்தியடையவும் அவன் என்ன செய்யவேண்டுமோ, அதே முறையில் நீங்களும் பிறரிடம் பழகும்போது அவர்களுக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் உண்டாக்கும்படியான வழியில் நடந்துகொள்வதாகும். உங்களிடம் ஒருவர் நடந்துகொள்வதிலிருந்து உங்களுக்குக் கஷ்டத்தையும், மனக் கலக்கத்தையும் அதிருப்தியையும் உண்டாக்குகிற முறைகள் எவை எவையென்று தோன்றுகிறதோ, அவையவைகளை விட்டுவிடவேண்டும். இது ஒரு சுலபமான கருத்து. இதை யாவரும் கைக்கொள்ளுவதால் நல்லறிவும், பொது அறிவும் அடைந்தவர்களாகலாம்.

இப் பழக்கங்களை மாணவப் பருவம் முதற்கொண்டே, பழகினால் சுலபமாகக் கடைப்பிடிக்கவும் நீடித்திருக்கவும் ஏதுவாகும். திராவிட மாணவர்களாகிய யாவரும் இதையே பின்பற்றி நடக்கவேண்டுமென்றும், எதையும் ஆராயுந் தன்மையுடனும், எவ்விதக் கேள்விகளுக்கும் பதில் தெரிந்து சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதே மாணவப் பருவம் என்பதன் நோக்கம் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

[திருச்சியில், 7-11-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-11-1954]

நான் மாணவர்களைப்பற்றி பேசும்பொழுதெல்லாம் அடிக்கடியும் குறிப்பிடுவதுண்டு. அதாவது, யாரும் மாணவர்களை நம்பி மோசம் போகக்கூடாது என்று கூறுவேன். ஏனெனில், மாணவர்கள் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் பண்டங்களுக்குச் சமமானவர்கள். பஞ்சு, மண்ணெண்ணெய், பெட்ரோல் இவைகளை எரியும்படி செய்வதற்கு அதிக உஷ்ணம் தேவை இல்லை. சூரியனின் ஒளிக்கதிர் பட்டாலே எரியக்கூடிய தன்மையும் உண்டு. அப்படிப்பட்ட மெல்லிய உள்ளமும், தெளிவான மனத்தையும் கொண்டவர்கள் மாணவர்கள். கெட்டியான வஸ்துக்கள் சுலபத்தில் தீப்பற்றுவதில்லை; தீப்பற்றிவிட்டால் சுலபத்தில் அணைவதில்லை; நெடுநேரம் நின்று எரியும் சக்தி உள்ளவை. சீக்கிரத்தில் தீப்பிடிக்கும் வஸ்துக்களோ கெட்டியான வஸ்துக்களைப்போல் அதிக நேரம் எரிவதில்லை. சிறிது நேரத்திலேயே அணைந்து போகும். அப்படிப்பட்ட தன்மைக்குச் சமமாக மாணவர்களைக் கூறலாம். எதையும் உடனே நம்பும் சுபாவம் மாணவர்களுடையது. மாணவர்களின் உள்ளம் கெட்டியானது அல்ல; இலேசானதாக இருக்கும்; அதுவும் தூய்மையானதாக இருக்கும்; பட்டதும் பிடிக்கக்கூடிய தன்மை உள்ளது. அந்த மனம் கெட்டிப்படும் வரை அடுத்தடுத்து வருகிறவைகளைக் கவ்விக்கொண்டு, முன்னே பற்றியதைக் கக்கிவிடும்; சரியான பக்குவம் இல்லாததால் ஒரு நிலையில் நிலைத்து நிற்கும் தன்மை கிடையாது. இன்றைக்கு நான் சொல்வதைக் கேட்டு அப்படியே நம்பிவிடும். சரி நம்பி விட்டார்களே என்று நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது நாளைக்கு யாராவது ஒன்றைக் கூறினால், நான் சொன்னதை விட்டுவிட்டு, மற்றவர் கூறுவதை ஏற்றுக்கொள்வார்கள். மனது பக்குவம் அடைய வேண்டும். இதனால் நான் மாணவர்களுக்கு அறிவில்லை, அல்லது மாணவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் என்பதாகக் கூறுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். மாணவர்கள் அறிவுள்ளவர்கள்தாம். இருந்தாலும், அந்த அறிவு முற்ற வேண்டும். பிஞ்சு அறிவு கொண்டவர்கள்! அந்த அறிவு முற்றும் வரை அவர்களுக்கு எதிலும் உறுதியான எண்ணம் பிறக்காது.

அறிவு முற்றும் வரையில் எதையும் கற்பதிலேயே மாணவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். மாணவ வாழ்க்கையில் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டியது எதையும் கற்பதிலேயே மனத்தைச் செலுத்திக் கற்றுத் தெரிந்துகொள்வதிலேயே இருக்கவேண்டும். படித்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதிலேயே முழு முயற்சியும் காட்டவேண்டும்.

[சிதம்பரம் அண்ணாமலை நகரில், 19-2-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-3-1956]

3. பகுத்தறிவாளர்களுக்கு

தமிழ் நாட்டில் பல இடங்களில் பகுத்தறிவாளர்கள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது; மேலும் பல இடங்களில் பகுத்தறிவுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது; மேலும் பல இடங்களில் பகுத்தறிவுக் கழகம் தோற்றுவிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. இந்த நிலை தமிழர்களுக்கு மிகுதியும் போற்றத்தக்கதும், பாராட்டத் தக்கதுமாகும்.

இவ்விளைவினால் தமிழர் சமுதாயம் சமத்துவமும், முன்னேற்றமுமடைந்து உலக மக்களால் பாராட்டத்தக்க நிலையடையும் என்பதில் சந்தேகமேயில்லை. இவ்வியக்கம் பயனுள்ளதாகவும், பாராட்டத் தக்கதாகவும் வளர்ச்சியடையத் தக்கதாகவும் ஆக வேண்டுமானால் இவ்வியக்கத்தில் அரசியல், மத இயல், சமூக இயல் புகுத்தப்படக்கூடாது. அங்கத்தினர்கள் நிர்வாணியான ஒருவனைப் பார்த்து எப்படி அவனது சாதி, மதம் கண்டு பிடிக்க முடியாதோ அதுபோல் பரிசுத்த உணர்வோடும், தோற்றத்தோடும் விளங்க வேண்டும்.

அதாவது, எந்தவித மதக் குறிப்பும், மதச் சின்னமும் அணிந்தவராக இருக்கக் கூடாது. களைய, எடுத்துவிட, மாற்றமுடியாத நிரந்தர சின்னத்தைத் தடையாகக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அங்கத்தினர்கள் குறைவாக இருந்தாலும் பகுத்தறிவுக்கு மாறான சாதி, மத சின்னங்கள், குறிகள் இல்லாமல் (கண்டிப்பாய்) பார்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'—30-11-1970]

5. நமது ஆராய்ச்சி மனப்பான்மை

1. புலவர்களின் தன்மை

நம் புலவர், பண்டிதர், தமிழறிஞர் என்பவர்களுக்குத் தமிழ் மொழி பற்றிய இலக்கியம், இலக்கணம் என்னும் துறைகளில் ஏதாவது அறிவுப் பயிற்சி இருந்தால் இருக்க முடியுமே யொழிய—உலகம், சரித்திரம், பூகோளம், பகுத்தறிவு, விஞ்ஞானம் என்னும் துறைகளில் அறிவோ ஆராய்ச்சியோ இருக்க முடியுமா என்பது பெரிதும் ஆலோசிக்கத் தக்கதாகும்.

இதைச் சொன்னால் நம் புலவர்களுக்குக் கோபம் வருவதில் குறைவில்லை. ஆனால், அப் புலவர்கள் தங்களைப்பற்றிச் சிறிது யோசித்துப் பார்க்கட்டும்! தங்களால் நாட்டுக்கோ, சமுதாயத்துக்கோ சிறிதாவது பயன் ஏற்படும்படியான காரியம் செய் கிறார்களா? செய்யத் தகுந்த அறிவோ, சக்தியோ இருக்கிறதா? அப்படிக்கில்லாமல் புராணங்களை உருப்போட்டுக்கொண்டும், புராணங்களுக்குப் புதிய கருத்து சொல்லிக் கொண்டும், உலக தற்கால நிலையை உணராமல் பார்ப்பனர்களைப்போல் வேடம் போட்டுக் கொண்டு—தங்களை மேல்சாதியார் என்று பிறர் மதிக்கவேண்டும் என்கின்ற ஆசையோடு திரிவதும் புலவர் தன்மை ஆகுமா?

புலவன் என்றாலும், பண்டிதன் என்றாலும், வித்வான் என்றாலும் அறிவுடையவன் என்பதுதான் கருத்தாகும். பண்டிதன், வித்வான் என்கின்ற சொற்கள் தமிழ் அல்ல என்றே கருதுகிறோம். புலமையை உடையவனே புலவன் ஆவான். நம் புலவர்களுக்குள்ள புலமைத் தன்மை என்னவென்று பார்த்தால், புராணப் புலமையும், தமிழ் மொழி இலக்கணப் புலமையும் அல்லாமல் அவர்களுக்கு வேறு எதில் புலமை இருக்கிறது?

எனவே, மேற்கண்ட புலவர்கள் ஒரு துறையில் பயிற்சி உள்ளவர்கள் என்பதைத் தவிர—பொது அறிவு பெறவோ, பொதுமக்களுக்கு வழிகாட்டும்படியான தன்மை பெறவோ, முன்னேற்றத்திற்கு வழி கோலவோ, புதுமையைச் சித்திரிக்கவோ இன்றையப் புலவர்கள் என்பவர்களுக்கு ஏதாவது பயிற்சி இருக்கிறதா? எனவே, ஒரு துறையில் பயிற்சி பெற்றவர்கள் பொதுத் துறையில் வந்து கலந்துகொள்ளுவதும், அதைப்பற்றிப் பேசத் தங்களுக்கு அருகதை உண்டு என்பதும் தங்களது குறைபாட்டைக் காட்டிக் கொள்வதே யாகும். உலக இயற்கை மாறுபாட்டைக் கொண்டதாகும். மாறுபாட்டிற்கு அடிமைப் படாது எதுவுமே இல்லை எனலாம். புலவர்கள் அல்லது அறிஞர்கள் என்பவர்களுக்கு, அம் மாறுபாட்டை—முன்னேற்றத்திற்கு ஏற்ற வண்ணம் அமைத்துக் கொடுக்கவேண்டியது கடமையாகும்.

ஆனால், நம் புலவர்கள் மாறுபாட்டை விரும்பாதவர்கள்; அது மாத்திரமல்லாமல், 1000, 2000, 3000, 5000 வருடங்கட்கு முன்னிருந்த நிலைமையை நிலைநாட்ட முயற்சிப்

பவர்கள். புலமைக்கும் பகுத்தறிவிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பவர்கள்; பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைகளிலே நம்பிக்கையும் பக்தியும் கொண்டு அவற்றை உருப்போட்டு மக்களுக்குள் புகுத்துகிறவர்கள். இவர்களைக் கொண்ட நாடோ மக்களோ எப்படி முன்னேற்றமடைய முடியும்? இவர்களுக்குப் பொது வாழ்வில் மதிப்பு இருக்கும் பட்சம் முன்னேற்றத்திற்கு இடமுண்டா?

பொதுவாகவே ஒரு மொழியில் இலக்கண இலக்கியங்களைப் படித்தவர்களையும்—மத சம்பந்தமான பயிற்சியும் நம்பிக்கையும் உடையவர்களைப் புலவர்கள் என்று அழைப்பதும் கருதுவதுமே பொது அறிவையும், அறிவு வளர்ச்சியையும் கொலை செய்வதற்கு ஒப்பாகும்.

முன்னேற்றத் தன்மையான விஷயங்களிலும் மக்களைச் சீர்திருத்தும் விஷயங் களிலும், மொழிப் புலவர்களுக்கும் மதப் புலவர்களுக்கும் மதவாதிகளுக்கும் இடம் கொடுப்பது, கலந்துகொள்ளச் செய்வது முதலியன முட்டுக்கட்டையான காரியங்களே யாகும்.

மொழித் துறைக்கும், மதத் துறைக்கும்கூட முற்போக்கு வேண்டுமானால் பொது அறிவுள்ள புலவர்கள் வேண்டுமே தவிர, ஒரு மொழி, ஒரு மதம் என்பதில் புலமை கொண்ட வர்கள் பெரிதும் அம் முன்னேற்றத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றே சொல்லுவோம். ஏனெனில், அவர்கள் தாங்கள் கற்றதையும், அந்தக் கற்பிலிருந்து தாங்கள் கொண்டதையும் தான் குரங்குப் பிடியாய் வலியுறுத்துவார்களே தவிர, திருத்தப்பாட்டிற்குச் சிறிதும் சம்மதிக்கமாட்டார்கள்.

இவற்றை நாம் திடீரென்று சொல்ல வரவில்லை. புலவர்களிடம் 40, 45 வருட காலமாய்ப் பழகி வந்த அனுபவங்களைக் கொண்டே சொல்லுகிறோம். உதாரணமாக, எந்தப் புலவராலாவது—எந்தத் துறையிலாவது இதுவரை ஏதாவது ஒரு முன்னேற்றகர மான—அறிவுக்கு ஆதரவான காரியம் நடந்திருக்கிறது என்று சொல்லமுடியுமா என்று பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

ஆகவே, சீர்திருத்தக்காரர்களும் முன்னேற்றக்காரர்களும் தங்கள் வேலைகளுக்குப் புலவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதோடு, அவர்களுக்குப் பாமர மக்களிடம் மதிப்பு இருக்கும்படியாகவும் இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறோம். அவர் களுக்கு மதிப்பு இருப்பதால் நமக்கு இருக்கும் தொல்லைகளுக்கும் நம் காரியங்களுக்கு இருக்கும் முட்டுக்கட்டைகளுக்கும் ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால், பெரியபுராண மும் கம்பராமாயணமும் பாமர மக்களுக்குள் பரவாமல் இருக்கத் தக்கவண்ணம் அவற்றை வெறுக்கச் செய்யவேண்டும் என்று நாம் சொன்ன உடனே, நாம் எதற்காக வெறுக்கச் சொல்லுகிறோம் என்று எடுத்துக் காட்டும் காரணங்களுக்கு எவ்வித சமாதானமும் சொல் லாமல், அவற்றை முன்னிலும் தீவிரமாகப் பரப்பும் வேலைகளையும், அப்படிச் சொல்லுகிற வனை ஆண்மையும் நேர்மையும் அற்றமுறையில் குறைகூறும் வேலைகளையும், மற்றும் இக் காரியங்களைச் செய்ய நம் பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்களின் காலுக்குள் நுழையும் துணிவையும் கொள்ளுவது என்றால்—புலவர்களின் இழிதன்மைக்கும், பொது அறிவுடைமைக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும்?

மொழிப் பயிற்சி வேறு, கலைப் பயிற்சி வேறு என்பதே நமது புலவர்களுக்குத் தெரிவதில்லை. மொழி, கலை, சமயம் ஆகிய மூன்றையும் ஒன்றாய்ப் போட்டுக் குழப்பி—நம் புலவர்கள் தங்கள் பொதுஅறிவு, புத்தியைப் பாழ்செய்து கொண்டார்கள். அதனாலேயே மொழியைத் திருத்தவும், சமயத்தைப் பரிசுத்தம்செய்யவும் இன்றையத் தன்மைக்கு ஏற்ற கலைகளைப் புதுப்பிக்கவும் வெகுகாலமாகவே ஒரு புலவராலும் முடியாமல் போய்விட்டது. இன்றுள்ள மொழிப் புலவர்கள் யாருக்காவது சமயத்தையோ, ஆண்-பெண் காதலையோ சம்பந்தப்படுத்தாமல் இயல், இசை, நாடகம் என்கின்ற முத் துறைகளிலும், ஏதாவது

செய்யவோ, சொல்லவோ தெரியுமா? சொல்லியோ செய்தோ இருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஆகவே, நமது நண்பர்கள், நாம் புலவர்களைக் குறைகூறுகின்றோம் என்று கருதாமல் அவர்களைப் பாராட்டும்படியான காரியம் என்ன இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

இப்பொழுது சிறிது காலமாக சில வாலிப மொழிப் புலவர்கள் நம் கருத்தைச் சிந்தித்துப் பார்த்துச் சிறிது அளவுக்கு மாற—பழம்பெரும் புலவர்கள், முதிய புலவர்கள் ஆகியவர்களிடமிருந்து மாறுபட்டு, நம் கொள்கையை ஆதரிக்க முற்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்; என்றாலும் சில வாலிபப் புலவர்கள் துணிவாய் வெளியில் வந்து வேலை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—15-1-1944]

2. நமது ஆராய்ச்சி மனப்பான்மை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மனிதன் அடுத்த 500 வருடத்தில் அடையக்கூடிய முற்போக்கு இப்போதே நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆனால், நம்மைச் சுற்றியுள்ள உலகம் இந் நிலையிலிருக்க நாமோ நமது ஆராய்ச்சிக் காரர்களால் 3000 வருடத்திற்கு முன்னால் நாம் இருந்த நிலையை அடைய வேண்டுமென்று தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்பட்டுப் பெருமை அடைகின்றோம். அப்படிப் பட்ட தொல்காப்பியம் 2000 வருஷத்திற்கு முந்தியதா, 3000 வருஷத்திற்கு முந்தியதா என்கின்ற ஆராய்ச்சி இன்னமும் நமக்குள் முடியவில்லை. ஆராய்ச்சிக்காரர்கள் யோக்கியதை இப்படி என்றால், நமது பண்டிதர்களுடைய யோக்கியதையோ சமணர்கள் கழுவேற்றப் பட்டார்களா அல்லது தாமாகக் கழுவேறினார்களா என்பதற்குச் சமயம்போல் பேச ஆதாரம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் தேசியப் பண்டிதர்களின் யோக்கியதையோ—தேசிய மேடையில் ஏறி, தாயைப் புணர்ந்தும் தகப்பனைக் கொன்றும் மோட்சத்திற்குப்போன புராணத்தையும், பெண்சாதியைக் கூட்டிக்கொடுத்து மோட்சத்திற்குப் போன புராணத்தையும் படித்தால் சுயராஜ்யம் வந்துவிடுமென்ற தேசியப் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

[சென்னை பிரம்ம சமாஜத்தில், 19-10-1929-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 27-10-1929]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மேல்நாட்டில் ஒவ்வொரு மனிதனும் அறிவாளிகள் சொன்னபடி கேட்டுத்தெரிந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் ஒவ்வொருவனும் அய்யர் என்ன சொல்லுகிறார்? சமயம் என்ன சொல்கிறது? சாஸ்திரமென்ன சொல்கிறது? என்று பார்த்துக்கொண்டிருப்பதோடு, கடவுள் வந்து சொப்பனத்தில் சொல்வார் என்றும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

20 வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளைக்காரப் பெண் அணிந்துவந்த உடை சுமார் 20 கஜத்திற்கு மேலாகவே இருக்கும். பெரிய வீட்டுப் பெண்கள் நடந்தால், துணி பூமியில் இழுபடாமல் தூக்கிக்கொண்டு போவதற்கு ஆள் வைப்பார்கள். அவயவங்களைப் பெரிதாகக் காட்டுவதற்கு முயற்சிப்பார்கள். இன்றைய தினம் அவர்களுடைய உடை 2 கஜம் துணியில் முடிந்துவிட்டது. எவ்வளவு குறுக்கவேண்டுமோ அவ்வளவு குறைத்துவிட்டார்கள். நாம், எதைச் சுருக்கினாலும் கடவுள் கோபித்துக்கொள்வாரோ என்று நடுங்குகிறோம்.

வெள்ளைக்காரர்களுடைய ஆராய்ச்சி அடுத்த வருஷத்திற்கு என்ன மாறுதல் செய்வதென்று துடித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி 2000 வருஷத்திற்கு முன் எப்படி இருந்தோமோ அப்படியே இருக்கவேண்டுமென்று கருதி அதைக் கண்டுபிடிக்கத் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. எனவே, வெள்ளைக்காரனுடைய முற்போக்குக் குதிரை முன்னாலும், நமது குதிரை பின்னாலும் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய முட்டாள்தனமான காரியங்கட்கெல்லாம் அவசியத்தையும் காரணத்தையும் சொல்லாமல் பகவான் சொன்னார்; மனு சொன்னார்; ஆகமம் சொல்லிற்று; ஆழ்வார் சொன்னார்; ஆச்சாரியார் சொன்னார் என்று சொல்வதைத் தவிர வேறுஒன்றும் சமாதானம் இல்லை. ஆகவே, நாம் எந்தக் காலத்திலோ, எவனோ, எதையோ, எதற்கோ சொன்னான்; அதைப் பற்றி நமக்கு என்ன கவலை என்று கருதி, இந்தக் காலத்துக்குத் தகுந்ததைச் செய்யாமல்—வாளாயிருப்போமானால் மனிதர்களாக வாழமுடியாது.

எப்படி, பஞ்சாட்சரம் ஜெபித்தால்—விபூதி பூசினால் மோட்சம் வரும் என்று மூடநம்பிக்கையைக் கருதிக்கொண்டு துன்பப்படுகிறோமோ அதுபோலவேதான், தக்ளி சுற்றினால்—உப்புக் காய்ச்சினால் விடுதலை வரும் என்று மூடநம்பிக்கையால் கஷ்டப் படுகிறோம். பஞ்சாட்சரத்திலும், விபூதியிலும் நமக்குள்ள மூடநம்பிக்கைதான் தக்ளியிலும் உப்புக் காய்ச்சுவதிலும் திருப்பி விட்டுவிட்டதே தவிர வேறில்லை. அதில் நாம் கடுகளவு ஆராய்ச்சியாவது செய்திருப்போமானால் இதிலும் அணுவளவாவது ஆராய்ச்சி செய்யப் புத்தி புகுந்திருக்கும். பரம்பரையாய் நமக்குள்ளிருந்த மூடநம்பிக்கை நம்மை ஆட்சி செய்துகொண்டு சிறிதும் முன்னேறவொட்டாமல் தடுக்கின்றது.

இப்போது நீங்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியில் போகும்போது உங்களிற் சிலர், ' இராமசாமி சரியாய்த்தான் பேசினான்; அதில் என்ன தப்பிருக்கிறது!' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வீர்கள். ஆனால், பக்கத்தில் ஒரு பார்ப்பான் நின்று கொண்டு உங்களைப் பார்த்து, ' நன்றாய் நாத்திகப் பிரச்சாரம் கேட்டீர்களா? பாகவதத்தில் இத்தனையாவது ஸ்காந்தத்தில் இம்மாதிரி இன்ன இடத்தில் இத்தனை மணிக்கு இன்னான் வந்து இந்த மாதிரி நாத்திகம் பேசுவான். ஜனங்கள் அறிவில்லாமல் கேட்டுக்கொண்டிருப் பார்கள். அதுதான் கலி வந்ததற்கு அடையாளம். அது சமயம் ஜாக்கிரதையாய் இருந்து அதை மறக்கடிக்க ஒவ்வொருவராக முயல வேண்டுமென்று பகவான் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். ஆதலால், அவற்றை நம்பாதீர்கள்' என்று சொல்லுவான். நீங்களும் திடுக்கிட்டு, ' ஆ! என்ன பிசகு செய்தோம்!' எனக் கருதி இந்தச் செய்தியைக் கேட்டதற் காக உங்கள் காதுகளைக் கழுவிக்கொள்வீர்கள்.

இப்படியேதான் உங்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏமாற்றி வைத்திருக் கிறார்கள். ஆகையால், எந்த விஷயத்தையும் கண்மூடித்தனமாய் நம்பிவிடாமல் உங்கள் அறிவைக்கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்த்து அதன் முடிவின்படி நடவுங்கள்.

[திருவாரூரில், 5-6-1930-ல் சொற்பொழிவு—' குடி அரசு ' 15-6-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை அடிமைத் தன்மையின் வாசனையினால் ஏற்பட்டதாகுமே தவிர ஒருகாலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது.

எங்களுக்காக ஏன் ஒருவர் பயப்படவேண்டும்? நாங்களும் மனிதர்கள்தானே? எந்த மனிதனுடையவும், எந்த அரசாங்கத்தினுடையவும் தனிப்பட்ட காரியங்கள் எதிலும் நாங்கள் பிரவேசிப்பதில்லையே! பொதுப்பட்ட காரியங்களில், பொதுமக்கள் நன்மை தீமைகளில் மற்ற எல்லாருக்கும் உள்ளதுபோன்ற உரிமை எங்களுக்கும் உண்டு என்பதில்

நாங்கள் சிறிதும் விட்டுக்கொடுக்க இசையோம். எங்கள் கருத்துகளுக்கு மாறுபட்டவர்கள் தக்க பதிலையும் ஆதாரத்தையும் உடையவர்களானால், நாங்கள் பேசுவதைத் தடுக்கவோ எங்கள்மீது ஆத்திரப்படவோ சற்றும் அவசியம் ஏற்படாது. ஆதாரமற்றவர்கள், தந்திரத்தில் வாழ்பவர்கள்; அதட்டலிலும் மிரட்டலிலும் மக்களை ஏமாற்றிக் காலம் கழிப்பவர்கள் ஆகியோருக்குத்தான் எங்களைப்பற்றிப் பயம் ஏற்படக்கூடும்; கோபமும் ஆத்திரமும் வரக்கூடும். ஆனால், அதற்காக நாங்கள் என்ன செய்வது? அஸ்திவார மற்றவைகளும் புரட்டுகளும் என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்குச் சாய்ந்து விழுந்துதான் தீரும்.

அன்றியும், அதைக் காப்பாற்ற முயற்சிக்கும் நாளெல்லாம் வீண்நாளே. வெகு நாளையப் புரட்டு என்பதாலேயோ, கோபக்காரர்கள், முரடர்கள், தந்திரக்காரர்கள் ஆதரிக்கிற அபிப்பிராயங்கள் என்பதாலேயோ எதுவும் நிலைத்திருக்க முடியாது. அவையெல்லாம் இனிப் பலிக்கவும் பலிக்காது. சுதந்திர உணர்ச்சி என்பது இத் தேசத்தில் இல்லையானாலும், சுற்றுப் பக்க தேசங்களில் இருந்துவந்து புகுந்துவிட்டது. இனி அதை வெளியில் தள்ளிவிட முடியாது. ஆதலால், தடைப்படுத்த முயற்சிப்பதிலோ கோபிப்பதிலோ பயனில்லை.

அசரீரி சொல்லிற்று, அருள் சொல்லிற்று, ஆகாயவாணி சொன்னாள், ஆண்டவன் சொன்னான் என்று ஏதோ ஒன்றைக் கற்பித்து எழுதிவைத்துக்கொண்டு அதன்படி நடந்தாக வேண்டுமென்று மக்களைக் கட்டாயப்படுத்திக்கொண்டு இருப்பதும்; அவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றியாவது சந்தேகப்பட்டு விவரம் கேட்டால் அவர்மீது கோபிப்பதும், வைவதும், பழிசுமத்துவதும், கலகமாகிவிடுமென்று மிரட்டுவதுமான காரியங்கள் எப்படி மனிதத் தன்மையானவையும் நியாயமானவையும் ஆகும்?

அசரீரி, ஆண்டவன், அருள், ஆகாசவாணி சொன்னவைகளானால் அதற்குப் புத்தகம் எதற்கு? ஒருவருக்கு மற்றொருவர் சொல்லுவதெதற்கு? காதில் உபதேசிப்பதெதற்கு? தத்துவார்த்தங்கள் எதற்கு? அறிமுகப் படுத்துவதெதற்கு? என்பவைகளை மக்கள் சிறிதும் யோசிப்பதில்லை.

ஏதாவதொன்றை ஆண்டவன் சொன்னான் என்று சொல்லிவிட்டால், 'ஆண்டவன் எப்படிச் சொன்னான்? ஆண்டவன் சொன்னதாக யார் சொன்னார்?' என்றுகூட கேட்கப் படாதென்கிறார்கள். தப்பித்தவறி யாராவது கேட்டுவிட்டால் வசவும், பழியும் மிரட்டலுடந்தான் பதிலாயிருக்கின்றனவே யொழிய, சமாதானமான பதிலென்பதே கிடையாது. ஆகவே, மனிதர்கள் முதலாவதாக இந்த இடத்தில் தங்களது அறிவைப் பயன்படுத்தச் சுதந்திரம் பெற்றாலல்லாது ஒருநாளும் மனித சமூகம் முற்போக்கடைவதற்கே இடமில்லாது போய் விடும். ஏனெனில், உலகத்தில் சிலர் பலரை ஏமாற்ற, ஆதிக்கம் செலுத்த தங்கள் தங்களது புரட்டுகளையும் பித்தலாட்டங்களையும் ஆரம்பித்த இடமே இந்த இடந்தான் என்று நாம் காணுவதால், அந்தப் புரட்டை முதலில் வெளியாக்கி விடவேண்டும். ஆதலால், அந்த இடத்தை நன்றாய்ப் பரீட்சிக்க வேண்டுமென்று மேலும் மேலும் வலியுறுத்துகிறோம்.

இன்று உலகத்திலுள்ள பெரும்பான்மை மதக்காரர்கள் தங்கள் தங்களுக்கென பற்பல விதமான வாசகங்களை வைத்துக்கொண்டு, அவற்றை ஆண்டவன் சொன்னான் என்று சாதித்துக் கொண்டு, அவற்றைப் பாமர மக்களிடம் பலவந்தமாகச் செலுத்திவிட்டார்கள். அதனாலேயே மக்களுள் பற்பல பிரிவுகள், அபிப்பிராய பேதங்கள் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதோடு, ஒருவரையொருவர் சந்தேகிக்கவும், வெறுக்கவும், அலட்சியமாய்க் கருதவும், எதிர்க்கவும், வஞ்சிக்கவும் அடக்கி ஆளவும் பயன்படுகின்றன. இந்த உணர்ச்சியையும் செய்கையையும் உலகத்தில் செல்வாக்குப்பெற விட்டுக் கொண்டிருக்கும்வரை மனித சமூகத்திற்குள் ஒற்றுமையும் ஓய்வும் ஏற்படுவதற்கு இடமே இல்லை.

நாம் இப்போது எந்த மதக்காரர்களுடைய கொள்கைகளையும் உபதேசங்களையும் எடுத்துக் கொண்டு அவை சரியா தப்பா என்பதாகவோ, ஆண்டவன் சொல்லா என்ப தாகவோ வாதாடவரவில்லை. நம்முடைய வேலையும் கவலையும் அதுவல்ல. எல்லா மதக் காரர்களும் பெரிதும் ஒரே ஆண்டவன்தான் உண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றவர் களானதால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்கைகளையும் உபதேச வாசகங்களையும் அந்த ஆண்டவனே சொன்னான் என்று சொல்லுவதால் இவர்களுக்குள் எந்த மதக்காரர்கள் சொல்வது உண்மையென்றும், எந்த அவதார புருஷர்கள் எந்தத் தூதர்கள் சொன்னது உண்மையாய் இருக்கக்கூடியதென்றும் கண்டுபிடிப்பதெப்படி? இதற்கு என்ன பரீட்சை?

இவைகளையெல்லாம் ஆண்டவன் சொன்னான் என்று நம்பும்படி கட்டாயப் படுத்துவதால் ஆண்டவன் எந்த ரூபத்தில், எந்த நிலையில், எங்கு இருந்துகொண்டு, என்ன மொழியில் சொன்னார் என்பதில், எந்த மதக்காரர்கள் உண்மை சொல்லுகின்றார்கள் என்று கண்டுபிடிப்பதுமேயாகும்.

மேலும், ஆண்டவன் என்பவர் தான் சொல்லவேண்டுமென்ற கொள்கையையோ, உபதேசத்தையோ தானே ஒருவர் மூலம் சொல்லிய பிறகு, மற்றவர்களால் எடுத்துச் சொல்லும்படி செய்த பிறகு அவை விவாதத்திற்கு உள்ளாயிருப்பதைப் பார்க்கும்போது— உண்மையிலேயே அவை ஆண்டவனால் சொல்லப்பட்டிருந்தால் அவைகள் ஒவ்வொரு மனிதனுடைய காதிலும் விழும்படியாகவோ, அல்லது மனத்திலும் பதியும்படியாகவோ— அல்லது இப்பொழுதாவது அவைகளை ஆண்டவன்தான் சொன்னான் என்று கருதும் படியாகவோ—ஏன் அந்த ஆண்டவனால் செய்யமுடியவில்லை என்றும், இது ஆண்டவனால் முடியாத காரியமா என்றும் யோசிக்கப் புகுந்தால், அதிலிருந்தே அவைகள் எல்லாம் ஆண்டவனால் சொல்லப்பட்டவை என்று சொல்லப்படுவது உண்மையாய் இருக்க முடியுமா என்னும் சந்தேகங்கள் தோன்றுவதற்கு, என்ன சமாதானம் சொல்லுவது என்பதேயாகும்.

[புதுச்சேரியில், 1-3-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 8-3-1931]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

முயற்சி விஷயத்தில் மேல் நாட்டாரோ இமயமலை உச்சியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், அதிவேகமாய்ப் பறக்க முயற்சிக்க வேண்டும் என்றும் அவ்வித முயற்சியினால் மரணமடைந்தாலும் பரவாயில்லை என்றும் மேல் நோக்கிக்கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியாவிலோ ஒன்றுமே இல்லை.

ஏனெனில், தைரியமும் வீரமும் நமக்கில்லை. உதாரணமாக, ரூ. 400, 500 இலஞ்சம் முதலியன செலவு செய்து ஒரு லைசென்சு வாங்கி துப்பாக்கி வாங்கியிருந்தாலும், அத் துப்பாக்கியின் குதிரையானது கெட்டுப்போய், குதிரையைக் கம்மாளனிடம் கொடுத்து விட்டுக் கட்டையை மூலையில் வைத்திருக்கும்பொழுதுகூட நமது குழந்தைகள் அதன் பக்கமாய்ச் சென்றால், 'துப்பாக்கி! துப்பாக்கி! கிட்டே போகாதே—போகாதே!' என்று சத்தமிடுகின்றோம். ஏன்? நமக்குப் பயமே அதிகமாக இருக்கின்றது; தைரிய உணர்ச்சி என்பது சிறிதுகூட இல்லை. இதனால் நமது அறிவு எவ்வளவுதூரம் முதிர்ச்சி அடைந் திருக்கின்றது என்பது புலப்படுகிறது. நாம், வீணாய் 'நாளை, நாளை' என நாட் களைக் கழித்துக்கொண்டுதான் செல்கின்றோமேயல்லாது வேறில்லை; விஷயங்களை உணரக்கூடிய சக்தியுமில்லை. அப்படி யாராவது உணர்ந்து சொல்ல வந்தாலும், 'நமது முன்னோர்கள் எவ்வளவு பெரியவர்கள்—அவர்களுக்குத் தெரியாத சங்கதியா இவர்களுக்குத் தெரிந்துவிட்டது? இவன் நேற்று வந்த பயல்தானே! அவரைவிடவா இவன் பெரியவன்?' என உரைப்பதில்இருக்கிறோம். இதற்குக் காரணம் என்னவென்றால், நமது அடிமைத்தனம் நம்முடைய தலையின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது; அது நமது அறிவைக் கூறில்லாமல் செய்துவிட்டது. நமது நாட்டில் இருக்கக்கூடிய அறிவாளிகளும், தீர்க்கதரிசி

களும், கவிவாணர்களும் பழைமையைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். பழைமையிலிருந்து அவர்கள் சிறிதேனும் நழுவுவார்களேயானால் அவர்களுடைய கவிகளை அரங்கேற்ற முடியவே முடியாது.

மக்கள் ஒவ்வொன்றையும் யோசனை செய்து புதிது புதிதாக ஒவ்வொன்றையும் கண்டுபிடிப்பதற்குத்தான் ஆராய்ச்சி எனப்பெயர். ஆனால், நாமோ நமது முன்னோர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை ஆராய்ச்சி செய்வதிலும், அதை நிலை நிறுத்த என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வதிலுந்தான் ஆராய்ச்சித்துறையில் இருந்துவருகின்றோமே யல்லாது, அதாவது, பின்னால்தான் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கிறோமே தவிர, முன்னோக்கிப் பார்ப்பது இல்லை. மேல்நாட்டுக்காரன் ஏதாகிலும் ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்தால் மென்மேலும் ஆராய்ச்சி செய்து, 1930-ல் இப்படி இருந்தால், 1940-ல் இது எப்படி இருக்கும்; 1950-ல் இப்படி இருந்தால், 1960-ல் எப்படி இருக்கும் என்பதையே அறிந்துகொள்ள முயற்சிக்கிறான். இதுதான் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

உதாரணமாக, ஒரு 'போர்டு மோட்டார்' வண்டியை எடுத்துக்கொண்டால் 20 வருடங்களுக்கு முன்பிருந்த உருவம் இப்போது இல்லை. அப்போது மணி ஒன்றுக்கு 18 மைல் சென்றால் இப்போது 90 மைல் வீதம் செல்கிறது. மோட்டாரில் காணப்படும் கோளாறுகளை குறைத்துக்கொண்டே முன்னேறிக்கொண்டு வருகிறான். அவனுக்கு மனிதத் தன்மை, உணர்ச்சி, ஊக்கம், முயற்சி, கவலை ஆகியவைகள் இருக்கின்றன. நமக்கோ அவை இல்லை.

எதை எடுத்தாலும் நமது நாட்டில் பழமை வந்து குறுக்கிடுகின்றது. நமக்குக் கவலை இல்லை; ஊக்கமில்லை; முயற்சி இல்லை; முற்போக்கடைய ஆசையுமில்லை. நாடு முற்போக்கு அடைந்துவிட்டால் சோம்பேறிகளுக்கு இடமிருக்காது. நாம் ஒவ்வொன்றையும் புராணக் கதைகளை ஒப்பிட்டுத் திருப்தி அடைகிறோம். நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பவைகளில் முதன்மையானது மூடப் பழக்கவழக்கமேயாகும்.

நாம், இங்குதான் 'பாரத வீரர்கள், பீமன் சந்ததிகள்' என்று மேடையேறிப் பேசுகிறோமே தவிர, ஒரு அராபி தேசத்தவனை ஒரு நடுத் தடத்தில் பார்த்துவிட்டால்—நமது மக்கள் ஆண், பெண் அடங்கலும் நடுங்குகின்றனர்; காலுடன் மூத்திரம் பெய்துகொள்கின்றனர். வெளி தேசத்திலிருந்து எவன் வந்தாலும் அவனைக் கண்டால் இப்படித்தான் நடுங்குகின்றோம்.

வெளிநாட்டுக்காரன் இங்குவந்து சம்பாதித்துப் போவதற்குக் காரணமே, நமக்கு வீரமும் நாணயமும் அற்ற தன்மையாலேயாகும். நமது கிராமங்களில் ஒரு அராபித் தேசத்துக்காரன் 4 ரூபாய் பெறும்படியான ஒரு சால்வையை 8 ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு 6 மாதம் பொறுத்துவந்து பணம் கேட்டால், வெற்றிலை, பாக்குத் தட்டில் வைத்து, சங்கராச்சாரிக்குக் காணிக்கை கொடுப்பதுபோல் பயபக்தியுடன் கொடுத்துவிடுகின்றோம்; அவனைக் கண்டால் நடுங்குகின்றோம். உள்ளூர்வாசியிடம் கடன்பட்டிருந்தாலோ அவனுடைய கடனைக் கொடுக்க மறுப்பதுமல்லாமல், 'பண்ணுவதைப் பண்ணு' என்றும் சொல்லுகிறோம். இதற்குக் காரணம் என்ன? ஒரு இரயில்வண்டியில் ஆப்கன் தேசத்தான் ஒருவன் இருந்து அவ்வண்டி முழுமையும் காலியாக இருந்தாலுங்கூட நாம் அவ் வண்டியில் ஏறமாட்டோம். நாம் 10 பேர்வரை ஒரு அறையில் உட்கார்ந்து அவ்வண்டியில் இடமில்லாதிருந்தபோதிலுங் கூட, வடதேசத்தான் ஒருவன் தைரியமாக வந்து உட்காருவான். நாமும் உடனே வண்டியைக் காலிசெய்துவிடுவோம்.

ஆனால், நாம் காளி, வீரன், கருப்பன், சடையாண்டி, முதலிய 'வீரம்' பொருந்திய தெய்வங்களை வணங்குபவர்களாகவும் இருக்கிறோம். எதற்காக இவற்றைக் கும்பிடுகிறோம் என்றால், அத் தெய்வங்களுக்குள்ள தைரியம் நமக்கும் வரவேண்டும் என்றுதான் கும்பிடு

கிறோம். ஆனால், நாம் அதனால் தைரியமுடையவர்களாக வாழ்கின்றோமா என்று பார்த்தாலோ அப்படியுமில்லை. நமது தைரியமெல்லாம் முதலில், 'அடி பார்க்கலாம்!' என்பதிலும், அடிவிழுந்தால் 'ஓடுவதற்குள் என்ன அவசரம்?' என்பதிலேயேதான் இருக்கின்றது. யார் அடித்தாலும் திருப்பி அடிக்கக்கூடிய நிலையில் நாம் இன்று இல்லை.

[திண்டுக்கல் சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-6-1931]

தோழர்களே!

விவகாரம், நியாயம் என்ற இரண்டு வார்த்தைகளையும் உபயோகப்படுத்தும் விதத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளும்படி கோருகிறேன். நியாயம் வேறு—விவகாரம் என்பதும் வேறு.

விவகாரம் என்பது வலுத்தவன் ஆதிக்கத்தையும், தந்திர சூழ்ச்சிகளையும், பணச் செல்வாக்கையும் பொறுத்து முடிவுபெற்றுவிடும். ஒருவன் தன்னிடம் சக்தியில்லாத காரணத்தால்—பேசும் திறமை, எடுத்துக்காட்டும் அனுபவம் ஆகியவை இல்லாத காரணத்தால் ஒரு விஷயத்தைப் பற்றி வாதித்துத் தோல்வியுற்றுவிட்டால் அது நியாயம் கண்டுபிடித்ததாகிவிடுமா? அதுபோல், உங்கள் வாய் அடங்கும்படி நான் பதில் சொல்லி விட்டதாலேயே நான் சொன்னது சரி என்று சொல்லிவிடமுடியாது. உங்களுக்கு எடுத்துச் சொல்லி மெய்ப்பிக்க முடியாததாலேயே நான் சொன்னது தப்பு என்றும் சொல்லிவிட முடியாது. ஆதலால், எனக்குத் தெரிந்த பதில் சொல்லுகிறேன். அதை ஆராய்ச்சி செய்து பிறகு தக்க ஒரு முடிவுக்கு வாருங்கள்.

[ஈரோடு, லண்டன் மிஷன் பள்ளியில் சொற்பொழிவு—'புரட்சி' 31-12-1933]

3. பழந் தமிழன் பெருமை

பழந் தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன?—என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக அந்தப் பெயரின்பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களைச் சுரண்டவோ, தங்கள் எண்ணத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவோ அது பயன்படுத்தப் படுகிறது. பழந் தமிழன் யாராயிருந்தால், எனக்கு என்ன? உங்களுக்குத்தான் என்ன காரியம் ஆகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சக்தியோ எதுவாய் இருந்தாலும் இங்கு, இன்று நமக்கு அதனால் என்ன இலாபம் என்பதுதான் என் கேள்வி. பழந்தமிழர் நிலையைப்பற்றிப் பேசுபவர்கள் பகுத்தறிவுவாதிகளானால், பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கும் அறிவாளிகளானால், நடுநிலைமைக்காரர்களானால்-அவர்களை ஒன்று கேட்கிறேன். அதாவது, காட்டுமிராண்டி வாழ்க்கைக் கால மனிதனைவிட கல்லாயுத கால வாழ்க்கை மனிதன் சிறந்தவன் அல்லவா என்பதும்; அதுபோலவே 4000, 5000 வருஷ காலத்திற்கு முன் இருந்த மனிதனைவிட இன்று 20-வது நூற்றாண்டில் வாழும் மனிதன் சிறிதாவது மேலான அனுபவமும், அனுபவம்பெற சவுகரியமும், ஆராய்ந்து பார்க்கும் வசதியும் உடையவனா அல்லவா என்பதோடு, அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைவிட, எண்ணிய எண்ணத்தைவிட வேறான வாழ்வும், வேறான எண்ணங்கள் கொள்ளவேண்டிய வனாய் இருக்கின்றானா இல்லையா என்பதுமே ஆகும்.

இன்று வாழும் மனிதனுடைய எந்தக் காரியத்திற்குப் பழந் தமிழனுடைய வாழ்க்கைக் குறிப்பும் நினைவுக் குறிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது என்று உங்களை வணக்கமாகக் கேட்கிறேன்.

வீணாகப் பழந்தமிழர் கொள்கை என்பதும், பழந் தமிழர் வாழ்க்கை நிலை என்பதும் அன்னியனை ஏய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோதான் பயன்படக்கூடியதாக ஆகி

விட்டன. இனி நம்முடைய எந்தச் சீர்திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுவாதியின் கடமையாகிவிட்டது.

பழந் தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந் தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு, மாறுதலோடு செல்ல வேண்டியவனே ஒழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஒரு ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால், சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்தவிடக்கூடாது என்பதோடு, அவ்வளவு மடையர்களாகவும் நாம் இல்லை. இன்று நம் பண்டிதர் பலருக்குப் பகுத்தறிவு இல்லாமல் போனதற்குக் காரணமே பழந்தமிழர் வாழ்க்கை, பழங்கொள்கை என்பன போன்ற பழமையேயாகும். பழந் தமிழர் பேச்சைப்பேசி இனி ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லை. ஆதலால், பொதுமக்கள் பழந் தமிழர் கொள்கைப் பேச்சுப் பித்தலாட்டத்திற்கு இடங்கொடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். அன்றியும் பழந் தமிழர் கொள்கை என்பது விவகாரத்திற்கு இடமாய்விட்டது.

['குடி அரசு'-கட்டுரை—10-1-1943]

4. சிந்திக்காததால் கேடு

தலைவரவர்களே! பேராசிரியர்களே! மாணவர்களே!

சிந்திக்கும் அறிவை 500, 1000 ஆண்டுகளுக்கு முன் மனிதன் பயன்படுத்தி இருந்தால் எவ்வளவோ முன்னுக்குப் போய் இருக்கலாம். ஜன்மமே துக்கம்; வாழ்வே துன்ப சாகரம்—என்று எண்ணியும், அறிவுகொண்டு எதையும் சிந்திக்காமலும் மனிதன் அடங்கிக் கிடந்தானே ஒழிய, 1000, 500 ஆண்டுகளுக்கு முன் எவனும் அறிவைப் பயன் படுத்தவே இல்லை.

மனிதன் தனது முயற்சியால் இரு வேறுவகை நாய்களைச் சேரவைத்துச் சிறந்த புதிய இனத்தை உண்டாக்குகிறான்; புளிப்பு மாங்காயைச் சர்க்கரை மாங்காயாக மாற்ற இரு வேறு மரக் கிளைகளை ஒட்டுகிறான்.

ஆனால், மனிதனை எந்த முறையில் திருத்தி முன்னேற்றலாம் என்று எண்ணவே இல்லை.

எனக்கு உள்ள கவலை—மனிதனுக்கு இந்த எண்ணம் ஏற்படும்படியான சாதனம் இந்தப் படிப்பு அல்ல. இருந்திருந்தால் மனிதன் எவ்வளவோ முன்னேறியிருப்பான்.

மனிதனைச் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று எண்ணுபவர்கள் மிகமிகக் குறைவு.

மக்கள் அறிவின் பெருமையை உணருவதற்கு முதுகைப் பார்த்துத்தான் பழகி யிருக்கிறார்களே ஒழிய, முன்னே பார்த்துப் பழகவில்லை.

கடவுள் சொன்னது, மகான் சொன்னது, ரிஷிகள் சொன்னது, அவதார புருஷர்கள் சொன்னது என்று பார்க்கிறானே ஒழிய—தன் புத்தி என்ன சொல்லுகிறது என்று பார்ப்பதேயில்லை.

மனிதன் குழந்தைப் பருவத்தைக் காட்டிலும்—3, 4 வயதில் அறிவில் சிறிது முன்னேறுகின்றான்; அதைவிடப் பள்ளிப் பருவத்தில் முன்னேற்றம் அடைகின்றான். பிறகு திருமணமான பிறகு குழந்தை குட்டிகளைப் பெற்றுக்கொண்டும் பல புது அனுபவங் களைப் பெறுகிறான். மற்றும் கால மாறுதல், சுற்றுச் சார்பு, அக்கம் பக்கம் இவைகளுக் கேற்பவும் மாறுதல் அடைகிறான்.

வாழ்வுக்கு, பொறுப்புக்கு, பக்குவத்துக்கு ஏற்ப அறிவு மாறும்போது—1000, 2000 வருடங்களுக்கு முன்பு, 4 சதுர்யுகங்களுக்கு முன்பு, நமது முன்னோர்கள் எப்படி நடந்தார்கள், நமது கடவுள்—சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன, அதன்படிதான் நடக்க வேண்டும் என்றால் என்ன நியாயம்? சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர்களைவிட நாம் சிறந்தவர்களாக உள்ளோம். இது இப்படி இருக்க, 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எப்படி அறிவுள்ளவனாக, இன்றைய மனிதனைவிட எதில் சிறந்தவனாக இருக்கமுடியும்?

கிராமத்து அறிவைவிட நகரத்து அறிவு சிறந்து இருக்கின்றது. சென்னை போன்ற பெரிய இடங்களில் நகரத்து அறிவைவிட அதிகம் பெறமுடிகிறது.

நமது நாட்டு அறிவைவிட லண்டன், அமெரிக்கா அறிவு சிறந்து நிற்கின்றது; இந்த லண்டன், அமெரிக்காவைவிட—ரஷ்யா அறிவில் மேலோங்கி நிற்கின்றது. இவைகளையெல்லாம் கண்டு—நாம் இதுவரை எதை எதை அறிவு வளர்ச்சி பெற்ற இடங்கள் என்று எண்ணி இருந்தோமோ—அதை, அதைவிட அதிக வளர்ச்சி பெற்ற இடங்கள் உண்டு என்பதை உணர்ந்து, நமது தவறான கருத்துக்களை எல்லாம் மாற்றிக்கொள்ளுகின்றோம்.

இவ்வளவு பிரத்தியட்சத்தைக் கண்ட பிறகும் நாம் கீழ்நிலையிலேயே இருக்கின்றோம். நமக்கு அறிவு இருந்தாலும், பகுத்தறிவை—உணர்ச்சியைத் தூண்ட அறிவு சாதனங்களும் இல்லை; நமக்கு வழிகாட்ட ஆளேயில்லை. எவனைப் பார்த்தாலும் பின்னாலே போகச் சொல்லுவானே ஒழிய, முன்னுக்குக் காட்ட ஆளே இல்லை. எதற்கு எடுத்தாலும்—சாஸ்திரத்தைப் பார்! புராணத்தைப் பார்! புலவர்களின் இலக்கியத்தைப் பார்! என்கிறார்களே ஒழிய, உன் புத்தி என்ன சொல்லுகிறது என்று சிந்தித்துப் பார் என்பதே இல்லை.

மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், ஒழுக்கங்கள் என்ன என்றால்—அந்த முனி அப்படிச் சொன்னார்; இந்த ரிஷி இப்படிச் சொன்னார் என்று கூறுகிறானே ஒழிய, அந்தப் பயல்கள் எல்லாம் யார், அவர்கள் வாழ்ந்ததாகக் கூறுகின்றாயே—அந்த 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு என்ன புத்தியிருந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பதே இல்லை.

தோழர்களே! நமது கோர்ட்டுகளில் சட்டத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது மேற்கோள் காட்டி விளக்குகையில்—அகத்தியர் என்ன சொன்னார்? நாரதர் என்ன சொன்னார்? வசிஷ்டர் என்ன சொன்னார்? என்றுதான் பார்க்கப்படுகிறது.

நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிக் கூறப்படுபவர்களெல்லாம் யார்? அவர்கள் பிறப்பு, வளர்ப்பு என்ன? என்பதை எண்ணிப் பார்த்தால்—நாம் எவ்வளவு மோசமாக நடக்கின்றோம்; நமது சட்டம் எவ்வளவு முட்டாள்தனமானது என்பது விளங்கும்.

இந்த ரிஷிகள் பலர் மனிதர்களுக்கே பிறக்கவில்லை. கலைக்கோட்டு முனி—மானுக்கும்; ஜம்புகர்—நரிக்கும், கவுதமர்—மாட்டுக்கும், மாண்டவியர்—தவளைக்கும், காங்கேயர்—கழுதைக்கும், கணநாதர்—கோட்டானுக்கும், சவுனகர்—நாய்க்கும், சுகர்—கிளிக்கும், ஜாம்பவந்தர்—கரடிக்கும், அஸ்வத்தாமா—குதிரைக்கும் பிறந்தார்கள் என்று புராணங்களில் எழுதிவைத்துக்கொண்டு இருக்கின்றனர். இவர்கள்தாம் நம் வாழ்வுக்கும் நடப்புக்கும் ஒழுக்கமுறையைக் கற்பிக்க எடுத்துக்காட்டாகக் கூறப்படுபவர்கள்.

எனவே, மாணவர்கள் அறிவில் நம்பிக்கை வைத்து, எந்தக் காரியத்தையும் துருவித் துருவிப் பார்க்கவேண்டும்; முன்னோர்கள் பக்கம் திரும்பிப் பார்க்கவேகூடாது. இப்படி அறிவில் நம்பிக்கை வைக்க வேண்டும்—சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கூறுபவர்களை இவர்கள் நாத்திகர்கள் என்று ஒரு வார்த்தையில் கூறிவிடுகின்றனர்.

நாத்திகன் என்றால் ஞானி, அறிவாளி என்றுதான் பெயர்; கடவுள் இல்லை என்பவர் என்பது பொருள் அல்ல. ஞானி என்றால் முனிவர் என்பது அல்ல—ஞானம் உடையவன்; அறிவு உடையவன் என்பது பொருள். எவன் ஒருவன் அறிவை உபயோகப் படுத்துகிறானோ—எவன் ஒருவன் அறிவுகொண்டு எதையும் விவகாரம் பண்ணுகிறானோ அவன் நாத்திகன் என்று கூறப்படுகிறான்.

ஆத்திகன் என்றால் அறிவில் நம்பிக்கை வைக்காமல்—சாஸ்திரம், புராணங்கள் முதலியவைகளை அப்படியே ஒப்புக்கொண்டு, ஆராயாமல் நடப்பவன் என்று பொருள்.

தோழர்களே! இராமாயணத்திலேயே ஓர் இடத்தில் நாத்திகனைப் பற்றிக் குறிக்கும் போது, 'எவன் ஒருவன் நீதியில் நம்பிக்கை வைத்து நடக்கின்றானோ அவன் நாத்திகன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்படி அறிவில் நம்பிக்கை வைத்து நடக்க வேண்டும் என்று சொன்னவர்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டே இருக்கின்றனர். அதன் காரணமாகவே இந்தத் துறையில் இறங்கிப் பாடுபட எவருமே முன் வருவதில்லை.

2500 ஆண்டுகளுக்கு முன் புத்தர் தோன்றிப் பாடுபட்டார். 'உன் அறிவு என்ன சொன்னதோ அதன்படி நட; முன்னோர்கள்—பெரியவர்கள் சொன்னார்கள், வெகு காலத்துக்குமுன் சொல்லப்பட்ட கருத்தாயிற்றே என்று நம்பாதே! மோட்சம், நரகம் என்பது எல்லாம் பித்தலாட்டம்' என்று எடுத்துக் காட்டி விளக்கினார். அவருடைய இயக்கம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பரவி இருந்தது என்றாலும், புத்தருக்குப் பிறகு அது ஒழிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டுவிட்டது. பிறகு யாரும் வரவில்லை. நாங்கள்தான் பாடுபடுகின்றோம்.

மாணவர்களாகிய நீங்கள் நல்ல வாழ்வில் நம்பிக்கை வைக்கவேண்டும். அறிவில் நம்பிக்கை வைத்து ஒழுக வேண்டும்.

[மதுரை தியாகராயர் கல்லூரியில், 13-3-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-4-1961]

பகுதி VIII

கலைகள்

1. கலைகள்

1. நமது இலக்கியம்

தலைவரவர்களே! மாணவத் தோழர்களே! தாய்மார்களே!

தமிழனைப் பற்றிச் சிந்தித்து இலக்கியம் பற்றி ஏதாவது பேசுவதாக இருந்தால், முதலில் எதற்காக இலக்கியம், அதனால் நமக்கு என்ன பயன் என்று யோசிக்க வேண்டும். நம் புத்திக்கு எட்டிய முறையில் தமிழர் பண்புக்கு, கலைக்குத் தகுந்தவாறு ஏதாவது இருக்கிறதா என்றால் ஒரு இலக்கியங்கூட இல்லை. இருந்தால் யாராவது சொல்லட்டுமே! எல்லா இலக்கியங்களும் ஆரியர் பண்புக்கு, கலைக்கு, நடத்தைக்குத்தான் இருக்கின்றன. வேண்டுமானால், 'குறள் இருக்கிறதே' என்று சிலர் சொல்வார்கள். நான் சொல்வேன், 'குறளில்கூட தமிழருக்குத் தகுந்தவாறு 50 சதம் தான் இருக்கிறது' என்று. நாட்டில் இலக்கியங்கள் இருந்தால் அது நாகரிகத்திற்கு, அறிவு வளர்ச்சிக்கு, புரட்சிக்கு, முற்போக்கு மாறுதலுக்கு உதவிட வேண்டும். ஆனால், நம் நாட்டு இலக்கியங்களோ புலவர்களும் மதவாதிகளும் ஆரியரும் பிழைக்கத்தான் இருக்கின்றன. 'வடமொழி வேதங்கள் ஆரியருக் கென்றால் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் தான் நமது வேதங்கள்' என்று ஒரு தடவை மறைமலையடிகள் சொன்னார்கள். கடவுளைக் 'கண்ணே', 'மணியே'! என்று பிரார்த்தித்தால் அது வேதமாகுமா? இலக்கியமாகுமா? மூடத்தனமான பக்திப் பாடல் களைத் தவிர நமக்கு இலக்கியமில்லை.

மேல்நாட்டு இலக்கியங்களைப் பாருங்கள்! மேல்நாட்டு இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் நான் சொல்வதன் உண்மை விளங்கும். நம் நாட்டில் இருக்கும் இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் அதில் மதம் தலைவிரித்தாடும். ஆத்திகம் ஆதிக்கம் செலுத்தும். ஆரியம் அதை அடிமை கொண்டதாக இருக்கும். இன்றைக்குத் தொல்காப்பியம் இருக்கிறது. அதுவும் இலக்கியந்தான். அது புலவர் கையிலும், பட்டதாரி கையிலும் சிக்கியதே தவிர பாட்டாளிகள் கையில் சிக்கவில்லை. என்றாலும், அதிலும் ஆரியம் புகுந் திருக்கிறது. விளம்பரமாகியிருக்கும் மற்ற இலக்கியங்கள் இராமாயணம், பாரதம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம் இவைதாம். பெரும்பாலானவை வடமொழியி லிருந்து காப்பியடிக்கப்பட்ட நூல்கள். மற்றவை அவற்றை அனுசரித்துச் செய்யப் பட்டவை. ஆரியர் வருகைக்கு முன்பு தமிழர் பண்பு எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படி இருக்கவேண்டியதாகும் என்பதைக்காட்ட நமக்கு இலக்கியம் இருக்கிறதா? ஏதாவது ஒன்று இருந்ததாகக் காட்டவாவது முடியுமா? ஆரியர்கள் இதில் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தால், மக்கள் இதைப்பற்றிக் கவலைப்பட வில்லை; சிந்திக்கக்கூட இல்லை. ஆங்கில இலக்கியங்களைப் படித்தவர்கள் பிழைப்புக்காக உத்தியோகத்திற்குப் போய்விட்டார்கள். அவர்கள், அதை வேறு எவருக்கும் கற்றுத் தரவில்லை; பயன் படுத்த வில்லை. அதனால் நல்ல மேல்நாட்டு இலக்கியங்களும் நம் மக்களிடம் பரவவில்லை. அறிவோடு ஆராய்ந்து பார்த்தால், நமக்கு இலக்கியம் இருந்ததா என்பதுபற்றிக்கூட நினைக்க நியாயமில்லை. ஆரியர்களுக்கே இலக்கிய சுதந்திரம், ஆக்க சுதந்திரம் இருந்ததோடு அழிக்கும் சுதந்திரமும் இருந்தது. நமக்கென இருந்தவை எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. அக் காலத்தில் கிராமபோன் இல்லை; அச்சு இயந்திரம் இல்லை; ஓலை ஏடுகள்தான் இருந்தன. ஏடு நீண்ட நாட்களுக்கு இருக்க முடியாது. கரையான் அரித்துவிடும்; பூச்சிகள் தின்றுவிடும். ஆரியம் இலக்கியத் துறையிலே ஆதிக்கம் கொண்டிருந்தபொழுது அதனுடன் போட்டிபோடத் தக்க சாதனங்கள் இல்லாமலிருந்தன.

முதலாவது, நம்மவர்களுக்குப் படிப்பில்லை. சிறிது படித்தவர்கள் இருந்தால் அவர்கள் பக்தர்களாக ஆகிவிடுகிறார்கள். அப் பக்தர்கள் ஆரியத்தைப் பரப்பும் அடிகளார்களாக ஆகிவிடுகிறார்கள். இலக்கியம் என்றாலே பக்தி நூல்கள்; புலவர்கள் என்றாலே பக்தர்கள். இப் புலவர்களால் இலக்கியம் எப்படி வளரமுடியும்? ஆகவே, பொதுவாக நமக்கு இலக்கியமில்லை.

இன்று புலவர்கள் என்பவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் ஆரிய இலக்கியங்களை விற்று வயிறு வளர்க்கிறவர்கள்தான். கலைவாணர்கள் என்பவர்களும் ஏராளமாய் இருக்கிறார்கள். அவர்கள் 100-க்கு 100 பேரும் ஆரியப் பண்புள்ள இலக்கியங்களைக் கலைக்குள் புகுத்தி, ஆரிய அடிமைகளாக இருந்து, வயிறு வளர்க்கிறவர்கள்தான். அவர்கள் கல்லூரிகளிலும், உத்தியோகங்களிலும், பள்ளிகளிலும் இருந்துகொண்டு புத்தகம் போட்டுப் பணம் சம்பாதிக்கிறார்கள். நமக்கு, நம் பண்புக்கு வேண்டிய இலக்கியங்களை எழுத யாரும் இல்லை. இரண்டொரு ஸ்தாபனங்கள்தான் இதற்காகப் பாடுபடுகின்றன. அவற்றுக்குச் செல்வாக்கு இல்லை. சிறிது செல்வாக்கு இருந்தாலும் அதை எதிரிகள் மட்டந்தட்டியபடி இருக்கிறார்கள். அறிவை, ஒழுக்கத்தை வளர்க்கும் இலக்கியமே தேவை. ஆகவே, இனிமேல்தான் நமக்கான இலக்கியம் தோன்றவேண்டும். அதில் இந்துமதம், ஆத்திகம், ஆரியம் மூன்றும் இருக்கக்கூடாது. அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம் இவைதான் இருக்கவேண்டும். அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றால் அவை நம் நாட்டில் நாத்திகம், மதவெறுப்பு என்றாக்கப்பட்டுவிட்டது. அதனாலேயே நம் நாட்டில் நல்ல பயன்படும் இலக்கியம் இல்லை என்பதோடு தோன்றவும் இல்லை.

காவியங்கள் என்ற பெயரால் சில இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவை எதற்கு உதவும் என்பதே எவருக்கும் தெரியாது. அவை மக்களிடம் பரவவும் இல்லை. உண்மையில் தமிழருக்கு உகந்த ஒரு இலக்கிய நூல்கூட இல்லை. சிலப்பதிகாரத்தில் ஆரியம், மடமை கலக்காமல் இருக்கும் பத்து வரிகளைக் காணமுடியாது. இப்படித்தான் மற்றவையும். ஆரியப் பண்பு வேறு; நமது பண்பு வேறு. ஆரியர் வேறு; நாம் வேறு. ஆரியம் வேறு, திராவிடம் வேறு என்ற உணர்ச்சியும் எண்ணமும் இப்போது 50 ஆண்டுகளாகத்தான் மக்களிடம்—அதுவும் வெகு சில மக்களிடம் காணமுடிகிறது. நேற்றுவரை இலக்கியங்களைக் கையாண்டவனும், தோற்றுவித்தவனும் ஆரியன்தான். ஆரியப் பிரச்சாரத்திற்கும் ஆதிக்கத்திற்குந்தான் அவற்றைத் தோற்றுவித்தான். நம் முயற்சியால் தமிழில் ஏதோ சில நூல்கள் தோன்றின. பத்திரிகைப் பிரச்சாரம் செய்யப் பலர் வசதி பெற்றுள்ளனர். என்றாலும், அவர்களில் ஆரியத்திற்கு அடிமையாகிப் பணம் திரட்டும் ஈனப் பிறவிகளாகவே அதிகம் பேர் இருந்து வருகிறார்கள். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ்ப் புலவர்கள் இவ்வளவு துரோகிகளாக இல்லாவிட்டாலும் மடமையில், பொய்யில் ஊறியவர்கள். பட்டமரம் தழைக்கப் பாடுவார்கள். அறம் பாடி மிரட்டுவார்கள். பிச்சை எடுக்கக் கவி பாடுவார்கள். ஆரிய புராண இலக்கியத்தைப் பரப்பிக் கூலி பெறுவார்கள். இந்தக் கோவிலில் முக்கியம் என்ன என்று ஒருவனைக் கேட்டால் அதுவா, அது இன்ன ஆழ்வாரால் மங்களாசாசனம் பெற்ற கோவில்; இன்ன நாயன்மாரால் பாடப் பெற்ற கோவில் என்பதுதான் பெருமை.

பழங்காலத்தில் ஏதோ சிறிது படித்தாலும் பெரும் புலவனாகிவிடுவான். அக் காலத்தில் வசனம் இல்லை. பெரிதும் பாட்டுத்தான். அந்தப் பாட்டும் எதுகை, மோனையை அவசியமாகக் கொண்டவையாக இருக்கும். அதைத் தெரிந்தவன் ஒன்று பிச்சைக்குப் பாடுவான், அல்லது பக்திக்குப் பாடுவான்! பக்திக்குப் பாட ஆரம்பித்தால் சுவாமிகள், அடிகள், நாயன்மார், ஆழ்வார் ஆகிவிடுவார்கள். அவர்கள் அதிகமாகப் பிச்சை எடுத்துக்கொண்டு திரிந்த பக்கத்தில் உள்ள கடவுள்களைப்பற்றிப் பாடிய பாட்டுக்கள் பிரபந்தங்கள் ஆகிவிடுகின்றன. அக் கோவில்கள் பாடல்பெற்ற கோவில்—

'ஸ்தலங்கள்' ஆகிவிடுகின்றன. பாட்டு, 'தேவ ஆரங்கள்' ஆகிவிடுகின்றன. யாரோ ஒரு சில புலவர்கள்—வள்ளுவர், அவ்வை, கபிலர் போன்றவர்கள் நீதிநூல், நீதி மஞ்சரி, கொன்றைவேந்தன், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சதகம், நாலடி முதலிய பல நீதிகளைப்பற்றியும் ஒழுக்கம்பற்றியும் கூறப்பட்டுள்ள இலக்கியங்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார்கள். 60, 70 ஆண்டுகளுக்கு முன் நான் திண்ணைப் பள்ளிகளில் படிக்கும் பொழுது இவையே தலைசிறந்து விளங்கின. இப்போது அவை குப்பை மேட்டிற்குப் போகச் செய்யப்பட்டுவிட்டன. அந்த இடங்களைப் புராணங்கள், இதிகாசங்கள், கைப்பற்றிவிட்டன. மக்களுக்குள் 50 ஆண்டுக்கு முன்பிருந்த ஒழுக்கம் இன்று ஏன் இல்லை என்றால், ஒழுக்கத்தைப் போதிக்கும் இலக்கிய நூல் எங்கே இருக்கிறது? ஒழுக்கத்திற்காக இலக்கியம் இல்லை என்பது மாத்திரமல்லாமல், ஒழுக்கத்திற்கான கல்வியும் இல்லை; ஒழுக்கத்திற்கான மதமும் இல்லை; ஒழுக்கத்திற்கான அரசும் இல்லை. ஒழுக்கக் கேட்டிற்கும், மோசடி-வஞ்சகத்திற்கும், துரோகத்திற்கும் கல்லூரி, சகல கலாசாலை என்று சொல்லத்தக்க வண்ணமே இவைகள் இருக்கின்றன.

[திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 29-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-9-1956]

2. குறளும்—நானும்

பேரன்பு படைத்த தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! வணக்கம்.

வள்ளுவர் குறளையும், அந்தப்படியே, அப்போது பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்று கண்டித்து வந்தேன். எல்லாவற்றையும் குறை சொல்லும்போது, பலர் என்னிடம், 'எல்லாம் போய்விட்டால், நமக்கு எதுதான் நூல்!' என்று கேட்பார்கள். நான், 'இங்கே இருக்கிற மலத்தினால் கெட்ட நாற்றம் வீசுகிறது; அதை எடுத்துவிடு என்று கூறினால்—அந்த இடத்தில் என்ன வைப்பது என்றா கேட்பது?' என்று பதில் கூறுவேன்.

ஏறக்குறைய மத சம்பந்தமான காரியங்களில் மக்களுக்கு நம்பிக்கையே இருக்கக் கூடாது என்று கருதி அந்தப்படியாகவே பிரச்சாரம் புரிந்து வந்தேன். பிறகு நாளாக ஆக நல்ல அறிவாளிகளோடு—அறிவாளி என்றால் பண்டிதர்களோடு அல்ல, பொது அறிவுள்ள மக்களோடு, திராவிட உணர்ச்சி மிக்கவர்களோடு—நம் உணர்ச்சியுள்ள அறிவாளிகளோடு பழகியபோது குறளின் மேன்மை பற்றி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நான், 'இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதே, இந்த இடத்தில் இப்படி யிருக்கிறதே!' என்று கேட்டேன். 'அது பரிமேலழகரின் உரை; அது குறளாசிரியர் கருத்தல்ல' என்று எடுத்துக் கூறி உண்மை உரையினைச் சொன்னார்கள். அந்தக் காலத்தில் பரிமேலழகர் உரைதான் சிறந்த உரை என்று கொண்டாடப்பட்டது. அவர் மனுதர்ம சாஸ்திரப்படி குறளுக்கு உரை எழுதிவிட்டார். பின்னர் வந்த அறிவாளிகள் அதைக் கண்டித்து, குறளின் உண்மைக் கருத்தை எடுத்துக் காட்டினார்கள்.

அதிலிருந்துதான் நான் குறளைப் பற்றிப் பேசுகிறேன். அதுவும் அதையே ஆதாரமாக (Authority) எடுத்துக் கொண்டல்ல; 'நான் சொல்லுகிற கருத்து—அதிலும் இருக்கிறது பார்!' என்று கூறிவந்தேன்.

சிறிது குறை இருந்தாலும் இப்போதைக்கு இது இருக்கட்டும் என்று கருதினேன்.

புராணக் கருத்துக்களிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நம் மக்களுக்குப் பகுத்தறிவு வளர்ந்தபின், மூடக் கருத்துக்கள் ஆட்டம் கண்ட பின்தான் குறளின் பொருளை உணரும் அறிவு மக்களுக்கு உண்டாகும் என்று கருதி, முதலில் மூடக் கருத்துகளை அகற்றும் பணியில் பிரச்சாரம் புரிந்து வந்தேன். இன்று மக்களுக்குக் கொஞ்சம் அறிவுத் தெளிவு—பகுத்தறிவுத் தன்மை வளர்ந்து இருக்கிறதால் இன்று குறளைப் பற்றிப் பேசுகிறேன்.

'குறளில் இப்படியிருக்கிறதே! நீ ஏன் இப்படி நடக்கிறாய்?' என்று கேட்காதீர்கள். நான் சொல்லுவது அதில் இருக்கிறது என்ற அளவில்தான்—நான் குறளை ஆதரிக்கிறேன்; அதை அப்படியே முழுவதையும் ஒத்துக் கொள்ளமாட்டேன்.

உதாரணமாக, மாமிச உணவு உண்பதை வள்ளுவர் மிக வன்மையாகக் கண்டிக்கிறார்; கொல்லாமையின் உயர்வு குறித்து வெகுவாக எழுதியிருக்கிறார். குறளிலேயே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதே என்பதற்காக நான் மாமிச உணவு உட்கொள்ளாமல் இருக்கமுடியுமா? மக்களுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் குறள்தான் ஆதாரம் என்று சொல்லவில்லை.

குறளிலிருந்து உங்களுக்கு வேண்டியதை ஏற்றுக் கொள்ளுங்கள். வேண்டாததைத் தள்ளிவிடுங்கள் என்றுதான் கூறுகிறேன்.

ஒரு கடையில் எல்லா சாமான்களும் கிடைக்கும் என்றால், அந்தக் கடையில் உள்ள எல்லா சாமான்களையும் நாம் வாங்கிக்கொண்டு வருவோமா? நமக்குத் தேவையான சாமான்களை மாத்திரந்தான் வாங்கிவருவோம். அது போலவே, குறளில் வேண்டியதை எடுத்துக் கொண்டு வேண்டாததை விட்டு விடுங்கள் என்று கூறுகிறேன்.

குறளில் ஏதோ சில குறைகள் இருக்கலாம்; இருக்க முடியும். ஏனென்றால், அது 1950-வது வருடத்திய (இன்றைய) மாடல் அல்ல. 2000 வருடத்திற்கு முந்திய சங்கதி. திருவள்ளுவர் திரிகால முணர்ந்த முனிபுங்கவரென்றோ, ஞானியென்றோ நாம் கொள்ளவில்லை. 2000 வருடங்களுக்கு முன்னர் ஒருவன் எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும் எலக்ட்ரிக் லைட், ஒலிபெருக்கி, மோட்டார் முதலியவைகளைக் கண்டிருப்பானா? மதவாதிகள் வேண்டுமானால், 'எல்லாக் காலத்தையும், முக்காலத்தையும் உணர்ந்த மகான் இவர்' என்று பலரை விளம்பரப்படுத்தலாம். ஆனால், அது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. நாம் திருவள்ளுவரை மகான் என்றோ அவதார புருஷரென்றோ ஒத்துக்கொள்ளமாட்டோம்.

திருவள்ளுவர் நல்ல அறிவாளி, ஆராய்ச்சிக்காரர். அந்தக் காலத்தில் மக்களிடம் பரவி இருந்த மூட எண்ணங்களோடு போராடிய அறிஞர் என்ற அளவில்தான் ஒத்துக் கொள்ள முடியும்.

அந்தப்படியிருக்க, 2000 ஆண்களுக்கு முன்னதாகத் திருவள்ளுவர் சொன்னவை எல்லாம் அப்படியே இன்றைக்கும் ஏற்றதாக இருக்க முடியுமா? இன்றைய நிலைக்கு நான் பேசும் கொள்கைகள் சரி; என் திட்டங்கள் சரி என்றால் எனக்குப் பிறகும், இன்னும் 100, 200, 1000 வருடங்களுக்குப் பிறகும் என் கொள்கைகள்—நான் வகுத்த திட்டங்கள் கொஞ்சங்கூட மாற்றப்படாமல் அப்படியே இருக்கவேண்டும் என்பது என்ன நியாயம்? அந்தப்படி இருக்க முடியுமா?

காலத்திற்கு ஏற்ற முறையில்தான் எண்ணங்களின் விரிவும், கொள்கை, திட்டங்களும் இருக்க முடியும். போர் முறை பற்றித் திருவள்ளுவர்—வில், வாள், வேல், கேடயம் என்ற ஆயுதங்களை வைத்துத்தானே எழுதியிருக்கிறார்? இன்று எழுதப்பட்டால் அணுகுண்டைப் பற்றி எழுதுவார்கள்; நாளைக்கு வேறொன்று. இந்தப் படியாகத்தானே மாறிக் கொண்டே போகும்! அப்படியிருக்க, எதையும் மாற்றக்கூடாது என்பது என்ன நியாயம்? ஆரியக் கருத்துகள், தத்துவங்கள் நம் நாட்டில் நுழையாதிருந்தால், நமக்குக் குறளே ஆதாரமாக—குறளே நம்முடைய மதமாக இருந்திருக்கும். ஆரியர்கள் திருவள்ளுவரை முதலிலேயே—பிறப்பிலேயே இழிந்தவராக ஆக்கிவிட்டார்கள்.

இந்து மதத்தில் எந்தக் காரியங்களைச் செய்தவராக இருந்தாலும், அதிசயமான—அற்புதமான—நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களை அவர்களின் பிறவியில்—வரலாற்றில் புகுத்துவார்கள். இவன் குதிரைக்குப் பிறந்தான்; இவன் குரங்குக்குப் பிறந்தான்; இவன் யானைக்குப் பிறந்தான்; இவன் செத்துப்போனவனை உயிர் மீட்டு எழச்செய்தான்; இவன்

மண்ணைச் சர்க்கரையாக்கினான்; குருடனுக்குக் கண் கொடுத்தான்—என்பது போன்ற அதிசயங்களைப் புகுத்தி விடுவார்கள். ஏனென்றால், அப்போதுதான் அதிலிருக்கும் குற்றங் குறைகள் பற்றி—ஆபாசங்கள் பற்றி யாரும் கேள்விகள் கேட்க மாட்டார்கள் என்ற கருத்தோடு!

ஆனால், குறளில் அப்படிப்பட்ட அதிசயம் ஒன்றையுங் கூறாவிட்டாலும்—திருவள்ளுவரைத் தெய்வீகப் பிறவியாக ஆக்காவிட்டாலும்—அவருடைய பிறப்புப்பற்றி இழித்துக் கூறிவிட்டார்கள்.

வள்ளுவரின் தாயை ஒரு விபச்சாரியாகக் கற்பனை செய்து விட்டான். வள்ளுவர் பிறப்பைப்பற்றி எழுதும் போது பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் வள்ளுவர் பிறந்தார் என்று எழுதுகிறான். இதில் புத்திசாலித்தனம் என்ன வென்றால்—குறளைப் போன்ற நீதி நெறிகளை, மக்களின் உயர் ஒழுக்கத்திற்கு வேண்டிய பண்புகளைப் போதிக்கத்தக்க தகுதியும் அறிவும் வள்ளுவருக்கு வந்ததற்குக் காரணமே, அவர் பார்ப்பனருக்குப் பிறந்த தால்தான் ஆகும் என்ற கருத்தில் இந்தக் கதையை எழுதியிருக்கிறார்கள். இந்தப்படி பறைச்சியுடன் பார்ப்பான் கூடினான் என்பது, பார்ப்பனர்களுக்கு தர்மப்படி எவ்வளவு கேவலம் என்பதை மறந்துவிட்டார்கள். அக்காலத்தில் அறிவாளிப் பார்ப்பான் எவ்வளவு அயோக்கியத்தனமாக நடந்திருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இந்தப்படியாக முதல் எடுத்தவுடனேயே குறளையும், அதன் ஆசிரியரையும் இழிவு படுத்தி விட்டார்கள்.

நாட்டில் புராணங்களைப்பற்றியும், இராமன்–சீதை தொடர்புபற்றியும், கந்தன்–வள்ளி காதல் லீலைகள்பற்றியும், கிருஷ்ணனின்–பிள்ளை விளையாட்டு, கோபிகள் லீலைகள் பற்றியும் எல்லோருக்கும்—பாமரர்கள், பாட்டாளிகள், படிக்காதவர்கள், கூலிகள் முதற் கொண்டு பெரிய, பெரிய சீமான்கள் வரை தெரியும்; தெரிந்திருப்பார்கள். ஆனால், குறள் பற்றிப் பெரிய பணக்காரர்களுக்கும் தெரியாது; தெரிய வாய்ப்பும் இல்லை. இந்தப்படியாகக் குறளை எந்தெந்த வழியாக மங்கும்படி செய்ய முடியுமோ—மக்கள் மனத்தில் குறளின் கருத்துக்கள் புகமுடியாது செய்ய முடியுமோ அவ்வளவுக்கு ஆரியர்கள் செய்து விட்டார்கள்.

நான், ஆரியக் கருத்துக்களெல்லாம்—அதன் தத்துவங்கள், கொள்கைகள் ஆகியவை களெல்லாம் ஒரு கூட்டத்தின் உயர்வுக்கும், வேறொரு கூட்டம் வேதனைப் படவுமான முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி—அவைகளை, ஆரியக் கருத்துக்களை–அவைகளுக்கு ஆதாரமாய் இருக்கின்ற மதம், கடவுள் தன்மை, புராணங்கள் போன்ற வைகளை ஒழிக்க வேண்டும் என்றும் பிரச்சாரம் புரிந்து வருவதால் எனக்கு வள்ளுவர் உள்ளமும், அவர் நூலின் உண்மைக் கருத்தும் தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவேதான், நாம் வள்ளுவரை, அவர் இயற்றிய திருக்குறளைப் போற்றுகிறோம்.

வள்ளுவர் யார், எந்தக் குலத்தைச் சேர்ந்தவர் என்று நிச்சயமாய்க்கூற முடியாது. வள்ளுவர் ஆரியத்தை எதிர்ப்பவர்; ஆரியக் கருத்துக்களைக் கண்டிப்பவர்; அவைகளை வெறுப்பவர் என்று தான் நமக்குத் தெரிகிறது. அத்தோடு, வள்ளுவர் எந்த மதத்தையும் சார்ந்தவராகத் தெரியவில்லை. சாதாரணமாக சைவ, வைணவ, சமணர்கள் விவாதங்களில்–சமணர்கள் தான் வெல்லுவார்கள். பெரிய புராணம் எழுந்ததே சமணர்களை ஒழிப்பதற் காகத்தான். ஆரியக் கருத்துக்களை சமணர்கள் ஏற்கவில்லை என்பதற்காக அவர்கள் வெறுக்கப்பட்டார்கள். அதன் விளைவாகப் பலப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப் பட்டார்கள் சமணர்கள். இன்றுங்கூட மதுரையில் 8000 சமணர்களை கழுவேற்றின திருவிழா கொண்டாடப்படுகிறது.

அவ்வளவு தூரம் ஆரியக் கருத்துக்களை எதிர்த்து, அதற்காக இன்னல்கள் பல பட்டிருக்கும் சமணர்களும்–திருக்குறளை ஆதரிக்கிறார்கள். சைவ சமயத்தவரும், வைணவ மதத்தாருங்கூட திருக்குறளை மாபெரும் நூல் என்று ஒத்துக் கொள்ளுகின்றனர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களும், கிறிஸ்துவ மதத்தின் கீழிருப்பவர்களும் திருக்குறளைப்

போற்றுகிறார்கள். இந்தப்படி எல்லோரும் போற்றுவதால்தான் திருக்குறள் ஒரு மதத்தைத் தழுவியோ, ஒரு மதத்தின் உயர்வுக்காகவோ எழுதப்பட்ட நூல் என்றில்லாமல், மக்களின் வாழ்க்கைக்கு, மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே கையாளவேண்டிய வழி வகைகள் பற்றி எழுதப்பட்ட நூல் என்று ஆகிறது. குறளாசிரியர் காலத்தில் 'இந்து மதம்' என்பது இல்லை. இந்து மதம் என்று இருந்திருந்தால் திருக்குறளில் ஒரு இடத்திலாவது 'இந்து' என்ற சொல்லைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், 1330 பாட்டுக்களிலும் ஒரு இடத்திலாவது 'இந்து' என்ற சொல் காணப்படவே இல்லை.

அது மட்டுமல்ல, குறளாசிரியர் கடவுளையும், மோட்ச நரகத்தையும் ஒத்துக் கொள்ள வில்லை. குறளில் நீங்கள் அறம், பொருள், இன்பம் என்ற அளவில்தான் காணமுடியுமே தவிர—'வீடு' 'மோட்சம்' பற்றி அவர்கூறி இருப்பதாக இல்லை. அறம், பொருள், இன்பம் என்றுதான் முப் பிரிவுகளைக் கூறுகிறார், மோட்ச சாம்ராஜ்யத்தை விட்டு விட்டு.

திருவள்ளுவர் கடவுளைப்பற்றிக் கவலைப்படவில்லை என்று கூறினேன். திருக் குறளின் முதல் அத்தியாயத்தில், 'கடவுள் வாழ்த்து' என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் உருவ வணக்கக் கொள்கைகள் இடம் பெறவில்லை. மேலும், இந்து மதக் கடவுள் களைப் பற்றிய 'புகழாரம்' அந்தப் பத்துப் பாட்டுக்களிலும் கிடையாது.

சிலர் கூறுகிறார்கள், 'குறளில் முதல் அத்தியாயத்தில் இருக்கும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் இடைச் செருகல்' என்று; சிலர், 'அப்படியெல்லாம் இல்லை; வள்ளுவர் பாடியது தான்' என்று கூறுகிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில் கடவுள் வாழ்த்துப் பாக்களை வள்ளுவரே பாடினதாக வைத்துக்கொண்டாலும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. இன்றைக்கு நமக்கு இருக்கின்ற கடவுள்களைப் போன்ற கடவுள்களுக்கா வள்ளுவர் வாழ்த்துக் கூறினார்? இல்லை. கடவுள் வாழ்த்துக் கூறப்படும் பத்துப் பாட்டிலும், ஒரு பாட்டிலாவது வள்ளுவர் 'கடவுள்' என்ற சொல்லைக் கையாளவில்லை. திராவிட மக்களுக்கு 'எல்லாம் வல்ல,' 'எங்கும் நிறைந்த' என்பதாகக் கடவுளைக் குறிக்க 'கடவுள்' என்ற ஒரு சொல்லைத் தவிர வேறு சொல் கிடையவே கிடையாது. அந்தச் சொல்லையே வள்ளுவர் தமது குறளில் கையாளவில்லை! கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் கையாளவில்லை என்பதோடு மாத்திரமல்ல. குறள் முழுவதிலுமே—1330 பாடல்களிலுமே ஒரு இடத்தி லாவது வள்ளுவர் 'கடவுள்' என்ற சொல்லைக் குறிப்பிடவில்லை. தமிழ் மொழியில் உள்ள நல்ல சொற்களையெல்லாம்–உயர்ந்த சொற்களையெல்லாம் தமது நூலில் பயன்படுத்திய வள்ளுவர், 'கடவுள்' என்ற சொல்லை மட்டும் பயன் படுத்தவில்லை.

இரண்டாவது, 'கடவுள் வாழ்த்து' என்பதே கேலிக்குரியது; மிகவும் தவறான சங்கதியாகும். 'சர்வ வல்லமை'யும் படைத்த—நம்மையெல்லாம் காக்கும் கடவுளுக்கு 'கடவுள் வாழ்த்து' என்று நாம் போய் வாழ்த்துக் கூறுவதா? வள்ளுவரை நாம் மாபெரும் அறிவாளி, ஆராய்ச்சிக்காரர் என்று கூறுகிறோம். அதற்குத் தக்க ஆதாரங்களும் இருக் கின்றன. அவர் போய் இந்தப்படி 'கடவுள்' என்று நாம் கருதுவதற்கு வாழ்த்துப் பாடல் வாசிப்பாரா?

வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடியிருப்பதெல்லாம் ஒவ்வொரு நற்குணங்களை வைத்து, அந்தப்படியாக நடக்கவேண்டும் என்பதற்காகவே பத்துப் பாட்டிலும் பத்து விதமான குணங்களைக் கூறினார். சர்வ வல்லமையுடைய சர்வேசுவரனைப் பற்றிப் பாடுவ தென்றால் இரண்டு, மூன்று பாட்டுக்களோடு குறளை நிறுத்தியிருப்பார். அதை விட்டு அவ்வளவு பாட்டுக்கள்—அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நற்குணத்தைப் போதிக் கிறார் என்றால் என்ன பொருள்? மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவ தற்காகத்தான்—வாழ்வின் வகையை, நிலையை உணர்த்துவதற்காகத்தான் எட்டு, ஒன்பது கருத்துக்களை வைத்து வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

['விடுதலை'–30-5-1950]

'கற்றதனால் ஆய பயன் என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.'

ஒரு மனிதன் நல்ல அறிவுடையவனாய் இல்லாதிருந்தால், நல்ல அறிவுக்கு ஆட்பட்டிருக்க வில்லையானால்—அறிவோடு நடந்துகொள்ளாவிட்டால், அவன் எவ்வளவு படித்து இருந்தாலும் என்னதான் அந்தப் படிப்பில் அவனுக்குப் பயன் ஏற்பட்டது என்று கூறமுடியும்?

'வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.'

விருப்பு, வெறுப்பு இரண்டும் இருக்காதவனுக்குத்தான்—மன அமைதி இருக்கும்; விருப்பு, வெறுப்பு இருந்தால் மனிதனுக்கு மன அமைதி இருக்காது என்று கூறுகிறார். அடுத்து,

'தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.'

என்ற பாட்டை, கடவுளடியைச் சேர்ந்தாலொழிய நன்னிலை இல்லை; பரமனின் திருவடியினை அடைந்தால்தான் பாபங்கள் ஒழியும்; மோட்ச வாழ்வு கிட்டும் என்ற அர்த்தத்திலா வள்ளுவர் கூறுகிறார்? இல்லை.

ஒரு மனிதன் தன் நிலையைப் பூரணமாக-குறைவற்றதாக நினைத்துக்கொள்ள வேண்டும்; தனக்கு மேலாக ஒருவனது நிலை இருப்பதாகக் கருதி, குறைபாடு உணர்ச்சி கொள்ளலாகாது. அதாவது, ஆசை கூடாது. உள்ளதைக் கொண்டு முழுத் திருப்தி அடைந்தவனுக்கு மனத்தில் கவலை உண்டாகாது என்பது அதன் கருத்தாகும். மனிதனுக்குக் கவலை எதனால் ஏற்படுகிறது? தன்னைவிட மேல் நிலையில் ஒருவன் இருக்கிறான்; அவன் உலகத்தில் உள்ள பல பொருள்களை உல்லாசமாக அனுபவிக்கிறான்; அதற்கான வசதி வாய்ப்பு அவனுக்கு இருக்கிறது; நமக்கு அவ் வசதிகள் இல்லையே என்று மனிதன் தன்னைவிட உயர்ந்தவனாக ஒருவனைக் கருதி, அவனைப் பார்க்கும்போதுதானே கவலை கொள்ளுகிறான்? அந்தக் கவலை இல்லாமல், 'நான் ஏழைதான்; படிக்காதவன்தான்; பல நூல்களைக் கற்றறியாதவன்தான்; பணத்தைத் தொட்டறியேன் என்றாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை; இப்பொழுது நான் இருக்கும் நிலையே எனக்கு உயர்ந்தது' என்று மனத் திருப்தி அடைந்துவிட்டானானால் மனக் கவலை ஏது அவனுக்கு?

மனிதனுக்குக் கவலைகள் நீங்கி, திருப்தி எண்ணம் ஏற்பட வேண்டுமானால், பொது உடமைதான் அதற்கு மருந்து என்று கூறப்படுகிறது. ஏனென்றால், பொது உடமைத் திட்டத்தில் மனிதர்களுக்குள் பேதம் இல்லாமல் செய்யமுடிகிறது.

பேதமல்லாத இடத்தில் மனிதன் யாரையும் பார்த்துப் பொறாமையுற முடியாது; ஆகவே, மனிதன் மனத் திருப்தியடைகிறான். இக் கருத்தைத்தான் வள்ளுவர் அக் குறளில் கூறுகிறார்.

அதைப்பற்றிப் பரிமேலழகர், வடவர்களுடைய–ஆரியர்களுடைய 32 அறங்களை வைத்துக் கூறினார். ஆனால், வள்ளுவர் அறம் என்று சொல்வது என்ன வென்றால், மக்களுக்குள் அன்பு, ஒழுக்கம், அருள் இருக்க வேண்டும் என்பதாகும்.

மேலும், வள்ளுவர் மேலுலகத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் அவர் மரியாதை செய்யவில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை. ஓரிடத்தில் கூறுகிறார்:

'மேலுலகம் இல்லையெனினும்' என்று—அதாவது, 'உனக்கு மேலுலகம் கிடைக்க வில்லை யென்றால் கூட அதைப் பற்றிக் கவலைப்படாதே; உனக்கு மேலுலகம் கிடைக்காது என்றாலும் நீ பிறருக்கு அருள் கூர்ந்து நட' என்று கூறுகிறார். கடவுளைப் பற்றிச்

சொல்லுகிறபோதுகூட, மனிதனின் வாழ்வுக்கு வசதியில்லாவிட்டால், நம்மையெல்லாம் படைத்துக் காத்துக்கொண்டிருப்பதாகக் கருதப்பட்டு வருகின்ற கடவுளை ஒழிக்கவேண்டும்; அது இல்லாவிட்டால் குற்றமில்லை என்று கூறுகிறார். ஏனென்றால், மனிதனின் கஷ்ட நஷ்டங்களுக்கும், அவனுக்கு ஏற்படுகின்ற இலாபத்திற்கும், அவன் வாழ்வில் தென்படுகிற இன்ப துன்பங்களுக்கும் கடவுள் காரணமில்லை என்பதை உணர்த்தவே அப்படிக் கூறுகிறார்.

இன்னும் வள்ளுவர் ஆரியத்தை எந்தெந்த வகையில் எதிர்க்கிறார் என்றால்,

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்'

என்று—பிறப்பினாலே பேதம் இல்லை; பேதம் கற்பிக்கவும் கூடாது; அடுத்து செய்கின்ற தொழிலாலும் பேதங்கள் கற்பிக்கக் கூடாது என்று—ஆரியக் கொள்கையின் அடிப்படைக்கே அடி கொடுக்கிறார். ஆரியர்கள், 'மனிதனின் பிறப்பிலே—ஆண்டவனின் முகத்திலே பிறந்தவன் உயர்ந்தவன்; காலிலேயிருந்து வந்த (நாம்) இழிந்தவர்கள்' என்று பிறப்பில் பேதங்களை ஏற்படுத்தி, செய்கின்ற தொழிலாலும்,-அதாவது நம்மவர் செய்கின்ற தொழில்களை-உழவுத் தொழில் உட்பட-கேவலமான ஈனசாதித் தொழில் என்று ஆக்கியிருக்கிறார்கள். அதைத்தான் வள்ளுவர் வெகுவாகப் பிறப்பிலும், தொழிலிலும் பேதமில்லை என்று கண்டிக்கிறார்.

மனித சமுதாயத்தின் தேவைக்காகத்தான் பல தொழில்களும் இருக்கின்றன. வண்ணான் செய்யும் தொழில், நாவிதன் செய்யும் தொழில், தோட்டி செய்யும் தொழில் நமக்கு அத்தியாவசியத் தேவையில்லையென்று கூறிவிடமுடியுமா? கக்கூஸ் எடுக்கிறவன் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தம் செய்தால் நம் கதி என்னாவது? இந்தப்படியாக சமுதாயத்தின் தேவைக்காகத்தான் பல தொழில்கள் இருக்கின்றன. அதில் போய்ப் பேதங் கற்பிப்பது என்றால் என்ன நியாயம்? இவைகளைச் செய்ய யாவருக்கும் பங்கும் உரிமையும் இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, வள்ளுவர், ஆரியர் செய்யும் வேள்வியைக் கண்டிக்கிறார்.

'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின்
உயிர் செகுத்துண்ணாமை நன்று'

அதாவது, கடவுள் பெயர் கூறி உயிர்க்கொலை புரியுங் கொடுஞ்செயலைக் கண்டிக்கிறார். நாட்டிலே நாலு வருணத்தை நிலைநிறுத்துவதற்காகவும், ஆரியர்களின் உயர் வாழ்வுக்கு ஆதாரமாயும் இருந்துவரும் வேதங்களையும்—அதாவது, வேதத்தைப் படிக்கா விட்டாலும் குற்றமில்லை; ஒழுக்கமாக நடக்க வேண்டும் என்று வள்ளுவர் வேதியத் தன்மையைக் கண்டிக்கிறார்.

இந்தப்படியாக மதம், கடவுள், வேதம், வேள்வி ஆகிய அத்தனையையும்—ஆரியத்தின் உயர்வுக்கும் நம்மவர் இழி நிலைக்கும் காரணமாய் நின்று நிலவும் அவைகளை வள்ளுவர் வெகு தீவிரமாகக் கண்டிக்கிறார். இந்தப்படியாக வள்ளுவர் ஆரியக் கருத்துக்களை எதிர்த்துவிட்டு, கண்டித்துவிட்டுத் தனக்கு என்று யாதொரு 'புதுமத உபதேசமும்' அவர் புரியவில்லை. 'உன் அறிவைக் கொண்டு சிந்தித்து, ஆராய்ந்து, உண்மை கண்டு, உலகம் ஒப்ப நடந்துகொள்' என்கிறார். யாவர் ஒருவர், 'உன் அறிவின்படி, உலகம் ஒப்ப நட' என்கிறாரோ அவர் எந்த மதத்தையும் சேர்ந்தவராகார்.

'குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்'

என்று கூறுகிறார். அதாவது, ஒரு மனிதன் தன் இனத்தவருக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்று நினைத்தானானால்—அதாவது, பொதுநலத்துக்குப் பாடுபட

வேண்டும் என்று முன்வந்தால், அவன் அந்தக் காரியத்துக்கு ஏற்ற நல்ல காலம் வரட்டும் என்று எண்ணிக் காத்திருக்கக்கூடாது. இரண்டாவதாக, 'நாம் இந்தக் காரியத்தில் இறங்குகிறோமே; இதனால் இன்னின்ன கஷ்டங்கள் வருமே! நமக்குப் பலவிதத்திலும் அவமானம் ஏற்படுமே—மானம் போய்விடுமே' என்று கவலைப்படக் கூடாது. அந்தப் படியாகவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தால் பொதுவாழ்வில் நாம் செய்யப் புகும் காரியமே கெட்டுவிடும் என்று மிகப் புரட்சிகரமாகக் கூறுகிறார்.

ஏன் புரட்சிகரமாகச் சொல்லுகிறார் என்று கூறுகிறேன் என்றால், மற்றொரு இடத்தில் காலம் பார்த்துச் செய்தால் ஞாலமும் கைகூடும் என்று கூறுகிறார். இன்னொரு இடத்திலே,

'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்' போன்று மானம் நீங்குமானால்—மனிதன் இறந்துவிட வேண்டும் என்று கூறுகிறார்.

மானமிழந்தால் மரணத்தைத் தழுவவேண்டும் என்று வள்ளுவர் கூறுவது ஏன் என்றால், மனிதனுடைய தனி வாழ்வில், அவனது சொந்த வாழ்வில் அவனுக்கு அவமானம் நேரிடின் உயிர்விட வேண்டும். உயிரைவிட மானத்தைப் பெரிதெனமதித்து நடக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார்.

இந்தக் குறள் பொது வாழ்வு பற்றியதாகும். பொதுவாழ்வில் எந்த மக்களின் நல்வாழ்விற்காக—முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறானோ, அந்த மக்களாலேயே வெறுக்கப்படலாம்; பல தொல்லைகட்கும் ஆளாக நேரிடலாம். ஆனால், தாம் படுகின்ற பாடுகள்—அடைகின்ற அல்லல்கள் நன்மைக்காகத்தான் என்று கருதி வேலை செய்தால் தான், அவன் எண்ணிய காரியம் ஈடேறுமேயொழிய, மானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் காரியம் கைகூடிவராது என்று கூறுகிறார்.

இந்தப்படியாக வள்ளுவர் மக்களுக்கு நல்வாழ்வின் வழியையும், நல்லொழுக் கத்தையும் கூறுகிறார்.

இன்றையதினம் திராவிடர்களுக்கு ஒழுக்க நூல் குறள்தான். மற்ற வேறு எந்த நூலும்—பகவத் கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம் முதலியவையும் அவை போன்ற நூல்களும் திராவிடரின் ஒழுக்கத்திற்கோ, மான வாழ்வுக்கோ ஏற்றபடி எழுதப்பட்ட நூல்கள் அல்ல. அவைகளெல்லாம் ஆரியர்கள் தங்களின் உயர்வுக்காக—தங்களின் மேல்சாதித் தன்மையை நிலைநிறுத்தி அதனால் இலாபம் அடைவதற்காக ஏற்பட்ட வருணாசிரம தர்மத்தை வலியுறுத்தி எழுதி வைத்துக்கொண்டவையல்லாமல், பொதுவாக மனிதர்கள்—உலக மக்களின் நலனுக்கு ஏற்றமுறையில் எதையுங் கூறவில்லை. பித்தலாட்டங்கள் பல புரிந்தும் தங்கள் காரியத்தை, தங்களுக்கு இலாபத்தைத் தரக்கூடிய காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதற்காகவும் பஞ்ச தந்திரக் கதைகள் போலச் சொல்லி—அந்தப்படி சொன்னவைகளைக் கடவுளோடு சம்பந்தப்படுத்திவிடுவார்கள்.

நமக்கு ஒரு அளவுக்காவது ஒழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய நூல்களாக இராமாயணம், பாரதம் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா? உதாரணமாக, சாணக்கியன் எழுதிய அர்த்த சாஸ்திரத்தை நம்முடைய பொருளாதார ஒழுக்க நூல் என்று நம்மால் எப்படி ஒத்துக்கொள்ள முடியாதோ, அதே போல்—இவைகளை நம் ஒழுக்க நூல்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. அர்த்த சாஸ்திரத்தில், சாணக்கியன், அரசனுக்கு வருமானம் பெருக வேண்டுமானால் அவன் கள்ளுக் கடைகளைத் திறக்கவேண்டும் என்றும், கோவில்களை வைத்து அதற்கு நிறையத் திருவிழாக்களையும் நடத்தி அந்தத் திருவிழாக்களுக்கு மக்கள் அதிகமாக வருவதற்காக அழகிய பெண்களை நாட்டியமாடச் செய்ய வேண்டும், அப்போது கோவிலுக்கும் திருவிழாவுக்கும் வருகிறவர்களிடமிருந்து நிறையப் பொருள் கிடைக்கும் என்றும்; கோவில்களில் அதிசயம் அற்புதம் நடப்பதாக ஜாலம் தந்திரம் செய்ய வேண்டும்

என்றும் சொல்லுகிறார். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? இது அரசருக்கு—செல்வ வான்களுக்குத்தான் பயன்படும். அதுபோல்தான் புராண—இதிகாச—சாஸ்திரங்கள் ஆரியருக்கு உயர்வும், திராவிடருக்கு இழிவுமாகும்.

இயற்பகை நாயனார் கதையைப் படித்தால்—அதில் இயற்பகை நாயனார் ஒரு பார்ப்பனனுக்குத் தன்னுடைய மனைவியைக் கொடுத்தார் என்றும் அதனால் அவருக்கு மோட்சம் கிடைத்தது என்றும் சொல்லப்படுகிறது. இக் கதை பக்திக்கோ, ஒழுக்கத்திற்கோ ஏற்றதாகுமா? இன்று மோட்சம் மோட்சம் என்று கத்திக்கொண்டு திரியும் பிரசங்கிகள் அல்லது மோட்சம் அடையவேண்டும் என்று நினைப்பவர்களெல்லாம் இயற்பகை நாயனார் செய்ததுபோல—தனது மனைவியைப் பார்ப்பானுக்குக் கூட்டிக் கொடுக்கத் தயாரா?

மற்றும் 'பரி'க்குப் பதிலாக 'நரி'யைக் கொண்டுவந்து அரசனின் இலாயத்தில் இருந்த மற்ற குதிரைகளையுங் கொன்றுவிட்டார், ஒரு நாயனார். ஒரு கோவிலை இடித்து மற்றொரு கோயிலைக் கட்டினார் ஒரு ஆழ்வார். பலபேரை அடித்துத் திருடிக் கோவில் கட்டினார் மற்றொருவர். இந்தப்படியாக வரிசையாகச் சொல்லிக் கொண்டு போகிறார்கள்—நாயன்மார்களைப் பற்றியும், ஆழ்வார்களைப் பற்றியும். இவைகளெல்லாம் ஒழுக்கத்திற்கு ஏற்றவையா?

பக்தி என்பது, எவ்வளவு அயோக்கியத்தனங்களைச் செய்தாலும், அவைகளையெல்லாம் மறைத்து மோட்சத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் என்பது அல்லாமல், வேறு என்ன? கடவுள் இதற்கெல்லாம் மோட்சம் கொடுப்பாரா?

[பெங்களூரில், 22, 23-5-1950-ல், சொற்பொழிவு—'விடுதலை' 1-6-1950]

3. மன்னர்களும் இலக்கியமும்

தோழர்களே!

இன்றைய தினம் நாம்கூடப் பேசுகிறோமே—தமிழ்நாட்டு மூவேந்தர்கள் என்று! இந்தத் தென்னாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியன் என்று சொல்லுகிறோமே—இவர்கள் எல்லோரும் அரசர்களாக இருந்ததற்குக் காரணமே ஆரியர்களுக்கு அடிமைகளாய் இருந்ததால்தான்; அவர்களுக்குக் கோவில் கட்டி மானியம்விட்டதால்தான்! இல்லாதிருந்தால் அவர்களுடைய வாழ்வு இவ்வளவு விளம்பரத்திற்கு உள்ளாகி இருக்குமா என்பது சந்தேகம்தான்.

நம் அரசர்கள் எல்லோரும் ஆரியர்களுக்கு அடிமைகளாக இருந்து, அவர்கள் ஆதிக்கத்துக்கு வேண்டிய காரியங்களை நிரந்தரமாகச் செய்து, அவர்களுக்கு உதவி செய்து வந்திருக்கிறார்கள். இந்தக் காஞ்சிநாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி—மற்ற எந்த நாட்டை (தென்னாட்டை) எடுத்துக்கொண்டாலும் சரி—இந்த நாட்டிலே இருக்கின்ற கோவில்கள், குளங்கள், ஸ்தல புராணங்கள் முதலியவைகளை எல்லாம் நீங்கள் பார்த்தால் சகலமும் ஆரியர்களுக்கு ஆதரவாக இருக்குமே தவிர, திராவிடர்களுடைய மனிதத் தன்மைக்கு, மான உணர்ச்சிக்கு, பகுத்தறிவுக்கு ஏற்றதாக இருக்காது. அப்படிக் காண்பது அருமையாக இருக்கும்.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1951]

4. உதவாக்கரை இலக்கியங்கள்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நமது பிரச்சாரத்தால் பாரத, இராமாயண, மனுதர்ம சாஸ்திரங்களுக்கும் மதிப்புக் குறைந்துவிட்டதால் மனுதர்மத்தையும், ஆரிய தர்மத்தையும், பெரிதும்கொண்ட சிலப்பதிகாரத்தைத் தலையில் தூக்கிக்கொண்டு, ஊர்ஊராய்த் திரிந்து பிரச்சாரம் செய்ய ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது.

இந்தச் சிலப்பதிகாரம் எப்படி அமைந்திருக்கிறது என்றால் ஆபாச மூடநம்பிக்கை, ஆரியக் கருத்துக்களை உட்கருத்தாகக் கொண்டு, நல்ல தமிழ் அமைப்பு உடையதாகக் கொண்டு தேவடியாளுக்குச் சமமாக—அதாவது, தேவடியாள் எப்படிப் பார்ப்பதற்கு அலங்காரமாய் இருப்பாளோ, ஆனால் உள்ளேபோய்ப் பார்த்தால் உள்ளமெல்லாம் வஞ்சகம் நிறைந்தும் உடலெல்லாம் நோய்கொண்டும் வளையல் அணியால் மக்களை ஏய்த்துப் பிழைத்துக்கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றாளோ அதுபோலத்தான்—இந்தச் சிலப் பதிகாரம் ஆகும். பாரத, இராமாயணம் போல்—அது ஒரு நாவல்; சித்திரக் கதை. அதுவும் குறிப்பிட்டகொள்கை இல்லாமல் எழுதின கதைகள்.

ஆரியம் தலைதூக்கி நம் அரசர்கள் ஆரியத்திற்கு அடிமைகளாய், தாசர்களாய் இருந்த காலத்தில்—பகுத்தறிவும், இன உணர்ச்சியும் இல்லாமல் சித்திரித்த கதையாகும். அது மூடநம்பிக்கைக் களஞ்சியம்; ஆரியக் கோட்டைக்கு அரண். இப்படிப்பட்டதைத் 'தமிழ்ப் பண்புக்கு' என்று பிரச்சாரம் செய்தால் இது மானமுடைமை ஆகுமா? ஆதிமுதல் அந்தம்வரை—எப்படிப் பார்ப்பானை, பார்ப்பனீயத்தைப் புகுத்தி அமுல் படுத்தவேண்டும்; எப்படி எப்படி நாம் நடக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

நான் ஒன்றும் பயந்துகொண்டு பேசுகிறேன் என்றோ, பொய் பேசுகிறேன் என்றோ நினைக்கவேண்டாம். அந்தக் கதைகளில் உள்ள கருத்தை அப்படியே எடுத்துக் காட்டுகிறேன். ஆகவே, கவனமாகக் கேளுங்கள்.

சிலப்பதிகாரம், போன ஜென்மம், வருகிறஜென்மம் என்று தலைவிதியைக் காட்டி மனிதனை எப்படிப்பட்ட இழிவுக்கும் ஆளாகச் செய்கிறது; பார்ப்பான் சொல்லுகிறபடி, அவன் எதுகேட்டாலும் எடைக்குஎடை கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறது; ஆருடம், சோசியம், பில்லிசூனியம் ஆகியவைகளைப் பற்றிச் சொல்லுகிறது. முட்டாள்தனமான கற்பையும், பெண் அடிமையையும் பெருமைப்படுத்துகிறது.

கோவலனை அரசன் தண்டித்த மாதிரியானது, நம் நாட்டு இராஜாக்களுக்கே ரொம்பவும் அவமானம் தருவதாகும். இராஜா வீட்டுச் சிலம்பு எங்கோ போய்விட்டது; கோவலன் சிலம்பு வைத்திருப்பது இராஜாவினுடையது என்று பொய்க் குற்றம் சாட்டப் பட்டதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத அரசன், கோவலனை வெட்டிக் கொல்லச் சொல்லுகிறான்; கோவலன் இறந்து போகிறான். இதை அறிந்த அம்பாள் கண்ணகிக்குப் பெரும் கோபம் வந்து, நிரபராதிகளான மதுரை மக்களைச் சுட்டுச் சாம்பலாக்கினாள். இந்த அம்மாளின் கற்பைப் பற்றிச் சொல்லுவதாயிருந்தால், தேவடியாள் வீட்டிற்குக் கணவன் போனதை அறிந்தபோது, அந்தத் தேவடியாளை ஏதாவது செய்து இருக்க வேண்டும். தாசி மாதவி, கோவலன் கண்ணகியின் கணவன் என்று தெரிந்து அவனை அனுபவிக்கிறாள். தேவடியாளுக்கு இதுவா தர்மம்? அப்படிப்பட்டவளுக்குக் கண்ணகி பொருள் கொடுக்க வசதி செய்யலாமா? கோவலன் ஒழுக்கமற்றவன்; தாசி ஒழுக்க மற்றவள்; கண்ணகி மடப்பெண்.

அகலிகை, சீதை, துரோபதை, தாரை எல்லாம் கற்புக்கரசிகளாய் இருக்கும்போது, கண்ணகி கற்புக்கு மாத்திரம் முட்டாள்தனம் வேண்டுமா? மற்றும் இந்த அம்மாளுக்குக் கோபம் வந்ததும், தன் மார்பைத் திருகி எறிகிறாள். இது என்ன புத்தி? மார்பைக் கையால் திருகினால் அது வந்துவிடுமா? இந்தப்படி நடந்த சங்கதியும் அனுபவமும் சிலப்பதிகாரம் தவிர வேறு எதிலும் எங்கும் காணக்கிடைக்கவில்லை. அந்தப்படி திருகிப் பிடுங்கின மார்பு (முலை) வீசி எறிந்தால் அது நெருப்புப் பற்றிக்கொள்ளுமா? அதில் 'பாஸ்பரஸ்' இருக்குமா? இந்த மூடநம்பிக்கைக் கற்பனையானது, என்ன பயனைக் கொடுக்கிறது? இதனால் கண்ணகிக்கு வீரம் இருந்ததாகக் கூறமுடியுமா?

அக்கினி பகவானுக்கு, கண்ணகி, 'பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களைச் சுடு!' என்று கட்டளை இட்டாளாம். அதுபோல் பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்கள் சாம்ப

லானார்களாம்; மதுரைநகரம் சாம்பலாயிற்றாம்! இதுதான் கண்ணகியின் கற்பின் பெருமையா? அவள் புத்தியின் பெருமையா? அக்கினி பகவானுக்குப் புத்தி வேண்டாமா? ஒரு பெண்பிள்ளை முட்டாள்தனமாக உளறினால் நிரபராதிகளைச் சுடலாமா? ஒரு பட்டணத்தைக் சொளுத்தலாமா என்கின்ற அறிவு வேண்டாமா? பார்ப்பனர்களை எதற்காக மீதம் விடவேண்டும்? ஆகவே, வருணாசிரம தர்ம மனுநூல், இராமாயணம், பாரதத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

இராமன் பார்ப்பனன்—ஆகவே சூத்திரனைக் கொன்றான் என்பது இராமாயணம்! பார்ப்பனனை மட்டும் காப்பாற்றவேண்டுமென்பது சிலப்பதிகாரம்! எவ்வளவு முட்டாள் தனமான கொடுமை செய்தாலும் பார்ப்பனர்களைக் காப்பாற்றினால் அவள் பதிவிரதை ஆகி விடுவாள் என்பது சிலப்பதிகாரம்! பாண்டியன் விசாரணை செய்து அவனுக்குக் கிடைத்த உண்மைமீது கோவலனுக்குத் தண்டனை விதித்தான். ஆனால், கண்ணகி ஒரு விசாரணையும் செய்யாமல், ஒரு குற்றமும் காணாமல் நிரபராதிகளான மக்களை, பெண்களைச் சுட்டு எரித்துக் கொன்றாள். அவள் கற்புக்கரசி; வணங்கத் தக்கவள்; தெய்வமானவள்! பாண்டியன் 'குற்றவாளி'—இதுதானே சிலப்பதிகாரக் கதை? இதுதான் தமிழர் பண்பாம்! எவ்வளவு முட்டாள்தனம்—இந்த மாதிரியான ஆபாசமும், அநீதியும் நிறைந்து இருக்கும் கதைகளை நாம் வைத்துக் கொண்டு, நமக்குச் சொந்தம் என்றா சொல்வது?

இவைகளைத்தான் நாம் ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்; நெருப்பு வைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம்; சமுதாயத்திற்கு உதவாக்கரை என்று ஒதுக்கி வைக்கிறோம்!

சிலப்பதிகார அன்பர்கள் கண்ணகிதான் கற்புடையவள் என்கிறார்கள். அப்படி யானால், அப்பொழுது—மற்றவர்களெல்லாம் கற்பு இல்லாதவர்களா? இது மனிதத் தன்மைக்கே பொருத்தம் இல்லையே! ஆனால், அந்த மாதிரி நடந்ததை நாம் பார்த்து இருக்கவும் முடியாது.

இந்தக் கதையைச் சொல்லியே நம் நாட்டுப் பெண்கள் எல்லாம் கண்ணகிகளாகத் திகழவேண்டும்; அவள்போல் கற்புக்கரசியாக வேண்டும் என்று பிரச்சாரம் செய்கின்றவர் களின் பிள்ளை குட்டிகள்—முதலாவது, இம் மாதிரி நடந்தால் பொறுப்பார்களா என்று கேட்கிறோம்.

இந்தப் பிரச்சார 'பிரம்மா'க்களின் மாப்பிள்ளைமார்கள் தேவடியாள் வீட்டில் போய் இருந்தால், இவர்கள் பெண்கள் தாசி வீட்டிற்குப் பணம், நகை எல்லாம் அனுப்பச் சம்மதிப் பார்களா? இப்படி நடந்தால் ஆண்கள் ஒழுக்கமுள்ளவர்களாக ஆவார்களா? இது ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நூல் ஆகுமா?

ஆகவே, இதுபோன்ற கதைகள் பெண்களுடைய அடிமைத்தனத்திற்கு அடிகோலுவ தாகும். முட்டாள்தனத்திற்கு மூல ஆதாரமாகவும், பிற்போக்கிற்கு வழி அமைப்பதாகவும், பார்ப்பனர்களுடைய உயர்வைக் காப்பாற்றுவதாகவும் செய்யப்பட்ட இலக்கியங்களே தவிர, மனித சமுதாயத்திற்கு எந்த நன்மைக்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களா?

ஆகவே, நமக்கு இருக்கிற இலக்கியங்களின் நிலைமை பெரிதும் மோசமானது. உண்மையிலேயே நமக்கு ஏதாவது கடவுள் உண்டா? மதம் உண்டா? சாஸ்திரங்கள் உண்டா? அவர்கள் சொல்லுவதைத்தானே ஒத்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால்தான், நாம் கீழ்ச் சாதியாகவும், பார்ப்பான் மேல் சாதியாகவும் இருப்பதற்கு ஆன நிலைமை ஏற்பட்டு விட்டது.

[சேலத்தில், 22-7-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 28-7-1951]

5. கோவில்

தோழர்களே!

புத்தருடைய முயற்சிக்கு நேர் விரோதமாக—அது அடியோடு அழிக்கப்படுவதற்குத் தான் ஏறக்குறைய நம்முடைய நாட்டிலே இருந்த அரசர்கள் இவ்வளவு கோவில்களைக் கட்டினார்கள். சரித்திரத்திலே சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள், புத்தருக்குப் பின்னர் தான் இந்தக் கோவில்கள் ஏற்பட்டன என்று!

தமிழ் நாட்டுக் கோயில்கள் எதை எடுத்துக் கொண்டாலும் அவைகள் அத்தனையும் புத்தருக்குப் பின்னர் தான் ஏற்பட்டன என்று சொல்லுகிறார்கள். இது எப்படியோ இருந் தாலும், அவைகளின் ஒரே கருத்து—ஆரியர்களுடைய வருணாசிரம தர்மத்தை நிலை நிறுத்துவதே; வருணாசிரம தர்மத்திற்கு நிரந்தரமான பிரச்சார ஸ்தாபனமாக இருப்ப தற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்தாம் இந்தக் கோவில்கள்.

இவைகள்தாம் நமக்குக் கடவுள் கதைகளாக, மதங்களாக, பண்டிகைகளாக, தினந் தோறும் நாம் நடந்து கொள்ளும் நடவடிக்கைகளாக ஆக்கப்பட்டுவிட்டன. இவைகள் தாம் நமக்குப் படிப்பாகவும் இயக்கமாகவும், சங்கீதமாகவும், நாடகமாகவும், நாட்டியமாகவும் இருக்கின்றன. வருணாசிரம தர்மத்தை நீக்கிய ஒரு இலக்கியம் நமக்கு வேண்டுமானால் மிக்க கஷ்டம்தான். கண்டு பிடிப்பதே மிகவும் கஷ்டம். ஏதோ சொல்கின்றார்கள்—தொல் காப்பியம் இருக்கிறது, குறள் இருக்கிறது என்று! தொல்காப்பியத்திலும் ஆரியம் புகுந்து இருக்கிறது; குறளில் அவ்வளவாகச் சொல்லக் கூடியது இல்லை என்பது என்கருத்து. அதிலும் அதிகம் இருக்கலாமோ, என்னவோ!

அப்பொழுது தோன்றிய பெரியவர்கள் எல்லாம் ஆரிய தர்மங்களைப் பின்பற்றி, இந்த ஆதாரங்களை நம்பிப் பக்தி செலுத்தினார்கள். அவர்கள்தான் இன்றையதினம் நமக்குப் பெரியவர்களாகக் காணப்படுகிறார்கள். தவிர, அவர்கள் எல்லாக் கொடுமை களையும் சகித்துக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்களே தவிர, மற்றபடி அவைகளை எதிர்த்தார்கள் என்று சொல்லுவதற்கு மிகக் குறைந்த அளவு ஆதாரம் கூடக் கிடைப்பது இல்லை. எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளாக கடவுள், கலை, இலக்கியம் காவியங்களாக இருக்கும் பலம் பொருந்திய ஒரு கொள்கையை ஒழிப்பதற்காக, நாம் இன்றையதினம் போராடுகின்றோம். இன்றையதினம் சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரத் திலும், கலைத் துறையிலும் பக்தித் துறையிலும் நாம் போராட வேண்டியவர்களாக இருக் கின்றோம். இது மிகவும் கஷ்டமான காரியம்.

நம்முடைய மதம் என்று நாம் சொல்லுவது, அன்னியனுடைய உயர்வுக்கு—நம் முடைய இழிவுக்கு; நம்முடைய கடவுள்கள் என்று நாம் சொல்லுவது—அன்னியனை வளர்ப்பதற்கு ஏற்ற கடவுள்கள். அவைகள் நம்மை அடக்கி, ஒடுக்க ஏற்படுத்தப்பட்டவை. இத்தனை துறைகளில், இவ்வளவு தொல்லைகளில் இருந்து வருகின்ற சுரண்டலை நாம் ஒழிக்க வேண்டும்.

[காஞ்சிபுரத்தில், 7-4-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1951]

6. அரசர்களின் இழிசெயல்

தோழர்களே!

நமது அரசர்கள் கோயில், குளங்கள், மடங்கள் முதலியன கட்டி அதன் பேரால் பார்ப்பானைக் கொழுக்க வைக்கவும், நம்மைக் கல்லில் முட்டிக்கொண்டு மடையர்கள் ஆகவும் ஆக்கித்தானே போனார்கள்!

நான் ஒன்றும் விளையாட்டுக்காகவோ, அவர்களைத் திட்டவேண்டும் என்பதற் காகவோ இப்படிக் கூறவில்லை.

தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் என்ற ஊர்க் கோயிலில் போய்ப் பார்த்தால் தெரியும். வரகுண மகாராஜன் என்ற பாண்டியன் தான் மோட்சம் அடைவதற்காகத் தன் மனைவியை பார்ப்பானுக்கு விட்டுக்கொடுத்தது சித்திரமாகச் சுவரிலேயே தீட்டப்பட்டு இருக்கின்றது! இவனது சிவபக்தியின் மேலீட்டைப்பற்றிப் பட்டினத்தார் பாடியுள்ள பாடலிலேயே வரகுண மகாராஜன் தன் மனைவியைப் பார்ப்பானுக்குக் கொடுத்ததைப் புகழ்ந்து பாடியுள்ளார். அந்தப் பாண்டியன், சேர—சோழர்களையெல்லாம் வென்ற பராக்கிரமசாலி என்று சரித்திரம் கூறுகின்றது. அப்படிப்பட்டவன்தான் இப்படிக் கேவலமாக, மானமற்று நடந்துகொண்டான்.

அடுத்தாற்போல, திருவண்ணாமலையில் ஒரு அரசன் ஆண்டுள்ளான். அவன் பெயர் வல்லாள மகாராஜன் என்பது. அந்த மடையனும், தான் மோட்சமடையவேண்டித் தன் மனைவியைப் பார்ப்பானுக்கு விட்டுக் கொடுத்து இருக்கின்றான்.

இந்த அரசர்கள் எல்லாம் பார்ப்பான் சுகவாழ்வு வாழவும், நாம் என்றென்றைக்கும் இழிமக்களாக இருக்கவுமே மனு (அ)நீதி முறைப்படி ஆட்சிசெலுத்தி இருக்கின்றனர். இவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'இவன் மனுமுறை தவறாது ஆண்டவன்' என்றும் புகழ்ந்து கூறப்படுகின்றது!

அடுத்து நாயக்கனோ, மராட்டியனோ, முஸ்லிமோ ஆட்சி செலுத்தினார்கள். என்றாலும்—அவர்களும் மக்களுடைய குறைபாடுகள், மற்றும் தேவைகள் என்ன என்று ஆராய்ந்து—அதற்காகப் பரிகாரம் தேடியவர்கள் அல்லர். நமது தற்குறி நிலைமையைப் போக்கவும், நமது இழிவுகள் போக்கவும் பாடுபடவேயில்லை.

அடுத்து வெள்ளைக்காரன் ஆண்டான். அவனாவது நமது இழி நிலையினைப் போக்கவும், நமது தற்குறித் தன்மையினைப் போக்கவும் வேண்டும் என்ற கருத்தை வைத்து ஆண்டானா? இல்லையே!

[ஜோலார்பேட்டையில், 16-4-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-4-196 1]

7. ஓவியம், சிற்பம்

தோழர்களே!

சுயமரியாதை இயக்கத்தார் மத சம்பந்தமான ஆபாசங்களை எடுத்து வெளிப்படுத்துகின்ற காலத்தில் அதற்குச் சரியான சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத நமது பண்டிதர்கள், தாங்கள் தப்பித்துக்கொள்வதற்காகப் பழைய கலைகள் என்னும் சாக்கின் பேரில்—அதன் நிழலில்போய் மறைந்துகொண்டு, 'சுயமரியாதை இயக்கத்தார் பழைய கலைகளை நாசம் செய்கின்றார்கள்' என்று பழி சுமத்துவதன் மூலமே அவைகளைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள். ஆகவே, இது அவர்களுடைய நியாயமற்ற தன்மையையும், பயங்காளித் தன்மையையும் வேறுவழியில், சமாதானம் சொல்லச் சக்தியற்ற தன்மையை யுமே காட்டுவதாகின்றது.

கோவில்களைக் குற்றம் சொல்லி, அவற்றில் உள்ள விக்ரகங்களின் ஆபாசங்களை எடுத்துக் காட்டி, இம் மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சியை மக்களுக்கு வளர்க்கலாமா என்றும், இந்த ஆபாசத்திற்காக இவ்வளவு பணச் செலவும் நேரச் செலவும் செய்யலாமா என்றும் கேட்டால்—ஓவியம் என்னும் நிழலில் புகுந்துகொண்டு 'அவைகள் அவசியம் இருக்கவேண்டும்' என்றும், 'அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக் கலை அழிந்துவிடும்' என்றும், 'சாமி பக்திக்காகத் தாங்கள் கோவில்களைக் காப்பாற்றுவதில்லை' என்றும், 'ஓவியக் கலை அறிவுக்காகக் கோவில்கள் காப்பாற்றப்பட வேண்டும்' என்றும் சொல்லுகின்றார்கள்.

இதுபோலவே, புராணங்களைப் பற்றிய ஆபாசங்களை எடுத்துச் சொல்லும் போதும், இதே பண்டிதர்கள், 'புராணக் கதைகளை நாங்கள் மதிப்பதில்லை' என்றும், 'அப் புராணங்களில் உள்ள இலக்கண இலக்கியக் கலைகளையே காப்பாற்ற முயற்சிக் கின்றோம்' என்றும், 'கம்பன் கவிச் சுவையும் சேக்கிழார் தமிழ்ச் சுவையும் இவ்வுலகில் வேறு எங்கும் காண முடியாது' என்றும், 'ஆதலால் அவைகள் காக்கப்படவேண்டும்' என்றும் பேசுகின்றார்கள்.

ஆகவே, நமது பண்டிதர்களின் ஓவியக் கலையும், காவியக் கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால், அவர்களுக்கு உள்ள பகுத்தறிவுக் கலை எவ்வளவில் இருக்கின்றது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால், இந்தியக் கோவில் ஓவியமும் இந்துக் கடவுள்கள் ஓவியமும், கடுகளவு அறிவுள்ள மனிதனும் ஒப்ப முடியாத, மதிக்க முடியாத ஓவியங்கள் என்பதோடு, அவை மனிதத் தன்மையும் பகுத் தறிவும் உள்ள மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம் என்று சொல்ல முடியாததான நிலையில் இருப்பதையும் காணலாம்.

எப்படியெனில், இந்திய ஓவியம் என்பது இந்து மத சம்பந்தமான கடவுள் புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத் தவிர, தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அருமை என்றே சொல்ல வேண்டும். அது மாத்திரமல்லாமல், அவைகளில் இயற்கைக்கு முரண்பட்டவையே 100-க்கு 99 ஓவியங்கள் என்றும் சொல்ல வேண்டும். சாதாரணமாக மனிதனும் மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும், மிருகங்கள் பறப்பதும், மிருகங்களின்மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பட்சி களின் மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும்; 4 கைகளும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அஞ்சு, ஆறு முகங்களும்; சிறிய உருவத்தின் மீது பெரிய உருவங்கள் இருப்பதும், தாமரைப் பூவின் மீது ஒரு பெண் நிற்பதும், இன்னமும் இதைவிட எத்தனையோ பொருத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன.

சாதாரணமாக, மேல் நாட்டு ஓவியங்களைப் பார்த்தால் இது ஓவியமா, உண்மைத் தோற்றமா என்று மருளும்படியாகவும், அவைகளுடைய சாயல் முதலியவைகளிலிருந்தே குணம், காலம், இடம், நடவடிக்கை முதலியவைகள் தெரிந்துகொள்ளும்படியாகவும், அவைகள் பிரத்தியட்சமாக இயங்கிக்கொண்டிருப்பது போலவும், எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச் சாதாரண தன்மையில் அறியும்படியாகவும், நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக் கொள்ளும்படியாகவும் இருப்பதைக் காணலாம். இவற்றிற்காக ஒரு தம்பிடியாவது செலவில்லாமலும் பூசை, நைவேத்தியங்கள் செய்வதின் மூலம் நேரத்தையும் அறிவையும் பறிகொடுக்காமலும் அனுபவிக்கலாம்.

ஆகவே, அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும், சித்திரங்களையும், புதுமை களையும் விட்டுவிட்டு—அநாகரிகமும், காட்டுமிராண்டித்தனமுமான, மிருகப் பிராயமும் கொண்டதான உருவங்களை வைத்துக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவைகளுக்குப் பணம், காசு, நேரம் ஆகியவை செலவுசெய்து, கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக்கொண்டு, 'ஓவியக் கலைக்காக—அக் கலையைக் காப்பாற்றுவதற்காக அவைகளிடம் இப்படிச் செய்கின்றோம்' என்றால், இது பகுத்தறிவும் யோக்கியக் குணமும் படைத்த மனிதர் என்பவர்களின் செய்கையாகுமா—பேச்சாகுமா என்று கேட்கின்றோம்.

ஆகவே, இவர்களைத் தவிர மற்ற கோடிக்கணக்கான மக்கள் அவற்றை என்னவாகக் கருதுகின்றார்கள்? அதைப் பார்த்தபின், கேட்டபின், எப்படி நடந்துகொள்ளுகின்றார்கள் என்கின்ற விஷயங்கள் இந்தப் பண்டிதர்களுக்குத் தெரியாதா?

கம்ப ராமாயணத்தின் கவி அழகையும், சேக்கிழார் புராணத்தின் தமிழ் அழகையும் பண்டிதர்கள் எடுத்துச் சொல்லும்பொழுதே, புத்தகத்தின்முன் தேங்காய், பழம் உடைத்து

கற்பூரம் பற்றவைத்து, பூசை செய்து கீழே விழுந்து கும்பிட்ட பிறகு, 'ஸ்ரீமத ராமானுஜாய நமஹ' என்றும், 'நமப் பார்வதீபதே; அரகர சம்போ மகாதேவா' என்றும் சொல்லி விட்டு, பிறகு கண்மூடி கைகூப்பி, காப்புச் சொல்லி அருள் உண்டாக்கிக்கொண்டு—பிறகு தான் கவி படித்துப் பொருள் சொல்ல ஆரம்பிக்கின்றார்கள். அதுவும் யார் முன்னிலையில், எப்படிப்பட்ட ஆண் பெண் முன்னிலையில் என்பதைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை.

ஆகவே, இந்த நிலையில் புராணங்கள், காவியங்கள் ஆகியவைகள் இலக்கியத் திற்கும், இலக்கணத்திற்கும் பயன்படுகின்றனவா—பயன்படுத்தப்படுகின்றனவா, அல்லது மக்களை இலக்கண இலக்கிய அறிவற்ற மக்களாக்கப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைச் சிந்தியுங்கள்.

இந்த இடத்தில் நாம் முக்கியமாய்க் குறிப்பிடுவது என்னவென்றால், நமது பண்டி தர்கள் என்பவர்களின் வயிற்றுப் பிழைப்புக்குப், புத்தக வியாபாரத்திற்கும், வாழ்க்கை நிலைமைக்கும் இம் மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான அநாகரிகமான காவியங்களும் ஓவியங்களுமல்லாமல் வேறுவகை ஒன்றில்லாமல்போனதால், அவர்கள் இத்தனை மோச மான பொய்யையும், புரட்டையும் வஞ்சகத்தையும் சொல்லிக்கொண்டு, இவைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆகவே, இம் மாதிரி ஆபாசமும் அநாகரிகமுமான காவியமும், ஓவியமும் அழிக்கப்படவேண்டுமானால், முதலாவதாக நமது பண்டிதர்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு—வாழ்க்கை நலத்திற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியது பகுத்தறிவையும் நாகரிகத்தையும் விரும்பும் பொதுமக்கள் கடமையேயாகும்.

மேல்நாட்டுப் பண்டிதர்களுக்கு அவர்களுடைய கல்வியானது பகுத்தறிவை உண்டாக்கக்கூடியதாய் இருப்பதால், அவர்கள் அநாகரிகப் பழங் காவியங்களுடையவும் ஓவியங்களுடையவும் உதவி சிறிதும் இல்லாமலேயே உயிர்வாழ சவுகரியமடைந்து இருக்கிறார்கள். ஆனால், நமது பண்டிதர்கள் பரிதாபகரமான நிலைமையில் இருப்பதால் அவர்களைக் குற்றம் சொல்லுவதிலும் பயனில்லை.

['குடி அரசு'-கட்டுரை—26-4-1931]

2. இசை

1. சங்கீதம்

சங்கீதம் என்னும் கலையானது மிக்க மேன்மையானதென்றோ அல்லது இன்றைய நிலையில் மனித சமூகத்திற்கு அது மிக்க இன்றியமையாததென்றோ கருதவியலாது. உலகத்தில் மக்களுக்குள்ள அனேக விதமான உணர்ச்சித் தோற்றங்களில் இதுவும் ஒன்றே தவிர, இதற்கு எவ்விதத்திலும் ஒரு தனி முக்கியத்துவம் கிடையாதென்பதே நமது அபிப்பிராயம்.

உதாரணமாக, சங்கீதம் என்பது தேசத்திற்குத் தகுந்தபடியும், அங்குள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தபடியும், அவரவர்களது அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தபடியும் இருப்பதே தவிர—ஒரே சங்கீத முறையானது உலகத்திற்கெல்லாம் பொருத்தமானதென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டுச் சங்கீத உணர்ச்சிக்காரனுக்கு இன்பமாய் இருப்பது, மற்றொரு நாட்டு வித்வானுக்குப் புரியாததாகவே இருக்கும். மேல் நாட்டுச் சங்கீத இன்பம், கீழ் நாட்டான் அனுபவிக்க முடியாதது; அதுபோலவே, கீழ் நாட்டானின் சங்கீதம் மேல்

நாட்டானுக்கு இன்பம் தராது. ஆனால், பொதுவில் சங்கீதத்தில் உலக மக்களுக்கெல்லாம் ஒருவித போக்கிய அனுபவமிருக்கின்றது என்பதை மாத்திரம் காணலாம். ஆனால், ஒருவர் அதிகமாக அனுபவிக்க ஆசைப்படுவார்; மற்றொருவர் அதைச் சாதாரணமாகக் கருதுவார். எப்படி இருந்தாலும் உலகிலுள்ள பல கலைகளில் அதுவும் ஒன்றாயிருக்கிறது.

நாம் சங்கீத மாநாட்டில் கலந்துகொள்ள ஆசைப்பட்டதன் முதல் காரணம், சங்கீத ஞானத்திற்காகவோ, சங்கீதக் கலை வளர்ச்சிக்காகவோ மாத்திரம் அல்ல என்றும்; பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்திற்குள்ளும் புகுந்து, அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் விரோதமாயிருக்கும் கொடுமையை அழிப்பதற்கே ஒழிய வேறில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—20-4-1930]

2. தமிழிசையும் நாடகமும்

கல்விப் பெரியாரும் அறிவுப் பெரியாருமான தலைவர் அவர்களே! ஆசிரியர்களே! மாணவியர்களே! மாணவர்களே! தமிழ் அன்பர்களே!

இன்று எனக்கு உங்கள்முன் பேசும்படியான வாய்ப்புக் கிடைத்திருப்பதை நான் ஒரு பேறு என்றே கருதுகிறேன். தலைவர் அவர்கள் என்னைப்பற்றி மிக மிக அதிகமாகப் புகழ்ந்து கூறி அறிமுகப்படுத்தினார். அவை என்மீது அவருக்குள்ள அன்பையும் அவர்கள் கொண்டுள்ள மதிப்பையும் காட்டுகின்றனவே ஒழிய, அவை பெரிதும் என்னால் ஏற்றுக்கொள்ளக்கூடியனவல்ல என்பதோடு சிலவற்றைப் பற்றி நான் வெட்கமுறுகிறேன்.

தோழர்களே! இன்று உங்களிடையே சொற்பொழிவாற்றுவது எனக்கு மகிழ்ச்சிக் குரியதாயினும், சொற்பொழிவின் தலைப்பு எனக்கு அத்தனை மகிழ்ச்சிக்குரியதாயில்லை. 'தமிழ் இசை' என்பது பற்றிப் பேசவேண்டியது இன்று மிக்க அவசியமாகி விட்டது என்றாலும், அது எனக்கும் மிக்க உற்சாகமான தலைப்பே ஆனாலும், எப்படியோ அந்தத் தலைப்பும் சேதிகளும் இன்று விவாதத்துக்கு இடமுள்ளதாகப் போய்விட்டதால் முதல் முதல்—அதுவும் கட்டுப்பாடானதும் உங்களுக்குச் சுதந்திரமற்றதுமான ஒரு ஸ்தாபனத்தில், விவாதத்துக்கு இடமான விஷயத்தைப் பற்றிப் பேசினால் அது எனக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சியாய் இருந்தாலும், சிலருக்காவது விரும்பத் தகாததாக ஆகக்கூடும். அப்படி ஏற்பட்டால் அது அவ்வளவு நன்மையான காரியமாகாது.

என்றாலும், இன்று நாட்டில் இத் தலைப்பு ஒருவித உணர்ச்சியைக் கொண்டதாக இருப்பதால் நீங்கள் அதை விரும்புகிறீர்கள் என்று கருதி அதுபற்றிய என் கருத்தைச் சொற்பொழிவு வழியாகச் சொல்லுகிறேன். நீங்கள் நடுநிலைமையில் இருந்து கேட்டு, கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ள வேண்டிக்கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொன்னால், தமிழன் தான் நுகரும் இசையை, 'தமிழில் இசை, தமிழில் பாடு, தமிழர்களைப் பற்றித் தமிழர்களுக்கு ஏற்றதைத் தமிழர்களுக்குப் பயன்படுமாறு பாடு' என்கின்றான். இதை யார்தான் ஆகட்டும், ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? ஏன் குறை கூறவேண்டும் என்று கேட்கிறேன். அதிலும் தமிழன் இப்படிக் கேட்பதை— தமிழனால் தமிழனல்லாதவன் என்று கருதப்பட்டவன், ஏன் மறுக்கவேண்டும்? இது மிக மிக அதிசயமானதும், தமிழனால் மிக மிக வருந்தத் தக்கதுமாகும். தமிழன்-தமிழ்மக்கள், தமிழில் பாட்டுக் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். பணம் கொடுப்பவன், தனக்குத் தமிழ்ப் பாட்டுப் பாடப்படவேண்டுமென்று ஆசைப்படுகிறான்; பாட்டுக்கேட்பவன் தமிழில் பாட்டுப் பாடவேண்டும் என்று ஆசைப்படுகிறான். இந்த ஆசையில் பழந் தமிழர் அல்லாதார் அதை மறுக்கவோ, குறைகூறவோ, குற்றம் சொல்லவோ எப்படி உரிமையுடையவர்கள் என்று கேட்கிறேன்.

'தமிழரென்றும், தமிழரல்லாதவர் என்றும் பேதம் பாராட்டக்கூடாது' என்பதாகத் தமிழர்களுக்கு அறிவுரை கூறும் இந்தப் பெருமான்களே, 'தமிழில் பாடவேண்டும் என்பது பொதுநலத்துக்குக் கேடு, கலைக்குக் கேடு, கலை நலத்துக்குக் கேடு' என்று சொல்ல வந்தால்—இவர்கள் உண்மையில் தமிழர்—தமிழரல்லாதவர் என்கின்ற உணர்ச்சியைக் குறையச் செய்பவர்களா, அல்லது நெருப்பில் நெய்யை ஊற்றி எரியச் செய்யும்படியான மாதிரியில் வளரச் செய்பவர்களா என்று கேட்கிறேன். அன்றியும், இப்படிப்பட்ட இவர்கள் தங்களைத் தமிழர்களென்று சொல்லிக்கொள்ளக்கூடுமா? தமிழில் பாடினால் இசை கெட்டுப் போகும் என்றால், மேற்கூறிய தமிழர் அல்லாத தோழர்களைவிட இராஜா சர். அண்ணா மலை செட்டியார், சர். சண்முகம் செட்டியார் போன்றவர்கள் குறைந்த அளவு கலை அறிவோ பொது அறிவோ உடையவர்கள் என்பது இவர்கள் எண்ணமா என்று கேட்கிறேன். காது, கண், மனம் ஆகியவை எல்லா விஷயங்களுக்கும் எல்லோருக்கும் ஒன்றுபோல் இருக்கமுடியாது என்பது அறிஞர் ஒப்பமுடிந்த விஷயமாகும்.

'தமிழில் பாடு!' என்றால், சிலர்—அதுவும் ஒரு வகுப்பாரே பெரிதும் ஆட்சேபணை சொல்ல வந்ததாலேயே, 'தமிழ் இசை இயக்கம்' வகுப்புத் துவேஷத்தையும் உண்டுபண்ணக் கூடிய இயக்கமாகவும், பலாத்காரத்தை உபயோகித்தாவது தமிழ் இசையை வளர்க்க வேண்டிய இயக்கமாகவும் ஆகவேண்டியதாய் விட்டது.

'இத்தனை பெரியவர்கள் எதிர்ப்பும், தமிழரல்லாதவர்களின் பத்திரிகைகளின் எதிர்ப்பும் ஏற்பட்ட பிறகேதான் இது ஒரு இயக்கமாக விளங்க வேண்டியதாயும், சில இடங்களில் பாட்டுப் பிழைப்புக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி, பயமுறுத்தித் தமிழில் பாடச் செய்ய வேண்டியதாயும், பாட்டுப் பிழைப்புக்காரர்கள் சில இடங்களுக்குப் போகும்போது பந்தோபஸ்துக்கு ஆட்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டியதாயும் ஏற்பட்டுவிட்டது. பாட்டுப் பிழைப்புக்காரரான சிலர்மீது தமிழர்களுக்கு வெறுப்புக்கூட ஏற்படும்படியாக நேர்ந்துவிட்டது. கூடிய சீக்கிரத்தில் இசைக் கலை வியாபாரம் தமிழர்கள் அல்லாதவர்களை விட்டு விலகினாலும் விலகிவிடலாம்; அல்லது, அவர்களே அதை விட்டு விலகினாலும் விலகிவிட நேரிடலாம் என்றுகூடக் கருதவேண்டியதுமாகிவிட்டது.

பொதுவாகச் சொன்னால், இந்த நிலையானது நாட்டின் நலத்துக்கும் ஒற்றுமைக்கும் ஏற்றதல்ல என்றே சொல்லுவேன். இன்று தமிழனின் நிலைமை 'தமிழன் அன்னிய மொழியைக் கற்கவேண்டும்' என்று சொல்லுவது தேசாபிமானமும் நாட்டு முற்போக்கு இயல்கலை அபிவிருத்தியுமாக ஆகிவிடுகிறது. தமிழனுக்குத் தெரியாத—புரியாத மொழியில் தமிழன் பாட்டுக்கேட்கவேண்டும்; இதற்குப் பேர்தான் கலை வளர்ச்சியாம்! மற்றும், 'தமிழனுக்குத் தமிழ் வேண்டும்; தமிழ் இசை வேண்டும்' என்பது தேசத் துரோகமாகவும், கலைத் துரோகம் வகுப்புத் துவேஷம் என்பதாகவும் ஆகிவிடுகிறது. காரணம், பெண்களுக்கு ஆண்கள் ஒழுக்க நூலும், கற்பு நூலும் எழுதுவதுபோல்—தமிழனுக்குத் தமிழனல்லாதவன்—தமிழரை அடிமை கொண்டு அடக்கி ஆண்டு சுரண்டிக்கொண்டிருப்பவன்—தேசாபிமானம், மொழியபிமானம், கலையபிமானம் முதலியவை கற்பிப்பவனாய்ப் போய்விட்டதேயாகும்.

தமிழ்நாடும், தமிழ்மொழியும், தமிழன் தன்மானமும் விடுதலை பெற்று வளர்ச்சியடைய வேண்டுமானால், தமிழன் காரியத்தில் தமிழனல்லாதவன்—அவன் எப்படிப்பட்டவனானாலும், தலையிடுவது முதலில் ஒழிந்தாகவேண்டும். இதை வேறு எதை ஒழித்தாவது ஒழிக்கவேண்டும்.

அறிஞர்களே! நமக்குப் பாட்டுக் கேட்கக்கூடத் தெரியாது என்றும், நம் மொழியானது பாட்டு இசைக்கக்கூடப் பயன்படாது என்றும் சொன்னால், இந்த இழிமொழி—நம் உயிரைப் போயல்லவா கவ்வுகிறதாயிருக்கிறது என்று மிக்க வேதனையோடு கூறுகிறேன். தமிழ்த் துரோகத்தால் வாழவேண்டியவனும், வள்ளுவர் சொன்னதுபோல்—'குலத்திலே

அய்யப்படவேண்டியவனுமான தமிழ் மகன்களுக்கு, இது எப்படி இருந்தாலும் அவர்களது வாழ்வும் நம் எதிரிகளின் புகழுமே அவர்களுக்கு அணியாகவும் அலங்காரமாகவும் முக்கிய இலட்சியமாகவும் இருக்கும். ஏன், நம் எதிரிகளுக்கு இருக்கும் செல்வாக்கால் நம்மில் துரோகிகள் பெருகிவிட்டார்கள்; இன்னும் பெருகுவார்கள் என்பதும் உண்மைதான். ஏனெனில், மானங்கெட்ட தமிழ்மக்கள் பலர் இப்படிப்பட்ட இனத் துரோகிகளை அறியாமையாலும், சுயநலத்துக்காகவும் ஆதரிக்கிறார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். ஆனால், நாம் இப்படிப்பட்டவர்களையும்தான் முதலில் நன்றாய் வெறுக்க வேண்டும்; அவர்களைத் தமிழர் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கித் தள்ளவேண்டும்.

எப்படியோ ஒரு அளவில் நம் எதிரிகளின் எதிர்ப்பையும், நம் இனத் துரோகிகளின் சதிச் செயலையும் தாண்டித் தமிழிசை வெற்றி வழியில் சென்றுகொண்டிருக்கிறது. இதற்கு நம் வள்ளல் இராஜா சர். அண்ணாமலையாரும் நம் அறிஞர் சர். சண்முகனாரும் ஒரு அளவுக்குப் பெருங் காரணஸ்தர்களாவார்கள். அவர்களுக்குத் தமிழ்மக்கள் நன்றி என்றும் உரித்தாகுக. ஆனால், இனித் தமிழிசைக் கிளர்ச்சி அடுத்தாற்போல் செய்யவேண்டியதென்ன என்பது யோசிக்கத் தக்கது.

தமிழ் இசையை நாம் ஏன் வேண்டுகிறோம்? எதற்காக நமக்குத் தமிழில் இசை வேண்டுமென்கிறோம்? தமிழ்மொழியை ஏன் வேண்டுகிறோம்? ஸ்காந்தத்தை–'கந்த புராணம்' என்றும், கிருஷ்ணனை–'கிருட்டிணன்' என்றும், ஹோம் நமஹா என்பதை–'ஓம் நமோ' என்றும், நரசிம்ஹமூர்த்தி என்பதை–'சிங்கமுகக் கடவுள்' என்றும், தசகண்ட இராவணன் என்பதை–'பத்துத்தலை இருட்டுத் தன்மையன்' என்றும் மொழிபெயர்த்துக் கொண்டு வணங்கி, நம்பி, திருப்தி அடையவா என்று கேட்கிறேன்.

தமிழிசைக்கு நாம் கிளர்ச்சி செய்ததானது வீணாகவில்லை. தமிழிசைத் தொழிலாளர்கள் தமிழில் இசை கற்று வருகிறார்கள்; பெரும்பாலும் தமிழில் பாடுகிறார்கள். இசையை நுகர்வோரும் தமிழில் இசை வேண்டுமென்று விரும்புகிறார்கள். இனி இந்த உணர்ச்சி குன்றிவிடாது. இசை விருந்தளிக்கும் செல்வவான்களும், நுகர்வோர்களும் தமிழுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும் வரை இந்த உணர்ச்சி வலுத்துக்கொண்டே போகும்.

தமிழிசை நமது நல்வாழ்வுக்குப் பயன்படும்படி செய்யவேண்டியது நமது கடமை. இன்று இதுவரை தமிழல்லாத வேறு மொழியில் இருந்த இசை (பாட்டுகள்), தமிழில் பாட வேண்டியதாக ஏற்பட்டதற்குக் காரணம், நமக்குத் தமிழினிடம் ஏற்பட்ட உணர்ச்சியேயாகும். இது ஒரு பெரிய மாறுதல்தான்.

இசை, நடிப்பு ஆகியவை எதற்குப் பயன்படுகின்றன? ஏதாவது ஒரு கருத்தை ஒரு சேதியைக் காட்டுவதற்கும், அதை மனத்தில் பதிய வைப்பதற்கும் அது வெறும் வாக்கியத்தில் இருப்பதை இசை இன்பத்தோடும், நடிப்பு இன்பத்தோடும் மனத்திற்குள் புகுத்துவதற்கும் ஆகவே முக்கியமாய் இருந்து வருகின்றன.

அடுத்தபடியாக இரண்டாவதாகத்தான் அவற்றில் இன்ப நுகர்ச்சி வருகின்றது. ஆகவே, இசைக்கும் நடிப்புக்கும் கருத்தும் செய்திகளும் பிரதானமாகும்; அடுத்ததாகவே சுவை பிரதானமாகும். அதன் உண்மையான அனுபவமும் அப்படியேதான் இருந்து வருகிறது. ஆனால், நுகர்வோரும் இசைத்து நடிப்போரும் செய்தியையும், சுவையையும் பற்றிக் கவலையில்லாமல் நுகர்வோர்கள் நேரப் போக்குக்கும், வேறு பல காட்சி இன்பத்திற்கும் அதைச் சாக்காக வைத்து நுகர்வதாலும், இசைத்து நடிப்போர்கள் பொருளுக்கும், வேறு சுயநலத்துக்கும் பயன்படுத்துவதாலும் அதற்கு உண்டான பயன் ஏற்படாமல் போய் விடுகிறது.

நம்நாடும் நாமும் எவ்வளவோ குறைபாடுகள் உடையவர்களாக இருக்கிறோம். அக் குறைபாடுகள் ஒழிக்கப்படுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்கிறோம். இம் முயற்சியின்

மூலம் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் அனுபவித்துவருகிறோம். இவற்றை யாராலும் மறுக்க முடியாது. அப்படி இருக்க நம்முடைய கலைகள், நாம் அனுபவிக்கும் நுகரும் சாதனங்கள், இன்பத் தன்மைகள் ஆகியவை எப்படியிருக்கவேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

சாதாரணமாக பொருள் நஷ்டமோ, கால நஷ்டமோ, ஊக்க நஷ்டமோ இல்லாமல் நடைபெறும் காரியங்கள்கூட, நம் நலத்துக்கு ஏற்றதாகவும், தீமை ஒழியத் தக்கதாகவும் இருக்கவேண்டுமென்று விரும்புவது அறிவுடைய மக்களின் தலையாய பண்பாகும். அவற்றில் நமக்குப் போதிய கவலை இல்லாததாலேயே நம் நலத்துக்கு மாறான சேதிகளும் உணர்ச்சிகளும் கொண்ட காரியங்கள் வளர்ந்துவர ஏற்பட்டு விட்டதுடன், அவைகளையே பொருள் கொடுத்தும், காலத்தையும் ஊக்கத்தையும் செலவழித்தும் நுகர்ந்து, அறிவும் மானமும் கெட்டு, முற்போக்கும் தடையுற்றுக் கீழ்நிலைக்கு வரவேண்டியவர்களானோம்.

இன்றைய நம் நிலை என்ன? முதலாவது, சமுதாயத்தில் நாம் கீழான நிலையில் இருக்கிறோமா, இல்லையா? இந்தக் கீழான நிலை ஏழைகளுக்கும் மடையர்களுக்கும், இரந்துண்போர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், கயவர்களுக்கும் இருந்தால் நமக்குக் கவலையில்லை. (ஏனெனில், இது தனி உடைமை நாடு) ஆனால், கோடீசுவரரும், கோணாத கை-கொடைவள்ளலும், மிக்க மதிவாணருமான இராஜா சர் அண்ணாமலை அவர்களும்; பேரறிஞரும், மலையாடும்படியான வாயாடிகளும், கருத்தாளர்களும் மெச்சும் மதி அரசர் சர். சண்முகம் அவர்களும் நம் சமுதாயத்தில் 4 ஆம் சாதி, 5 ஆம் சாதியாக மதிக்கப்படவும், அவ்வாறே பெரிதும் நடத்தப்படவும் காரணம் என்ன? ஏன் நடத்தப்பட வேண்டும்? சம மனிதராய்க் கருதப்படாததற்கு இவர்களிடம் உள்ள குறை என்ன? குற்றம் என்ன? என்று கேட்கிறேன். இந்தக் கொடுமை இன்றா நேற்றா? இவர்களுக்குள்ள பொருள், செல்வாக்கு, மதி, திறமை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை உண்மையில் எதற்காகச் செலவிடப்பட்டு வரவேண்டும்? எதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்? இப்படிப்பட்டவர்கள் பிறந்த நாட்டிலே, இவர்கள் இருக்கும் காலத்திலே மனித சமுதாயத்துக்கும்—ஏன், இவர்களுக்குமே, சமுதாயப் பிறவி இழிவும், குறைபாடும் நீக்கப்பட வில்லையானால், நீக்கப்பட இவர்கள் உழைக்கவில்லையானால், நீக்கப்பட இவர்களது அறிவு, ஆற்றல், உணர்ச்சி, ஊக்கம் செலவழிக்கப்படவில்லையானால்—மற்றும் வேறு யாருடைய காலத்தில் நாம் எதிர்பார்க்க முடியும் என்று கேட்கிறேன்.

சென்ற மாதம் சென்னையில் நடந்த தமிழ் இசை மாநாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 10 நாட்கள் ஒரு பெரிய திருநாள்போல் நடந்தது; பல பதினாயிரம் ரூபாய் செலவிடப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மக்கள் தினம் 4, 5 மணி நேரம் செல வழித்து வந்து அமர்ந்து இருந்துவிட்டுப் போனார்கள். வள்ளல் அண்ணாமலையார் உணர்ச்சியும் ஊக்கமும் ஆழ்ந்த சிந்தனையும், அவர்களது பந்துமித்திரக் குழாங்களும், அறிஞர் சண்முகம் அவர்களது அறிவுரைகளும் ஆற்றல்களும் எல்லையின்றிப் பயன் படுத்தப்பட்டன. எதிரிகளுக்கு ஆணித்தரமான விடை அளித்து அவர்களது வாய்க்கு ஆவிகூட வெளிப்படமுடியாதவாறு ஆப்புகள் சம்மட்டியால் அறையப்பட்டன. வெற்றிக் கொடி ஆகாயத்தை அளாவிப் பறந்தது. சென்னை நகர் முழுவதுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிளம்பியது. சரி, இவை பாராட்டத் தக்கன, போற்றத் தக்கன.

ஆனால், விளைந்த பயன் என்ன? ஏற்பட்ட படிப்பினை என்ன? இம் மாநாடு— பண்டிதர்களைத் தமிழில் பஜனைப் பாட்டுகளைத் தொடுக்க வைத்தது; இசைவாணர்களை (பாட்டுத் தொழில்காரர்களை) வீட்டில் தனிமையில் உட்கார்ந்து பாட்டுகளைப் பாடிப்பாடிப் பழக்கம் செய்து கொள்ளச் செய்தது; இந்தப்படியான தமிழ் பஜனைப் பாட்டுப் பாடத் தெரிந்தவனையே இசை விருந்துக்கு அழைக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சியை நமது செல்வவான்கள் பலருக்கு ஊட்டியது; இசை நுகரச் செல்லும் மக்கள் பலருக்கும் (இந்த இசைவாணர்) தமிழில் இசை இசைக்கிறாரா, அல்லது வேறு மொழியில் இசைக்கிறாரா— வேறு மொழியில் இசைத்தால் கலவரம் செய்யலாமா என்கின்ற சிந்தனையைச் சிலருக்கு

ஊட்டிற்று—என்பனவாகிய இவை ஏற்பட்டன என்றே வைத்துக் கொள்ளலாம். இவற்றால் சகல உயர்வும், தகுதியும் இருந்து—ஒரு சிறு கீழ் மக்கள் குழுவால் இழி மக்களாய்க் கருதப் பட்டு, சுரண்டப்பட்டு, மானமற்று நடைப்பிணங்களாய்க் கிடக்கும் தமிழ் மக்களுக்கு, இந்த நிலை மாற, ஏதாவது ஒரு ஊசி முனை அளவு பயன் ஏற்பட்டதா என்று வணக்கத் தோடு கேட்கிறேன். நலம் பெறுவதற்கு வழி சிறிதும் இல்லாவிட்டாலும் கேட்டிற்காவது சரிவு வழி ஏற்படாமல் போயிற்றா என்று கேட்கிறேன்.

என் மீது ஒரு சிலர் முனிவு கொள்ளலாம்; ஆத்திரப்பட்டு வஞ்சினம் கூடக் கூறலாம்; அதை நடத்துவிக்கவும் முனையலாம். இவற்றால் பொதுநலம் என்ன ஏற்படக்கூடும்? தனி நலம்தான் என்ன ஏற்படக்கூடும்? இப் பெரியார்களிடத்தில் இந்த விண்ணப்பம் கொடுக்க எனக்கு உரிமை இல்லையா?

சர். சண்முகம் அவர்கள் ஒரு பெரிய பொருளாதார நிபுணர்; இவ்விஷயத்தில் அரசர் களும் மதிக்கத் தகுந்தவர்; எதிரிகளும் கண்டஞ்சத் தக்கவர். வள்ளல் அண்ணாமலையார் பொருளாதார நிபுணத்துவத்தையே உருவாய்க் கொண்டவர். இவ்விருவரின் பொருளாதார நிபுணத்துவம் இந்தத் தமிழ் இசை மாநாட்டில், தமிழ் இசைக் கிளர்ச்சியில் எப்படிப் பயன் படுகிறது என்று பாருங்கள்!

தமிழிசைக் கிளர்ச்சிக்காக இவர்கள் செலவழித்த பொருளும், மற்ற தமிழ் மக்கள் செலவழித்த பொருளும் தமிழ்நாட்டுப் பொருளல்லவா? தமிழர்களுடைய பொருளல்லவா? நிலை குலைந்து தரித்திரர்களாய் வயிற்றுப் பசிக்கு எச்சல்கலையைத் தேடித் திரியும் ஈன மக்களாய்க் கருதப்படும் தமிழ் உயிர்களுடைய செல்வமல்லவா? இதற்குச் செலவழித்த உணர்ச்சியும் ஊக்கமும் ஆற்றலும் காலமும் இவர்களுடையவை அல்லவா என்று கேட் பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இவ்வளவு பொருளும், ஆற்றலும், மதியும், மற்றதும் செலவழித்ததற்கு நாம் கண்ட பயன் என்ன? நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள்! நாட்டில் உள்ள நல்ல, உயர்தர இசைவாணர்களுக்குப் பொருள்தந்து வரவழைத்து—ஒரு காலைத் தூக்கி ஆடிக்கொண் டிருக்கும் நடராஜ உருவத்தின்முன் தீப தூப நைவேத்தியத்துடன் உட்கார வைத்து, பல ஆயிரக்கணக்கான மக்களை வரவழைத்துப் பஜனைப் பாட்டுக்கள் பாடச் செய்வதும், அதன் மூலம் மக்களுக்குப் பக்தி புகட்டுவதுந்தானா? இது யார் செய்யவேண்டிய காரியம்? எதற்கு ஆகச் செய்ய வேண்டிய காரியம்? இதனால் ஏற்படும் பலன் யாருக்கு நலனைத் தரும்? நிலைகுலைந்து, இழிவடைந்து தரித்திரர்களாய், மடையர்களாய், கீழ்மக்களாய், சுரண்டப்பட்டவர்களாய் வாடும் மக்களுக்கு என்ன பலனைத் தரும்? அவர்கள் குறையைப் போக்கிக்கொள்ள ஏதாவது உணர்ச்சி ஏற்படுமா? அல்லது, முயற்சியைத் தடுக்குமா? மறு முறையும் சிந்தித்துப் பாருங்கள். இதில் பொருளாதார ஞானம் இருக்கிறதா என்று. பஜனைப் பாட்டுக்கள் தமிழில் இருந்தால் என்ன, தெலுங்கில் இருந்தால் என்ன, இந்தியில் இருந்தால் என்ன—அல்லது ஜப்பான், ஜெர்மனி பாஷையில் இருந்தால்தான் என்ன? கடவுளுக்கு எந்தப் பாஷை தெரியாது?

நாட்டினுடைய செல்வம், அறிவு, ஊக்கம், உணர்ச்சி—இந்தப் பஜனைக்காகவா இப்படிச் செலவழிக்கப் படவேண்டும்? இதைக் காணும் அயலான் எவனாவது இந்த நாட்டு மக்களுக்குத் தன்மான உணர்ச்சியோ, இழிவையும் கீழ்மையையும் கண்டு உடல் துடிக்கும் சொரணையோ இருக்கிறது என்று கருதமுடியுமா? நாட்டு மக்களுக்கு இதில் பிரவேசித்து, இந்தத் தன்மானத்துக்குக் கேடு செய்யும் தன்மையைப் பற்றிச் சிந்திக்கவோ, விளக்கவோ, தடுக்கவோ உரிமை இல்லையா என்று கேட்கிறேன்.

தமிழிசைக் கிளர்ச்சிக்குச் செலவாகும் பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் பார்த்தால் அதன் பயன் இந்தப் பஜனையில் முடிவதானால் மானமும் அறிவும் உள்ள எவனுக்குத்தான் வயிறு எரியாது என்று கேட்கிறேன்.

பல் விளக்கச் சோம்பேறித்தனப்பட்ட மருமகனைப் பார்த்து ஒரு மாமியார், பல் விளக்கும்படி மருமகனுக்குச் சொல்ல வெட்கப்பட்டு, கரும்பு சாப்பிட்டால் பல் வெள்ளை யாகும் எனக் கருதி, மறைமுகமாய் 'மாப்பிள்ளை! இந்த ஊர்க் கரும்பு நல்ல ருசியாக இருக்கும்; ஒரு கட்டுக்குக் கரும்பு வாங்கிச் சாப்பிடுங்கள்' என்று சொல்லிக் காசு கொடுத்தால்—மாப்பிள்ளை அதை வாங்கிக்கொண்டு போய் எள்ளுப் பிண்ணாக்கை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பல்லை இன்னும் கேவலமாக்கிக்கொண்டு கரும் எண்ணெய்ப் பசையுடன் வந்தால், மாமியாருக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! அது போலல்லவா இந்தத் தமிழிசைக் கிளர்ச்சி இந் நாட்டில் நடந்துவருகிறது என்று கருத வேண்டியிருக்கிறது.

இதுபோலவே, நம் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் மாபெரும் கேடாய் இருந்து வரும் மற்றொரு காரியம் சினிமா, நாடகம் முதலிய நடிப்புக் காட்சிகளாகும். இவை இசையைவிடக் கேடானவையாகும் என்பது என் கருத்து. மானமுள்ள நாடாக—மானத்தில் கவலையுள்ள மக்களைக் கொண்ட நாடாக இருந்திருக்குமானால் இந்த நாடகம் சினிமா முதலியவை ஒழிந்து கல்லறைகளுக்குப் போயிருக்கும். இதை நான் வெகு காலமாகச் சொல்லிவருகிறேன்.

இசையினால் காது மூலம் உடலுக்கு விஷம் பாய்கிறது. நடிப்பினால் காது, கண் ஆகிய இரு கருவிகள் மூலம் உடலுக்குள் விஷம் பரவி இரத்தத்தில் கலந்துபோகிறது. இவ்வளவு பெரிய குறைபாடும், இழிவும் உள்ள மக்களுக்கும்—இன்று கடவுள் பஜனையும், கடவுள் திருவிளையாடல் நடிப்புந்தானா விமோசனத்துக்கு வழியாய் இருக்கவேண்டும்?

நாடகம் எதற்கு? அது படிப்பிக்கும் படிப்பினை என்ன? புராணக் கதைகளை நடிப்பினால் அனுபவிப்பதால் மூடநம்பிக்கை, ஒழுக்க ஈனம், கட்டுத்திட்டமற்ற காம உணர்ச்சி, கண்ட மாத்திரத்தில் காம நீர் சுரக்கும்படியாகப் பெண் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல் முதலியன பிடிபடுவதல்லாமல் வேறு என்ன ஏற்படுகிறது?

'இரணியன்' நாடகத்தில், விஷ்ணு தூணிலிருந்து வெளிவரும்போது கூத்து பார்க்கும் மக்கள் கைகூப்பிக் கும்பிடுகிறார்கள்.

'வள்ளி திருமணம்' நாடகத்தில், வள்ளியை சுப்பிரமணியன் காதலித்து காதல் சேட்டை செய்யும்போது, பல ஆண்கள் பெண்கள் பக்கமும், பல பெண்கள் ஆண்கள் பக்கமும் திரும்பிப் பார்த்துக் கண்ணோடு கண்ணை முட்டவைப்பதுபோல் ஆகி மூர்ச்சையாகி விடுகிறார்கள்.

ஒரே கதை, நாடகமும் சினிமாவுமாக ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் ஆடுவதின் காரணம் என்ன? முதலிரண்டு மூன்று நாட்களிலேயே பல பெண்களும் பல ஆண்களும் நாடகக் கொட்டகையைத் தங்கள் 'சங்கேதஸ்தலம்' (அதாவது பார்வையால், சந்திப்பால் ஒரு அளவு காதலைத் தீர்த்துக் கொள்ளவும், காதல் குறியைக் கண்டு அனுபவிப்பதால் ஒரு அளவு இன்பங் கொள்ளவும் அனுகூலமான இடம்) ஆக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். வெறும் சாதாரண நிலையில் ஆண் பெண் சந்தித்துக்கொள்வதைவிட நல்ல உடை, நல்ல நடை, நல்ல அலங்கரிப்பு, நல்ல சாயலோடு செல்ல உரிமை இருக்கிற இடங்கள்—இவைகளோடு அதற்கேற்ற சைகைகள் நடக்கும் சமயத்தில் சந்திப்பு வைத்துக் கொள்வது, உண்மையிலேயே யாருக்கும் ஒரு இன்பத்தையும் திருப்தியையும் கொடுத்துத் தான் தீரும். இது இயற்கையே ஆகும். ஆனால், நாம் இதை வளர்க்கச் செய்யலாமா? இளம் வயதாகவும், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளப் போதிய சக்தி இல்லாதவர்களாகவும் இருக்கிற சிறுவர் சிறுமிகளுக்கும், மனோபலமற்றவர்களுக்கும் இதை ஒரு பழக்கமாகச் செய்யலாமா என்று பாருங்கள். அப்படிச் செய்வதானாலும் அதிலிருந்து சிறிது அறிவும் மானமும் பெறும்படியாகவாவது அந்த நடிப்பைத் திருப்பவேண்டாமா? அதை விட்டுவிட்டு காட்டுமிராண்டிகள்போல் மூடநம்பிக்கையும் காமமும் காதலுமே நமது கலைகளை நிரப்பி

வருவதானால்—கலையினால் மனிதன் அறிவாளியாவானா, மடையனாவானா? சிந்தித்துப் பாருங்கள்!

'நந்தனார் சரித்திரத்'தால் தீண்டாமை ஒழியுமா, நிலைக்குமா யோசித்துச் சொல்லுங்கள், பார்க்கலாம்! 'கிருஷ்ண லீலை'யால் விபச்சாரித்தனம் வளருமா, குறையுமா சொல்லுங்கள், பார்க்கலாம்! திருவிளையாடல் புராண 'சிவ லீலை'யால் ஒழுக்க ஈனங்களும் அயோக்கியத்தனங்களும் வளருமா, குறையுமா என்று கூர்ந்து பாருங்கள். இராமாயணத்தினால் அடிமைத்தனமும் சூழ்ச்சிகளும் வளருமா, குறையுமா என்று பாருங்கள்! இப்படிப்பட்ட புராண சம்பந்தமான கதைகளின் நடிப்பு ஏதாவது ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுகிறதா என்று கேட்கிறேன். இப்படியே ஒவ்வொரு புராணக் கலையிலும் கேடு இருப்பதோடு, நாட்டுக்குப் பெருமித நட்டமும் முன்னேற்றத் தடையும் இருந்துவருகின்றன. வாலிபர்கள்—ஆண்களும், பெண்களும் முன்வந்து இந்தக் கேட்டை ஒழிக்கவேண்டும். நாடகங்களில் போய் உட்கார்ந்துகொண்டு இப்படிப்பட்ட காதல் வரும் சந்தர்ப்பங்கள் வரும்போது, 'வெட்கம், வெட்கம், மானங்கெட்ட பெண்கள்தான் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். மானமும் ஒழுக்கமும் உள்ள பெண்கள் இந்த நாடகங்களை எட்டிக்கூடப் பார்க்கமாட்டார்கள்' என்றும்; மூட நம்பிக்கை வரும் சந்தர்ப்பங்களில், 'வெட்கம், வெட்கம், பகுத்தறிவற்றவர்களும் காட்டுமிராண்டிகளும்தான் இந்தக் காட்சிகளைக் காண வருவார்கள்; அறிவும் மானமும் உள்ளவன் இதைத் திருத்தத்தான் முற்படுவான்' என்றும் சொல்லவேண்டும்.

அதுபோலவே, இசையரங்குகளிலும் பஜனைப் பாட்டுகள் வரும்போது அவை காதுகளில் கேட்காதபடி, 'யாயா யாயாயா' என்று கூப்பாடு போட்டு அந்தச் சப்தம் மற்றவர்கள் காதுகளில் கேட்காமல் இருக்கும்படி செய்யவேண்டும். யுத்தத்தின் காரணமாக நமது சர்க்கார், ரேடியோவில் ஜப்பான், ஜெர்மன் பேச்சுக்கள் வரும்போது வேறு யாரோ ஒருவர் அப்பேச்சுக்கள் நம் காதுகளில் விழாமல் இருப்பதற்காக 'யாயா..யாயாயா' என்று சொல்லச் செய்கிறார்கள் அல்லவா—அதுபோலத்தான் நானும் சொல்கிறேன்.

நாம் நம் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன்—எவ்வளவு நாட்களாக—எவ்வளவு பாடுபட்டு வருகிறோம்? அந்தப் பலன்கள் நாம் செய்த சிறு காரியத்தையும் கெடுக்கவும், யாரோ சுயநலக்காரர் சுரண்டுவதற்குந்தானா பயன்படவேண்டும்? நமக்கு ஒருவர் உதவி செய்யாவிட்டாலும் நம் காரியம் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாகவாவது பார்த்துக்கொள்ள நமக்கு உரிமை இல்லையா என்று கேட்கிறேன். இந்தப் பஜனைப் பாட்டும், இந்தப் புராண நாடகமும் இருக்கும் வரை நம் முட்டாள்தனமும், இழிவும், மானமற்ற கீழ்மையும், ஒழுக்க ஈனமும் ஒழிக்கப்பட முடியவே முடியாது என்பேன்.

[சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 7-2-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1944]

3. தமிழிசை

தமிழிசை முயற்சி அல்லது கிளர்ச்சி என்றால் என்ன? தமிழ்நாட்டில் தமிழர்கள் இடையில் இசைத் தொழில் வாழ்க்கை நடத்தவோ அல்லது பொருள் திரட்ட ஒரு வியாபார முறையாகவோ கொண்டுள்ள இசைத் தொழிலாளி அல்லது இசை வியாபாரியை இந்த நாட்டானும் பொருள் கொடுப்பவனும் இசையை அனுபவிப்பவனுமானவன், 'இசை என் விருப்பத்திற்கு ஏற்றவண்ணம் இருக்கவேண்டும்' என்று சொல்லி விரும்புவதேயாகும். இதில் எவ்வித விவாதமோ, வெறுப்போ ஏற்படச் சிறிதும் இடமில்லை. இந்த முயற்சியும், கிளர்ச்சியும், இத்தனை நாள் பொறுத்து ஏற்பட்டதேன் என்பதுதான் அதிசயக்கத்தக்கதாகும். அன்றியும் எங்களுக்கு இப்படிப்பட்ட இசைச் சரக்குத்தான் இருக்கவேண்டும்

என்று, கொள்வோரும் நுகர்வோரும் கேட்டால் அதைத் தர்க்கித்து, 'நீ இதைத்தான் கொள்ளவேண்டும்' என்று சொல்லுவது இசைப் பிழைப்பாரின் ஆதிக்கத்தையும், இசை வியாபாரியின் ஆதிக்கத்தையும்—கொள்வோரின் இழிதன்மையையும், வலிவற்ற மானமற்ற தன்மையையும் காட்டும் அறிகுறியாகும்.

தமிழன் காதுக்கும், மனத்துக்கும் வேண்டிய உணவுக்கு—இந்தத் தமிழர் அல்லாதவர் என்று கருதப்பட்டவர்கள் பக்குவமும், நோட்டமும், சுவையும் சொல்லவருவது அவர்களது அதிகப் பிரவேசத் தனத்தையும், அகம்பாவத்தையும், தமிழர்களை இழிவாய்க் கருதி இருக்கும் சிறு குணத்தையும் காட்டுவதல்லாமல்—அதற்கு வேறு என்ன பெயர் சொல்லக்கூடும்?

['குடி அரசு'-கட்டுரை 19-2-1944]

3. நாடகம்

1. நவீன நாடகம்

நாடகம் என்பது ஒரு விஷயத்தை, ஒரு சம்பவத்தை, ஒரு கற்பனையை நடித்துக் காட்டுவது என்பது பலரின் துணிபு என்றாலும், அது மக்கள் சமூக நன்மைக்காகவே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தொழில் முறையென்றும் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல், ஜனசமூக நல்வாழ்க்கைக்கு ஏற்ற விஷயங்களையே நடித்துக்காட்ட ஏற்பட்டது என்றும் சொல்லிக்கொள்ளப்படுகின்றது.

ஆனால், இன்றைய நாடக உலகில் நடைபெறும் தொழில் முறைகளில் இம்மூன்று கருத்துக்களுக்கும், ஏதாவது ஆதாரமிருக்கின்றதாவென்று வெறுப்பு விருப்பு இல்லாமல் கூர்ந்து பார்க்கும்படி நாடக அபிமானிகளை வேண்டிக்கொள்ளுகிறேன்.

முதலாவது, நடிப்பு என்பது தற்சொரூபம் என்பதுமாறி, நடிப்போர் என்பவரின் இச்சைப்படி உருவகம் கொடுத்துத் தன்போக்குப்படியும், பார்ப்பவர்கள் இஷ்டப்படியும்—அதாவது எப்படி எப்படி நடித்தால் மக்கள் ஏற்பார்கள் என்ற கவலைமீதும், நடிப்பதையே முக்கிய கொள்கையாய்க்கொண்டு, உண்மை நடிப்பு என்பதன் ஜீவனையே இழந்து, நடை உடை, பாவனை, ரசபேதம் முதலியவைகளைத் தலைகீழாகக்கொண்டு நடிக்கப்படுகின்றது. மற்றும், நடிப்பவர்கள் தங்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்றபடி திருத்தப்பட்ட வசனங்களைக் கொண்டும், அனேக சந்தர்ப்பங்களில் பொருத்தமற்ற பாவனைகளைக்கொண்டும், பாட்டு களைக்கொண்டும், பொருத்தமற்ற வசனங்களைக்கொண்டும் நடிக்கின்றார்கள்.

ஒன்று: இரண்டு நடிப்புகள் எல்லா அம்சங்களிலும் ஒழுங்காய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நான் பெரும்பான்மையாய்க் காணப்படுகின்ற விஷயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

இரண்டாவது: நாடகங்கள் பொதுஜன நன்மைக்காக நடிக்கப்படுகின்றன என்பதையும் முழுவதும் ஒப்புக்கொள்ள முடியாதவனாகயிருக்கிறேன். ஏனெனில், இன்று எப்படி உலகில் பல்வேறு பொது ஸ்தாபனங்களில் இருந்துகொண்டு, மனித சமூக பொது நலத்திற்கு என்று நடைபெற்று வருபவைகள் அவ்வளவும் அனேகமாய் அவற்றின் ஒவ்வொரு காரியங்களும் அவற்றில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு தனி மனிதனுடையவும், அவனது தனி வகுப்பினுடையவும் சுயநலத்திற்கே பெரிதும் நடைபெற்று வரத் தக்கதாய் இருக்கின்றதோ அதேபோல்தான்—நாடக உலகிலும் அதில் ஈடுபட்டவர்களுடைய—அதைத் தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாய் ஏற்படுத்திக்கொண்டவர்களுடைய சுயநலத்திற்காகவே

கைக்கொண்ட தொழில்முறையாகத்தான் நடைபெற்று வருகின்றன. அந்த மாதிரியில் வியாபாரம் நடத்தும் முதலாளிகளின் மனப்பான்மையையே அஸ்திவாரமாக வைத்துத்தான் நாடகத்தொழிலும் வியாபாரமுறையில் நடந்துவருகின்றது என்று சொல்லுவதற்கு நான் வருந்துகிறேன்.

மூன்றாவது : 'மக்கள் சமூகத்திற்கு நன்மையான காரியங்களை வைத்துக்காட்டுவதற்காக நாடகம் ஏற்பட்டது' என்று சொல்லப்படுவது; இவ்விஷயத்திலும் நாடக உலகம் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதாகச் சொல்ல முடியாமைக்கு வருந்துகிறேன்.

ஏனெனில், இன்றைய நாடக உலகத்தில் உள்ள நாடகங்களின் மூலக் கதைகள், கற்பனைக் கதைகள் முதலியவைகள் எல்லாம் பெரிதும் மனித சமூகத்திற்கோ அல்லது அவர்களது நல்வாழ்க்கைக்கோ, முற்போக்குக்கோ, விடுதலைக்கோ, சுதந்திரத்திற்கோ சிறிதும் பயன் அளிக்காததும் பிற்போக்கானதும், மனிதனை மிருகபிராயத்திற்கு, காட்டுமிராண்டிப் பிராயத்திற்கு அழைத்துச் செல்லக்கூடியதுமான விஷயங்களையே நடித்துக் காட்டப்படுகின்றதுடன், மனித சமூகத்தைப் பிரித்து வேற்றுமையும், துவேஷமும் பெருகுவதற்கு அனுகூலமாய் இருப்பவைகளே பெரிதும் நடிக்கப்படுகின்றன.

மனித சமூகத்திற்கு இன்று உள்ள இழிவுகளுக்கும், குறைபாடுகளுக்கும், மானமற்ற தன்மைக்கும், மதத்தின் பேரால், நீதியின் பேரால், தர்மத்தின் பேரால், அரசின் பேரால் எதுஎது ஆதாரமாய் இருந்து வருகிறதோ அதுவேதான் இன்றைய நாடக உலகத்தின் நடிப்புகளுக்கு மூல ஆதரவாய் இருந்து வருகின்றது.

உதாரணமாக, மதசம்பந்தமானதும், ஒழுக்க சம்பந்தமானதும் என்று சொல்லப்படுகின்ற அரிச்சந்திரன் கதையின் நடிப்பையே எடுத்துக்கொள்வோம். இது 'சத்தியத்தை' நிலை நிறுத்துவதற்குப் படிப்பினையாக நடித்துக் காட்டப்படுவதாகச் சொல்லப்படுவதாகும். ஆனால், இதிலுள்ள தத்துவங்கள் என்னவென்று பாருங்கள்: (1) பெண் அடிமை (2) பிறவித் தீண்டாமை (3) பிறவி வருணாசிரமப் பிரிவு (4) சாதிபேத உயர்வு, தாழ்வு (5) வைதீகர் ஆதிக்கம் (6) மூடநம்பிக்கை (7) முதலாளி—தொழிலாளி கொடுமை, (8) எஜமான் அடிமைத் தன்மை முதலிய குணங்கள் மிதந்து நிற்கின்றனவா, இல்லையா? ஊன்றிப் பாருங்கள். இவை அனைத்தும் உண்டா இல்லையா என்று விவரிக்கக்கூட அவசியமில்லாமல் பிரத்தியட்சமாய் இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள். ஆனால், இக் கதையின் முக்கிய கருத்து என்று சொல்லப்படும் 'சத்தியம்' என்பது அக் கதையில் எங்கு இருக்கின்றது என்று தேடிப்பிடிக்க வேண்டியதாய்த்தான் இருக்கிறது. தேடிப்பிடித்ததாகச் சொல்லப்பட்டாலும் அது விவகாரத்திற்கு இடமில்லாமல் எங்கும் சத்தியம் துலங்கியதாகச் சொல்லமுடியாது என்று நான் கருதுகிறேன். என்றாலும், விவகாரத்திற்காக ஒப்புக்கொண்ட போதிலும் இந்தப்படி ஒருசிறு நன்மைக்கு பெருந் தீமைகளைக் கொண்டிராத சரித்திரங்களோ, கதைகளோ எவ்வளவு நடிக்கப்படுகின்றது என்று சிந்தித்துப் பாருங்கள். இதை விரிக்கிற் பெருகும். அன்றியும், அது மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடாத விஷயமாகவும் இருக்கும். ஆதலால், இவ்வளவோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

நிற்க, மனிதனுக்குச் சத்தியம் பிரதானமா? மானமும் அன்பும், சமத்துவமும், சுதந்திரமும் கொண்ட வாழ்க்கை பிரதானமா என்று பார்த்தால், சத்தியத்தின் பிரதானம் சுலபமாய் விளங்கி விடும். சத்தியம் என்பதே என்ன என்பதற்கும் விவகரித்துத் தீர வேண்டிய நிலையில் இருந்துவருகிறது.

ஆதலால், இனி வரப்போகும் நாடக உலகமானது இதுவரை இருந்ததுபோலவே இல்லாமல், உண்மையிலேயே மனித சமூகத்திற்குப் பயன்படக்கூடியதாயும் அதாவது, மக்கள் யாவரும் சமம்—பகுத்தறிவே பிரதானம்—உலக இயற்கைப் போக்குகள், இன்ப துன்பங்கள் யாவர்க்கும் பொது; இவற்றை யாரும் சரிசமமாய் அனுபவிக்கக் கடமைப்பட்டவர்கள்; அதற்கேற்ற கொள்கைகளே வாழ்க்கை முறையாகவும் ஆட்சி முறையாகவும்

இருக்கவேண்டும்; இவற்றிற்கு விரோதமாய் இருப்பவைகள் எல்லாம் அழிந்து ஒழிந்து மறையவேண்டும் என்கின்ற கருத்துக்கு அனுகூலமாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பி, இன்றைப் கொடுமையும் பட்சபாதமும் நிறைந்த உலகத்தை அன்பும் சமத்துவமும் கொண்ட உலகமாய்ச் செய்ய உதவிபுரிய வேண்டுமென்று ஆசைப் படுகிறேன். குற்றமுள்ளதைத் தள்ளி, குணமுள்ளதைக் கொள்ளக் கோருகிறேன்.

['வைகுண்டு'-கட்டுரை—10-8-1933]

2. இரணியன் நாடகம்

தலைவரவர்களே! தோழர்களே!

சென்னை சீர்திருத்த நாடக சங்கத்தாரால் நடிக்கப்பட்ட இந்த முதல் நாடகத்துக்குத் தலைமை வகிக்கும் பெருமை எனக்கு அளித்ததற்கு நன்றி செலுத்துகிறேன்.

நாடகம் என்பது ஒரு விஷயத்தைத் 'தத்ரூபமாய்' நடித்துக் காட்டுவது என்பதோடு அதைப் பெரிதும் மக்களின் நடத்தைக்கு வழிகாட்டியாகவும், ஒழுக்கங்கள் கற்பிக்கப் படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், அது அந்தப்படி தத்ரூபமாய் நடத்திக் காட்டப்படுவதும் இல்லை; மக்கள் ஒழுக்கத்துக்கும், நடப்புக்கும் வழிகாட்டியாய் நடப்பிப்பதும் இல்லை என்று சொல்வதற்கு நாடக அபிமானிகள் மன்னிக்க வேண்டுகிறேன்.

தத்ரூபம் என்பதில் விஷயங்களின் இரசபாவங்களும், உண்மையாய் நடந்திருக்கும் என்று நினைக்கும்படியான எண்ணமும் ஜனங்களுக்கு விளங்கவேண்டும்.

அந்தப்படி இல்லாமல், நமது நாடகங்கள் பெரிதும் சங்கீதக் கச்சேரி போலவும், காலட்சேப சபை போலவும், விகடசபை போலவும், நகைகள்-உடுப்புகள் காட்சிசாலைகள் போலவும், விஷயங்களுக்குப் பொருத்தமில்லாத பேச்சுக்களை அடுக்கிப் பேசும் பேச்சு வாதசபை போலவும் விளங்குகின்றது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

நாடகங்களுக்கு நடிப்புகளில் மிக விசேஷ சமயங்களில், அல்லது அசல் விஷயத் திலேயே பாட்டுவரும் சந்தர்ப்பங்களில் தவிர, மற்ற சமயங்களில் பாட்டுகள் பொருத்த மற்றது என்பது நமது அபிப்பிராயம்.

உதாரணமாக, நெருப்புப் பிடித்துவிட்ட சமயத்தைக் காட்ட, நடிக்கவேண்டியவர் தடபுடலாய் ஆத்திரப்பட்டுக் குளறுபடியாய் இருப்பதுபோல் நடிக்க வேண்டுமா? அல்லது தாளம், சுதி, இராகம் முதலியவைகளைக் கவனித்து, சங்கீத இலட்சியத்தில் திரும்பி, ஜனங்களுடைய கவனத்தையும் சங்கீதத்தில் திரும்பவிட்டுவிட்டால் நடிப்பு சரியானதாக இருக்கமுடியுமா என்று கேட்கிறேன். அது போலவே, நடிப்புக்குப் பொருத்தமற்ற உடை, நடை, நகை முதலியவைகளுடன் விளங்கினால் விஷயம் நடந்ததாகத் தத்ரூபமாய்க் கருதப்பட முடியுமா?

மேல் நாடுகளில் இரச பாவங்களுக்காகவும், தத்ரூபமாய் நடந்ததாகக் காட்டப்படும் நடப்புக்காகவும் நடத்தப்படும் 'டிராமாக்களில்' பாட்டு என்பதே மிகமிக அருமையாய்த் தான் இருக்கும். சங்கீதத்துக்காக நடக்கும் விஷயத்தை அங்கு 'ஆபரா' (Opera) என்று சொல்லப்படுமே தவிர, 'டிராமா' என்று சொல்லப்படமாட்டாது. இங்கு சங்கீத வித்வான்களே நாடகமேடையைக் கைப்பற்றிக் கொண்டதானது நாடகக் கலையைச் சங்கீதம் அழித்துவிட்டது என்றும், மக்களது நாடகாபிமானமும் சங்கீதத்தில் திருப்பப் பட்டுவிட்டது என்றும்தான் கருதவேண்டும்.

நாடகம் நடிக்கப்படும் கதைகள் விஷயமும், தற்கால உணர்ச்சிக்கும் தேவைக்கும் சீர்திருத்த முறைக்கும் ஏற்றதாயில்லாமல் பழைமையைப் பிரச்சாரம் செய்யவும், மூட

நம்பிக்கை, வருணாசிரமம், சாதிவித்தியாச உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, பணக்காரத் தன்மை முதலிய விஷயங்களைப் பலப்படுத்தவும், அவைகளைப் பாதுகாக்கவுந்தான் நடிக்கப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

அரிச்சந்திரன் கதை, நந்தனார் கதை முதலாகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். அரிச்சந்திரன் கதையில் சத்தியம் பிரதானம் என்று சொல்லப்பட்டாலும், சத்திய–அசத்திய விஷயம் நடக்காமல் கதையில் அலட்சியமாய் இருக்கிறது. சாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்ணடிமை, பார்ப்பன ஆதிக்கம், பணக்காரத் தன்மை, எஜமானத் தன்மை ஆகியவைகள்தாம் தலைதூக்கி இருக்கின்றன. அதுபோலவே, நந்தன் கதையிலும், ஆள் நெருப்பில் விழுந்து வெந்துபோனதுதான் மிளிர்கின்றதே தவிர, உயிருடன் தீண்டாமை ஒழிக்கப்பட்டதாக இல்லவே இல்லை. இராமாயணமும், சீதையைப் படுத்தினபாடு—பெண் ஒரு சொத்துபோல் பாவிக்கப்படுகிறதும் விளங்கும். இப்படிப்பட்ட கதைகள் ஒழிக்கப்படவேண்டும்; சுயமரியாதையும், சீர்திருத்த வேட்கையும் உள்ளவர்கள் அதை நடிக்கக்கூடாது.

இரணியன் கதையில் வீர ரசம், சூழ்ச்சித் திறம், சுயமரியாதை ஆகியவைகள் விளங்கினதோடு பகுத்தறிவுக்கு நல்ல உணவாகவும் இருந்தது. ஆனால், சில விஷயங்களில் தலைகீழ் மாறுதலாகவும், கடின வார்த்தையாகவும் காணலாம். சீர்திருத்த நாடகம் என்றாலே மாறுதல் இருந்துதான் தீரும். மாறுதலுக்கு அவசியமானதும், பதிலுக்குப் பதிலானதுமான வார்த்தைகள் இருந்தால்தான் பழைமை மாற சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் இருந்தால் தகுந்த மாறுதல் ஏற்பட இடமிருக்காது. ஆரிய புராணங்களில் ஆரியர்களல்லாதவர்களை—குரங்கு, அசுரன், இராட்சதன், சண்டாளன், பறையன் என்பன போன்ற வார்த்தைகளையும், அவை உபயோகிக்கும் முறைகளையும், பழக்கத்தில் இருந்துவரும் மாதிரியையும் பார்த்தால் இந்தச் சரித்திரம் படிப்பதில் அவசியமான மாறுதல் ஏற்பட உதவி செய்யுமா என்பது சந்தேகந்தான்.

நிற்க, இச் சரித்திரம் உண்டாக்கிய தோழர் புதுவை பாரதிதாசனை நாம் போற்றிப் பாராட்ட வேண்டும். அவர் உணர்ச்சியுடன் உண்டாக்கி இருக்கிறார். இன்னும் இது போல் பல நாடகங்களை உற்பத்தி செய்யவேண்டும். பாத்திரர்களுக்குக் கற்பித்த தஞ்சை தோழர் டி. என். நடராசன் அவர்களின் ஆசிரியத் தன்மை மிகவும் போற்றத் தக்கது. அவர் 20 வருடமாய்ப் பொதுநல சேவையில் இருந்துவருகிறார்; ஜெயிலுக்கும் சென்றவர். அவர்கள் இருவருக்கும் இந்த இரண்டு பதக்கங்களைச் சீர்திருத்த நாடக சங்கத்தார் சார்பாய்ச் சூட்டுகிறேன்.

[சென்னையில், 9-9-1934-ல் தலைமையுரை—'பகுத்தறிவு' 16-9-1934]

3. நாடகக் கலை

தோழர்களே!

இதுவரை நம் நாட்டிலே நடந்துவந்த நாடகங்கள் எல்லாம் வள்ளி திருமணம், கிருஷ்ண லீலா, இராமாயணம் இவைகள்தானே! இவைகளினால் மக்கள் அடையும் பயன் என்ன? வள்ளியும் சுப்பிரமணியரும் எப்படிக் கொஞ்சினார்கள்; கிருஷ்ணன் பெண்களை எப்படிக் கற்பழித்தான்; அவனுடைய லீலைகள் எவை எவை—இவைகள் தானே மக்களுக்குக் காட்டப்பட்டன? மக்கள் சமுதாயம் முன்னேற்றம் அடைய, இந்தக் கருத்துக்களையா சொல்லிக் கொடுக்கவேண்டும்? உள்ளபடியே கூறுகிறேன்—இந்த சர்க்கார் மக்களின் முன்னேற்றத்தில் கவலை எடுத்திருக்குமானால், கண்டிப்பாக மேற்கூறிய நாடகங்களை நாட்டில் நடத்த விடாமல் தடை விதித்திருக்க வேண்டாமா?

ரஷ்யா போன்ற நாடுகளிலே இந்த மாதிரியான நாடகங்கள் நடத்தப்படுகிறதா என்றால், காணவே முடியாது. அங்கே, மக்களின் மூடக் கொள்கையை நீக்கக்கூடிய கருத்துக்கொண்ட நாடகம்; சர்க்கார் எப்படி நடந்தால் மக்களின் வாழ்க்கைக்கு நல்லது என்பதை எடுத்துக்காட்டும் படங்கள், நாடகங்கள் போன்றவைகள்தான் நடத்தப்படும். ஒரு சிலர் கூறுவதைப்போல் நான் கூறவில்லை. அங்கு நேரிலே போய் எத்தனையோ நாடகங்களை நான் பார்த்து இருக்கிறேன். அவைகள் எல்லாம் இப்படியேதான் இருந்தன.

ராதாவின் நாடகம் :—

மக்களின் நன்மைக்காக ஆடப்படும் ஒரு நாடகத்தைப் பார்த்துச் செல்லும்போது நல்ல புத்தியோடு போவார்கள். நல்ல அறிவுரைகள் நாடகத்தில் இருந்தால், பார்த்துச் சென்ற மக்கள் மனத்தில் அது ஓரளவு நிலைத்து நிற்கும். எனவே அதுபோன்ற—நடிகவேள் ராதாவின் நாடகம் போன்றவைகளுக்கு சர்க்கார் முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும்.

மனித சமுதாயத்தில் நல் வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும், நல்லறிவு பெறுவதற்கும் நம் நாட்டிலே இலக்கியம், நாடகம் முதலியவைகள் தேவை.

[கரூரில், 27-3-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1952]

4. வெளியீடுகள்

1. பத்திரிகைகள்

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கென்று வெகு காலமாகவே அதாவது, ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே மதம், வேதம், கடவுள், மோட்சம் என்னும் பெயர்களால் பலவித ஆதாரங்களையும் ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் தாங்கள் உயர்ந்தோர்களாயிருந்துகொண்டு, நம்மை ஏய்த்துத் தாழ்த்தி வயிறு வளர்ப்பதல்லாமல் அரசியல் சுயராஜ்யம், தேசியம், தேசியப் பத்திரிகை, தேச சேவை என்கிற பெயராலும் பலவித இயக்கங்களையும் பத்திரிகைகளையும் உண்டாக்கிக்கொண்டு, அதன்மூலம் தாங்களே தேசபக்தி உள்ளவர்கள் என்றும், தங்களுடைய பத்திரிகைகளே தேசியப் பத்திரிகைகள் என்றும் நமது பணத்திலேயே விளம்பரப்படுத்திக்கொண்டு நம்மைத் தாழ்த்தி, மிதித்து, மேலேறி பல வழிகளிலும் வயிறு வளர்க்க ஆதிக்கம் தேடி வைத்துக்கொண்டு விட்டார்கள். இவை எல்லாவற்றையும்விட நமக்குப் பெரிய ஆபத்தாயிருப்பது பார்ப்பனப் பத்திரிகைகளே!

அப் பத்திரிகைகளின் செல்வாக்கு நம் நாட்டை அடியோடு முற்றுகை போட்டுக் கொண்டிருக்கிறது. பாமர மக்கள் மட்டுமல்லாமல், தங்களைப் போதிய அறிவுள்ள மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரும் அப் பத்திரிகைகளின் மூலம் ஏமாறுவதும், அப் பத்திரிகைகளின் மூலம் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாவதும் வளர்ந்துகொண்டே வருகிறது. தமிழ்நாட்டு மக்கள் இப் பார்ப்பனக் கொடுமை முற்றுகையிலிருந்தும் அன்னிய ஆட்சிக் கொடுமை முறைகளிலிருந்தும் தப்பவேண்டுமானால் இப் பார்ப்பனப் பத்திரிகைகளைப் பார்த்து ஏமாறுவதையும் அவற்றிற்கு அடிமைகளாவதையும் ஒழித்தாலல்லது கண்டிப்பாய் முடியவே முடியாத நிலையில் இருக்கிறோம். அவைகள் செய்யும் அக்கிரமங்களை நினைக்கும்போது நமது மக்கள் மனிதர்கள்தானா? மனிதப் பிறவிகள்தானா? இப் பிறப்புக்கு மானம், வெட்கம் என்கிற தன்மைகள் இருக்கின்றனவா? என்று சந்தேகப்பட வேண்டியிருக்கின்றது. நமது கெடுதிக்காகவே இப் பார்ப்பனப்

பத்திரிகைகள் நடந்துவருவதையும், பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரமே அதன் கொள்கைகளாக இருப்பதையும் நாம் சந்தேகமற—மனப் பூர்வமாகத் தெரிந்திருந்தும், இப் பிரச்சாரங் களுக்குப் பணம் கொடுத்து நாம் நாசமாய்ப் போவதற்காக இப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதென்றால் யாராவது நம்மை அறிவு, புத்தி, ஒழுக்கம், மானம், வெட்கம், சுயமரி யாதை உள்ள சமூகம் என்று சொல்லக்கூடுமா என்பதை நன்றாய் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. பிறரைக் குற்றம் சொல்லும்போது மாத்திரம் 'கள், சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் அதைக் குடிக்கிறார்களே! என்ன புத்தி கெட்ட ஜனங்கள்; மானங்கெட்ட ஜனங்கள்!' என்கிறோம். ஆனால், அந்தப் புத்தியும் மானமும் நமக்கு இருக்கிறதா என்பதைப் பார்ப்பவர்கள், நம்மில் 1,000-க்கு ஒருவரைக்கூட காணோம். பார்ப்பனப் பத்திரிகைகள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு மட்டுமல்ல, நம்முடைய இழிவுக்கும் தாழ்மைக்கும் அழிவுக்கும் நடத்தப்படுகின்றன என்பதனை அறிந்திருந்தும் அதைப் பணங்கொடுத்து வாங்கிப் படிப்பவர்களுக்குப் புத்தியும் மானமும் இருக்கின்றதா என்பதைக் கவனிப்பதில்லை. உதாரணத்திற்காக ஒரு பத்திரிகையை எடுத்துக் கொள்வோம்:

சாதாரணமாக 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகை பெரும்பாலும் பார்ப்பன ரல்லாதாருடைய பணத்தையே மூலதனமாகக் கொண்டது. அதன் பத்திராதிபர்கள், உப பத்திராதிபர்கள், மேனேஜர்கள் முதலியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அவர்கள் சம்பளமோ மாதம் ரூ. 1,500, ரூ. 1,000, ரூ. 800, ரூ. 600—இப்படி அனுபவிக்கிறார்கள். அப் பத்திராதிபர் பார்ப்பனரல்லாதாரை ஒழித்துப் பார்ப்பனராதிக்கம் தேடுகிற பிரச்சாரம் தவிர, வேறு வேலை ஏதாவது செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? நம்மை நாமே கெடுத்துக் கொள்ள நமது பணமே உதவ வேண்டுமா? அதற்கு விளம்பரம் கொடுப்பவர்கள் பெரும் பாலும் பார்ப்பனரல்லாதார்களே! அதை வாங்கிப் படித்துக் கெடுகிறவர்களும் பார்ப்பன ரல்லாதார்களே! இதில் ஏதாவது இரகசியம் இருக்கிறதா? அல்லது, இப் பார்ப்பனர்கள் எதையாவது இரகசியமாகச் செய்கிறார்களா? நேருக்கு நேராக நம்மைப் பார்த்து, 'நீங்கள் முட்டாள்கள்; உங்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை, அறிவு, புத்தி இவைகள் கிடையாது; ஆதலால் நாங்கள் உங்களை ஏமாற்றுகிறோம். உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களில் யாரோ சிலர் கத்தினால் கத்தட்டும்—எங்களுக்குக் கவலை இல்லை; இதற்காக நாங்கள் கொஞ்சமும் பயப்பட்டு எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. உங்களிலேயே சில அயோக்கியர்களையும் முட்டாள்களையும் நாங்கள் சுவாதீனம் செய்துகொண்டு உங்கள் கத்தல்களை ஒழிக்க எங்களுக்குத் தெரியும். ஒரு கை பார்க்கலாம், வாருங்கள்!' என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள். இதற்கொன்றும் மார்க்கமில்லையா என்றுதான் கேட்கிறோம்.

'குடிஅரசு' தோன்றிய பிறகு 'மித்திரன்' சுமார் 2000 சந்தாதாரர்களுக்கு மேலாக இழக்க நேரிட்டும்—இன்னமும் பார்ப்பனரல்லாதாரிலேயே பல பங்குதாரர்களை இரகசிய மாகச் சேர்த்துப் பணம் சம்பாதிக்கப்பட்டு வருகிறது. நம்மவர்கள் முன்னேற்றத்திற் கென்றே நடத்தப்பட்டு வருகிற பத்திரிகைகளைக் கையில் தொடுவதற்கும் நமது மக்கள் அஞ்சுகிறார்கள் என்றால், நமது யோக்கியதையை என்னவென்று சொல்லுவது? சாதாரண மாக 'திராவிடன்' பத்திரிகை எவ்வளவு கஷ்ட, நஷ்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகிறது என்பதை யாராவது உணருகிறார்களா? இது யாருடைய நன்மைக்கு நடத்தப் படுகிறது என்பதை யாராவது அறிகிறார்களா? யாரையாவது போய், 'அய்யா, திராவிடன் பத்திரிகை தங்களுக்கு வருகிறதா? இல்லையானால், ஒன்று வரவழையுங்கள்; அதைப் படித்துப் பார்ப்பனர்கள் சூழ்ச்சியையும் அதனால் நம்மவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தையும் உணர்ந்து அதிலிருந்து தப்புவதற்கு வேண்டியது செய்யுங்கள்' என்றால்—'திராவிடனா? அதிலென்ன இருக்கிறது? அதைப் பார்த்தாலே என்னமோபோல இருக்கிறதே! அந்தப் பெயரே நமக்குப் பிடிக்கவில்லையே!' என்று சொல்லி விடுகிறார்கள். இதைத் தங்களுக்குத் தோன்றுகின்றபடி வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளு

வோம். கட்டின பெண்சாதியை விட்டு, தாசி வீட்டுக்குப் போய்ச் சொத்தைப் பாழாக்கி வியாதி கொள்கிறவர்களைப் பார்த்து, 'என்னப்பா, கட்டின பெண்சாதியை வீட்டில் வைத்துவிட்டு, தாசி வீட்டுக்குப் போய்ச் சொத்தையும் பாழாக்கி வியாதியும் கொள்கிறாய்?' என்றால்,

'வீட்டில் என்ன இருக்கிறது? அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவள் நடந்துகொள்கிற மாதிரியே மனத்திற்கு அசிங்கமாகப் படுகிறது. கட்டிலுண்டா? மெத்தையுண்டா? வாசனையுண்டா? கடிப்பதுண்டா? கிள்ளுவதுண்டா? சட்டிபானை கழுவுகிறவள்தானே' என்று ஆரம்பித்து விடுகிறானேயல்லாமல்—இதெல்லாம் எதற்காகச் செய்யப்படுகிறது, பின்னால் நம்முடைய கதி என்னாகும் என்கிற கவலையே இல்லாமல் அறிவீனமாய் நடந்து கொள்கிறான். அப்படிபோல் நம்மை மயக்கி, ஏய்த்து, நம்மைப் பாழாக்கி, கொள்ளை கொள்ள நடக்கும் பத்திரிகைகள் நாம் ஏமாறத் தகுந்த மாதிரியாகத் தான் நடத்தப்படும். ஒருநாள் பூரா படிப்பதற்கு விஷயமிருக்கலாம். ஆனால், அது பெரும் பாலும் என்ன விஷயம்? நம்மைக் கழுத்தறுக்கும் விஷயமும், பொழுது போக்கும் விஷயமு மாகத் தானே இருக்கும்! அதனால் மானமுள்ள மக்கள் நமது சொந்தப் பெண்டை அன்னி யன் குற்றம் சொல்லும்படியாகவும், கஞ்சிக்குத் திண்டாடும்படியும் விடாமல் காப்பது எப் படித் தனது கடமையாக நினைப்பார்களோ அதுபோல, 'திராவிடன்' பத்திரிகையை ஆத ரிப்பதோடு, கட்டின பெண்டைத் தெருவில் அலையவிட்டு, தாசிவீடு காத்துத் திரிவதுபோல் 'திராவிடனை' விட்டுப் பார்ப்பனர் பத்திரிகைகளைக் கட்டி அழுவதை மறந்து—நமது மானத்தைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டுமென்பதாகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த மார்க்கந்தான் நமது பாமர மக்களைக் காப்பாற்றவும் நமது மக்கள் எல்லோருக்கும் சுயமரியாதை ஏற்படவும் சரியான மார்க்கமாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—30-1-1927; 'திராவிடன்' தினசரி, 7-5-1927]

2. தமிழரும் பத்திரிகைகளும்

14-12-1956-ம் தேதி 'விடுதலை'யில் அழகுக்கரசு என்பவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அது இந்தச் சமயத்தில் வெளியிடத்தக்க கடிதம் அல்ல:

'தமிழ்நாடு' பத்திரிகையும் 'நவ இந்தியா' பத்திரிகையும் இன்று தமிழ்நாட்டில் உலவுவது தமிழர்களுக்கு மகத்தான ஒரு நல்வாய்ப்பேயாகும்.

அவை என்ன கொள்கையைக் கொண்டு எப்படி நடப்பதானாலும் தமிழர்கள்—உண்மையான தமிழர்கள் யாவரும் அவற்றின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டியது கடமை ஆகும். அவற்றின் உரிமையாளர்களின் உள்ளம் எனக்கு ஓரளவுக்குத் தெரியும். அவர்கள் தமிழர்களின் நலத்தைக் கோருபவர்களே. இந்த இரண்டு பத்திரி கைகள் இல்லாமல் இருந்தால் ஆரியப் பத்திரிகைகளின் அட்டூழியம் தமிழர்களுக்கு எவ்வளவோ கேடுகளைச் செய்திருக்கும். தமிழ் மக்களை நாம், 'பார்ப்பனர்களின் பத்திரி கைகளைக் கண்டிப்பாக வாங்கக்கூடாது' என்கிறோம். 'விடுதலை'யின் நிலைமை நமக்குத் தெரிந்ததே. இந்த நிலையில் தமிழர்கள் எதை வாங்கிப் படித்து விஷயங்களை அறிய முடியும்?

'தினத்தந்தி'யைப்பற்றி அடிக்கடி குறை எழுதுவதுகூட எனக்குப் பிடிப்பதில்லை. நான் பேசுகிறபோது அவைகளைக் கண்டிக்கிறேன் என்றாலும் அவைகளை ஆதரிக்கும்படி மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஆதலால், இந்தப் பத்திரிகைகளை அத்தியாவசியம் கண்டாலொழிய குறைகூறுவது கூடாது என்பது எனது கருத்து.

'நவ இந்தியா' சென்னை வந்தது தமிழர்களுக்கு ஒரு பெரும்பேறு. 'தமிழ்நாடு' பத்திரிகையும் சென்னைக்கு வரவேண்டுமென்பது எனது பேரவா. தமிழ்மக்கள் கண்டிப்பாகப் பார்ப்பனர் பத்திரிகைகளை வாங்கக்கூடாது. கண்டிப்பாகத் தமிழர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளையே வாங்கிப் படிக்க வேண்டுமென்று சிரம் வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—16-12-1956]

3. நூல்கள்

தோழர்களே!

இந்தப் புத்தக வியாபார நிலையத்தின் துவக்கவிழா ஆற்றுவதில் நான் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் சண்முக வேலாயுதம் அவர்கள் என்னை வேண்டிக் கொள்ளும்போது இப் புத்தக வியாபார நிலையம் சுயநல இலாபத்தை—பண வருவாயை உத்தேசித்துத் துவக்கப்பட்டதல்லவென்றும், நம் இயக்க நூல்களையும், சீர்திருத்த இயக்க நூல்களையும், பத்திரிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்ற பொதுநல நோக்கத்தையே முக்கியமாய்க் கருதித் துவக்குவதாகவும் சொன்னார். இதைக் கேட்டு நான் மிகுதியும் மகிழ்ச்சியடைந்தேன். இந்தப் பணி ஆற்றுகிறவர்கள் நமது நாட்டில் இதுவரை எங்கும் துணிந்து இம் மாதிரி முன்வந்ததில்லை; முன்வந்தாலும் இலாபத்துக்காக—அதாவது, ஏதாவது ஒரு இயக்கத்துக்காவது, ஏதாவது ஒரு கொள்கைக்காவது, ஏதாவது ஒரு மனிதனுக்காவது செல்வாக்கேற்பட்டால் அந்தப் பெயரைச் சொல்லிக்கொண்டு, அந்தக் கொள்கையைச் சொல்லிக்கொண்டு, அந்த மனிதனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, அவன் பெயரைச் சொல்லிக்கொண்டு வயிறு வளர்க்க முன்வருபவர்களும், தன் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களும்—அந்த இயக்கத்தை, கொள்கையை, மனிதனை வைவதில் செல்வாக்கேற்பட்டால் உடனே வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை நலத்துக்குமாக அவைகளை வைத்துக்கொண்டு வயிறு பிழைப்பவர்களும், அல்லது இந்தக் காரியங்களுக்குக் கூலி பெற்றுக்கொண்டு தொண்டர்களாக இருப்பவர்களும் எங்குமுண்டு என்றாலும் நம் நாட்டில் அதிகம். ஏனெனில், இங்கு மனிதத் தன்மையை உணர்ந்த—மனிதத் தன்மையில் கவலை கொண்ட மக்கள் அரிது. அதாவது, தங்களுடைய சுய இலாப நஷ்டம், பெருமை, சிறுமையே இலட்சியமென்பதில்லாமல் பொதுநலக் கொள்கைகளுக்காக என்று வெளிவந்து தொண்டாற்றும் மக்கள் மிகமிக அருமையாகும்.

பெரிய ஜனக்கூட்டங்களில் அல்லது சந்தைகளில், நாடக இடங்களில், காப்பிக் கடை ஓட்டல்கள், சோடா, லெமன், லட்டுக் கடைகள் வைத்து விற்பனை செய்பவர்கள் பெரிய பொதுநலத் தொண்டர்கள், தியாகிகள் என்றால்—முந்திய ஆட்களும், பெரிய பொதுநலத் தொண்டர்களும், தியாகிகளுமாவார்கள் என்கின்ற நிலையில் உள்ளவர்கள் அனேகர். சந்தை, நாடகம் கலைந்தவுடன் காப்பிக் கடை, ஓட்டலை மூடிவிட்டு வேறு வேலைக்குப் போவதுபோல் இந்தக் கூட்டங்களும் இயக்கத்துக்கோ, அதன் கொள்கைகளுக்கோ, தலைவனுக்கோ கொஞ்சம் செல்வாக்குக் குறைந்தவுடன் அவற்றின்மீது ஆளுக்கொரு கல்லை எறிந்துவிட்டு ஓடுபவர்களாவார்கள். அதுபோல்தான் சிலர் இன்று நம் கூட்டங்களிலும் வந்து பகுத்தறிவு நூல்கள் வெளியிடுவதும், சீர்திருத்த நூல்கள் வெளியிடுவதும், விற்பதுமாக இருக்கிறார்கள். இந்த நபர்கள் உற்சவம், வேறு பெருங்கூட்ட இடம் முதலியவைகளில் சென்று, அங்கு புராணங்கள், விபூதி, ருத்திராட்சம், துளசி மாலை, சாமி படம் விற்பவர்களாகவும் இருப்பார்கள். மற்றும் நாடகக்காரர்களும் இப்படித்தான்; ஒரு ஊரில் சீர்திருத்த நாடகம், புரட்சி நாடகம், என்று ஆடுவார்கள்; மற்றொரு ஊரில் பக்தி நாடகம், கடவுள் திருவிளையாடல்கள் நாடகம் என்று ஆடுவார்கள்; சிலர் இரண்டும் கலந்துகொண்டு இரு கூட்டத்தாரிடையும் செல்வாக்குப் பெற்று, இருகூட்டப் பிரச்சாரகர்களையும் விலைக்கு

வாங்கிப் பொதுமக்கள் காசைக் கறந்துகொள்வார்கள். ஆகவே, இப்படி யாவும் வியாபார முறையில் இயக்கம், கொள்கை, நபர்கள் கொண்டாடப்படுவதும், வெறுக்கப்படுவதும், தொண்டாற்றப்படுவதும் அனேகம் காண்கிறோம்.

நூல் வியாபார நிலையங்கள் எந்த மாதிரி நூல் நிலையமானாலும் இனி நஷ்டப்பட வேண்டிய அவசியமேற்படாது. நாட்டில், படிக்கும் மக்கள் அதிகமாகி வருகிறார்கள். படித்த மக்கள் அதிகமாகப் பெருகிவிடவில்லையென்றாலும் படித்த மக்கள் கொஞ்சம் பேரும் எதையாவது படிக்கவேண்டும் என்கின்ற ஆர்வமுள்ளவர்களாக ஆகிவருகிறார்கள். அப்படியானால் குப்பைகூளப் பத்திரிகைகளும்; ஒன்றுமற்ற அத்தான், அம்மாஞ்சி, மன்னி, மதனி ஆரியப் பழக்கவழக்க உரையாடல்களும்; வெறும் காதல் கதைகளும்; நேரப் போக்கு, போதைக்கேற்ற பித்தலாட்டக் கட்டுரைகளும்; ரிஷிகள், மகான்கள், பாபாக்கள் விளம்பரங்கள் செய்து மக்களை வஞ்சிக்க ஏமாற்றுச் செய்திகளும்—இவ்வளவு ஏராளமாய் விற்பனையாகுமா? இவைகளுக்காகவும், கொள்கை இல்லாமல் ஈசல்கள் போல் பொல பொல வென்று தோன்றுமா? மக்களைப் படிக்கச் செய்யாமல் செய்து வைத்திருந்தார்கள் ஒரு கூட்டத்தார்; அதை மீறிக்கொண்டு எப்படியோ மக்களுக்குள், எதையாவது படிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் வந்துவிட்டது. இது யாரால் ஏற்பட்டிருந்தாலும் இந்த ஆர்வத்தை, முன் தடைசெய்து வைத்திருந்த கூட்டத்தார்—மூடநம்பிக்கைக்கும், மானமற்ற தன்மையை விரும்புவதற்கும் பித்தலாட்ட வஞ்சகர்களுக்கு மக்களை அடிமையாக்கு வதற்கும் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள். அதற்கு நாம் இடம் விடுவதென்றால் இது மகா மோசமான காரியமேயாகும்.

இந்த நாடு, இன்று, சிறப்பாக நம் மக்கள்—படியாமையைவிட படித்ததாலேயே பெரிதும் மானமற்றவர்களாகவும், இன்னும் சொல்லவேண்டுமானால் அயோக்கியர்களாகவும், பாமர மக்களைச் சுரண்டிப் பிழைப்பதிலேயே இன்பம் அனுபவிப்பவர்களாகவும் அனேக ராகிவிட்டார்கள் என்றால் அதைச் சுலபத்தில் மறுக்க எவராலும் முடியாது என்பேன்.

படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய்—தொல்லை கொடுக்காதவனாய்—நாணயமாய் வாழ்வதற்கு என்பதல்லாமல் வேறு எதற்கு என்று சொல்லுவோம்? ஆனால், தோழர்களே! இன்று நீங்கள் படித்தவர்கள் என்பவர்களைப் பாருங்கள். 'படித்த கூட்டத்தில்' நான் மேலே சொல்லியபடி பயன்படுகிற ஒரு படித்தவனைக் காட்டுங்கள், பார்க்கலாம். இமயம் முதல் குமரிவரை உங்களுக்கு நன்றாய் அனுபவத்தில் தெரிந்த எவனாவது ஒரு படித்தவனை இந்தத் தன்மையில்—அதாவது, 'படித்ததால் இந்தத் தன்மை ஏற்பட்டது!' என்று காட்டுங்கள்; சொல்லுங்கள்! சாதாரண மனிதனில்கூட இல்லாவிட்டாலும் பெரிய மகான்கள், பேரறிவாளர்கள், பிரபுக்கள், இராஜாக்கள், ஆச்சாரியார்கள், குருமார்கள், ரிஷிகள், மகாத்மாக்கள், தெய்வீக சக்தி பொருந்தியவர்கள், சாமியாடிகள், அருள் வாக் காளார்கள், தியாகிகள், வீரர்கள் முதலிய எந்தக் கூட்டத்திலாவது; ஜட்ஜுகள், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், குமாஸ்தாக்கள், வாத்தியார்கள், வித்துவான்கள், வக்கீல்கள் முதலிய எந்தக் கூட்டத்திலாவது காட்டுங்கள் பார்க்கலாம்! ஆனால், இதன் காரணத்தாலேயே மக்களைப் பிறவி அயோக்கியர்கள் என்று யாராவது சொல்லக் கூடுமா? ஒருநாளும் யாரும் சொல்ல மாட்டார்கள். அப்படியானால், படித்த மக்கள் என்பவர்கள் பெரிதும் 100-க்கு 99 பேர், ஏன் உபகாரிகளாக இல்லை என்றால்—இதற்கு என்னுடைய பதில், 'அவர்கள் படிப்பு அப்படிப்பட்டதாகும்' என்பதைத் தவிர வேறொன்றும் என்னால் சொல்ல முடியவில்லை.

இன்றைக்கு நாம் அனுபவிக்கும் தொல்லைகளுக்கு—அதாவது, மக்களால் மக்கள் அனுபவிக்கும் தொல்லைகளுக்குப் படித்தவர்கள், படிப்பு காரணம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆடு நரிக்குப் பயன்படுவதுபோல், படிக்காதவன் படித்தவர்கட்கு உணவாய்ப்

பயன்படுகிறான். நன்றாகச் சொல்லவேண்டுமானால், படித்தவன் படிக்காதவனை ஏமாற்றிச் சுரண்டுகிறான் என்பதைத் தவிர, படிப்பு என்பது எதற்குப் பயன்படுகிறது? அப்படியானால், படிப்பு கூடாது என்று நான் சொல்லுகிறேனா? அல்லது, நான் சொல்லுவதிலிருந்து படிப்பது தப்பு என்று அர்த்தமா? இரண்டும் அல்ல. மற்றென்னவென்றால், நம் நாட்டில் ஆரியர் ஆதிக்கம், வருணமுறை ஏற்பட்டகாலம் முதல் நமக்களிக்கப்படும் படிப்பு—நாம் படிக்க முடிகிற படிப்பு அப்படிப்பட்டது. எப்படிப்பட்டது என்றால், பெரிதும் அயோக்கியத்தனத்துக்கு, பித்தலாட்டத்துக்கு, மற்றவனை ஏமாற்றிப் பிழைப்பதற்குத் தூண்டுவது, நடத்துவது தவிர வேறொன்றுக்கும் பயன்படாதது என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அரசியலில் மூத்த அரசாங்க அதிகாரிகளைப் பாருங்கள். எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் அயோக்கியத்தனமாய், ஆணவமாய் நடக்காத ஒரு அதிகாரியைக் காட்டுங்கள். அதிகாரி என்றால் அவர்கள் இலஞ்சம் வாங்கினாலும் மக்களுக்கு எஜமானத்தனம் செய்வதையே பிழைப்பாய்க் கொண்டவன் என்பதல்லாமல் மக்களுக்கு நாணயமாக, நடுநிலையாகத் தொண்டாற்றுவது, தயவு தாட்சண்யம், அனுதாபம் ஆகியவைகளுடன் மக்களிடம் நடந்துகொள்ளுவது என்கின்ற தத்துவத்தில் நடப்பவர் யார்? அடுத்த படித்தவர் என்பவர்கள் அரசியலில் தலைமை வகிக்கும் வக்கீல்கள் என்பவர்கள். இந்தக் கூட்டத்தார் தான் இப்போது மகாத்மா முதல், அரசியல் தலைமை மந்திரி, அய்க்கோர்ட் ஜட்ஜு முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டவர்கள். இவர்களால் மனித சமுதாயத்திற்கு தாசி, வேசி, சூது, கள், சாராயக் கடை, வழிப்பறி, தீவட்டிக்கொள்ளை, பிக்பாக்கெட் முதலியவைகளால் மக்களுக்கேற்படும் கேடுகள், மோசங்கள், ஆகியவைகளைவிட அதிகமாக ஏற்படுகின்றன என்பதல்லாமல்—அதில், அவர்கள் பணிகளில் உள்ள பொதுநலம் என்னவென்று சொல்லுகிறார்கள், பார்க்கலாம். வக்கீல்களும், வக்கீல் ஜட்ஜுகளும் இல்லாமலிருந்தால் மக்களுக்குள் இவ்வளவு சாந்தியற்ற தன்மை, நாணயக் குறைவாய் நடப்பதால் இன்பம் (என்பவை) ஏற்பட்டிருக்குமா? அடுத்தபடியாகப் படித்தவர்கள், கல்வித் துறையில் வாத்தியார்கள். இவர்கள் வாழ்க்கை எதற்குப் பயன்படுகின்றது என்று பார்த்தால், இவர்களிடம் படித்தவர்கள்தாம் அல்லது இதற்குத் தகுந்த படிப்பை மக்களுக்குள் புகுத்த சாதனமாய், ஆயுதமாய் இருந்தவர்கள்தாம் வாத்தியார்கள் என்றால் யார் மறுக்க முடியும்? படித்தவர்களில் பெரும்பாலோர் யோக்கியர்களாய் இல்லையென்றால், வாத்தியார்கள் வாழ்வு, வாத்தியார்கள் தொண்டு எப்படி யோக்கியமானதென்று கூறமுடியும்? இனி, பொதுஜன ஊழிய குமாஸ்தாக்கள் நிலையோ சொல்லவே வேண்டாம். அவர்கள் கழுகுகள் அல்லது கத்திரிக்கோலால் வாழ்கின்றவர்கள் என்பதல்லாமல் அதில் பொதுநலம், பொதுநல உணர்ச்சி என்பது என்ன இருக்கிறது?

இனி, பண்டிதர்கள். இவர்கள் ஒழுக்க இயலைச் சேர்ந்தவர்கள். இவர்களை எதற்குச் சமமாய்ச் சொல்லலாம்? மலக் குழியைக் கலக்கி விடுகிறவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். மக்களுக்குத் தெரியாத அயோக்கியத்தனத்தை—சுலபத்தில் தெரிந்துகொள்ள முடியாத அயோக்கியத்தனத்தை—மூடத்தனத்தை—ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்குக் காட்டிக்கொடுப்பவர்கள் என்பதல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்? பத்திரிகைக் காரர்கள், புத்தகம் எழுதுகிற எழுத்தாளர்கள், மகான்கள், புராணப் பிரசங்கிகள், மதவாத அறிஞர்கள் முதலிய இவர்கள் தொண்டில் இருக்கும் பொதுநலம், நாணயம், முன்னேற்றத் தன்மை, அறிவு விரியும் நிலை, நல்ல சங்கதிகள் தெரியும் தன்மை என்ன இருக்கின்றன?

பத்திரிகைக்காரர்கள்—மக்களை முட்டாள்களாக்கவும்; அவர்கள் மானம் பெறாமல் இருக்கவும்; முன்னையக் கூட்டத்தாருக்கு அடிமையாக இருக்கவும்; தாங்கள் கொள்ளை கொள்ளவும்; மனிதனின் மான உணர்ச்சியை, முற்போக்கு உணர்ச்சியை மழுங்க வைத்துப் பொய்யையும், ஏமாற்றத்தையும் அறிவிக்க அறிவுக் களஞ்சியமாக மக்களுக்குள்

நிரப்பவுமல்லாமல்—அவர்களது தொண்டால் மக்களுக்கு ஏற்பட்ட பயன் என்ன? சயின்ஸ்—விஞ்ஞானம் படித்த தனி நிபுணர்கள் என்பவர்களும் மக்களை ஏமாற்றித் தன்னைப் பெரிய மேதாவி என்று கருதிக்கொண்டு, அகம்பாவமாய் மற்றவர்களை முட்டாள்கள் என்று அவமதிப்பதல்லாமல் அவர்களால் ஏற்பட்ட விஞ்ஞான நலம் என்ன? உதாரணமாக, இந்த மேசைமேலிருக்கும் ரேடியோ என்பது 4, 5 வருடங்களுக்கு முன்பே 250 ரூபாய்க்கு வாங்கி இருப்பார்கள். இதுவரை இலட்சக்கணக்கான மக்கள் கேட்டிருப்பார்கள்; கண்டிருப் பார்கள். நமது நாட்டில் இலட்சக்கணக்காக ரேடியோ இருக்கின்றது. அப்படியிருந்தும் இது எப்படி ஒலிகளைக் கொண்டு வந்து எப்படிப் பரப்புகிறது என்பது இதுவரை எத்தனைப் பேருக்குத் தெரியும்? கம்பியில்லாத் தந்தி எப்படிச் சேதி சொல்லுகிறது? கிராம போன் எப்படிப் பாடுகிறது, பேசுகிறது என்பது எத்தனைப் பேருக்குத் தெரியும்?

புராணம் எழுதி அச்சுப் போட்டு விற்றது எத்தனையோ இலட்ச லட்சப் பதிப்பு களும், கோடிகோடி ரூபாய்களுமிருக்கும். அதில் ஏற்பட்ட நல்லறிவை நல்ல படிப்பை (அதில் இல்லை; இருந்தால்) தெரிந்துகொண்டவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள்? தோழர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, மகா மகோபாத்தியாய கதிரேசன் செட்டியார், மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற திராவிடர்கள் பலர்—பார்ப்பனர்களால் புலவர்கள் என்று மாபெரும் விளம்பரம் பெற்றவர்களாவர். இவர்களால் இதுவரை ஏற்பட்ட மூடநம்பிக்கையில்லாத—மானமற்ற தன்மை அல்லாத அறிவு நூல் ஒன்றைக் காட்டுங்கள். உயர்ந்த கலைகள் என்பவை, மக்களை எச்சில்கலையாக ஆக்குகின்றன. மற்ற எழுத்தாளர்கள் என்பவர்கள் பதிப்பித்த புத்தகங்களில் உண்மையை—பகுத்தறிவை மனித முன்னேற்றத்தை—மானத்தைக் குறியாகக் கொண்ட, வீரத்தைக் கிளப்பும் புத்தகம் ஒன்றைக் காட்டுங்கள்! படித்தவர்கள் கூட்டத்திலுள்ள திராவிடன் கதியே இப்படியிருந்தால், இனி ஆரியன் எழுதும் பத்திரிகை, பிரசுரிக்கும் புத்தகம், பாடும் பாட்டு, ஆடும் நாடகம், எழுதும் நாவல், கதை எப்படியிருக்கும்? கடவுளையும், காதலையும் இன்னது என்று புரிந்து கொள்ளா தவர்களே கலை உலகில் புகுந்து, கொலை செய்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம், 'இவர்கள் படித்த படிப்பு அப்படிப்பட்டது' என்றுதான் நான் சொல்லுவேனேயொழிய, இவர்கள்மேல் குற்றம் சொல்லவில்லை.

இன்றையப் படிப்பின் தொல்லைகளில் மாபெரும் தொல்லை 'சம்பளம் போதாது' என்பது. இது மகா அக்கிரமம். ஏனெனில், உழைப்புக்குக் கணக்குப் பார்த்துச் சம்பளம் கேட்பதில்லை. படித்தால், படிப்பைப் பார்த்துக் கேட்கப்படுகிறது. மாதம் 15 ரூபாய்க் காரரும் சம்பளம் பற்றாது என்கிறார்; 30 ரூபாய்க்காரரும் பற்றாது என்கிறார்; 100 ரூபாய்க்காரரும் அதற்கு மேற்பட்டவரும் பற்றாது என்கிறார். இதற்கு அர்த்தம் என்ன? படித்தால் மேல் வாழ்வு வாழ வேண்டும்; படித்திருக்கும் குடும்பத்துக்கு அதிகச் செலவு செய்யவேண்டும், ஆதலால் அதிகச் சம்பளம் வேண்டும் என்பதல்லாமல் வேறு என்ன? மற்றவன் படிக்காதவன்—அவனுக்கு மேல் வாழ்வு தேவையில்லை; அவன் குடும்பத்துக்கு அதிகச் செலவு தேவையில்லை—20 அல்லது 30 ரூபாய் போதும்; அதுவே கொடுக்கக்கூடாது என்பதுபோல்தானே—குறைந்த சம்பளத்துக்குக் காரணம் சொல்லப் படுகிறது. சம்பளப் போராட்டம், படித்தவர்களிடையில் இப்படியிருக்க—இலஞ்சம், கொள்ளை இலாப வியாபாரம், புரட்டு இத்தனையும் படித்தவர்கள் என்பவர்களிடையில் தான் இருக்கின்றன.

சம்பளம் உயர வேண்டுமானால், சர்க்கார் பொக்கிஷத்துக்கு வரியின் மூலம்தான் பணம் வரவேண்டும்; வரியென்றால் அது பெரிதும் படிக்காத உழைப்பாளி மக்களின் உழைப்பில் இருந்துதான் கசக்கிப் பிழியப்படவேண்டும். அந்த உழைப்பாளியின் வாழ்க்கைத்தரம், துணிமணி செலவு, பிள்ளைகுட்டி படிப்பு, சினிமா, டிராமா, பெண்டு

பின்னை அலங்காரம், காபி, உப்புமா, சீர் ஆகிய ஒன்றைப்பற்றியும் கவலைப்பட்டு சம்பளத் திட்டம் போடுவதில்லை. ஏன்? உழைப்பாளி–படியாதவன்; உழைக்காமல் பேனாவில், பாட்டில், கூத்தில், பிரசங்கத்தில், கவியில் வாழ்வு நடத்துகிறவன்–படித்தவன். இதுதவிர, இரு கூட்டத்துக்கும் வேறு வித்தியாசம் என்ன சொல்லமுடியும்?

எனவே, இன்றையப் படிப்பு வருணாசிரம தர்மத்தை அனுசரித்து ஏற்படுத்தப் பட்டது என்பதோடு, ஒருவன் உழைக்க வேண்டும்; ஒருவன் உழைக்காமல் ஏமாற்றி வாழவேண்டும்; இதற்காக ஒரு கூட்டம் இதற்கேற்ற படிப்பு படித்திருக்க வேண்டும்; ஒரு கூட்டம் படியாமல் முட்டாள்களாக–அப்பாவிகளாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்; இதுவும் படிப்படியாய் வருணாசிரம தர்மம்போல் இருக்கவேண்டும் என்பதையே அடிப்படையாய்க் கொண்டு இருக்கிறது.

ஆகையால், இப்போது உண்மையாகப் பொதுநலத்துக்கு ஏதாவது உழைக்க வேண்டும் என்பவர்கள்—இந்தப் படிப்பு மாறும்படியான காரியத்துக்கு, இந்தப் படிப்பால் ஏற்பட்ட கேடுகள் மாறும்படியான காரியத்துக்கு ஏற்ற படிப்பினை உண்டாக்க வேண்டும்; அதற்கேற்ற பிரசுரங்கள் ஏற்பட வேண்டும்; அவை எப்படியாவது மக்களுக்குள் பரப்பப்பட வேண்டும். இவையெல்லாம் பிரசங்கத்தாலேயே முடிந்துவிடாது. இவற்றிற்கு உதவும் படியான பிரசுரம் தெளிவாகக் குறைந்த விலையில் சவுகரியமாக யாருக்கும் கிடைக்கும்படிச் செய்யப்பட வேண்டும். இப்போதுள்ள பிரசுரம்—100-க்கு 99 பேர் மோசடிக்கும், கொள்ளை யடிப்பதற்குமே பயன்படுகின்றது.

இது சமயத்தில், பொதுமக்களுக்கு ஒரு வார்த்தை. அறிவியக்க நூல்கள்—சீர்திருத்த நூல்கள் என்றால் ஒவ்வொன்றையும் வாங்கி வீட்டில் நிரப்பிக்கொள்ள வேண்டுமென்பது அர்த்தமல்ல. வாங்கிப் படித்துவிட்டு, படித்துமுடித்தவுடன் முக்கால் விலைக்கு, அரை விலைக்கு விற்றுவிடவேண்டும். மறுபடி வேறு வாங்கவேண்டும். புத்தக வியாபாரியும் தான் விற்ற புத்தகத்தை அரை விலைக்குக் கொண்டுவந்து கொடுத்தால், நலுங்காம லிருந்தால் வாங்கிக்கொள்ள வேண்டும். இதுதான், மேல்நாடுகளில் புத்தகம், பிரசுரம் முதலியவை விஷயங்களில் இருந்துவரும் பழக்கம். வாங்கினால் படிக்கவேண்டும்; படித்தவுடன் விற்றுவிடவேண்டும்; 'முக்கிய புத்தகம்', 'கிடைக்காதது' என்றிருந்தால் வைத்துக்கொள்ளலாம். அதிகம்பேர் படிக்கவேண்டும் என்பதுதான் யோக்கியமான பொதுநல ஆசிரியர்களின், பொதுநல வியாபாரிகளின் இலட்சியமாய் இருக்கும்.

[ஈரோட்டில், 22-1-1947-ல் சொற்பொழிவு—'விடுதலை' 25-1-1947]

4. அச்சுக் கலை

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நமது நாட்டில் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன்தான் அச்சகம் ஏற்பட்டது. அதற்கு முன்பு ஏடுகள் (ஓலைகள்)தான். அது பொதுவாகக் கல்வி வளர்ச்சிக்கே பெருந்தடையாக இருந்தது. பிறகு அச்சகம் வளர்ந்ததன் காரணமாகவே படிப்பு வளர்ந்தது. நான் பள்ளியில் சேர்ந்த காலத்தில் திண்ணைப் பள்ளியில் ஏடு, எழுத்தாணிதான் இருந்தது. பிறகு, முனிசிபல் பள்ளிக்கு வந்தபோதுதான் புத்தகம் கொடுத்தார்கள். நமது இலக்கி யங்கள், புராணங்கள் எல்லாம் முன்பு ஏடாகத்தான் இருந்தன. இன்றைக்கு 100-க்கு 35, 40 பேர்கள்தான் படித்து உள்ளோம்; மற்றவர்களும் படிக்க அச்சகம் பெரிதும் வளர்ந்தாக வேண்டும்.

மேல்நாடுகளில் அச்சாகின்ற புத்தகங்கள் அடிக்கடி மாறாது. தகுதிவாய்ந்த அறிவு நூல்கள்தான் வெளியிடுவார்கள். அதனைப் பீரோவில் வார்த்து 20, 30 ஆண்டுகள்கூட

வைத்து இருப்பார்கள்; தேவையானபோது பிரிண்ட் செய்து கொள்வார்கள். நமது நாட்டில் கல்விக் கொள்கையில் ஒரு நிலை இல்லாத தன்மை இருப்பதால்தான் அவ்வப்போது மாற்றுகின்றார்கள்.

அச்சுத் தொழிலுக்கு கம்பாஸிட்டர்கள் பெரிய தொல்லையாக இருக்கின்றார்கள்; அவர்களுக்குச் சம்பளம் ரூ. 3 அல்லது 4 என்று குறைந்த அளவில்தான் உள்ளது. மண் எடுக்கின்ற ஒட்டனுக்கும் ரூ. 4; கம்பாஸிட்டருக்கும் நாலு ரூபாய் என்றால் என்ன நியாயம்? இது மாறவேண்டும்.

வேலை இல்லாத இளைஞர்களுக்கு கம்போசிங் பள்ளிகள் துவக்கி அச்சுக்களைக் கோக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

அச்சாபீஸ்காரர்கள் ஜாப் வேலையையே பிரதானமாகக் கருதாமல் புத்தகங்கள், பெரிய வேலைகள் முதலியன செய்யவேண்டும்.

1973ஆம் வருஷத்தில் நமது நாட்டில் 35, 40 பேர்கள்தான் படித்து இருக்கின்றார்கள் என்றால் பெரிய அவமானம்; அரசாங்கம் போதிய கவனம் எடுத்து மக்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதோடு, தொழிலுக்கு வழிவகைகள் செய்து தரவேண்டும்.

தமிழ்நாடு, கேரளம், பம்பாய், டில்லி தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் 100-க்கு 30 பேர்கள்கூடப் படிக்கவே இல்லையே! ஆண்கள் பெண்களுக்கு 50 பேர் அளவிற்குச் சாப்பாடுபோட்டு, அச்சுத் தொழில் கற்றுக்கொடுக்கலாம். இது வேலைஇல்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்க உதவும்.

நண்பர் ஆனைமுத்து திராவிடர் கழகம் சம்பந்தமாகவும், பகுத்தறிவுக் கொள்கை சம்பந்தமாகவும் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் இப்படி அச்சகம் துவங்குவது பாராட்டத் தக்கது. அவருக்கு அச்சுத் துறையில் அனுபவம் உண்டு.

இன்றைக்கு அரசாங்கம் மக்கள் நன்மையைக் கருதி அனேகக் காரியங்கள் எல்லாம் செய்து வருகின்றது. மக்கள் காலித்தனம், ரகளைகளுக்கு இடம் தராமல் ஆட்சிக்குப் பாதுகாவலாக இருக்கவேண்டும்.

இன்றைக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் ஸ்டிரைக், ரகளை, காலித்தனத்திற்கு முற்பட்டுவிட்டது வேதனை அளிக்கின்றது. நமது நாட்டுக் கல்வி முறையானது மாற்றி அமைக்கப்பட்டாக வேண்டும். இன்றையக் காலித்தனத்திற்குக் காரணமே கல்வியின் அஜீரணம்தான்.

பட்டப் படிப்புக்குப் பதிலாகத் தொழில் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

[திருச்சியில், 17-8-1973-ல் சொற்பொழிவு—'விடுதலை' 25-8-1973]

PART IX

DRAVIDASTAN SEPARATION

1. SEPARATE ELECTORATES

Mr. E. V. Ramaswami Naicker has issued the following statement to the Press :—

I am surprised to read the statement that Mr. A. Ramaswami Mudaliar has issued on the question of separate electorates. The statement is obviously made by Mr. Mudaliar in his personal capacity and not as a representative of the Non-brahmin party, though 'The Hindu' and other Madras Journals have utilised it to their advantage by publishing it under such headlines as 'Non-brahmin Leader's views'.

Communal representation in all matters is still the creed of the Non-brahmin party. The party was nourished and brought up on this principle. The party has gained a large adherence among the masses owing to the steadfastness shown in the realisation of this principle. It remains to be seen how far the party would maintain its strength among the people if, according to the advice of Mr. Ramaswami Mudaliar, it throws to the four winds this demand for separate electorates as well as for reservation of seats in joint constituencies.

The case for separate electorates, says Mr. Ramaswami Mudaliar, was negatived once and for ever by the Joint Parliamentary Committee in 1919. The question cannot be re-opened because, Mr. Mudaliar remembers, the Non-brahmins tolerated the decision of the Joint Parliamentary Committee. The Non-brahmin party which was in its infancy at that time, had not the strength to resist that decision and had therefore to make the best of the bad situation in which it found itself. But now that the party has grown in srtength and the people at large have realised the evils of the decision of 1919, it would be absurd to impose the decision of two years ago as the laws of the Medes and the Persians.

Again, in Mr. Mudaliar's opinion, the question cannot be reopened unless an extraordinarily strong case has been made out for doing so. I would like to know what, according to Mr. Mudaliar, would constitute 'an extraordinarily strong case". To say that no point has been made out for reopening this all important question is to give away the whole case for Non-brahmins.

Mr. Ramaswami Mudaliar has himself drawn vivid pictures in the columns of the 'Justice' of the grievous wrongs that the Non-brahmin community is still suffering as regards both official and non-official representation. The monopolists still hold undisputed sway in all walks of life. After ten years of 'toleration' of the decision of the Joint Parliamentary Committee, the position of the Depressed Classes, the Mussalmans, the Christians, and other Non-brahmin Communities has not only not improved but has visibly deteriorated.

In view of the retrograde recommendations of the Nehru Committee and in view of the reactionary evidence that the Bombay Government tendered through Messers Turner and Griffiths, I see a grave danger ahead of the Non-brahmin cause being lost not only before the Simon Commission but before the bar of public opinion. I therefore appeal to all Non-brahmins and particularly to leaders like Mr. Ramaswami Mudaliar to bestir themselves and educate the public in favour of separate electorates and proportionate representation in the services.

['*Revolt*'—Press Statement, Vol. 1. No. 1. Dated 7th November 1928, Erode.]

2. DRAVIDASTAN SEPARATION

The Editor wanted me to write on "The Black Shirt Movement". There is no movement at all by that name. Those who are dissatisfied with and affected by the movement and those who are inimical towards it have named it so. Evidently the Editor has meant the "Dravidastan Movement." For it is improper to call a great national movement by the kind or colour of the dress worn by its followers. I won't call the Congress movement "khaddar shirt movement."

The black shirt is worn by us as a symbol of the darkness and degradation in which the Dravidians of this great sub-continent are plunged. It is a symbol of our social and economic bondage. We of the movement are proud to wear it, just as a true Congressman is proud to wear khaddar. The idea is entirely mine and is not borrowed from any foreign party or organisation. Black is usually associated with death and sorrow. We the Dravidians are worse than the dead. We are *Shudras*. So say the Puranas, Ithihasas, Smiritis and other Hindu scriptures. Hindu Law perpetuates it even today. Hindu temples are monuments of this ignominy. Even the Temple Entry Act (of which Congressmen are so proud today) does not allow us to approach the *Sanctum Sanctorum*. Our (Dravidian) languages are anathema to the so-called Gods! I could cite innumerable examples to show our ignoble and shameful position in society.

In order to indicate to the public and also to remind ourselves of our sorrowful plight in all spheres of life, I have prescribed the black shirt as a symbol. Those who wear it are as proud of it as Mr. Gandhi was, when he donned the South African prisoner's cap on his head. Have not his followers honoured that cap by calling it the "Gandhi Cap."

In spite of the fact that the black shirt is an ordinary symbol, the Provincial Government chose to ban the so-called "Black-shirt Movement". The mistake was pointed out at once to the Government and we continue to wear it even though the ban does not appear to have been removed technically. But I should thank the Government for the impetus given to the black-shirt spirit by imposing a ban on it.

So much for the so-called "Black-shirt Movement".

It is well known that the Justice Party was founded in 1916 by the two great South Indian leaders, Dr. T. M. Nair and Sir P. Tyagaroya Chettiar, both of whom had been for a long time in the Congress.

Before the year 1920 the Congress organisation was chiefly concerned with the securing of big jobs for Indians, most of which were in the hands of foreigners. This resulted in almost all the key jobs being filled up by the privileged few. I mean the Brahmins. With a view, therefore, to securing equal rights and opportunities for the rest of the communities of South India, and securing political, educational and economic equality for the down-trodden non-Brahmin community, the Justice Party was started by these two great leaders. In those days, not even 10 per cent of the non-Brahmins were educated and not even 5 per cent were in Government and other public services. And in the domain of politics their influence was almost nil. In the legislatures, in the local bodies, and in almost all spheres of life the non-Brahmins were completely neglected. Almost all the lucrative jobs, say above Rs. 100, were denied to the non-Brahmins who form 97 per cent of the population. High posts carrying salaries of thousands of rupees per month could not even be dreamt of.

As the result of this, a great community was suppressed in all walks of life, and even the educated and efficient few could not come up. Hence the birth of the South Indian Liberal Federation (Justice Party).

The Congress was dominated by South Indian Brahmins and also North Indian leaders who knew nothing of South Indian conditions or who willingly ignored the welfare of South Indians. And naturally the Congress turned its attention to the South Indian movement. As the entire Press was in the hands of the Congress and the Brahmins and their sympathisers (this holds good even today) a tearing propaganda was carried on throughout the length and breadth of the land insisting that the Justice Party was anti-national and pro-British. The main reason for such propaganda was the agitation of the Justice Party, and not without success, to capture the Government and secure certain high posts in Government. This mischievous propaganda was readily believed by the illiterate masses.

After 1920 the Congress movement threw off its moderate programme (it should be remembered that in pre-1920 Congress conferences the British National Anthem used to be sung) and adopted a virulent, anti-British, non-co-operation idealogy. And therefore it was nothing unnatural that the Justice Party, which was wedded to constitutional methods of agitation for securing equal rights in the administration of the country was decried as an anti-national organisation. In addition to this there was a split in the Justice Party on account of scrambles for ministrial jobs. Though such splits are an annual occurrence in the Congress Ministries of

1686—162 A

today, and not regarded as very serious by the public, it was not so in those days.

To cut a long story short, the emergence of the Swaraj Party, the subsequent defeats of the Justice Party in the elections, coupled with the treachery of a few non-Brahmin leaders brought about the ruin of the Justice Party as a political entity.

Split with Congress

Between 1923-26, those of us who knew the ins and outs of the Congress move, I mean a few non-Brahmins including me, had to leave the Congress. But I didn't join the Justice Party immediately; I was a nationalist to the core. But I agreed with the principle of communal representation which was the bedrock of the Justice Party. Even as a staunch Congressman and no-changer, and a strong lieutenant of (now His Excellency the Governor-General of India) Mr. C. Rajagopalachariar, I was fighting for communal representation and equality of rights and privileges. I even made the Madras Congress Party accept this principle and set apart 50 per cent of places for the non-Brahmin communities. I and other nationalist non-Brahmins started the Madras Presidency Association and made this Association also accept this principle. Besides this, I also started the Nationalist Association which included not a few Brahmin nationalists, and made this too accept this principle of communal representation.

All this I say, in order to emphasise my ardent belief in this principle being the only practical way for the upliftment of the non-Brahmin community. How I brought a resolution for the acceptance of communal representation at the Provincial Congress Conference at Conjeevaram, and how it was ruled out by the President and how I walked out of the Conference along with my friends, are all too well known to bear repetition here. I was then the Provincial Secretary and had been the President of the Provincial Congress Committee twice before. If, in spite of my responsible position in the Congress, I was treated so badly, how could any one with an ounce of self-respect in him continue in that communal organisation any longer? So I had to sever my connection with the Congress after having served in it for ten years and having made many a sacrifice, including the jail-going of those days. This resulted in the birth of the Self-Respect Movement.

Now about the great national organisation of South India. I mean the Dravida Kazhagam. The old South Indian Liberal Federation, popularly known as the Justice Party of which I was elected the leader in 1939, (29-12-1938, Ed.) assumed this new historic name as a result of the resolution passed at the Annual Confederation held at Salem in 1944. The movement was given a new orientation by virtue of the well-known Self-Respect Movement (of which I am the founder) merging in it.

The Dravidians have a distinct origin in society, their languages are independent and belong to a separate class. The terms "Aryan" and "Dravidian" are not my inventions. They are historical realities. They can be found in any school boy's text book. That the Ramayana is an allegoric representation of the invading Aryans and the domiciled Dravidians, has been accepted by all historians including Pandit Nehru and all reformers including Swami Vivekananda. My desire is not to perpetuate this difference; but to unify the two opposing elements in society. I am not a believer in the race theory as propounded by the late Nazi leader of Germany. None can divide the South Indian people into two races by means of any blood test. It is not only suicidal but most reactionary. But the fundamental difference between two different cultures, Aryan and Dravidian cannot be refuted by anyone who has closely studied the daily life habits and customs and literature of these two distinct elements in South India.

The Dravidian Movement is essentially a socio-religious organisation whose aim is to reconstruct society on a human and rational basis. It wants to destroy caste root, and branch. It does not believe in easy doses or injections! It is all out for the amputation of the diseased limb. It wants to bring together all Dravidians irrespective of political or religious affiliations. Though its ultimate aim is to destroy religions as popularly understood and practised, it is not so virulently anti-religious as is represented by the interested few.

The Dravidians in the first place hate the title Shudras (born of prostitutes) conferred on them by the so-called high caste.

Demand for separate state

The Dravidian Movement does not stop with this socio-religious revolution. On the economic side, the movement wants to cut itself away from the North. I mean the Central Government. The South should not be exploited by the North. It should not be bartered away to the Birlas, Goenkas, Tatas, Dalmias and Hirachands. We who belong to the South should not rest satisfied with the mere change of masters.

When I say that we should not allow ourselves to be dominated by the North, I do not mean that Dravidastan when it comes into being, will be a thorn in the flesh of the North. We can be even more friendly and helpful than Ceylon and Burma. A separate independent State for the South would merely mean economic self-sufficiency and independence.

South India had been a separate State up to the time of the British occupation. Even Akbar and Asoka dared not interfere with the independence of the South. We have about 1,500 miles of sea coast; plenty of forest; a network of rivers; and enormous underground wealth. And our manpower is incomparable in skill and efficiency. Are we not proud of

having lent to the North, a Governor-General, a couple of Finance Ministers and last but not least, the first Commander-in-Chief ?

The proposed Dravidastan or Dravidanadu can in no way be worse than a Switzerland, a Ceylon or Burma. If these small stretches of land could be separate, independent countries, why not we with a vast area of about 1,25,000 sq. miles and six crores of people, and plenty of natural resources ?

The Dravidastan movement is not a communal organisation. It is a national movement. It is only an attempt of a great historic people to throw off their age-long social and religious bondage and to cut off the two-century chain put on its feet by a foreign bureaucracy.

(Courtesy : "The Hindu" Republic Day Number, 26-1-1950, Madras-2.)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
713	13	பலம்	பலன்
717	33	செய்கிறார்கள்	செய்கிறார்கள்
719	7	சங்தியான	சங்கதியான
720	16	யோக்கியமில்லாவர்கள்	யோக்கியமில்லாதவர்கள்
725	6	உச்தேசித்து	உத்தேசித்து
726	28	அவசியன்	அவசியம்
728	42	எப்படியனில்	எப்படியெனில்
743	13	தயது	தயவு
753	42	இதில்	இது
770	25	மோகம்	யோகம்
776	36	வருதையும்	வருவதையும்
795	9	பது மாதிரியான	புது மாதிரியான
825	30	எனபதாகும்	என்பதாகும்
841	38	ஏற்டடும்	ஏற்படும்
842	31	சொல்லை	தொல்லை
856	36	மலைடோல	மலைபோல
8С1	33	கிளர்சிக்காரர்கள்	கிளர்ச்சிக்காரர்கள்
874	2	பார்ட்பனருக்கும்	பார்ப்பனருக்கும்
889	36	அஸ்வாரத்தோடு	அஸ்திவாரத்தோடு
	41	டாமர	பாமர
927	11	ஏற்படுத்தட்பட்ட	ஏற்படுத்தப்பட்ட
932	4	வகுப்பவாரி	வகுப்புவாரி
933	34	கொடுட்பதையே	கொடுப்பதையே
974	2	20	21
1095	கட்டுரை	14. 'நான்'	13. 'நான்'
1099	கட்டுரை	15. ஆத்திகம்-நாத்திகம்	14. ஆத்திகம்-நாத்திகம்
1108	கட்டுரை	16. நாத்திகம்	15. நாத்திகம்
1115	3	அவிவேகமான	அதிவேகமான
1119	7	சூத்திரர்களக	சூத்திரர்களாக
1121	8	புத்தகத்திலிருந்து	மறுத்தலும் பகுத்தறிவும் என்ற புத்தகத்திலிருந்து
1135	1	குருநாதளாவானா?	குருநாதராவானா?
1146	38	வாழுக்கை	வாழ்க்கை
1164	10	சகாப்பத்திற்கு	சகாப்தத்திற்கு
1180	12	சரதியார்	சாதியார்
1187	9	செய்யப்படுகின்றன	செய்யப்படுகின்றன

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

3

பதிப்பாசிரியர் : வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

போன் : 0422 – 2572635
செல் : 936 2970121

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., எஃப்.அய்.இ.
(மருத நாடன்)
தலைமைப் பொறியாளர் மி.வா. (ஓய்வு)
தலைவர் : சிந்தனையாளர் கழகம்
தமிழ் தமிழர் ஒருங்கிணைப்பாளர்
அமைப்பாளர் : தொழில் நுட்ப வல்லுநர் குழுமம்

18/12ஏ, அண்ணாநகர், ஆறுமுகம் லே–அவுட்,
பூளைமேடு (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 004.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;rp erd; (09-06-2011)
jkpHk; tiy (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

மூன்றாம் தொகுதி

பதிப்பாசிரியர்
வே. ஆனைமுத்து

திரு பொன்னாச்சி நதன்
அவர்களுக்கு நினைவுத்தகுதி
வைக்க இந்நூலை அளிக்கின்றோம்.
9-6-2011.
தலைவர்.

வெளியீடு :
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி-2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (மூன்றாம் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME III

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume III
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

தம் 95 ஆம் வயதிலும், உருப்பெருக்கி ஆடியின் துணைகொண்டு நூல்களை
ஆர்வத்துடன் படிக்கும் தோற்றத்தில்—பெரியார் ஈ. வெ. ரா.

12–12–1973-ல் நன்செய்ப்புகலூர் தவிட்டுப்பாளையத்தில், திருமணத்தில் அறிவுரையாற்றினார், பெரியார்



ஈரோட்டில், 'குடிஅரசு' ஏடு, மற்றும் "ரிவோல்ட்" 'புரட்சி', 'பகுத்தறிவு', ஏடுகள்; குடிஅரசு பதிப்பக நூல்கள் ஆகியவற்றை வெளியிட்ட—அறிவுப் பட்டறையான 'குடிஅரசு' அலுவலகம்—'தமிழன்' அச்சகம்'

[illegible]

1 [illegible]

[illegible]

2 [illegible]

[illegible]

3 [illegible]

[illegible]

4 [illegible]

[illegible]

5 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

6. [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



பகுத்தறிவு அகராதி

1. கடவுள் என்பது காட்டுமிராண்டிக் கண்டுபிடிப்பு.
2. வேதம் என்பது சூது நிறைந்தது.
3. இதிகாசம் என்பது சதிமோசமானது.
4. புராணமென்பது புளுகு மூட்டை.
5. அடியார்கள் என்பவர்கள் மடையர்களே ஆவார்கள்.
6. தேவர்—அசுரர் என்பவர்கள் ஆரியர்—திராவிடர்களே யாவார்கள்.
7. சாஸ்திரமென்பது மோசடிக் குவியல்.
8. முனிவர்கள், ரிஷிகள் முட்டாள்களின் தொகுப்பு.

பதிப்பாசிரியர் முன்னுரை

உலகப் பெருஞ் சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்களின் முழு ஒப்புதலோடு—அவர்தம் சொற்பொழிவுகளையும், எழுத்துக்களையும் தொகுத்து வெளியிடும் அரிய பணியினை 1972இல் திருச்சி சிந்தனையாளர் கழகம் மேற்கொண்டது.

அத் தொகுப்பினைப் 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற பெயரில் வெளியிடுவதற்கான கையெழுத்துப் படித் தாட்கள் முழுவதையும் வருத்தம் பாராது படித்தும்—படிக்கக் கேட்டும் ஒப்புதல் அளித்த அய்யா அவர்கள், அதனை அச்சு வடிவில், சுமார் 400 பக்கங்களை மட்டும் பார்த்த அளவில், இக் கழகத்தின் முயற்சியினை மனமாரப் பாராட்டினார்கள்.

அப் பேரறிவாளர் எதிர்பாராத வகையில், திடுமென மறைவுற்றமையானது—இக் கழகத்தினர் மேற்கொண்ட முயற்சிக்கு, உலகுக்கு நேர்ந்ததை ஒப்ப—பெரும் பேரிடியென நேர்ந்து விட்டது.

எனினும் அப் பெருந்தகையார்க்கு இக் கழகத்தினர் அளித்த வாக்குறுதியினைக் காக்க உறுதிபூண்டு—அன்னார்க்கு நன்றிக் கடன் ஆற்றும் உணர்வினை மேற்கொண்டு—விடாமுயற்சியுடன் இப் பெருநூல் அச்சிட்டு முடிக்கப்பெற்று, இதன் மூன்று பெருந் தொகுதிகளும் ஒரே சமயத்தில் உலகினோர்க்கு வழங்கப்பட்டுள்ளன.

சுயமரியாதை உலகும், ஆராய்ச்சி உலகமும், திராவிடப் பெருஞ் சமுதாயமும் இப் பெருந் தொகுதிகளை ஏற்றுப் பயன்படுத்தி—கோடானு கோடி மக்களிடையே பெரியார்தம் கொள்கைகள் பரவ ஆவன ஆற்றும் என மனமார நம்புகிறோம்.

இந் நூலின் மூன்று தொகுதிகளுள், இது மூன்றாம் தொகுதியாகும். இம் மூன்றாம் தொகுதியின்கண் கடவுள், மதம், பொருளாதாரம், கிளர்ச்சிகள், செய்திகள், உலகம், தன்னைப்பற்றி, இறுதிச் சொற்பொழிவுகள், Religion என்பனவாகிய ஒன்பது பகுதிகள் (Parts) உள்ளன.

அறியாமையும் அச்சமும் விளைத்ததே கடவுள் நம்பிக்கை என்பதையும், சுயநலக் காரர்களாலேயே கடவுள் நம்பிக்கை வளர்க்கப்பட்டது, பரப்பப்பட்டது என்பதையும் எடுத்து விளக்கி, 'கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை' என்பதைப் பாமரரும் உணரும் வண்ணம் விளக்கியவர் பெரியார். உலக வரலாற்றில், 'கடவுள் ஒழிப்புக் கொள்கை'யைப் பாமர மக்கள் அளவில் செல்வாக்குப் பெறச் செய்தவர் பெரியார் ஒருவரே ஆவார். இத்தன்மையில் அவர் அளித்த விளக்கங்களைக் கொண்டது 'கடவுள்' என்ற பகுதியாகும். இந்துமதக் கடவுள்கள் பற்றிய அவர்தம் தெளிவுரை எவரையும் சிந்திக்க வைப்பவையாம்.

மதம் என்பது ஒழுக்கத்தையோ மனிதாபிமானத்தையோ கற்பிக்கவில்லை என்பதையும்; குறிப்பாக இந்துமதம் காட்டுமிராண்டிக்காலக் கண்டுபிடிப்பு என்பதையும், சாதி அமைப்பையும், பார்ப்பனர் உயர்வையும், பெண்ணடிமையையும் பேணுவதை இலட்சியமாகக் கொண்டது என்பதனையும் காட்டும் அன்னாரின் கருத்துரைகள் 'மதம்' என்ற பகுதியில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இதிகாசங்கள், புராணங்கள் விளைத்த கேடுகளைக் கொடிட்டுக் காட்டும் அவர்தம் உரைகளும் இப் பகுதியில் அடங்கும்.

பொருளாதாரக் கொள்கைகள், சமதர்மம், கம்யூனிசம், இயந்திரமுறைத் தொழில், தொழிலாளர் இயக்கங்கள் பற்றி, இங்கு, 1931 முதல் புரட்சிகரமான எண்ணங்களை

வெளிப்படுத்தியவர் பெரியாரே ஆவார். அவை 'பொருளாதாரம்' என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளன.

சமயத்தின் பேரால் நடந்த படுகொலைகள் தமிழக வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பல பக்கங்களை இரத்தத்தில் தோய்த்துவிட்டன. அரசியல் உரிமை, தொழிற்புரட்சி இவற்றின் பேரால் 18ஆம் நூற்றாண்டு முதல் குமுறி எழுந்த புரட்சிகள் கொலைக் களங்களில்தான் வெற்றிவாகை சூடின. ஆனால் 2000 ஆண்டு காலமாக திராவிடரைப் பீடித்திருந்த சமுதாய இழிவினையும் கேடுகளையும் கிளர்ச்சிகள் பல நடத்தி அமைதிப் புரட்சிமூலம் அகற்றினார் பெரியார். இந்தி எதிர்ப்பு, கடவுள் நம்பிக்கை ஒழிப்பு, சாதி இழிவுக்குறி அழிப்பு, வடநாட்டு ஆதிக்கத் தகர்ப்பு இவற்றை மையமாகக் கொண்டு அன்னார் மேற்கொண்ட புரட்சிச் செயல்கள் 'கிளர்ச்சிகள்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளன.

பெரியாரவர்கள் தோழர்கள் பலருடைய முயற்சிகளை ஊக்குவித்து விடுத்த பாராட்டுச் செய்திகளும், தலைவர்கள் பலருடைய மறைவுக்கு மனந்தாளாது விடுத்த இரங்கற் செய்திகளும்; தம் பிறந்தநாள் அறிக்கைகள் பலவும் 'செய்திகள்' என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. 'நாகம்மாள் மறைவு', 'சின்னத்தாயம்மாள் முடிவு' என்பன நெஞ்சை நெகிழவைப்பன; மற்றும் பலவும் உள்ளத்தை உலுக்குவனவாம்.

உலகத்தில் எவருக்கும் முன்னோடியாக, 'சோதனைக் குழாயில் மனிதக் குழந்தை' உருவாகும் என்ற அறிவியல் எண்ணத்தை 1943-ல் உலகுக்கு அளித்தவர் பெரியார். இத்தகு புதுமைக் கருத்துகள் 'உலகம்' என்ற பகுதியில் அமைந்துள்ளன.

பெரியார் அவர்கள் தம்மைப்பற்றி அடக்கத்துடன் அவ்வப்போது அளித்த விவரங்கள், 'தன்னைப்பற்றி' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளன.

தொண்ணூற்றைந்தாண்டு காலம் வாழ்ந்த அப்பெருந்தகை 48 ஆண்டுகாலம் சுழலும் இயந்திரமென ஓடி ஓடி நாத்திகம் பரப்பினார். தம் இறுதி மூச்சு அடங்குவதற்கு நூறு மணி நேரத்திற்கு முன்னருங்கூடப் பல்லாயிரக் கணக்கான மக்களைப் பிணித்து மணிக்கணக்கில் சொன்மாரி பொழிந்து அறிவுரை நல்கினார் அவ் ஏந்தல். இந் நூலைக் கொணரும் பணியினை மேற்கொண்ட சிந்தனையாளர் கழகத்தில், வாழ்நாளிலேயே இறுதி மாநாட்டில், வாழ்நாளில் இறுதி நிகழ்ச்சியில் என அமைந்துவிட்ட அவர்தம் சொற்பெருக்குகள் 'இறுதிச் சொற்பொழிவுகள்' என்ற பகுதியாக உருப்பெற்றன.

கடவுள், மதம், சாதி பற்றி அன்னார் 1928-ல் அளித்த புரட்சிக் கருத்துகள் 'Religion' என்ற ஆங்கிலப் பகுதியில் இம் மூன்றாந் தொகுதியின் இறுதியில் அளிக்கப் பட்டுள்ளன.

இந்நூல் முழுமைக்குமான பெயர்க் குறிப்பு அகராதி, பொருட் குறிப்பு அகராதி ஆகியவை இத் தொகுதியின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

இத் தொகுதிகளை வரவேற்றுப் போற்றிச் சிந்தனையாளர் கழகத்தினரை ஊக்குவிப்பதன் வழியாக—தொடர்ந்து மேலும் பல அறிவியக்க வெளியீடுகளைக் கொணர, எங்கட்குத் தமிழ்ப் பேருலகமும், அறிஞருலகமும் பெருந் துணைபுரியும் என நம்புகிறோம்.

அனைவர்க்கும் சிந்தனையாளர் கழகத்தாரின் நன்றி என்றும் உரித்தாகும்.

வாழ்க தந்தை பெரியார் புகழ்!

திருச்சிராப்பள்ளி,
1—6—1974

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்

மூன்றாம் தொகுதி

பொருளடக்கம்

2. இதிகாசங்கள்

3. புராணங்கள்

4. புராண ஆபாசங்கள்

பக்க எண்

5. மூடநம்பிக்கைகளும் பழக்கங்களும்

6. மூடப் பண்டிகைகள்

7. சாதி

பக்க எண்

8. சாதி ஒழிய வழி

பகுதி III—பொருளாதாரம்

1. பொருளாதாரம்

2. தொழில் வளர்ச்சி

3. சமதர்மம்

4. பொதுவுடைமை

பக்க எண்

5. தொழிலாளர் இயக்கம்

6. தொழிலாளரும் நாமும்

பகுதி IV—கிளர்ச்சிகள்

1. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

2. இந்தி எதிர்ப்புப்போர்

3. இரண்டாம் போர்

2. இரங்கற் செய்திகள்

3. பிறந்த நாள் செய்திகள்



கடவுளும் — நானும்

கடவுளைப்பற்றி நான் எதிர்ப்பாய் இருக்கிறேன் என்றால், ஏன் அப்படி இருக்கிறேன் என்று ஒரு கடவுள் பக்திக்காரரும் சிந்திப்பதில்லையே.

ஏன்—கடவுள்களை ஒழிக்கவேண்டுமென்கிறேன்?

கடவுளை உண்டாக்கிக்கொண்ட எவருமே யோக்கியமான அல்லது யோக்கியத் தன்மையுடைய கடவுளை ஏற்படுத்திக்கொள்ள வில்லையே.

அவரவர் சுயநலத்திற்கேற்ப முட்டாள்தனத்திற்கேற்ப, ஒழுக்க மற்ற, நேர்மையற்ற, சக்தியற்ற கடவுள்களையும்; தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்ற கடவுளையும், தன் எதிரிகளை ஒழிக்கவேண்டு மென்கின்ற ஆவலுக்கேற்ற கடவுள்களையும் உண்டாக்கிக்கொண்டால்— அவற்றை, அவற்றால் பாதிக்கப்படுபவர்களும்—(அதை) அறிவாளிகளும் ஏற்றுக்கொள்ளமுடியுமா? சுயநலமற்றவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா?

உலக மனித சமுதாயத்திற்கு ஒருவன் தொண்டுசெய்ய வேண்டு மானால்—முதல் தொண்டாக இப்படிப்பட்ட கடவுள்கள் ஒழிப்பு வேலை யில் இறங்கினால்தானே அவன் உண்மையான—யோக்கியமான— அறிவாளியான தொண்டனாக இருக்கமுடியும்?

பகுதி I

கடவுள்

1686—163

1. கடவுளும் மதமும்

1. கடவுள் சர்வசக்தி உள்ளவரா?

மனிதன் உலகத் தோற்றத்திற்கும் நடப்பிற்கும் சம்பவங்களுக்கும் காரணம் கண்டு பிடிக்க முடியாத நிலையில் கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக் கொள்வதும்—உதாரணமாக, அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு அந்நினைப்பு கொஞ்சங் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருந்தோம். இந்த முறையிலேயே கொஞ்ச காலத்திற்கு முன் அனேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள் விஞ்ஞான (Science) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு, அனேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக்கொள்வோம். கம்பி யில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விஷயமும், அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற விஞ்ஞான உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால் நாம் இன்னமும் அதை 'ஒரு தெய்வீக சக்தி' என்றும் பழைய காலத்து ரிஷிகள் பேசிக்கொண்டதாய்ச் சொல்லப்படும் 'ஞான திருஷ்டி சம்பாஷணை' என்றுமே சொல்லித்தீருவோம். ஆதலால், மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளரக் கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்துகொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே, அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய, கடவுள் உணர்ச்சி வளர்ந்துகொண்டே வரும் என்பதும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமேதான் அனேகமாகத் தொட்டதற்கெல்லாம் கடவுளும் அவர்தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே 'கடவுள்' வருவதைப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர் களிடமே அனேகமாகக் கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும், புராணம் என்பவை களும் மதிப்புப்பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக் கதைகளை அப்படியே—அதாவது, கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பியிருந்தவர்கள்கூட, இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப் பட்டுக்கொண்டு தங்களுக்கில்லா அறிவு வளர்ச்சித் தன்மையை மறைத்துக்கொண்டு, 'சயின்ஸின்' மூலம் அக் கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டு கஷ்டப் படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால், மக்கள் வர வர இப்போது விஞ்ஞானத் திற்குப் பொருத்தமில்லாததை ஏற்க மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டிருக் கின்றார்கள் என்பது விளங்குகின்றது.

மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடி பிழைக்கச் செய்வதும், பேச்சுக் களையும், நாட்டியங்களையும் இயந்திரங்களில் பிடித்துக்காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு—மிக்க பாமர ஜனங்களுக்குக் கூட இவை எல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை மறைந்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீர வேண்டுமா என்றால், எப்படியும் அது ஒரு அளவுக்காவது இருந்துதான் தீரும் என்றே சொல்லலாம். ஏனெனில் மனிதன், 'தான் எல்லாம் அறிந்தவன்' என்கின்ற ஆணவத்தை

உடையவன் ஆதலால், தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு அதாவது, தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல; பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும் சுயநலமோ மூடப் பிடிவாதமோ காரணமாக தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் பிழைக்கக்கூடியவர்களாய் இருப்பதால்தான். எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வர வரக் குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும், மூடப் பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான் உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

['குடி அரசு'-தலையங்கம்—11-8-1929]

மதமும் கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்.

மனிதனுக்குள் கடவுளைப் புகுத்துவது மனிதனை முட்டாளாக்கும் 'டானிக்' (வைட்டமின் சத்து) ஆகும். இதை இன்று பார்ப்பனர்கள், சங்கராச்சாரிகள் கடவுள் பிரச்சாரம் செய்வதில் எடுத்துக்கொள்ளும் முயற்சியிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

கடவுள் மனித நலத்துக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனம் அல்ல. மனிதனை முட்டாளாக்குவதற்குப் பயன்படுத்தும் சாதனமேயாகும். சூரியனை, சந்திரனை, நெருப்பை, நீரை, காற்றை, கல்லை, மண்ணை எந்த மனிதனும் கண்டுபிடிக்கவில்லை. அவற்றின் பெயர்களைத்தான் மனிதன் தெரிந்துகொண்டான்.

இவற்றிற்கு விளக்கம் தேவையில்லை; காரண காரியங்கள் தேவையில்லை.

மனிதனென்றால் இவைகளை அறிந்தே ஆகவேண்டும். இவற்றின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆனால், கடவுள் அப்படியல்ல. ஒருவன் சொல்லி, அதுவும் சொல்லுவது மாத்திரமல்ல—நம்பும்படி செய்து; நம்பும்படி செய்வது மாத்திரமல்ல—நம்பும்படி கட்டாயப் படுத்தி, மனித மூளைக்குள் புகுத்தியாக வேண்டும்.

இந்தக் கதி சர்வ சக்தியுள்ள 'கடவுளுக்கு' ஏற்பட்டது பரிதாபம்! மகா பரிதாபம்!

கடவுள் கதை ஒரு முட்டாளுக்குத் தோன்றிய தோற்றம். இது உலக அறிவையே பாழாக்கிவிட்டது. அதாவது, 'சிறு குழந்தையின் கையில் கிடைத்த நெருப்புப் பந்தம் வீட்டையே—ஊரையே எரித்துச் சாம்பலாக்கியது' என்பதுபோல்—கடவுள் எண்ணம் அறிவையே கொன்றுவிட்டது என்று சொல்லலாம்.

கடவுள் என்பது பிடிக்குப் பிடி, 'நமசிவாயம்', 'நமசிவாயம்' என்றால், இங்கு ஒன்றுமில்லை, சூனியம் என்பதுதான் பொருள்.

அது, 'கடவுள்' என்றால் ஒரு 'சக்தி'; சக்திகூட அல்ல, 'ஒரு காரணம்'; 'காரணப் பொருள்'; காரணப் பொருள்கூட அல்ல, அப்படி நினைப்பது; நினைத்துக் கொள்வது மனிதனுக்கு ஒரு 'சாந்தி' என்பதாக—கா. சு. வும் (M. L. பிள்ளை); திரு. வி. க.வும் சொன்ன விளக்கம். இதைப் பழைய 'குடி அரசு' இதழில் காணலாம். ஆனாலும், இவர்கள் விக்கிரக பூசையும், பட (உருவ) பூசையும் செய்து வந்தவர்கள், கடைசியாக மாற்றிக்கொண்டவர்கள்.

மனிதனுக்கு எதற்காகக் கடவுள் தேவைப்பட்டது என்பது எனக்கு இன்னமும் விளங்க வில்லை. அதிலும் கடவுளை நம்பும் எவனும் அதன் சர்வசக்தியில் நம்பிக்கை வைப்பதே இல்லை. எவனும் சம்பிரதாயத்திற்காக, 'கடவுள் செயல்' என்றானே தவிர, காரியத்தில் மனிதன் செயல் என்றும், தன்செயல் என்றும், இயற்கை யென்றும், 'அகஸ்மாத்து', தற் சம்பவம், (accident) 'ஆக்சிடெண்ட்' என்றும்தான் முடிவுசெய்துகொண்டவனாகிறான்.

'சர்வம் கடவுள் செயல்' என்று சொல்லுகிற எவனும் சர்வத்திற்கும் தற்காப்புச் செய்து கொள்ளாமல் இருப்பதில்லை. 'சர்வம் கடவுள் செயலாயிருக்கும் போது, நாத்திகன்—கடவுள் இல்லை என்பவன் எப்படித் தோன்றினான்?' என்பது பற்றிச் சிந்திப்பதில்லை.

மற்றும், சர்வத்திலும் வியாபகமாக இருக்கிற கடவுள் மக்களுக்கு ஏன் தான் இருப்பதாக, தன்னைத் தானாகத் தெரிந்துகொள்ளச் செய்ய முடியவில்லை என்பதைச் சிந்திக்கவே மாட்டேன் என்கிறான்.

ஒரு கிறிஸ்துவப் பாதிரி இந்தக் கேள்விக்குப் பதிலாக, 'கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்து விட்டான். அந்த அறிவைக் கொண்டு கடவுளைத் தெரிந்து கொள்ள வேண்டியது மனிதன் கடமை' என்று சொல்லிவிட்டார்.

'உன் அறிவுக்கு எட்டிய கடவுள்—ஏன் என் அறிவுக்கு எட்டவில்லை?' என்று கேட்ட தற்கு, 'பாப ஜன்மங்களுக்கு எட்டாது' என்று சொல்லிவிட்டார்.

அந்தப் பாப ஜன்மங்களைப் படைத்தது யார்? படைத்தது கடவுளானால் பாப ஜன்மங்களை ஏன் படைத்தார்? கடவுள் பாப ஜன்மங்களைப் படைக்க வில்லையானால், பாப ஜன்மங்களைப் படைத்தது யார்? என்று கேட்டேன்.

'சாத்தான் படைத்தான்' என்றும், மற்றும் அவருக்கே புரியாத எதையெதையோ யோசித்துப் பேசினார்.

இஸ்லாத்தின் கதியும் இப்படித்தான். இந்துவின் கதியோ மும்மூர்த்திகள், ஓங்காளி, மாரி, காத்தவராயன், மதுரைவீரன், கருப்பண்ணண், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமாதி, கல்லுகள், படங்கள், பட்சிகள், மிருகங்கள், மரங்கள், சாணி (முட்டை உருவ) உருண்டைகள் செத்துப்போன மனிதர்கள் முதலிய எத்தனையோ பண்டங்கள்—கடவுளாக, வணங்கத்தக்க வைகளாக இருந்து வருகின்றன.

இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளுக்குத் தன்னைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள, தன் உருவத்தை விளக்க சக்தி இல்லை என்பதைக் காட்டத்தான்.

பிறகு, முன்ஜன்மம், பின்ஜன்மம், கருமம், விதி, நரகம், சொர்க்கம், வைகுண்டம், கைலாயம்—இப்படி இன்னும் பல, பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றியதுபோல் உளறல்மேல் உளறல்கள்!

மனிதனுக்குப் பிறப்பு முதல் சாவு வரை எத்தனையோ துன்பமும், தொல்லையும் இருக்க, இந்தக் கடவுள், கருமம், மோட்ச–நரகத் தொல்லைகள் ஒருபுறம் சித்திரவதை செய்கின்றன. (ஜீவகோடிகள்) பிறப்புக்கும், வாழ்க்கைக்கும், சாவுக்கும் இடையில் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கவலை, தொல்லை முதலிய காரியங்களுக்கு அவசியம் என்ன? காரணம் என்ன? என்பதை எவனாலும் இதுவரை தெரிந்துகொள்ள முடிய வில்லையே! இத்தனைக்கும் கழுதை, குதிரை, நாய், நரி, எருமை, யானை, புலி, சிங்கம், ஈ, எறும்பு முதலான எண்ணிறந்த ஜீவராசிகளைவிட அதிகமான அறிவு (பகுத்தறிவு) படைத்தவனாவான் மனிதன்.

இந்தப் பகுத்தறிவின் பயனால்தான் மற்ற ஜீவப் பிராணிகளுக்கு இல்லாத தொல்லையை மனிதன் அனுபவிக்கிறான். காரணம், இந்தப் பாழாய்ப்போன கடவுளால் தான் அதிகத் தொல்லை என்பேன்.

'உள்ளதைப் பங்கிட்டு உண்பது; உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது' என்ற நிலை ஏற்பட்டால் கடவுளுக்கு வேலையோ, அவசியமோ இருக்காது.

இப்போது, கையில் வலுத்தவன் காரியமாகவும், அயோக்கியன் ஆதிக்கமாகவும் இருப்பதால்—மனிதன் அறிவு இருந்தும் தொல்லைக்கும் துன்பத்திற்கும் ஆளாகிறான், அடிமையாக வாழ்கிறான்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

உலகத்தை எல்லாம் உண்டாக்கி அதில் உள்ள எல்லாவற்றையும் நடத்தும் சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரால்தான் (அவர் இஷ்டப்படி) உலகம் இயங்கு (நடைபெற) கின்றது என்று சொல்லப்படுமானால், அவரை நடுநிலைமையுடையவ ரென்று சொல்லுவதைவிடப் பாரபட்சமுடையவரென்று சொல்வதற்கே மிகமிக இட மிருக்கிறது. அவரைக் கருணை உடையவர் என்று சொல்வதைவிடக் கருணையற்றவர் என்று சொல்வதற்கே ஏராளமான பிரத்தியட்ச உதாரணங்கள் இருக்கின்றன.

அவரை நீதிவான் என்று சொல்லுவதைவிட அநீதிவான் என்று சொல்வதற்கே தாராளமான ஆதாரங்கள் அதிகமிருக்கின்றன.

அவரால் உலகுக்கு நன்மை ஏற்படுகிறது என்று சொல்வதைவிட அவரால் அதிகத் தீமையே ஏற்படுகின்றது என்று சொல்லுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

அவர் அறிவாளி என்று சொல்வதைவிட மூடர் என்று சொல்வதற்கே போதுமான ருஜு இருக்கின்றது.

(அதுவே முடிந்த முடிவானால்) அப்படிப்பட்டவரை யோக்கியர் என்று சொல் வதைவிட அயோக்கியர் என்று சொல்லுவதற்கே திருஷ்டாந்தங்கள் பல இருக்கின்றன.

அவர் ஜீவன்களுக்கு நன்மையே செய்கிறார் என்பதைவிடத் தீமையே செய்கிறார் என்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

அவரால் நன்மை அடைந்தவர்களைவிடத் தீமையடைந்தவர்கள் அதிகமாக இருக் கிறார்கள் என்று சொல்லத் தகுந்த அத்தாட்சிகள் மிகுந்து கிடக்கின்றன.

கடவுள் நாகரிகம் உடையவர் என்று சொல்வதைவிடக் காட்டுமிராண்டி என்று சொல்லுவதற்கே அளவுக்கு மீறிய அனுபவங்கள் காணப்படுகின்றன.

அவர் இருந்தால் நல்லது என்று சொல்லுவதைவிட, அப்படிப்பட்டவர் ஒருவர் இல்லாமல் இருந்தால் நல்லது என்று ஆசைப்படுவதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

அப்படி ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதை விட, அப்படி ஒருவர் இல்லை என்று வாழ்க்கையை நடத்துவதே மனித சுதந்திரத்திற்கு அதிகமான நன்மை பயக்கத் தக்கது என்று கருதுவதற்கு வேண்டிய அவசியங்கள் பல இருக்கின்றன.

சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருந்தால் மனிதனுடைய தேவைக்கும் ஆசைக்கும் தகுந்தபடி நடந்துகொண்டு இருப்பார். அல்லது, கடவுளுக்கு இஷ்டமில்லாத விஷயங்களைப்பற்றி மனிதனுக்குத் தேவையில்லாமலாவது, ஆசையில்லாமலாவது அல்லது நினைப்புக்கே வராமலாவது செய்திருப்பார்.

உதாரணமாக, மனிதன் தனக்கு முகத்தில் மயிர் வேண்டியதில்லை என்று கருதி தினம்தினம் சவரம் செய்துகொள்வதைப் பார்க்கிறோம். ஆனால், கடவுள் அனுக்கிரகத்தால் அது தினம் தவறாமல் முளைத்துக்கொண்டே வருவதையும் பார்க்கின்றோம்.

இது என்ன, கடவுளுடன் மனிதன் ஏறுக்கு மாறாய் நடந்து போட்டிபோடுகின்றானா? அல்லது, மனிதனுடன் கடவுள் ஏறுக்கு மாறாக நடந்து போட்டிபோடுகின்றாரா? அல்லது, ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் அவரவர் காரியத்தை அவரவர்கள் பார்க்கிறார்களா?

[சித்திரபுத்திரன் கட்டுரை-'குடி அரசு'—6-12-1947]

'கடவுள் நன்மை செய்தவனுக்கு நன்மை செய்வார்', 'கடவுள் தீமை செய்தவனுக்குத் தீமை செய்வார்' என்று கடவுள் பிரச்சாரகர்கள் சொல்லுகிறார்கள்.

அப்படியானால், மனிதனை நன்மை செய்யச் செய்தவன் யார்? தீமை செய்யச் செய்தவன் யார்? ஒரு மனிதனை தீமை செய்யாமல் இருக்கச் செய்ய முடியவில்லையானால், கடவுள் எப்படிச் சர்வ சக்தி உள்ளவராவார்?

கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்துவிட்டார்; அந்த அறிவைப் பயன்படுத்துவதில் தீமை ஏற்பட்டால் கடவுள் தண்டிக்கிறார்.

அப்படியானால், கடவுளுக்குப் புத்தியிருக்க வேண்டாமா? இவனுக்கு அறிவைக் கொடுத்தால் தீமை செய்வான். ஆதலால், இவனுக்கு அறிவும், சுதந்திரமும் கொடுக்கக் கூடாது என்று அறிவுள்ள கடவுள் சிந்திக்கவேண்டாமா? மனிதனுக்குத்தான் கடவுள் அறிவைக் கொடுத்தார்; விஷமூட்டும் பாம்பு, தேள், கொல்லும் புலி, சிங்கம், சிறு பிராணிகளைத் தின்றே வாழும் பெரிய ஜீவன்கள் ஆகிய இவைகளைக் கடவுள் ஏன் உண்டாக்கினார்?

இதற்குப் பெயர் காருண்யமா? ஒரு நாளைக்கு எத்தனைகோடி பூச்சி புழுக்களைப் பட்சிகள் தின்கின்றன! எத்தனை கோடி பட்சிகளை மனிதர்கள் கொன்று தின்கிறார்கள்! எத்தனைகோடி மீன்களை மக்களும், மற்ற உயிர்களும் கொன்று தின்கிறார்கள்!

எத்தனை கோடி, எத்தனை இலட்சம் ஆடுகள், எத்தனை ஆயிரம் மாடுகள் ஆகியவைகளை உலகில் மக்கள் கொன்று சாப்பிடுகிறார்கள்? சர்வ சக்தியுள்ள—கருணைக் கடாட்சம் பொருந்திய கடவுளுக்கு இதுதான் வேலையா? அல்லது, கடவுள் சம்பந்தமில்லாமல் அவர் சக்திக்கு மீறி இக் காரியங்கள் நடைபெறுகின்றனவா? சர்வ சக்தியுள்ள கடவுள்—ஜீவராசிகள், மரம், புல், பூண்டு வகைகளை எதற்காகத் தோற்றுவிக்க வேண்டும்?

இவைகள் பெரிதும் எல்லாம் அழிந்துதானே போகின்றன? அழியும்போது இம்சை, நோய், வேதனைப்பட்டுத்தானே அழிகின்றன? இப்படிப்பட்ட ஜீவனை உண்டாக்கி, இப்படி அழியச்செய்வதில் கடவுளுக்கு என்ன மகிழ்ச்சி? கடவுள் சக்திக்கு என்ன பெருமை? சர்வ சக்தி என்பதன் தத்துவம் இதுதானா?

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

என்னைப் பொறுத்தவரையில் என் தொண்டின் தன்மை என்ன? மக்களைப் பார்த்து, 'ஏ, காட்டுமிராண்டிகளே!' என்றும், 'மானங்கெட்டவர்களே!' என்றும்தான் கூறுகிறேன். ஒரு இடத்திலாவது, யாராவது எழுந்திருந்து எதிர்த்துக் கேட்கவில்லையே!

கடவுளைப்பற்றி எவ்வளவு கடுமையான கருத்துக்களைச் சொல்லிவருகிறேன். யாராவது மரியாதையாக—ஒழுங்காகப் பதில் சொல்லி இருக்கிறார்களா? கடவுள் பக்திக் காரனைத்தான் கேட்கிறேன்; சொல்லட்டுமே! உண்மையிலேயே, கடவுள் நம்பிக்கை

அற்றவர்கள் யாரென்றால், 'கடவுள் உண்டு' என்று கூறுகின்றவர்கள்தாம். ஏன்? உண்மையிலேயே, கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர்; எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார் என்பது உண்மையானால்—இவர்கள் ஏன், 'கடவுள் இருக்கிறார்!' என்று நம்மிடம் கூறவேண்டும். சர்வசக்தி வாய்ந்தவர் கடவுள் என்பது உண்மையானால்—எங்களுக்குக் 'கடவுள் ஒருவர் உண்டு' என்ற நம்பிக்கையைக் கடவுளே உண்டாக்கி இருக்கலாமே!

போலியாக—'கடவுள் உண்டு' என்று பித்தலாட்டமாகப் பேசி நாங்களும் மகானாகவோ, சாமி பாபாவாகவோ ஆகியிருக்க முடியாதா? அப்படி இருக்கும்போது, நாங்கள் ஏன் அனாவசியமாக இந்தக் கடவுளின் பித்தலாட்டங்களை எடுத்துக் கூறிக்கொண்டு இருக்கவேண்டும்?

இந்தக் கடவுள் உணர்ச்சி, மனித சமுதாயத்தைக் கெடுத்ததுபோல வேறு எதுவும் கெடுத்திருக்க முடியாதே! இந்தக் கடவுள் சங்கதி இல்லாவிட்டால் இந்த உலகம் எவ்வளவோ முன்னேறி இருக்கும்! கடவுளை மறந்து மனிதன் சிந்திக்க ஆரம்பித்ததால் தானே இந்த விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம்?

அய்ந்து வயது சராசரியாக வாழ்ந்த ஒரு இந்தியன் இன்றைக்கு எப்படி 52 வயது உடையவனாக மாறினான்? பெரிய பெரிய நோய்களை எல்லாம் எப்படித் தீர்த்துக்கட்டியிருக்கிறார்கள்? இது மனித அறிவு முயற்சியால்தானே! வெறும் கடவுளைமட்டும் நம்பிக் கொண்டு, 'சிவ, சிவா' என்றால் இந்த வளர்ச்சியைப்பெற்று இருக்கமுடியுமா?

[மாயூரத்தில், 22-9-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-10-1972]

2. கடவுளைப்பற்றி

'கடவுளை உண்டாக்கியவன் முட்டாள்; கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்று நான் கூறி வருவது கண்டு, பார்ப்பனர் நெருப்பின்மீது நிற்பதுபோல் துள்ளுகிறார்கள்; துள்ளிக் குதிக்கிறார்கள்; அப்பாவிகளையும், கூலிகளையும் பிடித்து நம்மீது ஏவிவிடுகிறார்கள்; பெரும் பெரும் போராட்டங்கள் நடத்தப்போவதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்; எதிர்பார்க்கின்றேன். காரணம், போராட்டம் துவக்கினால் எனது மேற்கண்ட பிரச்சார வேலைக்கு உதவியாகும் என்பதோடு, மேலும் இத் தொண்டு செய்ய உற்சாகமூட்டி ஊக்கமளிக்கும் என்று கருதுவதுதான்.

'கடவுளை உண்டாக்கியவன் முட்டாள்' என்பதற்காகக் கோபித்துக்கொள்ளும் சிகாமணிகளே! நான், கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்றால்—எதற்காக நீங்கள் கோபித்துக்கொள்ளவேண்டும்? 'உண்டாக்கியவன் முட்டாள்' என்றால் உண்டாக்கியவன் யார்? அச் சொல் யாரைக் குறிக்கிறது? கோபிக்கின்றவனே! நீ, 'கடவுள் உண்டாக்கப் பட்டது' என்பதை ஒப்புக்கொள்கிறாயா? 'கடவுளை உண்டாக்கியவன் ஒருவன் இருக்கிறான்' என்பதை ஒப்புக்கொள்ளுகிறாயா? உனது முட்டாள்தனத்தைக் காட்டத்தான் கோபிக்கிறாய்; ஆத்திரப்படுகிறாய்! நிற்க, உன் ஆத்திரத்திற்குக் காரணம், ஆதாரம் என்ன?

முண்டமே! நீ நினைக்கும் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்கிறாயா? அல்லது, அது ஒருவனால் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறாயா? அல்லது—கடவுள் யாராலும் உண்டாக்கப்படாமல், யாராலும் கண்டுபிடிக்கப்படாமல் தானாக இயற்கையாகக் கடவுள் இஷ்டப்படி—கடவுளே தோன்றிற்று என்கிறாயா? நான் சொல்வதில் உனக்கு ஆத்திரம், கோபம் வருவதாயிருந்தால் எதற்காக வரும்? நான் சொல்வதை—'கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது' என்று நீ கருதினால்தானே—'உண்டாக்கியவனை நான் முட்டாள் என்கின்றேன்' என்று, நீ கோபிக்கவேண்டும்?



1967-ல் தஞ்சை மாவட்டம், விடயபுரம் பயிற்சிக்கூடத்தில், உலகுக்கு அறிவித்த நாத்திகக் கட்டளைகளைப் பெரியார் ஈ. வெ. ரா. எடுத்தியம்புகிறார்.

மற்றும், கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று கருதுகிறவனுக்குத்தானே கோபம், ஆத்திரம் வரவேண்டும்? நீ கோபித்தால் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் என்றுதானே அர்த்தம்?

அது மாத்திரமல்லாமல், நீ கோபிப்பதால் கடவுளையும் அவமதிக்கிறாய் என்றுதானே கருத்தாகிறது?

இப்போது நீ நினைத்துப் பார்! கடவுள் உண்டாக்கப்பட்டதா? கிரியேஷனா? (Creation); அல்லது, கடவுள் கண்டுபிடிக்கப்பட்டதா? இன்வென்ஷனா? (Invention) அல்லது, கடவுள் இயற்கையாய்த் தோன்றினதா? நேச்சரா? (Nature)—இதை முதலில் முடிவுசெய்துகொள்.

நான் சொல்வதன் கருத்து—கடவுள் கண்டுபிடிக்கப்பட்டது மல்ல; தானாகத் தோன்றியிருப்பதுமல்ல; அது முட்டாளால் உண்டாக்கப்பட்டது என்பதாகும். அதை—அதாவது, 'கடவுளை ஒரு மனிதன் உண்டாக்கினான்' என்பதாக நீ நினைத்தாலோ அல்லது, அதை நீ ஒப்புக்கொண்டாலோதானே கடவுளை உண்டாக்கினவன் முட்டாள் என்றால், நீ கோபித்துக் கொள்ளவேண்டும்?

நீ, இருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கும் 'கடவுள்—ஒருவராலும் உண்டாக்கப் பட்டதல்ல. தானாக, சுயம்புவாகத் தோன்றியிருக்கிறது' என்பதுதான் இன்று கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கருத்தாக இருக்கிறது.

ஆகையால், நான் கடவுளை உண்டாக்கியவனை முட்டாள் என்பதோடு, அதற்காகக் கோபிப்பவனை, ஆத்திரப்படுபவனை 'இரட்டை முட்டாள்' என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படி நான் சொல்வதால், கடவுளால் எவன் பெரிய சாதியாய் இருக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறானோ அவனுக்கும், கடவுள்பேரால் பொறுக்கித் தின்னவேண்டுமென்று கருதிக்கொண்டிருக்கிறவனுக்கும், கடவுளால் தனது அயோக்கியத் தனங்களை மறைத்துக்கொள்ள வேண்டியவனுக்கும்தான் கோபம் வரவேண்டும். அதை நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, 'கடவுளைப் பரப்புகிறவன் அயோக்கியன்' என்பதற்கு விளக்கமாக இவ் விளக்கம் எழுதப்படுகிறது.

கடவுளைப் பரப்புகிறவன் எவனுமே—'கடவுள் தத்துவத்திற்கு' ஏற்பக் கடவுளைக் கற்பித்துக் கொண்டு பரப்புகிறவன்; அல்லது, பிரச்சாரம் செய்பவன்; அல்லது, கற்பித்துக் கொள்பவன்; அல்லது, கடவுளுக்காகவென்று கதைகள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் எழுதினவர்கள்; மற்றும் அதற்காகக் கோவில்கள் கட்டி அவற்றுள் உருவங்கள் வைத்தவர்கள்; கடவுளுக்காகவென்று பூசைகள், உற்சவங்கள், பண்டிகைகள் முதலியவைகளை நடத்துகிறவர்கள், செய்கிறவர்கள் யாவருமே—நாணயத்தையோ, யோக்கியதையையோ, ஒழுக்கத்தையோ ஆதாரமாக வைத்துக் கடவுளைப் பரப்புவதில்லை, நடத்துவதில்லை.

'கடவுளுக்கு உருவமில்லை; குணமில்லை' என்று ஆரம்பித்து, 'கடவுள் சர்வ வல்லமையுடையவர்; 'சர்வத்தையும் அறியக்கூடிய சக்தி (சர்வக்ஞத்துவம்) கொண்டவர்;' 'கருணையே வடிவானவர்'; 'அன்பு மயமானவர்'; 'அவரின்றி ஓர் அணுவும் அசையாது' என்பன போன்ற கடவுளின் எல்லாக் குணங்களையும், சக்திகளையும், தன்மைகளையும் அடுக்கடுக்காகக் கடவுளுக்குக் கற்பித்து மக்களை நம்பச் செய்துவிட்டு, இந்தக் குணங்களுக்கும் தன்மைகளுக்கும் மாறான குணங்களை—தன்மைகளை அதற்கு ஏற்றி, அதற்காகக் கோவில்கள் கட்டியும், உருவங்கள் உண்டாக்கி வைத்தும், நடவடிக்கைகளை ஏற்றியும்—அவைகளை ஆதாரமாய்க் கொண்டு பூசை, உற்சவம், பண்டிகை முதலிய

வைகளைக் கொண்டாடச் செய்வதன் மூலம் கடவுளைப் பரப்புவதென்றால், இக் காரிய முயற்சியில் ஈடுபட்ட மக்கள் அயோக்கியர்களா, அல்லவா என்று சிந்தித்துப் பார்க்கும்படி கேட்கிறேன்.

இக் கூட்டத்தார் மக்களை ஏய்க்கவல்லாமல், வேறு எக் காரியத்திற்காக இக் காரியத் தில் ஈடுபடுகிறார்கள்—ஈடுபடவேண்டியவர்களானார்கள் என்பது சொல்லமுடியுமா ?

இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, தங்கள் பெருமைக்காக, தங்கள் வாழ்க்கை நலத்திற்காக, தங்கள் பிழைப்பிற்காக இக் காரியங்களைச் செய்யும் அயோக்கியர்களாக முட்டாள்களாக இருந்துவருகிறார்கள் என்பதல்லாமல் வேறு கருத்து, காரணம் என்ன சொல்ல முடியும் ?

இன்று இந்தப்படியான அயோக்கியர்களால் பரப்பப்பட்டிருக்கும் எந்தக் கடவுளை எடுத்துக்கொண்டாலும் அதற்கு வீடு, உணவு, பெண்டாட்டி, வைப்பாட்டி, குழந்தை குட்டிகள், நகைகள், சொத்துக்கள், கலியாணம், உற்சவம், ஊர்வலம் முதலியவை செய்து கூட்டத்தைக் கூட்டி ஆயிரம், பல்லாயிரம், இலட்சம், பல இலட்சம் ரூபாய்கள் செலவு ஏற்படும்படியும் ; அதுபோலவே மக்களுக்கும் நாள் கணக்கில் மெனக்கேடு ஏற்படும்படியும் செய்வதோடு, கோடிக்கணக்கான மக்களை இழிசாதி மக்களாகவும் இருக்கும்படி செய் கின்றனர்.

'அன்பும், கருணையும், ஒழுக்கமும் உள்ள கடவுள்கள் யுத்தம் செய்ததாகவும், கோடிக் கணக்கான மக்களை, ஆண்களை, பெண்களைக் கொன்று குவித்ததாகவும், வெட்டி வீழ்த்திச் சித்திரவதை செய்து நாசமாக்கியதாகவும், விபச்சாரம் செய்ததாகவும் நடப்பில் நடத்திக்காட்டிப் பரப்புவதென்றால்—இப்படிப் பரப்புகிறவர்கள் அயோக்கியர்களா, அல்லவா என்று மறுபடியும் கேட்பதோடு, இதற்கு இரையாகிறவர்களை—முட்டாள்களாக, மானமற்ற வர்களாக ஆக்குகிறார்கள் அல்லவா என்று திரும்பவும் கேட்கிறேன்.

இப்படிக் கடவுளைப் பரப்பும் அயோக்கியர்களால் எத்தனை எத்தனை கோடி மக்கள் மடையர்களாகிறார்கள் என்பதை, அறிவாளிகள் முதலில் சிந்திக்கவேண்டும்.

சாதாரணமாக, இந்தியாவை எடுத்துக்கொண்டால்—சிறப்பாக இந்துக்களை எடுத்துக்கொண்டால், சுமார் 40 கோடி மக்களும்—இந்த விஞ்ஞான காலத்தில் டாக்டர் எம். ஏ., பி. ஏ., (Doctor, M. A., B. A.,) படித்த மக்களும் ; புலவர்கள், வித்துவான்கள், மகா மேதாவிகள் என்று கூறப்படும்—கூறிக்கொள்ளும் மக்களும் இக் காரியங்களில் 'பரம முட்டாள்களாக' இருப்பதற்குக் காரணம்—கடவுளைப் பரப்பினவர்களும், பரப்பி வருபவர் களும், இப்படிப்பட்ட கடவுள் கதை எழுதினவர்களும், இந்தக் கடவுள்களுக்குக் கோயில் கட்டி, உருவம், உற்சவம், நடப்பு, தேர், திருவிழா நடத்தும் அயோக்கியர்களுமல்லாமல் வேறு யாராய் இருக்க முடியும் ?

இந்த மடையர்கள் எவ்வளவு துணிவோடு ஆண், பெண் கடவுள்களைக் கற்பித்து, அவற்றிற்கு விபச்சாரத் தன்மைகளை (ஒழுக்க ஈனங்களை)க் கற்பித்துப் பரப்புகிறார்கள் என்றால், இவர்களை எத்தனை முறை அயோக்கியர்கள் என்று கூறவேண்டும் ! என்பதை வாசகர்களே தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடுகிறேன்.

இப்படி நான் எழுதுவதால் 'சிலர் மனம் புண்படாதா ?' என்று கேட்கப்படலாம். அயோக்கியர்கள் மனம் புண்படுமே என்று பார்த்தால்—ஒரு சிலரால் முட்டாள்களாக ஆக்கப்பட்ட கோடிக் கணக்கான மக்களை அறிவாளிகளாக ஆக்க வேறுவழி யாராவது சொல்லட்டுமே, பார்க்கலாம் !

'கோவில், கள்ளரின் குகை' என்று கூறிய கிறிஸ்து கொல்லப்பட்டாலும், இன்று அவரை நூற்றுக்கணக்கான கோடிமக்கள் 'கடவுளுக்கு' மேலாகக் கருதுகிறார்கள்.

'கடவுளுக்கு உருவம் கற்பித்து வணங்குகிறவர்கள் முட்டாள்கள், மடையர்கள்' என்று கூறிய முகமது நபியைச் சிலர் துன்புறுத்தினார்கள் என்றாலும்—இன்று அவரைப் பல பத்துக்கோடி மக்கள் கடவுளைவிட மேலாகக் கருதுகிறார்கள். இவ்வளவு ஏன்?

நம் கண் முன்னால், 'கோயில்கள் குச்சுக்காரிகளின் விடுதிகள்' என்று கூறிய காந்தியை, இன்று பார்ப்பனர் உட்பட ஏராளமான மக்கள் 'மகாத்மா' என்கிறார்கள்.

உயிருக்குத் துணிந்து உண்மையை எடுத்துக்கூற மக்களில்லாததால், இன்று நம் நாட்டில் இவ்வளவு முட்டாள்களும், அயோக்கியர்களும், காட்டுமிராண்டிகளும் தோன்றி—இந்த விஞ்ஞான காலத்திலும் இருந்துவர இடமேற்பட்டதே தவிர, வேறு காரணம் என்ன? சிந்தியுங்கள்! மற்றும், இந்தப்படியான நம்மை, உலகம்—அறிவுலகம் எப்படிப்பட்டவர்கள் என்று கருதும் என்பதையும் சிந்தியுங்கள்!

எவ்வளவோ பொறுமைக்கு மேல்தான் இந்த விளக்கத்திற்கு வந்திருக்கிறேன். அடுத்து, 'கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்ற கருத்திற்கு விளக்கம் எழுத ஆசைப்படுகிறேன்.

பொதுவாகச் சொல்கிறேன், உலகிலேயே கடவுளை வணங்குகிற எவனும், கடவுள் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அதன் தன்மை என்ன? குணம் என்ன? என்பனவாகிய விஷயங்களை உணர்ந்தோ அல்லது உணர்ந்ததன்படியோ வணங்குவதேயில்லை. மற்றெப்படியென்றால், 'கடவுளை, மனிதனாகவே கருதிக்கொண்டு, மனித குணங்களையே அதற்கு ஏற்றிக்கொண்டு, தான் எப்படி நடந்துகொண்டான், தான் எப்படி நடந்துகொள்ளுகிறான், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பவைகளைப்பற்றிக் கவலைப்படாமல்—தான் நடந்து கொண்ட கூடாத் தன்மைகளுக்குப் பரிகாரம் (பாவ மன்னிப்பு) தேடும் முறையிலும், நியாயமோ, பொருத்தமோ, விகிதமோ இல்லாமல் தனக்கு வாழ்வில் எல்லாத் துறைகளிலும் உயர்நிலையே வேண்டுமென்கிற பேராசையுடனுந்தான் கடவுளை வணங்குகிறான்.

இப்படிப்பட்டவனை அயோக்கியன் என்று சொல்லாவிட்டாலும்—அறிவாளி என்று சொல்லமுடியுமா?

இப்படிப்பட்ட இவர்கள் வணங்கும் கடவுளை, இவர்களை—இன்றைய நம் ஜனநாயக ஆட்சிக்கும், ஆட்சிப் பிரஜைகளுக்கும், பிரதிநிதிகளுக்கும் ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயொழிய—யோக்கியர்கள், அறிவாளிகள் என்று எப்படிச் சொல்லமுடியும்? இம் மாதிரியான கடவுள்வணக்கம் உலகில் ஏற்பட்டபின், இதன் பயனாக இயற்கையான, யோக்கியமான மனிதன் என்று சொல்லக்கூடிய ஒரு மனிதனாவது தோன்ற முடிந்ததா? இருக்கமுடிந்ததா? பொதுமக்கள் பயமில்லாமல் வாழமுடிந்ததா? அல்லது கடவுள்களோ, கடவுள்கள் வீடு, வாசல், சொத்துக்களோ பயமில்லாமல் வாழமுடிந்ததா? இது பொது விளக்கமாகும்.

இனி, நமது மக்கள் கடவுளை வணங்குவதன் மூலம் எவ்வளவு காட்டுமிராண்டிகள், மடையர்கள் என்பதைப்பற்றி விளக்குகிறேன்.

நான் பந்தயம் கட்டிச் சொல்லுவேன், நம் மக்களில் (இந்துக்கள் என்பவர்களில்) கடவுளை வணங்குகிறவர்களில் ஒருவர்கூட அறிவாளரோ, யோக்கியரோ, உண்மை அறிந்தவரோ இல்லை! இல்லை! இல்லவே இல்லை! என்று கூறுவேன்.

ஏனெனில், எப்படிப்பட்ட கடவுள் பக்தனும் கடவுள் என்று கல்லைத்தான், மனித உருவத்தைத்தான், மாடு, குரங்கு, மீன், ஆமை, பன்றி, கழுகு, யானை முதலிய உருவங்கள் கொண்ட கல்லைத்தான் வணங்குகிறான். அவற்றிலும் மிகமிக முட்டாள்தனமாக வணங்கப்படும் போக்கு என்னவென்றால்—ஒரு தலை, இரண்டு தலைகள், மூன்று தலைகள், நான்கு தலைகள், அய்ந்து தலைகள், ஆறு தலைகள், ஆயிரம் தலைகளும் அவைபோன்ற

கைகளுமுடைய மனித உருவங்களையும்; மற்றும் தலை மனிதன்—உடல் மிருகம்; தலை மிருகம்—உடல் மனிதன் முதலிய உருவங்கள் கொண்ட சிலைகளையும் வணங்குகிறான் என்பதே.

கடவுள் இருப்பதற்கு, இப்படிப்பட்ட தோற்றங்கள் எங்கு இருக்கின்றன? ஒவ்வொரு அயோக்கியனும் ஒவ்வொரு கூற்றைக் கற்பித்தால்—பற்பல மூடர்கள் இதை ஏற்பது என்றால், இது முட்டாள்—காட்டுமிராண்டித்தனமா, அல்லவா என்றுதான் கேட்கிறேன்.

மற்றும், கடவுள்களுக்குப் பெண்டாட்டி, பிள்ளை, வைப்பாட்டி முதலியவைகளுடன் பூசை செய்து வணங்குவது முதலிய காரியங்களும்; கடவுள் மற்றவன் (மனிதனின்) மனைவியைக் கெடுத்தான்; மற்றவனைக் கொன்றான்; மற்றவனை ஏய்த்து மோசம் பண்ணினான்; திருடினான்; அவனுக்குப் பதினாயிரம் பெண்டாட்டிகள்; பதினாயிரம் காதலிகள் என்றெல்லாம் கதைகட்டி, அதைத் திருவிழாவாக்கி வணங்குவதும் காட்டு மிராண்டித்தனமா, அறிவுடைமையா என்று கேட்கிறேன்.

மற்றும், பலர் ஒரு வேளை உணவுக்கும் திண்டாட, தலைக்கு எண்ணெய் இல்லாமல் வருந்த—தினம் அய்ந்து வேளை, ஆறு வேளைகள் பொங்கல், அக்காரவடிசல் முதலியன படைத்தல், பால், நெய், தேன், தயிர், இளநீர், எண்ணெய் அபிஷேகம் என்னும் பெயரால் கற்களின் தலையில் கொட்டிச் சாக்கடைக்கு அனுப்புதல் வடிகட்டிய முட்டாள்தனமா? கடவுள் வணக்கமா? என்று அழுத்திக் கேட்கிறேன். இவற்றால், இந்த முட்டாள்தனமான கடவுள் வணக்கத்தால்—நலம், பார்ப்பனருக்கு அல்லாமல் (மற்ற யாருக்கும் முட்டாள் பட்டம் அல்லாமல்) வேறு பயனுண்டா என்று கேட்கிறேன்.

மேலும், இதற்காக ஏற்படும் பொருட்செலவு, நேரச்செலவு எவ்வளவு? இந்த நிலை ஒருபுறமிருந்தாலும், நம் மக்கள் இப்படியே போய்க்கொண்டிருந்தால்—நமது பின்சந்ததிகளின் நிலை என்ன ஆவது என்று கேட்டு இதை முடிக்கிறேன்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

3. கடவுளும் நாமும்

கடவுளைப்பற்றி நான் எதிர்ப்பாய் இருக்கிறேன் என்றால், ஏனப்படி இருக்கிறேன் என்று—ஒரு கடவுள் பக்திக்காரரும் சிந்திப்பதில்லையே.

நான் ஏன் கடவுள்களை ஒழிக்க வேண்டுமென்கிறேன்? கடவுளை உண்டாக்கிக் கொண்ட எவருமே—யோக்கியமான அல்லது யோக்கியத் தன்மையுடைய கடவுளை ஏற்படுத்திக்கொள்ள வில்லையே!

அவரவர் சுயநலத்திற்கேற்ப, முட்டாள்தனத்திற்கேற்ப, ஒழுக்கமற்ற, நேர்மையற்ற, சக்தியற்ற கடவுள்களையும், தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்ற கடவுள்களையும், தம் எதிரிகளை ஒழிக்கவேண்டுமென்கிற ஆவலுக்கேற்ற கடவுள்களையும் உண்டாக்கிக் கொண்டால், அவற்றை,—அவற்றால் பாதிக்கப்படுபவர்களும், அறிவாளிகளும் ஏற்றுக் கொள்ள முடியுமா? சுயநலமற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

உலக மனித சமுதாயத்திற்கு ஒருவன் தொண்டு செய்யவேண்டுமானால், முதல் தொண்டாக இப்படிப்பட்ட கடவுள்கள் ஒழிப்பு வேலையில் இறங்கினால்தானே அவன் உண்மையான, யோக்கியமான, அறிவாளியான தொண்டனாக இருக்கமுடியும்?

உதாரணமாக, ஒரு மனிதன் தான் மற்ற மனிதனைவிட மேலான, மேல் பிறவியான உயர்சாதி மனிதன் என்று சொல்லிக்கொண்டு, அதற்காகவென்று ஒரு கடவுளையோ, பல கடவுள்களையோ கற்பித்துக்கொண்டு, அதுவும் அயோக்கியத்தனமான, ஒழுக்கங் கெட்ட கடவுள்களைக் கற்பித்துக்கொண்டு, 'அவைகள்தாம் என்னை-எங்களை உயர்

சாதியாய்ப் பிறப்பித்தது' என்றால்—அந்த உயர் சாதியல்லாத மற்றவன் அதனால், அவற்றால் இழிசாதி, கீழ்ச் சாதியாக ஆக்கப்பட்டவன் அந்த—அவற்றிற்கு ஆதாரமாகக் காட்டப்படும் கடவுளை—கடவுள்களை ஒழிக்க, அழிக்க, சின்னப்படுத்த முன்வராதவன் மனிதனாவானா? அறிவாளியாவானா? மானமுள்ளவனாவானா? தன்னை மனிதன் என்று சொல்லிக்கொள்ளத் தகுதியுடையவன் ஆவானா?

கடவுள் நம்பிக்கைக்காரர்கள் யாராகத்தான் இருக்கட்டுமே, அவர்களை, 'எதற்காகக் கடவுள் ஏற்பட்டது? அதனால் உனக்கு என்ன பலன்?' என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவான்? அவன் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லுவானானால் 'அதனால் எல்லா மக்களும் பயனடைகிறார்களா? மகிழ்ச்சியடைகிறார்களா? யாராவது துக்கம், வேதனை, இழிவு, கவலை அடையாமல் இருக்கிறார்களா?' என்றால் என்ன பதில் சொல்லுவான்? மகிழ்ச்சி, நலம், மேன்மையடைந்திருக்கும் எவனும், 'கடவுள் சித்தத்தால்' என்பான். அவை இல்லாதவன், அவற்றிற்கு நேர்மாறான துன்பம், தொல்லை, கவலை அடைந்து கொண்டிருப்பவன் முட்டாளாய் இருந்தால், 'கடவுள் சித்தம்' என்பான். ஏனப்படியென்றால், 'என் கர்மம்' என்பான். இப்படிப்பட்ட அயோக்கியர்களுக்காக, மடையர்களுக்காக நாமும் இவர்களோடு சேர்ந்து கொண்டு இந்தக் கடவுள்களைக் காப்பாற்றுவதா?

'உயர்' சாதிக்காரன், 'நலன் அனுபவிப்பவன்' கடவுளைக் காப்பாற்றினால்—'தாழ்ந்த' சாதிக்காரன், 'கேடு அனுபவிப்பவன்' கடவுளை ஒழிப்பது என்பதுதானே நியாயமும், நேர்மையுமாகும்; அறிவுமாகும்?

அப்படிக்கில்லையானால், அவன் அடிமை, மானமற்றவன், கூலி, சுயநலக்கார மடையன் என்றுதானே சொல்லப்பட வேண்டும்?

ஆகவே, தோழர்களே!

கவலையும், துன்பமும், இழிவும் உள்ளவர்களே! சிந்தியுங்கள். தங்களுக்கு விமோசனம், விடுதலை, மனிதத் தன்மை—கடவுள் ஒழிப்பிலும், அழிப்பிலும், இழிவுபடுத்துவதிலுந்தானிருக்கிறது.

இதனால், யோக்கியமான, அறிவாளியான யார் மனமும் புண்பட இடமில்லை. சுயநலத்திற்காகச் சிலர் ஆத்திரப்படலாம்; 'மனம் புண்படுகிறது' என்று சொல்லலாம். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்; சிறிதும் அச்சப்படாதீர்கள். நாம் யாரையும் அவர் மனம் புண்படுவதற்காக இதைச் சொல்லவில்லை; செய்யவில்லை. இதற்காக அறிவற்றவர்களால், சுயநலக்காரர்களால், கூலிகளால் நமக்குத் தொல்லை ஏற்பட்டால், மகிழ்ச்சியோடு ஏற்று, மானத்தோடு பாய்ந்தெழுங்கள்! யார் மீதும் வெறுப்பு, குரோதம் கொள்ளாதீர்கள்!

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

4. கடவுளை நம்பும் முட்டாள்களே!

கடவுளை நம்பும் முட்டாள்களே! அதாவது, கடவுள் ஒருவரிருக்கிறார்; அவரே உலகைப் படைத்து, காத்து, நடத்தி வருகிறார்; அவரன்றி ஓரணுவும் அசையாது; அவரே உலக நடப்புக்குக் காரணஸ்தர் ஆவார் என்றெல்லாம் கருதிவரும் முட்டாள்களே!

கடவுளால் உலகத்திற்கு, மனித சமுதாயத்திற்கு, ஜீவகோடிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? கடவுள் இருக்கிறார் என்றால்—ஜீவன்களுக்குப் பசி, தாகம், புணர்ச்சி, உணர்ச்சி, ஆசை, கவலை, நோய், வேதனை, சாவு முதலியவை ஏன் ஏற்படவேண்டும்? பிறப்பு, சாவு, தோற்றம், அழிவு முதலியவை எதற்குத் தேவை? இவைகளால் உலகமோ, மக்களோ, அடைகிற இலாபம் என்ன? கடவுள் தோன்றி எத்துணையோ காலம் ஆகியும், எத்துணையோ காலமாக மக்கள் கடவுளை நம்பியும் வணங்கியும் வந்தும், 'யோக்கியனாகவோ, கவலையற்றவனாகவோ' ஒரு மனிதனைக்கூடக் காணமுடியவில்லையே, ஏன்?

கடவுள் பாதுகாப்பு இருந்தால்—வீட்டிற்குக் கதவு, தாள் போடாமலும்; பெட்டிக்குப் பூட்டுப் போடாமலும்—அவற்றில் பண்டங்கள் வைக்க முடியவில்லையே, ஏன்?

மனிதன் எதனால் கெட்ட காரியங்களைச் செய்கிறான்?

ஒரு மனிதனால் மற்றொரு மனிதனுக்கு ஏன் 'தீங்குகள்' செய்யப்படுகின்றன?

கடவுள் நம்பிக்கைக்காரர்களிடத்தில் காணப்படும் நற்குணங்கள் என்ன?

மனிதரிடம் காணப்படும் தீய குணத்திற்குக் காரணஸ்தர்கள் யார்?

ஒரு மனிதனுக்கு அவன், 'கெட்ட காரியம்' செய்த பிறகு—செய்துவிட்டு செத்த பிறகு, அவனுக்குத் தண்டனையைக் கொடுக்கும் கடவுள்—அந்த மனிதனைக் 'கெட்ட' காரியம் செய்யாது தடுக்க முடியாமல் போவது ஏன்?

'கெட்ட' காரியம் செய்தவனுக்குத் தண்டனை கொடுப்பதானாலும்—கெட்ட காரியம் செய்யப்பட்டதால், துன்பம், நட்டம், நோய், மரணம் அடைந்தவனுக்குக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார்?

மனிதனுக்கு நன்மை-தீமை, இலாபம்-நஷ்டம், செல்வம்-தரித்திரம், சுகம்-துக்கம், திருப்தி-அதிருப்தி, கவலை, துன்பம் முதலிய அவஸ்தைகள் எதற்காக ஏற்பட்டும், இருந்தும் வரவேண்டும்?

மனிதன் படும் அவஸ்தைகள் கடவுளுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால், இவை கடவுளுக்குத் திருவிளையாடலா?

'நரக'த்தைப் பாவ காரியத்திற்குப் பரிகாரமாக, தண்டனையாகச் சிருஷ்டித்த கடவுளை விட—வேறு அயோக்கியன், கொடியவன், துஷ்டன் உலகில் யாராவது இருக்க முடியுமா?

இப்படிப்பட்டவனை அன்பு உரு, கருணை உரு என்று சொல்லுகிறவனைவிட, வேறு மடையன் உலகில் இருக்கமுடியுமா?

ஏன் இதைப்பற்றி இவ்வளவு சொல்லுகிறேனென்றால், என் அனுபவத்தில் கடவுளால் உலக முன்னேற்றமும், மனித சமுதாய ஒழுக்கமும், மனிதத் தன்மையும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டு விட்டதுடன், கெட்டும் வருகிறது என்று உணர்ந்ததாலும், இதை வெளிப் படுத்த வேறு ஆள் இல்லையென்பதை நான் காணுவதாலும், எனக்கு வயது எல்லைக்கு நெருங்குவதாலும்—நான் உணர்ந்ததை வெளிப்படுத்திவிடலாம் என்று கருதியதாலேயே யாகும்.

ஆகவே, மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் கடவுளை மறுக்கிறானோ—மறக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயமுன்னேற்றம் இருக்கிறது என்பது எனது உறுதி.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

5. கடவுள் ஒழிப்பு

இந்த நாட்டில் நாட்டுப்பற்றோ, மனிதப்பற்றோ உள்ள அரசாங்கமானாலும், பொதுத் தொண்டு செய்யும் ஸ்தாபனங்களானாலும் அல்லது தனிப்பட்ட சமுதாயப் பற்றுள்ள மக்களானாலும் அவர்கள் முதலாவது செய்யவேண்டிய காரியம்—நாட்டு மக்களை அறிவாளிகளாகச் செய்து, அவர்களது பகுத்தறிவு ஆராய்ச்சித் தன்மையைப் பெருக்கவேண்டியதாகும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஒரு வழி செய்து, அவர்களுக்குக் கவலையோ, குறைபாடோ ஏற்படுவதற்கு இல்லாமல் பொருளாதார சமத்துவம், சமுதாய சமத்துவம் ஏற்படும்படிச் செய்யவேண்டும்.

இந்தத் தன்மைகளுள்ள நாட்டைத்தான் நாடு என்றும், சுதந்திர பூமி என்றும் சொல்லலாம்; இவையில்லாத நாட்டையும், சமுதாயத்தையும் சிறைக்கூடம் என்றும் அடிமைச் சமுதாயம் என்றும்தான் சொல்லவேண்டும்.

சாதாரணமாக அரசர்களால் ஆளப்படும் நாடுகளும், சமுதாயமும் எப்படி வேண்டு மானாலும் இருக்கலாம். ஏனெனில், அரசனுக்கு ஆட்சிமுறை—மதமும் சாத்திரங்களுமே தாம். மக்களால் ஆண்டுகொள்ளப்படும் நாட்டுக்கு ஆட்சிமுறை—அறிவும், சுதந்திரமுமே தாம்.

மதமும், சாத்திரங்களும் மனிதனின் அறிவையும், சுதந்திரத்தையும் ஒழிப்பதற் கென்றே—மக்களை மடையர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்குவிப்பதற்கென்றே ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட சாதனங்களாகும். அவைகளும், மக்கள் காட்டுமிராண்டி களாய்—மிருகப்பிராயத்தில் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். எப்படி யென்றால், மக்களுக்குப் பயத்தைக் காட்டியே—அதாவது பேய், பிசாசு, பூதம் என்பவை களைச் சொல்லி எப்படி மக்கள் பயப்படுத்தப்பட்டார்களோ, அதுபோலவேதான் மதத்தையும், சாத்திரங்களையும் கூறி மக்களைப் பயப்படுத்தி விட்டார்கள்.

மதத்திற்கும் சாத்திரங்களுக்கும் கடவுளை எஜமானனாக, மூல கர்த்தாவாக வைத்து உண்டாக்கினார்கள் என்றாலும், கடவுள் வேறு, மதம்-சாஸ்திரம் வேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனெனில், கடவுள் அறியாமையில் இருந்து தோன்றியதாகும்.

மதமும் சாத்திரங்களும் அயோக்கியத்தனத்திலிருந்து—அதாவது, மக்களை மடையர் களாக்கவும், பயப்படுத்தி அடிமைகளாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மீதும் உண்டாக்கப்பட்டவைகளாகும்.

உலக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட—குறிப்பிடத்தகுந்த மேல் நாட்டு அறிஞர்களாலேயே இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது, 'கடவுளைக் கற்பித்தவனை மன்னித்துவிடலாம்; ஏனெனில், அவன் மடையன்; அறிவில்லாத காரணத்தால் கற்பிக்க வேண்டியவனானான்.

ஆனால் மதத்தையும், சாத்திரங்களையும் (ஆத்மா, மோட்சம், நரகம்) கற்பித்தவன் அயோக்கியன். அவனை மன்னிக்கவே முடியாது. அவன் மக்களைப் பயப்படுத்த வேண்டியே இவற்றைக் கற்பித்து இருக்கிறான்' என்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

கடவுளைக் கற்பித்தவன், 'உலக உற்பத்திக்கு, நடத்தைக்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும்; அந்தக் கர்த்தாதான் கடவுள்' என்று உத்தேசத்தின் மீது உறுதிப்படுத்திச் சொல்லுகிறான்.

அதாவது, சந்தேகத்தின் பயனை (பெனிஃபிட் ஆஃப் டவுட்-Benefit of Doubt) கடவுளுக்குக் கொடுக்கிறான்.

ஆனால் மதமும் சாத்திரமும் அப்படி இல்லை. முழுப் பொய்யையே கற்பனை செய்து, மக்களை ஏய்ப்பதற்கென்றே, பயப்படுத்துவதற்கென்றே பாகுபடுத்தி மதத்தையும் சாத்திரத்தையும் அமைக்கிறான்.

இந்த அமைப்பிற்கு (இதை அமைப்பு என்பதற்கு) ஆதாரம் என்னவென்றால் பல மதங்கள், பல சாத்திரங்கள் இருப்பதும், அவை ஒன்றுக்கொன்று (முரண்பாடாக) நேர் மாறாக இருப்பதுமேயாகும்.

மற்றும், இப்படிக் 'கற்பித்தவர்கள்' என்பவர்கள் மனிதத் தன்மைக்கு மேம்பட்ட வர்கள் என்பதும், இந்து மத சாத்திரங்கள் இயற்கைப் பிரத்தியட்ச விதிகளுக்கு மாறுபாடாக இருப்பதும் மற்றொரு ஆதாரமாகும்.

இதை நாம், ஏன் குறை கூறுகிறோமென்றால்—இவை, அறிவை மாத்திரமல்லாமல் ஒழுக்கம், நேர்மை, அன்பு, அருள், ஒற்றுமை, சமநிலை முதலியவற்றைப் பாழ் செய்வதோடு, வளர்ச்சியையும் கெடுத்து, விஞ்ஞானத்தை மறைத்து, அஞ்ஞானத்தை வளர்த்து வருகிறது.

இதை உணர நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லை. 'நமது' மதத்தையும் சாத்திரங்களையும் எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

நம் (திராவிடர்) தமிழர்களாகிய மக்களுக்கு (கடவுள் உண்டா, இல்லையா என்பது வேறு விஷயம்; ஆனால்) மதமே இல்லை; இந்து மதம் நம் மதம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம். இதுவே ஒரு மாபெரும் 'இமயமலை அளவு' முட்டாள்தனமாகும். ஏன்? இந்து மதம் என்றால் என்ன? அதற்குப் பொருள் என்ன?

மதம் என்னும் சொல்லுக்கு கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம் என்பதற்கு உள்ள இலட்சணப்படி, ஆதாரப்படி—இலட்சியம், ஆதாரம், சரித்திரம் ஏதாவதுண்டா? இந்து மத சாத்திரம், வேதம் என்பதாக ஏதாவது இருக்கிறதா?

இந்து மதத்தைப் பார்ப்பனர் வேத மதம் என்கிறார்கள்; பார்ப்பனர் தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்கிறார்கள்; அதனால் அதை ஆரியமதம் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆங்கில அகராதிகளில்–இந்துமதம் என்றால் 'பிராமண மதமெ'ன்றும்; 'கிறிஸ்தவர்–முகமதியர் அல்லாதவர்களுடைய மதம்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விரிக்கில் பெருகும்; சுருக்கிக் கொள்கிறேன்.

இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம், சாத்திரம், புராண இதிகாசமே! இந்த மதத்தின்படி நாம் கீழானபிறவி, 4-வது, 5-வது சாதியாராவோம்! அதனால் மேற்கண்ட மத ஆதாரங்களைப் படிக்கத் தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம். வேத, சாத்திர, புராண, இதிகாச ஆதாரங்கள் பெரிதும் நம் மக்களை இழி குலமாக்கி, அயோக்கியராக்கிப் பல வழிகளிலும் அவமானப்படுத்தியுள்ளன.

ஆகவேதான், கடவுள் நம்பிக்கை, மதம், சாத்திரம், புராணம், இதிகாசம் ஒழிக்கப் பட்டே ஆகவேண்டுமென்று கூறுகிறோம்.

['விடுதலை'–தலையங்கம்—17-12-1969]

6. கடவுள் என்பது......?

கடவுள் என்பது முதன்முதல் யாரால் எப்போது சொல்லப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை. திராவிடர்கள் (தமிழர்கள்) ஆகிய நமக்கு ஆரியனால் புகுத்தப்பட்டது என்பதுதான் தெரிய வருகிறது.

நமக்கு (தமிழர்களுக்கு), ஆரியனுக்கு முன் கடவுள் இல்லை என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், கடவுள் என்பதற்குத் தமிழில் ஒரு சொல்லே இல்லை.

'கந்தழி' என்னும் ஒரு சொல் இருப்பதாகத் தமிழ்ப் புலவர்கள் கூறுகிறார்கள். என்றாலும், 'அது பொருளற்ற சொல்' எனத் தகுந்தபடிதான் அதற்கும் பொருள் கூறப் பட்டிருக்கிறது.

அதாவது, 'ஒரு பற்றுமற்று (உருவமற்றதாய்), அருவாய் தானே நிற்கும் தத்துவம் கடந்த பரம்பொருள்' என்ற பொருளைக் கொண்ட சொல்லாகும். தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை, சுபாவம், பலம், புத்தி முதலிய பல பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன. 'இவை கடந்த' என்றால் இல்லாதது, பொய்யானது என்றுதான் பொருள் மிஞ்சும்; நிலைக்கும்.

ஆகவே, தமிழன் 'கந்தழி' என்ற சொல்லைச் சொன்ன காலத்திலேயே அதற்குக் கடவுள் இல்லை என்ற பொருளைப் புகுத்தித்தான் உண்டாக்கி இருக்கிறான். தத்துவம், கடந்த என்பதில் தத்துவம் என்பது தமிழ்ச்சொல் அல்லவென்பது என் கருத்து.

ஆகவே, 'கந்தழி' என்ற சொல்லுக்குத் தமிழில் ஒரு பொருளும் கூறவில்லை. வடமொழியிலும், 'உண்மை அல்லாதது' என்ற பொருளைக் கூறிவிட்டு மற்றும் பஞ்சபூதம் போன்ற தமிழல்லாத சொற்களே அகராதியில் அடுக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும் தெய்வம், பகவான், ஈஸ்வரன், பராபரன் என்ற சொற்கள் தமிழல்ல என்பது எனது கருத்து.

ஆகவே, கடவுள் என்பதற்குத் தமிழில் சொல் இல்லை என்பது உறுதி.

கடவுள் என்ற சொல்லுக்கும் அகராதியில் குரு, அய்யர், வானவர், புத்தேள் என்பவைதாம் (பொருளாகக்) காணப்படுகின்றன.

புத்தேள் என்பதைத் தமிழாகக் கொண்டால், புத்தேள் என்பதற்கும் தெய்வம், புதுமை, புதியவர், புத்தாள் எனப் பொருள்கள் காணப்படுகின்றன.

ஆகவே, கடவுளுக்கு எப்படிப்பட்ட பொருள் காண்பதானாலும் வடமொழிப் பொருள்களே அல்லாமல் அதுவும் வானவர், தேவர்கள் போன்ற பொருள்களே அல்லாமல் இன்று மக்கள் கொண்டிருக்கும் கருத்துக்கு ஒரு சொல்—தமிழிலோ, வடமொழியிலோ இல்லை என்பது உறுதி.

கடவுள் என்பது தமிழனுக்கு மாத்திரமில்லை என்று நான் சொல்ல வரவில்லை; ஆரியனுக்கும் கடவுள் இல்லை.

ஆரியனுக்கு மூல ஆதாரம் வேதம்; அந்த வேதத்திற்குக் காலம் இருந்தாலும், அந்த சமீப காலத்தில் உண்டாக்கப்பட்ட வேதத்தில்கூட (ஆரியனுக்கு) கடவுள் தத்துவப்படி, கடவுள் காணப்படவில்லை; அதில் காணப்படுவதெல்லாம் தேவர்கள்தாம்; அந்தத் தேவர்கள் அனைவரும் இந்திரனுக்குக் கீழ்ப்பட்ட தேவர்கள்தாம். எனவே தமிழனுக்கோ, திராவிடனுக்கோ, ஆரியனுக்கோ கடவுள் என்பது இல்லவே இல்லை.

இருக்கும் கடவுள்கள் எல்லாம் தேவர்களில் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்தாம்.

அவர்களும் மிகமிகக் கீழ்த்தரமான தன்மையுடையவர்களே; அதாவது, மனிதத் தன்மையிலும் கீழ்த்தரமான குணங்களைக் கற்பிக்கப்பட்டவர்களேயாவார்கள்.

அவர்களில் இன்று தமிழன் கொண்டாடும், வணங்கும் கடவுள் என்பவைகளில் எல்லா மூலாதாரமாகச் சொல்லப்படும் கடவுள்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பெயர்கள் கொண்டவர்களேயாவர். அவர்கள் தனித் தனியானவர்கள் என்பதாகக் கருதியே அவரவர் பெயரால் மதமும், உயர்வு தாழ்வு சக்திகள் படைத்த சமயநூல் புராணங்களும் ஏற்பாடு செய்து பாவிக்கப்பட்டு வரப்படுகின்றன.

இந்தநிலை கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கடைநிலை என்று சொல்லப்படுவதாகும்.

ஏனென்றால், இம்மூன்று சமயத்தாரும், மூன்று கடவுள்களுக்கும் உருவம், ஆண்-பெண் தன்மை, இவைகளுக்கு மனிதத் தன்மை, மனித குணம்—அதுவும் மனிதனின் கீழ்த்தரமான குணங்கள் கற்பிக்கப்பட்டு அதன்படி நடந்து வருகிறவர்களாதலால், இந்த மூன்று சமய மக்களும் உலகினரால் காட்டுமிராண்டி மக்கள் என்று சொல்லத் தக்கவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல், கடவுள் நம்பிக்கையுள்ள உலகில் உள்ள மக்கள் யாவருமே மனித குணம் கற்பிக்கப்பட்ட கடவுளைத்தான் வணங்கி வருகிறார்களே தவிர, 'கடவுள் குணம்' என்பதானவற்றைக் கற்பித்த கடவுளை வணங்காதவர்களாகத்தாம் இருந்து வருகிறார்கள்.

மற்றும், கடவுளை நம்புகிற, வணங்குகிற மக்களில் ஒன்றுபோன்ற கருத்துடையவர்களும் யாரும் இலர்.

கடவுள் சொன்னதாக—கடவுளுக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும், கற்பிக்கப்படும் ஆதாரங்கள் எவையும் ஒன்றுபோல் இல்லை.

கடவுள் தன்மைகளும் அவைபோலவேதான் அவரவர் இஷ்டப்படி கற்பித்துக் கொள்ளப்படுகின்றன. கடவுள் என்பதாக ஒன்றோ, பலவோ இல்லை என்பதற்கு இந்த விஷயங்களே போதுமான ஆதாரங்களாகும்.

உலகில் இப்போது கடவுள் நம்பிக்கைக்காரர்கள் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறார்கள். இதற்குக் காரணம், மக்களுக்கு அறிவுத் தன்மை, ஆராய்ச்சித் தன்மை, சிந்திக்கும் துணிவு ஏற்படுவதும், வளர்ந்து வருவதுமேயாகும். அதாவது, இப்போது கடவுள் நம்பிக்கையின் அவசியம் சுயநலக்காரனுக்கும் அயோக்கியனுக்குந்தான் அவசியமாகிவிட்டது.

வணங்கும் தன்மை, அறிவற்ற மூடனிடம்தான் அதிகம் காணப்படுகிறது.

இன்று உலக மக்கள் பெரும்பாலோருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. ரஷ்யா, சீனா, ஜப்பான், சயாம், பர்மா, சிலோன் முதலிய பலபெரும் ஜனத் தொகை கொண்ட நாடுகள் 100-க்கு 100-ம், 100-க்கு 90-ம், 100-க்கு 75-ம் வீதம் கடவுள் நம்பிக்கை இல்லாத மக்களைக்கொண்ட நாடுகளாக ஆகிவிட்டன.

மற்றும், அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேல் நாடுகளில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சங்கம் ஏராளமாக ஏற்பட்டு, அவற்றிற்குக் கோடிக் கணக்கான மக்கள் அங்கத்தினர்களாக இருப்பதோடு, இலட்சம், பத்து இலட்சம் கணக்கில் நூல்கள் பிரசுரித்து உலகம் முழுவதும் பரப்பப்பட்டு வருகின்றன.

இதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாகவே அறிஞர்களால் மனித சமுதாய வளர்ச்சிக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு, சிந்தனை வளர்ச்சிக்குக் கடவுள் என்ற கருத்து பெரும் தடையாக, கேடாக இருக்கிறது என்ற கருத்து நாளுக்கு நாள் வளர்ந்து வருவதுதான்.

'ஞானிக்குக் கடவுள் இல்லை' என்பது, 2000 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட ஆத்திகப்பரப்பு நூல்களிலேயே காணப்படும் சொல்லாகும்.

ஞானி என்ற தன்மைக்கும், கடவுள் தன்மை கற்பிக்கப்பட்டுவிட்டபடியால்—ஞானம் ஞானி என்பதுபற்றிக் கடவுள் நம்பிக்கைக்காரர்கள், மூடநம்பிக்கைக்காரர்கள் சிந்திக் காமலேயே போய்விட்டார்கள்.

எண்ணெய் இருந்தால்தான் விளக்கு எரியும் என்பதுபோல சிந்தனை இருந்தால் தான் உண்மை விளங்க முடியும்.

'கடவுள், சிந்தனைக்கு உரியதல்ல. ஏனென்றால் கடவுள், சிந்தனைக்கும் மனத் துக்கும் எட்டாதவர்; மனம், வாக்கு, காயத்திற்கும் எட்டாதவர்' என்ற நிபந்தனையில் மனிதனுக்குள் கடவுளைப் புகுத்திவிட்டால், மனிதன் எப்படி அறிவு படைத்த ஜீவனாக இருக்கமுடியும்?

இப்போது உலகம் அறிவுத் துறையை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

சாதாரணமாக, நமது நாட்டில் இன்று ஆட்சிசெய்கிற அரசு, கடவுள் இல்லை என்ற கொள்கையுடைய பகுத்தறிவு ஆட்சி என்றால், அந்தத் தன்மையில் இந்த ஆட்சி ரஷ்யாவுக்கு அடுத்தபடியான ஆட்சியல்லவா?

மற்றும், நம்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபன ரூபமாய் இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் இயங்கிவருகிறதென்றால், கடவுள் இல்லை என்ற தன்மையில் அறிவு வளர்ச்சி, சிந்தனா சக்தி என்ற தன்மையில் முன்னேற்றமடைந்து வருகிறது என்பது, கல்லுப்போல் துலங்கவில்லையா? மற்றும், முதலாளித் தன்மை கொண்ட அய்ரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களில், முக்கிய நகரங்களில் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட கடவுளை மறுக்கும் சங்கங்கள் ஏராளமாக இருந்துவருகின்றன; மேலும் ஏற்பட்டு வருகின்றன என்றால் இதன் பொருள் என்ன?

ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் பாதிரிகளும், முல்லாக்களும், 'டூய்' என்றால் சாக்கடைக்குள் புகுந்து ஒளியும் பார்ப்பனர்களும்—அழியப் போகும், அழிந்துகொண்டு வரும் கடவுளை, அதுவும் இல்லாத கடவுளை 'நிறுத்தி வைத்து ஆணி அடிக்கிறோம்' என்றால், இதில் எப்படி அறிவுடைமை இருக்கமுடியும்?

மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் முயற்சியின் கணக்குப்படி இன்று 300 கோடி உலக மக்களுக்குள் 150 கோடிக்கும் குறைந்த மக்கள்தாம் 'கடவுள் நம்பிக்கைக்காரர்கள்' என்றும், மீதிப் பல கோடி மக்களிலும் முக்கால்வாசிப் பேர் பச்சை நாத்திகர் என்றும், மீதிப் பேர்கள் குழப்பக்காரர்கள் என்றும் மேல்நாட்டு ஆதாரங்களில் குறிப்பிட்டிருப்பதைக் கூறி இதை முடிக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—5-8-1972]

7. கடவுள் நம்பிக்கைக்காரர்கள் பற்றிய என் கருத்து

ஒரு தேவதாசியை விபச்சாரி என்று சொன்னதற்காக அவள் கோபித்துக்கொள்வது போலும்; ஒரு 'வக்கீலை' அவர் காசுக்குப் பேசுகிறவரேயொழிய, நேர்மைக்காகப் பேசுகிறவரல்லர் என்று சொன்னால் அவர் கோபித்துக்கொள்வது போலும்; ஒரு வியாபாரியைப் பொய் பேசுகிறவர் என்று சொன்னால் அவர் கோபித்துக்கொள்வது போலும்—கடவுள் நம்பிக்கைக்காரர்களை 'முட்டாள், அயோக்கியன், காட்டுமிராண்டி' என்று சொன்னால் அவர்கள் கோபித்துக்கொள்கிறார்கள்!

இதற்குக் காரணம் பெருவாரியான மக்கள் இந்த நிலைக்கு ஆளாகியிருப்பது தானாகும்.

இன்றைக்கும் நான் கடவுள் நம்பிக்கைக்காரர்களைக் கேட்கிறேன்; ரூபாய் பதினாயிரம் பந்தயம் கட்டிக் கேட்கிறேன்—அதாவது, 'சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதாக ஒன்றிருக்கிறது; அது சர்வ சக்தி, சர்வ வல்லமையுடையது என்பதை நான் என் மனம், மொழி, செய்கையால் நம்புகிறேன்; அதற்கேற்பவே நடந்துகொள்கிறேன்' என்று யாராவது ஒருவர் சொல்லட்டும்; சொல்ல முன்வந்து தன் நடத்தையைக் கொண்டு நிரூபிக்கட்டுமே பார்க்கிறேன்! அப்படி மெய்ப்பித்தால் ரூபாய் பதினாயிரம் தருகிறேன்; யாரிடம் வேண்டுமானாலும் கொடுத்துவைக்கிறேன் என்று கூறுகிறேன். யார் வருகிறார்கள்? எந்தப் பத்திரிகைக்காரர் பக்கத்தில் வரத் தயாராயிருக்கிறார்? எந்தப் பார்ப்பனர் வரத் தயாராயிருக்கிறான்?

வேறு யோக்கியமானவர்கள் யார் வேண்டுமானாலும் வரட்டும் என்று சவால் விடுகிறேன்.

இவ்விஷயத்தில் மக்கள் பெருவாரியாக முட்டாள்கள் என்கின்ற காரணத்தால் நினைத்த அனாமதேயமெல்லாம் இவ்விஷயத்தில் வாயை வைத்துக் கண்டபடி உளறினால்—கண்டபடி எழுதினால் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் என்பவர்கள் யோக்கியர்களாக, அறிவாளிகளாக ஆகிவிடுவார்களா?

சில காரியங்களில் மக்கள் பொய் சொல்லியாகவேண்டும்; சில காரியங்களில் மக்கள் அயோக்கியர்களாக ஆகித் தீரவேண்டும்; சில காரியங்களில் மக்கள் முட்டாள்களாகித் தீர வேண்டும்; அதுபோல்தான் கடவுள் விஷயத்தில் மக்கள் 'மூன்றும்' ஆகித் தீரவேண்டும். இது எனது 70, 75 வருடத்திய அனுபவம்; கொள்கை; பேசியும் எழுதியும் வருவதுமான விஷயமாகும். இது மாத்திரமா?

உலகில் கடவுள் சம்பந்தமான சர்ச்சைகள் 2, 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்துவருகின்றன.

கடவுளைப்பற்றிய பிரச்சாரம் செய்ய- பார்ப்பனர், அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள்; கிறிஸ்தவர், முஸ்லிம் ஆகியோர் ஸ்தாபனம் வைத்துப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்; கோயில், சர்ச், மசூதிகள் மூலமும் பண்டிகைகள் மூலமும் செய்கையில் பரப்பி வருகின்றார்கள். பார்ப்பனர் முதல் பலரும் கடவுளாலேயே, கடவுள் பிரச்சாரத்தாலேயே வாழ்ந்து வருகிறார்கள்; வயிறு வளர்க்கிறார்கள். இதற்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள்–வரும்படிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; பல செல்வர்கள் உதவி வருகிறார்கள். பாதிரி, முல்லா, சங்கராச்சாரி, குருமார், பண்டாரசன்னதி முதலிய பலர் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏராளமான புத்தகங்கள்–வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இலக்கியம் என்பதாக அனேக புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றின் பலனால் முட்டாள்கள், அயோக்கியர்கள், காட்டுமிராண்டிகள் இருப்பது மாத்திரமல்லாமல்–உற்பத்தியாகிக்கொண்டும் வருகிறார்கள்.

அறிவாளிகளாக, யோக்கியர்களாக இருப்பவர்கள் தங்கள் சுயநல காரியத்தைப் பார்த்துக்கொண்டு, இந்த முட்டாள்தனங்களைப்பற்றிச் சிந்திக்காமல் கவலையற்றிருக்கிறார்கள். கடவுள் பிரச்சாரகர்கள் அயோக்கியர்களும், மடையர்களுமானதால் காலித்தனமான–பலாத்காரமான காரியங்களில் ஈடுபட்டும் பல கொடுமையான கொலைபாதகங்களில் ஈடுபட்டும் மக்களைக் கொன்று குவித்து இருக்கிறார்கள்.

இதற்கு உதாரணம்—ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்கின்ற பல அயோக்கியர்களும், அவர்கள் சமணர்களையும், பவுத்தர்களையும் கொன்றுகுவித்த அயோக்கிய கொலை பாதகச் செயல்களுக்குத் தேவாரம், பிரபந்தம் முதலிய நூல்களுமே போதிய சான்றாகும்.

தொண்டரடிப் பொடியாழ்வார் என்கின்ற ஒரு வைணவப் பார்ப்பன அயோக்கியன், சமணர்களும் பவுத்தர்களும் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் ஆனதால் அவர்களது தலையை அறுப்பதே (வெட்டுவதே) அவசியமாகும் என்று பாடியிருக்கிறான்.

அந்தப்படி, ஏராளமான பவுத்தர்களின் தலையை வெட்டியும் இருக்கிறார்கள். இவை இன்று காஞ்சி, செய்யாறு முதலிய இடங்களில் கற்சிலைகளாகவுமிருக்கின்றன. இது போலவே சம்பந்தன் என்னும் ஒரு அயோக்கிய சைவப் பார்ப்பான், 'சமண, பவுத்தர்களின் பெண்களைக் கற்பழிக்க வேண்டும்' என்றும், பல அயோக்கியத்தனமாகவும் கொலை பாதகமாகவும் பாடியிருக்கிறான்.

இன்றும் சீர்காழி, மதுரை முதலிய இடங்களில் சமணரைக் கழுவேற்றும் நிகழ்ச்சி, பண்டிகையாக—உற்சவமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

இப் பாடல்கள் இன்றும் வைணவர்களாலும், சைவர்களாலும் பக்திப் பாடல்களாகப் பாடப்பட்டு வருகின்றன. மற்றும், கடவுள் நம்பிக்கையில்லாதவர்களை மிக இழிவுபடுத்திப் பாடப்பட்ட பாடல்கள் அனேகம் பாடப்பட்டு வருகின்றன; நூல்களும் விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் கடவுள் நம்பிக்கைக்காரர்களைப்பற்றிச் சொல்லப்படும் கருத்துக்கள்—அதுவும் உண்மையான கருத்துக்கள் எப்படித் தவறானவைகளாகக் கருதப்பட முடியும் என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—11-10-1969]

8. கடவுள் புரட்டை உணர வேண்டாமா?

மதத்தின் பேரால், (ஏன், கடவுளின் பேரால், என்றும் சொல்லலாம்) உலகில் உள்ள எல்லா மக்களும், எல்லா நாட்டிலும், மதங்களின் அவ்வக் காலங்களின்போது காட்டுமிராண்டிகளாய், மூட நம்பிக்கைக்காரர்களாய், சிந்தனையற்ற முட்டாள்களாகவே இருந்திருக்கிறார்கள்.

ஆரியர்கள், அவர்கள் இனத்தவர்களான மேல் நாட்டவரை எடுத்துக்கொண்டாலும் கடவுள்-மதம் விஷயமாக இன்று அவர்களும் நாமும் பங்குகொள்ளும் எந்தக் கருத்தும் சுமார் 4,000 அல்லது 5,000 ஆண்டுகட்கு முன் அவைகளுக்கென்றே சொல்லும்படியான சொற்கள் இருந்ததாகவும் தெரியவில்லை; 4,000 ஆண்டுகட்கு முன்னதாக என்று சொல்லும்படியான காலத்திலேற்பட்ட ஆரிய வேதம் என்னும் கற்பனைக் கோவைகளிலும் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ இன்று குறிப்பிடுவதைப் போன்ற சொற்களைக் காணவும் முடியவில்லை.

வேதம் என்பதில் காணப்படும் ஏதாவது 'கடவுள் தத்துவம்'கூட வேதத்திற்கு வியாக்கியானம் செய்தவர்களான சங்கரர், இராமானுசர், மாத்துவர் முதலிய மத குருமார் என்பவர்கள் தனித் தனியாக அவரவர்களுக்கென்று செய்துகொண்ட வியாக்கியானங்கள் கூட, கடவுளைப்பற்றி ஒன்றுக்கொன்று பொருந்தாத வகையில் உள்ளன. அந்தக் கருத்து வேற்றுமைகள்தாம் இன்று சங்கர, இராமானுச, மாத்துவ மதங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

இவர்கள் மூவரல்லாத ஒரு பொது மனிதன், வேதத்திற்கு இன்று வியாக்கியானம் செய்வதானால், வேதத்தில் கடவுள்களைக் காட்டவோ, காணவோ முடியாது.

வேதத்தில் பஞ்ச பூதங்களைத்தாம் காணலாம். ஆனால், அந்தப் பூதங்களுக்கு அக்காலக் காட்டுமிராண்டி மவுடீகத்திற்கேற்ப ஒவ்வொரு எஜமானர்களை ஏற்படுத்தி, பிறகு அவர்களே அவைகளாக ஆக்கப்பட்டு, அதனால் அவர்கள் தேவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்திரதேவன், வாயுதேவன், வருணதேவன், அக்கினிதேவன், பூமிதேவன் என்று இவை முறையே ஆகாயம், வாயு, அப்பு, தேயு, பிருதவி என்கிறவையான பஞ்ச பூதங்களைக் குறிப்பிடுபவையேயாகும். இவைகளைச் சேர்த்துவைக்கும் இயற்கைக்குப் பலவாறு பெயரிட்டுக் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வைந்தின் கூட்டினால் ஏற்பட்ட உலகைத்தான் பிரபஞ்சம் என்று பெயரிட்டு அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இன்று மதம்—கடவுள் 100-க்கு 97 பேரான 'இந்து' பாமர, பண்டித, பணக்கார மக்களை என்ன செய்திருக்கிறது? எப்படி நடத்துகிறது? என்பதைப்பற்றி எவருக்குமே கவலையில்லை என்பதுடன், மானமும் இல்லாமல் செய்துவிட்டதைச் சிந்திக்கவேண்டாமா?

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

9. கடவுள் கதை

கதை சொல்லுகிறவன்: ஒரே ஒரு கடவுள் இருந்தார்.

கதை கேட்பவன்: ஊம்; அவர் எங்கே இருந்தார்?

கதை சொல்லுகிறவன்: ஆரம்பத்திலேயே அதிகப் பிரசங்கமாய்க் கேட்கிறாயே! நான் சொல்லுவதை, ஊம் என்று கேட்டால்தான் இந்தக் கதை சொல்லுவேன்.

கதை கேட்பவன்: சரி, சரி. சொல்லு, ஒரே ஒரு கடவுள். அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: ஒருநாள் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

கதை கேட்பவன்: சரி; எப்போது?

கதை சொல்லுகிறவன்: பார்; மறுபடியும், இரட்டை அதிகப் பிரசங்கமாய்க் கேட்கிறாயே!

கதை கேட்பவன்: சரி, சரி; தப்பு—சொல்லப்பா சொல்லு.

கதை சொல்லுகிறவன்: உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று முடிவு கொண்டார்.

கதை கேட்பவன்: அதற்குமுன் உலகம் இல்லைபோல் இருக்கிறது; உலகம் இல்லாமலே ஒருநாள் உட்கார்ந்துகொண்டு யோசித்திருக்கிறார் போலிருக்கிறது. அந்தரத்தில் உட்கார்ந்திருப்பார், பாவம்! (என்று நினைத்துக்கொண்டு, கொஞ்ச நேரம் பொறுத்து) சரி; அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: என்ன, இந்த மாதிரி—நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்காமல் எங்கெங்கேயோ யோசனையாய் இருக்கிறாயே!

கதை கேட்பவன்: இல்லை; நீ சொல்லுகிறபோதே சில சந்தேகங்கள் தோன்றின. அதைக் கேட்டால் கோபித்துக்கொள்ளுகிறாய்; அதிகப் பிரசங்கி என்று சொல்லி விடுகின்றாய். ஆதலால், மனத்திலேயே நினைத்துச் சமாதானம் செய்துகொண்டேன்.

கதை சொல்லுகிறவன்: அப்படியெல்லாம் சந்தேகம்கூடத் தோன்றக்கூடாது; கதை, பாட்டிக் கதையல்ல; கடவுள் கதையாக்கும்! இதை வெகு பக்தி சிரத்தையுடன் கேட்கவேண்டும். தெரியுமா?

கதை கேட்பவன்: சரி; அப்படியே ஆகட்டும்; சொல்லு பார்ப்போம்.

கதை சொல்லுகிறவன்: எதிலே விட்டேன்? அதுகூட ஞாபகமில்லை, உன் தொந்தரவினால்.

கதை கேட்பவன்: சரி, கோபித்துக்கொள்ளாதே. நீ விட்டது எதிலே என்றா கேட்கிறாய்? இரு; யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்.

ஒரே ஒரு கடவுள்; அவர், ஒருநாள் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது என்று யோசித்தார்; உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று எண்ணினார் என்பதில் விட்டாய். அதில் தொட்டுக்கொள். என்னை அதிகப் பிரசங்கி என்றாய்; எனக்காவது ஞாபகம் இருக்கிறது; மகா பக்தனாகிய உனக்கு மறந்து போகிறது—பாவம்! அப்புறம் சொல்லு.

கதை சொல்லுகிறவன்: பாவம், என்ன இழவு; உன்னுடைய தொல்லையில் எதுதான் ஞாபகமிருக்கிறது? அப்புறம் என்ன பண்ணினார் என்பதுகூட மறந்து போய் விட்டது. யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்; பொறு. (சற்று யோசித்து) முதலில்—'வெளிச்சம் உண்டாகக் கடவது' என்று சொன்னார்.

கதை கேட்பவன்: இருட்டில் உட்கார்ந்து கொண்டா இவ்வளவும் நினைத்தார்? பாவம்—கடவுளுக்கு எவ்வளவு பிரயாசை நம்மால்? அவர் கருணாநிதி என்பதற்கு இதை விட என்ன ருசு வேண்டும்?

கதை சொல்லுகிறவன்: அதையெல்லாம் நீ தெரிந்து கொள்ளுவதற்குத்தானே இந்தக் கதை சொல்லுகிறேன். இந்த மாதிரி கவனமாய்க் கேள்.

கதை கேட்பவன்: சரி, சரி; சொல்லு; உடனே வெளிச்சம் உண்டாய்விட்டதாக்கும்; கடவுளுக்கு ஏதோ போட்டி இருக்கும் போலிருக்கிறது.

கதை சொல்லுகிறவன்: என்ன போட்டி?

கதை கேட்பவன்: இல்லையப்பா; வெளிச்சத்தைத்தான் கடவுள் சிருஷ்டித்தார். அதற்கு முன் இருந்த இருட்டை—எவனோ அயோக்கியப் பயல் கடவுளுக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டுமென்று, போட்டிக்காக சிருஷ்டித்துவிட்டு ஓடிப்போய்விட்டான் போலிருக்கிறது. கண்டால் நான் அவனை என்ன செய்வேன் தெரியுமா?

கதை சொல்லுகிறவன்: தொலைந்து போகிறது; அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாதே. சொல்லுவதைக் கேள்!

கதை கேட்பவன்: சரி; சொல்லு!

கதை சொல்லுகிறவன்: அப்புறம்—'மேடு பள்ளம் எல்லாம் சமம் ஆக வேண்டும்' என்று கருதினார்; அதுபோலவே ஆயிற்று.

கதை கேட்பவன்: கடவுளுக்கு முன்னால் இருந்த மேடு பள்ளங்களை யெல்லாம் சமன் ஆக வேண்டும் என்று சொன்னாராக்கும்; அதெல்லாம் சமமாகிவிட்டதாக்கும். கடவுள்—நல்ல கடவுள்! எவ்வளவு ஞானமும், கருணையும் உடைய கடவுள்? மேடு பள்ளம் இருந்தால் நம்முடைய கதி என்ன ஆவது? இன்று போல் சமுத்திரமும், மலையும், குழியும், குன்றுமாக அல்லவா ஆகியிருக்கும்! ஆதலால் கடவுள் நல்ல வேலை செய்தார்.

ஆனால், அப்புறம் எவனோ புறப்பட்டு மறுபடியும் பழையபடி இருக்கட்டும் என்று மேடும் பள்ளமும், குழியும் குன்றும் ஏற்படும்படி செய்துவிட்டான் போலிருக்கிறது; இருக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. கடவுள் செய்த நன்மைகளை நினைத்து மகிழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோம். அப்புறம் என்ன செய்தார்?

கதை சொல்லுகிறவன்: அப்புறம், அதாவது வெளிச்சம் உண்டாகி மேடுபள்ளம் நிரவப்பட்ட பிறகு—மறுபடியும் யோசித்தார்.

கதை கேட்பவன்: சரி; யோசித்தார்.

கதை சொல்லுகிறவன்: அதற்குள் ஒரு நாள் முடிந்துபோய்விட்டது. அடுத்த நாள்—அதாவது இரண்டாவது நாள், 'காற்று உண்டாகக் கடவது' என்று சொன்னார்; உடனே காற்று உண்டாகிவிட்டது.

கதை கேட்பவன்: பிறகு என்ன செய்தார்?

கதை சொல்லுகிறவன்: அதற்கும் ஒரு நாள் ஆகிவிட்டது. பிறகு மூன்றாம் நாள், 'பூமி உண்டாகக் கடவது' என்று நினைத்தார்; பூமி உண்டாயிற்று. அன்றே, 'சமுத்திரம், செடிகள் உண்டாகக் கடவது' என்று நினைத்தார்; உடனே சமுத்திரம், செடிகள் உண்டாயின.

கதை கேட்பவன்: பிறகு?

கதை சொல்லுகிறவன்: இதற்குள் மூன்று நாட்கள் முடிந்துவிட்டன. - நான்காம் நாள் உட்கார்ந்துகொண்டு யோசித்தார்—யோசித்தார்—ரொம்பக் கஷ்டப்பட்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

கதை கேட்பவன்: அய்யோ, பாவம்! கடவுள் நமக்காக எவ்வளவு பாடுபட்டார்; மனிதர்களுக்கு நன்றி விசுவாசம் இருக்கிறதா? போனால் போகட்டும்; அப்புறம் என்ன செய்தார்? சொல்லு சீக்கிரம்!

கதை சொல்லுகிறவன்: அப்புறம் நான்காம் நாள் ஒரு முடிவுக்கு வந்தார். என்ன முடிவுக் தத் தெரியுமா? 'சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவைகள் உண்டாக வேண்டும்' என்று கருதி—'ஒரே அடியாய் இவ்வளவும் உண்டாகக்கடவது' என்று சொன்னார்; உடனே உண்டாகிவிட்டன.

கதை கேட்பவன்: சரி; சரி. இப்போது புரிந்தது; அந்தக் கடவுளின் பெருமை. நான் முன்பு சந்தேகப்பட்டதும், குறுக்குக் கேள்வி போட்டதும் அதிகப் பிரசங்கித்தனம் என்பது வெளியாயிற்று.

கதை சொல்லுகிறவன்: பார்த்தாயா, நான் அப்போதே சொல்லவில்லையா? கடைசிவரை பொறுமையாய்க் கேட்டால் எல்லாச் சந்தேகமும் விளங்கிவிடும் என்று. எப்படி விளங்கிற்று? சொல்லு பார்ப்போம்.

கதை கேட்பவன்: அந்தக் கடவுளின் பெருமை எனக்கு எப்படி விளங்கிற்று என்றால்—பூமி உண்டாவதற்கு முன்பே மேடு பள்ளத்தையெல்லாம் சமன் செய்தது ஒன்று; மற்றும் சூரியன், பூமி ஆகியவை உண்டாவதற்கு முன்பே நாட்கள் கணக்கு எண்ணவும், முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் கண்டுபிடிக்கவும் முடிந்ததுபார்—இது எவ்வளவு அற்புதமான செய்கை! அப்புறம் மேலே சொல்லு. மிகவும் ருசிகரமாகவும் மகிமை பொருந்தியதாகவும் இருக்கிறது—இந்தக் கடவுள் கதை.

கதை சொல்லுகிறவன்: அதற்குள் என்ன தெரிந்து கொண்டாய்? இன்னும் கேள்—எவ்வளவு அதிசயமாயும் ருசியாயும் இருக்கும் பார்! அப்புறம் அய்ந்தாவது நாள் ஆயிற்று. 'மீன்களும், பட்சிகளும் உண்டாகக்கடவது' என்றார்; உடனே ஆகிவிட்டன.

கதை கேட்பவன்: இத்தனை கோடி கோடி கோடி மீன்களும் ஒரே நாளில் ஆய் விட்டன என்றால் கடவுள் சக்தியும் பெருமையும் எப்படிப்பட்டது பார்! அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: அப்பறந்தான் விசேஷமான வேலை செய்கிறார். அதாவது ஆறாவது நாள் உட்கார்ந்து யோசித்து, யோசித்துப் பார்த்தார்; ஒரு முடிவுக்கு வந்து, 'மிருகங்களும் மனிதர்களும் உண்டாகக் கடவது' என்றார்; உடனே மிருகங்களும் மனிதர்களும் உண்டாகி விட்டன.

கதை கேட்பவன்: அப்பாடா! கடவுள் வெகு பிரயாசைப்பட்டிருக்கிறாரே, ஒரு வாரம் போல்! 6 நாள் விடாமல் கஷ்டப்பட்டு வெளிச்சம், சமம், காற்று, பூமி, சமுத்திரம், செடிகள், சூரியன், நட்சத்திரம், சந்திரன், மீன்கள், பட்சிகள், மிருகங்கள், மனிதர்கள் ஆகிய எவ்வளவு பண்டங்களையும், ஜீவன்களையும் சிருஷ்டித்திருக்கிறார்! என்ன கஷ்டம்? இதற்காக அவருக்குக் களைப்பு, இளைப்பு ஏற்படவில்லையா?

கதை சொல்லுகிறவன்: ஓடாதே—சொல்லுகிறேன் கேள். நமக்கு இருக்கிற புத்தி கடவுளுக்கு இருக்காதா? ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக்கொண்டார்; அதனால்தான் இப்போதும்கூட ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் ஆகக் கருதப்படுகிறது.

கதை கேட்பவன்: சரி; புரிந்தது. கடவுள் தயவினால்—வேலை செய்யாதவன்கூட இப்பொழுது ஞாயிற்றுக்கிழமை ஓய்வெடுத்துக் கொள்கிறான். கடவுள் எவ்வளவு கருணை உடையவர்? சரி; அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: மனிதரைக் கடவுள் சிருஷ்டித்தாரென்றால் எப்படிச் சிருஷ்டித்தார் தெரியுமா?

கதை கேட்பவன்: அதைக் கேட்கவேண்டும் என்றுதான் நினைத்தேன். நீ அதிகப் பிரசங்கிக் கேள்வி என்று சொல்லிவிடுவாயே என்று விட்டுவிட்டேன். ஆனாலும், நல்ல வேளையாய் நீயே சொல்லப் புறப்பட்டுவிட்டதால் அதுவும் அந்தக் கடவுள் செயலாகத்தான் இருக்கவேண்டும்; சொல்லு, சொல்லு.

கதை சொல்லுகிறவன்: முதல் முதலில் ஒரே ஒரு மனிதனைச் சிருஷ்டித்தார்; பிறகு அவனுடைய விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அந்த எலும்பிலிருந்து ஒரு பெண்ணைச் சிருஷ்டித்து இரண்டுபேரையும் 'ஷோக்காக' ஒரு நந்தவனத்தில் உலவச் சொன்னார். அந்த நந்தவனத்தில் சில பழச்செடிகள் இருந்தன. அந்தப் பழச்செடிகளில் ஒரு பழச் செடியின் பழத்தைச் சாப்பிடக்கூடாது என்று கடவுள் அந்த ஆண், பெண் இருவருக்கும்

சொல்லிவைத்தார். கடைசியாக அந்த ஜோடி—கடவுள் வார்த்தையைத் தட்டி விட்டு, பிசாசு வார்த்தையைக் கேட்டு அந்தப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டது.

கதை கேட்பவன்: நில்லு, நில்லு! இங்கே எனக்குக் கோபம் வருகிறது—அந்தக் கோபம் ஆறினால்தான் மேற்கொண்டு கதை கேட்கமுடியும்.

கதை சொல்லுகிறவன்: என்ன கோபம்?

கதை கேட்பவன்: அதெப்படி—அங்கே சாத்தான் வந்தான்? அவனை யார் சிருஷ்டித்தது? மேற்படி ஆறு நாள் வேலையிலும், கடவுள் சாத்தானைச் சிருஷ்டிக்கவே இல்லையே! அந்தப் பயலை வேறு எந்தப் பயலோ சிருஷ்டித்தல்லவா கடவுளுடன் போட்டி போட, அந்த நந்தவனத்துக்கு அனுப்பியிருக்கவேண்டும்? அந்தப் பயலைக் கண்டுபிடித்து அவனுக்குத் தகுந்த புத்தி கற்பிக்க வேண்டாமா? ஒரு சமயம், கடவுளும் தனது பெருந் தன்மையில்—அந்தச் சாத்தானையும் அவனைச் சிருஷ்டித்த மற்றொரு சாத்தானையும் சும்மா விட்டிருப்பார். நமக்குப் புத்தியும் ரோசமும் வேண்டாமா? அந்தச் சாத்தானையும் அவனைச் சிருஷ்டித்தவனையும் கண்டுபிடித்துத் தகுந்தபடி புத்தி கற்பிக்காவிட்டால் நமக்கும் மற்ற மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் என்னுடைய ஆத்திரம். இதற்கு ஒரு வழி சொல்லு—எனக்குக் கோபம் வந்து வந்து போகிறது.

கதை சொல்லுகிறவன்: ஆத்திரப்படாதே, நான் சொல்வதைப் பூராவும் கேள். பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

கதை கேட்பவன்: சரி சொல்லித் தொலை! நமக்கென்ன—மானமா, வெட்கமா, அறிவா–என்ன இருக்கிறது? எவன் வந்து என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு, சாமி மாடு மாதிரி தலையை ஆட்டவேண்டியதுதானே! அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: அந்தப் பழத்தைச் சாப்பிட்ட இருவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

கதை கேட்பவன்: ஆளுக்கு ஒரு குழந்தையா?

கதை சொல்லுகிறவன்: இரண்டு பேருக்கும் சேர்ந்து இரண்டு குழந்தைகள் பிறந்தன.

கதை கேட்பவன்: சரி; அப்புறம் என்ன ஆயிற்று?

கதை சொல்லுகிறவன்: என்ன ஆவது? பிசாசு பேச்சைக் கேட்டதால் பிறந்த பிள்ளை, யோக்கியமாக இருக்குமா? அவைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு —இளையது மூத்ததைக் கொன்றுவிட்டது.

கதை கேட்பவன்: கலிகாலமல்லவா? 'மூத்தது மோழை இளையது காளை'— கொல்லாமல் இருக்குமா? அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: இளையவனை, கடவுள்—'உன் அண்ணன் எங்கே?' என்று கேட்டார். இளையவன், 'எனக்குத் தெரியாது' என்று சொன்னான். உடனே கடவுள் கோபித்துக்கொண்டு அந்த ஆதி ஆண்–பெண் ஆகியவர்களிடத்தில் மறுபடியும் ஒரு குழந்தை உண்டாகும்படி செய்தார்.

கதை கேட்பவன்: எப்படியோ செய்தார்—அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: இதற்குள்ளாக கொச, கொசவென்று குழந்தைகள் பெருகி விட்டன; இவைகள் எல்லாம் அயோக்கியர்களாக இருந்தன. இவைகளில் ஒன்று தவிர மற்றவைகள் எல்லாம் இறந்து போயின.

கதை கேட்பவன்: அய்யய்யோ! அப்புறம் கடவுள் என்ன செய்தார்?

கதை சொல்லுகிறவன்: என்ன செய்தார்...! மிஞ்சின குழந்தையை ஒரு கப்பல் தயார் செய்யச் செய்து—அதில், கடவுள் முன் உற்பத்தி செய்த பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு தண்ணீரில் மிதக்கச் சொன்னார். அந்தப்படியே மிதந்தான்; அந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய மழை பெய்து எங்கும் பிரளயமாக ஆகி உலகமே அழிந்துவிட்டது. அந்தக் கப்பல் மாத்திரம் மிஞ்சிற்று. மீதியான கப்பலினாலும்—அதிலிருந்தவர்களாலும் இப்பொழுது காணப்படுகிற உலகமும் அதிலுள்ள சகலமும் உண்டாயின.

கதை கேட்பவன்: கப்பலில் சந்திரன், சூரியன், நட்சத்திரம் முதலிய எல்லாம் ஏற்றப்பட்டு எல்லாம் மூழ்கிப் போச்சாக்கும்.

கதை சொல்லுகிறவன்: ஆம்; எல்லாம் அடியோடு மூழ்கிவிட்டன.

கதை கேட்பவன்: போதுமப்பா; இன்னும் இதற்குமேல் சொன்னால், என்னால் கேட்கமுடியாது. நல்ல தங்கமான கதை இது.

கதை சொல்லுகிறவன்: சரி, அப்படியானால் இப்பொழுது நிறுத்திவிட்டு, மற்றொரு நாளைக்கு, இன்னொரு கடவுளுடைய கதையை நான் சொல்லுகிறேன். நீ கேள்!

['சித்திர புத்திரன்' உரையாடல்—'பகுத்தறிவு' மலர் 2. இதழ் 1.-1936]

10. கடவுள் பக்தி

உலகில் மனிதனுக்குத்தான் கடவுள் கற்பிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, மற்ற ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு தாவரங்களுக்கும் கடவுள் என்கின்ற உணர்ச்சியே கிடையாது. ஆனால், அவையெல்லாம் மனிதர்களைப் போலவே தோன்றி, வாழ்ந்து, செயல்பட்டு, அழிந்து மாய்ந்து போகின்றன.

தோன்றி, வாழ்ந்து, அழிந்து, மாய்ந்து போவதில் மனிதர்களுக்கும், மற்ற ஜீவராசி, புல், பூண்டு, தாவரங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் எவ்வித மாறுதலும் காணமுடிவதில்லை.

பிறவியில் இயற்கையால் உள்ள பேதங்களால் சில மாறுதல்களைக் காண்கிறோம். அம் மாறுதல்களின் அடிப்படையில் பேதம் எதுவும் காண்பதற்கில்லை.

ஜீவ நூல், ஜீவ ஆராய்ச்சி வல்லுனர்கள் ஆதியில், அதாவது உலகம் ஏற்பட்ட, தோன்றிய காலத்தில் மனிதனும், மற்ற மிருகாதி ஜீவப் பிராணிகளும் ஒன்றுபோலவேதான் நடந்து வாழ்ந்துவந்தன என்று குறிப்பிடுகிறார்கள்.

மனிதனுக்கு மற்ற ஜீவராசிகளைவிட அறிவுத் துறையில் சிறிது மாற்றம் இயற்கையில் இருந்து வருகிற காரணத்தால், மனிதனுக்கு ஆசைப் பெருக்கெடுத்து வாழ்க்கையில் பெரும் கவலைக்கு ஆளாகி, அதனால் துக்க சுகத்திற்கும் ஆளாகி உழலுகிறான். ஆசையும் மடமையும் சேர்ந்தே மனிதனுக்குக் கடவுள் கற்பிக்கப்பட்டுப் புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கெடுத்துக்கொண்டு, கவலைக்கும், துக்க-சுகத்திற்கும் ஆளாகி அழிகிறான்.

மனித சமுதாயத்தில் கடவுள் கற்பனை புகுத்தப்படாமலிருந்தால், மனிதர் நிலையே இன்று வேறாக இருக்கும்.

அதாவது, கவலையற்ற-துக்கமற்ற வாழ்வு வாழும்படியான நிலையை மனிதன் எய்தி இருப்பான்.

இன்று கவலையும் துக்கமும் இல்லாத மனிதனைக் காண்பதே அரிதாயிருக்கிறது. எந்த உயர் நிலையில் இருப்பவனுக்கும் கவலையும், துக்கமும் குடிகொண்டிருக்கிறது. கடவுள் எண்ணத்தை ஒழித்தவர்களுக்குக் 'கடவுள் இல்லை, எல்லாம் இயற்கை' என்று

எண்ணியிருப்பவர்களுக்குத் துக்கம், கவலை இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களைத்தான் ஞானிகள்—முற்றும் துறந்த மெய்ஞ்ஞானிகள் என்று சொல்லுவார்கள். அந்த நிலையை மனிதன் எய்துவது எளிதல்ல. ஞானம் தோன்றும்; துறவு தோன்றும். தோன்றியவன் உலகில், மக்களிடையில் வாழ்வதால், அடிக்கடி சறுக்கி விழுந்து, கவலைக்கும் துக்கத்திற்கும் ஆளாகி விடுகிறான். என்றாலும் நாம் அறியாமல், நமக்குத் தெரியாமல் யாராவது ஒரு துறவி இருந்தாலும் இருக்கலாம்.

'மோட்சம்' என்ற சொல்லுக்கும் 'முக்தி' என்ற சொல்லுக்கும் உண்மையான கருத்து (அர்த்தம்) கவலையற்ற தன்மை, துக்கமற்ற தன்மை என்றுதான் பொருள். மோட்சம் (அல்லது முக்தி)—துக்க நாசம். இந்த நிலை கடவுள் (ஒருவர் அல்லது பலர்) இருக்கிறார் என்கின்ற எண்ணமுடையவனுக்கு என்றுமே தோன்றாது.

எவ்வளவுக்கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் பதிகிறதோ—உடைத்தானவனாய் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையும் கொண்டவனாகத்தான் இருப்பான்; பேராசைக்காரனாகத்தான் இருப்பான். பொதுவாகவே இன்று பார்ப்போமேயானால், கடவுள் பக்தன், கடவுளை வணங்குகிறவன்—அவன் முட்டாளானாலும், அறிவாளியானாலும் எதற்காக வணங்குகிறான்? என்ன எண்ணத்தில் வணங்குகிறான்? ஏதோ ஒரு வேண்டுகோளின் மீதுதானே—எதையோ எதிர்பார்த்து, ஆசைப்பட்டுத்தானே வணங்குகிறான்?

'எனக்கு ஒன்றுமே வேண்டாம்' என்று சொல்பவனாய் இருந்தாலும், 'உன் பாதாரவிந்தம் வேண்டும்' என்றாவது சொல்லித்தானே கும்பிடுவான்? இவன் யாருக்குச் சமம் என்றால் 'எனக்குப் பின்புறம்—பிடரியில் ஒரு கண் இருக்கவேண்டும்' என்று கடவுளை வணங்குகிறவனுக்குச் சமமானவன்தானே!

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி, வணக்கம், பூசை, தொழுகை, பிரார்த்தனை முதலியவை எல்லாம்? ஒன்றும் வேண்டாதவனுக்குக் கடவுளிடம் என்ன வேலை?

அதிலும் தவறு செய்தவன், மோசடி செய்தவன், செய்கிறவன், பேராசைக்காரன் ஆகியவர்களுக்குத்தான்—கடவுள் பக்தி, பூசை முதலியவை அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

எனக்குச் சுமார் பத்து ஜெயில்களில் இருந்த அனுபவம் உண்டு. கொலைக் கைதி முதல் எல்லாக் கைதிகளும் அவனவன் அறையில் ஏதாவது ஒரு சாமி படம், சிலர் ஏதாவது ஒரு புராணம், 'பக்திநூல்' வைத்து, பூசை, பிரார்த்தனை செய்துகொண்டு இருப்பதைத்தான் பார்த்தேன்.

இராஜமுந்திரி (கோதாவரி) ஜெயிலில் ஒரு கைதி—கொலை செய்தவன்; ஆயுள் தண்டனை அடைந்தவன். அவன் காலை 10 மணிக்குக் குளித்துவிட்டு, அரைமணிநேரம் ஒற்றைக் காலில் நின்று, கைகளைத் தலைக்குமேல் தூக்கிக் கூப்பிக் கும்பிட்டுக் கொண்டு, எதையாவது சொல்லிக்கொண்டே நிற்பான். அவன் படித்தவன்; கொஞ்சம் பணக்காரனும் கூட. எதற்காக இவ்வளவு பக்தி, பூஜை என்று கேட்டதற்கு, 'சீக்கிரம் விடுதலையாவதற்கு' என்று சொன்னான். இப்படி எத்தனையோ கைதிகள் குளித்தவுடன் சாம்பலைப் பூசிக் கொண்டு சாமி கும்பிடுவதைப் பார்த்தேன்.

இலஞ்சம் வாங்கும் சைவன், இலஞ்சம் வாங்கும் வைணவன், இலஞ்சம் வாங்கும் முஸ்லிம், இலஞ்சம் வாங்கும் கிறிஸ்தவன் முதலிய இவர்கள்—பெரிதும் பூசை, வணக்கம், தொழுகை, பிரார்த்தனை இவைகளில் மிகக் கண்டிப்பாக—தவறாமல் நடந்துகொள்கிறார்கள்.

அதிக பக்தி, பூசை, தானம், தர்மம், உபயம், கட்டளை உள்ள வியாபாரிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! ஆகவே, மனிதனிடம் கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி

இருப்பதெல்லாம் ஆசை காரணந்தானேயொழிய, மனிதனை ஒழுக்கமுடையவனாக்கவோ, மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்யவோ அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டுமாய் வேண்டுகிறேன்.

[நூல் : 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

11. மனிதன் எதற்காகக் கடவுளை வணங்குகிறான்?

உலகில் மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வணக்கமும், கடவுள் பக்தியும், கடவுள் தொண்டும் எப்படி ஏற்படுகின்றன? ஏன் செய்யவேண்டியதாகிறது?

இவற்றை, இவற்றில்பட்ட ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டியது பகுத்தறிவுள்ள மனிதனின் கடமையாகும். முதலாவதாக, மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கை எப்படி உண்டாகிறது?

தானாகவே ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் நம்பிக்கை அவன் பிறந்தபோதே உண்டாகிறதா? கடவுள் நம்பிக்கையுடனேயே பிறக்கிறானா? அல்லது, மனிதனுக்குக் குழந்தைப் பருவத்திலேயே கடவுள் நம்பிக்கை புகுத்தப்பட்டதால் ஏற்படுகிறதா? என்பதைச் சிந்திக்கவேண்டும்.

உலகிலேயுள்ள கோடானுகோடி யானை முதல் கிருமி ஈறாக உள்ள ஜீவராசிகளில் மனிதனைத் தவிர, அதுவும் மனிதரிலும் பல பேர்களைத் தவிர, மற்ற எந்த ஜீவராசிக்கும், கோடிக்கணக்கான மனித ஜீவனுக்கும் கடவுள் நம்பிக்கை என்பது அறவேயில்லை. மனிதரிலும், உலகில் பகுதிப்பட்ட மனிதருக்கும் கடவுள் நம்பிக்கை புகுத்தப்படுகிறது, கற்பிக்கப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், கடவுள் நம்பிக்கை உள்ள மக்கள் எல்லோருமே ஒரே மாதிரியான கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். எப்படியெனில், கடவுள் நம்பிக்கைக்காரர்கள் ஒரே மாதிரியான, ஒரே பெயருள்ள, ஒரே மாதிரியான எண்ணிக்கை கொண்ட, ஒரே மாதிரி உருவங்கொண்ட கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்; ஒரே மாதிரி குணங்கொண்ட கடவுள் நம்பிக்கைக்காரர்களும் அல்லர்; ஒரே மாதிரியான கடவுள் தன்மை, ஒரே மாதிரியான கடவுள் சக்தி, ஒரே மாதிரியான கடவுள் செயல் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமல்லர்.

இதற்குக் காரணமென்ன? கடவுள் நம்பிக்கையும், அதன்மேல் சொல்லப்பட்ட பலவாறான தன்மைகளும் மனிதனுக்கு இயற்கையாய்த் தானாகத் தோன்றாமல், மற்றவர்கள் கற்பிப்பதாலும், கற்பிக்க நேருவதாலும், சூழ்நிலையாலும், தான் அனுசரிக்கும்—தான் கட்டுப்பட்ட மதத்தாலும், மத ஆசாரங்களாலும், மதக் கற்பனை, மதக் கட்டுப்பாடு என்பவைகளாலுமே ஏற்படுவதால்—இவைபற்றிய விஷயங்களில் ஒன்றுபோல் நம்பிக்கை கொள்ள முடிவதில்லை.

மேற்கண்ட கருத்துக்கள் சாதாரணமாகக் கிறிஸ்துவ மதக்காரனுக்கு ஒருவிதம்; இஸ்லாம் மதக்காரனுக்கு ஒருவிதம்; இந்துமதக்காரனுக்கு ஒருவிதம்; இந்து மதத்திலேயே சைவனுக்கு ஒருவிதம்; வைணவனுக்கு ஒருவிதம்; சைவ, வைணவத்திற்குள்ளாகவே பல பிரிவுகள்; அப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதம். மற்றும், பல காரணங்களால் பலருக்குப் பல மாதிரி நம்பிக்கை ஏற்படுகிறது. இவற்றிலும் 'கீழ்நிலை' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும், 'மேல்நிலை' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும் தோன்றப்படுகிறது.

இவற்றிற்கெல்லாம் காரணம்—வாய்ப்பு, கற்பிப்பு, சூழ்நிலை, தேவை (சுயநலம்) என்பதல்லாமல் வேறு எதைச் சொல்லமுடியும்?

கடவுளைப்பற்றிக் கற்பித்தவர்கள் யாரானாலும் தாய், தந்தையார், குரு, சமயங்கள், நூல்கள் எதுவானாலும்—கடவுளை வணங்கினால் நலம் பெறலாம் என்கின்ற ஓர்

இலட்சியத்தை அடிப்படையாக வைத்தே புகுத்தியிருக்கிறார்கள் என்பதோடு—தாங்களும் மற்றவர்களுக்குப் புகுத்தியவர்களும் கடவுளை நம்பினால், வழிபட்டால், பிரார்த்தித்தால் தங்களுக்கு வேண்டிய நலன்கள் கிடைக்கும்; கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடனே இருக்கிறவர்களாவார்கள். மற்றும், தங்கள் தவறு மன்னிக்கப்படும்; தங்கள் தகுதிக்கு மேல் பலனடையலாம் என்பவையான எண்ணங்களே, ஆசைகளே, பேராசைகளே நம்பிக்கைக்கும், வழிபாட்டிற்கும், தொண்டிற்கும் காரணமாக இருக்கின்றன.

உண்மையான பொது உடமை மதக்காரனுக்கும் (கொள்கைக்காரன்), சமதர்மக் கொள்கைக்காரனுக்கும், பவுத்தனுக்கும், பகுத்தறிவுவாதி (நாத்திகர்)களுக்கும் இந்த எண்ணங்கள்—அதாவது, சுயநலத்திற்காகக் கடவுளை நம்புதல், கடவுளை வணங்குதல், பிரார்த்தித்தல் முதலிய குணங்கள், எண்ணங்கள் தோன்றுவதில்லை என்பதோடு, தோன்றப்பட்டவர்களையும் முட்டாள்கள் என்றும், பேராசைக்காரர்கள் என்றும், மற்ற மக்களை ஏய்ப்பவர்கள் என்றுமே கருதுகிறார்கள்.

'கடவுள்' என்ற சொல்லும் கருத்தும் உண்மையற்றதும் பொருளற்றதுமாய் இருப்பதால், அவற்றைப் பற்றி ஒரு பொருள், ஒரு தன்மை இல்லாமல் பல ஆயிரக்கணக்கான கருத்துக்கள் ஏற்பட்டுவிட்டன.

எந்த ஜீவனுக்கும்-அதுவும் அறிவற்ற, சிந்தனையற்ற எந்த ஜீவனுக்கும் தேவையில்லாத கடவுள்—பகுத்தறிவுள்ள, சிந்தனையுள்ள, சுதந்திரமுள்ள தனக்கு வேண்டியதையும், தன்னையும், தேடிக் காப்பாற்றிக் கொள்ள, தனது நல்வாழ்வை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள, தனக்குவரும் கேடுகளைத் தவிர்த்துக்கொள்ள சக்தியுள்ள மனிதனுக்கு, கடவுள் செயல், கடவுள் அருள் எதற்காகத் தேவை என்று கேட்கிறேன்.

கடவுளே அப்படிப்பட்ட எண்ணத்தை ஏற்படுத்தினார் என்றால், கடவுள் மேற்கண்ட வசதியற்ற மற்ற ஜீவராசிகளுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை என்பதற்குக் கடவுள் நம்பிக்கைக் காரர்கள், கடவுள் அருள் தேடுகிறவர்கள் என்ன பதில், சமாதானம் சொல்ல முடியும்?

மேற்கண்ட கடவுள் தன்மைகள் எல்லாம் மனிதனுக்குப் பாஷைகளைப்போல், நாடுகளைப்போல், மதங்களைப்போல், பிறந்து வளர்ந்த, பழகிய இடங்களுக்கு ஏற்ப ஏற்படும் தன்மையே தவிர, இயற்கையானது, ஜீவ உரிமையானது என்று எந்தக் காரணத்தைக் கொண்டும் சொல்லமுடியாதே!

தேசப் பற்று என்றும், மொழிப் பற்று என்றும், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் முட்டாள்களும் கற்பித்துக்கொண்டு பலனடையப் பார்ப்பது எப்படியோ, அப்படியே சுயநலக்காரர்களும், முட்டாள்களும் கடவுள் அருள், கடவுள் பக்தி, கடவுள் பற்று, கடவுள்கள் தன்மை, கடவுள்கள் எண்ணிக்கை, கடவுள்கள் உருவம் என்பனவாகியவெல்லாம் கற்பித்துக் கொண்டு, மக்களை ஏய்க்கவும், மடையர்களாக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு, மனித சமுதாய வளர்ச்சியைப் பாழாக்குகிறார்கள் என்பதல்லாமல், இவற்றில் எந்தவித உண்மையும் நாணயமுமில்லை.

கடவுள் பணிக்காகப் பாதிரிகள், முல்லாக்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள், பண்டார சன்னிதிகள், குருக்கள், பூசாரிகள் முதலிய இந்தக் கூட்டங்கள் மனிதனுக்கு எதற்காகத் தேவை?

இவற்றால் இந்தக் கூட்டத்தினர்தாம் கவலையற்று, உழைப்பற்றுச் சுகபோக வாழ்வு வாழ்கிறார்களேயொழிய இவர்களால் யாருக்கு, எந்த ஜீவனுக்கு என்ன பயன்?

மற்றும், கடவுளை ஏற்படுத்தி, மதத்தை ஏற்படுத்திக் கடவுள் பெயரால், மதத்தின் பெயரால் பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, மக்களை இயற்கைக்கும் நேர்மைக்கும், சுதந்திரத்திற்கும் கேடாக நடக்கும்படி—நடக்க வேண்டியதாய்ப் பல கருத்துக்களைக் கற்பனை செய்து மக்களை வஞ்சிக்கிறார்கள்.

உலகிலாகட்டும், நம் நாட்டிலாகட்டும்—கடவுள், மதம், சாஸ்திரம், தர்மம் என்பவை கற்பிக்கப்பட்டிராவிட்டால், உலகில் ஏழையேது? பணக்காரன் ஏது? பாட்டாளி மகன் ஏது? முதலாளி ஏது? பறையன் ஏது? சூத்திரன் ஏது? பார்ப்பான் (பிராமணன்) ஏது? பட்டினி கிடப்பவன் ஏது? வயிறு புடைக்க உண்டு புரளுபவன் ஏது?

இவ்வளவு கொடுமைகளை, பேதங்களை சமுதாயத்தில் வைத்துக்கொண்டு பரிதாபம், பச்சாதாபம் இல்லாமல் முட்டாள்தனமாக, பித்தலாட்டத்தனமாக, மோசமாக—'கடவுளை நம்பு; கடவுளை வணங்கு; கடவுள் சொன்னபடி நட! உனக்குத் தரித்திரம் நீங்கும்; இழிவு நீங்கும்; அடிமைத்தனம் நீங்கும்' என்றால், இப்படிப்பட்ட இவர்கள்—அறிவும், பரிதாபமும் கொண்ட ஜீவன்கள் ஆவார்களா?

ஆகவே, கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், கடவுள் அருள் என்பதும் கைதேர்ந்த பித்தலாட்டக்காரர்களின் மோசடி, தந்திரம் என்றுதான் சொல்லவேண்டும். நாம் சமதர்மம் அடைய ஆசைப்பட்டு இறங்கிவிட்டோம். இனி இப் புரட்டுக்கும் முட்டாள் தனத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது என வேண்டிக்கொள்கிறேன்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

12. கடவுள்களின் நாசவேலைகள்

பெருமழையினால் பயிர்களுக்குக் கேடு, நாசம் என்பது ஒருபுறமிருந்தாலும் மற்றும், ஜீவப் பிராணிகள், கால்நடைகள், வீடுகள் இவைகளுக்குப் பெருஞ்சேதங்களும் ஏற்படுகின்றன. இது போலவே, பூகம்பங்களாலும் மக்களுட்பட ஜீவப் பிராணிகளும் மாள்வதோடு, ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்தும், மறைந்தும் நாசமாகிப் போகின்றன. அதுபோலவே இடி-பேரிடி விழுவதாலும், மக்களுக்கும் ஜீவன்களுக்கும், வீடுகளுக்கும் பெருஞ்சேதங்கள் உண்டாகிவிடுகின்றன.

போதாக்குறைக்குப் பெரும்புயல் காற்றுகள் ஏற்பட்டு இவைபோன்றே பெருங்கேடுகளும், சேதங்களும், நாசங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

இதில், சிந்திக்கும்படியான விஷயம் என்னவென்றால்—மேற்கண்ட கேடுகளில், சேதங்களில், நாசங்களில், ஜீவஅழிவுகளில் எந்த ஒருசிறு அளவுக்கும் ஆறறிவு படைத்த மனித வர்க்கத்தால், எந்தவிதமான பாதுகாப்பும் செய்துகொள்ள முடியாத நிலையில் அனுபவித்தே தீர வேண்டியதாகவும், பலவற்றைப்பற்றி அவை நிகழும்வரை தெரிந்துகொள்ளவே முடியாததாகவும் இருப்பதாகும்.

இந்த நிலைக்குக் காரணம் என்ன? 'கடவுள் சித்தம்' என்பதுதானே? அது உண்மையாயிருக்குமானால் இதிலிருந்து கடவுளையோ, கடவுள் சக்தியையோ எவ்வளவு அயோக்கியத்தனமானவன் என்று கருத வேண்டியிருக்கிறது! இந்நிலையில் கடவுள் இருப்பானேயானால் அவன் உலகத்தைப் படைத்ததே முட்டாள்தனம் அல்லது அயோக்கியத் தனம் என்றுதானே சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த மாபெரும் உலகத்தைப் படைத்து, அதில் ஏராளமான ஜீவன்களைப் படைத்து, அவைகள் திருப்தியாய் வாழ்வதற் கில்லாமல்—பசி, பட்டினி, நோய், துன்பம், தொல்லை, வேதனைகள் உண்டாக்கி நாசமடையச் செய்வதென்றால், இதில் அறிவுடைமையோ, கருணையுடைமையோ, நேர்மை—ஒழுக்கமுடைமையோ என்ன இருக்கிறது?

இப்படிப்பட்ட கடவுளால், இப்படிப்பட்ட நாசவேலைகள் ஏற்படுவதல்லாமல் நல்ல காரியங்கள் என்று சொல்லப்படுபவைகளில்—எது செய்யப்படுகிறது?

இதை ஏன் எடுத்துக்காட்டுகிறேனென்றால், இந்த நிலையிலுள்ள—ஒரு (இல்லாத) கடவுளுக்காகவென்று ஆறறிவு (பகுத்தறிவு)டைய மனிதனால் எவ்வளவு பொருள், நேரம்,

ஊக்கம், முயற்சிகள் செலவழிக்கப்படுகின்றன? கடவுள் பெயரைச் சொல்லி எத்தனை மக்கள் முட்டாள்களாக்கப்பட்டு ஏய்க்கப்படுகின்றனர்? இவைகளெல்லாம், முட்டாள்கள் என்பவர்கள் அல்லாமல் B.A , M.A., Doctor, விஞ்ஞான மேதாவி, தத்துவஞான மேதாவி, புலவர், வித்துவான், முதலிய படித்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மகான்கள், மகா மேதாவிகள் என்பவர்களால் செய்யப்படுகின்றன; சொல்லப்படுகின்றன; பிரச்சாரம் செய்யப் படுகின்றன என்றால், இவர்களையெல்லாம் எப்படி அறிவாளிகள், யோக்கியர்கள், உண்மை யாளர்கள் என்று கூறமுடியும்? கருதமுடியும்? நம்பமுடியும்?

ஆறறிவுடைய மக்கள் நாட்டில், மனித சமுதாயத்தில் ஒரு கடவுள், அதற்கு வீடு, சோறு, பெண்டாட்டி, பிள்ளை, சேலை, நகை, வைப்பாட்டி, விபச்சாரம் செய்தல், கோபம், தாபம், பழிவாங்குதல், கொல்லுதல், போர் செய்தல், போரில் அடிபடுதல், மூர்ச்சையாதல் மற்றுமெத்தனையோ கீழ்த்தர மக்களது தன்மைகளையெல்லாம் பொருத்தி—அந்தப்படி பொருத்தப்பட்ட கடவுளுக்குத் தேசப் பொருளை, செல்வத்தைக் கோடி கோடியாக செலவழித்துப் பாழாக்கப்படுவதென்றால், கடுகளவு சிந்தனை அறிவுள்ள யார்தான் இதை யோக்கியமான காரியம் என்றோ, உண்மையான நம்பிக்கையுடைய காரியமென்றோ கருத முடியும்?

இந்த நாட்டில் இன்று கல்வியென்னும் பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய் களைச் செலவு செய்து, பல்கலைக்கழகம், கல்லூரி, உயர்தரப் பள்ளி என்பதாகப் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை வைத்துக் 'கல்வி' கற்பிப்பதைவிட, பகுத்தறிவுப் பள்ளிகள் மாத்திரம் வைத்து, 'நிர்வாணமான' சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து, மக்களை எதைப் பற்றியும், எந்தப் பற்றுமற்ற வகையில், செல்லும்வரை சிந்தித்து முடிவுக்குவரக் கற்பிப்போமானால், நாட்டில் இன்று வீணாகும் செல்வம், அறிவு, ஊக்கம், நேரம் முதலியவை பெருமளவுக்கு மீதமாகி, மக்கள் வாழ்க்கைத் தர முயர்ந்து, ஒழுக்கம், நேர்மை, நல்லெண்ணம், மனிதாபிமானம், அன்பு, பரஸ்பர உதவி முதலியவை தானாக வளர்ந்து, இவைகளுக்குக் கேடான தன்மைகள் மறைந்து, எல்லா மக்களும் 'குறைவற்ற செல்வத் துடனும்,' 'நிறைவுற்ற ஆயுளுடனும்' வாழ்வார்கள் என்பது உறுதி.

['விடுதலை'-தலையங்கம்—16-12-1969]

13. கடவுள்-பிறரும் நாமும்

ஆசிரியப் பெருமக்களே! பெரியோர்களே! மாணவர்களே!

உலகத்தில் 250 கோடி மக்கள் இருக்கிறார்கள். அதில் 100 கோடி மக்களுக்குக் கடவுள் இருக்கிறது; 150 கோடி மக்களுக்குக் கடவுள் இல்லை. ரஷ்யா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருப்பவர்களுக்குக் கடவுள் இல்லை. உலகத்தில் தனித்தனி ஆட்களாகச் சில பேர் கடவுள் நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். 100 கோடிப் பேருக்கு மதம் வேண்டும், கடவுள் வேண்டும் என்றாலும்—அவர்கள் கடவுள், மதம் எல்லாம் மக்களுக்காக இருக்கின்றன.

நம் நாட்டில் கடவுள், மதங்களை எந்தெந்த அளவுக்கு வைத்துக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

நம் கடவுள்கள் எல்லாம் 5, 10 ஆயிரம் வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டவை. மற்றவர்கள் கடவுள்கள் எல்லாம் 2000 வருடங்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டவை. நம் கடவுள்கள் 1 இலட்சம், 10 இலட்சம், 1 கோடி யுகங்கள் கொண்டவை. நம் கடவுள்களுக்கு ஆதாரம் மதம்தான்; மற்றவர்களுக்கு அப்படியில்லை. நம் கடவுள்கள் 10 இலட்சம் கோடி வருடம் பார்த்தவர்கள்; 5, 7 சதுர்யுகம் கண்டவர்கள். இப்படிச் சொன்ன கடவுள்களாலே, மதத்தாலே ஒன்றும் மாற்றமடையவில்லை. மற்ற நாட்டிலிருப்பவர்கள் எல்லாம் எவ்வளவோ மாற்றமடைந்துவிட்டார்கள்.

இவ்வளவு கடவுள், மதம் இருந்தும் ஒழுக்கம், நாணயம், மனிதப் பண்பு இல்லாமல் போய்விட்டது. மற்ற நாட்டில் எல்லாம் அவற்றாலே நாகரிகம் நடக்கிறது; அந்தப் பண்பு நமக்கில்லை. ஆனால், மேலான பண்பு என்று நம்மவன் பேசுகிறான்.

மேல்நாட்டில் தெருவில் போய் நின்றால் நம் உயிரை வாங்கிவிடுவார்கள். 'என்ன வேண்டும்? எதற்காக நிற்கிறீர்கள்?' என்று கேட்காமல் எவனும் போகமாட்டான். எகிப்தில் தெருவில் போகிற பெண் கேட்கிறாள், 'ஏதாவது உதவி பண்ண வேண்டுமா உங்களுக்கு?' என்று. ஏதாவது சொல்லிவிட்டோமோ—அங்கே போகவேண்டும்; இன்னது வேண்டும் என்று, உடன் வந்து விட்டுவிட்டுத்தான் போவார்கள்.

அங்கு கடைக்குப் போனீர்களானால் (இங்கே போல) 'ஒரு வீசை கற்கண்டு கொடுங்கள்' என்று கேட்க முடியாது. முன்னால் வந்து யார் நிற்கிறார்கள்? முன்னால் வந்தவர் வாங்கியதைச் சரிபார்த்த பிறகுதான் நாம் வாங்கவேண்டிய முறை. கணக்கு எழுதிக்கொண்டிருக்கிறபோது—சாமான் கொடுத்துக்கொண்டிருக்கிறபோது ஏதாவது கேட்டால் அநாகரிகம், வெட்கம், தண்டனை என்று நினைப்பான். குற்றம் சொல்கிறாற்போல் நடந்துகொள்வதில்லை. அங்கே அப்படி! இங்கே?

[அரவக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியில், 22-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-5-1959]

2. கடவுள்கள்

1. காப்பியடிக்கப்பட்ட கடவுள்கள்

கடவுள் என்பதற்கு ஒரு சொல் வடமொழியிலும் கிடையாது; தமிழிலும் கிடையாது. தமிழில் சொல்லப்படுகிற கடவுள் என்கின்ற சொல்லுக்கு உண்டான கருத்துக்கு ஏற்ற வேறு ஒரு சொல்லும் தமிழில் காணப்படுவதற்கு இல்லை; அதுபோலவே, வடமொழியிலும் சொல் காணப்படுவதற்கு இல்லை.

ஆரியர் (பார்ப்பனர்), 'தேவர்கள்' என்ற சொல்லை வேத காலத்தில் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர். அதுவும் மத்திய ஆசியாவிலும் மேல் நாட்டில் அய்ரோப்பாவிலும் வசித்த பழங்கால மக்கள் கற்பனை செய்துகொண்ட பல தெய்வங்களையே தேவர்கள் என்றாக்கி, ஆரியப் பார்ப்பனர் தாங்கள் சொல்லிவந்த வேதங்களில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மத்திய ஆசிய நாகரிகக் காலத்துக்குப் பிற்பட்டதே ஆரியவேத சகாப்தம் என்பதை நினைவிலிறுத்தவேண்டும். எனவே, மத்திய ஆசியாவில் தோற்றுவிக்கப்பட்ட கடவுள்களைக் 'காப்பி'யடித்தே ஆரியர்கள் கடவுளர் பெயர்களைக் கற்பித்துக்கொண்டுள்ளனர்.

இவற்றிற்கு உதாரணங்களையும், பட்டியலையும் கீழே தருவோம்.

வேதத்தில் காணப்படுகிற அத்தனை தேவர்களும் எகிப்தியர், கிரேக்கர், காக்கேசிய மலைச்சாரலில் வசித்த காக்கேசியர்கள் முதலானவர்கள் வணங்கி வந்ததாகக் கருதப்படும் தெய்வங்களேயாகும் என்பதைப் பட்டியலில் காணலாம்.

ஆரியர்கள் வந்து குடியேறிய பின்பே கடவுள் கருத்துக்களும், தேவர்கள் பெயர்களும் தமிழர்களிடையே நுழைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது வரலாற்றாசிரியர்களின் துணிபு ஆகும்.

மத்திய ஆசியா, தற்போதைய கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில்தான் முதலில் மக்கள் நாகரிகம் தோன்றியிருக்க வேண்டும்.

தீயினிடம் ஏற்பட்ட அச்சத்தால் அதை வணங்கிய ஆரியர், அதற்கு—'சிவந்தவன்' என்ற சொற்பிறப்பால் 'சிவன்' என்று பெயரிட்டழைத்தனர். ஞாயிற்றுக்கும் அப்பெயரிட்டழைத்தனராம்.

பாபிலோன் மக்கள் வழிபட்ட 'தந்தைக் கடவுள்', கிரேக்க நாட்டு மக்களது வழிபாட்டுக் கடவுளை ஒத்திருப்பதைக் காணலாம். அங்குள்ள பழைய நகரம் ஒன்றுக்கு சிவன் என்றே பெயர்; இப்போதும் அப்படியே வழங்குகிறது. எனவே, சிவன் 'காப்பி' யடிக்கப்பட்ட பெயர் என்று கொள்ளலாம்.

சிவன் பாம்பை அணிபவராகக் குறிப்பிடுவதும் மேல்நாட்டுத் தொடர்புடையதே. மொகஞ்சதாரோவிலும் சிவக் கடவுள் பாம்போடு காணப்படுவதும், இடப வணக்கத்தைப் போல் பாம்பு வணக்கமும் இருந்திருக்கிறது. ஞாயிறு வணக்கம், சிவ வணக்கமுள்ள எல்லா நாடுகளிலும் பாம்பு வணக்கமும் காணப்படுகிறதாதலின், பாம்புகள் சிவலிங்கத்தோடு—சிவன் கடவுளோடு தொடர்புடையனவாகவே உள்ளதைக் காணலாம்.

சிவனுடைய கைகளில் இருப்பதுபோன்ற சூலம், மழு (கைக் கோடரி) முதலிய ஆயுதங்கள் மேற்கு ஆசியாவில் கிரேத்தா முதலிய நாடுகளில் வழிபட்ட கடவுள்களின் கையிலுமிருந்திருக்கின்றன.

கையில் சூலம், இடியேறு என்று மூன்று கவை உள்ள நெளிவுடைய ஆயுதம் ஏந்திப் பிடித்திருந்தனராம்.

இந்திய நாடல்லாத மற்றைய நாடுகளின் கடவுளர்கள் யாவும் இரண்டே கைகள் உள்ளவை. இந்தியாவில் மட்டுமே நாலு கை, ஆறு கை, பன்னிரு கை முதலிய பல்வேறு வகைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மொகஞ்சதாரோவிலும் கடவுள் வடிவங்கள் இரு கைகள் படைத்தனவேயாகும்.

மத்திய தரைக்கடலின் கீழ்க் கரையோரமுள்ள சிரியா நாட்டிலே சிவனும், காளியும் வழிபடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்திய நாட்டுச் சிவன் போலவே, சிரியா நாட்டிலும் தந்தைக் கடவுளாகவே அதாந்துவை வணங்கி வந்துள்ளனர்.

கிதைதி என்னும் சின்ன ஆசியா நாட்டிலும் சிவனையே தந்தைக் கடவுளாக வழிபட்டனர் என்பதற்கும் சான்று உள்ளது. கிதைதி நாட்டின் அழிபாடுகளின் சுவர் ஒன்றில் எழுதப்பட்ட தந்தைக் கடவுள் சித்திரம் இடபத்தின் மீது நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

கூரியமுடி அணிந்துள்ள 'தாய்க் கடவுள்' தண்டும் கேடயமும் தாங்கிச் சிங்காசனத்தின் மீது நிற்பதைக் காணலாம். இத் தாய்க் கடவுளுக்கு 'இஸ்தர்' என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். அதுவே 'ஈஸ்வரி' என்று திரிந்திருக்கக்கூடும்.

கிதைதியில் காணப்பட்ட இன்னொரு சிற்பம் முக்கோண வடிவான வில்லைப் பிடித்துக் கொண்டு இடபத்தின் மீது நிற்கிறது. எகிப்தியர் எழுதியுள்ள களிமண் தட்டிலும் இக் கடவுள் பற்றி எழுதப்பட்டுள்ளதாம். இவ் ஆண் கடவுள் நீண்ட காலம் சிரியா நாட்டுப் போர் வீரர்களால் வணங்கப்பட்டதாம்.

இந்தக் கடவுள் என்னும் சொல் தமிழனுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்ட சொல்லேயல்லாமல், பழங்காலச் சொல் என்று சொல்லமுடியாது. இலக்கியங்களும், தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டனவேயாகும்; தமிழனுக்கு ஆதிநூல் என்று சொல்லப்படும் தொல்காப்பியமும் ஆரியர் வருகைக்குப் பிற்பட்டதேயாகும்.

இன்றைய நம் கடவுள்கள் அத்தனையும் பிரம்மா, விஷ்ணு, சிவன், அவனது மனைவி, பிள்ளை குட்டிகள் யாவும் ஆரியக் கற்பனையே. ஆரிய வேதங்களில் அவர்களால் கொண்டுவரப்பட்டவை என்பதல்லாமல் தமிழர்க்குரியதாக ஒன்றுகூடச் சொல்லமுடியவில்லை.

சிவன், விஷ்ணு தமிழருடையதென்று சிலர் சொல்லிக்கொண்டபோதிலும்—அதன் இலக்கணம் வடமொழி முறையேயாகும். லிங்கம்—சதாசிவம் முதலான சொற்கள், அவற்றின் கருத்துக்கள் ஆரிய மொழிகளேயாகும்.

கடவுளர்க்கு ஆரியர் இட்ட பெயரனைத்தும், மேல்நாட்டுக் கடவுளர்க்கு இட்டதை அனுசரித்தே இடப்பட்டிருப்பதைக் கீழ்வரும் பட்டியல் மூலம் அறியலாம்.

இந்தியக் கடவுள்	மேல்நாட்டுக் கடவுள்	இந்தியக் கடவுள்	மேல்நாட்டுக் கடவுள்
சிவன், இந்திரன்	ஜுப்பிட்டர்	குபேரன், கிருஷ்ணன்	புளுட்டஸ், அப்போலோ
பிரம்மா	சாட்டர்னஸ்	நாரதன்	மெர்குரியன்
யமன்	மைனாஸ்	இராமன்	பர்கஸ்
வருணன்	நெப்டியூன்	கந்தன்	மார்ஸ்
சூரியன்	சோல்	துர்க்கை	ஜுனோ
சந்திரன்	லூனாஸ்	சரஸ்வதி	மினர்வா
வாயு	சயோனஸ்	அரம்பை	வீனஸ்
விசுவகர்மா	காண்டர் போல்வஸ்	உஷா	அரோரா
கணபதி	ஜுனஸ்	பிருதிவி, ஸ்ரீ	சைபெல்வி, சிரஸ்

என்கின்ற பெயருடன் இக் கடவுள்கள் மேனாட்டில் இருந்தவையாகும். 'காப்பி' யடித்தே ஆரியர்கள் இங்கு பல்லாயிரம் கடவுள்களைப் பல்லாயிரம் உருவில் உண்டாக்கி, அதன் மூலம் சமுதாயத்தையே அடிமையாக்கிவிட்டிருக்கின்றனர்.

[நூல் : 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

2. கடவுள்கள்

தலைவரவர்களே! தோழர்களே!

கடவுள்களைப்பற்றிய அபிப்பிராயத்தில், பழைய காலத்தைவிட கிறிஸ்தவர்களில் ஒரு சாராரும் முகமதியர்களும் எவ்வளவோ சீர்திருத்தத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் ஒரே கடவுள்தான் இருக்க முடியுமென்றும், அக் கடவுள் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது என்றும், அது பெயரும் குணமும் உருவமும் இணையும் இல்லாதது என்றும், மனிதரில் நன்மையான காரியங்கள் செய்தவர்களுக்கு நன்மையும் தீமையான காரியங்களைச் செய்தவர்களுக்குத் தீமையும் அளிக்கக்கூடியது என்றும் சொல்லி குணம் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட கடவுளைப்பற்றி இப்போது விவகாரம் பேச வேண்டியதில்லை. இக் கருத்துடன் இணைந்திருக்கும் கடவுளால், 'மனிதன் தீமை செய்யப் பயப்படுவான் என்றும், நன்மை செய்ய ஆசைப்படுவான் என்றும், அது சமுதாய வாழ்விற்கு மிக்க நன்மை அளிக்குமென்றும்' பல அறிஞர்களும் அதை ஒப்புக்கொண்டு காரணம் சொல்லுகிறார்கள். ஆகையால், இன்றைய தினம் இந்துக்களால், குறிப்பாகப் பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கடவுள்களை எடுத்துக்கொள்வோம். இந்துக்களுக்கு இத்தனை கடவுள்கள் ஏன்? அவை எப்படி வந்தன? பல்லாயிரக்கணக்கான கடவுள்கள் தவிர மற்றும் என்னவெல்லாம் கடவுளாக்கப்பட்டு இருக்கின்றன, பாருங்கள்! மாட்டு மலம் முதல் மாடு, குதிரை, எருமை, குரங்கு, பெருச்சாளி, கழுகு, காக்கை, பாம்பு, மரம், செடிகள், மண், உலோகம், காகிதம் முதலியவைகளும் மற்றும் பல ஆபாச உருவங்களும்

கடவுளாக வணங்கப்படுகின்றன. காசியில் ஒரு கோயிலில் 2 உயிருள்ள நாய்கள் படுத்திருக்கின்றன. அவைகளுக்கும் பூசை போட்டு வணங்குவதை நேரில் பார்த்தேன். இப்படிச் செய்வதற்குப் பண்டிதர்களால் தத்துவார்த்தம் சொல்லப்படுகிறது. இவ்வளவோடு இல்லாமல் இக் கடவுள்களுக்குப் பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி, தாசி, விபச்சாரித்தனம், ஆகாரம், உறக்கம், புணர்ச்சி முதலியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. மற்றும் இக் கடவுள்களுக்குக் கலியாணம், சாவு முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன.

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—' குடி அரசு ' 19-12-1937]

தலைவரவர்களே! தோழர்களே!

மனித சமூகத்திலே எங்கு பார்த்தாலும் கடவுள், மத உணர்ச்சி இருந்துவருவதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சமூகவாழ்வுக்கு இந்தக் கடவுள், மதங்கள் அல்லாமல் இயற்கையே பெரிதும் படிப்பினையாகவும், மனிதனை நடத்துவதாகவும் இருந்து வருகிறது. காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் அவனது அனுபவம், அவசியம் ஆகியவைகட்கு ஏற்றபடியும் சமூகவாழ்வின் சவுகரியங்களை மனிதன் அமைத்துக் கொள்கிறான். இக் காரியங்களுக்குக் கடவுள், மதத் தத்துவங்களைப் பற்றியோ, அவைகளைப் பற்றிய கற்பனைகளையோ மனிதன் சிந்திப்பதில்லை; சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதுமில்லை.

ஆனால், பயமும் சந்தேகமும் பேராசையும் பழக்கவழக்கங்களும் மற்றவர்களின் படிப்பினைகளும் சுற்றுப் புறமும்—மனிதனுக்குக் கடவுள், மத உணர்ச்சிகளை உண்டாக்கி விடுகின்றன. அவை எப்படி இருந்தபோதிலும் எங்களுக்குக் கவலை இல்லை. அந்த ஆராய்ச்சியில் நாங்கள் சிறிதும் காலத்தையோ, புத்தியையோ செலவழிப்பதில்லை. ஆனால், மனித சமூகத்துக்குத் தேவையான தொண்டு என்று நாங்கள் கருதிவரும் தொண்டுகளைச் செய்துவரும்போது, மனித சமூக சுதந்திர சுகவாழ்வுக்குப் பிறவியிலேயே எதிரிகளாகவுள்ள புரோகிதக் கூட்டத்தார், மதத்தின்பேரால்—கடவுள்பேரால் தங்கள் வாழ்க்கையை நிச்சயித்துக்கொண்ட சோம்பேறி மக்கள், எங்கள் தொண்டிற்கு, கொள்கைகளுக்குச் சமாதானம் சொல்லி எதிர்த்து நிற்கச் சக்தியற்ற கோழைகள் கடவுளையும் மதத்தையும் பற்றிக் குழப்பமாய்ப் பேசி, அவைகளைக் குறுக்கே கொண்டுவந்து போட்டுவிடுகிறார்கள்.

மனித சமூகத்தில் பிறவியில் உயர்வு–தாழ்வு, சாதிபேதம் ஒழிந்து, ஆண்டான்–அடிமைத் தன்மை மாறி ஆணும் பெண்ணும் சகல துறைகளிலும் சமசுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்று நாங்கள் சொன்னால், தீண்டாமையும் சாதிபேதமும் ஒழிந்தால் தமது உயர்வும் தம் பிழைப்பும் கெடுமென்று எண்ணிப் பாடுபடாது வாழ்ந்துவரும் பார்ப்பனர்கள் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைக் கொண்டுவந்து குறுக்கே போட்டு எங்களைத் தடைப்படுத்தும்போது, அவை எவையாயினும் மனித சமூக ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும், சுதந்திர வாழ்வுக்கும் கேடு செய்வதாக இருந்தால் அவற்றைக் கொளுத்தி ஒழிக்க வேண்டுமெனக் கூறுகிறோம்.

தீண்டாமையைப் பார்ப்பனர்கள் மதத்துடன் சேர்த்துக் கட்டிப் பிணைத்து இருப்பதாலேயேதான், நாங்கள் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றால் அந்த மதம் ஒழிந்துதான் ஆகவேண்டும் என்கிறோம். தீண்டாமையை அசைக்கும்போது மதமும் ஆடுகிறது. அப்போது மதம், நரகம், மோட்சம் முதலிய பல கற்பனைகளை வெகு நாட்களாக ஊட்டி வந்த பாமர மக்களிடம் உடனே பார்ப்பனர்கள் சென்று, 'மதம் போச்சுது; மதம் போச்சுது' என்று விஷமப் பிரச்சாரம் செய்து எங்களை மதத் துரோகி என்றுகூடத் தூற்ற முடிகிறது.

கடவுள்பற்றிய தத்துவங்களையே எடுத்துக்கொண்டு பார்ப்போம். அதுவும் இப்படித்தான். அதாவது, கடவுளைப்பற்றி விளக்க இதுவரை எத்தனையோ ஆத்மஞானிகள், சித்தர்கள், முத்தர்கள் என்போரும், ஆழ்வார்கள், நாயன்மார்கள், அவதாரங்கள்

என்போரும் எவ்வளவோ அரும்பாடுபட்டிருக்கின்றனர். ஆனால் முடிந்ததா? முடிவு இதுதான் எனச் சொல்லப்பட்டதா? அல்லது, இவர்களைப் பின்பற்றியவர்களுக்காவது புரிந்ததா? புரியவைக்க முடிந்ததா?

'கடவுள் ஆதி இல்லாதது; அந்தமும் இல்லாதது; உருவம் இல்லாதது; அது இல்லாதது; இது இல்லாதது; புரியப்பட்ட சங்கதி எதுவும் இல்லாதது' என அடுக்கிக் கொண்டேபோய்—அப்படிப்பட்ட ஒன்று இருப்பதாக, அல்லது இருக்கும் என்பதாக, அல்லது இருந்தேதான் தீரவேண்டும் என்பதாக, அல்லது இருக்கிறது என்று எண்ணிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாகச் சொல்லிவிடுகிறார்கள்.

இராமலிங்க சுவாமி என்று சொல்லப்பட்ட பெரியார், அறிவுதான் கடவுள் எனக் கூறினதுடனன்றி சாதி, சமயம், மோட்சம், நரகம், மோட்ச நரகங்களைக் கொடுக்கும் கடவுள்கள் ஆகியவைகள் எல்லாம் வெறும் பித்தலாட்டங்கள் எனப் பச்சையாகச் சொல்லி விட்டார். இவர்கள் எல்லாம் நாத்திகர்களா?

ஒரு மனிதன் கடவுள் உண்டா, இல்லையா என்ற விஷயத்திலே கவலை செலுத்தாது—அதை அறிவதற்கே மெனக்கெட்டுக் குழப்பமடையாது இருப்பதற்காகவே, மனித சமூக வாழ்வுக்கு நன்மையும் அவசியமுமான காரியங்கள், குணங்கள் எவை எவையோ அவை களைத்தான் கடவுள்கள் எனப் பெரியார்கள் சொன்னார்கள். இதைப் பார்த்தாவது மனிதனுக்கு அறிவு வந்து உண்மை உணர்ந்து பேசாமல் இருக்கவேண்டாமா?

ஒரு மனிதன் அறிவுடையவனாகி, உண்மையுடையவனாகி, மக்களிடம் அன்பு காட்டி மனம், வாக்கு, காரியங்களால் தொண்டுசெய்து அவைகளின்படி நடப்பானேயானால், அவன் கடவுள் துரோகியாகக் கருதப்படுவானா? அன்பு, அறிவு, உண்மை இவை தவிர வேறு கடவுள் ஒன்று இருந்தாலுங்கூட, அக் கடவுள்—தன்னை இல்லை என்று சொன்ன தற்கும் தன்னை விழுந்து கும்பிடாததற்கும் அப்படிப்பட்டவனைத் தண்டிப்பாரா? உண்மையில் யாரும் அறியமுடியாத ஒரு கடவுள் இருந்தால்—அவரை அறிந்து அவருக்கே பக்தி செய்து வணங்கி வந்தவனைவிட, கடவுளைப்பற்றிக் கவலைப்படாமல், கடவுளுக்கு பக்தி செய்யாமல் அன்பு, அறிவு, உண்மை ஆகியவைகளுடன் நடந்து வந்தவனுக்கேதான் கருணை காட்டுவார். இந்த உணர்ச்சியினாலேயேதான் நான் கடவுளைப் பற்றிய விவாதத்தில் இறங்கிக் காலங் கழிக்காமல், நான் மனித சமுதாயத்திற்கு என்னாலான தொண்டை அறிவு, உண்மை, அன்பு ஆகியவைகளைக் கொண்டு செய்துவருகிறேன்.

நான் கூறின மேற்கண்ட தத்துவங்கள்—மதத் தலைவர்கள், அதிலே நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஆகியவர்கள் வாக்கு ஆகும்.

மற்றும் சித்தர்களும் வேதாந்திகளும், இந்த உலகமும் தோற்றமும் எண்ணங்களும் மனிதனுட்பட எல்லாம் மாயை என்று சொல்லிவிட்டனர். ஆகவே, ஒரு மனிதன் தன்னை நிஜஉரு என்று கருதி—கடவுள் உண்டு என்று கண்டுபிடித்தாலும், முடிவு கொண்டாலும் அதுவும் மாயைதானேயொழிய உண்மையாயிருக்க இடமில்லை.

சிலர் உலக நடத்தையைப் பார்த்து அதற்கு விவரம் புரியாமல், 'இதற்கு ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டாமா?' என்று கேட்கின்றனர். ஏதோ ஒரு சக்தி இருக்கட்டும்! இருக்க வேண்டியவைகளை யெல்லாம் கண்டுவிட்டோமா? இல்லாதவைகளை யெல்லாம் உணர்ந்து முடிவு செய்துவிட்டோமா? அதைப்பற்றிய விவாதம் ஏன் நமக்கு?

மனித சமுதாயம் ஒற்றுமையாக, ஒழுக்கத்துடன், சமத்துவத்துடன் வாழ, சாந்தி யாய் இருக்க ஏதாவது ஒருவிதமான கடவுள் உணர்ச்சி மனிதனுக்கு வேண்டாமா என்று கேட்கிறார்கள். வேண்டுமென்றே வைத்துக்கொள்வதானால், அப்படிப்பட்ட உணர்ச்சி யானது மக்கள் சமூகத்தில் ஒழுக்கம், ஒற்றுமை, சமத்துவம், சாந்தி அளிக்கிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டாமா? ஏனெனில், எந்த உணர்ச்சி காரணமாக மனிதனின்

கடவுள் என்பது
கருத்தில்
[illegible]
[illegible]
உண்டாக்கினவாம்.

காதலர்
[illegible]
கொடுத்தப்பட்ட
[illegible]
மாட்டு உண்டாக்கின
வாம்.

கடவுளர்
இவைகள் போல
பலவாறு



கடவுள்கள் உற்பத்தி

கந்தன்

திலத்தில் ஒழுக விடப்பட்ட சிவன் இந்திரியத்தில் உருவானவன்.

கணபதி

பார்வதியின் உட(லி)ல் இருந்து திரட்டி எடுத்த அழுக் குருண்டையில் உருவானவன்.

கிருஷ்ணன்

விஷ்ணுவின் மார்பு மயிரிலிருந்து உருவானவன்.

இராமன்

தசரதன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்த பிறகு, யாகப் புரோகிதர்களுக்குத் தன் மனைவியைக் கொடுத்த பிறகு அப் புரோகிதர்களால் உண்டாக்கப்பட்ட கர்ப்பத்தால் உண்டானவன்.

வாழ்க்கையில் ஒழுக்கம் ஏற்படும் எனச் சொல்லப்படுகிறதோ—வாழ்க்கையில் நீதி, அன்பு நிலவ மேற்படி உணர்ச்சி தூண்டுகோலாய் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதோ— அந்தக் கடவுள் உணர்ச்சிக்கும் அந்த உணர்ச்சிகொண்ட மனிதனின் நடத்தைக்கும் ஒருவித சம்பந்தமுமின்றிச் செய்துவிட்டனர். மற்றும், நமது கடவுளைக் கண்ட பெரியார்கள் என்பவர்கள் உலகத்திலே கேடு, கூடா ஒழுக்கம், வஞ்சனை, பொய் முதலியன செய்பவர்களை இந்த மாதிரியான ஒரு கடவுள் உணர்ச்சியைத் தங்களின் மேற்கண்ட காரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளும்படி செய்துவிட்டார்கள். உதாரணமாக, ஆயிரத்தில் பத்தாயிரத்தில் ஒருவராவது கடவுள் உணர்ச்சியின் அவசியத்திற்கு ஏற்றபடி அவர்களது வாழ்க்கையிலே நீதி, நேர்மை, ஒற்றுமை, அன்பு நிலவும்படி நடப்பதை நாம் பார்க்கிறோமா? பெரும்பான்மையோருக்கு அவ்வுணர்ச்சி அப்படிப் பயன்பட்டிருந்தால் உலகிலே துன்பத்துக்கு, வஞ்சனைக்கு இடமேது? எவ்வளவு அக்கிரமம் செய்தபோதிலும் பிரார்த்தனை, கடவுள் பெயர் உச்சரிப்பு, புண்ணியஸ்தல யாத்திரை செய்த மாத்திரத்தில் மன்னிப்பும் பாபவிமோசனமும் கிடைக்கும்—ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு— அதனால் மக்களுக்கு அக்கிரமம் செய்யவே தைரியம் தருகிறதேயல்லாமல் யோக்கியனாக, அன்பனாக நடக்கக் கட்டாயப்படுத்துகிறதா?

இன்று சிறையிலுள்ளோரில் சமரசவாதிகளோ, நாத்திகர்களோ விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே இருப்பார்கள். மற்றையோர் யாவரும் கடவுள் உணர்ச்சியிலே ஒருவித சந்தேகமும் கொள்ளாத ஆத்திகர்களேயாவார்கள். ஆகவே, அவர்கள் சொல்லும் கடவுள் உணர்ச்சியை மனிதனுடைய நடத்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்து வரவு, செலவு கணக்குப் போட்டு, நஷ்டம், இலாபம் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[ஆய்க்கவுண்டன்பட்டியில், 23-1-1938-ல் சொற்பொழிவு—' குடிஅரசு ' 30-1-1938]

3. கடவுள்களின் பிறப்பு

வழக்கத்திலுள்ள கடவுள்களில் எதுவும் தமிழனுக்குச் சொந்தமானது கிடையாது. எல்லாம் வெளி நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட கடவுள்களேயாகும். சரஸ்வதி, இலட்சுமி, சிவன், விஷ்ணு, பிரமா, பிள்ளையார், அரங்கன், நடராசன், கந்தன், சுப்பிரமணியன், இராமன், கிருஷ்ணன் எல்லாம் வடமொழிச் சொற்களே தவிர, தமிழ் மொழியில் பெயருள்ள கடவுள்கள் எதுவுமே கிடையாது. கருப்பண்ணன், காட்டேரி வேண்டுமானால் தமிழ்ப் பெயருள்ளவைகளாக இருக்கலாம். அதுதான் தொலைகிறது. இந்தக் கடவுள் களின் கதைகளாவது நாணயம், நேர்மை, ஒழுக்கமுடையனவாக இருக்கின்றனவா?

இராமன் எப்படிப் பிறந்தான் என்று இராமாயணத்தில் பார்த்தால்—அவன் தகப்பனுக்கு அவன் பிறக்கவில்லை. அவன் தகப்பன் பிள்ளை பெறுவதற்காக யாகம் செய்கிறான். அந்த யாகத்தில் இராமனின் தாய், ஒருநாள் இரவு முழுவதும் வெட்டுண்டு இறந்த குதிரையை ஒட்டவைத்துக்கொண்டு இருந்திருக்கிறாள். அதில் உணர்ச்சி ஏற்பட்டுப் பார்ப்பானால் கர்ப்பம் ஏற்பட்டுப் பிறந்தவன்தான் இராமன் என்று அக் கதை எழுதியவன் எழுதி இருக்கிறான். அவன் மனைவி சீதை, தானே வலிய இராவணனோடு சென்று 3 மாத கர்ப்பமாகி அழைக்கப்பட்டு வந்திருக்கிறாள். அது தெரிந்த இராமன் அவளைக் காட்டிற்கு அனுப்பி இருக்கிறான்.

கிருஷ்ணன் கதை என்னவென்றால், தேவர்கள் எல்லாம் போய், ' உலகில் அதர்மம் அதிகமாகிவிட்டது ; இராட்சதர்கள் தொல்லை பொறுக்கமுடியவில்லை. அதைப் போக்க வலிமையுள்ள ஒருவனை எங்களுக்கு அளிக்கவேண்டும் ' என்று விஷ்ணுவைக் கேட்டார்களாம். உடனே விஷ்ணு என்ன செய்தார் தெரியுமா? தன் மார்பிலிருந்து இரண்டு மயிரைப் பிடுங்கிக் கொடுத்தான் ; அந்த இரண்டு மயிரில் ஒன்று கறுப்பாம் ; ஒன்று

வெள்ளையாம். கறுப்பு மயிர் கிருஷ்ணனாகவும் வெள்ளை மயிர் அவன் அண்ணனாகவும் ஆயின என்று அபிதான கோசத்தில் (ஆராய்ச்சி நூல்) இருக்கிறது. பெண்களை வைத்துக் கொண்டு சொல்லவே முடியாது. அவ்வளவு அசிங்கம், ஆபாசம்.

கந்தன் பிறப்பு எப்படி என்று இராமாயணத்திலும், காஞ்சி புராணத்திலும், கந்த புராணத்திலும் இருக்கிறது. தேவர்கள் எல்லாம் போய் சிவபெருமானிடம் கேட்டார்களாம். 'சிவபெருமானே! உலகத்தில் இராட்சதர் கொடுமை அதிகமாகிவிட்டது. அதைத் தாங்க எங்களால் முடியவில்லை. அவர்களை அழிக்கக்கூடிய வல்லமையுள்ள ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்களாம். அதற்கிணங்க சிவபெருமான் பார்வதியைத் திருமணம் செய்துகொண்டு பிள்ளைபெற அவளோடு கலவி செய்ய ஆரம்பித்தாராம். ஆயிரம் வருஷம் தொடர்ந்து சிவனும் பார்வதியும் கலவி செய்து கொண்டிருந்தார்களாம். ஆயிரம் வருஷமாகியும் பிள்ளை பிறக்காததைக் கண்டு தேவர்கள், 'இனிப் பிள்ளை பிறந்தால் இந்த உலகமே தாங்காது; அவ்வளவு வலிமையுள்ளதாக இருக்கும். அது இந்த உலகத்தையே அழித்தாலும் அழித்துவிடும்' என்று பயந்து, தேவர்கள் எல்லாம் சிவபெருமானிடம் சென்று கலவியை நிறுத்திக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்களாம். அதற்கு சிவபெருமான், 'நீங்கள் சொல்வதுபோல் நிறுத்திக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை; நிறுத்தினால் அதிலிருந்துவரும் வீரியத்தை என் செய்வது?' என்று கேட்டாராம். உடனே தேவர்கள் அனைவரும் தங்கள் கைகளை ஏந்தி அதில் விடுமாறு சொன்னார்களாம். அதன்படியே சிவபெருமான் எல்லாத் தேவர்கள் கையிலும் வீரியத்தை விட்டுக் குடிக்கும்படி சொன்னாராம். தேவர்கள் அனைவரும் அதனைக் குடித்தனராம். சிவபெருமான் தனது மீதி வீரியத்தைக் கங்கையில் விட்டாராம். கங்கை அதைத் தாங்காமல் கொதிக்க ஆரம்பித்துவிட்டதாம். வீரியத்தைக் குடித்த தேவர் களுக்குக் கர்ப்ப நோய் ஏற்பட்டுவிட்டதாம்; அவர்கள் சிவபெருமானிடம் சென்று வணங்கித் தங்கள் கர்ப்ப நோய் தீர வழி கேட்டனராம். அவர் காஞ்சீபுரத்தில் இருக்கிற சுரகரீஸ்வரர் குளத்தில் மூழ்கினால் உங்கள் கர்ப்பம் கலையும் என்று சொன்னாராம். அதன்படி தேவர்கள் அதில் மூழ்கிக் கர்ப்பத்தையும் கலைத்துக்கொண்டனராம். பூமியில் ஓடிய சிவ வீரியமானது ஆறு கிளைகளாகப் பிரிந்து ஓடினதால் ஆறு குழந்தைகள் ஆயினவாம். அதனை ஆறு பெண்கள் எடுத்துப் பால் கொடுத்தனராம். ஆறு பேர்கள் பால் கொடுப்பது சிரமமாக இருக் கிறது என்று அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்தார்களாம். அதனால் உடல் ஒன்றாகவும் தலை ஆறு ஆகவும் ஆயிற்றாம். அதுதான் ஆறுமுகத்திற்குக் கதை. ஸ்கலிதத்திலிருந்து உதித்ததால் 'ஸ்கந்தன்' என்று பெயர் உண்டாயிற்றாம். பிரம்மா தன் மகளை மனைவியாக்கிக் கொண்டாராம். இலட்சுமி குதிரையைப் புணர்ந் தாளாம். நமக்குக் கடவுளாக இருப்பவைகளின் யோக்கியதை இவைதாம்.

[நூல் : கடவுள் ஒரு கற்பனையே—1971]

4. பார்வதி—பரமசிவன் உரையாடல்

பார்வதி : எனது பிராண நாதனாகிய ஓ, சிவ பெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்துப் பலர் காலையிலும், மாலையிலும் கன்னங் கன்ன மாய்ப் போட்டுக் கொள்ளுகின்றார்களே, அது எதற்காக, நாதா?

பரமசிவன் : கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால், விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்தில் அடித்துக்கொள்கிறார்கள்.

பார்வதி : ஓஹோ, அப்படியா சங்கதி! சரி; அப்படியானால் நமது அடிமையின் வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும் போது—நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்தில் அடித்துக்கொள்வதில்லை? அன்றியும்

வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள்; ஓட ஓட அடிக்கிறார்கள்; செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள்; அடித்துக்கூடத் தின்றுவிடுகிறார்களே, அது ஏன்?

பரமசிவன்: நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை; நன்றாகச் சாம்பலைப் பூசிக்கொள்ளத்தான் தெரியும்; நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

பார்வதி: அதுதான் போகட்டும்; நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னம் கன்னமாய் அடித்துக் கொள்ளாமல் தடியை எடுத்து அடித்துக் கொன்றுவிடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன்: கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால், கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போதும் அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றிக் கொழுக் கட்டையை வைப்பார்கள். ஆனால், உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக் கேட்டை யாருடன் சொல்லுவது?

பார்வதி: அதுதான் போகட்டும்; தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக்கொள்ளாமல் எல்லோரும்–சோ! சோ! என்று விரட்டுகின்றார்களே, அது என்ன காரணம், நாதா?

பரமசிவன்: கண்மணி! அதுவும் பக்தர்களின் அறியாத்தனந்தான். ஆனாலும், அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள்போல் இருக்கின்றது.

பார்வதி: என்ன நாதா, வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால், மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்தப் பக்தர்கள் மன்னிக்கும்போது, மலம் சாப்பிடுவதைமாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது? அதுதான் போகட்டும்; நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங் கன்னமாய்ப் போட்டுக்கொள்வதில்லை? அன்றியும், ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்றுவிடுகிறார்களே? அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்? இது என்ன அநியாயம்!

பரமசிவன்: அது அந்த பக்தர்களின் பக்திக் குறைவு; அதற்கு நாம் என்ன செய்யலாம்?

பார்வதி: நாதா! சரி, சரி; இதையெல்லாம் பார்க்கும்போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கவுரவமும், அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும்; நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பது எனக்கு வெளியில் தலைநீட்ட முடியவில்லையே! தவிர, விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலட்சுமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப் பார்த்துப் பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர, நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல்—விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங் கன்னமாய்ப் போட்டுக்கொண்டு மரியாதை செய்கிறார்களே, இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்!

பரமசிவன்: என்ன செய்யலாம், சதி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப் படும்படியாக விதித்துவிட்டான். விதி யாரைவிட்டது, சொல் பார்ப்போம்! என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம்; உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

பார்வதி: சரி, சரி; இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும்! இனி நீங்கள்வேறா அழவேண்டும்! போனால் போகட்டும்; இம் மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவைப் பேசிக்கொள்ளலாம். வாருங்கள்—நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்!

['சித்திரபுத்திரன்' கட்டுரை—'குடி அரசு' 17-6-1928]

5. பிள்ளையார்

இந்து மதம் என்பதிலுள்ள கடவுள்களின் எண்ணிக்கை எண்ணித் தொலையாது; ஏட்டிலடங்காது என்பது போல எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப்பதும், அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோவில், குளம், பூசை, உற்சவம், பஜனை, பாட்டு முதலியவைகள் ஏற்படுத்தி இருப்பதும், அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பலகோடி ரூபாய் பெறும்படியான நேரமும், பலகோடி ரூபாய் பெறும்படியான அறிவும் வெகுகாலமாய்ப் பாழாகிக் கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக்கூடிய காரியமல்ல.

இந்தக் கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்போர்களில் ஏறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வணங்கப்படுவதுமான கடவுள் 'பிள்ளையார்' என்பது. இதனைக் 'கணபதி' என்றும் 'விநாயகன்' என்றும் 'விக்கினேஸ்வரன்' என்றும் இன்னும் இதுபோன்ற பல நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லி அழைக்கப்படுவதும் உண்டு.

நிற்க, இந்தப் பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என்பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மையாய் வைத்து வணங்குவதும்—கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்துவாலும் மறுக்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்டதானதும், யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதும், அதிகச் செல்வாக்குள்ளதும் முதற்கடவுளென்பதுமான பிள்ளையாரின் சங்கதியைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். ஏனெனில், கடவுள்களின் சங்கதி தெரியவேண்டுமானால், முதன்முதலாக முதற் கடவுளைப் பற்றித் தெரிவதுதான் நன்மையானதாகும். ஏனெனில், முதற் கடவுள் என்று சொல்லப்படுவதின் சங்கதி இன்னமாதிரி என்பதாகத் தெரிந்தால் மற்ற கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாயிருக்கலாம். அன்றியும், எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் காரியத்தை கவனிக்க வேண்டியது முறையென்று சொல்லப்படுவதால், நாமும் கடவுள்களின் கதைகளைப் பற்றி விளக்கப்போவதில் முதல் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகுமன்றோ?

இல்லாவிட்டால், அக் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக் காரியத்திற்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்! அன்றியும் சமீபத்தில் அக் கடவுளின் உற்சவம் (பிள்ளையார் சதுர்த்தி) ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் ஒரு வேளை பொருத்தமாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்!

பிள்ளையார் பிறப்பு: ஒருநாள் சிவனின் பெண்சாதியான பார்வதி தேவி தான் குளிக்கப் போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும்படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காகத் தனது சரீரத்தில் உள்ள அழுக்குகளைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண்பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், (ஆகலாமல்லவா? எப்படி எனில் மாட்டின் மலமான சாணிப் பிண்டமே பிள்ளையாராகின்றபோது பார்வதியின் அழுக்கு—பிள்ளையாராவது அதிசயமா?) அந்த ஆண் குழந்தையைப் பார்த்து, 'நான் குளித்துவிட்டுவரும் வரையில் வேறு யாரையும் உள்ளே விடாதே' என்று சொல்லி அதை வீட்டு வாயிற்படியில் பார்வதி உட்காரவைத்திருந்ததாகவும், அந்தச் சமயத்தில் பார்வதியின் புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்த

தாகவும், அழுக்கு உருண்டையான—வாயில் காக்கும் பிள்ளையார் அந்தப் பரமசிவனைப் பார்த்து, 'பார்வதி குளித்துக்கொண்டிருப்பதால் உள்ளே போகக்கூடாது' என்று தடுத்த தாகவும், அதனால் பரமசிவக் கடவுளுக்குக் கோபம் ஏற்பட்டுத் தன் கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையைவெட்டிக் கீழே தள்ளிவிட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாகவும், அப்போது பார்வதி சிவனைப் பார்த்து 'காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே வந்தாய்?' என்று கேட்டதாகவும், அதற்குச் சிவன், 'காவல்காரன் தலையைவெட்டி, உருட்டிவிட்டு வந்தேன்' என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத்தைத் தணிக்கவேண்டி வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்டவைத்து உயிர் கொடுக்கலாம் எனக் கருதி உடனே வெளியில்வந்து பார்க்க, வெட்டுண்ட தலை காணாமல் போனதாகவும், அப்போது அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி, முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்டவைத்து அதற்கு உயிர் கொடுத்துப் பார்வதியைத் திருப்திசெய்ததாகவும் கதை சொல்லப்படுகின்றது. இக் கதைக்கு சிவபுராணத்திலும் கந்தபுராணத்திலும் ஆதாரம் இருக்கின்றனவாம்.

2. ஒரு காட்டில் ஆண், பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவனும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகமேற்பட்டுக் கலந்ததால் யானை முகத்துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் கருவுற்றிருக்கையில் ஒரு அசுரன் அக் கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக் கருச் சிசுவின் தலையை வெட்டிவிட்டு வந்ததாகவும், அதற்குப் பரிகாரமாகப் பார்வதி யானையின் தலையை வைத்து உண்டாக்கிக் குழந்தையைப் பெற்றுக்கொண்டதாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக் கணபதியின் தலையை வெட்டிவிட்டதாகவும், சிவன் தனது இரண்டாவது பிள்ளையாகிய சுப்பிரமணியனை அனுப்பினதாகவும், அவன் போய்ப் பார்த்ததில் தலை காணப்படாமல் வெறும் முண்டமாய்க் கிடந்ததாகவும், உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்ததாகவும் மற்றொரு கதை சொல்லப்படுகின்றது. இது 'தக்கயாகப் பரணி' என்னும் புத்தகத்தில் இருக்கின்றதாம்.

இன்னும் பல வழிகள் சொல்லப்படுகின்றன. அவை பற்றியும் பிள்ளையாரின் மற்ற கதைகளைப்பற்றியும் மற்றொரு சமயம் கவனிக்கலாம்.

எனவே, பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ, பார்வதிக்கோ மகனாகப் பாவிக்கப்பட்டவர் என்பதும், அந்தப் பிள்ளையாருக்கு யானைத் தலை செயற்கையால் ஏற்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதும், அவைகளிலும் எல்லா விதத்திலும் அவர் பிறரால் உண்டாக்கப்பட்ட தாகவும், பிறப்பு வளர்ப்பு உடையவராகவும் ஏற்படுவதுமாயிருந்தால் மற்ற கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமா? நிற்க, ஒரு கடவுளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால், அந்தத் தாய் தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய், தகப்பன்கள் ஏற்பட்டுத்தானே தீரவேண்டும்? (இவைகளைப் பார்க்கும்போது கடவுள்கள் தாமாக ஏற்பட்டவர்கள் என்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?) ஆகவே, இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கின்றது.

கடவுளைப்பற்றிய விவகாரங்களோ, சந்தேகங்களோ ஏற்படும்போது மாத்திரம், 'கடவுள் ஒருவர்தான்; அவர் நாமரூப குணமற்றவர்; ஆதி அந்தமற்றவர்; பிறப்பு இறப்பற்றவர்; தானாகவே உண்டானவர்' என்று சொல்லுவதும், மற்றும் அது 'ஒரு சக்தி'

என்றும் 'ஒரு தன்மை அல்லது குணம்' என்றும் பேசி, அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக்கொண்டு, பிறகு இம் மாதிரிக் கடவுள்களைக் கோடி கோடியாய் உண்டாக்கி, அவைகட்கு இதுபோன்ற பல ஆபாசக் கதைகளை வண்டி வண்டியாகக் கற்பித்து, அவற்றையெல்லாம் மக்கள் நம்பவும் வணங்கவும் பூசைசெய்யவும் உற்சவம் முதலியன செய்யவும், செய்வதில் எவ்வளவு அறியாமையும் புரட்டும் கஷ்டமும் இருக்கின்றன என்பதை வாசகர்கள்தாம் உணரவேண்டும்.

உதாரணமாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்பரம் நடராசர் கோயிலில் யானைமுகங் கொண்ட ஒரு பிள்ளையார் சிலைசெய்து, அதன் தும்பிக்கையை மற்றொரு பெண் சிலையின் பெண்குறிக்குள் புகவிட்டு இக் காட்சியை யாவருக்குந் தெரியும் படியாகச் செய்திருப்பதுடன், இந்தக் காட்சிக்குத் தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகிறது. பல ஆண், பெண் பக்தர்கள் அதைத் தரிசித்தும் கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும், ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக்கையை ஒரு பெண் உருவத்தின் பெண்குறிக்குள் புகுத்தி அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டிருப்பது போலவும், அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக்கொண்டு அந்தரத்தில் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளைப் பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால் இவைகளுக்கு ஒரு கதையும், புராணமும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதாவது, ஏதோ ஒரு அசுரனுடன் மற்றொரு கடவுள் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களையெல்லாம் அந்தக் கடவுள் கொன்றுகொண்டே வந்தும், தன்னால் முடியாத அளவு அசுரர்கள் ஒரு அசுரப் பெண்ணின் குறியிலிருந்து 'புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல்' பல இலட்சக் கணக்காய் வந்துகொண்டே இருந்ததாகவும், அதை அறிந்த அந்தக் கடவுள், பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டியதாகவும், உடனே பிள்ளையாரவர்கள் 'ஈசல் புற்றிலிருந்து கரடி ஈசல்களை உறிஞ்சுவது போல்' தனது துதிக்கையை அந்தப் பெண்ணின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல்லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. எனவே, இம் மாதிரியான காட்டுமிராண்டித் தன்மையான ஆபாசங்களுக்கு—கண்டவைகளையெல்லாம் கடவுள் என்று சொல்லும் ஆத்திகர்கள் என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

'எவனோ ஒருவன் ஒரு காலத்தில் அப்படி எழுதி விட்டான்' என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன்றைய தினமும் அவ்வெழுத்துக் கொண்ட ஆதாரங்கள் போற்றப்படவில்லையா? அன்றியும், பல கோயில்களில் உருவாரங்களாகத் தோன்றவில்லையா? இதை எவனோ ஒருவன் செய்துவிட்டான் என்று சொல்லுவதானால் இவைகளுக்குத் தினமும் பெண்டு, பிள்ளை, வாகனம் முதலியவைகளுடன் பூஜைகள் நடக்கவில்லையா? என்பது போன்றவைகளைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள், அப்படி இருக்கவேண்டும்; இப்படி இருக்க வேண்டும் என்றும், மதத்திற்கு ஆபத்து; சமயத்துக்கு ஆபத்து: கடவுள்களுக்கு ஆபத்து என்றும் கூப்பாடு போட்டு—மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவென்று, அவைகளில் 'வக்காலத்துப் பெற்று', மற்ற மக்கள் துணையக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன்வந்தார்களா என்றும் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றி எந்த ஆத்திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில்லாவிட்டாலும்—'பிள்ளையார் சதுர்த்தி' என்கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்திரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறைவில்லை என்று சொல்வதோடு, இந்த ஆபாசங்களை யெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து கொண்டும், இந்த ஆபாசங்களைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் இருந்துவிட்டு-இதை எடுத்துச் சொல்லு

பவர்களை நாத்திகர்கள் என்று சொல்லிவிடுவதாலேயே எந்தக் கடவுளையும்,' எந்தச் சமயத்தையும் காப்பாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம். இனி அடுத்த கடவுளைப் பற்றிக் கவனிப்போம்.

['பகுத்தறிவு' மலர் 2 : இதழ் 4-கட்டுரை—1935]

6. சுப்பிரமணியன் பிறப்பு

சுப்பிரமணியனது பிறப்பைப் பற்றி, இராமனுக்கு விஸ்வாமித்திரன் கூறியது :

சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணம் செய்து, போகங்கொண்டு அவளுடன் நூறு தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்து கொண்டிருந்தான். அவ்வளவு காலம் கழித்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை. அது கண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, 'இவ்வளவு காலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ் ஆகிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்க மாட்டாது; உம்முடைய விந்துவைத் தயவுசெய்து, விடாமல் நிறுத்திக்கொள்ளும்' என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றபடி யார் தரிப்பது, எங்கு விடுவது என்று கேட்க—தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப்படியே சிவன் பூமியின்மீது விட்டு விட்டார். பூமி தாங்கமாட்டாமல் பூமி முழுவதும் கொதிகொண்டு எழ, தேவர்கள் அந்த வீரியத்தைப் பூமி தரிக்கமுடியாது எனக்கருதி அக்கினியிடம் சென்று வேண்ட, அக்கினி வாயுவின் உதவியால் அவ் வீரியத்திற்குள் பிரவேசித்து பிரம்மதேவன் கட்டளைப்படி அதைக் கங்கையில் கொண்டு சேர்த்து, அவ் வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தை பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ் வீரியத்தைப் பெற, அவ் வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட,' கங்கை அதைத் தாங்க மாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி, 'ஏ, கங்கையே! நீ அடைந்த சிவனின் வீரியத்தைத் தாங்க முடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டுவிடு' என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தைப் பனிமலையின் அருகில் விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற, அதை இந்திரன் பார்த்து அக் குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்க்கக் கிருத்திகா தேவிகளை ஏவ, அவர்கள் அதற்குப் பால் கொடுத்து வளர்த்து வரலானார்கள்.

பல இடங்களில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக் குழந்தை உற்பத்தியானதால், அக் குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும்; கிருத்திகா தேவிகள் ஆறு பேர்களுடைய பால் சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும்; மேற்கண்ட ஆறு பேரின் முலையிலும் ஆறு முகங்கொண்டு ஏக காலத்தில் பால் குடித்ததால் ஷண்முகன், ஆறுமுகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ் வரலாறு வால்மீகி இராமாயணத்தில், 'சிவன் பார்வதியைப் புணர்ந்தது' என்று தலைப்புப் பெயர் கொண்ட 36-வது சருக்கத்திலும், 'குமாரசாமி உற்பத்தி' என்கின்ற 37-வது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு: தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்குத் தகுந்த சக்தி கொண்ட ஒரு குழந்தையைப் பெற்றுத்தர வேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது அய்ந்து முகங்களுடன் மற்றும் ஒரு முகத்தையும் சேர்த்துக்கொண்டு தோன்ற அவ்வாறு முகங்களிலுள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப் பொறிகளைக்கண்டு தேவர்களும் மனிதர்களும் நடுநடுங்கிப் பரமனை வேண்ட, பரமன் அப் பொறிகளைக் கங்கையில் விடும்படி சொல்ல, அவர்கள் அப்படியே செய்ய, கங்கை அதைத் தாங்கமாட்டாமல் அவைகளைக் கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறு குழந்தைகள் தோன்ற, அந்த ஆறு குழந்தைகளையும் கிருத்திகைப் பெண்கள் அறுவர்களும் பால் கொடுத்து வளர்த்துவந்தார்கள். பிறகு, சிவன் பெண்சாதியாகிய பார்வதிதேவி, இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டுப்

பாலூட்டுகையில் அந்த ஆறு குழந்தைகளும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே குழந்தையாக ஆகிவிட்டது.

இதற்கு, ஆறுமுகமுடையதால் ஆறுமுகன் என்றும்; கங்கையாறு ஏந்திச் சென்றதால் காங்கேயன் என்றும்; சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும், முருகன் கதையிலும் உள்ளது.

குறிப்பு: சுப்பிரமணியன் பிறப்புக்கு மேற்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும், கந்தபுராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே—வால்மீகி இராமாயணத்தில் விஸ்வாமித்திரர் இராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேற்கண்ட கதைதான் உறுதியாகின்றது.

ஏனெனில், கந்த புராணத்திலும் பார்வதியானவள், தன் மூலியமாய்ப் பிள்ளை பெறுவதைத் தடுத்ததற்காக, தேவர்கள்மீது கோபித்துத் தேவர்களை, 'பிள்ளையில்லாமல் போகக் கடவது' என்று சபிக்கின்றாள் என்று காணப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில் பார்வதிக்குத் தேவர்களிடத்தில் கோபம் உண்டாகக் காரணம் ஏற்பட நியாயம் இல்லை. இந்தக் கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகி இராமாயணத்தில் சொல்லுவது போல்—அதாவது 100 தேவ வருஷம் சிவன் பார்வதியைப் புணர்ந்து கடைசியாக வீரியம் வெளிப்பட்டுக் கருத்தரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு, சிவனைத் தனது வீரியத்தைப் பார்வதி கர்ப்பத்திற்குள் விடாமல் நிறுத்திக்கொள்ளும்படி வேண்டினதால்—சிவன் அதை எடுத்துக்கொண்டதற்கு பார்வதி கோபித்து வீரியம் ஸ்கலிதமாகும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச் சபித்து, அதாவது தன்னைப் போலவே தேவர்களுடைய பெண்சாதிகள் எல்லோரும் பிள்ளையில்லாமல் மலடிகளாக வேண்டுமென்று சபித்ததாகக் காணப்படுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும், பார்வதி தனது கர்ப்பத்தில் விழவேண்டிய வீரியத்தைப் பூமி பெற்றுக் கொண்டதால், பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும் (பூமியையும்) பலபேர் ஆளவேண்டுமென்று சபித்ததாகவும், அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் என்றும் வால்மீகியில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக்கின்றது.

கந்த புராணமோ—மேற்கண்ட சிவன் 100 வருடம் புணர்ந்த விஷயம் ஒன்றைத் தவிர, மற்றவைகளையெல்லாம் ஒப்புக்கொள்கின்றது.

ஆகவே, சுப்பிரமணியன் என்றும், சண்முகன் என்றும், கார்த்திகேயன் என்றும், ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேற்கண்ட மாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உட்பட்டது என்பது வைணவப் புராணங்களிலும் சைவப் புராணங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி, இந்த சுப்பிரமணியனுடைய கடவுள் தன்மையையும் செய்கைகளையும் வேறு தலைப்பின்கீழ் விவரிக்கலாம்.

['பகுத்தறிவு' மலர் 2: இதழ் 4-கட்டுரை—1936]

7. அவதாரங்களின் இரகசியம்

தாய்மார்களே! தோழர்களே!

அவதாரங்களை இன்றைக்கு மாத்திரம் நாம் எதிர்க்கவில்லை; பல ஆயிரம் ஆண்டுகளாகவே எதிர்க்கிறோம். உங்களிடம் சரித்திர ஆதாரமில்லை; நாம் சரித்திரமில்லாதவர்கள். ஆனால், நம்மைப்பற்றிய சரித்திர ஆதாரங்கள் வேண்டுமானால் பார்ப்பனர் எழுதிவைத்துள்ள வேதங்களையும், புராணங்களையும் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். விஷ்ணு எடுத்ததாகக் கூறப்படும் பத்து அவதாரங்களிலிருந்து நல்ல ஆதாரங்கள் கிடைக்கின்றன.

விஷ்ணு மச்சாவதாரம் எடுக்கவேண்டிய அவசியமென்ன வந்தது? வேதத்தை, அசுரன் களவாடிச் சென்றானாம். வேதத்தைப் படைத்தவன் யார்? பிரம்மன் தூங்கும் போது அசுரன் வேதத்தைத் தூக்கிக்கொண்டு போனானாம்! அவன் தூங்கலாமா? அப்படியே அவன் தூங்கும்போது அசுரன் தூக்கிப்போனால் என்ன? வேறொரு வேதத்தை எழுதிக்கொள்ளக்கூடாதா? அவன்தானே எல்லாவற்றையும் படைத்தவன்!

தோழர்களே! வேதம் என்பதெல்லாம் அந்தக் காலத்தில் எழுத்து வடிவமாக இல்லவே இல்லை. வேறெப்படி இருந்ததென்றால்—ஓசைதான். அதை யாராவது களவாட முடியுமா? இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், பார்ப்பான் தவிர மற்றவன் யாரும் வேத ஒலிகளைக் கேட்டு அதன் கருத்தைத் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதுதான்! இதற்கு மாறாக, அந்த அசுரன் வேதங்களைக் கேட்டு, அதன் கருத்தை அறிய முற்பட்டான். உடனே அவனை அழித்தொழிக்க அவதாரம் என்ற பெயரால் அயோக்கியத்தனம் செய்து அவனை ஒழித்து விட்டார்கள்.

அடுத்தபடியாக, நரசிங்கவதாரம் என்ன என்று கருதுகிறீர்கள்? இரணியன், பார்ப்பனர்களை அவனது நாட்டிலிருந்து வெளியேற்றியிருக்கிறான். இதை, நான் ஆதாரமில்லாமல் சொல்லவில்லை. ஆதாரத்துடன் முன்னமே 'விடுதலை'யிலும், வேறு ஒரு நூலிலும் வெளியிட்டிருக்கிறேன். அவன் சொல்லுகிறான், 'பார்ப்பனர்களைக் கொல்லுங்கள்! கோயில்களை இடித்துத் தள்ளுங்கள்! யாகம் நடத்த விடாதீர்கள்! பார்ப்பனச் சேரியைக் கொளுத்துங்கள்! ஜபதபம் பண்ணுகிறவர்களைப் புதையுங்கள்!' என்றெல்லாம் கட்டளை இட்டிருக்கிறான். இப்படிப்பட்டவனை விட்டு வைப்பார்களா பார்ப்பனர்கள்? போகட்டும். நேராக அவனை எதிர்க்கத்தான் அவர்களால் முடியுமா? ஆகவே தோழர்களே! அவனுடைய மகனைத் தேடிப் பிடித்தார்கள்; அவன் இளைஞன். அவர்கள் மாய்மாலத்திற் சிக்கினான். அவனைத் துரோகியாக ஏற்படுத்திக்கொண்டு இரணியனைக் கொன்று அழித்துவிட்டார்கள்.

ஒரு அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய்க் கடலில் மறைந்து கொண்டானாம். தேவர்களெல்லாம் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டுக் கொண்டார்கள். உடனே அவன் பன்றி அவதாரம் எடுத்துக் கடலில் குதித்து, அசுரனைக் கொன்றுவிட்டு, பூமியைக் கொண்டுவந்து பழையபடி நிறுத்தினான். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அந்த அசுரன் என்பவன், பார்ப்பனர்களுக்கு இடம் இல்லாமல் செய்திருக்க வேண்டும். பார்ப்பனருக்கு இருக்க இடம் இல்லையென்றால் உலகமே இல்லை என்று சொல்லமாட்டானா? அப்படியே சொன்னார்கள். அதுதான் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய்க் கடலில் ஒளிந்து விட்டான் என்பது.

இல்லையென்றால் பூமி என்ன, பாயா—அவன் சுருட்டுவதற்கு? அப்படியே சுருட்டினான் என்றால், அவன் எங்கே இருந்து சுருட்டி இருப்பான்? அவனுக்கு மாத்திரம் ஒரு ரோடு வைத்துக்கொண்டு சுருட்டியிருப்பானா? சுருட்டிய பின் கடலில் ஒளிந்தான் என்றால் எப்படி ஒப்புவது? கடலும் பூமியில்தானே இருந்திருக்க வேண்டும்?

ஆகவே தோழர்களே! பார்ப்பானுக்கு இடமில்லை என்று அக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அடுத்தது, அமிர்தம் கடைகிற கதை. அமிர்தம் ஏன் கடையவேண்டி வந்தது; சுகமாக நீண்டகாலம் தேவர்கள் வாழவேண்டும்; அப்படி வாழ்வதற்கு அமிர்தம் வேண்டும். அதற்கு ஆள் வேண்டுமே! அதற்குச் சூத்திரன், அதாவது—அசுரர்கள் ஒரு பக்கமும்; தேவர்கள் மற்றொரு பக்கமும் நின்றுகொண்டு பாற்கடலில் மேரு என்ற மலையை மத்தாகப் போட்டு—வாசுகி என்ற பாம்பைத் தாம்பாகக் கட்டிக் கடைந்தார்கள். எப்படியோ அதிலிருந்து அமிர்தமும் வந்தது. அந்த அமிர்தத்தைச் சூத்திரன் உண்டால் தம்மைப் போல நீண்ட காலம் சுகமாக இருப்பானே என்று யோசித்தார்கள்? உடனே ஏமாற்ற

வழி செய்தார்கள். மகா விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்தான். அவளைப் பார்த்த சூத்திரர்கள் அவளழகில் மயங்கி, அவள் (மோகினி) பின்னால் போய்விட்டார்கள். இவ்வாறு ஏமாற்றி விட்டார்கள். இக் கதையின் கருத்தென்ன? நாம் சுகம் அனுபவிக்கக்கூடாது; பார்ப்பானே எல்லா சுகத்தையும் அனுபவிக்க வேண்டும். நாம் அனுபவிக்கிற வாய்ப்பு ஏதாவது இருந்தால் அதற்கு என்ன அயோக்கியத்தனம் செய்தாவது ஏமாற்றுவது என்பதுதான்.

அடுத்தபடியாக, இராவணன். இவன்தான் பார்ப்பனர்களும் உடலுழைப்புச் செய்தாக வேண்டும் என்று அவர்களுக்கு உடலுழைப்பு வேலை தந்தான். இராமாயணத்திலே கற்பித்திருக்கிறபடி இராவணனுக்கு மூன்றரைக் கோடி வருடம் அவன் ஆயுசு என்றாகிறது. அவ்வளவு காலம் ஒருவன் உயிர் வாழ்ந்திருக்க முடியுமா? இராமாயணம் நடந்தது திரேதா யுகத்திலே. கிரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய எல்லா யுகங்களையும் சேர்த்துக் கூட்டினாலும் 40 இலட்சம் வருஷங்கள்தாம் ஆகின்றன. அதிலே கிரேதா யுகம் 17 இலட்சம் வருஷமும், திரேதா யுகம் 12 இலட்சம் வருஷமும்தான் ஆகிறது. 12 இலட்சம் வருஷம் காலாவதியாகியுள்ள ஒரு யுகத்திலே வாழ்ந்த இராவணன் மூன்றரைக் கோடி வருடம் எப்படி இருந்திருக்க முடியும்?

இராவணனுக்கு பத்துத் தலைகள் என்றிருக்கிறது. பத்துத் தலைகளிருந்தால் பத்து அடி நீளவாக்கில் இருந்திருக்க வேண்டும். அவன் படுத்துக்கொள்ள வேண்டுமென்றால் எப்படி இருந்திருக்கும்? ஒரு பக்கமாகப் படுத்தால் அந்தத் தலைகள் நாலைந்தடி உயரத்துக்கு வரும். அதற்குச் சாதகமாக எத்தனை தலையணைகள் போடவேண்டும்? அவன் தன் மனைவியோடு கொஞ்சுவதெப்படி? எத்தனை தலையணைகளைப் போட்டு அவனுடைய அய்ந்தாவது முகத்தால் முத்தமிடுவது? அவன் சீதையைக் கற்பழிக்கத் தூக்கிச் சென்றானாம்.

இதிலிருந்தெல்லாம் என்ன தெரிகிறதென்றால், இராவணன் மகா நீதிமான்; யோக்கியன்; அவனை ஒழிக்கவேண்டுமென்றால் இலேசில் முடியாத காரியம் என்பதைப் பார்ப்பனர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். ஆகவே, அவனை ஒழிப்பதற்கு, 'பிறன் மனைவியைத் தூக்கி வந்தான்; கற்பழித்தான்' என்ற பழியால், தமக்கு அவமானம் நேருமே என்பதைக் கருதிக்கொள்ளாமலுங்கூட, அவன்பேரில் குற்றம் கற்பித்து அவனை ஒழித்துக் கட்டினார்கள்.

[பெங்களூரில், 30-11-1958-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-12-1958]

8. கடவுளைப்பற்றிக் காந்தியாரின் குழப்பம்

திரு. காந்தியவர்கள் 1928 அக்டோபரில் தமது 'யங் இந்தியா'வில் தம்மை ஒரு நண்பர் கடவுளைப்பற்றிக் கேட்ட சில கேள்விகளைப் பிரசுரித்து, அவைகளுக்குத் தமது அபிப்பிராயத்தையும் எழுதி உள்ளார்.

கேள்வியின் சுருக்கம் யாதெனில் :—

'கடவுளைத்தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்றதென்றும், சத்தியம்தான் கடவுள் என்றும், துன்பத்தைச் சகித்துக்கொண்டு பொறுமையாய் இருப்பதே கடவுள் என்றும், அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத் தாமே கேடு விளைவித்துக் கொள்ளும்படி செய்து விடுகிறார்' என்றும் 'யங் இந்தியா'வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால், கடவுள் இருக்கின்றார் என்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில், அப்படிக் கடவுள் என்பதாக ஒன்று இருக்கும்பட்சத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலை நிறுத்துவதே அவரது இலட்சியமாக அல்லவா இருக்கவேண்டும்?

ஆனால், உலகில் எங்கு பார்த்தாலும் பலவிதமான அயோக்கியர்களும் கொடுமைக் காரர்களும் நிரம்பியிருப்பதுடன், ஒழுக்க நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிதும் கவலையே எடுத்துக்கொள்ளாத அயோக்கியர்களான அவர்கள் சவுகரியமாகவும், நலமாகவும் வாழ்கிறார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்து வியாதிபோல் உலகில் தாராளமாய்ப் பரவிக்கொண்டு வருகிறது. இது இப்போதிருக்கும் மனித வர்க்கத்துடன் மறைந்து போவதாக இல்லாமல், இனி வரப்போகும் பின் சந்ததியார்களும் ஒழுக்கமற்றவர்களாகவும், நாணயமற்றவர்களாகவும் நடக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்துவரும் சர்வ வல்லமை உள்ளவரா?

அப்படி இருந்தால், தனது சகலத்தையும் அறியும் சக்தியைக்கொண்டு கெடுதியும், கொடுமையும் எங்கிருக்கின்றன என்பதை அறிந்து, தனது சர்வ வல்லமையைக் கொண்டு அவைகளை ஒழித்து, அயோக்கியர்களை வளரவிடாமல் ஏன் செய்யக்கூடாது? அன்றியும் கடவுள் ஏன் கஷ்டங்களை அனுமதித்துக்கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்?

அயோக்கியத் தனத்துடனும், நாணயக் குறைவுடனும், மகாக் கொடுமையுடனும் உலகம் நடந்துகொண்டே இருப்பதை அனுமதித்துக்கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்னதான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்லுவதுபோல், கொடுமை செய்கின்றவர்கள் தாங்களாகவே கெட்டுப் போகவும், தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக்கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால்—அவர் ஏன் கொடியவர்களைக் கொடுமை செய்வதிலிருந்து விலக்கி, கொடுமைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடக்கூடாது?

அப்படிக்கில்லாமல், ஒருவனுக்குக் கெட்ட காரியம் செய்யத் தாராளமாய் இடம் கொடுத்துவிட்டு, அக் கெட்ட காரியத்தால் உலகமும், பதினாயிரக்கணக்கான மக்களும் துன்பம் அடையும்படி செய்துவிட்டு, அதன்பிறகு கேடு செய்தவனைத் தானாகக் கெட்டுப் போகும்படி செய்துகொண்டு இருப்பது எதற்காக?

உலகம் நாளுக்கு நாள் கெட்ட தன்மையிலேயே போய்க் கொண்டு இருக்கிறது. ஆதலால், உலகத்தை யோக்கியமாகவும், அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்குத் தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத்தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்கவேண்டும்?

அயோக்கியர்கள் தங்கள் அயோக்கியத் தனத்துடன் சவுகரியமாகத் தீர்க்காயுளுடன் வாழ்வது என்பது நன்றாகத் தெரியும். அப்பேர்ப்பட்டவர்களால் துன்பம் இல்லாதிருப்பதை முன்னிட்டாவது அவர்கள் ஏன் சீக்கிரம் ஒழிந்துபோகக்கூடாது?

எனக்குக் கடவுளை நம்பவேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால், நம்பு வதற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவு செய்து தங்களுடைய 'யங் இந்தியா' பத்திரிகை மூலம் இவற்றிற்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்கவேணுமாய்க் கோருகிறேன்.

இக் கேள்விகளுக்குக் காந்தியார் எழுதிய சமாதானமாவது :—இக் கேள்விகள் மிகப் பழைய கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. ஆனால், நான் ஏன் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமாதானம் சொல்லக்கூடும்.

ருஜுப்பித்துக் காட்ட முடியாது; அதாவது விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை நான் காணமுடிவதில்லை; ஆனால், ஒருவாறு

உணருகிறேன். ஆனால், அதை எந்த விதத்திலும் மற்றவர்களுக்கு ருஜுப்பித்துக் காட்ட முடியாததாய் இருக்கிறது. ஏனென்றால், அது எனது புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது. வேண்டுமானால் ஒரு அளவுக்கு, கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

அசாவது, ஒரு சாதாரண மனிதனுக்குத் தன்னை ஆளுகின்ற அரசன் யார் என்பது தெரியாதபோதிலும், ஒரு அரசன் இருந்து ஆண்டுகொண்டுதான் இருக்கவேண்டும் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். எனவே, ஒரு சாதாரண மனிதனுக்குச் சாதாரண சங்கதி கூடத் தெரியாமலிருக்கின்றது போல், நம்போன்றவர்களுக்கு மகா பெரிய சங்கதியான கடவுள் விஷயம் புலப்படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும், இந்தப் பிரம் மாண்டமான உலகத்தைப் படைத்து ஆட்சிசெலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம்தான் கடவுள். அதை நான் மறுக்கமுடியாது. ஆனால், அந்தச் சட்டத்தைப் பற்றியாவது, அச் சட்டத்தை வழங்குபவரைப் பற்றியாவது, எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு இராஜ்யத்தை ஆளும் அரசனை மறுப்பதால், அந்த இராஜ்யத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெறமுடியாதோ, அதைப்போல் கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

மொத்தத்தில் தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கின்றது என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணிந்து நடந்து வந்தால் வாழ்வு சுலபமாக நடைபெறும்.

கடவுளை உணர விரும்புவன் உறுதியான நம்பிக்கை கொண்டால்தான் முடியும். அந் நம்பிக்கைக்கு வெளி ஆதாரங்கள் தேடப் புறப்பட்டால் அது முடியாத காரியமாகும்.

கடைசியாக, மேற்கூறிய கேள்விகளுக்கு ஒழுங்குமுறையில் காரணங்கள் காட்டி, மேற்கண்ட கேள்விகள் கேட்டவரைத் திருப்திசெய்யத்தக்க நியாயங்கள் ஒன்றும் என்னிடம் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

கடவுள் நம்பிக்கை காரண காரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆனதினால், நான் இக் கேள்விகள் கேட்டவருக்குக் கடைசியாகச் சொல்லுவதென்னவென்றால், சாத்தியப்படாத காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்பதுதான்.

உலகத்தில் உள்ள கெடுதிகளுக்கும், கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்டமுடியாது. ஆனால், கெடுதிகள் இருப்பதையும், அவற்றின் தன்மைகளை அறிய முடியாதது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

கடவுள் பொறுமை உள்ளவர் என்பதற்குக் காரணமே அவர் கொடுமை உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால்தான். கடவுளிடத்தில் கெட்ட குணம் இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனாலும், உலகில் ஏதாவது கெடுதி இருந்தால் அதற்கு அவரே கர்த்தா. ஆனால், அவருக்கு அதில் சம்பந்தம் இல்லை (இதற்கு அவருடைய ஆங்கில வாசகமானது)

I call God long suffering and patient precisely because He permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil, He is the author of it and yet untouched by it......' என்று எழுதியிருக்கின்றார்.

எனவே, அவர் சொன்ன பதில்களிலிருந்தாவது, அவர் காட்டி இருக்கும் நியாயங்களில் இருந்தாவது கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதைக் கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இக் கேள்விகளை எப்படி திரு. காந்தி பழைய கேள்விகள் என்று சொன்னாரோ— அதேபோல், அவருடைய சமாதானங்களும் பழைய கதைகள் என்றுதான் சொல்லவேண்டும்.

என்னவென்றால், 'கடவுளை அறிவது அசாத்தியம்.'

'அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பது நல்லது.'

'கடவுள் நம்பினால்தான் உண்டு.'

'அதுவும் உறுதியான நம்பிக்கை இருந்தால்தான் முடியும்' என்பன போன்ற சமாதானங்கள். ஆனால், ஒரு புதிய உதாரணம் காட்டியிருக்கின்றார். அது என்ன வென்றால் :

சாதாரண மனிதனுக்குத் தங்கள் அரசர் யார் என்பது தெரியாதாம். அதுபோல், தங்களுக்குக் கடவுள் என்பது தெரியவில்லையாம். இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஏனெனில், அரசன் எல்லோரும் தன்னை அறியும்படி செய்துகொள்ளத்தக்க சக்தி உடையவன் அல்லன். கடவுள் என்பவரோ சர்வசக்தி உள்ளவர் என்பதைக் கேள்வி கேட்ட நண்பர் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

தவிர, மற்றொரு புதிய விஷயம் கண்டுபிடித்து இருக்கிறார். அதாவது, கடவுள் இருக்கிறார் என்பது விளங்காமல் போனாலும் இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிகின்ற தற்காக, ஒரு விஷயத்தை—தனக்கு எட்டாததை—தெரியாததை நம்பவேண்டும் என்று சொல்வதனால், வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்குச் சவுகரியமான வேறு அனேக காரியங்கள் செய்யக்கூடுமானால் அவைகளையும் செய்யச் சொல்லுகிறாரா என்பது விளங்கவில்லை.

ஏனெனில், பலவிதமான புரட்டு, பித்தலாட்டம், திருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கைப் பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல் நிறையக் கள்ளையும், சாராயத்தையும் குடித்துப் போதை ஏற்றிக்கொண்டு, வாய் குளறிப் பாடிக்கொண்டு, தள்ளாடி நடந்து போகிறவனுக்கு இதைவிட வாழ்க்கை யாத்திரை சுகமாகவும், சுலபமாகவும் கழிகின்றதை நாம் நேரில் பார்க்கின்றோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் கழிவதே முக்கியமானால்—நாம் ஏன் இவனைப் பின்பற்றக் கூடாது? இந்த மாதிரிப் போதையில் மூழ்கியிருக்கும்போது எவ்வித இன்ப, துன்பமும் தோன்றாமல் வாழ்க்கை கழிந்து விடுகிறதா, இல்லையா? நிற்க;

தீமைகளும் கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகின்றனவென்றும், அதனாலேயே அவர் பொறுமைசாலி ஆகிறார் என்றும் சொல்லுவதைக் கவனித்தால் இது எவ்வளவு கவலையற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

ஏனெனில், கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும், கொடுமைகளும் கெடுதிகளும் கடவுளிடம் இல்லை என்றும், ஆனாலும் அக் கெடுதிகளைக் கடவுளே உண்டாக்குகிறார் என்றும், ஆனால், அவைகளில் கடவுளுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்லுவது அறியாமையால் சொல்லும் வாக்கியமா, அல்லது ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிக் கேள்வி கேட்பவர்களை ஏமாற்றிவிடலாம் என்பதாகக் கருதிச் சொன்ன வாக்கியமா என்பது நமக்கே விளங்கவில்லை.

உலகில் மிகப் பெரியார்கள் கூட்டத்திலும், மேதாவிகள் கூட்டத்திலும் சேர்ந்த ஒரு வரும், சதா சர்வ காலம் கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தவரும், கடவுள் செயலை அடிக்கடி உணர்ந்து அதன் பயனை அனுபவித்துக்கொண்டே இருப்பதாகச் சொல்லுபவரு

மான ஒருவரே கடவுளைப்பற்றிச் சொல்வது இதுவானால், மற்றவர்களிடம்—அதாவது கடவுள் பெயரையும் சமயத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு வயிறு வளர்ப்பவர்களிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அன்றியும், கடவுளைப்பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவரும், 'கடவுள் பெயரற்றவர், ரூபமற்றவர், குணமற்றவர்' என்பதையும், 'அவர் மனத்திற் கெட்டாதவர், இந்திரியங்களுக்கு அகப்படாதவர்' என்பதையும், அவருக்கு இலட்சணமாகச் சொல்லும்போது— அதற்குமேல் கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசிய மானதும், பலனற்றதும் என்பது நமது முடிவு.

அல்லாமலும், அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டுவதில்லை என்பது நமது முடிவு.

ஆனால், கடவுளைப்பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்தவரை என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்வதின் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும் முயற்சியும் கெட்டு, சோம்பேறித்தனம் உண்டாகக்கூடாது என்பதைப் பொறுத்த வரையில்தானே ஒழிய வேறில்லை.

உதாரணமாக, பாதாள லோகம் என்று ஒரு லோகம் இருக்கிறது என்றும், அதில் நாகராஜன் என்கின்ற அரசன் இருக்கிறான் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், 'அந்த லோகம் எங்கே? அந்த அரசன் வீடு எங்கே?' என்று கேட்டுக் கொண்டு திரியவேண்டியது ஒவ்வொருவனுடைய வேலை அல்ல.

அதுபோலவே, 'இல்லாத பட்டணம்' என்று ஒரு பட்டணம் ஆகாயத்தில் இருக்கின்றது என்றும், அதற்கு அரூபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு அனங்கள் என்கின்ற பூஜ்ஜியம் (0 சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், 'அதைக் காட்டு' என்று கேட்டுக்கொண்டு திரியவேண்டியதும் ஒவ்வொருவனுடைய வேலையுமல்ல.

மற்றென்னவென்றால்,

இம் மாதிரி அரசர்களையும், பெண்களையும்பற்றி எல்லா மக்களும் நம்பாவிட்டால் அதற்காகத் தண்டனையென்று நிபந்தனை ஏற்படுத்தி, 'அந்த நாகராஜாவே உனக்குச் சோறுபோட்டுவிடுவார், ஆகாயக் கன்னியே உனக்குப் பெண்சாதியாய் இருந்துவிடுவாள், மற்றபடி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே' என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளச் செய்து, மக்களது அறிவையும் நேரத்தையும் பொருளையும் பாழாக்கி, அவர்களை வெறும் அர்த்த மற்ற முறையில் அடிமைப்படுத்தி, பட்டினிபோட்டு வதைப்பதில்தான் கவலையே ஒழிய வேறில்லை.

ஒரு மனிதன் கடவுள் இல்லை என்று சொல்லுவானேயானால் அவன் உலகம் முழுவதும்—'அதற்கு அப்பாலும், இப்பாலும்' என்பவைகளெல்லாம் அறிந்து, நேரில் தேடித்தேடிப் பார்த்துக் காணாவிட்டால்தான் சொல்லவேண்டும் என்பதும் முழுதும் தப்பல்ல. ஆதலால், அதைப்பற்றிய முடிவைப்பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால், அதற்கும் மனிதனின் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் அறிவையும் நேரத்தையும் பொருளையும் ஏன் செலவு செய்ய வேண்டும்? இதுவரையில் அனேகர் அப்படிச் செய்து வந்ததன்மூலம் அடைந்த நன்மைகள் எவை? அப்படிச் செய்யாததன்மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் கெடுதி என்ன? —என்பன போன்றவைகளே இந் நிலையில் முக்கியமாக ஆராயத் தகுந்த விஷயமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்கள் தயவுசெய்து கடவுளைப் பற்றிய நம்பிக்கையும் கவலையுமில்லாத புத்தர் நடந்துகொண்டதையும், கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து

அவரது அருள் பெற்றவர் என்பவரான சம்பந்தருடைய நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கடவுளை நம்பினால்தான் யோக்கியனாக இருக்க முடியுமா என்பதும், நம்பாதவன் எல்லாம் அயோக்கியனா என்பதும் விளங்காமல்போகாது.

இதை ஏன் வலியுறுத்த நேரிடுகிறது என்றால், நம்மைச் சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும், நமக்கு வெளியில் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் நிலையும் நடவடிக்கையும் அவர்கள் கண்ட அற்புதக் காட்சியையும் அறிந்து அந் நிலைபெற்று-கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்யவேண்டும் என்கின்ற கருத்துக்கொண்டதே ஒழிய வேறில்லை.

இந் நிலையில் குட்டிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவசியம் என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்பவைகளைத் தாங்களே சற்று, தங்களது நடுநிலைமை அறிவைக்கொண்டு யோசிப்பார்களானால்—அவர்களது மடமையும் இதுவரை தங்கள் வாழ்வு வீணானதும் ஒரு சிறிதாவது அவர்களுக்குப் புலப்படாமல் போகாது.

[பிறந்த நாள் மலர் 91; 'விடுதலை'-கட்டுரை—17-9-1969]

பகுதி II

மதம்

1. மதம்

1. மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ் செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகட்டிக் கூடிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகி விட்டன. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கின்ற அவசியம் ஏற்பட்டு விடுகின்றதோ அதேபோல், மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள்தாம் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கின்றன.

ஆனால், இக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங் கொண்டு என்று பார்ப்போமானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது, பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் முதலாகிய நிலையில், அதாவது கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப் பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேச வர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால் யாராவது அறிஞர் அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது, பாமர மக்கள் மூட நம்பிக்கையின் பலனாய்த் தங்கள் பிடிவாதம் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில், பிரிந்து போய்க் கொள்கைகள் வகுத்து, அதாவது முன்னையதைத் திருத்தியோ அல்லது சிலவற்றை மாற்றியோ அல்லது சில புதியவைகளைச் சேர்த்தோ செய்ய நேரிடும்போது—அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள், அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், 'என் மதம் பெரிது', 'உன் மதம் சிறிது' என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டுவிடுகின்றது.

இன்றையதினம் எந்த மதக்காரனையாவது கண்டு, உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன?—என்றால் சில சடங்கையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம், அதாவது எந்தக் கருத்தைக்கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அந்தக் கருத்து சற்றும் அறிந்திருக்க மாட்டான். அதோடு, அதற்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் ஏற்பட்டு விட்டன. அன்றியும், சிலர் இவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும் கருவியாய் விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக் கொடுமைப் படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும் அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றி, பொதுவாக மனித வர்க்கத்திற்கு அவற்றால் எவ்விதப் பலனும் இல்லாமற் போய்விட்டது.

['குடி அரசு'—தலையங்கம்—11-8-1929; 23-4-1949]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொதுவாக சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவைகள் எல்லாம் நல்ல அர்த்தத்தில் எடுத்துக்கொண்டாலும் அவை மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

மனித வாழ்க்கைக்கேற்ற திட்டங்களேதாம் சமயம் அல்லது மார்க்கம் என்று சொல்லப்படுவதுமாகும்.

ஒரு வாசக சாலையிலே, உல்லாசக் கூட்ட சாலையிலே, ஒரு சங்கத்திலே சேர்ந்திருக்கவேண்டிய அங்கத்தினர்கள் அச் சங்கத்தின் நிர்வாகத்தின் அவசியத்திற்காக என்று தங்களுக்குள் விதிகளை நிர்ணயித்துக்கொள்வதுபோலவே—ஒரு பிராந்தியத்தில் வாழும் மக்கள் தாங்கள் சேர்ந்திருப்பதற்காகவும் தங்கள் வாழ்க்கை தடையின்றி முறையாய் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடைபெறுவதற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட, அல்லது யாராவது ஒரு தலைவனால் அல்லது அறிஞனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளே சமயக் கொள்கைகளாகும்.

இதுவும் அந்தந்தக் கால தேச வர்த்தமானத்திற்கும், மக்கள் அறிவு நிலைமைக்கும் வளர்ச்சிக்கும் தக்கபடி செய்யப்படுவனவேயாகும். ஆனால், அக் கொள்கைகள் மக்கள் தங்களது நன்மை தீமைகளைக்கூட சரிவர உணர்ந்து நடந்துகொள்ள முடியாத—அறிவு இல்லாத காலத்தில் மக்களைப் பயப்படுத்தி இணங்கச்செய்ய என்று பல கற்பனைகளை உண்டாக்கி, பயப்படுத்தி வைத்து, அப் பயத்தின் மூலமாவது நடக்கும்படி செய்யக் கருதி ஏற்படுத்திய கொள்கைகளும் சேர்ந்தவையாகும்.

அதாவது, எப்படி ஒரு குழந்தையானது, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி இல்லாததென்றும், அதைப்பற்றிய விவரங்களை எடுத்துச்சொன்னால் அதை அறிந்து கொள்ள முடியாததென்றும் அதன் பெற்றோர்களோ பாதுகாப்பாளர்களோ கருதினால், அக் குழந்தை வெளியில்போய் நடமாடி ஆபத்தில் பட்டுக் கஷ்டப்படாதிருக்கச் செய்ய வேறுவிதமாக—அதாவது ஒருவித பயம் உண்டாகும்படியான, 'பூச்சாண்டி பிடித்துக் கொள்வான்' என்றும், 'பேய்பூதம் பிடித்துக்கொள்ளும்' என்றும், 'துண்டுத் தடிகாரன் பிடித்துக்கொண்டுபோய் அடைத்துவிடுவான்' என்றும் இன்னும் பல வகையாய்ச் சொல்லுவதோடு, கையையும் முகத்தையும் ஒரு விதமாக ஆக்கிக் காட்டி, அக் குழந்தைக்கு ஒன்றும் புரியாதபடி மிரட்டிப் பயப்படுத்திவைத்து, அதை எப்படி வெளியில் போகாமல் செய்கின்றார்களோ, அப்படிப்போலவே—மக்கள் வாழ்க்கை நலத்திற்கென்று ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளை உணர்ந்து அதன்படி ஒழுகமுடியாத நிலையில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கருதப்பட்ட காலத்தில், அப்போதுள்ள 'அறிஞர்' என்பவர்கள் அம் மக்களைப் பயப்படும்படியாக ஏதோ அம் மக்களுக்குப் புரியாத ஒன்றைச் சொல்லி, வேறுவித பயத்தை உண்டாக்கி, அக் கொள்கைகளுக்கும் மதக்கட்டுப்பாட்டிற்கும் இணங்கி நடக்கும்படி செய்திருக்கிறார்கள்.

அந்த நிபந்தனை மிரட்டல்களும் கட்டுப்பாடுகளுந்தாம் இன்றைய மோட்சம், நரகம், எமன், அடுத்த ஜென்மம், கர்மம், விதி, செக்கில் போட்டு ஆட்டுவது முதலாகியவைகளாகும்; மற்றும் இவற்றை வலியுறுத்தி எழுதிய சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்.

அது மாத்திரமல்லாமல், மேற்கண்ட முறையில் சொல்லுபவைகளையெல்லாம் சொல்லி விட்டும் எழுதிவிட்டுமான பிறகு, அவைகளை மனிதன் சொன்னான்; மனிதன் எழுதினான் என்றால் நம்பமாட்டார்களென்று கருதி, அவைகளையெல்லாம் கடவுள் சொன்னார், பகவான் சொன்னார், ரிஷி சொன்னார், முனிவர் சொன்னார் என்று—அதாவது மனிதத் தன்மைக்கு மீறினவர்களால் சொல்லப்பட்டது என்று சொல்லிக் கட்டாயப்படுத்தி—எப்படியெனில், நம்பினவனுக்கு மோட்சம்; நம்பாதவனுக்கு நரகம்—கழுதை ஜன்மமாய்ப் பிறக்க வேண்டுமென்று சொல்லி நம்பச் செய்வதுமான காரியத்தின்மீதேதான் சமயக் கொள்கைகளை மக்களுக்குள் புகுத்தி இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உண்மையென்று நம்பின பாமர ஜனங்களும், இவற்றினால் பிழைக்க வசதிசெய்துகொண்ட சில பண்டித ஜனங்களும் இந்த மாதிரிக் கொள்கைகள் கொண்ட சமயங்களைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்து, சிறிது

கூட காலத்திற்கும் அறிவின் நிலைமைக்கும் ஏற்றமாதிரி திருந்துவதற்கு விடாமல் முட்டுக் கட்டை போட்டுவந்ததாலேயே, அறிவுக்குத் தகுந்தபடியும் காலத்திற்கு ஏற்றபடியும் பலப் பல சமயங்கள் தோன்றவேண்டியதாயின. அன்றியும், திருத்த இடம் கொடுத்துக்கொண்டு வந்த சமயமெல்லாம் பெருகவும், பிடிவாதமாய் இருந்ததெல்லாம் கருகவுமாய் இருந்து கொண்டு வரவேண்டியதுமாயிற்று.

ஆகவே, இன்றைய தினமும் மக்கள் எந்தச் சமயமானாலும் இந்தத் தத்துவத்தின் மேல் ஏற்பட்டதென்பதை ஒத்துக்கொண்டும், காலதேச வர்த்தமானத்திற்கும் அறிவு வளர்ச் சிக்கும் தகுந்தபடி திருத்தமடைய உரிமையும் சவுகரியமும் உடையது என்று சொல்லப்படு மாயின் அது எந்த மதமாயினும், சமயமாயினும் அறிவுள்ள மனிதன் ஒப்புக்கொள்ள வேண்டியதேயாகும்.

அப்படிக்கில்லாமல், அதாவது மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல்—அதுவும் காலத்திற்கும் அறிவுக்கும் ஏற்ற மாறுதலுக்குக் கட்டுப்பட்டது என்பதாக இல்லாமல்—மதத்திற்காக மனிதன் ஏற்பட்டான் என்றும்; அந்த மதத்தைக் காப்பாற்றவேண்டியதே மனிதனின் கடமை என்றும்; அது எப்படிப்பட்ட தானாலும் அதைப்பற்றிக் குற்றம் சொல்லவோ, திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றும் சொல்லும்படியான மதம் எதுவாயிருந்தாலும் அதை அழித்துத் தீரவேண்டியது மனித சமூக சீர்திருத்தத்தைக் கோருகிற ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகவே, அக் கடமைக்குட்பட்டவைகள்தாம் சமயக் கொள்கைகளாகும்.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவு—'குடி அரசு' 25-1-1931]

2. இந்துமதம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

குறிப்பாகவும் சிறப்பாகவும் கடவுள் என்பது என்ன என்பதைப்பற்றியும், பரிபாலனம் என்பது என்ன என்பதுபற்றியும், மதம் என்பது என்ன என்பது பற்றியும், தர்மம் என்பது என்ன என்பதுபற்றியும், இந்துக்கள் என்போர்களில் ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட, குறைந்த அளவு ஞானமில்லாமலே இருக்கிறது. இதைப்போல ஒரு ஜனசமூகத்திற்குக் கேடான காரியம் வேறொன்றும் இல்லை. நம்மில் அனேகர் கடவுள் என்றால் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? கடவுள் நம்மைப் போல மனித உருவத்தோடு இருப்பதாயும்; அதற்குப் பெண்டாட்டி, பிள்ளை, தாய்தகப்பன், வீடுவாசல், சொத்து சுகம் உண்டென்றும்; அதற்கும் கல்யாணம், ருதுசாந்தி, படுக்கை வீடு, சீமந்தம், பிள்ளைப் பேறு உண்டென்றும்; இப்படி ஆயிரக் கணக்கான கடவுள்கள், ஆயிரக் கணக்கான பெயர்களினால் இருக்கிறதாகவும்; அதற்கு அபிஷேகமோ, பூசையோ, தீபாராதனையோ, உற்சவமோ செய்வதுதான் பக்தி என்பதாகவும் நினைத்துக்கொண்டிருக் கின்றார்கள்.

அதுபோலவே, மதம் என்பதையும் நெற்றியில் நாமமோ, விபூதியோ, கோபியோ, சந்தனமோ பூசுவதுதான் இந்துமதம் என்றும்; ஒருவரை ஒருவர் தாழ்ந்த சாதி—உயர்ந்த சாதி என்று சொல்வதைத்தான் இந்துமதம் என்றும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். உற்சவம் நடத்துவிப்பதையும், இந்த உற்சவத்திற்கு வரும் ஜனங்களுக்கு மடம் கட்டுவதும், சத்திரம் கட்டுவதும், சாப்பாடு போடுவதும் தர்மம் என்று நினைத்துக்கொண் டிருக்கின்றார்கள். இவ்விதக் காரியத்தைப் பிரச்சாரம் செய்வதையும், இவ்விதக் காரியங்களை நிர்வகிப்பதையும், இதற்காகப் பொதுஜனங்கள் பொருளைச் செலவு செய்வதையும் பரிபாலனம் என்று நினைக்கிறார்கள்.

இந்து சமூகத்திற்கு அடிப்படையான குற்றம்—அதாவது அஸ்திவாரத்திலேயே பலவீனம்—நாம் கடவுளையும் மதத்தையும் அறிந்திருக்கும் பான்மையேதான். இந்தப் பான்மையுள்ள சமூகம் உருப்படியாவதற்கு மார்க்கமே இல்லை. தொட்டதற்கெல்லாம் கடவுள் செயல் என்பதும்; நமது தேவைகளையெல்லாம் பிரயத்தனமில்லாமல் கடவுளை ஏமாற்றி அடைந்துவிடலாம் என்ற பேராசைப் பைத்தியமும் நம்மை விட்டு நீங்கவேண்டும். கடவுள் கைகால், கண், மூக்குடன் மனிதனைப்போல் எங்கோ ஓரிடத்தில் இருக்கிறார்; அவரை நினைத்தாலோ, பணிந்தாலோ, தேங்காய் பழம் உடைத்துப் பொங்கல் வைத்துப் பூசை செய்தாலோ, பூசாரிக்குப் பணம் கொடுத்தாலோ மனிதனாய்ப் பிறந்ததற்குச் செய்ய வேண்டிய கடன் தீர்ந்துவிட்டது; மனிதன் செய்த தப்பிதம் எல்லாம் தீர்ந்துவிட்டது என்று எண்ணுகிற எண்ணத்தைப்போல ஒரு முட்டாள்தனமான எண்ணம் வேறொன்றுமே இல்லை. மனிதர்கள் இவ்வளவு அக்கிரமங்கள் செய்யக் காரணமே, கடவுள் என்பது என்ன என்று உணராததும், உணர்ந்திருப்பதாய் நினைக்கும் பலர் —கடவுளை வணங்கி மன்னிப்புக்கேட்டால் மன்னித்துவிடுவார் என்ற நம்பிக்கையுந்தாம். கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவர் எல்லாவற்றையும் அறிந்துகொண்டுதான் இருக்கிறார் என்ற மக்களிலேயே 1000-த்தில் ஒருவன்கூட தனது காரியங்களைக் கடவுளுக்குவிடுவது அருமை யாய்த்தான் இருக்கிறது. இவற்றிற்குக் காரணம்–இயற்கைக்கு விரோதமான கட்டளை களையும் கடவுள் என்றால் என்ன என்பதையும் அறியாததேதான்.

கடவுளின் கட்டளை என்று சொல்வது ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொருவிதமாக இருந்துவருவதை நாம் காண்கிறோம். இவைகள் எப்படிக் கடவுள் கட்டளையாக மதிக்கப்படும்? அதுபோலவே, பாவபுண்ணியம் என்பது தேசத்திற்கு ஒருவிதமாகவும், மதத்திற்கு ஒருவிதமாகவும், சாதிக்கு ஒருவிதமாகவுந்தான் கருதப் படுகிறது. நமது கலியாணங்களிலேயே மதத்திற்கு மதம் வித்தியாசம்; சாதிக்குச் சாதி வித்தியாசம்.

சிலர் தமது சிறிய தகப்பனார், பெரிய தகப்பனார் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் அத்தை, மாமன் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் யாரையும் மணக்கிறார்கள்.

ஆகார விஷயத்திலோ, சிலர் பசுவை உண்ணுவது பாவம் என்று நினைக்கிறார்கள்; சிலர் பன்றியை உண்பது பாவம் என்கிறார்கள்; சிலர் கோழியை உண்பது பாவம் என்கிறார்கள். ஐந்துக்களிலேயே, சிலர் பசுவை அடித்துத் துன்புறுத்தி வேலை வாங்கலாம்; ஆனால், பாம்பை அடிப்பது பாவம் என்கிறார்கள். சிலர் எந்த ஜீவனையும் வதைக்கக் கூடாது என்கிறார்கள். சிலர் எல்லா ஜீவன்களும் மனிதன் தன் இஷ்டம்போல அனுபவிப் பதற்குத்தானே படைக்கப்பட்டன என்கிறார்கள்! இந்த நிலையில் எது உண்மை? எது கடவுள் கட்டளை? எது பாவம் என்று எப்படி உணரமுடியும்? இவற்றைப்பற்றி எவராவது ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் உடனே அவரை 'நாத்திகன்' என்று சொல்லுவதும், 'இதெல்லாம் உனக்கு எதற்காகவேண்டும்—பெரியவர்கள் சொன்னபடியும், நடந்தபடியும் நடக்கவேண்டியதுதானே!' என்றும் சொல்லிவிடுவார்கள்.

பெரியவர்கள் யார் என்று யோசிக்கப்போனால், அதிலிருக்கும் கஷ்டத்திற்கு அளவே இல்லை. அன்றியும், அவர்கள் சொன்னதையும், நடந்ததையும் கவனிக்கப் போனால் அதிலுள்ள கஷ்டத்திற்கும் விவகாரத்திற்கும் முடிவே இல்லை.

உதாரணமாக, சிலர் வேதம் என்று ஒன்றைச் சொல்லி அதன்படி எல்லோரும் நடக்க வேண்டும் என்று சொல்வார்கள். 'அதில் என்ன சொல்லி இருக்கிறது—நான் பார்க்கலாமா?' என்றால், 'அது கடவுளால் சொல்லப்பட்டது; அதை நீ பார்ப்பது பாவம், நான் சொல் வதைத்தான் நம்பவேண்டும்' என்பார்கள். உலகத்தில் எத்தனை கடவுள்கள் இருப் பார்கள்? ஒரு கடவுள் என்றுதானே சொல்லுகிறார்கள். அவர் சொல்லியிருப்பாரானால் உலகத்திற்கெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருக்க வேண்டாமா? அப்படியானால்,

கிறிஸ்து, முகமது முதலிய மதங்களும்—இந்தியா தவிர மற்ற தேசங்களும் இதை ஒப்புக் கொள்ளும்படி கடவுள் ஏன் இதைச் செய்யவில்லை? ஆனதனால், இதைக் கடவுள் சொன்னார் என்பது பொய் என்று யாராவது சொன்னால், உடனே அவனை 'வேதப் பிரஷ்டன்' என்று சொல்லிவிடுவார்கள். இவ்வாறு மூடுமந்திரமானதும், இயற்கைக்கும் அனுபவத்திற்கும் நாணயத்திற்கும் விரோதமானதுமான கொள்கைகள் நமது நாட்டில் இந்துமதத்தின் பெயரால் இருந்துகொண்டு, ஒரு பெருஞ் சமூகத்தையே தேய்ந்துபோகும்படி செய்வதோடு—இதன் பரிபாலனம் என்னும் பெயரால் தேசத்தின் நேரமும் அறிவும் பொருளும் அளவற்று அனாவசியமாய்ச் செலவாகியும் வருகின்றது.

மதத்திற்கொரு கடவுளா? சாதிக்கொரு கடவுளா? மதத்திற்கொரு வேதமா? மதத்திற்கொரு பாவ புண்ணியமா? கடவுளுக்கும், மோட்சத்திற்கும், நரகத்திற்கும் வேறு ஒரு உலகம் இருக்கிறதா? ஒருக்காலும் அப்படி இருக்கவே முடியாது. பெரியவர்கள் கோயிலில் சாமி கும்பிடும்போது கட்கத்திலிருக்கும் குழந்தை எப்படி ஒன்றும் அறியாமலும், மனத்தில் ஒன்றும் நினைக்காமலும், தானும் கைகூப்பிக் கும்பிடுகிறதோ—அதுபோலவே, நமக்கும் தெய்வம், மதம், தர்மம் என்கிற சொற்கள் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு அர்த்தமில்லாமல் நமக்குள் பதிந்துவிட்டன.

இதுபோலவே, பக்தி-தொண்டு-அஹிம்சை என்னும் பதங்களும் அர்த்தமில்லாமலேயே வழங்கப்படுகின்றன. யோசித்துப் பார்ப்போமேயானால், நம்மிடையில் இருக்கும் மக்களிடம் காட்டும் அன்புதான் நாம் பக்தி செய்யத் தக்க கடவுள்; அவர்களுக்குச் செய்யும் தொண்டுதான் கடவுள் தொண்டு. அம் மக்களின் விடுதலைதான் மோட்சம். அச் சீவன்களிடம் கருணை காட்டுவதும் அவைகள் வேதனைப்படாமலிருப்பதுந்தான் அஹிம்சை. மாமிசம் சாப்பிடுவதில்லை என்பது மாத்திரமே அஹிம்சையாகாது. பகுத்தறிவுள்ள மக்களைக் கஷ்டப்படுத்தாமல், அவர்கள் மனவேதனை அடையச் செய்யாமலிருப்பதும், அவர்கள் கஷ்டத்தையும் அடிமைத் தனத்தையும் நீக்க உழைப்பதுந்தான் அஹிம்சையாகும். மாட்டு மாமிசம் சாப்பிடாமலிருந்துவிட்டு, மாட்டை வண்டியில் கட்டி, சுமக்க மாட்டாத பாரம் வைத்துத் தினமும் கஷ்டப்படுத்துவது ஒருக்காலும் அஹிம்சையாகாது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் மற்றொரு ஜீவனுக்கு உபத்திரவமும் கொடுமையும் செய்யாமலிருப்பதுந்தான் அஹிம்சை.

மனிதனுக்கு மனிதன் பார்ப்பது பாவம்; தெருவில் நடப்பது பாவம் என்று சொல்லிக் கொண்டு—பட்டை நாமம் போட்டுக் கொண்டும், பஞ்சக் கச்சம் வைத்து வேட்டி கட்டிக் கொண்டும் வாயால் 'ராம்! ராம்!' என்று ஜபித்துக்கொண்டும் இருந்தால் அது ஆச்சாரமும் பக்தியும் ஆகிவிடுமா?

நம்மைச் சுற்றிக் கோடிக்கணக்கான மக்கள் குடியிருக்க நிழல்கூட இல்லாமலும், இரண்டு நாளைக்கு ஒருவேளைகூடச் சாப்பிடச் சக்தி இல்லாமல் தரித்திரத்தால் வாடிக் கொண்டும் இருக்கும்போது, சோம்பேறிகளும் விபசாரிகளும் தங்கும்படி மடங்களும் சத்திரங்களும் கட்டுவதும், வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு 'பாயாசத்திற்குக் குங்குமப்பூ போடவில்லை'; 'பொங்கலுக்குப் பாதாம்பருப்பு போதவில்லை' என்று சொல்லிவிட்டுப் போகும் தடியர்களுக்குப் பொங்கிப் போடுவதும் சமாராதனை செய்வதும் தர்மமாகுமா? இவைகளை உணராமல் சுயநலக்காரர்கள் தங்கள் நன்மைக்கு எழுதிவைத்திருக்கும் ஆபாசக் களஞ்சியங்களை நம்பிக்கொண்டு நமது பொருள், நேரம், அறிவு ஆகியவைகளை வீணாக்குகிறோம்.

இந்துக்கள் என்பார்களோ இந்துமத ஆச்சாரியர்கள் என்பார்களோ சிறிதும் கவலையற்று, தங்களது வாழ்வுக்கு இவற்றைத் தொழிலாய் வைத்துக்கொண்டு காலங் கழித்து வருகிறார்கள். இப்படி நடந்துவருவது சில தனிப்பட்ட நபர்களுக்கும், சில தனிப்பட்ட வகுப்புகளுக்கும் அனுகூலமாக இருப்பதால் இவ்வாபாசங்களை வெளியார்

அறியாமலிருப்பதற்கு அவ் வகுப்பாரின் கட்டுப்பாடான சூழ்ச்சியும், மற்ற வகுப்பாரின் அறியாமையும் உதவி செய்துவருகின்றன.

நமது சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்துமத சம்பந்த சடங்குகள் பெயராலும், மதத்தின் பெயராலும், தெய்வங்கள் பெயராலும், வருடம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவாகிவருகிறது என்று சொல்வது அதிகமாகாது. அதாவது, எவ்வளவு யாத்திரை ஸ்தலம், எவ்வளவு வேண்டுதல் ஸ்தலம், எவ்வளவு உற்சவ ஸ்தலம், எவ்வளவு மதச்சடங்குகள்– இவைகளுக்கு ஏற்படும் செலவு, மெனக்கேடு இவைகளைக் கணக்குப் பார்த்தால் எவ்வளவு 10 கோடி ரூபாயாகும்? இதனால் என்ன பலனை அடைகிறார்கள்? மனத்தில் ஏற்படும் ஒரு குருட்டு நம்பிக்கையாலும், இதனால் இலாபமடையும் வகுப்பார்களால் ஏமாற்றப்படுவதாலுந்தானே நமது மக்கள் இவ்விதக் கஷ்ட, நஷ்ட, மெனக்கேடுகளுக்குக் கட்டுப்படவேண்டியிருக்கிறது? அல்லாமலும் இதனால் எவ்வளவு அடிமைப் புத்தி வளர்கிறது?

[ஏழாயிரம் பண்ணையில், 16, 17-5-1926-ல் நடந்த பால்ய நாடார் சங்கத்தின் ஆண்டு விழாவில் சொற்பொழிவு—'குடிஅரசு' 30-5-1926]

3. மதப்புரட்டு

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

அரசியலின் பெயரால் அரசியல்காரர்கள், தேசியக்காரர்கள் என்போர்கள் தங்கள் சுயநலத்திற்கு மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றிப் பாழ்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லி வந்தேனோ, அதைவிடக் கொஞ்சமாவது குறைந்ததல்ல இந்தப் புரோகிதர்கள் அல்லது பார்ப்பனர்கள் என்கிற ஒரு கூட்டத்தார், மதத்தின் பேரால் நம்மை ஏமாற்றி, நமது ஒற்றுமையைக் குலைத்து, நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த நமது பொருளையும் கொள்ளை கொண்டு, நமது நாட்டையும் சமூகத்தையும் பாழாக்கி, நம்மைச் சுயமரியாதை அற்ற மனிதர்களாக–நடைப் பிணமாய் வாழும்படி செய்துவருவது.

இதன் இரகசியத்தை நாம் கொஞ்சமும் உணராமல், இம் மாதிரியான வஞ்சகச் செயலுக்கும் நாமே உதவியாயும் இருந்து, நீடூழிகாலம் நம்மையும் நமது பின்சந்ததியையும் நிரந்தர அடிமையாக்க வேண்டியதான ஆதாரங்களையும் சிருஷ்டித்து வருகிறோம். இதை விளக்குகிறபோது உங்கள் மனம் ஒருசமயம் பதைத்தாலும் பதைக்கும். தயவு செய்து கொஞ்சம் பொறுமையோடு கவனித்துக் கேட்டபிறகு, உங்கள் பகுத்தறிவையும் நடுநிலைமையில் இருந்து உபயோகப்படுத்திப் பார்ப்பீர்களானால் அதன் உண்மை—அதாவது நான் சொல்வது சரியா, தப்பா என்பது உங்களுக்கு விளங்காமற் போகாது.

அல்லாமலும், 'நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள்! நான் சொல்லுவது கடவுள் வாக்கு; நம்பாவிட்டால் நரகம் வரும்; நாத்திகர்கள் ஆகிவிடுவீர்கள்' என்ற வேதம், சாஸ்திரம், புராணம் போல நான் உங்களை அடக்குமுறைக்கு ஆளாக்கவில்லை. நான் சொல்வது, 'உங்கள் அறிவு ஆராய்ச்சி, புத்தி, அனுபவம் இவைகளுக்கு ஒத்துவராவிட்டால் தள்ளிவிடுங்கள்; ஒத்துவந்தால் காரியத்தில் கொஞ்சமாவது செய்ய முற்படுங்கள். உங்கள் சகோதரர்களுக்கும் இதைச் சொல்லி அவர்களையும் ஈடேற்றுங்கள்' என்றுதான் நான் சொல்லுகிறேன். இப்படிச் சொல்வதனால் எனக்கு இதில் ஒரு சுயநலப் பலனும் இல்லை என்பதையும் அறியுங்கள்.

நான் எந்த மதக்காரனுக்காவது ஏஜண்டு அல்ல; அல்லது நானும் எந்த மதக்காரனுக்காவது அடிமையும் அல்ல. அன்பு, அறிவு என்கிற இரண்டு தத்துவங்களுக்கு மாத்திரம் ஆட்பட்டவன். ஆதலால், எனக்குப் பட்டதை உங்கள் முன் சொல்லுவதில் எனக்கு ஒரு கடமையும் ஆசையும் மகிழ்ச்சியும் இருப்பதால் சொல்லுகிறேன். மற்றபடி அதைப்பற்றிய

உங்கள் கடமைகளை உங்கள் சுதந்திரத்திற்கே—அதாவது உங்கள் பகுத்தறிவுக்கே விட்டுவிடுகிறேன்.

மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ சமூகத்தையோ கட்டுப்படுத்தி, ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டதா? அல்லது, ஒரு மனிதனின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனா? என்பவைகளைத் தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்.

இந்த முறையில் நமது மதம் என்பதன் யோக்கியதையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். முதலாவது, நமது மதமாகிய இந்துமதம் என்பது என்ன என்பது இங்குள்ள எத்தனை பேருக்குத் தெரியும்? இந்து மதஸ்தர்கள் என்போர்களில் எத்தனை பேர்கள் அதன் தத்துவத்தை அறிந்திருப்பார்கள்? இந்து மதம் என்பதாக ஒரு மதம் உண்டு என்று எத்தனை பேர் ஒப்புக்கொள்கிறார்கள்?

முதலாவது, இந்து என்பது எந்த பாஷை வார்த்தை? உலகத்தில் உள்ள எந்த பாஷையிலாவது 'இந்து' என்கிற ஒரு வார்த்தை இருக்கிறதாக யாராவது சொல்லக்கூடுமா? நமது நாட்டிற்கு இந்த வார்த்தை எப்பொழுதுவந்தது? என்று பார்ப்பதானால், நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆகட்டும், அல்லது சங்ககாலப் பழைய தமிழ் ஆதாரங்களில் ஆகட்டும், அல்லது ஆரிய பாஷை, ஆரிய நாகரிகப் பழக்க வழக்கங்களைக்கொண்ட வேதம், சாஸ்திரம், ஆகமம், சுருதி, ஸ்மிருதி, புராணம், சரித்திரம், கதை முதலிய எவைகளிலாவது—இந்து அல்லது இந்துமதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? அல்லது ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் என்கிற பெரியோர்களது பாடல்களிலாவது சரித்திரங்களிலாவது இந்த வார்த்தை காணப்படுகிறதா? அல்லது சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று சொல்லப்பட்டவர்களாவது இம் மாதிரி வார்த்தையை உச்சரித்ததாகவோ, வழங்கினதாகவோ எங்காவது காணக்கிடக்கின்றதா?

மதம் என்பதற்கு நாம் உத்தேசிக்கும் பொருள்தான் என்ன என்று பார்த்தால் ஆராய்ச்சிக்காரர்கள், 'மதம் என்பது கொள்கை' என்று சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்வதானாலும் இந்துமதம் என்பதற்கு என்ன பொருள்?

'இந்துக் கொள்கை' என்று வைத்துக்கொள்ளலாம் என்றால்,

இந்து என்பதற்குப் பொருள் என்ன? இந்துமதம் என்பதைத் தவிர மற்ற மதங்கள் என்பவைகள் இம் மாதிரி இல்லாமல், மதம் என்பதற்கு முன்னால் ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயரை வைத்துப் பின்னால் மதம் என்பதைக்கூட்டி, 'கிறிஸ்து மதம்'; 'மகமதிய மதம்'; 'புத்தமதம்'; 'இராமானுஜ மதம்'; 'சங்கராச்சாரிய மதம்' என்பது போலச் சொல்லப்படுகிறது. இம் முறையில் 'இந்து மதம்' என்பது எந்த ஆசாமியை உடையது? யாருடைய கொள்கை என்று பெயர்கொண்டது? ஒன்றுமே இல்லாமல் வெறும் உச்சரிப்பைத் தவிர யாதொரு பொருளுமற்றதான சப்தம்கொண்ட வார்த்தையை நமது மதத்திற்குப் பெயராக வைத்துக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டாவது, மற்ற மதங்களைப்போல இந்து மதத்திற்கு யார் கர்த்தா? அதற்கு என்ன வயது? அதற்கு என்ன கொள்கை? அதற்கு என்ன ஆதாரம்? என்பவைகளை யாவது யோசித்துப் பாருங்கள்.

'இந்துமதம் என்பது வேதமதம்; வேதம் என்பது கடவுளால் சொல்லப்பட்டது' என்று சிலர் சொல்லுவது உண்டு. அந்த ஆபாசத்தையும் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். கடவுளால் சொல்லப்பட்ட வேதமானால் உலகத்தில் உள்ளவர்கள்

எல்லோருக்கும் ஒரே வேதமாய் இருக்கக்கூடுமே தவிர—ஒருவர் ஒப்புக்கொள்ளவும், மற்றொருவர் மறுக்கவும், மற்றொருவருக்குத் தென்படக்கூடாததாயும், ஒரு எல்லைக்குள்ளாகவே அடங்கக்கூடியதாகவும் இருக்கமுடியுமா? கடவுளால் சொல்லப்பட்டதானால், அது ஒரு பாஷையில்தானா சொல்லப்பட்டிருக்க வேண்டும்? நமக்குச் சொல்லப்பட்ட வேதமானால் நம்முடைய பாஷையில் சொல்லப்பட்டிருக்காதா? வேதபாஷைக்கும், நமக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? அன்றியும், நமக்காகக் கடவுளால் சொல்லப்பட்டதாயிருந்தால் நாம் அதைக் கேட்கவும், பார்க்கவும், படிக்கவும், அறியவும் கூடாததாயிருக்க முடியுமா? அது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அய்ந்து, ஆறு வேதம் என்பதாகக் கணக்குக்காரருக்குக் கட்டுப்பட்டதாக இருக்குமா? தவிர, ‘பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாட்டி என்பதுபோல், அதற்கு ஆளுக்கு ஒருவிதமாக அவரவர் இஷ்டப்படி வியாக்கியானம் செய்யவும், ஒவ்வொரு வியாக்கியானத்திற்கு ஒரு கட்சி சேர்க்கவும் தக்கதாயிருக்கக்கூடுமா? ஆகிய இதுபோன்ற அனேக விஷயங்களை யோசித்தால், வேதம் என்று ஒன்று உண்டா? உண்டாயிருந்தாலும் அது உண்மையானதா? உண்மையானாலும் நம்மை அது கட்டுப்படுத்தத் தக்கதா? என்பவைகளைச் சற்று யோசியுங்கள். தவிர, இம் மாதிரியான மத, வேத கடவுளைப்பற்றியும் இதுபோலவே யோசியுங்கள்.

உலகத்திற்கு எத்தனை கடவுள்கள்? அதில் உள்ள எத்தனையோ மதங்களில் ஒரு மதமாகிய இந்துமதம் என்பதற்கு எத்தனை வேதங்கள்? அவைகளுக்கு எத்தனை கடவுள்கள்? இந்தக் கடவுளை ஆராதிக்கிற, வணங்குகிற மக்களுக்கு எத்தனை கட்சிகள்? ஒவ்வொரு கடவுளின் குறிகளுக்கு எத்தனை அடையாளங்கள்? அவைகளுக்காக எத்தனை சண்டைகள்? இந்தக் கடவுள்களுக்கு எத்தனை கோயில்கள்? எத்தனை ஆகாரங்கள்? எத்தனை கலியாணங்கள்? எத்தனை பெண்டு பிள்ளைகள்? எத்தனை அக்கிரமமான நடவடிக்கைகள்? என்பது போன்றதையும் கவனியுங்கள்! இந்தக் கடவுள்களின் பக்தர்களுக்குள் எத்தனை வித்தியாசங்கள்? எத்தனை சாதிகள்? எத்தனை உயர்வு தாழ்வுகள்? இவைகளில் எல்லாம் ஒரே ஒரு வகுப்பார் மாத்திரம் அதுவும் விரல்விட்டு எண்ணிவிடத் தகுந்த வெகு சிலர் மாத்திரம் எல்லாவற்றிற்கும் பெரியவர்கள், உயர்ந்தவர்கள், உரிமையுள்ளவர்கள் என்கிற நியாயம் ஏன்?

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், அவர் எங்கும் உள்ளவர்—என்கிற தத்துவம் நம்முடைய மதத்துக் கடவுளுக்கும் உண்டானால், நாம் கடவுள் கிட்டத்தில் போகக்கூடாது, கோயிலுக்குள் வரக்கூடாது, மற்றொருவர் மாத்திரந்தான் கடவுளைத் தொடலாம், கழுவலாம், வேட்டி, துணி கட்டலாம் என்கிற கொடுமைகள் அதற்கு ஏற்படுத்த முடியுமா?

நாம் இந்த மதத்தை ஒப்புக்கொண்டு, அதில் கண்ட சாமிகளையும் ஏற்றுக்கொண்டு அதற்காகக் கோயிலும் கட்டி, சொத்தும்விட்டு, நாம் வணங்கவும் தினம் போய்வருவதினால் நமக்கு ஏற்படுகிற பலன் என்ன என்பதைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு இலட்சம், அய்ந்து இலட்சம், பத்து இலட்சம் ரூபாய்கள் என்பதாகச் செலவுசெய்து கோயில் கட்டி, அந்தக் கோயில் 100 வருஷம், 1000 வருஷம், 100000 வருஷம் என்கிற காலம் நிலைத்திருக்கச் செய்வதில், என்ன நிலைத்திருக்கச் செய்கிறோம் என்பதைச் சற்றுப் பொறுமையாய் யோசித்துப் பாருங்கள்! ‘இந்தக் கோயிலில் உள்ள சுவாமியிடம் போகக் கூடாத ஒரு நீசன் நான்; அந்தச் சாமிக்கு நேரே பூஜை செய்யக்கூடாத ஓர் இழிந்தவன் நான்; என்னைவிட ஒரு பெரிய சாதி இருக்கிறது; அவர்களைவிடத் தாழ்ந்த சாதியாகிய நான் நிற்பதற்கு இந்த இடம்’—என்று பலப் பலவிதமாக நம்மை நாமே இழிவுபடுத்திப் பிரித்து, அதை ஒப்புக்கொண்டு, ‘அந்தக் கல்லும் கோயிலும் கோயிலுக்குள் இருக்கும் சுவாமியும் உள்ளவரை, என்னுடைய இழிவும் நீசத் தனமும் தாழ்வும் நிலைத்திருக்கத் தக்கது; இதற்கு என் பின் சந்ததிகளும் கட்டுப்பட்டிருக்கவேண்டும். இத்தனை இலட்சம் செலவு செய்து, கோயில்கட்டி, கும்பாபிஷேகம் செய்தது மாத்திரமன்றி, என்னைவிட இன்னொரு சாதியான் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்தவும், அவன் பசியினால்

சாகாமல் இருக்கவும், அவனுக்கு உபயோகப்படும்படியாக அந்தச் சாமியின் பெயரால் இத்தனை இலட்ச ரூபாய் சொத்துக்களை எழுதிவைக்கிறேன். இதை அவன் கூட்டத்தார் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு பிள்ளைபிள்ளைத் தலைமுறையாய்—கர்ப்பகோடி காலத்திற்குக் கல்லும் காவிரியும் புல்லும் பூண்டும் உள்ளவரைக்கும் மேல் சாதியாய் இருந்துவர வேண்டியது' என்று செய்வதாகிறதேயல்லாமல், வேறு என்ன என்பதையும் கவனித்துப் பாருங்கள். இது தவிர, இந்த மாதிரிக் கோயில்களுக்கு மற்றவர்களையும் எவ்வளவு செலவுகள் செய்யச் சொல்லுகிறோம்; அதனால் மக்களுக்கு ஏற்படுகிற செலவுகள் எவ்வளவு என்பதைப் பாருங்கள்.

'சர்க்கார் நம்மிடம் வரி வாங்குகிறார்கள்; கொள்ளை அடிக்கிறார்கள்; அது செய்யவில்லை, இது செய்யவில்லை, வீண் செலவு செய்கிறார்கள்; மக்களுக்குப் படிப்பு இல்லை; ஒழுக்கம் இல்லை' என்று சத்தம் போடுகிறோமே, அப்படிப்பட்ட நாம் இந்தச் சாமிகள் பெயரால் அடிக்கப்படும் கொள்ளைகளைக்' கொஞ்சமாவது கவனிக்கிறோமா? அல்லது, அவைகளை நிறுத்தவாவது பாடுபடுகிறோமா என்பதை யோசிக்க வேண்டாமா?

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஒரு 4, 5 கோயில்களை மாத்திரம் கணக்குப் போட்டுப் பாருங்கள். திருநெல்வேலி கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் வரும்படி; சங்கரன் கோயிலுக்கு 50,000 வரும்படி; குற்றாலம் கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 40,000; திருச்செந்தூர் கோயிலுக்கு $1\frac{1}{2}$ இலட்ச ரூபாய் வரும்படி. ஆக நான்கு கோயில்களுக்கு மாத்திரம் சுமார் மூன்று இலட்ச ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வருகிறதாக இந்தத் தேவஸ்தான நிர்வாகிகளால் கேள்விப்பட்டேன். இது தவிர, இந்தக் கோயில்களுக்கு வருகிற பக்தர்கள் போக்குவரவு, தேங்காய், பழம், நெய், தயிர், பஞ்சாமிர்த அபிஷேகம், மேளம், தாளம், தாசி, சதிர், பாட்டுக் கச்சேரி, உற்சவம் முதலியவைகளில் செலவு செய்யும் பணம் எவ்வளவு? இவைகள் எல்லாம் எதற்காக உபயோகப்படுகிறதென்பதையும் யோசியுங்கள். 'நீங்கள் கீழ்சாதி; பூஜை பண்ணுகிறவனும், சிலரும் மாத்திரம் உயர்ந்த சாதி; ஆதலால் நீங்கள் கொடுக்கவேண்டியது, மற்றவன் சாப்பிட வேண்டியது' என்பதல்லாமல் வேறு எதற்கு உபயோகப்படுகிறது என்பதை நன்றாய்க் கவனியுங்கள். இந்த மாதிரி செய்யும்படி உங்களை எந்தச் சாமி கேட்கிறது, அல்லது கட்டளை இடுகிறது?

சில வயிற்றுச் சோற்றுச்சாமி உங்களை ஏமாற்றுவதும், நீங்கள் ஏமாறுவதும் கோவில்களில் உள்ள 'சாமி'கள் 'நமக்கு இப்படியும் முட்டாள் பக்தர்கள் உண்டா?' என்று பல்லைக் காட்டிக்கொண்டு சிரிப்பதும் அல்லாமல் என்ன பலன் கிடைக்கிறது?

[குற்றாலத்தில், 27-8-1927-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 11-9-1927]

அக்கிராசனர் அவர்களே!

சமயச் சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசுவது என்பது என்னைப்போன்ற ஒருவருக்கு இலேசான காரியமல்ல. அதற்குத் தக்க ஆராய்ச்சி வேண்டும். சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசவும் எனக்குப் போதுமான திறமை இல்லை. நான் சமய ஆராய்ச்சி செய்யவில்லை. கடந்த ஆறேழாண்டுகளாக அரசியலில் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்றுவந்த காங்கிரசில் நான் உழைத்து வந்தது அன்பர் பலர் அறிவர்.

அரசியலின் மூலம் நாட்டின் சீர்திருத்தத்திற்கு அரும்பாடுபட்டும் யாதொரு பலனும் அடைய இயலாமல் போனதாலும், அதற்குக் காரணம் சமய சம்பந்தமான கொள்கைகளே தடையென்று உணர்ந்ததாலும், அக் குறைகளை நீக்க உழைப்பதுதான் அவசியமெனத் தோன்றிய பின்னர் அவ் வழியில் உழைத்துப் பார்க்கலாமென முற்பட்டேன். சமயத்தின் பெயரால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும், விடுதலைக்கு விரோதமானவைகளையும், மக்கள் சுயமரியாதையற்ற வாழ்க்கையில் துன்புறுவதையும் ஒழிக்கவே முதலில் பாடுபடவேண்டும். அப்போதுதான் நாம் விடுதலை அடைய முடியும்.

நம் நாடு விடுதலையடைய முடியாததற்கும் சுயமரியாதையற்ற தன்மையில் வாழ்வதற்கும் நமது சமயக் கொள்கைகள்தான் இடையூறாக இருக்கின்றன. நான் இப்பொழுது பேசினால் கேட்போரில் சிலருக்கு மனவருத்தமாய்த்தான் தோன்றும். ஏனெனில், நம் மக்களுக்குச் சமயப்பற்று என்கிற மூடநம்பிக்கையைச் சுயநலக்காரர்கள் அதிகமாய் ஊட்டி விட்டார்கள். அது நமது இரத்தத்திலும் நன்றாய்க் கலந்துவிட்டது. சுலபமாய், கேட்போருக்குச் சமாதானம் சொல்லிச் சரிப்படுத்த முடியாத அளவு பதிந்திருக்கின்றது. நாட்டின் சீர்திருத்தம் என்ற தலைப்பின் கீழ் நான் பேசும் விஷயங்களை உறுதியாய் நம்புகிறேன். நம் நாட்டிற்கு என்றுமே விடுதலையில்லாத வழியில் காரியங்கள் சமயத்தின்பேரால் நடைபெற்று வருவதைத் தெரிவித்தால் சிலர் மனம் வருந்தும்; அதற்குப் பயந்து வெளிப்படுத்தாமல் போனால் நான் சுயநலம் கருதுபவனாவேன்; அல்லது, பயங்காளித்தனம் கொண்டவனாவேன். பகுத்தறிவைக் கொண்டு பொது நிலையில் இருந்து ஆராய்ச்சி செய்தால், நான் சொல்லுவதில் குற்றம் சொல்ல அவசியமிராது. சமய விஷயம் பேசும் பொழுது அதன் பயனாய் அரசியலிலும் ஏற்பட்ட குற்றங் குறைகளைக் கூறவேண்டியிருக்கின்றது. அரசியலில் நான் தீவிர வேலை செய்தேன் என்பது இங்குள்ள பலர் அறிவர். பின்பு அவ்வனுபவத்தைக்கொண்டு, அது அல்ல விடுதலை அடையப் பாடுபடும் வழியெனக் கருதியே அதைவிட்டு வெளியேறினேனேயன்றி, மற்றபடி யாராலாவது வெளியேற்றப்பட்டோ அல்லது சிறு அபிப்பிராயபேதம் ஏற்பட்டோ வெளிவந்தவனல்ல. நான் சாதாரண நிலையிலிருந்து வெளிவரவில்லை. அரசியலில் ஒரு பொறுப்புள்ள பதவியிலும் உத்தியோகத்திலுமிருந்தே நான் வெளிவந்தேன். நமது நாட்டுக்கு இவ்வரசியல் இயக்கம் மூலம் ஒன்றும் ஆகாது என்று கருதியே வெளிவந்தேன். காஞ்சீபுரம் மாநாட்டில்தான் இவ்வுணர்ச்சிகள் பலப்பட்டு வெளிவந்தேன். அரசியலில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் தமிழ்நாட்டுக் காரியதரிசியாகவும் பல ஆண்டுகள் இருந்தேன். அப்பொழுதுதான் நான் ஆற்றுந்தொண்டு வீண் தொண்டெனவும், நமது எதிரிகளுக்கு அனுகூலமாய் இருந்து கொண்டு நாட்டையும் சமூகத்தையும் பாழாக்குகின்றோம் எனவும் கருதி நான் விலகினேன்.

மத சம்பந்தமாகவும் எனது நிலையை நீங்கள் அறிய வேண்டுமானால், 1904-ஆம் வருடம் முதல் 1927 ஆம் வருடம் ஜூன் மாதம் வரையில் சுமார் 23 வருடகாலமாக எனது தாலுக்காவாகிய ஈரோடு சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்குக் காரியதரிசியாகவும் தலைவனாகவுமிருந்தேன். இந்துமத பரிபாலன போர்டாரும் எனது நிர்வாகத்தைப் பற்றிப் பெருமை பாராட்டியே பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். தற்பொழுது உண்டாகிய புதிய போர்டார் புதிய கமிட்டியை நியமிக்கவே, அவர்கள் நான்கு தாலுக்காவுக்கு ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி, அதில் என்னையும் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள். தற்கால மந்திரி சபைக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் நீங்கள் அறிந்த விஷயமே. அவர்கள் செய்யும் குற்றங்களைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டி வருகின்றவர்களில் நான் ஒருவன்; அப்படி இருந்தும், அவர்கள் என்னை நியமித்தார்கள். என்னைப் பற்றிய பிராதுகள் பல அவர்களுக்குப் பார்ப்பனர்கள் அனுப்பி, என்னை நியமிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். அவைகளில் முதல் பிராது நான் குற்றவாளி என்றும், சிறை சென்றவன் என்றும், இரண்டுமுறை சிறையில் அடைக்கப்பட்டவன் என்றும் எழுதி அனுப்பினார்கள். அந்தப் பிராது எனக்கே என் பார்வைக்கு வந்தது. நான் அவர்கள் எழுயதெல்லாம் உண்மைதான்; ஆனால் மூன்றுதடவை சிறை சென்றேன் என்பதற்குப் பதிலாக இரண்டு தடவை என்று எழுதியதுதான் பிழை என்று திருத்தி அனுப்பிவிட்டேன்.

மறுபடியும் பல பார்ப்பனரல்லாதாரிடமும் பல பார்ப்பனர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி 'இவன் மதத்தை நிந்திக்கிறான்; எப்பொழுதும் பார்ப்பனரையே வைகிறான்; வேண்டுமானால் சி. ஐ. டி. ரிப்போர்ட்டர்களின் ரிப்போர்ட்டுகளைப் பாருங்கள்' என்று ஒரு விண்ணப்பம் சர்க்காருக்கு அனுப்பினார்கள். அதைப் பற்றியும் சர்க்கார் என்னைக்

கேட்டார்கள். நான் அதற்குப் பதில் எழுதியதில், 'நான் ஒரு வகுப்பாரை மாத்திரம் வையவில்லை; எல்லாரையும் வைகிறேன். என் தொண்டுக்கு எந்தெந்த வகுப்பார் கொள்கை எதிரிடையாக இருக்கிறதோ அவர்களைக் கண்டிக்காமல் இருக்க என்னால் முடியாது. எல்லாருக்கும் சம உரிமை வழங்கப்படுவதற்காக உழைக்கிறேனே யல்லாமல் வேறு அல்ல' என்று அறிவித்தேன். மறுபடியும் என்னை நியமித்தார்கள். சென்னைக்கு வருவதாலும் மற்றும் வெளியூர்களுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டதனாலும், எனது தலைமைப் பதவியைப் பொறுப்பு வாய்ந்த ஒருவருக்குக் கொடுத்து நான் இன்றுவரையில், உப தலைவராக இருந்து வருகிறேன். என்னைச் சிலர் நான் செய்யும் உபந்நியாசங்களைக் கேட்டு 'நாத்திகன்-மதத்தை நிந்திக்கிறவன்' என்றும் 'சுயராஜ்ய விரோதி' என்றும், 'சர்க்கார்நேசன்' என்றும் குறைகூறி வருவார்கள். சர்க்காருக்கு வேண்டியவன் என்பதற்கு அறிகுறி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. சர்க்கார் அன்று என்னை எப்படிப் பாவித்து நடத்தி வந்தார்களோ அதுபோலவே இன்றும் என்னை நடத்தி வருகிறார்கள். இன்றும் எனக்குப் பின்னால் போலீஸ்காரர்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தது சமயச் சீர்திருத்தம். நான் சொல்லு வதையெல்லாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டுமென்றும், அதன்படி நடக்காவிட்டால் பாவம் வரும் என்றும் சொல்லி, பார்ப்பனர்களைப் போல் நான் உங்களை ஏமாற்ற வரவில்லை. நான் சொல்லுவதைப் பொறுமையுடன் கேட்டு, பிறகு உங்கள் பிரியம்போல் நடவுங்கள் என்று சொல்லிய பின்பே நான் இன்று பேச எடுத்துக்கொண்ட 'சமயச் சீர்திருத்தம்' என்னும் விஷயத்தைப் பற்றிப்பேச ஆரம்பிக்கிறேன்.

சமயம் என்பதும் மதம் என்பதும் ஒன்றுதான்; சமயச் சீர்திருத்தம் என்றால் மதத் தைச் சீர்திருத்தவேண்டுமென்பதுதான் பொருள். சமயம் அல்லது மதம் என்றால் பொருள் என்ன? மதம் வேண்டுமென்கிற உணர்ச்சி எப்போது உண்டாயிற்று? மதம் எதற்காக வேண்டும்? என்பவைகளை உணரவேண்டும். மதம் என்பது என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் எந்த முறையில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால், மக்கள் கூடி கூட்டமாக வசிக்க ஏற்பட்டவுடன் அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடு இருக்கவும் மற்ற வர்களை மனிதன் துன்புறுத்தாமல் உபயோகப்படுகின்ற முறையில்தான் ஏற்படுத்தப் பட்டிருக்கவேண்டும். அந்த முறையில் ஏற்படுத்தின காலத்தில் அக் கால மக்களுக்குள்ள அறிவு, ஆற்றல், நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி முதலியவைகளுக்கு ஏற்றவாறு ஒரு சிறு கொள்கைகளை அமைத்து உண்டாக்கி இருக்கவேண்டும்; நாளடைவில் அது வளர்ந்து கொண்டும் தனி மனிதன் பெருமைக்கும், அவன் ஆசைக்கும், பிறகு அரசியலுக்குமாக சிறிது சிறிதாய் மாறி இப்போதுள்ளவைகள்போல் சமயம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். நமது நாட்டில் ஆதியில் சமயம் ஏற்பட்ட காலத்தில் சமயத்திற்கும் அரசியலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அக் காலத்தில் அரசியலில் நம் மக்களுக்கு உணர்ச்சி இல்லை; உணர்ச்சி உண்டாகவேண்டிய அவசியமும் இல்லை. ஏன்? பதினாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள சரித்திரங்களை ஆராயுங்கள். அக் காலத்தில் வேளாண்மை மிகுதியுமிருந்தது. ஒவ்வொருவனுக்கும் வேண்டிய பொருட்கள் அனைத்தும் இருந்து வந்ததோடு மிகுதியும் பட்டது.

நெல் வைத்திருப்பவன் பருத்தி வைத்திருப்பவனுக்கு நெல்லைக் கொடுத்து பருத்தியோ அல்லது துணியோ பெறுவான். இதுபோல் எல்லா சவுகரியமும் உண்டு. இதுதான் பண்ட மாற்றுதல் என்று பெயர். நம்மவர்கள் ஓய்வு நேரங்களில் சிந்தித் ததிலேயே சில சட்டங்களும் மற்ற சமயக் கட்டுப்பாடுகளும் ஏற்பட்டன. ஆனால், இதுதான் பின்னால் நம் நாட்டிற்கு வந்த பார்ப்பனர்கள்—கவலையற்று இருந்த நம் மக்களை ஏமாற்றி, தங்கள் நன்மைக்குத் தகுந்தபடி திருப்பித் தங்களுக்கு இவைகள் எலலாவற்றையும் அடிமையாக்கிக்கொண்டு, இவைகளுக்குத் தாங்களே கர்த்தாவாகவும் எஜமானர்களாகவும் ஆகிவிட்டார்கள். கொள்கையொன்றும் ஏற்படவில்லை; அவரவர்

இஷ்டம்போல் அனுபவித்தார்கள். முகமதிய மதமும், கிறிஸ்துவ மதமும் வெறும் கடவுளை வணங்குதல் என்பதோடல்லாமல், வரவர அரசியல் கருத்தைக்கொண்டும் தங்கள் தங்கள் மதத்தைப் பொறுத்த வேலை செய்தும், செய்து கொண்டும் வருகிறார்கள். ஆனால், நாம் கட்டுப்பட்டுக் கிடக்கும் சமயத்தையோ, அந்தக் காலத்திலிருந்த நிலையிலே இருக்கவேண்டுமேயல்லாமல் ஒரு சிறிதும் மாற்றக்கூடாது என்கிறார்கள். இதை நம்புகிற வர்களும் பிடிவாதக்காரராய் இருக்கிறார்கள. இங்குதான் அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது. நமக்கு அவசியமானபடி நாம் மாற்றிக் கொள்ளல் வேண்டும். அப்படி மாற்றுவதில் அடியோடு மாறவும் ஏற்படலாம். நம் மதம் கட்டுப்பாடு உடையதல்ல; ஒரு குறிப்புக்கு ஒத்ததல்ல. இக் காரணமே நம்மை அடிமையாக்கிற்று. ஆனால், இதனை நம் மக்கள் அறியார். இப்படி இருந்தால் நாம் எப்பொழுது முன்னேற்றமடைய முடியும்? நாம் எப்படி அடிமை வாழ்வினின்று நீங்கி சுயமரியாதையுடன் வாழமுடியும்? ஆகையால் ஒரு நாடோ, ஒரு தேசமோ சுயமரியாதையுடன் வாழத் தடுக்கின்றவர்களை அழிக்க உடனே முற்படல் வேண்டும். பிடிவாதக் குணத்தை விட்டொழித்து, மக்கள் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு காரியங்களை முடித்து, தடைகளை அகற்றிச் சுயமரியாதை அடைந்து விடுதலை பெறவேண்டும்.

சிலர் தங்களை 'இந்து' என்கிறார்கள். ஆனால் அவர்களை, 'இந்து என்றால் என்ன?' என்றால் 100-க்கு 90 பேருக்குத் தெரியாமலிருக்கிறது. அப்படி இருந்தும், நம் மக்கள் மூடநம்பிக்கையால், மதத்தின்பேரால் கொண்டுள்ள அன்பு செப்பத் தரமல்ல. மற்ற மதக்காரர்கள் அவைகளை அறிவதுபோல், நம் மதம் நாம் அறியக்கூடாதவர்களா யிருக்கிறோம். முகமதியர்களில் 100-க்கு 90 பேர் தங்கள் மதத்தைப்பற்றித் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். நம் மக்களை யாராவது உங்கள் மதம் என்ன? யார் ஏற்படுத்தியது? அதன் காலமென்ன? என்ற இதுபோன்ற வினா எழுப்பினால் பதில் சொல்லுவாரில்லை. முகமதியரையோ அல்லது கிறிஸ்தவர்களையோ அல்லது புத்தர்களையோ வேறு யாரையோ கேட்டால் உடனே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். இந்து மதத்திற்கு இவர்களால் கற்பிக்கப்படும் வயது இலேசானதல்ல. அதாவது, கடையிலுள்ள காகிதங்களை யெல்லாம் வாங்கி, அதில் ஒன்றுபோட்டு அதன்பின் எத்தனை முட்டைவடிவம் போட்டாலும் அதற்கு மேல் போகுமேயன்றி குறையாது. தலைவர் யார் என்றால் சொல்லும் நிலையில் இல்லை. கடவுளால் ஏற்பட்டது என்பர் சிலர்; ஆதாரம் என்னவென்றால், வேதம் என்பார்கள். அது என்ன சொல்லுகிறதென்றால், 'நீ பார்க்கக் கூடாது; கேட்கக் கூடாது, படிக்கக் கூடாது' என்பார்கள். அதைக் கடவுள் எழுதி இருப்பார் என்று யாராவது நம்பமுடியுமா என்று பாருங்கள். ஒருபொழுதும் முடியாது, ஏனெனில், கடவுள் சொன்ன வேதமானால் உலகத்தார் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். யாரும் பார்க்க வேண்டும். அப்படி யிருக்க நாம் எப்படி அந்த வேதத்தை நம்புவது? அதன்படி நடப்பது? மற்ற மதக்காரர்கள் தங்கள் வேத நூல்களைப் பல மொழிகளில் மொழி-பெயர்த்து, அச்சிட்டுத் தங்கள் மதஸ்தர்கள் அல்லாத ஒவ்வொருவர் கையிலும்கூட கிடைக்கும்வண்ணம் தங்கள் வேதத்தையும் மதத்தையும் பரப்பி வருகிறார்கள்.

முகமதியர்களும் கிறிஸ்தவர்களும் இத்தகைய முயற்சி எடுத்துத் தங்கள் மதங்களை யும், வேதங்களையும் மற்ற மக்களிடம் பரப்பினதால்தான் ஏழரைக்கோடி முகமதிய சகோதரர்களும், ஒரு கோடி கிறிஸ்தவர்களும் நமது நாட்டில் உண்டாக நேரிட்டது. இந்த ஏழரைக்கோடி முகமதியரும் அரபி அல்லது துருக்கி முதலிய தேசத்திலிருந்து வந்தவர்க ளென்று யாராவது சொல்லமுடியுமா? முடியாது. அப்படி வந்தவர்களும் ஒரு கோடிக்கு மேலிருக்க முடியவே முடியாது; மற்ற மக்கள் நம் 'இந்து' மதத்திலிருந்து பிரிந்து சேர்ந்தவர்களேயாவார்கள். கிறிஸ்துவ சமயத்திலும் வெளியிலிருந்து வந்தவர்கள் 2 அல்லது 3 இலட்சம் பேரே இருப்பார்கள்; மற்ற 97 இலட்சம் பேரும் நம் மக்கள்தான். திருவனந்தபுரத்திலே 40 இலட்சம் மக்களுள் பதினாறரை இலட்சம் கிறிஸ்தவர்களும்,

மூன்றரை இலட்சம் முகமதியர்களும் உண்டாகி இருப்பார்களானால் எத்துணை மக்கள் நம் சமயம் விட்டுப் பிற சமயம் புகுந்தார்களென்பது இதில் காணக்கிடக்கின்றது. வாரம் ஒன்றுக்கு இந்துக்கள் என்போர்களில் 4,000 பேர் அன்னிய மதம் புகுகின்றார்கள். காரணம், அவர்கள் மதப் பிரச்சாரம் செய்கிறார்கள். மதப் பிரச்சாரம் செய்து ஏற்றுக்கொண்ட மக்களுக்கு முதலில் மதத்தைப் பற்றியும், கல்வியிலும் பயிற்சியடையச் செய்கிறார்கள். பின்பு அவன் வாழ்க்கையைச் செவ்வனே கழிக்க ஒரு தொழில் ஏற்படுத்திப் பின்பு தங்கள் மதமே உலகத்தை ஆளவேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்குகின்றார்கள். இவ்வளவு காரியத்திற்கும் அவர்கள் வெகு குறைந்த பணத்தைத்தான் மதத்தின் பெயரால் செலவிடு கிறார்கள்; நாம் மதத்தின் பேரால் செலவிடுவதில் 100-ல் ஒரு பங்குகூட அவர்கள் செலவு செய்வதில்லை; நம்மைப்போல் மற்றெந்த மதக்காரர்களும் செலவிடமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் நம் நாட்டிற்கு வந்து சொற்ப நாட்களுக்குள் நம் மக்களைச் சேர்த்துக் கல்வி கற்பித்து, அவர்களை நமக்கு எஜமானர்களாக்கி இருக்கிறார்கள்; உயரிய நிலைக்கும் கொண்டு வருகிறார்கள்'; 100-க்கு 90 பேர் படிக்கும்படி செய்து வருகிறார்கள்.

ஆனால், கடவுளால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கோடி கோடி வருஷங்கள் ஆன தென்றும் சொல்லும் நமது மதத்தையோ பெரும்பான்மையான மக்கள் படிக்கக்கூடாது; அப்படி மீறிப் படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், படித்துவிட்டால் நெஞ்சை அறுக்கவும், மற்றும் பலவிதமான தண்டனைகள் உண்டு. இதன் பலனாய் வெள்ளைக்கார அரசாங்கம் நமது நாட்டிற்கு வந்து இப்போது கூட 100-க்கு 5 பேர்தான் படிக்க முடிகின்றது. அதிலும் 100-க்கு 90 பேர் பார்ப்பனர்கள். ஆனால் இப்போது சிலர் 'நாங்கள் படிப்பதைத் தடுப்பதில்லை; வேதத்தைத்தான் படிக்கக் கூடாதென்கிறோமேயன்றி வேறில்லை' என்கிறார்கள். வேதகாலக் கல்வி இக் காலத்தைப் போன்று இங்கிலாந்து, அய்ரோப்பா, அரேபியா முதலிய சரித்திரங்களல்ல; மற்றும் ஷேக்ஸ்பியர், மெக்காலே முதலியவர்களால் எழுதின நூல்களுமல்ல. ஆனால், அக் காலத்திய கல்வி என்பது நீதிகளை உணர்வது; நீதிகளோ வேதமாய்விட்டது; வேதமோ நாம் படிக்கக் கூடாதது. இம் முறையில் நாம் 1000-க்கு ஒருவராவது படிக்க முடியுமா? வெள்ளைக்கார ராஜாங்கம் வராதிருந்தால் நம்மில் ஆயிரத்துக் கொருவராவது படிக்க நமது மதம் இடந் தந்திருக்குமா? வேதந்தான் படிக்கக் கூடாதென்றாலும், வடமொழியாவது கற்றல் கூடாதாவென்றால் அதுவும் கூடாது என்பார்கள். ஏன் என்றால், அது வாயில் நுழையாது என்பார்கள். இல்லை, நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னால், வேதத்திலுள்ள நீதிகள் அதில் இடை இடையே வருமாதலால் அதைப் படிக்கக் கூடாதென் பார்கள். இம் மாதிரியாகவே மதத்தின் பெயரால் நாம் படும்பாடும் அடையும் இழிவும் செப்பத் தரமன்று; ஆனால், செலவாகும் ரூபாயோ கணக்கிலடங்காது; இவ்வளவு ரூபாய் மற்றெந்த சமயக்காரர்களும் சமயத்தின் பெயரால் செலவிடுவதே இல்லை. மற்ற மதத்துக்கு யாரோ ஒருவர் இருவர் ஆயிரம் பவுன், 4 ஆயிரம் பவுன் கொடுப்பார்கள். அது சமயத்தைப் பரப்புவதற்குப் பயன்படும். சமயம் பரப்புவது என்பது மக்கள் கல்வி அறிவு, மக்கள் நோய் தீரல், அற்புதம் கண்டுபிடித்தல் முதலியவை. ஆனால், நம் சமயத்திலோ ஒவ்வொரு வரும் மத வரி கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. நம் மாகா ணத்தில் மட்டும் சர்க்கார் கணக்குப்படி ஒரு வருஷத்திற்கு 2 கோடி ரூபாய் மதத்தின் பெயரால் கோவிலுக்கும் மடத்திற்கும் மாத்திரம் வரும்படி வருகிறது. இதன்றி தனிமடம், கோவில்களின் வரும்படிகளைக் கணக்குப் பார்த்தால் இப்படி எத்தனையோ பங்கு அதிக மாக முடியும். திருப்பதி கோவிலை மாத்திரம் எடுத்துக்கொண்டால் வருட வருமானம் 20 இலட்சமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மூன்று அல்லது நான்கு கோவில்களில் மாத்திரம் வருஷத்திற்கு 2, 3 இலட்சம் வரும்படியாகும்.

இன்னும் சிதம்பரம், இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய பெருமை பெற்றதென்னும் கோவில்களின் கணக்கைப் பார்த்தால் அதிகமாகவே முடியும். இவைகள் தவிர, கணக்குக்கு

வராத ரூபாய்கள் எவ்வளவு? உதாரணமாக, இங்கிருந்து ஒருவர் திருப்பதிக்கு 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாகச் செலுத்தப் புறப்படுகிறார் என்றால், அது தவிர அவருக்கு நேரிடும் செலவு எவ்வளவு? அவர் தன் சுற்றத்தாரை அழைத்துப் போகவேண்டியிருக்கிறது; மஞ்சள் ஆடை தரிக்கவேண்டியிருக்கிறது; மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் வரவேண்டியிருக்கிறது; வீதிகளில் கோவிந்தா சப்தம் போட்டுப் பிச்சை வாங்கவேண்டி இருக்கின்றது. இவ்வளவும் செய்து 2 ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்துவது எதற்கு என்றால், அது அவரே செய்துகொண்ட பிரார்த்தனையாம். என்ன பிரார்த்தனை என்றால், அவர் முன்பு காயலாவாக இருந்தபோதோ, வேறு கஷ்டமாயிருந்தபோதோ கடவுளை வேண்டிக்கொண்டாராம். கடவுளும் அவர் வேண்டுகோளுக்கிணங்கி, அவரை நோய் வாயினின்றும் நீக்கினாராம்; அவர் நினைத்ததை அனுகூலம் செய்தாராம். அதற்காகப் பிரார்த்தனை ரூபாயில் ஒரு காசுகூடக் குறையாமல் கொண்டுபோய்க் கொட்டவேண்டுமாம். எனவே, இதற்கு மற்ற செலவுகளிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு ரூபாய் செலவாகுமென்று சற்று யோசியுங்கள். இதைப் போன்ற எத்தனை மக்கள்—இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ளவர்கள் செல்வார்கள்? உற்சவத்திற்காகவும், காணிக்கை, வேண்டுதலை இல்லாமல் பல மக்கள் செல்லுகிறார்கள். அந்த முறையில் செலவிடும் செலவு எவ்வளவு? எனவே, இவ்வித நம்பிக்கையைப்பற்றி நான் இங்கு சொல்ல வரவில்லை; இப்படிச் செலவு செய்யும் பணத்தின் பலன் என்ன? இது என்ன ஆகின்றது? என்பதற்கே இந்தக் கணக்குச் சொல்லுகின்றேன். இதனால் யார் பலன் அனுபவிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பச்சரிசி, பாசிப் பயிறு, நெய், பாதாமி, சர்க்கரை இவைகள் வாங்க உதவுகின்றது. இதை யார் சாப்பிடுகின்றார்கள்?

இது தவிர, மதத்தின் பெயரால் சடங்குகளுக்கென்று எவ்வளவு வரி கொடுக்கிறோம்? குழந்தை உற்பத்தி முதல் கடைசி வரையில் கொடுத்துத்தான் தீரவேண்டிய மாதிரியாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இவைகளினால் நாம் அடையும் பலன் என்ன என்று பார்ப்போமானால், நம்மை மிருகத்திலும் கேவலமாய் ஒரு வகுப்பார் மதிக்கும்படி நாமே நம்மை இழிவுபடுத்திக் கொள்ளுகிறோம் என்பதல்லாமல், வேறு ஒன்றுமில்லை. ஒருவன் தனது பிரார்த்தனைக்காகவோ தனது பாபம் தொலையவோ என்று ஒரு கோயிலைக் கட்டுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் அவன் அடைந்த பலன் என்ன? அவனே உள்ளே புக யோக்கியதை இன்றித் தனக்கென ஓர் இடம் வெளியிலே ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கின்றது. நாம் மனிதனாகப் பிறந்தும் மனிதனாக மடிவதற்கில்லையே! நம் சமயக் கொடுமைகளைப்பற்றிப் பல பெரியோர்கள் நமக்கு முன்னும் கண்டித்திருக்கிறார்கள். சீர்திருத்த முறையிலும் இருந்திருக்கிறார்கள். அதனால் ஒரு பலனும் உண்டாகவில்லை. ஆனால் அவர்கள் எல்லாம் இப்போது ஒரு சிலையாக இருந்து பூஜை பெற்று வருகிறார்கள். கடைசியாக நம்மவர்கள், 'பெரியோர்கள் போனவழியே நாமும் பின்பற்றுவோம், நமக்கென்ன?' என்பவர் பலர். அவர்கள் பெரியோர்கள் போன வழியில் மற்றவைகளில் நடக்கிறார்களோ வென்றால் இல்லவே இல்லை. இந்துமத பரிபாலனத்திற்கு என்று ஏற்பட்ட சட்டத்தில்கூட வெறும் கணக்குப் பார்க்கத்தான் சுதந்திரம் உண்டேயன்றி, வரவை யோக்கியமானமுறையில் செலவழிக்க அதிகாரமிருப்பதாக ஒரு வரிகூட இல்லை.

முன் சொன்னபடி ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் காணிக்கையாக திருப்பதிக்குச் செலுத்தப்போகிறார் என்று தெரிந்த உடனே 'மகந்து' என்கிற ஒருவர் தனது ஆளை இரயிலுக்கு அனுப்பி அவனை அழைத்து வரச்செய்து, 'நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்கள். நீங்கள் 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாகக் கொண்டுவந்திருக்கிறீர்களல்லவா?' என்றவுடன், இவனுக்கு, 'இது எப்படி இவருக்குத் தெரிந்தது; எல்லாம் உள்ளது உள்ளபடி உரைக்கின்றாரே!' என்று நம்பி அவரிடம் அதிக பக்தி செலுத்தி விடுகிறான். இதைப் பார்த்து மகந்து, 'நீங்கள் கொண்டுவந்த ரூபாயை இங்கே என்னிடத்தில் கொடுங்கள்.

அங்கு கொண்டு போய்க் கெடாரத்தில் கொட்டினால் சர்க்கார் எடுத்து ஜெர்மனி யுத்தத்தில் பட்ட கடனுக்கு வட்டியாக உபயோகித்துக் கொள்வார்கள்; என்னிடத்தில் கொடுத்தால் நான் நேரிலே கடவுளுக்குச் சேரும்படி செய்வேன்' என்பார். சம்மதித்துக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவார். சந்தேகப்பட்டால், 'இதோ பார் இந்தப் படத்தை' என்று ஒரு படத்தைச் சுட்டிக் காண்பித்து, ஒரு காலத்தில் வெங்கடாசலபதிசாமி மகந்துவிடம் சதுரங்கமாடித் தோற்றதாகவும், அதற்கு நிபந்தனையாகக் கடவுள் முதலில் மகந்துவைத் தரிசித்தபிறகுதான் தன்னைத் தரிசிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தாரென்றும், அங்குள்ள மகந்து ஆட்கள் சொல்லுவார்கள். இதை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பா விட்டால் 'கங்கையாற்றங் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாபத்திற்காளாவாய். தாயைக்கொன்ற பாபத்திற்காளாவாய்' என்று சொல்லுவான். பிறகு பேசாமல் கலகல வென்று ரூபாயைக் கொட்டிவிடுவான். இந்தப் பணமெல்லாம் மேற்கண்ட 20 இலட்சத்தில் சேராது; இதை அடக்க தேவஸ்தான மசோதாவில் சட்டம் இல்லை.

இதுதவிர, அபிஷேகம் 1000 ரூபாய், அல்லது 5000 ரூபாயில் செய்து வைக்கிறார்கள். அல்லது வெள்ளியில் கலசம், பொன், வெள்ளிரதம் வாகனம் செய்கிறார்கள்; பட்டு, பீதாம்பரம் சாற்றுகிறார்கள்; 50 அல்லது 60 குடம் பால் ஊற்றுகிறார்கள். இதனால் என்ன பலன் என்று அறிய தேவஸ்தான பரிபாலன சட்டத்திலோ மதபரிபாலன சட்டத்திலோ இடமில்லை. 5000 வருடங்களுக்கு முன்பு கோவில்கள் கட்டப்பட்டன என்கிறார்கள். சில கோவில்கள் இதற்கு முன்பிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இம் மாதிரியாக நம் தமிழ் அரசர்களாலும் மற்றும் பெரியோர்களாலும் கட்டப்பட்டுச் செலவழிக்கப்பட்ட செல்வம் எவ்வளவு? அவர்கள் செய்த மற்ற தர்மங்கள் எவ்வளவு? அவர்களுடைய குடும்பங்கள் இப்போது எங்கே? யாராவது ஒருவரைக் காண முடியுமா? உதாரணமாக, தஞ்சாவூர் அரசரை எடுத்துக் கொள்ளுவோம். அவர் கட்டிவைத்த பள்ளிக்கூடங்களும் அக்கிரகாரங்களும் மற்றும் பல தர்மங்களும் இன்னும் இருக்கின்றன. அப்படிச் செய்த அந்த அரசாங்கம் இன்று எங்கே? வெள்ளைக் காரன் கையில் போய்ச்சேர்ந்து விட்டது; மீதியுள்ள சொத்துக்களுக்கும் சண்டை உண்டா யிற்று. ஒரு காலத்தில் அம் மன்னவனை க்ஷத்திரியன் என்று வானமளாவப் புகழ்ந்து, அவரிடம் பிச்சை வாங்கி வயிறு வளர்த்த அன்னக் காவடிகளெல்லாம் நேற்று, 'கலியுகத்தில் பிராமணன், சூத்திரன் என இரண்டு சாதிகள்தாம் உண்டு' என்று கோர்ட்டில் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். நம் மக்கள் இன்னமும் இவைகளெல்லாம் செய்தால்தான் புண்ணியமும் மோட்சமும் கடவுள் தயவும் உண்டு என நினைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது சொன்னால், 'பார்ப்பனர்களை வைகிறார்கள்; நாத்திகம் பேசுகிறார்கள்' என்று நீலிக் கண்ணீர் விடுகிறார்கள்.

இனிச் சடங்குகளைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். சடங்குக்காக நாம் செலவிடும் பணம் எவ்வளவு? 'சடங்குக்காக மனிதன்' என்று, நம் மக்கள் கருதுகிறார்கள். பிறப் பதற்கு முன்பே நம்மைச் சடங்குச் 'சனி' பிடித்துக்கொள்கிறது. கரு தரிப்பதற்கு முன்பே சடங்கு செய்ய ஆரம்பிக்கிறோம். அதற்குப் புரோகிதன் வேண்டும் என்கிறோம். அவன் வந்து விறகைக் கொளுத்திப் புகைத்துக் கரியாக்க வேண்டும். அவன் நல்ல பிள்ளை பிறக்குமென்றால்தான் நமக்கு நல்ல பிள்ளை பிறக்குமென்று நினைக்கின்றோம்; கர்ப்பத்தி லேயே உபதேசம் செய்தால்தான் ஞானம் வரும் என்று நினைக்கின்றோம். அக் குழந்தை கீழே விழுந்ததும் சடங்கு செய்யவேண்டி இருக்கின்றது. சாதகம் பார்ப்பதற்கும், தொட்டிலில் போடுவதற்கும் பாலூட்டுவதற்கும், கோவணம் கட்டுவதற்கும், சவரம் செய்வதற்கும், காது குத்துவதற்கும், பள்ளிக்கூடம் வைப்பதற்கும் சடங்குகள் செய்து தீரவேண்டியிருக் கின்றது. குழந்தைக்குக் காய்ச்சல் வந்ததென்றால் சடங்குதான். இவைகள் எல்லாவற் றிற்கும் பார்ப்பானையே கூப்பிடவேண்டியதுதான். அவனுக்குப் பணம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. காயலா வந்தாலும் 'சனியைச் சுக்கிரன் பார்க்கிறான்; சாந்தி கழிக்க வேண்டும்' என்கிறான். பணம் கொடுப்பதுதான் சாந்தி. கலியாணச் சடங்கோ, பொருத்தம்

பார்க்கவேண்டியிருக்கிறது. மரத்திற்கு மரம், பாலுக்குப் பால், கயிற்றுக்குக் கயிறு, பட்சிக்குப் பட்சி, எழுத்துக்கு எழுத்து என சிலேட்டுப் பொருத்தம் பார்க்கிறான்; இதற்கும் பணம். வேறு ஒருவன் அந்தப் பெண்ணை அடைய ஆசைப்பட்டால் அந்தப் புரோகித னுக்குச் சாடைசெய்து 1000, 500 ரூபாய் தருகிறேன் என்றால், பொருத்தமிருந்தாலும் இல்லை என்றே சொல்லிவிடுவான். அவன் இஷ்டம்போல் அனேகமாக நாளும் நேரமும் வைத்துக் கொடுக்கின்றான். கல்யாண மந்திரமென்று கருமாதி மந்திரமோ ஏதோ சொல்லி காசு வாங்கிப்போகிறான். சில 10 நாளைக்குள்ளும் அந்தப் பெண் தாலி அறுத்துப் போகிறது; மாமியார் படுத்தும் துன்பமோ சொல்லி முடியாது. புருஷன்படுத்தும் உபத் திரவமோ, தரித்திரமோ கணக்கு இல்லை. இதனை, அந்தப் புரோகிதனை அடுத்து, 'இவ்வளவு பொருத்தம் பார்த்தும் ஏனய்யா இப்படி ஆச்சுது?' என்றால் 'அதன் கர்மம் அப்படி இருக்கிறது. இதற்கு யார் என்ன செய்யமுடியும்!' என்று சொல்லிவிடுகிறான். 'அதற்கு ஏன் இவ்வளவு பொருத்தமும் சடங்கும் செய்து பணம் பெற்றாய்?' என்றால், 'அது உன்னுடைய முட்டாள்தனம்' என்கிறான். பிறகு பிள்ளை பெறாவிட்டால், 'எப்படியாவது பிள்ளை பெற்றுத் தீரவேண்டும், காசிக்குப் போ, இராமேஸ்வரத்திற்குப் போ, தருமம் செய், சாந்தி கழி, ஓமம் பண்ணு, இல்லையேல் 'புத்' என்னும் நரகத்திற்குப் போய்ச்சேருவாய்' என்கிறான். பிள்ளையில்லா வீட்டில் சாப்பிட்டால் பெரிய பாவம் என்கிறான்.

உன் பெண்சாதியை உன் அண்ணன், தம்பிக்காவது விட்டுப் பிள்ளைபெற்றுத்தான் ஆகவேண்டுமென்கிறான். இதன் ரகசியம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது பின் சந்ததி இருந்தால்தான் இப் பார்ப்பனர்கள் சடங்கு செய்து வாங்கித் தின்பதற்கு வழி உண்டு. இல்லையேல், கொடுப்பாரில்லாமல் அந்தச் சந்ததி போய்விடுமே என்பதுதான். கடைசியாய், சாகும்போதாவது நம்மை விட்டுவிடுகின்றானா? சுங்கச் சாவடிகளில் எப்படிச் சுங்கம் வாங்கினபிறகு வண்டிபோக அனுமதி அளிக்கின்றானோ, அதைப்போல இறந்து போகிறவன் இங்குள்ள பார்ப்பானுக்குச் சுங்கம் கொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது.

இனி, மத ஆச்சாரியார்களையும் மத குருக்களையும் சற்றுக் கவனிப்போம். இவர் களால் மக்களுக்குப் பயன் ஒருசிறிதும் இல்லை. இந்துமதத்தின் பேரால் சங்கராச்சாரியார், சைவ மடாதிபதி, வைணவ மடாதிபதி முதலிய பலர் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் யானைகளிலும், ஒட்டகங்களிலும் தன் இனத்தாருடன் வருவதும், ஓரிடத்தில் தங்குவதும், அவ்வூரிலுள்ள தங்கள் இனத்தாரைக்கொண்டே சாமியாருக்குப் பாதபூசை, பிச்சை என்று விளம்பரம் செய்வதும், ஒரு ரூபாய், ஒரு பவுன் கொடுத்து அவன் காலைக் கழுவின நீரை வாங்கி அருந்துவதும், அந்த ஊரில் கறக்கிறவரையில் அங்கே இருந்த பிறகு வேறு வேறு ஊர்களில் தங்குவதும், நம்மிடம் வாங்கின பணத்தைக் கொண்டே சாமியார் சூத்திரனைப் பார்த்ததற்கு ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும், நிழல் மேல்பட்டதற்கு ஒரு பிராயச் சித்தமும் ஒரு முழுக்கும், நீசமொழியாகிய தமிழில் பேசினதற்காக ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும் போடவேண்டியவனாகி விடுகிறான். இம் மாதிரி ஆட்களில் சிலர் 'உலக குரு' என்கிறார்கள்; சிலர் 'குலகுரு' என்கிறார்கள். குலகுரு என்பவர் ஓரிடத்திலிருந்து தனது ஆட்களில் ஓர் ஆளை அனுப்பி தான் வந்திருப்பதாகத் தெரிவிப்பார். சிஷ்யர்கள் மக்களோடும், மனைவியோடும் ஓடோடியும் சென்று அவர் காலில் விழும்படி அவனது மக்களுக்கும் மனைவிக்கும் கட்டளையிட்டுத் தானும் காலில் விழுவான்.

குலகுரு: உனக்கு எத்தனை குழந்தை?

சிஷ்யன்: மூன்று குழந்தைகள், இரண்டிற்கு விவாகம் ஆயிற்று.

குலகுரு: உன் 2 குமாரர்கள் இருதலைக் கட்டு; நீ ஒருதலைக் கட்டு, ஆக மூன்று தலைக் கட்டு. மூவொன்று மூன்று; மூகால் முக்கால்; ஆக மூன்றே முக்காலுக்கு ஒன்றே கால்தான் வைத்திருக்கிறாய்; என்ன!

சிஷ்யன் : சாமி! அடியேனை மன்னிக்க வேண்டும். என் அறியாமைக்கு அபராதம் 1¼ காணிக்கையும் சேர்த்து வைத்திருக்கிறேன். ஏனென்றால், என் மக்களிருவரும் உத்தியோகம் செய்யவில்லையே!

குலகுரு : உங்கள் தந்தைதானே தலைக் கட்டுக்கு 1¼ கட்டளை யென்று எழுதித் தந்திருக்கின்றார். இதோ பட்டயம் பார்!—என்று சொல்லி பணம் வாங்கிக்கொண்டு, 'சாமிகள் வீடு சிறிது பழுது பார்க்க வேண்டியிருப்பதால் நீங்கள் வந்து அவைகளைச் சீக்கிரம் முடித்துக் கொடுங்கள். சாமிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்' என்று சொல்லி வேறு ஊருக்குக் கொள்ளையடிக்கப் போய்விடுவான். இவன் போன பிறகு யாராவது வந்து சிஷ்யனை 'உன்னுடைய மதம் என்ன அப்பா; நீ பெரிய நாமம் போட்டுக் கொண்டிருக்கிறாயே?' என்றால் ஒன்றுமே பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பான்.

புராணக் கொடுமை: இராமாயணத்தில் இராமருக்கும் சீதைக்கும் ஒருமுறை கலியாணம் செய்திருந்தால்—நாம் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் வாரத்திற்கு ஒரு முறை கலியாணம் நடத்துகிறோம். வீட்டில் வைத்தால் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் எல்லாம் பறந்து போய்விடுவதோடு, நமக்கு மோட்சமும் கொடுக்குமென்று கருதியே, சீதா கலியாணம் செய்ய சாஸ்திரி காலில் விழுந்து இரண்டு ஜதை வேட்டியும் தருகிறோம். இராமாயணம், இராம பட்டாபிஷேகம், உற்சவம் செய்வதில் கேட்கக் கேட்க இன்பமாகத்தானிருக்கிறது. ஆனால், கடைசியில் படித்தால் நம்மை அடிமைகளென்று சொல்லுவதற்கு ஆதாரம் அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து, மீன், பாம்பு முதலியவைகளைப் பிடித்து, அதைச் சரியாகச் சுட்டும் சுடாமலும் தின்ற வெள்ளைக்காரர்கள் தற்பொழுது எந்த நிலையில் இருக்கிறார்கள்? அவர்கள் இப்பொழுது ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் செய்கின்றார்கள். எங்கேயோ இருந்து ஒரு பொத்தானை அழுத்தினால், எல்லா விளக்குகளும் எரிகிறதும், மறுபடியும் அந்தப் பொத்தானைத் தட்டினால் விளக்குகள் நின்று விடுகின்றதும்; மணிக்கு 500 மைல் ஆகாயக் கப்பல் பறக்கின்றதும் போன்ற பல செயல்களையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஆங்கிலேயரும், 'பெரியோர் போன வழியே நாமும் போவோம்'என்று போயிருந்தால் அவர்கள் இப்பொழுதுள்ள உன்னத நிலைமையிலிருக்க முடியுமா? பாவம் செய்பவன் புரோகிதனுக்குப் பணம் கொடுத்தால், அந்தப் பாவம் அவனைவிட்டு நீங்கிவிடுமென்று நினைப்போமானால் மக்களுக்கு மேலும் மேலும் பாவம் செய்ய வழியேற்படும். பாவத்தை விலைக்கு விற்கும் மூட வழக்கத்தை மூட்டைகட்டி வைத்ததால் அவர்கள் சீரும் சிறப்புமுற்று விளங்குகின்றார்கள். நாமும் அப்படியே விளங்கவேண்டுமானால் சமயமும் மூடவழக்கமும், குருட்டு நம்பிக்கையும் ஒழியவேண்டும்.

இப்போது, நீங்கள் இதையெல்லாம் கேட்டீர்கள். நாளைக்கு ஏதோ சடங்கு செய்ய வேண்டியதாயிருந்தால் புரோகிதனை அழைத்துத்தான் செய்ய முற்படுவீர்கள். காரணம் கேட்டால் பெண்கள்மீது பழி சுமத்துவீர்கள். அதோடு, உம் பெண்களையும் அவன் காலில் விழும்படி தூண்டுவீர்கள். இப் புரோகிதக் கொடுமைகளைப்பற்றி நம் பெண்கள் உணர்வார்களாயின் 'அய்யோ நீ தான் மதியின்றிக் காலில் விழுந்ததுமல்லாமல் என்னையும் விழச் சொன்னாயே' என்று நம்மை இழிவுபடுத்துவார்கள்.

இவற்றையெல்லாம் பெரியோர்களுக்கு என்ன சொல்லியும் பயனில்லை. அவர்களுக்குச் சில நொண்டிச் சமாதானங்கள் இருந்துகொண்டேயிருக்கும். இனிமேல் அவர்களை நம்புவதில் பயனில்லை. நான் வாலிபர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான்: நீங்கள்தாம் எதிர்காலத்தில் நாட்டை அடிமையிலிருந்து விலக்கப் போகின்றீர்கள். உங்கள் காலத்தில்தான் சுயமரியாதை உதயமாக வேண்டும். நான் உண்மையாய் நினைக்கிறேன்—நீங்கள் நினைத்தால் புரோகிதக் கொடுமை தலைகாட்டா

தொழியும்; நீங்கள் ஆண்பிள்ளைகளானால் அடிமைத் தனத்தையும் மூடநம்பிக்கையையும் ஒழியுங்கள்; புரோகிதக் கொடுமைகளுக்கு வழி கொடாதீர்கள். அதுதான் உங்களை அடிமையாக்கி இருக்கின்றது.

[சென்னை பச்சையப்பன் மண்டபத்தில், 21-10-1927-ல் சொற்பொழிவு-'குடி அரசு'—23-10-1927

4. இந்துமதக் கொடுமை

இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், அது பார்ப்பனர்கள் தங்கள் உயர்வுக்கும் வயிற்றுப் பிழைப்பிற்குமாக மூடர்களுக்கு ஏற்றவிதமாகப் பொய்யையும், புளுகையும் எழுதிவைத்து, அதையே மதம் என்றும் வேதம் என்றும் சாஸ்திரம் என்றும் பெயர் வைத்து, நம்மில் சில அயோக்கியர்களையும், அறிவிலிகளையும் இழிதன்மையால் சுவாதீனம் செய்து, அவர்களைக் கொண்டே அதைப் பிரச்சாரம் செய்விக்கச்செய்து, அதையே கலையாகவும் கவியாகவும் செய்வித்துவிட்டார்கள் என்றும், அதனால் இப்போது அவைகள் எங்கு பார்த்தாலும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் சுயநலக்காரர்களுக்கும், தொழிலாகவும் இலாபமாகவும் ஏற்பட்டுவிட்டதென்றும், இதன் பலனாக நாட்டிலுள்ள மக்கள் பெரும்பாலும் அறிவிழந்து, மானமிழந்து, நாணயமிழந்து பயனற்று வாழும்படியாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும் பலதடவை எழுதியிருக்கிறோம்.

இந்து மதத்திற்கு வக்காலத்துப் பேசும் யோக்கியர்கள் யாராவது சமாதானம் சொல்லுவார்களா என்று கேட்கின்றோம். இராமனைக் குற்றம் சொன்னதினாலும் தங்களுடைய மதமோ, தெய்வமோ மானமோ குற்றம் சொல்லப்படுவதாகக் கருதுபவர்கள் அக் குற்றங்கள் எங்கிருந்து உண்டாக்கப்பட்டன என்பவைகளை உணர்ந்தார்களா என்றுதான் கேட்கின்றோம்.

யோக்கியமும், ஆண்மையும் சுத்த இரத்த ஓட்டமும் உள்ளவர்களானால் அக் குற்றங்கள் உண்மையா இல்லையா என்பதையும், இந்து மதத்தைச் சேர்ந்த கடவுள்கள் என்று சொல்லப்படுபவர்களைப்பற்றிக் காணப்படுவதுதானா அல்லவா என்பதையும் வெளியாக்கி விவகாரம் தொடங்குவார்கள். அப்படிக்கில்லாமல், போக்கிரித் தனமாய் அன்னியர்கள் மீது குற்றம் சுமத்துவது யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் செய்கையாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், நாமும் நமது பத்திரிகையும் நாத்திகப் பிரச்சாரம் செய்கின்றதாகப் பல அயோக்கியர்கள் எழுதியும், உளறியும் திரிகின்றார்கள். இதைக் கவனிக்கும்போது நாம் கடிந்துகொள்ளாமல் இருக்கமுடியவில்லை. ஏனெனில், நாம் நாத்திகப் பிரச்சாரம் செய்வதாக எழுதுகிறவர்களும் குரைக்கின்றவர்களும், நாத்திகம் என்றால் என்ன என்பதைப்பற்றியும், அதனால் ஏற்பட்ட கெடுதி என்ன என்பதைப்பற்றியும் சொல்ல முன்வந்த பிறகு, அக் குற்றத்தை நம்மீது சுமத்தினால் அதை மனிதத் தன்மையாகக் கொள்ளலாம். அப்படிக் கில்லாது, நாத்திகம் இன்னதென்றே அறிவிக்காமல், மூட ஜனங்களுக்கு நாத்திகம் என்கின்ற வார்த்தையில் ஒருவித வெறுப்பு இருப்பதாக உணர்ந்து, அதை உபயோகித்துக் கொள்வதன் மூலம் நம்மீது அம் மக்களுக்குத் துவேஷம் உண்டாகட்டும் என்கின்ற அயோக்கியத்தனமான எண்ணத்துடன் பல மடையர்கள் அடிக்கடி எழுதினால், யார்தான் சும்மா இருந்துகொண்டிருக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

நாம் ஏதோ இவ் விஷயத்தில் சற்றுக் கடினமான பதம் உபயோகிப்பதாக நம் வாசகர்கள் கருதலாம். என் செய்வது? நிவர்த்தி இல்லாததால் உபயோகித்தே தீர வேண்டியதாயிற்று என்பதை நமது வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஏனெனில், இதைப்பற்றிப் பல தடவைகளில் நாம் சமாதானம் எழுதியிருக்கின்றோம். அவை கொஞ்சமும் அவ் விலங்கினங்களுக்குப் படும்படியாகச் செய்யமுடியவில்லை. மறுபடியும்

நாத்திகம் என்றும், சீதையைத் திட்டினான் என்றும் மற்றதைத் திட்டினான் என்றுமே எழுதியும் பேசியும் வருகின்றார்கள். ஆனதால் இவர்களின் உண்மை யோக்கியதையை வெளியிட்டே தீரவேண்டியதாகிவிட்டதேயொழிய வேறில்லை.

இனிமேலாவது இந்து மதத்திற்கோ மற்றும் எதற்கோ வக்காலத்துப் பேசி வருகின்றவர்கள் மக்களின் அறியாமையைத் தங்கள் அனுகூலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளாமல்—நாணயமான முறையில் வக்காலத்து வாங்கிப் பேசவரட்டும் என்றே எதிர் பார்க்கிறோம். அன்றியும், நாத்திகம் என்று பேச வருபவர்களும், அதுபோலவே, எது நாத்திகம் என்பதை எடுத்துக்காட்டி வக்காலத்துப் பேச முன்வரட்டும் என்றே எதிர்பார்க்கின்றோம். அதை விட்டுவிட்டு, இம் மாதிரி அயோக்கியத்தனமான வழியில் பிரவேசிப்பது மிகுதியும் ஈனத்தனம் என்றே சொல்லுவோம். இப்படி எத்தனை பேர் புறப்பட்டாலும் நாம் கலங்கப்போவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்படித்தான் 'ஜஸ்டிஸ் கட்சி' என்பதையும், 'திராவிடன்' என்பதையும் ஒரு காலத்தில் மக்களின் அறியாமையை உபயோகித்துக்கொண்டு பல அயோக்கியர்கள், பொது மக்கள் அவற்றின்மீது வெறுப்படையவும் செய்து, அதனால் வயிறு வளர்த்து வந்தார்கள். ஆனால், அது எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று உழைத்து வந்ததின் பயனாக இன்று மக்கள் உண்மை உணரும்படிசெய்து, புரட்டர்களின் யோக்கியதையையும் வெளியாக்கி, அவர்களை எல்லாம் மூலையில் உட்காரவைத்துவிட்டது என்பதை யார் மறுக்க முடியும்? எனவே, ஒரு காலத்தில் பாமர மக்கள் ஏமாற்றப்பட்டாலும் ஒரு காலத்தில் உண்மை அறிந்தேதீருவார்கள் என்பது நமது உறுதி.

['குடிஅரசு'—கட்டுரை—24-6-1928]

5. இந்துமதத் தத்துவம்

திருப்பதியில், திருப்பதி 'தேவஸ்தான பண்டில்' நடைபெறும் ஒரு பள்ளிக் கூடத்தில் சமஸ்கிருத வியாகரண வகுப்பில் பார்ப்பனரல்லாத பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்று பள்ளிக்கூட அதிகாரிகள் மறுத்துவிட்டார்களாம். பொது ஜனங்கள் இதைப்பற்றித் தேவஸ்தான அதிகாரியாகிய மகந்துவிடம் சொன்னதில், அவர் தமக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டாராம். மிஸ். மேயோ, இந்திய மக்கள் கல்வி அறிவில்லாமல் இருப்பதற்குப் பார்ப்பனர்களே காரணம் என்று—தமது, 'இந்தியத் தாய்' என்ற புத்தகத்தில் எழுதியதற்கு—அதைச் சுட்டி—'தேசியத் தலைவரான' திரு. சத்தியமூர்த்தி, பனகல் ராஜாவை சமூகத் துரோகி, தேசத்தைக் காட்டிக்கொடுத்த தேசத் துரோகி என்ற பொருள்படக் கூறினார். மற்றொரு தேசியத் தலைவர், மிஸ். மேயோவை 'குப்பைக்காரி' என்று கூறினார்.

இவர்கள் திருப்பதிப் பள்ளிக்கூட நடவடிக்கைகளுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள் என்று கேட்கின்றோம்.

சமஸ்கிருதம் தேவ பாஷை, பொது பாஷை, மத பாஷை, அறிவு பாஷை என்று சொல்லி, அதற்குப் பார்ப்பனரல்லாதார் பணத்தில் பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதும், அதில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகள் படிக்க ஆசைப்பட்டால் மறுப்பதுமான அயோக்கியத் தனத்தை ஒழிக்கவோ, கண்டிக்கவோ இதுவரை எந்தத் தேசியத் தலைவர்கள் முன் வந்தார்கள் என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களின் புன்சிரிப்புக்குப் பயந்துகொண்டு அவர்கள் காலுக்கு முத்தமிட்டு வரும் 'தேசிய வீர முழக்கம்' இப்போது எங்கேபோய் ஒளிந்துகொண்டது என்று கேட்கின்றோம்.

செத்த பாம்பை ஆட்டுவதுபோல், 'செத்துச் சுட்டுச் சாம்பலாக்கி ஆற்றில் கரைத்து விட்டுக் காடாற்றுக் கருமாதியும்' நடந்துவிட்ட சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றி

யும், சூழ்ச்சியும் தந்திரமும் பார்ப்பன ஆதிக்கமும் வயிற்றுச் சோற்றுத் தேச பக்தர்களின் பிழைப்புக்கு மார்க்கமும் நிறைந்த தேசியத் திட்டத்தைப்பற்றியும் கூக்குரலிட்டுக் கூலி வாங்குகின்றார்களே ஒழிய இந்த விஷயத்தில் யாராவது கவலை செலுத்திவருகிறார்களா என்று கேட்கின்றோம்.

'வேதம்'தான்—சூத்திரர்கள் என்கிற 'வேசி' மகனும், பார்ப்பனர் 'தாசி' மகனுமாகிய—பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாது என்றால், வியாகரணம் என்கின்றதான பொதுவான இலக்கணமும்கூடப் பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாது என்று சொல்லுவது எவ்வளவு அயோக்கியத்தனமானது என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை. எந்தப் படிப்பைப் பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாதோ அந்தப் படிப்புக்குப் பார்ப்பனரல்லாதார் பணத்தை உபயோகப்படுத்தலாமா என்று கேட்பதுடன், சற்றாவது மானமோ, வெட்கமோ, சுயமரியாதையோ, சுத்த இரத்த ஓட்டமோ உள்ள கூட்டமானால் இந்தக் காரியம் செய்ய முடியுமா என்று கேட்கின்றோம்.

இனியாவது சர்க்காரோ அல்லது இந்து மத பரிபாலன போர்டாரோ அல்லது பொது ஜனங்களோ இந்தக் காரியத்தில் பிரவேசித்து, இந்த மாதிரி பொது நன்மைக்கல்லாத தனிப் பட்டவர்களின் நன்மைக்கு ஏற்றதுமான காரியங்களுக்குப் பொதுமக்களின் பணத்தை உபயோகப்படுத்தாமல் பார்த்துக்கொள்ளக்கூடுமா என்று கேட்பதுடன், சுயமரியாதை என்றால் என்ன என்று விழிப்பதுடன், தூங்கிக்கொண்டிருப்பது போன்ற விதண்டாவாதிகளுக்கு இதிலிருந்தாவது சுயமரியாதை என்பது இன்னதென்று புரியுமா என்று கேட்கின்றோம்.

['குடிஅரசு'—கட்டுரை—19-8-1928]

6. சமயம்

நமது மதமென்பதோ, வேதமென்பதோ, சாமிகள் என்பனவோ சமீபகாலத்தில் ஏற்பட்டதாகச் சொல்லுவதற்கில்லை. யுகம், சதுர்யுகம், மகாயுகம், கற்பம் என்பவைகளை யெல்லாம் ஒதுக்கிவிட்டு—சரித்திர ஆராய்ச்சிப்படி பார்த்தாலும் 5000, 6000 வருஷ காலத்திற்குக் குறையாது என்று சொல்ல இடமிருக்கின்றதென்பதில் ஆராய்ச்சிக்காரர்களுக்குள் அதிகமான அபிப்பிராய பேதமில்லை. உலகத்தில் தோன்றி இப்போது ஜீவனுடனிருக்கும் மற்ற சமயங்களெல்லாம் அதைவிடக் குறைந்த காலத்தைக் கொண்டதாகவே இருப்பதுடன், அந்த நாடுகளும் தலைசிறந்து விளங்குகின்றன. அப்படியிருக்க, நம் தேசம் மாத்திரம் இந்நிலையிலிருக்கக் காரணம் என்ன என்பதற்கு மேற்கண்ட சமய வாதிகள் என்ன பதில் சொல்லுகின்றார்கள் ?

இதற்காக அரசாங்கத்தைப்பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லி அரசாங்கத்தை வைதுவிட்டால் அதுவே போதுமான சமாதானமாகுமா என்று கேட்கின்றோம்.

மற்றும், சமயத்தையே ஆதாரமாகக் கொண்ட இராமன், கிருஷ்ணன் போன்ற விஷ்ணு அவதார அரசர்களும்; மீனாட்சி-சொக்கலிங்கர் போன்ற சிவ அவதார அரசர்களும்; மற்றும் சேரன், சோழன், பாண்டியன் போன்ற தெய்வத் தன்மை தாண்டவமாடிய அரசர்களும் ஆண்டகாலத்தைவிட—இப்போதைய அரசாங்கமோ அல்லது ஜனப்பிரதிநிதி அரசாங்கமோ எந்தவிதத்தில் மோசமானது என்பதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சிறு உதாரணம் சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம்.

எனவே, ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்களின் நிலைகுலைந்து வருவதையும், தேசம் அடிமைப்பட்டு வருவதையும், தொடர்ச்சியாகக் கேட்டும், பார்த்துவந்தும்—கொஞ்சமாவது அறிவு என்பதை உபயோகப்படுத்தி, இதன் காரணங்கள் என்ன என்பதைக் கவனிக்காமலும், அக்கம் பக்கம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு சிறிதும் திரும்பிப் பாராமலும் மக்களைப் பாழும் சமயம்—சமயாச்சாரி—சாமி என்பதையே குரங்குப் பிடியாய்ப்

பிடித்துக்கொண்டே நாசமாய்ப் போகும்படி செய்வதால் யாருக்கு என்ன நன்மை விளையக் கூடும் என்று கேட்கின்றோம்.

சாமியின் மூலமும், சமயத்தின் மூலமும், சமயாச்சாரிகளின் நடத்தையின் மூலமும் மக்களுக்கு ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலத்தையும் கற்பிக்கலாம் என்று யாராவது சொல்ல வருவார்களானால்—அவற்றையெல்லாம் விட்டுவிட்டு நேரே ஒழுக்கத்தையும், வாழ்க்கை நலத்தையும் கற்பித்தால் என்ன நஷ்டம் விளைந்து விடக்கூடும் என்று கேட்கின்றோம்.

இதுகால பரியந்தம்—அதாவது குறைந்தது 5000 வருடகாலம் இந்த வேலையைச் செய்து பார்த்தாகிவிட்டதல்லவா ? இனி ஏன் புதுமுறை கண்டுபிடிக்கக் கூடாது ? சாதாரண மாக வைத்திய சிகிச்சையில், வியாதிக்குத் தக்க மருந்தை இரைப்பைக்கு அனுப்பி அங்கு அது ஜீரணக் கருவிமூலம் ஜீரணிக்கச் செய்து, சக்கையை மலத்தின் மூலம் கழித்து, சத்தை இரத்தத்தோடு கலக்கும்படி செய்து வியாதியைக் குணமாக்க முயற்சிப்பதைவிட, மருந்தின் உண்மையான சத்தை எடுத்து நேரே இரத்தத்தில் சேர்த்து வேலை செய்யும்படி செய்வதுபோல் (இன்ஜெக்ஷன்) ஒழுக்கங்களையே கற்பிப்பதில் என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் அந்தத் தொழில் பழகாத சில வைத்தியர்களுக்கு வேறு தொழில் கற்றுக் கொள்ளும் வரையில் வயிற்றுப் பிழைப்புக்குக் கஷ்டமாயிருக்கலாம். இதற்காக மக்கள் வியாதியோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதா என்பதை யோசித்துப் பார்த்தால், சிலரது வயிற்றுப் பிழைப்புக் கஷ்டம் அவ்வளவு பெரிதாகத் தோன்றாது ! நிற்க,

பொது ஜனங்களில் சிலர் இக் கூட்டத்தினர்களின் யோக்கியதையையும் உண்மை யையும் அறியாமல், நாம் ஏதோ சற்று அளவுக்குமீறி வேகமாய்ப் பேசுவதாகக் கருது கிறார்கள்போல் தெரியவருகின்றது. ஆனால், அவர்கள் அப்படிக் கருதுவதற்கு ஆதாரமோ நியாயமோ ஒன்றும் எடுத்துக் காட்டாமல்—'இருந்தாலும் இவ்வளவு கடினமாகப் போக லாமா ?' என்கின்ற ஒரு பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் நாமும் அவற்றை ஒரு சிறிதும் இலட்சியம் செய்வதில்லை. ஏனெனில், நேற்றுவரை 'அமிதவாதி' களாக இருந்தவர்கள் அந்தக் கொள்கையுடனேயே நம்மால் 'மிதவாதி'கள் என்று சொல்லப் படுபவர்களாகி விட்டார்கள். காரணம் என்னவென்றால், நாம் அவர்களைவிடச் சற்று வேகமாய்ப் போவதாக ஜனங்கள் நினைப்பதுதான்.

இதே முறையில் வெகு சீக்கிரத்தில் நாமும் மிதவாதிகள் என்று கருதப்படக்கூடிய வர்களாக ஆனாலும் ஆகலாம் என்பதே நமது முடிவு.

நம்மைவிட வேகமாய்ப் போகக்கூடிய வாலிபர்கள் முளைப்பதை, வளருவதை நாம் நேரிலேயே பார்க்கின்றோம்.

அதாவது, எவ்வளவு கொடுமையை அனுபவிப்பதானாலும். பலாத்காரம் என்றால் இன்னமும் நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கின்றது. நியாயத்தையும், வாதத்தையும் எடுத்துச்சொல்லி மெய்ப்பித்துப் பார்க்கலாம் ; முடியாவிட்டால் இன்னமும்.பொறுக்கலாம் என்கின்ற எண்ணமே தோன்றுகின்றது.

ஆனால், நமது இளவல்களுக்கோ, 'இன்னமும் எத்தனை நாளைக்கு இந்தப் புரட்டுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் சுயநலத்திற்கும் கொடுமைகளுக்கும் இடம் கொடுத்துக்கொண்டிருப்பது ; இரண்டில் ஒன்று பார்க்கவேண்டியதுதான்' என்கின்ற துடி துடிப்பு கொழுந்துவிட்டு எழுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் காலத்தில் நாம் அவர்களால் மாத்திரமில்லாமல் பொதுமக்களாலும் மிதவாதிகள் என்றும், பழம்பிடுங்கல்கள் என்றும் குற்றம் சொல்லப்படுவோம் என்கின்ற உறுதி நமக்கு உண்டு. எனவே, இந்த விஷயத்தில் அதிகமாகப்போவதும், நிதானமாகப் போவதும் அவரவர்கள் மன உணர்ச்சியைப் பொறுத்ததே தவிர வேறல்ல.

உதாரணமாக, பண்டிதர் திரு. வேதாசலம் அவர்கள் இராயப்பேட்டையில் காந்தி நிலைய ஆண்டுவிழா தலைமைச் சொற்பொழிவில் அவர் நிகழ்த்தியதாகக் காணப்பட்டவைகளில் ஒன்று, 'சைவத்தைக் குற்றம் சொல்பவனை இன்னமும் விட்டுவைத்திருக்கின்றீர்களா? உங்கள் சரீரத்தில் சைவ இரத்தம் ஓடவில்லையா?' என்பதாகச் சொன்னதாகக் காணப்பட்டது. (அது ஒருவாறு மறுக்கப்பட்டது). அவர் அப்படியே சொன்னதாக வைத்துக்கொண்டாலும், அது சட்டப்படி குற்றம் என்று சொன்னால் சொல்லலாமே யொழிய, அவரது உணர்ச்சிப்படி அது எப்படிக் குற்றமாகும்?

ஒரு சமயம் அதிலிருந்து பண்டிதர் சரீரத்தில் சைவ இரத்தம் ஓடிற்றா இல்லையா என்ற கேள்வி வேண்டுமானால் கேட்கலாமே ஒழிய, அந்த உணர்ச்சி மக்களுக்குத் தோன்றுவது இயல்பே என்பது எனது அபிப்பிராயம். தற்கால நிலையில் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் மிக்க வேகமாகச் சிலருக்குப் பட்டாலும் படலாம். அதற்காக, மக்களின் உணர்ச்சி, காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவ்வளவும் பயனளிக்காது என்றே சொல்லுவோம்.

மக்களின் சுதந்திரத்திற்கும் அறிவிற்கும் சுயமரியாதைக்கும் உலகம் போகின்ற போக்கில் நாம் இருக்கும் நிலை எவ்வளவு பிற்பட்டது என்பதையும், நமது போக்கு எவ்வளவு அசைவற்றதும், நிதானமுமானது என்பதையும் யாராவது கவலையுடன் சிந்தித்துப் பார்த்தால் கடுகளவு கவலை இருந்தாலும், மதமும் சாமியும் மத ஆச்சாரிகளும் அவர்கள் கதைகளும் நம்மை ஒரு சிறிதும் தடைப்படுத்தவே மாட்டாது என்றே துணிந்து சொல்லுவோம். ஆனால், அவற்றில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் தங்கள் வாழ்வும் அறிவுமே பிரதானம் என்பவர்களுக்கு உலகம் தெரியாதென்றுதான் சொல்லவேண்டும்.

ஆதலால், பொதுமக்கள் இனித்தான் சற்று ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—30-9-1928]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மதத்தைப்பற்றி நான் சொல்லுவதைச் சிலர் மதத் துரோகம் என்கிறார்கள். பிறவியின் காரணமாக மனிதனுக்கு மனிதன் ஒரு நீதியும், ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள எந்த மதமானாலும் சரி—அது, கடவுளை நேரே கொண்டு வந்து காட்டி, மோட்சத்திற்கு அழைத்துச் செல்லச் செய்யும் மதமாயிருந்தாலும் சரி, அதை அழிக்க வேண்டியதும், அழிக்க முடியாவிட்டாலும் அந்த அழிக்கும் வேலையில் உயிரைவிட வேண்டியதும் உண்மையான மனிதனது கடமை என்றுதான் நான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன். இதில் சிறிதும் ராஜிக்கு இடமில்லை என்பதைக் கண்டிப்பாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதலில் மதம் சம்பந்தமான என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், எந்த மதமானாலும்—அதன் கொள்கைகள் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயமுடையவையானாலும் அம் மதமும் கொள்கைகளும் மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு—அவனுடைய பிரத்தியட்ச அனுபவத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கைகளுடையவைகள் என்றால் அதைப்பற்றி யோசிக்க நான் எப்போதும் தயாராயிருக்கிறேன். அப்படிக்கின்றி, மதமும் அதன் கொள்கைகளும் 'மேல் லோகத்திலோ' அல்லது 'கீழ் லோகத்திலோ' அல்லது செத்தபிறகு 'சூட்சும' சரீரத்துடனேயோ அனுபவிக்கும் அனுபவத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்றால்—அது எப்படிப்பட்ட மதமானாலும்—யார் செய்ததானாலும்—அதற்கு என்ன ஆதாரம் சொல்லுவதானாலும்—அதனால் என்ன விளைவதானாலும் நான் அதைக் கணநேரம் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன். இது விஷயத்தில், என்னைப்பற்றி யார் எப்படி நினைத்துக்கொண்டாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஏனெனில்,

இந்தப்படி நினைப்பதற்கு எனக்குப் பூரண சுதந்திரம் இருக்கின்றது என்று நினைத்திருக்கின்றேன். அதோடு, எந்த லோகத்திலானாலும் இந்த உலக வாழ்க்கை அனுபவத்திற்கு விபரீதமான பலன் இருக்கமுடியாதென்றும் கருதுகிறேன்.

நாங்கள் ஜெயிலிலிருந்து வெளிவந்ததும் திரு. காந்தி கைது செய்யப்பட்டுச் சிறை சென்றுவிட்டதால், இந்தச் சமயத்தில் ஒத்துழையாமையை விட்டுப் போகக்கூடாது என்று சில பார்ப்பனத் தலைவர்கள் கேட்டுக்கொண்டதால் மறுபடியும் காங்கிரஸ் வேலையைச் செய்தோம். பிறகு குருகுல நடவடிக்கையையும், அது சம்பந்தமாகப் பார்ப்பனத் தலைவர்கள் மனப்பான்மையையும், அவர்களது உள் எண்ணத்தையும் தெரிந்தபிறகு 'இந்து' மதமே அடியோடு அழிக்கப்படவேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்துவிட நேர்ந்தது. அதன் பேரில் இந்து மதத்தை விட்டாலும் பிறகு தங்களுக்கு ஏதாவது ஒரு மதம் இருந்து தான் தீரவேண்டுமென்று கருதும் மக்களுக்குக் கிறிஸ்துவ மதத்தைச் சிபாரிசு செய்யலாமா, முகமதிய மதத்தைச் சிபாரிசு செய்யலாமா என்று கருதி யோசித்துப் பார்த்தேன். கடைசியாக கிறிஸ்துவ மதமும், நமது நாட்டில், நான் பார்த்தவரை அதுவும் மற்றொரு பார்ப்பனீய மதமாகவே காணப்பட்டது. கிறிஸ்துவ மதப் பிரச்சாரத்தின் கருத்தெல்லாம் அரசியல் விஷயத்தை அடிப்படையாகவும், அந்தரங்க இலட்சியமாகவும் கொண்டு செய்யப்படுகின்றதே ஒழிய, மக்கள் சமத்துவத்தையோ ஒற்றுமையையோ கொண்டதாகத் தெரியவில்லை என்கின்ற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று. எப்படி என்றால், இன்றைய தினமும் கிறிஸ்துவ மதத்தில் பறைக் கிறிஸ்தவன், சக்கிலிக் கிறிஸ்தவன், வேளாளக் கிறிஸ்தவன், உடையார் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன், பார்ப்பனக் கிறிஸ்தவன் என்கின்ற பாகுபாடுகளும்—குடியிருப்பு வசதி வித்தியாசங்களும்—சர்ச்சு முதலிய பிரார்த்தனை இடங்கள் வித்தியாசமும் காணப்படுவதைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். ஆகையால், முகமதிய மதத்தைத் தழுவுவதால்தான் தீண்டாதவர்களுக்கு இது சமயம் சீக்கிரத்தில் உடனேயே சமூக சமத்துவத்தை அளிக்கமுடியும் என்று கருதுகிறேன். இந்த நிலைமை நமக்கு ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தேன்.

[பாலக்காட்டில், 9-5-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-5-1929]

நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு எப்படிப் பிறவியின் காரணமாகவே சாதி .கற்பிக்கப் பட்டு, அந்தச் சாதியின்பேரால் அவன் அழைக்கவும்பட்டு, அந்த மனிதனும் அதை ஒப்புக் கொண்டு தன்னை இன்ன சாதியான் என்று ஒப்புக்கொள்கின்றானோ; அதுபோலவே மதமும் ஒரு மனிதனுக்குப் பிறவி காரணமாகவே கற்பிக்கப்பட்டு, அவனும் அந்த மதத்தின் பேரால் அழைக்கப்பட்டு, தானும் அதை ஒப்புக்கொண்டு தன்னை இன்ன மதத்தினன் என்றே எண்ணிக் கொண்டு வருகின்றான்.

ஆனால், சாதியானது பிறவியின் காரணமாக ஏற்படுகிறதென்று சாதியைக் கற்பிக்கும் சாஸ்திரங்கள் என்பவைகளால் சொல்லப்பட்டு வருவதால் பிறவியின் காரணமாக சாதி நிர்ணயிக்கிறவர்களுக்கு மேற்கண்ட ஆதாரங்களைச் சொல்லிக்கொள்ள இடமுண்டு. ஆனால், மதமானது பிறவியின் காரணமாக ஏற்படுவதாக இன்றுவரை எந்த மதமும் இது சம்பந்தப்பட்ட சாஸ்திரமும் சொல்லவே இல்லை. மதம் என்பது கொள்கை என்றும், அந்தக் கொள்கையானது எந்த மனிதனாலும், எப்பொழுது வேண்டுமானாலும், ஏற்றுக் கொள்ளவும் தள்ளவும் உரிமையுடையது என்றுமேதான் சொல்லப்பட்டு வருவதுடன்—அந்தப்படியே அனேக மனிதர்கள் அடிக்கடி மதம் மாறிக்கொண்டும் வருகிறார்கள். அதாவது, இந்துக்கள் என்பவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, முகம்மதியர்களாகவோ, பவுத்தர்களாகவோ, பிரம்மசமாஜிகளாகவோ, நாத்திகராகவோ மாறுவதும், ஒரு கிறிஸ்தவர் முகமதியராகவோ, இந்துவாகவோ, பவுத்தராகவோ, நாத்திகராகவோ மாறுவதும்; ஒரு முகமதியர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, பவுத்தராகவோ, நாத்திகராகவோ

மாறுவதும்; ஒரு பவுத்தர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, முகமதியராகவோ, நாத்திகராகவோ மாறுவதும்; ஒரு நாத்திகர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, முகமதியராகவோ, பவுத்தராகவோ மாறுவதும்; உள்பிரிவு மதக்காரர்களாக—அதாவது, சைவன், வைணவனாகவும்; வேளாளன், சைவனாகவும்; சைவன் சமணனாகவும்; சமணன் சைவனாகவும்; மற்றும் இதுபோலவே அடிக்கடி மாறுவதும் சர்வசாதாரணமாகப் பார்த்துவருகின்றோம். இந்த முறையில்தான் இன்றையதினம் உலகத்தில் சுமார் 2000 வருஷத்திற்குமுன் ஏற்பட்டதான பவுத்த மதத்தில் 55 கோடி மக்களும், 2000 வருஷத்திற்குமுன் ஏற்பட்ட கிறிஸ்துவ மதத்திற்கு 50 கோடி மக்களும், 1300 வருஷத்திற்குமுன் ஏற்பட்ட முகமதிய மதத்திற்கு 23 கோடி மக்களும், காலமே குறிப்பிட முடியாததான அவ்வளவு பழைய இந்து மதத்திற்கு 20 கோடி மக்களும்; இம் மதங்களுக்கு முன்னால் இருந்துவந்த யூத மதத்திற்கு ஒரு கோடி மக்களும், மதம் குறிப்பிட இயலாத மக்கள் 17 கோடி பேர்களும் இருந்துவருகின்றார்கள். இவர்கள் இந்தப்படி—எப்படி, எப்படி உண்டாகி இருக்கமுடியும்? அனேகமாக இவ்வளவு ஜனங்களும் ஏதோ ஒரு மதத்திலிருந்தோ அல்லது மதமே இல்லாதவர்களாயிருந்துதான்—புதிதாக ஏற்பட்ட மதப் பிரச்சாரங்களின் மூலமாக அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இன்றையதினம் இருக்கவேண்டும். இந்தப்படி பார்த்தாலே மக்களுக்கு மதம் பிறவியின் காரணம் அல்லவென்றும் அவரவர்கள் மனப்பான்மையும் மற்றவர்களின் பிரச்சாரமும் காரணமென்று விளங்கும். அன்றியும், இந்தக் கொள்கைப் படியே இனியும் உலகத்தில் எத்தனை மதம் வேண்டுமானாலும் உற்பத்தியாகலாம் என்பதும், அவைகளுக்கெல்லாம் இப்போதிருக்கும் மக்களேதான் பெரும்பகுதியும் போய் அப் புது மதங்களில் சேர்ந்தாகவேண்டுமென்பதும் நன்றாய் விளங்கும். எனவே, இந்து மதத்தையும் சாதியையும் இரண்டையும் பார்க்கும்போது, மதத்தைவிட சாதியே அதிக பலமுடையதாகும். ஏனெனில், சாதி பிறவியில் உண்டாவது, அது மாற்றமுடியாதது என்று சொல்லப்படுவது. ஆனால், மதமோ கொள்கையின் மூலம் ஏற்படுவது; அது மன உணர்சிக்கும், அறிவு உணர்ச்சிக்கும் தக்கபடி அடிக்கடி மாற்றிக்கொள்ள உரிமையுடையது என்பதாகும். ஆகவே, பிறவியினால்தான் ஏற்படுகின்றது என்று சொல்லும்படியான சாதியை அடியோடு அழித்து, எல்லா மக்களையும் ஒன்றுசேர்த்து, ஒற்றுமையையும் சகோதரத் தன்மையையும் உண்டாக்கவேண்டும் என்பதாகக் கூறப்படும் மக்களின் முயற்சியை ஒப்புக்கொண்டு, ஆதரவளிக்கச் சம்மதிப்பதாகச் சொல்லும் மக்கள்—கேவலம் கொள்கையாலும் அறிவு உணர்ச்சியாலும் இருக்கும் மதத்தை அழித்து மக்களை ஒன்றுசேர்க்க முயற்சிப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதன் அறிவு வளர்ச்சியின் மூலமும், ஆராய்ச்சித் தெளிவின் மூலமும் அசவுகரியத்தின் மூலமும், சுயநலத்தின் மூலமும் அடிக்கடி மாற்றிக்கொள்ளச் சுதந்திரம் இருக்கும் மதத்தைப் பற்றிப் பிடிவாதம் காட்டுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதும் நமக்கு விளங்கவில்லை. அனேகமாக மதங்களை இன்றைய தினம் வலியுறுத்துபவர்களில் அனேகர் தங்கள் மதத்திற்குச் சொல்லும் ஆதாரங்கள் எல்லாம் மதத்தை உண்டாக்கின மதத் தலைவர்—'பெரியர்' என்றும், அவர்கள் அனேக 'அற்புதங்கள்' செய்த பெரியர்கள் என்றும், தங்கள் தங்கள் மதம் இன்ன இன்ன பரீட்சைக்கு நின்று வெற்றிபெற்றது என்றும் சொல்வதன் மூலம் அவைகளைப் பெருமைப்படுத்திப் பேசுகிறார்களே அன்றி—அவைகளில் ஏதாவது ஒன்று, இன்றையதினம் நடைபெற முடியுமா என்பதுபற்றிக் கேட்போமானால் கோபித்துக்கொள்கிறார்களே யொழிய, வேறு சமாதானம் கிடையாது. அதுதான் போகட்டும் என்றாலோ, அம் மதக்கொள்கைகளைப் பற்றியும், அதே மாதிரி மதத்திற்காகக் கொள்கைகள் என்று சொல்லப்படுவதல்லாமல்—கொள்கைக்காக மதமென்றோ, சவுகரியத்திற்காகக் கொள்கைகள் என்றோ, பகுத்தறிவுக்கு ஒப்புகின்றதா என்றோ ஒரு காலமும் சொல்லமுடியாதவைகளாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் மதத்திற்காகக் கொலைகளும், கொள்ளைகளும், யுத்தங்களும் உயிர்விடத்தக்க வீரங்களும் நாட்டில் மலிந்துகிடக்கின்றன. அதுதான் போகட்டு

மென்றாலோ, மதத்திற்காகச் செலவாகும் பணங்களும், நேரங்களும், அறிவுகளும், ஊக்கங்களும் கணக்குக்கு அடங்காதவைகளாகவே இருக்கின்றன.

இந்து மதம் என்பதைப் பொறுத்தவரை ஏற்படும் செலவுகள் சகிக்க முடியாததாயிருப்பதோடு, அதனால் நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகள் அளவிட முடியாததாகவும் இருக்கின்றன.

['குடிஅரசு'–தலையங்கம்—3-11-1929]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

ஒரு நாட்டின் மதக் கொள்கைக்கும், ஆட்சியின் தன்மைக்கும் அளவுகோல் அந்த நாட்டு மக்களின் கல்வி அறிவேயாகும். நமது நாட்டில் 100-க்கு 93 பேர் கல்வி இல்லாத தற்குறிகள். நூற்றுக்கு 99 பேர் கல்வில் முட்டிக்கொள்ளும் மூடர்கள். இப்படிப்பட்ட இந்த நாடு எப்படி அறிவுள்ள ஒரு சுதந்திரமான நாடாகும்? இந்த நாடானது சமீப காலம்வரை எல்லா மக்களும் கல்வி கற்கக்கூடாது, எல்லா மக்களும் அறிவாளிகளாக இருக்கக்கூடாது, எல்லா மக்களும் சுதந்திரமாக இருக்கக்கூடாது என்கின்ற கொள்கைகளையுடைய மத ஆதிக்கத்திற்கு அடிமையாய் இருந்த அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கிறது. அதனால்தான் 100-க்கு 97 வீதமுள்ள மக்கள் தற்குறிகளாயிருக்க ஏற்பட்டது.

[கொடைக்கானலில், 20-7-1930-ல் சொற்பொழிவு 'குடிஅரசு' 27-7-1930]

7. இந்துமத ஆபாசம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னைப்போல ஒரு சாதாரண மனிதன் பேசுவதினாலோ, தனக்குத் தோன்றுவதை எழுதுவதினாலோ, கடவுள்–மார்க்கம்–சமயம் போய்விடும் என்று பீதி அடைவீர்களானால் உங்கள் கடவுளுக்கும் மார்க்கத்திற்கும் உள்ள யோக்கியதையைக் கவனியுங்கள். நீங்கள் உங்கள் கடவுள் உறுதியானவரல்ல, உண்மையானவரல்ல என்றும்; உங்கள் சமயம் உறுதியானது அல்ல, உண்மையானது அல்ல என்றும் நீங்களே கருதியிருக்கிறீர்களாவீர்கள். நாங்கள் உங்கள் கடவுளையோ, சமயத்தையோ இல்லையென்று சொல்லுவதற்காக இங்கு வரவில்லை. நீங்கள் சொல்லுவதற்கு, நீங்கள் பின்பற்றுவதற்கு ஆதாரமென்ன? அது உங்கள் பகுத்தறிவுக்குப் பொருத்தமாய் இருக்கின்றதா? அனுபவத்திற்கு ஒத்து வருகின்றதா? என்று யோசித்துப் பாருங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுவதுதான் எனது வேலையாகும். அவைகளுக்கு இடம் கொடுப்பதாலேயே உங்கள் கடவுளோ, மதமோ, ஆதாரமோ போய்விடுமென்று நினைத்தீர்களேயானால் அவைகளைப் பற்றி மறுபடியும் வெளியில் பேசுவது வெட்கக்கேடான காரியமல்லவா?

இப்படி ஆராய்ச்சி செய்வதாலேயே மறைந்துபோகும் மார்க்கமும், ஆண்டவனும் பிறகு என்ன காரியத்திற்குத்தான் பயன்படக்கூடும் என்பதை ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள். 'எங்கள் கடவுள் சர்வசக்தி உள்ளவர்; எங்கும் உள்ளவர்' என்று கருதிக் கொண்டு—'அஃரால் ஏற்பட்டது எங்கள் மார்க்கம்' என்று சொல்லிக்கொண்டு இருக்கும் நீங்கள், அப்படியானால்—'சற்று ஆராய்ச்சிசெய்து அறிவிற்குப் பொருத்தமாயிருக் கின்றதா வென்று பார்க்கலாமா?' என யாராவது கேட்டால், உடனே இம் மாதிரிப் பயந்தால் அப்படிப் பயப்படுகின்ற ஆட்களுக்குக் கடவுள் சர்வசக்தி உள்ளவர் என்கின்ற விஷயத்திலும், அவர் எங்குமுள்ளவர் என்கின்ற விஷயத்திலும், தங்கள் மதம் அவரால்தான் ஏற்பட்டது என்கின்ற விஷயத்திலும் நம்பிக்கையிருக்கின்றதா என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

மனிதனின் அறிவிற்குப் பயப்படும் கடவுளும் மார்க்கமும் உலகத்தில் யாருக்கு என்ன பயனை அளிக்கக்கூடும்? அறிவையும் ஆராய்ச்சியையும் கண்டால் ஏன் பயந்து

ஓடுகின்றீர்கள்? அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மதிப்புக் கொடுக்காத காரணமே—இன்று, இந்தியா உலகிலுள்ள நாடுகளிலெல்லாம் அடிமையான நாடாகவும், இழிவான மக்களாகவும் இருக்க வேண்டியதாகிவிட்டது. கடவுள் என்றால் குருட்டு நம்பிக்கை, மதம் என்றால் மூட நம்பிக்கை என்கின்ற தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. இந்நிலையைத் தவிர கடவுளுக்கும் மதத்திற்கும் வேறு அவமானம் வேண்டியதே இல்லை. இந்த மாதிரி அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பயந்த கடவுளையும் மதத்தையும் வைத்திருக்கின்றவனைவிட—கடவுள் மதம் இவைகளைப் பற்றிக் கவலைப் படாதவனோ, இல்லையென்று கருதிக் கொண்டிருக்கிறவனோ வீரனென்றே நான் சொல்லுவேன். ஏனெனில், கவலைப்பட்டு—உண்டு என்று சொல்லிக் கொண்டு—மெய்ப்பிக்கத் திண்டாடிக் கொண்டும், நடுங்கிக் கொண்டும் திரிவது பயங்கொள்ளித்தனமாகும்.

கடவுள் போய்விடும் என்று பயந்த மக்களால் வேறு என்ன வேலையாகும்? அவர்களைவிடப் பயங்கொள்ளிகள் யார் இருக்கக்கூடும்? கடவுளுக்கும் சமயத்திற்கும் அடிமையான நாடு ஒருநாளும் சுதந்திரத்திற்கு அருகதை இல்லை.

சமாதை வணங்கவேண்டாம், பூசை செய்யவேண்டாம் என்றால் உங்கள் மார்க்கம் போய்விடுமா? அப்படியானால் இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் வித்தியாசமென்ன? இந்துமத சம்பந்தமான கோவில்களெல்லாம் பெரிதும் சமாதுதான். அந்தக் கடவுளெல்லாம் அனேகமாய் அந்தச் செத்துப்போன ஆட்களே என்பதுதான் எங்கள் ஆராய்ச்சிக்காரர்கள் முடிவு. அதனால்தான் பல புண்ணிய ஸ்தலங்களும் பல கடவுள்களும் ஏற்பட வேண்டியதாயிற்று. அதை ஒழிப்பதற்குத் தோன்றியதுதான் இஸ்லாம் மார்க்கமாகும்.

இஸ்லாம் மார்க்கத்தில்தான் ஒரே ஒரு கடவுள் என்பதும், அதற்கு உருவமில்லை என்பதும், அதைத் தவிர மற்றதை ,வணங்கக்கூடாதென்றும் சொல்லப்படுகிறது. அது மாத்திரமல்லாமல், அல்லாசாமி பண்டிகையிலும், கூண்டு முதலிய திருவிழாக்களிலும் இஸ்லாமியர் சிலர் நடந்துகொள்வது மிகவும் வெறுக்கத் தக்கது. இவைகளையெல்லாம் ஒரு மார்க்கக் கட்டளை என்று சொல்லுவதானால் அந்த மார்க்கம் ஒருநாளும் அறிவு மார்க்கமாகவோ, உண்மையில் நன்மை பயக்கும் மார்க்கமாகவோ இருக்கமுடியவே முடியாது. அதோடுமல்லாமல், மார்க்கத் தலைவருக்கும் மார்க்க வழிகாட்டியாருக்குங்கூட இது அவமானமும் வசைச் சொல்லுமாகும். இன்று இந்துவும் கிறிஸ்தவனும் பகுத்தறிவைக் கண்டால் பயப்படுகிறார்கள். இஸ்லாம் மார்க்கத்தில்தான் தங்கள் மார்க்கம் பகுத்தறிவுக்கு ஏற்றது என்று பந்தயம் கட்டுகிறார்கள். ஆனால் சமாது வணக்கமும், பஞ்சா வணக்கமும், கொடி வணக்கமும், கூண்டு உற்சவமும், அல்லாசாமி பண்டிகையும் கொண்ட மக்களை ஏராளமாய் வைத்துக்கொண்டு—அவற்றையும் மார்க்கக் கொள்கைகளோடு சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களையும் சேர்த்துவைத்துக்கொண்டு இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கம் என்று எப்படிச் சொல்ல இயலும்? கோபிப்பதில் பயனில்லை. மற்ற மதங்களை விட இஸ்லாம் மதம் மேலானது என்பது எனது அபிப்பிராயம். ஆனால், அதில் இனிச் சிறிதுகூடச் சீர்திருத்தம் வேண்டியதில்லை என்பவர்களுடன் நான் முரண்பட்டவன். ஏனெனில், நான் கண்களில் பார்ப்பதைக் கொண்டுதான் சொல்லுகிறேன்.

இன்று இஸ்லாம் மதச் சடங்குகள் சீர்செய்யவேண்டியவை என்று துணிந்து கூறுவேன். நீங்களும் சீர்திருத்த வழிதேடுங்கள். எக்காலத்திற்கும் ஏற்ற மதமென்றால்—காலத்திற்கு ஏற்றபடி தானாகவே மாறவோ, மாற்றிக்கொள்ளவோ சவுகரியமாயிருக்கும் என்பதில் பயமோ, அவநம்பிக்கையோ கொள்ளாதீர்கள்! இருட்டானால் விளக்கைப் பற்ற வைத்துக்கொள்ளுங்கள், பகலானால் விளக்கை அணைத்துவிடுங்கள் என்றுதான் பகுத்தறிவுள்ள மார்க்கம் சொல்லியிருக்கும். ஆகவே, காலப்போக்குடன் கலந்துகொள்ளப் பயப்படாதீர்கள்.

சகோதரர்களே! களக்காடு ஊரின் கோயில் தேரையும் கோபுரத்தையும் பார்க்கும்படி கூப்பிட்டதினால் சென்றோம். அங்கு பார்த்த ஆபாசங்களைச் சொல்ல வெட்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. காட்டுமிராண்டிகள் காலத்தில்தான் சாமிகளும், கோயில்களும் ஏற்பட்டன என்று சொன்னால் யாராலும் மறுக்கமுடியாதபடி அவைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அதில் சித்திரித்து வைக்கப்பட்டிருக்கும் உருவங்கள் மிகமிக ஆபாச மானவையாய்க் காணப்பட்டன. அவைகளுக்கு என்னதான் தத்துவார்த்தம் சொல்வதானாலும், மனிதப் பெண்ணைக் கழுதை சம்போகம் பண்ணுவதுபோலும் இதுபோன்ற மற்றும் பல உருவங்களைச் சித்திரித்து வைத்திருப்பதை எப்படி ஒப்புக்கொள்வது? கோபுரங்களில் உள்ள பொம்மைகளில் பெண்களைப் படுத்துகின்றபாடும், காம விவகாரங்களை அதில் எடுத்துக்காட்டியிருக்கும் முறையும் அநியாயம்! அநியாயம்! இவைகளை எல்லாம் நெருப்புவைத்துக் கொளுத்தி, இடித்து எறிந்து, இவற்றிற்கு ஆதாரமான சாஸ்திரங்களை எல்லாம் பொசுக்கிச் சமுத்திரத்தில் கரைத்துவிட்டாலொழிய, இதைச் சேர்ந்த மனிதர்கள் மனிதர்களாகக் கருதப்பட முடியவே முடியாது.

சுயமரியாதைக்காரர்கள் புராணக் குப்பைகளைக் கிளறிக் கிளறி வெறும் ஆபாசங்களைப் பேசுகின்றார்கள்—எழுதுகின்றார்கள் என்று பேசுகின்றார்கள்; எங்கள்மீது வெறுப்பும் கொள்ளுகின்றார்கள். ஆனால், இந்தக் கோயில்களுக்கெல்லாம் போய் தேங்காய் பழம் உடைத்து வைத்துக் காசும் கொடுத்து இந்த உருவங்களைப் பார்க்க வருகின்றவர்கள் மனிதர்களா? நாங்கள் எழுதுவதையும் பேசுவதையும் கண்டு வெறுப்புக் கொண்டு என்ன செய்வது? இவ்வளவு பேசியும் எழுதியும் இந் நடவடிக்கைகள் நின்றனவா? அவற்றை நிறுத்த யாராவது பாடுபட்டீர்களா?

காரமடைத் தேரில் இதைவிட அசிங்கமாகப் பார்த்தேன். திருவொற்றியூர், மதுரை ஆகிய ஊர்களில் சொல்லவே தேவையில்லை. ஆனால், இந்த ஊர்க் கோபுரம் எல்லாவற்றையும் மீறிவிட்டது. இதில் சாமிகளாகவும், முனிவர்களாகவும், ரிஷிகளாகவும் காணப்பட்டவை இன்னும் மோசமாய் இருக்கின்றன. இவையெல்லாம் பற்றி அன்னிய மதக்காரர்கள் கேவலம் பண்ணமாட்டார்களா என்கின்ற எண்ணமே இல்லாமல் போய்விட்டது. இதை நிறுத்த வேண்டாமா? இதுவரை யாரும் இவர்களைத் திரும்பிப் பார்த்தார்களா? போதாக்குறைக்குப் பணம் படைத்தவர்கள் இவற்றை 'ரிப்பேர்' செய்கிறார்கள். சிறிதும் ஈவு இரக்கமின்றி ஏழைகள் பணத்தைக் கொள்ளை அடித்து, அவர்களைப் பட்டினி போட்டுவிட்டு இம் மாதிரி மனிதப் புணர்ச்சிகளுக்குப் பொம்மைகள் செய்து சாயம் அடித்துப் பூசனை செய்வது என்பது எவ்வளவு இழிவானதும்—திமிர் பிடித்த தனமுமாகும்! இந்த இலட்சணத்தில் நாங்கள் கோயிலுக்குள் போகாமல் போலீஸ் காவல் போட்டிருக்கின்றார்களாம். நாங்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்குள்ள கோயில்காரர்கள் எல்லாம் இப்படியேதான் செய்கின்றார்கள். ஆகவே, இந்துக்கள் என்பவர்கள் இவற்றிற்கெல்லாம் என்ன பதில் சொல்லுகின்றார்கள்? இந்த இந்து மதத்தை இன்னும் எத்தனை நாளைக்குத் தான் காப்பாற்றப் போகிறீர்கள்? மதம், சாமி, கோயில் என்றால் முட்டாள்தனம், அயோக்கியத்தனம், ஆபாசம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. வருத்தப்பட்டுப் பயனில்லை; வெட்கப்பட வேண்டும். அப்போதுதான் அறிவு, ஒழுக்கம், நாகரிகம் விளங்கும்.

[களக்காட்டில், 23-12-1930-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 1-2-1931]

இந்துமதம் இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கொள்கையில் எவ்வளவு கெடுதியோ அதைவிடப் பலமடங்கான கெடுதிகளை இந்துமதம் பார்ப்பனரல்லாத மக்களுக்குக் காரியத்தில் விளைவிக்கின்றது. அதைவிடப் பன்மடங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் காரியத்தில் விளைவிக்கின்றது. இஸ்லாமானவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இந்து மதத்தால் யாதொரு கெடுதியுமில்லை என்றுகூடச் சொல்லலாம். இஸ்லாமியரையும்

கிறிஸ்தவரையும் இந்துக்கள் வேறாகக் கருதுகின்றார்கள்; தங்கள் சமூகத்திற்கு எதிராய்க் கருதுகின்றார்கள் என்பதைத் தவிர வேறில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பலனாய் அவர்கள் பார்ப்பனரொழிந்த இந்துக்களைவிடச் சற்று அதிகமான நிலையில் இலாபமே அடைந்திருக்கிறார்கள். ஆனால், இந்துமதம் காரணமாகப் பார்ப்பனரல்லாதாரும், தீண்டாதாரும் இழிவாய் நடத்தப்படுவதுடன் சுயமரியாதை இல்லாத முறையிலும், சுதந்திரமில்லாமலும் நடத்தப்படுகிறார்கள். மேலும், இவர்களைப் பார்ப்பனர்கள் அடிமையாக்கிக் கொண்டும் இவர்களது கஷ்டத்தின் பயனை அனுபவித்துக்கொண்டும், இவர்களை (பார்ப்பனரல்லாதாரையும், தீண்டாதாரையும்) தலையெடுக்கச் செய்யாமலும் செய்துவருகிறார்கள். இந்துமதம் என்பதாக ஒன்று இருப்பது இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மற்றொரு விதத்தில் இலாபகரமானதென்றே சொல்லலாம். எப்படியெனில், மேற்கண்ட இரண்டு மதங்களும் இரண்டு சமூக எண்ணிக்கையிலும் பெருக்கமேற்படுவதற்கு இந்து மதமே காரணமாய் இருக்கின்றது. இந்தியாவில் இந்துமதமில்லாமல் புத்தமதம், கிறிஸ்துவ மதம் இருந்திருந்தால் இஸ்லாம் மத சமூக எண்ணிக்கை இவ்வளவு பெருகியிருக்காது. அது போலவே, வேறுமதங்கள் இருந்திருந்தால் கிறிஸ்துவமத சமூக எண்ணிக்கையும் இவ்வளவு பெருகி இருக்காது. ஆகவே, அவ்விஷயத்தில் இந்துமதம் இருப்பது முஸ்லிம்–கிறிஸ்துவ மதங்களுக்கு இலாபமேயாகும். ஆகையால், இந்து மதத்தை ஒழிக்க வேண்டுமென்பது இந்திய பார்ப்பனரல்லாத மக்களுக்கும் அவர்களில் தீண்டப்படாதார் என்கின்ற மக்களுக்குந் தான் மிகவும் அவசியமானது என்று சொல்லுவோம். இதோடு ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்குங்கூட சமத்துவமும் பொது உடைமைத் தத்துவமும் ஏற்பட வேண்டுமானால், முதலில் இந்துமதம் ஒழியவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

['குடிஅரசு'—கட்டுரை—7-6-1931]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொதுவாக உலகத்தில் அனேகமான மக்களுக்கு 'மதம்' பிரதானம் என்று கற்பிக்கப் பட்டிருக்கின்றதே தவிர, மதம் என்றால் என்ன, அது எதற்கு என்கின்ற அறிவே—மத பக்தர்கள், மதத்திற்காக உயிரையும் கொடுக்க இருக்கின்றவர்கள் என்பவர்களிலுங்கூட ஆயிரத்தில் ஒருவருக்கும் தெரியாதென்றே நான் தைரியமாகச் சொல்லுவேன். என்னைப் பற்றியே மதஞானமில்லாத மக்கள் பலவிதமாகப் பேசுவதையும் எழுதுவதையும் கவனித்துத் தான் வருகிறேன்.

மதத்தைப்பற்றி நான் பேச ஆரம்பித்த காலத்திலேயே, நான் நன்றாய் விளக்கிவிட்டே பேசுகின்றேனே யொழிய, பேசிவிட்ட பிறகு தத்துவார்த்தம் சொல்ல வருவதில்லை.

ஒரு பொதுச் சங்கமோ, ஒரு வாசகசாலையோ, ஒரு வியாபாரச் சங்கமோ என்பதாக ஒரு ஸ்தாபனமிருந்தால்—அந்த ஸ்தாபனத்திற்குச் சில விதிகள் இருக்கவேண்டியது அவசியமேயாகும். அவ் விதி அந்த ஸ்தாபன மக்கள் நன்மைக்கும், ஸ்தாபனம் சரிவர நடந்தேறுவதற்கு அனுகூலமானதாகவும், அந்த ஸ்தாபனக்காரர்களால் ஏற்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பதுபோலவே, கூடிவாழ நினைக்கும் மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கும் ஏதாவது விதிகள் வேண்டும் என்பதில் குற்றமில்லை. அவ் விதிகளுக்குப் பெயர் கொள்கை என்றாலும், திட்டம் என்றாலும், மதமென்றாலும், மார்க்கம் என்றாலும் ஒன்றேதான்.

நமது நாட்டில் பல பாஷைகள் வந்து கலந்துவிட்டதால் கொள்கைகளுக்கு மதமென்றும், சமயமென்றும், மார்க்கமென்றும் சொல்லுவதாகப் பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால், அந்த அளவில் நான் எந்த மதத்துடனும் தகராறுக்கு வரக்கூடியவனல்லன். இதில் ஒன்றும் ஒளிமறைவோ, தத்துவார்த்தமோ இல்லை; வெளிப்படையாகவே சொல்லுகிறேன்.

ஆனால், மதம் மனிதனுடைய ஆதிமார்த்தத்திற்கு ஏற்பட்டது; அது கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது; கடவுளைக் காண்பதற்கும், அடைவதற்கும் ஒரு சாதனமாயிருப்பது; அதை உண்டாக்கினது கடவுள், அல்லது கடவுள் அவதாரம், அல்லது கடவுள் மகன், அல்லது மனிதத் தன்மைக்கு மேற்பட்ட ஒரு தெய்வீகத் தன்மை; அதில் என்ன சொல்லியிருந்தாலும்—அது மனிதனுக்குப் புரியாவிட்டாலும், அது பயன்படாவிட்டாலும், மனிதனால் பின்பற்ற முடியாவிட்டாலும் அதை மனிதன் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்; அதன்பேரால் ஏற்பட்ட சாஸ்திரங்களையும் நம்பித்தானாக வேண்டும்; தனக்கு விளங்காததை எல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும்; அதில் ஒரு விஷயத்தைத்கூட நழுவவிடக்கூடாது; மாற்றவும் கூடாது; புதியதையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பன போன்ற நீதியையும், நிபந்தனைகளையும், கட்டளைகளையும் கொண்டதுதான் 'மதம்' என்று சொல்லப்படுமானால்—நான் என்னைப் பொறுத்தவரை அதைச் சிறிதும் ஒப்புக் கொள்ளாதவன் என்பதோடு, அப்படிப்பட்ட மதம், மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் சுதந்திரத்திற்கும் முற்போக்கிற்கும் சுயமரியாதைக்கும் விரோதமானது என்று சொல்லுவதோடு கூட, மனித சமூக நன்மையை உத்தேசித்து அது அழிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறுவேன்.

அன்றியும், நான் எந்த மதம் என்பதைப்பற்றிப் பேசும்போதும் இந்த விஷயங்களுக்கு மாறாக நான் எப்போதும் பேசியதே கிடையாது. நான் பவுத்த, இந்து, இஸ்லாம் மதத்தைப் பற்றி எல்லாம் பேசும்போது இந்த முடிவின் பேரிலேயே பேசுகிறேன். இந்த உண்மையின் பேரில்தான் நான் எந்த மதத் தலைவர்களைப்பற்றியும் பேசுகிறேன்.

திரு. முகமது நபியைப்பற்றி யார் எப்படி நினைத்துக்கொண்டாலும், நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடி கருத்தரித்துப் பிறந்தவர் என்றும் கருதித்தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படுபவைகளே அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன். புத்தரும் அப்படித்தான்; ஆனால், மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத் தலைவரை ஒரு மனிதர் என்றாலே கோபித்துக் கொள்கிறார்கள்.

கழுதை, நாய், குதிரை இவற்றினுடைய வயிற்றிலிருந்து பிறந்தார் என்றாலும் ஒப்புக்கொள்கிறார்கள். மனிதனுக்குப் பிறந்தார் என்றால் அதில் கவுரவம் இல்லை என்று கருதுவார்கள். மனிதத் தன்மைக்கும் மனித அறிவிற்கும் மேற்பட்டதாக, மக்களுக்குப் புரியாத ஏதாவது ஒன்றைச் சொல்லாமல் ஒரு மதத்தை நிர்ணயிக்க அனேக மக்கள் சம்மதிப்பதே இல்லை.

நான் இந்து மதத்தைப் பற்றியோ, இஸ்லாம் மதத்தைப் பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சிசெய்து பேசுவதாக யாரும் கருதிவிடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரீட்சை மாணவனுக்குக் கொடுத்துவிடுங்கள். அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலை இல்லை. ஆனால், நான் பேசுவது என்பது, இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பான்மை மக்களிடை இருந்துவரும் பிரத்தியட்சக் கொள்கைகள் சம்பந்தமான காரியங்களையும், அதனால் அவரவர்கள் பிரத்தியட்சத்தில் அடைந்துவரும் பலன்களையும் பற்றித்தான் பேசுகிறேன்.

அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள்? அதனால் சமூகம் என்ன பயனடைந்திருக்கிறது? என்பன போன்றவைகள்தாம் மதத்தின் மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்படிப் பார்ப்போமானால் அனேக விஷயங்களில் இந்து மதத்தைவிட இஸ்லாம் மதமே மேன்மையுடையது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இஸ்லாம் மக்களிடத்தில் தங்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, அன்பு முதலிய குணங்கள் இருக்கின்றன. வீரம் இருக்கின்றது. வீரம் என்றால் இலட்சியத்திற்கு உயிரைவிடத் துணிவது என்பதுதான்.

இஸ்லாம் மதத்தில் உயர்வு தாழ்வு இல்லை. அவர்களுக்குள் தீண்டாதவன் இல்லை. அவர்களது தெருவில் நடக்கக்கூடாதவன், குளத்தில் இறங்கக்கூடாதவன், கோவிலுக்குள் புகக்கூடாத மனிதன் இல்லை. இதை யோக்கியமான இந்துக்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இஸ்லாம் மார்க்கக் கடவுளுக்கு 'ரூபம்' கற்பித்து வணங்குவதில்லை. அதற்குப் பெண்டுபிள்ளை, வைப்பாட்டி கற்பிப்பதுமில்லை அதற்குப் பூசை, நைவேத்தியம், உற்சவம், நகை, துணிமணி முதலியவற்றிற்குக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்வதில்லை. மற்றும், அவர்களது பெண்களுக்குச் சொத்துரிமை, கலியாண ரத்து, விதவை மணம் ஆகியவைகளும் உண்டு. அவர்களுக்குள்ள அன்பையும் வீரத்தையும் பார்த்து நாம் அவர்களை முரடர்கள் என்கிறோம். அதுபோலவே, இந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தையும், பயங்காளித்தனத்தையும் நாம் பார்த்து அவற்றைச் சாதுத் தன்மை என்கிறோம். ஒரு கிராமத்தில் ஒரு இஸ்லாமானவனை இந்து அடித்தால் 100 இஸ்லாமானவர்கள் வந்து விழுந்துவிடுகின்றார்கள். இதைத்தான் நாம் முரட்டுத்தனம் என்கிறோம். ஒரு இந்துவை ஒரு இஸ்லாமானவன் அடித்தால் மற்ற இந்துக்கள், 'அவன் யாரோ அடிபடுகிறான்; நமக்கென்ன கவலை?' என்று சொல்லிச் சும்மா இருந்துவிடுகிறார்கள். இல்லாவிட்டால் அடிக்குப் பயந்துவிடுகிறார்கள். இதைத்தான் சாதுத் தன்மை என்று பெருமை பேசிக்கொள்கிறோம். அன்பும் சகோதரத் தன்மையும் 'இந்து'விடம் எங்கிருக்கிறது? ஆடு, கோழி தின்னாதே என்று சொல்லுவதில் மாத்திரம் இருக்கிறது. மக்களை இழிவாய்க் கருதுவது, பிறவியின் பேரால் தாழ்த்தி இம்சிப்பது ஆகிய காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள்—அன்பு, ஜீவகாருண்யம் என்று பேசுகிறார்கள். அன்பின் உண்மையை அறியவே இல்லை. இஸ்லாம் கொள்கையில் வேறு எங்கு, எப்படி இருந்தாலும் சமூக வாழ்விலும், 'ஆண்டவன் முன்னிலை' என்பதிலும் மனிதனை மனிதனாய்க் கருதப்படுகின்றது.

இந்துக் கொள்கையில் வேறு எங்கு ஒற்றுமையாய் இருந்தாலும்—சமூக வாழ்விலும் 'கடவுள்' முன்னிலை என்பதிலும் மனிதன் மிருகத்தைவிடக் கேவலமாய் நடத்தப்படுகின்றான். இதை நேரில் காண்கின்றோம். இதைத்தான் அன்பு மதம், சமத்துவ மதம் என்று இந்துக்கள் தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள்.

மதத் தத்துவ நூலை-வேதம் என்பதை இஸ்லாம் மத செருப்புத் தைக்கும் சக்கிலியும், மலம் அள்ளும் தோட்டியும் படித்தாக வேண்டும்; பார்த்தாக வேண்டும்; கேட்டாக வேண்டும். இந்துமத வேதம் என்பதை ஒரே ஒரு சிறு கூட்டம் தவிர—பார்ப்பனன் தவிர—மற்ற யாவரும் அவன் பிரபுவானாலும், ஏழையானாலும், யோக்கியனானாலும், அயோக்கியனானாலும் சரி ஒருவனுமே படிக்கவும் பார்க்கவும் கேட்கவும் கூடாது. இதைத்தான் சமத்துவநோக்கம் கொண்ட மதம் என்று இந்துக்கள் இன்னமும் சொல்லிவருகின்றார்கள்.

இஸ்லாம் கொள்கை மக்களை ஒன்று சேர்க்கிறது. இந்தியாவில் கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு கோடியைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்கள்—இன்று 8 கோடி மக்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இன்று யாவரையும், எப்படிப்பட்ட இழிவானவர் என்று இந்து மார்க்கத்தாரால் கருதப்பட்டவர்களையும் தனக்குள் சேர்த்துக்கொள்ளக் கையை நீட்டுகின்றது. இந்துக்களின் கொள்கையோ எப்படிப்பட்ட மேலானவன் என்று மதிக்கப்பட்டவனையும் உள்ளேவிட மறுத்து வாசற்படியில் காவல் காக்கின்றது; தன்னவனையும் வெளியில் பிடித்துத் தள்ளுகின்றது.

கள் குடியைப்பற்றி வாய்தீ தப்பட்டை அடிக்காத இஸ்லாம், 100-க்கு 99 பேர்களைக் குடியிலிருந்து விலக்கி இருக்கின்றது. குடிக்கக் கூடாதென்று சதா வாயில் தப்பட்டை அடித்துக்கொண்டு, ஓட்டு வேண்டியபோது கள்ளுக் கடையில் நின்று மறியல் செய்யும் இந்துக் கொள்கையானது—இந்துக்களில் 100-க்கு 51 பேர்களுக்கு மேல் குடிகாரர்களாக ஆக்கி யிருப்பதோடு, கடவுளுக்கும் குடிவகைகள் வைத்து—கோயில்களில் பெரிய பெரிய சாதியார் என்பவர்களால் நைவேத்தியம் செய்து, பிரசாதமாய்ச் சாப்பிடப்படுகின்றது.

கொள்கையை இஸ்லாம் வலியுறுத்தி நின்ற காரணத்தாலேயே இஸ்லாமியர்கள் அதிகமாயுள்ள நாடுகள் இஸ்லாம் அரசர்களால் ஆளப்படுகின்றன. கொள்கையை இந்து வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இந்துக்கள் அதிகமாயுள்ள நாட்டை 'அன்னியர்கள்' ஆளுகின்றார்கள்!

இந்தப்படியாக, வெளிப்படையாய்த் தெரியும் கொள்கைகளாலேயே இந்துக் கொள்கையைவிட இஸ்லாம் கொள்கைகள் எவ்வளவோ மேன்மையான பலன் கொடுத் திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப்படி நான் சொல்லுவதற்காகக் கோபிக்கும் சகோதரர்கள் முதலில் நான் சொல்லுவது உண்மையா, அல்லது அடியோடு பொய்யா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஆதித் திராவிடர்களை நான், 'இஸ்லாம் மதத்தில் சேருங்கள்' என்று சொன்ன தற்காக அனேகம் பேர் என்மீது கோபித்துக்கொண்டார்கள். அவர்களைப்பற்றி நான் கோபித்துக்கொள்ளவில்லை. அவர்களுக்குச் சொந்த அறிவும் இல்லை; சொல்வதைக் கிரகிக்கச் சக்தியும் இல்லை. சிலருக்குத் தங்கள் மேன்மை போய்விடுமே—தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம். ஏனெனில், மோட்சம் அடைவதற்காக என்று நான் ஆதித் திராவிடர்களை இஸ்லாம் கொள்கைகளைத் தழுவுங்கள் என்று சொல்லவில்லை; அல்லது 'ஆத்மார்த்தத்திற்கோ' 'கடவுளை அடைவதற்கோ' நான் அப்படிச் சொல்லவில்லை. ஆதித் திராவிடர்களின் தீண்டாமையைப் போக்குவதற்குச் சட்டம் செய்வது, சத்தியாக்கிரகம் செய்வதுபோலவே இஸ்லாம் கொள்கையைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொன்னேன்; இனியும் சொல்கின்றேன்.

சட்டம் செய்வது கஷ்டம்; செய்தாலும் நடைமுறையில் வருவது கஷ்டம். சத்தியாக்கிரகம் செய்வதும் கஷ்டம்; செய்தாலும் வெற்றிபெறுவது சந்தேகம். இவற்றால் துன்பமும் தோல்வியும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால், ஆதித் திராவிடர்களுக்கு—இஸ்லாம் கொள்கையை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா? அல்லது, அன்னியருக்கு ஏதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆத்திகனாய் இருந்தால் என்ன? நாத்திகனாய் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய் இஸ்லாம் ஆனால் என்ன? யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் இல்லாமல்—வேண்டுமானால் எவ்வித மனமாறுதல் கூட இல்லாமல், தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக்கொள்ள ஆசையும் அவசரமும்பட்ட ஒரு மனிதன் மாலை 5 மணிக்கு இஸ்லாம் மதக் கொள்கையை ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்லி, 5-30 மணிக்கு தீண்டாதவன் என்கின்ற இழிவிலிருந்து மீண்டு, தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் என்ன மற்றவர்கள் ஆட்சேபிக்க வேண்டும்? கேவலம் வயிற்றுச் சோற்றுக் காக 100-க்கு 90 மக்கள் என்னென்னமோ—அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய்கின்றார்கள். அப்படி இருக்க, இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது? உலகில் மதங்கள் ஒழிக்கப்படும்போது இஸ்லாம் மதமும் ஒழியும்.

ஏன் கிறிஸ்து மதத்தைத் தழுவக் கூடாது? ஆரிய சமாஜத்தைத் தழுவக் கூடாது? கிறிஸ்து மதக் கொள்கைகள் புத்தகத்தில் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. நேரிடையில் பறை கிறிஸ்தவன், பார்ப்பாரக் கிறிஸ்தவன், வேளாளக்

கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், கைக்கோளக் கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன் என்ப தாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ளனர்.

இஸ்லாம் மார்க்கத்தில் இவ்வித வேறுபாடுகள் இருக்கின்றனவா? கிறிஸ்தவ சகோ தரர்கள் கோபிக்கக்கூடாது; வேண்டுமானால் வெட்கப்படுங்கள் என்று வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரிய சமாஜம் என்பதும் ஒரு வேஷந்தான்.

உதாரணமாக, வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத் தீயர்களையும் கிறிஸ்துவப் புலையர்களையும் தெருவில் நடக்கவிடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒரு நாள் பாலக்காட்டில் 'செருமான்' என்கின்ற இழிவுபடுத்தப்பட்ட சாதியாயிருந்த தீண்டப்படாதவன் ஒருவன், இஸ்லாம் ஆகி, தடுக்கப்பட்ட தெருவழியாகப் போனான். அப்போது அவனை சவுளிக்கடைப் பார்ப்பனரும், வெற்றிலைக்கடை நாயரும் தெருவுக்கு வந்து நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இருந்த மாப்பிள்ளை (இஸ்லாம்) 'எந்தடா! பன்னிக் கூத்தச்சி மகனே, அவனே நோக்குன்னு?' என்று கேட்டான். அதாவது 'என்னடா பன்றித் தேவடியாள் மகனே, அவனைப் பார்க்கிறாய்?' என்று கேட்டான். செருமானாயிருந்த முஸ்லிம் சிரித்துக் கொண்டே போனான். பார்ப்பனரும், நாயரும் தலை குனிந்து கொண்டார்கள். இது உண்மையில் நடந்த சம்பவம்.

ஆகவே, இஸ்லாம் மார்க்கம் செய்கின்ற நன்மை இந்து மார்க்கம் செய்வதைவிட அதிகமா, இல்லையா?

ஆனால், நான் இஸ்லாம் மதக்கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்பதாகவோ யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மதத்தில் எதை எதைக் குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கம், பாமரத் தன்மை என் கின்றோமோ அவை போன்ற சில நடவடிக்கைகள் இஸ்லாம் மதத்திலும் சிலர் செய் கிறார்கள். சமாதி வணக்கம், பூசை, நைவேத்தியம் முதலியவைகள் இஸ்லாம் சமூகத் திலும் இருக்கின்றன. மாரியம்மன் கொண்டாட்டம்போல், இஸ்லாம் சமூகத்திலும் 'அல்லாசாமி பண்டிகை' நடக்கின்றது. மற்றும் நாகூர் முதலிய 'ஸ்தல' விசேஷங்களும், சந்தனக்கூடு, தீ மிதி முதலிய உற்சவங்களும் நடைபெறுகின்றன. இவைகள் குர் ஆனில் இருக்கின்றதா, இல்லையா என்பது கேள்வியல்ல. ஆனால், இவைகள் ஒழிக்கப்பட்ட பின்புதான் எந்தச் சமூகமும் தங்களிடம் மூடநம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்ள முடியும். உலகமெல்லாம் ஒரு கொள்கையின்கீழ் வரவேண்டுமானால் இஸ்லாம் கொள்கையும் இணங்கவேண்டும். உலகம் சீர்திருத்தத்துக்கு அடிமைப்பட்டது என்பதை மறவாதீர்கள்!

மனிதன் காலதேச வர்த்தமானத்திற்குக் கட்டுப்பட்டவனாவான். மனிதனது மார்க்கமோ, கொள்கையோகூட அதில் பட்டதேயாகும். ஏனென்றால், 'மார்க்கம் என்பது மனிதன் வாழ்க்கைக்கு வழிகாட்டி' என்பதைக் கொண்டு சொல்கிறேன். வழி என்பது அடிக்கடி மாறக்கூடியதேயாகும். கால்நடை வழி, ஆடு, கழுதை, குதிரைமூலம் செல்லும் வழி, கட்டைவண்டி வழி, மோட்டார் வழி, இரயில் வழி, ஓடம், கப்பல் வழி, ஆகாய விமான வழி ஆகிய ஒவ்வொரு காலத்திற்குத் தகுந்ததுபோல் வழி திருத்தப்படவேண்டும். அது போலவே மனித வாழ்க்கை வழியும் காலத்தின் கோலமாய்—தேசத்தின் தன்மையாய்—சந்தர்ப்பத்தின் அவசியமாய் மாறியே ஆகவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். மாறுதலுக்கு இடம் கொடுக்கும் என்கின்ற மார்க்கமே சரியான மார்க்கம்.

உதாரணமாக, இஸ்லாம் மார்க்கத்தை எடுத்துக் கொண்டால் துருக்கி இஸ்லாம் சமூகத்தின் நடவடிக்கையும், ஆப்கானிஸ்தான் இஸ்லாம் நடவடிக்கையும், இந்திய இஸ்லாம் நடவடிக்கையும் ஒன்று என்று சொல்ல முடியாது. இந்தியாவில் ஈரோட்டுக்கும், தஞ்சைக் கும், சாத்தான்குளத்திற்குமே அனேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவர்கள்

அனைவரும் சேரும்போது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. நான் சொல்லும் மாற்றமெல்லாம் நடை, உடை, பாவனைகளையேயாகும். மன மாற்றத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. அது அவரவர்கள் சொந்தச்சொத்து. மற்றவர்களுக்குத் துன்பமோ, தொல்லையோ இல்லாத வழியில், எவ்வித அபிப்பிராயத்தையும் கொள்ள யாருக்கும் உரிமை உண்டு.

[சாத்தான் குளத்தில், 28-7-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 2-8-1931]

சகோதரிகளே! சகோதரர்களே!

இஸ்லாம் மார்க்கம் மக்களுக்கு உபதேசிப்பதிலும் வேதவாக்கியங்களிலும் மேன்மையானதாய் இருக்கின்றது—என்கின்ற திருப்தியானது மனித சமுதாயத்திற்கு எல்லாப் பயன்களையும் அளித்துவிடாது. ஆனால், அதன் தத்துவத்துக்கு ஒப்பக் காரியத்தில் அதன் பயனை உலகத்தில் மேன்மையுறச்செய்து மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக்கி உலக மக்களை ஒன்றுபடுத்தவும், அனைவரையும் சகோதரத் தன்மையுடன் இருக்கவும்—பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரத்துடன் வாழவும் செய்யவேண்டும். எந்தக் கொள்கைக்காரனும் புத்தகத்தில் இருப்பதைக்கொண்டு—தங்கள் முன்னோர்கள், பெரியார்கள் சொன்னார்கள் என்பதைக் கொண்டு இனி உலகத்தை ஏய்க்க முடியாது. உலகம் பகுத்தறிவுக்கு அடிமையாகி எதையும் நேரிடை அனுபவத்தைக் கொண்டு பரீட்சித்துச் சரிபார்க்க வந்துவிட்டது. செட்டி முடுக்கு செல்லாது; சரக்கு முடுக்காய் இருந்தால்தான் இனிச் செலாவணியாகும். 'என் சரக்கைப் பரீட்சிக்கலாமா?' என்கின்ற அடக்குமுறை இனிப் பலிக்காது. 'அவர் ஒஸ்த்தின்னு சொன்னார்'; 'ஆண்டவன் சொன்னான்' என்பவையெல்லாம் அனுபவத்திற்கு நிற்காவிட்டால், காரியத்தில் நடந்துகாட்டாவிட்டால் இனி மதிப்புப் பெற முடியாது. ஆதலால், எந்தச் சரக்கின் யோக்கியதையையும் கையில் வாங்கிப் பார்த்துத்தான் மதிக்க வேண்டியதாகும். அந்தமுறையில் இஸ்லாம் கொள்கை என்பதும், முஸ்லிம் மக்களின் நடத்தையைக் கொண்டும் அவர்களது பிரத்தியட்ச பயனைக் கொண்டுந்தான் மதிக்கப்பட முடியும்.

இந்துக்கள் தேர் இழுப்பதைப் பார்த்து முஸ்லிம்கள் பரிகாசம் செய்துவிட்டு, முஸ்லிம்கள் கூண்டுகட்டிச் சுமந்து கொண்டு கொம்பு, தப்பட்டை, மேளம், பாண்டு, வாண வேடிக்கை செய்துகொண்டு தெருவில் போய்க் கொண்டிருந்தால்—உலகம் திருப்பிச் சிரிக்காதா? இந்துக்கள் காசிக்கும், இராமேஸ்வரத்திற்கும் போய்ப் பணம் செலவழித்துவிட்டு, 'பாவம் தொலைந்து விட்டது' என்று திரும்பி வருவதைப் பார்த்து முஸ்லிம்கள் சிரித்துவிட்டு, முஸ்லிம்கள் நாகூருக்கும், மக்காவுக்கும், முத்துப்பேட்டைக்கும் போய்விட்டு வந்து தங்கள் பாவம் எல்லாம் தொலைந்து விட்டது என்றால் மற்றவர்கள் சிரிக்கமாட்டார்களா? மக்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுவதென்றால்—கொள்கைகளைப் பகுத்தறிவுக்கு இணங்கி இருக்கும்படி ஜாக்கிரதையாய் பார்த்துப் பயன்படுத்த வேண்டும். 'தீர்க்க தரிசிகள் பகுத்தறிவுக்கு விரோதமாய்ச் சொல்லி இருக்கமாட்டார்கள்' என்று கருதி அவற்றைத் தன் இஷ்டப்படி அர்த்தம் செய்துகொண்டு, பிடிவாதமாய் இருப்பது மூட நம்பிக்கையைவிட மோசமானதாகும். அம் மாதிரி மூடநம்பிக்கைகளின் பயனாய்த் தீர்க்க தரிசிகள் என்பவர்கள் சொன்னதன் கருத்தையும், உண்மையையும் அறிந்துகொள்ள முடியாமலும் போகும்.

நமக்குப் பகுத்தறிவையும், நடு நிலைமையையும் எதிலும் பயன்படுத்த உறுதியும் துணிவும் இருந்தால்தான் உண்மையைக் காணமுடியும். நாம் அறிவை உபயோகப் படுத்தாமல் நபிகள் வாக்கியத்திற்குப் புரோகிதர்கள் சொல்லுகின்றபடி தப்பர்த்தம் செய்துகொண்டு 'இதுதான் நபிகள் சொன்னது' என்று சொன்னால் நபிகளுக்கு மரியாதை செய்ததாகுமா? மஞ்சள் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் எல்லாம் மஞ்சளாக இருக்கும்; சிவப்புக் கண்ணாடிக்குச் சிவப்பாகவும், பச்சைக் கண்ணாடிக்குப் பச்சையாகவுந்

தான் தெரியும். நல்ல, சுத்தமான, எந் நிறமும் இல்லாத கண்ணாடி கொண்டு பார்க்க வேண்டும். அது போலவே, பகுத்தறிவுடன் சுத்தமான நடு நிலைமை மனத்துடன் எதையும் பார்க்கவேண்டும். கண்ட உண்மையைத் தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிக்கில்லாமல், தங்களுக்குத் தெரிந்த தப்பிதங்களை மூடி வைத்திருந்தால் கடைசியாக 'ரிப்பேர்' செய்யமுடியாத அளவு மோசமானதாகி விடும். நீங்கள் பார்க்கின்ற கண்ணும், நீங்கள் செய்கின்ற அர்த்தமும், நீங்கள் அறிந்த மாதிரியும், யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்திப் பாராமல், எல்லாம் சரியானதாகத்தான் இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள். உங்களைப் போன்ற மற்றவர்கள் எப்படி நினைத்தார்கள், நினைக்கின்றார்கள் என்று பாருங்கள்.

நபி அவர்கள் உபதேசங்களைத் துருக்கியர் எப்படி மதிக்கின்றார்கள்? எப்படி அர்த்தம் செய்கின்றார்கள்? அவர்கள் என்ன பலன் அடைகின்றார்கள்? என்பவை போல உலகத்தில் முஸ்லிம்களின் நடப்பு முழுவதையும், அமுலையும், பலனையும் நன்றாய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். உங்கள் 'எதிரி' மதத்தைப் பரிசோதிப்பதுபோல், எதிரி ஆதாரத்தை எந்தெந்த வழியில் பரிசோதித்து நியாயம் அநியாயம் சொல்லுவோமோ அந்த நோக்கத்துடன்—உங்கள் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். கண்ட உண்மையை வீரத்துடன் வெளியிட்டு, குற்றமிருப்பின் திருத்த வேண்டும். மனிதன் முடிவு பெற்ற முற்போக்கானவன் என்று யாரும் கருதிவிடக் கூடாது. உலகமும் முழு முற்போக்கை அடைந்துவிட்டதாகக் கருதிவிடாதீர்கள். திருத்தம் அவசிய மானால் திருத்தியாக வேண்டும். திருத்தம் சரியென்று பட்ட வழியில் மனம் திரும்பப் பயமோ, வெட்கமோ அடையக் கூடாது.

நபி அவர்கள் தோன்றிய காலத்தில் அராபிய தேசம் எப்படி இருந்ததென்று மவுல்வி சாயபு அவர்கள் சொன்னார்களோ அப்படியேதான் இன்னமும் இந்தியாவில் இந்துக் கொள்கைகள் இருந்துவருகின்றன. அரேபியர்களிடத்தில் பெண் குழந்தை பிறந் தால் துக்கப்பட்டுக் கொல்லுகின்ற வழக்கம் இருந்ததாக மவுல்வி சாயபு அவர்கள் சொன் னார்கள். இந்துக்களிடத்திலும் பெண் குழந்தை பிறந்தால் துக்கப்படும் வழக்கம் இன்னும் இருக்கின்றது. சமீபகாலம்வரை பெண்களை—பெரிய பெரிய பெண்களை, புருஷன் இறந்து போனால் பக்கத்தில் உயிருடன் வைத்து நெருப்புக்கொளுத்தும் வழக்கம் இருந்துவந்தது. இன்றும் பெண்களை அதைவிடக் கேவலமாய் விதவை என்று சொல்லி—சகுனத் தடை யாகப் பாவித்துக் கொடுமைப்படுத்தும் முறை இருந்துதான் வருகின்றது. அரேபியர் பல கடவுளை வணங்கினதாகச் சொன்னார்கள். அதுபோலவே, இன்றும் இந்துக்கள் கோடிக் கணக்கான கடவுள்களை—உருவத்துடன் மாத்திரமல்லாமல் பெண்டு, பிள்ளை, வைப் பாட்டி, ஆடு, மாடு, குதிரை, யானை, எலி, பெருச்சாளி, மயில், கருடன், பாம்பு ஆகிய உருவங்களுடன் வணங்குகிறார்கள். இவையெல்லாம் மேல்சாதி-கீழ்சாதி அனைவரிடமும் உள்ளன. ஆதலால், முகமது நபி தோன்றுவதற்கு முன் அரேபியா பாலைவனம் எப்படிப் பட்ட காட்டுமிராண்டித்தனத்தில் இருந்ததோ, அதுபோலவேதான் இன்றையவரையில் இந்தியாவின் இந்து சமூகம் இருந்துவருகிறது. இந்த இலட்சணத்தில் இதை எடுத்துச் சொன்னால் இந்துக்களுக்கு வரும் கோபத்திற்கு அளவே இல்லை. இந்த மாதிரியான மத சம்பந்தமான முக்கிய நாள் என்பதற்கு உங்களைப்போல் இந்துக்கள் என்னைக் கூப்பிட வும் மாட்டார்கள்; ஏதாவது சொன்னால் பொறுக்கவும் மாட்டார்கள்; என்னை வைவதையே மதப் பிரச்சாரமாய்ச் செய்கிறார்கள்.

ஆகவே, மக்களிலேயே பிறவியில் வித்தியாசமில்லை என்று சொல்லும் கொள்கையில் இடத்திற்கு இடம் வித்தியாசம் கற்பிக்கப்பட்டு இருக்காது. ஆனால், இந்துக் கொள்கைகள் என்பவற்றில் ஒரு மனிதன் எவ்வளவு அயோக்கியனாக இருந்தாலும், கொலை செய்தாலும், திருடினாலும், நம்பிக்கைத் துரோகம், வஞ்சகம் முதலிய காரியம் செய்தாலும் ஒரு ஊரை நினைத்தால், ஒரு ஊருக்குப் போனால், ஒரு ஊரிலுள்ள குளத்துத் தண்ணீரைத் தலையில்

தெளித்துக்கொண்டால் பாபம் பரிகாரமாகிவிடும், மோட்சமடைந்துவிடுவான் என்று எவ்வளவோ அடியோடு பொய்ப் பெருமைகளைக் கற்பித்து—மூடநம்பிக்கை உண்டாக்கி—அங்குள்ள சோம்பேறிகள் பிழைக்க ஸ்தல யாத்திரை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஸ்தல யாத்திரைப் புரட்டுகள் எல்லாம் பகுத்தறிவுக்கு விரோதமானவை, மூடநம்பிக்கையில்பட்டவை என்று சொல்லும்போது, மற்றவர்கள் யாராவது அதுபோலச் செய்தாலும் அந்தத் தலைப்பின்கீழ் வருமல்லவா?

[ஈரோட்டில், 2-8-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 9-8-1931]

தலைவரவர்களே! தோழர்களே!

மதம் என்பது மனிதனின் கூட்டு வாழ்க்கைக்கும், அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் ஏற்ற விதிகளைக் கொண்டதேயாகும் என்று சொல்லப்படுமானால், அம் மாதிரி மதங்களைப் பற்றிச் சுயமரியாதை இயக்கம் அதிகக் கவலைப்படுவது கிடையாது. அதற்கு இயக்கம் அவசியமானால் உதவியும் செய்யும். மற்றும், மனிதனின் ஆத்மா என்பது கடவுள் என்பதை அடைவதற்காக மதம் ஏற்பட்டது என்றால் அதைப்பற்றிச் சுயமரியாதை இயக்கம் கவலைப்படுவதில்லை. அப்படிப்பட்ட அபிப்பிராயக்காரனும், அவனுடைய மதமும் இப்போது எப்படியோ போகட்டும் என்று விட்டுவிடுவோம். ஏனெனில், அது தனிப்பட்ட மனிதனைப்பற்றிய காரியம். அதைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால், மனித சமூகத்தின் அறிவைப் பாழ்படுத்தவும், தன்மான உணர்ச்சி அறவே இல்லாமல் செய்யவும், மக்களைப் பிரித்துவைத்து உயர்வு தாழ்வு கற்பித்து, மனித சமூக ஒற்றுமையைக் கெடுத்து, பொது முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் தடுக்கும்படியான மதம் எதுவானாலும் அதை ஒழிக்கச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டுத்தான் வந்திருக்கிறது. இன்று அனுபவத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான—பல மதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றுள் அன்னிய மதம் என்பதைப்பற்றி நாம் இப்பொழுது பேச வேண்டாம். 'நம்முடைய மதம்' என்று இந்துக்கள் என்பவர்களால் சொல்லப்படுகிற 'இந்து மதம்' என்பதையே எடுத்துக்கொள்வோம்.

இந்தியர்களாகிய நாம் இவ்வளவு பிரிவினராய் இருப்பதற்கு இந்த இந்து மதமில்லாமல் வேறு எது காரணம்? பொதுவாக இந்துக்கள் இத்தனை சாதிகளாக—அவற்றிலும் உயர்வு தாழ்வாக—பார்ப்பான், பறையன் என்பதாகப் பிரிவுபடுத்தப் பட்டிருப்பதற்கு இந்துமதமல்லாமல் வேறு என்ன காரணம்? இந்த 20-வது நூற்றாண்டில் நேற்றுச் சென்னையில் மகாமேதாவிகளான பி. ஏ., பி. எல்., சாஸ்திரிகள், மகாபண்டித சாஸ்திரிகள் ஒன்றுகூடிக்கொண்டு, 'கீழ்ச் சாதியானை மேல்சாதியான் தொடுவது என்பது செத்தால்தான் போகுமேயொழிய இந்த ஜென்மத்தில் சாதிபேதம் போக்கடிக்கப்பட முடியாது' என்று பேசியிருக்கிறார்கள். இதற்கு ஆதாரம் இந்துமத சாஸ்திரமும் வேதமுந்தான் என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் இம் மாதிரி மதம், சாஸ்திரம், வேதம் என்பவைகள் ஒழிக்கப்படாமல் தீண்டாமையும், சாதிபேதமும் போக்கடிக்கப்படமுடியுமா? இதுவரையும்—இந்துமதம் விட்டு வேறு மதம் மாறாத—முக்கியமாக முஸ்லிம் ஆகாத எந்தப் பார்ப்பனரல்லாதவருக்காவது தங்களது சமூகத்தில் தீண்டாமை போயிருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். மற்றும், பார்ப்பனருக்குள்ள சவுகரியமும் சுதந்திரமும் சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மற்ற வகுப்பாருக்கு இருந்து வருகின்றனவா? இப்படிப்பட்ட மதம் ஒழிக்கப்பட வேண்டியதுதான் என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்? மதம் என்றவுடன் ஒருவித வெறி ஏற்பட்டுவிடுகிறதாய் இருக்கிறதே ஒழிய, மதம் மக்களுக்குச் செய்துவரும் நன்மை என்ன? அதனால் மக்கள் அடையும் பயன் என்ன? என்பதை மதவெறியர்கள் சிந்திப்பதில்லை. கள்ளினால் உண்டாகும் வெறியைவிட இம் மாதிரி மதங்களால் ஏற்படும் வெறி அதிகமான கேட்டைத் தருகிறது. கள், குடித்தவனைக் கெடுக்கிறது; மதம், மனத்தில் நினைத்தவனையே கெடுக்கிறது.

சோம்பேறி வாழ்வுக்கு மதந்தானே காரணம்! சமுதாய வாழ்வில் மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கிறது மாத்திரமல்லாமல், பொருளாதாரத்தில் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கும் மதம் மூலகாரணமாய் இருக்கிறது. உண்மையில் நீங்கள் யோசித்துப் பாருங்கள்! உடல்வலிக்கப் பாடுபட ஒருசாதியும், நோகாமல் உட்கார்ந்துகொண்டு சாப்பிட ஒரு சாதியும் மதம் சிருஷ்டிக்கவில்லையா? உலக செல்வமும், போக போக்கியமும் சரீரப் பாடுபடும் மக்களுக்கு இல்லாமற்போகவும்–சோம்பேறி வாழ்க்கை யாருக்கும், சரீரப் பாடுபடாதவர்களுக்கும் போய்ச்சேரவும் காரணம், மதக்கொள்கை அல்லாமல் வேறு என்ன? பாட்டாளிகள் தரித்திரர்களாகவும், வயிற்றுச் சோற்று அடிமையாகவும், கீழ்சாதியாராகவும், கீழ்மக்களாக இருக்கவும்; பாடுபடுவதும் சரீர உழைப்பு உழைப்பதும் தோஷம் என்று ஏற்படுத்திக்கொண்டவர்கள் கவலையற்ற வாழ்வு வாழவும், செல்வம் பெருக்கிக்கொள்ளவும் மற்றவர்களை அடக்கி ஆளவும் மதம் அல்லாமல் வேறு காரணம் என்ன?

பகுத்தறிவற்ற பட்சி, மிருகம், புழுக்கள் தங்களுக்குள் சாதிபேதம், கீழ்மேல்நிலை, அடிமைப்படுத்தும் உணர்ச்சி ஆகியவை இல்லாமல் இருக்கும்போது, பகுத்தறிவுள்ள மனிதனுக்குள் சாதி–பேதம், உயர்வு–தாழ்வு, எஜமான்–அடிமை உணர்ச்சி ஏற்படக் காரணம் என்ன?

மிருகங்களுக்குள் சாதி வித்தியாசம் உண்டா? கழுதையில், நாயில், குரங்கில், எருமையில் பறைக் கழுதை, பறை நாய், பறைக் குரங்கு, பறை எருமை என்றும்—பார்ப்பாரக் கழுதை, பார்ப்பார நாய், பார்ப்பாரக் குரங்கு, பார்ப்பார எருமை என்றும் இருக்கின்றனவா? மனிதனில் மாத்திரம் இப்படி இருப்பதற்குக் காரணம் மதம் அல்லாமல் வேறு என்ன? இந்த மதம் ஏற்பட்டு எத்தனை காலமாயிற்று? இதுவரை மனித சமூகத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? கடவுள் அவதாரமான இராமனது இராஜ்யம் என்னும் காலத்தில் இருந்த கீழ்ச் சாதியும், சத்திய கீர்த்தி அரிச்சந்திரன் இராஜ்யம் என்னும் காலத்தில் இருந்துவந்த சுடுகாட்டுப் பறையனும் பெண்சாதி விற்பனையும், பதினாயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியும் இன்னும் ஒழியவில்லை என்றால், மதத்தினால் மக்கள் முன்னேறு கிறார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்?

மதம் மனிதனுக்கு முட்டாள்தனத்தைக் கற்பிக்கிறது, பாருங்கள்! செத்துப் போசுச்கப்பட்டு, அந்தச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்துவிடப்பட்ட மனிதனுக்கு–பசி தீரவும் சுகமடையவும் அரிசி, பருப்பு, காய், கறி, செருப்பு முதலியன பார்ப்பான் மூலம் மேல் லோகத்துக்கு அனுப்பக் கொடுப்பதென்றால் மனிதனுக்குச் சிறிதாவது பகுத்தறிவு இருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? பெற்றோர்களை—இறந்து போனவர்களை மதிக்கவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காகப் பார்ப்பானுக்கு ஏன் அழவேண்டும்? அவன் காலில் ஏன் விழவேண்டும்? அவன் கால் கழுவின தண்ணீரை ஏன் குடிக்கவேண்டும்? மாட்டுச் சாணியும், மூத்திரமும் கலக்கி ஏன் குடிக்கவேண்டும்? இது மதக்கட்டளை, மதத் தத்துவம் என்றால் இப்படிப்பட்ட மதம் ஒழியவேண்டாமா?

கருமாதி, கலியாணம், கல்லெடுப்பு முதலிய சடங்குகள் பார்ப்பனனுக்கு அழவே கற்பிக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய அவற்றினால் வேறு பலன் என்ன இருக்கிறது?

மற்ற மதக்காரரும் உலகில் உள்ள மற்ற நாட்டு மக்களும் இப்படியா நடந்துகொள் கிறார்கள்? நமக்குப் புத்தியும் இல்லை, வெட்கமும் இல்லை என்றால்—கண்ணும் இல்லை, காதும் இல்லை என்றுதானே அர்த்தம்? இதற்குப் பேர், 'மாமிச பிண்டம்' என்றுதானே சொல்ல வேண்டும்? எங்கள்மீது கோபித்து என்ன பிரயோசனம்? மனிதனுக்கு இன்று இருக்கும் கேவல நிலைக்குக் காரணம் மதமா? அரசாங்கமா? என்று சிந்திக்கவேண்டு மென்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்.

மதத்தால் மக்களைச் சுரண்டிக் கொள்ளை அடித்து, நோகாமல் வயிறு வளர்த்துப் போக போக்கிய மனுபவிக்கும் சோம்பேறி அயோக்கியக் கூட்டம், நம்மை மதத்தைப்

பற்றிச் சிந்தித்து, திருத்தப்பாடு செய்துகொள்வதற்குக்கூட இடம் கொடாமல், நம் ஈன நிலைக்கு அரசாங்கத்தை—வெள்ளையரைக் கைகாட்டிவிட்டுத் தப்பித்துக்கொள்கிறது. இது சாமர்த்தியமுள்ள திருடன் திருடிவிட்டு, 'அதோ, திருடன் ஓடுகிறான்!' என்று வேறு ஒருவனைக் கைகாட்டி தப்பித்துக்கொள்வது போலவே இருக்கிறது.

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1937]

8. கஷ்டமான பிரச்சினை

ஆத்திகன் : மதங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டவை.

பகுத்தறிவுவாதி : அல்ல; அவைகள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவை.

ஆத்திகன் : ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

பகுத்தறிவுவாதி : மதங்கள் எத்தனை உண்டு?

ஆத்திகன் : பல மதங்கள் உண்டு.

பகுத்தறிவுவாதி : உதாரணமாகச் சிலவற்றைச் சொல்லும்.

ஆத்திகன் : எடுத்துக் காட்டாக—இந்து மதம், புத்த மதம், கிறிஸ்துவ மதம், முகமதிய மதம், சீக்கிய மதம், பார்சி மதம், ஜொராஷ்ட்டிர மதம் முதலியவைகளும் இவற்றுள் பல உட்பிரிவுகளும் உண்டு.

பகுத்தறிவுவாதி : கடவுள் எத்தனை உண்டு?

ஆத்திகன் : ஒரே கடவுள்தான் உண்டு.

பகுத்தறிவுவாதி : இவ்வளவு மதங்களும் யாருக்காக உண்டாக்கப்பட்டவை?

ஆத்திகன் : மனித வர்க்கத்துக்காகத்தான்.

பகுத்தறிவுவாதி : மதத்தால் ஏற்படும் பயன் என்ன?

ஆத்திகன் : மனிதன் கடவுளை அறியவும், கடவுளுக்கும் தனக்கும் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக்குப் பாத்திரனாகவும் பயன்படுவதாகும்.

பகுத்தறிவுவாதி : அப்படியானால் ஒரே கடவுள் ஒரே மனிதவர்க்கத்துக்கு இத்தனை மதங்களை ஏற்படுத்துவானேன்?

ஆத்திகன் : இது மிகவும் சிரமமான கேள்வியாக இருக்கிறது. பெரியவர்களைக் கண்டு பேசியபிறகு பதில் சொல்லுகிறேன்.

பகுத்தறிவுவாதி : அதுதான் போகட்டும்! இந்து மதம் என்பது என்ன? அது கடவுளால் எப்படி ஏற்படுத்தப்பட்டது?

ஆத்திகன் : இந்து மதம் என்றால் வேத மதம் என்று பெயர்.

பகுத்தறிவுவாதி : வேதம் என்றால் என்ன?

ஆத்திகன் : ரிக்கு, யசுர், சாமம், அதர்வணம் என 4 வேதங்கள் உண்டு; அவ் வேத முறைதான் இந்து மதம் என்பது.

பகுத்தறிவுவாதி : இவ்வேதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டவை?

ஆத்திகன் : வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை.

பகுத்தறிவுவாதி : வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்று யார் சொன்னது?

ஆத்திகன்: வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்று வேதம் சொல்லுகிறது; வேதம் கடவுள் வாக்கு என்று வேதம் சொல்லுகிறது.

பகுத்தறிவுவாதி: இதற்கு ஏதாவது சாட்சியோ, ஆதாரமோ உண்டா?

ஆத்திகன்: வேதத்துக்கும், கடவுள் வாக்குக்கும் ஆதாரமோ, சாட்சியோ கேட்பது என்றால் அது பாவமான காரியமேயாகும்.

பகுத்தறிவுவாதி: அது பாவமாக இருக்கலாம்; ஆனால், ஆதாரம், ருசு இல்லாமல் ஒன்றை ஒருவன் நம்புவது என்றால் அது குற்றமாகாதா?

ஆத்திகன்: இதுவும் கஷ்டமான பிரச்சினையாகத்தானிருக்கிறது; பெரியவர்களைக் கேட்டுப் பார்க்கவேண்டும்.

பகுத்தறிவுவாதி: சரி; புத்தமதம் என்றால் என்ன?

ஆத்திகன்: புத்தர் என்கிறவர் காலத்தில் ஏற்பட்டது.

பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆத்திகன்: புத்தர் என்கிறவர் சொன்னதாகச் சொல்லப்படும் வாக்குகள்தாம்.

பகுத்தறிவுவாதி: புத்தர்தான் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆத்திகன்: புத்தர் சங்கதி சரித்திரத்தில் பட்டதாய் இருக்கிறது. அன்றியும், அதில் இன்றைய நிலையில் மற்ற மதங்களைப்போல் கடவுள், கடவுள் வாக்கு, பல அற்புதங்கள் முதலியவை இல்லை என்பதோடு—ஆலோசனைக்கும், அறிவுக்கும் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளி விடுவதில் பாவமோ, குற்றமோ, கடவுள் தண்டனையோ இல்லையாகையால் அதற்கு ஆதாரம் தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

பகுத்தறிவுவாதி: சரி; ரொம்ப நல்ல மாதிரி சமாதானம் சொன்னீர்கள். அப்படியானால் அம் மதத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. கிறிஸ்துவ மதம் என்பது என்ன?

ஆத்திகன்: கிறிஸ்துவ மதம் என்பது, கிறிஸ்துவால் சொல்லப்பட்ட கொள்கை.

பகுத்தறிவுவாதி: அது எது?

ஆத்திகன்: பைபிள்.

பகுத்தறிவுவாதி: கிறிஸ்து என்பவர் யார்?

ஆத்திகன்: கிறிஸ்து கடவுள் குமாரர்.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

பகுத்தறிவுவாதி: ஒருவர் தன்னை இன்னார் என்று நிரூபிக்க அவரது வாக்கு மூலமே போதுமா?

ஆத்திகன்: ஏன் போதாது?

பகுத்தறிவுவாதி: அப்படியானால் இப்போது ஒருவன் வந்து உம்மிடம், 'நான் தான் கடவுள்' என்று சொன்னால் ஒப்புக்கொள்ளுவீரா?

ஆத்திகன்: இதுவும் கஷ்டமான பிரச்சினைதான், பெரியவர்களைக் கேட்க வேண்டும்.

பகுத்தறிவுவாதி: முகமதிய மதம் என்றால் என்ன?

ஆத்திகன்: முகமது நபி என்பவரால் சொல்லப்பட்ட கொள்கைகளை உடையது.

பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆத்திகன்: குரான் என்னும் நூல்.

பகுத்தறிவுவாதி: அது யாரால் சொல்லப்பட்டது?

ஆத்திகன்: கடவுளால், முகமது நபி அவர்கள் மூலம் வெளியாக்கப்பட்டது.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: நபி அவர்கள் சொன்னார்.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: குரான் வாக்கியங்களில் இருக்கிறதுடன், வேறு பல சாட்சியங்களும் இருக்கின்றன.

பகுத்தறிவுவாதி: வேறு பல சாட்சியங்கள் என்பவை எவை?

ஆத்திகன்: அந்தக் காலத்தில் நபி அவர்களுடன் இருந்த பல பெரியவர்கள் வாக்கு இருக்கிறது.

பகுத்தறிவுவாதி: அவை உண்மை என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆத்திகன்: அந்தப்படி இருக்கும் ஆதாரங்களை நம்பவேண்டியதுதான்.

பகுத்தறிவுவாதி: மற்ற மதங்களும் இதுபோல்தானே?

ஆத்திகன்: ஆம்.

பகுத்தறிவுவாதி: அனேகமாக, கடவுள் வாக்கு, கடவுளால் அனுப்பப்பட்டவர்கள், கடவுள் அவதாரங்கள் என்பவர்கள், அவர்களது வாக்குகள் சம்பந்தப்பட்ட மதங்களின் தத்துவம், பலவிதக் கடவுள் தன்மை பெற்றவர்கள் ஆகிய எல்லோரையும்—ஒரே கடவுள் சொன்னார், சிருஷ்டித்தார் என்பதும் நியாயமாகுமா? ஆதலால், இம்மாதிரி மதம் என்பது வியாபாரம்; மதகர்த்தர், வேதம், புராணம் என்பவைகள் வியாபாரச் சரக்குகள் என்பது பகுத்தறிவுக்காரர்களுக்குப் படும் விஷயம். இது ஒரு சமயம் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்.

ஆத்திகன்: ஆம்; எல்லாம் இப்படிப்பட்டதுதான்.

பகுத்தறிவுவாதி: அப்படியிருக்க, இவ்வளவு மதங்களையும் ஒரே கடவுள் உண்டாக்கி இருப்பார் என்று நீரே நம்புகிறீரா? அதனால்தான், இவைகள்—ஒவ்வொரு சீர்திருத்தக்காரர்களால், அறிவாளிகளால் முன்பின் ஆராய்ந்து பார்த்து மனித சமூகத்துக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கவலை கொண்டவர்களால் (மனிதர்களால்) உண்டாக்கப்பட்டது என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல், ஒரே கடவுள் இருந்து அவரே இவ்வளவு மதத்துக்கும், மதகர்த்தருக்கும் ஆதார புருஷர் என்றால்—அப்போது கடவுளின் மேன்மைக் குணம் பாதிக்கப்படவில்லையா? யாரோ சில மனிதர்களுக்கு மேன்மை கொடுப்பதற்காகக் கடவுளை முட்டாளாக்குவதும், பல கடவுளைச் சிருஷ்டிப்பதும், பல வேதங்களைச் சிருஷ்டிப்பதும் சரியா?

நாம் இருவரும் இவ்விஷயங்களில் ஒரே கருத்துடையவர்களாகி இவைகள் எல்லாம் சற்று நேரத்திற்கு உண்மை என்றே ஒப்புக்கொள்வோம். அதாவது, இந்துமதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதையும்; வேதம் கடவுள் வாக்கு என்பதையும்; கிறிஸ்து கடவுள் அவதாரம் என்பதையும்; முகமது நபி கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும்; குரானையும மற்ற மதத்தையும் ஒப்புக்கொள்வோம். ஆனால், அவைகள் எல்லாம் இன்று ஒன்றாய் இல்லாமல், வேறு அபிப்பிராயங்களாகவும்—சில முரணானவைகளாகவும் ஒரு மதத்துக்கும், ஒரு மதத் தத்துவத்துக்கும், மற்ற மதத் தத்துவத்துக்கும், மற்ற தலை

வருக்கும் மாறாக இருப்பானேன்? ஒன்றுக்கொன்று இன்றைய அனுபவத்தில் அதிருப்தி, வெறுப்பு, துவேஷம் உடையவைகளாக இருப்பானேன்?

ஆத்திகன்: இதுவும் சிரமமான பிரச்சினையாகத்தானிருக்கிறது. பெரியவர்களைக் கேட்கவேண்டும்.

பகுத்தறிவுவாதி: சாவகாசமாய்ப் பெரியவர்களைக் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம். ஆனால், இன்று நாம் எதை நம்பி எப்படி நடந்துகொள்வது?

ஆத்திகன்: இவைகள் எல்லாம் உண்மை என்றோ, அல்லது உண்மை அல்ல என்றோ எப்படியோ இருக்கட்டும்! அதற்காக நாம் கவலைப்பட வேண்டாம். உலகில் மனிதன் உயிருள்ளவரை—நல்லது எண்ணு, நல்லது செய், அவ்வளவுதான்.

பகுத்தறிவுவாதி: நல்லது எது? தீயது எது என்பதற்கு அளவு கருவி என்ன?

ஆத்திகன்: இது மிகவும் கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது; ஆனாலும், பெரியவர்கள் நடந்து காட்டியது, சொல்லியிருப்பது இவைகளைக் கண்டு தெரிந்துகொள்ள வேண்டியதுதான்.

பகுத்தறிவுவாதி: பெரியவர் யார் என்பதற்கு அளவு கருவி என்ன? ஒருவர்—ஒருவரைப் பெரியவர் என்றால்—மற்றொருவர் அவரை ஒப்புக்கொள்வதில்லை. அவருக்கு மாறாக அல்லது வேறொன்றைச் சொன்னவர்களைப் பெரியவர்கள் என்கிறான். இதற்கு ஒரு பரீட்சைக் குறிப்பு வேண்டுமே?

ஆத்திகன்: இதுவும் கடினமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் உம்முடைய சமாதானந்தான் என்ன, சொல்லும் பார்ப்போம்.

பகுத்தறிவுவாதி: என் சமாதானம் என்ன? நான்தான் மதத் துவேஷி, பார்ப்பனத் துவேஷி, நாத்திகன், சுயமரியாதைக்காரர்கள் என்றெல்லாம் பெயர் வாங்கினவனாகி விட்டேனே! என் பேச்சை யார் கேட்பார்கள்? நீ ஆத்திகனாயிற்றே, உமக்குத் தெரியும் என்றும், தெரியாவிட்டாலும் உம்முடைய உள்ளத்தில் சதா குடி கொண்டிருக்கிற கடவுள் உணர்த்துவார் என்றும் கருதி உண்மையான சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காகக் கேட்டேன். நல்ல வேளையாக நீர் பதில் சொல்லாவிட்டாலும் என்னைத் திட்டாமல் பெரியவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னீரே—அதுவே எனக்கு ரொம்ப திருப்தி! ஆத்திகர்களில் இப்படிப்பட்டவர்கள் அருமை; மிக அருமை. சந்தேகம் கேட்டால் அடி, உதை, நாத்திகன், பிராமணத் துவேஷி, ஆரியத் துவேஷி,....என்றெல்லாம் வெறிபிடித்தவர்கள் போல் ஆடுவார்கள். ஆதலால், உம்மைப் பற்றிக்கூட எனக்குச் சந்தேகந்தான்.

ஆத்திகன்: என்ன சந்தேகம்?

பகுத்தறிவுவாதி: நீர் ஆத்திகரோ என்னமோ—என்று.

['சித்திரபுத்திரன்' உரையாடல்—'பகுத்தறிவு' மலர் 2; இதழ் 12—1938]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

உண்மையிலேயே நம்மைப் பொறுத்தவரையில், அதாவது திராவிட நாட்டில் உள்ள திராவிடர்களைப் பொறுத்தவரையில் மதசம்பந்தமாகப் பேசவேண்டுமானால் இங்குள்ள திராவிடர்களுக்குள் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்பவர்களைத் தவிர மற்ற மக்களுக்கு மதம் என்பதால் ஒரு குறிப்பிட்ட கொள்கையோ, கருத்தோ ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், கிறிஸ்தவர், இஸ்லாமியர், பின் தங்கின திராவிடர்களுக்கு மதம் என்கின்ற பெயரால் தங்களுக்குள் பல பிரிவாகப் பிரிந்து சாதி

வகுப்புப் பேர்கள் சொல்லிக் கொண்டு, ஒருவரை ஒருவர் இழிவாக நடத்துவதும், இழிவாகக் கருதுவதும், அதற்காக என்று ஏதோ ஒரு உயர்வு தாழ்வான பெயர்களைச் சொல்லிக் கொள்வதும், அதற்கென்று நடத்தையில் அர்த்தமற்ற வேஷத்தையும், குறிப்பையும் அணிந்துகொள்வதல்லாமல் வேறு பொதுவான கொள்கையோ, காரியமோ கருத்தோ இருப்பதாகச் சொல்லுவதற்குச் சரியான ஆதாரமோ அத்தாட்சியோ இல்லை என்றேகூறலாம்.

இஸ்லாம், கிறிஸ்தவர் அல்லாத மக்களைப் பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர, அந்த 'இந்து' என்பது சமுதாயப் பெயரா, இனப் பெயரா, மதப் பெயரா என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை. இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவும் இருக்க இடமில்லை. அரபு தேசத்தவனை 'அரப்' அல்லது 'அரபு' என்பது போலவும், ரஷ்யனை 'ரஷ்ஷி' என்பது போலவும், ஒரு சிந்தியனை—அதாவது சிந்து மாகாணத்தவனைச் 'சிந்தி' அல்லது 'சிந்து' என்பது போலவும், இந்திய நாட்டானை அதாவது இந்தியனை 'இந்து' என்று அழைக்கப்படுகிறது என்பதல்லாமல், இந்து என்கின்ற சொல்லில் மத சம்பந்தம் இருப்பதற்கு இடமே இல்லை. அன்றியும், இந்து என்கின்ற சொல்லுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல கருத்துக்கள் சொல்லுகிறார்களே தவிர, அது மதம் என்பதில்லை. இந்து என்பது ஒரு மதத்திற்கு என்று சொல்லப்படுமானால், அதற்கு ஏதாவது ஆதாரமோ அல்லது மத சம்பந்தமான இலட்சணமோ இருந்திருக்க வேண்டும்; அல்லது இருந்தாக வேண்டும். அந்த முறையில் இந்து மதம் என்பதற்கு எவ்விதமான மத இலட்சணமும் இல்லை. பவுத்தம், கிறிஸ்து, முகமது முதலிய மதங்களுக்கு மத கர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன், விஷ்ணு என்ற மதக் கடவுள்கள் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றிற்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மத கர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள்கள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல், குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது என்றால், அதுதான் இந்து மதம் என்றால், இந்த இந்து என்ற சொல் மதத்தைக் குறிப்பது என்று யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்?

தவிரவும், இந்து மதம் என்ற சொல் எந்த மத ஆதாரங்களிலும் காணப்படுவதே இல்லை. இந்து மதத்தின் கொள்கை இன்னதென்று சொல்வதற்கும் ஆதாரங்கள் கிடையாது. சரியாகவோ, தப்பாகவோ, சூழ்ச்சியாகவோ, முட்டாள்தனமாகவோ ஏற்பட்டுப் பழக்க வழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அனுகூலமாகவும், அறியாத பாமர மக்களுக்குக் கேடாகவும் இழிவாயும் தலையெடுக்க வசதியில்லாததாயும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்து மதம் என்ற பெயர் இருக்கிறது என்று சொல்லுவதற்கு அல்லாமல் வேறு என்ன பொருளில், என்ன பயனுக்கு இந்து மதம் இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா? இந்து மதத்தால் மேன்மையும் பயனும் அடைகின்ற 'பிராமணர்கள்' என்னும் பார்ப்பனர்கள், 'இந்து மதம் என்பதாக ஒரு மதம் கிடையாது; ஆரியர் கொள்கைகளும் பழக்க வழக்கங்களுந்தான் இந்துமதம் என்பது; ஆகையால் ஆரியமதமே இந்துமதம்' என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள்.

மற்றொரு பார்ப்பனச் சாரார், 'வேதமும் ஸ்மிருதிகளும் புராணங்களுந்தான் இந்து மதம் என்பதோடு மனுதர்ம சாஸ்திரம்தான் இந்து மதத்திற்கு சாஸ்திரம் (சட்டம்)' என்றும் சொல்லி, அதை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், வருணாசிரம தர்மம் என்பதாக ஒருமுறை இல்லாவிட்டால் மற்றபடி இந்துமதம் என்று சொல்ல இடம் இல்லை என்றே சொல்லலாம். அம் மதத்தில் கடவுளைப்பற்றிய கவலையோ நிர்ப்பந்தமோ கிடையாது என்பதோடு, ஆச்சார அனுஷ்டான பழக்க வழக்க நடை உடை பாவனை என்பவைகளுக்கும் எவ்வித நிர்ணயமோ நிர்ப்பந்தமோ கிடையாது என்றும் சொல்லலாம்.

உதாரணமாக, எதை வணங்குபவனும் எதை வணங்காதவனும், ஒரு கடவுள்காரனும், பல கடவுள்காரனும்தானே கடவுள் என்கின்ற ஸ்மார்த்தனும்; கடவுளே கிடையாது என்கின்ற நிரீச்சுரவாதியும்; சுவர்க்க-நரகம், பாவ-புண்ணியம் இல்லை என்கின்ற லோகாயதவாதியும்; எல்லாம் பொய் என்கின்ற மாயாவாதியும்; ஆண்-பெண் குறிகளே கடவுள் என்கின்ற சக்திவாதியும், மற்றும் மத சம்பந்தமாய் எந்த விதமான கொள்கை கொண்டவனும் (அதாவது தான் கிறிஸ்தவனல்ல, முகமதியனுமல்ல என்று சொல்லி விடுவானேயானால்) எவனும் இந்துவே ஆவான். அதனால்தான் நான் மேலே 'இஸ்லாம்–கிறிஸ்தவன் அல்லாத மக்களைக் குறிப்பிடும் சொல் இந்து என்ற சொல்லாக இருந்து வருகிறது' என்று குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இந்து என்கின்ற மதம் இருக்கும் காரணத்தாலேயே நாட்டில் மதச் சண்டை நடக்கின்றது என்பதல்லாமல், மற்றபடி இந்த நாட்டில்—இந்தியாவில் மதச் சண்டை ஏற்படச் சிறிதும் இடமே இல்லை. ஆகையாலேயே இந்துக்கள் என்றழைக்கப்படுகிற திராவிட மக்கள் இந் நாட்டின் நலங்கருதியும், நாட்டின் விடுதலையையும், மக்கள் சுயமரியாதையையும் கருதியும், பெரும்பாலான மக்களுக்குப் பிறவியின் காரணமாகவே சுமத்தப்பட்ட இழிவு ஒழிக்கப்படவேண்டும் என்பது கருதியும் முதலாவதாகச் செய்யப்பட வேண்டிய வேலை—இந்துமதம் என்கின்ற புரட்டை விளக்கி, மக்களுக்குத் தெளிவுஏற்படுத்தி, அந்தச் சிறையிலிருந்து வெளியேறும்படி செய்வதேயாகும்.

இன்று இந்திய மனித சமுதாயத்திற்கு, சிறப்பாகத் திராவிட நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் இருந்துவரும் பெரும் நோய் இந்து மதம் என்பதேயாகும். இந்த இந்து மதம் என்ற பெருநோய் திராவிடர்களுக்குச் சயரோகம் என்றும், குஷ்ட நோய் என்றும் உறுதியாகச் சொல்லலாம். இந்து மதம் இல்லாவிட்டால் 4-ம், 5-ம் சாதி (பிறவி) மக்களும் அவற்றால் ஏற்பட்டு வந்த, வருகிற, வரும்படியான கேடுகளும் இருக்க, நடக்க, ஏற்பட இடம் உண்டா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

இப்படி நான் சொல்லுவதால்தான்—இதைச் சுமார் 25 வருடகாலமாக முரட்டுத் தனமாக அச்சமின்றிப் பிரச்சாரம் செய்துவருவதால்தான்—மத விரோதி, மதங்களை ஒழிப்பவன், கடவுள் விரோதி, கடவுள் இல்லை என்பவன் என்றெல்லாம் என்மீது பழி சுமத்துகிறார்கள். மதமும் கடவுளும் இல்லை என்று ஒருவன் உண்மையாகவே சொல்லுவதானாலும், அதனால் உலகத்துக்கு எப்படிப்பட்ட கேடும் வந்துவிடாது. மதம் தோன்றிய காலம் முதல் மதப் போராட்டமும், கடவுள் கண்ட காலம் முதல் கடவுள் மறுப்பும் நடந்து தான் வந்திருக்கின்றன. அதனால் உலகம் அழிந்து மறைந்து எங்கும் நாத்திகமும், பொதுவுடைமையும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், சில பித்தலாட்டங்கள், சில வஞ்சகங்கள் ஒரு அளவுக்காவது பலமற்றுவருகின்றன என்பது மாத்திரம் உண்மை. ஆதலால், ஏமாற்றுதலில்–வஞ்சகத்தில் பிழைக்கும் மக்களுக்கு நம்மீது ஆத்திரம்வந்து, அவர்கள் பாமர மக்களையும் மூடர்களையும் கிளப்பிவிட்டு, நம் பிரச்சாரத்தை அடக்கவேண்டியவர்கள் ஆகிறார்கள்.

[கீழக்கரையில், 4-2-1947-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 22-2-1947]

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை. வேலூர் என்று ஓர் ஊர் இருந்தாலல்லவா அந்த ஊருக்குப் போக முடியும். அதேபோல, இந்துமதம் என்று ஒரு மதம் இல்லை என்கிறேன். இந்துமதம் என்பதாக ஒரு மதம் இருப்பதாக யாராவது சொல்லமுடியுமா? இது தான் இந்துமதம்; உண்டாக்கியவர் இன்னார்; இதனுடைய சட்டதிட்டங்கள் முறைகள் இன்னின்னவை-என்று யாராவதுசொல்லமுடியுமா? அப்படி இருந்தாலல்லவா சொல்வதற்கு? இதைப் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம்—காந்தியார்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்துமதம் இன்னது என்று 1 வரி, 2 வரி எழுத ஆளில்லை. ஒரு சீக்கியனைக் கேட்டால் சொல்ல முடியும். குருநானக் தலைவர், அவர் சொன்னது சீக்கிய மதம். ஒரு ஆதாரம்,

ஒரு தலைவன், சரித்திரம் இருக்கிறது. அதுபோல; முஸ்லிம் என்றால் குரான் ஆதாரம், முகமது நபி தலைவர், இத்தனை வருடத்திற்கு முன் பிறந்தவர்; இறந்தவர் என்று சரித்திரம் உண்டு. மதசம்பந்தமான ஆதாரங்கள் எப்படி இருந்தாலும் சரித்திர ஆதாரம் இருக்கிறது. அதைப்போல, கிறிஸ்தவனுக்கு பைபிள் இருக்கிறது. அவர்களது தலைவன் ஏசு. இன்றைக்கு 1956 ஆண்டுக்கு முன் ஆகிறது. அவர் பிறந்தது எங்கு? எத்தனை வருடத்திற்குமுன் பிறந்தார்? என்பதற்குச் சரித்திர ஆதாரம் இருக்கிறது. அதுபோல இந்து மதத்தில் இன்னார், இன்ன வருடத்தில் இன்ன காலத்தில், இன்னது செய்தார் என்று சொல்ல என்ன ஆதாரம்? எவனை எடுத்துக்கொண்டாலும், யுகா யுகங்கள், கோடிகோடி வருடம் முன்னால் 15 கோடி, 20 கோடி வருடங்கள் வாழ்ந்ததாகச் சொல்லக்கூடிய விதத்தில்தான் இருக்கிறது.

[வேலூர் நகராட்சி மன்றத்தில், 28-10-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை 8-11-1956]

நாம் 'கடவுளை' வணங்குகின்றோம் என்றாலும், பல 'கடவுள்களை' வணங்குகின்றோம். இவைகளுள் உயர் கடவுள்கள் மூன்று. அவர்கள் சிவன், விஷ்ணு, பிரம்மா (மும்மூர்த்திகள்) ஆவார்கள். இம்மூவருள் இருவரையே சிறந்தவர்கள் ஆகக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. அவர்கள் சிவன், விஷ்ணு என்பவர்கள் ஆவார்கள். அவர்கள் இருவர்களே ஆனாலும் அவ்விருவர்களும் பல உருவங்களையும், பல பிறவிகளையும், பல பெயர்களையும் கொண்டவர்கள் ஆவார்கள்.

அவர்கள், அதோடு கூடவே பல தனிப்பட்ட செயல்களைக் கொண்டு அவற்றிற்கு ஏற்ற உருவங்களைக் கொண்டவர்கள்.

இவ்விரு கடவுள்களும் அவைகள் சம்பந்தப்பட்ட ஆதாரங்களின்படி ஒருவரோடு ஒருவர் போட்டி, பொறாமை, ஒருவரைவிட ஒருவர் பெரியவர் என்கின்ற அகம்பாவக் கருத்துக் கொண்ட விரோதபாவம் உடையவர்களாகவே இருந்து இருக்கிறார்கள். அவை மாத்திரம் அல்லாமல், இவர்களைக் கடவுள் என்று சொல்லும்படியான இலட்சணத்திற்குச் சிறிதும் பொருத்தமில்லாததான—பல எதிரிகளைக் கொண்டு எதிரிகளோடு போர் புரிந்தும், பலரைக் கொன்றும், பல ஒழுக்கமற்ற காரியங்களைச் செய்தவர்களாகவும் ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். இவர்களது வாழ்வும் ஒரு சாதாரண மனித வாழ்வாகவே இருந்துவருவதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நிலையிலேயேதான், நமது நாட்டில் இருந்து வருகின்ற பல்லாயிரக் கணக்கான கோயில்களில் அமைத்திருக்கும் கடவுள்கள் இருக்கின்றனவே அன்றி, கடவுள் தன்மைக்கு ஏற்ற இலட்சணத்தோடு கூடியதாக ஒரு கோயிலாவது அமைக்கப்படவே இல்லை.

ஆகவே நாம் வணங்கும் இப்படிப்பட்ட கடவுள்கள், சிறு தெய்வங்களா?" துஷ்ட தேவதைகளா? அல்லது, உண்மையான தெய்வங்களா? என்பது விளக்கப்பட வேண்டியதாகிறது.

இன்றையக் காலம் விஞ்ஞான காலம்; விஞ்ஞான காலம் என்பதோடு அறிவு ஆராய்ச்சிக் காலமுமாகும். 'மக்கள் சமுதாயத்திற்கு ஒரு கடவுள் இருக்கவேண்டியது என்ற தத்துவத்திற்கு ஏற்பக் கடவுள் உணர்ச்சியை மக்களுக்குள் ஏற்படும்படி செய்ய வேண்டியது இன்றியமையாதது' என்றால்—இன்றைய மனித நிலைமைக்கு ஏற்றபடி அதை மக்களுக்கும் பழக்கினால் ஒழிய மற்றபடி, அந்தத் தத்துவம் நிறைவேறுவதோ, பயன்படுவதோ எளிதான காரியமாகாது என்பதே எனது கருத்து.

இது சமய ஆச்சாரியர்களால் அவசியம் கவனிக்கப்படவேண்டிய காரியமாகும். அப்படிக்கில்லாமல், மேற்கண்ட மாதிரியான கடவுள்கள் தன்மைக்குத் தத்துவார்த்தங்கள்

1686—175

சொல்லுவதும்—சமய சம்பிரதாயங்களைச் சொல்லுவதுமான (வலியுறுத்துவதுமான) காரியங்களில் பயத்தைக் கொண்டும் பேராசையைக் கொண்டும் பெரும்பான்மையான மக்களை மேற்கண்ட கடவுள் தன்மைகளை ஏற்கவும் நம்பவும் செய்வது என்பது கஷ்ட சாத்திய மான காரியமாகவே முடியும் என்று கருதவேண்டி இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, கோயில்களில் கடவுள் பூசைகளில்—இரு குறைபாடுகள், மக்களுக்குப் பெரும் மானக் கேடான காரியங்களாக இருந்து வருகின்றன.

அவை: ஒன்று கடவுள் பூசைகளின்போது சொல்லப்படும் தோத்திரச் சொற்களைத் தமிழில் சொல்லாமல் நாட்டுக்கும், நாட்டு மொழிக்கும் சம்பந்தம் இல்லாத சமஸ்கிருத மொழியில் சொல்வதும்;

மற்றொன்று: வழிபடுகின்றவர்களைக் கடவுள் இருக்கும் அறைக்குள் சென்று வழிபட அனுமதிக்காமல், வெளியில் நின்றே வழிபட வேண்டும் என்று சொல்லி இழிவு படுத்துவதும் ஆகும்.

பின்னையதானது முன்னையதைவிட மிகவும் சிந்திக்க வேண்டிய காரியமாகும். ஏனெனில், பின்னையது—அதாவது கடவுள் இருக்கும் அறைக்குள் வழிபடுபவர்—பக்தர் செல்லக்கூடாது என்று தடை விதித்திருப்பது—வெறும் பிறவியைக் காரணமாய் வைத்துத் (சாதியைக் காரணமாய்) தடுப்பதைத் தவிர, வேறு காரணம் ஒன்றும் இருப்பதாகக் கொள்ள முடியவில்லை.

ஏனெனில் பூசாரிக்கும், பக்தனுக்கும் உள்ள பேதம் என்னவென்று பார்த்தால்—பிறவியை, சாதியைத் தவிர எதுவும் தடையாக இருக்கவில்லை. எந்த விதத்தில்—பூசாரி, பக்தனைவிட உயர்ந்தவனாக இருக்கின்றான்? ஒழுக்கத்திலோ, நாணயத்திலோ, உடல் சுத்தத்திலோ மேம்பட்டவன் என்று யாராவது—எந்தப் பூசாரியையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? அன்றியும், இந்தப் பழக்கம் வடநாட்டுக் கோயில்கள் பலவற்றில் இல்லாமல் இருக்கின்றதையும் கண்டு வந்து இருக்கின்றேன்.

நாம், மக்களுள் பிறவியால் உயர்வு-தாழ்வு இல்லை என்பதையும், இருப்பதாகக் காணப்படுவதை ஒழிக்க வேண்டுமென்பதையும் கொள்கையாகக் கொண்டவர்கள் என்பதோடு—பலர், கடவுளுக்கு முன்னால் மக்கள் யாவரும் சமம் என்கின்ற கொள்கை உடையவர்களாகவும் இருக்கின்றோம். இந் நிலையில் பிறவி உயர்வு-தாழ்வு (சாதி) முறையைக் காப்பாற்றவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற காரியமான கோயிலில் கடவுள் அறைக்குள் ஒரு சாதி மக்கள் போகக்கூடாது என்று தடுத்து வைத்திருப்பதை எதற்காகப் பொறுத்துக்கொண்டு, தாங்கள் கீழ் பிறவி (சாதி) மக்கள் என்று தங்களை ஆக்கிக்கொண்டு இருப்பது என்பது—அதுவும் இன்றைய நிலையில் இருப்பது என்பதைச் சிறிது சிந்தித்தாலும், அது ஒரு மாபெரும் மானக்கேடான விஷயமாகவே எனக்குக் காணப்படுகிறது.

இந்தப் பிரச்சினையினை நான் வலியுறுத்துவதில்—இதில்—கடவுள் உண்டா, இல்லையா என்கின்ற பிரச்சினை சிறிதும் சம்பந்தப்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். அது ஒவ்வொரு மக்களுடைய சொந்த விஷயம்; ஆனால் மானக்கேடு என்பது எல்லா மக்களையும் பொறுத்த விஷயமாகும்.

இந்த நிலையில், பக்தர்கள் கோயிலுக்குப்போவது என்பதை நான் தடுக்க ஆசைப் படவில்லை; ஆனால் கடவுளை வணங்கக் கோயிலுக்குப் போவதனாலேயே தன்னுடைய பிறவியை இழிபிறவியாக ஆக்கிக்கொள்ளத் துணிகின்றானே என்பதைப் பற்றித்தான் நான் கவலைப்படுகின்றேன்.

கடவுளைக் கும்பிட—வணங்க—பிரார்த்திக்கக் கோயிலுக்குப் போகவேண்டும் என்கின்ற அவசியம் என்ன? அவரவர் வீட்டிலேயே இருந்துகொண்டு ஏன் வணக்கம் பிரார்த்தனை செய்யக்கூடாது? உருவக் கடவுள் வேண்டுமென்றாலும் கூட அதையும் வீட்டி

லேயே வைத்துக்கொள்ளலாமே! நீ கடவுள் அறைக்குள் வந்தால் கடவுளுக்குத் தீட்டு ஏற்பட்டுவிடும்; தீட்டுக் கழிக்கும் காரியம் செய்யாவிட்டால் கடவுள் சக்தி போய்விடும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கோவிலுக்கு ஏன் போகவேண்டும்? அப்படியே போகிறவன், 'மானம் இல்லை; ஈன உணர்ச்சி இல்லை; நான் ஈனப் பிறவி இழிமகன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்; கீழ் மகனாக, மானமற்றவனாக இருக்கச் சம்மதிக்கிறேன்' என்று துணிவு கொண்டவனாவான் என்பதைத் தவிர வேறு என்ன கருத்தைக் கொண்டவனாவான்?

'பழி என்றால்—மானக்கேடு என்றால்—இழிவு என்றால் உயிர் விடவும் வேண்டும்' என்ற நீதிக்கு ஆளாகவேண்டிய தமிழ் மகன்—வலியப்போய் இழிவையும், பழியையும், மானக்கேட்டையும் சம்பாதித்துக்கொண்டே இருக்கின்றான் என்றால், இதற்குச் சமயத்தின் பேரிலும் கடவுளின்பேரிலும் சாக்குச் சொல்லுவதென்றால் அது எப்படி அறிவுடைமை யாகும்? இதைப் பக்தர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

['விடுதலை'—கட்டுரை—28-1-1960]

9. பார்ப்பன தர்மம்

இந்து மதத்தைப் பற்றிப் பார்ப்பன குருவான சங்கராச்சாரியார் கூறியது என்ன வென்றால்—(27–2–1969 'தினமணி' பத்திரிகையில் உள்ளது.)

'இந்து மதம் பழமையானது. உலகம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது. இந்து மதத்தின் தர்மம் அவரவருக்கு விதித்தபடி நடந்து சனாதன தர்மத்தை நிலை நிறுத்தவேண்டியது' என்று சொன்னார்.

மேலும், 'மதம் என்றால் ஒருவர் தனக்கென்று நிச்சயித்துக்கொண்ட சித்தாந்த (கருத்து) முடிவு. இந்து மதத்திற்கு ஆதி கிடையாது. இதர மதஸ்தர்கள் அவர்கள் மதங்களைக் கடவுள் மகன் உண்டாக்கினார் என்றும் கூறுவர்; தூதர் உண்டாக்கினார் என்றும் கூறுவர். ஆனால், இந்துமதம் எப்பொழுது உண்டானது என்று கூறமுடியாது. வேதம் உண்டான காலத்தில் ஏற்பட்டது. வேதம் எப்பொழுது உண்டாயிற்றென்று சொல்ல முடியாது. வேத காலத்தைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுவார்கள்' என்றும் சொல்லி இருக்கிறார்.

ஆகவே, இந்துமதம் யாரால், எப்போது உண்டாயிற்றென்று சொல்ல முடியாது என்பதை சங்கராச்சாரியாரே ஒப்புக்கொள்வதோடு, அது உலகம் உண்டான காலத்திலேயே உண்டானது என்றும் சொல்லுகிறார்.

உலகம் உண்டான காலம் எவ்வளவு காட்டுமிராண்டிக் காலமாக இருந்திருக்க வேண்டும்?

'அந்தக் காலத்தில் ஏற்பட்ட தர்மங்கள், முறைகள், நடப்புகள் இன்றும் நடைபெற வேண்டும். அந்தப்படி நடக்காவிட்டால் பாவம், கேடு ஏற்படும்' என்றால் இதில் அறிவு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

எனவே, இந்துமதம் என்பது பெரிய புரட்டு.

இந்துமதம் என்பதாக எந்த ஆதாரமும் இல்லை.

அதற்கு எந்த முறையும் எந்தத் திட்டமும் கிடையாது.

பார்ப்பனர் சக்திக்கு ஏற்ப—பார்ப்பனரல்லாதவர்களின் முட்டாள் தன்மைக்கும், மானமற்ற தன்மைக்கும் ஏற்ப அவ்வப்போது உண்டாகும்–உண்டாக்கிக்கொள்ளும் திட்டங் களும், கருத்துக்களுமேயாகும்.

அதுவும் தேசத்திற்கு ஒருவிதம், நாட்டுக்கு ஒருவிதம், ஊருக்கு ஒருவிதம், சமயத்திற்கு ஒருவிதம், சந்தர்ப்பத்திற்கு ஒருவிதம், ஆளுக்கொருவிதம் என்றெல்லாம் சொல்லலாம்.

இராஜாஜி 'பஞ்சமர்' வீட்டில் சாப்பிடுவார்; சங்கராச்சாரி பஞ்சமனைக் கண்டதற்குக் குளிப்பார்; சிலர் நிழல் பட்டதற்குக் குளிப்பர்; சிலர் தொட்டதற்குக் குளிப்பர்; சிலர் 'பஞ்சம' ஆணையோ, பெண்ணையோ திருமணம் செய்துகொண்டு பார்ப்பனராகவே இருப்பார்கள்.

'பலித்தவரை' என்பதுதான் பார்ப்பனீயமும், இந்து மதமுமாகும்.

கடவுளும் அப்படித்தான். ஒரே கடவுள் கோயிலுக்குள் இருந்தால் பார்ப்பானைத் தவிர யார்தொட்டாலும், கிட்டேபோனாலும் தீட்டு ஆகிவிடும். அதே கடவுள் ஆலமரத்தடியிலோ, தெருவிலோ, திண்ணையிலோ இருந்தால் யார் வேண்டுமானாலும் தொடலாம்; நாய்கூட நக்கிச் சுவைக்கலாம். கோயிலுக்குள் இருந்தாலும் எலி, கரப்பான், பூச்சி, பூனை உலாவலாம்; மேலேறி விளையாடலாம்.

தமிழ்நாட்டு சிவனும், தமிழ்நாட்டு விஷ்ணுவும், உலகில் 'சிறந்த' ஸ்தலங்களான காசியிலும் பண்டரிபுரத்திலும் ஜகநாத்திலும் இருந்தால் யாரும் தொட்டுக் கட்டித் தழுவிக் கும்பிடலாம்.

பஞ்சாபில் உள்ள ஆரிய சமாஜத்தார் வேதத்தை 'பஞ்சமர்' உட்பட நாய், கழுதை, குதிரைகளுக்கெல்லாம் கேட்கும்படி வரட்டுக் கத்து கத்தலாம். தமிழ்நாட்டில் வேத சப்தம் நம் காதிலேயே விழக்கூடாது என்பார்கள்.

பார்ப்பன ஆச்சாரம் 1900-ல் ஒரு விதம்; 1940-ல், ஒரு விதம்; 1940-க்குப் பின் ஒரு விதமாகத்தான் இருக்கிறது.

1930-ல் கோயிலுக்குள் பஞ்சமர் போகக்கூடாது. மலையாளத்தில் 'நாலாவதர்' களிலும் சிலர் போகக்கூடாது. அங்கு, இன்று எல்லோரும் 'செரமர்' உட்பட எல்லா மக்களும் போகலாம்; இதனால் எந்தக் கடவுளும் ஓடிப்போய்விடவில்லை.

இன்றைய தினமும் சில ஸ்தலங்களில் கலவி சுகம்கொடுக்கப் பார்ப்பனப் பெண்களும் இருந்துவருகிறார்கள். அதற்குப் பார்ப்பன இளைஞர்களே தரகர்களாக இருக்கிறார்கள். சில இடங்களில் அர்ச்சகர்களில் சிலர் தங்களுக்கென்று ஒரு மனைவியும், பக்தர்களுக்கென்று ஒரு மனைவியும் உடையவர்களாக இருக்கிறார்கள். அர்ச்சகர்கள் என்றால் அவர்களைப் பார்ப்பனர்கள் இழிவாய் நினைத்த காலம் ஒன்று இருந்தது. இன்று அவர்கள் 'சரியான' பார்ப்பனர்களாகவே ஆகிவிட்டார்கள்.

வைணவ அர்ச்சகர்களும், சைவ குருக்களும் கொஞ்ச காலத்திற்கு முன்பு மலையாளிகளைப்போல் முன்குடுமிகள் வைத்துக்கொண்டிருந்தார்கள்; இப்போது அந்தப் பேதமே போய்விட்டது.

இன்று பார்ப்பனருக்கு எது எப்படிப் போனாலும் தங்களுக்குப் பெரியசாதி என்கின்ற பட்டம், அந்தஸ்து இருந்தால் போதும்; அதற்காக எந்தக் காரியத்தையும், எப்படியும் நடத்திக்கொள்ளலாம் என்பதை உயர் தர்மமாகக் கொண்டிருக்கிறார்கள்.

['விடுதலை'-தலையங்கம்—4-3-1969

10. சாமியும், சமயமும், சமயாச்சாரிகளும்

தேவர்கள் என்றும் தெய்வங்கள் என்றும் அவதாரமென்றும் ரூபமென்றும் அதற்காக மதம் என்றும் சமயமென்றும், அதற்காக மதாச்சாரியர்கள் என்றும், சமயாச்சாரிகள் என்றும் கட்டியழுபவர்கள்—ஒன்று வயிற்றுப் பிழைப்புப் புரட்டர்களாயிருக்க வேண்டும்; அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாகப் பலதடவைகளில் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

அதுபோலவே, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படு பவையும் ஒரு 'சாமி' என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவ மென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.

உலகத் தோற்றத்தையும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்வு அழிவு என்பவை களான பலவகைத் தன்மைகளையும், மேற்படி 'சாமி'களோ 'ஆசாமி'களோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்ப வர்களும் ஆச்சார ஞானமற்றவர்கள் என்றே சொல்லலாம்.

மற்றபடி, மேற்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேற்கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப் பட்டிருக்கின்றது என்றும் அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத் தன்மைக்கு ஆதாரமான குற்றங்களையுந்தான் கடவுள் என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், 'தானாகத் தோன்றிற்று', 'தானாக வாழ்ந்தது', 'தானாக அழிகின்றது' என்கின்ற யாவும் இயற்கை யென்றும், அந்த இயற்கைக்குத்தான் 'கடவுள்', 'ஆண்டவன்', 'சாமி', 'தெய்வம்' என்றும் சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் அந்த இயற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்கவேண்டுமே என்றும், அந்தக் காரணத்திற்கோ சக்திக்கோதான் கடவுள், 'சாமி', 'ஆண்டவன்', 'தெய்வம்' என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருப்பவர் களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாகத் தகராறு இல்லை என்று சொல்லிக்கொள் கின்றோம்.

ஆனால், அந்தக் கடவுளுக்குக் கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண்-பெண் தன்மை, பெண்சாதி புருஷன், குழந்தைக் குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்யவேண்டும் என்றும், அதற்குக் கோவில் கட்டி கும்பா பிஷேகம் செய்து தினம் பல வேளைகள் பூசை செய்யவேண்டும் என்றும், அச் சாமிகளுக்குக் கலியாணம் முதலியவைகள் செய்வதோடும், தேவடியாள் வீட்டிற்குக் கடவுள் சென்றார் என்று அழைத்துக் கொண்டு போவதோடும், அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான 'திருவிளையாடல்கள்' முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக் கடவுள்களின் பெருமையைப்பற்றியும், திருவிளையாடல்களைப் பற்றியும் பாடவேண்டும் என்றும், அப் பாடல்களை 'வேதமாக', 'திருமுறை'யாக, 'பிரபந்தமாக', கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளவேண்டும் என்றும், அப் பாடல்களைப் பாடினவர்களே 'சமயாச் சாரியர்'களாக, 'ஆழ்வார்'களாக 'சமயக்குரவர்'களாக, 'நாயன்மார்'களாக, பல அற்புதங்கள் செய்தவர்களாகக் கொள்ளவேண்டும் என்றும், இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக் கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த—செய்கின்ற—செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங் களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் 'சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும், வயிற்றுப் பிழைப்புச் சுயநலப் பிரச்சாரமும் ஒழியவேண்டுமென்பதுதான் நமது கவலை.

ஏனெனில், இந் நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள்போல நம் நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்பட்டு, மற்ற நாட்டவர்களைப்போல் விஞ்ஞான (சயின்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அன்னிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்ப முடியாமல், வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்துகொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம் மூடநம்பிக்கையும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும், இவை களினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக

நாம் முடிவு செய்துகொண்டிருக்கிறோம். நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுக் கிடப்ப தற்கும், ஒருவரை ஒருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப் பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களிடம் ஒழுக்கங்கள் குன்றி, மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியர்கள் என்பவர்களும், அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்குமேடையிலிருந்தும் சொல்லத் தயாரா யிருக்கின்றோம்.

நிற்க, இக் கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கலியாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலட்சேபத்திற்கும், இக் கடவுள்களைப்பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக் கடவுள்களின் அவதார மகிமைகளையும், 'திருவிளையாடல்களையும்', அவைகளைப்பற்றிய பாட்டுகளையும் அச்சடித்து விற்கும் புஸ்தகங்களை வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களிலும், நேரங்களிலும் நம்முடைய ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் 20 கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருடா வருடம் பாழாகிக்கொண்டு வருகின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இந்த இருபது கோடி ரூபாய்கள் இம் மாதிரியாக வீணாக்கப்படாமல் மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (Science) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால் நம் நாட்டில் மாத்திரம் வாரம் இலட்சக்கணக் கான மக்களை நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்குக் கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும், தொழிலாளிகள் கஷ்டத்திற்குள்ளாவார்களா? தீண்டக் கூடாத—நெருங்கக்கூடாத—பார்க்கக்கூடாத என்கிற மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்துகொண்டிருக்க முடியுமா? 100-க்கு மூன்று பேர் களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக்கொண்டு, இரத்தத்தை அட்டை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக் கொண்டும் நம்மையும், நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக்கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்துகொண்டும் இருக்கமுடியுமா என்று கேட்கின்றோம். நமக்குக் கல்வி இல்லாததற்கு சர்க்கார்மீது குற்றம் சொல்லுவதில் கவலை கொள்ளுகின்றோமே யல்லாமல், நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளைகொண்டிருப்பதைப்பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.

நிற்க, 'அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபகாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன். அதனால் உனக்கு என்ன தடை?' என்று யாராவது சொல்ல வருவார்களானால் அதையும் (அதாவது அக் குணங்கள் என்று சொல்லப் பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ, 'கடவுள்'களாகவோ தான் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய, வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

இதுபோலவேதான் 'மதம்' என்பதும் 'சமயம்' என்பதும் 'சமய நெறி' என்பதும். மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய நடையைப்பற்றிய கொள்கை களைக் கொண்டது என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை. 'அன்பே சிவம்', 'சிவமே அன்பு' என்பதான சிவனிடத்தில் நமக்குச் சண்டையில்லை. அன்பு என்னும் குணம்தான் 'சிவம்'; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவதுதான் சைவம்—என்பதானால் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக்

கொள்ள ஆசைப்படுகின்றோம். அதுபோலவே, ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள்தாம் விஷ்ணு; அக் குணங்களைக் கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்—என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை என்று சொல்வதோடு, நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச் 'சைவத் தன்மை'யும் 'வைணவத் தன்மை'யும் ஏற்படவேண்டும் என்றும் தவம் கிடக்கின்றோம்.

அப்படியில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் எனவும், அதை வணங்குகின்றவன்தான் 'சைவன்' என்றும், அப்படி வணங்குகிறவன் இன்ன மாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி 'குறி' இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றிப் பாடின—எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும் தான் சைவம் என்றும், மற்றபடி வேறு எந்த உருவமோ பேரோ உள்ள 'கடவுள்' என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்லுவதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன், அக் கொள்கைகளையும் அச் சமயங்களையும் அக் கடவுள்களையும் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும், பல சமயப் புரட்டர்கள் இம் மாதிரி விவகாரம் வரும்போது, 'நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ, ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை' என்றும் மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரந்தான் கடவுள், மரம் செடிதான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், அதன் மணம்தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பந்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றந்தான் கடவுள் என்பதாகத் தமக்கே புரியாமல் உளறுவதும்; மறுபடியும் சிவன்தான் முழு முதற் கடவுள்; மற்றபடி விஷ்ணுவும், பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள்; சைவ சமயந்தான் உண்மைச் சமயம், அதுதான் 'முக்தியளிக்க வல்லது' என்பதும், வைணவ சமயந்தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு என்பதும், 'அச் சிவனையோ, விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக் கடவுள்களையும் அச் சமயங்களையும் பாடினவர்கள்தாம் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள், சமயாச்சாரிகள் என்பதுமாக மக்கள்முன் உளறிக்கொட்டி, அவர்களது மனத்தைக் குழப்பிச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களைக் குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றுதான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனத்தில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப்பற்றிய தர்க்கங்களும், தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூடச் சொல்லுவோம்.

எனவே, மக்களின் பாரம்பரியமானதும், எங்கும் பரவியிருக்கும்படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம்.

ஏனெனில், இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது, பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையேதான் பெரிதும் (இந்த அறியாமை) இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

நிற்க, 'சர்வ வல்லமையுள்ள' என்று சொல்லப்படுவதான ஒரு 'கடவுள்' இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக் கொள்ளுவதாகவே வைத்துக் கொண்டாலும், மனிதனின் வாழ்க்கைக்கு அக் கடவுளின்

சம்பந்தமோ, வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்குச் சில குணங்களைக் கைக் கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா? என்பதே நமது கேள்வி. அன்றியும், அப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது, தனக்குக் கோவில் கட்டவேண்டு மென்றாவது, பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலியவைகள் செய்யவேண்டு மென்றாவது ஆசைப்படுமா? அல்லது, மக்கள் சில குணங் களைக் கொண்டு மற்ற ஜீவன்களிடத்தில் இன்ன இன்ன விதமாய் நடந்துகொள்ள வேண்டும் என்பதை விரும்புமா என்பதை யோசித்தால், 'கடவுள்' என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா, வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும், சர்வ வல்லமையுள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும், சமயங்களும் வேண்டுமா என்றும், அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருசுப்படுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இதுபோலவே, ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும், புத்தமதம் என்பதில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கங்களைத் தவிர, வணக்கம் என்பதை அம் மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும், அவர் கடவுளைப் பற்றியோ, கடவுளை வணங்குவதைப் பற்றியோ, கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப் பற்றியோ கவலை கொண்டு, ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடைக்கவில்லை. அன்றியும், அதைப்பற்றின வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்ப தாகச் சொல்லுபவர்களும் காணக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவ ராகவும், அக் கொள்கையை, அம் மதத்தை, அச் சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல்–50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும் ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும், அப்படிப்பட்ட புத்தரைத் தங்கள் கடவுள் அவதாரமென்றும், தீர்க்கதரிசி என்றும், பகவான் என்றும் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்து மதம் என்பதி லேயே, சைவ மதம் என்பதிலேயே, வைணவ மதம் என்பதிலேயே பல கோடிக்கணக்கான வர்கள் இருப்பதோடு, அதற்குப் பல ஆதாரங்களும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை யாராவது மறுக்க முன்வருகின்றார்களா?

மனிதனுக்கு ஏதாவது ஒரு மதமோ, சமயமோ வேண்டியது அவசியம் என்று யாராவது சொல்ல வருவார்களானால், புத்தமதம் என்பதும், உலகாயத மதம் என்பதும், சூன்ய மதம் என்பதும், இயற்கை மதம் என்பதும் 'மதங்கள்' என்றுதானே சொல்லப்படு கின்றன? அப்படியிருக்கையில் அம் மதங்களில் ஏதாவது ஒன்றைக்கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே, அது எப்படிக் குற்றமுடையதாகும்? எப்படிப் பல மதங்களுக்கும், சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றனவோ, அதுபோலவே இம் மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் எந்த மதக்காரனாகவோ, எந்த சமயக்காரனாகவோ, இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்கவேண்டும் என்பதாகக் கட்டளையிடவும், இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததா, அல்லது மற்றவனுடைய நிர்ப்பந்தமா என்று கேட்கின்றோம். 'துறவி'க்கு மதம் ஏது? 'ஞானி'க்குச் சமயம் ஏது? கடவுள் ஏது? 'வேதாந்தி'க்கு 'மதம்' ஏது? கடவுள் ஏது? சகலத்தையும் துறந்தவர்தானே—முற்றும் துறந்த முனியல்லவா, 'துறவி'? சகலத்தையும் சரி என்று எண்ணுகிறவர்தானே 'ஞானி'?

சகலமும் 'மித்தை, பொய், மாய்கை' என்று எண்ணுகிறவன்தானே 'வேதாந்தி' என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக்கொள்கின்றதா, இல்லையா? அங்ஙனமாயின், இம் மூவர்களும் 'நாத்திகர்'களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ, 'ஞானி' ஆவதற்கோ, 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமையில்லை என்று கேட்பதோடு, எந்தப் புஸ்தகத்தைப் படித்துவிட்டு, யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்தச் சமயத்தை ஏற்று, எந்தக் கடவுளைத் தொழுது துறவியாகவோ வேதாந்தியாகவோ ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தமுண்டா என்று கேட்கின்றோம். இந்த விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்குச் சற்று மனக் கசப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும், நம் நாட்டின் விடுதலை, கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில்தான் இருக்கின்றதே ஒழிய, வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும், பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும், அடிமைத் தனத்திற்கும், தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றன என்பது சத்தியமானாலும் அவ் வக்கிரமமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்துமதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக் கொள்கைகளின் பேரில்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்பது நமது முடிவு. இம் மூடக் கொள்கைகளை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரர்களையும் பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்து விட்டாலும், மறுபடியும் வெள்ளைக்காரர்களும் பார்ப்பனர்களும் வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி, ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதான் வருவார்கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அன்னிய அரசாங்கமோ இல்லாமல் நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் ஏன் அடிமைகளாக, தற்குறிகளாக, தாசி மக்களாக, தீண்டப்படாதவர்களாக இருந்து வந்திருக்கின்றோம் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டிக்கொள்கின்றோம்.

எண்ணிப் பார்க்க ஏதாவது கஷ்டமாயிருந்தாலும் நம் நாட்டு மக்களால் 'சாமுண்டீஸ்வரி' பேராலும், 'பத்மநாபசாமி' பேராலும், 'கிருஷ்ணசாமி' பேராலும் ஆளப்படும் மைசூரையும், திருவாங்கூரையும், கொச்சியையும் தயவுசெய்து சற்றுத் திரும்பிப் பாருங்கள் என்று வேண்டிக்கொள்கின்றோம்.

ஆட்சிமுறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளைக்கார அன்னிய அரசாங்கத்தைவிட உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா, கொஞ்சமா என்பதைக் கவனித்தால், வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களைச் செய்கின்றார்களா, அல்லது இந்த மதமும் கடவுளும் மத நெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடம் கொடுக்கின்றனவா என்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே, நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்னவென்றால் மூட நம்பிக்கை ஒழியவேண்டும்; அறிவுக்குச் சுதந்திரமும், விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சிபெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும். இம் மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமயாச்சாரிகளும் சந்திக்கு வந்தே தீர வேண்டுமேயல்லாமல் இதற்கு வேறு பரிகாரமோ, ராஜியோ இல்லை.

['குடி அரசு'—தலையங்கம்—1-7-1928]

11. சைவ சமயம்

கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்குமேல் போகின்றது.

சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாகவேண்டும் என்று அவர்கள் கட்சி சேர்க்கிறார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான்—அதாவது, 'சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாகவேண்டும்; அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடை பட்டுப் போகும்' என்று கூச்சல் போட்டார்கள்; கூலி கொடுத்தும் கூச்சல்போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சலையும் அடக்கிக்கொண்டு இப்போதும் நமது இயக்கம் தலை நிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கிவிட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இந்தச் சைவ சமயத்தார்கள் என்பவர்கள்—சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும்பொழுதும், வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும்பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு, நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின்மீதும் புகழ் புராணமும், கவியும் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்து சங்கராச்சாரியாரைத் தாக்கி வரும்போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவப் புராணங்களின் வண்ட வாளங்களை வெளியாக்கும்போதும் நமக்கு உதவிசெய்து வந்தார்கள். இது மாத்திரமல்லாமல், இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், இந்துமதம் என்று சொல்லப் படுவது பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும்போதும் அதை ஆதரித்து அதற்கு வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக, சைவ மதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம், 'சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றது, மோட்சத்திற்குத் தடையாய் நிற்கின்றது' என்று சொல்ல வந்துவிட்டார்கள். எனவே, சைவமதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாது வேறு தனி மதம் என்றோ, அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்லமுடியுமா என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டுச் சைவர்கள் பெரும்பாலும், 'நாங்கள் பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்' என்கின்றார்கள். அன்றியும், பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பவற்றையும் சைவர்கள் தங்களுக்குச் சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள்.

பார்ப்பனர்களின் 'மோட்ச' சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக் கொள்ளுவதில்லை என்கிறார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ளமுடியாது என்பதுடன், அவைகள் பொய் யென்றும் கற்பனை யென்றும் சொல்ல முன்வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றோர்களும் தங்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்லரென்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் எவ்வளவோ—அதாவது 'ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!' என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து, ஆரியத்திற்கும் தங்களுக்கும், தங்கள் சைவ மதத்திற்கும் சம்பந்தமில்லை என்றும்; தாங்கள் 'தனித் தமிழ்ச் சமயத்தார்' என்றும் சொல்லிக் கொள்ளுவதுடன், அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக, 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந் நிலையில் சைவ மதம் என்றால் என்ன?

முதலாவதாக, கற்பனை என்றும், பொய் என்றும், ஆபாசமென்றும், அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவ மகாபுராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், சிவனுக்கோ சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதைக் கூர்ந்து நோக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இரண்டாவதாக, இந்துமதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித் தனியாகவோ, பொதுவாகவோ எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ—சைவக் கடவுள்களும் 'சுரர்கள்' என்னும் 'தேவர்'களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்துவந்த 'அசுரர்கள்' என்னும் 'அரக்கர்களை'க் கொன்று வென்று, யாகத்தைக் காக்க வந்தவை என்கின்ற அஸ்திவாரம் தவிர, வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா என்று பார்க்கும்படி வேண்டுகிறேன்.

அல்லது, 'பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக்கொள்ளாததினாலோ நிந்தித்ததினாலோ, உலகில் நீதியும் ஒழுக்கமும் கெட்டுப் போய்விட்டன' என்று சொல்லிக்கொண்டு அவதாரம் செய்ததாகவோ, தோன்றியதாகவோ அல்லாமல், வேறு வழியில் வந்த ஏதாவது கடவுள்களுண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமய சம்பந்தமான எந்தப் புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்களும், 'வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களானார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து, வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்' என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும், வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு, அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு, ஆரியர்களால் புனையப்பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும், 'தமிழ் மறை'க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கின்றோம்.

சைவம், சிவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்கின்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கைச் சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும், சைவக் கடவுள்கள் பெயரும், அக் கடவுள்களின் பெண்சாதிப் பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியமொழிப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும், அப் பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக் காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தாம் ஆதாரமேயொழிய வேறில்லை. மற்றும் அப் பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழிபெயர்த்ததாகச் சொல்லப்படுபவைகளேயல்லாமல் வேறல்ல.

நிற்க, சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில், அதாவது வட நாட்டில் பரவியிருப்பதாகச் சொல்லமுடியுமா? வடநாடு முழுதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல்—வடநாட்டில் மாமிசம் புசிக்காதவனுக்கு வைணவன் என்று சொல்லப்படுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக்கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும், சைவ சமயத்தார்களோ, சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். பாக்கி உள்ள மக்கள்—அதாவது

100-க்கு 90 பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரைவீரன், பேச்சி என்பன போன்ற கடவுள் வணக்கக்காரரும், மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறவர்களுமே தவிர வேறல்லர்.

ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டிவைத்த கோயில் களும், அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடமிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்துச் சம்பாதித்த பணத்தைக்கொண்டு கீர்த்திக்கும், தங்களை உயர்த்திக் கொள்வதற்கும், சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுதுபார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால், இவ்வளவு பெருமைகள்கூட, சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொது வாக யோசிக்குமிடத்தில்—பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனீயத்திற்கும், பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே, இப்படிப்பட்ட சைவத்தைப் பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் நாட்டின் நலத்திற்கோ, மக்களின் மோட்சத்திற்கோ எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டுவிடும் என்பதைப் பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—7-10-1928]

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

வைஷ்ணவ மத நாலாயிர பிரபந்தமும், சைவ மத தேவாரமும் மற்றும் இவை போன்றவை தோன்றியதற்குக் காரணமெல்லாம் புத்தருடைய கொள்கையை ஒழித்துக் கட்டி—சாதி, மத, கடவுள் வித்தியாசத்தை நிலைநாட்டும் வேதசாஸ்திர புராண இதிகாசங்களைக் காப்பாற்றவும், அதற்காகக் கற்பிக்கப்பட்ட கடவுள்களையும் கடவுள் தன்மைகளையும் கடவுள் செய்கைகளையும் காப்பாற்றவுமேதாம்.

இந்த மாதிரி ஏற்படுவது—நாமம் போடுவதும், சாம்பல் அடிப்பதும் நம் நாட்டிலே தான் ஏற்பட்டிருக்கிறதே அன்றி, மற்ற எந்த நாடுகளிலும் இருப்பதாகச் சொல்ல முடியாது. பக்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இங்கு மாதிரி மற்ற மேல்நாடுகளில் தோன்றியும் இருக்கமுடியாது.

ஆகவேதான், இந்த நாட்டில் சாதிமதக் கோட்பாடுகளுக்கு இருந்த பலமான ஆதரவால்தான், சாதியை ஒழிக்கவேண்டுமென்று தோன்றியவர்கள் எல்லாம் ஒழிக்கப் பட்டு வந்திருக்கிறார்கள். மடங்கள் இடிக்கப்பட்டதும், கொளுத்தப்பட்டதும், மக்கள் கழுவேற்றப்பட்டதுமான சரித்திரங்கள்—கொண்டாட்டங்கள் இதை மெய்ப்பிக்கும்.

[சென்னை திருவொற்றியூரில், 19-2-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை.' 21-2-1952]

12. சமரச சன்மார்க்கம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக் கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில், எது எது சமரச சன்மார்க்கம் என்கிறோமோ அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நம்நாட்டில் மட்டுமல்ல; உலகம் முழுவதிலும் இவ்வாறே அமைக்கப்பட்டிருக்கின்றது.

முதலாவது கடவுள், மதம், விதி, சாதி, பணம், தொழில் முதலியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்க மல்லாமல்—நியாய பூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப்பற்றிப் பேசவேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்படவேண்டும் என்கின்ற முறையில் யோக்கியர்களாலோ, அறிவாளிகளாலோ பேசமுடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும்; அதோடுமாத்திரமல்லாமல், சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின்மீதே அமைக்கப்பட்டுள்ளவைகளாகும்.

மேற்கண்டவை சம்பந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்வேன். இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம் பக்கச் சாதியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாயும் இருக்கும். நான் உண்மையான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார்—அடைந்த சமூகத்தார் அடைந்த தனிமனிதர்கள் யார்யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்த்தெறிந்துதான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள்; இவைகளில் சிறிது தாட்சண்யப்பட்டவர்கள்கூட தோல்வியடைந்து விட்டார்கள்.

கடவுளையும், மதத்தையும், பணக்காரனையும் வைத்து சமரச சன்மார்க்கம் செய்ய முடியாதென்று கருதித்தான் ரஷியர்கள் பாதிரிமார்கள் தொல்லைகளையும், சர்ச்சுகளையும் பணக்காரத் தன்மைகளையும் அழித்துத்தான் சமரசம் பெற்றார்கள்.

தற்போதைய ரஷியச் சரித்திரத்தில் சமரசத்திற்குப் பாதிரிமார்கள் எதிரிகளென்றே தீர்மானிக்கப்பட்டு, அவர்களை அழித்துவிட்டார்கள். அழித்துவிட்டார்கள் என்றால் கொன்றுவிட்டார்கள் என்பது கருத்தல்ல. ஏதோ சிலரை, அதாவது சமரசத்திற்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தவர்களில் சிலரைத்தவிர மற்றவர்களைப் பட்டாளத்தில் சேரச்செய்தார்கள்; சிலரை விவசாயத்தில் போட்டார்கள்; சிலரை வைத்தியத்தில் போட்டார்கள்; வேறு காரியங்களுக்கு உதவாதவர்களைக் காவல் காக்கப்போட்டார்கள். அதுபோலவே, சர்ச்சுகளை தொழிற்சாலை, பள்ளிக்கூடம் முதலியவைகளாக மாற்றினார்கள். இவைகளுக்கு உதவாத போக்குவரத்துக்கு இடையூறானவைகளை இடித்தார்கள். பணக்காரர்களின் சொத்தைப் பிடுங்கி பொதுஜன சொத்தாக்கி, பூமி இல்லாதவர்களுக்கு பூமி, தொழிலில்லாதவர்களுக்குத் தொழில்; படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பு முதலாகியவைகள் கொடுப்பதற்கு உபயோகப் படுத்தினார்கள். கலியாண முறையை ஒழித்துப் பெண் அடிமையை நீக்கினார்கள். கண்டபடிப் பன்றிகளைப்போல் பிள்ளை பெறும் முறையை நிறுத்தச்செய்து, அளவுபடுத்தி ஆண் பெண் இன்ப வாழ்க்கைக்கு வழி செய்தார்கள். இன்னும் பல காரியங்கள் செய்தார்கள். ஆனால், நமக்கு இவை பொருந்துமா என்று சிலர் கேட்பார்கள். யார் கேட்பார்களென்றால், பணக்காரன், பாதிரி, உயர்ந்த சாதிக்காரன், அரசன் ஆகியவர்கள்தான் கேட்பார்கள். இவர்கள் நமது நாட்டு ஜனத் தொகையில் 100-க்கு 5 அல்லது 6 பேர்களே இருப்பார்கள். ஆதலால் குறைந்த எண்ணிக்கையுடையவர்கள்—அதிலும் தங்கள் சுயநலத்திற்கு என்று சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டுமென்றால் யார் சம்மதிப்பார்கள்? முதலாவது, இவர்கள் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளுகிறீர்களா? இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றீர்களா? என்ன சொல்லுகின்றீர்கள்? ஆகவே, கடவுள், மதம், பணக்காரன் இம்மூன்றும் இன்றே ஒழியவேண்டும் என்கின்ற ஆத்திரமுமில்லை. ஏனெனில், இன்னும் அனேக நாடுகள் இருக்கின்றன. அவை இப்போதுதான் முயற்சிக்கின்றன. ஆகையால், வரிசைக் கிரமத்தில் அந்த முறை நமக்கு வரும் என்கின்ற தைரியம் உண்டு. ஆனால், இங்கு மற்ற நாட்டில் இல்லாத சாதி முறை என்பது இச் சன்மார்க்கத்திற்கு விரோதமாய் இருக்கின்றது. அதை அழித்தே ஆகவேண்டும். நீங்கள் இவற்றிற்கெல்லாம் எத்தனை காலமாய் அடங்கி வந்திருக்கிறீர்கள்? என்ன பலன் அடைந்துள்ளீர்கள்? இன்றைய நிலையேதான் உங்கள்

வாழ்க்கையின் பலன் என்று நினைத்தால், எதற்காக நாளைய தினம் வரை உயிருடன் இருக்கின்றீர்கள் ?

மனிதன் வாழ ஏதாவது இலட்சியம் இருக்கவேண்டும். சும்மா அறைத்த மாவை அறைத்துக் கொண்டிருப்பதுபோல், வெறும் ஆகாரம் உட்கொள்ளவும் உண்டதை மல மாக்கவும் என்பதற்காகவும் அறிவற்ற உயிர்கள் இருக்கின்றனவே! இவை போதாவா? இனி, மனிதன் பகுத்தறிவுள்ளவன் என்றும் சொல்லிக்கொண்டு, பண்டிதன் என்றும் பணக் காரன் என்றும் கடவுளை அடையும் மார்க்கங்களையும் பின்பற்றி, கடவுளென்று பணத் தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் செலவுசெய்கின்ற மனிதனும்—நல்ல ஆகார வஸ்துக் களை மலமாக்குவதற்காக வாழவேண்டுமா? இவ்வித மனித சமூகம் அழிந்துபோவது ஜீவகாருண்யத்தை உத்தேசித்தாவது மிகவும் அவசியம்.

உங்கள் இலட்சியங்களை அடைய முயலுங்கள்; மற்றொரு 'பிறவிக்கு என்று அயோக்கியர்களின் வார்த்தைகளை நம்பி எதிர்பார்த்துக்கொண்டு வீணாய் ஏமாந்து போகாதீர்கள். முன்பிறவி சங்கதி ஏதாவது ஒன்று, உங்கள் சரீரத்திலிருந்து உதிர்ந்த ஒரு மயிர்த்துண்டாவது உங்களுக்கு இந்தப் பிறப்பில் ஞாபகமிருந்தால் அல்லவா இந்தப் பிறவியின் காரியங்களை அடுத்த பிறவியில் அனுபவிக்க முடியப்போகின்றது? அன்றியும், கடவுள் உங்களை இப்படிச் செய்துவிட்டார் என்று முட்டாள்தனமாய்க் கருதி உங்கள் துன்பத்தை நிலை நிறுத்தாதீர்கள்! உணர்ச்சியும் அறிவும் அற்ற சோம்பேறிகளுக்குத்தான் கடவுள்செயல் பொருத்தமாக இருக்கும். நீங்கள் ஏன் சோம்பேறியாய் இருக்கின்றீர்கள்! கடவுளுக்குக் கோயில்கட்டி, உருப்படிகளை அதிகமாக்கி நமது குறைகளையும் கஷ்டங் களையும் முறையிட்டு, முறையிட்டு அழுதுவந்தது போதும். இனி அந்தப் பக்கம் திரும்பிப் பாராதீர்கள். உங்கள் அறிவையும் மனிதத் தன்மையையும் திரும்பிப் பாருங்கள்; அது சொல்கின்றபடி நடவுங்கள்; அதனிடம் நம்பிக்கை வையுங்கள். ஆகையால், மற்றநாட்டு வர்த்தமானங்களை உணர்ந்து நீங்கள் நடுநிலைமையில் இருந்து உங்கள் அறிவுக்கே பூசை போட்டீர்களானால், வந்துவிட்டது அன்றே சமரசம்! சன்மார்க்கம்! விடுதலை! இதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

[பெருந்துறை சமீபம் கிரேநகரில், 26-1-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1931]

13. மதப்போட்டி

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாகவேண்டும்; மோட்சம் நரகம் இருந்தாகவேண்டும்; கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாகவேண்டும்.

இவை இல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்கமுடியாது. இந்து மதத்துக்கோ இவைகள் மாத்திரம் போதா. அதாவது, பல கடவுள்கள் வேண்டும்; பலவிதமான மோட்சங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும்; மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்–பின் ஜன்மங்கள் வேண்டும்; பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும். இவ்வளவும் போதாமல் கடவுளை நேரில் கண்டு மோசத்திற்குப்போன பலவித மான பக்தர்கள் வேண்டும்.

இந்தக் காரியங்கள் சிறப்பாக இந்து மதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டிலும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொறுத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய, காரியங் களைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பியடித்தது போலவேதான் இருக்கிறது.

உதாரணமாக, வைணவத்தில் இராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவும் அவரது மனைவியாகிய இலட்சுமியும் கலவி செய்ததிலிருந்தே ஏற்பட்டது என்றால்; சைவத்துக்கு, கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததிலிருந்தே ஏற்பட்டது.

எப்படியெனில், விஷ்ணுவும் இலட்சுமியும் பகல் நேரத்தில் கலவியிலிருந்தபோது சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக்காண ஆசைப்பட்டதாகவும், துவார பாலகர்கள் தடுத்ததாகவும், அதற்காக அவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச் சாபம் தீரவேண்டியதற்காகவே இராமாயணம் முதலியவை ஏற்படவேண்டியதாக ஆயிற்றாம்.

அது போலவே, பரமசிவன் பார்வதியோடு பலநூறு வருஷங்கள் விடாமல் கலவி செய்துகொண்டு இருந்ததாகவும், அதனால் ஏற்படும் வீரியமும், கர்ப்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக் கூடியதாகிவிடும் என்று தேவர்கள் முறையிட, கலவி முற்றுப் பெறுவதற்கு முன்பாகவே கலவியை நிறுத்திக் கொள்ளவேண்டியதாகி, அதனால் இந்திரியம் நிலத்தில் விழுந்து, பிறகு என்னென்னமோ ஆபாசமாகி, கடைசியாக 'சுப்பிரமணியர்' தோன்றி கந்தபுராணம் ஏற்பட வேண்டியதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும், பூபாரம் தீர்க்கவும், இராட்சதர்களை அழிக்கவும் விஷ்ணு இராமராய்த் தோன்றினார்.

அதுபோலவே, பூபாரம் தீர்க்கவும், அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

இராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்.

சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

இராமன் இராட்சதர்கள் என்பவர்களைக் கொன்றான்.

சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக் கொன்றான்.

இராமன் இராட்சதர்களைக் கொல்லும்போது (மூலபலம்) கொல்லக் கொல்ல உற்பத்தியாகிக் கொண்டே வந்தது.

சுப்பிரமணியன் அசுரர்களைக் கொல்லும்போது கொல்லக்கொல்ல அசுரர்களின் தலைகள் முளைத்துக்கொண்டே வந்தன.

இராமன் பெண்சாதி சீதை ஒரு வளர்ப்புப் பெண், சமுத்திரத்தில் கண்டெடுக்கப் பட்டவள்.

சுப்பிரமணியன் பெண்சாதியும் ஒரு வளர்ப்புப் பெண்; வள்ளிச் செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் இனியும் அனேக விஷயங்களில் கடவுள்களைப் பற்றிய கதைப் பொருத்தங்களைக் காணலாம்.

அதுபோலவே சைவ, வைணவ ஆச்சாரியார்கள் விஷயங்களிலும், சைவத்துக்கு நாயன்மார்களாகவும்—வைணவத்திற்கு ஆழ்வாராதிகளாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்ப தோடல்லாமல், பல பக்தர்களையும் அவர்கள் செய்த காரியங்கள்—அதன் பயனாய் அவர்கள் அடைந்த முக்திகள் ஆகிய விஷயங்களிலும் ஒன்றுபோலவே கதைகள் கற்பிக்கப் பட்டிருப்பதையும் காணலாம்.

வைணவ பக்தர்கள் விஷயத்துக்கு, 'பக்த லீலாமிருதம்' என்னும் புத்தகம் போலவே—சைவ பக்தர்கள் விஷயத்துக்கு 'பெரிய புராணம்' என்னும் புத்தகம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால், சைவ பக்தரிலும், ஒரு குயவர் இருக்கிறார்.

எப்படியெனில், வைணவக் குயவர் கோராகும்பராய் இருந்தால், சைவக் குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார். இரு குயவ பக்தர்களுடைய கதையும் ஒன்று போலவே—அதாவது கோராகும்பரும் தன் பெண்சாதியுடன் பேசாமலிருந்து, கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படிசெய்து சேர்த்துவைக்கிறார்.

திருநீலகண்ட குயவனாரும் தன் பெண்சாதியோடு பேசாமலிருந்து, கடைசியாக சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படிசெய்து சேர்த்துவைக்கிறார்.

மற்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்கு சொர்க்கமாலா என்கின்ற தீண்டாதசாதி பக்தர் ஒருவர் இருந்து, அவரைக் கோயிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டு, கனவு கண்டு கடைசியாக விஷ்ணு வந்து அழைத்துப்போகிறார்.

சைவத்திலும் தீண்டப்படாத வகுப்புக்கு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து, பரமசிவன் வந்து கனவில் சொல்லி சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டு மத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதிரியான உயர்வும், மற்றவர்களுக்கு இழிவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு, சாதிப் பாகுபாடுகளைப் பற்றி ஒரேமாதிரியாகவே குறிப்பிடப்பட்டுப் பலப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

இவற்றுள், சைவத்தைப் பார்த்து வைணவர்கள் காப்பி அடித்தார்களா, அல்லது வைணவர்களைப் பார்த்துச் சைவர்கள் காப்பி அடித்தார்களா என்பது ஒரு ஆராய்ச்சி வேலையாக இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ்நாட்டில்தான் சைவத்தைப்பற்றிப் பிரபலமாய்ப் பேசப்படுகின்றதே ஒழிய, மற்றபடி இந்தியாவின் வடபாகம் முழுவதும், ஆந்திரதேசம் உட்பட வைணவமே மேலோங்கி இருக்கிறது. வடநாட்டில் வைணவர் என்றால்தான் மாமிசம் சாப்பிடாதவர் என்று அர்த்தமாகும்.

ஆகையால், இவை இரண்டிற்கும் மதக் கிரந்தங்கள், மதக் கதைகள் மத பக்தர்கள், மதக் கடவுள்கள் என்பவைகளில் ஒன்றை ஒன்று 'காப்பி' அடித்தோ அல்லது இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப் பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப் பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

['பகுத்தறிவு' மலர் 1. இதழ் 4-கட்டுரை—1935]

14. மதம் விளைத்த கேடுகள்

நம் நாட்டிலுள்ள மக்களிடையே சாதி காரணமாகவும், மதம் காரணமாகவும், கட்சி காரணமாகவும் மற்றும் அந்தந்த சாதி, அந்தந்த மதம், அந்தந்த இனம் அவற்றிற்குள்ளாகவே உள்ள சச்சரவுகள் இவற்றின் காரணமாகவும்—பல போராட்டங்களும் சந்தேகங்களும் வெறுப்புணர்ச்சி, துவேஷ மனப்பான்மை இத்தியாதி தீய குணங்களும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இதை வீணாக மறைத்துப் பேசுவதில் பயனில்லை. ஏதோ ஒரு மதத்தைச் சேர்ந்தவன்—ஏதோ ஒரு சாதியைச் சேர்ந்தவன்—ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்தவன் காந்தியாரைக் கொலை செய்து விட்டான் என்பதாகக் கொண்டு நாட்டில் பெரும்பாலான மக்கள் அந்தச் சாதியின் மீது, அந்த மதத்தின்மீது, அந்தக் கட்சியின்மீது வெறுப்புக்காட்டி வருகிறார்கள். எதனால் இப்படி ஒரு பெரியாரைச் சுட்டுக் கொல்லும்படியான நிலை ஏற்பட்டது என்று யாரும் சிந்திக்கவில்லை. காந்தியாரைச் சுட்டது எது? இதுபோன்ற கொடுமை இனியும் நடவாமல் இருக்க நாம் என்ன பரிகாரம் செய்யவேண்டும்? என்று யாரும் யோசிப்பதில்லை.

பார்ப்பான் ஒருவன் சுட்டான் என்ற காரணத்திற்காக அந்தப் பார்ப்பனரைத் திட்டி விடுவதாலோ, அல்லது அந்தப் பார்ப்பன சமூகத்தையே அழித்து விடுவதாலோ, எத்தகைய உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடாது. நான் கூறுகிறேன்: சுட்டது பார்ப்பான் அல்லன், சுட்டது கைத் துப்பாக்கி. அதற்காகப் பார்ப்பான்மீது கோபித்துக் கொள்ளுவதா யிருந்தால் அந்த அளவுக்கேனும் அந்தப் பார்ப்பானின் கைக் கருவியாக இருந்த அந்தத் துப்பாக்கியின்மீது நாம் கோபித்துக்கொண்டாக வேண்டும்; அதை முதலில் துண்டு துண்டாய் உடைத்துத் தூள்தூளாக ஆக்கவேண்டும். காந்தியாரைச் சுட்டுக்கொல்ல உதவியாயிருந்த துப்பாக்கியின்மீது நாம் எவ்வளவு கோபப்படலாமோ, எவ்வளவு பழிக்க லாமோ—அந்த அளவுக்குத்தான் அதை உபயோகப்படுத்திய பார்ப்பான்மீதும் நாம் கோபித்துக்கொள்ள முடியும்; பழிக்க முடியும். அவனைப் பழிப்பதாயிருந்தால் அதே அளவுக்கேனும் அவன் பின்னாடி இருந்துகொண்டு, அவனுக்கு ஆதரவாய் இருந்த மற்றவர் களையும் பழிக்க நாம் சித்தமாயிருக்கவேண்டும். அவனும் அந்தத் துப்பாக்கிபோல் அவர் களுக்கு ஒரு கருவியாகத்தான் அமைந்துவிட்டான்.

மதத்தின் பேரால் உள்ள மூட நம்பிக்கைக் கருத்துக்களும், சாதியின் பேரால் உள்ள ஆசார அனுஷ்டானங்களும், மற்றும் கடவுள்–சாஸ்திரம் இவைகளின் பேரால் உள்ள அறியாமையுந்தான் இம் மாதிரிக் காரியத்தைச் செய்யும்படி அவனைச் செய்துவிட்டன. இனியேனும் இப்படிப்பட்ட காரியம் நடவாமல் இருக்கவேண்டும். அவனைத் தூக்கில் போட்டுவிடுவதாலோ, அல்லது அவன் சேர்ந்திருந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிடுவ தாலோ, அல்லது அவனுக்காக ஆதரவாயிருந்த அத்தனைபேரையும் அழித்துவிடுவதாலோ இப்படிப்பட்ட காரியம் நின்றுவிடாது. இவை வெறும் தற்கால சாந்தியாகத்தான் இருக்க முடியும். இது ஒருபோதும் நிரந்தரமான சாந்தியாகிவிடாது. இப்படிப்பட்ட கொலை காரர்கள் தோன்ற எது ஆதாரமாயிருந்ததோ அதை அழித்து ஒழிக்கவேண்டும்.

ஒருவனுக்கு மலேரியா காய்ச்சல் வருமானால் அவனுக்கு 'கொயினா' மருந்து கொடுப்பது தற்காலிக சாந்தியாகத்தான் இருக்கமுடியும்; கொசு வலையிட்டுக் கொசுக் களினின்று பாதுகாத்துக்கொள்வதும் ஒரு தற்கால சாந்தியாகத்தான் இருக்கமுடியும். ஆனால், அந்தக் கொசுக்களின் உற்பத்திக்கே காரணமாயிருக்கும் கசமான சாக்கடை நீர்த்தேக்கங்களைச் சுத்தப்படுத்திவிடுவதுதான் நிரந்தர பரிகாரமாக இருக்கும். அதே போல், கொசுக்களான இக்கொடிய கொலைபாதகர்களின் உற்பத்திக்குக் காரணமாயிருப்பது மதமும் அதற்கு ஆதாரமாயிருந்துவரும் சாஸ்திரங்களும், புராணங்களுந்தாம். இக் கொசுக் களின் முயற்சியால்—இவர்களின் இடைவிடாத துவேஷப் பிரச்சாரத்தால் உண்டாக்கப் பட்டவன்தான் மதவெறிகொண்ட கோட்ஸே. இவன், மேலே கூறப்பட்ட மலேரியா காய்ச்சலுக்கு ஒப்பாவான். ஆகவேதான், அவனைக் கொன்றால் பயனில்லை என்றும், அவன் உற்பத்திக்குக் காரணமாயிருந்த மதத்தையும், கடவுளையும் அதற்கு ஆதாரமாய் இருந்துவரும் அனைத்தையும் ஒழிக்கவேண்டும் என்றும் நாம் கூறி வருகிறோம். இம் மதக் கொடுமைக்குக் காந்தியார் மட்டுமல்ல—நாம் எல்லோருமே பல நூற்றாண்டுகளாக ஆளாகியிருக்கிறோம். ஒரு சமுதாயத்தையோ, அல்லது ஒரு கூட்டத்தையோ, அல்லது ஒரு சாதியையோ அப்படியே அழித்து விடுவதால் இக் கொடுமை மறைந்துபோகாது.

காந்தியாரைக் கொன்றது ஒரு பார்ப்பான் என்று கூறப்படுகிறது. சித்தானந்தரைக் கொன்றது ஒரு முஸ்லிம் என்று கருதப்படுகிறது. இந்தப் பார்ப்பானோ அல்லது முஸ்லிமோ தனியாகத் தோன்றி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து விட்டதாக நாம் கூறிவிட முடியாது. இம் மாதிரிச் சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன என்பதற்குச் சரித்திர ஆதாரங்களே இன்றும் இருந்து வருகின்றன.

மதுரை மாநகரில் 8000 சமணர்கள் சைவத்தை எதிர்த்ததற்காகக் கழுவேற்றப் பட்டார்கள். அவர்களைக் கழுவேற்றியவன் பார்ப்பான் அல்லன். ஒரு முஸ்லிமும் அல்லன்.

பின் யார்? அன்றைய மதக் கருத்துப்படி அரசன் அவர்களைக் கழுவேற்ற ஆணையிட்டான். ஆகவே, அவனல்லன் கழுவேற்றியது; அவன் தழுவியிருந்த மதந்தான் அவர்களைக் கழுவேற்றும்படி அவனைத் தூண்டியது.

அத்தகைய கொடுங் கருத்துக்கள் நம்நாட்டில் அன்னியன் (பிரிட்டிஷ்காரன்) ஆட்சியால் மேலும் வளரமுடியாமல் கொஞ்சகாலம் தடைப்பட்டிருந்தது. அவன் இப்போது போய்விடவே, மறுபடியும் மதம் தன் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. அது எந்த ரூபத்திலேனும் ஆதிக்கம் செலுத்திவருமே அல்லாது சுலபத்தில் அழிந்து போகாது. மதம்—அரசியலின் பேரால் ஒரு சமயத்திலும், சமுதாயத்தின் பேரால் மற்றோர் சமயத்திலும், மொழியின் பேரால் வேறோர் சமயத்திலும் தனது ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கும். இப்படியாக வெவ்வேறு 'ஷாப்புகளை' மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு மதக் கர்த்தர்கள் அந்த மதத்தை வளர்க்கப் பாடுபடுவார்கள். அதை அடியோடு–வேரோடு கல்லி எடுத்து அதன் ஆதாரமே ஒன்றுகூட இல்லாமல் செய்தால்தான் மதம் அழியும்.

நமது சமுதாயம் இனிமேலும் சாந்தியோடு வாழ வேண்டுமானால், மதம் அற்ற ஒரு புது உலகத்தை நாம் சிருஷ்டிக்க வேண்டும்.

இந்தக் காலம் மிக நாகரிகக் காலமென்று மக்களால் கருதப்படுகிறது. ஆனால், இந்தக் காலத்தில்தான் காட்டுமிராண்டிக் காலத்தில்கூட இருந்திராத மூர்க்கத்தனமும் அயோக்கியத் தனமும் இருந்துவருகின்றன. இப்படிப்பட்ட மூர்க்கர்கள், அயோக்கியர்கள் வாழும் காலத்தை எவனாவது நாகரிகக் காலமென்று கூறுவானா? அப்படிக் கூறுவானாகில் அவனை ஓர் அறிவாளி என்றுதான் நம்மால் ஒப்புக்கொள்ள முடியுமா? அல்லது, இவைகள் இல்லையென்றாவது யாராவது கூற முடியுமா?

காந்தியாரின் உபதேசம் என்றாவது பலாத்கார உணர்ச்சியை ஊட்டும்படியாக இருந்ததுண்டா? அவர் என்றாவது பொய் வார்த்தை கூறும்படியோ, பித்தலாட்டம் செய்யும்படியோ, அயோக்கியத்தனமாக நடந்துகொள்ளும்படியோ உபதேசித்ததுண்டா? அல்லது, அம் மாதிரி இழிதன்மையில் நடந்துகொண்டவர் என்று மக்கள் கருதும்படியாக வாவது அவர் ஏதாவது செய்திருக்கிறாரா? அப்படி ஒன்றும் இல்லையே! உலக மக்களில் 100 க்கு 90 பேரால்—ஓர் உத்தமர் என்றும், மனிதருள் மேலானவர், தெய்வீகத் தன்மை பொருந்தியவர் என்றும், அறிவையே—அன்பையே—சத்தியத்தையே உபதேசித்து வந்தவ ரென்றும் கருதப்பட்டு மரியாதை செய்யப்பட்டு வந்தவர்தானே அவர்! அப்படிப்பட்டவரால் கூட 30 வருட இடைவிடாத பிரச்சாரத்தால் இந்நாட்டு மக்களை முன்னேற்றமடையச் செய்ய முடியவில்லை; சீர்திருத்தம் செய்ய முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன? அப்படிப்பட்ட உத்தமரையே உயிர்க் கொலைசெய்யும்படி நேர்ந்த இன்றைய இப் பழிக்குக் காரணமாக்கப்பட்டுள்ளவன் யார்? அவன் கல்வியறிவில்லாத முட்டாளா? அல்லது கீழ்சாதி மக்களென்று கருதப்படும் அதாவது (lower order) ஏழை மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனா? அல்லது உணர்ச்சியற்ற பைத்தியக்காரனா? இல்லையே!

கொலை செய்தவன், சமுதாயத்தில் உயர்சாதியைச் சேர்ந்தவன்; அதுவும் சகல தத்துவமும் அறிந்த படித்த கூட்டத்தைச் சேர்ந்தவன். அவன் தழுவியிருந்த ஸ்தாபனமோ மற்ற மதங்களுக்கும் மேலாகத் தத்துவார்த்தமும் தெய்வீகத் தன்மையும் போதிக்கும் ஸ்தாபனம். இப்படியான கூட்டத்தைச் சேர்ந்த அவனை ஓர் காட்டுமிராண்டி என்றோ, கீழானவன் என்றோ கூறமுடியுமா?

படித்தவன்—உயர்சாதிக்கு நன்மை செய்ய ஏற்பட்ட ஸ்தாபனத்தைத் தழுவி நின்றவன்—அப்படிப்பட்டவனே இப்படிக் கொலை செய்தான் என்றால், அந்தக் காலத்தை நாகரிகக் காலமென்று எப்படிச் சொல்லமுடியும்? நீங்கள் சிந்திக்க வேண்டும்—இதை எங்காவது, எவனாவது, நாகரிகக் காலமென்று கருத முடியுமா என்று!

உலகம் இன்று மூர்க்கத்தனத்தில் பொருந்திவிட்டது. இன்று மக்களிடையே அன்பில்லை; நம்பிக்கையில்லை; விசுவாசமில்லை. 100 வார்த்தைகள் பேசினால் அதில் இரண்டொரு வார்த்தைகூட உண்மையான வார்த்தையாக இருக்கவில்லை. இன்றைய உலகில் மக்கள் நாணயமாக நடந்துகொள்ள வசதியில்லை. அப்படி நாணயமாக நடந்து கொள்பவர்களுக்கு உலகில் இடமில்லை. அன்பையும் அகிம்சையும் போதிப்பவர்களுக்கு உலகில் இடமில்லை. காந்தியாரின் முடிவே இதற்குப் போதிய சாட்சியாகும்.

மதத்தின் பேரால், கடவுளின் பேரால், சாஸ்திரத்தின் பேரால், நீதியின் பேரால், தெய்வீகத் தன்மையின் பேரால் நாளுக்கு நாள் அநாகரிகமும், அயோக்கியத்தனமும் அளவில்லாமல் வளர்ச்சியடைந்து வருகின்றன. ஒரு கடுகளவுக்குக்கூட உண்மையோ நாணயமோ நமக்குக் காணக் கிடைக்கவில்லை.

மக்களெல்லோரும் மூர்க்கர்களாகிவிட்டார்கள். காட்டுமிராண்டிக் காலத்தில் ஒருவனை ஒருவன் கொன்றுகொள்ளும் அளவுக்கு மூர்க்கத்தனம் இருந்ததென்றால், இன்றைய விஞ்ஞான காலத்தில் ஒருவனே—ஏன், ஒரு சிறு அணுகுண்டேகூட பல இலட்சக்கணக்கான மக்களைக் கொல்லக்கூடுமான அளவுக்கு அழிவு சக்தி மேலோங்கி இருக்கிறது. இதுவா நாகரிகம்? மக்களை எப்படிச் சுலபமாய் அழிப்பது என்று கவலை எடுத்துச் சிந்தித்துவரும் காலமா நாகரிகக் காலம்?

படிப்பினால் நாணயம் ஒழுக்கம் வளர்கிறது என்று யாராவது கருதமுடியுமா? படித்துப் பட்டம் பெற்றவரில் 100-க்கு இரண்டு பேராவது நாணயஸ்தர்களாக இருக்கிறார்களா? அரசன் நாணயமாக இருந்தால் மந்திரி நாணயமாக இருப்பான்; மந்திரி நாணயமாக இருந்தால் அவர் இலாக்காவில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் நாணயமாக இருப்பார்கள். ஆகவே, சிப்பந்தியின் நாணயக் குறைவுக்கு அவனல்ல காரணம்—அவனது எஜமான்களே காரணம் என்பது பெறப்படுகிறதா, இல்லையா?

இதேபோல், இந்தக் காட்டுமிராண்டித்தனத்திற்கு ஆதாரம் எங்கே இருக்கிறதென்று மக்கள் தேடிப்பிடிக்க வேண்டும். அந்த வாதங்களை அழித்து மக்கள் ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டிக்க முயற்சிக்கவேண்டும்.

இன்றைய உலகம் நமக்குப் பயனில்லை; இது அடியோடு அழிக்கப்பட வேண்டும். படர் கள்ளிப்பூச்சி எப்படி உலகிலிருந்த படர் கள்ளிகளையெல்லாம் அழித்து நிர்மூல மாக்கிற்றோ அதேபோல், இன்றைய மக்களின் காட்டுமிராண்டித்தனத்திற்கு ஆதாரமாய் இருந்துவரும் அனைத்தையும் அழித்து நிர்மூலமாக்கவேண்டும். இன்றைய மனித சமுதாயத்தில் வளர்ந்து தழைத்து படர்ந்து கிடக்கும் மதக் கள்ளிகளை மக்கள் ஒழிக்க வேண்டும். ஒழுக்கத்தின் மூலம் மக்களிடையே நம்பிக்கை ஏற்படச்செய்தல் வேண்டும்.

பாதுகாப்பில் போதிய கவலையும் கவனமும் செலுத்தப்படவேண்டும் என்று போராடினோம்; விடுதலை வேண்டுமென்று கூப்பாடு போட்டோம். அதன் பயனாக இன்று சுதந்திரம் வந்துவிட்டது என்றாலும் பயமின்றி நம்மால் தனித்துத் தெருவில் நடமாட முடியவில்லை. ஒவ்வொருவனும் எந்த நேரமும் தன் உயிரைப் பற்றி—தன் பொருளைப் பற்றி—தனது மானத்தைப் பற்றிக் கவலையோடு இருக்கவேண்டியிருக்கிறது. எந்த நிமிடத்தில் இவற்றிற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று ஒவ்வொருவனும் கவலை கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை எப்படி நாகரிக நிலை என்று நம்மால் கொள்ளமுடியும்? இன்றைய மனிதத் தன்மைக்கு—இன்றையக் கடவுள் சக்தியின் கேவலத் தன்மைக்கு—இதுவரை காந்தியார் செய்துவந்த உபதேசத்தின் பயனற்ற தன்மைக்கு காந்தியாரின் பரிதாப முடிவே ஒரு மாபெரும் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது.

இன்றையக் கடவுள் ஒரு ஒற்றைக் காசுக்குக்கூடப் பிரயோசனமில்லை. இன்றைய மதம் ஒரு ஒற்றைக் காசுக்குக்கூடப் பிரயோசனம் இல்லை. இன்றைய மதம் ஒரு கடுகள

வுக்குக்கூட நமக்குப் பிரயோசனம் இல்லை. நமக்கு வேறு மதம், வேறு கடவுள், வேறு கட்டளை வேண்டும்.

உங்களுக்கு வேண்டுமானால் இது சற்று அதிகமாகப்படலாம். ஆனால், இதை ஒப்புக்கொள்வது உங்களுக்கு எவ்வளவு கசப்பாயிருந்த போதிலும் இதுதான் உண்மை. இன்றைய நிலைமை மாறியாக வேண்டும். இன்றேல் சுயராஜ்யப் பித்தலாட்டத்தைப் போலவே மற்ற பித்தலாட்டங்கள் நாட்டில் வளர்ந்து கொண்டுதானிருக்கும்.

இன்றையக் கோயில், குளங்கள், சாஸ்திரங்கள், சட்டங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாதிகள், சமயங்கள் ஆகிய சகலமும் மாற்றப்பட்டாகவேண்டும். இப்படிப் பரிதாபகரமான முடிவெய்திய காந்தியார்கூட மதத்தைக் காட்டி—கடவுளைக் காட்டி—மக்களிடம் அன்பையும் அஹிம்சையையும் வலியுறுத்தி வந்தார் என்றாலும், இத்தகைய மாறுதல்களுக்கும் அவர் தனக்குள் பல இரகசியமான வழிகளும் திட்டங்களும் வைத்துக் கொண்டுதான் இருந்தார். இதில் அவருக்குக் கவலை இருந்துவந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. இத் தகைய மாற்றங்கள் ஏற்பட அவர் சாவகாசம் கொடுக்க வேண்டும் என்றார்; அவசரப்படக்கூடாது என்று கூறிவந்தார். ஆகவே, கொள்கையில் ஒன்றும் அபிப்பிராய பேதம் இல்லை; அக் கொள்கையை நிறைவேற்றி வைப்பதற்கான முறையில் தான் எங்களுக்குள் வேற்றுமை இருந்துவந்தது.

காந்தியாரும் எங்களைப் போல் மதத்தில் சில குறைபாடுகள் கண்டு அவற்றை ஒழிக்க முயன்றார். ஆனால், அவரது முயற்சி பலிக்கவில்லை. அதற்குக் காரணம், அவர் குற்றங்களை முழுவதும் உணராமையும், அவற்றைப் போக்க அவசரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமையுமாகும். சுமார் 23 வருடங்களுக்கு முன்பு எனக்கும் காந்தியாருக்கும் நடந்த சம்பாஷணை ஒன்று சமீபத்தில் 'விடுதலை'ப் பத்திரிகையில் வெளி வந்துள்ளது. அதைப் படித்துப் பார்த்தால் நீங்கள் அறிவீர்கள்—நான் மேலே கூறிய உண்மையை. இது இப்போதுதான் வெளிவந்ததில்லை; இதற்கு முன்பே இரண்டு மூன்று தடவைகள் காந்தியார் உயிருடன் இருந்தபோதே 'குடிஅரசி'லும், 'பகுத்தறிவி'லும் வெளிவந்திருப்பதாகும். அவற்றிலிருந்துதான் இதுவும் எடுத்துப் போடப்பட்டிருக்கிறது. அதில் காணலாம்—அவர் எவ்வளவு தூரம் இதில் கவலை கொண்டிருந்தார் என்பதும், எந்த அளவுக்கு எங்கள் கருத்தும் மாறுபட்டிருந்தது என்பதும்.

உங்கள் அனைவருக்கும் தெரியும்—காந்தியார் ஒரு நாத்திகர் அல்லர் என்பது. அவர் கடவுளைப்பற்றிய தமது கருத்தைப் பலமுறை வெளியிட்டிருக்கிறார். சாதாரண மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய தன்மையில் கடவுளைப்பற்றித் தனது கொள்கை என்ன என்று அவர் கூறியிருப்பது இசைத் தட்டாக எடுக்கப்பட்டு இன்றும் இருக்கிறது. அதில் சுமார் 15 வருடத்திற்குமுன், 'எனக்குக் கடவுள் என்பதாக ஒரு வஸ்து இருக்கிறது என்பதில் நம்பிக்கை இல்லை (I have no belief in personal God)' என்று தெளிவாகக் கூறி இருக்கிறார். அப்படியானால், பின் ஏன் அவர் 'கடவுள்', 'கடவுள்' என்று சாகும் வரை சுத்திக்கொண்டிருந்தார் என்று நீங்கள் கேட்கலாம். அவர் சத்தியத்தைத்தான்—உண்மையைத்தான் கடவுள் என்று நம்பி இருக்கிறார் (Truth is God). அந்த சத்தியத் தைத்தான்—அவர், மனிதன் பயப்படத்தக்கதென்றும்—ஜாக்கிரதையாகப் பின்பற்றத் தக்கதென்றும் கூறி வந்தார். சத்தியந்தான் கடவுள்; அன்புதான் கடவுள்; அறிவுதான் கடவுள் என்று அவர் போதித்தார். அப்படிப்பட்ட கடவுளைக் கல்லாக்கி, உருவாக்கி அதை எல்லோரும் நம்பவேண்டுமென்று கூறி, அதை மக்கள் மனத்தில் புகுத்தி அவர்களை மடையர்களாக்கியது, அதன் பேரால் கொள்ளையடித்து வாழும் கூட்டந்தான். இன்று கடவுளைத் தொழுபவர்களில்—பூஜிப்பவர்களில் 100-க்கு 90 பேர் அயோக்கியர்களாக இருக்க—மூட நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கக் காரணம் உருவமுள்ள கடவுளை ஒப்புக்கொண்டிருப்பதுதான். அதனால்தான், மிருகங்களிடையே இல்லாத, பட்சிகளிடையே இல்லாத, மரங்கள், செடி கொடிகள் இவற்றினிடையேகூட இல்லாத சாதி-வேற்றுமைத் துவேஷங்கள்

ஆறறிவு பெற்றுள்ள மக்களென்று பெருமையடித்துக் கொள்ளும் நம்மிடம் இருக்கின்றன. கடவுளைப்பற்றிய நம்முடைய கருத்துதான் நம்மைக் கீழான மக்களாக வைத்திருக்கிறதே ஒழிய, புத்திக் குறைவினாலல்ல நாம் கீழ்மக்களாயிருப்பது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உள்ளத்தில் கடவுளைப் புகுத்த வேண்டுமென்றால்—அவரை, சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து நீதிவழங்கும் நீதிபதியைப் போலவோ, மன்னிப்பளிக்கும் மகாராஜாவைப் போலவோ நாம் சித்திரித்துக் கொள்ளக்கூடாது. உள்ளத்தில் கடவுளைச் சித்திரித்துக் கொள்ள வேண்டுமானால் ஒழுக்கமாக நடக்கவேண்டும்; அன்பாக நடக்கவேண்டும்; சத்தியமாக நடக்கவேண்டும். இந்த உயர்குணங்களைக் கடவுள் தன்மையாகச் சித்திரித்துக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் காந்தியார் கூறிவந்தார். ஆனால், அவ்வப்போதைய நிலைக்கேற்ப வேறு எதை எதையோ புகுத்தி அதைக் குழப்பிவிட்டார் என்று சொல்லலாம்.

கடவுள்தான் சத்தியம் என்றுகூட அவர் கூறவில்லை. 'சத்தியமே கடவுள்' என்றுதான் அவர் கூறினார்; அன்புதான் கடவுள்; அறிவுதான் கடவுள் என்றுதான் அவர் கூறிவந்தார். அப்படித்தான் எந்த மதத் தலைவரும் இதுவரை கூறிவந்திருக்கின்றனர். என்றாலும் அவை ஒன்றுகூடப் பலனுக்கு வரவில்லை. காரணம், கடவுளுக்கு ஒரு உருவமும் அத்துடன் அதற்கு அளவற்ற சக்தியும் கொடுத்து, அதற்கு எந்தப் பாவத்தையும் மன்னித்துவிடும் உரிமையும் அளித்துவிட்டதுதான். பிரார்த்தனை செலுத்திவிட்டால் எந்தக் குற்றத்திற்கும் மன்னிப்புக் கிடைத்துவிடும் என்ற நினைப்பினால்தான், மக்கள் மேலும் மேலும் ஒழுங்கின்றி நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

எப்படி இலஞ்சம்வாங்கும் நீதிபதியும், அதற்கேற்ற போலீஸ் அதிகாரிகளும் நாட்டில் இருப்பார்களானால் அட்டூழியங்கள் அதிகரிக்குமோ அதேபோல்—கடவுள் மன்னித்து விடுவார், அவருக்கு விருப்பமான பிரார்த்தனையைச் செலுத்திவிட்டால்—என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படவும், முதலில் ஒரு குற்றமும்செய்ய அஞ்சியவன் பிறகு நாளடைவில் பயமின்றிப் பல குற்றங்களைச் செய்ய முற்பட்டுவிடுகிறான். தான் ஒரு தவறுசெய்தால் அது தன்னையே பாதிக்கும் என்பதில் நம்பிக்கையற்று, அனைவரும், தான் வாழ்வது தான்முக்கியமென்றும்—அதற்கு எதையும் செய்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் பாவ மன்னிப்புப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கருதி, எந்த அக்கிரமத்தையும் துணிந்துசெய்ய முற்பட்டு விட்டனர்.

ஆரம்பத்தில் அறியாமல் தப்பு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறான். அடுத்த தடவை அவசரத்தில் தவறு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறான். பிறகு பழக்கத்தால் மூன்றாவது தவறு, நான்காவது தவறு செய்கிறான். இது வழக்கமாகி விடுகிறபோது மன்னிப்பே தேவையற்றுப் போய்விடுகிறது. இப்படி மனித சமுதாயமே மதத்தின் பேரால் தவறுதலாக நடத்தி வரப்பட்டது. இதனால் தான் மிருக சாதிகள், பட்சி சாதிகள் இவற்றினிடம் இல்லாத வித்தியாச விரோத பாவங்களும், வஞ்சக துவேஷ குரோத மனப்பான்மைகளும் நம்மிடையே நிறைந்திருக்கின்றன. இவை ஏன் மக்களிடம் இருக்க வேண்டும்? இவற்றைப் போக்காத—இக் கவைக்குப் பயன்படாத கடவுளை ஏன் நாம் வணங்க வேண்டும்? மனிதனை யோக்கியனாக நடத்த முடியாத கடவுளும், வேத புராணங்களும் நமக்கேன்? காசு வாங்கிக்கொண்டு மன்னிப்புக் கொடுத்து விட்டு, மேலும் மேலும் நம்மை அக்கிரமம் செய்யத் தூண்டும் கடவுள் ஏன் நமக்கிருக்க வேண்டும்? பாடுபடும் பாட்டாளி மக்களேன் கீழ்சாதி? பாடுபடாத சோம்பேறிப் பார்ப்பான் ஏன் மேல் சாதி? மேல் சாதிக்காரன் சுகவாழ்வுக்கு ஏன் கீழ் சாதிக் காரன் உழைக்கவேண்டும்? இந்நிலை இனி மாறித்தான் ஆகவேண்டும்.

உயர்வு-தாழ்வு கற்பிக்க இடமில்லாத—ஏமாற்றதலுக்கும், வஞ்சகத்திற்கும் இட மில்லாத மாதிரியில் ஒரு புது அமைப்பு ஏற்படவேண்டும். மனித சமுதாய வாழ்க்கை

நிலையில் அவர்களுடைய திட்டங்களில்—அவர்களுடைய எண்ணங்களில் ஒரு மாற்றம் ஏற்படுதல் அவசியம். அதற்கான என் கருத்தைப் பல முக்கியஸ்தர்களுக்கும் தெரிவித்திருக்கிறேன். இன்றுள்ள குறைபாடுகள் நீங்கவேண்டும்; மதம் அடியோடு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று தெளிவாகக் கூறியிருக்கிறேன். இத் தகைய சீர்திருத்தங்களால் தம் பெருமையும் தம் உயர்வும் தம் வரும்படியும் இல்லாமற் போய்விடுமே என்று நினைக்கும் சுயநலக் கும்பல்தான் இவைகளை எதிர்க்குமே அல்லாது, வேறு எந்த அறிவாளியும் இவைகளை மறுத்துக் கூறமாட்டான். இந்த முக்கியஸ்தர்களுக்கு எனது யோசனையைக் கவனிக்க நேரமிருக்குமோ, இல்லையோ என்றாலும் இவர்கள் யாரும் இன்றில்லையானாலும் இன்னும் கொஞ்ச காலத்திலாவது இந்தக் கருத்துக்கு வந்துதான் ஆகவேண்டும். ஏதோ உயிர் வாழ்கிறோம் என்று வாழ்ந்துவிட்டால் மட்டும் போதியதாக ஆகிவிடாது. வாழ்வில் சக்தி இருக்க வேண்டும்; திருப்தி இருக்க வேண்டும். சதாகாலமும் கவலையோடும் குழப்பத்தோடும் வாழ்வது ஒருபோதும் வாழ்வாகிவிடாது. அப்படி வாழ அல்ல—நாம் ஆறறிவு பெற்றிருப்பது. திராவிடர் கழகத்தின் வேண்டுதல் இதுதான்.

திராவிடர் கழகம் கலகத்திற்கோ, கொள்ளைக்கோ, பலாத்காரத்திற்கோ இருந்துவரவில்லை. அதுவும் திராவிடர் கழகம் எனது கைக்கு வந்தது முதற்கொண்டு, அதில் சேர்ந்து நான் தொண்டாற்றிவந்த நாள் முதற்கொண்டு இந்த நாள் வரைக்கும்—அதை எந்தவிதமான பலாத்காரத்திற்கோ பழிவாங்குவதற்கோ உபயோகப்படுத்தியவன் அல்லன்; அத்தகைய செயலுக்கு அனுமதி கொடுத்தவனுமல்லன். திராவிடர் கழகத்தில் பலாத்காரத்திற்கு இடமில்லை. பலாத்கார உணர்ச்சி வேண்டுமென்று கருதிய சிலரையும்கூட திராவிடர் கழகத்தைவிட்டு நீக்கித் தண்டித்திருக்கிறோம், பலாத்காரத்திற்காக மட்டுமல்ல—நடத்தைக் குறைவுக்காகவும், ஒழுக்கக் குறைவுக்காகவும்கூடப் பலரைக் கழகத்தைவிட்டு வெளியேற்றி இருக்கிறோம். கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அதை மக்களின் அன்பிற்கும், நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான ஸ்தாபனமாக்கக் கவலையோடு நான் அதை நடத்திவருகிறேன்.

எங்கள் கழகத்தவர் பிறரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டபோதும், மதுரையில் எங்கள் கொட்டகைகளுக்கு நெருப்பு வைத்து போலீஸ் பந்தோபஸ்தில் கொளுத்தப்பட்ட போதும், சேலத்தில் எங்கள் ஊர்வலத்தின்மீது போலீஸார் முன்னிலையிலேயே கல்லும், சோடாப் புட்டியும் வீசப்பட்டபோதும், அண்ணாமலை நகரில் எங்கள் கழக மாணவர்கள் போலீஸ் பாதுகாவலிலேயே அறை அறையாகப் புகுந்து அடிக்கப்பட்டபோதுங்கூட தற்காப்புக்காக என்றுகூட எங்கள் கழகத்தவர் எதிர்த் தாக்குதல் செய்ததில்லை. அத் தகைய பேச்சுக்கே இடமில்லாத முறையில்தான் எங்கள் கழகத்தவர் இன்றுவரை நடந்து வந்திருக்கிறார்கள். இன்றும் நேற்றும் அது அடக்கத்தில்தான் இருந்து வந்திருக்கிறது; இனியும் அப்படித்தான் இருந்துவரும். எனக்கு வரும் 'தபாலை'ப் பார்த்தால் தெரியும்—எங்கள் கழகத் தோழர்கள் எவ்வளவு கவலையோடு, ஜாக்கிரதையோடு, அமைதியாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று. எங்காவது கலவரம் ஏதாவது ஏற்படுமானால் உடனே தபால் வரும், எனக்குக் கழகத் தோழர்களிடமிருந்து. 'நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. பத்திரிகையில் பார்த்துவிட்டு எங்கள்மீது வீணாகக் கோபித்துக்கொள்ளப் போகிறீர்கள். வேண்டுமானால் தயவுசெய்து வந்து நேரில் விசாரித்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்கள் உத்தரவுப்படி எப்போதும்போல் அமைதியாகத்தான் நடந்துவருகிறோம்' என்று. அம் மாதிரி ஜாக்கிரதையாக நாங்கள் நடந்துகொண்டு வருவதால்தான் எங்கள் கழகம் இன்றுவரை உயிர்வாழ்ந்து வர முடிகிறது.

எங்கள் கழகம் அரசாங்கத்திற்கு விரோதி; மதத்திற்கு விரோதி; கடவுளுக்கு விரோதி; கம்யூனிஸ்டுகளுக்கு விரோதி; சமதர்மவாதிகளுக்கு விரோதி. எங்களுக்குள்ளாகவே எங்கள் கழகத்திற்கு எத்தனையோ விரோதிகள். சுருங்கச் சொன்னால், சுயநலமிகள் கூட்டம் அத்தனை பேருக்கும் எங்கள் கழகம் விரோதி. அத்தனை பேர்

எங்களை எதிரிகளாய்ப் பாவித்துவந்தும், ஒரு துறையில்கூட—கொள்கையைப் பொறுத்த வரையில் நாங்கள் யாருக்கும் பின்வாங்கிவிடவில்லை; யாருக்கும் விட்டுக் கொடுத்துவிடவில்லை. அப்படியிருந்தும், கழகத்தின்மீது நாளுக்கு நாள் மக்களுக்கு ஒரு பற்றுதலும், மரியாதையும் ஏற்பட்டு வருவது கண்கூடு. நாளுக்கு நாள் எங்கள் கொள்கைக்கு ஆதரவு பெருகி வருகிறது. இப்படிப்பட்ட எதிர் நீச்சல் வேலை புரியும் எமது கழகத்திற்கு எப்படி மக்களிடையே செல்வாக்கு ஏற்பட்டது; ஏற்பட்டு வருகிறது என்று நீங்கள் கேட்கக்கூடும். எங்கள் கழகம் யாரையும் விரோதிகள் என்று நினைப்பதில்லை. காரணம்—இன்று நமக்கு எதிர்ப்பாயுள்ளவர்கள் அனைவரும் நம்மவர்கள் என்பதை நாங்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறோம்.

[சன்னாநல்லூரில், 19-2-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1948]

15. மதத்தால் பயன் என்ன?

'மதமே மக்களுடைய நாகரிக வாழ்க்கையை வெளிப்படுத்தும் கருவி. மதமே மக்களைச் சிறந்த வாழ்க்கையில் வாழச்செய்வது. மதமே மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பது. மதமே மக்கட் சமூகத்தை ஒழுங்குபடுத்தி, ஒரு கட்டுதிட்டத்தில் அடங்கி நடக்கும்படி செய்கின்றது. மதம் இன்றேல் மக்கள் வாழ்க்கை மிருக வாழ்க்கையாகிவிடும். ஒருவரும் கட்டுக்குள் அடங்க மாட்டார்கள்; நன்மை தீமைக்குப் பயப்படமாட்டார்கள். மனிதனை மனிதன் அடித்துச் சாப்பிடக்கூடியதான அலங்கோல நிலை தாண்டவமாடும். அதனால் மனித சமூகத்தின் வளர்ச்சியை-கட்டுப்பாட்டை-ஒழுக்கத்தை-முன்னேற்றத்தைக் கருதுபவர்கள் மதத்தைப் பரவச் செய்யவேண்டியது அவசியமாகும்' என்று, உண்மையில்—மதத்தைக்கொண்டு பாமர மக்களை அடிமைப்படுத்தி வயிறு பிழைக்க எண்ணும் போலிப் புரோகிதக் கூட்டத்தார் கூறுகின்றனர். இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மையென்பதைச் சிறிது ஆராய்வோம்.

மனித சமூகத்தில் குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணங்கள் என்ன வென்பதை ஆராய்ந்தால், மதம் மனித சமூகத்தைக் காப்பாற்றிவருகின்றது என்பதன் உண்மை நன்கு வெளியாகும்.

திருட்டு என்பது எல்லா நாட்டினராலும், எல்லாச் சமூகத்தாராலும் இப்பொழுது குற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால், திருட்டுக்குக் காரணம் என்ன என்று கண்டு, அக்காரணத்தை அழித்தால் திருட்டு நிகழாமல் இருக்க முடியும் அல்லவா? 'மற்றவரைப்போல் தானும் வாழவேண்டும்' என்பதே பொதுவான மனித உணர்ச்சியாகும். மற்றவன் அனுபவிக்கும் சுகத்தைப்போல் தானும் சுகமனுபவிக்க வேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் நினைக்கின்றான்.

'தன்னைக் காட்டிலும் கீழ்நிலையில் இருந்து துன்புறுபவர்களைக் கண்டு, தனது நிலையும் இன்பமும் உயர்ந்தவை என மகிழ்ச்சியடையவேண்டும்' என்று நீதி நூல்களும் மதக் கொள்கைகளும் கூறுகின்றனவாயினும், அதை அனுசரிப்பார் அறிவுடையார் கூட்டத்தில் ஒருவரும் இருக்கமுடியாது என்பது திண்ணம்.

ஏனெனில், இதை நம்பி எந்த அறிவுடையாரும் 'போதும்' என்ற திருப்தியுடன் சும்மாயிருப்பதையோ, தமது முயற்சியை இன்னும் விரிவுபடுத்தாமலிருப்பதையோ நாம் பார்ப்பதில்லை. ஆனால், அக்கொள்கை சிந்தனா சக்தியற்ற பாமர மக்களை முன்னேற விடாமல் அடக்கிவைத்து, அவர்களுடைய உழைப்பின் பயனை அறிவுடைய கூட்டம் நோகாமல் அடைவதற்கு மாத்திரம் ஓரளவு—ஏன் முழுவதும் உபயோகமாகிறது என்று சொல்லிவிடலாம்.

அறிவுபடைத்த கூட்டமே, சுக வாழ்க்கை போகத்தால் எந்தவிதமான பொய் பித்தலாட்டங்களைச் செய்தாவது பொருள் சேர்த்து வாழவேண்டும் என்று நினைக்கின்ற

போது, அம் மாதிரியே அறிவுடைய மக்களில் பெரும்பாலானவர்கள் வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம், அரசியல், பொது ஊழியம் ஆகிய எல்லாக் காரியங்களிலும் சுயநலத்தை முதன்மையாக வைத்து அவைகளை நடத்திப் பொருள் சம்பாதித்து வரும் போது—சாதாரண நிலைமையில் உள்ள சோற்றுக்கும் வழி இல்லாத தரித்திரர்கள் என்ன செய்யமுடியும்? தங்கள் வயிற்றுப் பசியைத் தணித்துக்கொள்வதற்கு வேறு வழியில்லாத போது திருடவேண்டும், அதாவது பிறர் பொருளை அவர்கள் அறியாமல் கவர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றுவது இயல்புதானே! இந்த இடத்தில் அவர்களுக்கு வயிற்று உணவுக்கு வழியில்லாத வகையில் மதம் எவ்வாறு அவர்கள் குற்றத்தைத் தடுக்கமுடியும் என்பதைச் சிந்தியுங்கள்!

இதுபோலவே, பொய், கொலை, சூது முதலான கெட்ட காரியங்கள் என்று கருதப் படுபவைகள் பலவும் நடைபெறுவதற்குக் காரணம், மேற்போக்காகப் பார்ப்போர் வேறு பல காரணங்களைக் கூறினும்—வறுமையே அதாவது உணவுக்கு—சுக வாழ்வுக்கு வழி யில்லாமையே முதற் காரணம் என்பதை யாரும் மறந்துவிடுதல் கூடாது. இன்று குற்றங்கள் செய்து, அக் குற்றங்கள் உண்மையென மெய்ப்பிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை பெறுவோரின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், அவர்களில் ஆயிரத்துக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மர் வறிய நிலைமையில் வாழும் மூன்றாந்தர வகுப்பைச் சேர்ந்தவர்களே என்பதை அறியலாம். இப்படிப்பட்ட மூன்றாம்தர வகுப்பினர் களுக்கு மதம் எந்த வகையிலும் உதவிசெய்வதாகக் கூறமுடியாது.

மக்கள் சமூகத்தில் உயர்தர வகுப்பினராகக் கருதப்படுகின்ற பணக்கார வகுப்பினர் செய்யுங் குற்றங்கள் சட்டத்தில் அகப்படாதவை. சட்டத்திற்குக் கட்டுப்பட்ட குற்றங்களை அவர்கள் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ செய்தாலும் அவற்றினின்றும் தப்பித்துக் கொள்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. மனிதனுடைய உடலையும் உயிரையும் வைத்துவிட்டு இரத்தத்தை மாத்திரம் உறிஞ்சுவதுபோல, ஏழை மக்களின் உழைப்பையும், அதன் பயனையும் கொண்டு அவர்களை நடமாடும் பிணங்களாகத் திரியச் செய்யும் பணக்காரர்களின் செயல் சட்ட சம்பந்தமானதாகவும், மத சம்பந்தமானதாகவும் கருதும்படி செய்யப்பட்டிருக்கிறது. 'வேலைக்குத் தகுந்த கூலி' என்ற கருத்துக்கொண்ட 'கர்ம பலன்' என்ற சொல்லை முன்பிறப்பில் அனுபவிப்பது என்ற பொருளில் மதவாதிகள் அமைத்துக்கொண்டதால் வந்த ஆபத்து இது. இதனாலேயே பணக்கார வகுப்பினர் நோகாமல் உலக இன்பங்களையெல்லாம் ஆண்டு அனுபவிக்கும் வாழ்வைப் பெற்றிருக் கின்றனர்.

இனி நடுத்தர வகுப்பினரோ, முதல்தர வகுப்பினரின் ஆதிக்கத்துக்கு அடங்கி நின்று தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்பவர்களாக இருக்கிறார்கள். தாங்களும் முதல் தர வகுப்பினராக—அதாவது முதலாளிகளாக ஆகவேண்டுமென்ற ஆசையினால் அவர்கள் மூன்றாந்தர வகுப்பினரை அடக்கிவைப்பதற்கும், காட்டிக்கொடுப்பதற்கும், அவர்களுடைய உழைப்பைக் கொள்ளைகொள்வதற்கும் முதல்தர வகுப்பினரின் கையாட்களாக இருக் கின்றனர். இவர்கள் தங்கள் நிலையிலிருந்து சுலபத்தில் மாறாதவர்களாக இருப்பதற்குக் காரணம், மதமும் மதக்கோட்பாடுகளும் என்பதில் அய்யமில்லை. பெரும்பாலும் நடுத்தர வகுப்பினராலேயே மதங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறிவிடலாம். இந்த நடுத்தர வகுப்பினரே எந்த நாட்டிலும் மூன்றாந்தர வகுப்பினரின் எழுச்சிக்குத் தடைக் கல்லாக இருக்கின்றவர்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆகவே, முதல்தர வகுப்பினரும், இரண்டாந்தர வகுப்பினரும் தங்கள் சுயநலத்திற் காகப் போற்றிப் பாதுகாத்துவரும் மதங்களால் மூன்றாந்தர வகுப்பினர் துன்புறுத்தப் படுகின்றார்கள் என்பது பகுத்தறிவாளர்களின் கொள்கையாகும். இது ஆராய்ந்து பார்ப் போருக்கு உண்மையென்று தோன்றாமலும் போகாது.

இந்த நிலைமையில் வறிய நிலையில் வாழும் சமூகத்தில் எப்படிக் குற்றங்கள் நிகழாமல் எதிர்பார்க்கமுடியும்? மதம் ஒன்றுதான் மனித சமூகத்தை முன்னேற்றக்கூடியது என்று சொல்லக்கூடியது குருட்டுவாதம். அது எப்படி உண்மையாக இருக்கமுடியும்? எந்த மதம் மனித சமூகத்தின் வறுமையைப் போக்க உதவிசெய்கிறது? பெரும்பாலான சமூகத்தின் உழைப்பை ஒரு சிறிய கூட்டத்தின் கையில் ஒப்படைப்பதற்காக மாத்திரம் மதம் உதவி செய்துகொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

கிறிஸ்தவர்கள் மதத்தின் பெயரால் செலவழிக்கும் பொருளில் ஓரளவு மக்களுடைய கல்விக்கும், வைத்திய உதவிக்கும் செலவழித்து வருவதை நாம் பார்க்கின்றோம். ஆனால், இந்துக்கள் என்று சொல்லுகின்றவர்கள் தங்கள் மதத்தின் பெயரால் செலவிடுவதில் ஒரு காசுகூட ஏழைகளுக்குப் பயன்படுவதில்லை; நாட்டின் நன்மைக்கும் உபயோகப்படுவதில்லை என்பது உண்மையாகும்.

ஆதலால், மக்களின் பசித் துன்பத்தைப் போக்க உதவி செய்யாதவரையில் உலகில் எந்த மதம் இருந்துதான் என்ன பயன் என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட உலக நன்மைக்கு எள்ளளவும் உதவிசெய்யாத மதங்களைக் கட்டிக்கொண்டு அழுவதில் ஏன் மக்கள் இன்னும் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்? இதுவரையிலும் மதங்களைக் கட்டிக்கொண்டு அழுதது போதும்; இனியாவது அவைகளைத் தகர்த்தெறிய முன்வருவது நன்றல்லவா? 'கஞ்சி', கஞ்சி! என்று பரிதபிக்கும் பரிதாபத்துக்குரிய மக்களின் துயரைக் களைந்து, அவர்களின் சந்தோஷ ஆரவாரத்தைக் கண்டு உள்ளங் களிக்க மனங்கொண்டு ஒன்றுகூடி உழைப்பது அறிவாளர் கடமை அல்லவா?

மக்கள் 'கஞ்சி', கஞ்சி! என்று கதறி மடியும்போது கோயில் கட்டுவதும், கல்லின் தலையில் அரும்பண்டங்களைக் கொட்டி வீணாக்குவதும், உற்சவம் நடத்துவதும், மதப் பிரதிநிதிகளைப் பல்லக்கில் வைத்துப் பிணத்தைச் சுமப்பதுபோல் சுமந்து திரிவதும் அறிவுடைய கூட்டம் செய்யக்கூடிய காரியங்களா?

['குடிஅரசு'—தலையங்கம்—15-10-1949]

16. ஒழுக்கக் கேட்டுக்குக் காரணம்

இன்று நம் நாட்டில் பெரும் ஒழுக்கக்கேடு நிலவிவருகிறது. இனியும் வளரும்போல் தெரிகிறதேயொழிய குறைகிற வழி காணப்படவில்லை.

இதன் காரணம் நமது மதம் என்னும் இந்து (ஆரிய) மதந்தான்.

உலகத்தில் இந்துமதத்தில் மத, வேத, சாஸ்திர, புராண, இதிகாச ஆதாரங்களில், மதக் கடவுள்களிடத்தில், மத சம்பந்தமான கற்புக்கரசிகள் முதலிய பெண்களிடத்தில் காணும்படியான பொய், பித்தலாட்டம், ஏமாற்றம், விபச்சாரம், பலாத்காரம் ஆகிய காரியங்கள், நடப்புகள் வேறு மதத்தில்—மத ஆதாரங்களில் காணப்படுவதில்லை.

ஒழுக்கக்கேடான, முட்டாள்தனமான காரியங்களை எல்லாம்கூட மதம் என்பதன் பெயரால் நாம் பாராட்டுகிறோம்; பண்டிகையாகக் கொண்டாடுகிறோம்; விரதமாக அனுஷ்டிக்கிறோம்; புண்ணிய சரித்திரங்களாகக் கொள்கிறோம்; நடிப்பு, நாடகம் சினிமா சங்கீதம், ஓவியம், இலக்கியம் ஆகிய துறைகளில் கையாண்டு ரசிக்கிறோம். இவற்றை வெறுப்பதைக்கூட வெறுக்கிறோம்! 'கடவுள், மதம் போய்விட்டதே! ஒரு வகுப்பாரைத் தூஷிக்கிறோமே!' என்று கூப்பாடு போடுகிறோம். இந்த நிலையிலுள்ள மக்கள் எப்படி ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கமுடியும்?

மனிதனை மனிதன், 'ஒழுக்கமுடையவனாக இருக்க வேண்டும்' என்று சொல்லுவதற்கு, மனிதத் தன்மை—அல்லது மத, சமுதாய அனுபவங்கள், ஆதாரங்கள் முதலியவைகளைக் கொண்டாவது சொல்லவேண்டும்.

நமது மனிதத் தன்மை, மனிதனை மனிதன் ஏமாற்றுவதே! அதாவது, மேல்சாதி-கீழ்சாதி, மோட்சம்-நரகம்-சடங்கு முதலியவையாகும். நமது அனுபவ ஆதாரங்கள் என்று சொல்லப்பட்டவைகளோ, ஆண்-ஆண் புணர்ச்சி, மனித-மிருகப் புணர்ச்சி, முறைகேடான, உரிமைக்குக் கேடான புணர்ச்சி ஆகிய இவைகளைக் கண்டு, கேட்டு, படித்து, ரசித்து உழல்பவருக்கு எப்படி ஒழுக்கம் ஏற்பட முடியும்? அதிலும், எவ்விதமான அயோக்கிய, ஒழுக்கமற்ற தன்மைக்கும் மிகமிக எளிதான பிராயச்சித்தமும் இருந்து விட்டால், எப்படி மனிதனுக்கு ஒழுக்கத்தில் கவலையோ, பயமோ, ஒழுக்கமற்ற தன்மையில் வெறுப்போ இருக்கமுடியும்? அதிலும் நம் நாட்டுச் சாதி அமைப்பானது 'கீழ்ச் சாதியை' மடையனாகவும், மானமற்றவனாகவும் ஆக்கிவிடுகிறது. மேல் சாதியைப் பச்சை அயோக்கியனாகவும், கல் நெஞ்சனாகவும், ஏமாற்றித் தீர வேண்டியவனாகவும் ஆக்கி விடுகிறது. ஒரு முஸ்லிமிடமோ, ஒரு கிறிஸ்தவனிடமோ இருக்கின்ற 'மனஇளக்கம்'—மனிதனை மனிதனாக மதிக்குந் தன்மை, இன அன்பு, உதவி—இந்து என்பவனிடம் இல்லை. அதிலும் ஆரியன் என்பவனிடம் அவன் மதக்காரனுக்குக் காட்டுவதுகூட இல்லவே இல்லை. பழிவாங்க நினைக்கிறான். அதிலும் ஒரு மனிதனை மற்றொரு மனிதன் கீழ்ப் பிறவியாகக் கருதவேண்டும் என்றும், ஒரு பிறவியை மற்றொரு பிறவி ஏமாற்றலாம் என்றும், ஒரு பிறவியின் உழைப்பை, மற்றொரு பிறவி உழைக்காமல் ஏமாற்றி, வஞ்சித்துப் பிழைப்பது தர்மம் என்றும் கருதி நடப்பதனால் ஒழுக்கம் எப்படி இருக்கமுடியும்? குறைந்த அளவாவது இத் தன்மைகளை மக்கள் வெறுக்காமலும், வெறுப்பவர்களுக்கு ஆதரவு அளிக்காவிட்டாலும், தடை செய்யாமலாவது இருக்காமலும்; தடை செய்தாலும் அதை 'ஒரு மாபெரும் பாதகச் செயல்' என்று சொல்லாமலாவது, எண்ணாமலாவது இருக்க வேண்டாமா?

மனிதனை மனிதன், 'ஒழுக்கமாக நடக்கவேண்டும்' என்று சொல்வதற்கு அரசாங்கம் தண்டனையிடுவது தவிர, ஆதாரம் இல்லை. அரசாங்கம் இடும் தண்டனையும் இலஞ்சம், சிபாரிசு, வரும்படி—ஆகியவைகளுக்கு அடிமை. பிறகு ஒழுக்கம் எங்கிருந்து குதிக்கும்?

['விடுதலை'-கட்டுரை—3-8-1956]

மதம் என்று ஒன்று இருந்தால் அதில் ஒழுக்கம் இருக்கும். நம் நாட்டில் இருக்கின்ற இந்த இந்து மதத்தில் என்ன ஒழுக்கம் இருக்கிறது? என்ன நாணயம் இருக்கிறது? மகா பாரதத்தையும் இராமாயணத்தையும் ஏன் ஆதரிக்கிறார்கள்? திருடுவதும் விபசாரம் செய்வதும் கலை என்று சொல்வதுபோல், பார்ப்பனர் செய்கின்ற அயோக்கியத்தனத்திற்கும் கலை என்று பெயர். அந்தக் கலைகள் முழுவதும் இந்த இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இருக்கின்றன. இந்த இரண்டிலும் எந்த இடத்திலாவது ஒழுக்கம், நாணயம் என்பது சிறிதளவாவது இருக்கிறதா? இராமாயணப் பாத்திரங்களின் யோக்கியதை என்ன? இராமாயணத்தில் இராமனுக்கும் இலட்சுமணனுக்கும் மான் ஒரு இராட்சதன் என்று நன்றாகத் தெரியும். பின் ஏன் சீதையைத் தனியே விட்டுவிட்டுப் போகிறான்? என்று பார்த்தால், இப்படித் தனியே விட்டுவிட்டுப் போனால்தான் இராவணன் வந்து சீதையைத் தூக்கிக்கொண்டு போவான் என்பதாலேதான். அப்படித்தான் இராவணன் சீதையை அணைத்துத் தூக்கிப்போனானே, என்ன ஆச்சு? இராமாயணத்தில் இப்படி! பாரதத்தில் என்ன வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்கள்! எப்படி, யார் நடந்துகொண்டாலும் தங்கள் காரியம் மட்டும் நடந்துவிட வேண்டும். இந்தக் கதையை நம் முட்டாள்கள் போய் காலட்சேபத்தில் உட்கார்ந்து கேட்டிருந்துவிட்டு வருகிறார்களே! முட்டாள்களாக இல்லா விட்டால் இந்தக் கதையைச் சினிமாவில் காட்டுவானா? இவர்கள் போய்ப் பார்ப்பார்களா? ஏதோ இரண்டணா கள்ளைக் குடித்துவிட்டு வீட்டில் விழுந்துகிடந்தால் ஒழுக்கமில்லையாம்? சிறுபிள்ளையில் இருந்தே சினிமா பார்த்துக் கெடுவது ஒழுக்கமாம்!

[சென்னையில், 5-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-8-1956]

17. மதம் வேண்டுமா?

மதமானது இன்று உலகில் மனித சமுதாயத்தின் வாழ்வைத் துக்க மயமாக்கி, ஜீவ ராசிகளில் மனிதனுக்கென்றுள்ள பகுத்தறிவை அடிமையாக்கி, ஒற்றுமையைக் குலைத்து, மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்துவருகின்றது.

தேசிய சிங்கங்களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில், 'நாங்கள் முதலில் முகமதியர்கள், பிறகுதான் இந்தியர்கள்'—அதாவது, முதலாவது மதம், பிறகுதான் தேசம் என்றும்; உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி, 'நானே இந்துமதத்தின் உருவம்; நான் மூச்சுவிடுவதும் வாங்குவதும் இந்துமதத்திற்காகவே; நான் உண்பதும் உயிர் வாழ்வதும் இந்துமதத்திற்காகவே; மதத்தைக் காப்பாற்றவே நான் சுயராஜ்யம் கேட்கிறேன்—அதாவது, இந்துமதந்தான் எனக்கு முதலும் கடைசியும்' என்றும்; பழைய காங்கிரஸ்வாதி மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன மாளவியா—'எனது மதத்தையும் சாதியையும் காப்பதே எனது முதல் வேலை. வருணாசிரமத்தைக் காப்பாற்றத்தான் நான் தேசியவாதி' என்றும் சொல்லும்படி செய்துவிட்டது.

பெருத்த தேசாபிமானிகள் தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து, அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்களது தேசாபிமானமும் உயிர்வாழ்வும் இருந்துவருகின்றன என்றால் மற்ற சாதாரணமான பாமர மக்களின் யோக்கியதையைப்பற்றி விளக்கவேண்டுமா?

வட்டமேசை மகாநாடு உடைந்துபோனதும்; அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும்; இந்து-முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் தனித் தொகுதி வேண்டுவதற்கும்; காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதற்கும்; தீண்டப்படாதார் தனித்தொகுதி கேட்பதற்கும்; மக்களை மக்கள் தீண்டப்படாதவராய்—கீழ்மேல் சாதியராய்க் கருதப்பட்டுவருவதற்கும் மதமே காரணமாய் இருந்துவருகின்றது. மற்றும் மனித சமூக வாழ்க்கைக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியமென்றும், அறிவிற்கு ஏற்றது என்றும் கருதப்படும் அனேக விஷயங்களைப் பற்றிச் சட்டங்கள் செய்யவோ; சட்டங்கள் செய்தாலும் அமுலுக்குக் கொண்டுவரவோ தடையாய் இருந்து வருவதற்கும் மதங்களே காரணமாகச் சொல்லப்படுகின்றதா, இல்லையா என்று கேட்கிறேன். ஆகவே, மனித வாழ்க்கைக்கு மதங்கள் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்ய வேண்டும்?

இப்படிப்பட்ட இந்து மதம் ஒன்று இரண்டு என்று இல்லாமல் நூற்றுக்கணக்காய் இருந்துகொண்டு, பலவிதக் கடவுள்களை உண்டாக்கிப் பலவித மேல் உலகங்களையும், மோட்ச—நரகங்களையும் கற்பித்து, அவரவர்கள் கடவுள்களுக்குத் தனிப்பட்ட குணங்களும், அவரவர்கள் மேலுலகங்களுக்குத் தனிப்பட்ட பூகோளங்களும், அவரவர்கள் மோட்ச நரகங்களுக்குத் தனிப்பட்ட வருணனைகளும் கற்பித்து மக்களை மயக்கி வருவதோடு—வாழ்க்கை, ஒழுக்கம், நடத்தை என்பவைகளும் அவரவர் மதத்துக்கு ஒவ்வொரு விதமாய்க் கற்பிக்கப் பட்டு நடந்துவருவதும் அறிஞர்கள் அறியாததா?

இப்படிப்பட்ட மதத்தை மக்களுக்குள் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு சில நபர்கள் 'பாதிரி' என்றும், 'முல்லா' என்றும், 'தம்பிரான்' என்றும், 'சங்கராச்சாரி' என்றும், 'ஜீயர்' என்றும், 'சாமியார்' என்றும் பெயர்கள் வைத்துக்கொண்டு, உலகச் செல்வத்தில் தனிப் பெரும் பாகத்தை வீணாக்கி, மக்களுக்குப் போதையூட்டி வருவதானது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பது சுய அறிவோடு பரிசுத்தத் தன்மையிலிருந்து யோசிப்பவர்களுக்கு விளங்கும்.

1. மதம் என்பது இவ்வுலக மானிட வாழ்வுக்கு ஏற்ற சட்டதிட்டங்கள் என்று சொல்லப்படுமானாலும், 2. மதம் என்பது இவ்வுலகில் மக்கள் கூடி வாழ்வதற்கு ஏற்ற ஒழுங்கு முறைகளைக் கொண்டது என்று சொல்லப்படுமானாலும், 3. மதம் என்பது மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுமானாலும் அவைகளைப் பற்றியெல்லாம் நாம் அதிகக் கவலை கொண்டு மதங்களை எதிர்க்க ஆசைப்படுவதில்லை. அப்படிக்கெல்லாம் அல்லாமல், 1. மதமானது மனிதனுடைய ஜட சம்பந்தத்தை விட்டு விட்டு, ஜடம் நீங்கின ஆத்மாவைப் பொறுத்த தென்றும், 2. மதமானது இவ்வுலக வாழ்வை, இன்ப துன்பத்தைத் துச்சமாக மதித்துவிட்டு மேலுலக வாழ்வை முக்கியமாகப் பொறுத்ததென்றும், 3. மதமானது கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவதைப் பொறுத்ததென்றும், 4. மதமானது பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கக்கூடிய வஸ்து என்ற தத்துவத்தை—அசரீரியை அடிப் படையாகக் கொண்டது என்றும், 5. மதமானது உலகபோக போக்கியம் இன்ப துன்பம் ஆகியவைகளை அலட்சியம் செய்து, கடவுளின் பாதாரவிந்தத்தை அடையவும், மோட்ச சாம்ராஜ்யத்தைப் பெறவும் ஏற்ற மார்க்க மென்றும் சொல்லப்படும் மதங்களையும்—மதத் தத்துவங்களையும் பற்றியே நாம் பேசுகின்றோம். என்றாலும், முதலில் கூறப்பட்ட அதாவது :

மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்ட திட்டங்களுக்கோ, மனிதனின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்கு முறைக்கோ ஏற்பட்டது என்கின்ற விஷயங்களிலும்கூட நமது ஆட்சேபணையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது, இன்று மதங்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவைகளில் மேற்கண்ட குணங்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பது ஒரு புறம் இருந்தாலும், இந்தக் காரியங்களுக்காக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிர்வாகமும், சிவில்–கிரிமினல் சட்ட திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம், தண்டனை, சன்மானம் ஆகிய முறைகளும் இருந்துவரும்போது, இவைகள் அல்லாத ஒரு சாதனம், அதாவது மதம் என்கின்ற ஒரு விஷயம் எதற்காக இருக்க வேண்டும் ?

அரசாங்கம், சட்டதிட்டம், நீதி நிர்வாகம், தண்டனை, கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவது கூடி ஒழுங்கு முறையுடன் வாழமுடியுமா என்பதை யோசித்தால், மதம் மேற்கண்ட காரியங்களுக்கு உண்மையாய்ப் பயன்படுகின்றதா என்பது விளங்கும். இன்று எந்தத் தேசத்திலும், எந்த மதத்திலும், எந்தச் சமூகத்திலும் உள்ள மக்களின் சொத்தும் சரீரமும் காப்பாற்றப்படுவது மதத்தினாலா, அரசாங்கச் சட்ட திட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே, மதத்தின் காப்பும்நடப்பும் எப்படிப் பட்டது என்பது சுலபத்தில் புரிந்துவிடும்.

'மதம், எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாய்—காருண்யத்துடன் இருக்கவேண்டும் என்று கற்பிக்கின்றது' என்று மதக்காரர்கள் சொல்லக்கூடும். ஆனால் மனிதன், மனிதனைத் தவிர மற்ற எல்லா ஜீவராசிகளையும்பற்றிக் கவலைப்படாமல் மற்ற ஜீவராசி களைக் கொல்லவும், தின்னவும், இம்சிக்கவும், தனக்கு இடையூறு என்று கருதினால் அழிக்கவும் செய்கிறான். ஆனால், மனிதனை மாத்திரம் அந்தப்படி செய்வதில்லை. இதற்குக் காரணம்—மதமா, அல்லது அரசாங்க சட்டதிட்டமா என்று கேட்கிறோம். மனிதனை அந்தப்படி எங்கோ ஒன்று இரண்டு சமயம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அதற்காகத் தண்டனையை அடைகின்றான்.

ஆதலால், மதம் எங்கே பொதுவான ஒழுங்கு முறையை, ஒழுக்கத்தைக் காப்பாற்று கின்றது என்று கேட்கின்றேன்.

மதம் மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுவதும் மிகுதியும் பொருத்தமற்றதே என்று கருதுகிறேன்.

மனிதனுக்கும் மற்ற ஜீவ வர்க்கத்திற்கும் உள்ள வித்தியாசம் எந்தத் துறையினாலும் அறிய வேண்டுமானால்—பிராணிவர்க்கத் தத்துவம்கொண்ட நூல்களைப் பார்த்தால், தாராளமாக மதச் சம்பந்தம் இல்லாமலே அவைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படி யில்லாமல், மதத்தின் மூலம் அறிந்த ஜீவ தத்துவங்கள் இன்று சிரிப்புக்கு இடமாகத்தான் இருந்துவருகின்றன.

மதம்—மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் கற்பிக்கின்றது; மிருகங்களை, பறவைகளை, பூச்சிகளை, புல்பூண்டுகளை மனிதனைவிட உயர்வாய் மதிக்கின்றது; ஒரு மிருகத்தை உயர்வாய், ஒரு மிருகத்தைத் தாழ்வாய்க் கற்பிக்கின்றது. இந்த விஷயங்களுக்குப் பிராணி சாஸ்திரமே முக்கியமானதும், சரியானதுமே தவிர, மதத்தின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும் தன்மை மிகவும் மோசமானதும், மூர்க்கத் தனமானதும், முட்டாள்தனமானதும் என்றே சொல்லலாம்.

மேற்கண்ட 1, 2, 3 விஷயங்களைப் பற்றியாவது மதத்தை ஒப்புக்கொள்ளச் செய்யலாமா என்று பார்த்தாலுங்கூட, அதுவும் அறிவிற்குப் பொருத்தமற்றதும், மூர்க்கத் தனம் கொண்டதுமான கருத்துக்களால் பாதகமடைகின்றது. அதாவது, எந்த மதக்காரனும் தன்தன் மதத்தைப் பற்றிய ஆதாரங்களும் கொள்கைகளுமே எந்தத் தேசத்திற்கும், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானவை என்றும்; அவைகளில் ஒரு முற்றுப்புள்ளி, குறிப்புக் கோடுகூட மாறக்கூடாது என்றும்; தன்தன் மதத்திற்குத் தலைவன் எவனோ அவனே உலக மதத் தலைவனாக இருக்கவேண்டுமென்றும் செய்யப்படும் பிடிவாதங்களும், முரட்டுத்தனங்களும்—எந்த மதத்தையும் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டி என்று ஒப்புக் கொள்ள முடியாமல் செய்கின்றது.

ஆகவே, மனித சமூகக் கூட்டு வாழ்விற்கும், ஒழுக்க முறைக்கும் மதங்களைவிட, அரசாங்கத் திட்டங்களையே ஆதாரமாகக் கொள்ளுவதுதான் அறிவுடைமை என்று கூறுவோம். அதுதான் இன்று உலகமெங்கும் அனுபவத்தில் இருக்கின்றது என்றும் சொல்லுவோம். ஏனெனில், அவைகளில் காலத்துக்கும், தேசத்துக்கும், ஒத்தபடி—அனுபவத்திற்கும் அறிவுக்கும் ஏற்றபடி மாற்றிக்கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் உரிமை இருக்கின்றது. மதங்களில் அவை காணவே முடியாது. அப்படி ஏதாவது முயற்சித்தாலும் கலகம், கொள்ளை, கொலை முதலியவைகளை உண்டாக்கி விடுகின்றது.

எனவே இந்த விஷயங்களே, —அதாவது இந்த உலகப் பிரத்தியேக மனித வாழ்வு சம்பந்தப்பட்ட இந்த விஷயங்களே— மதத்தின் பயனாக இப்படியிருந்தால்—இனி 'மேலுலக'—அதாவது, மனிதனுடைய கண்ணுக்கும், மனத்துக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத விஷயங்களைப்பற்றி மத போதனைகள் என்ன பயனைக் கொடுக்கக் கூடியவையாக இருக்கும், எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பதைப்பற்றி நான் விளக்க வேண்டுமா என்று கேட்கிறேன்.

மற்றபடி 'மதம், ஜடசம்பந்தத்தை விட்டுவிட்டு ஆத்மாவைப் பொறுத்தது' என்று சொல்லப்படுவதைப்பற்றியோ என்றால்—இந்தக் காரணத்துக்காகவே மதங்களையெல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஆத்மா என்பதை இதுவரை ஒரு மனிதனும் அர்த்தத்தோடு உறுதிப்படுத்தவே இல்லை.

4+3=10 என்று சொல்லிவிட்டு, அந்தப் பத்தைப் பற்றியே விவகாரித்துக் கொண்டிருப்பதுபோலவே—அதாவது, '10-யை யார் யாருக்கு எப்படி எப்படிப் பங்கிடுவது? எங்கு எங்கு வைப்பது? என்று வேண்டுமானால் பேசு; அதற்கு மேல் 4+3 எப்படி 10 என்று மாத்திரம் கேட்கக்கூடாது' என்கின்ற நிலையில்தான் இன்று ஆத்மா தத்துவம் இருந்து வருகின்றது.

அதாவது ஆத்மா, என்றால் என்ன? அது எப்படிச் சரீரம் பெற்றது? அதற்கு எப்படிக் கருமம் ஒட்டிற்று? அதன் நடத்தைக்குக் காரணம் என்ன? அது எப்படி மோட்சம் போகிறது? அது எப்படி மறுபடியும் சரீரம் பெற்று எழுகிறது? மனித ஆத்மா, மிருக ஆத்மா, பறவை ஆத்மா, புழு பூச்சி ஆத்மா ஆகியவைகளில் உள்ள வித்தியாசம் என்ன? ஆகிய இவைகளைப்பற்றியெல்லாம் பேசலாம், விவரிக்கலாம், 'வால்யூம் வால்யூமாக' புத்தகம் எழுதலாம்! ஆனால், ஆத்மா என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அப்படி ஒன்று இருக்க விஞ்ஞான சாஸ்திரம் (Science) அல்லது ஜீவ தத்துவ சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? என்பதைப்பற்றி யாரும் எவ்விதக் கேள்வியும் கேட்கக்கூடாது. ஆத்மா இருப்பதாக அவர் சொன்னார்—கிறிஸ்து சொன்னார்; கிருஷ்ணன் சொன்னார்; புத்தர் சொன்னார்......என்று சொல்லிவிடுவதும், ஆத்மாவை நம்பாதவன் கடவுளை நம்பாத நாஸ்திகனைவிடக் கேடானவன், மடையன், மட்டி என்றும்; 'கடவுளை நம்பாவிட்டாலும் ஆத்மாவை நம்பித்தான் ஆகவேண்டும்' என்றும் சொல்லிவிடுகிறார்களே ஒழிய, காரண காரியங்களுடன் அறிவு அனுபவங்களுடன் பேசுகின்றவர்களே காணக் கிடைப்பதில்லை.

இது ஒருபுறமிருந்தாலும், ரூபம் இல்லாத வஸ்து, தத்துவமில்லாத—மனத்துக்குப் புரியாத விஷயத்துக்காக இவ்வுலக பிரத்தியேக வாழ்க்கையையும், அடையும் இன்பதுன்பங் களையும்பற்றிய கவலை கூடாதென்றோ, அல்லது இக் கவலையைவிட 'ஆத்மா' கவலையே பிரதானமென்றோ, பெரியதென்றோ—சொல்லப்படுமானால், அப்படிப்பட்ட மதத்துக்கு உலகில் மனித ஜீவன்கள் இடம் கொடுக்கலாமா என்றுதான் கேட்கின்றேன்.

நிற்க; 'மதமானது மேல் உலக வாழ்விற்கு ஆதாரமானது' என்று சொல்லப்படு மானால், முதலாவதாக மேல் உலகம் என்பது என்ன என்பதைப்பற்றி இதுவரை யாராவது எங்காவது விளக்கியிருக்கிறார்களா என்று கேட்கிறேன்.

பூகோள சாஸ்திர நிபுணர்கள் பூமியின் கீழ் மனத்திற்கு எட்டக்கூடிய அளவு வரையும்; பூமியின் மேல் ஆகாய மார்க்கமாக மனத்திற்கு எட்டக்கூடிய அளவு வரையிலும் ஆராய்ந்து பார்த்து—இலட்சக்கணக்கான மைல்—(ஏன்) கோடிக்கணக்கான மைல் தூரம் வரையில் ஆராய்ச்சி செய்து மேல், கீழ் நிலைமையை விளக்கியிருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு நிபுணத்துவர்கள் என்கின்ற நிலைமையிலும், அனேக வருட காலம் அதற்காகப் பாடுபட்டு உழைத்து, அனேக கருவிகளின் உதவி கொண்டு கண்டுபிடித்துச் சொன்ன பிரத்தியட்ச அனுபவ—மெய்ப்பிக்கக் கூடிய உண்மைகளே ஒழிய, 'ஞான திருஷ்டி'—அதாவது ஒரு மனிதனுடைய புத்திக்குத் திடீரென்று தோன்றிய விஷயம் என்று சொல்லப்படுவதுபோல் சொல்லப்பட்டதல்ல. அன்றியும், பள்ளிக்கூடங்களில், அல்லது பூகோளப் புத்தகங்களில் முறையே கற்பிக்கப்படாததும் காணப்படாததுமான விஷயங் களுமல்ல.

அப்படியிருக்கும்போது, இந்தப் பிரத்தியட்ச உலக விஷயத்தை விட்டுவிட்டு, மேல் உலக விஷயத்தைப்பற்றிப் பேசுவதென்றால், அதில் அடங்கியிருக்கும் பேதைத் தன்மைக்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரையில் மனிதன் மேல் உலகத்தை எப்படிக் கண்டு பிடித்தான், அதன் விஸ்தீரணம், தன்மை என்ன என்பவைகளைப் பற்றிய உண்மை எதுவும் சொல்லப்படாமல், 'மேல் உலகத்தை நம்பு; பிறகு எப்படி வேண்டுமானாலும்-அதாவது, மோட்சம் எப்படிப் பட்டது? நரகம் எப்படிப்பட்டது? தண்டனை எப்படிப்பட்டது? அது யாருக்குச் சொந்தம்? பரமபிதாவா—அல்லாவா? வைகுண்ட நாதரா? கைலாச வாசரா? யார் அதற்கு எஜமான்? என்பதைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் வாதம் செய்' என்று கற்பிக்கப்பட்டதாய் இருப்பதைத் தவிர, வேறு என்ன உண்மை அல்லது அறிவுடைமை மேல் உலக விஷயத்தில் இருக்கிறது என்று கேட்கிறேன்.

அதுபோலவே, 'மதம் கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது' என்று சொல்லப்படும் வார்த்தையும் அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

கடவுளைப்பற்றி—அதாவது, கடவுள் என்றால் என்ன என்பதைப்பற்றி, இதுவரை ஆஸ்திகனாவது, அல்லது கடவுள் தன்மைகள் பெற்ற பெரியார்களாவது விளக்கினவர்களே இல்லை.

கடவுள் என்றால், கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாதது; ரூபமும் குணமும் இல்லாதது; சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளது என்று சொல்லிவிடுவதும்—அதைச் சொல்லுகின்றவர்களே அந்தக் கருத்தை நம்பாமல் இருப்பதும், பிறகு அதற்கு முரணாகப் பேசுவதுமான காரியங்களே இதுவரை கடவுளைப்பற்றிய வாதங்களின் முடிவாய் இருந்து வருகின்றன.

மனதுக்கு உட்படாத கடவுளைப்பற்றி மனிதன் எப்படி, எந்த இந்திரியத்தினால் உணர்ந்தான் என்று கேட்டால்—பதிலேயில்லை. குணமும், ரூபமும் இல்லாத வஸ்துவுக்கு செய்கை எது என்று கேட்டால்—அதற்கும் பதிலேயில்லை. சர்வ சக்தி, சர்வ வியாபகம் உள்ள கடவுள் செயலில் நன்மை–தீமை, இன்பம்–துன்பம், மேல்–கீழ், சுகம்–துக்கம், மோட்சம்—நரகம் எப்படி உண்டாயின என்று கேட்டால்—அதற்கும் பதில் இல்லை. 'அதைப்பற்றி யெல்லாம் யாரும் கேட்கக்கூடாது. கடவுளை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாதவன் நாத்திகன்; நம்பாவிட்டால் நரகம், அரச தண்டனை, ஆத்திகர்கள் தண்டனை கிடைக்கும்' என்று மிரட்டுவதும் உருட்டுவதும் தவிர கடவுளைப்பற்றி வேறு விளக்கமே இல்லை.

சர்வ சக்தியுள்ள, சர்வ வியாபகமுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்—ஏன் கடவுளை அறியமுடியவில்லை? ஏன் கடவுள் இல்லையென்று சொல்லுகிறேன்? என்று ஒருவன் கேட்டால்—'அது உன்னுடைய அகம்பாவம்; உன்னுடைய மடமை; உன்னுடைய பாவச் செய்கை' என்று சொல்லி, கடவுளைவிட அவனைப் பெரியவனாக மதித்து இகழ்வதா யிருக்கின்றதே தவிர, வேறு சமாதானமில்லை.

இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட மதங்களைப்பற்றி மக்கள் வேற்றுமை உணர்ச்சி கொண்டு, ஒருவரை ஒருவர் வெறுத்து, பலாத்காரச் செய்கையில் ஈடுபட்டு மக்களைத் துன்புறுத்துவதென்றால், மதத்தை ஒழிக்காமல் இருக்க யாருக்குத்தான் மனம் வரும் என்று கேட்கிறேன்.

மதத்தின் பயனாக நமது வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், தொல்லைகள் அடைய நேரிடுகின்றது என்பதை உணர்ந்தால்—மேலும் மேலும் மதங்களிடம் வெறுப்புத் தோன்ற இடமேற்படுகிறதேயொழிய, சிறிதாவது அதைச் சகிக்க இடமே இல்லாமல் இருக்கின்றது.

கிறிஸ்துவ மதத்தைப்பற்றி எழுதினோம் என்பதற்காக 'குடி அரசு' பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று. முகமதிய மதத்தைப்பற்றி எழுதியதற்காக 'புரட்சி' பத்திரிகை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

இந்து மதத்தைப்பற்றி எழுதுகிறோம் என்பதற்காகத் தினந்தோறும், நிமிடந் தோறும் அடைந்து வரும் தொல்லைகளும் நசுங்குச் சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது. பார்ப்பனர்களை உத்தியோகஸ்தர்களாகக் கொண்ட போலீஸ் இலாக்கா, போஸ்டல் இலாக்கா, இரயில்வே இலாக்கா, நீதி இலாக்கா, நிர்வாகம் மற்றும் அனேக துறைகளில் கீழேயிருந்து அய்க்கோர்ட் நிர்வாக சபை வரையில்—ஆங்காங்குள்ள மதக் காப்பாளர்களான பார்ப்பனர்களால் நாம் அடைந்து வரும் கஷ்டம், சித்திரவதைக் கொப்பாக இருந்துவருகின்றது.

நாம் மாத்திரமல்லாமல் நம்மைப்போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக்கணக்காக எல்லா மதங்களிலும் இருந்துவருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

மதமானது பணக்காரத் தன்மையைப் பிரதிபலித்துக்கொண்டும், அதை ஆதரித்துக் கொண்டும் இருந்துவருகின்ற சாதனமாய் இருப்பதால் அதற்கு இவ்வளவு ஆதிக்கம் இருந்துவருவதில் அதிசயமில்லை. ஆதலாலேயேதான், மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு, பணக்காரத் தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகிறோம்.

ஒரு கிறிஸ்தவன் முகமது நபியைப்பற்றி ஏதோ எழுதிவிட்டால் முகமதியர்களுக்கு ஆத்திரம் வருகின்றதும்; ஒரு முகமதியன் கிறிஸ்துவைப்பற்றி எழுதிவிட்டால் கிறிஸ்தவனுக்கு ஆத்திரம் வருவதும்; இதுபோலவே இந்துகளுக்கும், கிறிஸ்துவ, முகமதியர்களுக்கும் நேருவதும், அதற்காகக் கொலை, கொள்ளை கொடுமைகள் நடப்பதுமான காரியங்கள்—அதுவும் இன்று நேற்றல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக; அதுவும் இந்தியாவில் மாத்திரமல்லாமல் ஐரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லா நாடுகளிலும் நடந்துவருகின்றன என்றால் மதம் மக்களுக்குக் கூட்டு வாழ்க்கையையும், ஒற்றுமையையும், சகிப்புத் தன்மையையும், வாழ்க்கை ஒழுங்குகளையும், ஒழுக்கங்களையும் போதித்து வருகின்றதா என்று கேட்கிறேன்.

இந்து மதமும் இஸ்லாம் மதமும் ஒழுக்கத்தைப்பற்றிப் போதிப்பதில் ஒன்றுக் கொன்று—தானே சிறந்த ஒழுக்கத்தையுடையது என்று—போட்டி போடுகின்றன. ஒழுக்க யீனங்களில் எல்லாம் மிகக் கேடானதாக,—குற்றங்களில் எல்லாம் மிக இழிவான குற்றமாகவும் கருதப்படும் குற்றமாகிய பெண்களைப் பலாத்காரம் செய்து கற்பழித்தல், மான பங்கம் செய்தல் என்னும் குற்ற விஷயத்தில் இரு மதஸ்தர்களும் வங்காள மாகாணத்தில் எப்படி நடந்து இருக்கிறார்கள் என்பதைக் காட்ட, 'மாடர்ன் ரிவியூ' (Modern Review) பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு புள்ளி விவரத்தை இங்குக் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கிறேன்.

'இஸ்லாம் மூர்க்கர்களால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் விவரம்'

வருஷம்	இந்துப் பெண்கள்	முஸ்லிம் பெண்கள்	மொத்தம்
1926	113	481	594
1927	122	576	698
1928	104	460	564
1929	114	676	790
1930	104	531	635
1931	125	573	698

'இந்து மூர்க்கர்களால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் விவரம்'

வருஷம்	இந்துப் பெண்கள்	முஸ்லிம் பெண்கள்	மொத்தம்
1926	194	9	203
1927	201	3	204
1928	198	10	208
1929	236	8	244
1930	234	6	240
1931	197	3	200

மதம் ஒழுக்கத்தை, கூட்டு வாழ்க்கை ஒழுங்கு முறையை, மனிதர்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய தன்மையை எங்கே, எப்படிக் கற்பித்து இருக்கின்றது என்று மத பக்தர்களைக் கேட்கிறேன்.

['பகுத்தறிவு'—தலையங்கம்—9-9-1934]

மக்கள்வாழ்கை நாகரிகமாய் நடத்தப்பட மதம் வேண்டும் என்பது மதக்காரர்களுடைய வாதமாகும்.

இப்படிப்பட்ட வாதமும், தங்கள் தங்கள் மதந்தான் மனித சமூக நாகரிக வாழ்க்கைக்கு ஏற்றது என்பதும் ஒவ்வொரு மதக்காரர்களின் பிடிவாதமுமாகும்.

மதம் இல்லாமல் உலகில் எவ்வளவோ ஜீவகோடிகளும் பல மக்களும் வாழ்க்கை நடத்தவில்லையா என்று கேட்போமேயானால், அதற்குப் பதில், 'சாதாரண அசேதன வாழ்க்கை வாழலாமே ஒழிய, நாகரிகமானவாழ்க்கை நடத்தமுடியாது' என்றும், அதற்காகத்தான் மதம் இல்லாவிட்டால் மக்கள் நாகரிக வாழ்க்கை நடத்தமுடியாதென்று சொல்லப்படுவதாகவும் சொல்லுவார்கள்.

அதற்காக வேண்டியே மதவாதிகள் மதத்தைப்பற்றிப் பிரச்சாரங்களும், விளம்பரங்களும் செய்துவருகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களும் பிரச்சாரங்களும், புராணங்களாலும் படங்களாலும் கதைகளாலும் நடிப்புகளாலும் கோவில்களாலும் மற்றும் பல சாதனங்களாலும் செய்துவருகிறார்கள்.

இவ்வளவோடு நிற்காமல் கடவுள் அற்ற, மதமற்ற உலகத்தில் மக்கள் பல கொடுமைகளையும், தீமைகளையும், ஹிம்சைகளையும் அடைவதுபோலவும், அசுர ஆட்சியே நடைபெறுவதாகவும், கட்டுகள் கட்டி மக்களைப் பயப்படுத்துகிறார்கள்.

மேலும், கொள்ளைநோய்களும் துஷ்டதேவதைகளின் கோபத்தின் பலன் என்றும், வால்நட்சத்திரத்தின் வாயில் இருந்து கக்கப்படும் தீப்பொறிகளின் விளைவு என்றும் மக்களை ஒருவித பயத்துக்குள்ளாக்கினார்கள்.

நம் நாட்டு அரசியல் மேதாவிகளும் இப்படித்தான்—அதாவது பூகம்பத்தால் விளையும் கேடுகளும், வெள்ளத்தாலும் நெருப்பாலும் ஏற்படும் கொடுமைகளும், கடவுள் கோபத்தால் ஏற்பட்ட விளைவின் பயன் என்றும் சொல்லி மக்களை மிரட்டுகிறார்கள்.

மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கச் சட்டம் என்பதெல்லாம் அந்தந்த சமூகநிலையை அனுசரித்து ஏற்படுத்தப்படவேண்டியதேயல்லாமல், மனிதர்கள் மேல் உலகத்துக்குப் போவதற்குத் தகுந்தபடியும், அங்கு சென்றபின் நடக்கவேண்டிய காரியங்களுக்குத் தக்கபடியும் அமைக்கவேண்டியதில்லை.

மதம் இல்லாவிட்டால் மக்கள் கோவிலுக்குப் போக மாட்டார்களே என்றோ, கோவிலுக்குப் போகாவிட்டால் மக்கள் ஒழுக்கமாக நடந்துகொள்ள மாட்டார்களே என்றோ யாரும் பயப்படவேண்டியதில்லை.

உதாரணமாக வேண்டுமானால், கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டவர்களிடமிருந்தே அவர்களது விகிதாச்சாரத்திற்குக் குறைவில்லாத அளவு குற்றங்கள் குறைந்து கொண்டு வந்து இருப்பதை அனேக ஆதாரங்கள், புள்ளி விவரங்களோடு காட்டலாம்.

மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்ல ஆரம்பித்தாலேயே ஏன் சொல்லுகின்றோம், அதற்காக என்ன அவசியத்தைக் காட்டுகின்றோம் என்பதைச் சிந்திக்காமலேயே, சிந்திக்காவிட்டாலும் நமக்குக் காதுகூட கொடுக்காமலேயே, ஏதோ ஒரு பெரிய அபாயம் வந்து விட்டதுபோல மிக்க கவலையாகச் சிந்தனைசெய்யத் தொடங்கிவிடுகின்றார்கள்.

இதற்குக் காரணம் எல்லாம் அவர்கள் ஒழுக்கம் கெட்டுவிடுமே என்பதுகூட இல்லாமல்—நரகம் சித்தித்துவிடுமே என்பதும், மேல் லோக வாழ்க்கை பெருத்த மோசமானதாகிவிடும் என்பதுமே ஆகும்.

ஏனெனில், குருக்கள்மார் மதத்தை மக்களுக்குள் புகுத்துவதற்காகவும், மக்கள் மனத்தில் என்றென்றும் மதம் நிலைத்து இருப்பதற்காகவும் நரகத்தைப்பற்றி அவ்வளவு அதிகமாக வருணித்து, அவ்வளவு அதிகமான பயத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே, கடவுள் உதவி வேண்டுமானால் மதம் வேண்டும் என்பதும், மதம் வேண்டுமானால் குருக்கள் வேண்டும் என்பதுமே மதத்தின் அவசியத்துக்குக் காரணமாக்கி, அதன்மூலம் குருக்கள்மார் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி இருக்கிறார்கள்.

சாதாரணமாகப் பார்த்தாலும், மனித சுபாவமானதும், மனித சக்தியானதும் மதத்தைக்கொண்டேதான் வெளிப்படக்கூடியதென்றோ, நிலைநிற்கக்கூடியதென்றோ சொல்லுவது சுத்தத் தப்பான அபிப்பிராயமாகும்.

கோவிலையும் மதத்தையும் மிகப் பிரமாதமாய்க் கருதாதவர்களும், அதில் கவலையில்லாதவர்களும் அவற்றில் அனுதாபமோ, நம்பிக்கையோ இல்லாதவர்களுமான மக்களுக்குள்ளாகவே எத்தனையோ பேர் தங்கள் தங்கள் சுபாவங்களையும், சக்திகளையும் உணர்ந்துகொண்டு எவ்வளவோ மேலான நல்ல தன்மையுடனும், அதிமேதாவித்தனமான அறிவுடனும் உடல், பொருள், ஆவி ஆகியவற்றை மக்கள் நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்தியவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதத்தினாலும், பக்தியினாலுந்தான் மக்கள் தங்கள் சக்தியை உணரலாம் என்பதும், நன்மையான காரியங்களைச் செய்யலாமென்பதும், மேலான அறிவைப் பெறலாம் என்பதும் மெத்த பலமற்ற வாதமாகும்.

ஒழுக்கத்துக்காகவும், சமுதாய ஒழுக்கத்துக்காகவும் மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது மிகமிக பலமற்ற வாதமாகும்.

வரப்போகின்ற காலத்தில் மதக்கோட்பாடுகளைப்பற்றிப் பிரமாதப்படுத்துவதும், அதற்காகப் பல காரணங்களையும் கட்டுக்கட்டி மக்களுக்குள் புகுத்துவதும், அவற்றை எல்லாம் நம்பும்படி செய்வதும் இனி முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

எப்படித்தான் பாடுபட்டுப் புகுத்தினாலும் உண்மையான நம்பிக்கை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போனால் அவை எப்படி மதிப்புப் பெறமுடியும்? ஜனங்களைக் கோயிலுக்குப் போகும்படி செய்தல், ஒரு விஷயம்; அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதனக் கொள்கைகளிலோ நம்பிக்கைகொள்ளச் செய்வது வேறு விஷயம்.

சிறிது யோசித்தாலும் நரகத்தின் அடிப்படை முழுவதும் பொய்யாகிவிடும். கோயிலுக்குப் போகாததாலேயே நாம் கெட்டுப்போய்விடமாட்டோம். நாம் கோயிலுக்குப் போவது குறைந்துபோய் இருந்தாலும் நாம் நாளுக்குநாள் முன்னேற்றம் அடைந்தே வருகிறோம். நமது காலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித்திர சம்பந்தமாகவும், சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோமானால் ஏராளமான உண்மைகளும் புள்ளி விவரங்களுமே, 'நாம் முன்னேற்றமடையவில்லையா?' என்ற சந்தேகங்களை அறவே ஒழித்துவிடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத்காரங்களும், அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற்காலத்தவர் நம்மைவிட அதிக சுகஜீவிகளாய் இருந்ததில்லை. அவைகளைப் பற்றி நாம் நிச்சயமான புள்ளி விவரங்களைக் காட்டலாம்.

மதக்காரர்கள், நம்மைப்பற்றி—நாம் மடுவில் மூழ்கி இருக்கின்றோம் என்று கருதுகின்றார்கள். அதாவது, நாம் அநீதியை வளர்க்கிறோம் என்பதாகக் கருதுகின்றார்கள். இதற்கு ஆதாரமான புள்ளி விவரங்கள் ஒன்றும் இல்லை. ஆகவே, இந்த அபிப்பிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபசார விஷயங்களையும், குற்ற விவரங்களையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதிகாலத்தில் இத்தகைய பத்திரிகைகளின் விளம்பர முறைகள் இருந்ததில்லை என்பதை மக்கள் மறந்துவிடுகிறார்கள். ஆயினும், அக் காலத்திலும் விபசாரங்களும் குற்றங்களும் இருந்தே வந்திருக்கின்றன.

நவீன உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்து கொள்ளவேண்டும். குற்றங்களைப் பற்றியும் பலவந்தத்தைப் பற்றியும் பயப்படவேண்டாம். ஜனங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் மணவாழ்க்கை விஷயமாக ஜன சமூகம் தன் சமுதாய நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளும். சமுதாயத்தைப் பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கி ஆள முடியாது. இனி வருங்காலத்தில் அதைப்பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அது ஒரு பெரிய விஷயம்.

இனி மதத்தை எப்படித் திருத்தினாலும் அதை எப்படிக் கலைத்து அமைத்தாலும், அதை—ஒழிந்து போவதினின்றும் தடுக்கமுடியாது; அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருக்கமுடியாது; எல்லா மக்களையும் ஒப்புக்கொள்ளும்படி இனிச் செய்யமுடியாது.

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு, ஒழுக்க அபிவிருத்திச் சங்கங்களை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்கிறார்கள். இது எப்படி ஒரு பெரிய மதமாகிவிடும் என்பதைப் பற்றிச் சுலபமாய்ப் பரீட்சித்து விடலாம். சென்ற நூறு வருடங்களாக உலகில் பல இடங்களில், சிறப்பாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும்கூட மதாபிமான வைதீகச் சங்கங்களும் கோவில்களும் இருந்து வந்திருக்கின்றன. அவைகளில் அனேகம் மதக்கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீப காலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்தி சங்கங்களும் இருந்து வருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்று இருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப் போகாத ஆறுகோடி அமெரிக்கர்களும் மூன்று கோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது.

நம்முடைய காலத்திற்கு 'ஞாயிற்றுக் கிழமை கூட்டம்' தேவையில்லை; அதற்குத் தெய்வ வணக்கமோ அதற்குப் பதிலாக வேறு எதுவுமோ தேவை இல்லை.

நவீன நாகரிகத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகளின் நிலைமை என்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. இவர்களில் வீடுகளில் யாரும் கடவுளை வணங்குகின்றார்கள் என்றும்—யாரும் சொல்லமுடியாது. இந்தத் தேசங்களில் இலட்சக்கணக்கான குருக்கள் ஜனங்களைக் கோயிலுக்குப்போகும்படி நியாயம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். மனைவிமார்களும், குமாரத்திகளும் தங்கள் தங்கள் ஆடவர்களை அதற்குக் கட்டாயப்படுத்தும்படியும் தூண்டப்படுகிறார்கள். கோவில் பூசை முறைகளைக் கூடியவரையில் கவர்ச்சி உள்ளதாக ஆக்குகிறார்கள். குறிப்பிட்ட கிழமைகளின் நீண்ட பூசை காலத்திற்குப் பதிலாக இனிமையான மாலைப் பூசைகளைக் கிழமைகள்தோறும் நடத்துகிறார்கள். சங்கீதம் அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத் தக்க மதக் கற்பனைகளைப்பற்றிய தலையங்கங்களைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடல், பாடல், ஆடும் படக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. புதிய மதங்களான கிறிஸ்துவ, விஞ்ஞான, ஒழுக்க அபிவிருத்தி, 'தியாசபி' முதலியவை பழையவைகளோடு போட்டிபோடுகின்றன. முடிவு என்ன? உண்மை விஷயம் என்ன? நவீன நாகரிகத்தில் ஜனத்தொகையில் பாதி அல்லது முக்கால் பாகம் இவைகளையெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக் கோட்பாடுகள் குறைந்ததற்கு ஏற்பக் குறைந்த ஜனங்களே போகிறார்கள்.

கோவிலுக்குப் போகும்படி ஜனங்களை யாரும் நிர்ப்பந்தம் செய்யவில்லையென்று வைத்துக் கொள்வோம். பத்து வருடங்களுக்குக் குருமார்கள் எல்லோரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முடிவென்ன

வாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள்! நான் என் அபிப்பிராயத்தை இங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால், அப்பொழுது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாய் இருக்கிறது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப் பற்றுக் கிடையாது என்பது வெளிப்படை. நாகரிக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப் பற்று உள்ளவர்களாக வைத்துக்கொள்ள பத்து லட்சத்திற்கு மேற்பட்ட பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது.

இயற்கை மதப் பற்றைப்பற்றி பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலத்தையே கவனிக்கிறார்கள்; தற்காலத்தைப்பற்றி அறியாது இருக்கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று. ஆசியாவில் இருந்ததுபோல, படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலேயே இருந்துவருகிறார்கள். எப்படி இருந்தாலும், நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலக சந்தர்ப்பங்கள் முழுவதும் மாறிவிட்டன.

இருபதாவது நூற்றாண்டில் என்ன நேரிடும் என்று யாரும் கூற முடியாது. மதத்தைப் போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்ப்பந்தத்தையும் உண்டாக்க முடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்துவருகிறது. மதப் பற்று மனிதனுக்கு இயற்கையல்ல என்பதைக் கண்டுபிடித்தோம். அனேகர் மதத்தை விட்டுவிட்டார்கள். மதப் புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது மதப் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக் குறிப்புகள் காணப்படுவதில்லை. மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப் பேசப்படுகின்றன. அதைக் கேட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் நகைக்கின்றார்கள். ஆடும் படக் காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச் சேர்த்து இருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக் கொள்கிறார்கள். மதம் மெதுவாக இறந்து கொண்டிருக்கிறது.

அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப் போகுமா? மதத்தை அலட்சியம் செய்த அனேக இலட்சம் இலண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப்போகவில்லையே! இவர்களைப்பற்றி நான் நன்கு அறிவேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப்பற்றியும் நினைப்பதில்லை. வாழ்வு கெட்டுப்போகுமென்பதும், அவநம்பிக்கையால் அபாயம் என்பதும் சாதுர்யமான கட்டுக் கதைகளே ஆகும். வாழ்வு நல்லது; அது ருசிகரமானது. இலட்சாதிலட்சம் பேர் அனுபவித்து ஆனந்திக்க முடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக்கிடந்தார்கள்.

மக்களின் விருப்பத்திற்கேற்பக் கலைகள் இருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது, இலக்கியம் இருக்கிறது. பெருமை மிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001 வேடிக்கை வினோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஆகவே, மதமின்றி மக்கள் வாழமுடியாது என்று மதப் பிரச்சாரகர்கள் பயப்பட வேண்டியதில்லை.

['குடி அரசு'-கட்டுரை—30-7-1949; 'விடுதலை' 18-8-1972]

18. அறிவுள்ள மனிதனுக்கு அடையாளம்

உலகில் மதங்கள் ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகியிருந்தாலும் மதங்களை ஏற்படுத்தினவர்கள் எல்லாம், அல்லது மதங்களின் மூல புருஷர்கள் எல்லாம் தெய்வீக சக்தி பொருந்தியவர்களாகவும் தெய்வ சம்பந்தமுடையவர்களாகவும் தீர்க்க தரிசன ஞானமுள்ள மகாத்மாக்களாயும் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டும், எல்லா மதக்

கட்டளைகளும் தெய்வங்களாலேயே மூலபுருஷர்கள் மூலம் உலகத்திற்கு இறக்கப்பட்டவை என்று சொல்லப்பட்டும் இருந்தாலும்—சதா சர்வ காலமும் அந்த மதப் பிரச்சாரம் செய்யப் படாவிடில் மதம் ஒழிந்து போய்விடுமே என்கின்ற பயம் எல்லா மதங்களிடமும் இருந்து தான் வருகின்றது. இந்தக் கருத்திலும், காரியத்திலும்—உலகில் இன்ன மதம் உயர்வு, இன்ன மதம் தாழ்வு என்று சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக, ஒரு கோடி ரூபாயோ அல்லது இரண்டு கோடி ரூபாயோ கையில் வைத்துக்கொண்டு, ஆயிரம் ஆட்களோ அல்லது இரண்டாயிரம் ஆட்களையோ நியமித்து, 5, 6, மொழிகளில் பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட மிருகத்தின் பேரால் ஒரு மதத்தைக் கற்பித்து, அம் மிருகத்துக்குச் சில தெய்வீகத்தன்மை களைக் கற்பித்து—அது பல 'அற்புதங்கள்' செய்ததாகக் கதைகள் கட்டிவிட்டுப் பிரச்சாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டால்—கண்டிப்பாகச் சில வருட காலத்திற்குள் இலட்சக்கணக்கான மக்களை அம் மதத்தைப் பின்பற்றுபவர்களாகச் செய்துவிடலாம். பிறகு அந்த மதத்தை எவனாவது குற்றம் சொல்லுவானேயானால், அவன் தண்டிக்கப்படவோ, திட்டப்படவோ, கொலைசெய்யப்படவோ ஆளாகும்படியும் செய்துவிடலாம்.

மதங்களும் அதுபோலவேதான். தன்னை ஒரு மதக்காரன் என்று காட்டிக் கொள்ள வேண்டுமானால் மதக் குருக்கள் அல்லது மதக் கர்த்தாக்கள் அல்லது மதப் பிரச்சாரக் காரர்கள் என்றும் சொல்லப்படுபவர்கள் என்ன சொல்கின்றார்களோ, எப்படி நடந்தால் மத பக்தி உடையவன் என்று சொல்வார்களோ அந்தப்படி நடக்கத்தான் ஒவ்வொரு மதபக்தனும் ஆசைப்படுகிறான்.

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதென்றும்; 'சயின்ஸு'க்கும் மதத்துக்கும் சம்பந்தம் பார்க்கக் கூடாதென்றும்; பகுத்தறிவு வேறு, மதக் கோட்பாடுகள் வேறு என்றும்; இந்தக் காலம் வேறு, அந்தக் காலம் வேறு என்றும்; பெரியவர்கள் நியமனங் களுக்குக் காரண காரியங்கள் தேடக்கூடாது என்றும்; ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக் கூடாது என்றும் எல்லா மதக்காரர்களும் சொல்லிவிடுவதால்—உலகில் எந்த மூடனும் எதையும் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியத்தின்மீதே மத ஆபாசமும் மத அயோக்கியத்தனங்களும் உலகில் நிலைத்துவருகின்றன.

இந்த இலட்சணத்தில் உள்ள மதங்களுக்கு ஆள் பிடிக்கவேண்டும் என்கின்ற ஆர்வத்தின்மீது மதமாற்றப் பிரச்சாரங்களும் நடந்துவருகின்றன என்றால்—இது, 'புழுத் ததின்மீது நாய் விட்டைவிட்டது' என்கின்ற பழமொழிப்படி, மனிதர்களை மேலும் மூடர்க ளாக்குவதாகவே இருந்துவருகிறது. சாதாரணமாக, இந்திய மக்களில் 100-க்கு 92 பேர்கள் தற்குறிகள்; எழுதப் படிக்கத் தெரியாத மூடர்கள். இவர்களிலும் 100-க்கு 90 பேர்கள் நல்ல ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் செய்யலாம் என்று கற்பிக்கப்பட்டிருக்கிறவர்கள். இப்படிப்பட்ட இவர்களிடத்தில் எது சொன்னால் ஏலாது? எழுத்து வாசனை அறியாத மூடர்களுக்கு என்ன சொன்னாலும் நம்பும் சக்தி அதிகம். ஆதலால், இப்படிப்பட்ட ஜனங்களிடம் மதப் பிரச்சாரம் செய்து மத மாற்றுதல் வேட்டை ஆடுவது என்பது யாவருக்கும் சுலபமான காரியமாகும்.

இந்திய மக்களின் கல்வியறிவு வாசனை அற்ற தன்மையும், பாமரத் தன்மையும், அடிமைத் தன்மையும், எல்லாம் சேர்ந்து உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் இல்லாத அவ்வளவு மதங்களும், மத வேற்றுமைகளும், மத மாற்றமும் தாண்டவமாடுகின்றன.

இந்தியாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பவுத்தர்கள், யூதர்கள், பாரசீ கர்கள், சீக்கியர்கள், ஆரிய சமாஜிகள், வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய கடவுள் மாறுபாடுள்ளவர்களும்; மதக் கர்த்தாக்கள் மாறுபாடுள்ளவர்களும், மதக்கோட்பாடு களின் அர்த்த மாறுபாடுள்ளவர்களுமாக எத்தனையோ பிரிவினைகள் இருந்துகொண்டு, வெகுகாலமாகவே மதமாற்றப் பிரச்சாரம் செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனால், இந்த மதங்களின் மனித வாழ்க்கைத் தத்துவத்தில்—ஏதாவது ஒன்றுக்கொன்று பிரமாத வித்தியாசங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்றுமே காண முடியாத நிலையில்தான் இருந்துவருகின்றன.

எல்லா மதத்துக்குமே, ஒரு கடவுள் உண்டு: மேல் லோகமுண்டு; மோட்ச நரக முண்டு; ஆத்மா உண்டு.

செத்த பிறகு இந்த ஆத்மா அல்லது மனிதன் அவனவன் நன்மை தீமைக்கு ஏற்ற விதம் மோட்ச–நரகம் அனுபவிப்பான் என்கின்ற கொள்கைகளில் கருத்து வித்தியாசம் இல்லாமலே இருந்து வருகின்றது.

எல்லா மதங்களிலும்—ஏழைகள், பணக்காரர்கள் இருக்கிறார்கள்; எஜமான், கூலியாள் இருக்கிறார்கள்; உற்சவம், பண்டிகை இருக்கின்றன; வணக்கம், தொழுகை, பிரார்த்தனை, ஜபம், தபம் இருக்கின்றன. எல்லா மதக் கடவுள்களும் தொழுகை, பிரார்த்தனை, வணக்கம், பூசை ஆகியவைகளுக்குப் பலன்கள் கொடுக்கின்றன.

பிரத்தியட்ச அனுபவத்திலோ எல்லா மதத்திலும் 'அயோக்கியர்கள்', 'யோக்கியர்கள்' இருந்து வருகிறார்கள்.

எல்லா மதக் கடவுள்களும் கண்களுக்குத் தோன்றாததும், மனத்திற்குப் படாததும்; ஆதி, அந்தம், ரூபம், குணம், பிறப்பு, இறப்பு முதலியவைகள் இல்லாதவைகளுமாகவே இருக்கின்றன. எல்லா மதங்களும் கண்களுக்கும் மனத்திற்கும் தோன்றக்கூடிய எந்த வஸ்துவுக்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும் என்றும், ஆனால் கண்களுக்கும் மனத்திற்கும் எட்டாத ஒரு வஸ்துவாகிய கடவுளுக்கு ஒரு கர்த்தா இல்லையென்றும்தான் சொல்லுகின்றன.

ஒரு மதமாவது—'என் கடவுள் கண்ணுக்குத் தெரியக்கூடியது என்றோ; என் வேதமாவது தனது கோட்பாடுகளெல்லாம் மக்கள் எல்லோரும் ஏற்று நடக்கக்கூடியதாய் இருக்கின்றது, அல்லது நடக்கக்கூடியதாய்ச் செய்ய சக்தி உள்ளதாய் இருக்கிறது என்றோ, சொல்ல யோக்கியதை உடையதாக இல்லை. எல்லா மதக்காரர்களுக்கும் பசி, தாகம், நித்திரை புணர்ச்சி, இன்பம், துன்பம் ஒன்றுபோலவே இருக்கின்றன. எல்லோருடைய வேதமும், கடவுளாலும் கடவுள் தன்மை உடையவர்களாலும்தான் உண்டாக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுகின்றது. எல்லா மதக்காரர்களுக்கும் ஒவ்வொருவித அடையாளம் இருக்கின்றது. இந்த நிலையில், மதப் பிரச்சாரத்தால் மனிதர்களுக்கு என்ன இலாபம் என்பது விளங்கவில்லை.

சாதாரணமாக, இந்தியவில் 10 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள்; 1 கோடி கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; சுமார் 10 கோடி வைணவர்கள் இருக்கிறார்கள்; 5 கோடி சைவர்கள் இருக்கிறார்கள்.

மற்றும் கலப்பு மதம் உள்ளவர்கள், மதக் குறிப்பு இல்லாதவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள் என்று உத்தேசமாகச் சொல்லக்கூடுமானாலும்—இவர்கள் பெரும்பான்மையோர் சமீப காலங்களில், அதாவது சுமார் 1000, 2000 வருடங்களுக்குள் மதமாற்றமடைந்தவர்கள் என்று சொல்லலாமானாலும், இவர்களின் வாழ்க்கையில் உயர்வு தாழ்வு என்ன என்பதை நன்றாய்ப் பார்ப்போமானால், ஒருவித மேன்மையும் எந்த ஒரு தனி மதக்காரருக்கும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது, அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும், அறிவியலிலாகட்டும், சமுதாய வாழ்க்கையியலிலாகட்டும், ஆண்–பெண் தன்மையிலாகட்டும், எல்லோரும் ஒரு மாதிரியாகவேதான் இருந்துவருகின்றார்கள்.

ஆகையால், இந்தியாவுக்கோ, அல்லது உலகத்துக்கோ இனி மதம் ஒழிப்புப் பிரச்சாரம் வேண்டுமா என்பதை ஒவ்வொரு அறிவாளியும் யோசிக்கவேண்டியது முக்கிய கடமையாகும்.

மதப் பிரச்சாரக் காரியங்களால் சமீப காலத்திற்கு முன்பு உலகிலும், குறிப்பாக இந்தியாவிலும்—சிறப்பாகத் தென்னிந்தியாவிலும் நடந்த முட்டாள்தனமான, மூர்க்கத் தனமான பலாத்காரக் கொடுமைச் செயல்களும், கலகங்களும், அடிதடிகளும், குத்து வெட்டு களும், கொலைகளும், சித்திரவதைகளும் எவ்வளவு என்பதற்குச் சரித்திரங்கள், புராணங்கள், பிரட்தியட்ச அனுபவங்கள் எத்தனையோ மலிந்துகிடக்கின்றன. இவைகளை யெல்லாம் உத்தேசித்தாவது, இனிவரும் சுயமரியாதை–அறிவியக்க–சமதர்ம உலக ஆட்சியில் மத விஷயத்தைப்பற்றி ஆதரித்த எவராவது தெருவில் நின்று பேசினாலும், தெருவில் புஸ்தகங்கள் வைத்து விற்பனை செய்தாலும், பத்திரிகைகளில் எழுதினாலும் அவர்களெல்லாம் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் செய்யப்படு மானால்—உலக மக்கள் பிரிவினையற்று, குரோதமற்று, மடமையற்றுத் தோளோடு தோள் புனைந்து தோழர்கள்போல வாழமுடியும் என்பதோடு, மதத் தத்துவங்களின் பலனால் இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உயர்வு தாழ்வு நிலை ஒழிந்து, சகல துறைகளிலும் சமத்துவத்துடன் வாழமுடியும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இந்த அபிப்பிராயமானது மதங்கள் தெய்வத்தினாலும், தெய்வாம்சம் பெற்றவர் களாலும் உண்டாக்கப்பட்டவை என்கின்ற நம்பிக்கையை உறுதியாயும் உண்மையாயும் உடையவர்களுக்கு விரோதமாய் இருக்காது என்றும் கருதுகிறோம். ஏனெனில், அப்படிப் பட்ட மதங்கள், மதப் பிரச்சாரம் இல்லாவிட்டால் மறைந்துபோகும்—அழிந்துபோகும் என்று மதவாதிகள் (பக்தர்கள்கூட) பயப்படமாட்டார்கள்.

['விடுதலை'–கட்டுரை—9-2-1948]

சாதாரணமாக, திராவிடமக்களின் சமுதாய இழிவுக்கு ஆரிய கலாசாரங்களும், ஆரியக் கலைகளும், ஆரிய வேத–சாஸ்திர–புராண–இதிகாசங்களுந்தான் காரணம் என்பதை எந்தத் திராவிடனும் மறுக்கமாட்டான். திராவிடன் எவனாவது மறுத்தாலும் உலகில் வேறு எந்த மார்க்கக்காரனும் மறுக்கமாட்டான். அப்படிக்கு இருந்தும், ஆரிய கலாசாரத்தைப் பரப்பும் வேலையில்—ஆரியக் கலாச்சார சாதனங்களான சாஸ்திர–புராண–இதிகாசங்களைப் பரப்பும் வேலையிலேயே—அதாவது அவைகளைத் தெய்வீகமாக்குவது, அவைகளை இலக்கியமாக்குவது, அவைகளைக் காலட்சேபம் செய்வது, அவைகளைப் புதுப்பிப்பது, அவைகளுக்குப் புதுப் புது ஆரியத் தத்துவார்த்தம் கண்டுபிடித்துக் கூறிப் பணம் சம்பா திப்பது, புலமைப் பெருமை அடைவது, அவற்றை நடத்தையில் பின்பற்றுவது மூலம் பெருமையும் வாழ்க்கைக்கு நலனையும் பெருக்கிக்கொள்வது முதலாகிய அறிவற்ற, மானமற்ற காரியங்களைத் திராவிடன் செய்துவந்திருக்கிறான்.

ஒரு இனம் ஈனப் பிறவி என்று சொல்லுவதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவை இல்லை.

இன்று திராவிடநாட்டில், குறிப்பாகத் தமிழ்மொழி பேசும் திராவிடமக்களுக்குள் ஆரிய–திராவிட கலாசார, இன உணர்ச்சிப் போராட்டம் இதுவரையில் எங்கும் எப்போதும் கண்டிராத அளவுக்குக் கிளப்பப்பட்டுவருகிறது. அது அடியோடு வீண்போகாமல் ஒரு சிறு அளவுக்காவது பயன்பட்டுவருகிறது. அந்தக் கிளர்ச்சியினாலேயே திராவிட சமுதாயத் தில் உள்ள 'காலிப் பயல்கள்,' 'தாசி வேசிமக்கள்,' 'இழிபிறவி மக்கள்' என்று சொல்லப் படுகிறவர்கள் முதற்கொண்டு புலவர்கள், செல்வர்கள், அதிகாரிகள், பண்டார சன்னிதிகள் என்பவர்களாகியவர்கள் வரை பயனடைந்து வருகிறார்கள்.

சாதாரணமாக 'ஈனப் பிறவி' என்றால் எனது அகராதிப்படி, 'இனத்தைக் காட்டிக் கொடுத்துப் பிழைப்பவன்' என்பதாகும். 'காலிப் பயல்' என்றால், 'தன் சுயவாழ்வுக்காக மான ஈனத்தைப்பற்றிக் கவலைஇல்லாமல் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருப்பவன்' என்பதாகும். காலி என்றாலே ஒன்றும் இல்லாத வெறும் ஆள்—அதாவது 'ஒரு பை

காலியாகிவிட்டது,' 'ஒரு குடும்பம் காலியாகிவிட்டது,' 'ஒரு பெட்டி காலியாகிவிட்டது' என்பதுபோல் அவனுக்கு என்று அவனிடம் ஒன்றும் இல்லாத 'வெறும்ஆள்' என்று அர்த்தம். திராவிட—ஆரிய கலாசார இனக் கிளர்ச்சியால் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நல்ல பயனடையும்படியான அவ்வளவு நிலை ஏற்பட்டும் யாருக்காவது இன உணர்ச்சி, தன்மான கலாசார உணர்ச்சி ஏற்பட்டதா என்றால், பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

மதத் துறையில் பணக்காரன், படித்தவன் முதல் மேற்சொன்ன 'இழி பிறப்பு' மக்கள் என்பவர்கள் வரையில், ஆரிய கலாசார வேஷம் போட்டுக்கொண்டு வாழவே ஆசைப்படுகிறார்கள். தாசி வேசிகள், பஞ்சமர்கள் என்பவர்கள் கூட்டம் முதல், சைவத் திருமேனிகள் வரை அப்படியே நடந்துகொள்கிறார்கள். ஆனால், இந்தக் கிளர்ச்சியினால் முதலில் பயனடைகிறவர்கள் இந்தக் கூட்டத்தாரேயாவர்.

ஆரிய கலாசார எதிர்ப்புக்கு, அவற்றின் உண்மையான அஸ்திவாரபூர்வமான எதிர்ப்புக்குத் திராவிட மக்களுக்குள் ஆள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. இது மாத்திரமல்லாமல், இராமாயணம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், தேவாரம், திருவாசகம், பிரபந்தம் என்பனவாகிய இதிகாசங்களை, நூல்களைச் சமய உண்மைகளாகவும், இலக்கியமாகவும் கருதி, பிரச்சாரம் செய்கிறார்கள். இதுதான் இன்றையத் திராவிடரின் (தமிழ் மக்களின்) பிறப்பு நிலை.

பாகவதம், இராமாயணம், கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம், சிவ பக்த விலாசம், சகஸ்ரநாமம், திருவிருத்தம் முதலிய ஆரிய கலாசாரத்தை, ஆரிய உயர்வை வலியுறுத்தும் வடமொழி நூல்களைப் பற்றிய உபன்யாசங்கள் பார்ப்பனர்களால் தினமும் நடத்தப்படுகின்றன. மற்றும் சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளின் மூலம் பல; ரேடியோ மூலம் பல; மற்றும் பள்ளிகளில் ஆசிரியர்கள் மூலம் ஏராளம்; பிறகு கோவில் உற்சவம் முதலியவை மூலம் அளவிட முடியாதவை; இப்படியாகவும் இன்னமும் அரசியல் மூலமும், முதல் மந்திரி முதல் பலராலும் பிரச்சாரங்கள் நடைபெற்றுவருகின்றன.

ஆனால், திராவிடன்—தமிழன் என்ன செய்கிறான்? பார்ப்பான் காலை நக்கிச் சுவைக்கப் போட்டி போடுகிறான். நாளுக்குநாள் துரோகிகள் பட்டியல் பெருகுகிறது. இதற்கு ஏற்றவண்ணம் பார்ப்பன ஆதிக்கம் வளருகிறது. பட்டாபி சீத்தாராமய்யா—கவர்னர்; சந்தானம் அய்யங்கார்—கவர்னர்; இராதாகிருஷ்ணன்—'அம்பாசிடர்'; விஜயலட்சுமி—தூதுவர்; கிருஷ்ண ராவ்—மந்திரி; வரதாச்சாரி—குட்டி மந்திரி; அந்த அய்யங்கார்—'ஏஜண்ட் அண்ட் மேனேஜர்'; இந்த அய்யர்—'அட்வகேட் ஜெனரல்'; அந்த அய்யர்—'பாக்டரி ஏஜண்ட்'— இந்த அய்யர்; 'கம்பெனி ஏஜண்ட்'; இந்த அய்யர்—இந்திய 'சீப் ஜட்ஜ்'; அந்த அய்யர்—'சீப் இஞ்சினியர்'; இந்த அய்யங்கார்— 'அய். ஜி.'—என்பவை போன்ற அதிகாரங்களையும் ஆதிக்கங்களையும் கைப்பற்றி இலட்சம், பத்து இலட்சம், கோடிக்கணக்கில் கொள்ளையடித்துக்கொண்டு, இனநலத்தைப் பெருக்கிக்கொண்டு, பலம்தேடி நம்மை அழுத்திக்கொண்டு வருகிறார்கள்.

திராவிட அறிஞர்கள், புலவர்கள், செல்வர்கள் என்பவர்கள் பார்ப்பான் தின்று வெளியில் எறிந்த எச்சிலையை நக்குவதற்கு ஒருவரையொருவர் கடித்துக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இவைதாம் இன்று ஆரியர்—திராவிடர் நிலையாக இருக்கின்றது.

நம்மவர்களில் யார் இந்தப் பார்ப்பனர்கள்போல் 'திராவிடர் (தமிழர்) கலைப் பிரச்சாரம்', கலாசாரப் பிரச்சாரம் (வேலை) செய்கிறார்கள்? புலவர் இல்லையா? தமிழ்ப் புலவன் என்றால்—தலை சிறந்த அயோக்கியன், இனத் துரோகி, மானம் ஈனம் அற்ற இழிமகன் என்றல்லவா சொல்லும்படி நடந்துகொள்கிறார்கள்!

இன்று மானமுள்ள, இன உணர்ச்சியுள்ள தமிழ்ப் புலவன் யார் என்பதாக ஒரு விரலை மடக்க முடியுமா என்று கேட்கவேண்டியிருக்கிறது!

மறைமலை அடிகள் இருந்தார். அவரும் ஆரியக் கலை, இலக்கியங்களையே பெரிதும் தமிழ்க் கலை மாதிரிப் பிரசங்கிப்பார். அவருக்குப் பின் 'தமிழ்ப் புலவன்' இல்லை; இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுபவன் ஆரியக் கலையைப் பரப்பிப் பணம் சம்பாதிக்கவும், பதவி பெறவும் அலைகிறான்.

பள்ளி, காலேஜ் புலவர்கள், 'பென்ஷன்' வாங்கிய தமிழ் அறிவுள்ளவர்கள்—ஏன் வாரத்தில் 2 நாட்களாவது தமிழ்க் கலை, கலாச்சாரப் பிரச்சாரம் செய்யக்கூடாது? பள்ளி, காலேஜ் நிர்வாகிகள்—ஏன் இவர்களை அனுமதிக்கக்கூடாது? ஏன் இவர்களுக்கு இப்படிக் கட்டளை இடக்கூடாது?

['விடுதலை'–தலையங்கம்—15-7-1952]

மனிதன் என்பவன் பகுத்தறிவு உடையவன்; சிந்தனா சக்தியோடு எந்தக் காரியத்தையும் செய்யக்கூடிய சக்தி உடையவன்; இன்று நல்ல அனுபவங்களையும் வளர்ச்சித் தன்மையையும் பெற்று நாளுக்குநாள் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருப்பவன்.

ஒரு மணிக்கு 1000, 2000, 3000 மைல் வீதம் ஆகாயத்தில் பறக்கிறவனாக இருக்கிறான்; பத்தாயிரம் மைலுக்கப்பாலுள்ள மனிதனிடம், பக்கத்தில் இருப்பவனிடம் பேசுவதுபோலப் பேசுகிறான்.

அது மாத்திரமல்லாமல், அப்படிப் பேசுகிற மனிதனை நேருக்குநேராகக் காணுகிறவனாக இருக்கிறான்; சூரிய மண்டலத்தை அளந்துவிட்டான்; சந்திரமண்டலத்துக்குப் போய் வந்து கொண்டிருக்கிறான்.

அனேக வியாதிகளுக்கு மருந்துகள், சிகிச்சைமுறைகளைக் கண்டுபிடித்துவிட்டான்.

சராசரி அய்ந்து வருஷம், பத்துவருஷமே வாழ்ந்த மனிதர்கள்—இப்போது சராசரி 50 வயது முதல் 75 வயது வரை வாழ்கிறார்கள்.

இப்படிப்பட்ட மனிதனுக்கு இவை எல்லாம், இந்த சக்திகளெல்லாம் இல்லாத காட்டுமிராண்டிக் காலத்தில்—அதாவது 1000, 1500, 2000, 3000 வருஷங்களுக்கு முன்னால் இருந்த மூடமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட—கடவுள், மதம், வேதம் இவைகளைக் கற்பித்துக்கூறிய தலைவர்கள், இனியும் இன்றைக்கும் வேண்டுமா? அவைகளால் ஏதாவது பலன் உண்டா?–என்பவைகளைப் பற்றி மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதலாவது 'கடவுள் என்றால் என்ன?' என்று தெரிந்தவன்–யாராவது, ஒருவனாவது இருக்கிறானா?

'கடவுள் தன்மை இன்னது' என்று தெரிந்தவர்களில் ஒருவனாவது அதை நம்பி, அதைப்போல் நடக்கிறவன் ஒருவனாவது இருக்கிறானா? மனிதன் கடவுள் செயலை (விதியை) நம்புகிறானா? அல்லது, தன்செயலை (மதியை) நம்புகிறானா? வரையறுத்துக் கூறமுடியுமா?

'கடவுள் எங்கும் இருக்கிறான்' என்ற சொல்லுகிற அறிவற்றவர்களே—கடவுளுக்குக் கோயில் (இருப்பிடம்) கட்டுகிறார்கள்.

'கடவுளுக்கு உருவமில்லை' என்று சொல்கிற புத்தி ஈனனே—அந்தக் கடவுளுக்கு உருவம், அதுவும் பல்வேறு உருவங்கள் கூறியிருக்கிறான்.

'கடவுளுக்கு ஒன்றும் வேண்டியதில்லை' என்ற சொல்லுகிற முட்டாள்களே—அந்தக் கடவுளுக்குச் சோறு, பெண்டாட்டி, வைப்பாட்டி முதலியவைகளை அமைக்கிறார்கள்.

'கடவுள் யோக்கியர்' என்று சொல்லுகிற முட்டாள்களே—அந்தக் கடவுள் அவனைக் கொன்றார், இவனைக் கொன்றார், திருடினார், விபசாரத்தனம் செய்தார், அவன்

மனைவியைக் கெடுத்தார், இவர் மனைவியை அபகரித்தார் என்றெல்லாம் கூறிப் பண்டிகைகள் நடத்துகிறார்கள்.

இவை யாவும், இவை போன்றவையும் ஒருபுறமிருந்தாலும், இப்படிப்பட்ட கடவுளால் மனிதன் அடையும் பயன் என்ன என்று சிந்தித்தால் என்ன பதில் கிடைக்கிறது?

கடவுளினால் ஒன்றும் பயனில்லை என்பது ஒருபக்க மிருந்தாலும் மேற்கண்ட முட்டாள் தனமான, காட்டுமிராண்டி அயோக்கியத்தனங்கள் ஒழிக்கப்படுவதற்காகவாவது கடவுள்—மதம் ஒழிக்கப்படவேண்டாமா என்று கேட்கிறேன்.

ஒழுக்கத் துறையில், அறிவுத் துறையில் இவ்வளவு கேடுகள் இருப்பது மாத்திர மல்லாமல்—பொருளாதாரத் துறையில் எவ்வளவு கேடுகள், நட்டங்கள் ஏற்படுகின்றன! இந்தக் கேட்டிற்குப் பயன் என்ன?

அயோக்கியர்கள், மடையர்கள், சோம்பேறிகள் பிழைக்கிறார்கள்—மக்களை ஏய்க்கிறார்கள் என்பதில்லாமல் நற்பயன் என்ன என்று கேட்கிறேன்.

இவை மட்டுமா?

சமுதாயம் எவ்வளவு பிரிவுற்று, சின்னாபின்னப்பட்டுக் குதறிக்கிடக்கிறது?

எதற்காக 'இந்து'; எதற்காகக் 'கிறிஸ்தவம்'; எதற்காக 'முஸ்லிம்' முதலிய மதங்கள் வேண்டும்? இவர்களுக்குத் தனித்தனி வேதம், வேஷம், செய்கைகள் முதலியன எதற்காகத் தேவையாக இருக்கின்றன? இவைகளால் பிரிவினை உணர்ச்சியல்லாமல் சமுதாயத்திற்கு நலனென்ன என்று கேட்கிறேன்.

கடவுளாலும், இந்த வேதங்களாலும் பிரிவினை உணர்ச்சி தவிர வேறு பலன் என்ன என்று கேட்கிறேன்.

இவைகளெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இவற்றால் மனிதனின் அறிவுகெட்டு, வளர்ச்சி பாழாகி—இந்த இருபதாவது நூற்றாண்டிலும் மனிதன் அறிவிற்கும், சிந்தனைக்கும் ஏற்றபடி வளராமல் தேங்கிக் கிடக்கிறான். இது எவ்வளவு பெரிய கேடு? மனித வாழ்வினால் எந்த மனிதன் கவலை, தொல்லை, அடிமைத்தனம் இல்லாமல் இருக்க முடிகிறது? ஏன் பிறக்கவேண்டும்? ஏன் சாகவேண்டும்? இவை இரண்டுமில்லாமல் செய்துகொள்ள மனிதனால் முடியாதா? பாழும் 'கடவுளால்'தான் இது முடியாததாக இருக்கிறதே!

பிறப்பித்தல், சாகடித்தல் (ஆக்கல், அழித்தல்) என்ற இரண்டைத் தவிர, 'கடவுள்' வேறு வேலை எதைப் பார்க்கிறானாம்? இந்தக் காரியத்திற்கு 'ஒரு கடவுள்'—'பல கடவுள்கள்' ஏன்?

ஆகவே, தன்னைப் பகுத்தறிவுள்ள மனிதன் என்று உணர்ந்த எவனும் மனித சமுதாயத்துக்கு ஏதாவது தொண்டு செய்யவேண்டும் என்றால், தன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தோம் என்று கூறிக்கொள்ளவோ வேண்டுமானால் கடவுள் மதம் வேதங்கள் ஒழிக்கப்படத் தன்னால் கூடியதைச் செய்யவேண்டும்.

இதுதான் அறிவுள்ள மனிதர்க்கு அடையாளம் என்பது என் கருத்து.

['விடுதலை'—தலையங்கம்—18-10-1972]

2. இதிகாசங்கள்

1. இராமாயணம்

இராமாயணம் என்பது சூரிய குல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப்போக்கில் பல 'தெய்வீகக் காரணங்களால் மறைந்துபோய்விட்டன' என்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றைத் தோழர் கோவிந்த தாஸ் அவர்கள் வடஇந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய 'இந்துமதம்' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அதை அனுசரித்தே சென்னை மயிலாப்பூர் 'இராமாயண விலாசம்' என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுரகர்த்தாவாகிய திரு. சி. ஆர். சீனிவாசய்யங்கார் என்பவரால் எழுதப்பட்டு, 1928ஆம் வருடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் 'இதர இராமாயணங்கள்' என்னும் புத்தகத்தில் மேற்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு, முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அப் புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று. அவையாவன—ஜைன இராமாயணம், பவுத்த இராமாயணம், யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் என்பவைகளாகும்.

இவற்றுள் யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும், கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்களும் மற்ற சில்லறை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த மொழிக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆனாலும், மற்ற இரண்டும்—அதாவது ஜைன, பவுத்த இராமாயணங்கள் பெரிதும் கதைப் போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால், சில்லறை விஷயங்களில் மாத்திரம் பல விஷயங்கள் மாறுபட்டிருக்கின்றன.

அதில் ஜைன இராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தக சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகப் பதிப்பாசிரியரே எழுதியிருக்கிறார். அதில் தசரதன், இராவணன் முதலியவர்களுடைய சந்ததிக் கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகள் சிறிது வித்தியாசப்பட்டாலும் மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக்கொண்டு, அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) அபராஜிதை, (2) சுமத்திரை, (3) கைகேயி, (4) சுப்ரபை என்றும் குறிப்பிட்டுவிட்டு, கைகேயிக்குத் தசரதன் கொடுத்த இரண்டு வரங்களையும் அப்படியே குறித்திருப்பதுடன் அபராஜிதைக்கு இராமன் பிறந்ததாகவும், சுமத்திரைக்கு இலட்சுமணன் பிறந்ததாகவும் கைகேயிக்குப் பரதன் பிறந்ததாகவும், சுப்ரபைக்குச் சத்துருக்கன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுபோலவே, சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தானென்றும், ஆகவே வில்லை வளைத்தே இராமன் சீதையை மணந்தான் என்றும் இலட்சுமணனுக்கு 18 பெண் சாதிகள் என்றும் பரதனுக்கு ஜனகனுடைய சகோதரரின் குமாரத்தி கொடுக்கப்பட்டாளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி இராமாயணத்தைப் போலவே இருந்தாலும், சிறு சிறு மாறுதல்களுடன்-தபசு செய்ததற்காகச் சம்புகன் வதைக்கப்பட்டதும் குறிக்கப்

பட்டிருப்பதோடு—இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) சீதை, (2) பிரபாவதி, (3) ரதினிபா, (4) ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் வால்மீகி இராமாயணத்திலும்கூட இருக்கிறது.

பவுத்த இராமாயணத்திலும் தசரதனுக்குப் பதினாயிரம் மனைவிகள் என்றும் அவர்களில் மூத்தவளுக்கு இராமன், இலட்சுமணன் என்பவர்களான இரண்டு ஆண்களும், சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும்; அடுத்த மனைவிக்குப் பரதன் என்ற ஒரு ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும்; அரசன் பரதனுக்குப் பட்டங் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான் என்றும்; ஆனால், அரசன் அப்படிச் செய்யாமல் இராமனுக்குப் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும்; இளைய மனைவி கட்டாயப்படுத்தினதால் பரதனுக்குப் பட்டம் கொடுத்துவிட்டு–இராமன், இலட்சுமணன், சீதை ஆகிய சகோதர சகோதரியைப் பரதன் கொன்றுவிடுவான் எனப் பயந்து காட்டுக்கனுப்பி விட்டான் என்றும்; பரதன் தமையனைத் தேடிக் காட்டுக்குப்போய் இராமனையே ஒப்புக் கொள்ளச் சொன்னதாகவும்; இராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் தன் நாட்டிற்குத் திரும்பி வரமுடியும் என்றதாகவும்; அதுவரை–அவனது பாதரட்சைகளையும் மற்ற சகோதர சகோதரியையும் அனுப்பும்படி பரதன் கேட்டு வாங்கி அழைத்து வந்ததாகவும்; பன்னிரண்டு வருடங்களானபின் தசரதன் இறந்து போனதாகவும்; பிறகு இராமன் அயோத்திக்கு வந்ததாகவும்; வந்தவுடன் ஊர் ஜனங்கள் இராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய இராமனுக்குக் கலியாணம் செய்வித்துப் பட்டங் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இவைகளை மெய்ப்பிக்கத் தோழர் அய்யங்கார்–அந்தக் காலத்தில் அண்ணனும் தங்கையும் கலியாணம் கொள்ளும் வழக்கம் உண்டு என்றும், எகிப்து தேச ராஜதர்மமே சகோதரியை மணப்பதுதான் என்றும், இதை அறிந்துதான் ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் 10, 12 சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு முன் அவ்வழக்கம் இருந்துவந்ததற்கு மேலும் ஆதாரமாகச் சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கின்றார்.

தோழர் சி. ஆர். சீனிவாச அய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வால்மீகி இராமாயணம் பின்பகுதிக் குறிப்பு 431-ம் பக்கத்தில், சீதை தசரதனுடைய மகள் என்றும் அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம்கொடுத்தார் என்றும், அவள் பூமியில்பட்டால் பூமி இழுத்துக்கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில்விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், ஜனகன் இல்லாதபோது ஒருநாள் சீதை பூமியின்மீது நின்றுவிட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்துபோய் விட்டாள் என்றும், பிறகு கொஞ்சகாலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும்போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு—அவள்தான் முன்பு வளர்த்துவந்த சீதை என்று தோன்றவில்லை என்றும், ஆகவே அவளது தமையனாகிய இராமனுக்கு அவளைக் கலியாணம் செய்துகொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு, இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும் ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றியும், இதே தோழர் சீனிவாசய்யங்கார், ‘எவனொருவன் தன்னுடைய தங்கையை மணம் செய்துகொள்கின்றானோ அவனது மனைவியைத் தூக்கிக்கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு’ என்று இராவணனுக்கு ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும், அந்தச் சாபத்தின் பலனாய் இராவணனானவன், இராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்துகொண்ட விஷயம் தெரியாமல் சீதையைத் தூக்கிக்கொண்டு போனதாகவும், அதனாலேயே இராவணன் இராமனால் கொல்லப்பட்டதாகவும், இராவணனுக்கு உண்மையில் இராமன் தன் தங்கையைக் கட்டிக்கொண்டிருப்பது தெரியாதென்றும், தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்கமாட்டான் என்றும், இந்த

உண்மைகள் 'பார்க்கவ புராணத்தில்' இருப்பதாகவும் மேற்கண்ட 431-ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.

மற்றும், இதே தோழர் சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே, சீதை இராவணன் மகள் என்றும் அவள் பிறந்த கால தோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு) ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும், அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டு போய் எறிந்துவிட்டதாகவும், அது ஜனகனது இராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்துக் கொண்டு வரப்பட்டதாகவும், அதை ஜனகன் கண்டெடுத்து வளர்த்து இராமனுக்குக் கொடுத்ததாகவும், இராமனும் சீதையும் வனத்திலிருக்கும்போது சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் இராவணன் எடுத்துக்கொண்டு வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு, இந்த உண்மை 'மவுட்கலிய இராமாயண'த்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாம் என்பதற்கு அவர் ஒரு யுக்திக் காரணமும் சொல்லுகின்றார். அதாவது, 'சீதையின் பிறப்பைப் பற்றியோ அவளது பழைய சந்ததியைப் பற்றியோ வால்மீகர் எங்கும் ஒரு வரி கூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுகள் உண்மையாக இருக்கலாம் என்கின்றார்.

எனவே, சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும் இராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4, 5 ஆதாரங்களும், இராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற இராமாயணங்களில் என்னென்ன பந்தத்துவங்கள் இருக்குமென்று ஊகிக்கக்கூடவில்லை.

['ஆனந்த விகடன்' வருஷ அனுபந்தம்; 'குடிஅரசு' 3-3-1929;-'பகுத்தறிவு' 1-5-1936]

2. இராமாயணப் பாத்திரங்கள்

இராமாயணக் கதையில் முக்கிய பாத்திரங்களாக விளங்கும் தசரதன், இராமன், சீதை, இலட்சுமணன் முதலியவர்களின் யோக்கியதையைச் சற்று ஆராய்வோம்.

இராமாயணத்தில் யாகத்துக்கு அடுத்தாற்போல் தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் சேதி குறிப்பிடத் தக்கதாகும். இதில் தசரதன் அவனுடைய பிள்ளைகள், மனைவிமார்கள், மந்திரி, குரு முதலானவர்களுடைய தன்மைகள் இன்னவை என நன்கு விளங்கும்.

1. தசரதன் : தசரதன் கைகேயியை மணக்கும் போதே 'கைகேயியின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுக்கிறேன்' என்பதாக வாக்குக் கொடுத்துஇருக்கிறான். மற்றும் கதை வாசகப்படி பார்த்தால், தசரதன் தனது விவாகத்தின்போதே கைகேயிவசம் நாட்டை ஒப்புவித்துவிட்டு, கைகேயிக்காகக் கைகேயிக்குப் பிரதிநிதியாய் இருந்து நாட்டை ஆண்டுவந்தானென்றே தெரிகிறது.

2. அதாவது, கைகேயிக்குத் தசரதன் அயோத்தியை 'சுல்கமாக'க் கொடுத்து விட்டான் என்று மூலத்தில் இருக்கிறது.

3. இந்தச் சங்கதி இராமனுக்கும் கோசலைக்கும் தெரியும். 'என்றைக்குப் பரதன் அவன் மாமன் வீட்டுக்குப் போனானோ அன்று முதல் உன் பட்டாபிஷேகத்துக்குத் தக்க காலம் என்பது எனது கருத்து' என்று இராமனிடம் வெளிப்படையாய் தசரதன் சொல்லுகிறான். பரதனை நாடுபெறச் செய்யாமல் ஏமாற்றுவதற்காகவே அவனை அவனது பாட்டனார் வீட்டில் தசரதன் பத்து வருட காலம் விட்டுவைத்திருக்கிறான்.

4. திடீரென்று ஒரு நாள் நினைத்துக்கொண்டு குடிகளுக்குச் சமாதானம் சொல்லி, அடுத்த நாளே இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்கிறான்.

5. இந்தத் துரோகமான காரியத்திற்கு மந்திரிகளும் வசிட்டன் முதலிய குருமார்களும் இராமனும் சம்மதிக்கிறார்கள்.

6. கோசலையும் இராமனுக்குப் பட்டம் கிடைக்க சதா தபசு செய்கிறாள்.

7. பரதனுக்கும் சத்துருக்கனனுக்கும் ஜனக மன்னனுக்கும், கேகய மன்னனுக்கும் கைகேயிக்கும் தெரிவிக்காமலும் இவர்களுக்கு அழைப்புகள்கூட அனுப்பாமலும் இவ்வளவு முக்கியமான முடிசூட்டை அவசர அவசரமாக நடத்த ஏற்பாடு செய்கிறான்.

8. இராமனிடம் தசரதன் தனிமையில் பேசும்போது, 'பட்டாபிஷேகம் நடைபெறாமல் தடைசெய்ய வேண்டிய அவசியம் பரதனுக்கு இருந்தாலும், அது முடிந்துவிடுமாயின், பிறகு பரதன் வந்தாலும் தகராறு செய்யாமல் அதற்குச் சம்மதித்துச் சும்மா இருந்து விடுவான். ஏனெனில், பரதன் சாது; நல்லவன்; நடந்துவிட்ட காரியத்தை ஒத்துக் கொள்ளுவது உயர்ந்த குணம் படைத்தவர்களின் கடமை. ஆதலால் சீக்கிரம் முடிய வேண்டும்' என்கிறான்.

9. இந்தப் பட்டாபிஷேகச் சேதி அறிந்து, கைகேயி இராஜ்யத்தைத் தன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் அந்த முடி பரதனுக்கு நிலைக்கச்செய்ய இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் சொல்லும்போது, கைகேயியை ஏமாற்ற தசரதன் அவள் காலில் விழுந்து கெஞ்சுகிறான்.

10. 'எவ்வளவோ ஏற்பாட்டுடன் செய்த காரியத்தைக் கெடுத்து விட்டாயே' என்கிறான். ஆனால், நாடு மூத்த மகனாகிய இராமனுக்குத் தானே உரிமை என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லை. தசரதனுக்குக் கைகேயி இணங்காமல் போன பின்பு, தசரதன் இராமனை அழைத்து, 'இராமா! நான் புத்தி சுவாதீனம் இல்லாத சமயத்தில் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாக ஒப்புக்கொண்டுவிட்டேன்; என்றாலும் நீ அதற்குக் கட்டுப்படவேண்டியதில்லை. என்னைப் பட்டத்திலிருந்து தள்ளிவிட்டு நீ இராஜ்யத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்து கொண்டிரு' என்று துர்யோசனையைச் சொல்லிக்கொடுக்கிறான்.

11. இவையெல்லாம் பயன்படாமல் போகவே, தசரதன் சுமந்திரனை அழைத்து, 'இராமனுடன் நாட்டிலுள்ள பொக்கிஷம், தானியக் களஞ்சியம், குடிகள், படைகள், வியாபாரிகள், வேசியர்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிற்கு அனுப்பிக் கொடுத்துவிடு' என்கிறான்.

12. இதைக் கைகேயி ஆட்சேபித்தவுடன் தசரதன், 'நீ நாடுதான் கேட்டாயே ஒழிய இவைகளை எல்லாம் சேர்த்துக் கொடு என்று கேட்கவில்லையே' என்று அடா வழக்குப் பேசுகிறான்.

13. பிறகு பொக்கிஷத்தில் உள்ள நகைகளை எல்லாம் வாரி சீதைக்குக் கொடுத்து விடுகிறான்.

14. தனது மற்றொரு மகன் இலட்சுமணன் காட்டுக்குப் போவதைப் பற்றித் தசரதன் துக்கப்படவில்லை.

['குடி அரசு'—கட்டுரை—18-12-1943]

இராமன் தன்மையைச் சற்று ஆராய்வோம்.

1. கைகேயியை மணம் செய்து கொள்ளும்போதே தசரதன் நாட்டைக் கைகேயிக்கு 'சுல்கமாக'க் கொடுத்துவிட்டதும், அதனால் நாடு பரதனுக்குச் சொந்தமாக வேண்டியது என்பதும் இராமனுக்கு நன்றாய்த் தெரியும்.

2. நாட்டைக் கைப்பற்றவே இராமன் தகப்பனுக்கும், கைகேயிக்கும், குடிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்துவந்திருக்கிறான்.

3. பரதன் ஊரில் இல்லாத சமயத்தில் பட்டாபிஷேகம் செய்ய தசரதன் செய்யும் சூழ்ச்சிகளுக்கெல்லாம் சம்மதித்து முடிசூட்டிக் கொள்ள முனைகிறான்.

4. இலட்சுமணன் பொறாமைப்பட்டு ஏதாவது செய்து கெடுத்துவிடுவானோ என்று கருதி, இலட்சுமணனை ஏய்க்க, 'இலட்சுமணா, உனக்காகத்தான் நான் முடிசூட்டிக் கொள்கிறேன்; நீதான் நாட்டை ஆளப் போகிறாய்' என்று 'தாஜா' செய்கிறான்.

5. பட்டாபிஷேகம் நடக்குமோ, நடக்காதோ என்று ஒவ்வொரு நேரமும் கவலைப் பட்டுக்கொண்டே இருந்திருக்கிறான்.

6. 'நாடு உனக்கு இல்லை; நீ காட்டுக்குப் போகவேண்டும்' என்று தசரதன் சொன்னவுடன் மனதுக்குள் துக்கப்படுகிறான்.

7. 'நாட்டை இழந்து, சுகத்தை இழந்து, நல்ல மாமிசப் பட்சணங்களை இழந்து, காட்டிற்குச் சென்று காய்கறிகளைப் புசிக்கவேண்டியவனாகி விட்டேனே' என்று தாயாரிடம் சொல்லிச் சங்கடப்படுகிறான். (ஆனால், காட்டில் பெரிதும் மாமிசத்தையே சாப்பிடுகிறான்.)

8. 'என் கைக்குக் கிடைத்த இராஜ்யம் போனதோடல்லாமல் நான் காட்டுக்கும் போகவேண்டியதாயிற்றே' என்று தாயிடத்தும் மனைவியிடத்தும் சொல்லித் துயரப் படுகிறான்.

9. 'எந்த மடையனாவது தன் இஷ்டப்படியெல்லாம் நடந்துவரும் மகனைக் காட்டுக்கனுப்பச் சம்மதிப்பானா?' என்று இலட்சுமணனிடம் தன் தகப்பனைக் குறை சொல்லித் துயரப்படுகிறான்.

10. இராமன் பல மனைவிகளை மணந்திருக்கிறான். (இதை மொழிபெயர்ப்பாளர்க ளான தோழர் சி. ஆர். சீனிவாசய்யங்காரும், தோழர் மன்மதநாத் தத்தரும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இராமாயணத்தில் பல இடங்களில் 'இராமன் மனைவி யர்கள்' என்றே வாசகங்கள் வருகின்றன.)

11. இராமனிடம் கைகேயி எப்பொழுதும், சிறிதும் சந்தேகிக்க முடியாத அன்போடு இருந்தும், இராமன் அவளிடம் வஞ்சகமாக இருந்துவருகிறான்.

12. 'கைகேயி தீய குணமுடையவள்;

13. அவள் என் தாயைக் கொடுமை செய்வாள்.

14. அவள் என் தகப்பனைக் கொன்றாலும் கொன்றுவிடுவாள்' என்று சொல்லி இருக்கிறான்.

15. காட்டில் தனக்கு ஆபத்து நேரிடும் என்று கருதக்கூடிய சம்பவம் ஏற்படும் போதெல்லாம், 'கைகேயி எண்ணம் ஈடேறிற்று; கைகேயி திருப்தி அடைவாள்' என்று பல தடவைகள் சொல்லியிருக்கிறான்.

16. தனக்கு ஆபத்து வரப்போவதாக நினைத்த மற்றொரு சமயத்தில், 'இனி, பரதன் ஒருவனே அவனது மனைவியுடன் எவ்வித எதிர்ப்புகளும் இன்றிச் சுகமாய் அயோத்தியை ஆளுவான்' என்றெல்லாம் தனது கெட்ட எண்ணமும், நாட்டு ஆசையும், பொறாமையும் விளங்கும்படி பேசியிருக்கிறான்.

17. கைகேயி இராமனிடம், 'இராமா! அரசர் நாட்டைப் பரதனுக்கு முடிசூட்டுவ தாகவும், நீ காட்டுக்குப் போகவேண்டும் என்பதாகவும் உன்னிடம் சொல்லச்சொன்னார்' என்று சொன்னபோது இராமன், 'அரசர் நாட்டைப் பரதனுக்குக் கொடுப்பதாக என்னிடம் சொல்லவில்லையே' என்று சொல்லுகிறான்.

18. தந்தையை மடையன், புத்தி இல்லாதவன் என்று சொல்கிறான்.

19. தந்தையை, 'நீ யாருக்கும் பட்டம் கட்டாமல் நீயே ஆண்டுகொண்டிரு; நான் காட்டுக்குப் போய் வந்து விடுகிறேன்' என்று சொல்லி, பரதனுக்கு முடிசூட்டுவதைத் தடுக்கிறான்.

20. 'எனக்குக் கோபம் வந்தால் நான் ஒருவனே எதிரிகளைக் கொன்று, என்னை அயோத்திக்கு அரசனாக்கிக்கொள்வேன். உலகத்தார் பழிப்பார்களே என்றுதான் சும்மா இருக்கிறேன்' என்கிறான். இதனால் இவன் தர்மத்தையோ, சத்தியத்தையோ இலட்சியம் செய்யவில்லை என்பதைக் காட்டிக்கொள்கிறான்.

21. தன் மனைவி சீதையைப் பார்த்து, 'நீ பரதன் மனங் கோணாமல் அவனிஷ்டப்படி நடந்துகொள்; அதனால் பின்னால் நமக்கு இலாபம் ஏற்படும்' என்கிறான்.

22. இராமன் காடு சென்ற சேதிகேட்டு மனம் வருந்தி, பரதன் இராமனைக் கூப்பிடக் காட்டிற்குச் சென்று இராமனைக் கண்டபோது, 'பரதா! குடிகள் உன்னை விரட்டிவிட்டார்களா? தந்தைக்குப் பணிவிடை செய்ய இஷ்டமில்லாமல் வந்துவிட்டாயா?' என்று கேட்கிறான்.

23. மற்றும் 'உன் தாய், அவளது எண்ணம் நிறைவேறி சுகமாய் இருக்கிறாளா?' என்றும் கேட்கிறான்.

24. பரதன் இராஜ்யத்தை இராமனுக்குக் கொடுத்துவிட்டதாகக் காட்டில் வாக்குக் கொடுத்த பிறகே—தசரதன் நாட்டை கைகேயிக்கு ஏற்கனவே 'சுல்க'மாகக் கொடுத்து விட்ட செய்தியை பரதனுக்குச் சொல்லுகிறான்.

25. பரதன் இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, இராமனுடைய பாதரட்சையை வாங்கி வந்து சிம்மாசனத்தில் வைத்து, தான் துறவியாக 14 வருஷ காலம் இருந்து, குறிப்பிட்ட காலத்தில் இராமன் வரவில்லையே என்று ஏங்கி, நெருப்பில் விழத் தயாராக இருப்பவனை, இராமன் சந்தேகப்பட்டு—அனுமானை விட்டு, 'நான் படைகளோடும் விபீஷணன், சுக்ரீவன் ஆகியவர்களோடும் வருகிறேன் என்று சொல்! அப்போது அவன் முகம் எப்படி இருக்கிறது, இதைக் கேட்டவுடன் அவன் என்ன நடவடிக்கை செய்கிறான், என்பவைகளைக் கவனித்து வந்து சொல்! ஏனெனில், எல்லாவகை இன்பங்களும் போகபோக்கியங்களும் நிரம்பி இருக்கும் நாட்டின்மீது யாருக்குத்தான் ஆசை இருக்காது?' என்று சொல்லிப் பார்த்துவிட்டு வரச் சொல்லுகிறான்.

26. மனைவியிடம் சதா சந்தேகமுடையவனாகவே இருக்கிறான். மனைவி நெருப்பில் குளித்துவிட்டு வந்தபிறகும், பாமர மக்கள்மீது சாக்குப் போட்டு, அவள் கர்ப்பமானதைப்பற்றிச் சந்தேகப்பட்டு—அவளிடம் பொய் சொல்லிக் கர்ப்பத்தோடு காட்டில் கொண்டுபோய்க் கண்ணைக் கட்டி விட்டுவிடச் செய்கிறான்.

27. 'சீதை கற்புடையவள்' என்று வால்மீகி சத்தியம் செய்தும் இராமன் நம்பவில்லை. அதனாலேயே அவள் சாகவேண்டியதாயிற்று.

28. தமையனைக் கொல்லச்செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று கருதி, துரோக சிந்தனையோடு வந்த சுக்கிரீவன், விபீஷணன் ஆகிய அயோக்கியர்களை அவர்கள் அயோக்கியர்கள் என்று தெரிந்தே நண்பர்களாகச் சேர்த்துக்கொள்கிறான்.

29. தனக்கு யாதொரு குற்றமும் புரியாத வாலியை, சகோதர துரோகிக்காக வேண்டி மறைந்து இருந்து திடீரென்று கொல்லுகிறான்.

30. விபீஷணனை ஏற்கும்போது தன்னை அறியாமலே தனது கெட்ட எண்ணத்தையும் வஞ்சகத்தையும் தானே வெளிப்படுத்திவிடுகிறான். அதாவது—'தனக்கு மூத்தவன் தீயவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டும் என்கின்ற அறத்தை, எல்லோரும் கைக்கொள்ள மாட்டார்கள்; உடன் பிறந்தவர்கள் எல்லோரும் பரதனைப்போல் ஆவார்களா?' என்கிறான். இதில், தான் தீயவன் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ளுகிறான்.

31. வாலியைக் கொன்றதற்குச் சமாதானமாக, 'மிருகங்களிடத்தில் தர்மத்தை அனுசரிக்க வேண்டியதில்லை' என்று வாலிக்குச் சொல்லிவிட்டு, அதே வாலி மனிதர்களைப் போல் தர்மத்தை அனுசரிக்கவில்லை என்பதற்காகவே அவனைக் கொன்றிருக்கிறான். வாலிமீது சுமத்தப்பட்ட குற்றத்திற்குக்கூட வாலியைச் சமாதானம் கேட்காமல், இராமன் தன்னலம்கொண்ட சுக்ரீவன் பேச்சைக் கேட்டே கொன்றிருக்கிறான்.

32. இராமன் பல பெண்களை மூக்கு, முலை, காது ஆகியவைகளை அறுத்து அங்க ஈனமாக்கிக் கொடுமைசெய்யச் செய்திருக்கிறான்.

33. பல பெண்களைக் கொன்றிருக்கிறான்.

34. பெண்களிடம் பொய்பேசியிருக்கிறான்.

35. பெண்களைக் கேவலமாய் மதித்திருக்கிறான்; 'பெண்களை நம்பக்கூடாது' என்கிறான்; 'மனைவியிடத்தில் இரகசியத்தைச் சொல்லக்கூடாது' என்கிறான்.

36. அதிக காமாந்தகாரனாக இருக்கிறான்.

37. அனாவசியமாக உயிர்களைக் கொன்றும் தின்றும் இருக்கிறான்.

38. தான் அரக்கர்களைக் கொல்வதற்கென்றே காட்டிற்கு வந்ததாகவும், அரக்கர்களைக் கொன்று மடிவிப்பதாகத்தான் யாருக்கோ வாக்குக் கொடுத்துவிட்டுக் காட்டிற்கு வந்ததாகவும் சொல்லியிருக்கிறான்.

39. அரக்கர்களோடு வலிய சண்டைக்குப்போகவேண்டும் என்கிற ஏற்பாட்டுடனே, சீதை தடுத்தும் வலிய இராவணனது எல்லைக்குள் சென்றிருக்கிறான்.

40. கரனோடு போர்புரியும்போது, 'உங்களையெல்லாம் கொல்லுவதற்கே நான் காட்டிற்கு அனுப்பப்பட்டேன்' என்கிறான்.

41. ஒருவித யோக்கியதையும் இல்லாத—துரோகியாகிய சுக்ரீவனிடம் இராமன் தன்னலத்துக்காகச் சரணமடைகிறான். 'என்னை ஆட்கொள்ளவேண்டும்; கருணை காட்டவேண்டும்' என்கிறான்.

42. இலங்கையை விபீஷணனுக்குப் பட்டம்கட்டிவிட்டு, சீதையை விட்டுவிட்டால் இராவணனுக்கு இலங்கையை விட்டுவிடுவதாக அங்கதனிடம் இராமன் சொல்லியனுப்புகிறான். இதிலிருந்து இராவணன்மீது வேறு குற்றமில்லை என்று தெரிகிறது.

43. பரதனும், கைகேயியும், குடிகளும், குருவும் காட்டுக்கு வந்து இராமனை நாட்டுக்கு வரும்படி வருந்தியும் 'சத்தியாக்கிரகம்' செய்தும் அழைத்தபோது, 'தந்தை சொல்லைக் காப்பாற்றுவேனே ஒழிய வேறு யாருடைய பேச்சையும் கேட்கமாட்டேன்' என்று சொல்லி நாட்டுக்கு வர மறுத்துவிட்ட இராமன்—அதே தந்தை சொல்லுக்கு விரோதமாய், அயோத்தியைப் பட்டம் கட்டிக்கொள்ள மாத்திரம் எப்படிச் சம்மதிக்கிறான்!

44. சம்மதித்தது மாத்திரமல்லாமல், தந்தை இராமனைக் காட்டுக்குப் போகச் சொன்ன நேரம் முதல் திரும்பி அயோத்திக்கு வந்து முடிசூட்டிக் கொள்ளுகிறவரை—அதே கவனமாக, ஆசையாக, நம்பிக்கையாக இருக்கிறான்.

45. தபசு செய்ததற்காகச் சூத்திர வாலிபனைக் கொன்றிருக்கிறான்.

46. கடைசியாக, சாதாரண மனிதர்களைப் போலவே, இராமன், இலட்சுமணனையும் தள்ளிவிட்டுத் தானும் ஆற்றில் விழுந்து சாகிறான். பிறகு, உப இந்திரனாக ஆகிறான். (தோழர் சி. ஆர். சீனிவாசய்யங்கார் மொழிபெயர்ப்பு அயோத்தியா காண்டம் சருக்கம் 8, பக்கம் 28, 36-வது பாயிண்டுக்கு உதாரணமாக.)

இலட்சுமணன்: இலட்சுமணனைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால், இவனிடம் குறிப்பிடத்தக்க மேலான விஷயமாக ஒன்றுகூடக் கிடைப்பதில்லை. இராமனுடன் கூடவே இருக்கிறான் என்கிற ஒரு விஷயத்தினால்தான் இலட்சுமணன் பெயர் இராமாயணத்தில் அடிபடுகிறது. இலட்சுமணன் பொதுவாக சராசரி மனிதத் தன்மைக்கு மேம்பட்டவனாக எங்கும் காணக் கிடைப்பதில்லை. இவன் எப்படித்தான் 'இளைய ஆழ்வார்' ஆனானோ தெரியவில்லை.

1. இராமன், பரதனுடைய இராஜ்யத்தை அபகரிக்கச் செய்த சூழ்ச்சிக்கெல்லாம் இலட்சுமணனும் உடந்தையாகவே இருந்திருக்கிறான்.

2. இராமன் இலட்சுமணன்மீது சந்தேகப்பட்டு, 'இலட்சுமணா! பட்டாபிஷேகம் எனக்கு ஆனபோதிலும் நீதான் நாட்டை ஆளப் போகிறாய்' என்று சொன்னவுடன்—நாட்டை இராமன் கைப்பற்ற எல்லாவிதமான அக்கிரமங்களையும் செய்யத் துணிகிறான். சுமத்திரையின் மக்களான இலட்சுமணன் சத்துருக்கனன் இருவரும் எந்தக் காரணம் கொண்டும் நாடு தங்களுக்குக் கிடைக்காதென்று கருதித்தான்—இலட்சுமணன் இராமன் பக்கமும், சத்துருக்கனன் பரதன் பக்கமும் சேர்ந்திருக்கிறார்கள்போலும்!

3. இலட்சுமணன் தன் தந்தையாகிய தசரதனை வைகிறான்; அவனை அயோக்கியன் என்கிறான்.

4. தந்தையை, 'சிறையில் வைக்கவேண்டும்' என்கிறான்.

5. தகப்பனைக் கொல்லவேண்டும் என்கிறான்.

6. 'தந்தையைக் கொல்லுவது மனுதர்மம்' என்றுகூடச் சொல்லுகிறான்.

7. 'பரதனையும், பரதனுக்கு வேண்டியவர்களையும் பூண்டில்லாமல் அழித்து விடுகிறேன்' என்கிறான்.

8. இராமன், 'தனக்கு நாடு கிடைக்காமல்போனது கடவுள் செயல்' என்று வருந்துகிறபோது—இலட்சுமணன், 'பேடிகளும், மடையர்களுந்தான் கடவுள் செயலைப் பற்றிப் பேசுவார்கள்' என்கிறான்.

9. 'கைகேயியும், தசரதனும் முன்னதாகப் பேசிவைத்துக்கொண்டு உன்னை ஏமாற்றவே இந்தப்படி அபிப்பிராயப் பேதப்பட்டவர்கள்போல் நடிக்கிறார்கள்' என்கிறான்.

10. 'தசரதனையும் கைகேயியையும் இப்போதே காட்டுக்குத் துரத்திவிட்டு நான் உனக்குப் பட்டம் சூட்டுகிறேன், பார்' என்கிறான்.

11. 'உனக்குப் பட்டம் சூட்டிக்கொள்ள இஷ்டமில்லையானால் நான் நாட்டைக் கைப்பற்றி நானே அரசாளுகிறேன்' என்கிறான்.

12. நாட்டைவிட்டுப் போகும்போது, 'வேசையர்களால் அலங்கரிக்கப்பட்ட அயோத்தியை ஆளுபவர்களே பாக்கியசாலிகள்' என்றும்,

13. 'நாம் திரும்பவும் அயோத்திக்கு வருவோமா?' என்றும் பிரலாபிக்கிறான்.

14. வணங்கியும், பிரார்த்தித்தும் இராமனை முடிசூட்டிக்கொள்ள நாட்டுக்கு அழைத்துப்போகக் காட்டுக்கு வந்த பரதனைக் கண்டவுடன், 'இதோ, நான் அவனைக் கொல்லப்போகிறேன்!' என்கிறான்.

15. காட்டில் விராதன் என்கின்றவனைக் கண்டவுடன், 'இராஜ்யம் போய்விட்டதற்காக பரதன்மீது இருக்கும் ஆத்திரத்தை இவன்மீது காட்டுகிறேன்' என்று சொல்லுகிறான்.

16. சூர்ப்பனகையிடம், 'சீதை கெட்ட நடத்தையுள்ளவள்; வயிறு (கொங்கை) சரிந்தவள்' என்கிறான்.

17. சீதை சந்தேகிக்கும்படியாகவும்; சீதையை அனுபவிக்கக் காதல் கொண்டிருப்பவனாகவும் கருதும்படி நடந்துவந்திருக்கிறான்.

18. 'சீதையை எவன் எடுத்துப்போனால்தான் என்ன? அவள் செத்தால்தான் என்ன? கேவலம் ஒரு பெண்ணுக்காக நாம் வருந்தலாமா?' என்று தமையன் மனைவியை அலட்சியமாய்ப் பொறுப்பில்லாமல், அவனிடமே பேசுகிறான்.

19. தாடகை, சூர்ப்பனகை, அயோமுகி ஆகிய பெண்களைக் காது, மூக்கு, முலை ஆகியவைகளைக் கொய்து கொடுமைப்படுத்தினான்.

20. சுக்ரீவனிடம், 'சோகத்தால், புத்தி தடுமாறி இருக்கும் இராமன் உன்னைச் சரணமடைய வந்திருக்கிறான்; கருணை காட்டவேண்டும்' என்று சொல்லி அடைக்கலம் புகுகின்றான்.

21. பிறகு அந்த சுக்ரீவனையே, 'கொன்றுவிடலாம்' என்று இராமனிடம் அனுமதி கேட்கிறான்.

22. இராமன் பேச்சைக் கேட்டு, சீதையிடம் பொய் சொல்லி, வஞ்சித்து, கர்ப்பத்துடன் அவளை அழைத்துப்போய்க் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டுவிட்டு வருகிறான்.

23. இலட்சுமணனுக்கு இராமனும், பரதனும் அண்ணன்மார்கள் ஆவார்கள். அப்படி இருக்க, இராமனுக்கு அடிமையாகவும் பரதனுக்கு எதிராகவும் நடந்துகொள்கிறான். அதுபோலவே, கோசலையிடம் அன்பாகவும், கைகேயியிடம் வெறுப்பாகவும் நடந்துகொள்கிறான். இதன் காரணம் நாட்டாசை யல்லாமல் வேறு என்ன?

['குடி அரசு'—கட்டுரை—8-1-1944]

இனி பரதன், சத்துருக்கனன், கோசலை, சுமத்திரை, கைகேயி, சுமந்திரன், வசிஷ்டர், அனுமன், வாலி, சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், இராவணன் ஆகியவர்களின் சேதிகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

பரதன்: பரதனிடத்தில் எவ்வித பெருங் குணமும் இல்லை.

1. பாட்டன் வீட்டில் 10 வருஷ காலம் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்து கொண்டான்.

2. கூட்டி வர ஆள் அனுப்பப்பட்ட பிறகே அயோத்திக்கு வருகிறான். தாய், தந்தை, வீடு ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

3. பாட்டன் வீட்டிலிருந்து வந்தவுடன், இராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டான் என்று கேள்விப்பட்டதும், 'இராமன் எந்தப் பெண்ணையாவது கற்பழித்துவிட்டானா?' என்று கேட்கிறான்.

4. தனக்கு நியாயமான முறையில் கிடைக்கவேண்டிய இராஜ்யத்துக்காக எவ்வளவோ பாடுபட்டு இராஜ்யம் தேடிவைத்த தன் தாயாரை, விஷயம் தெரிந்து கொள்ளாமல் மடத் தனமாக, 'சண்டாளி, பாவி, தீயவளே, தகாத ஒழுக்கமுள்ளவளே, பேயே, நீ கெட்ட நடத்தை உள்ளவள்; நீ செத்துப் போ! இராஜ்யத்தை விட்டு ஓடிப் போ, உன் வயிற்றில் பிறந்தேனே!' என்று முட்டாள்தனமாகவும், அயோக்கியத் தனமாகவும் பேசிக் கடிந்துகொண்டு மிகக் கேவலமாக அவளை நடத்துகிறான்.

5. தன் தந்தையைக் 'கொடியவன்' என்று சொல்கிறான்.

6. இராமனிடம் காட்டில் பேசும்போது, 'அந்தப்புரப் பெண்கள் களிக்கும்படி முடி சூட்டிக்கொள்' என்கிறான்.

7. பரதனுக்கும் பல மனைவிகள் இருந்திருக்கிறார்கள்.

சத்துருக்கனன் : இவன் மகா மூடன்.

1. தனது சிற்றன்னையாகிய கைகேயியை வைகிறான்.

2. உண்மையை ஆதிமுதல் தெரிந்து தனது எஜமானியாகிய கைகேயிக்கு நியாயம் செய்யவேண்டும் என்று பாடுபட்ட மந்தரையைக் கீழே தள்ளி, கால்கள் முறியும்படி அடித்துக் கொடுமை செய்கிறான்.

[குறிப்பு : தகப்பனையும் தாயையும் இவ்வளவு இழிவாய்ப் பேசிக் கேவலப்படுத்திய பரத சத்துருக்கனன்கள், தமையனிடத்தில் மாத்திரம் இவ்வளவு பக்தி காட்டியிருப்பது பொருத்தமற்றதாகும்.]

கோசலை: கோசலை ஒரு கீழ்த்தரக் குடும்பத்துச் சக்களத்தி போலவே நடந்து கொண்டிருக்கிறாள்.

1. எப்படியாவது தன் மகனுக்குப் பட்டம் கிடைக்கவேண்டுமே என்கின்ற ஆத்திரம் சதா இருந்து வந்தது.

2. கைகேயிமீது பொறாமையும் துவேஷமும் இருந்துகொண்டே இருக்கிறது.

3. 'நான் கிழவி ஆகிவிட்டேனே; என் சரீரம் தளர்ந்துவிட்டதே; அரசர் என்மீது பிரியமாய் இருக்கமாட்டாரே !' என்று துக்கப்படுகிறாள்.

4. கணவனை மிகக் கேவலமாகவும் அலட்சியமாகவும் பேசி யிருக்கிறாள்.

சுமித்திரை : சுமித்திரை ஒரு அநாமதேயமாகவே இருந்திருக்கிறாள்.

1. இவளுக்குத் தன் மகனுக்குப் பட்டம் கிடைக்காது என்பது தெரிந்ததால்— இராமனுக்கு நாடு கிடைக்க வேண்டுமென்று ஆசை அதிகம்.

2. 'இராமன் 14 வருடங்கள் பொறுத்து நாட்டுக்கு வந்து ஒரு நொடிப்பொழுதில் பரதனை வென்று இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வான், கவலைப்படாதே' என்று கோசலைக்குச் சொல்லுகிறாள். ஆகவே, பரதனை மோசம் செய்யவேண்டுமென்கிற கெட்ட எண்ணம் இருவருக்கும் இருந்திருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது.

கைகேயி : 1. வீரமுடையவள். அழகுள்ளவள் ; பட்டத்து அரசியாய் இருந்தவள்.

2. இரண்டு தடவை புருஷனின் உயிரைக் காத்தவள்.

3. புருஷன் உயிரைக் காத்தவளாதலாலும், தசரதன் தன் கலியாணத்தின்போதே நாட்டைக் கைகேயிக்குக் கொடுத்துவிட்டதாலும் ஆகிய இரண்டு காரணங்களாலும் நாடு கைகேயிக்குச் சொந்தமாகி இருக்கிறது.

4. அப்படி இருந்தும் பரதன், 'நாட்டை இராமனுக்குக் கொடுத்துவிடுகிறேன்— கொடுத்துவிட்டேன்' என்று சொன்னபோதெல்லாம் கைகேயி சிறிதும் ஆட்சேபிக்கவில்லை.

5. தனக்கு உள்ள பாத்தியதையைக் காப்பாற்றப் பாடுபட்டாளே தவிர, யாதொரு கெட்ட எண்ணமும் கொள்ளவில்லை ; கெட்ட காரியமும் செய்யவில்லை.

சுமந்திரன் : மந்திரியாக இவன் யோக்கியமாய் நடந்துகொள்ளவில்லை.

1. தசரதனின் சூழ்ச்சிக்கு அனுகூலமாக நடந்து, துர்மந்திரியாகவே இருந்திருக்கிறான்.

2. அரசன் மனைவியான கைகேயியைக் கேவலமாகப் பேசியிருக்கிறான்.

3. பொய்யும் பேசியிருக்கிறான்.

வசிஷ்டர் : குருவான வசிஷ்டர் சாதாரண புரோகிதன் போலவே நடந்து கொண்டிருக்கிறார்.

1. நாடு பரதனுக்குப் பாத்தியதைப்பட்டுவிட்டது என்பது இவருக்குத் தெரிந்திருந்தும், இராமனது முடிசூட்டுக்கு இசைந்து சூழ்ச்சி செய்கிறார்.

2. அவசரம் அவசரமாகப் பொய்யான முகூர்த்தம் வைத்துக்கொடுக்கிறார்.

3. இவர் பட்டாபிஷேகத்துக்கு வைத்த முகூர்த்தம் வனவாசத்துக்கு முடிந்தது.

அனுமன் : இவன் ஒரு சாதாரணமான ஆள்; புத்திசாலித்தனமான காரியம் என்று ஒன்றும் செய்துவிடவில்லை. இவனது பெருமை யெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும்—அசாத்தியமானதுமான காரியங்கள் பல செய்ததாகச் சொல்லப்படுவதேயாகும். ஒரு நல்ல—பரிசுத்தமான அடிமைபோல் நடந்துகொண்டிருக்கிறான். மற்றும், நீதிக்கு ஒவ்வாததுமான காரியங்கள் பலவும் செய்திருக்கிறான்.

1. அக்கிரமமாக—நடு இராத்திரியில் இலங்கைக்குத் தீ வைத்து நிரபராதிகளைக் கொன்றும் நஷ்டப்படுத்தியும் இருக்கிறான்.

2. சீதையிடம் கெட்ட வார்த்தைகளைப் (ஆண்குறியைப் பற்றிக்கூட) பேசியிருக்கிறான்.

வாலி : வாலி எவ்விதக் குற்றமும் செய்யவில்லை.

1. தம்பியைக் கொல்லவேண்டும் என்றும் கருதவில்லை.

2. சுக்ரீவனே வாலியிடம் வலியச் சண்டைக்கு வந்திருக்கிறான்.

3. சுபாவத்திலும் வாலியிடம் குற்றம் இருந்ததில்லை.

4. தம்பியைக் கொல்லவில்லை என்று மனைவியிடம் வாக்குக்கொடுத்துவிட்டுப் போருக்கு வந்தான்.

5. மிகப் பொறுமையும் வலிமையும் உடையவன்.

6. மிக்க நீதிமான்.

7. நியாயமான முறையிலோ—யோக்கியமான முறையிலோ இவனை யாரும் வெல்ல முடியாது.

8. இவன் அனேக பெரியோர்களுக்கு நண்பன்.

9. இராமனை யோக்கியன் என்று நம்பினவன்.

10. இவன் செத்த பிறகு சுக்ரீவன், வாலியின் பெருமையைக் கூறி, 'இப்படிப்பட்ட தமையனை இழந்தபின் நான் உயிர் வாழமாட்டேன்; நெருப்பில் விழுந்து சாவேன்' என்கிறான்.

இப்படிப்பட்டவனைக் கொன்றதற்கு இராமன், 'மிருகங்களைக் கொல்லுவதில் நீதியைக் கவனிக்க வேண்டியதில்லை' என்கிறான். வாலியா மிருகம்?

சுக்ரீவன் : தமையனுக்குத் துரோகம் செய்தவன். தமையனைக் கொல்வதற்காகவே இராமனுக்கு அடிமை ஆனான்.

['குடி அரசு'—கட்டுரை—15-1-1944]

3. இராமாயண ஆராய்ச்சி

இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக்கொண்டு அக்கிரமம் செய்தார்கள்—என்பனவெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும் அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக்கொள்வதற்குக் கடவுள்களும் தேவர்களும் என்ற பெயர்கொண்ட ஆரியர்கள் வழிதேடிக்கொண்ட ஒரு சாக்கே அல்லாமல், அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யார்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டா னார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

அதுபோலவே—தேவர்கள் யார்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? உலகிற்கு அவர்களால் என்ன பயன்? என்பதற்கும் ஆதாரம் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம் தான்—அதாவது 'இந்தியக் கண்டம்' என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய மற்ற இந்தியாவுக்கு அப்பாற்பட்ட அய்ந்து கண்டங்களிலும் இருந்ததாகவோ, அந்தக் கண்டங்களைப்பற்றி இவர்கள் ஏதாவது தெரிந் திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

கீழ் ஏழு லோகம், மேல் ஏழு லோகம் கண்டுபிடித்தவர்கள்—ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, அய்ரோப்பாவைப்பற்றிய ஒன்றையும் கண்டுபிடித்ததாகவோ அல்லது அங்குள்ளவர்கள் இந்தியாவையும் சிவ, விஷ்ணு, தேவர், அசுரர்–இராட்சதர், சூரன் ஆகியவர்களை அறிந்ததாகவோ தகவல்களையும் காணமுடியவில்லை. அவர்கள் அறிந்த வாழ்க்கையில் உள்ள இடம், மலை, ஆறு, கடல், ஊர், வீடு, வாசல் எல்லாம் இந்தியாவில் இருப்பவைகளைத்தான் சொல்லப்படுகின்றனவே ஒழிய—மற்ற நாட்டு மலை, காடு, வானம், நதி, சமுத்திரம் எதுவும் சொல்லப்படவில்லை. கடவுள்களும், தேவர்கள் வாழ்க்கை களில் காணப்படும் 'பூலோகமே' இந்தியாவாகத்தான் கருதப்பட்டிருக்கின்றதே தவிர வேறு ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்து, இந்தியக் கண்டத்தின் பூர்வ நிலை— அதாவது ஆரியர் வருவதற்கு முன் இருந்த நிலையையும் யோசித்துப் பார்த்தால் சிவன், விஷ்ணு அல்லது சேயோன், மாயோன்—மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய வற்றில் வரும் 'உலகம்' முதலியவை, பெரும்பாலும் இந்தியாவுக்குள் ஆரியர் வந்தபிறகு ஏற்பட்டவைகள்தாம் என்பதும் அவை இந்தியாவைப் பொறுத்தவைதாம் என்பதும் சாதாரணமாய் விளங்கும். அவைகளைப்பற்றித்தான் மற்ற வேறு ஆதாரங்களும் விளக்கு கின்றன.

சிந்து நதி தீரத்தைப்பற்றியும், அங்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங் களில் கண்டுபிடிக்கப்பட்ட பூர்வ சின்னங்களைப் பற்றியும் பேசுவதில்–ஆரியர்களுக்கு முன் தமிழர்கள் அங்கிருந்தார்கள் என்றும், இந்தியக் கண்டம் பூராவும் தமிழர்கள் இருந்தார்கள் என்றும்தான் சொல்லப்படுகிறது.

ஆனால் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இன்றைக்கு 6000, 7000 ஆண்டு காலத்துக்கு முந்தியது என்றும் சொல்லப்படுகிறது.

ஆரியர்களுக்கு முன்பே இந்த இடங்கள் நாகரிகமாய் இருந்திருந்தால் ஆரியர் இங்கு எப்படி வந்திருக்க முடியும்? இந்தியக் கண்டம் முழுவதும் சமயம், சமுதாயம், கலை, பழக்க வழக்கம் முதலிய யாவும் ஆரிய மயமாய்—ஆரிய ஆகமம், ஆரிய ஆச்சாரம், தர்மம், ஆரியக் கதை ஆகியவைகளே கொண்ட இலக்கண–இலக்கியம், சரித்திரம், காவியம் ஆகியவை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

கோவில்கள் எல்லாம் தமிழர்களுடையவையா, ஆரியர்களுடையவையா என்று பார்த்தாலும் அவற்றிற்குப் பணம் செலவு செய்தவனும், கட்டடம் கட்டினவனும், அதற்கு மானியம், மடப்பள்ளி விட்டவனும் தமிழனாக இருக்கலாம்; சந்தேகமே இல்லை. ஆனாலும் சொந்தக்காரனும், கோவில் ஆகமக்காரனும், கடவுள் தன்மைக்காரனும் ஆரியனாகத் தானே இருக்கிறான்?

இக் கோவில்களில் உள்ள உருவங்கள்—அதன் தோற்றத்திற்கு ஆன கதைகள்–பூசை உற்சவ முறைகள்–நைவேத்திய சாதனங்கள் ஆகியவை ஆரியர்களுடையதாகத்தானே

இருந்து வருகின்றன? அந்தக் கோவில்கள் கட்டப்பட்ட காலத்திலும் அப்போதுள்ள அரசர்கள் ஆட்சியிலும், ஆரிய ஆதிக்கம் தலைசிறந்து உச்ச ஸ்தானத்தில் இருந்தது என்பதற்கு முதல், இடை, கடைச் சங்கங்களும் அப்போதிருந்த புலவர்களும், அரசர்களும், அரச நீதியும் அவர்கள் கைக்கொண்டிருந்த சமயங்களும் உதாரணமாக இல்லையா?

இந்த நிலையில் அசுரர், இராட்சதர்கள் யாராக இருந்திருக்க முடியும்? அவர்கள் எங்கிருந்து வந்திருக்க முடியும்? அதுவும் இந்தியாவிற்குள் உள்ள அயோத்தி, மதுரை, டெல்லி, மிதிலை, காந்தாரம், விராடம், விதர்ப்பம், தண்டகாரண்யம், கோதாவரி, சித்திர கூடம் ஆகிய இடங்களும்—அங்கும் அதற்குப் பக்கத்திலுமே தாடகை, கரன், சூர்ப்பனகை, மாரீசன்—முதலியவர்களும் இருந்தார்கள் என்றால் இவர்கள் யாராக இருந்திருக்க முடியும்? இதைக் கண்டுபிடிக்கப் பெரிய பெரிய புராண, சரித்திர, இலக்கிய, காவியநூல் ஆராய்ச்சி ஏன் வேண்டும்?

இவை பொய்க் கதைகளாக—கற்பனைக் கதைகளாக இருந்தால் கவலை வேண்டாம். மெய்க்கதை—சிறிதாவது நடந்த கதை என்றால்—கோதாவரி நதிக்குப் பக்கத்திய தேசத்தில் தான் இராவணன் தங்கை சூர்ப்பனகை, இராவணன் தம்பி கரன் முதலியவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, 'உங்களைக் கொல்லவே நான் வந்தேன்' என்று இராமன் சொல்லுகிறான். முனிவர்களும், 'பக்கத்தில் ஜனஸ்தானம் இருக்கிறது; அங்கு இராட்சதர்கள் இருக்கிறார்கள்' என்கிறார்கள்.

இந்தியக் கண்டத்தின் பாகத்தைக் கடல் கொண்ட காலம் பதினாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டது என்கிறார்கள். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தது 6000 வருடத்திற்கு உட்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பே தமிழர்கள் இந்தியாகண்டம் பூராவும் பரவி இருந்ததோடு, தமிழர் ஆட்சியும் அங்கெல்லாம் பரவி இருந்தது என்றும் சொல்லி—அஸ்ஸாம் கண்டுபிடிப்புக்களையும், சிந்து கண்டுபிடிப்புக்களையும் உதாரணம் காட்டுகிறார்கள்.

மீனக் கொடியோனாகிய—தெற்கத்திய 'சம்பாரன்' என்னும் 'அசுர' அரசனுடன், சண்டைபோட்டதாகவும் வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. சம்பாரன் என்னும் ஒரு பாண்டிய மன்னன் இருந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது.

கதையை வளர்த்துவதற்காக, 'இராமன் சீதையை அங்கு போய்த் தேடினான்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல், சீதை காணாமல்போன சிறிது காலத்துக்குள்ளாகவே, இராவணன்தான் தூக்கிக்கொண்டு போனான் என்பதும், அவன் தெற்கே போனான் என்பதும் தெரியும்.

அன்றியும், இராவணன் சீதையின் பக்கத்திலேயே இருந்து இலட்சுமணன் வெளியில் சென்றவுடன் தூக்கிவந்திருக்கிறான். மாரீசன், தாடகையின் மகன் பக்கத்திலேயே வசித்திருக்கிறான். சூர்ப்பனகை தனது மூக்கு அறுபட்ட உடனே இராவணனிடம் சென்று இரத்தச் சிந்தலோடு முறையிட்டிருக்கிறாள். இராவணன் உடனே மாரீசனோடு அதைப் பற்றிப் பேசுகிறான். விஸ்வாமித்திரன் யாகம் செய்ததும்—தாடகை அதைக் கெடுத்ததும்—இந்தியாவில் இன்னும் வடக்கில் என்றாலும் சமீபமாகத்தான் காணப்படுகிறது. சுக்கிரீவன் அனுமார் முதலியவர்களையும் பர்ணசாலைக்குச் சமீபத்திலேயே சந்திக்கிறான். ஜடாயு இரத்தம் காயாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போதே இராம இலட்சுமணர்கள் காண்கின்றார்கள். இராமன், 'நான் புத்தியில்லாமல் இராட்சதர்களை விரோதித்துக் கொண்டேன்' என்று வருந்துகிறான்.

ஆகையால், வால்மீகி கதைப்படி, இராட்சதர்கள்—இராட்சத அரசர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் திராவிட நாட்டிற்குள் அல்லது நமக்குச் சமீபத்திற்குள் தான் இருந்திருக்கவேண்டுமே ஒழிய அவர்கள் வெளி நாட்டார்கள் என்றோ, வேறு இனத்தார்கள் என்றோ சொல்லுவதற்குத் தக்க ஆதாரம் எதுவும் அதில் காணப்படவில்லை.

வால்மீகி இராமாயணத்தை, வால்மீகி கதை முகமாய் எழுதியதால் வர்ணனைக்கு ஆகவும் சிலவற்றைக் கற்பனையாகச் சேர்க்கவேண்டியதாகச் சேர்த்து—ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் ஆகிவிட்டது. பண்டிதர்கள் வக்கீல்களைப் போல் உண்மையைப் பற்றிய இலட்சியமில்லாமல் தங்கள் வெற்றியையே குறிவைத்தும் சில அற்புதக் குறிப்புகளை எடுத்துக்கொண்டும், மனச் சாட்சிக்கு விரோதமாய்க் கூச்சல் போட்டு, 'தேவ, அசுரர்'களை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதல்லாமல் வேறு உண்மை என்ன இருக்கிறது? புராணங்கள், இதிகாசங்கள், தேவசாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் என்பவை களுட்பட ஆரியர்கள் தங்கள் உயர்வுக்கும்—திராவிடர்களை இழிவுபடுத்தவும் செய்து கொண்டவைகளே தவிர வேறில்லை. அக் காலத் தமிழர்கள் ஒரு சமயம் பாமர மக்களாக இருந்திருக்கலாம். ஆதலால் சமய, சரித்திர ஆதாரங்களைக் கொண்டு நாம் நம்மைக் கவனிக்காமல் தற்கால அறிவைக் கொண்டு—நிலையைக் கொண்டு பார்ப்பதுதான் பயன் தரக்கூடியதாகும்.

['குடி அரசு'—'சித்திரபுத்திரன்' கட்டுரை—20-9-1947]

4. வால்மீகியின் சீதை

இராமாயணத்தைக் காவியமாக எழுதியது (சொன்னது) வால்மீகி முனிவர் என்று சொல்லப்படுகிறது. வால்மீகி முனிவர் என்பதாக ஒருவர் இருந்தாரா? இருந்திருக்க முடியுமா? என்று சிந்தித்துப் பார்ப்போமேயானால், 'இருந்திருப்பார்' என்று கருதுவது மிகவும் மூடநம்பிக்கையில் பட்டதேயாகும்.

ஏனெனில், வால்மீகியின் பிறப்பு, வளர்ப்பு, இருப்பு பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருத்தமற்ற—அசாத்தியமான காரியமாக இருக்கிறது.

ஆதாரங்களின்படி பார்த்தால், வால்மீகி ஒரு பார்ப்பனர்; அதிலும் அவர் ஒரு ஒழுக்கம் கெட்ட பார்ப்பனர்; அவர் திருட்டினாலும், வழிப்பறியினாலும் வாழ்வு நடத்தி வந்தவர். அப்படிப்பட்ட அவருக்கு ஒரு முனிவர், வால்மீகிமீது கருணைவைத்து ஞானோ பதேசம் செய்ய 'ராம மந்திர'த்தைப் போதித்ததாகவும்—அந்த உபதேசத்தை ஏற்றுக் கொள்ளத்தக்க அறிவு இல்லாததால்—அதாவது வால்மீகி 'ராமா' என்று உச்சரிக்கக்கூடத் தெரியாமல்—முடியாமல் இருந்ததாகவும், முனிவரானவர் காட்டில் இருந்த மரா மரம் என்னும் மரத்தைக் காட்டி அதன் பெயர் என்ன என்று கேட்டதாகவும், அதற்கு வால்மீகி அதற்கு மரா மரம் என்று சொன்னதாகவும், முனிவர், வால்மீகியை அந்தச் சொல்லையே உருப் போட்டு ஜபித்துக்கொண்டு இருக்கும்படி சொல்லிப் போனதாகவும்—வால்மீகி என்ற கள்வன் அந்தப்படியே 'மரா மரா' 'மரா மரா' என்று ஜபித்துக் கொண்டிருக்கையில் அவர்மீது ஒரு பெரிய புற்று வளர்ந்து, அவரை மண் மூடிவிட்டதாகவும்; பிறகு ஒரு வேடன் ஒரு பட்சியை வில்லால் அடித்துக் கொல்லுகையில், புற்றிலிருந்து வெளிப்பட்டு அந்த வேடனை அவர் சபிக்கத் தொடங்குகையில் அந்த சாபச் சொல் சுலோகமாக வெளிப்பட்டு, அது—'இராமாயணமாக' (இராம கதையாக) முடிந்தது என்றும் காணப்படுகின்றது. வால்மீகிக்கு ஆயுள் பல ஆயிரம் ஆண்டுகளாகக் காணப்படுகிறது.

இந்தக் கதையை நம்பினால்தான் வால்மீகி இருந்ததாகக் கொள்ளமுடியும். இதன் உண்மை எப்படியோ இருந்தாலும், இராமாயண காவியத்தை யாராவது ஒருவர்—அவர் முனிவரானாலும் சரி, மனிதரானாலும் சரி, ஒருவர் உண்டாக்கி இருக்கவேண்டும். அதோடு இராமாயணத்தை உண்டாக்கினவர் ஒரு ஆரியராக—அதுவும் வேதியராக, பார்ப்பனராகத் தான் இருக்கவேண்டும்.

ஆரிய நூல்களில் எதை எடுத்துக் கொண்டாலும், அது மனிதர்களால் மனிதத் தன்மையோடு மாத்திரம் இருந்தவர்களால் வற்புறுத்திச் செய்ததாகக் காணமுடியாது. ஏதாவது ஒரு தெய்த் தன்மை—ஒரு அசாத்தியத் தன்மை உடையவர்களால்தான் உண்டாக்கப்

பட்டதாகக் காணப்படும். காரணம் என்னவென்றால், அவைகளில் உள்ள சங்கதிகள் நம்பமுடியாதவையாயும் நீதி, நேர்மை, ஒழுக்கம், மனிதத் தன்மை அற்றவையாயும் பெரிதும் இருக்கும். அப்படிப்பட்டதை மக்கள் எளிதில் நம்பமாட்டார்கள். ஆதலால், மக்களை நம்பச்செய்ய, அந்நூல்களை உண்டாக்கினவர்கள்—'தெய்வத் தன்மை உடையவர்கள்' என்றும் அதைச் சொன்னவர்கள்—'தெய்வங்கள்'—'மனிதத் தன்மைக்கு மேம்பட்டவர்கள்' என்றும் கூறி மக்களை நம்பச்செய்து விடுவார்கள். அந்த முறையில்தான் இராமாயணம் வால்மீகியால் சொல்லப்பட்டது என்று சொல்லப்படுவதாகும்.

இராமாயணம் யாரால் உண்டாக்கப்பட்டதாக இருந்தாலும், இராமாயணத்தை உண்டாக்கியவருக்கு, அதன் கதா நாயகர்களான இராமனையோ, இலட்சுமணனையோ, சீதையையோ அவர்களது குடும்பத்தையோ சிறிதுகூடத் தெய்வீகத் தன்மை உடையவர்களாக ஆக்க மனம் இருந்ததாகத் தெரியவில்லை. அதுமாத்திரம் அல்லாமல், அவர்களை நேர்மை, ஒழுக்கம், யோக்கியம் உடையவர்களாகச் சித்திரிக்கவும் மனம் இல்லாதவராகவே இருந்திருக்கிறார் என்று நன்றாய்த் தெரியவருகிறது.

எடுத்துக்காட்டாக, இராமனின் தந்தையான தசரதனை ஒரு காமாந்தகாரனாக, நேர்மையற்றவனாக, வஞ்சகம்–துரோக எண்ணம் உள்ளவனாகச் சித்திரித்து இருக்கிறார்.

தாயாகிய கோசலையை, மிகப் பேராசை உடைய ஒரு சாதாரண இழிகுலப் பெண்ணாகச் சித்திரித்து இருக்கிறார்.

தம்பியாகிய இலட்சுமணனை, ஒருவித நேர்மையும் அற்ற மூடனாகவும், எதை யாவது செய்து தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் ஆர்வம் உடையவனாகவும் சித்திரித்து இருக்கிறார்.

இராமனையும், ஒரு தந்திரக்காரன், சுயநலக்காரன், துரோக வஞ்சக எண்ணத்திற்கு ஆதரவு–உடந்தைக்காரன்—சிறிதும் உண்மையோ உள்ளன்போ இல்லாத ஒரு வெகு சாதாரண மனிதன் என்பதாகச் சித்திரித்து இருக்கிறார்.

கடைசியாக, சீதையை ஒரு தாழ்ந்த குலப்பெண்ணாகவும், கற்பின் தர்மப்படியான கற்பு இல்லாதவளாகவும், கற்பு அழிந்தவளாகவுமே பச்சையாகச் சித்திரித்து இருக்கிறார்.

இராவணனிடத்தில் இருக்கும்போது இராவணன் சீதையைத் தொட்டு எடுத்து மடியில் வைத்து அணைத்துக்கொண்டு போனதாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

இராவணன், சீதையை இந்தப்படி இலங்கைக்கு எடுத்துப்போய், தனது மாளிகையில் சேர்த்தவுடன் சீதை சோகமும் மோகமும் கொண்டு இருந்தாள் என்று எழுதியிருக்கிறார். பிறகு உடனே இராவணன் பலாத்காரமாய் அனுபவித்தான் என்கின்ற குறிப்பைக் காட்டி, அதன்மீது சீதை வெட்கப்பட்டதாகவும் துக்கப்பட்டதாகவும் காட்டி—இராவணன் இதற்குச் சமாதானமாக ஆறுதல் சொல்லுவதாகவும்—இது, தெய்வச் செயல் ஏற்கக்கூடியது என்று சொன்னதாகவும் எழுதியிருக்கிறார்.

பின்பு, இராவணனைக் கொன்று சீதையை மீட்டதில்—சீதையின் நிலையைப் பார்த்ததும் இராமன் சீதையின்மீது சந்தேகம் கொண்டு, சீதையை 'ஏற்றுக் கொள்ளமாட்டேன்' என்று சொன்னதாகவும் எழுதி இருக்கிறார்.

வால்மீகி இராமாயணத்தில் அதன் ஆதிமூலக் கற்பனைகளைப் பின்னால் நாளா வட்டத்தில் அதில் உள்ள இப்படிப்பட்ட குறைகளை நீக்கப் பல மாறுதல்கள் செய்யப்பட்டதாகக் காணப்பட்டாலும்—அம் மாறுதல்களால் அதன் மூலத்தின் கருத்தைச் சரியானபடி மறைக்கமுடியாமலே போய்விட்டது.

இந்த வியாசத்தில் எடுத்துக்கொண்ட விஷயமான சீதையைப் பற்றியே இனிச் சொல்லலாம்.

சீதையை, அவளது திருமணத்தின்போது அவளை உத்தமமான பெண்ணாகச் சித்திரிக்காமல், ஒரு சாதாரணப் பெண்ணாக ஆக்கிவிட்டார்.

திருமணத்திற்குப் பிறகும் அப்படியே செய்தார்.

இராமன் முடிசூட்டல் தவறிய காலத்திலும் அப்படியே செய்தார்; காட்டிலும் அப்படியே செய்தார்.

கடைசியாக, இராவணனுடன் இருந்த காலத்தில் சீதையை அடியோடு கெடுத்து விட்டார்.

இந்த வியாசம் வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் விஷயங்களைக் கொண்டே எழுதப்படுகிறதே தவிர, உத்தேசமோ கற்பனையோ கலந்து எழுதப்படுவதில்லை.

சீதை–இராமன் சம்பாஷணைகளில் இராமனைப் பார்த்து, சீதை 'ஆம்! நீ சொல்லுவது சரிதான்; நான் என்ன செய்வேன்? நான் ஒரு பெண்; பலமற்றவள். அவன் ஓர் ஆண்; பலசாலி. என் திரேகம் அவனிடம் சிக்கி இருந்தபோது நான் என்ன செய்ய முடியும்? ஆனால், என் மனத்தில் அவனை விரும்பவில்லை. வாயால் அவனுக்குச் சம்மதிக்கவில்லை. திரேகத்தால் நடந்த காரியங்களுக்கு நான் எப்படிப் பொறுப்பாளனேன்?' என்று கூறியதாக எழுதிவிட்டார்.

இராமன் சீதையை நெருப்பில் இறங்கி, தனது கற்புத் தன்மையைக் காட்டும்படி கேட்டதற்கு, சீதை நெருப்பை வளர்த்து அதில் இறங்குகையில்—'நான் மனத்தினால், வாக்கினால் தவறு செய்திருந்தால்–கற்பு கெட்டிருந்தால், தீயே, என்னைச் சுடு!' என்று தான் சொல்லுகிறாளே தவிர, 'உடலால் கற்புக் கெட்டு இருந்தால், சுடு!' என்று சொல்ல வில்லை என்பதாகக் கூறி இருக்கிறார்.

அதை அனுசரித்தே கம்பனும்; 'மனத்தினால் வாக்கினால் மறு உற்றேன் எனில் என்னைச் சுடு தீச்செல்வா' என்று சீதை சொன்னதாகவே பாடி இருக்கிறார்.

இவைகள் யாவும் இந்தப்படி இருக்க,

இராமன் இராவணனைக் கொன்று சீதையுடன் அயோத்திக்குத் திரும்பிவந்த பிறகு இவர்கள் வாழ்க்கை நடத்தத் துவங்குகையில்,

இராமன், சீதை கர்ப்பம் உண்டாகி இருப்பதைக் கண்டவுடன் வருத்தப்பட்டு, அப்பொழுதே அவளைக் காட்டுக்கு அனுப்புவதாகத் தீர்மானித்து, அடுத்தநாள் காலையிலே அனுப்பிவிட்டார் என்று கொள்ளும்படியாகவே எழுதித் தீர்த்துவிட்டார்.

இதை வால்மீகி இராமாயணத்தில் உள்ளபடியே குறிப்பிடப்படுகிறது.

இராமாயணம் உத்தரகாண்டம் சி. ஆர். சீனிவாச அய்யங்கார் மொழிபெயர்ப்பு—சருக்கம் 41, பக்கம் 161-ல் காணுவது:

இராமன், இராவண ஜெயங்கொண்டு, மனைவியுடன் அயோத்திக்கு வந்து அனுமார் முதல் புஷ்பக விமானம்வரை அனுப்பிவிட்டு உடனே இராஜ்யபாரத்தில் ஈடுபடுகிறார்.

அப்பொழுது ஒருநாள் பரதன் இராமனைப் பார்த்து, 'ஸ்வாமி பரதெய்வமான தாங்கள் இராஜ்ய பரிபாலனம் செய்ய ஆரம்பித்து ஒரு மாசமாகிறது. பிராணிகள் யாதொரு குறைவில்லாமல் சந்தோஷத்தை அடைந்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சக்கரவர்த்தி எங்களை எப்பொழுதும் பரிபாலித்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்' என்று கூறுகிறார்.

இராமன் ஒருநாள் பகலில் இராஜ்ய காரியங்களைக் கவனித்து மத்தியானத்துக்கு முன்பகலில் அந்தப்புரத்திற்குச் சென்றார்.

சீதை, இராமனிடம் வந்தாள். இராமன் நல்லது, நல்லதென்று சிலாகித்து அவளுடைய முகத்தைக் கவனித்துப் பார்த்து, 'சீதே! ஒரு புத்திரன் உண்டாகப் போகிறான் என்று உன் தேக லட்சணங்களால் எனக்குத் தெரிகின்றது. உன் மனத்தில் தோன்றும் விருப்பத்தைச் சொல்' என்றார்.

சீதை வெட்கம் அடைந்து, 'நான் மறுபடியும் புண்ணியாச்சிரமங்களைப் பார்க்க வேண்டும். கங்கைக் கரையில் இருக்கும் மகரிஷிகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாகி இருக்கிறது' என்று பிரார்த்தித்தாள்.

இராமன், 'நாளைக்கே புறப்பட்டுப் போகலாம்' என்று சொல்லிக்கொண்டு நடுக் கட்டுக்கு வந்தார்.

அப்பொழுது சிலர் விசித்திரமான கதைகளைச் சொல்லி இராமனைச் சிரிக்கும்படி செய்தார்கள்.

விஜயன், மதுதத்தன் முதலியவர்கள் இராமனுக்கு அனேக பரிகாசக் கதைகள் சொன்னார்கள். அப்பொழுது; இராமன், 'மித்திரர்களே! நகரத்திலும் தேசத்திலும் என்ன விசேஷம்? ஜனங்கள் என்னையும் சீதையையும்பற்றி என்ன சொல்லிக்கொள்ளுகிறார்கள்?' எனக் கேட்டார்.

இந்த இடத்தில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க கருத்து, இதன் கீழே காணப் படுகிறது. அதாவது :

...'சீதையைக் காட்டுக்கு அனுப்பவேண்டிய—அதற்கு ஒரு வியாஜ்யமாக (காரணம் தேட) இராமர், இராஜ்ய விருத்தாந்தத்தை விசாரிக்கிறார்' என்ற வாசகம் இருக்கிறது. இது பிராக்கட்டுக்குள் இருப்பதால், உரை ஆசிரியர் கருத்தாக இருக்கலாம்.

இதுபோலவே இன்னொரு விஷயமும் பிராக்கட்டுக்குள் காணப்படுகிறது. அதாவது 'இராமர் சீதையைப் பார்த்துக் குலவிக் கர்ப்பத்தைக் கண்ட காலம்—வானரர் அயோத்தியைவிட்டுச் சென்ற பிறகு ஒரு வருடமாயிற்றே என்று தெரிகிறது' என்று உரையாசிரியர் தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

மற்றொரு உரையாசிரியர் உரையில், 'இராமன் அயோத்தியைப் பதினாயிரம் வருடம் பரிபாலித்த பிறகு—ஒரு நாள் சீதையின் கர்ப்பத்தைக் கண்டார்' என்று எழுதி இருக்கிறார். இது, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் உரையில் காணப் படுவது. மற்றொரு உரையாசிரியரும் அதாவது—கொ. க. சீனிவாசாச்சாரியார் எழுதிய உரையில் :

'பதினாயிரம் ஆண்டுகள் இருவரும் கூடிவாழ்ந்தபின் ஒரு நாள் சீதை கர்ப்பமுற்றிருப்பதை இராமன் கண்டான்' என்பது.

ஆனால், நடேசய்யர் உரையில் சீதையைக் காட்டிற்கனுப்பிய பின் 10 ஆயிரம் ஆண்டுகள் ஆண்டார் என்று கருதப்படுகிறது.

காலம் எவ்வளவு ஆனாலும் சரி, பரதன் சொன்னதுபோல், இராமன் திரும்பி வந்து ஒரு மாத காலத்தில்தான் சீதை 5 மாதக் கர்ப்பமுற்றிருந்ததை இராமன் கண்டான் என்பது தான் இராமாயணக் கதைகளின்படி உறுதியாகின்றது.

ஏனெனில், இராமன் சீதையின் கர்ப்பத்தைப் பார்த்தவுடன் மனவேதனை அடைந்தான் என்பதும்—அப்போதே சீதையைக் காட்டுக்கு அனுப்பத் தீர்மானித்து விட்டான் என்பதும் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. எப்படி எனில், சீதை கர்ப்பத்தைக் கண்டவுடன், இராமன் நடுக் கட்டுக்கு வந்துவிட்டான்; வந்தவன் மனச் சங்கடத்துடன் வந்தான் என்பது விளங்கவே இராமனுக்கு அங்குள்ளவர்கள் பல 'விசித்திரமான கதைகளைச் சொல்லி இராமனைச் சிரிக்கும்படி செய்தார்கள்' என்றும்;

விதூஷகர்கள், 'இராமனுக்கு அனேக பரிகாசக் கதைகளைச் சொன்னார்கள்' என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அன்றியும் சீதையைவிட்டுப் பிரிந்து மண்டபத்திற்கு வந்தவுடன் மனவேதனைக் குறியுடன் இருந்த இராமன்—'என்னையும் சீதையையும் பற்றித் தேச மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?' என்று ஏன் கேட்க வேண்டும்? முன்னமேயே காண்கிறோம்—இராமன் ஆட்சியைப் பற்றி மக்கள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள்—என்று பரதன் சொன்னதாக.

அன்றியும் உரையாசிரியர் நடேசய்யரே எழுதுகிறார் :

இராமன் இராஜ்ய விருத்தாந்தத்தை அறியவேண்டும் என்று சொன்ன காரணம் சீதையைக் காட்டுக்கு அனுப்ப ஒரு சாக்குத்தேடவே என்று. அன்றியும் இராமனும் சீதையும் கூடி 10 ஆயிரம் வருஷம் வாழ்ந்தபின் இந்த அபவாதம் சீதைக்கு வந்தது என்றால்—10,000 வருடத்திற்குப் பிந்தி வாழ்ந்த மக்களுக்கு இராவணனிடம் சீதை வாழ்ந்தது எப்படித் தெரியும்? அதுவும் 10 ஆயிரம் வருடத்திற்குப் பிறகு யார் தான் குறை கூறுவார்கள்? இவளுக்கு 10 ஆயிரம் வருடம் வரை ஏன் கர்ப்பம் உண்டாக வில்லை?

இவைகளிலிருந்து விளங்குவது என்னவென்றால்—சீதையை இராமன் காட்டிற்கு அனுப்பியதற்கும் உலக அபவாதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும், மற்றும் சீதை அயோத்திக்கு வரும்போதே கர்ப்பமுற்று இருந்தாள் என்பதும் ஆகும்.

இந்தப்படி இந்தக் கதை நடந்ததல்ல என்று சொல்லுவதானாலும் இராமாயணம் எழுதியவனுடைய நோக்கம் என்ன? அதாவது, சீதையைக் குற்ற மற்றவளாக—கற்புடைய வளாகச் சித்திரிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் சிறிதும் அவருக்கு இல்லை. சீதைக்கு கற்புத் தன்மை கொடுக்கக் கூடாது என்று கருதியே ஒவ்வொரு இடத்திலும் குற்றம் காட்டி இருக்கிறார்.

திருமணம் ஆன உடனே பரதனுடைய அதிருப்தியைப் பெற்றுவிட்டாள்.

'பரதனுக்கு என்னைப் பிடிக்காது; ஆதலால் நான் அவனுக்கு நல்லவளாக நடக்க முடியாது' என்கிறாள்.

இராமனும் சீதையை 'நீ பரதனால் போற்றத்தக்கவள் அல்லள்' என்று சொன்னான்.

புருஷனாகிய இராமனைப் பார்த்து, 'தங்கள் மனைவியைப் பிறருக்குப் பயன்படுத்திப் பிழைக்கும் கூத்தாடிகள்போல் என்னை நீயாகவே பிறருக்கு விட்டுக்கொடுத்துப் பயன் பெறக் கருதுகிறாயே!' என்றாள்.

கணவனை 'நீ ஆண்மையற்ற பேடி' என்றாள்.

கணவனுடைய சந்தேகத்திற்கு ஆளானவளாகவே இருந்து இருக்கிறாள்.

இதை சீதையே ஒப்புக்கொள்கிறாள்.

'இராமா, உன்னிடத்திலேயே அன்பாய் இருந்தும்—எத்தனை தரம் சத்தியம் செய்தாலும் என்னை நம்பாமல் சந்தேகப்படுவது ஏன்?' என்கிறாள். கணவன் சொல்லியும்—மாமி சொல்லியும் கேளாமல் தான் ஆடம்பரமாக, நகை உடை அணிந்துகொண்டு அவர்களுக்கு அதிருப்தியை உண்டாக்குகிறாள்.

சீதையை, அவள் மாமி, 'நீ பதிவிரதையைப்போல் நடந்துகொள்' என்று கூறுகின்றாள்.

இராம இலட்சுமணர்கள் மரஉரி உடுத்திக்கொண்டபோது சீதையானவள் உடுத்திக் கொள்ள மறுக்கிறாள்.

சீதை இலட்சுமணனால், 'கெட்ட நடத்தை உள்ளவள்' என்று சொல்லப்படுகிறாள்.

இராவணன் சீதையை மடிமேல் வைத்து அணைத்துக்கொண்டு போகையில், மேலாடையை எடுத்து—நகைகளைக் கழற்றி எறிந்துவிட்டு முண்டக் கட்டையாய்—அரை நிர்வாணமாகப் போகிறாள்.

இராவணன் மாளிகைக்குப் போனவுடன், 'மோக'மாகிவிட்டாள்.

அங்கு இராவணன் சீதையைக் கலவிக்கு அழைக்கும்போது, 'சீதை கண்களை மூடிக்கொண்டுவிட்டாள்.'

உடனே ஏதோ நடந்து இருக்கிறது.

ஏனெனில், உடனே இராவணன் 'சீதே, உனக்கும் எனக்கும் ஏற்பட்ட இந்தச் சம்பந்தம் தெய்வ கதியால் ஏற்பட்டது; இது முனிவருக்குச் சம்மதமானது' என்று சொல்லுகிறான்.

இதன் மத்தியில் சீதை இராவணனைப் பார்த்து, 'நீ என் உடலை எப்படி ஆனாலும் கட்டிக்கொள்; எனக்கு இந்தத் தேகத்தைக் காக்கவேண்டிய அவசியம் இல்லை. நான் தவறி நடந்து கொண்டேன் என்கிற அபவாதம் மாத்திரம் எனக்கு வரக்கூடாது' என்று சொல்லி இருக்கிறாள்.

இதை உறுதிப்படுத்தும் வகையில், இராமனிடம் சீதை சொன்ன பதிலும் இருக்கிறது. அதாவது, 'இராவணன் உன்னை அனுபவிக்காமல் விட்டு இருப்பானா?' என்றபோது, 'ஆம்! நான் என் செய்வேன்? என் சரீரம் அவன் வசப்பட்டு இருந்தது; நான் மன விருப்போடு குற்றமாக நடந்து கொள்ளவில்லை; தெய்வ சங்கற்பத்தால் நேர்ந்து விட்டது' என்று சொல்லுகிறாள்.

இந்தச் சொல்லும் உண்மை அல்ல. சீதை இராவணனுக்கு மனப் பூர்த்தியாகவே இணங்கி இருக்கவேண்டும் என்பதற்கு இராமாயணத்திலேயே ஆதாரக் குறிப்பு இருக்கிறது.

அதாவது, இராவணன் கையால் தொடும் பெண்களோ, அவன் கலவி செய்யும் பெண்களோ யாராய் இருந்தாலும்—இராவணனிடம் அந்தப் பெண்களுக்கு மனப்பூர்வமான காதல் இல்லாதிருக்குமானால், 'இராவணன் தலை பலநூறு துண்டுகளாகச் சிதறிப் போகக் கடவது' என்பதாக ஒரு சாபம் இருக்கிறது.

இந்தச் சாபமானது இராவணனுக்கு நளகூபன் என்பவனால் கொடுக்கப்பட்டது ஆகும். ஆதலால், இராவணன் எந்தப் பெண்ணையும் அவர்கள் சம்மதம் இல்லாமல் தொடுவதே இல்லை. அனுமானே இதை ஒப்புக்கொண்டு, இராமனிடம் சொல்லுகிறான். அதாவது :—

'இராவணனுடைய அந்தப்புரத்தில் பல அழகான பெண்கள் சயனித்துக்கொண்டு இருப்பதைக் கண்டேன்'.

அவர்கள் அத்தனை பேரும், இராவணன் மீது காதல் கொண்டு இராவணனைத் தேடிவந்தார்களே ஒழிய, தன்மீது காதல் இல்லாத எந்தப் பெண்ணையும் இராவணன் விரும்புவதில்லை. விரும்பித் தொடுவதும் இல்லை' என்று சொல்லுகிறான். கம்பரும் இதைப் பாடி இருக்கிறார். அதாவது,

'கருதிலான் தொடுதல் காணில் சிரம் எண்ணருங்கூறாய் மாய்தி என்னுமோர்' சாபம் உண்டு என்பதாகப் பாடி இருக்கிறார்.

அந்தக் காரணத்தினாலேதான் கம்பர், இராவணனன் சீதையைப் பர்ணசாலையுடன், அதாவது;

'மண்ணோடு பெயர்த்துச் சென்றான்' என்று பாடி இருக்கிறார்.

இவ்வளவு சங்கதிகளைத் தாண்டிக்கொண்டு எப்படி சீதை தப்பிவந்து கற்புடைய வளாக ஆக முடியும்?

இவ்வளவும் நடந்து, கடைசித் தடவை, கடைசி வாய்ப்பாக ஒன்றுசேர நேர்ந்த காலத்தில் சீதை கற்புடையவள் என்று காண்பதற்குச் சீதையைச் சத்தியம் செய்யும்படி கேட்கிறான்; சீதை சத்தியம் செய்யாமல் இறந்துபோகிறாள்.

அதாவது, ஒரு குழியில் விழுந்து விடுகிறாள். மேலேயே சொன்னேன். இப்படியெல்லாம் காரியம் நடந்து இருக்குமா என்பதில் நமக்கு நம்பிக்கை இல்லை—என்பதாக.

எப்படி இருந்தாலும் இந்த வியாசத்தின் கருத்து—வால்மீகிக்கு சீதையைக் கற்புடையவளாக, குற்றமற்றவளாக, ஒரு நல்ல பெண் பிறவியாகக் காட்ட எந்த இடத்திலும்—எந்தச் சந்தர்ப்பத்திலும் இஷ்டப்படாமல், குற்றம் சுமத்தும் நோக்கத்துடனேயே இராமாயணக் கதையில் கையாண்டு இருக்கிறார்.

இப்படிப்பட்ட நூலும், அதில் வரும் இப்படிப்பட்ட பாத்திரங்களும் நமக்கு எப்படி 'தெய்வமாக் கதை' நூல்களாகவும்—படிப்பினை நூல்களாகவும் இருக்க முடியும்?

இதற்கும்—திராவிட மக்களாகிய, தென்னாட்டு மக்களாகிய, தமிழ் மக்களாகிய, நமக்கும் என்ன சம்பந்தம்? நம் இனத்தை—நமது பெண்களை இழிவுபடுத்திக் கொடுமைப் படுத்தி இருப்பதாக அல்லாமல், வேறு நலமான—பயன்படும்படியான காரியம், குணம் என்ன இருக்கிறது?

வால்மீகியின் போக்குப்படி, அவர் எழுதி இருக்கிற எழுத்துப்படி பார்த்தால்—இராமாயணத்தில் இராமன் சம்பந்தமான—அவனுக்கு அனுகூலமாக நடந்து கொண்ட எந்தப் பாத்திரத்தையும் யோக்கியனாக, நாணயஸ்தனாக, மற்றவர்கள் பின்பற்றத்தக்க நடத்தை உள்ளவனாக வால்மீகியே காணமுடியாதபடியே இருந்துவருகிறது.

அது மாத்திரம் அல்லாமல், இராமனுடைய எதிரிகளாகக் கற்பிக்கப்பட்டவர்களின் குணங்கள் பல, போற்றத் தக்கதாக இருந்து வருகின்றன. வாலி மனைவி, இராவணன் மனைவி முதலிய பெண்களுக்கு மிகவும் ஏற்றம் கொடுத்து இருக்கிறார்.

எனவே, இந்த வியாசம் 'வால்மீகியும்—சீதையும்' என்று தொடங்கப்பட்டதாதலால் சீதையோடு முடிக்கப்படுகிறது. மற்றவர்களைப்பற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம்.

['குடி அரசு'—கட்டுரை—13-1-1951]

மாரீசன்தான் மான் உருவம்கொண்டு வந்துள்ளான் என்ற செய்தி தெரிந்தும், அந்த மானைப் பிடிக்க சீதை தன் கணவனைக் கட்டாயப்படுத்தி அனுப்புகிறாள்.

இலட்சுமணன், 'இராமனுக்கு ஆபத்து வராது; ஆகவே, உன்னைத் தனியே விட்டுப் போகமாட்டேன்' என்று தடுத்துக் கூறியும், அவனைக் கண்டபடி திட்டிப்பேசி அந்த இடத்தைவிட்டு அகலச் செய்கிறாள். இதன் மர்மம் தான் தனியே இருக்கவேண்டும்; அங்கு இராவணன் வரவேண்டும் என்ற முடிவை முன்கூட்டியே தீர்மானித்துக்கொண்டு, தன் கணவனையும், கொழுந்தனையும் துரத்திவிட்டுத் தான்மட்டும் தனியே இருக்கிறாள்.

இராவணன் காமப் பித்தனைப்போல் சீதையை வர்ணிக்கிறான்; உடல் உறுப்புகள் அத்தனையையும் ஒன்றையும் விடாது அவைகளுக்கு ஒப்புவமை கூறுகிறான்.

ஆடையினுள் மறைந்திருக்கவேண்டிய அங்கங்களாகிய தொடை, பின்தட்டு, ஸ்தனங்கள் இவைகளுக்கும் அங்க உவமை கூறும் அளவுக்கு அந்த அங்கங்கள் இராவணனுக்குத் தெரிந்திருக்கின்றன.

இத்தனையும் பேசிய இராவணனுடன் புறுமுறுவல் கொண்டு பேசுகிறாள்; அமுது படைக்கிறாள்; 'உள்ளே வாருங்கள், உட்காருங்கள், சாப்பிடுங்கள்' என்று உபசாரம் செய்கிறாள்.

அவள் அவனுக்கு உபசரிக்கும்பொருட்டு, 'வாயிற்படியின் வழியே தன் கணவனும் கொழுந்தனும் வருகிறார்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே உபசரிக்கிறாள்' என்று கூறப்படுகிறது.

பிறகு, இராவணன் 'வா என்னுடன்' என்கிறான். அவள் சம்மதித்தே அவனுடன் சென்றாள் என்பதற்கு ஆதாரங்கள் பல உண்டு.

அவளுக்கும் அவனுக்கும் நடந்த மேற்கண்ட சம்பாஷணைகளும், காட்சிகளும் மட்டும் அல்ல;

'தனக்கு எவ்வளவோ மரியாதை செய்து உபசரித்துப் பிரியமாய்ப் பேசின சீதையிடத்தில் ஆசை மேலிட்டு, புதன் ரோகிணியைப் பிடிப்பதுபோல் இடது கையால் சீதையின் தலைமயிரையும், வலது கையால் தொடைகளையும் சேர்த்துப் பிடித்தெடுத்தான்'. (சி. ஆர். சீனிவாசய்யங்கார் மொழிபெயர்ப்பு, ஆரண்ய காண்டம், சருக்கம் 49. பக்கம் 151) மேலும், 'தொடைகளைத் தூக்கிப் பிடித்து எடுத்து இரதத்தில் வைத்தான்' என்று 157-ம் பக்கத்திலும்; மற்றும், 'சீதையை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் ஜடாயுவை அறைந்தான்' என்று 165-ம் பக்கத்திலும் காணப்படுகிறது.

இவ்விதம், இராவணன் சீதையைத் தொட்டு எடுத்தான் என்பதற்கு ஆதாரம் உள்ளது. தொட்டு எடுத்திருப்பானாகில் சீதை இராவணனுக்கு உடன்பட்டவள் என்றே பொருள்படும்.

காரணம், இராவணன் தன்மேல் இஷ்டப்படாத பெண்ணைத் தொடுவானாகில், அவன் தலை சுக்கலாகிவிடும் என்று ஒரு சாபமும், உடம்பு தீப்பற்றி எரிந்துவிடும் என்று மற்றொரு சாபமும் இருக்கின்றன. அந்தச் சாபங்கள் ஒன்றாகிலும் இராவணனைப் பாதிக்காமல் இருக்குமானால், அவள் இஷ்டப்பட்டாள் என்றுதான் பொருள்படும். அதன்படியே இராவணனுக்குத் தலை வெடிக்கவும் இல்லை; உடல் தீப்பற்றி எரியவும் இல்லை. ஆகவே, சீதை இராவணனுடன் செல்வதற்கு உடன்பட்டாள் என்றே பொருள்.

மேலும், சீதை இராவணனுடன் செல்லுகையில், அவனுடைய மடியின்மேல் அவள் உட்கார்ந்திருக்கையில் அவளுடைய முகம், 'காம்பறுந்த தாமரை மலரைப்போல் இருந்தது. அவளுடைய ஆடைகள் காற்றால் அடிக்கப்பட்டு இராவணன்மேல் புரண்டன,' (பக்கம் 167) என்று கூறப்படுகிறது.

இலங்கைக்குக் கொண்டு சென்றபின் தன் அந்தப்புரத்தில் வைத்தான் (பக்கம் 173) என்று கூறப்படுகிறது.

'விசித்திரமாக அமைக்கப்பட்ட தங்கப் படிக்கட்டுகளில் இராவணன் சீதையுடன் ஏறும்போது துந்துபி அடிப்பதுபோல் சப்தம் உண்டாயிற்று. (பக்கம் 155, சருக்கம் 55)

குறிப்பு: எனவே, இருவரும் மாடியில், அந்தப்புரத்திற்குச் சென்றடைந்து விட்டனர். அதுவும் இருவரும் மாடியில் ஏறும்பொழுது துந்துபி அடிப்பதைப்போல் இருந்ததாம். இருவர் நடையும்—அதாவது, இராவணன் எவ்வளவு சந்தோஷமாகவும், ஒய்யாரமாகவும், ஆனந்தமாகவும் கம்பீரநடையுடன் காலடி எடுத்து வைத்தானோ அதே போல், சீதையும் ஒய்யார நடையுடன் இருவரும் ஒருவர் தோளின்மேல் ஒருவர் கையைப் பிடித்து அணைத்துக்கொண்டு ஏறி இருக்கவேண்டும். அந்தக் காலடியின் சப்தம் துந்துபி அடிப்பதைப்போல் இருந்திருக்கிறது. அன்றியும் இனியும் மேலே நடப்பதைக் கவனிப்போம்.

இராவணனைப் பார்த்துச் சீதை, 'பிறகு வருவதைப் பார்த்துக்கொள்வோம்; இப்பொழுது கிடைக்கும் சுகமே பெரிதென்று நினைக்கிறாயோ?' (பக்கம் 171) என்று கேட்கிறாள். இதனால் இராவணன் சீதையிடம் சுகம் அனுபவித்துவிட்டான்; ஆராய்ந்து பார்த்தால் அவளிடம் சுகம் அனுபவிக்கும் நேரத்தில் இவ் வார்த்தைகளைச் சீதை இராவணனிடம் கூறுவது நன்கு விளங்கும்.

அதற்கு இராவணன் சமாதானம் கூறுகையில், 'சீதே, அக்னி சாட்சியாக உன் கையைப்பிடித்த 'கணவனைக் கைவிடுவது அதர்மமென்றெண்ணி வெட்கப்படுகிறாயோ? நம் இருவருக்கும் நேர்ந்த சம்பந்தம் தெய்வ கதியால் ஏற்பட்டது. இது ரிஷிகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது' (பக்கம் 177) என்று சமாதானம் கூறுகிறான். (சீதை வருத்தப்படுவ தாகவோ, ஆத்திரப்படுவதாகவோ கூறவில்லை; வெட்கப்படுகிறாளாம். விருப்பம் இல்லாவிட்டால், வெட்கப்படுவதுதான்—'விருப்பமில்லை' என்பதைக் காட்டும் அறிகுறி போலும்! ஆத்திரமோ, கோபமோ கொண்டிருப்பாளாகில் விருப்பம் இல்லை என்று கூறலாம்.)

எனவே, சீதையிடம் இராவணன் செய்த காமலீலைகளுக்கும் அவள் உடன் பட்டிருக்கிறாள். ஆனால், பெண்களின் இயற்கைக் குணப்படி வெட்கப்பட்டிருக்கிறாள்.

மேலும், ஆரண்யகாண்டம் 55-வது சருக்கம் 678-வது பக்கத்தில், தாத்தா தேசிகாச்சாரியார் மொழிபெயர்ப்பில் கூறப்படுவதாவது:—'இனி நீ நாணமுறற்க. இதனால் தர்மலோபமொன்றுமிலது. உனக்கும் எனக்கும் இப்பொழுது தெய்வத்தினாலே சேர்க்கை நேர்ந்தமையின் இதுவும் தர்மமேயாகும். இது ரிஷிகளாலும் உகக்கப்பட்டது' என்று கூறப்படுகிறது.

'இனி நீ நாணமுறற்க'—இதன்படி என்னவென்றால், 'இனிமேல் எதற்காக வெட்கப் படவேண்டும்? உனக்கும் எனக்கும் தெய்வ கதியால் சேர்க்கை நேர்ந்துவிட்டது' என்கிறான். அதாவது, காரியம் முடிந்துவிட்டது; இனிமேல் வெட்கப்பட்டு என்ன பலன் என்ற கருத்தில் இராவணன் கூறுகிறான். எனவே, இருவருக்கும் சேர்க்கை நேர்ந்தது என்பதை இதன்படி உறுதிப்படுத்தலாம்.

மேலும், இராவணன் கூறியதாக அதே மொழிபெயர்ப்பாளர் இந்தச் சம்பவத்திற்குக் குறிப்பு தருகையில் 'இராவணன் பிராட்டியாரை முன்போலவே தாசனாகச் செய்து கொள்ளும்படி விண்ணப்பம் செய்தான்' என்கிறார். அதாவது 'முன்போலவே' என்பதைக் கவனிக்கவேண்டும். அதாவது, இருவருக்கும் சம்பந்தம் ஏற்பட்ட முன் சம்பவத்தைப் போலவே இனிமேலும் இருக்கவேண்டும் என்ற கருத்தில் வேண்டினான் என்கிறார். ஆகவே, மொழிபெயர்ப்பாளரின் ஆராய்ச்சியின்படியும் சீதைக்கும் இராவணனுக்கும் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்பது உறுதி.

['விடுதலை'—27-5-1956]

5. இராமன்

இராமன் தமிழன் அல்லன்; இராமன் தமிழ் நாட்டவனுமல்லன்; அவன் வடநாட்டான்; இராமன் கொன்ற மன்னன் இராவணனோ—தென்னாட்டவன்.

இராமனிடம் தமிழர் பண்பு (குறள் பண்பு) என்பது சிறிதும் இருந்ததாக இல்லை; இராமன் மனைவியும் அதுபோலவே வடநாட்டவள்.

அவளிடம் தமிழ்ப்பெண் பண்பு இல்லவே இல்லை.

அதில் தமிழ்நாட்டு ஆண்களைக் குரங்கு, அரக்கன் என்று குறிக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ் நாட்டுப் பெண்களை அரக்கி என்று குறிக்கப்பட்டு இருக்கிறது.

இராமாயணப் போராட்டத்தில் ஒரு பார்ப்பனர்கூட சிக்க (கிடைக்க)வே இல்லை. போரில் ஒரு வடநாட்டானோ, ஆரியனோ, பார்ப்பானோ (தேவரோ) சிக்கவே இல்லை.

கொல்லப்பட்டவர்கள், செத்தவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டவர்களே ஆவார்கள்.

இராவணன், இராமன் மனைவியைக் கொண்டுபோனதற்காக இலங்கைக்கு ஏன் நெருப்பு வைக்கவேண்டும்? இராமாயணக் கதை தமிழனை இழிவுபடுத்துவது தவிர, அதில் வேறு கருத்து இல்லை. தமிழ்நாட்டில் இராமாயணத்தையோ, இராமனையோ வைத்திருப்ப தானது மனித சுயமரியாதைக்கும், இன சுயமரியாதைக்கும், தமிழ் நாட்டுச் சுயமரியா தைக்கும் மிகமிகக் கேடும், இழிவுமானதாகும்.

இராமாயண இராமன், சீதை ஆகியவர்களைப் பொறுத்தவரைக்கும் கடுகளவாவது கடவுள் தன்மை என்பது காணப்படவில்லை. நாடு சுதந்திரம் பெற்றவுடன் நாட்டிலுள்ள இடங்களுக்கும், பல ஸ்தாபனங்களுக்கும் வெள்ளையர் பெயர்களை மாற்றி இந் நாட்டவர் பெயர்களை வைத்தது போலும்;

வெள்ளையர் உருவங்களைப் பெயர்த்து அப்புறப்படுத்தியிருப்பதுபோலும்;

தமிழன் சுயமரியாதை உணர்ச்சி பெற்றபிறகு தமிழர்களை இழிவுபடுத்திக் கீழ்சாதி மக்களாக்கிய ஆரியச் சின்னங்களையும், 'ஆரியக்' கடவுள்கள் என்பதான உருவங்களையும் அழித்து ஒழிக்க வேண்டியது சுத்த இரத்த ஓட்டமுள்ள தமிழன் கடமையாகும்.

['விடுதலை'-அறிக்கை—29-7-1956]

தலைவரவர்களே! தோழர்களே!

இராமன் செய்த பெருத்த அநீதி—இராமாயணத்தில் சூர்ப்பனகையை இலக்குவனை ஏவிவிட்டு—இராமன் மூக்கு, முலை முதலிய அங்கங்களை அறுக்கச் சொல்கிறானே, இவனை விளக்கு மாற்றால் அடித்தால் என்ன? அவளே இவனை வலிய வந்து கூப்பிட்டால்தான் என்ன? வர முடியாது என்று சொல்வதுதானே? அவளை மானபங்கம் செய்யும் அளவுக்கு இவர்களுக்குச் சக்தியிருக்கும்பொழுது அவளை ஏன் ஒரு மரத்தில் பிடித்துக் கட்டியிருக்கக் கூடாது? அவள் திராவிடர்களின் அக்காள், தங்கை அல்லவா? உங்கள் வீட்டுப் பெண்களை இப்படிச் செய்து பார்த்தால்தானே தெரியும்!

[திருவல்லிக்கேணியில், 5-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-8-1956]

இராமாயணம் தவறாக மக்களிடம் விளக்கப்பட்டு வந்திருக்கிறது. அதில் வரும் முக்கிய பாத்திரமான இராமன் ஓர் அயோக்கியன், துரோகி, வஞ்சகன். அயோத்திப் 'பேரரசு' (இராஜ்யம்) இராமனுக்கோ, அவன் தந்தைக்கோ உரியதன்று; தசரதனின் மனைவிகளில் ஒருத்தியான கைகேயிக்கே அது உரியது. அவளுடைய தந்தை சில காரணங்களைக் காட்டி பெண் தர மறுத்தான். 'அரசே! உனக்கு மனைவியர் பலர். அவர்களுள் இவளும் ஒருத்திதானே? எப்படி இவள் வயிற்றுப் பிள்ளை ஆட்சிக்கு வரவியலும்? முதல் மனைவியின் தலைமகன்தானே அரசனாவன்; எனவே, பெண் தர மாட்டேன்' என்றான் கைகேயியின் தந்தை. 'இன்றைக்கே தந்துவிடுகிறேன்; என் அரசுரிமை எல்லாம் அவளுக்குத்தான். அவள் பெற்ற பிள்ளைக்கே அரசு' என்று வாக்களித்தான் தசரதன். எனவே, அயோத்திப் பேரரசு தசரதனுக்குச் சொந்தம் இல்லை; அவன் மகன் இராமனுக்கும் இல்லை; பரதனுடையதேயாகும். ஆனால், வஞ்சகமாய் இராமனுக்கு முடிசூட்ட தசரதன் தீர்மானித்திருந்தான்; இன்று நினைத்து நாளைக்குப் பட்டம் சூட்டப் போகிறான். இச்சூழ்ச்சி இராமனுக்குத் தெரியும்; அவன் குரு வசிஷ்ட னுக்குத் தெரியும். எல்லா வீதிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன, இராமனுடைய பட்டாபி

ஷேகத்தின் பொருட்டு. ஆனால், கைகேயி இருக்கும் தெருமட்டும் அலங்கரிக்கப்பெறவில்லை; பொலிவிழந்திருந்தது. இராமனுடைய முடிசூட்டுவிழாபற்றி கைகேயி அறியாள்; அறிவிக்கப்பெறவும் இல்லை. இதற்கு முன்னமேயே பரதனைத் தனது பாட்டன் வீட்டிற்கு வஞ்சகமாக அனுப்பிவிட்டிருந்தான் தசரதன். ஆனால் திரை கிழிந்தது; சாயம் வெளுத்தது. கூனி தசரதன் சூழ்ச்சியைக் கைகேயிக்கு விளக்கிவிட்டாள். கைகேயி மனம் குமுறினாள்; அழுதாள்; ஆத்திரப்பட்டாள். தனக்குக் கொடுத்த உறுதியைக் காப்பாற்றும்படி தசரதனை வேண்டினாள். கடைசியாக இராமன் 'காடுறை வாழ்க்கை' எய்தினான். பாட்டன் வீட்டிலிருந்து தாய் வீட்டிற்கு வந்தான் பரதன்; இராமன் தந்தையின் ஆணையை மேற்கொண்டு காடு சென்றதாக அறிந்தான். பரதன் மன இரக்கம் உடையவன்; தசரதன் இராமன் ஆகியோரின் பித்தலாட்டமும் புரட்டும் அவனுக்குத் தெரியாது. எனவே அண்ணனை அழைத்துவரக் காட்டிற்குச் சென்றான்; இராமனைக் கண்டான்; நாட்டுக்கு மீண்டும் வர வேண்டினான். 'நாட்டை நீ வந்து ஆள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இராமன் 'முன்னாளில் உன் அன்னையைத் தந்தை மணந்துகொள்ளும்போது உன் அன்னைக்கு ஒரு வாக்களித்திருந்தார். உனக்கு அரசு உரிமை உடையதாகும்படி வாக்குத் தந்துள்ளார்' என்று முன்னாளில் கைகேயிக்குத் தந்த தசரதனின் வாக்குறுதியைக் கூறினான். 'அப்பா எனக்குத் தந்தார்; நான் உனக்குக் கொடுத்து விடுகிறேன்' என்றான் பரதன்.

[சேலத்தில், 10-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-8-1956]

6. இராமாயணம் புனைந்ததன் இலட்சியம்

இந்நாளில் வெளியிடப்படும் வால்மீகி இராமாயணங்களின் புதிய பதிப்புக்களில் மாறுதல்கள் செய்துகொண்டு வருகிறார்கள். உண்மையை மறைத்து விடுகிறார்கள். இராமாயணத்தின் உட்கருத்து என்ன? ஆரியர்கள் தமக்கு உரிமையில்லாத நாட்டில் தாம் வாழ்வதற்கு வழிதேட முயன்றதைப்போலவே இராமாயணம் அமைந்திருக்கிறது; பார்ப்பனர்—ஆரியர்கள் மானம்-அவமானத்துக்குக் கவலைப்படுவதாகவோ, நேர்மை, ஒழுக்கம், நீதியுடைய மக்களாகவோ இராமாயணத்தில் சுட்டிக்காட்டப்பெறவில்லை. மானத்தை விற்றேனும் உயிரைக் காப்பாற்ற வேண்டும்; வாழ்க்கை நடத்தவேண்டும் என்றே பார்ப்பனரைச் சித்திரித்து எழுதிவைத்துள்ளனர். இராவணனைக் கொல்ல வேண்டுமானால்—அவனைச் சீதைமூலம் சுவாதீனப்படுத்த வேண்டும்; சீதையைக் கெடுத்தவன் என்ற காரணத்தைக் காட்டி அவனைத் தொலைக்க வழி வகுக்கலாம் என்று முன்கூட்டியே தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இராமன் ஒரு பேடியே. நேர்மை, ஒழுக்கம் இவற்றால் காரியம் சாதிக்க வழி கிடையாது என்பது அவர்கள் கருத்து. பேடித்தனமாக, சூதாக-மறைந்து நின்றே இராமன் தாடகையைக் கொன்றிருக்கிறான். வாலியையும் மறைந்திருந்தே-மரத்தின் மறைவில் ஒளிந்திருந்தே கொன்றிருக்கிறான். இராவணனையும் அப்படித்தான்; இராவணனுடைய அந்தரங்க விஷயங்களையும் (மறை பொருளையும்) இன்னும் பிற செய்திகளையும் விபீஷணன் மூலம் அறிந்துகொண்ட பிறகே, இராவணன் தம்பியான விபீஷணனுக்கு இலஞ்சத்தைக் (நாட்டாட்சி) கொடுத்தே—இராவணனைக் கொன்றிருக்கிறான். இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போர் நேருக்கு நேர் நின்று சண்டையிட்ட போர் என்பதற்கில்லை. பார்ப்பனர் ஏமாற்று வாழ்வு, தங்கள் நன்மைக்காக ஒழுக்கக் கேடான காரியங்களைச் செய்துகொள்ளலாம்; சுயநல வாழ்வுக்கு வேண்டிய புரட்டுகளை—பித்தலாட்டங்களை ஒரு மார்க்கமாக அமைத்துக்கொள்ளலாம் என்பதே அவர்களது குறிக்கோள். அதற்காகவே கடவுள்களைப் படைத்து, அவைகளுக்குப் பல அவதாரங்கள் உண்டு என்று புளுகித் தாம் எழுதியவற்றைப் புண்ணிய சரித்திரம் எனச் சொல்லித் தமிழர்களை ஏமாற்றி வாழ்ந்துவருகின்றனர். வேத

சாஸ்திர புராண இதிகாசம் அனைத்தும் இயற்கைக்கு மாறானவை. அவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்ப்பதும்—பகுத்தறிவைக்கொண்டு ஆராய்வதும் மதத்துக்கு விரோதம், வகுப்புத் துவேஷம், நாத்திகம் என்று நம்மேல் பழி சுமத்துகிறார்கள்.

34 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னோம்—திருப்பூரில் 1922-ல் காங்கிரஸ் மாநாடு நடந்தது; வாசுதேவ அய்யர் தலைமை தாங்கினார். நான் அப்போது தான் தமிழ்நாடு காங்கிரசின் தலைவனாக ஆக்கப்பட்டேன். அதுவரை தமிழ்நாடு காங்கிரசின் காரியதரிசியாக இருந்தேன். அம் மாநாட்டில் நான் ஒரு தீர்மானம் கொண்டுசென்றேன். 'இந்து மதத்திலே சாதி வேற்றுமையும், தீண்டாமையும் இடம் பெறுகின்றன; இவற்றை நீக்க வழி செய்யவேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டுசென்றேன். அத் தீர்மானத்தைப் பல வகையில் பார்ப்பனர்கள் தடைசெய்ய முயற்சி செய்தார்கள். இந்து மதத்தில் சாதி இடம் பெறுவதாக ஒப்புக் கொள்ளவில்லை. இராமாயணத்தில் பல இடங்களில் சாதி குறிப்பிடப்படுகிறது. சூத்திரன் தவம் செய்ததற்காகக் கொல்லப்படுகிறான். பார்ப்பான் என்று 1000 இடங்களுக்குமேல் இராமாயணத்தில் வருகிறது.

[அங்கேரிபாளையத்தில், 11-8-1956-ல் சொற்பொழிவு 'விடுதலை'—17-8-1956]

இராமாயணத்தில் அவரவர் சாதிகளையும், பிரிவுகளையும்தானே நிலைநாட்டுகிறது. ஒரு இடத்தில் அனுமார் இராமன் காலில் விழுகிறான். இராமன் அனுமாரைத் தூக்கிப் பிடித்துகொண்டு மன்னிப்புக் கேட்கிறான். 'நீயோ ஒரு பிராமணன், நான் க்ஷத்திரியன். என் காலில் வந்து விழலாமா? இந்தப் பாவத்தை நான் எங்கே போய்த் தீர்ப்பேன்?' என்று கூறுகிறான். இராமன் அயோத்தியிலிருந்து காட்டுக்குப் புறப்படும் சமயம், 'என் பணத்தையும், சொத்துக்களையும், என்னிடத்தில் இப்போதிருக்கும் மாடுகளையும் கொண்டுவாருங்கள். முழுவதையும் பிராமணருக்குக் கொடுத்து விடுகிறேன்' என்பதாகச் சொல்லுகிறான். சீதை, 'என் நகைகள் முழுவதையும் கொண்டுவாருங்கள்; பிராமணனுக்குக் கொடுத்துவிட்டுப் போனால் புண்ணியம்' என்பதாகச் சொல்கிறாள். சூர்ப்பனகை, 'என்னைத் திருமணம் செய்துகொள்' என்று கேட்கும்போது, 'நீ ஒரு சாதி; நான் ஒரு சாதி; எப்படித் திருமணம் செய்து கொள்வது?' என்கிறான். ஒரு இடத்தில் தாடகை மகனை இலட்சுமணன் கொன்றுவிட்டு, 'இந்தப் பாவத்திற்கு என்ன செய்வேன்?' என்று வருத்தப்பட்டுக் கொள்கிறான். அதற்கு இராமன், 'சூத்திரனைத்தானே கொன்றாய், அதனால் பாவமில்லை. கவலையை விடு' என்று கூறுகிறான். சம்புகன் ஒரு சூத்திரன். அவன் தவம் செய்ய உரிமையில்லை என்று கூறி அவனைக் கண்டங் கண்டமாக வெட்டி விடுகிறான். இப்படி எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வருணாசிரம தர்மம் தாண்டவமாடுகிறது. இப்படி இருக்கும் இராமாயணத்தைக் கொளுத்தவேண்டும் என்பதில் என்ன தப்பு? ஓட்டுக் கேட்க இதைக் காட்டி உங்களை ஏமாற்றுகிறோமா? இதைச் செய்து யாராவது வயிறு வளர்க்கிறோமா?

[மேலகற்கண்டார் கோட்டையில் சொற்பொழிவு—'விடுதலை' 13-9-1956]

7. இன்றும் இராமாயண சம்பிரதாயமா?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திருவள்ளுவருடைய கொள்கைகளையும், அவருடைய பாட்டின் அருமையையும், அவற்றால் திராவிட நாடு பெற்றிருக்க வேண்டிய பலனையும் கம்பனது இராமாயணம் அடியோடு கெடுத்துவிட்டது. பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியான கம்பனால் இந்நாட்டில் நிலவியிருந்த திராவிட கலாச்சாரமே பாழாக்கப்பட்டுப் போய்விட்டது. ஆரியப் பண்புகளையும், ஆரிய நடைமுறைகளையும் போற்றிப் புகழ்ந்து அவற்றைத் திராவிட மக்கள் ஏற்கும்படி அழகுறத் தமிழில் பாடி மக்களை ஏய்த்து விட்டான் கம்பன். இராமாயணம்,

பாரதம், கீதை இன்னோரன்ன ஆரிய நூல்கள் யாவும் திராவிடப் பண்புகளை மறுக்க இயற்றப்பட்ட நூல்கள்தாம் என்பதை ஆராய்ச்சி அறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இவ்வாரிய நூல்களில் வலியுறுத்தப்பட்டுள்ள ஆரியப் பண்புகளுக்குத் திராவிடநாடு ஆட்பட்டிருந்த சமயத்தில்—திராவிடர்களை அதனின்று விடுவிக்கத் திராவிடப் பெரியார் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட நூல்தான் திருக்குறள் ஆகும். ஆரியப் பண்புகள் எப்படித் திருக்குறளால் மறுக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கமாக எடுத்துக்காட்ட, முதலில் இராமாயணத்தைப் பற்றியும் இதர ஆரிய நூல்களைப்பற்றியும் பேசச் சிறிது நேரம் எடுத்துக்கொள்கிறேன்.

மக்கள் யாவரும் ஒரே சாதி என்கிறது குறள்; 4 சாதியைச் சேர்ந்தவர்கள் என்று பாகுபடுத்திச் சொல்கின்றன இராமாயணமும், கீதையும். அறிவுக்கு மாறான—இயற்கைக்கு மாறான பல காட்டுமிராண்டித்தனமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்குகின்றன ஆரிய நூல்கள். அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்திற்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள். ஆரிய நூல்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நடந்திருக்கக் கூடாதனவாகவும், இன்று நடத்திக்காட்ட முடியாதனவாகவும், சாத்தியமற்றதாகவும் இருக்கின்றன. திருக்குறளில் காணப்படும் நீதிகள், அறிவுரைகள் நடக்கக்கூடியதும், நடந்தால் உற்ற பலன் தரக்கூடியதும் ஏற்கக் கூடியதாகவும் இன்று நம்மால் நடத்திக் காட்டக்கூடியவையாகவும் இருக்கின்றன.

நாம், இராமாயணத்தைக் கொளுத்தவேண்டுமென்று திட்டம் போட்டால், அத்திட்டத்தை இன்றும் நம்மவரைக் கொண்டுதான் எதிர்க்கிறது பார்ப்பனீயம். நம்மவர்கள் ஆரியத்தின் கையாட்களாகத்தான் நமக்குத் தொல்லைகொடுக்க முன்வருவார்களே யொழிய—தாமாக இராமாயணம் கொளுத்தப்படுவது பற்றிக் கவலைப்படமாட்டார்கள். இராமாயணப் பிரச்சாரமும், கம்பர் விழாவும் முதலில் துவக்கப்பட்டதே, நம்மிடமிருந்து சுயநலத்துக்காக ஆரியருக்கு அடிமையான திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையால்தான். அவரால் இராமாயணப் பிரச்சாரம் செய்யப் பார்ப்பனர்கள் முன்வந்தார்கள். பிறகு இப்போது மந்திரிகளே முன்வந்து விட்டார்கள். இதில் ஓமாந்தூர் ரெட்டியார் முதன்மையானவர். அவர் இராமாயணத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யட்டும், மற்றொரு ஆழ்வாராக ஆக இஷ்டமிருந்தால். ஆனால், மந்திரியாக இருந்துகொண்டு அவ்வேலையைச் செய்வது தவறு என்றுதான் நான் சொல்கிறேன். கம்பர் விழாவிற்குப் பணம் கொடுத்து உதவியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும்; இந்த விபீஷணர்கள் அவர்களின் தயவுக்காக அந்த விழாவில் கலந்து கொண்டு ஏதேதோ உளறிவிட்டார்கள்; அவ்வளவுதான். கலியாணங்களில் காலட்சேபங்களின் மூலமும், நாடக மேடைகளில் நாடகங்களின் வாயிலாகவும், சினிமாக்களில் படக்காட்சிகளின் மூலமும், பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களின் மூலமும் இந்த இராமாயண, பாரதக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுவிட்டதன் பயனாய்—இன்னும் வலியுறுத்தப்பட்டு வருவதன்பயனாய் நாடாளும் அரசன் முதற்கொண்டு, காட்டிலேயே இருந்து மாடுமேய்த்துப் பிழைக்கும் மாட்டுக்காரப் பையன் வரையும் எல்லோருக்கும் இராமனையும் சீதையையும் பற்றித் தெரிந்திருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படியாக உயர் தத்துவங்களும் அறிஞர்க்கான அறிவுரைகளும் அடங்கிய நூல் பொதுமக்களுக்குள் பரவவிடாமல் மறைக்கப்பட்டு—இராமாயணமும், பாரதமும் எல்லோருக்கும் தெரியும்படி விளம்பரப்படுத்தப்பட்டுவிட்டன. திராவிடர்களை இழி மக்களென்று வலியுறுத்தும் நூல்கள் போற்றத்தக்க தன்மையைப் பெற்றுவிட்டன. திராவிடர்களைப்பற்றிப் புகழ்ந்து கூறும் நூல்கள் மறைந்திருக்கும்படி செய்யப்பட்டுவிட்டன. என்னே ஆரிய சூழ்ச்சி, என்னே நம்மவர் விபீஷணத் தன்மை!

இராமாயணத்தையும், பாரதத்தையும் எடுத்துக்கொண்டால் இவற்றுள் பாரதந்தான் முந்திய நூலாக இருக்கவேண்டும் என்று நான் கருதுகின்றேன். சிலர் இராமாயணந்தான் முந்தியது என்று கருதுகிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். பாரதத்திற்கும் முந்திய நூல்தான் கந்த புராணம். கந்த புராணத்தையொட்டிச் சற்றுச் சிறியதாகப் படைக்கப்பட்டதுதான் பாரதம் என்று நான் நினைக்கிறேன். ஆரியத்தின் முதல் மத நூல், கந்த புராணந்தான். அது ஆரியத்திற்கு ஏற்பட்ட முதல் நூல். கந்த புராணத்தில் காணப் படும் இழிதன்மைகளை அதிகப்படுத்தியும், மனித வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி களைச் சற்று அதிகமாகச் சேர்த்தும் எழுதப்பட்டதுதான் பாரதம். கந்த புராணம் சைவ முறையின்பாற்பட்டது; பாரதம் வைணவ முறையின்பாற்பட்டது. கந்த புராணத்திலும், பாரதத்தில் உள்ளதைக் காட்டிலும், அதிகமாக இயற்கைக்கு மாறான பிறவிகள் காணப் படுகின்றன. அநாகரிகமும் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இவையிரண்டிற்கும் பிறகு சிலகாலம் கழித்து எழுதப்பட்ட நூல்தான் இராமாயணம். எனவேதான், மேற்கண்ட இரண்டு நூல்களில் காணப்படும் அநாகரிகமும், அமானுஷியமும் இயற்கைக்கு மாறான பிறவிகளும் சற்றுக் குறைவாக இராமாயணத்தில் காணப்படுகின்றது. அடிப்படையில்—கதைப் போக்கில் கந்த புராணமும், இராமாயணமும் ஒன்றாகத்தான் காணப்படுகின்றன. கந்தபுராணத்தில் கந்தனும், இராமாணயத்தில் இராமனும் ஆரியத் தலைவர்களாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். இரண்டும், தேவர்கள் அசுரர்கள் என்கிற இருகட்சிகளை அடிப் படையாக வைத்துத்தான் எழுதப்பட்டுள்ளன. ஆனால், கந்த புராணத்தில் காட்டு மிராண்டித்தனம் மிகமிக அதிகமாகக் காணப்படுகின்றது. பெரும்பெரும் புளுகுகளும் அதில்தான் அதிகம் காணப்படுகின்றன. அதில்தான் வைக்கோலிலிருந்து பட்டாளங்கள் தோன்றியதாகவும், நெற்றியிலிருந்து மனித உருவம் பெற்ற குழந்தைகள் தோன்றிய தாகவும் பகிரண்டப் புளுகுகள் எழுதப்பட்டிருக்கின்றன.

கடவுள்பேரால் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று தம் இஷ்டம்போல் எதை எதையோ புளுகிவைத்து விட்டார்கள். பாரதமோ இன்னும் மோசம். ஒருத்திக்கு 5 புருடர்கள் இருந்ததாக எழுதிவிட்டு அவளையே பதிவிரதையாகவும் கற்பித்துவிட்டார்கள். அந்தப் புருஷர்களும்—அந்தப் பஞ்சபாண்டவர்களும் யார் யாருக்கோ, எந்த எந்தவித மாகவோ பிறந்ததாகத்தான் கதை எழுதப்பட்டிருக்கிறது. அக் கதையில் காணப்படும் குழந்தைகளில் பெரும்பாலானவற்றிற்குத் தகப்பன்மாரைக் கண்டறிவது கஷ்டமாகவேயிருக் கிறது. அக் காலத்தில் ஆரிய நாகரிகம் அப்படித்தான் இருந்ததுபோலும்!

கந்தபுராணமும் இராமாயணமும் எப்படி ஒரே அடிப்படைக் கதையை வைத்துக் கொண்டு எழுதியவை என்று விளக்கிக் காட்டுகிறேன் பாருங்கள். கந்த புராணத்தில் சுப்பிரமணியன் கடவுளாகவும், இராமாயணத்தில் இராமன் கடவுளின் அம்சமாகவும் குறிக் கப்பட்டிருக்கிறது. இவர்கள் பெண்டாட்டிமார் இருவருமே காட்டில் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர்கள். பெற்றோர்கள் யார் என்று தெரிவிக்கப்படாதவர்கள். அனுபவத் திற்கு ஒட்டிப் பார்த்தால் யாரோ திருட்டுத்தனமாகப் பெற்றுப் போட்டுவிட்டுப் போன குழந்தைகள் என்றே கொள்ளத்தக்கவைகள். இராமனும், கந்தனும் இருவருமே தேவர் களின் முறையீட்டால்—அவர்களை, அசுரர்-இராட்சதர்களிடமிருந்து காப்பாற்றுவதற்குத் தோற்றுவிக்கப்பட்டவர்கள். இருவருக்கும் விரோதிகள் சூரனும், இராவணனும் ஆகிய அசுரர்கள்தாம். (அசுரர் என்றால் மதுவருந்தாதவர்கள்; இராவணன் என்றால் கறுத்தவன்) இருவருடைய தங்கைமார் இருவருமே மேலே கூறப்பட்டவர்களின் தம்பிமார்களால் மூக்கும், முலையும் அறுபடுகிறார்கள். இராமனுக்கு அனுமார் கிடைத்ததுபோல்—கந்தனுக்கும் ஒரு வீரபாகு என்கிறவன் கிடைக்கிறான். இலங்கை எரிக்கப்பட்டதுபோல்—சூரனுடைய நகரமும் எரிக்கப்பட்டிருக்கிறது. சூரன், தேவேந்திரன் மனைவியைச் சிறை பிடிக்க ஆசைப்பட்டு, அவன் மகளைச் சிறையில் வைத்தான். இராவணன், இராமன் மனைவியைச் சிறைபிடித்தான். இன்னும் பல நடப்புக்கள் ஒன்றுபோலவே—பேர்கள்தான்

மாறியிருக்கின்றனவே யொழிய—கதைப் போக்கில் எவ்வித முக்கிய மாறுதலும் காணப் படாமல் அமைந்துள்ளன.

கந்தபுராணத்தில் கந்தனைத் தெய்வமாகவே காட்டப்பட்டிருக்கிறது. இராமாயணத்தில் கொஞ்சம் அது குறைவாக்கப்பட்டு—அதாவது இராமன் கடவுள் அவதாரமாக மட்டுமே காட்டப்படுகிறான்; சில இழிதன்மைகளையும் சுமத்தப்படுகிறான். ஆனால், திருவள்ளுவர் குறளோ இவற்றை—ஆரியத்தை—ஆரிய தர்மத்தை, அப்படியே மறுக்க எழுதப்பட்ட நூலாகக் காணப்படுகிறது. கடவுள் வாழ்த்தில்கூட வள்ளுவர் ஒழுக்கத்தையும், அறிவையும், பற்றற்ற தன்மையையும்தான் கடவுளாகக் காட்டியுள்ளார். கடவுளை அறிஞன் என்கிறார்; ஆசை அறுந்தோன் என்கிறார். அவர் ஒரு இடத்திலாவது கடவுளை அயோக்கியனாகவோ, ஒழுக்க ஈனமுடையவனாகவோ, வஞ்சகனாகவோ, விபச்சாரியாகவோ சிருஷ்டித்திருக்கவில்லை.

ஆனால், ஆரிய நூல்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள கடவுள் தன்மையிலுள்ள ஆபாசக் கேட்டிற்கோ அளவு சொல்ல வேண்டியதில்லை. கீதை போற்றும் கிருஷ்ணனைப் போன்ற விபசாரக்காரனை—வஞ்சகனை—கீழ்க்கண்ட தன்மையை ஆரியர்கள் தவிர்த்த யாரும் கடவுளாக, நீதியாகச் சிருஷ்டித்திருக்கமாட்டார்கள். அவன் ஒரு விபச்சாரியை அல்ல, இலட்சக்கணக்கான பெண்களைக் கெடுத்து விபச்சாரிகளுக்கும், குடிப்பெண்களுக்கும் காமுகனாய், காதலனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் அவன் ஒரு சந்தர்ப்பத்திலாவது, ஒழுங்காக நடந்துகொண்டிருப்பதாக யாராலும் காட்டமுடியாது. அவன் நடத்தைகள் லீலைகளாக்கப்பட்டிருக்கின்றன. இராமனை எடுத்துக்கொள்ளுங்களேன்! இராமனை எடுத்துக்கொண்டால்—அவன் யாருக்கோ பிறந்ததாகத்தான் காட்டப்பட்டிருக்கிறதேயொழிய, தசரதனுக்கே பிறந்ததாக இல்லை. அவன் பெண்டாட்டியை இழந்து அலைவதற்குக் கூறப்படும் காரணமோ அதைவிடப் படுமோசம். அதாவது, மகாவிஷ்ணு எந்தப் பெண்மீதோ மோகங்கொண்டாராம்; மோகத்தைத் திருப்தி செய்ய அவள் இடம் கொடுக்கவில்லையாம். எனவே, அம் மகாவிஷ்ணு அவளுடைய புருஷன் இறக்கும் தறுவாயைப் பார்த்துக்கொண்டேயிருந்து இறந்ததும் அவனுடைய உடலில் தான் புகுந்துகொண்டு அப் பெண்ணை அடைந்து கூடி இன்புற்றுக்கொண்டிருந்தாராம். அந்தப் பெண், எப்படியோ, தன் புருஷனுடைய உயிரல்ல அவ்வுடலில் வேலை செய்வது என்று அறிந்தவுடனே உண்மையைக் கேட்டுணர்ந்து, மகாவிஷ்ணு மறு ஜென்மமெடுத்து தன் மனைவியைப் பிறன் கையில் விட்டுத் தன்னைப்போல் கற்புக் கெட்டவளாக வேண்டும் என்று சாபம் கொடுத்தாளாம். அதையொட்டித்தான் இராமன் அவதாரம் ஏற்பட்டு—சீதையை இராவணனுக்குப் பறிகொடுக்கவேண்டி ஏற்பட்டதாம். என்னே தெய்வத் தன்மை! பிறன் மனைவிமீது மோகிப்பதும், வஞ்சகமாக அவளை அனுபவிப்பதும் இவைதான் ஆரிய முறைப்பட்ட தெய்வத் தன்மைகள்! ஆண்கள் தன்மை இப்படியென்றால் ஆரியப் பதிவிரதைகளைப்பற்றிப் பேசினால் நமது பெண்கள் சகிக்க மாட்டார்கள்.

இதே இராமாயணத்திற்குக் கூறப்படும் மற்றொரு கதையைப் படித்தால் இன்னும் அசிங்கமாயிருக்கும். ஒருநாள் நண்பகலில் மகாவிஷ்ணு தன் மனைவியான இலட்சுமியிடம் கூடிக் கலவி செய்து கொண்டிருந்தாராம்.

அதைத் துரதிர்ஷ்ட வசமாகத் துவார பாலகர்கள் பார்க்க நேர்ந்து விட்டதாம். உடனே மகாவிஷ்ணு கோபங்கொண்டு, 'அசுரர்களாகப் பிறக்கவேண்டும்' என்று அவர்களுக்குச் சாபம் கொடுத்து விட்டாராம். அவர்கள் பகலில் படுத்து இன்புற்றதற்காகத் துவார பாலகர்களா தண்டனையடைவது? அப்படித்தான் பகலில் கூடுவதாயிருந்தாலும் காவற்காரர்கள் வெளியில் இருக்கிறார்களே, ஏதாவது அசந்தர்ப்பத்தில் வந்துவிடப்போகிறார்கள் என்று கதவையாவது மூடிக்கொள்ள வேண்டாமா? அவ்வளவு அறிவு கூடவா இல்லை அந்த

ஆரியக் கடவுள்களுக்கு? இவ்வளவு முட்டாளையா தெய்வம் என்று கூறுவது? என்னே மடத்தனம்!

ஒரு தசரதனுக்கு—60,000 மனைவிகளா? கிட்டத்தட்ட ஒரு முனிசிபாலிட்டியே அவனுடைய மனைவிகளுக்கு மட்டும் வேண்டியிருக்குமே? அவர்களுக்கு ஆள், அம்பு வேறு என்றால்—ஒரு கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியே போதாதே? மற்றும் குழந்தை, குட்டி என்றால் ஒரு பெரிய சென்னை கார்ப்பரேஷனே மக்களுக்குத் தேவையாகிவிடுமே? அவன் ஒரு பெண்டாட்டியிடம் ஒருநாள் வீதம் இருப்பதாக வைத்துக்கொண்டால்கூட— மறுபடி அதே பெண்டாட்டியைச் சந்திக்க,—ஒரு ரவுண்டு வர, 165 வருடமாகிவிடுமே! இத்தனை பேரையும் யாருடைய பணத்தைக் கொண்டு காப்பாற்றி இருப்பான், அந்த அரசன்? இந்த தர்பார், ஹிந்துஸ்தான்—ஆரிய தர்பாரை விட மிஞ்சிவிட்டதே! குடிமக்கள் வரிப் பணத்தைக் கொண்டுதானே இந்த போக போக்கியம்? எந்த யோக்கியனாவது, குடி மக்களின் வரிப் பணத்தை இப்படி வீணாக்குவானா? அப்படி வீணாக்குபவனிடத்துக் குடி மக்களுக்குத்தான் பற்றுதல் இருக்குமா? எவ்வளவு அயோக்கியத்தனம் செய்திருக்கிறான் இந்த தசரதன்? 60,000 போதாது-பட்ட மகிஷிகளோடு (60,002-ம்) போதாது என்று, 60,003-வதாக ஓர் இளம் மங்கையைக் கலியாணம் செய்துகொடுக்கும்படி கேகய மன்னனைக் கேட்கிறானே! அவன், தசரதன் கிழவன் ஆகிவிட்டான் என்று மறுத்தும் அதற்கு ஒப்புக் கொள்ளாமல்—தன்னுடைய பட்டணத்தையே அப் பெண்ணுக்கு (கைகேயிக்கு)த் தாரை வார்த்துக் கொடுத்து, அவளை மணந்து கொண்டு அவளுடைய பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிகிறானே! இவ்வளவு நடந்திருந்தும் பின்னர் கைகேயியையும், பரதனையும் வஞ்சித்து இராமனுக்குப் பட்டம் சூட்டவேண்டுமென்று—குருவோடு, புரோகிதரோடு மந்திரி மார்களோடு சதிசெய்து சகல ஏற்பாடுகளையும் செய்கிறானே! எங்கு கேகய மன்னனுக்குத் தெரிந்தால் சண்டைக்கு வந்துவிடுவானோ என்று அவனுக்குச் சொல்லாமல்—தன் மகனும் உரிமையாளனுமான பரதன் இல்லாத சமயம் பார்த்துக் கைகேயிக்கும் தெரியாமல் பட்டத்தைக் கோசலையின் மகனான இராமனுக்குக் கொடுக்கச் சூழ்ச்சி செய்கிறானே! கடவுள் அவதாரமாகக் கருதப்படும் இராமனும் இவ்வளவு சங்கதிகள் தெரிந்திருந்தும் தகப்பனுடன் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்கிறானே, பரதனுக்குச் சொந்தமான பட்டத்தை யடைய. இந்த நடத்தையை இராமனே ஒப்புக்கொள்கின்றானே, தான் காட்டில் இருக்கும்போது.

இவ்வளவு வஞ்சக நெஞ்சம் படைத்த இராமனைக் கடவுள் அவதாரமென்று புகழ் கிறானே கம்பன், சற்றும் மானம் வெட்கமின்றி! பரதனின் வேலைக்காரி இதில் தலையிடா திருந்தால்—பட்டம் சூட்டிக்கொண்டிருப்பானே இராமன்! பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய தினத்தன்று காலை தனக்குப் பட்டம் இல்லையென்று அறிந்ததும், தலையில் அடித்துக் கொண்டு அழுகிறானே! 'இது வேண்டாம்', 'அது வேண்டாம்' என்று ஒதுக்கித் தள்ளு கிறானே! விதி தவறுமா என்று அழுகிறானே! காட்டுக்கு விரைந்து சென்றுவிட்டால் பரதன் அழைத்ததும் பிறகு தந்திரமாகத் திரும்பி வந்துவிடலாம் என்று தாயாருடன் மறுபடியும் சூழ்ச்சிசெய்கிறானே! இவ்வளவையும் கூலிக் காசுக்காகப் பாடிய கம்பன் மறைத்து விட்டானே!

அரசு கிடையாது என்று இராமன் கேள்விப்பட்டதும், 'அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா அவன் முகம்' என்று பாடிவிட்டானே கூலிக்காரக் கம்பன்; இனத் துரோகி கம்பன்!

பார்ப்பனரின் பிச்சைக் காசுக்காக இராமாயணப் பிரச்சாரம் செய்யத் துவக்கிய தோழர்கள், துணிவிருந்தால்—இவற்றை மறுக்கட்டுமே பார்ப்போம்! எதையாவது தவறு என்று காட்டட்டுமே! நாங்கள் புத்தகங்களில் எழுதியிருக்கிறோமே, இவ்வுண்மைகளை விளக்கமாக. யாரோ ஒரு கம்ப பக்தன்கூட முன்வரக் காணோமே, எங்கள் கூற்றை மறுக்க,

மற்றொரு ஆரிய இதிகாசமாகிய பாரதத்தில் ஒருத்திக்கு அய்ந்து கணவன்மார் இருக்க, இராமாயணத்தில் ஒருத்திக்கு ஒரே கணவன் என்ற நியதி காணப்படுவானேன்? இடையில்—குறள் வந்து குறுக்கிட்டதுதானே!

குறளுக்குச் செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில்தான் கம்பனுக்குக் கூலி கொடுத்துக் கவி பாடும்படி செய்துவிட்டனர், ஆரியப் பார்ப்பனர்கள். வால்மீகி இராமாயணத்தைத் தன் இஷ்டம்போல் மாற்றிவிட்டான் கம்பன். எனவேதான் அவனைச் சாடவேண்டியிருக்கிறது.

வால்மீகி, ஒரு 'அரேபியன் நைட்ஸ்' கதையைப் போல்தான் இராமனுடைய கதையையும் பாடி இருக்கிறார். தசரதனுடைய குடும்பத்தை ஒரு சாதாரணக் குடும்பமாகத்தான் குறிப்பிட்டுள்ளார். அவன் வீட்டுப் பெண்களை மீன்கண்டம் விற்கும் பெண்டிர்களைப் போன்றுதான் வர்ணித்துள்ளார். மேலும், சீதையின் கற்பில் சந்தேகம் கொள்வதற்கான பல கருத்துக்களை அவர் இராமாயணத்தில் இடையிடையே கொடுத்துள்ளார். தன் மனைவி மீது சந்தேகம்கொண்டு, கர்ப்பகாலத்தில் அவளைக் காட்டிற்குக் கொண்டுபோய் விட்டு விட்டு வருவதுபோன்ற—அதாவது, சாதாரண மனிதன்கூட வெட்கம்கொள்ளக் கூடியதான பல சேதிகளை அவர் கொடுத்துள்ளார்.

திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களுள் ஒன்றேனும் ஒழுக்கக் குறைபாடுள்ளதாகக் காணப்படாது. அறிவுள்ளவர் யாரும் மறுக்கமுடியாத—வெறுக்கமுடியாத கருத்துக்களை அமைத்துத்தான் அவர் குறளை இயற்றியுள்ளார். குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கிவிடுகிறது.

அன்பர் கலியாணசுந்தரனார் திராவிடநாடு வேறு; ஆரியநாடு வேறு; ஆரியப் பண்பு வேறு என்று தெரிவித்தது போல் திராவிடநூல் வேறு; ஆரியநூல் வேறுதான். திராவிடர்கள், எப்போதுமே ஆரியர்களை—ஆரிய கலாச்சாரத்தை வெறுத்தே வந்திருக்கிறார்கள். திராவிடநாட்டை ஆரியர்களின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றப் பெரிதும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இதனுண்மையைக் கந்தபுராண ஆரம்பத்தில் காணலாம்.

சிவபெருமானுடைய கலியாணத்தின்போது தேவர்களும், ரிஷிகளும் வந்து தென்னாடு உயர்ந்துவிட்டதென்றும், வடநாடு தாழ்ந்துவிட்டதென்றும் அதற்குப் பரிகாரம் உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்கிறார்கள். இதிலிருந்து தென்னாட்டினர் உயர்வு, ஆரியர்களால் எவ்வளவு வெறுக்கப்பட்டது என்பது இனிது புலனாகிறது. சிவன் யார் கெட்டிக்காரன் என்று ஆலோசித்துப் பார்த்து—அகத்தியனை அனுப்பியிருக்கிறார் பரிகாரம் செய்ய. மிக மட்டமான—அதாவது சூழ்ச்சியில், தந்திரத்தில் வஞ்சகத்தில் கைதேர்ந்த ஒருவனை அனுப்பிவைக்கிறார். அவன் விந்திய மலையருகில் வரவும் அங்கு காவல் செய்துவந்த வாதாபியும், வில்வலனும் அவனைத் தடுத்து விடுகிறார்கள். அவர்கள் கந்தபுராணத்தில் சித்திரிக்கப்படுகிற சூரனுடைய தங்கையின் மக்கள் ஆவார்கள். அவர்கள் வடநாட்டிலிருந்து யார் வந்தாலும் அவர்களைக் கொன்று தின்றுவிடுகிறதாகக் கூறப்படுகிறது. அதேமாதிரியே அகத்தியனையும் தின்றுவிட்டதாகவும்—ஆனால், அவனை ஜீரணம்செய்ய முடியவில்லையென்றும், அவனுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு அகத்தியன் வெளிப்பட்டுச் சென்றான் என்றும், அவ்வாறு சென்று தமிழ்வளர்த்தான் என்றும் வருணிக்கப்படுகிறது.

இந்தத் தமிழ்ப் புலவர்களும் ஆராய்ந்தறியாமல், அதையொட்டி, 'அகத்தியன் வளர்த்த தமிழ் என்று புகழ் பாடி விட்டனர். அகத்தியன் இங்கு வந்து, பாதிரிகள் போல் தமிழ் கற்று, நமது தர்மங்களை—ஒழுக்கங்களை மாற்றியமைத்து இருக்கக்கூடும்.

இதற்கு அவனுக்கு நன்றி காட்டும் அவ்வளவு நன்றியுடையவர்கள், நமது மடப் புலவர்கள்! நாய் நன்றி காட்டுவதெல்லாம் அன்னியனிடத்துத்தான் என்பதுபோல், பழங்

காலத்து அப் பண்டிதர்களும் அன்னிய அகத்தியனுக்கே மரியாதை செய்துவிட்டனர். அந்த அகத்தியன், முதலில், தமிழ் நாட்டிலிருந்து இராவணனைத் துரத்திவிட்டதாக வேறு காணப்படுகிறது. இதற்கும்—இராவணனுடைய தம்பிக்கு இராமன் பட்டம் வாங்கிக் கொடுத்ததற்கும் ஏதேனும் பொருத்தம் இருக்கிறதா என்பதும் தெரியவில்லை. இக் கதைகளெல்லாம் 'அபிதான சிந்தாமணி'யில் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பாருங்கள்! அப்போது தெரியும்—ஆரியர் திராவிடர் போராட்டம் எப்போது, ஏன் துவங்கியது என்று!

இப்போது எப்படிச் சில திராவிடர்கள்–அறிவிழந்து ஆரிய வடவர்களையே தமது அரசியல் தலைவர்கள் என்று கொண்டு, தாம் பணியாற்றும் வகையில் ஏனைய திராவிடர்களையும், எப்படி அவர்களை நிரந்தர அடிமைகளாக வைத்திருக்க முயற்சிக்கின்றனரோ அதுபோல் வால்மீகி காலத்திலும் சில திராவிடர்கள் இருந்திருப்பதை நாம் அவரது இராமாயணத்தைப் படிப்பதன் மூலம் நன்கு அறியலாம். வாலி கொல்லப்பட்ட பிறகு, விபீஷணனைக் கொண்டுவந்து அனுமார் சேர்க்கிறார். அப்போது சுக்ரீவன் கேட்கிறான், 'அண்ணனுக்கே துரோகம் செய்யும் இவன்—நாளை உனக்கு மட்டும் துரோகம் செய்ய மாட்டான் என்று எப்படி நம்புவது?' என்று. அதற்கு இராமன் என்ன சொல்லுகிறான் பாருங்கள்.

'என் இலட்சியத்திற்கு அதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. இராவணன் தோல்விதானே—அவனது முடிவுதானே எனக்கு வேண்டியது! அதற்கு உதவி செய்யத் தகுந்தவன் யாராக இருந்தால்—எப்படிப் பட்டவனாக இருந்தால் என்ன? அவனை நண்பனாகக் கொள்ளவேண்டியதுதானே! மேலும் அவன் எப்படி எனக்குத் துரோகம் செய்யமுடியும்? அவனுக்கு வேண்டுவது அண்ணனுடைய இராஜ்யமன்றோ! அண்ணன் செத்தால்தானே அவனுக்கு இராஜ்யம் வரும்? ஆதலால், தனது அண்ணனை ஒழிக்க நமக்கு வழி கூறி உதவி செய்துதானே தீருவான்? இந்த விஷயத்தில் அவன் நமக்குத் துரோகம் செய்ய முடியாதே! அதன் பிறகு என்ன துரோகம் அவனால் நமக்குச் செய்ய முடியும்? இவனை விட்டால் இராவணனை எமக்குக் காட்டிக்கொடுக்கக்கூடிய வேறு ஆள் ஏது?' என்று சொல்லி விபீஷணனை ஏற்றுக்கொள்கிறான்.

இதேமாதிரித்தான், தம் இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டு இன்றைப் பார்ப்பனர்களும் மானாபிமானமற்று தம் கட்சிக்கு ஆள் தேடித்திரிகிறார்கள். நமக்கு எவன் துரோகம் செய்கிறானோ அவன்தான் பார்ப்பனர்க்கு ரொம்பவும் வேண்டியவன்; மகாதேச பக்தன்; அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவன்—புகழ் பெறுபவன். நம்முடைய துரோகிகள் மூலந்தான் அன்று தொட்டு இன்று வரையும் அவர்கள் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். இதை இந்த நாசமாய்ப்போன துரோகம் செய்பவர்கள் உணர்ந்தால் தானே! தோழர்கள் இராமநாதனும், கே. வெங்கிடசாமி நாயுடுவும் நமது கட்சியினின்று நீங்கிச் சென்றபோது—இவர்களைக் காந்தியாருக்கு அறிமுகம் செய்தபோது, இராஜகோபாலாச்சாரியார்—அன்று அனுமார் இராமனிடம் விபீஷணனை அறிமுகம் செய்து வைத்ததுபோன்றே செய்தாரே! 'இராமநாதன் வந்துவிட்டார்; பழையபடி அந்த சரணாகதிக்கு நீங்கள் மனமிரங்கி இடமளிக்கவேண்டும். இராமர் எப்படி விபீஷணனுக்கு அபயமளித்தாரோ அதேபோன்று இவருக்கும் தாங்கள் அபயமளித்தல் வேண்டும்' என்று.

இராவணனை விட்டு விபீஷணன் நீங்கியதற்கும் சுயமரியாதைக் கட்சியைவிட்டு இராமநாதன் நீங்கியதற்கும் ஒப்புதல் காட்டி விட்டாரே இராஜகோபாலாச்சாரியார். இது போலவே வெங்கடசாமி நாயுடு விஷயத்திலும் சொன்னார். இந்த 'இராமாயண சம்பிரதாயம்' தானே அன்றுமுதல் இன்றுவரைக்கும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது!

நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! பார்ப்பனர்கள் குறளுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறார்கள் என்பதை? அவர்கள் பகவத் கீதையை அச்சுப் போட்டு இனாமாக வழங்கி

வருவதும், அதைப்பற்றிப் பெருமையோடு எங்கும் பேசிவருவதும் உங்களுக்குத் தெரியாத தல்லவே! இது ஏன் என்று நீங்கள் சிந்தித்தது உண்டா? கிருஷ்ணன் கீதையின் மூலம் நாலு சாதிமுறை உண்டென்பதையும்; அதில் பார்ப்பனர்களே முதல் சாதியினர் என்பதையும்; கடவுளுக்கும் பெரியவர் பார்ப்பனர் என்ற தத்துவத்தையும் கூறியிருப்பதோடு, எப்படியும் அதர்மம் செய்பவர்களுக்கு மன்னிப்பு உண்டு—வருணதர்மம் செய்பவர்களுக்கு மன்னிப்பு இல்லை என்று ஒப்புக் கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம் என்பதை உணருங்கள்!

வேதாந்திகளுக்கும், பார்ப்பனர்களுக்கும் கீதையில் 1000 வரி தெரிந்திருப்பது ஏன், குறளில் 2 வரி கூடத் தெரியாதது ஏன் என்பதையும்; காவி வேட்டி கட்டிக்கொண்டு சில திராவிடர்கள் கூட கீதைப் பிரச்சாரம் செய்துவருவது ஏன் என்பதையும் யோசித்துப் பாருங்கள்! கீதை எவ்வளவு அக்கிரமத்திற்கும் முக்காடு போட்டுவிடும்—காவியுடையைப் போல். ஏன்? கீதைக்குத் தலைவனான கிருஷ்ணனே—அக்கிரமத்தின் தலைவனான காரணத்தால்.

தோழர்களே! நாம் எதிர்க்கும் நான்கு சாதி முறையைக் கடவுளின் பேரால் வலியுறுத்தத்தான் கீதையும், கிருஷ்ண பஜனையும் என்பது நினைவிருக்கட்டும்.

கீதை படிப்பவர்கள் எத்தகைய தர்மத்தையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், 'பகவானே இதைச் செய்துள்ளபோது சாதாரண மனிதனான நான் எம் மாத்திரம்?' என்றோ, 'எல்லாம் பகவான் செயல் என்றோ'—'நான் ஏன் பார்ப்பான் என்று கிருஷ்ணனிடம் கேட்டுத் தெரிந்துகொள்' என்றோ சுலபமாகப் பதில் கூறிவிடலாம். ஆனால், குறளைப் படித்தாலோ—தர்மத்தின்படி நடக்கவேண்டும்; பித்தலாட்டம் செய்ய முடியாது; பித்தலாட்டம் செய்பவரைக் கண்டாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

குறளிலும் இன்றைய நிலைக்குப் புறம்பான கருத்துக்கள் சில இருக்கலாம். அவற்றை மாற்றிவிட வேண்டியதுதான். அத்தகைய மாற்றத்திற்கு இடந்தருவதுதான் குறள்.

குறளை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உட்பட யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். மாமிசம் சாப்பிடுவது மறுக்கப்பட்டிருக்கிறது என்னலாம். காய்கறி, தானியம் இவை அபரிதமாகக் கிடைக்குமானால் மாமிசம் தின்னவேண்டிய அவசியம்தான் என்ன இருக்கிறது? முகமது நபியவர்களால் கூறப்பட்டுள்ள பல கருத்துக்களைக் குறளில் அப்படியே காணலாம். முஸ்லிம்களுக்கு எதிராக அதில் ஒன்றுமே காணமுடியாது. அது மனு தர்மத்துக்கு உண்மையான விரோதி நூல் என்றே திடமாகச் சொல்லலாம். மனுதர்ம சூத்திரங்களுக்கு நேர்மாறான கருத்துக்களைக் கொண்ட குறள் அடிகளை ஏராளமாகத் திருக்குறளிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி யூட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள்.

எனவேதான், அதன் ஆசிரியரைக்கூட சில மதத்தினர் 'தம்மவர்' என்று உரிமை பாராட்டிக் கொள்கிறார்கள். ஜைனர் தம்மவர் என்று கூறி அவரை மொட்டைத் தலையராக்கிக் காட்டுகிறார்கள். சைவர்கள் அவரைத் தம்மவர் என்று கூறி ஜடாமுடியுடன் விபூதிப் பட்டையுடன் காட்டுகிறார்கள். அவரோ எம் மதமும் இல்லாதவராகவே தோன்றுகிறார். ஒரு இடத்தில், 'மயிரும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை; மொட்டையும் அடித்துக்கொள்ள வேண்டியதில்லை-யோக்கியனாய் இருக்க வேண்டுமானால்' என்று கூறி இருக்கிறார். அப்படியான பெரியாரை வைணவர்கள் தம்மவர்தான் என்று கூறிக்கொண்டு, வடகலை நாமம் போட்டுக் காட்டுகிறார்கள். அவரை ஆழ்வார்களில் ஒருவராகவும் ஆக்கி விடுகிறார்கள். அவருக்கு வடகலை நாமம் போட்டது மகா மகாக் கொலைபாதகத் தனமாகும்.

திருவள்ளுவர் தவிர்த்த வேறு யாரையும் மற்ற மதத்தவர் இம் மாதிரி மதிப்ப தில்லையே! இதிலிருந்தே தெரியவில்லையா—குறளில் காணப்படும் திராவிடப் பண்பு எத்தகையது என்று! இப்படிப்பட்ட திருக்குறளை விரும்புவதை விட்டு நம் நாட்டவர்கள் இராமாயணத்தை வைத்துக்கொண்டு கூத்தடிக்கிறார்களே, நியாயமா?

எவளோ ஒருத்தி சொன்னாளாம்: 'பன்னாடைக்குப் பிறந்ததெல்லாம் பந்தம் பிடிக்கிறது; பண்டாரத்துக்குப் பிறந்தது எல்லாம் மணியம் பார்க்கிறது' என்று. அதாவது மதிக்கப்படவேண்டியது மதிக்கப்படாமல்—மதிக்கப்படக்கூடாதன மதிக்கப்படுகின்றன வென்று அர்த்தம். மேற்படிப் பழமொழி எப்படி வந்ததென்றால், முன்பெல்லாம் மிராசு தார்கள் கூத்திகளை வைத்துக்கொள்வார்கள். அவர்கள் கூத்தியோடு இருந்தால் அவர்கள் மனைவிமார் ஊர்ப் பண்டாரத்தைத் துணைக்கு வைத்துக்கொள்வார்கள். தாசி வீட்டில் மிராசுதார்களுக்குப் பிறக்கும் குழந்தை தாசி மக்கள் தொழிலையொட்டி கோயிலில் பந்தம் பிடிக்கும். ஆனால், மிராசுதாரர் பேரால் பண்டாரத்திற்கு அவர்வீட்டில் பிறந்த குழந்தைகள் மிராசு பார்க்கும் என்று கற்பனைக் கதை சொல்வார்கள். இதைக் குறிப்பதுதான் இந்தப் பழமொழி.

அதுபோல், உண்மைத் திராவிடன் தீட்டிய திருக்குறள் குப்பையிலே கிடக்க—திராவிடத் துரோகி தீட்டிய இராமாயணமும், ஆரியர் தீட்டிய கீதையும் அதிகாரத்தில் இருந்துவருகின்றன.

இந்த இழிதன்மையை–மானமற்ற தன்மையை–கவலையற்ற தன்மையை உங்களிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டித்தான் வள்ளுவர் படத்தைத் திறந்துவைக்க ஒப்புக் கொண்டேன். குறளுக்குள் நான் இன்று புகவில்லை; மற்றொரு சமயம் எடுத்துக் காட்டுகிறேன்.

குறள், இந்து மதக் கண்டனப் புத்தகம் என்பதையும்; அது சர்வ மதத்திலுமுள்ள சத்துக்களை எல்லாம் சேர்த்து எழுதப்பட்டுள்ள 'மனித தர்மநூல்' என்பதையும் எல்லோரும் உணரவேண்டும்.

ஒவ்வொருவனும், 'நான் இந்துவல்ல; திராவிடனே–திருக்குறள் விரும்பியே' என்று கூறிக்கொள்வதில் பெருமையடையவேண்டும்; விபூதியையும், நாமத்தையும் விட்டொழிக்க வேண்டும்; புராணங்களைப் படிக்கக்கூடாது. 'நீ என்ன மதம்?' என்றால்—'குறள்மதம்' 'மனித தர்ம மதம்' என்று சொல்லப் பழக வேண்டும்.

யார் எதைச் சொல்லிய போதிலும், எது எத்தன்மையுடையதாயிருப்பினும் ஒவ்வொரு வரும் நன்கு சிந்தித்துப் பார்த்து, பிறகே எது உண்மை என்பதை முடிவு செய்யவேண்டும்.

சுயஅறிவே பிரதானம் என்ற, 'வாலறிவன் நற்றாள்' என்ற வள்ளுவர் கருத்துப்படி அனைவரும் நடக்க வேண்டும். உருவ வழிபாட்டை ஒதுக்கி விடவேண்டும்.

[ஈரோட்டில், 23, 24-10-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-11-1948]

8. இராமாயண பக்தர்களுக்கு

நம் பண்டிதர்கள், 'கம்பன் தமிழபிமானமுள்ளவன்' என்றும், தமிழர் தன்மை, தமிழர் நாகரிகம், தமிழர் ஒழுக்கம், தன்மானம், நீதி முதலிய தமிழர் உயர் குணங்களை வெளிப்படுத்தவே இராமாயணம் கம்பனால் பாடப்பட்ட தென்றும் முழங்குகின்றார்கள்.

எனவே, கம்பனின் சுயமரியாதையையும் தமிழத் தன்மையையும் வெளிக்காட்ட இந்தப் பாட்டுகள் பயன்படுமென்று காட்டுகின்றனர்.

இராமனுக்கு தசரதன் முடிசூட்ட நினைத்து, அதற்கு வேண்டிய காரியம் நடத்தும் போது ஆட்சிமுறைக்குரிய சில நீதிகளைக் கூறிவிட்டு, வசிட்டரை நோக்கி, 'தவத்தின்

களஞ்சியமே! தாங்கள் சென்று இராமனை, நாளை, இந்த நாட்டைக் காக்கும்பொருட்டு இன்றிரவு உபவாசம் இருக்கச்செய்யுங்கள்' என்று தசரதன் கூறியதாகவும், வசிட்டர் அவ்வாறே இராமனிடம் சென்று இராமனையும், சீதையையும் உபவாசம் இருக்கச் செய்த தாகவும் வால்மீகி கூறுகிறார்.

ஆனால், கம்பரோ—தசரதன் வசிட்டரை அழைத்து, 'இராமனுக்கு வேண்டுவன செய்து அரச நீதிகளை உரைத்தருள்க' என்றதாகவும், அவ்வாறே வசிட்டர் இராமனிடம் சென்று, கீழ்க்கண்டபடி நீதிகள் உரைத்தாகவும் கூறுகிறார். இதுதானா தமிழருக்கு நீதி பண்டிதர்களே கருணைகாட்டிக் கூறுங்கள்.

1. 'கரியமாலினும் கண்ணுத லானினும்
உரியதாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோரைந்தினும் மெய்யினும்
பெரியரந்தணர் பேணுதி யுள்ளத்தால்'

அதாவது, திருமால், சிவன், நான்முகன், ஐம்பூதம், வாய்மை ஆகியவர்களைக் காட்டிலும் அந்தணர்கள் பெருமையுடையவர்கள்; ஆகையால் அவர்களை உள்ளன்போடு வழிபடுவாயாக என்றும்,

2. 'அந்தணாளர் முனியவு மாங்கவர்
சிந்தையாலருள் செய்யவுந் தேவரில்
நொந்துளாரையும் நோய் துயர்ந்தாரையும்
மைந்த எண்ணவரம்பு முண்டாங்கொலோ'

அதாவது, அந்தணர்களின் கோபத்தால் அழிந்தவர்களையும், அந்தணர்கள் அருளினால் செல்வாக்குப் பெற்றுயர்ந்தவர்களையும் கணக்கிட முடியாது என்றும்;

3. 'அனையராதலினைய விவ் வெய்யதீ
வினையினீங்கிய மேலவர் தாளிணை
புனையுஞ் சென்னியையாய்ப் புகழ்ந் தேத்துதி
இனிய கூறி நின்றேயின செய்தியால்'

அதாவது, அந்தணர்கள் இத் தன்மையுடையவராக இருத்தலினால், தீவினை செய்யாது உயர்ந்தவர்களாகிய அவ்வந்தணர் பாதங்களில் உன் தலை படும்படியாக வணங்கி, அவர்களைப் புகழ்ந்து, அவர்களிடம் இனிய சொற்களைக் கூறி, அவர்களிடும் கட்டளைப்படி நடப்பாய் என்றும்,

4. 'ஆவதற் கும்மழிவதற் கும்மவர்
ஏவதிற் கும்விதியு மென்றாலினி
யாவதெப் பொருளிம்மையு மம்மையுந்
தேவரைப் பரவுந்துணை சீர்த்தநே'

ஒருவன் செல்வமடைவதற்கும் அழிவதற்கும் காரணமான விதியும், அந்தணர்களின் கட்டளைப்படியேதான் நடக்கும். ஆகையால் இப் பிறப்பிற்கும், மறு பிறப்பிற்கும் (அவர்களை விடுத்தால்) வேறு பயன் ஏது? எனவே, அந்தணர்களை வணங்குதல் தேவர்களை வணங்குதல் போலச் சிறந்ததாகும் என்றும் கூறி அந்தணர் பெருமையை இவ்வாறு கூறுகிறார்.

போதுமா? இன்னமும் வேண்டுமா?

['குடிஅரசு'-கட்டுரை—12-2-1944]

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது ஒரு பழமொழியாகும். இது இரு கட்சியாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

எந்தெந்த இரு கட்சியார் என்றால், பஞ்சேந்திரியங்களுக்குப் புலனாவதைத் தவிர வேறு வஸ்து கிடையாது என்கின்ற முடிவைக்கொண்ட 'மெடீரியலிஸ்டு' (Materialist) என்னும் கட்சியாரும்; பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத ஒரு வஸ்து இருக்கிறது என்கின்ற முடிவைக்கொண்ட 'ஸ்பிரிச்சுவலிஸ்ட்' (Spritualist) என்னும் கட்சியாரும் ஆகிய இரு கட்சிக்காரர்களும்—அதாவது 'நாத்திகர்களும்', 'ஆத்திகர்களும்' ஆகிய இரு கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

இந்தப் பழமொழியின் கருத்து என்னவென்று தெரிந்திருக்கின்றோமென்றால், அன்னியருக்குக் கேடு செய்ய வேண்டுமென்றோ, கேடு உண்டாக்க வேண்டுமென்றோ நினைப்பவன் கெட்டுப்போவான் என்பதாகும்.

இதை ஆத்திகர்கள் எந்த முறையில் ஒப்புக்கொள்கின்றார்கள் என்றால், மனிதர்களில் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளையும் எண்ணங்களையும் தனித்தனியே கவனித்து, அந்தந்த நடவடிக்கைக்கும் எண்ணத்துக்கும் தகுந்த பலனைக் கொடுப்பதற்கு சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ உண்டு என்றும்; அது, பிறருக்குக் கேடு செய்தவனையும் கேடு நினைத்தவனையும் அறிந்து அப்படிப்பட்டவனுக்குத் தண்டனையாகக் கெடுதி செய்வதனால்—அவன் கெடுவான், கெட்டுப்போவான் என்றும் கருதுகிறார்கள்.

நாத்திகர்கள், அதாவது சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ அல்லது வஸ்துவோ ஒரு ஆவியோ இருந்துகொண்டு, மனித சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் நடவடிக்கைகளையும், எண்ணங்களையும் கவனித்து அதற்கேற்ற பலன்களை அவர்களுக்குக் கொடுத்து வருகிறார் என்பதை முழுதும் நம்பாதவர்களின் வர்க்கம், இந்தக் கெடுவான் கேடு நினைப்பான் என்கின்ற பழமொழியை எப்படி ஒப்புக்கொள்கின்றார்கள் என்றால்,—சமூகவாழ்வில் பிறருக்குக் கேடுசெய்கின்ற மனிதனும் கேடு நினைக்கின்ற மனிதனும் பிற மனிதர்களால் கேடு செய்யப்படுவதும் மற்றும் இவனது கெட்ட செய்கையைக் கண்ட, கேட்ட பிறரால் ஒதுக்கப்படுவதும், துவேஷிக்கப்படுவதும் பெரிதும் சகஜமான சம்பவங்களல்லவா? ஆகவே, பிறருக்குக் கேடுசெய்ய நினைத்து, பிறரால் வெறுக்கப்படவும், துவேஷிக்கப்படவும் ஆன மனிதன் கேட்டிற்கு ஆளாவதும் சகஜமாகும்.

'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்ற பிரத்தியட்சப் பழமொழிப்படியே, 'நன்மையும் தீமையும் தான்தர வருமே' என்பதும் யாராலும் ஒப்பமுடிந்த விஷயமாகும்.

ஆனால், இந்த வியாசத்தில் இப் பழமொழிக்கு நாத்திக சம்பிரதாயமான கருத்தை ஆதாரமாய் எடுத்துக்கொள்ளாமல், ஆஸ்திக சம்பிரதாயமான கருத்தை ஆத்திகர்கள் என்பவர்களே சரியானபடி ஏற்றுக்கொள்கின்றார்களா என்ற பிரச்சினையை முக்கியமாய் வைத்து, வேடிக்கைமுறையில், இராமாயணத்தின் நடவடிக்கை எப்படிப்பட்டது; அதைப் பிறர் எப்படி மதிக்கிறார்கள் என்கின்றவைகளை எடுத்துக்காட்டவும், இந்தப் பழமொழி ஆத்திக சம்பிரதாயப்படி பார்ப்பவருக்கு இராமாயணம் என்பது ஒரு படிப்பினையாகும் என்பதைக் காட்டவும் எழுதப்பட்டதாகும்.

இராமாயணக் கதைப்படி, 'தசரதனும், இராமனும் பரதனுக்குக் கேடு நினைத்ததால் கெட்டார்கள்' என்பது வியாசத்தின் கருத்தாகும்.

இராமாயணக் கதைப்படிக்கு, தசரதனுக்கு நான்கு ஆண் பிள்ளைகள். அவர்களுள் இராஜ்ய பட்டமானது பரதனுக்குச் சொந்தமானது. எப்படியெனில், பரதனுடைய தாயாராகிய கைகேயியை தசரதன் மணக்க ஆசைப்பட்டு, கேகய ராஜனிடம் சென்று

அவனது பெண்ணான கைகேயியைத் தனக்குத் தரும்படி கேட்க, கேகய மன்னன் தசரதனின் யோக்கியதையையும், நடத்தையையும் தெரிந்து, 'உனக்கு ஏற்கனவே பல ஆயிரக் கணக்கான மனைவிகள் இருப்பதால் நான் என் மகளை உனக்குக் கொடுக்கமுடியாது' என்று மறுத்துவிட்டான். இதற்கு தசரதன், அந்தப் பெண்மேல் உள்ள ஆசையால் கேகய மன்னனிடம் வணங்கி, 'ஐயா, எனக்கு எத்தனை மனைவிகள் இருந்தாலும் உனது மகளையே நான் பிரதான மனைவியாய்க் கொள்வேன்; உனது மகள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே இராஜ்ய பட்டாபிஷேகம் செய்வேன்' என்று வாக்குத் தத்தம் செய்து கொடுத்து கைகேயியை மணந்துகொண்டான்.

அந்தப்படி மணந்துகொண்ட தசரதன் கைகேயியையே பிரதான நாயகியாக அனுபவித்துவந்து, அவள் மூலம் ஒரு ஆண் குழந்தையையும் (பரதனை) பெற்று அது வளர்ந்து பெரிதாகிப் பட்டத்துக்கு யோக்கியமானவுடன், தசரதன் கெட்ட எண்ணங் கொண்டு, அதாவது இராஜ்ய பட்டாபிஷேகத்தை பரதனுக்குக் கொடுக்காமல் இராமனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்துவிட்டான்.

இவ்விதமான கெட்ட எண்ணம் தசரதனுக்கு உண்டாகும்படியாகவே இராமனும் மிக்க தந்திரமாக யோக்கியன் போலவும், தகப்பனாருக்கு மிகவும் வேண்டியவன் போலவும் நடந்துவந்ததுடன், தகப்பனாரின் ஆசைக்கு ஏற்றவண்ணமாகவும் நடந்து வந்திருக்கிறான்.

இருவரின் கெட்ட எண்ணங்களும் முதிர்ந்து, கடைசியாக ஒருநாள் பட்டத்துக்கு (தசரதன் வாக்குறுதிப்படி) உரியவனாகிய பரதனை அவனது பாட்டனார் ஊருக்கு அனுப்பி விட்டு, அவன் இல்லாத சமயம் பார்த்துத் திடீரென்று ஒரு நாளில் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாய் ஏற்பாடு செய்து, அவசர அவசரமாய் (திருட்டுத்தனமாய்)ப் பட்டாபிஷேகக் காரியங்கள் செய்ய தசரதன் சூழ்ச்சி செய்துவிட்டான். இராஜ்ய பட்டமானது பரதனுக்கு வெகு காலத்துக்கு முந்தியே தன் தகப்பனால் வாக்குக் கொடுக்கப் பட்டாய்விட்டது என்பது இராமனுக்குத் தெரிந்திருந்தும், அதைச் சிறிதாவது இராமன் இலட்சியம் செய்து தகப்பனிடம் மறுத்துக் கூறாமலும்—அதுதான் போகட்டும் என்றாலும் சரியொத்த சகோதரனான பரதன் ஊரில் இல்லாதபோது அப்படிப்பட்டதொரு முக்கியமான காரியத்தைச் செய்வது யோக்கியமான காரியமாகாது என்றாவது தகப்பனுக்குப் புத்தி கூறாமலும், தான் புத்தி கூறியும் தகப்பன் ஒரு சமயம் இராமனின் யோசனையை ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி இருந்தபோதிலும்கூட—'பட்டத்துக்கு உரியவனும் எனது அன்புள்ளவனுமான சகோதரன் பரதன் இல்லாமல் இப்படிப்பட்ட காரியத்துக்கு நான் சம்மதிக்கமாட்டேன்' என்று இராமன் ஒரு வார்த்தையாவது சொல்லாமலும், ஆளில்லாத சமயம் பார்த்துத் திடீரென்று தகப்பன் சொன்னவுடன் தானும் சம்மதித்துப் பேராசையுடன் பட்டம் கட்டிக்கொள்ள இசைந்தான் என்றால், அவ்விருவரும் அதாவது தசரதனும் இராமனும் பரதனுக்காகக் கேடு நினைத்தார்கள் என்ற முடிவின் பேரில், ஆத்திகர்கள் கொள்கைப்படியே, கேடு நினைத்தவர்கள் கெடாமல் இருக்க முடியாது என்பதை ஆத்திகர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அன்றியும், இந்தச் சூழ்ச்சியை அறிந்த கைகேயியானவள், அதாவது பரதனுடைய தாயாரானவள், தன் புருஷனான தசரதனுக்குப் பலவிதங்களில் எடுத்துச் சொல்லியும், பிடிவாதம் செய்தும், ஒன்றும் கேட்காமல் தசரதன் இவ்வுண்மைகளை மறைத்து, கைகேயியைக் கெட்டவளாக்கி, உலகம் முழுவதும் கைகேயியை நிந்திக்கும்படி செய்து, தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயற்சிக்கிறான்.

இச் சூழ்ச்சியும், பிடிவாதமும் எல்லாம் இராமன் அறிந்திருந்தும் பட்டாபிஷேகத்தை ஒத்திவைக்கக்கூடத் தகப்பனுக்கு யோசனை சொல்லாததால், கடைசியாகக் கேடு நினைத்தவர்கள் கெடவேண்டியதாகவே நேர்ந்துவிட்டது.

அதாவது எவ்விதம் என்றால், தசரதன் தனது சூழ்ச்சி வெளிப்பட்டுவிட்டதால், இனி தான் அரசனாய் இருந்து ஆட்சி புரிவதில் உலகம் தன்னை மதிக்காது என்றும், இகழும் என்றும் கருதித் தற்கொலை செய்துகொண்டு இறக்கவேண்டியவனாகிவிட்டான்.

இராமனுடைய பேராசையையும் சூழ்ச்சியையும் நன்றாய் அறிந்த கைகேயி, இராமனை இராஜ்யத்திற்குள் இருக்கவிட்டால் பரதனுக்கு ஏதாவது கேடு செய்து விடுவான் என்று கருதி, இராஜ்யத்தை விட்டு வெளியேறும்படி செய்துவிட்டாள். ஆனால், இராமன் அந்தப் பழியுடன் வேறு எங்கும் போய் வாழ்வதற்கு முடியாமல் காட்டிற்குப் போக வேண்டியதாய் முடிந்துவிட்டது. காட்டிற்குப் போனவனும் அங்கும் சும்மா இல்லாமல் மறுபடியும் எப்படியாவது அயோத்திக்கு வந்து அரசாளவேண்டும் என்கின்ற ஆசையை வைத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளையெல்லாம் செய்து, பரதனையும் மோசம் செய்து, தனது செருப்புகளைக் கொடுத்தனுப்பி அந்த செருப்புகளை வைத்துத் தன் பேரால் அரசாள வேண்டும் என்று சொல்லி, இராஜ்ய சுதந்திரத்தைத் தனக்கு ஆக்கிக் கொள்ள நினைத்ததால், காட்டிலும் இராமனுக்குப் பல தொந்தரவுகள் ஏற்பட்டதோடு இராமனால் கைகேயிக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்பட்டதோ அதைவிட அதிகம் கெட்ட பெயரும் இழிவும் இராமன் பெண்சாதியான சீதைக்கும் ஏற்பட்டது.

சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போனதும், இராமன் இராவணனைச் சூழ்ச்சியால் கொன்றதும் எப்படி என்றால், இராவணனைக் கொன்று விட்டால் அந்தப் பட்டத்தை இராவணன் தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுப்பதாகவும், வாலியைக் கொன்று அந்தப் பட்டத்தை வாலியின் தம்பி சுக்ரீவனுக்குக் கொடுப்பதாகவும் இப்படியெல்லாம் 'தில்லு முல்லு' செய்து ஜெயித்து தன் பெண் சாதியை (சீதையை) அழைத்து வந்ததும், அவளை இராமன் வைத்து வாழமுடியாமல் இராமனாலேயே சீதைக்கு விபச்சார தோஷம் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டும், பிறகு அதைக்கூட இலட்சியம் செய்யாமல் சேர்த்துக்கொண்டும், அப்படிச் சேர்த்துக் கொண்டதும் விபச்சார தோஷத்தைப் பொருட்படுத்தாமலோ, அல்லது விபச்சார தோஷத்துக்கு சீதை ஆளாக வில்லை என்ற பரிசுத்த எண்ணத்தோடல்லாமல், தான் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்போது பெண் சாதி இல்லாமலும் அல்லது பெண் சாதியை விபச்சார தோஷத்திற்காக வெளிப்படுத்திவிட்ட இராமன் என்கின்ற பழியுடன் இருக்கக்கூடாது என்றும் கருதி, தனக்குப் பட்டாபிஷேகம் ஆகும்வரை கூட வைத்திருப்பது போல் பாசாங்கு செய்து, பட்டாபிஷேகம் ஆனபின் சீதையினது கர்ப்பத்தைச் சந்தேகப் பட்டுத் தானாய் தள்ளினதாய் இருக்கக்கூடாது என்று கருதி, அதற்கும் ஒரு சூழ்ச்சி செய்து, அதாவது சீதையின் கர்ப்பத்தைப்பற்றி ஒரு வண்ணான் குற்றம் சொன்னதாக ஏற்பாடுசெய்து—ஏனென்றால் அந்தப்புரத்தில் ஸ்திரிகள் கர்ப்பவதியாய் இருக்கும் செய்தி வெளியில் முதல்முதல் வண்ணார்களுக்குத்தான் தெரியுமாதலால் அந்த வண்ணான்தான் சொன்னான் என்றால் உலகோரும் சீதையும் நம்புவார்கள் என்று அவன்மீது பழிபோட்டு—பெண்சாதியைக் கர்ப்பத்துடன் காட்டுக்கு அனுப்பவேண்டியதாகி, காட்டில், அந்தம்மாள் (சீதை) இராமன் இல்லாமலேயே, 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதுபோல மற்றொரு பிள்ளையும் பெற்றுக்கொள்ள நேர்ந்து, அந்த இரண்டு பிள்ளைகளாலேயே இராமன் யுத்தத்தில் தோல்வி அடைந்து, கடைசியாக இவ்வளவு வியாகூலங்களுடன், கஷ்டங்களுடன், பழிகளுடன் இராமன் சாகவேண்டியதாக ஏற்பட்டது.

இராமன் என்றைய தினம் பரதனை ஏய்த்து, இராஜ்யப் பட்டாபிஷேகம் பெற வேண்டுமென்று நினைத்தானோ, அன்று முதல் சாகும்வரை துக்கத்தையும், அவமானத்தையும், கஷ்டத்தையுமே அதிகமாய் அடைந்தானென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே, 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் பழமொழியை ஆத்திக தர்மப்படி நம்புகின்றவர்கள், இராமாயணக் கதையை இப் பழமொழிக்கு ஒரு உதாரணமாய்க்கொள்ள ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியில்லாவிட்டால், இக் கேடு நினைத்த தசரதன், இராமன்

இருவரும் ஏன் கேடு அடைந்தார்கள் என்பதற்குச் சமாதானம் சொல்லவேண்டும். தசரதனும் இராமனும் கேடு நினைக்கவில்லையென்றால், கதையில் உள்ளபடியான கேடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டன என்பதற்காகவாவது சமாதானம் சொல்லியாக வேண்டும்.

['விடுதலை'-கட்டுரை—10-3-1953]

9. அதிசயப் பிறவிகள், நம் புலவர்கள்!

தங்கள் இனத்தை இழிவுபடுத்துவதற்கென்றே (இன) எதிரிகளால் இயற்றப்பட்ட கற்பனைக் கதைகளில் வரும் பாத்திரங்களைத் தங்கள் கடவுள்களாகவும்; அவற்றின் நடத்தைகளைத் தாங்கள் பின்பற்றும் கொள்கைகளாகவும்; அவற்றைத் தங்கள் இலக்கியங்களாகவும் கொண்டு போற்றும், பின்பற்றும் அவற்றில் புலவர்களாகப் பெயர் பெற்று வாழும் இழிமக்களை—இந்த இந்திய நாடு, தமிழ்நாடு தவிர்த்து வேறு எந்தக் காட்டுப் பிரதேசங்களிலுங்கூடக் காணமுடியாது.

இந்திய மக்களுக்கு அறிவில்லாமல் போனதுடன் மான, ஈன உணர்ச்சிகூட இல்லாமல் போனதற்கும், இந்திய மக்கள் 20 ஆம் நூற்றாண்டில் காட்டுமிராண்டிகளாய் இருப்பதற்கும் காரணம் இந்த இழி குணங்களேயாகும்.

நம் நாட்டில் தேவதாசி என்ற முறை இருந்தபோது அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவன், 'எங்கம்மா உங்களைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார்கள்' என்பான்.

மற்றொருவன், 'எங்க அக்காள் உங்களைப் பிடியாய்ப் பிடித்துக் கூட்டிவரச் சொன்னாள்; இதோ கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறாள்' என்பான்.

மற்றொருவன், 'என் மகள், நீங்கள் வரவில்லை என்று மூன்று நாட்களாகச் சாட்பிடவேயில்லை; படுத்த படுக்கையில் கிடக்கிறாள்; நீங்கள் வந்தால்தான் சோறு தின்பேன் என்று பட்டினி கிடக்கிறாள்; இந்தாங்கோ அவள் கொடுத்தனுப்பிய கடிதம்' என்று கடிதம் கொடுத்துக் கெஞ்சுவான்.

இந்தப்படியான காரியம் சர்வ சாதாரணமாக இருந்தது—அக் காலத்தில். ஆனால், அதைச் சொன்னாலே இக் காலத்தில் அந்தப்படி நடந்தவர் எல்லோரும் வெட்கப்படுவார்கள். கோபித்துக்கொள்வார்கள். அக் காலத்தில் அத் தேவதாசிகளின் தம்பியும், மகனும், அப்பனும் நடந்துகொண்டது போலவேதான் இன்றைய நம் 'தமிழறிஞர்களும்,' 'புலவர்களும்,' 'மேதாவிகளும்' நடந்து கொள்கிறார்கள். அப்படி நடந்துகொள்வதிலுங்கூட, ஒரு சிறிதுகூட வெட்கப்படுவதில்லை; அதிலுள்ள இழிவுகளைப் பற்றி இலட்சியம் செய்வதேயில்லை.

எப்படியென்றால், இராமாயணத்தை ஆரியர்—திராவிடர் போராட்டம் என்றும்; 'இராமாயணக் கதை திராவிடரை இழிவுபடுத்துவதற்காகவே ஆரியர்களால் கற்பனை செய்யப்பட்ட கட்டுக்கதை' என்றும்; 'இராமாயணக் கதை ஆரியருக்குத் திராவிடர்கள் மீது இருந்த வெறுப்பைக் காட்டுவதற்கென்றே ஆரியரால் (பார்ப்பனரால்) புனையப்பட்ட கதை' என்றும்; 'இராமன் ஆரியத் தலைவன்—இராவணன் திராவிட அரசன்' என்றும்; மற்றும் 'இராமாயணம் புத்தனுக்குப் பின் கற்பனைசெய்து பார்ப்பனரால் எழுதப்பட்டது' என்றும்; 'இராமாயணம் நடந்த கதையல்ல, சரித்திரத்தில் பட்டது அல்ல, நீதியும் அல்ல' என்றும்; 'இராமாயணம் பார்ப்பனத் தர்மத்துக்கு எடுத்துக்காட்டு' என்றும்; 'இராமாயணம் பார்ப்பனர்கட்கு அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைத் தொகுப்பு' என்றும்—

மற்றும் பலவாறாகச் சரித்திர ஆசிரியர்கள் முதல் ஆய்வாளர்கள் உட்படப் பார்ப்பனராலும், வெளிநாட்டு அறிஞர்களாலும், சுயமரியாதை உணர்ச்சியுள்ள தமிழறிஞர்களாலும் ஆதாரங்களுடன் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு ஆதாரங்களும் நம்மிடம் இருக்

கின்றன. அவைகட்கு அன்றுமுதல் இன்றுவரை எந்த அறிவாளியும்—தமிழறில் எந்தப் புலவரும் ஆட்சேபணையோ, மறுப்போ கூறியது கிடையாது.

மற்றும், இந்த இராமாயணத்தைப் பற்றி அதில் காணப்படும் ஆபாசங்களுக்கு, ஒழுக்கக்கேடான காரியங்களுக்கு, அநீதிகளுக்கு நாளதுவரை எந்தப் புலவரும் மறுப்புக் கூறியதும் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள இராமாயணத்தைக் கடவுள் கதையாகப் பாவித்து, பாமர மூடமக்களிடம் புலவர்கள் புகுத்தி அதில் பயன் பெறுகிறார்கள் என்றால்—இதற்கு எதை ஒப்பிடுவது? இப் புலவர்களுக்கு எதை உதாரணமாக்குவது?

தோழர்களே! சிந்தியுங்கள்! நன்றாய்ச் சிந்தியுங்கள்.

புலவர்களுக்குப் புத்தி, மானம் இல்லாவிட்டாலும் நீங்களாவது கொளுத்துங்கள் கம்ப இராமாயணத்தை!

['விடுதலை'–தலையங்கம்—27-10-1972]

10. பாரதக் கதை மெய்யா?

இன்றைய இந்துக்களுக்கும், திராவிடர்களுக்கும் (தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளிகளுக்கும்) பாரத, இராமாயணக் கதைகள்தாம் மதமாக, ஆத்திகமாக, கடவுள் நம்பிக்கையாக இருந்து வருகின்றன.

பாரதம், இராமாயணம் என்பவை கடவுள் (விஷ்ணு), தேவர் அல்லாத மக்களை, 'அசுரர்களை', 'இராட்சதர்களை'க் கொல்லுவதற்காக மீன், ஆமை, பன்றி, சிங்கம், பார்ப்பனன், சத்திரியன், 'சூத்திரன்' (இடையனாக) முதலிய பிறவிகளாய் அவதரித்த நிகழ்ச்சிக் கதைகளில் இரண்டு கதைகளாகும். ஆனால், இந்த ஒன்பது, பத்துக் கதைகளில் இராமாயணம், பாரதம் என்பவையும் இராமன், கிருஷ்ணன் என்பவர்கள் மாத்திரமும் எப்படி இவ்வளவு பிரபலமடையவும், அந் நிகழ்ச்சிகளே இந்து மதக்காரர்களுக்கு முக்கிய தர்ம வழிகாட்டியாயும் இவர்கள் கடவுள்களாகவும் இருக்கக் காரணம் என்ன என்பதை இதுவரை யாருமே விளக்கவில்லை. இவற்றின் காலம் யுகக் கணக்காய் பத்து இலட்சக் கணக்கான காலமாகும். இவைகளுக்கு ஆதாரம் என்ன, சாட்சியம் என்ன என்பதற்கு எந்த ருஜுவுமே கிடையாது. இவைகள் சம்பந்தப்பட்ட கதைகள் ஆதாரங்கள் பலப் பல. அவையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை.

இந்த நிலையிலுள்ள பாரத இராமாயணக் கதைகளுக்கு சுமார் 2000, 3000 ஆண்டுகளுக்கு உட்பட்ட சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இராமாயணத்தில் சாதிகள், சாதி தர்மங்கள், சோழ அரசர், பாண்டிய அரசர், மதுரையம்பதி, இலங்கை, புத்தன் முதலியவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே பாரதத்திலும் பல தமிழரசர்களும், நகரங்களும், நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் பாரதக் கதை நடந்ததாகவே மக்களால் கொள்ளப்படுகிறது. அதுவும் இராமாயணக் கதைக்குப் பின்னிட்டுக் கலியுகத்திற்கு முன்னால், அதாவது 5,500 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக் கதையில் சிவன், விஷ்ணு, பிர்மா முதலியவர்களும் நாரதன், வசிஷ்டன் அகத்தியன் முதலியவர்களும் சம்பந்தப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்றும் ரிஷிய சிருங்கர், நளகூபன் முதலியோர் சம்பந்தப் பட்ட கதைகளும் பாரதத்திலும், இராமாயணத்திலும் இருக்கின்றன.

பாரதக் கதையில் பாண்டவர்கள் சாதாரண மனிதர்களாகவே குறிப்பிடப்பட்டிருக் கிறார்கள். அதில் வரும் கிருஷ்ணனுக்கு மனிதத் தன்மைக்கு மேற்பட்ட அசாத்தியமான, அற்புதமான காரியங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பாண்டவர்கள் சூரியன், யமன், வாயு, இந்திரன், அஸ்வினி, தேவர்கள் முதலியவர்களுக்குப் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவர்கள் எந்த உலகத்தில் இருப்பவர்கள்? பாண்டவர்கள் பிறப்புக் கதையோ, பராசரன் மகன் வியாசன்; வியாசன் பேரன்மார்கள் பாண்டவர்கள் என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பராசரன் வசிஷ்டன் பேரன்; வசிஷ்டன் பிரமன் மகன், வசிஷ்டன் பறைச்சியை மணந்து (அந்தக் காலத்தில் பறைச்சி, பறைச் சாதி இருந்ததா:) கொண்டான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (விரிக்கின் பெருகும்). இவைகளையெல்லாம் நம்பினால்தானே பாரதக் கதையை நம்பமுடியும்?

பராசரன் மகன் வியாசன் என்றால் மச்சகந்தி கதையை நம்பவேண்டும்.

வியாசன் எழுதிய பாரதம் என்றால் வியாசன் சொல்லக் கணபதி எழுதினான் என்பதை நம்பவேண்டும்.

கணபதியை நம்பவேண்டுமானால் கணபதி பிறப்புக் கதையை நம்பவேண்டும்.

இவ்வளவையும் நம்பினால்தான் பாரதம்; பாரதத்தை நம்பினால்தான் கிருஷ்ணன்; கிருஷ்ணனை நம்பினால்தானே கீதை முதலியவை மெய்யாகவேண்டும்? மற்றும், தமிழர்களின் இலக்கியங்களான குறள் முதல் எல்லா இலக்கியங்களிலும் மேற்கண்ட இராமாயணம், பாரதம் முதலிய கதைகள் புகுத்தப்பட்டிருக்கின்றனவே!

இவை மாத்திரமல்லாமல், இன்று சைவர், வைணவர் என்று சொல்லிக் கொள்ளுகிற தமிழர் எல்லோராலும், 'தமிழ் மறை' என்று பாராட்டி ஸ்தோத்திரம் செய்யப்படுகிற தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலிய யாவும் பெரிதும் மேற்கண்ட இராமாயணம், பாரதம் முதலிய கதைகளில் சம்பந்தப்பட்ட கதா நாயகர்களையும் அவர்கள் செய்கைகளையும், நடப்புக்களையும் பற்றிக் குறிப்பிட்டுப் பாடப்பட்ட பாடல்களாகத்தானே இருக்கின்றன?

இந்த நிலையில் நாம் எப்படி நம்மை சூத்திரர்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ள முடியும்?

நம் புலவர்களால் நமது சமுதாயத்திற்கு இதுவரை ஏற்பட்ட பயன் என்ன? வையாபுரி பிள்ளை, சேதுப்பிள்ளை, வரதராஜன், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஏ. சி. செட்டியார் மற்றும் மறைமலை அடிகள் முதலிய எவ்வளவோ பெரும் புலவர்களும், வித்தகர்களும் இருந்தும் நம் சமுதாயத்திற்கு எந்தச் சிறு முன்னேற்றமும் நன்மையும் ஏற்படவில்லையே!

['விடுதலை'-தலையங்கம்—21-1-1969]

11. இதிகாசங்களும் ஒழுக்கமும்

இதிகாசங்களில் சிறந்தவையாக இராமாயணமும், பாரதமும் விளக்கப்படுகின்றன.

இவை பக்தியை அடிப்படையாய்க் கொண்டவையா? அல்லது மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடத்தைகளை, ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையா? என்று சொல்லமுடியாத தன்மையில்—இரண்டிற்கும் பயன்படாத தன்மையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரண்டு நூல்களில் எது முந்தியது? எது பிந்தியது? என்பது விவாதத்திற்குரியதாகவே இருந்துவருகிறது.

(Evolution-Theory) எவலுஷன்-தியரி என்னும் வளர்ச்சிக் கொள்கைப்படிப் பார்ப்போமானால், பாரதக் கதை முந்தியதாகவும், இராமாயணக் கதை பிந்தியதாகவும் தான் சொல்லியாக வேண்டும்.

ஆனால், எந்தக் காரணத்தாலோ இராமாயணக் கதை முந்திய நடத்தையாகவும், பாரதக் கதை பிந்திய நடத்தையாகவும் புனையப்பட்டு விட்டது.

இந்தக் கட்டுரையில் அதைப்பற்றிய விவாதத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, அந்தக் கதைகளால் ஏற்படும் பயன் என்ன என்பதைப் பற்றி ஆராயலாம் என்றே கருதி இதை எழுதுகிறேன்.

இதை வலியுறுத்த விஷ்ணுவுக்கு—விஷ்ணு மனிதனாகப் பிறப்பதற்குப் பல சாபங்களைப் பல சம்பவங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அச் சம்பவங்கள் யாவும் ஒழுக்கம் அற்றவையாகவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், விஷ்ணுவுக்குக் கடவுள் தன்மையோ, இராமனுக்கு மனிதத் தன்மையோ இராமாயணத்தில் கற்பிக்கப்படவில்லை என்று உறுதியாய்க் கூறலாம். எப்படியெனில், விஷ்ணு மனிதனாகப் பிறப்பதற்குப் புராணங்களில் பல காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில்,

விஷ்ணு ஒரு கற்புள்ள அசுரப் பெண்ணைக் கற்பழித்து விட்டதால், அந்தப் பெண்ணின் சாபத்தால் மனிதனாகப் பிறந்தான். (இது கந்தபுராணம் தக்க காண்டத்தில் உள்ளது.)

மற்றொன்று: விஷ்ணு தன் மனைவியுடன் ஒரு பிரதோஷ வேளையில் சுகித்துக் கொண்டிருக்கும் போது (புணர்ந்து கொண்டிருக்கும் போது) அற்புதர்க்கன் என்னும் சிவகணங்களின் தலைவன் அங்கு சென்று, 'என்ன, நீ இப்படிச் செய்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு விஷ்ணு, 'நீ யாரடா இப்படிக் கேட்பதற்கு?' என்றான். இதை அந்த சிவகணத் தலைவன் நந்தியிடம் தெரிவித்தான். நந்தி உடனே விஷ்ணுவுக்கு—பூமியில் பிறந்து மனைவியைப் பிரிந்து தவிக்கும்படி சாபம் கொடுத்தான். (இது 'சிவரகசிய'த்தில் இருக்கிறது.)

மற்றொன்று: இதுபோலவே மாலை நேரத்தில் விஷ்ணு தன் மனைவியைப் புணர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த பிருகு முனிவர்—மேலும் சென்ற போதும் விஷ்ணு நீங்காமலும், முனிவரை வரவேற்காமலும் இருந்ததால் பிருகு முனிவர் சபமிட்டார். (இதுவும் 'சிவரகசி'யத்தில் இருக்கிறது.)

மற்றொன்று: ஒரு முனிவன் மனைவியை விஷ்ணு கொன்றுவிட்டான். அதனால் அந்த முனிவன் விஷ்ணுவுக்குத் (இராமன்) தன் மனைவியை இழந்து வருந்தும்படி சாபமிட்டான் (இது இராமாயணம், உத்திர காண்டத்திலும்; ஸ்கந்த புராணம் உபதேச காண்டத்திலும் இருக்கிறது.) இந்தச் சாபங்கள் பலவிதமாகும்; தேவர்களுக்காக அதைப் பயன்படுத்திக் கொண்டு மனிதனாகப் பிறந்தார் என்பது இராமாவதாரக் கருத்து.

இந்தப் பிறப்பு—'தசரதனுக்குப் பிள்ளை' என்னும் பெயரால், 'யாகப் புரோகிதப் பார்ப்பனருக்குத் தன் தாய் கர்ப்பமடையப் பிறந்தான்.' அப்படிப் பிறப்பதிலும் பல இழி தன்மை நடப்புக்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. உலக க்ஷேமத்திற்காக இராமனாக விஷ்ணு வந்தான் என்றால் இப்படி ஒழுக்கக் கேடு, இழிவும், அவமானகரமானதும், அசாத்தியமானதுமான நடத்தைகள் ஏன் ஏற்பட்டிருக்க வேண்டும்? இந்த மாதிரி நூல்களால் (அவதாரங்களால்) மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும்? மற்றும், இராமன் யாகக் கொலையைத் தடுத்த தாடகையைக் கொல்லுவது எதற்காக? இதனால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன? மற்றும், இராமன் எதற்காக நாடு கடத்தப்பட்டுக் காட்டுக்குப் போனான்? அவன் நாடு கடத்தப்பட்டதற்குக் காரணம், இராமனின் துரோகமும் இழிதன்மையுமான காரியமும்தானே—இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

அதாவது, அயோத்திய அரசு தசரதனுக்குப் பின் தனக்கு இல்லை என்பதும், அது பரதனுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதும் இராமனுக்குத் தெரியும். அப்படியிருக்க, அயோத்தியின் ஆட்சியை இவன் (இராமன்) இச்சிக்கலாமா?

தகப்பன் அயோக்கியத்தனமாய் நடந்துகொண்டாலும் அவதார புருஷனாகிய இவன் (இராமன்) தகப்பனுக்குப் புத்திசொல்லித் திருத்தவேண்டாமா ?

இவன் எப்படி ஆசைப்படலாம் ? இந்த ஆசையால் மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன ? மற்றும், அரசு கிடைக்காமல் போய்விட்டதே என்று விசனப்படலாமா ? அதற்காக உரியவனாகிய தம்பியையும் தம்பியின் தாயையும் குறை கூறலாமா ? வசவு மொழி கூறலாமா ? இந்தச் செய்கையால் மக்களுக்கு என்ன படிப்பினை கிடைக்கும் ?

இராமன் காட்டில் வசிக்கையில், ' முனிவர்களுக்கு—பிராமணர்களுக்கு எதிரானவர்களைக் கொல்லத்தான்—நான் காட்டுக்கு வந்தேன் ' என்று சொல்லுகிறானே, இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை உண்டாகும் ?

வாலியை முதுகுப்புறம், அவனுக்குத் தெரியாமல் நின்று, அவன் வேறு ஒருவனிடம் போராடிக்கொண்டிருக்கும்போது, அம்பை எய்து கொன்றானே—இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை, ஒழுக்கம், வீரம், ஏற்படக்கூடும் ?

தன் ஆட்சியில் உள்ள குடிமகன் ஒருவன் (சம்புகன்), 'பார்ப்பானைக் கடவுளாக வணங்காமல்—கடவுளை நேரில் வணங்கிப் பயன் பெற முயற்சித்தான்' என்று அவனைத் துண்டு துண்டாக வெட்டிச் சித்திரவதை செய்தானே, இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை ஏற்படக்கூடும் ?

இராமனால் கொல்லப்பட்ட ஒரு மனிதனின் தாயாரை, அவள் ' தன்னைப் புணரும் படி கேட்டாள்—பலாத்காரத்தில் பிரவேசித்தாள் ' என்று ஒரு இராஜ ஸ்திரீயை—மூக்கும், முலையும், காதும் அறுக்கச் செய்தானே, அதனால் மக்களுக்கு என்ன ஒழுக்கம், படிப்பினை ஏற்பட முடியும் ?

இராவணனோடு சீதை பத்து மாதம் அவன் அரண்மனையில் அந்தப்புரத்தில் இருந்ததும், அவனுக்குச் சீதை கர்ப்பமாகி இருந்தது தெரிந்ததும், அவளைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து—பிறகு அவளைக் கண்ணைக் கட்டி ஆளில்லாத காட்டில் கொண்டுபோய் விட்டுவரச் செய்ததால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன ?

கடைசியாக, இராமன் எல்லா மக்களைப் போலவே ஆற்றில் இறங்கிச் செத்து, மேல் உலகம் போனான் என்பதனால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன ?

இவ்வளவு பயனற்றதும் கேடானதுமான கருத்தை வைத்து ஒரு கதையை—அதுவும் மற்றொரு (கந்த புராண) கதையிலிருந்து எடுத்துக் கொண்ட கதையைக் கடவுளுடன் சம்பந்தப்படுத்தி மத நூலாக்கி, இலக்கியமாக்கி கடவுள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தி, உலக மக்களையே மடையர்களாக்கி—அதை வேதசாரம் என்று கூறி 'பக்திக்காக', ஒழுக்கத்திற்காக—மக்கள் படிக்க வேண்டும் என்றால், இது எவ்வளவு பெரிய மோசடியான காரியம் என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

மேலும், இராமன் மனிதனாகப் பிறந்தான் ; சீதை மனுஷியாகப் பிறந்தாள், இராமன் தம்பிமார் மனிதராகப் பிறந்தார்கள் என்று எழுதிவிட்டு இவர்கள் 1000 வருஷம் 10,000 வருஷம் வாழ்ந்தார்கள், அரசு செலுத்தினார்கள் என்று அதில்—இராமாயணத்தில் எழுதி இருப்பது எப்படிப் பொருத்தமானதும் உண்மையானதுமாக இருக்கமுடியும் ? அறிவாளிகள் சிந்திக்கவேண்டும்.

['விடுதலை'—தலையங்கம்—22-6-1972]

I புராணம்

'புராணம்' என்ற சொல்லுக்குப் பழங்கதை என்பது பொருள். 'புராணா' என்றால் பழையது என்பதுதான் அகராதிப் பொருள்.

இந்தி மொழியிலும் வடமொழியிலும் நூதனம்–நூதனமானது என்ற சொற்களுக்குப் புதியது, புதியவை என்பதுதான் பொருள். அதுபோலவே புராதனம்–புராதனமானது என்ற சொற்களுக்குப் பழையது, பழமையானது என்பதுதான் பொருளாகும்.

இந்தக் கருத்தில்தான் நமது புராணங்கள் எல்லாம் ஆக்கப்பட்டிருக்கின்றன. நமது புராணங்கள் எல்லாமுமே சுமார் 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்கு உள்ளாகக் கற்பிக்கப்பட்டவைகளேயாகும். அவை பெரிதும் நமது கடவுள்களைப் பற்றியவையேயாகும்.

3. புராணங்கள்

1. அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை

ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுகிறபோது முழுதும் உண்மையாய் இருக்காது என்று சந்தேகப்படுகிற காலத்தில் 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கின்ற விவரம் அனேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டுபிடித்த முடிவைச் சொல்லுகிறேன்.

'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்பதானது அய்ந்து விஷயம் சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும்; அப்படி இருந்தாலே போதும் என்கிற கருத்துக் கொண்டே இப் பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்ப்போமானால், ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புளுக ஆரம்பித்த காலத்தில் அப் புரட்டுகளை யாராவது கண்டுபிடித்துக் கேட்க ஆரம்பித்தால், அய்ந்துக்கு இரண்டு பழுதில்லாமல்—அதாவது முன் சொன்னதுபோல்—அய்ந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமாயிருந்தாலே போதுமென்றும் அதை நம்பவேண்டியதுதான் என்றும் சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள்.

அந்தப் பழமொழியின் ஆதாரத்தைக்கொண்டுதான் ஜனங்கள் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், சாதகம், ஆரூடம், சகுனம், சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை, அருள்வாக்கு என்பவைபோன்ற மூடக்கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில், இவைகளில் எவ்வளவு பாகம் பொய்யாய்ப் போய்விட்டாலும், அதை நம்பிக் கெட்ட மூடர்கள் பார்ப்பனர்களைச் சமாதானம் கேட்க ஆரம்பித்தால்—அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா, இல்லையா–என்று பார்க்கவேண்டுமே யொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாத்திகத் தன்மை ஆகிவிடும்; கடவுளிடத்தில் நம்பிக்கையற்ற தன்மையாகிவிடும்' என்று சொல்லி ஏமாற்றிவிடுவார்கள்.

ஆனால், 'அவற்றுள் 'அய்ந்து' என்ற எண்ணிக்கையும் 'இரண்டு' என்ற எண்ணிக்கையும் எப்படிக் குறிப்பாய் வந்தன; வேறு எண்களைச் சொல்லக் கூடாதா?' என்று சிலர் கேட்கக்கூடும். இம் மாதிரிக் கேள்விகளுக்கெல்லாம் பதில்சொல்வது அனாவசியமாகும். ஏனெனில், ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாக வேண்டும். அப்படிச் சொல்லும்போது இந்த இரண்டு எண்களைமட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும், இந்த இரண்டு எண்களுக்குக் குறிப்பான சமாதானம் இல்லாமல்போகவுமில்லை.

அதாவது, பார்ப்பன மொழியில் ஒரு தோத்திர ஸ்லோகமுண்டு. என்னவென்றால், 'அகல்யா, துரோபதா, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா பஞ்சகன்யாஸ்மரே நித்தயம் மகாபாதக நாசனம்.' இதன் கருத்து: 'அகல்யை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய அய்ந்து கன்னிகைகளைத் தினம் நினைத்தால் மகாபாதகமெல்லாம் நாசமாய்விடும்' என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான், 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி உண்டாக்கப்பட்டது. விவகாரத்தின் தன்மையாவது:—

கோபமில்லாமல் பகுத்தறிவோடு கேட்கவேண்டும். ஏனென்றால், கோபம்வந்தால் பார்ப்பான் ஏமாற்றிவிடுவான். கோபமில்லாவிட்டால்தான் அதிலிருக்கும் இரகசியம் விளங்கும். நான் கிளப்பப்போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப் பார்ப்பான் எழுதினானோ அந்தப் பார்ப்பான் எழுதிவைத்த சங்கதியைத்தான் சொல்லப்போகிறேன். ஆதலால், நான் என் உத்தேசப்படி சொல்லப்போவதாக நினைத்து ஏமாந்துபோகாதீர்கள்.

இதில் கண்டிருப்பது வாஸ்தவமா, இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். உண்மை அல்லவென்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது, அந்த ஸ்லோகத்தில் மேற்கண்ட அய்ந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. கன்னி என்றால் கலவி அறியாதவள்—அதாவது புருஷர்கள் சகவாசம் தொடங்காதவள்—கலியாணமில்லாதவள்—இன்பத்தைப் பருகாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு, 'இந்த ஸ்லோகத்தில் மேற்படி பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து, கன்னித் தன்மையை உத்தேசித்தல்ல; அவர்களுடைய கற்புத் தன்மையைப் பற்றியதே' என்று சமாதானமாகச் சொல்ல வருவார் களானால் அதையும்பற்றிச் சிறிது யோசிப்போம்.

இந்த அய்ந்து பெண்களையும் நான் (1) தாரை, (2) அகலிகை, (3) துரோபதை, (4) சீதை, (5) மண்டோதரி என்கின்ற வரிசையில் எடுத்துக்கொள்கிறேன்.

தாரை என்பவள் தேவ குருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்த அம்மாளைப்பற்றிய விவரம் அறிவதற்குக் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்ப்பயணம் போகவேண்டியதில்லை. இன்றைக்கும் தெருத்தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்றுகொண்டு சந்திரனுக்கு எண்ணெய் தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தைத் தினம்தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டுபேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டு பேருக்கு மாகப் பிறந்த குழந்தை 'புதன்' என்பவன் இருப்பதுவும் மேற்படி பார்ப்பனர்களின் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே, குருவின் யோக்கியதை, குருபத்தினியின் யோக்கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆஸ்ரமத்தின் யோக்கியதை, ஆரிய நாகரிகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதையெல்லாம்விடக் கற்பின் இலட்சணத்திற்கும் இது ஓர் ஆரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலியை அம்மாள் விஷயம். இவள் கவுதம முனிவர் என்கின்ற ஒரு ரிஷியின் பெண்டாட்டி. தெய்வராஜனான இந்திரன் இந்த அம்மாள்மேல் ஆசைப் பட்டு, மாறுவேஷம் பூண்டு, வீட்டிற்குள் நுழைந்ததாகவும், பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு இரண்டுபேரும் சுகித்ததாகவும், ரிஷிக்கு இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அத் தண்டனையால் இந்திரனுக்குச் சரீரமெல்லாம் பெண்குறியாகவும், அகலியை கல்லாகவும் ஆகிவிட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்ல வில்லை. 'அய்ந்தாம் வேதம்' என்று சொல்லப்படுவதாகிய இராமாயணம், பாரதம் முதலியவைகளில்தான் இந்த உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் தேவர் களின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றன.

மூன்றாவதாக துரோபதையம்மன் சங்கதி. இந்த அம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு, பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டி யாக இருந்துவந்திருக்கிறாள். அய்ந்துபேர்களிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனத்தில் நினைத்து, நினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதைத் தானே ஒப்புக்கொண்டதல்லாமல்—உலகத்தில் பெண்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமானால் ஆண்மக்களே இருக்கக்கூடாது என்று தீர்ப்பும் கூறிவிட்டாள். இதனால் அக் காலத்திய கற்புக்கு இலட்சணம் புருஷனும், மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னாலும் போய்த் தான் ஆகவேண்டுமென்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும், பிறகு தன் இஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக் கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே, அய்ந்து கன்னிகைகளில் மூன்று

பேர் சங்கதி இப்படி இருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் பார்ப்பனர்கள் அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை என்று சொல்ல—அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக் கழிக்கவேண்டியதாகத்தான் இருக்கின்றது. அடியோடு கழிக்காவிட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத்தீரவேண்டியதாகத்தான் இருக்கிறது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதியைப் பார்த்தால், முன்சொன்ன கதைகளின் படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் 'உத்தம ஸ்திரீ' என்றோ, முழுதும் பரிசுத்தமானவளென்றோ, கற்புக்கரசி என்றோ சொல்லுவதற்கில்லை. குணவிசேஷத்தைப் பற்றியோவென்றால் மாயமானைத் துரத்திக்கொண்டு இராமன் போனகாலத்தில் வெகுநேரம்வரை திரும்பி வராதது கண்டு புருஷனைப்போய்ப் பார்த்துவரும்படி சீதை இலட்சுமணனுக்குச் சொல்ல, இலட்சுமணன், 'போகவேண்டிய அவசியமில்லை; இராமர் எப்படியும் திரும்பி வருவார்' என்று சொன்னதற்கு, 'அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா?' என்று சொன்னதிலிருந்தே இலட்சுமணனிடம் பழகிய சீதைக்குப் போதிய அறிவும், உயர் குணமும், விஷயத்தை அறியும் சக்தியும் இல்லையென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகின்றது. தவிர, சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகிய அவன் புருஷனாகிய இராமனும் பல தடவை சீதையின் கற்பில் சந்தேகப்பட்டிருக்கின்றான். அதாவது, இராவணனைக் கொன்றபின் முதன்முதல் சீதையை ஒரு தடவை சந்தேகப்பட்ட போது சீதையிடம் என்ன சொல்லுகின்றான் என்றால் 'ஏ, சீதை! நான் உன் மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக்கொண்டு போவதற்காக இராவணனிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால், ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக்கொண்டு போய்விட்டால் அவனைச் சும்மா விட்டுவிடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோஷத்தின்மேல்தான் சண்டை போட்டு அவனைக் கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில் அதுவும் அவனுடைய அதிகாரத்துக்கும் பலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்த தன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக் கொள்வானா?' என்று சொன்னதோடல்லாமல் 'சகல வசத்திலும் அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன் இஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். கோபத்தால் சொல்லவில்லை; நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது' என்று சொன்னான். (இந்த இடத்தில் இராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படிச் சொல்லவில்லை. தானே சந்தேகப்பட்டு ஒருவித முடிவு செய்துகொண்டு சொல்லுகிறான் என்றுதான் அர்த்தம்). அதோடு 'பத்து மாதம் எதிரி வீட்டில் வசித்த நீ' என்றதால் இதுவரை 'உயிர் வைத்திருந்தாயே' என்கிற கருத்தும் தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் என்னவென்றால், 'ஏ! ராமா! நீ சொல்லுவது உண்மை! அதற்கு நான் என்ன செய்யட்டும்! நானோ ஒரு பெண். ஒண்டியாயும் அனாதையாயும் இருந்தவள். இராவணனோ இராட்சதன்; அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப் பார்த்தேன். எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்கின்ற ஆசை இருந்ததா? விதியை நேரகவேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகந்தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய, என் இருதயம் அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருந்தது; இருக்கின்றது. சுதந்திரமற்ற நான் என்ன செய்ய முடியும்? நீ அனுமானை அனுப்பி நான் இருக்குமிடத்தையும், ஸ்திதியையும் அறிந்துவரச் சொன்னதின் மூலம் நான் இலங்கையில் இராவணனுடைய வீட்டில் இருப்பதாகத் தெரிந்த உடனே என்னை ஏன் தள்ளிவிடவில்லை?' என்றுதான் சொன்னாள். (இது வால்மீகி இராமாயணம் யுத்த காண்டம் 117, 118-வது சருக்கங்களில் காணப்படுவது.)

இந்த இடத்தில் இராமன் சீதையைப் பார்த்து, 'நீ கற்பழிந்துவிட்டாய் என்று நான் தீர்மானித்துவிட்டேன்' என்று வெளிப்படையாய்ச் சொல்லிக் காட்டியதற்கு, சீதை ஏன், 'அப்படி ஒன்றும் நடக்கவில்லை' என்று தைரியமாய்ச் சொல்லி இருக்கக்கூடாது என்கின்ற கேள்விக்கு—பதில் இல்லை. அதோடு, 'என் சரீரம் அவன் வயப்பட்டு விட்டது; ஆனால், அப்போதும் மனம் உன்னிடம்தான் இருந்தது. விதியை நோக வேண்டுமேயொழிய, என்னை நோகக்கூடாது. இராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்துவிட்டு வந்து சொல்லி இருப்பானே—அப்போதே ஏன் என்னைத் தள்ளி விட்டதாகச் சொல்லியனுப்பவில்லை?' என்பதாகவெல்லாம் சீதை சொல்லுவதனால் விஷயம் சந்தேகத்திற்காவது இடமுண்டாகின்றதா, இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு சமயம் இராவணன்மீது அதிகமான பழியைச் சுமத்த, வால்மீகி வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால், அது வேறு விஷயம். என்னவென்றால், அது இராவணன் சங்கதியைப்பற்றிப் பேசும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இந்த இடத்தில் கற்பைப்பற்றிப் பரீட்சிப்பதால், வால்மீகி வார்த்தையில் இருந்தும், சாத்தியத்தில் இருந்துந்தான் பேசவேண்டும்.

தவிர, மற்றொரு தடவை, வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, கொஞ்சமுங்கூட முன்பின் யோசிக்காமல் திடீரென்று இலட்சுமணனைவிட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டுவந்ததும் அங்கு சீதை தன் கற்பைப்பற்றி யார் என்ன சொல்லிவிடப் போகிறார்களோ எனப் பயந்து 'இலட்சுமணா இதோ பார்! நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன்' என்று சொன்னதும்; காட்டில் இரட்டைப் பிள்ளைகள் பெற்றதாக ஓர் இராமாயணத்திலும்; தர்ப்பையைக் கிள்ளிப் போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு இராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்தப் பிள்ளைகளை இராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவசிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல்—மறுபடியும் சீதையை நெருப்பில் இறங்கும்படி சொன்னதும், அதற்குச் சீதை கட்டுப்படாமல், உலக அபவாதத்தை நிவர்த்தி செய்யவேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து, பூமியில் இறங்கி மறைந்து விட்டாள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னவோ இருந்தாலும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே, சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு, சீதையின் இலட்சுமித் தன்மையும் இராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களும், அக் காலத்திய ஆண் பெண்கள் வாழ்க்கை நிலையையும் வெளியாக்கவும் உதவுகின்றது.

கடைசியாக, மீதி இருப்பது அய்ந்தாவதான மண்டோதரி அம்மாள். இந்த அம்மாள் விஷயத்தில் ஒரு தகராறையும் காணோம். கம்பராமாயணத்தில், புருஷன் பிரிந்தவுடன், 'செத்து விட்டான்' என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டு விட்டதாகக் காணப்படுகின்றது.

தவிரவும், செத்துப்போன இராவணனைப் பார்த்து, அழும்போது 'சீதை குலத்திலாவது, ரூபத்திலாவது, குணத்திலாவது, சாமர்த்தியத்திலாவது என்னைவிடச் சிறந்தவளா?' என்று மாத்திரம் கேட்டிருக்கின்றாள். இது, சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால், இதில் மண்டோதரிபேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால், சீதையின் குணந்தான் வெளியாக்கப்பட்டதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆதலால், மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல ஏதுமில்லை. அவள் கற்புள்ள பெண்என்றே சொல்லலாம். இது திராவிட நாகரிகத்துக்கும், திராவிடர் சிறப்புக்கும் இலக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.

பொதுவாக 'பஞ்ச கன்னிகை'களின் யோக்கியதையைப் பார்க்கின்றபோதும் கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்றபோதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கின்றபோதும், நன்றாய்க் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு— அய்ந்துக்கு இரண்டாவது சுத்தமாய்த் தேறுகின்றதா என்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குருபத்தினியின் சங்கதியையும்—சிஷ்யனின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இரண்டாவது விஷயம், தேவர்களுக்கெல்லாம் அரசனாயிருக்கிறவன் யோக்கியதையையும், ரிஷி பத்தினியின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டு விஷயங்களும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதை யாவது காட்டின. மூன்றாவது விஷயமோ, புருஷனும் ஒப்புக்கொண்டான்; மாமியும் ஒப்புக்கொண்டாள்; சகோதரர்களும் ஒப்புக்கொண்டார்கள்; உலகமும் ஒப்புக்கொண்டது என்பதைக் காட்டிற்று. நாலாவது விஷயம், அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று.

மிஞ்சியது 'இராட்சசர்கள்' என்றும், 'இராட்சச ஸ்திரீகள்' என்றும்—ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களைச் சொல்லுகின்றார்கள், சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதையும்; ஒரு திராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்தப் பழமொழி ஒன்று, உலகத்தை ஏமாற்றச் செய்திருக்கவேண்டும்; அல்லது இது அவர்களின் பழக்க வழக்கமாய் இருக்க வேண்டும். ஆகவே, அய்ந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மையில்லை என்பதும், ஏதாவது உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில்தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது எப்படி அவர்கள் அக்கிரமங்களை மறைத்துக்கொண்டும், பெருமையாய்ப் பிரச்சாரம் செய்துகொண்டும் நம்முடைய யோக்கியமான காரியங்களைக் குற்றம் சொல்லிக் கொண்டும், அதற்கு நம்மவர்களையே கூலிகளாக அமர்த்திக்கொண்டும் வேலை செய்து வருகிறார்களோ—இதுபோல்தான், இந்தப் பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்கள் முன் காலத்திலும் செய்துவந்திருக்கின்றார்கள் என்பதோடு, நம்முடைய பாமர ஜனங்கள்— இவர்களை அப்போதும், இப்போதும் நம்பி ஏமாந்து வருகிறார்கள் என்பதும் அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை என்னும் வியாசத்தின் மூலம் உண்மை வெளியாக்கப்பட்டது.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் கட்டுரை-'குடி அரசு'—11-12-1927]

2. ஒரு யுக்தி ஆராய்ச்சி

மனுதர்ம சாஸ்திரக் கொள்கைகளையும், ஆரிய ஆதிக்கக் கொள்கைகளையும் கதை ரூபமாகவும், பக்தி ரூபமாகவும், கடவுள் செய்கை, கடவுள் வாக்குகள் ஆகியவை என்பதன் மூலமாகவும் திராவிடர்களுக்குள் புகுத்தச் செய்யப்பட்ட சாதனங்கள் தாம்—புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளும்; தேவார திருவாசகங்கள், பிரபந்தங்கள் ஆகியவைகளும் ஆகும் என்பது எமது கருத்து. இந்தக் கருத்துக்கு உதாரணங்கள் அவைகளிலேயே இருக்கின்றன.

அவதாரம்: விஷ்ணு அவதாரங்கள் அத்தனையும் ஆரியர்களின் எதிரிகளை அதாவது, மனுதர்மத்துக்கு விரோதமாகவும் ஆரிய ஆதிக்கத்தை ஒடுக்கவும் தடுக்கவும் முயற்சித்தவர்களைக் கொல்லவும் அழிக்கவும் சதி செய்யவும் ஏற்பட்டவைகள். அது போலவே சிவன் அவதாரமான சுப்பிரமணியனும், மற்றவர்களும் அதுபோலவே ஆரியரின் எதிரிகளை அழிக்க ஏற்பட்டவைகள். சுருங்கச் சொல்லவேண்டுமானால் சுரர் என்போர் அசுரர், அரக்கர், இராட்சதர் என்கின்றவர்களைக் கொல்ல, அழிக்க வந்தவர்கள் என்றே சொல்லலாம்.

ஆரியர்களின் தனிக் கடவுள் உற்பத்திகளில் சிவன் முதற்கடவுள்; அதாவது முதலில் சிருஷ்டிக்கப்பட்ட கடவுளாகவும், ஸ்கந்தம் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட புராணமாகவும் இருக்கவேண்டும். இவை விஷ்ணுவுக்கும் இராமாயணத்திற்கும் முந்தியவையாகவும் இருக்கவேண்டும். இராமாயணம் சமீபகாலத்தில் கந்தபுராணத்தைப் பார்த்துச் சற்றுத் திருந்திய காலத் திருத்தத்தோடு எழுதியதென்றே சொல்லலாம். பாரதம்கூட இராமாயணத் திற்கு முந்தியதாகவே இருக்கவேண்டும்.

எப்படி ஆயுதங்களில் கல், கவண், ஈட்டி (வேல்), வில், துப்பாக்கி, பீரங்கி, வெடி குண்டு, விஷப் புகை ஆகியவை ஒன்றிற்குப்பின் ஒன்று வரிசைக் கிரமமோ அது போலத்தான்.

முதலில் சிவன் கந்தபுராணம்; பிறகு விஷ்ணு சம்பந்தமான புராணங்கள்—பாரதம், இராமாயணம் ஆகியவை என்று சொல்லவேண்டும். சுரர், அசுரர் என்பவையெல்லாம், ஆரியர்—ஆரியரல்லாதார் என்பதற்கு முதலில் ஏற்படுத்திக் கொண்ட (இட்ட) பெயர் களாகவும்; தேவர்கள், இராட்சதர்கள் என்பவை பின்னால் ஏற்படுத்திக் கொண்ட பெயர் களாகவும் தெரிகின்றன.

சிவன் முதற் கடவுள் என்பதற்கும், கந்தபுராணம் முதல் புராணம் என்பதற்கும் உதாரணம் என்னவென்றால்,

சிவன் கற்பிதம் மிகப் பழைமையான, காட்டுமிராண்டி காலத்தியதாக இருக்கின்றது. அதாவது, தலை சடையாகவும்; ஆடை மிருகத்தின் தோலாகவும்; அணி (நகை) பாம்புகள், எலும்புகளாகவும்; புஷ்பம் கொன்றை, எருக்கம் பூக்களாகவும்; பாத்திரம் மண்டை ஓடும்; ஆகாரம் தேன், தினைமாவு, கொழுக்கட்டையாகவும்; ஆயுதம் 1-வது மழு, 2-வது சூலம்; இடம் மலை; விளையாடுவது சுடலை; பூசிக்கொள்வது சாம்பல்; ரூபம் (சாயல்) அகோரம்; வாகனம் மாடு; குணம் வெளிப்படையான ஹிம்சை; நடனம் காட்டுமிராண்டி ஆட்டம்; சங்கீதக் கருவி உடுக்கை; பெண்சாதி இதுபோன்ற கோர ரூபமுள்ள காளி; அவள் வாகனம் சிங்கம்; பிள்ளைகள் ஒன்றுக்கு ஆறுமுகம், மற்றொன்றுக்கு யானைத் தலை—விகாரரூபம்.

இந்த மாதிரியாகக் காட்டுமிராண்டித் தன்மைக்கு ஏற்றபடியாகவும், காட்டுமிராண்டி காலத்திய எண்ணங்களின்படியாகவும் கற்பிக்கப்பட்டிருக்கிறபடியால்—சிவன்தான் முதலாவ தாகச் சித்திரிக்கப்பட்ட கடவுளாக இருக்கவேண்டும் என்பது விளங்கும்.

அதுபோலவே, கந்தபுராணம் என்பதும் வைணவ புராணங்களைவிட முந்தியதாகவே இருக்கவேண்டும். ஏன் எனில், கந்தனின் உற்பத்தியை ஆபாசமான முறையில் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஆயிரதேவ வருஷம் (அதாவது பலயுக காலம்) சிவன் புணர்ந்ததால் ஏற்பட்டான் என்றும்; இந்திரியத்தை ஆற்றில் விட்டதால் ஏற்பட்டான் என்றும்; அந்த மிஞ்சின இந்திரியந்தான் என்றும், நெற்றிப் பொறியில் தோன்றினான் என்றும் மற்றும் பலவித ஆபாசமானதும், அசம்பாவிதமானதும், சிறிதும் அறிவற்றதுமான வழியில் உற்பத்தி யானதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

கந்தபுராணத்தில் வரும் பாத்திரங்கள் அக்கினிமுகன், சிங்கமுகன், ஆட்டுமுகன் முதலியன இயற்கைக்கு மாறுபட்டவைகள். யுத்தமுறை—இந்திரன் குயிலாக மாறினான்; சூரன் சக்ரவாகப் புள்ளாக (குருவியாக) மாறினான்; இந்திரன் மயிலாக வந்தான்; தீ, காற்று முதலிய உருவுடன் தோன்றினான்; வேலால் குத்துதல்—சேவலாக ஆகிவிடுதல் முதலியவை எல்லாம் காட்டுமிராண்டிக் காலத்திய கற்பனைகளேயாகும்.

இந்திரனுடைய நிலைமையும், இராமாயணத்தில் காட்டப்பட்டிருக்கும் இந்திரனை விடக் காட்டுமிராண்டித் தன்மை கொண்டதாகவும் சித்திரிக்கப்பட்டு இருக்கின்றது.

['குடி அரசு'—கட்டுரை—1-7-1944]

3. புராணங்கள்

நம் நாட்டில் நமது இனத் துரோக-ஈன வயிற்றுப் பிழைப்புக் கூத்தாடிகள் பலர், புராணங்களை நாடகமாக நடித்து நம் சமுதாயத்துக்கே பரம எதிரிகளான பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் வாழும் இழி தன்மையையும்; பாடகர் என்போர் பலர் புராணக் கதைகளின் கருத்துக்களையே பாட்டுக்களாகப் பாடி வயிறு பிழைப்பதையும் பார்த்து வருகிறோம். இப்படிப்பட்ட மக்கள் நம் திராவிட சமுதாயத்தில்தான் பலர் இருக்கிறார்களே யொழிய மற்றபடி பார்ப்பன சமுதாயத்திலோ, இஸ்லாம் சமுதாயத்திலோ, மற்ற சமுதாயத்திலோ இல்லை. இந்த இழிநிலையை மாற்றாது—பொருள் வருவாயே நோக்கமாகக் கொண்டுள்ள நாடக முதலாளிகளும், நடிகர்களும் நாட்டுக்குக் கேடுதான் செய்கிறார்கள்.

திராவிடப் பொதுமக்கள் மனம் வைத்தால் புராண நாடகம், சினிமா ஆகியவற்றைப் பார்ப்பதை நிறுத்த வழி ஏற்படும். எப்படி ஒரு பார்ப்பனனைச் 'சாமி' என்று கூப்பிடுவதும், அவனைக் கண்டால் நாமாகவே கையெடுத்து அவனுக்கு முன்னதாகக் கும்பிடுவதும், நம் மனத்திற்கு மிகமிக அவமானமாகவும் கஷ்டமாகவும் காணப்படுகிறதோ—இதுபோல், சுயமரியாதை உணர்ச்சி, மானமுள்ள திராவிடமக்கள் புராண நாடகங்களுக்குப் போவதை நிறுத்தி, இன உணர்ச்சி ஊட்டும் நாடகம், சினிமாக்களுக்குச் செல்லுவதென்று வைத்துக்கொண்டால் இரண்டொரு வருடத்தில் நாடக உலகமும், இசை உலகமும் நல்ல பகுத்தறிவும் சுயமரியாதையும் ஊட்டும்படியான பல கிருஷ்ணன்களையும் இராதாக்களையும் உண்டாக்குமென்பதில் அய்யமென்ன!

மேலும், நமது பெண்களுக்கு நகையிலும் துணியிலும் சிங்காரிப்பிலும் இருக்கிற உணர்ச்சி, அவர்களது இழிவு நீங்குவதிலும் மானத்திலும் சிறிதாவது ஏற்பட்டு, புராணக் கதை, நாடகம், சினிமாக்களுக்குப் போகாமலும் சீர்திருத்தமான நாடகங்கட்குச் செல்லுவதுமான காரியங்களில் திரும்புமானால்—வெகு சீக்கிரத்தில் திராவிட சமுதாயம் நல்ல மானமுள்ள சமுதாயமாக ஆகிவிடுமென்பதில் தடையென்ன இருக்கமுடியும்?

வால்மீகி இராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் மிகுந்த வேறுபாடுகள் இருக்கின்றன. வால்மீகி—இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியவர்களை மிகவும் கீழ்த்தரமாகவும் இழிவாகவும் சிருஷ்டித்திருக்கிறார். இதை மாற்றவே, பார்ப்பனர், கம்பன் என்னும் இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு பிழைக்கக் கருதிய ஈனப் பிராணியைப் பிடித்து—இப் பாத்திரங்களை உயர்ந்தவர்களாக மாற்றச்செய்து, திராவிட மக்களை அடிமையாக்கினார்கள். இக் காரணத்தால்தான் நாங்கள் கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்றும், வால்மீகி இராமாயணத்தின் சரியான மொழிபெயர்ப்பைப் படிக்கவும், நடிக்கவும் சங்கீதமாகப் பாடவும் வேண்டும் என்றும் சொல்லி வருகிறோம்.

கம்பன் மறைத்த செய்திகள் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டலாம். தசரதன் கைகேயியை மணஞ்செய்து கொள்ளும்போதே, அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுத்துவிடுவதாக உறுதி செய்து கொடுத்து விட்டு—பரதன் இல்லாத போது தசரதன், வசிஷ்டர், இராமன் ஆகிய மூவருமே சூழ்ச்சி செய்து பரதனை ஏமாற்றிச் சதி செய்ததையும்; இராமனைக் காட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டவுடன் இராமன் மிகவும் துக்கங்கொண்டு, கோசலை சீதை ஆகியோருடன் விசனப்படுவதையும்; சீதை காட்டுக்குப்போக விரும்பாமல் வருந்துவதையும்; கைகேயி செய்த கட்டாயத்தின் பேரில் இராமன் சீதையைக் கூட்டிக்கொண்டு போவதையும்; சீதையை இராவணன் கலவி செய்துவிட்டதாகவே நன்றாக விளங்கும்படிக் குறிப்புக் காட்டி இருப்பதையும் கம்பன் மறைத்துக் காட்டி—இராமன், சீதை, தசரதன் முதலிய பாத்திரங்களை உயர்த்திக்காட்டி மக்களை ஏய்த்து விட்டான்.

மேலும், புராண நாடகக் கதைகளில் உள்ள முட்டாள்தனமான, முரணான கற்பனை களுக்கும் சில எடுத்துக்காட்டுக்கள் பார்க்கலாம். நல்லதங்காள் பதிவிரதை என்பதைக்காட்ட, அவள் பச்சை வாழை மட்டையை விறகாக வைக்க—அது பற்றி எரிந்தது என்று காட்டு வார்கள். அப்படிப்பட்ட பதிவிரதை வாழ்ந்த நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகள் மழை யில்லாமல் பஞ்சம் வந்திருப்பதாயும், அதனால் நல்லதங்காள் கணவன், குழந்தைகளுடன் நாடு விட்டுப் பிழைக்க வந்ததாகவும் குறிப்பிட்டு—நல்லதங்காள் பதிவிரதையல்ல வென்றும், அவளிருந்த ஊரில் ஒரு பதிவிரதைகூட இல்லை என்று முடிவுகட்டும்படி அதே கதையில் சித்திரித்திருக்கிறார்கள்.

அதுபோலவே, சாவித்திரி–சத்தியவான் கதையைச் சித்திரித்தவன், சாவித்திரியின் கற்பினால்—பதிவிரதாத் தன்மையினால் இறந்துபோன தன் கணவன் உயிரை, எமனுடன் போராடிப் பெற்றுத் தான் விதவையாக ஆகாமல் மாங்கல்ய ஸ்தீரி ஆனதாகச் சித்திரிப்பதில்—இந்த நாட்டில் கணவனைச் சாகக்கொடுத்த அத்தனை பெண்களும் பதிவிரதைகள் அல்லர் என்றும், இன்று நம்நாட்டில் இருக்கும் விதவைகளில் ஒரு பதிவிரதைகூட இல்லை யென்றும், அதனாலேயே சாவித்திரிபோல ஒருத்திகூட எமனுடன் போராடி செத்துப்போன தன் கணவர் உயிரைக் கொண்டுவரமுடியவில்லை என்றும் பிறர் கருதும்படி முட்டாள் தனமாகக் கதை சித்திரித்துவிட்டான்.

மற்றும், 'குசேலோபாக்கியானம்' என்னும் குசேலர் கதையில்—குசேலருக்கு 27 பிள்ளைகள் என்றும், 27 பிள்ளைகள் பெற்று குசேலர் தரித்திரத்தில் துன்பப்பட்டு 27 குழந்தைகளை அழைத்துக் கொண்டு கிருஷ்ணன் (கடவுள்) இடத்தில் சென்று பிச்சை கேட்டதாகவும், கடவுள் ஏராளமாகச் செல்வம் கொடுத்ததாகவும் கதை சித்திரித்த ஆசிரியர் சிறிதுகூடப் பகுத்தறிவைப் பயன்படுத்தவில்லை. ஒருவனுக்கு 27 குழந்தைகள் இருந்தால் அவன் வருஷத்துக்கு ஒரு குழந்தைபெற்று இருந்தால், இருபது வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் நிறைந்த குழந்தைகள் எட்டாக இருந்திருக்கும். இந்தக் குழந்தைகளும் சோம் பேறித் தடியன்கள்போல் ஒரு வேலைக்கும் இலாயக்கில்லாத மாமிசப் பிண்டங்களாகவா இருந்திருக்கக் கூடும்? இப்படி இருபது வயதுக்கு மேற்பட்ட மக்களை வீட்டிலே வைத்துக் கொண்டு ஒருவன் பிச்சைக்குப் போயிருந்தால், அந்த நாட்டில் மற்றவர்களும் இது போலிருந்திருக்க வேண்டாமா? அப்படி இருந்தால், அந்த நாடு எப்படி உருப்படி ஆகி இருக்கும்? இப்படிப்பட்ட சோம்பேறித் தடியர்களுக்குக் கடவுள் செல்வம் கொடுக்கலாமா? இப்படி ஒரு கூட்டம் நம்மிடம் வந்து பிச்சை கேட்டால் நாம் என்ன சொல்லுவோம் என்பதைச் சிந்தியாது, இவ்வளவு முட்டாள்தனத்தைக் கடவுள்மீது ஏற்றின ஆசிரியர் எவ்வளவு அறிவற்றவராக இருக்கவேண்டும்? அற்புதங்கள், அதிசயங்கள் நடந்ததாக எழுதுகிற புளுகு முட்டாள்தனம் ஒருபுறம் இருக்க, இப்படி நியாயமான அறிவு, சிந்தனை, குற்றம் கூறாமல் இருக்கும் தன்மைகூட இல்லாமல் மிகமிக முட்டாள்தனமானதும் குற்ற மானதும் மக்களுக்கு இழிவைத் தருவதுமான கதைகளைச் சித்திரித்தவர் காட்டுமிராண்டிக் காலத்தில் சுய நல இழிதன்மையால் சித்திரித்தார்கள் என்றாலும்—விஞ்ஞான காலத்தில், பகுத்தறிவு வளர்ச்சி காலத்தில் மான உணர்ச்சி, இன உணர்ச்சி தாண்டவமாடுங் காலத்தில் இப்படிப்பட்ட கதைகளை அதுவும் திராவிட மக்களிடையில் திராவிட மக்களாலேயே நடிப்பதும் இசைபாடுவதும்—இதனால் திராவிட மக்களில் பலர் வயிறு வளர்ப்பதும் என்றால், திராவிட மக்களைச் சூத்திரன், அடிமை, தாசி மகன், சுதந்திரத்தையும் மானத்தையும் சிந்திக்கக்கூடாத இழிபிறப்புக் கடைமகன் என்று ஆரியன் எழுதி வைத் திருப்பதை இவர்கள் மெய்ப்படுத்துகிறார்கள் என்றுதானே அர்த்தம்?

இந்தவிதமான நம் இழி தன்மையால், அதாவது இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம் இடம் கொடுப்பதால் நம் பொருள், ரோசம், மானம், அறிவு எவ்வளவு கெடுகிறது என்று கணக்குப் பாருங்கள். இப்பொழுது திராவிட நாட்டில் நாடகக் கொட்டகை, சினிமாக் கொட்டகை, 'டெண்டு' (கூடாரம்) ஆகியவைகள் சுமார் ஒரு ஆயிரத்துக்கு மேலாகவே

புராணக் கதைகள், ஆரிய ஆதிக்கக் கதைகள் நடப்பனவாக இருக்கும். ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இரண்டு தரம் மூன்று தரம் கூடுவார்கள்; 3-மணி நேரமாவது நடத்துவார்கள். தினம் குறைந்தது 5-இலட்சம் ரூபாயாவது செலவாகும். 30 நாளைக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் இந்த அக்கிரமத்திற்குச் செலவாகின்றது. வருடத்திற்கு 18 கோடி ஆகிறது. இதுபோல் புராணக் கதைகள், இலக்கியங்கள், கதா காலட்சேபங்களுக்கு எத்தனை கோடி? இது—அறிவுள்ள நாட்டிற்கு, மானமுள்ள சமுதாயத்திற்கு ஏற்றதா? சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பணத்தில் ஒரு பாகம் கண்காட்சிக்கும் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் செலவு செய்யப்படுமானால் இந்த நாட்டு மக்களாகும் நாம், எவ்வளவு உயர் நிலையில் இருந்திருப்போம்! மேல்நாடுகள் நமக்கு எவ்வளவு பின்னணியில் இருந்திருக்கும்! நாம் இன்னும் இந்தக் காலத்திலும் சூத்திரர்களாய் நாலாவது சாதியாய் இருந்திருக்க முடியுமா? இனி மதம், கடவுள், உற்சவம், பண்டிகை, சடங்கு சனியன் என்பனவாகியவைகளுக்கு எத்தனை கோடி ரூபாய், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம் செலுத்தப்படுகின்றது என்று பாருங்கள்! இவைகளை நிலைநிறுத்தத்தானே இந்தப் புராணக் கதை, நடிப்பு, இசை, காலட்சேபம், படிப்பு பயன்படுகின்றன! அரசியல், பொருளாதார இயல் என்பவைகளைப் பிரதானமாகக் கருதாதீர்கள். அறிவியல், மானவியல், சரிப்பட்டுவிட்டால் அரசியல் கஷ்டம், பொருளாதார இயல் கஷ்டம் தலைகாட்டவே காட்டாது. இந்த இழிவுகளில் ஊக்கம், ஆற்றல், செல்வம் முதலியவைகளை அதிகமாகச் செலுத்தி எதிர்காலத்தைப் பாழ்செய்து கொள்ளாதீர்கள். நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலையில் இருந்து நியாயத் தீர்ப்பு நியாயாதிபதிபோல் கவலையுடன் சிந்தித்துப் பாருங்கள்.

பதவியும், வயிறு வளர்ப்புமே மனித வாழ்வின் இலட்சியமல்ல. மலத்தில் இருக்கும் புழுவும் உயர்வாக இருக்கிறது; தினத்துக்குத் தினம் வளர்ச்சி அடைகிறது; மற்ற ஜீவன்களுக்கு ஏற்படும் இயற்கைக்கு ஆளாகி இயற்கை எய்துகிறது. மனிதனும் அதுபோல் தானா? வாழ்வதும் வளர்வதும்தானா மனித இலட்சியம்? அல்லது, அதுதானா மனிதர்களின் இயற்கை முடிவு. சிந்தித்துப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! மனிதத் தன்மையையும் மான உணர்ச்சியையும்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

இரணியன் கதையானது வைணவ மயமாய்ச் செய்யப்பட்ட கதை. இது இராமாயணக் கதை செய்யப்பட்ட காலத்துக்கு முன்பாகச் செய்யப்பட்டதாகும். இது பாகவதம் என்னும் புராணத்தில்தான் விரிவாகக் காணப்படுகிறது. புராணங்களில் முதலாவது அல்லது முன்னது கந்தபுராணம் என்பதுதான் எனது கருத்து. அதைப் பார்த்துத்தான் இராமாயணம் ஆக்கப்பட்டதாகும். இன்னும் சொல்லவேண்டுமானால், மும்மூர்த்திகள் என்று சொல்லப்பட்ட மூன்று கடவுள்களில் முதல் கடவுள் சிவன்தான். சிவன்தான்—ஆரியர் கற்பனை மாத்திரமல்லாமல், பரிணாமத் தத்துவப்படி பார்த்தாலும்—முதலாவதாகக் கற்பிக்கப்பட்ட கடவுளாக இருக்கவேண்டும். ஏனெனில், சிவன் காட்டுமிராண்டிக் காலத்தில் கற்பிக்கப்பட்ட கடவுள்.

சிவனைப் பாருங்கள்! சடைமுடி, தாடி; கையில் மழு; மிருகம்—காட்டுமிருகம்; தோல் ஆடை; பாம்பு, எலும்பு நகை; மண்டை ஓடு பாத்திரம்; கோரரூபம்; சுடுகாடு இருப்பு; சாம்பல் மேல்பூச்சு; உடுக்கை வாத்தியம்; பழக்கொட்டைகள் விசேஷ அணி; வாகனம்—மாடு; முக்கியமாய் இருப்பது—மலைமேல்; மலையில் இருந்து வடியுந் தண்ணீரைச் சிவன் தலையில் இருந்து வருவதாகக் கற்பனை; ஆகாயத்தில் இருக்கிற சந்திரன், சிவன் தலையில் இருப்பதாகக் கற்பனை; கிரணத்தோடு காணப்படும் சூரியன்—சிவன் கண்களாகக் கற்பனை; இவையெல்லாவற்றையும் காட்டிலும், சிவன் பெண்டாட்டியும் காளி! காலப்போக்குப்படி பார்த்தால் முதலில் கற்பிக்கப்பட்ட கடவுள் கற்பிதந்தான் சிவன் என்பது சாதாரணமாகப் புரியும்.

பிறகுதான் விஷ்ணு கற்பனை என்பதற்கு ஆதாரம் என்னவென்றால்—விஷ்ணு சிறிது நாகரிகம் ஏற்பட்டபிறகு கற்பிக்கப்பட்ட கடவுள் ஆவார். எப்படி என்றால், விஷ்ணுவிற்கு இருப்பிடம் நாடு; உடை (பீதாம்பரம்) உயர்ந்த ஆடை; நகை—உயர்ந்த பொன், மாணிக்கங்கள்; தலையில் கிரீடம்; இலட்சுமி என்கிற செல்வச் சீமாட்டி—மனைவி; சந்தனக் காப்பு; குரங்கு, கருட ஆழ்வார் வாகனம்; பாற்கடலுள் இருப்பு, சயனம்; இந்தப்படியும், இதுபோன்ற மற்ற காரியங்களும் முந்தியதைவிடச் சற்று நாகரிகமாகவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

பிரம்மா என்கின்ற கடவுள் இன்னும் பிற்காலத்தில் கற்பிக்கப்பட்டது என்பதற்கு முன்னையவை இரண்டையும்விடச் சற்று முற்போக்காகவே இருந்துவருவது காரணமாகும். சிருஷ்டிக் கிரமம், கலை அறிவு, கல்வி அறிவு முதலியவைகள் மிகமிக நாகரிகமேற்பட்ட பிறகே தோன்றியிருக்கவேண்டும். இந்தக் கண்கொண்டு—ஜாக்கிரதையாக இந்துக் கடவுள்கள் தன்மையைப் பார்த்தால் கடவுள்கள், புராணங்கள், முதலியவைகளின் பரிணாமத் தன்மை விளங்கும். எனவேதான், முதல் கற்பிதக் கடவுளாகிய சிவனைப் பற்றிய புராணக் கதைகள் காட்டுமிராண்டித் தன்மையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் கந்தபுராணம் எடுத்துக்காட்டு.

பொதுவாகவே கந்தபுராணம், விஷ்ணு சரித்திரப் புராணங்கள் யாவும் ஒரே அடிப்படையைக் கொண்டவையாகும். அதாவது, தேவர்கள்—சூரர்கள், தேவர்கள்—அசுரர்கள், சுரர்கள்—அசுரர்கள், தேவர்கள்—இராட்சதர்கள், தேவர்கள்—தஸ்யூக்கள் என்பதாகச் சரிசம, இரண்டு இனப் போராட்டமே தவிர, வேறு நல்ல சங்கதி மிகவும் அருமையாகத்தான் இருக்கும். எல்லாப் புராணக் கதையும், யுத்தம், நாசம், கொலை ஆகியவைகளின் வருணனைகளையே அதிகமாகக் கொண்டிருக்கும். சைவப் புராணங்களைவிட, வைஷ்ணவப் புராணங்கள், காவியங்கள், மனுதர்ம சாஸ்திரத்தையும் வருணதர்மங்களையும் அவைகளைக் காப்பாற்றப் பெரிய முயற்சிகளையும் அதிக அதிகமாக வலியுறுத்தும்தன்மை கொண்டனவாகக் காணப்படும். சூழ்ச்சி, வஞ்சம், தந்திரம் ஆகிய குணங்களையும் சைவப் புராணங்களைவிட, வைஷ்ணவப் புராணங்கள், கதைகள், தெய்வத் தன்மை, ஆகியவை அதிகமாகக் கையாடி இருக்கும். சிவன் கடவுளைக்கூட முதல் உருவக் கற்பனையில் குழவிக் கல் (லிங்கம்) போல் கற்பிக்கப்பட்டு, பிறகு விஷ்ணு கற்பிக்கப்பட்டார். மனித உருவம், நாகரிகமான மனித உருவம்—அதிலும் சிறப்பாகப் பார்ப்பனன் உருவம் என்பதாகப் படிப்படியாக உயர்ந்துவந்து இருப்பதைக் காணலாம்.

இந்த நிலையில் சைவ, வைணவப் புராணக் கற்பனைகளில் இருக்கும் சில ஒற்றுமையையும் கவனித்துப் பாருங்கள். இதற்குக் கந்த புராணத்தையும் இராமாயணத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு கதைகளுக்கும் உள்ள பொதுக் கருத்துக்கள் பல உண்டு.

மேலும், இந்தப் புராணங்கள் செய்ததன் உட்கருத்து ஆரியர்—திராவிடர்கள் என்ற இரு பெரும் இனத்தைப் பொறுத்துச் செய்யப்பட்டதேயாகும் என்பதற்கு மேலும் சிலச் சில எடுத்துக்காட்டுகள் கூறுகிறேன். ஒரு காலத்தில் தேவர்கள் எல்லோருங் கூடி, தென்னாடு உயர்ந்து விட்டதென்றும் வடநாடு தாழ்ந்து விட்டதென்றும்—இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் யோசித்து, அதைச் சமனாக்க அகத்தியரைத் தென்னாட்டுக்கு அனுப்புகிறார்கள். அகத்தியர் தென்னாடு வந்து இராவணனைத் தென்னாட்டை விட்டு ஓட்டி, இரு நாட்டையும் சமனாக்குவிக்கிறார் என்பது தொல்காப்பியக் கதையில் காணப்படுவது.

இதைவிட முக்கியமான கருத்தொன்று காணப்படுவது யாதெனில்—கயிலையில் சிவபெருமானுக்குத் திருமணம் நடக்கும்போது தென்னாடு உயர்ந்தும், வடநாடு தாழ்ந்தும் இருப்பதைக் கண்டு, சிவபெருமான், அதைச் சரிப்படுத்த அகத்தியரைத் தென்னாட்டுக்கு அனுப்புகிறார். அகத்தியர் தென்னாடு நோக்கி வருகையில் விந்தியமலை தடுக்கின்றது.

அந்த விந்திய மலையானது தேவர்களில் யாரையுந் தென்னாட்டுக்குள் விடாமல் தடுத்து வருகிறதாகத் தேவர்களும் அகத்தியரிடம் முறையிடுகிறார்கள். அகத்தியர் விந்தத்தை அடக்கி, தென்னாடு வந்து இராவணனைத் தென்னாடு ஆளாமல் கட்டிப் பிணித்தார் என்று புராணங் கூறுகிறது.

இதற்கு மத்தியில் மற்றொரு கதை. அதாவது, தென்னாட்டு எல்லையில் வாதாபி, வில்வலன் என்ற இரு அசுரர்கள், அதாவது பத்மாசூரனின் தங்கையான அசமுகியின் புத்திரர்கள் தென்னாட்டுக்குள் பிரவேசிக்கும் வேதியர்கள் (ஆரியர்கள்) முதலியவர்கள் எல்லோரையும் உள்ளே விடாமல் கொன்றுகொண்டே இருக்கிறார்கள் என்பதையும் வேதியரும் ரிஷிகளும் அகத்தியரிடம் முறையிடுகிறார்கள். அகத்தியர் இதற்குப் பரிகாரமாக வாதாபியைக் கொன்றுவிட்டு, வில்வலனை அடக்கி வெற்றி கொண்டு, ஏராளமான பொருள்களை அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டு தென்னாடு நுழைகிறார் என்பதாக இதிகாசங்கள் கூறுகின்றன.

இப்படியாக இன்னும் பல சம்பவங்கள்—அதாவது தேவர்களுக்குப் பல அசுரர்கள் விருத்திகர், சூரன், சம்பரன், சம்பார் சூரன் முதலிய பல அசுரர்கள் தேவர்களை வருத்தியவர்கள் என்றும்; அயக்கிரீவாசுரன், இரணியன், இராவணன், சுந்தோட சுந்தன் முதலாய எண்ணிறந்த அசுரர்கள், அரக்கர்கள், இராட்சதர்கள் எல்லோரையும் ஒரு பக்கமாகவும்—தேவர்களை ஒரு பக்கமாகவும் வைத்து எழுதப்பட்டவைகளேயாகும்.

இதில் சைவம், வைணவம் என்கின்ற கருத்து வேற்றுமையே இடையே இல்லாமல் ஏற்படுத்திக் கற்பிக்க வாய்ப்புச் செய்து கொண்டு கற்பிக்கப்பட்டவைகளேயாகும். இவைகளின் கருத்தையே உதாரணமாகப் பிரமாதமாகக் கொண்டு ஆரிய நீதிசாரத் திரட்டுகளும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

திராவிடர்கள் இவற்றின் உள் தத்துவத்தைக் கண்டு அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டுமென்பதே நம் கட்டுரையின் கருத்தாகும்.

['பொன்னி' பொங்கல் மலர்—சனவரி, 1948]

4. கந்தபுராணமும் இராமாயணமும்

இது, கந்தபுராணமும்—இராமாயணமும் ஒரே கற்பனைக் கதையைச் சைவம், வைணவம் ஆகிய இரு சமயக்காரர்களும் தங்கள் தங்கள் மதச் சார்பாக ஏற்படுத்திக் கொண்ட புராணங்களேயாகும் என்பதை, விளக்குவதற்காக எழுதப்பட்டதாகும். 'புராணம்' என்ற சொல்லுக்குப் 'பழங் கதை' என்பதே அகராதிகளில் காணப்படும் பொருளாகும். பொதுவாகப் புராணங்களை எழுதியவர் வியாசர் என்று—அதாவது 'புராண கர்த்தா வியாசர்' என்று புராண ஆதாரங்கள் பலவற்றிலும் அறியக்கிடக்கின்றது.

இவற்றுள் கந்தபுராணம் (காந்தம்) என்பது—சிவமூர்த்தி நந்திக்குச் சொன்னதாகவும், நந்தி சனத்குமாரர்க்கு உபதேசித்ததாகவும், அவர் வியாசருக்கு உபதேசித்ததாகவும், வியாசர் சூதருக்கு உபதேசித்ததாகவும், இறுதியாக சூத முனிவரால் எழுதப்பட்டவை புராணங்கள் என்றும் முடிகிறது.

பொதுவாக வியாசன் என்றால், 'வியாசம் எழுதுபவன்'; 'வியாசத்திற்கு உடையவன்'—வியாசன் என்பது தத்துவப்பொருள். இந்தக் கருத்தை வடமொழிப் புலவரான திரு. கே. எம். முன்ஷி பாரத இதிகாச சமிதி நூல்களில் குறிப்புக் காட்டி இருக்கிறார்.

பொதுவாகப் புராணம் என்கிற வடமொழிச் சொல்லுக்குப் பொருள், 'பழங்கதை' என்பது மாத்திரமல்லாமல், புராணம் என்றாலே 'மிகப் பழைய' என்ற பொருளுமாகும். மற்றும், 'நவ' என்பதற்கு நேர் எதிர்மறைச் சொல் 'புராண' என்பதாகும். நவ (நவம்) என்றால் புதியது; புராண (புராணம்) என்றால் பழையது என்பதுதான் வடமொழி அகராதிப்பொருள். ஆகவே, பழங்கதை என்கின்ற முறையில் சைவ மதபரமாகத் தொகுக்கப்பட்ட ஒரு பழங் கதையை—அதற்குப் புராணம் என்பதாகப் பெயர் சூட்டி வடமொழியில் ஸ்காந்தம்–காந்தம் என்றும்; தமிழில் கந்தபுராணம் என்றும் பெயர் ஆக்கப்பட்டுவிட்டது.

கந்தபுராணத்து மூலக் கதாநாயகனாகிய கந்தன் அல்லது ஸ்கந்தனுக்கு அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் என்னவெனில், ஸ்கந்தம், கந்தம் என்றால் 'இந்திரியம்' என்ற பொருளும் காணலாம். கந்தன் பிறப்பு, சிவனுடைய ஒழுகிப்போன இந்திரியத்தில் இருந்து உற்பத்தியானவன் என்பதாகப் புராண ஆதாரம் இருப்பதால், அவனுக்குக் 'கந்தன்' என்று பெயரிடவேண்டியதாயிற்று எனலாம்.

இப்படியாக, இந்தக் கந்தனை உண்டாக்கி, அவன் பெயரால் ஒரு கதையெழுதி, அதற்குக் 'காந்தம்'—'கந்தபுராணம்' என்று பெயர் கொடுக்கவேண்டிய அவசியம் ஆரியருக்கு ஏற்பட்ட காரணம் என்ன என்று பார்த்தால், ஆரியர் சிந்து நதிக்கு இப்புறம் வந்து நிலைபெற்று, தங்கள் உயர்வுக்கு ஏற்றபடி ஆதாரங்கள் ஏற்படுத்திக் கொண்ட தன்மைகளை எதிர்த்துப் போராடிய போராட்டங்களில் தாங்கள் வெற்றிகொண்டதைத் தங்களிஷ்டப்படி பாராட்டிக் கொண்டும், போராடிய மக்களாகிய திராவிடர்களைத் தங்கள் ஆத்திரத்திற்கேற்ப இழித்துக் கூறியும், மற்றும் தங்களை எதிர்ப்பவர்களை மிரட்டுவதற்காகவும் ஏற்படுத்திக்கொண்ட தொகுப்புகளேதாம்—ஸ்கந்தம், ஸ்காந்தம், கந்தபுராணம் என்பவைகளாக ஆக்கப்பட்டுவிட்டன. மற்ற புராணங்களும், அவதாரக் கதைகளும் இப்படிப்பட்டவைகளேயாகும்.

இந்தக் கந்தபுராணம் தொகுக்கப்பட்ட காலம் முழுக் காட்டுமிராண்டிக் காலமேயாகும். இதை எப்படிக் கண்பிடிக்க முடிந்தது என்றால், கந்தன் பிறப்பைப் பற்றியும், அவனது போராட்டங்களைப் பற்றியும் ஆரியர் கற்பித்துக்கொண்ட தன்மையைப் பார்த்தால் நன்றாய் விளங்குகிறது.

கதைக்கு மூலகாரணம் தேவர்களை அசுரர்கள் கொடுமைப்படுத்தியதாகக் காரணம் வைத்து, அசுரர்களை ஒழிக்கச் சிவனின் உதவியைத் தேவர்கள் கோரியதாகவும், சிவன் தான் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுப்பதாகவும், அந்தப் பிள்ளை அசுரர்களை அழிக்கக் கூடியவனாவான் என்றும் கூறி—ஒரு பிள்ளையைப் பெறுவதற்காகத் தனது மனைவி பார்வதியிடம் கூடிக் கலவி துவக்கியதாகவும்; அக் கலவி தேவ வருஷத்தில் ஆயிரம் ஆண்டுகள் (நமக்கு ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள்; இந்த நாள் 360 கொண்டது தேவர்களுக்கு ஓராண்டு; இந்தப்படியாக ஆயிரம் ஆண்டு என்றால் 3,60,000—மூன்று இலட்சத்து அறுபதினாயிரம் நாட்கள்) நடந்ததாகவும், அதுவரையில் கூட பார்வதிக்குச் சினை (கர்ப்பம்) ஏற்படவில்லை என்றும்; பிறகு தேவர்கள் வேண்டுகோளால் கலவியை நிறுத்தி இந்திரியத்தைப் பூமியில் விட நேரிட்டதாகவும்; அது ஆறாய் ஓடிக் கங்கையில் விழுந்து 6 பிரிவுகளாய்க் கங்கையில் மிதந்ததாகவும்; அதை ஆறு பெண்கள் எடுக்க, அது ஆறு குழந்தைகளாக ஆகி, ஆறு பெண்களிடமும் முலைப் பால் அருந்தியதாகவும்; பிறகு அவற்றை ஒன்றுபடுத்தியதில் ஆறு உடல்கள் ஒருடலாகித் தலை மாத்திரம் ஆறு தலைகளாக இருந்து, அந்த ஒருடலில் ஒட்டிக்கொண்டதால், அது 'ஆறு தலைக் குழந்தை'யாகி ஆறுமுகனானான் எனவும் கதை கட்டிக் கொண்டார்கள். இதன்படியும், இன்னும் கதையில்வரும் மற்ற சம்பவங்களின்படியும் பார்த்தால், இந்தக் கதை கற்பனை செய்து கொண்ட காலத்தில் ஆரியர்களுக்கிருந்து வந்த புத்தி, காட்டுமிராண்டித்தனமான புத்தி, அறிவு என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட காட்டுமிராண்டிக் கருத்துக்கொண்ட கந்தபுராணத்தை, வெகு காலத்திற்குப் பிறகு வைணவர்கள் தங்கள் சமயபரமாக ஆக்கிக்கொள்ள விரும்பி, கந்த புராணக் கதைப் போக்கையே மூலமாகக் கொண்டு, பெயர்களையும், சம்பவங்களையும் மாற்றி அதற்குக் கதா புருஷன் இராமன் என்றும், இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்றும் காட்டி, அந் நூலுக்கு இராமாயணம் என்றும் பெயர் வைத்துக் கற்பித்து விட்டார்கள்.

கந்தபுராணம் எழுதியவனும் மனிதன்தான்; இராமாயணம் எழுதியவனும் மனிதன் தான்; இருவரும் ஆரியர்களேயாவார்கள்.

ஆனால், கந்தன் கதையைக் கந்த புராணம் என்று பெயர் வைத்து, ஸ்காந்தம் என்பதாகக் கூறி, புராணத்தோடு சேர்த்துவிட்டார்கள். இராமன் கதைக்கு இராம புராணம் என்று பெயர் வைத்தால் புராணம் 18 என்பதனுள்சேராது என்றும், சேர்ந்தால் புராணங்கள் 19 என்று மாற்றவேண்டியிருக்குமே—அம் மாற்றத்திற்குச் செல்வாக்கு இருக்காதே என்றும் கருதி, அதற்கு 'இராமாயணம்' என்று பெயர் வைத்து, அதை 'இதிகாசங்கள்' என்னும் கூட்டத்தில் சேர்த்துவிட்டார்கள். ஆனாலும், 'இதிகாசம்' என்னும் சொல்லுக்கும் பழங் கதை என்பதுதான் பொருள்; தொன்றுதொட்டு வழங்கும் கதையென்று அகராதி கூறுகிறது.

'இதிகாசங்கள்' என்பதில் பாரதமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. புராணங்கள் 18 என்றால், இதிகாசங்கள் மூன்றுதான். அவை இராமாயணம், பாரதம், சிவ இரகசியம் என்பவைகளேயாகும். இவை 18 புராணக் கற்பனை காலத்திற்குப் பின்பு சமீபகாலக் கோவை ஆதலால் தனித்து நிற்கவேண்டி வந்தது எனலாம்.

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் 18 புராண காலங்களுக்கு வெகு நாளைக்குப் பிற்பட்டவைகளென்று சொல்லுவதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் என்னவென்றால், வெகு நாளைக்குப் பிற்பட்ட கால சரித்திரங்களில் கண்டுள்ள விஷயங்கள், இவைகளில் (பாரத, இராமாயணங்களில்) மலிந்து காணக் கிடக்கின்றன.

உதாரணமாக, பவுத்தர்களைப் பற்றியும், சேர, சோழ, பாண்டியர்கள் பற்றியும் அவர்கள் கொள்கைகளைப் பற்றியும்; நாடு, நகரங்களைப் பற்றியும்; பார்ப்பனர்களின் உயர்வைப் பற்றியும்; மற்றும் பல நவீனங்களைப் பற்றியும்; வருண தர்மங்களைப் பற்றியும்–மிகுதியாகவும், பரவலாகவும் காணக்கிடக்கின்றன. மற்றும், கந்தன் உற்பத்தியைப் பற்றி இராமாயணத்தில், அதுவும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இழிந்த முறையில் காணக்கிடக்கின்றன.

தேவ—அசுரர்கள்; திராவிட—ஆரியர்கள்; பிராமண—சூத்திரர்கள்; பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதவர்கள் என்கின்ற வேற்றுமையான விஷயங்களின் தோற்றமே முதன் முதலாகக் கந்த புராணத்தில்தான் காணப்படுகின்றது. இராட்சதர்கள் என்ற சொல்கூட கந்த புராணத்தில் காணமுடிவதில்லை. மற்றும், விஷ்ணுவின் 10 அவதாரங்களைப்பற்றிய சேதிகளில் 2, 3 அவதாரம் தவிர மற்றவற்றை, இந்தப் புராணங்களில் காணமுடிவதில்லை. பல ரிஷிகள், முனிவர்கள் பெயர்கள், நடத்தைகள் கூட கந்தபுராணத்தில் காண முடிவதில்லை.

இந்தப்படியாக, இன்னும் பல உண்மைகளைக் கொண்டு பார்த்தால், கந்த புராணத்தைவிட பாரத, இராமாயணங்கள் வெகு பிற்பட்ட காலக் கற்பனை என்பது விளங்கும்.

இவை மாத்திரமல்லாமல், கந்தபுராணத் தமிழாக்கம், இராமாயணத் தமிழாக்கம் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டால், கந்த புராணத் தமிழ்க் காவியம் தான் முதலில் செய்யப்பட்டது; இராமாயணத் தமிழ்க் காவியம் பின்னால் ஆக்கப்பட்டது என்பதாகவும் ஆராய்ச்சியில் தெரிய வருகிறது.

அதாவது, கச்சியப்ப சிவாச்சாரியார் என்பவர் கந்த புராணத்தைத் தமிழில் காவியமாக ஆக்கிய பிறகே—கம்பர், இராமாயணத்தைத் தமிழில் கவி ரூபமாய்ப் பாடி இருக்கிறார் என்று கொள்ளத்தக்க ஆதாரங்கள்தான் இருக்கின்றன.

ஆகவே, கந்தபுராண உற்பத்தி முன்னையது என்றும், இராமாயணம் அதன் பின்னால் அதைப் பார்த்து—அதே கருத்தை வைத்து மாற்றி அமைத்துக் கொண்ட நூல் என்றும், அதுபோலவே தமிழில் காவியமாக்கியதிலும் முதலில் கந்தபுராணமும், பிறகு அதைப் பார்த்து இராமாயணமும் செய்யப்பட்டது என்பதும், அதிலும் அதன் ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியாரும், இராமாயண ஆசிரியர் கம்பரும் கோயில் பூசாரிகள் என்றும், இருவரும் 'கடவுள் அருள்பெற்றுப் பாடினார்கள்' என்றுமே காணப்படுகிறது.

ஆகவே, இரண்டும் ஒன்றுதான் என்பதற்கும், ஒன்றைப் பார்த்து மற்றொன்று 'காப்பி' அடிக்கப்பட்டது என்பதற்கும் ஆதாரம் காட்டவே இதை எழுதுவதுடன், இரண்டிற்கும் உள்ள பொருத்தத்திற்கும் ஏராளமானவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறோம்.

மற்றும், கவிகளை எடுத்துக்கொண்டாலும், ஒருவரே இரண்டையும் பாடினார் என்று சொல்லும்படியாகப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்படி ஒரு பொய்யான, மோசடியான கற்பனைக் கதைகளையும், காவியங்களையும்—நமது மடமைத் தமிழ்ப் புலவர்களும், காட்டுமிராண்டி மக்களும் எவ்வளவு தூரம் நம்பி இழிமக்களானார்கள் என்பதைக் காட்டவே இது எழுதப்பட்டதாகும்.

[நூல் : 'கந்தபுராணமும்-இராமாயணமும் ஒன்றே'—முகவுரை-2-ஆம் பதிப்பு 1961]

கந்த புராணம், இராமாயணம் ஆகிய இரண்டிற்குமுள்ள ஒற்றுமை :—

1. கந்த புராணமும்—இராமாயணமும் வடமொழியில் உள்ள மூலக் கதைகளைக் கொண்டவையாகும்.

2. இரண்டு மூலங்களும் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டவையேயாகும்.

3. இரண்டு கதைகளும் ஆரிய சமயக் கொள்கைகளை வலியுறுத்துவதைக் கருத்தாய்க் கொண்டு, ஆரியக் 'கடவுள்களைப்' பெருமைப்படுத்த ஏற்படுத்தியவையாகும்.

4. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களுக்கும் அசுரர்கள் என்பவர்களுக்கும் நடந்த போராட்டங்கள் என்ற பாவனை வைத்துக் கற்பிக்கப்பட்டவைகளாகும்.

5. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களை உயர்த்தியும்; அசுரர்கள்—இராக்கதர்கள் என்பவர்களைத் தாழ்த்தியும், இழித்தும் காட்ட ஏற்பட்டவை என்பதோடு, இரண்டு கதைகளுக்கும் இந்திரன் பிரதானப்பட்டவனாகிறான்.

6. இரண்டு கதைகளின் தமிழ் மொழிபெயர்ப்புக் காவியங்களும் இரண்டு கோயில் அர்ச்சகர்களால்-கோவிலில் பூசை செய்யும் பூசாரிகளால் பாடப்பட்டவைகளாகும். கந்த புராணம் கச்சியப்ப சிவாச்சாரி என்னும் அர்ச்சகராலும், இராமாயணம் கம்பன் என்னும் பூசாரியாலும் தமிழில் பாடப்பட்டவை.

7. இரண்டு கதைகள் உற்பத்திக்கும் காட்டப்பட்ட காரணங்கள்—அசுரர்களின் தொல்லைகள் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் கடவுள்களைப் பிரார்த்தித்துத் தங்கள் துன்பங்களைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டவைகளாகும்.

8. இராமாயணக் கதைக்கு விஷ்ணு இராமனாக அவதரித்துக் கதாநாயகனாகவும், —கந்த புராணத்திற்கு சிவன் கந்தனாகப் (சுப்பிரமணியனாக) பிறந்து கதாநாயகனாகவும் இருக்கிறார்கள்.

9. இரண்டு கதாநாயகர்களுடைய பிறப்பும் அருவருக்கும் தன்மையாகவே—அதாவது இராமனது தாய் கோசலை, யாகத்தின்போது குதிரையுடன் ஓர் இரவெல்லாம் கட்டித்தழுவிப் படுத்திருந்து, பகலெல்லாம் யாகப் புரோகிதனுடன் சேர்ந்து கர்ப்பமாகி இராமன் பிறந்ததாகவும்; கந்தன்—தன் தகப்பன் (சிவன்) தன் தாயைப் (பார்வதியை) பல 'தேவ' ஆண்டுகள் இடைவிடாமல் புணர்ந்து, தேவர்கள் விருப்பப்படி இடைவெளியில் வீரியத்தை விட்டு, அது கங்கையில் சேர்ந்து, அங்கு பல பிரிவாகிக் குழந்தை உருக்கொள்ள, அதைப் பல பெண்கள் வளர்க்க, அதனால் ஆறுமுகம் பெற்று ஆறுமுகமானான்; கார்த்திகேயனானான், (இந்தச் சேதிகளை இராமாயணமே கூறுகிறது) என்பதாகவும் இருக்கிறது.

10. இவ்விரண்டு கதாநாயகர்கள் (இராமன்—கந்தன்) மனைவிமார்களும் தங்கள் பிறப்பை அறிய முடியாதவர்கள். அதாவது, இராமனின் மனைவி சீதையை யாரோ பெற்று பூமியில் போடப்பட்டு, புழுதியில் மறைந்து கிடந்து, ஓர் அன்னிய அரசனால் கண்டெடுத்துவந்து வளர்க்கப்பட்டவள்.

கந்தன் மனைவி வள்ளியும் யாராலோ—ஒரு மானிடத்தில் ஒரு ரிஷியால் சினை ஆகிப் பெறப்பட்டு, காட்டில் ஒரு குழியில் கிடத்தப்பட்டு, ஒரு வேட அரசனால் கண்டெடுத்துக் கொண்டுபோய் வளர்க்கப்பட்டவள்.

11. இராமனுக்கு—சீதை (விஸ்வாமித்திரன் என்னும்) ஒரு ரிஷியினால் கூட்டி வைக்கப்படுகிறாள்; கந்தனுக்கு—வள்ளி (நாரதன் என்னும்) ரிஷியினால் கூட்டிவைக்கப் படுகிறாள்.

12. இராமனுக்கு எதிரி (இராவணன் என்னும்) தேவர்கள் விரோதி; தேவர்களை அடக்கி ஆண்டவன். கந்தனுக்கு எதிரி (சூரபத்மன் என்னும்) தேவர்கள் விரோதி; தேவர்களை அடக்கி ஆண்டவன்.

13. இராமனுக்கு ஆயுதம் வில்; கந்தனுக்கு ஆயுதம் வேல்.

14. இராவணனும் மகா தவசிரேஷ்டன்; மகா பலசாலி; வீரன்; மாபெரும் வரப்பிரசாதி. சூரபத்மனும் மகா தவசிரேஷ்டன்; மகா பலசாலி; வீரன்; மாபெரும் வரப்பிரசாதி.

15. இராமனுக்கு இலட்சுமணன் என்கின்ற ஒரு சகோதரன் உதவி செய்கிறான்.
கந்தனுக்கு கணபதி, வீரபாகு என்கிற சகோதரர்கள் உதவி செய்கிறார்கள்.

16. இராவணனுக்கு சூர்ப்பனகை என்ற ஒரு தங்கை இருக்கிறாள்.
சூரபத்மனுக்கு அசமுகி என்கின்ற ஒரு தங்கை இருக்கிறாள்.

17. இராவணனுக்கு இந்திரசித்து என்னும் (மேகநாதன் என்ற) மகன்; இவன் மகா பலசாலி; வீரன்.

சூரபத்மனுக்கு பானுகோபன் என்கின்ற ஒரு மகன்; இவன் மகா பலசாலி.

18. இராவணனுக்கு விரோதமாக இராவணன் தம்பி விபீஷணன் என்பவன் இருந்துகொண்டு, எதிரியைப் புகழ்ந்து, சீதையை விடும்படி கூறி, எதிரிக்குக் காட்டிக் கொடுக்க நாட்டை விட்டுப் போய்விடுகிறான்.

சூரபத்மனுக்கு விரோதமாக சூரபத்மன் தம்பி சிங்கமுகன் என்பவன் எதிரியைப் புகழ்ந்து பேசி, சயந்தனை சிறைவிடும்படி கூறி, எதிரிக்கு அனுகூலமாக நாட்டைவிட்டுப் போய்விடுகிறான்.

19. இராவணன் மகன் இந்திரசித்து, இராமனைப் புகழ்கிறான்.
சூரபத்மன் மகன் பானுகோபன், கந்தனைப் புகழ்கிறான்.

20. இராவணனிடம் தூதனாக அனுமான் சென்று இலங்கையை அழித்துவிட்டு வருகிறான்.

சூரபத்மனிடம் தூதுவனாக வீரபாகு சென்று வீரமகேந்திரத்தை அழித்து விட்டு வருகிறான்.

21. இராவணன் தங்கையின் மூக்கையும், காதையும் இலட்சுமணன், அவள் தலை மயிரை இழுத்துக் கீழே போட்டு அழுத்தித் துண்டிக்கிறான்.

சூரபத்மன் தங்கை அசமுகியின் கைகளை மாசானன் என்பவன், அவள் மயிரை இழுத்துக் கீழே போட்டு அழுத்தித் துண்டிக்கிறான்.

22. சூர்ப்பனகை சீதையை இராவணனிடம் சேர்க்க முயற்சிக்கிறாள்.

அசமுகி இந்திராணியை சூரபத்மனிடம் சேர்ப்பிக்க முயற்சிக்கிறாள்.

23. சூர்ப்பனகை மூக்கு, காது அறுபட்டவுடன் அண்ணன் இராவணனிடம் போய் 'என்னை இப்படிச் செய்துவிட்டானே, உனக்கு வெட்கமில்லையா!' என்று கூறி அழுகிறாள்.

அசமுகி கைகள் அறுபட்டவுடன் அண்ணன் சூரபத்மனிடம் போய், 'என்னை இப்படிச் செய்துவிட்டானே, உனக்கு வெட்கமில்லையா!' என்று கூறி அழுகிறாள்.

24. அதற்காகக் கோபப்பட்டு, இராவணன்—இராமனுடன் சண்டைக்குப் போகிறான்.

அதற்காக வேண்டியே சூரபத்மன் ஆத்திரப்பட்டு கந்தனுடன் சண்டைக்குப் போகிறான்.

25. இராமனுக்கு சுக்கிரீவன், அனுமார், அங்கதன், நீலன், சம்புவந்தன் முதலியவர்கள் உதவி செய்கிறார்கள்.

சூரனுக்கு நவ வீரர்கள் உதவி செய்கிறார்கள்.

இராமனை மூலபலம் எதிர்க்கிறது என்றும், சூரனுக்கு ஓர் அரக்கி வயிற்றில் வெட்ட வெட்ட அசுரர்கள் பிறக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

26. சூர்ப்பனகை, உற்றார் உறவினரை ஓலமிட்டு அழைத்தாள்.

அசமுகி, உற்றார் உறவினரை நினைந்து ஓலமிட்டாள்.

27. சூர்ப்பனகை, 'வெள்ளிமா மலையை அசைத்த மன்னவா! என் மூக்கை அறுத்த பகைவனை நோக்காயோ?' என்று இராவணனிடம் ஓலமிட்டாள்.

அசமுகி, 'கதிரவனை சிறைசெய்த மன்னவா! யான்பட்ட குறையினை அறியாயோ?' என்று சூரனிடம் அழுதாள்.

28. சூர்ப்பனகை, 'யான் அடைந்த அவமானத்திற்குப் பழிவாங்க வாராயோ?' என்று அழுதாள்.

அசமுகி சூரனிடம், 'பழி பூண்டு நின்றாயே!' என்றழுதாள்.

29. சூர்ப்பனகை அழுதுகொண்டு இராவணன் சபை புகுந்தாள்.

அசமுகி அழுதுகொண்டு சூரன் சபை புகுந்தாள்.

30. இராவணன் கோபம் கொண்டு வருந்தி, சீதையை அடையக் கருதினான்; அடையத் துணிந்துவிட்டான்.

சூரன் கோபங் கொண்டு மனம் கொதித்து, இந்திராணியை அடையக் கருதினான்.

31. இராவணன் சீதையைத் தூக்கிவந்து சிறைவைத்தான்.

சூரபதீமன், இந்திராணி ஒளிந்து கொண்டதால் அவள் மகன் சயந்தனையும், சுற்றத்தார்களையும் சிறை செய்தான்.

32. சீதை சிறையில் வாடி, வதங்கி அழுதாள்.

சயந்தன் சிறையில் வாடி அழுதான்.

33. சீதை, சிறையில் இராமன் வந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எண்ணினாள்.

சயந்தன், கடவுள் வந்து தன்னை விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினான்.

34. சீதை அழுது எண்ணியதால் இராமன் விற்படை இலங்கைக்கு வந்தது.

சயந்தன் எண்ணி அழுததால் வீரமகேந்திரத்திற்கு வேற்படை வந்தது.

35. இராம தூதனாக—அனுமான் இலங்கைக்கு வந்தான்.

முருக தூதனாக—வீரபாகு வீரமகேந்திரத்துக்கு வந்தான்.

36. இலங்கை, வீரர்களாலும் சூரர்களாலும் கனல்கக்கும் கண்ணீராலும் நிறைந்திருந்தது. இலங்கையில் பசி இல்லை; ஏழ்மை இல்லை; பிணி இல்லை; கவலையில்லை.

வீர மகேந்திரத்தில் உள்ளவர் வரத்தில் பெரியர்; வண்மையில் பெரியர்; உரத்தினில் பெரியர். அங்கு—வீரமகேந்திரத்தில் நலிந்து, மெலிந்து, நரை, திரை கொண்டு பசி கொண்டவர் இல்லை.

37. இலங்கையில் வானவர் பணிந்து பணிசெய்தனர்; காவல் காத்தனர்; பணியாளாய் நின்றனர். இதை அனுமான் பார்த்தான்.

வீரமகேந்திரத்தில் வானவர் வணங்கி ஏவல் புரிந்தனர்; மீன் கொண்டு வந்து கொடுத்தனர்.

38. இராவணனது பெருமையையும், அவனது தவத்தையும் அனுமான் வியந்து போற்றினான்.

சூரனின் தவத்தின் பெருமையை வீரபாகு வியந்து புகழ்ந்தான்.

39. அனுமான், சீதை சிறை இருந்த அசோகவனம் சென்று சீதையைக் கண்டு அவள் சோகத்தைத் தேற்றினான்.

வீரபாகு, சயந்தன் சிறையிருந்த இடம் சென்று அவனைத் தேற்றினான்.

40. அனுமான் இராவணன் முன் அழைத்துச் செல்லப்பட்டான்.

வீரபாகு சூரன் முன் சென்றான்.

41. அங்கே அனுமான், இராமன் பெருமையைச் சொல்லுகிறான்.

அங்கே வீரபாகு, முருகன் பெருமையைச் சொல்லுகிறான்.

42. அனுமான், இராவணனிடம், 'ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளே இராமனாய்த் தோன்றினான்' என்கிறான்.

வீரபாகு, 'தன்னிகரில்லா இறைவனே முருகனாகத் தோன்றினான்' என்கிறான்.

43. அனுமான் சொன்னது இராவணன் செவியில் ஏறவில்லை.

வீரபாகு சொன்னது சூரன் செவியில் ஏறவில்லை.

44. அனுமான், 'உன் செல்வம் சிதையாமல், உன் வாழ்வு குலையாமல் இருக்க வேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்று இராவணனுக்குச் சொன்னான்.

வீரபாகு, 'நின் சேனையோடு நீ நெடிது வாழ வேண்டுமானால் வானவரைச் சிறையினின்றும் விடுக; ஆறுமுகன் அடிபணிக' என்று சூரனுக்குச் சொன்னான்.

45. அனுமான் இலங்கையை எரித்தான்.
வீரபாகு மகேந்திர நகரை அழித்தான்.

46. அனுமான், அரக்க வீரரை அழித்தபின் இராமனிடம் சென்றான்.
வீரபாகு, அசுரன் சேனையைச் சிதைத்தபின் அதைவிட்டுச் சென்றான்.

47. இராவணன் மந்திரிசபை கூட்டினான்; அனுமான் செய்ததை எடுத்துரைத்து வருந்தினான்.

சூரன் மந்திரிசபை கூட்டினான்; வீரபாகுவின் ஜெயத்தை மந்திரிகளுக்குச் சொல்லி வருந்தினான்.

48. இராவணனின் சேனைக் காவலன், மகோதரன் எழுந்து வீரம் பேசினான்.
சூரனின் ஆட்களான காலசித்தனும், சூரனின் மகனாகிய பானுகோபனும் வீரம் பேசினார்கள்.

49. இராவணன் தம்பி விபீஷணன் எழுந்து இராவணனுக்குப் புத்தி கூறினான்.
சூரன் தம்பியாகிய சிங்கமுகன் சூரனுக்குப் புத்தி கூறினான்.

50. இராவணன் மகிழ்ச்சியும், தீரமும் கொள்கிறான்.
சூரன் மகிழ்ந்து ஊக்கம் கொள்கிறான்.

51. 'இராமன் கடவுள்' என்றும், 'நீ வாழ வேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்றும் விபீஷணன் கூறுகிறான்.

சிங்கமுகன், 'முருகன் ஆதிபரம் பொருள்' என்றும், 'நீ வாழ வேண்டுமாயின் வானவரை விட்டுவிடு' என்றும் சொல்லுகிறான்.

52. இராவணன், எதிரியைப் புகழ்ந்த விபீஷணனைக் கண்டிக்கிறான்.
சூரன், எதியைப் புகழ்ந்த சிங்கமுகனை வெறுக்கிறான்.

53. இராவணன், இராமனை ஏளனம் பேசி இழிவுபடுத்திச் செல்லுகிறான்.
சூரன் சுப்பிரமணியனை ஏளனம் பேசி, அலட்சியமாய்க் கருதிச் செல்லுகிறான்.

54. இராவணன், விபீஷணன் மீது குற்றம் சாட்டித் திட்டுகிறான்.
சூரன், சிங்கமுகன் மீது குற்றம் சாட்டித் திட்டுகிறான்.

55. விபீஷணன் வருந்தி, நாட்டை விட்டகலுகிறான்.
சிங்கமுகன் வருந்தி நாட்டை விட்டகலுகிறான்.

56. போர் நடக்கிறது. முதல்நாள் போரில் இராவணன் தோற்று மீளுகிறான்.
போர்நடக்கிறது. முதல்நாள் போரில் சூரன்மகன் பானுகோபன் தோற்று மீளுகிறான்.

57. இராமன்—இராவணனை, 'இன்றுபோய் நாளை வா' என்கிறான்.
முருகன்—பானுகோபனை, 'இன்று உன்னைப் போகவிடுகிறேன்' என்கிறான்.

58. இராமன் இராவணனை, 'இப்பொழுதாவது சீதையை விடுத்துப் பிழைத்துப் போ' என்று எச்சரிக்கிறான்.

முருகன் இரண்டாம் நாள் போரில் சூரனை, 'இப்பொழுதாவது வானவரை விடுத்தால் உயிர்வாழ்வாய்; இல்லையேல் மடிவாய்' என்று எச்சரிக்கிறான்.

59. இராவணன் மறுமொழி கூறாது அரண்மனை சென்றான்.
சூரன் மறுமொழி கூறாது அரண்மனை அடைந்தான்.

60. இந்திரசித்தன் போருக்குச் சென்று, தோல்வியடைந்து தந்தையிடம் வந்து, 'இராமனை வெல்லமுடியாது; சீதையை விட்டுவிடு; உயிர்வாழ்வோம்' என்கிறான்.
பானுகோபன் போரில் தோற்று, தந்தையிடம் வந்து, 'வானவரை விட்டுவிடு; உயிர்வாழலாம்' என்கிறான்.

61. இராவணன் தன் மகன்மீது கோபங்கொண்டு, 'உயிரைவிடுவேனே ஒழிய, சீதையை விடமுடியாது; மானம் பெரிதே ஒழிய, உயிர் பெரிதல்ல' என்கிறான்.
சூரன் தன் மகன்மீது கோபித்து, 'உயிரை விட்டாலும் விடுவேன்; வானவரை விட்டு, வசைக்கு ஆளாகி வாழமாட்டேன்' என்கிறான்.

62. இராவணன் மகன் இந்திரசித்தன், 'கேடுவரும் பின்னே; மதிகெட்டுவரும் முன்னே' என்று கருதி இலக்குவனோடு போர்தொடுத்து மாண்டான்.
சூரன் மகன் பானுகோபன் போருக்குச் சென்று மடிகிறான்.

63. இராவணன் இராமனுடன் போரிட்டு மடிந்தான்.
சூரன் முருகனுடன் போரிட்டு மடிந்தான்.

64. இராவனன் மனைவி மண்டோதரி, புலம்பி உடன்கட்டை ஏறினாள்.
சூரன் மனைவி பதுமை, புலம்பி உடன்கட்டை ஏறினாள்.

இப்படியாக, இன்னும் பல பொருத்தங்கள் காணப்படுகின்றன. ஆகவே, கந்த புராணத்தைப் பார்த்து நகல்படுத்திய கதையே இராமாயணம்.

[நூல் 'கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே'—2-ஆம் பதிப்பு 1961]

4. புராண ஆபாசங்கள்

1. பெரிய புராணம்

பெரியபுராணத்தில் உள்ள செய்திகள் உண்மையாய் நடந்தவைகளா? அல்லது மக்களுக்குச் சிவபக்தி உண்டாக வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு சைவ சமய வாதிகளால் கற்பனை செய்யப்பட்ட செய்திகளா?

சிவனுக்கு மனித உருவமும், மாட்டு வாகனமும், பெண்சாதி பிள்ளைகளும் உண்மையாகவே இருந்துவருகின்றனவா? அல்லது, சிவபக்தர்கள் கற்பனை செய்த கருத்துக்களா?

சிவன்தான் முழுமுதல் கடவுள் என்றால்—முழுமுதல் கடவுள் என்பதற்கு உருவம், பெண்டு, பிள்ளை கற்பிப்பது பொருத்தமாகுமா?

கயிலாயம் முதலிய இடங்கள் உண்மையிலேயே இருக்கின்றனவா? அல்லது, சைவ மதவாதிகள் கற்பனையா?

உண்மையாய் கயிலாயம் என்கின்ற இடம் ஒன்று இருக்குமானால், சாஸ்திரப்படி அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலியவர்கள், உண்மையிலேயே அவர்களைப் பற்றிச் சொல்லப்படுகிற பெரியபுராணம் முதலிய மத ஆதாரங்களின்படி இருந்தவர்களா? அல்லது, மதவாதிகளால் கற்பிக்கப்பட்டவர்களா?

அகஸ்தியனென்றும், நாரதனென்றும் மற்றும் மனிதத் தன்மைக்கும் விஞ்ஞான உண்மைக்கும் மேற்பட்டவர்கள் என்றும் சொல்லப்பட்டவர்களை எல்லாம் உண்மையாய் இருந்தவர்கள் என்றும், அவர்கள் சங்கதி எல்லாம் உண்மையாய் நடந்தவைகள் என்றும் பெரிய புராணக்காரர்கள் நம்புகிறார்களா?

பெரியபுராணச் செய்திகள் உண்மையாக நடந்தவைகள் என்றால், ஒரு ஆயிரம் வருஷங்களுக்குள்ளாகக் கடவுள்கள் நேரில் வந்து காட்சி கொடுத்ததாக அர்த்தமாக வில்லையா?

கயிலாயத்தில் இருந்து மாட்டின்மேல் வந்து பக்தனையும் அவன் மனைவியையும் அந்த மாட்டின்மேல் ஏற்றிக்கொண்டு கயிலாயத்திற்குப் போய்விட்டார் என்றால், அது உண்மையாகவே நடந்திருக்குமா?

மாடு இரண்டாகி வந்ததும், மாடு ஆகாயத்தில் ஏறிச் சென்றதும் கற்பனையா? அல்லது, உண்மையா?

அது உண்மையானால்—கடவுள் தன்மைக்கு அது ஏற்றதா? அல்லது மனிதத் தன்மைக்கு ஏற்றதா?

இந்த மாதிரிக் கடவுள் அற்புதங்கள், பக்தர்கள் அற்புதங்கள் எல்லாம் இப்போது சைவத்தில் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

சாயிபாபா, இராமகிருஷ்ணர், ரமணரிஷி, காந்தியார், சொரக்காய் சாமியார், பாம்பன் சாமியார், மெய்வழி ஆண்டவன், மவுன சாமியார், பட்டினத்தார், பத்திரகிரியார், அருணகிரியார் முதலியவர்களைப்பற்றிச் சொல்லப்படும் அற்புதங்கள் எல்லாம் பெரிய புராண பக்தர்களது அற்புதங்களோடு சேர்ந்தவைகளா? அல்லது, அதைவிட மட்டரக மானவையா? அல்லது, கற்பனைகளா?

அற்புதங்கள் இல்லாத கடவுள்களோ–மதமோ–பக்தர்களோ–மதித்து வணங்கத் தக்கவர்களோ சைவத்தில்–பெரியபுராணத்தில் ஏன் இருப்பதில்லை?

பெரியபுராணம் நிஜமானால் பக்த லீலாமிருதமும் நிஜமாய்த்தான் இருக்க வேண்டுமா? அல்லது, இது கற்பனையா?

சிவன் என்கின்ற ஒரு கடவுள் ரிஷப வாகனத்துடன் பார்வதி சமேதராய்க் கயிலாயத் தில் இருக்கிறார் என்றால், விஷ்ணு என்பதாக ஒரு கடவுள் கருட ஆருடராய், இலட்சுமி சமேதராய் வைகுண்டத்தில் இருக்கிறார் என்பது மெய்யா? அல்லது, கற்பனையா?

நாயன்மார்கள் நால்வருடைய கதையும் மெய்யானால் ஆழ்வாராதிகள் பன்னிரு வர்கள் கதைகளும் மெய்யா, கற்பனையா?

தேவார திருவாசகங்களுக்கும், நாலாயிரப் பிரபந்தங்களுக்கும் என்ன வித்தியாசம்? எது முந்தியது? எது உண்மை? எது சிறந்தது?

பெரியபுராணம் இன்றைய சைவர்களுக்குப் பொருத்தமானதா? இன்று அது சைவர் களுக்குள் பரப்பப்படுவது கடவுள் பெருமை, பக்தர் பெருமை ஆகியவை தெரிவதற்கா கவா? அல்லது, அதைப் பின்பற்றச் செய்வதற்காகவா? பெரியபுராணம் ஒழுக்க நூலாகுமா? பெரியபுராண சிவன் முழுமுதற் கடவுளாக இருக்கமுடியுமா? முழுமுதற் கடவுள் என்பதற்கு ஏதாவது இலட்சணம் உண்டா? அந்த இலட்சணப்படி பெரியபுராண சிவன் இருக்கிறாரா? சிவபெருமான் முழுமுதற் கடவுள் என்பதை–கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஒப்புக்கொள்கிறார்களா? அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வைணவர், மாத்துவர், ஸ்மார்த்தர்களாவது ஒப்புக்கொள்கிறார்களா?

['குடி அரசு'–கட்டுரை—2-10-1943]

2. பக்த லீலாமிருதம்

இது, சைவர்களுக்குச் சைவ நாயன்மார்கள் கதையாகப் பெரியபுராணம் இருப்பது போல், வைணவர்களுக்கு வைணவ பக்தர்கள் (ஆழ்வாராதிகள்) கதைகளைத் தொகுத்து 'பக்த லீலாமிருதம்' என்பதாக இருந்துவருகிறது. இதிலுள்ள பக்தர்கள் கதைகளும் பரமசிவன் பார்வதிக்குச் சொன்னதாகவே ஆரம்பிக்கப்படுகின்றன. பெரிய புராணத்தில் உள்ள பக்தர்கள் நடந்துகொள்வதுபோலவும் அதில் காணப்படும் அற்புதங்கள்போலவுமே அதே கொள்கைகளை வைத்து வேறு ஆட்களையும், வேறு சங்கதிகளையும் கொண்டு சொல்லப்படும் புராணமே பக்த லீலாமிருதமாகும் என்பது தொடர்ந்து வரும் கதைகளால் விளங்கும்.

பெரியபுராணத்தில் சிவபெருமான் பெருமைகள் எப்படி இருக்கின்றனவோ, அவர் எப்படி பக்தர்களிடம் நடந்துகொண்டாரோ, எப்படி பக்தர்களைச் சோதித்தாரோ, அது போலவே இதிலும் மகாவிஷ்ணுவின் சங்கதிகளும் விளங்குகின்றன. பெரியபுராணத்தில் 63 நாயன்மார்கள் இருந்தால்—பக்த லீலாமிருதத்தில் 82 பக்தர்கள் பெயர்கள் இருக்கின்றன. இவை தவிர, சைவ—வைணவத்தில், நால்வர்களைப்போல—ஆழ்வாராதிகளும்வேறு புத்தகங்களில் அதாவது குருபரம்பரை முதலியவைகளில் இருக்கின்றனர். நாயன்மார்களால் பாடப்பட்ட பாடல்பெற்ற சிவ ஸ்தலங்களைப் போலவே, 'ஆழ்வாராதிகளின் மங்களாசாசனம்' பெற்ற—அதாவது ஆழ்வாராதிகளால் பாடப்பட்ட விஷ்ணு ஸ்தலங்கள் பல இருக்கின்றன. சைவர்களுக்குப் பல மடங்கள், மடாதிபதிகள் இருப்பது போலவே வைணவர்களுக்கும் பல மடங்களும் மாடதிபதிகள் பலரும் இருக்கின்றனர்.

இரு சார்பிலும் ஆபாசக் கதைகள், ஆபாச சம்பவங்கள், அற்புதங்கள் ஒன்று போலவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதலால், சைவ, வைணவ இரு சமயங்களிலும் எது சற்று மேன்மையானது என்று சொல்வது மிக மிகக் கஷ்டமான காரியமாகும்.

இவற்றில் பக்த லீலாமிருதத்தைப் பார்த்து பெரியபுராணம் உண்டாக்கப்பட்டதா, பெரிய புராணத்தைப் பார்த்து பக்த லீலாமிருதம் உண்டாக்கப்பட்டதா என்பது ஆராய்ச்சிக்காரர்கள் முடிவுகட்ட வேண்டியதாகும். பக்த லீலாமிருதத்தில் உள்ள ஒரு முதல் கதையை வாசகர்களுக்கு மாதிரி காட்டுகிறேன். இது பதும புராணத்தில் உள்ளதை ஸ்ரீதரர் விளக்கி ஆக்கிய சரித்திரம் என்று அப் புராணத்தில் காணப்படுகின்றது. இது பெரிய புராணத்தைவிடச் சிறந்ததாகும். ஏனெனில், பெரிய புராணத்திற்கு சேக்கிழார்தான் கர்த்தாவாக இருக்கிறார். சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் பாடியிருக்கிறார். சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்ததற்கு சேக்கிழார்தான் சாட்சி. பெரிய புராணக் கதைகளுக்கும் சேக்கிழார்தான் 'பிரம்மா'. அவற்றை நிரூபிக்க 'திருத் தொண்டத் தொகை'யை விட வேறு சரியான ஆதாரங்கள் கிடையாது.

உதாரணமாக, 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்ற ஒரு வாக்கியத்தை வைத்து—சேக்கிழார், 'சிவபெருமான் ஒரு அயோக்கியப் பார்ப்பானாக வந்து இயற்பகை நாயனாரின் மனைவியைக் கேட்டார்; அவர் தன் மனைவியைக் கூட்டி விட்டார். சிவன் வந்து கணவனுக்கும் மனைவிக்கும் காட்சி தந்து மோட்சத்திற்கு அழைத்துப் போனார்' என்று அதைப் பெருக்கிச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் இக் கதைக்கு அகச் சான்று, புறச் சான்று கிடையாது; ஆனால், பக்த லீலாமிருதத்தில் உள்ள இந்தக் கதை 'பதும புராணத்தில்' உள்ளதாம்.

மற்ற புராணங்களை நம்புகிறவர்கள் இதை மறுக்க முடியாது. இக் கதை சைவ, வைணவர்—ஒருவரையொருவர் வைவதற்கு ஏற்படுத்திக்கொண்டதற்கல்ல; விஷ்ணுவின் மகாத்மியம் விளங்க ஆரிய வைணவர்களாலேயே போற்றப்படுவதாகும்.

கதை விவரம்: சிவனை உமாதேவி வணங்கி, 'மகாவிஷ்ணு பண்டரிபுரத்தில் வாசம் செய்வது யாது காரணத்தால்?' என்று கேட்டாள். அதற்கு சிவபெருமான் சொல்லு கிறார் என்று துவக்கப்படுகிறது :

திருமாலானவர் வைகுந்தத்தில் இருக்கும்போது இந்திரனின் மனைவி இந்திராணி அங்கு வந்தாள். அவள் உடனே திருமாலின் அழகைக் கண்டு மயங்கி, 'ஓ! திருமாலே, உமது மடியின்மேல் இருக்கவேண்டுமென்று எனக்கு ஆசை உண்டாகிவிட்டது' என்றாள்.

திருமால் மனமிரங்கி, 'ஓ! இந்திராணியே, நீ பூலோகத்திற்குப் போய் 60 ஆயிரம் வருஷம் தவம் செய்வாயானால், நான் துவாரகாபுரியில் கிருஷ்ணனாய் அவதரிக்கிறேன். அப்போது நீ என் மடிமீது இருக்கலாம்' என்று சொன்னார்.

இந்திராணி அதைப்போலவே பூலோகத்திற்கு வந்து தவம் செய்தாள். அதன் பயனாய் இந்திராணி கோகுலத்தில் இராதையாய்ப் பிறந்தாள். திருமால் கண்ணனாய்ப் பிறந்தார். இருவரும் கூடி விளையாடிக் கொண்டார்கள். பிறகு கண்ணன் கோகுலத்தை விட்டுத் துவாரகைக்குப் போய்விட்டார்.

இராதை, கண்ணன் பிரிவு சகியாமல் துவாரகை வந்து கண்ணன் கோவிலில் நின்று கதறினாள். கண்ணன் வந்து இராதையைத் தன் மடிமேல் இருத்திக்கொண்டார்.

இதைக் கண்ட ருக்குமணி, கண்ணன்மீது கோபித்து இராதையைத் துரத்தி விட்டாள். இராதை திண்டீரவனம் வந்து கண்ணனை அடைய மறுபடியும் தவம் செய்கிறாள். கண்ணன் (மகா விஷ்ணு) இராதையின் பிரிவு சகிக்கமாட்டாதவராய், ருக்குமணியை விட்டுவிட்டு இராதையைத் தேடித் தேடி அலைந்தார். இராதை காணாத தால் கண்ணன் துறவியாகி, அலைந்து திரிந்து இராதை தவம் செய்யும் சோலையை அடைந்து அவளுக்கெதிரில் நின்று, 'என்னைத் தவிக்கவிட்டு வெற்றுடம்பாக்கிவிட்டு இங்கு வரலாமா?' என்று பலவிதமாய் இராதையைப்பற்றி விசாரித்தார். இதைக் கண்ட இராதை அத் துறவியைக் கண்ணன் என்று அறியாது, 'நீ யாவன்? இங்கு நீ எப்படி வரலாம்?' என்று கோபித்தாள். அதற்குக் கண்ணன், 'நான் உன் கணவன்' என்றார். அதற்கு இராதை, 'என் கணவனுக்கு எண்ணற்ற மனைவிகள் உண்டு. அவர் என்னைத் தேடி வரமாட்டார். நீ பித்தலாட்டக்காரன், போய்விடு' என்றாள். கண்ணன் இராதையைச் சமாதானம் செய்து அவளை அடைவதற்காக அவள் முன்னால் 28 துவாபரயுக காலம் நின்ற வண்ணமே தவம் செய்துகொண்டு இருக்கிறார். அந்தத் தவக்காட்சிதான் திண்டீரவனம் என்னும் பண்டரிபுரத்தில் இன்றளவும் நின்றிருக்கும் காட்சியாகும் என்பதாக சிவபெருமான் உமைக்குச் சொன்னார் என்று இருக்கிறது.

எனவே, ஆரியர் கற்புக்கும் கடவுள்களின் ஒழுக்கத்திற்கும், கடவுள் தன்மைக்கும், ஆரியர்களின் காப்புக் கடவுளாகிய இந்திரனின் சுயமரியாதைக்கும், பதும புராணத்தில் உள்ள இக் கதை எடுத்துக்காட்டாகும். (இது 1921-ல் 'ரிப்பன் பிரஸில்' அச்சடித்த ஸ்ரீ பக்த லீலாமிருதம் 2, 3, 4, 5 பக்கங்களில் உள்ளது) பிறகு, இந்தக் கதையில், ஆரியர் வழக்கம்போல்—அசுரனைத் தேவர்களுக்காக விஷ்ணு கொல்லுகிறார் என்று முடிகிறது.

['குடி அரசு'-கட்டுரை—5.2.1944]

3. தமிழ் வருடங்கள்

ஆரிய சம்பந்தமான கதைகள், சேதிகள் ஆகியவைகள் எதை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆபாசம், அசிங்கம், விபச்சாரம், இயற்கைக்கு மாறான மடத்தனமான சங்கதிகள் முதலியவைகள் இல்லாமல் இருப்பது மிகமிக அதிசயமாகும்.

தமிழ் வருஷப் பிறப்புக் கதை நாகரிகமுள்ள மக்களால் எழுதப்பட்டிருக்க முடியுமா? இதைப் படித்துப் பார்க்கும் அன்னியன் இந்தக் கதை சம்பந்தப்பட்ட மக்களை என்ன வென்று நினைப்பான்?

கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஒரு முக்கிய சம்பவத்தை ஞாபகப்படுத்தக் கூடியதாகவும், சரித்திரத்திற்குப் பயன்படத் தக்கதாகவும், நாகரிகமுள்ளதாகவும் உள்ள வருஷக் கணக்குகள் இருக்கின்றன. உதாரணமாக, அவர்களது வருஷங்களுக்கு கி.மு., கி.பி., 'ஹிஜிரி' என்கின்ற பெயர்களும் அவற்றுக்கு நல்ல ஆதாரமுள்ள கருத்துக் களும் இருக்கின்றன.

ஆனால், தமிழனுக்கு—நாதியற்ற தமிழனுக்கு என்ன வருஷம் இருக்கிறது? அதற்கு என்ன கருத்து என்று பார்ப்போமேயானால், தமிழர் என்கின்ற பெயர் வைத்துக்கொண்டு இந்த நாட்டில் வாழ்வதற்கு வெட்கமில்லையா என்றுதான் தோன்றும். தமிழனின் நிலையை ஆரியர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் மானங்கெட்ட காட்டுமிராண்டி, லம்பாடி சமூகமாக ஆக்கிவிட்டதால், இவ்வளவு விழிப்பு ஏற்பட்ட இந்தக் காலத்திலும் தமிழனுக்குச் சூடு சொரணை ஏற்படுவதில்லை.

கோயிலுக்குத் தேவதாசிகளை விட்டவன் தமிழனே என்றால்—மற்றபடி தமிழனால் ஆக்கப்படவேண்டிய இழிசெயல் வேறு என்ன இருக்கிறது?

இது மாத்திரமா? மோட்சம் என்றால் தமிழன் எதையும் செய்ய முன்வருகின்றான்.

'ஆயபயன் அய்ந்து' என்று சொல்லிக்கொண்டு மாட்டு மூத்திரம், சாணி எல்லா வற்றையும் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கின்றான். நாம், நம் வருஷப் பிறப்புக்குத் தமிழ் வருஷப் பிறப்பு என்று சொல்லிக் கொள்கிறோம். இது நியாயமா? 'தமிழ்' வருஷப் பிறப்புக் கதையைப் பாருங்கள்!

நாரதர் பிரம்ம ரிஷி. அவருக்கு ஒரு நாள் காம இச்சை ஏற்பட்டதாம். எங்கு போனால் இது தீரும் என்று ஞானதிருஷ்டியினால் பார்த்து, சாட்சாத் கிருஷ்ணபகவா னிடம் போனால் தமது காம இச்சை தீரும் என்று கருதி, கிருஷ்ணனிடம் ஓடினாராம். கிருஷ்ணபகவான், 'நாரத முனிசிரேஷ்டரே எங்கு வந்தீர்?' என்றாராம். அதற்கு நாரதர், 'ஒன்றும் இல்லை' என்று தலையைச் சொரிந்துகொண்டு பல்லைக் காட்டினாராம். கிருஷ்ணபகவான், 'சும்மா சொல்லும்!' என்றாராம். நாரதர், 'எனக்கு எப்படியோ இருக் கிறது. உமக்கு அறுபது ஆயிரம் கோபிகள் (வைப்பாட்டிகள்) இருக்கிறார்களே—அதில் ஒன்று கொடுங்களேன்!' என்று கேட்டாராம். உடனே கிருஷ்ணபகவான், 'இதுதானா பிரமாதம், இன்று இரவு எனது அறுபது ஆயிரம் கோபிகளில்—நான் இல்லாத ஒரு கோபியின் வீட்டிற்குப் போய் அங்குள்ள கோபியை அனுபவித்துக் கொள்ளுங்கள்' என்றா ராம். உடனே நாரதப் பிரம்மம், 'கிருஷ்ண பகவானுக்கு ஒன்று போக—தனக்கு 59999 கோபிகள் கிடைத்ததாகக் கருதிக்கொண்டு, மகிழ்ச்சிப் பெருக்குடன் கோபிகள் வீடு நோக்கிச் சென்றாராம். அங்கு சென்று எந்த வீட்டைப் பார்த்தாலும் கிருஷ்ணபகவான் கோபியுடன் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு வெட்கப்பட்டு, வெகு கோபத்துடன் கிருஷ்ணபகவானின் வீட்டிற்கு வந்தார். வழியில் என்ன நினைத்துக்கொண்டு வந்தார் என்று யோசித்தால், அது மிகவும் வேடிக்கையானது. அதாவது, 'இப்படி நம்மை மோசம் பண்ணின கிருஷ்ணனையே இன்று அனுபவிப்பது' என்றுதான் கருதிக்கொண்டு வந்தார் என்று தெரியவருகிறது.

அதாவது, 'பகவானே! நான் சென்ற கோபி வீட்டில் எல்லாம் நீர் இருந்தீர்; ஆதலால் சும்மா வந்துவிட்டேன். அதன் நிமித்தம் நான் தேவரீரையே அனுபவிக்க ஆசைப்படுகிறேன்' என்று நாரதர் சொன்னதோடு, பகவானைப் பெண்ணாகக் கொண்டு அனுபவிக்க அழைத்தால் ஒரு சமயம் வரமாட்டாரோ என்று கருதிப் போலும், 'பகவானே

என்னைப் பெண்ணாய்க் கொண்டு தாங்கள் அனுபவிக்க எண்ணங் கொண்டேன்" என்று கெஞ்சினார். பகவான் உடனே கருணை கொண்டு ஸ்ரீமதி நாரத அம்மாளை அனுபவித்தார். இந்த 'நாரத அம்மை'யுடன் 60 ஆண்டுகள் லீலை செய்தார். அப்புறம் என்ன ஆயிற்றென்றால், ஆணாய் இருந்தாலென்ன பெண்ணாய் இருந்தாலென்ன— பகவான் கிரீடை செய்தால் வீணாகப் போகுமா? போகவே போகாது. எனவே, 60 வருஷ லீலைக்கும் 'நாரத அம்மாளுக்கு' 60 பிள்ளைகள் பிறந்தன. இந்த 60 பிள்ளைகளும் தகப்பனைப் பிடித்துக் கொண்டு, 'எங்களுக்கு என்ன கதி?' என்று கேட்டன. பகவான் அருள் சுரந்து, 'நீங்கள் 60 பேரும் 60 வருஷங்களாக ஆகி ஒவ்வொருவர் ஒவ்வொரு வருஷத்திற்கு உலகை ஆளுங்கள்' என்று கருணை சாதித்தார். அதிலிருந்து 60 வருஷங்கள் ஏற்பட்டு அவைகளுக்கு இந்த 60 பிள்ளைகள் பெயர் வைக்கப்பட்டு, வருஷந்தோறும் அப் பெயர்கள் மாறி மாறி வருகின்றன.

ஆகவே, இந்த 60 வருஷங்கள்—'பகவானும்' 'ரிஷியும்' ஆன ஆணும் ஆணும் ஆண்–பெண்ணாகச் சேர்ந்து பிறந்த குழந்தைகள். இதற்காகத்தான் நாம் வருஷப் பிறப்பு கொண்டாடுகின்றோம்.

இப்படி ஆணும் ஆணும் சேர்ந்ததால் பிறந்த அதிசயமான பிள்ளைகளானாலும்— இந்த வருஷப் பெயரையோ எண்ணிக்கையையோ கொண்டு 60 வருஷத்திற்கு மேற்பட்ட காலத்தைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. அதனால்தான், தமிழனுக்குச் சரித்திரமில்லை என்பதோடு—தமிழர் சரித்திர காலத்திற்கு விவகாரம் இல்லாமலும் இல்லை.

ஆகையால், இனியாவது தமிழர்கள் இந்த 60 வருஷ கால முறையைக் காரித் துப்பி விட்டு 'கி. பி.யையோ, 'ஹிஜ்ரி'யையோ, கொல்லத்தையோ (கொல்லம் ஆண்டு), விக்ரமாதித்தனையோ, சாலிவாகனனையோ அல்லது வேறு ஏதாவது ஒரு 'சனியனை'யோ குறிப்பு வைத்துக்கொள்வார்களா? அவ்வளவு சூடு சொரணை தமிழனுக்கு உண்டா என்றும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம்.

['குடி அரசு'–'சித்திரபுத்திரன்' கட்டுரை—8-4-1944]

4. சிவனின் முட்டாள்தனம்

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நம் கடவுள்களைப்போல் முட்டாள்களையும், அயோக்கியர்களையும் மனித ஜென் மங்களில் கூடக் காண்பது அதிசயமாக இருக்கின்றது.

ஆனால், கடவுள் என்பவர் அப்படி முட்டாளாகவும், அயோக்கியனாகவும் இருக்க முடியாது என்பது உண்மையான, யோக்கியமான கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கருத் தாகவே இருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்.

மற்ற கடவுள்களைச் சிருஷ்டித்து, அவர்களை அயோக்கியர்களாக, மடையர்களாகக் கற்பித்து, சாஸ்திர புராண இதிகாசங்கள் ஏற்படுத்தியவர்கள்தாம் முட்டாள்களாக, அயோக் கியர்களாக இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

மக்களில் இந்த முட்டாள்தனமும், அயோக்கியத்தனமும் சில மதவாதிகள் இடத்தில் தான் இருக்கிறதாகக் காணப்படுகிறதே ஒழிய, எல்லா மக்களிடமும் இருந்ததாகக் காண முடியாது.

உண்மையாகவே, நம்நாட்டு முன்னேற்றம் இந்த மடையர்களாலும், அயோக்கியர் களாலுமே மிகமிகத் தடைப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். உலகத்தில் இன்று எவ்வளவோ அதிசயங்கள், அற்புதங்கள் விஞ்ஞான அறிவால் கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை நாம் நம் பஞ்சேந்திரியங்களாலும் அனுபவிக்கிறோம்.

அப்படிப்பட்ட அதிசயங்கள், கண்டுபிடிப்புகள் நம் நாட்டவர்களால் அல்லது நம் நாட்டில் ஏதும் நடைபெற்றதாகக் காணமுடியவில்லை. காரணம், நம் மதம், நம் கடவுள்கள், நம் மத ஆதாரங்கள், நம் கடவுள் செயல்களும், நம் தத்துவ ஆராய்ச்சிகள் முதலானவைகளுமேயாகும்.

நம் நாட்டில் நல்ல வைத்திய முறை இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் போகர், அகஸ்தியர், சித்தர், தன்வந்திரி முதலான பல—அதுவும் புராண இதிகாச காலத்துக்கு முந்திய-அதிசய மனிதர்கள்பேரால் ஏடுகளில், கர்ணபரம்பரையில் இருந்து வரும் சில முறைகள் தவிர, புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட முறை எதுவும் எளிதில் காண முடியவில்லை. ஏனெனில், மக்களுக்கு வரும் நோய்கள் கடவுள்களால் ஏற்பட்டவைகளாகும் என்பதும், அவர்களுக்கு அந்நோய் வரக் காரணங்கள் மக்களின் முற்பிறவி வினைப் பயனால் உண்டானவை என்பதும் நம் அறிஞர்களின் முடிவு. உதாரணமாக, ஜோசியத்தில், இந்த மனிதனுக்கு இந்த வயதில் இன்ன நோய் வரும்; அதற்கு இன்ன பிராயச்சித்தம், இன்ன சாந்தி, இன்ன அர்ச்சனை, இன்ன ஸ்தல யாத்திரை, இன்ன தீர்த்த ஸ்நானம் செய்தால் நோய்தீரும் என்பதாக நந்திதேவர் நாரதமுனிக்குச் சொன்னார் என்று சோதிடன் சொல்லிவிடுகிறான். உடனே நோயாளியை மந்திரவாதி, அர்ச்சகன், ஸ்தல யாத்திரைத் தரகர், சாமியாடிகள் சூழ்ந்து கொள்கிறார்கள். இதனால் மருந்து சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கவோ, செய்யவோ, வைத்தியம் செய்யவோ தூண்டுதல் ஏற்படுவதில்லை.

அதனாலேயே, 'ஜோசியன், மந்திரவாதி, சாமியாடி (சாமி பிடித்தவன்), அர்ச்சகன், வைத்தியன் ஆகிய அய்வரும் பித்தலாட்ட வாழ்வு என்னும் ஒரு மரத்தின் வெவ்வேறு கிளையில் காய்த்த காய்கள்' என்று பெரியவர்கள் சொல்லுவது வழக்கம். இப்படியாக ஏற்பட்ட கற்பனைகளுக்கு ஏற்பத்தான் கோயில், குளம், மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் முதலாகியவைகள் உண்டாக்கப்பட்டும் இருக்கின்றன.

இந்தக் காலத்திலும் நோய்களுக்குச் சாந்தி செய்வதும், தீர்த்தமாடுவதும், ஸ்தல யாத்திரை செய்வதும், அரசர், ஜமீன், மிராசு, வியாபாரி முதலிய செல்வர்களும்; பி.ஏ., எம்.ஏ., சயின்ஸ், மெடிகல்துறை நிபுணர்கள் உள்பட கற்ற அறிஞர்கள் என்பவர்களும் இவைகளுக்கு அடிமைப்பட்டு நடந்துவருகிறார்கள்.

இந்தப் புரட்டும், முட்டாள்தனமும் ஆன காரியங்களை உடல் நோய்களுக்கு மாத்திரமல்லாமல், மக்களின் ஒழுக்கத்திற்கும் நடத்தைக்குங்கூட சம்பந்தப்படுத்தி ஒழுக்கங்கெட்ட, யோக்கியமும் நாணயமும் அற்ற, தீய வஞ்சகக் காரியங்களுக்கும் பரிகாரமாக மூர்த்தி-தீர்த்த-ஸ்தலங்களைக் கற்பித்து மக்கள் ஒழுக்கத்தைப் பாழாக்கி இருக்கிறார்கள்.

சைவ சாமிகளுக்கு அருணாசல புராணம் என்பது மிகவும் உவப்பானது. அந்தப் புராணத்தை ஆதாரமாகக் கொண்டதுதான் திருவண்ணாமலை, அண்ணாமலைநாதர், கார்த்திகை தீபம் முதலியவைகளாகும். இந்தக் கோயில் முதலியவைகளுக்கு ஒரு கோடிக்கு மேற்பட்ட ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் உண்டு. கோடிக்கணக்கான பக்தர்கள் உண்டு. பூசை, திருவிழா, நாள், நட்சத்திரம் ஆகியவை ஏராளமாக உண்டு. அவைகளுக்காக ஆண்டுக்கு இலட்சக்கணக்கில் மக்கள்வந்து குவிந்து இலட்சக்கணக்காகப் பணம் செலவிடுவதுண்டு.

அந்த ஸ்தல விசேஷத்தைப் பார்த்தால் அது எவ்வளவு 'மோசமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பது விளங்கும்.

அருணாசலபுராணம் தீர்த்தச் சருக்கம் 13-ம் பாட்டு: 'தென்திசை தருமதீர்த்த குளத்திற் செரிந்து மூழ்கில் பொன்திகழ் வடிவமாகும் உடற்பிணி பொடிபட்டோடும்.' அதாவது, திருவண்ணாமலைக்குத் தெற்கே யமதீர்த்தம் என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதில் மூழ்கினால் உடல் பொன்னிறமான வடிவினதாகும். உடலில் உள்ள நோய்கள் எல்லாம் பொடிப்பொடியாகி அழிந்து போகும் என்பது இதன் பொருளாகும்.

ஒரு குளத்தில் நீராடினால் சொரி பிடித்த உடல் பொன்னிறமாகி—நோய் கொண்ட உடல் நலமாகி விடுகிறது என்று கடவுள் பெயரில், ஸ்தலத்தின் பெயரில், குளம் பெயரில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது எவ்வளவு முட்டாள்தனமும் அயோக்கியத்தனமுமான காரியம் என்பதை ஆத்திகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஓர் அழுக்குப்பிடித்த, அதுவும் புழுவும், கொசுவும் நிறைந்த நாற்றமுள்ள ஆபாசக் குளத்திற்கு இந்த மாதிரியான சக்திகளைக் கற்பித்துவிட்டால்—இதை நம்பும் மூடர்கள் அதில் குளித்தும், நீர் அருந்தியும் அதிகமான நோயை உண்டாக்கிக்கொள்வார்களே ஒழிய நோய் குணமடைய முடியுமா? இதுதான் போகட்டும் என்றால், மனிதர் தாம் செய்த பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக மதவாதிகள் கற்பித்து இருக்கும் மார்க்கமானது எவ்வளவு அயோக்கியத்தனமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப் பாருங்கள். தீர்த்தச் சருக்கம் 36-ம் பாட்டு:

காக முன் பலி பீடத்திம் பலித
    னைக் கவரும் போதில்
ஆக மார் சிறகைக் கீழே புடைத்
    தாலை யத்தி னூடே
ஓகையால் நமது கோயில் விளக்கிய
    தென உட்கொண்டு
பாக சாதனனார் வாழும் பதியினைப்
    பரமன் ஈந்தான்

இதன் பொருள்:—ஒரு காக்கையானது திருவண்ணாமலைக் கோயிலில் உள்ள பலிபீடத்தில் வைத்திருந்த சோற்றைத் தின்னும்போது தன் சிறகை விரித்து அசைத்தது. அதனைக் கண்ட பரமசிவன் இந்தக் காக்கை நமது கோயிலைச் சுத்தம் செய்தது என்று மகிழ்ந்து அதற்கு உடனே தேவேந்திரன் வாழும் உலகத்தைக் கொடுத்தார் என்பதாகும். மேற்படி சுருக்கம் 37-ஆம் பாட்டு:

மூடிக மொன்று கோயில் முளை
    யினைக் கிளறும் போது
தேடரு மணி யொன்றங்கே சிதறி
    யோர் விளக்கிக் காட்ட
ஆடிய பெருமான் தீபம் அளித்த
    தென் றதற்கு நல்ல
வீடுயர் நெறியுங் காட்டி விரைந்து
    சாலோக மீந்தான்.

இதன் பொருள்:—ஒரு பெருச்சாளியானது (மூஷிகம்) கோயிலில் வளைதோண்டும் போது அது பறித்துத் தள்ளிய மண்ணிலிருந்து ஒரு இரத்தினமானது சன்னதியில் விளக்கு போல் ஒளி மின்னியது. அதைக் கண்ட சிவபெருமான் அந்தப் பெருச்சாளி தன் சன்னதிக்குத் தீபம் போட்டது என்று கருதி, மோட்ச வழியைக் காட்டி சாலோசப் பதவியைக் கொடுத்தார் என்பது. மேற்படி சருக்கம் 38-ஆம் பாட்டு:

சிலந்தி யொன்றொருநாள் அந்தத்
    திருமலை யிடத்து நூலைக்
கலந்துடன் இழைக்க
    ஈதுகலை நமக்களித்த தென்று
நலந்திகழ ரசனாக்கி அதற்கு நல்
    லறிவு நல்கி
உலர்ந்தபின் நெடிய மாயன்
    உலகினை உதவி னானே.

இதன் பொருள் : திருவண்ணாமலையில் ஒரு நாள் ஒரு சிலந்திப் பூச்சியானது தன் வாய் நூலால் ஒரு கூடு கட்டியது. அதனை சிவபெருமான், அச் சிலந்தியானது தனக்கு நல்ல வஸ்திரத்தை நெய்து கொடுத்ததாகக் கருதி அதை இராஜாவாக ஆக்கி, நல்ல ஞானம் உண்டாக்கி, அது இறந்த பிறகு வைகுந்தலோகத்தைக் கொடுத்தார் என்பதாகும்.

வாசகர்கள் இம் மூன்று பாட்டினையும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். காக்கை சிறகை ஆட்டினதினால் அது குப்பையைக் கூட்டிச் சுத்தம் செய்ததாக எவனாவது கருதுவானா? பெருச்சாளி தோண்டிய மண்ணில் ஒரு ஒளி மின்னும் கல் காணப்பட்டால் அதை அந்தப் பெருச்சாளி விளக்கேற்றியது என்று கருதுபவனைவிட பெரிய மூடன் இருக்கமுடியுமா? சிலந்திப்பூச்சி கூடுகட்டியதைக் கண்டு அது தனக்கு வேட்டி நெய்து கொடுத்ததாகக் கருதுவது கடுகளவு புத்தியுள்ளவனுக்காவது பொருந்துமா?

எனவே, இப் பாட்டுக்களிலிருந்து பரமசிவனை எவ்வளவு முட்டாளாக்கி இருக்கிறார்கள், இந்தப் புலவர்களும் மதவாதிகளும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவ்வளவு முட்டாள்தனமான புலவர்களும் மதவாதிகளும் எழுதும் கருத்து என்ன என்று பார்ப்போமானால், எந்த முட்டாளாவது இதை நம்பி காசு கேட்காமல் குப்பை கூட்டவும், விளக்குப் போடவும், துணிவாங்கித் தரவும் முன்வர மாட்டானா என்பதுதானே? அதற்கு ஏற்றாற்போலவே இப்படிப்பட்ட முட்டாள்தனமான கூற்றுகளை நம்பித்தானே அனேக மூடர்களும், அங்கு விளக்குப் போடவும், குப்பை கூட்டவும், சாமிக்கென்று துணி வாங்கிப்போடவும் முன் வருகிறார்கள். இதைப் பார்க்கும்போது இது போன்ற புராணங்கள் எல்லாம் எவ்வளவு பித்தலாட்டமாக, மூடத்தனமாக எழுதப்பட்டு இருக்கவேண்டுமென்பது விளங்கவில்லையா? சுயநலக்காரர்களும், பித்தலாட்டக்காரர்களும் செய்யும் இப்படிப்பட்ட காரியங்களால் மக்கள் ஏமாறுவது ஒருபுறமிருந்தாலும், இதனாலெல்லாம் தங்கள் பாவம் தீர்ந்துவிடும், தாங்கள் எவ்வளவு அயோக்கியத்தனம் செய்தாலும் மோட்சம் கிடைத்து விடும் என்று கருதி, தீயகாரியங்களுக்குப் பயப்படாமல் மேலும் மேலும் அயோக்கியத்தனம் செய்வது ஒருபுறம் இருந்தாலும், இதனால் கடவுள்கள் எவ்வளவு மடையர்களாகவும், ஒழுக்கத்திற்கும், நல்ல குணங்களுக்கும் பொறுப்பற்றவர்களாகவும் ஆக்கப்படுகிறார்கள் என்பதை அறிவுள்ள மக்கள் உணரவேண்டும்.

இம் மாதிரிக் கடவுள்களை முட்டாள்களாக ஆக்கிவிட்டு எவனாவது இந்த முட்டாள் தனத்தை எடுத்துக்காட்டினால், 'அய்யோ! கடவுளைக் குற்றம் சொல்கிறானே! கடவுள் களின் நடத்தைகளைக் குறைகூறுகிறானே! மதத்தை இழிவுபடுத்துகிறானே!' என்று கூக்குரலிடுவதில் அறிவுடைமை ஏது?

ஆகவே, மதவாதிகளும், புலவர்களும், சுயநலக்காரர்களும் செய்த காரியங்களால் தான் இன்று கடவுள்கள் சந்தி சிரிக்கப்படுகிறார்களே ஒழிய சுயமரியாதைக்காரர்களால் அல்ல என்பேன்.

[சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை—'விடுதலை' 10-3-1950]

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இராமாயணந்தான் ஆபாசம் என்றால் பாரதத்தின் யோக்கியதைதான் என்ன? எல்லோருக்கும் இராமாயணம், பாரதம், பாகவதம், கந்தபுராணம் முதலிய நூல்களைப் பற்றியும், அவற்றில் வரும் பாத்திரங்களைப் பற்றியும் 'புண்ணிய நூல்கள்' என்கின்ற தன்மையில் நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால், இந்தப் புண்ணிய நூல்களின் தன்மை என்ன? அவைகளிலே கற்பிக்கப்படும் ஒழுக்கம் என்ன என்று பார்த்தால், மக்களை அயோக்கியர்களாக்குவதற்கு—முட்டாள்களாக்குவதற்குத்தான் அவைகள் பயன்படுகின் றனவே தவிர பகுத்தறிவுக்கோ, நல்வாழ்வுக்கோ, ஒழுக்கத்துக்கோ வழிகாட்டுகிறதா? மக்க ளுடைய வாழ்க்கைக்கு—பகுத்தறிவுக்காக எழுதப்பட்டிருக்கும் திருக்குறளைப் பற்றி

நம்மவர்கள் அறியவில்லை; அறியமுடியாமல் செய்துவிட்டார்கள். நாடகத்தில், சினிமாவில், காலட்சேபத்தில் எல்லாவற்றிலும் இந்தக் கதைகளைப் புகுத்தி மக்களை ஏய்த்தார்கள். இந்தக் கதைகளைத் 'தெய்வீகம்' பொருந்தியவை என்று நம்பும்படி செய்துவிட்டார்கள்.

மகா பாரதத்தை அய்ந்தாவது வேதம் என்று கூறுகிறார்களே, அந்தக் கதையிலே வருகின்ற பெண்மணிகளில் யாராவது 'பத்தினி' என்று காட்டமுடியுமா? துரோபதையைப் பற்றி எடுத்துக்கொண்டால் அந்த அம்மாள் ஒரு 'Unlimited company.' அய்ந்து கணவர்கள் இருந்தும் ஆறாவதாகக் கர்ணனையும் காதலித்தாள் என்று அந்த அம்மாள் வாயால் சொன்னதாகக் காணப்படுவதுடன், உலகிலேயே பத்தினி இருக்க முடியாது என்று சொல்லிவிட்டாள்.

பாண்டவர்களின் தாய்மார்களைப் பற்றியும் அதே மாதிரி. ஒருவன் சூரியனுக்குப் பிறந்தான்; இன்னொருவன் எமதர்மனுக்குப் பிறந்தான்; அடுத்தவன் வாயுவிற்குப் பிறந்தான்; மற்றவன் இந்திரனுக்குப் பிறந்தான்; ஒருவன் வருணனுக்கு, ஒருவன் அக்கினிக்கு என்று கதைபோகும். இத்தனைக்கும் தனியாக, பாண்டு மன்னன் வேறு, அக்கினி சாட்சியாய் இவளைக் கல்யாணம் செய்து கொண்டவனாவான். இவர்கள் தாயின் கதை இப்படி; பெண்டாட்டி கதையும் இப்படி என்றால் இவர்கள் பாட்டிமார்கள் கதை மிகமிக மோசமாகும். இப்படி ஆபாச வாழ்க்கை இருந்தாலும் இவர்களெல்லாம் பத்தினிகளாம். இதுதான் ஆரியர் கொள்கைக்கு எடுத்துக் காட்டுப்போலும்!

[திருவல்லிக்கேணியில், 7-5-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-5-1950]

5. விஷ்ணுவின் ஆபாசம்

தோழர்களே!

ஒரு சமயம் பாற் கடலிலே அமிர்தம் கடைந்து எடுக்கப்பட்டதாம். ஒரு பக்கம் தேவர்களும் இன்னொரு பக்கம் அசுரர்களும் நின்று கடைந்தனராம். கடைந்து எடுப்பதற்கு உபயோகித்த சாமான்களைக் கேட்டாலே—இவை அபாண்டமான புளுகு மூட்டைகள்தாம்! இருந்தாலும் கடைந்தெடுத்தாய் விட்டது. ஆனால், பங்குபோட வேண்டுமே! தேவர்கள் நினைத்தார்கள்—அசுரர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று. எனவே, அதற்கு வழி என்ன என்று பார்த்தபோது, கடைசியில் மகா விஷ்ணு பெண்வேடம் போட்டு, அசுரர்களைப் பங்கீட்டு முறையில் ஏமாற்றிவிடுகிறார். அத்தனையையும் தேவர்களே குடித்தனர்.

கொஞ்சமாவது யோக்கியத் தன்மையிருந்தால் கதையை அதோடாவது நிறுத்தியிருக்க வேண்டாமா? அதுவுமில்லாமல் இன்னும் வளர்த்துக்கொண்டே போகிறார்கள்.

அமிர்தம் பங்கிட்டு வழங்கியதைக் கேள்வியுற்ற சிவன், மகா விஷ்ணுவைப் பாராட்டும் பொருட்டு வருகிறான். சிவன், மகா விஷ்ணுவிடம் சங்கதியைக் கேட்க, மகா விஷ்ணு தன்னுடைய சாமர்த்தியத்தைக் கூறுகிறான். அதைக் கேட்ட சிவன், 'அந்தப் பெண் வேடத்தைத் திரும்பவும் எடு; எல்லோரும் பார்க்கட்டும்' என்கிறான். உடனே மகா விஷ்ணு பழையபடி பெண்வேடம் தரித்தான். அதைக் கண்ட சிவன் அந்தப் பெண்மேல் மையல் கொண்டு மதிமயங்கி பெண்ணைத் துரத்துகிறான். அவள் ஓடுகிறாள்; சிவன் ஓடி ஓடிக் களைத்துவிட்டான். அதிக தூரம் காம இச்சையுடன் ஓடவே, சிவனுடைய வீரியம் தரையில் கொட்டிக்கொண்டே போயிற்று. எந்த எந்த இடங்களில் சிவனுடைய வீரியம் கொட்டியதோ, அந்த இடங்கள் எல்லாம் இன்று தங்கமும் வெள்ளியும் விளையும் பூமி என்று கூறி முடிக்கிறார்கள். தங்கமும் வெள்ளியும் வீரியம் என்றால், நாம் நகை அணிவதுகூட ஆபாசம்தானே!

எனவேதான், அன்றைய தினம் கதை எழுதியவர்களுக்குக் கொஞ்சமாவது புத்தி இருந்து இருக்கிறது என்று சொல்லமுடியாது என்கிறோம். எவ்வளவு முட்டாள்தனமான கதை, இது? இதையும் நாம் நம்புகிறோம் என்றால் இதைப்போல் மடத்தனம் வேறு என்ன வேண்டும்?

[பறங்கிமலையில், 13-4-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1952]

5. மூடநம்பிக்கைகளும் பழக்கங்களும்

1. மனிதன் கடவுளை நம்புகிறானா?

மனிதனுக்குள் புகுத்தப்பட்ட (கற்பிக்கப்பட்ட) கடவுள் சர்வ சக்தியுள்ளது; எல்லாம் வல்லது; யாவுமாயிருப்பது; கடவுளன்றி அணுவுமசையாது; கடவுளன்றி உலகில் எந்தக் காரியமும் நடவாது; யாவற்றையும் கடவுளே நடத்துகிறார் என்றெல்லாம் கடவுளைப் பற்றிக் கூறித்தான் மனிதனுக்குக் கடவுள் புகுத்தப்பட்டிருக்கிறது. மனிதனும் இந்தத் தன்மைகள், சக்திகளிருக்கின்றன என்கிற 'உண்மையோடு' கடவுள் நம்பிக்கைக் காரனாகிறான்.

ஆனால், வாழ்வில் மனிதன் எந்தத் துறையிலாவது, நடப்பிலாவது இந்தப்படி நம்பி நடந்துகொள்கிறானா?

மனிதன், மற்றும் ஜீவராசிகள் யாவும் ஆண், பெண் சேர்க்கையால்தான் சூலாகிப் பிறக்கின்றன. இதில் எவனும் கடவுளை நம்புவதுமில்லை; கடவுளை எதிர்பார்ப்பது மில்லை.

மனித ஜீவன் பிள்ளை பெற மருத்துவம் வேண்டியிருக்கிறது; அந்தப் பிள்ளைக்குத் தாய், பாலூட்ட வேண்டும்; பிறகு சோறூட்ட வேண்டும்; பெரியதானால் துணி வாங்கி உடுத்த வேண்டும்; பள்ளிக்கனுப்ப வேண்டும்; உபாத்தியாயர் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும்; பையன் கஷ்டப்பட்டுக் கவலை கொண்டு படிக்க வேண்டும்; பரீட்சையில் பையன் தேற வேண்டும்; பிரமோஷனாக வேண்டும்; அவைகளைப் படிப்பிக்க வேண்டும். இப்படியாக ஒரு துறையில் இவ்வளவு வேலைகள் பெற்றோர் செய்தாக வேண்டும். இப்படி மனிதனுக்கு வாழ்வில் எத்தனை துறைகள் இருக்கின்றனவோ அத்தனை துறைக்கும் பெற்றோர்களும், பிள்ளைகளும் அவரவர்கள் முயற்சித்துப் பாடுபட்டுச் செய்தால்தான் வாழ முடிகிறது.

மற்றும், மனிதன் உண்ணல், மலஜலம் கழித்தல், உறங்கல், கலவி செய்தல் முதலிய சகல காரியங்களும் அவனே முயற்சித்துப் பாடுபட்டுப் பக்குவப்படுத்திக் கொண்டுதான் வாழ்கிறான். இப்படியே, நோய் வந்தாலும் அதற்குப் பரிகாரம் அவனே செய்துகொள்ள வேண்டும். நோயில் பரிகாரத் தன்மைக்கேற்பக் குணமடைவது, சாவது முதலியவை மனிதனால் அல்லாமல் இவ்வளவு காரியங்களுக்கும் எவன் கடவுளை நம்பிக்கை கட்டிக்கொண்டிருக்கிறான்? ஆனால், வாழ்வில் எல்லா நிலையிலும் அறிவற்ற தனமாயும் 'கடவுள் செயல், கடவுள் செயல்' என்று சொல்லிக் கொண்டு தனது முயற்சிக்கெல்லாம் கடவுளை வேண்டுவதுபோல் நடித்துக் கொண்டும் இருக்கிறானென்பதல்லாமல், எந்த மனிதன், எந்தச் சிறு காரியத்திற்குக் கடவுளை நம்பி எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறான்? நடந்து கொள்கிறான்?

மனிதனுக்கு மனிதன் கண்டால், 'வாங்க, வாங்க, சவுக்கியமா?' என்று கேட்பது போலும், 'மகராஜனாய், நீடூழி வாழவேண்டும்!' என்று ஆசி கூறுவது போலும், தொட்ட

தற்கெல்லாம்—'கடவுள் செயல், கடவுள் செயல்' என்கின்ற சொல் ஒரு சம்பிரதாயச் சொல்லாக ஆகிவிட்டது. அதே மாதிரித்தான், மனிதன் கோவிலுக்குப் போவது, கும்பிடுவது பழக்கத்தில்—சம்பிரதாயத்தில் பட்டுவிட்டது.

அப்படியேதான், கோவிலுக்குப் போகும்போது தேங்காய், பழம், மற்ற பொருள் ஆராதனை முதலியவையும் ஏற்பட்டுவிட்டன.

சாமிக்கு வைக்கும் 'நைவேத்தியம்', 'ஆராதனைப் பொருள்களை'—சாமி சாப்பிடுகிறதென்றோ, சாமிக்குப் பயன் படுகிறதென்றோ எந்த அறிவாளியாவது, மடையனாவது சொல்லமுடியுமா? அப்படியேதான் சாமிக்கு உருவங்கள் கற்பிக்கப்பட்டவையும். சாமிக்கு உருவம் உண்டு என்று சாமியைக் கற்பித்தவன் சொல்லவே இல்லையே! சாமிக்கு உருவமில்லை, குணமில்லை, பிறப்பில்லை, இறப்பில்லை, ஆதியில்லை, அந்தமில்லை என்பதாக, ஒன்றும் இல்லை—இல்லை—இல்லை என்று சொன்னானே தவிர, சாமிக்கு ஏதாவது இருக்கிறது என்று எவன் சொன்னான்? இப்படியிருக்க, பிறகு எப்படி, சாமி (கடவுள்) மனிதனைப்போல நன்மை செய்தவர்களுக்கு நல்லது செய்வான்; கெட்டது செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பான் என்பது?

பிரார்த்தனை செய்தவர்களுக்கு நல்லது செய்வான், செய்யாதவர்களைக் கவனிக்க மாட்டான் என்பதும்; பாவம், புண்ணியம் என்பதும்; (கடவுள்) மன்னிப்பு என்பதுமான இப்படிப்பட்ட காரியங்கள் எப்படிக் கடவுளுடன் சம்பந்தப்படுத்தப்பட்டன? மற்றும், உருவமே இல்லாதவனுக்கு, மனித உருவம்; வேண்டுதலே இல்லாதவனுக்கு—பெண்டாட்டி, வைப்பாட்டி, பிள்ளை, வீடு, நகை, கலியாணம் முதலியவை எப்படி ஏற்பட்டன?

கருணைசாலி, யாரையும் காப்பாற்றும் உதார குணசாலி என்பவனுக்குக் கத்தி, வேல், வில், சக்கரம், மழு இவை எதற்கு? மற்றும், அவனைக் கொன்றான், இவனைக் கொன்றான், கோடிக்கணக்கான பேர்களைக் கொன்றான் என்பது எதற்காக? மற்றும், அவனை மோட்சத்தில் வைத்தான்; இவனை நரகத்தில் வைத்தான் என்பதெல்லாம் எதற்காகச் சொல்வது?

மற்றும், கடவுள் ஒழுக்க சீலன் என்று சொல்லிவிட்டு, 'அவன் பெண்டாட்டியைக் கெடுத்தான், இவன் பெண்டாட்டியைப் பலாத்காரம் செய்து ஏமாற்றிக் கெடுத்தான்'; இரண்டு பெண்டாட்டி, மூன்று பெண்டாட்டி, ஆயிரம் பெண்டாட்டி, பத்தாயிரம் பெண்டாட்டி, பல்லாயிரம் பெண்களிடம் சுகமனுபவித்தான் என்பதெல்லாம் எதற்கு? இவை, மனிதனுக்குள்ள கடவுள் நம்பிக்கையைக் காட்டுகின்றனவா? மனிதன் கடவுள் நம்பிக்கையால் சுத்த காட்டுமிராண்டி ஆகிவிட்டான்—ஆகிவருகிறான் என்பதைக் காட்டுகின்றனவா? இவற்றைக் கடவுள் பிரச்சாரக்காரர்கள் உணர வேண்டும். கடவுள் நம்பிக்கையிருந்தால்—மானம், வெட்கம், அறிவு, தெளிவு இருக்கக்கூடாது என்பது நிபந்தனையா என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—4-12-1969]

2. கடவுள்—மதம், நாட்டிற்குக் கேடே

தேவர்கள் என்றும், பல தெய்வங்களென்றும், அவற்றின் அவதாரமென்றும், உருவமென்றும், அதற்காக மதமென்றும், சமயமென்றும், மதாச்சாரியார்களென்றும், சமயாச்சாரியார்களென்றும் கட்டியழுபவர்கள்—ஒன்று பகுத்தறிவில்லாதவர்களாகவாவது அல்லது வயிற்றுப் பிழைப்பிற்குப் புறப்பட்ட புரட்டர்களாகவாவது இருக்க வேண்டும்.

அதுபோலவே, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் உண்மை-ஞானமற்றவர்களின் கொள்கையாகும்.

ஆதலால், உலகத் தோற்றமும் அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்விப்பு, அழிப்பு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும் மேற்படி சாமிகளோ, ஆசாமிகளோ, ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறானென்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கிறானென்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களை 'விசார ஞானம்' அற்றவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

அந்தக் கடவுள் என்பவைகளுக்குக் கண், மூக்கு, வாய், கால், கை, தலை; பெயர், ஆண்-பெண் தன்மை, பெண்சாதி-புருஷன், வைப்பாட்டி, தாசி, குழந்தை குட்டி, தாய்-தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து—அவைகளிடத்தில் பக்தி செய்யவேண்டுமென்றும்; அவற்றிற்குக் கோயில் கட்டி, கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பாலாபிஷேகம், படைப்பு, பூசை முதலியன செய்ய வேண்டுமென்றும்; அச் சாமிகளுக்குக் கலியாணம் முதலியவைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான 'திருவிளையாடல்கள்' முதலியவைகள் செய்துகாட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டுமென்றும்; அக் கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்கள் பற்றியும்—'திருமுறை'யாக, 'பிரபந்த'மாகப் பாடவேண்டும் என்றும்; அப்படிப் பட்ட கடவுள்கள் உண்டு என்பதற்கு அவற்றை ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்றும்; இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக் கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும்—மற்றும், நாம் செய்த-செய்கின்ற-செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத் தனங்களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகள் மூடநம்பிக்கை—வயிற்றுப் பிழைப்பிற்கான சுயநலப் பிரச்சாரமே.

ஏனெனில், இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப் படுத்துவதற்கும் மற்ற நாட்டார்கள் போல நம்நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்படாமல், மற்ற நாட்டார்களைப்போல விஞ்ஞான சாஸ்திரத்திலே (Science) முன்னேற்றமடையாமலிருப்பதற்கும் இம் மூட நம்பிக்கைகளும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங்களாகும்.

ஒருவருக்கொருவர் உயர்வு-தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி, ஒற்றுமை இல்லாமல் செய்திருப்பதற்கும்; மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும்; மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும்—சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும், கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியார்கள் என்பவர்களும் அவரது பாடல்களும், நெறிகளுமே காரணம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

நிற்க; இக் கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும் அவற்றின் கலியாணம் முதலிய உற்சவங்களுக்கும், பஜனை முதலிய காலட்சேப நேரக் கேட்டிற்கும், இக் கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும் இக் கடவுள் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், இக் கடவுள்களைப்பற்றிப் பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புத்தகங்களை வாங்குவதற்கும்—மற்றும், இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களாலும், நேரங்களாலும் நம் நாட்டில் பல கோடி ரூபாய்களுக்கும் குறைவில்லாமல் வருடா வருடம் பாழாகிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பலகோடிக் கணக்கான ரூபாய்கள் இம் மாதிரியாகப் பாழுக்கிறைக்காமல் மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (Science) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால்—நம் மக்கள் இன்னும் காட்டுமிராண்டிகளாகவும், உடலுழைப்புக் கூலிகளாகவும் இருக்கமுடியுமா? அன்றியும், தீண்டக்

கூடாத, நெருங்கக் கூடாத, பார்க்கக் கூடாத மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் இருக்கமுடியுமா? 100-க்கு 3 பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக்கொண்டு, அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக்கொண்டிருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

கடவுள்–மத மூடநம்பிக்கைகள் ஒழியச் செய்யும் காரியத்தை நாத்திகமென்றும், பாப காரியமென்றும் கூறுவது பகுத்தறிவற்ற பாமர மக்களை ஏமாற்றிச் சுரண்டிப் பிழைப் பவர்களின் சுயநலப் புரட்டேயாகும்.

['விடுதலை'–தலையங்கம்—9-12-1969]

3. கோயில் வழிபாடு

சென்னை மாகாணத்தில் தேவஸ்தானங்களும், தர்ம ஸ்தாபனங்களும், இந்துமத ஸ்தாபனங்களும் மொத்தத்தில் கோடிக்கணக்கான வரும்படி உடையவைகளாயிருந்தும், அவைகள் குறிப்பிட்ட காரியங்களுக்கு உபயோகப்படாமல் பெரும்பாலும் பிராமணர்களும், தாசி, வேசி முதலிய விபசாரிகளும், வக்கீல்களும் அனுபவிக்கவும்; தேவஸ்தான 'ட்ரஸ்டி' என்போர்களும் மடாதிபதியென்போர்களும், சமயாச்சாரி என்போர்களும் லோககுரு என்போர்களும், மகந்துகள் என்போர்களும் சுயமாய்த் தங்கள் இஷ்டம்போல் அனுப விக்கவும்; கொலை, களவு, கள்குடி, விபச்சாரம் முதலிய பஞ்சமா பாதகங்களுக்கு உபயோகப்படுத்தவும், சோம்பேறிகளுக்கும், விபச்சாரத் தரகர்களுக்கும் பொங்கிப்போடவும் உபயோகப்படுத்திக்கொண்டு வருவதைத் தென்னிந்தியர்கள் வெகுகாலமாய் அறிந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் கூறத் தேவை இல்லை.

அதன் பலனாய் 'காங்கிரஸ் கான்பரன்ஸ்' என்று சொல்லப்படும் ராஜீய ஸ்தாபனங் களின் மூலமாயும், பல சமய சபைகள் மூலமாயும், இவ் வக்கிரமங்களையெல்லாம் அடக்கிக் கோடிக்கணக்கான வரும்படியுள்ள சொத்துக்கள் ஒழுங்காய்ப் பரிபாலிக்கப்படவும், அதன் வரும்படிகள் குறிப்பிட்ட விஷயங்களுக்குக் கிரமமாய் உபயோகிக்கப்படவும் மீதி இருந்தால் இந்துமத சம்பந்தமான ஒழுக்கங் கற்பிக்கப் பொதுஜனங்களுக்கு உபயோகப்படவும் தக்க தான ஒரு சட்டம் செய்யவேண்டியது நமது அரசாங்கத்தின் முக்கிய கடனென்றும், கொஞ்சமும் காலதாமதம் செய்யாமல் உடனே செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமான தென்றும், இதுவரை செய்யாமல் அரசாங்கத்தார் கவலையீனமாய் இருந்தது பெரிய குற்ற மென்றும், இதற்குமுன் இதற்காக 1817-லும், 1863-லும் அரசாங்கத்தாரால் செய்யப் பட்டிருக்கும் இந்துமத தர்ம சொத்துக்கள் பரிபாலனச் சட்டம் போதுமான அளவு பந்தோபஸ்து அளிக்கக்கூடியதாய் இல்லை என்றும், பல தீர்மானங்களைச் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுமிருக்கிறது.

உதாரணமாக, ஈரோட்டில் 1915-ம் வருஷம் ஜூலை மாதம் 24, 25 தேதிகளில் டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடந்த கோயமுத்தூர் ஜில்லா இரண்டாவது கான்பரன்ஸ் என்னும் ராஜீய மாநாட்டில் 8-வது தீர்மானமாக அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது, 'தர்ம ஸ்தாபனங்கள் மத சம்பந்தமான தேவாலயங்கள் சரவரப் பரிபாலனம் செய்யப்படாததால் கிரமமாய் நடக்கும் வண்ணம் இப்போதிருக்கிற சட்டத்தைக் கொஞ்சமேனும் தாமதிக்காமல் சீர்திருத்தம் செய்து மாற்றிவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இக் கூட்டம் வற்புறுத்துகிறது' (இந்தத் தீர்மானத்தை ஸ்ரீமான் பி. வி. நரசிம்ம அய்யர்தான் பிரேரேபித்திருக்கிறார் என்பது நமது ஞாபகம்) இவற்றை அனுசரித்தே சர்க்காரிலுள்ள இதுசம்பந்தமான அதிகாரம், ஒரு இந்திய மந்திரியின் கைக்கு வந்ததும் அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்து 'சென்னை இந்துமத பரிபாலன மசோதா' என்னும் பெயரால் ஒரு சட்டத்தைஇயற்றிப் பொதுமக்கள் பிரதிநிதி

யென்றுசொல்லும் சட்டசபை அங்கத்தினர்களின் சம்மதம்பெற்று நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமானது மேலே. குறிப்பிட்டபடி தர்ம சொத்துக்களை அதன் கிரமமான உபயோகத்திற்கு அன்றி, தங்களுடைய சுயநலத்துக்காக உபயோகித்துக்கொண்டு வந்த சில மடாதிபதிகளுக்கும், பொதுமக்கள் தர்ம சொத்தைத் தங்கள் வகுப்பார்களே உண்ணவேண்டும் என்னும் கருத்தின்பேரில் சூழ்ச்சி செய்து பொது மக்களிடம் பணம் பறித்துத் தங்கள் வகுப்பார்களுக்கே பொங்கிப் போட்டுக்கொண்டிருந்த சில சமயாச்சாரிகளென்போரான சில பிராமணர்களுக்கும், அதன் பலனாய்த் தின்று கொழுத்துத் திரிந்துகொண்டிருக்கும் சில திண்ணைத் தூங்கிகளுக்கும், இவர்களின் தீச் செயல்களுக்கு அனுகூலமாய் இருந்து பணம் பறித்துக்கொண்டிருந்த வக்கீல்கள், பஞ்ச மகாபாதகத் தரகர்கள் முதலியவர்களுக்கும் விரோதமாயிருந்த படியாலும் இக் கூட்டத்தார் பெரும்பாலும் பிராமணர்களென்று சொல்லப்படுவோராயிருந்து விட்டபடியாலும் இவை களுக்கு ஏராளமான சொத்துக்கள் விட்டவர்களும் இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிற வர்களும் பிராமணரல்லாதாயிருப்பதனாலும் இந்தச் சட்டமானது பிராமணர்களுக்கு விரோதமாகவும், பிராமணர் அல்லாதார்களுக்கு அனுகூலமாயும் இருப்பதாக ஏற்பட்டுப் போய்விட்டது.

இதனால் இக் கூட்டத்தைச் சேர்ந்த பிராமணர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து, இந்தச் சட்டமானது மதத்திற்கு விரோதமானது என்றும், மதமே போய்விட்டதென்றும், சர்க்காரார் இந்துமதத்தில் பிரவேசித்து விட்டார்களென்றும், ஜஸ்டிஸ்கட்சி மெம்பர்களும் மந்திரிகளும் இச் சட்டத்தை உண்டாக்க அனுகூலமாய் இருந்தார்களென்றும், பொய்யழுகை அழுதும், பொய்ப் பழி சுமத்தியும், தங்கள் சாதிப் பத்திரிகைகளான 'இந்து' 'சுதேசமித்திரன்' 'சுயராஜ்யா' முதலிய பிராமணப் பத்திரிகைகள் மூலமாய்ச் சூழ்ச்சிப் பிரசாரம் செய்தும், பிராமணரல்லாதாரான சில அப்பாவிகளை ஏமாற்றியும், பிராமண கீர்த்திக்கு ஆசைப்பட்ட சில பயங்கொள்ளிகளைச் சுவாதீனம் செய்துகொண்டும் இச் சட்டத்தை ஒரேயடியாய்த் தொலைத்துவிடத் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தார்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள், மெம்பர்கள் முதலானவர்களுடைய உறுதியினாலும், முயற்சியினாலும்; ஸ்ரீமான்களான ஈ. வெ. இராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் இந்தச் சட்டத்தின் அனுகூலத்தைப் பொதுஜனங்களுக்கு எடுத்துக்காட்டி,இந்து மதத்திற்கும் இந்து மத பரிபாலனத்திற்கும் இச் சட்டத்தால் யாதொரு கெடுதியும் உண்டாகாது என்றும் ஆனால் 'ஊரார் முதலைத் தின்று வாழ்வதுதான் தர்ம'மென்ற கொள்கையை உடைய பிராமண மதத்திற்குத்தான் ஒருசமயம் ஆபத்து வந்தாலும் வரலாம் என்று பத்திரிகை மூலமாகவும், பிரசங்க மூலமாகவும் பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தியதின்பேரில், பிராமணர்களின் விஷமப் பிரச்சாரம் ஒருவாறாய் வெளிப்படையாய்க் குறைந்தது என்றாலும், இன்றைக்கும் ரகசியத்தில் எவ்வளவோ தந்திரங்களும் மந்திரங்களும் நடந்து கொண்டுதான் வருகின்றன. இதற்கு அனுகூலமாய் நமது மடாதிபதிகளும் மகந்துகளும் பொது ஜனங்களின் தர்மப் பணத்தை அள்ளி, புளியங்கொட்டைபோல் இறைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். அய்க்கோர்ட்டிலும் இச் சட்டம் சட்டப்படி செல்லாதென்றும் இதைத் தள்ளிவிட வேண்டு மென்றும் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்கள். இச் சட்டத்தில் என்ன கெடுதல் இருக்கிறது என்பதையாவது, இந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படி இந்து மதத்திற்கோ தர்ம பரிபாலனத்திற்கோ என்ன ஆபத்து இருக்கிறது என்பதையாவது இதுவரை எந்தப் பிராமணரும் எடுத்துச் சொன்னதே இல்லை.

'மதம் போச்சு; தர்மம் போச்சு; இந்து மதத்தில் சரக்கார் பிரவேசிக்கிறார்கள்' என்று பொய்யழுகை அழுகிறது தவிர வேறொன்றும் சொல்வதே கிடையாது.

எந்த உலகத்தில் மத விஷயங்களை அரசாங்கத்தார் திருத்த பிரவேசிக்காதிருக் கிறார்கள்? 1817-லும் 1863-லும் பிரவேசித்த காலத்தில் இந்தச் சாதியார் எங்கு போயிருந் தார்கள்? அரசாங்கத்தார் தாமதமின்றி உடனே பிரவேசித்து தக்கது செய்யவேண்டும் என்று

காங்கிரசிலும் கான்பரசிலும் தீர்மானித்த காலத்தில், இந்தச் சாதியார் எங்கு போனார்கள்? 'சட்டம் செய்யும் அதிகாரம் நம் கைக்கு வந்துவிடும். நம்மிஷ்டம்போல் நம் சாதிக்கே எல்லா உரிமைகளும் இருக்கும்படியாகச் சட்டம் செய்துகொள்ளலாம்' என்று நம்பி இருந்தார்கள்போலும். அல்லது, பிராமணரல்லாதார் இவற்றைக் கவனியாமல் இன்னும் பிராமணர்களே ஏகபோகமாய் உண்ணும்படி விட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்தார்கள் போலும்.

எந்தக் காரியத்திற்கு நாம் அரசாங்கத்தாரிடம் போகாமல் இருக்கிறோம்? நம்முடைய சாமிக்கு வைக்கும் நாமம் வடகலையா, தென்கலையா என்பதை சர்க்காரிடம் போய்த்தான் தீர்மானித்துக்கொள்கிறோம்; மடாதிபதியார்— இவரா, அவரா என்று தீர்மானிக்க சர்க்காரிடம்தான் போகிறோம்; நாம் கோவிலுக்குள் போகலாமா, வேண்டாமா என்பதற்கு சர்க்காரிடம்தான் போகிறோம்; என் சாதி பெரியதா, உன் சாதி பெரியதா என்பதற்கு சர்க்காரிடம்தான் போகிறோம். ஏழ்மைப்பட்ட தேசத்துப் பொது ஜனங்களின் பணம் வருஷம் ஒன்றரைக்கோடி ரூபாய்க்குமேல் மதத்தின்பேரால் வசூலித்து அயோக்கியர்களுக்கும், பஞ்சமா பாதகத்துக்கும் உபயோகப்படுத்துவதைக் கவனிக்க ஒரு சட்டம் வந்தால், அது கூடாது என்று சொல்லுபவர்கள் யோக்கியர்களா? நமக்குள் நாமே பார்த்துக் கொள்ளக்கூடாதா என்றால், இது விஷயத்தில் நமக்குள் என்ன யோக்கியப் பொறுப்பு இருக்கிறது? '10 லட்சம், 20 லட்சம் போட்டு நீ கோயில் கட்டிக்கொடுத்துச் சொத்தும் விட வேண்டும்—நான் செங்கல்லை அடுப்பில் போட்டுச் சூடேற்றி ஈரத் துணிமேல் போட்டு, ஆவியுண்டாக்கி, சுடுசாதம் என்று வெறும் பாத்திரத்தைச் சாமிக்கு வைத்து ஆராதனை செய்யவேண்டும்; அது சாதத்தின் ஆவியா, சுடுசெங்கல் ஆவியா என்பதைக்கூட நீ பார்க்கக்கூடாது; பார்த்தால் பாவம்' என்று சொல்லுகிற ஜனங்களை வைத்துக்கொண்டு நமக்குள் எப்படிச் சரிசெய்து கொள்ளுகிறது? வைக்கத்தில் தெருவில் நடக்க எத்தனை பேர் ஜெயிலுக்குப்போக வேண்டி வந்தது? கல்பாத்தில் தெருவில் நடக்க 144 யார் வேண்டுகோளின்பேரில் போடப்பட்டது? அதற்காக சர்க்காரிடம் யார் போனது? 'நமக்குள் சரிப்படுத்திக்கொள்ளக்கூடாதா' என்கிற யோக்கியர்கள் இந்தச் சமயம் ஏன் சர்க்காரிடம் போகவிட்டார்கள்? பொது ஜனங்கள் பணத்தில் நடத்தப்படும் வேதபாடசாலைகளில் பிராமணன்தான் படிக்கலாம்; சூத்திரர்கள் படிக்கக்கூடாது என்று சொல்லுகிறபோது 'நமக்குள் சரிப்படுத்திக் கொள்ளக்கூடாதா' என்கிற பிரபுக்கள் எங்கே போயிருந்தார்கள்?

இவற்றை, பிராமணரல்லாதார் தயவுசெய்து கருத்தாய்க் கவனிக்க வேண்டும். பிராமணரல்லாதாருக்குள் கொஞ்சம் பிளவு ஏற்பட்டவுடன் சட்டசபையால் இந்து தேவஸ்தான சட்டத்தை மாற்றப் பிராமணர்களால் தீர்மானம் கொண்டுவந்தாய்விட்டது.

இனி வரப்போகும் சட்டசபைக்கும், தேவஸ்தான சட்டத்தை மாற்ற சம்மதிக்கும் அங்கத்தினர்களுக்குச் சாதகமாய்ப் பிரச்சாரம் செய்யவும், அவர்கள் செலவுக்குப் பணம் கொடுக்கவும், மகந்துக்களும் மடாதிபதிகளும் இப்போதிருந்தே ஏற்பாடுசெய்து வருகிறார்கள். சுயராஜ்யக் கட்சிப் பிரச்சாரத்திற்கு இந்தப் பணம்தான் தாண்டவமாடும். சில பிராமணரல்லாதாரும் இப்பொழுது இருந்தே இதற்குச் சம்மதம் கொடுத்து, சில மகந்துக்கள் தயவையும், மடாதிபதிகள் தயவையும் சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாத ஒட்டர்களே! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! கோட்டையை விட்டீர்களானால் பிறகு வெகுநாளைக்குப் பிடிக்க முடியாது.

['குடிஅரசு'—தலையங்கம்—22-11-1925]

நமது நாட்டிலிருக்கும் அரசியலின் பெயராலும், மதத்தின் பெயராலும், மதச் சடங்கின் பெயராலும் நமக்கு இழைத்துவரும் கேடுகளுக்கும், தொல்லைகளுக்கும் அளவே இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் இக் கொடுமைகளில் சிக்கிச் சீரழிந்து சுயமரியாதை, மானம், மரியாதை, வெட்கமற்று அல்லல்படுகிறோம். இவைகளிலிருந்து

வெளியேற நாம் பிரயத்தனப்படும் இக் காலத்திலேயே—மேலும் மேலும் நமக்கு இழிவை உண்டாக்கித் தொல்லைப்படுத்துகின்றார்களென்றால் மற்றபடி நாம் சும்மா இருந்தோமானால் நமது கதி என்னவாகும்? 'அன்ன நடைக்கு ஆசைப் பட, உள்ளநடையும் போயிற்று' என்பது போல—கோயில்களில் நமக்கென்று தனி இடமும் பார்ப்பனர்களுக் கென்று தனி இடமும் கூடாது என்று நாம் சொல்ல ஆரம்பித்த பிறகு—'நீ கோயிலுக்கு வரவே கூடாது' என்று சொல்லவும், கோயிலை மூடிக் கதவைத் தாள்போட்டுக்கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார்கள். தெலுங்கில் ஒரு பழமொழியுண்டு. 'காலானிக்கி வேஸ்தே மூலானியாக்கி வஸ்துடு' என்பார்கள். அதன் அர்த்தம் '10-க்கு அடிப்போட்டால் 5-க்கு வருவான்' என்பது. அதுபோல, கோயிலுக்குள் வரவேண்டாம் என்பதாகவே சொல்லி விட்டால்—'கும்பிட்டுவிட்டாவது போய்விடுகிறேன்' என்று சொல்ல வருவான்; இல்லா விட்டால் சம உரிமை கேட்பான் என்று நினைத்து, போகிறபக்கமெல்லாம் கதவைச் சாத்து கிறார்கள். கோவிலில்போக உரிமை கிடைத்தவருக்கு, சாமி கும்பிட உரிமையுண்டா, இல்லையா? சுவாமி கும்பிட உரிமை உள்ளவனுக்கு, சுவாமிக்குத் தேங்காய் பழம் உடைத்து வைக்க உரிமை உண்டா, இல்லையா? இந்த உரிமைகளைக்கூட இந்தப் பார்ப்பனர்கள் அபகரிப்பார்களேயானால், இவர்களைவிட வெள்ளைக்காரர்கள் எந்த விதத்தில் கெட்டவர்கள்? நமது நாட்டுப் பார்ப்பனர்களைவிட தென் ஆப்பிரிக்க வெள்ளைக்காரர்கள் ஆயிரம் மடங்கு யோக்கியர்கள் என்று சொல்லுவோம். இந்தப் பார்ப்பன ஆட்சியிலும், அடக்கு முறையிலும் இருப்பதைவிட அந்த வெள்ளைக்காரர்கள் ஆட்சியே மேலென்பதாகச் சொல்லிவிடலாம். நம் நாட்டில் வரவர இந்தப் பார்ப்பனர்கள் எவ்வளவு அக்கிரமங்கள் செய்யத் துணிந்துவிட்டார்கள் என்பதை நினைக்கும்பொழுது நமது இரத்தமே கொதிக் கிறது; குலை நடுங்குகின்றது. பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளை என்பது போல், நாம் கட்டின கோயிலைக்கொண்டு வயிறு வளர்க்க ஏற்பட்டவர்கள் இப்போது நம்மை வெளியில் தள்ளிக் கதவைச் சாத்துவதென்றால் நமது மானங்கெட்ட தன்மைக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? சுவாமியைத் தொட்டுக் கும்பிடுவதும், சுவாமி பக்கத் தில் போய்க் கும்பிடுவதும் ஆகிய விஷயங்கள் இருக்கட்டும்; வெளியிலிருந்து தேங்காய் பழம் உடைத்துவைத்து சாமி கும்பிடுவதில் இந்தப் பார்ப்பனர்களுக்கு ஆட்சேபணை என்ன? இதைப் பார்ப்பனர்களின் எந்த வேதம், சாஸ்திரம், ஆகமங்களுக்கு விரோதம் என்று சொல்லக்கூடும்? கைவலுத்தவன் காரியமாயிருக்கிறதேயல்லாமல் இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? நாம் தேங்காய் உடைப்பதால் கோயில் வரும்படி குறைவதாக இருந்தால் அவர்கள் கேட்பதைத் தரத் தயாராக இருக்கின்றோம். பார்ப்பனர்கள் வரும்படி குறைந்துவிடுகிறது என்பதாகச் சொல்லுவதானாலும் அவர்களுக்கும் கொடுக்கவேண்டிய தைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றாம். மற்றபடி, இவர்கள் ஆட்சேபிக்கக் காரணம் என்ன? மதுரைக் கோயிலில் ஸ்ரீமான் இராமநாதனை உள்ளே வைத்து அடைத்ததும்—அவரைத் தேங்காய் உடைக்காமல் தடுத்ததும் எதைக் காட்டுகிறது? திருவண்ணாமலைக் கோயிலில் ஸ்ரீமான் கண்ணப்பரையும் மற்றவர்களையும் உள்ளேவிடாமல் கதவை மூடிய விஷயம் கோர்ட்டில் இருப்பதால் அது முடியட்டும். மற்றபடி, மதுரை விஷயத்தைப்பற்றி நமக்கு ஏற்பட்ட அவமானம் பொறுக்கக்கூடியதல்ல. இதுபோலவே, கொஞ்ச நாளைக்கு முன் தென்காசி கோயிலிலும் தேவாரம் படித்த பிறகு பிரசாதம் வாங்குவது தங்களுக்கு அவமானம் என்பதாகக் கருதி, அங்குள்ள பார்ப்பனர்கள் கோயில்களை விட்டுப் போய் விட்டதுமல்லாமல், சுவாமி எழுந்தருளும்போது கதவை மூடிக்கொண்டார்களாம். தேவாரம் படிக்கக் கேட்பதும் அதற்குப் பிறகு பிரசாதம் வாங்குவதும் இந்தப் பார்ப்பனர் களுக்கு அவமானமாய்த் தோன்றினால், நம்மைத் தேங்காய் பழம் உடைத்து வைத்துக் கும்பிட வேண்டாமென்றால் அது எவ்வளவு பெரிய இழிவு என்பதை அவர்களே சொல்லட்டும். ஒவ்வொரு அர்ச்சகனுக்கும் சுவாமி பூசை செய்யச் சம்பளம் உண்டு. அது கோயில் கட்டினவர்களே இத்தனை வேளை பூசை என்றும், அதற்கு இன்ன சம்பள மென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் பூசைக்கும் இவர்களுக்கும்

எவ்வித சம்பந்தமுமில்லை. அனேக இடங்களில் பக்தர்களே பூசை செய்வது இன்னும் வழக்கமாகத்தான் இருக்கிறது. இது வரையில் எவ்வித வழக்கத்தையும் யாரும் ஆட்சேபித்தது கிடையாது. இதை இப்படியே விட்டுவிட்டால் பம்பாயில் புரோகிதச் சட்டம் வந்ததுபோல்—அதாவது பார்ப்பானுக்குப் பணம் கொடுத்துத்தான் திதிசெய்ய வேண்டு மென்று சொன்னது, இங்கும் ஆகிவிடுமென்றே சொல்லலாம். அங்காவது பார்ப்பானுக்குப் பணம் கொடுத்துவிட்டுத் தாங்களாக திதி செய்து கொள்வதில் ஆட்சேபமில்லை என்பதாக ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இங்கு பார்ப்பானுக்குப் பணம் கொடுத்தாலும் நாம் செய்துகொள்ளப் பாத்தியமில்லை என்ற சட்டம் இருக்கிறதுபோல் இருக்கிறது.

நாம் தேங்காய் உடைத்தால் மீனாட்சியம்மனும் சொக்கலிங்க சுவாமியும் கோயிலை விட்டு ஓடிவிடுவார்களா? அல்லது, உலகம் முழுகிப்போகுமா? அல்லது, பாவமூட்டை ஏற்பட்டுவிடுமா? என்பது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லா மக்களுக்கும் சமத்துவ உரிமை வேண்டுமென்றும், யாவரும் கோயிலுக்குள் போய்ச் சுவாமியை தரிசிக்கும் உரிமை வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கும் இக் காலத்தில்—ஏற்கனவே உரிமையுள்ள காரியங்களையும் விட்டுக்கொடுப்பதனால் நாம் சமஉரிமை அடைய யோக்கியமானவர்களா வோமா? தேங்காய் உடைப்பதால் என்னதான் ஏற்பட்டுவிடும்? பார்ப்பனர்கள் சர்க்காரிடம் போய்த்தான் 144 உத்தரவு வாங்கி வரட்டுமே? அதையும் பார்த்துவிட்டிருக்க வேண்டுமே யல்லாமல் அதைத் தடுத்தது நமக்குத் திருப்தியளிக்கவில்லை.

கலகம் நடத்தவேண்டும் என்னும் எண்ணத்தோடு நாம் சொல்ல வரவில்லை. நாம் சரி என்று மனப்பூர்வமாய் யோசித்து, தீர்மானித்துச் செய்யுங் காரியங்களுக்கு ஒரு சிறு தடை ஏற்பட்டால், உடனே பின்வாங்கிக்கொள்கிறதென்று ஆரம்பித்துவிட்டால் எப்படி முன்னேற முடியும்? நமக்குப் பின்னால் யாராவது பிரயத்தனப்படுபவர்களுக்கும் இது பெருத்த குந்தகமாய் வந்து முடியும் என்றுதான் பயப்படுகிறோம். ஒரு காரியத்திற்குப் போகக்கூடாது; கிரமம் என்று நினைத்துத் தலையிட்டு விட்டால் அதைச் சுலபத்தில் விட்டுவிட்டு ஓடவும் கூடாது. ஆதலால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் யோசித்து, சீக்கிரத்தில் ஏதாவது ஒரு வசதிசெய்யக் கோருகிறோம். இன்னும் மற்ற ஊர்களிலும் இந்தவிதமான தடைகள் இல்லாமல் அவரவர்கள் தங்கள்தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்ற விரும்புகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—13-2-1927]

நமது நாட்டிலுள்ள எல்லாக் கெட்ட காரியங்களுக்கும் 'நமது நாட்டுக் கடவுள்'களே வழி காட்டிகளாக இருக்கிறார்கள். அதாவது சூது, வாது, வஞ்சகம், பொய், புரட்டு, திருட்டு, விபசாரம், குடி, கூத்தி, கொலை, ஜீவ இம்சை முதலிய எந்தக் கெட்ட தொழிலை எடுத்துக்கொண்டாலும்—சில கடவுள்களிடத்தில் இவை யாவும் மொத்தமாகவும், சில சில கடவுள்களிடத்தில் தனித்தனியாகவும், சில்லரையாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்து வருகிறோம். இதே குணங்கள் நமது கடவுள்களுக்கு இருப்பதாக நாமே தினப் படியும், மாதப் படியும், வருஷப் படியும், காலக்ஷேபம் மூலமாகவும், நடிப்பு மூல மாகவும், பூஜை மூலமாகவும், பஜனை மூலமாகவும், திருவிழாக்கள் மூலமாகவும் நடத்திக் காட்டிக்கொண்டும் வருகிறோம். இவைகளுக்காகவே நமது பெரியவர்களும் ஏராளமான சொத்துக்களையும்விட்டு, இவைகள் தவறாமல் நடந்துவரச் செய்திருக்கிறார்கள். தற்கால 'தர்ம பரிபாலனம்' என்பதும் பெரும்பாலும் இக் காரியங்களைப் பரிபாலனம் பண்ணுகிறவை களாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் ஏற்படுத்திய கடவுளை வணங்கும் மக்களுக்கு ஒழுக்கம் எப்படி உண்டாகக்கூடும்? இம் மாதிரியான தர்மங்களைப் பரிபாலனம் செய்யும் மக்கள், எப்படி ஒழுக்கமாக இருக்கமுடியும்? கடவுள்களும், கடவுள்களைப்பற்றிய கதைகளும், புராணங் களும் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளும் மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தை

யும் உண்டாக்குவதற்கு உண்டாக்கப்பட்டனவேயன்றி, இம் மாதிரிப் பலன்களுக்கு உண்டாக்கப்பட்டதாக யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.

மேற்கண்ட அனேகவிதமான ஒழுக்கக் குறைகள் கடவுள் பெயரால் நடப்பவைகளுள் இதுசமயம் சுவாமியின் பெயரால் பெண்களுக்கு விபசாரித்தனத்திற்கு அனுமதிச் சீட்டு (பொட்டுக் கட்டுதல்) என்னும் 'லைசென்ஸ்' கொடுக்கப்படுவதைப் பற்றி மாத்திரம் இவ் வியாசத்தில் எடுத்துக்கொள்வோம்.

கோயில்களுக்குத் தாசிகள் என்னும் விலை மாதர்கள் எதற்காக வேண்டும்? மேள மடித்தல், மணியடித்தல் முதலிய காரியங்கள் எதற்காகப் பூசைக்கு உபயோகப்படுகிறது என்று யாராவது கேட்டால், 'சுவாமிக்குத் தீபாராதனை ஆகும்போது வேறு சப்தங்கள் காதில் விழாமல் இருக்கும்பொருட்டு மணி சப்தங்களும், மேள வாத்தியங்களும் செய்யப் படுகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியோ தப்போ, அதைப்பற்றி நாம் இப்போது விவரிக்க வரவில்லை. வேறு சப்தங்கள் காதில் படாமல் இருப்பதற்கு மணியும், மேளமும் வைத்திருப்பதனால், விலை மாதர்களான விபச்சார ஸ்திரிகளைக் கோவிலில் நிறுத்தி இருப்பதன் காரணமென்ன? என்று இந்த முறையில் யோசிப்போமானால், சுவாமி தீபாராதனையின்போது பக்தர்களுக்கு வேறு சாமான் கண்களில் படாமல் இருப்பதற்கு இந்தச் சாமான்களை (விபச்சாரிகளை) நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். இதை, யாராவது அறிவாளிகளின் வேலையென்று சொல்லக்கூடுமா?

நமது நாட்டில் விபச்சாரத்திற்காகப் பொட்டுக்கட்டிக்கொள்ளும் தாசிகள் எல்லோரும் ஒவ்வொரு சுவாமியின் பெயரால்தான் தங்களைப் 'பொது மகள்' என்று முடிவுகட்டி விளம்பரப்படுத்திக் கொள்கிறார்களேயல்லாமல், 'வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி இல்லாததால் இந்த வியாபாரத்திற்குப் போகிறேன்' என்று யாரும் சொல்வதே இல்லை. இந்த மாதிரி அனுமதிச் சீட்டு கொடுக்கும் கடவுள், வேறு எந்த மதத்திலாவது இருக்கிறதா வென்பதை யோசித்துப் பார்த்தால், நமது அறியாமையும் நமது கடவுள்களுக்கு நாம் செய்யும் இழிவும் புலப்படாமல் போகாது.

தவிர, வேறு விவகார முறையில் பேசுவதானாலும், அதாவது 'கடவுளுக்குப் பணி செய்ய இவர்கள் கோவிலில் நியமிக்கப்படுகிறார்கள்' என்று சொல்வதானாலும், 'இருந் திருந்து கடவுள்களுக்குப் பணிசெய்ய இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களைத்தானா நியமிக்கவேண்டும்? வேறு யோக்கியமான தொழிலில் உள்ள பெண் மக்கள் உங்கள் சமூகத்தில் இல்லையா?' என்று யாராவது கேட்டால், அதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லக்கூடும்? இம் மாதிரி ஒவ்வொரு முக்கிய கோயிலிலும் பூசை காலத்தில் 10, 20, 30; சில கோயில்களில் 100, 150 வீதம் விபச்சாரப் பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொண்டு கோயிலுக்குத் தரிசனத்திற்காக வரும் பக்தர்கள்முன்னிலையில் நடமாடினால் அந்த பக்தர் களின் கதி என்ன ஆவது? கிராமாந்தரங்களில் எந்தக் கோயிலில் பார்த்தாலும் உள்ள துக்குள் நன்றாய்க் கொஞ்சம் அழகாய் இருக்கிற தாசிகள், முதலாவது தர்மகர்த்தாவுக்கு அல்லது அவர்கள் மக்களுக்கு, அதற்கடுத்ததுதான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு என்பதாகிய வழக்கமாயிருக்கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள கோயில்களின் கதி இப்படியென்றால், சில பெரிய பட்ட ணங்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும் உள்ள கோயில்களின் சங்கதி கேட்கவேண்டிய தில்லை. விசேஷ ஸ்தலங்களில் உள்ள கோயில்களின் தாசிக்கு பெரும்பான்மையும் அந்தந்தக் கோயில் அர்ச்சகர்கள் முதலியவர்களே தரகர்களாகி விடுகிறார்கள். அவர்கள் சுவாமிக்கும் நமக்கும் இடையில் எப்படித் தரகர்களாயிருக்கின்றார்களோ, அதுபோலவே, இந்த 'அம்மன்'களுக்கும் நமக்கும் தரகர்களாக இருந்துகொண்டு, யாத்திரைக்கார வாலிபர் களைப் பாழாக்கிவிடுகிறார்கள். சுவாமி பக்திக்காகக் கோயில்களுக்குப் போகும் பக்தர்கள் நாளாவட்டமாய்ப் பழகி தாசி பக்தர்களாகி விடுவதை நாம் எத்தனையோ பார்த்திருக்

கிறோம். இந்த அநாகரிகமும் கெடுதியுமான காரியங்கள் மதத்தின் பெயராலும் சுவாமியின் பெயராலும் நடைபெறுவதானது நமது சமூகத்திற்கே இழிவு என்று சொல்லாமலிருக்க முடியவில்லை. 'சாஸ்திரங்களிலிருக்கிறது; அதற்கு நாம் என்ன செய்வது?' என்று சிலர் சொல்லலாம். 'வெகு காலமாய் வழக்கத்தில் வந்து விட்டது; அதற்கு நாம் என்ன செய்வது?' என்று சிலர் சொல்லலாம். இதெல்லாம் முட்டாள்தனமான சமாதானமாகுமே தவிர அறிவுள்ள சமாதானமாகாது. நம்முடைய சாஸ்திரத்தில் இல்லாத அயோக்கியத்தனம் உலகத்தில் ஒன்றுகூட இல்லை என்பதாக நம்மால் மெய்ப்பிக்கலாம். அதையெல்லாம் இன்றைய தினம் நாம் செய்வதென்றால் நம்மைப்போல மூடர்கள் உலகத்திலிருக்கவே முடியாது.

அந்த சாஸ்திரங்கள் என்பவைகளை எழுதினவர்கள் யார்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக இப்படியெல்லாம் எழுதினார்கள்? இம்மாதிரி வேறு தேசத்தில், வேறு மதத்தில், வேறு சாஸ்திரத்தில் எங்கேயாவது இருக்கிறதா? என்பவைகளை யோசித்துப் பார்த்த பிறகு, இவற்றைக் கவனிக்க வேண்டுமேயல்லாமல், எவனோ தனக்குத் தொழில் வேண்டும், வயிற்றுப் பிழைப்பு நடக்கவேண்டும் என்பதாக ஏதாவது ஒன்றை எழுதிவைத்து நமக்குக் காட்டினால், அதுவே நமக்குக் கடவுள் வாக்காகிவிடுமா? அல்லது ஆதாரமாகிவிடுமா? மனிதனுக்குப் பகுத்தறிவு எதற்காக இருக்கிறது? இப்பொழுது வரவர அனேக கோயில்களில் இந்தத் தாசி வழக்கத்தை எடுத்தாகிவிட்டது. உதாரணமாக, மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஆட்சிக்குட்பட்ட கோயில்களுக்கு, 'எங்கும் தாசி உத்தியோகம் இருக்கக்கூடாது' என்பதாக ஓர் உத்தரவு போட்டு, தங்கள் சாமிகளை விபசாரத் தனத்திலிருந்து மீட்டுவிட்டார்கள். அதன் மூலம் அந்த சமஸ்தானத்துக் கோயில் தாசிகள் எல்லாம் நீக்கப்பட்டாய்விட்டது. மைசூர் சமஸ்தானத்துச் சுவாமிகளுக்கு வெட்கம் வந்து, தங்களுக்கு இனிமேல் தாசிகள் வேண்டியதில்லை என்று அந்த கவர்ன்மெண்டுக்குச் சொல்லிவிட்டது போல, நமது நாட்டுச் சுவாமிகளுக்கும் என்றைக்காவது வெட்கம் வந்தோ, அல்லது கிழப் பருவம் வந்தோ இனிமேல் தங்களுக்குத் தாசிகள் வேண்டியதில்லை என்று தேவஸ்தான போர்டாரிடமாவது, கமிட்டியாரிடமாவது, தர்மகர்த்தாக்களிடமாவது சொல்லிவிடக்கூடாதா என்பதாக நமது நாட்டுச் 'சாமி'களைக் கேட்டுக்கொள்கிறோம்.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் கட்டுரை—'குடிஅரசு' 4-9-1927]

4. பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இன்று உலகில் மக்கள் சமூகம் எல்லோரிடத்திலும்—அதாவது கடவுளால் மக்கள் நடத்தப்படுகிறார்கள் என்று நம்பும் எல்லோரிடத்திலும் இருந்துவருகிறது. இது எல்லா நாடுகளிலும் எல்லா மதக்காரர்களிடத்திலும் இருந்து வருகிறது.

பிரார்த்தனை என்பதற்கு ஜபம், தபம், வணக்கம், பூசனை, தொழுகை முதலிய காரியங்களும் பெயர்களும் சொல்லப்படுவதுண்டு.

இவை எல்லாம் கடவுளை வணங்கித் தங்களுக்கு நன்மை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதேயாகும்.

தனக்கு வேண்டியவற்றை எல்லாம்—அதாவது இம்மையில்—இவ்வுலகில் புத்தி, செல்வம், சுகம் இன்பம், ஆயுள், கீர்த்தி முதலியவைகளும்; மறுமையில்—மேல் லோகத்தில் பாவ மன்னிப்பு, மோட்சம், நல்ல ஜென்மம் முதலியவைகளும் கிடைக்கவேண்டும் என்கின்ற ஆசையே பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருந்துவருகிறது.

இந்தப் பிரார்த்தனையின் அஸ்திவாரம், உலகத்தைப் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதும்; அவர் சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வமும் அறியும் ஞானமும் உடையவர் என்பதும், அப்படிப்பட்ட அக் கடவுளை வணங்குவதால்

ஒருவனுக்கு வேண்டிய சகல காரியங்களிலும் சித்தி பெறலாம் என்பதுமானவைகள்தாம் பிரார்த்தனைக்காரர்களின் கருத்தாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பிரார்த்தனைக்கு அக் கடவுளை வணங்குவது, தோத்திரம் செய்வது, புகழ்வது, பஜனை செய்வது முதலிய காரியங்கள் ஒருபுறமிருக்க, பொருள்களைக் கொண்டும் கடவுளைத் திருப்திசெய்து அவற்றால் பயன்பெறலாம் என்பதும் இந்தப் பிரார்த்தனையில் சேர்ந்ததாகும்.

அதாவது, கடவுளுக்கு இன்ன இன்னது செய்வதாக நேர்ந்துகொள்வது, ஜீவப் பலி கொடுப்பது, கோவில் கட்டுவது, உற்சவம் செய்வது முதலிய காரியங்கள் செய்யப் படுவனவாகும்.

ஆகவே, இப்படிப்பட்ட பிரார்த்தனை என்பதற்கு வேறு வார்த்தையில் ஒரு மாறு பெயர் சொல்லவேண்டுமானால் 'பேராசை' என்றுதான் சொல்லவேண்டும். பேராசை என்றால் தகுதிக்குமேல் விரும்புவது, வேலை செய்யாமல் கூலி பெறுவது என்பதே ஆகும்.

படித்துப் 'பாஸ்' செய்யவேண்டியவன் பிரார்த்தனையில் பாஸ் செய்வது என்றால்; பணம் வேண்டியவன் பிரார்த்தனையில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால்; மோட்சத் துக்குப் போகவேண்டும் என்கின்றவன் பிரார்த்தனையில் மோட்சத்துக்குப் போக வேண்டும் என்றால் இவைகளெல்லாம் பேராசை என்று சொல்லுவதோடு, வேலை செய்யாமல் கூலி கேட்கும் பெரும் சோம்பேறித்தனமும் மோசடியும் ஆகும் என்று சொல்லுவதுதான் மிகப் பொருத்தமாகும்.

பேராசையும், சோம்பேறித்தனமும், ஏமாற்றும் தன்மையும் இல்லாவிட்டால் பிரார்த் தனைக்கு இடமே இல்லை.

மற்றும், முன் குறிப்பிட்ட தேவைகளுக்காகப் பிரார்த்தனை செய்வதும், பிரார்த் தனையில் அவைகளை அடையப் பார்ப்பதும், முன் குறிப்பிட்ட சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள கடவுளைச் சுத்த முட்டாள் என்று கருதி அவனை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சி என்று கூடச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

எந்த மனிதனும் தகுதியினால் எதையும் அடையலாம். அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து தகுதியாக்கிக்கொண்டு பலனடைய எதிர்பாராமல்—காரியத்தைச் செய்யாது பிரார்த்தனையில் பலன் அனுபவிக்க வேண்டும் என்று கருதினால், கடவுள் வேலை செய்யாமல் கூலி கொடுக்கும் ஒரு அறிவாளி என்றும், தன்னைப் புகழ்வதாலேயே வேண்டியதைக் கொடுக்கும் ஒரு தற்புகழ்ச்சிக்காரனென்றுந்தானே சொல்லவேண்டும்?

தவிர, இந்தப் பிரார்த்தனையின் தத்துவமானது மனிதனைச் சோம்பேறியாக்கு வதோடு, சகலவித அயோக்கியத்தனமான காரியங்களுக்கும் 'லைசென்சு' (அனுமதிச் சீட்டு) கொடுப்பது போலாகிறது. விதை நட்டுத் தண்ணீர் பாய்ச்சாமல் அறுப்பு அறுக்க அரிவாள் எடுத்துக் கொண்டு போகிறவனுக்கும், யோக்கியமான காரியங்களைச் செய்யாமல் கடவுள் கருணையை எதிர் பார்ப்பவனுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை.

ஏனென்றால், சகல காரியங்களும் கடவுளால்தான் ஆகும் என்று நினைத்துக் கொண்டு, கடவுள் யாருடைய முயற்சியும் கோரிக்கையும் இல்லாமல் அவனவன் செய் கைக்கும் எண்ணத்திற்கும், தகுதிக்கும் தகுந்தபடி பலன் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்து விட்டார் என்றும் (அதாவது விதியின்படிதான் முடியும் என்றும்) தெரிந் திருக்கும் ஒருவன் அந்தத் தெளிவில் நம்பிக்கை இருந்தால் பிரார்த்தனை செய்வானா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

சாதாரணமாக, மக்களில் 100-க்கு 90 பேர்களிடம் பிரார்த்தனை வெகு கேவலமான— அறிவற்ற வியாபாரத்தனமான முறையில் இருந்து வருகிறது.

அதாவது, 'எனக்கு இன்ன பலன் ஏற்பட்டால் உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன்' அல்லது 'உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன்; அதற்குப் பதிலாக நீ

இன்ன காரியம் எனக்குச் செய்' என்கின்ற முறையிலேயே பிரார்த்தனை இருந்து வருகின்றது.

இவர்கள் எல்லோரும்—அதாவது இந்தப் பிரார்த்தனைக்காரர்கள் எல்லோரும் கடவுளைப் புத்திசாலி என்றோ, சர்வசக்தி உள்ளவன் என்றோ, பெரிய மனிதத் தன்மை யுடையவன் என்றோ கருதவில்லை என்றுதான் சொல்லியாகவேண்டும்.

சிலர் சொல்லுகிறார்கள், 'மனிதன் பாபி; அவன் பாப கர்மத்தைச் செய்துதான் தீருவான்; ஆதலால் மன்னிப்புக்கேட்டுத்தான் தீரவேண்டும்' என்று.

'நான் பாபம் செய்துதான் தீருவேன்; நீ மன்னித்துத்தான் ஆகவேண்டும்' என்று பிரார்த்திப்பதைக் கடவுள் ஏற்றுக்கொள்ளுவதானால், மனிதன் எந்தப் பாவத்தைச் செய் வதற்கும் ஏன் பயப்படவேண்டும் என்பது நமக்குப் புலப்படவில்லை. பாபத்துக்கு எல்லாம் மன்னிப்பு இருக்குமானால் புண்ணியம் என்பதற்கு அர்த்தம்தான் என்ன?

ஆகவே, 'கடவுள்' கற்பனையைவிட இந்தப் பிரார்த்தனைக் கற்பனையானது மிகமிக மோசமானது என்றுதான் சொல்ல வேண்டும். பிரார்த்தனைக் கற்பனை இல்லா விட்டால் கடவுள் கற்பனை ஒரு பிரயோசனத்தையும் கொடுக்காமல் போய்விடும்.

மனிதன் பூசையும், பிரார்த்தனையும் செய்வதற்குத்தான் கடவுள் ஏற்படுத்தப் பட்டதே ஒழிய, கடவுளுக்காகப் பூசையும், பிரார்த்தனையும் ஏற்படுத்தப்படவில்லை.

குரு (பாதிரி), புரோகிதன் (பார்ப்பனன்) ஆகியவர்கள் பிழைப்புக்காகவே பிரார்த் தனையும் கடவுள் மன்னிப்பும் ஏற்படுத்தப்படவேண்டியதாய்விட்டது.

இந்த இரண்டு காரியங்களும் இல்லாவிட்டால் பாதிரிக்கோ, முல்லாவுக்கோ, புரோகிதனுக்கோ ஏதாவது வேலை உண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆத்திகர்கள் கொள்கைப்படி, மனிதனுடைய செய்கையும் எண்ணமும், 'சித்திர புத்திரனுக்கோ' 'கடவுளுக்கோ' தெரியாமல் இருக்கவே முடியாது. இதற்காகப் பலன் கொடுக்கத் 'தீர்ப்பு நாளும்', 'எமதர்ம ராஜாவும்' இருந்தே இருக்கிறார்கள்.

மத்தியில் பிரார்த்தனை, பூசனை என்பவை—மேற்கண்ட இரண்டையும் ஏமாற்றவா அல்லது குருவும், புரோகிதனும் பிழைக்கவா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.

பிரார்த்தனையில் செலவாகும் நேரத்தைப்போல் மனிதன் வீணாய்க் கழிக்கும் நேரம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். சில சோம்பேறிகள் பிழைப்பதற்காக மக்கள் புத்தி எவ்வளவு கெடுகிறது? மக்களுக்கு அயோக்கியத்தனமானவைகளைச் செய்ய எவ்வளவு தைரியம் ஏற்பட்டு விடுகிறது? பொருள்கள் எவ்வளவு நாசமாகின்றன என்பவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால் பிரார்த்தனை என்பது ஒரு புரட்டான காரியம் என்றோ, பயனற்ற காரியம் என்றோ, அறிவீனமான காரியம் என்றோ விளங்காமல் போகாது.

['பகுத்தறிவு' மலர் 1, இதழ் 9—1935]

'கடவுள்' என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்துவருகிறது.

'கடவுள்' என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது.

அப்படி இருந்தும் 'கடவுள்' என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆத்திக னாலும் சொல்ல முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு ஆத்திகனும் தனக்குப் புரியாத ஒன்றையே தன்னால் தெரிந்துகொள்ள முடியாததும், பிறருக்கு விளக்கமுடியாததுமான ஒன்றையே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, 'கடவுள்' என்று கட்டி அழுகிறான்.

கடவுளுக்கு இலட்சணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருந்தால், இவ்வளவு காலத்துக்குள்ளாகக் கடவுள் சங்கதியில் இரண்டில் ஒன்று—அதாவது உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள்.

மக்களுள் பெரும்பாலோரும் ஆத்திகர்கள். எல்லோரும், தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துர்க் குணங்களுக்கும் தங்கள் தரித்திரத்திற்கும் துன்பத்துக்கும் தாங்களே காரணம் என்றும் வருந்தி அவற்றைப் போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள் கடவுளை ஒரு மனிதனைப்போலவே கற்பித்துக்கொண்டு, அதிலும் ஒரு செல்வம் பொருந்திய மனிதனாய்க் கற்பித்துக்கொண்டு, அதற்கு மனிதனைப்போலவே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை, பல பெண்டுகள், பல வைப்பாட்டிகள், உடை, ஆகாரம், வாகனம் ஆகியவைகளைக் கொடுத்துவருகிறார்கள்.

மற்ற கிறிஸ்து, முஸ்லிம் ஆகிய மதத்தவர்களும் கடவுளை மனிதன்போலவே கற்பித்து, அக் கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகிய குணங்களைக் கற்பித்து, தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படி நடக்காதவனுக்கும், தீமையளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

சர்வ சக்தியுடைய—பூர்ண தன்மை பெற்று, எங்கும் நிறைந்திருக்கிற கடவுளுக்கு மோட்சம்—நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீயகுணம் மனிதனை அடையக் காரணம் என்ன?

தீயதைச் செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி அதிகரிக்கப்பட்டுவிடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமைசெய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதன் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்க முடியாமல் போய்விடுவார்கள் என்றால், தீமை எப்படி, எப்பொழுது உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாகக் கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும், தீமைக்காகத் தண்டிக்கப்பட்டும், உலகத்தில் இன்றும், நாளையும், இனியும், இனி வெகு காலத்துக்கும் தீமை இருந்துகொண்டே வருகிறது, வரும் என்றால் இதுவரையும் தண்டனையும், மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன?

தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு என்னதான் வழி?

தீமையைச் செய்தவன் மன்னிப்பு பெற்றோ, தண்டனை அடைந்தோ, தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்ளுகிறான் என்றே வைத்துக் கொள்ளவேண்டும்.

தீமையை அடைந்தவனுக்கு இந்தக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை.

தீமையை அடைகின்ற மனிதன் கடவுள் சித்தத்தால்தான் தீமை அடைகின்றான் என்றுதானே சொல்லவேண்டும்? அப்படி இல்லாவிட்டால், கடவுளின் காவலை மீறி, ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?

ஆகவே, கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகின்றான் என்றால், பிறகு தீமை செய்தவனுக்குத் தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்?

கடவுள் சித்தம் இல்லாமல், தனிப்பட்டமுறையில், தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை இன்னொருவருக்குச் செய்துவிட முடியுமா?

கடவுள், மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே பெருமித ஆத்திகர்கள் முடிவு. அதனாலேயே, பிச்சை பெற்றவனும் உதவி பெற்றவனும் உத்தியோகம் பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறார்கள். ஏதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியிலிருந்து தப்பியவனும் கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே, எந்த நன்மைக்கும், தீமைக்கும் மனிதன்மீது பொறுப்பைச் சுமத்துவது எப்படி முடியும்?

அன்றியும், கடவுள் சர்வ வியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு எண்ணத்தையும், காரியங்களையும் கவனித்து வருகின்றவனாய் இருக்கும்போதும், மனிதனுக்குத் தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவு செய்யவேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக் காரியத்தைப் பிரார்த்தனையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்கமுடியும்? பிரார்த்தனைக்கும், ஜபத்திற்கும் இரங்குபவர் என்றால் கடவுள் தற்பெருமைக்காரரா? அல்லது, பிரதிப் பிரயோசனம்பெறும் வியாபார முறைக்காரரா?

இவ்வளவுகாலப் பிரார்த்தனையும், ஜபமும், தொழுகையும் மனிதனுக்கு ஏதாவது ஒருவழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கின்றனவா?

நன்மைக்கும் தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும்போது, உலகில் நன்மை, தீமை இல்லாமல் இருக்கச்செய்ய முடியாதா? அவற்றை எவராவது சில மக்கள் அடைந்து தான் தீரவேண்டுமா?

அன்றியும், நமது பிரார்த்தனையும் தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்யமுடியுமா? அப்படிச் செய்தாலும் அத் தீமை, உலகில் உள்ளவரையில் யாராவது ஒரு மனிதனையாவது அணுகித்தானே தீரவேண்டும்? ஆகவே, மனித சமூகம் பொதுவில் தீமையிலிருந்து எப்படித் தப்பமுடியும்?

தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்க மாட்டார் என்று யாராவது நம்பமுடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வ சக்தியும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள், உலகத்துக்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப் பூச்சி, விஷக் கிருமி, விஷரோகம், தரித்திரம், துன்பம், கொலை, கொள்ளை, திருட்டு, பொய், வஞ்சகம், விபச்சாரம், கஷ்டமான வேலை, அடிமைத் தனம், கொடுங்கோல் ஆட்சி, இராஜத் துரோகப் பிரஜைகள், கடவுளை மறுப்பது, கடவுளை வைத்து வைவது முதலாகிய தீமைகள் என்னும் விஷயங்களை எல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகின்றாரா, இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன இலாபம்?

பூகம்பம், எரி மலை வெடிப்பு, புயல் காற்று, கடு மழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

நல்ல மனிதன்—கெட்ட மனிதன் என்று சொல்ல முடியாத நிலையிலுள்ள குழந்தைகள் ஜீவன்கள் ஆகியவைகளும் துன்பம் அடையும்படி ஏன் செய்தார்?

இவைகளுக்கெல்லாம்—சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வ தயாபரத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்திவருகின்றார் என்று சொல்லும் ஆத்திகர்கள் என்ன சமாதானப் பதில் சொல்லக்கூடும்?

இந்தக் கேள்விகள் வெகு காலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லி விட்டால் போதுமா?

['குடிஅரசு'-கட்டுரை—9-7-1949]

கடவுள் வழிபாடு என்பது-வழி படுவது தானே? என்னை வழிபடுகிறார்கள் என்றால் என்னுடைய கொள்கைகளை உண்மை என்று உணர்ந்து நம்பி, பின்பற்றுபவர்கள் என்னை வழி படுகிறார்கள்—என் வழி நடக்கிறார்கள் என்று தான் பொருள்.

உண்மையான கருத்துக்களைச் சொல்லுகின்றவனை வழிபடுவதில் அதாவது பின் பற்றுவதில் என்ன தவறு? ஒன்றுமில்லை.

கிறிஸ்தவர்கள் ஏசு கிறிஸ்துவை வழிபடுகிறார்கள் என்றால் கிறிஸ்து சொன்னதைப் பின்பற்றுகிறார்கள் என்றுதான் கருத்து.

முஸ்லிம்களும் அதுபோலவே நபிநாயகம் இன்னின்ன உண்மைகளைச் சொன்னார் என்பதற்காகவே அவர் சொன்னதை வழிபடுகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

புத்தமதத்தவர்களும், 'கடவுள் ஏது?' என்று சொன்ன புத்தரைத்தான் அதாவது புத்தியைத்தான் வணங்கி வழிபடுகிறார்கள்.

கடவுளுக்கு வழிபாடு முறை ஏது? இந்து மதத்தான் ஆடு, மாடு, பன்றிகளை வெட்டி கடவுளுக்குப் பூசை செய்தால்தான் வழிபாடு என்கிறான். முஸ்லிமோ பன்றியைத் தொட்டால் பாவம் என்கின்றான். கிறிஸ்தவன் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்தல் பாவம் என்கின்றான். அன்றைக்குத்தான் கடவுளை வழிபடவேண்டும் என்கிறான். எதைத்தான் கடவுள் வழிபாடு முறை என்பது?

நமது சுயமரியாதை முறை-அறிவு வழிபாடு என்பதுதான். அதுதான் கடவுள் வழி பாடு என்று வழிபடவேண்டுமே தவிர, கல்லை வழிபடுவது கடவுள் வழிபாடு ஆகுமா?

[புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது]

தலைவரவர்களே! தோழர்களே!

மக்கள் சாப்பிடக்கூடிய பால், தயிர், தேன், பழச்சாறு, பழச் சத்து முதலியவைகளைக் கல்லின் தலையில் குடம் குடமாய்க் கொட்டி, சாக்கடைக்குப் போகும்படி செய்து வேடிக்கை பார்ப்பது எதற்கு? இந்தச் சாமிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறும்படியான நகைகள் எதற்கு? பட்டு, பீதாம்பரத் துணிகள் எதற்கு? இலட்சம், பத்துலட்சம், கோடி பெறும்படியான 6, 7 மதில்கள் உள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் எதற்கு? தங்கம், வெள்ளி வாகனங்கள் எதற்கு? இவையெல்லாம் நாட்டுப் பொதுச் செல்வங்கள் அல்லவா? இவைகளைக் கற்களுக்கு அழுது விட்டு—சோம்பேறி, சூழ்ச்சிக்காரன்—பார்ப்பான் வயிற்றை நிரப்பி அவன் மக்களை I.C.S, அய்க்கோர்ட் ஜட்ஜ், திவான்களாக ஆக்கிவிட்டு, இதுதான் 'கடவுள் தொண்டு' என்றால், இந்தக் 'கடவுள்'கள் இருக்கவேண்டுமா?

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1937]

5. சிலை வணக்கம்

'விக்ரக ஆராதனை (சிலை வணக்கம்)யைக் கண்டித்துத் தாங்களும், இயக்கத் தோழர்களும் அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிறீர்கள். திராவிடர் கழகம் ஒரு அரசியல் கட்சி இயக்கம்; சுயமரியாதை இயக்கத்தைப் போல், வெறும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமல்ல. அரசியல் கட்சியில் பல்வேறு கொள்கைகளையுடையவர்களும் இருப்பார்கள்; இருக்கின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரே இப்போது திராவிடர் கழகமாக மாறியிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் ஒரு 10-20 பேர் தனியாகப் பிரிந்துபோனாலும், அவர்களைப்பற்றி மக்கள் கடுகளவுகூட அக்கறையெடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பத்து இருபது பேர்களிலேயே ஒரு சிலர் மெள்ள மெள்ள திராவிடர் கழகத்திற்குள் வழுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரி நிலைமையில் தாங்கள் சிலை வணக்கத்தைப்பற்றிக் கண்டிக்காமலிருப்பதே நல்லது என்று யோசனை கூறுகிறேன். நம்முடைய கழகமானது பலவிதமான ஆறுகள் வந்து விழக்கூடிய பெருங்கடலாக இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை. ஆகையால் தயவுசெய்து சிலை வணக்கத்தைக் கண்டிப்பதை நிறுத்திவிடக் கோருகிறேன்.'

இந்தக் கடிதம் நமது இயக்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரால் நமக்கு எழுதப்பட்டதாகும். இதை எழுதியவர் நம்மோடு நெருங்கிப் பழகுபவரும், பல ஆண்டுகளாய்த் தோழராய் இருந்து வருபவருமாவார்.

இவரைப் போன்றே இன்னும் பல தோழர்கள் அடிக்கடி கடித மூலமாகவும், நேரிலும் இதே சந்தேகத்தைக்கேட்டு வருகிறார்களாதலால் இக் கடிதக்காரருக்கும் பிறருக்கும் பதில் கூறவேண்டியது நம் கடமையாகிறது.

அது மட்டுமல்ல; இம் மாதிரியான காரணங்களைக் கூறியே நம் எதிரிகளும், கட்சியை விட்டுச் சிதறிப்போன தோழர்களில் இரண்டொருவரும் தமிழ் மக்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

திராவிடர் கழகம் அரசியல் கட்சிதான்; அதுவும் இனிமேல் தென் இந்தியாவில் முதல்தரமான அரசியல் கட்சியாக விளங்கப்போகிற கட்சியுங்கூட. பல கொள்கைக்காரர்கள் இக் கட்சியில் கலந்திருக்கிறார்கள். ஆனாலும், இந்துக்கள் அல்லாதவர்கள் என்று கூறப்படும் வேறு மதத்தினரும், வேறு பிரிவினரும் தங்களுக்கெனத் தனித் தனிக் கட்சிகளை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக, இந்தியக் கிறிஸ்தவர்கள் தனிக் கட்சியாக இருக்கின்றனர்; முஸ்லிம்களும் தனிக் கட்சியாக இருக்கின்றனர்; ஆங்கிலோ இந்தியர் தனிப் பிரிவாக இருக்கின்றனர்; தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் சிலர்கூட தங்களுக்கென 'ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன்' என ஒரு தனி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும், பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் திராவிடர் கழகத்தில் இரண்டறக் கலந்திருக்கின்றனர் என்பதும் பகிரங்க இரகசியம்.

ஆகவே, திராவிடர் கழகத்தின் அடிப்படையான தத்துவங்களில் நம்பிக்கை வைத்து அதன் முக்கிய குறிக்கோள்களில் கவலையும் வைத்திருக்கும் ஆரியரல்லாத 'இந்துக்கள்' என்பவர்களே இக் கழகத்தில் அங்கத்தினராக இருந்து வருகின்றனர் என்பதை மறுக்க முடியாது. ஆனாலும், அநேக முஸ்லிம் தோழர்களும், கிறிஸ்துவ நண்பர்களும், பிறரும் திராவிடர் கழகத்தின் அனுதாபிகளாக இருந்து உதவி செய்து வருகின்றனர் என்பதையும் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தென் இந்திய சமுதாய அமைப்பில் ஆரியரல்லாத நம் இனத்தவர் இப்போதுள்ள இழி நிலையை அடைந்திருப்பதற்குக் காரணம், இந்து மதம் என்று கூறப்படும் ஆரிய மதமேயாகும் என்பதைச் சரித்திரம் படித்தவர்கள் உணர்வர். இந்து மதத்தில் இருக்கும்

சாதி வேற்றுமை, சிலை வணக்கம், மூடநம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டு வெறுத்தே பலர் பிற மதங்களைத் தழுவியிருக்கின்றனர்; இன்னும் தழுவி வருகின்றனர் என்பதையும் யாராவது மறுக்கமுடியுமா? இந்த உண்மையை உணர்ந்திருக்கும் நாம், 'இந்துமதத்தை விட்டு விலகவேண்டும், அதாவது, நாம் இந்துவல்ல-திராவிடர்' என்று முடிவு செய்திருப்பதில் தவறென்ன என்று கேட்கிறோம். இந்துவல்ல என்று கூறுவதற்கே துணிந்திருக்க வேண்டிய திராவிடர்—இந்துமதத்திற்கே தனிப்பட்ட உரிமை என்று கூறப்படும் சிலை வணக்கத்தை விட்டொழிப்பதில் தாமதமோ, தயக்கமோ, வெட்கமோ, பயமோ, இருக்குமானால் நம் அடிப்படைக் கொள்கையையே சிலர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லையென்றுதான் கூறவேண்டும்.

சிலை வணக்கத்தை ஒழிப்பதென்பதும் இதர மூட நம்பிக்கைகளைக் கைவிடுவதென்பதும், இந்துக்களல்லாதவர்களின்—அதாவது திராவிடர்களின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று. இதனால் 'தனிப்பட்ட கடவுள் நம்பிக்கை கூடவா, இருக்கக் கூடாது?' என்று சிலர் கேட்கலாம். அதைப்பற்றி நாம் எதையும் வலியுறுத்துவதில்லை. இந்த விஷயம் அவரவர் சொந்த அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் முதலியவற்றைப் பொறுத்தது. தனிப்பட்டவரின் நம்பிக்கையைப் பற்றியோ, நம்பிக்கையில்லாத உணர்ச்சியைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. ஏனெனில், ஒருவருடைய தனிப்பட்ட ஆத்திக—நாத்திகக் கொள்கையானது பொதுநல விஷயங்களைப் பாதிக்காது. ஏனெனில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்கிறார். அதைப்பற்றி யாரும் இலட்சியம் செய்வதில்லை. ஆனால், சிலை வணக்கம் என்பது அப்படியல்ல. திராவிடர் பொருளைச் சுரண்டுவதற்குக் காரணமாயிருந்ததும்—இன்று வரையில் காரணமாய் இருந்து வருவதும் சிலை வணக்கமேயாகும். ஆரிய நச்சு மரத்திற்கு எருப்போட்டு, நீர் ஊற்றி வருவது இந்தச் சிலை வணக்கமேயாகும். திராவிட அறிஞர்களில் பலர் இன்று ஒரு சோம்பேறி ஆரியனிடம் தலை வணங்கி, வாய் பொத்தி நின்று 'பிரசாதம்' வாங்கும்படியான மானமற்ற அடிமைத்தனமான காட்சியைக் காணும்படியான நிலையில் திராவிட இனத்தைத் தாழ்த்தி வைத்திருப்பதும் இச் சிலை வணக்கமேயாகும். தமிழ் வளர்ச்சி என்னும் பேராலும் திராவிடர் செல்வத்தை நல்ல வழியில் பயன்படுத்த முடியாமல், தேர்த் திருவிழாக்களிலும், கோவில் கட்டுவதிலும், பஜனைக் கூடங்களிலும் கொட்டிப் பாழாக்குவதற்குக் காரணமாயிருப்பதும் இந்தச் சிலை வணக்கமேயாகும்.

சுருக்கமாகக் கூற வேண்டுமானால், சிலை வணக்க முறையை ஒழித்துவிட்ட அதே நேரத்தில் ஆரிய நச்சு மரத்தின் ஆணிவேர் ஆட ஆரம்பிக்கும். நம் அனுபவத்திலிருந்தும், பல வரலாற்று ஆதாரங்களிலிருந்துமே நாம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இந்த நமது முடிவுக்கு ஒரே ஒரு உரைகல் தருகிறோம். சிலை வணக்கத்தை ஆதரித்துப் பேச்சளவிலும் எழுத்தளவிலும் ஆவேச உணர்ச்சியுடன் பேசியும் எழுதியும் வருகிற ஆரிய இனத்தைச் சேர்ந்த எவராவது—கோவில் கட்டுவதற்கும், வாகனம் வாங்குவதற்கும், சிலைகளுக்கு நகைகள் வாங்குவதற்கும், சாப்பாடு படைப்பு முதலியவைகளுக்கும் பணம், நிலம் தந்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறோமா என்பதை நமது நிருபர் ஆர அமர ஆலோசித்துப் பார்க்கட்டும். இந்த விஷயத்தில் நம்மைவிட அவர்கள் புத்திசாலிகள்தான். இதில் வெட்கப்பட்டுப் பலன் என்ன? காரியத்தில் அல்லவா அறிவுடைமையைக் காட்ட வேண்டும்?

இறுதியாக, அரசியல் கட்சியில் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைக் கலக்கலாமா? என்ற சந்தேகத்தைப் பற்றியும் ஒரு வார்த்தை. அரசியல் என்பதே சமுதாயக் கோளாறுகளை ஒழிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஒரு சாதனம் என்பதுதான் நம் கொள்கை. சமுதாய வேலையைக் கலக்காத ஒரு அரசியல் மனித சமுதாயத்திற்கு எதற்காக வேண்டும்?

அரசியலையும் சமுதாயத் துறையையும் பிளந்து கூறுபோட்டு விற்கும் அரசியல் வியாபாரிகள் இந்நாட்டில் பெருகியிருப்பதற்குக் காரணம், ஒரே இனத்தவர், மற்ற இனத்தவரை அழுத்திவைத்துச் சுரண்டிக்கொண்டு இருப்பதற்காக—மறைமுகமாக ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடேயாகும். இந்த உண்மை ஆரியர் விஷயத்தில் மட்டு மல்ல; ஆங்கிலேயர் விஷயத்திலும் பொருந்தும்.

ஆனால், இச் சந்தர்ப்பத்தில் மற்றொரு முக்கிய விஷயத்தையும் வற்புறுத்திக் கூறி விட விரும்புகிறோம். இச் சமயம் இதுவிஷயமாய் நாம் செய்யும் பிரச்சாரம்—சிலைகளை அடியோடு அகற்றுவதோ, அழிப்பதோ அல்லது சிலை வணக்கம் செய்வோரின் மனத்தைப் புண்படும்படியாகச் செய்வதோ அல்ல என்றும், கண்டிப்பாக அல்ல என்றும், மற்றபடி மக்களை இதுபற்றிச் சிந்திக்குமாறு செய்வதும் அதுபற்றிய செலவை வேறு நல்ல வழிக்குத் திருப்புவதும் நம் வேலை என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

இச் சமயத்தில் ஒரு மகிழ்ச்சியான சேதியைத் தெரிவிக்கிறோம். அதாவது, இன்றைய மந்திரிகள் கோவில் மடங்களில் மீதியாய் இருக்கும் செல்வத்தைக் கல்விக்குச் செலவு செய்யச் சட்டமியற்றப் போகிறார்களாம். அவர்கள் இவ்விஷயத்தில் சொல்வது போல் நடந்தால், கடவுள் கோபித்துக்கொண்டாலும் மக்களுக்கு நலம்தான். ஆனால், ஆரியர்கள் அவர்களை அப்படிச் செய்ய விடுவார்களா? என்றாலும், பார்ப்போம்—சொன்னபடி நடப்பார்களா என்று!

['குடிஅரசு'—தலையங்கம்—29-6-1946]

6. திருவிழா ஏன்?

திருவிழா கொண்டாடுவதும், நல்ல நாள், கெட்ட நாள், பண்டிகை கொண்டாடுவதும் எதற்காக? மதத்தாலே ஏற்பட்ட சாதியை—புராணத்தினால் புகுத்தப்பட்ட சாதியை ஒவ்வொருவர் உள்ளத்திலும் திரும்பத் திரும்ப ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தனித்தனியாகப் பிரசங்கம் செய்வதற்குப் பதிலாக,—பண்டிகைகள், நல்ல நாள், கெட்ட நாள் மூலம் பிரச்சாரம் செய்வதே தவிர, அதனால் எந்தவிதமான பலனும் இருப்பதாகக் கூறமுடியுமா?

மதுரை, இராமேஸ்வரம், பழனி, திருப்பதி ஆகிய இடங்களில் பெரும் பண்டிகைகள் நடக்கின்றன என்றால் அதன் அர்த்தம் என்ன? பத்து வருடங்களுக்கு முன்னே இருந்த கல்தான் இன்றும் இருக்கிறது; பத்து வருடங்களுக்கு முன் அந்தக் கல்லைக் கழுவிய குடும்பமே இன்றும் கழுவுகிறது; இதுவரை அதில் ஒரு மாற்றமும் இல்லை. என்றாலும் கூட, அங்கே போய் வருவதன் நோக்கம் என்ன? அங்கே போய் வருதன் மூலம் மதப் பிரச்சாரந்தான் நடக்கிறதே தவிர வேறு என்ன?

எனவே, இந்த மாதிரியாக சூர சம்ஹாரம், இராமன் பிறப்பு, கிருஷ்ணன் பிறப்பு, பிள்ளையார் சதுர்த்தி, கந்தர் சஷ்டி, அது, இது—என்று வருகிற பண்டிகைகள் அனைத்தையும் ஒழிக்க வேண்டும்.

ஏன் இத்தனை தூரம் பலவந்தமாகக் கூறுகிறேன் என்றால், பார்ப்பனீயமாகிய சாதியானது—மதமானது எந்த விதத்தில் நம்மை அடிமை கொண்டு இருக்கிறது என்றால், ஆயுத பலத்தினாலோ—துப்பாக்கிக் குண்டு, பீரங்கியாலோ அல்ல. நான் இதற்கு முன் எதை எதை ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறி இருக்கிறேனோ, அவைகளால்தான் நம்மை அடிமையாக்க நேர்ந்தது.

ஆகையால், இத்தனை பேரும் இன்றைய தினம் சாதியை ஒழிக்கவேண்டுமென்று கூறிவிட்டுச் சும்மா இருந்துவிடுவதானால்—ஒரு பலனும் இந்த மாநாட்டில் ஏற்பட முடியாது. இந்த மாநாடு நல்ல முறையிலே கூட்டப்பட்டு இருக்கிறது. அந்த முறையிலே இன்றி

லிருந்து நம்முடைய மக்களில் ஒவ்வொருவரும், தங்கள் தங்களுடைய சாதி இழிவைப் போக்கிக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பெண்களும் இம் முயற்சியில் முன்வருவார்களானால், கண்டிப்பாகச் சாதி ஒழிந்தே போகும் என்று தைரியமாகக் கூறலாம். ஏனென்றால், சாதியைப் பற்றிக் கெட்ட நம்பிக்கைகள் அவர்களிடம்தான் சீக்கிரத்தில் குடி புகுந்துகொள்கின்றன.

எனவே, பெண்கள் அந்த நம்பிக்கைகளையெல்லாம் அடியோடு விட்டுவிடவேண்டும். இந்த மாதிரி நடக்கும் மாநாடுகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் தாங்கள் வருவதோடு அல்லாமல், தங்கள் புருஷனையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும்.

சில ஆண்கள் பெண்களின்பேரிலே குறைகூறுவது உண்டு. அதாவது 'நான் சீர்திருத்தக்காரனாகிவிட்டேன்; ஆனால், என் வீட்டிலே உள்ளவர்கள் சரியில்லை' என்று கூறுவது உண்டு. இது நியாயமா?

நான் கூறுகிறேன், உண்மையில் இவர்களே பெண்களை 'மூடர்களாக்கி' விடுவார்கள். இவர்கள் மாத்திரம் தனியாகக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் போய்க் கருத்துக்களை அறிந்கொண்டு வருவது வழக்கமாக இருக்கின்றதேயன்றி, தங்களுடன் தங்கள் மனைவிமார்களையும் அழைத்துக்கொண்டு வந்து இம்மாதிரியான கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதின் மூலம் பெண்களுடைய பழைய மூட நம்பிக்கைகளை மாற்ற வழிகாண்பது கிடையாது.

[திருவொற்றியூரில், 17-2-1952-ல் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1952]

7. சாமி விளையாட்டா?

நமது சின்னஞ்சிறு குழந்தைகள் 'சாமி' வைத்து விளையாடுவதைப் பார்க்கின்றோம். சிறு கற்களை இரண்டு வரிசையாக அடுக்கி அதன்மேல் குச்சிகளைப் பரப்பி அதற்குமேல் துணி, இலை, காகிதம் முதலியவைகளைப் போட்டு மூடி, ஓர் அறைமாதிரியாகச் செய்வார்கள். அதன் பிறகு சிறு ஓடுகளை முக்கோணமாகத் தேய்த்தோ அல்லது பொம்மைகளையோ அவ் வறைக்குள் சாமிகளாக வைத்து ஒரு குழந்தை அர்ச்சகராகவும், மற்றக் குழந்தைகள் 'பக்தர்'களாகவும் நடிப்பதுண்டு. இதுதான் குழந்தைகளுடைய கோயில். இவைகளுக்குத் திருவிழாக்களும் உண்டு. சிறு காய்களில் துடைப்பக் குச்சிகளைக் கோர்த்துத் தேர்மாதிரி செய்து, அடியில் குச்சிகளைப் பரப்பி அதன்மேல் முக்கோணமாய்த் தேய்க்கப்பட்ட ஓட்டுத்துண்டை வைத்து இழுத்துக்கொண்டு போவது உண்டு. அந்தக் கூட்டத்தில் மிகவும் சிறு குழந்தையாய் இருப்பவர்கள் ஓட்டைத் தகரங்களை 'மேள'மாக உபயோகப்படுத்துவார்கள். 'இந்துக்கள்' என்றும், சைவர்கள், வைணவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் எல்லாருடைய வீடுகளிலும் பெரும்பாலும் குழந்தைகள் இவ்வாறு விளையாடுவதுண்டு.

ஆனால், இப்போது பட்டணங்களிலுள்ள 'இந்து'க் குழந்தைகள் இவ்வாறான விளையாட்டு விளையாடுவது கிடையாது. அவர்கள் பட்டண வாழ்க்கையில் அதிகமாய்க் காணப்படும் மோட்டார், இரயில் முதலியவைகள் மாதிரி வைத்து விளையாடுகிறார்கள். ஏனெனில், கிராமத்துக் குழந்தைகளுக்குக் கடவுளின்மேலிருக்கும் அவ்வளவு 'பக்தி' பட்டணத்துக் குழந்தைகளுக்கு இருக்கச் சந்தர்ப்பம் கிடையாதல்லவா? 'சாமி' வைத்து விளையாடும் குழந்தைகள், பெரியோர்களாகிய நாம் செய்வதைப் பார்த்துத்தான் செய்கின்றன. ஆனாலும், அக் குழந்தைகள் விளையாடுவதை ஓரளவுதான் நாம் பொறுத்துக்கொண்டிருக்கிறோம்; பொறுத்துக்கொள்ளவும் முடிகிறது. உதாரணமாக, மிகவும் செல்லப்பிள்ளையாய் வளரும் ஒரு குழந்தையை 6 முதல் 8 அல்லது 10-வது வயது வரை 'சாமி' வைத்து விளையாடுவதைப் பொறுத்துக்கொண்டிருப்போம். சாதாரணமாக,

3 வயது முதல் 6 வயது வரைதான் இவ்வித விளையாட்டுகளுக்கும் மதிப்பு இருக்கும். அதுவும்கூட ஓர் அளவு வரையில்தான். 7 வயதுக் குழந்தை 'சாமி' விளையாடுவதற்காக பள்ளிச் சம்பளத்துக்கு வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கற்பூரமும், கலர் காகிதமும் வாங்கினால் கன்னத்தில் ஒரு அறை கொடுத்துக் காதைப்பிடித்து இழுத்து அப்புறம் விடுவதைப் பார்த்திருக்கிறோம். அல்லது, 13 வயதுப் பையன் 'சாமி' விளையாட ஆரம்பிப்பதைக் கண்டோமானால் 'அடே, குட்டிச் சுவரே! அரைக் கழுதை வயதாகி இன்னமும் சாமி வைத்து விளையாட வெட்கமில்லையா?' என்று கடுத்த முகத்தோடு கேட்கிறோம். அதையும் மீறிச் செய்தால் அக் குழந்தைகள் சிறு சிறைச்சாலை வாழ்க்கையைக்கூட அனுபவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இச் சிறு அனுபவம் எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால், மேலே சொன்ன எல்லா விஷயங்களிலும் அக் குழந்தைகளே நம்மைத் திருப்பிக் கேட்குமானால் நாம் என்ன சொல்வோம்? அவர்களைப் பார்த்து, 'அடே, அதிகப் பிரசங்கி!' என்பது தவிர உண்மையான பதில் ஏதாவது நம்மால் சொல்ல முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

வருடா வருடம் நமது நாட்டில் நூற்றுக்கணக்காகக் கோயில்களும் தேர்களும் கட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான உத்ஸவங்களும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திருவிழாவுக்கும், இலட்சக்கணக்கான மக்கள் போய்க்கொண்டே இருந்தால் இன்னும் சில வருஷங்களில் இந்தியாவினுடைய செல்வமெல்லாம், குட்டிச் சுவர்களிலும், குழவிக் கற்களிலும், குடை, பீதாம்பரங்களிலும் தான் இருக்குமே ஒழிய, மக்களுக்குப் பிரயோசனப்படக்கூடிய முறையில் ஒரு தம்பிடிகூட இருக்காது என்பது திண்ணம்! இன்னும் மதுரை, திருநெல்வேலி, திருவாரூர், சீரங்கம், திருச்செந்தூர், திருவானைக்காவல் முதலிய ஊர்களில் மக்களுக்கு வீடுகட்டிக்கொள்ளக்கூட இடமில்லாதபடி சரிபாதி ஊரைக் கோவில் அடைத்துக்கொண்டிருக்கிறது. உயிரில்லாச் சாமி ஒன்றுக்கும், உயிருற்ற 'சாமிகள்' தோசை, வடை, புளியோதரையை விழுங்கிவிட்டு ஜட்கா வண்டிக் குதிரை புரளுவது மாதிரி நெளிந்து கொண்டு ஏப்பம் விட்டு மல்லாந்து கிடப்பதற்கு மாத்திரம் ஊரில் பாதியை அடைத்துக் கோவில்கட்டினால், நமது புத்திசாலித்தனத்தைக் கண்டு மேல்நாட்டுப் பெண்மணிகள் புஸ்தகம் எழுதாமல் வேறு என்ன செய்வார்கள்?

நமக்குக் குட்டிச் சுவர் மாதிரி 5 கழுதை வயது ஆயிற்றே ஒழிய, 'சாமி' விளையாட்டு மாத்திரம் போகவே இல்லை. திருப்பதி போகலாமா, திருச்செந்தூர் போகலாமா என்பதும், காசி போய்விட்டு இராமேசுவரம் போகலாமா அல்லது இராமேசுவரம் போய்விட்டுக் காசி போகலாமா என்பதும்; அனுமார் வாகனத்திற்குத் தங்கமுலாம் பூசலாமா அல்லது தங்கத் தகட்டினாலேயே செய்துவிடலாமா என்பதும்; ஜம்புகேஸ்வரருக்குப் பூச் சக்கரக் குடை செய்வதற்குப் பட்டுவிசேஷமா, 'வெல்வெட்டு' விசேஷமா என்பதும்; மாரியம்மனுக்கு வெள்ளியில் கண்கவசம் செய்யலாமா, தங்கத்தில் செய்யலாமா? கலியாண உற்சவம் வருஷத்துக்கு இரண்டுதடவைகள் நடத்தலாமா என்பதுமே பெரிய ஆராய்ச்சியாயிருக்கிறதே தவிர, நமது நித்திய வாழ்க்கைக்குச் சவுகரியமான ஏற்பாடுகளைச் செய்வதில் நமது யுக்தியானது சிறு பிள்ளைகளைவிட ஆயிரம் மடங்கு கீழாகவேதான் இருக்கிறது. சாமிக்குப் போனவருடம் நடந்த கலியாணம் என்ன ஆயிற்று? எந்தக் கோர்ட்டில் ரத்து ஆயிற்று? அல்லது, மனைவி ஓடிப் போனாளா? தம்பதிகளில் யாராவது ஒருவர் செத்துப் போனார்களா? என்று யோசிப்பதில்லை.

பள்ளிக்கூடச் சம்பளத்தை எடுத்துக் கற்பூரம் வாங்கி தன் 'சாமி'க்குக் கொளுத்தும் பிள்ளையாண்டானுக்கும், ஆஸ்பத்திரி, கல்விச்சாலை, சுகாதாரம் முதலியவைகளுக்குப் பணமே இல்லாமலிருக்கும்போது பெரிய தொகையைச் செலவுசெய்து 'சாமி' விளையாட்டு விளையாடும் பெரியோர்களுக்கும்—புத்தி சம்பந்தப்பட்ட மட்டிலும் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

இவ்வுலக வாழ்விற்கு அவசியமான கல்வியையும் அதன்பிறகு தெரியவேண்டிய பல விஷயங்களையும் கற்றுக்கொள்ளவேண்டிய வயதில், 'சாமி'வைத்து விளையாடுவதும்—அதுவும் வீட்டுப் பணத்தைச் செலவழிப்பதும் அறிவீனமென்றும் அதைத் தடுக்காவிட்டால் பிள்ளையாண்டான் கெட்டுப்போவதோடு குடும்பத்துக்கும் கெடுதியுண்டாகும் என்றும் பெற்றோர்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, நமது உலக முன்னேற்றத்தில் ஈடுபடவும் நமது வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ளவும், அதற்கு வேண்டிய முயற்சிகளைப் பல துறைகளிலும் செய்யவும் வேண்டிய காலத்தில்—நமது பெரியோர்கள் 'சாமி' வைத்து விளையாடுவதும் அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதும் நமது மக்களைச் சோம்பேறிகளாக்கிவிடுவதோடு நமது நாட்டையும் பாழ்படுத்திவிடும் என்ற கவலையால்தான் நாமும் நமது பெரியோர்களுக்குப் புத்திகூற வேண்டியது கடமையாகின்றது. பெற்றோருக்கு அடங்காப்பிள்ளை 'சாமி' விளையாடிக் கொண்டே இருந்து வீணாய்ப்போவதுண்டு. ஆனால், தைரியமுள்ள பெற்றோர் தமது பிள்ளையைக் கெடுக்க விரும்புவதில்லை; அறைக்குள் கட்டிப்போட்டாவது புத்தி புகட்டுவது வழக்கம். அவ்வாறே, அறிவியக்கத்தார்களாகிய சுயமரியாதை இயக்கத்தவர்களுக்குச் சந்தர்ப்பமும், சவுகரியமும் கிடைக்குமானால் மேற்கண்ட முறையைக் கையாண்டாவது நமது பக்தர்களுக்குப் புத்திபுகட்டாமல் இருக்கப்போவதில்லை. ஆனால், அதற்குள்ளாக நமது பெரியோர்களும், 'பக்தர்களும்' நல்ல பிள்ளைகளாக ஆகிவிடவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 10-கட்டுரை—1937]

8. நாமம்—விபூதி

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இன்றைய தினம் நமது நாட்டிலே அனேகம் பேர் விபூதி போடுவதும், நாமம் போடுவதும் வழக்கமாக இருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த காரியந்தான். இது, பார்ப்பனர்கள் இங்கே வருவதற்கு முன்னே இருந்ததில்லை என்பதும் தெரிந்ததே. அப்படியிருந்தும் வெட்கமில்லாமல் சுவரில் வெள்ளையடிப்பதுபோல் நாமம், விபூதி போட்டுக் கொள்கிறார்கள். சாம்பலை ஏன் அப்படி நம்பிவிட்டார்கள் என்றால், பார்ப்பனர்கள் செய்த மாபெரும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

தன் தாயாருக்கு—தன்னைப் பெற்ற மாதாவுக்குப் பிள்ளை கொடுத்தாலும்கூட, இந்தச் சாம்பல் பூச்சால் அவனுக்கு மோட்சம் கிடைக்கும் என்று கூறிவிட்டனர்; நாமம் போட்டால் இதற்காக நரகம் கிடைக்காது என்று கூறிவிட்டனர். ஆகையால், இந்த மடச் சாம்பிராணிகளும்—தங்கள் மண்டையில் (நெற்றியில்) விபூதி என்றும், நாமம் என்றும் போட்டுக் கொள்கிறார்கள். இன்றைய தினம் இதையெல்லாம் மிகமிகக் கேவலம் என்றும், இழிவு என்றும் நாம் கூறிய பின்னர் சற்று மானத்திற்கு அஞ்சியவர்களும் படித்தவர்களும் இதற்குக் காரணம் காட்டுகிறார்கள்.

'குளித்த பிறகு, சாம்பலை மண்டையிலே போட்டால் மண்டையிலேயிருக்கிற நீரை எல்லாம் எடுத்துவிடும் இந்தச் சாம்பல்; அதனால்தான் நாங்கள் விபூதி போடுகிறோம்' என்று கூறுகிறார்கள். இதேபோல்தான், நாமம் போடுகிறவர்களும் காரணம் காட்டுகிறார்கள். இவ்வாறெல்லாம் கூறி, அந்தக் காலத்திலேயே இதை நம்பும்படி செய்துவிட்டனர், ஆரியர்கள்.

ஆகையால், அதை ஒழிப்பதற்கு மனது இல்லாமல் 'சால்சாப்பு' கூறுகிறார்கள். இன்றையதினம், சில பெரிய ஆட்களும்கூட திருநீறு, நாமம் போடுவதை நான் பார்த்திருக்கிறேன். நம்மை யாராவது கண்டுவிட்டால் உடனே அவர்கள் போட்டு இருக்கும் நாமத்தை அழித்துக்கொள்கிறார்கள். இது நான் கண்ணால் பார்த்தது; எத்தனையோ தடவைகள்

கண்டிருக்கிறேன். ஏன்? நம்மைக் கண்டால் ஒரு வெட்கம்; ஆனால், அதே சமயம் மத சம்பிரதாயங்களுக்குப் பயம்.

[சென்னை-மயிலையில், 3-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]

9. புண்ணிய ஸ்தலங்கள்

பண்டரிபுரம்—வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒருசமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக்கூடுமோ என்பதாகச் சந்தேகப்படக்கூடுமானாலும், வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் 'பக்தவிஜயம்' என்னும் புத்தகத்தின் சுருக்கமாகிய 'பக்த லீலாமிருதம்' என்னும் புத்தகமானது, சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக்கூடியதான சைவ புராணமாகிய 'பெரிய புராணமோ' அதுபோல்—ஏன், ஒருவிதத்தில் அதைவிட முக்கியமானதென்றுகூடச் சொல்லலாம். எப்படியெனில், பெரியபுராணம் என்பது சுந்தரமூர்த்தி சுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்து பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக—நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒரு சில—அதாவது ஒரு நூறு பாட்டைக்கொண்டு நாலாயிரத்துச் சில்லரைப் பாட்டுகளாக்கி, அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை சேக்கிழார் தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்துப் பாடிய புத்தகமாகும். அதுவும் சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள் மீதும், அவர்களது குற்றமற்ற நூல்களின்மீதும் உள்ள துவேஷத்தாலும், தமது சமய வெறியாலும் கற்பிக்கப் பட்டது என்றுகூடச் சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்தவிஜயமோ அப்படியில்லாமல் எவரோ ஒரு முனிவர், யாரோ ஓர் ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொன்னதாகவும் எழுதிய புத்தகம். ஆனதால் சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன் சொன்னதைவிட 'சிவன்' 'முனிவர்' என்கின்றவர்கள் சொன்னவை என்பவை உயர்ந்தவை என்பதில், இவற்றை நம்பும் பக்தர்களுக்குச் சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.

எனவே, இப்பேர்ப்பட்ட புத்தகத்தில் உள்ளதையேதான் எடுத்து எழுதி இருக்கிறோமே ஒழிய மற்றபடி நமது அபிப்பிராயம் என்பதல்ல. அதாவது :

தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் மனைவியான இந்திராணி, திருமால் என்கின்ற சாமியின்பேரில் காதல் கொண்டதாகவும், சாமியும் அதற்குச் சம்மதித்து பூலோகத்திற்குப்போய் 60 ஆயிரம் வருடம் தவம்செய்யச் சொன்னதாகவும், அதற்குப் பிறகு சாமி கிருஷ்ணனாக அவதரித்ததாகவும், இந்திராணியும் இராதையாகப் பிறந்ததாகவும்; பிறகு இருவரும் கூடினதாகவும், அதைக்கண்ட கிருஷ்ணனின் சொந்தப் பெண்சாதியாகிய ருக்மணி கோபம் கொண்டதாகவும், அதன் நிமித்தம் இராதை கிருஷ்ணனைத் தனக்கே புருஷனாக்கிக்கொள்ளக் காட்டிற்குத் தவத்திற்குப் போனதாகவும்; அந்தச் சமயத்தில் கிருஷ்ணன் இராதையைப் பிரிய நேர்ந்ததால், துறவி வேஷம் பூண்டு காடு காடாய்த் திரிந்து ஏதோ ஒரு காட்டில் இராதையைத் தவக் கோலத்தில் கண்டுபிடித்ததாகவும்; இராதை கிருஷ்ணனைப் பார்த்து, 'நீ ஒரு வஞ்சகன், என்முன் நில்லாதே' என்று கோபித்ததாகவும்; கிருஷ்ணன் மதிமயங்கி மூக்கில் கை வைத்துக்கொண்டு 28 துவாபரயுக காலமாய் நின்று கொண்டிருக்கின்றதாகவும்—அந்தக் காட்சியே பண்டரிநாதன் என்றும், மற்றும் இதுபோல ஆபாசக் கதைகளும் எழுதப்பட்டு, பண்டரிபுரத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்படுகிறது. எனவே, இம் மாதிரி ஆபாசமும், புளுகும் கொண்டதான பண்டரிபுரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாகக் கருதி மக்கள் ஏராளமாகப் பணம் செலவுசெய்து கஷ்டப்பட்டு யாத்திரை போவதுடன் பட்டை பட்டையாய் நாமமும் போட்டுக் கொண்டு, 'பண்டரி நாதா விட்டல்லே! பாண்டுரங்கா விட்டல்லே!' என்று கூப்பாடு போட்டுக்கொண்டு, குதித்துக்கொண்டு போவதையும் கருதினால் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகவும் கஷ்டமாகவும் இருக்கும் என்பது சுலபத்தில் வெளிப்படுத்தக்கூடியதாயில்லை என்பதுபற்றியும் முன்பே எழுதப்பட்டிருக்கின்றது.

ஜகந்நாதம் என்பதைப் பற்றிச் சிறிது ஆராயலாம். ஜகந்நாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானது என்று சொல்லப்படுவது. இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒரு சிலரால் மதத் துவேஷம் காரணமாக ஜகந்நாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும்—இந்தியாவில் உள்ள பெரும்பாலோரான இந்துக்கள் என்பவர்கள் எல்லோராலுமே முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால், அந்த ஜகந்நாதம் என்கின்ற ஊரின் எல்லைக்குள் சாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக, அந்தக் கோவிலில் பூசை பண்ணுகிறவர்கள் அந்தப் பக்கத்திய நாவிதர்கள். அவர்கள் குளத்தருகில் அடைப்பத்துடன் நின்றுகொண்டு சவரம் செய்வார்கள். பிறகு கோவிலில் பூசாரிகளாகவும் இருப்பார்கள். அந்தக் கோவிலில் பூசைசெய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத்தான் உண்டு என்கிறார்கள். அங்கு, சுவாமிக்கு முன்னால் சாப்பாட்டை மலைபோல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தைப் பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக்கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரைக்காரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிடவேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தைச் சட்டியில் வைத்து விற்பார்கள். சாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாவரும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தவிர, அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக்கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியை எடுத்துத் திரும்பவும் சட்டிக்குள் போட்டுக்கொள்வார்கள். கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச்சட்டியில் யாரும் கைவிட்டுச் சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியைச் சட்டியிலேயே போட்டுவிடலாம். அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஜகந்நாதத்திலுள்ள அந்த ஜகந்நாதர் கோவிலுக்குள் யாரும் போகலாம்; சாமியைத் தொடலாம்; காலைத்தொட்டுக் கும்பிடலாம்; அதுமாத்திரமல்லாமல், அந்த எல்லைக்குள் யாரும் திதி, விரதம், தர்ப்பணம் முதலிய அனுஷ்டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம்; செய்தால் பாவமாம். அன்றியும், அங்குள்ள சாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவர்கள்; அதாவது, மற்ற இடங்களைப்போல் சாமி புருஷன், பெண்சாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும்—தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன்மார் இருவரும் இரு பக்கங்களில் நிற்கின்றார்கள். அதுவும், மரக் கட்டையில் அரைகுறையாய்ச் செய்த உருவங்கள்தான்—விக்கிரகங்கள்.

அந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது 'சர்வம் ஜகந்நாதம்' என்று சொல்லுவது ஒருவழக்கம். அதாவது, எந்தவிதமான வித்தியாசமும், அதாவது சாதி, மதம், எச்சில், விரதம், முறை முதலிய வித்தியாசம் அந்த எல்லைக்குள் இல்லை என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் சொல்வது. இதற்கு ஆதாரமாக இரண்டுவிதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, விஷ்ணு என்னும், முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு, அந்தக் கடவுளின் பிணத்தைத் துவாரகைச் சுடுகாட்டில் வைத்து தகனம்செய்து—அது எரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கியதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்டபோது, அந்தக் கடவுளின் பிணமும், எரிந்து கொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள் மூழ்க நேரிட்டதால் அரைகுறையாய் வெந்த பிணக் கட்டையானது தண்ணீரில் மிதந்து கரை ஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்த ஊருக்கு ஜகந்நாதம் என்று சொல்லப்பட்டதாகவும், அந்த ஊரார் அந்தக் குறைபிணத்தை எடுத்து, அதன் சக்தியை ஒரு மரக்கட்டையில் ஏற்றி, அம் மரக்கட்டையில் இருந்து குறைபிணம் போலவே ஓர் உருவம் செய்து, அதை வைத்துப் பூசித்து வருவதாகவும் அந்த ஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகிறது.

மற்றொன்று, கிருஷ்ணபகவானின் லீலா விநோதங்களில் ஒன்றாகிய—கோபிகளுடன் கூடிக் குலாவி வருவதைக் கிருஷ்ணபகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்துப் பொறாமைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சென்று, 'ஓ, அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும், பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய். உன்னுடன் கூடி அனுபவிக்கும் பெருமை கோபிமார்கள் எல்லோரும் பெற்று அனுபவித்துவருகின்றார்கள். ஆனால், நானோ உனக்குத் தங்கையாகப் பிறந்து விட்டதின் காரணத்தினால் அந்தச் சுகபோகத்தை அடைய யோக்கியதை இல்லாதவளாய்ப் போய்விட்டேனே' என்று துக்கப்பட்டதாகவும்; கிருஷ்ணபகவான் அவளைப் பார்த்து, 'உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகந்நாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது; அங்கு எந்தவித வித்தியாசமும் கிடையாது. எந்தவிதமான செய்கைக்கும் பாவம் கிடையாது. ஆதலால், அந்த ஜகந் நாதத்திற்குப் போய் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்' என்பதாகச் சொல்லி ஜகந்நாதத்திற்கு வந்த—கிருஷ்ணன், சுபத்திரை, பலராமர் ஆகிய சகோதர சகோ தரிகள் ஒன்றுசேர்ந்து இருப்பதாகவும் ஒரு கதையை ஜகந்நாத 'பண்டாக்கள்' ஸ்தல மகிமையைச் சொல்லும் முறையில் சொல்வதுண்டு.

எனவே, இந்தக் கதையும் பொருத்தமானதாயிருக்கலாம் என்கின்ற மாதிரிதான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது தீட்டு இல்லை; சாதி வித்தியாச மில்லை; விரதாதி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசம் இல்லை என்பதுபோன்ற பல விஷயங்கள் இருப்பதுடன்-அண்ணனும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்க லாமாம்.

அன்றியும், அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்கவேண்டும் என் கின்ற எண்ணத்தின்பேரில் அப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக, சைவ சமயத்திலும், ஒரு ஸ்தலத்தையோ தீர்த்தத்தையோ ஒரு சாமியையோ பெருமைப்படுத்துவதில் இதுபோன்ற அல்லது இந்தத் தத்துவம் கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது, திருவிளையாடல் புராணத்தில் ஒருவன் தன் தாயைப் புணர்ந்ததுடன், தகப்பன் கண்டு கோபித்ததற்குத் தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத்தைச் சிவன் போக்கியிருப்பதாகவும், அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத் திற்கும் அந்தக் கடவுளுக்கும் இன்னமும் அந்தச் சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால், இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஓர் அதிசயமல்ல. எனவே, இந்தக் கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப்பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ணபகவான் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துப்போனார் என்பதும், அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும் நெருப்பில் வெந்துகொண்டிருக்கும்போது ஜலப்பிரளயம் ஏற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகாமல் தண்ணீரில் மிதந்துகொண்டுவந்து ஜகந்நாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால், கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும் செத்தபிறகு அந்தப் பிணத்திற்கு, அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்தச் சக்தியை மரக்கட்டையில் ஏற்ற முடியுமா? அந்த மரக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றபோதெல்லாம் அந்த சக்தி மாறி மாறி அதில் வருமா?

தவிர, மற்றும் ஓர் அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது, கோவிலில் இருக்கும் மரக்கட்டைக்குச் சக்தி குறைந்துபோனால் அந்தச் சமயம் அதாவது 10 அல்லது 20 வருஷங் களுக்கு ஒருமுறை—மறுபடியும் சமுத்திரத்தில் ஒரு கட்டை முன்பு பிணம் மிதந்துவந்தது போல் மிதந்து வருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்து வைத்துவிடுவதாம். இவற்றின் யோக்கியதைகளை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முன்புவந்த குறைப் பிணம் ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகின்றது. அதுபோல், இப்போது வந்துகொண்டிருக்கும் மரக் கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம் கற்பிக்கப்படுகின்றதா? எனவே, புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த புண்ணியஸ்தலமான ஜகந்நாதத்தின் நிலையை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப் பாருங்கள்!

இந்த இலட்சணத்தில் அங்கு ஒரு தீர்த்த மகிமையும் சொல்லப்படுகின்றது.

இவ்வளவையும் ஒப்புக்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேடஞானம் ஏற்படுகிறதா? அல்லது, அந்த ஸ்தல சரித்திரத்தின் யோக்கியமான கற்பனையையாவது மதித்து ஏதாவது ஒழுக்கத்தைப் பெறுகின்றார்களா? ஒன்றுமே இல்லாமல்—இரயில் செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்குச் செலவும் செய்வதல்லாமல் வேறுபலன் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் எழுதிய கட்டுரை—'குடி அரசு' 30-9-1928]

10. புரோகிதரும் திதியும்–உரையாடல்

புரோகிதர்: ஓய் சுப்ரமண்ய முதலியாரே! நாளைக்கு எட்டாம்நாள் உங்கள் அப்பனுக்குத் திதி வருகின்றது. திதியை அதிகாலையிலே முடித்துவிட்டால் நன்றாயிருக்கும்; ஏனென்றால் நான் அன்று காலை பத்துமணிக்கு நாயக்கர் வீட்டுக்குப் போகவேண்டும்; அங்கு கர்ணபூஷண முகூர்த்தம்; அல்லாமலும், அதிகாலையில் திதி செய்வது மிகவும் விசேஷமானது.

முதலியார்: சரி, சாமி! அப்படியே ஆகட்டும். தாங்கள் மாத்திரம் அதிகாலையிலே வந்துவிடுங்கள்; நாங்கள் ஸ்நானம் செய்துவிட்டு சாமக்கிரியைகளுடன் தயாராய் இருக்கின்றோம். (முதலியார் தம் மனைவியை அழைக்கின்றார்) அடீ!

அண்ணியார்: (பெரிய வீட்டுப் பெண்களை அண்ணியார் என்றுதான் கூப்பிடுவது) ஏனுங்க!

முதலியார்: சாமி, சொன்னதைக் கேட்டியா?

அண்ணியார்: ஆமாம்! நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.

முதலியார்: இன்றைக்கு எட்டாம்நாள்—ஞாபகமிருக்கட்டும்! காலமே நேரமே ஸ்நானம் செய்துவிட்டு, சாமிக்குக் கொடுக்கும் சாமான்கள் எல்லாம் தாராளமாய், ரெடியாய் வைத்து இருக்கவேண்டும்.

தம்பி: (பக்கத்தில் இதைக் கேட்டுக்கொண்டிருந்த முதலியார் மகன் எஸ். எஸ். எல். சி. படிக்கிறவர்) என்னப்பா, என்னமோ சொன்னீர்களே? என்னத்துக்காகத் தாராளமாய், ரெடியாய் இருக்கவேண்டும்?

முதலியார்: உங்கள் தாத்தாவுக்கு எட்டாம்நாள் திதி! சாமி, காலமே எங்கேயோ போகணுமாம். அதற்காகக் காலையிலே எல்லாம் தயாராக இருக்கவேண்டும் என்று சொன்னேன்; காலம் பஞ்சகாலம்; சாமிக்குத் தாராளமாய்க் கொடுப்போமே! இவர் 2, 3 மாதங்களுக்காவது சாப்பிடட்டும்.

தம்பி: அதற்கு, இந்த ஆசாமி என்னத்துக்கு வந்தாரு? எதற்காகக் கொடுக்கிறது? யாருக்குப் பஞ்சம்?

முதலியார்: அடே, அவர் சாமிடா, அப்படி எல்லாம் சொல்லாதே! மரியாதையாய்ப் பேசு.

தம்பி: என்னப்பா? கோவிலிலே இருக்கிறதும் சாமி; இந்தத் தடியனும் சாமியா? அப்படியென்றால் கோவிலிலே இருக்கிற சாமிக்குத்தான் என்ன மரியாதை இருக்கிறது?

ஒரு நாயை 'முதலியாரே,' 'முதலியாரே' என்று கூப்பிட்டால் நமக்குக் கோபம் வராதாப்பா? அதுபோல், இந்தப் பிச்சை எடுக்கிற மனிதனைச் 'சாமி'ன்னு கூப்பிட்டால் கோவிலில் இருக்கிற சாமி கோபித்துக்கொள்ளாதா?

முதலியார்: என்னடா, அதிகப் பிரசங்கிப் பயலே! இப்படி ஆய்விட்டாயே, இதெல்லாம் எங்கேயடா படித்தே? இந்தச் சுயமரியாதைக்காரப் பயல்களோடே சேர்ந்து கெட்டுப்போயிட்டாப்போலே இருக்கிறதே! மட்டு, மரியாதை, மனுஷாள், கினுஷாள் ஒன்றும் இல்லாமல் போச்சே! இனிமேல் இப்படியெல்லாம் பேசினால் பார்த்துக்கோ—அப்புறம் என்ன நடக்கும் என்று!

தம்பி: கோபிச்சுக்காதீங்கோ, அப்பா! இவனைப் போய்ச் 'சாமி'ன்னு கூப்பிடறதுக்கு வெட்கம் இல்லையாப்பா? இன்னும், நம்மளாட்டம் மனுஷன்தானப்பா? என்னத்துக்காக மனுஷனைச் 'சாமி'ன்னு கூப்பிடறது? பிச்சைக்காரன்தான் பிச்சை கேட்கிறதுக்குச் 'சாமி'ன்னு கூப்பிடுவான்! பிச்சை வாங்குபவனைப் பிச்சை கொடுப்பவர்கள் யாராவது சாமின்னு கூப்பிடுவார்களா? அப்படியெல்லாம் அவர்களைக் கூப்பிட்டால் அவர்கள் நம்மை என்னவென்று கூப்பிடுவார்கள்? மரியாதைக்குக் கூப்பிடவேண்டுமென்றால், அவர்கள் நம்மை 'சாமி' என்றால்—நாமும் அவர்களை 'சாமி'ங்கலாம். நம் வீட்டுக்கு, நம்மை ஏமாற்றிப் பணம் அடிச்சிக்கிட்டுப் போக வந்திருக்கிறான்; அவனைப் போய்—'சாமி'ன்னு கூப்பிடுறீங்களே! அதனாலேதான் அவன் நம்மைச் சூத்திரன் என்கிறான்; அம்மாவை சூத்திரச்சி என்கிறான். நம்மையெல்லாம் 'எட்டி நில்லு; மேலே படாதே' என்கிறான்!

முதலியார்: (அய்யரைப் பார்க்கிறார்)

அய்யர்: முதலியாரே, இது கலிகாலம்; இங்கிலீஷ் படிப்பு ஒரு பக்கம், மேல்நாட்டு நாகரிகம் மற்றொரு பக்கம், நாசமாய்ப்போன சுயமரியாதை இயக்கம் இன்னொரு பக்கம். அதைப் பார்த்து புதுப் புது டிராமா, கிருஷ்ணன்–மதுரம், ராதா, அண்ணாதுரை—டிராமா, டி. கே. எஸ் பிரதர்ஸ் நாடகக் கம்பெனி, விகடம் முதலிய சனியன்கள் வேறொரு பக்கம். இவையெல்லாம் சேர்ந்து இப்படி ஆகிவிட்டது. உங்கள் பையன் மாத்திரமல்ல, ஊர்ப் பையன்களே கெட்டுக் குட்டிச்சுவர் ஆகிவிட்டதுகள். வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த பெண்கள் சிலதுகள் இப்படியே ஆகிவிட்டதுகள். போனால் போகட்டும்—இது சிறு பிள்ளை. அதற்கு இன்னமும் உலகம் தெரியாது; அது என்ன வேணுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும். இதற்கெல்லாம் நான் வருத்தப்படமாட்டேன். எல்லாம் பகவான் செயல்! நீங்கள் வருத்தப்படாதீர்கள்; எல்லாம் கொஞ்சநாளில் சரியாய்ப்போய்விடும். நீங்கள் மாத்திரம் அன்றைக்கு எல்லா சாமக்கிரியைகளுடன் ரெடியாய் இருங்கள். பஞ்சகாலம் என்று சொன்னீர்களே, அது சரியாய்ப் போச்சு. அந்தப் பகவான்தான் தங்கள் வாக்கில் இருந்துகொண்டு அப்படிச் சொல்லச் சொன்னார். என்னமோ, நான் ஏழை; பெரிய குடும்பம் பார்த்துக்கோங்கோ. (அய்யர் தம்பியைப் பார்த்து) அடேய் தம்பி! நீ இப்படியெல்லாம் இனிமேல் பேசாதேடா? இது நல்லதல்லடா; தெரிந்ததா? உங்கள் குடும்பம் பெரிய குடும்பம். அதற்குக் கேடு வருத்திக்காதேடா!

தம்பி: (அய்யரைப் பார்த்து) யாரையடா அடேய் என்கிறாய்? என்னடா தெரியறது? உனக்குக் கொடுக்காவிட்டால் என்ன கேடுடா வரும்? திதியன்னைக்கு வாடா, எங்க வீட்டுக்கு. அப்போது நான் இந்த மாதிரி வாயால் பேசப் போறதில்லையடா! உன் முன்னங்கால் சில்லியைப் பேத்துப் பல்லைப் பிடுங்கிக் கொடுத்து அனுப்புகிறேன்டா! உனக்கு நான் 'அடே தம்பியா?' என்ன ஆனாலும் சரி; அன்னைக்கு உன்னை நான் பார்த்துவிட்டுடறேன்; கலிகாலமாம்—கலிகாலம்!—அது யாருக்கு என்று அன்னைக்குத் தெரியும். 'கிரஸ்னாயில் டாங்கு' மாதிரி இருந்துக்கிட்டு, பஞ்சமாம்? யாருக்குப் பஞ்சம்?

முதலியார்: டேய்! டேய்! தம்பி, கெட்டுப் போகாதேப்பா, கெட்டுப்போகாதே.

தம்பி : கெடற தென்ன, பிழைக்கிற தென்னப்பா ? நீங்களும் அம்மாவும் வேறு எங்கேயாவது போய் அவனை சாமின்னு கூப்பிட்டு, அவன் காலில் விழுந்து கும்பிடுங் களேன் ! இந்த வீட்டுக்குள் இவன் வந்தால் நான் அவனைக் கட்டாயம் உதைக்காமல் விடமாட்டேன். வேணுமானால் பாருங்களேன் ! ஒரு தூசு கூட அவனுக்குக் கொடுக்கப் படாது. பாடுபடுகிறவனுக்கு இந்தக் காலத்திலே ரூபாய்க்கு ஒருபடி அரிசி சிக்குகிறதில்லை. இந்தத் திருட்டுப் பசங்களுக்கு—சோம்பேறிகளுக்குக் கடுகு, மிளகு, சீரகம், உப்பு புளியோடு கலம் கலமாகப் படைப்பா ! நமக்கு 400 வேலி இருந்தும் கொக்கு மாதிரி இருக்கோம் ; இவனுக்குக் கழுத்து இருக்கிறதா பாருங்கோ ! தலையும் உடம்பும் ஒன்றாய்ப் பூசிய மாதிரி இருக்கின்றன ! இது என்ன அக்கிரமம் ! எப்படித்தான் இந்தப் புரட்டையும், திருட்டையும் அனுமதிக்கிறது ? பார்க்கலாம்—வருவது வரட்டும் ! நம்ம குடும்பமே கெட்டாலும் சரி ; அவன் மாத்திரம் அன்னைக்கு வரட்டும், இங்கே !

முதலியார் : சாமி நீங்க போங்க ! இப்போ நேரம் சரியாய் இல்லைங்கோ.

தம்பி : என்னங்க அப்பா ! மறுபடியும் இவனைச் 'சாமி'ங்கிறிங்கோ !

அய்யர் : சின்ன முதலியார்வாள் கோபித்துக்கொள்ளாதீங்கோ. நான் இனிமேல் உங்கள் வீட்டிற்கு வரவில்லை ; வந்தால் உங்கள் காலில் போட்டிருக்கிறதிலே அடியுங்கோ.

தம்பி : வீட்டிற்கு வருவதில்லேங்கிறதென்ன ? இனிமேல் இந்த வீதியிலேயே நடக்கப் படாது, தெரியுமா ?

அய்யர் : அப்படியே, சின்ன முதலியார்வாள் ; நான் இன்றைக்கு எவன் முகத்தில் விழித்தேனோ, தெரியவில்லை.

தம்பி : எவன் முகத்தில் விழித்தால் என்ன ? சங்கராச்சாரி முகத்திலேதான் விழித்து விட்டு வாயேன், அப்போது என்ன நடக்கிறது என்று பாரு ! என்ன அக்கிரமம் ! ஒரு கூட்டத்துக்கு இதே பிழைப்பா ? நினைத்தால் வயிறு எரிகிறதே ! மடப் பசங்கள், கொடுக்கிறதையும் கொடுத்து உன்காலில் விழுவதும், உன்னைச் 'சாமி' என்று கூப்பிடுவதும், உன்னிடம் சூத்திரப்பட்டம் வாங்கிக் கொள்வதும் சகிக்க முடியலையே ! யார்தான் இந்த அக்கிரமத்தையும், அயோக்கியத்தனத்தையும் கேட்பது ? அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பிகூட உதவமாட்டான் என்பது உங்கள் இனத்துக்கு மிகவும் பொருத்தமானது. ஆகவே இனி உதையப்பர்தான் இதைக் கேட்கவேண்டும். போ, வெளியிலே !

அய்யர் : நமஸ்காரம், சின்ன முதலியார்வாள் ! போய்வருகிறேன்.

தம்பி : திரும்பிப் பார்க்காமலே போ !

அய்யர் : சின்ன முதலியார்வாள், நீங்கள் கூப்பிட்டுத்தான் பாருங்களேன். நான் திரும்பிப் பார்க்கிறேனா, என்று.

தம்பி : சரி, சரி, போன்னாக்க, மறுபடியும் பேசறியே !

(அய்யர் போய்விட்டார்)

முதலியார் : என்னடா தம்பி, இந்த மாதிரி ஆகிவிட்டாய் ? இதெல்லாம் நமக்கு கெட்ட காலத்துக்கு அறிகுறியடா ?

தம்பி : சரி, போதுமப்பா, இப்போது உங்களுக்கு மகா நல்ல காலமாக்கும். 400 வேலி நிலம் வைத்துக்கொண்டு பெரிய மிராசுதாராக இருந்துகொண்டு, இந்தப் பிச்சை எடுக்கவந்த பயலைச் 'சாமிகளே' என்று கூப்பிட்டு எழுந்து நின்று கும்பிடுகிறீர்களே— இதுதான் உங்களுக்கு மகா நல்ல காலமோ ? இதைவிட இன்னும் என்ன கெட்ட காலம் வரப்போகிறது ?

முதலியார் : அடே பைத்தியக்காரப் பயலே, இதெல்லாம் பெரியவாள் காலம் முதற் கொண்டே நடந்துவரும் வழக்கமடா ?

தம்பி : சரி அப்பா, அந்த மடப் பெரியவாள் வழக்கம் இதுவரையில் போதும். இனி பகுத்தறிவுச் சிறியவர்கள் பழக்கம் அமுலுக்கு வரவேண்டியது ஆகும்—தெரியுமா? இனிமேல் அவர்கள் இந்த வீட்டுக்குள் நுழையப்படாது. அவன் நம்மை எல்லாம் சூத்திரன் என்கிறான். அதற்கு அவனுக்கு அரிசி, பருப்பா? அப்படி என்றால், 200 வேலி எனக்குப் பிரித்துக் கொடுத்துவிடுங்கோ !

அண்ணியார் : தம்பிகிட்டே பேசாதீங்கோ! திவசமும் வேண்டாம், ஒரு கல் லெடுப்பும் வேண்டாம். அப்படிக் கொடுக்க வேணுமுன்னா—'காசி, கீசி; கயா, கியா' போய் அங்கு கொடுத்துவிட்டு வருவோம். தம்பிகிட்டே கலகம் வேண்டாம். குடும்பம் கலைந்து போகும். நான் அப்பவே மீட்டிங்குக்கு–கூட்டத்துக்கு நம் தம்பியை அனுப்ப வேண்டாம்னு சொன்னேன். படுங்கோ; நிறுத்துங்கோ இந்தப் பேச்சை, இவ்வளவோடே ! யாராவது வரப்போறா !

['சித்திரபுத்திரன்' உரையாடல்–'குடிஅரசு'—27-11-1943]

11. சோதிடம்

இந்தியாவில் இந்துக்கள் சாமியாடுதல், வாக்குச் சொல்லுதல்; பூதம், பேய், பிசாசு என்பவை மனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல்; மந்திரம், மந்திரித்தல், பில்லி சூனியம்செய்து மக்களுக்குத் துன்பம், சாவு முதலியவை உண்டாக்குதல்; குட்டிச்சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்தல்; முன்பிறவி, மறுபிறவி உண்டெனல்–ஆகியவைகளில் நம்பிக்கைகொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற் கென்றும், எதிரிகளின் கேட்டிற்கென்றும், எப்படித் தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ அதுபோலவே—தங்கள் வாழ்க்கைக்குச் சோதிடம் என்னும் விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்துப் பணத்தையும், நேரத்தையும் செலவுசெய்து வருகின்றார்கள். இதனால், மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவோ கெடுதிகளும் ஏற்பட்டு வருவதைக் கண்கூடாய்ப் பார்க்கிறோம். எப்பொழுதுமே சோதிடன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும் மக்களின் பேராசைக்கும் முட்டாள்தனத்திற்கும் பங்கு தாயாதி களேயாவார்கள்.

எப்படியெனில், முதலில் சோதிடன், ஒருவனுடைய சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லுவதன்மூலம் கண்டம் நீங்க சாந்தியும், கிரகதோஷ பரிகாரத்திற்குச் சாமிகளுக்கு அர்ச்சனை செய்யும்படியும் சொல்லுவான். இதைக்கேட்ட மனிதன் தன் ஆசைக்காகவும், பயத்திற்காகவும் மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்தி கழிக்கச் சொல்லுவான். இந்த மந்திர வாதிகள் அனேகமாய் வைத்தியர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்கக் கடைச் சாமான்கள் பட்டியல் போடும்போதே—ஒரு மண்டலம் (48 நாள்), அரை மண்டலம் நவக் கிரகங்களுக்கோ அல்லது குறிப்பிட்ட சனி, செவ்வாய் முதலிய ஏதாவது ஒரு கிரகத் திற்கோ ஒரு சாமிக்கோ அர்ச்சனை; எள்ளு, பருத்திக்கொட்டை முதலிய தானம்; விளக்கு வைத்தல், அபிஷேகம் செய்தல் ஆகியவைகளையும்; ஏதாவது புண்ணிய புராணம் படித்தல் முதலியவைகளையும் சொல்லிவிடுவான். இவைகளையெல்லாம் செய்வதால் மந்திர வாதிக்கும், அர்ச்சகனுக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் சோதிடனுக்கும் சேர்ந்துவிடும்.

இந்தப்படியே எங்கும் நடப்பது வழக்கம். ஆகவே, இந்த விஷயத்தில் மந்திரம், அர்ச்சனை ஆகியவைகளைப் பற்றி விசாரிக்கும்முன் சோதிடம் என்பது பற்றி ஆராய்வோம்.

சோதிடம் என்றால் என்ன? அது உண்மையா? அப்படி என்று ஒன்று இருக்க முடியுமா ?

சோதிடம் என்பது உலக வழக்கில், அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அதன் சம்பவம், பலன் ஆகியவைகளை மொத்தமாய் வருஷப் பலனாயும், மாதப் பலனாயும், தினப் பலனாயும், நிமிஷப் பலனாயும் சொல்லுவதும்; அவற்றுள் துன்பம் வரத் தக்கது ஏதாவது நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக்கொள்வதும்; இஷ்ட சித்திக்கு ஏதாவது விரோதமாய் இருந்தால் அதற்கு ஏதாவது பரிகாரங்கள் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கி சித்தியடைய முயற்சிப்பதும் ஆகிய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகும். இந்தச் சோதிடம் முன்சொன்னது போல், பிறந்த காலத்தைக் கொண்டு சொல்வதோடு, மற்றும் வேறு பல வழிகளிலும்—அதாவது பேர் நாமத்தைக் கொண்டும், கேட்கப்பட்ட நேரம், கேட்பவரின் இருப்பு நிலை, கேட்ட சங்கதி, சோதிடனுக்கு எட்டும் நேரம், கேட்பவரின் தாய் தகப்பன், சகோதரம், பந்து முதலானவர்களின் பிறந்த கால சாதகம் முதலியவைகளைக் கொண்டும் பலன் சொல்லுவதுண்டு. இன்னும் இதுபோன்ற பலவகை—அதாவது, ஏதாவது ஒரு எண், ஒரு பூ, ஒரு எழுத்து ஆகியவைகளைக் கேட்டல்; ஒரு அங்கத்தைத் தொடுதல் முதலியவைகளின் மூலமும் பலன் சொல்லுவதுமுண்டு. ஆகவே, மேற்கண்ட எல்லாவற்றின் மூலமும் பலன் சொல்ல முடியுமா என்பதைப் பற்றி யோசிப்பதில் முதலாவதாக ஜீவன் பிறந்த காலத்தை ஆதாரமாக வைத்துப் பலன் சொல்லக்கூடுமா என்று பார்ப்போம்.

பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து பிறக்கும் காலமா? அப்படிப் பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது, ஒருநாள் அரைநாள் அக் குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி, நிலத்தில்பட்டு, கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கும் காலமா? அல்லது, கால் தலை ஆகிய எல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த காலமா? அல்லது, மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒருபுறமிருக்க—ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக்கொண்டே பார்ப்போமானாலும், அந்த நேரத்தைச் சரியாக எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருடன் இருக்கிறதா, இல்லையா? ஆணா, பெண்ணா? போன்றவைகளைப் பார்க்கச் சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டுவந்து வெளியிலிருக்கும் ஆண்களிடம் சொல்லச் சிறிது நேரமாவது செல்லும்; அந்தச் சேதியைக் கேட்டவன் நேரத்தைக் குறிக்க அங்கேயே அவனுக்குக் கடிகாரம் வேண்டும்; அந்தக் கடிகாரம் சரியான மணி காட்டுவதா என்பது தெரியவேண்டும்; கடிகாரமில்லாவிட்டால், வானத்தைப் பார்த்து நேரம் கண்டுபிடிப்பதாயிருந்தால் அதற்குப் பிடிக்கும் நேரம் முதலியவை; அல்லது அக்கம் பக்கத்திலுள்ள கடிகாரம், அதுவுமில்லாவிட்டால், உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும், பிசகுகளும் எப்படி நேராமல் இருக்கமுடியும்? இவை ஒருபுறமிருக்க, அந்த நேரத்தால் பலன் சொல்லுவதானால் அந்த நேரத்தில் உலகத்தில் பிறக்கும் ஜீவன்கள் எவ்வளவு இருக்கக்கூடும்? மற்ற ஜீவன்களையெல்லாம் தள்ளிவிட்டு, வெறும் மனித ஜீவனை மாத்திரம் எடுத்துக்கொண்டாலும், உலகத்தில் 170 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்ற கணக்குப்படி பார்ப்போமானால், சென்னை முதலிய பட்டணங்களின் சாதாரண அனுபவங்களின்படிக்கு உலகத்தில் நாள் ஒன்றுக்கு 226666 குழந்தைகள் பிறப்பதாகக் கணக்கு ஏற்படுகின்றது. இதைத் தவிர கணக்குக்கு வராத விதவைகளின் குழந்தைகள், கலியாணம் ஆகாத பெண்களின் குழந்தைகள், புருஷன் சமீபத்தில் இல்லாத பெண்களின் குழந்தைகள் இவைகளைச் சேர்த்தால் இன்னமும் இந்தக் கணக்கு அதிகமாகும். இது ஒருபுறமிருக்க, மேற்படி சாதாரணக் கணக்குப்படிக்குப் பார்த்தாலே ஒரு நாளைக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பங்கிட்டுப் பார்த்தால் ஒரு நிமிடத்திற்கு சுமார் 160 குழந்தைகள் வீதம் பிறப்பதாகக் கணக்கு ஆகிறது. இதில் 33 கோடி கொண்ட இந்தியாவுக்கு மாத்திரம் கணக்குப் பார்த்தால் நிமிஷத்துக்கு சுமார் 33 குழந்தைகள் வீதம் பிறக்கின்றதாகக் கணக்கு. ஆகவே,

இந்த 33 குழந்தைகளுக்குமாவது சாதகப் பலன் ஒத்திருக்க முடியுமா? இவைகளுக்குச் சரியான நேரம் கண்டுபிடிக்க முடியுமா?

நிமிஷக் கணக்கே இப்படி—அதாவது நிமிஷத்திற்கு 33 குழந்தைகள் பிறப்பதாக இருக்கும்போது, சோதிடம் சொல்லுவதற்குப் போதுமான காலமாகிய ஒரு 'லக்கினம்' 'நட்சத்திரம்' ஆகியவைகளின் காலத்திற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கக்கூடும்?

சாதாரணமாய், ஒரு சாதகமென்பது வருஷம், மாதம், தேதி, கிழமை, மணி, அந்தச் சமயத்தின் லக்கினம், நட்சத்திரம் ஆகியவைகளைக் குறித்துள்ளதேயாகும். உதாரணமாக, பிரமாதி வருஷம், புரட்டாசி மாதம் புதன் கிழமை காலை சுமார் 10 மணிக்கு, விருச்சிக லக்கினத்தில், அஸ்த நட்சத்திரத்தில் ஒருவன் பிறந்தான் என்பதாக ஒரு துண்டுச் சீட்டில் எழுதி ஒரு சோதிடனிடம் கொடுத்துவிட்டால், இதன்பேரில் சோதிடம் சொல்லக்கூடும். ஆகவே, இந்த விருச்சிக லக்கினம் என்பது 5¼ நாழிகையுடையதாகும். ஒரு மணிக்கு 2½ நாழிகை. இந்த நேரத்திற்குள் அதாவது 126 நிமிஷ நேரத்திற்குள் உலகத்திலே 20,160 குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். இது ஒருபுறமிருக்க, மேலும் இந்த 'லக்கினத்தில்' நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய—பூதக் கண்ணாடிப் பூச்சி முதல் யானை வரையிலுள்ள உயிர்களின் குழந்தைகள் பலகோடிக்கு மேல் பிறந்திருக்கவேண்டும்.

இந்தியாவில் மாத்திரம் அந்த 'விருச்சிக லக்கினத்தில்' முன் சொல்லப்பட்ட கணக்குப்படிக்கு 4,158 குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும். ஆகவே, அன்றைய தினம் அந்த 'விருச்சிக லக்கின'த்தில் பிறந்த காரணத்திற்காக மேற்படி 4,158 பேருக்கும் வாழ்க்கையில் ஒரேவிதமான பலன் அனுபவமிருக்க முடியுமா? அந்தப்படி இருக்கின்றதா?

தவிர, இந்தப் பலன் அனுபவங்கள் மனிதனுக்குத் தானாக ஏற்படுவதா? அல்லது, இரட்சிக்கிற கடவுள்களின் தன்மையால் ஏற்படுவதா? அல்லது, முன் பிறவியில் செய்த கருமத்தின் பலனாய்ப் பலன் ஏற்படுவதா? அல்லது, விதியின் பயனாய்ப் பலன் ஏற்படுவதா?

இந் நான்கிலும் மனிதனுக்குப் பலன் அவனது சொந்த திஷ்டத்தால், செய்கையால் தற்சம்பவமாய் ஏற்படுமானால் மேல்காட்டியவைகளில் அது தவிர மற்றவைகள் மூன்றும் அடிபட்டுப் போகும். கிரகங்களின் தன்மையால் ஏற்படும் என்றால் இதைத் தவிர, மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். முன்ஜென்ம கர்மத்தின்படி என்றால் இது தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். ஆகவே, மனிதனுடைய அனுபவ பலனுக்கு இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் காரணமாய் இருக்கமுடியுமே தவிர, இந்நான்கும் சேர்ந்து குழப்பிக் கொண்டிருக்க முடியாது. இன்ன இன்ன கிரகம் இன்ன இன்ன வீட்டில் இருப்பதாலும், இன்னின்ன காலத்தில் இன்னின்ன கிரகங்கள் இன்னின்ன கிரகங்களைப் பார்ப்பதாலும்—இந்த சாதகன் இன்ன இன்ன காரியம் செய்து இத்தனை தடவை சிறைக்குப் போவான் என்பதாக, ஒரு சரியான பிறந்த காலத்தைக் கண்டுபிடிக்கப்பட்ட சாதகன் ஒருவனுக்கு சரியான கெட்டிக்காரச் சோதிடன் ஒருவன் பலன் சொல்லுகிறான் என்பதாக வைத்துக் கொள்வோம்.

இவற்றுள் இந்த சாதகன் இன்ன வேளையில் இன்னாரைக் கொன்று ஜெயிலுக்குப் போவான் என்று இருந்தால், அந்தக் கொல்லப்பட்டவனுடைய சாதகத்திலும் இன்ன வேளையில் இன்னாரால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தால் ஒழிய, ஒருகாலமும் பலன் சரியாக இருக்கமுடியாது. இந்த இரண்டு சாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்துவிட்டதாகவே வைத்துக் கொண்டாலும், இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தப்பித்துக்கொள்ள முடியுமா என்றால் ஒருகாலமும் முடியாது. ஏனெனில், தப்பித்துக்கொண்டால் சோதிடம் பொய்யாகிவிடும். ஒரு சமயம் தப்பித்துக்கொள்வதாகவே வைத்துக்கொண்டால் அந்த இருவர்கள் சாதகத்திலும் அந்த முடிவும் இருக்கும். அப்படி இருக்குமானால், இந்த விஷயத்தை அவர்கள் இருவரும் தெரிந்து ஜாக்கிரதையாய் இருந்தாலும், தெரியாமல் கவலையற்று அஜாக்கிரதையாயிருந்தாலும் இவ்விருவருக்கும் கொலை

யும் சிறைவாசமும் கிடைக்க முடியவே முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் சாதகத்தில் ஏற்கனவே இருக்கின்றபடி நடந்துதானே தீரும்!

இதற்குச் சாந்தி, தோஷ பரிகாரம் என்பவைகள் செய்வதன் மூலமாவது ஏதாவது பலனை மாற்றிவிட முடியுமா என்பதையும் யோசிக்கலாம். அதாவது, இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்பதால் இன்ன கெடுதியான பலன் ஏற்படும்; ஆதலால் இன்ன தோஷ பரிகார சாந்தியும், இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள் அர்ச்சனை செய்தால் நிவர்த்தியாகும் என்று சோதிடன் சொல்வானானால் இந்த சாந்தியின் மூலமாகவோ அர்ச்சனை மூலமாகவோ அந்தக் கிரகங்களை அந்தக் காலத்தில் அந்த வீட்டைவிட்டு மாற்றமுடியுமா? அல்லது, அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், இம் மாதிரி சாந்தியோ, பரிகாரமோ செய்வதன்மூலம் தப்பித்துக்கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாதபட்சம், எந்தவித சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியாது. முடிந்தால் சோதிடம் பொய்யென்றே ஆகிவிடும்.

முடிவாக, எந்தக் காரணத்தைக் கொண்டாவது சோதிடம் உண்மை என்றாகி விட்டால், எந்த மனிதன்மீதும் எந்தக் குற்றமும் சொல்லுவதற்கு இடமுண்டா? சாதகப் பலன்படி நடவடிக்கை நடந்தால் அதற்கு சாதகன்மீது குற்றம் சொல்லுவது மடமையும் யோக்கியதைப் பொறுப்பற்ற தன்மையும் ஆகாதா? ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் இழப்பு ஏற்படும் என்று இருந்தால், அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு 'திருட்டுத் தொழிலில் பொருள் இலாபம் கிடைக்கும்' என்று சாதகப் பலன் இருந்துதான் ஆகவேண்டும். அதுமாத்திரமல்லாமல், திருட்டுக் கொடுத்தவனுக்குப் பணம் கொடுத்து யார் யார் நஷ்டமடைந்தார்களோ, அவர்கள் சாதகத்திலும்—இன்ன காலத்தில் இன்னாருக்குப் பணம் கொடுத்து அது திருட்டுப்போய் அதனால் நஷ்டமடைய வேண்டும் என்று இருந்தே ஆகவேண்டும். ஆகவே, இந்தப்படியெல்லாம் சோதிட உண்மை இருந்து விட்டால் பிறகு கடவுள் செயல் எங்கே? மோட்ச நரகம் எங்கே? தலைவிதி எங்கே? முன்ஜென்ம வினைப்பயன் எங்கே? இவைகளுக்கு வேலை ஏது?—என்பதைப்பற்றி யோசித்தால் இவை அவ்வளவும் பொய்யாகவே முடியும்.

இவைகளெல்லாம் நேரமும் இடமும் சம்பாதித்து மெய்ப்படுத்தக் குழப்புவதாக வைத்துக் கொண்டாலும், கண்டிப்பாக ஒரு மனிதனின் நடவடிக்கைகளுக்கு அந்த மனித னுடைய பொறுப்பையாவது அடியோடு விட்டுத்தானாக வேண்டும்.

['குடி அரசு'-தலையங்கம்—6-7-1930]

சோதிடம் என்பது ஒரு மனிதனுடைய பிறந்த நேரத்தைக் கொண்டு, அந்தச் சமயம் கிரகங்கள் இருந்த நிலைமைக்கேற்ப மனிதனுடைய பலாபலன்களைக் குறிப்பதென்பதாகும்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மனிதனின் வாழ்க்கை, அவனது பிறப்பு, இறப்பு; இன்பம், துன்பம்; சுகம், அசவுக்கியம்; செல்வம், தரித்திரம்; தொழில், மேன்மை, கீழ்மை; புத்திரகளத்திரத் தன்மை—எண்ணிக்கை, ஆயுள் முதலியவைகளைக் குறிப்பதாகும்.

இதைக் கூர்ந்து பார்ப்போமானால், மேற்கண்ட பலன்கள் சோதிடத்தின்மூலம் உணரலாம் என்பது உண்மையாய் இருக்குமாயின், ஒரு மனிதனின் பிறந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரகங்களின் நிலையை அறிந்து பலன்களைக் கணிப்பது என்பதில், குறிப்பிட்ட சாதகனுடைய பலன் மாத்திரமல்லாமல் அவனது பலாபலனுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற அனேகருடைய பலன்களும் அதில் அத்துபடி ஆகிவிட வேண்டும் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனென்றால், ஒரு சாதகனுக்குச் செல்வம் வரவேண்டுமானால், வியாதி வரவேண்டு மானால், உத்தியோகம் வரவேண்டுமானால், சாவு வர வேண்டுமானால்—அவை வருவதற்கு

ஹேதுவான மாற்றங்களும் இந்தச் சோதிடத்தின் மூலம் அறிந்ததாக வேண்டும். இவனால், மற்றவர்களுக்கு ஏற்படும் லாப நஷ்டங்களும், இவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் லாப நஷ்டங்களும் கணிக்கப்படும்போது, இவனது பலாபலன்களைப் போலவே மற்றவர்களது பலாபலன்களும் ஏற்கனவே அவனவன் சாதகப் பலனின் பயனாய் ஏற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும்.

எந்த ஒரு சாதகனுடைய பலனைக் கவனித்தாலும் அந்தப் பலனுக்குச் சம்பந்தப் பட்ட எல்லா மனிதர்களுடையவும் ஜீவராசிகளுடையவும் அந்தந்தப் பொருள்களுடையவும் சாதகமும் சம்பந்தப்படாமல் ஒரு காரியமும் நடக்காது.

மனிதன் பிறக்கும்போது உள்ள நேரத்தைக் கொண்டு அந்த மனிதனின் வாழ்வின் பலாபலன் சொல்லப்படுகிறது போலவே, வஸ்துக்கள், தாவரங்கள் முதலியவைகளுடைய பிறந்த நேரத்தைக் கொண்டும் பலாபலன்களைச் சொல்லலாம் அல்லவா?

உதாரணமாக, ஒரு விக்ரகம் செய்யப்பட்டால் அது செய்யத்தொடங்கிய நேரத்தையோ, செய்து முடிந்த நேரத்தையோ கொண்டு அதன் வைபவத்தைக் குறிக்கலாம் என்று சோதிடர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால், இந்தப் பலன் என்பது விக்ரகங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமானது என்றுதானே சொல்லவேண்டும்?

ஒரு கடிகாரம், ஒரு லாந்தர், ஒரு பாத்திரம், ஒரு நாற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை வைத்துக்கொள்வோம். அது செய்யத்தொடங்கிய நேரமோ அல்லது செய்து முடிந்த நேரமோ, அல்லது வாங்கிய நேரமோ குறித்துக்கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரக நிலைக்கேற்ப மற்றும் அதனுடைய சலனத்துக்கு ஏற்ப பலன்கள் குறிப்பிடக் கூடியதாகவே இருக்கவேண்டும்.

ஏனெனில், மனிதனுக்கும், விக்கிரகத்துக்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன், புல், பூண்டு சாதாரண வஸ்துக்கள் ஆகியவைகளுக்கும் இருந்துவருகின்றது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும் பெருமையும் அடைகின்றது; அதோடு கூடப்பிறந்த மற்றொரு குதிரை ஜட்காவண்டியில் தினமும் கட்டப்பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுவதோடு 'ரெயின்ஸ்' கயிற்றால் விதரில் அடிவாங்கி விதர் வீங்கிக் கஷ்டப்படுகிறது.

இது அவற்றின் பிறந்தநேர 'கிரகாச்சார'ப் பலன் என்றுதானே சொல்லவேண்டும்?

இதுபோலவே ஒரேபாறையில் உடைத்த இரண்டு பாளக்கற்களில் ஒன்று விக்ரகமாகி பொன், வைர ஆபரணங்கள் அணிந்து, தினம் ஆறுகால பூசை, சதிர், பாட்டு, வைபவம், இரண்டு மூன்று பெண்சாதிகள், தாசிகள், வருஷா வருஷம் கலியாணம், பெரிய ஆலயம், திருவிழா முதலிய வைபவங்களைப் பெறுகின்றது; அதோடு பிறந்த மற்றொரு கல் முனிசிபாலிடி கக்கூசுக்கு பாவப்பட்டு தினம் நூற்றுக்கணக்கான பேர் செருப்புக் காலால் மிதித்து அதன்மீது ஏறி மலஉபாதை கழிக்கவும், சதா விளக்குமாறுபோட்டு அடித்துக் கழுவவும், போகின்ற வருகின்றவர்கள் காரி உமிழவுமான பலனை அடைகின்றது. இதுவும் அந்தக் கல் பிறந்த நேரத்தின் பயனும் அப்போதிருந்த கிரகநிலைக்கு ஏற்ப ஏற்பட்ட பலனும் என்றுதானே சொல்லவேண்டும்.

அதுபோலவே, ஒரே தொழிற்சாலையில் ஒரேநேரத்தில் செய்யப்பட்ட இரண்டு கடிகாரங்களை எடுத்துக்கொண்டால் ஒன்று மகாராஜா கையில் கட்டப்பட்டுச் சிறிதும் ஆட்டம் அசைவு இல்லாமலும் சரியாய் மணிகாட்டிக்கொண்டு மேன்மையாய் இருக்கின்றது.

மற்றொன்றோ ஒரு கூலிக்காரன் கையில் சிக்கி கண்டபடி அடிபட்டுச் சாமான்கள் முறிந்து, கடிகாரமே கெட்டு, மூன்றாம் நாளே குப்பைத்தொட்டியில் எரியும்படியாக ஆகி விடுகின்றது. இதுவும் அந்தக் கடிகாரம் பிறந்த நேரத்திலோ அல்லது வாங்கப்பட்ட நேரத்திலோ கிரகங்கள் அமைந்திருந்தமையைக் கொண்டும் அதன் சஞ்சாரங்களைக் கொண்டும் ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்?

இதுபோலவே யாவரும் வெறுக்கும் மலம் முதற்கொண்டு ஒவ்வொரு வஸ்துக்கும் அதனதன் பிறந்த நேரத்தின் பயனாய் பலாபலன் இருந்து வந்தால்தான், சாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே யொழிய, மனிதனுக்கு மாத்திரம்தான் சாதகம் சொல்ல முடியும் என்றால் அதை யார் ஒப்புக் கொள்வார்கள்?

சிலர் குதிரைக்கும் யானைக்கும் சாதகம் வைத்திருப்பதும் பார்ப்பதும் நாம் பார்த்திருக்கிறோம்.

மனிதனுக்குச் சாதகப் பலன் சொல்ல முடிகின்ற போது, குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும், கழுதைக்கும் சொல்ல முடியாது என்று சொன்னால் அது நியாயமாகுமா?

அதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும் சாதகப் பலன் சொல்வதாய் இருந்தால்—கோழிக்கும், குருவிக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக்கும், ஈக்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிருமிக்கும், பன்றிக்கும் சாதகப் பலன் சொல்லமுடியாது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோழிக்கும், குருவிக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும் அதனதன் பிறந்த நேரத்தைக் கொண்டு பலன் சொல்லலாம் என்றால் மரத்துக்கும், செடிக்கும், புல்லுக்கும், பூண்டுக்கும் அது முளைத்த நேரத்தைக் கொண்டு ஏன் பலன் சொல்ல முடியாது?

ஆகவே, 'வஸ்து' என்று ஒன்று ஏற்பட்டு, அது பிறப்பதற்கோ தோன்றுவதற்கோ ஒரு நேரமும் இருந்து அந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரகநிலையை அறியக் கூடிய எல்லாவற்றிற்கும் சோதிடம் சொல்லலாம் என்பதுதான் சோதிடத்தின் தன்மையாக இருக்கவேண்டும்.

இந்த முடிவு எப்படியோ ஆகட்டும். முதலாவதாக, ஒரு மனிதனுடையவோ, ஜீவனுடையவோ பிறந்த நேரத்தை எப்படிக் கவனிக்க முடியும்? பிரசவ காலத்தில் வயிற்றுவலி ஏற்பட்ட நேரம் முதல் சிசுவானது கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாகிறது. உருவம் வெளிப்பட்டு, தலையோ, காலோ தெரிந்து வெகுநேரம் சென்றதும் சில சிசுக்கள் மணிக்கணக்கில் கீழே விழாமல் சிக்கிக் கொண்டும் இருக்கின்றன. கீழே விழுந்த நேரத்தையே எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும் பெரும்பான்மையான சிசுக்கள் விஷயத்தில் எப்படிச் சரியான நேரத்தை கண்டுபிடிக்க முடியும்?

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள்; ஒரு முகூர்த்தத்திற்கு $3\frac{3}{4}$ நாழிகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு லக்கினத்திற்கும் $4\frac{1}{2}$ முதல் $5\frac{1}{2}$ நாழிகையும், ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சுமார் 60 நாழிகையும் உண்டு.

இதற்குள் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிரகம், நட்சத்திரம் என்பவை ஒன்றாகவேதான் இருக்கமுடியும். உலகில் ஏற்படும் பிறப்பு இறப்புகள் எல்லாம் இந்த லக்கினத்துக்குள்ளும் இந்த நட்சத்திரங்களுக்குள்ளும்தான் வந்தாக வேண்டும்.

அந்தப்படியே வந்து அதைக் கொண்டே பலன் சொல்லக்கூடும் என்றே வைத்துக் கொண்டாலும், மனிதனுடைய நித்திய வாழ்க்கை, அனுபவத்துக்கும் பிறந்தபோது கிரகங்கள் வந்த நிலைக்கும் எப்படிச் சம்பந்தம் இருந்துவர முடியும்? எப்படி இருக்கக் கூடும் என்பதை எந்த வானசாஸ்திரியாவது, நட்சத்திர சாஸ்திரியாவது, ஜீவ தத்துவ சாஸ்திரியாவது, உடல் தத்துவ சாஸ்திரியாவது, பொது விஞ்ஞான சாஸ்திரியாவது ஒப்புக் கொள்கின்றார்களா?

இவைகளுக்கெல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? விஞ்ஞானத்திற்கு, அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்படுமானால் பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் நிர்த்தாரணம் செய்ய முடியும்?

ஒரு வஸ்து நிர்ணயத்துக்கோ, ஒரு விஷய நிர்ணயத்துக்கோ ஏதாவது ஒரு முறை அல்லது விதி இல்லாவிட்டால் பிறகு எப்படித்தான் விஷயங்களை நிர்த்தாரணம் செய்ய முடியும்?

இந்த விஷயங்கள் ஒரு புறமிருக்க, இந்த சாதகப் பலன்கள் மனிதனுக்கு இந்தப்படியெல்லாம் அமைவதற்கு ஒரு காரணமும் வேண்டியிருக்கிறது. ஏனெனில், மனித வாழ்க்கையின் தன்மையும் பலன்களும் அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் இருப்பதை இயற்கை என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பதால், அவற்றிற்குக் காரணம் மற்றும் கிரக பலன்களில் நம்பிக்கை உள்ளவர்களும் 'கிரகங்கள் அந்தப்படியெல்லாம் அமைவதற்கே' காரணம் சொல்லுகிறார்கள். அதாவது, ஒவ்வொருவருடைய 'கிரகாச்சார' பலனும் சாதகன் பிறப்பதற்கும் முன்னே அமைக்கப்பட்டதற்கு, அந்த சாதகர்களின் 'முன்ஜென்ம கர்மத்தின் பலன்' என்றும், அல்லது அவனுடைய முன்ஜென்ம நடத்தைக்குத் தக்கபடி கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்றும் சொல்லப்படுகிறது.

சோதிடத்தை ஒப்புக்கொள்கின்றவர்களோ, நம்புகின்றவர்களோ முன்ஜென்மம், முன்ஜென்ம கர்மம், அதை அனுசரித்துக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட விதி முதலியவைகளை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் யாதொரு பழிபாவம் அறியாத ஒரு ஜீவன் தான் பிறக்கும் போது நிஷ்காரணமாய், யதேச்சையாய், இயற்கையாய், அமைந்திருந்த கிரகங்களின் பயனாய்ப் பலன்களை அடைவதென்றால் அதையும் இயற்கை என்று சொல்லாதவர்கள் அதற்கு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித்தானே ஆகவேண்டும்?

ஆகவே, அந்தக் காரணந்தான் முன்ஜென்ம கர்மத்தின் பலனாகவும், தலைவிதியாகவும் சொல்லப்படுவதாகின்றது. இதை ஒப்புக்கொள்வதானால் இதில் மற்றொரு பெரிய பிரச்சினை வந்து புகுந்துகொள்கின்றது. அதாவது, இம் மாதிரி அமையப்பட்ட கிரகங்களின் பலனாக, அல்லது முன்ஜென்ம கர்மத்தின் பலனாகவோ தலைவிதியின் பயனாகவோ கடவுள் சித்தத்தின் பலனாகவோ ஏற்பட்ட, அல்லது ஒரு சாதகனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு மறுபடியும் பலன்கள் உண்டா என்பதும், அதற்கு அந்த சாதகன் பொறுப்பா என்பதும், அது அந்த சாதகனை எப்படிக் கட்டுப்படுத்தும் என்பதுமேயாகும்.

உதாரணமாக, ஒரு சாதகன் ஒரு மனிதனைக் கொலை செய்வதாக வைத்துக் கொள்வோம். இந்தக் கொலையானது 'இந்த சாதகன் இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இன்ன மணிக்கு, இன்ன ஊர் இன்ன ஆளை இன்ன விதமாய்க் கொலை செய்வான்' என்று கொலை செய்தவனுடைய சாதகத்திலும்; 'இன்ன வருஷம், இன்ன மாதம் இன்ன தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு, இன்ன மனிதனால் இன்ன விதமாய்க் கொலை செய்யப்படுவான்' என்று கொலை உண்டவன் சாதகத்திலும் கர்மத்தின் பயனாலோ, கடவுள் சித்தத்தாலோ ஏற்பட்டில்லாமல் இக்கொலை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

அந்தப்படி விதி ஏற்பட்டிருக்கும்போது, கொலை செய்பவன் இந்தக் கொலையைச் செய்யக்கூடாது என்று எவ்வளவுதான் கருதினாலும் அவனால் கொலைசெய்யாமல் இருக்க முடியுமா? அதுபோலவே, கொலை உண்டவனும் தான் எவ்வளவுதான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஒரு தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தாலும் கொலையிலிருந்து தப்பித்து இருக்க முடியுமா?

Reg No M 3066 1935- டிசம்பர் 1.

PAHUTHARIVU ("REASON")

(இதழ் 8.)

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 1935 மே திங்களில் துவக்கப்பட்ட 'பகுத்தறிவு' மாத இதழ்—முகப்பு அட்டை

'அன்றெழுதினவன் அழித்தெழுதுவானா?'

'விதியை யாரால் வெல்ல முடியும்?'

'அவனவன் முன் ஜென்ம கர்மத்தின் பயனை அவனவன் அனுபவித்தே தீர வேண்டும்' என்றபடி, விதியில் உள்ளது போல் நடந்துதானே தீரும்! இந்தப்படி விதியினாலோ, முன்ஜென்மத்தின் பலனாலோ, சாதக ரீதியாகச்செய்யப்பட்ட இந்தக் கொலைக்கும் கொலையுண்டானதற்கும் இந்த சாதகன் எப்படி ஜவாப்தாரியாக முடியும்? சாதகனை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்? இதற்காக சாதகனுக்குப் பாவமோ நரகமோ கர்மத்தின் பயனோ எப்படி ஏற்படும்?

இந்த சாதகனுக்குப் பாவமோ நரகமோ எப்படி ஏற்படும் என்பது மாத்திரமல்லாமல், மக்கள் விதியின்படியோ, முன்ஜென்ம கர்மத்தின் விளைவின்படியோ செய்யப்பட்ட காரியங்களுக்குப் பாவம் என்றோ புண்ணியம் என்றோ எப்படிச் சொல்லலாம்? அதற்காக நரகமோ, மோட்சமோ, அடுத்த ஜென்மத்தில் அடையவேண்டிய பயனோ எப்படிச் சித்திக்கும்?

ஆகவே, மனிதன் செய்யுங் காரியங்கள் எல்லாம் சாதகப் பலன்படியும்; சாதகப் பலன்கள் எல்லாம் விதிப்படியும்; விதி எல்லாம் முன்ஜென்ம கர்மத்தின் பலன்படியும் நடப்பதாய் இருக்கையில்—பாவ புண்ணியம் என்ற பாகுபாடும், நற்செய்கை, துர்ச்செய்கை என்கின்ற பெயரும் எப்படிப் பொருந்தும்? மோட்சத்திற்கும், நரகத்திற்கும் அவசியம் தான் ஏது? அவை எதற்காக இருக்கவேண்டும்?

கடவுளாகத்தானாகட்டும்—இந்தச் செய்கைகளுக்குத் தீர்ப்புகளோ, விசாரணையோ, சன்மானமோ, தண்டனையோ—எப்படிச் செய்ய முடியும் என்பவைகளை யோசித்தால் சோதிடம் என்பதாக ஒன்று இருக்க முடியுமா? அது, பிறந்த நேரத்தைக் கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்ல முடியுமா?

அப்படி ஒரு சாஸ்திரம் இருக்க பகுத்தறிவின்படி, 'சயின்ஸ்'படி இடம் இருக்கிறதா என்பவைகளை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சோதிடம் என்பதைப்பற்றி இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் முதல் எல்லா ஆத்திகர்களுக்கும் நம்பிக்கை இருந்து வருகின்றது.

சிற்சில மனிதர்கள் ஆத்திகர்களாய் இல்லாதவர்களும் சோதிடத்தை நம்புகிறார்கள். ஏனெனில், அது சாஸ்திரமென்றும், அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லையென்றும், சோதிடம் விஞ்ஞான பரீட்சையால் நிர்ணயிக்கக் கூடியதென்றும், ஆதலால், அது பிறந்த நேரத்தையும், நட்சத்திரங்களையும், கிரகங்களையும் பொறுத்ததென்றும் நட்சத்திரங்களும் கிரகங்களும் உண்மை ஆனதனாலும், பிரத்தியட்சப் பிரமாணமானதனாலும், அதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அனுபவத்திற்கு ஒத்திருக்கின்றதென்றும், இப்படிப் பலவாறாய்ப் பேசி அதை ஒப்புக்கொள்கிறவர்களும் நம்புகிறவர்களும் சமாதானம் சொல்லுகின்றார்கள்.

இந்தச் சமாதானங்களைப்பற்றிப் பின் ஆலோசிப்போம். இப்போது இந்தப்படி ஒரு சாஸ்திரமோ பலனோ இருக்க நியாயம் உண்டா என்பதைப் பற்றி மாத்திரமே இவற்றைக் கொண்டு ஆராய்ந்தோம்.

['பகுத்தறிவு' மலர் 1, இதழ் 4-கட்டுரை—1935]

12. பூர்வஜென்ம பலன்

சகோதரிகளே! சகோதரர்களே!

உங்களில் பலர் உங்களைவிட உயர்ந்த சாதியார் என்று சொல்லிக்கொள்ளும் அய்யர், கவுண்டர், நாயுடு முதலிய சாதியார் உங்களைத் தாழ்மையாய்க் கருதுவதை மாத்திரம் நினைத்து வருத்தப்படுகின்றீர்களேயல்லாமல்—பறையர், சக்கிலியர் என்பவர்களை நீங்கள் உங்களிலும் தாழ்ந்த சாதியாகக் கருதி அவர்களை உங்களுக்குச் சமமாய் நினைத்துச் சுதந்திரம் கொடுக்க மறுக்கின்றீர்கள். இதற்கெல்லாம் காரணம் உங்கள் மத உணர்ச்சியும், உங்கள் கடவுள் உணர்ச்சி, விதி உணர்ச்சியுமேயாகும்.

மத சம்பிரதாயப்படி நீங்கள் சக்கிலியரை, பறையர்களைவிட உயர்ந்த சாதியாராகவும் கடவுள் அந்தப்படி உங்களைப் படைப்பித்ததாகவும், அதற்குக் காரணம் உங்களுடைய பூர்வஜென்ம கர்மத்தின் விதியென்றும் கருதுகிறீர்கள்.

உங்களைத் தாழ்ந்த சாதியாய்க் கருதியிருப்பவர்களும் அப்படியேதான் மத ஆதாரத்தாலும், கடவுள் செயலாலும் பூர்வ ஜென்மாந்திர கர்மவிதியாலும் அப்படிப் பிறந்ததாகக் கருதியிருக்கின்றார்கள். இந்த மாதிரியான மதம், கடவுள், ஜென்மாந்திர விதி ஆகிய மூன்றையும் நம்பியிருக்கின்றவன்—இம் மூன்றையும் பாதுகாக்க விரும்புகின்றவன் எப்படி மற்ற மக்களைச் சமமாகக் கருதக்கூடும்?

பணக்காரனும்—தான் பணக்காரனாயிருப்பதற்கு இதே காரணந்தான் கருதிக் கொண்டிருக்கிறான். திருடனும்—தான் திருடனாயிருப்பதற்கும், அயோக்கியனும்—தான் அயோக்கியனாயிருப்பதற்கும், அரசனும்—தான் அரசனாகயிருப்பதற்கும், கூலியும்—தான் கூலியாயிருப்பதற்கும், ஏழையும்—தான் ஏழையாயிருப்பதற்கும், கொடுங்கோலாட்சியில் கஷ்டப்படும் குடிகளும்—தாங்கள் கஷ்டப்படுவதற்கும் இவ்வாறே மத சம்பிரதாயத்தையும், கடவுள் சித்தத்தையும், பூர்வஜென்ம கர்மவிதியையும் காரணமாய்க் கருதித் தங்கள் நிலையில் திருப்திகொண்டு இருக்கின்றார்கள். இந்தமாதிரி மக்களையுடைய தேசத்தில் எந்த மாதிரியான முன்னேற்றத்தைக் காணமுடியும்? இந்தத் தேசத்தை மனிதத் தன்மை உடைய தேசமாகவும், மானமுள்ள தேசமாகவும், சுயாதீனமுள்ள சமத்துவ தேசமாகவும் ஆகச் செய்ய வேண்டுமானால் மேற்கண்ட மூன்றும்—அதாவது கடவுள், மதம், விதி ஆகிய மூன்றும் அடியோடு ஒழிக்கப்பட்டாகவேண்டும். அந்தப்படியில்லாதபட்சம் வெறும் பேச்சுத்தான் நடைபெறுமேயொழிய, காரியத்தில் ஒரு சிறிதும் பயனடைய முடியாதென்பது உறுதி.

[இருகூரில், 3-1-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 11-1-1931]

13. முன்கால நடப்பு

தலைவரவர்களே! தோழர்களே!

இன்றைய வரையிலும், சரித்திரத்திலே, நாங்கள் செய்கிற காரியத்தை இதற்குமுன் செய்து இருக்கிறார்களா என்றால்—செய்திருக்கிறார்கள். புராணங்களைப் பார்த்தால் இதைக் கண்டு கொள்ளலாம். இரணியன், இராவணன், சூரபத்மன் போன்றவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த முயற்சிகளையெல்லாம் ஒழித்ததாகப் பார்ப்பனர்கள் தந்திரமாக எழுதி முடித்துவிட்டார்கள். இவர்கள் எல்லாம் மேல் லோகத்தில் கொடுமைப் படுத்தப்பட்டு ஒழிக்கப்பட்டுப் போனார்கள் என்றுதான் முடித்திருக்கிறார்களே தவிர, வேறு நல்ல முறையிலே இருக்காது. ஏன் இப்படிச் செய்துவிட்டார்களென்றால் மற்ற எவனும், எப்போதும் மறுபடியும் அம் மாதிரி முயற்சிக்கக்கூடாது என்பதற்காகத்தானாகும்.

[குன்றத்தூரில், 27-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-3-1951]

14. குறி, நல்ல நேரம்

கோயிலில் போய் பூப் போட்டுக் கேட்கிறோமே—சிறிதாவது சிந்திக்க வேண்டாமா? நீ போய் தங்கையையும், அண்ணனையும் சொல்லிப் பூப் போட்டுக் கேட்டால்—இது வேண்டாம் என்று அந்தச் சாமி கூறுமா? ஒரு கழுதை பிறந்த நேரத்தை சாதகம் குறித்துக் கேட்டால், 'இது கழுதையின் சாதகம்; வேண்டாம்' என்று கூறுமா? அம்மாள்-மகள் இருவருடைய பெயரையும் எழுதி அவர்களுடைய மகனுக்குக் கட்டலாமா என்று கேட்டால் அந்தச் சாமி என்ன செய்யும்? 'இருவருமே இலாயக்கில்லை' என்று கூறுமா? இரண்டில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொடுத்துவிடும்!

மற்றும் குருவி, கழுகுகளிடம் சோதிடம் பார்ப்பது என்பதெல்லாம் மிகவும் மடத் தனமான காரியமாகும். சாதகம், பொருத்தம், நல்ல நேரம் என்று பார்த்து நம்முடைய வசதியைக் கெடுத்துக்கொள்கிறோம். நல்ல நேரம், இராகு காலம், எமகண்டம் என்று பார்க்கிறார்களே—இவர்களுக்குக் கோர்ட்டில் ஒரு கேஸ் விசாரணை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கு நல்ல கொளுத்த, இராகு காலம் என்று சொல்லப்படும் நேரத்தில் அவன் 'இராமசாமி! இராமசாமி!' என்று கூப்பிட்டால், இவன், 'இப்போது இராகு காலம்; நான் வரமாட்டேன்' என்று கூறுவானா? துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு குடு குடு என்று—எங்கே சீக்கிரம் போகாவிட்டால் வழக்கைத் தள்ளிவிடப் போகிறானோ என்று ஓடிப்போய், 'வந்தேன்!' என்றுதானே கூறுவான்? அப்பொழுது எங்கே போயிற்று இராகு காலம்?

எமகண்டத்திலே இரயிலும் பஸ்ஸும் புறப்படுகிறது. 'கொஞ்சம் இரு; இப்பொழுது இராகுகாலம்' என்று கூறினால் அது நிற்குமா? அதில்தானே ஏறிச்செல்கிறான்? இதை யெல்லாம் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.

[மகுடஞ்சாவடியில், 27-12-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1960]

15. வாழ்த்தும் ஆசீர்வாதமும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமதுநாட்டில், ஆசீர்வாதம் அனேகமாய் ஒரு சாதிக்கே உரியதென்றும், அதுவும் அவர்களிடமிருந்து பணத்திற்கு விலைகொடுத்து வாங்கக்கூடியது என்றும் கருதியிருக் கிறோம். அனேகமாக, 'ஆசீர்வாத சாதி' பிச்சை எடுப்பதற்கு இதை உபயோகப்படுத்து வதைப் பார்க்கிறோம்.

நம்மை மகாராஜனாகவும், க்ஷேமமாகவும் இருக்கும்படி ஆசீர்வாதம் செய்து பணம் வாங்குகிறவனுடைய ஆசீர்வாதம்—யோக்கியமுடையதும் உண்மையுடையதுமானால் தன்னையே ஆசீர்வாதம் செய்துகொண்டு செல்வவானாய், சீமானாய் இருக்கும்படி செய்து கொள்ளலாமல்லவா? நம்மிடம் பிச்சைக்கு வருவானேன்?

தவிர, வாழ்த்துவதும் அர்த்தமற்றதேயாகும். ஒருவன் வாழ்த்துவதினாலேயே ஒரு காரியமும் ஆகிவிடாது. வேண்டுமானால், மணமக்கள் இன்பமாய் வாழ ஆசைப்படலாம். ஆனால், அவ்வித ஆசைப்படுகின்றவர்களுக்கு ஆசைக்கேற்ற கடமை உண்டு. அக் கடமை என்னவென்றால், ஆசைப்படுகின்றவரின் ஆசை நிறைவேற உதவியாய் இருப்பதுதான்.

[விருதுநகரில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-7-1930]

16. உண்ணா விரதம்

நாட்டில் 'உண்ணா விரதம்' என்பது இதற்குமுன் இருந்ததைவிட அதிகமாகச் செல்வாக்குப் பெற்றுப் பரவி வருகிறது. இதன் தத்துவம் என்னவென்றால், நாட்டு மக்கள் நாளாவட்டத்தில் கீழ்த் தரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதுதானாகும்.

இந்தக் கீழ்த்தரச் செய்கை முதன்முதல் காந்தியாரால் துவக்கப்பட்டதால் அதற்கு மரியாதை ஏற்படவேண்டியதாயிற்று. அதுவும் அவ் வுண்ணாவிரதம் பெரிதும் பார்ப்பனர் நலத்திற்கு ஆதரவானதாக அமைந்ததால் பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளா யிருந்தவர்களும் பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன 'அரசியல்' வாதிகளும் பிரமாத மாய்ப் பிரச்சாரம் செய்து விளம்பரம் தந்ததால் மூடப் பாமர மக்கள் இடையில் மிகச் செல் வாக்குப் பெற்றுவிட்டது.

என்றாலும், நான் அவ் வுண்ணாவிரதத்தை 1926 முதலே 'சண்டித்தனம்' என்றே எழுதிக் கண்டித்து வந்திருக்கிறேன்; வருகிறேன்.

இன்று அவ் வுண்ணாவிரதமென்பது மிக்க கீழ்த் தர மக்களுக்கெல்லாம், அநாம தேயங்களுக்கெல்லாம் விளம்பரம் தரத் தக்கதும்; இந்தச் சேதியை ஆதாரமாகக் கொண்டு காலிகள், கலவரம், குழப்பம், நாசவேலைகள் செய்யவும்—ஏன் சில ஓட்டுகள் பெறவும் பயனளிக்கக் கூடியதாய் இருப்பதால், இந்த உண்ணாவிரதங்கள் மக்களிடையில் செலாவணியாகி வருகின்றன. பொதுவில் கணக்குப் பார்த்தால் இதுவரை நடந்த உண்ணா விரதங்களில் 100-க்கு 5 வீதம்கூட வெற்றி பெற்றது என்கின்ற கருத்துக்கு இடமில்லாமல், வெறும் விளம்பரத்துடன்தான் முடிவடைந்திருக்கின்றன.

இப்போது சங்கராச்சாரியார் உண்ணாவிரதமும் அவருக்கு விளம்பரத்திற்குத்தான் பயன்படுமே ஒழிய, மற்றபடி காதொடிந்த ஊசியளவு பயனும் ஏற்படப்போவதில்லை என்பது உறுதி. மிருகங்கள் கொல்லப்படுவதில், மனிதனைத் தவிர மற்ற பிராணிகள் எதற்கும் பெறுமானத்தைத் தவிர, வேறு எதிலும் பேதம் காண எந்தவித காரணமும் இல்லை.

பசுவைக் கொல்லுவது என்பதை மாத்திரம் (ஒருதனி) கூடாதது என்பதற்கு என்ன அவசியம் என்பது நமக்குப் புரியவில்லை. பசு எனில் பால்கறக்கும் பெண் மாட்டை யாரும் நல்ல நிலையில் இருப்பதைக் கொல்லுவதில்லை; ஆண் மாட்டையும் வேலைக்கு லாயக்காக இருக்கும் எதையும் அனேகமாய் நம் நாட்டில் யாரும் கொல்லுவதில்லை.

இது எப்படியோ இருந்தாலும், உலகில் பொதுவாக 100-க்கு 95 மக்களுக்குப் பசு ஒரு ஆகாரப்பண்டமாய் இருந்து வருகிறது.

குறிப்பாக, இந்தியாவில் உள்ள 46 கோடி மக்களில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் 10 கோடி போக, ஆதித் திராவிடர்கள் சுமார் 6 கோடி மக்கள் போக, சுமார் 30 கோடி மக்கள் மாத்திரமே பசுமாமிசம் சாப்பிடாதவர்களாக இருக்கலாம். எனவே, இந்தியாவில் 3-ல் ஒரு பாகம் மக்களுக்கு–100-க்கு 33 பேர்களுக்கு உணவுக்கு ஆகாரமாய் இருக்கும் ஒரு ஜீவனைக் கொல்லக்கூடாது என்றால், இதில் ஆணவம் தவிர, கூடாது என்பதற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? உலகில் உண்மையாய் மாமிசம் சாப்பிடாதவர்கள் (300 கோடியில்) 20 இலட்சம் பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். இவர்களுக்காக இவர்கள் மனம் 'புண்படும்' என்பதற்காக, அல்லது இவர்கள் மத சம்பிரதாயத்துக்கு விரோதம் என்பதற்காக, 'யாரும் மாட்டைக் கொல்லக் கூடாது என்று சட்டம் செய்யவேண்டும்' என்று ஒருவர் உண்ணா விரத மிருந்தால், அவரைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்துத்தான் காப்பாற்ற வேண்டும்.

நான் எனது 25 வயதிலிருந்தே மாட்டு மாமிசம் சாப்பிட்டு இருக்கிறேன்; பல தடவை மக்களை மாட்டு மாமிசம் சாப்பிட வேண்டும் என்று எழுதி வந்திருக்கிறேன்.

இன்றைய நிலைமையில் ஏழைகள் மாமிசம் சாப்பிட வேண்டுமானால் மாட்டுமாமி சந்தான் மலிவாகக் கிடைக்கக் கூடியதாய் இருக்கிறது. மாட்டு மாமிசத்தில் நாம் சாப்பிடும் மற்ற மாமிசத்தைவிட உணவுச் சத்து அதிகமாக இருக்கிறது. மற்றும் பன்றி, கோழி, மீன் பட்சிகளைப்போல் மலம், பூச்சி, புழு முதலிய அசிங்கத்தை மாடு சாப்பிடுவதில்லை. ஆதலால் ‘மாடு வதை கூடாது’ என்பது ஒரு நாளும் அறிவுடைமை ஆகாது என்பதோடு அதை வலியுறுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும் அரசாங்கமானாலும் அவர்கள் மரியாதை யாய் வேறு நாட்டிற்குப் போய்விடுவதே மானமுள்ள காரியமாகும்.

[‘விடுதலை’—தலையங்கம்—17-10-1966]

சங்கராச்சாரி கைது செய்யப்பட்டதைப் பெரிதாக்கி மக்களைக் கிளப்பிவிட்டு, மற்றொரு ‘டில்லி 7-ஆந் தேதிக் காலித்தனத்’தை உண்டாக்கலாம் என்றே பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும், பத்திரிகைக்காரர்களும், காங்கிரஸ் எதிரிகளும், ஓட்டு வேட்டைக் காரர்களும் கருதுகிறார்கள். சங்கராச்சாரி என்றால் பூதமா? முனியா? பிசாசா? அவர் ஒரு சாதாரண மனிதன்தானே! சாதாரண மனிதத் தன்மைக்கு மேம்பட்ட குணம், தன்மை அந்த மனிதனிடம் என்ன இருக்கிறது?

‘கடவுளை’க் கொளுத்துகிறார்கள்; உடைக்கிறார்கள்; உருக்கி விற்கிறார்கள். இந்தக் கடவுள்கள் எல்லாம் கல்லாய், மரமாய், காரையாய், உலோகமாய், காகிதமாய் இருந்து உருவானவைதானே! அவைகளுக்காவது ‘மந்திரசக்தி’ ஏற்றிக் கும்பாபிஷேகம் செய்து, கோடிக்கணக்கான—நாட்டின் எல்லா மக்களால் பூசைசெய்து, பக்திகாட்டி வரப் படுகிறது.

இந்த சங்கராச்சாரிகள் யார்? ஒரு சாதாரண மனிதன்! பள்ளிக்கூடத்துப் பையன் களாய், சாதாரணப் பரம்பரையில், வெகு சாதாரண குடும்பத்துப் பிள்ளைகள் சிலர் மனிதராகி, பிழைப்புக்குத் திண்டாடி, சிலர் திருட்டு முதல் புரட்டுவரை பல தொழில்கள் செய்து பிழைத்து, ஒரு பரீட்சையுமில்லாமல் திடீரென்று பட்டம் சூட்டப்பட்டவர்கள் சங்கராச்சாரிகள்! பிறகு மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுவதுபோல் சங்கராச்சாரி ஆக்கி, சங்கராச்சாரி சுவாமிகள் ஆக்கிவிடுகிறார்கள்!

சட்டம் மீறுதலும், உண்ணாவிரதம் முதலிய காரியங்களில் நேரிடையாக ஈடுபடுவதும், வீட்டுக்கு நெருப்புவைக்கிற காலித்தனங்களுக்கு—‘குண்டாயிசத்து’க்கெல் லாம் பங்குபெறுவதும் ஆனகாரியத்தில் ஈடுபட்டபிறகும் ‘சங்கராச்சாரியார் சுவாமிகள்’ என்று அந்த மனிதனை அழைப்பதென்றால், இது ஏமாற்று வித்தையல்லாமல் இதில் உண்மையோ, யோக்கியமோ என்ன இருக்கமுடியும்?

மற்றும், எனக்குத் தெரிந்த உண்மை அனுபவத்தைச் சொல்லுகிறேன். சேலத்தில் சைக்கிள்திருடி தண்டனையடைந்த ஒரு பார்ப்பான் வடநாடு சென்று, இதுபோலவே ‘சங்கராச்சாரி சுவாமிகள்’ ஆகிவிட்டான்! ‘குடிஅரசு’ பத்திரிக்கையைப் பார்த்தால் அந்த ‘சங்கராச்சாரி சுவாமிகள்’ பாரியான் பெயர் சகிதம் விளக்கம் தெரியும்.

இந்த ‘சங்கராச்சாரி சுவாமிகள்’ என்கின்ற—இப்போது கைது ஆக்கப்பட்ட பார்ப் பனரும், சங்கராச்சாரியாக ஆவதற்கு முன்பு சந்திரசேகர திவிவேதி என்னும் பார்ப்பனராக இருந்து, பத்திரிகை ஆசிரியராய் இருந்து, பிழைப்பு நடத்திவந்து, பிறகு காசியில் ஒரு பத்திரிகைக்கு 3 ஆண்டு ஆசிரியாக இருந்துவந்தவர்—எப்படியோ சங்கராச்சாரியாராகி விட்டார். இவர் இதற்குமுன்பும் ஒருமுறை கைது ஆக்கப்பட்டவர்.

இப்படிப்பட்ட இவர், ‘சட்டம் மீறினால் என்ன நடக்கும்’ என்பதை அறியாதவர் என்று சொல்ல முடியாது.

மீறிவிட்டு, அதுவும், தாம் பட்டினி கிடந்து செத்தால் என்ன கேடு ஏற்பட்டுவிடும் என்பது தெரியாதவரா? தான் 'பட்டினி' கிடப்பது மூலம் மக்களுக்கு ஒரு வெறியை உண்டாக்கி, அந்த வெறி மூலம் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்படுத்தலாம் என்கின்ற எண்ணத்தைத் தவிர, மற்றபடி இவர் பட்டினிக்கு வேறு என்ன யோக்கியமான காரணம் இருக்க முடியும்?

இவர் பட்டினிக்காக அரசாங்கம் இணங்கிவிட்டால், பிறகு இந்த ஆட்சி எப்படி 45 கோடி மக்களை அடக்கி ஆளமுடியும்?

அரசாங்கத்தின் சட்டத்தை மீறி, அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுப்பதானால்—அதாவது அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுப்பதற்காகவே, அதுவும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவே இப்படிப்பட்ட கீழ்த்தரமான காரியங்களை யார் செய்வதானாலும், ஒரு காலத்தில் அதாவது ஆச்சாரியார் புகுத்திய கட்டாய இந்திக்கு எதிர்ப்பு நடத்திய போது, சத்தியமூர்த்தி அய்யர், இந்தி எதிர்ப்பாளர்களை—குறிப்பாக என்னையே, 'ட்ரீஸன்' (Treason) என்னும் குற்றத்தைச் சாட்டிச் சுட்டுக்கொல்லவேண்டும் என்று சொன்னதுபோல், அரசாங்கம் காரியம் செய்யவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

அதுவும், என்னுடைய உயிரையும் தூசியாக நினைத்துச் சொல்லத் தோன்றுகிறது.

இந்த மாதிரிப் பார்ப்பனரால் விளம்பர மூலமாய் அல்லாமல், வேறு ஒரு தனி யோக்கியதையுமில்லாமல், தனது விளம்பரத்தைப் பயன்படுத்தியே ஓர் அரசாங்கத்தை அதுவும் ஜனநாயக ஆட்சியைக் காலித் தனங்களின் மூலம்—'குண்டாயிசத்'தின் மூலம் கவிழ்த்து விட்டு இப்படிப்பட்ட காலிகள் கைக்கே ஆட்சியைச் செலுத்துவதா? இதற்காக என்று துணிந்தால், இந்தத் துணிவுக்குப் பரிகாரம் சுட்டுக் கொல்லுவதைத் தவிர, உலகில் எந்த அரசாங்கந்தான் வேறு என்ன வேலை செய்யமுடியும்?

காந்தியை இந்தக் கூட்டந்தானே கொன்று தீர்த்தது? அந்தத் துணிச்சல்தானே காமராசரைக் கொல்ல அவர் வீட்டிற்கு, அவர் தூங்கும்போது நெருப்பு வைத்தது? நெருப்பு வைத்த கொலைகாரத்தனத்தை மறைக்க, மக்களின் ஆத்திரத்தை வேறு வழியில் திருப்புவதற்காக இந்த 'உண்ணாவிரத' (பட்டினி) வித்தை காட்டப்பட்டிருக்கிறது என்பதல்லாமல், இதில் யோக்கியமான காரணம் எதுவும் காண முடியவில்லை.

இந்தக் கூட்டத்தினர் மற்றும் வேறு பல வழிகளில் எத்தனைதான் பித்தலாட்டங்கள் செய்தபோதிலும், அவை காமராசரைக் கொலை செய்ய முயற்சித்ததை மறைக்கத் தக்க காரியமாக ஆக முடியுமா? இந்தக் கொலை முயற்சிக்கு 100 சங்கராச்சாரி, 1000 சாதுக்கள், 1000 பார்ப்பனர்கள் பட்டினி கிடந்து செத்தாலும் மறைக்கத் தக்கதான முயற்சி ஆகப் போவதில்லை. இது காந்தி கொலைபோல் எளிதில் மறைத்துவிடக் கூடியதல்ல.

இது என்னவாய் முடியப்போகிறது என்பதை என்னால் சிந்திக்கவே முடியவில்லை.

இயற்கையின் முடிவு எப்படியாகுமோ?

['விடுதலை'—தலையங்கம்—24-11-1966]

17. உலகமே பொய்

உலகத்தை உண்டுபண்ணிய கடவுள் என்பதாக ஒன்றும் இல்லை; எல்லாம் பிரம்ம மயம். பஞ்சபூத சேர்க்கையால் உலகப் பிரபஞ்சம் தோன்றிற்று.

மதத்தின் பேரால் (ஏன் கடவுளின் பேரால் என்றும் சொல்லலாம்) உலகிலுள்ள எல்லா மக்களும் எல்லா நாட்டிலும் மதங்களின் அவ்வக் காலங்களின்போது காட்டுமிராண்டிகளாய், மூடநம்பிக்கைக்காரர்களாய், சிந்தனையற்ற முட்டாள்களாகவே இருந்திருக்கிறார்கள்.

தென்னாட்டில் தமிழர்களிடத்தில் இன்றைய மதசம்பந்தமாக இருந்துவருகிற காட்டுமிராண்டித்தனங்களும் மூடத்தனங்களும் இருந்ததாகத் தெரியவில்லை.

எப்படி, எதனால் சொல்லுகிறேன் என்றால், இன்றைய தினம் நம் நாட்டில் மத சம்பந்தமாக நடமாடும் சொற்களுக்குத் தமிழில் வார்த்தைகள் காண்பது மிக்க கஷ்டமாகவே இருக்கிறது. மதத்திற்கோ, கடவுளுக்கோ, இவற்றின் ஆதாரங்களுக்கோ நடப்புகளுக்கோ சொல்லப்படும் சொற்களுக்கும், செய்யப்படும் காரியங்களுக்கும் அவற்றையே குறிப்பதற்கான சொற்களைக் காண்பதும் மிகச் சிரமமான காரியமாகத்தான் இருக்கிறது.

மற்றும், ஆரியர்களை—அவர்கள் இனத்தார்களான மேல் நாட்டாரை எடுத்துக் கொண்டாலும், கடவுள் மதம் விஷயமாக இன்று அவர்களும் நாமும் பங்குகொள்ளும் எந்தக் கருத்தும், சுமார் 5000 அல்லது 4000 ஆண்டுகளுக்குமுன் அவைகளுக்கென்றே சொல்லும்படியான சொற்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. 4000 வருஷத்திற்கு முன்னதாக என்று சொல்லும்படியான காலத்தில் ஏற்பட்ட ஆரியவேதம் என்னும் கற்பனைக் கோர்வைகளிலும் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ இன்று குறிப்பிடுவதைப் போன்ற சொற்களைக் காணவும் முடியவில்லை.

வேதம் என்பதில் காணப்படும் ஏதாவது 'கடவுள் தத்துவம்'கூட வேதத்துக்கு வியாக்கியானம் செய்யப்பட்ட சங்கரர், இராமானுஜர், மாத்துவர் முதலிய மதகுருமார் என்பவர்கள் தனித்தனியாக அவரவர்களுக்கென்று செய்துகொண்ட வியாக்கியானங்கள்—கடவுளைப் பற்றி ஒன்றுக்கொன்று பொருந்தாத வகையில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்தக் கருத்து வேற்றுமைகள்தாம் இன்று சங்கர, இராமானுஜ, மாத்துவ மதங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

இவர்கள் மூவர் அல்லாத ஒரு பொது மனிதன் வேதத்திற்கு இன்று வியாக்கியானம் செய்வதானால், வேதத்தில் கடவுளைக் காட்டவோ, காணவோ முடியாது.

வேதத்தில் பஞ்சபூதங்களைத்தான் காணலாம். ஆனால், அந்தப் பூதங்களுக்கு அக்காலக் காட்டுமிராண்டி மவுடீகத்திற்கேற்ப ஒவ்வொரு எஜமானர்களை ஏற்படுத்தி, பிறகு அவர்களே அவைகளாக ஆக்கப்பட்டு. அதனால் அவர்கள் தேவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்திரதேவன், வாயுதேவன், வருணதேவன், அக்கினிதேவன் பூமிதேவன் என்று இவை முறையே ஆகாயம், வாயு, அப்பு, தேயு, பிருதிவி என்கின்றவையான பஞ்சபூதங்களைக் குறிப்பிடுபவையேயாகும். இவைகளைச் சேர்த்து வைக்கும் இயற்கைக்குப் பலவாறு பெயரிட்டுக் குறிப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வைந்தின் கூட்டினால் ஏற்பட்ட உலகத்தைத்தான் பிரபஞ்சம் என்று பெயரிட்டு அழைத்துக்கொண்டார்கள். இதற்கு ஓர் எஜமான்—கடவுள் வேண்டுமென்று யார் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் சங்கராச்சாரி—அதாவது 'சங்கர மதம்' சிறிதுகூட நினைக்கவே இல்லை. எப்படியென்றால், இன்றுகூட சங்கர மதத்திற்கு 'கடவுள் ஒன்று இருக்கிறது' என்ற கொள்கையே இல்லை.

சங்கர மதத்திற்கு 'அத்துவைத மதம்' என்று பெயர். அதாவது 'காணப்படும் உலகத்தைத் தவிர, அதை உண்டாக்கிய ஒருவன் இல்லை' என்பது.

அதனால்தான் சங்கர மதக்காரர்களை, 'தானே கடவுள் எனும் பாதகத்தவர்' என்று 'சமயாச்சாரியார்கள்' அழைக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல; சங்கராச்சாரிக்கு இன்றும் மற்ற மதக்காரர்கள் இட்ட பெயர் 'பிரசன்ன பவுத்தர்' என்பதாகும். அதாவது, பச்சை நாத்திகர் என்பது. எப்படியெனில், புத்த மதத்திற்குக் கடவுள் இல்லை என்பது மாத்திரமல்லாமல் 'ஆத்மா' என்பதும் இல்லை (அனாத்மன்) என்பது கொள்கையாகும்.

'துவைதம்' என்பது 'கடவுள், ஆத்மா ஆகிய இரண்டு உண்டு' என்பதாகும். 'அத்துவைதம்' என்பது 'இரண்டு இல்லை; ஒன்றுதான். அதுவும் பஞ்சபூதச் சேர்க்கையால் காணப்படும் தோற்றந்தான்; அதுவும் பொய்த் தோற்றமே; மாறக் கூடியதே. இல்லாமல் போகக்கூடியதே' என்பதுதான் அத்துவைதம். அதனால்தான், இந்த சங்கர மதத்திற்கு உலகில் பின்பற்றுகிறவர் மிகமிகக் குறைவு.

இந்த சங்கராச்சாரிக்கு சிஷ்யர்கள் பார்ப்பனரில் வைணவர்கள், மாத்துவர்கள், சைவர்கள், வடமர்கள் என்கின்ற பலவகைப் பார்ப்பனர்கள் சங்கராச்சாரியைக் குருவாக ஒப்புக்கொள்வதில்லை; பார்ப்பனர்களில் ஒரு சிறிய, மிகச் சிறிய கூட்டமாகிய ஸ்மார்த்தர்கள் என்பவர்களுக்கு மாத்திரம் இவர் குருவாவார். இவர்கள் எண்ணிக்கை நம் நாட்டில் 4 அல்லது 5 இலட்சம்கூட இராது.

இந்த ஸ்மார்த்தர்கள் இத்தனை பேருக்கும் கடவுள் கிடையாது; 'தானே கடவுள்' என்று சொல்லிக்கொள்பவர்கள்.

இந்த சங்கராச்சாரியை இந்துக்கள் என்பவர்களிலேயே மற்ற மதத்துக்காரர்கள் வெறுப்பார்கள்; ஏராளமான கண்டனங்கள் செய்வார்கள்; அதற்கு அனேக ஆதாரங்கள் இன்றும் இருக்கின்றன; இவர் முகத்தில் விழித்தாலே தோஷமென்று சில மதஸ்தர்கள் கூறுவார்கள்.

சுயமரியாதை இயக்கம் தோன்றி எல்லா மதங்களையும் ஒழிக்க முற்பட்டபின்பு எல்லா மதக்காரர்களும் முஸ்லிம், கிறிஸ்தவர்கள் உட்பட இன்று ஒன்று சேர்ந்து விட்டார்கள்.

எதுபோல் என்றால், சமதர்மம்தான் காங்கிரஸ் கொள்கை என்று ஆக்கினவுடன் நாட்டில் உள்ள அரசியல், மதிஇயல், பொருள் இயல், வியாபார இயல், 'பார்ப்பனன்' 'சூத்திரன்' 'பறையன்' என்கின்ற எல்லா சாதி இயல்காரர்களும், ஏன், காங்கிரசிலேயே பல மந்திரிகளும், காங்கிரஸ் கதர் பக்தர்களும் எப்படி ஒன்றுசேர்ந்து காமராசரைக் கொல்லவே அவரவர்களாலானவற்றைச் செய்து உதவுகிறார்களோ, அதுபோல சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க ஒன்று சேர்ந்து அவரவர்களால் ஆன உதவி செய்து வருகிறார்கள்!

இதில் 100-க்கு 90 பேர்களான பாமர மக்களுக்கு ஒன்றும் கவலை இல்லை என்றாலும், மதம் என்கின்றபெயரால் போர்துவக்கி இருப்பதால் நமக்கு எதிரான கட்சிகளையே அவர்கள் ஆதரிக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

இன்று மதம் 100-க்கு 97 பேரான 'இந்து' பாமர, பண்டித பணக்கார மக்களை என்ன செய்திருக்கிறது, எப்படி நடத்துகிறது, என்பதைப்பற்றி எவருக்குமே கவலை இல்லை என்பதோடு, மானமும் இல்லாமல் செய்துவிட்டதே என்று சிந்திப்பதே இல்லை.

இன்று மதம் ஒழிந்தால்—மனித சமுதாய உயர்வு தாழ்வு ஒழிந்து ஒன்றாகிவிடும்; செல்வத்தில், அறிவில், அந்தஸ்தில், வாழ்வில் உள்ள பேதங்களும் ஒழிந்து கவலையற்ற சமநிலை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இன்று பார்ப்பனரும், பணக்காரர்களும் மதப் பூச்சாண்டி காட்டிப் போர்தொடங்கி இருக்கிறார்கள் என்பதை மக்கள் உணரவேண்டுகிறேன்.

'மதம்', 'சங்கராச்சாரி', 'பசுப் பாதுகாப்பு', 'பணக்காரர்', 'பார்ப்பனர்கள்' ஆகியவைகள்பற்றி 30, 35 வருடங்களுக்கு முன்பு, 'குடி அரசு' ஏட்டில் பல கட்டுரைகள் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. அவை இன்றைய நிலைக்கு மிகமிகப் பொருத்தமுடையவையானதால் அவைகளை மறுபடியும் பிரசுரிக்கலாம் என்று கருதுகிறேன். தோழர்கள் ஊன்றி வாசிக்க வேண்டுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்— 23-11-1966]

18. வரவேற்கத்தக்கது

சங்கராச்சாரியைக் கைது செய்ததற்காக டில்லி அரசாங்கத்தினைப் பாராட்டுகிறேன்.

காரணம், எப்படி நாட்டில் இன்று, பார்ப்பான், பணக்காரர்கள், பெரிய மனிதர்கள் மாத்திரமல்லாமல் உண்மையான தன்னலமற்ற பொதுத்தொண்டர்கள் என்பவர்கட்கும் கூட, மதிப்புப்போய்விட்டதோ அதேபோல், சங்கராச்சாரி கூட்டத்திற்கும் மதிப்பு ஒழிய வேண்டியது அவசியமேயாகும்.

சங்கராச்சாரி என்பது ஒரு மூடநம்பிக்கைதானே!

சமதர்மம் என்றால் மனிதனின் நடத்தைக்கும் எண்ணத்திற்கும், நற்றொண்டிற்கும் தான் மதிப்பு இருக்கவேண்டுமேயொழிய அந்தஸ்துக்கும், பதவிக்கும் மதிப்பு இருக்கக் கூடாது. ஆகையால், அரசாங்கத்தின் இந்தக் காரியத்தை நான் வரவேற்கிறேன்.

எனது தோழர்கள் நாடு முழுவதும் சர்க்கரை, மிட்டாய், பப்பர்மின்ட் முதலியவைகளை மக்களுக்கு வழங்கவேண்டுகிறேன்.

குன்றக்குடி மடாதிபதிக்கு அபராதம்போட்டுத் தண்டித்தபோது சும்மாயிருந்து, மகிழ்ச்சியடைந்த மக்கள் யோக்கியர்களாய் இருந்தால், இதற்கும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது யோக்கியமாகும்.

அரசாங்கம், சட்டம் மீறுகிறவர்கள் யாராய் இருந்தாலும் ஒன்றுபோல் நடத்தப் படுவார்கள் என்பதைக் காட்டிக்கொண்டதற்காகப் பாராட்டுகிறேன்.

['விடுதலை'—24-11-1966]

19. நாமும் பிறரும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

அக்கிராசனர் அவர்கள் என்னைப்பற்றி மிக அதிகம் கூறிவிட்டார்கள். அவர் கூறிய அவ்வளவு புகழுக்கும் பெருமைக்கும் நான் யோக்கியதையுடையவனல்லன். என்மீது உள்ள ஏதோ அன்பாலேயே அவ்விதம் கூறியிருக்கக்கூடும். ஆனால், அப் புகழுரைகள் எனது கொள்கைக்கும், தத்துவத்திற்கும், திட்டத்திற்கும் அதிக ஆதரவு தருவன எனும் அளவில்—ஒருவாறு அவைகளை ஒப்புக்கொள்கிறேன். இப் புகழுரைகளால் எனது திட்டத் திற்கு உயர்வு கொடுக்கிறீர்கள் எனும் முறையிலிருந்து அதற்குத் தேசத்தில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளுதல் கூடும். எனது தொண்டினையும் அதன் கருத்துக்களையும் அக்கிராசனர் அவர்களும், நண்பர் சிவலிங்கச் செட்டியார் அவர்களும், எடுத்துச் சொன்னார்கள். எனது கொள்கையை எடுத்துரைக்கவே நானும் இங்கு வந்தேன். மூடத்தனமான பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிக்கவேண்டு மென்பதே எனது கொள்கை.

நான் சொல்லுவதில் சில, தவறென உங்களுக்குத் தோன்றலாம்; ஆனால் அதிலுள்ள நன்மைகளை எடுத்துக்கொள்ள வேண்டியதே உங்கள் கடமையாகும். எனது தொண்டினை நாட்டின் பல பாகத்திலுமுள்ள பெரியோர்கள் ஆதரித்து வருகிறார்கள். இத்தொண்டு அவசியமென்பதற்கு, ஆரம்ப காலத்திலிருந்து இப்போதுவரை அதிக ஆதரவு கிடைத்து வருகிறதே சான்றாகும். அப் பிரச்சாரத்தை இந்த நாட்டில் செய்யவேண்டுமென்பது எனது நீண்ட நாள் அவா. இங்குள்ள பிரபலஸ்தர்கள் பன்முறை அழைத்தும் இப்பொழுதுதான் வரும் சந்தர்ப்பம் கிடைத்தது. இத் தனவைசிய நாட்டில், எனது கொள்கையை ஒப்புக் கொண்டு அதை அனுஷ்டான முறையிலும் கொண்டுவர ஆரம்பித்து விடுவார்களானால்—அதனால் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, இந்த மாகாணத்திற்கே பெரும் பயனும் நன்மையும் விளையுமென்று நம்புகிறேன். இந் நாட்டவராகிய நீங்கள் அவ்வளவு தூரம் முக்கியஸ் தர்களாக இருக்கின்றீர்கள்.

நீங்கள் இதுவரையில் உங்கள் பணத்தாலும், அறிவாலும், ஆற்றலினாலும், பக்தியினாலும் செய்து வந்ததைப்பற்றிக் குறைகூறுவதாக நினைக்கலாம். இவ்வளவு காலமாய் தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் செய்துவந்த ஒரு தொண்டினைக் குற்றம் சொல்வதெனக் கருத வேண்டாம். நான் சொல்வதில் மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்கள் பலர் இருக்கலாம். நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் பேசி, அதன் பின்பே ஒரு நன்முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிலரின் அருவருப்புக்கோ, கோபத்திற்கோ பயந்து நான் திட்டத்தை மாற்றிக் கொள்ளும் சுபாவமுடையவனல்லன். அவ்விதம் செய்வது பயத்தாலும், சுயநன்மையாலுமே யாகும். நான் சொல்வதில் குறை இருப்பதாகக் கருதும் கனவான்கள் அதை எடுத்துச் சொல்லவேண்டும். எனது அனுபவத்தில் இதுவரை செய்துவந்த தொண்டில் பெற்றதைக் கொண்டு இந்தக் கொள்கைகளை உங்களுக்குக் கூறுகிறேன். ஆதலால், சகலரும் தங்கள் தங்கள் சொந்த புத்தியைக்கொண்டு ஆலோசித்து நியாயமென்று ஒப்புக்கொண்டவைகளைச் செய்கையில் செய்யுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பிரசங்கத்தைக் கேட்டு நீங்கள் ஒருக்கால் பதட்டமடையக்கூடும். ஐந்து ஆறு வருடத்திய தேசத்தொண்டே என்னை இந் நிலையில் கொண்டுவந்து விட்டது. நமது கஷ்டத்துக்கும் தாழ்ந்த நிலைமைக்கும் ஆங்கில சர்க்கார்தான் காரணம் என்று எண்ணி வந்தேன். அக் காலத்தில் ஏற்பட்ட பெரும் கிளர்ச்சியில் சேர்ந்து ஆங்கில சர்க்காரைத் திருத்த நானும் ஏதோ செய்துபார்த்தேன். அதற்காக, மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸ் மூலமாய்ச் சொன்ன ஒவ்வொரு திட்டத்தையும் என்னால் கூடியவரை பிரச்சாரம் செய்துவந்தேன். அக் காலத்தில் தேசம் மகத்தான தியாகம் செய்து கஷ்ட நஷ்டங்களையும் சகித்துவந்தது. அதனால், என்னபயன் அடைந்தோம்? நாம் யாருக்காக, எவருடைய விடுதலைக்காக அப் பெரும் போராட்டத்தை ஆரம்பித்தோமோ—யாருக்காக இன்னும் தொண்டுசெய்ய விரும்புகின்றோமோ—அத் தகைய நிர்பாக்கியமான நிலையிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது? அப் பெருங் கிளர்ச்சியின் பலனையும், பெயரையும் வைத்துக்கொண்டு, படித்த ஒரு சிறு கூட்டத்தார் பதவியும், பட்டமும், பெயரும், பெரும் பணமும் பெற்றார்கள் என்பது தவிர, எதற்காக அவ்வளவும் நடந்ததோ அதற்காக அவ் வியக்கத்திற்குக் கொஞ்சமும் நன்மை ஏற்படவில்லை. கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் தயாராக இருந்து நடத்திய நமக்கு, அதன் பலனை அடைய மார்க்கமில்லாமல் போனதற்குக் காரணம் என்ன என்று சற்று ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

நமது இன்றையத் தளர்ச்சிக்குக் கேவலம், சர்க்கார் மட்டும் காரணமல்ல. அரசியல் கொடுமையைவிட மத சம்பந்தமான கொடுமைகள் மிக அதிகமாக இருப்பதே அதற்குக் காரணம். நமது வறுமைக்கும் அடிமைத் தனத்துக்கும் காரணம் நாமேயாவோம். மதத்தின் பெயரால் ஒரு சிலர் சுயநன்மையால், சுயமரியாதையற்ற முறையில் நாம் கஷ்டப்பட்டு வருகிறோம். நாம் மீளவேண்டுமானால்—சுயமரியாதை பெற்று மக்களாக வாழ வேண்டுமென்று நினைத்தால்—அடிமைப்படுத்தும் மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையும் முதலில் விட்டுவிடவேண்டும். அரசியல் கொடுமையைப் பின்பு பார்த்துக்கொள்வோம். பார்ப்பனர்கள், மதத்தின் பெயரால் இதுவரை செய்துவந்த பழக்க வழக்கங்களைத் தகர்க்கும் வன்மை நமக்கு வந்துவிட்டால்தான், ஆங்கில சர்க்காரிடம் நியாயத்தை எதிர்பார்க்க அருகதையுள்ளவர்களாவோம். இவர்களின் புரட்டிலிருந்து தப்பும் நமக்கு, ஆங்கில சர்க்காரை எதிர்ப்பது ஒரு பெரிதல்ல. இதுவரை எங்கும் உள்ள கனவான்களும், சங்கங்களும், சபைகளும், பல பொது ஸ்தாபனங்களும் எனது தொண்டு நியாயமானது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; இன்னும் ஒப்புக்கொண்டும் வருகிறார்கள்.

மதத்தின் பெயரால் குருட்டுத்தனமான மூடநம்பிக்கையில் ஒவ்வொரு நாடும் அடிமைப்பட்டிருந்தது. சுயமரியாதையைப் பெற்ற அந்த நாடுகள், முதலில் அனுஷ்டித்த மூடமுறைகளுக்கு வெட்கப்பட்டு அவற்றை உதறித்தள்ளி, அதன் பின்பே சுயமரியாதையையும், சுயராஜ்யத்தையும் பெற்றிருக்கின்றன. இன்று முற்போக்கடைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் ஒவ்வொரு நாடும்–சுயராஜ்யம் பெற்று சுயேச்சையாக இராஜ்யம் நடத்திவரும் ஒவ்வொரு நாடும்—முதலில் மத சம்பந்தமான குருட்டுப் பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் விட்டொழித்த பின்புதான் இராஜ்யம் நடத்தும் நிலையை அடைந்திருக்கின்றன. உலகில் மூன்றில் ஒரு பங்கை ஆளுபவர்களும், 33 கோடி மக்களுள்ள நம் நாட்டில் ஆளுகின்றவர்களுமாகிய இங்கிலீஷ்காரர்களை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்—நாம் எவ்வளவோ உயர்ந்த நாகரிகமும் முற்போக்கும் பெற்றிருந்த காலத்தில், ஆங்கிலேயர்கள் மிக மோசமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அக் காலத்தில், நம்மைவிட மிக மோசமாக மத சம்பந்தமான பழக்க வழக்கங்களை அனுஷ்டித்து வந்தார்கள். அக் காலத்தில் அவர்கள் நிலை, இன்றைய நமது கேவல நிலையைவிட மிக மோசமாகவும், மானக்கேடாகவுமே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக, அக் காலத்தில் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற ஒரு சுலபமான முறையைக் கடைப்பிடித்து நம்பிச் செய்துவந்தார்கள். இன்று நமது நாட்டில் புரோகிதர்களால் நாம் ஏமாற்றப்படுவது போலவே, அங்குள்ள பாதிரிமார்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டு வந்தார்கள்.

அதாவது, 'பாவமன்னிப்புச் சீட்டு' வாங்குவது என்பதாகும். ஒருவன் எத்தகைய தீச் செயலையும் செய்துவிட்டுப் பாதிரியாரிடம் சென்று, 'அய்யா! நான் இன்ன பாவம் செய்தேன். அதற்கு 'மன்னிப்பு டிக்கட்' வேண்டும்' என்று கேட்டதும் உடனே பாதிரியார் அந்தந்தப் பாவத்தின் நிலைக்குத் தக்கபடி கிரயம் போட்டு பணம் வாங்கிக்கொண்டு டிக்கட் கொடுத்து விடுவதும் அங்கே இருந்தது. அந்த டிக்கட்டுகளை கடைகளிலும், சந்தைகளிலும் கட்டுக்கட்டாகக் கட்டிப் போட்டுக்கொண்டு விற்று வந்தார்கள். சந்தைகளில் மற்ற சாமான்கள் விற்பதுபோல பாவமன்னிப்பு டிக்கட்டுகளும் விசேஷமாக விற்கப்பட்டுவந்தன. இம் மூடக் கொள்கையிலிருந்து ஜன சமூகத்தை விழிக்கச் செய்ய அனேக சீர்திருத்தக்காரர்கள் அக் காலத்தில் தோன்றினர்.

ஒரு பாதிரியார், முக்கியஸ்தர். ஒரு சீர்திருத்தக்காரர் அப் பாதிரியாரிடம் சென்று, 'இதுவரை செய்த பாவங்களுக்குத்தான் மன்னிப்புக் கொடுக்கின்றீர்களே! இனிமேல் புதிதாகச் செய்யப்போகும் பாவங்களுக்கும் மன்னிப்புச் சீட்டு இருக்கிறதா?' என்று கேட்டதற்கு அப் பாதிரியார் 'ஆம்! இருக்கிறது' என்று கூறி 'இனிமேல் செய்யப்போகும் பாவத்தை மன்னிப்புச் செய்வதற்காக' என்று பணம் வாங்கிக்கொண்டு ஒரு டிக்கட்டைக் கொடுத்தார். அந்த டிக்கட்டை அச் சீர்திருத்தக்காரர் வாங்கி வைத்துக்கொண்டு ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தார். சந்தையில், அப் பாதிரி டிக்கட்டுகளை எல்லாம் விற்று விட்டுப் பணத்தை மூட்டை கட்டிப்போட்டுக் கொண்டுவரும் வழியில், அவனை அடித்து அவனிடமிருந்த பணத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டார். அச் சீர்திருத்தக்காரரைப் பார்த்து பாதிரியார், 'நான் பாவ மன்னிப்பு டிக்கட் விற்பவரல்லவா? உலகிற்கே நன்மை செய்யும் என்னை இவ்விதம் துன்பப்படுத்திப் பணத்தையும் பிடுங்கிக் கொள்வது பெரும் பாவமல்லவா?' என்று கேட்டதற்கு—அச் சீர்திருத்தக்காரர், 'கோபித்துக் கொள்ளாதீர்கள். தவறாக நான் ஒன்றும் செய்துவிடவில்லை. இதோ இந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு டிக்கட் வைத்திருக்கிறேன். அது, உம்மிடம்தான் முதலில் வாங்கினேன். நீர்தானே—இனிமேல் செய்யும் பாவத்தையும் இந்த டிக்கட் மன்னித்துவிடும் என்று கூறினீர்' என்று சொன்னாராம். அவ்வளவு மோசமான நிலையில் இருந்த அவர்கள் பாதிரிமார்களின் ஆதிக்கத்தை ஒழித்த பின்பே சுயமரியாதை பெற்றுத் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளுந்திறமையுடன் மட்டுமல்லாமல், உலகிலேயே பெரும் பகுதியை ஆளும் நிலைமையையும் பெற்றுள்ளார்கள்.

இதைப்போலவே, ஜப்பான் முதலிய நாடுகளெல்லாம் முதலில் மதக் கொடுமைகளை ஒழித்து, அதன் மூலம், சுயமரியாதையற்று வாழும் தம் ஜனங்களையும் கண் விழிக்கச் செய்த பின்பே தம் நாட்டையாளும் யோக்கியதையை அடைந்திருக்கின்றன. இதை நாம் செய்யாமல் சும்மா காங்கிரஸ், தேச விடுதலை, சுயராஜ்யம் என்று கூறுவது பொருந்துமா? சுயராஜ்யத்தையடையுமுன் அதை வைத்து நிர்வகிக்கச் சக்தியை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்க காலத்தில், நாம் எதை அனுஷ்டான முறையில் செய்யாமல் இருந்தோம்? எத்தகைய பெரியார்களும் இளைஞர்களும் அதில் சேர்ந்து கொண்டு செய்தார்கள். கோடிக்கணக்கான பணம் கொடுத்தார்கள்; எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்குஆளாக வேண்டுமோ அவ்வளவிற்கு ஆளாகியும் பயன் இல்லாமல் போனதன் தத்துவம் என்ன? வேகமாகப் போகும் ஒரு மோட்டாரானது, எதிரிலுள்ள சுவரில் திடீரென முட்டிக்கொண்டால், அதன் கதி என்ன ஆகின்றது? பக்குவப் படுத்தாத ஜன சமூக எழுச்சியால் அக் காலத்திய முற்போக்கு அழிந்ததுமன்றி, மிகவும் பிற்போக்கான நிலைக்கும் நம்மைக் கொண்டுவந்து விட்டுவிட்டது.

இன்றைய நிலையில் முட்டுப்பட்ட மோட்டார் நிலையைத்தான் நாம் அடைந்துள்ளோம். சமூகச் சீர்திருத்தமும், முற்போக்கும் இல்லாததே அத் தடைக்குக் காரணம். குருட்டுத்தனமாக—மதம், மதம் என்ற பெயரால் எக் கொடுமையையும் செய்யப் பழக்கப் பட்டிருக்கிறோம். 'உயிரைவிட மதமே பிரதானம்' என்று எண்ணுகிறோம். இந்த உணர்ச்சி நமது இரத்தத்திலேயே ஊறி இருக்கிறது. ஆனால், ஒரு சிறிது நேரமாவது, 'மதம் என்றால் என்ன? அதற்கு நாம் செய்துவரும் பழக்க வழக்கங்களால் ஏற்படும் நன்மை எவ்வளவு?' என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதே இல்லை. ஒருவன் நம்மை, 'நீ எந்த மதம்?' என்றால், 'இந்து மதம்' என்கிறோம். 'இந்து மதமென்றால் என்ன?' என்று கேட்டால் அதைப்பற்றிய விஷயம் ஒன்றும் தெரியாது.

நமது நாட்டில் எத்தனையோ மதங்களிருக்கின்றன. சிறப்பாக முகம்மதிய மதம், கிறிஸ்தவ மதம், புத்த மதம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒரு முகமதியரிடம் சென்று, 'அய்யா! உங்கள் மதம் எப்பொழுது உண்டாயிற்று? அதன் காலமென்ன? அதன் தலைவர் யார்? அதன் தத்துவமும், முறையும் என்ன?' என்று கேட்டால், அது முகமது நபிநாயகம் காலத்தில் இருந்து, சிறப்புற்று விளங்க ஆரம்பித்தது என்றும், குரான் என்பதே வேதம் என்றும், அதன் கால வரையறையையும், கொள்கையையும் குறிப்பிட்டு விடுகிறார். அதைப்போலவே ஒரு கிறிஸ்தவரிடம் சென்று கேட்டால் தக்க பதில் தருகிறார். அதைப் போன்றே பவுத்த மதஸ்தரிடம் சென்று அதன் ஆதாரங்களையும் முடிவையும் தெரிந்து கொள்ளலாம். அதற்குச் சவுகரியங்கள் இருக்கின்றன.

ஆனால், இந்துமதம் என்றால் என்ன? எப்பொழுது உண்டாயிற்று? அதன் பிரமாணம், தத்துவம், ஆதாரம் என்னவென்று யாரையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. இந்துமதத்தின் பெயரால் மதம் என்று சொல்லிக்கொண்டு ஒருவருக்கொருவர் சண்டை போடுகிறோம். உட்பிரிவுகளாகிய சைவ, வைணவ சமயங்களின் பெயரால் ஒருவருக்கொருவர் சண்டையிடப் பழக்கப்பட்டு இருக்கிறோம். இதில் ஒரு கடவுள் பெரிது; மற்றொரு கடவுள் சிறிது என்றும், ஒரு கடவுள்காரர் மற்ற கடவுளை வணங்குதல் பாவம் என்றும், ஒரு மதஸ்தனை மற்றொரு மதஸ்தன் பார்ப்பது பாவமென்றும் சண்டை இடுகிறோமே யல்லாமல்—இந்துமதம் என்றால் அது என்ன என்பதை நம்மில் ஒருவரும் அறியவில்லை. இந்து மதம் எப்பொழுது உண்டானது என்றால், அது அனாதி மதம், வேத காலம்தொட்டு இருக்கிறது என்கிறார்கள். வேதம் எப்பொழுது யாரால் உண்டானது என்றால், அதுவும் அனாதியானது, கடவுளால் உண்டாக்கப்பட்டது என்கிறார்கள். 'அய்யா, வேதம் என்பது கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிறீரே! கடவுள் எல்லோருக்கும் சமமானவர்தானே, அதை நான் பார்க்கலாமா?' என்றால்—'ஆகா, மோசம்

வந்துவிடும்; நீ பார்க்கக்கூடாது; நீ சூத்திரன்—அதைப் பார்த்தால் கண்ணைப் பிடுங்கிவிட வேண்டும்; படித்தால் நாக்கை அறுத்துவிட வேண்டும்; யாராவது படிக்கும்போது கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்' என்கிறார்கள்.

அது போகட்டும். இந்த 'இந்துமதம்' என்ற வார்த்தையாவது நமது தமிழ் நூல்களில் எதிலாகிலும், எங்கேனும் இருக்கிறதா? இல்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட தமிழ் நூல்கள் பல இருக்கின்றனவே, அவற்றில் ஏதாகிலும், எந்த இடத்திலாகிலும் இந்துமதம் என்ற வார்த்தை பெயருக்காவது இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இந்து மதத்தின்—பெயரின் இரகசியமே நமக்குத் தெரியவில்லை. இது எவ்வளவு மானக்கேடான நிலையாக இருக்கிறது? இந்து என்கிற வார்த்தை 'பெர்சியன்' பாஷையில்தான் வழங்கப்படுகிறது. அதற்கு அர்த்தம் என்னவென்றால், 'திருடன்' என்பது பொருள். ஒரு சமயம், குறிப்பிடும் 'இந்து' என்கிற வார்த்தைக்குப் பொருள் அது இல்லையென்று வைத்துக்கொண்டாலும்—ஆராய்ச்சிக்காரர்கள், சிந்து நதிக் கரையில் ஆரியர்கள் முதல் முதல் நமது நாட்டில் குடியேறினவர்களாதலினால் அந்த நதியின் பெயரால் அவர்கள் அழைக்கப்பட்டு, 'சிந்து' என்பது 'இந்து' வாகி—'இந்தியர்' என்று மாறிவிட்டது என்று சொல்கிறார்கள். அதற்கு ஆதாரமாக, ஆங்கில அகராதிகளிலும் இந்து என்றால் ஆரியன் என்றும்; இந்துமதம் என்றால் பார்ப்பன மதமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கில அகராதிதான் அப்படிச் சொல்கிறது என்பதாக, அதன்மீது நாம் குறை சொல்வதாக இருந்தாலும்—ஆரியர்களாலேயே எழுதப்பட்டதும், ஒப்புக்கொள்ளப்பட்டதுமான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம் இவைகளின் பாஷியம், புராணம் என்பனவற்றில் ஒரு ஆதாரத்திலாவது 'இந்து', 'இந்துமதம்' என்ற வார்த்தைகள் கிடையவே கிடையாது.

இந்து மதத்தின் ஆதாரங்கள் ஒரு யோக்கியதையில் இருந்தாலும் அதன் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்து மதத்தின் பேரால் எத்தனை கடவுள்கள்? பதினாயிரக் கணக்கான கடவுள்களும், ஒவ்வொரு கடவுளுக்கும் பல பெயர்களும், ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு வித ஆதாரமும், இவ்வளவும் உள்ளன. மேலும் அந்தக் கடவுள் பெயரால் மனிதர்கள் தங்களுக்கு இட்டுக் கொள்ளும் குறிகளில் வித்தியாசமிருப்பதோடு மாத்திரமல்லாமல், கடவுள் நெற்றியில் இடும் குறிகளுக்கு ஒருவருக்கொருவர் சண்டையும், அச் சண்டையைத் தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ளப் போதிய ஆதாரமின்மையும், மதாச்சாரியார் என்பவர்களுக்குச் சக்தி இல்லாமையும், நமது மதத்திற்கே சம்பந்தமில்லாதவரும் நமது மதத்தைப் பரிகாசம் செய்கின்றவரும், நமது மதத்தை அழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்காகவே பிரச்சாரம் செய்பவர்களுமான ஆங்கிலேயர்களிடம் தீர்ப்புக்காகக் காத்திருப்பதும் ஏற்படுகிறது.

உதாரணமாக, சீரங்கத்திலிருக்கும் ரெங்கநாதப் பெருமாளுக்கு எவ்வளவு பெரிய கோயிலிருந்தும், எவ்வளவோ பெரிய பக்த கோடிகள் இருந்தும், எவ்வளவு சொத்துக்கள் இருந்தும், அந்தச் சுவாமியின் நெற்றியில் வைக்கும் குறியான நாமமென்பது—வடகலையா, தென்கலையா என்பது பற்றிச் சத்தம் போட்டுக் கொள்வதும், ஒன்றை நீக்கி மற்றொன்றைத் திருட்டுத்தனமாக வைப்பதும், இந்தக் கலகத்தை நமக்குள்ளாகவும், நம்முடைய மதாச்சாரியார்களுக்குள்ளாகவும் தீர்த்துக்கொள்ள யோக்கியதையில்லாமல் வெள்ளைக்கார நீதிபதிகளிடம் போய், வாயாடி வக்கீல்களை வைத்துக் கொண்டு, தங்கள் தங்கள் கட்சியைச் சண்டப் பிரசண்டமாகக் கூறுவதும்; நீதிபதிக்கு ஒன்றும் புரியாமல், வீட்டிலுள்ள 'பட்லர்'களைக் கொண்டு விஷயம் தெரிந்து கொள்ள முயற்சிப்பதும், அப் 'பட்லர்'கள் வட கலைக் குறி என்பது ஆங்கிலத்தில் 'யூ' (U) போல் இருக்குமென்றும், தென் கலைக் குறி 'ஒய்'(Y) எழுத்துப் போல இருக்கும் என்றும் சொல்வதும்—ஜட்ஜு, 'இப் பைத்தியக்காரர் யூ-க்கும் ஒய்-க்கும் சண்டை பிடித்துக் கொண்டுதானா—இவ்வளவு

பணம் செலவு செய்துகொண்டு நம்மை வந்து உபத்திரவப் படுத்துகிறார்கள்? இதைப்பற்றி நமக்கென்ன தெரியும்; நாம் எப்படித் தீர்ப்புச் சொல்வதென்று தெரியவில்லை. ஆதலால், பூ-வையும் ஒய்-யையும் இரண்டு சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு ஒன்றை எடுத்துக் கொடு' என்று சொல்லவும், 'பட்லர்' எடுத்துக் கொடுத்ததைக் கொண்டு கோர்ட்டில் தீர்ப்புச் சொல்வதும் இருப்பதோடு மாத்திரமல்லாமல்—இன்னமும், நமது மத நடவடிக்கைகளிலும் கோயில் சம்பந்தமான நடவடிக்கைகளிலும் கோர்ட்டு மூலியம் நடவடிக்கைகளில் அனேக காலம் கஷ்டப்படுவதுமாக இருக்கிறோம். இவை ஒருபுறமிருக்க, கடவுள்களிலேயும் ஒரு கடவுளுக்கு ஒரு கடவுள் வித்தியாசங்கள் கற்பித்துக்கொண்டு நடத்துகின்றார்கள். உதாரணமாக, பிள்ளையார் என்ற கடவுளை யார் வேண்டுமானாலும் தொடலாம், யார் வேண்டுமானாலும் பூசை செய்யலாம் என்பதும்; காசியில் இருக்கும் கோயிலை யார் வேண்டுமானாலும் தொடலாம், யார் வேண்டுமானாலும் கர்ப்பக் கிரகத்திற்குப் போகலாம் என்றும்; நம் ஊரில் அதே பேரில் உள்ள கோயில்களில் அவன் போகக்கூடாது, இவன் போகக்கூடாது என்றும்; இவன் பூசை செய்யக்கூடாது, அவன் பூசை செய்யக்கூடாது என்றும்; இன்னான்தான், இன்னவன்தான் பூசை செய்ய வேண்டும்; இன்னின்ன பாஷையில்தான் தோத்திரம் சொல்லவேண்டுமென்பதுமான புரட்டுக்களும் கொடுமைகளும் நடந்து வருகின்றன.

நமது மதத்திற்காகவும், சாமிகளுக்காகவும், இந்தக் கோயில்களுக்காகவும் நாம் செய்கிற செலவைப் பற்றியதோ—நாம் சர்க்காருக்குச் செலுத்துகிற வரியைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகவும் செலுத்துவதோடு, அந்தவரி—சர்க்கார் செலவு செய்கிற அக்கிரமத்தைவிட அதிகமான அக்கிரமத்திலும், நமது சமூகத்திற்கு இழிவை நிலைநிறுத்தும் வகையிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உலகத்தில் வேறு எந்த மதத்தாரும் செலவு செய்யாத அவ்வளவு பணச் செலவும் மானக்கேடும் கஷ்டமும் அடைகிறோம்.

சாதாரணமாக, திருப்பதி வெங்கடாசலபதி என்கிற ஒரு கடவுளுக்கு மாத்திரம்—வருடம் ஒன்றுக்கு 20 இலட்ச ரூபாய் வரும்படி வருவதாக அந்தத் தேவஸ்தானக் கணக்கு மூலமாகவே ஏற்படுகிறது; கணக்குக்கு வராத பணம் 20 இலட்சத்திற்கு மேலாகவே இருக்கலாம். அதாவது, யாத்திரைக்காரர்களும், வேண்டுதல்காரர்களும் கொண்டுபோகும் பணத்தை 'மகந்து' என்கிற ஒரு சன்னியாசி—தான் கடவுளைவிடப் பெரியவர் என்றும், வெங்கடாசலபதிக்கு வேண்டுதலைக்காகக் கொண்டு வந்திருக்கும் பணத்தை கோயில் உண்டியல் பெட்டியில் போட்டால், சர்க்காரார் ஜெர்மன் யுத்தத்திற்காகப் பட்டிருக்கும் கடனுக்கு வட்டியாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்றும், தன்னிடம் கொடுத்தால் நேரே கடவுளுக்குப் போய்ச் சேருமென்றும் சொல்லி ஏமாற்றிப் பிடுங்கிக்கொள்கிற பணம் இவ்வளவென்று சொல்லமுடியாது. இவ்வளவு பணமும் எந்த வகையில் செலவாகிறதென்றால் ஒரு பகுதி, பச்சரிசி, நெய், பாசிப் பயறு, குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம், சர்க்கரை, பாதாமி, பால் இவைகளுக்குச் செலவாவதும்; அதை ஒரு கூட்டத்தாரே வயிறு வெடிக்கத் தின்பதற்கும், பணம் கொடுத்த கூட்டத்தார் கண்ணால் பார்த்தால் தோஷம் என்று சொல்வதற்கும் உபயோகப்படுவதோடு—மற்ற ஒரு பகுதியோ வேதபாடசாலை என்பதற்கும், சமஸ்கிருதப் பாடசாலை என்பதற்கும் செலவு செய்யப்படுகிறது. பணம் கொடுத்த கூட்டத்தார் வேத பாடசாலையில் படிக்கலாமோ என்று கேட்டால், 'நீ சூத்திரன், வேதம் படிக்கக்கூடாது' என்று சொல்வதும்; சமஸ்கிருத பள்ளிக்கூடத்திலாவது படிக்கலாமா என்று கேட்டால், 'அது சூத்திரன் வாயில் நுழையாது; நுழைந்தாலும் அதில் வேத சம்பந்தமான சங்கதிகள் வரும்; ஆதலால் அதுவும் படிக்க முடியாது' என்றும் சொல்லி நம்மை இழிவுபடுத்துவதற்கே செலவு செய்யப்படுகிறது.

இந்த மாதிரி இன்னமும் எத்தனையோ கோயில்கள் நம் நாட்டில் இருக்கின்றன. கோயில்கள்தாம் இப்படி என்றாலோ, மதத்தைப் பரவச் செய்யும் மதஸ்தாபனங்களான மடங்களும், மடாதிபதிகளும், மத ஆச்சாரியார்களும் செய்யும் அக்கிரமங்களைப் பாருங்கள்!

தருமபுரம், திருவாவடுதுறை முதலிய பல சைவ மடங்களும், பல வைணவ மடங்களும், சிருங்கேரி, கும்பகோணம் முதலிய ஸ்மார்த்த மடங்களும்—அய்ந்து இலட்சம், பத்து இலட்சம், இருபது இலட்சம், முப்பது இலட்சம், அய்ம்பது இலட்சக்கணக்காய் வரும்படி பெற்று என்ன செய்கிறார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். மதப் பிரச்சாரம் ஏதாவது உண்டா? மதத்தின் தன்மை இன்னதென்று மக்களுக்கு அறிவிக்கிறார்களா? சிருங்கேரி மடாதிபதி என்கிற சங்கராச்சாரியார் என்பவர் 'லோக குரு' என்பதாகப் பெயர் வைத்துக் கொண்டு பல்லக்கு, யானை, குதிரை, ஒட்டகம், மாடு, வண்டி, ஆள், சிப்பந்திகளுடன் வந்து இறங்குவதும், அந்தந்த ஊரிலுள்ள பிரபுக்களை அந்தந்த ஊரிலுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர்கள் தயவால் நய-பயத்தில் சுவாதீனம் செய்துகொண்டு ஆளொன்றுக்கு 100, 200, 500, 1,000, 5,000, 7,000, 10,000 என்பதாக வசூல் செய்து—தினம் ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் என்பதாகப் பார்ப்பனர்களுக்கே பொங்கிப் போட்டுவிட்டு, மிஞ்சிய பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு மற்றொரு ஊருக்குப் புறப்பட்டு விடுகிறார்கள்.

இவர்களால் ஏதாவது உபதேசம் உண்டா? ஒழுக்கப் பயிற்சியுண்டா? ஒன்றும் இல்லாததோடு, நம்மைக் கண்டால், நம்மோடு பேசினால், நம் பாஷையை உச்சரித்தால்—முறையே 'சண்டாள தரிசனம்', 'சூத்திர சம்பாஷணை', 'மிலேச்ச பாஷை உச்சரிப்பு' என்பதாகச் சொல்லி, நம் பணத்திலேயே பார்ப்பனருக்குத் தானம் கொடுப்பதும், பிராயச் சித்தம் செய்துகொள்ளுவதும், ஸ்நானம் செய்து வாயைக் கழுவுவதுமாகச் செய்கிறார்கள். நம்முடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பிரதியாய் அவர்களது காலைக் கழுவின தண்ணீரைக் குடிக்கச் சொல்லுகிறார்கள். இதுதவிர வேறு என்ன நடக்கிறது? இப்படிப்பட்ட சங்கராச்சாரியார் என்பவர், மனதில் நினைப்பதுதான் கடவுள் என்று கூறி—வெளியில் பூசை செய்வது ஒரு பெண் தேவதை; மேலில் வேஷம் போட்டுக் கொள்வது சைவப் பூச்சு. ஆகவே மதம் வேறு, கிரியை வேறு, வேஷம் வேறு என ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத ஒருவரை, பெற்ற பணத்தையெல்லாம் பார்ப்பனர்களுக்கே உபயோகப் படுத்தி, நம்மை இழிவுபடுத்தி அதை நிரந்தரமாய் நிற்கும்படி செய்துகொண்டு வருகிற ஒருவரை—நாம் கடவுளுக்குச் சமமாக நினைத்துக் காலில் விழுந்து கால் கழுவிய தண்ணீரைக் குடித்து ஆயிரம் பதினாயிரமாகக் கொட்டிக் கொடுக்கிறோம்.

இதைப்பற்றி ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. இந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்பதில்லை. கேட்டால் நாத்திகம், வேதத் துவேஷம், பிராமணத் துவேஷம் என்று சொல்லி அடக்குமுறை போட்டு விடுகிறார்களேயொழிய கொஞ்சமாவது யோசிக்கவிடுவதே இல்லை. மற்ற மதக்காரர்கள் செய்வதைப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் வேறு தேசத்தி லிருப்பவர்கள்; அவர்கள் மதத்தை நமது வீட்டில் பரப்ப எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? எவ்வளவு பணச்செலவு செய்கிறார்கள்? 6,000 மைல் கடந்து அவர்களது சீதோஷ்ண ஸ்திதி சவுகரியங்களைவிட்டு நமது நாட்டுக்கு வந்து, அவர்களது வேதங்களை நமது பாஷையில் அச்சிட்டு நமது வீடுகளிலும், சந்தைகளிலும், திருவிழாக்களிலும் கொண்டு வந்து கொடுக் கிறார்கள். நம மக்களுக்கு உபதேசம் செய்ய பாதிரியார் என்பதாக ஆட்களை ஏற்படுத்திப் பிரச்சாரம் செய்து, தினமும் நூற்றுக்கணக்கான நம் மக்களை தங்கள் மதத்தில் சேர்க் கிறார்கள். நமது மதப் பிரச்சாரம் என்பது தினமும் பல நூற்றுக்கணக்கான மக்களை முகமதிய மதம் முதலிய அன்னிய மதங்களில் சேர்க்கச் செய்வதாகத்தான் இருந்து வருகிறது. இன்றையதினம் நமது நாட்டில் இருக்கும் ஒரு கோடி கிறிஸ்தவர்கள் யார்? ஏழு கோடி முஸ்லிம்கள் யார்? என்று பார்ப்பீர்களானால் நமது மதக் கொடுமையால் மதாச் சாரியர்களால் அன்னிய மதத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட்ட, நம் சகோதரர்களே யல்லாமல் வேறு என்ன? அவர்கள் அத்தனை பேரும் எருசலத்தில் இருந்தோ, அரேபியா விலிருந்தோ வந்தவர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இம் மாதிரியான பெருந்தொகைகளுக்குக் கணக்குக் கேட்பதற்காகப் பார்ப்பனரல்லா தார் கட்சி மந்திரிகளால், 'இந்து பரிபாலன மசோதா' என்பதாக ஒரு சட்டம் ஏற்படுத்தப்

பட்டால், தங்களது வயிற்றுப் பிழைப்புப் போய்விடுமே என்று பயந்துகொண்டு, அதைக் கெடுக்க எண்ணங்கொண்ட நமது பார்ப்பனர்கள்—'ஜஸ்டிஸ் கட்சியார், மதத்தில் சர்க்கார் புகும்படியாகச் செய்துவிட்டார்கள்'; 'மதம் போச்சுது! மதம் போச்சுது!' என்பதாக விஷமப் பிரச்சாரம் செய்து, வேண்டுமென்றே அக் கட்சியின் மீது மக்களுக்குத் துவேஷமுண்டாக்க இதை ஒரு தந்திரமாகக் கைக்கொண்டு விட்டார்கள். அந்தச் சட்டத்தினால் மதம் எப்படிக்கெட்டுப்போய் விட்டதென்றாவது, சர்க்காரார் எப்படி மதத்தில் பிரவேசித்து விட்டார்கள் என்றாவது ஒரு வார்த்தைகூடச் சொல்லவேயில்லை.

இவர்கள் தந்திரத்திற்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன். ஒரு பெரிய வெள்ளத்தில் ஒரு நரி அடித்துக்கொண்டு வரப்பட்டுவிட்டது. கரையின்மேல் இருந்த ஜனங்களைப் பார்த்து அந்த நரி, 'உலகம் போச்சுது! போச்சுது!' என்று கத்திக்கொண்டே வெள்ளத்தில் மிதந்து கொண்டுபோகும்போது, கரையில் இருந்தவர்கள் உலகத்திற்கே ஏதோ பெரும் ஆபத்து வந்துவிட்டதாய்க் கருதி, நரியைக் கரைசேர்த்து அதன் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதாய் நினைத்து, கஷ்டப்பட்டு நீந்தி அதைக் கரையேற்றிய பின்பு, நரியைப் பார்த்து, 'உலகம் போச்சுது என்று சொன்னீர்களே! அதன் கருத்து என்ன? அதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு, அந்த நரி ஓடுவதற்கு வழிபார்த்துக்கொண்டு, கேட்டவர்களைப் பார்த்து, 'அடமைத்தியக்காரர்களே! இது உங்களுக்குத் தெரியவில்லையா? என்னை நீங்கள் தண்ணீரில் விழுந்து கஷ்டப்பட்டுக் கரை சேர்த்திருக்காவிட்டால் வெள்ளம் என்னை அடித்துக்கொண்டுபோய்க் கொன்று இருக்குமல்லவா? அந்தப்படி நான் செத்துப்போயிருந்தால்—எனக்கு உலகம் போய் விட்டதாய் இல்லையா? அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். இதுகூடவா உங்களுக்குத் தெரியவில்லை?' என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டது.

அதுபோல், நமது பார்ப்பனர்கள் மதம் போச்சு என்றால், என்ன மதம் போச்சு! கல் சுவாமிகளை எடுத்துவிட்டு ஜார்ஜ் சக்கரவர்த்தியை அந்த இடத்தில் வைக்கப் போகிறார்களா? அல்லது, பனகால் ராஜாவை அங்கு வைக்கப்போகிறார்களா? அரிசிச் சாதத்திற்குப் பதிலாக, மண் சாதம் வைத்துப் பூசை செய்யப்போகிறார்களா? அல்லது, இங்கிலீஷிலாவது, ஜெர்மனியிலாவது மந்திரம் சொல்லப்போகிறார்களா? ஒன்றும் மாறுதல் இல்லை; பழையபடிதான் நடக்கும். ஆனால் மதம் போய்விட்டது என்பது—யார் மதம், என்ன மதம் என்பது உங்களுக்குத் தெரியுமா? நாம் கொடுக்கிற பணத்தால் நெய்யும், பச்சரிசி, பாதாமியுமாய்த் தின்று கொழுத்து—அதனால் ஏற்படுகிற மதம்தான் பார்ப்பனர்க்குப் போய்விடும் என்கிற பயமே அல்லாமல், வேறு எந்த மதமும் போய்விட வில்லை.

முதலாவது, பார்ப்பனர்கள் நமக்கு ஒரு மதம் இருப்பதாக அரசாங்கத்தில் ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறார்களா என்பதை யோசித்துப் பாருங்கள். சர்க்காரில் கிறிஸ்துவ மதமும், முகமதிய மதமும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பார்ப்பனர்கள் சொல்லும் இந்துமதத்தை ஒப்புக்கொள்ளவேயில்லை. உதாரணமாக, அரசியல் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட சட்டசபை ஸ்தானங்கள் 128-ல் முகமதிய மதத்தின் பேரால் முகமதியர்களுக்கு 13 ஸ்தானங்களும்; கிறிஸ்துவ மதத்தின் பேரால் கிறிஸ்தவர்களுக்கு 6 ஸ்தானங்களும் கொடுத்திருக்கிறார்கள். தேசத்தின் பேரால் அப்ரோப்பியருக்கும், சமூகத்தின் பேரால் சட்டைக்காரருக்கும் ஒதுக்கிவைத்தார்கள். 'இந்து' மதத்தின் பேரால் 'இந்து'க்களுக்கு ஏதாவது ஸ்தானம் ஒதுக்கிவிட்டார்களா? ஒன்றும் இல்லை. ஒதுக்காவிட்டாலும் தொலைந்துபோகட்டும்; நமது மதத்தையாவது ஒப்புக்கொண்டார்களா? அதுவும் இல்லை. பின்னை என்ன செய்தார்கள் என்றால்—'முகமதியரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம்' என்பதாகப் பிரித்து ஒதுக்கி, அதை, நம்மை எடுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். நாமும் அதை ஒத்துக்கொண்டுதான், 'முகமதியரல்லாதார்' என்கிற பெயரால் சட்டசபை மெம்பராயிருக்கிறோம். இதோ, இங்கு என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும்

எனது நண்பர் ஸ்ரீமான் திவான்பகதூர் அ. மு. முருகப்ப செட்டியார் எம். எல். சி. அவர்கள் 'முகமதியரல்லாதாராய்' சட்டசபையில் ஸ்தானம் பெற்றிருக்கிறாரே அல்லாமல்—இந்துவாய் ஸ்தானம் பெறவில்லை ; ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் மாத்திரம் அல்லர்.

'மதம் போச்சே!' மதம் போச்சே! என்று நீலிக் கண்ணீர்விட்ட வருணாசிரமத் தலைவரான ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியாரும், இந்தியக் காங்கிரஸ் தலைவரான எஸ். சீனிவாசய்யங்காரும் 'முகமதியரல்லாதார்' என்கிற பெயரினாலேதான் இந்திய சட்ட சபையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு உண்மையாய் ஒரு மதம் இருந்திருந்தாலாவது அல்லது அந்த மதத்திற்குக் கடுகளவு சுயமரியாதை இருந்திருந்தாலாவது அல்லது நமது சமூகத்திற்குக் கடுகளவு மானம், சுயமரியாதை இருந்தாலாவது நாம் நம்மை 'முகமதியரல்லாதார்' என்று பதிந்துகொள்ள முடியுமா? பார்ப்பனரல்லாதார் என்று சொன்னால் சில பேருக்கு எவ்வளவு ரோஷமும், வேதாந்த தத்துவ ஞானமும் உண்டாய் விடுகிறது? ஆனால் இதைப்பற்றிய உணர்ச்சி மாத்திரம் ஒரு சிறிதும் உண்டாவதில்லை. 'முகமதியரல்லாதார்' என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒரு முகமதிய நண்பர் சொல்ல நான் கேட்டிருப்பது என்னவென்றால்—முகமதியரல்லாதாரை, முகமதியர்கள் 'காபர்' என்று கூப்பிடுகிறார்கள் ; காபர் என்றால் நாத்திகனுக்குச் சமானம். ஆகவே, நாம் நாத்திகர் என்கிற முறையில் இன்று அரசாங்கத்தாரால் கருதப்படுகிறோம். இப்படி 24 கோடி மக்களைக் கொண்ட இம் மாதிரியான சமூகம் மதத்தின் பேரால் எப்படி மதிக்கப்படுகிறது? முகமதியன் நம்மை—'காபர்' ஆகவும், கிறிஸ்தவர் நம்மை 'அஞ்ஞானி' எனவும், வெள்ளைக்காரன் நம்மைக் 'கூலி' எனவும், சட்டைக்காரன் நம்மைக் 'காட்டுமிராண்டிகள்' எனவும், பார்ப்பான் நம்மை 'சூத்திரன்' (தனது வைப்பாட்டி மகனும், அடிமையும் என்பதான பொருள்கொண்டு) எனவுமாய் அழைக்கும் நிலையில் வாழ்கிறோம். இந்த வாழ்வைப்பற்றி நாம் வெட்கப்படுவதில்லை. இன்னமும் நமது மதத்தின் பேரால் நாம் சில பொது ஸ்தலங்களுக்குப் போக உரிமை இல்லாமலும், நமது சகோதரர்கள் பலர் நாய், கழுதை, பன்றி ; மலம், மூத்திரம் நடமாடும்-கிடக்கும் தெருக்களில் கூட நடக்க உரிமை யில்லாதவராகவும் கொடுமைப்படுத்தப்பட்டு இருப்பதைப் பற்றி நினைக்கிறோமா? அதைப்பற்றிக் கொஞ்சம்கூட நினைத்துப் பார்ப்பதேயில்லை.

வெள்ளைக்காரனையும் நம்மையும் ஏமாற்றிப் பார்ப்பான் உத்தியோகம் பெறுவதற்காக, பார்ப்பனர்கள் ஏதாவது கூப்பாடு போட்டால், நாமும் கூடவே கூப்பாடு போட்டு அவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விடுகிறோமேயல்லாமல், பகுத்தறிவை நாம் உபயோகிப்பதே இல்லை. தென்னாப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள்—நமது நாட்டிலிருந்து அவ் விடத்திற்குக் குடியேறின நம்மவர்களை, அவர்கள் வசிக்கும் தெருவில் நடக்க விடுவதில்லை என்பதாகப் பார்ப்பனர்களுடன் சேர்ந்து நாமும் கூப்பாடு போட்டோம். இதன் பயனால் மகா கனம் சீனிவாச சாஸ்திரி என்கிற பார்ப்பனர் ஒருவருக்கு மாதம் 3000, 4000 ரூபாய் சம்பளமும், வருமானமுமுள்ள உத்தியோகம் ஒன்று கிடைத்தது. அதனால் நமக்கு என்ன பலன் கிடைத்தது? வாய் வலிக்கக் கத்தியதுதான் மீதி. தென்னாப்பிரிக்காவைப்பற்றிக் கூப்பாடு போடுவதற்குமுன், நமது நாட்டைப்பற்றி யோசிக்கிற புத்தியே நமக்குக் கிடையாது. தென்னாப்பிரிக்க வெள்ளையர், நம்மை மிரட்ட—நம்மைக் கொடுமைப்படுத்த, அவர்களுக்குச் சவுகரியமும் சக்தியும் இருக்கிறது. அதை எதிர்க்க நமக்குச் சவுகரியமும் சக்தியும் இல்லை.

என்னவெனில், அவர்கள் ஆகாசக் கப்பல், பீரங்கி, வெடிகுண்டு, பட்டாளம் முதலியவைகளை வைத்துக்கொண்டு நம்மை வீதியில் நடக்கவேண்டாம் என்கிறார்கள். நமது நாட்டுப் பார்ப்பனர்கள் நம்மிடம் பிச்சை வாங்கிப் பிழைப்பதைத் தொழிலாக உடையவர்கள் நம்மூருக்கு வந்து, நம்மை—நமது சகோதரர்களை, அவர்கள் வாழும் தெருவில் நடக்கக்கூடாது என்கிறார்கள். வெள்ளையருக்காவது துப்பாக்கி, பீரங்கி முதலியவைகள் உண்டு. இந்தப் பார்ப்பனர்களுக்கு என்ன ஆயுதம் உண்டு? வெறுங் கிழிந்த

பஞ்சாங்கத்தையும், காய்ந்த தர்ப்பைப் புல்லையும் கையில் வைத்துக் கொண்டு நம்மை விரட்டி அடித்து விடுகிறார்கள். இந்தக் கிழிந்த பஞ்சாங்கத்திற்கும், காய்ந்த தர்ப்பைப் புல்லுக்கும் பயந்து கொண்டு அந்த வீதியில் நடக்க உரிமை இல்லாமல் இருக்கிற நாம்—தென்னாப்பிரிக்கா வீதியில் நடக்க உரிமை கேட்பது கேலிக் கூத்தாக இல்லையா? இந்த மாதிரி ஜனங்களுக்கு ஆண்மையாவது, சுயமரியாதையாவது உண்டு என்று வெள்ளைக்காரன் நம்புவானா? நமது கூப்பாட்டையாவது நமது தீர்மானங்களையாவது இலட்சியம் செய்வானா என்பதை யோசித்துப் பாருங்கள். இப்படியேதான் நமது சுயராஜ்யக் கிளர்ச்சி என்கிற பித்தலாட்டமும் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த யோக்கியதையில் இனி இந்து மதச் சடங்கு என்பதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். ஒரு மனிதன் தான் இந்து என்று ஒப்புக் கொள்வதானால் –அவன் பார்ப்பனர்களுக்காகவே பிறக்கவும், பார்ப்பனர்களுக்காகவே வாழவும், பார்ப்பனர்களுக்காகவே சம்பாதிக்கவும், பார்ப்பனர்களுக்காகவே சாகவும் வேண்டியவனாகின்றான். மதச் சடங்குகளின் பெயரால் கொடுக்கவேண்டிய வரி எவ்வளவு என்பதைக் கவனித்துப் பாருங்கள்!

ஒரு இந்து 'கர்ப்பதான முகூர்த்தம்' செய்வதிலிருந்தே பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது, பார்ப்பான் வந்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் உட்காரவைத்து சமஸ்கிருத மந்திரம் சொல்லி இருவரையும் படுக்கை வீட்டுக்குள் கொண்டுபோய் விட்டு, அவன் கைப்படக் கதவைச் சாத்திவிட்டுப் போனால்தான் நல்ல குழந்தை பிறக்குமென்று நினைக்கிறோம். ஆதலால், அப்பொழுதே பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிறகு அந்தச் சடங்கின் மூலம் ஒரு கர்ப்பம் ஏற்பட்டு வயிற்றில் பிண்டம் உண்டாய்விட்டதோ இல்லையோ, 'சீமந்தம்' என்பதாகப் பெயர் வைத்துப் பார்ப்பானுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறகு குழந்தை பிறந்தவுடன் அதற்கு சாதகமெழுதவும், பாலூட்டவும், தொட்டலிலிடவும், நகைபோடவும், சோறூட்டவும் பார்ப்பானுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. குழந்தைக்கு ஆயுள் வளர வேண்டுமென்கிற எண்ணத்துடன் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருஷமும் 'ஆயுள் ஓமம்', 'ஆண்டு நிறைவு' என்பதாகப் பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

பிறகு, குழந்தையைப் படிக்க வைப்பதற்கு ஆரம்பிக்கும்போதும் பார்ப்பனனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அக் குழந்தை வாலிபனாகிக் கலியாணம் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றாலும், பொருத்தம் கேட்டு, கலியாணம் செய்வது, மறுபடியும் சாந்தி செய்வது முதலிய காரியங்களுக்குப் பார்ப்பனனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. கலியாணம் நடந்து, அவன் பிள்ளை குட்டிகள் பெற்றுப் பெரியவனாகிக் காயலா முதலிய கஷ்டங்கள் வந்தாலும்—சோதிடம் பார்க்கவும், கிரகதோஷம் பார்க்கவும், சாந்தி கழிக்கவும் பார்ப்பனனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. கடைசி காலமாகிய சாகப்போகும் காலத்திலும் பிராணன் விடுவதற்கு நாலு நாழிகை இருக்கும்போதே, சுங்கக்காரன் சுங்கம் வாங்கிக்கொண்டு வண்டியை ஊருக்குள் விடுவது போலப் பார்ப்பானும்—சாகப்போகிறான் என்று தெரிந்தவுடனே வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, சாகப்போகின்றவனைப்பற்றி நமக்கு ஏற்படும் துக்கத்தையும், கஷ்டத்தையும் கூடக் கவனிக்காமல்—தனக்கு மாடு வாங்கித் தானம் கொடுத்தால்தான் சாகின்றவன் ஜீவன் மோட்சத்திற்குப் போகுமென்றும்; இல்லாவிட்டால் பேய், பிசாசாய் உலகத்தில் அலைந்து கொண்டு இருக்குமென்றும் சொல்லிப் பசு வாங்கிக்கொண்டு போய்விடுகிறான். அதை வாங்கிக்கொண்டு போய் வீட்டில் கட்டிவிட்டு—அதற்குள் காயலாக்காரன் செத்துப்போயிருப்பான் என்று தீர்மானம் செய்துகொண்டும், தனக்கு நல்ல வேட்டை கிடைக்குமென்று எண்ணிக்கொண்டும் காயலாக்காரன் வீட்டுக்கு வருகிறான். அவன் வருவதற்குள் காயலாக்காரன் சாகாதிருந்தால், இன்னும் சாகவில்லையே என்று பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டு சீக்கிரம் சாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறான்.

இவனுடைய பிரார்த்தனைப்படி செத்துப் போனவுடன், உள்ளே வந்து புகுந்து கொண்டு, 'இந்தக் கருமம் செய்யவேண்டும்; அந்தக் கருமம் செய்யவேண்டும்; இந்த தானம் கொடுக்கவேண்டும்; அந்த தானம் கொடுக்கவேண்டும்' என்பதாகச் செத்தது முதல் 16-வது நாள் வரையிலும் இழவுக்கு வந்தவர்களை விசாரிக்கக்கூட நேரம் கொடுக்காமல், அவன் வேலை கொடுத்து தொந்திரவு செய்துகொண்டு இருப்பதுடன், அந்தப் பார்ப்பனரது குடும்ப வாழ்க்கைக்குச் சாமான்களை—அரிசி, புளி, பருப்பு, உப்பு, பண்டம், பாத்திரம், பலகை, குடை, செருப்பு, வேட்டி முதலியவைகளும் செலவுக்குப் பணமும்; சிற்சில இடங்களில் வீடுவாசல் பூமி வகையறாக்களையும் வாங்கிக்கொள்வதோடு, ஒவ்வொரு மாதமும் 'மாசியம்' என்பதாகவும் வந்து இதேமாதிரி கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுகிறான். இவ்வளவோடாவது விட்டுவிடுகிறானாவென்றால்—செத்துப்போன நாள் தினத்தை எழுதிவைத்துக்கொண்டு, 'இன்ன மாதம், இன்ன வருடம், இன்ன நட்சத்திர தினத்தில் இந்தத் தேதியில் உங்களய்யா செத்துப்போய்விட்டார். ஒரு வருடமாச்சுது; வை பழையபடி அரிசி, பருப்பு, வேட்டிக்காகப் பணம்' என்று உயிரை வாங்கிவிடுகிறான். ஒவ்வொரு வருடமும் ஒரு பெரிய தோட்டம் வாங்கியதுபோல் நினைத்து, வெள்ளாமை அறுவடை செய்கின்றவன் போல் வந்து வசூல்செய்து கொண்டு போய்விடுகிறான்.

பிள்ளை பெறுவதனால் இவ்வளவு கஷ்டமிருப்பதாக நினைத்துப் பிள்ளையைப் பெறாமல் இருந்தாலும் அப்பொழுதும் பார்ப்பனர்கள் அவர்களை விடுவதில்லை. 'பிள்ளை இல்லாவிட்டால் நரகத்துக்குப் போய்விடுவாய்; என்ன தருமம் செய்தாலும் பிள்ளை இல்லாதவனுக்கு மோட்சம் கிடையாது; எப்படியாவது ஒரு பிள்ளையைப் பெற்றுத்தான் ஆகவேண்டும். காசிக்குப் போ, இராமேசுவரம் போ, அந்த ஓமம் பண்ணு, இந்த யாகம் பண்ணு; இந்தக் கோயிலைக் கட்டு, அந்தக் குளத்தை வெட்டு' என்பதாகச் சொல்லி, அவன் பணத்தையெல்லாம் உறிஞ்சிப் படாதபாடு படுத்தி—எப்படியானாலும் ஒரு குழந்தை உண்டானால் போதுமென்று யோசிக்கும்படி செய்துவிடுகிறார்கள். தீர்த்த ஸ்தலங்களிலும், மூர்த்தி ஸ்தலங்களிலும் நடக்கும் அக்கிரமங்களையும், அங்குள்ள புரோகிதப் பார்ப்பனர்களின் கொடுமையையும், அவர்களுடைய இழிதொழிலைப் பற்றியும் எடுத்துச் சொல்வதென்றால்—அதுவே ஒரு பெரிய உபந்நியாசமாக முடியும். ஆகவே, இந்துமதச் சடங்குகள் மூலியமாய் இவ்வளவு கஷ்டமும், நஷ்டமும் படுவதில் பார்ப்பனர்கள் பிழைப்பு நடப்பதுதவிர செய்தவர்களுக்காவது, செய்த குடும்பத்திற்காவது ஏதாவது நன்மையேற்படுகிறதா? தானம் என்பதும் தர்மம் என்பதும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தால்தான் பிரயோஜனமுண்டென்று சொல்லுகிறார்களேதவிர, கஷ்டப்படுகிற மக்களுக்கோ—நொண்டி, முடம், கூன் குருடு, செவிடு இவைகளால் உழைத்துச் சாப்பிட முடியாமல் பட்டினிகிடந்து பரிதவித்து உயிர்விடும் ஜீவன்களுக்கோ ஏதாவது உதவுவது என்கிற காரியம் தர்மத்திலும் சேர்க்கப்படவில்லை; தானத்திலும் சேர்க்கப்படுவதில்லை. ஆயிரம் பிராமண போஜனம், பதினாயிரம் பிராமண போஜனம், இலட்சம் பிராமண போஜனம் என்று சமாராதனை செய்வதும், ஊரிலிருக்கிற, நாட்டிலிருக்கிற சோம்பேறிப் பார்ப்பனர்களும், அயோக்கியப் பார்ப்பனர்களும், எந்தவிதத்திலும் அங்கவீனமில்லாது உழைத்துச் சாப்பிடக்கூடிய தடிப் பார்ப்பனர்களும் வந்து உட்கார்ந்து மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவதும்; சாப்பிட்டுவிட்டுப் போகும்போது, 'என்ன சமாராதனை செய்துவிட்டான்; சுத்த சிகாமணி, லட்டுக்கு பச்சைக் கற்பூரம் போதவில்லை; பாயசத்திற்கு குங்குமப் பூ போதவில்லை; இவனை யார் இப்பேர்க்கொத்த சமாராதனை செய்யச் சொன்னார்கள்?' என்று வைதுகொண்டு போவதும், அடுத்த வேளை சாப்பாட்டுக்கு மார்க்கமில்லாமல், தாசிகளுக்கு மாப்பிள்ளை தேடிக்கொடுத்துத் தரகு வாங்குவதுமாகிய இம் மாதிரியான அக்கிரமங்களை எவ்வளவோ பார்த்துவருகிறோம். பார்ப்பனர்களுக்குக் கொடுப்பது புண்ணியமாய் இருந்து, அதனால் அக் குடும்பங்களுக்கு நன்மை ஏற்படுவதாக இருந்தாலும்—முன்னே தர்மம்செய்த பெருங் குடும்பங்களெல்லாம் இன்று எங்கே போய்விட்டன? இம் மாதிரிப் பார்ப்பனர்களுக்குத்

தர்மம் செய்ததன் பயனாய்க் கெட்டுப்போன குடும்பங்கள், கெட்டுப்போன அரசாங்கங்கள் எத்தனையோ கண்ணால் பார்க்கிறோம்.

உதாரணமாக, தஞ்சாவூர் இராஜாவைப்போல் தென்னாட்டில் பார்ப்பனர்களுக்கு அள்ளிக்கொடுத்த 'அமுத இராஜாங்கம் வேறொன்றிருப்பதாக நமது தகவலுக்கு எட்ட வில்லை. அவர்கள் கட்டிய அக்கிரகாரங்களும், பார்ப்பனர்களுக்காக வெட்டிய குளங்களும், விட்ட மானியங்களும், ஏற்படுத்தின பள்ளிக்கூடங்களும் இன்னும் இருந்துகொண்டே இருக்கின்றன. அவர்கள் சத்திரத்தில் தின்று அவர்கள் பள்ளியில் படித்த பார்ப்பனர்கள் குடும்பம் இன்னமும் இருந்துகொண்டுதானிருக்கின்றது. அவர்கள் அய்க்கோர்ட் ஜட்ஜ், நிர்வாகசபை மெம்பர், திவான், சட்ட அறிஞர் முதலிய வேலைகள் பார்த்துக்கொண்டு, மாதம் 1000, 5000, 10000 ரூபாய் வீதம் சம்பளம் சம்பாதித்துக்கொண்டும்; பஞ்சாங் கத்தையும், தர்ப்பைப் புல்லையும் வீசி எறிந்துவிட்டுத் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டும், மாட்டுக் கறி சாப்பிட்டுக்கொண்டும், பங்களா, மோட்டார் கார் பெங்களூர் பட்டு, வைர நகைகள் முதலிய போகபோக்கியங்களுடன் வாழ்ந்துகொண்டுமிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்குத் தர்மம் செய்த தஞ்சாவூர் இராஜ குடும்பம் பேர்சொல்லுவ தற்குக்கூட சந்ததி இல்லாமற்போய்—விவகாரங்களின் மூலம் பார்ப்பனர்களின் வாலைப் பிடித்திருந்து வயிற்றிற்கு மார்க்கமில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறது.

ஒரு கோர்ட்டு நடவடிக்கையில் இந்த இராஜ வம்சத்தார் தாங்கள் க்ஷத்திரியர்கள் என்று ருஜு செய்ய வேண்டியிருந்த சமயத்தில், அவர்களிடம் அதுவரை பொறுக்கித் தின்று வயிறு வளர்ப்பதற்காக அந்த இராஜாவை க்ஷத்திரியர் என்று சொல்லி வந்த பார்ப்பன குடும்பத்தார்களே—பெட்டிமேல் ஏறி—'இவர்கள் சூத்திரர்கள்' என்று சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்களுக்கு அள்ளிக் கொடுப்பது மோட்சத்திற்கு வழி அல்ல என்பதற்கும், தர்மம் அல்ல என்பதற்கும், அப்படி அள்ளிக் கொடுத்த குடும்பம் கெட்டுப்போய் இருக்கிறதென் பதற்கும் இதைவிட நல்ல சான்று வேறு என்ன வேண்டும்? இதனாலேயே பார்ப்பனர் களுக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாதென்று சொல்ல நான் வரவில்லை. கஷ்டப்படுகிறவர் களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும் தம்மாலான உதவியை நாம் செய்யவேண்டியதுதான் மனிதத் தன்மை.

ஒரு நாய் பட்டினியால் அவஸ்தைப்படுவதாக இருந்தால் ஒரு மனிதன் அதைப் பார்த்துக் கொண்டு தன் வயிற்றை மாத்திரம் நிரப்பிக் கொள்வது ஆண்மை அல்ல வென்பதும், சுயமரியாதையல்ல வென்பதும் நமது அபிப்பிராயம். ஆகவே, கஷ்டப்படுகிற வர்களுக்கு உதவி செய்யுங்கள்! பார்ப்பனர் மாத்திரம் உயர்ந்தவர்களென்றும், அவர்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்றும், நாம் பிறவியிலேயே தாழ்ந்தவர்களென்றும் எண்ணிக்கொண்டு மூடநம்பிக்கையில் இதுவரையில் வாழ்ந்தது போதும். இனியேனும் நாமும் மனிதர்கள் தானென்பதையும், நம்மிடம் பிச்சை வாங்கித்தின்று கொண்டு வாழும் ஒருசிறு கூட்டத்தார்—நம்மைச் சூத்திரரென்றும், தேவடியாள் மகனென்றும், பார்ப்பானின் வைப்பாட்டி மகனென்றும், நம்மைத் தொடக் கூடாதென்றும், நடக்கக் கூடாதென்றும், பார்க்கக் கூடாதென்றும் கூற—இத்தகைய இழிவு முறையில் நாம் நடத்தப்படாமல் இருக்க வேண்டுமானால் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் சுயமரியாதையைப் பெற முயல வேண்டும். அதைப் பெறாமல் மானமின்றி வாழ்வதைவிட உயிர் துறப்பதே மேலென்ற எண்ணம் உண்டாக வேண்டும்.

நீண்டநேரம் உங்களைத் தாமதித்து வைக்க விரும்பவில்லை. ஒவ்வொரு இடங் களிலும் சுயமரியாதை உணர்ச்சி யுண்டாகப் பாடுபடுங்கள். உங்களைப் பல ஆயிரக்கணக் கான வருடங்களாக மிதித்து அடிமைப்படுத்தி வாழும் வழக்கத்தை—உங்கள் மயிர்க் காம்பு களிலெல்லாம் கூடித் தடிப்பேறிய மானமற்ற வாழ்க்கை நிரம்பிய உணர்ச்சியை—உடனே உதறித் தள்ளுங்கள்! குருட்டுத்தனமான, மூடநம்பிக்கையுள்ள, புரோகிதக் கொடுமை

க்களைக் களைந்து ஆண்மையுடன் நீங்களும், உங்கள் பின் சந்ததியாரும் வாழத் தக்க முறையில் உங்கள் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொள்ளுமாறு உங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

[நூல் : 'வைக்கம் வீரர் சொற்பொழிவு': குமரன் அச்சகம், காரைக்குடி-1920]

20. ஆதாரமற்ற நம்பிக்கைகள்

ஒரு விஷயத்தை ஒருவன் கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாம் என்ன செய்கிறோம்?

'அது உனக்கு எப்படித் தெரியும்? அது உண்மை என்று நாங்கள் ஏன் நம்ப வேண்டும்? அது உண்மையென்று நம்ப ஆதாரம் என்ன?' எனப் பொதுவாக மூன்று கேள்விகளைக் கேட்கிறோம்.

பிரதி தினமும் நாம் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம். அவைகளில் பலவற்றை நாம் கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிடுகிறோம். 'அது உண்மையா? உண்மையென்பதற்கு ஆதாரம் என்ன?' என்பன போன்ற விஷயங்களை நாம் கவனிப்பதே இல்லை.

நமது நம்பிக்கைகளில் பலவற்றை ஆராய்ந்து பார்த்தால், அவற்றிற்கு ஆதாரமே இல்லையெனத் தோன்றாநிற்கும். ஒரு காலத்திலே ஒரு விஷயம் உண்மையென்று யாரோ ஒருவர் சொன்னார்; அல்லது, ஆராய்ந்து பாராமலேயே அதை நாம் உண்மை என நம்பிக்கொண்டோம்; அல்லது, அது உண்மையாகத்தான் இருக்குமென்று சுளுவில் நம்பிக்கொண்டோம்.

ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நாம் முதலிலே கூறிய மூன்று கேள்விகளையும் கேட்டால் எந்த விஷயத்தின் உண்மையையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

உண்மையாராய்ச்சியில் தோல்வி அடைந்த பிறகும் ஒரு விஷயத்தை நாம் உண்மையென நம்புவோமானால், அந்த நம்பிக்கை பகுத்தறிவுக்குப் பொருந்தாததென்றே ஏற்படும்.

யாரேனும் ஒருவரது இலேசான தூண்டுதலின் பேரில் முதலில் ஒரு விஷயத்தை உண்மையென நம்புகிறோம். அந்த நம்பிக்கை காலக் கிரமத்தில் வலுப்பெற்றுவிடுகிறது. இப்பொழுது அது நமது சர்வ சாதாரண நம்பிக்கைகளில் ஒன்றாகிவிட்டது. யாரோ ஒருவர், ஏதோ ஒரு இடத்தில், எப்பொழுதோ ஒரு காலத்து ஒரு விஷயத்தை நம்மிடம் சொன்னார். இதை ஆராய்ந்து பாராமலே நாம் ஒப்புக்கொண்டு நம்பிவிட்டோம். நம்மிடம் கூறப் படுகிறவைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் சக்தி நமக்கு உண்டாகாதிருந்த இளம்பருவத் திலேயே, அந்த விஷயத்தை நாம் கேட்டிருக்கலாம். நமது உறுதியான நம்பிக்கைகளில் பல, அப்பொழுது ஏற்பட்டவைகளாகும். நாம் பக்குவ தசை அடைந்திருக்கும் இப்பொழுது அது உண்மையா அல்லவா என்று கேட்கக்கூட நாம் துணிவு கொள்வதில்லை. அது தெளிவான உண்மையென்றே நமக்குத் தோன்றுகிறது. எனவே, அதைப்பற்றிக் கேள்வி கேட்பதே பைத்தியக்காரத்தனம் என்று நாம் உணருகின்றோம்.

ஒரு தீவிர வைஷ்ணவனையும், ஒரு தீவிர சைவனையும் இளம்வயதிலேயே இடம் மாற்றி வளர்த்தால்—அதாவது தீவிர வைஷ்ணவனைத் தீவிர சைவப் பெற்றோரும்; தீவிர சைவனைத் தீவிர வைஷ்ணவப் பெற்றோரும் இளமை முதற்கொண்டே வளர்க்கும் படி செய்தால் அவர்களது பழக்க நம்பிக்கைகள் எல்லாம் நேர்மாறாகவே அமையும். அவர்களில் ஒவ்வொருவனும் தனது நம்பிக்கையே—பழக்க வழக்கமே மெய்யென்று நம்புவான். சமயத்துறையில் மட்டுமின்றி இதர துறைகளிலும் இதே நிலைமையே ஏற்படும். பலதார மணம், சிசுஹத்தி, நரபலி, மாட்டுச் சண்டை, குத்துச் சண்டை, கோழிப்

போர் முதலியவைகள் அமுலில் இருக்கும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு— அவை தீயவை என்றோ தோன்றா; சர்வ சாதாரணப் பழக்க வழக்கமாகவே தோன்றும். அவர்களுக்கு, அவை அசாதாரணமான பழக்கங்கள் என்றோ ஒழுக்கத்துக்கு முரணான பழக்கங்கள் என்றோ தோன்றமாட்டா.

குற்றப் பரம்பரையினர் வாழும் நகரத்தின் ஒரு பகுதியிலே, குற்றப் பரம்பரையினருக்கு இடையிலே, ஒருவர் வளர்ந்து வந்தால் அவருடைய பழக்க வழக்கங்கள் ஏனையோர் பழக்க வழக்கங்களுக்கு மாறுபட்டனவாகவே இருக்கும். ஒரு ஆங்கிலப் பெண்ணை ஒரு ரஷ்ய மாது ஸ்வீகாரம் செய்து, ரஷ்யக் குடும்பத்தில் ரஷ்யப் பழக்க வழக்கப்படி வளர்த்தால், அவளுடைய பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் ரஷ்யப் போக்கிலேயே இருக்குமே ஒழிய, ஆங்கிலப் போக்காக இருக்காது. இதுபோலவே நமது அனேக அதிதீவிர நம்பிக்கைகளுக்குக்கூட நமது வளர்ப்பு முறையே காரணமாகும்.

இளமைப் பருவம் கடப்பதுடன் புதுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் குணமும் உண்மையில் நின்றுவிடுவதில்லை. நம்மையறியாமலேயே நமது வாழ்நாள் முழுவதும் புதுப்புதுக் கருத்துக்களை பிரதிதினமும் ஏற்றுக்கொண்டே இருக்கிறோம். இதற்குப் பத்திரிகைகளும் விளம்பரங்களுமே காரணம். பொதுவாக அனேக விஷயங்களைப்பற்றி நுட்பமாகச் சிந்தனை செய்வதே இல்லை. நாம் பெரிதும் கிளிகள் மாதிரியே நடந்து வருகிறோம்; பிறர் சொல்லுவதை நம்புகிறோம்; பிறர் செய்வதைப் பின்பற்றுகிறோம்.

இளமைப் பருவம் கடந்த பிறகும்—நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் கருத்துக்களுக்குப் பொருத்தமான கருத்துக்களைத்தான் ஒப்புக்கொள்கிறோம்; மற்றவைகளை நிராகரிக்கிறோம்.

'எல்லோரும் அப்படியே சொல்கிறார்கள், அதனால் நம்புகிறோம்' என்ற ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு தனியிடம் வகுக்க வேண்டியதுதான். அவை தெளிவான உண்மைகள் ஆக மாட்டா. அப்பேர்ப்பட்ட விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட தனிமனிதன் கூறியவைகளாயிருக்க மாட்டா. அவை யாரோ ஒருவராலோ, பலராலோ கூறப்பட்டு—பரம்பரையாய் நம்பப்பட்டு வந்தவைகளாக இருக்கலாம். அல்லது, மக்களின் 'அய்தீக நம்பிக்கை'களாகவும் இருக்கலாம். அப்படியானால் அவை 'வாரிசு உரிமைப்படி' நாம் பெற்ற சமூக (சொத்து)—நம்பிக்கைகளாகும். எனவே, ஒரு நம்பிக்கை மிகவும் பழமையானது என்ற ஒரே காரணத்தினால்மட்டும் அது ஆதாரமுடைய உண்மையாகிவிடமாட்டாது.

சந்தேகத்துக்கு இடமில்லாதபடி, வெளிப் பார்வைக்கு உண்மையாகத் தோன்றுபவைகள் விஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

'ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதே ஆபாசமானது, அனாவசியமானது—துரோகமானது' என்ற உணர்ச்சி மக்களுக்கு இருக்குமானால் அந்த விஷயம் பகுத்தறிவுக்கு முரணானது என்றுதான் கூறப்படும்.

'அது தெளிவான பொது உண்மை. அதைப்பற்றிச் சந்தேகம் கொள்வதோ, ஆராய்ச்சி செய்வதோ அனாவசியம்' என ஏற்படுமானால், மக்கள் அறிவு வளர்ச்சியின் சரிதம் முழுவதிலும் அப்பேர்ப்பட்ட தெளிவான பொது உண்மைகளே நிறைந்திருக்கின்றன. ஆராய்ச்சியில் அவை ஆதாரமற்றவை என்றும் வெளியாகி யிருக்கின்றன. உதாரணமாக, அடிமை வர்த்தகம் இயற்கையானது, நியாயமானது. இன்றியமையாதது என்றே வெகு காலமாக நம்பப்பட்டு வந்தது. மக்களில் பல வகுப்பார் இயல்பாக அடிமைகளாகவே இருந்துவருகின்றனர்; அடிமை வாழ்க்கையையே பெரிதும் விரும்புகின்றனர். அதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளவே இடமில்லை.

மற்றும், வட்டமாக அன்றி இதர முறைகளில் கிரகங்கள் சுற்றுகின்றன என்று நம்புவது வெகுகாலமாக அசாத்தியமாகவே இருந்து வந்தது. வட்ட வடிவம் அல்லது

மண்டலம் மேற்பார்வைக்கு ஒரு பூர்ணமான உருவம்; எனவே கிரகங்கள் எல்லாம் வட்டமாகச் சுற்றுகின்றன என நம்புவதே இயற்கையானது; சாத்தியமானது. ஆனால், இந்த நம்பிக்கையை ஒழிக்க அநாதி காலமாக நடந்துவந்திருக்கும் போராட்டம் சரித்திரத்திலேயே மிகவும் அற்புதமானதாகும்.

உணர்ச்சிக்கு இருதயமே ஆதாரமென்றும் மூளை அல்ல என்றும் முன்னோர் நம்பி வந்தனர். இன்றோ பெரும்பாலோர் மூளையின் உதவியினால் நாம் சிந்தனை செய்வதாகவே நம்புகிறார்கள். மூளையின் உதவியின்றி மனிதனுக்குச் சிந்திக்கவே முடியாதென்றே தற்காலத்தவர்களில் பெரும்பாலோர் கூறுகிறார்கள். எனினும் முன்னோர் மாறாகவே நம்பினார்கள்.

பூமி பரப்பானதென்பது தெளிவான உண்மையாகத் தோன்றியதினால் வேறு விதமாக அபிப்பிராயப்படுகிறவர்கள் கேலி செய்யப்பட்டார்கள்—தூற்றப்பட்டார்கள்.

பளுவான பொருள்கள் இலேசான பொருள்களைவிட விரைவாக விழுமென இரண்டாயிர வருஷகாலம் தடையின்றி நம்பப்பட்டு வந்தது. அதற்கு அரிஸ்டாட்டில் அபிப்பிராயமும் மேற்கோளாகக் காட்டப்பட்டது. உண்மை வேறுவிதமானதென்று கலிலியோ நிரூபித்துக் காட்டும்வரை மக்கள் அவ்வாறே நம்பி வந்தனர். ஆராய்ந்து பாராமல் கண் மூடித்தனமாக நம்பப்படுபவைகள் எல்லாம் ஆதாரமுடைய உண்மைகளாகிவிடமாட்டா. அத் தகைய தப்பு நம்பிக்கைகளை உடைத்தெறிவதிலேயே அறிவு வளர்ச்சியடைகிறது.

சுயநலப்பற்றினால் பல நம்பிக்கைகள் அமுலில் இருந்து வருகின்றன. தற்கால மனோதத்துவ சாஸ்திரப்படி பார்த்தால், இவ்விஷயத்தில் சந்தேகத்துக்கே இடமில்லை. சில விஷயங்களை நம்புவது நமக்கு இலாபகரமாயிருப்பதினாலேயே அவைகளை நாம் நம்பி வருகிறோம். பொதுஜன மதிப்பைப் பெறுவதற்காகவும் நாம் பல விஷயங்களை நம்புகிறோம்; அல்லது நம்புவதாகப் பாவனைசெய்கிறோம். ஆனால், அரசியல் அபிப்பிராயங்கள் உட்பட சகல அபிப்பிராயங்களும் சுயநலம் பற்றியவை என்றும் கூறிவிட முடியாது. எனினும், நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் சுயநலமும் ஒரு காரணமென்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது.

'சுயநலம்' என்பது பொதுவாக, மக்களது ஜீவனோபாயத்துக்குரிய வழிகள், பணம் தேடுதல் முதலியவைகளையே குறிக்கும். ஆனால், சமூக வாழ்வில் ஒருவனுக்கு ஏற்படும் நலத்தையும் நாம் சுயநலத்தோடு சேர்க்கலாம். பொதுஜன மதிப்பைப் பெறும் பொருட்டும் நாம் பல விஷயங்களை நம்புவதாக அல்லது பாவனை காட்டுவதாக ஏற்கனவே கூறியிருக்கிறோம். இதுவும் சுயநலம் பற்றியதாகும். ஒருவனது வாழ்நாளின் வெற்றியே பொதுஜன மதிப்பைப் பொறுத்திருக்கிறது. சில ஸ்தாபனங்களையோ இயக்கங்களையோ ஆதரிப்பதனாலோ, நடத்துவதனாலோ சிலருக்கு பொதுஜன மதிப்பும் வாழ்க்கை வெற்றியும் ஏற்படுகிறது. சமூக வாழ்வில் தாம் பெற்றிருக்கும் ஸ்தானம் அல்லது பதவிகள் காரணமாக சிலர் அனேக விஷயங்களை நம்பவேண்டியதாக ஏற்படுகிறது. அவ்வாறு நம்பவில்லையானால் அவர்களுடைய மதிப்பும் ஒழிந்துபோகும்; வாழ்வும் நஷ்டமாகும்.

தனது இயல்பான குணத்துக்கு ஆதாரம் தேடும் பொருட்டும், தனது நிலைமையைக் காப்பாற்றும் பொருட்டும், தனது நடத்தை நியாயமென நிரூபிக்கும் பொருட்டும் சிலர் வேண்டுமென்றே சில விஷயங்களை அல்லது கொள்கைகளை நம்புகிறார்கள்; அல்லது நம்பும்படி ஏற்படுகிறது. சோம்பேறிகளும் பித்தலாட்டக்காரர்களுங்கூடத் தமக்கு ஆதரவாகச் சில அபிப்பிராயங்களையோ கொள்கைகளையோ காட்டக்கூடும். நமது உபதேசிகளிலும், பிரச்சாரகர்களிலும் பெரும்பாலோர் வாலிழந்த நரிக்கு ஒப்பானவர்களே.

வீண் அபிமானம் காரணமாகவும் பலர், ஆதாரமற்றவைகளை உண்மையென நம்புவதுண்டு. ஆளையோ, சம்பவத்தையோ, ஸ்தாபனத்தையோ பற்றிய அபிமானத்தினாலும் துவேஷத்தினாலும் ஆதாரமற்றவைகளைப் பலர் மெய்யென நம்புவதுண்டு.

சிறுவயதில் பெற்றோர்களுக்கு அடங்கி நடக்காத பிள்ளைகள் பெற்றோர் அபிப்பிராயங்களுக்கு அல்லது நம்பிக்கைகளுக்கு முரணாகவே நடந்து வருகிறார்கள். அதுபோலவே பெற்றோரை நேசிக்கும் பிள்ளைகள் அவர்களது தப்பு அபிப்பிராயங்களையும் ஆதரிக்கின்றனர்; நம்புகின்றனர்.

வயதுவந்த பிறகு கொடிய பிணக்கினால் சிலருடைய அபிப்பிராயங்கள் மாறுபடுவதுண்டு. ஒருவன் பேரிலுள்ள பகை அவனது அபிப்பிராயங்களையும் பாதிக்கிறது. நம் எதிரிகளின் அபிப்பிராயங்களைத் தகர்த்தெறிவதில் நாம் பெரிய மகிழ்ச்சி கொள்வதில்லையா? அதுபோலவே, ஒருவன் மீதுள்ள நட்பினாலும் அவனது அபிப்பிராயங்களை ஆதரிப்பதில் நாம் பெரிய மகிழ்ச்சியடைகிறோம்.

சிலர் காலப்போக்கையொட்டி சில அபிப்பிராயங்களையும் நம்பிக்கைகளையும் ஆதரிப்பதுண்டு. ஆனால் காலப்போக்கு மாறுந்தோறும் நாம் அபிப்பிராயங்களைப் பொதுவாக மாற்றிக்கொள்வதில்லை. வெகு சீக்கிரத்தில் நமது மனோநிலை உறுதியடைந்து விடுகிறது.

ஒரு அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டு விட்டால் அது அப்படியே நிலைத்து வருவதே சகசமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட முறையில் சிந்தனை செய்வதனால் அம் மாதிரி செய்வதே சுலுவாகத் தோன்றுகிறது.

சிலர் கதை சொல்லுவதில் நிபுணர்களாயிருக்கிறார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட அபிப்பிராயங்களை அல்லது வாதங்களை விளக்குவதில் சமர்த்தர்களாயிருக்கிறார்கள். 'கிராமபோன்' மாதிரி வேலை செய்யும் பல புருஷர்களும், பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் பழங்கதைகளைத் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டே இருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைக் கிளப்பிவிட்டால் போதுமானது—அவர்கள், அதைப்பற்றி மூச்சுவிடாமல் பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

பொதுவாக எல்லா நம்பிக்கைகளும் அபிப்பிராயங்களும் அப்பேர்ப்பட்டவைகளே. சில காலங்களுக்குப் பிறகு அவை நமது உள்ளத்து உறைந்துவிடுகின்றன. இளமையாயிருக்கும்போது பழைய கருத்துக்களை மாற்றிப் புதப்புதுக் கருத்துக்களைச் சம்பாதித்துக் கொள்கிறோம். வயது முதிர முதிர புதுக் கருத்துக்களை நாம் அவ்வளவாக நாடுவதில்லை. நாம் பழமைக் களஞ்சியமாகி விடுகிறோம்.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 5—கட்டுரை—1936]

6. மூடப் பண்டிகைகள்

1. வருஷப் பிறப்பு

இங்கிலீஷ் புதுவருடம் பிறந்தது என்று மக்கள் அதை ஒரு பண்டிகைபோல் கொண்டாடினார்கள். 'புதிய வருடம் உங்களுக்கு ஒரு சந்தோஷகரமான வருஷமாய்க் கழிய வேண்டும்' என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லிக்கொண்டார்கள்.

தமிழ் வருடப் பிறப்புக்குங்கூட சில இடங்களில் இம் மாதிரி வாழ்த்துச் சொல்லிக் கொள்வதும், சன்மானம் வழங்கிக் கொள்வதும் உண்டு.

இவை ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக்கொள்ளும்போது தலைப்பில் 'மகா-ா-ா-ஸ்ரீ' என்று போடுவதும்; மேல் விலாசம் எழுதும்போதும் ஒருவருக்கொருவர் 'மகா-ா-ா-ஸ்ரீ' என்று போடுவதும் எப்படி ஒரு பத்ததியாகவும் வழக்கமாகவும் இருந்து வருகின்றதோ, அதுபோல்தான் புத்தாண்டு வாழ்த்தும் இருந்துவருகின்றது.

அனுபவத்தில் எவ்வித வாழ்த்தும் மக்களுக்கு யாதொரு பயனும் அளிப்பதில்லை. அவனவனுடைய நிலைமையில் இவ் வாழ்த்துக்களால் எவ்வித மாறுதலும் ஏற்படுவது மில்லை.

ஆகவே, இவ் வாழ்த்துக்களையும், புது வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களையும் பல வித மூடப் பழக்கவழக்கங்களில் ஒன்றாகத்தான் கருதவேண்டுமே ஒழிய—மற்றபடி இதில் எவ்வித உபயோகமும் இல்லை. ஆதலால், நாம் இதைக் கொண்டாடவில்லை என்பதோடு, புது வருடப் பிறப்புக்காக நாம் யாரையும் வாழ்த்தவும் போவதில்லை.

['பகுத்தறிவு'-தலையங்கம்—6-1-1935]

2. சரஸ்வதி பூசை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சரஸ்வதி பூசை என்பது ஓர் அர்த்தமற்ற பூசை. கல்வியையும் தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி—அதற்கு சரஸ்வதி என்று பெயர் கொடுத்து, அதைப் பூசை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்றும் சொல்லி, நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி, கல்வி கற்கச் சொந்த முயற்சி இல்லாமல் சாமியையே நம்பிக்கொண்டு இருக்கும்படி செய்துவிட்டு, நாம் அந்தச் சாமி பூசையின் பேரால் கொடுக்கும் பணத்தைக்கொண்டே அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளியாகிக்கொண்டு நம்மைப் படிப்பு வரமுடியா 'மக்குகள்' என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

முதலாவது, சரஸ்வதி என்னும் சாமியின் சொந்த யோக்கியதையைக் கவனித்தால், அது பார்ப்பனர்கள் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது, சரஸ்வதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட பிறகு அழகைக் கண்டு அந்த பிரம்மனாலேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில், அவள் பிரம்மனைத் தகப்பன் என்று கருதி அதற்கு உடன்படாமல் பெண் மான் உருவெடுத்து ஓடவும், பிரம்மன் தானும் ஓர் ஆண் மான் உருவெடுத்து அவளைப் பின் தொடர்ந்து ஓடவும், சிவன் வேட உருவெடுத்து ஆண் மானைக் கொல்லவும், பிறகு சரஸ்வதி அழுது சிவபிரானால் மறுபடியும் உயிர்ப்பிக்கச் செய்து பிரம்மனுக்கு மனைவியாகச் சம்மதித்ததாக சரஸ்வதி உற்பவக் கதை சொல்கிறது. அதாவது, தன்னைப் பெற்றெடுத்த தன் தகப்பனையே மணந்துகொண்டவள் சரஸ்வதி என்று ஆகிறது.

மற்றொரு விதத்தில் பிரம்மாவுக்குப் பேத்தி என்று சொல்லப்படுகிறது. அதாவது, பிரம்மா ஒரு காலத்தில் ஊர்வசியின்மீது ஆசைப்பட்டபோது வெளியான இந்திரியத்தை ஒரு குடத்தில் விட்டுவைக்க, அக் குடத்திலிருந்து அகத்தியன் வெளியாக, அவ்வகத்தியன் சரஸ்வதியைப் பெற்றான் என்று சொல்லப்படுகின்றது. அதனால் பிரம்மாவுக்கு சரஸ்வதி, மகன் வயிற்றுப் பேத்தி ஆகிறாள். எனவே, சரஸ்வதியின் பிறப்பும் வளர்ப்பும் நடவடிக்கையும் மேற்படி பார்ப்பனப் புராணப்படி மெத்த ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூசை செய்கிறார்கள் என்பது இதைவிட மிகவும் வேடிக்கையான விஷயமாகும். அதாவது, சரஸ்வதி வித்தைக்கு அதிபதியான தெய்வமாதலால் வித்தையின்பயன் தொழிலென்றும், தொழிலுக்கு ஆதாரமானவை ஆயுதங்கள் என்றும் கருதிக்கொண்டு—சரஸ்வதிபூசை என்றும் ஆயுதபூசை என்றும் ஒரு நாளைக் குறித்துக்கொண்டு, அந்தநாளை விடுமுறையாக்கி, புத்தகங்களையும் ஆயுதங்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தனது ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்களையும் தராசு, படிக்கல், அளவு மரக்கால், படி, உழக்கு, பெட்டி முதலியவைகளையும், தொழிலாளிகள் தங்கள் தொழில் ஆயுதங்களையும், இயந்திரக்காரர்கள் இயந்திரங்களையும், மாணாக்கர்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மைகளையும், தாசிகள் தங்கள் ரவிக்கை, சேலைகளையும்,

நகைகளையும், வாத்தியக்காரர்கள் வாத்தியக் கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொருவரும் அவரவர்கள் இலட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான்களை வைத்துப் பூசை செய்கிறார்கள்.

இதனால் அந்தத் தினத்தில் தொழில் நின்று அதனால் வரும்படிகளும் போய், பூசை, ஓய்வு முதலிய ஆடம்பரங்களுக்காகத் தங்கள் கையில் இருக்கும் பணத்திலும் ஒரு பாகத்தைச் செலவு செய்தும், போதாவிட்டால் கடன்வாங்கியும் செலவு செய்வதைவிட யாதொரு நன்மையும் ஏற்படுவதாகச் சொல்லுவதற்கே இல்லாமல் இருக்கின்றது. ஆயுதத்தை வைத்துப் பூசை செய்துவந்த—வருகின்ற அரசர்கள் எல்லாம் இன்றைய தினம் நம் நாட்டில் ஆயுதத்தை வைத்துப் பூசை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கி முனையில் மண்டிபோட்டு சலாம் செய்துகொண்டே 'இஸ்பேட் ராசாக்களாக' இருந்து வந்தார்களே ஒழிய, ஒரு அரசனாவது சரஸ்வதிபூசை, ஆயுதபூசை ஆகிய பூசையின் பலத்தால் தன் காலில் தான் தைரியமாக நின்றவனாகக் காணோம்.

சரஸ்வதிபூசை செய்யும் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்குப் பயந்து பொய்க் கணக்கு எழுதாமலோ, தப்புநிறை நிறுக்காமலோ, குறை அளவு அளக்காமலோ இருக்கிறார்களா என்று சொல்லமுடியாது. அதுபோலவே, கைத்தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களிடத்தில் வெகு பக்தியாய் அவைகளைக் கழுவி, சந்தனம், குங்குமம், பொட்டு முதலியவைகள் போட்டு விழுந்து கும்பிடுவார்களே தவிர—ஒருவராவது நாணயமாய் நடந்து கொள்கின்றார்கள் என்றாவது அல்லது அவர்களுக்குத் தாராளமாய் தொழில் கிடைக்கின்றது என்றாவது சொல்லுவதற்கு இல்லாமலே இருக்கின்றார்கள். அதைப்போலவே, புத்தகங்களையும், பென்சிலையும், கிழிந்த காகிதக் குப்பைகளையும் சந்தனப் பொட்டு போட்டுப் பூசை செய்கின்றார்களே அல்லாமல்—காலோ கையோ பட்டுவிட்டால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கும்பிடுகிறார்களே அல்லாமல்—நமது நாட்டில் படித்த மக்கள் 100-க்கு 5 பேருக்குள்ளாகவே இருந்து வருகின்றார்கள். இவ்வளவு ஆயுத பூசை செய்தும், சரஸ்வதி பூசை செய்தும், இவ்வளவு விரதங்கள் இருந்தும் நமது அரசர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள்; நமது வியாபாரிகள் நஷ்டமடைந்து கொண்டு வருகின்றார்கள். நமது தொழிலாளர்கள் தொழிலில்லாமல் பிழைப்பைக் கருதி வேறு நாட்டிற்குக் குடிபோகின்றார்கள்; நமது மக்கள் 100-க்கு 5 பேரே படித்திருக்கின்றார்கள். சரஸ்வதியின் சாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்துக்கு 9 பேரே படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

நாம் செய்யும் பூசைகளை சரஸ்வதி அங்கீகரிக்க வில்லையா? அல்லது, சரஸ்வதி தெய்வத்திற்கும் இந்த விஷயங்களுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லையா? அல்லது, சரஸ்வதி என்கின்ற ஒரு தெய்வமே பொய்க் கற்பனையா? என்பவையாகிய இம் மூன்றில் ஒரு காரணமாகத்தான் இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் இவைகள் சுத்த முட்டாள்தனமான கொள்கைகள் என்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரத் தேசத்தில் சரஸ்வதி என்கின்ற பேச்சோ கல்வித் தெய்வம் என்கின்ற எண்ணமோ சுத்தமாய்க் கிடையாது.

அன்றியும், நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரஸ்வதியாய்க் கருதித் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டும், நமக்குக் கல்வி இல்லை. ஆனால், வெள்ளைக்காரன் மல உபாதைக்குப் போனால் 'சரஸ்வதியைக்' கொண்டே மலம் துடைத்தும்—அவர்களில் 100-க்கு 100 ஆண்களும் 100-க்கு 60 பெண்களும் படித்திருக்கிறார்கள். உண்மையிலேயே சரஸ்வதி என்ற ஒரு தெய்வம் இருக்குமானால் பூசை செய்பவர்களைத் தற்குறிகளாகவும், தன்னைக் கொண்டு மலம் துடைப்பவர்களை அபார சக்தி வாய்ந்த அறிவாளிகளாகவும் கல்விமான்களாகவும் செய்யுமா என்பதைத் தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையிலே யுத்த ஆயுதம், கைத்தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் சரஸ்வதி என்னும் தெய்வ அம்சமாய் இருக்குமானால்—அதைப் பூசை செய்யும்

இந்த நாடு அடிமைப்பட்டும், தொழிலற்றும், வியாபாரமற்றும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கவும்—சரஸ்வதியைக் கனவிலும் கருதாது, சரஸ்வதி பூசை செய்கின்றவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாட்சியுடனும்—தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள்! இந்தப் பூசையின்மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகின்றது, பாருங்கள்!

இராசாக்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, சாமிகள் கொலுவிருப்பது, இதற்காக ஜனங்கள் பணம் செலவு செய்வது, அறிவு செலவு செய்வது, பத்து இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குப் பொம்மைகள், சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, கடலை, பொரி, சுண்டல், வடை, மேளவாத்தியம், வாழைக் கம்பம், பார்ப்பனர்களுக்குத் தட்சணை, சமாராதனை, ஊர்விட்டு ஊர் போக இரயில் சார்ஜ்—ஆகிய இவைகள் செலவாகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். இவைகள் எல்லாம் யார் வீட்டுப் பணம்? தேசத்தின் செல்வமல்லவா என்றுதான் கேட்கின்றேன். ஒரு வருஷத்தில் இந்தப் பூசையில் இந்த நாட்டில் செலவாகும் பணமும் நேரமும் கோடி ரூபாய் பெறுமானது என்று கணக்குப் பார்த்தால், மற்ற பண்டிகை, உற்சவம், புண்ணிய தினம், அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின்மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்தப் பொருளாதார இந்திய தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை.

[ஈரோடு உண்மைநாடுவோர் சங்கத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

3. விநாயகர் சதுர்த்தி

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இன்றைய தினம் நம் மக்களெல்லாம் வெகு மும்முரமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பண்டிகை விநாயகர் சதுர்த்தி. இது எவ்வளவு காட்டுமிராண்டித்தனம்? இதன் ஆபாசமான கதைகளைத் தெரிந்தால் இவர்கள் அப்படிச் செய்வார்களா?

விநாயகர் என்னும் கடவுள் இந்த நாட்டிலே உற்பத்தியான கடவுள் என்றும் சொல்லமுடியாது. வடநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கே இவ்வளவு கூத்தடிக்கப் படுகின்றது. ஆற்றங்கரையோரம், அரசமரத்தின்கீழ், குளத்தங்கரையிலும் வீதிகளின் சந்தியிலும் வைக்கப்பட்டு இருக்கும் இந்தக் கடவுளின் யோக்கியதையைச் சொல்லப்போனால் அது நம் 'கடவுள்'களுக்கே வெட்கக்கேடாகும். அதாவது, இவருடைய பிறப்பு—பின் வரலாறு அந்தப் பார்ப்பனர்களாலேயே எழுதப்பட்ட புராணங்களினின்றும் பார்த்தாலும் கூட, மிக மிக மோசமான கதை. விநாயகர் பிறந்த வரலாறு மூன்றுவிதமாக இருக்கிறது. இவற்றிலிருந்து இது உண்மையில் கடவுள் என்று சொல்ல முடியுமா என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை நம் மக்களுக்கு.

சிவன் என்ற கடவுளின் மனைவி பார்வதி குளிக்கச் சென்றாளாம். தான் குளிக்கின்றபோது யாராவது அந்த அறைக்குள் புகுந்துவிடக்கூடாதே என்று பயந்து, குளிக்கும் அறைக்கு வெளியிலே காவல் வைப்பதற்கு ஒரு உருவத்தை உற்பத்தி செய்தாள். அந்த உருவத்தை எப்படி உற்பத்தி செய்தாள் என்பதுதான் கடவுள் தன்மையை விளக்கும் அதிசயம்.

முதலாவதாக—பெண்கள் குளிக்கும்போது அந்த அறைக்கு ஆண்கள் போவது அங்கு சர்வசாதாரணமாக இருந்திருக்கவேண்டும். இல்லாமலிருந்தால் யாராவது வந்து விடுவார்களே என்ற பயம் தேவையில்லை. காவலுக்கும் ஆள் தேவை இல்லை. அடுத்தபடியாக, ஆண்கள் யாராவது வந்து விடுவார்கள் என்ற பயம் இருந்தால், விநாயகர் என்று செய்யப்பட்ட அந்த உருவம் ஆண் உருவம் தானே! ஆண்கள் வந்துவிடக் கூடாதென்ற

நினைப்பினால் ஒரு ஆணையே சிருஷ்டித்துச் சதா நேரமும் பார்த்துக்கொண்டு இருக்கச் செய்தது எவ்வளவு புத்திசாலித்தனம்? குளிப்பதற்காகச் சென்ற பார்வதி தன் உடம்பின் மேல் உள்ள அழுக்கை உருட்டி ஒரு உருண்டை பிடித்து அதை வாசல்படியில் வைத்து உயிர் கொடுத்தாள் என்று கூறப்படுகிறது. இதுதான் விநாயகர்.

ஆகவே, ஒரு மனிதனுடைய எடைக்கு ஏற்றவாறு அத்தனை பெரிய அழுக்கு பார்வதியின்மேல் இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா? அதுவரை ஒருநாளாவது பார்வதி குளித்து இருப்பாளானால் அந்த மாதிரியான அழுக்குப் பிடிக்குமா? ஆகவே, அவர்கள் சுத்த ஆபாசமும் அசுத்தமும் நிறைந்தவர்கள் தாம் என்று கருத வேண்டியது இருக்கிறது. அடுத்தபடியாக அவள் குளிக்கும்போது அங்கே வருகிறார் சிவன்! சிவனைக் கண்டதும் உமா கேட்கிறாள்; 'இங்கே எப்படி வந்தீர்? நான் குளிக்கும் போது நீர் வரலாமா? ஒரு ஆளை நடையில் காவல் வைத்து இருந்தேனே, அவனை எப்படித் தட்டிக் கழித்துக்கொண்டு வந்தீர்?' என்று. அதற்கு பரமசிவன் கூறுகிறார்: 'நான் வரும்போது நடையிலே ஒருவன் நின்றுகொண்டு என்னை வழிமறித்தான். நான் இங்கே வரவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவன்—விடமாட்டேன்; யாராய் இருந்தாலும் சரி; கணவனாய் இருந்தால்கூடப் பாதகம் இல்லை. விடவேமுடியாது என்று தடுத்தான். ஆகையால் என் கை வாளால் அவன் தலையைச் சீவினேன். பின்னர் தடையின்றி வந்தேன், உன்னைக் காண' என்று கூறுகிறார்.

இதிலே, குளிக்கும் பெண் தன்மனைவியாக இருந்தாலும் கூட அவனுக்கு அங்கே என்ன வேலை? இரண்டாவதாக, அதற்காக ஒரு மனிதனையே கொலை செய்து கொண்டு போகவேண்டிய அவ்வளவு பெரிய சங்கதி என்ன வந்துவிட்டது? மூன்றாவதாக, அவன் கணவன் என்று தெரிந்தபின்னும், அவன் பரமனை வழிமறிப்பது எவ்வளவு முட்டாள் தனம்? இதையெல்லாம் யோசனைசெய்தால் இது ஒரு அண்டப் புளுகு என்று, அல்லது முட்டாள்தனமான நடவடிக்கை என்பது விளங்கவில்லையா?

மேலும், இதை அறிந்த பார்வதி துடிதுடித்துக் கொண்டு ஓடிவந்து பார்க்கிறாள். தலை துண்டாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், துண்டாக்கப்பட்ட தலையைக் காண வில்லை. உடனே பரமனை நோக்கி, 'நாதா! என் அருமைச் செல்வம்—என் குழந்தை போன்று நான் உற்பத்திசெய்த அந்த அருள் செல்வத்தை எப்படியாவது எனக்குத் தந்து தான் தீரவேண்டும். இல்லையேல் என்னால் பொறுத்துக்கொண்டு இருக்கமுடியாது!' என்று கூறுகிறாள்.

பின்னர், இதைக்கேட்ட பரமன் என்ன செய்வதென்று யோசித்துக் கடைசியாக ஒரு யானையின் தலையைக் கொய்து அந்த முண்டத்தின் மேல் வைக்கிறார். உடனே அந்த முண்டம் யானைத் தலை உடைய விநாயகர் என்ற பெயருடன் உருப் பெறுகிறது. விநாயகர் பிறந்த வரலாற்றில் இது ஒன்று.

மற்றொன்று; பரமனும் பார்வதியும் ஒருநாள் வனத்திற்குச் சென்றபோது ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் கூடிக்கொண்டு இருந்ததைப் பார்வையிட்டனர்; உடனே அதே ஆசையால் பரமனும் பார்வதியும் கூடவே பிறந்ததுதான் விநாயகர் என்று கூறு கிறார்கள்.

இன்னொன்று; ஒருநாள் பார்வதியும் பரமனும் போய்க்கொண்டிருக்கையில் ஒரு யானையின் உருவம் (பொம்மை) ஒன்றைக் கண்டார்களாம். ஆகவே அதன்மேல் மோகம் கொண்ட பார்வதிக்கும் அதுபோல் பிள்ளை பிறக்கவேண்டும் என்று நினைத்தாளாம். ஆகவே அப்படிப் பிறந்ததுதான் விநாயகர் என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த மூன்று கதைகளையும் தெரிந்த மக்களே இந்தப்படி மண்டையை உடைப்பார்கள் என்றால், இவர் களின் புத்தி கெட்ட தன்மையை— முட்டாள்தனத்தைப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியுமா? இந்தப்படியாக ஆபாசமான கதைகளை எழுதி நம்மை நம்பும்படி செய்து

விட்டனர், பார்ப்பனர்கள். ஆகவே, இது சிவனும் சுப்பிரமணியனும் வந்த காலத்திலே வந்தது. வடநாட்டான் இங்கு கொண்டுவந்து விளம்பரம் செய்துவிட்டான். அது இப்பொழுது பெரிய கடவுளாக மதிக்கப்பட்டு எல்லாக் காரியங்களுக்கும் முன்னே வைக்கும் ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. ஆனதால்தான் பிள்ளையார் சதுர்த்தி-விநாயகர் சதுர்த்தி என்று ஆடம்பரமான நாளைக் கொண்டாடுகிறார்கள்.

ஆகவே, இதை எல்லாம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தால்—பகுத்தறிவைப் பயன்படுத்திப் புகுந்து பார்த்தால் மனிதனுக்கு இதன் உண்மை புலன் ஆகிவிடும். ஆனால் நாம் அப்படிச் செய்வது இல்லை. இதைத்தான் நாங்கள் கண்டிக்கின்றோம்.

[3-9-1951-ல், மயிலை திருவள்ளுவர் கழக ஆண்டுவிழாவில் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]

4. தாரா சசாங்கம்

ராமசேஷன்: அடே, ஜோசப்! இன்று நல்ல டிராமா என்று நோட்டீஸ் பார்த்தேன்; போகலாமென்றிருக்கிறேன்; நீயும் வருகிறாயா?

ஜோசப்: அது என்னடா அப்பா, அப்பேர்ப்பட்ட நல்ல டிராமா? கொஞ்சம் சொல்லு பார்க்கலாம்.

ராமசேஷன்: அதா? தாரா சசாங்கம்; நல்ல சீன்களும், நல்ல பாட்டுக்களுமுடையது.

ஜோசப்: என்னடா என்னமோ கொசமுசாங்கம் என்று சொல்லுகிறாய்; அதன் கருத்து என்ன?

ராமசேஷன்: உனக்கென்னடா தெரியும்? நீயோ தற்குறி; அது உன் வாயிலேயே நுழைவதில்லை; அதற்கு யார் என்ன செய்வார்கள்?

ஜோசப்: அந்த கிரகமெல்லாம் உன் வாயிலேயே நுழையட்டும்; நல்ல வேளையாக என் வாயில் நுழையவேண்டாம்; அதன் கருத்தென்ன சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன்: தாரா சசாங்கம் என்றால், தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்க்கும் பாகத்தை நாடக ரூபமாய்—பிரத்தியட்சத்தில் காட்டுவார்கள்.

ஜோசப்: அப்படியா? தாரை என்றால் என்ன? சந்திரன் என்றால் என்ன? இரண்டு பேருக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் சொல்லு. அப்புறம் நிர்வாணத்தைப்பற்றியும், எண்ணெய் தேய்ப்பதைப் பற்றியும் கவனிக்கலாம்.

ராமசேஷன்: இனி உனக்கு அஸ்திவாரத்திலிருந்து சொல்லியாக வேண்டும்போல் இருக்கிறது.

ஜோசப்: சும்மாதானா, ஒரு மனிதன் நிர்வாணத்தைப் பார்க்க வருகின்றது? அது இன்னது என்றுகூடத் தெரியவேண்டாமா?

ராமசேஷன்: சொல்லுகிறேன்; கேள்!

ஜோசப்: சொல்லப்பா சொல்லு.

ராமசேஷன்: தேவர்களுக்கெல்லாம் குருவாக பிரகஸ்பதி என்பதாக ஒரு தேவகுரு உண்டு.

ஜோசப்: பொறு, பொறு; யாருடைய தேவர்களுக்கு?

ராமசேஷன்: எங்கள் தேவர்களுக்கு.

ஜோசப்: சரி, சரி. அதுதான் கேட்டேன், எல்லோருடைய தேவர்களுக்கும்—என்று எங்கே சொல்லிவிட்டாயோ என்னமோ என்றுதான் கேட்டுப் பார்த்தேன். அப்புறம்?

ராமசேஷன் : அந்தத் தேவகுருவுக்கு, தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு. தேவர்களுடைய குழந்தைகளையெல்லாம் அந்த பிரகஸ்பதியிடம் கொண்டுவந்து விட்டுத் தான் கல்வி கற்பிக்கின்றது வழக்கம்.

ஜோசப் : நிறுத்து, நிறுத்து. அப்படியானால் அந்த பிரகஸ்பதி யென்கின்றவர் ஒரு வாத்தியாரா ?

ராமசேஷன் : ஆமாப்பா, குரு என்றால் என்ன ? வாத்தியாரென்றால் என்ன ? இரண்டும் ஒன்றுதானே; உனக்கு இதுகூடத் தெரிவதில்லையே; உன்னோடு எப்படி அழுவது ?

ஜோசப் : இரு அப்பா இரு; அதுக்குள்ளே கோபித்துக் கொள்ளவேண்டாம். குரு என்றால், இந்தப் பல்லக்கில் ஆனை, குதிரை, ஒட்டகை, மேளம், வாத்தியம் இதுகளுடன் மிரவணை, (ஊர்வலம்) வந்து கரண்டியில் தண்ணீர் விற்றுப் பணம் கொள்ளையடிக் கிறானே, அந்த ஆசாமியோ என்னமோ,—அவனுக்குச் சொந்தப் பெண்டாட்டி இல்லை என்று சொல்லுகிறார்களே,—அப்படியிருக்க நீ இந்தக் குருவுக்குப் பெண்டாட்டி இருப்ப தாகச் சொல்லுகிறாயே, என்னப்பா அதிசயமாயிருக்குது என்றுதான் யோசிக்கிறேன்.

ராமசேஷன் : அடே இந்த குரு வேறயடா; நீ ஒன்றும் தெரியாமல் உளறாதே!

ஜோசப் : அப்படியானால் அந்தக் குருவுக்கு என்ன பேர் ?

ராமசேஷன் : அவர்களுக்கும் குரு என்றுதான் பெயர். அவர்களெல்லாம் சமயாச் சாரியார்கள், மடாதிபதிகள், லோககுரு, குலகுரு, ஆச்சாரியார், பண்டார சன்னதிகள், சுவாமிகள் என்றும் பலவிதமாகச் சொல்லப்படுவார்கள். நான் சொல்லுகின்ற இவர் தேவ குரு. அதாவது தேவர்களுக்கு உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவர்.

ஜோசப் : நில்லு நில்லு; அவசரமாகப் போகாதே; எனக்குப் புரியவேண்டாமா ? முன் நீ சொன்னாயே லோக குரு என்று, அந்த லோக குரு என்பவர் எந்த லோகத்திற்குக் குரு ?

ராமசேஷன் : என்னப்பா உன்னோடு பெரிய தொல்லையாயிருக்கின்றது ? ஒவ் வொன்றும் உனக்குச் சொல்லித் தொலைக்கவேண்டும்போலிருக்கிறது!

ஜோசப் : சும்மாதானா—நிர்வாணத்தைப் போய்ப் பார்க்கின்றது ? அது இன்ன நிர்வாணம் என்று புரியவேண்டாமா ?

ராமசேஷன் : கேலி பண்ணாதே, விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள்; எங்கள் 'ரிலிஜனை' (மதத்தை) நீ படித்தால்தானே தெரியும்! நடுவில் புகுந்துகொண்டு கேட்டால், சுலபத்தில் புரியும்படி சொல்ல முடியுமா ?

ஜோசப் : ஓ, ஓஹோ! இதெல்லாம் உங்கள் 'ரிலிஜனை' (மதத்தை)ச் சேர்ந்ததா ? அப்படியானால் கவனமாய்க் கேட்கிறேன்; சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன் : லோக குரு என்பது, ஒரு பட்டப்பெயர். அவர் பார்ப்பனர்களில் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரம் சாமியார். அந்தக் கூட்டத்தாரின் செல்வாக்கினாலும் மற்ற மக்களின் அறிவீனத்தினாலும் அவரை எல்லோருக்கும் குரு என்று சொல்லிப் பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இப்படிப் பல பேர்வழிகள் உண்டு. அது போலவே, ஒவ்வொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு சாமியார் என்பவர் உண்டு. அவர்களையெல்லாம் இம் மாதிரிக் கவுரவமான பெயர்களால் அழைக்கின்றது எங்கள் வழக்கம். ஏனென்றால், ஒரு வகுப்புச் சாமியாரை, வேறு ஒரு வகுப்பார் பரிகாசம் பண்ணினால் அப்புறம் அந்த வகுப்புச் சாமியாரை மற்ற வகுப்பார் பரிகாசம் செய்வார்கள். அப்புறம் ஒருவருக்கும் யோக்கியதையில்லாமல் போய்விடும். ஆதலால், ஒருவருக்கு ஒருவர் மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக் கொள்ளுகின்றது வழக்கம். இந்த முறையில்

அவர்களுக்கு அந்தப் பெயர் கிடைத்திருக்கின்றது. ஆதலால், தேவகுரு என்பவர் இதில் சேர்ந்தவருமல்ல; இந்த லோகத்தில் இருப்பவருமல்ல.

ஜோசப்: சரி, இந்தச் சாமியார்களால் உங்களுக்கு என்ன இலாபம்—சொல்லு பார்க்கலாம்.

ராமசேஷன்: இலாபமென்ன; நஷ்டந்தான். வருஷா வருஷம் வந்து வரி வசூல் செய்வதுபோல் பணம் கொள்ளையடித்துக்கொண்டு போகின்றது; அல்லது, மடத்துக்கு முன்னோர்களால் விடப்பட்ட சொத்துக்களின் வரும்படிகளை அவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பது ஆகிய காரியங்கள் தவிர அவர்களால் மக்களுக்குச் சாதிக்கப்படுவது ஒன்றும் கிடையாது.

ஜோசப்: எனக்கு நேரமாய்விட்டது; இந்தச் சாமியார்களைப்பற்றி மற்றொரு நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். இப்போது நிர்வாண காட்சிக்குச் சம்பந்தப்பட்ட அந்தத் 'தேவகுரு' சங்கதியைச் சொல்லு; சீக்கிரம் முடியட்டும்!

ராமசேஷன்: மேலே சொன்ன அந்த பிரகஸ்பதி என்கின்ற தேவகுருவுக்கு, தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு; அந்த அம்மாள் ரொம்பவும் அழகு வாய்ந்தவள்; யவ்வனப் பருவமுடையவள். அந்த பிரகஸ்பதி என்கின்ற குரு தாடியும் மீசையும் முளைத்துப் பார்க்கின்றதற்கு 'கிழப் பிசாசு'போல் இருப்பார். இப்படியிருக்கும் நாளையில் அந்தத் தேவகுருவிடம் படிப்பிக்க சந்திரனை அவன் தாய்தந்தையர்கள் பிரகஸ்பதியிடம் கூட்டிவந்து விட்டார்கள்.

ஜோசப்: ஓடாதே, ஓடாதே! கொஞ்சம் நில்லு; சந்திரன் என்று இப்போது சொன்னாயே, அது யார்?

ராமசேஷன்: அட முட்டாளே! சந்திரன் என்றால் யார் என்றுகூடவா தெரியாது! வானத்தில் தெரிகின்றதே—இராத்திரியில் வெளிச்சம் கொடுக்கின்றதே அந்தச் சந்திரன் தான். இதுகூடவா சொல்லித் தொலைக்க வேண்டும்?

ஜோசப்: கோபித்துக்கொள்ள வேண்டாமப்பா! சும்மாதானா நிர்வாணத்தைப் பார்க்க வருகிறது? வானத்தில் தெரிகின்ற சந்திரனா—ஒருவருக்குக் குழந்தையாகப் பிறந்து பிரகஸ்பதி என்கின்ற குருவிடம் படிக்கக் கொண்டுவந்து விடப்பட்டான்?

ராமசேஷன்: ஆமாம், ஆமாம், ஆமாம். உனக்கு நூறுதரம் சொல்லித்தொலைக்க வேண்டுமாக்கும்.

ஜோசப்: தெரியாதவனுக்கு—என்னைப்போல் தற்குறிக்குத் தெரியும்படியாய்ச் சொல்ல வேண்டாமா? அப்படியானால் நீ சொல்லுகிற சந்திரன் பிறப்பதற்கு முந்தி, வானத்தில் சந்திரன் இருந்ததா, இல்லையா? தவிர, பிரகஸ்பதியிடம் படித்துக் கொண்டிருந்த காலத்தில், வானத்தில் என்ன இருந்தது? எப்போதும் அமாவாசையாகவே இருந்ததா? சற்று விளக்கு, பார்ப்போம்.

ராமசேஷன்: என்னப்பா இழவு, நீ கிறிஸ்தவன் என்பது சரியாய் இருக்கின்றது.

ஜோசப்: திடீரென்று அப்படிச் சொல்லிவிடாதே. இதை உன் தம்பி கேட்பதாகவே நினைத்துக் கொண்டு சமாதானம் சொல்லி விளங்கப்பண்ணப்பா!

ராமசேஷன்: என் தம்பி இந்த மாதிரி கேள்விகள் கேட்பானேயாகில்—அப்போதே அவனை நன்றாய் உதைத்து, இனிமேல் இம்மாதிரி அதிகப் பிரசங்கித்தனமானதும் நாத்திகமானதுமான கேள்விகளைக் கேட்கவேண்டாமென்று சரியானபடி புத்தி கற்பித்திருப்பேன்.

ஜோசப் : என்னடப்பா, கடைசியாக இப்படிச் சொல்லிவிட்டாய்! 'நிர்வாண நாடகம் பார்க்க வா' என்று வெகு ஒழுங்காய்க் கூப்பிட மாத்திரம் உனக்கு அறிவிருக்குது; அந்தக் கதையின் யோக்கியதை என்னவென்று கேட்டால் இப்படிச் சொல்லுகிறாயே! இதுதானா உன்னுடைய மதத் தத்துவம்?

ராமசேஷன் : இல்லையப்பா—அதற்காக நான் சொல்லவில்லை. இம் மாதிரி கேள்விகள் கேட்பதெல்லாம் தப்பு. அதாவது, இதனால் ஒரு மதத் தத்துவத்தை (இன்சல்ட்) அவமானப்படுத்தியதுபோல் ஏற்படுகின்றது. இதையெல்லாம் அறிந்துதான் பெரியவர்கள் —பெரியவான் சொன்னதையும், எழுதி வைத்ததையும் அப்படியே நம்பவேண்டுமென்றும்; நம்பாமல் கேள்வி கேட்பது நாத்திகம் என்றும், பாவம் என்றும் எழுதி வைத்திருக் கின்றார்கள். அதோடு, இப்படித் தர்க்கம் செய்பவனைச் சித்திரவதை செய்து கொன்றுவிட வேண்டும் என்றும் வேதம் சொல்லுகின்றது.

ஜோசப் : நல்ல வேளையாக வெள்ளைக்கார அரசாங்கம் இருப்பதால், நீ கூட என்னைக் கொல்லாமல் விட்டாய்போலும்! வெள்ளைக்கார அரசாங்கம் வேறுவகையில் எவ்வளவோ மோசமானதென்று சொல்லிக் கொள்ளப்படுவதாயிருந்தாலும்—இந்தக் காரியத்துக்காகவாவது இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றுகின்றது. அதிருக்கட்டும்; இதையாவது சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன் : எதை?

ஜோசப் : அதாவது, எப்பொழுது சந்திரன் பிள்ளையாய்ப் பிறந்தான்? எந்த உருவத்தோடு பிறந்தான்? எப்படி, வானத்திற்கு (ஆகாயத்திற்கு)ப் போனான்? அதையாவது சொல்லு பார்ப்போம்!

ராமசேஷன் : இதுவும் அந்த மாதிரிக் கேள்விகளைச் சேர்ந்ததுதான். தெய்வ மூலம், ரிஷி மூலம், நதி மூலம் ஆகியவைகள் ஒன்றும் கேட்கப்படாது என்பதும்; கேட்பதும் அதைத் தெரிய விரும்புவதும் பாபம் என்பதும் எங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளை யாகும். ஆதலால், நான் இவைகளைப் பற்றிக் கவலை எடுத்துத் தெரிந்துகொள்ள முயற்சிக்கவேயில்லை. மற்றபடி, இவைகளை உனக்குச் சொல்லக்கூடாது என்கின்ற நிர்ப் பந்தம் ஒன்றும் எனக்கு இல்லை.

ஜோசப் : சரி; அப்படியானால் அந்த வேதத்தை நீ பார்த்திருக்கின்றாயா? அதில் இம் மாதிரி எழுதியிருப்பது உனக்கு நேரில் தெரியுமா?

ராமசேஷன் : அதை நான் பார்க்கவில்லை; எங்கள் வேதத்தை எல்லோருமே பார்த்துவிட முடியாது.

ஜோசப் : அதென்ன, அப்படி?

ராமசேஷன் : அப்படித்தான்; அதைச் சிலர்தான் பார்க்கலாம். அவர்கள் தவிர மற்றவர்கள் பார்த்தால்—பார்த்தவர்களின் கண்ணைக் குத்த வேண்டும் என்றும்; அதில் உள்ளதைக் காதால் கேட்டால் அந்தக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும்; வாயால் படித்தால் படித்த நாக்கை அறுக்க வேண்டும் என்றும்; மனதில் பதிய வைத்து விட்டால் அந்த நெஞ்சைப் பிளந்து அதை வெளியாக்கிவிட வேண்டும் என்றும் நிபந்தனை இருக்கின்றது.

ஜோசப் : அது எதில் இருக்கின்றது?

ராமசேஷன் : அதுவும் அந்த வேதத்தில்தான் இருக்கின்றது.

ஜோசப் : அதையாவது நீ பார்த்தாயா?

ராமசேஷன் : நான்தான் பார்க்கக்கூடாது என்று முன்னமே சொன்னேனே!

ஜோசப் : பின்னே, உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது ?

ராமசேஷன் : பெரியோர்கள் சொல்லித் தெரிந்தது.

ஜோசப் : அப்படியானால், வேதத்தில் உள்ளது உனக்கும் தெரிந்து—இப்போது எனக்கும் தெரிந்துவிட்டதே ! நீ சொல்லுகின்ற வேத நிபந்தனைப்படி பார்த்தால்—உன் காதிலும் என் காதிலும் ஈயத்தைக் காய்ச்சிவிட்டு, உன் நெஞ்சையும் என் நெஞ்சையும் பிளந்தல்லவா ஆகவேண்டும் ?

ராமசேஷன் : நீ என்னப்பா, தொட்டதற்கெல்லாம் குதர்க்கவாதம் பேசுகின்றாய் ? இப்படியே பார்த்துக்கொண்டு போனால், உலகத்தில் எந்த மதமும்—எந்த வேதமும் நிலைக்க இடம் இருக்காது. இந்த விஷயங்களை யெல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும். ஒரு மாதிரியாகத்தான் பார்க்க வேண்டும்.

ஜோசப் : மற்ற மதங்களையும் வேதங்களையும்பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே; அவைகள் எப்படியோ போகட்டும். அவைகளைப்பற்றி இது முடிந்தவுடன் கவனிக்கலாம். இப்போது உன் சங்கதியை—அதாவது உன் தலைமேல் இருக்கும் பாரத்தைப்பற்றி, நீ உணர்ந்திருப்பதை எனக்குச் சொல்லு ; அதாவது நீ இப்போது சொன்ன 'வேதம்' என்பது யாரால் உண்டாக்கப்பட்டது ?

ராமசேஷன் : அது கடவுளால் உண்டாக்கப்பட்டது.

ஜோசப் : அந்த வேதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று யார் சொன்னார்கள் ?

ராமசேஷன் : அந்த வேதத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜோசப் : வேதத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று உனக்கு யார் சொன்னார்கள் ?

ராமசேஷன் : வேதம் பார்த்த பெரியோர்கள் சொன்னார்கள்.

ஜோசப் : அந்தப் பெரியவர்கள்—அந்த வேதத்தில் உள்ளதைக் கேட்கவும் பார்க்கவும் படிக்கவும் யோக்கியதை இல்லாத உனக்கு எப்படிச் சொன்னார்கள் ?

ராமசேஷன் : இதெல்லாம்தான் அதிகப் பிரசங்கித்தனம்—குயுக்தி வாதம்—தர்க்க வாதம்—நாத்திகம் என்று சொல்லுவது.

ஜோசப் : சரி சரி; கோபித்துக் கொள்ளாதே. நிர்வாணக் கதையையாகிலும் சொல்லித் தொலை. 'சந்திரனை' அவன் பெற்றோர்கள் பிரகஸ்பதியிடம் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூட்டிக்கொண்டு வந்தார்கள் ; அப்புறம் ?

ராமசேஷன் : அப்படிக் கேள் ; சொல்லுகின்றேன். கூட்டிக்கொண்டு வந்தார்களா ? சரி ; கூட்டிக்கொண்டு வந்தார்கள். பிரகஸ்பதியும், சந்திரனைத் தனது மாணாக்கனாக ஏற்றுக் கொண்டார்.

ஜோசப் : சரி ; அப்புறம் ?

ராமசேஷன் : சந்திரனுக்கு, பிரகஸ்பதி படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நாளையில் ஒருநாள் அவசரமாக தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பிரகஸ்பதியைக் கூப்பிட்டனுப்பினான்.

ஜோசப் : சரி, கூப்பிட்டனுப்பினான். அப்புறம் ?

ராமசேஷன் : பிரகஸ்பதி, தன் சம்சாரமாகிய தாரையைக் கூப்பிட்டுச் சந்திரனை சரியாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும் ; தன் மாணாக்கனாகிய சந்திரனைக் கூப்பிட்டுத் தாரையைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் கட்டளை இட்டு விட்டு தேவலோகத்திற்குப் போய்விட்டார்.

ஜோசப் : சரி சரி; கொஞ்சம் நில்லு; இங்கே ஒரு சின்ன சந்தேகம். என்ன வென்றால், அந்தப் பிரகஸ்பதி தேவலோகம் போய்விட்டார் என்று சொன்னாயே—அப்படியானால், இது, அதாவது—அப்போது சந்திரன், தாரை, பிரகஸ்பதி ஆகியவர்கள் இருந்து வந்தது எந்த லோகம்?

ராமசேஷன் : இதுதானே அதிகப் பிரசங்கித்தனம்,—நாத்திகம் என்பது.

ஜோசப் : சரி, சரி; கோபித்துக் கொள்ளாதே. பிரகஸ்பதி தேவலோகம் போய் விட்டார். அப்புறம் சொல்லு.

ராமசேஷன் : அப்புறமா? அப்புறந்தான் உன்னிடம் அதைப்பற்றிச் சொல்லுவது சரியல்ல வென்று நினைக்கிறேன்.

ஜோசப் : 'தாரை, சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதை நேரில் பார்க்கலாம் வா!' என்று கூப்பிடுகின்ற நீ—அந்தக் கதையைச் சொல்ல வெட்கப்படுகின்றாயே! இதுதானா உன்னுடைய மத பக்தி, ஆத்திகம், என்னைக் கூப்பிட்ட யோக்கியதை?

ராமசேஷன் : சரி; சொல்லித் தொலைக்கிறேன் கேள்!

ஜோசப் : சொல்லப்பா, சொல்லு! பிரகஸ்பதி தேவலோகத்துக்குப் போய்விட்டார்; அப்புறம்?

ராமசேஷன் : போய்விட்டாரா.........!

ஜோசப் : சரி, போய்விட்டார். அப்புறம் சொல்லு!

ராமசேஷன் : அப்புறமென்ன? அதைக் கூடச் சொல்லவேண்டுமா? சந்திரன் நல்ல அழகு உள்ளவன் என்பது உனக்குத்தான் தெரியுமே; ஆகாசத்தைப் பார்த்தாலே தெரியாதா?

ஜோசப் : ஆகாயத்தில் உள்ள சந்திரனின் அழகுக்கும்-பிரகஸ்பதி வீட்டில் உள்ள அழகுக்கும் என்ன சம்பந்தம்?

ராமசேஷன் : இதுதானே அதிகப் பிரசங்கித்தனம்!

ஜோசப் : இல்லை; இல்லை சொல்லு. சந்திரன் நல்ல அழகானவன்; அப்புறம்?

ராமசேஷன் : அதோடு வாலிபப் பருவம் உடையவன்; அதுபோலவே தாரையும் நல்ல அழகும் வாலிபப் பருவமும் உடையவள். இப்படிப்பட்ட இரண்டுபேர்கள் ஒரு இடத்தில் இருந்தால் அப்புறம் சொல்ல வேண்டுமா?

ஜோசப் : அதையும் சொல்லித் தொலை!

ராமசேஷன் : சந்திரன்மேல் தாரைக்கு ஆசை உண்டாய் விட்டது.

ஜோசப் : இது சகஜம்தான்; மாணாக்கர்மீது—வாத்தியாரைப்போலவே, வாத்தியார் சம்சாரத்துக்கும் ஆசை இருப்பது வழக்கந்தான். ஆதலால் என்ன?

ராமசேஷன் : அந்த மாதிரி ஆசையல்லடா! சந்திரன்மேல் தாரைக்குக் காதல் உண்டாய் விட்டது.

ஜோசப் : அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லையே?

ராமசேஷன் : உனக்கு நன்றாகச் சொல்லவேண்டுமாக்கும். காதல் என்றால் சந்திரனைத் தனது ஆசை நாயகனாகக் கொண்டு, அவனிடத்தில் கலவி இன்பம் அனுபவிக்கவேண்டும் என்கின்ற ஆசையும் காம விகாரமும் தாரைக்கு உண்டாய் விட்டது.

ஜோசப்: தேவர்களுக்கெல்லாம் குருவாயிருக்கும் தேவகுரு பெண்சாதிக்கு, தன் புருஷனிடத்தில் படிக்க வந்த மாணாக்கன்மேல் இந்தக் காம விகாரம் உண்டாய் விட்டது என்றா சொல்லுகின்றாய்?

ராமசேஷன்: ஆம்; ஆம்.

ஜோசப்: அப்புறம்!

ராமசேஷன்: சந்திரன் அதற்குச் சம்மதிக்காமல் அவளைத் தடுத்துவிட்டான்.

ஜோசப்: அப்புறம்!

ராமசேஷன்: ஒருநாள் தாரையானவள், தான் குரு பத்தினி என்கின்ற முறையில்—சந்திரனை மாணாக்கன் என்கின்ற முறையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது போல் ஒரு ஏற்பாடு செய்து, சந்திரனை உட்காரவைத்து எண்ணெய்க் கிண்ணத்தைத் தன் காலடியில் வைத்துத் தனது துகில், எண்ணெய் தேய்க்கத் தேய்க்க அவிழ்ந்துவிடும்படியாக—அவ்வளவு தளர்வாகக் கட்டிக்கொண்டு எண்ணெய் தேய்க்க ஆரம்பித்தாள்.

ஜோசப்: சரி; ஆரம்பித்தாள். அப்புறம்?

ராமசேஷன்: எண்ணெய் தேய்க்கும் சந்திரன் தலை குனிந்துகொண்டிருந்ததால் எண்ணெய்க் கிண்ணத்திற்குள் குரு பத்தினியுடைய அவயவ உருவங்களெல்லாம் நிழலில் தெரியும்படியாக இருந்தது. அப்படியே இருக்கும்போது சந்திரனுடைய புத்தியும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சபலப்பட்டுக்கொண்டே வந்தது.

ஜோசப்: யாருக்கு?

ராமசேஷன்: மாணாக்கனுக்கு!

ஜோசப்: சரி; சபலப்பட்டுவிட்டது; அப்புறம்?

ராமசேஷன்: இதே சமயத்தில் தாரைக்கும் மெள்ள மெள்ள அவளுடைய ஆடை அவிழ்ந்து கீழே விழுந்துவிட்டது. தாரை நின்றுகொண்டு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்போது, ஆடை கீழே விழுந்ததைப் பார்த்த சந்திரன் தலை நிமிர்ந்து பார்த்தான்.........

இதுவரையில்தான் நாடகக் கொட்டகையில் சீன் நடக்கும். இதற்கு மேல்கொண்ட சங்கதிக்கு, நாடக மேடையில் உடனே திரையைப் போட்டுவிடுவார்கள். இதைத்தான் தாரா சசாங்கம் என்று சொல்லுவது. இதைப் பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன்; வருகிறாயா, இல்லையா சொல்லு. நீ வராவிட்டால் நானாவது போகிறேன். இன்று நல்ல பாட்டு, நல்ல சீன், நல்ல காட்சி—மிகவும் வேடிக்கையாக இருக்கும். பெண்கள்கூட அனேகம் பேர் வருவார்கள்.

ஜோசப்: சரி, சரி; இந்தக் கதையைக் கேட்க எனக்கு எப்படியோ வாந்தி வருகின்றதுபோல் இருக்கின்றது. இந்த இலட்சணத்திற்கு—இதைப் பார்க்கப் பெண்கள்கூட வருவார்கள் என்றாயே, அது வேறயா இந்த அழகுக்கு? அவர்கள் எதற்காக வருவார்கள்?

ராமசேஷன்: முதலாவது, இது எங்கள் மதத்தைச் சேர்ந்த ஒரு பக்தி மார்க்கக் கதை. இக் கதையைக் கேட்டவர்களுக்கு மோட்சம் உண்டு என்று எங்கள் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவது, இது ஒரு வேடிக்கைக் கதை.

ஜோசப்: என்ன வேடிக்கைக் கதை—இது?

ராமசேஷன்: தாரை சந்திரனைக் கட்டாயப்படுத்தி இழுப்பது; அவன் சம்மதிக்க மாட்டேன் என்று வாதாடித் தப்பித்துக்கொண்டு ஓடுவது; சந்திரனை தாரை பலவந்தப் படுத்துவதன் மூலம் இருவரும் கட்டிப்புரளுவது; சிற்றின்பமான பாட்டுக்கள் பாடுவது; கடைசியாக நிர்வாணக் காட்சி காட்டுவது ஆகிய வேடிக்கைகளைப் பார்க்கக்கூடும். ஆதலால் எங்கள் பெண்களும் வருவார்களென்று சொன்னேன்.

ஜோசப் : இவ்வித நடவடிக்கை நடக்கும்—இம் மாதிரிக் காட்சிகள் காட்டப்படும்—இம் மாதிரி பாட்டுக்கள் பாடப்படும் என்கின்ற விஷயங்கள் எல்லாம் தெரிந்த பிறகுதானா, உங்கள் ஸ்திரீகளும் ஏராளமாய்ப் போகிறார்கள் என்கின்றாய்?

ராமசேஷன் : ஆம். தாரா சசாங்க நாடகம் என்று சொல்லிவிட்டால், நாடகக்காரன்கூட இன்ன இன்ன காட்சி—இன்ன இன்ன வேஷம்—இன்ன இன்னார் போடுவார்கள் என்பதை, ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் தெரியும்படியாக விளம்பரம் செய்வான்.

ஜோசப் : உங்கள் ஆண்கள் இதெல்லாம் தெரிந்துமா, உங்கள் பெண்களை அனுப்புகிறார்கள்?

ராமசேஷன் : ஆம்; ஏனென்றால் ஆண்கள் நாடகத்திற்குப் புறப்படும்போது பெண்களும் அவசர அவசரமாய்த் தங்களைச் சிங்காரித்துக்கொண்டு புறப்படுவார்கள். ஆண்கள் இந்தக் காட்சியைப் பார்க்க வருகின்ற பல பெண்களைப் பார்க்கலாம்; அவர்களைப் பார்த்துச் சிரிக்கலாம் என்றே வருவார்கள். இது எல்லாப் பெண்களுக்கும் தெரியும். ஆதலால், ஆண்கள் தங்கள் பெண்களை வரவேண்டாமென்று சொன்னால்—அவர்கள் இந்த இரகசியத்தைச் சொல்லி ஆண்களைக் கண்டித்துவிடுவார்கள். தவிர, சில ஆண்களுக்குப் பெண்களை வீட்டில் தனியாய் விட்டுவிட்டுப் போவதற்கும் சந்தேகம்; எனவே இருவரும் போவார்கள். அன்றியும், இப்படிப் போவதில் இன்னும் ஒரு இலாபம் இருக்கின்றது. அதாவது, மேற்கண்ட மாதிரியான காமாதுரமான பாட்டும் காட்சியும் செய்கையும் நாடகத்தில் காணப்படும்பொழுது பெண்களுக்கும், ஆண்களுக்கும், காம விகாரமேற்பட நேரும். அப்போது அவரவர்கள் புருஷனும் பெண்சாதியுமாயிருந்தால் அவரவர்களுடைய சொத்தை அவரவர்கள் பார்த்து ஒரு விதத்தில் திருப்தி அடையக்கூடும். அப்படிக்கில்லாவிட்டால் அச் சமயத்தில் வேறு ஒருவர் சொத்தை—ஒருவர் பார்க்க நேரிடும். அதோடு இருவரும் போனால் ஒருவொருக்கொருவர் பயந்து கொண்டு வேறு ஒருவரைப் பார்த்துக்கொள்ளவும் மாட்டார்கள். ஆதலால் புருஷனும் பெண் சாதியுமாகப் போவதே—தனியாய்ப் போவதைவிட மேலானது என்பது எனது அபிப்பிராயம்.

ஜோசப் : அது எப்படியோ போகட்டும். மேற்கொண்டு கதையின் முடிவு என்ன?

ராமசேஷன் : கதை முடிவு இதுதான் விசேஷபாகம். மற்றது சாரமில்லாதது.

ஜோசப் : சாரமில்லாவிட்டாலும்—சற்றுச் சொல்லு, கேட்போம்!

ராமசேஷன் : பிறகு ஒருவரை ஒருவர் கூடுகிறார்கள். பிரகஸ்பதி வருகின்றவரை இதே வேலையாய் இருக்கிறார்கள். இதனால் தாரைக்குக் கர்ப்பம் தரித்து விடுகின்றது. பிறகு தேவ குரு பிரகஸ்பதி வந்து, ஞான திருஷ்டியால் தெரிந்து, கோபித்துக்கொண்டு சந்திரனை 15 நாள் தேயும்படியாகவும்—15 நாள் வளரும்படியாகவும் சபித்துவிடுகின்றார். அதுதான் வளர்பிறை—தேய்பிறை என்பது. தாரை மீதும் ஏதோ கோபித்துக் கொள்ளுகின்றார். தாரைக்கு புதன் என்கின்ற பிள்ளையும் பிறக்கின்றது. தேவகுருவும் சந்திரனைச் சபித்துவிட்டுத் தன் பெண்சாதியைக் கடைசியாக மன்னித்து விடுகிறார். அதோடுகூட தாரையை உலகிலுள்ள கற்புள்ள ஸ்திரீகள் அய்வரில் ஒருத்தியாகச் சேர்த்துவிடுகிறார். தாரையை நினைத்தால்—நினைத்தவர்களுக்குச் சகல பாவமும் உடனே தீரும்படியான சக்தியையும் அவர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறார். அதுபோலவே இன்னும் உலகத்தில் தினமும் கோடிக்கணக்கான பேர்கள் இந்தத் தாரையை நினைப்பதன் மூலம் தினந்தோறும் அவரவர்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் புதிது புதிதான பாவங்கள் செய்யவும் மக்களுக்கு எவ்வளவோ தைரியம் கொடுக்க உபகாரமாகவு மிருக்கின்றது. இதுதான் தாரா சசாங்கக் கதையின் தாத்பரியம்.

ஜோசப் : இக் கதையினால் உங்கள் குரு பெண்சாதிமார்கள் சங்கதியும், சிஷப் பிள்ளைகளின் சங்கதியும் நன்றாய்த் தெரியவந்தது. அதோடு, உங்கள் கற்புக்கும் அர்த்தம்

தெரிந்தது. இவ்வளவே எனக்குப் போதும். நீ சொன்னதிலிருந்தே, இந்த 'கொசமுசாங்கக் கதை'யை நேரில் பார்த்ததுபோலவே ஆகிவிட்டது. இதை நீயும் உங்கள் பெண்களுமே நன்றாகப் பார்த்து மோட்சத்திற்குப் போங்கள்! உங்கள் உபாத்தியாயர் பத்தினிமார்களும் இந்தக் கண்காட்சியை நன்றாகப் பார்த்து, அந்தப்படியே நடந்து, மாணாக்கர்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டுப் பஞ்ச கன்னிகைகளோடு சேர்ந்து, அவர்களை நினைத்தவர்களுக்கெல்லாம் மோட்சத்தைக் கொடுத்துவரட்டும்! மாணாக்கர்களாகிய நீங்களும்—அவர்களுக்கு சீஷப் பிள்ளைகளாகச் சேர்ந்து சந்திரனைப் போலவே தினமும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு 'புதன்'களைப் பெற்றுக்கொண்டிருங்கள். நம்மை மாத்திரம் அந்த மோட்சக் காட்சிக்குக் கூப்பிடாதீர்கள்.

ராமசேஷன் : இதையெல்லாம் நீ எங்கிருந்து படித்துக்கொண்டாய் என்பது எனக்குத் தெரியும். 'குடிஅரசு' என்கின்ற அந்த நாத்திகப் பத்திரிகையை, நீ தினம் படிக்கின்றதை, நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். அது உன்னை இம் மாதிரி, ஆக்கிவிட்டது. நீ என்ன செய்வாய்; உன்மீது தப்பிதமில்லை.

ஜோசப் : குருபத்தினி சீஷப்பிள்ளைக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதைப் பார்க்க இஷ்டமில்லை என்று சொன்னால்—அது 'குடிஅரசை'ப் பார்த்ததனால் வந்த கேடாக்கும்? நாத்திகமாக்கும்? போதும் போதும்! உங்கள் ஆத்திகத்தை மூட்டை கட்டி வையுங்கள். இனி என்னிடம் விரிக்காதீர்கள். எனக்கும் நேரமாச்சுது; நான் போய் வருகிறேன். மற்றொரு நாளைக்கு உங்கள் வேதத்தைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

'குட் பை'—Good-bye.

['குடிஅரசு'-சித்திரபுத்திரன் என்ற பெயரில் எழுதிய உரையாடல்—8-7-1928]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

புரட்டாசி சனிக்கிழமை உற்சவங்களும், திருப்பதி முதலிய நூற்றுக்கணக்கான 'சனிக்கிழமைப் பெருமாள்கள்' உள்ள ஊர்களின் உற்சவங்களும் சனிக்கிழமை பிடிப்பதன் மூலம் அவரவர்கள் வீட்டில் ஏராளமாய் சமைத்துக்கொண்டு, சோம்பேறிகளையும் அயோக்கியர்களையும் மெனக்கெட்டுத் தேடிப்பிடித்து வந்து, அவர்களுக்கு வயிறு நிறையவும் போட்டு—மற்றும் மூட்டை கட்டிக்கொண்டும் போகக்கூடிய அளவு மேற்கொண்டும் போட்டு—கஞ்சாவுக்கோ, கள்ளுக்கோ, சூதாடவோ கையில் பணமும் கொடுத்து—இவ்வளவும் போதாமல் அந்த நாளெல்லாம் பட்டினி கிடந்து—அந்தச் சோம்பேறிகளின் காலிலும் விழுந்து, மாலை 3 மணி, 4 மணி சுமாருக்குச் சாப்பிடும் பண்டிகையிலோ, விரதத்திலோ, கடுகளவு அறிவு இருக்கின்றதா என்று கேட்கின்றேன். புரட்டாசி சனிக்கிழமை வந்தால் எத்தனை பேர்கள் தங்களுக்கும் பட்டை நாமம் போட்டுக்கொண்டு, சொம்புக்கும் நாமத்தைக் குழைத்துப் போட்டுக்கொண்டு, துளசி, அரளிப் பூவையும் அந்தச் சொம்புக்குச் சுத்திக்கொண்டு, 'வெங்கிடாசலபதி கோவிந்தா' என்றும் 'நாராயணா கோவிந்தா' என்றும் கூப்பாடு போட்டு—அரிசியோ, காசோ வாங்கிக்கொண்டு போவதில் ஏதாவது பலனுண்டா என்றுதான் கேட்கிறேன்.

மற்றும், 'திருப்பதிக்குப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு தலை மயிரும், தாடி மயிரும் வளர்த்து வெறும் மஞ்சள் நனைத்த துணி கட்டிக்கொள்வதும், மேளம் வைத்துக் கொள்வதும், பெண் பிள்ளைகள் சுற்றத்தார்களை அழைத்துக்கொள்வதும், வருஷமெல்லாம் பணம் உண்டியலில் போட்டு மொத்தமாய்ப் பணம் சேர்ப்பதும், அல்லது வேண்டு தலையின்மேல் இவ்வளவு பணம் என்று கடன் வாங்கியாவது எடுத்துக்கொள்வதும், அல்லது வியாபாரத்திலோ அல்லது வேறு வரும்படியிலோ இலாபத்தில் இத்தனை பங்கு என்று கணக்கு வைத்து எடுத்துச் சேர்த்துக்கொள்வதும், ஆன பணமூட்டையைக் கட்டிக் கொண்டு, கடைவாயிலும் நாக்கிலும் வெள்ளிக் கம்பியைக் குத்திக்கொண்டு—போதாக்

குறைக்குத் தெருவில் கூட்டமாய் 'கோவிந்தா, கோவிந்தா, கோவிந்தா' என்று கூப்பாடு போட்டு—வீட்டுவீட்டுக்கு, கடை கடைக்குக் காசு பணம் வாங்கி, ஒரு பகுதியை இரயிலுக்குக் கொடுத்து திருப்பதி போவதும், அங்கு முழங்கால் முறிய மலை ஏறுவதும், ஆண்களும் பெண்களும் தலை மொட்டை அடித்துக்கொள்ளுவதும், அந்த மலைச் சுனைத் தண்ணீரில் குளிப்பதும், அங்கு பட்டை நாமம் போட்டுக்கொள்வதும், கொண்டுபோன பணத்தைக் கடாரத்தில் காணிக்கையாகக் கொட்டுவதும், ஆண்களும் பெண்களும் நெருக்கடியில் இடிபடுவதும், பிடிபடுவதும்—வெந்ததும் வேகாததுமான சோற்றைத் தின்பதும், மற்றும் பல சோம்பேறிகளுக்கும் மேகவியாதிக்காரருக்கும் வேகவைத்தோ விலைக்கு வாங்கியோ போடுவதும், விறகுக் கட்டைகளிலும் வேர்களிலும் செய்த மரமணி மாலைகளை வாங்கிக் கழுத்தில் போட்டுக்கொள்வதும், மலைக் காய்ச்சலோடு மலையை விட்டு இறங்கிவருவதும், வீட்டுக்கு வந்து 'மகேஸ்வர பூசை', 'பிராமண சமாராதனை' செய்வதும் தவிர மற்றபடி இவைகளால் ஏதாவது செய்தவனுக்கோ, கூடப்போன மக்களுக்கோ, நாட்டுக்கோ, ஒழுக்கத்திற்கோ, மதத்திற்கோ கடுகளவு நன்மை உண்டா கின்றதா என்று கேட்கிறேன்.

திருப்பதிக்குப் போய்வந்த பிறகாவது, யாராவது தங்கள் துர்க் குணங்களையோ கெட்ட செய்கைகளையோ விட்டுவிட்டதாக—அல்லது திருப்பதி யாத்திரையானது இம் மாதிரிக் குணங்களை விடும்படி செய்ததாகவாவது—நம்மில் யாராவது பார்த்திருக் கின்றோமா என்று கேட்பதுடன், இம் மாதிரியான அறிவீனமான காரியத்திற்கு நமது நாட்டில் வருடத்திற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகின்றது என்பதை எந்தப் பொருளாதார இந்தியத் தேசிய நிபுணராவது கணக்குப் போட்டார்களா என்று கேட்கின்றேன்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்தில் பேருரை—'குடி அரசு' 20-10-1929]

5. தீபாவளி

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

தீபாவளிப் பண்டிகை என்று கஷ்டமும் நஷ்டமும் கொடுக்கத்தக்க பண்டிகை யொன்று வந்துபோகின்றது. அதிலும் ஏதாவது அறிவுடைமை உண்டா என்று கேட் கிறேன். தீபாவளிப் பண்டிகையின் கதையும் மிக்க ஆபாசமானதும், இழிவானதும், காட்டுமிராண்டித் தனமானதுமாகும். அதாவது, விஷ்ணு என்னும் கடவுள் பன்றி உருக் கொண்டு பூமியைப் புணர்ந்ததன் மூலம் பெறப்பட்டவனான நரகாசுரன் என்பவன், வருண னுடைய குடையைப் பிடுங்கிக்கொண்டதால் விஷ்ணுக் கடவுள் நரகாசுரனைக் கொன்றா ராம். இதைக் கொண்டாடுவதற்காகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறதாம்.

சகோதரிகளே! இதில் ஏதாவது புத்தியுள்ள தன்மையோ அறிவோ இருக்கிறதா என்பதைப் பாருங்கள்! விஷ்ணுக் கடவுள் பூமியைப் புணரமுடியுமா என்றாவது, பூமியைப் புணர்வதால் பிள்ளை பிறக்குமா என்றாவது யோசித்துப் பாருங்கள்! இப்படிப் பொய்யான பண்டிகையினால் எவ்வளவு கஷ்டம், எவ்வளவு கடன், எவ்வளவு அறியாத்தனம், எவ்வளவு பிரயாசை என்பவைகளை நம் மக்கள் நினைப்பதேயில்லை. அப் பண்டிகையைக் கொண்டாட ஒவ்வொருவனும் தேவைக்குமேல் செலவுசெய்து துன்பப்படுகிறான். தன்னிடம் இல்லாவிட்டாலும், கடன்வாங்கியாவது—கடன் என்றால் ஒன்றுக்கு ஒன்றரைப் பங்கு வட்டி ஏற்பட்டுவிடுகின்றது. பட்டாசு கொளுத்துவது எவ்வளவு துன்பம் என்றும், இதனால் பலவித அபாயங்கள் தோன்றி உபாதைகள் ஏற்பட்டு விடுவதும், துணியில் நெருப்புப் பிடித்து உயிர்போதலும், பட்டாசு சுடும்போது திடீரென வெடிப்பதால் உடல் கருகி, கண், மூக்கு, கை, கால் ஊனம்வருவதும் அல்லாமல், இந்தப் பண்டிகை கொண்டாடு வதற்கு அறிகுறியாக எவ்வளவோ பேர்கள் சாராயம் குடித்து மயங்கித் தெருவில்விழுந்து

புரண்டு மானம்கெடுவதும், மேலும் இதற்காக இனாம் என்று எத்தனை பாமரர் பிச்சை எடுப்பது அல்லது தொந்தரவு கொடுத்துப் பணம் வசூல் செய்வது ஆகிய இந்தக் காரியங் களினால் எவ்வளவு பணம், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம், எவ்வளவு அறிவு செல வாகின்றது என்றும் எண்ணிப் பாருங்கள்! இவைகளை எந்த இந்தியப் பொருளாதார—தேசிய நிபுணர்களாவது கவனித்தார்களா என்று கேட்கிறேன்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டுப் பற்றுதலால், தீபாவளியின்போது ஏராளமான பொருள்கள் நமது நாட்டில் வீண் விரயமாக்கப்படுகின்றன.

அப்படிப்பட்ட வீண் செலவுகளில் பட்டாசு முதலிய வெடிகள் சுடுதல், பலகார வகைகளை அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுதல், புதுத் துணிகள் வாங்குவதில் தன் நிலைமைக்கு அதிகமாகச் செலவு செய்தல் முதலியன முக்கியமாகும். இவற்றில் வெடிகள் சுடுவதன் மூலம் நமது நாட்டுப் பொருள் சீனா முதலிய அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவ்வன்னிய நாடுகளில் நமது நாட்டிலுள்ள மூடமக்கள் தேவைக்கு வெடிகள் செய்வ தென்று மனித நன்மைக்கு உபயோகமில்லாத ஒரு தொழில் வளர்க்கப்பட்டு வருகிறது. தீபாவளியில் தின்பண்டங்கள் தின்னவேண்டும் என்றிருக்கும் வழக்கத்தால் மக்களிடையே நோய் விருத்தியாகிறது. தின்பண்டங்களை ஒவ்வொருவரும் தனது தேக நிலைக்குத் தகுந்த அளவு நிரந்தரமாகப் புசித்துவரவேண்டுமேயொழிய—வருஷத்தில் சில தினங்களில் மாத்திரம் பண்டிகைகள் கொண்டாடும் விசேஷ தினங்களென ஏற்படுத்திக்கொண்டு—அந்த நாட்களில் மாத்திரம் அதிகமாகப் புசித்தால் நோயடைவது நிச்சயம். தமிழ்நாட்டில் அஜீரணத்தால் ஏற்படும் 'காலரா' என்னும் தொத்துநோய் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பமாவது தீபாவளி காலத்தில்தான் என்பதை அனைவரும் அறிவர்.

தீபாவளியில் புதுவஸ்திரம் கட்டியாக வேண்டியிருக்கும் வழக்கம் மேற்கண்ட மற்ற இரண்டு தீங்குகளைவிட மிகவும் பாதகமானது. மக்களுக்குத் துணி அவசியம் எனக் கொண்டாலும் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய துணிகளை நாளடைவில் அந்தந்தச் சமயத்திலுள்ள தேவைக்குத் தக்கவாறும், தனது பொருள் நிலைமைக்குத் தக்கவாறும் வாங்கிக்கொள்ளவேண்டும். பழைய துணிகள் கிழியாமல் வேண்டிய அளவு இருக்கும் போது, புதிதாய் வாங்கவேண்டியதில்லை. பொருள் கஷ்டம் ஏற்படும் காலத்தில் கிழிந்த ஆடைகளைக் கூடியவரையில் மறுபடியும் செப்பனிட்டுத் தைத்து உபயோகப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டுமேயொழிய, புதுப் புதுத் துணி வாங்கித்தான் ஆகவேண்டு மென்ற நியதியைக் கைக்கொள்ளக்கூடாது. ஆனால் தீபாவளிக் கொண்டாட்டம் என்னும் மூடசம்பிரதாயத்தின் காரணமாய் ஒருவன் தன்வசத்தில் ஏராளமான ஆடைகள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்தபோதிலும்—தற்சமயம் அவசிய செலவுக்கே பணமில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தபோதிலும், பண்டிகை காலத்தில் புத்தாடை வாங்கி உடுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறான். இதன் பயனாய் ஏழைமக்கள் தங்களுக்கு வேண்டிய துணி களைத் தீபாவளிச் சமயத்தில் தவிர வேறு சமயங்களில் வாங்காமலிருக்கிறார்கள். துணி வியாபாரத்தில் ஒரு வருஷத்திய வியாபாரம் முழுவதும் ஒரு தினத்தில் நடத்தவேண்டி யிருப்பதால் ஒரு நெருக்கடி ஏற்பட்டுத் துணிவிலை அதிகப்பட்டு, ஏழைகளுக்கு நஷ்ட முண்டாகிறது. ஆகையால், நமது நாட்டு மக்கள் இவ்வித நெருக்கடியிலும், கஷ்டத்திலும் பட்டு உழலாமலிருக்க வேண்டுமானால் தீபாவளிப் பண்டிகையைக் கைவிட வேண்டிய தவசியம். தேசநலத்தை விரும்புகிறவர்களும்—ஏழை மக்களின் அறியாமையை அகற்றப் பாடுபடுபவர்களும் தங்கள் செய்கையில் தீபாவளியைக் கொண்டாடாமல் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதிலும்—தீபாவளியைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பொதுமக்களிடையே தீவிரப் பிரச்சாரம் செய்வதிலும் முன்னிற்க வேண்டியது அவசியமாகும்.

பொது நன்மையைக் கோரும் அறிவாளிகளிடத்தில் இவ் விஷயத்தைப்பற்றி அபிப்பிராய பேதமிருக்க வேண்டியதில்லை.

['குடி அரசு'-தலையங்கம்—1-11-1931]

தீபாவளியின் பெயரால் ஏறக்குறைய 20 கோடி மக்களாவது பண்டிகை கொண்டாடி இருப்பார்கள். இவர்கள் பண்டிகை கொண்டாடியதன் பயனாய் சுமார் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பாழ்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த 10 கோடியும் அனாவசியமாய்—துணி வாங்கிய வகையிலும், பலகாரங்கள் செய்த வகையிலும், பட்டாசு வாங்கிப் பொசுக்கிப் புகையும் கரியுமாக ஆக்கிய வகையிலும் செலவாகி இருக்கும் என்பது மட்டும் அல்ல; பண்டிகை நாளில் வருத்தமின்றிக் களித்திருக்கவேண்டும் என்பதைக் கருதி ஏழை மக்கள் கள், சாராயம், பிராந்தி, விஸ்கி, ஜின், ஒயின், பீர், ராமரசம் முதலிய வெறி தரும் பானங்களைக் குடித்துக் கூத்தாடிய வகையிலும் ஏராளமான பணம் செலவழிந்திருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப் பண்டிகையினால் வெற்று நாளில் மறந்துபோயிருந்த—சாமிக்குப் படையல் போடத் தூண்டும் புராணக் கதை, மூட நம்பிக்கை மக்கள் மனத்தில் மறுபடியும் வந்து குடி புகுந்ததோடு அவர்களுடைய செல்வமும் கொள்ளை போகும் நிலை ஏற்பட்டது.

இவ்வளவு மாத்திரமல்ல; தீபாவளிப் பண்டிகைக்கு விடுமுறை விட்டதன் பயனாய்த் தினக் கூலிக்கு வேலை செய்யும் ஏழை மக்கள் கூலியை இழந்ததோடல்லாமல், கடன் வாங்கி நஷ்டமடைந்தது எவ்வளவு? வேலை நடக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு? தீபாவளிக்கு முன் சில நாட்களும், தீபாவளிக்குப் பின் சில நாட்களும், தீபாவளியைக் கருதி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் விளையாட்டுக்களிலும், வேடிக்கைகளிலும் கவனம் செலுத்திய காரணத்தால் அவர்கள் படிப்புக்கு நேர்ந்த கெடுதி எவ்வளவு? அரசியல் காரியங்கள் நடைபெறுவதில் இதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு?

['குடிஅரசு'-தலையங்கம்—22-11-1931]

சகோதரர்களே! சிறிதும் யோசனையின்றி, யோக்கியப் பொறுப்பின்றி, உண்மைத் தத்துவமின்றி, சுயமரியாதை உணர்ச்சி இன்றி, சுயமரியாதை இயக்கத்தின்மீது வெறுப்புக் கொள்கின்றீர்களேயல்லாமல்—மற்றும் சுயநலப் பார்ப்பனர் வார்த்தைகளையும், மூடப் பண்டிதர்களின் கூக்குரலையும், புராணப் புத்தக வியாபாரிகளின் விஷமப் பிரச்சாரத்தையும் கண்டு மயங்கி—அறிவிழந்து ஓலமிடுகின்றீர்களேயல்லாமல், மேலும் உங்கள் வீடுகளிலும், அண்டை அயல்களிலும் உள்ள கிழங்களுடையவும், அழுக்கு மூட்டைகளுடையவும், ஜீவனற்ற தன்மையான 'பழைய வழக்கம்', 'பெரியோர் காலம் முதல் நடந்து வரும் பழக்கம்' என்கிறதான வியாதிக்கு இடம் கொடுத்துக் கொண்டு கட்டிப்போடப்பட்ட கைதிகளைப் போல் துடிக்கின்றீர்களேயல்லாமல், உங்கள் சொந்தப் பகுத்தறிவைச் சிறிதுகூடச் செலவழிக்கச் சம்மதிக்கமுடியாத உலுத்தர்களாய் இருக்கின்றீர்கள்.

பணத்தையும் மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கின்றீர்கள். சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கின்றீர்கள். ஆனால், உங்கள் பகுத்தறிவைச் சிறிதுகூடப் பயன்படுத்தத் தயங்குகிறீர்கள்! அது விஷயத்தில் மாத்திரம் ஏன் வெகு சிக்கனம் காட்டுகின்றீர்கள்? பார்ப்பனரல்லாதார்களில், சில பண்டிதர்கள் மாத்திரம் வயிறு வளர்த்தால் போதுமா? புராணப் புத்தக வியாபாரிகள் சிலர் மாத்திரம் வாழ்ந்தால் போதுமா? கோடிக் கணக்கான மக்கள் ஞானமற்று, மானமற்று கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வகையற்று அலைவதைப்பற்றிய கவலை வேண்டாமா என்று கேட்கின்றேன்.

புராணக் கதைகளைப்பற்றிப் பேசினால் கோபிக்கின்றீர்கள். அதன் ஊழலை எடுத்துச் சொன்னால் காதுகளைப் பொத்திக்கொள்கின்றீர்கள். ஆனால், காரியத்தில் ஒரு நாளைக்கு உள்ள 60 நாழிகை காலத்திலும் புராணத்திலேயே மூழ்கி மூச்சு விடுவது முதல் அதன்படியே செய்து வருகின்றீர்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் புராணப் புரட்டை உணர்ந்தவர்களாவார்களா? புராண ஆபாசத்தை வெறுத்தவர்களாவார்களா? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

பண்டித, பாமர, பணக்கார ஏழைச் சகோதரர்களே! எவ்வளவு பண்டிகை கொண்டாடினீர்கள்? எவ்வளவு யாத்திரை செய்தீர்கள்? இவற்றிற்காக எவ்வளவு பணச்செலவும் நேரச்செலவும் செய்தீர்கள்? எவ்வளவு திரேகப் பிரயாசைப்பட்டீர்கள் என்பதை யோசித்துப் பார்த்தால், நீங்கள் புராணப் புரட்டை உணர்ந்து—புராண ஆபாசத்தை அறிந்தவர்களாவீர்களா? வீணாய்க் கோபிப்பதில் என்ன பிரயோசனம்? இந்த விஷயங்களை வெளியில் எடுத்து விளக்கிச் சொல்லுகின்றவர்கள்மீது ஆத்திரம் காட்டி அவர்களது கண்ணையும், மூக்கையும், தாடியையும், தலைமயிரையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்? 'நீ ஏன் மலத்தில் மூழ்கி இருக்கின்றாய்?' என்றால், அதற்கு, 'நீ தமிழ் இலக்கணம் தெரியாதவன்' என்று பதில் சொல்லிவிட்டால் மலத்தின் துர்நாற்றம் மறைந்துபோகுமா? இதைப் பார்ப்பனரல்லாத மக்கள் 1000-க்கு 999 பேர்களுக்கு மேலாகவே கொண்டாடப் போகின்றீர்கள். பெரிதும் எப்படிக் கொண்டாடப் போகின்றீர்கள் என்றால், பொதுவாக எல்லோரும்—அதாவது துணி தேவை இருக்கின்றவர்களும், தேவை இல்லாதவர்களும் பண்டிகையை உத்தேசித்துத் துணி வாங்குவது என்பது ஒன்று; மக்கள் மருமக்களை மரியாதை செய்வதற்கென்று தேவைக்கும், யோக்கியதைக்கும் மேலானதாகவும், சாதாரணமாக உபயோகப்படுத்துவதற்கு ஏற்றதல்லாததுமான துணிகள் வாங்குவது என்பது இரண்டு; அர்த்தமற்றதும் பயனற்றதுமான வெடிமருந்து சம்பந்தப்பட்ட பட்டாசுவகைகள் வாங்கிக் கொளுத்துவது மூன்று; பலர் இனாம் என்றும், பிச்சை என்றும் வீடு வீடாய்க் கூட்டங் கூட்டமாய்ச் சென்று பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பணம் வாங்கிப் அதைப் பெரும்பாலும் சூதிலும், குடியிலும் செலவழித்து நாடு சிரிக்க நடந்து கொள்வது நான்கு; இவற்றிற்காகப் பலர் ஊர்விட்டு ஊர் பிரயாணம் செய்து பணம் செலவழிப்பது அய்ந்து; அன்று ஒவ்வொரு வீட்டிலும் அமிதமான பதார்த்த வகைகள் தேவைக்கு மிகுதியாகச் செய்து அவைகளில் பெரும்பாகம் கண்டவர்களுக்குக் கொடுப்பதும், வீணாக்குவதும் ஆறு; இந்தச் செலவுகளுக்காகக் கடன்படுவது ஏழு; மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் செய்வதன் மூலம் பணம் செலவாகின்றது என்பதும், அதற்காகக் கடன்படவேண்டியிருக்கிறது என்பதுமான விஷயங்களொரு புறமிருந்தாலும்—மற்றும் இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ 'சயின்ஸ்' பொருத்தமோ—சொல்லுவதானாலும் தீபாவளிப் பண்டிகை என்றால் என்ன? அது எதற்காகக் கொண்டாடப்படுகிறது?—என்கின்றதான விஷயங்களுக்குச் சிறிதுகூட எந்த விதத்திலும் சமாதானம் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம். ஏனெனில், அது எப்படிப் பார்த்தாலும், பார்ப்பனீயப் புராணக் கதையை அஸ்திவாரமாகக் கொண்டதாகத்தான் முடியுமே ஒழிய, மற்றபடி எந்த விதத்திலும் உண்மைக்கோ, பகுத்தறிவுக்கோ, அனுபவத்துக்கோ சிறிதும் ஒத்ததாக இருக்க முடியவே முடியாது. பாகவதம், இராமாயணம், பாரதம் முதலிய புராண இதிகாசங்கள் பொய் என்பதாகச் சைவர்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகள் பொய் என்று வைணவர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டாய்விட்டது. இவ்விரு கூட்டத்திலும் பகுத்தறிவுள்ள மக்கள் பொதுவாக இவை எல்லாவற்றையும் பொய் என்று ஒப்புக்கொண்டாய்விட்டது. அப்படியிருக்க, ஏதோ புராணங்களில் இருக்கின்ற கதைகளைச் சேர்ந்த பதினாயிரக் கணக்கான சம்பவங்களில் ஒன்றாகிய, தீபாவளிப் பண்டிகைக்கு மாத்திரம் மக்கள் இந்த நாட்டில் இவ்வளவு பாராட்டுதலும் செலவுசெய்தலும், கொண்டாடுதலும் செய்வதென்றால் அதை என்னவென்று சொல்லவேண்டும்?

தீபாவளிப் பண்டிகையின் தத்துவத்தில் வரும் பாத்திரங்கள் மூன்று. அதாவது நரகாசுரன், கிருஷ்ணன், அவனது இரண்டாவது பெண்சாதியாகிய சத்தியபாமை ஆகியவைகளாகும். எந்த மனிதனாவது கடுகளவு மூளை இருந்தாலும் இந்த மூன்று பேரும் உண்மையாய் இருந்தார்கள் என்றாவது, அல்லது இவர்கள் சம்பந்தமான தீபாவளி நடவடிக்கைகள் நடந்தவை என்றாவது, அவற்றிற்கும்—நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இந்த மாதிரியான ஒரு பண்டிகை—தீபாவளி என்று கொண்டாடவேண்டுமென்றாவது ஒப்புக்கொள்ள முடியுமாவென்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார்கள், தங்களை ஒரு பெரிய சமூகக்காரர்கள் என்றும் கலைகளிலும், ஞானங்களிலும், நாகரிகங்களிலும் தேர்ச்சிபெற்றவர்கள் என்றும் தட்டிப் பேச ஆளில்லா விடங்களில் சண்டப்பிரசண்டமாய்ப் பேசிவிட்டு, எவனோ ஒரு மூடனோ அல்லது ஒரு அயோக்கியனோ, ‘காளைமாடு கன்று போட்டிருக்கிறது’ என்றால், உடனே, ‘கொட்டத்தில் கட்டிப் பால் கறந்து கொண்டு வா’ என்று பாத்திரம் எடுத்துக் கொடுக்கும் மடையர்களாகவே இருந்துவருவதைத்தான் படித்த மக்கள் என்பவர்களுக்குள்ளும், பாமர மக்கள் என்பவர்களுக்குள்ளும் பெரும்பாலும் காண்கின்றோமே ஒழிய, ‘காளைமாடு எப்படிக் கன்று போடும்?’ என்று கேட்கின்ற மக்களைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது. மற்றும், இம் மாதிரியான எந்த விஷயங்களிலும் கிராமாந்தரங்களில் இருப்பவர்களைவிடப் பட்டணங்களில் இருப்பவர்கள் மிகுதியும் மூடத்தனமாகவும்; பட்டணங்களில் இருப்பவர்களைவிட சென்னை முதலிய நகரங்களில் இருப்பவர்கள் பெரிதும் மூடசிகாமணிகளாகவும் இருந்துவருவதையும் பார்க்கின்றோம். உதாரணமாக, தீபாவளி, சரஸ்வதி பூசை, தசரா, பிள்ளையார் சதுர்த்தி, ஆடிப் பதினெட்டு, அவிட்டம் முதலிய பண்டிகைகள் எல்லாம் கிராமாந்தரங்களைவிட, நகரங்களில் அதிகமாகவும் மற்ற நகரங்களைவிட சென்னையில் மிக அதிகமாகவும் கொண்டாடப்படுவதைப் பார்க்கிறோம். இப்படிக் கொண்டாடும் ஜனங்களில் பெரும்பான்மையோர் எதற்காக ஏன் கொண்டாடுகின்றோம் என்பதைத் தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள். சாதாரணமாக, மூடபக்தியிலும், குருட்டுப் பழக்கத்தினாலும், கண்மூடி வழக்கங்களைப் பின்பற்றி நடக்கும் மோசமான இடம் தமிழ் நாட்டில் சென்னையைப்போல் வேறு எங்குமே இல்லையென்று சொல்லிவிடலாம். சென்னையில் எங்குபோய்ப் பார்த்தாலும் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் சரீரமில்லாத ஒருதலை உருவத்தை மாத்திரம் வைத்து—அதற்கு நகைகள் போட்டுப் பூசைகள் செய்துவருவதும், வீடுகள்தோறும் இரவு நேரங்களில் பாரத, இராமாயணக் காலட்சேபங்களும், பெரியபுராண, திருவிளையாடல் புராணக் காலட்சேபங்களும், பொது ஸ்தாபனங்கள்தோறும் சத்கதா காலட்சேபங்களும் நடைபெறுவதையும் இவற்றில் தமிழ் படித்த பண்டிதர்கள் ஆங்கிலம் படித்த பட்டதாரிகள்—கவுரவப் பட்டம் பெற்ற பெரிய மனிதர்கள்—பிரபலப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்கள்—மற்றும் பிரபுக்கள், ‘டாக்டர்கள்’, ‘சயின்ஸ் நிபுணர்கள்’, ‘புரபசர்கள்’ முதலியவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். பார்ப்பனரல்லாதார்களில் இந்தக் கூட்டத்தார்கள் தாம், ‘ஆரியர் வேறு—தமிழர் வேறு’ என்பாரும், ‘புராணங்களுக்கும், திராவிடர்களுக்கும் சம்பந்தமில்லை’ என்பாரும், ‘பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு நாங்கள்தான் பிரதிநிதிகள்’ என்பாரும், மற்றும், ‘திராவிடர்களின் பழைய நாகரிகத்திற்கு மக்களை அழைத்துச் செல்லவேண்டும்’ என்பாரும் பெருவாரியாக இருப்பார்கள். ஆகவே, இம் மாதிரியான விஷயங்களில் படித்தவர்கள், பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் என்கின்றவர்கள் போன்ற கூட்டத்தாரிடம் அறிவு, ஆராய்ச்சி சம்பந்தமானகாரியங்களை எதிர்பார்ப்பதைவிட, உலக அறிவுடைய சாதாரண மக்களிடம் எதிர்பார்ப்பதும், பிரச்சாரம் செய்வதும் பயன் தரத்தக்கதாகும்.

அன்றியும், இத் தீபாவளிக் கதை எவ்வளவு பரிகாசத்திற்கு இடமாயிருக்கின்றதென்பதை உணரும் பொருட்டு அதனையும் கீழே தருகிறேன்.

தீபாவளியின் கதைச் சுருக்கம் :

ஆதிகாலத்தில் நரகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். திருமாலுக்கும், பூமாதேவிக்கும் பிறந்த அவன் தேவர்களையெல்லாம் பலவாறு தூஷித்து இம்சித்து வந்தானாம்.

தேவர்கள் இதைப்பற்றி அவன் தகப்பனாகிய திருமாலிடம் முறையிட்டார்களாம். உடனே திருமால் நரகாசுரனைக் கொல்லுவதாக வாக்களித்தாராம். அதற்காகவேண்டி திருமால் கிருஷ்ணனாகவும், பூதேவி சத்தியபாமையாகவும் அவதாரமெடுத்து உலகத்துக்கு வந்து நரகாசுரனைக் கொன்றுவிட்டார்களாம்.

நரகாசுரன் சாகும்போது தான் செத்த தினத்தை உலகத்தார் கொண்டாட வேண்டு மென்று கேட்டுக்கொண்டானாம்.

கிருஷ்ணன், 'அப்படியே ஆகட்டும்' என்று வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி மக்கள் எல்லோரையும் கொண்டாடும்படி கடவுள் செய்து விட்டாராம்.

ஆதலால் நாம் கொண்டாடுகிறோமாம்; அல்லது கொண்டாட வேண்டுமாம்.

இதை நமது பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்ப்போம். முதலாவதாக, இந்தக் கதை உண்மையாய் இருக்க முடியுமா?

'எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும், உலகங்களை எல்லாம் காத்துவருபவரும், தேவர்கள் தலைவருமாகிய திருமாலுக்கும் பூமிதேவிக்கும் எப்படிக் குழந்தை பிறக்கும்? (பூமிதேவி என்றால் பூமி அல்லவா?) பிறந்தவன் எப்படி அசுரனானான்? அத் தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படித் தீய செயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும், அவனைப் பெற்றவனாகிய திருமால் தனது மகனைத் திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படி இருந்தாலும், தானே வந்துதான் கொல்ல வேண்டுமா? மேற்படி நரகாசுரனைக் கொன்றபோது, அவன் தாயாகிய பூமிதேவியும் சத்தியபாமையாகப் பிறந்து உடனிருந்ததாகக் கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவள்தான் உலகத்தையெல்லாம் காப்பாற்றுகிறாளாம்! உலக மக்கள் செய்யும் பாவங்களையெல்லாம் பொறுத்துக்கொள்கின்றாளாம்! 'பொறுமையில் பூமி தேவிபோல்' என்று உதாரணத்திற்குக்கூடப் பண்டிதரும் பாமரரும் இந்த அம்மையாரை உதாரணமாகக் கூறிவருகின்றனரே! இத்தகைய பூமிதேவியார் தனது மகனைக் கொல்லும் போது, தானும் உடனிருக்க வேண்டுமென்று திருமாலைக் கேட்டுக்கொண்டாளாம்! என்னே தாயின் பாசம்!

தமிழர்களாகிய நம்மையே அசுரர்களென்றும் ஆரியராகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்துக் கதைகட்டியிருக்கிற, தேவ—அசுரப் போராட்டத்தோடு சம்பந் தப்பட்டிருக்கிற இந்தக் கதையைத் தமிழ் மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம்! நாமே சிறந்த நாளாகக் கருதுகிறோம்! அந்தோ என் செய்வது? நம்மை ஏமாற்றி நம்மையே பழிக்கும் பார்ப்பனர்களின் கட்டுக் கதையை உண்மையென நாம் நம்பி, நாமே கொண்டாடி வீண் செலவு செய்வதென்றால், நமது சுயமரியாதையை என்னென்பது? நமது பகுத்தறிவை என்னென்று சொல்வது?

புராணங்களில் கண்டபடியே இந்தக் கதையை உண்மையென்று ஒப்புக்கொண்டு தமது பகுத்தறிவையிழந்து, இந்தத் தீபாவளியைக் கொண்டாடும் நமது தமிழ் மக்களின் அறியாமையை என்னென்று கூறுவது?

சென்றது போக, இனிமேலாவது தீபாவளியை—அர்த்தமற்ற மூடப் பழக்கத்தை—நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக்கொள்ளும் செயலைக் குறித்து ஒரு காசாவது,

ஒரு நிமிஷ நேரமாவது செலவு செய்யவேண்டாமென்று திராவிட மக்களாகிய உங்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 7 கட்டுரை—1936]

தீபாவளி என்கின்ற வார்த்தைக்கு விளக்கு வரிசை—அதாவது விளக்குகளை வரிசை யாக வைத்தல் என்பது பொருள். இது கார்த்திகை தீபம் என்னும் பெயருள்ள பண்டிகை நாட்களில் செய்யப்பட்டு வருகிறது. வடநாட்டில் விளக்கு வரிசை வைத்துத்தான் தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளிப் பண்டிகை தினத்தை, 'நரக சதுர்த்தசி' என்றும் சொல்வதுண்டு. இதற்குக் காரணம், நரகாசுரன் என்பவன் விஷ்ணுவால் கொலை செய்யப் பட்ட நாள் என்பதாகும். இந்தக் கதை விளக்கம் என்னவென்றால், அது மிகவும் ஆபாச மானது என்றாலும் ஆரியர்களின் இழிநிலைக்கும் 'தமிழர்களின் முட்டாள்தனத்துக்கும் ஆதாரத்துக்காக அதையும் ஆரியப் புராணப்படியே சற்றுச் சுருக்கமாக விளக்குவோம்.

இரண்யாட்சன் என்ற இராட்சதன் ஒருவன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு சமுத்திரத்தினடியில் போய் ஒளிந்துகொண்டானாம்.

மகாவிஷ்ணு என்னும் கடவுள் அவனைச் சமுத்திரத்திலிருந்து வெளியாக்கி, பூமியைப் பிடுங்குவதற்காகப் பன்றி உருவமெடுத்துப் போய் இராட்சசனைப் பிடித்துப் பூமியைப் பிடுங்கி விரித்து விட்டுவிட்டாராம். அந்தச் சமயத்தில், அந்தப் பன்றியைப் பூமாதேவி கலவி செய்ய விரும்பிக் கலந்தாளாம்.

அக் கலவியில் ஒரு குழந்தை பிறந்ததாம். அக் குழந்தைக்குத்தான் நரகாசுரன் என்று பெயராம்.

இவன் 'கசேரு' என்பவளை யானை உருவத்துடன் சென்று பலவந்தமாய்ப் பிடித்து வந்து மணம் செய்துகொண்டானாம். மற்றும் இவன் தேவர்களுக்கு இடையூறு செய்து வந்தானாம். தேவர்கள் விஷ்ணு இடத்தில் முறையிட்டார்களாம்.

விஷ்ணு கிருஷ்ணாவதாரத்தில் அவனைக் கொன்றாராம். நரகாசுரன், தனது சாவு நாளை உலகம் கொண்டாடவேண்டும் என்று விஷ்ணுவைக் கேட்டுக் கொண்டானாம். அதற்காக விஷ்ணு அந்த நாளை உலகம் கொண்டாடும்படி செய்தாராம்.

இதுதான் தீபாவளியாம்!

தோழர்களே! ஆரியரின் கதை சோடிக்கும் சின்னப் புத்தியைப் பாருங்கள்! அதை நம்பி விழாக் கொண்டாடும் உங்கள் மடப் புத்தியை எண்ணி வெட்கப்படுங்கள்! ஏனெனில், பூமியை இராட்சசன் பாயாகச் 'சுருட்டினான் என்றால் அப்போது எங்கிருந்து கொண்டு சுருட்டி இருப்பான்?

சமுத்திரத்திற்குள் போய் ஒளிந்துகொண்டான் என்றால் அப்போது சமுத்திரம் எதன்மேல் இருந்திருக்கும்? கடவுளுக்குச் சக்தி இருந்தால் பூமியையும், நரகாசுரனையும் 'வா' என்று அழைத்தவுடன் வந்திருக்காவா? அப்படித்தான் வரவில்லையானாலும் நல்ல ஆகாரம் சாப்பிடும் 'ஜீவஉரு' எடுக்காமல், மலம்சாப்பிடும் ஜீவஉரு எடுப்பானேன்?

அந்த அழகைப் பார்த்துப் பூமிதேவி அவனைக் கலவிசெய்ய ஆசைப்பட்டாள் என்றால் பூமிதேவியாகிய பாரதத் தாயின் யோக்கியதை எவ்வளவு இழிவானது? நம் பாரதத் தாயின் கற்புக்கும் காமத்திற்கும் எதை உதாரணமாகச் சொல்லுவது? அவளுடைய புத்திரர்கள் பரிசுத்த ஆவியினுடைய புத்திரர்களைக் காட்டிலும் எவ்வளவு மோசமானவர் களாக இருந்திருக்க வேண்டும்? பூமிதேவியும் சமுத்திரமும் என்றால் இந்தியாவில் உள்ள இந்துக்களின் பாரததேவியும் அரபிக்கடலும், வங்காளக்குடாக் கடலுந்தானா? இதை அன்னியர்கள் கேட்டால் என்ன சொல்லுவார்கள்? நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இவற்றையெல்லாந் தமிழர்கள்—பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரை உணர்ந்திருந்தும்

தீபாவளிப் பண்டிகை கொண்டாடினால்—ஆரியர்கள், தமிழர்களைத் தாசிமக்கள், மடையர்கள், கண்டதைப் புசிப்பவர்கள், புறமுதுகிட்டு ஓடியவர்கள், அடிமைகள் என்றெல்லாம் இன்னும் என்னென்னமோ சொல்வதில் உண்மை இருக்கிறது என்றுதானே அர்த்தமாகும்? அப்படித்தானே அன்னிய மக்கள் நினைப்பார்கள்!

ஆகவே, பாமர மக்களுக்குப் புத்தி இல்லாவிட்டாலும், மற்ற தமிழ்ப் பண்டிதர்களும், தங்களை உண்மைத் தமிழ்மக்கள் என்று கருதிக்கொண்டு இருப்பவர்களுமாவது இவற்றை நன்றாய்க் கவனித்துப் பார்த்து, பண்டிகை கொண்டாடாமல் இருந்து, மற்ற பாமர மக்களுக்கு வழிகாட்ட வேண்டாமா?

இந்தி ஆரியமொழி என்றும், ஆரியப் புராணங்களைத் தமிழர்களுக்குப் படிப்பித்து ஆரியக் கதைகளைப் புகுத்தி ஆரியஆதிக்கத்தை நிலைநாட்டவே இந்தியை ஆரியர்கள் கட்டாயமாய்ப் புகுத்துகிறார்கள் என்றும் சொல்லிக்கொள்வது உண்மையானால்—அதற்காகத் தமிழ்மக்கள் அதிருப்தியும் மனவேதனையும் படுவது உண்மையானால் தமிழ்மக்கள் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் பண்டிதர்கள் தீபாவளி கொண்டாடலாமா?

['குடி அரசு'—கட்டுரை—31-10-1937]

டேவிஸ் : டேய், ராமானுஜம்......எங்கடா போகிறாய்?

ராமானுஜம் : எங்குமில்லை; பிரின்ஸ்பாலைப் பார்த்து—எனக்கு இரண்டு நாள் லீவு கேட்கப் போகிறேன்.

டேவிஸ் : எதற்கு லீவு?

ராமானுஜம் : 21-ம் தேதி பண்டிகை லீவு; 22-ம் தேதி சனிக்கிழமை 23-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை. ஆக 3 நாள் காலேஜ் இல்லை. இன்னும் ஒரு இரண்டு நாள் அதை ஒட்டி லீவு கிடைத்தால் ஊருக்குப் போய், 5 நாள் சாவகாசமாய் இருந்துவிட்டு வரலாம் என்று கருதி இன்னும் இரண்டு நாள் லீவு கேட்கிறேன்.

டேவிஸ் : என்ன பண்டிகை?

ராமானுஜம் : தீபாவளிப் பண்டிகை.

டேவிஸ் : தீபாவளி என்றால் அது ஒரு பண்டிகையா?

ராமானுஜம் : ஆம்.

டேவிஸ் : அதற்காக லீவு எதற்கு?

ராமானுஜம் : பண்டிகை கொண்டாடுவதற்கு.

டேவிஸ் : எப்படிக் கொண்டாடுவது?

ராமானுஜம் : அதிகாலையில் எண்ணெய் தேய்த்து முழுகி, புதிய உடை அணிந்து, பலகாரம் சாப்பிட்டுப் பட்டாஸ் சுடுவது.

டேவிஸ் : குளித்து முழுகி, புதிய உடை அணிந்து பட்டாசு சுடுவது ஒரு பண்டிகையா? இதற்காக நீ ஊருக்குப் போகவேண்டுமா? அதை அனுசரித்து சனி, ஞாயிறு, வருவது போதாமல் மேற்கொண்டும் இரண்டு நாள் தேவையா? இதென்னப்பா நாட்களைக் கொலைசெய்யும் பண்டிகையாக இருக்கிறது! லீவுக்கு—கேள்வி கேட்பாடு இல்லையா? வாரத்துக்கு இரண்டுநாள் சனி, ஞாயிறு லீவு; வருஷத்தில் 2, 3 மாதம் வெயில் கால லீவு; வருஷத்தில் 15 நாள் ஜனவரி லீவு, பிறகு என்ன என்னவோ லீவு. இந்த 2, 3 மாதத்தில் பல லீவுகள்; பற்றாக் குறைக்கு நாணய மாற்று லீவு; இப்படி நாட்கள் பாழாகின்றன. நமக்குப் படிக்கும் நேரமோ ஒரு நாளைக்கு 5 மணி நேரம்தான் தேறுகிறது. அப்படித் தேறும் நாட்களில் இப்படிக் கணக்கு வழக்கு இல்லாத நாட்கள் பாழாகின்றன.

அன்னிய ஆட்சி போய் சுய ஆட்சி வந்து கூடவா இந்தத் தொல்லை? நாட்கள் எல்லாம் இப்படி லீவு ஆகிவிட்டால்அப்புறம் படிப்புதான் எப்படி வரும்?

ராமானுஜம் : நீ என்னப்பா? தீபாவளிப் பண்டிகை ஒரு வருஷத்துக்கு ஒரு நாளைக்கு வருகிறது; அதுகூட உனக்குப் பொறுக்கவில்லை. மனிதனுக்கு ஓய்வு வேண்டாமா?

டேவிஸ் : வருஷத்துக்கு ஒரு நாளாக ஒவ்வொரு நாளும்தான் வருகிறது; அதற்காக எல்லா நாளும் லீவு விடுவதா? ஓய்வுக்கு என்ன குறை—சனி, ஞாயிறு போதாதா?

ராமானுஜம் : சனி, ஞாயிறு நமக்குப் போதும். வீட்டிலே குடும்பத்துடன் கொண்டாட ஒரு ஓய்வு நாள் வேண்டாமோ? சனி, ஞாயிறுகளில் வீட்டில் உள்ளவர்களுக்கு என்ன ஓய்வு?

டேவிஸ் : என்ன ஓய்வோ, என்ன கொண்டாட்டமோ, எனக்கு ஒன்றும் புரிய வில்லை. இந்தப் பண்டிகைகளின் பேரால் நாட்கள் பாழாகின்றன.

ராமானுஜம் : நீ என்ன கறுப்புச் சட்டைக்காரன்போல் தோன்றுகிறது. பண்டிகை களை இப்படி வெறுக்கிறாய் ?

டேவிஸ் : கறுப்புச் சட்டையும் இல்லை; ஒரு இழவும் இல்லை. என்ன பண்டிகை? நாசமாய்ப் போன பண்டிகைகள், இப்படி மாதா மாதம் வந்து உயிரை வாங்குகின்றன ?

ராமானுஜம் : அப்படிச் சொல்லாதே! பண்டிகைகள் எல்லாம் மத சம்பந்தமான வைகள், கடவுள் சம்பந்தமானவைகள். நாம் மதத்தைச் சேர்ந்தவர்களாகவும், கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தால் இந்த மாதிரிப் பண்டிகைகளைக் குறை கூறக் கூடாது. மனிதனுக்கு மதமும் கடவுளும் தான் முக்கியமே ஒழிய—இந்த காலேஜ் படிப்பு முக்கியமல்ல. இந்தப் படிப்பு என்பதெல்லாம் மதத்தைச் சரிவரப் பின்பற்றிக் கடவுளைச் சரிவர அறிந்து பக்தி செய்யத்தான். ஆதலால் இப்படி எல்லாம் பேசாதே!

டேவிஸ் : என்னப்பா பூச்சாண்டி காட்டுகிறாய்? பண்டிகை எதற்கு என்றால் லீவுக்கு என்கிறாய்; லீவு எதற்கு என்றால் ஓய்வுக்கு என்கிறாய். சனி, ஞாயிறு போதாதா என்றால், குடும்பத்தோடு ஓய்வு பெற என்கிறாய். படிப்புக் கெட்டுவிடுகிறதே என்றால்—மதத்துக்காகவும், கடவுளுக்காகவும் பண்டிகை கொண்டாடுவதாகவும் சொல்லிக் கொண்டு, இதைத் தவறு என்று சொன்னால் என்னைக் கறுப்புச் சட்டைக்காரன் என்கிறாய். முடிவாக, ‘படிப்பைவிட மதம், கடவுள்தான் பெரிது; அதற்காகத்தான் படிக்கிறது’ என்கிறாய். இது என்ன சமாதானம்? மேலும், ஒரு மனிதன் பிறக்கும் போதே மதம் அவன் கூடவே பிறக்கிறது. கடவுளும், ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பு இருந்தே அவன் கூடவே இருந்து அவன் சாகும்வரை அவனை நடத்துகிறது. இந்த இரண்டு கெட்டியான சங்கதிகளுக்கு ஒரு மனிதன் படிக்க வேண்டியது எதற்கு? அதுவும் காலேஜிலே படிக்கவேண்டும் என்பது எதற்கு? அப்படியானால், காலேஜிலே படிக்காதவர்களுக்கு எல்லாம் மதமும், கடவுள் அறிவும், பக்தியும் இல்லையென்றும்—வராது என்றுமா சொல்லுகிறாய்?

ராமானுஜம் : நீ கறுப்புச் சட்டைக்காரன் தான்—சந்தேகமேயில்லை. உன்னோடு பேசிப் பயனில்லை.

டேவிஸ் : கோபித்துக் கொள்ளாதே. உன் பண்டிகையை அறிய வேண்டு மென்றுதான் கேட்டேன்; சங்கதி எங்கெங்கோ போய்விட்டதே! தீபாவளி என்ன பண்டிகை? எதற்காகக் கொண்டாடுவது? மதத்தை எப்படி அறிந்திருக்கிறாய்? அதில் கடவுள் பக்தி எப்படி ஏற்படுகிறது? சொல் பார்ப்போம்.

ராமானுஜம் : அப்படிக் கேள் சொல்லுகிறேன். தீபாவளி என்பது, உலகத்துக்குக் கேடு விளைவித்த ஒரு அசுரன்—கடவுளால் கொல்லப்பட்ட நாளை மக்கள் கொண்டாடுவ

த்தாகும். அதை நீயும் கொண்டாடலாம். இப்பொழுது வெள்ளையன் ஒழிந்த நாளை நாம், சுதந்திர நாளாகக் கொண்டாடவில்லையா—அது போல்.

டேவிஸ் : அப்படியா! அந்த அசுரன் யார்? அவன் எப்படி உலகுக்குக் கேடு செய்தான்? அந்தக் காலத்தில் அணுகுண்டு இருந்திருக்காதே! இந்தக் காலத்தில் அணுகுண்டு வைத்திருப்பவனையும், இன்னும் மக்கள் சமுதாயத்துக்கு என்ன என்னமோ கேடு செய்கிறவர்களையும் பற்றி நாம் ஒன்றுமே பேசுவதில்லை. அப்படி இருக்க அவன்—அசுரன் யார்? அவன் என்ன கேடு செய்தான்?

ராமானுஜம் : அந்த அசுரன் பெயர் நரகாசுரன். அவன் பூமியிலிருந்து பிறந்தவன். அவன் தகப்பன் மகாவிஷ்ணு. நரகாசுரன் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து, தேவர்களின் பெண்களுக்கும் தொல்லை கொடுத்தான். அதனால் மகாவிஷ்ணுவும் அவர் மனைவியும் சேர்ந்து அவனைக் கொன்று விட்டார்கள். இனி எவரும் தேவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதை மக்களுக்கு ஞாபகப் படுத்துவதற்காக அவன் செத்த நாளைக் கொண்டாடுவது, தெரிந்ததா? இதுதான் தீபாவளித் தத்துவம்.

டேவிஸ் : தெரிந்தது. ஆனால் அதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறது. அதாவது, அவன்—மகாவிஷ்ணுவுக்கும் பூமிக்கும் எப்படிப் பிறக்கமுடியும்? பூமியானது மண்கல உருவத்தில் இருந்தது. மகாவிஷ்ணுவுக்குப் பூமியுடன் எப்படிக் கலவி செய்ய முடிந்தது? பூமி எப்படிக் கர்ப்பம் தரிக்கும்? அதற்கு எப்படி பிள்ளை பிறக்கும்? எனக்குப் புரியவில்லையே!

ராமானுஜம் : அட, பைத்தியக்காரனே! மகாவிஷ்ணு, நேராகவா போய்க் கலவி செய்வார்? அதற்கு அவர் மனைவிகள் இல்லையா? ஆதலால் அவர் நேராகக் கலவி செய்ய வில்லை. மகாவிஷ்ணு பன்றி உருவமெடுத்தார்.

டேவிஸ் : பொறு, பொறு. இங்கே கொஞ்சம் விளக்கம் தேவை! மகாவிஷ்ணு பன்றி உருவம் ஏன் எடுத்தார்?

ராமானுஜம் : அதுவா—சரி, சொல்கிறேன் கேள்! இரணியாட்சதன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுக்குள் போய் ஒளிந்துகொண்டான்.

டேவிஸ் : பொறு, பொறு; ஓடாதே; இங்கே எனக்கு ஒரு மயக்கம்.

ராமானுஜம் : இதிலென்னப்பா மயக்கம்? நான்தான் தெளிவாகச் சொல்கிறேனே—'பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு சமுத்திரத்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டான்' என்று.

டேவிஸ் : சரி, அது அர்த்தமாச்சுது.

ராமானுஜம் : பின்னே எது அர்த்தமாகவில்லை? சும்மா தொல்லை கொடுக்கிறாயே?

டேவிஸ் : தொல்லை ஒன்றுமில்லை. உன் சங்கதிதான் என் மூளைக்குத் தொல்லை கொடுக்கிறது; தலை சுற்றுகிறது. அதாவது—'ஒரு இராட்சதன்'—அப்படீன்னா என்ன? அது கிடக்கிறது. அவன் பெயர் இரணியாட்சதன்—அதுவும் போகட்டும். அவன் கதை அப்புறம் கேட்போம். அந்த இராட்சதன் பூமியை எப்படிச் சுருட்டினான்? பூமிதான் பந்துபோல் இருக்கிறதே! அவன் அதை உருட்டுவதானால் ஒரு சமயம் உருட்ட முடியுமே ஒழிய, சுருட்ட முடியாது; அதுவும் போகட்டும். சுருட்டினான் என்கிறாய்! சுருட்டினான் என்றே வைத்துக் கொள்வோம். சுருட்டினானே, அவன் சுருட்டும்போது—தான் எங்கே இருந்துகொண்டு சுருட்டினான்? சுருட்டிக்கொண்டு ஓடினானே, எதன் மேல் நடந்து ஓடினான்? ஆகாயத்தில் பறந்து கொண்டே சுருட்டி இருக்கலாம்; ஆகாயத்தில் பறந்துகொண்டே ஓடி இருக்கலாம். கருடன்—மகாவிஷ்ணுவையும் அவர் பெண்டாட்டியையும் தூக்கிக்கொண்டு பறப்பதுபோலப் பறந்து இருக்கலாம்.

1686—199

ஆனால், அவன் சமுத்திரத்திற்குள் ஒளிந்துகொண்டான் என்கிறாயே—அந்தச் சமுத்திரம் எதன்மேல் இருந்தது? பூமியின்மேல் இல்லாமல் அதுவும் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டோ அல்லது பறந்துகொண்டோ இருந்தது என்றால், சமுத்திரம் தண்ணீர் ஆயிற்றே—அது ஒழுகிப்போய் இருக்காதா? அப்போது அடியில் ஒளிந்து கொண்டிருப்பவன் தொப்பென்று கீழே பூமியுடன் விழுந்திருக்கமாட்டானா? அல்லது, அது வேறு உலகம்; இது வேறு உலகமா? நமக்கு ஒன்றும் புரியவில்லையே! இதை எனக்குப் புரியவைக்க வேண்டும். நானும் நீயும் பி. ஏ. இரண்டாவது வருஷம். பூகோளம், வானநூல், சயின்ஸ் படித்தவர்கள்; ஆதலால் இந்தச் சந்தேகம் வருகிறது. நாம் படிக்காத 'மடையர்களாய்' இருந்தால் குற்றமில்லை. சற்றுச் சொல்லு பார்ப்போம்!

ராமானுஜம்: இதெல்லாம் பெரியோர்கள் சொன்ன விஷயம்; சாஸ்திரங்கள் சொன்ன விஷயம்; மதத் தத்துவம். ஆதலால், இவைகளை இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. நாத்திகர்கள் இப்படிக் கேட்பார்கள். கறுப்புச் சட்டைக்காரர்கள்தான் இப்படிக் கேட்பார்கள். இத்தனை ஆயிரம் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்களே—ஒரு ஆள் இப்படிக் கேட்பாரா? சோஷியலிஸ்டுகளில் ஒரு ஆள் இப்படிக் கேட்பானா? நீதான் இப்படிக் கேட்கிறாய். நீ கறுப்புச் சட்டைக்காரன்தான்—சந்தேகமில்லை.

டேவிஸ்: நீ என்னப்பா இப்படிப் பேசுகிறாய்? பி.ஏ. படிக்கிறவனாகத் தெரியவில்லை. பூமிக்குப் பிறந்தான் என்கிறாய்; பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போனான் என்கிறாய். எப்படிப் பிறந்தான்; எப்படித் தூக்கிக்கொண்டு—எப்படிப் போனான் என்றால்—கோபத்துக்கு வருகிறாய்! இந்தக் கதையைப் பண்டிகையாக வைத்துக் கோடிக்கணக்கான மக்கள் கொண்டாடுகிறார்கள் என்கிறாய்! சர்க்கார் இதற்கு லீவு விடுகிறது; பல இலட்சம் பிள்ளைகள் அன்று படிப்பதை விட்டுத் தெருச் சுற்றுகிறார்கள். இவ்வளவு பெரிய சங்கதியைக் கேட்டால், என்னைக் கறுப்புச்சட்டை என்கிறாய். கறுப்புச் சட்டை போடாதவனுக்குப் புத்தியே இருக்கக்கூடாதா? புத்தி-கறுப்புச் சட்டைக்குத்தான் சொந்தமா? சரி; அது இருக்கட்டும். அப்புறம்—அவன் ஓடிப்போய்ச் சமுத்திரத்தில் ஒளிந்துகொண்டான்; அப்புறம்?

ராமானுஜம்: ஒளிந்துகொண்டான்; பூமியில் இருந்தவர்கள் எல்லாம் போய் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள்.

டேவிஸ்: இரு, இரு; பூமியைச் சுருட்டினபோது பூமியில் இருந்தவர்கள் ஓடிவிட்டார்களோ? நோட்டீஸ் கொடுத்துவிட்டுத்தான் சுருட்டினானோ?

ராமானுஜம்: நீ என்னப்பா, சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்கிறாய்? ஓடிப்போய் முறையிட்டார்கள் என்றால், 'எப்படிப் போனார்கள்?' 'வெங்காயம் வீசை என்ன விலை?' 'கருவாடும் கத்தரிக்காயும் போட்டுக் குழம்பு வைத்தால் நன்றாக இருக்குமா?' என்பது போன்ற—அதிகப் பிரசங்கியான கேள்விகளை, முட்டாள்தனமாகக் கேட்கிறாயே!

டேவிஸ்: இல்லை, இல்லை; கோபித்துக்கொள்ளாதே. சரி, சொல்லித் தொலை. முறையிட்டார்கள்; அப்புறம்?

ராமானுஜம்: முறையிட்டார்கள். அந்த முறைக்கு இரங்கி, பகவான் மகாவிஷ்ணு உடனே புறப்பட்டார்; சமுத்திரத்தினிடம் வந்தார்; பார்த்தார் சுற்றி; எடுத்தார் பன்றி அவதாரம்; குதித்தார் தண்ணீரில்; பாய்ந்தார் நிலத்துக்கு; கண்டார் பூமியை; தன் கொம்பில் அதைக்குத்தி எடுத்துக்கொண்டு வந்து விரித்தார் பூமியைப் பாயாக—புரிந்ததா?

டேவிஸ்: புரியாவிட்டால் கோபித்துக்கொள்கிறாய்! அதிகப் பிரசங்கி என்கிறாய்! சரி புரிந்தது; விரித்தார் பூமியை—பிறகு என்ன நடந்தது?

ராமானுஜம்: பிறகா—பூமியை விரித்தவுடன் அந்தப் பூமிக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது; ஒரு 'குஷால்' உண்டாயிற்று. பூமி, அந்தப் பன்றியைப் பார்த்தது—அந்தப்

பன்றி, இந்தப் பூமியைப் பார்த்தது. அந்தச் சமயம் பார்த்து மன்மதன் இரண்டு பேரையும் கலவி புரியச் செய்துவிட்டான். அப்புறம் சொல்ல வேண்டுமா—கலந்தார்கள்; பிறந்தது பிள்ளை.

டேவிஸ்: சரி; இங்கே என் சொந்த சங்கதி கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாதே.

ராமானுஜம்: சரி, கேள்.

டேவிஸ்: வராகம் என்பது பன்றி; அது ஒரு மிருக ரூபம்; சரிதானா?

ராமானுஜம்: சரி.

டேவிஸ்: கல், மண் உருவம்; சரிதானா?

ராமானுஜம்: சரி.

டேவிஸ்: இது இரண்டும் எப்படிக் கலவி புரியும்? எப்படிக் கருத்தரிக்கும்?

ராமானுஜம்: பாத்தியா, பாத்தியா; இதுதான்—போக்கிரித்தனமான கேள்வி என்பது. கடவுள் பார்த்து எப்படிச் செய்யவேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

டேவிஸ்: என்னப்பா, ராமானுஜம்? பாத்தியா, பாத்தியா என்று சாயபு மாதிரி—'பாத்தியா' கொடுக்கிறாய்? இது ஒரு பெரிய சயின்ஸ்—செக்சுவல் சயின்ஸ் சங்கதி. இதைக் கேட்டால் போக்கிரித்தனமான கேள்வி என்கிறாய். சரி; இதைப் பற்றிப் பிரின்ஸ்பாலைக் கேட்கலாம். அப்புறம் அந்தப் பிள்ளை என்ன ஆயிற்று?

ராமானுஜம்: அந்தப் பிள்ளைதான் நரகாசுரன்!

டேவிஸ்: இந்தப் பெயரை அதற்கு யார் இட்டார்கள்? தாய் தந்தையர்களா?

ராமானுஜம்: யாரோ 'அன்னக் காவடிகள்' இட்டார்கள்? அதைப்பற்றி என்ன பிரமாதமாய்க் கேட்கிறாய்? எனக்கு அவசரம்–என்னைப் போகவிடு.

டேவிஸ்: சரி, போகலாம்; சீக்கிரம் முடி. அப்புறம்?

ராமானுஜம்: அந்த நரகாசுரன், தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தான்; அவனை மகாவிஷ்ணு கொன்றார்.

டேவிஸ்: அட, பாவி! கடவுளுக்குப் பிறந்தவனா தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தான்? அப்படி யென்றால் தேவர்கள் என்ன அவ்வளவு அயோக்கியர்களா?

ராமானுஜம்: இல்லையப்பா. இந்த நரகாசுரனின் பொல்லாதவேளை–தேவர்கள் கிட்டே அவன் வாலாட்டினான். அவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா?

டேவிஸ்: அதற்காக, தகப்பன் மகனுக்குப் புத்தி சொல்லாமல் ஒரே அடியாகக் கொன்றுவிடுவதா?

ராமானுஜம்: அது அவர் இஷ்டம்! அதைக் கேட்க நாம் யார்? 'தேவரனையர் கயவர், அவரும் தாம் மேவன செய்தொழுகலான்' என்று நாயனார் சொல்லி இருக்கிறார். ஆதலால், நாம் அது ஏன், இது ஏன் என்று கேள்வி கேட்கலாமா?

டேவிஸ்: சரி; கொன்றார்! அதற்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம்?

ராமானுஜம்: அதைக் கொண்டாட வேண்டிய அவசியம் ஏன் என்றால், இனிமேல் எவனும் தேவர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காக அதை ஞாபகத்தில் வைப்பதற்கு—அதை நினைவூட்டுவதற்கு நாம் அடிக்கடி கொண்டாட வேண்டியது.

டேவிஸ்: தேவர்கள் எங்கிருக்கிறார்கள்?

ராமானுஜம்: வான் தேவர்கள்—வானத்தில், (மேல் லோகத்தில்) இருக்கிறார்கள்; பூதேவர்கள் இந்தப் பூமியில் இருக்கிறார்கள்!

டேவிஸ்: இந்தப் பூமியில் இருக்கும் தேவர்கள் யார்?

ராமானுஜம்: அட, முட்டாள்! அதுகூடவா தெரியாது? அதுதான் பிராமணர்கள். பிராமணர்கள் என்றாலே பூதேவர்கள்தானே! அகராதியைப் பார்.

டேவிஸ்: பிராமணர்கள் என்பவர்கள் என்ன வகுப்பு?

ராமானுஜம்: என்ன வகுப்பு? நாங்கள்தான்.

டேவிஸ்: நீங்கள் என்றால், நீ அய்யங்கார். நீங்கள்தானா?

ராமானுஜம்: நாங்கள் மாத்திரம் அல்லப்பா; நாங்களும்—அய்யர், ஆச்சாரி, சாஸ்திரி, சர்மா, தீட்சதர் முதலியவர்கள் எல்லாரும்.

டேவிஸ்: அப்படி யென்றால் பார்ப்பனர்கள் யாவரும் பூதேவர் என்கிறாய்?

ராமானுஜம்: ஆமாம்; ஆமாம்! கல்லாட்டமா, ஆமாம்!

டேவிஸ்: சரி; தொலைந்து போகட்டும். நீங்கள் தேவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். உங்களுக்குத் தொல்லை கொடுக்க அசுரர், இராட்சதர் ஒருவரும் இந்த உலகத்தில் இல்லையே? இங்கிருப்பவர்களை எதற்காகப் பயப்படுத்தத் தீபாவளி கொண்டாட வேண்டும்?

ராமானுஜம்: இங்கேயா அசுரர், இராட்சதர் இல்லை என்கிறாய்? இந்தக் கறுப்புச் சட்டைக்காரர்கள்-சுயமரியாதைக்காரர்கள்-திராவிட கழகத்தார்கள் இவர்கள் எல்லாம் யார்? பிராமணர்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்கள்—குறை சொல்கிறார்கள். அவர்களைப் போல் வாழ வேண்டுமென்பவர்கள்; வேத, சாஸ்திர, புராண, இதிகாசங் களைப் பகுத்தறிவில் ஆராய்ச்சி செய்கிறவர்கள்—முதலிய இவர்கள் எல்லோரும் இராக்கதப் பதர்கள்; இரக்கமே இல்லாத அரக்கர்கள்—தெரிந்ததா? அவர்களுக்குப் பயம் உண்டாவதற்காக—தேவர்களுக்கு இடையூறு செய்தால் நாசமாய்ப் போய் விடுவாய் என்று அறிவுறுத்துவதற்காகத்தான், தீபாவளி கொண்டாடுவதாகும்; இதுதான் இரகசியம். மற்றபடி, கதை எப்படி இருந்தால் என்ன?

டேவிஸ்: அப்படியா நீங்கள் 100-க்கு 3 பேர்; நீங்கள் அல்லாதவர்கள் 100-க்கு 90 பேர். எப்படி, எத்தனை நாளைக்கு இப்படி மிரட்டமுடியும்?

ராமானுஜம்: அதைப் பற்றிக் கவலைப்படாதே. காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கிறது. அந்தத் தொண்ணூறு பேர்களில் ஒரு பகுதி விபீஷணர்களாக-அனுமார்களாக இருக் கிறார்கள். பிராமணத் தொண்டாற்றவும், எதிரிகளை ஒழிக்கவும், அவர்கள் பயன்படுவார்கள். மற்றும் பண்டிதர் கூட்டம்; படித்துவிட்டு உத்தியோகத்துக்குக் காத்துக் கிடக்கும் கூட்டம்; கோவில், மடம், தர்ம ஸ்தாபனத்தில் இருக்கும் கூட்டம்; புத்தகக் கடைக் கூட்டம்; பூசாரிக் கூட்டம்; பிரபுக் கூட்டம்; மந்திரிக் கூட்டம்; சினிமாக் கூட்டம்; நாடகப் பிழைப்புக் கூட்டம்; கலை வித்துவான்கள் கூட்டம்; அரசியல் பிழைப்புக்காரக் கூட்டம்; தேச பக்தர்கள் தியாகிகள் கூட்டம்—இப்படியாக இடறி விழுந்தால் அவர்கள் மீது விழும்படி சர்வம் 'பிராமண அடிமையாம்' என்பது போல் இருக்கும் போது, 100-க்கு 3 — 100-க்கு 90 என்ற கணக்கு முட்டாள்தனமான கணக்கு ஆகும்.

டேவிஸ்: ஓகோ! அப்படியா? சரி; சரி. தீபாவளி என்பதன் தத்துவமும் இரகசியமும் தெரிந்து கொண்டேன். நன்றி; வணக்கம்.

ராமானுஜம்: சரி; நமஸ்தே! ஜெய் ஹிந்த்!

[சித்திரபுத்திரன் உரையாடல்—'விடுதலை' 19-10-1953]

6. கார்த்திகை தீபம்

கார்த்திகை தீபப் பண்டிகை ஒரு தெய்வீகம் பொருந்திய சிறந்த நாளாகக் கருதி இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை இந்து மதத்தில் உள்ள சைவர், வைணவர், வீர சைவர், ஸ்மார்த்தர் முதலிய எல்லாப் பிரிவினரும் கொண்டாடுகின்றனர்.

சாதாரணமாக, கார்த்திகை நட்சத்திர தினத்தை 'சுப்பிரமணியன்' என்னும் சாமிக்கு உகந்த சிறந்த நாளாகக் கருதியே, 'பக்தர்கள்' என்பவர்கள் விரதங்களும், பூசைகளும் நடத்தி வருகின்றனர். சாதாரணமாக, மற்ற மாதங்களில் வரும் கார்த்திகை களைவிட, கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு திருவண்ணாமலை முதலிய பல ஊர்களுக்கு யாத்திரை போய்ப் பணத்தைச் செலவு செய்துவிட்டுத் திரும்பும்போது—அங்கிருந்து வாந்திபேதியைக் கொண்டுவருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கார்த்திகைக் காக, வைத்தீஸ்வரன் கோயில், குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமி மலை முதலிய ஊர்களுக்கு மக்கள் சென்று செலவுசெய்யும் செல்வங்களே பதினாயிரக்கணக் காகவும், இலட்சக்கணக்காகவும் ஆகும்போது, பெரிய கார்த்திகை என்று பெயர்பெற்ற கார்த்திகை மாதப் பண்டிகை நாளில் செலவாகும் பொருள் கோடிக்கணக்கில் குறைவு படுமா? இதில் எவ்வாறு பொருள் வீணாகிறது என்பதை நினைத்துப் பாருங்கள்!

வீடுகளுக்குள்ளும், வெளிப்புறங்களிலும், காடுகளிலும், மேடுகளிலும், குப்பை களிலும், கூளங்களிலும் எண்ணற்ற இலட்சக்கணக்கான விளக்குகளைக் கொளுத்தி வைப்பதன் மூலம் செலவாகும் நெய், எண்ணெய்ச் செலவு எவ்வளவு? கோயில்கள் என்பவை களுக்கு 'சொக்கப்பனை' கட்டி நெருப்பு வைப்பதற்குச் செலவு செய்யும் நெய், எண்ணெய், விறகு முதலியவைகளுக்காகும் செலவு எவ்வளவு? கார்த்திகைப் பண்டிகைக்காக திருவண்ணாமலை முதலிய ஊர்களுக்குப் பிரயாணம் செய்வதன் மூலமாகும் ரொக்கப் பணச் செலவு எவ்வளவு? அங்கு கூம்புக்குச் செலவாகும் விறகு, கற்பூரம், வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவு? இதனால் நாட்டிற்கு கடுகளவாவது பயனுண்டா?

இதனால் மக்களுக்கு உண்டாகும் மூடநம்பிக்கையையும் அதனால் உண்டாகும் மூடப்பழக்க வழக்கங்களையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! கார்த்திகை தீபத்தைப் பற்றி வழங்கும் புராணக் கதைகள் இரண்டு.

ஒன்று: ஒரு சமயம் அக்கினி தேவன் என்னும் கடவுள் சப்தரிஷிகளின் மனைவி மார்களைப் பார்த்து மோகங் கொண்டானாம். அதை அறிந்த அவன் மனைவி சுவாகா தேவி என்பவள், அந்த ரிஷிகளின் மனைவிகளைத் தொந்தரவு செய்தால் அவர்களால் தன் கணவன் சபிக்கப்படுவான் என்று எண்ணினாளாம். அதனால் அவள் வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததி உருவத்தை மாத்திரம் விட்டுவிட்டு மற்ற 6 ரிஷிகளின் மனைவி மார்களைப் போல உருவம் கொண்டு தன் கணவன் ஆவலை நிறைவேற்றினாளாம். இவ்வாறு சுவாகாதேவி கொண்ட 6 உருவத்திற்கும் கார்த்திகை என்று பெயராம். இவைகள் தாம் கார்த்திகை நட்சத்திரமாகக் காணப்படுபவையாம். இந்த நட்சத்திரப் பெண்கள்தாம் சுப்பிரமணியன் என்னும் சாமி குழந்தையாக இருந்தபோது அதை எடுத்து வளர்த்தார் களாம்.

இக் கதையினால்தான் கார்த்திகை நட்சத்திரத்திற்குப் பெருமை. இக் கதை நமது மக்களுக்குக் கற்பிக்கும் மூடநம்பிக்கையைப் பாருங்கள். பிறர் மனைவிமேல் ஆசைப்பட்டு விபச்சாரம் பண்ணுவது குற்றமில்லை என்பது, ஒன்று; மனைவி தன் கணவன் எந்தத் தகாத காரியத்தை விரும்பினாலும், அதை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்துகொடுக்கும் அடிமைக் கருவியாக இருக்கவேண்டும் என்பது, இரண்டு. இவைமட்டும் அல்லாமல், இயற்கைப் பொருள்களின்மேல் எல்லாம் 'தெய்வீகம்' என்னும் மூடநம்பிக்கையை

உண்டாக்கும் துர்ப்போதனை, மூன்று. ஆகவே, இவற்றை ஆராயும்போது இக் கதையும் இதன்மூலம் ஏற்பட்ட விரதம், பண்டிகை முதலியனவும் புரட்டு என்று உணரலாம்.

இரண்டாவது கதை : ஒரு காலத்தில் பிரம்மா என்னும் கடவுளும், விஷ்ணு என்னும் கடவுளும் தாம் தாமே ஆதிமூலக் கடவுளர் எனக் கூறிக்கொண்டதனால் இருவருக்கும் முதலில் வாய்ச் சண்டை உண்டாகி பிறகு அது கைச் சண்டையாக மூண்டு ஒருவரோடு ஒருவர் அடிபிடி சண்டை செய்தனராம். அவர்களுடைய சண்டை சீக்கிரத்தில ஒரு முடிவுக்கு வரவில்லையாம். ஆகையால் பரமசிவன் என்னும் கடவுள் அப்போது அவர்கள் மத்தியில் ஒரு பெரிய சோதி உருவத்தோடு வானத்திற்கும் பூமிக்குமாக நின்றாராம். உடனே சண்டைக்காரக் கடவுள்கள் இருவரும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்களாம். அப்போது சோதி உருவாக நின்ற பரமசிவக் கடவுள் 'ஏ, பிரம்ம, விஷ்ணுகளே! இந்த சோதியின் அடி, முடிகளை யார் முதலில் கண்டு வருகிறாரோ அவர்தான் உயர்ந்தவர்' என்று ஒரு அனாமதேய வார்த்தை சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றி உருவங் கொண்டு அடியைக் காணப் பூமியைத் தொளைத்துக்கொண்டு வெகுதூரம் சென்றும் காண முடியாமல் திரும்பி வந்து விட்டாராம். பிரம்மன் அன்னப் பறவை உருவங்கொண்டு சோதியின் முடியைக்காணப் பறந்து மேலே செல்லும்போது வழியில் கீழ்நோக்கி ஒரு தாழம்பூ வந்துகொண்டிருந்ததாம். அதைக்கண்டு பிரம்மன் 'தாழம்பூவே, எங்கிருந்து, எவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்க; அது 'நான் பரமசிவனுடைய முடியிலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களாக வந்து கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிற்றாம். உடனே பிரம்மன், 'நான் சிவனுடைய முடியைப் பார்த்துவிட்டதாக அவனிடத்தில் எனக்காகச் சாட்சி சொல்லுகிறாயா?' என்று கேட்க—அதுவும் சம்மதிக்க, இருவரும் பரமசிவனிடம் வந்து, முடியைக் கண்டுவந்ததாகப் பிரம்மன் கூற—தாழம்பூவும் அதை ஆமோதித்ததாம். அது கண்ட சிவன் கோபங்கொண்டு இருவரும் பொய் சொன்ன தற்காக 'பிரம்மனுக்கு இவ்வுலகில் கோயில் இல்லாமற் போகக்கடவது' என்றும், 'தாழம்பூ தனக்கு இனிமேல் உதவாமல் போகக் கடவது' என்றும் சாபம் கொடுத்தாராம். பிறகு பிரம்மாவும் விஷ்ணுவும் தங்கள் கர்வம் ஒழிந்து பரமசிவனே பெரியவர் என்று எண்ணி, இருவரும் அவரை வணங்கி, எங்கள் வழக்கைத் தீர்த்துவைத்ததற்கு அடையாளமாக இந்த மலையின்மேல் ஒரு 'சோதி' உருவாக இருக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்களாம். பரமசிவனும் அதற்குச் சம்மதித்து, 'ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகைப் பண்டிகையில் நான் இந்த மலையின் உச்சியில் சோதியாகக் காணப்படுவேன்' என்று சொன்னாராம். இதுதான் திருவண்ணாமலைப் புராணமாகிய அருணாசல புராணத்தில் சொல்லப்படும் கார்த்திகைப் பண்டிகைக் கதை.

இக் கதையை ஆதாரமாகக் கொண்டுதான் இன்றும் 'சைவப் பெரியார்கள்' என்பவர்கள் சிவன் என்பவரே மற்ற கடவுள்களைவிட உயர்ந்தவர் என்று சண்டை போடுகின்றனர். இந்தக் கதையைக் காட்டிச் சிவனை உயர்த்தியும், மற்றவர்களைத் தாழ்த்தியும் பாடாத சைவப் புராணங்களும், தேவாரங்களும், திருவாசகங்களும், தோத்திரங் களும் இல்லை. இதற்கு எதிராக மற்ற மதத்தினர்கள் எழுதி வைத்திருக்கும் கதைகள் பல. இவ்வாறு மதச் சண்டையை உண்டாக்குவதற்கு இக் கதை முதற்காரணமாக இருப்பதை அறியலாம். இந்தக் கதையில் தாழம்பூ பேசுவது வேடிக்கை. கடவுள்களுக்குள்ளேயே சண்டை வந்தது விந்தை. இதுபோல ஆராய்ந்தால் பரிகாசத்திற்கும் வேடிக்கைக்கும் இடமாக இக் கதையில் அனேக செய்திகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு முரண்பட்ட வேடிக்கைக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட இந்தக் கார்த்திகைப் பண்டிகையினால் நமது மக்கள் மனத்தில் குருட்டு பக்தியும் மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும் அதிகப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? இது நிற்க; மேலே கூறிய கதைகளில் இரண்டாவது கதையைச் சைவர்கள்தாம் சிவனுக்குப் பெருமை கற்பிக்கிறது என்று நம்பிக் கார்த்திகைப் பண்டிகை கொண்டாடுகிறார்கள்

என்றால்—வைணவர்களும் கொண்டாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? வைணவர்களின் கடவுளை மலந்தின்னும் பன்றியாக்கிக் கேவலப்படுத்தியிருப்பதுடன் சிவனுடைய பாதத்தைக் காணமுடியாத அவ்வளவு சக்தியற்ற தெய்வம் என்று இழிவுபடுத்தியிருப்பதை அறிந்தால் அவர்கள் இந்தப் பண்டிகையைப் பெருமையாகக் கொண்டாடச் சம்மதிப்பார்களா? இவர்கள் போகட்டும்; ஏதாவது ஒரு கடவுளாவது இருக்கிறார் என்ற நம்பிக்கையில்லாத, தானே கடவுள் என்னும் கொள்கையுடைய ஸ்மார்த்தர்களும் இக் கதையை நம்பிப் பண்டிகை கொண்டாடுகிறார்களே, இதில்தான் என்ன அர்த்தமிருக்கிறது? இவற்றையெல்லாம் யோசிக்கும்பொழுது இவர்கள் முட்டாள்தனம் காரணமாகவாவது, வீண் ஆடம்பரம் காரணமாகவாவது இப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. அறிந்தோ அறியாமலோ நமது மக்கள் மனத்தில் பண்டிகைகள்—புண்ணிய நாட்கள், அவற்றைக் கொண்டாடுவதால் புண்ணியம் உண்டு; கொண்டாடாவிட்டால் 'பாவம்' என்னும் குருட்டு நம்பிக்கை குடிகொண்டிருக்கிறது.

ஆகவே, இதுபோன்ற பண்டிகைகளால் நமது நாட்டில் பொருள் செலவும், வறுமையும், மூடநம்பிக்கையும், வீண்காலப் போக்கும் நிறைந்திருப்பதை எடுத்துக்கூறத் தொடங்குகிறவர்களுக்கு உடனே பகுத்தறிவற்ற, வைதீக மூடர்கள், 'தேசத் துரோகி,' 'மதத் துரோகி,' 'வகுப்புவாதி,' 'நாத்திகன்' என்ற பட்டங்களைச் சூட்டிவிடுகின்றனர். சிறிதேனும் பொறுமைகொண்டு—சொல்லும் விஷயத்தைப் பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து பார்க்கிறவர்கள் இல்லை.

['குடி அரசு'-தலையங்கம்—22-11-1931]

7. வைகுண்ட ஏகாதசி—பூசம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மார்கழி மாதம் வந்தால், வைகுண்ட ஏகாதசி என்று கூட்டம் கூட்டமாய் சீரங்கம் முதலிய ஊர்களுக்குப் பணச் செலவு செய்துகொண்டு போவதும், தை மாதம் வந்தால் பூசம் என்று காவடிகளைத் தூக்கிக்கொண்டு பழனி முதலிய மலைகளுக்குப் போவதும், பொய்யையும், புளுகையும் காவடிக் கதையாய்ச் சொல்வதும், அறுத்துச் சமைத்த பாம்பும் கோழியும், மீனும் உயிர் பெற்றுவிட்டன என்பதும், மண் சர்க்கரையாகிவிட்டது என்பதும், வெட்டித் துண்டாக்கப்பட்ட குழந்தை உயிர் பெற்று விட்டது என்பதும் இன்னும் இவை போல பல பொய்களை வெட்கமில்லாமல் சொல்வதும், அழுக்குக் குளங்களில் குளித்து—அழுக்குத் தண்ணீரைக் குடித்து—பஞ்சாமிர்தம் என்னும் ஒரு அசிங்கமான வஸ்துவைக் கண்டபடி சாப்பிட்டு வயிற்றுப் போக்கெடுத்து காலரா ஏற்பட்டு, திரும்பிப் போகும் வழியில் சாவதும்; சிலர் அந்தக் காலராவைத் தங்கள் தங்கள் ஊருக்குக் கொண்டுபோய்ப் பரவவிட்டு அங்குள்ளவர்களைக் கொல்லுவதும்; அவர்கள் நதி, வாய்க்கால் ஓரங்களில் குடி இருந்தால் அந்தக் காலரா அசிங்கம் வாய்க்கால்களில் கலந்து கரை ஓரங்களில் இருக்கும் ஊர்களிலெல்லாம் பரவி—மக்கள் நூற்றுக் கணக்காகச் சாவதுமான காரியங்கள் வருஷந்தோறும் நடைபெறுகின்றன. சாதாரணமாக, சீரங்கம் வைகுண்ட ஏகாதசி உற்சவத்திலும், பழனி தைப் பூச உற்சவத்திலுமே ஏற்பட்ட சுகாதாரக் கெடுதியால் ஒவ்வொரு வருஷமும், அங்கு முதல் முதல் காலரா உற்பத்தியாகி, பிறகு 2, 3 மாதங்கள் தென்னாடெல்லாம் பரவி, வருஷம் 1-க்கு 2, 3 ஆயிரம் பேருக்குக் குறைவில்லாமல் கொள்ளை கொண்டு போகின்றது. இதன் உண்மையை ஒருவரும் அறியாமல், 'பேதியாயி', 'காளியாயி', 'ஓங்காளியாயி' ஊருக்கு ஒரு குடம் எண்ணெய் கொண்டுவந்து—ஆளுக்கு அரைக் கரண்டி கொடுத்து விட்டாள்' என்று சொல்லி—ஊரிலுள்ள மக்களில் சிலபாகம் செத்து—காலரா தானாக ஒடுங்கிய பின் ஓங்காளியின் பொங்கலும், காளிபூசையும் செய்து பேதியை நிறுத்தி விட்டதாக வெட்கமில்லாமல் பேசிக்கொள்வதும், அன்றியும்;

கிராமங்களிலெல்லாம் மார்கழி, தை மாதங்களிலேயே மாரியம்மன் பண்டிகை கொண்டாடி—வெந்ததும் வேகாததுமான பொங்கலும், பச்சை மாவும், சரியாய்ச் சுத்தம் செய்யப்படாத—வேகாத மாமிசமும் கண்டபடி புசிப்பதால் அஜீரணம், காலரா முதலிய வியாதிகள் உண்டாவதையும் பார்க்கின்றோம். பொதுவாகவே, நம் நாட்டில் கூட்டம் சேர்ந்தாலே அசுத்தம் உண்டாகி வியாதிகள் ஏற்படுவதை அனுபவத்தில் பார்த்து வருகின்றோம்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்க விழாவில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

8. மகாமக தீர்த்தம்

மகாமகம் அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா இந்த மாதம் 25-ந் தேதியில் கும்பகோணத்தில் நடத்த ஏற்பாடுகள் வெகுதுரிதமாக நடைபெற்று வருகின்றது. சுமார் ஒரு இலட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்துகூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு இரயில்வேக்காரர்கள் பல பிளாட்பாரங்களையும், கொட்டகைகளையும் போடுகிறார்கள். அதற்குத் தகுந்தபடி கூட்டங்களை வரவழைக்க அனேகவித சித்திரப் படங்களை அச்சடித்து இரயில் நிலைய மேடைகளிலெல்லாம் கட்டித் தொங்கவிட்டும், பத்திரிகைகளுக்குப் பணம் கொடுத்துப் பிரசுரிக்கும்படி செய்தும், மற்றும் பல .வழிகளிலும் விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாக, கும்பகோணமானது ஒரு அழகான பட்டணம் என்றோ, சுகாதார வசதியான பட்டணமென்றோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ பயன்படத் தகுந்த விசேஷம் பொருந்திய பட்டணமென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு, நாளுக்கு நாள் க்ஷீணதசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்காலமுறைக் கட்டடங்களையும் உடைய ஊராகும். அதில் வசிக்கும் மக்களோ பெரும்பாலோர் பாப்பனர்களும், 'மேல்சாதி' மிராசுதாரர்களுமாவார்கள்.

'கும்பகோணம் பார்ப்பனர்கள் என்றால், மிகத் தந்திரசாலிகள்' என்பார்கள். கும்பகோணம் மாத்திரமல்ல, தஞ்சாவூர் ஜில்லா முழுவதுமே உள்ள பார்ப்பனர்கள் பழைய இராஜாவின் தர்மத்தினாலும், மற்றும் தஞ்சை ஜில்லாவிலேயே ஏற்பட்டிருந்த இரண்டு முதல்தர காலேஜ்களினாலும் சாப்பாடும் கல்வியும் சுலபமாய்—இருக்குமிடத்திலேயே கிடைக்கக் கூடிய நிலைமை இருந்ததால் படித்துப் பட்டம் பெறவும், அதற்கேற்ற உத்தியோகங்கள் பெறவும் சவுகரியம் ஏற்பட்டு இந்த மாகாணத்தில் அவர்களே முக்கிய மானவர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள்.

சுமார் 30–40 வருஷங்களுக்கு முன் தமிழ்நாடு மாத்திரமல்ல, மற்ற மாகாணங்களிலும் கூட—தஞ்சை ஜில்லா பார்ப்பனர்களே திவான்களாகவும், பிரபல வக்கீல்களாகவும், முன்சீப், ஜட்ஜு, டிப்டி கலெக்டர், சூப்பரிண்டெண்டுகளாகவும், மற்றும் பல பெரிய பதவி உடையவர்களாகவும் ஆக நேர்ந்து பிரபலமாகி விட்டார்கள். இக் காரணங்களால் 'கும்ப கோணம் பார்ப்பனர்களுக்கு' அதிகமான விளம்பரம் ஏற்பட வசதியாகி விட்டது. அங்குள்ள மிராசுதார்களும் ஏறக்குறைய பார்ப்பனர்களைக் 'காப்பி' 'அடித்துத் தங்களையும் மேல் சாதிக்காரர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதோடு நின்று விட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போட்டிபோடவோ, உத்தியோகம் பெறவோ முடியாதபடி பார்ப்பனர்கள் செய்துவந்த சூழ்ச்சியை வென்று முன்னேற முடியவில்லை. ஆதலால், பணம் சேர்ப்பதிலும் பூமியைப் பெருக்குவதிலும் மாத்திரம் கவலை கொண்டு, ஆள் ஒன்றுக்கு 1000 வேலி, 2000 வேலி என்பதாக நிலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். இரண்டு கூட்டமும் சரீரத்தினால் உழைக்காமல் ஏழைகள், உழைப்பாளிகள் ஆகியவர் களின் பாட்டினாலேயே வாழ்ந்து வருகிறார்கள். இதைத் தவிர, மற்றபடி அந்த ஜில்லா வுக்கும், கும்பகோணத்துக்கும் வேறு உண்மையான யோக்கியதை ஒன்றும் கிடையாது.

ஆனால், மற்றொரு யோக்கியதை உண்டு. அது, மேற்சொன்னவைகளைவிட மிகவும் மோசமான யோக்கியதையாகும். அதென்னவென்றால், தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு விசேஷ ஸ்தலமாகவும்; பாடல் பெற்ற ஸ்தலமாகவும், பூலோக வைகுண்டமாகவும், பூலோக சுவர்க்கமாகவும் மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் என்பவைகளெல்லாம் தஞ்சை ஜில்லாவிலேயே ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொன்று பிரதிபலிப்பதாகவும் கதைகளும், புராணங்களும், கர்ண பரம்பரை விசேஷங்களும் உண்டு.

தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் படித்துவிட்டு வெளி ஊர்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள செல்வங்களைக் கொள்ளை கொண்டுபோய்ச் சேர்ப்பது, ஒன்று; கிராமங்கள்தோறும் புண்ணிய க்ஷேத்திரங்களும் பாடல் பெற்ற க்ஷேத்திரங்களுமாய் இருப்பதால் மற்ற ஊர்களில் இருக்கும் மூடர்கள் எல்லாம் பாடுபட்டுத் தேடிய பணத்தை மூட்டை கட்டிக் கொண்டுபோய் அந்த ஜில்லாவில் அழுதுவிட்டு வரும் மடத்தனம், இரண்டு—ஆகிய இவைகளால் மாத்திரமல்லாமல், மைசூர், குடகு நாடுகளில் இருந்துவரும் காவேரியானது சேலம், கோயமுத்தூர் ஜில்லா வழியாக வந்தாலும், சேலம் ஜில்லாக்காரர்களுக்குக் குடிப்பதற்குக் கூட மார்க்கமில்லாமல் செய்துவிட்டும், கோயமுத்தூர் ஜில்லாக்காரருக்கு ஒரு செண்டு பூமிகூட பயிராவதற்கு உதவாமலும் ஏமாற்றிவிட்டு எல்லாத் தண்ணீரும் நேரே தஞ்சை ஜில்லா சென்று—ஜனங்கள் வெளிக்குப் போவதற்குக்கூட இடமில்லாமல் எல்லா நிலமும் நஞ்சைப் பயிராகும்படி செய்துகொண்ட சூழ்ச்சியால் ஏற்பட்ட லாபம், மூன்று.

இந்தப்படியாக, 'இயற்கை' வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவுக்கு மகாமக விசேஷம் என்னும் ஒரு புரட்டு யோகமும் சேர்வதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால், இப்போது நாம் இதை ஏன் எடுத்துக்காட்ட வருகிறோம் என்றால், நமது மக்கள் இத்தனை காலம் தான் மூடர்களாய், மடையர்களாய், கடையர்களாய் இருந்து, இவ்விதப் புரட்டுகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆளாகி, நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாற்றமும் அடைந்து வந்தோம் என்றாலும், இனியும் பாரம்பரியமாய்—தலைமுறை தலைமுறையாய் அடைய வேண்டுமா என்பதை ஞாபகப்படுத்தவே இதை எழுதுகின்றோம்.

தோழர்களே! மகாமகம் என்றால் என்ன என்பதைச் சற்று விசாரித்துப் பாருங்கள். இதை அறிவதற்காக நாம் ஆவல்பட்டுத் தேடினோம்; கும்பகோணம் ஸ்தல புராணம் என்பதில் இருப்பதாக அறிந்தோம். அதை வரவழைத்துப் பார்த்தோம்; அதில் உள்ளதை வெளியிடுகிறோம் :

'கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவிரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமிர பரணி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகளாக வெளிவந்து வெள்ளியங்கிரிக்குச் சென்று பரமசிவனை அடைந்து—'உலகில் உள்ள மக்கள் எல்லோரும் எவ்வளவோ கொடியதாகிய பாவங்களைச் செய்துவிட்டு, எங்களிடத்தில் வந்து ஸ்நானம் செய்து அவர்களது பாவங்களை எங்களுக்குக் கொடுத்துத் தீர்த்துக்கொண்டு போய் விடுகிறார்கள்; அந்தப் பாவங்களையெல்லாம் பெற்றுக்கொண்ட நாங்கள் எப்படி அவைகளைப் போக்கிக் கொள்ளுவது?' என்று கேட்டார்கள். அதற்குப் பரமசிவனார், 'கும்பகோணத்திலே தென் கிழக்கிலே ஓர் தீர்த்தம் உண்டு; 12 வருஷத்துக்கு ஒருமுறை மாசி மாதம் மகாமக நாளன்று அதில் குளிப்பீர்களானால் உங்கள் பாவங்கள் தொலைந்து போகும்' என்று சொன்னார். அதற்கு 9 கன்னிகைகளும், 'கும்பகோணம் எங்கே இருக்கின்றது?' என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவனார், அந்த 9 கன்னிகைகளையும் பார்த்து, 'நீங்கள் காசிக்குப் போயிருங்கள். அங்கிருந்து நான் விஸ்வேஸ்வரன் என்னும் பெயருடன் உங்களைக் கும்பகோணத்துக்கு அழைத்துப் போகிறேன்' என்று சொன்னார். அந்தப்படியே கன்னிகைகள் காசிக்குப் போயிருந்தார்கள். பரமசிவனார், அவர்களை காசியிலிருந்து கும்பகோணத்துக்கு அழைத்துச் சென்று மகாமகக் குளத்தைக் காட்டிக் குளிக்க வைத்தார். பிறகு

சிவபெருமானும் அந்தக் கன்னிகைகளும் கும்பகோணத்திலேயே கோவில் கொண்டு விட்டார்கள்! ஆதலால், அந்தக் குளத்தில் குளித்தவர்களுக்குச் சர்வ பாவமும் தொலைந்து சர்வ மங்களமும் உண்டாகும்' என்று இதில் கண்டிருக்கிறது.

தோழர்களே! இதுதான் கும்பகோண ஸ்தல மகத்துவமும், தீர்த்த மகத்துவமும் ஆகும். இதற்கு அப்புறம், அந்தக் குளத்தில் எப்படிக் குளிப்பது, அதற்காகப் பார்ப்பனர் களுக்கும் பார்ப்பனப் பெண்களுக்கும் எப்படி—எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியது என்கிற விஷயங்களும், எந்தெந்த இடத்தில் குளிப்பது, எந்தெந்தச் சாமியை எப்படி எப்படிக் கும்பிடுவது என்கிற விஷயமும் இருக்கின்றன.

இந்தக் கதையை ஆதாரமாக வைத்த இந்த மகாமக உற்சவத்திற்காக எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், எவ்வளவு விளம்பரங்கள், எவ்வளவு பணச் செலவுகள், எவ்வளவு கஷ்டங்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இந்துக்கள் மடையர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று ஒருவன் சொன்னால் உடனே கோபப்பட்டுக் கொள்ளத்தான் கற்றுக் கொடுக்கப்பட்டு இருக்கின்றோமே அல்லாமல்—அறிவைக் கொண்டு பார்க்கின்றோமா?

இந்தக் கும்பகோணத்துக்கும் அங்குள்ள மாமாங்கக் குளத்திற்கும் உள்ள விசேஷம் போலவே உலகத்தில் உள்ள அனேக சாக்கடைகளிலும், பட்டிக்காடுகளிலும் குப்பை மேடுகளிலும் உள்ள குழவிக் கல்லுகளுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும் எல்லாம் புராணங்களும், அய்தீகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக எந்தக் காரியங்களுக்கும் விசேஷம் என்பதெல்லாம் இரண்டே இரண்டு வாக்கியங்களில்தான் அடங்கி இருக்கின்றன.

அதாவது:—

1. சர்வ பாபங்களும் நிவர்த்தியாகி விடும்;

2. வேண்டியதெல்லாம் அடையலாம்—என்கின்றவைகளேயாகும்.

இந்த இரண்டு காரியங்களும் யோக்கியமான காரியங்களாயிருக்குமா என்பதை யோசித்துப் பாருங்கள். மனிதன் செய்கின்ற பாவமெல்லாம் இந்த மாதிரியான காரியங் களால் தீர்ந்து போவதாயிருந்தால் உலகத்தில் எந்த மனிதனாவது பாப காரியங்களைச் செய்யத் தவறுவானா, தயங்குவானா என்று யோசித்துப் பாருங்கள்!

மனிதனுக்கு வேண்டிய—அவன் ஆசைப்படும்படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறு காரியங்களால் கைகூடிவிடுவதாய் இருந்தால், மனிதனுடைய முயற்சி–நடத்தை–ஒழுக்கம் என்பவைகளுக்கெல்லாம் அவசியமும் நிபந்தனையும் வரையறையும் எதற்காக வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

நிற்க, பாவமுள்ள மனிதர்கள் நதிகளில் ஸ்நானம் செய்ததால் நதிகளுக்கு அந்தப் பாவங்கள் ஒட்டிக்கொண்டது என்பதில் ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்கமுடியுமா, அந்த நதிகள் அந்தப் பாவத்தைத் தொலைக்க மற்றொரு தீர்த்தத்தில் போய்க் குளிப்பது என்று மகாமக தீர்த்தத்துக்கு வந்து குளிப்பதனால்—இதில் ஏதாவது புத்தி இருக்கின்றதா? நாணயம் இருக்கின்றதா என்று யோசித்துப் பாருங்கள். இத்தனைப் பாவங்களையும் ஏற்றுக்கொண்ட மகாமகத் தெப்பக்குளம், அதன் பாவத்தைத் தீர்க்க—எந்த உருவெடுத்து, எந்தக் குளத்தில் போய்ப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளும் என்பதையும் யோசித்தால் கடுகளவு அறிவுள்ளவனாவது இதை ஏற்க முடியுமா என்று பாருங்கள்.

இதையெல்லாம் கவனித்தால் மதத்தின் பேரால்—பாவ புண்ணியத்தின் பேரால்—கடவுள் பேரால்—தீர்த்தம், ஸ்தலம், மூர்த்தி என்னும் பெயர்களால் மக்கள் எவ்வளவு தூரம் ஏய்க்கப்பட்டுக் கடையர்களாய், மடையர்களாய் ஆக்கப்படுகிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

மற்றும், அந்தப் புராணத்திலேயே இந்த மகாமகக் குளத்துக்குள் வடக்குப் பாகத்தில் ஏழு தீர்த்தங்கள் இருப்பதாகவும், கிழக்குப் பாகத்தில் நான்கு தீர்த்தங்கள் இருப்பதாகவும், நடு மத்தியில் 66,00,00,000 (அறுபத்தாறு கோடி) தீர்த்தங்கள் இருப்பதாகவும் இந்த மகா மகக் குளத்தில் இத்தனைத் தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்குமென்றும் எழுதி, அந்தப்படி ஒரு சித்திரமும் வரையப்பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பரிகசிக்கத் தக்க விஷயம் என்று பாருங்கள். இதை எழுதியவன் எவ்வளவு அயோக்கியன் அல்லது எவ்வளவு மூடன் என்பதல்ல இப்போதைய நமது கேள்வி; மற்றென்னவென்றால், இதைப் படித்துப் பார்த்து இதன்படி நடப்பார்கள் என்று நம்பிய மக்களை இவன் எவ்வளவு முட்டாள்களாகவும் அடிவண்டலாகவும் கருதி இருக்கவேண்டும் என்பதுதான் நமது கேள்வியாகும்.

தீர்த்தம் என்றாலும் நதி என்றாலும் குளம் என்றாலும் என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! நதி என்றால் மழைபெய்வதால் ஏற்படும் வெள்ளங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்ப் போக்காகும்.

குளம் என்றால் இந்தமாதிரி ஓடையில் இருந்து வழிவைத்துத் தண்ணீர் நிரப்புவதோ அல்லது மழை வெள்ளத்தால் ஊரில் உள்ள அசுத்தங்களையும் கசுமாலங்களையும் அடித்துக்கொண்டுவந்து குளத்தில் விழுந்து தேங்கியிருப்பதோதான். மற்ற குட்டித் தீர்த்தங்கள் என்பதும் கிணற்றுக்கு நீர் ஊற்றம் போன்ற ஊற்றேயாகும். இந்தத் தண்ணீர்களுக்கு எல்லாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதான் உண்டு. மற்றபடி அவற்றில் ஒரு மனிதன் செய்யும் பாவம் என்பதைப் போக்கவோ, அவன் ஆசைப்பட்டதைக் கொடுக்கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக்கூடும் என்பது ஒரு மனிதனுக்குத் தெரியாதா என்றுதான் கேட்கின்றோம்.

மாமாங்கக் குளம் என்பது மேற்கண்ட மாதிரியான ஒரு சாதாரண தெப்பக்குளம். மகாமக சமயத்தில் அதில் உள்ள தண்ணீர் அவ்வளவையும் இறைத்துவிட்டு வெறும் அடி வண்டலையும் சேற்றையும் மாத்திரம் மீதிவைத்து அதிலும் கந்தகப்பொடியைக் கலக்கி விடுவார்கள். அந்தச் சேறானது கருப்புக் களிமண்போல் இருக்கும். அந்தக் குளத்தின் விஸ்தீரணமோ சுமார் 500 அடி சதுரம் இருக்கலாம்; அடிமட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம். இதில் இலட்சம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படிச் சாத்தியமாகும்? அந்தக் குளத்தில் இறங்கி அந்தச் சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக்கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்கவேண்டியதுதான். இதுதான் வழக்கமாம். ஒரு கிறிஸ்தவரோ, ஒரு முகமதியரோ இப்படிச் செய்தால் அதை நாம் பார்க்க நேர்ந்தால் அப்போது நாம் என்ன என்று சொல்வோம்?

மிஸ். மேயோ (Miss. Mayo) நமது பழக்க வழக்கங்களைப்பற்றியும், சடங்குகளைப்பற்றியும், தீர்த்தங்களைப்பற்றியும் எழுதியதைப் பார்த்துக் கோபித்துக் கொண்டோம். ஆனால், இந்த மாதிரி சேற்றில் குளிப்பதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று கருதி இருக்கிற முட்டாள்தனமான பேராசைக்காக நாம் வெட்கப்படுவதில்லை என்றால், பிறகு எந்தவிதத்தில் நாம் அறிவாளிகள், யோக்கியர்கள், மனிதத் தன்மையுடையவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாமாங்கத்தால் எத்தனை இலட்ச ரூபாய் பார்ப்பான் கொள்ளையடிக்கப் போகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவை ஒரு பக்கம் இருப்பதோடு, கூட்ட நெருக்கடியில் உயிர்ச்சேதம் எவ்வளவு; திருட்டு எவ்வளவு? இவை தவிர இப்பொழுதே அங்கு கும்பகோணத்தில் காலராவும், அம்மையும் வரத் துவங்கிவிட்டது. இதற்காகத் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடாகிவிட்டது; 'பிளேக்கும்' பரவலாம். இந்த வியாதிகளும் தங்கள் பாவத்தைப் போக்கிக்கொள்ள அங்கு வரப்போகின்றன.

கும்பகோணத்துக் கொசுக்களோ அந்த ஊர்ப் பார்ப்பனர்களையும் குச்சுக்காரிகளையும் விட எத்தனையோ பங்கு மோசமானவை என்று சொல்லலாம். ஏனெனில், இவை அவர்களைவிட மோசமாக வெளியில் இருந்து வருகின்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சக் காத்துக்கொண்டிருக்கின்றன. மாமாங்கத்துக்குப் போய் வந்தவனுக்கு வரப்போகின்ற மலேரியா காய்ச்சல்—அடுத்த மாமாங்கம் வந்தாலொழிய தீராது. இந்த நிலையில் உள்ள மகாமகம் என்ன புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

['விடுதலை'—கட்டுரை—13-2-1956]

9. சிவராத்திரி

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மாசி மாதம் வந்தால் சிவராத்திரி என்று கண்டபடி கிழங்கு வகைகளையும், தானிய வகைகளையும், பலகார வகைகளையும் ஒரே நாளில் செய்து, அளவுக்கு மேல் தின்று, குழந்தைகளையும் தின்னச் செய்து அஜீரணத்தையும் வயிற்று வலியையும் உண்டாக்கிக் கொள்வதோடு, இதனால் ஏற்படும் செலவு எவ்வளவு என்பதை யாராவது யோசித்துப் பார்க்கின்றார்களா என்று கேட்கின்றோம். இப்படியே ஒவ்வொரு மாதமும் உற்சவம், பண்டிகைகளும், விரதங்களும், சடங்குகளும் ஏற்பட்டு மொத்தத்தில் வருஷத்தில் எவ்வளவு கோடி ரூபாய்கள் செலவு, எவ்வளவு வியாதிகள் வரவு, எவ்வளவு உயிர்கள் போக்கு என்பவைகளை யார் கவனிக்கிறார்கள்? இந்தப் பணமெல்லாம் தேசியப் பணமல்லவா? ஏழை தேசம், தரித்திர தேசம், அடிக்கடி பஞ்சம் வரும் தேசம், வேலையில்லாமல்—தொழிலில்லாமல் கூலிக்காரர்கள் கும்பல் கும்பலாய்ப் பட்டினி கிடந்து மடிவதுடன், பெண்டு பிள்ளை குழந்தைகளுடன் வெளிநாட்டிற்குக் கூலிக்காகக் கப்பலேறும் தேசம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நாம் எத்தனை நாட்களை, எத்தனை ரூபாய்களை, எத்தனை ஊக்கங்களை இந்தப் பாழும் அர்த்தமற்ற—பொய்யான—ஒரு காசுக்கும் உதவாததான—நமக்கு இழிவையும் அவமானத்தையும் தருவதான பண்டிகைக்கும், உற்சவத்திற்கும், பூசைக்கும், சடங்குக்குமாக ஒவ்வொருவரும் செலவு செய்கின்றோம் என்பதைக் கவனித்தால் இந்த நாடு பணமில்லாத நாடா என்பது நன்றாய் விளங்கும்.

எனவே, இப்படிக்கெல்லாம் சொல்வதைப் பார்த்தால் இந்தப் பண்டிகைகளையும், உற்சவங்களையும் ஏற்படுத்தியவர்கள் எல்லோரும் அறிவில்லாதவர்களா என்ற கேள்வி பிறக்கலாம். நான் அவர்களை அறிவில்லாதவர்கள் என்று சொல்ல இஷ்டப்படமாட்டேன். மற்றபடியோ என்றால், பெரும்பாலும் அவர்கள் சுயநலக்காரர்களும் தந்திரக்காரர்களுமே ஆவார்கள் என்பேன்.

என் புத்திக்குட்பட்ட வரையில் இந்தப் பண்டிகை, உற்சவம் எல்லாம் புரோகிதர்களான பார்ப்பனர்களும், ஆட்சிக்காரர்களான அரசர்களும் கலந்து கண்டுபிடித்துச் செய்த தந்திரம் என்பதே எனது அபிப்பிராயம். உலகத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறியாமைக்கும் கொடுமைக்கும் புரோகிதர்களும் அரசர்களுமே சேர்ந்து கூட்டுப் பொறுப்பானவர்களாவார்கள்.

இவ்விருவர்களும் சேர்ந்து ஜனங்களை ஏய்த்து ஆதிக்கம் செலுத்த வகை கண்டு பிடிக்கவேண்டிய அவசியமுடையவர்கள்.

அந்தப்படி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வாழவேண்டுமானால் அந்த மக்களை அறிவினாலும், செல்வத்தினாலும் தாழ்மைப்படுத்தி வைத்திருந்தால்தான் முடியும். ஒரு மனிதன் அறிவுடையவனாக இருப்பானானால், புரோகிதனுக்கு ஏமாறமாட்டான்; செல்வமிருக்குமானால், அரசனுக்குப் பயப்படமாட்டான். ஆகையால் அறிவும், செல்வமும் இல்லாமல் செய்வதற்கே கோயில், உற்சவம், பண்டிகை, சடங்கு ஆகியதான—

செலவுக்கு ஏற்ற வழிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மக்கள் சம்பாதிக்கும் பணங்களில் கணக்குப் பார்த்தால் பெரும்பாகமும் இவைகளுக்கே செலவுசெய்யும்படியாகவும், மேற் கொண்டு மீதி ஆவதெல்லாம் இவர்கள் சமூகத்திற்கே பயன்படும்படியாகவும் நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்கள் கடன்காரர்களாக இருக்கவுமே முடியும். எனவே, நமது நாடு என்றைக்காவது அறிவுள்ள நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும், சுயமரியாதை உள்ள நாடாகவும் இருக்க வேண்டுமானால்—முதலில் உற்சவம், பண்டிகை, சடங்கு, கோயில், பூசை ஆகியவைகள் ஒழிந்தாக வேண்டும்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்க விழாவில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

10. ஸ்ரீராம நவமி

இருபது இலட்ச வருடங்களுக்கு முன் இராமன், அயோத்தி இருந்தனவா?

இந்த நாள், கோள் இருந்தனவா? இராவணன் இருந்தானா?

பார்ப்பனர்கள் ஸ்ரீராம நவமி என்று ஒரு போலி நாளை மக்களிடம் விளம்பரப் படுத்திக்கொண்டு ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாட்டம் நடத்துகிறார்கள்.

இதை அரசாங்கம் அனுமதிப்பது மாத்திரமல்லாமல் சில இடங்களில் அரசாங்கத்தில் ஓய்வுநாள் (லீவு) விடப்படுகிறது. இராமன் பிறந்த நாள் என்று சொல்லப்படுவது இன்றைக்கு 20,00,000 (இருபது இலட்சம்) வருஷங்களுக்கு மேலாகிறது. இந்த 20 இலட்சம் வருஷத்தில் எத்தனையோ பிரளயம் ஏற்பட்டிருக்க வேண்டும். பிரளயம் என்றால் உலகமே மாற்ற மடைவதும், உள்ளதெல்லாம் நாசமடைவதும் முதலிய காரியங்கள் நடப்பதாகும். அப்போது மனித சமுதாயம், உலக பூகோளம், மலை, சமுத்திரம், காடு, நாடு முதலிய யாவும்—அழிவும் மாற்றமும் அடைந்துவிடும். இது யாவருமே அறிந்ததும், புராணக் கூற்றும், சரித்திர உண்மையுமாகும்.

இப்படிப்பட்ட நிலையில் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் அயோத்தி என்ற ஒரு ஊரும், தசரதன் என்ற ஒரு அரசனும் அவனுக்கு அனேக பெண்டாட்டிகளும் இருந்தனர்; அவனுக்கு இராமன் என்று ஒரு பிள்ளை பிறந்தான்; அதற்கு வருஷம், மாதம், தேதி, நாள், கோள் இன்ன இன்னது என்பதும்; அவை மாத்திரமல்லாமல் அந்த 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் திராவிட நாடு, பாண்டிய நாடு, இலங்கை (ஈழ) நாடு முதலியவை எல்லாம் இருந்தன என்பதும் எப்படி உண்மையாக இருக்கமுடியும்?

20 இலட்சம் வருடங்களாக கோள்கள் மாறாமல் மறையாமல் இருக்க முடியுமா? பார்ப்பனர்கள் தங்கள் சுயநல வாழ்வுக்காக எதையும் சொல்லுவார்கள், செய்வார்கள் என்று இருந்தாலும் பார்ப்பனரல்லாத மற்ற மக்கள், அறிவாளிகள், பூகோளம், விஞ்ஞானம் படித்த சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் இவற்றை எப்படி நம்புகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

இந்தக் கற்பனைப் புளுகை நமது மாணவர்கள் எப்படி நம்புகிறார்கள் என்பதும் அதிசயமாக இருக்கிறது.

எனக்குப் பல தொல்லை, பல வேலை, உடல் கோளாறு முதலியவை இருப்பதால், இவைகளைக் கவனித்து அவ்வப்போது இதன் புரட்டுகளை வெளியாக்க ஏற்பாடு செய்ய நேரமும் வசதியுமில்லை. பொது வாழ்வின் பேரால் பணமும் பதவியும் கொள்ளை அடிக்க, திருட நினைக்கும் சீர்திருத்த வேஷம் போட்ட மக்கள்—புலவர் எவரும் இதைப்பற்றி ஏதும் சிந்திப்பதும் இல்லை.

வடநாட்டில் இராவணனைக் கொளுத்தினார்கள் என்றால், தென்னாட்டில் ஏன் இராமனைக் கொளுத்தக் கூடாது? ஒரு பொய்யான கற்பனைக் கதையில் இருந்து தென்

னாட்டு மக்களை அவமானம், இழிவுபடுத்தும் காரியத்தைப் பார்ப்பனரும் வடநாட்டாரும் செய்தால்—அதற்கு அவர்களுக்கு உரிமை இருந்தால், அதற்குப் பதிலாக அவர்களுக்குப் புத்தி வரும்படியான காரியத்தை அல்லது அதுபோல துவேஷம் கொண்டது என்று படும் படியான காரியத்தை நாம் ஏன் செய்யக்கூடாது?

இன்று, 'ஸ்ரீராம நவமி' என்று பத்திரிகையில் பார்த்தேன். உடனே எனக்கு இந்தக் கருத்து தோன்றிற்று. அதாவது, இனிமேலாவது நம்முடைய இளைஞர்களும், மாணவர்களுமாவது இந்தப்படியான பித்தலாட்டங்களில் ஏமாறாமலும் நம்மை இழிவு படுத்தும் இதுபோன்ற காரியங்களில் பங்குகொள்ளாமல் இருக்கவும் நாம் ஏதாவது செய்தாக வேண்டுமென்று தோன்றிற்று.

ஆதலால், மாணவர்கள், இளைஞர்கள், திராவிடர் கழகத் தோழர்கள் கட்டாயமாகச் சிந்தித்து நல்லபடி யோசித்து எனக்காக என்றே அல்லாமல் தங்களுக்குச் சரி என்றும் அவசியம் என்றும் தோன்றினால்—இராவணன் படத்தை, உருவத்தைக் கொளுத்தின தற்குப் பதில்—என்று, இராமன் படத்தைக் கொளுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது (பார்ப்பனரல்லாத) மக்கள் ஆதரவு பார்ப்பனர்களுக்கு இருப்பதால் இது போன்ற (பார்ப்பனப்) பிரச்சாரம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பார்ப்பனர் இன உணர்ச்சியுடன் கட்டுப்பாடாக மிக ஒற்றுமையுடன் செய்கிறார்கள்; தாட்சணியத்தாலும் மிரட்டுதலாலும் நம்மவர்களையும் சேர்த்துக்கொள்கிறார்கள்.

இந்த ஆண்டுக்கு இது போதும்.

['விடுதலை'—கட்டுரை—19-4-1956]

11. மாரியம்மன் பண்டிகை

நமது நாட்டில் நம்மால் வணங்கப்படும் கடவுள்கள் எல்லாமுமே ஆரியக் கடவுள்கள் என்பதைப்பற்றிய உண்மையில் யாருக்குமே மறுப்பு இருக்காது.

இந்தக் கடவுள்கள் ஆரியக் கடவுள்கள் என்பது மாத்திரமல்லாமல், இக் கடவுள்கள்—ஆண் பெண் கடவுள்கள், அவர்களது மனைவி மக்கள், அவதாரங்கள், மூர்த்தி கரங்கள் யாவுமே ஒழுக்கக் கேடு, நாணயக் கேடு, கற்புக்கேடு ஆகிய இழிவான குற்றங்களுக்கு உட்பட்டவையாகவே இருந்து வருகின்றன.

இந்த விஷயங்களில் ஆரியர்களுக்கு மானம், வெட்கம், இழிவு இல்லையானதால், அவர்கள் அந்த நடத்தைகளையே நமக்கு உற்சவங்களாகக் கொண்டாடும்படியும் செய்து விட்டார்கள்.

இந்தப்படியான கடவுள் உற்சவங்கள், பண்டிகைகள் ஆகியவைகளைப்பற்றி 'குடி அரசு'விலும், 'விடுதலை'யிலும் மற்றும் புராண ஆபாசம், கடவுள் நடத்தைகள் முதலிய புத்தகங்களிலும் விளக்கி வருகிறோம்.

இப்போது இந்தக் கோடைகாலப் பருவத்தில் தமிழ்நாட்டில் எங்கும் மாரியம்மன் பண்டிகை என்பதாக ஒரு பண்டிகை நடந்து வருகிறது. மாரியம்மன் கடவுள்—கிராம தேவதை என்று பெயர் இருந்தாலும், அது ஆரியக் கதைப்படி, ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகா தேவி, மாரி ஆகிவிட்டாள். இந்த மாரி இல்லாத கிராமமே தமிழ்நாட்டில் இல்லை. மாரி, கிராம தேவதையாதலால், பாமர மக்கள் எல்லோருக்கும் கடவுளாகி விட்டாள்.

இந்த இரேணுகை என்னும் மாரியம்மனின் சரித்திரம் மிகவும் இழிவாகக் கருதத் தக்கதாகும்.

இந்த இரேணுகை என்னும் மாரி ஜமதக்கினி முனிவரின் மனைவி. அவள் ஒரு அன்னிய புருஷன்மீது இச்சைப்பட்டு—அதாவது, அவள் நீராடக் கங்கைக்குச் செல்லும் போது, எதிர்ப்பட்ட சித்ரசேனனைக் கண்டு மோகித்துக் கற்புக் கெட்டுவிட்டாள். அதை அறிந்த கணவன் ஜமதக்கினி அவளைக் கொன்றுவிடும்படி தன் மகன் பரசுராமனுக்குக் கட்டளையிட்டார். பரசுராமன், இரேணுகையை வேறு யார் தடுத்தும் கேளாமல் கொன்று விட்டான். கொன்றுவிட்டு வந்து, தாயைக் கொன்று விட்டோமே என்று துக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்—தகப்பன் ஜமதக்கினி அதை அறிந்து மகனுக்காக மாரியைப் பிழைப் பிக்க இசைந்து, மந்திர நீர் தந்து எழுப்பி வரும்படி மகனை அனுப்பினார்.

தாயைப் பிழைப்பிக்கச் சென்ற பரசுராமன் கொலைக் களத்துக்குச் சென்று தாயின் தலையை எடுத்து முண்டத்துடன் ஒட்டவைக்கையில்–கொலைக் களத்தில் பல முண்டங்கள் வெட்டுப்பட்டுக் கிடந்ததால் அடையாளம் சரிவரத் தெரிந்து கொள்ளாமல், ஏதோ ஒரு முண்டமாகக் கிடந்த உடலை எடுத்துத் தலையுடன் ஒட்டவைத்து அழைத்து வந்து தகப்ப னிடம் விட்டான். கணவன் அவளைப் பார்த்து, 'நீ இங்கு இருக்க வேண்டாம்; கிராமங் களுக்குப் போய், அங்கு வாசம் செய்து, கிராம மக்களுக்கு நோய் வந்தால் பரிகாரம் செய்து கொண்டு இரு' என்று கூறி அனுப்பி விட்டார்.

அதுமுதல், மாரி கிராமங்களில் வசிக்கத் தொடங்கினாள். கிராமவாசிகள் இந்த விஷய மறிந்து மாரியம்மன் தலையை மாத்திரம் வணங்கிப் பயன் அடைய முன் வந்து, தங்கள் ஊர்களில் மாரிக்குக் கோயில் கட்டி—மாரியின் தலையை மாத்திரம் வைத்து வணங்கி வருகிறார்கள். இது ஒரு புராணம்.

மற்றும் சிவ புராணத்தில், அந்த மாரி, கார்த்த வீரியனை மோகித்துச் சாபமடைந் தாள் என்று காணப்படுகிறது.

மற்றொரு புராணத்தில், அவள் புருஷன் ஜமதக்கினி கொல்லப்பட்டதால் அவள் அவனுடன் உடன்கட்டை ஏறினாள். இதை இந்திரன் ஒப்புக் கொள்ளாமல் மழை பெய்யச் செய்ததும் அவளது உடல் அரை வேக்காட்டுடன் நின்று விட்டது. அதனால் அவள் எழுந்து பக்கத்தில் உள்ள பஞ்சமத் தெருவில் நிர்வாணத்தோடு வேப்பிலையால் மானத்தை மறைத்துக் கொண்டு ஓடினாள். அதைக் கண்ட பஞ்சமர்கள் பச்சை மாவும், பழமும், இளநீரும் கொடுத்து உபசரித்தார்கள்; ஒரு வண்ணாத்தி சேலை கொடுத்து ஆதரித்தாள். இந்த ஐதீகம்தான் இன்று மாரியம்மன் பூசையாக நடத்தப்படுகிறது. பூசை, உருவம், உணவு முதலியவை எப்படி இருந்தாலும்—இந்த மாரியம்மன் மீது இரண்டு விபச்சாரக் குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

1. சித்திர சேனனை மோகித்துக் கற்பு இழந்தது;

2. கார்த்த வீரியனை இச்சித்துக் கற்பு இழந்தது.

இரண்டிலும் புருஷன் ஜமதக்கினியால் கண்டுபிடிக்கப்பட்டு, அவள் தண்டிக்கப் பட்டிருக்கிறாள்.

இதற்குப் புராண ஆதாரங்கள் இருக்கின்றன.

நமது கடவுள் நம்பிக்கையிலும், கடவுளை வணங்குவதிலும் நமக்குள் எவ்வளவு மடமை இருந்தாலும்—நாம் வணங்கும் கடவுள்களை இவ்வளவு மோசமான–நாணயம், ஒழுக்கம், நாகரிகம் என்பவை இல்லாமல், இவை யாவும் காட்டுமிராண்டித்தனமாக இருப்பது பற்றிக் கவலைப்பட வேண்டாமா? என்றுதான் கவலைப் படுகிறேன்.

['விடுதலை'–கட்டுரை—25–3–1960]

12. இவர்கள் மனிதர்களா?

இந்துக் கடவுள்கள், அவற்றின் புராணக் கதைகள் எவ்வளவு பெரிய முட்டாள் தனமான கற்பனைகள்!

20ஆம் நூற்றாண்டில் அவைகளை நடப்பு மூலம் செய்து காட்டுவதென்பது மேலும் எவ்வளவு காட்டுமிராண்டித்தனம் என்று கேட்கிறேன். ஒரு மனிதன் (அசுரன்) பூமியைப் பாயாகச் சுருட்டித் தூக்கி எடுத்துக்கொண்டுபோய் சமுத்திரத்துக்குள் ஒளிந்துகொண்டான் என்றால், எழுதியவன் எவ்வளவு மடையன்; அதை நம்புகிறவன் எவ்வளவு மடையனும், காட்டுமிராண்டித்தன்மை கொண்ட அயோக்கியனுமாயிருக்க வேண்டும்?

பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப்பற்றிப் பார்ப்பனர்கள் நெருப்பில் நிற்பவர்களைப் போலத் துடிக்கிறார்கள்; பதறுகிறார்கள். 'கடவுளை-மதத்தை நிந்தனை செய்கிறார்கள்' என்றால்—இந்தக் கடவுள்களையும், இந்தக் கதைகளைக்கொண்ட மதத்தையும் நிந்தனை செய்வது தப்பிதமா? நிந்தனை செய்து அழித்து ஒழிக்காமல் இருப்பது தப்பிதமா?

தாய் என்றும் மகள் என்றும் பேதத்தை உணர்ந்த மனிதர்களைக் கேட்கிறேன், பத்து நாட்களுக்குமுன்—அப்பனும் மகளும் கணவன் மனைவியாக வாழும் கடவுள்களின் கதையைப் (சரஸ்வதி பூசை) பண்டிகையாகக் கொண்டாடினார்கள். அதை முட்டாள்கள்—பூமியைப் பாயாகச் சுருட்டிய கதையையும், பூமிதேவி என்னும் கடவுள், விஷ்ணு என்ற கடவுளைப் பன்றி உருவத்தில் கலவிசெய்து ஒரு பிள்ளையைப் பெற்று அப் பிள்ளையையே விஷ்ணு என்னும் கடவுளும் அதன் பெண்டாட்டியும் (அதாவது அப் பிள்ளையின் தாயாரும்) சேர்ந்து கொன்றார்கள்; அப்படிக் கொன்ற நாளை மகிழ்ச்சி நாளாக—பண்டிகை கொண்டாடப் போகிறோம் என்றால் இந்தக் கொண்டாட்டக்காரர்கள் மனிதர்களா, மனிதப் பிறவிகளா என்று கேட்கிறேன்.

கடவுள், மதம், கடவுள் கதைகள் (புராணங்கள்) என்னும் பெயரால் மனிதன் எக் காலத்திற்கும் மடையனாய், முட்டாளாய், அயோக்கியனாய், காட்டுமிராண்டியாகவே இருக்கவேண்டும் என்றால்—அதற்கு, மனிதன் ஏன் தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்ளவேண்டும்? மனிதன் பகுத்தறிவுவாதி என்றாலும் அந்தப் பகுத்தறிவின் மூலமே நாளுக்குநாள் சகல துறைகளிலும் மாற்றமடைந்து, வளர்ச்சியடைந்து கொண்டு வரும்போது காட்டுமிராண்டிக் காலத்து அயோக்கியக் கற்பனைகளைப்பற்றிக்கூடச் சிந்திப்பது அக்கிரமம் என்றால், இப்படிச் சொல்லும் கூட்டத்தினிடம் ஆட்சியிருக்கு மானால் நம் கதி என்ன ஆவது?

கடவுளின் பெயரால் நம் பெண்களில் சிலர் பார்ப்பானுக்குத் தாசியாய் இருக்க வேண்டும்; அவர்களது உயிர் வாழ்விற்கு விபச்சாரம் செய்து காசு சம்பாதித்துச் சாப்பிட வேண்டும் என்று அயோக்கியர்கள் ஏற்பாடு செய்திருந்ததை நாம் மாற்றப் பார்த்தோம். அதைக்கூடப் பல அயோக்கியர்கள்—'இது, மத சம்பந்தமான காரியத்தில் கை வைப்ப தாகும்; கடவுள் தொண்டைத் தடை செய்வதாகும்' என்று காரணம் கூறித் தடுத்தார்கள். தடையை மீறி திராவிடர் கழகம் (ஜஸ்டிஸ் கட்சி) அந்த முறையை ஒழித்ததுடன், அந்த நடத்தையை கிரிமினல் குற்றமாக ஆக்கிச் சட்டம் செய்தார்கள். அதனால், இப்போது மதத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு கடவுளுக்கோ ஒரு கெடுதியும் வந்துவிட வில்லையே! அந்த விபச்சாரத் தொழிலுக்கு 'இசைப்பு வேலை' செய்து வந்த சாதிக்குத்தான் வரும்படி குறைந்ததே தவிர வேறு என்ன கேடு ஏற்பட்டது?

இந்தக் கடவுளையும், மதத்தையும், மதக் கதைகளையும் சாக்காகக் காட்டித் தமிழ் மக்களை இனியும் எத்தனை நாளைக்கு மடையர்களாக—மானங்கெட்ட இழி மக்களாக ஆக்கி, அதன்மூலம் வயிறு பிழைக்கலாம், உயர்வாழ்வு வாழலாம் என்று அயோக்கியர்கள் கருதியிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை!

அடுத்து, வரும் நவம்பர் மாதம் 4ஆம் தேதி அன்று இந்த—'நரகாசுரனைக் கொன்ற நாள்' என்னும் பெயரால் தீபாவளி எனும் பண்டிகை வரப்போகிறது. இதற்கு அரசாங்கத்தார் விடுமுறை விடுவது என்பது நீண்டநாளாய் இருந்துவருகிறது. இந்தப் பண்டிகையால் மக்களுக்கு எவ்வளவு மானக்கேடு, இழிவு, மெனக்கெடு, பணச் செலவு முதலியவை இருந்தாலும்—மக்களின் அறிவு எவ்வளவு தூரம் பாழாக்கப்பட்டு, மக்கள் மடையர்களாகிறார்கள் என்பதும், பின் சந்ததிகளான குழந்தைகள், இளைஞர்கள் எவ்வளவு தூரம் அறிவுகெட்டு மூடநம்பிக்கைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதும் பற்றிச் சிந்தித்தால் மனம் பதறுகிறது.

இது மாத்திரமா? இச் செய்கையை நம்மால் நிறுத்த முடியவில்லையென்றால் நாம் எவ்வளவு தூரம் சமுதாயத்திலும் அரசியலிலும் அடிமைகளாக இருக்கிறோம் என்பது புலனாகிறது.

பி. ஏ., எம். ஏ., பொது அறிவில் டாக்டர் பட்டம் பெற்றவர்களெல்லாம்—இந்த மடமையான காட்டுமிராண்டிச் செயலுக்கு அடிமைகளாக இருக்கின்றார்கள் என்றால், இன்றையக் கல்வி எவ்வளவு தூரம் அறிவை, மானத்தை உண்டாக்க முடியாத, அறிவுக்குப் பயனற்ற கல்வியாக இருக்கிறது என்பதைக் கருதி வேதனைப்படுகிறோம். அரசாங்கமும், 'இன்றையக் கல்விக்குத் தகுதி, திறமை இல்லை என்றுதான் கவலைப்படுகிறதே தவிர—கல்வியினால் அறிவு ஏற்படவில்லையே' என்று எந்த அரசாங்கமுமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எனவே, இதன் மூலம் நமது இயக்கத் தோழர்களை—கூடுமானால் பகுத்தறிவு இயக்கத் தோழர்களை ஒன்று வேண்டிக் கொள்கிறேன்.

என்னவென்றால், தமிழ் நாட்டில் ஆங்காங்குள்ள கழகப் பகுத்தறிவு இயக்கத் தோழர்கள், வசதியுள்ளவர்கள் ஒவ்வொரு ஊரிலும் 'தீபாவளி கண்டன நாள்' என்று ஒரு நாள் ஏற்படுத்திக்கொண்டு, அன்று பொதுக்கூட்டம் கூட்டியும், வீடு வீடாகச் சென்றும், தீபாவளிப் பண்டிகை என்னும் முட்டாள்தனத்தை—காட்டுமிராண்டித்தனத்தை விளக்கிச் சொல்லிப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—26-10-1972]

7. சாதி

1. சாதி

ஒரேநாட்டு மக்கள் பிறவியில் பல சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது இந்தியாவில் தான் இருக்கின்றதே தவிர வேறு எங்கும் இல்லை.

பொதுவாக 'சாதி' என்பது, இந்துக்கள் என்பவர்களுக்குள்—ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்படுபவர்களுக்குள் மாத்திரம்தான்—'கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது' என்கின்ற கொள்கையின்மீது நாலு சாதிகளாக, அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவை முறையே ஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகவும்—கடைசி சாதி மிக்க இழிவானதாகவும் கருதப்படுவதாகக் குறிக்கப்பட்டிருக்கின்ற விவரம் யாவரும் அறிந்ததேயாகும். இப்படி இருந்தாலும், இப்போது அனேக சாதிகள் இருப்பதற்கு என்ன காரணம்? அதாவது, 'ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் சாதிமுறை தவறிக் 'கலப்பு,' 'விபச்சாரம்' செய்துகொண்டதால் ஏற்பட்ட பிரிவுகளென்றும் அப்படிப்பட்ட பிரிவுகளுக்குப் பஞ்சம சாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

அப்படிச் சொல்லப்படுவதிலும் இப் 'பஞ்சம சாதிகள்' என்பது, இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான சாதிக்காரர்கள் என்பவர்களே—பெரிதும் இந்த விபச்சாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம சாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதில் உதாரணமாக இன்று தமிழ்நாட்டில் பிரபல சாதியும் பிரமுக சாதியும் என்று சொல்லிக்கொள்ளப்படுவதான வேளாள சாதியார் எனப்படுபவர்களே பஞ்சம சாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம சாதியிலும் பிராமணன், க்ஷத்திரியப் பெண்ணைச் சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்களில்—இந்தப்படியான வேளாளர் என்பவர்களில், விவசாயம் செய்பவர்களாக இருந்தால் அவர்களுக்குக் 'காணியாளர்' என்றும், பதவிகளில் இருந்தால் 'வேளாண் சாமந்தர்' என்றும் குறிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றிற்கு ஆதாரம் சுப்ரபோதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், சாதிவிளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் உள்ளது.

பிராமணன்—வைசியப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை அம்பட்டன் என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளைகள் குயவர், நாவிதர் என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன்—சூத்திரப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை 'பரதவர்' அல்லது 'செம்படவர்' என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளை 'வேட்டைக்காரன்' அல்லது 'வேடுவர்' என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன் க்ஷத்திரிய சாதிப் பெண்ணை விவாகம் செய்துகொண்டதால் பிறந்த பிள்ளைகளே 'சவர்ணர்' எனவும் 'தெலுங்கர்' எனவும் உள்ளது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்றும் உள்ளது.

பிராமணகுலப் பெண்ணுடன் சண்டாளர் கூடிப்பிறந்த பிள்ளைகள் 'சருமகாரர்' அதாவது 'சக்கிலியர்' என்றும், க்ஷத்திரிய குலப்பெண்ணுடன் சண்டாளர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் 'வேணுகர்' (வேணுகானம் செய்பவர்கள்), 'கனகர்' (தங்கவேலை செய்பவர்), 'சாலியர்' (நெசவு வேலை செய்பவர்) ஆவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதிரி, கீழ்—மேல் சாதிகள் கலந்துகலந்து வந்ததால் ஏற்பட்ட சாதிகளில் ஒன்றாகிய 'அயோவகச் சாதி'ப் பெண்ணிடம், நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் 'பார்க்கவர்கள்' என்றும் உள்ளது. இந்தப்படியே, இப்போது அமுலில் உள்ள சாதிகளெல்லாம் குறிக்கும்படியாகவே இன்னும் அனேக விஷயங்கள் காணப்படுகின்றன. அபிதான கோசம், அபிதான சிந்தாமணி முதலிய—எல்லா இந்துப் பண்டிதர்களாலும் ஆதாரமாய்க் கொண்டாடப்படும் புத்தகங்களிலும், மற்றும் பல சாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு நான்கு சாதிகள் தவிர, மற்ற சாதிகள் எல்லாம் மேற்கண்ட நான்கு சாதிக்குள் மேல்கீழாகவும், கீழ்மேலாகவும் கலியாணம் செய்தும், விபச்சாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள். செட்டியார், ஆச்சாரியார் இவர்களைப்பற்றியும் மிகமிக இழிவாகக் கூறப்படுகின்றது.

ஆகவே, சாதியைக் கட்டிக்கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக்கொள்வதையே ஒக்கும்.

['குடி அரசு'-தலையங்கம்—16-11-1930]

சாதியைக் காப்பாற்றும் பலசாதி அபிமானிகளே! ஆதியில் ஏற்பட்ட நான்கு சாதிகள், 4000 சாதிகளாகப் பிரிந்ததற்குக் காரணம்—ஒரு சாதியும், மற்றொரு சாதியும் மாறிமாறிக் கலந்ததால் ஏற்பட்டது என்று குறித்தோம். அப்படி இருந்தும் இன்னும் நம்மவரிலேயே ஒரு கூட்டத்தார் அதாவது, தங்களை 'வேளாளர்' என்று சொல்லுபவர்களில் ஒருசிலர்—மேற்படி சாதிக் கிரமத்தை—அதாவது 'ஆதிசாதி' என்பவைகளான பிராமணன்,

க்ஷத்திரியன், வைசியன், பஞ்சமன் என்கின்ற கிரமத்தை ஒப்புக்கொண்டு—தங்களை மாத்திரம் 'சற்சூத்திரர்' என்று அழைத்துக் கொண்டும், மற்றொரு சிலர் அச் சாதிக் கிரம வார்த்தைகளை வடமொழிப் பெயர்களால் சொல்லாமல் தென்மொழிப் பெயரால் சொல்லிக் கொண்டு—அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு ஆகப் பிரித்து—அவை தமிழ் நாட்டில் ஆதியிலேயே—அதாவது ஆரியர் வருவதற்கு முன்னாலேயே இருந்தன வென்றும், அவற்றிலும் தாங்கள் நாலாம் சாதி என்றும், ஒரு கற்பனையைக் கற்பித்துக் கொண்டு அப்படிப்பட்டவர்களான தாங்கள் நால்வருக்கும் தொண்டு செய்ய—அடிமையாய் இருக்க வேறுபல சாதிகள் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர்கள்தான் 'பள்ளு, பறை பதினெட்டுச் சாதிகள்' என்பது என்றும் ஒரு புதிய ஏற்பாட்டைச் சொல்லி ஒரு வழியில் திருப்தி அடைந்து வருகிறார்கள்.

அந்தப்படிக் கூறப்படும் 'பள்ளு, பறை பதினெண் குடிமக்கள்' என்பவர்களைக் குறிக்கும் முறையில் பணிசெய்யும் பதினெண்வகைச் சாதியார் என்னும் தலைப்பின் கீழ் குறிக்கப்பட்டிருப்பது என்னவென்றால்—இலை வாணிகன், உப்பு வாணிகன், எண்ணெய் வாணிகன், ஒச்சன், கல்தச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோயிற்குடியன், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பறையன், பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன் என்று அகராதியில் உள்ளது.

ஆனால், இதே பதினெண் மக்களை 'அபிதானகோசம்' என்னும் ஆராய்ச்சி நூலில் காண்கின்ற விவரப்படி குறிக்கின்றதென்ன வெனில், ஏவலாள்களாக சிவிகையர், குயவர், பாணர், மேளக்காரர், பரதவர் செம்படவர், வேடர், வலையர், திமிலர், கரையார், சான்றார், சாலியர், எண்ணெய் வாணிகர், அம்பட்டர், வண்ணார், பள்ளர், புலையர், சக்கிலியர், எனப் பதினெண் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, வேளாளர்களிலும் பல பிரிவுகளைக் காட்டியிருப்பதென்ன வெனில்—'சூத்திரருள்ளே வேளாளர் தலையாயினார்; அவருள்ளே முதலிகள் தலையாயினார்; இவர்களுக்கு அடுத்தபடி வேளாஞ்செட்டிகள்—இவர்கள் சோழபுரத்தார், சித்தக் காட்டார், பஞ்சுக்காரர் முதலிய பல திறப்பட்டவர்கள். இதற்கு அடுத்த படியிலுள்ளோர் கார்காத்தார்; அடுத்த வரிசையிலுள்ளோர் சோழிய வேளாளர்—இவர்கள் சைவர்களா வார்கள்—சமபந்தி போசனத்திற்கும் உரியவர்கள். இதற்கு அடுத்த படியிலுள்ளவர்கள் சோழிய, துளுவ, கொடிக்கால் முதலிய பலவகை வேளாளர்களாவார்கள். இவரில் தாழ்ந்தோர் அகம்படியர்; அவரில் தாழ்ந்தோர் மறவர்; அவரில் தாழ்ந்தோர் கள்ளர்; அவரில் தாழ்ந்தோர் இடையர்; இவர்களுக்கடுத்தபடியிலுள்ளோர்—கவரைகள், கம்மவர்கள்.'

இவற்றுள் எதிலும் பிராமணர்கள் விஷயத்தில் எவ்விதமான பாகுபாடும், தாழ்வுக் கிரமமும் சந்தேகமோ, ஆட்சேபணையோ சொல்லுவதற்கு இடமில்லாமல் செய்துகொள்ளப் பட்டிருப்பதைக் கவனித்தால், சாதியின் சூழ்ச்சித் தத்துவம் நன்றாய் விளங்கும். மற்றபடி க்ஷத்திரியர்களிலும் வைசியர்களிலும் இருக்கும் சண்டைகளும், ஆட்சேபணைகளும்—க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லிக்கொள்ளுவதில் எவ்வித உயர்வுத் தத்துவமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் தங்களில் வீண் வழக்காடிக்கொண்டு, பொதுஜனங்களாலும் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒருவரை ஒருவர் இழித்துரைத்துக் குறைவுபடுத்தி வருவதும் அனேக இடங்களில் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். மற்றும், ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சாதிகளைப்பற்றி எவ்வளவு மேன்மை ஆதாரங்கள் கற்பித்துக்கொண்டாலும்—கண்டுபிடித்தாலும், எந்தவிதத்திலும் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் கீழ்ப்பட்டவர்கள்தான் என்பதை நிலைநிறுத்துவதற்கு மாத்திரம் அவ்வாதாரங்கள் பயன்படுகின்றனவே தவிர, மற்றபடி எந்தக் கருத்தைக் கொண்டு கஷ்டப்பட்டு இவ்வித ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டதோ—கண்டுபிடிக்கப்பட்டதோ அவற்றிற்குச் சிறிதும் பயன்படுவதில்லை.

எனவே, இந்த நிலையில் இன்று நமது நாட்டில் பார்ப்பான் ஒருவனைத்தவிர மற்றவர்கள் தாழ்ந்த சாதியர்கள்—அதாவது பார்ப்பனனால் தொடவும், சமபந்தி போஜனம் பண்ணவும் மற்றும் சில பொது உரிமைகள் பெறவும் கூடாத சாதியார்கள் என்பதும்; அவனுக்கு அடிமையாய் இருக்கவும் 'விபசாரம்', 'கீழ் மேல் சாதிக் கலப்பு' என்று சொல்லும்படியான இழிவுத் தன்மையில் பிறந்தவர்கள் என்பதும் இன்றைய நமது சாதித் தத்துவமாக இருக்கின்றது.

மற்றபடி, இவற்றிற்கு எவ்வித தத்துவார்த்தம் சொல்லுவதானாலும் அதை மூடர்கள் முன்னால் மாத்திரம் சொல்லிக்கொள்ளக்கூடுமே தவிர, சாதிக்கும் சாதியைக் கற்பித்த மதத்திற்கும், இவ்விரண்டிற்கும் ஆதாரமான வேதம், சாஸ்திரம், தர்மம் என்று சொல்லப் பட்ட ஆதார நூல்களில் இருக்கும் உண்மைகளுக்கும் எவ்வித ஆட்சேபணையும் எவ்வித தத்துவார்த்தமும் சொல்லமுடியாது என்பதையும் யாதொரு பதிலும் சொல்லாமல், பேசாமல் இழிவை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டியதாகும்.

இவை ஒருபுறமிருக்க, இந்தச் சாதிக் கிரமத்தில் பார்ப்பனர்களைத்தவிர மற்றவர் களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யோக்கியதைகளையும் உரிமைகளையும் பார்ப்போ மானால் கடுகளவு பகுத்தறிவோ, மானமோ இருக்கின்ற மனிதர்கள் ஒருகாலமும் தங்கள் சாதிப்பேரைச் சொல்லிக்கொள்ள முடியாதபடியும், அதைக் கனவிலும் நினைக்கமுடியாத படியும் இருப்பதை நன்றாய் உணரலாம். அதாவது, நாலாவது சாதியர்களாக— சூத்திரர்கள் என்று சொல்லப்படும் வகுப்பாருக்குப் பார்ப்பனர்கள் ஏற்படுத்தியிருக்கும் உரிமையானது எப்படி இருக்கின்றது என்று பார்த்தால்—இப்போது 'பாரம்பரியமாய்க் குற்றம்புரியும் வகுப்பார்' என்று சொல்லக்கூடியவர்களுக்குச் சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் நிர்ப்பந்தத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் அவர்களை நடத்துகின்ற மாதிரிக்கும் குறைவில்லாமல் நடத்துகின்ற மாதிரியாகவே ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

உதாரணமாக, தர்ம சாஸ்திரம் என்று சொல்லப்பட்ட சட்டங்களில் உள்ளதையே சொல்வோம்; 'ஸ்நாதமஸ்வம் கஜமத்தம் ரிஷபம் காமமோஹிதம் சூத்தரம க்ஷரசம்யுக்தம் தூரதப் பரிவர்ஜ்ஜையேல்'—அதாவது, 'குளிப்பாட்டிய குதிரையையும், மதங்கொண்ட யானையையும், காமவிகாரங்கொண்ட காளை மாட்டையும், எழுத்துத் தெரிந்த சூத்திர னையும் பக்கத்தில் சேர்க்கக்கூடாது' என்பது கருத்தாகும்.

'ஜப, ஸ்தப, தீர்த்த யாத்திர பிரவர்ஜ்ஜய, மந்தரசாதனம் தேவராதனம் சசய்வஸ்தீரீ சூத்திர பததானிஷள்'—அதாவது 'ஜபம், தவசு, தீர்த்த யாத்திரை, சன்னியாசம், கடவுள் தோத்திரம், ஆராதனை இந்தக் காரியங்கள் பெண்களும் சூத்திரர்களும் ஒருபோதும் செய்யக்கூடாது.'

'நபடேல் சமஸ்கிருதம் வாணீம்'—'சூத்திரன் சமஸ்கிருதம் படிக்கக் கூடாது' என்பதாகும்.

'நைவ சாஸ்திரம் படேநைவ சுருணுயாத் வைதிகாக்ஷரம், நஸ்நாயாது தயால்பூர்வம் தபோ மந்திரஞ் சுவர்ஜ்ஜயேல்'—அதாவது, 'சூத்திரன் ஒருக்காலும் சாஸ்திரம் படிக்கவோ, வேதத்தைக் கேட்கவோ கூடாது. அவன் சூரிய உதயத்திற்குமுன் குளிக்கவும், மந்திரம் ஜெபிக்கவும், தபசு செய்யவும் கண்டிப்பாய்க் கூடாது.'

'இதிகாச புராணானி நபடேச்ரோது மர்ஹசி'—'இதிகாச புராணங்களுங்கூட சூத்திரன் படிக்கக்கூடாது. ஆனால், பிராமணர்கள் படிக்கக் காதால் கேட்கலாம்.

'சாதுர்வர்னியம் மயாசிருஷ்டம், பரிசரியாத்மகம் கர்மம் சூத்ரஸ்ஸியாபி பாவனாம்' (கீதை)—'நான்கு வருணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை; அவற்றுள் சூத்திரனுக்கு பிராமண சிசுருஷைதான் தர்மம்' என்பது.

இதுபோல் ஆயிரக்கணக்காக எழுதிக்கொண்டே போகலாம். இவைகள் எல்லாந் தான்—நமது சாதிமத ஆச்சார அனுஷ்டானங்களாக இருக்கப்படவேண்டியவை என்று வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள், பகவான் வாக்குகள் என்று சொல்லப்படுவைகளில் சொல்லப் பட்டவைகளாகும்.

எந்தக் காரணத்தாலோ இந்துமத தர்மத்தை அனுஷ்டித்துத் தீரவேண்டியதல்லாத ஓர் ஆட்சி இந்த நாட்டுக்கு ஏற்பட்டதன் பலனால் நம்மில் சிலராவது இந்தத் தர்மங்கள் முழுவதும் வலியுறுத்தப்படாமல் இருக்க முடிகின்றது. ஆனால், இந்த நிலையாலும் நாம் மறுபடி நமது சாதியையும் மதத்தையும் காப்பாற்றும் கவலைகொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு என்று மதத்தையும் சாதியையும் சொல்லி அவற்றை நிலைநிறுத்திக் கொண்டே போவோமானால், பின்னால் நமது நிலை என்னாகும் என்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்துக்கள் என்பவர்களுக்குள் சாதிப் பிரிவு இருக்கும்வரை உயர்வு-தாழ்வு போகாது என்பது கண்டிப்பாகும்.

இன்றையதினம் தேசியவாதிகளாக இருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூரண சுயேச்சை அடையவேண்டுமென்கின்ற உண்மையான ஆசையுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் வெள்ளைக்கார ஆட்சி இருக்கும்போதே சாதி வித்தியா சங்கள் எல்லாம் ஒழியும்படியான ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டியதுதான் அறிவுள்ள வேலையாகும். அதை விட்டுவிட்டு, 'முதலில் நீ போய்விடு! நாங்கள் பார்த்துக்கொள் கிறோம்' என்று சொன்னால் அது, தான் சாவதற்குத் தானே மருந்து குடித்தது போல் தான் ஆகுமே தவிர, வேறொரு பலனும் தராது. ஏனெனில், இந்தியாவில் இந்துக்களில் 1000-க்கு 999 பேருக்குக் குறையாமல் சாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென்று எண்ணமில்லாதவர்களாய் இருப்பதோடு, ஒவ்வொருவரும் மேல் சாதி ஆகவேண்டுமென்று ஆசைப்படுபவராகவும் தனக்குக்கீழ் பல சாதிகள் இருக்கவேண்டுமென்ற உணர்ச்சி உள்ள வர்களாகவுமே இருக்கின்றார்கள். இன்றைய தினம் இந்த நிலையில் இருக்கும் பல சவுகரியங்களை ஒழித்துவிட்டு, வருணாசிரமக் கொள்கையும், சாதி ஆதிக்கமும் உடையவர் களான மக்களிடம் ஆட்சி வந்துவிட்டால் பிறகு எவ்விதத்திலும் சாதிக் கொடுமைகள் ஒழியா.

['குடி அரசு'–தலையங்கம்—30-11-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மனிதனுக்குக் கடவுள் உணர்ச்சி தோன்றிய காலந்தொட்டே, இந்த நாட்டில் மேல்சாதி-கீழ்சாதி உணர்ச்சி தோன்றி விட்டது. கடவுள் பேராலேயே மேல்-கீழ் சாதி உணர்ச்சிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்து மதம் என்பதில் வைணவத்திலாவது, சைவத் திலாவது சாதிப் பிரிவு, உயர்வு-தாழ்வு காணப்படாத கடவுள்களோ, அவதாரங்களோ, திருவிளையாடல்களோ, கடவுள்களைக் காட்டிய பெரியோர்களோ, தத்துவம் புராணங் களோ, இதிகாசங்களோ ஏதாவது ஒன்றைக் காட்ட முடியுமா? 64 நாயன்மார்களும் 64 சாதிக்காரர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். 12 ஆழ்வார்களும் 12 சாதிக்காரர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். இந்து மதத்திற்கு ஆதாரமான, சட்டமான மனுதர்ம சாஸ்திரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டால் அவைகளில் அளவில்லாத சாதிகளும், அதற்குத் தாரதம்மியமும் காணப்படுவதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, எந்த நிலையில் எந்த ஆதாரத்தைக் கொண்டு—இன்று உங்கள் மத நம்பிக்கைக்காரனும் அதைச் சேர்ந்த கடவுள் நம்பிக்கைக்காரனும் அது சம்பந்தமான வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாச நம்பிக்கைக் காரனும் உங்களிடம் வந்து சாதிப் பாகுபாடும் சாதி வித்தியாசமும் இல்லை என்று சொல்ல முடியும்?

இந்துமத சம்பிரதாயப்படி சாதி இல்லை என்று உங்களிடம் யார் சொல்ல வந்தாலும் அவர்களை மூடர்களென்றோ, மோசக்காரர்கள் என்றோதான் நீங்கள் கருதவேண்டும். மற்றும் சிலர், 'தொழில் பாகுபாட்டைக் கொண்டு சாதி வகுக்கப்பட்டதே ஒழிய—பிறவியைக்கொண்டு பிரிக்கப்படவில்லை. ஆதலால் தொழில் பிரிவு இருக்கத்தான் வேண்டும்' என்று சொல்லி, 'கீதையில் பகவான் சொல்லுகின்றார்' என்று உங்களை ஏய்க்கக்கூடும். தொழிலுக்காக வந்தாலும்—ஏன் பாகுபாடு இருக்க வேண்டும்? ஒரு மனிதன் காலையில் தச்சனாகவும், மத்தியானம் வியாபாரியாகவும், இரவில் உபாத்தியாயராகவும் ஏன் இருக்கக்கூடாது? அவனே மறுநாள் காலையில் உழுகின்றவனாகவும், பகலில் நெய்கின்றவனாகவும், மாலையில் விற்கின்றவனாகவும், இரவில் காவற்காரனாகவும் ஏன் இருக்கக்கூடாது?

இந்தப்படி ஒரு முறையும் நமக்கு வேண்டியதில்லை என்றும் சொல்வேன். அது மக்களுக்கு எந்த முறையிலும்—எந்த அர்த்தத்திலும் பயன் விளைவிக்கவே இல்லை. இவையெல்லாம் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை முதலிய கொடுமைத் தன்மைகளைத்தான் உண்டாக்கப் பயன்படுகின்றனவே ஒழிய மக்கள் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் சிறிதும் பயன்படவில்லை.

[இருகூரில், 3-1-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-1-1931]

2. சாதிகள் நடைமுறை

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இம் மாநாட்டைத் திறந்து வைப்பது என்னும் முறையில் இந்த மாநாடு சம்பந்தமாய் நான் ஏதாவது சில வார்த்தைகள் பேசவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயமாய் என்னுடைய அபிப்பிராயம் நீங்கள் தெரிந்ததேயாகும். தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களுக்கு, மற்றவர்கள் இழைத்து வரும் கொடுமையிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது புரட்சி வேலையே ஆகும். ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை ஒரு பெரிய அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றது.

எப்படி என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்ச்சாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும்; அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்புவிக்கப்பட்டவர்கள் என்றும்; அதற்கு மதங்களும், மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும்; கடவுள் செயலையோ, மதவிதிகளையோ யாரும் மாற்றக்கூடாதென்றும்; அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவையல்ல என்றும் சொல்லப்படக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும், தீண்டாமைத் தத்துவம் மனித சமூகத்திலிருந்து விலக்கப்படுவதும் வெறும் வாய்வார்த்தையாலோ பிரசாரத்தினாலோ, மேல் சாதிக்காரர்களைக் கேட்டுக் கொள்வதினாலோ ஆகக்கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால் அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்றுதான் சொல்வேன். தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களில் சிலர் தாங்கள் ஏதோ குளித்து முழுகிவிட்டு, விபூதிப் பூச்சோ, பட்டை நாமமோ விதிப்படி அணிந்து, வைதிகர்கள்போல் வேஷமணிந்து, மது மாமிசம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிக்கொண்டு, ஸ்வாமி என்று பெயர் வைத்துக்கொண்டு திரிந்தால் தங்கள் நிலை உயர்ந்துவிடும் என்றும், தீண்டாமை ஒழிந்துவிடும் என்றும் கருதியிருக்கிறார்கள்.

இது மற்றவர்களை ஏமாற்ற நினைத்துத் தங்களையே ஏமாற்றிக்கொள்ளும் பைத்தியக்காரத்தனமேயாகும். இந்தப்படி வெகுபேர் தாழ்த்தப்பட்ட மக்களில்—ஆதித் திராவிடர்களில் வெகுகாலமாகவே வேஷம் போட்டுப் பார்த்தாய்விட்டது. அதற்குப் பல

புராண சரித்திர ஆதாரங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்து நாளதுவரை தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஒரு காரியமும் முடிந்ததில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஏதோ சில பாஷாண்டிகள் செய்த காரியங்களால் தங்கள் சுயநலத்துக்குப் பயன் ஏற்படுத்திக்கொள்ளத்தான் முடிந்திருக்குமே ஒழிய, அப்படிப்பட்ட வேஷத்தாலும் பக்தியாலும் காரியத்தில் ஏதும் ஆகியிருக்காது; ஆவதற்கும் நியாயமில்லை.

ஏனெனில், அதன் அஸ்திவாரம் அப்பேர்ப்பட்டதாகும். தீண்டாமை விஷயம் ஒருபுற மிருக்கட்டும். எவ்வளவோ காலமாகப் போராடி வந்தும், எப்படிப்பட்டவர்கள் எல்லாம் பாடுபட்டும்—சூத்திரப்பட்டம், அதுவும் 100-க்கு 3 பேர்களால் 100-க்கு 97 பேர்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் சூத்திரப்பட்டம் ஒழிக்கப்பட முடிந்ததா? சூத்திரர்களில் சிலர் மகாத்மா, ரிஷி, முனிவர்கள், ஆழ்வார்கள், தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் என்றெல் லாம் கூட ஆக்கப்பட்டிருக்கிறார்கள்; என்றாலும்—மனித சமூகத்தில் ஒரு பெருங் கூட்டத்தை 'சூத்திரன்' என்பதாகக் குறிக்க ஏற்படுத்தப்பட்ட கலம் (column) இன்னும் அழிக்கப்படவே இல்லை; அது சுலபத்தில் அழிக்கப்படக் கூடியதாயும் இல்லை. நேற்று இவ்விடம் உங்கள் ஆதித் திராவிட மாநாட்டைத் திறந்தவரும், அதற்குத் தலைமை வகித்தவரும், இருவரும் மேல்சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்கள்தாம். அதாவது மந்திரியார் கனம், பி. டி. இராஜன் அவர்களும், உங்கள் ஜில்லாபோர்ட் பிரசிடெண்டு தோழர் சாமியப்ப முதலியார் அவர்களும் சைவ வேளாளர்—அதுவும் தொண்டைமண்டல சைவ வேளாளர்கள் ஆவார்கள்; பார்ப்பனர்களுக்கு அடுத்த சாதியார் என்பதோடு, அவ்வகுப்பில் சிலர் பார்ப்பனர் வீட்டில்கூட சாப்பிடமாட்டோம் என்பார்கள். அப்படியிருந்தும் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?' என்றுதான் பார்ப்பனர்கள் கேட்பார்கள்.

அதுமாத்திரமல்லாமல், அவர்கள் எல்லோரையுமே சூத்திரன் என்கின்ற கலத்தில்தான் பார்ப்பனர்கள் பதிவார்களே ஒழிய, நான்கு வருணம் என்பதில் தொண்டைமண்டல வேளா ளர் என்பதற்கு வேறுகலம் இல்லவே இல்லை. எத்தனையோ தொண்டைமண்டல வேளா ளர்—தாங்கள் சூத்திரர்கள் அல்லவென்றும், தங்களுக்கும் வருணாசிரமத்திற்கும் சம்பந்த மில்லை யென்றும் வெகுகாலமாகவே கூப்பாடு போட்டிருக்கிறார்கள். மற்றும் பலர் தங் களை சாதாரண சூத்திரர்கள் அல்லவென்றும், 'சற்சூத்திரர்கள்' என்றும் 'பட்டுக் குஞ்சம் கட்டிக் கொள்வதுபோல' சொல்லிப் பார்த்திருக்கிறார்கள்; என்ன செய்தும் அதை மாற்ற முடியாமலே போய்விட்டது. அப்படியிருக்க, அய்யோ பாவம், உலக வாழ்க்கையில் எவ் வளவோ கீழான நிலையில் வைக்கப்பட்டு—எவ்வித ஆதரவும் சவுகரியமும் இல்லாத நீங்கள் பறைத்தன்மையை ஒழித்துவிடுவதோ, மறைத்துவிடுவதோ என்றால், அதுவும் மதசம்பந்த மான வைதீக வேதத்தைப் போட்டுக்கொண்டு ஒழித்துவிடுவது என்றால்—அது 'சமுத் திரத்தைச் சிட்டுக்குருவி வற்றடிக்க முயற்சித்தது போல்'தான் ஆகுமே ஒழிய வேறில்லை. வருணங்கள் என்பது 'கடவுளால்' சிருஷ்டிக்கப்பட்டதாகும். எப்படி எனில், கீதையில் பகவான் கிருஷ்ணன் 'நான்கு வருணத்தையும் நான்தான் சிருஷ்டித்தேன்' என்று சொல்லி யிருக்கிறார். சாதிகள் என்பது மதத்தினால் ஏற்பட்டதாகும். எப்படி எனில், மனுதர்ம சாஸ்திரத்தில் சண்டாளசாதி உற்பத்திக் கிரமம், மற்ற சாதிப்பிரிவு உற்பத்திக் கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கடவுளும் மதமும் அதற்கு ஆதாரமான கீதையும் மனுதர்ம சாஸ்திரமும் காப்பாற்றப்படுவதாய் இருந்தால் சூத்திரப்பட்டமும், கீழ்ச் சாதித் தன்மையும் எப்படி மாற்றப்படமுடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

தோழர் காந்தியார் தீண்டாமையை ஒழித்துவிட வேண்டும் என்று வரட்டுக் கத்து கத்திப்பார்த்து விட்டார்; பல இலட்ச ரூபாயும் வசூலித்து மேல் சாதிக்காரர், மேல் வருணக் காரர் என்பவர் கையில் ஒப்படைத்து விட்டாரே தவிர, மற்றபடி தீண்டாமையின் ஒரு சிறு தூசியைக்கூட அசைக்க முடியவில்லை. ஏனென்றால், அவர் மற்றொரு பக்கம் கீதையையும் மனுதர்ம சாஸ்திரத்தையும், வருணத்தையும், சாதிக் கிரமத்தையும் ஆதரித்து வருகிறார்.

இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும், சாதி வித்தியாச ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100-க்கு 100 பேரும் கீதை, மனுதர்ம சாஸ்திரம் ஆகியவற்றை நம்பும்-ஆதரிக்கும் சோணகிரிகளே ஆவார்கள். இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும்—அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களே யாவார்கள். ஆகவே, தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தைவிட்டு நீங்களாவது விலகியாக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உறுதி. உதாரணம் வேண்டுமானால், இதுவரையில் தீண்டப்படாதவர்களாயிருந்து மனித சமூகத்தில் தீண்டக் கூடியவர்களாக ஆன எவரும் தீண்டப்படாதவர்களாய் இருந்த போது அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதறித் தள்ளிவிட்ட பின்புதான், தீண்டத்தக்கவர்கள் ஆகி இருக்கிறார்கள். இதற்குக் கோடிக்கணக்கான மக்களை ஊர், பெயருடன் புள்ளி விவரத்தோடு காட்டலாம்.

ஆதலால், மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு தீண்டாமையை விலக்கி விடலாம் என்று நினைத்து ஏமாற்றமடையாதீர்கள். தோழர் காந்தியார் ஒரு மதவாதியே யொழிய, 'மனிதஜீவ அபிமான வாதி' அல்லவே அல்ல. அவர் தனது இந்து மதம் காப்பாற்றப்படுவதற்காகத்தான் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறாரே ஒழிய தீண்டப்படாத மக்களின் கொடுமைகள் தீரவேண்டுமென்பதை முக்கியமாய்க் கொள்ளவில்லை. காங்கிரசுக்காரர்களுக்கும் தீண்டாமையைப்பற்றிய கவலை கிடையாது. ஏனெனில், அவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அனுபவத்தில் தீண்டாமை ஒழிப்பை அவர்கள் கையாடுவதானால் முடிவில் அவர்களே தீண்டத்தகாதவர்களாக ஆகிவிட நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில், தீண்டாமை ஒழியும்போது பார்ப்பனர்களின் மேல் சாதித் தன்மையும் ஒழிந்துவிடும். மேல் சாதித்தன்மை ஒழிந்து விட்டால் பிறகு பார்ப்பனர்களை யார் சட்டைசெய்வார்கள்? ஆகவே, தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஏதாவது விடுதலை வேண்டுமானால் அரசாங்கத்தைக் கொண்டுதான் செய்து கொள்ள முடியும். அரசாங்கம் மனித சமூகத்தில் உள்ள கொடுமைகளையும், ஒருவரை ஒருவர் கொடுமையாய் நடத்தும் கொடுமையையும் ஒழிப்பதற்காகவே இருந்துவர வேண்டியதாகும். அதோடு மாத்திரமல்லாமல், இன்று இருந்துவரும் அரசாங்கம் தீண்டாமையை அனுசரிக்கும் அரசாங்கம் அல்ல. தீண்டப்படாதவரைப் பொறுத்தவரை நல்ல காலத்தின் அறிகுறியாக இந்தியாவின் ஏக சக்ராதிபத்தியமானது இந்திய அரசர்கள் கையில் இல்லாமல், ஒரு அன்னிய கண்ட அரசரிடத்தில் இருக்கிறது. இதை இந்தியர்கள் ஆட்சிக்குக் கொண்டுவரத்தான் காங்கிரஸ் முயற்சிக்கிறதாம்; முயற்சியும் நடக்கின்றது.

அப்படியானால், அதற்குள்ளாகவே உங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள நீங்கள் முயற்சி செய்யுங்கள். உங்களால் கூடுமானவரை—இன்றைய ஆட்சியைப் பார்ப்பன ஆட்சியாகச் செய்வதற்குச் செய்யப்படும் முயற்சியை எதிர்த்து நில்லுங்கள். சுயராஜ்யம், சுய ஆட்சி என்பது—இராமராஜ்ய ஆட்சி, கீதை ஆட்சி, மனுமுறை ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுவது நீங்கள் அறிந்ததேயாகும். மனு ஆட்சிக்கோ, இராமராஜ்ய ஆட்சிக்கோ இந்தியா போய்விடுவதானால் இந்தியா பூகம்பத்தினாலோ, சண்டமாருதத்தாலோ, காட்டு வெள்ளத்தாலோ அழிந்து போவதே மேலானதாகும். ஆதலால், நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே உங்களது விடுதலைக்கு முயற்சி செய்யுங்கள். பழைய ஆட்சிகள் எதுவும் தீண்டாமையை ஒழிக்க முடியவே இல்லை. இந்த ஆட்சியால் நீங்கள் கலெக்டர்களானீர்கள்; ஜட்ஜ்களானீர்கள்; வக்கீல்களானீர்கள்; டாக்டர்களானீர்கள்; உபாத்தியாயர்களானீர்கள்; சட்டசபை மெம்பர்களானீர்கள்; ராவ்பகதூர், திவான் பகதூர்களானீர்கள்; மந்திரிகளுமாகப் போகிறீர்கள். ஆகவே, உங்களுடைய குறைகள் கவனிக்கப்படவும், உங்கள் சமூகம் முற்போக்கடைந்து மற்ற மக்கள்போல் பாவிக்கப்

படவும், பிரிட்டிஷ் ஆட்சியில்தான் இடம் உண்டே ஒழிய—இந்து மதத்தில் இந்து ஆட்சியில், இராம ராஜ்யத்தில், மனுநீதி ஆட்சியில், கீதையில், சுதேச மன்னர்கள் ஆட்சியில் இடம் இல்லை என்பதை உங்களுக்கு வலியுறுத்துகிறேன்.

மற்ற வகுப்பாருடைய அரசியல் கிளர்ச்சிகளில் நீங்கள் பட்டுக்கொள்ளாதீர்கள். அதெல்லாம் பணக்காரனும், மேல்சாதிக்காரனும், படித்த கூட்டமும் இன்னமும் அதிகமாய் ஆதிக்கம் செலுத்தவே பாடுபடும் கிளர்ச்சியாகும். உங்களுக்கு அந்த மூன்றும் இல்லை. அவற்றைப்பெற நீங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே எதிர்பாருங்கள். மற்றவர்களெல்லாம், பிரிட்டிஷ் அரசாங்க பக்தராய், இராஜ விசுவாசிகளாய் இருந்துதான் இன்றைய மேல்பதவி அடைந்து இன்னும் மேல்பதவிக்குக் கிளர்ச்சி செய்கிறார்கள். நீங்களும் அதுபோலவே இருந்து சம பதவியாவது அடைந்து பின்னால், வேண்டுமானால் கிளர்ச்சி செய்து மேல்பதவிக்கு வர முயலுங்கள்.

தோழர்களே, உங்கள் விஷயத்தைப் பொறுத்தமட்டில் என்னுடைய அபிப்பிராயம் இதுவேயாகும். பிறகு நீங்கள் யோசித்துப் பார்த்து உங்களுக்குத் தோன்றியபடி நடவுங்கள்.

[சீர்காழியில், 10-7-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1935]

8. சாதி ஒழிக!

சகோதரிகளே! சகோதரர்களே!

உங்களை நீங்கள் எந்தச் சாதியில் சேர்த்துப் பேசிக்கொண்டாலும் அதனால் ஒருவித நலனும் ஏற்படாது. இப்பொழுது அருகே உட்கார்ந்திருக்கும் கனம் மந்திரி அவர்கள் நம் மாகாணத்திற்கே முதன் மந்திரியாய் இருந்தபோதிலும், நம் இந்திய நாட்டிற்கே மந்திரியாக இருக்கக்கூடிய யோக்கியதை அவருக்கிருந்தபோதிலும், அவர் ஒரு பெரிய வேளாளர் குலத்தவராய் இருந்தபோதிலும் அவரைத் தாழ்ந்த குலத்தவராகச் சேர்த்திருக்கிறார்கள். இவருக்குமேல் இன்னும் மூன்று குலங்களிருக்கின்றன. இவருடைய சாதி 'சூத்திரர்' சாதி என்றுதான் கூறப்படுகின்றது. ஒரு சாதியின் பெயரைக்கொண்டு அழைத்துக்கொள்கிறவரையில் உயர்வு, தாழ்வு வித்தியாச உணர்ச்சி போகவே போகாது. இந்த வித்தியாசம் ஒழிவதற்குச் சாதிப் பெயர்களும் உணர்ச்சியும் தொலைய வேண்டும்.

சகோதரர்களே! மிக்க காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. மாநாடும் சீக்கிரம் முடிவுற வேண்டியதாகவுமிருக்கிறது. ஆகையால் இன்று காலையில் சொன்னதன்படி முகவுரையாகச் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தமாதிரி மாநாடு இப்போது நாடெங்கும் நடந்துவருவதைக் காண்கிறோம். இந்த நாடு பலசாதி, பல வகுப்பார் அடங்கியதாக இருக்கிறது. எப்போது நமது நாட்டில் சாதி வகுப்பு ஏற்பட்டு அதனுள் உயர்வு தாழ்வு அமைக்கப்பட்டுப் போய்விட்டதோ அன்று முதலே தனிச் சாதி மாநாடு கூடவேண்டியது அவசியமேற்பட்டுவிட்டது. ஒவ்வொரு சாதியாரும் தனித் தனியாக மாநாடுகள் நடத்திக்கொண்டிருந்தால் எப்போதுதான் ஒன்று சேருவது என்று பலபேர் குற்றஞ்சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சிலர் இத்தகைய மாநாடுகளை 'வகுப்பு மாநாடுகள்' என்று சொல்லி மாநாட்டிற்கு வரமுடியாதென்று மறுக்கவும் பார்த்திருக்கிறேன். இத்தகைய காரணங்களைக்கொண்டு வகுப்பு மாநாடு கூட்டுவோரைக் குறைகூறமுடியாது. இத்தகைய மாநாடுகள் கூட்டவேண்டியது மிகவும் அவசியமாகவே இருக்கிறது. ஒரு வகுப்பார் தாங்கள் தாழ்ந்த நிலைக்குள்ளாக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு வருவதை உணராதிருக்கும் வரையில் ஒருவித ஏற்பாடும் செய்யாமல்

தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தாங்களும் மனிதர்கள், தாங்களும் மற்றோருக்குச் சமமானவர்களே, தங்களைத் தாழ்ந்தவர்களெனக் கூறுவது சுயநலக் கூட்டத்தாரின் பொறுக்கமுடியாத கொடுஞ்செய்கை என்று உணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வார்கள். 'தேவேந்திரகுல வேளாளர்' என்று உயர்ந்த பதத்தால் கூறப்படினும், தாழ்த்தப்பட்டுத் தொடுவதற்கு அருகதையற்றுக் கிடப்பதால், சுயமரியாதை உணர்ச்சி வந்துவிட்ட பிறகு சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வான். இப்போதிருக்கும் கஷ்டமெல்லாம் தாழ்ந்த சமூகத்தவரென்று எல்லோராலும் இகழப்பட்டு அழுத்தி வைக்கப்பட்டிருப்பதால், இதிலிருந்து எழும்பவேண்டியது முக்கியமானதாக இருக்கிறது.

இதுபோன்ற மாநாடுகளின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமென்ன? மாநாட்டின் ஆடம்பரத்தைப்பற்றியும், காட்சியைப்பற்றியும் பெருமை பேசிக்கொண்டிராமல் என்ன செய்திருக்கிறார்கள்; என்ன முடிவு கூறியிருக்கிறார்கள்; என்ன தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்று கவனித்து, அதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, எப்படியெப்படி நடக்க வேண்டுமோ அப்படி அப்படிச் செய்து நடக்க முயன்று பாடுபடவேண்டும்.

உலகப் போட்டிப் பந்தயத்திற்கு நாம் லாயக்கற்றவர்களாய்ப் பிற்போக்கிலிருக்கிறோம். எல்லாரையும் வரிசையாய் நேராக நிறுத்திவைத்துப் பந்தயம் விட்டால் நாம் ஒரு கை பார்த்துவிடலாம். அதல்லாமல், ஒருவர்பின் ஒருவர் நிற்கும் வரிசையில் தேவேந்திர குலத்தார் கடைசியிலிருக்கிறார்கள். நிர்ப்பந்தப்படுத்திப் போட்டி போடச் சொன்னால், எவ்வளவுதான் முயன்றாலும், கடைசியிலிருப்பவர் கொஞ்சம் கடைசியில்தான் போவார். நமக்குக் கல்வி வசதியும், பொருளாதார வசதியும் குறைவாகவே இருக்கிறது. படிப்பதற்கு முயற்சியும், அறிவும், கவலையும் நமக்கு இல்லை என்பதாகச் சிலர் சொல்லக்கூடும். படிப்பதற்கு அறிவும், முயற்சியும், கவலையுமில்லாதவன் எவனுமிருக்கமாட்டான். படிக்க முடியாமலும், அதன் மூலம் பொருளாதார வசதியைச் செய்துகொள்ள முடியாமலும் நம்மைக் கட்டிப்போட்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டை அவிழ்த்துவிட்டால் நாம் போட்டியில் ஒரு கை பார்க்கலாம்.

தேவேந்திரகுல வேளாளர் என்போர் தொடக்கூடாதவர் என்று சிலர் நினைத்துக் கொண்டிருந்தாலும் அவர்களும் வேறு சிலரால் சூத்திரன், அதாவது விபசாரி மகன் என்று தள்ளி வைக்கப்பட்டுத்தானிருக்கிறார்கள். இவ்வாறு வேசி மக்கள் என்று எல்லோரையும் இழிவாகக் கருதிக்கொண்டிருக்கும் பார்ப்பான்கூட தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர்களால் தாழ்ந்தவனென்றே குறைகூறி ஒதுக்கப்படுகிறான்; தெருவில் வசிப்பதினின்றும் நடப்பதினின்றும் தடுக்கப்படுகிறான். ஆதலால் உலகம் முழுதும் ஒவ்வொருவரும் தாழ்ந்தவர்களாகத்தானிருந்து வருகிறார்கள்.

பிறர் உங்களைப் பள்ளர், பறையர் என்று சொல்லி நீங்கள் கேவலமானவர்கள் என்று கருதப்பட்டால், அவர்கள் அதைவிடக் கேவலமானவர்கள் என்றே சொல்லுவேன். அவ்வாறு உங்களைக் கேவலமாகக் கருதுகிறவர்களுக்குள்ள பெயரைவிட உங்கள் பெயர் கேவலமானதல்ல. யாரேனும் என்னைப் பள்ளன், பறையன் என்று அழைப்பது மேலா, சூத்திரன் என்று அழைப்பது மேலா என்று கேட்டால், சூத்திரன் என்று அழைக்கவே கூடாது; பள்ளர், பறையர் என்று அழைப்பதுதான் மேல் என்று சொல்லுவேன். ஏனென்றால், சூத்திரன் என்னும் பெயர் அந்தப் பெயர்களைவிட மிகமிக இழிந்ததாகும். ஜனத்தொகை எடுக்கும்போது நான் பள்ளர், பறையர் என்றுதான் சொல்லுவேன். பள்ளர், பறையர் என்பவர்களாகிலும் சொந்தத் தாய் தகப்பன்மார்களுக்குப் பிறந்தவர்களாகிறார்கள். ஆனால், சூத்திரர் என்பவர்களோ, பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள் என்று அமைக்கப்பட்டுப் போய்விட்டது. இப்பொழுதுள்ள ராஜாங்கத்துறையின் வித்தியாசத்தால் வேண்டுமானால் அப்படி இல்லை என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால், பழைய இராமராஜ்யம் வருமானால் அப்படித்தானிருந்தாக வேண்டும். இன்றைக்கும் இராமராஜ்யம் நடக்குமிட

மாகிய திருவாங்கூரில் இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறது. அங்குள்ள ஒரு பக்கா நாயரைக் கூப்பிட்டு, 'நீ யாருடைய மகன், உன் தகப்பன் பெயர் என்ன?' என்றால் அவன், 'இன்ன நம்பூதிரியின் மகன், இன்ன நம்பூதிரிக்குப் பிறந்தவன்' என்றுதான் சொல்லுவான். இன்ன நாயரின் மகன் என்று சொல்லிக்கொள்ளவே கூசுவான். இவ்வாறு அவன் சொல்லிக்கொள்ளக் கூசுவதன் காரணம் அங்கு 'இராம ராஜ்யம்' நடப்பதன் பயனே யாகும். உண்மையான இந்து ராஜ்யத்தில் அப்படித் தகப்பனை மாற்றிச் சொல்லவும், தாய் மற்றொருவனின் இஷ்டப்படி பலர் மனைவியாய் இருக்கச் செய்யவும் செய்கிறது. அதைப் போலவேதான் இங்கே 'சூத்திரன்' என்ற வார்த்தைக்கும் அர்த்தம்.

நீங்கள் உங்களை வேளாளர்கள் என்று அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறீர்கள். வன்னியர்கள் தங்களை க்ஷத்திரியர்கள் என அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். செட்டியார்கள் வைசியர்களென அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். இதெல்லாம் எதற்காக? நீங்களே உங்களைத் தாழ்மைப்படுத்திக் கொள்வதற் கொப்பாகிறதே என்றால், 'என்ன அய்யா! இப்பொழுதுதான் எங்கள் பெற்றோர்களைத் திருத்திக்கொண்டிருக் கிறோம். அதற்குள் இப்படிக் கீழே தள்ளுகிறீர்களே?' என்கின்றனர். நாடார் பெரு மக்களும் ஆரியர் வழியைப் பின்பற்றுவதுபோன்று குறுக்கே பூணூல் போட்டிருந்தனர். அவைகளை எல்லாம் அறுத்தெறியுங்கள் என்றபோது ஓர் அன்பர், 'ஏனய்யா, இவ்வளவு காலம் போராடி இந்தப் பூணூல் போடுவதற்கு இவ்வளவு காலமாயிற்று. அந்த நூலில் அழுக்கு ஒட்டுவதற்குமுன் அறுத்தெறியச் சொல்லுகிறீர்களே' என்று வருந்தினார். இவ்வாறு க்ஷத்திரியர் என்றும், வைசியரென்றும், வேளாளர் என்றும் அழைத்துக் கொள்ள ஆசைப்படுவதும், பூணூல் முதலியன போட்டுக்கொள்ள ஆசைப்படுவதும் தன் சாதியைத்தவிர தனக்குமேல் பெரிய சாதி இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு, தாங்கள் அந்தச் சாதிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டவர்களா கிறார்கள். எல்லாருக்கும் உயர்ந்த சாதியான் என்று கூறிக்கொள்ளுகிறவன், க்ஷத்திரியரை வைசியனுக்குமேல் உயர்ந்தவனென்றும், வைசியனைச் சூத்திரனுக்கு மேலானவனென்றும் பாகுபடுத்திக் கூறினாலும் அவன் இந்த இரண்டு பேரையுமே ஒரே கண்ணுடன் பார்த்து, ஒரே முறையில்தான் நடத்துகிறான். ஆகவே, இந்த மூன்று பேர்வழிகளுக்குள் அவனுக்கு யாதொரு வித்தியாசமுமில்லை. இரயில்வே முதலிய சிற்றுண்டிசாலை களுக்கும், சாப்பாட்டு விடுதிகளுக்கும் சென்று பார்ப்போர் இதை உணருவதில்லையா? அங்கே சாப்பிடுவதற்கு இரண்டு பாகங்கள் தானிருக்கின்றன. ஒன்றில் பார்ப்பான் சாப்பிடுவதற்கும், மற்றொன்றில் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய எல்லோரும் சாப்பிடுவதற்குமே இருக்கின்றன. ஆகவே, இதில் என்ன வித்தியாசத்தைக் காண் கிறீர்கள்? உண்மையில் அவன் மட்டும் உயர்ந்தவனாகவும், மற்ற மூன்றுபேரும் அவனுக்கு ஒரேமுறையில் தாழ்ந்திருப்பதாகவே தானே அவ்வறைகள் உணர்த்துகின்றன? பிறகு எதற்காக நீங்கள், 'நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் வேளாளன்' என்று உயர்வு தாழ்வு பேசுகிறீர்கள்? இதெல்லாம் உங்களை ஒற்றுமையில்லாதிருக்கச் செய்யும் சூழ்ச்சிமுறை என்பதை நீங்கள் உணருகிறீர்களில்லையா? ஆகையால் சாதிப் பிரிவினை யால் ஒரே ஒரு கூட்டத்திற்குத்தான் சவுகரியம்; மற்றையோருக்கு ஒற்றுமைக் குறைவு ஏற்படுவதுதான் லாபம்.

ஆகையால், முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது இந்த நாட்டைவிட்டு ஒழியவேண்டுமா, வேண்டாமா என்ற முடிவு தெரிந்துவிட வேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழோ, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாகவேண்டும். அதற்குமேல், சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ளவை களை அடியோடு அழிக்க முயலவேண்டும். அப்படிச் செய்யாமல், உயர்வு தாழ்வைப் போக்கிவிடலாமென்று கருதுதல் நுனிமரத்தில் நின்றுகொண்டு அடிமரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள் செய்கையையே ஒக்கும். சாதி ஆசாரம் என்பவை மதம் என்னும்

மரத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. சாதியை மதத்திலிருந்து பிரித்துக் கல்ல வேண்டும். இப்படிப் பிரிப்பதற்கு முடியாதவரையில் சாதியும் மதமும் ஒன்றோடொன்று இறுகப் பின்னிக் கொண்டிருக்குமேயானால் அந்த இரண்டையும் வீழ்த்தியேயாகவேண்டும். முன்னிருந்த அந்த உயர்ந்த சாதிக் கபடர்கள் அவ்வளவு தந்திரமாக ஒன்றையொன்று பிரிக்க முடியாத வகையில் சாதியையும், மதத்தையும் பிணைத்துப் பின்னிக் கொண்டிருக்கும்படி இறுகக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆகையால், சாதியை அழிக்கத் தலைப்படுகையில் மதமும் வெட்டப்படுகிறதே என்று பயப்படாமல் சாதி மரத்தையும், மத மரத்தையும் சேர்த்து நெருப்புவைத்துச் சாம்பலாக்க வேண்டியது தடுக்கமுடியாத அவசியமாகும். இதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது, மதமானது வேதம், புராணம் என்பவைகளுடன் கட்டிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்த வேதம், புராணங்களிலிருந்து மதத்தைப் பிரிக்கவேண்டும். இதிலும் பிரிக்கமுடியாதபடி கட்டு பலமாக இருந்தால், இங்கும் இரண்டையும் சேர்த்து நெருப்பு வைக்கவேண்டியதுதான். ஆனால் இந்த வேதம், கடவுளுடன் சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பிரிக்கமுடியாத பிணைப்பு இருந்தால் அந்தக் கடவுள் என்பதன் தலையிலும் கை வைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. வேதத்தை இழுத்தால் கடவுளுக்கும் அசைவுதான் கொடுக்கும். இதில்தான் பெருத்த சங்கடப்படக்கூடும். கடவுளை அசைப்பதா என்று பயப்படக்கூடாது. எனவே சாதி, மதம், வேதம், கடவுள் எல்லாவற்றையும் ஒழித்துத்தான் ஆகவேண்டு. இவற்றில் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்துவராது. இப்படி நாம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கமுடியாமல் எல்லாவற்றையும் சேர்த்துக்கொளுத்தும்போது, உண்மையில் ஏதாவது சத்து இருந்தால் அது அழியாது. இப்படி நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படுகையில் மதமென்பதும் ஒழிந்துபோகுமே யென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம். அது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தைப் பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப் போவதாயிருந்தால் அந்த வேதம் என்பதும் இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஓட்டும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பதும் இந்த நிமிஷத்திலேயே ஓடி விடட்டும். அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்.

சாதியின் கொடுமையால், நாற்றமெடுத்த மலத்தைவிட மனிதன் கேவலப்படுத்தப் படுகிறான். இது உண்மை; வாய்ப் பேச்சுக்காக நான் சொல்லவே இல்லை. எப்படி என்றால், மல உபாதைக்குச் சென்றவன் அந்த பாகத்தைமட்டும் ஒரு சொம்பு தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்கிறான். மலத்தைக் காலில் மிதித்துவிட்டால் அந்தக் காலைமட்டும் தண்ணீரைவிட்டுக் கழுவிவிட்டால் அந்தக் குற்றம் போய்விடுகிறதாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தொட்டுவிட்டால் அவனைத் தொட்டதால் ஏற்பட்ட தோஷம், தன்னுடைய உடலை உச்சிமுதல் உள்ளங்கால்வரை குளிர, நனையக் குளித்தா லொழியப் போவதில்லை என்கிறார்கள். ஆகவே, மலத்தைவிட மனிதன் எவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிறான் என்பதைப் பாருங்கள். மனிதனை மனிதன் தொடுவதால் ஏற்படுகிற கெடுதலென்ன? தோஷமென்ன? குற்றமென்ன? எதுவுமில்லை. ஆனால், பிறகு ஏன் தோஷம் கூறப்படுகிறது? ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வதற்காகவே கூறப் படுகிறது. இதைவிட வேறு இரகசியமில்லை.

இக் குலத்தவர்கள் குளித்துச் சுத்தமாய் இருக்கவேண்டுமெனச் சிலர் கூறுகிறார்கள்; கள் குடிக்கக்கூடாதென்கிறார்கள்; மாமிசம் சாப்பிடக்கூடாதென்கிறார்கள். இப்படிக் கூறுகிறவர்கள்தான் சீர்திருத்தக்காரர்களாம். நான் இவர்களைச் சுத்தமாய் இருக்கக் கூடாதென்று சொல்லவில்லை; கள், சாராயம் குடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மாமிசம் தின்னவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், கேவலம் செய்வதற்காக இந்தக் காரணங்களைச் சொல்லுவது அடாது. இப்படி அவர்கள் மீது குற்றம் கூறி கேவலமாகப் பேசுகிறவர்கள், கள் சாராயம் குடிப்பவர்களையும், மாமிசம் தின்னுகிறவர்களையும், குளிக் காமலிருப்பவர்களையும் தொடாமல்தானிருக்கிறார்களா என்று கேட்கிறேன். இவர்கள்

தொட்டுக் கொண்டும் அளவளாவிக் கூடிக் குலாவுவோரெல்லாம் தினம் குளிப்பவர்கள் தானா? மாமிசம் தின்னாதவர்கள்தானா? கள், சாராயம் குடிக்காதவர்கள்தானா? நான் வாரத்திற்கு இரண்டொரு முறைதான் குளிக்கிறேன். சுற்றுப் பிரயாணம் செய்வதால் வாரத்திற்கு ஒருமுறைதான் குளிப்பதற்குச் சாத்தியப்படுகிறது. என்னைப்போலவே எண்ணிறந்தோரும் இருந்து வருகிறார்கள். இப்பேர்க்கொத்தவர்களை அவர்கள் தொட்டுக் கொள்ளுவதில்லையா? உலகத்தில் நூற்றுக்கு 99 பேர்கள் மாமிசம் சாப்பிடுகிறவர்களா யிருக்கிறார்கள். குடிப்பதும் எல்லா சாதியாரிடமும்தான் இருந்துவருகிறது. இவர்களை எல்லாம் இவர்கள் தொட்டுக்கொள்ளுவதில்லையா?

நம் நாட்டிலே உற்பத்தியாகிற கள்ளும், கொலை செய்யப்படுகிற மாமிசமும் இந்தத் தீண்டாதவர்களெனப்படுவோர் வயிற்றுக்குள்தானா போய்விழுகிறது? சிலர் இவர்கள் மாட்டு மாமிசத்தைத் தின்னுகிறார்களே என்கின்றனர். நம் நாட்டை அரசாண்டு வருபவர்கள் மாட்டு மாமிசத்தை முழுக்க முழுக்கத் தின்பவர்களாயிருக்கிறார்கள். மாட்டு மாமிசம் சாப்பிடுகிறவனின் ஆளுகைக்குட்பட்டு அவனது பிரஜையாக இருக்கச் சம்மதிக்கிற நாம்—நமது சகோதரன் ஒரு போதாத கொடுமையால் மாட்டிறைச்சி தின்றால் என்ன முழுகிப்போய்விடுகிறது? என்ன நீசத்தனம் வந்துவிடப்போகிறது? இவையெல்லாம் வெட்கக்கேடா, விதண்டாவாதக் கொழுப்பா? முகமதியர்கள்கூட மாட்டு மாமிசம் சாப்பிடு கிறவர்கள்தான். இதனால் அவர்களிடம் ஏன் மோதிக் கொள்வதில்லை?

வேறு சிலர், செத்த மாட்டைத் தின்னுகிறார்களே என்கிறார்கள். இதனால் என்ன தீட்டு, எந்த உருவாக வந்து அவர்களிடம் ஒட்டிக்கொள்கிறது? பதறப் பதற, கதறக் கதற மாட்டை அறுத்துச் சாப்பிடுவது பாவமா; மாண்டு மடிந்து மண்ணுக்குள் போவதை—இல்லாத கொடுமையால் வயிற்றுக்குள் போடுவது பாவமா? புழுத் தின்னும் கோழியையும், மலந்தின்னும் பன்றியையும்விடப் புல்லையும் பிண்ணாக்கையும் தின்னும் மாடு கேவலமானதா?

குளிப்பதற்கு வசதி வாய்க்கப் பெறாதவன் எப்படிக் குளிக்க முடியும்? மகந்து களையும், மடாதிபதிகளையும் ஒரு வீட்டுக்குள் போட்டுக் குளிக்கவும், பல் விளக்கவும் தண்ணீர் கொடுக்காமல் ஒரு மாதம் வரை பூட்டி வைத்திருந்து திறந்துவிட்டால், அவர் களுடைய வாய் நாறாதா? உடம்பில் துர்வாடை வீசாதா? துணி அழுக்காயிருக்காதா? இப்படியாவதன் காரணமென்ன? தண்ணீர் வசதி செய்து கொடாமையினாலா, பிறவி யிலேயா என்று கேட்கிறேன். குடிப்பதற்கே தண்ணீர் கொடுபடாமலும், மொண்டுகொள்ள விடப்படாமலும் தவிக்கும் தீண்டத்தகாதாரென்போர் உடம்பு குளிக்கவில்லை என்பது என்ன மதியீனம்? இறைச்சி வாங்கித் தின்பதற்குப் பணவசதியில்லாமலடித்து அவனது உழைப்பிலிருந்துவரும் உணவுப் பொருட்களை அவனது வயிற்றுக்குப் போகாதவாறு பிடுங்கிக்கொண்டால், அவன் செத்த மாட்டையும் செத்த ஆட்டையும் தின்னாமல் என்ன செய்வான்? காடு மேடெல்லாம் அலைந்து, இரவு பகலென்றும் பாராமல், தண்ணீரில் நனைந்து, வெயிலில் காய்ந்து, வியர்வையில் குளித்து விவசாயம் செய்வோன் தனது அலுப்புத் தெரியாது என்பதற்காகக் கள் குடிப்பதால் அவன் கேவலமாகி விட்டானா?

இந்த ஊர்களில் எப்படியோ எனக்குத் தெரியாது—எங்கள் ஊர்களுக்குப் பக்கத்தில் மாடு குளிப்பாட்டும் குட்டையிலும் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் கிணற்று வாய்க்காலி லும்கூட இந்த வகுப்பாரைத் தண்ணீர் எடுக்க விடுவதில்லை. ஆகையால், இந்தவிதக் காரியங்களுக்கெல்லாம் யார் பொறுப்பாளி? இதுவும் பிறவியோடு வந்ததா? சாதித் திமிரால் செய்யப்படும் தீவினைகளா?

நியாயமாகவும் மதக் கட்டுப்பாட்டின்படி, சாஸ்திரக் கட்டளைப்படி, கடவுள் பக்திப் படி, நாம் முன்னேறுவதற்கு எப்படி எப்படி அடங்கி ஒடுங்கிப் பொறுமை காட்டி நடக்க வேண்டுமோ, அவ்வாறெல்லாம் இதுவரை நடந்து காட்டியாகிவிட்டது. சாந்தமாகவும்,

அமைதியாகவும் மத வேதக் கடவுளுக்குக் கட்டுப்பட்டு எவ்வளவு பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவு பிரயத்தனங்களும் செய்து பார்த்து விட்டோம். பொறுமைக்கும், சாந்தத்துக்கும் அளவுண்டு. அந்த அளவு இப்போது தாண்டிப்போய்விட்டது. இனி, மதம், வேதம், கடவுள் என்று பார்த்துக்கொண்டிருந்தால் ஒன்றும் ஆகப்போவதில்லை.

நந்தனுக்கு மோக்ஷம் கொடுத்ததாகவும், பாணனை ஆழ்வாராக்கியதாகவும் கூறும் புராணங்களைக் குற்றங்கூறாதீர்கள் என்கிறார்கள். வாஸ்தவம், இதோ வாயைப் பொத்திக் கொண்டோம்! நந்தனுக்கு மோக்ஷம் கொடுத்தது உண்மையானால் அந்த நந்தனுடைய பேரனை ஏன் உள்ளே விடக்கூடாதென்கிறார்கள்? பாணனை ஆழ்வாராக்கியது வாஸ்தவ மானால் பாணனின் பேரன் கோயிலுக்குள் போவதை ஏன் தடுக்கிறார்கள்? நந்தனுக்கு ஒரு கல்லும் பாணனுக்கு ஒரு கல்லும் நட்டு, அவற்றின் பேரால் பொங்கல் அபிஷேகம் செய்து, காசு சம்பாதிக்கப் பிரயத்தனப்படுகிறார்களே ஒழிய, அவர்கள் பேரைச் சொல்லி வேறு என்ன செய்கிறார்கள்? நந்தன் போனபோது நாம் ஏன் போகக்கூடாது என்றால், நீங்கள் சொல்லுகிற நந்தன் வேறு நபர் என்று சொல்லி, 'அந்த நந்தன் உள்ளே வருவதற்கு முன் நெருப்பில் குளித்து வந்தான். நீங்களும் அப்படி வாருங்கள்' என்கிறார்கள். நாம் உள்ளே போக வேண்டுமானால் இவர்கள் சொல்லுகிற பிரகாரம் முதலில் நெருப்பில் குளித்துச் சாம்பலாகவேண்டும்; அதற்குமேல்தான் போகமுடியும்.

ஆகவே, சாதி வித்தியாசத்தையே அழித்தாக வேண்டும். சாதி வித்தியாசத்தைப் போக்குவதற்கு எல்லாவிதமான தியாகத்தையும் செய்வதற்கு முன்வரவேண்டும். இந்த மாநாட்டில் செய்கிற தீர்மானங்களைச் செய்கையில் நிறைவேற்றி, அதன்படி நடக்க எல்லோரும் முன்வரவேண்டும். 'பள்ளர்' என்று அழைப்பதா, 'வேளாளர்' என்று அழைத்துக் கொள்ளுவதா என்பதில் காலத்தை விருதாவாக்கி அடித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை; அது கூடவே கூடாது. மேல்நாட்டில் ஆராய்ச்சி செய்வதில் அடித்துக் கொள்கிறார்கள். நாம் பெயருக்காக அடித்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் தேவேந்திர குலப் பிராமணர் என்று வைத்துக் கொண்டாலும் சரி; பிராமணர்கள் என்று தங்கள் சாதிப் பெயர்களை வைத்துக்கொண்டு திண்டாடுவோரின் யோக்கியதை எனக்குத் தெரியும்; விஸ்வப் பிராமணர், தேவாங்கப் பிராமணர், சவுராஷ்டிரப் பிராமணர் என்று தங்களை அழைத்துக் கொள்வதால் அவர்களுக்குப் புதிதாக முளைத்திருக்கும் யோக்கியதையை நான் அறிவேன். ஆதித் திராவிடன் எல்லார் வீட்டிலும், எவ்வளவு பாடி (வைது) இட்டா லும் தின்றுவிடுகிறான்; எந்த இடத்தில் வைத்து ஊற்றினாலும் குடித்துவிடுகிறான். ஆனால், விஸ்வப் பிராமணர் என்னும் பிராமணர்கள் வீட்டில் பச்சைத் தண்ணீரைக்கூடத் தொட மறுக்கிறான். இதன் காரணமென்னவென்று கேட்டால், நாங்களெல்லாம் வலக் கை யர்கள், விஸ்வப் பிராமணர்கள் இடக் கையர்கள் என்கிறார்கள். இம் மாதிரிதான், பிராமணர் பட்டத்தைத் தாங்கியவர்களெல்லாம் இருக்கின்றனர்.

தேவேந்திர குலம் என்பதும் எனக்கு இழிவாகத்தான் தோன்றுகிறது. என்ன காரணத்தின் பொருட்டு இந்தப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறீர்களோ அது எனக்குத் தெரியாது. ஆனால், 'தேவேந்திரன்' என்றால் எனக்குப் பெருத்த அசிங்கமாகயிருக்கிறது. ஏனென்றால், தேவேந்திரனைப் பற்றிக்கூறும் புராணக் கதைகள் தேவேந்திரனை அவ்வளவு இழிவாகக் கூறுகின்றன. அவன் வேசி மகனிலும் இழிந்த ஜென்மன் என்பதாகவே அவைகள் உரைக்கின்றன. பல்வேறு பெயர்களைக்கொண்டு சாதி பிரிந்துபோவது கூடாது. நாயக்கரிலும் பல வித்தியாசம்; செட்டியிலும் வித்தியாசம்; பிள்ளையிலும் வித்தியாசம். பட்டணத்தில் பறையனும் பிள்ளையென்று வைத்துக்கொள்கிறான்; பள்ளனும் பிள்ளை என்று வைத்துக்கொள்ளுகிறான் என்று சொல்லிப் பட்டணத்திற்குப் போகும் பிள்ளை களும் அங்கு இருக்கும் பிள்ளைகளும் ஆகாயக் கப்பல் வேகத்தில் தங்கள் பெயர்களை முதலியார்களாக மாற்றி வருகின்றனர். எனவே, இந்த விதமான போக்கெல்லாம் கூடாது. சாதி வித்தியாசம் என்கிற எண்ணத்தையே அடியுடன் இடித்துத் தள்ள வேண்டும். நாம்

பிறந்த சாதியை இழிவாக மதித்து இன்னொரு சாதியை உயர்வாக மதித்து, அதனிடம் அடைக்கலம் புகுவதைவிட இழிவு வேறொன்றுமில்லை. இவ் வழியில் இறங்கவே கூடாது.

இத்தோடு எனது முகவுரையை முடித்துக் கொள்கிறேன். வரவேற்புக் கமிட்டியினுடைய வரவேற்புக்கும் உபசாரங்களுக்கும் எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவற்றை எனது முடிவுரையில் தெரிவிக்கிறேன்.

[திருச்சியில், 29-9-1929-ல் சொற்பொழிவு-'திராவிடன்' தினசரி—5-10-1929]

4. சாதி இருக்கலாமா?

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

பம்பாயில் போய் ஒருவனைச் சூத்திரன் என்றால் அவனுக்குக் கோபம் வராது; அவமானம் வராது. அதே மாதிரி பஞ்சாபில், அய்க்கிய மாகாணத்தில் போய் ஒருவனைச் சூத்திரன் என்று சொன்னால் இதை மறுத்து அவன் ஏன் என்று சொல்லமாட்டான். ஆனால் திராவிட நாட்டான்தான் சூத்திரன் என்பதை இழிவு என்று கருதுகிறான். சூத்திரன் என்பதை இழிவு என்று கருதுகிறவன் ஒருவன்; அதை ஒப்புக்கொள்கிறவர்கள் ஒன்பது பேர்.

இப்படி இருந்தால், அதை எப்படி நமது ஆட்சி என்று சொல்லமுடியும்? எப்படி நமது இழிசாதி நீங்கும்? நமக்கு ஏதாவது வசதி செய்யவேண்டும் என்று நினைத்தார்களா அவர்கள்! பார்லிமெண்ட்டில் உட்கார்ந்துகொண்டு பேசினார்களே, டில்லியிலே! பெரிய பெரிய அறிவாளிகளாகிய டாக்டர் அம்பேத்கார் முதற்கொண்டு, நம்முடைய நாட்டில் இருந்து சென்ற பஞ்சம சாதியைச் சேர்ந்த தோழர்கள் சிலர் முதற்கொண்டு ஒரு வார்த்தை பேசியிருப்பார்களா?

'சுதந்திரம் அடைந்த நாட்டிலே பார்ப்பனர்கள் ஏன் இருக்க வேண்டும்? சூத்திரர்கள் ஏன் இருக்க வேண்டும்? பஞ்சமர் ஏன்?' என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படிக் கேட்டால் வகுப்புத் துவேஷமா? கூறுகிறார்களே வகுப்புத் துவேஷம் என்று!

ஜனவரி 26-ஆம் தேதி முதற்கொண்டு பார்ப்பான் இருக்கக்கூடாது; இருந்தால் ஆறு மாதம் கடுங்காவல் என்ற சட்டம் எழுத வேண்டாமா? இன்றும் பார்ப்பான் தன்னைப் பார்ப்பான் என்று பூணூல் போட்டுக்கொண்டு இருக்கிறான்!

சாதியை ஒழிக்கத் திட்டம் எழுதுகிறார்களே, சர்க்கார்! இனிமேல் சாதியைக் குறிக்கும் சின்னத்தை ஒழிக்கவேண்டும் என்று கூறவேண்டாமா? அதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டாமா? இன்னமும் ஏன் பூணூல் இருக்கிறது? ஏன் இன்னமும் பூணூலை ஒப்புக் கொள்ளவேண்டும், இந்த சர்க்கார்?

போலீஸ்காரனைக் கூப்பிட்டு—'நம்முடைய நாட்டிலே சாதி ஒழிந்துவிட்டது; இனி பூணூலை எங்கே கண்டாலும் வெட்டு' என்று கையில் கத்தரிக்கோலைக் கொடுத்திருக்க வேண்டாமா, இந்த சர்க்கார்? ஏன் செய்யவில்லை?

சமத்துவம் ஏற்பட்ட பிறகு இந்த நிலை இருக்கலாமா? சுயராஜ்யம் ஏற்பட்ட பிறகு இந்த நிலை இருக்கலாமா? நாங்கள் கூறினால் பார்ப்பனர்களைத் திட்டுகிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால், காப்பி ஓட்டலிலே, 'பிராமணாள் கிளப்' என்று எழுதி இருக்கலாமா?

சாதியை வைத்துக்கொண்டு, அதற்கு ஆதாரமாகக் கோயில்களைக் காப்பாற்றுவதற்கு வசதியைத் தேடிக்கொண்டு, சாஸ்திரத்தையெல்லாம் பள்ளியில் பாடமாக வைத்துக் கொண்டு, சாதியை ஒழித்துவிட்டோம் என்று கூறினால்—பாமர மக்களை ஏமாற்றத்தானே இந்த மாதிரி செய்திருக்கிறார்கள்?

ஆகவே, இந்த ஆட்சி சமத்துவ ஆட்சி அல்ல; சுதந்திர ஆட்சி அல்ல; ஒரு சுரண்டல் ஆட்சி என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். எங்கள் நாடு எங்களுக்கு வந்து விடுமேயானால் கட்டாயம் இன்றைய தினம் நாங்கள் சொல்லுகின்ற இந்த உத்தரவைப் போடுவோம். இந்த நாட்டிலே எவனாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் இருந்தால் ஒரு வருடம் ஜெயில் என்று சட்டம் செய்வோம்.

[செங்கற்பட்டில், 5-11-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-11-1950]

8. சாதி ஒழிய வழி

1. கலப்பு மணத்தால் சாதி ஒழியுமா?

தலைவரவர்களே! தோழர்களே!

எனக்கு முன்னால் பேசிய சில தோழர்கள் சொன்னார்கள்—ஏதோ கலப்புக் கலியாணம் (கலப்பு மணம்) செய்துகொண்டால் சாதி ஒழிந்துபோகும் என்று! கலப்பு மணம் செய்வதால் சாதி ஒழிந்துபோகும் என்று சொல்ல எனக்குத் தைரியமில்லை. அதையே ஒரு சாதியாக ஆக்கிவிடுவார்கள்! எப்படி என்றால், 'கலப்பு மண சாதி' என்றுதான் கடைசியில் சொல்லமுடியுமே தவிர சாதி அடியோடு போய்த் தொலைய முடியாது. அதுவும் சம சாதியில்தான் கலப்பு மணம் நடைபெறும். பறையன், சக்கிலி, பள்ளன் முதலிய சாதிகளில்—'மேல்' சாதியான் இலேசில் மணம் செய்யமாட்டான்.

நம் நாட்டிலே எத்தனையோ தாசிகள் இருக்கிறார்கள்; நாமாவது ஒரு கலப்பு மணத்தைச் சொல்லுகிறோம், இவர்கள் ஆயிரம் கலப்பு மணம் செய்து பிள்ளைகள் பெறுகிறார்களே—அந்தச் சாதிக்குள்கூட சாதி போவதில்லையே! அதிலும் பல சாதிகளாக்கு கிறோம். அவர்களும் மேல்சாதி ஆகத்தானே பார்க்கிறார்கள்! பட்டிக்காட்டுத் தாசிகள் சாதி பார்த்துத்தான் புழங்குகிறார்கள். இதனால் கலப்பு மணத்தால் சாதி போய்விட்ட தென்று கூறமுடிகிறதா?

இப்போது நானும்தான் கலப்பு மணம் செய்து இருக்கிறேன். தோழர் சாமி சிதம்பரனார், தோழர் சா. குருசாமி, தோழர் எஸ். இராமநாதன் முதலியவர்களுந்தான் கலப்பு மணம் செய்து இருக்கிறார்கள். அதனால் சாதி போய்விட்டதா? ஏதோ வசதி இருப்பதால் மக்கள் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் எங்களுக்குக் குழந்தைகள் இருந்து அவர்களுக்குக் கலியாணம் ஆகவேண்டுமானால் அப்போது தகராறுதான். 'கலப்புச் சாதியைச் சேர்ந்தவர்கள்' என்றுகூறி கலப்பு சாதியார்கள்தாம் ஒருவருக்குள் ஒருவர் செய்துகொள்ளுவார்கள். அன்றியும், எங்களுக்கு மதம், கடவுள், சாதி என்ற மூன்றைப்பற்றியும் கவலை இல்லை. அதனால்தான் மறுசாதி மணம் செய்துகொள்ளவும், அதனால் தைரியமாக இருக்கவும் முடிகிறது.

எனவே, இந்தக் கொள்கையையும் பரீட்சைசெய்து பார்க்க வேண்டுமானால், நம்மிடம் அரசாங்கம் வந்தபிறகு சாதி ஒழிப்புக்கு ஏதாவது சட்டம் செய்யலாம். மத சாஸ்திரங்களை வைத்துக்கொண்டு சாதியை ஒழிப்பது கஷ்டம்.

[திருவொற்றியூரில், 17-2-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1952]

பேரன்புமிக்க தோழர்களே! தாய்மார்களே! மணமக்களே!

நாம் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் திருமணம் செய்கிறோம். அதில் ஒன்றும் மாறுதல்—கலப்பு இல்லை. கலப்பு என்பது ஒருவித மயக்கம்தான்.

சாதியை வைத்துக்கொண்டு சாதிக் கலப்பு என்கிறார்கள். படையாச்சி, பிள்ளை, கவுண்டர், நாயடு, பறையன், சக்கிலி என்பவர்கள் எல்லாம் ஒரே சாதிதான்—அதாவது சூத்திரர்கள்தாம். சிலர் தங்களைச் க்ஷத்திரியர்கள் என்று கூறிக்கொள்வதெல்லாம், சூத்திரன் என்று கூற வெட்கப்பட்டுக்கொண்டு கூறுவதாகுமே தவிர மற்றபடி அனைவருமே சூத்திரர்கள்தாம்.

இரண்டே சாதிகள் உண்டு; பார்ப்பான் ஒரு சாதி—மற்றவர்கள் கீழ்த்தர சாதி. இந்த இரு சாதிகள்தாம் உண்டு. கடவுள், மதம், சாஸ்திரம், அரசாங்கச் சட்டம் இவற்றில் எல்லாம் இந்த இரு சாதிகளும்—அதாவது பார்ப்பனர் சாதியும், சூத்திர சாதியும் கலப்பது தான் கலப்பு மணம் என்பது ஆகும். இந்தவிதமான திருமணத்திற்குத்தான் சட்டத்திலும் சில சலுகைகள் உண்டு. மற்றபடிஉள்ளதைக் கலப்பு மணம் என்று கூறினால் அதற்குச் சலுகை கிடையாது.

நம்மில்தான் சாதிப் பிரிவுகளை வைத்துக் கொண்டு இழிவுபடுத்துகின்றோம்.

பார்ப்பானை எடுத்துக்கொள்ளுங்கள்; அவர்களில் மராட்டி மொழி பேசும் மராட்டியப் பார்ப்பான், தெலுங்கு பேசும் பார்ப்பான், ராவ், அய்யர், அய்யங்கார் என்ற பல பிரிவுகள் இருப்பினும்—அனைவரும் ஒரே சாதியினர் என்று கருதுகின்றனர். நாம் செய்யும் கலப்பு மணத்தால் ஒருநாளும் சாதி ஒழியாது. இப்படி எவ்வளவோ திருமணங்கள் நடைபெற்றனவே—எங்கேயாவது சாதி ஒழிந்ததா? ஏதோ இதனால் சிறிது நல்வாய்ப்பு ஏற்படலாம்.

பெண்களையும் ஆண்களைப்போல் நன்றாகப் படிக்கவைத்து, இருவரையும் ஒத்த தகுதி உடையவர்களாக ஆக்கிவிட்டால்—குறுக்கே ஒன்றும் இருக்காது. பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்தித் தொழில்செய்து பிழைக்க வசதியாகும்படி செய்யவேண்டும். பெண்களைத் தனக்கு வேலைசெய்யும் அடிமைகளாய் நினைத்துப் பெண் எடுப்பதால் வசதி எனப் பார்த்து அளவு எடுக்கிறான். மற்றபடி, பெண்கள் தாமாக வாழ வசதி ஏற்படுத்தி விட்டால் கலப்பு தானாகவே நடக்கும்; நாம் ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமே இல்லை. இங்கு பேசியவர்கள் நல்ல குலம், குடும்பம் என்று பார்க்கவேண்டும் என்றார்கள். நான் அது கூடத் தேவையில்லை என்கிறேன். நாம் கட்டிக்கொள்ளப் போகும் ஆண் பெண் ஒழுக்கமானவர்களா என்று பார்த்தால் போதும். ஒழுக்க ஈனமானவர்களாய் இருக்கும் குடும்பத்தில் தங்கமான பெண் இருக்கும்; சில இடங்களில் பெற்றோர்கள் ஒழுங்காக இருந்தால் அந்தப் பெண் ஒழுக்க ஈனமானதாக இருக்கும். எனவே, பெற்றோர்களின் ஒழுக்கம், தரம் என்பதைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. இதையெல்லாம் பார்த்தால் காரியம் கெட்டுப்போகும்.

[மருடஞ்சாவடியில், 27-12-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1960]

2. சாதி ஒழிய வழி

ஸ்தல ஸ்தாபனங்களின் வாக்காளர் பட்டியலிலும், சர்க்கார் 'ரிக்கார்டுகள்', கல்விச் சாலை, கோர்ட் முதலிய 'ரிக்கார்டுகள்' ஆகியவற்றிலும் சாதி உட்பிரிவின் பெயர்களைக் குறிக்க வேண்டியதில்லையென்று அய்க்கிய மாகாண சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்த உத்தரவு பாராட்டப்படக்கூடியதுதான். இனிமேல் வாக்காளர்கள் யாவரும் 'இந்து', 'முஸ்லிம்', 'சீக்கியர்' என்ற பெரும் பிரிவுகளிலேயே அடக்கப்படுவர் என்று இந்த உத்தரவு கூறுகின்றது.

முஸ்லிம்களின் அரசியல் கிளர்ச்சி அதிகப்பட்ட பிறகும்; மதமாற்றம் செய்யும் வேலைகளும், மக்களைக் குடியேற்றும் முயற்சிகளும் தீவிரப்பட்ட பிறகும்; தாழ்த்தப்பட்ட மக்கள் முஸ்லிம்கள் ஆவதா அல்லது சீக்கியர்களாவதா என்ற பெரிய பிரச்சினை கிளம்பிய

பிறகுந்தான் காங்கிரஸ் தலைவர்கள் இந்து மதத்தை எப்படிக் காப்பாற்றுவது என்பதுபற்றி ஆலோசிக்கத் தொடங்கியிருக்கின்றனர். ஆனாலும், சர்க்கார் மட்டும் இவ் விஷயத்தில் குறட்டையிலிருந்து எழும்பாமலே படுத்துக்கொண்டிருக்கிறது!

காங்கிரஸ் இயக்கம் சாதியை ஒழிக்கும் முயற்சியில் தலையிடுவதேயில்லை. சுயராஜ்யக் கூச்சலைவிடக் கஷ்டமான பிரச்சினை இது என்பது, காந்தியாருக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும், அவருக்கு முன்பிருந்தவர்களுக்கும் நன்றாகத் தெரியும். சாதியை ஒழிப்பதைக் காட்டிலும் சுளுவான முறையில், 'தேசபக்தர்' பட்டமும், 'வீரர்' பட்டமும், 'தியாகி' பட்டமும் கிடைக்கும் வழிகள் எத்தனையோ இருக்கும்போது, செங்குத்தான மலைமீது தலை கீழாக ஏறுவது போன்ற சாதி ஒழிப்பு வேலையை காங்கிரஸ்காரர்கள் ஏன் ஏற்றுக் கொள்வார்கள்? காங்கிரஸ்காரர் மட்டுமல்லர், பொருளாதார சமத்துவம் உண்டாக்க வேண்டும் என்று போராடும் கட்சிகள்கூட சாதி ஒழிப்பைப்பற்றிக் கனவுகூடக் காண்ப தில்லை; வெளியே கூறவும் நடுங்குகின்றன! மனிதனுக்கு மனிதன் பொருளாதாரத்தில் அடிமைப்பட்டிருந்தால் என்ன? அல்லது சாதியால் அடிமைப் பட்டிருந்தால் என்ன? என்ற உண்மை—இந்தப் பொருளாதார சமத்துவக் கிளர்ச்சிக்காரர்கள் சிந்தனையில் படுவதே யில்லை.

காங்கிரஸ்காரர்களோ, 'வெளி நாட்டானின் ஏகாதிபத்தியம் ஒழிந்தால், எல்லாம் பிறகு சரிப்பட்டுவிடும்' என்று கூறி வருகிறார்கள். இந்த நாட்டில் வெளி நாட்டான் எவனும் நுழைவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, இந்தச் சாதிக் கொள்கை இருந்து வருகிறதென்பதையும், இது ஒழிந்தவுடனேயே வெளி நாட்டான் தானாகவே ஓட ஆரம்பிப் பானே என்பதையும் இவர்கள் உணர்வதில்லை.

சாதியை ஒழிக்கும் வேலை சாமான்யமானதல்ல. ஐக்கிய மாகாண சர்க்காரின் உத்தரவு அற்ப அளவுக்குத்தான் பயன்படுமே தவிர, சாதியை அறவே ஒழிப்பதற்குப் பயன்படாது என்பது உறுதி.

எப்படியெனில், சாதியை ஒழிப்பதற்குப் பல அடிப்படையான முறைகள் இருக் கின்றன. சாதிப் பட்டங்கள் (அய்யர், முதலியார், பிள்ளை, அய்யங்கார், செட்டியார், நாயுடு, நாயக்கர், ரெட்டியார், நாடார் முதலியன) சட்ட பூர்வமாகத் தடுக்கப்பட வேண்டும்! புதிதாக மணம் புரிவோர் அத்தனை பேரும் கலப்பு மணம் செய்யுமாறு தூண்டக்கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். ஒரே வகுப்பில், ஒரே சாதிப் பிரிவில் திருமணம் செய்ப வர்களுக்குப் பல கஷ்டமான நிபந்தனைகளையும், கட்டுத் திட்டங்களையும் விதித்து, அத்தகைய திருமணம் புரிபவர்களுக்குச் சமுதாயத்தில் செல்வாக்கில்லாமல் செய்ய வேண்டும். சாதிகளைக் குறிக்கும் நெற்றிக் குறி, உடை, பூணூல் முதலிய சின்னங் களையும் சட்டபூர்வமாகத் தடுக்கவேண்டும். இவ்வாறு செய்தால்தான் சாதிகள் அடியோடு ஒழியும்.

இவை மட்டுமல்ல; சாதிக்கு அடிப்படையாயிருப்பது எது? 'இந்து' மதம். அதை ஆதரித்து நிற்பவைகள் எவை? வேதம், இதிகாசம், சாஸ்திரம், புராணம் முதலிய கட்டுக் கதைகள். இவைகளுக்கு அடிப்படையாக உள்ளவைகள் எவை? இந்து மதக் கடவுள்கள் என்று கூறப்படும் முழுக் கற்பனைகள்.

எனவே, இவ்வளவையும் ஆணிவேருடன் பிடுங்கி எறிந்தாலொழிய, சாதியை எப்படி ஒழிக்க முடியும்? இவ்வளவையும் காப்பாற்றுவதற்காகவுள்ள ஒரு சமுதாயமான பார்ப்பனர்களின்—வைதிகர்களின் மனப்பான்மையை மாற்றியாக வேண்டும்; அல்லது அவர்களைத் தனியாகப் பிரித்து நீக்கி வைக்கவேண்டும்! ஏன்?

சாதிகள் ஒழிவதனால் பாதிக்கப்படுபவர்கள் பார்ப்பனர்களேயாவர். 'சாதி உயர்வு' என்ற அடிப்படையிலேயே அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னணிக்கு வந்திருக் கிறார்கள். இல்லாவிட்டால், கால்நடைகளை ஓட்டிக்கொண்டு, கால்நடையாக வந்த இந்தக்

'கால்நடை'கள், இன்று இந்நாட்டுக் குடிமக்கள் எல்லாரையும்விட ஆயிரம் மடங்கு உயர்ந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன? அது மட்டுமா? இன்று பெரிய பெரிய புரட்சிக் காரன் முதல், மகா கனம் போன்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கைக்கூலி வரையில்—எல்லா இயக்கங்களிலும் பார்ப்பனர்கள் இருக்கிறார்களேயொழிய, சாதிகளை ஒழிப்பதென்பதைக் கொள்கையாகக் கொண்டு இடைவிடாத தொண்டாற்றக்கூடிய ஒரு பார்ப்பனராவது இன்று இந்த நாட்டில் இருப்பதாக யாராவது எடுத்துக் கூறமுடியுமா என்று அறைகூவிக் கேட்கிறோம்.

இந்துமதம் ஒழிந்தால்தான் சாதி ஒழியும்; இந்துமதம் ஒழிந்தால் பார்ப்பனீயமும் அதே நேரத்தில் அழிந்துபோகும். இதைப் பஞ்சமா பாதகம் செய்யும் பார்ப்பான்கூட விரும்பமாட்டான்!

'இங்கிலீஷ் அரசியலமைப்பு' என்ற நூலை எழுதிய புரொபசர் டிசே என்பவர் 'புரட்சி மனப்பான்மையுடையவன், போப் ஆகவேமாட்டான்; போப் ஆகும் மனிதன் புரட்சி செய்ய விரும்பமாட்டான்' என்று கூறியிருக்கிறார். அது போலவே, பார்ப்பனனாகப் பிறந்தவன் சாதிப் புரட்சிக்காரனாக ஆகவே மாட்டான். ஏனெனில், போப்புக்குள்ள அதிகாரம் அதிகம்; அவைகளைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமாக இந்நாட்டுப் பார்ப்பனர்களுக்கு இருக்கின்றது. இவர்கள், இதர சாதிகளைத் தூண்டிவிட்டு, 'பார்! கழுதையும் குதிரையும் ஒன்றாகுமா? அய்ந்து விரல்களும் சரியாகுமா?' என்று கூறிப் பிரித்து வைத்துக் கொண்டேதான் இருப்பார்கள். ஒரு கடைசிப் பிராமணன் இந்நாட்டி லிருக்கும் வரையில் (இங்கிலீஷ்காரரைப் பின்பற்றி) இந்தப் பிரித்தாளும் பித்தலாட்ட வேலையைச் செய்துகொண்டுதான் இருப்பான்!

சாதிப் பிரிவுகள் பகுத்தறிவுக்கு முரணானவை என்பதையும் பார்ப்பனர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில், பகுத்தறிவுக்கு இந்து சாஸ்திரங்கள் 144 உத்தரவு பிறப்பித்திருக்கின்றன.

'எந்தப் பிராமணன் தர்க்க சாஸ்திர பலத்தைக் கொண்டு வேதத்தின் உண்மையைப் பற்றிச் சந்தேகிக்கிறானோ, அப்பேர்ப்பட்ட வேத நிந்தகன் சாதுக்களால் நாத்திகன் என்று பகிஷ்கரிக்கப்படுகிறான்' என்று மகா பாரதம் கூறுகிறது. எனவே, பார்ப்பான் மட்டுமல்ல; எந்த 'இந்து'வுமே பகுத்தறிவுக்கு இடந்தரமாட்டான்; இடந்தர முடியாது. இடந்தந்தால் இந்துவாக இருக்கமுடியாது!

'யார் என்ன சொன்னாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாயுள்ள இந்துமதத்தை அசைக்க எவராலும் முடியாது. எத்தனையோ எதிர்ப்புக்களையும் கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு உயிரோடிருக்கிறது நமது இந்து மதம்' என்று சர். இராதா கிருஷ்ணன் (?) போன்ற மேதாவிகள் கூறலாம். உயிரோடிருப்பதனால் மட்டும் ஒரு விஷயம் உயர்வானதாகிவிடுமா? எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கிடையே எலி, கொசு, ஈ, தேள், பாம்பு, மூட்டைப்பூச்சிகள் கூடத்தான் உயிரோடிருக்கின்றன! மனித சமுதாயமே எதிர்த்துவரும் குடி, விபச்சாரம் கூடத்தான் உயிரோடிருக்கின்றன. இவைகளெல்லாம் இந்து மதத்தைவிடப் புனிதமானவைகளா? அதிகப் பலன் தரக்கூடியவைகளா என்று கேட்கிறோம்.

இறுதியாக ஒன்று கூறுவோம். சாதியை ஒழிக்க விரும்புவோர் மேடைப் பிரசங்கம் மட்டும் செய்தால் போதாது! கலப்பு மணத்தைத் தவிர—வேறு சுயசாதி மணம் செய்யவே கூடாது. புத்தரும், குரு நானக்கும் கூறியதுபோல் வேதமும் சாஸ்திரங்களும் முழுப்பொய் என்று பச்சையாகவே கூறவேண்டும்.

இவ்வளவைச் செய்யக்கூடிய ஆற்றலும், துணிவும், தியாக உணர்ச்சியும் படைத்த இளைஞர்களால்தான் சாதியை ஒழிக்கமுடியும்! இந்த வேலையைச் செய்பவைகள்தாம் திராவிடர் கழகமும், சுயமரியாதை இயக்கமும்.

['விடுதலை'-தலையங்கம்—10-1-1947]

தாய்மார்களே! தோழர்களே!

வருணாசிரமம் ஒழியவேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென்றால், இந்து மதத்தை ஒழித்தால்தான் வருணாசிரமம் ஒழியும். வருணாசிரம தர்மத்தை ஒத்துக் கொள்ளாதவன்—அதாவது, சாதிமுறையை ஒத்துக்கொள்ளாதவன் இந்துவாக இருக்க முடியாது. அதாவது, இந்துவாக இருக்கிற ஒவ்வொருவனும் சாதி முறையை ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாக இந்துச் சட்டத்தைப் புதுப்பித்த டாக்டர் முல்லா எழுதியிருக்கிறாரென டாக்டர் அம்பேத்கார் டெல்லி சட்டசபையில் கூறினார்.

ஆகவே, சாதிகள் ஒழியவேண்டுமென்றால், இந்துமதம் அழிக்கப்பட வேண்டும். இந்துமதத்திற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் இருக்கிற கடவுள்களையும், சாஸ்திர புராணங்களையும் ஒழித்துக்கட்டவேண்டும். அடிப்படியில்லாமல், வருணாசிரமம் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, சாதிகளும் ஒழிய வேண்டுமென்று யாராவது சொன்னால்—ஒன்று, அவர்கள் பித்தலாட்டக்காரர்களாக இருக்கவேண்டும்; அல்லது, முட்டாள்களாக இருக்கவேண்டும்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

8. இந்துமதம் ஒழிக!

கேள்வி: சாதியை ஒழிக்க நீங்கள் என்ன வழி சொல்லுகிறீர்கள்?

பதில்: பொதுவாக, இரண்டு வழிகள் உண்டென்று சொல்லலாம். ஒன்று, சட்ட வரம்புக்குட்பட்ட முறையில் போராடுவது; மற்றொன்று, சட்டத்தைப்பற்றி இலட்சியம் செய்யாது சட்டத்தை மீறிக் கிளர்ச்சி செய்வது.

இவற்றில் நீங்கள் எந்த வழியைப் பின்பற்றத் தயாராக இருக்கிறீர்கள் என்பதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், என்னுடைய இயக்கத்தைப் பொறுத்தவரை நாங்கள் சட்ட வரம்புக்கு மீறிய வகையில் பல கிளர்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். நீங்கள் நம்முடைய கீழ்சாதித் தன்மை நீங்கவேண்டுமானால் அவசியம் பின்வரும் முறைகளை யாவது பின்பற்றவேண்டும்.

1. எந்த இந்துக் கோயிலுக்கும் நீங்கள்—பிற்படுத்தப்பட்ட, கீழ்சாதி மக்கள் யாரும் போகக்கூடாது.

2. இந்துமதக் கடவுள்களைக் கும்பிடக்கூடாது.

3. இந்துமதப் பண்டிகைகளைக் கொண்டாடக் கூடாது.

4. நெற்றியில் எந்தவிதமான குறிகளையும் சின்னங்களையும் அணியக்கூடாது.

5. உச்சிக் குடுமியை—'சோட்டி'—யாரும் வைத்துக்கொள்ளக்கூடாது.

6. வைதீகச் சடங்குகள் எதையும் செய்யக்கூடாது.

7. எந்தவிதமான சடங்குகள், நிகழ்ச்சிகள் ஆகியவைகளுக்கும் பார்ப்பானை அழைக்கவே கூடாது.

8. இந்துக் கடவுள்களின் படங்களை உங்கள் வீட்டில் எங்கும் மாட்டக்கூடாது.

9. பார்ப்பனர்களால் நடத்தப்படும் உணவுச்சாலை, சிற்றுண்டிச் சாலைகளுக்குப் போகக்கூடாது.

கேள்வி: இந்துமதத்தை மதிக்கக் கூடாது என்று குறிப்பிட்டீர்களே; அது சரி; ஆனால், கலியாணம் முதலிய சடங்குகளுக்கு எப்படிப் பார்ப்பானை அழைக்காமலிருப்பது? உங்கள் பக்கத்தில் எவ்வாறு நடத்துகிறீர்கள்?

பதில்: எங்கள் பக்கத்தில நாங்கள் எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும், சடங்குகளுக்கும் பார்ப்பானை அழைப்பதேயில்லை. திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் என்னை அழைப்பார்கள்; அல்லது எங்கள் கட்சித் தோழர்களை அழைப்பார்கள்; அல்லது அந்தந்த வகுப்புப் பெரியவர்களை அழைப்பார்கள்; அவர் தலைமை தாங்கி மணமக்களின் சம்மதம் கொண்ட உறுதிமொழியைப் படிப்பார்கள்; மாலை மாற்றிக் கொள்ளுவார்கள். சில இடங்களில் தாலியும் அணிவிப்பதுண்டு. அதுபோல நீங்களும் செய்யலாம்; அல்லது உங்கள் குடும்பங்களிலுள்ள வயதான பெரியவர்களை வைத்து நடத்தலாமே!

கேள்வி: 'ரிபப்ளிகன் கட்சி'யாகிய எங்கள் கட்சியோடு சேர்ந்து வேலை செய்வீர்களா? எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?

பதில்: எந்த வகையான உதவியை நீங்கள் சாதியொழிப்பிற்காக வேண்டுகிறீர்களோ, எங்கள் மாகாணத்திலுள்ள எங்களால் முடிந்த அளவு செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால், உங்கள் கட்சித் தலைவர்கள் எனப்படுபவர்களுக்கு, சட்டசபையையும், பார்லிமெண்ட்டையும் கைப்பற்றுவது எப்படி என்பதுதான் குறிக்கோள். ஆகவே, அதற்கெதிராக இருக்கின்ற எங்களை அவர்கள் விரும்புவதில்லை.

கேள்வி: நாம் இப்படிப் பார்ப்பானையும், இந்துமதத்தையும் புறக்கணிக்கும்படியான பிரச்சாரம் செய்தால் வெற்றிகாண முடியும் என்று நம்புகிறீர்களா!

பதில்: ஆகா! தாராளமாக எனக்கு அதில் நம்பிக்கையுண்டு; 10 வருடகாலத்திற்குள் கட்டுப்பாடான இடைவிடாத பிரச்சாரத்தின் மூலம் நாம் அந்த நிலையை அடைவோம் என்ற நம்பிக்கை உண்டு; அந்த உணர்ச்சியை மக்களிடையே அடைய முடியும்.

கேள்வி: சாதியையொழிக்க வேண்டுமென்றால் அரசாங்கத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களே, இது அரசியல் பிரச்சினையாகாதா? அரசியல் கட்சியாக இருந்தால்தானே இந்த அரசியல் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்?

பதில்: நல்ல கேள்வி. முதலாவது, அரசியலில் ஒருவன் நுழைகிறான் என்றாலே அவன் எப்படிப்பட்ட யோக்கியனாக இருந்தாலும், உடனே அவனது நாணயம், ஒழுக்கம் கெட்டுப்போய் விடுகின்றன; அவன் புரட்டு, பித்தலாட்டம் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்படுகிறான். அது நானாக இருந்தாலும், பாபாசாகிப் அம்பேத்காராக இருந்தாலும் சரி; அப்படித்தான் ஆகிவிடுவோம்; அது அப்படி ஆக்கிவிடும்.

இரண்டாவது, இன்றைய அரசியல்—சட்டப்படி நடைபெறும் ஒன்று; அரசியல் சட்டத்தில் மாற்றமுடியாத வகையில் சாதிக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; யார் போனாலும் சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்படி நடக்க வேண்டியவர்களே தவிர, அதை எதிர்த்து ஒன்றும் செய்யமுடியாது. சிலர் சொல்லுவார்கள், 'ஒன்றும் செய்ய முடியாவிட்டாலுங்கூட அங்கு போனால் இதை எடுத்துச் சொல்லலாம்' என்று. அதற்கு அங்கு போகவேண்டும், என்பது அவசியமில்லையே! பொதுக் கூட்டம் போட்டு எடுத்துச் சொன்னாலே அது அரசாங்கத்திற்குச் செல்லுகிறது!

கேள்வி: நாம் அரசாங்கத்தைக் கைப்பற்றலாமே, கைப்பற்ற முடியாதா?

பதில்: அது முதுகில் மூன்றாவது கை முளைத்து அதனால் சொரிந்து கொள்ளலாம் என்பது.

கேள்வி: நாமும் எலெக்ஷனுக்கு நிற்கலாமே; வயதுவந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே!

பதில்: எலெக்ஷனில் நின்று ஜெயித்து மெஜாரிட்டியாகி அரசாங்கத்தைப் பிடிப்பது என்பது நம்மால் ஆகாத காரியம். ஏனென்றால், பெரும்பாலான ஓட்டர்கள் முட்டாள்கள்;

எதற்காக ஓட்டுப்போடுவது என்பது தெரியாதவர்கள்; பெரும்பாலான அபேட்சகர்கள் பணம் செலவு செய்யாமல் எலெக்‌ஷனில் நின்று ஜெயிக்க முடியாது. ஒரு இடத்திற்கு நின்று போட்டி போட்டு ஜெயிக்க வேண்டுமென்றால் 10,000, 20,000, 30,000 ரூபாய்–சில சமயத்தில் இலட்ச ரூபாய்கூட செலவு செய்யவேண்டும். நீங்களோ ஒற்றைக் காசும் கையிலில்லாத (Penniless People) மக்கள்; எப்படிச் செலவு செய்ய முடியும்? பார்லிமெண்ட்டுக்குப் போகவேண்டும்; மெஜாரிட்டி அடைய வேண்டுமென்றால் தலைக்கு 300 (500-ல்) தேவை. அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும்? இந்த வசதி இன்றைக்குக் காங்கிரஸ் கட்சிக்குத்தான் இருக்கிறது. பெரிய முதலாளிகள், டாடா, பிர்லா, டால்மியா, முந்திரா போன்றவர்களிடம் சென்று கோடி கோடியாகப் பணம் வசூலித்து, பணத்தைத் தண்ணீர் பட்டபாடாகச் செலவு செய்து வெற்றியடைகிறார்கள்.

அவர்களும் கேட்டவுடன் சர்க்கார் (ஆளுகிற) கட்சியாக இருப்பதை அனுசரித்துத் தங்களது சுயநலத்தையெண்ணி வாரிவாரிக் கொடுக்கிறார்கள்; அதுபோல் நம்மாலாகுமா?

அப்படியே மீறி, காங்கிரசைத் தோற்கடித்து—கேரளத்தில் (மலையாளிகள் ராஜ்யம்) கம்யூனிஸ்ட்காரர்கள் ஆளுகிறார்கள் என்றால் அது பெயரளவிற்குத்தானே கம்யூனிஸ்ட் ஆட்சி? மீதியெல்லாம் டெல்லி அரசாங்கம் உத்தரவிடுவதுபடிதானே நடக்கிறது? ஒரு உதாரணம்—அந்தக் கேரள முதன்மந்திரி ஒரு கலப்பு மணச் சங்கத்தில் பேசும்போது சொன்னார்: 'நான் எனது ஆட்சியில் சாதியை ஒழிக்கப் பாடுபடுவேன். தீவிரமாகப் பாடுபட்டுச் சாதியை ஒழிக்க வேண்டும்' என்பதாக. உடனே, 'இந்து' பத்திரிகையில் ஒரு பார்ப்பனர், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியில் எழுதினார்: 'அரசியல் சட்டத்தில் சாதி பாதுகாக்கப்பட்டிருக்கிறது; அது மூலாதார உரிமை; அதையொழிக்க இந்த அரசாங்கத்தால் முடியாது; தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் நம்பூதிரிபாத் பேசலாமேயொழிய—ஆட்சியையோ, அதிகாரத்தையோ இதற்குப் பயன்படுத்த உங்களால் முடியாது' என்று எழுதினார். அதற்கு நம்பூதிரிபாத் பதில் சொல்லவே இல்லையே!

கேள்வி: அதுபோல பல மாகாணங்களிலும் எதிர்த்து நாம் அரசாங்கம் அமைக்க முடியாதா?

பதில்: நான் ஒன்று உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். சென்ற 1952 ஆம் வருட எலெக்‌ஷனில் எங்கள் நாட்டில் நான் முயற்சி செய்து காங்கிரசைத் தோற்கடித்தேன்; காங்கிரஸ் மைனாரிட்டியாக ஆயிற்று. காங்கிரஸ் அல்லாதவர்கள் (மொத்தம் 500 பேரில்) சுமார் 300 பேர் இருந்தும் அவர்களால் அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியவில்லையே!

திரு. இராசகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக வந்தார்—நாமினேஷன் மூலம். அப்போது அவருக்கு 200 மெம்பர்கள்தாம் இருந்தார்கள். வந்தவுடன் எதிரிகளில் சிலரை விலைக்கு வாங்கித் தன் ஆட்சியை மெஜாரிட்டியாக ஆக்கிக்கொண்டார். எப்படிப் பலரை எதிர்க் கட்சியிலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டார்? தனக்கு நிலைமை வசதியானதும் தன்னிஷ்டப்படி, மனுதர்ம முறைப்படி காரியம் செய்ய ஆரம்பித்துப் பதவிகளையும் உத்தியோகங்களையும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தது மட்டுமின்றி, 'அவனவன், சாதித் தொழிலைத்தான் செய்யவேண்டும்' என்ற ஒரு வருணாசிரம தர்ம கல்வித் திட்டத்தையும் புகுத்தினார். நான் 30 நாள் தவணை கொடுத்து, 'நீங்கள் அதை ஒழிக்காவிட்டால் பலாத்காரத்தில் இறங்குவோம்' என்று தெரிவித்த பிறகுதான், அவர் பதவியை விட்டுப்போனார். சட்டசபையால் அவரையொன்றும் அசைக்க முடியவில்லை. பிறகு காமராசர் அந்த இடத்திற்கு வந்து சாதிக் கல்வித்திட்டத்தை ஒழித்தார். அதனால்தான் அவர் காங்கிரசுக்காரராக இருந்தபோதிலும் அவரை ஆதரிக்கிறோம்.

கேள்வி: எப்படியும் நாமிந்த அரசாங்கத்தைக் கைப்பற்றித்தானே ஆகவேண்டும்?

பதில்: அதற்காகத்தான் நாங்கள் சொல்லுகிறோம்: 'சாதியையொழிக்க விரும்பாத—சாதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் உனது அரசாங்கத்தோடு இருக்க விரும்ப

வில்லை. தனியே பிரிந்து செல்லுகிறோம். எங்கள் நாட்டிற்குச் சுதந்திரம் வந்தால் நாங்கள் சாதியை உடனே ஒழித்துவிட முடியும். உனது ஆட்சி அதற்கு இடம் கொடுக்காததால் விலகிவிடுகிறோம்' என்று. அதற்காகத்தான், 'சுதந்திரத் தமிழ் நாடு' கிளர்ச்சி இருக்கிறது. அது ஒரு நாட்டைக் கொளுத்தும் பிரச்சினையல்ல; நமக்கு வேண்டாத ஆட்சியை வெறுக்கிறோம் என்றுதான் அர்த்தம். அதுபோல நீங்களும், உங்களுடைய ஆட்சி வேண்டாம் என்று பிரிந்து சென்றுவிடலாமே! நீங்களும் இந்தக் கொடுமையான— பார்ப்பன சாதி நாயகமான அரசாங்கத்தினின்றும் பிரிந்துவிடலாம். அதற்குத்தான் பட எரிப்புப் போராட்டம் நடத்தப்போகிறோம்.

கேள்வி: ஏன், இந்தியா பூராவும் அப்படி உணர்ச்சியை உண்டாக்கமுடியாதா?

பதில்: அதெப்படி? தமிழ் நாட்டில் அந்த உணர்ச்சி பலமாக இருக்கிறது. இந்தியா பூராவும் பரவவேண்டுமானால், அது ரொம்பவும் கஷ்டமான ஒன்றாகும். மேலும் சர்க்காரும் நம்மைப் பலமாக அடக்குகிறார்கள். நான் போனமாதம் பெங்களூரில் ஒரு மாநாட்டிற்கு–இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது, இதைத்தான் நான் அங்கு சொன்னேன். 'நீங்கள் இந்த ஆட்சியிலிருந்தே விலகிக்கொள்ளுவதைத் தவிர, வேறு வழியில்லை' என்பதாகக் குறிப்பிட்டேன். அங்கு கூடியிருந்த பாதிப்பேர் அதைக் கைதட்டி வரவேற்றார்கள்; பாதிப்பேர் அந்த உணர்ச்சியைப் பெறவில்லை.

கேள்வி: நீங்கள் கேட்கும் சுதந்திரத் தமிழ் நாட்டில் சிலோனையும் சேர்த்தா கேட்கிறீர்கள்?

பதில்: இல்லை; நான் அப்படிச் சொல்லவில்லை; சுதந்திரத் தமிழ்நாடு இலட்சியத்திற்குப் பாடுபடும் 'நாம் தமிழர்' இயக்கத்தார் ஆரம்பத்தில் அப்படிச் சொன்னார்கள்; நான் அவர்களிடமே அதை எதிர்த்துச் சொன்னேன்—'அது வேறு ஒரு சர்க்கார்; அதுபற்றி நமக்குக் கவலையில்லை' என்பதாக. அதுதான் எங்களுக்கும், அவர்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகளில் ஒன்றாகும்.

கேள்வி: நீங்கள் புத்த மார்க்கத்தில் சேரச் சொல்லுகிறீர்களோ?

பதில்: ஆம்; நேற்றே பொதுக்கூட்டத்தில் சொன்னேன். இன்னொரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் அம்பேத்கார் அவர்களைச் சந்தித்தபோது அவர் என்னிடத்தில் ஒரு பாரத்தை நீட்டி—'போடு கையெழுத்தை; நாமிருவரும் புத்த நெறியில் சேருவோம்' என்றார். அதற்கு நான் சொன்னேன், 'நீங்கள் சேருங்கள்; நான் மாறாமல் இருந்து—'இந்து' என்பவனாகவே இருந்தால், இந்துமத வண்டவாளங்களை எடுத்துப் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும்' என்றேன். மேலும், 'இப்போது செய்கிற வேலையைத் தொடர்ந்து செய்ய வசதியாக இருக்கும்; நான் புத்த மார்க்கத்தில் சேர்ந்துவிட்டால்— இப்போது கடவுள்கள், உருவச் சிலைகள் முதலியவற்றை உடைத்துக் கிளர்ச்சி செய்தது போல் செய்யமுடியாததாகிவிடும்' என்றேன்.

கேள்வி: ஒரு மனிதனுக்கு மதம் தேவையில்லையா?

பதில்: புத்த மார்க்கம் ஒரு 'கொள்கை'யே தவிர, அது ஒரு மதம் கிடையாது.

கேள்வி: புத்த மதம் அகிம்சையைப் பற்றிக் குறிப்பிடுகிறதே, அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: அது புத்திக்கு முக்கியம் தந்த ஒரு மார்க்கம்; அவ்வளவுதான். அகிம்சை என்பது புத்த மார்க்கத்தின் கொள்கையல்ல (Principles); அது புத்தருடைய அபிப்பிராயமாய் இருக்கலாம் என்பதுதான் என் கருத்து. ஆகவே, நாம் புத்திக்கேற்ப நடக்கலாம்; அதுதான் புத்த மார்க்கம் என்பது.

கேள்வி: நீங்கள் ஏன் கறுப்பு உடை அணிகிறீர்கள்?

பதில்: நாம், இப்போது இழிசாதி மக்களாகவும், சூத்திரர்களாகவும், தாழ்த்தப் பட்டிருக்கிறோம் என்ற இழிவை உணர்த்துவதற்காகக் கறுப்பு உடை அணிகிறோம். எங்கள் கொடியின் நடுவில் 'வட்டச் சிவப்பு' இருப்பது—அந்த இழிவிலிருந்து நாம் நாளாவட்டத் தில் மீண்டுவருகிறோம் என்பதைக் காட்டுகிறது.

[கான்பூர் ரிபப்ளிகன் கட்சி ஊழியர்களிடையே 9-2-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-2-1959]

4. சாதி விகிதப் பங்கு

இந்த நாட்டில் இன்று இரண்டே சாதிகள்தாம் சாஸ்திரத்தில்—சட்டத்தில் இருந்து வருகின்றன. அவை. (1) 'பிராமண சாதி', (2) 'சூத்திர சாதி'. அதாவது, மேல்சாதி, கீழ்சாதி.

மற்றும் நாட்டு மக்களிடையில் சாதிகள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் அந்த இரு சாதிகளின்—அதாவது, 'பிராமண சாதி,' 'சூத்திர சாதி' என்பதன் உட்பிரிவுகள் தாமே அல்லாமல், தனிப் 'பிறவி சாதிகள்' அல்ல. உதாரணமாக, 'பிராமணரில்' அய்யர்; அய்யங்கார்; ராவ்; ஆச்சாரி; சாஸ்திரி என்பவர்கள் எல்லாம் பிராமணன் என்ற ஒரே சாதியைச் சேர்ந்தவர்களே ஆவார்கள். இவர்களுக்கு 'இந்து' சாஸ்திரங்களிலும் 'இந்து' சட்டங்களிலும் ஒரே அந்தஸ்துதானே யொழிய தனித்தனி உயர்வு தாழ்வு அந்தஸ்து கிடையாது.

அதுபோலவே, 'சூத்திரர்'களிலும் வேளாளன், நாயக்கன், படையாட்சி, செட்டி, ஆசாரி, நாடான், வண்ணான், நாவிதன், குயவன், செம்படவன், பள்ளன், பறையன், சக்கிலி என்று சொல்லப்படும் பிரிவுகளும், மற்றும் முதலியார், பிள்ளை, கவுண்டர், தேவர், கள்ளர், மறவர், உடையார், அகமுடையர், தேவாங்கர், செங்குந்தர் முதலிய பிரிவுகளும், பட்டங்களும், எல்லாம்—சூத்திர சாதியின் உட்பிரிவுகளே தவிர, 'பிறவி சாதி'களில் சேர்ந்தவைகள் அல்ல.

மற்றும், ஒரு பிரிவினுள் பல உட்பிரிவுகளும் உண்டு. இவை பெரிதும் உழைப்பு, தொழில் ஆகியவற்றில் ஈடுபட்ட கோஷ்டிகள் பற்றி ஏற்பட்ட பிரிவுகளே அல்லாமல் புழங்கு வதற்கு, கொள்வினை, கொடுப்பினை செய்வதற்கு—சட்டத்தால் சாத்திரங்களால் தடையும், தனித்தனி நீதி நியமம் ஆசார அனுஷ்டானமும் ஏற்படுத்தப்பட்ட சாதிகள் அல்ல.

எனவே, இன்று ஒழிக்கப்படவேண்டிய சாதிகள்—மேற்கண்ட 'பிராமணன்', 'சூத்திரன்' எனப்பட்ட சாதிகளேயாகும். அதாவது, இந்த இரு சாதிகளுக்கும் இருந்து வரும் சமூகக் குறைபாடுகளும், வாழ்க்கை நலத் தடைகளுமேயாகும்.

சமூகக் குறைபாடு என்பது இன்று காணப்படும் தன்மைகளில் சில. அதாவது, மிகமிகச் சாதாரணத் தன்மையான—'கடவுள்' என்ற பெயரால் நட்டுவைக்கப்பட்டிருக்கும் ஒரு கல் அறைக்குள் பிராமணன்தான் போகலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லுக்குப் பூசை செய்யலாம்; பிராமணன்தான் அந்தக் கல் 'சாப்பிட' சோறு சமைக்கலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லைக் குளிப்பாட்டலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லைத் தொடலாம்' என்பன போன்ற நிர்ப்பந்தங்களைச் சாஸ்திரங்களின் பேரால், ஆகமங்களின் பேரால் ஏற்படுத்திக்கொண்டு, அதைக் காப்பாற்ற கிரிமினல் முதலிய சட்டங்களில் பாது காப்பு ஏற்படுத்திக்கொண்டிருப்பதும், இவை போன்ற வேறு வசதிகள் பிராமண சாதிப் பெருமைக்கும் நன்மைக்கும் சுக வாழ்வுக்கும் ஏற்றபடி அமைத்துக் கொண்டிருப்பவை களுமாகும்.

இந்த அமைப்புக்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பது மாகும்.

இவற்றின் பயனாய், வாழ்க்கையில் 'பிராமணன்' எல்லாத் துறைகளிலும் மேன்மையும் சுகமும் அனுபவிப்பதோடு, உடலுழைப்பும் இல்லாமல் ஊரார் உழைப்பில் சுக வாழ்வு, உயர்வாழ்வு வாழ நல்வாய்ப்பு இருப்பதும் ஆகும். மற்றும், இந்த நிலை காப்பாற்றப் படுவதற்காகவே பொதுக் கல்வி என்ற துறையில் 'பிராமணன்' 100-க்கு 100 பேரும் கல்வி உடையவனாய் இருப்பதும், 'சூத்திரன்' 100-க்கு பத்து பேர் கூட அதுபோன்ற கல்வி அறிவில்லாத மக்களாக இருப்பதும்; பொதுச் சேவை என்னும் 'நம் சர்க்கார்' பதவிகளில் 'இழி தொழில்', 'இழி நிலை' சேவகன், காவல்காரன் அதாவது 'அடா' என்று கூப்பிடத் தக்க இழி நிலையில் 100-க்கு 100 பேரும் இருந்துவரவும்; 'உத்தியோகம்', 'பதவி', 'உயர் பதவி' என்பவைகளில்—தலைமையில் 100-க்கு 100 பிராமணரும், மற்றும் மாதம் ரூ. 1000 முதல் ரூ. 5000 வரையும் அதற்கு மேலும் சம்பளம் வாங்கும் பதவிகளில் 'பிராமணர்'—அதாவது மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 3 பேர்களே உள்ள சாதியைச் சேர்ந்தவர்கள் ஏகபோகமாய் 100-க்கு 75-க்கு மேற்பட்ட பதவிகளில் இருந்து வரவும், மற்ற இடை நிலைப் பதவிகளிலும் 'பிராமணர்' 100-க்கு 50-க்கு மேல் அனுபவித்து வரவுமான தன்மை ஏற்படுத்திக் கொண்டு, 100-க்கு 97 விகிதம் உள்ள 'சூத்திரர்'கள் இத் துறைகளில் தலையெடுக்க விடாமல் அழுத்திவரப்படுகிறது. இந்தப்படியான சமூகக் குறையையும் வாழ்க்கை முறையையும் சரி நிலை, சரி பங்கு அடைய முடியாத தடைகளையும் ஒழிப்பதன் மூலமே சாதிக் கேட்டை ஒரு பெரும் அளவு ஒழிக்க முடியும்.

இதற்கு அரசாங்க அரசியல் கிளர்ச்சி என்பதன் மூலம் செய்யப்படவேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா என்றால் ஒரே ஒரு காரியந்தான் உண்டு. அதாவது,

1. இரண்டு சாதி மக்களுக்கும் சரிசமத்துவ விகிதத்தில் எல்லாப் படிப்பும் கிடைக்கும் படிச் செய்தல்;

2. இரண்டு சாதி மக்களுக்கும் உத்தியோகம், பதவி, ஆட்சித் தலைமை ஆகியவை களில் ஜனத்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதப்படி, சாதிவாரி உரிமையளித்து அந்தப்படி அந்தந்தச் சாதியை அமர்த்துதல்.

இந்த இரண்டு காரியமும் செய்வதற்கு மக்கள் சட்டசபைக்கோ, பார்லிமெண்டுக்கோ போவதால் சாதிக்கக்கூடியதாகி விடாது. இதற்காக அங்கு போய்ச் செய்யவேண்டிய காரியம் இன்று சாத்தியமானதல்ல. சட்டசபையும், பார்லிமெண்டும் இந்தக் காரியம் செய்யமுடியாத நிபந்தனைக்கு, கட்டுப்பாட்டுக்கு அடிமைப்பட்ட இடங்களாகும்.

ஆனால், ஆட்சியை இந்த இரண்டு காரியங்களையும் செய்யக்கூடாது என்று அரசியல் சட்டம் தடுப்பதில்லை; செய் என்று நிர்ப்பந்தப்படுத்தக் கூடாதபடிதான் அவைகள் அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எதுபோல் என்றால், ஒரு பார்ப்பானை அவனது சாதி அந்தஸ்தைக் காட்டும் உச்சிக் குடுமியையும், பூணூலையும் எடுக்கும்படி சொல்ல நமக்கு அதிகாரம் இல்லை; ஆனால், அவன் தானாக உச்சிக் குடுமியைக் கத்தரித்துக் கொள்வதையும் பூணூலை அறுத்து எறிந்துவிடுவதையும் செய்வதில் அவனுக்கு ஒரு தடையும் இல்லை. இதற்கு நாம் என்ன செய்யமுடியும்? நாம் உச்சிக் குடுமியும், பூணூலும் போட்டுக்கொண்டால் அவைகளுக்கு மரியாதை கிடைத்துவிடுகிறது. ஆகவே, நாம் செய்யக்கூடியதெல்லாம் அவைகளுக்கு மதிப்பில்லாமல், அவைகளைக் கண்டால் மக்கள் வெறுக்கும்படி செய்தால்—அவைகளை, அவர்களே—பார்ப்பனர்களே எடுத்துவிடுவார்கள்; அல்லது மறைத்துக்கொள்ளுவார்கள். அதுபோல் சட்டசபை, பார்லிமெண்டுப் பதவி களைப் பகிஷ்காரம் செய்து பதவிகளுக்கு மதிப்பில்லாமலும், போகிறவர்களை மக்கள் பரிகசிக்கும்படியும் வெறுக்கும்படியும் செய்வோமானால் அப் பதவியில் ஆதிக்கத்தோடு இருப்பவர்கள் அப் பதவிக்கு மரியாதை சம்பாதிப்பதற்கு ஆசைப்படுவார்கள். மற்றும், எதனால் மக்கள் பரிகசிக்கிறார்களென்பதை எளிதிலுணர்ந்து தங்களுக்கு வசதிப்பட்ட அளவிற்கு மக்கள் குறையை நீக்கித் தேவையை நிறைவேற்ற முயற்சிப்பார்கள்; இதுதான் இயற்கை நியதி ஆகும்.

மற்றும், இன்று நம் மக்கள்—தமிழர்கள் என்பவர்களுக்கும் இந்தச் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதும்; அதற்காக முதலாவதும் முக்கியமானதுமான காரியங்களாக எல்லோருக்கும்—இரு சாதிகளுக்கும் சமஅளவு, சமவிகிதம், சமஅந்தஸ்து, சமதரம் உள்ள கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பேன். இதற்கு, 100-க்கு 3 பேர் உள்ள—எண்ணிக்கையில் சிறு சாதியான பார்ப்பான்தான் எதிர்ப்பும் தொல்லையும் கொடுப்பானேயொழிய, மற்ற சாதியான் எதிர்க்கவோ, தொல்லை கொடுக்கவோ கண்டிப்பாக வெளி வரமாட்டான்.

அதுபோலவே, எல்லாச் சாதியானுக்கும் சர்க்கார் உத்தியோகம், பதவி, ஆதிக்கம் ஆகியவைகளில் எண்ணிக்கை விகிதம் முன்பின் பாராமல் கிடைக்க முயற்சிக்க வேண்டும். இதையும் பார்ப்பானைத் தவிர வேறு எவனும் தடுக்க வரமாட்டான். இதற்கு—இக் காரியங்கள் செய்யப்படுவதற்குக் கிளர்ச்சிதான் வேண்டுமே தவிர சட்டசபை, பார்லிமெண்டு தேவை இல்லை.

உண்மையான பொதுத் தொண்டு ஆர்வமுள்ள மனிதன் தனது முயற்சி, உழைப்பு, செல்வம், 'தியாகம்', ஆகியவைகளை இதற்காகச் செலவழிப்பதுதான் நாணயமும் ஒழுக்கமும் யோக்கியமும் ஆன காரியமாகுமே தவிர, மற்ற எந்தக் காரியத்திற்குச் செலவழிப்பதும் மேற்காட்டிய குணங்களுக்கு எதிர்மறைக் குணங்களேயாகும்.

'இந்தக் காரியங்களில் சாதி ஒழிந்து விடுமோ?' என்று, தங்களை 'அறிவாளிகள்' என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் கேட்கலாம். அப்படிப்பட்டவர்களை நான் கேட்பதாவது: 'தம்பீ! நீ சாதி ஒழிக்கப்பட வேண்டியது முக்கியமும் முதலாவதுமான காரியம் என்று நினைக்கிறாயா?' என்பது தான்.

'ஆம் நினைக்கிறேன்' என்றால், 'அதற்காக இதுவரை நீ செய்தது என்ன? அதற்கு ருஜு என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?' என்பதே எனது தாழ்மையான அடுத்த கேள்வியாகும்.

'அதற்காக நான் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, பாடுபட்டு சட்டசபைக்குப் போனேன்; பார்லிமெண்டுக்குப் போனேன்' என்று சொல்லக்கூடும்.

'சரி, நீ போனாய்; அங்குபோய் சாதியை ஒழிக்க நீ என்ன செய்தாய்? கேள்வி கேட்டாயா? மசோதா கொண்டு போனாயா?'

'கேள்வி கேட்டேன்; மசோதா கொண்டுபோகவில்லை' என்று நீ சொல்லக்கூடும். என்றாலும், இரண்டும் உன்னால் ஆகக்கூடிய காரியமல்ல. ஏனென்றால், சட்ட சபையில் சாதிப் பேச்சுக்கே இடமில்லை; ஆதலால் அங்கு கேட்டிருக்க முடியாது; கேட்டாலும் பயன் இல்லை.

பார்லிமெண்டில் மசோதா கொண்டு போயிருக்கலாம். அங்கு காங்கிரஸ் தவிர பல கட்சிகள் உண்டு. அதற்கு வேண்டிய தகுதி, திறமை, வசதி, வாய்ப்பு உனக்கில்லாவிட்டாலும் உள்ளவர்கள் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்குக் கிடைத்த பயன் (பதில்) என்ன தெரியுமா உனக்கு? அதுதான்,

'சட்டத்தால் சாதியை ஒழிக்க முடியாது' என்பதுதான். அத்தோடு தீர்ந்துவிட்டது அந்தப் பேச்சு.

['விடுதலை'—13-12-1960]

நாட்டில் சாதிப் பிரிவு நாளுக்கு நாள் வளர்ந்து ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, நிர்வாகக்கேடு, ஆட்சிக்கேடுகள் ஏற்பட்டுப் பெருகிவருகின்றன. இதற்குக் கடுமையான சட்ட மூலமான பரிகாரம் தேடாதவரை வெளிப்படையான அராஜகமும், உயிர்ச் சேதங்களும் பண்டிகைகளாகவும், உற்சவங்களாகவும் காட்சி அளிக்கப்போவது உறுதி! உறுதி! உறுதியேயாகும்!

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நாட்டில் நடைபெறும் நிர்வாகமுறையும், காலித்தனங்களும், சாதி ஆதிக்க இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு நடந்து வருவதாலேயும், அனுமதிக்கப்பட்டு வருவதாலேயுமாகும். இதன் வளர்ச்சி, ஆயுதப் பிரயோக வெறியாட்டமாகத்தான் முடியவேண்டியதாகும். இதற்கு என்ன ஆதாரம், எடுத்துக்காட்டு என்று சிலர் கேட்கக்கூடும்.

அப்படிக் கேட்பவர்கட்கு இன்று இந்திய பல தலைமை நாடுகளில் நடந்த, நடை பெற்றுவருகிற கொலை, கொள்ளை, நாசவேலைகள் முதலியவைகளே போதிய சான்றாகும். இவையெல்லாம் சாதி உணர்ச்சிக்கு, சாதி ஆதிக்க உணர்ச்சிக்கு 'மைக்ராஸ்கோப்' வைத்துப் பார்க்க வேண்டிய அளவுக்குச் சிறிய எண்ணிக்கையுடைய சாதியார்—உள் ஆளாய் இருந்து உசுப்படுத்தி வருவது என்பது அல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

'இக் காலித்தன நாசவேலைகளுக்குக் காரணம் பார்ப்பனத் தலைவர், (பார்ப்பனப்) பத்திரிகைகள், பணக்காரர்கள்' என்று ஆட்சியாளர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லப்பட்டும், காலித்தன நாசவேலைகளால் பல உயிர்களும், பல பத்து இலட்சக் கணக்கான ரூபாய்கள் பெறுமான சொத்துக்கள், கட்டடங்கள், காரியாலயங்கள், வண்டி வாகனங்கள் கொளுத்தப்பட்டும், நாசமாக்கப்பட்டும் கொள்ளை அடிக்கப்பட்டும் இன்று வரை ஒரு பார்ப்பான், ஒரு பணக்காரன், ஒரு பத்திரிகைக்காரன் மீதுகூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், இத்தொழில்கள் நாடுமுற்றும் பரவுவதற்கும், இதற்கு அடுத்த படிக்கு (ஸ்டேஜுக்கு)ச் செல்வதற்கும் என்ன தடை இருக்க முடியும்?

இதுவரை நாசவேலைக்காரர்களால் நடைபெற்ற காரியங்களைப் பார்த்தால், இனி நடைபெறவேண்டியது மந்திரிகளைக் கொல்லவேண்டியதும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளைக் கொல்லவேண்டியதும் போன்ற காரியங்கள்தானே பாக்கி என்று சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. மற்றும், அதற்கு அடுத்தபடியான வேலையாகச் சாதிக்குச் சாதி கொன்று குவிக்கும் வேலையில்தானே இது முடிவுபெற வேண்டியதாய்த் தீரும் என்று தோன்றுகிறது.

இந்த நிலை ஏற்பட்ட பிறகு இனி என்ன ஜனநாயகம், வெங்காய நாயகம் பேச இந்த நாட்டிற்கு யோக்கியதை இருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறது. மற்றும் பல ஸ்தாபனங்களில், சட்டசபைகளில், பாராளுமன்ற (பார்லிமெண்ட்) சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் நடந்துகொள்ளும் தன்மைகளைப் பார்த்தால் ஜனநாயகத்தின் யோக்கியதை விளங்கவில்லையா? ஓட்டர்கள், தெரிந்தெடுக்கப்பட்டவர் யோக்கியதை என்ன என்பதும் விளங்கவில்லையா?

பொதுவாக, இந்திய ஜனநாயக ஆட்சியை எடுத்துக்கொண்டால் கொள்கைகளால், திட்டங்களால், விளைந்த, விளைந்து தீரவேண்டியவைகளான சில நன்மைகள், வளர்ச்சிகள் என்பவைகள் தவிர, மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட நீதி என்ன? நாணயம் என்ன? யோக்கியம் என்ன? பாதுகாப்பு என்ன? அமைதி என்ன? கையில் வலுத்தவன் காரியம் என்பதல்லாமல் பாமர மக்களுக்குப் பாதுகாப்பு, உரிமை என்ன ஏற்பட்டது என்று சொல்ல முடியும்?

இவ்வளவுக்கும்—அதாவது இந்த சாதிப் பிரிவினால் ஏற்பட்ட கேட்டிற்குக் காரணம், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதியார்கள் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதி யார்களை யோக்கியமான முறை அல்லாமல் தந்திரத்தால், சூழ்ச்சியால், கூடா நட்பால் ஆதிக்கம்பெற்று, என்றென்றும் தலையெடுக்க விடாமல் அடக்கி ஆள நினைத்து, ஆண்டு வருவதால்தானே ஒழிய வேறில்லை. இதற்குப் பரிகாரம் தேடியே ஆகவேண்டும். தேடா விட்டால் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதி மக்கள், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதி மக்களை அழித்து ஒழித்துக்கட்டும் நாள் நெருங்கிவிடும் என்றே எச்சரிக்கை செய்கிறேன்.

ஏனென்றால், 'அக்கிரமத்தை அக்கிரமத்தால்தான் பரிகாரம் செய்ய முடியும்.' மற்ற 'வழி' எல்லாம் பேச, கேட்க அழகாய் இருக்குமே ஒழிய, காரிய சாத்தியமானதாகுமா? 'அரசு யோக்கியமாய் நடவாதபோது, தற்காப்புக்குத் திட்டம் கிடையாது; எது சாத்தியமோ, அதுதான் திட்டம்' என்கின்ற ஆப்த மொழிபோல் பரிகார நிலை பயங்கர மாகத்தான் காணப்படுகிறது.

இந்த நாட்டுக்கு ஜனநாயகம் என்பது பித்தலாட்ட நாயகமாகத்தான் இருக்க முடியும். எப்படியெனில், யோக்கியமான ஜனநாயகம் இருக்குமானால் 'ஷெடியூல் வகுப்புக்கு 100-க்கு 16 ஸ்தானங்கள்' என்று ஒதுக்கி இருக்கவேண்டிய அவசியமே வந்திருக்காதே! இந்திய நாடு பிறவியால் என்று பலசாதி, பலவகுப்பு, பலதரம் என்பவையான பல பிரிவுகளைக் கொண்ட நாடாகும். இவைகளில் சில 'கடவுள், மத, சாஸ்திர, தர்ம' சம்பிரதாயங்களைப் பொறுத்து ஏற்பட்டவை என்று உரிமை கொண்டாடப்படும் நாடு. நமது ஜனநாயகச் சட்டத்தில் 'இந்து உரிமைகள் பாதுகாக்கப்படும்' என்பதற்கான ஆதாரங்கள், அறிகுறிகள்தான் காணப்படுகின்றனவே ஒழிய, 'இந்த உரிமைகள் ஒழிக்கப்பட்டது—ஒழிக்கப்பட்டு விடும்; யாவருக்கும் எதிலும் சம உரிமை உண்டு; சம உரிமை ஏற்படுத்திக் கொள்ளலாம்' என்கிற அறிகுறியே இல்லையே? அந்த உரிமை சட்டத்தில் இல்லை என்பதற்கு ஆதாரந்தான்—அறிகுறிதான்—ஷெடியூல் வகுப்புக்கு மாத்திரம் 100-க்கு 16 எண்ணிக்கையும், மற்றபடி 100-க்கு 3 பேராய் இருக்கிற ஒரு சின்ன சாதியான, பல வகையிலும் முன்னேற்றம் அடைந்து, முன்னணியில் ஆதிக்கத்தில் இருக்கிற பார்ப்பன சாதிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் அவர்கள் அனுபவிக்க எடுத்துக்கொண்டது போக மீதிதான்—மற்ற மீதி உள்ளவர்களான 100-க்கு 81 பேர்களானவர்களுக்கு என்று—'சட்டத்தில் இல்லாவிட்டாலும், இதுதான் சட்டத்தின் கருத்து என்று' வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் கூறும் தீர்ப்புப்போல் சுப்ரீம் கோர்ட் (வேத வாக்கிய) தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.

இன்று தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, அதாவது, 100-க்கு 60 பேராக உள்ள சமுதாயத்திற்கு 25 மாத்திரம் ஒதுக்கி வைத்துவிட்டு, மீதி உள்ள 59 ஸ்தானங்களை 100-க்கு 26 உள்ள முற்படுத்தப்பட்டுள்ள சமுதாயத்திற்கு என்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தப்படி, 100-க்கு 26 உள்ள மக்கள், 59 வீதம் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்றாலும், இந்த 59-ல் வெகு சின்ன சாதியாகிய 100-க்கு 3 வீதம் உள்ள பார்ப்பான் 30-க்கு மேல் எடுத்துக்கொண்டு, 29-தான் 100-க்கு 56 வீதம் உள்ள பார்ப்பனரல்லாத மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டு விட்டது. இதிலும் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் பார்ப்பனரல்லாதார் போராடவேண்டி இருக்கிறது. எப்படி என்றால், ஒரு பார்ப்பனரல்லாத அபேட்சகன் பதவிக்குத் தேவையான அளவில் யுனிவர்சிட்டி பாஸ் செய்திருந்தால் மாத்திரம் போதாது. 'பரீட்சைக்கு உள்ள மொத்த மார்க்கில் 100-க்கு 50ஆவது வாங்கி இருக்க வேண்டும்.' இந்த விகிதம் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களாகிய 41, சில இடங்களில் 50 வரையும் உள்ள அபேட்சகர்களுக்குத் தேவை இல்லை. மீதி உள்ள 59 பேர்களில் சர்க்கார் ஒப்புக்கொண்ட அளவுக்குள்ளாகவே இருக்கும் பிற்பட்ட வகுப்பார்கள் எண்ணிக்கை சுமார் 40 விகிதம் இருக்கும். இவர்கள் கதி என்ன ஆவது? இதன் பயனாய் நாட்டில் சாதிக்கு ஒரு கட்சி ஏற்பட்டு அரசாங்கத்துடன் மோதுவதும், உள் கலகத்தை உண்டாக்குவதும், பள்ளிக்கூடங்கள், தொழில் ஸ்தாபனங்கள், சர்க்கார் காரியாலயங்கள் முதலிய எல்லா ஸ்தாபனங்களிலும் கலவரம், கீழ்ப்படியாமை, மேலிருப்பவன் கீழிருப்பவனை அமுத்தி வைத்தல், அனுபவத் தகுதிக்குமேல் தூக்கிவிடுதல் முதலிய தொல்லைகள் ஏற்பட்டவண்ணமே இருந்துவருகிறது. உதாரணமாக, என். ஜி. ஓ. சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களில் 100-க்கு 95 பேர்கள் சர்க்காருக்கு விரோதிகள்; கீழ்ப்படியாதவர்கள்; பொறுப்பும் கவலையும் அற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். காரணம், அவர்கள் மனக் குறைதான்.

பெரிய அதிகாரிகளும் இப்படித்தான். ஆசிரியர்கள் 100-க்கு 90 பேர்கள் இப்படித்தான். இவர்களுக்கு எல்லாம் சம்பளமாக—படியாக எவ்வளவு பணம் சேர்த்துக் கொடுத்தாலும் சர்க்காரிடம் விசுவாசம் என்பது அறவே ஏற்படுவதில்லை.

இதில் மந்திரிகள் செய்யும் தொல்லை ஒருபுறம்; அவர்களுக்கு வேண்டியவர்களைத் தூக்கி விடுவது, வேண்டாதவனை அழுத்துவது ஆகிய பல தொல்லைகள் விளைகின்றன. ஆகவே, இந்திய ஜனநாயகம் என்பது, இந்த சாதித் தொல்லைகளுக்கு நீதியான, விகிதா சாரமான உரிமைப் பரிகாரம் ஏற்படாதவரை—ஜனநாயகம், காலிகள் நாயகமாகத்தான் காட்சி அளிக்கும் என்பதோடு, மற்றும் முன் குறிப்பிடப்பட்ட கொலை, கொள்ளை முதலிய நாசவேலைகளுக்குப் பயிற்சி செய்யும் கலாசாலையாகத்தான் முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

குறிப்பு :

தமிழ்நாடு : பார்ப்பான், சைவன்—பார்ப்பனரல்லாதவர்கள் போராட்டம்.

கேரளா : நாயர்—ஈழவர் போராட்டம்.

ஆந்திரா : பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார், வெலமா—கம்மா போராட்டம்.

கன்னடம் : பார்ப்பான்—லிங்காயத்து, ஒக்கிலிகர்—குரும்பர் போராட்டம்.

பம்பாய் : மராட்டி, குஜராத்தி, மார்வாரி, பார்சி முதலிய போராட்டம்.

பஞ்சாப் : சீக்கியர்—பஞ்சாபிகள் போராட்டம்.

வங்காளம் : பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போராட்டம்.

அஸ்ஸாம் : அஸ்ஸாமி—வங்காளி போராட்டம்.

மத்திய பிரதேசம் : வங்காளி—பீகாரி போராட்டம்.

உத்தரப் பிரதேசம் : காஷ்மீரி பார்ப்பனர்—உத்தரப் பிரதேசப் பார்ப்பனர்—உள்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் போராட்டம்.

மற்றும் இதுபோல பல என்பதோடு முஸ்லிம்—முஸ்லிம் அல்லாதார்; கிறிஸ்தவர் போராட்டம் மற்றும், பார்ப்பனரால் தூண்டிவிடப்படும் சில சாதிகள் தொல்லை—இப்படியாகக் கொள்கைக் காரணமில்லாமல், சாதிக் காரணமாகவே கலவரம், காலித்தனங்கள் உண்டாகின்றன.

இப்போது எல்லா சாதிக்கும் படிப்பு ஏற்படுத்தப்பட்டபடியால், இனி எல்லாச் சாதி, பெரு வகுப்புகள், எல்லா மதங்களுக்கும், பிரிவினை விகிதம் ஏற்படுத்திவிட்டுவிட்டால், காலித்தனங்கள் கண்டிப்பாய் அடங்கிவிடும்.

['விடுதலை'–தலையங்கம்—7-11-1966]

5. கோயில் ஒழிப்பு

உலகத்தில் உள்ள மக்கள் இந்த 20-வது நூற்றாண்டிலே எவ்வளவோ அதிசயங்களைச் செய்து இன்னும் எவ்வளவோ அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிற காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்றால், இப்போது தான் சாதி ஒழியவேண்டும் என்று பேசுகிறோம்.

நீங்கள் நன்கு நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தச் சாதி என்பதே நமக்குத் தெரிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறைவில்லாத காலந்தொட்டு இருந்துவருகிற இழிசின்னம் ஆகும். அதை, இன்றைக்குத்தான்—இவ்வளவு வேகமாக ஒழிக்கவேண்டும் என்று பேசுகிறோம் என்றால் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. காரணம், மானம் உடையவனுக்குத்தான் மனிதன் என்று பெயர். 'மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு'

என்று சொல்கிறோம். இந்த இரண்டும் உள்ளவர்களுக்கு இன்றைக்கு இந்த வேலையைச் செய்யும் நிலைமை ஏற்பட்டதென்றால்—இதுவரை இந்த சமுதாயத்திற்கு மான உணர்ச்சியோ, அறிவு உணர்ச்சியோ இல்லை என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது என்றுதான் நான் கருதுகிறேன். தப்பாக நினைக்கக்கூடாது. நமக்குப் போதிய மானம் இல்லை; இதைப் பார்க்கிறபோது இரத்தம் கொதிக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டுச் சரித்திரம் எதை எடுத்துக்கொண்டாலும், இன்று போடுகிற கூப்பாடு ஒரு அம்பது வருஷத்திற்கு முன்புகூட இருந்ததாகச் சொல்ல முடியவில்லை; 1900 ஆண்டுவரைகூட இல்லை. இப்போதுதான் இந்த அம்பது அறுபது வருஷத்தில்தான் சாதி ஒழியவேண்டும் என்ற பேச்சு—எண்ணம்கூட வருகிறது! சாதி ஒழியவேண்டும் என்ற எண்ணம் இதுவரை மக்களிடம் இருந்தது என்பதற்கு ஆதாரமே இல்லை. ஏதோ, சிலர் வேண்டுமானால் வீட்டிற்குள் இருந்துகொண்டு பேசியிருக்கலாம்; ஆனால், காரியத்தில் ஏதாவது மேற்கொண்டார்களா என்றால் இல்லை; இல்லாதது அதிசயம் அல்ல; நம் பரம்பரை அப்படியாகிவிட்டது.

நம்முடைய முன்னோர்களான அரசர்கள் அனைவரும் சாதியைக் காப்பாற்றினார்கள். நம் முன்னோர்களான மூவேந்தர்கள், அய்ந்து வேந்தர்கள்—வெங்காய வேந்தர்கள் எல்லாம் சாதியைக் காப்பாற்றித்தான் புகழ் பெற்றுள்ளார்கள். அவர்களுக் கெல்லாம் என்ன உயர்ந்த பட்டம் என்றால், 'மனுநீதி தவறாத குணசீலர்கள்' என்பது. இதை யாரும் மறுக்கமுடியாது. மனுநீதிக்குப் புறம்பாக அரசன் ஆண்டதாக இல்லை. ஏதோ புராணக் கதைகளைப் பார்த்தால் இரணியன் ஆண்டான், இராவணன் ஆண்டான், சூரபதுமன் ஆண்டான் என்று வருகிறது. ஆனால், அவர்களையெல்லாம் கொன்று குவித்து விட்டனர்; அவர்களை உலகத்தில் தலைசிறந்த அயோக்கியர்கள் என்று மனிதர்கள் சொல்லும் நிலைமையை ஏற்படுத்தி விட்டனர்.

சும்மா அவர்களைச் சொல்வதில் நாணயம் இல்லை. நம் யோக்கியதை என்ன? இனியாவது நமக்குப் புத்தி வருமா? மானம் வருமா? இரண்டாயிரம் வருஷங்களாக சாதியைக் காப்பாற்றும் அரசர்கள், கடவுள், மதம், சாதியைக் காப்பாற்றும் சாஸ்திரங்கள், சாதியைக் காப்பாற்றுகிற கடவுள் கதைகள், சாதியைக் காப்பாற்றுகிற சமுதாய அமைப்பு இவைகளில் மூழ்கித்தான் இருந்தோமே தவிர—எதிர்த்தவர்கள் யார்? சந்நிதானம் (குன்றக் குடி அடிகளார்) சமயம் சாதியைக் காப்பாற்றவில்லை என்று சொல்லுகிறார்கள். ரொம்பசரி; அது எந்த 'சமயம்' என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. அந்த சமயம் மக்களிடம் புகுந்திருக்கவில்லை. சாதியைக் காப்பாற்றுகிற சமயம் தானே இன்று நமக்குச் சட்டத்தில், சாஸ்திரத்தில், அரசாங்கக் கொள்கையில் எல்லாம் இருக்கின்றது?

சாதியைக் காப்பாற்றுகிற கடவுளைத்தானே இன்று நாம் கும்பிடுகிறோம்? நாம் கும்பிடுகிற கடவுள், சாதியைக் காப்பாற்றும் கடவுளல்ல என்று யாராவது சொல்லட்டுமே! நண்பர் ஆசைத்தம்பி சொல்லுகிறார், சுயராஜ்யம் வந்து 14 வருஷம் ஆகியுங்கூட சாதி போக வில்லை என்று! சுயராஜ்யம் வந்தால் சாதி போகும் என்று யார் சொன்னார்கள்? சாதியைக் காப்பாற்றுவதற்கென்றுதானே அவர்கள் சுயராஜ்யம் கேட்டார்கள்? அப்படி யில்லாமல், சுயராஜ்யம் வந்தால் சாதி போய்விடும் என்று யாராவது சொல்லி நம்மை ஏமாற்றி யிருந்தால் பரவாயில்லை; அப்படி யாரும் ஏமாற்றவில்லை. 'சுயராஜ்யம் என்றால் என்ன?' என்று காங்கிரசிலே தீர்மானம் போடுகிற காலத்திலேயே, 'சாதி மதங்களைக் காப் பாற்றுவது' என்று அவர்களே தீர்மானம் போட்டிருக்கிறார்களே! சாதியைக் காப்பாற்றுகிற சுயராஜ்யம் என்று சொல்லித்தானே முட்டாள் பசங்கள் கேட்காமல் கை தூக்கினார்கள்? 40 வருஷங்களாகக் காங்கிரசை விட்டு வெளியில் வந்தவுடனே, 'அது, சாதி காப்பாற்றுகிற சுயராஜ்யம்; வெள்ளைக்காரனாலும், முஸ்லிம்களாலும் போடப்பட்ட சதி; இதைக் காப் பாற்றத்தான் சுயராஜ்யம்'—என்று சொல்லி வருகிறேன். சுயராஜ்யத்தில் எலும்புத் துண்டு நிறைய இருந்ததால் ரொம்பப் பேருக்கும் அதிக ஆசை வந்தது.

என் அருமை நண்பர் இராஜாஜி சொல்கிறார்; 'யார் சொன்னார்கள் சாதி ஒழியும் என்று? எதிலே இருக்கிறது சாதி ஒழியும் என்று?' என்பதாக. அவர் நன்றாகக் கேட்கிறார்; கேட்பதில் தப்பு இல்லை. நாம் முட்டாள்களாக இருந்தோம். நான் 1931-லேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன்—'இன்னுமா புத்தி வரவில்லை?' என்று 'குடி அரசு' பத்திரிகையில் நான் எழுதியிருக்கிறேன். அப்போதே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; 'சுயராஜ்யம் என்பது சாதி, மதம், தர்மம் இவைகளைக் காப்பாற்றுவதே' என்று. இப்போது அவர்கள் கேட்பதில் தப்பு இல்லை; நாம் முட்டாள்களாகவே இருந்துவந்திருக்கிறோம். தெரியாமல் வயிற்றுச் சோற்றுக்காக முட்டாள் ஆனவர்கள் கொஞ்சம்; தெரிந்து முட்டாளானவர்கள் கொஞ்சம். இந்தக் கேட்டால் வந்ததே தவிர, எதிரியின்மேல் ஒரு குற்றமும் இல்லை.

சாதியைக்–காப்பாற்ற மனுதர்மத்தைக் காப்பாற்ற–புராண ஆட்சியை உண்டாக்கத்தான் என்று கூறி சுயராஜ்யம் கேட்டார்கள். அதிலே போனால் 'எலும்பு' கிடைக்கிறது என்று அனேகம் பேர் போனார்கள். ஆகையால் அது ஏமாற்றம் அல்ல. நமக்கு அறிவு, மானம் இல்லை; அவைகளை விற்று வயிறுவளர்க்கிறோம்; அதற்கேற்ற சந்தர்ப்பங்களை உண்டாக்குகிறோம். இவையெல்லாம் இருக்கிறவரையில் சாதிபோகும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

நம் கடவுள் — சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம் — சாதி காப்பாற்றும் மதம்
நம் அரசாங்கம் — சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம் — சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி — சாதி காப்பாற்றும் மொழி

இதை உயர்ந்தமொழி என்கிறார்கள். என்ன வெங்காய மொழி? இரண்டாயிரம் வருடங்களாக இருக்கும் தமிழ்மொழி, சாதியை ஒழிக்க என்ன செய்தது? மொழிமீது என்ன இருக்கிறது? ஏதோ மொழிமீது நம்முடைய பற்று; விவரம் தெரியாமல் சிலருக்குப் பற்று. எந்த இலக்கியம் சாதியை ஒழிக்கிறது? நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்–வெங்காயம் என்று பாடியிருக்கிறான்; இந்த மடையனும் தினமும் படிக்கிறான். அது, முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம்வரை சாதியைக் காப்பாற்றுவதுதானே? அதை அனுசரித்துத்தானே புலவன் பாடியிருக்கிறான்? கோபித்துக் கொள்ளாதீர்கள்; நிலைமை அப்படி நம் மக்களை நெருக்கடியில் வைத்து, கீழே அதை எதிர்ப்பதற்கில்லாமல் ஏற்பாடு செய்தார்கள்; எதிர்த்தவர்களைக் கொன்றார்கள்; ஒழித்துக் கட்டினார்கள். எதிர்த்தால், 'இரணியனைப் பார்த்துக் கொள்'; 'இராவணனைப் பார்த்துக்கொள்'; 'சூரபதுமனைப் பார்த்துக்கொள்!' என்று சொல்லி மக்கள் எல்லோரையும் மடையர்களாக்கிவிட்டார்கள். அதிலிருந்து வெளியில் வர யாரால் முடிந்தது? வெளியிலே வந்தால் அவர்கள் எல்லாம் நாத்திகர்கள்! துவேஷிகள்!

சந்நிதானம் (குன்றக்குடி அடிகளார்) சொன்னார்கள், 'நாத்திகம்' என்றால் 'ஆராய்ச்சி' என்று. ஆராய்ச்சி என்றால் நாத்திகம்; ஆராய்ச்சிதான் பகுத்தறிவு. ஆகவே, பகுத்தறிவு என்றாலே நாத்திகம் என்று பெயர். ஆராய்ச்சிக்கு—பகுத்தறிவு, நாத்திகம் என்று பெயர் வைத்து விட்டதால் அறிவைப் பயன்படுத்தப் பயந்தார்கள்; துணிச்சல் இல்லை.

சகலமும் மேல் சாதிக்காரனின் ஆயுதம். கடவுள் அவனுடைய ஆயுதம்; மதம் அவன் உண்டாக்கியது. இவைகள் எல்லாம் எதற்கு என்றால் நமக்குத் தெரியாதென்றாலும், அவற்றிலே நமக்குக் குரங்குப் பிடி!

இன்று இங்கு பேசிய அறிஞர்கள், பெரியோர்கள் எல்லாம் உயர்ந்த வைத்தியர்கள். சாதி என்ற கொடுமையான நோயை ஒழிக்க நல்ல மருந்து கொடுத்தார்கள். அவர்கள் சொன்னவற்றில் நான் தப்புச் சொல்லவில்லை. அந்த நோய்க்குப் பரிகாரம் அவ்வளவுதான்.

மலேரியா நோய்க்குப் பரிகாரம் 'கொய்னா' சாப்பிட்டால் போதும்; அல்லது டாக்டரிடம் ஒரு 'டோஸ்' மருந்து சாப்பிட்டால் போதும்; அல்லது ஒரு தடவை ஊசி குத்திக் கொண்டால் போதும். அது ஒன்றும் தப்பு இல்லை—இவை யெல்லாம் உண்மையான மருந்து என்றே வைத்துக்கொள்ளுங்கள். இவையெல்லாம் நோயைப் போக்குமே தவிர, நோய் வராமல் தடுக்குமா? நோய் வந்தவனுக்கு மருந்து கொடுத்தால் சவுகரியமாகும்; சந்தேகமே இல்லை. ஒருவர் யூனானி வைத்தியர்; மற்றொருவர் ஹோமியோபதி வைத்தியர்; இன்னொருவர் சித்த வைத்தியர். எல்லோரும் நல்ல வைத்தியர்கள் தாம். இவர்களால் நோய் தீரும். ஆனால், வராமல் இருக்க வேண்டுமே? வந்துகொண்டே யிருந்து—தீர்த்துக்கொண்டேயிருந்தால் என்ன இலாபம்?

நல்ல வைத்தியர் என்று சொன்னால் நோய், நொடி பார்த்தால் போதாது. நோய் வந்த சங்கதி எப்படி என்று பார்க்க வேண்டும். அதற்கென்று ஒரு இலாக்கா தனியாக இருக்கிறது. அந்த இலாக்காவில் ஆராய்ச்சி செய்கிறார்கள்—மலேரியா எப்படி வருகின்ற தென்று. நோய் தீருவது பற்றி அந்த இலாக்காக்காரர்களுக்குக் கவலையில்லை. இந்த நோய் எதிலிருந்து வருகிறதோ, அதை ஒழிக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்துவர்.

அதுபோல, மதம் என்பது ஒரு நோய்; எல்லோரையும் பிடித்துவிடுகிறது. நான் சாதியைத் தொலைத்துவிட்டேன். என் பிள்ளைக்கும் அது போய்விட்டது. நான் இருக்கிற வரை இது பற்றிச் சொல்வேன். நான் செத்துப்போனால் சாதி, மதம் எல்லாம் பொய் என்று சொல்லுவதற்கு யார் இருக்கிறார்கள்? மறுபடியும் நோய் வந்துவிடுமே? சாதியைப் புகுத்துகிற மற்ற சாதனங்கள் எல்லாம் இருக்கின்றனவே? மலேரியா வராமல் தடுப்பது எப்படி என்று பார்த்துத் தடுக்க வேண்டும். அப்போதுதான் நிற்கும். மருந்து மட்டும் கொடுத்தால் வராமல் இருக்காது. அது வந்ததற்குப் பரிகாரம்; வராமல் இருக்க, தடுப்புச் செய்ய வேண்டுமானால் ஆராய்ச்சி ஸ்தாபனம் வைத்தால்தான் முடியும்.

அடுத்த வருடம் நம் நாட்டிலே மலேரியா இருக்காது என்று ஒரு பத்திரிகையில் பார்த்தேன். வராமல் இருக்க என்ன செய்தார்கள்? மலேரியாவிற்குக் காரணம் கசுமாலமும், அதில் பிறக்கும் கொசுவும். கொசுவிற்குக் காரணம் குப்பை; குப்பையில் கொசு முட்டை யிடுகிறது; குஞ்சு பொரிக்கிறது. அதன்மூலம் மலேரியா வந்துவிடுகிறது. அதுபோல, சாதி ஒழிப்புக்காரர்கள் அங்கே போகவேண்டும்; எங்கே கொசு உற்பத்தியாகிறதோ அங்கே போகவேண்டும். சாதிக்குக் கசுமாலம் கடவுள்; அதற்குக் கசுமாலம் சாஸ்திரம்—புராணம்; சாதிக்குக் கசுமாலம் அதன் பாதுகாப்பாளர்கள். இத்தனை பேரையும் ஒழித்தால் தானே கொசு (சாதிநோய்) வராமலிருக்கும்? கடவுளை வைத்துக்கொண்டு கொசுவை (சாதியை) ஒழிக்கவேண்டும் என்றால் எப்படி ஒழிக்கமுடியும்?

இராமனை—சாதி இல்லை என்கிறீர்களா? விஷ்ணுவை—சாதி இல்லை என்கிறீர்களா? பிள்ளையாரை—சாதி இல்லை என்கிறீர்களா? சிவனை—சாதி இல்லை என்று சொல்லு கிறீர்களா? எந்த சாஸ்திரத்தைச் சொல்கிறீர்கள்—சாதி இல்லையென்று? உபநிஷத்தைச் சொல்கிறீர்களா? ஸ்மிருதிகளைச் சொல்கிறீர்களா? இவைதவிர உங்களுக்கு என்ன தெரியும்? சந்நிதானத்திற்குத் தெரியும் வேறு சங்கதிகள். அவர்கள் சொல்லுகிற சிவம் வேறு; நாம் எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கிற சிவம் வேறு. அவர் சொல்லுகிற சமயம் வேறு; நம்மைப் பிடித்து ஆட்டுகிற சமயம் வேறு. இராமாயணத்தைப் படித்தால் சாதி போய் விடுமா? சிவபுராணத்தைப் படித்தால் சாதி போய்விடுமா? இவைதவிர நமக்கு வேறு என்ன இருக்கிறது? அதை யார் படிக்கிறார்கள்? யார் எடுத்துச் சொல்கிறார்கள்? இவ்வளவு பெரிய நாட்டிற்கு ஒரேயொரு சந்நிதானம்தான் எடுத்துச்சொல்லுகிறார்கள். எவ்வளவு நாளைக்கு? அவருக்கு ஒரு 20 ஆயிரம் ஆயுள் இருந்தால் நம் ஜனங்களுக்குப் புத்திவரலாம்.

அரசியல் என்று பேசுகிறார்கள்; அது பைத்தியக்காரப் பேச்சு. நம் நாட்டில் அரசியலே இல்லை. நாட்டில் இருப்பது சாதியைக் காப்பாற்றும் சாதனமே. ஒருவன்

சுதந்திரம் என்கிறான்; மற்றொருவன் அரசியல் என்கிறான்; ஒருவன் வெங்காயம் என்கிறான். இதுதவிர, செயலில்–சிந்தனையில் சாதியை ஒழிப்பதே இல்லை. இல்லை என்பது மாத்திரமல்ல; சாதியைக் காப்பாற்றுவது என்றே இருக்கிறது.

ஒருவர் எவ்வளவுதான் சட்டத்தை, சாஸ்திரத்தை வெறுத்தாலும் சட்டசபைக்குப் போனவுடன், 'சாஸ்திரத்திற்குக் கட்டுப்படுகிறேன்' என்று சொல்லிவிட்டுத்தான் உட்கார முடிகிறது. 'சாதி, மத சம்பிரதாயங்கள் எல்லாம் தனி மனிதன் உரிமைகள்; அவற்றைக் காப்பாற்றுவதுதான் சுதந்திரம்; இந்தச் சுதந்திரத்தின் (சட்டத்தின்) மூலமாக மக்களுக்கு இவைகளைக் காப்பாற்றுகிறோம்' என்று உறுதிகூறுகிறார்கள். ஆகையால், நாம்தான் ஏமாந்தவர்கள்; இல்லாவிட்டால் பித்தலாட்டம் பேசுகிறவர்கள். எப்படிச் சாதியை ஒழிக்கிறவர்கள் என்பவர்களுக்குக் கடவுள் இல்லையோ—சாஸ்திரம், மதம் இல்லையோ—அதே மாதிரிதான் சாதியை ஒழிக்கிறேன் என்கிறவர்களுக்கு அரசாங்கம் இல்லை. அதே மாதிரி அமைந்துவிட்டது.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் எல்லாம் சாதிப்படி நடந்தவர்கள்தாமே? இல்லா விட்டால் அவர்களுக்கு ஆழ்வார்கள், நாயன்மார்கள் பட்டம் ஏது? ஏன் சொல்லுகிறேன் என்றால், சுற்றி இருக்கும் அமைப்புகள் எல்லாம் நம்மை அழுத்தவே இருக்கின்றன. ஆகவே, நாம் சாதாரண முறையில் சாதியை ஒழிக்க முடியாது. மதிப்பிற்குரிய நண்பர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சொன்ன வழியெல்லாம் மருந்து. தனிப்பட்ட மனிதனுக்குச் சாதகமாகும். உடனே நம் பிள்ளைக்கு வந்துவிடும்.

ஆனதினாலே, நாம் ஏதாவது காரியம் செய்யவேண்டும் என்றால் நம் மதத்தை, கடவுளை, சாஸ்திர, புராண இதிகாசங்களை நெருப்பு வைத்துக் கொளுத்தத் தயாராக இருக்க வேண்டும். கடவுள்களையெல்லாம் சிதறுகாய் போடவேண்டும். எல்லாக் கடவுள் களும் சாதியைக் காப்பாற்றும் கடவுள்கள்—சாதிக்கு விரோதமாக நடந்தவர்களைக் கொல்லும் கடவுள்கள். இது தவிர வேறு என்ன வேலை இந்தக் கடவுள்களுக்கு? எதற்காக சுப்பிரமணியம் வந்தார்? எதற்காக அவதாரம் எடுத்தார், விஷ்ணு? அவர் கொன்ற ஆள் யார்? விஷ்ணு கொன்ற அத்தனை பேரும் சாதிக்கு விரோதிகள்; சாதியை ஒழித்தவர்கள்; பார்ப்பானை ஒழித்தவர்கள்; சாஸ்திர சம்பிரதாயங்களை அலட்சியம் செய்தவர்கள்; அவர்களை ஒழிக்கத்தான் இந்த அவதாரம். அந்த அவதாரத்திற்குக் காரணம், 'ஆரிய தர்மத்தைக் காப்பாற்ற அவதாரம் எடுத்தார் கடவுள்' என்பதைத் தவிர, எந்தக் கடவுளாவது உலகத்தைக் காப்பாற்ற வந்திருக்கிறார்களா?

தர்மம் என்றால் என்ன? உனக்குப் புத்தியில்லா விட்டால்—இராஜாஜி சொல்கிறார்: 'சாதி தான் தர்மம்' என்று. சாதி என்றால் என்ன? 'அவரவர்கள் குலத் தொழிலைச் செய்வதுதான் சாதி தர்மம்' என்று அவர் பச்சையாகச் சொல்கிறார். நமக்கு ஒரு சவுகரியம், நம் எதிரி யார் என்று தெரிந்து கொள்ள வசதி ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய கட்சி என்ன? சாதியை ஒழிக்கவேண்டும் என்பது. அவர்கள் கட்சி என்ன? சாதியைக் காப்பாற்றவேண்டும் என்பது. அவர்கள் பக்கத்தில் ஒரு கூட்டம் அவர்களுக்குக் கையாளாக இருக்கிறது. இது தவிர, இன்று அரசியல் என்ன? ஒரு அரசியல் சாதி காப்பாற்றப்படவேண்டும்—அதற்கு மாறாக இருக்கிற கட்சியை ஒழிக்க வேண்டும் என்பது.

பச்சையாகச் சொல்கிறார் இராஜாஜி: 'சாதியைக் காப்பாற்றுவதுதான் என் வேலை; அதற்காகத்தான் மூச்சு விடுகிறேன்; இல்லாவிட்டால் பொது வாழ்வு எனக்கு அவசியம் இல்லை; தர்மம் கெட்டுவிட்டது. இன்றைய ஆட்சி—தர்மத்தை அழிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது' என்று. இது உங்களுக்குத் தெரியவில்லை. அவ்வளவு யூகம் இல்லை. அவர்களுக்குத் தெரிகிறது—'இன்றைய ஆட்சி, தர்மத்தை ஒழிக்கிறது' என்று. 'நீண்ட நாட்களாக இருந்துவந்த தர்மத்தை, இந்த ஆட்சி கெடுக்கிறது. சீக்கிரமாக—

அதிலும் சமீப காலத்தில் தலைகீழாய்க் கெடுக்கிறது. ஆனதால், அதை ஒழித்துத் தீர வேண்டும்'—இப்படி, 'தின மணி'யில் வருகிறது. மற்ற பத்திரிகைகளிலும் இருக்கிறது.

ஆகவே, இன்றையப் போராட்டமே சாதியைக் காப்பாற்றுவது என்பதும், சாதியை ஒழிப்பது என்பதும்தான். உண்மை எப்படியோ—போராட்டத்தின் வெளிப்படையான தத்துவம் இதுதான். உங்களுக்குப் புரியாவிட்டால் நம் எதிரி சொல்லுகிறார்; அதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். இதிலே நம் கடமை என்ன என்று, யாருக்குத் தெரியும்? இது தவிர, 'அரசியல், அரசியல்' என்றால், அரசியல் புரியாத பைத்தியம்தான்.

நமது மூவேந்தர்களைப்பற்றிச் சொன்னால் சிலருக்குக் கோபம் வரும்; வெள்ளைக் காரனைப்பற்றிச் சொன்னாலும் சிலருக்குக் கோபம் வரும்; சுயராஜ்யத்தைப்பற்றிச் சொன்னாலும் சிலருக்குக் கோபம் வரும். உண்மையாகச் சொல்லுகிறேன்—நம்நாட்டில் பழைய காலத்தை விட்டுவிடுங்கள். மூவேந்தர் காலத்தில் யாராவது படித்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. 'ஏதோ புலவர்கள் சங்கம்' என்று சொல்கிறார்கள். அதிலே ஏதோ கொஞ்சம் பேர் இருந்திருப்பார்கள். எப்படியோ அவர்கள்பேரில் குற்றம் சொல்ல வேண்டாம்; தள்ளிவிடுங்கள். வெள்ளைக்காரன் வந்து 150 வருட ஆட்சி இந்த நாட்டில் நடந்த பிறகும் போனவாரத்தில் வந்த பத்திரிகையிலிருந்து சொல்கிறேன்:

சர்க்கார் கொடுத்த கணக்குப்படி 1901-ல் 100-க்கு 7 பேர் படித்திருக்கிறோம் நாம். ஆனால், அன்று பார்ப்பனோ 100-க்கு 100 பேர் படித்திருக்கிறான். என்ன நம் இராஜாக்கள் யோக்கியமாக ஆண்டிருக்கிறார்கள்? ஒரு இராஜாவும் பள்ளிக்கூடம் கட்டிய தாகக் காணோம். ஆனால், பார்ப்பனர்களுக்குப் பாடசாலை கட்டியிருக்கிறார்கள். அதற்காகச் சத்திரம் இருக்கிறது. சமஸ்கிருதம் சொல்லிக்கொடுக்கப் பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறார்கள். தமிழுக்குப் பள்ளிக்கூடம் வைத்துத் தமிழ் சொல்லிக்கொடுத் தார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! 'சூத்திரன் படித்தால் பாவம்; அவனுக்குச் சொல்லிக்கொடுத்தால் நரகம்.' ஆகவே, இரண்டும் தவறு. சூத்திரன் படித்தால் பார்ப்பானுக்கு ஆபத்து. ஆதலால் சூத்திரன் படிக்காமல் அரசன் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மனு தர்மம். அதற்குக் கட்டுப்பட்டவர்கள் அரசர்கள். ஏதோ மருந்து சாப்பிட்டால் போதுமா? வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே? அதற்கு அஸ்திவாரத்தைத் தோண்டியல்லவா செய்யவேண்டும்? இன்று தப்பித்துக்கொண்டால் நாளைக்கு மாட்டிக் கொள்ளுகிறோம்.

நம்முடைய நாட்டில் கிளர்ச்சிகள் வரும். அதற்குத் தக்கபடி மேல்சாதிக்காரர்கள் தங்களைத் தணித்துக்கொள்வார்கள். காரம் போனவுடன் பழையபடி அதைக் கொண்டு வந்து விடுவார்கள். இந்த மாதிரியான நெருக்கடி நிலைமை நாட்டில் சாதியைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறது. நமக்கு இன்று ஒன்றும் குறைவு இல்லை. சாதி தவிர, வேறு எவ்விதமான குறைபாடும் இருக்க இடமில்லை. ஏற்பட்டிருக்கிற குறைபாடு என்று எதைச் சொன்னாலும்—சாதியைத்தான் சொல்லவேண்டும். நாம் படிக்கவில்லை என்றால் —புத்தியில்லாமல் அல்ல; நாம் படிப்பது தர்மத்துக்கு விரோதம் என்றால், எப்படி நாம் படிக்கமுடியும்?

நமக்கு வெள்ளைக்காரன் படிப்புச் சொல்லித் தரவில்லை என்றால்—படிக்கமாட்டோம் என்பதற்காகவா சொல்லிக்கொடுக்கவில்லை? பார்ப்பானுக்கு விரோதமாக நடப்பதில்லை என்று ஒரேயடியாக வெள்ளைக்காரனிடம் எழுதி வாங்கிக்கொண்டார்கள்—காந்தியிடம் எழுதி வாங்கிக்கொண்டு அவருக்கு 'மகாத்மா' பட்டம் கொடுத்த மாதிரி.

'நான் இந்து. எனக்குக் கடவுள் அவதாரங்களில் நம்பிக்கை உண்டு; மறு பிறப்பில் நம்பிக்கையுண்டு; பார்ப்பனர்களின் ஆயுதங்கள் எல்லாவற்றையும் காப்பாற்றுகிறேன்' என்று சத்தியம் செய்த பிறகே, காந்திக்கு மகாத்மா பட்டம் கொடுத்தார்கள். அதை மீறினார்; உடனே கொன்று தீர்த்துவிட்டார்கள். இதே மாதிரி நம் ஆழ்வார்கள், நாயன்

மார்கள் எல்லோரும் அவர்களுக்கு எழுதிக்கொடுத்தார்கள். வெள்ளைக்காரனும் இப்படி எழுதிக்கொடுத்தான்—'உங்கள் தர்மங்களில் கை வைப்பதில்லை' என்று; கை வைத்தார்கள்—ஒழித்துக்கட்டிவிட்டனர். அவ்வளவுதான்! ஆகவே, நமக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால், சாதி போக வேண்டும் என்று சொன்னால் போதாது. எதிலிருந்து சாதி வருகிறதோ அதை ஒழிக்க வேண்டும். அதற்குத் தைரியம் வேண்டும்.

சிவனையும், விஷ்ணுவையும், கிருஷ்ணனையும் ஒழித்தால் கடவுள் போய்விடாது. இராமன் போய்விட்டால் கடவுள் போய்விடும்; கிருஷ்ணன் போய்விட்டால் கடவுள் போய் விடும் என்பது முட்டாள்தனம். அவர்கள் கடவுள் என்று எதிலே கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. வெறும் புளுகுப் புராணக் கதையில் கண்டு பிடித்த சங்கதிதான். இராமாயணம் இல்லையென்றால், இராமன் இல்லை; கந்தபுராணம் இல்லையென்றால் கந்தன் இல்லை; விஷ்ணு புராணம் இல்லையென்றால் விஷ்ணு இல்லை. இந்தமாதிரி புராணங்களிலிருந்து உற்பத்தி செய்து நம் தலையில் போட்டு அவனுடைய படங்களை ஏற்கச் செய்துவிட்டான் என்றால் அதற்கும், கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? எந்த மடையனாவது இவர்களைக் கடவுள் என்று சொல்ல முடியுமா? பார்ப்பான் எழுதி வைத்திருக்கிற கதைப்படி பாருங்களேன்! நாம் அவ்வளவு முட்டாளாக இருந்தால் எப்படிப் போகும்? எதற்காக இராமன் பிறந்தான்? தர்மத்தைக் காப்பாற்ற. என்ன தர்மம்? 'பார்ப்பான் கடவுளுக்குச் சமானம்; சூத்திரன் மலத்திற்குச் சமானம்!' என்பது. இந்தக் கதையையே நாம் பார்ப்பது; பாராயணம் செய்வது; அதையே நாம் கும்பிடுவது; அப்புறம் சாதி ஒழியவேண்டும் என்பது. இந்தச் 'சாதி' இவ்வளவு நாள் நிலைத்திருப்பதற்குக் காரணம் அதற்குப் பாதுகாப்பாக இந்தச் சாதனங்கள் இருந்துவருகிறதால்தான். அதற்கு ஏற்ப ஆட்சியும் அவன் கையில் இருந்துவருகிறது. அவன் கையைவிட்டு ஆட்சியைப் பிடுங்கி விட்டால் போதுமா?

சந்நிதானம் முயற்சி எடுக்கிறபடி கோயில், குளங்களில் நம் ஆதிக்கம் வந்தால், நாம் சாமியை வேண்டுமானால் பிறகு மாற்றிக்கொள்ளலாம். ஆதிக்கம் அவனிடத்தில் இருக்கிறதே, எப்படி மாற்றுவது? இன்னமும் அவனுடைய தர்மம்தான்; ஆட்சிதான்.

என்ன முன்னோர்கள்? கழுதைக்குப் பிறந்தவன், நாய்க்குப் பிறந்தவன், கோட்டானுக்குப் பிறந்தவன். இந்த முன்னோர்கள்தாம் வேதம் எழுதினார்கள்; புராணம் எழுதினார்கள்; வெங்காயம் எழுதினார்கள். உபநிஷத் எழுதியவன் யார்? மனிதனுக்கும்–குதிரைக்கும் குழந்தை பிறந்திருக்குமா? இவனையெல்லாம் பெரிய ரிஷி என்கிறார்கள். சாஸ்திரம் இவன் எழுதினான்; புராணம் இவன் எழுதினான். எழுதிய பயல்களைப் பார்த்தால், எல்லாம் அயோக்கியப் பயல்கள்! மனிதனுக்குப் பிறந்தவர்கள் அல்லர். இவர்களைத் தவிர வேறு முன்னோர்கள் இல்லை. இதைச் சொல்லியே நம்மை மிரட்டுகிறார்கள். இராஜாஜி சொல்கிறாரே, 'நம் முன்னோர்கள் நல்லபடி யோசனை செய்து உலக க்ஷேமத்திற்காகத்தான் தர்மத்தை எழுதினார்கள்' என்று. அதற்கு நேரு பதில் சொல்கிறார், 'நம் முன்னோர்கள் யார்? காட்டுமிராண்டிகள்தானே? ஒரு காட்டுமிராண்டி இன்னொரு காட்டுமிராண்டிக்கு எழுதி வைத்தது, இன்றைய மனிதனுக்குப் பொருந்துமா?' என்று கேட்கிறார். ஏன் சொல்லுகிறேன் என்றால், இதுதானே இன்று போராட்டமாக இருக்கிறது?

சாதியை ஒழிக்கிறார்களோ, இல்லையோ—நான் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நம் அரசாங்கம் இன்று சாதியை ஒழிக்கிறோம் என்று சொல்கிறது—வாயளவிலாவது சொல்கிறது. அதற்கு வேண்டிய காரியங்கள் செய்கிறோம் என்று சொல்கிறது. இதற்காகப் 'பறையருக்கு வீடு கட்டுகிறோம்; படிப்பு சொல்லித் தருகிறோம்; உத்தியோகம் தருகிறோம்; மற்ற சாதிக்காரர்களுக்குச் சமமாகச் செய்வதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்கிறோம்' என்று சொல்லுகிறார்கள்.

'சாதி ஒழியாத சுயராஜ்யம் என்ன சுயராஜ்யம்!' என்று ஆசைத்தம்பி கேட்டார். காமராசரும் அதைத்தான் கேட்கிறார். நேருவும் சொல்லிவிட்டார்; 'சாதியை நம் நாட்டில் வைத்துக்கொண்டு வெளிநாட்டில் போய்ப் பேச வெட்கமாக இருக்கிறது' என்று சொல்கிறார். அந்த அளவிற்காவது அவர்களுக்குப் புத்தி வந்திருக்கிறது என்றால், உங்கள் கடமை என்ன? இவர்களை ஒழித்துவிட்டுப் பார்ப்பான் கையில் அதிகாரத்தைத் தருவதா உங்கள் கடமை? மனிதன் புத்தி எவ்வளவு மோசமாக இருக்கிறது?

இன்று சாதியை ஒழிக்கிற நிலைமை வந்துவிட்டது; உங்களால் வரவில்லை—எப்படியோ அந்தச் சூழ்நிலை வந்துவிட்டது. இன்று சாதி இல்லை. எங்கே இருக்கிறது சாதி? பலாத்காரத்தில் மனிதனை அடக்கச் சாதி இருக்கிறதே தவிர, இயற்கையில் எங்கே இருக்கிறது?

மதிப்பிற்குரிய கி. ஆ. பெ. விசுவநாதம் சொன்னார். அவர் சொன்னபடி, எல்லோரும் எல்லோர் வீட்டிலும் இன்று சாப்பிடுகிறார்கள்; கலப்பு மணமும் சுளுவாக இருக்கிறது. நேருக்கு நேர் தெரியாவிட்டாலும் பலவிதத்தில் நடந்துகொண்டிருக்கிறது. சாதி போகாமல் எங்கேயாவது இருக்கிறதா? போகாமல் எங்கேயாவது இருக்கிறது என்று அடையாளம் காட்ட வேண்டுமென்றால், சந்நிதானம் சொல்லுகிற—கடவுள் இடத்தில் பார்ப்பான் இருக்கிறான். மற்றபடி எங்கே இருக்கிறது? ஆனால், அதன் சலுகையால் கிடைக்கும் அனுகூலத்திற்காக, 'அதில் கை வைக்காதே!' என்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து மீள முடியவில்லை. இப்படியாக எப்படியோ அவர்களால் வந்தது. அதிகார ஸ்தானம் அவர்கள் கைக்குப் போய்விட்டது. அரசியல் ஸ்தாபனம் அவர்கள் சொன்னபடி நடப்பதாகப் போய்விட்டது. நமக்கு நாதி இல்லை. 20, 30 வருட வேலையின் பயனாக, இன்றுதான் சாதி ஆணவக்காரன் கையிலிருந்த ஆட்சி, சாதியின் கீழ்மகன் கைக்கு வந்திருக்கிறது. இது பெரிய போராட்டமாகப் போய்விட்டது. இந்த அளவுக்கு வந்ததை வைத்துக்கொண்டு எவ்வளவோ காரியங்கள் செய்ய முடிந்தன.

இராஜாஜி, தர்ம ராஜ்யம் இருக்கவேண்டும் என்கிறார். சாதியைக் காப்பாற்றுவது தானே மனுதர்ம ராஜ்யம்! அதை ஒழிக்கவேண்டும் என்பது மனித தர்ம ராஜ்யம். நம் போராட்டம் 30, 40 வருஷங்களாக மனித தர்ம ராஜ்யத்திற்காகத்தான். அவர்கள் மனுதர்ம ராஜ்யத்தைக் காப்பாற்றுகிறார்கள்; அதற்காகத் தனிக்கட்சியை ஏற்படுத்த வேண்டாமா? ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்று, யார் யார் காமராஜ் ஆட்சியை எதிர்க்கிறார்களோ அவர்கள் எல்லாம் சாதியைக் காப்பாற்றத்தான் முயற்சி செய்கிறார்கள். சாதியை ஒழிக்கிறார் காமராசர். அவர்பேரில் ஆத்திரம் உள்ளவன் எவனாக இருக்க முடியும்? எந்தக் காரணத்தை முன்னிட்டும் காமராசரை எதிர்ப்பவன் சாதியைக் காப்பாற்றுகிறவனே! பொதுஜனங்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் உங்கள் கடமை என்ன என்று நீங்கள் சிந்திக்கவேண்டும். சாதி ஒழிக்கப் பாடுபடுகிறோம் என்றால், அதை—சாதியை ஒழிப்பவனை ஒழிப்பதற்குப் போட்டிபோடுவதா? இது பச்சைத் துரோகமல்லவா?

இந்த மாதிரியான வாய்ப்பு நமக்கு இலேசில் வராது. உங்கள் ஆதரவு இருக்குமானால், நீங்கள் எல்லாம் போதுமான அறிவு உணர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் என்று உங்களிடம் ஆட்சியாளர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால்—கண்டிப்பாக சாதி, கடவுள், மதத்தை, சாஸ்திரங்களை எங்களுக்குமுன் ஆட்சியாளர்களே கொளுத்திவிடுவார்கள். உங்களுக்குத் தைரியமிருந்தால் பார்ப்பான்கூட கடவுளை ஒழிக்கிறேன் என்று வந்துவிடுவான்! அந்த அளவுக்கு நிலைமை வந்துவிடும். நீங்கள் எல்லாம் ஓட்டர்கள். உங்கள் 'ஓட்' பெற்றுத்தான் பதவிக்கு வரவேண்டும்; உங்கள் உணர்ச்சி எப்படியிருக்கிறதோ அந்த மாதிரிதான் அவர்கள் நடந்துகொள்வார்கள்.

இந்த மாநாடு, சாதி ஒழிப்பு மாநாடு என்று சொல்லுவதோடு, நாம் நாளைக்குப் போடும் 'ஓட்'–சாதி ஒழிப்புக்காகப் போடுகிற ஓட் என்று ஆக்கிக்கொள்ளவேண்டும். அரசியல் ஓட்டாக வைத்துக்கொள்ளக்கூடாது. இந்த மாதிரி வாய்ப்பு நமக்குக் கிடைக்காது. எனக்குள்ள கவலையெல்லாம் இந்த ஒரு தடவை இந்த ஆட்சி பிழைத்துவிட்டால் பிறகு இலேசில் சாகாது. நான் அரசியல் உணர்ச்சியை மனத்தில் வைத்துக்கொண்டு நமக்கு இலாபம் எப்படிவரும் என்று எதிர்பார்த்துச் சொல்லவில்லை. எனக்கு என்ன தேவை? எனக்கு என்ன வேண்டும்? எனக்கு வேண்டியதெல்லாம் சாதி ஒழியவேண்டும்; அதற்குச் சம்பந்தமான கடவுள், மதம் ஒழியவேண்டும் என்பதுதான். பணம் காசு ஆசை இருக்கும். ஆனால், இது என் பெண்டு, பிள்ளைகளுக்கு அல்ல. எனக்குப் பின்னால் இந்தக் காரியம் நடக்க பந்தோபஸ்துக்குப் பணம் எதிர்பார்ப்பேன். ஆனதால், நல்ல சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்துவிடாதீர்கள்.

இராஜாஜியின் சுபாவம், அவருடைய குயுக்தி, குறிக்கோள் எல்லாம் ஒவ்வொரு சமயத்திலும் மனுதர்மம் காப்பாற்றப்படவும், நாம் தலையெடுக்காமல் ஒழிவதும்தான். என்றைக்கு நம்மைக் காப்பாற்றினார் அவர்? எதிலே காப்பாற்றினார்? அவர் தந்திரம் எல்லாம் நம்மை எப்படி ஒழிப்பது என்பதுதான்—நான் இருந்து அனுபவப்பட்டுச் சொல்லுகிறேன். நாலு வருடம், அய்ந்து வருடம் அவருக்குக் கையாளாக—சி. அய். டி. யாக இருந்து சங்கதி தெரிந்ததும் விட்டு ஓடி வந்து, நாம் செய்த தப்புக்குப் 'பிராயச்சித்தம்' செய்யவேண்டும் என்று சொல்லுகிறேன். நான் இராஜாஜியோடு போய்ச் சேர்ந்தால், நான்தானே சுதந்திராக் கட்சிக்குத் தலைவன்! எனக்குப் பதவி கிடைக்காதா? அவர் சொன்னபடி நான் ஒத்துக்கொண்டால் அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? காந்திக்கு மகாத்மா பட்டம் கொடுத்ததுபோல், எனக்கும் 'பகவான்' பட்டம் கொடுப்பார்கள்; 'பகவான் இராமசாமி' என்று என்னைச் சொல்வார்கள்! பார்ப்பனர்களை எல்லாம் அப்படியே தவறாமல் சொல்லச் செய்வார்கள்! பார்ப்பான் பத்திரிகையில் எல்லாம் எழுதுவார்கள்; பார்ப்பான் கடைகளில் எல்லாம் என்னுடைய படத்தைத் தொங்கவிடச் செய்வார்கள். அவர்கள் கடவுள் எல்லாம் அப்படி வந்த கடவுள்தானே? இவ்வளவையும் வெறுத்துவிட்டுக் காரியம் செய்கிறோமே தவிர, நமக்காக என்ன செய்கிறோம்?

இன்றையப் பிரச்சினை சாதி ஒழிப்பு. இது நேருக்கு நேர் உங்களுக்குப் புரியாது. 'எது செய்தால் சாதி ஒழியும்?' என்று நினைக்க வேண்டுமே தவிர, 'எந்த மருந்து சாப்பிட்டால் ஒழியும்' என்று நினைக்கக்கூடாது.

நமக்குக் கடவுள்மீது பைத்தியம்; சாஸ்திர புராணங்களில் நம்பிக்கை. சிலர், 'இராமசாமி சொல்வதெல்லாம் சரி; ஆனால், இராமாயணத்தைக் குற்றம் சொல்கிறாரே, அதுதான் பிடிக்கவில்லை. நான் பெரியார் தாசன்; ஆனால், அவர் சுப்பிரமணியரையும், கந்த புராணத்தையும் திட்டுகிறாரே!' என்கிறார்கள். அப்படிப்பட்டவனின் தைரியம் எதில் சேர்ந்தது? அவைகள்தானே அவர்கள் ஆயுதம்? நம் ஆள் எவன் போய்க் கொண்டு வந்தான், சுப்பிரமணியரை? நம் ஆள் எவன் உண்டாக்கினான், இராமனை? அவனுடைய மதம், சாஸ்திரம் எல்லாம் இன்னமும் உயிரோடு இருக்கின்றனவே! இவைகளை நீங்கள் சிந்தித்து எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்யவேண்டும்.

சாதியை ஒழிக்கவேண்டும் என்றால் கண்டிப்பாகச் சமயம் தேவையில்லை என்று நினைக்க வேண்டும். நாம் ஒழுக்கமாக நடந்தாலே போதும், கோயிலுக்குப் போகக்கூடாது; செத்தாலும் போகக்கூடாது. அங்கே என்ன இருக்கிறது—குழவிக் கல்லைத் தவிர? யாராவது சொல்லுங்களேன் சாமி இருக்கிறது என்று?

எங்கேயும் இருக்கிற சாமிக்கு அங்கே தனியாக—ஒரு இடத்தில் என்ன வேலை? எல்லாமாய் இருக்கிற சாமிக்கு குழவிக் கல்லாய் இருக்கவேண்டும் என்று என்ன 'தலை

எழுத்து"? எவனாவது சாபம் கொடுத்தானா? இருந்தாலும், கோயிலுக்கு ஒரு நாள் போனால் போதுமே? தினம்தினம் போய் என்ன வாழுகிறது?

இந்தக் காரியத்தை நான் சொன்னேன் என்று ஒத்துக்கொள்ளாமல், அறிவைக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள்!

[நூல்: 'சாதி ஒழிப்பு' 1961—சென்னையில், 16-9-1961-ல் சொற்பொழிவு]

6. எங்கள் தியாகம்

பேரன்புமிக்க தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நாங்கள் சாதி ஒழிப்பிற்காக அரசியல் சட்டத்தைக் கொளுத்திச் சிறைக்குச் சென்றோம். தோழர்கள் சென்னை மாவட்டத் தலைவர் சண்முகம், செயலாளர் லோகநாதன் இப் பகுதித் தலைவர் பக்தவத்சலம், வேலாயுதம் போன்ற 3000, 3500-க்கு மேற்பட்டவர்கள் ஒரே நாளில் சிறைக்குச் சென்றோம். 6 மாதம், 9 மாதம், ஒரு வருடம், 2 வருடம், 2½ வருடம், சிலர் 3 வருடம் என்று இப்படிக் கடுங்காவல் தண்டனை அடைந்தோம். சிறையிலும், வெளியிலுமாக 15 தோழர்களுக்குமேல் செத்துமடிந்தார்கள்.

ஆனால், நாங்கள் இவற்றையெல்லாம் காட்டி, எங்கள் தியாகத் தழும்புகள் என்று கூறி—மற்ற கட்சிக்காரர்கள் மாதிரி உங்களிடம் ஓட்டுக்கு வருகின்றோமா? வேறு பிரதிப் பிரயோசனமாவது கருதுகின்றோமா?

நாங்கள் சிறைக்குச் சென்றது—எங்களுக்கு மட்டும் இருக்கும் சாதி இழிவு ஒழிய வேண்டும் என்பதற்காக அல்லவே! இந்த பக்தவத்சலம், காமராசர்—மற்றும் எந்த எந்தக் கட்சியில் தமிழன், சூத்திரன் என்பவன் உள்ளானோ அத்தனை பேர்களின் சாதி இழிவுகள் போகவேண்டும் என்பதற்காகத்தானே?

நம் போராட்டத்தைப் பார்த்து, 'காட்டுமிராண்டித்தனம்', 'நான்சென்ஸ்' என்று கூறிய இந்தியப் பிரதமர் நேருவே—நம் போராட்டத்திற்குப் பிறகு—இப்போது அடிக்கடி, 'சாதிமுறை இருப்பது காட்டுமிராண்டித்தனம்' என்றல்லவா கூறுகின்றார்!

[அயன்புரம், குயப்பேட்டை, சூளை ஆகிய இடங்களில், 11, 12, 13-2-1960-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-3-1960]

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

3

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

போன் : 0422 – 2572635
செல் : 936 2970121

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., எஃப்.அய்.இ.
(மருத நாடன்)
தலைமைப் பொறியாளர் மி.வா. (ஓய்வு)
தலைவர் : சிந்தனையாளர் கழகம்
தமிழ் தமிழர் ஒருங்கிணைப்பாளர்
அமைப்பாளர் : தொழில் நுட்ப வல்லுநர் குழுமம்

18/12ஏ, அண்ணாநகர், ஆறுமுகம் லே–அவுட்,
பூளைமேடு (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 004.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;p erd; (09-06-2011)
jkpHk; tiy (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

மூன்றாம் தொகுதி

பதிப்பாசிரியர்
வே. ஆனைமுத்து

திரு பொன்னாச்சி நதன்
அவர்களுக்கு நினைவுத்தொகுதி
வைக்க இந்நூலை அளிக்கிறோம்.
செல்வராஜ்
9-6-2011.
தலைவர்.

வெளியீடு :
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (மூன்றாம் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME III

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume III
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

பகுதி III

பொருளாதாரம்

1. பொருளாதாரம்

1. இந்தியப் பொருளாதாரம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொருளாதாரம் என்கின்ற வார்த்தை நம் நாட்டில் தற்காலம் உள்ளதுபோல் முன் காலத்தில் இருந்ததாகச் சொல்ல முடியாது. முன் காலத்தில் எல்லாம் பொருளை உடைத்தாயிருக்கவும், பணம் காசைக் கையாளவும் சிலருக்கே உரிமை இருந்தது. மற்றவர்களுக்குத் தானியம் தவிர, வேறு ஒன்றும் பெற உரிமை கிடையாது. நாட்டு வழக்கிலும் பணம், காசு கிடையாது. எல்லா வாழ்க்கையும் பண்ட மாற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. ஒரு பண்டத்தைக் கொடுத்து, மற்றொரு பண்டத்தை வாங்கிக் கொள்வார்கள். கூலியாட்கள், கைத்தொழில் செய்வோர், ஏவலாள் ஆகியோருக்கும் தானியமே கொடுப்பது வழக்கம். மந்திரிகளுக்கும் அரசன் பூமி மானியம் விடுவதே தவிர, பணமாக ஏதும் கொடுப்பதில்லை.

பெருத்த மிராசுதார்களிடம் பார்த்தாலும்—தானியத்தைத்தான், பூமியில் பெரிய பெரிய குழிகள் ஆழமாக வெட்டிப் போட்டு வைத்திருப்பார்கள். பண்ட மாற்றைத் தவிர, சாதாரண மக்கள் பணத்தைப் பார்ப்பது மிக்க அபூர்வமாகவே இருக்கும்.

ரூபாய், நாணயம் இவை நம் நாட்டு மொழியல்ல, 'சின்னப் பணம்' அதாவது ரூ. 1-க்கு 10 கொண்டதாக இருக்கும். விலை பேசுவதிலும், 'எத்தனை பணம்?' என்று தான் கேட்பார்கள். செல்வமுள்ளவனையும் பணக்காரன் என்றுதான் சொல்லுகின்ற வழக்கம் இன்றும் உண்டு. அரசியல் அபராதம் முதலியவைகளிலும் 100 பணம்–200 பணம் என்று—பணக் கணக்கில்தான் கணக்குச் சொல்லுவார்கள். சமீப காலம் வரைகூட மலையாளத்தில் திருவாங்கூர், கொச்சி இராச்சியத்தில் சிவில் கோர்ட்டில், 'ரூபாய்' என்று 'பிராது' போடுவதில்லை. 10 ஆயிரம் ரூபாய்க்குப் பிராது போடுவதானாலும் அதைப் பணமாகப் பெருக்கி, அந்தப் பண எண்ணிக்கையைக் காட்டித்தான் பிராது போடும் வழக்கம் இருந்து வந்தது.

ஆகவே, 'ரூபாய்' என்பதும், 'பவுன்' என்பதும் வெளிநாட்டு நாணயங்கள். அவை நம் நாட்டிலே புழங்கக்கூடிய நிலை ஏற்பட்டதே, பொருளாதார நிலையில் நம் நாடு முன்னையைவிடச் சற்று உயர்வடைந்தது என்பதைக் காட்ட அறிகுறியாகும். எனவே, பொதுவாகப் பார்த்தால், பொருளாதாரம் நம் நாட்டில் குறைவு என்று நான் சொல்ல மாட்டேன். மற்ற நாட்டைவிட இந்த நாடு பொருளாதாரத்தில் குறைந்ததல்ல. இந்தியாவை நம்பி அனேக நாடுகள் தங்கள் வாழ்வை நிச்சயித்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் நாட்டமில்லையானால் வெள்ளைக்காரனுக்கு இங்கு வேலையில்லை. இதுபோலவே இதற்குமுன் வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு வந்த அரசர்களுக்கும் அவர்களுக்கு முன் வந்த ஆரியர்களுக்கும் இந்த நாட்டில் வேலையில்லை.

சாமி, பூசை, உற்சவம், புண்ணியம், யாத்திரை ஆகியவைகளின் பெயரால் தனித் தனிச் செலவும், அவற்றிற்காக நடைபெறும் பொது ஏற்பாட்டுச் செலவும், கணக்குப் பார்த்தால் மனிதனின் மொத்த வரும்படியில் ஒரு குறிப்பிட்ட பாகம் வீணாவதைக் காணலாம். மற்றும் மனிதன் வாழ்க்கையில் பிரவேசிக்கும்போதே பெரும்பான்மையோர் அவர்களது கல்வி, கலியாணம் முதலியவைகளால் ஏற்பட்ட கடனின் பேரிலேயே வாழ்க்கையைத் தொடங்க வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் சேர்ந்து அவசியமான

காரியங்களுக்குப் பொருள் இல்லாமல் கஷ்டப்படும்படி செய்து விடுவதுடன், சதா தரித்திரர்களாகவும், கடன்காரர்களாகவும் இருக்கவேண்டியதாய் இருக்கின்றது.

இவை மாத்திரமல்லாமல், நாட்டின் பொருளாதார நிலையை விருத்தி செய்ய அவசியமான பொதுத் தொழிற்சாலைகள், இயந்திர சாலைகள் முதலியவைகள் ஏற்பாடு செய்வதற்கும் மார்க்கமில்லாமல் பொருட்களை எல்லாம் மேற்கண்ட சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் கவர்ந்து கொள்வதோடு கோவில் கட்டுதல், சாமிக்கு நகை, வாகனம் முதலியவைகள் செய்து வைத்தல், மற்றும் உற்சவம் பூசை ஆகியவைகளுக்குப் 'பண்டு', பூமிகள் முதலிய சொத்துக்கள் ஒதுக்கி வைத்தல் ஆகிய காரியங்கள் பெரும்பெரும் தொகைகளைக் கவர்ந்து கொள்ளுகின்றன.

ஆகவே, இந்த மாதிரியாகவெல்லாம், எல்லாப் பொருள்களும் வீணாகிக் கொண்டிருக்கையில் இந்த நாடு எந்தக் காலத்தில்தான்—எந்த வகையில்தான் பொருளாதாரத்தில் சீர் அடைய முடியும்? நம் நாட்டுப் பொருளாதாரக் கஷ்டத்திற்கு மற்றொரு காரணத்தையும் கவனியுங்கள். நம்முடைய வாழ்க்கைத் தன்மையை, மேல் நாடுகளைப் பார்த்து—நாளுக்கு நாள் செலவை அதிகரித்து வருகின்றோம்; வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ளுகின்றோம். முன்னைவிட அதிக ஆடம்பரங்களை விரும்புகின்றோம். இவையெல்லாம் நமக்குத் தகாதென்றோ, குற்றமென்றோ சொல்லவில்லை. ஆனால், மேல்நாட்டார் எப்படிப் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டே தமது வாழ்வின் சுக போகத்தையும் உயர்த்திக் கொள்கிறார்களோ, அதுபோலவே நாமும் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டு, வாழ்க்கைத் தன்மையின் அவசியத்திற்கேற்ற வருவாய்க்கு வகை செய்து கொண்டுதானே அதில் பிரவேசிக்க வேண்டும்? அதுவும் இல்லாமல், இதுவும் இல்லாமல் வெறும் மனப்பால் குடிப்பதில் என்ன பயன்? மேல் நாட்டான் குறைந்த நேரத்தில் அதிக வேலை செய்து பன்மடங்கு இலாபம் அடைகிறான். அதனால் அவர்கள் சுகமனுபவிக்க மார்க்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆகவே, இவ்வளவு உயர்ந்த பொருளாதார நிலையுடைய இந்திய நாடு—இந்த நாட்டுப் பெரும்பான்மையான மக்கள் வயிறார உண்ணவும், இடுப்பார உடுக்கவும், மானத்தோடு பிழைக்கவும் முடியாதபடி வேறு பல காரியங்கள் கொடுமைப் படுத்துகின்றன. அவைகளில் முக்கியமானவை மதமும் கடவுளும் அடுத்த ஜென்மமுமேயாகும்.

மனிதன் எவ்வளவு சம்பாதித்தாலும், அனேகமாய் எல்லாவற்றையும் மேற்கண்ட மூன்றுமே அபகரித்துக் கொள்ளுகின்றன. அதிலும் உலகத்தில் வேறு எப் பாகத்திலும் காண முடியாத மாதிரி இந்த நாட்டில் இம் மூன்றினாலும் பிழைப்பதற்கென்றே—'பிறவி'யை ஆதாரமாகக் கொண்டு சில வகுப்புகள் ஏற்பட்டு, அந்த நிலைகளைக் காப்பாற்றிக் கொண்டு பாடுபடாமல் வயிறு வளர்ப்பதோடு சகல போக்கியங்களையும் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டதால், இந்த உலகம் உள்ள வரை இந்தியாவின் பொருளாதாரம் இப்படியே இருக்கும்படியாக ஆகிவிட்டது. அது மாத்திரமல்லாமல், இந்த நாட்டில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருக்கும் முறையும், மிராசுதாரனுக்கும் குடியானவனுக்கும் இருக்கும் முறையும், படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் இருக்கும் முறையும், மேல்சாதிக்காரனுக்கும் கீழ் சாதிக்காரனுக்கும் இருக்கும் முறையும் பார்த்தால் இந்த நாட்டு மக்களில் 100-க்கு 90 பேர்களுடைய பொருளாதார நிலை இன்றைய நிலையைவிடக் கடுகளவுகூட மாறி முன்னேற்றமடைய முடியவே முடியாது என்பது உறுதி.

நமது பொருளாதாரக் கஷ்டமெல்லாம்—முதலாவது அனாவசியச் செலவுகளுக்கும் அவற்றிற்கும் அதிகச் செலவுகளுமேயாகும். 100-க்கு 90 பேர்களுடைய சம்பாதனைகள் அனாவசியமானவைகளுக்கும், குருட்டுப் பழக்கம், மூடநம்பிக்கையானவைகளுக்கும், சோம்பேறியாய் வாழ்கின்றவர்களின் சுக போகத்திற்கும் செலவு செய்யப்படுவதினாலேயே வீணாகி விடுகின்றன.

இரண்டாவது, சுலபத்தில் ஒரே பக்கத்தில் பொருள்களெல்லாம் போய்ச் சேரும் படியாகவும் விடுகின்றன.

மூன்றாவதாக, மனிதனுக்கு உள்ள நேரமும் சக்தியும் குறைந்த வரும்படிக்கே செலவிடும்படியான முறைகளே இங்கு வெகு காலமாக இருந்து வருகின்றன. அதாவது, புத்தியைச் செலவழித்துக் குறைந்த நேரத்தில் அதிகமான வேலைகள் நடைபெறவும், அதனால் அதிக சம்பாதனை அடையும் மார்க்கம் தேடவுமான துறையானது அடியோடு அடைபட்டுப் போய்விட்டது. இத்தியாதி காரணங்களே இந்தியாவின் பொருளாதாரக் குறைவிற்குக் காரணமாகும்.

[களக்காட்டில், 27-12-1930-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 18-1-1931]

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்திய நாட்டின் விடுதலைக்கு இன்று இராஜ்யத்துறை அவ்வளவு முக்கியமானதல்லவென்றும், மற்றவர்களின் வரிசைக் கிரமத்தில் அரசியல் சீர்திருத்தம் என்பது எவ்வளவோ பின்னால் இருக்க வேண்டியது என்றும் கருதுகிறவன் நான். நமக்கு இருக்கும் வேலை எல்லாம்—நாம் செய்யவேண்டிய முதல் வேலை எல்லாம் சமுதாய சம்பந்தமானதே தவிர அரசியல் வேலை அல்ல.

ஏனெனில், சமூகத் துறையில் நமது நிலைமை என்ன? நமது அடிமைத்தனத்தின் கொடுமை எவ்வளவு? இவைகளுக்குக் காரணம் என்ன?—என்பதை நினைத்துப் பார்த்தால் அறிவும் மானமும் உள்ள மனிதன் அரசியல் தன்மையைக் கொஞ்சமும் பெரிதாகக் கருதி இலட்சியம் செய்யமாட்டான் என்றே கருதுகிறேன். உங்களில் யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி, என்னைப் பொறுத்தவரை நமது நாட்டு மத சம்பந்தமான—சமூக சம்பந்தமான அடிமைத்தனத்தால்தான் நாம் சுதந்திரம் இழந்து, மானமிழந்து, இழி சாதியாய் வாழ்கின்றோமே தவிர அரசியல் அடிமைத்தனத்தினால் அல்ல. நான் இப்போது அரசாங்க ஆட்சியின் சுதந்திரத்தை முதன்மையானதாகக் கருதவில்லை; உத்தியோகத்தை முக்கியமாகக் கருதவில்லை; அதிகாரத்திற்கு ஆசைப்படவில்லை.

என்னுடைய நாட்டு மனிதன் ஒருவன் தன்னை ஒரு மனிதனாய்க் கருதவேண்டும்; அவன் என்னைப் பிறவியில் சமமாய் நினைக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன். இந்த இழிவுத்தன்மையும் அவமானமும்தான் என்னை வருத்துகின்றது; நினைத்தால் வயிறு பற்றி எரிகின்றது; நெஞ்சம் குமுறுகின்றது. இதற்கு ஏதாவது மாறுதல் ஏற்பட இன்றைய அரசியல் ஏதாவது இடையூறாயிருந்தால் சொல்லுங்கள்! அப்பொழுது அந்த அரசியலைப்பற்றிக் கவனிப்போம்; அதை ஒழிப்போம். இல்லாவிட்டால், வேறு எது இடையூறோ, யார் இடையூறாய் இருக்கின்றார்களோ அவற்றையொழிக்க ஒன்று சேரலாம் வாருங்கள்! அதை விட்டுவிட்டு, இவ்வளவு பெரிய அக்கிரமத்தையும் கொடுமையையும் மூடி வைத்துக்கொண்டு, 'அரசியல், அரசியல்' என்றால் என்ன அர்த்தம்? இது யாரை ஏமாற்றுவது? இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே காலத்தைக் கடத்துவது?

அரசியலைப்பற்றிக்கூட நமக்குக் கவலையில்லை. அன்னியனை ஒழிக்க வேண்டாமா என்று சிலர் கேட்கின்றார்கள். இதிலும் உண்மையோ, அறிவுடைமையோ இருப்பதாக நான் கருதவில்லை. ஏனென்றால் யார் அன்னியன் என்பதை முதலில் யோசித்துப் பாருங்கள்!

நமது மக்கள் 100-க்கு 90-பேர்கள் மூடமக்களாக இருந்து வருகின்றார்கள்; கல்வியறிவு வாசனை இல்லை; இருந்தாலும், அறிவுச் சுதந்திரம் இல்லை. இவர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு யார் என்ன பேசினாலும் கை தட்டுவார்கள்; கூடவே கோவிந்தா போடுவார்கள். ஆகவே, சரி எது, தப்பு எது என்று தெரிந்து கொள்ளும் அறிவு இல்லாதவர்கள்—இவர்கள் முன் எதைச் சொன்னால்தான் என்ன என்கின்ற முறையில் தேசத்தில் எத்தனையோ புரட்டுகள் நடக்கின்றன. இதைப் பார்த்துக் கொண்டே, இந்த நிலைமையை

மாற்ற வேண்டியதே நமது முதல் வேலையாய் இருக்கவேண்டும் என்பதை, யாருமே கவனிப்பதில்லை; எந்தத் தலைவருமே நினைப்பதில்லை. இப்படியே காலங்கடந்தால் நமக்கு எப்போது விடுதலை கிடைக்கக்கூடும்?

பொருளாதாரத் துறையில் நாம் அடிமைகளாய் இருக்கின்றோம். நமது பொருள் கோடிக்கணக்காக வெளியில் போகின்றது. 'அதை நிறுத்த வேண்டாமா?' என்கின்றார்கள் மற்றொரு அரசியல் கூட்டத்தார். இதையும் என்னால் இலட்சியம் செய்யவோ ஒப்புக் கொள்ளவோ முடியவில்லை. ஏனென்றால், பொருள் நஷ்டம் என்பது இப்போது நமது நாட்டில் யாருக்கிருக்கிறது?

நமது நாட்டில் சமூகத் துறையிலேயே, பிறவியிலேயே பொருளாதார உரிமை அனேக மக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக, புரோகிதன், உத்தியோகஸ்தன், வக்கீல், வியாபாரி, முதலாளி, ஜமீன் தாரன், மிராசுதாரன் ஆகியவர்களின் கூட்டங்களுக்குத்தான் பொருளாதார உரிமை இருக் கின்றதேயொழிய—மற்ற மக்களுக்கு வயிற்றுக்கு எவ்வளவு வேண்டும் என்கின்ற அளவுக் குட்பட்ட அடிமை உரிமைதானே இருந்து வருகின்றது? முற்கூறிய கூட்டங்களுக்குப் பொருளாதார உரிமை என்பது பிறவியிலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதுடன் மற்றவர்கள் அதற்கு அருகரல்லாமல் இருக்கும்படியான நிர்ப்பந்தங்களும் செய்யப்பட்டிருக் கின்றன.

உதாரணமாக, ஒரு இட்லிக் கடைப் பார்ப்பானுடைய மகன் அய்க்கோர்ட் ஜட்ஜாக வரலாம்; ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனன் மகன்—மந்திரியாகலாம்; ஆனால், ஒரு தோட்டியி னுடைய மகன் அய்க்கோர்ட் ஜட்ஜாக வரமுடியுமா? யோசித்துப் பாருங்கள்! சாதியின் பேரால் வகுக்கப்பட்டிருக்கும் பிரிவானது இம் மாதிரி சிலருக்கு நன்மையையும், சிலருக்குத் தீமையையும் செய்து வருகின்றது. இனிமேல் இந்தப்படி செய்யாமலிருக்க நமது அரசியல் சுயராஜ்யத்தில் எவ்விதத் திட்டமும் இல்லை என்பதோடு, இந்த முறையைக் காப்பாற்றவும் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்றால் அறிவுள்ள மனிதன் எப்படி இந்த அரசியலை ஒப்புக்கொள்ள முடியும்?

[திருச்செங்கோட்டில், 1-9-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 6-9-1931]

இந்திய நாடு எவ்விதமான வளத்திலும் குறைந்தது அல்ல. இந்தியாவில் இராஜாக்கள், ஜமீன்தார்கள், மடாதிபதிகள், ஆச்சாரிய பீடங்கள், கோடீஸ்வரர்கள் மற்ற நாட்டிலுள்ளவர்களுக்குக் குறையாமல் உள்ளார்கள். வியாபாரிகளும் வியாபாரப் பொருட் களும் மற்ற நாடுகளைப் போலத்தான் இருந்து வருகின்றன.

விவசாயத் துறையிலும் ஏராளமான பூமிகள் இருப்பதும், அவற்றிற்கு அனுகூலமாக நீர் வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதாரர்கள் 1000 ஏக்கர், பதினாயிரம் ஏக்கர், சிலர் இலட்சம் ஏக்கர் நிலங்களை உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்பட வேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாக உள்ளது.

இப்படிப்பட்ட பல்வளமும் பொருந்திய இந்திய நாடு ஏன் தரித்திரமான நாடு என்றும், அடிமையான நாடு என்றும், ஏழைகள் பெருத்த நாடு என்றும் சொல்லப்பட்டு வருகின்றது?

முதலாவது, மேற்கண்ட வளமுள்ள செல்வம் எல்லா மக்களும் அடையத்தக்க மாதிரி யான சமூக அமைப்பு இல்லாமல்—செல்வங்கள் சில வகுப்பு மக்களுக்கே உரியவையாகவும் அனுபவிக்கத் தக்கவையாகவுமான சமூக அமைப்பு முக்கிய காரணமாகும்.

அதாவது, வருணாசிரம தருமப்படி—இன்ன இன்ன வகுப்புக்கு இன்ன இன்ன தொழில், இன்ன இன்ன உரிமை என்பதான திட்டமே நாட்டின் செல்வம் எல்லோருக்கும் பரவுவதற்கில்லாமல் தடை படுத்திக் கொண்டிருக்கிறது என்பது முதல் காரணம்.

இரண்டாவது, ஒரு வகுப்பு மக்கள்—அதாவது 100-க்கு 90 பேர்களுக்கு மேலாகக் கொண்ட சமூக மக்கள், அவர்களது வயிற்றுக்குப் போதுமான அளவுக்குமேல் பெற முடியாத நிபந்தனைக்குள்ளாக்கி வைக்கப்பட்டதுடன் அவர்கள் கையில் தங்கள் வயிற்றுக்கு வேண்டிய ஆகாரத்தின் அளவுக்கு மேற்பட்ட எந்தப் பொருளையும் வைத்திருக்க உரிமை இல்லாதவர்களாக்கப் பட்டிருக்கின்றது என்பது இரண்டாவது காரணம். இந்த உண்மைக்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில் நன்றாய்க் காணலாம்.

அதாவது, 'சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால் பிராமணன் பலாத்கார மாகப் பிடுங்கிக் கொள்ளலாம்', 'சூத்திரன் பொருளைப் பிராமணன் எப்படி வேண்டு மானாலும் கொள்ளை அடிக்கலாம்', 'அடிமையான சூத்திரன், பொருள் வைத்திருக்க உரிமை உடையவனல்லன்' என்கின்ற அனேக ஆதாரங்கள் இந்துமத சாத்திரங்களில் இருக்கின்றன.

இந்த மாதிரியான திட்டங்களை ஏற்படுத்த ஆதாரமாய் இருந்தது வருணாசிரம தர்மமேயாகும்.

வெள்ளைக்கார அரசாங்கத்தின் பயனாய் இந்தத் தர்மங்கள் சிறிது சிறிது மாற்ற மடைந்து ஏதோ நூற்றில் ஒருவர், ஆயிரத்தில் ஒருவர் செல்வவான்கள் ஆகவும், வருண முறை தவறிப் பணம் சம்பாதிக்க உரிமை உடையவர்களாகவும் ஆனாலும்கூட, அந்தப் பணமானது மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்—அதாவது, 'சூத்திரன் செல்வத்தைப் பிராமணன் எந்தவிதத்திலானாலும் கொள்ளை அடிக்கலாம்' என்கின்ற தர்மப்படி, சூத்திரன் செல்வத்தைக் கொள்ளை கொள்ளவே ஸ்தலம், கோவில், குளம், புண்ணியம், பாவம், சடங்கு முதலிய காரியங்களின் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகின்றன.

இந்தக் காரணத்தாலேயே சூத்திரர்களில் 100-க்கு 75 பேர்கள் கடன்காரர்களாகவே இருக்க நேரிட்டு இருக்கின்றது. இவை ஒருபுறமிருந்தாலும், இன்று பொருளாதாரக் கஷ்டத்தையே பெரும்பாலும் எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திப்பதற்காக இந்தியாவுக்கு சுயராஜ்யம் வாங்கித் தருகின்றதாகச் சொல்லும் அரசியல் தலைவர் திரு. காந்தி அவர்களும், இந்த வருணாசிரம முறையை அடிப்படையாகக் கொண்டு, சுயராஜ்யமே வேண்டு மென்று சொல்லிப் பாடுபட்டு வருகின்றார்.

ஆனால், இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு மயக்கம் ஏற்படலாம். அதாவது, திரு. காந்தியவர்கள் வருணாசிரம தர்மத்தைப்பற்றிப் பேசும்போது, தனது வருணாசிரம தர்மம் வேறு என்று சொல்லி வருகின்றதால் அது வேறாய் இருக்கலாம் என்று கருதலாம். அது எப்படி இருந்தபோதிலும் அதாவது, சாதி, உயர்வு தாழ்வு சம்பந்தமான காரியம் எப்படி இருந்தாலும், வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதிலும் அவனவனுடைய பரம்பரைத் தொழிலையே அவனவன் செய்ய வேண்டுமென்பதிலும் அவர் சந்தேகத்திற்கு இடம் இருக்கும்படியாகக்கூடப் பேசாமல்—தெளிவாகவே சாதிப் பாகுபாடுகளும், தர்மமும் (அவனவன் தொழில்) கண்டிப்பாய் அனுஷ்டிக்க வேண்டும் என்றே சொல்லுகின்றார். (அவர் எழுதியுள்ள 'பகவத் கீதை' மொழிபெயர்ப்பு 18-ம் அத்தியாயம், 41 முதல் 48 ஸ்லோகங்கள்)

இவை ஒருபக்கம் இருந்தபோதிலும், சமீபத்தில் பரோடா சமஸ்தானத்தில் அவர் பேசியபோதும் இக் கருத்தையே வலியுறுத்திப்பேசியிருக்கிறார். அதாவது, 'கிராமவாசிகள் செருப்புத் தைத்தல், ஆடுமாடு மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்யவேண்டும்; அவர்கள் பெட்டிகளில் அதிகப் பணம் வைத்திருக்கக்கூடாது; அவர்கள் பம்பாய் வியாபாரி களைப்போல் பணக்காரர்களாக இருக்க நினைக்கக்கூடாது' என்று பேசியிருக்கின்றார். ஆகவே, காந்தியவர்களால் கேட்கப்படும் சுயராஜ்யத்தில் இந்திய மக்களின் பொருளாதார நிலை எப்படி முன்னுக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்?

மேலும், நமது மக்களின் மதத் தத்துவமே இவ்வுலக வாழ்க்கை 'பொய்' என்பதும் 'மாய்கை' என்பதும்; செல்வத்தை—மோட்சத்தில் இடம்பிடித்து வைக்கவும், அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவியாய் பிறக்க ஏற்பாடு செய்துகொள்ளவும் செலவழிக்கவேண்டும் என்கின்றதுமான எண்ணங்கள் செல்வங்களைப் பாழாக்கிவிடுகின்றன. அன்றியும், பாடுபடுகின்ற மக்களுக்குத் தங்கள் மதக் கடமை, சாதிக் கடமை என்பது மாத்திரமல்லாமல் முன் ஜென்மக் கர்மத்தின் பயன் என்றும் எண்ணும் எண்ணங்களையே புகுத்தப்பட்டு, தங்கள் கஷ்டங்களையும் தரித்திர நிலைமையையும் உணராமல் இருந்து வருகின்ற குணமும் தகுந்த பயனை அடையமுடியாமல் செய்துவிடுகின்றன. இவை தவிர, நம் நாட்டு தர்ம ஸ்தாபனங்கள் ஏராளமான செல்வங்களைத் தம்முடையதாக்கிக்கொண்டு அவைகள் மக்களுக்குப் பயன்படாமல் வீணாக்கப்படுகின்றன.

சாதாரணமாக, சென்னை மாகாணத்தின் சர்க்காரார் வரி எவ்வளவு இருக்குமோ, அதில்—4-ல் 1 பங்குக்குக் குறையாமல் இம் மாகாணத்தில் வரும்படி வரத்தக்க சொத்துக்கள் கொண்ட தர்மஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவற்றின் மற்ற செலவுகளுக்கென்று நமது மக்களால் செய்யப்படும் செலவுகளின் மொத்தம், நாம் செலுத்தும் வரித் தொகைக்குக் குறையாதென்றே சொல்லலாம். இவை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படாததோடு வீண் செலவினமாகவே ஏற்பட்டுவிடுகின்றன.

அன்றியும், தர்ம ஸ்தாபனங்களில் வரும்படி இல்லாமல் வெறும் முடக்கமாய் இருக்கும் சொத்துக்கள் தங்கம், வெள்ளி, கல் நகைகள், இடங்கள் முதலியன கோடிக்கணக்கான ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவு உள்ள சொத்துக்கள்—யாதொரு பிரயோசனமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றன.

இவை ஒரு புறமிருக்க, 'இராஜாக்கள்' என்றும், 'ஜமீன்தார்கள்' என்றும் ஏற்பட்ட கூட்டங்கள் அனுபவிக்கும் பொருள்கள்—மற்றும் அவர்கள் நகை, பொக்கிஷம், புதைத்து வைத்திருப்பது முதலிய செல்வங்களின் அளவு நூற்றுக்கணக்கான கோடி என்றே சொல்லலாம்.

இவ்வளவும் தவிர, இந்திய மக்களின் வருமானம் என்பதோ அவர்கள் தங்களது தொழில் முறைகளைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாததால் பிரயாசை அதிகமும், சாமான் யோக்கியதைக் குறைவும், உற்பத்திக் குறைவும் இதனால் வரும்படி குறைந்ததுமாக இருப்பதுடன், மனிதனுடைய தேவைக்கும், போக போக்கியங்களுக்கும் வேண்டியவை களுக்கெல்லாம் ஏழை முதல் செல்வவான், மகாராஜாக்கள் வரை, வெளிநாட்டுப் பொருள் களையே உபயோகிக்க வேண்டியவர்களாகி—அதன்மூலம் செல்வம் ஏராளமாய் வெளியில் போய் விடுவதால் ஒருவித நஷ்டத்தையும் அடைய வேண்டியதாக ஏற்பட்டு விடுகின்றது.

ஆகவே, இத்தியாதி காரணங்களால் நாட்டில் பெரும்பாகமான மக்கள் ஏழைகளாக—தரித்திரர்களாக இருக்கக் கடமைப் பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

பொருளாதாரத் துறையில் இந்திய நாடு முற்போக்கடைய வேண்டுமானால் அதன் அஸ்திவாரமான காரணங்களையெல்லாம் கவனிக்காமல், மக்களுடைய மதியீனத்தையும் பகுத்தறிவற்ற தன்மையையும் ஆதரவாய் உபயோகித்துக் கொண்டு, வெளிநாட்டுத் துணியை மறியல் செய்வதாலும், கதரை வாங்கிக் கட்டுவதாலும், கள்ளுக் கடைகளை மூடி விடுவதாலும் பொருளாதாரத் துறையை சரிப்படுத்திவிடலாம் என்று சொல்லுவது ஒரு நாளும் நாணயமானதோ, அறிவுடைமையானதோ, காரியத்தில் பயன் கொடுக்கக் கூடியதோ என்பதாகச் சொல்லிவிட முடியாது.

இந்தியாவின் பொருளாதாரத் துறையைச் சீர்படுத்துவதற்கு முதலாவது வருணா சிரம முறை ஒழிய வேண்டும்; இரண்டாவது, மதசம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்; மூன்றாவது, கோவில், குளம், சடங்கு, சாத்தான்—'சனி விலக்கு' ஆகிய



கோயம்புத்தூர் யுனைடெட் மோட்டார் கட்டடத்தில், 3-10-1965-ல் நடந்த நிகழ்ச்சியில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு, தொழில் மேதை G.D. நாயுடு மாலை அணிவிக்கிறார். பெரியாருக்கு (வலப் பக்கம்) அறிவியல் அறிஞர் சர் சி.வி. இராமன் அமர்ந்துள்ளார்.

எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும். பிறகு அரசன், ஜமீன்தாரன் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாக வேண்டும்.

['குடி அரசு'-தலையங்கம்—13-9-1931]

2. செல்வம் பெருக வழி

தலைவரவர்களே! தோழர்களே!

நம்மிடத்தில் நமக்குப் போதுமான பொருள் இல்லையா? இல்லாதிருக்குமானால் அதற்குக் காரணம் என்ன என்பவைகளை யோசனை செய்து பாருங்கள்!

நாம் பொருள் சம்பாதித்துக் கடவுளைக் கும்பிடுகிறோமே ஒழிய—எந்த விதத்தில் பாடுபடவேண்டும், எதனால் பொருள் கிடைப்பதில்லை—என்று யோசிப்பதில்லை. நாம் கல்விக்கு எப்படி சரஸ்வதி என்ற ஒரு தெய்வத்தை உண்டாக்கி வணங்கி வருகின்றோமோ அதுபோலவே தான், நமது நாட்டுச் செல்வத்துக்கு ஒரு பெண் தெய்வமாகிய இலட்சுமியைத் தெய்வமாக உண்டாக்கி வணங்குகின்றோம். ஆகையால், ஒருவன் தான் ஏழையாக இருந்தால் தனக்கு இலட்சுமி கடாட்சம் இல்லை எனச் சுலபமாக எண்ணிக் கொண்டு, இலட்சுமி கடாட்சத்தையடையக் கையில் உள்ளதையும், கடன் வாங்கியும் செலவு செய்கிறான். பணக்காரனாய் இருப்பவனும் தனக்கு இலட்சுமி கடாட்சம் இருப்பதாக நினைத்துக்கொண்டு அதற்கே தனது சொத்தைச் செலவு செய்து வருகிறான்.

ஓர் ஏழை ஒரு நாள் முழுவதும் கஷ்டப்படுகிறான். அவன் காலை ஆறு மணிக்கு மண்வெட்டியைப் பிடித்தானானால் பகல் ஒரு மணிக்குத்தான் கீழே வைக்கிறான். கொஞ்சம் ஏதாகிலும் ஆகாரம் உட்கொண்டு மீண்டும் ஒன்றரை மணிக்கு மண் வெட்டியைப் பிடித்தானானால் மாலை ஆறரை அல்லது ஏழு மணிக்குத்தான் கீழே வைக்கிறான். இவ்வாறு அவன் ஓய்வு இல்லாமல் கஷ்டப்பட்டும், அவனுடைய வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் கடவுளின் 'கிருபை' எனவும், தனக்கு இந்த வேலையையே செய்து பிழைக்கத் தலையிலே பிரமன் எழுதி விட்டான் என்றும் கருதிக் கொண்டு, வாழ் நாள் கழிய மண் வெட்டியை நம்பிக்கொண்டு இருக்கிறான்.

அதுபோலவே, சிறிதும் பாடுபடாமல் ஒருவன் பணக்காரனாய் இருக்கின்றானே எனக் கேட்டால், 'இலட்சுமிதான் போட்டு விட்டாள்' என்பதாகச் சொல்லுகிறான். ஆகவே, இந்த இரண்டுவித நிலைமைகளுக்கும் ஒரே காரணத்தை உரைக்கின்றார்களே யல்லாமல், நாம் உண்மை அறிய ஆராய்வதில்லை.

மேல் நாட்டுக்காரர்கள் தங்களுடைய அறிவைத் தினம் தினம் விருத்தி செய்து கொண்டே வருகின்றார்கள். பல துறைகளையும் ஆராய்ந்து, பலவித தந்திரங்களையும் அத் துறைகளில் ஆராய்ச்சி செய்து மென்மேலும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றார்கள். தங்கள் தொழில் முறையைத் தாங்களாகவே மாற்றுகிறார்கள். ஒரு தொழிலிலிருந்து மற்ற தொழிலுக்குத் தாராளமாய்ப் பிரவேசிக்கிறார்கள். தங்கள் முன்னேற்றத்திற்கும் தங்களையே பொறுப்பாக்கிக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். தலைவிதியையும் நல்ல காலத்தையும் எதிர் பார்த்து அவர்கள் சும்மா இருந்து விடுவதில்லை. உதாரணமாக, முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்கும், இப்போது கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்குமுள்ள வித்தியாசங்களை நாம் கவனித்தோமானால், மேல்நாட்டுக்காரன் தொழில் முறையில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்து இருக்கிறான் என்பது புலப்படாமல் இராது.

ஆனால், நாமோ ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டை வண்டிகளினின்றும் இன்னும் சிறிதும் முன்னேற்றம் அடையாமல் இருக்கின்றோம். வேண்டுமானால் இரும்பு ஆணிகளுக்குப் பதிலாக வெள்ளி முலாம் பூசிய ஆணிகளை உபயோகிப்பதில் மட்டும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம்.

தொழிலில் நாம் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம், அதில் மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து அதாவது—பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரரென நான்கு வருணங்களாகப் பிரித்து—100-க்கு 90 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தைச் சூத்திரர்கள் எனத் தாழ்த்தி, சூத்திரர்களுக்கு வயிற்றுக்கு மட்டும் உண்ணப் போதுமான உணவிருந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமெனவும், அவர்கள் மற்ற மூன்று வருணத்தாருக்கும் தங்களுடைய சரீரத்தால் பாடுபட்டு உழைக்க வேண்டும் எனவும் எழுதிவைத்துக்கொண்டு, அதற்கு அத் தருமங்களின்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் எனவும், அதனின்றும் தவறக்கூடாதெனவும், தவறினால் பாபமெனவும் உரைக்கப்பட்டு வந்ததோடு, அரசர்களும் இந்தச் சட்டத்தைக் காப்பாற்றி வந்ததே நாம் தொழில்விருத்தி இல்லாமற் போனதற்குக் காரணமாகும்.

இவ்வித நிலைமையின் பயனாய்—பணம் சம்பாதிப்பவர்கள், சீர்படுபவர்கள் யார் என்பதை யோசித்துப் பாருங்கள். பிராமணர்களுக்கும், சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்குமேதான் பணம் மென்மேலும் சேருமேயாதலால் இந் நிலையில் யார் எவ்வளவு பாடுபட்டாலும் தொழிலாளிகளாகிய ‘சூத்திரர்’களிடம் ஒரு நாளும் பணம் சேராது என்பதோடு, வயிற்றுக்கு வேண்டிய அளவுகூட உணவு கிடைப்பதும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

இவ்வித நிலையில்தான் மக்கள் தங்களுடைய முயற்சியில் கவலையற்றவர்களாய் இருந்து, கடவுள்மீது பொறுப்பைப்போட்டு அடுத்த ஜென்மத்தில் பணக்காரர்களாகப் பிறப்பதற்குத் தங்கள் குறைந்த வரும்படியான பணத்தையும், நேரத்தையும் செலவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். கடவுள் உணர்ச்சியேதான் அவர்கள் விடுதலை அடைவதைத் தடுத்துக்கொண்டே இருக்கிறது.

ஆகவே, பொருளாதாரத் துறையில் நாம் விடுதலை அடைந்து முன்னேற்றம் அடைய வேண்டுமானால்—நாம் கவலை உள்ளவர்களாகி, நம்மை ஏமாற்றிச் ‘சூத்திரர்’களாக்கியவர்களுடன் சண்டை போட்டேதான் தீரவேண்டும். ஆதலால், நாம் அதற்காகக் கவலையில்லாமல் இருந்தாலும், அக் கட்டுப்பாட்டை ஒழிக்காமலிருந்தாலும் ஒருநாளும் முன்னேறவே முடியாது.

‘நமது பெரியவர்கள் எப்படி இருந்து வந்தார்களோ அப்படியே இருக்கவேண்டுமே ஒழிய புதிய மாதிரியில் நடக்கலாமா’ என்று நாம் கருதிக்கொண்டு இராமல், ‘இரண்டு அணாவில் இருந்து இரண்டு ரூபாய் எவ்வாறு சம்பாதிக்க முடியும்? ஏன் சம்பாதிக்க முடியாது? மற்றவர்கள் எப்படிச் சம்பாதிக்கின்றார்கள்? மற்ற நாட்டில் உள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? எப்படிச் சம்பாதிக்கிறார்கள்?’ என்பவைகளை யோசனை செய்து, முன்னேறும் மார்க்கங்களைக் கண்டு பிடித்து, அவற்றை நடைமுறையிலும் கொண்டு வந்தால்தான் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும்.

ஒருவன் இரண்டு மாடுகள், ஒரு வண்டி, ஒரு மனைவி, இரண்டு குழந்தைகளையுடையவனாக இருந்தால் அவன் வண்டி யோட்டிச் சம்பாதிக்கும் பணத்தால் 6 பேர்களைக் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கிறான். இவ்வாறு கஷ்டப்படுவதினின்றும் விடுதலை அடைய வேண்டுமானால் இயந்திரங்களினால் எவ்வளவுக் கெவ்வளவு நம்முடைய வேலையைச் சுருக்கிக் கொண்டு, குறைந்த நேரத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக விருத்தி செய்யமுடியுமோ அவ்வாறு செய்தால் மட்டுந்தான் நாம் விருத்தி அடைய முடியும்.

[சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—‘குடி அரசு’ 28-6-1931;
‘விடுதலை’ 8-10-1951]

3. தரகர்கள்

தரகர்கள் என்பது பெரும்பாலும் வியாபாரிகள் என்பதையே குறிக்கும். வியாபாரிகள் என்பவர்கள் அனேகமாக சரக்குகளை உற்பத்தி செய்யும் விவசாயக்காரர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கும்—அச் சரக்குகளை வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்கள் என்பவர்களுக்கும் இடையில் இருந்துகொண்டு குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதிப்பவர்களேயாவார்கள்.

பணம் சம்பாதித்து முதலாளிகளாக ஆவது என்பதற்கு அல்லாமல் வேறு எந்தக் காரியத்துக்கும் இந்தக் கூட்டத்தார்கள் உலகிற்குத் தேவையில்லை.

இவர்களினாலேயேதான் விவசாயம் செய்யும் விவசாயியும் சாமான்கள் செய்யும் தொழிலாளியும் என்றென்றைக்கும் ஏழைகளாகவும் தரித்திரர்களாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால், இந்த இருதரத்தாருமேதான் உலகம் நடைபெறுவதற்கு ஆதாரமாய் இருந்துவருகிறார்கள். அப்படியிருந்தும், இவர்களது குறைந்த அளவு தேவைகளையோ, நலனையோ கூடக் கவனித்து உலகில் எந்தமதமும் எந்த அரசாங்கமும் நாளதுவரை கவலையெடுத்துக் கொண்டதேயில்லை.

மனிதன் எப்பொழுது இயற்கைக்கு விரோதமாக வாழ்க்கை நடத்த நினைத்தானோ அல்லது இணங்கினானோ அன்றுமுதல் மனிதன் பாடுபட வேண்டியவனானான். ஆதலால், மனிதன் பாடுபடுவதைப் பற்றி நாம் பரிதாபப்படவில்லை. ஆனால், அந்த பாட்டின்—உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல், சும்மா இருக்கும் (உழைக்காத) சோம்பேறி அடைவதென்றால் இது எந்தமுறையில் நியாயமாகும்?

இங்கு இந்தச் சாக்கில் பொது உடைமையைப் பற்றிப் பேசவோ, சமதர்மத்தைப் பற்றிப் பேசவோ நாம் வரவில்லை. நீதி, நியாயம் என்பது வேண்டாமா என்றுதான் கேட்கின்றேன்.

உழைப்பாளிக்கும், விவசாயிக்கும், பண்டங்களைச் செய்யும் பாட்டாளிக்கும் வீடில்லை; கல்வியில்லை; சரீர சவுக்கியமில்லை; உடலில் வலிவு இல்லை; அறிவும் இல்லை என்றால் அவர்கள் உலகத்தில் ஏன் இருக்கவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

விளைபொருள்கள் 100-க்கு 100 விலை அதிகம் விற்று கொள்ளை இலாபம் வந்தாலும் விவசாயக் கூலியானவன் பஞ்சகாலத்தில் வாழ்வதுபோல் வாழவேண்டி யிருக்கின்றதைப் பார்க்கின்றோம். அபோலவே, உற்பத்திசெய்த சாமான்கள் 100-க்கு 100 பங்கு இலாபத்துக்கு விற்று இலாபம் பெற்றாலும் தொழிலாளி கைக்கும் வாய்க்கும் கணக்கு சரியாகும்படிதான் வாழ்கின்றான். இவை கவனிக்கப்பட வேண்டியதுதான்–அரசியல்வாதிகள், சமுதாய இயல் வாதிகள் கடமை என்பதோடு, ஒரு நல்ல அரசாங்கத்தினுடையவும், ஒரு உண்மையும் யோக்கியமும் பொருந்திய மதத்தினுடையவும் கடமையாகும் என்பது நமது அபிப்பிராயம்.

அதை விட்டுவிட்டு, இதெல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி விட்டு, இதற்காக யாதொரு காரியமும் செய்ய வேண்டியதில்லை யென்றும் சொல்லப்படுமானால்—தூக்கு மரங்களையும், சிறைக் கூடங்களையும் பெயர்த்து அழித்து விட்டு, கொலைகளையும், திருட்டுகளையும் பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் அவைகளையும் கடவுள் செயல் என்று ஏன் சொல்லிவிடக் கூடாது என்று கேட்கின்றோம்.

இந்தக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகப் பிரமாதமான முறை எதையும் சொல்ல வரவில்லை. உண்மையிலேயே விவசாயிகள்—பூமிக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கின்றவர்கள் முதற்கொண்டு வாரத்துக்கு, குத்தகைக்கு உழுபவர்கள் உட்பட விவசாயக் கூலிகள் வரையில்—கடன்காரர்களாகவே தரகர்களுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் உழைத்து, உழைத்துப் போட்டுவிட்டு பட்டினி கிடப்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் ஏன் இப்படி இருக்கவேண்டும், தொழிலாளிகளும் ஏன் இப்படியே இருக்க வேண்டும் என்பதைச் சிறிது கவலையுடன் யோசித்து, தக்கது செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

அதற்கு நாம் சொல்லும் மார்க்கம் மிக மிகச் சுருக்கமானதும் சுலபமானதும் ஆகும். இதில் பலாத்காரமோ சமாதான பங்கமோ இருக்கவோ, ஏற்படவோ இடம் இல்லை.

அதாவது, விவசாயக்காரன் சர்க்காரிலேயோ அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயோ தவிர வேறு எங்கும் கடன் வாங்க மார்க்கம் இல்லாமலும், அவனுக்கு வேறு தனிப்பட்ட நபர் யாரும் கடன் கொடுக்காமலும் செய்யவேண்டியது முதன்மையான காரியமாகும். அதோடு, விவசாயத்தில் ஈடுபட்ட கூலியாட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒருபங்கு இருக்கும்படி செய்யவேண்டும்.

பிறகு விளைபொருள்கள், அதாவது ஆகார சாமான்கள், கூட்டுறவு பண்டகசாலைகளே விலைக்கு வாங்கி, அதாவது விவசாயிக்குக் கட்டும்படியான விலைக்கு வாங்கி அக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவே வாங்குபவர்களுக்குக் குறைந்த இலாபத்தில் விற்பனை செய்யவேண்டும். இதனால் யாருக்கும் கஷ்டம் ஏற்படாது. அதிக இலாபம் வைத்து விற்பதானாலும் அந்த இலாபம் சாமான்கள் விற்ற விவசாயிகளுக்கு, வாங்குகின்ற மக்களுக்கும் உபயோகப்படும்படியே செய்யவேண்டும்.

இதன்படி செய்வதாயிருந்தால் மிடில்மென் (Middle men) அதாவது தரகர், வியாபாரி என்கின்ற கூட்டங்களுக்கு நாட்டில் தேவையே ஏற்படாமல் போய்விடும். அப்போது அனாவசியமாக ஏராளமான பணக்காரர்கள் உற்பத்தியாக மாட்டார்கள் என்பது மாத்திரமல்லாமல், உண்மையிலேயே விவசாயக்காரர்களுக்கு நஷ்டமும்கஷ்டமும் இல்லாமல் போவதுடன் மனிதத் தன்மைக்கு வேண்டிய சகல காரியங்களும், விகிதாச்சாரப்படி அவனும் அடைய சவுகரியம் ஏற்பட்டுவிடும்.

தொழிலாளர்கள் விஷயத்திலும், மனித சமூகத்திற்கு வேண்டிய அனுபவ சாமான்கள் யாவும் இக் கூட்டுறவு முறையினாலேயே செய்யப்பட்டு இக் கூட்டுறவு முறையினாலேயே வினியோகிக்கப்படுமானால் மில் முதலாளிகள் என்கின்ற கூட்டம் எப்படி உற்பத்தியாகும் ; அவர்களுக்கு வேலைதான் ஏது ? ஒரு வஸ்துவின் இலாபத்தை அந்த வஸ்துவைப் பாடுபட்டுச் செய்தவனாவது அல்லது பாடுபட்ட பணத்தைக் கொடுத்து வாங்குபவனாவது அனுபவிக்க வேண்டுமே யல்லாமல், சும்மாயிருக்கும் சோம்பேறித் தரகன் ஏன் அனுபவிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேனே ஒழிய, யாரையும் நான் தூக்கில் போடும்படியோ சிறையில் வைக்கும்படியோ சொல்லவில்லை. பிறகு தொழிலாளிகள் இருக்கும் இடங்களில் குறைந்தது அய்ந்துமைல் சுற்றளவு தூரத்திற்காவது கள்ளுக் கடைகளோ, மார்வாடிகளோ, நாட்டுக்கோட்டையார்களோ இல்லாமல் இருக்கும்படி செய்துவிட்டு, அவர்களுக்குத் தேவையான பணத்தைத் தொழிற்சாலை நிர்வாகிகளிடமே வாங்கிக் கொள்ளும்படி செய்துவிட்டு, இலாபத்தில் ஒரு பகுதியோ, அல்லது அத் தொழிலாளிக்கும் போதிய அளவு தாராளமான கூலியைக் கொடுத்து, அக் கூலியைச் சாமான்மீது வைத்து விற்கும்படியாகவோ செய்துவிட்டால் தொழிலாளிகளைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமே இருக்காது.

இந்த இரண்டு காரியங்கள், அதாவது விவசாயி விஷயமும், சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிலாளி விஷயமும் இந்த முறையில் முடிவு செய்யப்பட்டு விட்டால் உலகில் வேறு எவ்விதமான நெருக்கடிகளும் இருக்காது என்பதோடு, அரசியல் நிர்வாகத்துக்கும் இவ்வளவு கஷ்டமும் பளுவும் இருக்க நியாயம் இல்லாமல் போய்விடும்.

இதற்காக இப்போது நமது அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளெல்லாம்—கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பலப்படுத்தி, அவைகளை இன்னும் சற்று அதிகக் கவனத்துடன் மேற்பார்வை பார்த்து நிர்வகிப்பது என்ற ஒன்றே போதுமானது என்று சொல்லுவோம். இன்று இந்த நாட்டில் S.S.L.C., B.A., M.A. படித்துவிட்டு மக்கள் ஆயிரம், பதினாயிரக்கணக்காய் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றதை நேரில் பார்க்கின்றோம்.

இவர்களில் அனேகர் போலீஸ் கான்ஸ்டபிள் வேலைக்குக்கூட வரத் தயாராய் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யாமல் எத்தனை நாளைக்கு விட்டு வைத்துக் கொண்டிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

மேலும், இந்த நாட்டில் ஏதாவது அரசியல் கிளர்ச்சி உண்மையில் இருக்கின்றது என்று சொல்லப்படுமானால்—இந்த மாதிரி வேலையில்லாத ஆட்களுடைய கஷ்டமே அப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சிக்குக் காரணமாகும். ஆதலால், அப்படிப்பட்ட தொல்லைகளும் ஒருவாறு ஒழிந்து, மக்கள் சமாதானத்தோடு வாழ்வதற்கும் அனுகூலமாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

இன்று நடக்கும் கூட்டுறவுச் சாதனங்கள் என்பவை தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கிரிமினலுக்கு இடமில்லாமல் நடைபெறுகின்றன என்பது ஒரு அளவுக்கு திருப்தியானாலும், ஆந்திர தேசத்தில் பெரும்பாலும் மோசடியாகவே நடைபெற்று அனேக வழக்குகள் கிரிமினலுக்குப் போவதாகக் கேள்விப்பட்டோம்.

ஆதலால், கூட்டுறவு இலாக்கா சற்று விரிவடைந்து இன்னமும் அனேக துறைகளில் பிரவேசித்துத் தக்க மேற்பார்வையுடனும் உண்மையான நல்ல எண்ணத்துடனும் ஏழை மக்களுக்கும் பாடுபடும் உழைப்பாளி மக்களுக்கும் உதவும்படியாகவும் நடைபெறச் செய்ய வேண்டும் என்கின்ற ஆசையினால் இதை எழுதுகின்றோம்.

['பகுத்தறிவு'—கட்டுரை—2-12-1934]

தோழர்களே!

நம் நாட்டிலுள்ள விற்பனை வரியினால் இயற்கையாகவே மனிதனின் ஒழுக்கம் தானாகவே கெட்டுவிடுகிறது. நம் சர்க்கார் ஜனநாயக ஆட்சி நடத்துகிறது. நாம் ஒழுக்கமுடன் நடக்கவேண்டும்; ஒழுக்கத்தை உத்தேசித்து விற்பனை வரியை எப்படியாவது அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும். உலகில் 100-க்கு 90 நாடுகளில் விற்பனை வரியே கிடையாது. இதற்கு வேண்டிய பரிகாரம் பற்றி நன்றாக யோசித்துச் செயல்முறைக் கமிட்டி (Action Committee) ஒன்றை ஏற்படுத்தவேண்டும். வெற்றிபெற்றவர்கள் எந்தவிதக் கிளர்ச்சிகளைக் கையாண்டனரோ அந்தவிதக் கிளர்ச்சிகளையே நாமும் பின்பற்றவேண்டும். எந்தவிதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் நாம் தயாராக இருக்கவேண்டும். நம் தீர்மானத்தின் போக்கு, பேச்சாளர்களின் வேகமான பேச்சு, இவைகளைக்கண்டு சர்க்கார் உள்ளபடியே பயப்படவேண்டும். 'விற்பனை வரியை நீக்காவிட்டால் 15 நாட்கள் வரை கடைகளை அடைப்போம்' என்று சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படியும் சர்க்கார் பணியவில்லையானால் 16-ம் நாள் மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதாவது, 'விற்பனைவரியை நீக்காவிட்டால் இரயில் தண்டவாளங்களைப் பெயர்ப்போம்' என்று! அவ்வளவு தூரத்துக்கு முடியுமா என்றால், இந்தப்படி சொல்லுவதற்காவது நமக்குத் துணிச்சல் வேண்டும்.

தோழர்களே! விற்பனைவரி ஒழுங்கானதல்ல; யாரையும் விட்டதல்ல; எல்லா மக்களும் இவ்வரியால் பாதிக்கப்படுகின்றனர். உங்களுக்குக் கிளர்ச்சிகளில் உதவிசெய்ய ஏராளமான பொதுமக்கள் உள்ளனர். மற்றும், கட்சிச் சார்பற்று ஒரு பொதுப்பணியை ஏற்கப் பலர் காத்திருக்கின்றனர்.

சும்மா வெறுமனே 'ஒரு முனை விற்பனை வரி போடு' என்று வீதிகளில் அட்டை தாங்கிச் சென்றால் மட்டுமே பிரயோசனம் இல்லை; சர்க்காரும் நம்மை மதிக்காது. நாம் கவலையோடு அனைவரும் ஒன்றாகக் கூடிக் கிளர்ச்சி செய்தால் வெற்றி நிச்சயம் பெறுவோம்.

மேலும், வரிபோடுவது என்றால் ஜனங்கள் வேதனைப்படாமலிருக்கிற மாதிரி வரி போடவேண்டும். Direct and Indirect tax போடவேண்டும். வரிகட்டுபவனுக்கு

வரிகட்டுவது தெரியாத மாதிரி—அதாவது அவன் கட்டுகிற வரி அவனுக்கு ஒரு சுமையாக இல்லாதமாதிரி வரிபோடவேண்டும்.

வருமான நிலையங்களை சர்க்கார் மேற்கொள்ளவேண்டும்.

எல்லா மில்களையும், மற்றும் பெரிய கம்பெனிகளையும், எவை எவை பொது மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவோ அவைகளையெல்லாம் சர்க்கார் தைரியமாய் மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால், ஒருவன் கொள்ளை இலாபம் அடிப்பதை நிறுத்த முடியும். மற்றும், அப்படிச் செய்வதால் சர்க்கார் வரவு செலவு நிலைமையை நல்ல தன்மையில் வைத்திருக்கவும், மக்களுக்கும் தொல்லை ஏற்படாமலிருக்கவுமாக இருக்க முடியும். அப்படிச் செய்யாமல், இன்று சர்க்கார் நடப்பில் பெரிய முதலாளிகளுக்குத் தனிச் சலுகைகளையெல்லாம் காட்டி, அவர்களைக் கொள்ளையடிக்க விட்டுவிட்டுப் பொது மக்கள் உயிரை வாங்குகிறது.

[ஈரோட்டில், 27-12-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-12-1953]

4. கூட்டுறவு

தலைவரவர்களே! தோழர்களே!

நான் (கோவாப்பரேடிவ்) கூட்டுறவு சங்கங்கள் என்ற விஷயத்தில் ஆதியில் கொஞ்சம் அக்கறை கொண்டவனாய் இருந்தவன். முதன்முதலில், நம்முடைய சென்னை ரிஜிஸ்ட்ரார் தோழர் இராமச்சந்திர ராவும், அதுசமயம் டிப்டி கலெக்டராக இருந்த தோழர் நாராயணசாமி அவர்களும் இங்கு கோவாப்பரேடிவ் ஸ்தாபனம் ஏற்படுத்த என்னிடமே வந்தார்கள். எங்கள் வீட்டில்தான் கூட்டம் கூட்டப்பட்டது. பாங்குப் புத்தகத்தைப் பார்த்தாலும் நான்தான் முதல் பங்குக்காரனாக இருப்பது தெரியவரும். அதற்காகப் பெரிதும் நானும் அந்தக் காலங்களில் உழைத்திருக்கிறேன். என்றாலும், இன்றைய நிலைமையானது நான் கோவாப்பரேடிவ் சொசைட்டிகளிலிருந்து சிறிது விலகி அலட்சிய அபிப்பிராயமுடையவனாக இருக்கிறேன். ஏனெனில், எங்கு பார்த்தாலும் கட்சியும், சுயநலத்துக்கு ஸ்தாபனங்களை உபயோகித்துக்கொள்வதும், அதன் உத்தேசங்களுக்கு விரோதமாகப் பணக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துவதுமாய் இருந்து வருவதுமேயாகும். தோழர் கணபதி அய்யர் அவர்கள் சிறிது நேரத்துக்கு முன்பு என்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது நம்முடைய நிலைமையானது இப்படித்தான் இருக்கமுடியும் என்று குறிப்பிட்டார். அது மிக உண்மையேதான். ஏனெனில், நம்நாட்டில் நிலைபெற்றுள்ள பல்வேறு விஷயங்களையும், முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜன சமூகத்திற்கு நன்மையைக் கொண்டுவந்துவிடுவது என்பது கொஞ்சமும் முடியாத காரியமாகும்.

ரஷ்ய நாட்டின் கூட்டுறவு முறைகளைப்பற்றிப் பேசுவேன் என்று உங்களுக்குத் தலைவர் எடுத்துச் சொன்னார். சர்வ விஷயத்திலும் அய்க்கியபாவமான கூட்டுறவு முறையானது சாத்தியப்படுமா என்று ஒரு காலத்தில் கருதியிருந்தேன். ஆனால், எனது மேல்நாட்டு அனுபவங்களினால்—அதுவும் குறிப்பாக ரஷ்யாவின் கூட்டுறவு முறைகளைக் கவனித்துப் பார்த்ததினால் கூட்டுறவு முறையைப்பற்றிய எனது எண்ணம் சாத்தியமாகக் கூடியதென்று மிக்க பலமாக உறுதிப்பட்டது.

என்னைப் பொறுத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக்கொண்டிருந்தபோதிலும் எனது முடிவான இலட்சியம்—அதாவது, எனது எண்ணம் ஈடேறுமானால், அது உச்ச ஸ்தானம்பெற்ற உயரிய கூட்டுறவு வாழ்க்கை முறையாகத்தானிருக்கும் என்பதுதான் எனது அபிப்பிராயம். கூட்டுறவு என்கிற உயரிய—சரியான நிலையானது நம்முடைய நாட்டில் ஏற்பட்டுப்போனால் ஜனசமூகமானது கவலையற்று, சஞ்சலமற்று

நாளைக்கு என்செய்வோம் என்று ஏங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலைமையற்று நிம்மதியாக—சவுக்கியமாக—குதூகலமாக வாழவழி ஏற்பட்டுவிடும்.

நம்முடைய நாட்டில் ஏதாவது ஒரு சங்கம் ஏற்பட்டால் அதைப்பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்களென்றால்—அதில் தங்களுக்கு எவ்வளவு தூரம் இலாபமிருக்கிற தென்றும், அதைத் தங்கள் பெருமைக்கும், வாழ்வுக்கும் எவ்வளவு தூரம் (சுயநலத்திற்கு) பிரயோஜனப் படுத்திக் கொள்ளலாமென்றும்தான் கருதிக்கொண்டு, அதில் சம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறார்களே ஒழிய, அதனால் உலக நன்மைக்கு—ஜனசமூக மேம்பாட்டிற் குப் பாடுபட வேண்டுமென்பதைப் பற்றிய கவலையை அறவே விட்டு விடுகின்றார்கள்.

அதுபோலவே, நம்முடைய கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்களிலும் இருந்து வருகிறது. அந்த ஸ்தாபனத்திலுள்ள மக்களுக்குள்ளாகவே கூட்டுறவு உணர்ச்சி கூடக் கிடையா தென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆனால், ஏதோ சிலர் அவரவர்கள் தங்களுடைய நன்மைக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும், கவுரவத்திற்காகவும் ஏதோ சம்பந்தம் வைத்திருப்பதனால் மாத்திரம் என்ன பலன் ஏற்பட்டு விடும்?

சாதாரணமாக, இந்த ஊர்க் கூட்டுறவு ஸ்தாபனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் 2000, 3000 பேர்கள் வரை பங்குதார மெம்பர்களாக இருக்கின்றார்கள். ஆனால் ஸ்தாபனத் தினால் உருப்படியாகப் பொதுமக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடுகிறது? ஒரு சில— சொற்பப் பேர்கள், ஏதோ எப்படிக் கடன் பெறலாமென்று பெருத்த பிரயாசை எடுத்துக் கொள்பவர்களே சில அனுகூலங்கள் அடைகிறார்கள். இவர்களுக்கு மேற்படி ஸ்தாபனத்தைப் பற்றிய கவலையே இல்லை. இன்றைய உலக எல்லா வாழ்க்கையும் இப்படித்தான் இருக்கிறது; வெறும் குற்றத்தையே பேசுவதால் பயனில்லை. ஆனாலும், இவைகள் தக்க படிப்பினையாக இருக்க உதவ வேண்டும். கூட்டுறவு வாழ்க்கையென்றால் பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது, எவ்வாறு உதவி செய்வது என்கிற விஷயங்களே நமது வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாய் இருக்கவேண்டும். இவைகளில் தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பதே கூடாது.

சாதாரணமாக, நாம் நம்மிடையே ஒருவரைப் புதிதாகக் கண்டால், அதாவது சந்தித் தால் அவருடைய நிலை என்னவென்றும், உத்தியோகம் என்னவென்றும் வினவ ஆசைப் படுகிறோம். அவர் ஒரு பெரிய உத்தியோகஸ்தராகவோ, பணக்காரராகவோ இருந்தால் ஒரு தனி மதிப்பும்; ஒரு குமாஸ்தாவாக இருந்தால், கூலியாக இருந்தால் ஒரு தனி மதிப்புந்தான் கொடுக்கின்றோம். இதுதான் நம்முடைய நாட்டில் ஒரு மனிதனை மதிப் பதைப்பற்றிய முறையாகும். ஆனால், ரஷ்யாவிலோ இங்குள்ள இதுபோன்ற கேள்விகளை அங்கு யாரும் கேட்பதில்லை. அங்கு ஒருவருடைய உத்தியோகத்தைப் பற்றியோ, செல்வத்தைப் பற்றியோ சிறிதும் யோசிப்பதே இல்லை; விசாரிப்பதுமில்லை. ஒருவனைக் கண்டதும் அவன் (Social service) 'சமுதாய சேவை என்ன செய்திருக்கிறான்?' என்று மட்டுமேதான் பிரதானமாகக் கவனிப்பார்கள்; அதைத்தான் கேட்பார்கள். ஒருவர் பிறருக்கு என்ன நன்மை புரிய ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதுதான் மனிதனை அறிய முக்கிய தத்துவமாகும்; அதுதான் அங்கு அவருடைய பெருமையைக் காட்டுவதாகும். அங்கு உத்தி யோகத்தைப் பற்றிய பேச்சோ, வருமானமோ, மேல் கீழ் வரும்படி என்பது போன்ற பேச்சோ, எங்கும் எவ்வித ரூபத்திலும் கிடையாது. அங்கு எங்கும் யாவரும் சமுதாயவேலை செய்வோரேயாவர்.

நான் ரஷ்யாவில் இருந்த காலத்தில் ஒரு நியாயஸ்தலத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ஒரு குற்றவாளியை விசாரிக்கக் கண்டேன். அவன் ஒரு விசேஷ நாளில் குடித்து வெறியனாகிக் கலகம் செய்தான் என்பதான குற்றவாளி. அவனை அந்த விசாரணை ஸ்தலத்தில் என்ன கேள்வி கேட்டார்கள் என்றால் 'உன்னுடைய (Social Service Work) சமுதாய ஊழிய வேலை என்ன?' என்பதேயாகும். அவன் அதற்கு

எனக்கு (Social Service) சமுதாய வேலை இல்லை யென்றான். இதைக் கேட்டதும் நியாயாதிபதியும், ஜூரியான ஒரு பெண்ணும், "உனக்குச் சமுதாய வேலையில்லாமல் போய்விட்டது என்கிறாயே, வெட்கமில்லையா? 'என்னை உலகுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வகையற்றவனாக இருக்கிறேன்' என்று சொல்லுவது அவமான கரமானதாகத் தோன்ற வில்லையா?" என்று கடிந்தனர். அதற்கு அவன், 'எல்லா சோஷியல் சர்வீசையும் சிறு பிள்ளைகளாகிய 'கமசமால்' கூட்டத்தார் எடுத்துக்கொள்ளுகிறார்கள், நான் என்ன செய்வது?' என்றான். அந்தம்மாள், 'வெட்கம், வெட்கம்' என்றாள். இவைகளைக் கேட்ட பிறகுதான் சோஷியல் சர்விஸ் (Social Service) என்பவைகளைப் பற்றி அதிகம் அறிய விசாரணை செய்தேன். சமூக ஊழியம் செய்வதுதான் தங்கள் வாழ்க்கையின் கவுரவம் என்பதை முதலாவதாகவும், அடுத்தபடி கூட்டுறவு வாழ்க்கையே மேலானதாகவும் அவர்கள் கருதி நடக்கிறார்கள்.

ரஷ்யர்களுடைய வாழ்க்கையானது உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் சோஷியல் சர்விசும், கூட்டுறவு வாழ்க்கையும் நடத்த முனைந்து நிற்பதேயாகும். அவர்கள் வாழ்க்கையில் மேற்போட்டுக்கொள்ளும் இந்த வேலையானது—மனிதனுக்குக் கவலை, துன்பம், மனச் சோர்வு என்பவைகளே இல்லாமல் செய்துவிடுகிறது. அங்குள்ள சர்வ ஜனங்களுடைய எண்ணமெல்லாம், 'பிறருக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்யவேண்டும்' என்றே குடி கொண்டிருக்கிறது. இந்த நோக்க மில்லாத மனிதனை மனிதனல்லன் என்று வன்மையாக அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் உத்தியோகத்தின் பேராலும், மற்ற பதவிகளின் பேராலும் 1000, 2000, 5000, 7000 ரூபாய்களைக் கொள்ளை கொள்வது போன்ற கொடுமைகள் ரஷ்யாவில் கிடையாது. அங்கு உள்ளவர்களுக்குத் தனக்கு வேண்டிய அளவுக்குமேல் வரும்படி—இலஞ்சம்—இலாவண்யம் என்பன போன்றவைகளே அடியோடு கிடையாது. அங்கு ரூபாய் 10, 20 கூட கடன் கொடுக்கும் முறையோ, கடன்படும் முறையோ கிடையாது. அது குற்றமாகும்.

ஆனால், அந்த முறைகள் எல்லாம் நம்முடைய நாட்டின் இன்றைய நிலைமைக்குச் சாத்தியமில்லை என்று சொன்னாலும், நம்நாட்டு நிலைமைகளை எல்லாம் அடியோடு மாற்றி அமைத்துத்தான் ஆகவேண்டும். இக் கருத்தைத்தான் நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இது, சிறிது சிறிதாய் கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்களின்மூலம் செய்யலாம். நம்முடைய நாட்டில் அளவுக்குமீறிய செல்வச்செருக்கு கொண்டவர்களையும், கல்நெஞ்சம் படைத்த கனத்த முதலாளிகளையும் ஒரு பக்கத்தில் பந்தோபஸ்தாய் வைத்துக்கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களையும், பிச்சைக் காரர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கின்றன? இதுபோன்ற நிலைமை ரஷ்யாவில் இல்லையே! ஆதிக்கக்காரனுக்கும்–ஆதிக்கத்திற்கும் கொஞ்சமாவது இடமிருக்கிறவரையிலும் தொல்லைப்படுகிறவர்களும்–தொல்லையும், தரித்திரமும், ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

இன்று காலை முதல் மாலை வரையிலும் என்னிடம் வந்து 5, 6 பேர்கள்வரை வந்து, 'வேலை கொடு, வேலை கொடு' என்று வருந்தினார்கள். ஒருவருக்கு, கலெக்டருக்கு சிபாரிசுக் கடிதம், தாசில்தாருக்கு சிபாரிசுக் கடிதம் எழுதித் தரவேண்டுமாம்; ஒருவர், தனது குழந்தைகளுக்கு அம்மை போட்டிருக்கிறது, சம்சாரத்திற்கு உடல் நோவு; நான் என்ன செய்வேன்? 4 மாதமாக வேலையில்லையே, காப்பாற்றுவாரில்லையே என்று கதறினான். நான் அவருக்கு 2 படி புழுங்கல் அரிசி கொடுக்கும்படி வீட்டிற்குச் சீட்டுக்கொடுத்தேன். இதுபோன்ற கொடுமைகளின் தன்மையை இன்று என்னுடன் தங்கியிருந்த நண்பரும் நன்கறிவார். எங்கும் வேலையில்லை என்ற கூக்குரல் அதிகரித்துவிட்டது. ஏன் வேலையில்லாமல் போய்விட்டது? வேலையில்லாமை எப்படி ஏற்படும் என்று யோசித்துப் பார்த்தீர்களா?

ஒரு வேலைக்காரன் காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை வேலை செய்கின்றான். ஒரு தையல்காரன் 3 மெஷின்களை வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு 5 ரூ., 10 ரூ. சம்பாதிக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒருவன் அதிகநேரம் வேலை செய்து, அதிகப் பணம் ஒருவனே சம்பாதிப்பது எதற்கு? இவைகளையெல்லாம் கணக்குப்போட்டு, ஒரு ஒழுங்கு முறைப்படுத்தி ஒரு கூட்டுறவு முறையில் அமைத்தால்—அவனவனுக்குத் தேவையான அளவுக்கு ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாகப் போதிய பலன் கிடைக்கும்.

நம்முடைய நாட்டில் அடிப்படையான மாறுதல் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் நாம் என்ன கதிக்கு ஆளாகவேண்டிவரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் செலவழிப்பதில் வகைதொகையற்ற முறையில் வீண் செலவு செய்து வருகின்றோம். கூட்டுறவு முறையில் நமது வாழ்க்கையை நடத்தினால் இன்றைய நமது செலவில் எட்டில் ஒரு பாகம்தான் செலவு ஏற்படும்; பாக்கி இன்னும் 7 பேருக்கு உதவும். உதாரணமாக, ரஷ்யர்களின் சாப்பாட்டு முறையைக் கவனியுங்கள். அங்கு சாப்பாடும் கூட்டுறவு முறையில்தான். அங்கு ஓர் இடத்தில் நாளொன்றுக்கு ஒரு வேளைக்கு நாற்பதினாயிரம் பேர்கள் சாப்பிடுமிடத்தைக் கண்ணுற்றேன். ஆனால், இங்குள்ள நிலைமை என்ன? ஒரு வீட்டில் சமையல் செய்வதென்றால் தேவைக்குமேல் அதிகமாய்த்தான் போட்டுச் சமைக்கிறார்கள். 4, 5 பேர்களுள்ள ஒரு குடும்பத்திற்கு, ஒரு பெண் கண்டிப்பாகச் சமையலுக்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு குடும்பச் சமையலுக்கு என்றும் ஒரு தனி அறையும், பாக்கி வசதிகளுக்கென்று கொள்ளை கொள்ளையான இடமும் ஒதுக்கிவைத்துக் கொண்டு என்ன அக்கிரமமான தீங்குகளை வசதியற்ற எளியவர்க்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்!

ரஷ்யாவிலுள்ள மேற்சொன்ன பொதுச் சமையல் சாலையில் (General kitchen) 970 பேர்தான் வேலையிலீடுபட்டிருக்கிறார்கள் என்று நான் கணக்குக்கேட்டுத் தெரிந்தேன். நம்முடைய நாட்டில் 4 பேர்களுக்கு ஒரு பெண்வீதம் சமையலுக்கு வைத்துக்கொண்டிருக்கிற கணக்குப்படி 40000 பேர்களுக்கும் எத்தனை பெண்களை ஒதுக்கித் தள்ளிக் கொடுமைக்கு ஆளாக்குவது என்றுதான் யோசித்துப் பார்க்கும்படி கோருகிறேன். நம்முடைய சமையலைப்பற்றி ஏதாவது பந்தோபஸ்து உண்டா? அங்கு சமையலறையையும், சாப்பாட்டு சாமான்களையும்—சமைத்த பிறகும், தினம் டாக்டர் சரியான பரிசோதனை செய்கிறார். ஒரு பெரிய எம்.டி., (M.D.) டாக்டர் அதற்கென்றே ஒவ்வொரு கூட்டுறவு சமையலுக்கும் உண்டு. இங்கு நாம் என்ன செய்கிறோம்? சல்லிசான சரக்குகளை வாங்கிப் போட்டு வெந்தும் வேகாமல் அவித்துத்தின்று, சாப்பாட்டின் காரணமாகவே பெரும்பாலும் நோய் அடைகின்றோம். மேல் நாட்டின் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டக் குறைவு, அனுகூலம், மிச்சம், சுகாதாரம், சவுக்கியம் ஆகியவைகள் கவனிக்கப்படுகிறதென்பதை யோசியுங்கள். அங்கு ஒரு ரொட்டிக் கிடங்கில் (Bakery) நாள் ஒன்றுக்கு 250 டன் ரொட்டிகள் ஒரே சமயத்தில் செய்யப்படுவதைப் பார்த்தேன். கூட்டுறவு முறையினால் நாள் ஒன்றுக்கு ஒரு இடத்தில் இருபதாயிரம், முப்பதாயிரம் வீதம் 'ஷர்ட்டு'கள், 'டிரவுசர்'கள், 'ஜாக்கட்டு'கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு அத்தனை பேரும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள்; அங்கு மிகக் குறைந்த செலவுதான்.

இங்கு நாம் துணிவாங்கிக் கொடுத்தால் காலே அரைக்கால் பாகம் திருட்டும் சேதமுமாகின்றதென்றும் சொல்லலாம்; அங்கு அப்படியில்லை. துணியை அப்படியே 200, 300 வீதம் மடிப்பு மடித்து முதலிலேயே சின்ன வேலைக்கானவைகளுக்கு அதாவது பாக்கெட், கழுத்துப் பட்டை, கைப் பட்டை முதலியவைகளுக்கு, ரம்பத்தில் அறுப்பதுபோன்ற மிஷினில் அறுத்து எடுத்துக்கொண்டு, பாக்கியை அப்படியே சேதாரம் இல்லாமல் முழுதும் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

ரஷ்யாவில் 2000—3000 ஜனங்கள் சந்தோஷமாக, சவுக்கியமாக, போதிய சுகாதாரத்தோடு ஒரே கட்டிடத்தில் நிரம்பி வாழ்வதைப் பார்த்தேன். இங்கு நம்முடைய ஒரு வீட்டை என்ன அனாவசியமாக 3, 4 அடுக்கு மெத்தைகளுடன் கட்டுகிறோம்; அதில் பகுதிபாகம் நாம் உபயோகப்படுத்துவதுகூட இல்லை; அப்படி உபயோகப்படுத்தும் பாகத்தில் சுத்தம், சுகாதாரம் இருப்பதில்லை. நம்முடைய வீட்டைநிரப்புவது ஒடிந்து போன மத்து, கெட்டுப்போன நாற்காலி, மரம், கூடை, கிழிந்துபோன பாய், அவிந்துபோன குப்பைகளால்தான். இந்த முட்டாள்தனத்திற்காகவா வீடு வைத்துக்கொண்டு வாழுகிறோம்? யோசித்துப் பாருங்கள். அங்கு எப்படி வீட்டுவசதி முறை இருக்கின்றதெனக் கேட்கலாம். சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும் சாதாரணத் தொழிலாளிக்கும் சுமார் 10, 16 அடி அளவுள்ள ஓர் இடந்தான். அங்கு ஒரேமாதிரி சாதிக்காய்க் கட்டிலும், மேசையும் சிறப்பாக இருக்கும். அங்கு ஒரு சிறு 4×4 உள்ள கக்கூசு நூற்றுக்கணக்கானவர்களுக்கு உபயோகப்படுகிறது; தோட்டியே கிடையாது; அது கக்கூசா என்று நாம் சந்தேகப்பட்டே போய்விடுவோம்; அவ்வளவு சுத்தம்! அதில் எவ்வித வாடையும் இருக்காது; அழகு, ஒழுங்கானமுறை எல்லாம் சேர்ந்திருக்கிறது. இங்கு ஒரு வீட்டுக்கு 5 பேருக்கு ஒரு கக்கூசாக இருக்கிறது. அதற்கு எவ்வளவு இடம்? அப்படியிருந்தும் என்ன சகிக்கமுடியாத சுகாதாரக் குறைவு? இங்கு 300 பேர்களுக்கு ஒரு தோட்டி வீதம் இருப்பானென்று நம்புகிறேன். இந்த 30,000 பேர்களுள்ள ஈரோட்டில் எத்தனை தோட்டிகள்? எத்தனை வீடு, தெருக் கூட்டுகிறவர்கள்? எத்தனை வேலைக்காரர்கள்? இப்படியிருந்தும் இங்கு அசுத்தம்; அசுத்தம்தானே என்றும் அதி அக்கிரமமாக இருக்கிறது! அங்கு கக்கூசுக்குப் பக்கத்திலேயே படுக்கையறை இருக்கும்; அங்குள்ளமுறை கஷ்டத்திற்கே இடமில்லை; வழியுமில்லை.

ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிருக்கும் இடத்திலும்—ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு நல்ல (Park) பார்க், சினிமா, விளையாட்டு இடம், டிராமா, சுகாதார வசதி சாலை எல்லாம் அமையப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஸ்தாபனத்திலுமுள்ள 5000 பேருக்கும், 1000 கூட்டுறவு பேருக்கும் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுச் சம்பளம் ஒரே அளவுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. மேல்கொண்ட மீதியை அக் கூட்டுப் பொதுஜனங்களுடைய நன்மைக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இங்கு ஒரு மனிதனுக்கு ஒரு வண்டி இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் அவன் எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கிறானா? 10 மணி நேரத்திற்கும் வீணே தீனிபோட்டு 3 மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான்; 3 மணி நேரத்திற்கு அனுபவிப்பதினால் பாக்கி 7 மணி நேரக் கூலியும், செலவும் வீணாகிறது. இப்படியேதான் தனிப்பட்டவர்கள் தன்மையால் உண்டாகும் நாசங்கள் அனேகம். நம்முடைய நாட்டில் தேசச் செழிப்பும், அனுபவப் பொருள்களுற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்குகிறதா, இல்லையா? ஆனால், மக்களின் கஷ்டத்திற்குக் காரணம் என்ன? தனித்தனி என்னும் உணர்ச்சி ஒழியவேண்டுமா, வேண்டாமா? கவலையற்று வாழ்வதுதான் சிறந்தது; அதற்குக் கூட்டுறவு முறையேதான் பெரிதும் தேவையானது.

இந்த ஈரோடு முனிசிபாலிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். அது ஒன்று சேர்க்கப் பட்டுப் பலருக்கும் வாழ்க்கை வசதிகளைப் பூர்த்திசெய்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு பிரயோசனப்படும்? எவ்வளவு செலவு மிச்சமாகும்? எவ்வளவு அனுகூலம்? எவ்வளவு இலாபம்? எல்லாவற்றிலும் நன்மையேதான் ஏற்படும். அப்படிக் கின்றித் தனிப்பட்டவர்கள் நன்மைக்கு மாத்திரம் ஏன் எதுவும் இருக்கவேண்டும்? ஒரு ஹோட்டலைப் பொதுவாகப் பல குடும்பங்களுக்குச் சேர்த்துவைத்து நடத்தினால், இரண்டணாவுக்கும் கீழாகவே நல்ல சாப்பாடு போடலாம்; அது சத்துள்ளதாகவும், சுகாதார முறைப்படியும் இருக்கும். நம் வீட்டில் சமையல் என்னும் பேரால் சரியாக சாமான் வீணாய்ப் போகின்றது. நம்முடைய நாட்டில் என்ன பொதுப் பிரியம் இருக்கிறது?

பொது அலுவல்களில் டாக்டர் பரீட்சை செய்து என்ன சவுக்கியமாக எத்தனை காரியங்களைச் செய்யலாம்? இதுபோலவே வியாபாரத்திலும், கடையில் பேரம் செய்யும்போது கிராமக் குடியானவனிடம் 9 சாக்கு போட்டுவிட்டு 10 சாக்கு என்று பித்தலாட்டம் செய்வது தெரியும்; ஒன்றுக்கு ஒன்றரையாய் எடுத்துக்கொள்வது தெரியும்; இது நானும் செய்திருக்கிறேன். நம்மிடம் நிறைந்திருப்பது பொய்; சரக்கோ கலப்படம்; உபயோகிப்பதோ முக்கால் அளவுள்ள படிதான்; இவைகளினாலெல்லாம் எவ்வளவு நஷ்டம்? இவைகளையெல்லாம் கூட்டுறவு முறையில் இலட்சியம்கொண்ட ஜனத் தலைவர்கள் என்பவர்கள் ஏன் கன்ட்ரோல் (Control) செய்து அடக்கித் தடுக்கக்கூடாது? ஒவ்வொரு தனிப்பட்டவனையும் ஒன்றுபடுத்தி, 'நீயும் வா; எல்லோரும் ஒரு காரியத்தைச் செய்வோம்; எல்லோரும் இலாபம் பெறுவோம்; அதிக இலாபமும், 'அதிக ஓய்வும் எடுத்துக்கொள்வோம்' என்று ஏன் கூட்டுறவுத் தன்மையைப் பிரயோகிக்கக்கூடாது.

இம்முறைகள் என்றைக்காவது தலைதூக்கித்தான் ஆகவேண்டும். இதற்காகப் பொது உடைமை வேண்டுமா? பொது உடைமைப் பேச்சே வேண்டியதில்லை. ஆனால், இன்றே கூட்டுறவுத் தன்மையைக் கைப்பற்றுங்கள். வட்டி விஷயத்திலும் பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. இங்கு வட்டி ரூ. 10-க்கு மாதம் கால் ரூபாய் வாங்குகிறானே; என்ன கொடுமை? ரஷ்யாவில் லேவாதேவியும் செய்யக்கூடாது. ஒருவனுக்கு 5 ரூபாய் கடன் கொடுத்தால், அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவுவதென்றால்—கஷ்டத்துக்காக இருக்கும் என்றால்—'ஏன் ஆபத்தும் கஷ்டமுமான நிலைமை ஏற்படும்?' என்பதுதான் அங்குக் கேட்கப்படும் கேள்வியாகும்.

ஜன சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை-கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். நான் அதிகமாகச் சொல்ல வரவில்லை; இவைகளைத்தான் சொல்ல நினைத்தேன். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்; சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்; பலருடைய நன்மைக்கும் என்று கருதி இறங்க வேண்டும். 'இவற்றைச் சர்க்கார் செய்ய வேண்டியதா? பொதுஜனங்கள் செய்ய வேண்டியதா?' என்பது—ஆத்திகர்கள், 'விதி பெரிதா? மதி பெரிதா?' என்று தர்க்கிப்பதை ஒத்ததாகும். இவ்விவகாரங்களில் வலுத்தவன், வாய்ப் பேச்சுக்காரன்தான் ஜெயமடைவான்.

சர்க்கார்தான் ஜனங்கள்; ஜனங்கள்தான் சர்க்கார் என்பதை உணருங்கள். நமது சரீரத்தில் கஷ்டமேற்பட்டால் நமக்கென்னவென்று இருப்போமா? அதுபோல், நமது உணர்ச்சிகள் இருக்கவேண்டும். சிப்பியானது திறந்திருக்கும்பொழுது மழைத்துளி விழும் போதுதான் முத்தாகிறது. அதுபோல்தான், நமது உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி, சரிப்படுத்தி வைத்துக்கொண்டு தயாராகவே இருக்கவேண்டும்; அப்பொழுது கண்டிப்பாகப் பலன் ஏற்பட்டுவிடும். நம்முடைய அபிப்பிராயந்தான் ஜனசமூக அபிப்பிராயம் என்று தன்னம்பிக்கையுடன் நாம் வேலை செய்யவேண்டும். நமது உடலிலுள்ள பழைய 'தனித் தனித் தத்துவ' இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்சச் (Inject) செய்யவேண்டும். இது நம்மால் முடியுமா என்றிருக்கக் கூடாது; கண்டிப்பாய் இது முடியாமல் போய்விடாது.

நம்முடைய மக்கள் மடத்தனத்தில் இருக்கின்றார்கள்—அதனால் முடியாது என்றோ; அறியாமை அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது—அதனால் முடியாதென்றோ சொல்லிவிட முடியாது. 1914–18-ஆம் வருஷத்தில் நடந்த கொடிய மகா யுத்தத்தைக்கூடக் கேள்விப் படாத ரஷ்யர்களே இருக்கிறார்கள். இப்பொழுதும் (Czar) ஜார் அரசன் இருந்து அரசாளுகிறான் என்றே கருதிக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டிகளும் அங்கு இருக்கத்தான் செய்கின்றார்கள். இதனால் எல்லாம் அங்கு தகித்துக்கொண்டிருந்த கூட்டுறவுத் தன்மை போய் விட்டதா? எப்படிக் காய்ந்த, தீய்ந்த சருகில் அதிவேகமாய் நெருப்புத் தீப்பற்றிக்கொள்ளுகிறதோ, அப்படியேதான் அங்கு மதம் ஒழிந்து, கடவுள் மாய்ந்து, அரசர்கள் மண்ணாங்

கட்டிகளாகி, செல்வவான்கள் பனிக்கட்டிகளாகி—மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் கெடுவதுபோல் கெட்டு, 16 கோடி ஜனங்களும் கூட்டுறவு வாழ்க்கைக்காரராக ஆகிவிட்டனர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டு, இந்நாட்டுக் கொடுமை ஒழிப்புக்குத் தைரியங்கொண்டு, திடங்கொண்டு போராடி உழையுங்கள்! உங்கள் உணர்ச்சிகள் இவைகளுக்கு எப்பொழுதும் அனுகூலமாகவே இருக்கட்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[ஈரோட்டில், 4-11-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 12-11-1933]

2. தொழில் வளர்ச்சி

1. சுதேசி

மக்களுக்கு ஓர் எழுச்சியையோ, உற்சாகத்தையோ, ஆத்திரத்தையோ உண்டாக்கி விட்டுவிட்டு, அவர்களுக்குத் தகுந்த வேலை கொடுத்துக் கொண்டிருக்காவிட்டால் அது தாறுமாறாகக் கண்ட கண்ட பக்கங்களில் எல்லாம் போய் முட்டச்செய்யும் என்பது இயற்கையேயாகும். நம்மைப் பொறுத்தவரை—சுயமரியாதை இயக்கத்திற்கும் அரசியல் சம்பந்தமான கிளர்ச்சிக்கும் மத்தியில் சரியான தடைச் சுவர் இருக்க வேண்டும் என்பது நம் முடிவான அபிப்பிராயமாகும்.

நாம் இப்படிச் சொல்லுவதாலேயே இன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டு அதனிடம் வாலாட்டிக் கொண்டு அடிமையாய் இருக்க வேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. நம்மைப் பொறுத்தவரை, திரு. எஸ். இராமநாதன் அவர்களை வைத்துக் கொண்டே நாம் திரு. காந்தியவர்களிடம் 1927ஆம் ஆண்டிலேயே—இந்தியா விடுதலை யடைய வேண்டுமானால், சுயமரியாதை அடையவேண்டுமானால்—'இந்து மதமும் காங்கிரசும் ஒழிந்தாகவேண்டும்' என்று சொல்லிவிட்டு வந்தவர்களாவோம். அந்த நிமிடமே 20 அடி தூரத்தில் நின்று கொண்டிருந்த திரு. இராஜகோபாலாச்சாரியாரிடமும் சொல்லிவிட்டே வாசல் கடந்தோம்; அது முதலே அந்தப் பிரச்சாரமும் செய்தோம். இந்த அபிப்பிராயம் 1920-ல் நடந்த கிளர்ச்சி அனுபவத்திலேயே ஏற்பட்டதாகும். இந்து மதம் என்பது அழிய வேண்டும் என்கின்ற அபிப்பிராயமும் நமக்குச் சுமார் 25, 30 வருஷத்திற்கு முன்னாலேயே ஏற்பட்டதாகும். 5, 6 வருஷ காலமாகவே அரசியல் கிளர்ச்சியும், தியாகத் தின் பயனும் பாமர மக்களை—ஏழைகளை—தொழிலாளிகளை—கூலிகளை நசுக்கிப் பிழியவே உபயோகிக்கப்படப் போகின்றன என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இருந்த தில்லை.

இது போலவே 'சுதேசிப் பொருள்', 'பரதேசிப் பொருள்' என்பதிலும் உள்ள புரட்டுகளை நாம் அறிவதில்லை. சுதேசிப் பொருளை ஏன் ஆதரிக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது என்று பார்ப்போமானால், 'சுதேசிப் பொருளை ஆதரித்தால் தொழிலாளிக்குத் தொழில் கிடைக்கும்' என்று சொல்லப்படுகின்றது. அந்தப் பேச்சில் சிறிதுகூட நாணயம் இல்லவே இல்லை. ஏனெனில், இந்த நாட்டில் தொழிலாளிக்கு ஒருவிதப் பாதுகாப்பும் கிடையாது. பணக்காரர்கள் அடையும் இலாபத்திற்கோ அளவு கிடையாது. எவ்வளவு இலாப மடைந்தாலும் அது அவனது 'யோகமாய்', 'அதிர்ஷ்டமாய்'ப் போய் விடுகிறது. 'இன்ன இலாபத்திற்கு மேல் முதலாளி இலாபமடையக் கூடாது' என்ற நிபந்தனையே கிடையாது. ஆனால், தொழிலாளி வயிற்றுக்குப் போதவில்லை என்று வேலைநிறுத்தம் செய்தால், கூலி போதாது என்று கேட்டால் அவனை சர்க்காரிடம் சொல்லித் துப்பாக்கியால் சுடச் செய்யவேண்டியது, 10, 10 வருஷம் தண்டிக்கவேண்டியது;

அவர்கள் வீடுகளில் நெருப்புவைத்துக் கொளுத்தவேண்டியது ஆகிய காரியங்களே தொழிலாளிகளின் நிலை. இதற்குச் சமாதானம் அவர்களது ‘தலை எழுத்து’ என்பதைத் தவிர வேறில்லை.

இந்த நிலையில் எதற்காகச் சுதேசிப் பொருளை ஆதரிப்பது, எதற்காக கள்ளுக் கடைமறியல் செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் ஏழை மக்களுக்கு எது சுலபமோ அதை வாங்கிக் கொள்ள அனுமதி கொடுக்கவேண்டியதுதான் சமதர்மமாகும் என்பது நமது சொந்த அபிப்பிராயம்.

முதலாளி, தொழிலாளி நிலையை வரையறுத்த பிறகுதான், சுதேசிப் பொருள் பேச்சும் பிரச்சாரமும் பயன்படுமே தவிர இந்த நிலையில் ஒன்றும் பயன்படாது. முதலாளிகள் கொள்ளை அடிக்கத்தான் சுதேசிப் பிரச்சாரம் உதவும்.

இன்னும் உதாரணம் வேண்டுமானால் கதரை எடுத்துக்கொள்ளுவோம். கதர்ப் பிரச்சாரம் நாமே செய்தோம். ‘கதர் கட்டாதவன்—தேசத் துரோகி; நரகத்துக்குப் போவான்’ என்றெல்லாம் சொன்னோம்; கதர்சாலை ஏற்படுத்தினோம்; ஏழைகளையும் பிச்சை எடுத்தாவது வயிற்றை வாயைக் கட்டியாவது கதர்கட்டும்படி பிரச்சாரம் செய்தோம். கதர் சம்பந்தமான அனேக காரியங்களுக்கு நாம் பொறுப்பாளி என்று சொல்லிக்கொள்ள நமக்குப் பல உரிமைகள் உண்டு. கடைசியாக என்ன பலன் ஏற்பட்டது? கோயம்புத்தூர் மால்மில்லின் நாலரை முழம் வேட்டி 4-க்கு ரூ. 1-12-0-க்கு திரு. செங்கோட்டையா விற்கிறார்; ஆனால் நாலரைமுழம் கதர்வேஷ்டி 2-க்கு 1-12-0-க்கு கொடுத்து சுதேசி கைத்தொழிலை ஆதரிக்க வாங்குகிறோம். அதாவது, 7 அணா வேட்டிக்கு, 14 அணா கொடுத்து வாங்குகின்றோம். இப்படிப்பட்ட இந்த நிலையை ஆதரிப்பதுதான் நம் சுதேசி கைத்தொழில் ஆதரிப்பு என்றால், கண்டிப்பாய் இந்த மாதிரி ஆதரிப்பு ஒழிந்துதான் ஆகவேண்டும். ‘இந்தப்படிக்கு ஆதரிக்காவிட்டால், ஏழைகளுக்கு ஜீவனத்திற்கு மார்க்கமில்லை’ என்று சொல்வார்களேயானால், அப்படி வேலையில்லாமல் இருக்கும் ஆட்கள் பட்டினிகிடந்து, வேதனைப்பட்டு, பணக்காரர்கள் மீது பாய்ந்து—அவர்களது பணத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும் திட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்கு வேண்டுமானாலும் போய் உட்கார்ந்துகொண்டு, அங்கு ஏதோ தன்னாலான வேலையைச் செய்துவிட்டு ஜெயில் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருப்பது மெத்த நாணயமும் பொதுநலமுயற்சியும் கொண்ட யோக்கியமான வேலையுமாகும். அந்தப்படிக்கு இல்லாமல் பம்பாய், ஆமதாபாத்தில் சொந்தக்காரர்கள் சுதேசிப் பிரச்சாரமும்; மாதம் 100, 200 வாங்கும் கதர் இலாக்காக்காரர்கள் கதர்ப் பிரச்சாரமும், சட்டசபைக்குப் போய் கள்ளை நிறுத்துகிறவர்கள் கள்ளுப் பிரச்சாரமும் செய்வதென்றால் இதில் என்ன நாணயம் இருக்கிறது? பெரிய பெரிய மிராசுதார்கள் ஆயிரக்கணக்கில் ஏக்ரா பூமியை வைத்துக்கொண்டு, உழுகிறவனுக்கு உணவு கிடைக்காமல்படி நசுக்கிப் பிழிந்து 2-8-0 ரூபாய்க்கு ஒரு ஜதை கதர் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, ‘கனவான்களே! கதர் கட்டுங்கள், ஏழைகள் பிழைப்பார்கள்’ என்றால் அவர் பெரிய தேசாபிமானிகளா, ஏழை பங்காளிகளா என்கிறோம்.

[‘குடி அரசு’—தலையங்கம்—7-12-1930]

2. கதர்

முதலாவதாக, பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டு கதர் எந்த விதத்தில் அதற்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை யோசித்துப் பார்ப்போம். பஞ்சு விலை எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விவசாய மக்களுக்குக் கஷ்டம் இருந்தாலும் பஞ்சு விலையைப் பற்றிய—அதாவது, மூலப் பொருள்களைப் பற்றிய இலட்சியமே இல்லாமல் கதரின் உற்பத்தி, நூற்பு நெசவு ஆகியவற்றின் செலவுகளே, அதாவது அசல் விலையே மிகவும் கூடுதலாகவே அடங்கும்படியாக ஆவதோடு

அதை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நிலையும் கஷ்டமானதும் முன்னேற்றத்திற்கு உதவாததுமாகவே இருக்கின்றது.

அதாவது, யார் எவ்வளவு பாடுபட்டாலும் கதர் நூல் விஷயத்திலும், நெசவு விஷயத்திலும், துணி ரகம் விஷயத்திலும் இன்று காணப்படும் தன்மையிலிருந்து இனி சாதாரணத்தில் எவ்வித மாற்றத்தையாவது செய்துவிடக்கூடும் என்று சுலபத்தில் எண்ணுவதற்கில்லை. ஏதாவது ஒரு சிறு மாற்றமாவது-ரகம் முற்போக்குத் தன்மையில் செய்யலாம் என்றாலோ—அதற்கேற்படும் கூலி முற்போக்கின் தகுதிக்கு மேற்பட்டதாகச் செலவழித்ததாக வேண்டி வரும். இதைத் தவிர, விலை விஷயத்தில் இனி இதைவிடக் குறைக்கும்படியான நிலைமை சுலபத்தில் ஏற்படப் போவதில்லை.

ஏனெனில், கதர்த் தொழிலோ கதர் வியாபாரமோ மக்களின் சாதாரணப் பழக்கத்தில் உள்ள தொழிலாயும் வியாபாரமாயும் இல்லாமல் வேறு ஏதோ தத்துவத்திற்காக—தியாகம் செய்து தீரவேண்டிய முறையில்—மற்றவர்கள் நிர்ப்பந்தத்தின்மீது நூற்றல், நெய்தல், விற்பனை, வாங்கிக் கட்டுதல் ஆகியவைகள் முழுதும் நடைபெற வேண்டியதாக இருக்கின்றது. இவ்வளவு கஷ்டப்பட்டும் உத்தேசித்த காரியமாகிய பொருளாதாரம் என்பது—வாங்கி விற்கின்ற மத்திய மனிதன் என்கின்ற முதலாளி தவிர மற்ற யாருக்கும் அது சிறிதும் பயன்படாததாயிருப்பதுடன் உண்மையிலேயே, வாங்கிக் கட்டுகிறவன் அதிகப் பொருள் அதாவது, 100-க்கு 250 பங்கு நஷ்டமடைவதற்கும் தயாராக இருக்கவேண்டியவனாகிறான். அப்படிச் செய்தும் தொழிலாளியாகிய நூற்புக்காரன் ஒரு மணிக்கு ஒரு தம்பிடி பெற முடிகின்றது. நெசவுக்காரனும் சாதா மில் நூல் நெசவு நெய்வதை விட இரண்டு பங்கு கஷ்டமும் கவனமும் செலுத்தி வேலை செய்து பழைய கூலியையேதான் பெற வேண்டியதாயிருக்கின்றது.

ஆகவே, பொருளாதாரத் துறையில் கதர் எந்த விதத்தில் பயன் அளிக்கின்றது என்பது இதிலிருந்தே அறியத் தக்கதாகும். இனி, கதர் தத்துவம் கைத்தொழில் துறையில் எப்படிப் பயன்படுகின்றது என்று பார்ப்போம்.

கதர் கைத்தொழில், உலகக் கைத்தொழில் முறைக்கு நேர் விரோதமாக இருக்கின்றது. எப்படியெனில், கைத்தொழில் என்பது வேலை செய்கின்றவன் கொஞ்ச நேரத்தில் அதிக சரக்கு உற்பத்தி பண்ணக் கூடியதாகவும்—அதுவும் சரீரப் பிரயாசை தேவையின் பாகம் நாளுக்கு நாள் குறைந்து கஷ்டமில்லாமல் செய்யக் கூடியதாகவும்—சாமான் மாதிரியும் நாளுக்கு நாள் உயர்ந்த தரமானதாகவும் இருக்க வேண்டியதோடு, அதை வாங்கி உபயோகிக்கும் மக்களுக்கு அந்தச் சாமான்கள் அதிக சரசமாய் இருப்பதாகக் காணக் கூடியதோடு, அச் சாமானின் வேலைப்பாடானது மக்களை வாங்கும்படி தூண்டக்கூடியதாகவும் இருக்கவேண்டியதாகும். இந்த முறையில் பார்த்தாலும் கதர் தத்துவம் முதல் பிரிவுக்குச் சொல்லப்பட்ட காரணங்களால் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு நிலையிலும் விபரீதமாகவே இருந்து வருகின்றது.

மூன்றாவதாக, வியாபாரத்துறையில் பார்த்தாலும் மூலப் பொருளை அதிகமாகச் செலவு செய்து—அதாவது ஒரு வேட்டிக்கு எவ்வளவு மூலப்பொருள் (பஞ்சு) வேண்டுமோ, அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று பங்கு வீதம் பஞ்சைச் செலவு செய்து (முரட்டுத்தனமாக இருப்பதால்) அது சம்பந்தப்பட்ட தொழிலாளிகளையும் கசக்கிப் பிழிந்து, விற்கின்றவனையும், வாங்குகின்றவனையும் வேறு காரணத்திற்காக, அதாவது வியாபாரத்தில் நம்பிக்கையோ, விருப்பமோ இல்லாமல் நிர்ப்பந்தத்தின் பொருட்டு ஜனங்கள் இந்த விற்றல், வாங்கல், வியாபாரம் செய்யும்படியாக இருப்பதால் கதர் தத்துவம் வியாபார முறைக்கும் அதன் முற்போக்குக்கும் நேர்விரோதமாகவே இருக்கின்றது.

தவிர, ஒரு நாட்டின் பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம் ஆகியவை மூன்றும் முற்போக்கடைய வேண்டுமானால் இம்மூன்றும் மற்ற நாடுகளில் எப்படி முற்போக்

கடைந்து இருக்கின்றன? நமது நாட்டுக்கும், மற்ற நாட்டுக்கும் உள்ள—வியாபாரம், உற்பத்திச் சவுகரியம் எப்படி இருக்கின்றன? அதன் போட்டியின் தத்துவம் என்ன? உலகப்போக்கு என்ன? என்பவைகளை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாடும் முற்போக்கடைவது நவீன ஆராய்ச்சி, இயந்திர சவுகரியம், வியாபார தந்திரம் ஆகியவை களைக் கொண்டேயொழிய—பண்டையச் காலத்தின் கைத்தொழில் முறையையே புதுப்பித்த தாலோ, ஆராய்ச்சியை அலட்சியம் செய்து இயந்திரங்களை வெறுத்ததாலோ, அல்லது மறியல் செய்து நிர்ப்பந்தப்படுத்தி வியாபாரம் செய்யச் செய்ததினாலோ அல்லவென்பது விளங்கும்.

இந்தியா தேசத்தின் மக்களைச் சாதிவாரியாகப் பிரித்து, ஒவ்வொரு சாதிக்கு இன்ன, இன்ன தொழில் என்று கற்பித்து, அந்தந்தத் தொழிலை அந்தந்தச் சாதி தலைமுறை தலை முறையாகச் செய்ய வேண்டியதுதான் மனித தர்மம் என்கின்றதான நிர்ப்பந்தம் இங்கு இருந்து வருவதாலும்; இந்தத் 'தொழிலாளி' சாதியல்லாதவர்களே இந்நாட்டின் நலத்தைக் கோருகின்ற தலைவர்கள் என்பதாக ஆகிவிட்டதாலும்—அதுமாத்திரமல்லாமல் இந்த மாதிரியான வருணாசிரம தர்மதி தொழில்முறையில் நம்பிக்கை உள்ளவர்களும் அதை மேலும் நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவர்களுமே தொழில் முறையைச் சீர்திருத்தம் செய்கின்றவர்களாக இருப்பதினாலும், பண்டையத் தொழில் முறையைப் புதுப்பிக்க வேண்டுமென்றும், புதிய நாகரிக இயந்திரங்கள் கூடாது என்றும், ஒவ்வொருவரும் ஓய்வு நேரத்தில் வேலைசெய்யவேண்டும் என்றும், அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொண்டு தனித்தனித் தொழிலாளியாய் இருக்க வேண்டுமே தவிர, கூட்டுத் தொழிலாளியாய் இருக்கக்கூடாதென்றும் சொல்ல வேண்டியதாயிற்று.

ஏனெனில், இந்தப்படி ஒவ்வொருவனும் தனித்தனித் தொழிலாளியாக இருந்தால் தான், அதோடு அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்து கொள்ள வேண்டும் என்கின்ற வேலையில் அமர்ந்திருந்தால்தான் தொழிலாளிகள் ஒன்று சேரவோ, அவர்கள் நிலையைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கவோ, அல்லது தங்களது யோக்கியதையைச் சற்று உயர்த்திக்கொண்டு தொழிலாளி தன்மையில் இருந்து நழுவிக் கொள்ளவோ, அவர்களது பரம்பரை தர்மத்தில் இருந்து விலகவோ முடியாததாயிருக்கும் என்று கருதியே இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலாலேயேதான், புதிய நாகரிகமும், இயந்திர சவுகரியமும், கூட்டு வேலையும், தொழிலாளிகள் முன்னேற்றமும் கதர் தத்துவத்தில் சிறிதும் இல்லாம லிருக்க வேண்டியதாகிவிட்டது.

ஆகவே, வருணாசிரமக் கட்டுப்பாட்டை உடைத்து, மனித வர்க்கத்தின் சரீரப் பிரயாசையைக் குறைத்து, குறைந்த நேரத்தில் அதிகக் கூலி கிடைக்கும்படி செய்து, மூலப் பொருள்களை வீணாக்காமல் விவசாயிகளுக்கும் அதிகப் பணம் வரும்படி செய்து எல்லா மனிதரும் எல்லாவிதத் தொழில்களைச் செய்யவும், எல்லாவிதப் பதவிகளை அடையவும் தகுந்தபடியாக அவர்களை ஆக்கவேண்டும் என்றால், கண்டிப்பாக இத்தகைய கதர்த் திட்டம் ஒழிந்தே ஆக வேண்டும் என்பது நமது அபிப்பிராயமாகும்.

தவிர, இந்தியாவுக்கு எந்தவிதமான ஆட்சி முறையோ அல்லது சுயேச்சையோ, அல்லது 'ராம ராச்சியமோ', 'தர்ம ராச்சியமோ' வருவதானாலும் இந்தியா உலக முற் போக்கில் கலந்து கொள்ளவும் புதிய ஆராய்ச்சியின் பயன்களை அனுபவித்து மனித சமூகம் இன்பமும் திருப்தியும் அடையவும் தகுந்ததாக ஆவதற்குத் தக்கதாய் இருக்க வேண்டுமே யொழிய—மற்றபடி அவனவன் வயிற்றுப்பாட்டிற்கும் அவனவனுக்கு வேண்டிய இன்றி யமையாத அவசியங்களுக்கும் அவனவனே அவனவனது வாழ்நாள் நேரம் முழுவதையும் செலவு செய்து கொண்டிருக்கும்படியான தத்துவங்கள் கொண்டதாக இருக்கக்கூடாது.

இந்தக் காரணங்களாலேயே, திரு. காந்தியவர்களின் தத்துவமானது இந்தியாவை ஒரு நாளும் விடுதலையுள்ள நாடாகவோ மனித சமூகத்தின் முற்போக்கிற்கும் நாகரிக

அபிவிருத்திக்கும் சரீரப் பிரயாசையைக் குறைத்துக்கொண்டு வாழும்படியான நாடாகவோ ஒருநாளும் ஆக்க முடியாதென்றே சொல்லுவோம்.

ஏனெனில், அவரது நோக்கமெல்லாம் பண்டைய நிலைகளையே பெருமையாய்க் கருதுவதிலும் பண்டைய முறைகளைப் புதுப்பிப்பதிலும் இருக்கின்றதே யொழிய, இன்றைய உலகம் என்பது என்ன என்பதில் கவலையோ, கருத்தோ என்பதும் சிறிதும் இல்லை. பண்டைய நிலையைப் பெருமைப்படுத்தி, பண்டைய முறைகளைப் புதுப்பிப்பதில் யாருக்கு அனுகூலம் என்று பார்ப்போமானால்—மக்களை ஏமாற்றிக் கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்தும் பார்ப்பனர்களுக்கும், பாடுபடுவோரின் பலனை அனுபவிக்கும் பிரபுக்களுக்கும், சரீரப் பிரயாசை இல்லாமல் வாழ்வை நடத்த விரும்பும் படித்த கூட்டத்தார் என்பவர்களுக்கும் அனுகூலமாகவும், தங்கள் ஆதிக்கத்திற்கேற்ற அரசியலை ஸ்தாபித்துக் கொண்டு சுகத்திலிருக்கப் பயன்படக்கூடியதாகவும் இருக்கலாம். இந்தக் கூட்டத்தார் முன் திரு. காந்தி அவர்களும் மகாத்மாவாய், அவதார புருஷராய், தெய்வத் தன்மை பொருந்திய வராய், உலகம் போற்றும் உத்தமராய், உலகுக்கே பெரியோராய் விளங்கலாம்.

ஆனால், பாடுபட்டும் கூலி இல்லாமல் பட்டினி கிடப்பவனுக்கும், தலைமுறை தலைமுறையாய் ஏழையாய், கூலிக்காரனாய் இருப்பவனுக்கும், தெருவில் நடக்க—குளத்தில் குடிக்க யோக்கியதை இல்லாமல்—பன்றியிலும் கழுதையிலும் நாயிலும் கேடாய் மதிக்கப் படும் இந் நாட்டுப் பழங்குடி மக்களுக்கும் திரு. காந்தியவர்கள் 'எமனாய்' இல்லாமல் வேறு யாராய் இருக்கமுடியும் என்பதைப் பகுத்தறிவுடன் நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

['குடி அரசு'—தலையங்கம்—7-6-1931]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

முதலாவது, சுதேசக் கைத்தொழில் என்பதையே எடுத்துவிட வேண்டும் என்றும் அந்த உணர்ச்சி கூடாதென்றும் சொல்கின்றேன்.

சுதேசத்தொழில் என்று இருந்தாலும் பாதகமில்லை. ஒவ்வொரு தொழிலும் கையால் செய்ததாகவே இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. நமது நாட்டில் பொருளாதாரத்திற்கும் தொழிற் பெருக்கத்திற்கும் என்பதாகக் கைத்தொழிலை விருத்தி செய்வதும், புத்துயிர் அளிப்பதும், ஆதரிப்பதும் என்பதான காரியங்கள் தொழிலுக்கும் பொருளுக்கும் தொழிலாளிக்கும் கேடுசெய்வனவாகும். முக்கியமாக, கதர் என்று சொல்லும் விஷயமும் இன்னமும் மோசமானதாகும். அதனால் தொழில் முறை விருத்திக்கும் பொரு ளாதார விருத்திக்கும் இடமில்லை; தொழிலாளிக்கும் பயன் இல்லை. அதுபோலவேதான் கைத்தறி, கை நெசவு என்பவைகள் எல்லாம் தொழில் முறைக்குக் கேடு விளைவிப்பதும், தொழிலாளிகளின் முற்போக்குக்கும், விடுதலைக்கும் எதிரியுமானதாகும். அது நாகரிக முற்போக்கடைய வேண்டிய நாட்டிற்குச் சிறிதும் பொருந்தாததுமாகும். அன்றியும், இந்த உணர்ச்சி சமதர்மத்திற்கும் பொது உடைமைத் தத்துவத்திற்கும் மாறானதுமாகும். இவை மாத்திரமல்லாமல், இயற்கைக்கும் அதோடு மனித தத்துவத்திற்கும் முரண் பட்டதும், காரியத்தில் சித்தி பெறாமல் போவதோடு தானாக ஏற்படும் முன்னேற்றத்தையும் தடுப்பதுமாகும்.

கதர் ஏழைகளுக்குச் சோறு போடுகின்றது என்பது பொருளற்ற வார்த்தையே யாகும். அது சில இடங்களில் வேண்டுமென்றே ஏமாற்ற உபயோகப்பட்டு வருகின்றது. பாமர ஜனங்கள் இதை நம்பி ஏமாந்து வருகின்றார்கள். கதரின் தத்துவத்தால் இந்த நாட்டில் யாரும் பலனடைவதில்லை; பயனடையவும் முடியாது. ஆனால், கதரைப்பற்றித் திரித்தும், குழப்பியும் பிரச்சாரம் செய்வதால் சிலர், அதுவும் மற்றவர்களுடைய அளவுக்கு மீறிய நஷ்டத்தால் பயனடைகின்றார்கள்.

ஆகவே, இது பார்ப்பனர்கள் பிழைக்க என்று மற்றவர்களுக்குக் கடவுள் பேரால் போடும் ஒரு முட்டாள் வரிபோல், வேறு சிலர் பிழைக்க என்று கதர் வரி என்பதாகக் கதர் கட்டுபவரிடம் வசூலிக்கப்படும் ஒருவித வரித்திட்டமே யொழிய—கதர் ஒரு தொழில் திட்டம் இல்லை; அதனால் யாரும் யோக்கியதையாய்ப் பிழைக்க முடியாது.

கதர் பக்தர்களுக்கு இது புரியாவிட்டாலும், கதர் கர்த்தாக்களுக்கு இந்த அபிப் பிராயம் புரிந்ததுதான். மக்கள் கண்விழித்த பிறகு அவர்களும் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டார்கள்.

உயர்திரு. காந்தி அவர்களே இப்போது இன்று நடைபெறும் கதர்த் திட்டம் பயன் படாதென்று கருதி ஒரு இயந்திரம் கண்டுபிடிக்க ஆசைப்பட்டு, குறைந்த நேரத்தில்—கொஞ்ச கஷ்டத்தில் அதிகமான அளவு நூல் நூற்கும்படியாக ஒரு புதிய இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு இலட்ச ரூபாய் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார். இதன் கருத்து என்ன? கைத்தொழிலிலிருந்து—கைராட்டினத்திலிருந்து—இயந்திரத் தொழிலுக்கு இயந்திர ராட்டினத்திற்குப் பாய்ந்திருக்கிறார் என்பதல்லவா?

மற்ற தொழில் விஷயங்களிலும் கைத்தொழில் என்கின்ற மனப்பான்மையை விட்டொழிக்கவேண்டும். கைத்தொழில் சாமான்களையே ஆதரிப்பது என்கின்ற மனப் பான்மையையும் விட்டொழிக்கவேண்டும். அது பயன்படாத காரியமாகிவிடும். இன்றைய தினம் நம் நாட்டில் அனேகக் கைத்தொழில் விற்பன்னர்களுக்கு வேலை இல்லாமல் போய் விட்டது. வேலை கொடுக்கவும் நம்மால் முடியாமல் போய்விட்டது.

ஆகவே கைத்தொழில் பைத்தியத்தை விட்டுவிடவேண்டும்; இயந்திரத் தொழில் முறையை ஆதரிக்கவேண்டும்.

அன்றியும், கைத்தொழில், கைத்தொழில் என்பது, பொது உடைமைத் தர்மத்திற்கு விரோதமானது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். முதலாளி, தொழிலாளி என்கின்ற பாகுபாடு இருக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மை உடையவர்கள்தான் கைத்தொழில், குடிசைத்தொழில் என்று கட்டியழுவார்களே தவிர, சமதர்மமும் பொது உடைமைத் தத்துவமும் கோருபவர்கள் கைத்தொழிலை—அதாவது இயந்திர உதவி இல்லாமல் செய்யப்படும் தனிப்பட்டவர்கள் தொழிலை விரும்பமாட்டார்கள். கைத்தொழில் என்பதே வருணாசிரம தர்மத்தின் அடிப்படையாகும். திரு. காந்தி அவர்கள் சொல்லுகின்ற வருணாசிரம தத்துவமேதான், கதர் முதலிய கைத்தொழில் முறைகள். எப்படியெனில், அவர், மக்கள் பரம்பரைத் தொழில்களையே செய்யவேண்டும் என்கின்ற கருத்துடையவர். ஆகவே, சமதர்மமும் பொதுவுடைமைத் தத்துவமும் ஏற்படவேண்டுமானால் வருணா சிரமமும், பரம்பரைத் தொழில் முறையும் கைத்தொழில் முறையும் முதலில் ஒழியவேண்டும்.

அன்றியும், கைத்தொழில் செய்வதன் மூலமேதான்—அதாவது, மக்களுக்குச் சரீரத்தில் பாடுபடும்படியான வேலைகொடுத்து அவர்களை வாட்டி வளைவை நிமிர்த்துவதுதான்—மக்களுக்குப் பிழைப்புக்கு வழி ஏற்படுத்தலாம் என்று சொல்லுகின்றவர்கள் கூற்றையும் நான் ஒப்புக்கொள்ளமுடியாது. அந்த முறையையும் நான் ஏற்கமுடியாது.

ஏனெனில், அவர்கள்—மக்கள் பிறந்ததும், வளர்ந்ததும், இருப்பதும் தொழில் செய்து சரீரப் பிரயாசைப்பட்டு உழைத்துச் சாப்பிடத்தான் என்று கருதும் எண்ணத்தினாலேயே மக்களைக் கீழ்மைப்படுத்திவிட்டார்கள். ஆனால், இந்தப்படி சொல்லிக்கொண்டு இருக்கின்ற மக்களில் சிலர் மாத்திரம் உட்கார்ந்துகொண்டு, பாடுபடாமல் ஜீவிக்க என்று பிறந்து, வளர்ந்து, வாழ்பவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இது மோசடியான எண்ணமே.

கஷ்டப்பட்டுச் சாப்பிடுவதற்கென்றே மனிதன் பிறந்தான் என்று சொல்லுவதானால் மனித சமூகம் இல்லாமல்போவதே மேலான காரியமாகும். உலகம் வேண்டுமானால் மனித

சமூகம் பெருகவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் எல்லாம்—பெரிதும் மற்ற மக்கள் உழைப்பில் சாப்பிடுபவர்களேயாவார்கள். ஆகவே, மக்கள் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்று சொல்லி கஷ்டப்பட மார்க்கம் தேடுவதைவிட, மக்கள் இல்லாமலே போவ தற்குச் செய்யப்படும் காரியம் மிகவும் நல்லதாகும்.

உதாரணமாக, இரண்டு மாடுகளை—காலையில் 3 மணிக்குச் செக்கில் பூட்டி மாலை 7 மணி வரைக்கும் ஓட்டி, அடித்து அதன் வாலை முறித்து, முதுகுத் தோல் பட்டை வாங்கி, கழுத்து பூசணிக்காய்போல் வீங்க வைப்பதன் மூலம்தான் அந்த மாடுகள் வாழமுடியும் என்றால், அப்படிப்பட்ட மாடுகளை எல்லாம் கசாப்புக் கடைக்காரனிடம் ஒப்புவித்துவிட்டு இனிமேல் மாடுகளை யாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று சட்டம் போடுவதே மேலான காரியம் என்றுதான் சொல்லுவேன். இந்த மாதிரி நிலையில் ஒரு மாடுகூடப் பிழைத்திருக்க வேண்டியதில்லை.

தவிர, பொதுவுடைமைத் தத்துவத்திற்கு வெள்ளைக்கார ஆட்சியேதான் விரோத மாய் இருக்கின்றது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நமது நாட்டில் உள்ள வருணாசிரம தருமந்தான்—அதுவும் திரு. காந்தி சொல்லும் வருணாசிரம தருமந்தான் பொதுவுடமைக்கு விரோதமானதாகும். இந்த வருணாசிரம தருமந்தான் இந்த நாட்டுக்கு வெள்ளைக்கார ஆட்சி முதலிய வெளிநாட்டு முதலாளிகள் ஆட்சியைக் கொண்டு வந்து விட்டதாகும். இன்னும் அவ் வாட்சியை நடத்திக் கொடுப்பதே—அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதே நமது நாட்டு வருணாசிரம தர்ம முறையேதான் ஆகும்.

முதலாளி, தொழிலாளி என்ற முறையும் வருணாசிரம தரும முறையில் பட்டது என்பதை மறந்து விடாதீர்கள். அந்த முறையில்தான் இப்போது நமது நாட்டில் மஞ்சள் புரோகிதர்களும்; மஞ்சளும் கறுப்பும் கலந்த அரசர்களும், ஜமீன்களும், மிராசுகளும், வியாபாரிகளும் இருக்கின்றார்கள் என்பதோடு—இவர்களுடைய பத்திரத்திற்கென்றே வெள்ளை முதலாளிகள் வருவிக்கப்பட்டுக் காப்பாற்றப்படுகின்றார்கள்.

எதற்காக ஒருவனுக்கு சதா தொழில் இருக்கவேண்டும்? புலி, கரடி, நாய், சிங்கம், பட்சி ஆகியவைகளுக்குச் சதா தொழில் இருந்து கொண்டிருக்கிறதா? அவை தொழில் செய்துதான் ஜீவிக்கின்றனவா? புரோகிதன், அரசன், ஜமீன், மிராசு, வியாபாரி, உத்தியோகஸ்தன் முதலியவர்கள் சதா சரீரத்தால் வேலை செய்துகொண்டுதான் இருக் கின்றார்களா?

மேலும், இவர்கள் வேலை செய்யாததால் உடல் கெட்டுப் போகின்றதே என்று சரீர அப்பியாசம் (Exercise) செய்து கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா? ஒரு கூட்டம் சரீரத்திற்கு வேலை இல்லையே என்று சரீர அப்பியாசம் செய்யவும், மற்றொரு கூட்டம் ஜீவனத்திற்கு மார்க்கமில்லையே என்று வேலைசெய்து கஷ்டப்படவுமாய் இருப்பதற்குக் காரணம் வருணாசிரம சமூக வாழ்க்கை முறையா? அல்லது இயந்திரத்தினால் ஏற்பட்ட கெடுதியா?

நாட்டில் இருக்கின்ற வேலையையும், மக்கள் எண்ணிக்கையையும், அவர்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலிய சாமான்களையும் கணக்குப் போட்டு, அந்தச் சாமான்களை இயந்திரங்களால் செய்வதன் மூலம் குறையும் நேரத்தைக் கழித்து, மிகுதியுள்ள நேரத்தை எல்லா மக்களுக்கும் பங்குபோட்டுப் பிரித்துக்கொடுத்து, அவர்கள் வாழ்நாள் ஜீவனத் திற்கு வேண்டிய முழுக் கூலியையும் கொடுக்க ஆரம்பித்து விட்டால், வேலை சரியாய்ப் போய்விடுமா, இல்லையா? அதாவது, ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்கு இத்தனை மணி நேரம் மாத்திரம் வேலை செய்தால் போதும் என்கின்ற முறையில் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும். இப்படிச் செய்தால் ஒரு வாரத்தில் ஒரு நாள்கூட ஒரு மனிதனுக்கு வேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. மீதி நாட்களில் கஷ்டப்படாமல் சாப்பிடக்கூடும்.

[ஈரோட்டில், 10-6-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-6-1931]

கதரைப்பற்றியும், அதை அரசியல் பிழைப்புக்காரர்கள் எப்படி உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பற்றியும், 'கதர் புரட்டு' என்கின்ற தலைப்பின்கீழ் இதற்குமுன் பல வியாசங்கள் எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வந்திருக்கின்றோம். இதன் பயனாய் அரசியல் வாழ்வுக்காரர்களும், அரசியலில் கலந்துகொள்ளுவதன் மூலமாய் மக்களை ஏமாற்றிப் பயனடையக் கருதும் சில சுயநலக்காரர்களும் தவிர, மற்ற மக்கள் யாவரும் கதரை அடியோடு பகிஷ்கரித்து இருப்பதும் யாவரும் அறிந்ததேயாகும். ஆனால், இப்போது அதைப்பற்றி ஏன் எழுதுகிறோம் என்று சிலர் கருதலாம்.

இது எழுத வேண்டியதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், சுயமரியாதை இயக்கத்தைப் பழிக்கவும், தூற்றவும் அதன்மீது மூடப் பாமர மக்களுக்கு வெறுப்புண்டாக் கவுமான இழிதகைப் பிரச்சாரத்துக்கு அனுகூலமாக—சில, காங்கிரஸ்காரர் என்று சொல்லிக் கொண்டு சோம்பேறியாய் இருந்து வயிறு வளர்க்கும் வீணர்கள், 'சுயமரியாதைக்காரர்கள் கதரை வெறுக்கிறார்கள்' என்றும்; 'ஏழை மக்களைக் காப்பாற்றும் கதருக்கு விரோதமாய் இருந்து ஏழைகளுக்குத் துரோகம் செய்கிறார்கள்' என்றும் பொதுக்கூட்டங்களில் விஷமப் பிரச்சாரமும், திண்ணைப் பிரச்சாரமும் செய்து வருவதால், கதரின் வண்டவாளத்தை ஏழை மக்களே அறியட்டும் என்ற எண்ணத்தின்மீது, கதர் என்ற தலைப்பின்கீழ் மறுபடியும் சில குறிப்புக்கள் எழுத முன்வந்தோம்.

கதர் என்பது எதுவென்றால்—பஞ்சைக் கையினால் அரைத்து, கையினால் கொட்டி, கையினால் நூற்று, கையினால் நெய்த துணிக்குக் கதர் என்று பெயர். இவற்றுள் கையால் பஞ்சை அரைப்பது என்பது இப்போது சாத்தியமற்ற காரியமாகப் போய்விட்டது; இயந்திரத்தினால்தான் (ஜின்னிங் செய்ய) அரைக்க முடிகின்றது.

கதரைப்பற்றி, கதரை ஆரம்பித்த—கண்டுபிடித்த கதர் கர்த்தாக்கள் ஆரம்பத்தில் கதருக்காகச் சொன்ன காரணங்கள் யாவரும் அறிந்ததேயாகும். அதாவது,

1. 'இயந்திரம் என்பது பேயின் பிரதிபிம்பம். ஆதலால் இயந்திரத்தை ஒழித்துக் கையினால் வேலை செய்யும் பழையகால வாழ்க்கையைப் புதுப்பிக்க வேண்டியது அவசிய மானதால் எல்லோரும் கைராட்டினத்தில் நூல்நூற்க வேண்டியது' என்பதை முக்கிய காரணமாகவும்;

2. இரண்டாவதாக, அவனவனுக்கு வேண்டிய சாதனங்களை அவனவனே உற்பத்தி செய்துகொள்ளும் தன்னம்பிக்கைத் தன்மையடைய வேண்டும் என்கின்ற தத்துவத்தில் முதலாவதாக அவனவனுக்கு வேண்டிய துணியை அவனவனே நூற்று அவனவனே நெய்து கொள்ள வேண்டும் என்பதாகவும் சொல்லப்பட்டது.

3. அதன் பிறகு மூன்றாவதாக, இந்தியாவுக்கு வேண்டிய துணியை இந்திய மக்களே நூற்று நெய்து கட்டிக்கொள்வார்களேயானால் இங்கிலாந்து தேசம் வரட்சி யடைந்து, தரித்திரம் பொங்கி இந்தியர்களிடம் சரணாகதி அடைந்து 'சுயராஜ்யம்' கொடுத்துவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டது.

4. நான்காவதாக, கைராட்டினத்தால் நூல் நூற்பதானால் இந்தியாவில் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிற ஏழை மக்களுக்குக் கதர் ஒரு ஜீவனோபாயமாக இருக்கும் என்றும், அதனால் அனேக ஏழைகளுக்கு வேலை கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டது.

மற்றும், கதர் வேலைத் திட்டமானது இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்கும் வரை தான் அமுலில் இருக்குமே தவிர, சுயராஜ்யம் கிடைத்த பிறகு ஏழைகளுக்கு வேறு தொழில்கள் ஏற்பாடு செய்வதன் மூலம் கதர்த் திட்டம் எடுத்து விடப்படும் என்றும் சொல்லப் பட்டது. இவைகள் தவிர, இன்னும் எத்தனையோ காரணங்களைக் கதருக்காகச் சமயோசிதம்போல்—ஆளுக்குத் தகுந்தபடி அவ்வப்போது சமாதானமாகச் சொல்லப்பட்டும் வந்தது. இவ்வளவும் சொன்னவைகள் போதாமல், வீர வைணவர்கள், வீர சைவர்கள்

என்பவர்கள் போல்—'வீர கதர்க்காரர்கள்' தங்களுடைய அதி தீவிர கதர் பக்தியைக் காட்டுவதற்குத் 'தக்ளி'யினால் நூல் நூற்றுக்கொண்டு, அதாவது பக்தர்கள் சிற்சில ஒழிந்த நேரம் கிடைத்தாலும் 'சிவ சிவ', 'ராம ராம' என்று உரு ஜபிப்பதுபோல், ஒழிந்த நேரம் எல்லாம் 'தக்ளி'யினால் நூல் நூற்றுக் கொண்டே இருப்பதின் மூலம் செய்கையில் காட்டிவந்தார்கள்; இன்றும் சிலர் அம் மாதிரி செய்தும் வருகிறார்கள். மற்றும், இராட்டினத்தின் மூலமாகவோ, தக்ளியின் மூலமாகவோ நூல் நூற்பதைத் தேசியத்துவமாகவும், அது ஒரு 'ஆத்மார்த்த' தத்துவமாகவும் சொல்லப்பட்டது.

இவைகள் தவிர, கதர் கட்டாதவர்கள் தேசிய சபையில் அங்கத்தினராயிருக்க அருகதை அற்றவர் என்றும், மற்றும் இராட்டினத்திலோ, தக்ளியிலோ நூல் நூற்றுத் தேசிய சபைக்கு நூலையே சந்தாவாகக் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டது.

இவ்வளவும் தவிர, ஒரு முக்கிய விசேஷமென்னவென்றால், இந்தப் பத்து வருஷ காலத்தில் இந்தக் கதர்த் திட்டத்திற்காக—கதர் இயக்கத்திற்கும், பிரச்சாரத்துக்கும் ஒரு கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள் பொதுஜனங்களிடம் வசூல் செய்து செலவழிக்கப்பட்டு வந்திருப்பதாகும்.

இவ்வளவு சக்திகளையும், இலட்சியங்களையும், தத்துவார்த்தங்களையும், மகிமைகளையும், பிரச்சாரச் செலவையும் கொண்ட கதர்—நாளதுவரை பொருளாதாரத்திலோ, அரசியலிலோ, 'ஆத்மார்த்தத்திலோ' தொழில் முறையிலோ ஏழை மக்களுக்கு—இந்தியப் பொருளாதாரத்துக்கு ஒரு அம்மன் காசு அளவு (அம்மன் காசு என்பது காலணாவுக்கு அய்ந்து கொண்ட புதுக்கோட்டை நாணயம்) பலனாவது கொடுத்திருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டியது அறிவுடையோருடையவும், நடுநிலைமையோருடையவும் கடமையாகும்.

கதருக்கு முதலில் கூறப்பட்ட காரணங்களாகிய—'இயந்திரம் கூடாது' என்பதானது இனி உச்சரிப்பதற்கே முடியாத காரியமாய்ப் போய்விட்டது. ஏனெனில், இயந்திரம் என்பது அறிவு வளர்ச்சியடையவும், முற்போக்கு முயற்சியினுடையவும் அறிகுறியாகும். அறிவு வளர்ச்சியும் முற்போக்கு முயற்சியின் பயனும் கூடாது என்று சொல்ல, இந்த இருபதாவது நூற்றாண்டில் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலும்கூட மனிதன் இருக்க மாட்டான். அன்றியும், கதர் கர்த்தாவாகிய காந்தியாரே நூல் நூற்பதற்கு—அதாவது குறைந்த நேரத்தில் அதிகமான நூல் உற்பத்தி செய்யத் தகுந்த ஒரு இயந்திரம் (இராட்டினம்) கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பதாக விளம்பரம் செய்து, இரண்டு வருஷகாலமாய் முயற்சித்து வருகிறார். அந்தப்படி ஒரு இராட்டினம் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டால் அப்போது அதை இயந்திரம் என்று சொல்லாமல் என்ன சொல்ல முடியும்? ஒரு சமயம் 'சக்ராயுதம்' என்று காந்தியார் பெயரிடக்கூடும். (ஆரியம்—கேப்பை அரைக்கும் கல்லுக்கும் இயந்திரம் என்றுதான் பெயர்.) ஆகவே, அந்தப் பருப்பு இனி வேகாது.

அதற்கடுத்த காரணமாகிய, 'கதர்—இங்கிலாந்தைப் பட்டினிபோட்டுவிடும்' என்று சொல்லுவது, ஒரு தடவை 'ராமா' என்றால் சகல பாவமும் போய்விடும் என்பது போன்ற சங்கதிக்குத்தான் சமமாகச்சொல்ல வேண்டுமேயொழிய, மற்றபடி அதில் யாதொரு உண்மையும் இருக்க இடமில்லை. மற்றும், மேலே கூறப்பட்ட மற்ற காரணங்களும் அதுபோலவே பரிகசிக்கத் தக்கதாகத்தான் ஆகிவிடும்.

நிற்க, மற்றபடி அவனவனுக்கு வேண்டியதையெல்லாம் அவனவனே செய்து கொள்ளக்கூடிய சக்தியை ஒவ்வொருவனும் அடையவேண்டுமென்பதானது, ஆதியில் மனித சமூகம் காடுகளிலும் மலைப் பொந்துகளிலும் காட்டுமிராண்டிகளாய், காட்டு மனிதர்களாய்த் திரிந்தவர்களுக்குத்தான் இது சாத்தியப்பட்டிருக்கக்கூடும். எப்படியெனில், ஒரு மனிதனுடைய தேவை காய், கிழங்கு தவிர வேறொன்றும் இல்லாதிருக்கும். ஆனால்

இப்போதைய காட்டுமிராண்டிக்கும், காட்டு மனிதனுக்கும்கூட இது சாத்தியமாகக் கூடியதல்ல என்றே சொல்லுவோம்.

மேற்கண்ட கொள்கை, மூட மக்கள் காதுக்கு இனிமையானதாகவும், நியாயமான தாகவும் காணக்கூடும்; அவர்கள் கருத்துக்கு இதைவிட முட்டாள்தனமான கொள்கை வேறு ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், மனித சமூகம் கூடி வாழ வேண்டுமானால் கூட்டுறவும், ஒருவருக்கொருவர் செய்து கொள்ளவேண்டிய அவசியமும் இல்லாமல் இருக்க முடியவே முடியாது.

எனவே, இப்போது சிறிது செல்வாக்கு இருக்கும் ஒரே ஒரு காரணமாகிய—'கதர் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கக்கூடியது' என்பதில் ஏதாவது உண்மையோ, நாணயமோ இருக்கின்றதா என்று பார்ப்போம்.

கதரைப்பற்றிய நமது ஆராய்ச்சி அனுபவத்தில் நூல் நூற்பது ஒரு வெட்டி வேலை என்பதோடு, அது ஏழைகளை ஏமாற்றி நிரந்தரமாய் ஏழை வகுப்பு என்று ஒன்று இருந்து வருவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சி என்றே முடிவேற்பட்டிருக்கிறது.

ஏன் இராட்டினத்தில் நூல் நூற்பதை வெட்டி வேலை என்கிறோம் என்றால், இராட்டினத்தால் ஒரு ஆணோ, ஒரு பெண்ணோ ஒரு நாளைக்கு 10 மணி நேரம் நூல் நூற்பதால் ஒரு அணா அல்லது ஒன்றேகாலணா கூலி கிடைக்கின்றது என்பது கதர் நிபுணர்கள் கணக்கு. இந்தப்படி கதர் நூலில் கூலி கிடைப்பதில்லை என்றும், நூல் நூற்பதின் மூலம் நூல் நூற்கும் கூலியும் போய் கையிலிருந்தும் பணம் கொஞ்சம் நஷ்டமாகின்றதென்றும் நாம் சொல்லுகின்றோம். எப்படியெனில், இதைச் சற்று வாசகர்கள் கவனமாகவும், நுட்ப அறிவு கொண்டும் கவனித்துப் பார்த்தால்தான் விளங்கிக் கொள்ளக்கூடும். இல்லாத பட்சம் 'பார்ப்பான் வயிற்றில் கொட்டும் பண்டம் மேலோகத்தில் ஆவிரூபமாயிருக்கிற பெற்றோர்களுக்குப் போய்ச் சேருகின்றது' என்கிற மாதிரியில்தான், 'கதர் நூற்றால் ஒரு அணா கூலி கிடைக்கின்றது' என்கின்ற பொய் நம்பிக்கை உண்டாகிவிடும்.

54 இஞ்சு அகலமுள்ள கதர்த் துணி 10 கஜம் கொண்டது, $4\frac{1}{2}$ இராத்தல் எடை இருக்கும். இதில் சேதாரம், கஞ்சி, கனம் போனால் மீதி 4 ராத்தல் பஞ்சுக்குத்தான் நூற்கப்பட்ட கூலி கொடுக்கப்பட்டிருக்கும். அதாவது, இராத்தல் ஒன்றுக்கு 5 அணா கூலி வீதம் 4 இராத்தலுக்கு ரூ. 1-4-0 கூலி கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால்; இந்த பத்து கஜம் கதர்த் துணி என்ன விலைக்கு விற்கப்படுகின்றது என்று பார்த்தால், இன்று ரூ. 5-10-0-க்கு விற்கப்படுகின்றது. இந்த 54 இஞ்சு அகலம், 10 கஜம் துணி, இந்திய மில் நூலால் நெய்யப்பட்ட துணி இன்று ஈரோடு பஜாரில் சலவை செய்தது கஜம் ரூ. 0-3-6 வீதம் (10 கஜம்) ரூ. 2-3-0-க்குத் தாராளமாய்க் கிடைக்கின்றது. இது கதரைவிட எவ்வளவோ மடங்கு—துணி மிகவும் நைசாயும், முறுக்காயும், கெட்டியாயும் இருப்பதை யாரும் பார்க்கலாம்.

ஆகவே ரூ. 2-3-0-க்குக் கிடைக்கும்படியான துணியைவிட மட்டமானதும், முறுக்கும், கெட்டியும் இல்லாததுமான முரட்டுத் துணியைக் கதர் என்கின்ற காரணத்தால் ரூ. 5-10-0 விலைபோட்டு வாங்குவதன் மூலம்—4 ராத்தல் துணிக்கு ரூ. 3-7-0 அதிக விலைகொடுத்து வாங்குகிறோம். இந்த ரூ. 3-7-0 அதிகம் கொடுக்கும் பணத்திலிருந்துதான், நூல் நூற்றவர்களுக்கு ரூ. 1-4-0 கொடுக்கப்படுகின்றதே தவிர, கதரின்—துணியின் பெறுமானத்தில் இருந்து கொடுக்கக்கூடியதல்ல என்பதைப் புத்தியில் பதியவைக்க வேண்டுகிறோம்.

கதர் நூற்பதால் ஜனங்களுக்கு இராத்தல் ஒன்றுக்கு நூற்பவர்களுக்குக் கொடுத்த கூலிபோக, மேற்கொண்டு ரூ. 0-8-9 அணா வீதம் நஷ்டமேற்படுகிறது. இதுதவிர, 2 இராத்தல் பஞ்சில் நூற்கப்படவேண்டிய துணிக்குப் பதிலாக 4 இராத்தல் செலவாகின்றது. இதுவும் தவிர, 6 மாதத்திற்கு வரக்கூடிய துணி 4 மாதத்திலேயே கிழிந்துவிடுகின்றது. மற்றும், துணிமுரடாகவும், உபயோகத்துக்கு அசவுகரியமாகவும் இருந்துவருகின்றது.

இதில்தான் ஏழைக் கூலிகளுக்கு தினம் 10 மணி வேலை செய்தால் 15 பை. அதாவது ரூ. 0-1-3 கூலி கிடைக்கிறது என்று சொல்லி ஏமாற்றுகின்றார்கள். இந்த ஏமாற்றத்தை அறிந்துகொள்ளாத மூடர்கள்தான் கதரால் ஏழைகளுக்கு இலாபம் என்று சொல்லலாமே தவிர, பொருளாதாரக் கணக்கும் புள்ளிவிவரமும் தெரிந்தவன் கதரால் மக்களுக்கு இராத்தல் ஒன்றுக்கு 0-13-9 வீதம் பொதுஜனங்கள் பணம் நாசமாகின்றது என்றும், ஒன்றுக்கு இரண்டாகப் பஞ்சு வீணாகின்றது என்றும்தான் சொல்லித் தீரவேண்டும். இதிலிருந்து நமக்குத் தோன்றுவதென்னவென்றால், 'ஏழை மக்களை' 10 மணி நேரம் உழைக்கச் செய்து, வேலை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு ரூ. 0-1-3 கூலி கொடுப்பதைவிட—அவர்களைச் சும்மா உட்காரவைத்துச் சாப்பாடு போடுவதானால், மேல்கண்டபடி பொது ஜனங்களை ஏமாற்றி நஷ்டமடையச் செய்யும் பணத்திலிருந்து இன்னும் இரண்டு பங்கு ஜனங்களுக்குச் சாப்பாடுபோடலாம் என்று தைரியமாய்ச் சொல்லலாம் என்பதேயாகும்.

அன்றியும், கதர் இலாக்காவிலோ வியாபாரத்திலோ கலந்திருப்பவர்கள், 'புண்ணிய க்ஷேத்திரங்'களில் நாமம், விபூதி, உருத்திராட்சம், துளசிமணி விற்பதில் தங்கள் பக்தியைக் காட்டுவதுபோல், கதர்த் தொழிலில் ஈடுபட்டு வயிறு வளர்ப்பதன் மூலமும், பணம் சம்பாதிப்பதன் மூலமும் தங்கள் பக்தியைக் காட்டுகிறார்கள். இதைக் கண்டு பாமர மக்கள் ஏமாந்து பின்பற்றி வருகிறார்கள்.

காந்தியாரின் தத்துவார்த்தமும், காங்கிரஸ் தயவும், 10 இலட்சக் கணக்கான ரூபாய் செலவு கொண்ட காங்கிரஸ் தொண்டர்கள் பிரச்சாரமும் இல்லாவிட்டால் கதர் விற்பனையாகி 'ஏழைகளுக்குப் பயன்படுமா' என்பதை யோசித்துப் பாருங்கள்! இந்தப்படி ஒருவர் தயவில் பிழைப்பதுதானா, ஏழைகள் பிழைக்கும் வழி என்றும்—இது எத்தனை நாளைக்கு நடக்கும் என்றும் கேட்கின்றோம்.

ஆகவே, இந்திய மக்களின் பொது அறிவையும், தேசிய ஞானத்தையும் மதிக்க இந்தக் கதர் பக்தி ஒன்றே போதுமானது. இந்தியத் தேசியத் தலைவர் என்பவர்களின் நாணயத்தையும், யோக்கியப் பொறுப்பையும் கவனிக்க இந்தக் கதர்ப் பிரச்சாரம் ஒன்றே போதுமானது.

இந்திய தேச பக்தர்கள், தேசிய வாதிகள், தேசத் தொண்டர்கள் ஆகியவர்களின் பகுத்தறிவுக்கும், விடுதலை ஞானத்திற்கும் இந்தக் கதர்ப் பிரச்சாரமே போதுமானது. இந்தியப் பாமர மக்களின் மதசம்பந்தமான அறிவுக்கு அவர்களது சடங்கு, ஆச்சாரம், இராமாயணம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய விஷயத்தில் உள்ள நம்பிக்கை முதலியவை எப்படி அளவு கருவியாய் இருக்கின்றதோ அதுபோல்தான், இந்திய மக்களது பொருளாதார ஞானத்துக்கும், அரசியல் ஞானத்துக்கும், ஏழைகளின் விடுதலைக்கும் அவர்களது கதர் தத்துவமே அளவு கருவியாய் இருந்துவருகின்றது.

கடைசியாக, ஏழை மக்களைக் காப்பாற்றுவது என்பது, ஒரு மனிதனிடத்தில் இருந்து 3-7-0 வை ஏமாற்றிப் பறித்து, ஒரு மனிதனுக்கு ரூ. 1-4-0 வைக் கொடுப்பது அல்ல என்றும்; ஏழைகள் யார்? அவர்கள் ஏன் ஏழைகளாய் இருக்கிறார்கள்? ஏழைகள் என்கின்ற மக்களே இல்லாமல் இருக்க என்ன செய்யவேண்டும்?—என்பதைக் கவனித்து, அதற்கேற்றபடி நடப்பதுதான் நாணயமான காரியமாகுமேயொழிய, இந்த மாதிரியான பித்தலாட்டங்களால் ஒருநாளும் ஏழைமைத்தன்மை நீங்கிவிடாதென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறோம். உதாரணமாக, இந்த 10 வருஷ காலமாய்க் கதர்நூல் நூற்றவர்களுக்குக் கொடுத்த கூலியைக் கணக்குப் பார்த்தால், கதர்ப் பிரச்சாரத்துக்குச் செலவழிக்கப்பட்ட பணத்தைவிடக் கொஞ்சமாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் பெயரைச் சொல்லி, பொதுஜனங்களை ஏமாற்றி அடைந்த பணம்—கதர் நூற்ற 'ஏழைகளுக்கு'க் கொடுத்ததைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கும் என்று தைரியமாகச் சொல்லுவோம்.

ஆகவே, இனிமேலாவது கதர் பக்தர்கள் தங்களுடைய ஆவேசத்தில் சுயமரியாதைக் காரர்களை வையாமலும், பழி சுமத்தாமலும் வேறு வழியில் தங்கள் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—16-7-1933]

தோழர்களே!

'யாவரும் கதர் கட்டவேண்டும்; நூல் நூற்க வேண்டும்' என்றெல்லாம் இராட்டினமும் கதர் மூட்டையும் தூக்கிக்கொண்டு ஊர்ஊராய்ப் பிரச்சாரம் செய்தவன் நான்; அதற்கென்று அங்கங்கே பல இடங்களிலும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கதர் கட்டும் திட்டம் வளரப் பாடுபட்டவன் நான்.

அப்படியெல்லாம் இருந்து, இன்றைக்கு அவைகளை அடியுடன் வெறுக்கிறேன். நான் மட்டுமல்ல; யாவரும், சிந்தித்துப் பார்ப்பவர்கள் அத்தனை பேரும் இந்த முடிவுக்குத் தான் வரவேண்டும்.

சாதாரணமாக, நூல் நூற்பதை வெறுக்கிறேன் என்றால், காரணங்கள் பல உண்டு. கையில் நூற்பது வசதியான முறையா? சிக்கனமானதா? அல்லது கெட்டியானதா? அழகாக அமைவதா? விலை நயமாக அடங்குவதா? இவைகளில் ஒன்றாவது உண்டா? எனவேதான் இதற்குச் சமாதானம் காணும் தேச பக்தர்கள் என்ற பார்ப்பனர்களும், வடநாட்டவர்களும் ஒன்றும் கூற முடியாவிட்டாலும், 'காந்தி அடிகள் கூறினார்' என்று கூறி மழுப்பிவிடுகின்றனர். ஏன், வைதீகப் பார்ப்பனர்களுக்குக் கையால் நூற்ற நூல்தான் பூணூலுக்கு ஏற்றதாம்; அதுவும் இப்போதுள்ள பார்ப்பனர் யார் சுறுசுறுப்பானவர்கள்? ஒருவராவது கிடைப்பது அரிதாகையால், யாவரும், கையால் நூற்ற நூல்தான் பூணூலுக்குத் தேவை என்று தேடிச் செல்வதில்லை. கடையில் விற்கும் மில் நூலுக்குத்தான் இப்போது கிராக்கி அதிகம்.

எனவே, காந்தியார் சொன்னார் என்பதற்காகவும், பாரதமாதா மொழி என்பதற்காகவும் இந்தி நம் மீது சுமத்தப்படுகிறது. இதன் உட்கருத்து—வடநாடு, தென்னாடு என்ற பாகுபாடின்றி வடநாட்டினின்றும் தென்னாடு பிரிந்து செல்லாத வழியில் அடிமைப் படுத்தி அடக்கி ஆளவேண்டும் என்பதற்குத்தான். அம்மொழி இங்கு வந்தவுடனே அந் நாட்டுக் கலாசாரமும் நாகரிகமும் இங்கு வளர்ந்துவிடும்.

[காஞ்சிபுரத்தில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-8-1955]

3. இனி, கைத்தறி ஏன்?

இப்போது நமது நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய் பெறும்படியான கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்றன.

இவை இவ்வாண்டு மாத்திரமல்லாமல் சென்ற சில ஆண்டுகளாகவே தேங்கிக் கிடக்கின்றன. இதன் காரணம் என்ன என்பதை நெசவாளர்களும், கைத்தறித்துணி வியாபாரிகளும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாட்டில் மக்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகின்றது. அதுபோலவே நாகரிகமும் வளர்ந்து வருகின்றது. இந்த இரண்டையும்விட மக்களின் பொருளாதார நிலையும் நல்லவண்ணம் வளர்ச்சியடைந்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் கைத்தறித் துணிகள் ஏன் தேங்கிக்கிடக்கின்றன என்பதை நெசவாளிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று திரும்பவும் வேண்டிக்கொள்கிறேன்.

எனக்குத் தோன்றிய சில காரணங்கள் என்னவென்றால் :

1. ஆண்கள் வேட்டி கட்டிக்கொள்வதில் முன்புபோல் 6 முழம், 8 முழம் வேட்டிகள் வாங்கிப் பஞ்சகச்சம் (கீழ்ப்பாய்ச்சி) போட்டுக் கட்டும் வழக்கம் 3-ல் 2 பாகம் கைவிடப்பட்டு விட்டது. 4, 4½, 5 முழ வேட்டிதான் எல்லாத் தமிழர்களும் கட்டிக் கொள்கிறார்கள்.

2. பெண்கள் 16 முழ சேலை கட்டிவந்தவர்கள்—கிராமம் முதல் இப்போது 10 முழ, 12 முழ சேலைதான் கட்டி வருகிறார்கள்.

ஆணும் பெண்ணும் சட்டை இரவிக்கை போட்டுக்கொள்ளுகிறவர்கள் அதிகமானாலும்—அதற்காக மில் துணியைத்தான் எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். சேலைகளுக்கும் ஏராளமான பெண்கள் மில் துணிகளையும், மில் துணியில் அச்சிடப்பட்ட துணிகளையுமேதான்—கூலிவேலை செய்யும் பெண்கள் உட்பட—பெரும்பாலோர் விரும்புகிறார்கள். இந்தக் காரணங்களால் எந்தக் காரியத்திற்கும் யாரும் கைத்தறித் துணியை விரும்புவதே இல்லை.

உயர்ரக பட்டு சரிகைத் துணிகள்கூட இன்று மில்லில் தயாரிக்கப்படுகிறபடியால், அந்தத் துறையிலும்கூட கைத்தறிக்கு அதிக வேலையில்லாமல் போய்விட்டது; வேலை இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்துகிறவர்கள் மிகவும் குறைவாகிவிட்டார்கள்.

சிறு பையன்கள், மாணவர்கள், சிறு பெண்கள் முதலியவர்களும் சின்ன (துண்டு) வேட்டிகள், சிற்றாடை, சேலைகள் முதலியவை அணிவதை விட்டுவிட்டு, மாணவர்கள் உள்பட 'டிராயர்கள்' என்னும் தொடைவரை இருக்கும் கால்சட்டை முதலியவைகளையும், 'கவுன்' என்று சொல்லும்படியான மில்துணியில் செய்யப்பட்ட 'ரெடிமேட்' உடுப்புக்களையும் எல்லாப் பையன்களும், எல்லாப் பெண்பிள்ளைகளும் அணிய ஆரம்பித்து விட்டார்கள்.

பொதுவாக ஆண்களுக்கோ, பெண்களுக்கோ நாகரிக உடுப்பு என்றால் மில் துணிகளைத்தான் பயன்படுத்த முடிகிறதே தவிர, எந்தக் காரியத்திற்கும் எந்த நிலைக்கும் கைத்தறித் துணி தேவையில்லாமலே போய்விட்டது.

இந்த நிலை நமக்கு ஏற்படும் என்று நான் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே கைத்தறி நெசவாளர்களுக்கு இதை எச்சரிக்கை செய்திருக்கிறேன். தவிரவும், 'கைத்தறி நெசவு காட்டுமிராண்டிக் காலத்துத் தொழில்' என்றும், 'இதனால் மக்களுக்கு நேரக் கேடு, அதிக உழைப்பு, வரும்படி குறைவு, அநாகரிக வாழ்க்கை' என்றும் கூறி எச்சரிக்கை செய்திருக்கிறேன்.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்கூட கைத்தறி வாரம் என்ற ஒரு கூட்டத்தில் நான் பேசியபோது, 'கைத்தறி நெசவுத் தொழில் சாகவேண்டிய அல்லது சாகடிக்கப்பட வேண்டிய தொழில்' என்று கூறி இருக்கிறேன்.

கைத்தொழில் என்றால் அதற்கு நேரம், காலம், கால அளவு ஒன்றுமே இல்லை; தொழில் செய்ய வயது அளவே இல்லை. ஆகவே, இது ஒரு அடிமை வாழ்வுத் தொழிலேயாகும். இந்தியா தவிர, வேறு எந்த நாட்டிலும் உடைக்குக் கைத்தறித் தொழில் இல்லவே இல்லை. மில் நெசவுத் தொழில்தான் நீக்ரோ மக்களிடையிலும் இருந்து வருகிறது.

கைத்தறி நெசவாளர்கள் என்றைக்குமே பணக்காரராக முடியாது; நெசவாளியால் பலர் பணக்காரர்களாகலாம்.

இனி, எந்தக் காலத்திற்கும் கைத்தறித் துணியும், நெசவாளியும் முன்னேற்றமடைய முடியவே முடியாது.

கதர் எவ்வளவு முட்டாள்தனமும் காட்டுமிராண்டித் தன்மையும் கொண்ட தொழிலோ, அதில் பாதி அளவு முட்டாள்தனமும் காட்டுமிராண்டித்தன்மையும் கொண்ட தொழிலாகும்

இன்றையக் கைத்தறித் தொழிலும் என்பதே எனது கருத்து. அது மாத்திரமேயல்லாமல், இனி யார் என்ன பாடுபட்டாலும் அதை நல்வாழ்வு வாழச்செய்ய முடியவே முடியாது என்பதும் எனது கருத்து.

['விடுதலை'–தலையங்கம்—1-2-1969]

4. குடிசைத் தொழில்கள்

காங்கிரஸ் ஆட்சி என்றால்—காந்தி ஆட்சி என்பது தத்துவம்;

காந்தி ஆட்சி என்றால்—பார்ப்பான் ஆட்சி என்பது தத்துவம்;

பார்ப்பான் ஆட்சி என்றால்—மனுதர்ம ஆட்சி (வருணாசிரம ஆட்சி) என்பது தத்துவம்.

இன்றைய ஆட்சி மனுதர்ம ஆட்சி என்பதுபற்றி எந்த அறிவாளருக்கும் விளங்காமல் இருக்காது. மனு ஆட்சிக்காகத்தான் காந்தி பார்ப்பனக் கூலியாய் இருந்து நமக்கெல்லாம் நிரந்தர சூத்திரத் தன்மையையும், தரித்திரத் தன்மைக்கேற்ற குடிசைத் (கைராட்டினம், பஞ்சு, பட்டை போடல்) தொழிலையும், அதற்கென்று ஒரு இலாக்காவையும், அதன் செலவுக்கென்று மக்கள் வரிப் பணத்தில் பல கோடி ரூபாய்கள் செலவு செய்வதைக் கொள்கையாகவும், திட்டமாகவும் ஏற்படுத்திவிட்டுப் பார்ப்பனர்களாலேயே கொலையுண்டு செத்தார்.

இன்று இந்நாட்டில் 'குடிசைத் தொழில்' ஆகிய கதர், கைராட்டினம் முதலியவைகள் எல்லாம் இந்நாட்டின் மக்கள் தொகையில் 100-க்கு 97 பேராக இருக்கும் சூத்திரர், பஞ்சமர், மிலேச்சர் என்கின்ற பார்ப்பனரல்லாத மக்களுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டு—அந்த மக்களிடையில்தான் இருந்தும், நடந்தும் வருகின்றனவேயொழிய, பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களுக்காக இருந்து வரவில்லை.

குடிசைத் தொழில் என்பது, நமது நாட்டில் உழைப்பு அதிகம்; பலன் குறைவு; அதாவது இந்த உழைப்பாளிகளுக்கு அவரவர்கள் வயிற்றுக்குக்கூட—கஞ்சியாக, தண்ணீரும் பருக்கையுமாகக் குடித்தாலும், வயிற்றுக்குப் போதாமல் தரித்திர வாழ்வுக்கு ஏற்றதாகப் பார்த்துக் கண்டுபிடித்துத் திட்டமிடப்பட்டிருப்பதேயாகும்.

அதற்குக் காரணம், உடலுழைப்புக்கான தொழில்கள் என்பவைகள் எல்லாம் பார்ப்பனரல்லாத, 'சூத்திர' மக்கள் என்பவர்களுக்கே மதப்படி, சாஸ்திரப்படி, 'மனுதர்ம'ப்படி மனித தர்மம் என்று ஒதுக்கி வைத்துவிட்டபடியால்—அப்படிப்பட்ட தொழில்களின் மூலம் கிடைக்கும் வரும்படி சோற்றுக்கு (உணவுக்கு)ப் போதியதாய் இருந்தால் உடலுரம், மனவுரம் பெற்றுவிடுவான் என்றும்; உணவு, தேவைக்கு மேலிருந்தால் சரிவரத் தொழிலுக்கு வரமாட்டான் என்றும் கருதியே, உணவுக்கே போதாமல் இருக்கும்படி பார்த்துக் குடிசைத் தொழில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

தவிரவும், இந்தக் குடிசைத் தொழில் என்பவைகள் எல்லாமுமே இயந்திரங்களாலும் செய்ய அனுமதிக்கப்பட்டு, அதற்கு அரசாங்க ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு நடந்துவரும் இயந்திரத் தொழில்களோடு போட்டிபோட்டுக் குடிசைத் தொழிலாளிகள் சதா அரசாங்கத்தைக் கெஞ்சி—பிச்சைக்காரர்கள் பிச்சை பெறுவது போல், அரசாங்கத்தின் கருணையினாலேயே வாழும்படி செய்யப்பட்டிருக்கிறது.

இங்கு இந்த வியாசத்திற்கு எடுத்துக்காட்டாக அரசாங்கக் கொள்கைக்கும் ஆட்சி முயற்சிக்கும் ஆட்பட்டிருக்கும் மூன்று குடிசைத் தொழில்களை எடுத்துக் கொள்வோம்.

1. இராட்டினத்தில் நூல் நூற்றுக் கதர்த்துணி நெய்தல்;
2. மில்நூல் கொண்டு கைத்தறியில் துணி உற்பத்தி செய்யும் கை நெசவுத் தொழில்;
3. நெருப்புக் குச்சி (தீப்பெட்டி) செய்யும் தொழில்.

முதலாவதான இராட்டினம்–கதர்த் துணி நெய்யும் தொழில், பல தலைவர்களும் பல்லாயிரம் தொண்டர்களும், பல கோடி ரூபாய் செலவிட்டும் பல ஆண்டுகள் (சுமார் 40 ஆண்டுகள்) பல ஸ்தாபனங்கள் வைத்தும், அரசாங்கமே தனி இலாக்காமூலம் நடத்தி வந்தும் கூட இன்றும் 'அரசாங்கச் சலுகைத் தொகையுடன் மக்கள் தியாகமும் சேர்ந்தால்தான்' அது நடக்க முடியும் என்பதோடு, அப்படி நடந்தாலும் அதில் ஈடுபட்டவர்கள் பிச்சை எடுப்பதற்குப் பதிலாக, 'ஏதோ அரை வயிறாவது வளர்க்கலாம்' என்கின்ற தன்மையில் இருந்து வருகிறது.

இதில் குறிப்பிடத் தகுந்த அதிசயம் என்னவென்றால்—இந்த யோக்கியதையில் உள்ள குடிசைத் தொழில் கல்வியில் சேர்க்கப்பட்டுப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது என்பதுடன், இதற்காகவும் கோடிக் கணக்கில் மக்கள் வரிப் பணம் நாசமாக்கப்பட்டு வருவதேயாகும். மற்றும் ஒரு அதிசயம் என்னவென்றால், இத் தொழில் எந்தநாளிலும் அரசாங்க உதவியும் நிர்ப்பந்தமும் மக்கள் தியாகமும் இல்லாமல் வாழ முடியாது. மக்களுக்குச் சிறிதும் பயன் ஏற்படாது என்பது தெரிந்தே இக் காரியம் செய்யப்பட்டு வருகிறது என்பதாகும்.

இரண்டாவது தொழில் கைத்தறித் தொழில்; இதை சர்க்கார் ஆதரித்து அதைச் சாகடிக்காமல் பாதுகாப்பது.

கைத்தறித் தொழில் இன்று அத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்குப் போதிய உண வளிப்பதில்லை.

இத்தொழிலுக்கு சர்க்கார் பணச் சலுகை தரவேண்டி இருக்கிறது.

இத்தொழிலில் உற்பத்தியாகும் துணிகளுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டியிருக்கிறது.

நெசவாளி பிழைக்கவேண்டு மென்பதற்காகவே பெருவாரியாக மக்கள் இத் துணியை வாங்கவேண்டியிருக்கிறது.

இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு திடீர் திடீர் என்று துணித் தேக்கம், விலை வீழ்ச்சி, கூலி கட்டிவராமை, பஞ்சம், பரதேசம் சென்று பிச்சை எடுக்கவேண்டிய அவசியம், பிள்ளைகளை விற்றல் முதலாகிய தொல்லையும் இழிநிலையும் ஏற்பட்டுவருகின்றன.

இத்தொழிலில் நேரம், காலம், ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பிள்ளை, குட்டி, கிழடு, கிண்டு உட்பட—குடும்பமே பாடுபட வேண்டியிருக்கும் தொழிலாகும். இதற்கு அரசாங்க சலுகைத் தொகையும் மக்களது இரக்கமும் அருளும், அதாவது 'அய்யோ, பாவம்!—நெசவாளி பிழைக்க வேண்டாமா!' என்கின்ற கருணையும் தவிர, அரசாங்கப் பாதுகாப்பே இல்லாமலிருப்பதோடு இயந்திரத் தொழிலோடு சதா போட்டிபோடவேண்டியதாக இருந்து வருகிறது. இந்தக் கைத்தறித் தொழிலும், இனி எக்காலத்திலும் தன் காலில் நிற்கும் படியான யோக்கியதைக்கு ஆளாகாமல் சர்க்கார், பொதுமக்கள் ஆகியவர்களின் ஆதரவின் மீதே இருந்து தீர வேண்டியதுமாகும்.

இனி மூன்றாவது தொழிலான (தீப்பெட்டி) தீக் குச்சித் தொழிலாகும். இதைப்பற்றி மக்கள் அருள்கூர்ந்து சற்றுக் கவலையுடன் சிந்திக்க வேண்டும். இந்தத் தீக் குச்சித் தொழிலில் உற்பத்தியாகும் தீக்குச்சிகளுக்கு நமது 'குடிசைத் தொழில் பாதுகாப்பு சர்க்கார்'—100 ரூபாய் பெறுமான சரக்கு உற்பத்தி செய்யப்பட்டால் அதற்கு 300 ரூபாய் சுங்க (எக்சைஸ்) வரி போட்டு உற்பத்தியாளரிடம் தொழிற்சாலையிலேயே வசூல்செய்து விடுகிறார்கள். இதன் காரணமாக, ஒரு நயா பைசா (புதுக் காசு)வைவிடக் குறைவாகச் செய் முதல் அடங்கும் நெருப்புப் பெட்டியை ஆறு நயா பைசா போட்டு மக்கள் வாங்கிப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அதாவது, ஒரு அணாவுக்கு 6 அல்லது 7 பெட்டி வாங்கக்

கூடியதாக இருந்தும், அரசாங்க டியூட்டி (வரி) காரணமாகவே ஒரு பெட்டிக்கு ஒரு அணா விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

நமது நாட்டில் இயந்திரங்களுடன் போட்டிபோட்டுக்கொண்டு—கூலித் தொழிலாள மக்களுக்கும் நல்ல கூலி கொடுத்துக்கொண்டு–5, 6 வயதுக் குழந்தைகள் முதல் 85, 90 வயது கிழவி. கிழவர்கள் வரையிலும், பெரும்பாலும் 100-க்கு 90 பேர் அவரவர்கள் வீட்டிலிருந்த வாறே தொழில் செய்துகொண்டு—தினம் 8 அணா முதல் ஒரு ரூபாய் வரை கூலி சம்பாதிக் கும்படியான குடிசைத் தொழில் இந்தத் தீப்பெட்டித் தொழிலேயாகும். இந்தக் கூலி யென்பது—ஒரு ரூபாயில் அடங்கும் ஒரு குரோஸ் (144) நெருப்புப் பெட்டிகளுக்கு 3-4-0 ரூபாய் வீதம் டியூட்டி (வரி) கொடுத்தும் தொழிலாளிகளுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்குக் கொடுத்துவருகிற கூலியாகும்.

இந்தக் குடிசைத் தொழிலில் இருக்கும் பெருமை இது மாத்திரம்தானா என்றால், இன்னும் பல பெருமைகள் உள்ளன. இந்தத் தொழிலால் தென்னிந்தியாவில் மைசூரிலும், தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் சுமார் 1,00,000 (ஒரு இலட்சம்) பேர்கள் தினமும் இந்தப் படி வேலை செய்து கூலி வாங்கிப் பிழைக்கிறார்கள். அதாவது, கேரளாவில் மரமறுத்துக் குச்சிகள் செய்தல்; சிவகாசியில் பல அச்சாபீஸ் வைத்து லேபிள் செய்தல்; சேலம் மாவட்டத்தில் 20 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், மைசூர் இராஜ்யத்தில் 20 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மற்றும் இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நூற்றுக்கணக் கான தொழிற்சாலைகள் முதலாகியவற்றில் 1,00,000 தொழிலாளர்கள் மேலேகண்ட விபரப்படி தொழில் செய்து பிழைக்கிறார்கள்.

இத் தொழில் இப்படித் தென்னிந்தியாவில் நடப்பதன் மூலம் உற்பத்தியாகும் நெருப்புப் பெட்டிகள் நாளொன்றுக்கு சற்றேறக்குறைய 50,000 குரோஸ்—அதாவது 72,00,000 (எழுபத்திரண்டு இலட்சம்) நெருப்புப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு இவை களுக்காக டெல்லி சர்க்காருக்கு—144 பெட்டி கொண்ட ஒரு குரோசுக்கு ரூ. 2–8–0 முதல் ரூ. 5 வரை (டியூட்டி) சுங்கவரி போடுவதன் மூலம் நாளொன்றுக்கு ரூ. 1,30,000 (ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்) வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,50,00,000 (நாலரைக் கோடி ரூபாய்) வருமானம் வருகிறது.

இந்தப்படியான பகல் கொள்ளைக்கு ஒப்பான இந்தச் சுங்கவரி பிரிட்டிஷ் ஆட்சியில் 1934-ல் ஒரு குரோஸ் ஒன்றுக்கு ரூ. 2–4–0 ஆக உயர்த்தப்பட்டது. அதன் பிறகு, ஆட்சி காங்கிரஸ் கைக்கு ஏகபோகமாக வந்த பிறகு 1957-ல் குரோஸ் ஒன்றுக்கு ரூ. 3–4–0 ஆக 'டியூட்டி' உயர்த்தப்பட்டு, 0–0–6-க்கு விற்ற தீப்பெட்டி இப்போது ரூ. 0–0–9 (முக்காலணாவாக) விற்கப்பட்டு வருகிறது.

இப்படியெல்லாம் டெல்லி ஆட்சிக்குப் பலவிதத்திலும் தென்னிந்திய நெருப்புப் பெட்டி உற்பத்தித் தொழிலால் ஆண்டொன்றுக்கு ஆறு கோடி (6,00,00,000) ரூபாய் வரும்படி ஏற்படும் இந்தத் 'தென்னிந்திய நெருப்புப் பெட்டித் தொழில்' சம்பந்தமாக, டெல்லி சர்க்கார் தென்னிந்தியாமீது பொறாமைகொண்டு இதைத் தலையெடுக்கவொட்டாமல் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. டெல்லி சர்க்கார் பொறாமை யினாலும், அலட்சியத்தினாலும் வடநாட்டிலுள்ள தீப்பெட்டி செய்யும் அன்னிய நாட்டு மக்களுக்கு இலாபம் கிடைக்கும்படியான 'விம்கோ' கம்பெனியின் இயந்திரத் தொழிலை ஆதரிப்பதனாலும்—இன்று இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் உள்ள குடிசைத் தொழில் நெருப்புப் பெட்டித் தொழிற்சாலைகளில் இதுவரை சுமார் 150 தொழிற்சாலைகள் ஆள் குறைக்கப்பட்டும் மூடப்பட்டும் போகும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

வடநாட்டில் கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் வெளிநாட்டு—அதாவது ஸ்வீடன் நாட்டான் பெருவாரிப் பணத்தாலும் நிர்வாகத்தாலும் நடைபெறும் 3, 4 இயந்திரத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் நெருப்புப் பெட்டிகள் நாளொன்றுக்கு

70,000 (எழுபதாயிரம்) குரோஸ் பெட்டிகளுக்கு மேல் உற்பத்தி செய்யப்படுவதாகும். இவைகள் நான்கே நான்கு இயந்திரத் தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன.

இந்த நான்கிற்குமாக மொத்தத்தில் 7000 (ஏழாயிர) தொழிலாளர்களே வேலை செய்கிறார்கள்; இவற்றில் உற்பத்தியாகும் சரக்கும் மட்டரகமாகும்.

டெல்லி அரசாங்கத்தார் பொறாமை இல்லாமல் உண்மையில் நல்லெண்ணம் வைத்து குடிசைத் தொழிலை ஆதரிக்க வேண்டும் என்கின்ற நாணயமான கருத்தில் இந்தத் தென்னிந்தியக் குடிசைத் தொழிலை ஆதரிக்க எண்ணி முன்வந்திருப்பார்களானால், தென்னிந்தியாவில் இனியும் ஒரு லட்சம் (1,00,000) தொழிலாளர்கள் குழந்தை குட்டி, கிழடு, கிண்டுகள் உட்பட நல்ல கூலிபெற்று பிழைக்கும்படியாக இருக்கத்தக்க ஒரு ஆயிரம் குடிசைத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்குமென்று உறுதியாகக் கூறலாம்.

கையினால் பொருளை உற்பத்தி செய்து—உற்பத்தி விலைக்குமேல் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அளவு பணம் சுங்கவரி போட்டும், இயந்திரச் சாலையோடு போட்டிபோட்டும் நடைபெறத் தக்கதாக இருக்கிற ஒரு குடிசைத் தொழிலை ஆதரிக்காமல் அதை ஒழிக்கப் பார்க்கிறார்கள்—இந்த டெல்லி அரசங்கத்தார் என்றால், இந்த ஆட்சி மனுதர்ம வருணாசிரம பார்ப்பன ஆதிக்க ஆட்சி என்பதற்கு ஏதாவது சந்தேகம் உண்டா என்று கேட்கிறேன்.

30 குச்சிகள் கொண்ட 144 பெட்டிகள், ஒரு குரோஸ் நெருப்புப் பெட்டிக்குக் கொள் முதல் (அடக்கம்) விலையைப்பற்றி சற்றுக் கவனியுங்கள். 144 நெருப்புப்பெட்டிக்கும் மரக் குச்சிகளுக்கும் விலை 7 அணா; இவைகளுக்குக் காகிதம், கந்தகம், மருந்து சாமான்கள் ஒரு குரோசுக்கு 4 அணா; செய்கூலி, பெட்டி ஒட்டுதல் முதலியவைகளுக்கு ஒரு குரோசுக்கு 6 அணா; ஆக குரோசு (144 பெட்டிகள் கொண்டது) ஒன்றுக்கு அடக்க விலை சுமார் ரூபாய் ஒன்றே ஆகிறது. இதுதான்–'டியூட்டி' வரி காரணமாக–ஒரு பெட்டி 0-0-6 (அரை) அணாவுக்கு மக்களால் வாங்கப்படுகிறது.

மற்றபடி இந்தத் தொழில் விஷயத்தில் டெல்லி சர்க்கார் காட்டும் பொறாமைக் குணங்களுக்கும், அலட்சியங்களுக்கும் ஆதாரம் கோருபவர்கள் இன்று முதலாவது பக்கத்தில் பிரசுரித்து இருக்கும் 'தென்னிந்திய சுதேசி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம்' தெரிவித்து இருக்கும் விண்ணப்பத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

இந்தத் தகவல்கள் நான் சென்ற மாதம் செய்த சுற்றுப்பிரயாணத்தில் சாத்தூர் சென்றபோது அங்கு இத் தொழிலாளர், முதலாளிகள் அவர்களிடமிருந்து தெரியப்படுத்திக் கொண்ட செய்திகளேயாகும்.

புள்ளி விவரங்களில் ஏதாவது சிறு தவறு இருந்தாலும் மற்ற அடிப்படைச் செய்திகள் உண்மையானவை என்றே கருதி வெளியிடுகிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—6-7-1959]

5. இயந்திர முறைத் தொழில்

'மனித வர்க்கத்திற்கு இயந்திரங்கள் விரோதி' என்று நாம் கருதி இருந்த காலமும், அந்தப்படியே இயந்திரங்களை எல்லாம் 'பிசாசு' என்று பிரச்சாரம் செய்த காலமும் உண்டு. மனிதனின் இயற்கை முற்போக்கினுடையவும், அறிவு–ஆராய்ச்சி வளர்ச்சியினுடையவும் தத்துவத்தை அறிந்த பிறகும் அவ்வளர்ச்சியை மேலும் மேலும் விரும்புகின்ற நிலையிலும் மக்களின் சரீரக் கஷ்டத்தை உணர்ந்து, அதைக் குறைக்கவேண்டும் என்ற ஆசையில் முயற்சி கொண்டபோதும் எந்த மனிதனும் இயந்திரத்தை வெறுக்கவே முடியாது; அன்றியும் வரவேற்றே ஆகவேண்டும்.

ஏன் என்றால், மனித அறிவின் சுபாவ அனுபவத்தைக் கொண்டும், ஆராய்ச்சியைக் கொண்டும் நாளுக்குநாள் சுருக்கவழியைக் கண்டுபிடிப்பதே இயற்கையாகும். அது மாத்திரமல்லாமல், சரீரப் பிரயாசையைக் குறைத்துக்கொள்ள ஆசைப்படுவதும் இயற்கையாகும். இந்த இரண்டு சுபாவ குணங்களும், இயந்திரங்களைக் கண்டுபிடித்துக் கையாடித் தான் தீரும். ஆகவே, அறிவும் ஆராய்ச்சியும் இல்லாத இடங்களின்தான் இயந்திரங்கள் அருமையாய் இருப்பதும், அலட்சியமாய்க் கருதுவதுமாய் இருக்குமே தவிர—மற்ற இடங்களில், அதாவது, அறிவு, ஆராய்ச்சி, முன்னேற்றமுள்ள இடங்களில் இயந்திரங்கள் அதிகமாயிருக்கும்.

இயந்திரங்கள் 'பிசாசு' எனக் கருதப்படக் காரணம், 'இயந்திரங்கள் பலபேர் பல நாட்கள் செய்யும் வேலையை, வெகு சில பேர் சில நாட்களில் செய்துவிட்டால், மற்ற ஆட்களுக்கும் மற்ற நாட்களுக்கும் ஜீவனத்திற்கு—கூலிக்கு மார்க்கம் எங்கே? அதன் மூலமாய் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு என்ன சமாதானம்?' என்று சொன்னவர்களின் வார்த்தையினாலேயேதான்.

இந்தப்படியே இன்றும் அனேகர் நினைத்துக்கொண்டும், நம்பிக்கொண்டும் இயந்திரங்களை ஆட்சேபித்தும், வெறுத்தும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இப்படி எண்ணிக்கொண்டிருக்கும் நாம் இந்தக் காலத்திலும், இந்தப்படி இப்போது எண்ணிக்கொண்டிருக்கின்ற அனேகர் இப்போதும் தங்கள் தங்களைப் பொறுத்தவரை தங்கள் தங்கள் காரியத்திற்கு மனித சரீர வேலையைவிட இயந்திர வேலையையே விரும்பி அதை உபயோகித்துத்தான் வந்தார்கள், வருகிறார்கள்.

உதாரணமாக, கால்கள் இருக்க, கட்டை வண்டிகள் இருக்க, இயந்திரத்தின் மூலமாய்த்தான்—அதாவது இரயில் மூலம் பிரயாணம் செய்தோம்; மோட்டாரில் பிரயாணம் செய்தோம்; ஆகாயக் கப்பலிலும் பிரயாணம் செய்தோம்; அவைகளையே எல்லா மக்களும் போக வரப் போக்குவரத்துச் சாதனமாக்கவும் ஆசைப்படுகிறோம்; மற்றவர்களும் ஆசைப் படுகிறார்கள். ஆகவே, இதை மனிதத் தன்மையுடன் கூடிய குற்றமற்ற இயற்கை உணர்ச்சி என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர, இது எவ்விதக் குற்றமுள்ளதும் அநியாய மானதும் என்று சொல்லி, இதற்காக யாரையும் கண்டிக்கவும் முடியாது. ஜீவ சுபாவமே ஆசையின் உருவமாகும்.

ஆகவே, இயந்திரம் வேண்டாம் என்பது இயற்கையோடும் முற்போக்கோடும் போராடும் ஒரு அறிவீனமான பிற்போக்கான வேலையாகுமே தவிர, மற்றபடி பயனுள்ள வேலையாகாது.

உதாரணமாக, 10 மூட்டை நெல்லை ஒரு வண்டியில் ஏற்றி, முன்னே 4 பேர் இழுத்துக்கொண்டும் பின்னே 4 பேர் தள்ளவும் உடல் வேர்க்க, நெஞ்சொடிய மணிக்கு 3 மைல் தள்ளாடித் தள்ளாடியபடி இழுத்துக்கொண்டு போவதும், அதே மாதிரியான 25 மூட்டைகளை ஒரு மோட்டார் லாரியில் ஏற்றி ஒரு மனிதன் நோகாமல் நாற்காலியில் உட்கார்ந்து சுக்கானை மாத்திரம் பிடித்துத் திருப்பிக்கொண்டு மணிக்கு 25 மைல் போவது மான—இரண்டு வேலைகளையும் எடுத்துக்கொண்டால் அவற்றுள் சுயமரியாதைக்கு, ஜீவகாருண்யத்திற்கு, மனித சமூகத்திற்கு, முற்போக்கிற்கு, மற்ற உயிர்களைவிட மனிதனுக்குப் பகுத்தறிவு என்பதாக ஒரு குணம் அதிகமாக உண்டு என்கின்ற உயர் குணத்திற்கு எது ஏற்றது என்று கேட்கின்றோம்.

மற்றும், மொழிகள் ஆதியில் எழுத்துக்கள்கூட இல்லாமல் சப்த ரூபமாய் இருந்ததும், பிறகு எழுத்துக்கள் ஏற்படுத்தப்பட்டதும், அவை கூரிய ஆணிகளால் ஓலைகளில் எழுதப் பட்டதும், பிறகு காகிதம் ஏற்பட்டதும், அதில் நாணலில் எழுதியதும், உருக்குத் தகடுகளில் எழுதினதும், பிறகு பவுண்டன் பேனாவில் எழுதினதும், 'டைப்'பில் அடிப்பதும், அச்சடிப்பதும்—அந்த அச்சும் மணிக்கு 100 பிரதிகளாக இருந்தது, இப்போது 10000

பிரதிகளாக ஆக்கக் கூடியதுமான காரியங்கள் படிப்படியாய் விருத்தி ஆவதைப் பார்த்துக் கொண்டும் அதன் பலனை அனுபவித்துக்கொண்டும், ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொரு வரும் அதைச் செய்துகொண்டும் இருக்கிறோம். இவையெல்லாம் இயந்திரத்தின் பலன்கள் அல்லவா? இவற்றுள் எது தள்ளுவதற்குரியது?

சங்கராச்சாரி, மடாதிபதி என்று சொல்லப்படும் ஆட்கள் இரயில் ஏறுவது நீச்சத்தன மென்றும் மாட்டுவண்டி, குதிரைவண்டி ஆகியவைகளில் ஏறுவது ஜீவஹிம்சை என்றும் கருதிக்கொண்டு, மரக் கட்டையில் பல்லக்கு செய்து அதற்குத் தந்தம், வெள்ளி, தங்கம் முதலிய தகடுகள் போட்டு, அதன்மீது தான் ஏறி உட்கார்ந்துகொண்டு, தண்டு 1க்கு 4 பேர் வீதம் 4 தண்டுக்கு 16 பேர் 'ம்கு' 'ம்கு' என்று முக்கிக்கொண்டு மணிக்கு 4 மைல் வீதம் தூக்கி ஓடுவதைப் பார்க்கிறோம். இது இயந்திர சம்பந்தமில்லாதது என்று வைத்துக் கொண்டாலும், இந்த வாழ்வு காட்டுமிராண்டி உலக வாழ்வா? அல்லது நாகரிக உலக வாழ்வா? மனிதன் தூக்குவதைவிட்டு மாடோ, குதிரையோ, யானையோ சுமப்பதாக வைத்துக்கொண்டாலும் அதுவும் அதற்குச் சற்று அடுத்த காட்டுமிராண்டி வாழ்வா? அல்லது நாகரிக ஜீவகாருண்ய வாழ்வா? என்றும் கேட்கின்றோம்.

ஆகவே, இவைகளிலிருந்து இயந்திரம் மனிதனுக்கு அவசியம் என்றும், சவுகரிய மானதென்றும், ஜீவகாருண்யமுடையதென்றும், முற்போக்குக்கும் நாகரிகத்திற்கும் ஏற்ற தென்றும், இயற்கையுணர்ச்சியில் பட்டதென்றும், அறிவு ஆராய்ச்சியின் பயனென்றும் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும்.

ஆனால், முன்சொல்லப்பட்ட—அதாவது, 'இயந்திரம் பெருகுவதால் தொழிலாளிக்கு வேலை இல்லாமல போய்க் கஷ்டம் வரும், என்பதற்குச் சமாதானம் சொல்லியாக வேண்டும். தொழிலாளி என்று ஏன் ஒருகூட்டம் இருக்கவேண்டும்? முதலாளி என்று ஏன் ஒரு கூட்டம் இருக்க வேண்டும்? இது யார் கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது?

மற்றும் பாடுபடுபவன் – சோம்பேறி, கஷ்டப்படுபவன் – சுகம் அனுபவிப்பவன், ஏமாற்றுபவன்–ஏமாறுபவன் என்பன போன்ற பிரிவுகள் மனித வாழ்க்கையில் இருக்கும்படி யாகவே வாழ்க்கைத் திட்டத்தை வகுக்கவேண்டும் என்பதற்கு ஏதாவது அவசியமும், ஆதாரமும் உண்டா?

மனிதன் தொழில் செய்வது என்பது மனித வாழ்க்கையின் நலம் அல்லது தேவையின் அவசியம் என்பதற்காகவா? அல்லது முதலாளி, மிராசுதாரன் ஆகியவர்கள் வேலை செய்யாமல் சம்பாதிக்கவோ, பணம் சேர்க்கவோ வேண்டிய அவசியத்திற்காகவா?

இம் மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்தோமானால் வேலை என்பதும், வேலை யில்லாத் திண்டாட்டம் என்பதும்—ஒருவனை ஒருவன் கொடுமைப் படுத்துவதுதான் இந்த முறைகள் என்பதும் விளங்கிவிடும்.

இவை ஒருபுறமிருக்க, வேலைகளின் கூலிகளை உயர்த்தி, வேலை நேரத்தைக் குறைத்து, முதலாளிகளின் இலாபத்தையும் குறைத்து, ஒரு வரையறை ஏற்படுத்தி—உள்ள நேரத்தையும் கூலியையும் எல்லா வேலைக்காரர்களுக்கும் பங்கு வரும்படியான ஒரு திட்டம் போடுவோமேயானால்—அதாவது, மோட்டார் பஸ்காரர்கள் யூனியன் வைத்து, வருகின்ற பிரயாணிகள் சத்தத்தை உயர்த்திக் கிடைத்த வாடகையை எல்லோரும் பங்கிட்டுக் கொள்வதுபோல் செய்தால், வேலையில்லாத் திண்டாட்டம் தானாகவே ஒருவாறு ஒழிக்கப் பட்டு விடுமா, இல்லையா?

நிற்க, இன்றைய வாழ்க்கை நிலைமையைப் பார்த்தால் மனிதன் வேலை செய்வதற் காகவே–பிறருக்கு அடிமையாய் உழைப்பதற்காகவே பிறந்திருக்கிறானேயொழிய சுகப் படுவதில்லை என்றும்; ஆதலால் அவன் வேலை செய்வதற்காக ஒரு தொழில் கண்டு பிடித்துக் கொடுக்கவேண்டும் என்றும்தான் ஏற்படுகிறது. இதுவும் தன் வயிற்றுக்கு

வேண்டிய அளவுகூடக் கிடைக்க முடியாத கூலிக்கு முழு நேரத்தையும் செலவு செய்து பாடுபட வேண்டும் என்பதாகக் காணப்படுகிறது. இது பகுத்தறிவில்லாத மிருக வாழ்க்கையைவிட மிக மோசமான வாழ்வேயாகும். எப்படியெனில், அவற்றிற்காவது உத்தர வாதம் இருக்கின்றது. அதாவது, அதன் எஜமான் அதற்கு வயிறு நிறைய ஆகாரம் போடக் கட்டுப்பட்டிருக்கிறான். மனித வேலைக்காரனுக்கோ உத்தரவாதமே கிடையாது. இன்னும் பட்சிகள், காட்டு மிருகங்கள் ஆகியவைகளில் எதற்கும் எவ்வித வேலையும் செய்யாமல் வாழும் சவுகரியமிருக்கிறது.

இப்படி இருக்க, பகுத்தறிவு இருக்கும் காரணத்திற்காக மனிதன் 100-க்கு 90 பேர் ஆகாரத்திற்கே வேலை செய்ய வேண்டியது என்பதும்—அதுவும் உத்தரவாதம் இல்லாத அடிமையாய் இருந்து வேலை செய்வது என்பதும்—அதுவும் சரியாய்க் கிடைக்காமல் பட்டினியாய்க் கஷ்டப்படுவது என்பதும் இயற்கைக்கு மாறுபட்ட ஒரு பெரிய அக்கிரம மாகும். ஆகவே, வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டு மக்கள் பட்டினி கிடந்து பரிதவிக்க ஆரம்பித்தால்தான், ‘தங்களுக்குப் பகுத்தறிவும் வன்மையும் இருந்தும் தாங்கள் முட்டாள் தனமாய்ப் பாடுபடுவதும்—தங்களைப் போன்ற பிறரால் ஏய்க்கப்படுவதும் ஏன்?’ என்கின்ற காரணத்தை உணரமுடியும். உணர்ந்து சமநிலை அடைய முயற்சிக்கவும்முடியும்.

அதை விட்டுவிட்டு, முதலாளி–தொழிலாளி நிலைமையும், மிராசுதாரர்–உழவன் நிலைமையும் உலக வாழ்க்கையின் சவுகரியத்திற்கு அவசியம் என்பதாகச் சொல்லி, அதுவும் கடவுள் செயலால் – முன் ஜென்மத்தின் கர்மபயனால் – தலைவிதியால் ஏற்பட்டது என்று சொல்லிக்கொண்டு அவற்றை நிலைநிறுத்திக் கொண்டே, எவ்வளவு கூலி வாங்கிக் கொடுத் தாலும் மனித வர்க்கத்தினரில் பெரும்பான்மையானவர்களின் கவலையும் தொல்லையும் கொடுமையும் ஒழியவே ஒழியாது. எப்படியெனில், சாதி வித்தியாசத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு சமத்துவம் கொடுத்தாலும் அது எப்படிப் பயன்படாதோ அதுபோலவே, முதலாளி–தொழிலாளி முதலிய பாகுபாடுகளை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கும் எவ்வித சுதந்திரமும் பயன்படாமலே போய்விடுவதோடு, கீழ்நிலை மேல்நிலை என்பதும் மாற்றவே முடியாததாகிவிடும். ஏனெனில் தொழிலாளி, முதலாளி, உழவன், ஜமீன், மிராசுதாரன் என்பவைகளும் ஒருவித வருணாசிரம தர்மமேதவிர வேறல்ல. ஆச்சிரமங்கள் என்றாலே படிகள், நிலைகள் என்றுதான் கருத்தாகும்.

நமது நாட்டில் பிறவியிலேயே பல படிகள் இருப்பதாலும் அதனாலேயே நாம் சதா கஷ்டப்படுவதாலும் தொழில் வாழ்க்கையில் உள்ள படிகளை நாம் கவனிக்கவே நேரமும், ஞாபகமும் இல்லாதவர்களாய் இருக்கின்றோம். மனிதன் உண்மையான சமத்துவமடைய வேண்டுமானால் பிறவிப் படிகளையும் தொழில் படிகளையும் கடந்தவனாகத்தான் இருக்க வேண்டும். அவ் விரண்டு படிகளையும் ஒழித்த—அவ் விரண்டு படிகளும் ஒழிந்த நிலை தான் சமதர்மநிலை என்று சொல்லப்படுவதாகும்.

நிற்க, இவற்றிற்கெல்லாம் முக்கியமாக இன்னொரு விஷயம் உண்டு. அதைச் சரியாக உணர்ந்து கவனித்தோமானால், மேற்கண்ட கஷ்டங்களைப்பற்றிய கவலைகள்கூட அதிகப்படவேண்டிய அவசியமிராது. அதென்னவெனில், யோசனையில்லாமல் கண்ட கண்டபடி ஜனத்தொகையை விருத்தி செய்வதாகும்; பிள்ளைகளைப் பெறுவதாகும். 2 ஏக்கரா பூமி உள்ளவன் 100 மாடுகளை வாங்கி வளர்ப்பானேயானால் எப்படி அவனால் அந்த மாடுகள் போதிய தீனி கிடைத்து இரட்சிக்கப்படமுடியாதோ, அதுபோலவே மனித சமூகமும், தேவைக்கும் தன்னால் தாங்குவதற்கும் அதாவது, காப்பாற்றக் கூடியதற்கு அதிகமாகவும் தேசத்தின் கால நிலைமைக்கு மேலாகவும் பிள்ளைகளைப் பெற்றுக் கஷ்டப் பட்டு, தனது ஆகாரத்தில் பங்கு கொடுத்து கடைசியில் இருவருக்கும் போதுமான ஆகாரம் இல்லாமலும், போதுமான ஆதரிப்பு இல்லாமலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை ஒழிக்காமல் வீணாய் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் என்னபயன்?

இந்திய நாட்டு நிலைமை நமக்குத் தெரிய 40, 50 வருஷ காலமாகவே மக்களுக்கு வேலையில்லாமல் வெளிநாடுகளுக்குக் கூலியாகச் செல்வதே வழக்கமாக இருந்துவந்திருக்கின்றது. இது மாத்திரமல்லாமல், அடிக்கடி பஞ்சமும் கொள்ளை நோயும் வந்திருக்கின்றன. இது இந் நாட்டுச் சுயமரியாதைக்கே மிகவும் கேடானதாகும். சம்போக விஷயங்களில் கவலையற்றும் முரட்டுத்தனமாயும் அளவுக்கு மீறியும் நடந்துகொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவேதான் குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர, அதற்கும் இதற்கும் சிறிதும் வித்தியாசமேயில்லை. சம்போக உணர்ச்சி இந்த உலகத்திலுள்ள ஜீவஜந்துக்களில் மனிதனைத்தவிர எந்த ஜீவனுக்கும் குழந்தை பெறுவதற்காக என்ற எண்ணத்தின் மீதே தோன்றுவது கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கின்ற ஆணவத்தால் அவனுக்கு ஏற்படும் அனேக முட்டாள்தனமான செய்கைகளைப் போல், குழந்தை பெறவேண்டும் என்கின்ற முட்டாள்தனமும் ஏற்பட்டு, அது ஒரு ஆசையாகி, பிறகு அது ஒரு சொத்தாகி, பிறகு 'மோட்சத்திற்கு' உதவும் காரியமாகவும் ஆகிக் கடைசியில் வீண்கஷ்டமும், தொந்தரவும்பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுத்ததை, கொடுப்பதைத்தவிர வேறு ஒரு பயனும் இல்லாததாய் முடிந்துவிடுகிறது.

மேலும், பிள்ளை பெறுவதினாலேயே மொத்த ஜனத்தொகையில் பகுதியான பெண்கள் சமூகம் அடிமையாகி, அனேக ஆபத்துக்களுக்கும் வியாதிகளுக்கும் உள்ளாகி, அற்ப ஆயுளுடன் கஷ்டமும்பட வேண்டியதாகி, அவர்களது வாழ்வே மிக்க பரிதவிக்கத்தக்க வாழ்வாக முடிகின்றது.

எவனொருவன் தன் தேவைக்குமேல் சொத்தும் ஸ்திதியும் வைத்திருக்கிறானோ அவனைக் குற்றவாளியாக்கித் திருடனுக்குண்டான தண்டனையைக் கொடுப்பது என்கின்ற ஆட்சியை ஏற்படுத்துவதுதான் நல்லது.

இந்த ஆட்சி ஏற்பட்டுவிட்டால் பிறகு யாருக்கு வேலை இருந்தாலும், யாருக்கு வேலையில்லாவிட்டாலும் ஜீவனம் சரியாகும். இதற்காக அதிகக் கவலையும் படவேண்டியதில்லை. இந்தப்படிக் கவலைக்கெல்லாம் இல்லாமல் நாட்டுச் செல்வத்தை எல்லாம் ஒருவன் தன்னிடமே வந்து சேரும்படியான முறையை மனித வாழ்க்கைக் கொள்கைகளாக வைத்துக் கொண்டு பலபேர்கள் பட்டினி இருந்துகொண்டு இருப்பதும், ஏன் பட்டினியாய் இருக்கிறார்கள் என்று கேட்டால் வேலைகள் கிடைக்காததால் பட்டினியாய் இருக்கின்றார்கள்; ஆதலால் இயந்திரங்களையெல்லாம் ஒழித்துவிட்டுக் கடப்பாரையும், சம்மட்டியும் வாங்கிக்கொடுத்து வேலை வாங்க வேண்டுமென்றும் சொல்வதானால், இது எவ்வளவு அக்கிரமமானதும் அயோக்கியத்தனமானதும், திருட்டுத்தனமானதுமான காரியம் என்பது யோசித்தால் விளங்காமல் போகாது. ஆகையால் நாட்டுக்கும் முற்போக்குக்கும் மனித சமூக நாகரிக வளர்ச்சிக்கும் இயந்திரங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—14-12-1930]

நமது பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் பூராவுக்கும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் கைத்தொழில் அவர்களது வாழ்க்கைக்குப் பயன்படுமா? இந்தியாவில் இம்மாதிரி கைத்தொழிலுக்கு இனியும் எத்தனை காலத்துக்கு அவசியம் இருந்து வரமுடியும், இருந்து வர இடம் கொடுப்பது? உலகத்தில் கை நெசவு என்பதுகூட இந்தியாவில்தான் இருக்கிறது. மற்ற நாடுகள் எல்லாம் இயந்திரத்தில்தான் துணிகளை நெய்கின்றன.

விவசாயமும் இயந்திரத்தால் உழுது, விதைத்து, நீர் பாய்ச்சி, அறுப்பு அறுத்து, பண்டமாக்கி, எடையாக்கிப் பணம் வருகிறது. விவசாயமும் நெசவும் இயந்திரத்தின் மூலம் என்றாகிவிட்டால் மற்றபடி கையினால் செய்யும் கைத்தொழில் என்ன இருக்கிறது? நெல் குத்துவதா? கருப்பட்டி காய்ச்சுவதா? பால் கறந்து வெண்ணெய் எடுப்பதா? சோப்பு, சீப்பு, கண்ணாடி, வாசனை எண்ணெய் செய்வதா? அல்லது மேசை, நாற்காலி, தட்டுமுட்டு

சாமான், பாத்திரம் பண்டம் செய்வதா ? கட்டை வண்டி, மோட்டார், சைக்கிள், இரயில், ஆகாய விமானம் செய்வதா? கல் உடைத்து ரோடு போடுவதா? பாலம் கட்டுவதா ? ரோடு திருத்துவதா? காடு வெட்டித் திருத்துவதா? வாய்க்கால் வெட்டித் தண்ணீர் விடுவதா? இவை எல்லாமே இயந்திரங்களினால் செய்யப்படுகின்றன. கக்கூசு எடுக்கும் வேலையும் தானாகக் கழுவிக் கொண்டு போகும்முறை வரப்போவதால் ஆளுக்கு வேலை இல்லாமல் போகப் போகிறது! தச்சு, கொல்லு, கொல்லத்து வேலைகளையும் பெரிதும் மனிதன் இனித் தன் கைப்படச் செய்யவேண்டிய அவசியமில்லாத முறையில் நடைபெறப் போகின்றன. கொல்லத்துக்காரனுக்கு வேலையில்லாத மாதிரி கற்கள், பலகைகள், சிமெண்டு அட்டைகள் இயந்திரங்களில் செய்யப்பட்டு ஒரு நாளில் 5, 10 வீடுகள் கட்டும்படியான வேலைத் திறன்கள் இயந்திரங்களில் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் இருக்கின்ற உலகத்தில் இன்று காந்தியாரின் கல்வித்திட்டம் என்று சொல்லப்படும்—காங்கிரஸ் கல்வித் திட்டம் இந்தியாவில் ஏற்படுத்தப்படுமானால் மேலே கூறப்பட்ட இயந்திர சம்பந்தமான காரியங்கள் எதுவும் இந்தியாவுக்குள் நடைபெறக் கூடாதென்றும் மீறி நடத்தப்பட்டால் அதை இராஜ துவேஷமாகக் கொள்ளப்படும் என்றும் சட்டம் போட்டு, அக் காரியங்கள் தடுக்கப்பட்டுவிட்டால் மாத்திரமேதான் இது பயனுள்ளதாக ஆகலாம். அல்லாதவரை பார்ப்பனர்களே உயர்ந்த சாதியினராகவும், அரசியல், சமூக இயல், பொருளியல் ஆகியவைகளில் ஆதிக்கம் செலுத்திப் பாடுபடாமல் வயிறு வளர்க்கவும், மற்ற சமூகம் அவர்களது வைப்பாட்டிப் பிள்ளைகளாய், அடிமைகளாய் வாழவுந்தான் இக் கல்வித்திட்டம் பயன்படும் என்று கண்டிப்பாகக் கூறவேண்டியிருக்கிறது.

['குடி அரசு'-தலையங்கம்—21-11-1937

3. சமதர்மம்

1. செல்வர்–வறியர்

தோழர்களே!

இந்தியநாட்டிலே ஏன் செல்வர் – வறியர் இருக்கிறார்கள்? சர்க்காரின் சட்டத்தின்படி சர்க்கார் பாதுகாப்புப்படி சில பணக்காரர்களும் ஏழைகளும் இருக்கிறார்களே தவிர, மேல்–கீழ் சாதியைப் போல, பணக்காரன் அவன் தாய் வயிற்றில் இருந்து வரும்போதே கொண்டுவந்ததல்ல; அதாவது அந்தமாதிரியான அமைப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான். ஒருவனுக்கு நிறையப் பணமும், வீடுவாசலும், வியாபாரமும் இருக்கின்றன. இவற்றினுடைய பலனை இல்லாதவர்கள்—ஏழைகள் அனுபவிக்கமுடியாதபடி சட்டம் இருக்கிறது. ஒரு மனிதன் ஏழ்மையினால் கஷ்டப்படுகிறான்; இன்னொருவன் செல்வத்தில் புரளுகிறான். இந்தத் தன்மை மாறவேண்டாமா?

சாதாரணமாக நம்முடைய ஏழ்மை நிலையை எடுத்துக்கொண்டால் கடந்த யுத்தத்திற்கு (1936—39) முன் எவ்வளவு ஏழ்மைநிலை இருந்ததோ அதைவிட அதிகமான ஏழ்மை நிலையும்–சோற்றுக்கும் துணிக்கும், வீட்டிற்கும், பண்டங்களுக்கும் கஷ்டமும் தரித்திரமும் இருப்பதோடு; பணக்காரர்களின் நிலையைப் பார்த்தால் முன்புள்ள பணக்காரர் நிலையும், இப்போதுள்ள பணக்காரர் நிலையும்,—முன்பு பத்தாயிரக் கணக்கில் வைத்திருந்த பணக்காரனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது அவர்கள் இலட்சக் கணக்கிலும்; இலட்சக் கணக்கில் வைத்திருந்தவர்கள் பல இலட்சக் கணக்கிலும்; பல இலட்சக்கணக்கில் வைத்திருந்தவர்கள் கோடிக் கணக்கிலும் பணக்காரராய் இருக்கிறார்கள்.

அப்போதெல்லாம், ஒரு கோடிரூபாய் சொத்துள்ளவர்கள் நம்முடைய நாட்டில் ஒருவர் இருவர் இருப்பார்கள். அதுவும் என்னவென்று கணக்குப் பார்த்தால் தகராறில்தான் இருக்கும்—அவ்வளவு ரூபாய் சொத்துக் கணக்கு வருவதற்கு! அதேபோல் இலட்சரூபாய் சொத்தும் ஊருக்கு இரண்டு மூன்றுக்குமேல் காணமுடியாது. இப்போது நிலைமை என்னவென்று பார்க்கும்போது, நமக்குத் தெரியாத 'கோடீஸ்வரர்கள்' எத்தனையோ பேர் வந்துவிட்டார்கள்; இலட்சாதிபதிகள் ஏராளமாக ஆகிவிட்டார்கள்.

[சென்னை ஆயிரம் விளக்கில், 29-2-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-3-1952]

2. சமதர்மம்

ரொக்க சொத்துக்களும் பூமி சொத்துக்களும் அனேகமாய் பார்ப்பனர் முதலாகிய உயர்ந்த சாதிக்காரர்களிடமும் லேவாதேவிக்காரர்களிடமுமே போய்ச் சேரக்கூடியதாய் இருப்பதால், உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்களையும் கண்வைத்துக் கொள்ளை அடிக்கப் பட்டிருப்பதாகத் தென்படுகிறது.

ஆகவே, இவற்றிலிருந்து இந்த முறையை உயர்ந்த சாதித் தத்துவத்தையும், பணக்காரத் தத்துவத்தையும் அழிப்பதற்கே கையாளப்பட்டதாக நன்றாய்த் தெரியவருகின்றது. உலகத்தில் பொதுவாக யாவருக்கும் ஒரு சமாதானமும் சாந்தி நிலையும் ஏற்படவேண்டுமானால், இந்த முறையைத்தான் கடைசி முயற்சியாக ஏதாவதொரு காலத்தில் கையாளப்பட்டே தீரும் என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அன்றியும், இன்று இந்தியாவிற்கு வெளியில் உள்ள வேறு பல தேசங்களில் இம்முறைகள் தாராளமாகக் கையாளப்பட்டும் வருகின்ற விஷயமும் யாவரும் அறிந்ததேயாகும். மற்றும் பல நாடுகளில் விடுதலைக்கு இம்முறைகளையே கையாள முயற்சிகள் செய்யப்பட்டும் வருகின்றன.

இங்கிலாந்து முதலிய நமக்கு முக்கியமான நாடுகளில்கூட இம்முறைகளைப் புகுத்த ஒரு பக்கம் பிரச்சாரமும், மற்றொரு பக்கம் அதைத் தடுக்க முயற்சிகளும் நடந்துவருகின்றன. இவற்றின் உண்மைகள் எப்படி இருந்தாலும் கொஞ்ச காலத்திற்குமுன் இம்முறைகளைப் பாவம் என்றும், நரகம் கிடைக்கும் என்றும் மிரட்டி ஏய்த்துக்கொண்டிருந்ததெல்லாம் போய், இப்போது இது நாட்டுக்கு நல்லதா? தீமை விளைவிக்காதா? என்கின்றவை போன்ற தர்மஞானம் பேசுவதன் மூலம்தான் இம்முயற்சிகளை அடக்கப் பார்க்கிறார்களே ஒழிய, இது சட்டவிரோதம், பாவம், கடவுள் செயலுக்கு மாறுபட்டது என்கின்ற புரட்டுக்கள் எல்லாம் ஒருபக்கம் அடங்கிவிட்டன.

ஆனாலும், இந்தத் தர்ம சாஸ்திர ஞானமும் யாரால் பேசப்படுகின்றது என்று பார்ப்போமானால் பார்ப்பனராலும், பணக்காரராலும், அதிக நிலம் வைத்துக் கொண்டிருக்கும் பெரிய நிலச்சுவான்தாரர்களாலும் இவர்கள் தயவால் அரசாட்சி நடத்தும் அரசாங்கத்தாலுந்தானே தவிர, உண்மையில் சாதி ஆணவக் கொடுமையால் தாழ்த்தப் பட்டும், முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள் கொள்ளையால் கஷ்டப்படுத்தப்பட்டும், நிலச் சுவான்தாரர்கள் கொடுமையால் துன்பப்படுத்தப்பட்டும் பட்டினி கிடக்கும் ஏழை மக்களுக்கு இம்முறையைத் தவிர வேறு முறையில் தங்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற உணர்ச்சி பெருகிக்கொண்டேதான் இருக்கின்றதே தவிர சிறிதும் குறைந்ததாக இல்லை.

அன்றியும், இம்முறையை நாமும்—அதாவது நம் நாட்டு மக்களும், அனேகமாய் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் இன்னும் கையாடிக்கொண்டுதான் வருகின்றோம். உதாரணமாக, இன்றையச் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையோ, சாதி ஒழிப்புக் கொள்கையோ, சுயமரியாதைக் கொள்கையோ, சுயராஜ்யம் கேட்கும் கொள்கையோ,

பூர்ண சுயேச்சைக் கொள்கையோ ஆகியவைகள் எல்லாம் இந்தச் சமதர்ம பொதுவுடைமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதேயாகும். அதாவது, இவையெல்லாம் பலத்தையும் கிளர்ச்சியையும் சண்டித்தனத்தையும் அடிப்படையாகக்கொண்டு கொடுக்க இஷ்டமில்லாதவனிடத்தில், இணங்க இஷ்டமில்லாதவனிடத்தில் தட்டிப்பிடுங்குவதோ, வலுக்கட்டாயமாகப் பறிப்பதோ ஆகிய குறியைக் கொண்டதேயாகும். அதிலும் சுயராஜ்யமோ, பூரண விடுதலையோ கேட்பதைவிட—அடையக் கைக்கொண்டிருக்கும் இன்றைய முயற்சியைவிட, சாதியை ஒழிப்பதென்பது மிகுதியும் சமதர்மமும் பொது வுடைமைத் தன்மையும் கொண்டதாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—4-1-1931]

3. சமதர்ம அறிக்கை

தற்காலம் உலகில் ரஷியாவிலும், ஸ்பெயினிலும் மற்றும் சில இடங்களிலும் சமதர்மம், பொதுவுடைமை தர்மம் ஆகியவைகளின் பேரால் அரசாட்சிகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

இவ்வுணர்ச்சியானது ரஷியாவில்தான் முதன்முதலில் தோன்றியதாக நமது மக்களில் அனேகர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். சமதர்ம உணர்ச்சி சம்பந்தமான சரித்திரத்தைக் கவனித்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இக் கருத்து சரியானதல்ல என்பதாகத் தோன்றும். ஏனெனில், உலகில் சமதர்ம உணர்ச்சி என்பதானது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றி இருப்பதற்கு அத்தாட்சிகளிருக்கின்றன.

சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு அதன் தத்துவங்களைப் பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மாநாடுகள் மூலமும் அறிக்கை மூலமும் வெளிப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாய்க் காணப்படும் காலமே இன்றைக்கு சுமார் 80, 90 வருஷங்களுக்கு முன்பு என்று தெரிகின்றது. அதாவது 1847ஆம் வருஷத்திலேயே இலண்டன் மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்மவாதிகளுடைய மாநாடு (காங்கிரஸ்) ஒன்று நடந்திருப்பதாகவும் அதன் பலனாய் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆனால், அதைச் சீக்கிரத்தில் கையாளப் படவும் அனுபவத்தில் கொண்டு வரவும் முயற்சித்த நாடு ரஷியாவாக ஏற்பட்டுவிட்டது.

இது சம்பந்தமாக நமக்குக் கிடைத்த ஓர் அறிக்கை–சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மானியர்களாயிருந்தாலும், அதற்காக மாநாடு கூடினது இலண்டன் பட்டணமாய் இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு தேசமாயிருந்தாலும், அது முதன்முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்க வேண்டிய இடம் ரஷியாவாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமலில்லை.

என்ன நியாயமென்று வாசகர்கள் கேட்பார்களேயானால், அதற்கு நமது சமாதானமானது, எங்கு அளவுக்கு மீறிய–தாங்க முடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்கு தான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறுகொண்டெழவும், சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும்.

எனவே, இந்த நியாயப்படி பார்ப்போமேயானால் உலக அரசாங்கங்களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்கக் கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலேயே அங்கு சமதர்ம முறை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

இந்த நியாயப்படி பார்த்தால், அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷியா தேசத்தைவிட இந்தியாவுக்கே முதன்முதலாக ஏற்பட்டு இருக்க வேண்டியதாகும். ஆனால், அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்

பதாலும் சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதை உணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித் தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள்பேராலும், மதத்தின்பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும், மோட்ச சாதனமென்றும் புகட்டி வந்ததாலும் அதே சூழ்ச்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்துவந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச்செய்து வந்ததாலும், உலகில் சமதர்ம உணர்ச்சி முதன்முதல் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி, ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்படவேண்டியதாயிற்று.

ஆனபோதிலும்கூட, இப்போது உலகில் மற்றும் எல்லாப் பாகங்களிலும் ஏற்பட்டு விட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்படவேண்டியது தவிர்க்கமுடியாத அவசியமாய்ப் போய்விட்டதால் இங்கும் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. ஆனால், உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்துவருகின்றது. அதென்னவென்றால், மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாய்க் கருதப்படுகின்றது. அதாவது, முதலாளி (பணக்காரன்)–வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால், இந்தியாவிலோ மேல்சாதியார், கீழ்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன்–ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக்கொண்டு வருகின்றது.

ஆதலால், இங்கு சமதர்மத்திற்கு இரட்டிப்பு அதிகமான எதிர்ப்பு இருந்துவருவது கொண்டு சமதர்ம உணர்ச்சி தலைதூக்க முடியவில்லை.

இவ்விவரங்கள் இந்த அளவில் நிற்க, முன் குறிப்பிட்டதான அதாவது, சமதர்மக் கொள்கை சம்பந்தமாக அந்தக் காலத்தில் வெளியான ஓர் அறிக்கையை மக்கள் உணரும் படியாக வெளிப்படுத்தலாம் என்று நாம் கருதுவதால் அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்கின்ற கருத்துக்கு மேற்கண்ட வாக்கியங்களை முகவுரையாக எழுதினோம். இனிமேல் வருபவைகள் முழுவதும் அவ்வறிக்கையின் மொழிபெயர்ப்பேயாகும். அதில் நமது அபிப்பிராயம் என்பது சிறிதும் இல்லை. ஆகையால், வாசகர்கள் அதை 1847ஆம் வருஷத்தில் இரண்டு ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்பதாகவே கருதி வாசிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

சமதர்ம அறிக்கையின் சரித்திரமும் பீடிகையும் :

1847ஆம் வருஷத்தில் இலண்டனில் ஒரு சமதர்ம காங்கிரஸ் நடந்தது. அதற்கு உலகின் பல பாகங்களில் இருந்தும், சமதர்ம உணர்ச்சியுடைய பிரதிநிதிகள் பலர் வந்தார்கள். அக் காங்கிரசில் சமதர்ம இயக்கத்தின் சார்பாக அதன் கொள்கைகளை வெளியிட காரல் மார்க்ஸ், பிரட்ரிக் எஞ்சல்ஸ் ஆகிய இரண்டு ஜெர்மானியப் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் செய்து, அத் தீர்மானப்படி அவ்விருவரும் ஜெர்மனி பாஷையில் ஓர் அறிக்கை தயாரித்து 1848ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் அச்சுக்குக் கொடுத்தார்கள். ஆனால் அது அச்சிடப்பட்டு வெளியாவதற்கு முன்பே அடுத்த பிப்ரவரி மாதத்தில் பிரான்சு தேசத்தில் ஒரு சமதர்மப் புரட்சி ஏற்பட்டுவிட்டது. அப் புரட்சியின் மத்திய காலமாகிய ஜூன் மாதத்தில் அவ் வறிக்கையை பிரெஞ்சு பாஷையில் மொழி பெயர்த்துப் பரப்பப்பட்டது. அது சமயம் வேலை செய்து ஜீவனம் செய்யும் ஏழை மக்கள் ஏராளமாய் அப் புரட்சியில் கலந்து இருந்தார்கள் என்றாலும் புரட்சியின் பயனாய் ஏற்பட்ட மாறுதல்களால் அவ்வேழை மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படவில்லை. ஏழை மக்கள் சுதந்திரமாய், க்ஷேமமாய் வாழ ஆசைப்பட்டு அதற்காகவென்று என்னென்ன முயற்சிகள் செய்யப்பட்டனவோ அவைகளையெல்லாம் அங்குள்ள பணக்காரர்கள் எதிர்த்து நின்று தோற்கடித்துத் தலையெடுக்கவொட்டாமல் செய்துவிட்டார்கள்.

அதோடு கூடவே அப்போதைய ஜெர்மன் அரசாங்கத்தாரும் அம் முயற்சிகளை யெல்லாம் அடக்கப் புறப்பட்டு கலோன் பட்டணத்தில் இருந்த சமதர்ம சங்கத்தின் மத்திய நிர்வாக சபை அங்கத்தினர்களைக் கைது செய்து, 18 மாதங்கள் விசாரணை செய்யாமலே ரிமாண்டு கைதிகளாகச் சிறையில் வைத்திருந்தார்கள். கடைசியாக 1852ஆம் வருஷத்தில் அவர்கள் விசாரிக்கப்பட்டு ஏழு பெயர்கள் மூன்று முதல் ஆறு வருஷம் வரை தண்டிக்கப் பட்டார்கள். அதன் பயனாய் சமதர்ம சங்கமே கலைக்கப்பட்டுவிட்டது. சமதர்ம அறிக்கை வினியோகமும் நிறுத்தப்பட்டுவிட்டது.

மறுபடியும் கொஞ்சகாலம் பொறுத்து, வேலை செய்து ஜீவனம் செய்யும் பாமர ஜனங் களுக்குச் சிறிது சிறிதாகத் தைரியம் ஏற்பட்டு 'சர்வதேச வேலையாளர்கள் சங்கம்' என்பதாக ஒன்றை ஸ்தாபித்தார்கள். அதன் மூலமாக மற்றும் பல தேசங்களில் இருந்து வந்ததான சமதர்ம அபிப்பிராயம் கொண்டவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும் தங்கள் அபிப்பிராயங்களைக் கலந்து கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படலாயிற்று. சமதர்மக் கொள்கை முழுவதையும் ஏற்றுக் கொள்வதில் ஆரம்பத்தில் சற்றுத் தயங்கினார்கள். ஆனாலும் நாளடைவில் தைரியம் ஏற்பட்டு அறிக்கையில் கண்ட முழுக் கொள்கைகளையும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அதன் பிறகே இந்த அறிக்கை பல தடவை மீண்டும் மீண்டும் ஜெர்மன் பாஷையிலேயே பிரசுரித்து அய்ரோப்பா, அமெரிக்கா தேசங்களிலெல்லாம் தாராளமாய் வினியோகிக்கப்பட்டது. 1872ஆம் வருஷத்தில்தான் இவ் வறிக்கை முதன் முதலாக ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு அமெரிக்காவில் உள்ள ஒரு வாரப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டது.

மற்றும் இவ் வறிக்கையை 1863-லும் 1882-லும் ரஷ்யன் பாஷையிலும் மொழி பெயர்த்து ஜினிவாவிலிருந்து அனேக இடங்களுக்கு அனுப்பி வினியோகித்துப் பரப்பப் பட்டது. மேலும், இவ் வறிக்கை 1885ஆம் வருஷத்தில் டேனிஷ் பாஷையிலும் 1886-ல் பிரெஞ்சு பாஷையிலும் புதிய மாதிரியில் 1886ஆம் வருஷத்தில் ஸ்பானிஷ் பாஷையிலும் மொழி பெயர்த்து ஆங்காங்கு பரப்பப்பட்டது. ஜெர்மனி பாஷையில் மாத்திரம் இவ் வறிக்கை 12 பதிப்பும், இங்கிலிஷ் பாஷையில் 3 மாதிரியான மொழி பெயர்ப்பும் செய்யப் பட்டது. ஆர்மீனியன் பாஷையில் ஏற்பட்ட ஒரு மொழி பெயர்ப்பானது, அதன் மொழி பெயர்ப்பாளர் தனது பெயரை வெளியிடப் பயந்ததாலும் பிரசுரித்தவர் அவ் வறிக்கையின் கர்த்தாவான மார்க்ஸ் என்பவருடைய பெயரால் வெளியிடப் பயப்பட்டதாலும் அவ் வறிக்கை வெளிவர முடியாமல் போய்விட்டது. இந்த மேற்கண்ட சரித்திரமே அவ் வறிக்கையின் சரித்திரமாகும்.

உலகில் உள்ள எல்லா தேசத்து வேலையாளர்களுடைய மனோபாவத்தையும் ஒன்று படுத்தி அவர்கள் யாவரையும் ஒரே பொதுக்கூட்டத்தில் சேர்ந்து கலந்து உழைக்கத் தக்க மனோதைரியத்தையும் கொடுத்தது இந்த அறிக்கையேயாகும்.

இவ்வறிக்கை எழுத ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவரை உலக நிலைமையில் அதிசயிக்கத் தக்க பல மாறுதல்கள் எவ்வளவுதான் ஏற்பட்டு இருந்தாலும் அவ்வறிக்கையின் தத்துவமானது இன்றைய நிலைமைக்கு மிக்கப் பொருத்தமானதாகவே இருந்து வருவது அவ்வறிக்கையின் விசேஷத்திற்கு ஒரு காரணமாகும்.

சமதர்மவாதிகள் தங்களுடைய வேலைத்திட்டங்களை காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தபடி மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் என்பது சரியானாலும் சமதர்மக் கொள்கை என்பதில் எந்தக் காலத்திற்கும் எந்தத் தேசத்திற்கும் இந்த அறிக்கையில் இருந்து சிறிதுகூட மாறுபடவேண்டிய அவசியம் ஏற்படாதபடி இது அமைந்திருக்கின்றது.

அறிக்கை :

உலகத்தில் தோன்றியிருக்கும் ஒரு பூதத்தைக்கண்டு எல்லோருமே பயப்படு கிறார்கள்.

அது எப்படிப்பட்ட பூதம் என்றால் அதுதான் 'சமதர்மம்' என்னும் பூதமாகும்.

அய்ரோப்பாவிலுள்ள சகல சக்திகளுமே அதாவது, அரசாங்கச் சக்திகள், மதங்களின் சக்திகள் முதலியவைகள் எல்லாமும் ஒன்று சேர்ந்து அந்தப் பூதத்தை விரட்டி ஓட்டப் பார்க்கின்றன.

போப்பைப் போன்ற மத அதிகாரிகளும், ஜாரைப்போன்ற அரசர்களும், பிரபல இராஜதந்திரிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும், இரகசிய வேவுகாரர்களும் ஆகிய எல்லோருமே ஒன்றுசேர்ந்து இந்தப் பூதத்தை ஒழிக்கப் பகீரதப்பாடு படுகின்றார்கள். எந்த அரசியல் சபையிலும், கவர்ன்மெண்டார் தங்கள் எதிரிகளைச் சமதர்மவாதிகள் என்று வைவதும், எதிர்க் கட்சியார்கள் தங்கள் கட்சியிலிருக்கும் தீவிரவாதிகளையும், பிற்போக்காளர்களையும் சமதர்மவாதிகள் என்று வைவதும், அந்தப் பேச்சையே சொல்லி எந்த எதிரியையும் வைது வாயடக்கப் பார்ப்பதும் சாதாரண வாடிக்கையாகிவிட்டது.

இவைகளில் இருந்து இரண்டு விஷயங்கள் வெளியாகின்றன. அதென்னவென்றால்,

ஒன்று : சமதர்மம் என்பதானது ஒரு பெரிய வலிமையும் ஆதிக்கமும் கொண்டதான ஒரு பெரிய சக்தி என்பதாகச் சகலரும் ஒப்புக்கொண்டு வெளிப்படையாகவே பயப்படுகின்றார்கள் என்பது.

இரண்டு : உலகத்தில் உள்ள எல்லா சமதர்மவாதிகளும் ஒன்றாகச் சேர்ந்து தங்களுடைய உண்மை எண்ணங்களையும் பொதுவான இலட்சியங்களையும் வேலைத் திட்டங்களையும் உலகத்தாருக்கு முன்னால் நன்றாய் விளங்கும்படி வெளிப்படையாய் ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டு, அதில் உள்ள பயத்தையும் தப்பபிப்பிராயத்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம் என்பதாகும்.

['குடிஅரசு'-தலையங்கம்—4-10-1931]

4. போலி உரிமைகள்

ஈரோட்டில் நிறைவேற்றப்பட்ட நமது இயக்கத்தின் புதிய சமதர்மத் திட்டமானது— மக்களை ஏமாற்றிச் சோம்பேறி வாழ்க்கை நடத்தும் உயர்ந்த சாதிக்காரர்கள் என்போர்களையும், பாடுபடுவோரின் பலனை நோகாமல் அனுபவிக்கும் மிராசுதாரர்கள்–பணக்காரர்கள்–ஜமீன்தாரர்கள்–முதலாளிக் கூட்டத்தார்களையும், சரீரப் பிரயாசை இல்லாமலேயே சூழ்ச்சியாகவே வாழ்க்கையை நடத்தும் படித்த கூட்டத்தாரர்கள் என்பவர்களையும்— இவர்கள் எல்லோருடைய ஆதிக்கத்தையும் நடத்த இடங் கொடுத்திருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்தையும், மற்ற அரசியல் கட்சிகளையும் வேரோடு ஆட்டி அசைத்து—உயிரற்றவைகளாக்க முனைந்து நிற்கும் புரட்சிச் செய்தியை நம் வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

இதைக் கண்டு பயந்து ஓடினவர்கள் பலர்; குற்றம் சொன்னவர்கள் பலர். என்றாலும், இப்போது அதே கொள்கைகள் இந்தியாவெங்கும் முழங்குவதைக் காண்கிறோம்.

பம்பாயில் 1932-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ந்தேதி ஆரம்பிக்கப்பட்ட 'அகில இந்திய சமதர்மக் கட்சி'யாரின் வேலைத் திட்டம்—'People' என்கிற வாரப் பத்திரிகையில் காணக்கிடக்கிறது. அதோடு, தோழர்கள் ஜீவன்லால் காபூர், பெரோஸ் சண்ட் ஆகியவர்களைத் தலைவராகவும், காரியதரிசியாகவும் கொண்ட காரிய நிர்வாகக் கமிட்டியார் ஆரம்பித்த பஞ்சாப் சமதர்ம (சோஷியலிஸ்டு)க் கட்சியாரின் கொள்கைகளும், வேலைத் திட்ட முறைகளும் நமது பார்வைக்குக் கிடைத்திருக்கின்றன. இச் சங்கத்தின் தலைமை ஸ்தாபனம் லாகூர் லஜபதிராய் ஹாலில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனங்களைத் தவிர, கான்பூர் முதலிய இடங்களிலும் சமதர்ம இலட்சியங்களைப் புகுத்த நல்ல இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவென்றும் நமக்குத் தெரியவருகிறது. இவைகள் மிகத் தைரியமாக சமதர்ம இலட்சியத்தை நமது நாட்டில் புகுத்த முயன்றபோதிலுங்கூட,

மிக்க போற்றத் தகுந்த முறையில் அதனுடைய வேலைத் திட்டத்தை இன்னும் அமைத்துக் கொள்ளவில்லை என்றே காணும்பொழுது சிறிது வருத்தப்படாமலிருக்க முடியவில்லை.

ஏனெனில், காங்கிரஸ் ஸ்தாபனத்தை மிக்க பகிரங்கமான முறையில் தாக்க அஞ்சுவதாலும்—அதோடு, மதத்தை மிக உத்வேகத்தோடு கண்டிக்காமல் மறைமுகமாக பூச்சுப் பூசுவதாலும்தான் நமக்கு அதன்மீது சிறிது அதிருப்தி ஏற்படுகிறது. என்றாலும், நம் உலக முற்போக்கில் கலந்துகொள்வதற்கும் புதிய ஆராய்ச்சியின் முறைகளை அனுபவித்து ஜனசமூகம் சந்தோஷமும், சவுகரியமுமடைவதற்கும் தகுந்த முறையில் எல்லாப் பொதுத் தொழிற்சாலைகளையும், உற்பத்தி ஸ்தாபனங்களையும், பாங்கிகளையும் பொதுமக்களின் உரிமைக்காகச் சமதர்மப் படுத்துவதென்பதும்; பிறவி என்பதன் காரணமாகவோ, அல்லது நிறம், வகுப்பு, தேசம் போன்ற போலி உரிமைகளின் காரணங்களினாலோ அனுபவிக்கும் சலுகைகளைத் தகர்த்தெறிவதாலும்—இன்னும் இதுபோன்ற கொள்கைகளாலும் சட்ட பூர்வமான முறையில் அமுல் ஏற்படுத்தி சமதர்ம இலட்சியத்தை நிறுவுவது என்கிற ஆரம்ப வேலையில் முனைந்திருப்பதானது, ஓர் மகிழ்ச்சிக்குரிய விஷயமேயாகும்.

பாடுபட்டும் கூலிக்கு வகையின்றித் தத்தளிக்கும் தொழிலாளர்களுக்கும், தலைமுறை தலைமுறையாய் ஏழையாய் – கூலிக்காரராய் – கஷ்டப்படுவோராய் – துக்கப்படுவோராய் இருக்கும் நம் நாட்டின் பெரும்பகுதியான ஜனசமூக மக்களுக்கு இனி நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதென்றே அவர்களுக்கு அடிக்கடி ஞாபகமூட்டுவதே போன்று, இனியும் நம் நாட்டில் அக்கிரமமான வருணாசிரம தர்மத்தையொத்த-முதலாளி தொழிலாளி என்ற முறையும்; புரோகிதர் ஆட்சியும்; வியாபாரிகள் கொள்ளையும்; ஜமீன்தார்கள், சமஸ்தானாதிபதிகள், அரசர்கள் ஆகியவர்கள் ஆதிக்கமும் அடியோடு—மிக்க சமீப காலத்திலேயே அறவே ஒழிந்துவிடும் என்ற தைரியமும் ஏற்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

['குடி அரசு'—கட்டுரை—1௦-7-1933]

5. சமதர்ம இயக்கம்

இந்திய தேசிய காங்கிரசும், காந்தீயமும் அழிந்தொழிந்துபோவது என்பது இந்திய ஏழை மக்களுக்கு மாத்திரமல்லாமல், உலக ஏழை மக்கள் இயக்கத்திற்கே, அதாவது சமதர்ம உலகத்திற்கே பெரிய இலாபகரமான காரியமாகும்.

இந்தியாவில் சமதர்மக் கொள்கை என்றைக்காவது ஒரு நாள் ஏற்படும் என்று நினைப்போமேயானால்—அது தேசிய காங்கிரசும் காந்தீயமும் ஒழிந்த நாளாகத்தான் இருக்குமேதவிர அவை ஒழியாமல் ஏற்படாது என்பது உறுதி.

இந்தியாவைவிடப் பலமடங்கு அரசியல் கொடுமையும், பணக்காரக் கொடுமையும், பார்ப்பனீயப் (பாதிரித் தன்மை) கொடுமையும், அநாகரிகக் கொடுமையும் அடிமைத் தன்மைக் கொடுமையும் இருந்துவந்த ரஷியா தேசத்துக்கு சமதர்ம உணர்ச்சி எப்பொழுது ஏற்பட்டது என்று பார்ப்போமேயானால்—அங்கும் டால்ஸ்டாயிசம் என்னும் வைதீகப் பிடுங்கலிசம் (காந்தீயம்) ஒழிந்தபிறகுதான் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. ரஷிய மகாத்மாவான டால்ஸ்டாய் என்பவரும், தோழர் காந்தியாரைப் போலவே ஏழ்மை வேஷமும், கடவுளைத் தேடும் தொழிலும், கடவுள் அருளுடன் கலந்திருக்கும் தன்மையும் கொண்டவராக இருந்துவந்தார். அவருக்குச் செல்வாக்கு இருக்கும்வரை ரஷிய மக்களுக்கு இந்த உலகவாழ்வு விஷயத்தில் கவலையில்லாமல், 'செத்தபின் வாழும் மேல் உலக வாழ்க்கையிலேயே கவலை உண்டாகும்படியான உணர்ச்சியே வலுத்திருந்தது. ஏழைகளுடைய கஷ்டம் இன்னது, தொழிலாளிகளுடைய கஷ்டம் இன்னது என்று உணராமலும் அனுபவ ஞானமில்லாமலும் ஏழ்மைத் தன்மையையும் உழைப்பையும் சிலாகித்துப் பேசி, மக்களுக்குப் பிரச்சாரம் செய்து வந்தவராவார்.

அப்படிப்பட்ட டால்ஸ்டாயிசம் ஒழிக்கப்பட்ட பிறகுதான் முன் சொன்னபடி மக்களுக்குச் சமதர்ம உணர்ச்சி பரவத் தொடங்கி, நாட்டையும் புரட்சிக்குத் தயாராக்கி முதலாளித் தன்மையையும் பாதிரித் தன்மையையும், ஏகாதிபத்தியத் தன்மையையும் இருந்த இடம்தெரியாமல் செய்து இன்றைய ரஷிய குழந்தைகளுக்கு—'ஒரு காலத்தில் சார் (சக்கரவர்த்தி) என்பவன் இருந்தான்; அவனுக்கு முதலாளி என்ற அடிமைகளும், பாதிரி என்ற தாசர்களும் இருந்தார்கள்' என்று கதை சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆதலால், அந்த நிலையை இந்தியாவில் ஏற்படக் கூடியதன் அறிகுறியாக இருந்த காங்கிரசும், காந்தீயமும் அழிவதானால் நாம் மகிழ்ச்சியடைய வேண்டுமேயல்லாமல் யாரும் அதற்காகக் கவலைப்படவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தீயமும், காங்கிரசும் மறைபட வேண்டியதேற்பட்டதற்குப் பணக்காரர்களும், பார்ப்பனர்களும், படித்துவிட்டு உத்தியோகத்திற்குக் காத்திருக்கும் சோம்பேறிகளும் தான் விசனப்பட வேண்டுமே தவிர, மற்றபடி மனித சமூகத்தினிடம் அன்புகொண்டு சம நோக்குடன் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையுள்ள மக்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமே என்று எவரும் பயப்பட வேண்டியதில்லை.

அப்படிப்பட்ட சமதர்ம நோக்கமுள்ள உண்மைத் தொண்டர்களை இரண்டு கைகளையும் நீட்டி மண்டியிட்டு வரவேற்கச் சமதர்ம இயக்கம் காத்திருக்கின்றது. அது உலக மக்கள் எல்லோரையும் பொறுத்த இயக்கம்; சாதி, மதம், வருணம், தேசம் என்கின்ற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம். பிராமணன், க்ஷத்திரியன், சூத்திரன், ஹரிஜனன் என்கின்ற வருணங்களை ஒழித்து 'எல்லோரும் எப்பொழுதும் மனிதரே' என்று கூவும் இயக்கம். ஏழை என்றும் பணக்காரன் என்றும்; முதலாளி என்றும் தொழிலாளி என்றும்; எஜமான் என்றும் கூலி என்றும்; ஜமீன்தாரன் என்றும் குடியானவன் என்றும்—உள்ள சகல வகுப்புக்களையும், வேறுபாடுகளையும் நிர்மூலமாக்கித் தரைமட்டமாக்கும் இயக்கம். மற்றும் குரு என்றும் சிஷ்யன் என்றும்; பாதிரி என்றும் முல்லாவென்றும்; முன் ஜென்மம், பின் ஜென்மம், கர்ம பலன் என்றும்; அடிமையையும், எஜமானனையும், மேல்சாதிக்காரனையும், கீழ்சாதிக்காரனையும், முதலாளியையும், தொழிலாளியையும், ஏழையையும், பணக்காரனையும், குடிகளையும், மகாத்மாவையும் சாதாரண ஆத்மாவையும், அவனுடைய முன் ஜென்ம கர்மத்தின்படி அல்லது ஈஸ்வரன் தன் கடாட்சப்படி உண்டாக்கினான் என்றும் சொல்லப்படும் அயோக்கியத்தனமான சுயநலங் கொண்ட சோம்பேறிகளின் கற்பனைகளையெல்லாம் வெட்டித் தகர்த்துச் சாம்பலாக்கி, எல்லோருக்கும்—எல்லாம் சமம், எல்லாம் பொது என்ற நிலைமை உண்டாக்கும் இயக்கம். சாதி, சமய, தேசச் சண்டையற்று உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்று சாந்தியும், ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம்; இன்று உலகமெங்கும் தோன்றித் தாண்டவமாடும் இயக்கம்.

['குடி அரசு'-தலையங்கம்—30-7-1933]

6. அல்லாதார்கள் மகாநாடுகள்

தோழர்களே! மொத்த விஸ்தீரணத்தில் மூன்றிலொரு பாகப் பரப்புக்குமேல் ஜமீன் முறை ஆட்சியிலிருக்கும் இந்த சேலம் ஜில்லாவில் முதல் முதலாக இன்று இங்கு ஜமீன்தாரல்லாதார் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டதானது எனக்கு மிகுதியும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகும்.

நாம் உலக பொதுஜனங்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளின் முக்கியத்துவம் எல்லாம் இம் மாதிரியாகப் பல 'அல்லாதார்கள் மகாநாடுகள்' கூட்டி அவர்களது ஆதிக்கங்களையும் தன்மைகளையும் ஒழிப்பதில்தான் பெரிதும் அடங்கியிருக்கின்றது. இன்னும் இதுபோலவே பல மகாநாடுகள் கூட்டவேண்டி இருக்கிறது. சுயமரியாதை மகாநாடுகள்

கூட்டப்படும் இடங்களில் இம் மாதிரி மகாநாடுகள் அடிக்கடி கூட்டப்படுமென்று எதிர்பார்க்கிறேன். உதாரணமாக, லேவாதேவிக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, முதலாளிகள் அல்லாதார் மகாநாடு, தொழிற்சாலை சொந்தக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, வீடுகளின் சொந்தக்காரர் அல்லாதார் மகாநாடு, நிலச்சுவான்தார் அல்லாதார் மகாநாடு, மேல் சாதிக்காரர்கள் அல்லாதார் மகாநாடு, பணக்காரர்கள் அல்லாதார் மகாநாடு என்பதுபோன்ற பல மகாநாடுகள் கூட்டி இவர்களின் அக்கிரமங்களையும், கொடுமைகளையும், மோசங்களையும் பொது ஜனங்களுக்கு விளக்கிக்காட்டி அவைகளை ஒழிக்கச்செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

உலகில் எந்த எந்த ஸ்தாபனங்களால், எந்த எந்த வகுப்புக் கூட்டங்களால் மனித சமூகத்திற்கு இடைஞ்சல்களும், சமத்துவத்திற்கும் முற்போக்குக்கும் தடைகளும், சாந்திக்கும் சமாதானத்துக்கும் முட்டுக்கட்டைகளும் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் அழிந்து ஒழிந்து என்றும் தலைதூக்காமலும், இல்லாமலும் போகும்படி செய்யவேண்டியது தான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய இலட்சியமாகும்.

மனித சமூகத்துக்கு உள்ள தரித்திரத்திற்குக் காரணம் செல்வவான்களேயாகும். செல்வவான்கள் இல்லாவிட்டால் தரித்திரவான்களே இருக்கமாட்டார்கள். மேல்வகுப்பார் இல்லாவிட்டால் கீழ்வகுப்பார் இருக்கவேமாட்டார்கள். ஆதலால்தான், இம் மாதிரி அல்லாதவர்கள் மகாநாடு கூட்டவேண்டுகின்றோம்.

இன்று ஏன் முதன்முதலாக ஜமீன்தார் அல்லாதார் மகாநாடு கூட்டினோம் என்றால் இன்றைய உலக ஆதிக்கம் அவர்கள் கையிலேயே இருந்து வருகின்றது. இதற்குமுன் இந்நாட்டு ஆதிக்கம் பார்ப்பனர்கள் கையிலேயே இருந்தது.

அதற்காகவே நமது இயக்கம் பல பார்ப்பனர் அல்லாதார் ஸ்தாபனங்களும், மகாநாடுகளும், வாலிபர் சங்கங்களும் புதிய முறையில் தோற்றுவித்தும், கூட்டுவித்தும் பார்ப்பனக் கொடுமைகளையும், மோசங்களையும் ஒருவாறு பாமரமக்களுக்கு விளக்குவதில் முனைந்து நின்று வேலை செய்ததின் பயனாய் ஓரளவுக்குப் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதில் வெற்றி பெற்றோம். ஆனால், அந்தப் பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்தது என்கின்ற சந்தோஷத்தை அடைவதற்குள் அதற்குப் பதிலாக அதுபோன்ற கொடுமையும் மோசமுமான ஜமீன்தார் ஆதிக்கம் தலைதூக்கித் தாண்டவமாட ஏற்பட்டுவிட்டது. முன்பிருந்த கெடுதியும் தொல்லையுமே பார்ப்பன ஆதிக்கம் என்னும் பேரால் இல்லாமல் ஜமீன்தார் ஆதிக்கம் என்னும் பேரால் இருந்து வருகின்றன.

பார்ப்பனர்களைப் போலவே ஜமீன்தார்கள் பிறவியின் காரணமாகவே பரம்பரை உயர்வுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்கள். பார்ப்பனர்களைப்போலவே ஜமீன்தார்கள் இன்றைய ஆட்சிமுறைக்குத் தூண்கள் போலவும் இருந்து வருகின்றவர்களாவார்கள். பார்ப்பனர்களைப் போலவே ஜமீன்தார்கள் என்பவர்கள் உலகத்துக்கு வேண்டாதவர்களும், உலக மக்கள் கஷ்டங்களுக்கெல்லாம் காரணமாயிருப்பவர்களுமாவார்கள்.

இந்த ஜமீன்தார்கள் எப்படி ஏற்பட்டார்கள்? எப்படியிருந்து வருகின்றார்கள்? இவர்களது செல்வமும் மேன்மையும் எதற்குப் பயன்படுகின்றன? என்பவைகளை யோசித்துப் பார்த்தால் இவர்கள் உலகுக்கு வேண்டாதவர்கள் என்பதும், ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதும் நன்றாய் விளங்கும்.

இன்றைய தினம் சாதாரணமாய் ஜமீன்தார்கள் என்றால் என்ன என்று பார்ப்போமானால், ஒரு விஸ்தீரணமுள்ள பிரதேசத்தைச் சொந்தமாக உடையவர்கள் என்றும், அந்த விஸ்தீரணத்திலுள்ள பூமிகளுக்கு உள்ள வரி (கிஸ்தி) இந்த ஜமீன்தார்களுக்கே சேர்ந்தது என்றும் அதில் ஏதோ ஒருபாகம் சர்க்காருக்குச் செலுத்திவிட்டுப் பாக்கியைத் தாங்களே அனுபவிப்பவர்கள் என்றும்தான் அர்த்தமாய் இருந்து வருகின்றது.

பொதுவாக பூமிகளுக்குக் கிஸ்தி, அதாவது நிலவரி கொடுப்பது என்பது எதற்காக் வழக்கத்திலிருந்து வருகின்றது என்றால், பயிரிடும் மக்களின் நன்மைக்கும், பத்திரத்திற்கு மான காரியங்களைச் செய்யவே பயிரில் ஒருபங்கு கொடுக்கப்படுவதாகும். அதுபோலவே, சர்க்கார் வாங்கும் நிலவரிகளுக்கும் மற்றபடியான வரிகளுக்கும் சரியாகவோ, தப்பாகவோ ஒரு வரவு செலவுத்திட்டம் காட்டி, அதன்படி படிப்பு, சுகாதாரம், நீதி, பத்திரம், போக்கு வரவு சாதனம் முதலிய காரியங்களுக்குப் பயன்படுத்தி வருவதாய்ச் சொல்லியும், கணக்குக் காட்டியும் வருகிறார்கள். ஆனால், இந்த ஜமீன்தார்களால் குடிகளிடமிருந்து வாங்கும் நிலவரிக்கும், வாரத்துக்கும் இதுபோல் குடிஜனங்களுக்கு என்ன பிரதிப் பிரயோஜனம் இருந்து வருகின்றது என்பதை நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஜமீன்தார்கள் தங்கள் வரும்படியில் சர்க்காருக்கு ஏதோ ஒரு சிறு பாகம் கொடுப்பதாய்ச் சொல்லப்படுவ தெல்லாம் குடிகளிடமிருந்து வரியை எப்படியாவது வசூலிப்பதற்கும், ஜமீன்தார்கள் என்ன அக்கிரமம் செய்தாலும் குடிகளால் ஜமீன்தார்களுக்கு ஆபத்து இல்லாமல் இருப்பதற்கும் கூலியாகவே ஒழிய மற்றபடி ஜமீன் குடிகளுடைய நன்மைக்கு என்பதாக எண்ணங் கொண்டல்ல என்பதே எனது அபிப்பிராயம். இந்த ஜமீன்தார்களுக்கு இந்தப் பதவி வந்ததற்குக் காரணம் எல்லாம், ஆதியில் அன்னிய சர்க்கார் இத்தேசத்துக்கு வந்தபோது அவர்களுக்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுத்தும், இங்குள்ள எதிர்ப்புகளை அடக்கி ஒடுக்க உதவி செய்ததுமான காட்டிக்கொடுத்த காரியங்களுக்குத்தான் சன்மானமாய் (இலஞ்சமாய்) கொடுக்கப்பட்டதே ஒழிய வேறில்லை.

இப்படிப்பட்ட இந்த ஜமீன்தார்களின் யோக்கியதையை நான் உங்களுக்கு அதிகமாய் சொல்லிக்காட்டவேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய அருங் குணங்களில் எல்லாம் குடிப்பதும், கூத்திமார்கள் வைப்பதும், பந்தய சூது ஆடுவதும் தலைசிறந்த குணங்களாகும். மேலும், இப்பொழுது சிறிது காலமாய் அதாவது பார்ப்பன ஆதிக்கம் ஒடுங்க ஆரம்பித்த பின்பு அரசியல் தேர்தல்களைப் பணத்தின் மூலம் வியாபார முறையில் நடத்தி வெற்றிபெற்று ஆதிக்கமடைந்து பெருமை அடைவதையும், பணம் சம்பாதிப் பதையும் மற்றொரு அருங் குணமாய்க் கொண்டிருக்கிறார்கள்.

மற்றபடி, இவர்களிடம் என்ன யோக்கியதை இருக்கிறது? இவர்களால் தேசத்துக்கோ மனித சமூகத்துக்கோ என்ன பயன் என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பது தெற்றென விளங்கும். இன்றைய ஜமீன்முறை நாளடைவில் எல்லா பூமியும் அவர்கள் கைக்கே போய்ச் சேரும்படியானதாகவும், எல்லா அதிகாரமும், பதவியும் அவர்கள் கைக்கே போய்ச் சேரும்படியான மாதிரியிலுந்தான் இருந்து வருகின்றது.

ஏனெனில், வரிகொடுக்கமுடியாத பூமிகளும், வரிகொடுக்கவும், செலவுக்கும் வரும்படி போதாமல் இருந்தவரும் குடியானவனுடைய பூமிகள் முழுவதும், பணக்காரர்களாயிருக் கின்ற ஜமீன்தார்களுக்குத்தான் நாளாவட்டத்தில் போய்ச் சேருகின்றதாய் இருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் ஒவ்வொரு ஜமீன்தார்களுக்கும் இலட்சக்கணக்கான ஏக்கர் பூமிகள் இருந்து வருகின்றன. இதுபோலவே, தேர்தல்களிலும், அது எப்படிப்பட்ட தேர்தலாய் இருந்தாலும் ஜமீன்தார்கள் தாராளமாய் 40,000, 50,000, 1 இலட்சம், 2 இலட்சம் என்கின்ற கணக்கில் ரூபாய்களை வாரி இறைத்து எலக்ஷன்களில் வெற்றி பெற்றும், மற்றும் வேறு இடங்களில் வெற்றிபெற்றவர்களுக்கு 1000, 5000 என்கின்ற கணக்கில் ரூபாய்களைக் கொடுத்து அவர்களைத் தங்கள் அடிமையாக்கியும், சகல பதவிகளையும், அதிகாரங்களையும் சுவாதீனப்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது. இந்த மாதிரி விலை கொடுத்துத் தங்களின் செல்வத்தின் பயனாயும், செல்வாக்கின் பயனாயும் பெற்ற பதவியும் அதிகாரமும், ஆதிக்கமும் எந்த வழியில் உபயோகப்படுத்தினாலும் கேள்வி கேட்பார் இல்லாமல் செலாவணியாகி வருகின்றதைப் பார்க்கின்றோம்.

ஜமீன்தார்களின் நடவடிக்கைகளை நாம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இன்று யாரும் இல்லை என்றே நினைக்கின்றேன். சில ஜமீன்தார்கள் அவர்கள்

எல்லைக்குட்பட்ட விஸ்தீரணத்தில் எந்தப் பெண் ருதுவானாலும் அவர்களேதான் முதலில் சாந்தி முகூர்த்தம் செய்யவேண்டும் என்கின்ற (எழுதாத) சட்டம் அமுலில் இருந்துவருவது எனக்குத் தெரியும். இதில் ஒன்றும் அதிசயம் இருப்பதாக யாரும் நினைக்கவேண்டிய தில்லை. இந்தச் சட்டம் சில மதக் குருக்கள்மாருக்கும் இருந்துவருவது எனக்குத் தெரியும். இது தவிர, தனது குடிஜனங்களிடம் இருந்தும் நல்ல பெண், நல்ல மாடு, குதிரை முதலியவைகள் ஜமீன்தார்களுக்கே சொந்தமானது என்கின்ற முறையும் சில இடங்களில் இருந்துவருவது எனக்குத் தெரியும்.

மற்றும் பல ஜமீன்தார்கள் சுகவாசமும், வெளிநாடு சுற்றுப் பிரயாணமும் 10, 2000 கணக்கான மனைவிகளும், வைப்பாட்டிகளும், ஆயிரம் இரண்டாயிரக்கணக்கான தாசிகள், விபசாரிகள் ஆகியவர்கள் சம்பந்தமும் வைத்துக்கொண்டிருப்பதுடன் 40, 50, 100, 200 குதிரைகளும், 10, 20, 30 மோட்டார் கார்களும் 10, 20 அய்யர்கள் என்று பெயர் வழங்கும் மாமாக்களையும் உடையவர்களாக இருந்துகொண்டு, நெல் மரத்தில் காய்க்கின்றதா? கொடியில் காய்க்கின்றதா? செடியில் காய்க்கின்றதா? என்றுகூடத் தெரியாதவர்களும், வேஷ்டிகள் செடியில் காய்க்கின்றதா? அல்லது, தறியில் நெய்யப்படுகின்றதா? என்று தெரியாதவர்களும் ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை நிலையை அவர்களது பள்ளிக்கூட வாழ்வில் இருந்தே கவனித்தால் பெரும்பாலும் ஒவ்வொருவர்களுடைய யோக்கியதையும் விளங்கும். சாதாரணமாக, சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டோமேயானால், வருஷமொன்றுக்கு ஜமீன்தார்களுக்குக் குடிகளிடமிருந்து சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் வரையில் கிஸ்தி (நிலவரி) கிடைக்கின்றது. இதில் அரைக்கோடி ரூபாய் மாத்திரமே இவர்கள் சர்க்காருக்குச் செலுத்திவிட்டு, பாக்கி இரண்டு கோடி ரூபாய்களை இந்த ஜமீன்தார்கள் அனுபவித்து வருகின்றார்கள். இந்த இரண்டு கோடி ரூபாயில் 100-க்கு 90 பாகம் ரூபாய்கள் நான் மேற்குறிப்பிட்ட வழியிலேயே பாழாக்கப்படுகின்றன.

இந்த நிலவரியானது சென்னை அரசாங்கத்தாருக்கு மாகாணம் பூராவிலும் கிடைக்கும் நிலவரிக்கு 3-ல் ஒரு பங்குக்கு மேலானதென்றே சொல்லுவேன். இந்தப்படி விளைவின் பயனாய் உண்டான செல்வம்–அதுவும் எத்தனை ஏழைக் குடியானவன், விவசாயக் கூலிக்காரன் ஆகியவர்கள் பெண்டு பிள்ளைகள் சகிதம் தங்கள் சரீரங்களை தினம் 8 மணி முதல் 15 மணி வரையில் வியர்வையைப் பிழிந்து சொட்டுச் சொட்டாய்ச் சேர்த்த இரத்தத்திற்குச் சமானமான செல்வத்தை, ஒரு கஷ்டமும், ஒரு விவரமும் அறியாதவர்களும், ஒரு பொறுப்பும் இல்லாதவர்களுமான ஜமீன்தார்கள் சர்க்காரில் லைசென்சு பெற்ற கொள்ளைக் கூட்டத்தார்கள்போல் இருந்துகொண்டு மக்கள் பதறப் பதற, வயிறு வாய் எரிய எரிய, கைப்பற்றிப் பாழாக்குவதென்றால் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் உலகில் இருக்கவேண்டுமா என்றும், இவர்களின் தன்மையையும், ஆதிக்கத்தையும் இன்னும் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு ஜன சமூகம் சுயமரியாதையை உணர்ந்த ஜன சமூகமாகுமா என்பதைப் பற்றியும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சாதாரணமாக, ஜமீன் என்கின்ற மேற்கண்ட தன்மை, நாட்டில் அடியோடு இல்லாமல் இந்த இலாபங்களையும், அதாவது இந்த 2 கோடி ரூபாய்களையும் சர்க்காரே நேராய் அடைவதாய் இருந்தால் அதனால் மக்களுக்கு எவ்வளவு பயன் ஏற்படுத்தலாம் என்பதையும் யோசிக்க வேண்டுகிறேன்.

ஆதலால், மேல்சாதி, கீழ்சாதி முறை கூடாதென்றும், குருக்கள் முறை கூடாதென்றும் எப்படி நாம் பல துறைகளில் வேலை செய்கின்றோமோ அதுபோலவேதான் ஜமீன்தாரன், குடிகள் என்கின்ற தன்மையும், முறையும் கூடாதென்று வேலை செய்ய நாம் கட்டுப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.

[இராசிபுரத்தில், 20-8-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 27-8-1933]

7. சமதர்மப் பிரச்சார உண்மை விளக்கம்

இ. பி. கோ. 124-A செக்ஷன்படி தொடரப்பட்டுள்ள 'பொதுவுடைமைப் பிரச்சாரத்திற்காகவும், 'இராஜ நிந்தனை' என்பதற்காகவுமுள்ள வழக்கு கோவையில் 12-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டபோது தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கோவை ஜில்லா கலெக்டர் G.W. வெல்ஸ் I.C.S. அவர்கள் முன் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்.

1. என் பேரில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்குக்கு ஆதாரமே கிடையாது.

2. வழக்குக்கு அஸ்திவாரமான 29-10-1933-ந்தேதி 'குடி அரசி'ன் தலையங்கத்தை இப்போது பலதரம் படித்துப் பார்த்தேன்; அதை நான் எழுதினேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

3. அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்காவது, வாக்கியங்களுக்காவது, இராஜதுவேஷக் குற்றம் சாட்டப்படுமானால் இன்றைய அரசாங்கமுறை முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சிசெய்து குறைகளை எடுத்துச் சொல்லவோ, அவற்றால் மக்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களை விலக்கப் பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவோ யாருக்கும் சுதந்திரம் கிடையாது என்றுதான் முடிவு செய்யப்பட்டதாகும்.

4. என்ன காரணத்தைக் கொண்டு என்மேல் ஆதாரமற்ற இந்தப் பிராது தொடரப் பட்டிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால், என்னுடைய சமதர்ம பிரச்சாரத்தை நிறுத்தி விடச் செய்வதற்காக முதலாளி வர்க்கமோ அல்லது மத சம்பிரதாயக்காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்கவேண்டு மென்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. வியாசத்தின் விஷயத்திலாவது பதங்களிலாவது, நோக்கத்திலாவது சாட்டப்பட்ட குற்றத்தின் அமைப்பே கிடையாது.

5. முக்கியமாய் அதில் சொல்லப்பட்ட விஷயம் எல்லாம்—கல்வி இலாக்காவின் சம்பளங்கள் அதிகமென்றும், பிள்ளைகளுக்குக் கல்விச் செலவு அதிகமென்றும், அதற்கேற்ற பயன் விளைவதில்லை என்றும், ஏழைகளுக்குக் கல்வி பரவ சவுகரியம் இல்லை என்றும் இப்படிப்பட்ட முறையால் இலாபம் பெறும் பணக்காரர்களும், அதிகார வர்க்கத்தாரும், உத்தியோகஸ்தர்களும் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்துபோகாமல், வரப்போகும் (சீர்திருத்த) எலெக்ஷன்களில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டுமென்று ஏழைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டியதேயாகும்.

6. நான் 7, 8 வருஷகாலமாய்ச் சுயமரியாதை இயக்க சமதர்ம பிரச்சாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும், பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டு மென்பது அப் பிரச்சாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

7. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாய் அனுபவிக்கவேண்டுமென்பதும் அவ்வுற்பத்திக்காகச் செய்யப்படவேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லோரும் சக்திக்குத் தக்கப்படி பாடுபடவேண்டு மென்பதும் அதி தத்துவத்தின் கருத்தாகும்.

8. அவ்வியக்க இலட்சியத்திலோ, வேலைத் திட்டத்திலோ, பிரச்சாரத்திலோ அதற்காக நடைபெறும் 'குடி அரசு'ப் பத்திரிகையிலோ பலாத்காரம், துவேஷம், இம்சை இடம் பெற்றிருக்கவில்லை. எந்த விதத்திலாவது அவை நமது நாட்டில் இடம்பெறுவது என்பதும் எனக்கு இஷ்டமான காரியம் அன்று.

9. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், பல வருஷங்களாக இரகசியப் போலீஸ் இலாக்கா சுருக்கெழுத்து அறிக்கைக்காரர்கள் எனது பிரசங்கத்தை விடாமல் குறித்து வைத்திருக்கும் அறிக்கைகளையும் சுமார் 10 வருஷத்திய 'குடி அரசு'ப் பத்திரிகையின்

வியாசங்களையும் சர்க்கார் கவனித்துவந்தும் என்மேல் இத்தகைய வழக்கு இதற்குமுன் ஏற்படுத்தியதில்லை என்பதே போதும்.

10. அரசாங்கமானது முதலாளித்தன்மை கொண்டதாய் இருப்பதால் அது இத்தகைய சமதர்ம பிரச்சாரம் செய்யும் என்னையும் எப்படியாவது அடக்கவேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதில் அதிசயமில்லை. தற்கால அரசாங்க ஆட்சியில் பங்கு பெற்று போகபோக்கியமும், பதவியும், அதிகாரமும் அடைந்துவரும் பணக்காரர்களும் மற்றும் மதம், சாதி, படிப்பு என்கிற சலுகைகளைக் கொண்டு முதலாளிகளைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றவர்களும் இப்படிப்பட்ட அரசாங்கத்திற்கு நேர்முகமாகவும், மறை முகமாகவும் உதவி செய்து தீரவேண்டியவர்களாய் இருப்பதால் அவர்களும் இம் முயற்சிக்கு அனுகூலமாய் இருப்பதிலும் அதிசயமில்லை.

11. பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும், இயற்கை என்றும் கருதும்படியாகச் செய்து நிலைநிறுத்தப்பட்டு நடைபெற்றுவரும் சமூக அமைப்பையும், பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாய் இருந்தாலும்—அவற்றை மாற்றி அமைத்தாலொழிய மக்கள் வாழ்க்கையிலுள்ள அனேக கஷ்டங்களும், குறைகளும் நிவர்த்தியாகி சவுக்கியமாகவும் திருப்தியாகவும் வாழ முடியாதென்பது எனது உறுதி.

12. இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப்படுவதும் அதற்காக பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாது.

13. ஏதாவது ஒரு கொள்கைக்குப் பிரச்சாரம் பரவ வேண்டுமானால் அக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் அக் கொள்கைக்கு இடையூறு செய்பவர்களால் அடக்குமுறைக்கு ஆளாகவேண்டியதும் அவசியமேயாகும். அதற்காக நாமே வலுவில் போய்க் கஷ்டத்தைக் கோரி எடுத்துக்கொள்ளக்கூடாது; என்றாலும் தானாகவே ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை யாரும் இழந்துவிடக்கூடாது. இந்தப் பிரச்சாரத்தைத் தடுக்க வேண்டுமென்று கருதி இந்த வழக்கைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் எப்படியாவது எனது வியாசத்தில் துவேஷம், வெறுப்பு, பலாத்காரம் முதலியவைகள் இருப்பதாகக் கற்பனை செய்துதீரவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். அந்தப்படி செய்யப் படும் கற்பனைகளால் நான் தண்டிக்கப்பட்டாலும்—பொதுவாக என்மீது நம்பிக்கையும் நல்லெண்ணமும் உடையவர்களும், சிறப்பாக எனது கூட்டு வேலைக்காரத் தோழர்களும், தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடுமாதலால் அப்படிப்பட்ட கற்பனைகளை மறுத்து உண்மையை விளக்கிவிடவேண்டுமென்றே இந்த ஸ்டேட்மெண்டைக் கொடுக்கக் கடமைப் பட்டவனானேன்.

14. இதனால் பொதுஜனங்களுடைய கவனிப்பு இன்னும் அதிகமாவதோடு அவர்களது ஆதரவும் பெற நேர்ந்து கிளர்ச்சிக்குப் பலமேற்படக் கூடுமாதலால் என்மீது சுமத்தப்பட்ட இந்த வழக்கில் ஒரு ஸ்டேட்மெண்டை மாத்திரம் கொடுத்துவிட்டு, எதிர் வழக் காடாமல் இப்போது கிடைக்கப்போகும் தண்டனையை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.

15. இந்நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும் சரி, அல்லது இந்தப் பிராதுக்குப் போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையும் சட்டத்தையும் இலட்சியம் செய்து வழக்கைத் தள்ளிவிட்டாலும் சரி, இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி யடைகின்றேன்.

[12-1-1934-ல், கோவை ஜில்லா கலெக்டர்முன் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்—'புரட்சி' 21-1-1934]

8. சமதர்ம எண்ண வளர்ச்சி

தலைவரவர்களே! தோழர்களே!

'குடி அரசு'ப் பத்திரிக்கையில் என்னால் எழுதப்பட்ட ஒரு சாதாரணமானதும், சப்பையானதுமான வியாசத்திற்காகத்தான் நான் சிறைக்குப் போக நேரிட்டதே தவிர, மற்றபடி செல்லத்தக்க ஒரு சரியான காரியம் செய்துவிட்டுச் சிறைக்குப் போகவில்லை. சர்க்கார் இந்த 'குடி அரசு'ப் பத்திரிகையின் பழைய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால் என்னை வருடக்கணக்காய்த் தண்டிக்கக்கூடியதும், நாடு கடத்தக்கூடியதுமான வியாசங்கள் நூற்றுக்கணக்காகத் தென்படலாம். ஆனால், அவர்கள் அந்தக் காலங்களிலெல்லாம் கவனித்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஏன் கவனிக்கவில்லை என்பதை இப்போது நான் கவனித்துப் பார்த்தால், காங்கிரஸிற்குப் பாமர மக்களிடம் இருந்த செல்வாக்கின் பயனாய் நமது வியாசங்களைப் பொதுஜனங்கள் இலட்சியம் செய்யமாட்டார்கள் என்கின்ற தைரியத்தால் சர்க்கார் அப்பொழுது சும்மா இருந்தார்கள் என்று தோன்றுகிறது.

ஆனால், இப்பொழுது இப்படிப்பட்ட சிறிய வியாசங்களையும் கண்டு இவ்வளவு வல்லமை பொருந்திய சர்க்கார் பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பது நன்றாய்த் தெரிகிறது.

இதிலிருந்து நாம் என்ன நினைக்கவேண்டியிருக்கிறது என்றால், நமது அபிப்பிராயத்தை மக்கள் மதிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்றும், சுயமரியாதைக் கொள்கையை ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் சர்க்கார் இப்போது உணர்வதாகத் தெரிகிறது. அன்றியும், மற்றும் பல புதிய புதிய தீவிரக் கொள்கைகளையும் ஜனங்கள் வரவேற்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இதுவரை நமதுநாட்டில் இருந்துவந்த அபிப்பிராயங்கள் எல்லாம் வெள்ளைக்காரர்களுக்கு இந்நாட்டில் என்ன வேலை? அவர்களுக்கு ஏன் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம்? கறுப்பு மனிதனுக்கு ஏன் நூற்றுக்கணக்கான-பத்துக்கணக்கான ரூபாய்கள் சம்பளம்? அவர்களுக்கு ஏன் பெரிய அதிகாரம்? நமக்கு ஏன் சின்ன அதிகாரம்? என்பன போன்ற பிரச்சினைகளே தேசியம் என்னும் பேரால் முக்கியமாக இருந்துவந்தன. இதன் பயனாய் அரசாங்கத்தார்களும் இங்குள்ள பணக்காரர், படித்தவர், மேல்சாதிக்காரர் ஆகிய ஒருசிறு கூட்டத்தாருக்கு மாத்திரம் ஏதாவது வாய்பூசி மக்களின் 'தேசிய அபிலாஷைகளை'த் திருப்தி செய்துவந்துகொண்டும் இருந்ததால் பாமர மக்களின் எண்ணம், உணர்ச்சி, ஊக்கம் எல்லாம் அதிலேயே ஈடுபட்டுக்கிடந்தன. ஆனால், இப்பொழுதோ நாட்டில் வரவர அந்த எண்ணங்கள் மறையத் தொடங்கிவிட்டன. அவை வேறுவிதமாகப் பரிணமிக்க ஆரம்பித்து விட்டன.

எப்படியென்றால், வெள்ளையனுக்கு ஏன் 1000, 5000 ரூபாய் சம்பளங்கள்? கறுப்பனுக்கு ஏன் 100, 50, 10, 5 ரூபாய் வீதம் சம்பளம் என்பது போய்—மனித சமூகத்தில் யாராயிருந்தாலும் ஒருவனுக்கு ஏன் 5000, 10000 ரூபாய் சம்பளம்? மற்றவனுக்கு ஏன் 5 ரூபாய், 10 ரூபாய் சம்பளம்? என்கின்ற உணர்ச்சி தோன்றி எல்லா மக்களும், சாதி, மதம், தேசம் என்கின்ற பேதமும் பிரிவுமில்லாமல் சகலரும் சமமாய்ப் பாடுபடவேண்டும், பயனைச் சமமாய் அடையவேண்டும் என்கிறதான ஒரு சமதர்ம உணர்ச்சியில் திரும்பிவிட்டது. இந்த நிலைமையானது ஆட்சிக்காரருக்கு மாத்திரமோ அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமோ விரோதமானதென்றோ, அடக்கிவிட வேண்டியதென்றோ தோன்றாமல் நம் நாட்டிலுள்ள எல்லாப் பணக்காரர்களுக்கும் எல்லா மேல் சாதிக்காரர்களுக்கும் (அதாவது பாடுபடாமல் வயிறு வளர்க்கவும் போகபோக்கியம் அனுபவிக்கவும் கருதும் மக்களுக்கும்) படித்தவர்கள் என்கின்ற கூட்டத்திற்கும் தோன்றிவிட்டதுடன், இவர்களால் வாழ்ந்துவந்த மதப் புரோகிதர்கள் என்பவர்களுக்கும் தோன்றிவிட்டது. ஆதலால், இந்தக் கூட்டத்தார்கள்

எல்லோருமே அக் கொள்கைக்கு எதிரிகளாய் இருப்பதில் நான் அதிசயப்படவில்லை என்பதோடு, இதற்காக நான் ஜெயிலுக்குப் போக நேரிட்டதிலும் அதிசயமில்லை.

[ஈரோட்டில், 17-5-1934-ல் சொற்பொழிவு—'புரட்சி' 20-5-1934]

9. ஏழைகள் துயரம் நீங்க

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தத் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜனசமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியாய் இல்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின்மீது கட்டக்கூடிய எந்த அமைப்பும் ஜன சமூகத்திற்கு நன்மையளிக்கக் கூடியதல்ல.

ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்தும் சம உரிமையும் உண்டோ, அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழமுடியும். ஏதோ—தான் பிறந்த வேளையின் பலன் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியதுதான்; மற்றொருவன் சுகத்தை அனுபவிக்கப் பாத்தியதை உடையவன்தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபடவேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணாகாது. ஜனங்களின் மனோபாவமும், வாழ்க்கையை நடத்தும் முறையும் மாறினாலொழிய, வேறு ஒரு முறை யாலும் நன்மை உண்டாகாதென்பது திண்ணம்.

தற்போதிருக்கும் நிலைமையில் சுயராஜ்யம் வந்தால்—குருட்டு நம்பிக்கையும், வைதிகமும்தான் வலுக்கும். தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏழைகள் நிலைமை அங்கே எப்படி இருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்கா உலகில் செல்வத்திற்கே இருப்பிடமாயிருந்தும் அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித் தவிக்கிறார்கள். ஜெர்மனியின் நிலைமை இன்று எவ்விதமாக இருக்கிறதென்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை உடையதென்று சொல்லும் இங்கிலாந்தும் சுயராஜ்ய தேசமேயாகும். உலகத்தில் பல நாடுகள் இங்கிலாந்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கு ஏழைகள் படும் துயரம் கொஞ்ச நஞ்சமல்ல.

சுயராஜ்யமுள்ள ஒவ்வொரு தேசமும் இப்படித்தான் இருக்கிறது. சுயராஜ்யமோ, அன்னிய ராஜ்யமோ, குடியரசோ, முடிஅரசோ எந்தவிதமான முறையிலும் மக்கள் சுகம்பெற முடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்து வருகிறது.

ஆகையால், ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம்-இப்போது சிலரால் கருதப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். சமதர்மத்தையும், பொது உடைமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட இராஜாங்க அமைப் பொன்றே மக்கள் சுகவாழ்க்கைக்குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராயிருக்கக் கூடாதென்று கேட்கிறேன்.

உலகத்தில் பலவகையில் ஜீவராசிகள் மரணமடைகின்றன. பல நோய்களால் இறக்கிறவர்களின் தொகை சாதாரணமல்ல. மதத்தின் பெயரால் யாதொரு விவேகமு மில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ளு கிறார்கள். இன்னும் பலவழிகளில் மரணமடையும்போது—மக்களின் உன்னத வாழ்க்கை அமைப்பை உத்தேசித்துச் சிலரோ, பலரோ உயிரைத் தியாகம் செய்வதுகூட பெரிய காரிய மாகுமோ என்று கேட்கிறேன். மனிதனுக்கு மனிதன் எதற்காக வித்தியாசங்கள் கண் பிக்கப்பட வேண்டும்? அறிவுள்ள எவரும் இனி இந் நிலைமையைச் சகித்துக்கொண்டு

ஒரு க்ஷணமாவது வாழமுடியாது. பலாத்காரம் கூடாது. இம் முறைகளை மாற்ற பலாத்காரம் ஒருபொழுதும் வெற்றியடைய முடியாது. பலாத்காரம் பலாத்காரத்தையே பெருக்கும்; உண்மை மறைந்துவிடும். ஆகையால், ஜனங்களுடைய மனதை மாற்றப் பாடுபடவேண்டியதுதான் முறையே ஒழிய, பலாத்காரத்தினால் சாதித்துவிடலாமென்று எண்ணுவது மனித இயற்கைக்கு விரோதமான தத்துவமாகும். இந்தத் தேசத்தில் முன்னேற்றமுள்ளவர்கள் ஒன்று, பிற்போக்கானவர்கள் மற்றொன்றாக இரண்டு கட்சிகளே இருக்கமுடியும். இப்படிப் பிரிக்கப்பட்டாலொழிய மக்கள் அபிவிருத்தியடைய மார்க்கமில்லை. நமது மக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய பகுத்தறிவு விருத்தியடைந்தாலொழிய மற்றெந்த இராஜீய முறையாலும் ஒரு நன்மையும் விளைந்துவிடப் போவதில்லை.

[கும்பகோணத்தில், 8-7-1934-ல் சொற்பொழிவு—'பகுத்தறிவு' 9-9-1934]

10. வேலைத் திட்டம்

1. அரசாங்க உத்தியோக சம்பளங்கள் மக்களின் பரிசுத்தத் தன்மையைக் கெடுக்கக்கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக் கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிகமிகத் தாங்கமுடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து, உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும் மீத்துப் பெருக்கிவைப்பதற்கு இலாயக்கில்லாததாகவும் இருக்கும்படி செய்யவேண்டும்.

2. பொதுஜன தேவைக்கும், சவுகரியத்துக்கும், நன்மைக்கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழிற்சாலைகள், இயந்திரசாலைகள், போக்கு வரவு சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படி செய்யவேண்டும்.

3. ஆகார சாமான்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொதுஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும் சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

4. விவசாயிகளுக்கு இன்றுள்ள கடன்களை ஏதாவது ஒருவழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள், ஒரு குறிப்பிட்ட அளவு கல்வியாவது எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும், ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும்படியாகவும், ஒரு அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா சாதி-மதக்காரர்களுக்கும் சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடுகள் செய்வதுடன், இவை நடந்துவருகின்றதா என்பதையும் அடிக்கடி கவனித்துத் தக்கது செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

6. மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும் தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படி செய்வதுடன், அரசியலில்—அரசியல் நிர்வாகத்தில் அவை எவ்வித சம்பந்தமும், குறிப்பும் பெறாமல் இருக்கவேண்டும். சாதிக்கென்றோ, மதத்திற்கென்றோ எவ்விதச் சலுகையோ, உயர்வு-தாழ்வு அந்தஸ்தோ, அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாடுவதோ, ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது.

7. கூடியவரை ஒரு குறிப்பிட்ட ரொக்க வரும்படிக்காரருக்கோ அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ வரிப் பளுவே இல்லாமலும், மனித வாழ்க்கைக்குச் சராசரி தேவையான அளவுக்குமேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன் மூலம் பயனடைபவர்களுக்கும் வருமானவரி முறை போல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

8. லோக்கல் போர்டு, முனிசிபாலிட்டி, கோவாப்பரேட்டிவ் இலாக்கா ஆகியவை களுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, இவற்றின் மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிர்வாகம் செய்ய வசதிகள்செய்து, தக்க பொறுப்பும் நாணயமும் உள்ள சம்பள அதிகாரிகளைக்கொண்டு அவைகளை நிர்வாகம் செய்யச் செய்யவேண்டும்.

9. விவகாரங்களையும், சட்டச் சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவுவரி விதிக்கப் படவேண்டும்.

10. மேலே கண்ட இந்தக் காரியங்கள் நடைபெறச் செய்வதில் நாமே சட்டங்கள் செய்து, அச் சட்டங்களினால் அமுலில் கொண்டுவரக் கூடியவைகளைச் சட்டசபைகள் மூலமும், அந்தப்படி சட்டங்கள் செய்துகொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளைக் கிளர்ச்சி செய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

[29, 30-9-1934-ல் நடந்த சென்னை தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டிற்கு அனுப்பிய வேலைத் திட்டம்—' பகுத்தறிவு' 23-9-1934]

11. இலட்சியம்

தலைவரவர்களே! பெரியோர்களே!

நான், மனிதபேதம் ஒழிய வேண்டுமானால் மதம் ஒழியவேண்டும் என்கின்றேன்—அன்றியும் மதம் ஒழிந்த இடத்தில்தான் மனிதன் பிறப்பு பேதம் புதைக்கப்படுகின்றது.

அதுபோலதான், பொருளாதார ஏழ்மை, செல்வ பேதம் ஒழிய வேண்டுமானால் அவைகளின் உற்பத்தி ஸ்தானம், அதாவது தோன்றுமிடமும், காப்பு இடமும் ஒழிக்கப் படவேண்டும். ஏழ்மைக்கும் செல்வத்திற்கும் கர்த்தாவும், காவலும் கடவுளாய் இருக்கிறது. அப்படிப்பட்ட கடவுளைக் காப்பாற்றிக்கொண்டு, அல்லது அக் கடவுள் ஆணைக்கு அடங்கினவனாய் இருந்து கொண்டு, கடவுள் தன்மையை—செயலை—கட்டளையை நீ எப்படி மீற, சமாளிக்க, தாண்ட முடியும் என்று சிந்தித்துப் பார். அதனால்தான் மனித சமுதாய சமத்துவத்திற்கு மதம் ஒழிக்கப்பட வேண்டியது எப்படி அவசியமோ, அதுபோல் பொருளாதார சமத்துவத்திற்கும், அதாவது பொருளாதார சமத்துவம் வேண்டுமானால் பொருளாதார பேதத்துக்கும் பேதத் தன்மைக் காப்புக்கும் ஆதாரமாய் இருக்கின்ற கடவுள் தன்மை ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இது சமுதாய–பொருளாதார சமத்துவக்காரருக்கு A.B.C.D. படிப்பாகும். இதை எந்தச் சமுதாய சமத்துவ வாதியாவது, பொருளாதார சமத்துவ வாதியாவது பேசுகிறார் களா, சிந்திக்கிறார்களா என்று பாருங்கள். ஏன் சிந்திப்பதில்லை என்றால், இந்தத் துறையில் இன்று பாடுபடுகின்றவர்களாய்க் காண்பவர்கள் பெரிதும் பொருளாதாரத்திலும், சமுதாயத் திலும் நல்ல நிலையில், நல்வாழ்க்கையில் இருக்கும் ஆட்களேயாவார்கள். எலிகள் நலத் துக்குப் பூனைகள் பாடுபடுவதுபோல், சமுதாயத்தில் உயர்நிலையில் இருக்கும் பார்ப்பனர் களும், பொருளாதாரத்தில் சவுக்கியமாய் இருக்கும் பிள்ளைகளும் அவர்கள் வாழ்வு நலத்திற்கும் சுகத்திற்கும் உங்கள் பெயர்களைச் சொல்லிக்கொண்டு வாழ்கிறார்கள்.

கடவுளையும் மதத்தையும் ஒழிக்கத் தயாராக இல்லாதவனை உங்கள் கூட்டத்திற்குள் விடாதீர்கள். உங்கள் இளிச்சவாய்த்தனத்தினால் பொருளாதார சமுதாயப் பெயர்களைச் சொல்லிக்கொண்டு உங்களை ஏய்த்து வாழ்க்கை நடத்துகிறார்கள்.

[பெரம்பூரில், 4-3-1945-ல் சொற்பொழிவு–' குடிஅரசு '—10-3-1945]

சமதர்மம் என்பது என்ன?

(1) இது ஒரு சமுதாய அமைப்புத் திட்டம் ;

(2) இது தனிப்பட்ட இனத்திற்கோ, சாதிக்கோ, வகுப்புக்கோ மாத்திரம் ஏற்றதல்ல ;

(3) இதைப் புகுத்த வேண்டுமென்றால் நாட்டு எல்லாமக்களுக்கும் ஒன்றுபோல் புகுத்த வேண்டும் ;

(4) ஒரு சமுதாயத்திற்கு, ஒரு வகுப்புக்கு எல்லா சவுகரியமும் அமைப்பது சமதர்ம மாகாது ;

(5) பெரும்பான்மையோர் வாழ்வில் ஒவ்வொரு நிலைகளிலும் குறைபாட்டையும், குறைந்த அளவு தேவையற்றதுமான வாழ்வு வாழ்வதும் ; சிறுபான்மையோர்—சிறு கூட்டத்தினர்–சிறு வகுப்பினர் தேவைக்கு, தகுதிக்கு, அவசியத்திற்கு மேற்பட்டதாகவும், செல்வமும் பண்டமும் நாசப்படுத்தும்—நாசமாகும் தன்மையில் வாழ்வதுமாகியதான தன்மை தலைதூக்கி இருக்குமானால் அந்நாட்டை நரகவேதனை மிகுந்த நாடு என்றுதான் சொல்லவேண்டும்.

இந்நிலையில் வாழும், துன்பமடையும் மக்கள் பொறுமைசாலி மக்கள் அல்ல. மானமற்ற, கோழை, இழிமக்கள் என்றுதான் சொல்லவேண்டும். பாடுபட்டும் சராசரி வாழ்வுக்குப் போதியவசதி அற்றிருப்பது என்பதும் இதற்காகப் பல்லைக்காட்டிக் கெஞ்சுவதும் 'போராடுவதும்' மனிதன் தனது ஈனநிலையைக் காட்டிக்கொள்கிறான் என்பதுதான் பொருள். தர்மம் (பிச்சை) கொடுப்பவனிடம் பெறுவதும், அதற்காக அவனை வாழ்த்துவதும் ஒரு மனிதன் அவனது வாழ்வுக்காக அவனது மானத்தை (மனைவியை) அன்னியனுக்கு விட்டுக் கொடுத்துப் பயன் பெறுவதற்கே ஒப்பாகும்.

மனித வகுப்பில் ஒருவன் தன்னைக் கீழான வகுப்பினன் என்று எண்ணிக்கொண்டு வாழ்வதும், நாம் ஏழைகள், நமக்கு இதுதான் தகுதி என்று ஏழ்மை நிலையை ஏற்பதும், மனிதத் தன்மையும், மானமும் இல்லாமைக்கு நல்ல சாதனமேயாகும். இப்படிப்பட்ட இழிவானநிலை ஆறறிவுபடைத்த மனிதனுக்குள் புகுந்ததற்குக் காரணம் கடவுள், கர்மம், விதி, சகிப்புத் தன்மை என்பவைகளான விஷநோய்கள், தொத்துநோய்கள் ஆகும். இப்படிப்பட்ட நோய்களை உண்டாக்கும், பரவச்செய்யும் சாதனம்–மதம், கோவில் இவை சம்பந்தமான சாதனங்கள், பார்ப்பனர்கள், வைதிகக் காரியங்கள், பண்டிகை, உற்சவங்கள், மதத்தைப் பரிபாலிக்கும் ஆட்சிமுறைகள் ஆகியவைகளேயாகும்.

ஒரு மனிதன் தன் ஆயுளில் சமதர்மத்துக்காக, தாம் என்ன செய்தோம்? என்று சிந்தித்து—என்ன செய்யவேண்டுமென்று கருதுவானேயானால், அவன் மேற்காட்டிய சாதனங்களில் அவனவன் தகுதிக்குத் தகுந்த ஏதாவது ஒன்றையாவது அழிக்கவேண்டும். அப்போதுதான் அவன் தனது மானமற்ற நிலையை உணர்ந்தவனாகவாவது ஆவான்.

இந்தக் காரியத்தில் எவனுக்குக் கடும் துன்பமடையவோ, செல்வத்தையோ, வாழ்வையோ, உயிரையோ இழக்கநேரிடுகிறதோ, அவன் வீரன் ; உயிர்வாழும் சிரஞ்சீவி ஆவான்.

இக் கருத்துக்களைச் சமதர்ம சாத்திரம், சமதர்மம் என்று சொல்லலாம். ஆனால் சமதர்மத்தைப் பிரத்தியட்ச செயலில் காட்டும் காரியம் எதுவென்றால் மேடுகளைக் குறைக்க வேண்டும் ; அதாவது மேட்டைவெட்டிப் பள்ளத்தில்போடவேண்டும். சமநிலை—மட்டம் எந்த அளவிற்கு இருக்கலாம் என்று உத்தேசமாய்த் திட்டம் செய்துகொண்டு, அந்த மட்டத்திற்கு மேட்டைக் கரைக்கவேண்டும். மேடுகரைந்த அளவு உத்தேச மட்டத்திற்குப் போதவில்லை, கரையவில்லை என்று தோன்றினால், சரிமட்டமாக்குவதற்கு ஏற்ற, தேவையான திட்டங்களைத் தீட்டவேண்டும். இந்தத் திட்டங்களைத் தீட்டுவது என்பது பள்ளத்தை நிரவப் போதாத மண்ணை வெளியிலிருந்து கொண்டுவந்து கொட்டுவது

போலாகும். இதே இந்த வேலைசெய்யும் நேரத்திலேயே மக்களுக்குள் கடவுள், மதம், விதி, கர்மம், நம்பிக்கைகள் அற்றுப்போகும்படி செய்ய வேண்டும்.

அதற்கேற்ற ஆட்சிமுறை வகுக்கவேண்டும்; அதற்கேற்றவர்கள் ஆட்சிப்பீடத்தை அடையும்படி செய்யவேண்டும்.

['விடுதலை'-தலையங்கம்—18-1-1965]

12. கத்தி வைத்துக் கொள்ளுங்கள்

டில்லியில் காமராஜர் தங்கி இருந்த வீட்டுக்கு நெருப்பு வைத்து விட்டார்கள் பார்ப்பனர்கள்! ஏன் இப்படிச் சொல்லுகின்றேன் என்றால், நெருப்புவைத்த நாளில் சிருங்கேரி சங்கராச்சாரி, பூரி சங்கராச்சாரி முதலிய பார்ப்பன சமுதாயத் தலைவர்கள் டில்லியில் இருந்திருக்கிறார்கள்; தவிரவும், சந்நியாசிகள் (சாதுக்கள்) என்னும் பேரால் ஆயிரக்கணக்கான பார்ப்பனர்கள் பல பாகங்களிலுமிருந்து அன்று டில்லிக்கு வந்து இருக்கின்றார்கள். ஏன் இந்த சந்நியாசிகளைப் பார்ப்பனர்கள் என்கிறேன் என்றால், பார்ப்பனர் அல்லாத (சூத்திர) சாதிக்கு சந்நியாசம் கொள்ள உரிமை இல்லை. அவனைச் சாது வென்றோ, சந்நியாசி என்றோ சொல்லமாட்டார்கள்.

ஆகவே, அன்றையக் கலவரத்துக்கு, காலித்தனத்துக்கு நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்களும், தூண்டி விட்டவர்களும், ஆதாரமாக இருந்தவர்களும், தலைமை வகித்தவர்களும் பார்ப்பனர்கள் தவிர, மத தர்ம சம்பிரதாயங்களில் பார்ப்பனர்களுக்குச் சீடர்களாக இருந்தவர்களுந்தான் காரணஸ்தர்கள் ஆவார்கள் என்ற உறுதியால்தான் சொல்லுகிறேன். மற்றும் இராஜாஜி 'எலெக்ஷனுக்கு முன் காங்கிரஸ் ஆட்சியை ஒழித்தாக வேண்டும்' என்றும் 'எந்த அதர்மத்தைச் செய்தாவது ஒழித்தாக வேண்டும்' என்பதாகச் சொன்னதும், 'அஹிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை' என்பதும் ஆகப் பேசியதும் எனது உறுதிக்கு ஆதாரம் ஆகும்.

'பசு வதை தடுத்தல்' என்பது ஒரு பொய்யான காரணமேயாகும். உண்மைக் காரணம்—பார்ப்பனருடைய வருணாசிரம தர்மத்துக்குக் கேடு வந்துவிட்டது என்பது ஒன்றேதான். அந்தக் கேட்டை உண்டாக்கினது காமராஜர் என்கின்ற ஒரே காரணந்தான், காமராஜர் இருந்த வீட்டுக்கு நெருப்பு வைக்க முக்கியமான காரணமாகும்.

பார்ப்பானுக்கு மாட்டுக் கொலையைப்பற்றி அக்கறை இருக்கின்றதென்பது 'அப்துல்காதர் ஆடி அமாவாசையன்று தன் தகப்பனாருக்குத் தர்ப்பணம் கொடுத்தார்' என்பது போன்ற கதையேயாகும். இந்தச் சாதுக்கள், சங்கராச்சாரியார்கள், மற்றும் சர்வ பார்ப்பனர்களுக்கும் முன்னோர்களாகிய ரிஷிகள், முனிவர்கள், மகான்கள், தேவர்கள், இராமன், கிருஷ்ணன் முதலிய எல்லா ஆரியர்களுக்கும் மாடுதான் முக்கிய ஆகாரமாய் இருந்து இருக்கிறது. இவ்வுண்மை இன்றும் மனுதர்ம சாஸ்திரத்தில் பார்ப்பன தர்மமாய் இருந்துவருகின்றது.

உலகிலுள்ள மக்கள் 100-க்கு 100 பேர்கள் மாட்டின் பாலைக் குடிப்பதும், மாட்டின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்வதும், 100-க்கு 50 பேருக்கு மேலாக மாட்டு மாமிசம் உண்பதும் 100-க்கு 90 பேர்கள் வேறு பல மாமிசம் உண்பவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

இப்படிப்பட்ட மக்களுக்குப் பசுவதைத் தடுப்பு உணர்ச்சி ஏற்பட்டது என்றால், இதை எந்த மடையன்தான் உண்மை என்று நம்புவான்? எப்படி அது யோக்கியமான காரியமாய் இருக்க முடியும்?

காமராஜர் 'பார்ப்பனரை வதை செய்யும்' காரியத்தை உண்டாக்கியவர்; அதுதான் சமதர்மம் என்பது. காமராஜரின் 'சமதர்மம்' என்பதே 'பார்ப்பனக் கொலை தர்மம்' என்பதுதான் தத்துவார்த்தமாகும்.

'காமராஜர் சமதர்மம்' என்பது 100-க்கு 100 அமுலுக்கு வந்தால், 'பார்ப்பனியப் பூண்டு' உலகத்திலேயே இருக்க முடியாது.

'காமராஜர் சமதர்ம'த்தில் எல்லோருக்கும் படிப்பு; எல்லோருக்கும் வீடு; எல்லோருக்கும் வேலை; எல்லோருக்கும் உணவு; எல்லோருக்கும் சம அந்தஸ்து ஏற்பட்டு விடும். பிறகு இதில் மனித பேதம் எப்படி இருக்க முடியும்? மனித பேதந்தானே பார்ப்பனியம் என்பது!

ஆகவே, இதனால்தான் இந்தப் பார்ப்பனியக் கலவரத்துக்கும், காலித்தனத்திற்கும், பார்ப்பனக் குருமார்கள், பார்ப்பனச் சாதுக்கள், பார்ப்பன அதிகாரிகள், பார்ப்பனர்கள், பார்ப்பனப் பத்திரிகைக்காரர்கள், பார்ப்பன தர்மிகள் காரணமாக, காரியசித்தர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதோடு, பிர்லா, பஜாஜ், டாட்டா முதலிய செல்வர்கள் பலபேர்கள் கூட்டமும், மற்றும் சொல்லவேண்டுமானால் நந்தாக்கள் முதலிய மந்திரிகள் கூட்டமும் உடந்தையாயும், ஆதரவாளர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் சந்தேமில்லை.

நேரு தங்கைக்கும், மற்றும் நேரு சாதிக்கும் இந்தச் சமதர்மம் எதிர்க்கப்படவேண்டியதாகவே இருந்துவந்திருக்கின்றது. மற்றும், நந்தாக் கூட்டம் பெரிய அழுக்கு மூட்டைக் கூட்டமாகும். இந்தியப் பிரதமர் தேர்தலுக்கு நடந்த போட்டியில் ஒருவராக நிற்க முனைந்தவர் நந்தா; அதுவும் ஒரு பிரபல ஜோசியர் கட்டளைப்படி நின்றவர்; தேதி மாற்றத்தால் விலகிக் கொண்டவர்; இப்படிப்பட்ட அவர் எப்படிச் சமதர்மத்துக்கு உடந்தையாக இருக்கமுடியும்?

எனவே, டில்லிக் கலவரமும் காலித்தனமும் பார்ப்பனரின் மனுதர்மத்துக்கும், காமராஜரின் மனித (சம)தர்மத்திற்கும் ஏற்பட்டு நடந்து வரும் பலாத்காரப் போராட்டங்களில் ஒன்றேயாகும். எல்லாப் போராட்டங்களையும், கலவரத்தையும், காலித்தனங்களையும்விட நேற்று நடந்த டில்லிப் போராட்டத்தின் குறிப்பிடத்தகுந்த முக்கியம் என்னவென்றால், காமராஜர் தங்கி இருந்த வீட்டை காமராஜர் உள்ளே இருந்து தூங்கிக்கொண்டு இருக்கும்போது, நாலுபுறமும் சூழ்ந்துகொண்டு, நாலுபுறத்திலிருந்தும் நெருப்பு வைத்துக் கொளுத்தினதுதான் முக்கியமாகக் குறித்துக்கொள்ளத்தக்கதான சம்பவமாகும்.

இந்தச் செய்கை, காலிக்கூட்டத்தினரால் இலக்குவைத்துத் திட்டமிட்டு நடத்திய செய்கையாக இருக்கமுடியாது. பார்ப்பனச் சங்கராச்சாரியார்கள் பலர்களும், சாதுக்களும், ஆனந்தாக்களும், பிர்லாக்களும், பஜாஜ், டாட்டாக்களும், அழுக்குமூட்டை நந்தாக்களும் கூடி கலகம் நடத்திடத் திட்டமிட்டு, பல லட்ச ரூபாய் உதவி, பல அதிகாரிகளைச் சரிப்படுத்திக்கொண்டு நடத்திய சதித் திட்டமேயாகும்.

போலீஸ் 7-8 பேர்களைச் சுட்டது என்றால், ஏதோ அநாமதேயக் காலிகளைத்தான் சுட்டு இருக்குமேயொழிய, மேற்கண்ட கூட்டத்தினரில் ஒருவரைக்கூடச் சுடவில்லை. சுட நினைக்கவும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். நான் 3-ம்தேதி எழுதி, 4-ம்தேதி நகல்படுத்தி, 5-ம் தேதி சென்னைக்குப் பதிப்பிக்க அனுப்பிய 'விடுதலை' பெயர்போட்டு 6-ம் தேதி எழுதிய 'சாதிப் பிரிவுகள்' என்ற தலையங்கத்தில் நல்லவண்ணம் விளக்கிக் கூறி இருக்கின்றேன். அதில் 'இனி நடக்கவேண்டியது மந்திரிகளைக் கொல்லவேண்டியதுதான்' என்று எழுதி இருக்கின்றேன். ஆனால், டில்லிச் செய்கை மந்திரிகளைக் கொல்லுவதாய் இல்லை.

மந்திரிகள் பல மாகாணங்களில் இச் செய்கைகளுக்கு ஆதரவானவர்களாக இருக்க நேர்ந்துவிட்டதால் (காங்கிரஸ்) தலைவரையே கொல்லத் திட்டமிட்டு அவர் இருந்த வீட்டில் அவர் தூங்கிக்கொண்டு இருக்கும்போது வீட்டைச் சுற்றி 4 புறத்திலும் நெருப்பு வைக்கச் செய்து விட்டார்கள். காமராஜர் தங்கி இருந்த வீட்டிற்குப் புழக்கடைப் பக்கம் வெளியேற ஒரு வழி இல்லாதிருந்தால் காமராஜரின் கதி அன்று என்னவாகி இருக்கும்?

இனி, இது தேசத் தலைநகரில் மாத்திரம் அல்லாமல் மாகாணங்கள் முழுவதிலும் இக் கொலை, நெருப்பு வைத்தல் முதலிய காரியங்கள் பரவும் என்பதிலும் ஆட்சேபணை இல்லை. இன்று பல மாகாண ஆட்சித் தலைவர்கள், பார்ப்பன அடிமைகள், வருணாசிரமக் காவலர்கள், சமதர்ம விரோதிகள் என்று சொல்லும்படியாகவே அமைந்துவிட்டார்கள்! ஆதலால் இந்த 'மாடல் டில்லிக் காலித்தனங்கள்' இனி எல்லா மாகாணங்களிலும் ஏற்பட்டே தீரும்—பலவற்றில் ஏற்பட்டே விட்டதே!

அதாவது, பார்ப்பன எதிரிகள், பார்ப்பனர்களின் எதிர்க்கட்சித் தலைவர்கள் என்பவர்களைக் கொல்லவும், அவர்கள் வீட்டையும் நெருப்புவைத்துக் கொளுத்தவுமான நிலை ஏற்படலாம். அவற்றிற்கு அரசாங்கப் பாதுகாப்பும் அதற்கு ஏற்ற அளவில்தான் இருந்துவரும். எதிர்க்கட்சிக்காரர்கள் (பார்ப்பன அடிமைக் கட்சிக்காரர்கள்) இப்போதே அடிக்கல் நாட்டிக்கொண்டு விட்டார்கள். அதுதான் 'அண்ணாதுரையைத் தாக்கினார்கள்' என்பது போன்ற கற்பனைகளாகும்.

தமிழ்நாட்டு ஆட்சி அமைப்பை மாற்றாவிட்டால் காமராஜருக்குப் பாதுகாப்பு ஏற்பட்டுவிடுமே என்றுதான் கருதுகின்றனர். என்னைப்பற்றிக் கவலையில்லை. எனக்கு 'ஒரு கால் நாட்டிலும் ஒரு கால் சுடுகாட்டிலும்' என்ற பருவத்தில் இருக்கின்றேன். ஆதலால் என்னைப்பற்றிக் கவலை இல்லை.

காமராஜர் இன்று இந்த நாட்டுக்கு இரட்சகராக இருக்கிறார்; அதனால்தான் பார்ப்பனர்களும் பார்ப்பன அடிமைகளும் காமராஜர்மீது கண்வைத்து இருக்கின்றார்கள்; அவர் இருந்த வீட்டைக் கொளுத்தினார்கள். காமராஜருக்கு ஏதாவது ஏற்பட்டால் அவருக்கு ஒன்றும் நட்டம் இல்லை; அவரது தாயார்கூட மயக்கம் வரும்வரை அழுவார்கள்; அவ்வளவுதான். பிறகு நம்நாடு வருணாசிரம தர்ம நாடாகிவிடும்! அது மாத்திரமல்ல; இன்றையப் பார்ப்பனக் கூலிகளான காங்கிரஸ் எதிர்க் கட்சிகளுக்கு, தலைவர்களுக்கு, பலர்களுக்கும் நாதியற்ற நிலை ஏற்பட்டுவிடும். 'பழைய கறுப்பர்'களாகி விடுவார்கள். பிறகு நாடு என்ன ஆகுமோ? எப்படி ஆகுமோ? எப்படியோ இருக்கட்டும். இனி காமராஜர் தக்க பாதுகாப்புடன் இருக்கவேண்டும்.

பார்ப்பன எதிர்ப்புக் கட்சித் தோழர்கள் ஒவ்வொருவரும் 6 அங்குல நீளத்திற்குக் குறையாத கத்தி ஒன்றைத் தற்காப்புக்காக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். கண்டிப்பாக சீக்கியர்களது மத தர்மம்போல், கண்டிப்பாகக் கத்தி வைத்துக்கொண்டிருக்க வேண்டும். இந்தக் காரியம் காமராஜரைப் பாதுகாக்க அல்ல. நம் நாட்டில் உள்ள 3 கோடி 'கீழ்சாதி' (சூத்திர) மக்களை இழிவில் இருந்தும் அடிமை நிலையிலிருந்தும் 'படுகுழிப் பள்ளத்தில்' இருந்தும் வெளியாக்கிப் பாதுகாக்கவேயாகும்.

நமது சரித்திரம் தெரிய, இந்த நாட்டில் காமராஜரைப்போல ஓர் இரட்சகர் இதுவரை தோன்றியதே இல்லை. புராணங்களில் இரண்யர்கள், இராவணர்கள் தோற்றுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் கொல்லப்பட்டதாக—பிரகலாதன், அனுமான், விபீடணன்களைக்கொண்டு அழிக்கப்பட்டதாக எழுதிப் புராணங்களை முடித்திருக்கின்றார்கள்.

அந்தக் காலம் அப்படி; ஆனால் இந்தக் காலம் அதுபோன்ற புராண-சரித்திர காலம் அல்ல; உண்மை பிரத்யேக நடப்புக் காலம்; இதில் அந்த வித்தைகளை பலிக்கவிடக்கூடாது.

கத்தி வைத்துக்கொள்ளுங்கள்! காமராஜரைப் பாதுகாருங்கள்! மறுபடியும் எழுத இடம் வைத்துக்கொள்ளாதீர்கள். கண்டிப்பாய்க் கத்தி வைத்துக்கொள்ளுங்கள்!

['விடுதலை'—அறிக்கை—15-11-1966]

13. மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும்

ஜனநாயகம் என்றால் மக்களாட்சி என்பதுதான் உண்மையான கருத்து. அப்படிப் பட்ட ஜனநாயகத்திற்கு மக்கள் அறிவாளிகளாகவும், ஓரளவிற்காவது யோக்கியர்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

நமது ஜனநாயக மக்கள் இயற்கையில் மூடநம்பிக்கையுடைய காட்டுமிராண்டி மக்களென்பதோடு அல்லாமல் கல்வி—எழுதப் படிக்கவே அறியாத நிலையில் தற்குறிகளாக, பகுத்தறிவென்பதே இன்னதென்றறியாத பாமர மக்களாக ஏராளமான பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குப் படிப்பில்லை என்பது மாத்திரமல்லாமல், பிடிவாத மூடநம்பிக்கையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மற்றபடி மக்கள், ஒழுக்கமென்பது மதம், அரசியல் காரணங்களால் ஒழுக்கத்தைப் பற்றிய கவலையேயில்லாமல் எந்தக் காரணத்தைக் கொண்டாவது பதவிபெறவேண்டும் என்பதையும், வயிறுவளர்க்க வேண்டுமென்பதையும் மூச்சாகக் கொண்டவர்களாக இருக் கிறார்கள். மக்களுக்கு, 'வயிறுவளர்ப்பது, காசு சம்பாதிப்பதுதான் ஜனநாயகம்' என்பது கொள்கையாக இருந்துவருகிறது.

இப்படிப்பட்ட இவர்களிடையில் சமதர்மம் என்றால், அரசாங்கமும், மக்களும் சிறிதும் சுயநலமில்லாமல் எல்லாத்துறையிலும், எல்லா மக்களுக்கு மொத்த சமநலம் ஏற்பட உழைக்க வேண்டியது என்கிற குணம் எப்படி ஏற்படமுடியும்?

ஒரே மனிதன் வைத்தியனாகவும், புரோகிதனாகவும் இருக்க நேர்ந்தால் அவனுக்கு வியாதியஸ்தனைப் பிழைக்கவைப்பதைவிடச் சாகடிப்பதில் தானே ஆசையிருக்கும்? ஏனென்றால், வியாதியஸ்தன் செத்தால் பசு தானம், கருமம், கருமாதி காரியம், திதி, திவசம் முதலாகிய காரியங்களில் செத்த விநாடி முதல் நீண்ட நாட்கள் வரை பயனடைய முடியும்.

வியாதியஸ்தன் குணம் பெற்றால் வைத்தியனுக்கு, வியாதி குணமாகித் 'தலைக்குத் தண்ணீர் ஊற்றும்போது' கொடுக்கப்படும் இரண்டு ரூபாயோ, நான்கு ரூபாயோ வரும்படி யோடு விஷயம் முடிவுபெற்றுவிடும்.

ஆதலால், பதவி வேட்டைக்காரர்களும் பணவேட்டைக்காரர்களும், ஒரு நாளும் சம தர்மத்தை விரும்பமாட்டார்கள்.

மக்களைச் சமதர்மத்துக்குப் பக்குவப்படுத்தும் பணிபற்றிச் சிந்திக்கத் தக்கதாகும் என்பது என் கருத்தானாலும்—அதுவும் அவசரமான காரியமென்றே சொல்லுவேன்.

மூடநம்பிக்கை என்பவைகளில் முக்கியமானவை மத நம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் முதன்மையானவையாகும். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஒரு மனிதன் சிவனையோ, விஷ்ணுவையோ, இராமனையோ, கிருஷ்ணனையோ, கந்த னையோ, சுப்பனையோ இருப்பதாகவும், அவர்களைக் கடவுளர்களாகவும் நம்பிக் கொண்டு சாம்பலையோ, மண்ணையோ நெற்றியில் பட்டையடித்துக் கொள்வதன் மூலம் பக்தி செலுத்திக் கொண்டு, 'நான் சமதர்மவாதி' என்று சொல்லுவானேயானால் அவன் உண்மையான, யோக்கியமான சமதர்மவாதியாக 'இருக்க முடியுமா? கொள்ள முடியுமா? முடியும் என்று கருதுகிறவர்கள் அறிவாளிகளாக இருக்க முடியுமா?

ஒரு மனிதன்—முதலாவதாகத் தனது நெற்றியைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் படியான அறிவில்லாத ஒரு மனிதன்—எப்படிச் சமதர்மத்திற்கேற்ற அறிவுடையவனாகக் கருதப்பட முடியும்? அறிவின்மை என்பதைக் காட்டுவதுதானே நெற்றிக்குறி? நெற்றிக் குறி யென்றால் 'மூளைக்குறி' என்றுதானே பொருள்?

நான் நெற்றிக்குறி என்று சொல்லுவதில் குறி மாத்திரமல்ல; அவற்றுள் அடங்கி யிருக்கும் தத்துவங்களையே குறி கொண்டு சொல்லுகிறேன். அதாவது, மத சம்பந்தமான முட்டாள்தனம், மூடநம்பிக்கைகள் யாவற்றையும் கசக்கிப் பிழிந்து, காய்ச்சிச் சுண்ட வைத்து இறக்கிய சத்துதான் நெற்றிக்குறி! அதற்கு வேறு பொருள் என்ன சொல்ல முடியும்?

சமதர்மம் பேசும் காங்கிரசுக்காரர்களோ, மற்ற கட்சிக்காரர்களோ, 'மதக் கருத் தென்ன? நெற்றிக்குறிக் கருத்தென்ன? இதிகாச தர்மக் கருத்தென்ன?' என்பதைச் சிந்திக்கிறார்களா?

நான் ஒரு உண்மைச் சமதர்மவாதியென்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன். என் கழகத்தாரும், என்னை உண்மையாய்ப் பின்பற்றுகிறவருங்கூட சமதர்மப் போக்குக் காரர்கள் என்றே சொல்லுவேன். எங்கள் எல்லோருடைய நெற்றியும் சுத்தமாக இருக்கும்.

ஆகவே, உண்மையான சமதர்மவாதிகள் தன்னை—தன் அறிவை, தன் நெற்றியைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

['விடுதலை'-தலையங்கம்— 15-12-1969]

14. நாத்திகமும் சமதர்மமும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னை நாத்திகன் என்று சொல்லுகிறவர்கள் நாத்திகன் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்லுகிறார்களோ, அந்த அர்த்தத்தில் நான் நாத்திகன்தான் என்பதை வலியுறுத்திச் சொல்லுகின்றேன். நாத்திகத்திற்குப் பயந்தவனானால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும், சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் நாத்திகத்தினால்தான் முடியும். நாத்திகம் என்பதே சமதர்மம் என்று பெயர். அதனால் ரஷியாவையும் நாத்திக ஆட்சி என்கிறார்கள். புத்தரையும் நாத்திகர் என்பதற்குக் காரணம், அவர் சமதர்மக் கொள்கையைப் பரப்ப முயற்சித்ததால்தான். நாத்திகம் என்பது சமதர்மக் கொள்கை மாத்திரம் அல்ல; சீர்திருத்தம்—அதாவது, ஏதாவது பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும்—ஏன், எவ்வித சீர்திருத்தத்தையுமே நாத்திகம் என்றுதான் யதாபிரியர்கள் சொல்லித் திரிவார்கள். எங்கு எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடம் இல்லையோ அங்கு எல்லாம் இருந்துதான் நாத்திகம் முளைக்கின்றது. கிறிஸ்துவையும் முகமது நபியையும்கூட நாத்திகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கும் அவர்களது சமதர்மமும், சீர்திருத்தமும்தான் காரணமாகும். துருக்கியில் பாட்சாவும், ஆப்கானிஸ்தானில் அமீரும் நாத்திகர்கள் என்று அழைக்கப்பட்ட தற்கும் அவர்களது சீர்திருத்தம்தான் காரணம். ஏனென்றால், இப்பொழுது வழக்கத்தில் இருக்கும் கொள்கைகளும், பழக்கங்களும்—எல்லாம் கடவுள் செய்ததென்றும், கடவுள் கட்டளை என்றும், கடவுளால் சொல்லப்பட்ட வேதங்கள் சாஸ்திரங்கள் ஆகியவைகளின் கட்டளை என்றுமேதான் யதாப்பிரியர்கள் சொல்லுகின்றார்கள். ஆகவே, நாம் இப்பொழுது எதை எதை மாற்றவேண்டும் என்கின்றோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ தனது தூதர்களையோ செய்யச் சொன்ன தாகவுமே சொல்லப்படுவதால், அவைகளைத் திருத்தவோ, அழிக்கவோ புறப்படுவது கடவுள் கட்டளையை மீறின—அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததே ஆகும்.

உதாரணமாக, மக்களில் நான்கு சாதி, கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொல்லப்படுகையில், மேற்படி சாதி ஒழியவேண்டுமென்றால், அவன் கண்டிப்பாகக் கடவுளை மறுத்தோ, அலட்சியம் செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும், மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டவை என்று சொல்லப்படுகையில் அம் மத வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்றும் மதக் கொள்கைகள் மாற்றப்படவேண்டும் என்றும் சொல்லும்போது, அப்படிச் சொல்லுபவன் அந்தந்தக் கடவுள்களை, கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத் தன்மை பொருந்தினவர்களை அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான் கிறிஸ்தவர் அல்லாதவர் 'அஞ்ஞானி' என்றும், முகமதியரல்லாதவர் 'காபர்' என்றும், இந்து அல்லாதவர் 'மிலேச்சர்' என்றும் சொல்லப்படுகின்றனர்.

அன்றியும், கேவலம் புளுகும், ஆபாசமும் நிறைந்த புராணங்களை மறுப்பதே—இந்து மதக் கொள்கைப்படி நாத்திகம் என்றும் சொல்லப்படும்போது, சாதியையும் கர்மத்தையும் மறுப்பதை ஏன் நாத்திகம் என்று சொல்லமாட்டார்கள்?

சாதி, உயர்வு–தாழ்வு, செல்வம், தரித்திரம், எஜமான் அடிமை ஆகியவைகளுக்குக் கடவுளும் கர்மமும்தான் காரணம் என்று சொல்வதானால், பிறகு மக்களுக்கு விடுதலையும் முன்னேற்றமும் எங்கே இருக்கின்றன? கடவுளையும், கர்மத்தையும் ஒழித்தாலொழிய அதற்காக மனிதன் எப்படிப் பாடுபடமுடியும்? மேடும் பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமே ஆகும். மனிதனுக்கு முகத்தில், தலையில் மயிர் முளைப்பது கடவுள் செயலானால், சவரம் செய்துகொள்வது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும்—அதாவது ஓரளவுக்கு நாத்திகமான காரியமும் ஆகும். பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதும் நாத்திகமேயாகும். ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது 'கர்மத்திற்காக'ப் பட்டினி போட்டிருக்கும்போது நாம் அவனுக்குச் சோறு போடுவது கடவுளுக்கு விரோதமான காரியமேயாகும். அதாவது, கடவுளை நம்பாத—கடவுள் செயலை இலட்சியம் செய்யாத தன்மையே ஆகும். இப்படியே பார்த்துக்கொண்டு போனால் உலகத்தில் ஆத்திகன் ஒருவனும் இருக்கமுடியாது. ஆதலால், நம்மைப் பொறுத்த வரையில் நாம் பல மாறுதல் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாத்திகமேயாகும். நாத்திகமும் சாஸ்திர விரோதமும், தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்யமுடியவே முடியாது.

நமது நாட்டினர்களே ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார்கள். பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக்கொள்வதால் தினமும் ஏய்த்துக்கொண்டே வருகிறார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச் செய்து, 'நீங்கள் ஏழைகளாய், தரித்திரர்களாய் இருப்பதற்குக் கடவுள் செயல் காரணமல்ல; உங்கள் முட்டாள்தனம் தான் காரணம். ஆதலால், நீங்கள் கடவுள் செயலை இலட்சியம் செய்யாதீர்கள்' என்று சொன்னால்தான், செல்வந்தர்களின் அக்கிரமங்களைப் பாமர மக்கள் அறியக்கூடும். அப்பொழுது கடவுள் செயலையும்—அதிக மூடர்களிடம் கடவுளையும் மறுத்துத்தான் ஆகவேண்டும்.

இந்த நாட்டில் ஒருபுறம் ஏழைகள் பட்டினி கிடக்க; ஒருபுறம் சிலர் கோடீஸ்வரராய்க் கொண்டு தலைகொழுத்து டம்பாச்சாரியாய்த் திரிவது கடவுள் செயல் என்றால், இந்த நாட்டுச் செல்வத்தை வெளியான் சுரண்டிக்கொண்டு போவதும், அவன் இங்கு ஆடம்பரமாய் வாழ்வதும் கடவுள் செயல் என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால், கடவுள் செயல்கள் ஒரு காரியத்திற்கும் மற்றொரு காரியத்திற்கும் மாறுபடுவது போலவே—தர்மமும், நீதியும்கூட ஒரு சமயத்திற்கும் மற்றொரு சமயத்திற்கும் மாறுபடவேண்டியதே ஆகும். ஒரு காலத்தில் அரசர்கள் விஷ்ணு அம்சமாய் இருந்தார்கள். ஆனால், இப்போது அரசர்கள் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அது போலவே, செல்வவான்கள் இந்தக் காலத்தில், 'இலட்சுமி புத்திரர்களாய்' இருக்கிறார்கள். இன்னொரு

காலத்தில், அவர்கள் 'பெருத்த வஞ்சகப் பகற்கொள்ளைக்காரர்கள்' என்று அழைக்கப் பட்டு, பலாத்காரத்தில் அவர்களிடம் இருக்கும் செல்வங்களைப் பிடுங்கிக் கொள்ளப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். உதாரணமாக, மனுதர்ம சாஸ்திரத்தில் 'சூத்திரன் பொருள் சேர்த்து வைத்து இருந்தால், பார்ப்பனன் அதைப் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாம்' என்று இருக்கின்றதை இன்னும் பார்க்கின்றோம். கொஞ்ச காலத்திற்கு முன் இது அமுலிலும் இருந்து இருக்கிறதாம். இனிக் கொஞ்ச நாள் போனால் பார்ப்பான் பணம் வைத்து இருந்தால் பார்ப்பனரல்லாதார் பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொள்ளலாம் என்று தர்மம் ஏற்பட்டாலும் ஏற்படும். அப்படி ஏற்படுவது முன்னைய வழக்கத்திற்கு விரோதம் என்பதாக யாரும் சொல்லமுடியாது. காலம் போகப் போக, நேரில் உழுது பயிர் செய்ய முடியாதவனுக்குப் பூமி இருக்க வேண்டியதில்லை என்றும், அப்படி இருந்தாலும் சர்க்காருக்கு வரி கொடுப்பது போல் ஒரு சிறு அளவுதான் பாத்தியமுண்டே யொழிய, இப்பொழுது இருப்பதுபோல் உழுகின்றவன் தன் வயிற்றுக்கு மாத்திரம் எடுத்துக்கொண்டு —ஏன், சில சமயங்களில் அதற்கும் போதாமலும் இருக்க, பூமிக்கு உடையவனுக்கு பெரும் பாகம் கொடுப்பது என்கின்ற வழக்கம் அடிபட்டாலும் அடிபடலாம். அதுபோலவே, இன்று கோயில் கட்டுவது தர்மமாக இருக்கிறது. ஆனால், பிற்காலத்தில் கோவிலை இடித்து விக்கிரகங்களை உடைத்துப் பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவதும் தர்மம் என்று ஆகலாம். இதுபோலவே, அனேக விஷயங்களில் இன்றைய 'தர்மம்' நாளைய 'அதர்மம்' ஆகி, தலைகீழாக மாறக்கூடும். அப்பேர்ப்பட்ட நிலைமை வரும்போது, இன்றைய நிலைமை எல்லாம் கடவுள் கட்டளை என்றால் அதை மாற்ற முற் படுகிறவன் கடவுள் கட்டளையை மறுக்க—ஏன் கடவுளையே மறுக்கத் துணியவேண்டும். கடவுளை மறுக்கத் துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன்றையக் கொடுமைகளை ஒழிக்க முடியும். அப்படிக்கில்லாமல், கடவுளுக்கும் மோட்சத்திற்கும் பயந்து கொண்டு இருப்பானானால் ஒரு காரியமும் செய்யமுடியாது என்பது உறுதி.

ஏனெனில், அரசியல், சமூக இயல், பொருளாதார இயல் ஆகியவைகளில் உள்ள இன்றையக் கொடுமையான நிலையும் முட்டாள்தனமான நிலையும், அயோக்கியத்தனமான நிலையும் எல்லாம் கடவுள் கட்டளையாலும், மோட்ச சாதனங்களாலும், சாஸ்திர தர்மங் களாலுமே ஏற்பட்டவைகளாகும். ஆகையால்தான், அவ்விஷயங்களில் நான் அவ்வளவு உறுதியாய் இருக்கிறேன்.

[திருச்சியில், 1-9-1930-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 7-9-1930]

சமதர்மம் என்கின்ற வார்த்தை—ஒரு பொது வார்த்தை. இது ஆங்கிலத்தில் உள்ள 'சோஷியலிசம்' என்னும் வார்த்தைக்குத் தமிழ் மொழி பெயர்ப்பாகக் கையாளப்படுகிறது என்றாலும், சோஷியலிசம் என்ற வார்த்தையே தேசத்துக்கு ஒருவிதமான அர்த்தத்தில் பிரயோகிக்கப்படுகிறது. அனேமாக அவ்வார்த்தை அந்தந்தத் தேச நிலைமைக்கும், தகுதிக்கும், சவுகரியத்துக்கும், அரசாங்கத்துக்கும் தக்கபடிதான் பிரயோகிக்கப்படுகிறது. சில இடங்களில் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டும், சில இடங்களில் சட்டதிட்டங்களுக்கு மீறினதாயும் உள்ள பொருள்களுடன் சமதர்மம் என்கின்ற வார்த்தை பிரயோகிக்கப் படுகிறது.

ஆகவே, சோஷியலிசத்துக்கு, இதுதான் அர்த்தம் என்று வரையறுக்க, அவ் வார்த்தையில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

சில இடங்களில் சோஷியலிசத்திற்கும் பொது உடைமை என்பதற்கும் பேதமே இல்லாமல் அர்த்தம் இருந்து வருகிறது. சில இடங்களில் வெகு சாதாரண விஷயத்துக்கும் அப் பெயர் இருந்து வருகிறது. சில இடங்களில் பொது உடைமை வேறாகவும் சமதர்மம் வேறாகவும் இருந்து வருகின்றன.

இங்கு, 'சமதர்மம்' என்கின்ற வார்த்தைக்குச் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் மக்கள் உயர்வு தாழ்வு இல்லாமல் சமத்துவமாய் (பேதமின்றி) வாழ வேண்டும் என்பதையே, சமதர்மம் என்று நான் கருத்துக் கொண்டு, சமதர்மம் என்கின்ற வார்த்தையை இங்கு பிரயோகிக்கின்றேன்.

ஏனெனில், மற்ற நாட்டின் சமூகத் துறையில் நமது நாட்டில் உள்ளது போன்ற உயர்வு தாழ்வு பேதாபேதம் இல்லை.

பொருளாதார சம்பந்தமே பெரிதும் மற்ற நாடுகளில் இருக்கின்றது. நமது நாட்டுச் சமுதாய உயர்வு தாழ்வானது, பிறவியிலேயே வகுக்கப்பட்டு, அதை மதத்தோடு பொருத்தி, அதற்கு அரசியல் பாதுகாப்பளிக்கப்பட்டு இருந்து வருகிறது. அரசியலில் உள்ள பாது காப்பை உடைப்பது என்று முதலில் ஆரம்பித்தால், அதற்கு நம் நாட்டு மக்கள்—அதுவும் பொருளாதாரத்தால் மிகவும் நொந்து ஏழ்மை நிலையில் இருக்கும் மத நம்பிக்கை கொண்ட பாமர மக்கள் என்பவர்களே சிறிது கூட ஒப்பமாட்டார்கள். ஒப்பமாட்டார்கள் என்பதோடு மாத்திரம் அல்லாமல், அவர்களே நமக்கு எதிரிகளாயும் இருப்பார்கள். ஏனெனில், பிறவி காரணமாய் உள்ள உயர்வு—தாழ்வு, மதத்தில் சம்பந்தப்பட்டு, அம் மதம் பாமர மக்கள் இரத்தத்தில் ஊறி இருக்கிறபடியாலும், அதுவே அரசியலுக்கு ஆதாரமாய் இருப்பதாலும், அதை மாற்றாமல் அதை மாற்றுவதற்குத் தகுந்த முயற்சி எடுக்காமல் மேல்நாட்டுச் சமதர்மம் பேசுவது, பாலைவனத்தில் இருந்து சத்தம் போடுவது போலவே ஆகும்.

முதலில் சமுதாயத்தில், பிறவியின் பெயரால் உள்ள பேதங்களை ஒழித்தாக வேண்டும். அதுவே இந்நாட்டுச் சமதர்மத்துக்கு முதற்படியாகும். அதனாலேயே பொருளாதார சமதர்மமே மனித சமூக சாந்திக்கு மருந்து என்று கருதி இருக்கும் நான், சமுதாயத்தில் வாழ்க்கையில் சமதர்மத்தை—அபேத வாதத்தை முக்கியமாய் வலியுறுத்தி வருகிறேன்.

நிற்க, பொதுவாகவே சமதர்மம் என்பது எந்த அர்த்தத்தில் இருந்தாலும்—சமுதாயம் முக்கியமானாலும் பொருளாதாரம் முக்கியமானாலும்—அதற்குக் கடவுள் உணர்ச்சி, மத நம்பிக்கை என்பவைகள் எதிராகவே இருந்து வந்திருக்கின்றன. ஆதலால், எந்தச் சமதர்ம வாதிக்கும் இதைப் பொறுத்த வரையில் அபிப்பிராய பேதம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த வேலை அபிப்பிராய பேதமில்லாமல் நடந்துதான் தீரும்.

நம் நாட்டிற்கு இன்று முதலில் சாதி பேதங்கள் ஒழிந்து, மக்கள் யாவரும் பிறவியில் சமம் என்கிறதான 'சமதர்ம' முயற்சியே முதலில் செய்ய வேண்டியதாயிருக்கிறது. சாதி, பேதம், பிரிவு ஆகியவை ஒழிந்தால்தான் சமூக வாழ்க்கையில் சமதர்மமாய் வாழமுடியும். பொருளாதார பேதத்துக்கும் சமூக சாதி பேத முறைதான் பெரிதும் காரணமாய்—காவலாய் இருந்துவந்திருக்கிறது. இன்றும் பெருவாரியான மக்களுக்குச் சாதி பேதமே பொருளாதார சமதர்ம முறையை நினைக்கக்கூட இடம் தராமல் அடக்கி வருகின்றதுடன் பொருளாதார பேதத்துக்கு இடமளித்தும் வருகிறது.

எந்தக் காரணத்தைக் கொண்டாவது இன்று நாட்டில் உள்ள பொருள்களையெல்லாம் எல்லா மக்களுக்கும் சமமாக்கி வைத்துவிட்டாலும், நமது சாதி முறைகள் மறுபடியும் வெகு சீக்கிரத்தில் பழைய நிலைமையைத்தான் உண்டுபண்ணிவிடும். மற்ற நாட்டு மக்களுக்குப் பொருளாதார சமதர்ம உணர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம் எல்லாம்—அவர்களில் பிறவியில் கீழ், மேல் நிலை இருக்கும்படியான சாதி பேதம் இல்லாததேயாகும். நமது மக்களுக்கு வெறும் பொருளாதாரச் சமதர்மம் சுலபத்தில் புரியவே புரியாது. 'சாதி பேதம்' ஒழிப்பது என்ற சமதர்மத்தைச் சொல்லி, பொருளாதார சமதர்மம் சொன்னால்தான் உண்மையாகக் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு உணர்ச்சி உண்டாக்க முடிகின்றது.

ஆகவே, சமூக சமதர்மம் ஏற்பட ஆசைப்படுகிற நாம்—சாதி பேதத்தை ஒழிக்க வேண்டும் என்று கருதுகின்ற நாம்—பொருளாதார சமதர்மத்துக்காகவே பிறவி சாதியை

ஒழிக்க வேண்டியிருக்கின்றது என்றும், பிறவி சாதியை ஒழிப்பதற்கு அதற்கு ஆதாரமான மதத்தையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம். மதத்தைப் பற்றியோ மதத்தில் உள்ள ஏதாவது ஒரு கொள்கையைப் பற்றியோ பேசினாலும், அதை ஒழிக்க வேண்டும் என்று சொன்னாலும் அதை நாத்திகம் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால்தான் சமதர்மம் பேசுகின்ற யாரும் கண்டிப்பாய் நாத்திகர்களாகியே தீரவேண்டி இருக்கின்றது.

நாத்திகனாவதற்குக் கடவுள் இல்லை என்றுகூடச் சொல்ல வேண்டியதில்லை. மதக் கொள்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்து பேசினாலே போதுமானதாக இருக்கின்றது.

சாதிகள் கடவுளால் உண்டாக்கப்பட்டதாக—கடவுளால் கற்பிக்கப்பட்டதாக—கடவுளே சொன்னார் என்பதாக மத சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றது.

அந்த மத சாஸ்திரங்கள் வேதமாகவும், வேதம் போன்றதாகவும் கருதப்படுகின்றன. உதாரணமாக, பகவத் கீதை என்பது இந்துக்கள் என்பவர்களுக்கு மிகப் புனிதமானதும் மேலானதுமான புத்தகம் என்று பெயர்.

முகமதியர்கள் குரானை மதிப்பதைவிட, கிறிஸ்தவர்கள் பைபிளை மதிப்பதைவிட, கீதையை அதிக பக்தியாய் அனேக இந்துக்கள் மதித்து இருக்கிறார்கள். ஆனால், அப் புத்தகத்தில் நான்கு சாதிகளும், நான்கு பிரிவான சாதிப் பெயர்களும் அதற்குத் தனித் தனி வேலைக் கிரமங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. கீதை என்றாலே ‘பகவான் வாக்கு’ என்று அர்த்தம்.

சாதி ஒழியவேண்டும் என்று பேசுகிறவர்களில் கூட 100-க்கு 99¾ பேர்கள்,'கீதையை பகவான் வாக்கு என்று நம்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

சாதி வித்தியாசம், உயர்வு—தாழ்வு ஆகியவைகளைப் பற்றிக் கண்ணீர் விட்ட பெரியார் காந்தியார்கூட, கீதைக்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்டிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்.

இந்நிலையில் இப்படிப்பட்ட மக்களால் சாதிப் பிரிவுகளுக்கு உள்ள கீழ்—மேல் நிலைகளை எப்படி ஒழிக்கமுடியும்? கீதை முறை தவறு என்றோ, கீதை கடவுள் சொன்னது அல்ல என்றோ, அப்படித்தான் கடவுளே சொல்லியிருந்தாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை என்றோ சொல்லத் துணியாவிட்டால்—சொல்லத் தைரியம் இல்லாத மக்கள் யாவரையும் அந்தப்படி சொல்லத் தயார்செய்யாவிட்டால், சாதிப் பிரிவு, சாதி வித்தியாசம் ஆகியவை எப்படி ஒழியும்? ஆகவே, இந்தப்படி சொல்லும்படியான ஒருவன் கீதையையும், கிருஷ்ணனையும் நம்பும் மக்களால் நாத்திகன் என்று சொல்லப்படாமல் இருக்க முடியாது.

ஆதலால், நாத்திகனாகவோ, நாத்திகன் ஆவதற்குத் தயாராகவோ, நாத்திகன் என்று அழைக்கப்படுவதற்குக் கலங்காதவனாகவோ இருந்தாலொழிய ஒருவன் சமதர்மம் பேச முடியவே முடியாது.

இதுமாத்திரம் அல்லாமல், சர்வமும் கடவுள் செயல் என்றும், மனித சமூகத்தில் பிறவி மூலமாகவும் வாழ்வு மூலமாகவும் இன்று இருந்துவரும் பிரிவுக்கும் பேதத்துக்கும் உயர்வு தாழ்வுக்கும் கடவுளே பொறுப்பாளி என்றும், கடவுள் சித்தத்தினால்தான் அவற்றில் ஒரு சிறு மாற்றமும் செய்யமுடியும் என்றும் சொல்லப்படுமானால் அதை நம்பாமல் இருப்பது நாத்திகமானால் கண்டிப்பாக ஒவ்வொரு மனிதனும் நாத்திகனாகத்தான் வேண்டும்.

ஏனெனில், செல்வவான்களிடம் இருக்கும் செல்வமும் பார்ப்பான் பாராட்டிக் கொள்ளும் உயர்ந்த சாதித் தத்துவமும் கடவுள் கொடுத்தது என்றும், கடவுள் சித்தத்தால் ஏற்பட்டது என்றும் சொல்லப்படுமானால், அந்தக் கடவுளை யார்தான் ஏற்றுக் கொள்ள முடியும்?

அதை யார்தான் நிலைத்திருக்க விட்டுக்கொண்டிருக்க முடியும்? எந்த மாதிரியான மூடக் கடவுள்களும், எந்த மாதிரியான அயோக்கியக் கடவுளும் மனிதரில் ஒருவரை மேல் சாதியாக்கி, பாடுபடாமல் ஊரார் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்படிக்கும், மற்றொருவரைக் கீழ்சாதியாக்கி, பாடுபட்டுச் சோம்பேறிகளுக்கு அழுதுவிட்டுப் பட்டினியாய், நோயாய், கட்டக் கந்தையற்று, இருக்க இடமற்றுத் திரியும்படியும் சொல்லி இருக்கவே இருக்காது.

இந்தக் காரியங்களுக்குக் கடவுளைப் பொருத்துகின்றவர்களை யோக்கியர்கள் என்றோ, அறிவாளிகள் என்றோ யாராலும் சொல்லமுடியாது.

ஊரார் உழைப்பைக் கொள்ளை கொள்ளாமல் எவனும் பணக்காரனாக முடியாது.

இங்கு நாட்டுக்கோட்டையார்கள் 10 லட்சம், 20 லட்சம் கோடிக்கணக்கான ரூபாய் சொத்து உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தப் பணம் ஏது? இவர்கள் படும் பாட்டிற்கும், இவர்கள் அனுசரிக்கும் முறைக்கும், இவர்கள் நடந்துகொள்ளும் மாதிரிக்கும், எந்தக் கடவுளாவது இவ்வளவு பணம் கொடுத்திருக்க முடியுமா?

ஏதோ இதெல்லாம், அவரவர் பிரயத்தனத்தினால், தொழில் முறையினால், மன வலிமையினால், சம்பவங்களால் ஏற்பட்டதென்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?

இவ்வளவு பணம் இவர்களுக்குச் சேருவதற்கு ஆதாரமாய் இருந்த முறையை யார் தான் சரியானமுறை என்று சொல்லிக்கொள்ள முடியும்? இவ்வளவு பணம் இவர்களுக்குக் கொடுத்தவர்களில் பெரும்பான்மை மக்கள் இன்று இருக்கும் நிலையை யார்தான் நல்ல நிலை என்று சொல்லமுடியும்? இதையெல்லாம் மாற்றவேண்டும் என்று சொல்லும்போது கடவுளையும், மதக் கொள்கைகளையும் கொண்டுவந்து குறுக்கே போட்டால், அக் கடவுளையும் மதத்தையும் ஒழிக்காமல் எப்படி இருக்கமுடியும்?

மற்றும், கடன்பட்டு வட்டிகொடுத்த மக்களுடையவும், பாடுபட்டுப் பயனைக் கொடுத்த மக்களுடையவும் மனமும் வயிறும் வாயும் பற்றி எரிய எரிய, அப் பணங்களைக் கோவில் கட்ட, வாகனம் செய்ய, சாமிக்குக் கிரீடம் செய்ய, கலியாணம் செய்ய, தாசி வீட்டுக்குப்போக, தாசிகளை வைத்து உற்சவம்–வாண வேடிக்கை செய்யப் பாழ்பண்ணப் படுமானால்—யார்தான் சகித்துக்கொண்டு இருக்கமுடியும்? இந்த அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டு எந்தக் கடவுள்தான் இருக்கமுடியும்?

அப்படியும் ஒரு கடவுள் இருக்கிறது என்று சொல்லப்படுமானால்—அப்படிப்பட்ட கடவுளை அழித்து ஒழித்து விடுவதில் யாருக்கு என்ன நஷ்டம் வரும்?

அப்படிப்பட்ட கடவுளை யாரும் ஒழிக்கமுடியாது என்று சொல்லப்படுமானால், அது ஒழிந்துபோகுமே என்று ஒருவராவது ஏன் வருத்தப்படவேண்டும்?

இதையெல்லாம் பார்க்கும்போது, கடவுளைக் கற்பித்தது நல்ல எண்ணம் கொண்டு என்பதாக நம்ப நம்மால் முடியவில்லை.

சோம்பேறிக் கொள்ளைக் கூட்டங்கள், கொடுங்கோன்மைக்காரன், பேராசைக்காரன் முதலிய கூட்டத்தாரின் சுயநலத்துக்குத்தான் பயன்படுகின்றதே ஒழிய வேறு காரியத் துக்குக் கடவுள் பயன்படுவதேயில்லை.

இதுவரை எந்தக் கடவுளால்—யாருக்கு—எப்படிப்பட்ட ஒழுக்கம் ஏற்பட்டது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

கடவுளைச் சதாகாலம் கட்டியழுது, அதனாலேயே ஜீவனம் நடத்தும் அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியவர்கள் முதலில் ஒழுக்கமாய் இருக்கிறார்களா? இவர்களுடைய ஒழுக்கக் காரியங்கள் நமக்குத் தெரியாதா?

கடவுளுக்காக இலட்சம், பத்து இலட்சம் பணம் போட்டுக் கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து, அய்ந்து வேளை, ஆறு வேளை பூஜை செய்து மானியம் விட்ட கடவுள் பக்தர்களில் எவராவது ஒழுக்கமாய் யோக்கியமாய் நடக்கிறார்களா? கடவுளுக் காகவே சந்நியாசியாய், குருவாய், சங்கராச்சாரியாராய், தம்பிரானாய், 'முல்லா'வாய், 'மவுலானா'வாய், பாதிரியாய், பெரிய குருவாய் இருக்கின்றவர்களிலாவது எல்லோரும் ஒழுக்கமானவர்கள் என்று சந்தேகமறச் சொல்லத்தக்கவர்களாய் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் நிலையே இப்படி இருக்க, கடவுள் நம்பிக்கை உள்ள சாதாரண பாமர மக்களிடத்தில் எப்படி ஒழுக்கம், யோக்கியதை எதிர்பார்க்க முடியும்?

எப்படியானாலும் கடவுளைப்பற்றிய எண்ணமே யாருக்கும் இருக்கக்கூடாது என்ப தற்காக நான் கூறவில்லை என்பதோடு, மனித சமூக சமதர்ம வாழ்வுக்குத் தடையாய் எந்தக் கடவுளும் இருக்கக்கூடாது என்றும், அப்படிப்பட்ட கடவுளை இருக்க விடக் கூடாது என்றும் நான் வற்புறுத்திக் கூறுகிறேன். மனித வாழ்க்கைக்கும் பேதா பேதங் களுக்கும் கடவுள் சம்பந்தமில்லை என்று சொல்லும் பட்சம் அக் கடவுளைப் பற்றி நமக்கு என்ன கவலை?

['குடிஅரசு'–கட்டுரை—18-6-1949]

15. சமதர்மவாதியின் கடமை

இந்தியாவில் உழைப்பாளி–சுகபோகி என்கிற இரண்டு வகுப்புகள் இருக்கின்றன. இந்த இரண்டு வகுப்புகளுமே பெரிதும் ஏழை என்பதாகவும், பணக்காரன் என்பதாகவும் சமுதாயப் பிரிவுகளைப் பரிணமிக்கச் செய்கின்றன.

எனவே, உண்மையான சமதர்மம் இந்தியாவில் நிலைநாட்டப்படவேண்டும் என்று விரும்புகின்றவன் மேற் கூறப்பட்ட நிலைமையை மறக்காமல் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

ஒருவன் சமதர்மத்துக்கு உழைப்பதானால் அவன் முதலில் ஒரு உண்மையை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். உழைப்பதற்கென்றே பிறந்திருக்கும் வகுப்பு ஒன்று, இவர்களது உழைப்பின் பயனை அனுபவித்துக்கொண்டு சுகபோகியாய் வாழ்வதற்கென்றே பிறந்திருக்கும் வகுப்பு ஒன்று என்று இருப்பதை ஒழிக்கவேண்டும்—கிள்ளி எறியவேண்டும் என்பதே அந்த அடிப்படை நிலை. இதைச் செய்யாத வரையில் எந்தவிதப் பொருளாதார சமதர்மத்திட்டமும் இந்த நாட்டில் அரை வினாடி நேரமும் நிலைத்து நிற்காது என்பதைச் சமதர்மம் பற்றிப் பேசுவோர்–நினைப்போர்–ஆசைப்படுவோர் மனதில் கொள்ளவேண்டும்.

நம் நாட்டின் சமூக–பொருளாதார நிலையை நன்றாக அறிந்தபின்னும் பணக் காரனை மட்டுமே குறைகூறும் சமதர்மம் வெறும் பொறாமைச் சமதர்மமேயாகும்.

ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், இந்த நாட்டின் சமுதாய அமைப்பானது, பிறவியின் காரணமாகவே, ஏழையையும் பணக்காரனையும் அதாவது, உழைப்பாளியையும் சுகபோகியையும் உண்டாக்கியிருக்கிறது.

உதாரணமாக, இன்றைய சுகபோகிகள் பெரும்பாலும் மேல் சாதிக்காரர்களாகவும், பாட்டாளிகள் அல்லது உழைப்பாளிகள் அனைவரும் கீழ் சாதிக்காரர்களாகவும் இருப் பதைக் காணலாம்.

இன்றைய தினம் ஏதோ ஒரு புரட்சி மூலமோ ஒரு சர்வாதிகாரி மூலமோ இந்த நாட்டில் பொருளாதார சமதர்மப் பிரகடனம் ஏற்பட்டு விட்டதாகவே வைத்துக்கொள்வோம்; அந்தப் பிரகடனத்தின்படி, இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் இந்த நாட்டில் உள்ள பொருட்கள் அனைத்தையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம்.

பிறகு நடப்பது என்ன என்பதை யோசித்துப் பார்த்தால் என்ன விளங்கும்? மறுபடியும் பழைய நிலையே ஏற்படுவதற்கான காரியங்கள் நிகழ்ந்துகொண்டேபோய், ஒரு சில வருடங்களுக்குள் பொருளாதார உயர்வு—தாழ்வுகள் தாமாகவே பழையபடி ஏற்பட்டுவிடும் என்பதில் சிறிதும் ஆட்சேபணை இருக்காது.

ஏனெனில், பிரகடனத்தில் பொருளாதார சமதர்மம்தான் ஏற்படுமே ஒழிய அதுவும் தற்கால சாந்தியாய் அல்லாமல், சமூக-சமுதாய-சமதர்மம் ஏற்பட இடமில்லை. அது பிறவியின் பேராலேயே தங்கிவிடும்; அது தனது காரியத்தை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மத்திலும் செய்துகொண்டுதான் இருக்கும்.

அதுவும் மதத்துக்கும், சாதிக்கும் பெயர்போன இந்த நாட்டு மக்களுக்குள்—கல்வி அறிவற்று மூடநம்பிக்கையில் ஆழ்த்திவைக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டுப் பாமர மக்களுக்குள் பிறவிபேதம் நீக்கப்படாதவரை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மமும் கடுகளவு மாற்றத்தையும் உண்டாக்கிவிடாது.

மற்றும், பார்ப்பனரல்லாத சமூகத்தில் கீழ்சாதிக்காரர்கள் என்பவர்கள் எவ்வளவு செல்வம் தேடியபோதிலும் சாதி-மத சம்பிரதாயம் காரணமாக அடிக்கடி சறுக்கி விழுந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; அவ்வளவோடு மாத்திரமல்லாமல், சமூகத்தில் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள். ஒரு சிலர் செல்வவான்களாய், கோடீஸ்வரர்களாய் இருந்தாலும்கூட, அவர்கள் சமூகத்தில் கீழ்சாதிக்காரர்களாய்த்தான் இருந்துவருகிறார்கள்.

சமதர்ம வாசனையே சிறிதும் இல்லாதவர்களும் சமதர்மத்துக்குப் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களுமான பார்ப்பனர்கள் எவ்வளவு ஏழைகளாகவும் எவ்வளவு 'பாப்பர்'களாகவும் இருந்தாலும், எவ்வளவு சோம்பேறிகளாகவும் எவ்வளவு உழைக்காதவர்களாகவும் இருந்தாலும் மக்களின் சராசரி வாழ்க்கையைவிட மேலாகவும் மனித சமூகத்தில் மேல் நிலையை உடையவர்களாகவும் தானே இருந்துவருகிறார்கள்!

இதனால்தான், பார்ப்பனர்கள் சமுதாய சமதர்மக்காரர்களைக் கண்டால் காய்ந்து விழுவதும் சமுதாய சமதர்ம இயக்கங்களைக் கண்டால் அவற்றை ஒழிக்கச் சூழ்ச்சி செய்வதுமாய் இருப்பதோடு, பொருளாதார சமதர்மக்காரர்கள் என்பவர்களை வரவேற்பது போலவும், பொருளாதார சமதர்ம ஸ்தாபனங்களை ஆதரிப்பது போலவும் காட்டிக்கொள்கிறார்கள்.

ஏனெனில், வெறும் பொருளாதார சமதர்மம் பார்ப்பனரை ஒன்றும் செய்துவிடாது. மேலும், பார்ப்பனருக்குப் பொருளாதார சமதர்மம் அனுகூலமானதேயாகும். எப்படி என்றால், இப்போது அவர்களால் பிச்சை வாங்கப்படும் நபர்கள் ஒரு பங்காய் இருந்தால் பொருளாதார சமதர்மத்தில் பார்ப்பனருக்குப் பிச்சை கொடுக்கும் நபர்கள் 10 பங்காக ஆகிவிடுவார்கள். அப்போது அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) சமதர்மத்தில் பகிர்ந்து கொடுக்கப்படும் சொத்துக்கள் தவிர, மற்றும் சாதி, மத சடங்குகள் காரணமாக அதிகப் பிச்சையும் சேர்ந்து ஒவ்வொரு பார்ப்பனரும் ஒவ்வொரு சங்கராச்சாரி, மடாதிபதியாக சுலபத்தில் மார்க்கம் ஏற்பட்டுவிடும். இந்த நிலை மறுபடியும் வெகு சீக்கிரத்தில் பழைய நிலையை அதாவது இன்றைய நிலையை உண்டாக்கிவிடும்.

இந்த நாட்டில் சாதியும், மதமும், சிறப்பாகச் சாதி ஒரு கடுகளவு மீதியிருந்தாலும் எப்படிப்பட்ட சமதர்மமும் ஒரு நிமிட நேரத்தில் கவிழ்ந்து போகும் என்பதை சமதர்மிகள் என்பவர்கள் கருத்திலிருத்தவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மற்றும், சமுதாய சமதர்மத்துக்கு, அதாவது சாதிகளை ஒழிப்பதற்கு என்றால் பணக்காரன் சேருவான். ஏனெனில், எவ்வளவு பணக்காரனாய் இருந்தாலும் 100-க்கு 97 பேர் இன்றைக்குக் 'கீழ் சாதிக்காரர்'களாகவே இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சேருவார்கள்.

ஆனால், பணக்காரனை ஒழிக்கப் பார்ப்பனர் சேரமாட்டார்கள். சேர்வதாய் இருந்தாலும் சாதி இருப்பதன் பலனாய் மீண்டும் பணக்காரனை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று கருதியே சூழ்ச்சித் திறமாய்ச் சேருவான்.

இந்த நாட்டுக்கு—இந்த நாட்டு மக்களுக்கு நன்மைவேண்டும் என்று கருதுகிறவர்கள் இந்த நாட்டின் நிலை என்ன என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றபடி நடக்கவேண்டுமே ஒழிய, மேல் நாட்டைப்பற்றிப் படித்துவிட்டுப் புத்தகப் பூச்சியாய் இருப்பது வீண் பிரயாசையே ஆகும்.

சாதியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, சாதி முறையின் ஆணிவேராக இருக்கும் பார்ப்பனனை ஒழிக்கும் முயற்சியே சமதர்மவாதிகளின் முதற் கடமை என்பது நமது அபிப்பிராயமாகும்.

['விடுதலை'—தலையங்கம்—4-9-1973]

சமதர்மம் என்றால் சாதாரணமாக பாரபட்சமற்ற நீதி, சமத்துவம், உயர்வு—தாழ்வு இல்லாதநிலை என்பதாகும். ஆனால், இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அதாவது சாதியில், கல்வியில், செல்வத்தில், வாழ்க்கை அந்தஸ்து நிலையில் மேல்—கீழ்நிலை இருந்து வருகிறது. இவற்றை ஒழித்து யாவற்றிலும் சமத்துவம், சமத்துவத்தை நிறுவுவதற்குச் சமதர்மக் கொள்கை ஆட்சி அவசியம் என்றால், மதக்காரர்களுக்கும், கடவுள் நம்பிக்கைகொண்ட ஆத்திகர்களுக்கும் கஷ்டமாக இருக்கிறது.

உழைப்பாளி மக்கள் உடல்வருந்தி உழைத்த பின்னும், குடிக்கக் கூழ் இன்றியும், கட்டக் கந்தையின்றியும் பரிதவிக்கும்போது, எந்தவிதமான வேலையும் செய்யாது, பணக்காரனாகத் தொழிலாளியைக் கொடுமைப் படுத்திக்கொண்டு, டம்பாச்சாரித்தனமாக வாழ்வது சரி அல்ல.

சாதாரணமாக, இன்று ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்துவது இல்லையா? அதுபோலவே ஒரு கிராமம், ஒரு மாவட்டம், ஒரு மாநிலம் அல்லது தேசத்தில் உள்ள சகல மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்பப் பொதுச் சொத்து என்பதுபோலவும், எல்லா மக்களுக்கும் பொதுவாகி அக் குடும்பத்துக்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவனவன் இன்பம்போல் அனுபவிக்கும் தனி உரிமை யாருக்கும் இல்லை.

இந்தச் சமத்துவமான வாழ்க்கை வேண்டும் என்று கூறும்போது சமதர்ம விரோதிகளான மதவாதிகளும், ஆத்திகர்களும் துள்ளிக் குதித்து 'அது கடவுளுக்காகாது; அவனவன் முன் பிறவியில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றாற்போல் சுகமான வாழ்க்கையோ கஷ்டமான வாழ்க்கையோ நடத்துகிறான். பணக்காரனாகவோ, ஏழையாகவோ இருப்பது கடவுள் சித்தம். அவன் கடாட்சத்தால் அவனுக்கே தனி உரிமைகொடுக்கப்பட்ட பொருள்களைப் பொதுவுடைமை ஆக்குவது அநீதி' என்று கூப்பாடு போடப்படுகிறது.

ஏற்றத் தாழ்வுகள் மலிந்த இந்தச் சமூக அமைப்பு ஏற்பாட்டால் யாருக்காவது வாழ்க்கையில் பூரண இன்பமோ அமைதியோ ஏற்படமுடியுமா?

இருப்பவன் அதோடு திருப்தி அடையாது மேலும் மேலும் பணக்காரனாகவேண்டும் என்று கருதுகிறான்.

இந்த மனப்பான்மைக்குக் காரணம் என்ன வென்றால், கஷ்டப்பட்டு உழைக்காது சுக வாழ்வு நடத்துவதும், தேவைக்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சொந்தக்காரனாக இருப்பதும் ஒரு கவுரவம் என்றும், தனி மதிப்புக்குரிய பாத்திரமானது என்றும் கருதுகின்ற ஒரு மூடநம்பிக்கையே தவிர வேறில்லை. இந்த மூடநம்பிக்கையின் பயனாகத்தான் மனிதன் தேவைக்கு மேற்பட்ட பொருள் போகங்களைத் தானும் அனுபவியாது, பிறரையும்

அனுபவிக்கவிடாது, வைக்கோல் போரைக் காக்கும் நாய்போல் வாழ்கின்றான். இத் தனி உரிமையினால் வாழ்க்கையில் பலகோடிக்கணக்கான மக்களுக்குக் கிடைக்கவேண்டிய பல பொருள் சாதனங்கள் வீண் விரயம் செய்யப்படுகின்றன.

எனவே, தனிமனிதச் சொத்துரிமை ஒழியவேண்டும். பிறர் உழைப்பில் படோடோப வாழ்க்கை நடத்துவதும் அதிகப்படியான பொருள்களுக்கு அதிபதியாய் இருப்பதும் பெருமையான வாழ்க்கை என்று கருதப்படுகின்ற மூடநம்பிக்கை ஒழியவேண்டும். இதில் கவுரவமும் மரியாதையும் இல்லை என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

['விடுதலை'-தலையங்கம்—8-10-1973]

4. பொதுவுடைமை

1. பொதுவுடைமை

பொதுவுடைமை என்கின்ற வார்த்தையானது மக்களின் காதுகளில் படும்பொழுதே அது ஒரு பயங்கர சப்தம்போல் கருதப்படுகின்றது. கொஞ்ச காலத்திற்கு முன் நாத்திகம் என்ற வார்த்தையும் இந்தப்படிதான் மக்கள் காதுகளுக்கு ஒரு பெரிய அதிருப்தியானதும், வெறுப்பானதுமான சப்தமாகக் கருதப்பட்டு வந்தது. என்றாலும், இப்போது அது ஒரு தர்க்கவாதத்துக்கு ஏற்றதாகவும், சிலர் அதை ஒரு நாகரிகமாகக் கருதவும், சிலர் அவ் வார்த்தையின் கருத்தை, சாதாரண நோக்கத்தோடு கவனித்து 'அது அவரவர்கள் அபிப் பிராயம்' என்பதாகவும், சிலர் ஜன சமூக வாழ்க்கைக் கட்டுப்பாட்டிற்கு 'அந்தப்படி (கடவுள் என்பதான) ஒரு அபிப்பிராயம் இருந்தால் நல்லது' என்றும் கருதும்படியாகவும் இருந்துவருகின்றது.

நாத்திக விஷயத்தில் இப்போது ஆத்திரங் காட்டுபவர்கள் எல்லாம்—மதப் பிரச்சாரத் தினால் வாழலாம் என்று கருதுகின்றவர்களும், மதப் பிரச்சாரத்தைத் தங்களது வாழ்க் கைக்கு ஆதாரமாய்க் கொண்டவர்களும் தவிர, மற்றவர்களுக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலையே இல்லாமல் இருந்துவருகின்றது. பொது ஜனங்களில் நாத்திகத்தைப்பற்றி எந்தக் கூட்டத்திற்காவது சிறிது அதிருப்தி இருக்கும் என்று கருத வேண்டுமானால்—அது, போதிய கல்வி அறிவு பெறாத சமூகமும், முரட்டுக் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவரும் பிடிவாத சமூகமும், தங்களைத் தவிர வேறுவித உலக அபிப்பிராயம் இருக்கின்றது என்று கூட உணர முடியாமல் வைக்கப்பட்டிருக்கும் பாமர கூட்ட சமூகமும் ஆகியவர்களுக் குள்ளாக இருந்துவரலாம்.

பொதுவாக 100-க்கு 10 அல்லது 12 பேரே படித்த மக்களும்; 100-க்கு 80, 90 பேர்கள் தற்குறிகளாகவும் இருக்கும் ஒரு தேசத்து மனித சமூகத்தில் நாத்திகத்தை வெறுக்கும் ஜனங்கள் சிலராவது இருக்கிறார்கள் என்பதில் அதிசயமொன்றுமில்லை. ஏனெனில், நாத்திகம் என்பது அறிவு வளர்ச்சியினாலும், ஆராய்ச்சித் திறத்தினாலும், சுதந்திர உணர்ச்சியாலும் ஏற்பட வேண்டிய விஷயமேயொழிய, கடவுள் சொன்னார் என்று எழுதப்பட்ட புத்தகங்களில் என்ன சொல்லியிருக்கிறது என்றும், தங்களைக் கடவுள் அவதாரமாகவோ, தூதர்களாகவோ, குருமார்களாகவோ சொல்லிக்கொண்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், பெரியோர்கள், ரிஷிகள், நபிமார்கள், நாயன்மார்கள், தீர்க்க தரிசிகள், ஆழ்வார்கள், சித்தர்கள், ஞானிகள், மகாத்மாக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், அவர்கள் சொன்னதாக ஏற்பாடு செய்த ஏடுகளிலும், புத்தகத்திலும் என்ன எழுதியிருக்கிறது என்றும் கவனித்து அவைகளுக்கெல்லாம் அடிமை யாகியிருக்கும் அது விஷயத்தில் சுதந்திரமும், சுய அறிவும் இல்லாத மக்களுக்கு விளங்கக் கூடிய காரியமல்ல.

ஆகையால், அறிஞர்கள் அவ்வித மக்களின் கூப்பாடுகளை இலட்சியம் செய்யாமல் இருந்து வருவதுடன் ஆராய்ச்சியையும், சுயபுத்தியையும் பற்றிப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆதலால்தான், இப்போது நாத்திகம் என்னும் வார்த்தையானது மிகச் சாதாரண வார்த்தையாகவும், நாகரிக ஆராய்ச்சி அபிப்பிராயமாகவும் கொள்ளப்பட்டு வருகின்றது என்று சொன்னோம்.

அதுபோலவே, பொதுவுடைமை என்னும் வார்த்தையானது அதுபற்றிய ஆராய்ச்சியே இல்லாத காரணத்தாலும்; சுயநலத்தின் காரணமாய் அவ் வார்த்தைக் கெதிராகவே பிரச்சாரங்கள் நடைபெறுவதாலும் பொது ஜனங்களுக்குப் பொதுவுடைமை என்றால் வெறுப்பாயும், பயமாயும், தப்பிதமாயும் தோன்றலாம். எந்தப் புதிய கொள்கையும், அபிப்பிராயங்களும் ஆரம்ப காலத்தில் பாமர மக்களிடை வெறுப்பாகவும், கஷ்டமாகவுந்தான் தோன்றும். இதற்கு உதாரணங்கள் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஏனெனில், புதிய அபிப்பிராயங்களையும், கொள்கைகளையும் கொண்டுவந்து புகுத்தியவர்களின் சரித்திரங்கள் என்பவைகளைப் பார்த்தால் இதுதானாகவே விளங்கிவிடும். ஆகவே, பொது வுடைமை என்னும் வார்த்தையும், கொள்கையும் பொதுஜனங்களால், பாமர மக்களால், சுயநலங்கொண்ட சோம்பேறிக்கூட்டங்களால் ஆதரிக்கப்படுகின்றதா, வரவேற்கப்படு கின்றதா, வெறுக்கப்படாமல் இருக்கின்றதா என்பவைகளைப்பற்றிக் கவனிக்காமல் அது விஷயமாய் நமக்குத் தோன்றியதை எழுதலாம் என்றே கருதுகிறோம்.

பொதுவுடைமை என்பது ஒரு குடும்பத்திலுள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள், இலாப நஷ்டங்கள், இன்ப துன்பங்கள், போகபோக்கியங்கள், பொறுப்பு, கவலைகள் முதலாகியவை எல்லாம் எப்படி அக் குடும்ப மக்களுக்குப் பொதுவோ, அதுபோல் தான், ஒரு கிராமத்திலோ, ஒரு பட்டணத்திலோ, ஒரு மாகாணத்திலோ, ஒரு தேசத்திலோ, ஒரு கண்டத்திலோ, ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள அவ்வளவு பேருக்கும் பொதுவானது என்பதாகும். சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால், பொதுவுடைமைக் கொள்கையின் கட்சி இலட்சியம்–உலகம் பூராவும் ஒரு குடும்பம்; உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள்; உலகத்திலுள்ள செல்வம், இன்பம், போக போக்கியம் முதலியவை எல்லாம் அக் குடும்பச்சொத்து; குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோருக்கும் அக் குடும்பச் சொத்தில் (உலகச் சொத்தில்) சரிபாகம் என்கின்ற கொள்கையேயாகும். ஆகவே, பொதுவுடைமை என்பது ஒரு கணக்குப் பிரச்சினை (Mathemetic Problem) ஆகும்.

ஆகவே, இப்படிப்பட்ட கருத்துக்கொண்ட பொதுவுடைமைக் கொள்கையை வெறுக்கவோ, எதிர்க்கவோ நியாயமான முறையில் யாதொரு காரணமும் இருப்பதாய் நமக்குத் தோன்றவில்லை. ஆனால், சகோதரனுடைய பங்கை மோசம் செய்து சகோதர துரோகத்தின்மூலம் அதிகப் பங்கை ஆசைப்படுகிற மனப்பான்மை உள்ளவனும், குடும்ப வேலைகளில் தனக்குள்ள சரிபாகப் பொறுப்பைத்தான் ஏற்றுக்கொள்ளாமல் மற்ற சகோதரர் களையே அதிகமாய் உழைக்கச்செய்து தான் சோம்பேறியாயிருந்து, அதிகப் பங்கை யடைந்து, மற்றவர்களுக்குப் போதுமான அளவு கூலி கொடுக்காமல் வஞ்சித்து ஏமாற்ற வேண்டும் என்கின்றதான மனப்பான்மை உள்ளவனும்தான் பொதுவுடைமைக் கொள் கையை வெறுக்கவும் எதிர்க்கவும் கூடும்.

நிற்க, மற்றொரு விதத்திலும் பொதுவுடைமைத் தத்துவம் என்பது எல்லா ஜனங் களாலும் மதிக்கத்தக்கது என்கின்றதான வேதாந்த தத்துவம் என்பதுமாகும். எப்படி யெனில், எல்லா சரீரத்திலும் வசிக்கும் ஆத்மா ஒன்றேயென்றும்; எப்படி ஒரே சூரியன் பதினாயிரம் குடம் தண்ணீரில் பதினாயிரம் சூரியனாகக் காணப்படுகின்றதோ, அதுபோல் கோடானுகோடி ஜீவராசிகளினுள்ளும் கோடானுகோடி ஆத்மாவாகக் காணப்படுகிறது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறு ஆத்மாவாக

இருக்கிறதென்றோ, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வெவ்வேறுவித சைதன்னிய—அதாவது ஞானமோ, வேற்றுமை உணர்ச்சியோ இல்லை என்கின்ற தத்துவமே வேதாந்தமாகும். ஆதலால், அப்படிப்பட்ட வேதாந்தக் கொள்கைக்குப் பொதுவுடைமைத் தத்துவம் எவ்விதத்திலும் விரோதமானதல்ல.

மதக் கொள்கைகளுக்கும் பொதுவுடைமைத் தத்துவம் விரோதமானதாக இல்லை. எப்படியெனில், எல்லா மதமும் மக்கள் யாவரும் சகோதரர்களென்றும், ஒருவருக்கொருவர் சகோதர உணர்ச்சியுடனிருக்க வேண்டுமென்றும், எல்லோரையும் எல்லோருமே சகோதரர்களாகப் பாவிக்கவேண்டும் என்றும், எல்லோருமே ஒரேவித இன்பத்தையும், ஒரேவித செல்வத்தையும் அடையவேண்டும் என்றும் கற்பிக்கின்றதாகச் சொல்லப்படுகிறது. ஆதலால், பொதுவுடைமைத் தத்துவம் எந்த மதக் கொள்கைக்கும் விரோதமானது என்று சொல்லிவிட முடியாது.

மற்றும், பொதுவுடைமைத் தத்துவமானது ஆத்திகம் என்பதற்கும் விரோதமானதல்ல. ஏனெனில், ஆத்திகமென்பது கடவுள் என்பதாக ஒன்று இருக்கின்றதென்றும், அது பாரபட்சமற்றதென்றும், சர்வசக்தியும் சர்வவியாபகமும் உடையது என்றும், அதுவே உலகத்தையும் உலகத்திலுள்ள வஸ்துக்களையும் ஜீவர்களையும் சிருஷ்டித்தது என்றும், உலகமும் உலக வஸ்துக்களும் அந்த ஜீவர்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டன என்றும் கருதுவதேயாகும். ஆகவே, அப்படிப்பட்ட கருத்துக்கு எல்லா மக்களும் சகோதரர் என்ற கொள்கையும், எல்லாப் பொருள்களும் இன்ப துன்பங்களும் எல்லா மக்களுக்கும் சரிசமமான பொது என்பதையும் எந்த ஆத்திகர்களும் ஆட்சேபிக்கவோ, எதிர்க்கவோ முடியாது என்பது விளங்கும்.

மேலும், மகாத்மாக்கள் என்பவர்களுக்கும் பொதுவுடைமைத் தத்துவம் வெறுப்பாகவோ, விரோதமாகவோ இருக்க நியாயமில்லை. ஏனெனில், மகாத்மா தத்துவம் என்பது எல்லா ஜீவர்களையும் சரிசமமாய்ப் பார்ப்பதும், எல்லா ஜீவர்களிடத்திலேயும் ஒரே ஆத்மா பரிணமிக்கின்றது என்பதை உணருகின்றதுமான வர்க்கமாகும். ஆதலால், அப்படிப்பட்ட தத்துவமுடையவர்களுக்குப் பொதுவுடைமைத் தத்துவம் என்பது ஆட்சேபிக்கத் தக்கதாவதற்கு இடமில்லை. இவை தவிர கிருஷ்ணர், புத்தர், ஏசு, முகமது, குருநானக், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி என்று சொல்லப்படுபவர்களான அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் என்பவர்களுடைய கொள்கைகளுக்கும், இலட்சியங்களுக்கும், எல்லா மக்களும் சகோதரர்கள்; எல்லாச் சொத்துக்களும் பொதுவானது என்னும்படியான கொள்கைகொண்ட பொதுவுடைமைத் தத்துவம் விரோதமாகவோ, ஆட்சேபிக்கத் தக்கதாகவோ இருக்கும்என்று சொல்லுவதற்கில்லை.

மற்றும், தேசியம் என்பதற்கோ, தேசியவாதிகள் என்பவர்களுக்கோ பொதுவுடைமைத் தத்துவம் விரோதமானது என்று சொல்லுவதற்கும் இடமிருக்கக் காரணமில்லை. ஏனெனில், தேசியவாதிகளுடைய கொள்கையெல்லாம் தங்கள் தேசத்துச் செல்வத்தை மற்றொரு தேசத்தார் கொள்ளை கொள்ளக்கூடாது என்பதும், தங்கள் தேச ஆட்சியை மற்றொரு தேசத்தார் ஆளக்கூடாது என்பதுமே முக்கியமானதாகும். ஆதலால், இதே கொள்கைகொண்டதான, அதாவது—ஒருவனுடைய உழைப்பின் பயனை மற்றவர்கள் கொள்ளைகொள்ளக் கூடாது என்பதும், ஒருவர்மீது ஒருவர் ஆதிக்கம் கொள்ளக்கூடாது என்பதும், எல்லோரும் சமமாய் உழைக்கவேண்டும், எல்லோரும் சமமாய் அடைய வேண்டும், எல்லோருக்காகவும் எல்லோரும் ஆட்சிசெலுத்த வேண்டும் என்னும் கொள்கை கொண்ட பொதுவுடைமைத் தத்துவத்தை ஆட்சேபிக்க நியாயமேயில்லை. மற்றபடி சமூகசேவைக்காரருக்கோ, பொதுநலச் சேவைக்காரருக்கோ, நீதிக்கோ பகுத்தறிவுக்கோ, பொதுவுடைமைத் தத்துவம் மாறானதென்றோ, ஆட்சேபிக்கத் தக்கதென்றோ சொல்வதற்கு எந்தவிதத்திலும் ஆதாரம் இருப்பதாய்த் தெரியவில்லை.

ஆனால், யாருக்கு விரோதமாகவும், ஆட்சேபிக்கத் தக்கதாகவும், கெடுதி தரத் தக்கதாகவும் இருக்கும் என்று பார்ப்போமேயானால் சுயநலம் கொண்ட மக்களாகிய சக்கரவர்த்தி, அரசர், பாதிரி, குரு, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், மேல்சாதிக் காரன் (பார்ப்பான்) என்று சொல்லப்படுபவர்களுக்கும்; இவர்களுக்குக் கூலிகளாய் இருப்பதினாலேயே உயர்வான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றவர்களுமான மக்களுக்கும் ஆட்சேபணையாய் இருக்கலாம். இவர்களுடைய ஆட்சேபணைகளை நாம் இலட்சியம் செய்யவேண்டியதில்லை.

ஏனெனில், இவர்கள் யோக்கியதைகளை நன்றாய் உணர்ந்து, இவர்களால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் இழிவுகளையும் அறிந்து, இவர்கள் தன்மைகளை ஒழிக்க வேண்டும் என்றும், மாற்றவாவது வேண்டுமென்றும் மக்கள் வெகு நாட்களாகவே பாடுபட்டு வருகிறார்கள். உதாரணமாக, ஏகாதிபத்தியத் தன்மை கூடாதென்றும், தனிப்பட்ட நபர் களான அரசர்களுடைய ஆட்சிகள் கூடாதென்றும் கிளர்ச்சிகள் வெகுகாலமாகவே நடந்து வருகின்றன. இதன் பயனாகவே சில ஏகாதிபத்தியங்கள் ஒழிந்து, சில அரசாட்சிகளும் வீழ்ந்து, பொதுஜன ஆட்சியென்றும், குடிகளுடைய ஆட்சி என்றும் சொல்லும்படியான ஆட்சிகள் ஏற்பட்டும் இருக்கின்றன; இனியும் ஏற்படுத்தும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. ஆதலால்தான், அவற்றைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை என்றோம். மற்றபடி, மேல்சாதிக் கொடுமையையும் நன்றாய் உணர்ந்து அதை ஒழிக்கவேண்டும் என்று முயற்சி செய்ததோடு சிலவற்றை ஒழித்தும் வருகிறோம். மற்றபடி, ஜமீன் முதலாளி முதலியவர்களுடைய கொடுமைகளையும், அநீதியான வழியில் அவர்கள் செல்வம் பெருக்கு வதையும் நன்றாய் உணர்ந்து அவர்களது கொடுமைகளை ஒழிக்கவும், அவர்களது அநீதி களில் இருந்து மீளவும் முயற்சிகள் செய்துகொண்டுதான் வருகிறோம். கடைசியாக, குருமார்கள், பாதிரிமார்கள் என்று சொல்லுகின்ற கூட்டத்தாரினின் யோக்கியதைகளும் அறிஞர்கள் உணர்ந்ததேயாகும். எப்படியெனில் குரு, பாதிரி, முல்லா, புரோகிதர்கள் என்கின்ற கூட்டத்தார்கள், அரசர்கள் செல்வவான்கள், சோம்பேறிகள் ஆகியவர்களுடைய 'லைசென்சு' பெற்ற கூலிகளேயாவார்கள். இவர்களுடைய உழைப்பின் பயன் எல்லாம் அரசர்களுக்கும், செல்வந்தர்களுக்கும், சோம்பேறிக் கூட்டத்தார்களான மதப் பாஷாண்டி களுக்குமே பயன்படத்தக்கதாதலால் அவர்களது அதிருப்தியைப்பற்றியோ, அழுகையைப் பற்றியோ நாம் சிறிதும் கவலைப்படவேண்டியதில்லை.

இருந்தபோதிலும், இந்தக் கூட்டத்தாரும் சாவதானமாய் இருந்து நல்லறிவைக் கொண்டு யோசித்துப் பார்ப்பார்களானால் பொதுவுடைமைத் தத்துவம் என்பது தங்கள் கூட்டத்தாருக்குக் கெடுதியில்லை என்பது விளங்கும். எப்படியெனில், பொதுவுடைமைத் தத்துவத்தினால் மனித ஜீவனுக்கு ஏற்படப்போகும் முக்கியமான மாறுதலும் அனுகூலமும் என்னவென்றால், மனிதனுக்குக் கவலை என்பது 100-க்கு 90 பாகத்துக்கு மேலாகவே குறைந்து போகும். இது தவிர, அதிருப்தி, பொறாமை என்று சொல்லும்படியான இயற்கைக் குணங்கள் என்பவைகள் எல்லாம் குறைந்துவிடும். இவைகளில் ஏதாவது ஒரு அளவும், பொதுவுடைமைத் தத்துவத்திலும் இருக்கும் என்று தர்க்கத்துக்காகச் சொல்ல வந்தாலும் அதுவும் பொதுநலத்தை உத்தேசித்து இருக்குமேயொழிய சுயநலத்தை உத்தேசித்து இருக்க முடியவே முடியாது. அதுபோலவே, மனிதனுக்குத் துக்கம் என்பது பெரும்பாகமும் மறைந்து போகும்.

இப்போது மேற்குறிப்பிட்டதான கவலை, அதிருப்தி, ஆசை, பொறாமை, துக்கம் முதலிய குணங்கள் தனி மனிதனில் ஆகட்டும், மனித சமூகத்திலாகட்டும் எந்த நிலைமை யில் இருக்கின்றவர்களுக்கும் இருந்துதான் வருகின்றது. அரசனுக்கோ, செல்வவானுக்கோ, குருவுக்கோ, பார்ப்பானுக்கோ, மற்றும் பெரும் பதவியில் இருக்கின்றவன் என்பவனுக்கோ இக் குறைகள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. இவர்களுக்குள்ள பெருமையெல்லாம் அன்னியர்கள் இவர்களைப் பெருமையாய் நினைக்கின்றார்கள் என்பதைத் தவிர தங்கள்

தங்களுக்குச் சொந்தத்தில் துக்கமும், கவலையும் இல்லாதவர்கள் இல்லவேயில்லை. மத சம்பந்தமான ஆதாரங்களில் காணப்படும் மோட்சத்திற்கும், முத்திக்கும் சொல்லப்படும் கருத்தெல்லாம் கவலையும், துக்கமுமற்ற தன்மை என்றுதான் சொல்லப்படுகின்றதே யொழிய, மற்றபடி வேறு ஒரு லோகத்தில் போய்—'வெல்வெட்' மெத்தையில் சதா தூங்கிக் கொண்டிருப்பது என்று சொல்லப்படவில்லை. ஆனால், இப்படி எங்காவது ஒன்று, இரண்டு இடத்தில் சொல்லப்படுவதாய்ச் சொல்லப்பட்டாலும் அது புரோகிதர்களுடையவும், முல்லாக்களுடையவும், பாதிரிகளுடையவும் அவர்களுடைய கூட்டத்தாருடையவும் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கற்பித்துக்கொண்ட புராணப் பிடுங்கல், கற்பனை என்பதை— எல்லா தத்துவஞான அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆகையால், பகுத்தறி வுள்ள மனித ஜீவர்கள் வாழ்க்கையில் கவலையும் துக்கமுமில்லாத ஒரு நிலையை ஒரு நாளும் வெறுக்கவோ, மறுக்கவோ முடியவே முடியாது.

ஆகவே, பொதுவுடைமை என்பது பொது மனித தர்மமென்றும்; சகோதரத் தன்மையும், சமத்துவத் தன்மையும் கொண்டதென்றும்; வேதாந்த தத்துவத்துக்கும், ஆத்திகத் தன்மைக்கும், தத்துவத்திற்கும் ஏற்றது என்றும்; மதத் தலைவர்களுக்கும், தேசியத்துக்கும், நீதிக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்ததென்றும்; அரசர்களுக்கும் செல்வவான் களுக்கும் பாதிரிப் புரோகிதக் கூட்டங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதென்றும்; பொது வுடைமைத் தத்துவமேதான் மோட்ச நிலை என்பதும், முத்திநிலை என்பதுமாகும் என்றும் ஒருவாறு சுருக்கமாய் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

['குடிஅரசு'–தலையங்கம்—10-9-1933]

2. மே தினம்

1933ஆம் வருடம் மே மாதம் 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை, சுயமரியாதையோரால் 'மே தினம்' தமிழ்நாடு முழுமையும் கொண்டாடப்படும்.

உலகெங்கும் கடந்த 50 வருஷமாக மே தினத்தை ஒரு பெருநாளாகத் தொழிலாளர், கிருஷிகள் முதலியோர் கவனித்து வருகின்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப் பட்டவர்களுக்கும், ஏமாற்றப்பட்டவர்களுக்கும் இந்நாள் ஒன்றே உவந்த தினமாகும்.

இந்நாளில் கோடான கோடி மக்கள் தாங்கள்படும் கஷ்டங்களையும், குறைகளையும் தெரிவிப்பான் வேண்டி, ஆங்காங்கு கூட்டங்கள் போடுவதும், ஊர்வலம் வருவதும், உபந்யாசங்கள் செய்வதும் வழக்கமாயிருந்து வருகிறது. இவ் வருஷம் 'மே' தினமாகிய சென்ற திங்களில் (1933, மே 1) ஆங்கில நாட்டிலும் (England), பிரான்சு (France), ரஷ்யாவிலும் (Russia), ஜெர்மனி (Germany), இத்தாலி, (Italy), அமெரிக்காவிலும் (America), இந்தியாவிலும் (India), ஜப்பானிலும் (Japan)—மற்றுமுள்ள தொழிலாளர், முதலாளி தேசங்களிலும் கோடானுகோடி மக்கள் தம்தம் குறைகளைத் தெரிவித்தும், குறைகளுக்குப் பரிகாரம் தேடியும், யோசித்தும் பற்பல தீர்மானங்கள் செய்தும் வந்திருக்கின்றனர்.

இந்த வருஷம், பாரிஸ் பட்டணம், இந்நாளைத் தொழிலாளர் விடுமுறை நாளாகக் கொண்டாடியது. சமதர்ம நாடாகிய சோவியத் ரஷ்யாவில் 16 கோடி ஆண், பெண், குழந்தைகள் அடங்கலாக யாவரும் ரஷ்ய தேசமுழுமையும் இத் தினத்தைக் கொண்டாடி னார்கள். சமதர்மிகளாகிய நாமும் இத் தினத்தைக் கவனிக்காமலிருப்பது பெருங்குறைவே யாகும். இம் மாதம் முதல்நாள் கடந்துவிட்ட போதிலும் வருகிற ஞாயிற்றுக்கிழமை மே மாதம் 21ஆம் தேதி சுயமரியாதை சமதர்ம சபைகள் யாவும், சமதர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சங்கங்கள் யாவும், அத் தினத்தைப் பெருந் தினமாகக் கொள்ளல் மிக்க நலமாகும். அன்று காலையிலும், மாலையிலும் அந்தந்தக் கிராமங்களிலும், பட்டணங்

களிலும்—சமதர்மிகள் ஊர்வலம், சமதர்ம சங்கீதங்களுடன் வரலாம்; ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி சமதர்மம் இன்னதென்றும், தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமுறச் செய்யலாம்; துர்ப்பழக்க ஒழுக்கங்களை ஒழிக்குமாறு பல தீர்மானங்களைச் செய்யலாம். இவ்விதமாக ஒழுங்காகவும், நியாய முறைப்படி கூட்டங்களையும் ஊர்வலங் களையும் நடத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

['குடி அரசு'-அறிக்கை—14-5-1933]

சர்வ தேசங்களிலுமுள்ள தொழிலாளர்கள்—ஆண்களும், பெண்களும் மே மாதம் 1-ஆம் தேதியைத் 'தொழிலாளர் தின'மாகக் கொண்டாடி வருகிறார்கள்,

ரஷ்ய சமதர்மத் தொழிலாளர்கள், தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதின் சந்தோஷத் தையும், பூரிப்பையும் அதன் பலனையும் எடுத்துக் காட்டுகிற தோரணையில் மே தினத்தை ரஷ்யாவில் கொண்டாடுகிறார்கள்.

பிற தேசங்களில், தொழிலாளர்களின் குறைபாடுகளைப் பகிரங்கப்படுத்தி, பரிகாரம் வேண்டுகிற முறையிலும்; தொழிலாளர்களின் சுபீட்ச வாழ்க்கை, சமதர்ம முறையாலும், தொழில் நாயக அரசாலும் (Ergotacracy) அதாவது—தொழிலாளர் குடி அரசாலுமே (Proletarian democracy) சித்திக்குமெனத் தீர்மானிக்கும் முறையிலும் 'மே தினம்' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவிலும் சில வருஷங்களாக, 'மே தினம்' இங்கொரு இடத்திலும் அங்கொரு இடத்திலுமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற வருஷத்தில் இந்தியாவில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டிலோ மே மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது. பின், நமது பிரத்தியேக வேண்டுகோளின்படி மே மாதம் 21 ஆம் தேதி தமிழ் நாடெங்கணும் கொண்டாடப்பட்டது.

சுயமரியாதை வீரர்களே! சமதர்மிகளே! தொழிலாளர்களே! தொழிலாளர்களின் தோழர்களே! இந்த வருஷத்தில் மே தினத்தை மே மாதம் முதல் தேதியில் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள நகரங்கள்தோறும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுகிறேன்.

தேசம், மதம், சாதி என்கின்ற தேசிய உணர்ச்சிகளை மறந்து, உலகத் தொழிலாளர் எல்லாம் ஒரே சமூகமாய் ஒன்றுபட்டு எல்லா தேச, மத, சாதி மக்களுக்கும் வாழ்க்கையில் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படி கொண்டாட வேண்டும் என்றும்; தொழிலாளர் சம தர்ம இராஜ்யம் ஏற்பட வேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயம் ஏற்படும்படி தொழிலாளர்களிடையில் பிரச்சாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும் இம் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['குடி அரசு'-அறிக்கை—28-4-1935]

3. பொதுவுடைமையா? பொது உரிமையா?

தமிழ்நாட்டில் பொதுவுடைமைப் பிரச்சாரகர்கள் பெரிதும் பார்ப்பனர்களாய் இருப் பதால், நாம் அவர்களிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? காங்கிரஸ் என்றாலும், பொதுவுடைமை என்றாலும், இந்து மதம் என்றாலும் அல்லது வேறெந்த பொதுநலப் பேரை வைத்துக்கொண்டாலும் பார்ப்பனர்கள் செய்யும் பிரச்சாரம் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்வதல்லாமல் அவர்களால் வேறு என்ன செய்யமுடியும்?

இலண்டன் பார்லிமெண்டில் சென்ற மாதம் ஒரு மெம்பர் இந்தியா மந்திரியை ஒரு கேள்வி கேட்டார். அதாவது:—

'உலகத்திலேயே எல்லா மக்களையும்விடத் தங்களை உயர்ந்த பிறவிகள் என்று சொல்லிக்கொண்டும்—மற்றவர்களை விட்டு விலகி தனித்து இருந்துகொண்டும்—பாடு படாமல் இராஜபோகம் அனுபவிக்கும் இந்தியப் பார்ப்பனர்கள் இந்த நாட்டுப் பொதுவுடைமைக்காரர்களுடன் சேர்ந்திருக்கிறார்களே, இதன் அர்த்தமென்ன? என்று ஒரு கேள்வி கேட்டார். இதற்கு இந்தியா மந்திரி சிரித்தாராம்!

அதுபோல், பார்ப்பனர்கள் பாடுபடாமலும், எவ்விதக் குறைபாடு இல்லாமலும் வாழ்ந்துகொண்டும் மற்றவர்களுக்கு மேலானவர்களாக இருந்துகொண்டும் பொதுவுடைமைப் பிரச்சாரத்தில் காங்கிரசையும், பார்ப்பனீயத்தையும் கண்டிக்காமல்—அவற்றைக் கண்டிக்கும் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் ஏன் குறை கூறுகிறார்கள் என்றால்—இந்த இரண்டு கட்சிகளும் வருணாசிரம காங்கிரசுக்கும், பார்ப்பனீயத்திற்கும் விரோதமாக இருப்பதால்தானே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர்களுக்கே நன்றாய்த் தெரியும்! என்னவென்றால், வருணாசிரமத்தையும், பார்ப்பனீயத்தையும் பத்திரப்படுத்திவிட்டு எப்படிப்பட்ட பொதுவுடைமையை ஏற்படுத்தி விட்டாலும், திரும்பவும் அந்த உடைமைகள்-வருணாசிரமப்படி பார்ப்பானிடம் தானாகவே வந்து விடும் என்றும்; சாதி இருக்கிறவரையில் எப்படிப்பட்ட பொதுவுடைமைத் திட்டம் ஏற்பட்டாலும் பார்ப்பனர்களுக்கு ஒரு கடுகளவு மாறுதலும் ஏற்படாமல் அவர்கள் வாழ்வு முன்போலவே நடைபெறும் என்றும் தைரியம் கொள்ளத்தெரியும்.

ஆதலால், பார்ப்பனர் பேசும் பொதுவுடைமை, 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதால்' அவர்களுக்கு நட்டம் ஒன்றும் இல்லை என்பதோடு, உடைபட்ட தேங்காயும் அவர்களுக்கேதான் போய்ச்சேரும். அதனால்தான் பார்ப்பனர்களுக்குப் பொதுவுடைமைப் பிரச்சாரத்தில் அவ்வளவு உற்சாகம் ஏற்படக் காரணமாகும்.

நம் தொழிலாளி மக்களும், ஏழை மக்களும், பொறுப்பற்ற வாலிபர்களும் யோசனை அற்றவர்களாதலால் இதில் சுலபத்தில் ஏமாந்து மயங்கி விடுகிறார்கள்.

பொதுவுடைமை வேறு; பொது உரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும்; பொது உரிமை என்பது சம அனுபவம் என்பதாகும்.

இந்நாட்டில் பார்ப்பனீயத்தால்—சாதியால் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களுக்கு சம உடைமை இருந்தாலும் சம உரிமை (அனுபவம்) இல்லை என்பது குருடனுக்கும் தெரிந்த சங்கதியாகும். அதனாலேயே அவர்கள் உடைமை கரைந்துகொண்டே போகிறதுடன் உடைமைக்கு ஏற்ற அனுபவமும் இல்லாமல் இருக்கிறார்கள்.

உதாரணமாக, இராஜா சர். அண்ணாமலை செட்டியார் கோடீஸ்வரர்; சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் பல இலட்சங்கட்கு அதிபதி; இருவரும் பெரும் தனி உடைமைக்காரர்கள். இவர்களுக்கு ஒரு சாதாரண பிச்சைக்காரப் பார்ப்பானுக்கு இருக்கும் பொது உரிமை இல்லை என்பதை அவர்களே ஒப்புக்கொள்வார்கள். ஆனால், தனி உரிமை உள்ள ஒரு கீழ்த்தரப் பிச்சைக்காரப் பார்ப்பானுக்கு உடைமையே அடியோடு இல்லாவிட்டாலும் அவனுடைய போக போக்கியம் குறைவு படுவதே இல்லை. அன்றியும், பாடுபடாமல்—கை முதல் இல்லாமல்—தனக்குள்ள தனிஉரிமை காரணமாகவே தன் மகனை அய். சி. எஸ். படிக்க வைத்து, 'ஜில்லா கலெக்டர்', 'ஜில்லா ஜட்ஜ்', ஏன்—'அய்க்கோர்ட் ஜட்ஜா'கவும், 'சங்கராச்சாரி', 'ஜீயர்' ஆகவும் ஆக்க முடிகிறது.

இந்த நிலையில் தனிஉரிமையை முதலில் ஒழித்துவிட்டோமானால், தனிஉடைமையை மாற்ற அதிகப்பாடுபடாமலே இந்த நாட்டில் பொதுவுடைமை ஏற்பட வசதி உண்டாகும். உண்மையான பொதுவுடைமையும் நிலைத்து நிற்கும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சாதி காரணமாகத்தான் பலர் மேன்மக்களாய்-பணக்காரர்களாய் இருக்கிறார்கள்; இருக்கவும் முடிகிறது. சாதி காரணமாகத்தான் எல்லோரும் கீழ் மக்களாய், ஏழைகளாக இருக்கிறார்கள்; இருக்கவும் வேண்டியிருக்கிறது. இது இன்றையப் பிரத்தியட்சக் காட்சியாகும்.

ஆங்கிலத்தில் 'கேஸ்ட்', 'கிளாஸ்' (caste, class) என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. அதாவது தமிழில் சாதி—வகுப்பு என்று சொல்லப்படுவனவாகும். சாதி-பிறப்பினால் உள்ளது; வகுப்பு-தொழில் அல்லது தன்மையினால் ஏற்படுவது.

தொழிலும், தன்மையும் யாருக்கும் ஏற்படலாம். சாதிநிலை, அந்தந்தச் சாதியில் பிறந்தவனுக்குத்தான் உண்டு; பிறக்காதவனுக்குக் கிடையவே கிடையாது.

மேல் நாட்டில் சாதி இல்லாததால், அங்கு பொதுவுடைமைக்கு முதலில் வகுப்புச் சண்டை துவக்கவேண்டியதாயிற்று. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடைமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்கவேண்டியதாகும்.

பார்ப்பானும், பார்ப்பனீய உணர்ச்சியும் உள்ள மக்கள் பொதுவுடைமை வேஷம் போடுவதால் சாதிச் சங்கதியை மூடிவிட்டு, ஆகாத காரியமான—ஆனாலும் தங்களுக்குக் கேடில்லாததான வகுப்பு (class) உணர்ச்சியைப்பற்றிப் பேசி—சாதியை ஒழிக்கப் பாடுபடும் கட்சிகளோடு ஏழைகளை மோதவிடுகிறார்கள்; சாதியை ஒழிக்கச் செய்யப்படும் முயற்சியையும் அழிக்கப் பார்க்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்கும் மற்றும் மேல் சாதிக்காரர்களுக்கும் இருக்கும் உயர்வை முதலில் ஒழித்தாகவேண்டும். இதிலேயே அரைப் பாகம் பொதுவுடைமை ஏற்பட்டுவிடும். அதாவது, சாதியினால் அனுபவிக்கும் ஏழ்மைத்தன்மையும், சாதியினால் சுரண்டப்படுபவர்களாக இருக்கும் கொடுமையும் நம் பெரும்பான்மை மக்களிடமிருந்து மறைந்துவிடும்.

பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்துகொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம் என்பதை மக்கள் உணரவேண்டும்.

இன்றுள்ள கோயில், குளம், உற்சவம், சடங்கு, பண்டிகை, சுபகாரியம், அசுப காரியம் என்பவைகள் எல்லாம் பிறவி காரணமாகவே சிலருக்கு அதிக உரிமை இருப்பதாலும்—சிலர் சுரண்டுகிறவர்களாய் இருப்பதாலும் ஏற்பட்டு இருந்து வருபவைகளே ஒழிய—அவர்களுக்காகவே இருந்து வருபவைகளே ஒழிய இவற்றிற்கு வேறு காரணம் ஒன்றுமே இல்லை. ஆகவே, சுரண்டப்படும் சாதியாரிடத்தில் உள்ள சாதி இழிவை, மடமையை ஒழிக்க சுரண்டும் சாதியார் முயற்சிப்பார்களா? அல்லது ஒழியத்தான் சம்மதிப்பார்களா?

திராவிடநாடு பிரிந்து—கிடைத்து, சுரண்டும் சாதி ஒழிக்கப்பட்டு, சம உரிமை எல்லோருக்கும் ஏற்படும்படியான உணர்ச்சி வந்துவிட்டால், பிறகு நாம் சுலபத்தில் எதுவும் செய்துகொள்ளமுடியும். அந்தக் காரியத்திற்காகத்தான் சுயமரியாதைக் கட்சி முயலுகிறது. இந்தக் கட்சியில் இன்று மேல்சாதியானுக்கோ அல்லது சாதிப் பேய்—பார்ப்பனீயப் பேய் பிடித்த பெரிய மனிதர்கள் என்பவர்களுக்கோ எவ்வித அதிகப்படியான செல்வாக்கோ, ஆதிக்கமோ இல்லை என்பதையும், இக் கட்சி சாதியிலேயே தொழிலாளர்களாகவும், உண்மைத் தொழிலாளர்களாகவும் ஏழைக் கூலி மக்களாகவும் உள்ள பெரும்பான்மையான மக்களுடைய கட்சி என்பதாகவும் மக்கள் உணரவேண்டும்.

['குடிஅரசு'—தலையங்கம்—25-3-1944]

4. பொதுவுடைமைக்கு விரோதியா ?

நம்முடைய மக்களின் குறைபாடுகளை உணராமல், நமக்குள்ளே ஒற்றுமை இல்லாமல், பார்ப்பனர்மீது குறைகூறுவதில் என்ன இலாபம் ? இவ்வளவு காலம் எடுத்துக் கூறியும் மதத் துறையிலே—கடவுள் துறையிலே—சாதித் துறையிலே யார் அறிவோடு நடந்துகொள்கிறார்கள் ? கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதோ, தேர்த் திருவிழா உற்சவம், கலியாணம், கருமாதி செய்வதோ நின்றதா ? மகாமகக் குளத்திற்குப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது குறைந்ததா ? இந்த சூழல்களைக் கவனியாமல் நாடு ஏழை நாடு, மக்கள் படிக்காதவர்கள் என்றால் என்ன நியாயம் ? இந்த நாடு ஏழை நாடா ? டாட்டாக்களும், பிர்லாக்களும் ஒரு மீனாட்சியம்மனிடத்தில் பிச்சை வாங்க வேண்டாமா ? படிக்க வசதியில்லை. குடிக்கக் கஞ்சியில்லை ! ஆனால், குழவிக் கல்லுக்குத் தங்க ஓடு ; செப்புச் சிலைக்கு வெள்ளித் தேர் ; அதை இழுப்பதற்கு ஆயிரம் முட்டாள்கள்-என்ன நீதி ?

இம் மாதிரியான அறிவுக்குப் பொருத்தமற்ற செயல்களை நீக்கவேண்டும். சிலர் நம்மீது குற்றஞ் சாட்டுகிறார்கள், நாம் பொதுவுடைமைக்கு விரோதிகள் என்று. இவர்களுக்குத் தெரியுமா, இந்த நாட்டில் யார் பொதுவுடைமைத் தத்துவத்தை முதலில் பேசியதென்று ? 14-11-1935-ல், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட என்னுடைய 15 திட்டங்களை இவர்கள் படித்துப் பார்க்கவேண்டும் ; பிறகு கூறட்டும்—இவ்வளவு அரிய பெரிய திட்டங்களையுடைய பொதுவுடைமைக் கட்சி, ஏதாவது உண்டா என்பதை !

[தஞ்சை மாவட்டத்தில், 26-11-1944 முதல் 30-11-1944 முடிய சொற்பொழிவு—'குடி அரசு' 9-12-1944]

5. கம்யூனிசம்

தலைவரவர்களே ! தோழர்களே ! தாய்மார்களே !

கம்யூனிசம் என்பதற்குத் தமிழிலே பொதுவுடைமை என்பார்கள். இன்றைய தினம் உடைமை என்று கருதப்படுவதெல்லாம் தனித்தனி மனிதனுக்குச் சொந்தம். பொதுவுடைமையென்றால் எந்தச் சொத்தும் எந்த மனிதனுக்கும் சொந்தமல்ல. பொதுவுடைமை நாட்டில் அந்த நாட்டுச் சொத்துக்கள் எல்லாம் சர்க்காருக்கு (பொது மக்களுக்கு)ச் சொந்தம். நிலமாக இருந்தால் எல்லா மக்களும் பாடுபட்டுப் பயிர் செய்வது ; தொழிற்சாலையாக இருந்தால் எல்லோரும் தொழில் பண்ணுவது ; பாடுபட்டு வரும் பொருளை எல்லோரும் அனுபவிப்பது.

உதாரணமாக, இந்த உறையூர் ஓர் பொதுவுடைமை நாடாக ஆகின்றது என்று வைத்துக் கொள்வோம். உறையூர் மக்கள் எல்லாம் ஒரு குடும்பம் போன்றவர்கள். எப்படிக் குடும்பத்தின் சொத்தானது குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொதுவானதாகின்றதோ, குடும்பத்தின் எல்லா மக்களும் எப்படிப் பாடுபட்டு உழைக்கின்றார்களோ, பிறகு வரும் வருவாயைக் குடும்பத்திலுள்ள எல்லோரும் எப்படி அனுபவிக்கின்றார்களோ, அதுபோலத்தான், பொதுவுடைமை நாடு என்பதும்.

நாட்டு மக்கள் எல்லாம் ஒரு குடும்பம்போல ; எல்லா மக்களும் பாடுபடவேண்டும் ; வருகின்ற இலாபம்—விளைபொருள் முதலியவற்றை எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிப்பது. இதுதான் பொதுவுடைமையாகும்.

இதன் அடிப்படைத் தத்துவம் என்ன ? இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏன் நடத்தப்படுகின்றது ? என்பனவற்றையெல்லாம் புரிந்துகொண்டால்தான் பொதுவுடைமைத் தத்துவத்தின் சிறப்பு விளங்கும். மனிதன் அறிவைக் கொண்டு வசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால், மனிதனென்றால் கவலை உள்ளவனாகவே இருக்கின்றான்.

பிரதம்ரானாலும், முதன்மந்திரியானாலும் அவர்களுக்கும் கவலைதான்; 'கோடீசுவரன்' ஆனாலும் அவனுக்கும் கவலைதான்; நாட்டை ஆளுபவர்களுக்குப் பல பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டிய கவலை நிலை உண்டாகிறது.

'கோடீஸ்வர'னுக்கு—எப்படித் தனது ஒரு கோடி ரூபாயைக் காப்பது என்பது கவலை; அத்தோடு நின்று விடுவதில்லை; தனக்கு ஒரு கோடி ரூபாய்தானே உள்ளது— அடுத்தவனுக்கு 2 கோடி இருக்கின்றதே என்று தம்மினும் மேம்பட்டவனைப்பற்றிக் கவலை யடைகின்றான்.

ஏழை தனக்குச் சாப்பாட்டிற்கு வழியில்லையே—அவன் நல்வாழ்வு வாழ்கின்றானே என்ற வேதனையடைகின்றான். குச்சு வீட்டுக்கும் வழியில்லாத ஒருவன், வசதிபடைத்த ஒருவன் பங்களாவில் வாழ்வதைப் பார்த்து மனம் புழுங்குகிறான். இதுபோலக் கவலை, மனக் குறையென்பது எல்லாத் துறைகளிலும் இருக்கின்றது.

பெண்டு பிள்ளைகள் மட்டும் சும்மாவா? சும்மா இருக்கின்ற மனிதன் ஒருத்தியைக் கட்டிக்கொண்டு எவ்வளவு வேதனையும் கவலையும் படுகின்றான்? கட்டிக் கொண்டவளைக் காப்பற்றனும்; மற்றவன் கண்ணடிக்காமல் பார்த்துப் பாதுகாக்கனும்; அவள் குட்டிகள் போட்டால் அவைகளைப் பாதுகாக்கனும்; படிக்கவைக்கனும்; கலியாணம் செய்யனும். அப்புறம் கல்வி; இரண்டாவது, உத்தியோகம்—வேலை தேடிக் கொடுக்கனும். பிறகு, 'பிரமோஷனு'க்குப் பிறரிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சனும்; மாற்றலானால் 'கேன்சல்' பண்ணிச் சொந்த ஊருக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் எனக் கெஞ்சனும். இப்படி யாக சதா கவலை, மனக் குறைவு உடையவனாகவே மனிதன் இருக்கின்றான். இந்தக் கவலைகளை, மனக் குறைகளை எல்லாம் பொதுவுடைமை ஒன்றினால்தான் நிவர்த்திக்க முடியும்.

பொதுவுடைமை என்று கூறுவதன் அடிப்படைத் தத்துவமே, மனிதன் கவலையற்ற வாழ்வு வாழவேண்டும் என்பதுதான். சொந்த உடைமை என்பது கவலை நிறைந்த வாழ்வாகும்.

மனிதனுக்கு உணவுப் பண்டம் பற்றவில்லையானாலும், சற்றுக் குறைவாக இருப்ப தனாலேயே குறைகூறமாட்டான். ஒருவனுக்கு அதிகம்; இன்னொருவனுக்குச் சும்மா— ஒன்றுமில்லை என்றிருந்தால்தானே குறைபாட்டுக்கு—எதிர்ப்பதற்கு இடமேற்படும்!

மனிதனுடைய கவலைக்கும் குறைபாட்டிற்கும் பரிகாரமாக, முடிந்த முடிவாக அறிஞர்களால் பலகாலும் சிந்திக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டதுதான் பொதுவுடைமைத் தத்துவம்.

இதன்மூலம் சந்தோஷமான, கவலை-துக்கமற்ற, தெளிவுள்ள வாழ்க்கை மக்களுக்குக் கிட்டுகின்றது. மனிதன் சிந்தித்து அறிவை வளர்த்துக்கொண்டே போனால் அங்குதான் (பொதுவுடைமையில்தான்) கொண்டுபோய்விடும்.

இன்றைக்கு இந்தக் கொள்கையினை ஏற்றுக்கொண்ட மக்கள் 100 கோடிகளுக்கு மேல் உலகில் வாழ்கின்றார்கள். ரஷ்யா பொதுவுடைமை நாடு; அங்கு 25 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். அடுத்து சீனா; அங்கும் கம்யூனிஸ்ட் ஆட்சிதான், 75 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். இவை இல்லாமல் அங்கேரி, போலந்து, செக்கோஸ்லோவேக்கியா, ஆஸ்ட்டிரியா, கிழக்கு ஜெர்மனி—இன்னும் அனேக கம்யூனிஸ்ட் நாடுகளும் உலகில் உள்ளன. ஏராளமான மக்கள் அங்கும் வாழ்கின்றார்கள்.

இந்த நாடுகளில் மக்களுக்குக் கடவுளோ, மதமோ, சாஸ்திரமோ, முன்னோர்கள் நடப்போ ஒன்றும் கிடையாது; அறிவுதான் பிரதானம்.

நம் நாட்டிலும் கம்யூனிஸ்டுக்காரர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு மட்டும் பொதுவுடைமையைச் சாதனமாகப் பயன்படுத்திக்கொள்கின்றார்களே ஒழிய, பொதுமக்கள் கடைத்தேற ஒன்றும் செய்யவில்லை; பொதுவுடைமை என்றால் மக்களுக்கும் ஒன்றும் தெரியாது.

எனவே, நாட்டில் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்ட அரசாங்கம் ஏற்பட்டு முயன்றால்தான், மக்களின் குறைபாடுகள் நீங்குமே ஒழிய, பொறுக்கித் தின்னும் இந்தக் கம்யூனிஸ்ட்டுகளின் காலித்தனம், பலாத்காரத் தூண்டுதல் மூலம் ஒன்றும் முடியாது. அரசாங்கத்தைக் கைப்பற்ற ஆட்சி இந்தத் துறையில் ஈடுபட்டால்தான் மார்க்கம் ஏற்படும். ஒருவன் சட்டைப் பையில் இருப்பதை இன்னொருவன் எடுப்பதுபோல், ஒருவன் நிலத்தில் மற்றொருவன் பிரவேசிப்பதால் இது ஆகிவிடாது.

மோட்சம், முக்தி என்ற வார்த்தைக்கு 'துக்கநாசம்' 'சுகப் பிராப்தி' என்பது பொருள்.

இந்தத் துக்க நிவர்த்திக்கும், குறைபாடுகள் ஒழிப்பிற்கும் பரிகாரம்—பொது வுடைமைதான் ஆகும்.

குறைபாடு இரண்டு விதங்களில் உண்டு. போதவில்லை என்பது ஒன்று—அதாவது கால்படி அரிசி தேவையானால் அதற்கும் குறைவாகக் கிடைக்கின்றதே என்பது.

இரண்டாவது, போதுமான அளவுக்குமேல் வேண்டும் என்று ஆசைப்படுவது. உதாரணமாக ஒரு 'ரூமில்' வசிப்பவன் இரண்டு ரூம்கள் இருந்தால் நன்றாய் இருக்கும் என்று ஆசைப்படுவது.

இப்படி ஆசையினால் ஏற்பட்ட குறையும் தேவையினால் ஏற்பட்ட குறையும் பொது வுடைமையினால் தீர்ந்துவிடும்.

இருக்கின்ற உணவுப் பொருள் எல்லோர்க்கும் பகிர்ந்து கொடுக்கப்படும்போது, ஒரே விதமாக எல்லோருக்கும் உணவுப் பொருள் கிட்டுவதால், தமக்குக் குறைவு என்ற எண்ணம் ஏற்படாது; எல்லோருக்கும் ஒரு 'ரூம்'தான் என்று எண்ணி சமாதானம் அடைந்து கொள்வான்.

இதனாலேயே, போட்டி பொறாமை ஏற்பட வழி இருக்காது; கவலை ஒழிந்து எல்லோரும் மன நிறைவோடு வாழச் செய்யும்.

ரஷ்யாவில் புருஷனும் மனைவியுமாக வாழ்கின்றவர்களுக்கு வசிக்க அறை கொடுக்கின்றார்கள்; மற்ற வசதிகளும் செய்துகொடுக்கின்றார்கள். இருவரும் இஷ்டப் பட்டுச் சேர்ந்து வாழுகின்றனர்; இஷ்டம் இல்லாதபோது பிரிந்துகொள்கின்றனர்.

இருவரும் ஆபீசுக்குப் போகும்போது முத்தம் கொடுத்துவிட்டுப் போகின்றனர். திரும்பி வந்து பார்த்தால் 'டேபிளில்' ஒரு கார்டு இருக்கும். 'இதுவரைக்கும் நாம் இருவரும் இஷ்டப்பட்டுக்கூடி சந்தோஷமாக வாழ்ந்தோம். இனி எனக்கு இஷ்டம் இல்லை; பிரிந்து கொள்வோம்' என்று இருவரில் யாராவது ஒருவர் எழுதிவைத்து இருப்பார்கள்; ஒரு தகராறும் இல்லாமல் பிரிந்துகொள்வார்கள். அதனால் ஏதாவது விவகாரம் ஏற்படும் என்றால்—அது, இருவருக்கும் பிறந்த குழந்தைகளைப் பற்றியேயாகும்; 100-க்கு 90 பங்கு அவர்களே அதை 'பைசல்' பண்ணிக்கொள்வார்கள்—'இந்தப் பிள்ளை உன்னோடு இருக்க வேண்டியது; இது என்னோடு இருக்கவேண்டியது' என்று. தகராறு ஏதாவது ஏற்பட்டால்,அதற்கு என்று சில 'கோர்ட்டு'கள் இருக்கின்றன; அவைகள் அதைத் தீர்த்து வைக்கும்.

அங்கு. ஒருவன் மனைவியை இன்னொருவன் அனுபவித்தான் என்பது பற்றிய பேச்சே வராது; அனுபவிக்கப் பலாத்காரம் பண்ணினான் என்றால்தான், 'கேஸ்'.

அங்கு பிள்ளைகளைத் தாய் தந்தையர்தான் காப்பாற்றவேண்டும், வளர்க்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. அரசாங்கமே ஏற்று வளர்த்துக்கொள்கின்றது. இங்கு நம்மவர்கள் 'எதற்கடா குழந்தை?' என்றால், 'செத்த பிறகு கொள்ளிவைக்க, ஈமக்கடன் செய்ய' என்கின்றான்; மற்றும் 'அந்திய காலத்தில் எங்களைக் காப்பாற்ற, கஞ்சி ஊற்ற அவசியம் குழந்தை வேண்டும்' என்கின்றான்; 'என் சொத்துக்கு வாரிசாக வேண்டும்' என்கின்றான்.

ரஷ்யாவில் அப்படியல்ல. அவன் உடலில் வலுவுள்ளவரைக்கும் உழைத்துச் சாப்பிடுகின்றான்; வயோதிகம் வந்தால் அரசாங்கம் அவனுக்கு உணவு முதலிய வேண்டிய சவுகரியங்கள் எல்லாம் செய்துகொடுத்துக் காப்பாற்றுகின்றது. அங்கு தனி மனிதனுக்குச் சொத்து வைத்துக்கொள்ள உரிமையில்லாத காரணத்தினால், தம் சொத்துக்கு வாரிசு—பிள்ளை இருந்தாகவேண்டும் என்ற அவசியமுமில்லை.

தோழர்களே! பொதுவுடைமை நாட்டில் கடவுளோ, மதமோ, சாஸ்திர நம்பிக்கையோ இல்லை. அங்கு உயர்ந்தவன், தாழ்ந்தவன்; உயர்ந்த உத்தியோகஸ்தன், தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்கின்ற நிலையுமில்லை. எல்லோரும் சமமானவர்கள்; எல்லோருக்கும் சம்பளம் (வாழ்க்கை வசதி) ஒன்றுதான்—வேலைதான் வேறு, வேறு. அங்கு பெரிய வேலையை ஒத்துக்கொண்டால் பொறுப்புக்கள் அதிகம் என்று கருதுவான்.

எனவே, அங்கு மேல், கீழ் என்று பாராட்டப்படுவதேயில்லை.

இதனால் அங்கு உற்பத்தி பெருகுகின்றது. இங்கு 100 பங்கு விளைகின்றதென்றால் அங்கு 150 பங்கு, 200 பங்கு விளைகின்றது.

அங்கு ஒரு ஆள் இத்தனை மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்றும், இவ்வளவு வேலை செய்தாக வேண்டுமென்றும் உள்ளது. 'டைம்' முடிந்தால் நம் நாட்டுத் தொழிலாளர்கள்போல அவர்கள் ஓடமாட்டார்கள்; அதிகப்படியாகக் கொஞ்சநேரம் வேலை, அவனாக முன்வந்து செய்வான். இப்படிச் செய்கின்றவர்களின் வேலைகளையும் நேரத்தையும் கணக்கிட்டு, வருஷமோ, மாதமோ ஆன பிறகு அவர்களுக்குப் பட்டம் கொடுத்து மரியாதை பண்ணுவார்கள்.

தோழர்களே! அங்கு இந்த மரியாதையினைத்தான் எதிர்பார்ப்பானேயொழிய அதிகப்படி பணத்தை எதிர்பார்க்கவேமாட்டான். அங்கு புரட்டோ, திருட்டோ ஏமாற்றுவதோ அடியோடு கிடையாது.

அங்குக் கழிப்பிணித்தனம் அவமானமாகக் கருதப்படும்; நாணயம் என்பது மக்களிடம் கரைபுரண்டு ஓடும். அங்கு, நான் கூறியதுபோல—மக்களுக்கு எந்தவிதமான குறைபாடுகளோ, கவலைகளோ இல்லை. இதன் காரணமாக மக்கள் அங்கு 100 வயதிலும் 120 வயதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வாழ்கின்றார்கள்.

அங்கு 1915-ல் புரட்சி ஏற்பட்டது; 1920-ல் சோவியத் ஆட்சி என்று பிரகடனப் படுத்தினார்கள்; இன்றைக்குச் சுமார் 54 வருஷங்கள் ஆகின்றன. இந்தக் காலத்துக்குள்ளாக எவ்வளவோ மேம்பாடு அடைந்து இருக்கின்றது. எனவே, இங்கு எனக்குத் தோன்றிய பொதுவுடைமை என்பதுபற்றிச் சுருக்கமாகக் கூறினேன்.

[திருச்சி சிந்தனையாளர் கழகச் சார்பில், உறையூரில், 9-1-1972-ல் ஆற்றிய சொற்பொழிவு—
'உண்மை'-பிப்ரவரி, மார்ச் 1972]

5. தொழிலாளர் இயக்கம்

1. தொழிலாளர் சங்கம் ஏன்?

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நான் இதுவரை எந்தத் தொழிலாளர் சங்கத்திலும் பேசியதே இல்லை. டாக்டர் வரதராஜுலு நாயுடுவுடன் இரண்டொரு சங்கங்களுக்குப் போயிருக்கிறேன். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மாநாட்டில் உபசரணைத் தலைவராக இருந்து இரண்டொரு வார்த்தைகள் பேசி இருக்கிறேன்.

பொதுவாக, 'தொழிலாளர் சங்கம்' என்றாலே எனக்கு அதனிடத்தில் விருப்பம் இருப்பதில்லை. அதில் ஒரு சத்து இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. சில, வெறும் வெளி ஆசாமிகள் அதைத் தம் நன்மைக்கும் கீர்த்திக்கும் ஏற்படுத்திக்கொண்ட சாதனமென்பதே என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயம். அல்லாமலும், நமது நாட்டில் உண்மையான தொழிலாளிகளே கிடையாது.

நமது நாட்டில் இப்போது தொழிலாளிகள் என்று சொல்லப்படுவோரெல்லாம் தொழிலாளிகளல்லர். அவர்கள் எல்லாம் கூலிக்காரர்கள்தாம். தொழிலாளி என்பவன்—நாட்டின் நன்மைக்காக ஒரு தொழிலைக் கற்று அத்தொழிலைத் தானாகவே சுயேச்சையுடன் செய்து அதன் பலன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி. நீங்கள் அப்படியில்லை. ஏதோ ஒரு முதலாளியின் கீழ் தினக் கூலிக்கமர்ந்து உங்களுக்கு எவ்வித சுதந்திரம் இல்லாமல் முதலாளி சொல்லுகிறபடி செய்துவிட்டு, அதன் பலன் முழுவதும் அவரே அடையும்படி செய்து, உங்கள் ஜீவனத்திற்குக்கூட போதுமானதாயில்லாத கூலியை வாங்கிப் பிழைக்கிறீர்கள். ஒரு முதலாளிக்குக் கீழ் வேலை செய்து கூலி வாங்குபவன் எவ்வளவு பெரிய கூலிக்காரனானாலும் அவன் கூலிக்காரன்தான்; அடிமைதான்.

தொழிலுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் பலனுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் அருமை, உங்களுக்கு ஏதாவது தெரியுமா? காலையில் பட்டறைக்குள் நுழைந்தால் மாலை வரை அவன் சொல்லுகிறபடி உழைக்க வேண்டியது! வாரம் ஒரு முறை கூலி வாங்கிக்கொள்ள வேண்டியது! தெருக்களில் கூலிக்கு மூட்டை தூக்கி அவ்வப்போது கூலி வாங்கும் நபருக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் தங்களுக்குக் கூலி போதாது, அதிக பாரமாயிருக்கிறது இன்னும் சேர்த்துக் கொடு என்று முதலாளியைக் கேட்பதற்கும்—நீங்கள் சங்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு செய்யும் தீர்மானங்களுக்கும் என்ன வித்தியாசம்? சில சமயங்களில் கூலிக்காரனாவது தான் தூக்கும் பாரத்தையும், தூக்கிக்கொண்டு செல்லும் தூரத்தையும் அறிந்து கூலி அதிகம் கேட்கிறான். நீங்கள் அதுகூட இல்லை. உங்கள் தொழிலின் அருமை இன்னதென்றுகூட உங்களுக்குத் தெரியாமல், முதலாளியைப் பார்த்து, 'நீ இவ்வளவு ரூபாய் கொள்ளையடிக்கிறாயே; நீ இவ்வளவு சுகப்படுகிறாயே!' என்ற பொறாமையின் மேல்—'ஏன் எனக்கு இன்னும் கொஞ்சம் கூலிசேர்த்துக் கொடுக்கக் கூடாது?' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுகிறீர்கள். தனித் தனியாய்க் கெஞ்சுவதற்குப் பதில் நாலுபேராய்ச் சேர்ந்து கெஞ்சுவதைத் தொழிற்சங்கம் என்கிறீர்கள். அதுவும் உங்களுக்குக் கெஞ்சிக்கேட்க சக்தி இல்லாமல்—உங்கள் தொழிலிலோ, கஷ்டத்திலோ கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத ஒருவரை, உங்கள் சங்கத் தலைவராயும், காரியதரிசியாயும் சில சமயங்களில் நிர்வாகஸ்தர்களாகவும் வைத்துக்கொண்டு கூலியை உயர்த்தும்படி கேட்கிறீர்கள்.

ஒரு முதலாளியிடம் வேறு ஒருவன் போய், 'அய்யா, உங்களிடம் உள்ள கூலிக்காரர்களுக்குக் கூலிபோதவில்லை; கொஞ்சம் சேர்த்துக் கொடுங்கள்' என்று கேட்டால்—அந்த முதலாளிக்கு, கூலிக்காரர்களிடம் என்ன மதிப்பு இருக்கும்? அதுபோலவே, உங்கள்

சவுகரியத்திற்கு வேறொருவன் போராடுகிறான் என்றால் உங்களுக்கு உங்களுடைய தேவை இன்னதென்று கூடத் தெரியவில்லை என்பதுதானே பொருள்? பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உபாத்தியாயரிடம் போய், 'எனக்கு வயிறு வலிக்கிறதென்று எனது தாயார் சொன்னார்கள்; ஆதலால் இன்று எங்களுக்கு லீவுகொடுங்கள்' என்று கேட்பதுபோலவே— நீங்கள் வேறொருவரை உங்கள் சங்கத்திற்குத் தலைவராக வைத்துக்கொண்டு காரியங் களைச் செய்வதும், உங்களுக்குச் சம்பந்தமில்லாதவைகளைப் பின்பற்றுவதுமாகும். வெளியிலிருந்து உங்களுக்குத் தலைவராய் வருபவர்களுக்கு—முதலாவது உங்கள் வேலையி லுள்ள கஷ்டமும், உங்களுக்கு இருக்கும் கஷ்டமும் எப்படித் தெரியும்?

உதாரணமாக, இதுசமயம் நமது நாட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். யாருக்காவது உங்கள் தொழிலின் அருமை தெரியுமா? உங்கள் கஷ்டத்தின் கொடுமை தெரியுமா! அவர் தனது கீர்த்திக்காக உங்களுக்குத் தலைவராய் இருப்பார். அவர் ஒரு தொழிலும் செய்யாமல் மாதம் 500, 1000, 5000, 10,000 என்று பொதுஜனங்களின் பணத்தை உங்கள் முதலாளிகளைப் போலவே கொள்ளையடித்துக் கொண்டு, சுகபோகம் அனுபவித்துக்கொண்டு, தனது சுயநலத்தை நாடிக்கொண்டிருப்பவரா யிருப்பார். அவர்களால் உங்களுக்கு எந்தவிதத்தில் அனுகூலம் கிடைக்கக்கூடும்? அவர்களைக் கண்டால் உங்கள் முதலாளிகள் எப்படி மதிக்கக்கூடும்? இதே முகாந்திரங் களால்தான் நமது நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் இதுவரை உருப்படியாகாமல் போயின.

அனேக இடங்களில் வேலை நிறுத்தம் (Strike)—வெளியேற்றம்(Lock-out) நிகழ் கின்றன. இவைகள் ஏற்பட்டு என்ன பலன் கிடைத்தது? எவ்வளவு தொழிலாளிகளுக்கு வேலைபோய் கஷ்டம் உண்டாயிற்று? இவற்றை எந்தத் தலைவர் கவனித்தார்? எவ்வளவு தொழிலாளிகள் தம் தலைவர்களின் வார்த்தைகளைக் கேட்டதின் பலனாய், வயிறாரக் கஞ்சி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்? மற்றும் பல தலைவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உங்கள் முதலாளிமார்களிடம் உத்தியோகம் பெற்றுக் கொண்டு தானிருக்கிறார்கள். விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவதைப்போல, வெளியார் களை உங்கள் சங்கத் தலைவர்களாக வைத்திருக்கின்றீர்கள்.

இது மாத்திரமல்ல, உங்கள் சங்கதியே உங்களுக்குத் தெரியாமல் இப்படித் திண்டாடும் போது, சூதாட்டத்திற்குச் சமமான அரசியல் கட்சிகளில் உங்கள் சங்கங்களை நுழைத்துக் கொள்கிறீர்கள்; தனித் தனியாகவும் நுழைகிறீர்கள். கூலிக்காரனுக்கும் அரசியலுக்கும் வெகு தூரம். அரசியல் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வயிற்றுக்குக் கூலிகேட்கவே உங்களுக்குத் தெரியவில்லையானால், உலகத்துக்குத் தேவையை நீங்கள் அறிவது எப்படி? உங்களுக்கு இருக்கும் வியாதிகள் இன்னதென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கும்போது, நீங்கள் ஊராருக்கு வைத்தியம் செய்வதென்பது சிரிப்பாயிருக்க வில்லையா? உங்களுடைய அரசியல் என்ன! முதலியாரை வண்டியில் வைத்து இழுக்க லாமா; நாயுடுவை வண்டியில் வைத்து இழுக்கலாமா; அய்யங்காரை வண்டியில் வைத்து இழுக்கலாமா; நாயக்கரை வண்டியில் வைத்து இழுக்கலாமா என்பது போன்றவையும்— யாரைச் சட்டசபைக்கு அனுப்பலாம்; யாருக்கு 'ஜே' போடலாம்; யாருக்கு ஓட்டுச் செய்யலாம் என்பதுதானே? நீங்கள் வண்டிசவாரி செய்யலாமா? நீங்கள் சட்டசபைக்குப் போய் உங்கள் தேவைகளைக் கவனிக்கலாமா—என்கின்ற கவலையே உங்களுக்கில்லையே! எப்பேர்ப்பட்ட உண்மைத் தலைவர்கள்—மகாத்மா போன்றவர்கள் அரசியல் என்பதை உதறித் தள்ளிவிட்டு ஏழைகள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டும்; ஒடுக்கப்பட்டவர் களையும், தாழ்த்தப் பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்று தனியே இருந்து இரவும் பகலும் உழைக்கும்போது—உங்களுக்கென்ன அரசியல் அழுகின்றது?

இப்போது அரசியலில் உழலும் யாருக்காவது விடுதலை என்றால் என்ன? உரிமை என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? தொழிலாளர் விடுதலை என்றால் என்ன

என்பது தெரியுமா? எப்பொழுதாவது வாயைத் திறந்து சொல்லி இருக்கிறார்களா? வயிற்றுப் பிழைப்பிற்கும் உத்தியோகத்திற்கும் 'உரிமை, உரிமை', 'சுயராஜ்யம், சுயராஜ்யம்', 'தொழிலாளர், தொழிலாளர்' என்று கத்தினால் நீங்களும் அதில் சேர்ந்து கத்துவதா? உங்கள் நிலைமையை இன்னதென்று அறியாமல் இப்படி மோசக் காரர்களுடன் சேர்ந்து, அவர்களை உங்கள் தலைவர்களாக்கிக் கொண்டு, அவர்கள் பின்னால் திரிந்தீர்களானால், நீங்கள் மற்றவர்களை வண்டியில் வைத்து இழுக்கவும், உங்கள் கழுத்தில் கயிறுகட்டிச் சந்தைகளில் கொண்டுபோய் விற்கவும்தான் ஆவீர்களே தவிர, ஒருக்காலும் நீங்கள் மனிதர்களைப்போல வாழமுடியாது.

கண்டிப்பாய் நீங்கள் அரசியலில் சேரவேகூடாது. அரசியல் உங்களிடம் வந்து சேரட்டும், அரசியல்காரர் உங்களைத் தலைவர்களாகக் கொள்ளட்டும். அப்பேர்ப்பட்ட நாளை எதிர்பாருங்கள்!

உங்கள் சங்கங்களுக்கெல்லாம் நீங்களே தலைவர்களாகுங்கள். உங்கள் நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் எல்லாரையும் ஒன்றுசேருங்கள். பிறகு தொழிலாளர் கட்சி என்று ஒரு பொதுக்கட்சியை ஏற்படுத்துங்கள். அதில் உங்கள் தொழிலின் பலன் முழுவதையும் நீங்களே அடையத் தக்கதாகவும், தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளையும், பொது மக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் கொள்கையாக வைத்துப் பரப்புங்கள். அதில் எல்லோரையும் வந்து சேரும்படி செய்யுங்கள். தொழிலாளர் கட்சி நாட்டை ஆளும்படி செய்யுங்கள். அதை விட்டுவிட்டு, எடுப்பார் கைக் குழந்தையாகத் திரிவது தொழிலாளர் உலகத்திற்கே மானக்கேடு. உங்கள் நிலை என்ன? மாடு, கன்றுகள் வளர்க்கிறவர் களாவது, அவைகளிடம் வேலை வாங்கிய பின்னர் நிழலில் கட்டுகிறார்கள்; வேளா வேளைக்குத் தண்ணீர் காட்டுகிறார்கள். உங்களுக்கு அந்த சவுகரியங்கூட எங்கே இருக்கிறது? பகலெல்லாம் உழைக்க வேண்டியது; கூலி வாங்க வேண்டியது; அதை குடிக்கோ, கூத்திக்கோ, சூதுக்கோ செலவு செய்ய வேண்டியது; பட்டினி கிடக்கவேண்டியது; பெய்யும் மழையும் அடிக்கும் வெயிலும் உங்கள் மேலேயே படவேண்டியது என்கிற கேவல நிலைமையிலிருக்கின்றீர்கள். உங்களில் இரண்டொருவர் சுகப்படுவதை நினைக்காதீர்கள். பெரும்பான்மையாய் எப்படி இருக்கிறீர்கள்? இதைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை. உங்கள் ஓட்டுக்கு மாத்திரம் அதிகக் கிராக்கி; யாராவது பணம் கொடுத்து அல்லது யாருக் காவது பணம் கொடுத்து உங்கள் ஓட்டுகளை வாங்கிப் பதவியைப் பெற்று விடுகிறார்கள்.

ஆதலால், இன்று முதல் அரசியலையும், அரசியல்காரரையும் மறந்துவிடுங்கள். உங்கள் சங்கத்திற்கும், வருஷாந்திரக் கொண்டாட்டங்களுக்கும் தொழிலாளர்களையே தலைவர்களாக ஏற்படுத்துங்கள். அவர்களுக்குச் சக்தி இல்லையே என்று குறை கூறாதீர்கள். அது உங்களுக்கு அவமானம். அதைவிட மோசமானவர்களை நீங்கள் தலைவர்கள் என்கிறீர்கள். அயோக்கியர்களைவிட முட்டாள்கள் நல்லவர்கள் என்றே சொல்லுவேன். இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு காரியங்களை நடத்துங்கள். கூடிய சீக்கிரம் எல்லாம் சரிப்பட்டுப் போகும்.

நான் ஒரு சிறுகதை கேள்விப்பட்டிருக்கின்றேன். ஒரு குளத்திலுள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டுமென்று கடவுளைக் கேட்டதாகவும், கடவுள் ஒரு மரக்கட்டையைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அம் மரக்கட்டை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளிடம் எங்களுக்குக் கொடுத்த தலைவர் உபயோகமில்லையென்றும் வேறு தலைவர் வேண்டுமென்றும் கேட்டதாகவும், கடவுள் ஒரு பாம்பைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அப் பாம்பு தினம் 10 தவளை களைத் தின்று வந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளை நோக்கித் தங்களுக்குக் கொடுத்த தலைவரை எடுத்துக்கொள்ளும்படி வேண்டி, தங்கள் காரியத்தை வேறொரு தலைவரில் லாமல் தாங்களே பார்த்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அதுபோல, உங்களிலேயே உங்களுக்குத் தலைவர்களும், காரியதரிசியும், நிர்வாகிகளும் கிடைக்க வில்லையானால் கண்டிப்பாய் உங்களுக்குச் சங்கம் வேண்டாம். இந்த நிலையில் நீங்களும், சங்கம் வைத்து நடத்தச் சக்தியற்றவர்கள். உங்களுக்குள் தலைவர் ஏற்பட்டு நடத்த சக்தி ஏற்படும் வரை முதலாளிகளை அனுசரித்தே பிழையுங்கள். வீணாக, 'குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு விட்டதுபோல்' உங்கள் உழைப்பால் உங்கள் முதலாளிமார் பிழைப்பதோடல்லாமல்—உங்களால் மோசக்காரர் பிழைக்கும்படி செய்து நீங்கள் கஷ்டப்படாதீர்கள். நீங்கள் என்னைக் கூப்பிட்டபோதே இதைத்தான் சொல்லலாம் என்று நினைத்தேன். இதுதான் உங்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, நீங்கள் கதரை ஆதரிக்கவேண்டும். தொழிலாளராயிருப்பவன் முதலாவது செய்யவேண்டிய வேலை மற்றொரு தொழிலாளியை ஆதரிக்க வேண்டியது தான். ஆதலால், கிராமத்துப் பெண்மணிகள், நமது சகோதரிகள் தொழிலற்று—கூலியுமற்று—தமக்கும் தமது பிள்ளை குட்டிகளுக்கும் ஆகாரமில்லாமல் பட்டினி கிடந்து—விபச்சாரம் செய்யத்தக்க நிலையில் இருக்கும்போது, நீங்கள் அவர்களை அலட்சியம் செய்து, அவர்களது தொழிலை ஆதரிக்காமல் மல் துணிகளையும், மில் துணிகளையும் ஆதரிப்பதானது மிகவும் பாதகமான காரியமாகும். கதரை ஆதரித்தால் நீங்கள் காலக்கிரமத்தில் கூலிக்காரர்கள் என்ற பெயர் மாறி உண்மையான தொழிலாளியாவீர்கள்.

[நாகையில், 25-5-1926-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 30-5-1926]

2. பார்ப்பனரும் தொழிலாளரும்

சென்னைப் பார்ப்பனத் தலைவர்கள் தாங்கள்தாம் தொழிலாளர்கள் விஷயத்தில் அதிக அக்கறையுள்ளவர்களென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் தங்களால்தாம் செய்யக் கூடுமென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவங்களெல்லாம் தாங்கள்தாம் வாங்கிக்கொடுக்கக் கூடுமென்றும் சொல்லி, இதுகால பரியந்தம் தொழிலாளர்களை ஏமாற்றி, அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்றுப் பதவிபெற்று வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சென்ற வருஷத்திய முனிசிபல் தேர்தல்களிலும், சட்டசபைத் தேர்தல்களிலும், அதற்குமுன் நடந்த தேர்தல்களிலும் இப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை அறியாமல் ஏமாந்து, தொழிலாளர்கள் தங்களுடைய ஓட்டுகளையெல்லாம் பார்ப்பன அபேட்சகர்களுக்கே கொடுத்து, பார்ப்பனரல்லாதாரைத் தோற்கடிக்கச் செய்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்படியிருக்க, இப்போது மேற்படி தொழிலாளச் சகோதரர்களில் தங்களுக்குத் தாங்களே பிரதிநிதியாய் இருக்கலாம் என்பதாகக் கருதி, வரப்போகும் சென்னை முனிசிபல் தேர்தலுக்குத் தங்கள் சகோதரர்களிலேயே இரண்டொருவரை அபேட்சகர்களாய் நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை அறிந்த மேற்படி பார்ப்பனர்கள் தொழிலாளர்களை ஏமாற்றப் புதியதாய் ஒருவழி கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அது என்னவென்றால், தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால், அவர்கள் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியில் சேரவேண்டுமாம்; இல்லாவிட்டால் அவர்கள் நிற்கக்கூடாதாம். இது எவ்வளவு வஞ்சகமானதென்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டும். என்னவெனில், காங்கிரசிலோ சுயராஜ்யக் கட்சியிலோ தொழிலாளர்கள் சேருவதானால் தொழிலாளிகளின் முதலாளிமார்கள் அவர்களை எப்படியாவது கெடுத்துவிடக்கூடும்; அதனால் தொழிலாளிகள் காங்கிரசில் சேரமுடியாமல் போய்விடலாம்; இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு, தொழிலாளிகளைச் சுலபமாகத் தள்ளிவிடலாம் என்பதுதான். தொழிலாளிகளுடைய ஓட்டுப்பெறும்போது மாத்திரம் யாரையாவது பிடித்து அவர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்றுவிடலாம் என்கிற தந்திரத்தின்பேரில் பார்ப்பனர்களின் 'தொழிலாளர் அனுதாபம்' நிற்கிறது. நமது தொழிலாள நண்பர்களோ இந்தச் சூழ்ச்சிகளை அறியாமல் 'எடுப்பார் கைக் குழந்தை'களாயிருக்கின்றார்கள். இவைகளை எல்லாவற்றையும்

அறிந்தேதான், நாம், தொழிலாளிகள் அரசியல் சம்பந்தமான எந்தக் கட்சியிலும் சேரக் கூடாது என்றும் அவர்கள் தங்கள் கால்களிலேயே நிற்கக்கூடிய சக்தியைப் பெறவேண்டு மென்றும், அது கொஞ்ச காலம் தாமதமானாலும் குற்றமில்லை என்றும் பேசியும் எழுதியும் வந்தோம். நாம் இப்படிப்பேசி, எழுதி வந்ததைப்பற்றிப் பல 'தொழிலாளர்கள் தலைவர் களுக்கும்' நம்மீது மனஸ்தாபம் ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மாநாட்டு உபசரணைத் தலைவர் முறையிலும் இதையே சொன்னோம்; 'மித்திரன்' அதைப்பற்றி மிகுதியும் கோபம் கொண்டது. ஆனபோதிலும் இன்னமும் நாம் அதே கொள்கையுடன் தான் இருக்கிறோம்.

இப்போது சென்னை காங்கிரஸ் கமிட்டியில் முனிசிபல் தேர்தலுக்கு அபேட்சகர்கள் நிறுத்தும் விஷயத்தில் ஸ்ரீமான்கள் சிங்காரவேலு செட்டியாருக்கும், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் முதலியவர்களுக்கும் நடந்த சம்பாஷணை, அடிதடி சண்டை முதலியவைகள் நடந்திருப்பதையும்; தொழிலாளர் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் சிவராவ், கலியாணசுந்தர முதலியார் முதலியவர்கள் பேசிய பேச்சுகளிலிருந்தும் பார்ப்பனத் தந்திரங்கள் நன்றாய் விளங்குகின்றன. இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இவ்வரசியல் புரட்டுகளின் மாய்கையில் இருந்து விலகுவார்களா என்பதுதான் நமது கோரிக்கை. அப்படி அவர்கள் விலகித் தனிப்பட்ட ஓதாவில் தொழிலாளி என்கிற முறையில் தேர்தலுக்கு நிற்பார்களானால், நாமும் நம்மாலானதைச் செய்யத் தயாராய் இருக்கிறோம் என்றும், எந்தக் கட்சி எதிர்த்தாலும் அதை ஒரு கை பார்த்துவிடலாம் என்றும் நமது தொழிலாளர் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—24-4-1927]

3. தொழிலாளர் சத்தியாக்கிரகம்

சகோதரர்களே!

தொழிலாளர்கள் குறைகள் உண்மையானவை என்பது எனது அபிப்பிராயம். இரயில்வேக்காரர்கள், திடீரென்று மூன்று, நான்கு ஆயிரம் பேர்களை வேலையிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அது உண்மையான சிக்கனத்தை முன்னிட்டாவது அல்லது இலாபம் கட்டவில்லை என்பதற்காவது, அல்லது ஜனங்களின் நன்மைக்காக இரயில் சார்ஜைக் குறைப்பதற்கென்றாவது இத்திட்டத்தை அனுசரிப்ப தானால் எனக்குச் சந்தோஷமே.

அப்படிக்கில்லாமல், சீமையில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, அங்கிருந்து இயந்திரங்கள் தருவிக்கவும், வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் சார்பாருக்கும் வேலை கொடுப்பதற்கும் இம் மாதிரி சூழ்ச்சி செய்கின்றார்கள். தென்னிந்திய இரயில்வேக் காரர் மற்ற எல்லா இரயில்வேக்காரர்களைவிட அதிகக் கொள்ளை அடிக்கின்றார்கள். மற்ற இரயில்களில் மெயிலுக்குக்கூட மைலுக்கு இரண்டரைக் காசு சார்ஜ். ஆனால், இவர்கள் நான்கு காசு, நாலரைக் காசு வாங்குகிறார்கள். வண்டி சவுகரியம் மற்ற வண்டிகளைவிட எஸ். அய். ஆர். இரயிலில் மிகக் கொடுமையானது. சம்பளம், கூலி முதலியவைகளும் நம்மவர்களுக்கு மற்றவர்களைவிட மிகக் கொஞ்சமாகவே கொடுக்கின்றார்கள். இந்த நிலைமையில் இவர்கள் சிக்கனமென்பது இந்தியர்கள் வாயில் மண்ணைப்போட்டு வெள்ளைக்காரர்கள் வயிறுவெடிக்கச் செய்யும் கொடுமையேயாகும்.

நிற்க, இரயில்களில் நடந்த அபாயங்களுக்கெல்லாம் இரயில்வே அதிகாரிகளே காரண மாவார்கள். ஏனெனில், வேலைநிறுத்தம் செய்வதாக முன்னெச்சரிக்கை கொடுத்துத்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இரயில்வேக்காரர்கள் எச்சரிக்கையாய் இருந்திருக்க வேண்டும். ஒரு வேலைநிறுத்தம்

என்றால் என்னென்ன காரியங்கள் நேரும் என்பது அதிகாரிகள் அறிந்த விஷயம்தான். மேல்நாடுகளின் வேலை நிறுத்த அனுபவம் தெரிந்த வெள்ளைக்காரர்கள் அலட்சியமாய் இருந்தது மிகவும் கண்டிக்கத் தகுந்தது. கலகக்காரர்களும், காலிகளும் தொழிலாளர் களிடம் அனுதாபம் கொண்ட வாலிப இரத்த ஓட்டமுள்ளவர்களும் இன்னமும் என்னென்ன செய்வார்கள் என்பது நாம் சுலபத்தில் முடிவு கட்டக்கூடியதல்ல. இதற்காகத் தொழி லாளர்கள் மீது குற்றம் சொல்லுவது அறியாமையேயாகும்.

உதாரணமாக, திருச்சி பாலக்கரை ஸ்டேஷனுக்கு அருகில் லயனில் உள்ள கேட்டில் கதவில்லை என்றும், காவலில்லை என்றும் தெரிந்து வண்டியைவிட எப்படி இரயில்வே அதிகாரிகள் சம்மதித்தார்கள் என்று நான் கேட்கின்றேன். அப்படிக் கவலையின்றி இஞ்சின் விட்டதால் மோட்டார் பஸ் மீது ஏறி 10 பேர்கள் கச கசவென்று நசுங்க நேர்ந்தது. இதற்கு யாரைத் தண்டிக்கவேண்டும் என்று நீங்களே யோசியுங்கள். நல்ல அரசாங்கமாய் இருந்தால் இஞ்சின் ஓட்ட ஆதாரமாய் இருந்தவர்களில் 10 பேரைத் தூக்கில் போட்டு, இனி இம் மாதிரி நடக்காமல் பந்தோபஸ்து செய்திருக்கும். அப்படிக்கில்லாமல், மேல்கண்ட 10 பேர் நசுக்கப்பட்டுப் போனதற்காக விசனப்பட்ட ஜனங்களைச் சுட்டார்களாம். இது என்ன ஒழுங்கு! இது அதிகாரம் இருக்கின்றது என்கிறதும், துப்பாக்கியும் குண்டும் மருந்தும், சொன்னபடி கேட்கப் போலீஸ் படையும் இருக்கின்றது என்கிறதுமான ஆண வத்தைக் கொஞ்சமாவதும் காட்டுகின்றதா, இல்லையா என்று கேட்கிறேன். இம் மாதிரிக் கொடுமைகளும் ஆத்திரம் மூட்டத்தக்க காரியமும் செய்துவிட்டு, 'பொறுமையாய் இருங்கள்! சாந்தமாய் இருங்கள்!' என்று சொன்னால் அது வார்த்தை அளவில் இருக்குமேயல்லாது காரியத்தில் பயனளிக்குமா?

தவிர, 144 போடுவதாலும், ஜெயிலில் வைப்பதாலும் என்ன காரியத்தைச் சாதிக்க முடியும்? 144-யை மீறுவது வெகு கஷ்டமானகாரியமா என்று கேட்கின்றேன். பலாத்காரமான காரியங்கள் யாராலானாலும் சரி, நடந்ததாகக் காணப்படாதிருந்தால் 144-யை மீறும்படியே கட்டளை இட்டிருப்பேன். ஜெயிலில் போடுவதால் யாரும் பயந்து விடமாட்டார்கள். ஜெயில் அனுபவம் எனக்கு நன்றாய்த் தெரியும். மூன்று, நான்கு தடவை நான் அனுபவித்துப் பார்த்தவன். உள்ளேபோய் வெளியில் வரும்போது உடல் எடை 10 இராத்தல் அதிகமாகவே தான் வருவேன். ஆதலால், அந்தப் பூச்சாண்டிக்கு யாரும் பயப்படமுடியாது. மரியாதை யாகத் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கியோ, அல்லது அவர்களைச் சமாதனப் படுத்தியோ ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாக முடியும்.

கடைசியாக, நான் பொதுமக்களையும், தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்வ தாவது: எந்தக் காரணத்தை முன்னிட்டும் பலாத்காரமும், பொறுமை இழத்தலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், பலாத்காரம் ஏற்படுவது அதிகாரி களுக்கு நன்மையாகவும் நமக்குக் கெடுதியாகவும் முடியும். ஒத்துழையாமையின்போதுகூட திடீரென்று திருவாளர். காந்தி இயக்கத்தை நிறுத்த நேர்ந்ததற்குக் காரணம் பலாத்காரம் ஏற் பட்டதுதான். அதனாலேயேதான் அவ்வியக்கம் தோல்வி அடைந்ததாகக் கருதநேரிட்டது. ஆதலால், பலாத்காரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நமது கடமையாகும். போலீசார் மீது குற்றம் சொல்லுவதில் யாதொரு பயனுமில்லை. அவர்கள் சம்பளத்திற்காக மேல் அதிகாரி சொன்னபடி கேட்கும் நிபந்தனை இல்லாத அடிமைகள். அவர்கள் எஜமான் சொன்னபடி நடக்காவிட்டால் வேலை போய்விடும். 144 போட்ட மாஜிஸ்டிரேட்டிடமும் நாம் குற்றம் கண்டு பிடிப்பது முட்டாள்தனம். வெள்ளை அதிகாரிகள் சொன்னபடி உத்தரவு போடாவிட்டால் வேலை போய்விடும். அப்புறம் உபாதானமெடுக்க வேண்டியதோ கருமாந்தர வீட்டில் தட்சணைக்குப் போகவேண்டியதோ அவர்கள் கடமை ஆகிவிடும். ஆதலால், பொறுமை இழக்காமல் பலாத்காரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எங்களா லான உதவி கடைசிவரை செய்யக் காத்திருக்கின்றோம். பலாத்காரம் ஏற்பட்டால், அதுவும் தொழிலாளர்களால் நடந்தது என்பதாகத் தெரிந்தால், நாங்களும் விலகிக் கொள்வோம்

என்பதைக் கண்டிப்பாய்ச் சொல்லுகின்றேன். மற்றபடி இங்கு நடத்தப்போவதாய் சொல்லப் படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னாலான பண உதவியும், ஆள் உதவியும் செய்யத் தயாராய் இருக்கின்றேன்.

[ஈரோட்டில், 27-7-1928-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 29-7-1928,
சென்னை 'திராவிடன்' தினசரி 30-7-1928]

4. தொழிலாளர் பிரச்சினை

தோழர்களே!

உங்களுடைய மாநாட்டில் தலைமை வகிக்கும் பேற்றை எனக்களித்து இந்தச் சந்தர்ப்பத்தில் எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள வசதி அளித்ததற்கு எனது நன்றியறிதலை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பற்றிப் பல தோழர்கள் கவிராயர்கள்போல் புகழ்ந்து கூறியதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகிலும், அப் புகழ்ச்சி உரைகளுக்கு நான் தகுதி யுடையவனல்ல வென்றும், அப் புகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு பாகத்துக்காவது தகுதி யுடையவனாக என்னை ஆக்கிக்கொள்வதற்கு அவைகளை உபயோகப்படுத்திக் கொள் கிறேன் என்றும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பற்றிப் பேசிய பலர் வைக்கம் சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதை நடத்துவித்ததும் அது வெற்றியாய் முடிவுபெறக் காரணமாய் இருந்ததும் நானேயாவேன் என்று பேசினார்கள். அதையும் ஒப்புக்கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். வைக்கம் சத்தியாக் கிரகத்தில் பெயரளவுக்கு என் பெயர் அடிபட்டாலும் அதன் உற்சாகமான நடப்புக்கும், வெற்றிக்கும் வாலிபத் தோழர்களுடைய வீரம் பொருந்திய தியாகமும், சகிப்புத் தன்மையும் கட்டுப்பாடுமே காரணமாகுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிற்க, தோழர்களே! தொழிலாளர் பிரச்சினை என்பது உலக மக்கள் சமூகத்தின் பிரச்சினையேயாகும்.

ஏனெனில், உலக மக்களில் 100-க்கு 90 பேருக்கு மேம்பட்டவர்கள் 'தொழிலாளிகள்' என்னும் தலைப்பின் கீழ்தான் வருவார்கள். எப்படியெனில், தொழிலாளிகள் என்றாலே மனித சமூகத்தில் சரீரத்தினால் பாடுபட்டு வேலை செய்து ஜீவனம் செய்யும் மக்களாவார்கள்.

இந்தப்படி ஜீவனம் செய்வதிலும் அன்னியருக்காக என்று பாடுபட்டு, அன்னியர் சுகமாய்ப் போக போக்கியத்துடன்—சரீரத்தினால் பாடுபடாமல் வாழக்கூடிய ஒரு கூட்டத்திற்காக என்று உழைத்துவிட்டு, மேலும் மேலும் உழைப்பதற்கும், தாங்கள் சீக்கிரம் இறந்துவிடாமல் இருப்பதற்கும், தங்கள் ஜீவதசைக்குப் பிறகும் அன்னியருக்கு உழைத்துப் போடுவதற்காகச் சந்ததிகளை ஏற்படுத்தி, அவர்களையும் அன்னியருக்கு உழைக்கவே தற்புத்தி செய்யவும், எவ்வளவு வேண்டும் அவ்வளவை மாத்திரமே அடைவதற்குத் தகுதியுடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கின்றவர்களா வார்கள்.

ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் உலக மக்கள் சமூகத்தில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலானவர்களாய் இருப்பதால்தான், இப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினையை உலக மக்கள் பிரச்சினை என்று சொல்லவந்தேன். ஆனால், இப்படிப்பட்ட பெரும் சமூகப் பிரச்சினையை ஒரு தனிப் பிரச்சினை என்பதாக (தொழிலாளர் பிரச்சினை என்று) ஒதுக்கி வைத்திருப்பதும் மிகச் சிறு தொகை கொண்ட தனிப்பட்ட வகுப்பார்களது பிரச்சினையை —அதாவது பாடுபடாமல் அன்னியர் உழைப்பால் வாழும் மக்களாகிய எஜமானத் தன்மை— முதலாளித் தன்மை கொண்ட 100-க்கு 10 பேர்களாய் உள்ள மக்களின் பிரச்சினையைப்

பொதுப் பிரச்சினையாக்கி, அதைப் பற்றியே எல்லா மக்களும் கவனிக்கும்படியானதா யிருந்துவரும் காரணம் என்ன என்று உங்களில் பலர் கருதலாம். அதற்குக் காரண மெல்லாம், உலகம் – பாடுபடாத சோம்பேறிக் கூட்டத்தார், சூழ்ச்சிக் கூட்டத்தார் ஆகிய முதலாளித் தன்மை, புரோகிதத் தன்மைக் கூட்டத்தார் என்பவர்களின் ஆதிக்கத்தில் இருப்பதால் அப்படிப்பட்ட அவர்களுடைய பிரச்சினையே உலகப் பொதுப் பிரச்சினையாக ஆகிவிட்டது. முன் குறிப்பிட்ட தொழிலாளிக் கூட்டத்தார், எண்ணிக்கையில் பெரும் பான்மையானவர்களாய் இருந்தும், ஆதிக்கமற்றவர்களாகவும் அடிமைத்தனத்தின் பேரிலேயே தங்களது வாழ்வை நிர்ணயித்துக் கொண்டவர்களாகவும் இருந்துகொண்டு இந்தத் தன்மையையே 'உலக இயற்கை' என்று கருதிக்கொண்டிருப்பதால் (தொழிலாளர் பிரச்சினை) 100-க்கு 90 மக்களது பிரச்சினை–பொதுப் பிரச்சினையாகக் கருதப்படுவதற் கில்லாமல் போய்விட்டது.

ஆகவே, தொழிலாளி மக்கள் பிரச்சினை உலக மக்கள் பிரச்சினை என்கின்ற கருத்தின்மீதே அது சம்பந்தமாக எனக்குப்பட்ட சில விஷயங்களை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தோழர்களே! இன்றைய உலக நிலை அதாவது, மனித சமூகத்தின் வாழ்க்கைத் தன்மையானது துக்கம், கவலை, அதிருப்தி, சாந்தியற்றதன்மை, ஒருவருக்கொருவர் தாழ்ந்த தன்மை, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளுந்தன்மை ஆகியவைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக்கொண்டு இருக்கத் தக்கதாகவே இருந்துவருகிறது. இந்த நிலையானது இன்று, நேற்று ஏற்பட்டது என்று சொல்லிவிடுவதற்கு இல்லாமல் உலகம் தோன்றியதாகச் சொல்லப்படும் காலமுதல் நாளதுவரையிலும் எவ்விதமான மாறுதலும் இல்லாமலே இருந்து வருகிறது.

மனித சமூகத்தில் உள்ள இவ்விதமான கஷ்டங்களையும், கொடுமைகளையும், குறைகளையும் நிவர்த்திப்பதற்காகவென்று வெகுகாலமாகவே அதாவது நமக்குச் சரித்திரப் பூர்வமாய் விளங்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே அநேக மனிதர்கள், கடவுள், கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன், கடவுள்தன்மை பெற்றவர் என்னும் பெயர்களாலும்; ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், மகாத்மாக்கள், ஞானிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்ற பெயர்களாலும் தோன்றி எவ்வளவோ காரியங்கள், திருத்தப்பாடுகள் உண்டாக்கியதாக எழுதிவைக்கப்பட்டும் சொல்லப்பட்டும் வருகின்றது. மேற்கண்ட ஒவ்வொருவருடைய தோன்றுதலுக்கும் காரணமாக—பெரிதும் உலகத்தில் தர்மம் குன்றி விட்டதாகவும், அதர்மம் அதிகரித்துவிட்டதாகவும், துஷ்டர்களால் சாதுக்கள் கஷ்டப்படுவ தாகவும், வலியோரால் எளியோர்கள் துன்பப்படுவதாகவும், அவைகளை யெல்லாம் போக்குவதற்காகவென்றே தோன்றி அதர்மத்தை ஒழித்து, துஷ்டர்களைச் சிட்சித்து, சாதுக்களையும் ஏழைகளையும் கஷ்டப்படும் மக்களையும் இரட்சிப்பதற்காகவே தோன்றினார்களென்றும் சொல்லப்பட்டு வருகிறது.

மற்றும், இந்த 'தெய்வாம்சம் பெற்றவர்கள்' என்ற கூட்டத்தவர்களால் மனித சமூக வாழ்க்கையின் ஒழுங்குக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் வேதங்கள், நீதிசாஸ்திரங்கள், மற்றும் நீதியைப் போதிக்கும் சாதனங்கள் என்பவைகளும், எண்ணிக்கைக்கும் எல்லைக்கும் கட்டுப்படாத அளவுக்குக் குவிந்து கிடக்கின்றன.

இவைகளின் பயனாகவெல்லாம் அனேக காலமுதல் நாளதுவரையில் பெரும்பான்மை யான மனித சமூகத்திற்குச் சிறிதாவது கஷ்டமோ, துன்பமோ, கவலையோ ஒழிந்திருப்ப தாகச் சொல்லமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

எப்படிப்பட்ட கடவுளோ, அவதாரமோ, கடவுள்தன்மை பெற்றவர்களோ, ஞானிகளோ, மகான்களோ தோன்றிய காலங்களிலும் மற்றும் அவர்களது ஆதிக்கத்திலும்,

ஆட்சியிலும் உலகம் இருந்துவந்த காலங்களிலுங் கூட—ஜனசமூகத்திற்கு இன்று இருக்கிற கஷ்டமேதான் இருந்து வந்திருக்கிறதென்பதை எந்தச் சரித்திரத்திலும் காணலாம்.

'தர்ம ராஜ்யம்' 'ராம ராஜ்யம்' 'சத்தியகீர்த்தி ராஜ்யம்' என்று சொல்லும்படியான காலங்களில் எல்லாங்கூட இன்று காணப்படும் கொடுமையும், அதர்மமும், கஷ்டமும், தரித்திரமும், அடிமைத்தன்மையும் இருந்துகொண்டுதான் வந்திருக்கின்றன என்பது சரித்திரங்களிலும், சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் தாராளமாய்க் காணப்படுகின்றன.

எனவே, இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? இப்படிப்பட்ட பெரியார்கள் என்பவர்களால் மனித சமூகத்திற்குள்ள கஷ்டங்கள், துன்பங்கள் ஏன் ஒழிக்கப்படவில்லை? இவர்களால் எல்லாம் ஆகாத காரியம் நம்மால் ஆகிவிடுமா? என்பன போன்ற விஷயங்களை யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகேதான், நாம் இனி என்ன செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அப்படிக்கெல்லாம் இல்லாமல், கூடிக் கூடிப்பேசி பழைய பாடங்களையே படித்து, கஷ்டப்படுபவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, அவர்களது கஷ்டங்களை வர்ணித்துப் பேசிக் கண்ணீர்விட்டுப் போவதென்பது, 'அரைத்த மாவை அரைத்தது போலும், சிரைத்த தலையைச் சிரைத்தது போலும் ஆகுமே ஒழிய பலன்தரத்தக்க காரியம் எதுவுமே நம்மால் முடியப்போவதில்லை.

ஆகவே, ஏன் இந்தப் பழைய நிலை மாறவில்லை என்றும், மாற்றுவதற்காகத் தோன்றிய பெரியார்கள் எல்லாம் ஏன் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்றும் யோசித்துப் பார்ப்போமேயானால், முறையே அதன் காரணமும் அப்படிப்பட்டவர்களின் தவறுதலும் நமக்கு நன்றாய் விளங்கும்.

எனக்குத் தோன்றிய வரையிலும் 'பெரியார்'களுடைய முயற்சிகளெல்லாம் வெற்றி பெறாமல் போனதற்குக் காரணம், அப்பெரியார்கள் 'கஷ்டநிலை' என்பதற்குக் காரணம் என்ன என்பதையே சரியாய் உணரவில்லை என்றுதான் சொல்லுவேன். அஸ்திவாரத்தில் உள்ள கோளாறுகளை இலட்சியம் செய்யாமல் மேலும் மேலும் கட்டடங்கள் கட்டியதாலேயே, கட்டின கட்டடங்களெல்லாம் இடிந்து விழுந்துகொண்டே வந்துவிட்டன. இதனால் இன்று இடிந்து விழுந்த பழுதுபட்ட சாமான்களும், வாழ்வுக்குதவாக் குட்டிச் சுவர்களுமாகத்தான் அம் முயற்சியின் பலன்கள் காணப்படுகின்றன. ஆதலால்தான் பயன்படவில்லை.

ஒரு விவகாரத்தை ஒழிக்க (பைசல் செய்ய) முன்வந்த ஒருவன் 5-ம், 5-ம் பன்னிரண்டு என்று கருதிக்கொண்டு விவகாரத்தைத் தீர்க்க முற்படுவானேயானால், அப்படிப்பட்டவனால் விவகாரம் சரியான தீர்ப்பு அடைய முடியுமா? அதுபோலவே, உலகக் கஷ்டத்தைப் போக்குவதற்குத் தோன்றிய அவதாரங்கள் (பெரியார்கள்) எல்லாம், மனித சமூகத்தின் கஷ்டங்களுக்குக் காரணமாயிருப்பது மனித சமூகத்திலுள்ள சிலரின் சூழ்ச்சி என்றும் அக்கிரமமான நடத்தை என்றும் கருதாமல், தங்களால் நிரூபிக்கச் சாத்திய மற்றதும் தங்களுக்கே புரியாததுமான ஒரு வஸ்துவைக் கற்பனை செய்து கொண்டு, அதற்கே சகல சக்திகளையும் கொடுத்து, எல்லாவற்றிற்கும் அதையே பிணையாக்கி, அதன் பேரிலேயே எல்லாப் பழிகளையும் போட்டு, அதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் காட்டி, அதன் தயவினாலேயே உலகக் கஷ்டங்களைப் போக்க முயற்சிப்பதாகச் சொல்லி, அந்தப்படியே மக்களையும் நம்பச் செய்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இப்பொழுது தோன்றுகிறவர்களும் தங்களை 'மகான்கள்' என்றும், 'ஞானிகள்' என்றும், 'உலகக் கஷ்டத்தை ஒழிப்பதற்குக் கடவுள் அருளால் தோன்றி, கடவுள் அருளால் இருந்து, கடவுள் கட்டளைப்படி நடந்து வருவதாகவும்' சொல்லுகிறபடியால் அவர்கள் ஒரு காரியத்தையும் செய்ய முடியாமல் இருப்பதோடும், கஷ்டங்களையும், கஷ்டத்திற்கு ஆதாரமாக இருப்பவைகளையும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதாகவே செய்து வருகிறார்கள்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இத்தனை பெரியார்கள் என்பவர்களும் தங்கள் முயற்சியால் வெற்றிபெறாமல் போனதற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிக்கச் சக்தி இல்லாமல் போய்விட்டதால், அவர்கள் அச் சக்தியற்ற தன்மையைத் தைரியமாய் ஒப்புக்கொள்ள இஷ்டப்படாமல் 'இவ்விதக் கஷ்டங்களும் துன்பங்களும், கீழ்-மேல் நிலையும், அதிருப்தியும், சாந்தமற்ற நிலையும் மனித சமூகத்திற்குத் தவிர்க்கமுடியாதது' என்றும், 'இதுவே உலக இயற்கை' என்றும் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். இதைத்தான் இன்று சகல துறைகளிலும் அடக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மனித சமூகம் ஒட்டும் நம்பிக்கைகொண்டு இயற்கையையோ, தெய்வத்தின் அருளையோ எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இதன்றி, இனி மற்றொரு காரணம் என்னவென்றால், அதாவது இன்றைய மேற் கண்ட நிலைகள் மனித சமூகத்திற்குப் பெருந் துன்பமாய் இருந்தும், மனிதனுக்குப் பகுத்தறிவு என்பதான ஒரு விசேஷ சிந்தனா சக்தி இருந்தும், அத் துன்பத்தை ஒழித்துக் கொள்ள அது பயன்படாமல் போனதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால், மனித வாழ்க்கையில் மனிதன் தான் இன்று உயிருடன் இருக்கும்போது அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பங்கள் ஆகியவை எல்லாம் இலட்சியம் செய்யத் தக்கதல்லவென்றும் அதாவது, இந்த வாழ்வே நிலையற்றதென்றும், மனிதன் இறந்த பிறகு தீர்ப்பு நாளிலோ அல்லது மற்றொரு உலகமாகிய மேல் லோகத்திலோ அனுபவிக்கப்போகும் விஷயங்களே முக்கியமானதென்றும், அதைப்பற்றியே மனிதன் கவலை செலுத்தவேண்டும் என்றும் மதங்கள் மூலம் கற்பிக்கப் பட்டதும் ஒரு முக்கிய காரணமாகும். இத்தியாதி காரணங்களே—இந்தவிதமான கற்பனைகளே மனித சமூகத்தின் துக்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு இடையூறாய் இருந்து வந்திருக்கின்றன.

அப்படிக்கில்லாமல் இருக்குமானால், உலகிலுள்ள ஜீவராசிகளில் எல்லாம் விசேஷமானது என்றும் மனித ஜீவனுக்கு உயர்ந்த ஞானமும், அறிவும், சிந்தனாசக்தியும் இருந்து வருகின்றது என்றும் சொல்லப்பட்ட ஒரு சமூகம் இவ்விதக் கீழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்து வந்திருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இது இப்படி இருக்க, தொழிலாளிகளுக்கு உள்ள கஷ்டங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தோழர்களே! உலகமானது தொழிலாளர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டுத் தொழிலாளர்களாலேயே நடைபெற்று வருவதாய் இருந்தாலும், உலக வாழ்க்கையில் உள்ள சகல விதமான தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும், கவலைகளுக்கும், தொழிலாளிகளே ஆளாகி வருகின்றார்கள். சகல அய்ஸ்வர்யங்களும், சுகபோகத்துக்கு வேண்டிய சகல சாதனங்களும் தொழிலாளிகளாலேயே உண்டாக்கப்படுவதாய் இருந்தாலும்—தொழிலாளிகளுக்குத்தான் வயிறார உண்ண உணவில்லை என்கின்ற குறையும், இடுப்பாரக் கட்டத் துணி இல்லை என்கின்ற குறையும், இருக்க இடமில்லை என்கின்ற குறையும், நாளைக்கு என்ன செய்வது என்கின்ற கவலையும்; மற்றும் காயலா வந்தால் வைத்தியத்துக்கு என்ன செய்வது, பெண்சாதி பிரசவத்திற்கு என்ன செய்வது, பிள்ளை படிப்புக்கு என்ன செய்வது, சாவு, கல்யாணம் ஆகியவைகளுக்கு என்ன செய்வது என்பதுபோன்ற அனேகக் கவலைகள், குறைகள் இருந்து வருகின்றன. தொழிலாளிகள் அல்லாத மனிதருக்கோ இவ்வித கவலைகள் ஏதுமில்லை. இவர்களுக்கெல்லாம் தொழிலாளிகளின் உழைப்பால் சேமித்த பொருளை எப்படிப் பத்திரப்படுத்துவது, எப்படி மேலும் மேலும் பெருக்குவது, எப்படி அதிகமான சுகபோகங்களை அனுபவிப்பது என்பதுபோன்ற கவலைகளேயாகும். இன்னும் ஏதாவது கவலை இருக்குமானால், அது நாமே உலகில் பெரிய சீமானாக எப்படி ஆவது; நாம் செத்த பிறகும் நமது பெருமையும், புகழும், செல்வமும் நமது பிள்ளைகளுக்கும், நமது பேரன்களுக்கும் உலகமுள்ள அளவும் எப்படி நிலைத்திருப்பது என்பது போன்றவைகளுமேயாகும்.

இவைகள் தவிர, முதலாளிகள் என்பவர்கள் தங்கள் நிலை என்றும் நிலைத்திருக்கவும், தொழிலாளிகள் என்னும் பேரால் உலகப் பெரும்பான்மையுமான மனித சமூகம் தங்களை எதிர்க்காமலும், தாக்காமலும் இருப்பதற்காக வேண்டிய பந்தோபஸ்துக்காக ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியவர்களுமாகின்றார்கள். நாளாவட்டத்தில் அந்த ஆட்சியின் ஆதிக்கத்தையும் தங்கள் கைக்குள் கொண்டு வந்துவிடவே முயற்சிப்பவர்களாகவுமிருந்து வருகிறார்கள். இதனால் முதலாளிகளின் வாழ்வுக்கும், செல்வம் சேர்ப்பிப்பதற்கும் மாத்திரம் தொழிலாளிகள் பாடுபடுகிறார்கள் என்பதில்லாமல், இந்த முதலாளிகளைக் காப்பாற்றவும் தொழிலாளிகளை அடக்கவுமான காரியத்தின் செலவுக்கும் இந்தத் தொழிலாளிகளே பாடுபட்டு உழைக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் சரீரத்தால் பாடுபட்டு உழைக்கும் மக்களாகிய தொழிலாளிகளுடைய நிலைமை நாளுக்குநாள் அடிமைத்தனத்திலும் தரித்திரத்திலுமே அமிழ்த்தப்படுகின்றது.

ஆதலால், தொழிலாளிகளுடைய கஷ்டமும், துன்பமும், அடிமைத்தனமும், கவலையும் குறையும் நீங்கவேண்டுமானால் முதலாளித்தன்மை என்பது இல்லாமல் போயே ஆக வேண்டும். அப்படிக்கு இல்லாமல், வேறு எப்படிப்பட்ட காரியம் செய்தாலும், தொழிலாளி துன்பமும், இழிவும், தரித்திரமும் ஒருநாளும் ஒழியாது. மனிதனுக்கு இருக்கும் தரித்திரமும், துன்பமும், குறைவும் என்பதெல்லாம்—மற்றவனைவிட நாம் அதிகமாய்க் கஷ்டப்படுகின்றோமே, மற்றவனைவிட நாம் தாழ்மையாய் வாழ்கின்றோமே, மற்றவன் நம்மை அடக்கி ஆளுகின்றானே என்கின்ற மனப்பான்மைகளேயாகும். இந்த மனப்பான்மையை ஒழிக்க வேண்டுமானால், மற்றவனுக்கும் நமக்கும் வித்தியாசம் காணப்படாத ஒரு நிலையை உண்டாக்குவதேயாகும்.

உதாரணமாக, 100 வருஷத்திற்கு முன், 50 வருஷத்திற்கு முன் மனிதர்களின் சாதாரண வாழ்க்கை இருந்ததைவிட, இன்றைய வாழ்க்கைத் திட்டங்கள் அனேக வழிகளில் ஓரளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பது பிரத்தியட்சம். அப்படியிருந்தும் அந்த அளவுக்கே மற்ற நிலையில் உள்ளவர்கள் திட்டமும் உயர்ந்துவிட்டதால், திட்டம் உயர்ந்தாலும் நிலைமையும் தன்மையும் முன்போலவேதான் இருக்கின்றது. தொழிலாளிகளின் கவலை எல்லாம் தங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்பதல்ல; தங்களுடைய நிலைமை மற்ற யாருடைய நிலைமைக்கும் தாழ்ந்ததாக இருக்கக்கூடாது என்பதேயாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும்; பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் கூடாது என்பதுதான் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் முக்கியத்துவமாய் இருக்கவேண்டும்.

அப்படிக்கில்லாமல், ஏதோ 2 அணா, 4 அணா கூலி உயர்த்தப்படுவதற்காகப் போராடுவதென்பது பயனற்றதேயாகும். ஏனெனில், நமது கிளர்ச்சியில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால், தொழிலாளிகளால் செய்யப்படும் சாமான்களின் பேரில் முதலாளிகள் ஒன்று சேர்ந்து நாலணா விலை அதிகப்படுத்திவிடுவார்கள். அந்த உயர்ந்த விலையைக் கொடுத்துச் சாமான் வாங்கவேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே, முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலது கையில் கூலி அதிகம் கொடுத்து, இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்வார்கள். முதலாளிகளுடன் கூலித் தகராறு என்பது, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள புல்லுருவிக் கூட்டமான தரகர்களுடைய சூழ்ச்சியேயாகும். 4 அணா கூலிக்கு வேலை செய்த மக்கள் இன்று 14 அணா கூலி பெறுவது எனக்குத் தெரியும். இதன் பயனாய் அவனுடைய நிலை சிறிது கூட உயர்ந்ததாகச் சொல்லமுடியாது. அடிமைத் தன்மையும், தரித்திரமும் அவனைச் சூழ்ந்துகொண்டே இருக்கின்றது. 4 அணா கூலி கொடுத்த முதலாளி அப்போது இருந்ததைவிட இப்போது 14 அணா கொடுக்கும்போது எத்தனையோ பங்கு மேன்மையாய் மோட்டாரிலும், ஆகாய ரதத்திலும் செல்லுகிறான்; சந்திரகாந்த மண்டபத்தில் வசிக்கிறான். ஒருநாளைக்கு 4 அல்லது 5 கையெழுத்துப் போடுவதுடன் அவனது வேலை

முடிவடைந்து விடுகின்றது. இந்த நிலையை அவன் பிள்ளை பிள்ளை தலைமுறைக்குப் பத்திரப்படுத்திக் கொள்கிறான். தொழிலாளி நிலை இந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறதா பாருங்கள். அவன் பிள்ளைகள் 3-வது, 4-வது பாரம் வரையிலும்கூட படிக்கமுடியவில்லை; ஓதம் (ஈரம்) இல்லாத இடத்தில் படுக்கமுடியவில்லை; இடுப்புக்குத் தவிர மேலுக்குத் துணி இல்லை. இந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

[5-9-1933-ல் கொச்சியிலும், 10-9-1933-ல் ஆலப்புழையிலும், 23-9-1933-ல் திருநெல்வேலியிலும் சொற்பொழிவு—'குடிஅரசு' 1-10-1933]

5. இரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம்

இந்தியாவிலுள்ள இரயில்வேக்களில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் யாவரும் இம் மாத இறுதியில் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக ஏற்பாடுகள் சில நாட்களாகவே நடந்துவருகின்றன. இன்றைய 'முதலாளித்தன்மை ஆட்சி'யில் தொழிலாளிகள், சிப்பந்திகள் தங்கள் மனிதத் தன்மையான வாழ்வுக்கு வேலைநிறுத்தம் செய்து, இடர்ப்பட்டு சமாளித்துத்தான் வெற்றிபெற முடியுமே அல்லாமல் மற்றபடி எந்தச் சமதர்ம 'தேவதையும்' வந்து இந்தக் காரியத்தைச் சாதித்துக்கொடுக்க முடியாது. இந்தப்படி ஒரு பெருங்கூட்ட மக்கள்—அதுவும், அல்லும் பகலும் உடலுழைத்துப் பாடுபட்டு, உணவுக்கும் உடைக்கும் கூடத் தொங்கலோடு அல்லல்பட்டுக் கஷ்டப்படுகிறார்களே, இதற்கு ஏதாவது வழிசெய்ய வேண்டுமே என்கின்ற கவலை எந்தக் கடவுளுக்குமே கிடையாது. மக்களாகவே பார்த்து ஏதோ கஷ்டப்பட்டுத் தங்கள் குறைகளை நீக்கிக்கொண்டால், அப்புறம் கடவுள்கள் வந்து விடுவார்கள்; தங்களால்தான் குறைகள் நீக்கப்பட்டனவென்றும் அதற்குக் கூலி வேண்டு மென்று கேட்டு வாங்கிக்கொண்டும் போய்விடுவார்கள். அவ்வளவுதான் இந்தப் பாட்டாளி மக்களின் விஷயத்தில் கடவுளின் கடமையாகும்.

ஆனதால், ஒவ்வொருவரும் கடவுள்மீது பாரம் போடுவதில் பயன் விளையாது. தங்களுக்குத் தாங்களேதான் பாடுபட்டாக வேண்டும். அந்த முறையில் தொழிலாளிகள், தங்களுடைய குறைந்த, மிக்க பலவீனமான ஆயுதமாகிய வேலைநிறுத்தத்தைப் பயன் படுத்துவதில் யாரும் குற்றம்சொல்ல முடியாது. நினைத்ததற்கெல்லாம்—வெகு சாதாரண காரியங்களுக்கெல்லாம் பள்ளிப் பிள்ளைகள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். தங்களோடு சேராத பிள்ளைகளை உதைத்து, அடித்துக் காலித்தனம் செய்கின்றனர். அவற்றை யெல்லாம் தேசியத் தலைவர்களும், தேசியப் பத்திரிகைகளும், பள்ளி ஆசியர்களும் சில சமயங்களில் அதிகாரிகளுங்கூட ஆதரிக்கின்றனர். அப்படியிருக்கும்போது, தொழிலாளி மக்கள் செய்யும் வேலைநிறுத்தத்தைப் பொதுமக்களும், மற்ற தொழிலாளிகளும், அவர்கள் போன்ற—'வயிற்றுப் பிழைப்பு அளவுக்கு மாத்திரம்' என்று வேலை செய்யும் மற்ற இலாக்கா சிப்பந்திகளும் ஆதரிக்கவேண்டியது உடன்பிறந்த கடமையாகும்.

தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தால் முதலாளிகள்—முதலாளித் தன்மையி லிருப்பவர்கள், தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், கூலி முதலியவை தொழிலாளியின் வயிற்றுக்குப் போதுமானதாக இருக்கிறதா என்பதை மாத்திரம் பார்க்கக் கூடாது. இந்தக் காலம் முதலாளித் தன்மைக்குப் பெருமையிருக்கும் காலம்; ஏராளமான வருவாய் இருக்கும் காலம்; எவ்வளவு இலாபம் வேண்டுமானாலும் பெறக்கூடிய காலம். ஒவ்வொரு சிறு தொழிலில் வியாபாரம் செய்கிறவனும் அவனவன் எதிர்பார்ப்பதற்கு மேல் பலமடங்கு பணம் சம்பாதித்து மீத்துவைக்கும் காலம்; மீத்துவைத்த பணத்தை என்ன செய்வது, எப்படிச் செலவிடுவது என்பதற்கு வழிதேடியலையும் காலம். பொறுப்பும், கட்டுப்பாடும் இல்லாத தினக் கூலிகளுக்கு அவர்கள் தங்களிஷ்டப்படி கூலி கேட்டு வாங்கி, இஷ்டப்படி அனுபவிக்கும் காலம். எந்தக் காரியத்தை எவன் செய்தாலும் நஷ்டத்திற்கு இடமில்லாத காலம்.

இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் இரயில்வே தொழிலில் சம்பந்தப்பட்டு, இரயில் போக்குவரத்தைச் சரியானபடி நடத்திக்கொடுத்துக்கொண்டு, இரயில்வே முதலாளி ஏராள மாய்ப் பணம் சம்பாதிப்பதையும், மற்ற முதலாளி ஏராளமாய் மூட்டை கட்டுவதையும் அதில் பிரயாணம் செய்கிறவர்கள் ஆடம்பரங்களோடு ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்வ தையும் பார்த்துக்கொண்டு இருக்கிறவன்—தனது வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்பட்டுத் தனக்கும் ஏதாவது உயர்ந்த கூலியோ சம்பளமோ வேண்டுமென்றால், அதற்கு, 'உணவுப் பொருள் எப்படி விற்கிறது? தொழிலாளிகளுக்குக் குடும்பச் செலவிற்கு மாதம் என்ன ஆகும்? இவ்வளவு போதாதா? அவ்வளவுக்குள் சரிப்படுத்திக்கொள்ளக் கூடாதா?' என்றெல்லாம் கணக்குப் பார்த்துச் சம்பளத் திட்டம் ஏற்படுத்துவது என்றால், இத் தொழி லாளிகள் சொன்னபடியெல்லாம் நடந்து, சோற்றுக்கு மாத்திரம் வகைசெய்துகொள்ளப் பாடுபடவேண்டிய அடிமைகளா என்று கேட்கிறோம். அவர்களது வாழ்வும் உழைப்பும் சோற்றுக்குத்தானா, வேறு மனமகிழ்ச்சிக்கு இடமில்லையா என்று கேட்கிறோம். தொழி லாளி என்றால் அவன் பணம் சேர்க்க வேண்டாமா? அவன் பெண்டு பிள்ளைகளுக்கு மற்றவர்களைப்போல்—அதாவது அவனது ஊழியத்தில் வாழும் மற்றவர்களைப்போல் வாழ்க்கை நடத்த வசதிகள் வேண்டாமா? அவன் பெண்டு பிள்ளைகள் நல்ல நகை, துணிகளுடன் நல்வாழ்க்கை வாழ வேண்டாமா என்று கேட்கிறோம். இவைகளுக்கு இடம் வைத்துத்தானே இனித் தொழிலாளர்கள் சம்பளங்களை நிர்ணயிக்க வேண்டும்? காலம் மாறிவருகிறது; உணர்ச்சியும் உரிமை வேட்கையும் பெருகி வருகின்றன; வாழ்க்கையின் உயர்வும் ஆசாபாசமும் வளர்ந்து வருகின்றன என்பதை யார் மறுக்க முடியும்? ஆகவே, இப்படிப்பட்ட நிலையில், இந்தக் காலத்தில், இனித் தொழிலாளிகளை உண்டிக்கு மாத்திரம் உழைக்கும் பிராணிகள் என்று கருதாமல், அவர்கள் முதலாளிகளின் பங்காளிகள்; உண்மை யுள்ள கூட்டாளிகள்; அவர்கள், தங்கள் வாழ்க்கைச் செலவு போக இலாபத்தில் சரி விகிதா சாரம் பெற உரிமையுடையவர்கள் என்கின்ற கருத்தில் நடத்தப்பட வேண்டியவர்களும்— கொடுக்கப்பட வேண்டியவர்களும் ஆவார்கள்.

முதலினாலும், தொழிலினாலும் ஏற்படும் வருவாயை முதலுக்கும் தொழிலுக்கும் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதுதான் தொழிற்சாலைகளைத் தேசியமய மாக்கவேண்டும் என்பதன் கருத்தாகும். முதலாளி—மனைவி; தொழிலாளி—கணவன்; இருவரும் சேர்ந்து பெற்ற பிள்ளைதான் உற்பத்தி என்பதாகும். மக்களுக்குச் சம சுதந்திரம் அளிப்பதாகச் சொல்லும் தேசிய சர்க்கார், மற்றெந்தக் காரியம் செய்வதற்கும் முன்பு இதை, இந்தத் தொழிலாளிகள் சம உரிமையைச் செய்துவிட வேண்டும். இதில் பேரம் பேசுவது அடிமைத் தன்மையை வலியுறுத்துவதேயாகும்; அதை அமுல் நடத்துவதேயாகும். ஆகை யால், இந்தத் தொழிலாளிகள் கிளர்ச்சிப் போராட்டம் என்பதால் இரயில் நிர்வாகக் குழுவில் தொழிலாளர்களுக்குச் சம பிரதிநிதித்துவம் கொடுத்து வரவு-செலவுக் கணக்குகளை அவர்கள் முன்னால் வைத்து ஆளுக்கு எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும்; எவ்வளவு பாதுகாப்புக்குக் காப்பு நிதியாய் ஒதுக்கவேண்டும் என்பவைகளை முடிவுசெய்யவேண்டும். அப்படியில்லாமல், உணவுப் பொருள் விலைவாசி பார்த்துப் பேரம் பேசுவது, இக் காலத்தில் மனித சமுதாயத்திற்கு—சிறப்பாகத் தொழிலாளிகளுக்கு மிகமிக இழிவேயாகும்.

ஆகையால், தொழிலாளிகள் இந்த நிலையை மாற்றப் பாடுபடவேண்டியதும், அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் துணிவு கொள்ளவேண்டியதும் மிகவும் தேவையான காரியம் என்றே சொல்லுவோம். ஆதலால், இப்போது இரயில்வே தொழிலாளர்களுடைய உள்ளத்தில், சிந்தனையிலிருக்கும் வேலை நிறுத்த உணர்ச்சியை, முயற்சியை நாம் பாராட்டி வரவேற்கிறோம். அவர்கள் கிளர்ச்சிக்குக் காரணம் சொல்லும் போது விலைவாசிகளை, வாழ்க்கைச் செலவுகளைக் காரணமாய்க் காட்டக் கூடாது. முதலாளி வாழ்க்கைத் தன்மையையும், அனுபவ உரிமையையும்; தங்கள் வாழ்க்கைத் தன்மையையும், அனுபவ உரிமையையும் எடுத்துக்காட்டி—அந்தப் பேதத்தைச் சொல்லி,

அவை, எந்த அளவுக்குச் சமமாக்க முடியும் என்கின்ற பிரச்சினை (இஸ்ஸூ)யின் மீது வாதம், போராட்டம் துவக்கப்பட வேண்டும். இம் மாதிரியான தன்மையில் நடக்கும் தொழிலாளி போராட்டம் தான் ஒரு சாந்தியான வெற்றியைக் கொடுக்குமேயல்லாமல், ஏதோ ஓரளவுக்குக் கூலி உயருவதால் மனச் சாந்தி ஏற்பட்டுவிடாது. ஆகவே, போராட்டம் முக்கியமானது என்பதையும், அவசியமானது என்பதையும், அவசரமானது என்பதையும் நாம் வலியுறுத்துக் கூறுவோம்.

போராட்டம் துவக்குமுன்பு விளைவை நன்றாய்ச் சிந்தித்து ஒருவாறு அதன் பலாபலனை ஏற்க நம்மைத் தகுதியாக்கிக்கொள்ள வேண்டும். தொழிலாளிகளுக்காகப் பரிந்து பேசுவதாக வேஷம் போட்டுக்கொண்டு, தொழிலாளிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறவர்கள் நயவஞ்சகத் துரோகிகளாக இருக்கக்கூடாது. தொழிலாளர்களின் தலைவர்கள்—வழிகாட்டிகள் என்பவர்கள் முதலாளித்தன்மை கொண்டவர்களாகவோ, முதலாளிகளின் இரகசியக் கூலிகளாகவோ இருக்கக்கூடாது. இன்றைய அரசாங்கம் பொது ஜனங்கள் அரசாங்கம் என்று சொல்லப்பட்டாலும், அது முதலாளிகள் ஆட்சியென்பதும், முதலாளித் தன்மையும்—சோம்பேறி வாழ்க்கையில் கைகண்டதும்—ஊரார் உழைப்பில் சுகவாழ்க்கை நடத்தும் முதலாளிகளுக்கும் மேம்பட்ட வஞ்சக சுகவாசிகள் ஆதிக்கத்தில் இருப்பதுமான ஆட்சி என்பதையும் மறந்துவிடக்கூடாது. நாட்டிலுள்ள மற்ற சாதனங்கள், அதாவது பத்திரிகைகள், பிரச்சாரங்கள், வாயாடிகள், பொது மக்கள் கருத்தை உண்டாக்குகிறவர்கள்; அதை உருப்படுத்துகிறவர்கள், தங்கள் இஷ்டப்படி பயன்படுத்துகிறவர்கள் ஆகியவர்கள் தொழிலாளிகளுக்குப் பிறவி எதிரிகள் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவர்களை முதலாளிகள் எந்த நிமிஷத்திலும் என்ன விலை கொடுத்தேனும் வாங்கித் தங்கள் கையாட்களாகத் தங்கள் நலனுக்கேற்ற தன்மையாக நடத்திக் கொள்வார்கள் என்பதை உறுதியாக்கிக்கொள்ள வேண்டும். பத்திரிகைக்காரர்கள் ஒரு பித்தலாட்டச் செய்தியைக் கற்பனை செய்துகொண்டு, பழி ஏற்படுத்தி ஒரு தலையங்கம் எழுதித் தொழிலாளர்களில் பலரையே சரணாகதியடையும்படி செய்துவிடுவார்கள். இந்தப்படி இதற்குமுன் பலதடவை சில பத்திரிகைக்காரர்கள் செய்து, தொழிலாளிகளின் முயற்சியை நாசமாக்கி, ஸ்தாபனங்களையே பாழாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள், இந்தப் பத்திரிகைக்காரர்கள் இப்பொழுதே தொழிலாளிகளைப் பயப்படுத்தியும், எச்சரிக்கை செய்தும், தங்கள் அதிருப்தியைக் காட்டியும், மக்கள் மனம் தளரும்படியும், தொழிலாளிகள் மீது குற்றங்காணும்படியும் செய்துவருகிறார்கள்.

இன்றைய இரயில்வேக்களில் பத்திரிகைக்காரர்கள் ஆதிக்கமும் பார்ப்பனர்கள் ஆதிக்கமும் ஏகபோகமாய் இருந்து வருவதை அசாதாரணமாகவோ சாதாரணமாகவோ கருதிவிடக்கூடாது. இந்தப் பத்திரிகைக்காரர்களும், கிளப்பி விடுகிறவர்களும் இதற்குமுன் நடந்த பல போராட்டங்களில் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள்? அதனால் எவ்வளவு இலாபம் அடைந்தார்கள்? என்கின்ற அனுபவத்தையும் கவனிக்கவேண்டும். ஏனெனில், எந்த முயற்சிகளுக்கும் பொதுஜன ஆதரவு எப்படியிருக்கும் என்று பார்த்துத்தான் எதிரிகள் வசமாவதும், நமக்கு வெற்றி ஏற்படுவதும் பெரிய அளவுக்கு இருந்து வருகிறது. முதலாளிகளும் அதற்குத்தான் இணங்கி இறங்கிவருவார்களேயொழிய மற்றபடி நியாயம், நீதி, கடமை, உரிமை ஆகியவைகளைப் பார்க்கமாட்டார்கள். இவைகளைப் பார்க்காத தன்மைதான் முதலாளித் தன்மையாகும்.

ஆகையால், இரயில்வேத் தொழிலாளர்களான நமது உண்மைத் தோழர்கள் இவைகளை எல்லாம் சிந்தனையில் வைத்துத் தங்கள் நிலைமையையும் பார்த்து, நல்லபடி சிந்தித்து, இவற்றைச் சமாளிக்கத் தகுந்த வகைகள் வகுத்துக்கொண்டு தங்கள் போராட்டத்தைத் தாமதமின்றித் துவக்க வேண்டுமென்றும் அவர்களுக்குப் பூரண வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் உள்ள நம் ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

['விடுதலை'—தலையங்கம்—10-6-1946]

6. திராவிடர் கழகம்—தொழிலாளர் நிறுவனமே!

தலைவரவர்களே! தோழர்களே! பெரியோர்களே!

இக் கூட்டம் தொழிலாளர்களின் தற்காலப் பிரச்சினையாகிய 'பக்கிங்ஹாம்-கர்நாடிக் மில் ஸ்ட்ரைக்' சம்பந்தமாக, திராவிடர் கழகத்தாரால் கூட்டப்பட்ட கூட்டம் என்று தோழர் என். வி. நடராசன் சொன்னார். 'தொழிலாளர்களுக்கும்—திராவிடர் கழகத்தாருக்கும் அதிக ஒற்றுமையில்லை; திராவிடர் கழகத்தார் தொழிலாளிகளை சரிவரக் கவனிப்பதில்லை' என்பது ஒரு புகார். இது தொழிலாளர்களின் தெரியாத்தனமேயாகும். தொழிலாளிகளும், தொழிலாளர் இயக்கங்களும்—பெருவாரியாய் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், 'புராண பிரசிங்கிஸ்ட்' ஆகிய ஸ்தாபனங்களோடுதான் அதிக சம்பந்தம் வைத்துக்கொண்டு அவைகளை ஆதரித்து வருகிறார்களே தவிர, திராவிடர் கழகத்தினிடம் தொழிலாளர்களுக்குப் பற்றில்லை. இது எனது 20-25 வருஷ அனுபவம். என்றாலும், நான், தொழிலாளர்கள் நம்மை ஆதரிக்கவில்லையே என்று ஒரு காலத்திலும் கவலைப்பட்டதில்லை. அதற்காக அவர்களைப் பிடிக்க நான் வலை வைத்ததுமில்லை. எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவேதான்; நாங்களும் தொழிலாளிகள்தாம். ஆகவே, வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளில்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தாம் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளில் உண்மைத் தொழிலாளிகள் 1000-த்தில் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்.

தொழிலாளி என்கின்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அர்த்தமாகும். 'யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படியிருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன்?' என்றால், பிறருக்காகத் தொண்டுசெய்து மனுதர்ம சாஸ்திரப்படி தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால், திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளர்கள் அல்லவா என்று கேட்கிறேன். இயந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரந்தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிறவர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணான், நாவிதன், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு நெய்பவன் முதலியவர்கள் சரீரத்தாலுழைத்து, வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்கைக்கு அன்றாட வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா என்று கேட்கிறேன்.

இன்று, இம் மாதிரித் தொழிலாளர்கள் யார்? பிராமணர்களா? சத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்த மாதிரித் தொழிலாளிகளாய் இருக்கிறார்கள்? அந்தச் சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம்தானே—'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும் காரியத்தில் நடப்புப்படியும் இருந்துவருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்கமுடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும்—ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால், திராவிடர் இயக்கம் தொழிலாளர் இயக்கம் என்று சொல்லுகிறேன்.

எதற்காகத் திராவிடர் இயக்கம் வேலை செய்கிறது என்றால், திராவிடர் நாலாவது சாதியாக இருக்கக்கூடாது; தொழிலாளர் சாதியாக இருக்கக்கூடாது என்பதற்காகவேயாகும்.

சில தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் என்மீது குரோதம் கொண்டிருக்கிறார்கள். என்னைப்பற்றி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். நீங்கள்—வாயில்லாப் பூச்சி, அறிவில்லா ஜந்து என்கின்ற மாதிரி, அந்த வஞ்சகப் பேச்சுக்குக் காது கொடுத்து பைத்தியக்காரர்களாக இருந்து வருகிறீர்கள். என்னவென்றால்,

'ராமசாமி நாயக்கர் மதத்தில், கடவுளில் பிரவேசிக்காவிட்டால் நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால், அவர் நாத்திகம், மதத் துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாயிருங்கள்!' என்று உங்கள் தலைவர்களில் சிலர் சொல்லி, உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், உங்களை ஏய்க்க இப்படிப்பட்ட பேச்சுப்பேசும் உணர்ச்சி உள்ளவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாக இருக்க யோக்கியதை உண்டா என்று கேட்கிறேன். இவர்களை நம்பினவர்கள் முன்னுக்கு வரமுடியுமா என்று கேட்கிறேன்.

எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.

எந்த ஒரு மதம்—ஒரு மனிதனைப் பிராமணனாகவும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும், பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ, அந்த மதம் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா, வேண்டாமா? ('ஆம், ஒழிய வேண்டும்' என்ற பேரொலி) எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் 'கொடுத்தும்', ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும்; மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப் போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், இரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால்உழைத்த வண்ணமிருந்து கீழ்மகனாய் வாழும்படி செய்கிறதோ—அந்தக் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழியவேண்டுமா, வேண்டாமா? ('ஆம்! ஆம்! ஒழிந்தேயாகவேண்டும்' என்கின்ற பேரொலி). ஆகவே, தோழர்களே! இது சொன்னால், நான் நாத்திகனும்—மதத் துவேஷியுமா? 'ஆம், ஒழிய வேண்டும்' என்று சொன்ன நீங்கள் மதத் துவேஷிகளா, நாத்திகர்களா? தோழர்களே, நம்மை நாத்திகர்கள் என்கின்ற இந்தப் பாஷாண்டங்கள்தாம் நாத்திகர்களாவார்கள்.

[சென்னையில், 30-6-1946-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-7-1946]

7. தி. வி. தொ. சங்கம் ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிறதான ஒரு அமைப்பு, திராவிடர் கழகத்தின் சார்பிலே இருக்கவேண்டும் என்று எனக்குத் திருச்சியிலே நினைப்புத் தோன்றியது. அந்தப்படிதான் இன்று திராவிடர் கழகத்தின் சார்பாக, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்களை நாடெங்கும் ஏற்படுத்தி வருகின்றோம்.

இந்தப்படியான ஒரு அமைப்பை, அதாவது திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தைத் துவக்க வேண்டுமென்பதாக ஏன் தோன்றியது என்றால், இன்றைய தினம் விவசாயம் செய்கிறவர்கள் நிலத்திலேயே இறங்கிப் பாடுபடுகிறார்கள். பண்ணையாள், கூலியாள் முதலியோரும்—அதே மாதிரி நாட்டின் எல்லாத் தொழில்களை—அதாவது மில்லில் வேலை செய்வது, மூட்டைதூக்குவது, கல்லுடைப்பது, வண்டி இழுப்பது இன்னும் இதுபோன்ற உடலுழைப்பு வேலை செய்கிறவர்கள் எல்லாம் திராவிட மக்கள்தாமே தவிர வேறு யாருமல்லர். பார்ப்பானுக்கும் உடலுழைப்புக்கும் வெகு தூரம். இந்தப்படி

இருக்கும்போது, இந்த நாட்டுத் திராவிட மக்களின் நலனுக்குமாகவே பாடுபட்டுவரும் திராவிடர் கழகம் இந்தத் துறையிலே வேலை செய்ய வேண்டியது; அந்தத் தொழிலாளி களுடைய வாழ்வை முற்போக்கு அடையச்செய்ய வேண்டியதில் முழுப்பங்கு எடுத்துத் தொண்டாற்ற வேண்டுவது அவசியமாகும்.

அதோடு, இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று பாடுபடுவதற் காகப் பல கட்சிகள் இருந்துவருகின்றன. கம்யூனிஸ்டுகள் விவசாய சங்கம் என்பதாக ஒரு அமைப்பு ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். அதுபோலவே, சோஷிய லிஸ்டுகள் கிசான் சங்கம் என்பதாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, காங்கிரசுக்காரர்களும் விவசாயிகள் சங்கம் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். மற்றும், பல தொழிலாளர் சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப்படி விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆக வேலை செய்துவருகிற எந்தக் கட்சியாரும், திராவிடர் கழகத்தின் கொள்கைகளை ஒத்துக்கொள்ளாதவர்கள்.

இன்றையத் தொழிலாளர், விவசாய சங்கத்தை அமைத்துக் கொண்டிருப்பதைக் குறித்துப் பொதுவாக எனக்குத் தோன்றும் கருத்து என்னவென்றால், இந்தப்படியான ஸ்தாபனங்களை வைத்துக்கொண்டு—ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட்சிக் காரியத்துக்கு இவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதுதான். மற்றபடி, இன்றையத் தொழி லாளிகளின் இழி வாழ்க்கைத் தன்மை ஒழியவோ, வேறு வசதியான நிலை அவர்களுக்கு ஏற்படவோ யாரும் பாடுபடுவது இல்லை.

இந்த நாட்டிலே இன்றைய தினம் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் கூலிக்காரர் களாக இருப்பது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. பாரம்பரியமாக, வழி வழியாக இவர்கள் தொழிலாளர்கள் தான்.

அன்றாடக் கஞ்சிக்காக—அன்றாடம் வேலை செய்து, கூலி பெற்று, அந்தப்படி பெற்ற கூலியை, அன்றையக் கஞ்சிக்கே செலவு செய்துவிட்டு, அடுத்த நாள் கஞ்சிக்கு யாரிட மாவது வேலைக்குப் போய்க் கூலி வாங்கித்தான் வழி செய்து கொள்ள வேண்டும் என்ற தன்மையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கிளர்ச்சிகள் நடக்கின்றன என்றால் எதற்காக நடக்கின்றன? அவனுடைய தொழிலாளித் தன்மை ஒழிவதற்காகவா? இல்லவே இல்லை.

ஒரு மாதம், இரண்டு மாதம் 'ஸ்ட்ரைக்' செய்து, அடிதடிப்பட்டு, பல கஷ்ட நஷ்டங் களை யேற்று கிளர்ச்சி செய்தால் இரண்டணா கூலி உயர்வு தரப்படுகிறது. ஆனால், கூலி உயர்வு தரப்படுகிறதே தவிர, அவனுடைய தொழிலாளத் தன்மை அப்படியேதான் இருக் கிறது. அவ்வளவு கஷ்டப்பட்டுக் கூலி உயர்வு சம்பாதித்த தொழிலாளி, அந்தப் பணத் தினால் ஏதாவது இலாபம் பெறுகிறானா என்றால் அதுவும் இல்லை.

கூலி உயர்வு பெற்றவுடன்—தொழிலாளி, எங்கே தேர்த் திருவிழா நடக்கிறது? எந்தச் சாமிக்கு 'அர்ச்சனை' செய்யலாம், என்பதிலேதான் கவனத்தைச் செலுத்துகிறான். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம், அவனிடத்திலே குவிந்திருக்கும் முட்டாள் தனத்தின் காரணமாகக் கல்லுச் சாமிக்கும், திருவிழாக் கூத்துக்கும் போய் விடுகிறது.

அதுமட்டுமல்ல; தொழிலாளிக்கு முதலாளி, இரண்டணா கூலி கூட்டிக்கொடுப் பதினால் முதலாளிக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடுவதில்லை; அவனுடைய தன்மைக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக, கூலி உயர்வு கொடுத்து, தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற முற்போக்கு உணர்ச்சிகளை மழுங்கச் செய்து, அவனுடைய முதலாளித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்கிறான்.

அதோடு, முதலாளி என்ன செய்கிறான் என்பதை நீங்கள் கவனித்துப் பார்த்தால் தெரியும்.

தொழிலாளிக்குக் கூலியில் இரண்டணாவை அதிகப்படுத்தினவுடனேயே, முதலாளி தன் பண்டங்களின் விலையின்மீது இரண்டணாவைக் கூட்டி உயர்த்தி வைக்கிறான். இதனால் பொருள்களின் விலையேற்றத்தால் பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதோடு, தொழிலாளியும் தான் முதலில் ஓரணாவுக்கு வாங்கிக்கொண்டிருந்த அதே சாமானை, கூலி உயர்வு கிடைத்தபின் ஒன்றேகால், ஒன்றரை அணா கொடுத்து வாங்க வேண்டியவனாகிறான்.

எனவேதான், நான் சொல்லுகிறேன்: 'இந்தக் கூலி உயர்வுக் கிளர்ச்சியும், அதற்காகத் தொழிலாளர்களுக்கு அடி, உதை, துப்பாக்கிக் குண்டு சாவு வாங்கிக் கொடுப்பதும் வெறும் கேலிக் கூத்து ஆகும்' என்று.

தொழிலாளி உயரவேண்டுமென்றால் தொழிலின் இலாபத்தில் அவனுக்கும் பங்கு வேண்டும்; தொழிலின் நிர்வாகத்தில் அவனுக்கும் பங்கு இருக்கவேண்டும். இந்தப் படியாகக் காரியம் செய்தால்தான் தொழிலாளி நிலைமை ஒழிந்து மனித வாழ்க்கையில் சம நிலைப் பங்காளிநிலை ஏற்படுமே தவிர—கூலிக்குக் கிளர்ச்சி என்பது, தொழிலாளி தொழிலாளியாகவுமே, ஏழை ஏழையாகவுமே, பணக்காரன் மேலும் பணக்காரனாகவுமே இருப்பதற்கு—அதாவது முதலாளி, முதலாளியாகவுமே இருப்பதற்குத்தான் உதவுமே தவிர வேறு எதற்கும் இல்லை. அன்றியும், தொழிலாளிக்குப் பாடுபடுகிறவர்கள் சர்க்காரிடம் நேரிடை நடவடிக்கை எடுத்துச் சட்ட திட்டம் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக்கொண்டு அந்தப்படிக் காரியம் செய்தால்தான் 'தொழிலாள நிலை' ஒழிந்து சமநிலை காணமுடியும் என்பேன்.

உதாரணமாக, நான் ஒரு தொழிலாளியைப் பார்த்து, 'நீ ஏழையாய் மற்றவர்களுக்கு உழைத்துப் போட்டுவிட்டு, நீ ஏன் ஒன்றும் இல்லாமல் இருக்கிறாய்!' என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தொழிலாளி என்ன நினைப்பான்?

'அவன் (முதலாளி, பணக்காரன்) மகாராஜன்—போன ஜன்மத்திலே புண்ணியம் செய்திருப்பான்; நானென்ன பாவம் செய்தேனோ, இந்த ஜன்மத்தில் இவ்வளவு கஷ்டப் பட!' என்றுதான் சொல்லுவான். இது, இந்த நாட்டில் மற்றெல்லா நாட்டைவிட அதிகமாகும். ஆதலால், இந்த நாட்டுத் தொழிலாளர் நலம் பெற, தொழிலாளிகளைப் பார்ப்பானிடமும் முட்டவிட வேண்டும்.

அன்றியும், இன்று தொழிலாளிகளுக்குப் பாடுபடுவதாகச் சொல்லுகிற ஸ்தாபனங்கள் எல்லாம் தொழிலாளிக்கு நாத்திகம் தேவையில்லை; அவன் சாமி கும்பிடுவதையோ, கோயில் குளங்களுக்கு, திருவிழாக்களுக்குப் போவதையோ தடுக்க வேண்டிய அவசிய மில்லை என்பதாகவெல்லாம் சொல்லுகிறார்கள். அந்தப்படி இருப்பதினால், நான் முன்னே சொன்ன மாதிரி தொழிலாளி தனக்குக் கிடைக்கும் பணத்தை இந்த மாதிரிக் கோவில், குளம், திருவிழாக்களிலே செலவிட்டு, மூடத்தனத்திற்கும், முட்டாள்தனத்திற்கும் பலியாவானே தவிர—சேர்த்த பொருளை மீத்தாமல் கண்டதுக்கு, கண்மூடித்தனத்துக்குச் செலவிடுவானே தவிர, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவோ, வாழ்க்கைத் தேவைகளைச் சரிக் கட்டிக் கொள்ளவோ முடியாதவனாக ஆகிவிடுகிறான்.

இந்தப்படி இருக்கிற யதார்த்தமான நிலைமையைப்பற்றி, யாரும் எடுத்துச் சொல்வ தில்லை. என்ன காரணத்தாலோ ஏதோ முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சண்டையை உண்டாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து, தொழிலாளிக்கு அடி, உதை பெறும் படியாகச் செய்வார்கள். பார்ப்பானிடமும் முட்டவிடத் தயங்குவார்கள்.

அதுமட்டுமல்லாமல் மற்றொரு சங்கதியையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தொழிலாளர்கள் சார்பாகப் பேசுபவர்கள் எல்லோரும் முதலாளியைத் திட்டியும் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இருக்கிற பேதாபேதத்தையும் சுட்டிக் காட்டியும்தான் பேசுவார்களே தவிர, முதலாளி–தொழிலாளி தன்மைக்குப் பாதுகாப்புத் தருகிற சர்க்காரை—பார்ப்பானை ஒன்றும் செய்யமாட்டார்கள். அதாவது, முதலாளியின் முதலாளித் தன்மைக்கு ஆபத்து வராமல் தொழிலாளியைச் சுரண்டிப் பெறும் உடைமையை அனுபவிக்க அவனுக்கு உரிமை கொடுத்து, அந்தப்படி அவன் அனுபவிக்கிற பொருளுக்கு எந்த விதமான தீங்கும் நேராமலும் தனி உடைமை அனுபவிப்புக்குப் பாதுகாப்பு அளிக்கும் சர்க்காரை இவர்களிலே யாரும் ஒன்றும் செய்வதில்லை. அதை விட்டுவிட்டு, தொழிலாளிக்கு, முதலாளியிடம் வெறுப்பையூட்டி, முதலாளியின் பொருளைப் பலாத்கார நடவடிக்கையின் மூலமாகக் கொள்ளையடிப்பது, தீ வைப்பது, நாசமாக்குவது போன்ற காரியங்களைச் செய்ய ஏவிவிடுகிறார்கள். தொழிலாளி அந்தப்படி செய்கிறபோது, முதலாளி தன்னுடைய நிலைமைக்கு அனுமதி அளித்தும், பாதுகாப்பு அளித்தும் வரும் சர்க்காரிடம் உதவிக்குப் போகிறான். சர்க்காரும் உள்ளே புகுந்து தொழிலாளியை அடக்குகிறது. இதுதான் இன்றைய தினம் முதலாளி—தொழிலாளிப் போராட்டத்தின் பிரத்தியட்ச நிலைமையாய் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவேதான் நான் சொல்லுகிறேன்: 'இன்றைய பேத நிலைமைக்குக் காரணமாக இருக்கிற அமைப்பும், அந்தப்படியான அமைப்புக்கு ஆதரவளித்துப் பாதுகாப்பாக இருக்கும் சர்க்காரும் ஒழிக்கப்படவேண்டும். தொழிலாளிகளிடையில் இந்தப் பிரச்சாரமே அதிகமாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நான் துவக்குவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு.

இன்னொன்று சொல்லுகிறேன். உதாரணமாக, சோஷியலிஸ்டுகள் தொழிலாளர் சங்கம் என்பதாக வைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள். எலெக்ஷன் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்த எலெக்ஷனில் நாம் ஒரு ஆளை நிறுத்துகிறோம் அல்லது நிற்கிற யாரையாவது ஆதரிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த எலெக்ஷனில் தொழிலாளர் சங்கம் வேறு ஆளை ஆதரிக்கிறது அல்லது நிறுத்துகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது திராவிடர் கழகத்தில் இருக்கும் தொழிலாளி யாருக்கு ஓட்டுப்போடுவான்?

திராவிடர் கழகத்திலிருந்தாலும் தொழிற் சங்கத்துக்காரன், தொழிலாளி என்கிறதால் தொழிற் சங்கம் ஆதரிக்கிற, நிறுத்துகிற ஆளுக்குத்தான் ஓட்டுப்போடுவான். அப்போது நாம் ஆதரிக்கிற ஆள் என்ன ஆவது? நமக்குச் சட்டசபை சம்பந்தமே வேண்டாமா?

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் நாம் ஏற்படுத்தி இருப்பதுபற்றிப் பலர் குற்றம் சொல்லலாம். கம்யூனிஸ்டுகளும் நம்மை, 'முதலாளிகளின் கையாட்களாகிய இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்' என்று சொல்லலாம்.

சோஷியலிஸ்டுகள், 'இதனால் எல்லாம் ஒன்றும் காரியம் நடக்காது' என்பதாகக் குற்றம் சொல்லலாம். மற்றவர்கள் நம்மைப்பற்றிச் சொல்லுகிற குறையைப்பற்றி நமக்குக் கவலையில்லை. திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நாம் ஆரம்பித்தது மற்றவர்களுக்குப் போட்டியாகவோ அல்லது மற்ற கட்சிக்காரர்கள் காட்டுகிற தப்புகளுக்கோ அல்ல என்பதை நம்முடைய பின் நடத்தையின் மூலம் அவர்களே தெரிந்துகொள்வார்கள்.

அதோடு மற்றொரு சங்கதியையும் நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, கம்யூனிஸ்ட் கட்சியோ, சோஷியலிஸ்ட் கட்சியோ இந்த நாட்டுக் கட்சிகள் அல்ல. அவற்றுக்குத் தலைமை இங்கு இல்லை. மேலிருந்து—ஹைகமாண்டிலிருந்து என்ன உத்தரவு வருகிறதோ அதை நிறைவேற்ற வேண்டியதே இங்கு இருக்கிற ஆட்களுடைய கடமையாகும். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சி உலகம் பூராவுக்கும் சம்பந்தப்பட்ட கட்சியாகும்.

எனவே, அந்தக் கட்சிகளின் மேலிடத்திலிருந்து வரும் உத்தரவுகள் எல்லாம் நம்முடைய நல்லதுக்கு ஏற்றபடியே—நலத்துக்காகவே வரும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

அதோடுமட்டுமல்லாமல், திராவிடர் கழகம்தான் இந்த நாட்டினுடைய தேசிய ஸ்தாபனம் ஆகும். மதத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் பார்ப்பனர்களுக்கும் வடநாட்டார்களுக்கும் அடிமைப்பட்டிருக்கும் இந்த நாட்டைப் பார்ப்பனர், பனியாக் கூட்டத்தினிடமிருந்து விடுவித்து, சுதந்திர நாடாக்கும் விடுதலைக் கிளர்ச்சி ஸ்தாபனம் தான் திராவிடர் கழகம். திராவிடர் கழகத்தினால்தான்—இந்த நாட்டை விடுதலை செய்து, இங்கு சுயமரியாதையுடன் கூடிய நல்ல நிலைமையை—உயர்ந்த பண்பை—சவுகரியமான வாழ்வை அமைக்கமுடியுமென்று நாம் கருதுகிறோம்.

அந்தப்படி கருதி நாம் ஆற்றிவரும் தொண்டில், நாம் நாலணா அளவுக்குத்தான் காரியம் சாதித்திருக்கிறோம். இதற்குள்ளேயே எத்தனையோ துரோகத்துக்கும், ஐந்தாம் படைக்காரர்களின் சதிக்கும் தப்பிக் காரியம் சாதித்திருக்கிறோம். பல பார்ப்பனர்கள், பல பணக்காரர்கள் கம்யூனிசத்தில் இருப்பதுபோல நடித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் பணக்காரர்கள் ஆதிக்கம் இல்லை என்றாலும் இவைகளுக்கெல்லாம் தலை கொடுத்துக்கொண்டுதான் இந்த நாட்டிலே காரியம் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னமும் திராவிடர் கழகத்தின் இலட்சியங்கள் நிறைவேறவும், இந் நாட்டு மக்கள் உயரவும் பார்ப்பனர்கள் தவிர மற்ற மக்கள் அனைவரும் திராவிடர் கழகத்தில் பங்கு கொண்டு காரியம் ஆற்ற வேண்டியிருக்கிறது. எனவேதான், நாம் நம் இனத்தைச் சேர்ந்த அனைவரின் பிரச்சினையையும் கவனித்துக் காரிய மாற்றும் வேலையில் இறங்கி, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் ஏற்படுத்தியிருக்கிறோமே தவிர, மற்ற கட்சிக்காரர்கள் நினைப்பதுபோல் போட்டிக்கு அல்ல; மற்றவர்களுடன் சண்டை போடுவதற்கு அல்ல.

தோழர்களே! இன்னமும் சொல்லுகிறேன்: திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தின் திட்டம் இத்தோடு முடிந்துவிடுவதல்ல. இந்த நாட்டின் சகல துறைகளிலேயும் விஞ்ஞான ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், தனி உடைமையை ஒழித்து அனைவருக்கும் அனைத்தும் என்கிறதான நிலையை ஏற்படுத்தவும், அப்படி ஏற்படுத்த இருக்கும் மற்ற கட்சிகளுடன் தாராளமாக—ஏன் வலியவும் ஒத்துழைக்கவும் விரும்புகிறது என்றும் சொல்லுகிறேன்.

இந்த நாட்டு விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், 2000 வருடங்களுக்கு முன் வயல் வேலைகளில் எப்படிப்பட்ட முறைகள் இருந்துவந்தனவோ—எந்த விதமான ஏர், கலப்பை உபயோகப்படுத்தப்பட்டு வந்தனவோ—எப்படி உழுவது, விதைப்பது, வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலேயிருந்து அறுவடைக் காரியம் வரை செய்துவந்தார்களோ—அதே முறைகள்தாம் இன்றும் இருந்துவருகின்றன. போதுமான முற்போக்கும் காணப்பட வில்லை. இந்தத் துறைகளில் பாட்டாளி சிறிதும் நலம் பெறவில்லை.

மேல்நாடுகளைப் பார்த்தால் இங்கு 10 ஏகராவில் செய்கிற வெள்ளாமை, விளைச்சலை அங்கே 4 ஏக்கரிலேயே விளைக்கிறான். இங்கு 2 ஏகராவுக்குச் செலவழிக்கப்படும் உழைப்பை அங்கே 10 ஏகராவுக்குச் செலவழித்து நலம் காண முடிகிறது விஞ்ஞான முறையில். இங்கே காலங்காத்தாலே—கோழி கூவும்போது எழுந்துபோய் சூரியாஸ்தமனம் வரையிலும் கஷ்டப் பட்டு உழைத்துவிட்டு வந்தும் கஷ்டப்பட்டதற்கு ஏற்ற விளைச்சலைக் காணமுடிவதில்லை.

மேல்நாடுகளில் மற்ற துறைகளில் வளர்ச்சியடைந்தது போலவே இந்தத் துறை யிலேயும் வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைய விவசாய முறைகளிலேயும் விஞ்ஞானத்தின் அடிப்படைப்படி மாற்றம் காணவேண்டும்.

மேல்நாட்டில் நிலத்திலே வேலை செய்கிறவனுக்கு விளைச்சலில் பங்கு உண்டு, ஆனால், இங்கு அப்படியல்ல. நிலத்துச் சொந்தக்காரன் எங்கோ இருந்துகொண்டு

நிலத்தை வாரத்திற்கு விட்டுவிட்டு, அந்தப்படி வாரத்திற்கு நிலத்தைப் பெற்ற குத்தகைக்காரன் நிலத்தைப் பண்படுத்தி உழுது விளைச்சல் எடுத்துக்கொடுக்க, சும்மா உட்கார்ந்திருந்த நிலத்துச் சொந்தக்காரன் பெரும் பகுதியை எடுத்துக்கொள்வான். குத்தகைக்காரனுக்கு முட்டுவழிச்செலவு, ஆட்கள் கூலிச் செலவு போக, கடைசியில் ஒன்றும் இல்லாதவனாக—'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிச்சமில்லை' என்ற மாதிரியில், ஆற்றுப் பாசனமில்லாத மிராசுதாரன் நஷ்டப்படவேண்டியிருக்கிறது. இந்த முறையினாலேயே அவன் பாட்டாளிக்குச் சரிவரக் கொடுக்கமுடியாமலும், ஏதும் மீத்த முடியாமலும் போகிறது. பாட்டாளி அன்றாடக் கூலிக்காரனாகவே—ஒரு சில பெரு நிலப் பிரபுக்கள் தவிர, மற்றவர்கள் இருந்து வழிவழியான கூலிக்காரனாக வாழவேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையேற்படாமல் முதலாளி எப்படி மீத்து வைக்கிறானோ அப்படியே தொழிலாளியும் விவசாயியும் மீத்து வைக்கும்படியானபடி அனைவருக்கும் தொழிலின் இலாபத்தில் பங்கு இருக்க வேண்டுமானால் தொழில்முறையும் விஞ்ஞான ரீதியில் முன்னேற வேண்டும்.

சீக்கிரத்திலேயே ஒரு காலம்வரும். என் காலத்திலேயே வந்தாலும் வந்துவிடும் என்றுதான் நான் கருதுகிறேன். அதாவது, பூமி பூராவும் ஏராளமாக ஒரு மனிதன் வசமே தேக்கப்பட்டிருக்கக் கூடாது. அனைவருக்கும் அவரவர்கள் அளவுக்குப் பிரித்துக் கொடுக்கும் காலம் வரும். அந்தப்படியான காலத்தை விரைவில் ஏற்படுத்த நாம் வழிகாட்டிகளாயிருக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பே இந்தப்படியாக நான் சில திட்டங்கள் வகுத்து இருக்கிறேன். அவை இன்று செல்வாக்குப் பெற்று வருகின்றன.

இன்றைய விவசாயத் தொழிலாளர்களின் துயரைப் போக்கி தொழிலாளி-முதலாளி என்கிற, நிலத்துக்குச் சொந்தக்காரன்—நிலத்துக் கூலிக்காரன் என்பதான சொல்லே அகராதியில் இல்லாதபடி செய்ய வேண்டும் என்பதுதான் திராவிடர் கழகக் குறிக்கோள்.

இந்த நிலைமையெல்லாம் நாட்டிலே மலரவேண்டுமென்றால் நாடெங்கும் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் அதிலே ஏராளமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[தாதம்பட்டி, சிவதாபுரம் சொற்பொழிவுகள்—'விடுதலை' 22-3-1952]

8. தொழிலாளர் கிளர்ச்சி

தோழர்களே!

தொழிலாளர் கிளர்ச்சியே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மக்கள் உள்ளத்திலே முதலாளித்துவப் பாதுகாப்பு சர்க்கார்—பேத அமைப்புக்குப் பாதுகாப்புத் தேடுகிற சர்க்கார் எதற்காக என்கிறதைத் தெளிவாக்கவேண்டும். இந்தப்படி இருக்கிற இந்த சர்க்காரை ஒழித்தாகவேண்டும் என்கிற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டவேண்டும். அதற்காக என்று சர்க்கார் கொடுக்கும் தொல்லையைச் சகித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாறுதல் ஏற்படும். இதைத்தான் நாங்கள் கூறுகிறோம்—எங்கள் கழகம் கூறுகிறது.

இப்போது தொழிலாளர் கிளர்ச்சி என்பது எப்படியாகிவிட்டதென்றால், முதலாளியோடு சண்டை போடுவதுதான் என்பதாகிவிட்டது. நான் சொல்லுகிறேன்: முதலாளிக்கும், முதலாளித்துவ முறைக்கும் பாதுகாப்புத் தரும் சர்க்காருடன் நாம் போராடவேண்டும்.

இந்த நாடு திராவிடநாடு; இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கம் திராவிட நாட்டுத் தொழிலாளர் இயக்கமாகத்தான் இருக்கும். உலகத் தொழிலாளர் இயக்கம் என்பதாக இருக்கிறது. அதைப்போலவே அந்தந்த நாட்டுக்கு—அந்தந்த நாட்டின் பெயரால்

தொழிலாளர் இயக்கங்கள் இருக்கின்றன. அதாவது, இங்கிலாந்து தொழிலாளர் இயக்கம், அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம், இந்தியத் தொழிலாளர் இயக்கம் என்று இருப்பது போல, திராவிடநாட்டு விவசாய சங்கம், தொழிலாளர் இயக்கம்—திராவிட விவசாயத் தொழிலாளர் இயக்கமாக இருக்கிறது. அதோடு, மற்ற நாட்டுத் தொழிலாளர் இயக்கங் களுக்கும் இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒரு பெருத்த வேற்றுமை உண்டு. அதாவது, மற்ற நாடுகளில் பணக்காரன்—ஏழை என்கிற பேதத்தோடு நின்றுவிடும். ஆனால், இங்கோ பணக்காரன் – ஏழை என்கிற பேதத்தோடு மாத்திரமல்லாமல், அந்தப் பேதத்துக்குப் பாதுகாப்புத் தருகிற பார்ப்பான்—சூத்திரன், பறையன் என்கிற அதைவிடக் கொடுமையான பேதமும் உள்ளது. நாம் அந்தப் பேதத்தையும் களைந்தாக வேண்டும். எனவே, மற்ற நாட்டு முறைதான் இங்கும் சிலாக்கியமானது என்று விவாதிப்பது என்ப தானால், அது ஒன்று அறியாமையாய் இருக்கவேண்டும்; அல்லது வடிகட்டின பித்தலாட்ட மாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிற ஸ்தாபனம் இப்போது சமீபத்தில் தான் திருச்சியில் ஆரம்பித்தோம். சாதாரணமாக இப்போது இந்தத் தமிழ்நாடு முழுவதும் திராவிடத் தொழிலாளர்கள் பலர் தங்கள் தங்கள் தொழிலின் பேரால் திராவிட விவசாயிகள் கழகம் என்றும், திராவிடத் தொழிலாளர்கள் கழகம் என்றும், திராவிட நெசவுத் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட சலவைத் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட மருத்துவத் தொழிலாளர் கழகம் என்றும் இன்னும் இதுபோன்ற தொழிலாளர் கழகங்கள் பலவற்றை நாடு பூராவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தனை நாள் இல்லாமல், திராவிடர் கழகம் இன்று ஏன் இந்தத் துறையிலே தனியான ஸ்தாபனத்தின் பேரால் சேவை செய்ய ஆரம்பித்தது என்று நீங்கள் கேட்பீர் களானால், ஏறக்குறைய இந்த 25 ஆண்டுகளாக எங்களுடைய போராட்டங்கள், பிரச்சாரங்கள், சேவைகள் எல்லாம் தொழிலாளர்கள் சங்கதியையே—அதாவது கீழ்சாதி மக்களுடைய—பாடுபடுகிற பாட்டாளி மக்களுடைய—சூத்திர, பஞ்சம மக்களுடைய நல்வாழ்வுக்கு என்றே அமைக்கப்பட்டிருந்தாலும்; சுயமரியாதை இயக்கம், சமதர்ம இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் என்பன போன்ற பல ரகங்களால் வேலை செய்து வந்தாலும், தொழிலாளர்கள் மத்தியிலே தனி ஸ்தாபனமாக வேலை செய்யவில்லை. பொதுவில்தான் காரியங்களைக் கவனித்துவந்தோம். அவ்வப்போது வேண்டிய உதவி களைச் செய்துவந்தோம். பல நேரங்களில் நாங்களும் நேரடியாகக் கலந்துகொண்டோம்.

[பூந்துறையில், 13-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-10-1952]

6. தொழிலாளரும் நாமும்

1. தொழிலாளரும் நாமும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நம்முடைய முயற்சிகள், தொழிலாளி – முதலாளி ஆகியோர் கூட்டாளிகள் என்கிற தான தன்மை ஏற்பட வேண்டும் என்பதற்கே. அதற்குப் பலாத்காரம்தான் சாதனம் என்பது அல்ல! அல்லது ஸ்ட்ரைக் செய்துதான் அந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற தன்மை இருக்கக்கூடாது. வேறு முறைகளைக் கையாள வேண்டும். முதலாளிகளை மிரட்டுவது என்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கக் கூடாது. முதலாளி முறை ஆட்சியிலுள்ள வரையில் முதலாளிகளை நம்மால் ஒன்றும் செய்துவிட முடியாது.

சில ஆயிரம் ரூபாய்கள் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும்படி செய்வதால் அவர்கள் இணங்கிவிட மாட்டார்கள். கூட்டுக் கம்பெனிக்கு-'லிமிடெட் கம்பெனிக்கு' முதலாளியே கிடையாது. நிர்வாகிகளோடு செய்யும் போராட்டம் கல்லிலே முட்டிக்கொள்வது போன்றதே யாகும். அவர்களோடு போராடுவதால் அவர்களுக்கு நம்மீது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றும்; நம் கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும் என்கிற புத்தி தோன்றாது; இது இயற்கை. இந்த இடத்தில் நமக்குத்தான் அதிகப் பொறுப்பும் சரியான வழியும் தேவையாக இருக்கின்றன.

அடிக்கடி சோஷலிஸ்டுகள் 'இரயில்வே பொது ஸ்ட்ரைக்' என்று சர்க்காரை மிரட்டு வதும், அதனால் தங்களுக்கு வசதியும் பெருமையும் சம்பாதித்துக் கொள்வதுமாய் இருக் கின்றனரே, இதை சர்க்கார்தான் மதிக்குமா? மற்ற கட்சிகள்தாம் மதிக்குமா? பொது மக்கள்தாம் மதிப்பார்களா? சில கட்சிகளுக்கு இது ஒரு பிஸினெஸ் (Business) வியாபார மாகப் போய்விட்டது என்பதாகத்தானே ஆகி விட்டது? 'ஸ்ட்ரைக்' முறை தொழிலாளி களுக்கு வெற்றி தரவில்லை என்பதை அனுபவ மூலமாக இந்த 25 ஆண்டுகளில் உணர்ந்து விட்டோம்.

மற்றும், அடுத்தபடியாக இன்று பார்த்தால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் பரஸ் பரம் நல்லுறவு என்பதே கிடையாது; ஒருவருக்கொருவர் துவேஷமும் வெறுப்பும் இல்லாதபடி நடந்துகொள்ள முடியவில்லை. தொழிலாளியைக் கண்டால் முதலாளிகள், மேலதிகாரிகள் 'உர்' என்று இருப்பதும் மேலதிகாரிகளைக் கண்டால் தொழிலாளர்கள் கொடூரமாக இருப்பதுமாகவே எங்கும் இருந்துவருகிறது. இந்த நிலை யாருக்கும் நல்ல தல்ல; நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் செல்வ வளர்ச்சிக்கும் கேடானது. ஒருவருக் கொருவர் பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம் இருக்கவேண்டும்; ஒருவருக்கொருவர் தனிப் பட்ட முறையில் தாக்கிக் கொள்ளக்கூடாது; கலவரத்தை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது. இரயிலில் இருப்பவர்கள் எங்கள் சிற்றப்பன், பெரியப்பனல்ல! எல்லாம் கடைந்தெடுத்த பார்ப்பனர்கள்தாம். பின், ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், கலவரத்தையும் பலாத் காரத்தையும் நாமே பழக்கித் தந்தால் மக்கள் கதியும், நாட்டின் பொது நிலையும் என்னாவது?

மற்றும் சொல்லுகிறேன். தொழிலாளர்களுக்குள் நல்ல ஒற்றுமையும், கட்டுப்பாடும் வேண்டும். குறிப்பாக எடுத்துக் கொண்டால், தொழிலாளிகள் அனைவரும் ஒரே சாதி மக்கள் என்ற உணர்ச்சிவேண்டும். தொழிலாளிகள் என்றால் யார்? எல்லோரும் திராவிட மக்கள்தாமே! திராவிட மக்கள்தாம் உழைக்கும் மக்களாய், பாடுபடும் பாட்டாளிகளாய் இருக்கிறார்களே தவிர எந்தப் பார்ப்பான் தொழிலாளியாய் இருக்கிறான்?

தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லுகிறவர்களெல்லாம் இந்தச் சங்கதியை, பேதத்தை அதாவது 'திராவிட மக்கள்தாம் தொழிலாளிகள்'; திராவிட மக்களாய் இருப்பதாலேயே சமுதாயச் சூழ்நிலையும், விதி மத சாஸ்திர முறையும் அவர் களைத் தொழிலாளியாக்கி வைத்திருக்கிறது; அது போலவே, பார்ப்பானாய் இருப்ப தாலேயே முதலாளி சாதி மகனாய், உட்கார்ந்து சாப்பிடும் வசதி வாய்ப்பு உடையவனாய், மேல் சாதிக்காரனாய் இருக்கும்படியாகக் கடவுள், மத, சாஸ்திர அமைப்பும், சமுதாய நடப்பும், தன்மையும் இருக்கின்றன—என்கிறதை யாரும் எடுத்துச் சொல்லவில்லை; சொல்லாததோடு மட்டுமல்ல—இந்தச் சங்கதி தொழிலாளி மகனுக்குத் தெரியக்கூடாது என்றும் நினைக்கிறார்கள். இன்றைய தினம் இருக்கிற இந்தப் பேதத்தை மாற்றுவதற்கு முயலாமல், தொழிலாளிகளின் கவனத்தை அடிதடி, கலவரம், கூலி உயர்வு என்று சொல்லி சூழ்ச்சியாய் வேறு பக்கம் திருப்பிவிட்டு விடுகிறார்கள். ஜெயப்பிரகாச நாராயணன், எஸ். குருசாமி, பி. ராமமூர்த்தி, ஆர். வெங்கட்டராமன் முதலிய தொழிலாளர் தலைவர்கள் பார்ப்பனர் (பிறவி முதலாளிகள்) என்பதை மறந்துவிடாதீர்கள்! V. V. கிரியும், கிருஷ்ண

ரீவுமான தொழிலாள மந்திரிகள் பார்ப்பனர்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்! சர்க்காருக்கு இந்தத் துறையில் இவர்கள் உள் ஆட்கள் ஆவார்கள்!

அதனாலேயே, சமுதாயத் துறையைப்பற்றி ஒரு தொழிற் சங்கம்கூட கவலை எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் ஒரு சாதி மக்கள் மட்டும் உடலுழைப்புக்காரர்களாகவே இருக்கவேண்டும்? ஏன் ஒரு சாதி மக்கள் அதற்கு மாத்திரம் தகுதியுடையவர்கள்; மற்ற காரியங்களுக்குத் தகுதி அற்றவர்கள் என்று யார் கேட்டார்கள், எங்களைத் தவிர? காங்கிரஸ் கேட்டதா? சோஷியலிஸ்ட் கேட்டதா? அல்லது இந்த கம்யூனிஸ்ட் வீரர்கள் தானாகட்டும் கேட்டார்களா? இல்லையே! கம்யூனிஸ்டுகள் இதைப்பற்றி நாம் சொல்லப் போனால், 'சே! சே! இது பிற்போக்கு சக்தி; நாங்கள் முற்போக்கு வீரர்களாக்கும்; எங்கள் கண்ணுக்கு இந்தச் சிறிய சங்கதியெல்லாம் தெரியாது' என்று போய்விடுவார்கள். அதேபோல் மற்றவர்கள் இதை வகுப்பு வாதம் என்று சொல்லிவிடுவார்கள்.

இதைப்பற்றி நாங்கள்தான் கவலை எடுத்துக்கொண்டு காரியம் செய்து வருகிறோம். ஏன்? இது எங்கள் நாடு; எங்கள் முதல்; தொழிலாளிகள் எங்கள் சாதி—இவை மூன்றும் பார்ப்பனருக்குக் கிடையாது; அறவே கிடையாது.

திராவிட மக்கள் அனைவரும் தொழிலாளிகள்; திராவிட மகனாய் இருக்கிறதாலே அவன் தொழிலாளியாகவும்; பார்ப்பானாய் இருக்கின்றதாலே இன்னொருவன் முதலாளி யாகவும், முதலாளி சாதியாகவும் இருக்கிறான் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். இந்தப் பேதம் இருக்கக் கூடாது. தொழிலாளிகளின் கவனம் ஸ்ட்ரைக், சம்பள உயர்வு, அடிதடி என்கிற பக்கத்திலே செலுத்தப்பட்டதே தவிர, இந்தப் பேதத்தை ஒழிக்கும் முயற்சியிலே திருப்பி விடப்படவில்லை என்பதைத் திரும்பவும் கூறுகிறேன். உள்ளபடி சொல்லுகிறேன். இந்த இரயில்வே தொழிலாளர்கள் மட்டுமாவது இந்த இன உணர்ச்சி யோடு, பார்ப்பான்—திராவிடர் என்ற உணர்ச்சியோடு அதைப்பற்றிக் கவலை எடுத்துக் கொண்டு பாடுபட்டிருப்பார்களேயானால், இந்நேரம் இந்த இரயிலே நமக்கு ஆகி இருக்குமே!

நம்முடைய தொழிலாளி தன்னுடைய சம்பளத்தைப்பற்றிக் கவலைப்படுகிறானே தவிர, இந்த 2000, 3000 ஆண்டுகளாக நாம் ஏன் அடிமைகளாக, இழிந்த சாதி மக்களாக இருக்கிறோம்; பார்ப்பான் எப்படி 2000, 3000 வருடங்களாக உயர்ந்த சாதிக்காரனாக— முகத்திலே பிறந்த முதல் சாதிக்காரனாக—உழைக்காமல் சாப்பிடுகிற உயர்ந்த சாதிக் காரனாக இருக்கிறான் என்பதைப்பற்றிக் கவலையே படுவதில்லையே! ஏன்? நம்முடைய மக்கள் படிக்கவேண்டும் என்று சொன்னால் தகுதியில்லை, திறமையில்லை என்று சொல்லப் படுகிறதே! இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? 1000 வருடமாகவா ஒரு சமுதாயத்து மக்கள் 'தகுதி', 'திறமை' இல்லாதவர்களாக இருப்பார்கள்? இப்படியே இருந்து கொண்டிருந்தால் இவற்றையெல்லாம் யார் கவனிப்பார்கள்? மேல் படிப்பு என்பதெல்லாம் அவர்களுக்கே! அதே போல அந்தச் சாக்கில் உத்தியோகம், மேல் உத்தியோகம் எல்லாம் பார்ப்பனர்களுக்கேதான்.

இவற்றைப் பற்றி யார் கவனித்தார்கள்—எங்களைத் தவிர? தொழிலாளி மகன் எப்படி எஸ். எஸ். எல். சி., எஃப். ஏ., பி. ஏ. படிப்பது? படித்தால்தானே குமாஸ்தாவாக வாவது வரமுடியும்? இதை யார் கவனிக்கிறார்கள்?

நான் சொல்கிறேன், நம்முடைய தொழிலாளர்களுக்கு ஒன்றும் பெரிய வேலை கொடுக்கப்படாவிட்டாலும், கொடுக்கிற சம்பளமாவது அதிகமாகக் கொடுக்கக் கூடாதா? நல்ல வசதியான அறையிலே 'Fan'-னுக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு, மேஜை நாற்காலியோடு வேலை செய்கிற குமாஸ்தாவுக்கு 100 ரூ. சம்பளம்; நெருப்பிலே உழன்று சம்மட்டி அடிக்கிற தொழிலாளிக்கு 30, 50 ரூபாய்தானா?

கொடுக்கிற வேலைக்குத்தான் தகுதி, திறமை பார்க்கிறாய்! வாழ்க்கைக்குக் கூடவா தகுதி திறமை? சம்பளத்திலாவது சரி சமன் செய்யக் கூடாதா? தகுதி, திறமை உடையவன் அதிகமாகச் செலவழிக்கவும், தகுதி, திறமை இல்லாதவன் குறைவாகவுமா செலவழிக்கிறான்? எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரு பெரிய சமுதாயத்தை நிரந்தரமாகத் தலை முறை, தலை முறையாக அடிமைகளாகவே வைத்திருப்பதற்கு எவை எவைகளின் பேரால் சூழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டத்தான். பள்ளிக் கூடத்துக்குப் போய் எம். ஏ. பட்டம் வாங்காததால், அவன் மனித சமுதாயத்திலே மதிக்கப் படத் தகாதவனாக ஆகி விடுவானா? வாழ்வில் சராசரித் தேவைகள் வசதிகள் கூட அற்றவனாக வாழ வேண்டுமா? இப்படியெல்லாம் செய்து, அவன் மேலுக்கு வரமுடியாதபடி அழுத்தி அழுத்தி வைத்துக் கொண்டே 'நீ எம். ஏ. படி; உனக்குத் தகுதி திறமை இருக்கிறதா? அப்படியானால் தருகிறேன்'—என்கிறாய்! கொடுப்பதே சோற்றுக்குக் கணக்குப் பார்த்துத்தானே! அப்புறம் எப்படி அவர்கள் முன்னுக்கு வரமுடியும்? இரண்டரை அணாவுக்கு வேலை செய்த ஆள் இன்றைக்குக் கூலி ஒன்றரை ரூபாய் கேட்கிறான். ஏனென்று கேட்டால், 'சாமி! தவசம் என்ன விலை விற்கிறது என்று பாருங்கள்; சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கொடுங்கள்,' என்கிறான். 'பத்து அணாவுக்கு விற்ற புல்கட்டு என்னம்மா ஒரு ரூபாய் சொல்லுகிறாய்?' என்று கேட்டால், 'கம்பு, சோளம் என்ன விலை விற்கிறது என்று பார்த்துக் கொடுங்கள், சாமி!' என்று தானே பதில் வருகிறது. அந்தத் தன்மை மாறவேண்டும். சோற்றுக்குப் போய் கணக்குப் பார்த்து வரும்படி என்பது போய் வாழ்வுக்கு, வசதிக்குத் தேவையான வருமானம் என்கிற நிலைமை ஏற்படவேண்டும்.

அதை விட்டு விட்டு சும்மா ஜன்னல் வைப்பது, நாலாவது வரை சம்பளமில்லாமல் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருவது, ஆஸ்பத்திரி கட்டிவிடுவது—இது போன்ற சாதாரண வசதிகளைத் தொழிலாளிகளுக்குச் செய்து கொடுத்து விட்டு, பெரிய பிரச்சினைகளிலே, உரிமைக் கிளர்ச்சியிலே, அவர்களின் கவனம் செல்ல வொட்டாமல் தடுக்கப் படுகிறது.

நம்முடைய தேவை அதுவல்ல; நம்மால் செய்யப்படுகிற கிளர்ச்சியும் அதற்காகவல்ல. நம்முடைய தேவையெல்லாம் அடிப்படையில் மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது, தொழிலாளிகளுக்கு இலவச (Free) காலேஜ் வேண்டும். அதில் தொழிலாளிகள் மக்கள் 2000 பேராவது எப்போதும் இலவசமாய்ப் படித்து, ஆண்டுக்கு 200 பேர் வெளியாக வேண்டும். அவர்கள் மேல் வேலைக்குத் தகுதி ஆக வேண்டும். இப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட வேண்டும்.

முக்கியமாக எந்தக் காரணம் கொண்டும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இன்றைக்கு இருக்கிற மாதிரி 'ஏழாம் பொருத்தம்' இருக்கக் கூடாது; இருவருக்குள்ளும் பரஸ்பரம் நல்லெண்ணமும், சுமுகமான உறவும் கூட்டுப் பொறுப்பும் ஏற்படவேண்டும். இந்தத் தன்மை ஏற்பட அடிப்படையில் மாறுதல் ஏற்பட வேண்டும். முதலாளியும் தொழிலாளியும் பங்காளிகள், கூட்டாளிகள் என்கிற நினைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

தொழிலாளி என்றால் யார்? முதலாளி என்றால் யார்? எவனொருவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காகத் தனது உழைப்பை மாற்றுப் பண்டமாகப் பிறருக்குக் கொடுக்கிறானோ அல்லது பிறர் இஷ்டப்படி நடக்க வேண்டியவனாகிறானோ அவன்தான் தொழிலாளி அல்லது வேலையாள் ஆவான். எவனொருவன் தன் உழைப்பைத் தன் இஷ்டமான விலைக்கு, பிரதிப் பிரயோசனத்திற்கு மாற்றுப் பண்டமாக விலை பேசுகிறானோ அவன் முதலாளி அல்லது எஜமான் ஆவான். இவைதாம் தொழிலாளி என்பதற்கும் முதலாளி என்பதற்கும் அடிப்படைக் கருத்துக்கள் ஆகும்.

ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் முதலாளிதான்—எப்படி? அவன் சாமானுக்குச் சொன்ன விலையைக் கொடுத்து நாம் வாங்குவோம். அது போலவே, தட்டுக்

கடைக்காரனும் இன்னும் செருப்புக் கடைக்காரனும் முதலாளிகளே யாவார்கள். இவர்களில் யாரும் தங்களுடைய உழைப்பைத் தங்கள் வயிற்றுக்குத் தேவையான அளவுக்குப் பிறர் இஷ்டத்திற்கு செலவழிப்பவர்களல்லர். அவர்கள் சொல்கிற விலைக்குச் சாமான்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் அவர்களிடத்தில் சேவிப்பதானால், சோற்றுக்குக் கணக்குப் பார்த்து அவர்கள் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று அவர்கள் வியாபாரம் செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். அவர்களை ஏன் செய்ய வில்லை, ஏன் இவ்வளவு அதிக விலை சொல்கிறார்கள், குறைந்த கூலி கொடுக்கிறார்கள் என்று கேட்க முடியாது.

எவ்வளவு பெரிய சம்பளம் வாங்குகிறவனாக இருந்தாலும், மாதம் 100, 200 என்று சம்பாதித்தாலும்—சம்பளத்துக்காக அவன் தன் உழைப்பைப் பிறர் இஷ்டத்திற்குச் செலவழிக்கிறான். ஆகவே, அவன் தொழிலாளிதான். இதுதான் முதலாளி–தொழிலாளி நிலைமையே தவிர, பணக்காரனெல்லாம் முதலாளி; ஏழையெல்லாம் தொழிலாளி என்பதல்ல.

ஆதலால், நம் கிளர்ச்சி வெறும் கூலிக்காக மட்டுமல்லாமல் உரிமைக்காக இருக்க வேண்டும். இதுதான் இந்தச் சங்கத்தின் குறிக்கோள் ஆகும்.

பொதுவாக, தொழிலாளர்கள் உலகத்திலும், முதலாளிகள் உலகத்திலும் பொதுநலத் தன்மை பற்றிய பொறுப்பு இல்லை. முதலாளி நினைப்பதென்ன? ‘சம்பளத்துக்குத்தானே தொழிலாளி வேலை செய்கிறான். அவன் எப்படி நடத்தப்படுவதும் சரிதான்’ என்று நினைக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், ‘சும்மாவா கூலி கொடுக்கிறான்—வேலை செய்கிறோம், கூலிகொடுக்கிறான், இவனென்ன பெரியவன்?’ என்று முதலாளியைப் பற்றி நினைக்கிறான். இப்படி, இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் இந்த மாதிரிக் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதால் தொழிலின்மீது பொறுப்பு இல்லாதவர்களாகவும், தொழிலுக்கு நல்ல பலன் கிடைக்க முடியாதபடி செய்துவிடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

முதலாளி எந்நேரமும் எப்படி இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைவாகச் சம்பளம் கொடுத்து அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பது என்று திட்டம் போட்டுக்கொண்டே இருக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், இவன் கொடுக்கிற சம்பளத்திற்கு இந்த வேலை போதும் என்று தன் வேலையைக் குறைத்துக்கொள்வதிலேயே கவனமாக இருக்கிறான். இப்படி ஒருவருக்கொருவர் ஏமாற்றிக் கொள்கிறதனால் நமக்கு என்ன என்றால், பொதுநிலையில் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது? பொதுத்தன்மை கெட்டுப் போவதுமட்டுமல்லாமல், முதலாளியும் தொழிலாளியும் கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதால் உற்பத்திக் குறைச்சலும், விலைவாசி உயர்வும் ஏற்பட்டு மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருசாராருக்கும் பொறுப்பும் நாணயமும்—ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நல்லெண்ணம் நல்லுறவு இல்லாத வாழ்வுபெருகுவது, பொதுநலத்திற்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் கேடே யாகும். இருசாராருமே தாங்கள் பொதுமக்களின் தர்மகர்த்தாக்கள் என்பதாகக் கருதுவதோடு, தங்கள் தொழிலின் காரியத்தைத் தங்கள் தங்கள் சொந்தக் காரியம் போல் பொறுப்புடன் கருதும்படியான நிலை ஏற்படவேண்டும். அப்போதுதான், நாட்டில் செழிப்பும், மக்களுக்குத் திருப்தியான வாழ்வும் ஒழுக்க உயர்வும் ஏற்படமுடியும்.

சாதாரணமாக, இரயிலைக் கவிழ்க்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இரயில் விழுவதால் யாருக்கு என்ன நஷ்டம்? இரயில்வே பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒரு பார்ப்பான் அதைப்பற்றிக் கவலைப்படுவானா? அல்லது வடநாட்டு ஆட்சி கவலைப்படுமா? அவனுக்கென்ன? இரயில் விழுந்தால் நம்முடைய பணத்திலிருந்து வேறு இரயில் வரவழைத்துக் கொள்கிறான்; அதில் தரகு பெறுகிறான். நட்டத்தைச் சரிக்கட்டிக் கொள்கிறான். நமக்கு அப்படியா? எவ்வளவு பொருள் நட்டம்! உயிர் நட்டம்! பார்ப்பனர்கள் நம் உயிரைப்பற்றிக் கவலைப் படுவார்களா? அவர்களுக்கென்ன கவலை?

வேண்டுமானால் விழுந்திறந்து கிடக்கிறவர்களில் எத்தனை பேர் திவசம் பண்ணுகிறவர்கள் என்று பார்ப்பான்; வண்டிவண்டியாகப் பிணம் போனாலும் பார்ப்பானுக்குத் திவசம் பண்ணுவதிலேதானே கண்!

அதோடு மட்டுமல்ல; இவ்வளவு விஞ்ஞான காலத்திலே—நாகரிக காலத்திலே சோற்றுக்காக – கூலியை உயர்த்திக் கொள்வதற்காக இரயிலைக் கவிழ்ப்பதா? 'இந்த டிபார்ட்மெண்ட்டிலே இந்த மேலதிகாரி உன்னை, வேலை சரியாகச் செய்யவில்லை என்று கூறித் திட்டினானா? சரி, இன்றைக்கு இராத்திரி ஒருவருக்கும் தெரியாமல் போய், அந்த மிஷினை உடைத்து விடு' என்று தொழிலாளியைத் தூண்டிவிடுவதா? இது பொறுப்புள்ள யோக்கியன் செயல் ஆகுமா? கொஞ்சமாவது நாட்டைப்பற்றியும், பண்டத்தைப் பற்றியும், மக்களைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், பொது நிலையைப் பற்றியும் கவலைப்படவேண்டாமா? இன்று ஒரு தொழிற்சங்கத்திற்கும் இந்தக் கவலை இல்லையே!

சாதாரணமாக, நெருப்புப் பிடித்துக்கொண்டால், 'நெருப்பு எவ்வளவு அழகாக எரிகிறது பார், பார்!—அடுத்த வீட்டுக்குத் தாவுகிறது! இன்னும் பிடிக்கிறது! அடடா—அதற்குள் அணைத்து விட்டார்களே!' என்று சத்தமிட்டு, சிறு பையன்கள் நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டும், நெருப்பு பரவுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தும், நெருப்பு அணைக்கப் படுவதைப் பார்த்துத் துக்கப்படுவது போலவும் அல்லவா சில தொழிற்சங்கங்கள் நடந்துகொள்ளச் செய்யப்படுகின்றன? சிறு பையன்களுக்கு என்ன பொறுப்பா? கவலையா? அந்த மாதிரிச் சிறு பையன்கள் போல், பொறுப் பற்ற முறையிலா இவர்கள் நடந்து கொள்வது? நாட்டைப்பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், மனித உயிரைப் பற்றியும் இப்படியா பொறுப்பற்ற முறையில் கவலையற்று நடந்து கொள்வது?

இந்த நாட்டில் பஞ்சம், பண நெருக்கடி இருக்கிறது என்றால் ஏன்? தோழர் ஆச்சாரியார் அவர்கள் சொல்கிற மாதிரியான மழையில்லாததாலா? அல்லவே அல்ல.

மற்றென்ன வென்றால், ஆச்சாரியார் அவர்கள் விவசாயச் சட்டம் செய்வதற்குக் காரணம் சொன்னாரே அதுதான். அதாவது, 'விவசாயி—பண்ணையார் தகராறில் உற்பத்தி சரிவர ஆவதில்லை' என்று சொன்னாரே அதேதான். உற்பத்திப் பெருக்கக் கவலை இருவருக்கும் கிடையாது. இருவரும் 'இலாபமும் கூலியும் அதிகமாக வேண்டும்' என்ற கருத்தில் ஒருவரையொருவர் ஏமாற்றுவதிலேயே கவலை செலுத்துகிறார்களே தவிர, காரியத்தில் கொஞ்சங்கூடக் கவலைப்படுவதில்லை. அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வது; இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் என்று தொழில் நிலையங்கள் வேலை செய்யப் படாமல் சும்மா பூட்டியே கிடப்பது! அப்புறம் எப்படித் தொழில் வளர்ச்சியும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படும்?

இப்போது எடுத்ததற்கெல்லாம் 'ஸ்டிரைக்' ஆரம்பித்து விடுகிறார்கள். இதில் பெரும்பான்மை ஸ்டிரைக்குகள்—சங்கங்களை நடத்துகிற ஆட்களின், ஸ்தாபனங்களின் சொந்த நலனுக்கும், மற்றபடி தங்கள் சொந்தக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவுமே செய்கிறார்கள்.

ஸ்டிரைக்கினால் ஏற்படுகிற விளைவுகள் என்ன? நான் முன் சொன்னது போல் தொழில் வளர்ச்சி கெட்டு, உற்பத்தி குறைவதோடு மட்டுமல்ல; பொது மக்களுக்கும் எவ்வளவு தொந்தரவு ஏற்படுகிறது?

இரயில்வேயில் 'அனைத்து இந்திய ஸ்டிரைக்' இரண்டு மாதம் செய்து சம்பளத்தில் 5–10 ரூபாய் உயர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பண்டித நேருவோ தோழர் கிரியோ தங்கள் வீட்டுக் காசிலிருந்து கொடுக்கிறார்களா? இல்லை. 'சரி, இவர்களுக்குச் சம்பளம் 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்து விட்டு, 2-வது 'கிளாஸ்' மைலுக்கு 6 தம்பிடி 'சார்ஜ்' உயர்த்து; 3-வது 'கிளாஸ்' 2 தம்பிடி உயர்த்து' என்று சொல்லி

விடுகிறார்கள். இதனால் யாருக்கு நட்டம்! இரயிலில் ஏறுகிற மக்களுக்குத்தான். இந்த அதிகப்படியான பணத்தைப் பொதுமக்கள்தாம் கொடுக்கிறார்கள்.

அது போலவே, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தால் அவர்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுத்துவிட்டு, அதைச் சரிக்கட்ட, துணியில் கெஜத்துக்கு இரண்டு அணா உயர்த்துகிறான். 10 ரூபாய் அதிகச் சம்பளம் பெற்ற இரயில்வே தொழிலாளி, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட விலையைத் துணிக்குக் கொடுக்கிறான். அதே மாதிரி ஸ்டிரைக் செய்து அதிகச் சம்பளம் பெற்ற மில் தொழிலாளி, ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட 'சார்ஜ்' கொடுத்து இரயிலில் போகிறான். அதுபோலவே 'ட்ராம்வே' தொழிலாளி ஸ்டிரைக் செய்தால் 'ட்ராம்' நிர்வாகம், சார்ஜில் 3 தம்பிடியை உயர்த்தி விட்டு, 'ட்ராம்' தொழிலாளிக்குச் சம்பளத்தை உயர்த்தி விடுகிறது. இந்த உயர்த்தப்பட்ட 'சார்ஜை' யார் கொடுப்பது? பொது மக்களும், இரயில்வேத் தொழிலாளியும், மில் தொழிலாளியும் போன்றவர்கள்தாமே! இப்படியாக ஸ்டிரைக் செய்வதன் மூலமாக வேலை மெனக்கெடுவதோடு இருசாராரும் தொல்லை, துயரத்துக்கு இலக்காகி விலைவாசிகளும் உயரும் தன்மை இருக்கிறது. இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அதோடு இந்த மாதிரி 'ஸ்டிரைக்', பலாத்காரம், நாசவேலை முதலிய காரியங்களால்தானே போலீஸ் படையும், எம். எஸ். பி., எஸ். ஏ. பி. என்றும் ஏற்பட்டது! இப்படியா செய்வது! இவ்வளவு தொல்லை, துயரப்பட்டா பரிகாரம் காணுவது? மற்றும், இவ்வளவு கஷ்டத்திற்குக் காரணம் அரசாங்கம் என்பதைத் தெரிந்தும் தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் அரசாங்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல், வாயில்லாப் பூச்சிகளாகிய தொழிலாளர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கிப் பெருமை, பயன் அடைகிறார்கள்.

இந்த நாட்டுக்கு ஏற்ற மாதிரியில்—இந்த நாட்டுத் தன்மைக்கு ஏற்ற மாதிரியில் தொழிலாளர் பிரச்சினைகளை அணுக வேண்டும். மற்ற நாடுகளில் நடந்ததுபோல் இங்கும் நடத்த வேண்டும் என்பதும் அந்த முறையிலேதான் போக வேண்டும் என்பதும் அவசிய மற்றதாகும்.

மற்ற நாட்டிலே இருக்கிற நிலைமை வேறு; இந்த நாட்டு நிலைமை வேறு. அதாவது, இந்நாட்டில் தொழிலாளிகள் என்பவர் பிறவித் தொழிலாளிகள் ஆவார்கள். இப்படிப் பிறவித் தொழிலாளி யாக்கி வைத்து, அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல்—மாற்ற மடையச் செய்யாமல் பார்த்துக் கொள்கிறவர்கள் மற்றொரு சாதியார். அந்தச் சாதிதான் இன்று ஆட்சியிலும் தொழிலாளர் தலைமையிலும் இருந்துவருகிறது. இன்று தொழிலாளர் நலமாக இருவரின் 'சதிதான்' இருந்து வருகிறது.

இந்த நிலை மற்ற நாடுகளில் இல்லை. மார்க்ஸும், லெனினும் 'சதிக்கென்று' ஒரு சாதி இல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள், சதிகாரர்களின் சதிச் செயலுக்கும், தொழிலாளர் சாதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அழுத்தப்பட்டுக் கிடப் பதற்கும் பரிகாரம் சொல்லவேண்டிய அவசியமில்லாதவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

ஆதலால், தொழிலாளி பேதம் மட்டுமல்லாமல் முதலாளித் தன்மையில் சாதி உயர்வு-தாழ்வு பேதம் நடப்பு இருக்கிற போதும், அதைப் பாதுகாக்க ஒரு சாதி இருக்கிற போதும், அவர்கள் தொழிலாளர் கிளர்ச்சியை நடத்துகிற போதும்—'மார்க்ஸ் சொன்னபடிதான் செய்யவேண்டும்; லெனின் என்ன சொன்னாரோ அந்தப்படிதான் செய்யவேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இது சதிகார சாதிக்குத்தான் அனுகூலம், மார்க்ஸேதான் தொழிலாளர் பிரச்சினைக்கு முடிவானவரா? அல்லது லெனினே கடைசி யானவரா? நாளுக்கு நாள் நடப்பும் கருத்தும் மாறிக் கொண்டே வருகின்றனவே! சாதியின் பேரால் தொழிலாளர் சமுதாயம் இருக்கக் கூடாது என்கின்ற கிளர்ச்சியே 1925-ல் தானே துவக்கப்பட்டது—கண்டு பிடிக்கப்பட்டது! இந்த நிலையில் மார்க்ஸும் லெனினும் முக்கால முணர்ந்த தீர்க்க தரிசிகளா, அவர்களுடையதே முடிவு என்று சொல்ல? மதவாதிகள்—?

பார்ப்பனர்கள் எப்படி மகாவிஷ்ணு, பரமசிவன் என்று சொல்கிறார்களோ அப்படியா பகுத்தறிவு வாதிகள், மார்க்சிஸ்டுகள் சொல்லுவது? காலம் வேறு; ஆட்சி வேறு. அங்கு முதலாளி ஆளுகிறான்; இங்கு பார்ப்பான் ஆளுகிறான். பண்டித நேருவும் இராஜாஜியும், இராமமூர்த்தியும் யார்? கிரியும், கிருஷ்ணாராவும் ஜெயப் பிரகாசும், குருசாமியும் யார்? மற்றும் இரயில்வே மந்திரியும், தட்சிண இரயில்வேக்களின் ஏஜண்டும் யார்?

இதற்கும் தொழிலாளர் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்று யாராவது சொன்னால் அவர்களை யோக்கியர்கள் என்றோ அல்லது அறிவாளி என்றோ ஒரு நாளும் சொல்ல முடியாது. ஏன் இப்படிச் சொல்கிறேன்? இந்த மாதிரித் தொழிலாளிக்குச் சம்பந்தப்பட்ட எல்லா ஸ்தானங்களிலும்—ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லாத் தலைமைகளிலும் பார்ப்பனனே இருக்கவேண்டிய அவசியமென்ன? இது அகஸ்மாத்தாக ஏற்பட்டதா?

அல்லது, பார்ப்பனர்தான் இருக்கவேண்டும் என்கின்ற அவசியத்தினால் ஏற்பட்டதா கம்யூனிஸ்டுகள்தாம் இதற்குப் பதில் சொல்லட்டுமே! 'சாதிபற்றி-வகுப்புபற்றி-பார்ப்பான் சதியைப்பற்றிப் பேசுவது பிற்போக்குச் சக்தி' என்று சொல்லி விடுவதே இவற்றிற்குப் பரிகாரமாகிவிடுமா? அல்லது மார்க்ஸ், லெனின் சொன்னபடிதான் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

மார்க்ஸ் நினைத்திருப்பாரா, இந்த நாட்டில் பார்ப்பனர்கள் என்கிற சதிகாரர்கள் செய்து வருகிற கொடுமைகளையும், புரிந்து வருகிற ஆதிக்கத்தையும், நடத்துகிற சதித் திட்டங்களையும்—மற்றும் இந் தநாட்டின் சொந்த மக்கள் பிறவிச் சூத்திரர்களாக்கப்பட்டு, வேசி மக்களாய்க் கருதப்படுகிற நிலைமையையும் பற்றி? அதற்கு ஏற்ற மதம், சாஸ்திரங்கள் கடவுள்கள் பற்றி? ஆதலாலேயே, அவர் அந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி நிலவி வந்த முதலாளித்துவம், அதன் ஆதிக்க முறைகள், அவைகளுக்கு மதம் அளிக்கும் ஆதரவு பற்றிச் சொல்லிப்போனாரே தவிர, இந்த நாட்டைப்பற்றி—பாவம், அவர் என்ன கண்டார்?

ரஷ்யாவில் என்னை அதிசயமாகக் கேட்டார்களே! ரஷ்யாவிலே ஒரு மாணவன் என்னைப் பார்த்து, 'என்ன, உங்கள் நாட்டிலே மகாராஜாக்கள் இருக்கிறார்களாமே! அதுபோலவே, பறையர் இருக்கிறார்களாமே! அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்?' என்று அதிசயமாகக் கேட்டான். (அதாவது மகாராஜா, பறையர் இருக்கிறார்களாமே என்று) நான் சொன்னேன்—'அதோடு மட்டுமல்ல—பார்ப்பானும் அதாவது பிராமணன் என்பவனும் எங்கள் நாட்டில் இருக்கிறான்' என்றேன்.

அவனைப்பற்றியும் சொன்னேன். அதற்கு அவன் ஆச்சரியப்பட்டுப் போய் விட்டான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அந்த நாட்டிலே இதைப்பற்றித் தெரியாது. அப்படி இருக்கும்போது அதுதான் 'வேத வாக்கு' 'ஞான சூத்திரம்' என்று சொன்னால், என்ன அர்த்தம்?

இவ்வளவு பாடுபட்டும் இன்னும்—இந்தக் காலத்திலும் பார்ப்பான் இருக்கிறான்; சூத்திரன் இருக்கிறான்; பறையன் இருக்கிறானே! இந்தக் காலத்திலா இத்தகைய பேதங்கள் இருப்பது? அந்தச் சாதிகளில் ஒன்றுதானே தொழிலாள சாதி! பாழும் சுயராஜ்யம் வந்தும் ஒரு பார்ப்பான் குறையவில்லை; ஒரு பார்ப்பான் ஆதிக்கமும் குறையவில்லை. சூத்திரன் குறையவில்லை; பறையனும் குறையவில்லை; அவர்களது இழிநிலை, பாட்டாளித் தன்மை குறையவில்லை. இவை குறையவில்லை என்பதோடு மட்டுமல்ல—இந்தப் பேதங்கள் இந்த சுயராஜ்யக் குடியரசிலே இன்னும் அதிகமாகப் பலப்படுத்தப் படுகின்றனவே!

இதைப்பற்றிக் கொஞ்சமாவது, தொழிலாளர்களுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் இந்த வீரர்கள் கவலைப்பட வேண்டாமா? இந்த நாட்டுக்கு இது ஒரு முக்கியமான சங்கதி. இத்தனை நாளும் யாரும் இதைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள

வில்லையே, எங்களைத் தவிர! வீராதி வீரர்கள் என்றெல்லாம் 'விருது' பெற்ற 'சூரர்கள்' இதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கிறார்களா? சும்மா தொழிலாளர்களை உசுப்பிவிட்டு அடி உதை வாங்கி வைப்பதில்தானே அவர்கள் கவனம் செலுத்தினார்கள்? தொழிலாளிக்கு அடி உதை; அதோடு மட்டுமா? தொழிலாளர் குடும்பப் பெண்கள் எத்தனை பேர்கள் கற்பழிக்கப்பட்டார்கள்? எத்தனை பெண்களைக் குடுமியைப் பிடித்துக் கொண்டு தெருவிலே கொண்டு வந்து போட்டு அடித்தார்கள்? இவ்வளவு பாடுகள் படச் செய்தா இரண்டணா கூலி உயர்த்தித் தருவது? குறைந்த கஷ்ட நஷ்டத்தில் அதிகப்படியான இலாபத்தை அல்லவா பெற வேண்டும்? இதை நினைத்தால் எனக்கு மனம் பதறுகிறது. நம் மக்கள் இப்படி ஏமாற்றப்படுகிறார்களே என்கின்ற ஆத்திரத்தில் சில சமயங்களில் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. எத்தனை நாளைக்கு இப்படி நடந்தாலும் சூத்திரன் (தொழிலாளி) சூத்திரனாகவும் பார்ப்பான் (பிறவி முதலாளி) பார்ப்பானாகவும்தானே இருப்பர்?

நியாயமாக—எந்தவிதமான ஒளிவு மறைவுகளன்னியில்—எந்தவிதமான கட்சி சுயநலமன்னியில்—வெளிப்படையாக—பலாத்காரம் இல்லாமல் காரியம் செய்தால், இந்தத் தொல்லைகள் படவேண்டிய அவசியமே இல்லை. இன்றைய தினம் தொழிலாளிகள் நாள் தவறாமல் சோறு தின்னாவிட்டாலுங்கூட, அடி, உதை தின்று கொண்டிருக்கிறார்களே, இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். மாற்றியமைக்கிறேனா இல்லையா என்று பாருங்கள்.

நாங்கள் இந்த 25 ஆண்டுகளாக பார்ப்பன ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வருகிறோமே! எவ்வளவு பேசியிருக்கிறோம்? அதனால் இதுவரை ஏதாவது கலவரம் உண்டாயிற்றா? ஒரு பார்ப்பானுக்காவது ஒரு சிறு அடியாவது பட்டிருக்குமா? ஒரு பார்ப்பனப் பெண்ணின் உடம்பிலாவது, கை மேலே பட்டிருக்குமா? மற்றும் எந்தப் பார்ப்பான் வீட்டிலாவது நாங்கள் புகுந்து கலவரம் செய்தோமா? பார்ப்பனர்களுடைய கொள்கைகளை அவற்றின் சூதுகளைத் திராவிட மக்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்கள் விடுதலை பெற வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வந்தோமே தவிர, வேறு என்ன செய்தோம்?

சமுதாயத்தில் அவர்கள் வேறு; நாம் வேறு. நம் விடுதலைக்கு—முற்போக்குக்கு நம் மக்கள் நடந்து கொள்ள வேண்டியதை நாம் பேசுகிறோம்; விஷயங்களை எடுத்துச் சொல்கிறோம். கொள்கையின் அடிப்படையிலே பேதப்படுத்துகிறோம் என்ற—நாகரிகமான முறையில் இருக்கிறோமே தவிர, 'குத்து, வெட்டு, கொலை, பலாத்காரம், நாசம், ஒழுங்கு மீறிய காரியம் செய், கொள்ளையடி'! என்றா சொல்லிக்கொண்டு திரிந்தோம்? அப்படியெல்லாம் செய்யாததால் எங்கள் கருத்து சிறிதும் வெற்றி பெறாமலா போய்விட்டது?

கம்யூனிஸ்டுகளுடைய கஷ்டமே தீர்ந்தது என்றால், எப்படித் தீர்ந்தது? 'புத்தி வந்தது, இனிமேல் நாங்கள் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டோம்; 'பார்லிமெண்டரி' முறையிலேயே இருக்கிறோம்; 'அண்டர் கிரவுண்ட்' வேலையெல்லாம் வைத்துக் கொள்வதில்லை'—என்றெல்லாம் சர்க்காரிடத்தில் சொல்லிக்கொண்டதால்தானே, அவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்? அவர்கள் மீதிருந்த 'வாரண்ட்'களெல்லாம் ரத்து செய்யப்பட்டன? சிறையில் இருந்தவர்கள் விடுதலையடைந்தார்கள்; வழக்குகள் சில வாபஸ் வாங்கப்பட்டன. நான், அதை ஒன்றும் கேவலமாகச் சொல்லவில்லை. பலாத்காரத்தை விட்டுவிட்டு எந்தக் காரியத்தையும் நேரிடையாகச் செய்ய ஆரம்பிப்பது என்றாலே அதிலே நிச்சயம் ஜெயம் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது.

[பொன்மலையில், 10-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-9-1952]

2. சாதித் தொழிலாளி—கூலித் தொழிலாளி

இந்த நாட்டில் விவசாயத் தொழிலாளி, உழவர், வேளாளர் ஆகிய சாதியைச் சேர்ந்தவர்; நெசவுத் தொழிலாளி, கைக்கோளர், தேவாங்கர், சாலியர், பட்டுநூல்காரர் முதலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள்; உலோக, மரத் தொழிலாளிகள், விஸ்வகர்ம ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்தவர்கள்; சிற்பத் தொழிலாளிகளில் உலோகம், மரம், கல், மண் கட்டடம் ஆகியவைகளுக்கு விஸ்வகர்மாக்களுடன் மற்றும் உப்பாரன் என்னும் உப்பிலியர், ஒட்டர், கொல்லத்துக்காரர் முதலிய சில சாதிகளைச் சேர்ந்தவர்கள்; இவர்களைத் தவிர்த்து மற்றும் குடிமக்கள் என்னும் பேரால் மனித சமூக வாழ்க்கைக்கு அவசியமான பல தொழில்களுக்கும் குடிமக்கள் என்னும் தலைப்பில் பலவகை வாணியர், வலையர் குயவர், வண்ணார், நாவிதர்; இன்னும் மக்களுக்குப் 'போக இன்பம்', நாட்டிய இன்பம் அளிக்கும் தொழில்களை மேற்கொண்ட தொழிலாளர் மக்கள்—எல்லோருமே நம் நாட்டில் 'இந்து சமயம்' காரணமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாதியின் பேராலேயே வகுக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்துமத ஆதாரப்படி-இந்துமத தர்ம சாஸ்திரங்களின் விதிப்படி இத்தொழிலாளிகள் இவ்வளவுபேரையும் உழவர், நெசவர், வாணியர், பல தொழில் தச்சர்கள் உட்பட யாவரையும் வருணாசிரம சாதி முறையில் நாலாம்சாதி—சூத்திர சாதியாய் ஆக்கி; மற்றும் அதனுள்ளும் கீழ்–மேல் படி வைத்து, ஒருவருக்கொருவர் உண்பன, தின்பன, தொடுதல்–நெருங்குதல் கூட இல்லாமல் இருக்கும்படியான இழிவுகளை உண்டாக்கி—ஒருவரை ஒருவர் இழித்துக் கூறிக்கொள்ளும்படியாகச் செய்துவைத்து, இந்த முறையும்கூட நாட்டுக்கு ஒருவிதமாய் நடப்பிலிருக்கும்படியாக ஆக்கிக் கீழ்மைப்படுத்தி—அவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் நலனுக்கும், மேன்மைக்கும் முயற்சிசெய்ய வழிஇல்லாமல் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் கல்லின்மேல் எழுத்துப்போல் ஆதாரத்திலும் அனுபவத்திலும் இருந்துவந்தாலும்—இந்தத் 'தொழிலாளர் சாதியார்கள்' ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனி சாதியையும், வகுப்பையும் உயர்வாகப் பேசிக்கொள்வதிலும் வழிதேடிக்கொள்வதிலும் எவரும் இளைத்தவர்கள் அல்லர்!

உண்மையில், பகுத்தறிவுப்படி இந்தியனாகவோ, இந்து சமயத்தானாகவோ இல்லாமல் உலகப் பொதுமகனாக இருந்து ஒருவன் நோக்கினானேயானால், இவ்வளவு தொழிலாளர் சமூகமும், இன்னும் இதில் குறித்திராத பள்ளு, பறை, சக்கிலி, தோட்டி என்று சொல்லப்படும் சமூகங்களும் யாவரும் பிறவியில் பேதமில்லாத மனித சமூகம் ஆவார்கள்.

மொத்தத்தில் தொழில் என்பது மக்களின் சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றாகும். மனிதன் காட்டுமிராண்டி வயதில் தன்னந்தனியாய்—மிருகங்களைப்போல் காடுகளில் திரிந்த காலத்தில் இம் மாதிரித் தொழில்முறைகள் தேவை இருக்காது. ஆனால், சமுதாயமாகச் சேர்ந்து கூட்டு வாழ்க்கை வாழ ஆரம்பித்த பின்—காலம் செல்லச் செல்ல—அறிவு பெருகப் பெருக, தேவைகள் வலுக்க வலுக்க பல தொழில்கள் செய்யவேண்டியது மனிதனுக்கு அவசியமாயிற்று. அதிலிருந்து நிலைமைக்குத் தக்கபடி தொழில்களும், தொழில் செய்யவேண்டிய அவசியமும் மக்களுக்கு ஏற்பட்டன. அவற்றை ஒவ்வொரு மனிதனும் அவனவன் உடல் சக்தி, அறிவு சக்தி ஆகிய காரணங்களுக்குத் தக்கபடி செய்து வருகின்றான். இதற்குச் 'சாதியோ', 'வகுப்போ' இல்லாமல், அவரவர்கள் சவுகரியம் இச்சை ஆகியவைகளுக்குள்ளாகவே தொழில்கள் சார்ந்துவிட்டன. அந்த முறைதான் இன்றளவும் உலக முழுதும் நடந்துவருகின்றது. கஷ்டமானதாகவோ, அசவுகரியமான தாகவோ ஒரு தொழில் இருக்குமானால் அந்தத் தொழில் நாளாவட்டத்தில் கஷ்டக் குறை வாகியும், அசவுகரியக் குறைவாகவும் செய்யப்படவேண்டியதுதான் அறிவுடைமையே தவிர—தொழில்களில் உயர்வு தாழ்வு கற்பித்து நிலைநிறுத்துவதோ, தொழில்களுக்குத் தத்துவார்த் தங்கள் கண்டு பிடிப்பதோ, அவற்றை மற்றவர்கள் தலையில் போடப் பார்ப்பதோ,

தொழிலாள சாதியர்கள் தங்கள் தொழிலை மாற்றாமல் சாதியை உயர்த்திக்கொள்ள நினைப்பதோ எவ்வித பயனும் அளிக்காது.

உழவுத் தொழிலாளியும், விஸ்வகர்மத் தொழிலாளியும் ஒன்று என்பதுதான் நமது அபிப்பிராயம். சாதிப் பிரிவால் பேதப்படுத்தப்பட்டுவிட்டதல்லாமல் மனித சமூக வாழ்வுக்கு இவர்கள் யாவரும் சமுதாயத்திற்கு அஸ்திவாரம் போன்று இன்றியமையாதவர்கள்; ஒரே விதமாகத் தொண்டாற்றுகிறவர்கள். இவர்களில் எதற்காகப் பேதம் காணவேண்டும்? சமயத்தில், சாஸ்திரத்தில் சொல்லும் பேதங்கள் அல்லாமல் பிரத்தியட்சத்தில் என்ன பேதம் காணமுடியும்? ஆதலால், தொழில்களில் உயர்வு–தாழ்வுகளையும், தொழிலாளி சமூகங்களில் உயர்வு–தாழ்வுகளையாக்கும் சாதிபேதங்களையும் அழிப்பதற்கு முயற்சிப்பதுதான் தொழிலாளர் முன்னேற்றமாகும். ஒரு தொழிலாளிக்கு மற்றொரு தொழிலாளி எவ்வளவு உயர்ந்த சாதியானாலும், சாதி முறையில் அவன் மற்றொரு சாதிக்குக் கீழ்ப்பட்டவனாக ஆகித்தான் தீருவான். ஆதலால், அவைகளை வலியுறுத்தும் சமயமும், சாஸ்திரமும் முதலில் அழிக்கப்படவேண்டும். அப்படியில்லையானால், கல் தச்சனும், நெசவாளியும் பிராமணனாக முயற்சித்தால் மற்றொரு தொழிலாளி ரிஷியாக முயற்சிக்கிறான். இதன் பயனாய், பிராமணன் என்பவன் உயர்ந்தவன் என்பதும், ரிஷிகள் என்பவர்கள் உயர்ந்தவர்கள் என்பதும், தேவர்கள் என்பவர்கள் உயர்ந்தவர்கள் என்பதும்தான் நிலைநிறுத்தப் பாடுபட்டதாக ஆகுமேயல்லாமல்—தொழில் முறைக்கோ, தொழிலாளி சாதி இழிவு என்பதற்கோ யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை.

நாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டானாலும் சரி—பாடுபட்டு உண்கின்றவனும், பாடுபடாமல் உண்கின்றவனுமான இரண்டு பிரிவுகள் உள்ளவரை மனிதனில் மேல்–கீழ் நிலைமை இருந்துதான் வரும். இது உலகமெல்லாம் இருந்துதான் வருகிறது. பாட்டாளி, அன்னியன் கையை எதிர்பார்க்க வேண்டியவனாய் இருக்கிறான். இது மாறவேண்டுமானால், பாட்டாளிகளின் ஒற்றுமைப் பலத்தினால்தான் முடியும். பாட்டாளிகளுக்குள் முதலில் சாதிபேதம் இருக்கக்கூடாது; தொழில்களை உயர்வு தாழ்வாய்க் கருதக்கூடாது.

எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். பேதமும்–இழிவும் கற்பிக்கும் சமய சாத்திரங்களை அழிக்கவேண்டும்; அரசியலைக் கைப்பற்றவேண்டும். உயர்ந்த சாதியார் என்பவர்களையோ, சோம்பேறிகளாய் உடலுழைப்பு இல்லாமல் வாழ்கிறவர்களையோ, எதிரிகளாகக் கருதி—அக் கொள்கைகளை நிர்மூலமாக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளி வகுப்பும், 'தங்களால்தான் உலகம் இருக்கிறது; தங்களால்தான் மக்கள் வாழமுடிகிறது; மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்குத் தாங்களே அஸ்திவாரமானவர்கள்' என்பதை உணரவேண்டும். உணருவது மாத்திரமல்லாமல், 'அப்படிப்பட்ட தொழிலாளர் சமூகம் சமுதாயத்தில் கீழ்நிலையில் இருப்பானேன்? இது நம்முடைய அறிவீனமும் ஒற்றுமையற்ற தன்மையும் அல்லவா?' என்று சிந்திக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாததனாலேயே தொழிலாளர்களுக்குப் பொதுத் தலைவர் இல்லை; பகுத்தறிவு இல்லை; முன்னேற்றத் திட்டம் இல்லை. சோம்பேறிகளுக்கு–ஊரார் உழைப்பில் வாழ்பவர்களுக்குக் கை ஆயுதமாய் அவர்கள் இருக்க நேரிட்டது.

இந்த நிலையை மாற்றுவதற்கே இன்று இந் நாட்டில் இருக்கும் பிராமணர்—பிராமணர் அல்லாதார் போராட்டம் என்பது ஏற்பட்டதே ஒழிய, வேறு எந்தக் காரியத்திற்காகவும் ஏற்பட்டதல்ல. இதைத் தொழிலாளி மக்கள் உணராமல் சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களான பார்ப்பனர்களுக்குக் கையாட்களாக ஆனதின் பயனாலேயே—தொழிலாளிகளுக்கும், தொழில் முறைக்கும் நாளதுவரை எவ்வித முற்போக்கும் ஏற்படவில்லை. 'பார்ப்பனர் அல்லாதார் கட்சி' என்னும் 'ஜஸ்டிஸ் கட்சி' தனக்கு அரசியல் ஆதிக்கம் சிறிதளவும் கிடைத்த காலத்திலும்—அது இந்த சாதி உயர்வு–தாழ்வு பேதத்தை ஒழிக்க எவ்வளவோ வேலை செய்தது. பெரும்பாலும் அதனுடைய வேலைப்பயன் தொழிலின்

காரணமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில், பிற்படுத்தி வைக்கப்பட்ட மக்கள் விஷயத்தில் எவ்வளவோ முன்னேற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. தொழிலாளிகள் என்பவர்கள் யாராய் இருந்தாலும், 'சாதித் தொழிலாளி'யானாலும், 'கூலித் தொழிலாளி'யானாலும் சரீரத்தால் பாடுபடுகிறவர்கள் என்றால் அவர்கள் அத்தனைபேரும் பார்ப்பனரல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களைத் தவிர்த்த மற்றவர்கள் பெரிதும் சாதியால் பார்ப்பனர்களாகவும் சிலர் அவர்களைப்போல் பாடுபட இஷ்டப்படாத சோம்பேறிகளாகவும் இருப்பவர்கள். இவர்களும் தங்களை ஒரு வித மேல் (சாதியார்) வகுப்பார் என்று சொல்லிக் கொள்பவர்களாக இருப்பார்கள். ஆனாலும், பார்ப்பனர் தவிர மற்றவர்கள் சூத்திரர்களாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

['விடுதலை'—தலையங்கம்—16-2-1940]

3. 'குறிப்பிட்ட தொழில் ஏன்?'

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நான் 1927-லேயே சொன்னேன், கூலி உயர்ந்தால்—அதுவே தொழிலாளருக்குப் போதாது; அவன் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்று. இதெல்லாம் தொழிலாளருக்குத் தெரியாது. தவறிக் காலின்மேல் கோடரியைப் போட்டுக் கொண்டால் கூட 'இது கடவுள்செயல்' என்று கூறிக்கொள்வான்; முதலாளி 40 இலட்சம் சம்பாதித்தால் 30 இலட்சம் வரியாகக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் 30 இலட்சம் வரியாக வாங்குவதை, 5500 தொழிலாளர்கள் வேலைசெய்தால் அவர்களின் பிள்ளைகள் 4500 பேர் படிக்க வசதி செய்ய 7, 8 இலட்சம் அதிலிருந்து செலவு செய்யவேண்டும். தொழிலாளியின் மகனைப் படிக்கவைத்தால் அவன் முன்னேற வழி உண்டு. படித்தபிறகு அவனும் கோடரி, மண்வெட்டி எடுக்கவேண்டிய நிலை ஏற்படாது; 'பிச்சை எடுத்தாகிலும் வயிற்றைப் பார்த்துக் கொள்வேன்' என்று கூறுவானே தவிர, பரம்பரைக் கூலியாகவே இருக்கமாட்டான். பரம்பரைத் தொழிலாளி நிலை மாறவேண்டும். மேலும், இந்த நாட்டில் நாற்று நடுதல், ஏர் உழுதல் போன்ற வேலைகள் குறிப்பிட்ட ஒரு சாதியாருக்கு, சூத்திரருக்கு என்று இருக்கிறது. மனிதன் செய்யும் தொழில் என்று இருக்குமானால் குறிப்பிட்ட ஒரு சாதியார் மட்டும் ஏன் செய்யாமல் இருக்கவேண்டும்? எந்தப் பார்ப்பான் ஏர் உழுகிறான்? எந்தப் பார்ப்பனத்தி நாற்று நடுகிறாள், புல் விற்கிறாள்? பார்ப்பனத்திகளுக்குச் சாமான் கழுவத் தெரியாதா? நம் பெண்கள் அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பது என்ன சம்பிரதாயம்? நம் பெண்கள் சாமான் கழுவ கல்லூரிபோய்ப் படித்துவிட்டு வந்திருக்கிறார்களா? பார்ப்பனத்தி, பார்ப்பான் என்றைக்கு அந்த வேலையைச் செய்கிறார்களோ அன்றுதான் அது தொழிலாளி செய்யும் வேலை ஆகும். சிறிது நாட்களுக்கு முன் பார்த்தோமே, நம் பெண்கள் சதிர் ஆடினார்கள்; அவர்களைத் தேவடியாள்கள் என்று கூறினார்கள் பார்ப்பனர். அவர்களே ஆட ஆரம்பித்தார்கள்; உடனே அது பரதநாட்டியம் என்று சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்கள் துணி சலவைசெய்தல் முதலிய வேலைகளைக் கட்டாயம் செய்தே ஆகவேண்டும். இந்த மாதிரி அமைப்பு ஏற்பட்டால்தான் தொழிலாளிகளுக்குள் இருக்கும் வேறுபாடுகள் மறையும்; இல்லாவிட்டால் மறையாது. மிராசுதார்களுக்கும் இன்று இல்லாவிட்டாலும் நாளைக்குச் சட்டம் வந்துவிடும். ஆகவே, அவர்களும் பரவாயில்லை என்று சொல்லத்தக்க அளவில் நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளர்களும் கட்டுப்பாட்டோடு இருக்கவேண்டும். மற்றவர் பேச்சைக் கேட்டுக் கலகத்தில் இறங்கக்கூடாது. கூடிய சீக்கிரத்தில் தொழிலாளருக்கு இலாபம் ஏற்படும்படியான நிலைமை வரும்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை'—10-8-1956]

4. பிறவி முதலாளி

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

பெரியவன்–சின்னவன், பணக்காரன்–ஏழை, எஜமான்–அடிமை, நிலப்பிரபு–கூலி என்னும் வேறுபாடுகள் இருக்க வேண்டுமென்பது நீண்ட நாளாக உலகத்திலே இருந்துவருகிற சம்பிரதாயம்; விதி. ஆனால், இந்தப்படியான அமைப்புகள் எதற்காக இருக்க வேண்டும்?

மனித சமுதாயத்தில் இம் மாதிரியான பேதங்கள் இருந்துவர வேண்டியதன் அவசியம் என்ன? இந்த அமைப்புமுறை மாறிவிடுவதனால் சமுதாயப் பொதுநிலைமைக்கு என்ன நட்டம், பங்கம் வந்துவிடும்? இந்த மாதிரியான ஒரு அமைப்புமுறை இருந்து வருவதனால் ஒரு பெரும் ஜனக்கூட்டம் கஷ்டப்படவும், தங்களுடைய சராசரித் தேவைகளைக்கூடப் பெற முடியாமல் நசித்துக்கொண்டு போகவுமான நிலைமைதான் வளருமே தவிர, இன்னொரு கூட்டம் ஏழைகள்மீது குதிரையேறிக் கொண்டிருக்கத்தான் பயன்படும் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து, நிலைமையை மாற்றியமைக்கக் கிளர்ச்சி செய்யப்பட்டது.

இந்த மாதிரியான பணக்காரன்–ஏழை, முதலாளி–தொழிலாளி, நிலப்பிரபு–பண்ணையாள் என்பதான முறை ஆண்டவனாக, கடவுளாகப் பார்த்து மனித சமுதாய வாழ்வுக்காக வகுத்துவைத்தது என்கிற எண்ணமே—நம்பிக்கையே நீண்டநாளாக, பேதம் உள்ள அமைப்பை இருக்கும்படி செய்துவிட்டது. இது கடவுள் செயல் அல்ல; சில சுயநலக்காரர்கள் தங்களின் வாழ்வு ஆதிக்கத்துக்காக ஏற்படுத்திக்கொண்ட முறைதான் இது என்று மக்கள் தெளிந்த பிறகுதான்—கிளர்ச்சி ஏற்பட்டு, மேல் நாடுகளில் மாறுதல் ஏற்பட்டது. இந்த மாதிரியான கிளர்ச்சிகள் மற்ற நாடுகளிலேதான் வெற்றிபெற்றனவே தவிர, இன்னும் இந்த நாட்டில் பேதம் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த நாட்டிலே பார்க்கிறோம் முதலாளி–தொழிலாளி மற்றும் இதுபோன்ற பேதங்கள் இருப்பதை. இந்தப் பேதங்கள் மாத்திரமல்லாமல், இன்னும் இதைவிடக் கொடுமையாய், இந்த நாட்டிலே, பார்ப்பான்–சூத்திரன்–பறையன் என்பதான பிரிவுகள் இருக்கின்றன. மற்ற நாடுகளில் ஏழை–பணக்காரன் என்ற பேதம் இருந்ததே தவிர, பார்ப்பான்–பறையன் என்ற பேதம் அங்கு எல்லாம் இல்லை. ஆனால், இங்கு பணக்காரன்–ஏழை என்கிற பேதத்தோடு மட்டும் இல்லாமல் பிறவியிலேயே உயர்சாதிக்காரப் பார்ப்பானும், இழி சாதிக்காரப் பறையனும் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ஏழை–பணக்காரன் என்பது, எப்படிக் கடவுள் அமைப்பு என்று சொல்லப்பட்டு வந்ததோ, அதைப்போலவே இந்தச் சாதி உயர்வு–தாழ்வுத் தன்மை கடவுளின் பேரால் நிலைநிறுத்தப் பட்டுள்ளது.

முதலாளி என்பவன் பரம்பரை பரம்பரையாக வருபவனல்லன். இன்றைக்கு ஒருவன் முதலாளியாக இருக்கலாம்; நாளைக்கே அவன் 'இன்ஸால்வென்ட்' கொடுத்து 'பாப்பர்' ஆகிவிடலாம். அதுபோலவே, இன்று கஞ்சிக்குத் திண்டாடியவன் அடுத்த நாள் பெருத்த முதலாளியாக வரலாம். ஆனால், பார்ப்பான் என்பது அவன் உயர் சாதிக்காரன், கடவுளுக்கு நேராகத் 'தந்தி' சொல்கிறவன் என்பது பரம்பரை பரம்பரையாக—வாழையடி வாழையாக வருவது ஆகும். அழுக்குப் பிடித்த பார்ப்பான் ஆனாலும், குஷ்டம் பிடித்து அழுகிய பார்ப்பான் ஆனாலும், அயோக்கியப் பார்ப்பான் ஆனாலும் பார்ப்பார சாதியிலே பிறந்து விட்டதால், அவன் உயர்ந்த சாதிக்காரன் ஆகிவிடுகிறான்; அவன் மற்றவர்களால் மரியாதை செய்யப்பட வேண்டியவனாகி விடுகிறான். அதேபோல, எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும், திறமைசாலியாய் இருந்தாலும், ஒரு சாதியில் பிறந்ததாலேயே அவன் பறையன், சூத்திரன், தேவடியாள் மகனாகக் கருதப்பட்டு, மேல்சாதிக்காரர்களுக்கு கை கட்டிச் சேவகம் செய்து வாழ வேண்டியவனாகக் கருதப்படுகிறான்.

முதலாளியாவது, நிலப் பிரபுவாவது அசையும் சொத்து, அசையாச் சொத்து என்பவைகளை வைத்துக்கொண்டு, முதல் வைத்துக்கொண்டு உயர்வுத் தன்மை படைத்தவனாக வாழ்கிறான்.

ஆனால், இந்தப் பார்ப்பானோ கை முதலே இல்லாமல் கடவுளைக் காட்டி, மதத்தைக் காட்டி, தர்ப்பைப் புல்லைக் காட்டி மேல்சாதிக்காரனாக உழைக்காமல் உண்டு கொழுப்பவனாக வாழ்கிறான்.

இந்த விசித்திரமான நிலைமை பாழாய்ப்போன இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை. உள்ளபடியே சொல்லுகிறேன்,—இன்று ஏன் நாம் தொழிலாளமக்களாய் இருக்கிறோம்? சாதி அமைப்பின் காரணமாகத்தானே!

சூத்திர சாதி என்பதால் நாம் பார்ப்பானுக்கு உழைத்துப்போட வேண்டியவர்கள். பார்ப்பனர்கள் என்பதால், அவர்கள் எல்லாவற்றையும் தங்கள் வயிற்றுக்கே வாய்க்கால் வெட்டி விட்டு உயர் வாழ்வு வாழ்கிறவர்கள். இன்னும் சொல்லப்போனால், சாதி உட்பிரிவுகள் இருக்கின்றனவே, அவைகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டன? பார்ப்பன பாஷைப்படி எடுத்துக்கொண்டால்கூட, தொழிலுக்குத்தானே சாதிப் பிரிவு? பறையடிக்கிறவன்—பறையன்; வெளுப்பவன்—வண்ணான்; மண்பாண்டம் செய்கிறவன்—குயவன். ஆனால், வேதம் ஓதுகிறவர்—அய்யர், இப்படித்தானே! இதில் பார்ப்பனரைத் தவிர மற்றையோரெல்லாம் உடலுழைப்புக்காரர்கள், சாதியின் முறைப்படியே—சமுதாயத்தின் அமைப்புப்படியே! எனவேதான் சொல்லுகிறேன்—இன்றைய அமைப்பு முறை, பேதத் தன்மை, ஏழ்மை-உயர்வு நீங்க வேண்டுமென்றால் இந்த நாட்டிலே முதலாளியை ஒழித்தால் மட்டும் போதாது; பார்ப்பன உயர்வுத் தன்மை, அதற்குக். கடவுள் மத சாஸ்திரத்தின்மீது கட்டப்பட்டுள்ள பலமான பாதுகாப்பு—இவைகளை ஒழித்தால்தான் முடியும்.

1000 முத்தையா செட்டியார்களும் சரி,—ஒரு சங்கராச்சாரிப் பார்ப்பானும் சரி. நாளை எல்லோருக்கும் நிலம் பொதுவானது என்று பிரித்துக் கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். வருஷம்தோறும் சிரார்த்தம், திவசம் என்பவைகளின் பேரால் பார்ப்பான் கறந்துகொண்டுதானே இருப்பான்! கடவுளின் பெயரால் அர்ச்சகப் பார்ப்பான் சுரண்டிக்கொண்டுதானே இருப்பான்! எனவே, இந்த நாட்டுப் பேதங்கள் நிலைநிறுத்தப் பட்டிருப்பதற்குக் காரணம் எல்லாம் கடவுள், மதம், சாஸ்திரம் என்பவைகளும், அவைகளின் பேரால் வாழுகிற கூட்டமும்தான் என்பதை உணர்ந்து இவைகளை ஒழித்தால்தான், 'எல்லார்க்கும் எல்லாமாய்' என்று சொல்லுவார்களே—அந்த நிலைமை இங்கு ஏற்படும்.

[குளித்தலை–வதியத்தில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1952]

5. திராவிடத் தொழிலாளர் என்பது ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்த மாநாடு திராவிடத் தொழிலாளர் மாநாடு. விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக உண்டு. அவைகள் இருந்தும் ஏன் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படவில்லை? அவர்கள் விடுதலைக்கு வேண்டிய கொள்கைகளைச் சொல்லலாமென்றுதான் திராவிடத் தொழிலாளர் சங்கம் என்று வைத்தோம். இதன் பலன் தெரிந்துகொண்டு திராவிட கம்யூனிஸ்ட் கழகம் வைக்கலாம் என்று இருக்கிறோம். திராவிடம் என்ற சொல்லை ஏன் புகுத்துகிறோம்? பொதுவாக இருக்கவேண்டிய கழகத்திற்கு, ஏன் திராவிடர் கழகம் என்று வைத்தோம்? பொதுவுடைமை என்பதற்கு ஏன் திராவிடப் பொதுவுடைமை என்று வைக்க ஆசைப்படுகிறோம்?

இந்த நாட்டில் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் திராவிடர்கள்தாம்; மங்கோலியரோ, நீக்ரோக்களோ, ஆரியரோ அல்லர். திராவிடர்தான் பாட்டாளிகளாய், விவசாயிகளாய் வாழ்கிறார்கள். சாதாரணமாக விவசாயி, தொழிலாளி என்பது ஒரு பொது நிலைமை. அதில் திராவிட சம்பந்தமில்லை. பொதுவான பெயரே போதுமென்று மற்ற கழகங்கள் கருதுகின்றன. ஆனால், திராவிடனாக இருப்பதால்தான் தொழிலாளியாக இருக்கிறான் என்று நாங்கள் கருதுகிறோம். சரீரத்தால் பாடுபடும் சமுதாயம் திராவிட சமுதாயந்தான். திராவிடரல்லாதவர்கள் யாரும் தொழிலாளியாக இல்லை. கடவுளால் தொழில் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பிறவி திராவிடன் என்று சாத்திரத்தில் எழுதி வைத்துவிட்டார்கள். திராவிடர்களாய் இருப்பதால்தான் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உணர்த்துவதற்காகத்தான் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்று வைத்தோம்.

[கள்ளக்குறிச்சியில், 4-10-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-10-1953]

6. தொழிலாளர் நிலை

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

எனக்குத் தெரிந்து விக்டோரியா மகா ராணி, ஜார்ஜ் எட்வர்ட், ஐந்தாம் ஜார்ஜ். ஆறாம் ஜார்ஜ், இப்பொழுது எலிஸபெத் ஆளுகிறார்கள். இவர்களின் அரசாட்சியே போய் விட்டது. நம் நாட்டில் உள்ள இராசாக்கள், ஜமீன்தார்கள் எல்லாம் சட்டத்தினால் அடிபட்டுப் போய்விட்டார்கள். ஏன், இவர்கள் நினைத்தால் வெற்றி அடைய முடியாதா? ஏன் போய்விட்டார்கள்? மக்களின் மனது மிகவும் மாறிக்கொண்டு வருகிறது. யாரை யார் ஆள்வது என்ற உணர்ச்சி! பணக்காரர் மட்டும் என்ன மிஞ்சப்போகிறார்கள்? பணக்காரன் இலாபத்துக்கும் அரசாங்கம் சட்டம் போட்டது. அவன் ஒரு ரூபாய் சம்பாதித்தால் 12 அணா வரியாகக் கொடுக்கவேண்டும். பூமியை வேறு பிடுங்கிக்கொள்ளப் போகிறோம் என்று அரசாங்கத்தார் கூறுகிறார்கள். இது தேர்தல் தந்திரப் பேச்சு. நேரு காலத்தில் சிறிது தாமதமானாலும் ஆகலாம்; நேருவிற்குப் பிறகு சீக்கிரம் பிடுங்கிக்கொள்வார்கள். அப்படி அரசாங்கத்தார் பிடுங்கிக்கொள்ளாமல் விட்டால் மக்களே பிடுங்கிக்கொள்வார்கள். அரசாங்கம் கொடுத்தது; கடவுள் கொடுத்தார்; பார்ப்பனர் செய்த மந்திரத்தால் வந்தது என்று சொன்னதெல்லாம் என்ன ஆச்சு? தொழிலாளர் சமபங்காளியாக வேண்டும். தொழிலாளரைப் பற்றிய என் கொள்கையை நீண்டநாட்களாகவே நான் சொல்லிவருகிறேன். 'தொழிலாளருக்குப் பாடுபட்டோம்' என்று சொல்லும் சிலர் தங்களால்தான் கூலி உயர்ந்து விட்டதென்று கூறலாம். ஆனால், கூலி வேலை செய்பவன், தோல் வேலை செய்பவன், வண்டியோட்டுபவன், புல் விற்பவன் இன்றைக்கு முன்பைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கூலி சொல்கிறானே! அவனுக்காக யார் பாடுபட்டார்கள்? எந்தக் கட்சி பாடுபட்டது? அரிசி மூட்டை ரூ. 10 விற்றது; இப்பொழுது (1956) 45 ரூபாய் விற்கிறதே; அவர்கள் எந்தச் சங்கம் வைத்து விலை ஏற்றினார்கள்? சில அரசியல் கட்சியினர் வேண்டுமென்றே ஒன்று மறியாத தொழிலாளரிடம், 'நாங்கள்தான் பாடுபட்டோம்' என்று சொல்லி ஏமாற்று கிறார்கள். காலம், சூழ்நிலை இவைகளால் தானாகவே பொருள்களின் விலை அதிக மாயிற்று; கூலியும் அதிகமாயிற்று. மில்லில் 100 ரூபாய் என்று ஒரு பங்கு இருந்தால் அதற்கு 120 ரூபாய் கொடுக்கிறான்; 20 ரூபாய் இலாபம். இது கம்யூனிஸ்டுகளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் முதலாளிகளிடத்தில் பிச்சைக் காசு வாங்கிக்கொண்டு தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கேட்பதில்லை. முதலாளி, தொழிலாளிக்கு உதை கொடுக்காமல் சும்மா நாலணா அதிகமாகக் கொடுக்கமாட்டான். நான் ஒருவன்தான் கேட்டேன்; 'முதலாளிக்கு ஏற்படும் இலாபத்தில் சரிபங்கு தொழிலாளிக்கும் கொடுக்க வேண்டும்; தொழிலாளர்களால்தானே இலாபம் ஏற்பட்டது? ஆகவே, தொழிலாளிக்கும் இலாபம் கொடுக்கவேண்டும்' என்று. மேலும், தொழிலாளியின் கூலி உயர்ந்தால் மட்டும்

போதாது. அவன் அந்தஸ்து உயரவேண்டும். இரண்டு ரூபாய் உயர்ந்தால் கோவிலுக்கும், சினிமாவிற்கும், குடிக்கும் பாழாக்கிவிடுகிறான். ஆறுமாத சம்பளம் போனசாகக் கொடுத்தால் காசி, இராமேஸ்வரம், தேர்திருவிழாவுக்குப் போகிறான். கேட்டால் சாமி கொடுத்தது என்கிறான்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—' விடுதலை ' 10-8-1956]

தோழர்களே ! தாய்மார்களே !

என்னுடைய அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தத் தொழிலாளர் இயக்கங்கள் நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் தொழிலாளர்களின் ஒழுக்கமே கெட்டுப்போய் விட்டது. அவர்கள் ஒழுக்கம் மட்டும் அல்லாமல் முதலாளிகளின் ஒழுக்கமும் கெட்டு, அதனால் மக்களுக்குப் பெருந்தொல்லையும் ஏற்பட்டுவிட்டது. அப்படியானால், தொழிலாளர் சங்கமே கூடாது என்பதல்ல. இன்று தொழிலாளர்கள் இயக்கங்கள், தொழிலாளர்கள் கையில் இல்லை. தொழிலாளர்களாக இல்லாதவர்கள் கையில்—அதாவது அதைக்கொண்டு வயிறு வளர்ப்பவர்கள் கையில்தான் உள்ளது. தொழிலாளர் சங்கம் ஏற்பட்ட நாள் தொட்டு, அரசியல் கட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிற்சங்கம் என வைத்துப் பதவிப் பலன் பெற்றுப் பொறுக்கித் தின்கின்றார்கள் !

எனது 50 ஆண்டு அனுபவத்தின் பயனாகக் கூறுகின்றேன். அந்தக் காலத்தில் காங்கிரசுக்காரர்களே (பார்ப்பனர்கள்) தொழிலாளர்களைப் பயன்படுத்திப் பிழைக்கவும், பெருமையடையவும் தொழிலாளர்களை வேட்டையாட ஆரம்பித்தார்கள். இந்தநிலை அன்னி பெசன்ட் காலத்தில்தான் முதன்முதல் ஏற்பட்டது எனலாம். மற்றும் வாடியாவுக்கு (Wadia) என்று ஒரு தொழிற்சங்கம்; திரு.வி.கவுக்கு என்று ஒரு தொழிற்சங்கம்; பிறகு ரெங்கசாமி அய்யங்காருக்கு ஒன்று; சத்தியமூர்த்திக்கு ஒன்று, வரதராஜுலு (நாயுடு)வுக்கு ஒன்று என இப்படியாக ஏற்பட்டுவிட்டது.

இன்று தொழிற்சங்கம் என்றாலே, 'முதலாளிகளுடன் சண்டை பிடிக்கக்கூடிய ஸ்தாபனம்' என்றுதான் இயங்கிக்கொண்டு வருகின்றது. இதனால் உற்பத்தி குறைகின்றது; இந்தத் தகராறு முதலாளி-தொழிலாளி இருவர்களோடு மட்டும் போகாமல் பொதுமக்களுக்குப் பாதகமாகவும் முடிகின்றது.

நல்ல தொழிலாளர் சங்கம் என்ற ஒன்று இருக்கவேண்டுமென்றால், அது முதலாளி இடத்தில் விசுவாசம்—சொந்தப் பொறுப்புபோலக் கருதித் தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது, முதலியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிருக்கவேண்டும்.

அதுபோலவே, சிறந்த முதலாளிகள் என்பவர்களும் தொழிலாளர்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகள்போல் பாவித்து அவர்கள் நன்மையில், மேம்பாட்டில் நாட்டம் செலுத்த வேண்டும்.

நான் சிறிய முதலாளியாக இருந்தவன். எங்கள் அய்யா பெரிய முதலாளி, கணக்கப் பிள்ளைக்கு ரூ. 7 தான் அப்போது சம்பளம்; காரியஸ்தருக்கு 6 தான் மாதம் கொடுப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 4, 5 பிள்ளை குட்டிகள் இருக்கும். அவர்கள் வாங்கும் சம்பளம் சாப்பாட்டிற்குத்தான்; மற்றபடி பிள்ளைகள் படிக்க, புத்தகம், துணிமணிகள், கலியாணம் எல்லாவற்றிற்கும் முதலாளிகள் தனியாகப் பணம் கொடுத்துப் பெருமையாக நடத்துவார்கள். சண்முகம் பிள்ளை என்ற என் குமாஸ்தா கலியாணத்திற்கு, சதிர்க் கச்சேரியுடன், சாரட்டில் ஊர்வலம் வைத்தேன். அவர் என் 'குடி அரசு' ஆபீஸிலும் 1945 வரை இருந்து, 40 வருஷம் உழைத்துச் செத்தார். 'விடுதலை' ஆபீசு வாட்சுமேன் பழனி என்பவர் 35 வருஷமாக என்னிடம் இருக்கிறார்.

தொழிலாளர்களைக் கெடுத்தது தொழிலாளர்கள் சங்கங்கள்—தலைவர்கள் மட்டு மல்ல; அரசாங்கமும் கெடுக்கின்றது. அவர்கள் சட்டம் எந்த நல்ல தொழிலாளியையும் கெடுத்துவருகிறது.

தொழிலாளி மகன் தொழிலாளியாக இருக்கக்கூடாது என்பது எனது இலட்சியச் சொல். 'கம்பாசிட்டர்' மகன் கம்பாசிட்டராகவே இல்லாமல், சிறு அச்சு ஆபீஸ் வைத்து நடத்துபவராக ஆகவேண்டும்; அல்லது ஆபீஸ் மானேஜர் அல்லது குமாஸ்தாவாகவாவது ஆகவேண்டும்.

தொழிலாளி மகன் பரம்பரை பரம்பரையாகத் தொழிலாளி என்பது இல்லாமல் மறையவேண்டும். மேலும், இந்த நாட்டில் தொழிலாளியே இருக்கக்கூடாது. அப்படியானால், தொழிலாளி இல்லாவிட்டால் தொழில் எப்படி நடக்கும் என்று கேட்கலாம். அது பற்றி உங்களுக்கு என்ன கவலை? எப்படியாவது போகிறது; அவசியம் உள்ளவன் செய்துகொள்கிறான். கக்கூஸ் எடுப்பவன் பரம்பரை பரம்பரையாகக் கக்கூஸ் எடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்றால் என்ன நியாயம்? அவன் எடுக்கமாட்டேன் என்றால் கட்டாயப்படுத்த முடியுமா? இப்படி எடுப்பதற்கென்றே ஓர் சாதி இருப்பதுதான் ஜனநாயகமா? அதுபோல் தொழிலாளி என்ற ஓர் பரம்பரை இருக்கலாமா?

நான் தொழிலாளி கூடாது என்பதெல்லாம்—அவர்கள் பரம்பரையாகத் தொழிலாளிகளாக இருக்கக் கூடாது என்பதற்காகவே! தொழிலாளர்கள் தொழிலில் பங்குதாரர்கள் ஆகவேண்டும்.

என் கருத்து என்னவென்றால், தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கிடைக்க வகை செய்யவேண்டும்; தொழிலாளி தொழிற்சாலையில் பங்குதாரர்போல என்பதேயாகும்.

[சென்னை, தினத்தந்தி அலுவலகத்தில், 14-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 18-4-1959]

தோழர்களே! தாய்மார்களே!

நான் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், போர்ச்சுக்கல், ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக் கெல்லாம் சென்று அங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனங்களின் நடை முறையைப் பார்த்து வந்தேன். தொழிற் சங்கங்களின் சிபாரிசின்பேரில்தான் ஒரு நாடு விட்டு மற்றொரு நாட்டுத் தொழிற் சங்கங்களுக்குச் சென்றேன். நான் போய்ப் பார்த்த அத்தனை ஊர்களிலும் நான்கண்ட கருத்து, முதலாவதாக தொழிலாளர்கள் பெரிதும் நாத்திகர்கள். ரஷ்யாவில் அந்நாட்டு இயற்கையே நாத்திகம்; ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் தொழிலாளர்கள் நாத்திகர்கள்தாம்.

நாத்திகர்கள் என்றால் அறிவுவாதிகள்–பகுத்தறிவைப் பயன்படுத்துபவர்கள் என்று அர்த்தம். இரண்டு காரியங்கள்: முதலாவதாக, அந்தத் தொழிற் சங்கத்தின் மீது பாதிரிமார்கள் போராட்டம் செய்கிறார்கள். இரண்டாவதாக, அரசாங்கத்தினிடம் போராட்டம். அதனால் அரசாங்கம் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் சி. அய். டி. போட்டிருக்கிறார்கள். சில ஊர்களில் தொழிற் சங்கங்களின் சார்பாக நான் இறங்கிய காரணத்தால் என்னுடைய 'பாஸ் போர்ட்டைப்'ப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள்; பிறகு கஷ்டப்பட்டு வாங்கினேன்.

நம் நாட்டில் தொழிலாளர் ஸ்தாபனங்களை உருவாக்கி அதற்குத் தலைவராக இருப்பவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றால், அந்தக் கம்யூனிஸ்டுகள் தங்களால் நடத்தப் படுகின்ற தொழிலாளர் இயக்கங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது இல்லை. பகுத்தறிவுக்கு அவர்களைப் பக்குவப்படுத்தி, நாத்திகர்களாக ஆக்குவதில்லை.

தொழிலாளி நாத்திகனாக ஆனால்தான், தான் ஏன் தொழிலாளி ஆனான் என்பது தெரிய முடியும்.

அடுத்தபடியாக, வாழ்க்கையின் செலவைச் சிக்கனமாகச் செய்து பழக வேண்டும்; வரவுக்கு அடங்கிய முறையில் செலவு செய்து காசை மீதியாக்க வேண்டும். இந்தக் கடவுள், மதம், சாஸ்திரம், புராணம் சம்பந்தப்பட்ட மதச் சடங்குகள் போன்ற காரியங்களுக்கு—சம்பிரதாயங்களுக்குக் கண்டிப்பாய்ச் செலவு செய்யக் கூடாது என்ற அறிவைக் கற்றுத்தர

வேண்டும். அவர்கள் கண்டபடி ஒன்று இரண்டுக்கு மேல் பிள்ளைகள் பெறக் கூடாது. ஆனால், இங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனத் தலைவர்களிடமும், தொழிலாளர்களிடமும் இந்தக் குணம், நடப்பு இல்லவே இல்லை. அதன் பலன் என்னவென்றால், எவ்வளவுதான் சம்பளவு உயர்வு வந்தாலும் அது போதாது என்ற நிலைதான் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் ஒழுக்க ஈனம் தான் வளரும். பேராசை ஒரு புறம் இருப்பினும் வரவுக்கு மீறிச் செலவு செய்வது என்பது, ஒழுக்கக் கேட்டைத் தான் வளர்க்கும்.

அதனால்தான் கண்டிப்பாக நாங்கள் அவர்களையும் நாத்திகர்களாக ஆக்க முயலு கிறோம். எங்களோடு சம்பந்தப்பட்ட வரையில் உள்ள தொழிற் சங்கங்களில் உள்ளவர்கள் அனைவரும் 100-க்கு 90 பேர் நாத்திகர்களே ஆவார்கள்.

கடவுள் கொடுக்கிறார் என்று கூறிக்கொண்டு கடவுளை வணங்குவது வெறும் வேஷம்; முட்டாள்தனம் ஆகும். முதலாளி என்பவன் மூட்டை அடிக்கிறான்—எனவே அவன் 'கடவுள் கொடுத்தார்' என்று கூறி மக்கள் தன்மேல் ஆத்திரப்படாமல் இருக்கக் 'கடவுளை' வணங்குகிறான். தொழிலாளியாக உனக்கு நாளைக்குச் சோற்றுக்கு வழியில்லை. கடவுள் நம்பிக்கை உனக்கு இருக்குமானால்—கடவுள் என்று ஒன்று இருக்கு மானால் அந்தக் கடவுள் உன்னைத் தொழிலாளியாக—மறுவேளைச் சோற்றுக்கு வழி இல்லாதவனாக உண்டாக்கியிருக்குமா? நிறையச் சோற்றுக்கு வகை இருப்பவனுக்கு மேலும் பணம் கொடுக்குமா? என்று சிந்திக்கவேண்டும். தொழிலாளர் நிலை வளராமல் இருப்பதற்கு இதுதான் காரணம்.

எப்பாடு பட்டாவது தன் மக்களைப் படிக்கவைத்து வசதிசெய்து கொடுத்து, தகப்பன் வேலையை விட்டு, சாதி வேலையை விட்டு, வேறு வேலைக்கு அனுப்ப வேண்டும். எந்தத் தலைமுறையும் தன் சாதி வேலைக்கே வராமல் செய்வதுதான் முக்கிய கடமை ஆகும் என்று கூறிப் பாடுபட்டு வருகிறோம்.

தொழிலாளி என்றால் என்ன? முதலாளி என்றால் என்ன? தொழிலாளி என்று கூறுபவன் தன்னுடைய அருமையான புத்தியை, தொழிலின் திறமையை வெறும் சோற்றுக்கு விற்பவன்; வயிறு வளர்ப்பதற்காகத் தன்னுடைய அறிவை—தொழிலை மாற்றுப் பண்டமாக விற்கிறவன். எவ்வளவுதான் புத்திசாலியாக—திறமையுடையவனாக இருந்தாலும், கூலி உயர்வு கேட்கும்போது தன் முதலாளியிடம் தன்னுடைய வேலைத் திறமையை எடுத்துக்கூறி—வயிற்றுக் கொடுமையை எடுத்துக்கூறி—'எனவே, சம்பளம், கூலி அதிகமாகவேண்டும்' என்றுதான் கேட்பான். அதாவது, 'தாங்கள் தரும் சம்பளம், என் குடும்பத்திற்குப் போதுமா? நான் பிள்ளை குட்டிக்காரன் ஆயிற்றே! சாமானின் விலை என்ன? அரிசி என்ன விலை விற்கிறது? வீட்டுவாடகை எவ்வளவு? பையன்கள் வேறு படிக்கவேண்டி இருக்கிறதே, ரூ. 50 போதாது; ரூ. 75 சம்பளம் தாருங்கள்' என்று கேட்பான். தனது சாமர்த்தியத்தைக் கூறி, இந்த வேலைத் திறமைக்குச் சம்பளம் போதாது அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்காமல், வயிற்றுச் சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கேட்பான்.

அதேபோல், ஒரு சக்கிலியிடம் செருப்பு விலை கேட்டால் ரூ 4-50, என்பான். உடனே நாம், 'என்னப்பா, ரூபாய் இரண்டுக்குத் தரக் கூடாதா?' என்றால், 'என்ன சாமி, அரிசி என்ன விலை விற்குது? கேழ்வரகின் விலை என்ன? இப்படிக் கேட்கிறாயே?' என்றுதான் கூறுவானே தவிர, செருப்பின் இன்றியமையாத தன்மையைக் கூறி விலை கேட்கமாட்டான். சிறு பெட்டிக்கடை முதலாளியிடம், 'ஒரு கட்டு பீடி என்ன விலை?' என்றால், 'மூன்றணா' என்பான். 'என்னப்பா, அதிகமாகக் கூறுகிறாயே?' என்றால், 'பேச நேரமில்லை; வாங்கினால் வாங்கு; வாங்கா விட்டால் போ' என்று தான் இஷ்டப்பட்ட விலையைக் கூறுவானே தவிர, அவன் வீட்டு வாடகை சாமான்களின் விலை உயர்வு பற்றிக் கணக்குப் போட்டுக் கூறமாட்டான்.

முதலாளி–தொழிலாளி இருவரும் ஒன்று சேர்ந்தால்தான் உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி நடக்கவேண்டுமென்றால் பணம்—தொழில் இரண்டும் தேவை. உற்பத்தி, மக்கள் நலனுக்கு—உலக நலனுக்கு மிகமிக அவசியம் ஆகும் என்றாலும் முதல் (பணம்) இருந்தால்தான் உற்பத்தி தலை காட்டமுடியும்.

முதலாளி–தொழிலாளி இருவர்களும் கணவன்–மனைவி போன்றவர்கள் ஆவார்கள். கணவனும் மனைவியும் குடும்பம் நடத்திப் பிள்ளை பெறுவதுபோல்தான் முதலாளியும், தொழிலாளியும் சேர்ந்து தொழில் நடத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதாகும். கணவன், மனைவி ஒற்றுமையாக இருக்கவேண்டும். நம் நாட்டில் முன்பு இருந்த முறை, கணவனுக்கு மனைவி அடிமையாகத்தான் இருக்கவேண்டும். கணவன் மனைவியை அடித்தால்கூட ஏன் என்று கேட்பதற்குக்கூட உரிமை கிடையாது. அதுதான் 'பிராமணன்–சூத்திரன்' தன்மை. அந்த முறையில்தான் தொழிலாளி–முதலாளிப் பிரச்சினையும் இருந்தது. ஆனால், இன்று என்ன ஆயிற்று? கணவன்–மனைவி சினேகிதர்கள் போன்றவர்கள்; எஜமான்–அடிமை என்ற முறையில்லை; இருவருக்கும் சம உரிமை என்ற நிலைக்கு வந்துவிட்டது.

கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாற வேண்டும்; இருவரும் சம உரிமை உள்ள கூட்டாளிகள் என்ற நிலை வந்தாகவேண்டும். அதற்கு இருவரும் விறைத்துக் கொண்டிருந்தால் முடியுமா? கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாறி, சம உரிமை உள்ள கூட்டாளிகளாக ஆவதை நடக்காமல் தடுத்து வருகின்றனர், இந்தத் தொழிலாளி ஸ்தாபனங்களை நடத்திச் செல்லும் தலைவர்கள்.

தொழிலாளர்களிடையே நாணயம், ஒழுக்கம், பொறுப்பு, கடமை இவை ஏற்பட வேண்டும்; இவை ஏற்பட்டு வளரவேண்டுமென்றால் அதற்கு எஜமான்–அடிமை; முதலாளி–தொழிலாளி என்ற நிலை இருக்கக்கூடாது. இந்த நிலைமை இருக்குமளவுக்கு இவை வளராது. அதற்குக் காலம் வரவேண்டுமானால், தொழிலாளர்கள் தன்மை ஆள வேண்டும். நம்நாட்டிலே அந்தத் தன்மை வரத் தொழிலாளர் தலைவர்கள் முதலில் பாடுபட வேண்டும்.

நம்முடைய அரசாங்கம் தொழிலாளர்கள்மீது கவலை எடுத்துக் கொள்கிறதா என்றால், இல்லை. சும்மா அவர்களைத் திருப்திப்படுத்த ஏதோ மேலுக்குச் செய்கிறார்கள்.

உண்மையில், அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக் கருதினால் தொழிலாளர் ஸ்தாபனங்கள் நடத்துவதைத் தனிப்பட்டவர்களிடம் கொடுத்திருப்பதை மாற்றி, அரசாங்கமே தொழில் ஸ்தாபனத்தை நடத்தவேண்டும். அரசாங்கம் நடத்துகிறது என்றால், பொதுமக்கள் நடத்துவதாகத்தான் அர்த்தம். 10 மணி நேரத்தை 8 மணி வேலை நேரமாகக் குறைப்பதும், 8 மணி நேரத்தை ஏன் 6 மணி நேரமாக ஆக்கக்கூடாது என்று கேட்பதும்; மூன்று ரூபாய் சம்பளம் அய்ந்து ரூபாயாகக் கேட்பதும், பின்பு அய்ந்து ரூபாய் என்ன—அதை ஏன் ஆறு ரூபாயாகத் தரக்கூடாது என்பதிலும்தான் இன்று தொழிலாளிகளின் விருப்பம் போய் நிற்கிறது. அதாவது—'நீ எவ்வளவு எடுத்துக் கொண்டாலும்சரி, எனக்குக் கவலை இல்லை; எனக்கு இவ்வளவுதான் என்று ஒதுக்கி விடு' என்று கேட்கும் மனோபாவம்தான். முதலாளியும் எப்படியாவது இவனுக்குப் பங்காளி உணர்ச்சி வராமல் இருந்தால் போதும் என்று நினைத்துக் கூலி உயர்வு சிறிது ஏற்றித் தந்து ஏமாற்றிவிடுகிறான்.

தொழிலாளர்கள் பகுத்தறிவுவாதிகளாக ஆகவேண்டும். கடவுள், மதம், சாஸ்திரம், சம்பிரதாயம் முதலிய காரியங்களில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும். மனிதத் தன்மையிலும், மானத்திலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும்.

தொழிலாளி என்றால் கீழான சாதி என்றும்; முதலாளி என்றால் மேல்சாதி என்றும் தான் அர்த்தம். பாடுபடுகின்ற தொழிலாளி கீழ்ச்சாதி, பாடுபடாத முதலாளி மேல்சாதி. தொழிலாளியின் உழைப்பின் பயனாய்வரும் பணத்தைக்கொண்டு சுகபோகமாய் வாழும் முதலாளி, மேல்சாதி. அதாவது, சூத்திரன்–பிராமணன் என்பது மாதிரியான நிலைமை. சூத்திரன் எவ்வளவுதான் உயர்ந்தவனாகவும், திறமைசாலியாகவும் புத்திக் கூர்மை உள்ள வனாகவும் இருந்தாலும் சூத்திரன், சூத்திரன்தான். அவன் மேல்சாதியாக–பார்ப்பானாக ஆகமுடியாது. அதுபோல், எவ்வளவுதான் இழிகுணம்–இழிநிலை உடைய பார்ப்பானாக இருந்தாலும் அவன் மேல்சாதி–மேல்சாதிதான், பார்ப்பான்தான். அதுபோல, இதிலே அந்தமுறை இருக்கிறது. அதாவது, தொழிலாளி என்றுமே தொழிலாளிதான். அதை விட்டு, அவன் எவ்வளவு திறமையுடையவனாக இருப்பினும் மாறமுடியாது. தொழிலாளி என்ற முறை மாறவேண்டும்; சமுதாயத்தில் உள்ள சாதி முறையும் மாறவேண்டும்; நாலாவது சாதியான் சூத்திரன் தொழில்செய்து பிழைக்க வேண்டியவன் ஆகும். அன்றாடக் கூலிபெற்றுச் சாப்பிட்டுவரக்கூடிய தன்மை உடையவன்; அவன் கையில் காசு சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது; இப்படித்தான் இந்த நாட்டில் சாதியமைப்பு முறை இருக்கிறது. இதை மாற்றினால் தொழிலாளியின் நிலை இப்படியே இருக்காது; நிச்சய மாகத் தானாகவே மாறிவிடும்.

தொழிலாளி பகுத்தறிவு பெறக்கூடாது—பெற்றுவிட்டால், தான் அந்தத் தொழில் ஸ்தாபனத்தின் மூலம் சம்பாதிப்பது பாதிக்கப்படும் என்ற காரணத்தால் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களை–சம்பளம் போதாது என்ற பிரச்சினையிலேயே தூண்டி விடுகிறார்களே தவிர, ஏன் இந்த இழிநிலை—அதாவது அவன் ஏன் முதலாளி, நான் ஏன் தொழிலாளி–என்று கேட்பது கிடையாது. அதற்கு மாறாக நம்மைப் பார்த்து மிகப் புத்தி சாலித்தனமாகக் கேட்கிறார்கள், 'கக்கூஸ்காரன் மகன் படித்து வேறு வேலைக்குப் போய் விட்டால், பிறகு யார் மலம் எடுப்பது? அந்தத் தொழில்செய்ய ஆள் வேண்டாமா?' என்று. மலம் எடுப்பதற்கு என்று ஏன் வேறு ஆள்? மலம் கழிக்கிறவனே எடுக்கட்டுமே! ஒரு மனி தனின் மலத்தை எடுப்பதோடு இழிமகனாகவும் இருக்கவேண்டுமா? தொழிலாளர் நலத்துக் காகப் பாடுபடுகிறவர்கள் இந்த மலமெடுப்பவர்கள் விஷயத்தில் என்ன செய்தார்கள்?

[பெங்களூரில், 1-5-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-5-1961]

7. முதலாளி – தொழிலாளி தொல்லை

தோழர்களே! தாய்மார்களே!

இன்று பொதுவாகவே உலகம் முழுவதும் ஒரு தொல்லை இருக்கிறது. அந்தத் தொல்லை பல்வேறு உருவங்களில் காட்சியளிக்கின்றது. அந்தத் தொல்லை என்ன வென்றால், மனித சமுதாயத்தில் உடையவன்–இல்லாதவன் என்ற தொல்லை. இந்தத் தொல்லை உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ளது. மனிதன் இயற்கையாகவே ஆசை குடிகொண்டுள்ள ஜீவன். அதன் பயனாகத்தான் உலகில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற இரண்டுவித நிலைமைகள் உண்டாகிவிட்டன. இந்த நிலைமைகளை மதமும், கடவுளும் பாதுகாத்து வருகின்றன. அதற்கு ஏற்ப அரசாங்கமும் அமைந்துவிடுகிறது.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற கவலையோடு மற்றொரு கவலையும் சேர்ந்துகொண்டது. அதுதான் சமுதாயத்தில் மேலான சாதி, கீழான சாதி என்று பாகுபடுத்தப்பட்டுள்ள தொல்லை. இந்தத் தொல்லை உலகில் வேறெங்கும் இல்லாத தொல்லை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. நம் மக்களிடம் குடிகொண்டுள்ள முட்டாள் தனத்தினாலும் மானமற்ற தன்மையினாலும் இந்தத் தொல்லை நீண்டநாட்களாக நம்மிடையே இருந்துவருகிறது. உடையவன்–இல்லா தவன் என்ற தொல்லையை ஒழிக்க உலகில் போராட்டம் நடந்தபடியே உள்ளது. அதைக்

காக்க சட்டம், வெடிகுண்டு, ஆகாயக் கப்பல், அணுகுண்டு ஆகிய அனைத்தும் உண்டு. ஆனால், மேல்சாதி-கீழ்சாதி என்ற குறை அஸ்திவாரம் இல்லாமலேயே வளர்ந்தது. நம் மக்களின் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையும் சேர்ந்துதான் அதை வளர்த்து நம் நாட்டில் நிலைநிறுத்தி வைத்துள்ளன. அதை நீக்க நாம் முயலவேண்டும். உடையவன்—இல்லாதவன் என்ற தொல்லை நீங்க உலகில் கிளர்ச்சிகள் நடந்தபடியே உள்ளன. தொழிலாளர்கள் கிளர்ச்சி, விவசாயிகள் கிளர்ச்சி ஆகிய கிளர்ச்சிகளெல்லாம் முதலாளித்துவம் நிலைக்க உபயோகப்படுகின்றனவே ஒழிய அடிப்படையை மாற்றியமைக்கவில்லை. நம் நாட்டிலுள்ள மேல்சாதி-கீழ்சாதிக் கொடுமை அஸ்திவாரம் இல்லாததும் மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதுமாக இருப்பதால் கிளர்ச்சிகள் செய்ய முடியாதபடி தந்திரமாக அமைந்துள்ளது. இங்கு சாதித் தொல்லைகளை ஒழிக்கப் பாடுபடவேண்டியது தான் முதல் தேவை என்பது என் கருத்து.

முதலாளி—தொழிலாளி என்கிற பிரச்சினை எங்கிருந்து வந்தது? மூடநம்பிக்கையிலிருந்து வந்ததல்ல. அந்தப் பிரச்சினை ஆதாரத்தோடுதான் உள்ளது. எப்படி இருக்கிறான் முதலாளி? சட்டத்தின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் பாதுகாப்பின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் சலுகையால்தான் அவன் முதலாளியாக வாழமுடிகிறது. ஆகையால், முதலாளி கூடாது என்றால் அவனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது திரும்ப வேண்டும். முதலாளிமீது பாய்வதால் பலன் ஏதுமில்லை. முதலாளிமீது போராட்டம் துவக்கி, தொழிற் சங்கங்கள் இந்த அம்பது வருட காலமாகச் சாதித்தது என்ன?

[பொன்மலையில், 27-9-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1953]

8. பாராட்டு

சேரன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர்களுக்கு முதலீட்டிலும், நிர்வாகத்திலும் பங்கு அளிக்க எடுத்திருக்கிற துணிச்சலான ஒரு திட்டத்தைப் பற்றி அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன், தி. மு. க. அரசாங்கம் சாதித்துவரும் பெரும் மவுனப் புரட்சிகளில் இது சரித்திர சாதனை என்பேன்.

நான் கடந்த நாற்பது ஆண்டு காலமாக இதை என்னுடைய கொள்கையாகக் கூறி வருகிறேன்.

1944-ல் சேலத்தில் நடத்திய மாநாட்டில், 'இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டும்; அவர்களுக்கு நிர்வாகத்திலும் உரிமை வேண்டும்' என்னும்படியாக ஒரு தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறோம்.

இது ஒன்றுதான் வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்ற எல்லா வகையான கெடுதல்களுக்கும் முடிவான மருந்தாகும்; இது தொழிலாளிகள் நடுவில் கட்டுப்பாட்டு உணர்ச்சியையும் பொறுப்பையும் ஏற்படுத்தும்.

தொழிலாளி வர்க்கத்தை இனி யாரும் சுரண்ட முடியாது.

நம்முடைய சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கும், ஆற்றலும் சொல் திறனும் ஒருங்கே அமைந்த நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கும், என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேபோல துடிப்பும், திறமையும் வாய்ந்த இளைஞர் நம்முடைய போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

இதுபோன்ற செயற்கரிய காரியத்தை மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

['விடுதலை'-பாராட்டுச் செய்தி—5-5-1973]

பகுதி IV

கிளர்ச்சிகள்

1. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

1. இந்திப் புரட்டு

முதலாவது, இந்தி மொழி என்றால் என்ன? அதற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்ன சம்பந்தம்? அதைப் படித்ததினால் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என்பவைகளை முதலில் கவனிப்போம்; இந்தி மொழி என்பதை அகில இந்திய மொழியாகக் கருதவேண்டும் என்பதுபற்றிப் பின்னால் யோசிப்போம்.

இந்தி மொழி படித்த மக்களுக்கு அதனால் ஏற்படும் பயன் என்ன? இதுவரை தமிழ் நாட்டில் காங்கிரஸ் பணத்திலிருந்தும், மற்றும் பொதுமக்களிடமிருந்தும் இந்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் எவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் படித்தார்கள்? அதை எதற்கு உபயோகப்படுத்துகின்றார்கள்? என்பவைகளும் கவனிக்கத் தக்கதாகும்.

இந்திமொழி என்பது தமிழ் மக்களுக்கு விரோதமான ஆரிய மொழியாகும். அதிலுள்ள வாசகங்கள் முழுவதும் ஆரியப் புராணங்களும் மூடப் பழக்க வழக்கங்களும் கொண்டனவும் பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்பட்டனவுமாகும். இந்த நாட்டில் இப் போது சமஸ்கிருதம் இருப்பது போலவும் அது உபயோகப்படுவது போலவும்—இந்தி ஒரு சிறிதும் தேவையில்லாததாகும். அப்படியிருந்தாலும் அது ஏதாவது வடநாட்டுக்குப்போய் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்காவது உதவுமா என்று பார்ப்போமானால், அப்படியும் சொல்லுவதற்கில்லாமல், இதுவரை இந்தி படித்தவர்களில் 100-க்கு 95 பேர் பார்ப்பனர்களே படித்து அந்தப் படிப்பைக்கொண்டு வடநாட்டிற்கு உத்தியோகத்திற்கோ பிச்சைக்கோ சென்று, அதன்மூலம் பார்ப்பனரல்லாதார்களுக்குத் துரோகம் செய்யவே உதவப்பட்டு வருகின்றது. அதற்காகச் சம்பாதித்த பணங்கள் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திலேயே இருந்துவருகின்றது. ஒரு சமயம் பார்ப்பனரல்லாதவர்களும் இந்தி படித்திருப்பதாக வைத்துக்கொண்டாலும் இந்த நாட்டில் அவர்களுக்கு அது என்ன பயனைக் கொடுக்கும்? இதுவரை இந்தி படித்த பார்ப்பனரல்லாதாரில் எவராவது அதனால் இன்ன பிரயோஜனம் அடைந்தார்கள் என்று ஏதாவது ஒரு சின்ன உதாரணமாவது காட்டமுடியுமா?

இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமானாலும், அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொதுமொழி வேண்டுமானாலும் ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல், வேறுமொழியைப்பற்றி யோசிப்பது முட்டாள்தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும்.

ஆங்கிலம் உலக மொழி; உலக வர்த்தக–விஞ்ஞான மொழி; இந்திய அரசாங்க மொழி; அதுமாத்திரமல்லாமல் மூடப் பழக்க வழக்கமும், பார்ப்பனீயமும் இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வாசகமாகப் பெற்ற மொழியாகும்.

இவைகள் மாத்திரமல்லாமல், இந்தி, உருது முதலியவற்றுக்குத் தாய்மொழியாக உள்ள துருக்கி மொழிகூட, ஆங்கில மொழிக்கும் ஆங்கில எழுத்துக்கும் மதிப்புக்கொடுத்து தனது நாட்டுத் தாய்மொழியாகிய தன்னையே மாற்றிக்கொண்டது. அன்றியும், நமது பிரிட்டிஷ் அரசாங்கம் உள்ளவரை—மேல்நாடுகளின் வர்த்தக உடன்பாடோ, கலை சம்பந்தமோ, கல்வி சம்பந்தமோ உள்ளவரை—ஆங்கிலம் இல்லாமல் முடியவே முடியாது. இப்படி எல்லாம் இருக்க, இதைச் சற்றும் கவனியாமல் இப்போது தமிழ் நாட்டில் இந்தி மொழி பரப்ப வந்திருப்பதென்பது தற்காலம் தமிழ் நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால், இதற்கு எந்தப் பார்ப்பனரல்லாதாராவது பணம் கொடுத்தோ அல்லது ஆதரித்தோ பேசினாலும் அது பெரிய சமூகத் துரோகமாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—20-1-1929]

இந்தி என்பது, பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட புரட்டு. இந்தியாவில் 35½ கோடி மக்கள் இருந்தாலும் பல மொழி, மதம், நாகரிகம், நடை, உடை, பாவனைகளாக இருந்துவருவதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி இருந்தாலும் மக்களுக்குள் மதத்தின் பேராலும், சாதியின் பேராலும், மொழியின் பேராலும் போட்டிகள் நடந்துவருவதும் மறுக்கக் கூடியவை அல்லவென்றே சொல்வோம்.

இந்த நிலைமையிலுள்ள சமூகங்களை—பிரிவினைக்கு ஆதாரமாய் இருப்பன வற்றைக் கண்டுபிடித்து, அவைகளை ஒழிக்க முயற்சிக்காமல், கண்மூடித்தனமாய் எல்லோரையும் 'இந்தி' கற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசியலின் பேரால் நிர்ப்பந்திப் பது எப்படி ஒழுங்காகும்? 'இந்தி' என்பது அனேகமாக வடமொழியின் சார்போ அல்லது திரிபோ ஆகும். இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வடமொழிக்கு உயர்வுகொடுக்கப் பலவழிகளிலும் சூழ்ச்சி செய்து, உலக வாழ்க்கையில் ஒரு ஓடிந்துபோன குண்டூசிக்குப் பயன்படாத மொழியாகிய அவ் வடமொழிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப் பட்டுவருகின்றது என்பது வெகுநாட்களாகத் தமிழ்மக்கள் கவனித்துவரும் சங்கதியாகும். இப்போது மறைமுகமாய் வடமொழியை ஆதரிக்கவும், ஆரிய நாகரிகம், சமயக் கொள்கை ஆகியவைகளை நிலை நிறுத்தவும், இந்தியை அரசியல் விஷயமாக ஆக்கி, அதைக் கதரைப்போல்—ஏன், கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப் பார்ப்பது, எவ்வளவு வஞ்சகமான காரியம் என்பதை நமது 'சோணகிரிகள்' அனேகர் இன்னும் உணரவே இல்லை. தமிழ்ப் பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்துச் சூடுபோட்டது போல் மேலெல்லாம் தீட்டிக்கொண்டு—'சிவ, சிவ, சிவ' என்பதற்கும், 'ராம, ராம' என்பதற்கும் உதவுவார்களே தவிர, மற்றபடி நமது மக்கள்மீது, அனாவசியமான ஒரு மொழி—சூழ்ச்சித் திறத்தால் சுமத்தப்படுகின்றதே என்கின்ற அறிவும் கவலையும் அவர்கட்குச் சிறிதும் கிடையாது என்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. இன்றையத் தினம் இந்திய மக்களுக்கு அவரவர்கள் சொந்தமொழி தவிர வேறுமொழி தெரியவேண்டு மானால், அது ஆங்கிலமொழி என்றே நான் தைரியமாகச் சொல்லுவேன்.

'உலகமே தங்கள் கிராமந்தான்' என்று எண்ணிக்கொண்டிருந்த காலம் மலையேறி, இப்போது நிலப் பரப்பு, நீர்ப் பரப்பு, முழுவதும் தெரிந்து—200 கோடி உலக மக்களையும் சகோதரர்களாகப் பாவித்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்போது, உலகச் செலாவணி மொழி எதோ, அதை மனிதன் அறியாமல், கபீர்தாஸ் இராமாயணத்தைப் படிக்கவேண்டிய இந்தி மொழி எதற்குப் படிக்கவேண்டும் என்று கேட்கிறோம்.

தமிழ் மக்களுக்குச் சுயமரியாதை என்பது பல துறைகளிலும் வரவேண்டியிருப்பதை இந்தியின் ஆதிக்கம் இனியும் அதிகமாய் வலியுறுத்துகின்றது.

தமிழ் மொழியின் பாண்டித்தியம் என்பது இப்போதே அனேகமாய்ப் பார்ப்பனர் களிடமே இருக்கிறது. தமிழ் மொழியின் சங்கத் தலைவர்கள் பார்ப்பனர்களாய் இருக் கின்றார்கள் என்பதோடு—இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை இந்தி படிக்கக் கட்டாயப் படுத்துகின்றார்கள் என்றால், தமிழ் மொழிக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதைத் தமிழர்களே உணர்வார்களாக!

அரசியல் தத்துவத்தின் பலனாய், தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் பணத்தில் இந்தி கற்று, இந்தியத் தலைவர்களாகி வடநாட்டுத் தலைவர்களிடமெல்லாம் பார்ப்பனர்களே போய்க் காரியதரிசிகளாய் அமர்ந்து—அவர்களே தென்னாட்டுப் பிரதிநிதி களாகி, அவர்களது ஆதிக்கத்திற்கே இந்திய அரசியலைத் திரும்பப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார்கள்.

ஆகவே, அரசியல் துறையிலிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அறிவு இருந்தாலும்—அதைப் பார்ப்பனர்களுக்குத் தக்க விலைக்கு விற்றுவிட்டார்கள் என்றாலும்—அரசியலி

லில்லாத பார்ப்பனரல்லாதார்கள் அறிவையாவது தக்க வழியில் உபயோகித்துத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டாமா?

['குடி அரசு'-தலையங்கம்—10-5-1931]

இந்தி கட்டாயப் பாடமாக ஆகும்பட்சத்தில் கண்டிப்பாகப் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் 100-க்கு 90-க்குமேல் தேர்ச்சியில் தவறி விடுவதோடு, பார்ப்பனப் பிள்ளைகள் 100-க்கு 100 தேர்ச்சி பெற உதவியாயிருக்கும். ஆகவே, பார்ப்பனரல்லாத பிள்ளைகளை மேல் படிப்பில்லாமல் அழுத்தத்தான் இந்தி ஒரு நல்ல சாதனமாகுமே தவிர—மனித வாழ்க்கைக்கோ அறிவுக்கோ தமிழர்களுக்கு எந்த விதத்திலும் இந்தி இன்றியமையாததாகாது.

கட்டாயப் படிப்பு என்பது நாட்டின், சமூகத்தின் பொதுக் காரியமாகும். அதற்காகச் செலவு செய்யும் நேரம், பணம், ஊக்கம் ஆகியவைகள்—நாட்டின் பொதுச் சொத்தாகும். அப்படிப்பட்டதைக் கொண்டுபோய்ப் பாழான—பார்ப்பனச் சூழ்ச்சியான—முட்டாள் தனத்துக்கு வித்தான காரியத்துக்குப் பயன்படுத்துவது என்றால் யார்தான் சம்மதிக்கமுடியும்?

'இந்தி படித்தால் துளசிதாஸ் இராமாயணம் படிக்கலாம்' என்கிறார், நமது அக்கிரகார பிரதம மந்திரி. 'இந்தி படித்தால் வடநாட்டில் சுற்றுப்பயணம் செய்யலாம்' என்கிறார் நமது விபீஷணாழ்வாரான கல்வி மந்திரி. துளசிதாஸ் இராமாயணம் நமக்கு எதற்கு? சோற்றுக்கு வழி இல்லாத மக்களுக்கு வடநாட்டுச் சுற்றுப் பிரயாணம் எதற்கு?

கம்ப ராமாயணம் படித்து முட்டாளாகி, துரோகிகளாகி, சுயமரியாதை இழந்து, எதிரிகளின் கால் அலம்பிக் குடித்து வயிறு வளர்க்கும் ஈன மக்கள் போதாது என்று கருதியா—நமது அக்கிரகார மந்திரி துளசிதாஸ் இராமாயணம் படிக்கச் சொல்கிறார் என்று யோசிக்க வேண்டி இருக்கிறது! கம்ப ராமாயணத்தின் கருப்பொருள் கண்டுபிடித்துப் படித்த மக்களில், 100-க்கு 5 பேருக்காவது சுயமரியாதையோ, சமூகப் பற்றோ, தாய்மொழிப் பற்றோ இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? ஆரிய இராமாயணத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்தவேண்டும் என்று ஆதியில் நாம் சொன்ன காலத்தில்—இராமாயணக் கதை ஆபாசமானது, வெறுக்கத் தகுந்தது, கீழ் மக்களின் இயற்கையையும் கெட்ட குணங்களையும் சித்திரிப்பது என்றும்; 'ஆனால், கம்பன் கவித் திறம், தமிழின் கலைத் திறம் முதலியவை, கம்ப ராமாயணத்தில்—மலத்தில் கிடக்கும் முத்துப்போல் பொதிந்து கிடப்பதால் அதை எரிக்கக் கூடாது' என்றும் சொன்ன கம்ப ராமாயணக் கருப்பொருள் பண்டிதர்கள்—இன்று 'பக்கா பட்டரான' ஆச்சாரியார் துளசிதாஸ் இராமாயணம் படிப்பதற்காக இந்தியைக் குழந்தைகளுக்குக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய காரியங்கள் செய்துவரும்போது–மனைவியை மற்றொருவன் சேலையை அவிழ்த்துப் பலாத்காரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள் கதைபோல்—இன்று வாய்திறவாமல் அடிமையாய், துரோகியாய், தமிழ்மாதுக்கு மாதுரு துரோகியாய் வீற்றிருக்கும் காரணம் என்ன?

தமிழ் மொழியில் உள்ள புராணங்களின் ஆபாசங்களையும் சூழ்ச்சிகளையும் மக்கள் சுலபமாய் அறிந்து, ஆரிய மதத்திலிருந்து மக்கள் விலகி அதை இழிவுபடுத்தி வருகிறார்கள் என்பதை உணர்ந்தே தமிழை ஒழிக்கவும், இந்தியைப் பரப்பவும் பார்ப்பனர் ஆட்சி முயலுகின்றது. அதை நம் மக்கள் சிறிதும் உணரவில்லை. ஆரிய புராணங்களை—கடவுளின் தன்மைகளை மனிதன் படித்தால் அவன் மனிதன் என்று சொல்லக்கூடிய நிலையை அடைய முடியுமா? சிறுவயதிலேயே குழந்தைகளின் பகுத்தறிவையும், ஆராய்ச்சி உணர்ச்சியையும் பாழ்படுத்த—அதன் எதிரியை இரத்தத்தில் செலுத்துவதுபோல் அல்லவா இந்தி படிப்பதின் பலன் ஏற்படக்கூடும்? இன்று மனிதனுக்கு அறிவோ தொழில் திறமையோ ஏற்பட வேண்டுமானால் ஆங்கில மொழி மூலந்தான் கற்க வசதி இருக்கிறது. நமது தமிழ்ப் பண்டிதர்கள் இராமாயணத்தில் கருப்பொருள் தேடவும், திருவிளையாடல் புராணத்துக்கு

77-வது உரை எழுதவும், பெரிய புராணத்துக்கு 113-வது உரையும் தத்துவார்த்தமும் எழுதவுந்தான் தகுதியுடையவர்களாகவும்–கவலையுடையவர்களுமாகவே இருக்கின்றார்களே ஒழிய, பகுத்தறிவை அடையத்தக்கதாகவோ, மானத்துடன் பிழைக்க ஒரு தொழில் கற்றுக் கொள்ளத்தக்கதாகவோ இன்று ஒரு புத்தகமும் ஒருவராலும் எழுதப்பட்டதாக இல்லை. சாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகள் இந்தக் கருத்தை மனத்தில் கொண்ட 'பாவத்துக்காக' சற்றேறக்குறைய 100-க்கு 75 தமிழ்ப் பண்டிதர்கள் அடிகளைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்க முற்பட்டார்கள் என்றால்–தமிழ் படிப்பதனாலாவது, தமிழ்த்தாய் பக்தியினாலாவது மனிதனுக்குச் சுயமரியாதை உணர்ச்சியும், பகுத்தறிவு உணர்ச்சியும் வருமா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இன்று தமிழ் நாட்டில் ஒரு ஆரியப் பார்ப்பனர்—நாட்டை மனு ஆட்சிக்குக்கீழ்க் கொண்டுவரும் முயற்சிக்குச் சூழ்ச்சி கர்த்தர்—தமிழ்மொழியை எப்படிப் பரப்புவது, எப்படி மேன்மைப் படுத்துவது என்பதை விட்டுவிட்டு, குழந்தைகளுக்குக் கட்டாயமாக இந்தி கற்பிக்கவேண்டும், துளசிதாஸ் இராமாயணம், மற்ற புராணம் ஆகியவைகள் மூலம் படிக்கவேண்டும் என்று சொல்லுவது என்றால், இந்த நாட்டில் உண்மைத் தமிழ் இரத்தம் ஓடும் மக்கள் ஒருவர் இருவராவது இருக்கிறார்களா?

['குடி அரசு'–தலையங்கம்—22-8-1937]

இந்தி எதிர்ப்பின் மூலம் தமிழ்மக்கள் வெற்றிபெற வேண்டுமானால், அவன் சரீரத்தில் ஓடும் பார்ப்பன மத உணர்ச்சி இரத்தம் அவ்வளவும் வெளியாக்கப்பட்டுப் புதிய–சுதந்திர அறிவு இரத்தம் பாய்ச்சப் பட்டாக வேண்டும்.

ஏனெனில், பார்ப்பனீயம் இன்று இந்தியைக் தமிழ் மக்களுக்குள் கட்டாயமாகப் புகுத்தவேண்டும் என்கின்ற மூர்க்கப் பிடிவாதத்தைக் கொண்டிருப்பதன் உண்மைக் கருத்து என்னவென்றால், அரசியலுக்கு அல்ல; பொருளியலுக்காக அல்ல; அல்லது பார்ப்பனர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக அல்ல. உண்மையான காரணம் என்னவென்றால், இன்று தமிழ் மக்கள் பெரும்பாலோருக்குள் ஏற்பட்ட சுயமரியாதை உணர்ச்சியால் ஆட்டம் கொடுத்திருக்கும் பார்ப்பனீய மத உணர்ச்சியைத் தமிழ் மக்களுக்குள் மறுபடியும் சரியானபடி புகுத்தி—அதைக் கெட்டிப் படுத்தி—பார்ப்பனீயத்துக்குத் தமிழ் மக்களைப் புராணகாலம்போல நிரந்தரமாய் அடிமை யாக்குவதற்காகவேயாகும். அதனால்தான், சோழவந்தான் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அதன் தலைவர், 'இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்கப்படுவதை ஒழித்தால் போதாது. இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்பதற்கான உள் காரணங்களை ஒழிக்க வேண்டும்' என்று கூறி இருக்கிறார்.

ஆதலால், 'இந்திப் போர்' தமிழ் மக்களுக்கு ஒரு கிடைத்தற்கரிய 'பாக்கியம்' என்றே ஒவ்வொரு தமிழ் மகனும் கருதவேண்டும். அது போன்ற ஒரு பயனளிக்கத்தக்க போராட்டம் இனி சுலபத்தில் ஏற்படும் என்று எந்தத் தமிழ் மகனும் இலேசில் கருத முடியாது என்பதோடு, இது அவ்வளவு சுலபமானதும், அவ்வளவு பெரிய பயனை அளிக்கக் கூடியதுமான ஒரு அரும் பெரும் போராட்டமாகும்.

['குடி அரசு'–தலையங்கம்—15-5-1938]

நான் இந்தியை 1924, 1925 முதலே எதிர்த்து வருகிறேன். அதற்கு ஆதாரம் 'குடி அரசு' பத்திரிகையில் பார்க்கலாம். இன்றைய இந்தி எதிர்ப்புத் தோழர்களும் மற்றும் அனேகரும் வெகு நாட்களாகவே தமிழ்நாட்டிற்கு இந்தி ஏன் என்று எதிர்த்து வந்திருக் கிறார்கள்.

இந்தி என்றால் பார்ப்பன மொழி என்றுதான் அர்த்தம். 'டிக்ஷனரியை'ப் பாருங்கள்! பார்ப்பன மொழியை, பார்ப்பனரல்லாதாருக்குக் கட்டாயமாகப் புகுத்தினால்

பார்ப்பனரல்லாதாருக்கு வீரமும், அறிவும், மானமும் இருந்தால் ஒப்புக் கொள்ள முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

[சென்னையில், 25-6-1938-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 10-7-1938]

2. பொதுமொழி இருந்ததா?

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தி மொழி தமிழ் நாட்டில் எப்போது இருந்தது? பம்பாயில் எப்போது இருந்தது? வங்காளத்தில் எப்போது இருந்தது? இந்தியா 56 தேசமாய் இருந்தபோது 56 மொழிகளின் பேரால்தானே தேசமாய் இருந்தது? அப்போதும் மொத்தத்தில் 56 மொழிகள் இருந்திருக்கும். நாளாக நாளாக ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும் போதுதான் அன்னிய மொழி புகுத்தப்பட்டுவிடுகிறது. அந்த முறையிலேயே இன்று இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தப் பார்ப்பது தமிழனல்லாத அன்னிய வகுப்பான் இன்று தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டதினாலேயே ஒழிய வேறில்லை.

ஒரு பொது மொழி தேர்ந்தெடுக்க மெஜாரிட்டி பலமே போதுமானதாகுமா? மொழி எதற்காக வேண்டும்? பேசுவதற்கு மாத்திரம்தானா? புதிதாக ஒரு மொழியைத் தேர்ந்தெடுப்பதினால் அந்த மொழி பழையது என்றோ, வெகுபேர் பேசுகிறார்கள் என்றோ காரணம் சொல்லித் தெரிந்தெடுப்பது அறிவுடைமையாகாது. அந்த மொழியால் தேச மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன என்று பார்க்கவேண்டும். புது அறிவு உண்டாகுமா? ஆராய்ச்சிக்குப் பயன்படுமா? முற்போக்கிற்கும் நாகரிகத்துக்கும் பயன்படுமா? சீர்திருத்தத்திற்கு ஏற்றதா, என்றெல்லாம் பார்க்கவேண்டாமா? இவர்கள் சொல்லும் 'இந்தி' எதற்காகப் பயன்படும்? தோழர் இராஜகோபாலாச்சாரியாரும்—அதாவது இந்தியைப் பொதுமொழி ஆக்கவேண்டும் என்று சொல்கிறவரும் அவரது சகாக்களும், 'இந்தியால் துளசிதாஸ் இராமாயணம் படிக்கலாம், சமஸ்கிருதம் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம், இந்துமத சாஸ்திரம் உணரலாம்' என்றெல்லாம் சொல்லுகின்றனர். ஆகவே, இந்தி மூலம் மோட்சத்திற்குப் போவதற்கு அனுகூலமாக—ஆத்மார்த்த விஷயங்கள் என்பதற்கு அனுகூலமாகக் காரணம் சொல்லுகிறார்களே ஒழிய, இந்த உலக வழிக்கான காரணம் எதுவும் இந்தியில் இருப்பதாகச் சொல்லவே இல்லை. இராமாயணத்திலும், பாரதத்திலும், 'ஆகாயன விமானம்' இருக்கிறது; ஆனால், அது மந்திர சக்தியில் ஓடி இருக்கிறது. இங்கிலீஷில் 'ஆகாய விமானம்' இருக்கிறது; அது இயந்திர சக்தியில் ஓடுகிறது. நமக்கு எதுவேண்டும்? மந்திர சக்தியா? இயந்திர சக்தியா?

[ஈரோட்டில், 19-9-1937-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 26-9-1937]

3. இந்தி—இந்தியப் பொதுமொழியா?

இம் மாகாணத்திலுள்ள 600 உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் இந்தியை இஷ்டப் பாடமாக வைப்பதாக, காங்கிரஸ் சர்க்கார் முடிவு செய்துவிட்டனர். தோழர் காந்தியார் தமது தினசரி வழிபாட்டுக் கூட்டங்களில் இந்தியிலேயே பேசுகிறார்! தோழர் நேரு மந்திரி பதவி ஏற்றவுடன், முதன்முதலில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இந்தியிலேயே பேசினாராம்!

இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக ஆக்குவதற்காகக் காங்கிரஸ் கட்சி முனைந்து நிற்கிறது. இதற்காகத் 'தேசபக்தி' உணர்ச்சியையும், 'மகாத்மா' தன்மையையும் மூலதனமாக வைத்துப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது.

மாகாணங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி முறையும் ஏற்படுவது நிச்சயமாயிருக்கும்போது, 'இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று அவசியந்

தான்? என்பதே விவாதத்திற்குரிய விஷயம். தென்னிந்தியாவுக்கு வியாபாரத்திற்கும், வேறு வேலைகளுக்கும் வருகின்ற வடநாட்டார் எவ்வாறு தென்னிந்திய மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்களோ அதேபோல், வடநாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய திராவிடர்களும், அங்கே வேலைக்குச் செல்ல வேண்டியவர்களும் இந்தியைக் கற்றுக்கொண்டாலே போதும்.

இதைத்தவிர, உலக மொழியாகிய ஆங்கிலத்தை அறவே ஒழிப்பதென்பது முடியவே முடியாது. அப்படி ஒழித்தால், நாம் உலகிலேயே மிகப் பிற்போக்கான மனித சமுதாயமாகி விடுவோம் என்பது முக்காலும் உறுதி.

ஏனெனில், உலகில் சுமார் 26 கோடி மக்கள், அதாவது உலக மக்களில் எட்டில் ஒரு பங்குப் பேர் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர்; உலகிலுள்ள பத்திரிகைகளில் சரிபாதிக்கு மேற்பட்டவை ஆங்கிலத்தில் வெளிவருகின்றன; உலகிலுள்ள ரேடியோ நிலையங்களில் 5-ல் 3 பங்குக்குமேல் ஆங்கிலத்தில் செய்திகள் ஒலிபரப்பப் படுகின்றன. இதைத்தவிர, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிராத பல இலட்சக் கணக்கான மக்கள் அறிவு, ஆராய்ச்சி, இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் விரைவில் முன்னேறுவதற்காக ஆங்கிலத்தைப் பயின்றுவருகின்றனர்.

எனவே, ஆங்கிலத்தை அறவே புறக்கணிக்க முடியாதென்பது நிச்சயம். உலக மொழியாகிய ஆங்கிலத்துடன் இந்தியப் பொதுமொழி என்று கூறப்படும் இந்தியையும் கற்றுக்கொண்டு, அவர்கள் தாய்மொழியையும் கற்கவேண்டுமென்றால், மொழிகளைத் தவிர்த்த, இதர கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது முடியக்கூடிய காரியமா? யோசித்துப் பாருங்கள்!

அதுமட்டுமல்ல; இந்தி இந்தியாவின் பொது மொழியென்பதை 10 கோடி முஸ்லிம்கள் ஒப்புக்கொள்வதில்லை. உருது மொழி இந் நாட்டில் ஏற்பட்டு 1000-ஆண்டுகள் ஆகி விட்டன. இதை ஒழிப்பதற்காகத் தோழர் காந்தியாரும், பிறரும் புகுத்த முயற்சிக்கும் இந்தி அல்லது இந்துஸ்தானி 19-வது நூற்றாண்டுக்கு முன்பு இந்தியாவில் இருந்ததே இல்லை. கல்கத்தாவிலுள்ள போர்ட் வில்லியம் கல்லூரியைத் தொடங்கியவர்கள்—உருதுவுக்கு எதிராக உண்டாக்கிய மொழியே 'இந்தி' ஆகும்.

இந்தியாவின் ஒரு பகுதியில் பேசப்படும் இந்தி—மற்றொரு பகுதியிலுள்ள மக்களுக்குப் புரிவதில்லை. அய்க்கிய மாகாணத்தில் தவிர, வேறெந்த மாகாணத்திலும் பெரும்பான்மை மக்கள் இந்தி பேசுவதேயில்லை. அங்குங்கூட 70 இலட்சம் முஸ்லிம்கள் 'இந்துஸ்தானி' பேசுகிறார்களே தவிர, 'இந்தி' பேசுவதில்லை. 'மேற்கு இந்தி', 'கிழக்கு இந்தி', 'பீகாரி' ஆகிய மொழிகளையெல்லாம் இந்தி என்ற பிரிவில் சேர்த்தால் கூட பீகார், ஒரிஸ்ஸா, டில்லி, அய்க்கிய மாகாணம்—ஆகிய பகுதிகளைத்தவிர இதர மாகாணங்களில் இந்தி பேசுகிறவர்களின் தொகை மிகமிக அற்பமானது என்று ஜனகணித அறிக்கையில் கூறியிருப்பதை இந்துஸ்தானியர்கள் உணரவேண்டும்.

பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், வங்காளம் ஆகிய மாகாணங்களில் ஆயிரத்தில் ஒருவர்கூட இந்தி பேசுவதில்லை. அஸ்ஸாமில் 100-க்கு 3 பேரும், பம்பாயில் 100-க்கு 2 பேரும் மத்திய மாகாணத்தில் 100-க்கு 20 பேருமே இந்தி பேசுகின்றனர். இன்னும் கேளுங்கள். வங்காளத்தில் 92 சதவிகித மக்கள் வங்காள மொழியைப் பேசுகின்றனர்; பஞ்சாப்பில் 100-க்கு 77 பேர்கள் பஞ்சாபி மொழியைத் தாய் மொழியாகப் பேசுகின்றனர். நம் மாகாணத்திலோ 100-க்கு 40 பேர் தமிழையும், 100-க்கு 38 பேர் தெலுங்கையும் தாய் மொழிகளாகப் பேசுகின்றனர். பம்பாய் மாகாணத்தில் 42 சதவிகிதம் மக்கள் மராத்தி பேசுகின்றனர்; 19 சதவிகிதம் குஜராத்தி பேசுகின்றனர்; 13 சதவிகிதம் 'சிந்தி' மொழி பேசுகின்றனர்; 12 சதவிகிதம் கன்னடம் பேசுகின்றனர்.

ஆகவே, இலக்கியத் துறையில் இந்தியையோ, தோழர் காந்தியாரின் புதுப் பெயரைக் கொண்ட 'இந்துஸ்தானியையோ' தாய் மொழியாகக் கொள்ளக் கூடியவர்கள் இந்தியாவில் எத்தனை ஆயிரம் பேர் இருக்க முடியும் என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

இந்த நிலைமையில் வங்காளிகளும், பஞ்சாபியரும், பம்பாய் மாகாணத்தாரும் 'இந்தி'யைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கும்போது, இந்த மாகாணத்தில்மட்டும் இந்தியின் மீது தனிக் காதல் பிறக்கக் காரணமென்ன? கவனியுங்கள்!

திராவிடர்களின் ஏமாந்த தனமும், இங்குள்ள காங்கிரஸ்காரரின் வடநாட்டு அடிமைப் புத்தியும் ஒரு காரணம். காங்கிரஸ் இயக்கத்தை இங்கு நடத்திவரும் ஆரியர், 'இந்தி'யை நுழைப்பதன்மூலம், அதன் மூலமொழியாகிய சமஸ்கிருதத்தைப் பிழைக்கவைக்கலாம் (அதாவது தமிழைக் கொல்லலாம்) என்று கொண்டிருக்கும் ஆசை மற்றொரு காரணம்.

ஆகவே, இந்தியின் பெயரால் என்னென்ன பொய்க் கணக்குகள் கூறப்படுகின்றன என்பதையும்; காங்கிரசிலுள்ள திராவிடத் தோழர்கள் தோழர் காந்தியின் ஏமாற்றுப் புள்ளிகளைக் கண்டு மயங்கி விடக்கூடாது என்பதையும் வற்புறுத்துவதற்காகவே இதை எழுதுகிறோம்.

['விடுதலை'–தலையங்கம்—20-9-1946]

4. வடவர் மொழி நமக்கு வேண்டாம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

முற்காலப் புலவர்களுக்கும், இக்காலப் புலவர்களுக்கும் இடையே கால மாறுதலால் எவ்வளவோ வேற்றுமைகளைக் காண்கிறோம். எங்களைப் பொறுத்தவரை அல்லது எங்களது இயக்கத்தைப் பொறுத்தவரை பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை. இங்கு நான் பேசும் இதே சமயத்தில் முற்காலப் புலவர்களா யிருப்பார்களேயானால் நேரடியாக எழுந்து நின்று சபிக்காவிட்டாலும் மனத்துக்குள்ளாகவாவது—'இவன் நாசமாகப் போகமாட்டானா!' என்றுதான் வைவார்கள். அது அவர்கள் குற்றமல்ல. அக்கால நிலையும், அவரவர்கள் மனத்திலும், புத்தியிலும் புகுத்தப்பட்ட பொது அறிவும்தான் காரணம்.

ஆனால், இக்காலத் தமிழ் ஆசிரியர்கள், பெரும்பாலும் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு ஒத்து நடப்பவர்கள். இன்னும் கூறவேண்டுமானால், இப் புலவர்கள் 100-க்கு 90 பேர்கள் சுயமரியாதை இயக்க உணர்ச்சி கொண்டவர்கள் என்றும் கூறுவேன். அந்த நிலைக்குத் தமிழாசிரியர்களின் தொண்டு மேலும் மேலும் வளர்ந்திருக்கிறது. இனி இவர்கள் ஆங்கிலப் புலவர்கள் ஷேக்ஸ்பியர், பெர்னாட் ஷா ஆகியோர் போல் புத்துலகைச் சிருஷ்டிப்பார்கள் என்பதில் எனக்கு அய்யமில்லை. என் வாழ்நாளில் இதுவும் ஒரு அற்புதமாகும்.

இந்தியால் தமிழ் கெட்டுவிடும் என்றே நான் வருத்தப்படவில்லை. இந்தியால் மட்டுமல்ல; மற்றும் வேறெந்த மொழியாலும் நமது மொழியைப் பொறுத்தவரை கெட்டு விடாது. ஆனால், இந்தியால் நமது கலாச்சாரம் அடியோடு அழிந்துவிடும். இப்போதே, வடமொழி நம்நாட்டில் புகுந்து, நமது கலாச்சாரம் எவ்வளவு கெட்டுவிட்டது! அதற்காகவே, நாம் இந்தியை எதிர்த்துப் போராடவேண்டி ஏற்பட்டது. ஒரு மொழி ஒரு மக்களிடையில் புகுந்தால், கண்டிப்பாய் அதற்கு நல்ல பலனோ, கெட்ட பலனோ உண்டு. தமிழ்ப் புலவர்கள் தமிழைச் சாகாமல் காப்பாற்றும் பணியில் இனி இருப்பதைவிட, தமிழை வளர்க்கும் தொண்டில் ஈடுபடுதல் வேண்டும். தமிழை வளர்ப்பதென்றால், புராணக் கதைகளைப் பிரச்சாரம் செய்வதல்ல; அவற்றை மக்களுக்குப் போதிப்பதல்ல. தமிழ்

மொழியை விஞ்ஞானத் துறையில் புகுத்தி, தமிழ்மொழி கற்பதின் மூலமாகப் புதிய உலகைக் காணும் வழிவகுத்தல் வேண்டும். இன்று உலகில் அவ்விதத் தன்மையுடைய மொழி நமக்கு ஆங்கிலம் ஒன்றைத் தவிர வேறில்லை என்றே கூறுவேன்.

காலையில் நான் இம் மாநாட்டுத் தலைவரை ஆதரித்துப் பேசுகையில், 'தமிழை விட ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கினால் அதற்கு ஒட்டுக் கொடுப்பேன்' என்று கூறினேன். சிலர் அதைப்பற்றித் தவறாகவும் எண்ணியிருப்பார்கள். குறிப்பாக ம. பொ. சிவஞானம் அவர்கள், 'பெரியார் மந்திரியானால் அவ்விதம் செய்யமாட்டார்; ஏதோ பேச்சுக்கு அவ்வாறு கூறினார்' என்று தனது அதிருப்தியைக் காட்டினார். நான் இன்னும் கூறுகிறேன்; ஆங்கிலத்தை நாம் வெறுக்கும் புத்தியை வளர்ப்போமேயானால் விரைவில் நாம் என்றுமே உண்மை விடுதலையடைய முடியாத அடிமைகளாகவே இருக்க நேரிடும்.

ஆங்கிலம், ஆங்கிலப் பண்பு இல்லாவிட்டால் அரசியல் விடுதலை ஏது? மந்திரிகள் ஏது? இன்றைய விஞ்ஞான வளர்ச்சி, ஞானம், அற்புத அதிசயங்கள், அனுபவங்கள் ஏது? இதை இன்று மந்திரிகள் உணர்ந்து ஆங்கிலத்தைத் திரும்பவும் சேர்த்துக்கொண்டார்கள். சென்னைக்குவந்து திரும்பிச் சென்ற பண்டித நேரு அவர்களும் ஆங்கிலத்தின் அவசியத்தையும் அதனால் பல நன்மைகளை எதிர்காலத்தில் அடைய இருப்பதால் அதை வெறுக்கும் மனப்பான்மை கூடாதென்பதையும் பம்பாய் மந்திரிகளுக்கே உபதேசம் செய்திருக்கிறார். வடநாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு இந்தப் புத்தி. ஆனால் நம் நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கோ எனின்—அதற்கு நேர்மாறான பழைய விரும்பிகளாயிருக்கின்றனர். இது ஒழுங்காகுமா என்று கேட்கிறேன். நாம் நம் நாட்டைவிட்டு வடக்கே போனால் மலைப் பிரதேசம்தான் காணவேண்டும்; காட்டுமிராண்டித்தனம்தான் கற்க வேண்டும். ஆனதால், நாம் கற்றுக்கொள்ள ஏதாவது உண்டு என்றால், அது நமது மேற்கிலும், கிழக்கிலும்தான் உண்டு. ஆங்கில மோகத்தால் நான் அதை ஆதரிக்கவில்லை. அவ்விதமானால், ஆங்கிலத்தையே வேரறுக்கும் வீரர்களான பண்டிதர் போன்றோர் இன்றைய நிலையிலும் ஆங்கிலத்தின் மேன்மையை ஏன் எடுத்துக் கூறவேண்டும்? அதுமட்டுமல்ல, சென்னை அரசியலார்தான் ஆங்கிலத்திற்கு நான்கு பீரியட் (Period) என்று ஏன் ஒதுக்கவேண்டும்? இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தை வெறுத்த அவிநாசியார் இன்றும் ஏன் அதை ஆலிங்கனம் செய்யவேண்டும்? இது ஆங்கிலத்தின் மேன்மையை உணர்ந்ததாலல்லவா?

ஆங்கிலம் உலகமொழி என்பதை யாவரும் ஒப்புக்கொண்டாகிவிட்டது. 150 மைல் கடற்கரையுள்ள நாட்டினராகிய நாம்—உலக மொழியைக் கற்று ஏற்கவும் தகுதியும், அவசியமும் உடையவர்கள் அல்லவா? எனவே, நான் ஆங்கில மொழியின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திக் கூறுவதைப் பழைமை விரும்பிகளான காங்கிரசார் தவறாகக் கருதுவதில் அதிசயமில்லை. அதனால் நான் தமிழ்மொழியை இகழ்வதாகவும் கருதக்கூடாது. ஆங்கிலத்தில் விஞ்ஞான அறிவு அறவே கலந்துவிட்டது; புதிய உலகுக்கான வழிவகைகள் அதில்தான் மலிந்து கிடக்கின்றன. இதை எவரும் மறுக்கமுடியாது. ஆங்கில ஏகாதிபத்திய முறையை நாம் வெறுக்கும் மனப்பான்மை கொண்டிருந்தோமேயன்றி, ஆங்கிலமொழியை வெறுப்பதென்பதல்ல. வடநாட்டு இந்திமொழியைக் கூட நாம் வெறுப்பது—வடநாட்டவர்களின் ஆதிக்கம் மீதுள்ள வெறுப்பால் என்று எவரும் கருதக்கூடாது. அம்மொழியிலிருந்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு சிறு எடுத்துக்காட்டாகிலும்—தமிழில் இல்லாத எதையாகிலும் இந்தியில் காட்டமுடியுமா? கூறமுடியுமா? நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், காங்கிரஸ் ஏடுகள்—'இத்தனை காலம் ஆங்கில மொழிக்கு அடிமையாக இருந்து வந்த வீரர்கள், இன்று இந்தியை எதிர்க்கிறார்கள்—வெட்கமற்றவர்கள்' என்று எழுதி என்னைக் கேலி செய்தனர். அதற்காக இதைச் சொல்லுகிறேன். நாம் ஆங்கிலம் கற்காவிட்டால் உலக மக்களோடு கலந்து வாழ முடியுமா? ஏன்? அம்

மொழியின் ஆற்றல் அவ்வளவு! ஆங்கிலம் கற்றதினால்—பல நிபுணர்கள், அறிஞர்கள் புத்துலகச் சிற்பிகள் தோன்றினார்கள். நாம் சரித்திர வாயிலாக இன்றும் நேரடியாகக் காண்கிறோம். ஆனால், இந்தி மொழி கற்றவர்களில் எவர் அறிஞராய்–முற்போக்குடை யோராய்த் திகழ்கின்றனர் என்று கேட்கிறேன். மத வெறி பிடித்த பழைமை விரும்பி களாகத்தான் இருக்கிறார்களேயன்றி வேறில்லை. இன்னும் கூறவேண்டுமானால், அம் மொழி காந்தியாரைக் கொன்ற கோட்ஸேக்களைத்தான் உற்பத்தி செய்திருக்கிறது. நான் ஒரு மொழியை வெறுப்பதோ, வரவேற்பதோ, அந்தந்த நாட்டுக்காரன் என்ற உணர்ச்சி யாலல்ல. அம் மொழியைக் கற்றால் மக்கள் சமுதாயத்திற்கு என்ன பலன் ஏற்படும்; என்ன இலாபம் கிடைக்கும் என்பதையே முக்கியமாகக் கருதுபவன். நான் ஒரு பகுத்தறிவு வாதி; நிபந்தனையற்ற முற்போக்கு வாதி. அந்த நிலையிலிருந்துதான் நான் ஆங்கிலத்தைப் பற்றி என் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவின்றிக் கூறினேன்; நீங்கள் ஏற்கவேண்டு மென்றல்ல; சிந்திக்க வேண்டும் என்பதற்காக. நம் நாட்டைப் பொறுத்த வரை நம் தமிழ் மொழியையும், இனிப் புலவர் பெருமக்கள், ஆங்கிலப் புலவர்கள்போல், முற்போக்குப் படைத்த அறிவுக்கண் கொண்டு வளர்க்கவேண்டும். மதம், சமுதாயம், நாடு என்பவைகள் பற்றிய பழைமையை மறக்கவேண்டும். பழைமையில் சிக்கிக் கிடக்கும் ஒரு சில பண்டிதர் களுக்கும் இதை நினைவூட்டுகிறேன். பழைமைக்காக நாம் வாழவில்லை. பழமையைத் தேடவோ இறுக்கிப் பிடிக்கவோ ஏற்பட்டதல்ல, நம் அறிவு.

நம் நாடு அமெரிக்கா போல், அய்ரோப்பா போல், ரஷ்யா போல், ஜப்பான் போல் ஆக வேண்டும். ஒருவருக்கு 18 மொழிகள் தெரியும் என்ற பெருமையைவிட, நம் நாட்டு மொழியும், உலக மொழியும் தெரிந்திருந்தாலே போதுமானது என்று நான் கூறுவேன். 18 மொழிகள் பயின்ற பெருமையினால் மக்களுக்கு லாபம் என்ன? அஷ்டாவதானம், சதாவதானம் போல்—படித்தவனுக்குப் பெருமையே தவிர, யாருக்கு லாபம்? சமுதா யத்துக்கும் நாட்டுக்கும் இலாபம் என்ன? அதைக் கவனித்தே நாம் மொழி விவகாரங்களில் கவலை செலுத்த வேண்டும். வடநாட்டு மொழியால்தான் இந்நாட்டில் வர்ணம், சாதி, சாதி உயர்வு–தாழ்வு, பெண் அடிமை, திதி, திவசம், கன்னியாதானம், கருமாதி, பூசுரர்–வான்சுரர், மோட்சலோகம்–நரகலோகம் முதலியன உண்டாயின; தமிழினால், ஆங்கிலத் தால் அல்ல. இன்னும் கூறுவேன்: ஆங்கிலத்தில்—வாடி, போடி, வாடா, போடா, டேய்—என்றிருக்கிறதா? நம் தமிழில் மட்டும் ஏன் அவ்வாறு இழித்துக்கூறும் பதங்கள் இருக்கவேண்டும்? ஆங்கிலத்தில் 'தேவடியாள்' என்ற சாதி இருக்கிறதா? பிராமணன்—சூத்திரன் என்ற வார்த்தைகள் இருக்கின்றனவா? 'விபச்சாரி' என்று ஒன்று இருக்கும். ஆனால், தமிழில் தேவடியாள் முதலிய வார்த்தைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நாளடைவில் ஒழித்து, தமிழை மேலும் வளர்க்கும் வேலையையே புலவர்கள் செய்தல் வேண்டும். தமிழைக் காப்பாற்றும் வேலையிலேயே நாம் இன்னுமா இருப்பது! அதிலுள்ள பழைமைகளையும், புகுந்த இழிவு, பேதம் கற்பிக்கும் மொழிகளையும் நீக்கி வளர்த்தல் வேண்டாமா? இந்தக் காரியத்தைச் செய்வதைவிட, புலவர்களுக்கு வேறு முக்கிய காரியம் இருக்க முடியுமா? புலவர்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாக—புதிய உலகை உண்டாக்குபவர்களாக—விஞ்ஞானப் பொக்கிஷங்களாக ஆகவேண்டும். இன்றையப் புலவர்களைக் காணும்போது அவர்கள் இந்நாட்டு மாணிக்கங்களாகக் காணப்படுகிறார்கள். சீக்கிரத்தில் நாடு புலவர்களின் கைக்கு வரலாம் என்று தோன்றுகிறது. தமிழர், ஆந்திரர், கன்னடியர், மலையாளி என்று நமக்குள் பிரிந்து நிற்கும் வேலையைச் சிலர் மேற் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தனிப்பட்ட சுயநலம், பதவிப் பித்து தவிர வேறு எந்த ஆதாரத்தைக்கொண்டு ஆந்திரம், கேரளம், கன்னடத்தைத் தமிழ்நாடு அல்ல என்று கூறு கிறார்கள்? அவ்வாறு கூறுவதற்குச் சிறிதாவது ஆதாரமிருக்கிறதா? மொழித் தத்துவமோ, நாட்டுச் சரித்திரமோ தெரிந்தால்—ஒரு தலையற்ற முண்டம்கூடப் பேதம் காணவோ, கூறவோ முடியாது. இந் நான்கும் தனித் தனியாகப் பிரிந்து நின்றால் தமிழ் நாட்டின் நிலை என்னாகும் என்று சற்றாவது சிந்தித்தார்களா? தெலுங்கு, தமிழ் வெறி - பதவி

வெறியாகுமேயன்றி மக்களின் நன்மைக்காக இதன் மூலம் ஒரு சிறு காரியமும் செய்ய முடியாது. ஆந்திர–கேரள–கர்நாடகத்தை ஆரியம் உட்கொண்டது என்பதை வெளிப் படையாகத் தெரிந்திருந்தும், அதை அவர்களிடமிருந்து மீட்க வகையற்றவர்கள், தமிழர்—தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் என்ற வேற்றுமையை வளர்ப்பதா என்று கேட்கிறேன். 4 கோடி மக்களுக்கு மேற்பட்டவர்கள் பேசிவந்த தமிழ் மொழி, இன்று 2½ கோடிக்கும் கீழாகப் பேசப்பட்டுவருகிறது. இன்று நமக்குள் இவ்வாறே பிரிந்து, பிரிந்து நின்றால், தமிழ்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கையும் தமிழ் நாட்டின் நிலப் பரப்பும் எங்குபோய் முடியும் என்பதையாவது சிந்தித்துப் பேசுகின்றனரா?

நாடு, மக்கள் குறைந்தால் கவலை இல்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நம்மைச் சுற்றிலும்—தமிழ்நாட்டைச் சுற்றிலும் நம் எதிரிகளை வைப்பதா? தெற்கும், மேற்கும், வடக்கும் நம் எதிரிகள் நாடு ஆகிவிட்டதா? இதைச் சம்மதிக்கலாமா? எனவே, ஆந்திரமும், கன்னடமும், மலையாளப் பகுதிகளும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையே யாகும்; மொழிப்படி, சரித்திரப்படிச் சேர்ந்தவையேயாகும். அதாவது, திராவிடநாடு என்றோ, தென்னாடு (தக்ஷிணம்) என்றோ நாம் கூறிவருவதன் கருத்தும் அதுவேயாகும். வடமொழியால் பலவற்றாலும் பிரிந்து அடிமைப்பட்டுள்ள நாம்—தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளி என்ற வேறுபாட்டாலும்—இந்தி மொழி நுழைவாலும் காஷ்மீரப் பார்ப்பனர் ஆட்சிக்கு அடிமைப்படும் இழிந்த தன்மையை அடைதல் கூடாது.

சென்னை யாருடையது என்பதற்கு, பதில்—ஆந்திரம் யாருடையது? கர்நாடகம் யாருடையது? கேரளம் யாருடையது?–என்பதுதான் பதில். வடநாட்டான் ஆதிக்க ஒழிப்பே இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும். வட நாட்டான் ஆதிக்கத்தில் யார் மந்திரியானாலும், நமக்கும் நம் நாட்டுக்கும் நன்மை ஏற்படாது. சென்னை மந்திரிகள் மீது நமக்கு வெறுப் பில்லை. அம் மந்திரி பதவி மூலம் வட நாட்டுக்கு அடிமைப்பட்டு, நம்மை—நமது நாட்டைச் சீரழிக்கும், காட்டிக் கொடுக்கும் செய்கைமீதே நமக்குள்ள வெறுப்பு. அதுவே இன்றையப் போராட்டம். விளக்கமாகக் கூற வேண்டுமானால்—சென்னை மந்திரி சபையின் அடிமைத் தனத்தை ஒழிக்கவே—வட நாட்டான் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பதிலிருந்து விடுதலை பெறவே இன்று ஆரம்பித்துள்ள அறப் போரே யன்றி, மந்திரிகளை ஒழிப்ப தென்பதல்ல. வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்பு என்றும் சொல்லுவேன்.

[சென்னையில், 14-8-1948-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 15-8-1948]

5. இந்தி–தேசிய மொழியா?

முதலாவது, இந்தி தேசிய மொழி என்பதைத் திராவிடர் கழகமும் நானும் அல்லாமல் வேறு யாரும் இதுவரை மறுக்கவே இல்லை என்பதைப் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். நம்முடைய தேசம் (நாடு) எது? நம் தேச மொழி எது? இந்தி எப்படி நமக்குத் தேசிய மொழியாகும்?

எத்தனையோ மூடர்கள், ‘இந்தியா’ என்பதை நமது தேசம் என்று கருதிக் கொண் டிருக்கிறார்கள் என்பதோடு வாயாலும் சொல்லுகிறார்கள்.

இந்தியா என்பதையும், ‘பல தேசங்கள் (நாடுகள்) சேர்ந்த ஒரு கூட்டு’—அதாவது ‘பல தேசங்களை உடைய’ என்பதாக இல்லாமல் ‘பல தேசங்கள் சேர்ந்த’ என்று தான் அரசியல் சட்டமும் கூறுகிறது.

அப்படி இருக்க, இந்த சென்னை தேசத்தை (திராவிட தேசத்தை) எந்த முறையில் இந்தியாவுக்கு உடைய தேசம் என்று சொல்ல முடியும்? சென்னை (திராவிட) தேசத்திற்குத் தனி எல்லை, தனி கலாச்சாரம், தனி மொழி, தனித்து இயங்கிய சரித்திரம் முதலியவைகள் இருக்கும் போது—சென்னை இராஜ்யத்திற்கு இந்தி மொழி எப்படித் தேசிய மொழியாக

இருக்கமுடியும்? எதற்காக சென்னை தேசத்தார் இந்தியைத் தேசிய மொழியாகக் கொள்ள வேண்டியதாகும்?

ஆகவே, யூனியன் ஆட்சியானது சென்னை இராஜ்யத்தைத் தனக்கு நிரந்தர அடிமையாக்கி வைத்துக்கொண்டு இருப்பதற்காகவும், இந்த இராஜ்யத்தில் அன்னியனைக் கொண்டு வந்து ஏராளமாகக் குடியேற்றி—தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் குடியேறி சுதேசிகளை அடிமையாக நடத்துவதுபோல் நடத்திப் பயன்பெறுவதற்காகவும், செய்யப்படுகிற சூழ்ச்சியே இது. ஆனதினால், இந்தியை எதிர்த்து ஒழிக்கவேண்டியது, ஓட்ட வேண்டியது—சென்னை தேசத்தாருக்கு அவசியமாகிறது. அதற்காகவே முக்கியமாக ஆகஸ்ட் கிளர்ச்சி துவக்கப்படுகிறது.

['விடுதலை'-தலையங்கம்—23-7-1952]

திராவிட நாட்டில் சுமார் 200 ஆண்டுகளாக ஆங்கிலம் 'அரசியல் மொழியாக' இருந்ததே தவிர, ஆங்கிலம் 'தேசிய மொழியாக' ஒருநாளும் இருக்கவில்லை. ஆங்கிலம் அரசியல் மொழியாக இருந்ததற்குக்கூடக் காரணம் என்னவென்றால், ஆங்கில ஆட்சி அன்னிய ஆட்சியாக இருத்தலும், ஆங்கிலேயன் திராவிட நாட்டவன் அல்லாதவனாக இருத்தலுமேயாகும். அதாவது, அன்னியன் ஆட்சியில் அன்னியனுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், மொழிச் சாக்கின் மூலம் தன் இஷ்டப்படி ஆட்களைப் பொறுக்கி எடுத்து, தன் இஷ்டப்படி அடிமையாக்கி, அவர்களைக்கொண்டு அன்னிய ஆட்சி நடத்திக்கொள்ளவும் செய்துகொண்ட காரியமாகும்.

இப்போது அன்னியன் 'ஒழிந்துவிட்டான்' என்று ஆகிவிட்டது. இந்த நிலையில் ஒரு நாட்டானுக்கு—ஒரு இராஜ்யத்தானுக்கு (நாடு என்பதையும் இராஜ்யம் என்பதையும் தான் வடமொழியில் தேசம் என்று சொல்லப்படுகிறதே ஒழிய, நாடு வேறு-தேசம் வேறு என்று சொல்லுவதற்குத் தனித் தனிப் பொருள்—அர்த்தம் இல்லை) திராவிட தேசத்தானுக்கு (திராவிட தேசம் என்ற சொல் இராமாயணம், பாரதம், பாகவதம், மனுநூல் முதலியவைகளில் இன்றும் காணலாம்) எதற்காகக் கட்டாய மொழியாக—தேசிய மொழியாக இந்தி (அன்னிய மொழி) இருக்கவேண்டும்?

தேசிய மொழி என்றால், 'தேச மொழி' என்றுதானே அர்த்தம்? அன்றியும் திராவிட (சென்னை) தேசத்தானுக்கு அன்னிய தேச மொழியாகிய இந்தி எதற்காக அரசியல் மொழியாக இருக்கவேண்டும்? ஒரு நாடு சுதந்திரமடைந்துவிட்டது; பூரண சுயேச்சை அடைந்துவிட்டது என்றால் அந்த நாட்டில் அன்னிய மொழி தேசிய மொழியாகவும், அன்னிய மொழி அரசியல் மொழியாகவும் இருப்பதுதானா என்று சுயேச்சை சென்னை வாசிகளை, சுயேச்சை திராவிட மக்களைக் கேட்கிறேன்? 'எனது நாடு இந்தியா' என்றால், 'எனது நாட்டு மொழி இந்தி' என்றால்—எனது நாடு திராவிடம், எனது மொழி திராவிட மொழி என்பது என்ன ஆயிற்று? என்ன ஆவது? திராவிடன்-சென்னை இராஜ்யத்தான் நாடு, மொழி அற்ற அவ்வளவு மானங்கெட்டவனா? அவ்வளவு இழிமகனா?

திராவிடம் தனி தேசம். 'இந்திய' உபகண்டத்தின் 56 தேசங்களில் ஒரு தேசமாக 2000 ஆண்டுகளுக்கு முந்திய சரித்திரத்திலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லப்படுகிற புராண இதிகாசங்களிலும், மததர்ம நூல்களிலும் சொல்லப்படுவதை இன்றும் காணலாம்.

அது போலவே, இன்றும் மற்றொன்றையும் காணலாம். அது என்னவென்றால், திராவிட மொழி தனிச் செம்மொழி என்பதையும், திராவிட மொழி எந்த மொழியிலும் ஒட்டிச் சார்ந்து இருக்காத ஒரு தனி, தனித்தியங்கும் மொழி என்பதையும் யாரும் மறுக்க முடியாது. அன்றியும், மற்ற தேசத்தார்—ஏன், உலகிலேயே பெரும் பாகத்தார் திராவிட மொழியை ஒட்டவைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் உலகிலுள்ள

எல்லா மொழி ஆராய்ச்சி வல்லுநர்களும் திராவிட மொழி தனித்த மொழி என்றே முடிவு கட்டி இருக்கிறார்கள். 'பரத கண்டம்' என்பதையே எடுத்துக் கொண்டாலும் அதில் வட மொழியும், வடமொழிச் சார்பு மொழியும் ஒன்று; திராவிட (தென்) மொழியும் தென் மொழிச் சார்பு கொண்ட மொழியும் ஒன்று என்பதாக இரண்டே மொழிகள்தாம் இருந்துவருகின்றன.

ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்களை எடுத்துக்கொண்டாலும் உலகிலேயே இரண்டு தனிப் பிரிவும் சார்பும்தான் உண்டு. அதாவது, திராவிட மொழி எண் பெயர், வட மொழி எண் பெயர். இப்படியாகத் தனிப் பிரிவினையும், தனி வாழ்வும் தனி மூலத் தத்துவமும் உள்ள திராவிட நாட்டில்—அன்னிய மொழி, ஆதாரமற்ற மொழி–யாருக்குப் பிறந்தது எப்போது பிறந்தது, எதிலிருந்து பிறந்தது, எப்படிப் பிறந்தது என்றுகூடச் சொல்ல முடியாத ஒரு மலைப் பிரதேச மொழியா ஆட்சி புரிவது? அரசியல் மொழி ஆவது? ஒரு லம்பாடி (ஜிப்சி) மொழியா திராவிட தேச (தேசிய) மொழி ஆவது? என்பதைச் சிந்தித்தால், மானமுள்ள, மனிதப் பிறவி என்று தன்னை எண்ணிக்கொண்டு இருக்கிற எவன்தான் ஆகஸ்ட் கிளர்ச்சியை—இந்திப் பெயர் அழிப்பதை அலட்சியமாகக் கருத முடியும்? எவன்தான் குறை சொல்ல முடியும்? எவன்தான் கலந்துகொள்ளாமல் வேடிக்கை பார்க்க முடியும்?

திராவிட நாட்டில் இருக்கும் பார்ப்பனர்கள் அத்தனை பேரும் பித்தலாட்டக் காரர்கள், வஞ்சனைக்காரர்கள்; தமிழுக்கு, தாய்நாட்டு மொழிக்குத் துரோகிகள் என்பதற்கு அவர்கள் 'சுதந்திரம்' வருமுன்பே இந்தியை ஆதரித்ததும், வரவேற்றதும், இந்த நாட்டில் பள்ளிகள் வைத்துப் பரப்பியதும்—அரசியலின் மூலம் இந்திக்கு ஆக்கமும் ஆதரிப்பும் செய்ததான காரியங்களின் மூலமே விளங்கவில்லையா?

ஆச்சாரியார் தன்னைத் தமிழர் 'லிஸ்டில்' சேர்த்துக்கொள்கிறார். அவர் கோஷ்டி பத்திரிகாசிரியர்கள் தங்களைத் தமிழர் கோஷ்டியில் சேர்த்துக்கொள்கிறார்கள். ஒரு காலத்தில், இப்போது அய்கோர்ட் ஜட்ஜுகளில் பச்சைப் பார்ப்பனராக இருக்கும் ஜஸ்டிஸ் ஏ. எஸ் பஞ்சாபகேச அய்யர் அவர்கள் என்னைப் பார்த்து, 'நாயக்கரே! நான் ஆரியனா? திராவிடனா? என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். நீர் என்னையும் ஆரியனில் சேர்த்துக் கொள்ளுகிறீரே!' என்று கேட்டார். காலஞ்சென்ற ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களும் அப்படியே கேட்டார். கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலிய பார்ப்பன ஆசிரியர்களும், 'தமிழ் பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்கள்' என்று கிளர்ச்சி துவக்கி, தமிழர் மாநாடு கூட்டினார்கள். இந்தக் கூட்டத்தார்தானே இன்று இந்தியைத் தேசிய (தேச) மொழியாக்கவும், இந்தியை அரசியல் (ஆட்சி) மொழி ஆக்கவும் பாடுபடுகின்றனர்; சூழ்ச்சிகள் பல புரிகின்றனர்; எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்க 'அண்டர் கிரவுண்ட்' வேலை செய்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், சோஷியலிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், தமிழ் இலக்கியக் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும் இன்னும் எந்தக் கட்சியில்—எந்தக் கூட்டத்தில்—எந்த வேஷத்தில் பார்ப்பனர் இருந்தாலும் எல்லோரும், இந்தியைத் தேசமொழியாக, ஆட்சி மொழியாக இருக்க வரவேற்பார்களே ஒழிய—வரவேற்கிறவர்களாக இருக்கிறார்களே ஒழிய எதிர்ப்பவர்களைக் காண்பது அரிது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானாலும், பார்ப்பானுக்கு சென்னை இராஜ்யம்—திராவிட தேசம் சொந்த நாடல்ல, தாய் நாடல்ல என்பதோடு—தமிழ் மொழி சொந்த மொழியல்ல, தாய் மொழியும் அல்ல. அது மாத்திரமல்ல; தமிழை 'நீச பாஷை' என்று சொல்லும் 'மகா பாவி'களும் பார்ப்பனர்களில் இன்றும் உண்டு; அதற்கேற்ற ஆதாரங்களும் உண்டு என்று சொல்லவும் கூசமாட்டேன்.

ஆகவே, இந்தி எதிர்ப்பு ஒரு தேசிய (தேச)ப் போராட்டம்; ஒரு தேசமொழி (தமிழர்)ப் போராட்டம் என்பதைச் சுத்த (கலப்படமற்ற) தமிழ் (திராவிட) மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து தனது கடமையைச் செய்வார்களாக!

['விடுதலை'–தலையங்கம்—24-7-1952]

மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ, நாட்டு நினைவோ எப்படி வரும்? நம் பிற்காலச் சந்ததிக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படி செய்ய வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி சிறிதாவது இருந்தால்தான் முடியும். அன்றியும், சமுதாய இன உணர்ச்சி சிறிதாவது இருக்கவேண்டுமானாலும் மொழி உணர்ச்சி இருந்தால்தான் முடியும்.

உதாரணமாக, இன்று பார்ப்பனர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பார்களானாலும், சமுதாயத் துறையில் எவ்வளவு பேதம் கொண்டவர்களானாலும் சமஸ்கிருதம் (வடமொழி) என்கின்ற ஒரு மொழி உணர்ச்சியாலேயே அவர்கள் பிரிக்க முடியாத—கட்டுப்பாடான இன உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், ஆரியம் சமயத் துறையில் ஆதிக்கம் பெற்றதாலும் ஆங்கிலம் அரசியல் முதலிய பல துறைகளில் ஆதிக்கம் பெற்றதாலுமே தமிழர்களுக்குள் இன உணர்ச்சி பலப்படவில்லை; குறைந்து வந்துவிட்டது. இப்போது பாக்கி உள்ள துறைகளிலும் இந்தி ஆதிக்கம் பெற்று இந்தி மயமாகிவிட்டால், இந்தியும் ஆட்சிப் பீடம் ஏறிப் பெருமை பெற்றுவிட்டால்—தமிழன் நிலை என்ன ஆகும் என்பதைச் சிந்தியுங்கள்!

['விடுதலை' 25-7-1972]

2. இந்தி எதிர்ப்புப் போர்

1. இந்தி எதிர்ப்பு ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இந்தச் சென்னைக் கடற்கரையில் இவ்வளவு பிரம்மாண்டமான கூட்டத்தில் நான் பேச நேர்ந்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தக் கூட்டமானது எனது நண்பர் கனம் ஆச்சாரியார் அவர்கள், தமிழ் மக்கள் மீது பலாத்காரமாய்ச் சுமத்தும் பார்ப்பனப் பாஷையாகிய இந்தியைத் தடுப்பதற்காகக் கூட்டப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டமாகும் என்பது நீங்கள் அறிந்ததேயாகும். இது தோழர் ஆச்சாரியார் சென்ற வாரத்தில் இதே கடற்கரையில் இந்தியை ஆதரித்துப் பேசுவதற்காக என்று கூட்டப்பட்ட கூட்டத்தில், அதன் தலைவர் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த மக்களை எழுந்து போகும்படி சொன்னதுபோல்—அதாவது 'இக் கூட்டம் இந்தியை ஆதரிக்கின்றவர்களுக்குமட்டுமே அன்றி ஆதரிக்காதவர்களுக்கு இங்கு வேலையில்லை' என்று சொல்லி, போலீஸ் குதிரைப் படையைவிட்டு கூட்டத்தைக் கலைத்தும் போலீஸ் தடியைக்கொண்டு கூட்டத்தை விரட்டியும் அடித்ததுபோல் இக் கூட்டம் ஒரு சாராருக்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. இக் கூட்டம் இந்தியை எதிர்ப்பதற்கு உண்டான காரணங்களைச் சொல்லவே கூட்டப்பட்டதானாலும், அன்றையதினம் அந்த (ஆச்சாரியார்) கூட்டத்தில் பேசியவைகளுக்குப் பதில் சொல்லவும், இந்தியை எதிர்ப்பவர்களும், ஆதரிப்பவர்களும் நடுநிலைமைக்காரர்களும் யாவரும் வந்து கேட்கவும், தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுக்கவும் போடப்பட்ட கூட்டமாகும்.

நாங்கள் இக் கூட்டத்திற்கு உண்மையிலேயே போலீஸ் உதவியையோ, குதிரைப் படை உதவியையோ கோரவில்லை என்றாலும், இது மகா பிரமாண்டமான கூட்டமாயிருப்பதால் போலீசார் தங்கள் கடமையைச் செய்ய ஒரு சிலர் இங்கு நிற்பதைப் பார்க்கிறேன், அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன் என்றாலும், சென்னை பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களது கூலிப் பத்திரிகைகளும் முதல் மந்திரியார் (ஆச்சாரியார்) கூட்டம் போலீஸ் பந்தோபஸ்தில் நடக்கவேண்டி இருந்ததே என்கின்ற அவமானத்தையும் கேவல நிலைமையையும் போக்கிக்கொள்ள ஒரு நொண்டிச் சாக்கு தேடிக்கொள்வதற்காக நமது

(இந்த) கூட்டமும் 'போலீஸ் பந்தோபஸ்தில் நடந்தது' என்று எழுதுவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. போலீஸ் பந்தோபஸ்து இருப்பதை நான் எப்போதும் குற்றங்கூறுவதில்லை. போலீஸ்காரர்கள் நம் உண்மையான காவல்காரர்கள். நம் பணத்தைக் கொண்டே அவர்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆதலால், நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆனால், கனம் ஆச்சாரி யாரின் வாழ்க்கைக்கு இன்று அவ்வளவு போலீஸ் காவல் தேவை இருப்பதானது, அவரது வாழ்க்கை மிகக் கொடியது என்பதையாவது அல்லது அவர் பொது மக்கள் வெறுப்புக்கும், ஆத்திரத்திற்கும் அதிருப்திக்கும் ஆளாகி வாழ்கிறார் என்பதையாவது காட்டுகிறது.

அன்றியும், தன்னைப் பொதுஜன சேவகன் என்றும் ஜனநாயக முறைப்படிதான் பதவி பெற்றவன் என்றும், தனது எல்லா அக்கிரமும் எதேச்சாதிகாரமும் கொண்ட காரியங் களுக்கு அடிக்கடி சமாதானம் சொல்லி ஏய்க்கப் பார்க்கும் அந்த ஒழுக்கம் கெட்ட காரியத்துக்கு இது ஒரு சரியான புத்தி கற்பிப்பும் ஆகும்.

தோழர்களே! இன்றையதினம் நமது மாகாணத்தில் உள்ள இந்தி எதிர்ப்புக்குக் காரணஸ்தர்களில் நானும், இன்று இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கும் தோழர் கலிபுல்லா சாயபுவும் முக்கியஸ்தர்கள் என்றும், நாங்கள் ஏதோ வேறு காரணம் கொண்டு இந்த எதிர்ப் பிரச்சாரம் செய்கின்றோமென்றும் ஆச்சாரியாரும் அவரது சிஷ்யகோடிகளும் பத்திரிகைகளும் கூப்பாடுபோட்டு, மக்களை ஏய்க்கப் பார்க்கின்றார்கள். நான் இந்தியை 1924, 1925-ஆம் வருஷத்திலேயே எதிர்த்திருக்கிறேன். அதற்கு ஆதாரம் 'குடி அரசு' பத்திரிகையில் பார்க்கலாம். அப்போது ஆச்சாரியார் எனக்கு முக்கிய நண்பராகவும், தலைவராகவும் கூட இருந்தார் என்று சொல்லலாம். தோழர் கலிபுல்லா சாயபு அவர்கள் ஆச்சாரியார் மந்திரி ஆவதற்கு முன்பே, இந்தி கட்டாயம் ஆகும் முன்பே—'இந்தி இஷ்டப் பாடமாகக் கூட இருக்கக் கூடாது' என்று பிரச்சாரம் செய்து, பண்டித ஜவஹர்லாலுடன் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தவர். இன்றைய இந்தி எதிர்ப்புத் தோழர்களில் மற்றும் அனேகரும் வெகுநாளாகவே 'தமிழ் நாட்டிற்கு இந்தி ஏன்?' என்று கண்டித்து வந்திருக்கின்றார்கள்.

இந்தி பாஷையைப் பற்றியும், அதன் யோக்கியதையைப் பற்றிம், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் கெடுதியைப் பற்றியும் ஆச்சாரியார் இதைக் கட்டாயமாய்ப் புகுத்தும் சூழ்ச்சியைப் பற்றியும், இந்தி எதிர்ப்பு மேடைகளில் வண்டிவண்டியாய்ப் பேசப்பட் டிருக்கின்றன. இதற்கு ஆச்சாரியாரோ மற்ற அவரது கூலிகளோ, பத்திரிகைகளோ ஏதாவது சமாதானம் சொன்னார்களா, சொல்லுகிறார்களா என்று யோசித்துப் பாருங்கள். நாம் சொல்லும் காரணங்களைக் கூட சென்னைப் பத்திரிகைகள் பல வெளியிடும் கண்ணிய மான குணமில்லாமல் இழி தன்மையில் நடந்துகொள்கின்றன. ஆகவே, இந்த ஒரு காரணமே இந்தியை அயோக்கியத்தனமாகவும் அக்கிரமமாகவும் வஞ்சகப் புத்தியோடும் நம் குழந்தைகளுக்கு ஒரு கூட்டத்தார் புகுத்தப் பார்க்கிறார்கள் என்பதற்குப் போதாதா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இந்தி கெட்ட பாஷை, சூழ்ச்சி பாஷை என்பதையும்; இந்தியைப் புகுத்தப் பார்ப்பதும் அக்கிரமமென்றும் நாம் ருஜு செய்துவிட்டோம். அந்த ருஜுவை ஆச்சாரியாரும் ஏற்றுக்கொண்டதோடு இந்தியையும் கைவிட்டுவிட்டார் என்கின்ற அளவில் நாம் வெற்றியும் பெற்றுவிட்டோம். நமது கிளர்ச்சி வெற்றியளித்து விட்டதென்கின்ற நற்செய்தியை இன்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். எப்படியென்று கேட்பீர்கள்; கவனமாய்க் கேளுங்கள். ஆச்சாரியார் இந்தியைக் கைவிட்டு ஒரு மாத காலமாகிவிட்டது. அவர் இப்போது எங்கும் இந்தி என்று பேசுவதில்லை; பத்திரிகைகளும் இந்தி என்று எழுதக்கூடாதென்பதாகப் பத்திரிகைகளைக் கேட்டுக்கொண்டார். ஆனால், அதற்கு வேறு பெயர் கொடுத்து – 'இந்துஸ்தானி' என்று பேசுகிறார். அவரை ஆதரிக்கும் பத்திரிகை களும் அப்படியே எழுதுகின்றன.

ஆச்சாரியார் உண்மையில் நம் மக்களை சமஸ்கிருதம் படிப்பிக்கச் செய்யவேண்டும் என்றுதான் முதன்முதல் கருதினார். ஆனால், அதற்குத் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள எதிர்ப்பைக் கண்டு பயந்து, அதற்கு மறுபெயர் கொடுத்து ‘இந்தி’ என்றார். அதை எதிர்த்து தமிழ்மக்கள் கிளர்ச்சி செய்தவுடன் அதை விட்டுவிட்டு, இப்போது ‘இந்துஸ்தானி’ என்கிறார். இதையும் அதே மூச்சில் எதிர்த்தோமானால் இதையும் கைவிட்டு விடுவார் என்பது உறுதி. சூழ்ச்சிக்காரர்களுக்கு மானமும் வீரமும் நேர்மையும் இருக்காது; அவை இருந்தால் சூழ்ச்சி செய்ய அவசியமும் இருக்காது. ஆகையால், நாம் இந்தி போய்விட்டதே என்று எதிர்ப்பைக் கைவிட்டு விடக்கூடாது. இந்துஸ்தானியை ஆச்சாரியார் கைவிட்டு விட்டதாகச் சொன்னாலும் நம்பிவிடக்கூடாது. நமது எதிர்ப்பு தொடர்ந்து இருக்க வேண்டும். நம்மை அறியாமல் நமக்கு எவ்வளவோ கேடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் மக்களுக்குச் சரியாய் விளங்க வேண்டுமானால் ஆச்சாரியார் இன்னும் ஒன்று இரண்டு வருஷத்துக்காவது பதவியில் இருந்து, இந்தியையும் அல்லது இந்துஸ்தானியையும் மாற்றாமல் பிடிவாதமாய் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ‘வந்தேமாதர’ப் பாட்டை நிறுத்தி விட்டதுடன் முஸ்லிம்களுக்கு காங்கிரசின் முழு சூழ்ச்சியும் தெரியும்படியான அளவுக்கு நடைபெறவேண்டிய பிரச்சாரம் நின்று விட்டது. முஸ்லிம்களின் கொதிப்பு ஓர் அளவுக்குக் குறைந்து விட்டது. ஆதலால், இந்திச் சூழச்சியை ஆச்சாரியார் நிறுத்தி விட்டால், நம் மக்கள் கிளர்ச்சி அடங்கிவிடுமே என்று உண்மையிலேயே நான் கவலைப்பட வேண்டியவனாக இருக்கிறேன்.

மற்றும், தோழர் ஜெகதீசனின் பட்டினியைப் பற்றிச் சிலர் பேசினார்கள். இம் மாதிரி பட்டினியைப் பற்றிய எனது அபிப்பிராயம் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். பட்டினியில் எந்தவிதமான ஆத்மார்த்தம் என்பதோ, தெய்வீகம் என்பதோ ஆன தத்துவம் இருக்கிறது என்பதை நான் என்றும் நம்பினதில்லை.

காந்தியார், தான் பட்டினி இருந்த காலத்தில் அதற்கு அவர் சொல்லிக் கொண்ட காரணங்களும் அதற்காக மற்ற மக்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று கட்டாயப்படுத்திய செய்கைகளும் உலகம் அறிந்திருந்தும், தோழர் ஸ்டாலின் பட்டினியைப்பற்றி மிக்க விஷமத்தனமாகக் கொடுத்த அபிப்பிராயத்தைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. இதிலிருந்தாவது பொது ஜனங்களுக்குக் காந்தியாரின் உண்மையான நிலை தெரியச் சந்தர்ப்பம் ஏற்பட்டதே என்பதற்காகவும் இந்தப் பட்டினி வரவேற்கத் தக்கதாகின்றது என்கிறேன்.

மற்றும், உலகில் இறப்பது இயற்கையானாலும் ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் இறந்தே தீரவேண்டியது முடிவே ஆனாலும், தானாகவே பட்டினி கிடப்பதன் மூலம் சாகத் துணிவது என்பது பொதுமக்கள் கவனத்தை இழுக்க மிக்க பயன்படத்தக்கதாய் இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில், இக் காரியத்துக்காக மனிதத் தன்மைப்படி பரிதாபப்படாவிட்டாலும், இதைக் குறை கூறுவதும், குற்றம் சொல்வதும் சிறிதும் யோக்கியமான காரியம் ஆகாது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

இந்திக் கட்டாயத்திலிருந்து மக்களை மீள்விப்பதற்காக முயற்சித்த பலர் இதுவரை 100 பேர்கள் வரை சிறைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். பலர் 3 மாதம், 4 மாதம் கடினகாவல் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; சிலர் மீது 2 வருஷம், 3 வருஷம் தண்டிக்கக் கூடிய சட்டப்படி குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இதுதானா இராம ராஜ்யம் அல்லது தர்ம ராஜ்யம் என்று கேட்கிறேன். இந்த அக்கிரமத்தைச் சகிக்காமல் பார்ப்பனர்களிலேயே பலர் வெளிப்படையாய் ஆச்சாரியார் மீதும் அவரது ஆட்சி மீதும் குறைகூற வந்து விட்டார்கள்.

பம்பாய் ‘சோஷியல் ரிபார்மர்’ பத்திரிகை பார்ப்பனர்களால் மிகவும் விளம்பரப் படுத்தப்பட்ட பத்திரிகையாகும். அதன் பத்திராதிபரும் இந்தியப் பிரதான புருஷர்களில்

ஒருவராய்க் கருதச்செய்யப்பட்டவருமான தோழர் நடராஜ அய்யர் அவர்கள் தனது பத்திரிகையில் 'ஆச்சாரியார் இந்திக் கிளர்ச்சியை நிறுத்த இவ்வளவு பெரிய அடக்கு முறையை ஆரம்பிக்கும்படியான அளவுக்கு ஆத்திரம்கொண்ட ஒரு காரணமே, இந்திக்குச் சரியான எதிர்ப்பு இருக்கிறது என்பதை ருஜுப்படுத்தி விட்டது. இதனால் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் துவேஷத்தைக் கிளப்புகிறார். ஆதலால், இனி இதைக் கைவிட்டுவிட வேண்டியதுதான்' என்பதாக எழுதி இருக்கிறார்.

நமது மாகாண அய்க்கோர்ட் ஜட்ஜாயிருந்த தோழர் விஸ்வநாத சாஸ்திரியார், இந்திக் கிளர்ச்சியை அடக்க ஆச்சாரியார் கையாண்டமுறை அக்கிரமமானதென்றும், ஒரு காலத்தில் பொதுஜனப் பிரதிநிதிகள் என்கின்ற முறையில் ஆச்சாரியாராலேயே கண்டிக்கப் பட்ட சட்டத்தைத் தாங்கள் பதவிக்கு வந்தவுடன் பொதுஜனங்கள் மீது பிரயோகிப்பது— மாமியார் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி—என்று கூறுகிற ஆதிக்கத்தைப் போலிருக்கிறது என்றும் கண்டித்து 'மெயில்' பத்திரிகையில் எழுதி இருக்கிறார். மற்றும் ஆச்சாரியார் ஆட்சியில் ஜெயிலில் செய்யப்படுகிற கொடுமை காதில் கேட்கப் பிடிக்கவில்லை.

இவ்வளவோடு இல்லாமல், காங்கிரஸ்காரர்கள் கூலிக்குச் சில ஆட்களைப்பிடித்து அனுப்பி, இந்திக் கிளர்ச்சி பேரால் வேண்டுமென்றே சிறைபிடிக்கச்செய்து, ஜெயிலுக்கு அனுப்பி மன்னிப்பும், நல்ல நடவடிக்கை ஜாமீனும் எழுதிக்கொடுத்துவிட்டு வெளியில் அழைத்து வருவதன் மூலம், அந்த முயற்சியைக் கேவலமானதாகச் செய்யப் பார்க்கிறார்கள். இந்த வேலையில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் ஆட்கள் மிகத் தீவிரமாய் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதுவரை சிறைசென்ற 100 பேர்களில் காங்கிரஸ்காரர்களால் அனுப்பப் பட்டவர்களும் 10 பேர்களுக்குமேல் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மற்ற தொண்டர் களையும் பலவிதமாக நிர்ப்பந்தப்படுத்துவதாகவும் தெரியவருகிறது. எந்தக் காரியம் எப்படி இருந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பலாத்காரம் ஏற்படக்கூடாது என்பதும், செய்யக்கூடாது என்பதும் எனது கொள்கை. இதை இந்தி எதிர்ப்புத் தொண்டர்களுக்கு மிக வற்புறுத்திக் கூறுகிறேன். பலாத்காரம் ஏற்பட்டால் நான் பிரிந்துகொள்வேன் என்பதையும் கூறிவிடுகிறேன்.

ஆச்சாரியார் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தி, ஆணவமாகப் பேசிக்கொண்டு வர ஆரம்பித்த பின்பு அவருக்குச் செல்லுமிடங்களில் எல்லாம் பகிஷ்காரம் இருந்து வருகிறதைப் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே பார்க்கிறேன். இவற்றிற்குக் காரணம் தன்னுடைய அடாதசெய்கை என்பதை மறைத்துக்கொண்டு 'யாரோ சில துவேஷக்காரர்கள் இப்படிச் செய்கிறார்கள்' என்று சொல்லி மக்களை ஏமாற்றப் பார்ப்பது, அவர் தன்னையே ஏமாற்றிக்கொள்ளத்தான் பயன்படப்போகிறது. சிற்சில இடங்களில் கூட்டங்களில் ஏற்பட்ட கலவரங்களையும், செருப்பு முதலியன வீசி எறியப்பட்டன என்பதையும் நான் பலமாக வெறுக்கிறேன். அது கண்டிக்கப்படவேண்டியதேயாகும். ஆனால், 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதுபோல், காந்தீயம் மக்களுக்குக் கற்றுக்கொடுத்த பாடமும், காங்கிரஸ்காரர்கள் மற்ற தலைவர்களுக்கும் மந்திரிகளுக்கும் நடத்தின மரியாதையும் இன்று காங்கிரஸ் மந்திரிகள் அடைகிறார்கள். விளைவின் பயன் மிக வலிமை உடைய தல்லவா? இது இன்னும் எங்குகொண்டுபோய் விடுமோ என நான் பயப்படாமல் இருக்க முடியவில்லை.

நிற்க, தோழர்களே!

எனக்குப் பிறகு பலர் பேசவேண்டியவர்கள் இருப்பதால், நான் அன்றையக் கடற் கரைக் கூட்டத்தில் தோழர்கள் முத்துரங்க முதலியார், ஆச்சாரியார், சந்தானய்யங்கார் ஆகியவர்கள் பேசிய பேச்சுகளுக்கு மாத்திரம் பதில் சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்கிறேன்.

1. அன்று, தோழர் முத்துரங்க முதலியார் அக்கூட்டம் இந்தி ஆதரிப்பவர்களுக்கு மாத்திரம் கூட்டப்பட்டது என்று சொன்னார். ஆதரிப்பவர்களுக்கு மாத்திரம் என்றால் அவர்களுக்காக ஒரு கூட்டம் கூட்டுவானேன்? அதைக் கடற்கரையில் கூட்டி அவ்வளவு பந்தோபஸ்து வைப்பானேன்? பத்திரிகைகளில் அக் கூட்டத்தைப்பற்றி விளம்பரம் செய்து திரளான ஜனங்கள் வரும்படி வேண்டுகோள் விடுவானேன்? அவ் வேண்டுகோள் களையும் பதினாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களிலும், 'ஆதரிப்பவர்கள் மாத்திரம் வரலாம்' என்று ஏன் போடவில்லை? என்பவைகளைக் கவனித்தால், இந்தி எதிர்ப்புக்கு ஆச்சாரியாரிடம் சரியான சமாதானம் இல்லை என்பதும், பொதுஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய்ச் சுயநலம் கொண்டோ எதேச்சாதிகாரம் கொண்டோ இந்தியைப் புகுத்து கிறார்கள் என்பதும் விளங்கவில்லையா என்று கேட்கின்றேன்.

2. சர். கே. வி. ரெட்டியாரும், சர். கிருஷ்ணன் நாயரும், தோழர் கலிபுல்லாவும் தங்கள் நாட்டில் இந்தி எதிர்ப்புச் செய்யாமல் தமிழ்நாட்டில் செய்கிறதால், அதற்கு ஏதோ உள் காரணம் இருப்பதாகத் தோழர் முதலியார் சொன்னாராம். சர். கே. வி. ரெட்டி நாயுடு பேசுவதும் எழுதுவதும் எல்லா நாட்டுக்கும் சேர்ந்துதானே ஒழிய, ஆந்திரர்களை விலக்க வில்லை. சென்னையே ஆந்திராவில் ஒரு பாகம் கொண்டதே என்பது முதலியாருக்குத் தெரியாதா? இதனால் ஆந்திராவில் இக் கிளர்ச்சி இல்லை என்று முதலியார் சொல்லு கிறாரா? ஆந்திராவுக்கு கனம் ரெட்டிநாயுடு போகவில்லை என்றதால் அவர் இந்தி கூடாது என்கின்றதற்குக் கூறும் காரணங்கள் செல்லுபடி அற்றதாகி விடுமா? இதிலிருந்தே தோழர் முத்துரங்க முதலியாருக்கு இந்தியை ஆதரிக்கத் தகுதியான காரணம் இல்லை என்பது விளங்குகிறது.

மற்றும், சர். கிருஷ்ணன் நாயர் அவர்கள் இந்தியை எதிர்த்து மலையாள நாட்டி லிருந்துதான் அறிக்கை விட்டார். அதை எந்த மலையாளியும் மறுக்கவில்லை. தோழர் கலிபுல்லா சாயபு 'தனது நாட்டுக்குப் போய் ஏன் பிரச்சாரம் செய்யவில்லை?' என்று முதலியார் சொல்லுவதிலிருந்து தோழர் முதலியாருக்கு தோழர் கலிபுல்லா சாயபு எந்த நாட்டுக்காரர்—எந்த நாட்டில் கிளர்ச்சி செய்கிறார் என்பதுகூடத் தெரியவில்லை என்று புலப்படுகிறது.

மறைமலை அடிகளும், தோழர் சோமசுந்தர பாரதியாரும் செய்யும் கிளர்ச்சிக்குக் காரணம் 'ஆரிய துவேஷம்' என்று சொன்னாராம். கனம் ஆச்சாரியாரும் இந்தியை எதிர்ப்பவர்களைப்பற்றி இப்படியே சொல்லுகிறார். தமிழரிடையே ஆரிய பாஷையைப் புகுத்துவதும், அது கூடாதென்றால் 'ஆரிய துவேஷம்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பதும் என்றால், இது மிக இழிவான சமாதானம் என்றுதான் சொல்வேன். தோழர் மறைமலை அடிகளும், பாரதியாரும் வெகுகாலமாய் ஆட்சேபித்து வந்திருக் கிறார்கள். இதைக் கண்டித்துப் பல புஸ்தகங்கள் போட்டு இருக்கிறார்கள். அன்றியும், இந்த நாட்டுத் தமிழ் மக்களுக்கு 'ஆரிய துவேஷம்' இருப்பது ஓர் அதிசயமா என்று கேட்கின்றேன். ஆரிய மதப்படி தமிழ் மக்கள் எவ்வளவு இழிவானவர்களாகக் கருதப்படக் கூடியவர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். ஒரு சமூகத்தை ஒரு சமூகம் கீழ்ச்சாதி என்றும், அடிமைச் சாதி என்றும் தங்களுக்கு (ஆரியர்களுக்கு) பாடுபட்டுப்போட்டு வாழ வேண்டியவர்கள் என்றும் சொல்லப்படுமானால்—கருதப்படுமானால், சமூகத்துக்குச் சமூகம் துவேஷமில்லாமல் இருக்கமுடியுமா என்று பாருங்கள். தமிழ் மக்களுக்கு ஆரியபாஷை கட்டாயமாய்க் கற்றுக்கொடுத்தால்கூட துவேஷப்படாமல் இருக்கமுடியுமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். வெள்ளைக்காரர்மீது பார்ப்பனர்கள் குறைகூறி அவர்களை ஓட்ட வேண்டுமென்று கூறியது குற்றமில்லை; துவேஷமில்லை என்று கற்றுக்கொடுத்த இவர்கள் கொடுமையைப் பார்த்து—இவர்கள் செய்கையைக் கண்டிப்பது மட்டும் துவேஷமா என்று கேட்கிறேன். இன்று பார்ப்பனர்கள் நடத்தும் ராஜ்யபாரம் வெள்ளைக்காரர் ராஜ்ய பாரத்தைவிட ஆயிரம் மடங்கு கொடுமையானதாகவும் ஏதேச்சாதிகாரமாகவும் இருக்

கிறதே—இதை நாம் சகித்துக்கொண்டிருக்க வேண்டியதுதான் நம் கதியா என்று நான் கேட்கிறேன்.

மற்றும், ஆச்சாரியார், 'இந்தி புகுத்துவதால் தமிழ் கெடாது' என்று மனதறிந்த பித்தலாட்டம் பேசுகிறார். இன்று தமிழ் எங்கே இருக்கிறது? தமிழ்ப் பழக்கவழக்கம், சுதந்திரம், மானம் ஆகியவைகளை உணர்த்தும் தமிழ் வார்த்தைகள் எங்கே? ஒரு தமிழ் மகன் தன் மகளுக்கோ, மகனுக்கோ கலியாணம் செய்யவேண்டுமானால் தமிழ்ச்சொல் எங்கே? தமிழ்க் கருத்தினால்—'வாழ்க்கைத் துணை நலம்' என்பான். ஆனால், ஆரியக் கருத்தில் பேசும்போது 'கல்யாணம்' 'விவாகம்' 'கன்னிகாதானம்' என்கிறான். வார்த்தை வரும்போது கருத்தும் மாறிவிடுகிறது. இதற்குத் தகுந்தபடி புரோகிதம், சடங்கு, செலவு, பார்ப்பான் பிழைக்க வழி ஏற்படுவதல்லாமல்—வாழ்க்கைத்துணை என்பதில் சம உரிமையும், கன்னிகாதானம் என்பதில் ஆண்டான் அடிமைத்தன்மையும் புகுத்தப் பட்டுவிடுகிறது. இம் மாதிரியே ஆரியக் கலப்பால் தமிழின் தன்மை, உரிமை, நேர்மை எல்லாம் கெட்டு, ஆரியருக்குத் தமிழன் அடிமை என்பதுதான் மிஞ்சிவிடுகிறது. அப்படி இருக்கும்போது இனியும் ஆரியப் பாஷையைக் கட்டாயமாக்கினால் என்ன ஆகும்? ஆகையால், இந்தியை ஆச்சாரியார் புகுத்துவது மத உணர்ச்சியால் அல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும்.

[சென்னை கடற்கரையில், 26-6-1938-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-6-1938]

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவேண்டி 'நமது' சுயராஜ்ய சர்க்கார் இதுவரை 120 பேர்களை அரஸ்ட் (கைது) செய்து, சுமார் 40 பேர்கள்வரை கிரிமினல் அமெண்ட்மெண்ட் ஆக்ட் 7-3-ஏ படி, 4 மாதம், 6 மாதம் கடினகாவல் சிட்சை கொடுத்துத் தண்டித்து—கேப்பைக் கூழும், களியும் போட்டு, மொட்டை அடித்து, ஜெயில் உடை கொடுத்து, குல்லாய்ப் போட்டு வேலை வாங்கி வருகிறார்கள்.

மற்றும் தோழர்கள் சி. டி. நாயகம் (மாஜி டிப்டி—ரிஜிஸ்ட்ரார்), ஈழத்து சிவானந்த அடிகள் பி. ஏ. (ஒரு சந்நியாசி), கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி.எல்., ஷண்முகா நந்த சுவாமி (ஒரு சந்நியாசி), சி. என். அண்ணாதுரை எம். ஏ. ('ரிவோல்ட்' பத்திராதிபர்), சுவாமி அருணகிரிநாதர் (ஒரு மடாதிபதி) முதலாகிய முக்கியஸ்தர்களை 3-வருஷம் வரை தண்டிக்கும்படியான இண்டியன் பினல்கோட் சட்டம் 117 பிரிவுப்படி கைது செய்து சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். சிலர் ஜாமீனில் இருக்கிறார்கள் என்றாலும் இனியும் இந்த சட்டப்படியும் தினமும் 3 பேர், 4 பேர் வீதம் கைதுசெய்யப்பட்டுக்கொண்டும், தினமும் 10 பேர், 5 பேர் வீதம் தண்டிக்கப்பட்டுக்கொண்டும் வருகிறார்கள். 'இந்த சுயராஜ்ய சர்க்கார் இந்தக் காரியங்கள் மாத்திரம்தான் செய்துவருகிறார்கள். இதற்குமேல் என்ன செய்துவிடுவார்கள்?' என்று மக்கள் கருதி—மேலும் மேலும் கைதியாக ஆயிரக்கணக்கான பேர்கள் முன்வந்துவிடுவார்கள்போலிருக்கிறதே என்று கருதி, 'நமது' தோழர் சத்திய மூர்த்தியார் அவர்கள் தமது அருப்புக்கோட்டை அரசியல் மாநாடு தலைமைப் பிரசங்கத்தில், 'இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்பவர்கள் பெரிய இராஜத் துரோகிகளாவார்கள்' என்றும், 'அவர்கள் மீது ஆயுள்பரியந்தம் அல்லது தூக்குப் போடும்படியான குற்றப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் மிகத் 'தயாள' குணத்தோடு 'இளகிய' மனம் கொண்டு பேசியிருக்கிறார். இதை 'மெயில்' பத்திரிகை மாத்திரமே கண்டித்துத் தலையங்கம் எழுதி இருக்கிறது.

அதாவது, 'தோழர் சத்தியமூர்த்தியாரே! நீர், இந்தியை எதிர்க்கிறவர்களுடைய தலைகளையெல்லாம் வெட்டவேண்டும் என்று சொல்லுகிறீர்களே, அப்படியானால்—சென்னைக் கடற்கரையில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசும்போது 50,000 (அம்பதாயிரம்) ஜனங்கள் கேட்டுக்கொண்டிருந்ததோடு, தோழர் திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம் அவர்கள்

சர்க்காரைக் கண்டித்துத் தீர்மானம் பிரேரேபித்ததற்கு அந்த 50,000 பேர்களும் ஏகமனதாய் ஓட்டுக் கொடுத்திருக்கிறார்களே! ஆதலால் இந்த 50,000 பேர்களுடைய தலைகளையும்தானே வெட்டவேண்டும்! இதுதானா உமது சுயராஜ்யம்? இதுதானா காந்தியார் கூறும், அன்பினால் ஆளப்படும் இராஜ்யபாரம்?' என்று கேட்டிருக்கிறதே தவிர —மற்ற எந்தப் பார்ப்பனப் பத்திரிகையும்—எந்தக் காங்கிரஸ் பத்திரிகையும் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்பது மாத்திரமல்லாமல், அதைப் பற்றி இதுவரை எந்தக் காங்கிரஸ் தலைவர் என்பவர்களும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்றால்— இன்றைய சுயராஜ்யத்தில் தமிழ் மக்களின் தலை—உயிர் எவ்வளவு அற்பமாய் மதிக்கப் படுகின்றது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா என்று கேட்கின்றோம்.

உண்மையில் தோழர் சத்தியமூர்த்திக்கும், கனம் ஆச்சாரியாருக்கும் ஒருவருக் கொருவர் தனிமையில் கண்டால் வெட்டிக்கொள்ளும்படியான ஆத்திரமும் குரோதமும் இருந்து வருவது யாவரும் அறிந்ததாகும். அதாவது, சத்தியமூர்த்தியாருக்குக் கிடைக்க வேண்டிய மந்திரிப் பதவியை, தோழர் ஆச்சாரியார் திடீரென்று திருச்சி டாக்டர் இராஜனுக்குக் கொடுத்துவிட்டதால் அன்று முதல் இன்றுவரை ஆச்சாரியாரை வைத வண்ண மாகவும், அவர்மீது எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தவண்ணமாகவும் இருந்துவருகிறார். அப்படிப்பட்டவர், 'ஆச்சாரியாரின் இந்திக் கட்டாயநுழைப்பும் எதிர்ப்பும், பார்ப்பனர்— பார்ப்பனர் அல்லாதார் என்ற விஷயமாக இருந்துவருகிறது' என்று தெரிந்தவுடன்— இந்தியை எதிர்ப்பவர்களை 6 மாதமும், 3 வருஷமும் தண்டித்தால் போதும் என்று ஆச்சாரியார் சொன்னால், தோழர் சத்தியமூர்த்தியார், 'இந்தியை எதிர்ப்பவர்களை ஆயுள்பரியந்தம் தண்டிக்க வேண்டும், அல்லது தலையை வெட்டவேண்டும் (தூக்கில் போடவேண்டும்)' என்று பகிரங்கமாக ஒரு பொதுமேடையில் பேசி, ஆச்சாரியாருக்கு உதவி செய்கிறார்.

100-க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களாக உள்ள மக்களை எப்படி அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா என்று கேட்கிறோம். பார்ப்பனர்கள் தங்கள் சமூக நலனுக்காக என்றாலும்—தங்கள் சமூக நலனுக்குக் குறைவு வருகிறது என்றாலும் உடனே கன்னியாகுமரி முதல் இமயமலை வரை உள்ள சகல மாதிரியான பார்ப்பனரும் ஒன்று சேர்ந்து ஒரே அபிப்பிராயம் கொண்டு விடுகிறார்கள். அவர்களில் யார் எவ்வளவு கொடுமையும், குற்றமும் செய்தாலும் ஒருவரையொருவர் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஆதரிக்கிறார்கள்; எதிரிகள் மீது ஒரே மூச்சில் விஷமப் பிரச்சாரம் செய்து ஒழிக்க எக் கருமத்தையும் கையாளுகிறார்கள். ஆனால்-பார்ப்பனரல்லாதாராகிய, குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தமிழ் மக்களோ—இப்படிப்பட்ட சமயத்தில்தான் விபீஷணர்களாக மாறுகிறார்கள் என்பதற்கு—இப்படிப்பட்ட கட்டுப்பாடாக-வன்மனமாகத் தமிழ் மக்களை அடக்கி ஆதிக்கம் பெறுவதற்கென்றே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பார்ப்பன ஆட்சிக்கு, நமது தோழர் இராமநாதன் அவர்கள் மாட்டு வண்டி ஓட்டப்படவும், எதிரிகளை நல்லவர்களாகவும் நம் மக்களை அயோக்கியர்களாகவும் விளம்பரம் செய்யும் கேவலத் தொழிலுக்கு ஆளாகவும் துணிந்துவிட்டார் என்றால்—தமிழ் மக்கள் நிலைக்கு வேறு உதாரணம் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இவைகளைப்பற்றியெல்லாம் உண்மையிலேயே நாம் சிறிதும் கவலைப்படவில்லை; மிக்க உற்சாகமே கொண்டிருக்கின்றோம். எப்படியெனில், 'வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசிவிட்டு, வீணே முதுமைக்கும் நோய்க்கும் ஆளாகி நமக்கு இஷ்ட மில்லாமல் சாவதை விட—இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சிறு காரியத்திற்காகவாவது அல்லது இம் மாதிரியான ஒரு சிறிய நன்மை உடைய காரியத்துக்காகவாவது வாழ்ந்து மறைவது அறிவுடைய காரியம் என்பதாகக் கருதி இருப்பதால், அதை 'நாம் வெகு நானாக எதிர்

1686—224

பார்த்த காரியம் கைகூடிற்று? என்ற மகிழ்ச்சியிலேயே இருக்கிறோம். அவ்வளவு மாத்திரந்தானா? அல்ல, அல்ல! இந்நாட்டு உண்மைத் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய வீரத்தையும் தன்மானத்தையும் காட்டுவதற்கும், அவர்களது வாழ்வும் செல்வமும் உயிரும் நற்கருமத்துக்குப் பயன்படுத்துவதற்குமான ஒரு கிடைத்தற்கரிய அரும் சமயம் கிடைத்திருக்கிறதென்றும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழர்களே! நீங்கள் எத்தனை மேதாவிகளானாலும், அறிவாளிகளானாலும், செல்வவான்களானாலும்—மற்றும் யாராய் இருந்தாலும் நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நாளில் முடிவெய்தப் போவது திண்ணம். ஆனால் இந்த அறிவையும், மேதாவித் தன்மையையும், செல்வத்தையும் மற்றதையும் இப்பொழுது எதற்குச் செலவழிக்கிறீர்கள்? பொய்ப் புகழ் தேடுவதிலும், பின்னால் என்ன ஆகப் போகிறதோ என்றுகூட அறியமுடியாத காரியத்திற்காகப் பொருளைத் தேடிப் பெருக்கிவைப்பதிலும் பயன்படுத்துகிறீர்கள். இம் முயற்சியில் நீங்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைகிறீர்கள்? எவ்வளவு சங்கடம், கவலை, மனவேதனை, சரீரப் பிரயாசை அடைகிறீர்கள்? இவை மாத்திரமா? இந்தக் காரியங்களுக்கு நீங்களே உங்கள் வாழ்வில் மனமார எவ்வளவு பொய், வஞ்சகம், பித்தலாட்டம், பழிவாங்கும் உணர்ச்சி ஆகிய காரியங்களில் ஈடுபட வேண்டியவர்களாக ஆகின்றீர்கள் என்பவற்றையும் நினைத்துப் பாருங்கள்! ஆகவே, மானம், வீரம், அறிவு பெற்ற மனிதன்—தன் வகுப்பை, மற்றொரு வஞ்சக அறிவு பெற்ற வகுப்பு சூறையாட அனுமதித்துக்கொண்டிருந்து விட்டு மறைவது அறிவுடைமையா என்பதை யோசித்துப் பாருங்கள்!

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இக் கொடிய நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இதை ஒழிக்க, அழிக்கத் தமிழ்மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டவையல்ல—ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருக்கலாம் என்று சொல்லலாம். ஆனாலும், இன்றுதான் எதிரிகளின் கொடுமைகள் பாமர மக்களுக்கும் விளங்கும்படி வெளிச்சம் ஏற்பட்டு வருகிறது. மனிதன் மானத்துக்கும் அறிவுக்கும் வாழவேண்டியவன் என்பது இன்றுதான் மக்களுக்கு விளக்கிவைக்க முடிகிறது. ஆதலால், இச் சமயம் செய்யப்படும் எவ்வித முயற்சியும் பயன்படக்கூடியதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று, இக் கொடுமையில் இருந்து தப்புவதற்குத் தமிழ் மக்களுக்கு வேண்டியது—முதலாவது ஒற்றுமையாகும். நிலை குலைந்த தமிழ் மக்கள் முதலில் நிலைபெறவேண்டும்; ஒன்றுசேரவேண்டும்; சில்லரை அபிப்பிராய பேதங்களை, அசூயை, பொறாமையை விட்டு உடன் பிறப்பு (சகோதர) உணர்ச்சி கொள்ளவேண்டும். தங்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தப் பாகத்தை இந்த அருமையான—முக்கியமான காரியத்துக்கு உதவலாம் என்று கவலைகொள்ள வேண்டும். தங்களிடம் சவுகரியமாக உள்ள செல்வத்தில் சிக்கன உணர்ச்சி இல்லாமல் எவ்வளவு அளிக்கலாம் என்பதைத் தாராளத் தன்மையோடு யோசித்து உதவ முன் வரவேண்டும். எதிரிகள் கொடுங்கோன்மையை ஒழிக்க—தங்கள் தங்களைப் பொறுத்த வரை எவ்வளவு தூரம் தியாகத்தைச் செய்யலாம் என்று நன்றாய் யோசித்து முடிவுக்கு வந்து வெளியில் புறப்பட்டுவிட வேண்டும். இத்தியாதி காரியங்கள் செய்யாவிட்டால், இந்த 50 அல்லது 100 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் அடைந்துள்ள சுதந்திரம், மானம், சமத்துவம் எல்லாம் நாசமாகி பழைய (வருணாசிரம தர்ம) நிலைக்குப் போய்ச் சேர்ந்து விடுவோம் என்பதை நன்றாக உணருங்கள்.

இது எவர்மீதும் கொண்ட விரோதமல்ல, குரோதமல்ல, ஹிம்சையல்ல, பலாத்காரமல்ல. நமது உரிமையை நாம் பெற—காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கின்றோம். இம் முயற்சியிலும் யாரிடமும் துவேஷமும் காட்டுவதில்லை; யாரிடமும் பலாத்காரச் செய்கைக்கோ ஹிம்சையைத் தரும் செய்கைக்கோ நாம் செல்வதில்லை—செல்லும்படியாகவும் யாரையும் தூண்டவும் வரவில்லை. அன்றியும், அப்படிப்பட்ட காரியம் செய்யக் கூடாதென்றும் வன்மையாகக் கூறுகிறோம்.

தமிழர்களே! இப்போது இந்த முயற்சிக்கு அவசரமாக அவசியமாக வேண்டியது பணம்-பணம்-பணமேயாகும். பணம் இல்லாவிட்டால் இம்முயற்சி உடனே செத்து மடிந்து நசுக்கப்பட்டு மறைந்தே போகும். பிறகு என்ன ஆகும் என்பதைச் சொல்லவேண்டிய தில்லை. ஓர் இலட்ச ரூபாய் இருந்தால்தான் நாம் உண்மையில் ஓரளவு இக்கொடுமையில் இருந்து மீளலாம். கொடுமை என்றால் விளையாட்டுக் கொடுமையா? தமிழ்நாட்டில் உள்ள தமிழ் வீரர்கள், செல்வர்கள், மேதாவிகள் எல்லோரும் அடங்கி ஒடுங்கி நடைப் பிணங்களாக நடந்து திரியும்படி செய்யப்பட்டுவிட்ட கொடுமையாகும்.

உதாரணம் காட்டுகிறோம், பாருங்கள்! தென் கோடியில் இருந்து எடுத்துக் கொள்ளுங்கள். திருநெல்வேலி ஜில்லாவில் தோழர்கள் மேடை தளவாய் குடும்பம், ஈஸ்வரம் பிள்ளை குடும்பம், சிவசின்னக்கண்ணு பிள்ளை குடும்பம் முதலிய 20, 30, 50 இலட்சம் செல்வமும், பாரிஸ்டர் பி.ஏ.பி.எல். முதலிய கல்வியும், பரம்பரைப் பெருமையும், மிட்டாவும் உள்ள குடும்பத்தார்கள் இன்று எவ்வளவு அடிமை நிலையில்—அஞ்ஞாதவாசமாய் (தங்களைக் காட்டிக்கொள்ள முடியாத நிலையில்) இருக்கிறார்கள்? இராமநாதபுரம் ஜில்லாவில் இராமநாதபுரம் இராஜா எங்கே? சிவகங்கை ஜமீன் எங்கே? சேத்தூர் எங்கே? எட்டயபுரம் எங்கே? கோடீஸ்வரர்களான செட்டி மக்கள் எங்கே? பல இலட்சாதிகார வியாபாரிகளான நாடார்குலப் பெரியார்கள் எங்கே? இவர்கள் நிலை இன்று எவ்வளவு அடிமைத்தனமாகவும், பரிதாபகரமானதாகவும் இருக்கிறது, பாருங்கள். மற்றும் மதுரை ஜில்லாவில் உத்தமபாளையம் குடும்பம் எங்கே? போடி ஜமீன் எங்கே? பெரியகுளம் எங்கே? சுப்பஞ் செட்டியார் குடும்பம் எங்கே? மற்றும் பல மிராசுதார்களும் வியாபாரிகளும், பி.ஏ. பி.எல்., எம்.ஏ.க்களும் எங்கே? விலாசம்கூட அறியக்கூடாத அளவு மறைந்து கிடக் கிறார்கள்! அதுபோல், திருச்சி ஜில்லாவில் காட்டுப்புத்தூர், மீனாம்பள்ளி, உறையூர் ஜமீன்கள், கடவூர் சமஸ்தானங்கள் எங்கே? மற்ற பிரபல மிராசுகள் எங்கே? பத்து இலட்சக்கணக்கான செல்வம் படைத்த சவுகார்கள் எங்கே? தஞ்சை ஜில்லாவில் உடையார் எங்கே? வடபாதி மங்கலம் எங்கே? சீர்காழியார் எங்கே? இவர்கள் போன்ற மற்ற மேதாவி களும் எங்கே?

அதுபோலவே, மற்ற சகல தமிழ் ஜில்லாக்களிலும் மற்றும் ஆந்திர, மலையாள ஜில்லாக்களில் உள்ள மேதாவிகளும் செல்வவான்களும், ஜமீன்களும், இராஜதந்திர நிபுணர்களும் அடக்கப்பட்டுவிட்டனரே! இவை எதனால்? இந்த நாடு ஏதாவது பொது வுடைமை—அல்லது சமதர்ம நாடாக ஆகிவிட்டதா? சர்வாதிகாரக் கொடுங்கோன்மை நாடாகத் திகழ்கின்றதா?

அதாவது—'இந்தி படிக்கமாட்டேன்' என்றால், ஒருவர் 6-மாதம் கடின காவல் போடச் சொல்லுகிறார்; ஒருவர் 3-வருடம் போடச் சொல்லுகிறார்; ஒருவர் தலையை வெட்டு என்கிறார். தொழிலாளிகள் தெருவில் திண்டாடிச் சோற்றிற்கு இல்லாமல் சொத்துப் பொத்தென்று மடிந்து விழுகிறார்களே! 'பசிக்குதே' என்றால்—ஒருவர் ஜெயில் என்கிறார். தட்டிக் கேட்டால்—மற்றவர், சுடு என்கிறார். நாட்டு முன்னேற்றமோ—ஆகாயக் கப்பலில் இருந்து கட்டை வண்டிக்கு வந்துவிட்டது; 'பார்ச்மெண்ட் பேப்பரில்' இருந்து பனை ஓலைக்கு வந்துவிட்டது; சல்லா வேட்டியிலிருந்து கோணி ரெட்டுக்கு வந்துவிட்டது.

சாதி வித்தியாசமோ—கூட இருந்து சாப்பிட்டதற்குக் கட்டி வைத்து உதைத்து மொட்டை அடித்துச் சாணிப் பால் உற்சவம் நடந்ததாகக் கூப்பாடுகள் வானத்தைப் பிளக் கின்றன. உத்தியோகமும் அதிகாரமும்—ஒரு தனிச் சாதிக்குத்தான் உண்டே ஒழிய, மற்றவர்கள் நினைக்கவே தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

சமத்துவமோ,—'சர்வ குண்டித் தீர்த்தம்போல் வழங்கும் காப்பிக் கடையில்' கூடச் சமத்துவம் கிடையாது. அங்கும் 'பிராமணன்'-'சூத்திரன்' பலகை தொங்கிக்கொண்டு,

'பஞ்சமனும் பெரு வியாதிக்காரனும் நாயும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்கின்ற அறிவிப்புப் பலகை வெளியில் வைக்கப்பட்டும் இருக்கிறது.

மற்றும், பணக்கார இராஜ்யம் ஒழிந்து ஏழைகள் இராஜ்யமாக ஆக்கப்பட்டு விட்டதோ என்று சொல்லப்படுமானால்—அப்படியும் இல்லாமல், காலிகள், குண்டர்கள், இழி குண, இழிபிறப்பு மக்கள் என்று 'கல்லுப்போல் ருஜு செய்ய'க்கூடிய மக்கள் பலரைச் சேர்த்துக்கொண்டு—அவர்களது ஆதரவில் யோக்கியர்கள், தகுதியுடைய மேதாவிகள், கண்ணியமுள்ள நாணயஸ்தர்கள் துரத்தியடிக்கப்பட்டு விட்டார்கள். இவைகளை ஏன் சொல்லுகிறோமென்றால்—இந்த நாட்டில் செல்வவான்கள், மேதாவிகள், அறிவாளிகள் ஒடுக்கப்பட்டார்கள், ஒழிக்கப்பட்டார்கள் என்று சொல்லுவதால் சிலர் 'சமதர்மம் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்லி ஏமாற்ற வருவார்களோ என்னவோ என்று கருதி, அந்த யோக்கியதையையும் மக்கள் உணரட்டும் என்பதற்கு எடுத்துக் காட்டுகிறோம்.

'இந்தக் காரியங்களைப்பற்றி எவ்வளவுதான் உணர்ந்தாலும்—நம் நாட்டுச் செல்வவான்களில் பலருக்குச் சுலபத்தில் மான உணர்ச்சி வராது என்பது நமக்குத் தெரியும். ஏன் என்றால், இவ்வளவு இழிநிலை தங்களுக்கு ஏற்பட்டும், இன்னமும் பல செல்வவான்கள் எதிரிகளின் காலை 'மோட்சத்திற்காகவும்', பதவி வாழ்க்கைக்காகவும் நக்கிக்கொண்டு திரிகிறார்கள்; நக்கத் தூது அனுப்புகிறார்கள்.

தமிழ் வக்கீல்களோ—அவர்கள் பலருடைய அகராதியில் மானம் மனிதத்தனம் என்கின்ற வார்த்தைகளே கிடையாது என்று சொல்லலாம்.

ஆதலால், சாதாரண நடுநிலையிலுள்ள தமிழ் மக்களே, தங்கள் சமூகத்துக்கு நேர்ந்த இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்க உதவிசெய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டுத் தமிழ் வாலிபர்களே, அடக்குமுறை ஆயுதத்தை மழுங்கச்செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டுத் தமிழ்ப் பெண்மணிகளே, இவ்விரு கூட்டத்திற்கும் உற்சாகமூட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

வெளிநாட்டில் உள்ள 'இந்து', முஸ்லிம் தமிழ் மக்களே, இம் முயற்சிக்கு உதவி அளித்து—இந்நாட்டுப் பணக்காரர்களுக்குப் புத்தியும் மானமும் ஏற்படுத்தித் தாராளமாய் உதவச் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதலால், மேற்கூறிய ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மக்களும் இதுசமயம் தைரியமாய் வெளிவந்து, தன் தன் கடமையைச் செய்து, தமிழ்நாட்டை—உலகத்தில் இல்லா விட்டாலும், பூகோளப் படத்திலாவது உருவிருக்கச் செய்வார்களாக!

['குடி அரசு'-தலையங்கம்—3-7-1938]

2. இந்தி எதிர்ப்புப் படை

தோழர்களே!

இன்றையக் கூட்டம் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்துக்காகச் செல்லும் படையை வழியனுப்புவதற்காக என்றே கூட்டப்பட்டது என்று அழைப்பு விளம்பரத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டத்தில் வந்து சிலர் குழப்பம் நினைத்தது சுத்த முட்டாள்தனமாகும். இந்தக் கூட்டத்தில் இரண்டொருவர் 'காந்திக்கு ஜே' போடுவதும் 'இந்தி வாழ்க' என்று கத்துவதும் மண்ணை வாரி இறைத்து, வேஷ்டியை வீசி, மக்களை எழுந்துபோகும்படிக் காலித்தனம் செய்வதும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். கூட்டத்தை கலிபுல்லா சாயபு மிக்க வலுவுடன் அடக்கி இராவிட்டால் இன்று பலர் உதைபட்டுத் துன்பப்பட்டு இருப்பார்கள். போலீசும் இல்லாத இந்தச் சமயத்தில் காலிகளுக்கு இக் கூட்டத்தார் புத்தி

கற்பிக்க ஆரம்பித்து இருந்தால் என்ன நிலை ஏற்பட்டு இருக்கும்? கூட்டத்தில் இந்தியை ஆதரிக்கின்றவர்கள் எவ்வளவு பேர் என்று தோழர் கலிபுல்லா சாயபு கேட்டபோது கை தூக்கிய எண்ணிக்கையிலிருந்தே, இத் தொல்லைக்காரர்களின் யோக்கியதை நன்றாய் விளங்கி இருக்கும்; அவர்களும் பெரிதும் பார்ப்பனர்களாகத்தான் இருந்திருப்பதாய்த் தெரிகிறது. இம் மாதிரிக் காலித்தனத்தால் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இப் பார்ப்பனர் வெற்றிபெற முடியும்?

நாங்கள் உண்மையிலேயே இந்தியை எதிர்ப்பவர்கள். 'இந்தியைப் பார்ப்பன ஆதிக்கத்துக்காகப் புகுத்தப்படுகிறது' என்பதை இக் கூட்டத்தில் உள்ள பார்ப்பனர்களே மெய்யாக்கி விட்டார்கள். தமிழ் மக்கள் வயிறு எரிந்து மனம் நொந்துகிடக்கும் காலத்தில் —அதுவும் பிரிந்து ஆதரவற்றுக் கிடக்கும் இந்நாளில் ஏதோ சில கூலிகள் தங்கள் வசத்தில் இருப்பதாகக் கருதி, எங்கள் முயற்சிகளை இப்படி அடக்கப் பார்ப்பது தர்மமா என்று கேட்கிறேன்.

எங்களுடைய சேதிகளைப் பொதுப் பத்திரிகை எனச் சொல்லும் பார்ப்பனப் பத்திரிகைகள் கேலி செய்து, கிண்டல் செய்து மறைத்துத் திரித்துக் கூறுகின்றன; சில அடியோடு அடக்கிவிடுகின்றன. எங்கள் ஒற்றுமையைக் கலைக்கச் சூழ்ச்சி செய்கின்றன. மக்கள் அநீதியாகச் சிறைப் பிடித்துக் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்.

எங்களுக்குள்ளாகவே துரோகிகள் கற்பிக்கப்படுகிறார்கள்; கீழ்மக்களைச் சுவாதீனம் செய்து, அவர்கள் மூலமாக நம் இயக்கத்தை ஒழிக்க முயற்சி செய்யப்படுகின்றது. இந்தி எதிர்ப்பு–ஜஸ்டிஸ் கட்சியின் மற்றொரு அவதாரம் என்றும் பழி சுமத்தப்படுகிறது.

ஜஸ்டிஸ் கட்சிக்குச் சட்டசபையில் உள்ள இரண்டு தலைவர்களும் பார்ப்பனத் தாசர்களாய் இருக்கும்போது, இது எப்படி ஜஸ்டிஸ் கட்சிக் காரியமாக இருக்கமுடியும்? 'இந்தி எதிர்ப்பு–பார்ப்பன துவேஷத்துக்கு ஒரு கருவி' என்று சொல்லப்படுகிறது. தோழர்கள் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, கே. நடராஜன், வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, சி. வி. விஸ்வநாத சாஸ்திரி, உ. வே. சாமிநாதய்யர், பரவஸ்து ஆச்சாரியார், கே. பாஷ்யம் அய்யங்கார், வி. பாஷ்யம் அய்யங்கார், வி. வி. சீனிவாசய்யங்கார், குன்ஸ்ரு, டில்லி நிர்வாக சபை வர்த்தக மெம்பர் சர். மகமத் யாகூப் இவர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களா?

'சென்டினல்', 'அமிர்த பஜார்', 'மாடர்ன் ரிவ்யூ', 'சோஷியல் ரிபார்மர்', 'லீடர்', 'சர்வெண்ட் ஆப் இந்தியா' முதலாகிய பத்திரிகைகள் ஜஸ்டிஸ் பத்திரிகைகளா? அல்லது பம்பாயிலும் சென்னையிலும் உள்ள பிரஜா உரிமைச் சங்கங்கள் ஜஸ்டிஸ் கிளைச் சங்கங்களா? அடக்குமுறையை ஒன்று இரண்டுதடவையாவது கண்டித்து எழுதிய 'சுதேச மித்திரன்' ஜஸ்டிஸ் பத்திரிகையா? இப்படி எல்லாம் இருக்க, தமிழ்மக்கள் கண்களில் மண்ணைப் போட்டு அவர்களை அடிமைகொள்ளச் செய்யும் இம் மாதிரியான சூழ்ச்சியும் கொடுமையும் நியாயமா? என்று உங்களைக் கேட்கிறேன்.

நாங்கள் சொல்லுவதும் செய்வதும் தப்பானால் நாளை இங்குக் கூட்டம் போட்டுப் பாருங்கள்; உங்கள் பத்திரிகையில் எழுதுங்கள். மற்றபடி பொய்யாகவாவது கூட்டத்தில் கலகமும் குழப்பமும் ஏற்பட்டது என்று எழுதுவதற்காகவே—இங்கு விஜயம் செய்திருக்கும் சில அயோக்கிய நிருபர்களுக்குச் சேதி கொடுக்கவேண்டுமென்று கருதி, சில்லறை சேஷ்டைகள் செய்வது நியாயமா என்று கேட்கிறேன்.

இன்றைய ஆட்சியில் தங்கள் அபிப்பிராயம் சொல்லக்கூடவா இடமில்லை? இந்தக் கூட்டத்தில் 'காந்திக்கு ஜே' சத்தம் ஏன் போடவேண்டும்? இவர்கள் காந்தியை யோக்கியர் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களா? அல்லது தங்களையாவது காந்தி சிஷ்யர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களா? நான் பார்த்தேன். ஒருவன் மண்ணை வாரி இறைத்துக்கொண்டு 'காந்திக்கு ஜே' போட்டான்; முதுகில் இரண்டு அப்பளம்

விழுந்தவுடன் அறுத்துவிட்ட கழுதைகள்போல் பலர் ஓட்டமெடுத்தார்கள். இந்தச் சமயம் நான் பயந்துவிட்டேன்; போலீசும் தென்படவில்லை. நமக்கோ, நம் ஆட்களுக்கோ பந்தோபஸ்தில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆத்திரத்தோடு கை கலக்க ஏற்பட்டால் எதிரிகள் கதி என்னவாகும்? அப்புறம் 'இந்தி எதிர்ப்புக்காரர்கள் பலாத்காரம் செய்கிறார்கள்' என்று சொல்லுவதா? எவ்வளவு கஷ்டப்பட்டுப் பலாத்காரம் ஏற்பட இருந்ததை இப்போது அடக்கவேண்டியதாயிற்று! போலீசார், கூட்டத்திற்குக் காவல் அளிக்கவேண்டியதில்லை என்றாலும் காலிகளுக்காவது காவல் அளிக்கவேண்டாமா? இன்று இவ்வூர்ப் போலீசும் தண்டோரா அடிக்கக்கூட அனுமதி கொடுக்கவில்லை; நோட்டீசு அச்சடிக்க அச்சாபீசுகள் பயப்படுகின்றன.

இந்தக் கிளர்ச்சிக்குப் பணம் வசூல் செய்வதைத் தடுக்கப் பல போக்கிரித்தனமான—அற்பத்தனமான பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன. இந்த நிலையில் நாங்கள் என்ன செய்வது?

தொண்டர்களைச் சிறை பிடிப்பதையும், தண்டிப்பதையும் அவர்களை நடத்துவதையும் சற்றுப் பாருங்கள்! 150 பேர்களைச் சிறைபிடித்துத் தண்டித்துவிட்டு, இப்போது அந்தக் காரியத்திற்குச் சிறைபிடிப்பது நிறுத்தப்பட்டுப் போய்விட்டது என்றால், இதுவரை பிடித்தது ஒழுங்கா, நியாயமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பற்றி காங்கிரஸ் காரிய கமிட்டி, 'தப்பு அபிப்பிராயத்தின்மீது அக் கிளர்ச்சி நடப்பதால் அதை விலக்க காங்கிரஸ் தலைவருக்கு அதிகாரமளித்திருக்கிறது' என்று தீர்மானித்திருக்கிறது.

அப்படியானால், அபிப்பிராய பேதத்தினால் நடத்தும் காரியத்துக்கு ஆறுமாதம் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கடின காவலா என்று கேட்கிறேன். இதுதான் ஜனநாயகமா? இதுதான் அபிப்பிராய சுதந்திரமுள்ள பிரஜா உரிமை ஆட்சியா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்த அரசாங்கம், இந்தி எதிர்ப்புக் கமிட்டியைச் சட்டம் மீறுவதற்கும், ஆயிரக் கணக்கான மக்களைச் சட்டம்மீறித் தீரவேண்டுமென்றா கட்டாயப்படுத்தவும் தூண்டச் செய்கிறது? இதில் சர்க்காருக்கு என்ன லாபம் கிடைக்கப்போகிறது என்று கேட்கிறேன். அரசாங்கத்திற்கும், சட்டத்திற்கும் பணிந்துபோவது அவமானம் என்று மக்கள் கருதும்படி செய்கின்றது.

நாம் என்ன செய்வது? கிளர்ச்சிகூடச் செய்யக்கூடாதா? தோழர் சத்தியமூர்த்தியார் 'இந்தக் கிளர்ச்சிக்காரரை, ராஜத் துரோகச் சட்டப்படி வழக்குத்தொடுத்துத் தூக்கில் போடும்படி' சர்க்காருக்கு யோசனை கூறுகிறார். இப்போது நடத்தும் சட்டமே கொடுங்கோலாட்சி என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, காங்கிரஸ் ஆட்சியின் யோக்கியதையும், அதைக் கையாளும் பார்ப்பனர்கள் யோக்கியதையும் நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள் என்பதாகக் கூறிவிட்டு, படைத் தொண்டர்களுக்கு ஈ. வெ. ரா. செய்த உபதேசமாவது:

இப்படையை நடத்துகிறவர்கள் பொறுப்புள்ள பெரியார்கள். இவர்கள் நடத்தையில் படை வெற்றிகரமாய் முடிவுபெறும் என்றே கருதுகிறேன். ஒற்றுமை, சிக்கனம், சமரச எண்ணம் ஆகியவை படைத் தலைவர்களுக்கு வேண்டும். தொண்டர்களுக்குப் பொறுமை, சகிப்புத்தன்மை, கிடைத்ததைக்கொண்டு திருப்தி அடையும் தன்மை ஆகியவை வேண்டும்.

எதிரிகள் பல சூழ்ச்சி செய்வார்கள்; சிறியதைப் பெரியதாக்கிப் பழிகூறப் பல எதிரிகள் இருக்கிறார்கள். எதிரியிடம் கூலி வாங்கிக்கொண்டு நம்மைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் பல ஈனர்கள் நமக்குள்ளாகவே இருந்து குடிகெடுத்து வருகிறார்கள். இந் நிலையில் இயக்கத்துக்குக் கேடுவராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கிய

மாகும். எவ்வளவு பழிசுமத்தினாலும், எவ்வளவு இழிவுபடுத்தினாலும் இவற்றை எவ்வளவு பேர் நம்பினாலும்—நான் மாத்திரம் களைத்துப் பின்வாங்குகிறவனல்ல. எனக்கு எனது லட்சியம்தவிர வேறு ஒன்றுமே இல்லை. அதற்காகவே உயிர் உள்ள அளவும் பாடு பட்டுத்தான் சாவேன். யார் என்ன சொன்னாலும் வெட்கப்படப்போவதில்லை. யார் என்ன மோசம் செய்தாலும்சரி, துரோகம் செய்தாலும்சரி—வாழ்நாள் முடிகிறவரை கிடைத்த ஆயுதத்தைக்கொண்டு காரியம் செய்கிறதென்ற முடிவில்தான் இருக்கின்றேன்.

ஆகவே, தோழர்களே! இம் மாபெரும் லட்சியத்திற்குத் தொண்டாற்றும் வேலையை யாவரும் தங்கள் வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொண்டு, காரியத்தைக் கெடுக்காமல், லட்சியத் துக்குக் கூடுமானவரை தொண்டாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருச்சி டவுன்ஹாலில், 1-8-1938-ல் இந்தி எதிர்ப்புப் படை வழி அனுப்புவிழாக் கூட்டத்தில், சொற்பொழிவு—'விடுதலை' 2-8-1938]

3. கட்டாய இந்தி ஒழிந்தது!

'இந்தி கட்டாயப் போதிப்பு உத்தரவு' மாற்றப்பட்ட சர்க்கார் அறிக்கையைப் பார்த்தேன்.

இவ்வளவு நாள் பொறுத்தாவது, நமது கவர்னர், இந்தி எதிர்ப்பானது இந் நாட்டுப் பெரும் பகுதியான மக்களின் ஆத்திரத்துடன் கூடிய எதிர்ப்பு என்பதை உணர்ந்து கொண்டதற்கும், இப்போது போதித்துவரும் கட்டாய இந்திப்போதனைமுறை பயனற்றதும் கூடாததும் என்றுணர்ந்து, அந்த முறையையும் கட்டாயப் போதிப்பையும் ரத்து செய்த தற்கும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால், அந்த அறிக்கையின்படி இந்தி இனி இஷ்டபாடமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டாலும், அதற்காகப் பொது மக்களின் வரிப் பணம் செலவழிக்கப்படுவதை நான் வீண்—அனாவசியமான செலவு என்று வருத்தத்துடன் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இம் மாதிரிச் செலவுக்கு சர்க்கார் அறிக்கை சொல்லும் காரணம், 'மெயில்' பத்திரிகை சொல்லுகிற பிரகாரம், பொருத்தமற்றதும்—நியாயமற்றது மாகும் என்பதுதான் எனது அபிப்பிராயமுமாகும். ஏனெனில், இந்தியா என்கின்ற பெயருள்ள பூபாகத்தில் பல பாஷைகள் பேசும் பல மாகாணங்கள் இருக்கும்போது, 'தென்னிந்தியர் இந்தி படிப்பது, இந்தி பேசும் மாகாண மக்களுடன் பழகுவதற்கு அனுகூலமாயிருக்கும்' என்று சொல்லுவது அசட்டுத்தனமேயாகும். ஒரே ஒரு பாஷை பேசும் மக்களுடன் பழகுவதற்கு மாத்திரம் அனு கூலமாயிருக்கும் மற்றொரு பாஷைக்கு—பொது மக்களின் வரிப் பணமும், பொதுப் பள்ளிக் கூட முயற்சியும் ஏன் செலவழிக்கப்படவேண்டும்? மற்றபாஷை மாகாணங்களுடன் தென்னிந்தியர் பழக வேண்டுமானால் அதற்கு என்ன செய்வது? மற்றும், இப்போதைய சர்க்கார் அறிக்கை முறைப்படி, ஒரு தமிழ் மாணவன் இந்தியை இஷ்டபாடமாக எடுக்க வேண்டுமானாலும் அவன் தனது தாய் மொழியை விட்டு விட்டுத்தான் இதையெடுக்க வேண்டியவனாக ஆவான்.

ஆகையால், இந்தப் பாகம் மாத்திரம், ஒன்று—யோசனை இல்லாமல் செய்த காரியமாய் இருக்க வேண்டும்; அல்லது மாஜி கனம் ஆச்சாரியாரைத் திருப்திப்படுத்த கவர்னர் பிரபு எடுத்துக்கொண்ட கோணல்வழி முயற்சியாய் இருக்கவேண்டும். எப்படியிருந்த போதிலும், தமிழர் விருப்பப்படி இந்தி கட்டாயப் போதிப்பு ஒழிந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

நமது பிறவி எதிரிகளான பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும் நமது விஷயத்தை மறைத்தும், குறைத்தும், திரித்தும், விஷமத்தனமாகக்

கூறியும், வெளியிட்டும், நம்மை எதிர்த்தும், நம் முயற்சியைக் கெடுத்து வந்தும் நாம் வெற்றி பெற்றோம். இதற்குத் தமிழர்களின் ஒற்றுமையும் தன்மான உணர்ச்சியுமே காரணமாகும்.

ஆரம்ப முதல் கட்டாய இந்திப் போதிப்பை எடுத்துவிடக் கிளர்ச்சி செய்யப் பெரிய தொரு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்படி உதவி செய்து வந்த 'மெயில்' பத்திரிகைக்கு நான் தனியான நன்றி செலுத்துவதுடன், நம்முடன் ஒத்துழைத்துப் பல வகையில் ஆதர வளித்தவர்களுக்கும், பல கஷ்ட நஷ்டங்களை ஏற்றுத் தீவிரக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், பொருளுதவி செய்தவர்களுக்கும் எனது மனப் பூர்த்தியான நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி, அடுத்துத் தொடங்கப்போகும் கிளர்ச்சிகளிலும் தமிழர்கள் இதுபோலவே ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

['குடி அரசு'—அறிக்கை—25-2-1940]

4. சோதனைக் காலம்

'விடுதலை' தினசரிப் பத்திரிகைக்கு சுயராஜ்ய சர்க்கார் என்னும் பார்ப்பன ஆதிக்க ஆட்சியால் 2000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அக் கட்டளையின் தன்மையையும், அதன் காரணத்தையும் நான் படித்துப் பார்த்த வரையில், 'விடுதலை'ப் பத்திரிகையை எப்படியாவது அடக்கி, ஒடுக்கி நடைபெறாமல் செய்துவிட வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்து, அதற்காகச் செய்யவேண்டிய முறையையே கிரமப்படிச் செய்து வருகிறது என்கின்ற முடிவுக்குத்தான் வரவேண்டியவ னாக இருக்கிறேன்.

இந்த ஜாமீன் கட்ட வேண்டும் என்கிற கட்டளையானது பத்திரிகைக்குத்தான் ஜாமீன் கேட்கப் பிறப்பிக்கப்படுகிறது என்பதாகக் காணப்பட்டாலும், ஜாமீன் கேட்கப் படுவதற்குச் சர்க்காரால் காட்டப்பட்டு இருக்கும் காரணங்கள்,—திராவிடர் கழகத்தை ஒழித்து, அதற்காக எனது பிரசாரத்தைத் தடுத்து, திராவிட மக்களுக்கு—மதம், சமுதாயம், அரசியல் முதலிய துறைகளில் இருந்துவரும் குறைபாடுகளையும், இழிவுகளையும் இனியும் செய்யப்பட்டு வரும் வஞ்சகங்களையும் முன்னேற்றத் தடைகளையும் எவரும் எந்த விதத் திலும் எடுத்துச் சொல்லாமல் இருக்கும்படி செய்யப் போகிறார்கள் என்பதைக் காட்டுவ தாகவும் இருக்கின்றன. இந்த நிலை நமக்கு (திராவிட மக்களுக்கு) ஒரு சோதனைக் காலமாகும். அதாவது, திராவிட மக்கள் திராவிட நாட்டில் மனிதர்களாக வாழ்வதா, அல்லது 'சூத்திரர்'களாக, பார்ப்பனர்களின் அடிமைகளாக என்றென்றும் மனு தர்மப் படியான ஒடுக்கப்பட்ட மக்களாக—இந்துவாக இருப்பதா என்கின்ற சோதனை.

நான் எனது வாழ்நாளின் முக்கிய காலத்தையும், எனது தொண்டின் முக்கியத் தையும், முடிவான இலட்சியத்தையும், திராவிட மக்கள், சமுதாயம், மதம், சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் கீழ்மைப் படுத்தப்பட்டு—தடைப் படுத்தப்பட்டு இருந்து வருவதை மாற்றியாக வேண்டும் என்பதற்கே பெரிதும் பயன்படுத்தி வருகிறேன். இனியும் இதற்கே பயன்படுத்துவது என்கின்ற முடிவிலேயே இருக்கிறேன். அதோடு, எந்தக் காரணத்தாலோ இன்றைய நிலை நமக்குச் சிறிது நம்பிக்கை கொடுப்பதாக இருக்கிறது. இந்த நம்பிக்கை வளர்ச்சியடைவதாகவும் இருக்கிறது. எனது முடிவும், தொண்டும்— இந்த நம்பிக்கைக்கும், வளர்ச்சிக்கும் இடம் ஏற்பட்டுவிட்டதான நிலையும்தான் பார்ப்பன ஆதிக்க ஆட்சியை இப்படிப்பட்ட அடக்குமுறைப் பாணங்களை எய்யச் செய்திருக்கின்றன.

பலாத்காரம், கலவரம், குழப்பம் முதலியவை சிறிதுகூட ஏற்படுவதற்கு இடமில் லாமல்—எந்தச் சங்கதியையும் சிறிதுகூட அதிகப்படுத்திப் பேசாமல், உண்மைகளையே

அமைதியான தன்மையில் குறிப்பிட்டு, எந்த மனிதனைப்பற்றியும் தனித்த குறை கூறாமல், இலட்சிய வெற்றியையே கவலையாய்க் கொண்டு செய்துவருகிற பிரசாரத்தை இந்தப்படித் தவறான முறையில் தடுத்துத் தொல்லை கொடுப்பது என்று முடிவு செய்தால், இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்து, ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசரமான அவசியமாகிவிட்டது.

மதத்தில் திராவிடன் கீழ்சாதி; சமுதாயத்தில் கீழ்த்தர வேலை உழைப்பாளி; பொருளாதாரத்தில் ஏழை; கல்வியில் 100-க்கு 85 கை நாட்டுப் பேர்வழி; அரசியலில் பெரிதும் கீழ்த்தரச் சிப்பந்தி. இந்த நிலையில் இருப்பதோடு பெருவாரியான வரியும் கொடுத்துவருகிறவனாக இருக்கிறான். இப்படிப்பட்டவன் தனது குறைகளை எடுத்துச் சொல்லவும் தனது உரிமைகளைக் கேட்கவும் செய்வது தவறு என்று, இந்த ஜாமீன் உத்தரவால் ஆகிவிட்டது.

திராவிட நாட்டில் திராவிட மக்கள்—திராவிட மொழிக் கல்வியில் 100-க்கு 85 பேர் எழுத்து வாசனை அற்றவர்களாக இருக்கும்போது, ஆரிய நாட்டு ஆரிய மொழியைப் பள்ளியில் புகுத்தி இருப்பதோடு, அரசியல்—நிர்வாகம் முதலிய பதவிகளுக்கு, உத்தியோகங்களுக்கு ஆரிய மொழி (இந்தி) கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது. சட்டம், நீதி, வைத்தியம், இஞ்சினியரிங் முதலிய நிர்வாகத் துறைகள்—ஆங்கிலத்தில் நடத்தப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றன; இவைகள் கற்கப்பட ஆங்கிலப் புத்தகங்களையே பெரிதும் படிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக எப்படிப்பட்ட தாய்மொழிப் பேச்சாளராக இருந்தாலும் இரு மொழிக்காரர் பேசுவதாயிருந்தால்—தங்கள் இரு தாய் மொழிகளையும் விட்டுவிட்டு ஆங்கிலத்தில் பேசிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சர்க்கார் ஆதாரங்கள், நடப்புகள்—உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆங்கிலத்திலும், மாகாணத்துக்கு மாகாணம் ஆங்கிலத்திலும், வெளிநாடுகள் சம்பந்தம் ஆங்கிலத்திலும் இருந்து வருகிறபோது—பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு 10, 12 வயதுவரை அதாவது (First Form) 6-வது வகுப்பு வரை ஆங்கிலம் கற்பிக்கக்கூடாது என்று சர்க்கார் இன்று ஏற்பாடு செய்திருப்பதானது—சிறிதாவது அறிவுடைமை என்றோ, அதனால் திராவிட மக்களுக்குக் கேடில்லையென்றோ, யாராவது சொல்லமுடியுமா? நாம் ஒரு பையனைப் படிக்க வைக்க—அவனது 6-வது ஆண்டிலே துவக்குகிறோம். அவன் 'செகன்ட் பாரம்' என்னும் 2-வது பாரத்திற்கு வர குறைந்தது ஆறுவருஷம்; சிலருக்கு 7 வருஷம் படிக்கவேண்டியிருக்கிறது. 12, 13-வது வயதில் ஆங்கிலம் துவக்கினால் மேற்கண்ட சட்டம், வைத்தியம், இஞ்சினியரிங் முதலியவைகளை ஆங்கிலத்தில் படித்துத் தேறமுடியுமா? படிப்புக்கு உருப்போட்டு ஒப்புவிப்பதையே—பரீட்சைத் தேர்வுக்கும், கெட்டிக்காரத்தனத்துக்கும், தகுதிக்கும், யோக்யதா பட்சமாக வைத்திருக்கும்போது இதில் திராவிடப்பிள்ளை படித்துத்தேறி அதிக மார்க்கு வாங்கி மேல் வகுப்பில் சேருவதற்கும், உத்தியோகத்திற்கும் தகுதியாக முடியுமா? 'எந்த மாணவனும் தனக்குப் படிப்பில்—உத்தியோகத்தில் இருந்துவரும் தடைகளை, வசதிக் குறைவுகளைச் சொல்லிச் சலுகை அல்லது பரிகாரம் கேட்கக்கூடாது' என்று சட்டமும் செய்திருக்கும்போது—திராவிட மக்கள் கதி என்ன ஆவது? இந்த நிலையில் இதுவரை இருந்துவந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை (கம்யூனல் ஜீ. ஒ.) என்று இருந்து வந்ததையும் எடுத்துவிட்டதாக, மேலிடத்தில் இருந்து அறிக்கை வந்துவிட்டதென்றால்—உத்தியோகத்தில் திராவிடமக்கள் நிலை என்ன ஆவது?

இப்படிப்பட்ட நிலையில் உள்ள மக்களின் ஒரே ஒரு சார்பு ஆயுதமான 'விடுதலை'யில் இவைகளை எழுதுவதும், எடுத்துச் சொல்வதும் குற்றம் என்று ஆகிவிட்டால் திராவிடமக்களுக்கு இனிப் பரிகாரம்தான் எப்படிக் கிடைக்கமுடியும்? ஆகவேதான் சர்க்கார், 'விடுதலை'மீது எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி—நாம், இனிச் சிறிதும் அலட்சியமாக இருக்கமுடியாது; உடனே முக்கியமாய்க் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதற்கேதுவான காரியமாகும் இது.

['விடுதலை'—தலையங்கம்—16-6-1948]

6. 'வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம்'

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இன்றைய நிலையில் திராவிட மக்கள் நாதியற்றவர்களாக ஆக்கப் படுகின்றனர்; நமது உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அரசாங்கத்தார் நமது குறைபாடுகளுக்குப் பரிகாரம் செய்யக் கவலை கொள்ளாமல், மேலும் மேலும் தொல்லை கொடுப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். எப்படியாவது நமது கழகத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதாகத்தான் எண்ணுவதாகத் தெரிகிறது.

நாம் அரசாங்கத்திற்கு ஒரு கெடுதியும் செய்யாதபோது—நமது தோழர்களுக்கும்—'அமைதியாய் இருங்கள்—கட்டுப்பாடாய் நடவுங்கள், வீண் கிளர்ச்சிகள் செய்து நமது அரசாங்கத்தோடு மோதிக்கொள்ளாதீர்கள்; அவர்களும் திராவிடர்—நாமும் திராவிடர்; நம் தொண்டு அவர்களுக்கும் சேர்ந்ததுதான்; நீங்கள் அமைதியைக் கைக் கொள்ளுங்கள்; சர்க்காருக்குத் தொல்லை கொடுப்பதல்ல நம் வேலை; நம் மக்களுக்கு இருந்துவரும் இழிவைப் போக்க நாம் வாதாடுகிறோம்; நாம் சூத்திரராய் இருப்பதை வெறுக்கிறோம்; அதை ஒழிக்க முயலுகிறோம்; இன்றுள்ள அரசாங்கத்தாரைக் கொண்டே அதை ஒழிக்க நாம் முயற்சிப்போம்' என்று, இவ்வாறாக நாம் எடுத்துக்கூறி வந்தும், இன்றைய சர்க்கார் பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டு நமக்குத் தொல்லைகளையும், கஷ்டங்களையும் கொடுக்க முன்வந்து விட்டார்கள். நாம் எவ்வளவோ இதுவரை அடக்கமாய் இருந்தும் அவர்களே நம்மை வம்புச் சண்டைக்கு இழுக்கிறார்கள்.

கடைசியாக, நமது கலாசாரத்திற்கும் மொழிக்கும் இடையூறு விளைவிக்க முன்வந்து விட்டார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னே நம்மால் வெறுத்து முறியடிக்கப்பட்ட இந்தி மொழி இன்று நமது இளைஞர்கள், குழந்தைகள் தலையில் கட்டாயமாக்கப்பட்டு விட்டது. முதலில், ஒரு கூட்டத்தார் இஷ்டப்படாததால் இந்தி கட்டாயமில்லை என்று சொன்ன கல்வி மந்திரியார், பார்ப்பனர்களின் கண்டனத்திற்குப் பயந்து, அவர்கள் மூக்கு சொறிந்ததற்குப் பயந்து—'இந்தி கட்டாயப் பாடம்' என்று இடம் கொடுத்து, இன்று நமது மக்களுக்கு இந்தியைக் கட்டாயமாக்கி விட்டார்கள். இதுவரை அவர்கள் செய்துவந்த எல்லையில்லா அக்கிரமங்களுக்கு எல்லாம் பொறுத்துவந்த நாம், இனி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாகி விட்டோம்.

மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்தவர்கள், மக்களின் குறைபாடுகளுக்குக் காது கொடுக்காதவர்களாகி, பார்ப்பனரின் வாக்குக்கு மதிப்புக்கொடுத்து பார்ப்பன அடிமை சர்க்காராக ஆகிவிட்டனர். பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்றெல்லாம் மக்களை ஏய்த்து ஓட்டுப்பெற்று, இன்று பதவியில் அமர்ந்ததும்—பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் எல்லாம் பறிக்கப்படுகின்றன. திராவிடர்களின் நன்மைக்காக உழைக்கும் ஒரே தினசரியாகிய 'விடுதலை'க்கு, இன்று ரூ. 2000/– ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பொதுஜன சர்க்காராகுமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்! நம்மவர்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் வேலையில் பார்ப்பனர்கள் இறங்கி விட்டார்கள். கேள்வி கேட்பாரற்றுப் போய்விட்டது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, லஞ்சம், பித்தலாட்டம், கள்ள மார்க்கட் முதலியவைகள் தாண்டவமாடுகின்றன. நீதி என்பது இல்லை. நம் கடமைகளைத் தடுப்பதும், கொடிகளைப் பறிப்பதுமாக—முரட்டுத்தனமாக சர்க்கார் நடக்கிறது. காலிகளின் தொல்லைகளை அடக்குவதில்லை.

ஏகாதிபத்திய சர்க்கார் என்று சொல்லி வெள்ளையரைக் குறைகூறி வந்த இந்த மகானுபாவர்கள் எந்த விதத்தில் அவர்களைவிடச் சிறந்தவர்களாவார்கள்? வெள்ளையர் ஆட்சியில் காணாத குறைபாடுகளும், பட்டினி, கொலை, கொள்ளைகளும், யுத்தங்களும் இன்று மலிந்துவிட்டனவே! ஆகவே, நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். 24-6-1948-ல்

திருச்சியில் கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், இன்றைய சர்க்காரின் அடக்குமுறைக் கொடுமையை ஒழிக்கக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. நிலைமையை உணர்ந்து இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப் பூரண அதிகாரத்தையும்—தலைவர் என்ற முறையில் என்னிடம் அளித்திருக்கிறார்கள். அதைக் கொண்டுதான் நான் ஜில்லாதோறும் சென்று நம் இயக்கத் தோழர்களை, இளைஞர்களை, பணியாளர்களைக் கண்டு, அவர்கள் நிலை எவ்வாறிருக்கிறது, ஆதரவு எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவாகப் போகப்போகிறேன்.

அதாவது போராட்டம் நடக்குமானால், அல்லது நம்மீது அடக்குமுறைப் பாய்ச்சல் பாய்வார்களானால் நம்மவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும், அப்போராட்டத்தின்போது இன்றைய சர்க்கார் எப்படி எப்படி நடந்துகொள்ளும் என்பதைப் பற்றியும் எடுத்துக்கூறிப் பின்தான் உங்கள் உதவியை நாடுவேன். சென்ற போராட்டத்தின் போது, அன்றிருந்த சர்க்கார் காங்கிரஸ் சர்க்காராயிருந்தாலும் வெள்ளையனிடத்தில் மேல் அதிகாரம் இருந்துவந்ததினால் அவர்கள் காட்டுராஜா ஆட்சி நடத்த முடியவில்லை. இன்றைய சர்க்கார் ஒரு அநாகரிக சர்க்கார், காட்டுமிராண்டி சர்க்கார். காலித்தனத்தினாலும், கட்டுப்பாடான பித்தலாட்டத்தினாலும் மக்களை ஏய்த்து அரசாங்கத்தைக் கைப்பற்றினவர்களின் சர்க்கார். அதனால், அக் காரியத்தை இனி அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே, இப்போதும் முன்போலவே இவர்கள் நமக்கு மிகுந்த தொல்லைகள் கொடுப்பார்கள். கண்ணீர்ப் புகைவிட்டு மக்கள் கூட்டத்தைக் கலைக்க முன்வருவார்கள். முட்டிக்கு முட்டி அடிப்பார்கள்; சுடுவார்கள். நம் வீட்டுக்குள் புகுந்து நம் பெண்டு பிள்ளைகளை வதைப்பார்கள். தொழிலாளத் தோழர்களுக்குச் செய்த துன்பத்திற்குமேல் செய்வார்கள். எப்படியாவது நமது கிளர்ச்சியை அடக்க முன்வருவார்கள்.

பிரிட்டிஷார் நடந்துகொண்ட நாகரிக சர்க்கார்போல் இது நடக்காது. நம்மைச் சிறைப்பிடித்து 'ஏ' கிளாஸ், 'பி' கிளாஸ் கொடுத்துப் பச்சரிசிச் சோறும், தனியாகப் பாலில் உறைக்கு ஊற்றிய தயிரும், வெண்ணெய் உருக்கின நெய்யும், உருளைக் கிழங்கும், பருப்பும், பழங்களும், மாமிசம் முட்டையும், பத்திரிகைகளும் கொடுத்து நம்மை உபசரிப்பார்கள் என்று கருதாதீர்கள்! இவைகளெல்லாம் இன்றைய சுயராஜ்யம் தேடிய தேசபக்தர்களுக்கு—வெள்ளையன் ஆட்சிக் காலத்தில்—அந்த சர்க்காரால் சிறைப்படுத்தப்பட்டபோது மாமியார் வீட்டுக்குப்போன புது மருமகன் போலக் கொடுக்கப்பட்டன. அந்தச் சுகத்தை அனுபவித்து, 'தியாகிகள்' பட்டம் பெற்றவர்கள்—இன்று பதவி மோகத்தில் மூழ்கி நாற்காலிச் சண்டை போட்டுக்கொண்டு இருப்பவர்கள். இவர்களால் நமக்கு இப்படிப் பட்டவைகளெல்லாம் கிடைக்கும் என்று நினைத்து யாரும் ஏமாறவேண்டாம். அப்படி அவர்கள் நடந்தால் ஒழிந்துபோக வேண்டியதுதான். இவை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நாளைக்குப் போராட்டத்தில் இறங்கியபின், 'இப்படியெல்லாம் வரும் என்று தெரியாது!' என்று சொல்லி மனத் தளர்ச்சியடையக்கூடாது என்பதற்காகத்தான். இவர்களால் என்னென்ன தொல்லை கொடுக்கமுடியுமோ அவ்வளவையும் கொடுத்தபின்தான் திருப்தியடைவார்கள். இவைகள் எல்லாம் தெரிந்த பின்னர்தான் நீங்கள் கிளர்ச்சியில் இறங்கவேண்டும்; இறங்கியபின் உறுதியாகக் கடைசிவரை இருக்கவேண்டும். நம் பின் சந்ததிக்காவது மனிதத் தன்மையும், மானமும் தேடிவைத்துவிட்டு நாம் மறைவோம்; இதில் கண்டிப்பாக நாம் பல நூற்றுக்கணக்கில் மாளவேண்டிவரும். சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சியாக இருக்கும் இது. தமிழரின் பெருமை, திராவிட மக்களின் வீரம், அவர்களது அடிமை நீக்க உணர்ச்சி இவைகளுக்குக் காலம் வந்துவிட்டது. ஒன்று, 'வாழ்ந்தால் மானத்தோடு—வீரத்தோடு வாழ்வோம்! அல்லது மடிவோம்!' என்ற உறுதியுடன் ஒவ்வொருவரும் இறங்கவேண்டும். இதில் வருகிறவர்களுக்கு ஒரு இலாபமும் கிடைக்காது. இது பணக்காரன் இயக்கம் அல்ல. அல்லது, சிலர் கூடிப் பித்தலாட்டக் கூட்டமாகி, பதவி வேட்டைக்காக வியாபாரம் நடத்தும் அரசியல் தந்திர இயக்கமல்ல.

இதில் வருகிறவர்கள் தங்கள் கைப்பொருள்களை இழக்கவேண்டும்; உயிரைத் துறக்க வேண்டும். கஷ்டநஷ்டங்கள் அனுபவிக்கத் தங்கள் வாழ்வைப் பாழாக்கவேண்டும்.

எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் இருந்துவந்த இழிவுகளை ஒழிக்கப் போகிறவர்கள் நாம். அதற்கேற்ற இந்த விலைகளைக் கொடுத்தால்தான் முடியும். எந்த இயக்கத்திற்கும் இது உண்டு. கஷ்டப்படாமல் சுகம் அனுபவித்த 'அரசியல் இயக்கம்' இதுவரையில் நாட்டில் ஏற்பட்டதில்லை. கடைசி மூச்சு இதுதான். துணிவு கொள்ளுங்கள்! துணிந்து காரியத்தில் இறங்குங்கள்! எனக்கு வெகு கூப்பாடுபோடும் 1000 வேஷக்காரர்கள் இருப்பதைவிட, உறுதியான மனம்படைத்த 100 பேர்கள் இருந்தாலே வெற்றிபெறுவேன். இந்தப் போராட்டத்தில் நாம் தோல்வி அடைந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், பரிகசிக்கத்தக்க முறையில் இழிவான தோல்வி இருக்கக்கூடாது என்பதுதான். நீங்கள் உரம் பெற்று உண்மையாய்த் துணிந்து காரியத்தில் இறங்க வேண்டுமென்பதுதான் எனது ஆசை. ஒன்று சொல்கிறேன்; இதுவரை என்னால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கிளர்ச்சியும் தோல்வியடைந்ததில்லை. எனக்கு நம்பிக்கை உண்டு, இதிலும் வெற்றிபெறுவோம் என்று. தோழர்களே! உங்களுக்குச் சொல்லவேண்டியவைகளை எல்லாம் சொல்லிவிட்டேன். அரசாங்கம் எப்படி நடந்துகொள்ளும் என்பதையும் முன் கூட்டியே சொல்லிவிட்டேன். உதாரணம் ஒன்று சொல்லுகிறேன்.

சென்ற சில மாதங்களுக்கு முன் சென்னையில் நடந்த 'பக்கிங்ஹாம் மில்' தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் (Strike) சர்க்கார் எப்படி நடந்துகொண்டது—அப்படித் தான் நம்மிடமும் நடக்கும். பெண்களென்றும், குழந்தைகள் என்றும், தாய்மார்கள் என்றும், கிழவிகள் என்றும் பார்க்க மாட்டார்கள். பெண்கள் கண்களிலும் கண்ணீர்ப் புகை விடுவார்கள். போலீசாரைக் கொண்டு சுடவைப்பார்கள்; அடிப்பார்கள். மேலும் சொல்லு கிறேன்: நம் நாட்டுப் போலீசாரைக்கூட சுடச்சொல்ல மாட்டார்கள்; ஏன்? அவர்கள்மீது நம்பிக்கை இல்லை; அவர்களுக்கும் திராவிட உணர்ச்சி வளர்ந்துவருவதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், மலபார் போலீசோ வடநாட்டுப் போலீசோ கொண்டுதான் நம்மைச் சுடச் செய்வார்கள். இதற்கெல்லாம் துணிந்து மார்பைக் காட்டக்கூடிய தொண்டர்கள் தாம் எனக்குத் தேவை. திராவிடரின் மரபு மார்பைக் காட்டுவது என்பது தவிர, புறமுதுகு தருவதில்லை. இதை மறக்காமல் வைத்து—வைரம் பதித்த உள்ளம் படைத்த மக்கள்தாம் தேவை. நீங்கள் சிந்தித்து, எத்தனை பேர்கள் வருவீர்கள் என்பதை எனக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி வருகிறவர் எவ்வித பலாத்காரத்திற்கும், சமாதான பங்கத்திற்கும், குழப்பத்திற்கும் இடம் இன்றி அமைதியாக நடந்துகொள்ள வேண்டும்.

உங்களுக்குத் தலைவர்களாக வருகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சர்வாதி காரிகளாகத்தான் இருப்பார்கள். அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஒருவரும் தங்கள் இஷ்டம் போல் நடக்கக்கூடாது. நமக்குக் கட்டுப்பாடு தான் மிகவும் அவசியம். தலைவர்கள் சொல்லை மீறி நடக்கும் மனப்பான்மை கொண்ட வர்கள் போராட்டத்தில் இறங்கக் கூடாது. மேலும், 'நம்மவர்களால்தான் இந்தத் தொல்லை ஏற்பட்டது; நாம்தான் தவறு செய்தோம்' என்று மக்கள் பழி கூறும்படியாக நாம் நடந்து கொள்ளக் கூடாது. நம் நடத்தையைப் பார்த்துப் பொது மக்கள் பரிதாபப் படக்கூடிய விதத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தார் செய்யும் கொடுமைகள் அக்கிர மங்கள் தாம் பொது மக்கள் கண்களுக்குத் தெரியவேண்டும். அவ்வளவு கட்டுப்பாட்டுடனும், அமைதியுடனும் நாம் நடந்துகொண்டு, மக்கள் ஆதரவைப் பெறவேண்டும். வெளியில் ஒதுங்கி இருப்பவர்கள்கூட நமக்கு உதவி செய்ய முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

[சென்னையில், 2-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-7-1948]

தோழர்களே !

இந்தி நம் நாட்டுச் சீதோஷ்ணத்திற்குப் பொறுத்தமற்றது ; நம் நாக்குக்கு ஏற்க முடியாதது ; நமக்குத் தேவையற்றது. 'இந்தி, மனிதர்களை மந்திகளாக்கும்' என்று அன்பர் திரு. வி. க. அவர்கள் கூறினார்கள். அது உண்மையிலும் உண்மை. உண்மை யிலேயே இந்தி இராமாயணத்தில்தான்—அதாவது வடமொழி இராமாயணத்தில்தான் நாம் முதலாவதாகக் குரங்குகளாக ஆக்கப்பட்டிருக்கிறோம். அதைப் புகுத்துவதுதான் இந்தியின் தத்துவம். எனவேதான், அதை இவ்வளவு கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது.

மந்திரியார் நம்மவர் ஆயிற்றே என்று எவ்வளவு காலம் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியும் ? அதிலும் கல்வி இலாக்கா முடிவுகள் வரவர மிகமிகக் கேவலமாக ஆகிக்கொண்டு வருகின்றன. தோழர் சர். இலட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக்கூறியும் கல்வி மந்திரியார் அறிஞர்களைக் கொண்டு எதுவும் தீர்மானம் செய்வ தில்லை. சில சமயம் தன் இலாக்கா அதிகாரிகளுக்குக்கூடத் தெரியாமல் எதேச்சையாக—ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும், சில சமயம் கலாசாலை அதிகாரிகளுக்கும், மற்றும் கலாசாலை உபாத்தியாயர்களுக்கும்கூடக் கடிதம் எழுதிவிடுகிறாராம். இதன் பயனாய் ஊழல்கள் மிக மலிந்துவிட்டனவாம். ஆகவேதான், வாரத்துக்கொரு முறை 'பல்டி' அடிக்கவேண்டி இருக்கிறதாம்.

இந்த இந்தி போதனை விஷயத்தில், முதலில் நியமிக்கப்பட்ட கல்விமுறை நிர்மாணக் கமிட்டியார்—'தமிழ் நாட்டில், இந்தி விருப்பப் பாடமாக இருக்கட்டும்' என்று சிபாரிசு செய்தார்களாம். அதன்படிதான் முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். பிறகு சிலரின் தூண்டுதலின் பேரில் அதே கமிட்டியில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டு மென்பதற்கு ஆதரவாயிருந்த ஒரு சிலரை மட்டும் கொண்டு, மறுபடியும் தந்திரமாக ஒரு கிளைக் கமிட்டியை ஏற்படுத்தி, இந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம். அதுவும், முன்னையக் கமிட்டியார்—எந்த ஒரு மாணவனோ, மாணவியோ இந்தியைப் படிக்க இஷ்டப்படாவிட்டால் அவர்கள்மீது ஆசிரியரோ, பெற்றோரோகூட வற்புறுத்தக்கூடாது என்று தெரிவித்திருந்தார்களாம். இரண்டாவதாக நியமிக்கப்பட்ட சப்-கமிட்டியாரால் அவ்வளவும் உதாசீனம் செய்யப்பட்டு விட்டது.

ஆகவே தோழர்களே ! நாம் இவ்வளவு கேடு செய்யத் துணிந்தவர்களோடு ஒரு போராட்டம் நடத்துவதென்றால் அது வெறும் விளையாட்டுப் போராட்டமாக இருக்காது. பிறகு தீர்மானங்கள் வரும். முறைப்படி நிறைவேற்றப்படும். தீர்மானங்களை நிறை வேற்றுவது பெரிதல்ல. அவற்றை முறைப்படி நடத்திக் காட்டுவதுதான் பெரிது.

முன் இந்தி நம் மாகாணத்தில் நுழைக்கப் பட்டபோது ஆட்சிப் பீடத்தில் அமர்ந் திருந்தவர்கள் வெள்ளையர்கள். அவர்கள் ஒரு நாகரிகப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ; மனிதத் தன்மையை அறிந்தவர்கள் ; மேலும், உலக வாக்குக்குப் பயந்தவர்கள். ஆனால், இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோ நாகரிகம் தெரியாதவர்கள் மட்டுமல்லர் ; தாமே நாகரிகத்தின் பிரதிபிம்பங்கள் என்றுகூடத் தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள்.

காடுகளில் ஆடு மாடுகளைக் கொன்று தின்று வாழ்ந்துவந்த ஆரிய காட்டுமிராண்டிப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், இன்று நம்மை ஆட்சி புரிபவர்கள் ; தன்மான மற்றவர்கள். தந்திரத்தால்—கட்டுப்பாடான பலாத்காரத்தால் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள். ஆகவே, வெள்ளையன், 'ஆள் கீழே விழுகிறவரை அடியுங்கள்' என்று போலீசுக்கு உத்தரவு கொடுத்தால்—இவர்கள் 'செத்துப் பிணமாகும்வரை அடியுங்கள்' என்று உத்தரவிடுவார்கள். அவன், 'இவர், அவர் என்று பாரபட்சம் பாராமல் அடியுங்கள்' என்றால் – இவர்கள், 'இன்னார், இன்னாரைப் பார்த்துப் பார்த்து அடியுங்கள்' என்று உத்தரவு போடுவார்கள். அவன், 'கண்ணீர்ப் புகை மட்டும் உபயோகியுங்கள்' என்று கூறுவானானால், இவர்கள் 'கண்ணீர்ப் புகை ஏன் – விஷப் புகை விட்டே கொல்லுங்கள்' என்று உத்தரவு பிறப்பிப்

பார்கள். அந்தமாதிரிக் காட்டுமிராண்டிச் செயலால்தான் மக்களை அடக்கமுடியும் என்பதில் நம்பிக்கை உடையவர்கள் இவர்கள். ஆகவே, எத்தகைய எதிர்ப்புக்கும் நாம் தயாராய் இருக்கவேண்டும். இங்குள்ள திராவிடப் போலீஸ்காரர்களைக்கூட நம்ப மாட்டார்கள். மலையாளத்திலிருந்தோ, கூர்ஜரத்திலிருந்தோ, பட்டாளத்தைத் தருவித்து வந்து நம்மீது ஏவிவிடுவார்கள். ஏற்கனவேகூட 2000 பேரை சென்னைக்குத் தருவித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பயங்கர நிலையில்தான் இந்தி எதிர்ப்பு நடைபெற வேண்டும்.

சென்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இரண்டு பேர் ஜெயிலில் இறந்தார்கள் என்றால், இன்றையப் போராட்டத்தில் 200 பேருக்கு மேலாக வெளியிலேயே இறக்க நேரிடக்கூடும். இதை நீங்கள் நம்பவேண்டும். சற்றேனும் மனிதத் தன்மையோடு நீங்கள் வாழவேண்டுமென்று நினைப்பீர்களானால், இந்தியை ஒழிக்க நீங்கள் கட்டாயம் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும். தாய்மார்களும் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும். இது கடைசிப் போராட்டம்—வெற்றி அல்லது தோல்வி, இரண்டிலொன்று பார்த்துவிடத்தான் வேண்டும். பண்டைப் பெருமை பேசிப் பயனில்லை. அழகான மேடைப் பேச்சினாலோ, பண்டைச் சரித்திரப் பெருமையினாலோ பயனில்லை. தோழர் அண்ணாதுரை, 'நானும் வந்து விட்டேன், போராட்டத்தில் முன் நிற்க' என்று சற்றுமுன் கூறியதுபோல்—நீங்கள் எல்லோரும், இத் திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுவனும் சிறுமியும் முன்வர வேண்டும். நான் ஒன்றும் உங்களுக்குப் பூச்சிகாட்டவில்லை. உண்மையைத் தான் கூறுகிறேன். நினைத்தால் இன்று இரவேகூட உத்தரவை மாற்றிவிடலாம் என்கிற நிலையில் இல்லை அது; அந்த உரிமை இவர்கள் கையிலில்லை. அவ்வுரிமை இவர்களின் சூத்திரதாரிகளான பார்ப்பனர்களிடம் இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவோ, வடநாட்டாரிடம் இருக்கிறது. அந்த இருவரும் சேர்ந்து நம் மந்திரிகளை ஒழிக்கும்வரை தூங்க மாட்டார்கள். ஆகவே, வடநாட்டவர்களின் ஆதிக்கம், பிணைப்பு நம் மாகாணத்தை விட்டு ஒழிந்தால்தான் இந்தியும் நம் மாகாணத்தை விட்டு ஒழியும் என்பதை மனத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். பிறகு தெரியும் இந்தி ஒழிவதில் உள்ள சிரமம். நமது குழந்தைகளுக்கு 1-வது வகுப்பு, 2-வது வகுப்புப் படிக்கக்கூடப் பள்ளியில் இடமில்லை என்று நகர்ப் புறங்களில் கூறப்படுகிறது. அதாவது, போதிய பள்ளிக்கூடங்கள் இல்லை; வாத்தியார்கள் இல்லை. என்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இந்தி வகுப்பும், இந்தி வாத்தியாரும் வைத்துக்கொள்ள வேண்டுமாம். யார் அப்பன் வீட்டுப் பணம் கொள்ளை போவது இதற்கெல்லாம்? ஏற்கனவே பஞ்சத்தில் அடிபட்டுப் பஞ்சைகளாகக் கிடக்கிறோம். மேற்கொண்டு பள்ளிக்கூடப் பிள்ளைகள் சம்பள உயர்வு வேறு. ரூ. 2-12-0 கொடுத்தவர்கள் ரூ. 5-4-0 கொடுக்கவேண்டும். ரூ. 5-4-0 கொடுத்தவர்கள், ரூ. 7-8-0 கொடுக்கவேண்டும். முன்பு 8 மாதச் சம்பளம் கொடுத்தவர்கள் இப்போது இந்த உயர்ந்த தொகையை 10 மாதம் கொடுக்கவேண்டும். இந்தி நுழைவு கல்வித்துறையில் பெருத்த சங்கடமென்றால் கலைத் துறையிலும் அதைவிடச் சங்கடந்தான்.

இந்தியில் மெச்சத் தகுந்த கலைகளே கிடையாது. அதிலுள்ள கலைகள் யாவும் துளசிதாஸ் இராமாயணமும், கபீர்தாஸ் சரித்திரமுந்தாம்; மனுதர்மமும், பாகவதமும்தாம். போதுமா இவை? இவற்றின் தன்மைதான் தெரியுமே உங்களுக்கு? இந்தி மொழி தலை சிறந்த அறிஞர்களைப் பெற்றெடுக்கவில்லை என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டார். இந்தி உற்பத்திசெய்த அறிவாளிகள் யார் என்றால் நேரகாமல் பதவிக்கு வந்த நேருவையும், அவருடைய அய்யாவையுந்தான் குறிப்பிடவேண்டும். அவர்களது தியாகம்–இன்று அந்தக் கூட்டம் குடும்பத்தோடு கொள்ளையடிப்பது (உங்களுக்குத் தெரிந்ததுதான்); வேறு ஆட்களைக் குறிப்பிட முடியாது. தமிழ் மொழியோ எண்ணற்ற கலைகளையும், கலைஞர்களையும் அறிஞர்களையும் சித்தர்களையும் முத்தர்களையும் தோற்றுவித்திருக்கிறது.

இந்தியில் கலை இல்லை; காவியம் இல்லை; நீதிநூல் இல்லை. அம்மொழி மூலம் அறியக் கிடக்கும் விஞ்ஞானத் தத்துவங்களும் இல்லை. ஆகவே 100-க்கு 97 பேர் விரும்பாத அம்மொழி—ஏன் இங்குப் புகுத்தப்படவேண்டும்? காரணம் தெரியுமா? இங்குள்ள பார்ப்பன கோஷ்டியார் இத் திராவிட நாட்டின் கலைகளையும் கலாசாரத்தையும் அடியோடு அழித்து இந்நாட்டை வடநாட்டுக்கு வால்நாடாக்கப் பார்க்கிறார்கள். அதுதான் மர்மமே ஒழிய 'இந்தி தேசிய மொழி; ஆகவே, எல்லோரும் படிக்கவேண்டும்' என்று கூறுவதெல்லாம் பித்தலாட்ட வார்த்தைகள். இந்தி தேசிய மொழியாயின் எல்லோரும் கட்டாயமாக இந்தியைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்று வெளிப்படையாகக் கண்டிப்பாகக் கூறிவிடட்டுமே! இந்தி அல்லது சமஸ்கிருதம் படியுங்கள் என்கிறார்களே, அது ஏன்? இந்தி தேசியமொழியா? அல்லது சமஸ்கிருதம் தேசிய மொழியா? நீங்கள் சற்று அருள்கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்!

தேசியம் என்பது பித்தலாட்டம்; வடமொழியை நுழைத்து, அதன்மூலம் வருணாசிரமத்தை நுழைத்து, பெருமை மிக்க திராவிடமக்களைச் சூத்திரர்களாக்கி என்றென்றும் அடிமைகளாக ஆக்கிவைத்துக் கொள்ளப் பார்ப்பனக் 'கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம்தான் இது. நமது தாய்மார்களைச் சூத்திரச்சிகளாக—நமது ஆடவர்களைச் சூத்திரர்களாக—நமது பழங்குடி மக்களைப் பஞ்சமர்களாக, சண்டாளர்களாகவும்; நமது கிறிஸ்தவத் தோழர்களையும், முஸ்லிம் தோழர்களையும் மிலேச்சர்களாக வைத்திருக்கச் செய்யப்படும் சூழ்ச்சிதான் இது. இந்தச் சூழ்ச்சிகளுக்கு நமது அமைச்சர்கள் விபீஷணர்களாகிவிட்டார்களே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. இந்தி நுழைவால் உண்மைத் தமிழ்மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படாது. கடுகளவு பயன்கூட ஏற்படாது. அதற்கு மாறாக எவ்வளவோ கேடுகள் வந்து சூழும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் போற்றிக் காப்பாற்றிவந்து, கடைசி காலத்தில் கைவிட்டுத் தற்போது வெகு கஷ்டப்பட்டுப் பெற்று வளர்த்துவரும் தமிழ்ப் பண்பு—அடியோடு கெட்டுப் போகும்.

கன்னிகாதானம் என்பதை வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்று மாற்ற எவ்வளவு சிரமப்பட இருந்தது? மாங்கல்ய தாரணம் என்பதை ஒழிக்க எவ்வளவு இம்சைப்படவேண்டி இருந்தது? மற்றும், தேவை இல்லாத சடங்குகளை, புராண இதிகாசக் குப்பைகளின் மீதும், வெறும் கற் கடவுள், செம்புக் கடவுள் இவற்றின்மீதும் இருந்த மூடநம்பிக்கையையும், மூடபக்தியையும் மாற்ற எவ்வளவு காலம் ஆகியது? இவ்வளவு முற்போக்கும் மறுபடியும் அழிந்து போகவேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுவீர்களா?

சூத்திரன் என்ற வார்த்தையைக் கைவிட்டு 'திராவிடன்' என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் நீங்கள், மறுபடி சூத்திரனாக மாற விருப்பம் கொள்வீர்களா? இந்த முற்போக்கைக் கண்டு அஞ்சும் பார்ப்பனக் கூட்டம் வடநாட்டாரின் கூலிகளாகி, அவர்களுக்கு வால்பிடித்து நம்மவர் சிலரை விபீஷணர்களாக்கிக் கொண்டு, தேசியமொழி என்ற பேரால் நம்மீது வடமொழியைச் சுமத்துகிறது என்றால்—நம்மை, நம் நாட்டை வடநாட்டாருக்குக் காட்டிக்கொடுக்கிறதென்றால் நாம் அதற்கு இடங் கொடுக்கலாமா?

தோழர்களே! தாய்மார்களே! இந்தியோடு, வடநாட்டாரையும் சேர்த்து ஒழிக்க வேண்டியதுதான்; அதற்கான அவசியம் ஏற்பட்டுவிட்டது. திராவிடர்—ஆரியர் போராட்டம் —அதுவும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இடையறாது இருந்துவரும் இப் போராட்டம், இன்று ஒரு முடிவான கட்டத்திற்கு வந்துவிட்டது. இதை முடித்து வைப்பது நமக்குப் பெருமையுங்கூட. நமது பின் சந்ததியார் போற்றிப் புகழக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தில் நாம் இன்று இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன் படுத்திக்கொள்ளாவிட்டால் நாம் எதிர்காலத்தில் பின்சந்ததியாரால் எள்ளி நகையாடப் படுவோம் என்பதோடு, அவர்களின் துன்பத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் நாமே காரண பூதர்களாகவும் ஆடுவிடுவோம்.

போராட்டத்தைத் துவக்குவோம்; மானமுள்ள மக்களாகப் போராடுவோம்; மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறில்லை. பின்சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி நாம் விட்டுச்செல்லும் பணியைப் பூர்த்திக்குக் கொண்டுவருவார்கள். திராவிடர்கள் மானத்திற்கும், வீரத்திற்கும் பேர் பெற்றவர்கள். ஆகவே, இவற்றைக் கைவிடாதீர்கள். குண்டுபட்டு இறந்தீர்கள் என்றாலும், குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும்! முதுகில் பாயும்படி நடந்துகொள்ளாதீர்கள்! என்றாயினும் ஒருநாள் சாகப்போகிறவர்கள்தான் நாம். ஆகவே, நல்ல காரியத்திற்காக நம் உயிரை நல்ல முறையில் அர்ப்பணித்துச் சாவோம். மந்திரிகள் நம்மவராயிற்றே என்ற நினைப்பை மறந்துவிடுங்கள். நம்மவர்கள் மந்திரிப் பதவியை இழக்க நேரிடுமே என்ற பயத்தையும் விட்டொழியுங்கள். ஒரு ஓமாந்தூராரின் இடமோ, ஒரு அவிநாசியாரின் இடமோ காலியானால் அந்த இடத்தைப் பார்ப்பனர்களைக்கொண்டு அடைக்க முடியும் என்று நினைக்காதீர்கள். தமிழ்நாடு இன்றுள்ள நிலையில் அது சுலபத்தில் சாத்தியமானதல்ல. ஆகவே, இந்தியை ஒழித்துக் கட்டுவதில் நாம் யாவரும் ஒன்றுபடவேண்டும்.

இதில் நம் இளைஞர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பேத உணர்ச்சி ஏற்படக் கூடாது. இந்தி படித்தல் தம் மக்களுக்குக் கேடு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து அதை ஒழிக்க முன்வரவேண்டும். நம்மிடையே உள்ள பேத உணர்ச்சிகளை விட்டொழிக்க வேண்டும். சின்னஞ்சிறு குற்றங்களை மறந்து நேரடியாகப் போராட்டத்தில் வந்து ஒவ்வொருவரும் கலந்துகொள்ள வேண்டும். இப்போது நடக்கப்போவதுதான் உண்மையான ஆரிய–திராவிடப் போராட்டம்; நம் மானத்தைப் பணயம் வைத்து நடத்தும் போராட்டம். இதில் ஏமாந்துபோனால் பிறகு திராவிடர்களாக இந்நாட்டில் வாழமுடியாது; கண்டிப்பாக, சூத்திரனாகத்தான் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

சர்க்காருக்கு நல்ல வீம்பு வந்திருக்கிறது. ஆகவே, எளிதில் நமக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆகவேதான், திரும்பத் திரும்பப் போராட்டத்தினிடையே அனுபவிக்க வேண்டியிருக்கக்கூடிய கஷ்டநஷ்டங்களைப்பற்றிக் கூறவேண்டி இருக்கிறது. நம்மை அடிப்பார்கள்; நம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள்; நமது தாய்மார்களை மான பங்கப் படுத்துவார்கள்; வடநாட்டுப் பட்டாளத்தைக் கொண்டுவந்து நமது பெண்கள்மீது ஏவி விடுவார்கள்; வீடு புகுந்து கொள்ளையடிக்கச் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலை கட்டாயம் வரும். அந் நிலையை எப்படியும் ஆட்சியாளர்கள் வரவழைத்துக் கொள்வார்கள். நமது நாட்டுச் சுதந்திரமும், தனிமையும் இந்தப் போராட்டத்தின் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

நமது பிரிவினை உணர்ச்சியை அழிக்கத்தான் அவசர அவசரமாக இந்தியைக் கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இது எல்லோரும் ஒன்றுசேரக் கூடிய நல்வாய்ப்பாக இருக்கிறது. மற்ற காரியங்களில் நாமெல்லாம் சுலபத்தில் ஒன்றுசேர முடியாது. இது மொழிப் போராட்டம் மட்டும் இல்லை; கலைப் போராட்டம்; கலாசாரப் போராட்டம் என்று கூடச் சொல்வேன். இது உரிமை வேட்கைப் போராட்டம் ஆகும். இப் போராட்டத்தின் போது எந்த ஒரு திராவிடனாலும்–எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தூங்கிக்கொண்டிருக்க முடியாது. இதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். சில நாட்களுக்கு—மாணவர்களுக்குப் படிப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று, நம் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் இருக்கவேண்டியதுதான். மாணவர்களானால் மட்டுமென்ன? அவர்களுக்கும் மனிதத் தன்மை வேண்டாமா? தன்மானம் வேண்டாமா? ஏழை மக்களிடம் இருந்து வரிப் பணம் வாங்கி அதை இந்திச் சனியனுக்கா அழவேண்டும்? இந்த அமைச்சர்களுக்கு எந்த அளவுக்கு மூளை இருக்கிறதென்று பாருங்கள்! ஒரு குழந்தையை 6 வயதில் அல்லது 7 வயதில் பள்ளியில் சேர்க்கிறோம். 12 வயதில் 5 வகுப்பு முடிக்கிறது. 19 வயதில் 6-ம் பாரம் முடிகிறது. அப்புறம் கல்லூரிப் படிப்பு 4 வருடம்; ஆக, 23 அல்லது 24 வயதில்தான் அவன் பி.ஏ. பட்டம் பெற முடிகிறது. இதற்குள்ளாக

திராவிடத் தந்தை

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு

முதுபெரும் தமிழ்ப் புரவலர்,

நாவலர் ச. சோ. பாரதியார் அவர்கள்

அனுப்பிய உறுதிமொழி.



Pasumalai
28-6-48

[illegible]

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தலைமையில் 'இந்தி'யை எதிர்த்துப் போரிடுவதாக நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் உறுதி கூறி எழுதிய கடிதம்

எவ்வளவு பணம் வீணாக்கப்படுவது? இந்தப் படிப்பால் பெறக்கூடிய பயன்தான் என்ன? இவ்வளவு காலச் செலவையும் பொருட் செலவையும் குறைக்க மந்திரியார் ஏதாவது திட்டம் தீட்டினாரா? அதிகப்படியான ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துதல், ஏழை எளியவர்கள் படிப்பதற்கான இலவசப் பள்ளிகள் ஏற்படுத்துதல், கிராமந்தோறும் பாடசாலை இருக்கும்படிச் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதை விட்டு – ஒன்றுக்கும் உருப்படாத இந்த இந்தி மொழியை ஏன் கட்டியழத் துணிந்துவிட்டார்? காரணம் இதுதான்! பிரிவினை உணர்ச்சி தலை தூக்குமுன் அதை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள தன்மான உணர்ச்சி தலை தூக்குமுன் அதை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும்; அவர்களை அடிமைகளாக்க வேண்டும் என்ற வடநாட்டாரின் திட்டத்திற்கு அடிபணிந்துவிட்டதுதான்.

ஆகவே, நாமாக வம்புக்குப் போகவில்லை; வம்பை வரவழைத்துக்கொள்பவர் அரசியலார்தாம். மறுபடியும் கூறுகிறேன்: இது அரசியல் போராட்டமல்ல; இனப் போராட்டம்; மனிதத் தன்மைப் பாதுகாப்புப் போராட்டம் என்று. தென்னாட்டவரின் மனிதத் தன்மையை அழித்து இதையும் ஆரிய வர்க்கத்தோடு சேர்த்துக்கொள்ளச் செய்யப்படும் சூழ்ச்சியின் முதல்படிதான்—கட்டாய இந்தி நுழைப்பு. ஆகவே, நாம் இதை எதிர்த்துத்தான் ஆகவேண்டும். ஒருவேளை ஆந்திரர்கள் ஆரிய வர்க்கத்தில் சேர்ந்துவிடுவார்களோ என்றுகூட நினைக்கவேண்டியிருக்கிறது. எவ்வகையாயினும் இதை எதிர்த்துப் போராடியே தீருவோம். இப் போராட்டம், தென்னாட்டுச் சரித்திரத்தில், திராவிடநாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய மகோன்னதப் போராட்டமாக அமையும். இப் போராட்டத்தில் வெற்றியின்றேல் தமிழ்நாடு போம்; தமிழ்க்கொடி போம்; தமிழன் சிறப்பெல்லாம் தகர்ந்து போம். நியாயம் நமது பக்கத்தில்தான் இருக்கிறது. தமிழ் காக்க வாரீர்! எங்களுக்கும் வயதாகி விட்டது! நாங்களும் வெற்றி காண ஆசைப்படுகிறோம். ஆகவே, தன்மானத் திராவிடர்காள்! தமிழர்காள்! வெற்றி காணப் போராட்டத்தில் ஈடுபட முன்வாருங்கள். யார் எந்தக் கட்சியில் இருந்தாலும் தன்மானமிருந்தால், தமிழ் காக்க முன்வாருங்கள். 'சாவேன் அல்லது வெற்றியோடு மீள்வேன்' என்ற உறுதியோடு முன் வாருங்கள்! போராட்டத்தில் வெற்றிக்காக ஒழிந்துபடவும் தயாராக முடிவு செய்துகொண்டு முன் வாருங்கள். அப்போதுதான் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

[சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில், 17-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-7-1948]

3. இரண்டாம் போர்

1. நமது போர் முறை

இந்தி எதிர்ப்பு என்பது ஒரு மாபெரும் போராட்டமாகும். அதுவும் சர்வ வல்லமையும், சர்வ வசதியும் உள்ள (அதாவது, ஒரு மாபெரும் கட்டுப்பாடான சுயநல பதவிப் பித்துக் கோஷ்டி) சர்க்காருடன் நிர்க்கதியான—மதம், சமுதாயம், சுதந்திரம், சுயராஜ்யம் என்னும் பேரால் ஏமாற்றப்பட்டு மான உணர்ச்சியையும், மனிதத் தன்மையையும் அடியோடு அற்றுப் போகும்படி செய்யப்பட்டு, தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து, எதிரிக்குத் தஞ்சமாவதின் மூலம்தான் மனிதனாக வாழமுடியுமே தவிர, மற்ற வழிகளில் வாழமுடியாத மாதிரி ஆக்கப்பட்டு, பலப்பல விபீஷணர்களைக் கொண்ட ஒரு நிர்க்கதியான மக்கள் நடத்தும் போராட்டமாகும்.

இதில் நாம் துன்பப்படுவது, நசுக்கப்படுவது, நட்டப்படுவது, உடல்-பொருள்-ஆவி இழக்கப்படுவது என்பதல்லாமல் 'எதிரி'க்குச் சிறிதும், 'சரீரக் கஷ்டம், தொந்தரவு

தொல்லை' கொடுக்காத போர் ஆகும். மற்ற யுத்தங்களுக்குச் செல்பவர்களும் தங்கள் உயிரைக் கொடுக்கத் துணிந்துதான் செல்லுகிறார்கள் என்றாலும், அவர்களுக்கு எதிரியைக் கொல்லுவது என்கின்ற எண்ணமும், அதுவே, முக்கிய இலட்சியமும் ஆகும். ஆனால், நமது போராட்டம் அப்படியல்ல. 'எதிரி'க்குச் சிறிதும் தொந்தரவு கொடுக்காமல் நமது உயிரைக் கொடுக்கவே நாம் யுத்தத்திற்குச் செல்கிறோம். அதனால், இந்த யுத்தத்தில் ஈடுபடும் மக்கள் ஒரு நல்ல யுத்தவீரன் எப்படித் தன் உயிருக்குத் துணிந்து உற்சாகமாக இறங்குகிறானோ அதுபோலவும், யுத்தவீரன் எப்படி எதிரியைக் கொல்லலாம் என்று கருது கிறானோ அந்தப்படிச் சிறிதுகூடக் கருதாமலும் நாம் உயிர் விடுவதன்மூலமே எதிரியை வெற்றிகொள்ளலாம் என்ற கருத்துடன் வரவேண்டும். அதாவது, எல்லாத் தொண்டர்களும் திருப்பூர் குமரனைப்போல்—சர்க்காரால், போலீஸாரால் அடிபட்டுச் செத்தான் என்று ஆகவேண்டுமேயொழிய, ஆகஸ்ட் தனத்தாலோ—ஆகஸ்ட் தனத்தில் வெற்றிபெற்ற காசி ராஜன் – ராஜகோபாலன்கள் போலவோ ஆகக்கூடாது; கண்டிப்பாக ஆகக்கூடாது.

காங்கிரஸ்காரர்கள் செய்த போராட்டம் கொள்ளை அடிக்க, கொடுங்கோல்—ஒழுக்க மற்ற ஆட்சி நடத்தச் செய்யப்பட்டதாய் முடிந்தது; நாம் போராடுவது மனிதத் தன்மை பெற, மானம் பெற, நம் பல்லாயிரக்கணக்கான மக்களின் இழிவை நீக்கிக்கொள்ளவே ஆகும். காங்கிரஸ் போராட்டம், தனிப்பட்ட மனிதனின் பித்தலாட்ட வாழ்வுக்கு; ஆனால், நமது போராட்டம்—பல கோடி மக்களின் மனிதத்தன்மை வாழ்வுக்கு ஆகும். இதைத் தொண்டர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தில் ஒரு காரியத்தில்கூட, (ஆரியர்கள்) காங்கிரஸ்காரர்கள் நடத்திய தன்மையை எண்ணத்தில், மனத்தில் கொள்ளக்கூடாது. திராவிடர் கழகம் இந்தப் பத்து ஆண்டுகளாக நடந்து வந்த தன்மையை, போதித்து வந்த நடத்தையை மனத்தில், பேச்சில், செயலில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரன் அல்லது காங்கிரஸ் சர்க்கார் அல்லது காங்கிரஸ் சர்க்கார் சிப்பந்தி நம்மைக் கொடுமைப்படுத்துவது தனது வாழ்வுக்கு அல்லது வயிற்றுப் பிழைப்புக்கு ஆதலால்—அவர்களுக்குப் பல அட்டூழியம் செய்ய உரிமை உண்டு; நாம், அட்டூழியத்தால்—யோக்கியக் குறைவால் வாழவேண்டுமென்று கருதினால் அந்தக் கோஷ்டியில் சேர்ந்து அவர்களைவிட உயர்ந்த அல்லது அவர்களைப்போன்ற வாழ்வு வாழலாம். ஆனால், நாம் உலகுக்கு உண்மை ஒழுக்கத்தை—ஒழுக்கப் போராட்டத்தின் மூலம் ஒரு மனிதன் வாழமுடியும், வெற்றிபெற முடியும் என்பதை எடுத்துக்காட்டப் போராட்டம் நடத்துகிறோம்; நாம் வெற்றி பெற்றே தீருவோம். 'காங்கிரஸ் தனம்' அல்லது 'ஆகஸ்ட் தனம்' என்பது தோல்வியடைந்தே தீரும்; அடைந்தே வருகிறது. எனக்குத் 'தெய்வீகம்' என்பதில் நம்பிக்கை கிடையாது; ஞானத்தில், அறிவில், சத்தி யத்தில் நம்பிக்கை உண்டு. இது மூட நம்பிக்கை இல்லை; அல்லது நம்பித்தான் தீர வேண்டும் என்பதன்பாற்பட்டதல்ல. பிரத்யட்ச அனுபவத்தில் அனுபவித்து வருபவன்; பிறத்தியாருக்கும் மெய்ப்பித்துக் காட்டுகிறவன். ஆதலால், நான் மூடநம்பிக்கையில்—மகாத்மா தன்மையில் இதைப் பேசவில்லை; சத்திய நீதியில் பேசுகிறேன். எப்படி என்றால், இது நம்நாடு; இங்கு வடநாட்டான் ஆதிக்கம் செலுத்துகிறான்; சுரண்டுகிறான். நாம் இந்நாட்டு மக்கள்; நாம் இந் நாட்டு மன்னர் சந்ததிகள்; நம்மீது ஆரியன் ஆதிக்கங் கொண்டான். பிச்சைக்குப் புகுந்த ஆரியனுக்குப் பிறவியடிமையாயிருக்கிறோம், நாம். தமிழ், நம்நாட்டு மொழி; இன மொழி; இந் நாட்டுக் கலாசாரத்துக்கு ஏற்றமொழி. வட மொழி–அன்னிய மொழியின் ஆதிக்கத்தில் நம் மனிதத் தன்மானம், உரிமை பாழாக்கப் பட்டிருக்கின்றன. இதற்கு நம் உடன் பிறந்தவர்கள் விபீஷணர்களானது உண்மையில் மகா மகா இழிவு என்பது சத்தியம். இவைகள்தாம் சத்தியமும், நீதியும் ஆகும் என்கிறேன்.

இவை தோல்வியுறாது! தோல்வியுறாது! தோல்வியுற்றால்தான் நட்டம் என்ன? அந்தத் தோல்வியை நாம் கண்டிப்பாய் அனுபவிக்கமாட்டோம். நம்மைத் தோற்கடித்தவர்

களும், தோல்வியைக் கண்டு சும்மா இருப்பவர்களும், தோல்வியைச் சகித்துக்கொண்டு உயிர்வாழ்பவர்களுமேயாவார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆதலால், தொண்டர்களே! போராட்டத்தில் சிறிதும் நிலை தவறி விடாதீர்கள்.

['விடுதலை'-அறிக்கை—8-8-1948]

2. வாழ்வு அல்லது சாவு

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகத்தைப் போன்ற அபூர்வமான இயக்கம் வேறெங்கும் இருக்க முடியாது.

அதாவது, பதவிக்கு வரவேண்டுமென்ற எண்ணமோ, தேர்தலுக்கு நிற்கவேண்டிய அவசியமோ, அதற்கான திட்டமோ சிறிதுமின்றி—யார், எந்த எதிர்க்கட்சி ஆட்சி புரிந்தாலும் அவர்களை நாணயமாகவும், மக்களின் நலனுக்காகவுமான வகையில் தொண்டாற்றச் செய்வதும்; அவர்களிடத்தில் நிபந்தனைப்படுத்தி அவ் வேலைகளை வாங்குவதும் திராவிடர் கழகத்தின் முக்கிய தொண்டாகும்.

எனவேதான், நாங்கள் கூட்டம் போடுவதோ அன்றிக் கிளர்ச்சி செய்வதோ, ஓட்டுப் பெறுவதற்காக அல்லது அதிகாரபீடத்தில் அமருவதற்காகச் செய்யப்படும் அரசியல் முன்னேற்பாடுகள் என்று எவரும் கருதக்கூடாது. இன்னும் கூறுவேன்—நாங்கள் எந்தக் குறிப்பிட்ட சாதியினருக்கோ, கட்சியினருக்கோ, விரோதிகளல்லர். 'எல்லோரையும்விட நாங்கள்தாம் உயர் பிறவி' என்னும் பார்ப்பனர்களுக்கும்கூட நாங்கள் எதிரிகளல்லர்; அவர்கள் பாடுபடாமல் உயர் வாழ்வு வாழ்கிறார்கள் என்று அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்பதும் எங்கள் கொள்கையல்ல; அல்லது அவர்களுக்கு மேலாக நாம் உயர்ந்து விடவேண்டும்—அவர்களை நமக்குக் கீழானவர்களாக ஆக்கிவிடவேண்டும் என்பதற் காகவும் நாம், நமது கழகம் எண்ணுவதில்லை.

ஆனால், பார்ப்பனர்கள் நமக்கு மேலானவர்கள் என்ற எண்ணம் நாட்டிலும், நடைமுறையிலும் இருத்தல் கூடாது; எல்லோரும் சரிநிகர் சமானமாயிருத்தல் வேண்டும் என்பதுதான் நமது சமுதாயத் தொண்டு. அதேபோல்தான், வடநாட்டவர்களும் நமக்கு எதிரி என்று எண்ணுவதில்லை. அவர்கள் நம் நாட்டைச் சுரண்டிக்கொண்டு போதல் கூடாது; நாமும் அவர்கள் நாட்டைச் சுரண்டிக்கொண்டுவர வேண்டுமென்று எண்ணப் போவதில்லை. அதுபோலவே, வடநாட்டான் இந்தியாவை ஆளக்கூடாது என்பது நம் கருத்தல்ல; வடநாட்டான் திராவிட நாட்டை ஆளக்கூடாது—எந்த நாட்டவருக்கும், இனத்த வருக்கும் நாம் அடிமையல்ல; நம்மை நாமே ஆள வேண்டும்; நம் செல்வம் நம்மிடமே இருக்கவேண்டும் என்பதைத் தவிர யாருக்கும் எவ்விதத்திலும் நாம் எதிரிகளல்லர் என்ப தோடு, அவர்களும் அதற்கேற்ப நடக்க வேண்டுமென்பதே நமது இயக்கக் கொள்கையாகும். இதையறிந்து கொள்ளச் சக்தியற்ற சிலரும், ஏன் ஆட்சியாளர்கள்கூட நம்மை வகுப்பு வாதிகள், பார்ப்பன—பனியா எதிரிகள் என்று கூறுகின்றனர்.

பார்ப்பனனுக்கும், பனியாவுக்கும் தனிப்பட்ட விரோதத்திற்காக நமது இயக்கம் நடத்தப்படுகிறதென்று இன்னும் எண்ணிக் கொண்டிருப்பவர்களைப் பைத்தியக்காரர்கள் என்றே கூறுவேன். ஆனால், பார்ப்பனீயமும், 'பனியாயிஸமும்' திராவிடத்தை எவ்விதத் திலும் தாழ்த்துவதை, வீழ்த்துவதை இனி ஒரு விநாடியும் அனுமதிக்க முடியாது. இவ் விரண்டு பிற்போக்குச் சக்திகளுக்கு அரசியலாரின் பாதுகாப்பு என்னதான் பலமாயிருந் தாலும், அதற்காக நானோ, நமது இயக்கமோ அஞ்சப் போவதில்லை.

நம் மாகாணத்தைப் பொறுத்தவரை கூற வேண்டுமானால், ஆட்சியாளருக்குத் திறமையே கிடையாது. அதற்காக நாமோ, நமது இயக்கமோ, அவர்களுக்குத் தொந்தரவு

கொடுத்தலும் கிடையாது. அவர்கள் தேர்தலுக்கு நின்றபோது நாம் போட்டியிடவில்லை. நம்மை ஜெயித்து விட்டு ஓட்டுப் பெற்றார்களென்றோ, அல்லது அவர்களை எதிர்த்து நாம் தோல்வியடைந்தோம் என்றோ கூறுவதற்கில்லாமல்—அவர்களுக்கு நமது இயக்கத்தால் சிறு தொல்லைகூட ஏற்படக் கூடாதென்று கருதியே நாம் தேர்தலில் தலைகாட்டவில்லை. அதற் கேற்றதைப் போல் அவர்கள் ஒழுங்காகக் காரியங்களைச் செய்ய வேண்டுவது முக்கிய கடமையல்லவா? அவ்விதம் செய்யாத போது அதை எடுத்துக் காட்டவும்—எடுத்துக் காட்டியும் அவர்கள் கேட்காவிடில் எதிர்க்கவும் இந் நாட்டுக்குரிய மக்களுக்கு—அவர்கள் ஓட்டர்களாயில்லாவிட்டாலும்–இவர்களுக்கு ஓட்டுப் போடாதவர்களானாலும் உரிமையுண்டு; இவர்களைக் கவிழ்ப்பது நோக்கமல்ல. எனவே, திராவிடர் கழகத்தார் அரசியலாரைத் தட்டிக் கேட்கிறார்களென்றால் ஆட்சிப் பீடத்தைக் கவிழ்ப்பதற்கோ, எதிர்த்துத் தொல்லை கொடுப்பதற்கோ அல்ல. அவர்கள் வரி கொடுப்பவர்கள்; இந்நாட்டுக் குடிகள் ஆனதால் ஆட்சியாளரைத் தவறுகளிலிருந்து திருத்த உரிமையுடையவர்கள் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடந்த 10 நாட்களாக சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடைபெற்று வருகிறது. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையென்றாலும் இந்நிலை இன்னும் நீடிக்காது; நாளையோ, அதற்கடுத்த நாளோ சிலர் கைது செய்யப்படலாம். கனம் ஆச்சாரியார் நம் நாட்டில் பவனிவரப் போகிறார்; அவரின் வருகையை நாம் மனமார எதிர்க்கிறோம்; எதிர்க்க வேண்டியது நம் கடமை என்று கொண்டிருக்கிறோம் என்பதை 23-ம் தேதியன்று எடுத்துக் காட்ட முடிவு செய்துவிட்டோம். இதன் மூலம் கவர்னர்–ஜெனரலான கனம் ஆச்சாரியாரை வெறுப்பதென்பதல்ல. ஆனால், இன்று அவர் எந்தக் கோலத்துடன் நம் மாகாணத்தில் நுழை கிறாரோ, அதை அறவே வெறுக்கிறோம் என்பதை நிரூபிக்கவே ஆகும். திராவிடத்தை—தென்னாட்டைப் பல வகையாலும் அடிமைப் படுத்திவரும் வடநாட்டு ஏகாதிபத்திய சர்வாதிகார கோஷ்டியின் கண்காணியாய் ஆச்சாரியார் வருகிறார்; அதை நாம் எதிர்க்கா விடில் என்றைக்கு ஓய்வு எடுப்பது என்று கேட்கிறேன். இந்தியை எதிர்க்கும் இதுசமயம் அரசியலார் அய்தராபாத் சண்டையைக் காட்டித் தப்பித்துக் கொள்ளப்பார்க்கின்றனர்!

காஷ்மீர் போரில் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு; அய்தராபாத்துக்கு 20 கோடி ரூபாய் செலவு. இது யார் வீட்டுப் பணம்? இந்தச் சண்டைக்கும், நம் மாகாணத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நம்மிடம் அய்தராபாத்துக்கோ, அல்லது காஷ்மீருக்கோ என்ன தகராறு இருக்கிறது? இந்த வடநாட்டான் ஆதிக்கத்தில் தென்னாட்டை முடிபோட்டு இழுத்துச்செல்வதால்தானே அவனுக்கு வரும் இழிவுக்கெல்லாம் நாம் மாரடித்துக் கொண்டிருப்பதுடன்—நம் மாகாணப் பணமும் பாழாக்கப்படுகிறது? இவைகளையெல்லாம் காங்கிரஸ் திராவிடர்களே! நீங்கள் எப்போதுதான் எண்ணி உண்மையை உணரப் போகிறீர்கள்?

1938–40-ல்—60, 70 வயது சென்ற தாய்மார்கள் முதல் சிறு குழந்தைகள் வரை ஆயிரக்கணக்கான மக்கள் சிறைசென்று ஒழித்த இந்தி—மீண்டுமா நம் நாட்டில் நுழைவது? அப்போது இந்தியைக் கொண்டு வந்து தொல்லை கொடுத்த ஆச்சாரியார் வைசிராய் பதவி அல்ல—அதற்கு மேலான பதவி பார்த்தாலும் இந்தச் சமயத்தில் சென்னைக்கு வரலாமா? வர மனத்தில் எண்ணலாமா? இதைக் கண்டு நாம் வெட்கப்படவேண்டாமா என்று கேட்கிறேன். வடநாட்டு ஆதிக்கத்துக்கு இவ்வளவு ஆணவமிருந்தால் இந்தச் சமயத்தில் ஆச்சாரியார் நம் மாகாணத்துக்கு வர முற்படுவார் என்பதை, திராவிடர்களே சற்று எண்ணிப் பாருங்கள்! எனவேதான், ஆச்சாரியாரின் வருகையை நாம் எதிர்ப்பதென்பது—வடநாட்டு ஆதிக்கத்துக்கும், ஹிட்லரிச, பாசிச வெறித் தன்மைக்கும்—தென்னாட்டை அடிமைப்படுத்தும் அரசியல் அநீதிக்கும் புத்தி புகட்டுவதாகும்.

வெள்ளைக்காரன் ஒழிந்தான் என்றால், அவன் மறைந்தவுடன் இந்த வடநாட்டுக் காரன் காலடியில் நாமும், நமது நாடும் வீழ்ந்துகிடக்க வேண்டுமா? இந்தச் சுதந்திரத்திற்

காகவா காங்கிரஸ் திராவிடர்களே—நீங்கள் பாடுபட்டீர்கள்? நாங்களும் அக் காலத்தில் பாடு பட்டது இதற்காகவா?

நான் காங்கிரஸ் தலைவனாயிருக்கும்போது தோழர் காமராஜர் அரசியலில் புகுந்து கூட இருக்க மாட்டாரே! நாங்களெல்லாம் அந்நாளில் உழைத்தது பதவி வகிக்கவா, பட்டம் பெறவா? ஆட்சியாளர்களாக நம்மவர்கள் வரவேண்டுமென்பதுடன், அவ்வாட்சி ஏழை எளிய மக்கள் இன்ப வாழ்வு காணக்கூடிய வகையில் இருக்க வேண்டுமென்பதற்குத் தானே? இன்று அவ்வித ஆட்சி இருக்கிறதென்று எவராவது கூற முடியுமா என்று கேட்கிறேன். மக்கள் வரிப் பணத்திலிருந்து 10½ கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதே, அதன் மூலம் சில பணக்காரப் பிள்ளைகள் படித்து ஆக்கம் பெறும் வகையில் கல்வி முறையும், கல்லூரிகளும் இருக்கின்றனவேயன்றி—வரி கொடுக்கும் கிராமங்களிலுள்ள வரி கொடுப்போரின் பிள்ளைகளும், பாட்டாளி மக்களின் பிள்ளைகளும் கல்வி பயிலும் தன்மையில் இருக்கிறதா? பகுதி கிராமங்களுக்காவது பள்ளிகள் இருக்கின்றனவா? இந்த இலட்சணத்தில் இந்தி வேறு ஒரு கேடா?

இவைகளையெல்லாம் நாங்கள்தான் கேட்கிறோம். மற்றவர்கள்—அதாவது காங்கிரசார் கேட்காவிட்டாலும், எங்களுக்கு ஆதரவாவது தர வேண்டாமா? 10 வயது குழந்தைக்கு மூன்று பாஷையா புகுத்துவது? இதுவரை, உத்தியோகங்களுக்கு என்றால்—சம்பந்தப்பட்ட எந்த மொழி அவசியமோ, அதை உத்தியோகம் ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு மட்டும் ஓராண்டுப் பாடமாக அரசியலார் வைப்பார்கள். இந்த இந்தித் திட்டத்தினால், 10-வது பையனுக்கல்லவோ மூன்று மொழிகள்! இந்நிலை இருந்தால் அவர்கள் நல்ல முறையில் கல்வி பயில முடியுமா?

இந்தி நுழைவு என்பது வடமொழி ஆதிக்கம் மட்டுமல்லாமல், சிறு பையன்களின் தூய மனத்தில்—பச்சை மரத்தில் ஆணி அடிப்பது போல, ஆரிய வருணாசிரமக் கலாசாரத்தைப் புகுத்துவதும் அநீதியேயாகும். எனவே நாம், மொழிப் பிரச்சினையோடு மாத்திரமின்றி நம் நாட்டுக் கலாசாரம், பண்பாடு ஆகியவைகளிலும் வடநாட்டு ஆதிக்கம் கை வைத்து அழிக்கும் சூழ்ச்சியென்பதை மறக்கக்கூடாது. நமது எதிர்ப்பு 'புஸ்' என்று போய்விடுமாம்! அதனால்தான் நம்மைக் கைது செய்யவில்லையாம்! இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான எண்ணம்?

நாங்கள் சிறைக்குச் சென்று வீரப் பிரதாபப் பட்டமோ, தேச பக்தர்கள் என்ற பட்டமோ பெறுவதற்காகவா அறப் போர் துவங்கி இருக்கிறோம்? இதைக்கூட இந்த ஆட்சியாளர் உணரும் அறிவு பெறவில்லையென்றால், நாம் என்னதான் இவர்களைப் பற்றி நினைப்பதென்பதே புரியவில்லை. அப்படி வலியச் சிறை சென்று அதன் மூலம் நமக்கோ—நம் இயக்கத்துக்கோ பெருமை தேடிக்கொள்ள வேண்டுமென்ற நிலையும் இல்லை.

அந்த எண்ணம், இன்று மட்டுமல்ல—இதுவரை எந்தெந்தக் காரியங்களில் போராடி வெற்றி பெற்று வந்தேனோ அக் காலங்களிலும் கிடையாது. சிறை சென்றுதான் ஒரு இயக்கத்திற்குப் பலம் திரட்டமுடியும் என்று கருதுவதே பைத்தியக்காரத்தனமாகும்; இன்னும் கூறுவேன்—அது ஏமாற்றுத்தனமுமாகும். ஆகவே, நாம் துவக்கியுள்ள அறப் போரில் ஆட்சியாளர் நம்மைக் கைது செய்யவில்லையென்பதால், நமதுஇயக்கம் நசித்து விடும்என்று ஆட்சியாளர் நினைத்தால் அவர்கள் அந்தப் பிரச்சினையில் விரைவில் தோல்வியுற்றே தீருவார்கள். எத்தனை நாளைக்கு எங்களை இப்படியே விட்டுவைக்க முடியும்?

எங்களை சர்க்கார் இலட்சியம் செய்யவில்லையென்றால், மறியல் செய்யுமிடத்தில் அங்கிருந்து தொண்டர்கள் புறப்பட்டாலும், போலீஸ் கமிஷனர் முதல் மற்ற உத்தியோகஸ்தர்களும், படையும், பட்டாளமும் வருவதேன்? பேசாமல் இவர்கள் வீட்டிலேயே இருக்கலாமல்லவா? இப்போது நடைபெறுவதைப்போல் இன்னும் இரண்டு ஆண்டுகள் நடைபெற்றாலும் அதற்கான வசதியும் நமக்கிருக்கிறது. அந்த வசதிகளெல்லாம் ஏழை

மக்களாகிய நீங்கள் அளித்ததன்றி வேறில்லை. ஒரு பள்ளிக்கூடத்திற்கே, போலீஸ் பட்டாளத்திற்கு இவ்வளவு அவசியம் என்றால் இன்னும் 5, 6 இடங்களில் துவக்கிவிட்டால் ஊரில் திருட்டு முதலிய வழக்குகளைக் கண்டுபிடிக்கவே போலீஸ்படை இருக்கமுடியுமா? திருட்டு இருக்கட்டும்; மந்திரி ஆபீஸ்களிலே எவனாவது கொள்ளையடித்தால்கூட அதை அடக்கப் போலீஸ் இருக்க முடியாதே! இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் நமது போராட்டம் 'புஸ்' என்று போய்விடுமென்று கூறுவது அறிவுக்கும், அனுபவத்திற்கும் பொருந்துமா? வேண்டுமானால் இவ்விதப் பேச்சுக்களை அரசியல் கெட்டிக்காரர்கள் பேசலாம்! ஆனால், மந்திரிகளே கூட்டங்களில் பேசுகிறார்களென்றால் இதிலிருந்து நமது மந்திரிகளின் பேச்சுக்கு எவ்வளவு மதிப்பிருக்க முடியும் என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்!

மறியல் செய்யும் தொண்டர்களுக்குச் சலிப்பு இருக்கலாம்; அதுகூட எதற்காக? தங்களை இன்னும் கைதுசெய்யாமல் இருக்கின்றனரே என்று. அவ்விதச் சந்தர்ப்பங்களில் மற்றொரு தொண்டர் படையை மாற்றி, முன்னவர்களுக்குச் சற்று ஓய்வு கொடுக்கிறோம். இதற்காகவா நாம் ஓய்ந்துவிடுவோம்? அருமை நண்பர்களே! இப்படியே இன்னும் ஒரு மாதம் நடக்கட்டும். பிற்பாடு நீங்கள் காணப்போகிறீர்கள்—இந்த அரசியலார் சலிப்படையப்போகிறார்களா, நாம் சலித்துவிடுவோமா என்பதை.

நான் முதலில் குறிப்பிட்டது போல், 1938–40 போராட்டத்தைவிட இம்முறை மறியல் செய்வதற்காக ஆள் ஒன்றுக்கு தாங்களாகவே 25 ரூபாய் வீதம் கொடுத்து, போராட்டத்திற்கு வருகிறோம் என்று, துடிதுடிப்பவர்கள் எவ்வளவு பேர்? இந்த அரசாங்கத்திற்குக் கண் இருந்தாலல்லவோ இதெல்லாம் தெரியப்போகிறது! உத்தியோகஸ்தர்–ஆசிரியர்–மாணவர்–தொழிலாளர்–தாய்மார்கள் வரை தவறாமல் எங்களைத் தொந்தரவு செய்துவருகின்றனர். எல்லோருக்கும் 22-ந் தேதி கூடும் நிர்வாகக் கமிட்டியின் முடிவுப்படி வேண்டியன செய்வதாகச் சமாதானம் கூறி அடக்கிவருகின்றேன். இவ்வாறிருக்க, நாம் ஓய்ந்துவிடுவோமெனத் தப்புக் கணக்குப்போடும் சர்க்கார், விரைவில் இந்தி நுழைவு விஷயத்தில் தோல்வியுறப் போவது நிச்சயம் என்று கூறுவேன். நமது போராட்டம் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்பதே எனது ஆசையாகும். அதற்குள்ளாகத் தேர்தல் வரத்தான் போகிறது.

தேர்தலுக்கு நாம் நிற்கப் போவதில்லையென்றாலும் நம் போராட்டக் காலத்தில் இவர்கள் ஓட்டுப்பிச்சை கேட்க எந்த முகத்தைக் கொண்டுசெல்ல முடியும்? எனவே, நம்மைக் கைதுசெய்யாவிட்டாலும், அல்லது இலட்சியப் படுத்தாவிட்டாலும் அதனால் நமக்கு யாதொரு நஷ்டமுமில்லை; அரசியலாருக்குத்தான் அதனால் பெருந் தொல்லை ஏற்படும். அதுமட்டுமில்லை;

இதுவரை நானோ, சுயமரியாதை இயக்கமோ, திராவிடர் கழகமோ துவக்கிய எந்தப் போராட்டத்திலும் அல்லது கொள்கையிலும் தோல்வியுற்றதே கிடையாது என்பதைப் பல முறைகள் எடுத்துக்காட்டி இருக்கிறேன். கோவில் நுழைவு முதல், பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் உரிமைவரையிலும்; இரயில்வே சிற்றுண்டிவிடுதிகள் முதல் சாதாரண ஓட்டல்களிலும்—சாதி வித்தியாசம், உயர்வு தாழ்வு கூடாதென்பதிலும்; தாய்மார்களை ஆண்டவன் பேரால் பொட்டுக் கட்டும் அநாகரிகம் ஒழியவேண்டுமென்பது வரை—நாங்கள் கிளர்ச்சிசெய்து சிறைசென்று பல தொல்லைகளுக்கு உட்பட்டு வெற்றிபெற்று அது நடைமுறையிலும் இன்று இருந்துவருகிறதேயல்லாது, ஒன்றிலும் தோல்வி கிடையாது. இன்னும் விரைவில் கூறப்போகிறேன்—கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்களை விட்டதுமட்டும் போதாது; அவர்களே பூசை செய்யவேண்டும்; தட்சணைக் காசுகளை அவர்களே அடைய வேண்டும்; அப்படி அனுமதிக்காத சாமிகளை உடைத்து ரோட்டுக்கு ஜல்லி போடவேண்டுமென்று கிளர்ச்சி செய்யத்தான் போகிறேன்.

[சென்னை வண்ணையம்பதியில் சொற்பொழிவு—'விடுதலை' 22-8-1948]

3. இந்தி கட்டாயமா?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தி வேண்டவே வேண்டாம் என்பதல்ல எங்கள் கொள்கை; அதைக் கட்டாயப் படுத்தக்கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோம். எந்த மொழியையும் யார் வேண்டு மானாலும் கற்றுக் கொள்ளட்டும். ஆனால், எந்த மொழியையும் யார் மீதும் கட்டாயமாகத் திணிக்காதீர்கள் என்றுதான் நாம் கூறுகிறோம். சில காரியத்திற்காக இந்தியைக் கட்டாய மாக்க வேண்டுமானாலும் கட்டாயமாக்குங்கள்; ஆனால், குழந்தைகளுக்கு வேண்டாம்; பெரியவர்களுக்கு—கல்லூரி மாணவர்களுக்கு வேண்டுமானால் இருக்கட்டும் என்றுதான் நாங்கள் கூறுகிறோம். 12 வயது பையன்களுக்கு மூன்று மொழிகளைப் படித்தால் கஷ்டமா யிருக்கும். மூன்றையும் படித்துச் சரிவர 'மார்க்' வாங்கித் தேறுவது கஷ்டமாயிருக்கும். அதனால் அவர்கள் படிப்புக்கு—அறிவு வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும்; திராவிட ஏழை மக்களில் ஒரு சிலராவது 10-வது வரை சரிவரப் படித்து வருவதும் தடைபட்டுப் போகும் என்றுதான் நாம் கூறிவருகிறோம்.

இன்று நம் பிரதம மந்திரியாரிடம் நான் தெரிவித்தபோது, 'உங்களுக்குத் தெரியாது நம் பிள்ளைகளின் புத்திசாலித்தனம்! இவர்கள் 3 அல்ல-4 பாஷைகள்கூடக் கற்பார்கள்' என்று தெரிவித்து விட்டார். தாம் ஒருவர் மந்திரியாக வந்து விட்டதால் எல்லோருமே புத்தி சாலிகளாகிவிடமுடியும் என்றும் நினைத்து விட்டார் போலும்! 2 வருடங்களுக்குமுன் கல்வி அமைச்சர் இங்கிலீஷை 3-வது பாரத்திலிருந்துதான் சொல்லிக் கொடுக்க முடியும் என்று தெரிவித்தார். நாங்கள் சற்றுச் சஞ்சலப்பட்டோம். 'இந்தக் காலத்தில் ரிக்ஷாக்காரனுக்குக் கூட ஒன்றிரண்டு வார்த்தை இங்கிலீஷ் தெரிந்திருக்க வேண்டியிருக்கிறதே! 'சார், ஹவ் மச்—Sir How much?' என்று கேட்கவாவது தெரிந்திருக்க வேண்டியிருக்கிறதே! அப்படி யிருக்கும்போது, இங்கிலீஷை 3-வது பாரத்திலிருந்து சொல்லிக்கொடுப்பது நியாயமில்லை; முதல் பாரத்தில் இருந்தாவது சொல்லிக் கொடுத்தல் அவசியம்' என்று கூறினோம்.

'அதெல்லாம் முடியாது; இப்படியெல்லாம் எதிர்த்துப் பேசுவதாயிருந்தால் இங்கிலீஷையே இந் நாட்டைவிட்டு ஓட்டி விடுவேன்' என்று பயமுறுத்தினார். எப்படியோ நாசமாய்ப் போகட்டும் என்று பேசாமல் இருந்தோம். கல்வி அமைச்சருக்கு இப்போது புத்தி தெளிவடைந்தது. ஆகவே, முதல் பாரத்திலிருந்து இங்கிலீஷைக் கட்டாயப் பாடமாக்கி யிருக்கிறார். அதுவரை மகிழ்ச்சிதான்.

மற்ற வடநாட்டினரைக் காட்டிலும் எங்களுக்கு இங்கிலீஷ் மிக அவசியமானதுதான். எங்களுக்கு 1,500 மைல் நீளம் கடற்கரை உண்டு. எனவே, எங்கள் சம்பந்தம் முக்கால் பாகம் வெளிநாடுகளோடுதான் இருக்கும். வெளிநாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள இங்கிலீஷ்தான் அவசியமான மொழி. ஆகவே, எங்களால் இங்கிலீஷை எப்போதும் கைவிடமுடியாது. தமிழைப்பற்றி இப்போது தகராறில்லை. அதில்தான் எல்லாப் பாடங் களும் கற்பிக்கப்படப் போகின்றன. இங்கிலீஷைப்பற்றியும் தகராறில்லை; அதுவும் 3-வது மொழியாகக் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டாய மொழியாக வைக்கப் பட்டிருக்கும் இந்தியைப் பற்றித்தான் இப்போது தகராறு. இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதுகூட இப்போது பிரச்சினையல்ல. இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டுமா, இஷ்டமிருந்தால் மட்டுமே படிக்க வேண்டுமா என்பதுதான் இப்போதையப் பிரச்சினை.

இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியதில்லை என்று சர்க்கார் என்னிடத்தில் மட்டுமல்ல, சட்டசபை மெம்பர்களிடத்தில்கூடக் கூறியிருக்கிறார்கள். 'இந்தி கட்டாயமா, இஷ்ட பாடமா?' என்று சட்டசபையில் கேள்வி எழும்போது சர்க்கார், 'இந்தியைக் கட்டாய மாக்கி இருக்கவில்லை; இஷ்ட பாடமாகத்தான் வைத்திருக்கிறோம்' என்று தெளிவுபடக் கூறியிருக்கின்றனர். நாம் சொல்கிறோம்: 'மந்திரியார் கட்டாயமில்லை என்று வாயளவில் கூறுவது உண்மைதான்; ஆனால், நடைமுறையில் இந்தி கட்டாயமாக்கப்படுகிறதே'

என்று. மந்திரியார் சொல்லளவில் கட்டாயமில்லை என்கிறார். நாம் செயலளவில் கட்டாய மாக்கப்பட்டிருக்கிறது என்கிறோம். இதுதான் இன்றையப் பிரச்சினை.

இதற்கு முடிவு காண்பது எப்படி? நாலைந்து கல்வி அதிகாரிகள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமியுங்கள். அந்தக் கமிட்டியின் முன் சர்க்காரும் இந்தி கட்டாயமில்லை என்பதற்கு ஆதாரம் கொடுக்கட்டும்; நாமும் கட்டாயம்தான் என்பதற்கு ஆதாரம் காட்டு கிறோம். இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து அவர்களே முடிவு சொல்லட்டுமே! இந்தி நடைமுறையில் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். 1946ஆம் ஆண்டு கடைசியில் கல்விமுறையை மாற்றி அமைப்பதற்கான யோசனை கூற நமது மாகாணத்தில் ஒரு கல்வி புனர் நிர்மாணக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தியை நம் மாகாணக் கல்விமுறையில் எப்படிப் புகுத்துவது என்பதும் அக்கமிட்டியாரால் பரிசீலனை செய்யப்பட்டது. அக் கமிட்டியார் ‘இந்தி இம் மாகாணத்தில் இஷ்டபாடமாக வேண்டுமானால் இருக்கலாமே ஒழிய, கட்டாயப் பாடமாக இருக்கக்கூடாது; எந்த ஒரு ஆசிரியரும் எந்த ஒரு மாணவரையும் இந்தி படிக்குமாறு வற்புறுத்தக்கூடாது; குழந்தை களுக்கு எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே போதிக்கப்படவேண்டும்’ என்று ஆலோசனை கூறினர். அவ்வாலோசனையைக் கல்வி அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை; ஏற்காதது மட்டுமல்ல—அந்த ரிப்போர்ட்டை வெளியிடவுமில்லை; அப்படியே அதை மறைத்துவிட்டார். பிறகு தம் இஷ்டம்போல் வேறொரு கமிட்டியை நியமித்தார். அக் கமிட்டி யாரும் குழந்தைகளுக்கு இந்தியைக் கட்டாயமாக்க விரும்பவில்லை. சென்ற 10 ஆண்டு களுக்கு முன்பு ஒரு பெரிய கிளர்ச்சி இந்தத் தமிழ்நாட்டில் நடந்திருப்பதை ஒட்டி, என்ன செய்வதென்றே தெரியாமல் காலங்கடத்திக் கொண்டு வந்து கடைசியில் ஒரு தந்திரம் செய்தனர்.

இந்தியைத் தமிழ்நாட்டில் மட்டும் இஷ்டபாடமாகவும் மற்ற ஆந்திர, கேரள, கன்னட பிரதேசங்களில் கட்டாயப் பாடமாகவும் ஆக்கி—1948ஆம் வருடம் ஜூன் மாதம் 20-ந்தேதி 1643-ம் நம்பர் ஜீ. ஓ. படி ஒரு உத்தரவு பிறப்பித்தனர். மேற்படி உத்தரவு விளம்பரப் படுத்தப்பட்டதும், சில பார்ப்பனர்கள் இலேசாக அங்கும் இங்கும் குசும்பினர். பம்பாய் இங்கிலீஷ் பத்திரிகை ஒன்று, திராவிடர் கழகத்திற்குப் பயந்து இம் மாதிரி செய்வதுகூடா தென்று எழுதிற்று. பார்ப்பனர் அமைச்சர் மூக்கைச் சொறிந்தனர்! ஒன்றிரண்டு பார்ப் பனர்கள் ‘ஆசிரியருக்குக் கடிதங்கள்’ என்ற பகுதியில் சர்க்காரின் உத்தரவைக் கண்டித்து எழுதித் தம் அதிருப்தியைக் காட்டிக்கொண்டனர்.

இடையில் பிரதம மந்திரியார் கோயம்புத்தூர் சென்றபோது, அங்கு இந்திப் பிரச்சினை பற்றிப் பேச நேர்ந்தது. அவருடைய பேச்சு 24-6-1946 ‘சுதேசமித்திரனில்’ வெளியாகியிருக்கிறது. அதில், அவர், ‘இந்துஸ்தானி சென்னை மாகாணத்தில் தமிழ்நாடு தவிர்த்த மற்ற ஆந்திர, கேரள, கன்னட நாடுகளில் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது; இது வேண்டுமென்றே யோசித்துத்தான் செய்யப்பட்டது. இதுவரை இதற்கு இரண்டொரு இடத்தைத் தவிர்த்து வேறு ஆட்சேபணையே வரவில்லை’ என்று குறிப்பிட்டார். உடனே மறுநாள் பத்திரிகையில் ‘சுதேசமித்திரன்’, ‘இதோ நான் ஆட்சேபிக்கிறேன்’ என்று, ‘கட்டாய இந்தியே தேவை’ என்று தலையங்கம் தீட்டிற்று. ‘மற்ற மூன்று பிரதேசங் களிலும் இந்தியைக் கட்டாயமாக்கிவிட்டு, தமிழ்நாட்டில் மட்டும் இந்தியை இஷ்டப் பாடமாக ஆக்கி இருப்பது நியாயமா?’ என்று கேட்டுவிட்டு, ‘இந்தியை எதிர்க்கும் கும்பல் ஒன்று இந்நாட்டில் இருப்பதால்தான் கட்டாயப் பாடமாக ஆக்க முடியவில்லை என்று மந்திரியாரால் கூறப்படும் வெறும் சமாதானம் ஏற்கக்கூடாதது. வெறும் பேச்சுக்காரர் களுக்குப் பயந்து சர்க்கார் இம் மாதிரியெல்லாம் விட்டுக்கொடுப்பதாயிருந்தால் நாட்டில் எந்த நல்ல காரியம் செய்வதும் கஷ்டமாகிவிடும். இந்தி கட்டாயமாக்கப்படுவதையே பெரும்பாலான தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்’ என்று எழுதி, கல்வி மந்திரியார் மூக்கைச் சொறிந்து விட்டது. பார்ப்பான் அடிமையான கல்வி மந்திரியாரும் உடனே துணிந்து

அந்தப்படியே தமிழ் நாட்டிலும் இந்தி கட்டாயந்தான் என்று உத்தரவு பிறப்பித்து விட்டார்.

இந்தி கட்டாயமில்லை என்று அவர்கள் கூறுவதற்கு ஆதாரமாகக் காட்டுவது இந்தியோடு வேறு சில மொழிகளையும் சேர்த்து, அவற்றில் ஏதாவதொன்றைப் படிப்பது என்று உத்தரவு போட்டிருப்பதுதான். இதிலுள்ள பித்தலாட்டத்தைப் பாருங்கள்! ஏதாவதொரு மொழியைப் படிக்கலாம் என்று உத்தரவு போட்டுவிட்டு, ஒவ்வொரு பள்ளியிலும் இந்தி மட்டுமே கற்பிக்க ஆசிரியர் இருக்க வேண்டியது அவசியம் என்றும், அப்படி இந்தி ஆசிரியரை வைத்துக் கொண்டிராத பள்ளிகளுக்கு சர்க்கார் 'கிராண்ட்' வழங்காதென்றும் உடன் உத்தரவு பிறப்பிப்பதன் அர்த்தமென்ன? ஒவ்வொரு பள்ளியிலும் இந்தியைக் கட்டாயமாக்கத்தானே இந்தச் சூழ்ச்சி? இல்லையென்றால், மற்ற மொழிகளுக்கும் ஆசிரியர் வைத்துக்கொள்வது கட்டாயப்படுத்த வேண்டாமா? இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

கனம் மந்திரியார் அவர்களே, 'சென்னைச் செய்தி' என்ற சர்க்கார் வெளியீட்டில் தம் பொம்மையோடு வெளியிட்டிருக்கும் கருத்தைப் படித்துப் பாருங்கள். 'இம் மாகாண மக்கள் ஒவ்வொருவருக்கும் இந்தி தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று இங்கு வற்புறுத்திக்கூறுவது அனாவசியம் என்று கருதுகிறேன். இதற்காகத்தான் எல்லாப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்று நம் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் நாம் திருச்சியில் கூடி, கட்டாய இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தீர்மானம் செய்த பிறகு வெளியான பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சேதியாகும் இது. எனவே அதில், 'கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும்' என்று வரும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லையென்று யாராகிலும் கருதிக்கொள்ள முடியாது. அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்: 'இந்தி படிப்பதால் அறிவு ஒன்றும் அதிகமாகிவிடப்போவதில்லை; அதனால் அறிவு வளர்ச்சிக்குக் குந்தகமே விளையும்' என்று. அறிவில்லாத—வேறு எதற்காகவோ, அதைப் படிக்கவேண்டுமாம்? என்ன புத்தி தீட்சண்யம்? சிரிக்காதீர்கள்! சந்தேகமிருந்தால் நீங்களே வாங்கிப் படியுங்கள். இனி நீங்கள்தான் இந்தி கட்டாயமா, இல்லையா என்று முடிவு செய்யவேண்டும்.

இதையெல்லாம், நான் பிரதம மந்திரியாரைச் சந்திக்க நேர்ந்தபோது தெரிவித்து, இந்தியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யப்போவதாகவும் மறியல் செய்யப்போவதாகவும் தெரிவித்தேன். அய்தராபாத் பிரச்சினை காத்திருக்கும்போது இம் மாதிரி தொல்லை கொடுக்கலாமா என்று கேட்டார். அய்தராபாத்தில் போராட்டம் துவக்கப்பட்டால் உடனே எனது போராட்டத்தையும் நிறுத்திக்கொள்வேன் என்றும், சென்னை மாகாணத்தைக் காப்பாற்றுவதில் எனக்கும் கவலையும், பொறுப்பும் உண்டென்றும் தெரிவித்தேன். அப்படியானால், 'கலவரம் ஏதுமின்றி மறியல் செய்துகொள்ளுங்கள்; நான் அதைப் பாதுகாத்துக் கொள்கிறேன்' என்று உறுதி தந்த உடனேயே போலீஸ் கமிஷனரையும் கூப்பிட்டு அந்தப்படியே ஏற்பாடு செய்தார். மறியலும் மறுநாள் துவக்கப்பட்டு யாதொரு கலவரமும் இன்றிச் சில நாட்கள் நடைபெற்றது. நாளுக்கு நாள் இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு பெருகி வருவதைக் கண்ட பார்ப்பனர்கள், 'இந்த மாதிரி மறியலைப் பாதுகாத்துக் கோட்டையை விட்டு விட்டார்களே' என்று மந்திரியாரிடம் தெரிவித்தனர். மந்திரியாருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. ஆகவே, போலீஸ் புலிகளை இஷ்டம் போல் வேட்டையாடும்படி விட்டுவிட்டார். அவர்கள் இந்தி எதிர்ப்பாளர்களை லாரியில் ஏற்றிச் சென்று கண்காணாக் காட்டில் 31 மைலுக்கப்பால் விட்டுவிட்டு வந்து விட்டனர். அங்கு ஒரு போலீஸ்காரனையும் காவல் வைத்து—எந்த வண்டிக்காரனும் தொண்டர்களை ஏற்றிக் கொள்ளக்கூடாது என்று தடுத்தனர். மாலையில் நமது வண்டி சென்றுதான் அவர்களை அழைத்து வர நேரிட்டது. இந்தி எதிர்ப்புத் தொண்டரில் ஒருவர் அம்மையார்; அவர் எட்டு மாதக் கர்ப்பிணி. இருந்தும் அவரைக்கூட விடவில்லை. எல்லோரையும் 'மிலிடெரி

லாரி'யில் ஏற்றிச் சென்றனர். சென்ற வழியில் லாரி ஆட்டம் அதிகமாய் இருந்ததின் காரணமாக, அந்த அம்மையாருக்குக் கர்ப்பக் கோளாறு ஏற்பட்டுக் கடைசியில் பிழைப்பதே கடினமாகி விட்டது. அவர் போராட்டத்திற்கு வரவேண்டாமென்றாலும் கேட்கவில்லை. அவர் புருஷனும்—நல்ல காரியத்திற்காக ஒருத்தியைக் கொடுத்தால்தான் என்ன முழுகிப் போகும் என்று கூறிவிட்டார். நல்ல வாய்ப்பாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உடல்நலம் பெற்றார்கள்.

அடுத்த நாள் வேறொரு பக்கம் தொண்டர்களை அழைத்துச் சென்றார்கள்; மறுநாள் இன்னொரு பக்கம்! இப்படி சடுகுடு விளையாடினர் போலீஸ்காரர்கள். 'ஏனய்யா இப்படி அக்கிரமம் செய்கிறீர்கள்?' என்று கண்டிக்க முற்பட்ட பிறகு—சர்க்காரின் இந்தப் போக்கு சந்து பொந்து தோறும் குறை கூறப்பட்ட பிறகு, ஜெயிலில் பிடித்துப் போட்டனர். ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம் என்று கடுங்காவல் தண்டனை கொடுத்தனர்; நன்னடத்தை ஜாமீன் கேட்டனர். இவ்வளவுக்கும் தொண்டர்கள் விட்டுக்கொடுக்காமல் இருக்கவே, தடிகொண்டு தாக்க ஆரம்பித்தனர். ஒரு பையனை ஒரு சப்-இன்ஸ்பெக்டர், காலின்கீழ் மிதித்துக் கழுத்தை நெறிக்கவும் முற்பட்டார்—வாயிலிருந்து இரத்தம் கக்கும் அளவுக்கு; அவர் பேரையும் பத்திரிகையில் வெளியிட்ட உடனே, தானல்ல அதற்குக் காரணம்; வேறு யாரோதான் அப்படிச் செய்திருக்க வேண்டும் என்று எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

போலீஸ் மந்திரியாருக்கு என்ன உத்தரவிடுவதென்றே தெரியவில்லை. அங்கொரு மந்திரியும் இங்கு ஒரு மந்திரியுமாக, சர்க்காரின் அடக்குமுறைப் பேயாட்டம் நடக்கிறது. இவர்களைப் பிடித்தாலும் தொல்லை, பிடிக்காவிட்டாலும் தொல்லை! என் செய்வதென்று விழிக்கிறாராம் பிரதம மந்திரியார்! இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஆபீஸில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கும்போது 'அஸோஸியேடட் பிரஸ்' செய்தி வந்தது—அம்தராபாத்தில் இந்தியத் துருப்புகள் நுழைந்துவிட்டன என்று. இந்த ஊர் பிடிக்கப்பட்டது—இந்தப் பாலம் பிடிக்கப்பட்டுவிட்டது என்று சேதி வந்துகொண்டே இருந்தது. உடனே இந்தி எதிர்ப்பு மறியலைத் தற்காலிகமாக, நிர்வாகக் கமிட்டியின் உறுதியை எதிர்பார்த்து நிறுத்தி விட்டேன் என்றும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அடையாள மறியல் மட்டும் ஆங்காங்கு நடத்தப்படலாம் என்றும், ஆனால் போலீஸ் உத்தரவிடுவதுபோல் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், பத்திரிகையில் போட்டுவிட்டு, நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் வேதாசலம் அவர்களுக்கும் தந்தி கொடுத்துவிட்டேன். போராட்டம் நிறுத்தப் பட்டது சிலருக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், அது முறைப்படி நிறுத்தப்பட்டது.

எல்லா இடங்களிலும் அமைதியாகவே நடைபெற்றது என்றாலும்—7, 8 இடங்களில் போலீஸ் ஆடிய வேட்டைக்குக் கணக்கே இல்லை. கேள்வி கேட்பாரற்ற முறையில் ராஜகம் சில இடங்களில் நடைபெற்றது. சில இடங்களில் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது; சில இடங்களில் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது; சில இடங்களில் கைது செய்யவே இல்லை, சில இடங்களில் சில மணி நேரம் பூட்டி வைத்து வெளியே அனுப்பிவிட்டனர்; சில இடங்களில் அடித்து மிரட்டி உதைத்திருக்கின்றனர். சில இடங்களில் மிக மிகக் கொடுமைப்படுத்தி இருக்கின்றனர்.

இப்போது 'விடுதலை'ப் பத்திரிகை ஜாமீன் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறதாம்! அடுத்து நாலாயிரம் கேட்கப்படலாம் ஜாமீன் தொகையாக! அதற்கும் நீங்கள்தான் மனமுவந்தளித்திருக்கிறீர்களே—ரூ. 15 ஆயிரத்திற்கும் மேலாக! அது தீர்ந்து போகும் வரை கொடுத்துக்கொண்டே போவோமே! கொடுத்தால் எங்கே போய்விடும்? அதே இடத்திற்கு நாங்களே வரும்போது வட்டியோடு சேர்த்து எடுத்துக்கொள்ளமாட்டோமா?

இராஜகோபாலாச்சாரியாரை ஏழை பங்காளர் என்று விளம்பரப்படுத்த—அவர் துணி துவைப்பதையும், இலை எடுப்பதையும்கூடப் படமாகப் போட்டுக் காட்டவில்லையா?

இன்று அதே இராஜகோபாலாச்சாரியார் மாதம் 20,000 சம்பளம் பெற்றுவரவில்லையா? 'ஏனய்யா, இவ்வளவு சம்பளம்?' என்றால், 'அவர்தம் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? அவர் வக்கீல் தொழிலை விடாமல் இருந்திருப்பாரானால் அல்லாடியைக்கூட மிஞ்சிவிட்டிருப்பாரே!' என்று சமாதானம் கூறப்படவில்லையா இன்று? இது ஒரு பக்கம் கிடக்கட்டும்.

மறியலைப் பாதுகாத்துத் தருவதாகவும் நேர்மையான பிரச்சாரத்திற்குத் தடையில்லாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதிதந்த மந்திரியார் ஆட்சியில், எங்கு பார்த்தாலும், எங்கள் கூட்டத்திற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது; ஊர்வலத்திற்கும் தடை விதிக்கப்படுகிறது.

வெள்ளையன் காலத்திலாவது எல்லா ஊரிலும் ஒரேமாதியான அடக்குமுறை கையாளப்படும்; எல்லா ஊருக்கும் ஒரே மாதிரியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், இன்றைய ஆட்சி முறையிலோ ஊருக்கு ஒரு மாதிரி அடக்குமுறை 'தர்பார்' நடத்தப்படுகிறது. காரணமே தெரியவில்லை. நல்ல வாய்ப்பாக இந்த ஊரில் இவ்வளவு அமைதியாகக் கூட்டம் நடக்கிறது. நேற்று கடலூரில் கூட்டத் தலைவருக்குக் கல்லடி; சப்-இன்ஸ்பெக்டருக்குக் காயம். எங்கு பார்த்தாலும் காங்கிரஸ் தலைவர்களின் தலையீடு பொறுக்க முடியவில்லை. என்ன செய்வது? இப்படியான பல தொல்லைகளால் நாட்டின் முன்னேற்றமே வெகுவாகத் தடைப்பட்டு நிற்கின்றது.

வெள்ளைக்காரன் காலத்தில் அகிம்சையின் பேரால் பட்டாளத்திற்கு ஆள் சேர்த்துக் கொடுக்க மறுத்த அகிம்சா மூர்த்தியின் அடிச் சுவட்டைப் பின்பற்றும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இன்று நாட்டின் பாதுகாப்புக்காக மட்டும் 130 கோடி ரூபாய் ஒதுக்கிவைத்துள்ளார்கள், துப்பாக்கியும், வெடிமருந்தும் வாங்குவதற்காக. துப்பாக்கியும் வெடிமருந்தும் எதற்காக? கொஞ்சவா, குலாவவா, அல்லது கட்டியணைத்து முத்தமிடவா? மாற்றாரை மாய்க்கத்தானே! அகிம்சைவாதிகள்—பிறரை மாய்க்க நினைக்கலாமா? காஷ்மீரில் 6 மாதத்திற்குள் மட்டும் 35 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறதே; மக்களைக் கொன்று குவிக்கத்தானே! அகதிகளுக்கு மட்டும், தினம் 12 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறதே! அகிம்சாவாதிகளான இவர்கள் ஏன் தேர்ச்சி பெற்ற சோல்ஜர்களையும், மேஜர்களையும் கூவி அழைக்கிறார்கள்?

ஏழை பங்காளர்களான இவர்கள், ஏன் இன்று 8 ஆயிரமும், 10 ஆயிரமும் சம்பளம் வாங்கிவருகிறார்கள்? விஜயலட்சுமி அம்மையாருக்கு மாதம் 8000 ரூபாய்; அந்த அம்மாளுடைய கட்டிலுக்கும், கம்பளம், மேஜை வகையறாக்களுக்கும் செலவு 2½ இலட்ச ரூபாய்; அந்த அம்மையார் அமெரிக்காவில் விருந்தொன்று கொடுக்கச் செலவு செய்தது இலட்சக்கணக்கான ரூபாய்கள். இங்கிலாந்திலுள்ள ஸ்தானீகருக்கு மட்டும் 9 மோட்டார் கார்கள். அதில் ஒரு காரின் விலை 26,000 ரூபாய்! வெளி நாட்டிலாகும் செலவு மட்டும் 1 கோடி, 2 கோடி என்று ஏறி வருகிறது என்றாலும் இவர்கள் எல்லோரும் தரித்திர நாராயணனின் சிஷ்யர்களாம். என்னே விந்தை!

அகிம்சை என்பதும் ஏழ்மை என்பதும் வெறும் விளம்பரப் பேச்சுதானே? ஏழை மக்களின் வரிப் பணம் தானே, இப்படிச் சூறையாடப்படுகிறது? இவ்வளவு செலவாகியும் மக்களுக்கு ஏதாகிலும் சவுகரியமோ, பாதுகாப்போ உண்டா? வெள்ளையன் காலத்திலாவது நம் வீட்டில் திருட்டுப்போகும். இப்போதைய சுயராஜ்ய காலத்தில் போலீஸ்காரன் வீட்டிலேயே திருட்டுப் போகிறது! மந்திரிகளுக்குச் சம்பளம் போதவில்லையென்றால், ஏற்கனவே இருந்த சம்பளத்தோடு ஒரு 'சைபர்' சேர்த்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் தம் அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ள என்பார்கள். போலீஸ்காரனுக்குத் தன் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பக்கூடக் காசு கிடைப்பதில்லை; அவன் சம்பளம் போதவில்லையென்றால்,

அது ராஜ துரோகமாகிவிடுகிறது; பேசாமல்—தெருவில் மலஜலம் கழிப்பவனைப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்கிற நிலையில் அவன் இருக்கிறான். அவனுடைய அந்தஸ்தைக் காப்பாற்றுவது பற்றிச் சர்க்காருக்குக் கவலையில்லை. சாதாரணமாகக் கல்லுடைப்பவன்கூட நாளொன்றுக்கு ரூ. 3 கூலி வாங்குகிறான்; அதுவும் 6 மணி நேரம் வேலை செய்துவிட்டு. ஆனால் நம் போலீஸ் தோழனுக்கோ, நாள்முழுதும் உழைத்தாக வேண்டுமென்றாலும் 30 ரூபாய்தான் சம்பளம். போலீஸ்காரர் நிலையே இப்படியென்றால் மற்ற கீழ்த்தர சிப்பந்திகளைப் பற்றிக் கேட்கவேண்டியதே இல்லை. கீழ்த்தர சிப்பந்திகள் யாவரும் திராவிடர்கள். ஆதலால் அவர்களுடைய அந்தஸ்தைப்பற்றிச் சர்க்கார் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

ஜமீன்தார்கள்—முக்கால்வாசிப்பேர் திராவிடர்கள். ஆதலால் அவர்கள் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டுமாம்! ஜமீன்தாரர்கள் சிலர் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்து வந்தார்கள் என்பதற்காக, 'நாங்கள் பதவிக்கு வந்தால் உங்கள் கையில் முதலில் ஓடு கொடுப்போம்' என்று இராஜகோபாலாச்சாரியார் அன்று சவால் விட்டதன் காரணமாக—அவரது ஆட்சியின்போது துவக்கப்பட்டதுதான், இந்த ஜமீன் ஒழிப்புப் படலம். ஜமீன்கள் ஒழிக்கப்படட்டும், நமக்குக் கவலை இல்லை. அவர்களிடமிருந்து அன்னக்காவடிப் பார்ப் பனர்கள் இனாமாகப் பெற்ற இனாம் சொத்துக்களும் அதோடு ஒழிக்கப்பட வேண்டாமா என்று கேட்டால்—'இனாம் கொடுத்ததற்குப் பதிலாக அப்போதே அவர்களுக்கு மோட்சத்தில் இடம் பிடித்துக் கொடுத்தாகிவிட்டது' என்றால் அது நியாயமா? திராவிடர் களுக்கொரு நீதி, பார்ப்பனருக்கொரு நீதியுமாக நடந்து கொள்வது என்றால் பொதுமக்கள் நியாயத்திற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டாமா? இன்றைய சர்க்காரோடு போட்டி போட வேறு கட்சியே இல்லையே!

முஸ்லிம் லீக் இம் மாகாணத்தைப் பொறுத்தவரை மறைந்துவிட்டது. கம்யூனிஸ்ட் தலைவர்களை ஜெயிலில் அடைத்தாகிவிட்டது. நாங்களோ சட்டசபையின் எல்லைக்குள் காலெடுத்துவைப்பதில்லை. ஆகவே, காங்கிரஸ்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் என்ன வேண்டுமானாலும் செய்யவேண்டியதுதானா? தெரிந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர் களாயிருக்கும் அந்தக் காங்கிரஸ்காரர்களின் யோக்கியதையோ சொல்லத்தரமில்லை. இந்நாட்டில் 100-ல் 10 பேருக்குத்தான் ஓட்டுரிமை உண்டு; அதாவது படித்தவர்களுக்கும் சொத்துரிமை உடையவர்களுக்குந்தான் ஓட்டு. பார்ப்பனர்கள் அத்தனை பேரும் படித்தவர்கள்; எனவே, அத்தனை பேருக்கும் ஓட்டு உண்டு. அவர்கள் 100-க்கு 3 பேர்; மீதியுள்ள 7 பேரில் 5 பேர் பணக்காரர்களாவும், 2 பேர்—படித்த பார்ப்பனர் தயவால் உத்தியோகம் பார்த்துவரும் ஏழைத் திராவிடர்களாகவும் இருப்பார்கள். இந்தப் பத்துப் பேர்களுக்குந்தான் சட்டசபை மெம்பர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும் உரிமை உண்டு. தேர்தல் என்றால் 10 ஆயிரம், 20 ஆயிரம் செலவாகும். எனவே, ஏழைமகன் எவனும் தேர்தலுக்கு நிற்கமுடியாது. நிற்பதாயிருந்தால், அவன் யாராவது ஒரு பணக்காரனுடைய அடிமையாகத்தான் நிற்கவேண்டியிருக்கும். எனவே, பார்ப்பன அடிமைகளும் பணக்காரர் களும்தான் இன்றைய சட்டசபை மெம்பர்கள்; அவர்கள்தான் நம்முடைய பிரதிநிதிகள். இப்படிப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து ஏழைகளுக்குச் சாதகமான சட்டதிட்டங்கள் எவற்றை யாவது எதிர்பார்க்க முடியுமா? இவர்களுடைய யோக்கியதைதான் இப்படியென்றால், மத்திய சட்டசபை அங்கத்தினர்களின் யோக்கியதை இதைவிடக் கேவலமானது.

இந்த மாகாணத்திலிருந்து மத்திய சட்டசபைக்கு 45 பேர் அனுப்பப் படவேண்டு மென்று ஏற்பாடுசெய்தனர். அந்த 45 பேரில் ஒருவர்கூட இந்தச் சட்டசபை மெம்பர்களால் சுயமாகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. மத்திய பார்லிமெண்டரி போர்டு யாரைத் தெரிந் தெடுத்து அனுப்பவேண்டுமென்று மாகாண சட்டசபைக் கட்சித் தலைவருக்கு எழுதி அனுப்பினார்களோ—அதே ஆட்களை, இந்த மெம்பர்கள் தேர்ந்தெடுத்தனுப்பினர். சண்முகஞ் செட்டியாரைத் தேர்ந்தெடுத்தனுப்புங்கள் என்றால்—சண்முகஞ் செட்டியார்;

அல்லாடி அய்யரைத் தேந்தெடுத்தனுப்புங்கள் என்றால்—அல்லாடி அய்யர்; இந்தப்படியே 45 பேரும் மத்திய பார்லிமெண்டிரி போர்டாரால் நாமினேஷன் செய்யப்பட்டு, இங்குள்ள அடிமைச் சட்டசபை அங்கத்தினர்களால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இந்தப் படியாக ஜனநாயகத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத முறையில் தெரிந்தெடுத் தனுப்பிக்கப்பட்டுள்ள அடிமை வீரர்கள்தாம் நமது விதியை நிர்ணயிக்கும் வேலையில் டில்லியில் ஈடுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட இராஜ்யத்தை 'ஹம்பக் ராஜ்யம்' என்று கூறுவதா? சுயராஜ்யம் என்று கூறுவதா? ஒரு சட்டசபை மெம்பருக்குக்கூடச் சுயமாக ஓட்டுக்கொடுக்க உரிமை தரப்படாமல் இன்னாருக்குத்தான் ஓட்டுச் செய்ய வேண்டு மென்று ஒரு சீட்டில் எழுதித் தரப்பட்டதென்றால்—இவர்கள் அடங்கிய சர்க்காரை சுயராஜ்ய சர்க்கார் என்று கூறமுடியுமா?

வெள்ளையனாவது அன்னியன்; அவனுக்கு மக்களிடத்தில் பொறுப்பில்லை; நாட்டைப்பற்றியும் கவலையில்லை. 'ஜனநாயகம்' என்று மேடை மேடையாகக் கூறித் திரியும் காங்கிரஸ்காரர்களுக்காவது, கொஞ்சமேனும் ஜனநாயக முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை வேண்டாமா? ஜனநாயகத்தில் கடுகளவேனும் காங்கிரஸ்காரர் களுக்குப் பற்றிருந்தால் இந் நாட்டிற்கு ஒரு இராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனர லாகி இருக்கமுடியுமா? இராஜகோபாலாச்சாரியாரைப்பற்றி சர்தார் பட்டேல், 'அவருக் கென்ன தெரியும்? கதைகூறி மக்களை ஏமாற்றத்தான் தெரியும்' என்று கூறியது இன்னமும் கவனத்திலிருக்குமே? ஒரு இராஜேந்திரப் பிரசாத்தும் ஒரு நேருவும் அவரைத் தூற்றியதற்கு அளவு காட்டமுடியாதே! இங்கு அவரால் நாலணா மெம்பராகக்கூட ஆக முடியவில்லையே! அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சென்ற இடமெல்லாம் கல்லடியும் தாரடியும் கிடைத்ததே! போலீஸ் வளையத்திலேயே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறதே! கல்கத்தா போய் ஆஜாத் தயவால்தானே மெம்பராக முடிந்தது? மறுபடியும் ஒரு அசப்அலி தயவால்தானே கமிட்டி மெம்பராக முடிந்தது? இம் மாகாணத்து மக்களால் இவ்வளவு வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒருவருக்கு, சுயராஜ்யம் வந்ததும் கவர்னர் ஜெனரல் வேலை கொடுக்கப்பட்டது என்றால்—இம் மாகாண மக்களின் ஜனநாயக உணர்ச்சிக்குச் சாவு மணி அடிக்கும் வேலைதானே? அவரை அங்குக் கவர்னர் ஜெனரல் ஆக்கிவிட்டு, அங்கிருந்து ஒரு மகாராஜாவை இம் மாகாணத்துக்கு கவர்னராக அனுப்பிவைக்கிறார்கள் என்றால்—இம் மாகாண மக்களின் சுதந்திர உணர்ச்சியை நையாண்டி செய்கிறார்கள் என்பதுதானே அர்த்தம்? வெள்ளையன் எப்படி இம் மாகாண மக்களின் விருப்பத்தைப்பற்றிக் கவலைப்படாது இங்கிலாந்திலிருந்து கவர்னரை அனுப்பி வந்தானோ அப்படித்தானே—இன்றும் வடநாட்டிலிருந்து ஒரு மார்வாரி மகாராஜா கவர்னராக அனுப்பப்படுகிறார்?

எவ்விதத்திலும் மாறுதலைக் காண முடியவில்லையே? எங்கே பேச்சுரிமை, எழுத் துரிமைக் கூச்சல்கள்? வெள்ளையனை ஓட்டிவிடுகிறோம் என்று நம்மிடமிருந்து ஓட்டு வாங்கிச் சென்று, இன்னும் வெள்ளையனையே நமக்கு இராஜாவாக வைத்துக்கொண்டு, அவனோடு ஏதோ ஒப்பந்தம் செய்துகொண்டதன்மூலம் பெறப்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்தை சுயராஜ்யம் என்று விளம்பரப்படுத்திப் பித்தலாட்டம் செய்து ஆட்சி நடத்துவ தென்றால், அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ளுவதா? பூரண சுதந்திரம் வாங்கித் தருவோம் என்று சவாலிட்டு ஓட்டு வாங்கிச் சென்ற தோழர்கள்—குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்கும் போல் இருக்கிறதென்றால்—மறுபடியும் பொது ஜனங்களின் அபிப் பிராயத்தைக் கேட்டிருக்கவேண்டாமா? கேட்டார்களா இவர்கள்? வெறும் கைதூக்கத்தானா இவர்கள் நம்மிடம் ஓட்டுப்பெற்றுச் சென்றனர்? சர்க்கார் கொண்டுவரும் சட்டத்தின் பேரில் காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் யாரும் திருத்தம் கொண்டுவரக்கூடாது என்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்களாமே! இது நியாயமா? பேச்சுரிமை, எழுத்துரிமை என்று கூறியதெல்லாம் இன்று எங்கேயோ மறைந்து விட்டனவே! சர்க்காரின் குற்றங் குறைகளை

எடுத்துக்கூறி வருபவர்கள் ஒன்று ஜெயிலில் அடைக்கப்படுகிறார்கள் அல்லது சுயராஜ்ய விரோதிகள் என்று தூற்றப்படுகிறார்கள்.

தோழர்களே! உங்களுக்கு எனது கருத்தைத் தெளிவாகத் தெரிவிக்கு முகத்தான் எந்த எந்த விதமாகவோ பேசி இருப்பேன். தவறுதலாக—ஏதாவது கடுமையான வார்த்தைகள் என்னையறியாமலே வெளியாகி இருந்தால் அதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். இம் மாதக் கடைசியில் மறுபடியும் இந்தி எதிர்ப்பு மறியல் துவங்கும். சர்க்கார் அதை எப்படி ஒடுக்க முயற்சிப்பார்களோ தெரியாது. அவர்கள் தடியையே நம்பி இருக்கிறார்களோ அல்லது துப்பாக்கியையும், வெடிமருந்தையும் நம்பி இருக்கிறார்களோ அல்லது ஜெயிலைத் தான் நம்பியிருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. நாங்கள் வேண்டுவது இதுதான் : 11-வது வகுப்புக்கு மேல் (Sixth Form) கல்லூரி வகுப்புக்களில் இந்தியை எப்படி வேண்டுமானாலும் போதிக்கட்டும்; நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை; ஆனால் உயர்தரப்பள்ளிகளில் மட்டும் இந்தி எந்த வகையிலும் தலைகாட்டக் கூடாது; அவ்வளவு தான் நாம் வேண்டுவது.

கடைசியாக, காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! ரேஷன் பெர்மிட்டுக்கோ, கள்ள மார்க்கெட் லைசென்ஸுக்கோ, மற்ற தரகுக்கோ, சர்க்கார் அதிகாரிகளை மிரட்டிப் பெறும் இலஞ்சக் காசுக்கோ, சர்க்கார் தயவை எதிர்பார்த்துத் திரியும் சுயநலமிகள் அல்லாத மற்ற காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! நாங்கள் உங்களுடைய உண்மைத் தொண்டர்கள். பொது வாழ்க்கையில் உங்களைப்போல் எவ்வித சுய நலத்தையும் கருதாது பணியாற்ற வேண்டுமென்று உண்மையிலேயே விருப்பப்படுபவர்கள். நீங்கள் செய்ய நினைக்கும் எந்த நல்ல காரியத்திற்கும் உங்களுக்குத் தோள் கொடுத்து உதவத் தயங்காதவர்கள். உத்தியோகத்திலிருப்பவர்களின் அக்கிரமச் செயல்களையும், வியாபாரிகளின் கொள்ளைகளையும், பார்ப்பனர்களின் புரட்டல்களையும் மக்களிடம் எடுத்துக்கூறி, அவர்களைச் சிந்திக்கச் செய்பவர்கள் நாங்கள். நாங்கள் யாருக்கும் விரோதிகளல்லர். எதையும் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதில்தான் எங்கள் கவலை பூராவும் அடங்கிக் கிடக்கிறது. நாட்டிலுள்ள வேறு எந்தக் கட்சியைக் காட்டிலும் மிக மிக முன்னேற்றமான கொள்கையுடையது எங்கள் கழகந்தான். இந்த மாதிரி நல்ல ஸ்தாபனம் கிடைத்தலரிது. இதை நானே சொல்லிக் கொள்வது கேவலம் என்றாலும்—உணராதவர்களுக்கு எடுத்துக் கூறத்தான் வேண்டியிருக்கிறது. எனவே, கூடுமானவரைக்கும் எங்களோடு ஒத்துழையுங்கள்; உண்மை வழி நிற்கும் எங்களுக்கு உதவி புரியுங்கள்.

மாணவத் தோழர்களே! எங்கள் அழைப்பு என்றைக்கு வருகிறதோ அன்று—பள்ளிகளை விட்டு, கல்லூரிகளை விட்டு வெளியேறிவரத் தயாராகுங்கள்! படிப்புக்கூட பிறகு பார்த்துக் கொள்ளலாம்; அல்லது ஜெயிலிலே பள்ளி நடத்தலாம், ஆசிரியர்களையும் உடன் சேர்த்து வாருங்கள்.

வாலிபத் தோழர்களே! தோழியர்களே! நீங்களும் தயாராய் இருங்கள். கலியாணம் செய்துகொள்வதும், பிள்ளைகள் உற்பத்தி பண்ணத் துவக்குவதும் அப்புறம் ஆகட்டும். தாய்மார்களே! உங்களுடைய இழிவைப் போக்குவதற்குத்தான், சட்டத்தாலும் சாஸ்திரத்தாலும் கடவுள் பேராலும் உங்களுக்கு இருந்துவரும் முன்னேற்றத் தடைகளைத் தகர்த்தொழிக்கத்தான் எங்கள் கழகம் ஆரம்ப முதற்கொண்டு தொண்டாற்றி வருகிறது. நீங்கள் சமூகத்தில் மிகமிகத் தாழ்ந்த ஜந்துக்களாக ஆக்கப்பட்டு, ஆண்களுக்கு நிரந்தர அடிமைகளாக—கட்டிலறைப் போகப் பொருள்களாக இருந்துவருகிறீர்கள். இன்று உங்களில் ஒரு சிலருக்காவது சற்று சுதந்திரத்தோடு வாழ முடிகிறதென்றால், அதுவும் எங்கள் கழகம் செய்த தொண்டின் பயனால்தான் என்பதை உணர்ந்து எங்கள் கழகத்தை ஆதரித்து உதவுங்கள்.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-10-1948]

4. இந்தித் திணிப்பு

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தி கட்டாயப்படுத்தப் படுவதற்குத்தான் நாம் எதிரிகளே ஒழிய, தனிப்பட்டவர்கள் செய்யும் இந்திப் பிரச்சாரத்திற்கு நாம் விரோதிகளல்லர். இந்திப் பிரச்சார சபைகளையே அழித்தொழிக்க வேண்டுமென்பதும் நம் நோக்கமல்ல. இதைப் பொதுமக்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆட்சியாளர்களும் வெறும் பேருக்குத்தான் கட்டாயமில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். இந்தியைக் கட்டாயப்படுத்தவேண்டும் என்பதுதான் தங்கள் ஆசை யென்றும், இந்தியை எல்லோரும் கற்கவேண்டுமென்றே தாங்கள் விரும்புவதாகவும்—இந்தி இந் நாட்டின் தேசிய மொழியாதலால் அதை எல்லோரும் கற்கவேண்டுவது அவசியமே என்றும் கூறிவருகிறார்கள்.

இந்தி இந் நாட்டின் தேசிய மொழி என்பதையே நாம் மறுக்கிறோம். இந் நாடு திராவிட நாடு. இந் நாட்டு மக்கள் திராவிடர்கள். இந் நாட்டு மொழி திராவிட மொழி. இந் நாட்டிற்குத் திராவிட மொழிதான் தேசிய மொழியாக இருக்க முடியுமே ஒழிய, இந்தி போன்ற வேறுநாட்டு மொழி ஒருக்காலும் இந் நாட்டிற்குத் தேசிய மொழியாக இருக்க முடியாது.

இந் நாட்டிற்குத் திராவிடத் தேசியம்தான் தேவையே ஒழிய, டெல்லித் தேசியமோ, அய்க்கிய மாகாணத் தேசியமோ, மற்ற வடநாட்டுத் தேசியமோ தேவையில்லை.

நாம் நிரந்தரமாக வடநாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கப் போகிறோமா? நாம் வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து என்றைக்குமே விடுதலை அடையப்போவதில்லையா என்பதை நம் தேசியத் திராவிடத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வந்த சுயராஜ்யத்தில் நமக்குப் பங்கில்லையா? அல்லது சுயராஜ்யம் நம்மை அடிமைகொள்ள வந்திருக்கிறதா என்பதையும் நம் தேசியத் திராவிடத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளையர் நாட்டில் ஜப்பான் மொழி தேசிய மொழி ஆடுவிடுமா? ஜெர்மன் நாட்டில் ரஷ்ய மொழி தேசிய மொழி ஆடுவிடுமா? அந்த சர்க்காரால் ஒப்புக்கொள்ளப் படுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அதேபோல்—திராவிட நாட்டிலும் ஆரியத் தேசியம், ஆரிய மொழித் தேசியம் செல்லுபடியாகாது; ஒப்புக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

வெள்ளையர்கள் வடவரிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு நம்மை அக்கிரமமாக விற்று விட்டார்கள். அதனால்தான், அவர்கள் நம்நாட்டில் ஆரியமொழித் தேசியத்தை—மார்வாரி பொருளியல் தேசியத்தை—குஜராத்தி அரசியல் தேசியத்தைப் புகுத்துகிறார்கள். இது நீதியு மல்ல, நேர்மையுமல்ல என்பதைத் தேசியத் தோழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தியை நம் நாட்டில் புகுத்துவது நம்மை நிரந்தரமான அடிமைகளாக ஆக்கிக்கொள்ளச் செய்யப்படும் சூழ்ச்சிதான். ஆரியர்கள் எப்படி நம்மை கீழ்சாதிக்காரர்களாக ஆக்கி அடிமைப்படுத்தினார்களோ—அதுபோல, இன்றைய வடநாட்டு ஆட்சியும் நம்மை அன்னக் காவடிப் 'பாப்பர்'களாக்கி அடிமைகொள்ளப் பார்க்கிறார்கள்.

ஆரியர்கள் நம்மை முதலில் எப்படி அடிமைகொண்டார்கள்? படை பலத்தில் யுத்தம் நடத்தி வெற்றிபெற்றதன் மூலம் அல்லவே! தந்திரமாக—தமது புராண இதிகாசங்களைக் கலைகளாக்கி, அவற்றை நம் மக்களிடையே புகுத்தினார்கள். அவற்றின் தத்துவத்தை—அத் தத்துவக் கடவுள், அவற்றின் தர்மங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒப்புக்கொள்ளும் படி செய்தனர். அதில் அவர்கள் வெற்றிபெற்று, அதற்கேற்ப மனுநீதிச் சட்டம் வகுத்து, நம்மைக் கீழ்மக்கள்—ஈனப் பிறவி ஆக்கினர். அதாவது, மதத்தை முதலில் நம்மை ஒப்புக் கொள்ளச் செய்த பிறகு நம்மைக் கீழ்மக்கள் என்று கூறும் சட்டம் செய்துகொண்டனர்.

இதை உணர்ந்து மதத்தைக் கண்டிக்க நாம் ஆரம்பித்ததும், வேறுவழியில்—அதாவது, தேசியத்தின் பேரால் இந்தியைப் புகுத்தி—அதன்மூலம் ஆரியர் கருத்துக்களைப்புகுத்தி—அதன் வழி நாம் அறிவைப் பாழாக்க நினைக்கின்றனர். நமது பிரச்சாரத்தின்மூலம் மக்கள் ஒரு அளவுக்கு ஆரிய கலாச்சாரத்திலிருந்து விடுதலை பெறவும், அதை வெறுக்கவும் முற்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால், குழந்தைப் பருவத்திலேயே ஆரியக் கலாச்சாரத்தைப் புகுத்தவேண்டி இந்தியை ஆரம்பப் படிப்பிலேயே புகுத்த முயற்சிக்கிறார்கள். மதத்தினால் புகுத்த முடியாமல்போன பித்தலாட்டக் கருத்துக்களை மொழியின் மூலம் புகுத்தச் சூழ்ச்சி செய்யப் படுகிறது. இந்திக்கும் சமஸ்கிருதத்திற்கும் அதிக பேதமில்லை என்பதை இந்தி ஆதரவாளர்களே ஒப்புக்கொள்கிறார்கள். மதம் செல்வாக்குடன் இருந்த சமயத்தில் நாம் சமஸ்கிருதம் படிக்கக்கூடாதென்றும் கூறிவந்தார்கள். திருப்பதி, இராமேஸ்வரம் முதலிய இடங்களிலுள்ள சமஸ்கிருதக் கல்லூரிகளில், அதுவும் சர்க்கார் மானியத்தைக்கொண்டு நடைபெற்று வரும் இக் கல்லூரிகளில்கூட சமீபகாலம் வரை நம் மக்களுக்கு சமஸ்கிருதம் படிக்க வசதியளிக்கவில்லை.

நம் மக்களைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதேயில்லை. சர்க்கார் மானியம் அளிப்பதை நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்திய பிறகுதான் நம் பிள்ளைகளையும் அக் கல்லூரிகளில் சேர்க்க முற்பட்டார்கள். எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடினோமே ஒழிய, சமஸ்கிருதம் படிப்பதால் அறிவு விசாலம் அடையும் என்பதற்காக நாம் போராடவில்லை. நாம் இன்று சமஸ்கிருதம் ஆரிய மொழி என்றும், அது நம் திராவிட கலாச்சாரத்தை அடியோடு பாழ்படுத்தி நிற்கும் மொழி என்றும், அதைப் படிப்பதால் மூட நம்பிக்கைக் கருத்துக்கள்தாம் வளர்ச்சியடையுமேயொழிய—ஆபாச அறிவுதான் வளர்ச்சியடையுமேயொழிய—பகுத்தறிவு வளராது என்றும் பிரச்சாரம் செய்வதன் பயனாக, சமஸ்கிருதத்தைக் கட்டாயப்படுத்தும் வாய்ப்பற்றவர்களாய்ப் போய் விட்டார்கள். மேலும், அது பேசும் பழக்கத்தில்—உரையாடும் பழக்கத்தில் இல்லாது போய்விட்டதால் அதைக் கற்கும்படி வற்புறுத்த இயலாமல் போய்விட்டது.

எனவே, சமஸ்கிருதத்தின் மூலம் புகுத்த முடியாமற்போன பித்தலாட்டக் கருத்துக்களை அதன் வழிமொழியான இந்தியின் மூலம் புகுத்த முற்பட்டிருக்கிறார்கள். அரசியல் ஆதிக்கத்தின் உதவியால் இந்தியைப் புகுத்துவதில் வெற்றி காணலாம் என்று நினைத்திருக்கிறார்கள்.

இனி சர்க்கார் இந்தியால்தான் நடைப்பெறப்போகிறதாம். கோர்ட்டுகளும், சட்டசபைகளும் இந்தியிலே நடைபெறலாம். தொழிற்படிப்பான வைத்தியப் படிப்பு, 'என்ஜினீயரிங்' முதலிய படிப்புகள் யாவுமே இந்தியில் நடைபெறலாம். இன்னும் 10 ஆண்டுத் தவணையில் இன்று ஆங்கிலத்தில் நடைபெற்று வரும் சகலமும் இந்தியில் நடைபெற வேண்டுமென்று மத்திய சட்டசபையில் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

[சென்னையில், 10-1-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-1-1950]

5. அரசியல் கிளர்ச்சி அல்ல

இந்தி எதிர்ப்புக்கு ஆதரவளிப்பதை அரசியல் பணியாகவே யாரும் கருதக்கூடாது என்றும் இதை மொழிப் பாதுகாப்புப் பணியாக ஒவ்வொரு தமிழரும் கருதவேண்டும் என்றும் தலை குனிந்து வேண்டிக்கொள்கிறேன்.

1948 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்பு துவங்கிய காலத்தில்—அதாவது இரண்டாவது எதிர்ப்புக் கிளர்ச்சி காலத்தில் தோழர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தார். நான் எதிர்ப்புக்குத் தேதி குறிப்பிட்டவுடன், 2 நாட்களுக்கு முந்தி

என்னை நேரில் அழைத்தார். நான் நேரில் சென்றேன். அன்பாய் வரவேற்று துவக்க வாக்கியமாகக் கலக்கத்துடன், 'நீ இருக்கவேண்டிய இடத்தில் நான் இருக்கிறேன்' என்றார். 'இந்த இடத்தில் நான் இருக்க நினைத்தால் இந்த இடம் எனக்கும் கிடைக்காது; உங்களுக்கும் கிடைத்திருக்காது' என்றேன்.

'என்ன இருந்தாலும் நீ காங்கிரசை விட்டுப்போனது தவறு' என்றார்.

'நான் காங்கிரசில் இருந்திருந்தால் இன்று நீங்கள் செய்கிற அளவு காரியம் கூட எனக்குச் செய்ய வாய்ப்புக் கிடைக்காது; அடிமையாகவேதான் இருந்திருக்க வேண்டும்' என்றேன்.

பிறகு சில வார்த்தைகள் பேசிய பின், 'என்ன இப்படி ஆரம்பித்து எனக்கு நீ வேறே தொல்லை கொடுக்கப் போகிறாயே?' என்றார்.

'என் நாட்டின் சுதந்திரத்தை முன்னிட்டுச் செய்கிறேன்' என்றேன்.

அதன் மீது அதுபற்றிச் சிறு விவாதம் நடந்தது. முடிவாக 'நான் எப்படியோ மாற்றிக்கொள்ள முடியாத நிலையில் இப்போது இருக்கிறேன். என்னைப்பற்றித் தவறாய்க் கருதக்கூடாது' என்றேன். அதையே அவரும் சொல்லிப் பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு என்னை வழியனுப்பினார்.

கிளர்ச்சி தொடங்கியதும் அவரும் அவரது கடமையைச் செய்தார்; எப்படியோ முடிந்தது. அதனால் எங்களுக்குள் ஒரு மனத்தாங்கலும் ஏற்படவில்லை என்பதோடு, பல காரியங்களில் அவர் ஆட்சியை நான் ஆதரித்தும் வந்திருக்கிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—25-7-1952]

6. இந்தி எதிர்ப்பின் பயன்கள்

இந்தி எதிர்ப்புக்கு இது (ஆகஸ்ட் கிளர்ச்சி) மூன்றாவது போராட்டமாகும். முதல் போராட்டம் 1938-ல் நடந்தது. அப் போராட்டம் 1500 பேர்களைச் சிறைக்கு அனுப்பி, 2 பேர்களின் உயிர்களை வாங்கி, பல குடும்பங்கள் பல இன்னலடைய நேரச்செய்து, முடிவில் கட்டாயம் (கம்பல்சரி) என்கின்ற சொல் மாத்திரம் நீக்கப்பட்டது. என்றாலும், கூரை வீட்டில் தீப்பற்றியதுபோல், அதுமுதல் பள்ளிகளில் எல்லாம் இந்தி வாழ்ந்தும், வளர்ந்துமே வந்தது. நாட்டிலும் வடவர்கள் பொருளுதவியாலும், பார்ப்பனர்கள் முயற்சியாலும், காங்கிரசினுடைய ஆதரவாலும் இந்தி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்க்கப்பட்டே வந்தது—வருகிறது.

இந்தி வளர்ச்சியின் தன்மை அந்தப்படியாக இருந்தபோதிலும், அந்த 1938 ஆம் வருஷத்திய ஆட்சியில் நுழைக்கப்பட்ட கட்டாய இந்தி பற்றிய கிளர்ச்சியானது, தமிழ் நாட்டிற்கே (திராவிடத்திற்கே) தமிழர்களுக்கே ஒரு திருப்பு முனையாகிப் (Turning Point) பெருவாரியான பாமரர்களுக்குப் பார்ப்பனர்களின் உண்மைத் தத்துவத்தை அறியச் செய்யவும், தமிழ் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் தமிழைப்பற்றிய கவலை ஏற்படவும், தமிழனின் தன்மை, தமிழனின்—தமிழ் நாட்டின் (திராவிடத்தின்) சரித்திரம் மக்கள் கவனத்திற்கு வரவும், தமிழ்நாடு சுதந்திரமாகத் தனித் தியங்க வேண்டும் என்கின்ற கொள்கையைக் காங்கிரசிலுள்ள தமிழர்கள் தவிர மற்ற பொதுமக்கள் உட்பட யாவரும் ஆதரிக்கவுமான ஒரு நிலை ஏற்பட்டது. நம் வாழ்நாளில் அதுவரை தமிழ் பற்றி, பார்ப்பனர்பற்றி ஏற்பட்டிராத ஒரு கிளர்ச்சி அச் சமயத்தில் ஏற்பட்டு, இலகுவில் மறைந்துவிட முடியாததான ஒரு உணர்ச்சியை நிலை நிறுத்தியது என்று சொல்லலாம்.

மற்றும், அக் கிளர்ச்சியானது தமிழர்களின் அரசியல், உத்தியோக இயல், மத இயல், கடவுள் இயல், கலை இயல் முதலிய பல முக்கிய இயல்களிலும் ஒரு நல்ல உணர்ச்சியும் மாற்றமும் ஏற்படப் பெரும் காரணமாக இருந்தது என்றும் கூறலாம்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், அக் கிளர்ச்சிக்கு அப்புறமே திராவிட அதிகாரிகள், சிப்பந்திகள் முதலியவர்களும், மாணவர்கள் ஆசிரியர்கள் முதலியவர்களும்—ஏன், மந்திரிகள் முதலியவர்களுங்கூட தகுந்த அளவுக்கு ஆரியர்–திராவிடர் என்ற பேதமும், ஆரியக் கலை–திராவிடக் கலை என்ற பேதமும் உணர நேர்ந்ததோடு காரியத்திலும் நடைபெறச் சிறிது வாய்ப்பும் ஏற்பட முடிந்தது எனலாம்.

இவை மாத்திரமல்லாமல், அக் கிளர்ச்சிக்கு அப்புறமே பார்ப்பனர்களும் தங்கள் போக்கைச் சிறிதாவது மாற்றிக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை யாரும் மறைக்கமுடியாது. பார்ப்பனர்கள் தேவார, திருவாசக, பிரபந்த மாநாட்டைத் திறப்பது, பார்ப்பன குரு சங்கராச்சாரியார், திராவிட குரு பண்டார சந்நதி வீட்டிற்குச் சென்று கூட்டு முயற்சிக்கு ஒப்பந்தம் பேசுவதும் ஆன காரியங்களே பார்ப்பனர்களின் போக்கு மாற்றத்திற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

மற்றும் சரிபகுதி பார்ப்பனர்கள் இருந்துவந்த மந்திரி சபையானது 13, 15-க்கு 2 பேர், 3 பேர் என்ற அளவிற்குச் சுருங்க நேரிட்டதும் 1938ஆம் ஆண்டு இந்தி கிளர்ச்சிக்குப் பின்புதான். எனவே, 1938ஆம் ஆண்டைய முதலாவது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி–கட்டாய இந்தியை எடுக்கச்செய்தது மாத்திரமல்லாமல், மேற்கண்ட மற்ற காரியங்களையும் செய்ய உதவியிருக்கிறது.

அடுத்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியானது, 1938-க்கு அப்புறம் காங்கிரஸ் இரண்டாம் தடவையாக மந்திரி சபைப் பீடம்ஏறி ஆட்சிசெலுத்திய காலமாகிய 1948 ஆம் ஆண்டில் ஆகும். அந்தச் சமயத்திலும் இந்தி கட்டாயமாக்கப்பட்ட ஒரு சாக்குக் கிடைத்தது. அதன் மீது ஓர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி துவக்கப்பட்டது. அந்தக் கிளர்ச்சியும் பெருத்த ஆடம்பரமாய் மக்கள் கவனத்தைக் கவரும்படியாய் நடக்காவிட்டாலும்—அப்படி நடைபெறாததற்குக் காரணம் நாமல்ல; சர்க்காரேயாகும். ஏனென்றால், கிளர்ச்சிக்காரரை, மறியல் செய்தவர்களை மற்றும் யாரையும் சிறை பிடிக்கவில்லை; நல்ல அடக்குமுறை எடுக்கவில்லை. அதனால், மக்களுக்கு உணர்ச்சியும் உற்சாகமும் ஏற்படவில்லை. ஆனால், கிளர்ச்சி துவக்கமானது மாபெரும் அஸ்திவாரத்தின்மீதே துவக்கப்பட்டது.

அதாவது, 1948ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாடானது சென்னையில் (செண்ட் மேரீஸ் ஹாலில்) மறைமலை அடிகள் தலைமையில், தெருக்கள் எல்லாம் அடைபடும்படி 25000 மக்கள் முன்னிலையில், அந்த ஹாலும் அந்தத் தெருவும் அதுவரை கண்டிராத அளவு கூட்டத்தில் மகா உற்சாகத்துடன் கூடியது.

அதில் மறைமலை அடிகள், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் முதல் தோழர்கள் கதர் பிரதிநிதி நாரண துரைக்கண்ணனார், காங்கிரஸ் பிரதிநிதி ம. பொ. சி., கிறிஸ்தவ பிரதிநிதி ரெவரெண்ட் அருள் தங்கையா, முஸ்லிம் லீக் பிரதிநிதி அப்துல் மஜீத், டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி, வி. வி. இராமசாமி, மாஜி மேயர் இராதாகிருஷ்ண பிள்ளை, கே. ஏ. பி. விஸ்வநாதன் முதலிய திராவிட கழகத்தினர் அல்லாதவர்களும், அதன் எதிரிகளும் ஏராளமாக வந்திருந்தார்கள். இம் மாநாடு தவிர மற்றும் பல மாநாடுகள்–புலவர் மாநாடு, மாணவர் மாநாடு, பெண்கள் மாநாடு முதலிய பல மாநாடுகள் கூடி இந்தியை எதிர்த்துத் தீர்மானங்கள் செய்ததோடு, நேரடிக் கிளர்ச்சியில் கலந்துகொள்ள ஏராளமான மக்கள் முன் வந்தார்கள். அடக்குமுறை இல்லாததால் கிளர்ச்சி சிலருக்குச் சப்பிட்டுப் போனாலும் அக் கிளர்ச்சியும் வெற்றிபெற்றது.

அதாவது, முன்னையக் கிளர்ச்சி வெற்றிபோலவே இதன் பயனாகவும் சர்க்கார் கொள்கையில் இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லப்பட்டு, அந்தப்படியே கட்டாயம்

எடுக்கப்பட்டதாக மந்திரிகளாலேயே அறிவிக்கவும்பட்டது. இதனாலும் தமிழருக்குள்—தூண்டிவிடப்பட்ட விளக்குபோல் ஒரு அளவுக்கு விழிப்பு ஏற்பட்டது.

எனவே, இதற்கு முன் 1938-லும் 1948-லும் நடந்த இரண்டு கிளர்ச்சிகளும் அந்தக் காரியக் கொள்கையில் வெற்றி பெற்றன என்றாலும் அந்தக் காரியத்தில் முழு வெற்றி என்று சொல்ல முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை. ஆனால், வேறு பல காரியங்கள் அதுவும் சுலபத்தில் நீண்டநாள் முயற்சியாலும் பிரச்சாரத்தாலும் கூட நடைபெறச் செய்ய முடியாத காரியங்கள் நடந்திருப்பதை நான் பெருமையோடு, அகக் களிப்போடு சொல்லிக்கொள்கிறேன்.

இது, அதாவது, ஆகஸ்ட் ஒன்றாந்தேதி நடப்பது 3-வது இந்திக் கிளர்ச்சி என்பதோடு, அதுவும் காங்கிரசின் 3-வது மந்திரிசபை ஆட்சியின்போது நடைபெறுகிற 3-வது கிளர்ச்சி ஆகும்.

இக் கிளர்ச்சியானது முன்னையக் கிளர்ச்சிகள் போன்றதல்ல. அவை கட்டாய இந்தி கூடாது என்பதற்காக நடத்தப்பட்டவை. அவற்றில் பார்ப்பானது வேஷமே முக்கியமாய் இருந்தது. என்னைப் பொறுத்தவரை அக் குறிக்கோள் வைத்தும் அவை நடத்தப் பட்டவையாகும்.

ஆனால், இது அப்படியல்ல. கட்டாய இந்தி கூடாது என்பது மாத்திரமல்ல; அப்படியானால் குள்ளநரிக் கூட்டமெல்லாம் இதில் புகுந்து துரோகம் செய்துவிட முடியும். இதற்கு யாரும் 'நானும் கூடத்தான்' என்று சொல்லிவிட முடியும். ஆதலால், இந்தக் கிளர்ச்சி கட்டாய முறைக்கு மாத்திரமல்லாமல் அரசியலிலும், சமுதாய இயலிலும், கல்வி இயலிலும், அரசாங்க ஆதரவில், அரசாங்க நடப்பில் திராவிட நாட்டில் (தமிழ் நாட்டில்) இந்தி தலை காட்டக் கூடாது என்பதற்கு ஆகும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், இரயில் பலகைகளில் 'போஸ்ட் ஆபீஸ்'களில், கார்டு கவர்களில், 'போஸ்ட்' முத்திரைகளில் 'கட்டாயமாகவா' இந்தியை சர்க்கார் புகுத்துகிறார்கள்? அவர்கள் ஆட்சி முறையில்—குழாயில் தண்ணீர் வருவதுபோல் வந்து, இந்தி புகுந்துகொண்டு இருக்கிறது. இதை எப்படிக் கட்டாயமாகப் புகுத்துதல் என்று சொல்ல முடியும்?

முன்பு ஆங்கிலேயன் ஆட்சியினால்தான் சர்வம் ஆங்கில மயமாக்கப்பட்டது. இதில் கட்டாயம் எதுவும் இல்லையே! இந் நாட்டிலுள்ள எல்லாப் பார்ப்பனரும் ஆங்கிலத்தை வரவேற்றார்கள்; அதற்காக ஆங்கிலேயனுக்கு நன்றி செலுத்தினார்கள்; ஓடி, ஓடி, முக்கி முக்கிப் படித்தார்கள். அதைப்பற்றித் திராவிடன் கவலைப்படவே இல்லை. நல்ல திராவிடன், செல்வத் திராவிடன், 'நமக்கு எதற்கு ஆங்கிலம்?' என்று சொல்லிவிட்டான். ஆங்கிலத்தால் பதவி, உத்தியோகம், வருவாய் கிடைக்கின்றன என்று கண்டதும் சிறிது படிக்க ஆரம்பித்தான். அதற்கும் பார்ப்பான் முட்டுக்கட்டை போட்டு ஆங்கிலத்தைத் தனக்கே ஆக்கிக்கொண்டான்.

பிறகு திராவிடன் கிளர்ச்சி செய்தான். அக் கிளர்ச்சியைப் பார்ப்பனால் அடக்க முடியவில்லை. எப்படியோ, ஆங்கிலேயன் போய்விட்டான். அந்த இடத்தில் பார்ப்பான் உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்து, ஆங்கிலத்திற்குப் பதிலாக, அந்த இடத்தில் இந்தியை வைத்தான். இந்தியாவில் பதவி மாத்திரமல்லாமல் ஆட்சியையே தனக்கு நிரந்தரமாகத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ளத் திட்டமிட்டுக்கொண்டான். இப்போது நாம் இந்தியை மொழி காரணமாகவே வெறுக்கவில்லை. இந்திமூலம் ஆட்சியையும், பதவியையும் நிரந்தரமாகத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ளும் முயற்சியை எதிர்க்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கை நகர்த்தி நம் கழுத்தை அறுக்கும் கொலை பாதகத்தை எதிர்க்கிறோம். இதற்குத் தமிழர்களை—திராவிடர்களைத் தவிர வேறு யாரும் சம்மதிக்கமாட்டார்கள்.

இந்தியக் காங்கிரஸ், இந்திய சோஷியலிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், இந்திய வெங்காய 'இஸ்டு'யாரும்—இந்திய என்கின்ற பெயரைத் தலையில் கொண்ட எந்தக் கட்சியாரும், பார்ப்பனக் கூலிகள்; வடநாட்டான் கூலிகள்; இவர்களது மறுபதிப்புகள்—திராவிடர் உழைப்பில் உண்டுகளிக்க இருக்கும் காதக எதிரிகள். ஆதலால், இவர்கள் எல்லோருடையவும் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் சேர்த்து எதிர்க்கும் எதிர்ப்பே இந்த இந்தி எதிர்ப்பு ஆகும்.

உதாரணம் வேண்டுமானால், இவர்கள் எல்லோரும், 'கட்டாய இந்தியை நாங்களும் தான் எதிர்க்கிறோம்' என்பார்கள். 'கற்பு அழிப்பு' என்றால் பலாத்காரமாகச் செய்தல் என்பது மாத்திரம்தானா? மற்றவகைகளில் நெருக்கடி, தடுக்கமுடியாத தன்மை, திருட்டுத் தனமாக மயக்குதல், சிறிது சிறிதாக இணங்கவைக்கச் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல் முதலிய காரியங்களால் நடத்தினால் அது 'கற்பு அழிப்பு' ஆகாதா என்று கேட்கிறேன்.

ஆதலால், இந்த நாட்டில் இந்தி எதிர்ப்புக்கு இந்த நாட்டு ஸ்தாபனங்களும்—அதுவும் தமிழினத் திராவிடனைத் தவிர வேறு எந்த இனத்தானும், சாதியானும் அறவே கலந்தில்லாத ஸ்தாபனங்களும், வடநாட்டார் சம்பந்தமே இல்லாத ஸ்தாபனமும், அதுவும் அதில் கலந்துள்ள தமிழர் (திராவிடர்)களும்தான் சேரமுடியும், தொண்டாற்ற முடியும். மற்றவர்கள் இதை ஒழிக்க, எதிர்க்க, சூழ்ச்சிகளைத்தான் செய்வார்கள். அதுவும், 'சோறு இல்லை, துணி இல்லை, கூலி இல்லை, வரி அதிகம், ரோட்டில் புழுதி; இவைகளையெல்லாம் விட்டுவிட்டு—இதற்கு என்னடா அவசியம்?' என்று 'மொடா' வயிற்றில் அடித்துக்கொண்டு 'ரோலர்' கல்போல் 'ரோட்டில்' புரளுவார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து, 'இவைகள் எல்லாம் ஏன் இல்லாமல் போயின? யாரால், எதனால் இல்லாமல் போயின?' என்று ஒரு கேள்விகேட்டால், 'இது பிற்போக்கு சக்தி' என்று சொல்லிவிட்டு 'அண்டர் கிரவுண்ட்' ஆகிவிடுவார்கள்.

ஆனாலும், இப்போது நமக்கு வேறு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. யூனியன் ஆட்சியில் டெல்லிதவிர, அதிலுள்ள பார்ப்பன ஆதிக்கக்காரர்களும், சில யூனியன்களும்—அவர்கள் கூலிகளும் தவிர, மற்ற இராஜ்யக்காரர்கள் அனேகமாக எல்லோருமே இந்தியை எதிர்க்கிறார்கள்; எல்லா நாட்டிலும் எதிர்ப்பு உணர்ச்சி தோன்றிவிட்டது. இதையெல்லாம்விட நம் நாட்டுப் பார்ப்பனர்கள் பலரும் இந்தியை வெறுத்தவர்கள்போல், இந்தி புகுத்துவதை இஷ்டப்படாதவர்கள்போல் காட்டிக்கொள்கிறார்கள். போராட்டம் நீடித்து நடக்க நல்ல ஆதரவுகளும் வளர்கின்றன; நல்ல அறிகுறியும் கொண்ட நல்ல சமயமாக இருக்கிறது.

['விடுதலை'-தலையங்கம்—27-7-1952]

7. நம் போராட்ட நேர்மை

ஒரு நண்பர் என்னிடம் வந்து, 'என்ன இப்படி எழுதியிருக்கிறாயே? இந்தி எழுத்துப் பெயரை அழிக்கவேண்டும் என்கின்ற எண்ணம் உனக்கு இல்லைபோல் தெரிகிறதே! அழிக்கப் போகிறவரின் பெயர் விலாசம் கொடுத்தால், கொடுத்தவர்களை வீட்டில் இருக்கும்போதே, போலீசார் வந்து பிடித்துக்கொண்டு போய்விடுவார்களே; அப்புறம் யார் இந்தியை அழிப்பது? இது என்ன போராட்டம்?' என்று கேட்டார்.

அதற்கு நான் என்ன பதில் சொன்னேன் என்றால், 'நமது போராட்டம் காங்கிரஸ் காரர்களின் 'ஆகஸ்டுப் போராட்டம்' போன்ற நாசவேலைப் போராட்டம் அல்ல; திருட்டு வேலைப் போராட்டமும் அல்ல. இது ஆண்மைப் போராட்டம்; உண்மைப் போராட்டம்; அதுவும் நமது வெறுப்பையும், வேண்டாமையையும் காட்டும் வீரப் போராட்டம்; இதில் பயன் ஏற்படவில்லையென்றால் நான் விலகிக்கொள்கிறேன். மற்றதில் நம்பிக்கையுள்ள மற்றவர்கள் அவரவர் ஆசைப்படி நடந்துகொள்ளட்டும்' என்று சொன்னதோடு—

'எனது 30 வருஷ பொதுத் தொண்டில் ஒரு செயல்கூட, ஒரு போராட்டம்கூட நான் மறைவாய் நடத்தினது கிடையாது; நடத்த அனுமதித்ததும் கிடையாது.

என்மீது பொதுவாழ்வில் சுமார் 20 வழக்குகள் நடந்திருக்கும். என் சொந்த வாழ்விலும் சில வழக்குகள் நடந்திருக்கும். ஒன்றுக்குக்கூட நான் எதிர் வழக்காடி இருக்க மாட்டேன்; ஒப்புக்கொள்ளவும் தயங்கி இருக்கமாட்டேன்' என்று சொன்னேன்.

ஒரு சிறு எடுத்துக்காட்டு :—

1903-ல்—அப்போது எனக்கு சுமார் 24 வயது இருக்கும். அப்போதே வியாபாரத்தில் எனக்கு விளம்பரம் உண்டு; என் தகப்பனார் பெயரில் பெற்று இருந்த ஒரு ஆயிரம் ரூபாய் டிக்கிரியை திருச்சியில் நிறைவேற்ற 'டிக்கிரி' நகலை எடுத்துக்கொண்டுபோய் வக்கீலிடம் கொடுத்து, வக்காலத்து பாரத்தில் என் தகப்பனார் கையெழுத்தை நானே போட்டுக் கொடுத்து, அவசரப் படி கட்டி, ஆளைப்பிடித்துச் சேவகன் கையில் விட்டு உடனே ஈரோட்டிற்கு வந்துவிட்டேன்.

பிரதிவாதி டிக்கிரி பணத்தை வக்கீலிடம் கட்டி, வக்கீலை ரசீது கேட்டார்; அதோடு செலவைத் தள்ளிவிடுங்கள் என்றார். அதற்கு வக்கீல், 'இப்பொழுதுதானே வாதி ஊருக்குப் புறப்பட்டார்; சற்றுமுன் வந்திருந்தால் வாதி இடமே ரூபாயைக் கட்டி ரசீது வாங்கி இருக்கலாமே; அவர் ஏதாவது தொகையில் தள்ளிக்கொடுப்பாரே' என்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் பிரதிவாதி வக்கீலிடம், 'வந்திருந்தவர் வாதி அல்ல; வாதியின் மகன்; இவர் பெயர் இராமசாமி நாயக்கர்' என்றார். உடனே வக்கீல் ஆத்திரப்பட்டு 'அப்படியா?' என்று கேட்டு ரசீது கொடுத்து பிரதிவாதியை அனுப்பிவிட்டு, மறுநாள் முனுசீப் கோர்ட்டில் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்து பணத்தைக் கட்டிவிட்டார். அந்த விண்ணப்பத்தில் நான் ஆள் மாறாட்டம் செய்துவிட்டேன் என்றும், 'போர்ஜரி'—கள்ளக் கையெழுத்துச் செய்து தன்னை மோசம் செய்துவிட்டேன் என்றும் எழுதி இருந்தார்.

முனுசீப் எனக்கு நோட்டீஸ் அனுப்பிவிட்டார். அந்த நோட்டீஸில் 'உன்மீது (கேஸ்) வழக்கு நடத்த ஏன் சாங்கிஷன் கொடுக்கக்கூடாது?' என்று கண்டிருந்தது.

இந்த நோட்டீஸ் எனக்கு வந்ததும், தென் இந்திய வியாபார உலகமே ஆடிவிட்டது. காரணம், அப்போது என் தகப்பனாருக்கும், எனக்கும் வியாபார உலகில் இருந்த பிரபலப் பெயராகும்.

என் தகப்பனார் இந்த நோட்டீசை எடுத்துக்கொண்டு பி. டி. சுப்பிரமணிய அய்யர், C. விஜயராகவாச்சாரியார் என்ற இரண்டு பிரபல சேலம் வக்கீல்களிடம் சென்றார். அவர்கள் இருவரும் ஒரேமாதிரிச் சொன்னார்கள்; அதாவது, உங்கள் மகன், 'இந்தக் கையெழுத்து நான் போடவில்லை' என்று சொல்லிவிடவேண்டும் என்று சொன்னார்கள். என் தகப்பனார் நான் ஜெயிலுக்குப்போகாமல் இருப்பதற்கு எதுவும் செய்யத் துணிவு கொண்டவர்; ஆதலால், அவர் அதற்குச் சம்மதித்துக்கொண்டு வந்துவிட்டார். ஈரோட்டுக்கு வந்து என்னைக் கேட்டார். நான் அதற்கு இணங்கவில்லை. 'இதற்காக 2 பெரும் பொய்களைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை; வருவது வரட்டும்' என்று சொல்லிவிட்டேன்.

என் மைத்துனன் நோட்டீசை எடுத்துக்கொண்டு நார்ட்டன் துரையிடம் சென்றார். அவரும், 'இதில் கையெழுத்து நான் போடவில்லை என்பது தவிர வேறு 'டிபன்ஸ்' இல்லை; இதற்காக எனக்கு ஏன் 2000, 3000 கொடுக்கவேண்டும்?' என்று சொல்லி, தனக்கு வர விருப்பமில்லை என்பதைக் காட்டிக்கொண்டார்.

கடைசியாக டி. டி. ரெங்காச்சாரியார் என்ற ஒரு முனுசீப்பை சிபார்சு பிடித்து டி. தேசிகாச்சாரியை வக்கீல் வைத்து முனுசீபிடம் என் தகப்பனார் எவ்வளவு கெஞ்சியும் அவர் 'சாங்கிஷன்' கொடுத்துவிட்டார். உடனே நான் காப்பு, கொலுசு, கடுக்கன் எல்லா வற்றையும் கழற்றி எறிந்துவிட்டு, தாடி வளர்த்துக்கொண்டு—கேப்பைக் களி (கேழ்வரகுக்

களி) சாப்பிட்டுப் பழகிக்கொண்டு—தலையணை இல்லாமல் பாயில் படுத்துப் பழக ஆரம்பித்துவிட்டேன். என் தாயாருக்கு அன்று முதல் ஒரே வேளை சாப்பாடு; பல கோயில்களுக்கு அர்ச்சனை செய்கிற வேலை. ஆனால் நான் மாத்திரம், 'நாம் ஜெயிலுக்குப் போவது என்னமோ உறுதி; 'கேஸ்' நடந்து தண்டனை கிடைக்கிறவரை அனுபவிக்காததை எல்லாம் அனுபவித்துவிடுவோம்' என்று நல்ல மைனர்போல் திரிந்துகொண்டு இருந்தேன். சாப்பாடு—களி; படுக்கை—பாயில்; அவ்வளவுதான்; மற்றவையெல்லாம் 'ஜமீன் மைனர்'தான்!

2 மாதம் பொறுத்து திருச்சியில் அசிஸ்டெண்ட் கலெக்டர் மெக்பர்லெண்டு (என்று ஞாபகம்) என்பவரிடம் கேஸ் வந்தது. கோர்ட்டுக்குப் போனோம்; அன்று 500 பேர்கள்—பெரிய வர்த்தகர்கள் உட்பட கோர்ட்டில் வேடிக்கை பார்க்க வந்த கூட்டம்.

கலெக்டர் ஆசனத்தில் அமர்ந்து 5, 6 வழக்குகளைக் கூப்பிட்டு விசாரித்து முடிவு சொல்லிவிட்டார். எல்லா 'கேஸ்'களையும் தண்டித்துவிட்டார். அவர் சிறு வயது—28 அல்லது 30 வயதுதான் இருக்கும். என் பெயரைக் கூப்பிட்டார்.

எனக்கு, வக்கீல் கணபதி அய்யர்—அப்போது அவர் பப்ளிக் பிராசிகியூட்டர். எனக்காக பெரிய கலெக்டரிடம் அனுமதிபெற்று, 'எதிரிக்கு' ஆஜராகிறார். அவரும் நானும் ஒன்றாய்க் கோர்ட்டுக்குள் போனோம். அவர் என் தோள்மேல் கையைப் போட்டுக் கொண்டு கோர்ட்டுக்குள் வந்து, என்னைக் கூண்டிற்குப் பக்கத்தில் விட்டுவிட்டு, அவர் தனது இடத்திற்குச் சென்று அமர்ந்தார். கலெக்டர் இதைப் பார்த்துவிட்டு அவரிடம், 'எங்கு வந்தீர்கள்? உங்களுக்கு இன்று இங்குக் கேஸ் இருக்கிறதா?' என்றார். கணபதி அய்யர், 'ஆம்! போர்ஜரி கேஸ் இருக்கிறது' என்று கேஸ் நம்பரைச் சொன்னார். அதற்கு, 'சர்க்கார் தரப்பில் உம்மை அழைக்கவில்லை போலிருக்கிறதே' என்றார், கலெக்டர். 'நான் எதிரிக்காக ஆஜராகிறேன்' என்றார் வக்கீல். 'சர்க்கார் வக்கீல், சர்க்கார் வழக்கில் எதிரிக்கு ஆஜராகலாமா? இதென்ன புது வழக்கமாக இருக்கிறதே!' என்றார். 'கலெக்டர் அனுமதிமீது ஆஜராகிறேன்' என்றார் வக்கீல். 'ஏன் அப்படி?' என்றார் கலெக்டர். 'கேஸ், சர்க்காருக்கு உபயோகமற்ற—பலமற்ற கேஸ். அதோடு இது 'சென்சேஷனல்' கேஸ் ஆனதால், அனுமதி கேட்டேன்; கொடுத்தார்' என்றார் வக்கீல்.

என்னைப் பார்த்துக்கொண்டே, 'சரி, சாட்சியைக் கூப்பிடு' என்றார் கலெக்டர். முதல் சாட்சி வக்கீல் ஐம்புநாதய்யர். அவர் கொஞ்சம் சரக்குச் சேர்த்து, 'இந்த ஆளை, நீ தான் வாதியா என்றேன், உன் பெயர் என்ன என்றேன். ஆம்; வெங்கிட்ட நாய்க்கர் என்றான்' என்றார். 'ஏன் அப்படிக் கேட்டீர்?' என்றார் கலெக்டர். 'யார் வந்தாலும் நான் அப்படித்தான் கேட்பது' என்றார் வக்கீல். வக்காலத்து பாரம் ரிஜிஸ்டர் செய்த கிராம முனுசீப் ஒரு சாயபு; அவர் கிழவனார். அவருக்குக் கண் பார்வை சரியாகத் தெரியாது. 'அவர் ஒரு வாலிபமான ஆள்—காப்பு, கொலுசு, கடுக்கன் போட்டுக்கொண்டு வந்து என் எதிரில் நான்தான் வெங்கிட்ட நாய்க்கன் என்று சொல்லிக் கையெழுத்துப் போட்டார். அந்த ஆள் இதோ காப்பு கொலுசு போட்டுக்கொண்டு நிற்கிறாரே இவர் தான்' என்று கையை நீட்டி என்னைக் காட்டினார். எல்லோரும் சிரித்தார்கள்.

கலெக்டர் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில், 'நீ என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்டார். என் வக்கீல் அதை மொழிபெயர்த்து என்னைக் கேட்டார். நான் தயங்கித் தத்தளித்துப் பேசுகிற தன்மையில், 'நான்தான் கையெழுத்துப் போட்டேன்' என்றேன். 'ஏன் போட்டாய்?' என்றார். 'அப்படித்தான் கோர்ட்டு, ரயில் நடவடிக்கைகளில் எப்போதும் நான் போடுவது வழக்கம்' என்றேன். 'ஏன் அந்த வழக்கம்?' என்றார். 'எங்கள் அப்பா கிழவனார்; நான்தான் வேலை பார்ப்பது; அந்த வியாபாரமும் பணமும் என்னுடையது. அவர் பெயர் பிரபலம்; ஆனதால் அந்தப் பெயர் வைத்து நான் வியாபாரம் செய்கிறேன்' என்றேன்.

'சரி; வெங்கிட நாயக்கரை கூப்பிடு!' என்றார் கலெக்டர். வெங்கிட நாயக்கர் அழுது கொண்டே பெட்டிமேலேறி, வக்கீல் கேட்டதற்கு நான் சொன்னதை ஆதரித்தே பதில் சொன்னார். ஜம்புநாதய்யரைப் பார்த்து, கலெக்டர், 'எனிதிங்?' என்றார். எல்லோரும் சிரித்தார்கள். ஜம்புநாதய்யர் ஒன்றும் பேசவில்லை.

உடனே கலெக்டர் 4 வரி எழுதிப் படித்துவிட்டு அடுத்த கேஸ் கூப்பிட்டார். அவர் படித்தது விளங்கவில்லை. மேஜிஸ்ட்ரேட் கிளார்க்கு ஒரு நாயுடு. அவர், 'கேஸ் தள்ளப் பட்டுவிட்டது; நீ போகலாம்' என்றார். என் தகப்பனார் என்னைக் கட்டிக்கொண்டு அழுதுவிட்டு, கணபதி அய்யர் காலில் விழப்போனார்; அவர் எட்டிப்போய்விட்டார். தீர்ப்பு என்னவென்றால், 'இந்த நடவடிக்கை இந்த செக்ஷனின் கருத்துக்குப் பொருந்தாது. எதிரி யாரையும் மோசம் செய்ய இந்தக் காரியம் செய்யவில்லை. வழக்குத் தள்ளப்பட்டது' என்று இருந்தது.

இப்படி இன்னும் சில உண்டு. இந்த எனது நடத்தை கடவுளுக்காக—மோட்சத் திற்காக—சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. நேர்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், நம்மை நாமே எண்ணிக் கொள்ளுவதில் ஒரு பெருமை, ஒரு அகம்பாவம், எங்கும் எப்போதும் யாரிடமும் பேசும்போது ஒரு துணிச்சல், தோல்வியிலும் ஒரு திருப்தி, மற்றவர்களுக்கும் நேர்மை ஒழுக்கம் பற்றிய வழிகாட்டி–பிரச்சாரம். ஆதலால் 'மறைவாக ஒன்றும் செய்யவேண்டாம்; எதையும் மறைக்காதே' என்றேன். மற்றும் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம்; அது தற்பெருமையாக முடியும். சுருக்கமாகச் சொல்லுவேன். நேர்மையாக நடப்பது சுயநலமும்கூட ஆகும்.

எனது பலக் குறைவினால் எத்தனையோ தவறுகள் ஏற்பட்டும்—பொதுவாழ்வில் இந்த நாட்டில் நான் சாகாமல் இருப்பதற்கு இந்த நேர்மையில் நான் வைத்திருக்கும் ஜாக்கிரதைதான் காரணமாகும்.

['விடுதலை'–தலையங்கம்—26-7-1952]

8. இந்தி அழிப்புக் கிளர்ச்சி

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ந் தேதியில் நடந்துவரும் இரயில்வே நிலையப் பெயர்ப் பலகைகளிலுள்ள இந்திப் பெயர்களை அழிக்கும் கிளர்ச்சியை இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று வைத்துக்கொள்வது நலமென்று கருதுகிறேன். ஏனெனில், ஆகஸ்ட் 1-ந் தேதியன்று குடியாத்தத்தில் அசெம்பிளி உபதேர்தல் நடைபெறப் போகிறது. அதுமிகவும் முக்கியமானதும் நமது சில நலன்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதுமான தேர்தலாயிருப்பதால் இவ்வாண்டு 1-ந்தேதி இந்தி அழிப்பின் காரணமாக ஏதாவது காரியங்கள் அல்லது குழப்பங்கள் நடப்புக்கு விரோதமாக ஏற்பட நேருமேயானால் அது ஒருசமயம் தேர்தலை பாதித்துவிடுமோ என்கிற எண்ணத்தாலும் எதிரிகள் தேர்தல் பாதிக்கும்படியான அளவுக்குக் கலவரம் செய்யவேண்டுமென்று கருதி ஏதாவது தொல்லை விளைவிப்பார்களோ என்பதாகவும் கருதி எல்லாவற்றுக்கும் தயாராய் இருப்பதற்கான ஏற்ற நாளாக இருக்க ஆகஸ்ட்மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை 1954-ம் ஆண்டின் இந்தி அழிப்பு நாளாக ஏற்பாடு செய்திருக்கிறேன்.

ஆதலால், கழகத் தோழர்களும், மற்றும் இந்தி எதிர்ப்பில் கவலையுள்ள மற்ற தோழர் களும் இந்தி அழிப்பை ஆகஸ்ட் 8-ந் தேதியன்று வழக்கம்போல் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்தவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்தி அழிப்புச் சுற்றுப் பிரயாணமாக ஆகஸ்ட் 4 அல்லது 5-ந் தேதியிலிருந்து தமிழ் நாடு முழுவதும் இரயில்வே பிரயாணமாக நானும் சில தோழர்களும் புறப்பட்டு ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வழக்கம்போல் நண்பர்களைக் காண இருக்கிறேன்.

ஆகையால், இப்பொழுதிருந்தே இதற்கேற்ற கமிட்டி வகையறா ஏற்பாடுகளைச் செய்து பெயர் முதலியவற்றைத் தெரிவிக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—17-7-1954]

ஆகஸ்ட் கிளர்ச்சியில் உன் பங்கு என்ன ?

ஏறக்குறைய தமிழ்நாட்டில் 500 இரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

இவற்றுள் நீ எந்த ஸ்டேஷனில் உள்ள இந்திப் பெயரை அழிக்கத் தெரிந்தெடுத்து இருக்கிறாய் ?

நீ திராவிடன் அல்லது சென்னை ராஜ்யத்தான் அல்லது தமிழ்நாட்டான் என்பதை சந்தேகமற உணருகிறாயா ?

உன் நாட்டு (தேச) மொழி தமிழ் என்பதையும் நீ தமிழன் என்பதையும் உணருகிறாயா ?

அப்படியானால் உன் கடமை என்ன ? இந்தி மெள்ள மெள்ள உன் நாட்டில் உன் படுக்கை அறையில் புகுந்துகொண்டது.

'இந்தி படிக்காதவனுக்கு பாஸ் இல்லை.'

'இந்தி படிக்காதவனுக்கு உத்தியோகம் இல்லை.'

'இந்தி தெரியாதவனுக்கு பார்லிமெண்டில் இடம் இல்லை., தெரியாவிட்டால் வெளியே போ' என்கிற நிலைமை வந்துவிட்டது

இந்த நிலையில் உன் கடமை என்ன ?

உன் நாட்டிற்கு, உன் மொழிக்குத் துரோகம் செய்து வடவனுக்குக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பது திராவிடன் பண்பா ?

ஆகஸ்ட் 8-ந் தேதி 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதில் சொல்லு.

'ஆம்' என்றால் 'ஜே இந்தி' என்று சொல்லு.

இல்லாவிட்டால் 'இந்தி ஒழிக' என்று தாரில் புருசை நனைத்து இந்திப் பெயரை அழி—அழி—அழி.

['விடுதலை'-அறிக்கை—5-8-1954]

ஆகஸ்ட் கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற தோழர்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்டால் கீழ்க்கண்ட அறிக்கையைமட்டும் எழுத்துமூலமோ வாக்குமூலமோ தெரிவித்துவிட்டால் போதும் என்று அறிவித்துக்கொள்கிறோம்.

'நான் குற்றவாளியல்ல; திராவிடநாட்டில் இந்தியை அரசியல் மொழியாகவோ, தேசிய மொழியாகவோ, உத்தியோக மொழியாகவோ, யூனியன் சர்க்கார் புகுத்துவதையும் நடைமுறையில் கொண்டுவருவதையும் திராவிட (தமிழ்) மக்களாகிய நாங்கள் விரும்பவில்லை என்பதையும், எங்கள் விருப்பத்துக்கு விரோதமாக சர்க்கார் தங்கள் ஆதிக்கத்தின் மூலம் இந்தியைப் புகுத்துகிறார்கள் என்பதையும், இந்தச் செய்கையை வெறுக்கிறோம் என்பதையும் சர்க்காருக்கும், வெளி ராஜ்யக்காரர்களுக்கும் தெரிவிப்பதற்கு அறிகுறியாகவே அமைதியான முறையில் சட்டவரம்புக்குட்பட்டு இந்தக் காரியத்தைச் செய்தேன்; நான் குற்றவாளியல்ல.'

['விடுதலை'-அறிக்கை—6-8-1954]

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாம் ரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்து வந்ததற்கேற்ப இந்த ஆண்டும் இந்தி அழிப்புச் செயலைச் செய்திருக்கின்றோம். இந்த நிகழ்ச்சி ஆகஸ்ட் 1-ந் தேதியே நடந்திருக்க வேண்டியது. ஆனால் ஆகஸ்ட் 1-ந்தேதி குடியாத்தம் உபதேர்தல் நடக்கிற நாளானபடியால் இந்த நிகழ்ச்சியில் ஏதாவது ஏற்பட்டு அதன் காரணமாக தேர்தல் பாதிக்கப்படுமோ என்கிற காரணத்தினால் 8-ந்தேதிக்கு மாற்றிவைத்தோம்.

தோழர்களே! இந்த நம்முடைய இந்தி எதிர்ப்பு இன்று நேற்று நாம் செய்துவருகிற காரியமல்ல. பிரச்சார முறையில் 20, 25 ஆண்டு காலமாகவே நாம் இந்தியை எதிர்த்து வந்திருக்கிறோம்.

நான் காங்கிரசிலே இருந்த காலத்தில் காங்கிரசின் கொள்கைக்கேற்ப இந்தியை ஆதரித்துவந்தேன். மோதிலால் நேருவைக்கொண்டு ஈரோட்டில் ஒரு இந்திப் பிரச்சாரப் பள்ளியை என்னுடைய சொந்த இடத்தில் சொந்த செலவில் திறந்து 20, 30 மாணவர்களுக்கு இலவசமாகச் சாப்பாடு போட்டு, இந்தியைக் கற்றுக்கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்தேன்.

நான் காங்கிரஸ் ஸ்தாபனமானது பார்ப்பன ஆதிக்கத்துக்காகவே-பார்ப்பன நலத்துக்காகவே நடைபெற்றுவருகிற ஒரு ஸ்தாபனம் ஆகும் என்று கண்டு, அந்த ஸ்தாபனத்தில் இருக்கிற பெரும்பாலோர் சுயநலத்துக்காகவும் தங்கள் காரியானுகூலத்துக்காகவும் இருக்கிறார்கள்; இன்னும் சிலர் காங்கிரஸ் உள்ளபடியே சுயராஜ்யத்துக்காகப் பாடுபடுகிறது என்கிற கருத்துக்கொண்டு காங்கிரசை உண்மையிலேயே தேச ஸ்தாபனம் என்பதாக முட்டாள்தனமாகக் கருதிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதாகக் கண்டு, இத்தனை நாளாக அப்படிப்பட்ட ஒரு முட்டாளாக நாம் இருந்த தன்மைக்காக வருந்தி, நம்முடைய நாட்டுக்கு, நம்முடைய மக்கள் சமுதாயத்துக்கு என்று நாம் ஏதாவது பணிபுரியவேண்டும் என்கிற கருத்தில் காங்கிரசைவிட்டு வெளியேறிய காலம் முதற்கொண்டு, இந்த இந்தி எதிர்ப்பு என்பதை சுயமரியாதை இயக்கத்தின் ஒரு கொள்கையாகக் கொண்டு, பணியாற்றி வருகிறேன். அதுவும் இந்த இந்திமொழி என்பதன் மூலம் பார்ப்பனர்கள் நம்மை நிரந்தர அடிமைகளாக-பச்சைச் சூத்திரர்களாக ஆக்கவே கொண்டுவருகிறார்கள்; இந்திமொழியை இந்த நாட்டில் செயல்படுத்துகிறார்கள் என்று நன்றாக உணர்ந்து எதிர்த்து வந்திருக்கிறேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், காங்கிரஸ் ஆட்சியில் இருப்பதின் காரணமாக அத்தகைய ஆட்சிக்கு விரோதமாக இன்று திடீரென்று நினைத்துக் கொண்டு செய்கிற காரியம் அல்ல; 20, 25 ஆண்டு காலமாகவே பிரச்சார முறையில் செய்து வந்த காரியத்தையே இன்று செயல்முறையில் செய்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். அதுவும் காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யம் வரும் என்பதாகக் கனாக்கூடக் காணாத காலத்திலிருந்தே எதிர்த்தேன்.

1942-ம் வருட ஆகஸ்டுக்குப் பின்னர்தான் காங்கிரஸ்காரர்களுக்குச் சுயராஜ்யம் வரவேண்டும் என்கிற நினைப்புத் தோன்றியது; அதற்கு முன்பு அந்த நினைப்பே இல்லை. ஆகஸ்டு கிளர்ச்சிக்குக் கொஞ்ச நாள் முந்திகூட காந்தியார் கூறினார்: 'சுயராஜ்யத்தின் நிழலைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதாவது குடியேற்றநாட்டு அந்தஸ்தைத்தான் கேட்கிறோம்' என்பதாகச் சொன்னார். அதற்கு முன் காங்கிரஸ் எப்படி இருந்தது என்றால் ஏதோ வெள்ளைக்காரர்களுக்குக் கொடுக்கிற உத்தியோகம் எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று உத்தியோகம் கேட்பதாகத்தான் இருந்தது. இன்னும் சொல்லப் போனால், அப்பொழுது காங்கிரசு மாநாட்டில் முதலாவதாக ராஜவிசுவாசத் தீர்மானம்தான் போடுவார்கள்; பிரிட்டிஷ் சக்கரவர்த்தி நன்றாக இருக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கும் தீர்மானமும் போடுவார்கள்; அத்தோடு, என்றென்றைக்கும் நிரந்தரமாக பிரிட்டிஷ் ராஜாவே எங்களுக்கு ராஜாவாக இருக்கவேண்டும் என்பதாகக் கடவுளை

1686—229

வேண்டித் தீர்மானங்கள் போடுவார்கள்; இவ்வளவு தீர்மானங்களையும் போட்டுவிட்டு உத்தியோகத்தில் எங்களுக்கும் இடம்கொடுங்கள் என்று கேட்பார்கள்; இந்தப்படிதான் காங்கிரஸ் முன்னெல்லாம் நடைபெற்று வந்திருக்கிறது. அப்புறந்தான் படிப்படியாக வந்து, 42-லே காந்தியார் 'Quit India' என்று சொன்னார். நாம் இந்த இந்தியை 42-க்கு முன்பிருந்தே – 1926 முதற்கொண்டே எதிர்த்து வந்திருக்கிறோம். சென்றமுறை தோழர் ஆச்சாரியார் அவர்கள் பதவியில் இருந்தபோது இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்தபோது நாங்கள் அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தோம். அதற்காகப் பலபேர் சிறைக்குச் சென்றார்கள். எனக்கும் 2 வருடக் கடுங்காவல் தண்டனையும் 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு, என்னுடைய காரை ஏலத்தில் விட்டும் ஆன காரியங்கள் எல்லாம் நடந்தும் கடைசியில் கட்டாய இந்தி ஒழிந்தது.

தோழர்களே! இன்று இந்தி எந்த அளவுக்கு இந்த நாட்டில் வந்துவிட்டது என்றால் தபால் முத்திரைகளில் இங்கிலீஷில் ஒரு முத்திரையும் இந்தியில் ஒரு முத்திரையுமாகப் போடப்படுகிறது. இங்கிலீஷ் முத்திரை இருப்பதால் இப்போது ஏதோ ஊர் பெயரை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இன்னும் கொஞ்சநாளில் இங்கிலீஷில் அடிப்பதை நிறுத்தி விட்டு இந்தியில் மாத்திரமே போட்டுவிடுவார்கள். அப்புறம் நம்முடைய நிலைமை என்ன ஆவது என்று யோசித்துப் பாருங்கள். இன்னும் இந்தி தெரிந்தால்தான் உத்தியோகம் என்கிறார்கள். வேலைக்குப் பொறுக்கும் பேட்டியின்போது கேள்வியோடு கேள்வியாக 'உனக்கு இந்தி தெரியுமா?' என்று கேட்கிறார்கள். இந்தி தெரியாது என்றால் வெளிப் படையாக இந்தி தெரியாததால் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லாமல் இதை உள்காரணமாய் வைத்துக்கொண்டு, வேறு ஏதாவது காரணங்காட்டித் தள்ளிவிடு கிறார்கள்.

மற்றும், சமீபத்தில் கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் பரீட்சைக்கும் இந்தி பாடமாக இருக்கும் என்பதாக ஒரு உத்திரவு கொண்டுவந்தார். நாம் சத்தம் போட்டவுடன் இல்லை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். காமராஜர் எலக்ஷனைக் கருதி இந்தப்படி மாற்றிக்கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. இந்திக்கு இந்த நாட்டில் இப்போது ஆதிக்கம் வரவர அதிகமாக வளர்ந்துகொண்டே வருகிறது. இன்னும் கொஞ்சநாளில் இந்தி தெரியாவிட்டால் உத்தியோகம் இல்லை என்கின்ற நிலைமை வந்துதான் தீரும் என்பதோடு நாளைக்கு வியாபாரிகள் எல்லாம் இந்தியிலேயே கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவேதான், நம்மைப் பேராபத்துக்கு ஆளாக்குகிற—நம் பின் சந்ததிகளை வாழாவெட்டிகளாக ஆக்குகிற இந்த இந்தியை நாம் இந்த நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டியாக வேண்டும் என்கிறோம். இந்தக் கருத்தில் மூன்றாவது முறையாக நாம் இந்தி எழுத்துக்களை அழித்திருக்கிறோம். இரண்டு வருஷ காலமாக ஆச்சாரியார் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் அவர் விட்டுவிட்டார். தோழர் காமராஜர் அவர்களும் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குச் சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் அமைச்சர், ரயில்வே துணைமந்திரி அளகேசன் அவர்களும் 'இதனால் ஒன்றும் கஷ்டம் இல்லை; அவர்கள் அழித்தால் திரும்பி நாங்கள் எழுதிவிடுகிறோம்' என்பதாகச் சொல்லி இருக்கிறார். இப்படியே நாம் அழிப்பதும் திருப்பி அவர்கள் எழுதுவதுமாக விளையாட்டுப்போல நடந்துகொண்டிருக்க நாமும் விட்டுக்கொண்டிருக்க முடியாது. இந்தத் தடவையும் திருப்பி எழுதுவார்களேயானால் அடுத்த ஆண்டு நாம் வேறு ஏதாவது மாதிரியாக, அதாவது இன்னும் கொஞ்சம் முன்னாலே போவதான தன்மையிலே கிளர்ச்சியை நடத்தவேண்டி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[தஞ்சாவூரில், 8-3-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-8-1954]

9. இந்தியும்–நானும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தி விளைவிக்கும் கேட்டை முன்னரே அறிந்து சொல்லியுள்ளேன். நான் காங்கிரசை விட்டு விலகிய 1925ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் தமிழர்களின் இலட்சியங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்தேன். அப்பொழுதிலிருந்தே இந்தி நமக்குக் கேட்டை விளைவிக்கும்பொருட்டே புகுத்தப்படுகிறது என்பதாகக் ‘குடி அரசில்’ எழுதி வந்திருக்கிறேன். அப்போது, இப்போது உள்ளதைப்போன்று சுயராஜ்ய அரசாங்கமில்லை. வெள்ளைக்கார அரசாங்கம் இருந்த அப்பொழுதே, இந்தியைக் காங்கிரஸ் திட்டத்தில் ஒன்றாகப் பிரச்சாரம் செய்தனர். அப்போது அதற்குப் பெயர் ‘தேசிய மொழி’ என்று சொல்லிவந்தனர்.

ஏனெனில், அப்பொழுது வடமொழியின்மீது பொது மக்களுக்கு வெறுப்புண்டாகும் நிலை ஏற்பட்டதேயாகும். ஜஸ்டிஸ் கட்சியினால் பார்ப்பன ஆதிக்கம் குன்றி வந்த காலம் அது. சமுதாயத் துறையில் பார்ப்பனர்களிடம் நம் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு எப்படியும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை அடக்க வேண்டும் என்று முயசித்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக் காலம் அது. சமஸ்கிருதத்தினிடம் மக்களுக்கு மனக் கசப்பு ஏற்பட்டு, அது ‘பார்ப்பன மொழி’, ‘வடநாட்டவரின் மொழி’ என்றெல்லாம் உணர்ச்சியோடு கூடி வெறுத்தனர். இதனால் பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தைத் தங்களின் சூழ்ச்சியின்படி புகுத்துவதற்கு இல்லாமற் போய் விட்டது.

என்றாலும், அவர்கள் ஒரே கல்லில் இரண்டு பட்சிகளை அடித்ததுபோன்று, மக்களுக்கு சமஸ்கிருதத்தின் மீதுள்ள வெறுப்பு உணர்ச்சியை உணர்ந்து கொண்டு வெகு தந்திரமாக இந்தியைப் புகுத்த முற்பட்டனர். இந்தி, இந்தியாவில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்றும்; எனவே இதையே மற்ற சிறுபான்மை மக்கள் கற்றுணர்ந்து கொள்வது சுலபமாகும் என்றெல்லாம் காரணம் கூறினர். இதனால் நம் பிள்ளைகளைக் கல்வியில் தேறாமல் செய்வதும் சுலபமாகும் என்று பார்ப்பனர் நினைத்துச் செய்தனர்.

இதற்குக் காந்தியாரும் உடன்பட வேண்டியதாயிற்று. அவர் எவ்வளவு பெரிய மனிதரானாலும், அறிவாளியானாலும், பொதுநலத் தொண்டரானாலும்–அவர் வடநாட்டவர் என்பது மட்டும் உறுதி. அவருக்குத் தன்னாட்டைத் தவிர, தென்னாட்டின் நிலைமையை எப்படி உணரமுடியும்? அப்படித் தென்னாட்டின் நிலைமையை உணர வேண்டுமானால் ஆச்சாரியார், சத்தியமூர்த்தி போன்றவர்களால்தான் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் ‘இந்து’, ‘சுதேசமித்திரன்’, ‘தினமணி’, ‘எக்ஸ்பிரஸ்’ போன்ற பார்ப்பனரின், வடநாட்டவர்களின் பத்திரிகைகள் மூலம்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மூலமும் இப் பத்திரிகைகள் மூலமும் நம்முடைய கருத்துக்கள் வெளியாவதற்கில்லை என்பது தெரிந்ததே. எனவே, காந்தியாரும் தென்னாட்டவர்களின் கருத்தை உணர முடியாது போய்விட்டார்.

மேலும், பார்ப்பனர்கள் காந்தியாரைப் பிடித்ததற்குக் காரணமே தமிழர்களையும், தமிழ்நாட்டையும் பார்ப்பனர்களின் ஆட்சிக்கு உட்படுத்தவேண்டும் என்பதற்கேயாம்.

இது அவர்களின் இரகசியத் திட்டம் என்றாலும் எனக்குத் தெரியவேண்டிய காரணம் என்னவென்று கேட்கலாம். நான் அப்பொழுது பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாக இருந்தேன். அவர்களின் அந்தரங்க விஷயங்கள் அத்தனையும் தெரிந்துகொள்ளும்படியான முக்கியஸ்தனாகவும், காங்கிரஸில் தலைவனாகவும் இருந்தவன். காங்கிரஸின் அடிப்படைத் தந்திரங்கள் அனைத்தும் எனக்குத் தெரியாமல் இருக்க முடியாது. காங்கிரஸின் திட்டங்களை என்னால் நிறைவேற்றும்படியாகவும் இருந்தது. அத் திட்டங்களில் ஒன்றாக இந்தியைப் பரவச் செய்யும் விஷயத்தில் மிகவும் அக்கறையோடு முயற்சி எடுத்தவன் நான். அப்போது தனிப்பட்டவர்களால் பொருள் சேர்க்கப்பட்டு, அதன் மூலம் இந்திப் பிரச்சார

ஸ்தாபனங்களை உண்டாக்கி, இந்தி கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆனால், காங்கிரஸின் பேரால், காங்கிரஸின் செலவில் முதன் முதலில் இந்தியை இங்குக் கற்றுக்கொடுக்கும்படி செய்தவன் நான். மேலும், என்னுடைய சொந்தச் செலவில் இந்தியைப் பரவச் செய்தேன்.

1922-ஆம் ஆண்டு பிற்பகுதியில் எங்கள் ஊருக்கு வடநாட்டில் இருந்து டாக்டர் அன்சாரி, விட்டல்பாய் பட்டேல், பண்டித மோதிலால் நேரு முதலிய காங்கிரஸ் பிரமுகர்கள் விஜயம் செய்தார்கள். அப்போது இங்கிருந்த காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே சட்டசபை செல்ல விரும்புவோர்கள் என்றும் சட்டசபை செல்ல விரும்பாதவர்கள் என்றும் இரு பிரிவுகள் இருந்தன. இவற்றை ஒருவழிப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதன் சம்பந்தமாக முடிவு செய்யும்பொருட்டு, மேற்கண்ட வடநாட்டவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் எங்கள் இல்லத்தில்தான் வந்து தங்கினர். நான் அதுசமயம் அவர்கள் என் வீட்டிற்கு வந்து சென்ற ஞாபகார்த்தமாக ஏதாவது புதிய காரியம் ஒன்றை ஆரம்பித்து வைக்கலாம் என்று ஆசைப்பட்டேன்.

அப்போது எனக்கு எல்லாவற்றையும்விட இந்தி சம்பந்தமாகத்தான் ஆவல் ஏற்பட்டு 'இந்தியை இன்று முதல் சில பிள்ளைகளுக்கு நம் செலவிலேயே கற்றுக்கொடுக்கலாம்' என்று தீர்மானித்தேன்.

அன்றுமுதல் 30 பேர்கள் கொண்ட ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியருக்கும் 15 பிள்ளைகளுக்கும் காங்கிரஸின் செலவும்; 15 பிள்ளைகளுக்கு, உணவு, தங்கும் வசதிகளெல்லாம் என்னுடைய செலவும் ஆகும். என் தகப்பனாரின் சமாதிக்குப் பக்கத்தில் உள்ள கட்டிடத்திலேயே அப் பள்ளி நிறுவப்பட்டதுடன், அந்தச் சமாதி டிரஸ்ட் செலவிலேயே 15 பேருக்குச் சாப்பாடு போட்டு வந்தேன். இப்படி 2 வருடங்கள்வரை அதை நடத்தினேன். இது மட்டுமின்றி போகிற இடங்கள்தோறும் இந்தியைப்பற்றிப் பெருமையாக ஏதேதோ பேசுவதுண்டு. இப்படி இந்தியைப்பற்றிக் கவலைகொண்டு அதை நம் நாட்டில் கொண்டு வந்து பரவச் செய்தவர்களில் நானும் ஒருவன்.

எனவேதான், நான் வெள்ளையன் இந்நாட்டை விட்டுப் போகுமுன்னமேயே—இந் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கும் என்ற எண்ணம் கனவிலும் தோன்றாத காலத்திலேயே நான் இந்தியை ஒழிக்கவேண்டும் என்று கூறினேன்.

என் எண்ணத்திற்கு மாறாகவே, இந்தியை வட நாட்டார் இங்கு புகுத்தி, அவர்களின் நாகரிகங்களைப் புகுத்த முயற்சித்தனர். இந்தியை அரசியல் மொழியாகவும் கொண்டுவரச் சட்டமியற்றினர்.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-8-1955]

தோழர்களே!

இந்தி படித்தால் உத்தியோகம் என்றும், தொழில் துறைகளில் எல்லாம் இந்தியிலேயே சொல்லிக்கொடுப்பதுமாகச் செய்கின்றனர். இந்தியை இஷ்டமில்லாதவர்களிடம் புகுத்துவதில்லை என்றும் கூறிக்கொண்டே, செயலில் தங்கள் சூழ்ச்சியான காரியத்தைக் காட்டிக் கொண்டு வருகின்றனர்.

ஆச்சாரியார் முதன்மந்திரியாகி—ஒரு சர்வாதிகாரத் தலைவனுக்குள்ள வசதிகளை எல்லாம் அடைந்து—தன்னுடைய சுண்டுவிரல் ஆட்டத்திற்கு ஏற்றபடி ஆடும் அங்கத்தினர்களைக் கொண்ட சட்டசபையை அமைத்துக்கொண்டு, அதன் பிறகு துணிவாக யாரும், எதுவும் கூற, மறுக்க முடியாது என்ற அதிகார ஆணவத்தால் அவருடைய வாக்கிலிருந்து, 'இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

அப்போது நாங்கள் செய்த கிளர்ச்சியில் 1700 பேர்கள் வரை சிறை சென்றோம். இரண்டு நண்பர்கள் தாளமுத்து-நடராசன் என்பவர்கள் சிறையிலேயே உயிரும் விட்டனர்.

எனக்குக் கடுமையான தண்டனையும் விதித்தார். குற்றத்தை இரண்டு செக்ஷன்களாகப் பிரித்து, ஒவ்வொரு செக்ஷனுக்கும் 1000 ரூபாய் அபராதத்துடன் ஒரு வருடம் கடின காவல்; ஆக இரண்டு செக்ஷன்களுக்கும் மூன்று வருடங்கள் சிறையிலிருக்க வேண்டும் என்பதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

என்னைப் பல்லாரியின் கடும் வெயில் உடைய உஷ்ணமான இடமாகப் பார்த்து அங்கே சிறை வைத்தார். அதை விட்டுப் பல இடங்களுக்கும் என்னைப் பந்தாடுவதுபோல் மாற்றி வைத்து, இறுதியில் எனக்கேற்பட்ட வயிற்றுக் கோளாறைக் கண்டு, காலராவோ என்று பயந்து வெளியில் விட்டு விட்டனர்.

அடுத்து நண்பர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆட்சி வரவும், அவர் எனக்கு உற்ற நண்பர் என்ற முறையில் என்னிடம் நேரிலேயே, 'இந்தக் கலவரம் எல்லாம் நமக்குள்ளேயே எதற்காக? இந்திதான் கட்டாயப் படுத்துவதாக இல்லையே' என்றெல்லாம் சமாதானம் சொன்னார்.

அப்போது அரசாங்கம் நடத்திய பத்திரிகை ஒன்றில், கல்வி மந்திரியாக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார், இந்தியைப்பற்றி எழுதியதில் அது கட்டாயப் பாடமாக்கப் படும் என்பதாக எழுதி இருந்த பத்திரிகையைக் கையில் எடுத்துக் காட்டினேன்: உடனே ரெட்டியார் அவர்கள், 'இதென்ன? இந்தச் செட்டியார் தொல்லை பெரும் வம்பாக இருக்கிறதே' என்று பேசிவிட்டு, என்னிடம், 'நீ இருக்கவேண்டிய இடத்தில் நான் இருக்கிறேன்; எனக்காகவாவது நீ பேசாதிருக்கக் கூடாதா? பிறகு ஏதாவது ஒரு முடிவுக்கு வருவோம்' என்றார்.

நான் அதற்கு, 'நானும் இப்படி இல்லாவிட்டால், உங்களைப் பார்ப்பான் இந்த இடத்திற்கு வரும் சந்தர்ப்பத்தையே ஒழித்திருப்பான்; நானும் இந்த இடத்திற்கு வரமுடியாது. எனவே, இப்போதே ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும்' என்றேன். 'இப்போது முடியாது' என்றார். நானும், 'இதைப்பற்றிச் சும்மா இருக்க முடியுமா? ஜனங்களுக்கு ஏதாவது சமாதானம் செய்யாவிட்டால் சும்மா இருக்கமாட்டார்கள்' என்றேன். 'அப்படியானால் சட்டப்படி கடமையைச் செய்வேன்; அதற்காகக் கவலை கொள்ளக் கூடாது' என்றார். நான் அதற்கு, 'எனக்குக் கவலை இல்லை; நான் என் கடமையைச் செய்வதில் தாங்கள் கவலை கொள்ளாதிருந்தால் போதும்' என்று கூறி வந்துவிட்டேன்.

அப்போது நடத்திய கிளர்ச்சியின்பொழுது ஜெயிலில் இடமில்லாமல் இருந்தது. எங்களைச் சிறையிலடைக்க முடியாமற் போகவே கிளர்ச்சி செய்த நம் தோழர்களையும், தாய்மார்களையும்—கர்ப்பவதிகள் முதற் கொண்டு, லாரிகளில் ஏற்றி 20–30 மைல்களுக்கப்பால் கொண்டுபோய் விட்டுவந்தனர்.

இப்படியெல்லாம் நடத்தி, ஆச்சாரியார் காலத்தில் புகை வண்டி நிலையங்களின் பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்தோம். இதைப்பற்றி இருவரும் நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. ஏனெனில், டில்லி சட்டசபையில் இதற்குக் காரணங் கூறிய இரயில்வே மந்திரி, 'இதனால் உண்டாகும் செலவு 2200 ரூபாய்தான், மண்ணெண்ணெய் வாங்குவதற்குச் செலவாகிறது; நடவடிக்கை எடுத்தால் அதிகம் செலவாகும்' என்று கூறினாராம்.

எனவே, சென்ற ஆண்டிலேயே தஞ்சையில் இக் கிளர்ச்சியை நடத்தியவுடன் கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில், இனி வேறு முறையில் இக் கிளர்ச்சியைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக் கூறினேன்.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-8-1955]

4. பிற கிளர்ச்சிகள்

1. கணபதி உருவப் பொம்மை உடைப்பு

27–5–1953 புதன்கிழமை மாலை 6–30 மணிக்கு கணபதி உருவப் பொம்மையைத் தூள் தூளாக்கி மண்ணோடு மண்ணாய்க் கலக்கிவிடுங்கள்!

திராவிடத் தோழர்களே! இந்தியாவில் 'வெள்ளைக்காரச் சக்கரவர்த்தி' ஆட்சி ஒழிந்து, பார்ப்பன ஆதிக்க 'ஜனநாயக ஆட்சி' ஏற்பட்டதிலிருந்து—இன்று, இந்த நேரம் வரை ஒவ்வொரு மாத்திரை நேரமும் வருணாசிரம தர்ம ஆட்சி வளர்ந்து, வளம்பெற்று வருகிறது.

வருணாசிரம தர்மத்தைப் புகுத்த—பார்ப்பன ஆதிக்க ஏகபோக 'ஜனநாயக' ஆட்சியானது ஆட்சிமூலம் பல துறைகளில் பல கொடுமையான முறைகளைக் கையாண்டு வந்தாலும், திராவிடநாட்டில்–தமிழ்நாட்டில்–தென் இந்தியாவில்–சென்னை இராஜ்யத்தில் 'வெள்ளைச் சக்கரவர்த்தி' காலத்தில் ஒரு அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிற திராவிடர்களை மனுகாலச் சூத்திரர் ஆக்கத் திட்டம் கொண்டு உத்தியோகத் துறையிலும், கல்வித் துறையிலும் திட்டம் வகுத்துச் செயலில் இறங்கிவிட்டது.

1. 'சூத்திரர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் இருந்த 'சூத்திரர்' வகுப்பு உரிமை அரசியல் சட்டத்தின் மூலம் உறுதியாகி அமுலுக்கு வந்துவிட்டது. இதிலிருந்து 'சூத்திரர்கள்' (தமிழர்கள்) உத்தியோக உரிமை அற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

2. சூத்திரர்களுக்குக் கல்வித் துறையில் ஒரு அளவுக்கு பெரிய கிளர்ச்சி மீது சிறிய உரிமை இருந்தது; அதுவும் ஆச்சாரியார் ஆட்சியில் அழிக்கப்பட்டுவிட்டது.

3. கல்வித் துறையில், மேல் வகுப்பு—அதாவது உத்தியோகத்திற்குத் தகுதியாகும் படிப்புதான் 'சூத்திரர்'களுக்கு உரிமையில்லாமல் இருக்கும்படி செய்யப்பட்டுவிட்டது என்றாலும், பொதுக் கல்வி என்பதுகூடச் சரிவரப் பெறுவதற்கில்லாமல், அடிப்படைக் கல்வி என்னும் பேரால் தகப்பன் தொழிலை—பரம்பரைத் தொழிலைப் படிக்க வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், எந்த நாட்டிலும் இல்லாத இந்த அதிசய முறையானது, நாட்டு நலனுக்காகவோ, கல்வி நலனுக்காகவோ, ஆட்சி நலனுக்காகவோ அல்லது மக்கள் ஒழுக்க நலனுக்காகவோ அல்லாமல் பார்ப்பன நலனுக்கும், சர்வ ஆதிக்க நலனுக்கும் ஆகவுமே ஏற்படுத்தப்பட்டு, இருந்துவருகிற வருணாசிரம தர்ம புதுப்பிப்புக்காகவே (Reviving-க்காகவே) இந்த 'ஜனநாயக ஆட்சி' என்பதில் செய்யப்பட்டு வருகிறது என்பதைக் காட்டுவதற்கு ஆகவேயாகும்.

இன்று இந்தத் திராவிட (தமிழ்) நாட்டுத் திராவிட மக்கள் இன்று தங்கள் நாட்டிலேயே, தாங்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டு ஓட்டுரிமை பெற்றிருந்தும், ஜனநாயக ஆட்சியிலேயே இந்த இழிநிலை; அதாவது சூத்திர, பஞ்சமநிலை அடைந்திருப்பதை ஒழித்துக் கொள்ள வேண்டுமானால், இதை மாற்றி—இந்து வருணாசிரம முறையை அழித்து ஒழித்தாலொழிய வேறு எந்தக் காரணத்தாலும், யாராலும் முடியாது என்று நான் மனப்பூர்வமாக—சித்த சுத்தியாக நம்புவதால், வருணாசிரம முறையை அழிக்க முற்படும் முறையில் முன்னுரையாக இதைக் கூறுகிறேன்.

சமீப காலமாகவே பொதுமக்கள் உணரலாம்: என்னவெனில், ஆட்சியின் வேலையும் அதிகாரிகளின் வேலையும், சவுண்டிப் பார்ப்பனர் முதல் சங்கராச்சாரியார் பார்ப்பனர் வரை சர்வ பார்ப்பனர்களும் வருணாசிரம வேத சாஸ்திர புராண இதிகாசங்களைப் பிரச்சாரம் செய்வதும், இந்தியப் பிரசிடெண்டு, இந்தியப் பிரதமர், மற்றும் இராஜ்ய

கவர்னர்கள், இராஜ்யப் பிரதமர்கள் முதல் யாரும் பார்ப்பனர்களாகவே ஆகிக்கொண்டு, மேற்கண்ட வேத, சாஸ்திர, புராண முதலிய பிரச்சாரங்களும் செய்துவருவது என்றால், இதில் ஏதாவது சூழ்ச்சி, உட்கருத்து இல்லாமல் இருக்க முடியுமா?

மற்றும் இவை மாத்திரமல்லாமல் நமது சூத்திர மக்களில் செல்வவான், கல்விமான், அரசியல் விளம்பரம், பதவி பெற்ற உலக விளம்பர சீமான்கள் முதல் எச்சிக்கலைச் செல்வ வான்கள் வரையில்—100-க்கு ஒருவருக்குக்கூட கவலையோ, மான உணர்ச்சியோ இல்லையே என்று நாம் காணும்போது—75 ஆண்டுகள் வாழ்ந்து அண்மையில் சாகப் போகிற நான், 35 ஆண்டுகளாக வீடு, வாசல், செல்வம், தொழில், மனைவி, மக்களைத் துறந்து சந்நியாசியாக நம் திராவிட மக்களுக்கு இந்தச் சூத்திரப் பட்டம் ஒழிய வேண்டு மென்றே பாடுபட்டு வந்த—வருகிற நான், ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம், 40 ஆயிரம், ஏன்—50 ஆயிரம் ரூபாய் கூட வரும்படி உள்ளதான எனது எஸ்டேட்டைப் பாழடைய விட்டுவிட்டு, பரதேசியாய்ப் பிரயாணங்களுக்கும், பிரச்சாரத்திற்கும் பொதுமக்களிடம் செலவு பெற்று வாழ்ந்துவரும் நான்—இதற்கு, இந்த வருணாசிரம தர்மமுறை ஒழிப்புக்கு ஏதாவதொரு காரியம் செய்யாமல் என் உயிர் போக, எப்படி என்னால் விட்டுக் கொண்டிருக்க முடியும்?

ஆச்சாரியார் முதல்மந்திரி பதவிக்கு வந்தது குறித்து உண்மையில் மகிழ்ச்சி அடைந்தவன் நான். காரணம், பிரகாசம்—கம்யூனிஸ்ட்—பொறுப்பற்ற 'உதிரிகள்' என்பவர்கள் ஆட்சியைவிட, நமக்கு நன்றாகக் கண்டித்து, எதிர்த்துப் போர் துவக்க வசதி இருக்கக்கூடிய ஒரு ஆட்சி, அதுவும் சொந்த வாழ்வில் கண்ணியமும் உலக அனுபவ அறிவும் உள்ளவர் ஆட்சிக்கு வருவது மேல் என்று கருதி ஆதரித்தேன்.

இதற்குக் காரணம், தனிப்பட்டவர்கள் சொந்த முறையில் நடந்து கொண்டிருக்கிற முறை பற்றிய அனுபவம் எனக்குச் சிறிது இருந்ததேயாகும். ஆச்சாரியாரும் அதுபோலவே ஆட்சிக்கு—கவர்மெண்டுக்குக் கவுரவம் இருக்கிற மாதிரியிலேயே பெரிதும் நடந்துவருகிறார் என்றாலும்,

தனது வகுப்புக்கு ஒரு வகுப்பின் உத்தமபுத்திரன் எப்படி நடந்து கொள்வானோ அதுபோல்—'தேவர்களுக்கு இராமன் நடந்துகொண்டது' போல்தான் நடந்துகொண்டிருக் கிறார்.

நம்மில் துரோகிகள், அனுமார்கள், விபீஷணர்கள் இருந்தால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்?

ஆனதால், நான் என் சொந்தப் பொறுப்பில் முன்பு பலதடவைகள் கூறி இருப்பது போல, வருணாசிரம வியாதியை ஒழிக்கக் கடைசிச் சிகிச்சையாக,

நாளது மாதம் 27-ந்தேதி புதன்கிழமை தமிழ்நாடெங்கும் புத்தர் விழா கொண்டாடி, மாலை 6 மணிக்குப் பொதுக்கூட்டத்தில் வருணாசிரம வாதிகள் பெரும்பாலோருக்கும் 'மூல தேவன்-தெய்வம்' என்று கருதப்படுகிறதற்கு என்று உருவாக்கி இருக்கும் 'செயற்கை உருவ கணபதி அறிகுறியை' மக்கள் உள்ளத்தில் அழித்துவிட வேண்டும் என்பதாகப் பொது மக்களை—அதாவது, மனு வருணாசிரம தர்மத்தை வெறுக்கிற பொது மக்களையும்—திராவிடர் கழகத் தோழர்களை, சிறப்பாக இளைஞர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

அன்று 'பிள்ளையார் அல்லது கணபதி உருவம்' என்பதை—மண்ணால் செய்த பொம்மை உருவத்தையே கொள்ளுங்கள். சர்க்கார் 144 போட்டால் உருவத்தை அழிப்பதை நிறுத்திவிடுங்கள். அவரவர்கள் கழகக் காரியாலயத்தில் அல்லது அவரவர்கள் வீட்டில் உடைத்து மகிழ்ச்சி கொண்டாடுங்கள்! நரகாசூரனைக் கொன்றதாகப் பார்ப்பனர்களும், பார்ப்பன அடிமைகளும் எப்படிக் கொண்டாடுகிறார்களோ அதுபோல், உருவத்தை உடைத்துக் கொண்டாடுங்கள்!

புத்தர் பிரான், வருணாசிரம தர்மத்தையோ இந்த வருணாசிரம தேவர்களையோ ஏற்றுக்கொண்டவர் அல்லர்; அவற்றை ஒழிப்பதே புத்தர் மதத்தின் உட்கருத்து; முதல் கருத்து!

இந்தத் தேவர்களை, தெய்வங்களை நாம் வணங்குவது—ஏற்பது—மிகுதியும் முட்டாள் தனமும் மானமற்ற தன்மையுமாகும்.

நமக்குக் கடவுள் என்பதெல்லாம், நம் நடத்தையில்—சத்தியம், நாணயம், தயவு, உபகாரஞ்செய்தல், துரோகம் செய்யாமலிருத்தல் ஆகியவைகளாகும்.

['விடுதலை'—தலையங்கம்— 7-5-1953]

2. ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

ஆச்சாரியார் கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு என்பதாக இரண்டாவது நாள் (24-1-'54) மாநாடு கூட்டினோம்.

அம் மாநாட்டின் தீர்மானமாக ஒரே ஒரு தீர்மானம் மட்டுமே நிறைவேற்றியிருக் கிறோம். அதாவது,

'ஆச்சாரியார் கல்வித் திட்டமாகிய, புதிய 3 மணி நேரக் கல்வித் திட்டத்தை மாற்றி பழையபடியே செய்ய வேண்டும் என்று சென்னை அரசாங்க மந்திரி சபைக்கு 3 மாத வாய்தா கண்டு ஒரு வேண்டுகோள் விடுவது என்றும்; 3 மாத வாக்கில் அரசாங்கம் இதற்குத் தயவுகாட்டிக் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்காதபட்சத்தில் ஒரு 'ஸ்பெஷல் மாநாடு' கூட்டி அதில் தீவிர நேரிடை எதிர்ப்பு நடவடிக்கை எடுத்து மந்திரி சபையைப் பணியச் செய்ய வேண்டும் என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது'—என்று.

தோழர்களே! இந்தக் கல்வித் திட்டம் எவ்வளவு யோக்கியமற்றது! இந்தப் பார்ப்பனர்கள் நம்மை எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்துகிறார்கள்; அடக்கி மிதித்து நசுக்குகிறார்கள் என்பதற்கு இந்தக் கல்வித் திட்டமே போதுமானது என்பது விளங்கும்; எவ்வளவு தைரியம்! இந்தக் காலத்தில் இவ்வளவு தைரியமாக நம்மைக் கொடுமைப்படுத்து கிறார்களே!

பண்ணாத கொடுமைகளை, அக்கிரமங்களையெல்லாம் செய்கிறார்கள். இவ்வளவும் போதாதென்று நமது மக்களின் கண்ணையும் சேர்த்துக் குத்துகிறதா? ஏன் இந்த அக்கிரமம்?' என்றால், 'பொறு, பொறு! இந்தத் திட்டத்தை 'டவுனு'க்கும் கொண்டு வருகிறேன்' என்று சொல்லுகிறார்கள்! இந்த நாட்டில் உழைக்கிறவர்கள் யார்? நம்ம வர்கள்தானே! பாடுபட்டு, கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் செய்கிறோம்; உடலால் பாடு படுகிற வேலைகள் அத்தனையும் செய்கிறவர்கள் திராவிட மக்கள்தானே! இன்னும் சர்க்காருக்கு வரி கொடுப்பது நம் மக்கள்—கிராமத்து மக்கள்தானே கொடுக்கிறார்கள்? இப்படியிருக்கும்போது 'உழைக்கிற நமது மக்கள் படிக்கக்கூடாது; பாடுபடாத சோம் பேறிக் கூட்டம்தான் படிக்க வேண்டும்; உத்தியோகம் பார்க்கவேண்டும்' என்று திட்டம் கொண்டுவருவது என்றால் என்ன நியாயம்? இதை எப்படிச் சகித்துக்கொண்டிருப்பது? இவர்களைச் சும்மா விட்டுவைத்திருப்பதால்தானே, இப்படியெல்லாம் தைரியமாகச் செய் கிறார்கள்? என்ன அநியாயம்! 'சாஸ்திரத்திலே, புராணத்திலே, இன்னும் மத, கடவுள் ஆதாரங்கள் எல்லாவற்றிலும் அக்கிரமமான முறையில் எங்களை அடக்கி ஒழிப்பதையே இலட்சியமாகக் கொண்டு வைத்து இருப்பது போதாமல் இன்று நடப்பிலும் அந்தப்படியே செய்யப்பட்டு வருகிறதே!

எங்கள் நாட்டிலே வந்து உட்கார்ந்து கொண்டு எப்படி எப்படியோ தந்திரமாய் அதிகாரத்தை—ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு தகுதியில்லாதவனுக்கு எல்லாம், அயோக்கியர்களுக்கெல்லாம், அவர்கள் பார்ப்பன அடிமைகள்—கூலிகள்—பிரச்சாரத்தால் பிழைக்க வேண்டிய கூலிகள் என்பதற்காகவும், அவர்களுக்குப் பதவியும், செல்வாக்கும், பெருமையும் கொடுத்துவருவது என்றால் என்ன நியாயம்? உள்ளபடி யோக்கியன்—திறமை சாலிகள்—நல்லவர்கள் வெளியே தலைகாட்ட முடியவில்லையே! நாம் கேட்டால்—'நீ சட்ட சபைக்கு வாயேன், வந்து உன் காரியத்தைச் செய்து கொள்ளேன்!' என்றா சொல்வது?

அந்தச் சட்டசபை யோக்கியதைதான் என்ன? சென்ற தடவை நடைபெற்ற தேர்தலிலே காங்கிரசின் கதி என்னவாயிற்று? காங்கிரஸ் தோற்றுப்போய் எதிர்க் கட்சிகள் தானே மெஜாரிட்டியாய் இருந்தன? உண்மையிலேயே யோக்கியமான ஆட்சியாய் இருந்தால், ஜனநாயகத்தை உள்ளபடியே கருதுபவர்களாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? மெஜாரிட்டியாய் இருந்த காங்கிரஸ்-எதிர்ப்பாளர்களைக் கூப்பிட்டல்லவா மந்திரிசபை அமைத்திருக்க வேண்டும்? அதை விட்டு, தேர்தலுக்கே நிற்காத ஒருவரை சட்டத்திற்கு – சட்டத் தத்துவத்திற்கு விரோதமாக – கவர்னர் நாமினேஷன் என்பதன் மூலமாகப் பதவிக்குக் கொண்டுவந்து மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டது! இதுதானே சட்டசபையின் யோக்கியதை!

இது மட்டுமா? அந்தச் சட்டசபையில் காரியந்தான் எப்படி நடைபெறுகிறது? இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றியே எடுத்துக்கொண்டாலும்—'இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும்' என்று சட்டசபையில் மெஜாரிட்டியான உறுப்பினர்கள் தீர்மானம் செய்யவில்லையா? அந்தத் தீர்மானம் என்னவாயிற்று? வெகு சாதாரணமாக, 'இது வெறும் சிபாரிசுதானே தவிர, இந்த முடிவை அமுல் நடத்தவேண்டிய அவசியமில்லை' என்று தள்ளப்பட்டுக் குப்பைத் தொட்டியில் போடப்பட்டு விட்டதே!

இப்படியிருக்கும்போது, சட்டசபைக்கு நாம் போனால் அவர்களிடம் கூலி பெறுவதல்லாமல் வேறு என்ன செய்ய முடியும்? இன்னும் சொல்ல ஆசைப்படுகிறேன்—இன்றைக்கு இந்த இராஜ்யத்தின் முதல் மந்திரியாய் இருக்கிறாரே, தோழர் ஆச்சாரியார் அவர்கள் அவர் எந்த ஜனநாயகத்தின் மீது, எந்த ஓட்டின் மீது, எந்தச் சட்டசபைத் தன்மையின் மீது மந்திரியாக இருக்கிறார்? காரணம் வேண்டும்! எந்தத் தொகுதியிலும் நிற்காமல், யாரிடமும் ஓட்டு வாங்காமல் முன் சொன்னதுபோல் யார் தயவிலோ மந்திரியாக ஆனார்.

அந்தப்படி வந்த முதல் மந்திரி, தமக்கு உதவி மந்திரிகளாகத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறாரே, அந்த மற்ற மந்திரிகளின் தகுதி—திறமைதான் என்ன? அவர் களுக்குள்ளேயே—இருப்பவர்களுக்குள், இந்த ஆட்கள்தாம் மந்திரி வேலைக்குத் தகுதி யானவர்களா? மந்திரி வேலைக்கு அனுபவஸ்தர்களா? அவர்களுக்கு, எந்த அர்த்தத்தில் மந்திரிகளாகப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது? தேர்தலில் நின்று மக்களால் கூடாது என்று துரத்தியடிக்கப்பட்ட ஒருவருக்கு மந்திரிப் பதவி! அதுபோலவே தேர்தலிலே நின்றறியாத, யாருக்குமே தெரியாத—இன்னும் சொல்லப்போனால் காங்கிரசிலேயேகூட இல்லாத ஒருவர் திடீரென்று மந்திரியாக ஆக்கப்பட்டிருக்கிறார்! இது வெல்லாம் என்ன நியாயம்? இப்படிப்பட்டவர்கள்தாம் நம்பிக்கையானவர்கள் என்றால், அதன் அர்த்தம் என்ன? சுத்தமான பார்ப்பன அடிமைகளாகவும் தலையாட்டிப் பொம்மைகளாகவும் இருக்க இவர்கள் ஒப்புக்கொண்டு அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்; ஆகவே அப்படிப்பட்டவர்கள்தாம் வேண்டும் என்பதுதானே அர்த்தம்! உள்ளபடி யோக்கியமான சர்க்கார் நடப்பாய் இருந்தால், இப்படி மக்களால் துரத்தப்பட்ட—மக்களுக்குத் தெரியாதவர் களுக்கா பதவியும், பெருமையும், ஆதிக்கமும் கொடுக்கும்? மக்கள் யாரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, யாரை மக்கள் மதிக்கிறார்களோ அவர்களுக்கல்லவா கொடுக்க வேண்டும்?

இப்படி அக்கிரமம் செய்துகொண்டு, மேலும் செய்கிற மாதிரி—திராவிட மக்கள் படிக்கக்கூடாது என்பதாகக் கல்வித்திட்டம் கொண்டு வருவது என்றால், நமக்கு ஆத்திரம் வராதா? எந்தப் பார்ப்பனர் மீதும் கோபமோ, குரோதமோ இல்லை. ஆனால், அவர்களுடைய நடத்தையும், போக்கும் நம்மைப் பார்ப்பனர்கள்மீது கோபம் கொள்ளுகிற மாதிரி—அதைவிட 'இந்தப் பார்ப்பனர்களை இங்கே வைத்திருக்கிற வரையில் நம்முடைய இன மக்கள் தலையெடுக்கமுடியாது; ஆதலால் இந்தப் பார்ப்பனர்களைக் கண்டிப்பாக இந்த நாட்டை விட்டுத் துரத்தித்தான் ஆகவேண்டும்' என்று சொல்லத்தக்க மாதிரியான அந்த அளவுக்கு அல்லவா எண்ணம் போகிறது!

உள்ளபடி இந்தப் பார்ப்பனர்களைத் துரத்தாதபடிக்கு இந்த நாட்டில் திராவிடர்கள் எப்படி இன்னமும் சகித்துக்கொண்டிருப்பது? எனவேதான், இந்த முடிவுக்கு அதாவது, 'பார்ப்பானே வெளியேறு!' என்ற முடிவுக்கு வரவேண்டியதாய்ப் போய்விட்டது. பார்ப்பனர்களின் நடத்தையும், கொடுமையும், அக்கிரமுமேதான் இதற்குக் காரணம்! குத்துவெட்டு வேண்டாம்; கலவரம் வேண்டியதில்லை. அந்த நிலை ஏற்படுவதற்கு முன் 'பார்ப்பனர்களே பேசாமல் வெளியேறிவிடுங்கள்!' என்கிறோம். 'போகவும் முடியாது; இங்கேயேதான் இருப்போம், இப்படித்தான் செய்வோம், அதை நீங்கள் சகித்துக்கொண்டு தான் இருக்கவேண்டும்' என்றால், பலாத்காரமாய்த் துரத்துவதைத் தவிர வேறு வழிதான் என்ன என்று பார்ப்பனர்களே சொல்லட்டுமே!

இந்தக் கல்வித் திட்டம் கேடானது; எங்கள் மக்களை நசுக்குவது; நாங்கள் படிக்கக் கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்படும் அழிவுத் திட்டம் என்பதாகச் சொன்னால் இவர்கள், 'இல்லை இதுதான் நல்ல திட்டம்; இதன் மூலம்தான் படிக்கமுடியும்; மக்களைக் கெடுப்பதற்காக இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்' என்று நமக்குச் சொல்லுகிறார்கள். இது எந்த விதத்தில் பொருத்தமானது, யோக்கியமானது என்று கேட்கிறேன். நாங்கள் தான், ஆயிரம் காரணங்களை விளக்கி, இன்னின்ன காரியங்களால் இத் திட்டம் கேடானது என்று சொல்லுகிறோமே! நாங்கள் சொல்லுகிற காரணங்களை மறுத்தால் சரி; அல்லது நாங்கள் சொல்லுவது இன்ன விதத்தில் தவறானது என்று சொல்லுவதானால் நியாயம். அதை விட்டுவிட்டு, என்னமோ—இவர்கள் (பார்ப்பனர்கள்) தான் மக்களைப்பற்றிக் கவலை எடுத்துக்கொண்டு பாடுபடுகிற மாதிரியும்—எங்களுக்கெல்லாம் அதைப்பற்றிக் கவலையே இல்லை என்றும் பேசுவது என்பது எவ்வளவு தவறானது?

நான் கேட்க ஆசைப்படுகிறேன்—இந்தத் தோழர் ஆச்சாரியார் அவர்களுக்கோ, அல்லது அவருடைய இனத்து மக்களுக்கோ இந்த நாட்டைப்பற்றி, இந்த நாட்டு மக்களைப் பற்றி எதில் எங்களைவிட அதிகமான கவலை இருக்கமுடியும்? அவர்களுடைய கவலையெல்லாம் பார்ப்பன ஆதிக்கத்துக்கு—பாதுகாப்புக்கு என்பது தவிர, பொதுவுக்கென்று என்ன இருக்கிறது? எங்களைவிட என்ன இந்த நாட்டுக்கு அதிகமாகப் பாடுபட்டு விட்டார்கள்? இந்தப் பார்ப்பனர்களால் நாம் இந்த 2000, 3000 ஆண்டுகளாக எதில் முன்னேற்றம், மேன்மை அடைந்திருக்கிறோம்? வெள்ளையன் சிறிது முன்னேற்றமடையச் செய்தான். இந்தப் பார்ப்பனர் அவன் இடத்திற்கு வந்து நம்மைப் பழையபடி கீழே தள்ளப் பார்க்கிறார்கள்; சாண் ஏறினதற்கு முழம் இறக்கிவிட்டார்கள்.

இன்றைக்கு இருக்கிற எவர்தானாகட்டும்; ஆச்சாரியாரேதான் ஆகட்டும், என்னை விட அதிகமாக என்ன இந்த நாட்டுக்குப் பாடுபட்டு விட்டார்கள்? அல்லது மற்றவர்களுடைய உழைப்புக்கு, நாணயத்திற்கு, தியாகத்திற்கு—என்னுடைய பொதுநல உழைப்பு என்பது என்ன, எவ்வளவு குறைந்தது என்று சொல்லமுடியும்? இவர்கூட அல்ல; இவருக்குப் பெரியவர்கள் என்று சொல்லப்படுகின்ற நேரு, இராஜேந்திர பிரசாத் போன்றவர்கள்தான் ஆகட்டும், என்ன, என்னைவிட அதிகமாகப் பாடுபட்டு விட்டார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்த ஆச்சாரியாரும், பிரசாதும், நேருவும் 4 முறை, 5 முறை ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்றால், நான் 13 தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். அந்தஸ்தில், பணம் காசில் இவர்களில் யாருக்கு நான் குறைந்தவன் என்று சொல்லமுடியும்? இரண்டு தலைமுறையாக நாங்கள் பெரிய வியாபாரக் குடும்பம்; செல்வாக்கும் அந்தஸ்தும் உள்ள நல்ல பெரியதனக் குடும்பக்காரர்களாயிற்றே! மற்ற எந்தப் பார்ப்பனத் தலைவர்கள் என்பவர்களாகட்டும், அவர்களுடைய முன் தலைமுறையை எடுத்துப் பார்த்தால், அவர்கள் புரோகிதர்கள்தானே! அவர்கள் வீதி விளக்கு வெளிச்சத்திலே படித்துக் கொண்டிருக்கிற போதே அந்தஸ்துள்ளவனாக, பெருமைக்கு உரியவனாகத்தான் நானிருந்தேன்.

இன்னும், 'பாடுபட்டோம்' என்று சொல்லுகிற மற்றவர்கள்—நேரு, பிரசாத், ஆச்சாரியார் உட்பட அத்தனை பேரும், இன்று அந்தப் பாட்டுக்குப் பலனை அனுபவிக்கிறார்கள்; இராஜபோகம் அனுபவிக்கிறார்கள்; 10 இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் சேர்க்கிறார்கள். ஆனால், நான் இந்தப் பொதுவாழ்க்கை என்பதன் பேரால் இத்தனை ஆண்டு பாட்டுக்கும் இன்றுவரை நான் ஏதாவது பலன், பதவி, பணம் அடைந்திருக்கிறேனா? சொல்ல முடியுமா? வேண்டுமானால், இந்தக் காரியத்துக்கு வந்ததனால் எனக்கு என் சொந்தத்தில் ஏராளமான பொருள் நட்டத்தையும், எதிர்ப்பையும் அனுபவித்திருக்கிறேன் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, ஒரு செல்லாத காசு அளவாவது இலாபம் பெற்றிருப்பேனா? அப்படி இருக்கும்போது என்னைப் பார்த்து, 'எங்களுக்குத்தான் மக்கள்மீது கவலை, உனக்கு இல்லை' என்றால், என்ன யோக்கியதை என்றுதானே கேட்கவேண்டி வரும்? ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் இருக்கிறது என்றால் இந்த முறையிலா நடந்துகொள்வது? ஒரு முறை வேண்டாமா?

என்ன தைரியம்? எங்கள் நாட்டில் பார்ப்பானுக்குச் சமமாக வாழ எங்களுக்குத் தகுதி இல்லை; திறமையில்லை என்கிறார்கள்! படிக்கவும் வசதி தரமாட்டேன் என்கிறார்கள்! பெரிய படிப்பு படிக்க வசதியில்லை—விடமாட்டேன் என்கிறார்கள். கொஞ்சம் மனிதனாகலாம் என்றாலும் அதற்கும் விடாமல்—'கல்வித் திட்டம்' என்ற பேரால் அவனவன் சாதித் தொழிலுக்குப் போங்கள் என்று அதற்கும் வெடி வைக்கிறார்கள். அடக்குவது என்றால் இப்படியா? எதிரி என்றால் வாழவே கூடாது என்றா நினைப்பது? இதுதான் பெரிய பண்பு என்பதா?

உள்ளபடி இந்தக் கல்வித் திட்ட எதிர்ப்பு என்பதை ஒரு அரசியல் போராட்டமாகக் கருதி இதை நாங்கள் எதிர்க்கவில்லை. இதைச் சமுதாயப் போராட்டமாக, இனவாழ்வுப் போராட்டமாகக் கருதியே எதிர்க்கிறோம். எங்கள் இனத்துக்கு—திராவிட இனத்துக்கு இந்த இனத்தையே தீர்த்துக் கட்டுவதற்காக வைக்கப்படும் பெருத்த வெடிகுண்டு என்று கருதியே இக் கல்வித் திட்டத்தை எதிர்க்கிறோம். இந்த எதிர்ப்பை, போராட்டத்தை நாங்கள் எங்களுடைய ஜீவாதாரமான, உயிர்நிலைப் போராட்டமாகக் கருதுகிறோம்.

இப்போதே சொல்லுகிறேன்; இந்தக் கல்வித் திட்டம் எடுபட்டால் மட்டுமே போதாது; நம்முடைய மக்களுக்கு உத்தியோகம், கல்வி எல்லாவற்றிலும் சரியானபடியான விகிதாச்சாரம், பார்ப்பானுக்கு 100-க்கு 3, நம்மவர்களுக்கு 97 என்கிற மாதிரி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டாக வேண்டும். இந்த இரண்டும் திராவிட மக்களின் ஜீவாதாரமான—உரிமையான பிரச்சினைகள். இந்த இரண்டு காரியங்கள் நிறைவேறுவதற்காக இந்த இனம் கடைசிவரை உயிரைப் பணயம் வைத்துப் போராடியே தீரும்! இதில் சந்தேகமே இல்லை. உள்ளபடி சொல்லுகிறேன்—இந்தப் பார்ப்பனர்களை ஒழிக்கிறோமோ இல்லையோ—எங்களிலே 1000 பேர் இந்த முயற்சியில், பார்ப்பனர்களை வெளியேற்றுகிற இந்த நல்ல காரியத்திலே, சாவோம்! ஓர் ஆயிரம் பேர் செத்துவிட்டால்—என்ன இந்த இனத்துக்கு நட்டம் வந்துவிடப் போகிறது? நான் பலமுறை கூறியதுபோல் இந்த நாட்டுத் திராவிட மக்களின் எண்ணிக்கையில் இந்தச் சாவு என்பது—தலை வாருவதில்,

சிக்கெடுப்பதில் கழியும் ஒரு சில முடிகள் போன்றதுதானே தவிர, பெரிய நட்டம் ஒன்றுமில்லை. ஆனால், இந்த 1000 பேரில் பகுதி வீதம் பார்ப்பனர்கள் தீர்க்கப்படுகிறார்கள் என்ற நிலைமை ஏற்படுமானால் உள்ளபடி அந்தச் சமுதாயத்துக்கு அது எவ்வளவு கேடு, நட்டம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கட்டும்! 'நாங்களும் தயாராய் இருக்கிறோம்' என்று மடி கட்டுவதும், கசரத் பழகுவதும் பார்ப்பானுக்கு முட்டாள்தனமாக—போங்காலமாகவே முடியும்.

உள்ளபடி ஆச்சாரியாருக்குச் சொல்ல விரும்புகிறேன்; அவர் இந்தத் திட்டத்தை மாற்றவில்லையானால் நிச்சயமாக (அவர் பதவியை விட்டுப் போகிறாரோ, இல்லையோ அது வேறு விஷயம்) இது அவருடைய இனத்தின் அழிவுக்கே ஒரு காரணமாய் இருக்கப் போகிறது. சும்மா நான் 'டுப்' (Dupe) விடவில்லை. இதை நன்றாக உணர்ந்து கொள்ளட்டும். திராவிடமக்கள் இன்னும் இந்தக் கொடுமைகளையும் அக்கிரமத்தையும் நிச்சயமாகச் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். இனியும் அவர்களை அடக்கி வைத்திருப்பதும் தவறான காரியம்; தற்கொலைக்கு ஒப்பான காரியம் என்றே சொல்லுவேன்.

கடைசியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தோழர்களே! இனி அகிம்சை, அமைதி என்று பேசிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. ஏன் என்றால், அனுபவத்திற்கு அவை பயன்படவில்லை. எந்த முறையால் காரியம் கைகூடுமோ அந்த முறையைக் கையாளுவோம்; அதற்குப் பலாத்காரம், அராஜகம் என்ற பெயர் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல்!

தோழர்களே! இப் பெருத்த போராட்டத்தில் கலந்துகொள்ள எல்லா மக்களும் தயாராய்ப் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு வாருங்கள்! கூடவே சொல்லிக்கொள்கிறேன்: இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதன்மூலம் பெருமையும் செல்வாக்கும் கிடைக்கும்; தேர்தலுக்கு நின்று மந்திரியாகலாம்—அதாவது ஜெயிலுக்குப் போய்வந்தவுடன் நாமினேஷன் பாரத்திற்கு ஓடுவது என்கின்ற எண்ணத்தின்மீது யாரும் வர வேண்டாம். எதற்குச் சொல்லுகிறேன்; இன்றைக்கும் பொதுவாழ்வு என்பது 100-க்கு 90 பாகம் சுயநலத்துக்கும், சொந்த இலாபத்துக்கும், வாழ்வுக்கும் ஆகவே பயன்படுத்தப் படுகிறது. இந்தப் பொதுவாழ்க்கை என்பதை ஒரு ஏணிப் படியாக வைத்துக்கொண்டு, தாங்கள் மேலே மேலே ஏறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாய்ப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எல்லாப் பொதுநல வாழ்வுக்காரர்கள் என்பவர்களுமே அப்படித்தான் இருக்கிறார்கள். அதனாலேயே பொதுவாழ்வுக்கு மதிப்பு இல்லை; சுயநலம் தவிர பலனும் இல்லை.

நான் மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்—பொதுவாழ்வில் எந்தவிதமான இலாபத்தையும் கருதாமல், எந்தப் பெருமையும்—சட்டசபை, ஜில்லாபோர்டு என்பதாக எதையும் கருதாமல் கை நட்டப்பட்டுக்கொண்டு, தங்களுக்கு உள்ளதையும் விட்டுவிட்டு, உள்ளபடி, பொதுநன்மை என்கிறதையே இலட்சியமாகக்கொண்டு யாராவது பாடுபடுகிறார்கள் என்றால் அது திராவிட கழகத்தார் என்கிற இந்த ஒரு கழகத்தாரைத் தவிர வேறு யாருமேயில்லை. மற்றவர்கள் எல்லாம் பாடுபடுவார்கள் என்றால் அந்தப் பாட்டை எலெக்ஷனுக்கும் மற்ற வாழ்வுக்கும் கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள்; பலர் அதனாலேயே வயிறு வளர்க்கிறார்கள். மற்றும் எடுத்துப் பாருங்கள், ஒவ்வொருவரும் பொதுவாழ்வுக்கு வந்தபோது அவர்களுக்கிருந்த யோக்கியதை, அந்தஸ்து, செல்வம் முதலியவைகளை-அவர்கள் இன்றைக்கு இந்தப் பொதுவாழ்வின் பேரால் எல்லாத் துறையிலும் எத்தகைய பெருமையான வாழ்வு நடத்துகிறார்கள் என்பவைகளை!

எனவே தோழர்களே! இதை ஒரு ஏணியாகக் கருதி மேலே போவது என்பதாகக் கருதாமல் தங்களைத் தாங்களே ஏணியாகக் கருதிக்கொண்டு, சமுதாய மக்கள் முன்னேறப் பயன்படுவதாய்ப் பாடுபட முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டத்திற்கு வரும்போது வீட்டில் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு வாருங்கள்.

[நூல் : 'புரட்சிக்கு அழைப்பு'; சென்னையில், 31-1-1954-ல் சொற்பொழிவு]

3. தேசியக் கொடி கொளுத்தும் தீர்மானம்

இந்திய அரசாங்கத் தேசியக் கொடியைக் கொளுத்துவது என்பது மிகக் கடினமான தீர்மானம் என்பதாகப் பலர் கருதக்கூடும். இது இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ, ஒழித்துக் கட்டவோ கருத்துக்கொண்டு செய்யப்பட்ட—கொடி கொளுத்தும் தீர்மானமல்ல.

எங்களுக்கு—தமிழர்களுக்கு—தமிழ் நாட்டாருக்கு—இந்திய அரசாங்கம் வேண்டாம்; தமிழ்நாடு—தமிழர்கள் இந்திய அரசாங்கத்தின் கூட்டு ஆட்சியில்—இந்திய யூனியனில் இருக்க விரும்பவில்லை. நாங்கள் எங்களை, நாட்டை, தனிப்பட்ட பூர்ண சுயேச்சையுள்ள தனியரசு நாடாக ஆக்க விரும்புகிறோம்; எங்கள் நாட்டைத் தனி-பூரண சுயேச்சை நாடாக ஆட்சிசெய்ய எங்களுக்கு சக்தி உண்டு; சகலவிதத்திலும் எல்லாவிதமான வசதியும் உண்டு. மத்திய கூட்டாட்சியிலிருந்து பிரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

இந்திய யூனியன் அரசியல் சட்டத்தில், சட்டப்படியான கிளர்ச்சியின்மூலம் பிரிந்து கொள்ளப் போதியபடி சட்டவசதி இல்லை; எங்களை—தமிழர்களைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும்படியானதும்—தமிழ் நாட்டு மக்களில் 100-க்கு 3 வீத ஜனத்தொகை உள்ளது மான பார்ப்பனர்கள் மத, சமுதாயத் துறையில் எங்களிடம் பெற்ற ஆதிக்கத்தை வட நாட்டாருக்குக் காட்டிக் கொடுத்துப் பிழைப்பதாலும், தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கத்தில் பெரும் பங்கைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சட்டசம்பந்தமான வழிகளையெல்லாம் அடைத்துவிட்டார்கள். ஆனதால், நாங்கள் சட்டசம்பந்தமான வழி மாத்திரமல்லாமல் வேறு எந்தவிதமான வழிமூலமானாலும் பிரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் பிரிந்துகொள்ளவேண்டும் என்கின்ற எண்ணம், எங்களுக்கு வடநாட்டா ரால் நடத்தப்படும் இந்திய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு தோன்றிய எண்ணமல்ல.

வெள்ளையனால் நடத்தப்பட்ட இந்திய அரசாங்கம், சர்வ வல்லமையுடன் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த காலமான 1937–38-லேயே தோன்றி, திராவிடநாடு கிளர்ச்சியை நடத்தி வந்திருக்கிறோம்.

வெள்ளையர் இந்த நாட்டைவிட்டுப் போகும்போது நாங்கள் ஸ்தாபன பூர்வமாக சட்டமுறைப்படிக் கிளர்ச்சி செய்திருப்பதோடு, டெல்லிக்குத் தூதுசென்று, வெள்ளையர் களிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டும் இருக்கின்றோம்; இந்தச் சந்தர்ப் பத்தில் வடவர்கள் வெள்ளையர்களுக்கு இலஞ்சத்தைக்கொடுத்து எங்கள் விருப்பத்தை இலட்சியம் செய்யாமல் செய்துவிட்டார்கள். மற்றும், வடவர் ஆட்சி ஏற்பட்டு, அவர்கள் சுதந்திரதினம் கொண்டாடும்போதே அந்த நாளை நாங்கள் துக்க நாளாகக் கொண்டாடி இருக்கிறோம்.

ஆண்டுதோறும் நாங்கள் பிரிவினை நாளைக் கொண்டாடி வருகிறோம். மற்றும், 'அரசியல் சட்டம்-எங்களை நிரந்தர அடிமைப்படுத்தும் வடவரின் சர்வாதிகாரச் சட்டம்' என்றும், அதைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டுமென்றும் எங்கள் மாநாடுகளில் பலதடவை பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வந்திருக்கிறோம்.

எங்களுடைய இந்த உணர்ச்சியையே அடியோடு அழிக்கும்படியான தன்மையில், அன்னிய மொழியாகிய இந்திமொழியை எங்கள் நாட்டிற்குள் அரசியலின்பேரால் பலாத்காரமாய்ப் புகுத்தி, மொழி, கலாச்சாரம், கல்வி முதலிய துறைகளிலும், அரசியலில் ஆட்சிமொழி என்கின்ற தன்மையிலும் புகுத்தி இருப்பதோடு, இந்தி படித்து பாஸ் செய்தவனுக்குத்தான் உத்தியோகம் என்கின்ற அளவுக்கு வடவராட்சி துணிந்துவிட்டதால், இந்திய ஆட்சி தமிழ் நாட்டில் கூடாதென்கின்ற எண்ணம் எங்களுக்கு வலுப்பட்டுவிட்டது.

இந்த வலுப்பட்ட எண்ணம் பெற்ற பின்னர்தான் நாங்கள் 17-ந்தேதி திருச்சியில் செய்த, வடவராட்சிச் சின்னமாகிய தேசியக்கொடி என்பதைக் கொளுத்தவேண்டும் என்ற தீர்மானமாகும். அந்தத் தேசியக்கொடி என்பது எங்களுக்கு, எங்கள் தேசத் தேசியக் கொடியல்ல.

'இந்தியா தேசம்' என்பதை எங்களுக்குச் சம்பந்தபட்ட தேசமாக நாங்கள் வெகு நாளாகக் கொண்டிருக்கவே இல்லை. நாட்டு இலட்சணப்படி, எங்கள் நாடு எந்தவிதத்திலும் இந்திய நாடு என்பதுடன் சேர்ந்ததாக இருக்க நியாயமே இல்லை. சரித்திர சம்பந்தபட்ட வரையில்—வெள்ளையர் காலத்தைத் தவிர, வேறு எந்தக் காலத்திலும் எங்கள்நாடு தனித்த சுதந்திர நாடாகவே இருந்துவந்திருக்கிறது.

மதசம்பந்தமான புராண இதிகாசங்கள் சம்பந்தப்பட்டவரை தமிழ்நாடு (திராவிட நாடு) தவிர்த்த இந்திய நாடு திராவிடநாட்டிற்கு எதிரி நாடாகவும், அந்த இந்திய மக்கள் (ஆரியாவர்த்தம் ஆரிய மக்கள்) திராவிட மக்களுக்கு எதிரிகளாகவும் இருந்துவந்ததாகவே அறியக்கிடக்கின்றது.

ஆகவே, 'இந்தியத் தேசியக் கொடியைக் கொளுத்துவது, இந்தியக் கூட்டாட்சி என்பதில் தமிழ் நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பிரஜைகளாக இருக்கச் சம்மதப்பட வில்லை' என்கின்ற எங்களுடைய இஷ்டமின்மையைக் காட்டுவதேயாகும்.

['விடுதலை'–தலையங்கம்—20-7-1955]

4. இந்திக் கிளர்ச்சி

கொடி கொளுத்திக் காட்டுவது என்று திராவிடர் கழகம் தீர்மானித்த பிறகு, அரசியல் உலகில் ஒரு பரபரப்பு—'சென்சேஷன்' ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பெரிதும் அரசியல் பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்களே அதிகம் பேசுகிறார்கள்.

இதில் சிலருக்கு கொடியைப்பற்றிக் கவலையில்லாமல் வேறு விஷயமாய் மகிழ்ச்சியும் கவலையும் ஏற்பட்டிருக்கலாம். அதாவது, காமராசரின் எதிரிகளுக்கு ஒரு மகிழ்ச்சி என்ன வெனில், 'காமராசருக்குப் பொது மக்களிடம் பெரிய ஆதரவிருந்து வருகிறது. இப்போது இராமசாமி கொடி கொளுத்தப் போவதால் அவன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துதான் தீரவேண்டும்; விஷயம் இந்திப் பிரச்சினையானதால் இந்த இந்தி எதிர்ப்பு நாட்டுமக்கள் எல்லோரும் வரவேற்கும்படியான காரியமாகும்; இப்போது இராமசாமி மீது எடுக்கும் நடவடிக்கையில் காமராசர் பொதுமக்கள் ஆதரவை இழந்து விடுவார்; செல்லுமிடங்களில் கருப்புக்கொடி (1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பில் இராஜாஜிக்குப் பிடித்ததுபோல்) பிடிக்கும் படியான நிலைமை வந்துவிடலாம். ஆனதால், இந்தக் கொடி கொளுத்துவது காமராசரைத் திண்டாட்டத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டது. இது ஒரு நல்ல சம்பவம்' என்று காமராசரின் எதிரிகள் மகிழ்ச்சிக் கூத்தடிப்பார்கள்.

அதுபோலவே காமராசரின் நண்பர்கள், 'இது ஒரு சங்கடமான நிலையாக இருக் கிறதே; இது எப்படி முடியுமோ?' என்று கவலைப்படுவார்கள். இதுதான் பரபரப்புக்கு முக்கியமான காரணம். மற்றபடி, இந்தக் கொடி கொளுத்துவது ஒரு சாதாரண விஷயம். பிள்ளையார் உடைக்கப்பட்டதைவிட இது ஒன்றும் முக்கியமான காரியமல்ல. அது கடவுள் சங்கதி; இது ஆட்சி சங்கதி. அது ஒரு மொத்தைக் களிமண்ணைப் பொறுத்தது–இது ஒரு முழம் அல்லது ஒருசாண் துணியைப் பொறுத்தது. இந்த இரண்டு காரியமும் யாரிடமும் எவ்வித பலாத்காரம் கொண்டதுமல்ல—நாசத்தைக் கொண்டதுமல்ல.

ஆனால், வெறும் மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அந்தக் களிமண் பொம்மை எப்படிக் 'கடவுள் சின்ன'மோ, அப்படியே, இந்த மேற்படி அளவு துண்டுத் துணி 'ஆட்சிச் சின்னம்' என்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுவதாகுமே ஒழிய, அறிவாளிகள் பிரமாதமாகக் கருதிக்கொள்ளப்பட இடமில்லை. கடவுள் சின்னம் என்பது 'ஒழுக்கத்தையும் எல்லா மக்களுடைய உள்ளத் திருப்தியையும்' பொறுத்தது; ஆட்சிச் சின்னம் என்பது நீதியையும் எல்லா மக்களுடைய திருப்தியையும் பொறுத்தது. அது மத சாஸ்திரத்தைப்

பொறுத்தது; இது அரசியல் சட்டத்தைப் பொறுத்தது. இவற்றில் ஒழுக்கம், நேர்மை இல்லாமல் சாஸ்திரத்தையும் சட்டத்தையும் கருதிக்கொண்டு இந்த இரண்டையும் காப்பாற்றப் புறப்படுவது கைபலமே அல்லாமல் நியாய பலத்தைப் பொறுத்ததல்ல.

ஆனால், பொதுமக்கள் இந்த இடத்தில் ஒரு விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். அதாவது, உடைப்பவர்களும் கொளுத்துபவர்களும் என்ன எண்ணத்தைக்கொண்டு அப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றியதாகும்.

பக்தர்களுக்கோ, அரசாங்கத்திற்கோ எந்தவிதமான தொல்லையையும், அவர்களது காரியங்களுக்கு எந்தவிதமான தடையையும், ஏற்படுத்துவதற்காக அல்லவேயல்ல. மற்றெதற்கு என்றால், 'பிள்ளையார் என்பதை நாங்கள் எங்கள் கடவுளாகக் கருதவில்லை. அது போலவே, இந்திய யூனியன் ஆட்சி என்பதை நாங்கள் எங்கள் சர்க்காராக, ஆட்சியாகக் கருதவில்லை. இவை எங்களுக்கு இஷ்டமில்லாத காரியங்கள்; அதன் காரணங்கள் இன்னின்னவைகள் என்று விளக்கி வந்திருக்கிறோம்; விளக்கி வருகிறோம். அந்த எண்ணங்களைப் படிப்படியாக தீவிரப்படுத்திக் காட்டுவதற்காக இப்படிச் செய்கிறோம். இதனால் எங்களுக்கு வேறு எவ்வித கெட்ட எண்ணமுமில்லை.'

இந்திய யூனியன் ஆட்சியை ஒழித்து, கவிழ்த்து எங்கள் ஆட்சியை இந்தியாமீது சுமத்தவோ, இந்தியாவை நாங்கள் எங்களுக்கு அடிமைப் படுத்திக் கொள்ளவோ அல்ல; அல்லது இந்தியாவை மற்றொரு நாட்டானுக்குக் கைவசப்படுத்தவோ, காட்டிக்கொடுக்கவோ அல்ல; அதாவது நாங்கள் துரோகிகளுமல்லர்; எதிரிகளுமல்லர்; யுத்தம் தொடங்குகிறவர்களுமல்லர்.

எங்கள் நாட்டு ஆட்சி எங்களுக்கு வேண்டும். எங்கள் நாட்டுக்குள் எங்கள்மொழி அல்லாதது ஆட்சி மொழியாக, தேசிய மொழியாக, கல்வி மொழியாக இருக்கக்கூடாது. இந்தியை வலியுறுத்தும் ஆட்சி எங்கள் (தமிழ்) நாட்டிற்கு வேண்டாம் என்பதை ஆட்சியாளருக்குக் காட்டுவதற்காக—ஒரு கிளர்ச்சி காரியமாக இதைச் செய்கிறோம். அதுவும் ஏன் செய்கிறோம் என்றால், மற்றவிதமாகச் செய்யப்பட்ட காரியங்கள் கவனிக்கப்படவில்லை; கேலி செய்யப்பட்டுவிட்டன. இந்திய யூனியன் ஆட்சி ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்துவது ஜனநாயகமா? இங்கு தமிழர்கள் 100-க்கு 90 பேர்கள் ஆவார்கள்; மீதி 100-க்கு 10 பேர். பாக்கியுள்ள மக்களிடம் இந்த ஜனநாயக ஆட்சி, இந்தியைப்பற்றி யோக்கியமான முறையில் ஓட்டுக் கேட்கட்டுமே! மெஜாரிட்டி மக்கள் இந்தியை விரும்பினால் வைத்துக்கொள்ளட்டும். அப்படியில்லாமல், 'இந்திய யூனியன் அரசாங்கத்திற்குள் தமிழ்நாடு ஒரு இராஜ்யமாக சேர்க்கப்பட்டு இருக்கிறது (அது என்றென்றைக்கும் விடுபடுவதற்கு இல்லாமல் சட்டம், ஆட்சி அமைத்துக்கொண்டு) ஆதலால் யூனியனிலுள்ள 20 நாடுகள் சொல்லுகிறபடிதான் தமிழ்நாடு கேட்டு ஆகவேண்டும்' என்றால் நாங்கள் பரிகாரம் தேடிக்கொள்வது எப்படி?

['விடுதலை'-தலையங்கம்—21-7-1955]

5. கொடி எரிப்பு ஒத்திவைப்பு

ஆகஸ்ட் 1ஆம் தேதி, 'இந்திய யூனியன் கொடி' கொளுத்தப்படும் என்கின்ற திராவிடர் கழகத் தீர்மானம் சம்பந்தமாக, சென்னை அரசாங்க முதன் மந்திரி திரு. காமராஜர் அவர்களது அறிக்கையைப் பார்த்தேன்.

அவ்வறிக்கையானது நான் விரும்பியபடி மத்திய அரசாங்கத்திற்காகவும், சென்னை அரசாங்கத்திற்காகவும் வெளியிடப்பட்ட அறிக்கை என்று பொருள் தரும்படியாக விடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தமிழ்நாட்டவர்மீது இந்தி கட்டாயப் பாடமாகத் திணிக்கப் படமாட்டாது என்று அரசாங்கம் வாக்குறுதி கொடுத்து, கொடியைக் கொளுத்த வேண்டாம்

என்று விரும்புவதாக உணருகிறேன். ஆகவே, நான் எனது தீர்மானம் அமுல் செய்யப் படாமல் இருக்க வேண்டும் என்று சர்க்கார் விரும்பினால், எப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தேனோ அப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், நடைமுறையில் இந்த வாக்குறுதியை அமுல் நடத்துவதில் அரசாங்கத் தாரால் இந்தி கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதாக மக்கள் தெளிவாகக் கருதும்படி நடந்துகொள்ளுமோ, அல்லது இவ்வளவு நாள் நடந்துகொண்ட மாதிரி ஒன்றுக்கொன்று (அறிக்கைக்கும், செய்கைக்கும்) சம்பந்தமில்லாத மாதிரி நடந்துகொள்ளுமோ என்பதை நடைமுறையில் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால்—முதல் மந்திரியாரின் விருப்பத்திற்கு ஏற்பக் 'கொடி கொளுத்துவதை'த் தற்காலிகமாகவே ஒத்திவைத்து, திராவிடர் கழகத் தாரையும் மற்றும் இதில் ஈடுபட இருக்கிற பொதுமக்களையும் ஆகஸ்டு 1 ஆம் தேதி யன்றைக்குக் கொடியைக் கொளுத்தாமல் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

மற்றபடி, அவ்வறிக்கையில் கொடி கொளுத்துவோர் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியப்படுத்தி இருப்பது பற்றி நானோ, பொதுமக்களோ எவ்வித ஆச்சரியமும் படத் தேவையில்லை. மக்கள், 'அரசாங்கத்தினுடைய கொடி'யைக் கொளுத்தினால், அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் என்று எந்தப் பைத்தியக்காரனும் நினைத்துக் கொண்டிருக்க மாட்டான். அடக்குமுறையினுடையவும், தண்டனையினுடையவும் கடைசி எல்லையை எதிர்பார்த்துத்தான் திராவிடர் கழகம் கொடி கொளுத்தத் தீர்மானம் செய்திருக்கிறது. இதை உலகறியவும் செய்திருக்கிறது. ஆதலால், அந்தச் சொற்களுக்காக அறிவாளிகளுக்கு நான் ஏதும் சமாதானம் சொல்லத் தேவையில்லை.

என்னுடைய இந்தக் கொடி கொளுத்தும் தீர்மானத்திற்கு எதிர்ப்பாக வீணர்கள் செய்த ஆர்ப்பாட்டம், பூச்சாண்டிகளைச் சிறிதும் மதிக்காமல் செயலில் இறங்க முன்வந்து மடிகட்டிப் பெயர் கொடுத்த—மொழிப் பற்றும், ஆண்மையும், மானமும், துணிவும் கொண்ட பதினாயிரக்கணக்கான வீர சிகாமணிகளுக்கு எனது பாராட்டுதலையும், உளம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, கொடி கொளுத்தும்படி மறுபடியும் எனது வேண்டு கோள் வரும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கச் சிரம் வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

வீண் பொய்க் கவுரவத்தைப் பார்க்காமல் மிகவும் அறிவுடைமையுடன் நடந்து கொண்ட சென்னை அரசாங்கத்தையும் மனமாரப் பாராட்டுவதுடன், உறுதி மொழிக்கேற்ப நடந்து கொள்ளுமென்றே நம்புகிறேன். வணக்கம்.

['விடுதலை'—அறிக்கை—31-7-1955]

6. தேசியக் கொடி எரிப்பு

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்தப் பார்ப்பனர்கள்தாம் இப்படிக் காலிகளைக் கிளப்பிவிட்டனர் என்றால், மந்திரி கோவிந்த வல்லப பந்த் அவர்கள், 'கொடி கொளுத்துவது பெரிய இராஜத் துரோகக் குற்றத் திற்குச் சமமான குற்றமாகும்' என்று கூறுகிறாராம். அதன் பிறகுதான் கொடி கொளுத்துவோர் பட்டியலில் ஆயிரக் கணக்கில் பெயர் வந்தவண்ணமிருக்கின்றது. அன்றியும் எந்தச் சட்டப்படி, என்ன குற்றம் என்பதே இதுவரை யாருக்கும் புலப்பட வில்லை!

வக்கீல்கள் எல்லாம் சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், இப்பேர்ப் பட்ட முக்கிய விஷயத்தைப் பற்றிச் சட்டத்தில் ஒன்றுமே தென்படவில்லை. கொடியைக் கொளுத்தினால் என்ன தண்டனை விதிப்பது என்பதைப்பற்றி அரசாங்கமே இன்னமும் சட்டபூர்வமாக ஒன்றும் முடிவு செய்யவில்லை.

அப்படி இருக்க, தெருவில் திரியும் ஆண்டிகளெல்லாம், 'கொடியைக் கொளுத்தினால் உயிரைக்கொடுத்துக் காப்பேன்' என்று மிரட்டுகின்றனர்.

இவர்கள் மிரட்டலுக்கும், பூச்சாண்டிகளுக்கும் நான் பயந்தவனா? அப்படித்தான் என் உயிர் போனாலும் நஷ்டம் என்ன என்று நினைப்பவன். நானும், இந் நாட்டில் ஒரு மனிதனின் சராசரி வயதைப்போல் மூன்றுமடங்கு வயதுடையவன். இதுவரை இருந்தது போதாமல் இன்னமும் உயிருடன் இருக்க ஆசைப்படுபவன் அல்லன். போகிற நேரத்தில் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பெரிய கவலையே தவிர, என் உயிர் போய்விடுமே என்ற கவலை இல்லை.

நானும் இப் போராட்டம் நடந்தே தீரும்—அதன் மூலமாவது பெரிய குற்றமென்று சொல்கிறார்களே அதற்காகவாவது சில வருடங்கள் சிறைவாசம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு இருந்தேன். என் உடல் நிலையைப்பற்றிக்கூடக் கவனிக்காது உடல் நிலையில் பலவிதமான குறைகளிலிருந்தும் டாக்டரிடம் காட்டிச் சரிசெய்து கொள்ளாமல் இருந்துவிட்டேன். ஏன்? சொந்தச் செலவில் ஏன் காசை வீணாக்கவேண்டும்; சிறைக்குச் சென்றவுடன் அரசாங்கச் செலவிலாவது பார்த்துக்கொள்ளலாம் என்றெல்லாம் ஆசையுடன் இருந்தேன். ஆனால், தற்சமயம் அவ்வித வாய்ப்புக்கு இடமின்றிப் போய்விட்டது.

நான் விரும்பியபடியே சர்க்கார் உறுதிமொழி கிட்டியது. என்னுடைய விருப்பப்படி சர்க்கார் எப்படிப்பட்ட வாக்குறுதி கொடுத்தால் போதும் என்றேனோ, அதன்படி வாக்குறுதி தந்துவிட்டது. இந்தி மொழி தமிழ்நாட்டார்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது என்ற ஒரே உறுதிமொழி கொடுத்தால்போதும் என்றேன்.

இவ்வாக்குறுதியை அடைந்த பிறகு, நான்—இக் கிளர்ச்சியை நடத்துவதென்பது சரியல்ல; ஆனால், அரசாங்கமும் இதுவரை அப்படித்தான் கூறிவந்திருக்கிறது. பெரிய தலைவர்களும், மந்திரிகளும்கூட இந்தியை விரும்பாதவர்களிடத்தில் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறிவந்துள்ளார்கள். இன்றைக்கு நடைமுறையில் அப்படிக் காணவில்லை. பிரதமர் நேருவிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார்—முதலமைச்சர் காமராசர்.

நேரு அவர்கள்கூட காமராசரிடம் அப்படித்தான் கூறினாராம். 'நாங்கள் எத்தனையோ முறை இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறியுள்ளோமே' என்றாராம். முதலில் காமராசரைக் கண்டவுடனேயே நேரு புன்முறுவல் கொண்டு, கிண்டல் செய்தாராம். 'நாயக்கரும், தாங்களும் கட்டிப் புரளுகிறீர்கள் என்று கூறுகிறார்கள். அவ்விதமிருக்க, உங்கள் ஆட்சியிலேயே நாயக்கர் ஏதேதோ செய்யப்போகிறாராமே?' என்று கேட்டாராம். அதற்கு முதன் மந்திரி அவர்கள், 'எல்லாம் உங்களால் வருவதுதான்' என்றாராம். என்ன என்று கேட்டவுடன், 'இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று பேசிவிட்டு, நடைமுறையில் கட்டாயப்படுத்துவதைப் பார்த்து ஆத்திரம் பொறுக்காமல் இது போன்ற கிளர்ச்சி எல்லாம் செய்கிறார்கள்' என்றாராம். பிறகுதான், 'நம்மிடமா குற்றம் உள்ளது? அப்படியானால் உடனே சென்று இனி கட்டாயப்படுத்தப்படாது என்பதாக அறிக்கை வெளியிடுங்கள்' என்றாராம். அதன்படிதான் காமராசர் அவர்களும் அறிக்கை வெளியிடும்படியாகியது.

அந்த அறிக்கையை வெளியிடுமுன் ஒரு சிலர் என்னிடம் கொண்டுவந்து காட்டி, இப்படி வெளியிட்டால் போதுமா என்று என் சம்மதம் கேட்டனர். நானும் அதைப் பார்த்து ஒருசில திருத்தங்களைச் சொல்லி, அதன்படி இருந்தால் போதுமென்றேன். அப்படியே திருத்தங்கள் செய்து அறிக்கையும் வெளியிடப்பட்டது.

நானும், வெளியிட்ட எனது அறிக்கையை அவர்களிடம் காட்டவும், அவர்கள் போராட்டத்தை விட்டுவிட்டதாகவே வெளியிடச் சொன்னார்கள். ஆனால், நான் அவ்வளவு ஏமாந்தவனல்லன்! எனவே, நான் தங்கள் அறிக்கையை நடைமுறையில் பார்க்கவேண்டும்;

அதுவரை போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை; ஆனால், அதுவரை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளேன் என்பதாகத்தான் வெளியிடுவேன் என்பதாகக்கூறி, அதன்படியே போராட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக இன்றைய அறிக்கையில் வெளியிட்டுள்ளேன்.

இவ்வுண்மைகளை நம் நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்கின்றன. 'காமராசர் எச்சரிக்கை' என்றும், 'நாயக்கரின் போராட்டம் வாபஸ்' என்றும் எழுதுகின்றன. நாட்டின் நலனுக்கென்று உண்மைச் செய்திகளை வெளியிடவேண்டும் என்ற அறிவாளிகளைக் கொண்ட பத்திரிகைகள் ஒன்றாவது கிடையாது. எல்லாம் பார்ப்பான் நலனுக்கே – பார்ப்பானுடைய ஆதரவிலேயே – பார்ப்பனர்களாலேயே நடத்தப்படுவதால் பித்தலாட்டமும், பொய்யும், புளுகும், லம்பாடித்தனமுமாகவே நடந்துகொள்கின்றன.

இதனால் நம் நாட்டின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழியின்றிப் போய் விடுகின்றது. இப் பத்திரிகைகள் அத்தனையும், நம் நாட்டை வடநாட்டவர்களுக்குக் காட்டிக்கொடுப்பவைகளாகத்தாம் உள்ளன.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-8-1955]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

தமிழ்நாட்டில், வடநாட்டு மொழி எப்படித் தேசியமொழி ஆகும்? அதைப்போல், தமிழ்நாட்டில் வடவரின் ஆட்சிக் கொடி எப்படி ஆட்சிக் கொடி ஆகும்? தமிழ்நாட்டின் ஆட்சிக் கொடி வேறு; இன்றுள்ள வடவரின் ஆட்சிக் கொடி வேறு.

அது வடநாட்டுக்கு ஆட்சிக் கொடியாகலாம்; எங்களுக்கு அக்கொடி ஒரு கையகலத் துணிதானே? கை அகலக் கந்தல் துணிக்குள்ள மதிப்பைத்தானே நாங்கள் கொடுப்போம்!

பாரத மாதா கொடி, பாரத நாட்டின் கொடி என்றால் அது வடநாட்டைப் பொறுத்த மட்டும்தான். நாங்கள் அதற்கு மதிப்புக் கொடுக்கத் தேவையில்லை; அதனிடத்தில் நாணயமிருந்தால், உண்மையான நேர்மை இருந்தால் மதிப்புக்கொடுக்கத்தான் வேண்டும். அதன் அந்தஸ்து அதனிடத்து உள்ள உயரிய குணத்தைப் பொறுத்துத்தான் உள்ளது. ஏன்? மனிதனுக்கு அந்தஸ்து எப்படி உயருகிறது? அவனிடம் உள்ள நேர்மை, உயரிய குணம், அறிவு ஆண்மையைப் பொறுத்துத்தானே உள்ளது? இவைகள் இல்லையேல் அவன் வெறும் அடிமுட்டாள், மடையன் என்றுதானே பொருள்? இப்படித்தானே இன்றைய அரசாங்கக் கொடி? ஏன், இன்றைய ஆட்சியாளர்களே அப்படி உள்ளதைப் பார்க்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் என்றால் தாய்நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று, தன்மான உணர்ச்சி, சுயஅறிவு இவைகளை எல்லாம் தத்தம் செய்தாகவேண்டும்! நாம் கேட்பது நம்முடைய நாட்டை. நம் நாட்டில் அன்னிய மொழி கூடாது என்று நான் மறுக்கிறேன்.

[திருவல்லிக்கேணியில், 31-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-8-1955

7. கம்யூனிஸ்டுகளும், கொடி எரிப்பும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

கம்யூனிஸ்டுகளை எடுத்துக்கொள்வோம். உலகத்தில் அறிவு பிறக்குமிடம் அங்கேதான் உள்ளதென்பார்கள்; அறிவாளிகளை உற்பத்தி செய்யுமிடம் அதுவே என்பார்கள்.

ஆனால், நம் நாட்டுக் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தமட்டிலும் அத்தனையும் பொய்யாகிவிட்டது. பெரும் அயோக்கியர்களையும், பித்தலாட்டக்காரர்களையும், கலகக்காரர்களையும், கொள்ளை, கொலையைத் தூண்டிவிடும் அராஜகச் செயல் கொண்டவர்களையும் கொண்டுள்ளது, இந் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று மெய்ப்பிக்கிறார்கள். அப் பேர்ப்பட்டவர்களிடமிருந்து வரும் பதில், 'குமரன் காப்பாற்றிய கொடி அல்லவா? அதை எப்படி எரிப்பது?' என்கிறார்கள்.

குமரனுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை. குமரன் இந்தக் கொடியினையா காப்பாற்றினார்? குமரன் காலத்தில் எந்த மூலையில் இவர்கள் கிடந்தார்களோ, தேடிப் பிடிக்கவும் முடியாதே? குமரன் காலத்தில் இந்தக் கொடி கர்ப்பத்தில் கூட இருந்திருக்காதே? சுதந்திரம் வரும் என்று நினைத்தது யார்? இந்தக் கொடி ஆட்சிக் கொடியாக வரும் என்று கனவிலும் நினைத்தவர் உண்டா? அப்படி இருக்க குமரனுக்கும், இந்தக் கொடிக்கும் என்ன சம்பந்தம்?

குமரன் ஒருவன் உயிர்விட்டுக் காப்பாற்றிய கொடி இதுவானால், தாளமுத்து—நடராசன் என்ற இருவர் உயிர் விட்டது, இந்திக் கிளர்ச்சிக்காக வல்லவா? குமரன் ஒரு ஆள்; எங்களில் இருவர்கள் பலியானோம்! இதை யார் இன்றைக்குக் கூறுகிறார்கள்?

குமரன் காப்பாற்றியதால் அந்தக் கொடியை எரிக்க முடியாதா? அந்தத் துணியென்ன அவ்வளவு அழுக்குப் படிந்த கந்தல் துணியா? மண்ணெண்ணெய் ஊற்றினால் இன்னும் சிறிது நேரம் கொழுந்து விட்டு எரிகிறது! அல்லது அந்தக் கொடி வாட்டர் புரூஃப் துணியைப் போல் ஃபயர் புரூஃப் துணியால் செய்யப்பட்டதா?

ஒரு உருண்டைக் களிமண் பிள்ளையார் ஆன சங்கதி தானே—முழத் துணி அரசியல் கொடி ஆனது? மண்ணுக்குள்ள மதிப்புத்தானே, பிள்ளையாருக்கு என்பதை நிரூபித்தோம். அதைப்போல், முழக் கந்தல் துணிக்குள்ள மதிப்புத்தான், உன் கொடிக்கு என்பதையும் நிரூபிக்கிறோம்.

ஆனால், பிள்ளையார் பெயரைக் கூறிச் சுரண்டி வாழும் உனக்கு பிள்ளையார் தெய்வமாகத் தோன்றலாம். அதைப்போல், இக் கொடியால் உனக்குச் சவுகரியம் அடைய வசதி இருப்பதனால் உனக்குப் பெரிதாகத் தோன்றலாம். குமரன் காத்து வளர்த்த பாரத மாதா கொடி என்று எது வேண்டுமானாலும் கூறலாம். அதைப்போலத்தானே, இராமாயணமும், இராமனும், சீதையும் மற்றும் பதிவிரதைகளும் கூறப்பட்டனர்? அவர்கள் வண்டவாளங்களே வெளிப்படுகையில் இக் கொடியைக் கொளுத்துவது பெரிய காரியமில்லை.

[திருவல்லிக்கேணியில், 31-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-8-1955]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நேரு அவர்கள், கடைசிக் கூட்டத்தில், கொடி கொளுத்துவதாகச் சொன்னவர்களைப் பற்றி மிகவும் துடுக்காகப் பேசி இருக்கிறார். அவருடைய பைத்தியக்காரத்தனமான காரியங்களில் இதுவும் ஒன்றாகும். கொடி எரிப்பதைப்பற்றிப் பேசினதின் கருத்தெல்லாம்—திராவிடக் கழகத்தாரை வையவேண்டும், மிரட்டவேண்டும் என்பதைத் தவிர, அதில் அவசியமோ, அறிவுடைமையோ என்ன இருக்கிறது?

கொடி கொளுத்துவதாகச் சொல்லப்பட்டவுடன் குறிப்பிட்ட தேதிக்குள்ளாகவே இவ் விஷயம் ஏதோ ஒரு அளவுக்குச் சமரசமாக முடிந்துபோன பிறகு—அதை மறுபடியும் சர்க்கார் தரப்பிலேயே ஏன் கிளப்பவேண்டும்? கிளப்புவது மாத்திரமல்லாமல் ஏன் பேச வேண்டும்? இது, கொளுத்துகிறதாகச் சொன்னவர்களைத் தூண்டிவிடுகிறதுபோலும், அவர்களுக்கு ஆத்திரமூட்டுவதுபோலும் நினைக்கிறது என்பதே தவிர, வேறு என்ன சொல்ல முடியும்? இதிலிருந்தே இந்த அரசாங்கத்தை ஏதாவது மிரட்டவேண்டுமானால் கொடி கொளுத்துகிறோம் என்று சொல்லுவதே போதுமானது என்று தெரிகிறதா, இல்லையா?

கொடியைப்பற்றிப் பிரமாதப்படுத்தியதும், அதை எரித்தால் உலகத்தையே சுட்டெரித்துவிடுவதாக வீரப் பிரதாபம் பேசுவதும் வெறும் வீண்பேச்சே தவிர, மற்றபடி கொடியை எரித்தால் இவர்களால் என்ன செய்துவிடமுடியும்? செய்வதற்கு இவர்கள் கையில் என்ன சரக்கு இருக்கிறது? அரசியல் சட்டத்திலாகட்டும், கிரிமினல் பீனல்கோடி

லாகட்டும்—கொடிக்கு என்ன மரியாதை இருக்கிறது? அதை எரிப்பதற்கு என்ன தண்டனை இருக்கிறது? அதைச் சொல்லாமல் சும்மா வீரப் பிரதாபம் பேசுவதில் பலன் என்ன? இன்ன காரியம் செய்தால் இன்ன குற்றமாகும் என்பது ஒருவனுக்குத் தெரிந்தால் தானே, அந்தக் காரியத்தை ஒருவன் செய்யாமல் இருக்கமுடியும்? வீண் பூச்சாண்டி காட்டுவதைக் கொண்டு யார் பயப்படுவார்கள்? அதிகாரம் தங்கள் கையில் இருக்கிறது; ஆதிக்கம் தங்கள் கையில் இருக்கிறது; ஆதலால் எதையும் பேசலாம் என்பதே தவிர, மற்றபடி இதில் என்ன நியாயமோ நேர்மையோ இருக்கிறது?

கொஞ்சநாளைக்கு முன்பு சட்டசபையில் பண்டித நேருவைப் போலவே ஒரு வீரர் பேசினார். அதாவது, ‘வேறு எது செய்தாலும் நான் சும்மா இருப்பேன்; இராமனையோ, சீதையையோ குறைசொன்னால் கொன்றுபோடுவேன்’ என்பதாகப் பேசினார். அதற்கும் பண்டித நேரு அவர்கள் பேச்சுக்கும் என்ன வித்தியாசம்?

உலகத்தையே படைத்ததாகக் கூறப்படும் கடவுள்களே எங்களிடம் அகப்பட்டுத் திண்டாடும் நேரத்தில் உன் அரசாங்கக் கந்தல் துணியாகிய கொடி எம் மாத்திரம்? அதன் யோக்கியதை தெரியாதவர்கள் அதைத் தலையில் தூக்கிக்கொண்டு ஆடலாம். அதன் பித்தலாட்டம் தெரியாத மூடர்கள் அதைத் தாயின் மணிக்கொடி—புனிதத் தன்மை கொண்ட பாரத மாதாவின் கொடி என்றெல்லாம் புகழலாம். அக் கொடியின் பெயரைக் கூறி வயிறு வளர்க்கும் சோம்பேறிகளும் எல்லா அயோக்கியத்தனங்களும் துணிந்து செய்ய முற்படுப வர்களும் அதை வானளாவப் புகழ்ந்து பேசலாம்.

ஆனால், அதன் யோக்கியதை என்ன என்று தெரிந்த நாங்கள், மற்றவர்களுக்கும் அதன் யோக்கியதையை வெளிப்படுத்த முற்படுகிறோம்; தாயின் மணிக்கொடியின் அந்தஸ்து–கந்தல் துணிக்குள்ள அந்தஸ்துகூடக் கிடையாது என்ற உண்மையை வெளிப் படுத்துகிறோம். ஒளிவு மறைவாகச் செய்வதாகக் கூறவில்லை; யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் கொளுத்துவதாக ‘அண்டர் கிரவுண்ட்’ வேலை செய்யவில்லை; பகிரங்கமாக முச் சந்திகளில் கொளுத்துகிறோம்; தெருக்களில் கொளுத்துகிறோம்; அவரவர் வீட்டின் முன் பலபேர் அறியக் கொளுத்துகிறோம் என்று அரசாங்கத்துக்குத் தெரிவித்தோம். தெரிந்தவுடன் உன்னால் என்ன செய்ய முடிந்தது?

கொடியைக் கொளுத்தினால், நாடே அழிந்தாலும்—கொடியைக் கொளுத்தவிட மாட்டேன் என்றாயே! பாட்னாவில் மாணவர்கள் எரித்தார்கள்; என்ன செய்தாய்? உன் வீரப் பிரதாபம் அப்போது எங்கே போனது? அப்படி இருக்க, நாங்கள் எரித்தவுடன் என்ன செய்துவிடுவாய்? உன்னையே எவனோ ஒருவன் அடிக்க வந்தான் என்று பத்திரிகையில் எல்லாம் செய்தி பறந்ததே! அவனை உன்னால் என்னசெய்ய முடிந்தது?

[திருச்சியில், 8-10-1955-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 12-10-1955]

5. இராமன் பட எரிப்பு

1. நமது போராட்டம்

ஆத்திகப் பிரச்சாரமும், பக்திப் பிரச்சாரமும் செய்யும் பார்ப்பனத் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் ‘இராமன் கடவுள் அல்லன்; அவன் ஒரு வீரன்’ என்று ‘சக்ரவர்த்தித் திருமகனார்’ என்ற தமது கட்டுரையில் தெளிவாக எழுதி இருக்கிறார்.

சங்கராச்சாரியாரும், ‘இராமன் கடவுள் அல்லன்; ஓர் ஆதர்சன புருஷன்; மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்தவன்’ என்று கூறி இருக்கிறார்.

காலஞ்சென்ற மறைமலை அடிகள், டி. கே. சி, திரு. வி. க, வி. பி. சுப்பிரமணிய பிள்ளை, பி. சிதம்பரம் பிள்ளை முதலிய புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள் 'இராமன் கடவுள் அல்லன்; இராமாயணம் கடவுள் கதை அல்ல' என்று கூறி இருக்கிறார்கள்.

வால்மீகியும் தனது இராமாயண இலக்கியத்தில்: 'இராமன் பெண்ணைக் கொன்றவன்; பெண்ணை மானபங்கப்படுத்தியவன்; மறைந்திருந்து எதிரிகளைக் கொன்றவன்; துரோக காரியங்களுக்கு உடந்தையாக இருந்தவன்' என்றெல்லாம் கூறி இருக்கிறார். இவ்வளவுதானா?

காந்தியாரே, 'நான் போற்றும் இராமன், இராமாயண இராமன் அல்ல, அல்ல' என்றும், 'காட்' (God), என்று சொல்லும்படியான உருவமற்ற, பெயர்ச்சொல் அல்லாத—அதாவது, ஒரு வஸ்து அல்லாத சர்வ சக்தியான இராமன்' என்றும் கூறி இருக்கிறார்.

ஆகவே, நானும், இராமாயணப் பாத்திரங்களில் ஒன்றான இராமாயண இராமனிடம், கடவுள் இலட்சணப்படி ஏதாவது கடவுள் தன்மையோ, ஒழுக்கமோ, நாணயமோ, சாதாரண அறிவோ இருக்கின்றதா என்றும்; இல்லாவிட்டாலும் துரோகம், வஞ்சகம், பேடித்தனம், பேராசை, மதுவருந்தல், புலால் உண்ணல், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் முதலிய கூடாஒழுக்கக் குணங்கள் என்பவைகளாவது இல்லாமல் இருக்கிறதா என்றும் துருவித்துருவிப் பார்த்து, இல்லை என்ற முடிவுக்கே வந்திருக்கிறேன்.

ஆகவே, அப்படிப்பட்ட ஒருவனை மக்கள் கடவுளாக, வழிகாட்டியாக, பிரார்த்தனை, பக்தி செலுத்தத் தக்கவனாகக் கருதக்கூடாது என்பதற்காகவே – 'இராமாயண இராமனைக் கொளுத்துங்கள்' என்கிறேன்.

'இம் மாதிரிக் குணங்கள்' இல்லாத இராவணன் கொளுத்தப்பட்டான்; ஆண்டுதோறும் கொளுத்தப்படுகிறான்.

இந்த இராவணன்மீது சுமத்தப்படுகிற ஒருதலைப் பட்சமான—மறைமுகமான குற்றங்களைவிடப் பன்மடங்கு தெளிவான, பிரத்தியட்சமான குற்றங்கள் புரிந்த இராமனைப் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்காக ஏன் கொளுத்தக்கூடாது?

['விடுதலை'–தலையங்கம்—27-7-1956]

2. நேர்மையான எதிர்ப்பு இல்லை

திராவிடர் கழகம் இராமன் உருவத்தை எரிப்பது பற்றி இன்றுவரை நேர்மையான—வாத முறைக்கு ஏற்ற எதிர்ப்பு ஒன்றுகூடக் காணப்படவில்லை.

நான் மதிக்கத்தக்க இரண்டு நபர்களிடமிருந்து இராமன் உருவம் கொளுத்தப்படக் கூடாது என்று ஒரு வேண்டுகோள்—அதாவது, ஒருவகை 'எதிர்ப்பும்'; கொடி கொளுத்துவதைத் தடை செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் மற்றொரு வகை 'எதிர்ப்பு' ஒன்றும்–ஆக இரண்டு எதிர்ப்புகளைப் பத்திரிகையில் பார்த்தேன்.

இந்தக் கனவான்கள் எனது மரியாதைக்கு உரியவர்கள் ஆவார்கள். இவர்களில் எம்.எல்.ஏ. ஒருவர். இவர் மக்கள் பிரதிநிதி உரிமை கொண்டவர். மற்றொருவர் ஒரு மடாதிபதி ஆவார்கள். இவர்கள் இருவரும் யார் என்றால் வரதராஜுலு நாயுடு அவர்களும், குன்றக்குடி மடாதிபதிகளுமாவார்கள்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களைப்போல் சட்டசபையில் இரு நூற்றுக்கு மேற்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் டாக்டர் நாயுடுவைத் தவிர, மற்றவர்கள் யாரும் எந்தவித மறுப்பையும் முணுமுணுப்பையும் கூடக் காட்டவில்லை என்பது மாத்திரமல்லாமல், பல சட்டசபை மெம்பர்கள், பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆகியவர்கள் கமிட்டிக்

கூட்டத்திலிருந்து படம் கொளுத்துவதை ஆதரித்து இருக்கிறார்கள். மதப் பிரதிநிதிகளில் குன்றக்குடி சுவாமிகள் ஒருவர்தான் தனது எதிர்ப்பைக் காட்டி இருக்கிறாரே தவிர, மற்றபடி எந்த மடாதிபதியும் எரிப்பைப்பற்றி ஓர் ஆட்சேபணையோ, அதிருப்தியோகூடக் காட்ட வில்லை.

பிள்ளையார் உடைப்புக்கு வெளிப்படையாகக் காட்டப்பட்ட எதிர்ப்புகளில் 100-ல் ஒரு பங்குகூட இதில் காணப்படவில்லை. இராமன் என்கிற 'கடவுளால்' சொந்தத்தில் பயன்பெறும் பார்ப்பனர்களில் எவரும்கூட வாய்திறக்கவில்லை.

டாக்டர் நாயுடுவின் எதிர்ப்புக் காரணங்கள் எவராலும் மதிக்கத் தகுதியற்றதாகும். மற்றும், அந்த எதிர்ப்பில் அரசியல் வாசனைதான் காணப்படுகிறதேயன்றி, சீர்திருத்த இயல் உணர்ச்சி காணப்படவில்லை.

மடாதிபதி அடிகளாரும் ஒரு மடத்தின் அல்லது மதத்தின் அதிபதியாக, பிரதி நிதியாக இருப்பவர். இப்படிப்பட்ட சீர்திருத்தக் காரியத்திற்கு அரசாங்கத்தை நாடினால் மதம், கடவுள் காப்பாற்றப்பட்டுவிடுமா என்பதும் எனக்கு விளங்கவில்லை. அவரது எதிர்ப்பில் தைரியமோ, உண்மையோ இருந்தால் மக்களை அணுகவேண்டியது பயனளிக்கும் காரியமாகும்.

நான், இராமன் படத்தை எரிக்க ஆசைப்படுவதானது—இராமன் கடவுள் என்று கருதப்படுவது ஒழியவேண்டும் என்கின்ற கருத்தின்மீது அல்லாமல், வேறு ஒரு உள் கருத்தும் கொண்டு அல்ல. அப்படி ஏதாவது இருப்பதாக எதிர்ப்பவர், மற்றும் யாரும் இதுவரை சொல்லவில்லை.

நான் ஒரு 'புரட்சிகரமான' சமுதாய சீர்திருத்தவாதி. அதற்கே என் உடல், பொருளை ஒப்படைத்துவிட்டு, ஆவியையும் ஒப்படைக்க வாய்ப்புக்காகக் காத்திருக் கிறேன். அதோடு கூடவே, என் தொண்டுக்கு அறிவையும் ஆராய்ச்சியையுமே அடிப்படை யாய்க் கொண்டு இருக்கிறேனே அல்லாமல், மதவாதிகள், மதத் தலைவர்கள்போல் வெறும் நம்பிக்கையையும், மூட மக்கள் மரியாதையையும், சர்க்காரிடம் தஞ்சமடைவதையும் அல்ல.

என்னோடு போராட்டத்திற்கோ, எதிர்ப்புக்கோ வருபவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி விஷயங்களில் எப்படி நடந்துகொண்டாலும்—அறிவு ஆராய்ச்சித் தன்மை யைச் சிறிதளவாவது ஆதாரமாய்க்கொண்டு பிரவேசிக்க வேண்டியது நேர்மையான எதிர்ப் புக்கும் பண்புக்கும் ஏற்ற காரியமாகும்.

நான் இராமன் படத்தை (உருவத்தை)க் கொளுத்த வேண்டுமென்பதற்கு ஏராளமான இராமன் சம்பந்தப்பட்ட நூல்களை ஒரு தடவைக்கு 100 தடவை படித்து ஆராய்ந்து பார்த்ததோடு, சுமார் 30, 40 ஆண்டு ஆராய்ச்சியில் கழித்துவிட்டு, ஆயிரக்கணக்கான கூட்டங்களில்—கோடிக்கணக்கான மக்களிடம் பேசி மெய்ப்பித்துவிட்டு, பல புலவர் களையும், கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்பவர்களையும் ஏற்கச் செய்துவிட்ட பிறகு தான் கொளுத்தச் செய்கிறேன்.

மற்றும், 1922-ல் காங்கிரஸ் மாநாட்டில் இராமாயணத்தைக் கொளுத்த வேண்டு மென்று சொல்லிவிட்டு, 1925 ஆம் ஆண்டு முதல் இராமாயண ஆராய்ச்சி என்னும் பேரால் அனேகக் கட்டுரைகளை எனது 'குடிஅரசு' 'பகுத்தறிவு', 'திராவிடன்', 'விடுதலை' ஆகிய வார, மாத, தினசரி பத்திரிகைகளில் வெளியாக்கி, கோடிக்கணக்கான மக்களைப் படிக்கச் செய்து, 4-அணா, 2-அணா, 1-அணா, ½-அணா விலையுள்ள புத்தகங்களாக 10 ஆயிரம், 20 ஆயிரம் கணக்கில் வெளியிட்டு, மக்களிடம் விற்றுவிட்டுக் கொளுத்த வந்திருக்கிறேன்.

மற்றும், எரிப்பது பற்றி 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே சேதி வெளியிட்டும், பல இடங்களில் எரிக்கப்பட்டும் இருக்கின்றன.

இவ்வளவு ஆதாரத்தின் மீதும், பலத்தின் மீதும், ஆமோதிப்பின் மீதும் நடத்தப் படுகிற ஒரு காரியத்தை ஒரே வார்த்தையில் 'வேண்டாம்' என்றும், 'தடை செய்' என்றும் பொறுப்புள்ள மரியாதையுள்ள இரு பெரியார்கள் சொல்லிவிடுவது என்றால், இதில் எப்படி நம் கருத்தைக் கூறாமல் இருக்க முடியும்? மற்று வேறு யாராவது இருந்தால் நான் இவ்வளவு இலட்சியம் செய்யமாட்டேன்.

நான் இராமனைக் கொளுத்த, பல காரணங்கள் ஆதாரத்துடன் சொல்லிவிட்டுக் கொளுத்துகிறேன். அந்த ஆதாரங்களை இதுவரை யாரும் மறுத்துக் கூறவில்லை.

டாக்டர் நாயுடு அவர்களும், 'சுவாமி'களும் கொளுத்துவதில் தங்களுக்குச் சிறிதாவது அதிருப்தி இருக்குமானால், அதை அவர்கள் 'வேண்டாம்' என்றும், 'தடை செய்' என்றும் எழுதுவதன் மூலம் நீதியாக நடந்துகொண்டவர்களாக ஆகிவிட மாட்டார்கள்.

என் உள்கருத்தையறிந்து நான் சொல்லுங் காரணங்களை,—காட்டும் ஆதாரங்களை எடுத்துத் தலைப்பில் காட்டி, அதை மறுத்து அல்லது சமாதானம் சொல்லி—'கொளுத்த வேண்டாம்; கொளுத்துவது தப்பு' என்று சொல்லுவது எதிர்ப்புப் பண்பாகும்; நமக்கும் உதவி செய்ததாகும். அப்படியில்லாமல் 'மக்கள் மனம் புண்படும்' என்பது, மக்கள் பிரதிநிதியாக வேண்டும் என்பவருக்குத்தான் கவலைப்படத் தக்கதாகுமே தவிர, மக்களை மூடத்தனத்தில் இருந்து—அதனால் ஏற்பட்ட இழிவிலிருந்து வெளியேற்ற வேண்டு மென்பவனுக்கு 'மக்கள் மனம் புண்படுவது' என்பது மதிக்கத் தக்கதாகுமா?

போகட்டும்; டாக்டர் நாயுடு அவர்களுக்காவது என்னளவு ஆராய்ச்சி இருக்க அவசிய மிருக்காது. அவர் முதலாவதாக ஓர் அரசியல்வாதி; இரண்டாவதுதான் அவருக்குச் சமுதாயம். ஆனால், 'சுவாமி'கள் அப்படியல்லர்; அவர்கள் எவ்வளவோ நூல்கள், மத சம்பந்தமான புராண இதிகாசங்கள், மக்கள் வரலாறுகள் ஆகியவைகளைப் படித்து ஆராய்ச்சி செய்து, உண்மை கண்டிருக்கவேண்டியவராவார்கள். அவர்கள் உண்மையில் சமய மக்களால் அந்தப்படி கருதப்படத் தக்கவர் ஆவார். அப்படிப்பட்ட அவர்கள் நான் கூறிவருகிற காரணங்கள் ஒன்றுக்குக் கூடச் சிறிதளவு சமாதானமும் கூறாமல், 'கொளுத்துவது தவறு' என்று கூறினால் அது எப்படி மதிக்கத் தக்கதாகும்? இப்போதும் சொல்லுகிறேன்:

'இராமன் கதை நடந்ததல்ல; சரித்திர சம்பந்தமானதல்ல; நீதிக்கோ படிப்பினைக்கோ ஏற்றதல்ல. ஆரியர்களுக்கு—பார்ப்பனர்களுக்குத் திராவிடர்கள் மீது (தென் இந்திய மக்கள்மீது) ஏற்பட்ட துவேஷம், பொறாமை, வஞ்சக எண்ணம் ஆகியவை பெற்ற பிள்ளைதான் இராமாயணக் கதை' என்று சொல்லுகிறேன். இராமாயணம் முதலிய ஆதாரங்களும், இராமன் முதலிய கடவுள்களுமேதான் டாக்டர் நாயுடுகாரு, 'சுவாமி'கள், நான் உட்பட அனேக கோடித் தென் இந்தியப் பழங்குடி மக்கள்—கீழ்சாதியாய், இழி பிறப்பாய் ஆக்கப்பட்டதோடு, 3000 ஆண்டுகளாக இன்னும் இருக்கச் செய்து வருவதற்குக் காரணமாகும்.

இதை ஒழிக்க டாக்டர் நாயுடு அவர்களும், 'சுவாமி'களும் செய்த, செய்துவருகிற, செய்யப்போகிற காரியங்கள் யாவை?

பார்ப்பான் அயோக்கியன் என்று சொல்லுவது மாத்திரம் போதுமா? ரோஷம், மானம் இல்லாதவனை வைவதற்கும், செத்த பாம்பை அடிப்பதற்கும் என்ன பிரமாதமான பேதம் இருக்க முடியும்?

இப்பவும் காலம் தாண்டிவிடவில்லை. இராமன் சங்கதி எப்படியோ போகட்டும். இதுபோன்ற மற்ற 'கடவுள்'களுக்காவது இந்தக் கதி வராமல் இருக்க விரும்புகிறவர் களானால் அவற்றின் ஆதாரங்களில் இருந்து—அதுவும் இப்பெரியார்கள் மதிக்கும் ஆதாரங்

களிலிருந்து 'இக் கடவுள்கள்' ஒழிக்கப்படவேண்டும் என்பதற்கு நான் எடுத்துக்காட்டுவதை ஆதாரக் காரணங்களோடு மறுத்துவிட்டு, 'உடைக்கவேண்டாம்; கொளுத்தவேண்டாம்' என்று கட்டளை இடட்டும் என்று பணிவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இல்லாவிட்டால், நண்பர் ஆச்சாரியாருக்கும், அனுகுண்டு 'சாமி'களுக்கும் 'மித்திரன்' 'இந்து' 'தினமணி' 'கல்கி' 'ஆனந்தவிகடன்', மகாலிங்கய்யர்களுக்கும், இப் பெரியார்களுக்கும் என்ன பேதம் என்று கேட்கிறேன்.

நான் தவறு செய்யலாம்; என் ஆராய்ச்சியும் 'குருடன் யானை கண்ட காட்சிபோல்' என்னைத் தவறான வழியில் இழுத்துவிட்டிருக்கலாம். அப்படி இருந்தாலும் அதில் அதிசய மிருக்காது. ஆனால், அதைத் திருத்துவது எப்படி? என்னைக் குறைகூறுவதும், என்னைத் தண்டிக்கச் செய்வதும் திருத்துவதாகிவிடுமா? காரியத்தை நிறுத்திவிடுமா? 1956 ஆம் ஆண்டில் இவை எளிதில் நடக்கக்கூடிய காரியமாகிவிடுமா? உண்மையில் பெருமையும், போற்றுதல் மரியாதையுமுள்ள இவர்கள் இப்படி நடந்துகொண்டால், அரசியல் பிரதிநிதித்துவத்திற்கும், சமயத் தலைமைக்கும் அறிஞர்களிடம் எப்படிப் பாராட்டுதலும் போற்றுதலும் கிடைக்கமுடியும்?

எனக்குக் கெட்டபெயர் வருவது பற்றியோ, எனக்குத் தண்டனை கிடைப்பது பற்றியோ, என் ஆவி பிரிவது பற்றியோ நான் சிறிதாவது இலட்சியம் செய்வதாயிருந்திருந்தால் நான் இந்தக் காரியத்தில் பிரவேசித்து இருக்கமாட்டேன். இப்படி நடந்து கொண்டவர்கள் கதியும், சரித்திரமும் பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்திருக்கிறேன் என்பதோடு, என்னைத் 'திருத்த' அறிவும், ஆராய்ச்சியும், அன்பும்தான் நல்ல வழியே யொழிய, இவை பயன்படாதது என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வாழ்நாளில் தமிழர்களுக்கு நீண்டநாளாக இருந்து வருகிற காட்டுமிராண்டித் தன்மையான 'கடவுள்–சமய'ப்பற்றும், பெரும்அளவுக்கு இருந்துவரும் 'இழிநிலை'யும் ஆகியவைகளில் கடுகளவாவது குறைந்தாலும் நான் வெற்றி பெற்றவனாவேன்.

மன்னித்தருள்க!

['விடுதலை'–தலையங்கம்—30-7-1956]

3. 'இராமனை'க் கொளுத்தியது குற்றமல்ல

'இராமன் கடவுள் அல்லன், இராமாயணக் கதையின் பாத்திரமான இராமன் ஒழுக்க முள்ள ஒரு யோக்கியனல்லன்' எனக் கருதுபவர்கள் யாரும், நாட்டு நன்மையை, சமுதாய சுயமரியாதையைக் கருதுபவர்கள் யாரும் இராமன் படத்தைக் கொளுத்தலாம்.

இந்த உரிமையை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் ஆகஸ்ட் 1-ந்தேதி இராமன் படம் கொளுத்தும் கிளர்ச்சி நாளாகக் கொண்டாடத் தமிழ்நாட்டு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

அரசாங்கமும் நல்ல வாய்ப்பாக மக்கள் உரிமையில் பிரவேசிக்காமல் இராமன் படம் கொளுத்துவதன் பயனாய்க் குழப்பம், கலவரம், பலாத்காரம் ஏற்படக்கூடாது என்று கருதி, பொதுக் கூட்டத்தில் கொளுத்த விடக்கூடாது என்று கருதி, பொதுக் கூட்டத்திற்கும் அது சம்பந்தமான ஊர்வலத்திற்கும் தடை விதித்தது.

என்றாலும், உரிமையுள்ள காரியம் நடைபெற்றால் கலவரம் உண்டாகும் என்று கருதினால், அதற்கு அரசாங்கம் பாதுகாப்புச் செய்யவேண்டுமே ஒழிய, காரியத்தைத் தடை செய்ய அல்ல என்பது என் கருத்து. இன்றும், மதுரை முதலிய இடங்களில் சமணர் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆண்டுக்கு ஒரு முறை நடக்கின்றது. மற்றும், தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான சைவக் கோயில்கள் உள்ள இடங்களில் சூரசம்மார உற்சவங்கள் நடை

பெறுகின்றன. இராவணனை இழிவுபடுத்தி, இராவண பக்தர்கள் மனம் புண்படும்படி தினமும் பல காலட்சேபங்களும், பல பாட்டுக் கச்சேரிகளும், பல தெருக்கூத்துகளும், 'டிராமா'க்களும் நடைபெறுகின்றன.

இவை குறித்து அனேகருக்கு வெகு நாட்களாகவே மனவேதனை இருந்துவந்தும், அவற்றைச் சரியானபடி வெளியாக்கித் தடுக்க இதுவரை மக்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருந்துவந்தது. காரணம் என்னவென்றால், வெள்ளை ஆட்சி இருந்ததாலும், அந்த ஆட்சியில் பார்ப்பனர்களே ஆதிக்கக்காரர்களாக இருந்ததாலும் இது விஷயத்தில் எளிதில் நியாயம் பெறமுடியாமல் 'மாமூல்' என்ற சாக்கில் தடைப்படுத்தப்பட்டு இருந்தது. இப்போது சுயராச்சியம், மக்கள் ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இந்தப் பெயரை வைத்துக்கொண்டு கோவில் நுழைவு, சமபந்தி ஏற்பட்டு, மற்றும் அரசர்கள், ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட்டவை முதலிய—அனேக ஆயிரக்கணக்கான, பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இருந்துவந்த 'மாமூல்' காரியங்களும், 'மாமூல்' கருத்துக்களும், நடப்புகளும் மாற்றமடைந்துவிட்டன.

அப்படி இருக்க, இந்த நாட்டைத் தவிர, உலகில் வேறு எங்குமே நடப்பில், கருத்தில் இல்லாத காட்டுமிராண்டித் தன்மை கொண்ட புராணக் கதைகளை ஆதாரமாய்க் கொண்டு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்த காரியங்கள் நீக்கமுடியாத மாமூலாகிவிடுமா? தீண்டாமையை ஒழித்ததும், 'தீண்டப்படாதவன் சமைக்கும் சாப்பாட்டைப் பார்ப்பான் சாப்பிட்டுத்தான் தீரவேண்டும்—இல்லாவிட்டால் வெளியே போ' என்பதும் ஒருவர் மனத்தையும் புண்படுத்தவில்லை என்றும், புண்படுத்தினாலும் கவலை இல்லை என்றும் கூறும்போது—கடவுள் தன்மை ஏற்படாத காகிதத்தை, பொம்மையைக் கொளுத்தினால் யாரோ ஒருசிலர் மனம் புண்படும் என்று தடங்கல் காரியம் செய்வதை அனுமதிக்கக்கூடாது என்பதுதான் எனது கருத்தே ஒழிய வேறில்லை. அதனால்தான், சர்க்கார் உத்தரவு மீற நேரிட்டது. காரியம் வெற்றிகரமாய் முடிந்துவிட்டது. தமிழ்நாடு முழுவதும் 1-ந்தேதி மாத்திரம் 4000, 5000 பேர்கள் தடையை மீறி, இராமன் படக் காகிதத்தைக் கொளுத்த முன்வந்து இருக்கிறார்கள். இதில் போலீசார் தங்களால் ஆனவரை கழித்து, ஒரு 1000, 1500 பேர்களை மட்டும் கைது செய்து, அதிலும் பலரை 'ஸ்டேஷனு'க்கு அழைத்துப்போய் ரிக்கார்டு செய்யாமல் பலரை விரட்டிவிட்டு, ஒரு சிலரை மாத்திரம் 'லாக்கப்'பில் வைத்திருப்பதுமான திருவிளையாடல்கள் செய்திருக்கிறார்கள்.

31-ந்தேதி அன்று, நான்,—போலீசார் யாரையும் பிடிக்காமல் பலாத்காரம் உபயோகித்து அடித்து விரட்டி, 'ஒருவரும் கொளுத்த முன்வரவில்லை; சட்டம் மீறவில்லை' என்று கணக்குக் காட்டிவிடுவார்கள் என்று கருதியே (அந்தப்படி சர்க்கார் உத்தரவு செய்திருப்பதாகச் சேதி வந்ததாலேயே)—'உங்களுக்கு விருப்பமானால் உத்தரவு அமுலில் இருக்கும் நாள்வரை கொளுத்தலாம்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

நான் எண்ணியதற்கு விரோதமாக நாடு முழுவதும்—சிறப்பாகச் சென்னையிலும், போலீசார் சிலரை விட்டுவிட்ட போதிலும் மிகவும் நேர்மையாக நடந்து 1000 பேர்கள் போல—நகரில் 100 பேர்கள்போலப் பிடித்து 'ரிக்கார்டு' செய்துவிட்டார்கள். பல இடங்களில் படம் கொளுத்தப்பட்டுவிட்டதாகவும், அதற்கு அதிக போலீஸ் ஒன்றும் தடபுடல் செய்யாமல் பெருந்தன்மையாக நடந்துகொண்டதாகவும் சேதி வந்தது; இதை ஒருவாறு அறிந்த உடனே எனக்கு இனியும் மற்ற நாட்களுக்குத் தொடரவேண்டிய அவசியமில்லை என்று கருதி, திடீர் 'பிரேக்' போட்ட மாதிரி, நான் கைதான உடனே அறிக்கை எழுதி, மணியம்மையிடம் கொடுத்துவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன். 31-ந்தேதி அறிக்கையினால், பல தோழர்கள் நாளை மறுநாள் கொளுத்தலாம் என்று கருதி இருப்பார்கள். உதாரணமாக, சென்னையில் இருந்து பெருங்கூட்டம் வந்து, 'இன்றைக்கு மாத்திரம் அனுமதியுங்கள்' என்று பெருந்தொல்லை கொடுக்கிறார்கள் என்றாலும் அவர்களது ஏமாற்றத்திற்கு வருந்தி சமாதானம் சொல்லிச் சரிப்படுத்தினேன்.

7, 8, 10 நாட்களுக்கு இயக்கம் நடக்கும் என்றும் தினம் 500, 1000 பேராவது பிடிபட வேண்டும் என்றும் கருதிப் பலர் ஏமாந்து விட்டார்கள் என்பது உண்மைதான்.

இதுமாத்திரமல்ல ; என்னையும் நண்பர் குருசாமியையும் கைது செய்து அழைத்துப் போய் வைத்து, நாங்களும் புத்தகம், படுக்கை முதலியவைகளுடன் தயாராய் இருந்தும், திடீரென்று, 'இருட்டாய் விட்டது; நீங்கள் வீட்டிற்குப் போகலாம்' என்று கமிஷனர் அவர்கள் எங்களுக்குச் சொன்னபோது நாங்கள் எவ்வளவு ஏமாற்ற மடைந்து இருப்போம் ? இந்தப் பேச்சைக் கேட்டவுடன், ஏதோ 'கிரிமினல்' குற்றத்திற்குத் திடீரென்று எனக்கு ஓர் 'அரஸ்ட்' வந்ததைப் பார்த்தால் எப்படி என் மனம் பக்கென்று திகைப்பும், பய உணர்ச்சியும் ஏற்படுமோ அதுபோலத் திடீரென்று ஆய்விட்டது.

'என்ன அய்யா ! இப்படி வீட்டிற்குப்போ என்கிறீர்களே ; எனக்குப் புரியவில்லை ; இப்படிக் கேட்பதற்கு மன்னிக்கவேண்டும்' என்று கமிஷனர் அவர்களைக் கேட்டேன். அவர், 'பெரியவாளை எல்லாம் இவ்வளவுதான் செய்ய முடியும்' என்றார் ; எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. இந்த என் ஏமாற்றம் எப்படியோ இருக்கட்டும்; நாளையதினம் போலீஸ் அதிகாரிகள், பிடித்தவர்களையெல்லாம் திடீரென்று விடுதலை செய்து விட்டார் களானால் பிடிபட்டவர்கள் அத்தனைபேரும், 'ஏதோ ஒரு மாதம் அல்லது 15 நாட்கள் குறைந்தது இந்த உத்தரவு அமுலில் இருக்கும் வரையிலாவது ஜெயிலில் இருக்கலாம் என்று வந்தோமே ; இப்படி நம்மை அவமானப்படுத்துவதுபோல் விரட்டி விட்டார்களே ; இனி எப்படி வெளியில் தலைகாட்டுவது !' என்று எவ்வளவோ ஏமாற்றமும் வேதனையும் அடை வார்கள். பொதுக் கிளர்ச்சி விழாவில் இது சகஜம். எனக்கு எத்தனையோ தடவை மக்கள் பரிகாசம் செய்யும்படியான அவமானமே ஏற்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் நான் பயப் பட்டால் மேலே கிளர்ச்சி நடக்கவே நடக்காது. ஆதலால், யாரும் ஏமாற்ற மடைந்ததாகக் கருதக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன்.

என் 'பொதுநலக் கிளர்ச்சி வியாபாரம்' எல்லாம், 'குறைந்த செலவில் (தியாகத்தில்) பெரிய இலாபம் (வெற்றி)' என்ற கொள்கையைக் கொண்டது. ஆதலால், பொதுமக்கள், போலீஸ், அரசாங்கங்கள், நாம் ஆகிய எல்லோரும்—இந் நிகழ்ச்சி அதிகச் செலவு, தொல்லை இல்லாமல் வெற்றிகரமாய் முடிந்திருப்பது பாராட்டத்தக்கதேயாகும்.

எதிரிகள் வேதனைப்படுவார்கள். அது இயற்கைதானே ! அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டுமானால் நான் சாகவேண்டும் அல்லது எதிலாவது நான் தோல்வி அடைய வேண்டும். அது அவர்கள் அவசரத்துக்கு ஏற்றபடியோ, எளிதிலோ நடக்கமாட்டேன் என் கிறது ; அதற்கு நாம் என்ன செய்யலாம் !

கடைசியாக, இன்றுமுதல் இனி யாரும் இந்தக் கிளர்ச்சி விஷயமாய் 'தடை உத்தரவு நாள் வரையில்' என்ற எனது வேண்டுகோள்படி யாதொரு நடவடிக்கையும் செய்யாமல் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மறு கிளர்ச்சியை எதிர் பாருங்கள்.

இந்த நல்ல முடிவுக்கு உதவி செய்த எல்லோருக்கும் எனது நன்றி. வணக்கம்.

['விடுதலை'—அறிக்கை—2-8-1956]

4. இராமன் பட எரிப்பு ஏன் ?

நான் ஏன் இராமனை எரிக்கச் சொன்னேன் ? நான் ஏன் பிள்ளையாரை உடைக்கச் சொன்னேன் ? இதன் காரணம் 100-க்கு 90, பிள்ளையார் கடவுள் அல்ல என்பதாக இருந் தாலும், அதன் பிறவிக் கதைகள் கடவுள் தன்மைக்கு ஏற்றதல்ல என்பதோடு, அந்தக் கதைகள் காட்டுமிராண்டிகள் கற்பனை போன்றதாகும் என்பது விளக்கப்படவேயாகும்.

பொதுவாக, பிள்ளையாரை, நம் நாட்டில் இராமனை வணங்குபவர்களைவிட அதிகமான மக்கள் வணங்குகிறார்கள் என்றாலும், பிள்ளையாரிடம் பொய், வஞ்சகம், சாதி ஆணவம், ஒரு சாதியைக் கெடுத்து அழித்து மற்றொரு சாதியைக் காப்பாற்றவேண்டும் என்கின்ற தான வகுப்புணர்ச்சி முதலியவை மிகமிகக் குறைவு; அருமையுமாகும். ஆனால், இராமன் அப்படி அல்லன்; அவனைப்பற்றிய கதைகள் பல என்றாலும் அத்தனையின்படியும் இராமன் பிறவியில் இருந்து இறப்புவரை நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும், உண்மைக்கும் நல்ல மனிதன் தன்மைக்கும் மாறான—கூடாத தன்மையைக் கொண்டவனாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறான்.

இன்றைய தினம் எனது சமுதாயத் தொண்டின் முதலானதும்—முக்கியமானதுமான சாதி ஒழிப்பை எடுத்துக்கொண்டால் இராமனின் முதல் செய்கையும் கடைசிச் செய்கையும் சாதியைக் காப்பாற்றப் பிறந்து, சாதியைக் காப்பாற்றிவிட்டுச் செத்ததேயாகும். நம்நாட்டில் சமுதாயத் திருத்த வேலையோ, பகுத்தறிவுப் பிரச்சார வேலையோ எந்த ஒரு சிறிய அளவுக்கு நடக்கவேண்டுமானாலும் முதல் இலட்சியச் செய்கையாக, ஸ்லோகச் சொல் காரியமாக, துவக்கக் குறியாக இராமாயணம்—இராமன் அழிந்து ஒழிக்கப்பட்டு ஆக வேண்டும். இராமாயணப் பிரச்சாரம் ஒழுக்கக் கேட்டுப் (Criminal and Immoral) பிரச்சாரம் ஆகும். எவ்வளவுதான் மத மவுடீகம் மக்களுக்கு இருந்தாலும், ஒரு மனிதன் தன்னைப் பெற்ற தாய் இரண்டணா ரேட்டுக் குச்சுக்காரியாக இருந்து, தெருவில் போகிற சின்னப் பையன்களையெல்லாம் கையைப் பிடித்து இழுத்தால், மகன்காரனாகிய மனிதன் இழுக்கப்பட்ட பையனைப் பார்த்து, 'ஏண்டா, எங்கம்மா இழுத்தால் திமிறிகிட்டு ஓடப் பார்க்கிறாய்?' என்று பையனை அடித்தால் அவன் தாய்ப் பற்று, தாய் அன்பு, தாய் அபிமானம், தாய் பக்தி கொண்டவனாக ஆகிவிடுவானா?

உலகின் சாதாரண மக்களும் அந்த மகனைப்பற்றி என்ன கருதுவார்கள் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால், இராம பக்தர்களான தமிழர்களுக்கு நான் இராமனை எரிக்கும் தன்மையின் உண்மை விளங்காமல் போகாது. இந்த மாதிரி 'தியாகிகள்'—அதாவது உயிருக்குத் துணிந்து உயிரினும் சிறந்ததான 'மானத்தை'த் துறந்து (மற்றவற்றைத் துறந்தது என்பது மிக மிக அற்பமேயாகும்) மக்கள் பழியை ஏற்று, இக் காரியத்தைச் செய்யக்கூடியவர்கள் எளிதில் ஏற்படமாட்டார்கள்; ஏற்பட்டாலும் முன்வரமாட்டார்கள்; முன்வந்தாலும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்; அனுமதித்தால் மாற்றார்கள் வாழ விட மாட்டார்கள். தமிழனுக்கு இன்று தன்மானம்தான் தேவை. இது தாயினும் (மதத்தினும்) உயிரினும் (கடவுளினும்) சிறந்ததாகும். தாயை வெறுத்தாவது உயிரைவிட்டாவது மானத்தை, மனிதத் தன்மையை, ஒழுக்கத்தைக் காப்பாற்றவே இராமனைக் கொளுத்தச் சொன்னேன், சொல்கிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—4-8-1956]

6. இழிவு நீக்க அறிப்பு

1. பிராமணாள் அழிப்பு

சென்னை 'இராஜ்ய ஆட்சியாளருக்கும்', கவர்னர் பெருமான் அவர்களுக்கும், சென்னை மாநிலத் திராவிடர் கழகத் தலைவர் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்வதாவது:

நம் நாட்டில் இருந்துவரும் சாதிப் பிரிவுகள் ஒழிந்து, மக்கள் யாவரும் சாதிப் பிரிவற்ற ஒரே சமுதாயமாக இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தார் இலட்சியமாகவும், முயற்சியாகவும் இருந்துவரும் என்கின்ற எண்ணத்தின்மீதே, இந்த வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாட்டில் இந்தியப் பிரதமரும், தமிழ்நாடு முதலமைச்சரும் ஆகிய இரு கனவான்களும் சாதிப் பிரிவு ஒழிக்கப்பட வேண்டுமென்று பல சந்தர்ப்பங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். உத்தியோகங்களில் 'குவார்ட்டர்லி சிவில் லிஸ்ட்' என்பதாக நீண்டகாலமாய்ப் பதிப்பித்துவந்த புத்தகத்தில், ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களுடைய சாதியைக் காட்டும் குறிப்பை இப்போது எடுத்துவிட்டார்கள்.

பல ஆதாரங்களிலும் சாதிகளைக் காட்டக்கூடாது என்று அரசாங்கத்தால் திட்டப் படுத்தப்பட்டிருக்கிறது.

சாதியின் பெயரால் பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடாது என்றும், அப்படி ஏற்படுமானால் அதற்கு அனுமதியும் உவித்தொகையும் கொடுக்கப்படமாட்டாது என்றும் அரசாங்கத்தாரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களில் சாதிமட்டுமல்ல-இனத்தின் பெயரைக்கூடக் குறிப்பிடக்கூடாதென்று-சில விளம்பரப் பலகைகளில் இனப் பெயரை அரசாங்கம் மாற்றிவிட்டது. உதாரணமாக, திராவிடன் என்று காணப்பட்டதையெல்லாம் அழித்துவிட்டுத் தமிழன், தமிழ்நாடு என்று போடப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களில் சாதிப்பெயர் காட்டக்கூடாதென்றும், மாணவர்களைத் தெரிந்தெடுத்துச் சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் கமிட்டியார்-செலக்ஷனில் நேரில்வரும் மாணவர்களை 'நீ என்ன சாதி?' என்று கேட்கக்கூடாதென்றும் ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவைகளெல்லாம் சாதிப் பிரிவை உத்தேசித்துச் செய்யப்பட்ட ஏற்பாடுகளே தவிர, சாதிக்குள்ளிருக்கும் உட்பிரிவையோ, பேதத்தையோ பொறுத்ததல்ல. சாதிப்பிரிவு விஷயங்களில், நம் நாட்டில் முக்கியமாக அனுபவபூர்வமாகக் காணப்படுவதெல்லாம் இரண்டே சாதிகள் என்கின்ற பிரிவுதான். அதாவது, ஒன்று 'பிராமணன்'; மற்றொன்று 'சூத்திரன்'. அந்த 'சூத்திரன்' என்கிற வார்த்தை இழிவாயிருக்கிறது என்கிற காரணத்தால், எதிர்ப்பு ஏற்பட்டதன் பலனாக, பிராமணனை மட்டும் பிராமணன் என்றே சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருவது பழக்கத்தில் வருவதோடு, சூத்திரர்களைப் பொறுத்த வரையில் 'பார்ப்பனரல்லாதார்' (Non-brahmin) என்றும், 'திராவிடன்' என்றும், சில சந்தர்ப்பங்களில் 'தமிழன்' என்றும் இப்படிப் பலவாறாகச் சொல்லப் படுகிறது. எப்படியிருந்தாலும், பிராமணன் ஒரு சாதி. அவன் நீங்கிய மற்ற எல்லா இந்து மக்களையும்—அதாவது சத்திரியன், வைசியன், சூத்திரன் முதலிய எந்தச் சாதிக் காரர்களையும் இந்தச் சூத்திர சாதிக்குள்ளாகவே அடக்கினர். தங்களைப் பிராமணன், சத்திரியன், வைசியன் என்று சொல்லிக்கொள்ளுகின்ற பொற்கொல்லர் (ஆசாரி), படையாச்சி (வன்னியர்), நாடார்கள், நாயுடுமார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், வாணியச் செட்டியார்கள் முதலிய பலரைச் சூத்திரர்களுக்கு உண்டான அந்தஸ்தில் வைத்துத்தான் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லப்படுவதோடு, அவர்கள் 'சூத்திரர்'களாகவே பாவிக்கப்பட்டும் வருகிறார்கள்.

மற்றும் குறிப்பிடத் தகுந்தது என்னவென்றால், தங்களை வைசியர்கள் என்றே சொல்லிக்கொண்டு மற்ற பெருவாரியான மக்களிடம் உண்பன, தின்பன வைத்துக்கொள்ளாமல் தனித்து விலகி நிற்கும் 'ஆரிய வைசியர்' என்று சொல்லிக்கொள்ளும் கோமுட்டிச் செட்டியார்களையும், நகரத்தார் என்று சொல்லிக்கொள்ளும் நகரத்துச் செட்டியார்களையும் சூத்திரர் வகுப்பிலேயே சேர்த்து—சூத்திரர்களாகவே (Non-brahmin) பாவிக்கப்பட்டும் வருகிறார்கள். எதற்காக இவைகளைக் குறிப்பிடுகிறேன் என்றால், சாதி முறையில் அரசாங்கத்தாராலும், பார்ப்பனர்களாலும், அனுபவத்தினாலும்—இரண்டே சாதிப் பிரிவுகள்தான் பழக்கத்திலிருந்து வருகின்றன என்பதைக் காட்டுவதற்காகத்தான்.

இந்த இரண்டு பிரிவுகளில், 'பிராமணர்கள்' தவிர மற்ற பிரிவு மறைக்கப்பட்டு விடுவதில் யாருக்கும் கவலையில்லை. பிராமணர்கள் என்பவர்கள் மாத்திரம்தான் தங்கள் சாதியை நிலைநிறுத்திக்கொள்ளப் பாடுபடுகிறார்கள். காரணம், அவர்கள் மேல்சாதி உரிமை பெற்றிருப்பதனால். அதன் பயனாக மற்ற சாதிகளுக்குப் பெரிய தொல்லை இருப்பதனால், சாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்கிற கிளர்ச்சி அவசியம் தோன்ற லாயிற்று. அது எப்படியோ, அரசாங்கக் கொள்கையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது; நடைமுறையிலும் சில காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், எப்படியோ—தெரிந்தோ, தெரியாமலோ, அல்லது வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ பார்ப்பனருக்கு மத்திய அரசாங்கம் ஒரு உரிமை (அனுமதி) கொடுத்து வருகிறது. அதாவது, அரசாங்கம் அனுமதி (லைசென்ஸ்) கொடுத்து நடைபெறும், நடக்கச் செய்யும் பார்ப்பனர்களின் உணவு விடுதிகளில், 'பிராமணர் விடுதி' என்று போட்டுக்கொள்ள அனுமதிக்கிறது.

சாதியின் அனுபவ ஆதிக்கமெல்லாம் பெரிதும் உணவினாலேதான் வரையறுக்கப் படுகிறது; சாதியை ஒழிக்க வேண்டுமென்கிறவர்கள், அந்த உணவுத் தன்மையில்தான் ஒழிக்கப் பாடுபட வேண்டும். அப்படியிருக்க, எதற்காக உணவு விடுதியில் சாதிப்பெயர் போட அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்? இப்படி அனுமதிப்பது அரசாங்கத்தின் கொள்கைக்கும் நடப்பிற்கும் முரண்பட்டதாகும். இதை அரசாங்கம் சீர்திருத்தவில்லை யானால் மக்கள் முயற்சித்துச் செய்யவேண்டியது அவசியமாகிறது.

பார்ப்பனர்கள் தங்களை மேலான சாதியென்று—மேலே குறிப்பிட்ட மற்றவர்களைப் போல, அவர்கள் வீட்டிலிருந்து சொல்லிக்கொள்ளட்டும். 'பிராமணாள் வீடு' என்று அவர்கள் வீட்டில் வேண்டுமானால் போர்டு போட்டுக்கொள்ளட்டும்; பூணூல் போட்டுக் கொள்ளட்டும்; நமது மேல் படுவதில்லையென்று எட்டி ஓரமாக நடந்து கொண்டு போகட்டும்; இவைகளைப் பற்றிப் பொதுமக்கள் பார்த்துக்கொள்ளட்டும். அரசாங்கத்தார் —ஏன், 'பிராமணன்' என்று போட்டுக் கொண்டு வியாபாரம் நடத்திப் பணம் சம்பாதிக் கவும், மற்றவர்களை இழிவுபடுத்தும் குறியைக் காட்டவும் இடங்கொடுக்கவேண்டும்? அந்த மாதிரி விளம்பரப் பலகை இருக்க இடங்கொடுப்பதிலிருந்து சாதி உணர்ச்சி தோன்று கிறதா, இல்லையா என்பதைத்தான் அரசாங்கம் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

ஆதலால், நான் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்வதெல்லாம்—உணவு, சிற்றுண்டிச் சாலைகளுக்கு அரசாங்கம் அனுமதி கொடுப்பதில் அந்த அனுமதிச் சீட்டு நிபந்தனைகளில், 'லைசென்ஸ்தாரர்–சாதிப் பெயர் போடக்கூடாது' என்று குறிப்பிட வேண்டும் என்பதுதான்.

இதைச் செய்ய, சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பாக சில நகரசபைத் தலைவர்களைக் கொண்டு நகரசபை 'லைசென்சு'களில் குறிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்தேன். அப்பொழுது முனிசிபல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிராத காரியங்களை முனிசிபாலிட்டியார் செய்தால், அது சட்ட விரோதம் என்று சொல்லி அபிப்பிராயம் கொடுக்கப்பட்டுவிட்டது; அதனால் அது நடைபெறவில்லை. அதற்குப் பிறகுதான், பல இடங்களில் கிளர்ச்சிகளால் மறைக்கப் பட்டன; இரயில்வே பிளாட்பாரங்களில்கூட 'பிராமணாள் ஓட்டல்', 'பிராமணாள் சாப்பிடுமிடம்' என்பவைகள் மறைக்கப்பட்டன.

ஆதலால், அரசாங்கத்தாராவது, கவர்னர் பெருமானாவது அருள் கூர்ந்து 5-5-1957-ஆம் தேதிக்குமுன் அமுலுக்கு வரும்படியாக—ஓர் அவசர அறிக்கை வெளி யிட்டுவிட்டால் இதற்காக நேரடி நடவடிக்கை—கிளர்ச்சி செய்யவேண்டிய அவசிய மிருக்காது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

['விடுதலை'–அறிக்கை—27-4-1957]

2. நமது இழிநிலை

தமிழ் மக்கள் என்று சொல்லவேண்டுமானால் நாம் உலகத்திலில்லாத காட்டு மிராண்டித்தன்மையில் வாழ்கிறோம். உலகத்திலுள்ள எந்தச் சமூகத்திலும், பார்ப்பானும் பறையனும் சூத்திரனும் இல்லை. இப்படிப்பட்ட நிலை, நீக்ரோக்களிடம்கூட இல்லை. மோசமான காட்டுமிராண்டிகளாக இருந்தவர்களெல்லாம் இன்று பெரிய விஞ்ஞானிகளாக இருக்கிறார்கள்.

நாம் எப்படி இருந்தோம் என்பதற்குச் சரித்திரமும் இலக்கியமும் இல்லை; நிசமாக நாம் எப்படி இருந்தோம் என்பதற்கு ஆதாரம் இல்லை- ஆனால், கண்டுபிடிக்க ஒரு வாய்ப்பு உண்டு. அது என்ன வாய்ப்பு? அதுதான் நம் எதிரிகளால் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள். நம்மை ஒழிக்கவேண்டுமென்று இருப்பவன்—நம்மைக் குறைகூறவேண்டும் என்றே எழுதியவைகளில் இருந்தே நாம் காண்கின்ற அளவில், நாம் நல்ல நிலையில் இருந்திருக்கிறோம் என்பதைக் காணலாம்.

ஆணும் ஆணும் சேர்ந்து பிள்ளை பெற்றார்கள்; மீனுக்குப் பிறந்தான்; சாமியும் சாமியும் கலியாணம் செய்து கொண்டன என்றெல்லாம்—காட்டுமிராண்டித்தனமாக இருந்தவன், அந்தக் காட்டுமிராண்டி உணர்ச்சியிலிருந்து எழுதியவன்—இராவணனைப் படு அயோக்கியன் என்று எழுதவேண்டும் என்று கருதி எழுதியுங்கூட, என்ன எழுதியிருக்கிறான்? 'அவன் மதிற்சுவர் அப்படி இருந்தது; ஆட்சி இப்படி இருந்தது; இப்படிப் படித்தவன்' என்று புகழ்ந்துதான் எழுதியிருக்கிறான்! காலத்தைப்பற்றிச் சந்தேகம் வந்தாலும், கற்பனையாக எழுதியிருந்தாலும், அதில் பகுதி இருந்தாலும்—நாம் அவர்களைப்போல் காட்டுமிராண்டிகளாய் வாழவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

அப்படியிருந்த நம்மை, இன்று சூத்திரன், பஞ்சமன் என்கிறானே! இன்று அய்க்கோர்ட் தீர்ப்பில், 'இவன் சூத்திரன்; அவன் பிராமணன்; இவன் சாதியில்லாத இந்து (Non-caste Hindu)' என்று எழுதுகிறானே! இன்னும் எத்தனை காரியங்களில் இழிவாக நடத்தப்படுகிறோம்! இதற்கெல்லாம் சமாதானமாக 'பார்ப்பான் செய்துவிட்டான்!' என்று கூறிவிட்டால் போதுமா? அவர்கள் மூன்று பேர்தான்; நாம்—மூன்று பேருக்கு முப்பது மடங்கு பேர் இருக்கிறோமே! மான உணர்ச்சி இருந்தால் அவன் புகுத்தினான் என்று சொல்ல வாய்ப்பிருக்குமா?

இராமாயணத்தில், பாகவதத்தில் என்ன இருக்கிறது? அவன் காட்டுமிராண்டியாக இருந்தாலும் நாம் மேலான வாழ்க்கை உடையவர்களாக இருந்தபோதிலும் நம்மை ஒழிப்பதானால்—இராவணனை ஒழிக்க அவன் தம்பியையும்; இரணியனை ஒழிக்க அவன் மகனையும் சரிசெய்து கொண்டதுபோல்—நம்மை ஒழிக்க நம்மில் சில பைத்தியக்காரனையே பிடித்துக்கொள் என்ற தத்துவந்தானே அந்தக் கதைகளிலிருந்து தெரியவருகிறது?

புத்தனை ஒழிக்க என்ன செய்தான்? அவனா பிரச்சாரம் செய்து, அதற்கு மறுப்புச் சொல்லியா ஒழித்தான்? நமது ஆட்களைப் பிடித்து, 'நீ ஆழ்வார், நீ நாயன்மார்!' என்று சொல்லித் தூக்கிவிட்டுத்தானே புத்தனை ஒழித்திருக்கிறான்? இன்றுதான் என்ன? பார்ப்பான் இன்று ஆள்கிறான். அவன் வைத்ததுதான் சட்டம் என்கிறான்; அவனேயா ஆள்கிறான்? சட்டசபையில் அவனேயா உட்கார்ந்திருக்கிறான்? இது இன்று மாத்திரமல்ல. இராவணன் காலந்தொட்டு இப்படியே இருக்கிறதென்றால்—இந் நிலை மாறாதிருந்தால் என்னாவது? இந்தக் கொள்ளைக்கார ஆட்சி ஒழிந்து நமது நிலை மாறவேண்டாமா?

நானும் இருபது வருடமாகச் சொல்லுகிறேன்: பார்ப்பானை 'பிராமணாள்' என்று சொல்லாதே; அவனைப் பிராமணன் என்று கூறினால், நீ யார்? ஒருத்தி, உன்தெருவில், தன் வீட்டில் 'இது பதிவிரதைவீடு' என்று 'போர்டு' போட்டுக்கொண்டால்—மற்றவர்கள் வீடு என்ன என்று அர்த்தம்?—என்று கத்திக் கத்தி என் தொண்டையில் இரத்தம் வரச் சொல்கிறேன். இந்தச் சின்னக் காரியம் செய்யவும் எவன் கேட்கிறான்?

என்னைப் பார்க்கும்போது, 'ஆகா இந்தப் பார்ப்பானை ஒழிக்க, நீதான் சரியான ஆள்' என்கிறான். அந்தப் பக்கம்போய், 'பிராமணாள்' என்கிறான். எந்தக் கேவலமான பார்ப்பான் தன் இனத்தைக் காட்டிக் கொடுக்க முன்வருகிறான்? மாணிக்க நாயக்கர்தான் சொன்னார்: 'நாய் நன்றியுள்ள பிராணி. ஆனால், யாருக்கு நன்றியாக இருக்கும்? எலும்பு போடுகிறவனுக்குத்தான். ஆனால், தன் இனத்தைக் கண்டால் முன்பின் விரோதமே வேண்டியதில்லை—கண்டாலே 'உர்' என்னும். அதுபோல்தான் தமிழன் தன் இனத் துரோகியாக இருந்து பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாக நடக்க விரும்புகிறான்' என்று.

ஒரு நண்பர் சொன்னார் வேடிக்கையாக! 'நீ இப்படிக் கத்துவதால் பயனில்லை. பேசாமல் வெளிநாட்டுக்குப் போய்க் கொஞ்சம் துலுக்கன் இரத்தமும், வெள்ளைக்காரன் இரத்தமும் வாங்கிக்கொண்டு வா! தமிழன் உடம்பிலுள்ள தமிழ் இரத்தத்தை ஒரு சொட்டு விடாமல் எடுத்துவிட்டுப் புதுஇரத்தம் பாய்ச்சினால்தான் பயன்படும்' என்றார். 2000 ஆண்டுகளாக இழிநிலையிலிருந்தே பழகிவிட்டதால் இது தோன்றுவதில்லை. ஒரு துலுக்கனிடம்—'பன்றி' என்று சொல்லுங்கள். அந்தப் பேச்சே பிடிக்காது. ஏன்? அப்படியே பழகியாய் விட்டது.

நமது பிள்ளைகள் பார்ப்பான் உயர்ந்தவன் என்ற பேச்சைக் கேட்டாலே முகத்தைச் சுளிக்கவேண்டும். எதற்குப் பார்ப்பான் வேண்டும்? பார்ப்பான் இல்லாவிட்டால் என்ன காரியம் நடக்காது? எனக்காக—நான் சாப்பிட—பலகாரம் செய்து வைத்துக்கொண்டு, உன் கடையில் 'பிராமணாள்' என்று போர்டு போட்டுக்கொண்டால் 'சூத்திரப் பயலே, வாடா' என்றுதானே கூப்பிடுகிறாய்? அதை எடுத்துவிடு என்றால், இந்த 1958 ல் கூட மாட்டேன் என்கிறானே?

[விழுப்புரத்தில், 27-8-1958-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-8-1958]

7. காந்தி சின்னம் அழிப்பு

1. காந்தி பட எரிப்பு ஏன்?

காந்தி பட எரிப்பு, காந்தி சிலை அகற்றல் என்பதான காரியங்கள் தமிழ்நாட்டில் நடைபெறவேண்டும் என்கின்ற எண்ணம் எனக்குப் பல ஆண்டுகளாகவே உண்டு. அதைப் பொதுமக்களிடையில் இந்த 3, 4, ஆண்டுகளாக எனது பொதுக்கூட்டப் பேச்சுகளில் காட்டிகொண்டே வந்திருக்கிறேன். அந்த எண்ணமும் பேச்சும் நாளுக்குநாள் முதிர்ச்சி பெற்று இந்தச் சந்தர்ப்பத்தில் உருவகமாக வெளியாக்கப்பட வேண்டிய அவசியத்திற்குள்ளாகிவிட்டது.

காந்தியைப் பற்றிய நீண்டநாளான எனது கருத்தை அறியவேண்டும் என்கின்ற ஆசையுள்ளவர்கள்–1927 முதல் 1931 வரை உள்ள 'குடி அரசு' பத்திரிகையைப் பார்ப்பவர்களுக்கு (அதை முறையாய் வெளியிடப் போகிறேன்) நன்றாக விளங்கும்.

நான் 1924-ல் தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தலைவனாகவும், பிரமுகனாகவும் இருந்த காலத்தில்—காங்கிரசைவிட்டு வெளியேறிய காரணம் காந்தியின் செய்கையாலேயே ஆகும்.

1928-ல் என்பது எனது ஞாபகம், காந்தியின் உள்கருத்திலேயே எனக்கு ஏற்பட்ட உறுதியான எண்ணத்திலே—'இனி, காந்தியை மகாத்மா என்று அழைப்பதில்லை' என்று நான் முடிவுசெய்து—'திரு. காந்தியார்; தோழர் காந்தியார்' என்றே எழுதியும் பேசியும் வந்திருக்கிறேன். 'குடி அரசு', 'திராவிடன்', இன்றைக்கும் 'விடுதலை' பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும்.

'பல கூட்டங்களிலும்—'காந்தியை, மகாத்மா காந்தி என்று சொல்' என்று பலர் குழப்பங்களும் காலித் தனங்களும் செய்த காலத்திலும்—காந்தியாரின் நடத்தையை, அவர் நமக்குச் செய்த கெடுதியை, துரோகத்தை விளக்கி ஒப்பச்செய்திருக்கிறேன் என்றாலும், இந்தப் பார்ப்பனர்கள் தங்கள் வாயால் ஒரு பார்ப்பனரல்லாத மனிதரை 'மகாத்மா' என்று அழைத்துத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே என்பதுபற்றி மகிழ்ச்சி அடைந்து இருக்கிறேன். ஆனாலும், அதற்கு ஏற்ற கருத்துக்களை நான் ஆதரித்ததே கிடையாது.

சில கூட்டங்களில் நான் தாட்சண்யப்படவேண்டிய சில தோழர்கள்கூட சினேகித முறையில், 'காந்தியை—மகாத்மா என்று சொல்லு' என்று கேட்டுக்கொண்ட காலத்திலும் அவர்களுடன் தர்க்கம் செய்யாமல், 'அய்யா, எனக்கு வெறும் ஆத்மா என்பதிலேயே நம்பிக்கை கிடையாது; அப்படி இருக்க, மகாத்மா என்று சொல்லச்சொன்னால் என் நா எப்படி உச்சரிக்கும்?' என்று சமாதானம் சொல்லி இருக்கிறேன். ஆதலால், நான் ஒன்றும் இன்று எனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்பதற்கு ஆகவே இதைக் குறிப்பிட்டேன். தவிர, நானும் தோழர் இராமநாதன் எம். ஏ. அவர்களும், எங்களது சுயமரியாதைப் பிரச்சாரம் மும்முரமான காலத்தில் காந்தியாரது வருணாசிரமப் பிரச்சாரம் எங்களுக்கு மூட்டிய ஆத்திரத்தால்—எங்கள் தனிப்பட்டமுறைப் பேச்சில், 'இந்த காந்தியைச் சுட்டுத்தள்ள வேண்டும்' என்று நண்பர்களிடையில் பேசிக்கொண்டு இருந்திருக்க வேண்டும்.

நண்பர் ஆச்சாரியார் அவர்களும் நானும் காந்தியாரைப்பற்றித் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்தபோது பல விஷயங்கள் பேசினோம் என்றாலும் 'காந்திக்குத் தெளிவான புத்தி (Clear Thinking) கிடையாது, மிகவும் (Confused mind) எல்லாம் குழப்பமான எண்ணம்தான்; அதோடுகூடத் தனக்கு எல்லாம் தெரியும் என்கின்ற எண்ணம் உள்ளவர்' என்பதாகப் பேசிக்கொண்டு இருந்திருக்கின்றோம்.

வேறு பல விஷயங்களும் உண்டு; அவை பின்னால் வெளிவரும். இவை ஒருபுற மிருக்க, காந்தியால் நமது தமிழ்நாட்டுக்கு—தமிழ்நாட்டு மக்களுக்கு அரசியல்—பொருளியல்—சமுதாய இயல் ஆகியவைகளில் ஏற்பட்ட கேடுகள் அளவிலடங்காதவை என்றாலும், இன்று அது வளர்ந்து விரிந்து மாபெரும் கேடு ஏற்படும் அளவுக்கு—அதாவது, இனிப் பரிகாரம் செய்யமுடியாத அளவுக்குப் பரவி, பலம்பெற ஆரம்பித்துவிட்டதால் ஒரு இரண்டு மூன்றாண்டுகளாக எனது உள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்த எண்ணம் வெளியாக்கப்பட வேண்டியதாக ஆகிவிட்டது. இனி அது எந்தவிதத்திலும் தங்காது; வெளியிட,—பிரச்சாரம் செய்யத் தயங்காது.

'உலகம் போற்றும் உத்தமர்' என்று சிலர், மதசம்பந்தமான முறையில் பேசுவது போல், காந்தியைப்பற்றிக் கூறுவதுண்டு. இது பார்ப்பனரில் ஒரு சிறு கூட்டத்திற்குச் சாமியாரான சங்கராச்சாரியை, அவர் 'தானேதான் கடவுள்' என்ற தன்மையை 100-க்கு 90 ஆத்திகர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், எல்லாப் பார்ப்பனரும் அவரை லோககுரு, ஜகத்குரு என்று எப்படிச் சொல்லுகிறார்களோ அதுபோலும், நாமும் எப்படி அவரை லோககுரு என்று பேசுகிறோமோ அதுபோலும்—காந்தியை காங்கிரஸ்காரர்கள், 'உலகம் போற்றும் உத்தமர் காந்தி, மகான் காந்தி, காந்தி மகான்' என்று அவசியத்தை முன்னிட்டு—மற்ற மக்களை ஏய்ப்பதை முன்னிட்டுப் பேசுவதாலும்; பத்திரிகைக்காரர்கள் பார்ப்பனருக்கு அடிமையாகி வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதால் அவர்களும் அப்படி எழுதுகிறார்கள். நான் அப்படிப் பேசியதும் இல்லை; எழுதியதும் இல்லை. எனக்குக் காந்தியை நன்றாகத் தெரியும். ஜின்னாவுக்கும், அம்பேத்காருக்கும் காந்தியை எவ்வளவு தெரியுமோ—அதற்குச் சற்று மேலாகவே எனக்குத் தெரியும்.

இது ஒருபக்கம் இருக்கட்டும். காந்தியை வெளியாக்கவேண்டிய முக்கியமான அவசியம்—காங்கிரஸ்காரர்களையோ, சட்டசபை மெம்பர்களையோ, பத்திரிகைக்காரர்

களையோ, பாமர மக்களையோ திருத்திவிடலாம் என்கின்ற எண்ணத்தால் அல்ல. மற்றென்னவென்றால், நமது பின் சந்ததிக்கு—'விஷயத்தைச் சொல்லி விளக்கிவிட்டுப் போனால், பயன்படுகிறபோது பயன்படட்டும்' என்கின்ற எண்ணமும்; மோசடிக்கார நம் எதிரிகளின் கூலிகள் தங்கள் வாழ்வுக்கு இனிமேலாவது—'காந்திமகான் சொன்ன வழி' என்று சொல்லி மக்களை ஏய்க்காதிருக்கட்டும் என்பதுமாகும்.

காந்தியால் நம் சமுதாயத்திற்கு—நம் நாட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன? காந்தியால் நாம் ஏமாற்றப்பட்டோம்; காந்தியால் நம் நாடு வடவனுக்கும் பார்ப்பானுக்கும் அடிமைப்படுத்தப்பட்டது. காந்தியால் மக்களிடம் இருந்த ஒழுக்கங்கள் அடியோடு நாசமாகி எல்லாத் துறைகளிலும் ஒழுக்கக் கேடும் நாணயக் கேடும் வளர்ந்து, இன்று ஒரு துறையிலாவது—ஒரு மனிதனிடத்திலாவது—ஒழுக்கம், நாணயம் என்பது இல்லாமல் போனதோடு அயோக்கியத்தனம், பித்தலாட்டம், வஞ்சகம், துரோகம் இல்லாமல்—அப்படி நடக்காமல் எவரும் வாழமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

அரசியல் துறை ஆபாசக் களஞ்சியம், பித்தலாட்ட ஊற்றாக ஆகிவிட்டது.

மனிதனுக்கு மான ஈன உணர்ச்சி சிறிதுகூட நினைக்கவே முடியாமல் போய் விட்டது.

ஜனநாயகம் என்றால், ஓட்டர்கள்தாம் முட்டாள்கள் என்றால், பிரதிநிதிகள் 100-க்கு 99 அயோக்கியர்கள், வஞ்சகர்களாக இருக்கிறார்கள்.

ஜனநாயகம் என்றால்—10 ஆயிரம் முதல் 100 ஆயிரம் வரை செலவு செய்தால்தான் ஒருவன் பிரதிநிதி ஆகமுடிகிறது.

இதற்குப் பெயர், 'காந்தி மகான் காட்டியவழி; காந்தியார் தேடித் தந்த சுதந்திரம்—சுயராஜ்யம்' என்றால், மக்கள்மீது தவறா? காந்திமீது தவறா? என்பதை யோசித்துப் பாருங்கள்! மற்றவர்கள் இதை மறைக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்களது பிழைப்பு இந்தப் பித்தலாட்டத்தின்மீது அமைந்துவிட்டது. எனக்கு அந்த நிலைமை இல்லை. நான் மக்களுக்காக வாழ்கிறேன்; மக்களுக்காக எனது பொருளை ஒப்படைத்து இருக்கிறேன்; மற்றும் மக்களுக்காகச் சாகப்போகிறேன் (என் உயிரைக் கொடுக்கப்போகிறேன்) அப்படிப்பட்ட நான், ஏன் இந்த மோசடியை மூடிவைக்க வேண்டும்?

காந்திபெற்ற சுயராஜ்யத்தில் நாட்டு மக்களுக்கு ஏதாவது பங்கு உண்டா? யாராவது எந்தப் பத்திரிகைக்கார யோக்கியனாவது எடுத்துக்காட்டட்டுமே, பார்க்கலாம்! மந்திரிக்கு சம்பளப் பெருமை, சட்டசபை மெம்பருக்கு படிப் பெருமை தவிர, சொந்த வாழ்வுக்கு வசதி—இதைத்தவிர, அவர்கள் தங்களால் ஆகக்கூடியது இன்னது என்று சொல்லட்டும்; அல்லது தங்களால் ஆனது இன்னது என்று சொல்லட்டும்.

தமிழ்நாட்டில் பார்ப்பானுக்கும் வடநாட்டானுக்கும் ஆதிக்கமும் சுரண்டலும் எதற்காக இருக்கவேண்டும்? இருக்கவேண்டும் என்று வைத்துக்கொண்டாலும், அவனவன் பங்குக்குமேல் ஏன் இருக்கவேண்டும்? 'காந்திமகான், இருக்கவேண்டும் என்று சொன்னார்' என்றால் அந்த காந்தி முதலில் ஒழியவேண்டுமா, வேண்டாமா?

சாதிகளைக் கடவுள் உற்பத்திசெய்தார் என்பதால்தானே—அந்தக் கடவுள் முதலில் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறி, எரிக்கவும் உடைக்கவும் செய்கிறோம்!

சுயராஜ்யம், சுதந்திரம், ஜனநாயகம் வந்து 10 ஆண்டுகள் ஆகப்போகிறது; ஜனநாயக—பொதுஜன 'ஓட்டு'த் தேர்தல்கள் இரண்டு நடந்துவிட்டன. இன்றும் இந்த நாட்டில் பிராமணன், சூத்திரன், பறையன், (அரிஜன்) இருக்கிறான் என்றால்—'இது காந்தி மகான் தேடிய சுயராஜ்யம்; இதில் அப்படித்தான் இருக்கும்' என்றால்—அந்த

காந்திமகான் உருவம் இந்த நாட்டில் இருப்பது இந்த நாட்டு மக்களுக்கு மானக்கேடா, இல்லையா? யோக்கியமான பத்திரிகைக்காரர்கள், அரசியல் வாழ்வுக்காரர்கள் பதில் சொல்லட்டுமே, பார்க்கலாம்!

வாழ்வுக்கு—ஒருவன் மானத்தை விற்கிறான்; ஒருவன் நாணயத்தை, ஒழுக்கத்தை விற்கிறான்; ஒருவன் மனைவியை, மகளை விற்கிறான். ஆகவே, இவர்கள் ஒரு டிகிரி இரண்டு டிகிரி, 5 டிகிரி, 10 டிகிரி வித்தியாசக்காரர்களே தவிர, பொதுவில்—விற்கக் கூடாததை விற்கிறவர்கள்தாமே?

நாளைக்குக் கொண்டாடப்போகும் சுதந்திரவிழா—பிராமணன், சூத்திரன், பறையன் இல்லாத நாட்டுச் சுதந்திர விழாவா, மக்களை ஏமாற்றி மோசம் செய்த, யோக்கியப் பொறுப்பற்ற சுயநல வஞ்சகர்கள் சுகவாழ்வுக்கு நடத்தும் நாட்டுச் சுதந்திர விழாவா என்று கேட்கிறேன்.

யோக்கியமான, மானமுள்ள பத்திரிகைக்காரர்கள் சொல்லட்டும், பார்க்கலாம்! திருடனைத் திருடன் மிரட்டலாம்; திருடாதவனைத் திருடன் எப்படி மிரட்டமுடியும்? மந்திரிசபை காங்கிரஸ்காரர்களே! சட்டசபை மெம்பர்களே! யோக்கியப் பொறுப்பு கடுகளவுமில்லாத பத்திரிகைக்காரர்களே!

நாளைக்கே காந்தி படத்தைக் கொளுத்தப் போவதில்லை.

நாளன்றைக்கே காந்தி சிலையை அப்புறப்படுத்து என்று கேட்கப்போவதில்லை! நல்லபடி நாடுமுழுதும் பிரச்சாரம் செய்து—நான் சொல்லாமலே பொதுமக்கள் அந்த வேலைகளைச் செய்ய முன்வரும்படி, அல்லது நானே செய்யச்சொல்லும்படி சொல்லப் போகிறேன்! கண்டிப்பாய்ச் சொல்லப்போகிறேன்! அதற்குள் உங்கள் துரோகத்தையும் விஷமத்தையும் செய்துபாருங்கள்.

மற்றவை பின்னால்,

[‘விடுதலை—தலையங்கம்—13-8-1957]

2. காந்தி பொம்மை உடைப்பு

‘காந்தி பொம்மையை உடையுங்கள்.’

ஆளுக்கொரு காந்தி பொம்மையை உடையுங்கள்; வீட்டில் மாட்டியுள்ள படத்தை ரோட்டில் வீசி எறியுங்கள். இப்படிச் செய்தால் நம் உணர்ச்சியைக் கண்டு துரோகம் செய்யப் பயப்படுவார்களே! மந்திரிகள் ‘நாடு பிரியக்கூடாது’ என்று சொல்ல மாட்டார்களே!

‘காந்தி இன்னின்ன துரோகம் செய்து எங்களை அடிமையாக்கிவிட்டார்’ என்று விவரம் சொல்லிக் கொளுத்து என்கிறேன். நீங்கள் வேண்டுமானால், ‘காந்தி ஒன்றும் செய்யவில்லை; நான்தான் செய்தேன்’ என்று தைரியமாய்ச் சொல்லுங்கள்! முடியுமா?

காந்தி ஒன்றும் அபூர்வ புருஷர் அல்லர். பார்ப்பான், அப்படிப் பாமர மக்கள் நம்பும்படி—மகாத்மா ஆக்கினான். இப்போதல்ல; அப்போதே, நான் ‘குடி அரசி’ல் இதை எழுதி இருக்கிறேன். ‘ரிஷிகளுக்கு எவ்வளவு அறிவோ அவ்வளவுதான் காந்திக்கும். அவரைப் பார்ப்பனர்கள் மகாத்மா ஆக்கிவிட்டார்கள்! மகாத்மா வேஷத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே அவருக்கு வேலை சரியாய்ப்போகிறது’ என்று எழுதியிருக்கிறேன்.

1930-க்கு முன்னமேயே, காந்தி ஒரு காங்கிரஸ் மாநாட்டுக்குப் போகும்போது வழியில் அவரை மடக்கி, ‘துரோகி ஒழிக’ என்று கூவி, அவர் காரில் கண்டதைப் போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கூட்டத்தில் காந்தி, ‘என்னை ஒழிக என்கிறார்கள்; இவர்களா

என்னை ஒழிப்பார்கள்? அது பகவான் கையில் இருக்கிறது' என்று பேசியிருக்கிறார். சுபாஷ் சந்திர போஸ் கோஷ்டியினர்தாம் அப்படி வழியில் மடக்கிக் கண்டதைப் போட்டு, 'காந்தி ஒழிக!' என்றவர்கள்.

தாகூர் சொல்லியிருக்கிறார் : 'காந்தி காட்டு மனிதன்; இவருக்கு என்ன அனுபவம்? இவரது கொள்கை மோசமான கொள்கை' என்று. அதற்கு காந்தி தாகூரைப்பற்றி, 'இந்த தாகூருக்கு என்ன தெரியும்? கவி என்றால் கவிதை பாடி, பணக்காரர்களிடம் கூலி வாங்கிச் சுகபோகமாக இருப்பார்கள்; விடுதலையைப்பற்றி இவர்கள் பேசுவது தப்பு' என்று பேசினார். மக்களை உசுப்பிவிட்டு அவர்கள் தாகூர் வீட்டில் கல் போட ஓடினார்கள்; அவர் பயந்து, மறுநாளே காந்தியை 'மகாத்மா' என்று சொல்லிவிட்டார்.

இப்போது மராட்டி, குஜராத்தி சண்டை வந்தபோது காந்தி படத்திற்குச் செருப்பு மாலை போட்டார்கள்! குஜராத்தி—ஆரியன்; மராட்டி—திராவிடன். இப்போதும் மராட்டிய னிடம் திராவிட உணர்ச்சி ஊட்டினால் வளரும். அங்கு அந்த இராஜ்யங்களின் அமைப்பை ஒரு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தான். அந்தக் காலத்தில் காந்திக்குச் செருப்பு மாலை போட்டார்கள். நேரு, அங்கு எப்படிப் போவதென்று யோசனை செய்தார். அவருக்கும் செருப்பு மாலை போட்டான். இதெல்லாம் விளம்பரமாகவில்லை; சுபாஷ் சந்திர போஸ் ஓடியது யாரால்?

ஆந்திரர், மலையாளி இவர்கள் நாடாளப் பணமின்றித் தவிக்கிறார்கள்! பெட்டி வெறும் பெட்டியாக இருக்கிறது என்று முணுமுணுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ தாண்ட ஆரம்பித்தாகி விட்டது; அரைக் கிணறு தாண்டியதும், போதும் இவ்வளவு என்றால், கீழே பாதாளத்திற்குப் போகவேண்டியது தான். ஆகவே, வேகமாகத் தாண்டியாக வேண்டும்.

நான், 'தேசியக் கொடியை எரிக்கப் போகிறேன்' என்றதும் வழிக்கு வந்தார்களா, இல்லையா? அதுபோல் வந்து கேட்கட்டுமே! 'ஏன் ரகளை செய்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?' என்று. இனிமேல் சட்டம் போடவேண்டும்: 'திட்டினால் இன்னது கொளுத்தினால் இன்னது' என்று.

காந்திக்கும் எங்களுக்கும் சொந்தத் தகராறு ஒன்றுமில்லை. அவர் இடத்தைப் பிடிக்கப் போட்டி போடவில்லை; எங்களுக்கும் சொந்தத்திற்கும் எதுவும் வேண்டுமென்று செய்ய வில்லை. இதற்கு ஒரு மாநாடு கூட்டி விஷயத்தை விளக்கிக் கேட்கப் போகிறேன்; சம்மதம் கொடுக்க வில்லை யென்றாலும், நானாவது செய்து விட்டுப்போய் உட்கார்ந்து விடுவேன்.

'காந்தி நாடு என்று பெயர் வை, காந்தி சகாப்தம் என்று பெயர் வை என்று நீ சொன்னாயே?' என்று என்னைக் கேட்கிறார்கள். அவர்களால், கொளுத்துவதற்கு நான் சொல்லும் காரணங்களை மறுக்கமுடியவில்லை.

நான் சமயம்போல் பேசுகிறேன் என்று மக்களுக்குத் தோன்றச்செய்ய வேண்டும் என்றே இப்படிக் கேட்கிறார்கள். குறும்பாகச் சொல்வதென்றால், 'நான் அன்று சொன்னேன், கேட்டாய்; இப்போதும் நான் சொல்கிறேன்—கேளேன்!' என்று நான் சொல்லிவிடலாம்.

'காந்தி நாடு' என்று வைக்கலாம் என்று சொன்னேன். முதலில் இந்தியா என்பதே கற்பனைச் சொல்; இப்படிக் கற்பனைச் சொல்லை வைத்துக்கொண்டு உயிரை வாங்கு வதைவிட உனக்குத்தான் காந்தியிடம் அதிக மரியாதை இருக்கிறது என்றாயே—அவர் பெயரை வைத்துவிட்டுப்போயேன் என்று யோசனை சொன்னேன். சுயநலக்காரர்கள் அதை வைக்கவில்லை; என்ன செய்வது என்று யோசனை கேட்டார்கள், சொன்னேன். அது போலவேதான், 'காந்தி சகாப்தம்' என்று வைக்கச் சொன்னேன். நமக்கென்று வருடமே இல்லை. வெள்ளைக்காரன் கிறிஸ்து பிறந்து 1957 வருடம் என்று வைத்திருக்கிறான். நமக்கு இருப்பது பிரபவ, விபவ என்ற ஆரிய கதைப்படி உள்ள 60 வருடங்கள்தாம். இதைக்

கொண்டு, காலத்தைக் கண்டுபிடிக்கமுடியாது. நான் பிரமாதி ஆண்டில் பிறந்தேன். இப்பொழுது கணக்குப் பார்த்தால் 19 வயதுதானே ஆகவேண்டும்! எனக்கு எழுபத்தொன்பது என்று கண்டுபிடிக்கவேண்டுமானால் என் தாடியைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். சரித்திரத்திலேயே புரட்டு ஏற்பட இது ஒரு காரணம். கல்வெட்டில்—'கலியுகாதி, பிரபவ வருடம்' என்று போட்டிருப்பான். 'கலியுகாதி' என்பது பித்தலாட்டம்; அறிவுக்குப் பொருத்தமும் ஆதாரமும் அற்றது. பிரபவ என்று சொன்னால்—'எந்த பிரபவ' என்று சொல்லமுடியாது. 'இப்படி நமக்கென்று ஒரு சகாப்தம் இல்லாமல் அழிப்பதைவிட, காந்தி பெயரைத்தான் வையேன்!' என்று யோசனை சொன்னேன். அவ்வளவுதான்.

காந்தி துரோகம் செய்தாரா, இல்லையா என்று உங்கள் அறிவைக்கொண்டு யோசியுங்கள்.

[சேலத்தில், 18-8-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 23-8-1957]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

'காந்தி சிலையைத் தொட்டால் சும்மா விடுவோமா?' என்கிறார்கள். என்ன செய்வார்கள்? காந்தியார் படத்தைக் கொளுத்துவதற்குக் காரணம், காந்தி நம்மைச் சூத்திரர்களாக இருக்க உதவியதுதானே? மந்திரிகள் சூத்திரர்களாக இருக்க விரும்புகிறார்களா? மந்திரிப் பதவி என்பது எல்லா உணர்வையும் விட்டுக்கொடுத்து விடுவதுதானே? தீண்டாமை விலக்கு மாநாட்டிலே சாதி ஒழியக்கூடாது என்ற தீர்மானமே போட்டார் காந்தியார்! சமபந்தி போஜனத்தையும், சாதி ஒழிப்பு என்ற விஷயத்தையும் தீண்டாமை 'லீக்'கில் இருந்து எடுத்துவிட வேண்டுமென்று பிர்லா சொன்னார். அவருடைய பணத்திற்காக ஆதரித்தார் காந்தியார்.

காந்தியார் படத்தை எரிப்பதையும், சிலையை உடைப்பதையும் இந்தியாவில் எந்தப் பத்திரிகையாலும் செய்தி ஸ்தாபனங்களாலும் உலகத்தின் பார்வையிலிருந்து மறைக்க முடியாது.

'சாதி இந்தியாவிலிருக்கிறது. பார்ப்பான் சாதித் தலைவனாக இந்தியாவிலிருக்கிறான். அவனே அரசியல், பொருளியல், சமூக இயல் இவைகளுக்கும் தலைவனாக இருக்கிறான். காந்தியார் பார்ப்பன சமூகத்தைக் காப்பாற்றி இருக்கிறார்; மற்ற இனங்களை அவர்களுக்கு அடிமைகளாக ஆக்கி இருக்கிறார். அந்தக் கொடுமை தாங்க முடியாத தென்னாட்டு மக்கள், காந்தியின் சிலையை உடைக்கிறார்கள். இதனை நேருவால் நிவர்த்திக்க முடியவில்லை' என்று உலகம் தெரிந்துகொள்ளும். உலக அரசியலில் 'சமாதான தூதுவராக' நேரு பறக்க முடியாது. இந்த நிலையை உண்டாக்கியே தீருவேன்.

[நாகப்பட்டினத்தில், 12-9-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1957]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

சட்டத்திலே சாதியைக் காப்பாற்ற ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; அந்தப்படி செய்ததற்கு அடிப்படைக் காரணம் காந்தி.

காந்தி பெயரைச் சொல்லித்தான் சாதிக்குப் பாதுகாப்பான ஏற்பாடு செய்ய முடிந்தது; எனவே, இந்த நாட்டில் காந்தி சிலை இருப்பது அவமானம் என்கிறேன்.

இன்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களே, 'வெலிங்டன் சிலை இருக்கக் கூடாது; விக்டோரியா ராணி சிலைகூடாது; நீலன் சிலை கூடாது' என்று; அதுபோல காந்தி சிலை எங்கள் நாட்டில் இருக்கக்கூடாது என்று சொல்ல எனக்கும் உரிமையுண்டு.

ஒரு வெலிங்டனும், நீலனும் செய்யாத அக்கிரமத்தை—எங்களுக்கு காந்தி செய்துள்ளார்.

காந்தி மனதார ஏமாற்றி, சாதியைக் காப்பாற்றப் பலமான சட்டம் செய்துகொண்டு, பார்ப்பானுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, நம்மை என்றும் அடிமையாக இருக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டார்.

நம்மவனோ—நான் நாயக்கனாயிற்றே, நான் கவுண்டனாயிற்றே என்று நினைத்துக் கொண்டு—சூத்திரன் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறானே தவிர, வேறு என்ன? தெரியாமல் தொட்டால் நெருப்பு சுடாமல்விடுமா? தெரியாததுபோலவே இருந்து விட்டால் சூத்திரப் பட்டம் இல்லாதுபோய்விடுமா?

இந்தியா பூராவிலும் அகில இந்திய காங்கிரஸ் 70 வருடமாக இருக்கிறது; இந்த காங்கிரஸ் வந்தபின் நமக்கு ஏற்பட்ட லாபமென்ன? பார்ப்பானுக்கு ஏற்பட்ட லாப மென்ன? என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டாமா?

காங்கிரஸ் வந்த 50 வருடத்தில் பார்ப்பான் 100-க்கு 100 பேர் படித்தவன்; பார்ப் பாத்தியும் படித்தவள் ஆகிவிட்டனர். 70 வருட காங்கிரஸ் அவர்களை அந்த அந்தஸ்தில் வைத்துவிட்டது. அதே காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்துத் தீர்மானங்களுக்குக் கைதூக்கிப் பலப்படுத்திய நம் கதி என்ன? 100-க்கு 18 பேர் படித்திருக்கிறார்கள். இந்தப் 18 பேரும் எப்படிப் படித்தவர்கள்? பார்ப்பனனைப்போலவா படித்தவர்கள்? அதில் 10 பேர் சும்மா கையெழுத்துப் போடத் தெரிந்தவர்கள்; அவ்வளவுதான். வெள்ளைக்காரன் போகிறபோது 12 பேர்தான் படித்தவர்கள்; சுதந்திரம் வந்த 10 ஆண்டு ஆகியும், அதுவும் காமராசர் வந்ததால் இன்று 100-க்கு 18 பேர் படித்தவர்கள். காமராசர் வராவிட்டால் இன்னும் குறைந்திருக்கும்.

இராசகோபாலாச்சாரியார் மதுரையில் பேசும்போது, ‘சிலர் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றதைத் தப்பாகப் புரிந்துகொண்டு, சாதியே ஒழியவேண்டுமென்கிறார்கள். காந்தி ஒருக்காலும் சாதி ஒழியவேண்டும் என்று சொல்லவில்லை; சாதி காப்பாற்றப்பட வேண்டுமென்றார்’ என்று பேசினார். சாதி ஒழியக்கூடாது என்று சொல்லத் தைரியம் வந்துவிட்டதே, என்ன சங்கதி?—என்று பார்த்தால் ஒவ்வொன்றாகத் தெரிகிறது. காந்தி வருணாசிரம தர்மத்தை (சாதியை)க் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னதை ஆதாரமாக வைத்துக்கொண்டு—அதன்படியே சாதியை அசைக்க முடியாதபடி சட்டம் செய்து விட்டார்கள். இது காந்தி மனதாரச் செய்த துரோகம். இந்தப் பித்தலாட்டம் உங்களுக்குத் தெரியாது.

டாக்டர் அம்பேத்கார் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். இதில் காந்தி செய்த பித்தலாட் டங்களை நல்லபடி எடுத்துப் போட்டுள்ளார். ‘தீண்டாமை ஒழிப்புக்குக் காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன?’ என்பது அந்தப் புத்தகம்.

தீண்டாமை ஒழிப்பிற்காக ‘அன்டச்சபிள்ஸ் லீக்’ (Untouchables League) என்ற அமைப்பு வைத்திருக்கிறார்கள்; நிறைய ஃபண்டும் கொடுத்திருக்கிறார்கள் அதற்கு. அத் தீண்டாமை ஒழிப்புச் சங்கத்திற்கு ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி மெம்பர்களில் ஒருவர் பேசும்போது, ‘சமபந்தி போஜனம் செய்யவேண்டும்; சாதி ஒழியவேண்டும்; அப்போதுதான் தீண்டாமை போகும்’ என்று பேசினார். அது மற்ற மெம்பர்களுக்குப் பிடிக்கவில்லை; அவர்கள் காந்தியிடம் புகார் சொன்னார்கள்.

அதன் பேரில் காந்தி ஒரு ‘ஸ்டேட்மெண்ட்’ கொடுத்திருக்கிறார். என்ன ஸ்டேட் மெண்ட்? ‘தீண்டாமை ஒழிப்பிற்கும் சாதிக்கும் சம்பந்தம் இல்லை; சமபந்தி போஜனம் செய்யவேண்டுமென்பது வேறு—தீண்டாமை ஒழியவேண்டுமென்பது வேறு’ என்று ஒரு ஸ்டேட்மெண்ட் காந்தி கொடுத்தார். இதைத் தெரிந்ததும் அந்தக் கமிட்டி மெம்பர் ராஜினாமா கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பிறகு ‘யங் இந்தியா’ என்ற பத்திரிகையில் காந்தி, ‘சாதிமுறை என்பது நல்ல அமைப்பு; அது இருக்கவேண்டும்; அதாவது வருணாசிரம தர்மம் பாதுகாக்கப்படவேண்டும்’ என்று எழுதிவந்தார்.

நான் காங்கிரசில் இருந்தபோதே சமுதாயத் துறையில் சமத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்று நிறையப் பேசியிருக்கிறேன்.

அப்போது காந்தி, 'தீண்டப்படாதவர்களைக் கிணற்றில் தண்ணீர் எடுக்க விடா விட்டால் வேறு தனிக் கிணறு கட்டிக் கொடு. கோவிலுக்குள் விடாவிட்டால் வேறு தனிக் கோவில் கட்டிக் கொடு' என்றார்; பணமும் அனுப்புகிறேன் என்றார். அப்போது நாங்கள் தான் அந்த ஏற்பாட்டை எதிர்த்தோம். 'கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாதென்று இழிவு படுத்தும் இழிவுக்குப் பரிகாரமில்லாவிட்டால்—அவன் தண்ணீரில்லாமலே சாகட்டும்' என்றேன். 'அவனுக்கு இழிவு நீங்க வேண்டும் என்பது முக்கியமே தவிர, தண்ணீரல்ல' என்றேன். கோயில் பிரவேசம் வேண்டுமென்று கூப்பாடுபோட்டோம். என் கூக்குரலுக்குக் கொஞ்சம் மரியாதை உண்டு என்பது இராஜாஜிக்குத் தெரியும். கோயில்களுக்குள் தீண்டப் படாதவர்கள் என்பவர்களை அழைத்துக் கொண்டு நுழைந்தோம்.

கேரளத்தில் பெரிய ரகளையாகிக் கொலையும் நடந்துவிட்டது, இராஜாஜி, காந்தி யிடம், 'ராமசாமி பேச்சுக்கு மரியாதை உண்டு; ரகளை ஆகும். ஆதலால் கோவிலில் நுழைய விட்டுவிடவேண்டியதுதான்' என்றார். அதற்குப் பிறகும், 'சூத்திரன் போகின்ற அளவுக்குப் பஞ்சமன் போகலாம்' என்றார்கள்.

நான், 'சூத்திரனும் பஞ்சமனும் ஒன்றாகி, நாங்கள் இன்னும் கொஞ்சம் மட்ட மானோமே தவிர, பார்ப்பான் அப்படியேதானே இருக்கிறான். சாதி ஒழிய வேண்டுமா, வேண்டாமா?' என்றேன்.

அப்போதிருந்தே காந்தி, சாதி காப்பாற்றப்பட வேண்டும் என்ற முயற்சியில் பார்ப்பனருக்கு உடந்தையாகவே இருந்து பல மோசடிகள் செய்து, நம்மை ஏமாற்றி விட்டார். காந்திக்கு இருந்த செல்வாக்கு, நம்மைப் பார்ப்பானுக்கு அடிமையாக்கவும்—பார்ப்பான் பார்ப்பனனாகவே இருக்கவுந்தான் பயன்பட்டது. இன்னும் சாதி ஒழிப்புக்கு விரோதமாக—'காந்தி சொன்னது; காந்தி மகான் காட்டிய வழி' என்று கூறிச் சட்டத்திலும் பாதுகாப்புச் செய்துகொண்டார்கள்.

காந்தி செய்த மோசடி மக்களுக்குத் தெரியவேண்டும். அதனால்தான், 'காந்தியின் படத்தை எரிப்போம்; எங்கள் நாட்டில் காந்தி சிலையிருப்பது கூடாது—அகற்ற வேண்டும்' என்று சொல்லுகிறோம். காந்தியின் பெயரைச் சொல்லித்தானே பிழைக்கிறோம்; காந்திக்கு மரியாதை கெட்டுவிடும் போலிருக்கிறதே என்று நினைத்து அரசாங்கத்திற்கு—சாதியை ஒழிக்க உணர்ச்சி வரலாம். 'ஆகா! காந்தி படத்தை எரித்தால் இரத்தக் களறி ஆகும்!' என்கிறார்கள். ஆகட்டுமே—என்ன நஷ்டம்?

பொறுப்புள்ளவர்கள் பதில் சொல்லவில்லை. மந்திரிகள் சொன்னார்கள் என்றால்—'காந்தி படத்தை எரிப்பது தவறு என்று சொல்லவில்லை. எரித்தால் மக்கள் மனம் புண் படும்; மக்கள் மனம் புண் படாமலிருக்க நடவடிக்கை எடுப்போம்' என்றார்களே தவிர, காந்தி படம் எரித்தால் தவறு என்று கூறவில்லை. காந்தி பேரில், அவர் இன்னின்ன தவறு செய்தார் என்று நான் கூறுகிறேனே; எரிக்கக் கூடாது என்பவர்கள் அவர் தவறு செய்ய வில்லை என்று சொல்லவேண்டாமா? வேறு என்ன செய்தால் சாதி ஒழியும் என்றாவது சொல்லட்டுமே! இல்லை, சாதி ஒழியக்கூடாது என்றாவது சொல்லட்டுமே!

காந்திதான் வருணாசிரம தர்மம் காப்பாற்றப்படவேண்டும் என்றார். 1927-லேயே 'காந்தி, மகாத்மா பட்டத்தைக் காப்பாற்றிக்கொள்ள பார்ப்பன அடிமையாகிவிட்டார்' என்று எழுதினேன். அது முதலே தோழர் காந்தி என்றுதான் நான் போடுவேன்; மகாத்மா என்று போடுவதில்லை. பிறகு காந்தியார் என்று போட்டோமே தவிர—மகாத்மா என்று போடவில்லை. காந்தி சமுதாயத் துறையில் பெரிய கேடு செய்து விட்டார்.

அவர் செய்த அடுத்த துரோகம், நம்மை வடநாட்டானுக்கு அடிமையாக்கிவிட்டுப் போனது. சுயராஜ்யம் பேசி, வெள்ளைக்காரன் வெளியே போனதும் நம்மை வடநாட்டுக்கு அடிமைகளாக்கிவிட்டார்.

பெயர் தமிழ்நாடு; தமிழ்நாடு என்பது போலவே ஒவ்வொரு நாடும் தனி; எல்லாம் சேர்ந்து ஒரு யூனியன்—கூட்டாட்சி என்று சொல்லிப் பிரிக்கவே முடியாது என்று எழுதி வைத்து விட்டான்.

வடநாட்டான் காங்கிரசுக்கு நிறையப் பணம் கொடுத்தான்; எங்களுக்கெல்லாம் தெரியும். நாங்கள் தேசாபிமானத்தால் அவன் கொடுக்கிறான் என்று நினைத்தோம். நம்மை வடநாட்டுக்கு விற்கும் விலை என்று தெரியாது. மாகாண அரசுக்கு எந்த உரிமையுமில்லை.

[தர்மபுரியில், 19-9-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-10-1957]

8. சாதி ஒழிப்புப் போர்

1. அரசியல் சட்ட எரிப்பு ஏன்?

தோழர்களே!

'பிராமணன் என்று ஒரு சாதி சட்டத்தில் இருக்க அனுமதிக்க மாட்டோம். அப்படி இருந்தாலும், அவன் பிராமணனாக வாழ அனுமதிக்க மாட்டோம்' என்று அரசாங்கம் சொல்லட்டும்.

இந்த மாதம் 26-ந் தேதிக்குள், 'பிராமணன் என்ற ஒரு சாதி கிடையாது. சட்டத்தில் அந்த மாதிரிக் கருதமாட்டோம்' என்று அறிக்கை வராவிட்டால் அரசாங்கச் சட்டப் புத்தகத்தை நாங்கள் கொளுத்தப் போகிறோம். இதை நாங்கள் வருத்தத்துடனேயே சொல்கிறோம்; வெறும் குறும்புக்காகவோ, விளம்பரத்திற்காகவோ, ஜெயிலுக்குப் போய் வந்ததைக் காட்டி ஓட்டு வேட்டையாடவோ நாங்கள் அந்தக் காரியம் செய்யவில்லை.

எனக்கு 79 வயதாகிவிட்டது; நம் மக்களுக்கு ஏதாவது காரியம் செய்துவிட்டு நான் சாகவேண்டும். இல்லையென்றால், நம் மக்களுக்கு உணர்ச்சியூட்டிவிட்டுச் சாகவேண்டும்.

இன்றைய தினம் எல்லாப் பார்ப்பனப் பத்திரிகைகளும் கட்டுப்பாடாக—நான் பார்ப்பனரை வெட்டச் சொன்னேன், குத்தச் சொன்னேன் என்று கூப்பாடு போடுகின்றன! எந்தப் பார்ப்பானிடம் எனக்கு விரோதம்? யார்மீது துவேஷம்? நேற்று எனக்கு நடைபெற்ற விழாவுக்குப் பார்ப்பனர் பணம் கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் கொடுத்த 'செக்' என்னிடம் இருக்கிறது; ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், எனக்குத் தனிப்பட்ட முறையில் யார்மீதும் துவேஷம் இல்லை என்பதைக் காட்டவே!

நான் ஏன் ஒரு கூட்டமே ஒழிய வேண்டுமென்று சொல்லுகிறேன்? நம் சமுதாயத் திற்கே களை மாதிரி இருந்துகொண்டு வளரவொட்டாமல் செய்கிறது—அந்தக் கூட்டம். வெட்டுகிறேன் என்று சொன்னேன், குத்துகிறேன் என்று சொன்னேன் என்று பூச்சாண்டி காட்டுகின்றனர். அப்படிச் சொல்லுவதன் மூலம் அந்த நாளையே அவர்கள் விரைவுபடுத்து கின்றனர்.

'காந்தியார் படத்தை எரித்தால் தலைகள் உருளும்; இரத்த ஆறு ஓடும்; அதற்கு 20,000 பேர் தயார்' என்று சொன்னார்களே, அவர்களை நீ என்ன செய்தாய்? நான் சொல்லுகிறேன்—'சாதி ஒழியாவிட்டால் இரத்த ஆறு ஓடும்' என்று. 'சாதி இருக்கத்தான் வேண்டும்' என்று நீ சொல்லேன்!

இந்த மாதிரிக் கூப்பாடு போட்டால் அரசாங்கம் பிடித்து எங்களை ஜெயிலில் போடும்; நாங்கள் பயந்துகொள்வோம் என்பது பார்ப்பனர்கள் நினைப்பு. இது யாரிடம் பலிக்கும்? நான்தான் உயிரைவிடத் தயாராயிருக்கிறேனே! என்னுடைய தொண்டர்களும் தயாரா யிருக்கிறார்களே!

வேண்டுமானால், இந்தப் பார்ப்பன சமுதாயத்திற்கு நான் வாய்தா கொடுக்கிறேன்; தன்னை அது மாற்றிக் கொள்ளட்டும்!

இன்றைய தினம் அரசாங்கத்திற்கு வாய்தா கொடுத்திருக்கிறேனே! சாதி ஒழிப்புக்குப் பரிகாரம் கிடைக்காவிட்டால் அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம். அதிலும் முடியாவிட்டால் காந்தியார் சிலையை உடைக்கப் போகிறோம். வேண்டுமானால் என்னை ஜெயிலில் போடட்டும்; வெளியே இருந்துகொண்டு கொடுமையைச் சகித்துக்கொண்டிருக்க எங்களால் முடியாது.

இதற்கு முன்பே–1950-லேயே நான் சொன்னேன், 'இது மனுதர்ம சாஸ்திரத்தின் மறுபதிப்பு; ஆகவே, இதைக் கொளுத்தவேண்டும்' என்று!

இந்தச் சட்டம் எழுதியவர்கள் ஆறு பேர்கள். அதில் நாலு பேர் பார்ப்பனர்கள். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், முன்ஷி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி அய்யங்கார் ஆகிய பார்ப்பனர்கள் எழுதினார்கள். மற்றவர்கள் இரண்டு பேரில் ஒருவர் அம்பேத்கார், மற்றவர் ஒரு சாயபு.

அம்பேத்காரர் கொஞ்சம் நம் உணர்ச்சியுள்ளவர். அவர் என்னைக் கேட்டார், 'உன்னுடைய மக்களுக்கு என்ன செய்யவேண்டும்?' என்று. நிறைய விவரங்களையெல்லாம் அவரிடம் கொடுத்தேன்; அதையெல்லாம் அவர் பேச ஆரம்பித்தார். உடனே பார்ப்பனர்கள் அவருக்கு விலை கொடுத்துவிட்டார்கள். அது என்ன விலையென்றால், அவர் தன்னுடைய மக்களுக்கு 100-க்கு 10 இடம் கல்வி வசதியில், உத்தியோக வசதியில் கேட்டார். அவன், '15–ஆகவே எடுத்துக்கொள்' என்று சொல்லிவிட்டான்! அவனுக்குத் தெரியும், 25 இடம் கொடுத்தால்கூட அவர்களில் மூன்று அல்லது நான்கு பேர்கூட வரமாட்டார்கள் என்பது. பார்ப்பான் எழுதிக்கொடுத்த சட்டத்தில் அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டார். மற்றவர்களுடைய சங்கதியைப்பற்றி அவர் சிந்திக்கவில்லை.

ஒரு சட்டம் எல்லோருக்கும் சமம், சமவாய்ப்பு என்று சொல்லிக்கொண்டு—பார்ப்பன ருடைய உயர்வைக் காப்பாற்றி—அவர்களுடைய ஏகபோக அனுபவத்திற்குக் கல்வியையும், உத்தியோகத்தையும் தருகிறதென்றால், அது எந்த வகையில் நீதியான, நேர்மையான சட்டம்?

இத்தகைய மோசடிச் சட்டம் ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும். அந்த முயற்சியாக, 26-ஆம் தேதியன்று இந்தச் சட்டத்தைத் தீயிலிட்டுப் பொசுக்கப் போகிறோம்.

[சுவாமிமலையில், 4-11-1957-ல் சொற்பொழிவு–'விடுதலை' 11-11-1957

தோழர்களே!

சட்டத்தைக் கொளுத்துவதென்பது சாதிப் பிரச்சினையை மட்டும் வைத்துத்தான் என்பதல்ல; உத்தியோகம், மற்றும் மத்திய அரசாங்கம் எந்தத் தகுதியும் நியாயமு மில்லாமல் அரசியல் சட்டத்தின் பெயரால் நடத்தும் கொடுமையான அநீதிகள், அத்தனையும் வைத்தே அதைக் கொளுத்தவேண்டும் என்கிறோம்.

மத்திய சர்க்கார் பெயரால்—அரசியல் சட்டத்தின் பெயரைச் சொல்லி எவ்வளவு கொள்ளைகள்? தபால், சுங்கம் முதலியன வருமானமுள்ள சங்கதிகள் பூராவும் அங்கு! இந்த ஆதிக்கத்திற்கு அரசியல் சட்டம்தானே இடம் தருகிறது? நீங்கள் சரியாகப் படித்துப் பார்த்தால் ஏன் கொளுத்த வேண்டுமென்பது விளங்கும்.

நாம் எவ்வளவு கீழ்மக்களாக ஆக்கப்பட்டிருந்தாலும் அதுபற்றி யாருக்கும் கவலை இல்லை; எதிர்த்துப் பேசி மத்திய சர்க்காரின் கொடுமைகளைக் கூறவும் ஆளில்லை. கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் எவராக இருந்தாலும் அரசியல் சட்டத்தைப்பற்றிப் பேசவே கூடாது என்பார்கள். எல்லோரும் இந்தக் கொடுமையான சட்டத்தை ஒப்புக்கொண்டு அதன்படி சட்டசபையில் போய் உட்காருகிறவர்கள். நாம்தாம் இதைச் செய்யமுடியும்.

ஆகவே, காலணாவுக்கு அரசியல் சட்டத்தின் சுருக்கத் தொகுப்பு கிடைக்கும். அதை வாங்கி வைத்து, நெருப்புக் குச்சியைக் கிழித்து வைத்துக் கொளுத்தவேண்டும். தண்டனை 3 வருடமோ, 6 வருடமோ—நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இது கடமை, செய்யவேண்டியது அவ்வளவுதான்! தாய்மார்களும் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும். ஜோடி ஜோடியாகக் கொளுத்துங்கள்; அங்கேயே போய்க் குடும்பம் நடத்தினால் போகிறது? 26-ந்தேதி வரை வெளியில் இருந்தால் என் பங்குக்கு நானும் கொளுத்துவேன்.

ஆனால், போராட்டத்தில் கலந்துகொள்பவர்கள் போலீஸ்காரர்களிடமோ அதிகாரிகளிடமோ முரண்பட்டு நடந்துகொள்ளாமல் காரியம் செய்யவேண்டும்; கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நமக்குப் பெருமை.

குத்துவதாக இருந்தால்கூட எப்படிக் குத்துவோம்—எங்கு குத்துவோம் என்று சொல்லிவிட்டுத்தான் செய்வோமே தவிர, திடீரெனச் செய்துவிட மாட்டோம்.

ஆகவே, கலவரமில்லாமல் இராமன் படம் எரித்த மாதிரி, அவ்வளவு கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டும்.

ஆண் பெண் எல்லோரும் கொளுத்த வேண்டும். போலீஸ்காரர்கள் முன்கூட்டியே மிரட்டுவார்கள்; நடக்காமல் செய்யத் தந்திரம் செய்வார்கள். ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். தப்பித்துக்கொள்வோம் என்று எதிர்பார்த்து எதையும் செய்யக் கூடாது. வீட்டிலிருந்து கொளுத்தினாலும் போதும். கொளுத்திக் கையில் பிடித்துக் கொண்டு போலீஸின் எதிரில் நில்லுங்கள். 'கைது செய்கிறேன்' என்றதும்—பேசாமல் போலீஸ் பின்னால் போய்விடுங்கள். முன்கூட்டியே கைது செய்தாலும் செய்வார்கள்; கூப்பிட்டால் போய்விடுங்கள். அரசியல் சட்டம் கொளுத்தும் காரியத்திற்கு இத்தனை பேர் கைதாகி இருக்கிறார்கள் என்ற கணக்குப் போதும். மூன்று வருடம் போடட்டும்; குடும்பத்தோடு சிறையில் இருக்கலாம்.

'சட்டத்தைக் கொளுத்தவேண்டாம்' என்பவர்கள் இன்னவழி, இன்ன பரிகாரம் என்று சொல்லட்டுமே—கேட்டுக்கொள்கிறேன்! 'இதற்குப் பரிகாரம் சொன்னால்—மரியாதை குறைந்துவிடும்; சட்டம் செய்கிறோம்; செக்ஷன் இருக்கிறது' என்று கருதி அடக்கப் பார்க்கிறார்களே தவிர, எங்களுக்கும் உரிமை இருக்கிறது என்பதைக்கூட யோசிப்பதில்லை. நான் ஏன் தாழ்ந்த சாதி என்று கேட்க உரிமையில்லை என்றால்—இது என்ன சுயராஜ்யம்?

இந்த உணர்ச்சியை—உரிமையை மதிக்க வேண்டும் என்ற எண்ணமே வரவில்லையே? நாங்களும் மனிதர்கள்—இந்த நாட்டு மக்கள்—எங்களுக்கும் உரிமை உண்டு என்பதைக்கூடக் கருதாமல் அடக்குமுறைதான் பதில் என்றால், என்ன நியாயம்? உள்ளபடியே ஆத்திரப்பட்டே கேட்கிறோம்—நாங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு, விளம்பரத்திற்காகவா இந்தக் காரியம் செய்கிறோம்? இல்லை—தொல்லை கொடுப்பதற்காக ரகளை செய்கிறோமா? ஆட்சியிலிருப்பவர்களுக்குக் கஷ்டம் தரக்கூடாது என்பதுதானே எங்கள் கவலை!

[எழும்பூரில், 10-11-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 13-11-1957]

நாங்கள் அரசியல் சட்டம் முதலியன கொளுத்துவது பற்றிச் சென்னை அரசாங்கம் செய்திருக்கும் புதிய சட்டம் விஷயமாய்ப் பொது மக்கள் சிறிதும் கவலைப்பட வேண்டிய தில்லை. மற்றும், என்மீது கடுந்தண்டனைக்கு ஏற்ற வழக்குத் தொடர்ந்திருப்பது பற்றியும் பொதுமக்கள் கவலைப்படவேண்டியதில்லை.

இவைகளெல்லாம் பார்ப்பனர்களால் எய்யப்படும் அம்புகளே தவிர, சென்னை அரசாங்க மந்திரிகளாகிய அம்புகளுக்குச் சிறிதும் சம்பந்தப்படாததேயாகும். அன்றியும், பார்ப்பான் வெளியேற்றப்படவேண்டும் என்பதற்கும், வடநாட்டான் ஆதிக்க ஆட்சியிலிருந்து (இந்திய யூனியனிலிருந்து) பிரிந்து முழு சுதந்திரத் தமிழ்நாடு ஆட்சிபெற்று ஆக வேண்டும் என்பதற்கும் இவை (பார்ப்பனர் நடத்தைகளும், அவர்களுக்கு வடநாட்டான் ஆதரவுகளும்) சரியான காரணங்களாகும். அற்காகத் துரிதமாகவும், தீவிரமாகவும் கிளர்ச்சி செய்யவும், இது வலிமைமிக்க மக்களின் தூண்டலாகும்.

சென்னை அரசாங்க மந்திரிகள் நம் மக்களின் கல்வி சம்பந்தமாக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் நாம் பாராட்டத்தக்கதும், நன்றி செலுத்தத் தக்கதுமாகும்–இம் முயற்சி பார்ப்பனர்களுக்குப் பெரும் கேடானதால், இந்தப் பார்ப்பனர்கள் என்மீது கொண்டிருக்கிற ஆத்திரத்தையும் பழிவாங்கும் எண்ணத்தையும்விட, இன்றைய மந்திரி சபை மீது கொண்டுள்ள ஆத்திரமும், பழிவாங்கும் எண்ணமும்தான் பேயாட்டமாக ஆடி, இப்படிப் பட்ட கொலைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், பொது மக்கள் இச் சம்பவங்களுக்காக இன்றைய மந்திரி சபையிடமோ, குறிப்பாக—திரு. காமராசரிடமோ எந்தவிதமாக அதிருப்தியும் காட்டவோ, கொள்ளவோ வேண்டியதில்லை.

புதிய சட்டம் செய்ததன் பயனாகவும், என்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதன் பயனாகவும், எனக்கு என்ன சம்பவிக்கும் என்பதைவிட—மந்திரிகள்மீது பொதுமக்களுக்கு ஆத்திரமும் துவேஷமும் ஏற்பட வேண்டுமென்ற கருத்துதான் பார்ப்பனர்களுக்கு முக்கியமானது.

ஆதலால், அக் கருத்து வெற்றியடையும்படியாக நடந்து கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். புதிய சட்டத்துக்குப் பொதுமக்கள் காண வேண்டிய எதிர்ப்பு என்னவென்றால், பதினாயிரக்கணக்கான மக்கள் அரசியல் சட்டத்தைக்கொளுத்தி, அத்தாட்சி காட்டுவதுதான்!

இதுவரையில் திராவிடர் கழகத் தோழர்களுக்கு இம் மாதிரியான நல்ல வாய்ப்புக் கிடைக்கவேயில்லை; இனியும் கிடைக்குமா என்பதும் சந்தேகந்தான்.

ஆகவே, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் இதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

['விடுதலை'–அறிக்கை—16-11-1957]

சட்டக்குழு உறுப்பினர்கள் :

1. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் (பார்ப்பனர்)
2. டி. டி. கிருஷ்ணமாச்சாரி (பார்ப்பனர்)
3. என். கோபால்சாமி அய்யங்கார் (பார்ப்பனர்)
4. கே. எம். முன்ஷி (வடநாட்டுப் பார்ப்பனர்)
5. டாக்டர் B. R. அம்பேத்கார் (ஆதித் திராவிடர்)
6. முகமது சாதுல்லா (முஸ்லிம்)

1. 1077 நாள் செலவு செய்து உருவாக்கிய இந்தச் சட்டத்தில் வெகு ஜாக்கிரதையாக பார்ப்பனர் (ஆரிய பிராமணர்) உயர்வும், பார்ப்பனரல்லாத மக்கள் (திராவிடர்–'சூத்திரர்')

இழிவும் சாஸ்திரப் படிக்குக் கொண்ட இந்துமதத்தைக் காப்பது, மத உரிமை அளிப்பது என்கிற தன்மையில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் தகுந்தபடி பாதுகாப்புச் செய்து கொண்டார்கள்.

2. மேலும், 'சூத்திரர்' என்று கூறப்படுகின்ற மக்களின் பிரதிநிதிகள் அறவே இல்லாமல், 6 பேர்களில் 4 பேர் பார்ப்பனர்களாகவே கொண்டு—மற்றும் இரு இனத்தின் பிரதிநிதிகளுக்கும்கூட விலை கொடுத்து விட்டுச் செய்துகொண்டதுதான் இந்திய அரசியல் சட்டம் என்ற இந்த அரசியலமைப்பாகும்.

3. இந்த நாட்டு வாக்காளர்களின் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்டல்ல, இத்தச் சட்டம் செய்யப்பட்டது. எவ்வாறெனில், 1946-ல் நடைபெற்ற தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டசபை அங்கத்தினர்களால் ஓட் செய்யப்பெற்று, அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரிட்டிஷார் அளித்த இந்திய சுதந்திரச் சட்டமே (Indian Independence Act) 1947-ல் தான் நமக்குக் கிடைத்தது! நாடு இரண்டாகப் பிரிந்த பிற்பாடு எஞ்சியிருந்த உறுப்பினர்களால், மாகாணங்களிலிருந்து 235 பேர்களும், சமஸ்தானங்களிலிருந்து 72 பேர்களுமாக—மொத்தம் 307 பேர்கள்தான் அப்போது இருந்தார்கள். அப்போது ஓட்டு உரிமை பெற்றிருந்த வாக்காளர் எண்ணிக்கை இன்றைய வாக்காளர்களின் எண்ணிக்கையில் பன்னிரண்டு சத விகிதத்தினரேயாவர். எனவே, இது எப்படி மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டதாகும்? நாடு 'சுதந்திர' மடையாத காலத்தில் நடந்த எலக்ஷன் பிரதிநிதிகளால்—காங்கிரஸ் பார்ப்பனப் பிரதிநிதி களால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் நம்மை—அதாவது பார்ப்பன ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற நம்மை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

4. மற்றும், மொழி சம்பந்தமாகவும், வரி சம்பந்தமாகவும் பொருளாதார உரிமை சம்பந்தமாகவும், வெளி நாட்டார் சுரண்டுதல் சம்பந்தமாகவும் அதிகாரங்களைத் தங்களுக்கே வைத்துக்கொண்டு—எந்த வகையிலும் மாற்ற முடியாத அளவுக்கு இரும்புக் கூட்டுப் பாதுகாப்பை இந்தச் சட்டத்தின் மூலம் பார்ப்பனர்களும் வடநாட்டார்களும் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். அதிலிருந்து விடுபட ஆசைப்படுகிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் 'அரசியல் சட்ட எரிப்பு' என்பதாகும்.

இந்திய அரசியலமைப்புப் பீடிகை :

இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்பூரண அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து அதன் குடிகள் அனைவருக்கும் —

சமூகம், பொருளாதாரம், ராஜீயம்—இவற்றில் நீதியும் ;

எண்ணம், வெளியீடு கோட்பாடு, மதம், வழிபாடு—இவற்றில் சுதந்திரமும் ;

அந்தஸ்து, வாய்ப்பு—இவற்றில் சமத்துவமும் கிடைக்குமாறு செய்யவும் தனியொரு வரின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் மனப் பூர்வமாகச் சங்கற்பம் செய்துகொண்டமையால், நமது அரசியல் நிர்ணய சபையிலே 1949-ஆம் வருஷம் நவம்பர் மாதம் இருபத்தாறாம் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

அடிப்படை உரிமைகள் :

13. (2) இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் அல்லது சுருக்கும் சட்டம் எதையும் ஒரு இராஜ்யம் இயற்றலாகாது. இப் பகுதியை மீறி இயற்றப்படும் சட்டம் எதுவும் அப்படி மீறிய அளவிற்குப் பயனற்றதாகும்.

மத சுதந்திர உரிமை :

25. (1) அமைதி, நல்லொழுக்கம், ஆரோக்கியம், இவற்றிற்கும்—இந்தப் பாகத்தி லுள்ள மற்றைய ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, மக்கள் அனைவரும், மனச் சாட்சி சுதந்திரத் திற்கும் தடையின்றி எம் மதத்தையும் தழுவுதல், அனுஷ்டித்தல், பரவச் செய்தல் இவை பற்றிய உரிமைக்கும் சமமான பாத்தியதை உடையவராவார்.

பண்பாடு, கல்வி இவைபற்றிய உரிமைகள் :

29. (1) தனிப்பட்ட மொழி, லிபி, அல்லது பண்பாடு இவற்றை ஏற்கனவே உடைய வராய், இந்தியாவின் ஆட்சிப் பரப்பின் அல்லது அதன் ஒரு பாகத்தில் வசிக்கும் குடிகளின் எப் பிரிவினரும் அவற்றைச் சிதையாமல் காக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(2) மதம், இனம், சாதி, மொழி, இவை காரணமாக அல்லது இவற்றுள் எவையேனும் காரணமாக இராஜ்யத்தினால் பராமரிக்கப்பட்ட அல்லது இராஜ்ய நிதிகளிலிருந்து உதவி பெறுகின்ற எந்தக் கல்வி ஸ்தாபனங்களிலும் சேருவதற்கு எக் குடியும் மறுக்கப்படலாகாது.

அரசியலமைப்பின் திருத்தம் :

368. இந்த அரசியலமைப்பின் திருத்தம் அதற்கென பார்லிமெண்ட் சபை ஒன்றில் ஒரு மசோதாவைக் கொண்டுவருவதால் மட்டுமே ஆரம்பிக்கப்படலாம். அச் சபை ஒவ் வொன்றிலும்—அம் மசோதா அச் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோ ராலும், வந்திருந்து ஒட்டுச் செய்யும் அச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையோராலும், நிறைவேற்றப்பட்டால், அது ராஷ்டிரபதி யிடம் அவர் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அம் மசோதாவிற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் இந்த அரசியலமைப்பு அம் மசோதாவின் ஷரத்துக்களின்படி திருத்தம் பெற்றதாகும்.

இவைபோன்றே இன்னும் பல அனுமதிகள் உள்ளன.

குறிப்பு: இந்த அரசியல் சட்டத்தை உருவாக்கின ஆறுபேர்களில் நான்கு பேர் பார்ப்பனர்; இதை நிறைவேற்றிய அரசியல் நிர்ணய சபை என்பது வயது வந்தோரின் வாக்குரிமை பெறாதவர்களை—பெரும்பாலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களையே கொண்டதாகும்.

இந்தச் சட்டத்தில் இந்துமதத்துக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; இந்து மதத்தில் சாதிக்குப் பாதுகாப்பு இருக்கிறது; சாதியைக் காப்பாற்றத்தான் இடமிருக்கிறது. இதை எளிதில் திருத்தியமைப்பதற்கும் சாதி ஒழிப்புக்காரருக்கு வசதியில்லை; வாய்ப்பும் இல்லை. (368-வது பிரிவைப் படியுங்கள்.)

ஆதலால், சாதியை ஒழிக்க விரும்புகிறவர்கள், தனித் திராவிட நாடு பெற விரும்புகிறவர்கள், தமிழ்நாடு சுரண்டப்படுவதைத் தடுக்க விரும்புபவர்கள்—என்ன செய்வது?

இதை எரிப்பதன் மூலம் நம் எதிர்ப்பைக் காட்டிக்கொள்வதைத் தவிர, வேறு வழி என்ன?

['விடுதலை'—அறிக்கை—17-11-1957]

26-ந்தேதி கிளர்ச்சியில் நீதிமன்றத்தில் கூறவேண்டியது :

நான் சாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் சாதிக்கும், அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப் படவுமில்லை; அச் சட்டத்தைத் திருத்தக்கூடிய வசதி தமிழர் களுக்கு இல்லை.

ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளும் அறிகுறியாக இச் சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படிக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமை உண்டு. இதனால் எந்த உயிருக்கும், எந்தப் பொருளுக்கும் சேதமில்லை. ஆதலால், நான் குற்றவாளி அல்ல. இந்த நீதிமன்ற நடவடிக்கையில் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால், அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

[' விடுதலை '—அறிக்கை—21-11-1957]

2. சட்டத்தைக் கொளுத்துங்கள்

நான்—மூன்று ஆண்டுக்கோ, பத்து ஆண்டுக்கோ, நாடு கடத்தலுக்கோ, தூக்குத் தண்டனைக்கோ, ஆளாக்கப்பட்டாலும் ;

மற்றும், பிரிட்டிஷ்காரன் காங்கிரஸ் கிளர்ச்சியின்மீது கையாண்ட எந்த விதமான கொடிய, தீவிரமான அடக்கு முறைகளை நம்மீதும், கழகத்தின் மீதும் பிரயோகித்தாலுங் கூட, அவைகளுக்குப் பயப்பட்டு என் இலட்சியத்தையோ, திட்டத்தையோ, மாற்றிக் கொள்ளப்போவதில்லை.

கழகத் தோழர்களே ! தீவிர இலட்சியவாதிகளே !

நீங்கள் மூன்று ஆண்டு தண்டனைக்குப் பயந்துவிட வேண்டியதில்லை ; பயந்துவிட மாட்டீர்கள் ! சட்டத்தைப் பார்த்துப் பயந்து விட்டதாகப் பெயர் வாங்காதீர்கள் !

ஆகவே, இஷ்டப்பட்டவர்கள் தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற—பெயர் கொடுங்கள் !

[' விடுதலை '—அறிக்கை—11-11-1957]

சட்டத்தைக் கொளுத்துங்கள் !

சாம்பலை மந்திரிக்கு அனுப்புங்கள் !

சட்டத்தை நிறைவேற்றிவிட்டதன் மூலம், அரசாங்கத்தினர் ' சாதியைக் காப்பாற்றித் தான் தீரவேண்டும் ' என நமக்குச் சவால்விட்டு இருக்கின்றனர். இந்தச் சவாலுக்கு, நீங்கள் சட்டம் கொளுத்தாவிட்டால் மனிதர்கள்தானா ?

சட்டம் கொளுத்திச் சாம்பலைச் சட்டம் செய்த மந்திரிக்கு அனுப்பிக்கொடுங்கள் !

சட்டம் கொளுத்தின மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதை அதன் மூலம் கொஞ்சமாவது தெரிந்துகொள்ளட்டும் !

[' விடுதலை '—அறிக்கை—15-11-1957]

சிறை செல்லுமுன் பெரியார் வேண்டுகோள்:

நவம்பர் 25-ந்தேதி நடக்கும் விசாரணையில் எனது ' முச்சலிக்கா பாண்டு ' கேன்சல் ஆகி என்னைச் சிறைப்படுத்தும்படியான நிலைமை பெரும்பாலும் ஏற்படலாம். இந்தச் சமயத்தில் பொதுமக்களுக்கு ஏதாவது சொல்லவேண்டியது அவசியமாகும்.

நான் சிறைப்படுத்தப்பட்டு விட்டேன் என்பதாலேயோ, அல்லது பொதுமக்கள் கொளுத்துவார்கள் என்கிற எண்ணத்தால் அதைத் தடுக்க அரசாங்கத்தார் ஏராளமான மக்களைக் கைதுசெய்து விட்டார்கள் என்ற எண்ணத்தாலேயோ, புதிய சட்டத்தின்படி நீண்டநாள் தண்டிக்கப்பட நேரிடும் என்ற அச்சத்தினாலேயோ—யாரும் அதாவது கொளுத்தவேண்டியது அவசியந்தான் என்று கருதுகிறவர்கள், எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், அரசியல் சட்டத்திலிருந்து பொறுக்கி எடுத்துப் போட்டிருக்கிற, நமக்குக் கேடான நாலைந்து பிரிவுகளைக்கொண்ட பிரசுரத் தொகுப்பைக் கொளுத்தியே தீர வேண்டியது முக்கியமான காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைவிட முக்கியமான காரியம் ஒன்றை வணக்கமான வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை அவசியம் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது.

என்னை, 'ரிமாண்டு' செய்வதனாலேயோ மற்றும் இப்பொழுது 'செஷன்சில்' நடைபெறும் வழக்கின் பெயரால் என்னை நீண்டநாள் அரசாங்கத்தார் தண்டனைக் குள்ளாக்கி விடுவதாலேயோ பொதுமக்கள் யாரும் ஆத்திரப்படுவதற்கோ, நிலை குலைந்து விடுவதற்கோ ஆளாகாமல் மிக்க மகிழ்ச்சியோடு அச் செய்தியை வரவேற்கவேண்டும். எந்தவிதமான கலவரமோ, பலாத்காரமோ—பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்த ஆண் களுக்கோ, பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ துன்பம், வேதனை உண்டாக்கக் கூடியதான எப்படிப்பட்ட பலாத்காரமான செய்கையையும்; நஷ்டம் உண்டாக்கக்கூடிய தான செய்கையையும்—அதாவது ஆயுதப் பிரயோகமோ, அடிதடியோ, நெருப்புக் கொளுத்துதலோ முதலிய ஒரு சிறு காரியம்கூட நடத்தாமலும், நடைபெறாமலும் இருக்கும் படியும் ஒவ்வொருவரும் நடந்துகொள்ளவேண்டும். நான் ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டும் என்றும், அக்கிரகாரங்கள் கொளுத்தப்பட வேண்டுமென்றும் சொன்னதும், சொல்லிவருவதும் உண்மை. ஆனால், அவை இப்பொழுது அல்ல. அதற்கான காலம் இன்னும் வரவில்லை—வரக்கூடாதென்றே ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட காரியங் களில் ஈடுபடுவதற்குக் காலம் எப்போதுவரும் என்றால், அரசியல் சட்டத்தைக் கொளுத்து வது முதலிய இன்னும் நான்கைந்து கட்டங்கள் நடத்தி, அவைகளில் ஒன்றும் பயனில்லை; வெற்றிக்கு அவை பயன்படவில்லை என்று கண்டு, பலாத்காரத்தைத் தவிர வேறு வகை யில்லை என்ற முடிவுக்கு வந்த பிறகுதான் நாம் அவற்றில் இறங்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால், இந்த என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை ஒவ்வொருவரும் கருத்தில் வைக்கவேண்டும்.

இப்பொழுது எனக்கு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் தண்டனையானது நம்முடைய அடுத்த திட்டங்களுக்கு வலுவான ஆதரவுகளையும், உணர்ச்சியையும், ஊக்கத்தையும்—துணிச்சலோடும் வேகத்தோடும் ஈடுபடுத்துவதற்கு வலுமையான சாதன மாக அமையும். பொதுமக்கள்மீது எனக்குப் பலமான ஆதிக்கம் இருக்கிறது என்று அரசாங்கமும், இந்தியாவிலுள்ள மற்ற மக்களும் எண்ணியிருக்கிற ஒரு எண்ணத்திற்குப் பாதகம் ஏற்படாமல் பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றால்—நான் மேலே வேண்டியிருக்கிறபடி எந்தவிதமான தண்டனைக்குப் (ஏற்பட்டால்) பிறகு பொதுமக்க ளிடையில் மேற்சொன்னபடி—எந்தவிதமான கலவரமும், செய்கையும் ஏற்படாமல் இருக்க வேண்டிக்கொள்கிறேன். அதிகாரிகளிடத்தில், போலீஸ்காரர்களிடத்தில் மரியாதையாகவும், கட்டுப்பாடாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—25-11-1957]

3. நேருவின் முட்டாள்தனம்

'இந்த அரசியல் சட்டம் பிடிக்க வில்லையானால் நாட்டைவிட்டு வெளியேறிவிடு'— பண்டிதநேரு.

இன்றைய ஆட்சி முட்டாள்தனமான, காட்டுமிராண்டி ஆட்சி என்றும், இது பார்ப்பன ஆட்சி என்றும், இது சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியென்றும், இது திராவிட மக்களை ஆரியர் (பார்ப்பனனும், வடநாட்டானும்) அடிமை கொண்ட ஆட்சியென்றும், இந்த வடநாட்டாராலும் பார்ப்பனராலும் அவர்களது நலனுக்கும் உயர்வுக்கும் ஆகவே செய்யப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மனுதர்ம சட்டத்தின் மறுபதிப்பே என்றும்—1949-லேயே நான் சொன்ன கருத்துக்கு இது எடுத்துக்காட்டாக இல்லையா என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தவிரவும், 'இந்த அரசியல் கொடி உனக்குப் பிடிக்கவில்லையானால் நாட்டை விட்டு வெளியேறிவிடு' என்றும் பேசியிருக்கிறார். யார் என்றால்—பண்டித ஜவகர்லால் நேரு!

அவர் என்ன சாதி என்றால், பார்ப்பன புரோகித சாதி; எந்த நிலையில் என்றால், இந்தியா முதல் மந்திரி (ஆட்சித் தலைவர்) என்ற நிலையில்.

'தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்து மனிதனையே கடிக்க வந்து விட்டது' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கேற்ப, இந்தப் பார்ப்பனர்கள் சாதி காரணமாகத் தாங்கள் சம்பாதித்துக் கொண்ட உயர் பதவிகளையும் ஆதிக்கங்களையும் ஆதரவாகக் கொண்டு சட்டம் செய்து கொண்டு, 'இந்தச் சட்டம் பிடிக்க வில்லையானால்—அதாவது, சாதி முறைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தச் சட்டம் உனக்குப் பிடிக்க வில்லையானால்—இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டு, நீ சூத்திரனாய்–பார்ப்பானின் வைப்பாட்டி மகனாய் வாழ உனக்கு இஷ்டமில்லையானால் இந்தத் திராவிட நாட்டை, தமிழ் நாட்டை விட்டு வெளியேறி விடு; இல்லாவிட்டால் ஜெயிலில் வைப்பேன்; இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைப்பேன்' என்பதாகப் பேசியிருக்கிறார். (பார்ப்பன மொழியில் 'முழக்கி' இருக்கிறார்.)

எங்கு முழக்கியிருக்கிறார் என்றால், தமிழ்நாட்டின் மார்பு, (இதயம்–மத்திய ஸ்தானம்) போன்ற திருச்சி நகரில், தமிழர் உணர்ச்சிக்குத் தாயகமான சுமார் 20-30 ஆயிரம் பேர் நகர மக்கள் கொண்ட மாபெரும் தமிழர் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்.

சொன்னது மட்டுமல்லாமல் இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பித் தனது ஊருக்கும் பறந்து சென்றிருக்கிறார்! எப்படியென்றால்–8,000 பேர் கொண்ட போலீஸ் பாதுகாவலில்.

உண்மையாக, உள்ளது உள்ளபடி சொல்லவேண்டுமானால், இந்தப் 'பனியா'–'பார்ப்பன' ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டில் தமிழர், சிறையில் இருக்கும் கைதிகள் போலவே நடத்தப்பட்டு வருகிறார்கள்; 'கான்விக்ட் வார்டர்'களாகத் தமிழர் சேவகர்கள், தமிழர் அதிகாரிகள் ஆகியவர்கள் இருந்துவருகிறார்கள்.

தமிழர்கள் மந்திரிகளாக இருந்தாலும் சரி, உயர்ந்த தலைமை மாவட்ட நீதிபதிகளாக இருந்தாலும் சரி, நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் சரி, போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, இவர்கள் யாவருமே கான்விக்ட் வார்டர்களைப் போலவேதான் இருந்து வரவேண்டியதாக இருக்கின்றனர்.

(கான்விக்ட் வார்டர் என்றால், நல்ல அடிமையாக இருந்து விடுதலை பெறக் கருதி சிறையில் தொண்டுசெய்யும் நீண்ட நாட்கள் தண்டனை பெற்ற கைதி.)

இந்தப் பாதுகாப்பான நிலையில்தான் நேரு பார்ப்பனர் திருச்சி நகரத்தில், திருச்சி மக்கள் முன்னிலையில், 'எங்களுக்கு அடங்கிக் கீழ்ப்பட்டு சூத்திரனாக இருந்தால் இரு; இல்லாவிட்டால் நாட்டைவிட்டு வெளியே போ; போகாவிட்டால் ஜெயிலில் போடுவேன்' என்று எக்காளமிட்டுச் சென்றுவிட்டார்.

இந்தச் சமயத்தில் மந்திரிகளைப்பற்றி, போலீசாரைப்பற்றி, சிறிதும் சிந்திக்காமல் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட வாழ்விற்கேற்ப அதைப் பார்த்துக்கொள்ள அப்படி (அதாவது கான்விக்ட் வார்டர்களாக) நடந்துகொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள். அவர்களை மறந்துவிடுங்கள்! அப்படி மறக்கும்போது அந்த இடங்களில் பார்ப்பனர்கள் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைவில் வைத்து, மறந்துவிடுங்கள்.

ஆனால், தமிழ் மக்களே! இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? உங்களுடைய கடமை என்ன என்பதுதான் இப்போதைய பிரச்சினை.

அரசியல் சட்டம் எதற்காகக் கொளுத்தப்பட்டது? யாருக்காகக் கொளுத்தப்பட்டது? 3000 பேர் எதற்காகச் சிறைபிடிக்கப்பட்டார்கள்? நான் எதற்காகச் சிறைத் தண்டனை இடப்படுகிறேன்?

பார்ப்பனர்களைக் குத்தியதற்கா, கொன்றதற்கா, பார்ப்பனச் சேரியில் நெருப்பு வைத்துக் கொளுத்தினதற்கா, அல்லது பார்ப்பனப் பெண்களை இம்சித்ததற்கா? இல்லவே இல்லை. இதற்காக இன்று யாரும் சிறையிலில்லை.

குத்தச் சொன்னதற்காகவோ, கொல்லச் சொன்னதற்காகவோ, கொளுத்தச் சொன்ன தற்காகவோ கூட இன்று யாரும் சிறையிலில்லை; என்றாலும், என் ஒருவன் பேரில் மட்டுந்தான் அப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது. அதுவும், 'வெள்ளரிப் பழத்திற்குப் பூண் போட்டுக் கெட்டிப் படுத்துவது' போன்ற குற்றந்தான் சாட்டப் பட்டிருக்கிறது. இது எப்படியோ போகட்டும், அதைப்பற்றித் தமிழர்களாகிய உங்களுக்குக் கவலை வேண்டாம்.

'சாதி காப்பாற்றப்படும் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; சாதியை ஒழிக்க இயலாத சட்டம் எங்களுக்கு வேண்டாம்; அதைத் திருத்து; சாதி ஒழிக்கப்பட வசதி செய்து கொடு,' என்பதற்கு அறிகுறியாக, சாதியைப் பாதுகாக்க வசதியுள்ள பாகத்தைக் குறித்த ஒரு துண்டுக் காகிதத்தை, அறிக்கை கொடுத்துக் கொளுத்துவதன் மூலம் வலியுறுத்திக் காட்டி யதற்காகக் குழந்தைகள், குஞ்சுகள், வயோதிகர்கள், பெண்கள், கர்ப்பப் பெண்கள், இளைஞர்கள் உட்பட 3,000 மக்களை—அதுவும் கொளுத்தின மக்கள் 10,000 பேர்களில் பலவிதமாக 7,000 பேர்களை விட்டுவிட்டு, 3,000 பேர்களைச் சிறையில் அடைத்து, ஊசிப் போன சோளக் கஞ்சியையும், கேப்பைக் கூழையும், மக்கிப்போன அரிசிச் சாத உருண்டை யையும், களி மொத்தையையும் கொடுத்துக் கொடுமைப் படுத்துகிற இந்த அட்டூழியத்திற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

சிறையில் கொடுமைப் படுகிறவர்களில் 1, 2, 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக் காரர்களும், ஆண்டொன்றுக்கு 1000, 5,000, 10,000 ரூபாய்க்குமேல் வரும்படி உள்ளவர் களுமான பல செல்வவான்களும், உயர் வாழ்வு வாழுகின்ற சுக புருடர்களும்—அது போன்றே தாய்மார்களும் தகுதிக்கு மேம்பட்ட மக்களாக இருந்துவருவது அரசாங்கத் திற்கே தெரியும்.

அப்படிப்பட்ட மக்களையும் இப்படிக் கொடுமைப் படுத்துவதற்கு, நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வெள்ளையனான அன்னியனாட்சிக் காலத்தில், 'வெள்ளையனே வெளியேறு' என்ற கூட்டத்தையும், வெடிகுண்டு ஏந்திய கூட்டத்தையும், தண்டவாளங்களைப் பெயர்த்து, இரயிலைக் கவிழ்த்து, தபாலாபீசுகளுக்கும், நீதி ஸ்தலங்களுக்கும், இரயில்வே ஸ்டேஷன் கட்டடங்களுக்கும் நெருப்பு வைத்துக் கொளுத்திக் கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை, ஆயிரக்கணக்கான உயிர்களை நாசப்படுத்தியவர்களையும் மனிதத் தன்மைக்கு மேலாகவே நடத்தினான்.

'உங்கள் நாட்டை நீங்கள் ஆண்டு கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை' என்று சொன்னான்.

'எங்களை, உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நாங்கள் மனப்பூர்வமாய்ப் போய் விடுகிறோம்; உங்கள் நாட்டை நீங்களே ஒப்புக்கொள்ளுங்கள்' என்று சொல்லி ஒப்பு வித்தானேதவிர, இப்படி வடகோடியிலிருந்து தென்கோடிக்கு வந்து, தென்கோடி மக்களை 'என்னுடைய ஆட்சி, என்னுடைய சட்ட திட்டம் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் நீங்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிடுங்கள்' என்று சொல்லவில்லை.

இந்தப் பேச்சு நேருவின் கெட்டிக்காரத் தனத்தையும் வீரத்தையும் காட்டுகிறதா? அல்லது தமிழர்களின் மானங்கெட்ட தன்மையையும், மடமையையும், கோழை (சோதா)த் தனத்தையும் காட்டுகிறதா என்பதுதான் இங்கு சிந்தித்துப் பார்க்கத் தக்கதாகும்.

நேரு சாதியார் இந்த நாட்டில் எவ்வளவு கட்டுப்பாடு, ஒற்றுமை, தங்கள் இன நலத்தில் கவலை, முயற்சி முதலியவைகளோடு இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும்; நம் சாதியார் என்பவர்கள் எவ்வளவு ஈனமாய், ஒற்றுமை இன்றி, இனத்தைப்பற்றிய உணர்ச்சியே இல்லாமல் சுயநல வாழ்வு வாழ்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழனைப் பார்த்து, 'ஓ தமிழர்களே! நீங்கள், எங்களுக்கு வைப்பாட்டி மக்களாய், இழி மக்களாய், சூத்திரர்களாய், கீழ்மக்களாய் இருந்தால் இந் நாட்டில் இருங்கள்; இல்லா விட்டால் இந் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்' என்று சொல்ல—இந்த நேருகூட வேண்டிய தில்லையே; இன்னமும் பரம முட்டாளும், படுகோழையும், பிழைக்க வழியற்ற—தெருவில் பிச்சையெடுத்து வயிறு பிழைக்கும் ஒரு பார்ப்பன விதவைகூடப் போதுமானதாகுமே!

இதில் நேருவுக்கொன்றும் கெட்டிக்காரத் தனத்தையோ, துணிவையோ, வீரத் தையோ பொருத்தவேண்டியதில்லை; தமிழனின் மானமற்ற சுயநல ஈனப் பிழைப்பும், கோழைத் தனமும், நாட்டைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் தன்மையும்தான் காரணமாகும்.

கொலைக் குற்றப் பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு முச்சலிக்கா பாண்டுமீது நான் வெளியில் இருக்கிறேன்; வழக்கு விசாரணை 12ஆம் தேதி நடக்க இருக்கிறது; நான் இந்த நாட்டுக்கு 100-க்கு 90 பேர்களைக் கொண்ட திராவிடர் கழகத்திற்குத் தலைவன்; இந்த நிலையிலும் சட்டம் எரித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, இனியும் விசாரணை செய்துத் தீர்ப்புச் சொல்லவேண்டிய 2,000-க்கு மேற்பட்ட கழகத் தோழர்கள்—அதாவது, என்னைப் பின்பற்றுகிறவர்கள் சிறையிலும் விசாரணையிலும் இருக்கிறார்கள்; இந்த நிலையிலும் ஆட்சித் தலைவன் என்னும் பேரால் ஒரு நபர் இங்கு வந்து—அதாவது, எங்கு விசாரணை நடக்கிறதோ அந்த ஊருக்குவந்து, எந்த நீதிபதியும், மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கவேண்டியவர்களோ—விசாரிக்கிறார்களோ, அந்த மாஜிஸ்ட்ரேட்டையும் நீதிபதி யையும் அழைப்பனுப்பி வரவழைத்து எதிரில் உட்கார வைத்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து, 'இவர்கள் (இந்தக் குற்றவாளிகள்) சிறையில் இருக்க வேண்டியவர்களாவார்கள்; இவர்கள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள்; மன்னிக்கத் தக்கவர்களல்லர்' என்று இடி முழக்கம் செய்கிறாரென்றால்—இந்த ஆட்சி எவ்வளவு நீதியும் நேர்மையும் நாணயமுமான ஆட்சி என்பதைத் தமிழர்கள்—மானம், ஈனம் இவற்றைப் பற்றிக் கவலைப்படாத தமிழர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

இதில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த நேரு 9ஆம் தேதிக்கு முதல் நாள் 8ஆம் தேதி-கொலை, கொள்ளை, கொளுத்தல், நாசவேலை, உயிருடன் தூக்கி நெருப்பில் போட்டுப் பொசுக்குதல், சுமார் 100, 200 பேர்களுக்குமேல் உயிரிழக்கச் செய் திருத்தல் ஆகிய காரியங்களைப் பற்றிப் பேசும்போது, 'விவகாரம் விசாரணையிலிருப்ப தால், அதைப் பற்றிப் பேசுவது நீதியாகாது; நேர்மையாகாது' என்று சொல்லிப் பேசாமல் வாயை மூடிக்கொண்டு வந்து, மறுநாள் காலையில் விசாரணை நடக்கும் இடத்திற்கே வந்து நீதிபதி அவர்களிடத்திலேயே நேரில், 'இவர்கள் ஜெயிலில் இருக்க வேண்டியவர்கள். நல்லபடி கடினமாகத் தண்டிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால், உங்களுக்கு உத்தியோகம் நிலைக்காது; பிரமோஷன் இருக்காது' என்று சொல்லுவதுபோல்—அதுவும் பெரிதும் பார்ப்பன 'நீதிபதிகள்' இடமே எக்காளமிட்டுச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாரென்றால்—இந்த ஆட்சி, சட்டம், ஆட்சிக்கொடி மாத்திரமல்லாமல், ஆட்சிமுறை, ஆட்சிநீதி, ஆட்சிப் பீடம் ஆகியவையும் சுட்டுப் பொசுக்க வேண்டியதாகுமா, ஆகாதா? இதில் நமக்கு நலமான வாழ்வோ, நீதியோ கிடைக்குமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்–தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள்!

['விடுதலை'–தலையங்கம்—11-12-1957]

4. பெரியார் கோர்ட்டு வாக்குமூலம்

திருச்சி செஷன்ஸ் கோர்ட்டார் அவர்கள் முன்பாக

S.C. 93/1957

திருச்சி விசேஷ போலீஸ் இன்ஸ்பெக்டர்—கம்பளைனெண்ட்

vs

பெரியார் ஈ. வெ. ராமசாமி—எதிரி

எதிரி தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட் :—

'இந்த ஆட்சி கொடுமையான காட்டுமிராண்டி ஆட்சி. அதாவது, பச்சைப் பார்ப்பான் நீதி, நேர்மை, அன்பு, அறிவு அற்ற கொடுங் காட்டுமிராண்டிப் பார்ப்பனப் பாதகர்கள் ஆட்சி.

இந்த ஆட்சியில் இப்போது இயற்கையாகவே நீதி கிடைக்கமாட்டாது. அதிலும், பார்ப்பனத் தலைவனும் பார்ப்பன ஆட்சித் தலைவனுமான முதல் மந்திரி வேஷத்தைக் கொண்ட பண்டிட் நேரு ஆகிய பார்ப்பனர், வழக்கு நடக்கும் இந்த ஊருக்கு வந்து, வழக்கு நீதிபதியாகிய தங்களை அழைத்து வைத்துக்கொண்டு, தங்கள் முன்னிலையிலேயே 9-12-1957-ல் 'பார்ப்பனர்களைக் கொல்லவேண்டும் என்று சொன்னவர்களை விடக்கூடாது; ஜெயிலில் தள்ளவேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்.

நூற்றுக்கணக்கான பேர்கள் கொல்லப்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகள் கொளுத்தப் பட்ட வழக்கு பற்றி மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லில் பேசும்பொழுது, 'வழக்கு விசார ணையிலிருக்கும்பொழுது நான் அதைப்பற்றி இங்கு பேசக்கூடாது' என்று சொல்லிவிட்டு, மேலும் அங்கு அந்தக் கொலை, கொள்ளை, எரிப்பு ஏற்படக் காரணமான சாதியை, சாதி உணர்ச்சியை ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பேசி வழக்கு இணக்கம் காட்டிவிட்டு, யாரும் கொல்லப்படாத, எங்கும் கொளுத்தப்படாத இந்த வழக்குபற்றி— அதுவும் சாதி ஒழியாவிட்டால் முதுகுளத்தூர் போன்ற கொலை, கொள்ளை ஏற்படும்— என்பதாக எச்சரிக்கை செய்யப்பட்ட பேச்சைப்பற்றிப் போடப்பட்டிருக்கும் தப்பு வழக்குப் பற்றி இப்படிப் பேசிப் போயிருக்கும்போது, அந்தப் பார்ப்பன ஆட்சியின் ஆதிக்கத்தின்கீழ் இரண்டாந்தர சிப்பந்தியாக இருக்கும் தங்களிடம் நான் என்ன நீதி காணமுடியும்?

இந்த வழக்குக்குச் சாட்சியாக, ஆதரவாகக் கோர்ட்டில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்ற ஆதாரங்களை நான் பார்த்த அளவில் என் பேச்சு என்ற தலைப்பில் எழுதப்பட்ட சொற்கள் பெரிதும் கற்பனைச் சொற்களைக் கொண்ட ஆதாரங்களாகும். எப்படியெனில், கம்பன் பாட்டையும், ஒட்டக்கூத்தன் பாட்டையும் படிக்கும் மாத்திரத்தில், இது கம்பன் கவி அல்ல என்பது எப்படிக் கவிஞர்களுக்குச் சொல்லமுடியுமோ அதுபோல், என் பேச்சு என்ற ஆதாரங்களை ஒரு சாதாரண மனிதன் பார்த்தாலும் அதில் உள்ள மாறுதலும் கோர்வை இல்லாமல் விடப்பட்ட பொருத்தமில்லாத சேர்க்கையும் பிற தவறுகளும் நன்றாய்த் தெரியும். மிகமிக அலட்சியமாய் எழுதப்பட்ட குறிப்புகளாகப் பெரிதும் அவை காணப்படு கின்றன. அதாவது, நான் பேசிய பேச்சு அப்படியே வார்த்தை வார்த்தையாக எழுதப்பட வில்லை! வேறு வார்த்தைகளால் எழுதப்பட்டவைகளும் வழக்குக்கு [செக்ஷன்களுக்கு] பொருந்தக்கூடியதாக இல்லை. செக்ஷன்களின் கருத்துக்கேற்ற தொடர் வாக்கியங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சொற்களையும் வாக்கியங்களையும் கொண்டு சேர்த்துத் தொகுத்து எழுதி செக்ஷன்களுக்கு ஏற்ப என்று காணும்படியாக, பேசும்போது பேசிய சந்தர்ப்பங்களைக் காட்டும் வாக்கியங்களை மறைத்து விட்டுப் பொருத்தப்பட்டிருக்கிறது. 'கொலை செய்வது' என்றாலும் ஏன்? எதற்காக? எப்படி? எப்போது? என்பதையும் குறிப்புக் காட்டவில்லை. நான் கட்டளை கொடுத்த பின்புதான் சாதி ஒழிக்க இது ஒரு கடைசி வழி, அதாவது இந்த நிலைதான் வந்து சேரும் என்ற உத்தேசக் கருத்தில் அச்

சொற்கள் உச்சரிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றதா? உடனடியாகச் செய்யும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறதா? என்பவைகளை எல்லாம் கவனித்தால் செக்ஷன் கருத்துக்கு 'கொலை' என்ற சொல் ஏற்றது என்பது விளங்காது; ஒரு புண்ணுக்கு இந்த மருந்துதான் பொருந்தும் என்கின்ற தன்மையில் கடைசி வைத்தியமாகச் சொல்லப்பட்டதா? அல்லது இந்த மருந்தை உடனே போடு என்று யாருக்காவது கட்டளையிட்டதாகச் சொல்லப்படு கிறதா என்பதும் நடுநிலையில் இருந்து சிந்தித்துச் சிறிதும் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெளிவாகிறதா என்று கனம் நீதிபதி அவர்கள் பார்த்து, தங்களுக்குத் தோன்றும் முடிவின்படி முடிவு செய்ய வேண்டிக்கொள்ளுகிறேன்.

கனம் கோர்ட்டார் அவர்கள் தீர்ப்பில் எனக்குக் கடினமான நீண்டகால தண்டனை கிடைப்பதாக இருந்தாலும் அதை எனது இலட்சியம் நிறைவேறுவதற்காக நான் கண்டிப் பாகக் கொடுக்கவேண்டிய விலையைக் கருதி ஏற்றுக்கொள்ளுவேனே தவிர சிறிதும் அதிருப்தியடையமாட்டேன்.

['விடுதலை'—12-12-1957]

5. சிறை புகுமுன் அறிக்கை

நான் இன்று தண்டனை அடையப்போவது உறுதி. ஏனென்றால், இந்தியப் பிரதமர் என்னும் பதவியிலுள்ள பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், எனது வழக்குநடக்கிற ஊராகிய திருச்சிக்கே வந்து எனது வழக்குநடைபெறும் நியாயஸ்தல நீதிபதியாகிய செஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் முன்னிலையிலிருந்து, 'பார்ப்பனர்களைக் கொல்லு என்று சொல்லியிருக்கிறவர்களைக் கண்டிப்பாகத் தண்டிக்கவேண்டும்; அது மாபெரும் தேசத் துரோகக் குற்றமாகப் பாவிக்கப்பட வேண்டும். அந்தக் கருத்துடையவன் ஜெயிலில் இருக்கவேண்டியவன்!' என்பதாகச் சொல்லித் தூண்டிவிடும்படியான அளவுக்குப் பேசிவிட்டுப் போயிருக்கும்போது, எந்த நீதிபதிதான் என்னைத் தண்டிக்காமல் விட்டுவிட முடியும்?

அதுபோலவே, சட்டம் எரித்ததாகக் குற்றம்சாட்டி ஜெயிலில்பிடித்து அடைத்து வழக்குத் தொடரப்பட்டிருக்கும் 4000 குற்றவாளிகள் பற்றியும், 'அதன் குற்றம் தேசத் துரோகக் குற்றமாகும்; அவர்கள் கடினமாகத் தண்டிக்கப்படவேண்டியவர்கள்; ஜெயிலில் இருக்கவேண்டியவர்கள்!' என்பதாகவும் விசாரணை செய்து தீர்ப்புக் கூறவேண்டிய மாஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையிலும் சொல்லிவிட்டுப் போயிருக்கும்போது எந்த ஜட்ஜ்தான்—எந்த மாஜிஸ்திரேட்தான் குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தண்டியாமல்—கடின மாகத் தண்டியாமல் விடமுடியும்?

உதாரணமாக, பண்டித நேரு அவர்கள் திருச்சிக்கும், தமிழ்நாட்டில் மற்ற ஊர்களுக்கும் வந்து இப்படியாகப் பேசுவதற்குமுன் 3 மாதம், 6 மாதம், 9 மாதம் போட்ட வழக்குகள்—இவர்வந்து, இந்தப்படிப் பேசியபின் 9 மாதம், 1 வருடம், 1½ வருடம், 2 வருடம் விதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், என்னை, 'ஜட்ஜ்' தண்டிக்கப்போவது உறுதி.

நான் தண்டிக்கப்பட்டால் பொதுமக்களும், குறிப்பாகக் கழகத் தோழர்களும், 'இந்தத் தண்டனையும் நம் கழக முயற்சிகளும் வெற்றிபெறும் நாள், பயனளிக்கும் காலம் நெருங்கிவிட்டது—பூக்க, காய்க்க ஆரம்பித்துவிட்டது' என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு கழகப் பணியாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்; பங்குகொள்ள வேண்டும்; ஆதரவளிக்கவேண்டும். எப்படியோ இது ஒரு இனப் போராட்டமாகப் பார்ப்பனர்கள் செய்துவிட்டார்கள்.

ஆதலால், கழகத் தோழர்களும், மற்றவர்களும் எவ்விதமான பலாத்காரமான, இம்சையான, கொல்லுவதான, நாசகரமான காரியம் எதையும் செய்ய முன்னடையாமல்—

மனத்திலும் செய்ய நினைக்காமல்—பிறர் சொல்லும்படியும் நடவாமல், சாந்தத்தோடும் சமாதானத்தோடும் கழகப் பணியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

மற்றும், இன்று நமது தோழர்கள் 3000 பேருக்கு மேல் சிறைப்படுத்தப்பட்டுக் கடினமான தண்டனைக் கொடுமை வழங்கப்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம்—நாம் செய்த எந்தவிதமான குற்றங்களுக்காகவும் அல்ல. அதாவது, நாம் நம் உரிமைக்கு விரோதமாய், நீதிக்கு விரோதமாய் எந்தவிதக் காரியமும் செய்துவிடவில்லை. யாருக்கும் எந்தவிதமான கேடும் செய்துவிடவில்லை; ஏற்பட்டுவிடவுமில்லை.

இதை இன்றைய நம் மந்திரிமார்களே சொல்லிவிட்டார்கள்; சொல்லியும் வருகிறார்கள். அப்படியிருந்தும், இந்த நாட்டுப் பார்ப்பனர்களின் கட்டுப்பாடான கூப்பாட்டிற்காகவும், மாய்மால நடிப்பிற்காகவும், பார்ப்பனப் பத்திரிகைகளின் கட்டுப்பாடான பொய் விஷமப் பிரச்சாரத்தின் காரணமாகவும் மத்திய அரசாங்க அதிபர்கள்—ஆதிக்கக்காரர்களின் சர்வாதிகாரக் கட்டளைக்காகவும் வேறு மார்க்கமில்லாமல் இணங்கித் தீரவேண்டிய அவசியத்தின் காரணமாக ஏற்பட்டவைகளாகும்.

ஆதலால், நமது மக்கள் இந்த நடவடிக்கைகளுக்கும் சென்னை அரசாங்க மந்திரிகளுக்கும், பார்ப்பனரல்லாத போலீஸ் நீதி நிர்வாக அதிகாரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதாகக் கருதி, அவர்களிடம் எவ்வித வெறுப்பும் அதிருப்தியும் கொள்ளாமல் அடங்கி நடப்பதாய் இருக்கவேண்டும்.

இதை நல்ல வாய்ப்பாகக்கொண்டு தங்கள் சுயநலத்திற்காக வெறுப்பு அதிருப்தி ஏற்படுத்த முயற்சிக்கும் எந்தக் கோஷ்டியாருடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்பதாகவும்; அப்படிப்பட்டவர்களுடைய முயற்சி வெற்றி பெறாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியதும் பொதுமக்களுடையவும் கழகத் தோழர்களுடையவும் இன்றியமையாததுமான கடமையாகும். கழகத் தோழர்களும் பொதுமக்களும் பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட பாதகமான செயலுக்கு நாம் பரிகாரம் தேடுவது என்பதற்காக நான் மேலே வேண்டிக்கொண்டிருக்கிறபடி எந்தவிதமான பலாத்கார, இம்சையான, நாசமான செயலிலும் ஈடுபடாமல், பார்ப்பனர்கள் தங்கள் கொடுமைச் செயலின் பயனை அனுபவிக்கும் வண்ணம்—அதாவது தாங்கள் செய்தது தப்பு என்று உணரும் வண்ணம் அவர்களை நாம் வெறுப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்.

அவர்கள் உறவை நீக்கவேண்டும், அவர்கள் சம்பந்தத்தை வெறுக்கவேண்டும்;

அவர்களுடன் எவ்வித உறவாடலும் சம்பந்தமும்கூடாது;

கூடுமானவரை அவர்களுடன் பேசுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்;

அவர்களை நாம் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது;

அவர்களிடமும் நாம் எந்த வேலைக்கும் இருக்கக்கூடாது;

பார்ப்பன வக்கீல்களைப் பகிஷ்கரிக்கவேண்டும்;

அவர்களிடம் எந்தவிதமான வியாபார சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது;

அவர்கள் உண்டி நிலையங்களுக்கு அறவே நாம் செல்லக்கூடாது;

அவர்களைக் கண்டிப்பாக—நமது நன்மை தீமை காரியங்களுக்கு அழைக்கவோ, சம்பந்தப்படுத்தவோகூடாது; எல்லாவற்றையும்விட, அவர்கள் பூசை செய்யும்—தொண்டு செய்யும் எந்தக் கோவிலுக்கும், தொழுகை இடத்திற்கும் நாம் செல்லவேகூடாது.

அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் விற்பதோ, கொடுப்பதோ கூடாது.

நமது வண்டி வாகனக்காரர்கள் அவர்களை (பார்ப்பனர்களை) ஏற்றக் கூடாது. இன்னும் உள்ள எவ்வித சம்பந்தங்களிலிருந்தும் நாம் விலகி நிற்க வேண்டும்.

எல்லாவற்றையும்விட, பார்ப்பனப் பத்திரிகைகளைப் பகிஷ்காரம் செய்யும்படி பிரச்சாரம் செய்யவேண்டும்.

மற்றும், இந்தப் பார்ப்பனர்களைப் போலவே வடநாட்டார்களையும் கருதவேண்டும். பார்ப்பனர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று மேலே எடுத்துக் காட்டிய அவ்வளவையும்—வடநாட்டாருடனும் வைத்துக் கொள்ள வேண்டும்; நடந்துகொள்ள வேண்டும்.

உடனடியாக நிர்மாணத்திட்டமாக, வடநாட்டான் கடைகளை வியாபாரத் துறைகளில் பகிஷ்கரிக்க ஏற்பாடு செய்ய—கழகக் கமிட்டி கூட்டி யோசித்து நடத்தவேண்டும். வட நாட்டான் கடைகளில் நம்மவர் வியாபாரம் செய்யக்கூடாது என்று, நம்மவர்களை வட நாட்டார்களின் வியாபார ஸ்தலங்களில் நின்று பணிவாக, சமாதான முறையில், சாந்தமான தன்மையில் வேண்டிக்கொள்ள வேண்டும்.

இவ்விதக் காரியங்களை அரசாங்கத்தார் தடுத்தால் அதற்கு மாத்திரம் நாம் இணங் காமல் இருக்கலாம் என்பது எனது கருத்து.

தமிழ் நாடு முழுவதிலும்—கன்னியாகுமரி மாவட்டம் முதல் எல்லா மாவட்டங்களிலும் கழகங்களை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு இலட்சம் அங்கத்தினர்களையாவது சேர்க்கவேண்டும்.

அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு, நல்லபடி படித்த பெண்களை மாவட்டத்திற்கு இருவர் அல்லது மூவர் வீதம் தேவையான அளவுக்கு அலவன்ஸ் கொடுத்து மெம்பர் சேர்க்கும் பாரங்கள் இலட்சக்கணக்கில் அச்சடித்துக் கொடுத்துச் சேர்க்கவேண்டும்.

அவர்கள் மூலமே இயக்கப் புத்தகங்களையும் இந்த அறிக்கை முதலியவைகளையும் குறைந்த விலைக்கு விற்கச்சொல்ல வேண்டும். இந்தப் பெண்களுக்கு சிவப்புக் கரை போட்ட கறுப்புச் சேலை, சிவப்பு ரவிக்கை சப்ளை செய்யவேண்டும். திருமதி. நாகரசம்பட்டி விசாலாட்சி அம்மையார், ஆனைமலை ராமகிருட்டின அம்மாள் முதலியவர்கள் இந்த நிர் வாகத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டிக்கொள்ளச் செய்ய வேண்டும். மாவட்டத்திற்கு ஒருவர் அல்லது இருவர் ஆண் தோழர்களை இந்தக் காரியத்திற்கு ஏற்படுத்தி, அவர் களுக்கும் தேவையான அலவன்ஸ் கொடுத்து இந்த வேலைகளைச் செய்யவேண்டும். முழுநேரத் தொண்டர்களாக வரும் ஆண்களையும் பெண்களையும் ஏற்று, அவர்களுக்கு உணவு, போக்குவரத்துச் செலவு அளித்து மேற்படி வேலைசெய்யச் செய்யலாம். ஒவ்வொரு வரின் வேலையையும், செய்த அளவையும் அறிந்து வேலைக்குத் தக்கபடி உற்சாகப்படுத்தி அலவன்ஸ் கொடுத்து வேலைசெய்யச் செய்யவேண்டும்.

மற்றக் கட்சிக்காரர்களைப் பற்றியோ, கோஷ்டிகளைப் பற்றியோ, காங்கிரசைப் பற்றியோ, மந்திரிகளைப் பற்றியோ எவ்விதக் குற்றம் குறைகளும் நம் பேச்சாளர்கள் யாரும் பேசக்கூடாது. அவர்கள் நம்மீது சுமத்தும் விஷமப் பிரச்சாரக் குற்றங்களுக்குக் கண்ணியமான முறையில் சமாதானம் சொல்லலாம். நமது இயக்கத்தின் தலைவர்கள் பொறுப்பானவர்கள் என்கிற முறையில் உயர்திரு. வேதாசலம் அவர்களும் திருமதி. மணி யம்மை அவர்களும் மற்றும் பல நண்பர்களும் வெளியிலிருக்கிறார்கள். திரு. வேதாசலம் அவர்கட்கு உடல்நலம் சரியாக இல்லாததால் முழுப் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது எனக்குக் கலக்கமாக இருக்கிறது. என்றாலும் தோழர்கள் அவர்களது கட்டளையை மதிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

திருமதி. மணியம்மையார் கூடுமான அளவு தக்க பேச்சாளர்களுடன் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஆங்காங்குள்ள—நமது கழகம் அமைத்தல், மெம்பர் சேர்த்தல், புத்தகம் அறிக்கை விற்றல் ஆகிய காரியங்களைக் கவனிப்பார்கள்.

நான் இரண்டாண்டுக்கும் குறையாமல் தண்டிக்கப்பட்டுச் சிறைவாசம் செய்து, திரும்பி வரும் வாய்ப்பு இருந்து வந்து சேருவேனேயானால் ஒரு இலட்சம் அங்கத்தினர், மூவாயிரம் கழகங்கள், 1500 ரூபாய்க்குக் குறையாத அறிக்கை புத்தக விற்பனைக் கணக்கு-காண்பேனேயானால் நானும் மற்றும் அன்பான தோழர்கள் 4000 பேரும் சிறை சென்றது நல்ல பயனை அளித்தது என்றே கொள்ளுவோம்.

பல நண்பர்கள் நமக்குக் கூடுமான அளவு பொருளுதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். முக்கியமாக ஒரு நண்பர் பெரும் அளவுக்கு, அதாவது 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்.

இந்தச் சிறைப் பிடிப்பில் போகமுடியாமல் வெளியிலிருப்பவர்களும், சிறைப் பிடித்து நாள் கணக்கில் வைத்திருந்து விடுதலையானவர்களும் மேற்குறித்த எனது வேண்டுகோள் பணிக்கு நல்ல ஆதரவு தரவும், எங்கள் தண்டனைக் கால அளவுக்கு முழுநேரத் தொண்டு செய்யவும் பலர் தாங்களாகவே முன் வந்திருக்கிறார்கள்; தயாராய் இருக்கிறார்கள். அவர்கள் பெயரை நான் இதில் குறிப்பிடவில்லை—என்றாலும் அவர்களது முழுச் சம்மதத்துடன் பெயர்களை மணியம்மையார், திருவாளர்கள் வேதாசலனார், சுப்பிரமணியம் திருநாவுக்கரசு ஆகியவர்களுடன் யோசித்து வெளியிடுவார்கள். அவர்களைக் கழகத் தோழர்கள், அபிமானிகள் ஆதரவாளர்கள் நல்லபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடைசியாக பலாத்காரம், இம்சை, நாசவேலை, கலவரம், சாந்த சமாதான பங்கம், தனிப்பட்டவர்களிடம் நேரிடையான வாக்குவாதம், கலவரம் ஆகிய காரியம் எதுவும் சிறிதும் தலைகாட்ட இடமில்லாமல் எனது தோழர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

அப்படி ஏதாவது தாறுமாறாக நடந்துகொண்டால் அவர்கள் எனக்கு எதிரிகளும் கழகத்திற்குக் கேடு செய்பவர்களுமாவார்கள்.

என் பிறவி காரணமாக என் இன இழிவுக்குக் காரணமாக இருக்கும் சாதியை ஒழிப்பதும் என் இன மக்களாகிய தமிழர்களுடையவும், என்னுடையவும் தாய்நாடான தமிழ் நாட்டைப் பனியா–பார்ப்பனர்களின் அடிமைத் தளையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் மீட்டுச் சுதந்திரமாக வாழவைக்க வழி செய்வதுமான தனித் தமிழ் நாடு பெறுவதும் என் உயிரினும் இனிய கொள்கைகளாகும்.

அந்த இலட்சியங்களை அடையத் தகுந்த விலையாக என் உடல், பொருள், ஆவி ஆகிய எதையும் கொடுப்பதற்கு உடன்பட்டே நான் இப்போது சிறை செல்லுகிறேன், சென்று வருகிறேன்.

வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

['விடுதலை'–தலையங்கம்—15-12-1957]

6. எங்கள் போராட்டம்

இந்தத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி—இந்திய சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, சமுதாயப் பிரச்சினைக்காக—சாதி ஒழிப்பிற்காக ஒரே நாளில் 3500–4000 பேர்கள் சிறை சென்றது நமது கழகம் ஒன்றில்தான்.

தேசியப் போராட்டம் என்ற பெயரால் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தியதில் கூட, தினம் 4 பேர், 8 பேர்கள்தாம் சிறை செல்வார்கள். முன்கூட்டியே போலீசுக்குச் சொல்லியனுப்பிப் பிடித்துச் செல்லச் சொல்லி—சிறையிலே இராஜ போகங்கள் அனுபவித்தார்கள்!

இன்றுள்ள அத்தனை அரசியல் கட்சிக்காரர்களும் எங்களை ஒழிக்கப் பாடுபடுவார்களே தவிர, சாதி ஒழிய வேண்டியதற்கான பரிகாரம் என்ன என்பது பற்றி ஒருவனும் கவலைப்படுவது கிடையாது.

[திருச்சியில், 27-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-4-1959]

7. இராமாயணத்தை எரியுங்கள்

கழகத் தோழர்களே! பார்ப்பனர்கள் வரப்போகின்ற தேர்தலிலே நம் மக்களை கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாசங்களின் பெயரால் ஏமாற்றி, மயக்கி வெற்றி பெறலாம் என்கின்ற எண்ணத்தின்மீது, இப்போது எங்கு பார்த்தாலும் எந்த ஊரிலும் இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலிய புராண இதிகாசங்கள் மூலம் பிரச்சாரம் செய்தும், செய்வித்தும் வருகிறார்கள்.

ஏற்கனவே, நம் நாட்டில் நம் மக்கள் இந்தப் பார்ப்பன, கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், மனுதர்மம், புராணம், இதிகாசங்கள், கோயில், உற்சவம் முதலியவை களினாலேயே நாம் முட்டாள்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும், மூடநம்பிக்கைக் காரர்களாகவும் ஆகி, பல்லாயிர வருஷ காலமாக, நமது நாட்டில் நாம் கீழ்சாதி மக்கள், ஈனப் பிறவிகள் என்பதை ஏற்று, பார்ப்பனருக்கு அடிமையாய் இருந்து வாழ்ந்துவந்தாலும் இன்று சிறிது காங்கிரஸ் ஆட்சியின் பயனாய், கண்திறந்து அறிவுபெற்று வருவதை ஒழிப்ப தற்கு வேறுவகை இல்லை என்று கண்ட பார்ப்பனர், மறுபடியும் மேற்கண்ட இந்தப் பிரச்சாரத்தைத் துவக்கி இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே நாம் இப்பொழுது சற்றுவேகமாக கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாச ஆதிக்கங்களையும் புரட்டுகளையும், ஆபாசங்களையும் மக்களுக்கு விளக்கி ஏமாறாமல் இருப்பதற்காகப் பிரச்சாரம் செய்துவருகிறோம்.

பார்ப்பனர்கள் பிரச்சாரத்தைப்பற்றி எண்ணும்போது அதில் 8-ல் ஒரு பங்கு, 10-ல் ஒரு பங்கு நமது பிரச்சாரம் இல்லை என்றாலும், தயங்காமல் நம்மால் ஏதோ கூடியதைச் செய்து தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதற்காக இப்போது நாம் செய்துவரும் பிரச்சாரம் நீங்கள் எல்லோரும் அறிந்ததேயாகும். இனியும் தேர்தல் வரையிலும் நமது கழகத் தோழர்கள் எல்லோருமே நம் இயக்கப் புத்தகங்களைத் தருவித்து, விஷயங்களை உணர்ந்து, ஆங்காங்கு அந்தந்த ஊரில் மறுப்புப் பிரச்சாரம் செய்து வரவேண்டியது மிக்க அவசியமாகும்.

இதை அனுசரித்தும் நான் கீழே சொல்லும் விஷயங்களைச் சற்றுக் கவனமாகத் தெரிந்து, அதன்படி கூடுமானவரை நடந்துகொள்ள வேண்டுமெனக் கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தோழர்களே! மார்ச்சு மாதம் 31ஆம் தேதி 'ஸ்ரீராமநவமி' என்னும் ஒரு பண்டிகை நாள் வரப்போகிறது. அந்த நாளைப் பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும் நல்ல வண்ணம் பிரச்சாரம் செய்ய முற்படுவார்கள். அதனால் நம் மக்களை ஏமாறாமல் இருக்கச் செய்வதற்காக நம் கழகத் தோழர்கள் ஒவ்வொரு ஊரிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்து, மேற்சொன்ன பாமர மக்களுக்கு விளங்கும்படி எடுத்துச் சொல்வதோடு,

இராமாயணம், வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம் ஆகியவை தமிழர்களை இழிவுபடுத்துவதற்கென்றே ஆக்கப்பட்ட, பொய்யும், கற்பனையும் ஆபாசமும் நிறைந்த நூல்கள் ஆகும். ஆகவே இந்த மூன்று சொற்களையும் ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கையில் வைத்துக்கொண்டு, சொற்பொழிவின் முடிவில் கூட்டத்தில் மக்களுக்குத் தெரியும் படியாக நெருப்பினால் கொளுத்தி, சாம்பலாகும்படி செய்துகாட்டவும்.

இந்தப்படி ஒவ்வொரு கூட்டத்திலும் எத்தனை பேர்கள் செய்துகாட்டக் கூடுமோ அத்தனை பேர்களும் அந்தப்படி எழுதப்பட்ட துண்டுக் காகிதத்தை மக்கள் அறியும்படி கொளுத்தி எரித்துச் சாம்பலாக்கிக் காட்டவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'–அறிக்கை—30-3-1966]

9. 'தமிழ் நாடு' பெயர் மாற்றப் போர்

1. அபாயச் சங்கு

சாதாரணமாக இன்று நம் நாட்டில் நடந்துவரும் பார்ப்பன (ஆரிய ஆதிக்க) பாதுகாப்புத் தீவிர முயற்சியானது நாமறிய சுமார் 60, 70 ஆண்டுகளாக நடந்திருக்காத அளவில் வெகு வேகமாகவும் வெகு தீவிரமாகவும், மிக்க பரவலாகவும் நடந்து வருகிறது. இம் முயற்சிக்குத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பார்ப்பனர்களும் கட்டுப்பாடாக ஒற்றுமையாக ஒரே மூச்சாக முனைந்து நின்று பாடுபடுகிறார்கள்.

அரசியல் வேஷம் போட்டுக்கொண்டு இராஜாஜி 'தர்மங்களைக் காக்கப்போகிறேன்; தனி மனிதனின் உரிமையைக் காப்பாற்றப் போகிறேன். இத் துறைகளில் மக்களுக்கு முழுச் சுதந்திரமும் தேடித் தருவதே எனது ('சுதந்திரா') கட்சியின் நோக்கம்' என்று வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டு ஆகா வழிகளையும், வழிப்பறி வெட்டிகளையும், வாழ்வில் வழுக்கி விழுந்தவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு பெரும்போராட்டம் நடத்தத் துணிந்துவிட்டார். அவருக்கு காந்தியாரால் ஏற்பட்ட செல்வாக்கு இதற்குப் பெரும் ஆதரவளிக்கிறது என்பதுடன் பார்ப்பனர்—அவர்களது பத்திரிகைகள் பெரும் ஆதரவு தருகின்றன.

அடுத்தாற்போல், வைதீக முறையில் அடியோடு எல்லாப் பார்ப்பனர்களும் சேர்ந்து அரசாங்க அலுவலகங்களில்-பெரிய பதவிகளில் மாதம் ரூ. 3000, 4000 சம்பளம் வாங்கிக் கொண்டு உத்தியோகம் பார்த்து ஓய்வெடுத்து பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கும் பார்ப்பனர்களின் தலைமையில் ஊர்தோறும் வைதீக ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டும் மாநாடு நடத்திக்கொண்டும் பெரும் பிரச்சாரங்கள் செய்து வருகிறார்கள்.

இவைதவிர, பார்ப்பன மடாதிபதிகள், சங்கராச்சாரி, மத்துவாச்சாரி, வைணவாச்சாரி ஸ்மார்த்தாச்சாரி முதலான எல்லா மடாதிபதிப் பார்ப்பனர்களும் தினமும்—நாள்தோறும் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து, ஆங்காங்குள்ள பார்ப்பன அதிகாரிகளைக் கண்டு ஆள் சேர்க்கச் செய்தும் பணம் சேர்த்துக் கொடுக்கச் செய்தும் இமாலயப் பிரச்சாரம் செய்து, ஆரிய வைதீகக் கருத்துக்களைப் புகுத்திப் பார்ப்பனருக்குப் பொருளாதார உதவி, கல்வி உதவி ஆகியவைகளை அளித்தும் வருகிறார்கள்.

இவையெல்லாம் தவிர வெள்ளையன் போனபின்பு வியாபாரத் துறையிலும், தொழில் துறையிலும், பஸ் நடத்தும் துறையிலும் பிரவேசித்துக் கோடீஸ்வரர்களான பார்ப்பனப் பிரபுக்கள், ஆச்சாரியார் முயற்சி முதல் மற்ற எல்லாப் பார்ப்பனர் முயற்சிகளுக்கும் ஏராளமான பொருள் உதவி, வேலை உதவி, மற்றும் ஆள் மாகாண உதவி முதலியவைகள் செய்து, ஆதரித்து, உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து, பிரச்சார காரியங்கள் நல்லபடி நடக்கச்செய்து வருகிறார்கள்.

மற்றும் மத்திய, மாகாண ஆகிய இரு சர்க்கார் அலுவலகங்களிலும் குறிப்பாகத் தபால், ரயில், சுங்கம், வருமான வரி, அக்கவுண்டஸ், அய்க்கோர்ட் இலாக்கா அலுவலகங்களிலும் பொறுப்பான பெரிய பதவிகளிலும் பார்ப்பனர்கள்—அதிலும் வைதீக வெறிப் பார்ப்பனர்களே குவிந்து கிடப்பதால், அவர்களும் கட்டுப்பாடாகத் தங்கள் இன உயர்வுக்குப் பாடுபடுவதிலும் இத் துறைகளில் நம்மவர்கள் தலையெடுக்கமுடியாதபடி அழுத்திவைத்தும் ஒழித்துக்கட்டுவதற்கு ஏற்ற கொடுமைகளைத் துணிந்து செய்வதுமான காரியங்களிலும் முனைந்து நிற்கின்றார்கள்.

மற்றும், பொதுவாழ்வில், அரசியலில் பிழைப்பை ஏற்படுத்திக்கொண்டு, யார் எந்தக் கட்சி தோன்றினாலும் அவர்களுக்கு விளம்பரமும் தேர்தலில் வெற்றியும் கொடுக்கக்கூடிய அளவுக்குப் பார்ப்பனர்கள் ஆதரவு தேவை இருக்கின்றபடியால், எல்லாக் கட்சிக்காரர்களும்

—காங்கிரசுக்காரர்களில் பெரும்பாலோர் உள்பட—பார்ப்பனர்கள் காலடியில் கிடந்து உழல வேண்டியவர்களாக இருப்பதால் சர்வ கட்சிகளும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவே இருந்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாகப் பார்ப்பனப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பனர்களிடத்தில் இருப்பதாலும் திராவிடர்கள் நடத்தும் பத்திரிகைகளும் பார்ப்பனர்களுக்குப் பயந்து நடத்தப்படவேண்டி இருப்பதாலும் மேற்கண்ட பார்ப்பன ஆதிக்க வைதீக முயற்சிக் காரியங்கள் எதற்கும் எதிர்ப்பு நடத்த எந்தத் திராவிடனுக்கும் எந்த 'எதிர்க்கட்சி'க்கும் வசதியோ வாய்ப்போ இல்லாமல் போய் விடுவதோடு, வாழ வேண்டியவன்—வளர வேண்டியவன் ஆன மந்திரிகள் உட்பட எந்தத் திராவிடனும் வைதீகப் பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க வேண்டியவனாகவே ஆகிவிடுகிறான்.

திராவிட நாட்டில் திராவிடர்களுக்குச் செல்வாக்கு இருக்கும்படியான தன்மையில் திருந்திய திராவிட அரசர்களைக்கொண்ட அரசுகள் பல அண்மையில் இருந்தன. வெள்ளையன் போன உடனே 'அந்தப் பிராந்தியங்கள் அந்தந்த அரசுடனேயே சேர்க்கப் பட்டிருக்க வேண்டும். அந்தந்தப் பிராந்திய அரசுக்குப் பூரண சுய ஆட்சி உரிமைகள் வழங் கப்பட்டிருக்க வேண்டும்' என்று சுதந்திரம்—சுய ஆட்சி என்னும் பேரால்—அதிலும் ஒரு பெரும் மோசடியாக ஜனநாயகம் என்னும் பேரால் ஜனங்களோடு சம்பந்தமே இல்லாத ஒரு சாதி பிரிவுப் பார்ப்பனரே ஜனநாயகத்திற்கு மனுதர்மம் போல் சட்டம் செய்துகொண்டு, அச் சட்டப்படியான ஜனநாயக முறையில் சாதாரணத் தன்மையில் பார்ப்பானே—ஆரியனே ஆட்சித் தலைவனாக ஆகும்படியான நிலையில் ஆட்சி நடக்க வகை செய்துகொண்டதோடு, அக் கால முடி அரசர்கள் எல்லாம் பார்ப்பன அடி அரசுக்குச் சிப்பந்திகளாக ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் திராவிடர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமைக் குடிகளாகத்தான் என்றும் இருக்க வேண்டியதைத் தவிர ஆட்சியாளராக இருக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

மற்றபடி, திராவிடர்களே பெருநிலக்கிழார்களாக இருந்த ஜமீன் மிட்டாதாரர்கள் எல்லோரும் ஒழிக்கப்பட்டு, அவர்கள் ஒரு சாதாரணக் குடியானவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

இவர்கள் இரு கூட்டத்தினருக்கும் இருந்த பரம்பரைப் பெருமை பாத்தியதை—அதாவது தனிப்பட்டவர்களுக்கு இருந்த உரிமை அடியோடு—ஒருநாள் அய்ந்து பார்ப்பனர் கூடி 'சட்டம்' செய்து ஒரு வரி உத்தரவினால் பறிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், பார்ப்பனர்களையே பெரிதும் கொண்ட மடாதிபதிகள், அவர்களது உரிமைகள், செல்வங்கள், பெருமைகள் முதலியவை ஒரு சிறிதும் ஒரு துரும்பும் அசைக்கப் படவில்லை. அரசர்கள் ஒழிக்கப்பட்டதன் பயனாகத்தான், உஞ்சவிருத்திப் பார்ப்பனர்கள் ஒரே அடியாக சக்கரவர்த்தி—ஏகபோக சர்வாதிகார ஆட்சிக்குத் திடீரென்று எட்டிக் குதித்து சர்வ பவுமன் என்று சொல்லத்தக்க ஏக சக்ராதிபதிகளாக ஆகிவிட்டார்கள். இன்றைய ஆட்சிக்கு ஜனநாயகம் என்று பெயர் சொல்லப்பட்டாலும், வேசிக்குத் தேவதாசி என்று பெயர் வைக்கப்பட்டிருப்பதுபோல், என்றும் சர்வாதிகாரியாக ஒரு பார்ப்பானே இருந்து வரும்படியான ஆட்சித் தன்மைக்கு 'ஜனநாயகம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விளக்கிச் சொல்லவேண்டுமானால், இன்றைய ஜனநாயகத்தில் ஒரு பார்ப்பான்தான் பிரதம (மந்திரி) ஆட்சி ஆளனாகவும் ஒரு பார்ப்பான்தான் பிரஸிடெண்டாக—ஆட்சி யாளனாக வரமுடியுமே அல்லாமல் இந்த இந்தியக் கூட்டாட்சி என்பது உள்ளவரையில் ஒரு தமிழனும் ஒருநாளும் ஆட்சிக்கு வரமுடியாது. தமிழன் சுதந்திர ஆட்சிக்கு வரும்வரை தமிழன், தமிழ்நாடு ஒருநாளும் சூத்திரத்தன்மையிலிருந்து, அடிமைக் குடியாய் இருப்பதி லிருந்து கடுகளவும் மாற்றமடைய முடியாது.

ஆகவே, இந்தப் பெருங்கேட்டிலிருந்து தமிழ்நாடும், தமிழனும் தப்பிப் பிழைத்து விடுதலை பெறவேண்டுமானால் இந்தியக் கூட்டாட்சி என்கின்ற பார்ப்பன ஏகபோக சர்வாதிகார ஆட்சியிலிருந்து விலகி, தமிழ்நாட்டைச் சுதந்திரத் தமிழ்நாடு ஆக ஆக்கிக் கொண்டாலன்றி, வேறு எக் காரணத்தாலும் எக் கிளர்ச்சியாலும் முடியவே முடியாது என்பதைத் தமிழ்மக்கள் உணரவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன். தியாகம் என்பது சிறைத் தண்டனை அனுபவிப்பதுதான் என்று பலர் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். தியாகம் என்பது தன்னலமறுப்பு என்ற பொருளைக் கொண்டதாகும்.

தன்னலமறுப்பு என்பது தனது உயிரைப் பலிகொடுப்பது என்பதை இறுதியாகக் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட தன்னலமறுப்பு கொண்ட ஒரு ஆயிரம் வீரர்கள் முன்வந்தால்தான் தமிழ்நாடு சுதந்திரத் தமிழ்நாடாக ஆகமுடியும்.

இளைஞர்கள் இதை நல்லபடி சிந்தித்து முடிவுசெய்து கொண்டு செயலில் ஈடுபட வேண்டிக்கொள்கிறேன். சிந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதற்காகத்தான் இந்த அபாயச் சங்கை ஊதுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—13-5-1960]

2. தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு வழி

சுமார் 3 கோடித் தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டிற்கு அதிகாரபூர்வமாக 'தமிழ் நாடு' என்ற பெயரில்லை.

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் (States Re-organisation Commission) அறிக்கை வெளிவந்தவுடன் நான் பதறிப்போய், பெயரிடுவது பற்றி 12-10-1955-ல் 'விடுதலை'யில் அறிக்கை வெளியிட்டேன். (இது பின்னால் வெளியிடப்படும்.)

மக்களிடையே இக் கருத்துக்கு இருக்கும் செல்வாக்கைக் கண்டும், ஆட்சியாளர்கள் இதை நிறைவேற்றத் தவறியதையும் இந்த நாட்டு எதிர்க் கட்சிகள் என்பவைகள்—அதாவது தேர்தல் ஜனநாயகப் படுத்திக்கொண்டு, இன்றும் 'ஓட்டுப் பிழைப்பு'க்குப் பயன்படுத்தத் தங்களுக்குக் கிடைத்த நல்ல கருவி—சாதனம் என்பதாகக் கருதிக்கொண்டு பிரச்சாரம் புரிந்து வருகின்றனர். 'தமிழ்நாடு' என்று பெயர் வரவேண்டும் என்ற ஆசையைவிட, அப்படி மாறி விடக்கூடாது; மாறிவிட்டால் அந்த ஆயுதமும் பிடுங்கப்பட்டுவிடும் என்ற பயத்தால் அவதிப் படுகின்றனர். அந்த எண்ணமே அவர்களுக்கு அதிகம். மனதில் நினைப்பதை அப்படியே காட்டுவதற்கு, உடல் உஷ்ணத்தைக் காட்ட தெர்மா மீட்டர் கொண்டு அறிவதுபோல், கருவி ஒன்று இருக்குமானால், அதைவைத்து நான் கூறிடும் இந்த உண்மையை அறியலாம்.

அதிலும் இங்குள்ள 'காமராஜர் அரசாங்க எதிர்ப்புக் கட்சி'களைப் பொறுத்து இது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

காமராஜர் அரசாங்கம் இதை ஏன் செய்யவில்லை என்று கேட்பதைவிட காமராஜரோ அல்லது அவரது சக மந்திரிகளோ தாங்களே பார்த்து உடனே உத்தரவு போட்டு மாற்றும் சக்தி சட்டப்படி, அதாவது அரசியலமைப்புப்படி உண்டா? என்று கேட்பதுதான் நாணய மான காரியமாகும். ஆனால், அரசியல்தான் 'அயோக்கியர்களுடைய கடைசிப் புகலிடம்' ஆயிற்றே! அதிலும் இந்த அரசியல்வாதிகளிடம் நேர்மை நாணயத்தை எதிர்பார்ப்பது நமது தவறல்லவா?

இதோ இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது: ஷரத்து (Article 3)

பார்லிமெண்டு சட்டத்தினால், (அ) எந்த இராஜ்யத்திலிருந்தாவது ஒரு பிரதேசத்தைப் பிரித்தேனும், அல்லது இரண்டோ அதற்கு மேற்பட்ட இராஜ்யங்களையோ

இணைத்தேனும் அல்லது எப் பிரதேசத்தையாவது ஒரு இராஜ்யத்தின் பாகத்தோடு இணைத்தேனும் புதிய இராஜ்யம் ஒன்றை அமைக்கலாம்.

(ஆ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் பெருக்கலாம்;

(இ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் குறைக்கலாம்;

(ஈ) எந்த இராஜ்யத்தின் எல்லைகளையும் மாற்றலாம்;

(உ) எந்த இராஜ்யத்தின் பெயரையும் மாற்றலாம்.

எனினும், இவற்றிற்கான எந்த மசோதாவும் இராஷ்டிரபதியின் சிபாரிசின் பேரில் அன்றியும் மசோதாவில் அடங்கிய பிரேரணை முதலாவது 'அ' பாகம் அல்லது 'ஆ' பாகத்தில் குறிப்பிட்ட எந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் எல்லைகளையாவது அத்தகைய இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் பெயர் அல்லது பெயர்களையாவது பொறுத்திருக்குமாயின் அம் மசோதாவைக்கொண்டு வருவதற்கான பிரேரணையைப் பற்றியும், அதன் ஷரத்துக்களைப்பற்றியும் அந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் ஒவ்வொன்றின் சட்ட மன்றத்தினுடைய கருத்துக்களை இராஷ்டிரபதி கேட்டறிந்துகொண்டால் அன்றியும் பார்லிமெண்ட் சபை எதிலும் கொண்டுவரப்படலாகாது.

எனவே, பெயர் மாற்ற அதிகாரமும், சக்தியும் டெல்லி ஆட்சிக்கே உண்டு; அதிலும் இந்நாட்டு அரசாங்க சட்டசபைகள் கருத்துத் தெரிவித்தாலும் 'இராஷ்டிரபதியோ' அல்லது பார்லிமெண்டு சபைகளோ அதற்குக் கட்டுப்படவேண்டும் என்ற நியதி அரசியலமைப்பில் இல்லையே!

ஆகவே, இதற்காகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு முட்டிக்கொள்ளுவதைவிட இந்த அநீதிக்குக் காரணமான ஆதிபத்திய டெல்லி ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதுதானே அறிவுடைமை!

எனவே, தாய்த் திருநாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரில்லையே என்று கொதிக்கும் உள்ளங்கொண்ட இளைஞர்களே! தோழர்களே! புலவர்களே! பெருமக்களே! எழுத்தாளர்களே! பேச்சாளர்களே!

நாடு பிரிவினையைத் தவிர வேறு வழி உண்டா? என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். நேர்மை விடை காணுங்கள். உண்மையில் நாட்டின் பெயர் மாற்றத்தில் யாருக்காவது நாணயமான கவலை இருக்குமானால் ஜூன் 5-ல் இந்திய யூனியன் படத்தை ஒரு கையிலும், தீப்பந்தத்தை மறு கையிலும் தூக்கி ஊர்வலம் வந்து டெல்லி ஆதிக்க ஆட்சிக்குத் தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்!

ஊர்வலம் வருவதில் யாருக்காவது வெட்கம், பயம் இருக்குமானால் அவரவர்கள் வீட்டின் முன் வாசலில் கொளுத்திவிட்டுப் பெயர்களைக் கொடுங்கள்.

['விடுதலை'–அறிக்கை—18-5-1960]

3. தேச படத்தைக் கொளுத்துங்கள்

அருமைத் தமிழ்ப் பெருமக்களே!

இந்திய யூனியன் ஆட்சி (டெல்லி ஆட்சி) இந்தி மொழியைத் தீவிரமாகப் பரப்ப 'கச்சையை' வரிந்து கட்டிக்கொண்டு தீவிரமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் 343-வது ஷரத்து சொல்கிறது: 'யூனியனின் ராஜாங்க பாஷை தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்தியாக இருக்க வேண்டும்' என்று.

அதில் குறிப்பிடப்பட்டபடி ஏற்படுத்தப்பட்ட அரசாங்க மொழிக் கமிஷன்—திரு. பி. ஜி. கெர் என்பவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது—நாம் முன்கூட்டியே சொன்னபடி 'இந்தி மொழிக் கமிஷன்' என்று கூறும் அளவு இந்திதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதையும் இங்கிலீஷிலிருந்து இந்திக்கு மாற்றங்கள் விரைவில் ஏற்படுத்தப் படவேண்டும் என்றும் எழுதிவிட்டது. பார்லிமெண்டும் அதன் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டது. நமது நாட்டைச் சார்ந்த திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள் அக் கமிஷனில் ஒரு மெம்பராக இருந்து ஆட்சேபக் குறிப்பு (dissent) தெரிவித்தபோதிலும் அவர்கள் காரியம் இதனால் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை.

ஆறு பேர் கொண்ட கமிட்டி அமைத்து அதில் டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் ஒரு அநாமதேய முஸ்லிமையும் போட்டு 4 பார்ப்பனர்கள் கூடி, கல்லுப் பிள்ளையார் மாதிரி அமர்ந்து, அசைக்க முடியாதபடி பார்ப்பன நலச்சட்டம் ஒன்றை—நவீன மனுதர்மத்தை—எழுதி அதற்கு 'இந்திய அரசியல் சட்டம்' என்று பெயரிட்டுக் கொண்டது போல், இந்திக் காரர்களையே போட்டு, பெயருக்கு ஒரு தமிழரைப் போட்டு அவரது ஆட்சேபக் குறிப்புக்கு எந்த மரியாதையும் கொடுக்காமல், இந்தி நுழைப்புக்குச் சரியானபடி அடிகோலி ஆணி அடித்துவிட்டார்கள்.

முன்பு ஒரு தடவை திருப்பதியில் இந்திய யூனியன் ஆட்சியின் தலைவரான ஜனாதிபதி திரு. ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்தித் திணிப்பிற்கு முழு ஆதரவு கொடுத்துப் பேசியதைத் தமது அடுக்கடுக்கான உத்தரவுகள் மூலம் செயல்படுத்திக் காட்டுகிறார்.

முன்பு நாம் இந்தியைப் புகுத்துவதை எதிர்த்து இந்திய யூனியன் கொடியைக் கொளுத்துவது எனப் பிரகடனம் செய்தோம்; 'இல்லை, இல்லை; இந்தி பேசாத மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியைத் திணிப்பதில்லை' என்று அரசாங்கத்தினர் உறுதிமொழி கொடுத்து, நம்மைக் கொடிகொளுத்தும் போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டனர்.

நான் அப்போதே இவர்களது நாணயத்தையும் வாக்குறுதியையும் எடை போட்டுப் பார்த்துத்தான் கைவிட வில்லை. தற்போதைக்கு நிறுத்தி வைக்கிறேன்—அதாவது ஒத்தி வைத்திருக்கிறேன் என்று அறிக்கை விட்டேன்.

பிறகு சாமர்த்தியமாக, கொடியைக் கொளுத்தினால் மூன்று வருஷ தண்டனை என்பதாக ஒரு சட்டத்தை (இந்நாட்டுச் சட்டசபைக்கு உத்திரவிட்டு)ச் செய்து வைத்துக் கொண்டு, இந்தியைத் தீவிரமாகப் புகுத்தும் 'கைங்கர்யத்தில்' டெல்லி ஆட்சியினர் இறங்கியுள்ளனர்.

மைல் கற்களில் எல்லாம் இந்தி எழுதப்படுகிறது. தமிழ்நாட்டு மந்திரிகள் ஆட்சே பித்தாலும்கூட அதற்கு டெல்லிக்காரர்கள் செவி சாய்ப்பதில்லை.

மணியார்டர், கார்டு மற்ற தபால் தந்தி ரசீதுகளில் இந்தி மயம்!

(வெளிநாடான இலங்கையில் சிங்களவர் அரசாங்கத்தால்கூட தமிழில் இவைகள் எல்லாம்—அதாவது கார்டு, ஸ்டாம்பு முதலியன இருக்கின்றன என்பது இங்கு நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும்.)

வானொலிப் பெட்டியைத் திருப்பினால் அங்கு 'ஆகாஷ்வாணி' என அலறுவதைக் காணுகிறோம்.

மத்திய இலாக்காக்களான தபால், ரயில்வே, சுங்கம் போன்ற பல துறைகளில் வேலையில் உள்ளவர்களை எல்லாம் இந்திபடித்து பாஸ் செய்யும்படி சுற்றறிக்கைகளும், தாக்கீதுகளும் தூண்டுதல்களும் இடைவிடாமல் நடந்தவண்ணமே இருக்கின்றன.

இலாக்காவினரோ இந்தி வாத்தியார் போட்டு வேலை நேரத்தில் ஒரு பகுதியை அதற்கும் தந்து இந்தி படிக்கும்படி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் எல்லாம் இந்தி கட்டாயமாகவே மாணவர்களுக்குப் புகுத்தப் படுவதுடன், இந்தியில் மார்க் வாங்காத மாணவர்கள் ஃபெயிலாக்கப்படுகின்றார்கள்.

இந்தி பேசாத ராஜ்யங்களிலிருந்து பிரதிநிதிகள் டெல்லி சட்டசபையில் மந்திரி களைக் கேள்விகேட்டால் அவர்களுக்குப் புரியாதவகையில் இந்தியிலேயே பதில்கள் தரப்படு கின்றன. இதைத் தட்டிக்கேட்டுப் பரிகாரம் தேட அவர்களுக்கு வசதி ஏதும் இல்லை.

இந்தியைப் பிரதான மொழியாகக்கொண்ட உத்திரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான் போன்ற ராஜ்யப் பிரதிநிதிகள் கணிசமான அளவு அங்கு இருப்பதால் இந்தி ஆதிக்கத்தை— ஆதிபத்தியத்தை எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்று பல பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கே தெரியும்.

மற்றும், அகில இந்தியக் கட்சிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் எந்தக் கட்சியும் இந்தித் திணிப்பை எதிர்ப்பது—பேசுவது என்பது இயலாத காரியமாகும்.

சென்ற இரண்டு வாரங்களுக்குமுன் ஜனாதிபதி போட்டுள்ள உத்திரவு—இந்தியை எப்படியேனும் சீக்கிரம் திணித்து இங்கிலீஷைப் புதைகுழிக்கு அனுப்பியாகவேண்டும் என்கிறது.

இந்தி எதிர்ப்பாளர்கள் கருத்துக்கு மதிப்புத் தருவதுபோல், பிரதம மந்திரி நேரு சிற்சில நேரங்களில் பார்லிமெண்டிலும் வெளியிலும் வாய்ப்பேச்சு—உறுதிமொழிகள் தருகிறார். அந்தப் பேச்சு அச்சுப் போட்டு வெளியே வருவதற்குள்—அச்சு மை உலருவதற்கு முன்பே உள்நாட்டு மந்திரி இலாக்காவிலிருந்தோ அல்லது 'இராஷ்டிரபவன'த்திலிருந்தோ இந்தி நுழைப்புத் திட்டம் வந்துவிடுகிறது.

ஆகவே, இந்தியைத் தீவிரமாக எதிர்க்கிறோம் என்கிற தோழர்களே! கட்சிக் காரர்களே!

இந்தியாளர்களை ஆட்சிப் பீடத்தில் கொண்ட இந்திய யூனியன் ஆட்சி இருக்கும்வரை இந்தி நுழைக்கப்படாமல் இருக்கமுடியுமா? என்று தீவிரமாக நாணயமாக யோசியுங்கள்!

நண்பர் ஆச்சாரியார் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக 'இந்தி நுழைப்பு தேச அய்க்கியத்தைக் குலைக்கும்' என்று சொல்லி வருகிறார். அதன் அர்த்தம், கருத்து எல்லாம்—இந்தியை ஒழிக்க முடியாவிட்டால் நாம் இந்தி ஆட்சியாகிய இந்திய ஆட்சியி லிருந்து பிரிந்துகொள்வது என்பதுதானே?

இந்தியை எதிர்க்க, அதன் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்ட ஆட்சியின் பிணைப்பி லிருந்து நாம் விடுபடுவதைத் தவிர வேறு வழி உண்டா? சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

மைல் கற்களில் இந்தி எழுதப்படுவதை எதிர்த்து ஒரு போராட்டம், உண்ணாவிரதம்!

'ஆகாசவாணி'யை எதிர்த்து ஒரு போராட்டம்! உண்ணாவிரதம்! மறியல்!

தபால், கார்டு, கவர்கள், மணியார்டர் கூப்பன்களில் இந்தி இருப்பதை எதிர்த்து ஒரு போராட்டம்! மறியல்! கிளர்ச்சி!

இப்படித் தனித் தனியாகக் கிளர்ச்சிகள் நடத்துவதனால் இலட்சியம் எந்த அளவுக்குக் கைகூடும்? எந்த அளவு இந்திக் கேடு நம்மைவிட்டு நீங்கும்? என்று யோசியுங்கள்! தனிப்பட்டவர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும், விளம்பரம், வோட்டு, 'தியாக முத்திரை' இவை கிடைக்குமே தவிர, காரியத்தில் அது இந்தி ஒழிப்புக்கு எந்த அளவு பயன்படும்?

எனவே, இந்தி விஷவிருட்சத்தின் ஆணிவேரைக் கெல்லி எறிய ஒரேவழிதான் உண்டு. அதுதான் நாடு பிரிவினை.

ஆகவே, அருமை இந்தி எதிர்ப்பாளர்களே! நீங்கள் வேறு எதற்காகவும் இந்திய தேசப் படத்தை எரிக்கவில்லை என்றாலும் இதற்காகவாவது கொளுத்துங்களேன்!

ஜூன் 5-ந்தேதி மாலை தயார்தானா? பல நாட்கள் அவகாசம் இருக்கிறது! நிதானமாகச் சிந்தியுங்கள்! இலட்சியத்தில் கவலை இருந்தால் தீவையுங்கள், இந்தியத் தேசப் படத்திற்கு!

['விடுதலை'—அறிக்கை—21-5-1960]

தமிழ்நாடு எதற்காக யூனியன் (டெல்லி) ஆட்சியின்கீழ் அடிமையாக இருக்க வேண்டும்? இல்லாவிட்டால் என்ன ஆகிவிடும்?

டெல்லி ஆட்சி அப்படி என்ன நீதிக்கும், நிர்வாகத் திறமைக்கும், நேர்மைக்கும், ஜனநாயகத்திற்கும், பாதுகாப்பிற்கும், பலத்திற்கும் சிறப்பான பேர்போன ஆட்சி?

1. வரலாற்றுப்படி நாம், டெல்லியுடன் இணைந்து கூட்டாக இருக்கவேண்டும் என்பதற்கு ஏதாவது ஆதாரங்கள் உண்டா? 56 நாடுகளில் நாம் ஒருநாட்டாராய் இருந்து வந்தவர்கள்!

வெள்ளைக்காரன் வியாபாரம் நிமித்தம் இங்குவந்து பல பகுதிகளில் இருந்த நாடுகளையும் பிடித்துத் தனது சவுகரியத்தை முன்னிட்டு இதை 'ஒரு குடைக்கீழ்' கொண்டு வந்தானே தவிர அதற்குமுன்பு எப்போதாவது டெல்லியை எஜமானனாகக்கொண்டு தமிழ்நாடு இருந்தது என்று சரித்திரத்தைப் புரட்டிக் காரணம் காட்டமுடியுமா? 'காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை' என்ற சொற்றொடருக்கு அய்க்கியப்பட்ட ஒரே நாடு இந்தியா என்ற பொருள் இதற்குமுன் எப்போதாவது இருந்திருக்கிறதா? அல்லது,

2. புராணப்படியோ, இதிகாசப்படியோ ஒரே நாடாக இருந்திருக்கிறதா? 'சுயம்வரத்திற்குக்கூட 56 தேசத்து ராஜாக்கள் வந்திருந்தார்கள்' என்றுதான் அவைகள் கூறுகின்றன. இராமாயணத்தில் வில் உடைப்பதற்குக்கூட பலதேச ராஜாக்கள் வந்தார்கள் என்று இல்லையா?

ஆகவே, அப்போதும்கூட பற்பல ராஜ்யங்கள், அவைகளுக்குத் தனித்தனி எல்லைகள், ராஜாக்கள் இருந்திருக்கின்றனர் என்றுதானே அறிகிறோம்?

3. பூகோளப்படி எந்த நாடாவது 2000 மைல்களுக்கு அப்பால் எஜமான் ஆட்சியை வைத்திருப்பதும், எதற்கெடுத்தாலும் அங்கு ஓடி ஓடி கருத்தும் உத்தரவும் என்ன என்று தெரிந்து, பிறகு செயலாற்றும் தன்மையைக் கொண்டுள்ளதா? எந்தவகையில் இது சரியானதாகும்?

4. கலாசாரப்படியாவது டெல்லி எஜமான ஆட்சிப் பீடர்களாகிய அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தம் ஏதாவது உண்டா?

உணவில், உடையில், மொழியில் எல்லாவற்றிலுமே ஒன்றுக்கு மற்றொன்று ஏறுமாறான நிலை!

ஆகவே, வரலாற்றுப்படியும் காரணமில்லை;

பூகோளப்படியும் காரணமில்லை;

புராணப்படியும் காரணமில்லை;

கலாசாரப்படியும் காரணமில்லை.

இந்தப்படியான எத்தன்மையாலும் நாம் டெல்லி ஆதிக்கத்திற்கு அடிமையாவதால் நமக்கு ஏதாவது சமுதாயம், பொருளாதாரம், ஆட்சிமுறை ஆகிய ஏதாவது ஒருதுறையி

லாவது பலன் ஏற்படுகிறதா? ஏற்படுகிறது என்ற நிலையிலிருந்தாலாவாது யூனியன் ஆட்சியின்கீழ் நாம் இருப்பதில் அர்த்தம் உண்டு.

இந்த ஆட்சியில் நீதி இல்லை என்பதைச் சில ஆண்டுகளுக்கு முன்பே சென்னை அய்க்கோர்ட்டில் என்மீது போடப்பட்ட ஒரு வழக்கின்போது தெளிவாக எடுத்து விளக்கி 'பார்ப்பான் நீதிபதியாய்—ஆட்சியாளனாய் உள்ளநாடு கடும்புலி வாழும் காடேயாகும்' என்று குறிப்பிட்டுள்ளேன்.

நிர்வாகத் திறமையோ நேர்மையோ இல்லை. ஒவ்வொரு வருஷமும் ஆடிட்டர் ஜெனரல் தரும் ரிப்போர்ட் ஒன்றே அதற்கு நல்ல 'சர்ட்டிபிகேட்'டாக இருக்கிறது. பலகோடி நம்மிடம் சுரண்டும் வரிப் பணம் நாசத்திற்கும் மோசத்திற்கும் ஈடாக்கப்படுகிறது.

நம்மிடமிருந்து நம்மைக் கசக்கிப் பிழிந்து வாங்கி அதை அவர்கள் டாட்டா, பிர்லா, முந்திராக்கள் இடம் கோடி கோடியாகத் தந்து, அதற்குக் கைமாறாக (காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு) இலட்சம் இலட்சமாகப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

சென்ற ஆண்டு பிரதம மந்திரி திரு. நேருவின் காரியதரிசியாக இருந்த திரு. மத்தாய் என்பவர் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு அதிபராகவும், அதைக்கொண்டு அவர் தாயார் பெயரில் 'ஜக்கம்மா டிரஸ்ட்' என ஏற்படுத்தியும், செய்த ஜகஜாலப் புரட்டுகளையும், அதைப் பூசி மெழுகி மூடி மறைக்க நேரு பட்டபாட்டினையும், கடைசியில் முந்திரா விவகாரம் போலவே அது அமிழ்த்தப்பட்டதும் நாம் அவ்வளவு சுலபமாக மறந்துவிடுவதற் குரியவைகளா?

பிர்லா, டாட்டா, டால்மியா போன்றவர்களிடம் வாங்கும் தேர்தல் நன்கொடையும் அதற்குப் பிரதி உபகாரம் என்ற முறையில் சர்க்கார் அவர்களுக்கு வழித்துறை வகுப்பதும் நாம் எடுத்துக்காட்டி வராதவைகள் அல்லவே? இந்திய யூனியன் ஆட்சியின் நிர்வாகத் திறமைக்கும் நீதிக்கும் இன்னும் வேறு எடுத்துக்காட்டுகள் வேண்டுமா?

ஜனநாயகத்திற்கும், இந்த ஆட்சிக்குந்தான் ஏதாவது சம்பந்தமுண்டா?

'எனது கொடி, அரசியல் சட்டம், ஆட்சி பிடிக்காதவர்கள் இந் நாட்டை விட்டு வெளி யேறி விடவேண்டும்' என்று பார்ப்பன சர்வாதிகாரத் திமிருடன் பேசும் ஒரு பிரதம மந்திரியைக் கொண்ட இந்த ஆட்சிக்கு ஜனநாயக ஆட்சி என்று பெயரிட்டு அழைப்பதை விட வடிகட்டிய முட்டாள்தனம் வேறு உண்டா?

அதிலும், கேரளத்தில் முறைப்படி நடந்த கம்யூனிஸ்ட் ஆட்சியைக் காலித்தனம் மூலம் கவிழ்க்க ஏற்பாடுகள் செய்து, பிறகு அதைக் காட்டி, ஒரு வரி உத்தரவின் மூலம் ஒழித்துக்கட்டினார்களே, அந்தப் பிரத்யட்ச நிலையைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

யூனியன் ஆட்சியின்கீழ் இருப்பதால் மற்ற எவையும் இல்லாவிட்டால்கூட நமக்கு பாதுகாப்பாவது இருக்கிறதா?

வருஷம் ஒன்றுக்கு சுமார் 250 கோடி ரூபாய்க்குமேல் இராணுவத்திற்குச் செலவழிக் கப்படுகிறது. அதாவது 55% இதற்குச் செலவழிக்கப்படுகிறது. ஆனாலும் பலன் உண்டா?

ஒரு பக்கத்தில் சீனாக்காரன் ஆக்கிரமிப்பு; இன்னொரு பக்கத்தில் பாகிஸ்தான் காரனிடம் தினம் தினம் உதைபடும் நிலை.

'சுண்டைக்காய்' கோவாவை இதுவரை முயற்சி செய்தும் இவர்களால் எடுத்துக் கொள்ள முடியாத நிலை; வீணாகப் பல உயிர் பலியானதுதான் மிச்சம். உலகமெல்லாம் சென்று 'தோட்டாக்கள்' பெற்று வரும் பண்டித நேருவால் கடுகளவு உள்ள இதற்குப் பரிகாரம் காண இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளாக முடியவில்லை.

கடன், கடன் என்று வெளி நாட்டாரிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சி பல கோடிகள் படிப் பிச்சை வாங்கி, காஷ்மீர் முனையிலும், இதுபோன்ற மற்ற காரியங்களிலும் அவை பாழடிக்கப்பட்டு வருகின்றன.

காஷ்மீர் பிரச்சினைக்கு மாத்திரம் இதுவரை சுமார் ரூ. 300 கோடிக்குமேல் செல வழித்தனர். 'காதொடிந்த ஊசி'யளவும் பயன் விளையவில்லை.

இந்த நிலையில் எதற்காக நாம் டெல்லி ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும்? ஆண்டு ஒன்றுக்கு 66 கோடி ரூபாய் எதற்காகக் 'கப்பம்' கட்டவேண்டும்?

சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! ஏக இந்தியத் தோழர்களே, நன்றாகச் சிந்தியுங்கள்!

தெளிவடைவீர்களானால், ஜூன் 5-ந்தேதி மாலை இந்தியத் தேசப் படத்தில் தீவையுங்கள்! நாடு பிரிக்க, மேற்கூறிய அநியாய அக்கிரமங்களைக் கண்டிக்க, அடக்கி ஒழிக்க இது ஒன்றுதான் வழி! வேறு மார்க்கம் இருந்தால் காட்டுங்கள்; வேறு வழி இருந் தால் சொல்லுங்கள். இல்லை என்றால் நீங்கள் எங்கள் வழிக்கு வாருங்கள்! நாங்கள் சொல் வதைக் கேளுங்கள்! பந்தத்தை ஏந்துங்கள்! படத்தைப் பொசுக்குங்கள்!

['விடுதலை'—அறிக்கை—22-5-1960]

10. இழிவு நீக்கக் கிளர்ச்சி

1. இழிவு நீக்கக் கிளர்ச்சி

சூத்திரர் என்கின்ற இழிவை நீக்கக் கிளர்ச்சி செய்வது என்பது சமுதாய சம்பந்த மான (சோஷியலிச) காரியமே தவிர, இதில் அரசியல் ஏதுமில்லை; மற்றும் இதில் பலாத்காரம் என்பதுமில்லை.

அதிலும், இந்த இழிவு நீக்கக் கிளர்ச்சி என்பது, உலகில் எங்குமே இல்லாத அக்கிரமக் கொடுமையிலிருந்து மனிதன் விடுதலை, மானம் பெறவேண்டும் என்பதற்காக நடத்தப் படும் கிளர்ச்சியேயாகும். இதில் எந்தவித வகுப்புத் துவேஷமோ, வகுப்பு வெறுப்போ இல்லை. நம் நாட்டில் (இந்துக்கள் என்னும்) சமுதாயத்தில் 100-க்கு 97 பேர்களாக உள்ள மக்கள்—அதிலும், படித்தவர்கள், செல்வவான்கள், உயர்தர அய்க்கோர்ட் நீதிபதிகள், கலெக்டர்கள், உப அத்தியட்சகர்கள், மடாதிபதிகள், சமீப காலம்வரை மகாராஜாக்கள், அரசர்கள், ஜமீன்தார்கள், பலகோடி ரூபாய்க்குச் சொந்தக்காரர்கள், பிரபுக்களுட்பட இவர்கள்—சமுதாயத்தில் கீழ்ப் பிறவியாக, கீழ்மக்களாக, கடவுள் என்கிற (அதுவும் அவர்க ளுடைய கடவுள்) சிலையிடம் நெருங்கக் கூடாதவர்களாக, அறைக்கு வெளியே நிற்க வேண்டியவர்களாகத் தலைமுறை தலைமுறையாகத் தடுக்கப்பட்டு, நிரந்தரக் கீழ்மக்களாக ஆக்கப்பட்டிருக்கும் கொடுமைக்கு, இழிவுக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதிலிருந்து விலக்கி, மானமுள்ள மக்களாக—ஆக்கப்பட வேண்டுமென்பதற்குக் கிளர்ச்சி செய்வதென்றால்—இது, இதுவரை செய்யாமலிருந்ததுதான் மானங்கெட்ட தன்மையும், இமாலயத் தவறுமாகுமே யொழிய, இப்போது கிளர்ச்சி செய்வதென்பது ஒரு நாளும், ஒரு விதத்திலும் தவறாகவோ கூடாததாகவோ ஆகாது; ஆகவே ஆகாது.

நீக்ரோக்களுக்கும், வெள்ளையருக்கும் உள்ள அளவு பிறவி பேதம், நிற பேதம், நாகரிக பேதம் நமக்கும் பார்ப்பனருக்கும், பூசாரிகளுக்கும் கிடையாது. அவ்வளவு பேதமுள்ள (மைனாரிட்டி) நீக்ரோக்கள் மெஜாரிட்டியான, ஆளும்சாதியாரான, பிரபுக்களான வெள்ளையர்களோடு எல்லாத் துறைகளிலும் சரிசமமாகக் கலந்து, உண்பன, உறங்குவன, பெண் கொடுக்கல்-வாங்கல், உட்படக் கலந்து புழங்குகிறார்கள். ஆனால், நம் நாட்டில் 100-க்கு மூன்றுபேரே உள்ள கூட்டம் பிச்சை எடுப்பதையும், உழைக்காததையும்,

கூலிக்குப் புரோகிதம் செய்வதையும் உரிமையாய்க் கொண்ட—பிழைப்பாய்க் கொண்ட கூட்டம், மற்றும் வாழ்வில் யோக்கியமாக, நேர்மையாக, நாணயமாக இருக்கவேண்டும் என்கின்ற தர்மம் இல்லாததும், தாங்கள் எது வேண்டுமானாலும் செய்து பிழைக்கலாம், எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்கின்ற அனுபவத்தில் இருக்கிற கூட்டம்—தங்களை 'மேல் பிறவி' என்றும், நம்மைக் 'கீழ்ப் பிறவி-இழி பிறவி'-பொது இடமாகிய கடவுள் என்கின்ற கல் சிலையிருக்கும் இடத்தில் பிரவேசிக்கக் கூடாத மிக மிக இழிதன்மை யானவர்கள் என்பதான நிபந்தனையை நம் பேரில் ஏற்றிக் கொண்டு—கட்டிடத்திற்கு, அறைக்கு வெளியில் நின்று வணங்கவேண்டும் என்பதை—நிலைக்க விடலாமா என்பது தான் கிளர்ச்சியின் 'தத்துவமாகும்'.

வேறு நாடுகளில் இப்படிப்பட்ட கொடுமையான, இழிவான தன்மை எந்தச் சமுதாயத் திற்கும் இருக்குமானால் எவ்வளவோ கொலை, பலாத்காரம், நாசவேலை நடத்தி ஒழிக்கப் பட்டிருக்கும். அப்படிக் கொடுமை இந்த நாட்டில் இருந்து வருகிறதென்றால் இது யாருடைய தவறு? யாருடைய மானங்கெட்ட ஈனத்தனம் என்று ஒவ்வொரு தமிழனையும் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன். மற்றும், இது விஷயத்தில் நாம் கிளர்ச்சி செய்து வெற்றிபெற்றால் அதனால் யாருக்கும், எந்த நபருக்கும் ஒரு தூசி அளவு நட்டமும், கேடும் இல்லாத ஒரு காரியமாகும். கடவுள்களைப் பூசை செய்கிற பூசாரி வேலை பார்ப்பனருக்குத் தான்—மேல் சாதிக்காரருக்குத்தான் உண்டு என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை யென்றாலும் கோயில் பூசை செய்பவன் பார்ப்பானல்லன்; மேல் சாதிக்காரனுமல்லன்; குருக்கள் என்கின்ற ஒரு சாதியானாவன் என்றும் சொல்லப்படுகிறது; ஆதாரங்களு மிருக்கின்றன.

அந்தக் குருக்கள் என்பவர்கள் பார்ப்பனரல்லாத சைவர்களே ஆவார்கள் என்று சில ஆதாரங்களில் இருக்கின்றன. மற்றும், 'ஒரு குறிப்பிட்ட சாதியார்' தான் பூசாரியாக இருக்க வேண்டுமென்கின்ற நிபந்தனை எந்த ஆதாரத்திலுமில்லை.

குருக்கள், அர்ச்சகர்கள் என்பவர்கள் வீட்டில் பார்ப்பனர்கள் சாப்பிடவே மாட்டார்கள்; பெண் கொடுக்கல், வாங்கலும் செய்ய மாட்டார்களாம். இந்த நிலையிலிருப் பவர்கள் பூசை செய்யும் இடத்திற்கு, மற்ற இந்து மக்கள்—பார்ப்பனரல்லாதார் மட்டும் நுழையக் கூடாது என்றால் அது எப்படி நியாயமாகும்?

தமிழ் நாட்டிலேயே பல கோயில்களில் சாத்தாணி என்கின்ற பார்ப்பனரல்லாதவர்கள் பூசை செய்கிறார்கள்; பல கோயில்களில் ஆண்டிகள், பண்டாரங்கள் என்கின்ற பார்ப்பன ரல்லாதவர்கள் பூசை செய்கிறார்கள். மற்றும், நாம் மூலஸ்தானம் என்பதற்குள் செல்வதால் அந்த இடத்திற்கோ—சாமிக்கோ எந்தவிதப் புனிதமும் கெட்டுப்போவதில்லை; சிலையைத் தொடவேண்டாமென்று வேண்டுமானாலும் திட்டம் வைத்துக்கொள்ளலாம். ஆனால், நெருங்கக் கூடாது; அந்த அறையின் படியைத் தாண்டக்கூடாது என்பது என்ன நியாயம்? உற்சவக் கடவுள்கள், சிலைகள் என்பவைகளிடமெல்லாம் எல்லாச் சாதியாரும், எல்லா மக்களும் நெருங்குகிறார்கள்.

மூலஸ்தானத்திற்கு வெளியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவக் கிரகங்கள் என்கின்ற கடவுள்கள்—மற்ற சிலைகளிடம் எல்லோரும் நெருங்குகிறார்கள்.

எனவே, இந்தக் 'கர்ப்பக் கிரகம்' என்கின்ற பூச்சாண்டிகள் பார்ப்பனரல்லாத மக்களை, இழி மக்கள்—இழி பிறப்பாளர்கள் என்றாக்கப்படுவதற்காகத்தான் இருந்து வருகிறதேயல்லாமல், மற்றபடி வேறு எந்தப் புனிதத் தன்மையையும் பாதுகாக்கவல்ல என்பதே நமது கருத்து. அன்றியும், நாம் உள்ளே சென்று வணங்குவதால் எந்தப் புனிதத் தன்மையும் கெட்டுவிடுவதில்லை என்பதும், 'உள்ளே செல்லவேண்டும்' என்கிற நமக்கும், நம் உறுதிக்கும், உண்மையில் எந்தப் புனிதத் தன்மையையும் கெடுக்கவேண்டும் என்கின்ற எண்ணம் இல்லவே இல்லை.

நமது இழிவு நீக்கப்படவேண்டும் என்கின்ற காரியத்திற்காகத்தான் இதைச் சொல்லுகிறோம்.

ஆகவே, தோழர்களே, இந்தக் கிளர்ச்சி அவசியமா, இல்லையா?

என்ன சொல்கிறீர்கள்?

அவசியம் என்றால் வாருங்கள், போகலாம்.

உடனே பெயர் கொடுங்கள்!

['விடுதலை'-தலையங்கம்—19-10-1969]

2. மூலஸ்தானப் பிரவேசம்

'மூலஸ்தானத்தில் எல்லா மக்களும் பிரவேசிக்கக் கூடாது' என்பது கோயில் சம்பந்தமாக அல்லது ஒரு பொது இடம் சம்பந்தமாக அரசாங்கத்தார் செய்துகொண்ட ஏற்பாடுதானேயொழிய, அது எந்த விதத்திலும் ஒரு மத சம்பந்தமான தத்துவமாகாது; எந்த விதத்திலும் ஒரு புனிதமான காரியமோ, யாருக்காவது மனம் புண்படுவதைத் தடுக்கும்படியான காரியமோ என்று சொல்ல முடியாது; 'கோயில் பிரகாரத்திற்குள் தாழ்த்தப்பட்ட இனமக்கள் செல்வது' எவ்வளவு சாதாரண காரியமோ, அதைவிடச் சாதாரணமான காரியமேயாகும்.

'கோயிலுக்குள்ளாகவோ, மூலஸ்தானத்திற்குள்ளாகவோ இன்ன மதத்தார்தான், இன்ன சாதியார்தான் செல்லலாம்; இவரிவர் செல்லக்கூடாது' என்பதற்கு எந்தச் சட்டமும், மத ஆதாரமும், சரித்திர நியமனமுமில்லை.

இன்ன மொழியில்தான் பூசைக்குச் சொற்கள் சொல்லவேண்டும் என்கிற கட்டாயமும் இல்லை. கோயில் நிர்வாகத்திற்கு, டிரஸ்டி பதவிக்கு இன்ன சாதியாகத்தானிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு நிர்ப்பந்தமுமில்லை; மத விரோதமும், சாஸ்திர விரோதமும், சட்ட விரோதமுமில்லை.

நான் சுமார் 20 ஆண்டு ஈரோடு தாலுக்கா தேவஸ்தானக் கமிட்டிச் செயலாளனாகவும் தலைவனாகவும் இருந்திருக்கிறேன்; 'சாத்தாணி' இனத்தாரை அர்ச்சகராக நியமித்து இருக்கிறேன்; நான் கடவுள் நம்பிக்கையில்லாதவனாக (நாத்திகனாக) இருந்து கொண்டேதான் இந்தத் தாலுக்கா தேவஸ்தானக் கமிட்டித் தலைவனாக, செயலாளனாக இருந்திருக்கிறேன்; மற்றும் ஈரோடு, பவானி, திருப்பூர், கோபி தாலுக்கா கமிட்டித் தலைவனாகவும் இருந்திருக்கிறேன். இதுபற்றிக் கலெக்டருக்கு, சிலர், நான் நாத்திகன் என்று புகார் எழுதி, அவர் என்னை அதிசயமாக, 'நாயக்கரே! நீர் நாத்திகரா?' என்று கேட்டார். 'ஆம்' என்று சொன்னேன்; அவர் சிரித்துக்கொண்டே, 'இந்துதானே!' என்று, தானே கேட்டுக்கொண்டு சும்மா இருந்துவிட்டார்.

இதை நான் 20, 30 ஆண்டுகளுக்கு முன் 'குடி அரசி'லும், 'விடுதலை'யிலும் எழுதியிருக்கிறேன்.

இன்றும் விஷ்ணு கோயில்கள் பலவற்றில் மூலஸ்தானத்திற்கும், மற்றவர்கள் நிற்குமிடத்திற்கும் இடையில் கதவு நிலைதான்—வாயிற்படிதான்—அதாவது, சுமார் ஒரு அடி அளவு இடம் தூரம்தானிருக்கிறது. 'பிரசாதம்' வாங்கக் கையை, கதவைத் தாண்டி உள்ளே நீட்டலாம். படுத்திருக்கும் 10, 12 அடி நீளமுள்ள சிலையின் தலையையும் காலையும் பார்க்க—'பக்தர்கள்' தலையையும் கழுத்தையும் கதவு நிலையைத் தாண்டி உள்ளே நீட்டலாம். பூசாரிக்குக்கூட நெற்றியில் நாமம், விபூதிதான் இருக்க வேண்டுமேயொழிய, அவன் ஸ்நானம் செய்துவிட்டு வரவேண்டுமென்றோ, சுத்தமான வேட்டி கட்டிக்கொண்டு வரவேண்டுமென்றோ திட்டம்கூடக் கிடையாது.

அவர்களில் அனேகர் 'மாமா'வாக இருப்பார்கள் என்பதோடு, தாசிகளிடம் சங்கமம் 'இதழ் அமுதம்' பருகுபவர்களாகவும் இருப்பார்கள். மாலையில் நாம் கோயிலுக்கு அனுப்புகிற சண்பகப் பூ, மனோரஞ்சிதப் பூ உள்ள பூமாலையில் உள்ள பூ—இரவு 10 மணிக்குத் தாசி வீட்டிற்குப் போனால், அந்தத் தாசியின் தலையில் பார்க்கலாம். (அந்தக் காலத்தில் இந்தப் பூக்கள் எங்கள் நந்தவனத்தில் மாத்திரம்தான் உண்டு.) ஆக, மூலஸ்தானப் பிரவேசத்திற்கும், கர்ப்பக் கிரகப் பிரவேசத்திற்கும் சட்டம், சாஸ்திரம் ஒன்றும் கிடையாது. ஆச்சாரம், அனுஷ்டானம் என்பதற்கும் எந்தத் திட்டமும் கிடையாது —இந்து மதம் என்பதற்கே கிடையாது.

நெற்றிக் குறி என்பதும் அதிகாரத்தாலும், செல்வாக்காலும் ஏற்பட்டதேயொழிய, அதற்குச் சட்டமோ, சாஸ்திரமோ, நிர்ப்பந்தமோ கிடையாது.

ஆகவே சாதிபேதம், மதபேதம் என்பவை அனுஷ்டானத்திலும் இல்லை; சட்டத்திலும் இல்லை; சாஸ்திரத்திலும் இல்லை.

உண்பன, தின்பன வகையிலும்; பெண் கொடுப்பன, கொள்வன என்பவைகளிலும் சட்டப்படியே தடை நீக்கப்பட்ட பிறகு—'ஒரு நிலக் குறிப்பான இடத்திற்கு—மூலஸ்தானத்திற்கு' மட்டும் உண்டு என்றால், இது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதோடு, இதனால் சமுதாய இழிவும் அமுல் படுத்தப்படுவதென்றால் எவ்வளவு மானக் கேடான காரியம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனவே, ஆட்சியாளர் இதைப் பகுத்தறிவோடு கவனிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—18-10-1969]

3. இழிநிலை நீக்க மாநாடு

நண்பர்களே! நாம் நமது நாட்டில் நாலாம் சாதியார்—சூத்திரர்—பார்ப்பனரின் தாசி புத்திரர்கள் என்றும், சில அனுபவங்களில் தீண்டப்படாத, நெருங்கப்படாத இழிபிறவி மக்கள் என்றும் 'இந்து' மத சாஸ்திரங்களில் தர்மமாகவும், 'இந்து லா' என்னும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டும், அதை அனுசரித்தே கோர்ட் தீர்ப்புகளும் இருந்துவருகின்றன. அந்தப் படி அமுல் நடத்தப்பட்டும் வருகின்றன.

இந்த நிலை, இந்த அமைப்பு, இந்த அனுபவம் மாற்றப்படவேண்டும் என்பது இன்றையத் தமிழர்களின் பெரும்பான்மையோரின் ஆவல்.

இந்த நிலை அரசியல் நிர்வாக சட்டத்திலும், நீதி சட்டத்திலும் இடம் பெற்று இருக்கின்றபடியால், அரசாங்கத்துடன் போராடித்தான் நீக்கிக் கொள்ளத் தக்கதாக இருக்கிறது.

நம்நாடு, முஸ்லிம் ஆட்சியிலோ, (அய்ரோப்பிய) கிறிஸ்தவருடைய ஆட்சியிலோ இருக்குமானால் இந்த நிலை வெகுநாளைக்கு முன்னதாகவே ஒழிக்கப்பட்டிருக்கும். அப்படிக்கில்லாமல், (பார்ப்பனருடைய) 'இந்து'க்களுடைய ஆட்சியில் இருப்பதால், இதை ஒழிக்கப்படும் வரையில் மாற்ற முடியாததாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இதற்குக் காரணம், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள்—கிறிஸ்தவர்கள் தவிர்த்து, மற்ற எல்லா மக்களும் அதாவது, பவுத்தர், சீக்கியர், சமணர், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள் மற்றும் பிள்ளையார் சிலையை உடைத்தவர்கள், இராமாயணம் கொளுத்தியவர்கள், இராமனை, முருகனை, வெங்கிடாசலபதியை (கடவுள்களை)ச் செருப்பால் அடித்தவர்கள் முதலிய எல்லோருமே 'இந்து'க்கள்தான் என்று சட்டமும், சட்ட நிபுணர்களால் கோர்ட் தீர்ப்புகளும் இருக்கின்றன. இந்து என்கின்ற பெயரிலிருந்து விலகிக்கொள்ள நமக்கு உரிமையில்லை; இடமும் இல்லை.

அதனால், உலகம் உள்ளவரை, இந்திய ஆட்சியில் தமிழ்நாடு ஆட்சியின் கீழ் குடிமகனாய் இருப்பவர்கள், முஸ்லிம்-கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் யாவருமே சூத்திரர், நாலாம் சாதியார், பார்ப்பனரின் தாசி புத்திரர்கள் என்னும் தன்மையில் இருக்கிறோம்.

இதோடு கூடவே, நம் கோவில்களுக்குப் போகிற எவரும் எந்தக் கோவிலுக்குப் போவதானாலும், சாமி இருக்கிற அறைக்கு (கர்ப்ப கிரகத்திற்கு) வெளியில் நின்றுதான் சாமி தரிசனமோ, மற்றதோ செய்யவேண்டியிருக்கிறது. காரணம், நாம் கீழ்சாதிக்காரர்கள். நாம் தொட்டால், நெருங்கினால் சாமி தீட்டாகிவிடும். ஆதலால் எட்டி நிற்கவேண்டும்; வெளியில் நிற்கிறோம். எனவே, நமக்கு இந்த இழிநிலை போக்கப்பட வேண்டாமா என்பதுதான் நான்நமது மக்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் விண்ணப்பம்.

இன்றைய நமது இந்திய ஆட்சிக்கு உட்பட்ட தமிழக அரசுக்கு இது விஷயத்தில் உள்ள சட்டத் தடைகளை நீக்க சக்தி போதாது. இந்தியாவில் தமிழ்நாடு தவிர்த்து, மற்ற நாட்டு மக்கள் அனேகமாக இசைய மாட்டார்கள். என்றாலும், நாம் இந்த இழிவுகளை இனி பொறுத்துக்கொண்டு இருக்கமாட்டோம். எப்படியாவது, என்ன செய்தாவது, என்ன கஷ்ட நஷ்டங்களை ஏற்றாவது, அனுபவித்தாவது இந்த இழிநிலையை ஒழித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்காக, இதுவரை செய்துவந்த பிரச்சாரம் எதுவும் நமக்குப் பயன் அளிக்கவில்லை. ஆதலால், இப்போது நாம் இதற்காக என்றே ஒரு மகாநாடு 'சூத்திரன்—தாசிமகன் என்கின்ற இழிநிலை நீக்க மாநாடு' என்னும் பெயரால் சென்னையிலோ, திருச்சியிலோ ஒரு மாநாடு கூட்டி, அதில் நமது இந்திய அரசாங்கத்திற்கு எதிராக நமது வேண்டுகோள் என்பதாக விளக்கி, ஒரு தீர்மானமும், அந்த வேண்டுகோளை நிறைவேற்றப்படவில்லையானால், நமது முயற்சி என்னவென்பது பற்றி ஒரு தீர்மானம் செய்ய உத்தேசித்தும் இருக்கின்றோம்.

இந்த மாநாடு டிசம்பரில் கூடுவதாக என்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் துவக்கி இருக்கிறேன். மாநாடு நடத்தவும், கிளர்ச்சி நடத்தவும் பெருந்தொகை தேவைப்படும். அது நன்கொடை மூலமும், டிக்கெட் விற்பனை மூலமும் மற்றும் பலவழிகளில் சேகரிக்கவும் முயற்சிக்கிறேன்.

தமிழ் நாட்டில் ஆளுங்கட்சியில் உள்ள இயக்கத் தோழர்களும், மற்றும் இந்தக் கொள்கையை ஏற்கும் மற்ற எல்லாக் கட்சித் தோழர்களும் வேண்டிய முயற்சி செய்து உதவ வேண்டுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—14-10-1973]

பெரியார்

ஈ. வெ. ரா. சிந்தனைகள்

THOUGHTS OF PERIYAR E. V. R.

3

பதிப்பாசிரியர் : வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
திருச்சிராப்பள்ளி-2.

போன் : 0422 – 2572635
செல் : 936 2970121

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன் பி.இ., எம்.பி.ஏ., எஃப்.அய்.இ.
(மருத நாடன்)
தலைமைப் பொறியாளர் மி.வா. (ஓய்வு)
தலைவர் : சிந்தனையாளர் கழகம்
தமிழ் தமிழர் ஒருங்கிணைப்பாளர்
அமைப்பாளர் : தொழில் நுட்ப வல்லுநர் குழுமம்

18/12ஏ, அண்ணாநகர், ஆறுமுகம் லே–அவுட்,
பூளைமேடு (அஞ்சல்), கோயமுத்தூர் – 641 004.

இன்று கோவையில் பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். இவர் மின்வாரியத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். தந்தை பெரியாரோடு இணைந்து தமிழகம் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். இவரது முயற்சியால் திரு.வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2200 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்த மூன்று தொகுதிகளும் பெரியாரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு ஆகும். பெரியாரின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்துகிற அரிய நூலாக இன்றளவும் இந்த நூல் போற்றப்படுகிறது.

பொறிஞர். கு.ம.சுப்பிரமணியம் எழுதிய கவிதை நூலை இணையத்தில் வலையேற்றுவதற்காக அவரைச் சந்தித்தபோது பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற நூலைப்பற்றி அவரிடம் பேசினேன். அந்த நூலை வெளியிட்ட நினைவலைகளை அவர் விளக்கினார். நூல் வெளியீட்டிற்காப் பட்டபாடுகள் என் கண்முன் நிழலாடியது. அவர் காட்டிய தந்தை பெரியாரின் உருவம் என் முன் நிழலாடியது. பகுத்தறிவு விதைப்பிற்காகத் தன்வாழ்நாளின் இறுதிவரை பேசியும் எழுதியும் வந்த அவரது உறுதி தெரிந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பினை இணையத்தில் வலையேற்றினால் உலகமக்கள் வலைஇறக்கிப் படித்து மகிழ்வார்களே என்று சொன்ன பொழுது, நூலை வெளியிட்ட சிந்தனையாளர் கழகத்தின் தலைவர் திரு. கு.ம. சுப்பிரமணியம் அவர்கள் மகிழ்வோடு, தன் கைப்படியாக வைத்திருந்த அந்த முதன்மைப் படியை அன்போடு எடுத்து வந்து கொடுத்தார்.

இணையத்தில் வெளியிடுங்கள், அய்யாவின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவட்டும் என்று அவர் கொடுத்தபோது நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்தபோது, தாராபுரம் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கமாகப் படித்து நெஞ்சில் பதிந்து என்னை வழிநடத்திய அந்த நூலை நான் படவடிவக் கோப்பாக்கும் வாய்ப்பு கிடைத்தது கண்டு நெஞ்சு நெகிழ்ந்தேன்.

ஆனைமுத்து அய்யா அவர்கள் பெருமுயற்சியில் திரட்டிச் சேகரித்த பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற இந்த மூன்று தொகுதிகளும் உலகம் முழுவதும் உள்ள நம் தமிழ் மக்களுக்கும் இனிவரும் அடுத்த தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக நின்று பகுத்தறிவூட்டும் என்று நம்புகிறேன்.

bghs;shr;rp erd; (09-06-2011)
jkpHk;tiy (www.thamizham.net)

பெரியார்
ஈ. வெ. ரா. சிந்தனைகள்

(பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின்
சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்)

மூன்றாம் தொகுதி

பதிப்பாசிரியர்

வே. ஆனைமுத்து

திரு பொன்னாச்சி நாதன்
அவர்களுக்கு [illegible]
வைக்க இந்நூலை அளிக்கின்றோம்.
[illegible]
9-6-2011.
[illegible]

வெளியீடு :
சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி-2

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (மூன்றாம் தொகுதி)

முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974

கபீர் அச்சகம், சென்னை—600005

THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

VOLUME III

Compiled and Edited by
V. ANAIMUTHU

Published by
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

Thoughts of Periyar E. V. R.—Volume III
First Edition, Published on 1-7-1974

Kabeer Printing Works, Madras—600005

பகுதி V

செய்திகள்

Price One Anna. Reg. No. M. 2426.

Annual Subscription:—
Inland: Rs. 4.
Foreign: Rs. 5, 8 sh., $ 2.

Edited by
E. V. Ramasami.
S. Ramanathan.

revolt

PUBLISHED EVERY WEDNESDAY.

VOL. I. 12th DECEMBER 1928. NO. 6

The Call of Science.

What is the difference between the wise man and the fool? The wise man is not infallible, nor is the fool necessarily a blunderer. Both are liable to err. Both commit mistakes. But the wise man learns from his mistakes. The fool does not. Science is an attempt to draw the attention of man to the mistakes he has committed. Science is a call to mankind to learn by past failures. He who heeds the call of science is wise. He who does not is otherwise.

Elsewhere we publish an article by "Simha" setting forth the changes in our method of living necessitated by recent advances in science. The positive measures advocated by Eugenics may not win immediate approbation in the circumstances prevailing in our country, however desirable they may appear from a theoretic point of view. But there is negative warning conveyed by Eugenics which we desire our readers to clearly understand. Investigations relating to laws of heredity have not only indicated the directions in which humanity should advance if it would improve its breed but they have also brought into clear relief one false step we took in the past. One of the most serious of blunders that we have been guilty of is an inculcation of belief in the heritability of acquired characters. No other idea has created such bad blood between friends and neighbours or has produced so much unnecessary suffering and misery. Wars have been fought to enlist its application to one set of facts rather than to another, causing tremendous loss of lives and untold sufferings to the nations.

Pride of descent is born of our vanity. We like to think of ourselves as superior beings. We delight in imagining that others are our inferiors. The sense of our own supreme worth is so pleasing to us that we desire to display it to the public gaze. But no human failing can find vent in public unless it is reduced to a dogma and sanctified as a creed. We have therefore exalted our prejudice into a doctrine. We have postulated that our own superiority is such a magnificent affair that we could not have acquired it in a single birth. Our forefathers through the generations accumulated the treasure for us; our descendants will continue to add to the store. Heredity is made to pile up human qualities even as the miser who adds up one hard earned coin to another, never losing a farthing, ever on the look-out to increase the hoard.

But science has stepped in and has expropriated our superiors from this ill gotten wealth. It has been established that acquired characters are not inherited. A genius may be born of humble parents. The shastri, learned in the scriptures, may beget a son with an antipathy to the sacred lore. The Devadasi may give birth to a Savithri. A Gandhi may rise from among the Banias. It is no longer possible to construct intellectual dreadnaughts. The child at the Agraharam is not the superior of his contemporary in the Cheri, either in intellectual ability or in moral worth. Both are liable to error as both are liable to catch measles. The mighty edifice of Varnashrama has crumbled like a house of cards. The orthodox ostritches will not face facts. But let the intelligent reader learn wisdom from the conclusions of science.

Racy.

This week 'G. R.' is giving our readers a treat. 'G. R.' is a blue blooded Gandhiite. But he is in a fighting mood, and active Khadi service is keeping him in good form. His attempt to give us "a hard hit" has fallen wide of the mark. But he has deigned to praise us and has mad us blush. 'G. R.' has fallen in love with 'Sak'. He is right. For 'Sak' is a fine swordsman. But his sally on Communal representation has not done him or his keen sword full justice.

Our contention is that *separate* electorates have an equal claim to be considered along with *joint* electorates in any scheme of organising constituencies in our country. We did not maintain, as 'G. R.' wrongly supposes we did, that *communal* electorates are the best method of electing representatives. *Joint* electorates are synonimous with *territorial* electorates. But *separate* electorates are not indentical with *communal* electorates. A communal electorate is a separate electorate. But a separate electorate need not be a communal one. We

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 7–11–1928-ல் நிறுவப்பெற்ற, Revolt-ரிவோல்ட் ஆங்கில வார ஏட்டின் 6-ம் இதழின் முகப்பு அட்டை

Price One Anna. Reg. No. M. 2426.

Annual Subscription :—
Inland: Rs. 4.
Foreign: Rs. 5, 8 sh., $ 2.

revolt

Edited by
E. V. Ramaswami

Published Every Sunday.

VOL. 2. ERODE, 19th JANUARY 1930. NO. 3.

NOTES AND NEWS.

An Inter-Caste Self-respect Marriage

At Erode.

Mr. E. V. Ramasami's mansion at Erode witnessed the celebration of the self-respect inter-caste marriage between Mr. S.Guruswami, Sub-editor, "Revolt" and Srimati T. S. Kunjitham, Student, B. A. Senior, Queen Mary's College. There was a very large gathering of ladies and gentlemen, besides the members, workers, leaders and other followers and admirers of the self-respect movement. The marriage was conducted wholly under self-respect methods, there being neither the usual ceremonies, nor the intermediary. This is the first instance of a member of the "Mudaliar" community which in South India is next to the Brahmins in orthodoxy and privilege of birth, entering into an inter-caste marriage.

Among those who sent messages of congratulations are, Hon. Mirza S. Ismail Sahib Bahadur, Dewan of Mysore, Hon. Dr. P. Subbarayan, Chief Minister, Hon. Sir Muhamad Usman Sahib Bahadur, Home Member, Hon. S. Muthia Mudaliar, Health Minister, Dr. P. Varadarajalu Naidu, Editor, "Tamil Nadu", Miss De La Hey, Principal Queen Mary's College, Mr. R. K. Shanmugham Chettiar, M.L.A., Janab. M. Jamal Muhammad Sahib, Sir A. P. Patro, Mr. K. Chidambaranatha Mudaliar, Shiyali, Mr. K. Aiyappan, Editor "Sahodaran", Mr. W. P. A. Soundrapandya Nadar, Mr. T. K. Chidambaranatha Mudaliar, M.L.C., and Mr. P. T. Rajan, M. L. C.

In the evening there was held a public meeting under the presidency of Mr. S. Ramanathan M.A. B.L., when the married couple besides others addressed the gathering on "Social Reform".

* * *

NEVER-NEVER GIRLS.

Twenty young women who have sworn never to wed have formed themselves into the "Never, Never Club," the one and only rule of which is that they shall remain spinsters till the end of their days!

"You may think we are joking," said Miss May Gridley, the founder and Seceetary, in an interview, "but we are in deadly earnest." "Don't think that we are man-haters, or soared spinsters, or have been crossed in love. Not a bit of it." Miss Gridley explained that all the members were in good positions self-supporting and likely to continue so and they were of the opinion that by marrying they would be robbing domestically inclined girls of their chance of happiness. "After all," she said, "there are something like two million surplus women. It is the duty of those of us who can find for ourselves not to marry.

"Our membership includes confidential Secretaries and clerks, buyers, a traveller, typists and so on. All are earning good money, and are competent enough to be almost certain of regular jobs with the opportunity of putting away for a rainy day."

"And if a member falls in love ?,"

Miss Gridley smiled. "That will be our business," she said.

* * *

THE CHIVALROUS HUSBAND.

The world has become accustomed to reading of men who, in their wills, insert clauses penalising their widows should they re-marry. But Mr. Edward E. Mengens, of 81, Harborne Road., Eggbaston, a business man who died three months ago, leaving £32,264, was a refreshing exception. Instead of enjoining his widow to refrain from taking another partner, he urged her, in his will, to get married again and as quickly as possible! A note written at the bottom of Mr. Mengen's will, reads as follows:—

"In the event of my wife marrying again, I wish it to be known to all my friends and

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை ஆசிரியராகக் கொண்ட Revolt-ரிவோல்ட் ஆங்கில வார ஏட்டின் தொகுதி 2, இதழ் 3-ன் முகப்பு அட்டை

1. அறிமுகச் செய்திகள்

1. 'ரிவோல்ட்' (Revolt)

'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றைச் சென்ற ஆறாம் தேதி செவ்வாய்க்கிழமை பட்டிவீரன்பட்டி திரு. சவுந்தரபாண்டிய நாடார் அவர்களைக்கொண்டு திறப்புவிழா நடத்தி, 7ஆம் தேதி புதன்கிழமை, 'முதல் இதழ்' வெளிப்படுத்திவிட்டோம். இனி அதை ஆதரித்து அதன் கொள்கைகளை வெற்றிபெறச்செய்து வைக்கவேண்டியது பொதுமக்களின் கடமையாகும்.

'ரிவோல்ட்' பத்திரிகையின் ஆரம்பத்தின் உத்தேசமெல்லாம் நமது நிலைமையையும் கொள்கையையும் தமிழ்மக்கள் தவிர மற்ற மக்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என்கிற ஆவலேயாகும். நமது நிலைமை சென்னை மாகாணத்திலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளை நாட்டு பாஷையாகக்கொண்ட பல ஜில்லாக்களுக்கே தெரியவில்லை என்றால்—வெளி மாகாணங்களுக்கும், வெளி தேசங்களுக்கும் எப்படித் தெரிந்திருக்கமுடியும்? உதாரணமாக, ஒரு சமயத்தில் இந்தியா மந்திரியுடன் திரு. டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, 'சென்னை பார்ப்பனரல்லாதார்களுக்காகப் பெரிய உத்தியோகங்கள் அளிக்கப்படவில்லை' என்று சொன்னபோது, 'திரு. B. N. சர்மா என்பவர், இந்திய அரசாங்கத்தில் நிர்வாகசபை மெம்பராயிருந்து 6,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரே, அது போதாதா?' என்று இந்தியா மந்திரி சொன்னாராம். அதற்கு திரு. டாக்டர் நாயர் அவர்கள், 'நான் இந்தியாவைவிட்டுப் புறப்படும்வரை திரு. B. N. சர்மா அவர்கள் பார்ப்பனராயிருந்தார்; நான் புறப்பட்டபிறகு அவர் ஏதாவது, பார்ப்பனரல்லாதாராய்விட்டாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை; ஆதலால், தயவுசெய்து அவர் பார்ப்பனரல்லாதாராக ஆகிஇருப்பதாய்த் தங்களுக்கு வந்த செய்தியைக் காட்டுகிறீர்களா?' என்று கேட்டாராம். அதன்பிறகு அந்த இந்தியா மந்திரி திடுக்கிட்டு, 'நான் இத்தனை நாளாக, அவரைப் பார்ப்பனரல்லாதார் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன்; இப்போது தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாய் இருக்கின்றது' என்று சொன்னாராம்.

அதுபோலவே, சென்னையில் சென்ற வருடம் நடந்த காங்கிரசுக்கு, கல்கத்தாவிலிருந்து வந்த முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. கோஸ்வாமி என்கிறவரோடு நாம் பேசிக்கொண்டிருந்தபோது, 'சென்னை மாகாணத்தில் தெருவில் நடக்கக்கூடாதவர்களும், கோயிலுக்குள் போகக்கூடாதவர்களும், தொடக்கூடாதவர்களும், நிழல் மேல்படக்கூடாதவர்களும் இருக்கின்றார்களே, அவர்களைப்பற்றித் தங்கள் அரசியல் திட்டத்தில் என்ன கவலை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டபோது, அவர் ஆச்சரியப்பட்டு, 'அப்படி ஒன்றும் இருப்பதாக எனக்கு இதுவரை தெரியவே தெரியாது; இது உண்மையா?' என்று, பக்கத்தில் இருந்த திரு. ஆர். கே. சண்முகம் செட்டியாரைக் கேட்டார். அதற்கு திரு. சண்முகம் செட்டியாரவர்கள் சிரித்துக்கொண்டே, 'இதற்குச் சாட்சிக்காக அதிக தூரம் போகாதீர்கள். நானே சில கோயிலுக்குள் போகக்கூடாத சாதி என்பதைச் சேர்ந்தவன். அய்க்கோர்ட்டு வரையில் விவகாரம் செய்து பார்த்தும் எங்களை அந்தக் கோயிலுக்குள் போகக்கூடாத சாதியிலேயே சேர்த்துத் தீர்ப்புப்பெற்றுவிட்டார்கள். எனவே, இனி உங்களுக்கு ஏதாவது சந்தேகமுண்டா?' என்று கேட்டார். பிறகு திரு. கோஸ்வாமி பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

இதுபோலவே, பல உதாரணங்கள் எடுத்துக்காட்டலாம். எனவே, நம் நிலைமையையும், தேவையையும் வெளிநாட்டார்களுக்கு, உள்ளங் கை நெல்லிக் கனிபோல தெரியப்படுத்த வேண்டுமானால் தாட்சண்யமும், பயமும், சுயநலமும் அற்ற தன்மையில் தைரியமாய்

வெளிப்படுத்தக்கூடிய ஒரு சாதனம் இருந்தாகவேண்டும் என்ற கருத்தைக் கொண்டே, 'ரிவோல்ட்'டை ஆரம்பித்துவிட்டோம். அதன் கொள்கையைப்பற்றி நாம் அதிகமாகச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

முக்கியமாக அரசியல் துறையில் உழைக்கவேண்டும் என்பது அதன் கவலையல்ல. ஆனால், அரசியல் அயோக்கியத் தனங்களைத் தைரியமாயும், தாராளமாயும் வெளியாக்கி விட வேண்டுமென்பதே, 'ரிவோல்ட்'டின் பெருங் கவலைகளில் ஒன்றாகும். அதுபோலவே, சாமியைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் அதற்குச் சிறிதும் கவலையில்லை. ஆனால், அவற்றின் பேரால் நடைபெறும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் அடிமைத் தன்மைகளையும் அறியாமையையும் வெளியாக்குவது எல்லாவற்றையும்விட முக்கியமான தாகும். சுருக்கமாகவும், மொத்தமாகவும் கூறுமிடத்து, இதற்கு முன் ஒரு தடவை—அதாவது 'ரிவோல்ட்' பத்திரிகையை அரசாங்கத்தாரிடம் பதிவு செய்துகொண்ட சமயத்தில், அதன் கொள்கை என்பதாக அரசாங்கத்தார் அறிய விரும்பியபோது தெரிவிக் கப்பட்டதையே மறுமுறையும் தெரிவித்து இதை முடித்துவிடுகின்றோம்.

அதாவது—

'ரிவோல்ட்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நாம் பதிப்பாசிரியராயிருந்து நடத்தும் 'குடிஅரசு' என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க்கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. 'ரிவோல்ட்' என்கின்ற வார்த்தைக்கு நாம் எடுத்துக்கொண்ட அர்த்தம் 'கட்டுப் பாட்டை உடைத்தல்' என்பது. அதாவது, மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி, மற்றும் எவைகளி லானாலும் சரி; அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப் பாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும், மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாட்சிப்படி சாத்தியமான வழிகளில் பிரச்சாரம் செய்வதே அதன் நோக்கம்' என்பதாகும்.

இதற்கு முக்கிய பத்திராதிபராக திரு. எஸ். இராமநாதன் எம்.ஏ., பி.எல். அவர்கள் இருந்து வருவார். நாமும் அதில் பங்கு எடுத்து வருவோம். எனவே, இதை வாலிப உலகம் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். எம் வாலிப நண்பர்கள் ஆங்காங் குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாதாரராய்ச் சேருவதுடன், ஒவ்வொருவரும் இது சமயம் மூன்று சந்தாதாரர்களுக்குக் குறையாமல் சேர்த்துவிட்டு மறுகாரியம் பார்ப்பது என்கின்ற உறுதியைக்கொள்ள வேண்டுகின்றோம்.

['குடிஅரசு'—அறிக்கை—**11-11-1928**]

2. 'முன்னேற்றம்'

'முன்னேற்றம்' என்னும் பத்திரிகை திரு. வெ. சி. நாராயணசாமி அவர்களை ஆசிரியராகவும், திரு. ஜி. எஸ். சாரங்கபாணியவர்களை வெளியிடுவோராகவும் கொண்டு மலாய் நாட்டில் சிங்கப்பூரிலிருந்து வெளிவருவதாகும். இப் பத்திரிகையின் ஐந்து மலர்களைப் பார்த்ததில் இதன் கொள்கைகள் முற்றிலும், மக்களைத் தொன்றுதொட்டுள்ள மூடப் பழக்க வழக்கங்களாகிற படுகுழியினின்றும், சாதி மதங்கள் என்கின்ற கொடிய விலங்குகளினின்றும், பார்ப்பனீயக் கொள்கைக்காரர்களின் பெருந் துன்பங்களினின்றும் மீட்டு வாழ்விக்கும்படியானதும், ஒப்பற்ற சுயமரியாதைத் தத்துவங்களையும் கொண்ட தாகவே இருக்கின்றன. இப் பத்திரிகையானது தன் பெயருக்கேற்ப மக்களின் முன்னேற் றத்திற்கான விஷயங்களையே கொண்டு விளங்குவதால், இப் பத்திரிகையானது நம் மக்களுக்கு இன்றியமையாததோர் நற்றுணையாகும் என்பது எமது அபிப்பிராயம்.

ஆனால், தற்காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்களெல்லாம் 'பத்திரிகை', 'பத்திரிகை' என்பதாக ஏற்படுத்திக்கொண்டு மக்களை உபத்திரவிக்கிறார்கள் என்று சிலர் எண்ணவோ, சொல்லவோ செய்யலாம். ஆனால், நாம் அதைப் புத்திசாலித்தனமானவை களென்று மதிக்கமாட்டோம். ஏனெனில், ஒரு நாடோ, ஒரு சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், அதன் பரப்பெங்கும் பத்திரிகைகளும், பாடசாலைகளுமாகவே மிளிர வேண்டும். இதை உத்தேசித்தேதான், சில அறிவிற்சிறந்த பெரியார்கள் எந்தச் சமூகத்தை யேனும், எந்த நாட்டையேனும் முன்னேற்றமடைந்திருக்கிறதா, இல்லையா?—எனத் தெரிந்துகொள்ள வேண்டுமானால்—அவர்கள் அந்த நாட்டினரையோ சமூகத்தினரையோ கண்டால், 'உங்களுக்கென எத்தனை பத்திரிகைகள்? எத்தனை பாடசாலைகள்? எத்தனை கலாசாலைகள் இருக்கின்றன?' என்னும் கேள்வி கிளத்துகின்றனர். ஆகவே, பத்திரிகைகளின் எண்கள் மிகுவதைத் தாழ்வாக நினைக்கவோ, சொல்லவோ சற்றும் இடமில்லை.

ஏனெனில், பத்திரிகைதான் முன்னேற்றமடையக் கருதும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஆசான்; பத்திரிகைதான் மக்களுக்கு அறிவையூட்டி வளர்க்கும் தாயினு மினியது; பத்திரிகைதான் புத்தி புகட்டும் நற்றந்தை; பத்திரிகைதான் ஆபத்துக்கு உதவும் நற்புதல்வன்; பத்திரிகைதான் உண்மைத் தோழன்; அதுவே அம்புலன் களையும் ஒருமித்து இன்பம் நுகரச் செய்யும் உத்தம மனைவி; அதுவே பெருஞ் செல்வம்; அதுவே நெருங்கிய சுற்றம்; அதுவே இன்பந் தரும் பெரு வீடு; அதுவே நோயகற்றும் சஞ்சீவி; அதுவே இன்னமுது; அதுவே உண்மைச் சேவகன். அது மக்கள் வசிக்கும் ஒவ்வொரு இல்லந்தோறும் வந்து, சுயேச்சையும், சுவாதீனமுமற்று அஞ்ஞானத்திலும் சோம்பலிலும், பசியிலும், தரித்திரத்திலும் உறங்கிக் கிடக்கும் மக்களை எழுப்பி உய்விக்கும் நற்றுணைவன்.

வெறும் நாட்டுச் செய்திகளையே தமக்கு அணியாகத் தாங்கியும், ஒரு சில தொகை யினரான கூட்டத்திற்கு மட்டில் நலத்தைத் தருவதாகவும், ஆசிரியர்களின் கியாதி, இலாப பூஜைகளுக்காகவும், மக்களின் பொருட்களையும் அவர்களின் அருமையான பொழுது களையும் கொள்ளைகொண்டு தமது ஒருசாணை நிரப்பிப் பெருமைச் சின்னங்களைப் பரிமாறிக் காலத்தைக் கழித்துவரும் சில போலிப் பத்திரிகைகள் போன்றல்லாமல், ராயல் 1-க்கு 16-ல் 20 பக்கங்கள் கொண்டு, மலர்கள் தோறும் கண்கவரும் தலைவர்களின் சித்திரப் படங்களாலும், நல்ல பதிப்புள்ள நல்ல தமிழில் பண்டித பாமர ரஞ்சனமான முறைகளில் உயர்ந்த அனுபவமும் பரோபகாரமுமுள்ள அறிவாளிகளால் எழுதப்பெற்ற கட்டுரைகளைக் கொண்டதோடு, ஒவ்வொரு மலர்களிலும் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வாக்கியத் திலும்—சுயமரியாதைத் தத்துவத்தின் தேன் துளிகள் கசிந்து ஒழுகும் மாதிரியிலமைந்து ஒளிர்வதால் இக் காலத்துக்கேற்ற ஓர் நற்பயனென மக்கள் யாவருமிதை ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

['குடி அரசு'—மதிப்புரை—3-3-1929]

3. 'சுயமரியாதைத் தொண்டன்'

தோழர்களே!

சுயமரியாதைப் பத்திரிகைகள் ஒவ்வொரு கிராமத்திலும் பரவவேண்டும்; இல்லா விடில் நாடு முன்னேற்றமடையாது. பத்திரிகை படிப்பதற்குக் கல்வி அவசியம்; அக் கல்வியை மக்களுக்குப் பரப்பும்படியான பொறுப்பும் சவுகரியமும் ஜில்லாபோர்டு தலைவர் களுக்கு உண்டு. எல்லோரும் 'சுயமரியாதைத் தொண்டனை' ஆதரிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிப்பாளையத்தில், 9-4-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-4-1929]

4. நூல் முன்னுரை

நான் திராவிடர் கழகத்தை அது 'ஜஸ்டிஸ்' என்ற கட்சிப் பெயரோடு இருந்த காலத்தில் இருந்தது போல் இது ஒரு கட்சியல்லவென்றும், திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் 10 ஆண்டுகளாகச் சொல்லிவருகிறேன். அதனாலேயே திராவிடர் கழகத்தை மக்கள் ஒரு கட்சி என்று கருதாமல் இயக்கம் என்றே கருதவேண்டும் என்பதற்காக, அதற்கு ஏற்றபடி கழகத்தை ஒரு பிரச்சார ஸ்தாபனமாகச் செய்துவருகிறேன். ஏன் என்றால், 1925-ல் நாம் ஆரம்பித்து நடத்திவந்த சுயமரியாதை இயக்கம்தான் ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி இயக்கப் பிரச்சாரம் செய்து வருகிறதே ஒழிய, இது ஒரு தனிக் கட்சியாளர் கையில் இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் திட்டங்களில் ஏதாவது ஒரு சிறுமாறுதல் காணப்பட்டால்—காணப்படலாமே ஒழிய சுயமரியாதை இயக்க அடிப்படையிலும் அதன் தலையாய கொள்கைகளிலும் திராவிடர்கழகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இதைச் சேலம் மாநாட்டிலேயே அண்ணாதுரை தீர்மானம் மூலம் தெளிவுபடுத்தி ஆய்விட்டது. ஆகவே, ஜஸ்டிஸ் கட்சி எந்த மக்களுக்காக என்று தோற்றுவித்து நடத்தி வரப்பட்டதோ, அந்த மக்கள் (திராவிட மக்கள்) சுயமரியாதை இயக்கத்தை அப்படியே ஒப்புக்கொண்டு பெரிதும் சுயமரியாதைக் காரர்களாக ஆகிவிட்டார்கள் என்பதும், சுயமரியாதைக்காரர்கள் அல்லாதவர்களாய் இருந்த வர்கள் மெல்ல நழுவிவிட்டார்கள் என்பதும்தான் கருத்தாகும். எனவே, சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகம் என்னும் பேரால் பெரிதும் தன் இயக்கப் பிரச்சார வேலையே செய்து வருகிறது என்று சொல்லலாம். அதனால்தான் நான் அடிக்கடி திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும், இது காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், இந்துமகா சபை, வருணாசிரம சுயராஜ்ய சங்கம், பிராமண பாதுகாப்பு சங்கம், மிதவாத சங்கம், முஸ்லிம் லீக், கிறிஸ்தவர் சங்கம், தாழ்த்தப்பட்டவர்கள், ஷெடியூல் லீக் முதலாகியவை போலும் ஒரு கட்சி ஸ்தாபனமல்ல என்றும் சொல்லுகிறேன். எப்படி எனில், இக் கழகம் மக்கள் அறிவுத் துறையிலும், சமுதாயத்திலும், மதத் துறையிலும், கடவுள் துறையிலும் நீண்டநாட்களாக இருந்துவரும் மடமைகளையும், முன்னேற்றத் தடைகளையும், குறை பாடுகளை நீக்கவும் மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும் சிறப்பாக, நமக்கு—திராவிட மக்களுக்கு இருந்துவரும் சமுதாய இழிவு, மத மூடநம்பிக்கை, சாதிப் பிரிவு, வேறுபாடு அடியோடு அழிக்கப்பட்டு, ஆரியக் கொடுமையிலிருந்து மீளவுமே பாடுபட்டு வரும்படியான, அதாவது மக்களுக்கு வலியுறுத்தி வரும்படியான, ஒரு ஸ்தாபனமாகும்.

திராவிடர் கழகத்திற்கு சுயராஜ்யம் பெறவேண்டுமென்கிற ஒரு கற்பனைத் தத்துவமோ, தேர்தலுக்கு நின்று மெஜாரிட்டியாகி அரசியலைக் கைப்பற்றவேண்டும் என்கிற தப்புப் பாவனையோ இல்லை. ஏனென்றால், இன்று நடப்பது சுயராஜ்யம் என்றுதான் சொல்லப்படுகிறது. அன்னியனான வெள்ளையன் (பிரிட்டிஷார்) ஆதிக்கம் போய்விட்டது. திராவிடநாட்டுக்குத் திராவிடமக்களே முதல் மந்திரி, இரண்டாம் மந்திரி; மொத்தத்தில் 13-ல் 10 மந்திரிகள் திராவிட மந்திரிகள் என்று சொல்லும்படியான திராவிட மெஜாரிட்டி மந்திரிசபையாக இருக்கும்போது இனிச் சுயராஜ்யம் பெறுவது என்பதற்கு, வேறுகருத்து என்ன இருக்கமுடியும்? யார் பெறுவது? அரசியலைக் கைப்பற்றுவது, யாரிட மிருந்து யார் கைப்பற்றுவது? திராவிட மக்கள் அல்லாதவர்கள் கைக்கு இனி அரசியல் எப்படிப் போகும்? ஆகவே, சுயராஜ்யம் பெறுவது என்பதோ, அரசியலைக் கைப்பற்றுவது என்பதோ இனி அர்த்தமற்ற பேச்சுக்களாகும், அர்த்தமற்ற காரியங்களுமாகும்.

இந்த மாகாணத்தில் இனி நாம்தான் 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஓட்டர்களாவும் ஆக்கப்படப் போகிறோம். பெரும்பாலான மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் திராவிடர் களாகத்தான் இருக்கப்போகிறார்கள். அதில் சந்தேகம் இருக்க நியாயமில்லை. ஆனால் இதில் என்ன குறைசொல்லலாம் என்றால், இதனால் திராவிடநாடு பிரிந்து கிடைக்குமா? திராவிடர் கழகக் கொள்கைகள், திட்டங்கள் நடைமுறைக்கு வருமா? என்பதுவே யாகும்;

சுலபத்தில் வராது என்று வைத்துக்கொள்ளலாம். நாம்—திராவிடர்கழகத்தார் சட்ட சபைக்குப் போய் விடுவதாலோ, அரசியலைக் கைப்பற்றுவதாலோ, மந்திரிகளாய் விடுவதாலோ, திராவிடநாடு வந்துவிடுமோ, திராவிடர் கழகக் கொள்கைகளும் திட்டங்களும் அரசியல் மூலம் நடத்தப்பட்டுவிடுமோ? என்று பார்த்தால் இன்றைய நிலைமையில் அவை சுலபத்தில் ஆகக்கூடிய காரியங்கள் அல்ல என்பதே நமது கருத்து.

நாம் இழிவு நீக்கம், நம் முன்னேற்றத்திற்குத் தடை நீக்கம், ஆரியத்தில் – மூட நம்பிக்கையில் இருந்து விடுபடுதல், பகுத்தறிவாளர்களாக–மானமுள்ள சமுதாயமாக ஆவது, இப்படிப்பட்ட நம்வேலை, நெருப்போடு பழகுவதுபோல், பாமர மக்களிடம் பழகுவதாகும். அவர்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும். அவர்களைத் திருத்தியே ஆக வேண்டும். இதற்கு நல்ல பிரச்சாரம் வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும், ஒன்றுபட வேண்டும். நிலைகுலைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுசேர்த்து, யாவர் பலத்தையும் ஒன்றாய்த் திரட்டி ஒருமூச்சுப் பார்த்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இனி நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம் என்பதே நமது இலட்சியச் சொல்; நமது மூச்சு.

வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. அது கானல் நீரல்ல. கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம் என்கிற உறுதி எனக்கு உண்டு.

[திரு. C. N. அண்ணாதுரையின் ‘இலட்சிய வரலாறு’ நூலுக்கு முன்னுரை]

5. ஓர் வேண்டுகோள்

50 வருஷத்திற்குமுன் சுயமரியாதை இயக்கம் :

சுமார் 40, 50 வருஷத்திற்கு முன் பதிப்பித்ததும், ‘இந்துமத ஆச்சார ஆபாச தரிசினி’ என்ற பெயர் கொண்டதும், 762 பாடல்களை உடையதும், கிரவுன் ஒன்றுக்கு எட்டு சைசில் 120 பக்கங்களை உடையதுமான ஒரு தமிழ்ப் புத்தகம் எங்கேயாவதும், யாரிடத்திலாவதும் கிடைக்குமானால் தயவு செய்து வாங்கி உடனே நமக்கு அனுப்பிக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

ஏனெனில், அப் புத்தகம் ஒன்று நமக்கு ஒரு மாதத்திற்குமுன் ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனால், அது மிக்க பழையதாகவும் முதலிலேயே சில பக்கங்கள் இல்லாமலும், சில பக்கங்கள் கிழிந்து சரிவரத் தெரியாமலும் இருப்பதால் கிழியாத புத்தகம் ஒன்று வேண்டி இருக்கின்றது. அப் புத்தகம் நமது இயக்கக் கொள்கைகளையே முக்கியமாய் வைத்துப் பாடின பாட்டுகள் அனேகம் அதில் இருக்கின்றன.

[‘குடி அரசு’ 23-2-1930]

6. ‘வெடி குண்டு’

சுயமரியாதை இயக்கக் கொள்கையை ஆதரித்து மதுரையில் ‘வெடிகுண்டு’ என்னும் பத்திரிகை தோன்றி, தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததேயாகும். வியாபார முறையை விட்டும், சமயத்திற்குத் தகுந்தபடி மாறிக்கொள்வதை விட்டும், தனக்கு என்று ஏதாவது ஒரு கொள்கையும் இல்லாமல் ‘பரிசுத்தமாய்’ இருக்கும் நிலையைவிட்டும் நடைபெறும் பத்திரிகைகள் நமது நாட்டில் அதாவது, பகுத்தறிவற்று பாமரத்தன்மை பூண்டு இருக்கும் ஜனங்கள் மலிந்த நாட்டில், கவலையற்று நடைபெறுவது என்பது மிகமிகக் கஷ்டமான காரியமாகும். இந்தக் காரணத்தால் இதுசமயம் ‘வெடிகுண்டு’ பத்திரிகை மிக்க நெருக்கடியில் நடைபெறுகிறது என்றும் நாம் கேள்விப்படுவதில் அதிசயமொன்றுமில்லை. இருந்தபோதிலும், மதுரை சுயமரியாதை சங்கத்துக்கு மிகுதியும்

ஆதரவளித்து வருபவரும், முனிசிபல் கவுன்சிலரும், செல்வாக்கும், செல்வமும் பொருந்திய வருமான தோழர் ஆ. அ. ஆறுமுகம் அவர்களது உதவியாலும், ஆதரவாலும் ஒருவாறு நடத்தப்பட்டு வருகிறது என்றாலும், சதா சர்வகாலமும் ஒரு பத்திரிகை ஒருவரின் ஆதரவையும் உதவியையும் கோரி நிற்காமல், தன் காலிலே தைரியமாய் நிற்கவேண்டு மாதலால், சுயமரியாதை இயக்க அன்பர்களும், அபிமானிகளும் அதை ஆதரிப்பது மாத்திரமல்லாமல், அது கிராமங்கள் மூலை முடுக்குகள் தோறும் செல்லும்படியான அளவுக்கு உதவிசெய்யவேண்டுமாய் வேண்டுகிறோம்.

['குடி அரசு'-வேண்டுகோள்—27-8-1933]

7. 'புரட்சி'

'குடி அரசை' ஒழிக்கச் செய்த முயற்சியால் 'புரட்சி' தோன்ற வேண்டியதாயிற்று. உண்மையிலேயே பாமர மக்களின், அதாவது பெரும்பான்மையான மக்களின் ஆட்சியாகிய குடி அரசுக்கு உலகில் இடமில்லையானால் கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும்.

அந்த அய்தீகப்படியே 'புரட்சி' தோன்றி இருப்பதால், புரட்சியில் பற்றுள்ள மக்கள் யாவரும் 'புரட்சி'யை வரவேற்பார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் அய்யமில்லை.

நமது முதலாளிவர்க்க ஆட்சியானது தனது காவலாளியாகிய பாதிரி வர்க்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டியிருப்பதால் 'குடி அரசை' அதன் முதுகுப் புறத்தில் குத்தி விட்டது. இந்தக் குத்தானது, 'பாதிரி வர்க்கத்தை ஒழித்தால்தான், முதலாளி வர்க்கத்தை அழிக்கமுடியும்' என்ற ஞானபோதத்தை உறுதிப்படுத்திவிட்டது.

ஆதலால், நமது 'புரட்சி'யானது 'குடி அரசை'க் காட்டிலும் பதின்மடங்கு அதிக மாய் பாதிரி வர்க்கத்தை—அதாவது மதப் பிரச்சார வர்க்கத்தை அடியோடு அழிப்பதையே கங்கணமாய்க்கொண்டு வெளிவர வேண்டியதாகிவிட்டது.

இதன் காரணமாய் 'புரட்சி' எந்த நிமிஷத்தில் குத்துப்பட்டாலும் படலாம்; எந்த வினாடியில் கொலையுண்டாலும் உண்டாகலாம். ஆனால், 'சுயமரியாதைப் புரட்சி'யானது இனி ஒருநாளும் மறையாது; அது வெற்றிபெறும்வரை ஒரு க்ஷணமும் ஓய்வு கொள்ளாது என்பது மாத்திரம் உறுதி.

காங்கிரஸ் காரியதரிசியான தோழர் ஜவகர்லால் அவர்கள் தான் இதுவரை மத விஷயமாய்ப் புரட்சி செய்யாமல் ஏமாந்து விட்டதைப்பற்றி மனமார வருந்தியும், மத விஷயத்தில் தான் அலட்சியமாய் இருந்த ஒவ்வொரு நிமிஷமும் முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம் பலப்பட்டு வருவதற்கு இடம் கொடுத்தாகிவிட்டது என்று வியக்தமாக எடுத்துச் சொல்லியும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டார்.

மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி ;

மதமே மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதி ;

மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி ;

மதமே மனித சமூக சமதர்மத்துக்கு விரோதி ;

மதமே கொடுங்கோலாட்சிக்கு உற்ற துணை ;

மதமே முதலாளி வர்க்கத்துக்குக் காவல் ;

மதமே சோம்பேறி வாழ்க்கைக்கு ஆதரவு ;

மதமே உழைப்பவனைத் தரித்திரத்தில் ஆழ்த்தி, உழைக்காதவனை உச்சத்தில் வைப்பதற்கு உதவி—என்கின்ற முடிவின் பேரிலேயே 'புரட்சி' தோன்றியிருக்கிறது என்பதில் யாருக்கும் அய்யம் வேண்டாம்.

ரிஜிஸ்டர்டு நெ.

தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

பெண் ஏன் அடிமையானாள்?

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

மதம் என்றால் என்ன?

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 26–11–1933–ல் துவக்கப்பட்ட 'புரட்சி' வார ஏட்டின் முதல் இதழின் முகப்பு அட்டை

R. No. "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

பகுத்தறிவு

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்: ஈ. வெ. கிருஷ்ணசாமி.

வருடசந்தா உள் நாடு 3-0-0.
" வெளி நாடு 5-0-0.

மலர் 1. | ஈரோடு, பவ-ஹு ஆவணி-மீ 18-உ. (2—9—1934) | மலர் 2.

இனாம்! சந்தாதாரர்களுக்கு இனாம்!

அருமையான புத்தகங்கள் இனாம்!

நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு செப்டம்பர் மாதம் 1-உ-யிலி ருந்து அக்டோபர் 1-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந் தாதாராய்ச் சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனு ப்பிக்கொடுக்கப்படும்.

கைவல்யம்		0-8-0
இந்தியாவின் குறைபாடு		0-8-0
இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்)		0-8-0
மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை		0-8-0
லெனினும், மதமும்	அணா 4	0-8-0
பொதுவுடைமைத்தத்துவம்	" 3	
போல்ஷ்விக் முறை	" 1	
கடவுளும் பிரபஞ்சமும்	அணா 4	0-8-0
சோஷியலிசம்	" 3	
இலங்கை உபந்யாசம்	பை 6	
சமதர்ம உபந்யாசம்	" 6	

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு
பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 26-8-1934-ல் துவக்கப்பட்ட
'பகுத்தறிவு' வார ஏட்டின் இதழ் 2-ன் முகப்பு அட்டை

ஆதலால், மனித சமூகத்தில் சமதர்ம வாழ்க்கையை ஏற்படுத்த மதங்களை முதலில் அழித்தாகவேண்டும் என்று காங்கிரஸ் காரியதரிசி தோழர் ஜவகர்லால் அவர்கள் இப்போதாவது கண்டு பிடித்ததற்கோ அல்லது தைரியமாய் வெளியிட்டதற்கோ நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றோம்.

சோம்பேறித்தனமாய் வாழ நினைத்து சுயமரியாதை இயக்க நிழலில் திரிந்தவர்களுடையவும் பட்டம், பதவி, அதிகாரம், செல்வம் ஆகியவைகள் அடையக் கருதி சுயமரியாதை இயக்கப் போர்வை போட்டுக் கொண்டிருந்தவர்களுடையவும் ஆதரவு நம் 'புரட்சி'க்கு இனி சிறிதும் எதிர்பார்க்க முடியாது என்பதை நன்றாய் உணர்ந்தே 'புரட்சி' தோன்றியிருக்கிறது.

ஆதலால், பாடுபட்டு உழைத்து ஊராருக்குப் போட்டுவிட்டு பட்டினியாயும் சமூக வாழ்வில் தாழ்மையாயும் வாழும் மக்களின் ஆதரவையே 'புரட்சி' எதிர்பார்த்து நிற்கிறது.

வெள்ளை முதலாளிகளை ஒழித்துக் கறுப்பு முதலாளிகளைக் காக்கும் வேலைக்கு இன்று 'புரட்சி' வெளிவரவில்லை. அல்லது, வெள்ளை ஆட்சியை ஒழித்து கறுப்பு ஆட்சியை ஏற்படுத்த 'புரட்சி' தோன்றவில்லை. அதுபோலவே, இந்து மதத்தை ஒழித்து, இஸ்லாம், கிறிஸ்து மதத்தைப் பரப்ப 'புரட்சி' தோன்றியதல்ல.

அதுபோலவே, இஸ்லாம், கிறிஸ்து மதத்தை ஒழித்து, இந்து மதத்தை நிலைநிறுத்த 'புரட்சி' வெளிவரவில்லை.

சகல முதலாளி வர்க்கமும், சர்வ சமயங்களும் அடியோடு அழிந்து, மக்கள் யாவரும் சுயமரியாதையுடன் ஆண் பெண் அடங்கலும் சர்வ சமத்துவமாய் வாழச் செய்யவேண்டும் என்பதற்காகப் புரட்சி செய்யவே 'புரட்சி' தோன்றியிருக்கிறது.

அது உயிருள்ள வரையும் அதன் கடமையைச் செய்து கொண்டு இருக்கும்.

ஆதலால், புரட்சியில் ஆர்வமுள்ள மக்கள் 'புரட்சி'யை ஆதரிக்க வேண்டுகிறோம்.

['புரட்சி'—தலையங்கம்—26-11-1933]

8. 'பகுத்தறிவு'

'பகுத்தறிவு' வாரப் பத்திரிகையின் முதல் மாலை—முதல் மலர் 26-8-1934 ஞாயிறு வெளியாகின்றது என்றாலும், அதன் கொள்கைகளைப்பற்றி 'குடி அரசு', 'ரிவோல்ட்', 'புரட்சி', 'பகுத்தறிவு' (தினசரி) ஆகிய பத்திரிகைகளின் அபிமானிகளுக்கும், வாசகர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டியதில்லை.

சுருக்கமாக, ஒரு வாக்கியத்தில் சொல்லித்தீர வேண்டுமானால், 'பகுத்தறிவு' தோன்றலானது, இன்றைய உலக வழக்கில் இருந்துவரும் காரியங்களில் பெரும்பான்மை மக்களால் முதன்மையானதாகவும், இன்றியமையாதனவாகவும் கருதப்படும்

'எங்கும் நிறைந்த இறைவனை' வழுத்தவோ,

'எல்லாம் வல்ல மன்னனை' வாழ்த்தவோ,

'யாதினும் மேம்பட்ட வேதியனை' வணங்கவோ,

'ஏதும் செய்யவல்ல செல்வவானை' வாழிய செப்பவோ கருதி அல்ல என்பதேயாகும்.

மேலும், மனித சமூகத்தில் மவுடீயத்தால் ஏற்பட்ட துரபிமானங்களாய கடவுள், சாதி, மதம், தேசம், நான், எனது என்பன போன்ற அபிமானங்களை அறவே ஒழித்து, மனித சமூக ஜீவாபிமானத்தையும், ஒற்றுமையையும் பிரதானமாய்க் கருதி உழைத்துவரும் என்றும் சொல்லுவோம்.

இத் தொண்டாற்றுவதில் 'பகுத்தறிவு' வேதத்திற்கோ, விமலத்திற்கோ, சரித்திரத்திற்கோ, சாத்திரத்திற்கோ, பழக்கத்திற்கோ, வழக்கத்திற்கோ, பழமைக்கோ புதுமைக்கோ அடிமையாகாமல், கொள்வனகொண்டு தள்வன தள்ளி, தானே சுதந்திரமாய் தன்னையே நம்பி, தனது அறிவையும் ஆற்றலையுமே துணையாகக்கொண்டு தன்னாலான தொண்டாற்றிவரும்.

முடிவாய்க் கூறுமிடத்து, 'பகுத்தறிவு' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை நடத்திச் செல்லுமே ஒழிய, எக் காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்.

['பகுத்தறிவு'-தலையங்கம்—26-8-1934]

9. 'விடுதலை'

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து, தமிழ் பத்திரிகை ஒன்று, 'விடுதலை' என்னும் பேரால், வாரம் இரு முறையாக சென்னையிலிருந்து வெளியாகி இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு வந்தன. அதைப்பற்றி ஒரு மதிப்புரை எழுதவேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

ஏனெனில், 2, 3 வருடங்களாகவே பரிசுத்த வீர இரத்த ஓட்டமுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் இரவும் பகலுமாய், 'தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!' என்கின்ற தாகத்துடன் அலைந்துகொண்டிருந்ததும், அதை எந்தத் தலைவர்களும் கவனியாமல் அலட்சியமாய் இருந்ததும், அதன் பயன்களைச் சமீப காலத்தில் ஏற்பட்ட பல தேர்தல்களின் மூலம் அனுபவித்ததும், மறுபடியும் புதிய முறையில் முன்னிலும் அதிகமாக இரண்டு பங்கு சப்தத்துடன், 'தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!' என்று மக்கள் கூப்பாடு போட்டதுமான விஷயம் யாரும் அறியாததல்ல. அப்படிப்பட்ட நிலையில் 'விடுதலை' என்னும் பேரால் ஒரு பத்திரிகை வெளியாகி இருப்பதைப் பார்த்து எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்கு ஏதோ ஒரு 'பாக்கியம்' கிடைத்ததாக மகிழ்ச்சியடைவார்களே ஒழிய, 'இதற்கு மதிப்புரை வருகின்றதா? அது எப்படி வருகின்றது?' என்று யாரும் கவனிக்க மாட்டார்கள்.

ஆதலால், நாம் மதிப்புரை எழுதும் வீண் வேலையில் பிரவேசிக்காமல், 'வந்து விட்டது, தமிழ்ப் பத்திரிகை!' என்று விளம்பரம் செய்யவே ஆசைப்படுகின்றோம்.

'விடுதலை' பத்திரிகை இன்று வாரம் இருமுறையாக வெளிவந்தாலும், கூடிய சீக்கிரம் தமிழ் மக்கள் ஆதரவுக்கு ஏற்பத் தினசரி ஆகும் என்பதில் நமக்கு அய்யமில்லை.

பத்திரிகையானது நல்ல மாதிரியில்—பார்ப்பன விஷமப் பிரச்சாரங்களுக்கு மார்பைக் காட்டும் முறையில் சரியான விஷயங்களைக் கொண்டு வெளியாகி வருவதால், அதை ஆதரிக்க வேண்டிய அவசியம் எந்த விதத்திலும் குறைவாகக் காணப்படவில்லை என்றே சொல்லுவோம்.

இப் பத்திரிகைக்கு உள்ள கஷ்டம், எதிர்ப்பு, சூழ்ச்சி, தொல்லை ஆகிய விஷயங்களைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட தொல்லைகளுக்கிடையே ஒரு பத்திரிகை வாழ்வதென்றால் மிகவும் ஆச்சரியமான காரியமாகும். இதுவரை பார்ப்பனர்களுக்கு விரோதமானது என்று காணப்பட்ட பத்திரிகைகள் எதுவும் நமது நாட்டில் வாழவே இல்லை.

எவ்வளவோ வீரமாக ஆரம்பித்த பத்திரிகைள் எல்லாம் வருடாந்தரம் ஆவதற்குள்—ஒன்று பார்ப்பனர்களுக்கு அடிமையாகவேண்டியது; அல்லது, மறைந்துபோக வேண்டியது என்கின்ற நிலையில்தான் இருந்துவந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் 'குடிஅரசு' ஏதோ 'பாஷாணத்தில் புழுத்த புழு'ப்போல் உயிர் வைத்துக்கொண்டு வருகின்றது என்றாலும், அதுவும் இதுவரை அடையாத கஷ்டமோ, தொல்லையோ இனி புதிதாக ஒன்று இருப்பதாகத் தோன்றவில்லை. இப்படிப் பட்ட நிலையில் 'விடுதலை' தோன்றி இருக்கின்றது என்பது ஒருவிதத்தில் சந்தோஷம் என்றாலும், மற்றொரு விஷயத்தில் எந்த நிமிடத்தில் அதற்கு ஆபத்து வரப்போகின்றதோ என்று பயப்படவேண்டியதாகவே இருக்கிறது.

எப்படியோ ஒருவிதத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடி 'தமிழ்ப் பத்திரிகை' ஒன்று வந்துவிட்டது. அதை ஆதரித்து, தினசரியாக்கி நிலை நிறுத்த வேண்டியது தமிழ் மக்கள் கடமையே ஒழிய, இனித் தலைவர்களைக் குற்றம் சொல்லவேண்டிய அவசியமே இல்லை.

அதன் நோக்கம், அதன் தொண்டு ஆகியவைகளைப்பற்றி சந்தேகப்படவேண்டிய காரணமே யாருக்கும் கிடையாது. ஆகையால், அதைப்பற்றிக் கவலைப்படாமலும், அதற்கு யாரும் புத்தி புகட்டும் வேலையில் இறங்காமலும் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாக வேண்டும். சந்தாத் தொகை வாரம் இரு முறைக்கு வருஷம் ரூ. 3-10-0 ஆகும். இதை விடக் குறைந்த தொகைக்குத் தமிழ் நாட்டிலோ, இந்தியாவிலோ ஒரு 'வாரம் ஒரு முறை'— 10 பக்கம் விஷயம் கொண்ட பத்திரிகை ஒன்று இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆகையால், ஒவ்வொருவரும் ரூ. 3-10-0 நாளையே மணியார்டர் அனுப்பிவிடவேண்டியது அவசியமான காரியமாகும். 3 மாதத்திற்குள் 2000 சந்தாவாவது சேர்ந்தால் 'விடுதலை' தினசரி ஆகிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. அதன் பத்திராதிபர் தோழர். டி. ஏ. வி. நாதன் அவர்கள்; ஜஸ்டிஸ் பத்திரிகையை நடத்திவந்தவர். ஆனதால், அப்பேர்ப்பட்ட அறிவாளியால் நடக்கும் பத்திரிகை நீடூழி வாழ்ந்து பாமர மக்களுக்கும், பண்டிதர்களுக்கும் பயன்பட்டு, உலக மக்களுக்கு உண்மை விடுதலையைக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப் படுகிறோம்.

['குடிஅரசு'—9-6-1935]

10. நம் ஆயுதம்—'விடுதலை'

திராவிட மக்கள் உள்ளத்தில் பெருங் குறையாய் இருந்ததும், திராவிட மக்கள் முற்போக்குக்கே பெருந் தடையாய் இருந்ததுமான குறை நீங்கும்படியாக—இன்று, 'விடுதலை' வெளியாகிவிட்டது. இனி இதை ஆதரித்து வளர்த்து நலனடைய வேண்டியது திராவிட மக்களின் கடமையாகும்.

திராவிட நாட்டிற்கும், திராவிட மக்களுக்கும் இன்றுள்ள இழிநிலைகளுக்குத் தலையாய காரணங்களுக்குள் முக்கிய காரணம் என்னவெனில்—திராவிடர்களுக்கு என்று, திராவிடரிடத்தில் தினசரிப் பத்திரிகை ஒன்றாவது இல்லாததேயாகும்.

திராவிட நாட்டில் உள்ள தினசரிப் பத்திரிகைகள் யாவும் திராவிடர் அல்லாதவர் களிடமும், திராவிடர்களின் மாற்றார்களான பிறவி எதிரிகளிடமும், அவர்களின் அடிமை களிடமுமே இருந்துவருகின்றன. குறிப்பாக, ஆரியர்கள் வெகு தந்திரமாக, வெகு முன்னெச்சரிக்கையுடன் பத்திரிகை உலகைத் தங்கள் கைவசத்தில் ஏகபோகமாக ஆக்கிக் கொண்டதோடு, வேறு ஒருவரும் அத் துறையில் தலை எடுக்காதபடியும், வேறு ஒருவரும் தினசரிப் பத்திரிகைகள் நடத்திச் சமாளிக்கமுடியாதபடியும் செய்துவந்திருக்கிறார்கள்; செய்தும் வருகிறார்கள். யாராவது, எந்தத் திராவிடராவது துணிந்து பத்திரிகை நடத்து வாரேயானால்—அவர் நிபந்தனையற்ற ஆரிய அடிமையாய்—ஆரியர் நலனுக்கே அதை நடத்துபவராய் இருந்தாலொழிய, வெளியில் தலைகாட்ட முடியாதபடி அமுத்தப்பட்டு விடுகிறார். அப்படி நடத்தினாலும் வெகு நாளைக்கு வாழமுடியாமல் சில நாட்களில் அழிக்கப்பட்டுவிடுகிறார். இந்த நிலையில் பத்திரிகை உலகம் சிக்கிக்கொண்டதால் திராவிடர் எத் துறையிலும் தலையெடுக்கமுடியாமல் தாழ்த்தப்பட்டு வருகிறார்களென்பது

மாத்திரமல்லாமல், திராவிடர் ஆரியருக்கு மனுதர்ம நீதிப்படி அடிமைகளாயிருக்க வேண்டியவர்களாகிறார்கள்.

மற்றும் சொல்லுவோமானால், ஆரியர்கள் திராவிட நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியா என்னும் உபகண்டத்திலும் மற்ற நாடுகளிலும் உள்ள பத்திரிகைகளையும் தங்கள் ஆதிக்கத்திலேயே வைத்து, இந்தியாவில் எங்கணுமே திராவிட மக்களை இழிமக்களாகக் கருதும்படியும், மானம்-மரியாதை அற்ற மக்களாக இருக்கும்படியும் செய்துவருகிறார்கள். பொதுவாகச் சுருங்கச் சொல்லவேண்டுமானால், பத்திரிகை உலகம் முழுவதும் ஆரிய ஆதிக்கத்தில் இருப்பதாலேயே இந்த ஆயுதத்தைக்கொண்டு ஆரியர் திராவிடர்களை அவர்களது வாழ்வில் இவ்வளவு கொடுங்கோன்மையான அடக்குமுறையில்—இராணுவ ஆட்சி போல் ஆதிக்கம் செலுத்தி அடக்கி ஆண்டு நசுக்கிவருகிறார்கள். இந்தக் காரியத்தில் ஆரியர்கள் இவ்வளவு வெற்றிபெற்று இருப்பதாலேயே, ஆங்கில அய்ரோப்பிய ஆரியர்களும் கூட, இந்த இந்திய ஆரியர்களுக்கு இணங்கி, அவர்களது நலனுக்கு ஏற்ற வண்ணம் நடந்து, இந் நாட்டில் ஆட்சி செலுத்த வேண்டியவர்களாகவும் வாழ வேண்டியவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இதற்குமுன் எப்படி இருந்தாலும், இப்போது சிறிது காலமாய்த் திராவிட மக்களுக்குள் நல்ல உணர்ச்சியும் எழுச்சியும் முயற்சியும் இருந்து வந்தும், தொடர்ந்து கிளர்ச்சியும் தொண்டும் நடந்துவந்தும், குறைந்த பட்சம் ஒரு 50 வருஷ காலத்தில் இல்லாத அளவுக்குத் திராவிடர்களிடமும் சிறப்பாகத் திராவிட இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் ஆகியவர்கள் உள்ளத்திலும் தீப்பொறி பறக்கத் தகுந்த அளவு தீவிர உணர்ச்சி கொண்ட பிரச்சாரத் தொண்டாற்றி வந்தும், வேறு எக் கூட்டத்தாரையும்விடக் குறைந்ததாயில்லாத அளவுக்கு உண்மை அங்கத்தினர்களும் அமைப்புகளும் ஸ்தாபனங்களும் ஏற்பட்டு—கூட்டங்கள், மாநாடுகள், விழாக்கள் நடந்துவந்தும் அவைகளுக்குச் சிறிதும் பயனில்லாமல் போய்விடுவதும், மதிப்பில்லாமல் போய்விடுவதுமான தன்மைகள் ஏன் ஏற்படுகின்றனவென்றால், பத்திரிகைகள் ஆரியர்களுடையதாகவும் அதன் நிருபர்கள் ஆரியர்களாகவும், அவற்றைக்கொண்டு அவர்கள் செய்யும் வன்னெஞ்சமான நீதியும்-ஒழுக்கமும்மற்ற அட்டூழியமும்தான் என்பதல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லமுடியும் என்று கேட்கிறோம்.

வேறு எந்தக் காரியத்தில் ஆரியர்களுக்குள் சிறு அபிப்பிராய பேதம் இருந்த போதிலும், இந்தப் பத்திரிகைக் கொடுங்கோன்மை அட்டூழியக் காரியங்களில்—அவர்களுக்குள் பேத உணர்ச்சியே கிடையாது என்பது மாத்திரமல்லாமல், கட்டுப்பாடாய் ஒன்று சேர்ந்து ஒரே மூச்சில் அவ்வப்போதைக்கு ஏற்ற ஒவ்வொரு காரியத்தையும் செய்து திராவிடர்களை ஒழிப்பதில், தலையெடுக்க ஒட்டாமல் அழுத்துவதில் சிறிதும் பேதமில்லாமல் நடந்து வருகின்றனர். இந்தப் பத்திரிகை ஆயுதம் இந்தத் தன்மையில் அவர்களிடம் இருந்துவரும் வரையில் திராவிட மக்களின் அடிமைத் தன்மையும் சூத்திரத் தன்மையும் அதாவது, சமுதாயத்தில் இழிமக்களாகவும், சமயத்தில் நான்காம் அய்ந்தாம் மக்களாகவும், கல்வியில் 100-க்கு 90 பேர் தற்குறி(கைநாட்டு)களாகவும், பொருளாதாரத்தில் தினக்கூலித் தொழிலாளிகளாகவும், அரசியலில் அடக்குமுறை ஆட்சிக்குட்பட்டுத் தவிக்கும் மானமற்ற ஒற்றுமையற்ற ஈன இன மக்களாகவும் ஆக்கப்பட்டிருக்கும் தன்மையிலிருந்து மீள முடியவே முடியாது என்பது கல்லுப்போன்ற உறுதியாகும். உண்மையாகவே திராவிடருக்குள் இன்று ஒற்றுமை எங்கே? இன உணர்ச்சி எங்கே? கட்டுப்பாடு எங்கே? ஒன்றுபட்ட இலட்சியம் எங்கே? ஆனால், திராவிடர்களுக்கு அவர்களது வாழ்வில், முற்போக்கில் எதில் குறையில்லாமல்-தடைகளில்லாமல் இருக்கின்றது? அதே தன்மையில் ஆரியர்களைப் பார்த்தோமானால், அவர்களுக்கு எவ்விதக் குறை இல்லாவிட்டாலும்-எவ்வளவு கட்டுப்பாடு! எவ்வளவு இன உணர்ச்சி! எவ்வளவு ஒன்றுபட்ட இலட்சியம்! எவ்வளவு 'கூட்டுத் தொண்டு' இருந்து வருகின்றன!

இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்கு முதற்காரணம், நாம் மேலே காட்டியதுபோல், அவர்கள் கைவசம் பத்திரிகை உலகம் இருந்து வருவதும், நமக்கு அது இல்லாததுமே முக்கியமென்பதல்லாமல், வேறு என்ன சொல்லமுடியும்? குறைந்த அளவு நாம் (திராவிடர்கள்) ஆரியர்களின் பத்திரிகை அட்டூழியங்களையாவது சமாளிக்கத்தக்க ஒரு தன்மையை அடையாவிட்டால், மற்றபடி அவர்களுடைய வலிமை பொருந்திய ஆயுதங்களான—மதம், கடவுள்கள், ஆத்மார்த்தம், தெய்வீகம், கலை, தேசியம், சுதந்திரம், சுயேச்சை என்னும் 'இருபுறமும் பதமுள்ள வஜ்ஜிராயுதங்களால்' நடத்தும் சித்திரவதைகளில் இருந்து எப்படி மீள முடியும்?

அப்பப்பா! அய்யய்யோ! சகிக்க முடியாத-பொறுக்க முடியாத துன்பங்கள், தொல்லைகள், கொடுமைகள்! இவைகள் பரிகாரமற்றவைகளாக இருப்பதுடன் இந்த வாழ்வு வாழ்வதைவிடத் தற்கொலை செய்துகொள்வது மேல் என்று சிறிதாவது மான உணர்ச்சியுள்ள திராவிடனைத் தூண்டுகின்ற தன்மையில் இருந்துவருகின்றன.

திராவிட மக்கள் சற்றேறக்குறைய தெளிவான இரு பிரிவுகளாகக் காணப்பட்டுவிட்டார்கள். ஒன்று, திராவிடர்களின் இழி நிலையைப் பற்றி—அவர்களது முன்னேற்றத்திற்கும் மனிதத் தன்மைக்கும் கேடாக இருக்கும் தன்மைகளைப் பற்றிக் கவலையற்று, தங்கள் நலனையே பார்த்துக் கொண்டு வாழ்வை நடத்துவது என்பது. மற்றொன்று, தங்களைப் பற்றிக் கவலையில்லாமல் இன்றைய இந்த இழி நிலையைப் போக்கத் தம்மாலானதைச் செய்வது; செய்யும் முயற்சியில் முடிவெய்துவது; அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்பது என்பதாகும். இவற்றுள் முன்னையவர்களில் இரண்டு பிரிவினர்கள் இருந்து வருகின்றனர். இவர்களுள் ஒரு சாரார், எதிரிகளுடன் சேர்ந்து திராவிடர்களுக்கு இடரையும் தடையையும் செய்யத் துணிந்து, ஆரியர்களுக்கு உடந்தையாயும் அடிமையாயும் இருந்துவரும் வழுக்கி விழுந்த திராவிட சகோதரர்கள்; மற்றொரு சாரார், அவர்களுடனும் சேராமல், நம்மோடும் சேராமல் நடுநிலைமை காட்டிக்கொண்டு, சமயம்போல் நடந்து, மற்ற இரு கூட்டத்தாரின் தொண்டிலும் பங்கு பெற்றுத் தங்கள் சொந்த வாழ்வை மாத்திரம் கவனித்து, அதற்காக எதுவும் செய்யத் துணிவு கொண்ட திராவிடர்கள். இவர்கள் தங்களை, மற்ற யாரையும் விட மேதாவிகள்-மேன்மக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சுயநல வேட்டை ஆடுகிறவர்கள் ஆவார்கள். இத்தகைய எந்தப் பிரிவும் ஆரியர்களுக்குள் இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

எனவே, திராவிடமக்கள் மேற் குறிப்பிட்ட தன்மைகளில் இருந்து மாறி—மற்ற இனத்தவர், மற்ற நாட்டவர் போல் ஆகி, ஒரு மனிதத் தன்மை கொண்ட சமுதாயமாக ஆவதற்கு மிக்க எதிர் நீச்சல் போன்ற கஷ்டமானதும்-தன்னலத்தை வெறுத்ததுமான தொண்டு செய்ய வேண்டியது மிக அவசியமாகுமென்பதல்லாமல், இந்தச் சமயம் மிகவும் அவசரமானது என்போம். அதற்கு முக்கியமான-இன்றியமையாத ஆயுதம் பத்திரிகையாகும். அதை உத்தேசித்தே இந்தக் காரியத்திற்கும்கூட நமக்குள் இருக்கும் பல வித வேற்றுமை, உதவியற்ற தன்மை, நிதியற்ற நிலை, வேறு பல தடைகள், கஷ்ட நஷ்டங்கள் ஆகியவைகளைக் கூட இலட்சியம் செய்யாமல்—'விடுதலை'யைத் துவக்கி விட்டோம். பெரிதும் பாமர, பொதுமக்களையும் இளைஞர்களையும் நம்பியே இதில் இறங்கி இருக்கின்றோம். இது நீடித்து நடந்தாலும் சரி, அல்லது முன்போல் சில நாட்களில் ஒழிந்தாலும் சரி; நம் கடமையைக் கருதியும் இச் சில செல்வர், அறிஞர்கள் ஆதரவு கிடைக்கலாம் என்கின்ற நம்பிக்கையுடனும் இறங்கிவிட்டோம். இச் சமயம் நம் எதிரிகளின் ஏகபோக ஆதிக்கத்தில் அரசியலும் இருக்கும்படியான சமயமாகும். அதனால், அவர்கள் 'விடுதலை'யை எப்போது வேண்டுமானாலும்—என்ன வேண்டுமானாலும் செய்துவிடக் கூடும் என்றாலும் நமக்குள்ள ஆசை-நமது முக்கிய கடமை-நம் மக்களிடத்தில் உள்ள நம்பிக்கை-நம் இளைஞர்கள் நம் மாணவர்கள், நம் தாய்மார்கள், நமக்கு ஊட்டிவரும் ஊக்கம், உள் நம்பிக்கை ஒத்துழைப்பைத் தருவதாய்க் காட்டும் அறிகுறி, அவர்களது

வாக்குத்தத்தம் ஆகியவைகளைக் கொண்டும் தொடங்கிவிட்டோம்! இதே தொண்டில் இதற்குமுன் இரண்டு மூன்று தடவை வரை முயன்று தோல்வியுற்றாலும் அதைப்பற்றிச் சிந்தியாமல், மறுமுறையும் துணிந்து இறங்கி விட்டோம். ஆகவே தோழர்களே! தாய்மார்களே! செல்வர்களே! அறிஞர்களே! இளைஞர்களே! மாணவர்களே! இனி உங்கள் கடமை என்ன?

['விடுதலை'–தலையங்கம்—6-6-1946

11. 'திராவிட நாடு'

E. V. RAMASAMI,
Erode. Date 1-4-1943

பத்திரிகைக்கு உதவி வேண்டுகோள்

காஞ்சிபுரத்தில் தோழர் C. N. அண்ணாதுரை M.A., அவர்களால் நடத்தப்பட்டு வரும் 'திராவிட நாடு' பத்திரிகை தமிழர்களின் விடுதலைக்கு உண்மையுடனும் உறுதியுடனும் உழைத்து வருவது தமிழர்கள் அறிந்ததேயாகும்.

அப் பத்திரிகை தவக்கமின்றியும் நிலையாகவும் நடந்து வருவதற்கு அதற்குச் சொந்தத்தில் ஒரு அச்சு இயந்திரம் வேண்டியிருக்கிறது. அதை உத்தேசித்தே ரூபாய் 1200-0-0-ல் ஒரு டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் பேசி இருக்கிறது.

ஆதலால், தமிழ் மக்கள் இந்தத் தொகையைக் கொடுத்து உதவ வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

—ஈ. வெ. ராமசாமி

உதவியோர்:	தொகை:
ஈ. வெ. ராமசாமி	100-00
கோபி. தோழர்கள்	63-00

['திராவிட நாடு'–அறிக்கை—18-4-1943]

12. 'தோழனு'க்கு வாழ்த்து

'தோழன்' என்கின்ற பெயரில் தோழர் ஜனார்த்தனம் அவர்களால் ஒரு மாதப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அனேகமாக நம் நாட்டில் பார்ப்பனரல்லாதார் (திராவிடர்கள்) கொள்கைக்காகப் பொதுத் தொண்டுக்காக என்று பத்திரிகைகள் துவக்கி, திராவிடர்கள் ஆதரவு சரிவரக் கிடைக்காததால், அது கடைசியில் வயிற்றுப் பிழைப்புக்காக என்று மாறி, துவக்கிய கருத்து மறைந்து, கொள்கையும், வாழ்வும் நாணயமற்றதாக ஆகிவிடுவதை மலிந்து கிடக்கப் பார்க்கிறோம். இப்படிப் பட்ட திராவிடநாட்டு மக்களிடையில் தோழர். ஜனார்த்தனம் அவர்கள் பத்திரிகை நடத்துகிறார் என்றால், மற்றபடி மேற்கண்ட மலிவுத் தன்மையை இதுவும் அடைந்துவிடுமோ என்று எந்தத் திராவிட மகனும் அஞ்சவேண்டியதில்லை; அய்யுற வேண்டியதில்லை என்று நாம் உறுதி கூறி சிபாரிசு கூடச் செய்வோம்.

ஏன் என்றால், தோழர் ஜனார்த்தனம் அவர்கள் 'தோழனை' ஆயுதமாகக்கொண்டு மக்களை நடத்துவாரே தவிர, மக்கள் பின் செல்லமாட்டார் என்கின்ற நமது உறுதியால் தான்.

E. V. Ramasami,
ERODE.

Date 1 . 4 . 1943.

"திராவிடநாடு"
பத்திரிகைக்கு உதவி வேண்டுகோள்

காஞ்சீபுரத்தில் இருந்து C.N. அண்ணாதுரை M.A. அவர்களால் நடத்தப்பட்டு வரும் "திராவிட நாட்டுப் பத்திரிகை நஷ்டக் [illegible] உண்டாக்கப்பட்ட நிதிக்கு உதவி [illegible] கனவான்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அப்பத்திரிகை நஷ்டமின்றியும் இனியும் நடப்பதற்கு வேண்டிய [illegible] பணம் [illegible]. அதாவது [illegible] ரூபாய் 1200-0-0 [illegible] பொதுமக்கள் [illegible] உதவ வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி

உதவியவர்கள் — ரூபாய்
T. நா. [illegible] — 100-0-0
கோவை [illegible] — 63-0-0

ஆகவே, திராவிட மக்கள் 'தோழனை' ஆதரிக்கவேண்டியது நீங்காக் கடன் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'தோழன்' நீண்ட நாள் தோழர்களுக்குத் தொண்டாற்றி, திராவிடர்களுக்கு இருந்து வரும் குறைகளையும் கேடுகளையும் நீக்கி, உண்மை ஆருயிர்த் தோழனாக மிளிர விழைகிறேன்.

['தோழன்'—1-11-1947]

13. 'உண்மை'

'உண்மை' என்னும் பெயரால் ஒரு மாதப் பத்திரிகையை 1970-ஆம் ஆண்டு முதல் துவக்குகிறேன். அதற்குக் கொள்கை–மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்கவேண்டும் என்பதாகும்.

இன்று நம் நாட்டிலுள்ள நம் மக்களில் 100-க்கு 85 மக்கள் சுத்தக் காட்டுமிராண்டி–மூடநம்பிக்கைக் கருத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மற்றும், இந்த 100-க்கு 85 வீதம் கொண்ட மக்களும் சமுதாயத்தில் இழிபிறவிகளாக, கீழ்ச் சாதியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி ஆக்கப்பட்டிருப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரம் என்னவென்றால் கடவுள், மதம், வேத சாஸ்திரங்கள், மத தர்மங்கள், அரசியல், ஆட்சிச் சட்டம் என்பவைகளாக இருந்துவருதல் ஆகும்.

இந்த நிலை இன்று நேற்று என்றில்லாமல், சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலம் முதலே இருந்துவருகின்றது. ஒரு நாட்டின் நிலை இந்தப்படியாகவும், மக்கள்நிலை அதற்கேற்ற தன்மையுடைய அறிவைக்கொண்டதாகவும் இருந்துவந்தால் இதற்குப் பரிகாரம் என்பதே இல்லையா? மனிதன் என்றாலே உலகிலுள்ள மற்ற ஜீவப் பிராணிகள் எல்லாவற்றையும்விட அதிகமான அறிவுகொண்டவன் என்பதே பொருளாகும். மனிதனுடைய இந்த உயர்ந்த அறிவின்தன்மை அவனை இழிமகனாக, கீழ்மகனாக, மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டவனாக இருக்கத்தான் பயன்பட்டு வருகிறதென்றால் அறிவுள்ள மனிதன் என்பவனெல்லாம் வெட்கப்படவேண்டிய விஷயமல்லவா இது! எனவேதான், இந்த நிலையை மாற்றவே — மக்களைப் பகுத்தறிவாளிகளாக, மானமுடையவர்களாக ஆக்குவதற்காகவே—'உண்மை' என்னும் பெயரால் இப் பத்திரிகை துவக்கப்படுகிறது என்று திரும்பவும் கூறுகிறேன்.

மக்களை அறிவாளிகளாக்கும் துறையில், மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் துறையில் யார் பாடுபட்டாலும் அவர்கள் பொதுமக்களால் வெறுக்கப்படவும், நாத்திகர்கள் என்று கூறப்படவும், தொல்லைக்கு ஆளாக்கப்படவும், கொல்லப்படவுமான தன்மை உலகிலேயே இயற்கையாக இருந்துவருகிறபோது, அந்த நிலை நம் நாட்டில், நம் மக்கள் இருக்கும் யோக்கியதையில் ஏற்படாமல் இருக்கமுடியுமா? ஆதலால், அந்த நிலைக்கு ஆளாகும் தன்மையை எதிர்பார்த்தே நான் இந்தக் காரியத்தில் பிரவேசித்துத் தொண்டாற்றி வருகிறேன்.

இதன் பயனாக நான் பலமுறை சிறை சென்றிருக்கிறேன்; வாழ்க்கையில் பல இன்னல்களை அடைந்திருக்கிறேன்; அரசாங்கத்தால் வெறுக்கப்பட்டிருக்கிறேன். இதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கத்திற்கு என் பெயராலும், இயக்கத்தின் பெயராலும் அரசாங்கத்தாலோ, அரசாங்கத்திலுள்ள 'மேல் சாதி' மக்களாலோ அல்லது இந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்பவர்களாலோ எனது முயற்சியைத் தடுக்கவும் ஸ்தாபனத்தை ஒழிக்கவுமான தன்மையாக ரூ. 15,00,000 (பதினைந்து இலட்ச ரூபாய்)க்கு மேல் கடந்த காலத்துக்கு என்று 'இன்கம்டாக்ஸ் (வருமான வரி)' போடப்பட்டிருக்கிறது

என்பதுடன், நிகழ்காலத்திற்கும் ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய்போல் இன்கம்டாக்சும் போடப்பட்டுவருகிறது.

இவை தவிர, நம் நாட்டில் உள்ள எல்லாப் பார்ப்பனராலும் வெறுக்கப்பட்டிருக்கிறேன்; மேல் சாதியார் என்று பார்ப்பனரைப் போல் தங்களைக் கருதிக்கொண்டிருக்கும் எல்லாச் சைவர்கள் என்பவர்களாலும் பெரிதும் வெறுக்கப் படுகிறேன். இவை மாத்திரமா! 100-க்கு 90 கிறிஸ்தவர்களாலும் வெறுக்கப்படுகிறேன். இஸ்லாமியர்களால் வெளிப்படையாய் வெறுக்கப்படவில்லை என்றுதான் நினைக்கிறேன்.

இவற்றுள் ஒரு அதிசயமென்னவென்றால், ஆதித் திராவிட மக்களுக்குள் பதவியில் உள்ள சிலர் தவிர ஒருவர்கூட எனக்கு ஆதரவாளர் கிடையாது. யாராவது சிலர் அவர்கள் சொந்த—சுயநல காரியங்களுக்கு வருவார்கள்; அவ்வளவுதான். சிலர் எதிரிகளாகவே, அலட்சியப்படுத்துபவர்களாகவே ஆகிவிட்டார்கள். எதற்கு இவற்றைச் சொல்கிறேன் என்றால், 'என் இந்தத் தொண்டுக்கு ஆதரவாளர்களாக, பாராட்டுபவர்களாக பெரும்பாலான மக்கள் இல்லை' என்பதைக் காட்டுவதற்காகவேயாகும்.

இதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடையத் தக்கதும், குறிப்பிடத் தக்கதுமான காரியம் என்ன வென்றால், என் இயக்கத்தில் (இந்தத் தொண்டுக்கு ஏற்பட்ட இந்த இயக்கத்தில்) வேறு எந்த இயக்கத்தையும் விடக் கட்டுப்பாடும் அதற்கேற்ற கடமைப்பாடும் நல்ல அளவுக்கு இருந்துவருகின்றன. இயக்கத் தோழர்கள் யாராயிருந்தாலும், பிடிக்கா விட்டால் அவர்கள் வெளியே போய்விடுகிறார்கள் என்பதுதான்.

ஆகவே, 'உண்மை'யின் தொண்டு எதிர் நீச்சல் தொண்டேயாகும். 'குடி அரசு'த் துவக்க காலம் இதைவிட மோசமாக இருந்தது.

'குடி அரசை' ஒழிப்பதற்கு இந்த நாட்டுக் கிறிஸ்தவர்கள் அமெரிக்காவிற்கு எழுதி, அழுது பணம் தருவித்துப் பிரமாத வேலை செய்தார்கள். பார்ப்பனர் பணம் கொடுத்து எதிர்ப்புப் பத்திரிகைகள் ஆரம்பிக்கச் செய்து காலிகளை ஏவிவிட்டு எதிர்ப்புக் காட்டினார்கள். ஆனால், 'குடி அரசு' என்னும் வாரப் பத்திரிகை 'விடுதலை' பேரால் தினப் பத்திரிகையாக ஆகி, அதே தொண்டுடன் வேறு பல தொண்டுகளும் செய்து வருகிறதே ஒழிய, ஒழிந்துவிடவில்லை. இப்போது அதே தொண்டுக்காக, பகுத்தறிவுத் தொண்டுக்காக, சமுதாய இழிவு மடமை நீக்கும் தொண்டுக்காக என்றே பாடுபட இந்த 'உண்மை' பிறந்திருக்கிறது.

'உண்மை' நாத்திகப் பத்திரிகைதான்; முக்காலும் நாத்திகப் பத்திரிகைதான். அதற்காக யாரும் பயப்படாதீர்கள். சாக்ரட்டீஸ் நாத்திகர்; பெர்ட்ராண்ட் ரஸல் நாத்திகர்; பெர்னாட் ஷா நாத்திகர்; மற்றும் இயேசுநாதரும் 'நாத்திகர்' என்றே சொல்லப்பட்டுக் கொலையுண்டார். முகமது நபியும் 'நாத்திகர்' என்றே சொல்லப்பட்டு அடித்து விரட்டப் பட்டார். பவுத்தர்களும், சமணர்களும் நாத்திகர்கள் என்றே சொல்லப்பட்டு அவர்கள் வீடுகள், மடங்கள், கொளுத்தப்பட்டு வெகுபேர் கொல்லப்பட்டு, கழுவேற்றப்பட்டு, அவர்களது பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டு அல்லலுற்றனர். இவர்கள் தவிர, அமெரிக்காவில் பல நாத்திகச் சங்கங்களில் மூன்று கோடிக்குமேல் வெளிப்படையான நாத்திகர்கள். இங்கிலாந்திலும் அதுபோலவே அரைக் கோடிக்கு மேலும், ஜெர்மனியில் ஒரு கோடியும், சைனாவில் 60 கோடியும் ரஷ்யாவில் 40 கோடியும், ஸ்பெயினில் முக்கால் கோடியும், பிரான்சில் முக்கால் கோடியும், பர்மாவில் அரைக் கோடியும் சயாமில் ஒரு கோடியும் இருக்கிறார்கள்.

இப்படியாக, நூற்றுக்கணக்கான கோடி மக்கள் உலகில் நாத்திகர்களாக இருக்கிறார்கள். பல தேசங்கள் நாத்திக தேசங்களாகவே இருந்து வருகின்றன. இத்தனைக்கும் அவர்கள் எல்லோரும் பகுத்தறிவு கொண்ட தேச மக்கள் ஆவார்கள்.

இந்தியாவில் தமிழ் நாட்டில் இன்றைய அரசாங்கமே 'நாத்திக' அரசாங்கமாக இருந்துவருகிறது. கேரளாவில் நாத்திக அரசாங்கம் என்பதோடு—மூன்றில் ஒரு பங்குக்கு மேற்கொண்ட மக்கள் நாத்திகர்கள். இவர்கள் இன்று கோயிலை இடிக்கிறார்கள், சாமி சிலையை உடைக்கிறார்கள். மற்றும் பல நாடுகளில் நாத்திகர்கள் தாராளமாக இருக்கிறார்கள். நமது பார்லிமெண்டில் கடவுள் இல்லை என்று தீர்மானம் கொண்டுவருகிறார்கள். இவர்களால், இவற்றால் உலகம் முழுகிப்போய் விட்டதா? ஆகவே, நாத்திகம் கூடாததல்ல; இல்லாததல்ல; நடக்க வேண்டாததுமல்ல.

மற்றும் நமது 'கடவுள்'களில் ஒன்றான—2½ இலட்சம் மைல் உயரத்தில் இருக்கும் சந்திரன், இன்று வெள்ளையர் காலடியில் உதைபடுகிறான்—உடைக்கப்படுகிறான்.

இந்த நிலையில் 'உண்மை' நாத்திகத்தைப் பரப்புகிறது என்றால் எதற்காகப் பரப்புகிறது? உன்னைப் பார்ப்பான்—'சூத்திரன்' என்று சொல்லுவதையும், உனது மனைவி மக்களை 'வைப்பாட்டி' என்றும், 'தனது வைப்பாட்டி மக்கள்' என்றும் சொல்லுவதையும், நீ இவைகளுக்குச் சம்மதித்துக் கொண்டு அதற்கேற்ப நடந்து கொண்டிருப்பதையும் ஒழிப்பதற்காகவே பரப்புகிறது. ஆதலால், 'உண்மை'யை வர வழைத்துப் படியுங்கள். பத்தாயிரம் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுங்கள்! 'உண்மை' ஆறு மாதத்தில் வாரப் பத்திரிகையாக ஆகும்படி ஆக்கிக் கொடுங்கள்.

['உண்மை' முதல் இதழில் தலையங்கம்—14-1-1970]

14. இந்துமத ஆசார ஆபாச தரிசனி—மதிப்புரை

இன்றைக்கு அறுபதைந்து ஆண்டுகளுக்குமுன் சென்னையம்பதிக்கு அடுத்த அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயக்கர் என்னும் ஒரு பேரறிஞரால் செய்யுளாகச் செய்யப்பட்ட 'இந்துமத ஆசார ஆபாச தரிசனி' என்னும் இந்த அருமையான நூல் ஒன்று எனது நண்பர் தோழர் குரு. இராமலிங்கம் அவர்களது முயற்சியால் வெளியிட்ட பிரதியொன்று எனது மதிப்புரைக்காக அனுப்பப்பட்டதை நன்றியறிதலோடு பெற்றுப் பெரிதும் படித்துப் பார்த்தேன். அவையாவும் இந்துமத ஆசாரம்பற்றி எனது வெகுநாளைய கருத்துக்களை அடிப்படையாகக்கொண்ட நோக்கத்தை அணியாகக்கொண்டு துலங்குவனவாகக் காணப்படுகின்றன.

நான் பெரிதும் தொண்டாற்றிவரும் பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்ட சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்கள் இன்றைக்கு 60, 70 ஆண்டுகளுக்கு முன்பாகவே மிகத் துணிவோடு தெளிவாக செய்யுள் உருவாய்ப் பாடப்பட்டிருப்பதைக் கூர்ந்து நோக்கினால் சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்கள் புதியனவல்ல என்பதோடு, வெகுகாலத்திற்கு முன்னதாகவே, அதாவது நான் பிறப்பதற்கு முன்னதாகவே, பல அறிஞர்களால் வெளியிடப்பட்ட பழங் கருத்துக்கள் என்பதற்கு ஓர் தக்க சான்றாகும்.

இந்துமதம் என்னும் பேரால் நம் நாட்டில் இருந்துவரும் மூடத்தனமானதும் ஆபாசமானதுமான ஆசார அனுஷ்டானக் கருத்துக்களும் நடத்தைகளும் இந்த நாட்டிலல்லாமல், அதுவும் இந்து மதத்திலல்லாமல் வேறு எங்கும் எந்த நாட்டிலும், எம்மதத்திலும் காணவும், கருதவும் முடியாதவைகளாகும். நம் நாட்டைவிட எவ்வளவோ மோசமான காட்டுமிராண்டித்தனமான, மத ஆச்சாரக் கொள்கைகள், நடத்தைகள் கொண்ட மற்ற எந்த நாட்டினரும் நல்ல திருத்தப் பாடடைந்து, பகுத்தறிவுக்கு ஏற்றமுறையில் முன்னேற்றமடைந்து, முழுவிடுதலையும் பெற்று வாழ்கின்ற இந்த விஞ்ஞான வளர்ச்சிக் காலத்தில் நம் நாடும் நம் சமுதாயமும் மாத்திரம் இந்து மதம் என்னும் பேரால், இந்த நூலில் காணப்படும்படியான, இன்னும் அதிகமான ஆபாசத்தன்மையில் இருக்கிறது என்றால், இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டுமென்றே சொல்லுவேன்.

அந்தக் காரணம் என்னவென்றால், மேற்கண்ட தன்மையதான ஆபாச அனாச்சார காட்டுமிராண்டித் தன்மைகளைக் காப்பாற்றி, நாட்டில் பாமர மக்களிடையே பரப்பி, மூடநம்பிக்கைகளைப் புகுத்தி அதனாலேயே மேம்பாடுபெற்று வாழ்க்கை நடத்தும்படியான ஒரு சுயநல இனம்–பிறப்பினாலேயே தன்னை வேறுபடுத்திக்கொண்டு, அதனாலேயே தனது வாழ்வை அமைத்துக்கொண்டு இருப்பதேயாகும். அந்த இனம்தான் ஆரியப் பார்ப்பனர் இனம் என்று சொல்லப்படுவதாகும்.

இப் பார்ப்பனர் என்பவர்கள் இன்று இந்நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற்று மிக்க சக்திவாய்ந்த செல்வாக்குடன் இருந்துவரும் இந்நாளில், பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்டதும், அவற்றால் அவர்கள் மாத்திரமே பயன் அனுபவிப்பதற்கு வசதியாய் இருப்பதுமான இந்துமத ஆசார ஆபாசக் களஞ்சியங்கள் ஒழிவதற்கு இக் காலத்தில் யாராவது ஒருவர் தொண்டாற்றுவதென்றால், அப்படிப்பட்டவர் சர்வத்தையும் துறந்த துறவியாயிருந்து உயிருக்குத் துணிந்த ஒரு வீரராயிருந்தாலொழிய முடியாத காரியமாயிருந்து வருகிறது.

இப்படிப்பட்ட ஒரு அருஞ்செயலை நமது நண்பர் தோழர் குரு. இராமலிங்கனார் அவர்கள் மேற்கொண்டு ஊக்கத்தோடு ஆற்றிவரும் அரும்பணிகளில் இந்த 'இந்துமத ஆசார ஆபாச தரிசினி' என்னும் வெகுநாளாக மறைந்துகிடந்த இந் நூலை நல்லமுறையில் தொகுத்துப் புதுப்பித்து வெளியிட முன்வந்ததானது தமிழ்மக்களால் பெரிதும் பாராட்டிப் போற்றக்கூடிய செயலாகும்.

அவர் இதுபோல் இன்னும் பல நூல்களை வெளியிட்டு, நம் திராவிட மக்களிடையே இரத்தத்தில் ஊறி நிலவிவரும் இந்து (ஆரிய) மத ஆசார ஆபாசங்கள் அடியோடு நீக்கப்பட உறுதிகொண்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆதலால், அவரது இந்த நன்முயற்சியில் அவர் முழுவெற்றி பெறவேண்டுமென்று நான் விரும்புவதோடு, இவ்வரும்பணிக்காக அவருக்கு நன்றி செலுத்தி, மேலும் ஊக்கமளிக்க வேண்டியது திராவிட மக்களின் கடமையாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந் நூல்போலவே மற்றுமுள்ள நூல்கள் யாவும் விரைவில் வெளியாக்கப்பட வேண்டுமென்றும், அவைகள் ஒவ்வொன்றையும் திராவிட மக்கள் வாங்கிப்படித்து, அறிவு பெற்றுத் தன்மானவாதிகளாக, மனிதத் தன்மையுடையவர்களாகத் திகழவேண்டும் என்றும் முறையே குரு. இராமலிங்கனாரையும் தமிழ்மக்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

[சென்னை அறிவியக்க நூற் பதிப்பகம் 1948-ல் வெளியிட்ட 'இந்துமத ஆசார ஆபாச தரிசனி' என்னும் நூலின் மதிப்புரை]

2. இரங்கற் செய்திகள்

1. தங்கப் பெருமாள்

தமிழ் நாட்டின் அருந் தவப் பயன், நமது ஆருயிர் நண்பர் ஸ்ரீமான் வா. மு. தங்கப் பெருமாள் பிள்ளை இம் மாதம் 6-ந் தேதி காலை 4 மணிக்கு உயிர் நீத்தார் என்னும் செய்தியை எழுதவே மெய் நடுங்குகிறது. அவருக்கு இன்னமும் ஆண்டு முப்பதுகூட ஆகவில்லை. அவர் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள் கருங்கல்பாளையம் என்னும் கிராமத்தில் வாத்தியார் வீடு என்று சொல்லும்படியான புராதனமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு சைவ வேளாள செல்வக் குடும்பத்திற்குச் செல்வமாய்ப் பிறந்தவர். அவரது இளம் வயதிலேயே, அதாவது, 12-வது வயதிலேயே தந்தை இறந்துபோனார். ஆயினும், சிறிய தந்தையார் ஆதரவினால் கல்வி கற்பிக்கப்பட்டு, தனது 21-வது வயதில் B. A. பட்டம் பெற்று, 24-வது வயதில் B. L. பட்டமும் பெற்று, ஈரோடு ஜில்லா முன்சீப் கோர்ட்டில்

1921-ஆம் வருஷத்தில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். ஆரம்பித்த மாதமே 200 ரூபாய் வரும்படி கிடைத்தது. அடுத்த மாதம் 250 ரூபாய் வரும்படி கிடைத்தது. மற்றும் இரண்டொரு மாதங்களிலேயே மாதம் 300 ரூபாய்க்கு மேல் வரும்படி வந்துகொண்டிருக்கும் படியான நிலைமை ஏற்பட்டதோடு, ஊருக்குள் பிரபலமும், செல்வாக்கும் ஏற்பட்டு, தான் படித்து வந்த மகாஜன ஹைஸ்கூல் என்னும் பள்ளிக்கூடத்திற்கு ஓர் நிர்வாக அங்கத்தின ராயும், ஈரோடு நகர பரிபாலன சபைக்கு நிருவாக அங்கத்தினராகவும் தெரிந்து எடுக்கும் படியான பொதுஜன அபிப்பிராயத்தைப் பெற்றார். அவர் தனக்கு விவரம் தெரிந்த காலம் முதலே பொது விஷயங்களில் ஊக்கமும்—தன்னைப்போன்ற இளம் வாலிபர்களின் மிகுதியான கூட்டுறவும், தமிழ் மொழியினிடத்து ஒருவிதத் தனிப் பற்றுதலும் உடையவரா யிருந்ததோடு, தனது ஊராகிய கருங்கல்பாளையத்தில் ஒரு சிறு வாசகசாலை என்பதாக ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் பொதுநல விஷயங்களையும், தமிழர் பெருமையையும் பற்றி அடிக்கடி தமது நண்பர்களிடம் பேசுவதும், அவ் வாசகசாலைக்கு வருடா வருடம் ஆண்டுவிழா என்னும் பேரால் தமிழ்நாட்டுப் பெரியோர்களை, அதாவது ஸ்ரீமான்கள் பாரதியார், வரதராஜுலு நாயுடு, வ. வெ. சு. அய்யர், திரு. வி. க. முதலியார், மு. வே. நாட்டார் முதலியவர்களை அழைத்து, கொண்டாட்டங்கள் நடத்துவதுமான விஷயங்களில் பெரிதும் தனது சகாக்களோடு ஊக்கங்காட்டி வந்தவர்.

இந்நிலையில் 4, 5 மாதங்கள்கூட தனது வக்கீல் தொழிலை நடத்தியிருக்கமாட்டார். இதற்குள்ளாக காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கம் ஆரம்பமாயிற்று. தனது வக்கீல் தொழிலோடு ஒத்துழையா இயக்கம் சம்பந்தமான பொதுக்கூட்டங்கள் ஈரோட்டில் நடை பெற்று வந்த சமயங்களில், நமது பிள்ளை அவர்களே அனேகமாய் அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொள்ளப்படுவதும், இவரது அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோர் பேசுவதும் வழக்கமாயிருந்தது. இப்படியிருக்க, ஒருநாள் கூட்டத்தில் நமது பிள்ளையவர்கள் தனது முடிவுரையில், தான் நாளை முதற்கொண்டு வக்கீல் தொழிலுக்குப் போவதில்லை என்ற செய்தியை அறிவித்துவிட்டார். இவ்வறிவிப்பானது அக்கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் அவரிடம் அளவு கடந்த பக்தியையும், அன்பையும் ஏற்படுத்திவிட்டது. பிறகு காங்கிரஸ் நிருவாகத்திலும் அவர் இழுக்கப்பட்டார். உடனே, ஜில்லா காரியதரிசியானார். அடுத்தாற்போல் மாகாண நிர்வாகசபை அங்கத்தினரானார். பெயர்பெற்ற ஈரோடு கள்ளுக்கடை மறியலில் இவர் குற்றம் சாட்டப் பட்டு, நாயக்கர் உட்பட 40 தொண்டர்களோடு மேஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டுச் சிறைவாசமிருந்தார். சிறையினின்று வெளிவந்ததும் அதி மும்முரமாக ஜில்லா முழுவதும் சுற்றும்படியான வேலையில் தனது மெல்லிய சரீரத்தின் சவுகரியங்களையும், தனது வாழ்க்கை போகத்தின் பழக்கங்களையும் கொஞ்சமும் கவனியாமல் கிராமம், கிராமமாய்த் திரிந்து வேலை செய்து வந்தார். இந் நிலையில் ஜில்லா தலைவராகவும், மாகாண காரியதரிசியுமானார். இதன் பலனாய் மாகாணமெல்லாம் சுற்றவும் திருச்சியில் மாகாண கமிட்டிக் காரியாலயத்திற்குத் தன் மனைவி சகிதமாய்ப் போய் மாதக் கணக்காய் குடியிருக்கவும் செய்துவந்தார். இராஜீய நிலைமாறி நிலைகுலைந்ததின் பலனாய் காங்கிரஸ் நிருவாகத்தில் கலந்துகொள்ள இஷ்ட மற்றவராகி சகலவித நிருவாகத்தினின்றும் விலகிக்கொண்டு, 'குடி அரசு' என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்த முற்பட்டார். இதுசமயம் கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட்டதாலும், உடல்நலிவு ஏற்பட்டு படுக்கையில் கிடக்கத்தக்க அசவுகரியத்தோடு இருந்ததாலும், 'குடி அரசு' நிருவாகத்தை நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டு விலகினார். அடுத்தாற்போல், உடல்நலம் செய்துகொள்ள சென்னைக்குப் போகவேண்டியிருந்ததால், கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஸ்ரீமான் நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்னைக்குப் போனார். அங்கும் ஒன்றிரண்டு மாதம் இருந்து சிகிச்சை செய்துகொண்டார். பின் வைத்தியர்கள் அனுமதியின் பேரில் ஊருக்கு வந்து 3, 4 மாத காலம் படுக்கையிலேயே இருந்து சிகிச்சைசெய்து வந்தார். என்ன செய்தும்

அதிசாரக் கழிச்சல் என்னும் அவருக்கு ஏற்பட்ட வியாதி குணப்படாமல், அவரது முடிவுக்கே கூற்றுவனாயிருந்து கொள்ளைகொண்டுவிட்டது. படுக்கையில் இருக்கும்போதும் எழுதுவதும், படிப்பதும், சவுக்கியமான பிறகு தேசத்திற்கு என்னசெய்வது என்று வேலைத் திட்டம் போடுவதிலும் காலத்தைக் கழிப்பார். யாரிடமும் கடினமாகப் பேசமாட்டார். ஒருவருக்கும் மனவருத்தம் ஏற்படும்படி நடக்கமாட்டார். தான் சொல்லுவது உண்மை யானாலும் அதனால் யாருக்காவது சலிப்பு ஏற்படும் என்று பட்டால் பயந்து நிறுத்திக் கொள்ளுவார். தாராளக் கையர், தமிழ்நாட்டுத் தொண்டர்கள் என்போர் அனேகர் அவரிடம் வந்து அடிக்கடி ஏதாவது பெற்றுப்போவார்கள். நண்பர்களுக்குச் சமயங்களில் அவரைப்போல் உதவி செய்பவர்கள் மிகச் சிலர்தானிருப்பார்கள். இல்லை என்று சொல்லுவதானால் தனக்குள் ஒரு பெரிய பாவத்தைச் செய்கிறோமே என்று நடுங்குவார். தமிழிலும், ஆங்கிலத்திலும் அனேக புத்தகங்கள் வாசித்தவர். தமிழ்நாட்டிலுள்ள தமிழாராய்ச்சிக்காரர்களில் நமது பிள்ளையும் ஒரு முக்கியமானவர் என்று சொல்லவேண்டும். அவர் காரியாலயம் ஒரு புத்தகாலயம்போல இருக்கும். ஆராய்ச்சி, ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று எப்போது பார்த்தாலும் இதே வேலைதான். நமது நாட்டில் மக்கள் உயர்வு–தாழ்வு என்பது எப்படி ஒழியும் என்ற கவலை அவருக்குள்ள மற்ற எல்லாக் கவலைகளையும்விட முன்னின்று கொண்டேயிருந்தது.

முடிவாய்க் கூறுமிடத்து, தன்னலத் தியாகத்தில் ஒரு ஈடற்ற தேசபக்தர்; உண்மைத் தொண்டர்; அஞ்சா நெஞ்சர்; ஆருயிர்த் தோழர்; தமிழ்நாட்டின் ஒரு முக்கிய உருப்பு; கோவை ஜில்லாவின் வலக் கண்; ஈரோட்டின் முடி மறைந்ததென்றுதான் சொல்ல வேண்டும்.

['குடிஅரசு'–தலையங்கம்—7-3-1926]

2. பாஞ்சால சிங்கம்

நமது பத்திரிகை முடிந்து கடைசித் தாள் அச்சுக்குப் போகுந் தறுவாயில், பாஞ்சால சிங்கம்—முடிசூடா மன்னர்—உண்மைத் தலைவர் லாலா லஜபதிராய் அவர்கள் திடீரென்று மாரடைப்பு வியாதியால் மரணமடைந்தாரென்று தந்தி கிடைத்ததைப் பார்த்ததும் திடுக் கிட்டுப் போனோம்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் இருந்த—இருக்கிற தலைவர்களில் லஜபதியவர்கள் சொல்லும் வார்த்தைக்குத் தப்புஎண்ணம் அவரது எதிரியாலும் கற்பிக்க முடியாத உத்தம வீரர் இவர் ஒருவர்தான் என்றே சொல்லவேண்டும். இவரது மரணத்தால், தனது மனதிற்குப் பட்டதைத் தைரியமாயும் ஒளிக்காமலும் வெளியிடக்கூடிய ஒரு ஒப்பற்ற தலைவர் இந்தியாவில் இல்லை என்று சொல்லும்படியான நிலைமை உண்டாகிவிட்டது. சுயராஜ்யக் கட்சியாரைப் பார்த்து, 'பஞ்சாப் மாகாணத்தில் உள்ள எல்லாத் தொகுதிகளில் வேண்டுமானாலும் நான் ஒருவனே தேர்தலுக்கு நிற்கின்றேன்; யாராவது வந்து என்னுடன் போட்டி போடுவதாயிருந்தால் வாருங்கள், ஒருகை பார்க்கலாம்' என்று சொன்ன தீரர். திரு மோதிலால் நேருவின் வாடையே பஞ்சாப் நாட்டிற்குள் அடிக்கவிடாமல் செய்த தனி வீரர்.

சமீபத்தில் தமிழ் நாட்டையும் மலையாளத்தையும் பார்த்துவிட்டுப் போன பிறகு தமிழ்நாட்டின் நிலையைப் பயப்படாமல்—சிறிதும் ஒளிக்காமல் வெளியிட்டவர். தமது ஆயுட் காலமெல்லாம் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் மக்களுக்கு என ஒதுக்கி வைத்து விட்ட உண்மைத் தியாகி. தேசத்துக்காக 'முதல் சீர்திருத்தத்'தின்போது 20 வருஷத் திற்கு முன் நாடு கடத்தப்பட்டவர். 'இரண்டாவது சீர்திருத்தத்'தின்போது 15 வருஷத் திற்கு முன் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரவிடாமல் தடை செய்யப்பட்டவர்; ஒத்துழையாமையின்போது 2 வருடம் சிறை சென்றவர்; '3-வது சீர்திருத்தம்' வரப்போவ தற்கு முன் சர்க்காரால் அடியும் பட்டவர்; அதாவது அதனாலேயே உயிர்விட நேர்ந்ததோ

என்று எண்ணத்தக்க அளவு அடியும்பட்டவர். இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற ஒரு மகான்—உண்மைத் தியாகி இறந்தது ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

['குடிஅரசு'–தலையங்கம்—18-11-1928]

3. நமதருமைத் தலைவர்!

தேடற்கரிய, ஒப்புயர்வு அற்ற நமதருமைத் தலைவர் கனம் பனகால் இராஜா சர். இராமராய நிங்கவாரு திடீரென்று நம்மைவிட்டு சனிக்கிழமை இரவு 1 மணிக்குப் பிரிந்துவிட்டார் என்கின்ற சங்கதியைக் கேட்டவுடன் பொதுவாக இந்திய மக்களுக்கும்—சிறப்பாகத் தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் ஏற்பட்ட அதிர்ச்சிக்கும் துக்கத்திற்கும் அளவே இருக்காது. ஒரு நல்ல நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைவரின் காலம் முடிவுபெற்றதால், பெரியதும் திறமையானதுமான ஒரு யுத்தம்—முனைந்து வெற்றிக் குறியோடு நடந்துகொண்டிருக்கும் சமயத்தில், போர்வீரர்கள் சேனாதிபதியின் ஆக்ஞையை எதிர்பார்த்துத் திரும்பியபோது சேனாதிபதி இறந்துபோய்விட்டார் என்கின்ற சேதி கிடைக்குமானால், அந்தச் சமயத்தில், அப் போர்வீரர்களின் மனம் எப்படித் துடிக்குமோ அதுபோல்,—நமது தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

திரு. இராஜா சாஹேப் அவர்கள் நம் தேசத்தில் உள்ள மற்ற பெரும்பான்மையான தலைவர்கள் என்பவர்களைப்போல் கவலையும் பொறுப்பும் இல்லாமல் கூட்டத்தில் கோவிந்தா போட்டுக்கொண்டு, பாமர மக்களின் அறியாமையை ஆதரவாய்க்கொண்டு, வெறும் வார்த்தைகளை மாத்திரம் அடுக்காகவும் அழகாகவும் பேசுவதும் எழுதுவதும், சமயம் சந்தர்ப்பம் அவசியம் ஒன்றையும் கவனியாமல் சர்க்காரை எதிர்த்தும் கண்டித்தும் பேசுவதுபோல் காட்டுவதும் ஆகிய காரியங்களாலேயே பெரிய தலைவர் பட்டமும் கீர்த்தியும் பெருமையும் பெற்று வாழக்கூடியதான ஒரு சுலபமான முறையைக் கைக்கொண்டு தலைவரானார் என்று யாரும் சொல்லிவிடமுடியாது.

அன்றியும், மற்றொரு விதமாகவும்—அதாவது, பத்திரிகைக்காரர்கள் தயவால் அதாவது, பத்திரிகைக்காரர்களைத் திருப்திசெய்து அவர்களது இலட்சியங்களுக்கு ஆயுதமாய் இருந்து, அவர்களால் கைதூக்கிவிடப்பட்டுத் தலைவரானவரும் அன்று. அன்றியும் மற்றொரு விதமாகவும், அதாவது, ஆங்காங்கு கூலி ஆட்கள் பிடித்துக் கூலிகொடுத்து அவர்களைக்கொண்டு நாடு முழுவதும் தங்களைத் தலைவர்கள் எனக் கூச்சலிடச்செய்து, அதனாலேயே தலைவரானவரும் அன்று. அன்றியும், பார்ப்பனர்களின் அடிமையாய் இருந்து, உலக நலத்தின்பேரால்—கலை நலத்தின்பேரால்—மோட்ச நலத்தின்பேரால்—சுயராஜ்யத்தின்பேரால் என்று பார்ப்பன ஆதிக்கத்திற்கும் நலத்திற்கும் ஆளாயிருந்து அவர்களால் தலைவர்பட்டம் பெற்றவரும் அன்று.

மற்றென்னையோவெனில், தாழ்த்தப்பட்ட—ஒடுக்கப்பட்ட—இழிவாய்க் கருதப்பட்ட மக்கள், அதாவது தீண்டாதார்–கீழ் சாதியார்–ஈன சாதியார்–சூத்திரர் என்பவனாகிய 'பிறவி இழிவும்', 'பிறவி அடிமைத்தனமும்' சுமத்தப்பட்ட சுமார் 20 கோடி இந்திய மக்களின் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும், மனிதத் தன்மைக்குமாகவேண்டி பிரவாகமும் வேகமும் கொண்ட வெள்ளத்தில் எதிர்நீச்சு செய்வதுபோன்ற கஷ்டமான காரியத்தைக் கைக்கொண்டு, அதில் இறங்கி வேலை செய்தவர். அவ் வேலையில் அவர் பட்ட கஷ்டத்தை யார் அறிவார் என்பது எமக்கே சொல்ல முடியாததாய் இருக்கின்றது. இந்தியாவில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற அரசியல் இயக்கத்திற்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற சமூகத்திற்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பத்திரிகைகளுக்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பிரச்சாரக் கூலிகளுக்கு விரோதி! இவ்வளவு மல்லாமல் மதிக்கத் தக்க பிரதிநிதித்துவம் என்று சொல்லும்படியான

நிலையில், நெருப்பின்மேல் நின்றுகொண்டு வேலை செய்வதுபோல் வெகு கஷ்டமான துறையில் வேலை செய்தவர். இந்த 'வேலையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன குணங்கள் வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கினார், நமது தலைவர் பனகால் அரசர் என்று சொல்லுவது ஒரு சிறிதும் மிகையாகாது என்றே எண்ணுகின்றோம்.

அது மாத்திரமல்ல; நமது தலைவரின் தொண்டில் அவருக்கு உற்ற துணையாக வாவது, உதவியாகவாவது யாராவது இருந்தார்களா என்று பார்ப்போமானால், ஒருவரைக் கூட உறுதியாய்ச் சொல்லமுடியாது. இவருக்கு முன்னைய தலைவர்களான டாக்டர் நாயர், சர். தியாகராயர் ஆகியவர்களுக்கு நமது இராஜா போன்ற உள்ளன்போடு மனப் பூர்வமாய்ப் பின்பற்றுகின்றவர்கள் அனேகர் இருந்தார்கள். ஆனால், நமது இராஜாவுக்கு யார் இருந்தார்கள்? ஒருவரும் இல்லை என்று சொல்லுவதுடன் மாத்திரம் நில்லாமல், உள்ளுக் குள்ளாகவே எதிரிகள் சதா குற்றம் சொல்லிக்கொண்டும், பழி சுமத்திக் கொண்டும், அவரது தலைமையைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்துகொண்டும் அவரைச் சுற்றிலும், அவரது சொக்காய்ப் பையிலும் இருந்தார்கள். பின்னை எப்படி இராஜாவுக்குக் கட்சியும் ஆள் பலமும் இருந்தது என்று யாராவது கேட்பீர்களானால், அதற்குப் பதில்—அவருடைய தனி சாமர்த்தியத்தால், புத்திசாலித்தனத்தால், இராஜதந்திரத்தால், சிலரைத் தான் சொல்லு கின்றபடி கேட்டுத் தீரவேண்டிய நிலையில் வைத்துக்கொண்டிருந்ததால் என்றுதான் சொல்லவேண்டும். அன்றியும், பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்னும் கூட்டத்தாரில் பனகால் அரசரால் அதிருப்தி அடையாதவர்களோ—ஏமாற்றமடையாதவர்களோ அவர் மீது வெறுப்புக் கொள்ளாதவர்களோ ஒருவர் இருவராவது உண்டு என்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது. ஏனெனில், அவர் ஒரு அருமையான சாதனத்துக்குப் பாடுபட்டதினால் அது ஏதாவது கடுகளாவது பயன் அளிப்பதானாலும் அந்தப் பலன் அனுபவிப்பதில் ஏற்படும் சண்டைகளும் போட்டிகளும் அபிப்பிராய பேதங்களும் ராஜா சாஹேபை அனேகருக்கு விரோதியாகவும் அதிருப்தி கொள்ளவேண்டியவராகவும் செய்துவிடுகின்றன. இந்த நிலையில் அவர் மேற்கண்ட தொண்டில் ஒரு தனி வீரராய் நின்று போர்புரிந்தார் என்று தான் சொல்லியாக வேண்டும்.

அப்படியிருந்தாலும், எதிரிகளால் அடிக்கடி அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளைச் சமாளிப்பதில் வழிதவறிப் போயாவது—மனிதத் தன்மைக்கு விரோதமாகவாவது ஒரு சிறு காரியத்தையும் செய்யாமல் ஒரு சுத்த வீரனைப்போலவே நின்று கருமம் ஆற்றியவர். எந்தச் சமயத்திலும் மனம் கலங்கியோ அல்லது யாருக்காவது பணிந்தோ அல்லது தலை குனிந்தோ நின்றவரல்லர்.

உதாரணமாக, அவரது தலைமை வாழ்வு இந்த 10 வருஷத்திற்கு உள்ளாக மூன்று விதப் பரீட்சைக்கும் ஆளாயிற்று. அதாவது, ஒரு சமயத்தில் முதல்மூன்று வருஷத்தில் அவருக்கு அதிகாரமும் செல்வாக்கும், அதாவது மந்திரி அதிகாரமும் கட்சிச் செல்வாக்கும் இருந்தது. இரண்டாவது மூன்று வருஷத்தில் உள்ளுக்குள்ளாகவே கட்சி ஏற்பட்டதால் செல்வாக்கு இல்லாத மந்திரி அதிகாரம் மாத்திரம் இருந்தது. மற்றொரு சமயத்தில் மூன்றாவது மூன்று வருஷத்தில், உள் கலகத்தை எதிரிகள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக்கொண்டதால் அதிகாரம், செல்வாக்கு இரண்டும்—அதாவது கட்சிச் செல்வாக்கும் மந்திரி அதிகாரமும் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. ஆனாலும், முக் காலத் திலும் அவர் செய்யவேண்டியதைத் தைரியமாகவும், ஒரே மாதிரியாகவுமே செய்துவந்தார் என்று சொல்லியாக வேண்டுமே ஒழிய, எப்போதாவது களைத்துப்போயோ மனமுடைந்து போயோ விட்டார் என்று சொல்லமுடியாது. மேலும், அதிகாரமும் செல்வாக்கும் இல்லை என்று சொல்லும்படியான மூன்றாவது மூன்று வருஷமான நிகழ்காலத்தில், மந்திரி வேலை யுமில்லாமல் கட்சிச் செல்வாக்கு மில்லாமல், முன் ஆறு வருஷத்தில் செய்ய முடியாத காரியங்கள் அனேகம் செய்து முடித்திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அதனாலேயே

நமது பனகால் அரசரின் பெருமையும் சாமர்த்தியமும் விளங்கும்படியான சம்பவங்கள் நடந்துகொண்டே வந்தன.

திரு. பனகால் அரசருக்கு மந்திரி அதிகாரமும் கட்சிச் செல்வாக்கும் இருந்த காலத்தில் நம் நாட்டில் பார்ப்பன ஆயுதமான காங்கிரசுக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் இப்போது பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்கமுடியாத மாதிரி—வக்கீல் குமாஸ்தாக் களின் தோட்டங்களிலும் வக்கீலுக்குக் கட்சிக்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிடும் தரகர்களின் புழுக்கடைகளிலும் புகுந்து மறைந்து கொண்டன.

இந்த இரண்டு வருஷகாலத்தில் நமது தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஒரு மாகாண மாநாடு கூட கூட்டமுடியாத அளவு முறியடிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் நமது தலைவருக்கு 'அதிகாரமும் செல்வாக்கும் என்பவைகள் போய்விட்டதின்' பலன்தான் என்று உறுதி யாய்ச் சொல்லுவோம். இவ்வளவிலும் பொறுக்கியெடுத்த மணிபோன்ற அதிசயம் என்ன வென்றால், அவர் எந்தக் காலத்திலும் சர்க்காரிடத்திலோ மற்றும் யாரிடத்திலோ தனது கொள்கையைச் சிறிதாவது விட்டுக்கொடுக்கச் சம்மதிக்காததும், யாருக்கும் தலை வணங்கா ததுமேயாகும்.

முக் காலத்திலும் சர்க்காரை நடத்தக்கூடிய ஒற்றைத் தலைவராகவே (டிக்டேட்ட ராகவே) இருந்தார். அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில்தான் நமது தலைவ ரானவர் பெருமை தங்கிய கவர்னர் பிரபுவான லார்டு கோஷன் அவர்களை—சென்னை அரசாங்கத் தலைவரை—அரசரின் பிரதிகாவலரை—மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறும் படி உத்தரவிட்டார். 'பெரிய தலைவர்கள்—33 கோடி மக்களின் பிரதிநிதிகளான' காங்கிரஸ்காரர்களும் அவர்கள் முன்னோர்களும், முன்பு இதைவிட அதிகமாகச் சொன்ன போதெல்லாம் சிறிதும் இலட்சியம் செய்யாத அரசாங்கம்—அரசாங்கத் தலைவர்கள் நமது அரசர், பனகால் வீரர்—'உம்மீது நம்பிக்கையில்லை; கட்டும் மூட்டையை!' என்று சொன்னவுடன், லார்ட் கோஷன் மாத்திரமல்லர்—சென்னை அரசாங்கம் மாத்திரம் அல்ல, இந்திய அரசாங்க மாத்திரமல்ல—பார்லிமெண்டுகூட நடுங்கின நடுக்கம் யாரே அறிவார்! சர்க்கஸ்காரன் குதிரைகளையும், யானைகளையும், சிங்கங்களையும் ஆட்டுவதுபோல் இந்த அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில் அவர் அரசாங்கத்தை ஆட்டிவைத்த ஆட்டம் அறிஞர்களுக்கு மாத்திரமல்லாமல், அறியாதவர்கள் என்பவர்களையும் அதே மந்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டது. இது ஒன்றே—அவர் அரசாங்கத்திற்கு அடிமையாய் இருந்தாரா, அரசாங்கத்தை ஆட்டி வைத்தாரா என்பதை விளக்கிவைக்கும்.

அவர் சென்னை அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் அவசியமானபோது இந்திய அரசாங்கத்தையும் பார்லிமெண்டையும்கூட மிரட்டி நடுங்கவைத்து வந்திருக்கிறார்–மற்றும் அவர் அதிகார ஆட்சியான ஆறு வருஷ மந்திரி காலத்தில்—தனது மந்திரி வேலையை இராஜிநாமா கொடுத்தது குறைந்தது மூன்று நான்கு தரம் இருக்கும் என்றே சொல்லலாம். 1921-ல் தொழிலாளருக்காக ஒரு தடவையும், 1924-ல் வெளியில் சொல்லக்கூடாத விஷயத் திற்காக ஒரு தடவையும், 1926-ல் தேவஸ்தான ஆக்ட்டுக்காகவும், சர். சி. பி. அவர்கள் அக்கிரமத்திற்காகவும் ஒரு தடவையும்—மற்று சில சமயத்திலும் அவர் இராஜிநாமா கொடுக்கத் துணிந்ததும் இராஜினாமா கடிதம் எழுதி கவர்னர் பிரபுவுக்கு அனுப்பிவிட்டு வீட்டில் உட்கார்ந்துகொண்டதும், கவர்மெண்ட் மெம்பர்கள் ஜாமீனாக இருந்து இராஜி னாமாவை வாபீசு பெற்றுக்கொள்ளச் செய்ததும் அவரது உத்தியோக அலட்சியத்தைக் காட்டப் போதுமானவை.

மற்றும், அரசியல் சுதந்திரம் என்பதின்பேரால் தேசத்திற்காக பனகால் வீரர் போட்ட திட்டங்கள்—இப்போது உள்ள எந்தப் பெரிய மகாத்மாக்களோ, சிங்கங்களோ, லோகமான்யர்களோ, தேசபந்துகளோ, நேருக்களோ, தேசிய வீரர்களோ, அம்மைகளோ, மகான்களோ ஆகியவர்கள் கேட்டவைகளுக்கு ஒரு பிடியாவது அதிகமானதா யிருக்குமே

ஒழிய ஒரு நெல்லிடை அளவாவது குறைந்ததா யிருக்காது என்று கல்லின்மேலும் எழுதுவோம். வெள்ளைக்காரர்களிடமிருந்து அதிகாரங்களைப் பறிப்பதில் நமது இராஜா அவர்கள் காங்கிரசுக்காரர்களைவிடச் சிறிதும் பின்வாங்கியவரல்லர் என்றே சொல்லுவோம். அனேக இடங்களில் இதுவரை வெள்ளைக்காரர்கள் பார்த்துவந்த உத்தியோகங்களைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதுபோல் வாதாடிப் பிடுங்கிக்கொண்டார். அப்பேர்ப் பட்ட நிலையில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற வித்தியாசத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தவரே அல்லர். ஆனால், நமது பார்ப்பனக் காங்கிரசுக்காரர்கள்—நேரே, தங்கள் கைக்கு ஏதாவது உத்தியோகங்கள் வராது என்று நினைத்தால், உடனே அவற்றை வெள்ளைக்காரர்கள்தாம் பார்க்கவேண்டும் என்று சொல்லிவந்திருக்கின்றார்கள்.

இதற்கு ஆதாரம், எவ்விதமான சீர்திருத்தம் வேண்டும் என்று பார்லிமெண்டாரால் சென்னை அரசாங்க மெம்பர்கள் என்கின்ற முறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நமது பனகால் அரசர் கொடுத்த விடையும் வெகுநாளைய காங்கிரஸ்காரர் சர். சி. பி. ராமசாமி அய்யரவர்கள் கொடுத்த விடையும் போதுமானவை. அவ் விடைகளைப் பார்த்தவர் களுக்கு—எந்த இயக்கம், எந்தக் கூட்டம் தேசத் துரோகி என்பதும், யார் தேசபக்தர்கள் என்பதும் ஒரு மூடனுக்கும் விளங்கச் செய்யும்.

அவரது தலைமை வாழ்நாளில், அவர் எந்தக் காரியம் செய்தாலும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒரேவித நன்மையைக் கருதித் திட்டம் போடுவாரே ஒழிய, ஒன்றுக்கொன்று விரோதமாகவோ—தனது சுயநலத்திற்காகவோ ஒரு சிறு காரியத்தையும் செய்ததாக அவர் இறந்தபிறகுகூட, இழி முறையில் அவரைத் தூற்ற முற்பட்டவருங்கூட—ஒரு சந்தர்ப் பத்திலாவது சொல்ல வரவில்லை என்பதாலேயே விளங்கும். பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும், பார்ப்பனக் கூலிகளும் அவர்களது பத்திரிகைகளும் நமது இராஜாவின் மீது சுமத்திய பழிகளும், செய்த சூழ்ச்சிகளும், விஷமப் பிரச்சாரங்களும் கொஞ்சநஞ்ச மல்லவானாலும் ஒன்றையாவது இலட்சியம்செய்து பதில் சொல்லவோ அல்லது அந்த நபர்களை இலட்சியம் செய்து திருப்பிச் சொல்லவோ சற்றாவது தனது காலத்தைச் செல வழித்தார் என்று அவரது எதிரிகள்கூட இதுவரை சொல்ல வரவில்லை.

இந்தத் தலைமை ஸ்தானத்தால் மற்றவர்களைப்போல் பணம் சம்பாதிக்காமல் இருந்ததோடு மாத்திரம் அல்லாமல், குறைந்தது மாதம் 1-க்கு 2000 ரூ. வரை இயக்கத்திற் காகச் செலவு செய்துகொண்டு முழு நேரத்தையும் அதற்கே ஒப்புவித்துவிட்டவர், கடைசியாக உயிரையும் கொடுத்துவிட்டார்! இதனால் உண்மைத் தியாகி—ஒப்பற்ற தலைவர் மறைந்தார்.

இந்நிலையில் இப்பேர்ப்பட்ட தலைவரை இழந்து பரிதவிக்கும் தமிழ் மக்களுக்கு நாம் என்ன ஆறுதல் சொல்ல முடியும் என்பது நமக்கே விளங்காமல் துடிக்கின்றோம்.

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் தடைசெய்ய முடியாத தத்துவம். தலைவர்கள் போவதும் வருவதும் முரண்பாடில்லாத வழக்கம். இதற்குமுன் எத்தனையோ தலைவர்கள் மறைந்துபோனார்கள்; எத்தனையோ தலைவர்கள் தோன்றினார்கள். நமது தலைவரும் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் பிறந்த அன்றே அதே நேரத்தில பிறந்து சாகும்வரை நமக்காகவே உழைத்து 62 வயதான பிறகே உயிர் நீத்தார். இந்திய மக்களின் சராசரி வயது 24 என்றால்—சராசரிக்கு மேல் 39 வருஷம் வாழ்ந்திருந்து நமக்கு அவர் செய்திருக்கும் நன்மைகளை உணர்ந்து திருப்தி அடையாமல் இன்னும் கவலைப்பட்டுக்கொண்டு மனதுடைந்து போவதானது—நமது மயக்கத்தையும் பேராசையையுமே காட்டும். எந்தத் தலைவர் அல்லது எந்தப் பெரியார் சாகாமல் 'சிரஞ்சீவியாய்' வாழ்வதை நாம் பார்க் கிறோம்? இப்படி இருக்க, உலகில் மக்களில் ஒருவர் இறந்ததற்காக ஒருவர் ஏன் துக்கப்படு கின்றார்கள் என்று கேட்போமானால், அது இறந்தவரின் அருமை பெருமையைப்பற்றிப் பேசவும், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை உணர்ந்து அதன்படி

நடக்கவும், அவர்களது உயர்ந்த குணத்தைப் பின்பற்றவும் .சித்தாந்தப்படுத்திக்கொள்ள இந்தச் சமயத்தை உபயோகித்துக்கொள்வதற்காகத்தான் என்பதே எமது அபிப்பிராயம். அன்றியும், நாயர் பெருமான் அவர்களும் இதேமாதிரி நெருக்கடியான சமயத்தில் தேசம் விட்டு தேசம்போய் உயிர்துறந்தார். தியாகராய வள்ளலும் இதேபோல் இறந்தார். பனகால் வீரரும் அவர்களைப் பின்பற்றி நடந்தார். ஆனால், நாயர்பெருமான் காலமான வுடன் மக்கள் கண்ணிலும் மனத்திலும் தியாகராய வள்ளல் தோன்றினார். அதுபோலவே தியாகராய வள்ளல் மறைந்தவுடன் நமது பனகால் வீரர் தோன்றினார். பனகால் வீரர் மறைந்தபிறகு யாரும் தோன்றக் காணோம்! அவர் மறைந்தபிறகு சற்றேறக்குறைய இரவும்பகலுமாக 192 மணி நேரம்—இலட்சக் கணக்கானவர்கள் காலம் சென்ற தலைவரைப் போல் ஒரு தலைவரைத் தேடித்தேடிக் களைத்தாய்விட்டது. இன்னமும் ஒருவரும் புலப்பட வில்லை! இது ஒன்றே நமது பனகால் வீரர், ஒப்பாரும் மிக்காருமற்ற தலைவர் என்பதைக் காட்டுகின்றது.

ஆனாலும், இதற்காக மனமுடைந்து போகாமல், இந்த நிவர்த்தி இல்லாததும்—பெரிய துக்ககரமானதுமான சந்தர்ப்பத்தையும், 'இதுவும் ஒரு நன்மைக்காக' என்பது போல் கருதி, அதை அந்தப்படி உபயோகித்துக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். அன்றியும், அதுதான் அறிவும் வீரமும் தியாகமும் உறுதியும் கொண்ட தலைவரால் நடத்தப் பட்ட மக்கள் என்பவர்களுக்கு ஏற்ற குணமுமாகும்.

இனிமேல் நமக்கு எதற்காகத் தலைவர்கள் வேண்டும்? இனியும் எத்தனை நாளைக் குத் தலைவர்களாலேயே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும்? இவ்வளவு அருமை பெருமை சாமர்த்தியம் வீரம் வாய்ந்த தலைவர்களால் இத்தனைக் காலம் நடத்தப்பட்டும் இனியும், நாம் நமது காலிலேயே நிற்கமுடியாத பலவீனர்களாக இருப்போமானால் அல்லது இருக்கின்றோம் என்று நினைத்துக்கொண்டிருப்போமானால், என்றைக்குத்தான் நாம் மனிதர்களாவது–என்பது போன்ற ஞானங்கள் உதயமாவதற்கு இதுவே தக்க சமயம் என்று கூசாமல் சொல்லுவோம். ஏனெனில், இந்தச் சமயத்தில் நாம் நிலைகொள்ளவில்லை யானால் இனி நமக்கு வெகு காலத்திற்கு விமோசனம் இல்லை என்றுதான் முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்.

தந்தையை இழந்த மக்கள் தங்களது வாழ்க்கையை இனி தந்தை இல்லாமல் எந்த விதமாய் நடத்துவது என்கின்ற யோசனை கொண்டு, மார்க்கம் கண்டு நடக்க முயற்சிப்பார் களே ஒழிய, 'வேறு தந்தை யார்'? என்று நினைத்துக்கொண்டு தேடித் திரியமாட்டார்கள். அதுபோலவே, நாமும் இனித் தலைவரைத் தேடிக்கொண்டு திரிவதைப்போன்ற பைத்தியக் காரத்தனம் வேறில்லை என்று நினைக்கவேண்டும்.

உண்மையில், நமக்கு இப்பொது என்ன குறை? தலைவர் இல்லாத குறையா, நமக்குப் போதிய கவலையும் உணர்ச்சியும் பொறுப்பும் இல்லாத குறையா? என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கவேண்டும். உண்மையைப் பேசவேண்டுமானால், நமது மக்களுக்கு இனியும் போதிய உணர்ச்சி ஏற்படவில்லை; பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. சுயநலம் அளவுக்குமேல் தாண்டவமாட விட்டுவிடுகின்றோம். இத்தியாதி குணங்கள் உள்ள சமூகம் ஆயிரம் ஆயிரம் நாயர்களையும்—தியாகராயர்களையும்—பனகால் வீரர் களையும் 'சிரஞ்சீவி'களாக வைத்துக்கொண்டிருந்தாலும் முற்போக்கடைய முடியவே முடியாது என்று சொல்லுவதற்காக மன்னிக்கவேண்டுகிறோம். நமது ஈனநிலைக்கு நமது மக்களில்—பாமர மக்களைவிடப் படித்தவர்கள் என்பவர்களும் பணக்காரர்கள் என்பவர் களுமே மிகுதியும் காரணஸ்தர்களாய் இருந்து வந்திருக்கின்றார்கள் என்று சொல்லு வதற்குப் படித்தவர்கள் என்பவர்கள் நம்மை மன்னிக்கவேண்டும்.

நமது மேற்கண்ட தலைவர்களால் இதுவரையில் பாமர மக்களைவிட முக்கியமாய்ப் படித்தவர்கள் என்பவர்களும் சிறிது பணக்காரர்கள் என்பவர்களுமே பயன்பெற்றுவந்திருக்

கின்றார்கள். அதற்கு உதாரணமாக, அனேக படித்தவர்கள் பெற்றிருக்கும் உத்தியோகங்களையும் பணக்காரர்கள் பெற்றிருக்கும் பதவிகளையும் கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. ஆனால், இப் படித்தவர்களினுடையவும்—பணக்காரர்களினுடையவும் உணர்ச்சி எப்படி இருக்கின்றது என்று பார்ப்போமானால், வெளியில் சொல்ல வெட்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

உதாரணம் வேண்டுமானாலும் சொல்லுகின்றோம்—ஆனால், கோபிப்பதில் பயன் இல்லை. ஒரு சாதாரணமான—2½ அடி உயரமுள்ள பையன், அதுவும்—அரை டிக்கட்டுக்கு அருகதையில்லாதவன் என்று சொல்லக்கூடியன் முதற்கொண்டு, பெரிய ஆசாமி என்கிறவர்கள் வரையில் இரண்டு கோணல் எழுத்து அறியவோ அல்லது ஏதாவது ஒரு சர்வகலா சாலைப் பட்டமோ பெற்றுவிட்டால்—உடனே, தன்னை ஒரு பெரிய முக்கியமான பார்ப்பனரல்லாதாரர் என்று நினைத்துக்கொள்வதும், 'பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ன செய்து விட்டது; யாருக்குச் சாதித்துவிட்டது; எனக்கு இன்னமும் யாதொரு உத்தியோகமும் கொடுக்கவில்லை; அவனுக்குக் கொடுத்தார்கள், இவனுக்குக் கொடுத்தார்கள்; எல்லாம் அவரவர்கள் சுயநலத்திற்காகப் போடும் வேஷமே ஒழிய—இது பார்ப்பனரல்லாதார் இயக்கமல்ல' எனக் கூறி சவடால் அடிப்பதும், 'பனகாலைத் தெரியாதா? நாயரைத் தெரியாதா? செட்டியாரைத் தெரியாதா? எல்லாம் கூட்டுக்கொள்ளை' என்று சொல்லுவதும்; 'பார்க்கப் போனால் பார்ப்பனர்களே நல்லவர்கள்' என்று சொல்லுவதும்; 'என்ன இருந்தாலும் காங்கிரசைக் குற்றம் சொல்லலாமா? ஆதலால்தான் இவர்களோடு இருக்கமுடியவில்லை' என்பதும்—'எல்லாம் சரி; எனக்கு அந்தப் பெயர் தான் பிடிக்கவில்லை' என்பதுமானதும், ஆயிரத்தெட்டு அசந்தர்ப்பமும் அசம்பாவிதமான வார்த்தைகளை உளறிக்கொண்டு திரிவதும்—இவ்வளவையும் சகித்துக்கொண்டும் தலைவர்கள் ஏதாவது உத்தியோகமோ, பதவியோ கொடுத்தாலும் அதைப் பெற்றுக்கொண்டவுடன் நேர் விரோதிகளாகவும் அலட்சிய புத்தியுடையவர்களாகவும் இருந்துகொண்டு, 'பனகால் இப்படி நடக்கவேண்டும்; அப்படி நடக்கவேண்டும்' என்று அவருக்கே புத்தி சொல்லுவதும் பார்ப்பனர்களுக்கு உள் ஆளாயிருப்பதும், இயக்கத்தைக் குறை கூறுவதுமான வேலையிலேயே காலங் கழிப்பதுமாய் இருக்கின்றார்கள். பணக்காரர்களும் தங்களுக்குப் பதவி கேட்பதும், கிடைத்துவிட்டால் இயக்கத்தை மறந்துவிடுவதும், கிடைக்காவிட்டால் இயக்கத்தையும் தலைவர்களையும் குற்றம் சொல்லிக்கொண்டு எப்படியாவது இந்த இயக்கத்தை ஒழித்தாலொழிய நாட்டுக்கு மோட்சமில்லை என்று பிதற்றித் திரிவதுமான வேலையில் ஈடுபடுவதைத் தவிர வேறு ஒரு நன்மையுமே செய்யாமல் இருந்துவருகின்றார்கள்.

இதற்கு வெளிப்படையான சாட்சி பார்ப்பனரல்லாதார் பெயர் சொல்லிக்கொண்டு பெரிய பெரிய உத்தியோகம் பெற்றவர்கள்—ஜில்லா ஜட்ஜு, கலெக்டர் முதல் சாதாரண பெரிய உத்தியோகம் வரை பெற்றவர்கள்—இயக்கப் பத்திரிகை வாங்க மாட்டார்கள்; வாங்கச் சொன்னால் அதில் குற்றம் சொல்லுவார்கள்; மீறி வாங்கினாலும், பணம் கொடுக்க மாட்டார்கள். கேட்கப் போனால் 'அந்தப் பணம் என்ன ஆச்சுது, இந்தப் பணம் என்ன ஆச்சுது?' என்று கேட்பதன் மூலம் பழிசுமத்த வருவார்கள். அதோடு எதிரிகளின் பத்திரிகைகளை முன்பணம் கொடுத்து வாங்கிப் படிப்பார்கள். அன்றியும், இவர்கள் தங்களைப் பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்கள் என்றும், அவ் வியக்கத்திற்குள்ளாகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் என்றும் சொல்லிக்கொள்வார்கள்.

சாதாரணமாக, அவ்வியக்கம் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் இருந்ததான 1927ஆம் வருஷம் வரையில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகை—1200-ம் 'திராவிடன்' பத்திரிகை—700-ம் தான் அச்சாகிக்கொண்டு வந்தன. இதற்கும் மந்திரிகள் மாதம் 2000 ரூபாய்போல் கொடுத்து வந்தார்கள்; மற்றபடி, சில ஜமீன்தார்களும் பெரிய பணக்காரர்களும் உதவிவந்தார்கள். ஆனால், இயக்கத்தால் உத்தியோகம் பெற்றவர்களில் பணங் கொடுப்பதையோ, பத்திரிகை படிப்பதையோ தங்கள் கடமை என்று நினைத்தவர்கள் யார் என்று சொல்ல முடியாமலே

இருந்தது. இன்றையத் தினமும் 3000-க்கு மேற்பட்ட 'ஜஸ்டிஸு'ம் 6000-க்கு மேற்பட்ட 'திராவிட'னும் வெளியாகின்றதானாலும் 'ஜஸ்டிஸு'க்கு மாதம் 1-க்கு 1500 ரூபாய் நஷ்டமும், 'திராவிட'னுக்கு மாதம் 1-க்கு 500 ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டு வருவதன் மூலம் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகள் 25000 ரூபாய் கடனிலும் அது இன்னமும் பெருகும் படியான நிலையிலும் இருக்கின்றன. தியாகராயர் மெமோரியல் கட்டிடத்திற்கு 40000 ரூபாய் கடனும் வட்டியும் ஏறிக்கொண்டு வருகின்றது.

எனவே, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் நன்மை அடைந்தவர்களின் யோக்கிய தைக்கும், ஒப்பற்ற அருமையான மூன்று தலைவர்களால் அவ்வளவு தியாக புத்தியுடனும் சமர்த்துடனும் நடத்தப்பட்ட மக்களின் நன்றியறிதலற்ற தன்மைக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

மற்றும், இவ்வியக்கமானது, தன்னிடமிருந்து வெறும் உத்தியோகத்தையும் பதவி யையும் மாத்திரம் எதிர்பார்க்கும் மக்களைக் கொண்டிருக்கின்ற வரையிலும்—இயக்கத்தின் இலட்சியமே வெறும் உத்தியோகங்களை சர்க்காரிடமிருந்தும் பார்ப்பனர்களிடமிருந்தும் பிடுங்கிக்கொள்வதுதான் என்று கருதும் மக்களைக் கொண்டிருக்கும் வரையிலும்—இனியும் எத்தனை தலைவர்கள் தோன்றினாலும் உண்மை இலட்சியம் கைகூடும் என்று நம்மால் சொல்லமுடியாது. பதவிப் போட்டியாலும் அதிகாரப் போட்டியாலும் உத்தியோகப் போட்டி யாலும் மக்களுக்குள் கட்சிப் பிரதி கட்சியும், விரோதமும், வெறுப்பும் ஏற்படும் நிலைமை மாறும்படி செய்யவேண்டும். உத்தியோகம், பதவி, அதிகாரம் முதலியவைகள் எல்லாம் சமூக முன்னேற்றத்திற்காகப் பயன்படத்தக்க வழியில் கைப்பற்றவும் உபயோகப்படுத்தவு மான மாதிரியில் நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பெரிய சம்பளமுள்ள மந்திரி போன்ற பொறுப்புள்ள அதிகாரப் பதவிகள் இயக்கத்தின் பிரதிநிதித்துவமாக அனுபவிக்கவேண்டும். அதன் வருமானம் முழுவதும் இயக்கத்திற்குச் சேரவேண்டும். வேலை பார்ப்பவரின் செலவுக்காக இயக்கத்திலிருந்து ஏதாவது கொடுபடவேண்டும். கவுரவ உத்தியோகங்களும், பொது நன்மையைக் கருதுபவர்களுக்கே—ஒரு குறிப்பிட்ட நிபந்தனைப்படி நடப்பவர் களுக்கே கொடுக்கப்படவேண்டும்.

அன்றியும், சாதாரணமாக இதுசமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் உண்மை யிலேயே கொள்கைகளுக்காக அபிப்பிராயபேதம் இருப்பதாக யாரும் சொல்லமுடியாது. சுய நலத்தை முன்னிட்டு ஏற்பட்ட விரோதத்தினால் விலகி நிற்கவும், எதிர்த்து நிற்கவும் வேண்டி—வேண்டுமென்றே சில மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கற்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே ஒழிய வேறில்லை.

இந்த நிலைமை அடியோடு ஒழிய வேண்டும். இன்னும் இன்னோரன்ன பல விஷயங் களைக் கவனித்து மக்கள் தங்களைத் திருத்திக் கொள்ளச் சம்மதிப்பார்களானால் தலைவர் மறைந்த நஷ்டம் நம்மை ஒன்றும் செய்துவிடாது. மற்றும், அவர்களின் உயிர் தத்தத்தால் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டது என்றுகூடச் சொல்லத்தக்க ஒரு பெருமையும் மறைந்த தலைவர்களுக்கு ஏற்படும். இந்தச் சமயத்தில் முடிவாகவும் சுருக்கமாகவும் நாம் இவற்றைச் சொல்லி, இந்த நமது துயரத்தையும் ஆசையையும் படித்த மக்களைவிட சாதாரணப் பொது மக்களிடமே தெரிவித்துக்கொண்டும்—அவர்களையே நம்பிக்கொண்டும் இருக்கின்றோம். ஆதலால், இந்தச் சகித்தற்கரிய துக்கத்தால் யாரும் தங்கள் பிற்கால கதியைப்பற்றி உடைந்து போகாமல், நம்பிக்கையோடு ஒற்றுமைப்பட்டு—கட்டுப்பாடாக முனைந்து வேலை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மக்கள் எல்லோரும் நாயராக!

எல்லோரும் தியாகராயராக!

எல்லோரும் பனகால் வீரராக!

['குடி அரசு'-தலையங்கம்—12-12-1928]

4. உண்மைத் தோழர்

சுயமரியாதை இயக்கத்தின் உண்மைத் தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 26-2-1933-ந் தேதி மறைந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் நாம் திடுக்கிட்டுப் போய்விட்டோம். நாம் மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்தில் கடுகளவு ஆர்வமுள்ளவரும் இச் சேதி கேட்டவுடன் திடுக்கிட்டிருப்பர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தோழர் இராமச்சந்திரனை இழந்தது சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடு செய்யமுடியாத ஒரு பெரு நஷ்டமேயாகும். தோழர் இராமச்சந்திரனைப் போன்ற உறுதியான உள்ளமும், எதற்கும் துணிந்த தீரமும், மனதில் உள்ளதைச் சிறிதும் எவ்வித தாட்சண்யத்திற்கும் பின் வாங்காமல் வெளியிடும் துணிவும் சாதாரணமாக வெகு மக்களிடம் காண்பது என்பது மிக மிக அரிதேயாகும். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக என்ற கிளர்ச்சி சுயமரியாதை இயக்கத்தில் வீறுகொண்டிருந்த காலத்தில் தோழர் இராமச்சந்திரன் அவர்கள் தாலூக்கா போர்டு முதலிய பல ஸ்தாபனங்களில் தலைவராய் இருந்த சமயம் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்காவது உத்தியோகம் கொடுப்பதில்லை' என்று ஒரு உறுதிமொழி கூறி, அதை ஒரு விரதமாய்க் கொண்டிருப்பதாக விளம்பரப்படுத்தினார். மற்றும், அவரது திருநெல்வேலி சுயமரியாதை மகாநாட்டின் தலைமை உரையில் (1929-ஆம் வருஷத்தில்) வருங் காலத்தில் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்படும் பலன் இன்னின்னவை என்று குறிப்பிட்ட சமயத்தில்,

'உலகம் எல்லாம் வழங்கப்படும் ஒரு பாஷை ஏற்படும்;

உலகம் எல்லாம் ஒரு அய்க்கிய ஆட்சி நாடாகும்;

உலகத்திலுள்ள சொத்துக்கள், பூமிகள் எல்லாம் உலகத்திலுள்ள மக்களுக்குச் சொந்தமாகும்.

வேலை செய்யாத சோம்பேறிகள் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள்; குற்றங்கள் குறைந்துவிடும்; நோய்கள் அகன்றுவிடும்; மனித ஆயுள் இரட்டித்துவிடும். மக்கள் வாழ்வில் உள்ள கவலைகள், பொறாமைகள் நீங்கி, ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் கூட்டுறவு முயற்சிகளும் தாண்டவமாடுவதுடன், மக்கள் சதா சந்தோஷத்துடன் இருப்பார்கள்' என்று கர்ஜித்ததுடன், தீண்டாமை என்பது மதக் கொள்கையைச் சேர்ந்தது என்பது முழுப் புரட்டென்றும் அது முழுதும் பொருளாதார சூழ்ச்சியின் அடிப்படையைக் கொண்டது என்றும் பேசி இருக்கிறார்.

இந்தத் தத்துவங்களில் ஒரு சிறிதும் மாற்றமில்லாமல் இன்று சுயமரியாதை இயக்கம் வேலைசெய்து வருவதைப் பார்ப்பவர்கள் இவ்வியக்கம் யாதொரு புதிய வழிகளிலும் செல்லவில்லை என்பதை உணர்வார்கள். தோழர் இராமச்சந்திரன் நல்ல வாக்கு விசால முள்ள வக்கீலாகவும், தகுந்த வரும்படியும் மேலும் மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய நிலையும் சவுகரியமும் இருந்தும் அவைகளை இலட்சியம் செய்யாமல், இயக்கத்திலேயே கவலைகொண்டு மற்றவைகளை அலட்சியம் செய்துவந்த உண்மைச் சுயமரியாதை வீரரே யாவர். இவரது வயது 48; அதாவது 1884-ல் பிறந்தவர். இவ்விளம் வயதில் இப்படிப்பட்ட உற்ற தோழரை இழக்க நேர்ந்தமைக்கு யாரே வருந்தாமல் இருக்கமுடியும்? இவருக்கு 4 ஆண் மக்களும், 3 பெண் மக்களும் உண்டு. இவரது வாழ்க்கைத் துணைவியார் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு அங்கத்தவராகவும், சிவகெங்கை தாலூகா போர்டு அங்கத் தவராகவும் தகுந்த கல்வி ஞானமுமுள்ளவராகவும் இருக்கின்றார்கள்.

எனவே, இவ்வம்மையார் இயற்கையை மதித்து, துணைவரின் பிரிவைச் சடுதியில் மறந்து, அவரது சுயமரியாதை இயக்கத்தில் அவரது கொள்கைகளையே கொண்டு, உலக விடுதலைக்கும் உலக இன்பத்துக்கும் உழைக்க முன்வருவார்கள் என்றே ஆசைப் படுகின்றோம்.

['குடி அரசு'—5-3-1933]

5. நாகம்மாள் மறைவு

எனதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11-5-1933-ந் தேதி மாலை 7-45 மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு இலாபமா, நஷ்டமா என்பது இதுசமயம் முடிவு கட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.

எப்படியிருந்தாலும், நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்,' 'காலியாய்,' 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்கமுடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ—போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால், நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்துகொண்டிருந்தார் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக் கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்டபிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத் திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும் போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

ஆகவே, நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!

எது எப்படியிருந்த போதிலும், நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கையை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை.

நாகம்மாளை அற்ப ஆயுள்காரியென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயது ஆனபோதிலும், அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறைவான போதிலும் இந்திய மக்களில் சராசரி வாழ்நாளாகிய $23\frac{1}{2}$ (இருபத்திமூன்றரை) வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்லவேண்டும். 'செத்தால் சிரிக்கவேண்டும்; பிறந்தால் அழவேண்டும்' என்ற ஞானமொழிப்படி நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும் ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல், அதை ஒரு மகிழ்ச்சியாகவும், இலாபமாகவும் கருதவேண்டும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்றும் கருதுகிறேன்.

எப்படியெனில், எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிருக்காது. அத்துடன் அதைக் கண்டு சகியாத முறையில் யானும் சிறிது கலங்கக்கூடும்.

ஆதலால், நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் 'குடும்பத் தொல்லை' ஒழிந்தது என்கின்ற ஓர் உயர் பதவியையும் அடைய இடமேற்பட்டது.

இது நிற்க, நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும் இலாபமான காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்கின்றேனோ அந்த மாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்திக் கொள்ளமாட்டார். அதற்கு நேரெதிரிடையாக்குவதற்கே உபயோகித்துக் கொள்வார். ஆதலால், நாகம்மாள் நலத்தைக் கோரியும், நாகம்மாள் எனக்குமுன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

என்னருமைத் தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு ஈடுபடுத்தமுடியாத நஷ்டம் என்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயமல்ல. அவர்கள் சற்றுப் பொறுமையாய் இருந்து, இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பார்களேயானால் அவர்களும் என்னைப் போலவே நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு காயலா ஏற்பட்ட காரணமே, எனது மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் காரணமாய் ஒருவருட காலம் பிரிந்து இருந்திருக்க நேர்ந்த பிரிவாற்றாமையே முக்கிய காரணம். இரண்டாவது, ரஷ்ய யாத்திரையினால் எனக்கு ஏதோ பெரிய ஆபத்துவரும் என்று கருதியது.

மூன்றாவதாக, நமது 'புதிய வேலைத் திட்டங்களை' உணர்ந்தபின் ஒவ்வொரு நிமிஷமும் தனக்குள் ஏற்பட்ட பயம். ஆகிய இப்படிப்பட்ட 'அற்ப' காரணங்களே அவ்வம்மைக்கு 'கூற்றா'க நின்றது என்றால், இனி இவற்றைவிட மேலானதான பிரிவு, ஆபத்து, பொருளாதாரக் கஷ்டம் முதலியவை உண்மையாய் ஏற்பட இருக்கும் நிலை அவ்வம்மைக்கு எவ்வளவு கஷ்டமாய்இருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் தோழர்கள் நாகம்மாள் மறைவுக்கு வருந்தமாட்டார்கள் என்றே கருதுகிறேன். 2, 3 வருடங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சங்கராச்சாரிகள் போல—(அவ்வளவு ஆடம்பரத்துடனல்ல–பண வசூலுக்காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பிரயாணத்திலேயே இருக்கவேண்டும் என்றும் நமக்கென்று ஒரு தனி வீடோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசமோ என்பது கூடாதென்றும் கருதி இருந்தது உண்டு. ஆனால், அதற்கு வேறு எவ்விதத் தடையும் இருந்திருக்கவில்லையென்றாலும் நாகம்மாள் பெரிய தடையாய் இருந்தார். இப்போது அந்தத் தடை இல்லாமல் போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆதலால், நாகம்மாள் முடிவு நமக்கு நன்மையைத் தருவதாகுக!

['குடி அரசு'–தலையங்கம்—14-5-1933]

6. சின்னத் தாயம்மாள் முடிவு

95 வயது காலம் சுகமே வாழ்ந்து, சுகமே இருந்துவந்த எனதருமைத் தாயார் சின்னத் தாயம்மாள் 28-7-1936 ஆம் தேதி செவ்வாய் நள்ளிரவு 12 மணிக்கு முடிவெய்தினார்.

அம்மையார் இந்திய மக்களின் சராசரி வயதுக்கு 4 பங்கு காலம் அதிகமாகவே வாழ்ந்துவிட்டார். தானாக நடக்க, இருக்க, மலஜலம் கழிக்க சவுகரியமுள்ள காலம் அவ்வளவும் வாழ்க்கை நடத்திவிட்டு, சவுகரியம் குறைந்த 2 மணி நேரத்தில் முடிவெய்தி விட்டார். 28-ந்தேதி இரவு 9-30 மணிக்கு அம்மையிடம் அனுமதிபெற்றே ஜோலார்பேட்டை பிரச்சாரத்துக்குச் சென்றேன். 12 மணிக்கு ஆவி போக்கு வரத்து நின்றுவிட்டது. காலை 9 மணிக்கு வந்துசேர்ந்தேன்.

என் தாயார் சின்னத் தாயம்மாள் சேலம் டவுனுக்கு 3 மைலிலுள்ள தாதம்பட்டி என்கிற கிராமத்தில் ஒரு பிரபல செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்; மிக்க செல்வமாய் வளர்க்கப்பட்டவர். உதாரணமாக, தமது கிராமத்தில் புஷ்பவதி ஆனதற்கு சேலம்டவுனில் ஊர்வலம் விடத் தக்க தடபுடல் வாழ்க்கையில் இருந்தவர்.

ஈரோட்டில் ஏழைக் குடும்பத்தில் குழந்தைப் பருவத்திலேயே தகப்பனார் காணாமற் போனபிறகு ஒரு மிக ஏழ்மை வாழ்க்கை நடத்திய தாயாரால் காப்பாற்றப்பட்டவரும், பள்ளிக்கூடமே இன்னதென்று அறியாதவரும், 6 வயதிலேயே கூலிவேலை செய்யவும், 18 வயதில் கல்லுடைப்பு வேலை செய்யவுமாய் இருந்துவந்தவரும், 25 வயதில் வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டிப்போகிறவருமான வெங்கட்ட நாயக்கருக்கு—நெருங்கிய பந்து உறவு காரணமாக வாழ்க்கைப்படுத்தப்பட்டவர்.

அம்மை செல்வக் குடும்பத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து வந்தவராயிருந் தாலும், வெங்கட்ட நாயக்கரை மணந்தபிறகு, வெங்கட்ட நாயக்கரின் தரித்திரவாழ்வு அம்மையாரையும் பீடித்து, அம்மையார் செங்கல்—ஓடு முதலியவைகளைக் காளவாயி லிருந்து ஊருக்குள் கட்டடம் கட்டுபவர்களுக்குக் கூலிக்குக் கூடையில் சுமந்துபோட்டு, தினம் 8 பைசாக்கள் கூலிவாங்கிப் பிழைத்துவந்தவர். புருஷனுக்குத் தினம் 2 அணாக்கள் கூலியும், பெண்சாதிக்கு 8 பைசாக்கள் கூலியுமாகச் சம்பாதித்து வந்தனர்.

பிறகு, புருஷனுக்குக் கல் சித்திரவேலையில் தினம் பகலில் 8 அணாக்களும், இரவில் 12 அணாக்களும் பெறக்கூடிய யோக்கியதையும், வேலைத் திறமையும் ஏற்பட்டபோது—அம்மையார் வெளிவேலைக்குப் போகாமல் இருக்க நேர்ந்தது. ஆனபோதிலும், பின்னால், புருஷன் வண்டி ஓட்டிக்கொண்டு அடிக்கடி வெளியூர்களுக்குப் போவதைச் சகிக்காத அம்மையாரின் தகப்பனார் ஒரு சிறு தட்டுக்கடை வைத்துக்கொடுத்தார். அந்தக்கடை ஒரு வண்டிப்பேட்டையில் வைத்தால் தன்னுடன் தோழர்களாயிருந்த வண்டிக்காரர்கள் தன்னிடம் சாமான்களை வாங்குவார்கள் என்று கருதி, சட்டிபானை, அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய்ப்பொடி, விறகு முதலிய சாமக் கிரியை சாமான்களும் ஒருங்கேவைத்து வியாபாரம் செய்தார்கள். இந்தக் கடைக்கு வேண்டிய சகல சாமான்களும் அம்மையாரும், அம்மையாரின் மாமியாரான கெம்பு அம்மாளும் வீட்டில் தயார்செய்து கொடுத்து வருவார்கள்.

இந்தச்சமயம் 2, 3 குழந்தைகள் பிறந்து, இறந்துவிட்டன. இந்த நிலையில், அந்தக் கடையில் நல்ல இலாபம் கிடைத்தாலும் பிறகு போட்டி ஏற்பட்டதால் அதை விடுத்து, அந்தக் கடையை அப்படியே மற்றொருவருக்கு விற்றுவிட்டு இலாபப் பணத்தையும், கைமுதல் பணத்தையும் சேர்த்து ஈரோடு 'பஜார் ரோட்டி'ல் ஒரு மளிகைக்கடை வைத்தார். அம்மையைக் கைப்பிடித்த சம்பவத்தால் 'கல்தச்சு வெங்கட்டன்' என்ற பெயர் மாறி, 'வண்டிக்கார வெங்கட்ட நாயக்க'னாகி, பிறகு அதுவும் மாறி, 'தட்டுக்கடை வெங்கட்ட'னாகி, பிறகு அதுவும் மாறி 'மளிகைக் கடை வெங்கட்ட நாயக்கரா'னார். அதில் மூன்று வருடத் திலேயே மற்றவர்கள் பொறாமைப்படும்படியான இலாபம் அடைந்தார். ஒரு சிறு குச்சு—அதாவது, கதவு இல்லாமல் தட்டி வைத்து, இரவு முழுவதும் நாயை விரட்டிக்கொண் டிருக்க வேண்டிய குடிசை மாறி, ஓட்டு வில்லை கட்டட வீடும், இரண்டு ஏக்கரா விஸ்தீரண முள்ள நல்ல வயல் நிலமும் உடையவரானார்.

இது சமயம்தான், அம்மையாருக்கு முன்பிறந்த மூன்று குழந்தைகளும் இறந்து போய் 'ஸ்தல யாத்திரைகள்', 'தவங்கள்' செய்து, 'வறட்டிக் கல்' சுற்றி, 'நிலத்தை வழித்து அதில் சாப்பாடு போட்டுப் பிசைந்து சாப்பிட்டு, சன்னியாசிகளின் எச்சிலைச் சாப்பிட்டு, 'வரன்' பெற்று ஈ. வெ. கிருஷ்ணசாமியையும், ஈ. வெ. இராமசாமியையும் பெற்று எடுத்த காலம் என்றாலும், அம்மையாருக்குள்ள பிள்ளை ஆசையால், மூத்த பிள்ளை ஒன்றே தனக்குப் போதும் என்று கருதி, அதற்கே தனது முலைப்பால் முழுவதும் கொடுக்க ஆசைப்பட்டு, இளைய பிள்ளையாகிய இராமனை மற்றொரு—குழந்தை இல்லாத

அம்மையாருக்கு—அதாவது, தன் புருஷனின் சிறிய தகப்பனார் மனைவியாகிய ஒரு விதவைக்கு ஒரு சிறு வீடும், சிறிது நிலமும் இருந்த காரணத்துக்காக அவர்களையே வளர்த்துக்கொள்ளும்படி இனாமாய்க் கொடுத்துவிட்டார்கள்.

அந்தக் காரணத்தாலேயே இராமன் (ஈ. வெ. இராமசாமி) பள்ளிக்கு அனுப்பப் படாமல், தெருத் தெருவாகச் சுற்றவும், கேள்வி கேட்பார் இல்லாமல் அலையவும் ‘கைம் பெண் வளர்ப்பது கழுதைக் குட்டிதான்’ என்ற பழமொழிக்கு ஏற்ப, ஒரு உதாரணமாக இருந்து வரவும், மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியை மிக அருமையாய்ச் செல்வமாய் வளர்க் கவுமான நிலை ஏற்பட்டது. ஆனால், அந்தச் சமயந்தான்—அதாவது, அந்த இரு குழந்தைகளும் பிறந்த சமயந்தான் வெங்கட்ட நாயக்கருக்குப் பெரிய செல்வம் பெருகச் சந்தர்ப்பமும் பெருகிவந்த காலமாகும். அதாவது, கடைசியில் சொன்ன மளிகைக் கடை வியாபாரமானது வலுத்துவிட்டது. வீடு, வயல், தங்க நகைகள், கேட்போர் மனமும் பார்ப்போர் கண்களும் திடுக்கிடும்படியான தோற்றமாய் இருந்ததால், எப்படியாவது அந்த மளிகைக்கடை நடக்கும் கட்டடத்தைப் பிடுங்கிக்கொண்டால் தங்களுக்கு அந்த இலாபம் கிடைக்கும் என்று கருதிச் சிலர் அந்தக் கடையைக் கட்டடக்காரனிடம் அதிக வாடகை வைத்துக் கேட்க ஆரம்பித்தார்கள். அம்மையாரும், புருஷனும் யோசித்து, கடையைச் சகல சாமானுடனும் பாக்கியுடனும் ஒப்புக்கொள்ளுபவர்களுக்குக் கொடுத்துவிடுவதாய் விலை கூறினார்கள். அதற்கு ஏற்பட்ட போட்டியில் நல்ல விலை கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு உடனே ஒரு மண்டிக்கடை அதாவது, மொத்த வியாபாரக் கடை (மூட்டைக் கணக்காய் விற்பது) வைக்க யோசித்தார்கள். உடனே நல்லதொரு கடை அமைந்தது. அங்கு மண்டிக்கடை வைத்தார். புருஷன் உடனே மண்டி வெங்கட்ட நாயக்கர் ஆனார்.

சின்னத் தாயம்மையாருக்கும், மண்டி வெங்கட்ட நாயக்கருக்கும் ஊரில் பணக்காரர் கூட்டத்தில் சேர்க்கத்தக்க பெயர் ஏற்பட்டதோடு, எப்படியோ நாணயமும் ஏற்பட்டு விட்டது. தான் மிகவும் நாணயசாலி என்று காட்டிக்கொள்வதில் இருவரும் சமர்த்தர்கள். அந்தக் காலங்களில் பணம் படைத்தவர்களுக்குப் பணம் போட்டுவைக்க பாங்கி (Bank) இல்லாததால் நாணயத்தில் பேர்பெற்ற சின்னத் தாயம்மாளும், வெங்கட்ட நாயக்கரும் ஒரு ‘சேவிங்ஸ் பேங்க்’ ஆகிவிட்டார்கள். பணம் ஏராளமாய்த் தங்களிடம் டிபாசிட் வர ஆரம்பித்ததும் தங்கள் வியாபாரத்தை மிகவும் பெருக்கிவிட்டார்கள்.

மண்டி வெங்கட்ட நாயக்கர் தன் கடையில் வியாபாரம் செய்தால், சின்னத் தாயம்மாள் வீட்டில் நெல்குற்றும் கொட்டணம், துவரை, உளுந்து உடைக்கும் வேலை, விளக் கெண்ணெய் காய்ச்சி ஊற்றும் வேலை முதலியவைகளில் எப்பொழுதும் 20, 30 பேர் வேலை செய்யும்படியான தொழில்செய்து, புருஷனைப் போலவே தானும் வருஷம் முழுவதும் சிறிதாவது பணம் சம்பாதித்துப் புருஷனுக்குக் கொடுத்தே வருவார்கள். பணம் சேர்ந்த வுடன் மதபக்தி, மதச் சின்னம், விரதம், நோன்பு, திதி முதலியவைகள் தாமாகவே தேடி வருவது வழக்கம் அல்லவா? அதுபோல் அம்மையார் மிகவும் பக்தியுடையவரானார்; விரதங்களை அதிகமாய் அனுஷ்டிக்கத் தொடங்கினார்.

மண்டி வெங்கட்ட நாயக்கருக்கும் நாமம் பலமாக-பட்டை பட்டையாய்த் திகழ்ந்தது. இதன் மத்தியில் வீட்டில் செல்வமாய் வளர்க்கப்பட்ட மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியும் பாகவதராக ஆகிவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில், அதாவது மண்டி வைத்து மண்டிக் கடை நன்றாய் நடக்க ஆரம்பித்து சிறிது எதிர்பார்த்ததற்குமேல் இலாபம் வர ஆரம்பித்த வுடன், சின்னத் தாயம்மாள் சின்னப்பிள்ளை இராமனை (ஈ. வெ. இராமசாமியை) ஒரு சிறு சண்டை காரணமாக, இனாமாக (தத்து)க் கொடுத்துவிட்ட அம்மாளிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். இராமனை வளர்த்த அம்மாள் ஊர்ப் பஞ்சாயத்துக் கூட்டினார்; மண்டி வெங்கட்ட நாயக்கருக்கு ஒன்றும் தட்டிச் சொல்லமுடியவில்லை. சின்னத் தாயம்மாள் ‘இரண்டு கண்கள்தான் எனக்கு இருக்கின்றன. இதில் ஒன்றைக் கொடுக்க முடியுமா?

முடியாது போ' என்று சொல்லிவிட்டார்கள். முடிவில் இராமனை சுமார் 9 வயதில் கைப்பற்றினாலும், அவன் 'விதவை வளர்த்த பிள்ளையாய்' 'ஊர்சுற்றியாய்', 'லோலனாய்' திரிந்ததால் படிப்பு இல்லை. அது மாத்திரமா? இனிமேல் படிக்கவும் இலாயக்கில்லாத சோதாவாய் ஆகிவிட்டான். இருந்தபோதிலும், பள்ளியில் வைத்துவிட்டு, வாத்தியார் வைத்துப் பார்த்தார்கள். வாத்தியாருடன் சண்டை; பிள்ளைகளுடன் பலாத்காரம்; அடிதடி. கடைசியாய் 'வாத்தியாரை வைவதில்லை'; 'பிள்ளைகளை அடிப்பதில்லை' என்கிற வாசகம், ஆயிரம் தடவை-அய்யாயிரம் தடவை 'தண்டக் காப்பி' எழுதுவதே வேலையாய் இருந்ததால், இராமனைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக்கொண்டு, மண்டிக்கடையில் அதாவது—தரகு வியாபார இலாக்காவில் மஞ்சள், மிளகாய் ஏலம் கூறும் வேலையில் போட்டார்கள். இருந்தாலும், இராமன் எங்கு, வளர்த்த தாயாரிடம் போய் விடுவானோ என்று சின்னத் தாயம்மாள் சின்ன மகனுக்குச் சிறிது சலுகை காட்டி, பொய் அன்பாவது காட்டியே வருவார்கள்.

எப்படியோ பணம் சேர்ந்துகொண்டேவரும். இந்தச் சந்தர்ப்பந்தான்—வெங்கட்ட நாயக்கர் என்கிற பெயர் மாறி நாயக்கர் ஆனதும், சின்னத் தாயம்மாள் என்கிற பெயர் மாறி நாயக்கம்மாள் என்கிற பெயர் ஏற்பட்டதுமாகும். அம்மையாருக்குத் தெய்வபக்தி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது. நாயக்கரும் அம்மாள் சொன்னபடி ஆடியாக வேண்டும்.

பணத்தை அள்ளி இறைக்க ஆரம்பித்துவிட்டார்கள்; கண்டவிடமெல்லாம்—காடுமேடெல்லாங் கோவில், சத்திரம், சாவடி கட்ட ஆரம்பித்தார்கள்; பார்ப்பனர்களின் புகழுரைகளுக்கு அடிமைப்பட்டு பல குருமார்களை ஏற்படுத்திக்கொண்டார்கள்; ஒவ்வொரு கலியாணத்தின்போதும், தருமக் கலியாணங்கள் செய்வார்கள்; நன்றாய் இருக்கும் கோவிலுக்கும் கும்பாபிஷேகம் செய்வார்கள்; நாயக்கர் (புருஷன்) ஏதாவது தட்டிச் சொன்னால், 'நீங்கள் பணம் கொடுக்கவேண்டியதில்லை; என் பணத்தில் செய்யுங்கள்' என்று எடுத்தெறிந்தாற்போல் பேசிவிடுவார்கள்; வீட்டில் ஒருவாரம் காலட்சேபம், இராமாயண, பாரத வாசகம், எங்கெங்கோ திரியும் சன்னியாசிகளுக்கும், பாகவதர்களுக்கும் சதாசர்வகாலம் உலையில் நீர் கொதித்தவண்ணமாய் இருக்கும்படியான தண்டச் சோற்றுச் சத்திரம்போல் வீட்டை நடத்திவந்தார்கள்.

இந்த நிலையில் ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. இளைய மகன் இராமனிடம் எவ்வளவு அன்பு காட்டினாலும், அம்மையார் இராமன் தொட்ட சொம்பு-டம்ளர் ஆகிய வைகளைக் கழுவியே வைப்பார்கள்; இராமனைச் சமையல் வீட்டிற்குள் விடமாட்டார்கள்; அப்பொழுதே அவன் 'சாதிகெட்ட' பயலாய் விளங்கினான்.

இராமனுக்காகவே சமையல் வீட்டுக்குள் வேறு யாரும் நுழையக்கூடாது என்பார்கள். இந்த இலட்சணத்தில் அம்மையார் மாமிசம் சாப்பிடமாட்டார். இராமனுக்குத் தினமும் மாமிசம் வேண்டும்; ஆதலால், இராமனுக்குக் கலியாணம் ஆனவுடன் அவனுடைய 'அனாச்சாரத்துக்கு' ஆகவே அம்மையார் இராமனை 'வேறு குடும்பம்' வைத்து விட்டார்கள்.

சதாசர்வகாலம், தன் வயிற்றில் இப்படிப்பட்ட பிள்ளை—இராமன் பிறந்ததற்குத் துக்கப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பொதுவில் சொல்லவேண்டுமானால், அம்மையார் பணத்தாசை இல்லாதவர்கள்; நன்றாய்ச் சம்பாதித்து, நன்றாய்ச் செலவு செய்தவர்கள்; பார்ப்பனர்களுக்கு ஏராளமாய் அழுதவர்கள்; அளவுக்கு மீறிய ஆசாரங்களை அர்த்தமில்லாமல் பின்பற்றி வந்தவர்கள். எத்தனையோ பேரைத் திருத்திய இராமனால், அம்மையாரிடம் தன் கொள்கையைச் சொல்லுவதற்குக்கூட தைரியம் ஏற்படும்படியாக அம்மையார் இடங்கொடுக்கவில்லை.

கடைசி வயதில்கூட அம்மையாரைப் பார்க்க வந்தவர்களிடம், 'என்மகன் இராமனைச் சிறிது பார்த்துக் கொள்ளுங்கள். இளங்கன்று பயமறியாது என்பதுபோல் கண்டபடி திரிகிறான்' என்று ஆவலாகச் சொல்லியே வருவார்கள்.

ஒரு காலத்தில் மவுலானாக்கள் ஷவ்கத் அலி, மகமது அலி ஆகிய இருவரும் அம்மையாரின் கையில் தங்கள் தலையை ஒட்டவைத்து வாழ்த்தும்படி கேட்டபோது—தன்னை அவர்கள் தொட்டுவிட்டதற்காக முகத்தைச் சுளித்துக்கொண்டார். இதை நான் வெளிப்படையாய் எடுத்துக்காட்டிக் கேலிசெய்து அம்மையாரை மன்னிப்புச் சொல்லும்படி செய்தேன். அதனால் அரசியல் தலைவர்கள்—காந்தி முதல் யார் வீட்டுக்கு வந்தாலும் அவர்கள் எங்கு தன்னைத் தொட்டு விடுவார்களோ என்று பயந்து, ஒடுங்கி, ஒரு மூலையிலேயே நின்றுதான் அவர்களுடன் பேசுவார். மூடநம்பிக்கைகளுக்கும், குருட்டு அனாச்சாரங்களுக்கும் தாயகமாய் இருந்தாலும் 95 வயது வாழ்ந்து முடிவெய்தி விட்டார்.

எனக்கு அவர் முடிவெய்தியதுபற்றி உண்மையிலேயே மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. அந்தம்மாளுடைய கோரிக்கை எனக்கு ஒரு கலியாணம் செய்து வைத்துவிட்டுச் சாக வேண்டுமென்பதே. எனது கோரிக்கை-எனக்கு முன்னதாகவே அம்மையார் முடிவெய்தி விடவேண்டுமென்பதே!

என் இஷ்டம் நிறைவேறியது.

மகிழ்ச்சி! மகிழ்ச்சி! பூரண மகிழ்ச்சி!

['குடி அரசு'—2-8-1936]

7. சர். ஏ. டி. பன்னீர்செல்வம்

நமது உண்மைத் தோழரும், உற்ற துணைவரும், உள்ளும் புறமும் ஒன்றாய் உள்ளவரும், தமிழர் இயக்கத்தில் உறுதியான பற்றுக்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்தவரும், நம்மிடத்தில் களங்கமற்ற அன்பும் பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்தவரும், நினைத்தால் திடுக்கிடும்படி எதிரிகள் நெஞ்சில் எப்பொழுதும் திகிலை உண்டாக்கிக் கொண்டிருந்தவருமான அருமை பன்னீர்செல்வம் அவர்களை, இன்று, காலம் சென்ற பன்னீர்செல்வம் என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது! நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக்கொள்ளுகிறது! மெய் நடுங்குகிறது! எழுதக் கையோடவில்லை; கண் கலங்கி மறைக்கிறது; கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது!

பன்னீர்செல்வத்திற்குப் பாழும் உத்தியோகம் வந்ததும்போதும்; அது அவரது உயிருக்கே உலையாய் இருந்ததும்போதும்! தமிழர்களைப் பரிதவிக்கவிட்டுவிட்டு மறைந்துவிட்டார். இந்த உத்தியோகம் ஏன் வந்ததென்றே ஒவ்வொரு வினாடியும் தோன்றுகிறது. அவருக்கடுத்தாற்போல்—யார், யார் என்று மனம் ஏங்குகிறது; தேடுகிறது; தேடித்தேடி ஏமாற்றமடைகிறது!

என் மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை; ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை.

என் தாயார் இறந்தபோதும்—இயற்கைதானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா? இது பேராசை அல்லவா என்று கருதினேன்!

10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்கவைத்த ஒரே அண்ணன் மகன், படித்துவிட்டு இந்தியா வந்துசேர்ந்து சரியாக 20 வயதில் இறந்துபோனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை!

பன்னீர்செல்வத்தின் மறைவு மனத்தை வாட்டுகிறது.

தமிழர்களைக் காணுந்தோறும் காணுந்தோறும்—தமிழர் நிலையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கிறது!

காரணம், முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுக துக்கத்தைப் பொறுத்தது; தன்னலம் மறையும்போது அவர்களது மறைவின் நினைவும் மறந்துபோகும். பன்னீர்செல்வத்தின் மறைவு பொதுநலத்தைப் பொறுத்தது; தமிழர்களின் நிலையைப் பொறுத்தது. எனவே தமிழர்களைக் காணுந் தோறும்—நினைக்குந்தோறும் பன்னீர்செல்வம் ஞாபகத்துக்கு வருகிறார்! இது என்று மறைவது? இவருக்குப் பிறகு யார் என்றே திகைக்கிறது! பாழாய்ப்போன உத்தியோகம்—சர்க்கரை பூசின நஞ்சுருண்டை குத்திய தூண்டில் முள்ளாக இருந்துவிட்டது! அம் முள்ளில் பட்ட மீனாக ஆகிவிட்டார் செல்வம்!

இனி என் செய்வது? தமிழர் இயக்கமானது தோன்றிய நாள் முதல் இப்படியே பல 'தத்துக்களுக்கு' ஆளாகி வந்திருக்கிறது என்றாலும்—நாளுக்கு நாள் முன்னேறியே வந்திருக்கிற அனுபவந்தான் நமக்கும் தமிழ் மக்களுக்கும் சிறிது ஆறுதலளிக்கும் என்று கருதுகிறேன்.

காலம் சென்ற பன்னீர்செல்வமே! காலம் சென்றுவிட்டாயா? நிஜமாகவா? கனவா? தமிழர் சாந்தி பெறுவாராக!

['குடி அரசு'—17-3-1940]

8. நம் சி. டி. நாயகம்

நம் அன்பர், ஆருயிர்த் தோழர் சி. டி. நாயகம் 13-12-1944-ல் முடிவெய்தி விட்டார். இனி அவரது இடத்தைப் பூர்த்தி செய்ய ஆள் இல்லை என்கின்ற நிலையில், உண்மையாய் உழைத்து வந்த உத்தமர் மறைந்தார்.

எளிய வாழ்க்கை உள்ளவர்; அதனால் மீதப் பணத்தையெல்லாம் கல்விக்குச் செலவு செய்தவர்; நினைப்பது போல் பேசுபவர்; பேசுவது போல் நடப்பவர்.

ஆவலோடு கண்ணை மூடிக்கொண்டு பெரியாரைப் பின்பற்றி வந்தவர். ஆனால், பெரியாருக்கும் அவருக்கும் எந்த விஷயத்திலும் ஒன்றுபோலவே கருத்து உதிக்கும். பெரியார் கருத்தைச் சொல்லி விட்டால் நாயகம் பெரியாருக்கு மேலாக அதை விளக்கிச் சொல்லுவார். அதற்கு ஆதாரங்கள் விநாடியில் சேகரித்து விடுவார்.

எந்தப் பதவியும், உத்தியோகமும், செய்யுந் தொண்டும் தமிழ் மக்களுக்குப் பயன் படுத்த முடியாவிட்டால் அது எவ்வளவு பெரியதாயினும் திரும்பியும் பாரார். உண்மையில் கண்ணியமானவர். வேஷத்திற்கு என்று நடக்கும் காரியம் அவரிடம் எதுவும் இருந்த தில்லை. அப்படிப்பட்ட பெரியார் முடிவெய்தினது நமக்கு மாபெரும் நட்டமென்றே சொல்லுவோம்; அதுவும் பரிகரிக்க முடியாத நட்டமென்றே சொல்லுவோம்.

அவரது குடும்பத்தார் பகுத்தறிவுவாதிகளானதால் அவர்களுக்கு எவருடைய ஆறுதலும் தேவை இருக்காதென்றே கருதுகிறோம்.

தமிழ் மக்கள் ஆங்காங்கு கூட்டங்கூட்டி, அவர்களது அனுதாபத்தை அக் குடும்பத் தாருக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

நாயகம் அய்யா அவர்களைப் போலவே இருந்து உழைத்துவந்த அவரது வாழ்க்கைத் துணைவியார், தோழர் சிதம்பரம் அவர்கள் அய்யா அவர்கள் விட்டுப்போன காரியங்களைப் பின்தொடர்வார்கள் என்ற உறுதி நமக்கு உண்டு.

['குடி அரசு'—16-12-1944]

9. காந்தியார் மறைவு

காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டார் என்கின்ற சேதியானது எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவேயிருந்தது. இது உண்மைதான் என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறிவிட்டது. இந்தியாவும் பதறியிருக்கும். மதமும் வைதிகமும்தான் இக் கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து. இக் கொலைக்குத் திரைமறைவில் பலமான சதிமுயற்சி இருந்தே இருக்கவேண்டும். அதுவும், காந்தியார் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ—உயிர்வாழ்ந்து வந்தாரோ அவர்களாலேயேதான் இச் சதிச்செயல் ஏற்பட்டிருக்க வேண்டும். இது மிகமிக வெறுக்கத்தக்க காரியமாகும். இவரது காலிஸ்தானம் எப்படிப் பூர்த்திசெய்யப்படும் என்பது ஒரு மாபெரும் பிரச்சினையே ஆகும். இப் பெரியாரின் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல்—மதயியல் கருத்துவேற்றுமையும், கலவரங்களும் இல்லாமல் இருக்கும்படி மக்கள் நடந்துகொள்வதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்.

['விடுதலை'—31-1-1948]

பெரியார் காந்தியவர்களின் விசனிக்கத்தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது. இந்திய மக்களனைவரையுமே இந் நிகழ்ச்சி திடுக்கிடவைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகவே தோழர் காந்தியார் இப் பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்து வந்தார்; மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது இலட்சியக் கோட்பாடுகள் உலக மரியாதையினை ஏற்றுவிட்டன.

காந்தியார்மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும். பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்துகொண்ட காந்தியார் இக் கொடுந் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்களென்றால், இது மிகவும் வெறுக்கத் தக்கதாகும்.

இக் கொலையாளியை ஆட்டிப் படைக்கும் சதிகாரக் கூட்டமொன்று திரை மறைவில் வேலைசெய்து வரவேண்டும். வடஇந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியேயாகும்.

காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந் நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல், மதவேறுபாடுகளை மறந்து, சகோதர பாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவைப்பர்.

['குடிஅரசு'-அறிக்கை—7-2-1948]

'உலக மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காக 125 வயது வரை நான் உயிருடன் வாழ்ந்துவருவேன்' என்று கூறிக்கொண்டே, அதற்கு ஏற்றவண்ணம் உடலையும் பாதுகாத்துக்கொண்டே, பெருவாரியான மக்களின் போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்று, அதற்காக உண்மையாய் உழைத்துவந்த மகான் காந்தியார், தனது 79-ஆம் ஆண்டில் அகால மரணத்தால் முடிவெய்தி விட்டார்.

இவரது முடிவைக் கேட்டதும் மக்களுக்குத் திடுக்கிடும் தன்மையும், அலறிப் பதறித் துடிதுடித்துத் துக்கப்படும் தன்மையும் இதுவரை நம் நாட்டிற்கு வேறு எவருடைய முடிவும் தந்ததில்லை என்பதோடு, இப்படிப்பட்ட இவரே இக் கதிக்கு ஆளான பின்பு, இனி எவர் எக்கதியானால்தான் என்ன என்று கூறலாம்.

காந்தியார் கொள்கையில் அதிருப்தி கொண்டவர் சிலர், ஏன்—பலர் இருக்கலாம் என்றாலும், அப்படிப்பட்டவர்களும் காந்தியாரிடத்தில் மரியாதையும் அன்பும் வைத்தவர்களாகவே இருந்தார்கள்.

கம்யூனிஸ்ட்டுகளும், சமதர்மவாதிகளும் காந்தியார் கொள்கையில் எவ்வளவு குறை கண்டாலும், அவரிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்தவர்களாகவே இருந்துவந்தார்கள். வெள்ளையர்கள் மீதில் இந்தியர்களுக்கு எப்படிப்பட்ட குரோத மனப்பான்மை ஏற்பட்ட காலத்திலும், வெள்ளையர் அரசாங்கம் காந்தியாரை மதிப்பதிலோ அவரைப் பாதுகாப்பதிலோ சிறிதுகூடச் சிறிதும் தவறியதில்லை. அனுபவத்திற்கு ஏற்றதோ ஏற்காததோ என்ற கவலையற்று காந்தியார் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு இலட்சியவாதியாகவே இருந்த பெரியாராவார். ஆதலால், அவரிடத்தில் சொந்த விருப்பு வெறுப்புக் கொண்டு எவரும் அவரை வெறுத்ததில்லை.

திராவிடர் கழகத்தாருக்கு, காந்தியாரிடம், அவர் வருணாசிரம தர்மத்தைக் காப்பதில் பிடிவாதமான கவலை கொண்டிருக்கிறாரே என்பது தவிர—மற்றக் காரியங்களில் அவருடன் பிரமாதமான முரண்பட்ட கருத்துக் கொண்டிருக்கவில்லை என்பதோடு அவர்கள், 'காந்தியார் கூடிய சீக்கிரத்தில் இந்த விஷயத்திலும் சரிப்பட்டு விடுவார்கள்' என்றே கருதி, அதை மாத்திரமே முக்கியமாக காந்தியாருக்கு எடுத்துக் கூறிக் குறிப்பிட்டு வந்தார்கள். இந்துஸ்தானிலிருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியவேண்டும் என்பதிலும் காந்தியாருக்குப் பிடிவாதமில்லாமலேயே இருந்துவந்தது. என்றாலும், அவர்களது நண்பர்களான மார்வாடிகள், குஜராத்திகளின் தாட்சணியம் காரணமாக மாத்திரமே அது விஷயத்தில் தனது அதிருப்தியைக் காட்டி வந்தார். எப்படி இருந்தபோதிலும், திராவிடர் கழகத்தாருக்குள் ஒரு சிலருக்கு காந்தியார் நட்புப் பெறவும், அவரிடம் தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடவும் ஆசை துடித்துக்கொண்டிருந்தது. 1948ஆம் ஆண்டு முடிவதற்குள் இது விஷயத்தில் ஒரு குறிப்பிடத் தகுந்த மாறுதல்கூட திராவிடர் கழகத்தில் ஏற்படலாம் போல் நிலைமை இருந்தது.

இப்படிப்பட்ட சமயத்தில் ஒரு பார்ப்பனப் பாதகன், மதவெறி காரணமாகக் கொடுஞ் செயல் செய்து, தனது சாதிக்கே நீங்காப் பழியையும் மாசையும் உண்டாக்கிக்கொண்டான். காந்தியார் எப்படி இருந்தாலும் ஒரு நாளைக்குச் சாகக்கூடியவர் என்பதில் யாருக்கும் அய்யமில்லை; அவர் இளம் வயது உடையவருமல்லர். 80 வயதுடையவராய்—உலகப் பெரியாராய்—உத்தமராய் வாழ்ந்துவிட்டார். அவர் அடைந்த சுகபோகம், இராஜ உபசாரம் என்பவைகள் 'போதுமானதற்குமேல்' என்றே சொல்லலாம்; மற்ற எவருக்கும் இதுபோல் சுலபத்தில் கிடைக்கக்கூடியதல்ல என்றும் சொல்லலாம். அவர் மக்களுக்குச் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லிவிட்டு அதுபோல் நடந்து காட்டவும் செய்தார். அவர் சாகும்போது அவருக்கு நினைவு உணர்வு இருந்து இருக்குமானால், 'கடவுள் என்னை அழைக்கிறார்' என்று கருதித் திருப்தியுடன்தான் உயிர்விட்டிருப்பாரே ஒழிய, சிறிதும் அதிருப்தியாய் உயிர்விட்டிருக்கமாட்டார்.

என்றாலும், நடந்தது என்ன என்று பார்ப்போமேயானால் அவர் குறிப்பாக எந்தச் சாதி மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்துவந்து, எந்தச் சாதி மக்களை—'பிக்ஷாந்தேஹி' என்கின்ற உஞ்சவிருத்திக் கூட்டமாக இருந்துவந்தவர்களை—இன்று உயர்வாழ்வில் இருத்தி நாட்டை அவர்களது ஆட்சிக்கும், ஆக்கினைக்கும் உள்ளாக்கிக் கொடுத்தாரோ, அந்தச் சாதியே இன்று அவரை அழித்துவிட்டதே என்பதுதான் இதில் ஆத்திரம் கொண்ட பரிதாபத்தோடு சிந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் 'பிராமண' (பார்ப்பன) சாதி என்பதாக ஒரு சாதி—அந்தச் சாதியின் நலனுக்காக—அதுவும், மற்ற சாதிகளை இழித்து அழுத்திக் கசக்கிப் பிழிந்து, தாங்கள் மாத்திரம் நல்வாழ்வு வாழ்ந்தால் போதும் என்கின்ற கருத்துக்காக மாத்திரம் அல்லாமல், மற்றபடி வேறு எந்தக் காரியத்திற்கும் அந்தச் சாதி உலகத்துக்குத் தேவையே இல்லாத சாதியாகும். அப்படிப்பட்ட சாதியை அது ஒழியப்போகும் தருணத்தில் காப்பாற்றி அந்தச் சாதியாருக்குப் பொருந்தாத ஏற்றத்தைத் தந்து, நிரந்தரமாய் நல்வாழ்வு வாழ வகையளித்

தார். அப்படிப்பட்ட அந்தச் சாதிப் பாதகரே, அதற்குப் பிரதி உபகாரமாக இப்படிப்பட்ட பழிபாவத்திற்கு அஞ்சாத மகா பாதகமான காரியம் செய்தார் என்பது—இது, அவருடைய—அவ்வொருவருடைய செய்கையாக மாத்திரம் ஆகிவிட முடியுமா? ஒரு நாளும் முடியவே முடியாது. இதைச் 'சாதி தர்மம்' என்றுதான் சொல்லவேண்டும்.

புத்த தர்மம் கெட்டது யாரால்? சமண தர்மம் கெடுக்கப்பட்டுச் சமணர்கள் கழுவேற்றப்பட்டது யாரால்? மற்றும் பாதகமானதும் வஞ்சனையானதுமாகிய பல கொடுஞ்செயல்கள் புராண காலத்திலும் சரித்திர காலத்திலும் நடந்ததாகக் காணப்படுபவை யாரால் நடந்தவைகள்?

இவைபோன்றவைகளைக் கூர்ந்து கவனிப்போமேயானால், காந்தியார் போன்ற பெரியார்கள் பார்ப்பனரால் படுகொலை செய்யப்பட்டது என்பது அதிசயமோ—சிறிதும் ஆச்சரியமோ அல்ல என்பதை உணருவோம். இதற்காகப் பார்ப்பனச் சாதியைக் குறை கூறுவது முற்றும் சரியானதாகிவிடாது. அவர்கள் தங்கள் சுயநல வாழ்வுக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மதக் கற்பனைகளே இப்படிப்பட்ட பார்ப்பனர்களை உற்பத்தி செய்யும் விளை நிலமாக இருந்து வருகிறது.

உண்மையிலேயே மத மாற்சரியம், வகுப்பு மாற்சரியம், இன மாற்சரியம் முதலிய துவேஷங்களுக்குப் பார்ப்பன மதம் தவிர—மற்றபடி, இந்த நாட்டில் வேறு காரணம் யாராவது சொல்லமுடியுமா? தனிப்பட்ட எந்தப் பார்ப்பனரை நாம் குற்றம் கூறக்கூடும் என்று கேட்கிறோம்.

நன்றாக ஆழ்ந்து நிதான புத்தியுடன் கூர்ந்து சிந்திப்போமானால், 'வெள்ளையன் ஆட்சி கூடாது', 'முஸ்லிம் ஆட்சி கூடாது' என்ற உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டவும், அதனால் குரோதம், துவேஷம் ஏற்படவும், அதனால் வெட்டு, குத்து, கொலை, கொள்ளை, நாசம் ஏற்படவும் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு ஏதாவது கொள்கைகள், திட்டங்கள், ஆட்சி தர்மங்கள் காரணம் என்று யாராலாவது சொல்ல முடியுமா? சொல்லக் கூடுமானால், வெள்ளையன் ஆட்சியும் முஸ்லிம் ஆட்சியும் ஒழிந்தன; இந்துஸ்தான் சுய ஆட்சி பெற்றது என்று சொல்லப்பட்ட பின்பும் இந்து - முஸ்லிம் போராட்டம் என்னும் பேரால்—இந்த ஒரு ஆண்டு காலமாக நடந்துவரும் அட்டூழியமான நடத்தைகள் நடப்பதற்குப் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு காரணம் என்று யாராவது, எதையாவது சொல்ல முடியுமா?

திராவிட நாட்டில் இதுபோது நடந்துவரும் திராவிட—ஆரியர் நாடு பிரிவினைப் போராட்டங்களுக்கும் பார்ப்பன மதம் காரணம் என்பதல்லாமல் வேறு காரணம் ஏதாவது சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட ஒரு மத தர்மம் காந்தியாரைக் கொன்றதில் அதிசயமென்ன என்று திரும்பவும் கேட்கிறோம்.

பார்ப்பனீய மதக் கொடுமைக்குத் திராவிட நாட்டில் எப்படியோ ஒரு விதத்தில் இதுவரை இப்படிப்பட்ட பாதகங்களுக்கு இடமில்லாமல் பலரால் பல காரியங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன என்றாலும், பார்ப்பனர்கள் இனிச் சும்மா இருக்கமாட்டார்கள் என்றே தெரிகிறது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனரும் தமது பார்ப்பன மதத்தைக் காப்பாற்றத்தான் அரசியலில் கலந்துகொண்டும், பத்திரிகைகள் நடத்திக்கொண்டும், காந்தியார் முன் ஆஷாடபூதி வேஷம் போட்டுக்கொண்டு 'தக்ளி' சுற்றுவதும், கதர் கட்டிக் கொள்வதும், கோணல் குல்லாயைப் போட்டுக்கொள்வதும், தேசியக் கொடி பிடித்துக் கொண்டு காங்கிரஸ் பித்தர்கள்போல் நடிப்பதுமாய் இருந்துவந்தார்களே ஒழிய—நாட்டுப் பற்றால் என்றோ, மக்களுக்கு விடுதலை ஏற்படவேண்டும் என்ற விடுதலை வேட்கையால் என்றோ, எந்தப் பார்ப்பனரையாவது அவர்களது எந்த நடவடிக்கைகளையாவது சுட்டிக் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.

வடநாட்டில் காந்தியாரை வீழ்த்தியதன் பயனாய்ப் பார்ப்பனர்களின் செல்வாக்கு ஒரு அளவுக்கு இந்த நாட்டிலும் இனிக் குறைந்துதான் தீரும் என்பதோடு, இந்து—முஸ்லிம் போராட்டமும் பெரும் அளவுக்கு அடங்கித்தான் தீரும் என்பதை உணர்ந்த தென்னாட்டுப் பார்ப்பனர்கள், இங்கு திராவிட மக்கள்மீது அவ் வஞ்சகத் தன்மையைத் திருப்ப இப்போதே துவங்கிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

முதலாவதாக, தென்னாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகள் காந்தியாரைச் சுட்டவன் பார்ப்பனன் என்பதை வேண்டுமென்றே மறைத்து—மக்கள் முஸ்லிம்கள் மீதும், காங்கிரசுக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் மீதும் பாயும்படியான மாதிரியில் அயோக்கியத்தனமாக மறைத்தும் திருத்தியும் பிரசுரித்தார்கள். அது மாத்திரமா என்று பார்த்தால், திராவிடர் கழகத்தார் மீதும் துவேஷம் ஏற்படும்படி இரட்டை அயோக்கியத் தனமாக, 'கருப்புச் சட்டைக்காரர்களின் கலாட்டா' என்ற தலைப்புக் கொடுத்து மக்களை அவர்கள்மீது கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக் காரியத்தைச் 'சுதேசமித்திரன்' பத்திரிகையே முதன்முதலாகத் தைரியமாய்க் கையாண்டிருக்கிறது. உண்மையாக இந்த நாட்டில், 'இந்து', 'சுதேசமித்திரன்' என்ற இந்த இரண்டு பேயாட்ட, வெறி கிளப்பும் விஷமப் பத்திரிகைகள் இல்லாமல் இருந்திருக்குமானால்—இந்த நாடு எவ்வளவோ முன்னேற்றமடைந்து, இந்த நாட்டு மக்கள் எவ்வளவோ அன்னியோன்னிய பாவமடைந்து ஞானமும், செல்வமும் ஆறாகப் பெருகும் நன்னாடாக ஆகிப் பல்லாண்டுகள் ஆகியிருக்கும். இன்றையக் கலவரங்களிலும், கேடுகளிலும், நாசங்களிலும் 1000-ல் 999 பாகமும் இல்லாமல் இருந்திருக்கும்.

இப் பத்திரிகைகள் தங்கள் சாதியார் செய்யும் அயோக்கியத்தனங்களையெல்லாம் 'பொது மக்கள் ஆத்திரம்' என்று போட்டுவிட்டு, (கருப்புச் சட்டைக்காரர்கள் செய்தார்களோ இல்லையோ) கருப்புச் சட்டைக்காரர்கள் நடத்தையைக் குறிப்பிடும்போது, 'கருப்புச் சட்டைக்காரர்கள் கலாட்டா' என்று போடுவதன் காரணம், அதுவும் இந்தச் சமயத்தில் போடுவதன் காரணம் வேறு என்னவாய் இருக்கமுடியும்? இந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட ஆட்சி ஏற்பட்டாலும், 'இந்து', 'சுதேசமித்திரன்' என்னும் இந்த இரண்டு விஷ ஊற்றுக்களும் ஒழிக்கப்பட்டால் ஒழிய மக்களுக்குத் துவேஷம், குரோதம், வஞ்சகம் என்னும் விஷநோய்கள் நீங்கப்போவதில்லை என்று உறுதியாய்க் கூறுவோம். இந்தச் சமயத்தில் பார்ப்பனர் செய்யும் அயோக்கியத் தனங்கள் ஏராளமாக இருக்கும்போது, அவைகளை மறைத்து—சுட்டவன் சாதியைக்கூட மறைத்துவிட்டு, 'கருப்புச் சட்டைக் காரர்கள் கலாட்டா' என்று எழுதுவதானது சர்க்கார் அடக்குமுறையைப் பார்ப்பனர் பக்கம் திருப்புவதை விட்டு—கருப்புச் சட்டைக்காரர் பக்கம் திருப்புவதற்கல்லாமல் வேறு எதற்காக இருக்கமுடியும்? இந்தப்படி செய்த மற்றக் கூட்டத்தினருக்குப் பெயரைக் கொடுத்து அது பிரசுரித்ததா?

இப்படிப்பட்ட யோக்கியர்கள் உள்ள நாட்டில்—எப்படி சாதி, வகுப்பு ஒற்றுமை இருக்கமுடியும்? மேலும் மேலும் துவேஷம், பிரிவு ஏற்படாமல் எப்படி இருக்கமுடியும்? மக்களுக்கு வெறி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் 'கருப்புச் சட்டைக்காரர் கலாட்டா' என்று எழுதினால் அதன் உள் மர்மம் என்னவாய் இருக்கமுடியும்?

எனவே, பார்ப்பனீய விஷம மதம் அழிக்கப்பட்டால் ஒழியச் சாந்தியும், சமாதானமும் இந்த நாட்டுக்கு ஏற்படுவது அருமையிலும் அருமையாகத்தான் இருக்கும். வருணாசிரம தர்மப் பிரிவு கொண்ட பார்ப்பன மதம் வேண்டவே வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம். அது உள்ளவரை நாட்டில் இன்றுள்ள கேடுகள் எல்லாம் இருந்துதான் தீரும்.

பண்டித நேருவும், இராஜகோபாலாச்சாரியாரும் எவ்வளவு தியாகிகளாகவும், யோக்கியர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருந்தாலும் அவர்கள் இந்த வருண தர்மத்தை வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட நல்லாட்சியைக் கொண்டு வந்தாலும், அதில் காந்தி

யாருக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும்—ஏன் நமக்கும் கூட ஏற்பட்டுத்தான் தீரும். பார்ப்பன மதம் அவ்வளவு விஷத்தன்மை கொண்ட மதமாகும்!

ஏன் இப்படிச் சொல்கிறோமென்றால், பர்மாவில் சுயராஜ்யம் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து விட்டது. எப்படிச் செய்ய முடிந்ததென்றால்—அங்கு வருணாசிரம சாதி முறை இல்லை; பார்ப்பான் இல்லை. இந்துக்கள் நாட்டில்–இந்துஸ்தானில் சுயராஜ்யம் வந்து என்ன செய்தது? காந்தியார் உயிரைப் பலி வாங்கிவிட்டது. ஏன் என்றால், இங்கு வருண சாதியும், பார்ப்பானும் உண்டு. இனியும் என்ன என்ன செய்யப்போகின்றனவோ இவை? இன்றைய சுயராஜ்ய ஆட்சி மந்திரிகளில்—ஒருவர் மீது மற்றொரு மந்திரி சந்தேகப்பட்டுக் குற்றப் பத்திரிகை வாசிக்கிறார்; அதாவது, போதுமான பாதுகாப்பு முயற்சி எடுத்துக் கொள்ளாததாலேயே உள் நாட்டுக் கலகமும் காந்தியார் கொலை பாதகமும் ஏற்பட்டது என்று–பாதுகாப்பு மந்திரிமீது பண்டிதநேரு, குற்றமேற்படும்படிச் சொல்கிறார். நேருவின் நண்பரும் சமதர்மக் கட்சித் தலைவருமான ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் வெட்ட வெளிச்சமாகவே, இதை—அதாவது 'பாதுகாப்பு மந்திரி (சர்தார் பட்டேல் அவர்கள்) அந்தப் பாதுகாப்பு இலாக்காவுக்குத் தகுதி அற்றவர்' என்று சொல்லுகிறார். பொது மக்களும் இந்தக் கொலைக்குச் சர்தார் மீதும் பழிபோட இட மிருக்கிறது என்றே கருதுகிறார்கள். காந்தியாரும் உயிருடன் இருக்கும்போது, 'எனக்கும் பட்டேலுக்கும் விரோதம் இருப்பதாகக் கருதாதீர்கள்' என்று சொல்லி, அவர்மீது மக்களுக்கு உள்ள தப்பபிப்பிராயத்தை மாற்ற முயன்று இருக்கிறார். சர்தார் பட்டேல் அவர்களும், 'காந்தியார் பட்டினியின்போதே செத்து இருந்தால் நன்மையாக இருந்திருக்கும்' என்று தனது துக்கச் சேதியில் நுழைத்துச் சொல்லியிருக்கிறார். இதன் காரணமாய் மந்திரிகளுக் குள்ளும் அபிப்பிராய பேதம் வலுத்து, மந்திரி சபையில் மாற்றமோ, கோளாறோ ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

ஆகவே, பண்டித நேரு அவர்களும், இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் அவர்கள் விலகுவதற்கு முன்போ, ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்கு முன்போ, இல்லையானால் இனி இப்படி நேராமல் இருக்கப் பாதுகாப்பு முறைகள் கையாளுவதற்கு முன்போ, 'காந்தியார் பலியாக்கப்பட்டதன் காரணமாய்', இந்து மக்கள் சமுதாயத்தில் வருணாசிரம தர்ம முறை —அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதான பிரிவு (பிறவி உரிமை) முறை இனி கிடையாது; வருண முறையைக் குறிக்கும் சட்டம், சாஸ்திரம், சம்பிரதாயங்களும் இந்தச் சுயராஜ்யத்தில் இனி அனுஷ்டிக்கப்படமாட்டாது; இவை ஒழியும்படியாக அவசியமான எல்லா ஏற்பாடுகளும் கையாளப்படும்' என்று சுயராஜ்ய சர்க்கார் பேரால் ஏற்பாடு செய்துவிடுவார்களேயானால்—இந்த நாட்டைப் பிடித்த எந்த விதமான கேடும், ஒரே அடியாய்த் தீர்ந்துவிடும். இதைச் செய்த உடனே அப்புறம் ஒரு உத்தரவு போட்டுவிடலாம். அதாவது, 'பிறவி சாதி முறை எடுபட்டுவிட்டதால் இனி இந்த நாட்டில் பிராமணர் பாதுகாப்புச் சங்கமோ, பிராமணர் சேவா சங்கமோ, வன்னியகுல க்ஷத்திரியர் மகாஜன சங்கமோ, நாடார் மகாஜன சங்கமோ, வாணிய வைசியர் சங்கமோ, மருத்துவர் சங்கமோ, அருந்ததியார் சங்கமோ, மற்றும் இப்படிப்பட்ட பல பல சாதி–வகுப்புச் சங்கமோ எதுவும் இனிச் சட்ட விரோதமாகக் கருதப்படும்; அதனதன் தலைவர் களும் பிரமுகர்களும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டு அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப்படும்' என்று உத்தரவு போட்டுவிடலாம்.

பிறகு நமக்கு என்னதான் வேண்டும்? தானாகவே சமதர்மமும், பொதுவுடைமையும், தனித்தனி நாடு சுதந்திரமும் தாண்டவமாடும்.

இந்தப்படி சர்க்கார் செய்யாமல், வேறு எவ்வி : முயற்சி செய்தாலும் அடுத்த பலிக்கு மந்திரிமார் உள்பட நாம் யாவரும் தயாராய் இருக்கவேண்டியதுதான். இந்த நல்ல சமயத்தில் இதைச் செய்யாமல் இந்து மகாசபை ஒழிக்கப்பட்டாலும் சரி; ராஷ்ட்ரீய சுய

சேவக் சபை ஒழிக்கப்பட்டாலும் சரி—மாறுதல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை என்பது நமது கல்லுப்போன்ற உறுதியாகும்.

திராவிடர் கழகத்தார் முக்கியமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள்மீது எவ்விதமான குற்றமும் குறையும் எவரும் கூறுவதற்கு இடமில்லாமல்—அடக்கமாய், அமைதியாய் உண்மையாய், நிரபராதியாய் நடந்துகொண்டு, தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

['குடிஅரசு'—தலையங்கம்—7-2-1948]

10. ஜின்னா இழப்பு

தோழர்களே!

காந்தியாரின் மறைவைப்போன்றே துக்கம் தரக்கூடிய வேறொரு மறைவு சில நாட்களுக்கு முன் நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அதாவது, நமக்காக சுமார் 40 ஆண்டுகளுக்குமேல் உழைத்தவரும், முஸ்லிம்களின் இன்றைய ஏகதலைவரும் ஆன தோழர் ஜின்னா அவர்கள் சில நாட்களுக்குமுன் இயற்கை எய்தினார். அவர் முஸ்லிம்களின் நல்லெண்ணத்திற்கும், நம்பிக்கைக்கும் மட்டுமேயன்றி, இந்நாட்டு மக்கள் பெரும்பான்மையோரின் நம்பிக்கைக்கும், நல்லெண்ணத்திற்கும் பாத்திரமாகி, இந்தியாவின் மாபெருந் தலைவராக இருந்து வந்தார். தான் விரும்பிய முடிவை–தன் போராட்டத்தின் வெற்றியைத் தன் ஆயுட்காலத்திலேயே பெற்று, அப் பேற்றில் இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் தறுவாயில் அவர் காலமாக நேர்ந்தது மிக வருந்தத் தக்கதுதான். தோழர் ஜின்னாவும் என்னைப் போல், ஏன்—எனக்கும் மேலாகக்கூடக் காங்கிரஸ் பணியில் ஈடுபட்டவர்தான். நான் எப்படித் தேசியப் பற்றின் காரணமாக, காங்கிரஸ் பக்தியின் காரணமாக—காங்கிரசில் இருந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்கு இடையூறாக இருந்தேனோ அதேபோல், காங்கிரஸ் பக்தியின் காரணமாக ஆரம்பத்தில் அவர், முஸ்லிம் லீக்கைக்கூட எதிர்த்தவராவார். நான் காங்கிரசைவிட்டு வெளியேறி எப்படி ஜஸ்டிஸ் கட்சித் தலைவனானேனோ, அது போலத்தான், 'காங்கிரஸ் தன் வகுப்பு மக்களுக்கு எவ்விதத்திலும் நன்மை செய்யாது; கேடே செய்யும்' என்று உணர்ந்த பிறகுதான் அவரும் வெளியேறினார்; லீக்குக்குத் தலைவரானார். எனவேதான், காங்கிரஸ்காரர்களால் பலவாறு தூற்றப்பட்டார். எவ்வளவோ செல்வாக்குப் பெற்ற காந்தியாருக்கு நல்ல எதிரி உண்டென்றால், அவர் தோழர் ஜின்னா என்றுதான் எல்லோரும் புகழ்ந்து கூறுவார்கள். அந்த அளவுக்கு நாட்டில் மனத் துணிவு பெற்றிருந்தார் என்பதோடு, அவர் தனது கொள்கையின் நேர்மையை உணர்ந்து, அவர் காங்கிரஸ்காரர்களின் எவ்விதத் தூற்றலுக்கும் அஞ்சாமலிருந்து, சலியாமல் உழைத்து, பிறர் காட்டும் ஆசைகளுக்கு மயங்காமல், தயங்காமல் உறுதியுடன் இருந்து, முடிவில் வெற்றி மாலை சூடினார். இப்படிப்பட்ட ஒரு மாவீரர் மறைவுக்காக நாம் உண்மையிலேயே துக்கப்படுகிறோம். இப்படி இன்னும் பல துக்ககரமான சம்பவங்கள் அன்றாடம் ஏற்பட்டுக்கொண்டு தானிருக்கின்றன. இவை தவிர்க்கமுடியாதவை.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1948]

11. அழகிரிசாமி

நண்பர் அழகிரிசாமி முடிவு எய்தியதுபற்றி நான் மிகவும் துக்கப்படுகிறேன். அழகிரிசாமி எனக்கு 30 ஆண்டு நண்பரும் என்னை மனப்பூர்வமாய் நிபந்தனை இல்லாமல் பின்பற்றி வருகிற ஒரு கூட்டுப் பணியாளருமாவார். இந்த 30 ஆண்டுகாலத்தில் எனது கொள்கையிலும் திட்டத்திலும் எவ்வித ஆலோசனையும் தயக்கமும் கொள்ளாமல் நம்பிக்கை வைத்து அவைகளுக்காகத் தொண்டாற்றி வந்தவர். என் விஷயத்தில் மறந்தும் புறங்

கூறாமல் இருந்தது மாத்திரமல்லாமல், புறங்கூறுகிறவர்கள் யாராயிருந்தாலும் ஒளிவு மறைவில்லாமல் கண்டித்துவிடுவார்.

திடீர் என்று நான் புகுத்தும் கொள்கையையும், போடும் திட்டங்களையும் சிறிதும் யோசனை இன்றி ஒப்புக்கொண்டு, அவைகளை எப்படிப்பட்ட அறிவாளிகள், குயுக்திக் காரர்கள் வாதக் கூட்டத்திலும், எதிர்ப்பிலும் மெய்ப்பித்து வெற்றி காணுவார்.

கொள்கை வேற்றுமை, திட்ட வேற்றுமை என்பது எனக்கும் அவருக்கும் ஒருநாளும் காண முடிந்ததில்லை.

அவருடைய முழுவாழ்க்கையிலும் அவர், இயக்கத் தொண்டைத் தவிர, வேறு எவ்விதத் தொண்டிலும் ஈடுபட்டதில்லை. அவருக்குப் போதிய பணம் இல்லை. பல காரணங்களால் பொருளாதார நெருக்கடி அடிக்கடி அவருக்கு ஏற்படுவது இயற்கையாக இருந்துவந்தாலும், ஒரு சமயத்திலும் விளையாட்டுக்குக்கூடக் கொள்கையை எந்த விலைக்கும் விலைகூறி இருக்கமாட்டார். சமீபகாலமாக அவருக்கு உடல்வசதி இல்லாததால் அவருடைய தொண்டு சரிவர நடைபெறாமல் பல தடைகளுக்கும், பல அசவுகரியங்களுக்கும் ஆளாகிவிட்டது என்றாலும், அழகிரிசாமியைப் போல் இயக்கத்தில் படித்த, பாமர மக்களுடையவும், இளைஞர்களுடையவும் மனத்தைக் கவர்ந்து பறி கொண்டவர்கள் அரிது என்றே சொல்லுவேன்.

அப்படிப்பட்ட ஒருவர், உண்மையான வீரமும், தீரமும் உள்ளவர் இச்சமயத்தில் முடிவெய்திவிட்டது என்பது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதோடு, இயக்கத்துக்கும் பதில் காணமுடியாத பெருங்குறை என்றே சொல்லுவேன்.

['விடுதலை'—அறிக்கை—30-3-1949]

12. ஈ வெ. கிருஷ்ணசாமி

நீங்கள் இவ்வளவு பெருந் திரளாகக்கூடி எங்கள் குடும்பத் தலைவர் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்காக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றிய தற்காக நாங்கள் உள்ளபடியே நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சாதாரணமாக கவனிக்கப்போனால், இதற்காக நாம் துக்கப்படவேண்டிய அவசிய மில்லை என்பதோடு, இம் மறைவில் அதிசயப்படத்தக்கதும் ஏதும் இல்லை. ஏனெனில், அவர் இளம்வயதில் மறையவில்லை. 73 வயது தாண்டி 74ஆம் வயதில்தான் மறைந் துள்ளார். இது இந் நாட்டினரின் சராசரி வயதுக்கு மூன்று மடங்காகும். பெரும்பாலான மக்கள் 30 வயதிற்குள்ளாகவே இந் நாட்டில் இறந்துவிடுதல் மிகச் சாதாரணமாகும். எனவே, இந்தவகையில் நாம் அதிகம் வருந்துவதற்கில்லை. காலமாறுதல்களும், பஞ்சமும் மற்றும் பல கொடிய நோய்களும் மக்களை வாட்டி வதைத்துவரும் இக் காலத்தில் 74 வயது வரை உயிர் பிழைத்திருந்ததுதான் அதிசயமே ஒழிய மாய்வதொன்றும் அதிசயமே இல்லை. எனவே நாம் ஏன் என்னுடைய தமையனாரின் மறைவுக்காக இவ்வளவு வருந்துகிறோம் என்பதை நீங்கள் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றாடம் பல லட்சாதிபதிகள், ராஜாக்கள், மகாராஜாக்கள் இவர்களெல்லாம் மறைந்துகொண்டுதான் இருக்கிறார்கள். என்றாலும், மறைந்துபோகும் ஒவ்வொருவருக்கும் நாம் இம் மாதிரிக் கூட்டமாகக் கூடி அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருப்பதில்லை. 'இறந்துவிட்டாரா அவர்—சரி இது இயற்கைதான்; விதி முடிந்துவிட்டது. இறந்துவிட்டார், இதற்கென்ன செய்யலாம்' என்பதோடு பெரும்பாலோருடைய முடிவைப்பற்றி நாம் கவலைப்படாமல் இருந்து விடுவோம்.வேறு சிலருடைய மறைவுக்காகத்தான் நாம் பொதுக்கூட்டம் கூட்டி அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறோம். ஏன் அப்படி? என் தமையனார்போன்ற ஒருசிலர் மறைவுக்கு மட்டுமே நாம் அனுதாபம் தெரிவித்துக்கொண்டுவரும் இப் பழக்கத்திற்குக் காரணமென்ன?

இப்படி எல்லோரும் சேர்ந்து வருத்தம் தெரிவித்துக்கொள்ளும்படி என் தலைவனார் என்ன பெரிய காரியம் சாதித்துவிட்டார்? இதையெல்லாம் நீங்கள் உய்த்துணரவேண்டும்.

என் தலைவனார் தனக்காக மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. தன்னால் இயன்ற அளவுக்குப் பொதுமக்களுக்காகவும் சிறிது தொண்டாற்றியிருக்கிறார். தன் வாழ்வையே முதன்மையாகக் கருதி அவர் பாடுபடவில்லை. மற்ற மக்களுக்காகவும் தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபட்டிருக்கிறார். இதுதான் முக்கிய காரணமாகும்.

சுமார் 25 வருட காலமாகவே அவர் வைத்தியத்தில் மிகுந்த பற்றுக்கொண்டவராய் இருந்து வந்திருக்கிறார். வெறும் பற்றுதல் கொண்டவராக மட்டும் இருக்காமல், அதில் மிகுந்த ஆராய்ச்சி உடையவராகவும் இருந்திருக்கிறார். அதை யொட்டி வெகு தாராள மாகச் செலவு செய்யக் கூடியவராகவும் இருந்திருக்கிறார். தங்கபஸ்பம், வெள்ளிபஸ்பம், பவழபஸ்பம், முத்துபஸ்பம் முதலியவை செய்வதில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்ததோடு, தான் செய்யும் ஒவ்வொன்றையும் மிகக் கவலையோடும் கருத்தோடும் செய்து வந்திருக்கிறார். எதையும் மிக்க நல்லமுறையில் மிக நல்லதாகவே செய்ய வேண்டுமென்ற ஆர்வம் படைத்திருந்தார். மேலும், அதை எல்லோருக்கும் வழங்கவேண்டும், எல்லோருடைய நோயையும் போக்கவேண்டும் என்ற பேரார்வமும் பெற்றிருந்தார். அவரிடம் யாரேனும் தனக்கு ஒரு நோய் என்று சொல்லிவிட்டு, பிறகு தப்பித்துக்கொண்டு போய்விட முடியாது; எப்படியும் தன் மருந்தைக் கொடுத்தே அனுப்புவார். அதை உண்டு சுகமடையவேண்டும் என்பதில் அவருக்கு அவ்வளவு பிரீதியுண்டு.

வைத்தியம் தெரிந்த டாக்டர்கள் பலர் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். என்றாலும் அவர்களிடம் உதவிபெறுதல் எல்லோருக்கும் சுலபமாயில்லை. ஆங்கில வைத்தியம் மிக நல்ல வைத்தியம்தான் என்றாலும் அது ஏழை எளியவர்களுக்குப் பயன் படாததாக இருக்கிறது. ஆங்கில மருந்துகளைச் செய்வதற்கு அதிகப் பணம் செலவாகிறது. ஆனதால், அவற்றின் விலை அதிகமாயிருக்கிறது. நாட்டு வைத்தியமுறை சற்று மலிவான தாகும். மேலும், மலிவான பொருள்களைக்கொண்ட அம் மருந்துகளைச் செய்யமுடிகிறது. எனவே, அவர் நாட்டு வைத்திய முறையை வளர்ப்பதில் ஊக்கம் காட்டி வந்ததும், இலவச மாகவே தான் செய்த நன் மருந்துகளை மக்களுக்கு உதவிவந்ததும் மிகவும் பாராட்டத்தக்க செயலேயாகும். இப்படிப் பாராட்டுவதன் மூலம் மற்றவர்களுக்கும் பொதுத் தொண்டில் ஆர்வம் ஏற்படச் செய்யலாம்.

ஒருவன் தனக்காக என்று ஏதேனும் காரியம் செய்து கொள்வதென்றால் அக் காரியம் பொதுமக்களுக்கான நற்காரியத்தைச் செய்து, அவர்களுடைய அன்புக்கும் பாராட்டு தலுக்கும் பாத்திரமாவதுதான்; இம் மாதிரிப் பலர்கூடி தன் மறைவுக்காக வருத்தப்படும் அளவுக்குப் பொதுத்தொண்டு ஆற்றுவதுதான். இதுவே ஒருவன் தனக்கெனச் செய்து கொள்ளும் காரியமாகும். மற்ற காரியமெல்லாம் தன் மனைவி மக்களுக்காகச் செய்யப் பட்டதாகக் கொள்ளப்பட்ட போதிலும் அவை ஊருக்குச் செய்ததாகத்தான்—கண்டவர் களுக்குச் செய்ததாகத்தான் போய்விடும். ஒருவன் எவ்வளவுதான் சொத்துச் சேர்த்து வைத்துவிட்டுப் போனாலும் அது அவனுக்குப் பெருமை அளிக்காது; அதற்காக அவனுக்கு யாரும் மரியாதை செய்யவும்மாட்டார்கள். அச் சொத்து, மறைவின்போது அவனுடன் செல்வது இல்லை.

ஒவ்வொருவரும் எந்த வேலையில் இருந்தாலும் தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை, உழைப்பின் ஒரு பகுதியை, ஊதியத்தின் ஒரு பகுதியை, பொதுத்தொண்டிற்காக, ஏனைய மக்களுக்காகச் செலவிடவேண்டும். அதுதான் தனக்கென்று செய்துகொள்வதாகும்; மறைந்த பிறகும் தன் பெயர் நிலைத்து நிற்கச்செய்து கொள்வதாகும். என் தலைவனார் இந்த வகையில் தொண்டாற்றி உங்களுடைய பற்றுதலைப் பெற்றிருக்கிறார். எனவேதான் அவருடைய மறைவுக்காக நீங்கள் வருந்துகிறீர்கள். ஒரு நாளைக்குத் தம் ஆஸ்பத்திரிக்கு

ஒரு 150 பேர் வந்துவிட்டார்கள் என்றால் 'அவ்வளவு பேருக்கு உதவ வாய்ப்புக் கிடைத்ததே' என்று அவர் அவ்வளவு பூரிப்படைவார். அவர் அரிய பெரிய காரியம் ஏதும் செய்துவிடவில்லை என்றாலும் அவருடைய எண்ணம் கருத்து அதுவாகவே—பொதுநலத் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆர்வமாகவே இருந்தது. நீங்களும் அம் மாதிரியான ஆர்வம்பெற்று எல்லோருடைய வாழ்வும் சிறக்கப் பாடுபடவேண்டும். உங்களுடைய அனுதாபமும் புகழுரைகளும் எங்களுக்கு மிக ஆறுதலைத் தந்திருக்கின்றன. இதற்காகவும் நாங்கள் நன்றி செலுத்திக் கொள்ளுகிறோம்.

['விடுதலை'—7-2-1950]

13. ஸ்டாலின் மறைவு

ஸ்டாலின் முடிவெய்திய செய்தி கேட்டுத் திடுக்கிடாத—துக்கப்படாத ஏழை மக்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள்.

ஸ்டாலின், உலகத்தில் ஒரு கொள்கையாகக் காட்சியளித்து வந்தார். ஸ்டாலின் உலகப் பெரியார்களில் கடைசிப் பெரியாராக இருந்தவர்.

இனி உலகில் கொள்கைக்காக வாழும், கொள்கைக்காக இருக்கவேண்டிய பெரியார்கள் இல்லை.

அது மாத்திரமல்லாமல், 'உலக இரத்தினார்த்தமாய்த் தோன்றவேண்டிய' பெரியார்களும் இனித் தோன்றப்போவதில்லை.

நாம் பெரியார் என்று சொல்வதன் கருத்து 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற கருத்திலேயேயாகும்.

நாம், ஸ்டாலின் கடைசிப் பெரியார் என்று ஏன் சொல்லுகிறோம் என்றால்,

இன்று மதத் துறையில் பெரியார் யாருமிலர்; பொருள் துறையில் பெரியார் யாருமிலர்; கல்வித் துறையில் பெரியார் யாருமிலர்; அறிவுத் துறையில் பெரியார் யாருமிலர்; கொள்கைத் துறையில் பெரியார் யாருமிலர்.

ஸ்டாலின் கொள்கைத் துறையில் பெரியாராக இருந்தவர். மற்ற துறைப் பெரியார்கள் முடிவெய்தியதின் பலனாய், அத் துறையில் ஒன்றும் மோசமாய்ப் போய்விடவில்லை. அவர்களது கொள்கைகளால் மக்கள் ஏமாந்துவந்தது நின்றுபோய் விட்டது என்றுதான் சொல்லலாம்.

ஆனால், ஸ்டாலின் முடிவு மக்கள் விளக்கம் பெற்று, பயனடைந்து வந்த—வருகிற கொள்கைகள் வலுக் குறையக் கூடுமென்று பயப்படக்கூடிய, கவலைப்படக்கூடியதாய் ஏற்பட்டது.

அமுல் நடத்தப்பட்டு வந்த ஸ்டாலின் கொள்கையைச் சுயநலத்திற்குப் பயன் படுத்திக் கொண்டு (Exploit செய்து) வருகிறவர்கள்—இனி யோக்கியமாய், நாணயமாய் நடந்து மக்களிடம் அனுதாபத்தையும் அன்பையும் பெறும் மாதிரியில் உழைத்துவந்தால், அல்லது அப்படிப்பட்டவர்கள் விலகிக்கொண்டால், அல்லது விலக்கப்பட்டால்தான் உலகில் ஸ்டாலின் கொள்கைக்கு இடமுண்டு.

ஸ்டாலின் முடிவானது—உலக ஏழைப் பாட்டாளி மக்களின் ஒரே இரட்சகர் முடிவு எய்தினார் என்பதேயாகும்.

இது போன்ற நஷ்டம் உலகிற்கு ஏற்பட்டதில்லை.

நஷ்டம்! நஷ்டம்! ஏழைப் பாட்டாளி மக்களுக்கு மாபெரும் நஷ்டம்!

['விடுதலை'—அறிக்கை—7-3-1953]

14. திரு. வி. க.

திரு. வி. க. அவர்கள் தமது 70-வது வயதில் முடிவெய்தினார். இதில் ஒன்றும் அதிசயமில்லை. ஆனால், 75 வயதானவர்களாகிய நானும், என்னைப்போன்ற பலரும் சாகாமல் (கெட்டியாக) இருக்கும்போது 70 வயதுக்காரர் முடிவெய்தியது அதிசயம்தான்.

வயது சிறிது குறைவாய் இருந்தாலும், அவரது உணர்ச்சிப் புலன் தவிர்த்து மற்ற புலன்கள் பெரிதும் அதனதன் கடமையைச் (கர்மத்தை) செய்யமுடியாமல் போனபின்பு, உணர்ச்சிப் புலன் மாத்திரம் எவ்வளவு நன்றாக இருந்தாலும் அதனால் அவருக்கு ஒவ்வொரு வினாடியும் துக்கமும் அதிருப்தியும்தாம் தாண்டவமாட முடியுமே தவிர, மகிழ்ச்சிக்கு, திருப்திக்குச் சிறிதும் இடம் இருப்பது என்பது முடியாத செயலாகும்.

ஆனதால், கடமையைச் செய்ய வசதியும், வாய்ப்பும் இல்லாதவர்கள் முடிவெய்துவது அவரவர்களைப் பொறுத்தவரை வரவேற்கத்தக்கது; மற்றவர்களுக்கும் ஏமாற்றமோ, சங்கடமோ அடையவேண்டியதல்லாததுமேயாகும்.

திரு. வி. க. அவர்கள் தம் சொந்தத்திற்குப் பெறவேண்டிய பேற்றைப்பெற்ற ஒரு வாழ்க்கை வெற்றிவீரர் ஆவார்.

எப்படியென்றால், திரு. வி. க. முடிவானது அவரைத் தவிர்த்து, அவரை அறிந்த, அவருக்கு அறிமுகமான அவரைத் தவிர்த்த மற்ற எல்லா மக்களுக்கும் குறைபாடாகவும், கவலை தருவதாகவும், ஏன், துக்கம்கூடத் தரத் தக்கவுமான பலனைக் கொடுத்து இருக்கிறதுடன், ஒருவருக்காவது மகிழ்ச்சியையோ திருப்தியையோ கொடுக்கக்கூடாதது மாகும்.

மனிதன் தனது வாழ்வில் பெறவேண்டியதில் உயர்ந்த இலட்சியமாய் இருக்கத்தக்கது இதுதான்.

இதைத்தான் வள்ளுவர், 'அறத்தான் (கடமையால்) வருவதே இன்பம் (வெற்றி) மற்றெல்லாம் புறத்த (1. இன்பமல்லாதவை, 2. தனக்குப் பயன்படாதவை, 3. கூடாதவை) புகழுமில,' வெற்றி இல்லை. (1. மனிதனுக்கும், மிருகத்திற்கும் பேதமில்லாத தன்மையது, 2. தோன்றாதிருத்தலே நன்று என்று சொல்லத்தக்கது) என்பதாகக் கூறியுள்ளார்.

இதிலிருந்து நாம் என்ன காண்கிறோம் என்றால், ஏராளமான செல்வத்தையும், எவராலும் தட்டிப் பேசமுடியாத சர்வாதிகாரத்தையும், எப்பேற்பட்டவனும் ஏமாந்து போகும்படியான தந்திரத்தையும், கெட்டிக்காரத்தனத்தையும், எவ்வளவோ சாமர்த்திய மான விளம்பரத்தையும் பெற்று இருந்தாலும் அவை புறத்தது (அவனுக்குப் பயன்படாததே) என்று காணக்கிடைக்கிறது.

நல்லோர் எனப்படுபவரது முடிவிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை இதுதான்.

பணமும், ஆணவமும், சர்வாதிகாரமும், மற்றவர்களை ஏமாற்றிச் செல்வம் குவித்தலும், விளம்பரம் பெறுவதுமே மனிதன் கடமை என்று கருதிக்கொண்டிருப்பவர் களுக்கு—கலியாணசுந்தரனார் முடிவு கண்களைத் திறக்கச்செய்யத் தக்கதாகுக!

இத் துறையில் நாமறிந்தவரை, இன்றைவரை இவருக்கு மிக்கார் இல்லை என்பது மாத்திரமல்லாமல் ஒப்பாரும் இல்லை என்று கூறுவதில் நான் மிகுதியும் உவப்படைகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—20-9-1953]

15. டாக்டர் அம்பேத்கார் மறைவு

இந்தியாவின் சிறந்த அறிஞர்களில் முன்னணியிலுள்ள அறிஞரும், ஏராளமான விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த கலாநிதியுமான அம்பேத்கார் அவர்கள் முடிவெய்திவிட்டார் என்று செய்தி கேட்டவுடன் திடுக்கிட்டுப் பதறிவிட்டேன். உண்மையில் சொல்லவேண்டுமானால், டாக்டர் அம்பேத்காருடைய மறைவு என்னும் ஒரு குறைபாடானது எந்த விதத்திலும் சரிசெய்யமுடியாத ஒரு மாபெரும் நஷ்டமேயாகும். அவர் சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப் பயப்படும்படியான புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச்சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

உலகத்தாரால் மதிக்கப்படும் மாபெரும் தலைவரான காந்தியாரை, வெகு சாதாரணமாக மதித்ததோடு, அவருடைய பல கருத்துக்களைச் சின்னாபின்னமாகும்படி மக்களிடையில் விளக்கும் மேதாவியாக இருந்தார். இந்துமதம் என்பதான ஆரிய—ஆத்திக மதக்கோட்பாடுகளை வெகு அலட்சியமாகவும், ஆபாசமாகவும், அர்த்தமற்றதாகவும் மக்கள் கருதும்படியாகப் பேசியும், எழுதியும் வந்தார். உதாரணம் சொல்லவேண்டுமென்றால், காந்தியாரையே ஒரு பத்தாம் பசலி, பிற்போக்குவாதி என்றும், அவரால் பிரமாதமாகப் படிக்கப்பட்டுவந்த கீதையை, 'முட்டாள்களின் உளறல்கள்' என்றும் சொன்னதோடு, காந்தியாரின் கடவுளான இராமனை மகாக் கொடியவன் என்றும், இராமாயணக் காவியம் எரிக்கத் தகுந்தது என்றும் சொல்லி, பல்லாயிரக் கணக்கான மக்களிடையில் இராமாயணத்தைச் சுட்டு எரித்துச் சாம்பலாக்கிக் காட்டினார்.

இந்துமதம் உள்ளவரையிலும் தீண்டாமையும் சாதிப் பிரிவும், அவற்றால் ஏற்பட்ட கொடுமையும் ஒழியவே ஒழியாது என்றும் ஓங்கி அறைந்தார். மேற்கண்ட இந்தக் கருத்துக்கள் தவழும்படியாக ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இப்படியாக அனேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சிவீரருமான டாக்டர் அம்பேத்கார் முடிவு எய்தினது இந்தியாவுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் எளிதில் பரிகரிக்க முடியாத பெரியதொரு குறைவேயாகும்.

அம்பேத்காரின் மறைவு என்னும் செய்தி திடீரென்று மொட்டையாக வெளியானதிலிருந்து அவருடைய மரணத்துக்குப் பின்னால் சில இரகசியங்கள் இருக்கலாமென்று கருதுகிறேன். அதாவது, காந்தியார் மரணத்துக்கு உண்டான காரணங்களும், அதற்கு ஆதாரமான பல சங்கதிகளும் டாக்டர் அம்பேத்கார் மரணத்துக்கும் இருக்கக் கூடும் என்பதே ஆகும்.

['விடுதலை'—அறிக்கை—8-12-1956]

16. டாக்டர் வரதராஜுலு

இன்று (23-7-1957) காலை 1-40-க்கு டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் காலமாகி விட்டார்கள் என்ற செய்தி கேட்டு, மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தேன். அவர் எனக்குச் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகவே நன்றாய்த் தெரிந்து, நெருங்கிப் பழகிக்கொண்டுவந்த அருமையான நண்பர் ஆவார்.

நாங்கள் காங்கிரசில் தோளோடு தோள் பிணைந்து, அதை எங்கள் சொந்த ஸ்தாபனம்போல் கருதிப் பல ஆண்டுகள் தொண்டாற்றினோம்.

நான் காங்கிரசைவிட்டுப் பிரிந்து காங்கிரஸ் கொள்கைகளுக்கு மாறாகத் தொண்டாற்றி வருகிற சமயத்திலும், டாக்டர் நாயுடுவும், நானும், திரு. வி. க. அவர்களும் நண்பர்

ளாகவே இருந்து வந்தோம். ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து அதைத் தலையெடுக்காமல் செய்து, இந்நாட்டின் அரசியலில் பார்ப்பனர்களுக்குப் பூரண ஆதிக்கம் ஏற்படுத்திக் கொடுத்த 'பாபமான' காரியத்தில் மற்றெல்லோரையும்விட எங்களுக்கு அதிகப் பங்குண்டு. அதில் என்னைவிட அதிகப் பங்கு டாக்டர் நாயுடு அவர்களுக்கு உண்டு. ஏனெனில், ஒரு வியாபாரியாய் இருந்து சமுதாயத் தொண்டைப் பொதுத் தொண்டாகக் கருதி ஆற்றி வந்த என்னை, அரசியல் முழுநேரப் பொதுத்தொண்டனாக, பார்ப்பன தாசனாக 1920ஆம் ஆண்டிலேயே ஆக்கியவர் டாக்டர் நாயுடு அவர்கள்தான். நண்பர் இராஜாஜி அவர்களுக்கும் இதில் பங்கு உண்டு என்றாலும் டாக்டருக்கு அதிகப் பங்குண்டு.

பொது வாழ்வில் நாயுடு அவர்கள் அடையவேண்டிய நிலையை அடையமுடியாமல் போய்விட்டது. அவருக்கு அடுத்தவர்களாகவும், ஜூனியர்களாகவும் உள்ளவர்கள் பெரிய பெரிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இவர்கள் வந்ததற்குப் பல காரணங்கள் சொல்லப் பட்டாலும், உண்மையான காரணம் அவர் ஒரு பார்ப்பனரல்லாதவராக இருந்ததும், அடிக்கடி பார்ப்பனரை எதிர்த்ததுந்தான்.

எப்படியிருந்தாலும், நான் காங்கிரஸில் தொடர்ந்து இருந்திருந்தால் டாக்டர் நாயுடுவைக் கண்டிப்பாக மந்திரியாகப் பார்த்து இருப்பேன்.

சராசரி மனிதத் தன்மையை எடுத்துக்கொண்டால், பொதுவாழ்விலுள்ள எத்தனையோ பேரைவிட டாக்டர் மேலானவர் என்றே சொல்லுவேன். டாக்டர் நாயுடுவுக்கு தேசப் பற்று அதிகம். அவர் 1920, 1921, 1922ஆம் ஆண்டுகளில் மாதம் 2000, 3000 ரூபாய் வரும்படி உள்ளவராக இருக்கக் கண்டேன். பணத்தையெல்லாம் தேசத்தின் பெயரால் கண்டபடி செலவழித்து விட்டார் என்றாலும் அதைப்பற்றிக் கவலையில்லாமல் திருப்தி யாகவே வாழ்ந்துவந்தார். சில நாட்கள் தவிர, கடைசிவரை காங்கிரஸ்காரராகவே இருந்து வந்தார்.

பழைய காங்கிரஸ்காரர் என்கின்ற தன்மையிலும், காங்கிரஸ் தன்மையில் முதலாவது தலைவர் என்கின்ற தன்மையிலும் இருந்தவர்களில் இன்றுவரை உயிரோடு இருந்தவர் டாக்டர் நாயுடு அவர்கள்தான். இப்போது இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் எல்லோருமே டாக்டருக்கு அடுத்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரசினால் பலனடைந்த வராக இல்லாதிருந்தவரும் அவர்தான்.

அவருக்கும் எனக்கும் சிநேகமான காங்கிரஸ் நண்பர்கள், தலைவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்களென்றாலும், அவர்களில் பார்ப்பனரல்லாத தலைவர் டாக்டர்தான். அவரும் காலமாகிவிட்டார். இனித் தலைவர் கிடையாது.

டாக்டர் நாயுடு அவர்களது அருமை மனைவியார் திருமதி ருக்மணியம்மாள் அவர் களுக்கும் அவர்களது மக்களுக்கும் மற்றும் எங்கள் பொது நண்பர்களுக்கும் எனது மனப் பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'—அறிக்கை—23-7-1957]

17. நேரு மறைவு

தாய்மார்களே! தோழர்களே!

இன்றையதினம் நாட்டுக்கு இதுவரை ஏற்பட்டிருக்காத மாபெரும் கேடு ஏற்பட்டு விட்டது என்று சொல்லும் வண்ணம் நமது நேரு அவர்கள் முடிவு செய்தி அமைந்துள்ளது. பூகம்பம், இடி, புயல் முதலியன ஒரே சமயத்தில் வருவதைவிடக் கொடுமையானது. அவை வந்தால், வந்த பகுதிக்குத்தான் கேடு விளையும். ஆனால், நேரு அவர்களின் முடிவானது இவைகளை எல்லாம்விட மாபெரும் கேடாக இந்த நாட்டின் 45 கோடி மக்களையும் நாட்டையும் பெரும் துக்கத்தில் ஆழ்த்தக்கூடியதாக உள்ளது. நேரு முடிவு எய்திய செய்தி யினைக்கேட்ட உடனே பெரும் அதிர்ச்சியும் தாளமுடியாத துக்கமும் அடைந்தேன். இப்போது என்ன பேசுவது என்றே எனக்குத் தோன்றவில்லை.

பிரதமர் நேரு அவர்களை இழந்ததன்மூலம் நமது நாட்டிற்குப் பரிகரிக்கமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. நேரு அவர்களின் இடத்தைப் பூர்த்திப் பண்ணக்கூடிய வர்கள் வருவார்களா என்பதே சந்தேகம்! அவர் விட்டுச் சென்றதை எடுத்துச் செய்யக் கூடியவர்கள் தோன்றுவார்களா என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. நேரு அவர்கள் எடுத்துக்கொண்ட காரியமானது மாபெரும் காரியமாகும்.

இதனை நிறைவேற்ற, அவரால்தான் முடியும். மீண்டும் கூறுகிறேன், அவர் விட்டுச்சென்ற காரியம் இனி நிறைவேறுமா என்று எண்ணிப் பார்க்கவே வேதனையாக உள்ளது. நாட்டில் பெரியவர்கள் என்று யாரைக் கூறுவார்கள் என்றால், மக்கள் சமுதா யத்தில் செயற்கரிய காரியத்தைச் செய்தவர்களைத்தான் கூறுவார்கள். அதன்படி நேரு அவர்கள் மிகப் பெரியவர் ஆவார்.

நேரு அவர்களைக் 'கொஞ்ச காலமாகவே தங்களுக்குப் பிறகு வாரிசு யார்?' என்று கேட்டுத் தொல்லை கொடுத்து வந்தார்கள். அதுகண்டு அவர், தனக்குப் பிறகு யாரும் தோன்றமாட்டார்கள்; தோன்றவும் முடியாது என்று சொன்னால் மக்கள் எங்கு தப்பாக நினைப்பார்களோ என்று நினைத்துத்தான் 'நான் இப்போது சாகமாட்டேன்' என்று கூறினார் என்று நினைக்கிறேன். எப்போதும் செயற்கரிய காரியங்களைச் செய்தவர்களுக்கு வாரிசு ஏற்படுவதில்லை. அவர் விட்டுச்சென்ற காரியத்தைப் பெரியவர்கள் தோன்றிச் செய் வார்கள் என்று கருதிக்கொண்டு இராமல், அவர் அடிச் சுவட்டைப் பின்பற்ற எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நேரு அவர்கள் அருமையான திட்டத்தை நிறை வேற்ற முற்பட்டது அவருடைய திறமை என்றோ அல்லது அவருக்கிருந்த செல்வாக்கு வசதி, வாய்ப்பு காரணமாக என்றோ மாத்திரம் கூறமாட்டேன்.

இவை எல்லாவற்றையும்விட அவர் ஒரு சிறந்த தியாகி. தனக்கென்று எதையும் செய்து கொள்ளாதவர். 'தியாகம்' என்று சொல்வதற்கே பொருள் தனக்கென்று எதையும் செய்து கொள்ளாமல் தொண்டாற்றுவதுதான்.

தியாகத்தைக் கூறிப் பலன்பெறப் பார்ப்பது வெறும் கூலித் தொண்டாகும்.

நேரு அவர்கள் விட்டுச்சென்ற காரியத்தை, காமராசர் அவர்கள் எடுத்துச் செய்வார். அவரும் நேருவைப்போலவே தனக்கென்று எதையும் சேர்த்துக்கொள்ளாத தியாகியாவார். நேருவைப் போல காமராசர் அவ்வளவு விளம்பரமான தியாகியாக இல்லாவிட்டாலும், நமது நாட்டைப் பொறுத்தவரையில் அவர் ஒரு பெரிய தியாகி ஆவார்.

நேரு அவர்களின் முடிவின் காரணமாக எனது தொண்டும்கூட தடைப்பட்டுவிடக் கூடும் என்று கருதுகிறேன்.

'இனி நான் என்ன தொண்டு செய்வது? நமது தொண்டுதான் அவரும் செய்கிறார்' என்று கருதியே கண்ணை மூடிக்கொண்டு அவரது கட்சியை ஆதரித்தேன். உங்களையும் ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டேன். நேரு அவர்கள்விட்டுச் சென்ற காரியம் வெற்றி பெற, பொதுமக்களாகிய நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸ் கொள்கையை ஆதரிக்கவேண்டும். காங்கிரசுக்கு நாட்டில் இருக்கும் எதிர்ப்புச் சக்திக்கு ஆதரவு தரக் கூடாது.

[சேலத்தில், 27-5-1964-ல் சொற்பொழிவு—'விடுதலை' 28-5-1964]

18. சாஸ்திரி மறைவு

சாஸ்திரி மரணத்தைக் கேட்டவுடனேயே, நேரு மரணத்தைக் கேட்டதைவிட அதிக மான அதிர்ச்சி அடைந்தேன். எதிர்காலத்தைப்பற்றி நினைக்க எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. காமராசர்தான் இதற்கு ஒரு பரிகாரம் ஏற்படுத்தவேண்டும்.

காங்கிரஸ்காரர்களும், மற்றும் நம் கழகத் தோழர்களும் அதிகமான கட்டுப்பாட்டுடன் இருந்து, காமராசர் கையை வலுப்படுத்தவேண்டியது நாட்டின் நன்மைக்கு முக்கியமான காரியமாகும்.

பாகிஸ்தான், இந்தியா ராஜி ஏற்பட்டது மிகவும் பாராட்டத் தகுந்ததும் அமைதி ஏற்படுத்தத் தகுந்ததுமான ஒரு காரியமாய் இருந்தாலும், சாஸ்திரியின் மரணமானது அவர்கள் அமைத்த கட்டடத்தையே ஆட்டி அசைத்ததுபோல் ஆகிவிட்டது.

சாஸ்திரி மறைவு பூகம்பம் போன்றது. இடிவிழுந்தால் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குத் தான் சேதம். பூகம்பம் வந்தால் ஒரு பிரதேசம் முழுவதும் சேதம் அடையும். ஆகவே சாஸ்திரி மறைவு இந்தியப் பிரதேசத்திற்கே பெரிய துக்கத்தை உண்டாக்கிவிட்டது.

['விடுதலை'–செய்தி—11-1-1966]

19. அண்ணா

இன்று அண்ணா அவர்கள் முடிவு எய்தி விட்டார். இந்த முடிவு தமிழ்நாட்டின் நான்கு கோடி மக்களை மாத்திரமல்லாமல் இந்தியா முழுவதிலுள்ள மக்களையும், இந்தியா மாத்திரமல்லாமல் உலகில் பல பாகத்திலுள்ள மக்களையும் பெரும் துக்கத்தில் மூழ்கடித்திருக்கும் முடிவாகும்.

அண்ணாவுக்குச் செய்த வைத்திய சிகிச்சை உலகத்திலுள்ள வேறெவருக்கும் செய்திருக்க முடியாத அரும்பெரும் சிகிச்சை என்றே சொல்ல வேண்டும். அண்ணாவுக்காகப் பயன்படுத்திய மருந்து உலகிலுள்ள பல பாகங்களிலிருந்தும் உடனடியாக டெலிபோனில் கேட்டு, ஏரோப்பிளேனில் வரச்செய்து, உடனுக்குடன் பிரயோகித்து, அவ்வப்போது அது குணமளித்தது என்று சொல்லும்படியான தன்மையில் பயன்படுத்தப் பட்டதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்க விஷயம் டாக்டர்களைப் பற்றிய விஷயங்களேயாகும். அதாவது, டாக்டர் சதாசிவம் அவர்கள் தலைமையில் டாக்டர்கள் குழுவினர் மிக மிக அதிசயமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான உணவு இல்லை; உறக்கமில்லை; இயந்திரங்கள் போல் வேலை செய்திருக்கிறார்கள். டாக்டர் சதாசிவம் அவர்கள் திறமையை அமெரிக்க டாக்டர்கள் பாராட்டினார்கள். மற்றும் புற்றுநோய் மருத்துவ மனையிலுள்ள வசதிகள்—கருவிகள்—இயந்திரங்கள் இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்கது என்று சொல்லலாம். இவ்வளவுடன் வேலூர் ஆஸ்பத்திரி டாக்டர்களும் சேர்ந்து பல புதிய முறைகளைக் கையாண்டார்கள். இவ்வளவும் செய்து வந்ததானது அண்ணாவின் உயிர் ஊசலாடி நம்பிக்கை அளித்துக்கொண்டே வந்தது.

அதாவது, இந்த நிலையில் படுக்கையிலிருந்த அண்ணாவுக்கு ஜனவரி 29-ம் தேதி முதல் நினைவு இழந்தது மாத்திரமல்லாமல் 'உயிருக்கு நெருக்கடி' என்பதாகத் தொடங்கி தினமும் 'நெருக்கடி' ஏற்படுவதும், பிறகு அது மாறி தெளிவாவதுமாகி 29, 30, 31, 1, 2-ம் தேதி இரவுவரை நிலைமை இருந்துகொண்டே வந்தது. இதன் பயனாக மக்களுக்கு, 'அண்ணாதுரை நெருக்கடியான நிலையில் இருந்தாலும் சாகமாட்டார். எப்படியும் பிழைத்துக் கொள்ளுவார்' என்கின்ற எண்ணம் ஏற்பட்டுச் சிறிது சிறிதாகக் கவலை குறைந்து வந்தது என்றே சொல்லலாம். இந்த நிலையில் 2-ம் தேதி மாலைக்குப் பிறகு திடீரென்று அபாய நிலை வளர்ச்சியடைய நேரிட்டு, நடு ஜாமத்தில் அண்ணாவின் உயிர் பிரிந்து விட்டது. சுமார் இரவு 12-30 மணிக்கு எனக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. உடனே நானும் எனது துணைவியாரும் ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்று, துக்கத்தோடு அண்ணாவின் சடலத்தைக் கண்டுவிட்டு, ஜாகைக்கு வந்து சேர்ந்தோம்.

அண்ணாவின் மறைவு தமிழ் நாட்டிற்கு மாபெரும் நஷ்டம் என்றே சொல்ல வேண்டும். தமிழ் நாடும் தமிழர் சமுதாயமும் அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசய

மான முன்னேற்றமடையக் காத்திருந்தது. அவரும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி அதை உருவாக்குவதே தனது கடமை என்று கருதியிருந்தார். அதற்கு எடுத்துக் காட்டாக, 'நான் இந்த (என்னுடைய) மந்திரி சபையையே பெரியாருக்குக் காணிக்கையாக வைத்து விட்டேன்' என்று கூறி இருக்கிறார். அப்படி என்றால், 'பெரியார் கொள்கைப்படி நான் நடப்பேன்' என்று சொன்னதாக நான் கருதினேன்.

அதற்கேற்ப, அவர் செய்த அரும் பெரும் காரியங்களில் முக்கியமானது 'சுயமரி யாதைத் திருமண செல்லுபடிச் சட்டம்' ஆகும். அதில், கடவுளுக்கோ, மதத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ இடமில்லை என்பதாகும். இது தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்லாமல், உலகத்திற்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது. மற்றும், 'பொதுப் பணி இடங்களிலுள்ள கடவுள் படங்களை அப்புறப்படுத்தப்பட வேண்டியது' என்கின்ற அரசு கட்டளையானது மிக மிகத் துணிச்சலான சீர்திருத்தமாகும்.

மற்றும், 'இந்தி மொழி தமிழ் நாட்டுக்குக் கட்டாயம் என்பது ஒப்புக்கொள்ள முடியாது' என்று சட்டசபை மூலமே தீர்மானம் செய்ததானது, தனது பதவி போனாலும் சரியென்று துணிவு கொண்ட காரியமாகும். இவை தவிர, உத்தியோகங்களில், பதவிகளில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாத்ததாகும்.

இதிலுள்ள ஒரு குறிப்பிடத்தக்க அதிசயம் என்னவென்றால், இவைகள் செய்யப்பட்ட பிறகும் நாட்டில் எல்லாக் கட்சியாருடனும் எல்லா மக்களுடனும் மிக்க நேசமாகவும், அன்புக் குரியவராகவும் இருந்து வந்ததாகும்.

அண்ணாவின் குணம் மிக மிகத் தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாய் இருந்தாலும் முடியாது என்று சொல்ல மிகவும் தயங்குவார். நல்ல ஆராய்ச்சி நிபுணர் என்றுதான் சொல்லவேண்டும்.

காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது அதிகார சக்தி கொண்ட ஸ்தாபனமாகும். அண்ணாவின் முன்னேற்றக் கழக ஸ்தாபனமானது அதிகார சக்தி இல்லாதது என்பதோடு, அன்பினாலேயே கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நட்பு நிலை ஸ்தாபனமாகும். இதற்கு உதாரணம் என்னவென்றால், தி. மு. க.-வில் ஏமாற்றமடைந்த எத்தனையோ பேர் இருந் தாலும் கழகத்திற்குள் ஒரு பூசலோ, தனிப் பிரிவோ, கருத்து வேற்றுமைக் கோஷ்டியோ இல்லாமல் ஒரு குடும்பம் போலவே வாழ்ந்து வருகின்றார்கள் என்றால், இதற்கு அண்ணா நடந்துகொள்ளும் தன்மையேதான் காரணமாகும். இவைகளையெல்லாம் விட, என்னைப் பற்றியும் சில இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

அதாவது, நான் தி. மு. க.-வுக்கு—அது தேர்தலில் வெற்றி பெறும் வரை நான் அக் கழகத்திற்குப் படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை மறந்து, அடியோடு மறந்து மிக்கப் பெருந் தன்மையோடு நட்புகொள்ள ஆசைப் பட்டு—என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன் நண்பராகவே நடத்தினார். அதன் பயனாக எனக்கும் மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டதுடன் என் அந்தஸ்தும் அதிகமாயிற்று என்றுகூடச் சொல்லலாம். அதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்க வேண்டியதும் என் கடமையாகிவிட்டது.

இதன் பயன் தி.மு.க.-வை என்றென்றும் பகுத்தறிவுக் கழகமாகவே இருக்க உதவும் என்று நினைப்பதோடு, அண்ணா என்னிடம் காட்டிய அன்பும், ஆதரவும், அளித்த பெருமையும் தி.மு.க.-வுக்குள் எந்தவிதக் கருத்து வேற்றுமையையோ, கட்சி மனப்பான்மை யையோ கழகத்திற்குள் புகுத்தவிடாமல் கழகம் பெருமையோடு விளங்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும் பயன்படும் என்று உறுதி கொண்டிருக்கின்றேன். அதற்கேற்ற தன்மை களை அண்ணா தம்பிமார்களுக்கு ஊட்டியும் இருக்கிறார் என்பதில் அய்யமில்லை.

இப்படிப்பட்ட ஒரு அற்புத குணம் படைத்த அண்ணா முடிவானது தமிழருக்கும் தமிழ் நாட்டிற்கும் பரிகாரம் செய்ய முடியாத நட்டமேயாகும்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஏற்பட்ட அண்ணாவின் இந்த முடிவு இந்த நாட்டில் மற்ற எவருக்கும் எளிதில் கிடைக்க முடியாத உயர்தர முடிவேயாகும்.

அண்ணா நல்ல பதவியில், நல் வாழ்வில் எல்லா மக்களாலும் கொண்டாடி, புகழ்ந்து, பாராட்டி, முடிவைப்பற்றித் துக்கம் கொண்டாடும்படியான அரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காத வாய்ப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

மனிதன் தன் வாழ்நாளில் அடைந்த வெற்றிக்கு, மேன்மைக்கு அறிகுறி, முடிவின் போது அடையும் புகழ்தான் என்பது எனது கருத்து. அதுபோலவே, அண்ணா அடைந்த புகழ் மிகமிகப் பாராட்டுதற்குரியதாகும்.

மற்றும், இனியும் அவர் புகழ் ஓங்க வேண்டுமானால், 'அண்ணாவுக்குப் பிறகும் அண்ணா இருப்பதுபோலவே காரியங்கள் நடைபெற்று வருகின்றன' என்று சொல்லப்படும் நிலையால்தான் முடியும். தி.மு.கழகத் தோழர்கள் யாவரும் எனது நண்பர்களும் அரும் பெரும் கூட்டுப் பணிக்காரர்களுமாக இருப்பதால் நான் அவர்களை எனது சொந்த தி. க. தோழர்களைப் போல, கூட்டுப் பணியாளர்களைப் போலவே கருதுகின்றேன்.

கடைசி நேரத்தில் அண்ணா உடல் நிலை தேறி அவர் பிழைத்துக் கொள்வார் என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன் கடவுள் பிரார்த்தனைகளும், பூசைகளும் வளர்ந்த துடன் ஜோசியர்கள் எல்லாம் ஜோசியம் நல்ல நம்பிக்கையுடன் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அவர்களும் ஏமாற்றம் அடையும்படி முடிவு ஏற்பட்டு விட்டதானது மிக்க பரிதாபத்திற்குரியதாகும்.

பொதுமக்கள் எல்லோரும் மாற்றுக் கட்சியாளர்கள் உட்பட இந்த மாபெரும் நட்டத்திற்குப் பரிகாரமாக அந்தத் (தி. மு. க.) தலைவர்களுடன் ஒத்துழைத்து, அதனால் மக்களுக்கு வேண்டிய எல்லா நலன்களையும் பெறப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

['விடுதலை'–தலையங்கம்—3-2-1969]

அண்ணா முடிவெய்திவிட்டார். அண்ணா வாழ்க! அதாவது அண்ணா கொள்கை வாழ்க! நோய் வருவதும், முடிவெய்துவதும் மனித ஜீவனுக்கு இயற்கையேயாகும். ஆனால், அதற்காக மக்கள் வருந்துவதும், துக்கம் கொண்டாடுவதும் மக்களுக்கு ஒரு சம்பிரதாயமேயாகும். என்றாலும், இவ் விஷயத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் சம்பிரதா யத்தையெல்லாம் தாண்டி, மக்களின் உச்சநிலைத் துக்கக் கொண்டாட்டத்தைப் பெற்று விட்டார்.

யானறிந்தவரை, சரித்திரம் கண்டவரை அண்ணா முடிவுக்குப் பொதுமக்கள் காட்டிய துக்கக் கொண்டாட்டத்தில் 4-ல், 8-ல் ஒரு பங்கு அளவுகூட வேறு எவருடைய முடிவுக்கும் காட்டியதான நிகழ்ச்சி கிடையவே கிடையாது.

அந்த அளவுக்கு அண்ணா தமிழ்மக்கள் உள்ளத்தில் இடம்பெற்று விட்டார்கள். இது அண்ணாவின் இரண்டாண்டு ஆட்சியால் தமிழர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சி என்ப தோடு, இவ் விஷயத்தில் மனித வாழ்வில் வேறு யாருக்கும் கிடைக்கமுடியாத பெருமையை அண்ணா அடைந்துவிட்டார். எனவே, அண்ணாவின் நற்குண நற்செய்கை, பெருமைக்கு இதற்குமேல் எடுத்துக்காட்டு காட்டமுடியாது.

இன்றும் மக்களுக்கு உள்ள கவலையெல்லாம்—நானறிந்தவரை அண்ணா முடிவடைந்துவிட்டாரே, இனி ஆட்சி எப்படி இருக்குமோ என்பதுதான். நான் சொல்லு வேன், 'அண்ணா இறந்துவிட்டார்; அண்ணா வாழ்க!' என்பதற்கிணங்க, இனி நடை

பெறும் ஆட்சியில் எவ்வித மாறுதலும் திருப்பமும் இல்லாமல் அவரது கொள்கை வளர்ந்து ஆட்சியாளர்கள் தாங்கள் தமிழர்கள், தமிழர்களுக்காகத் தமிழர்களாக ஆட்சி செய்கிறோம் என்கின்ற உணர்ச்சியோடு, மற்ற இனத்தார் காட்டும் இன உணர்ச்சியைத் தங்களுக்கு வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, அதன்படி நடந்துகொள்வார்கள் என்றே கருது கின்றேன். இயற்கையும் அவர்களை அந்தப்படி நடக்கச்செய்யும் என்பது உறுதி. அதற்காக யாரும் கவலைப்படவேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் மேன்மைதங்கிய கவர்னர் பெருமானும். மாண்புமிகு மந்திரிமார்களும் பட்ட கவலையும் காட்டிய ஆறுதல் ஆதரவுகளும், சிகிச்சை செய்வதில் டாக்டர் சதாசிவம், கிருஷ்ணமூர்த்தி முதலிய வேலூர் டாக்டர்களும் எடுத்துக் கொண்ட மனிதத் தன்மைக்கு மேற்பட்ட முயற்சியும், 15 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி ஒழுங்காக நடத்தியதில் போலீஸ் அதிகாரிகளும், சிப்பந்தி களும் நடந்துகொண்ட பாதுகாப்புத் தன்மைகளும், ரேடியோ நிலையத்தாரும் பத்திரிகைக் காரர்களும் விஷயங்களை அவ்வப்போது மக்களுக்குக் கூடியவரை தெரிவித்துவந்த நேர்மையும் மிகமிகப் பாராட்டத்தக்கதும் நன்றி செலுத்துவதற்கு உரியதுமாகும்.

தமிழ்மக்கள் அண்ணாவிடம் காட்டிய அன்பு போலவே, இன்றைய நமது மந்திரிகள் எல்லோரிடமும் காட்டி பரிவாய் நடந்துகொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

[4-2-1969 வானொலி உரை—'விடுதலை' 5-2-1969]

20. ரஸ்ஸல் மறைவு

'பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மறைவு, நாத்திக உலகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.'

—தந்தை பெரியார்

['விடுதலை' 4-2-1970]

21. தி. பொ. வேதாசலனார்

வக்கீல் அய்யா என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த நண்பர் தி. பொ. வேதாசலம் அவர்கள் காலமானார் என்ற செய்தி நமக்கெல்லாம் அதிர்ச்சியையும் தீராத துக்கத்தினையும் தரக்கூடிய செய்தியாகும்.

இந்தத் திருச்சி நகரத்தில் நமது இயக்கத்திற்குத் தூண் போன்றவர் அவர். நான் இந்தத் திருச்சி நகரத்தில் வந்து இதையே என் சொந்த ஊராகக் கொள்வதற்கு முழுமுதற் காரணம் நண்பர் திரு. வேதாசலம் அவர்கள் ஆவார்கள்! நமது இயக்கத்தின் பேரிலும் என் பேரிலும் மிகுந்த பற்றுக்கொண்டு உழைத்தவர்.

இடையிலே ஏற்பட்ட கோளாறு காரணமாக அவர் என்னிடம் கருத்து வேறுபாடு கொண்டு ஒதுங்க நேரிட்டபோதிலும் இயக்கத்திற்கும் நம் கொள்கைக்கும் அவர் ஆற்றிய பணியும் தொண்டும் அளவிடற்கரியது.

['விடுதலை'—11-10-1971]

தோழர்களே!

நமது அருமை நண்பர் திரு. வேதாசலம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார். அவர் நமது சமுதாயப் பணியில் பங்குகொண்டு சிறப்பாகப் பணியாற்றியவர். எனக்கு 35 ஆண்டு களுக்குமேல் தெரியும். நமது திராவிடர் கழகத்திற்குத் தலைவராக இருந்தவர்.

நான் முதலில் திருச்சிக்கு வந்தால் கலியபெருமாள் அவர்கள் வீட்டில் தங்குவேன். பின் நண்பர் விசுவநாதன் அவர்கள் வீட்டில் தங்குவேன். பிறகு நீண்ட நாட்கள் நண்பர் வேதாசலம் அவர்கள் வீட்டில்தான் இங்கு வந்தால் தங்கி, இயக்கக் காரியங்களைக் கவனிப்பேன். அவருடைய வீட்டிலுள்ளவர்கள் மிக அன்போடு நடந்துகொள்வார்கள். நமது இயக்கம் வளர்ச்சியடைய மிகவும் பாடுபட்டார். நமது இயக்கத் தூண்களில் ஒருவர் என்று சொல்லக்கூடியவர்; மிக நேர்மையானவர்; சாந்தமான குணமுடையவர். 35 ஆண்டுகளுக்குமேல் அவருடன் பழகியிருக்கிறேன் என்றாலும் அவர் ஒரு முறைகூட கோபமடைந்து நான் பார்த்ததில்லை. திருச்சி மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுமைக்கும் பணியாற்றியவர். நேற்றுப் பொதுக்கூட்டத்தில்தான் அவர் காலமான செய்தி கிடைத்தது. மிகவும் அதிர்ச்சியுற்றேன். நான்கு, அய்ந்து ஆண்டுகளுக்கு மேலாக உடல் நலமற்றிருந்தார் என்றாலும், இயற்கை எய்தும்படியான அளவிற்கு உடல் கோளாறு இல்லை என்றாலும், இருதய நோயால் திடீரென்று இயற்கை எய்திவிட்டார்.

இயற்கை எய்துவது என்பது எல்லோருக்கும் நேரக்கூடியதேயாகும். அதற்கு நம்மால் என்ன செய்யமுடியும்? நாம் மூடநம்பிக்கைக்காரரல்லர், அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று சொல்வதற்கு.

இயற்கை எய்துவது என்பது எல்லோருக்கும் நேரக்கூடியதேயாகும். நண்பர் வேதாசலம் அவர்கள் இயற்கை எய்தியதானது நம் சமுதாயத்திற்குப் பெருநஷ்டம். அதனை நாம் உணருகின்றோம்; அதற்காக வேதனைப்படுகின்றோம். நமது மனம் நிறைந்த அனுதாபத்தை அவர்கள் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமைக்குரிய மாண்புமிகு வேதாசலம் அவர்கள் நமது இயக்க வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்; அவர் மறைந்துவிட்டார். அவர் மறைவின் பயனாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்—பின்பற்ற வேண்டும் என்பதெல்லாம், அவரைப் போல நாமும் பொதுத் தொண்டிற்காக ஏதாவது செய்யவேண்டும்—பொதுத்தொண்டு செய்வதுதான் கடமை எனக் கருத வேண்டும் என்பதே. மேல்நாட்டில் பதவியைவிடப் பொதுத் தொண்டைத்தான் மதிக்கின்றார்கள். மனிதன் தனக்காக வாழ்வது என்றில்லாமல் மனித சமுதாயத்திற்கு என்று வாழ வேண்டும்.

[தென்னூர் இடுகாட்டில், 11-10-1971-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-10-1971]

22. இராஜாஜி

நண்பர் இராஜாஜி அவர்கள் முடிவெய்திய நிகழ்ச்சி எல்லையற்ற துக்கத்துக்குரிய நிகழ்ச்சியாகும். சம்பிரதாயத்திற்கல்ல; உண்மையாகவே சொல்லுகிறேன், இராஜாஜி அவர்கள் ஒப்பற்றவர்; இணையற்றவருமாவார். கொள்கைக்காகவே வாழ்ந்து, கொள்கைக் காகவே தொண்டாற்றி முடிவெய்திய பெரியார் ஆவார். அவரது இழப்பு பரிகாரம் செய்ய முடியாத இழப்பாகும்.

தமிழ் நாட்டில் ஒப்பிலா மணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் இராஜாஜி 95ஆம் வயதில் முடிவெய்தி மறைந்துவிட்டார்.

அவரது பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு தெரிவிக்கவேண்டுமானால், இராஜாஜி இல்லாது இருந்தால் 'மகாத்மா காந்தி'யே இருந்திருக்கமாட்டார். அதுமாத்திரமல்ல; இந்திய தேசிய காங்கிரசே இருந்திருக்க மாட்டாது.

தமிழ் நாட்டில் பார்ப்பனருக்கு எதிராகத் தோன்றிய ஓர் எரிமலையை, மகாத்மா காந்தி என்னும் ஒரு புயல் மழையைக்கொண்டு தான்அவித்து, பார்ப்பனரை இருக்கச் செய்தார். இவை இன்றைக்கு அதாவது, சுமார் 40 ஆண்டுகளுக்கு உட்பட்ட மக்களுக்குத் தெரியாத சேதியாகும். இராஜாஜி அவர்களால்தான் திராவிட நாட்டில் சமபந்தி போஜனம்

என்பதும், அதைவிடத் தீவிரமான சாதிபேதம் என்பதே இல்லாமல் யார் வீட்டிலும் யாரும் உணவு அருந்தலாம் என்கிற தன்மையும் ஏற்பட்டது. நான் அறிய இராஜாஜி அவர்கள் 1910-லேயே பார்ப்பனரல்லாத மக்களுடன் சமபந்தி போஜனம் செய்வார்; 1915-ல் பார்ப்பனரல்லாத மக்கள் வீட்டில் உணவு அருந்துவார். இது அவருக்கு மாத்திரம் ஏற்படுத்திக் கொண்ட சாதனை என்றாலும், காங்கிரசிலேயே எல்லாப் பார்ப்பனர்களும் சமபந்தி போஜனம் அருந்தும்படி செய்தவர் இராஜாஜி அவர்களே ஆவார்.

காந்தியாருக்கும்கூட சமபந்தி போஜனத்தில் நம்பிக்கை இல்லாத காலத்திலேயே, யார் வீட்டிலும் யாருடனும் இருந்து உணவு கொள்ளும் தன்மையை ஏற்படுத்தினார்.

காங்கிரசில் பெரிய தீவிர தேசபக்தர், மகா தியாகி என்று சொல்லப்பட்ட வ. வே. சுப்ரமணிய அய்யர் என்கிற (போலி) தேசபக்தர் வருணாசிரமப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த காலத்தில், காங்கிரசில் தான் மாத்திரம் அல்லாமல் அனேக பார்ப்பனரையும், பார்ப்பன இளைஞரையும் யாருடனும் யார் வீட்டிலும் உணவு அருந்தச் செய்தார், இராஜாஜி. எது எப்படி இருந்தாலும், சமுதாயத் துறையில், இம் மாபெரும் சீர்திருத்தம் செய்த பெருமை இராஜாஜிக்குத்தான் உண்டு.

அதுமாத்திரம் அல்ல. கலப்புத் திருமணம் என்னும் தன்மையைத் துணிந்து ஆதரித்தவர் இராஜாஜி அவர்களே ஆவார். 1920-ல் என்று கருதுகிறேன்; அருண்டேல்—ருக்குமணி அம்மையார் விவாகத்தைப் பார்ப்பனச் சமுதாயமே கட்டுப்பாடாக எதிர்த்த காலத்தில் இராஜாஜி அவர்கள் அதை ஆதரித்தார்; மற்றும், தமது பெண்ணையே பார்ப்பனரல்லாதவருக்கு மணம் செய்து கொடுத்தார். ஆகவே, சமுதாயத் துறையில் மாபெரும் சீர்திருத்தம் செய்தவர் இராஜாஜியே ஆவார்.

இந்தக் காரணங்களால் இராஜாஜி அவர்கள் சென்னைப் பார்ப்பனர்களான கஸ்தூரி ரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி அய்யர் முதலிய—பார்ப்பன ஆதிக்கப் பணிக்காகவே வாழ்ந்த பார்ப்பனக் கும்பலுக்கு எதிரியாக இருந்தார்.

இவ்வளவு என்ன; உற்சாகக் காரணமாகத் தனிப்பட்ட முறையில் சமுதாயத் தொண்டில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த என்னை, முழுக்க முழுக்கச் சமுதாயத் தொண்டனாக ஆக்கிய பெருமை இராஜாஜி அவர்களுக்கே உரியதாகும்.

என்னை இராஜாஜி அவர்கள்தான் முதலாவதாக கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் செகரட்டரி ஆக்கினார்; பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செகரட்டரி ஆக்கினார்; பிறகு அவர்தான் என்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக ஆக்கினார். என்னிடம் அவர் முழு நம்பிக்கை வைத்து, என்னையே அவர், 'நமது தலைவர் நாயக்கர்' என்று அழைத்ததோடு, பார்ப்பனரில் வெகுபேரை என்னை 'தலைவர்' என்று அழைக்கும்படி செய்தார்.

நாங்கள் நாலைந்து ஆண்டுகள் இரண்டறக் கலந்த நண்பர்களாக இருந்தோம்; சகல ரகசியமான காரியங்கள் பற்றிப்பேசி ஒரு கருத்துடையவராக இருந்தோம்.

என்னைப் பல விஷயங்களில் என் தகுதிக்குமேல் கருதி வந்ததோடு, பிரச்சாரமும் செய்து வந்தார். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். இன்றைய மாஜிகவர்னர் திரு. கே. சந்தானம் அவர்களிடத்தில் என்னைப்பற்றிப் பேசும்போது, 'Mr. Santhanam! Don't think that Naickers life is an ordinary life' என்று சொல்லுவார்.

இன்னும் மற்ற பல பார்ப்பன நண்பர்களுக்கு என்னைப்பற்றிச் சொல்லுவார்.

இவ்வளவும் ஏன் சொல்லுகிறேன் என்றால்—என் கொள்கை, கருத்து, செய்கை முதலியவைகளைக் கூடவே இருந்து அறிந்தவர்; அவ்வளவையும் ஏற்றுப் பாராட்டிப் பேசியவர் என்பதைத் தெரிவிப்பதற்காகவே ஆகும்.

3–1–1962–ல், சென்னை பெரியார் திடலில்



பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பின்புறத் தோற்றம் (1962)

இராஜாஜி என்னோடு உள்ளவரை அவர் ஒரு பகுத்தறிவுவாதியாகவே இருந்தார். மற்றும், அவர் பொதுவுடைமைக் கருத்தையும் ஆதரித்தவர். வக்கீல் தொழிலிலும், அதிகாரிகளிடம் விளக்குகையில், 'கோர்ட்டார் அவர்களே! எனது கட்சிக்காரரை நிரபராதி என்று சொல்ல நான் இங்கு வரவில்லை; இவரைக் குற்றவாளி என்று முடிவு செய்ய வேண்டிய அளவுக்குச் சட்டப்படியான ஆதாரம் இல்லை' என்றுதான் சொல்லுவார். காந்தியை அடிக்கடி திணறவைத்து விடுவார். இதனாலேயே காந்தியாரும் இராஜாஜி அவர்களின் ஆமோதிப்பைப் பெற்றே எந்தக் கருத்தையும் வெளியிடுவார்.

'இந்தி' விஷயத்தில் பிற்காலத்தில் அவருக்கு அது கட்டாயப்படுத்தத் தக்கதல்ல என்கின்ற கருத்து பலமாக இருந்தது. மற்றும் இராஜாஜி அவர்களுக்கு 'ஸ்தலசுய ஆட்சி' என்பது மக்களைக் கெடுத்து விடுகிறது; ஆதலால் தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்கள் தேவை இல்லை என்ற கருத்தைக் கொண்டவர்.

நம் நாட்டு அரசியல், வகுப்பு உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியலாக ஆகிவிட்டதால் அரசியல் காரணமாக வகுப்புக்களுக்குக் கேடு வரக்கூடாது என்ற கருத்தால்—நம்முடைய சில கருத்துக்கள், காரியங்கள் இராஜாஜி அவர்களது ஆதரவுக்கு உரியதல்லதாக இருக்கலாம் என்றாலும், பொதுவில் இராஜாஜி அவர்களை நாம் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது, நமக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் பரிகாரம் செய்ய முடியாத இழப்பே ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'—26-12-1972]

3. பிறந்தநாள் செய்திகள்

1. பொதுத் தொண்டு

பொதுத் தொண்டு, அதாவது உண்மையான பொதுத் தொண்டு தன்னை, தன்னலத்தை அடியோடு மறந்து, தன்னைத் தவிர்த்த மற்ற மனித சமுதாய நலத்திற்கென்றே மனிதன் பொதுத் தொண்டு செய்வது என்பது இயற்கைக்கு மாறுபட்ட காரியமேயாகும்.

ஜீவன் என்பதே சுயநலம் என்ற தத்துவத்தைக் கொண்டதேயாகும்.

எந்த ஜீவனும் எப்படியாவது தான் வாழவேண்டும் என்ற அடிப்படையில்தான் வாழ்கிறது—ஜீவிக்கிறது என்கின்ற தன்மையில்தான் வாழ்கிறது; அதற்கேற்றபடிதான் நடக்கிறது; இதற்கு மாறான ஜீவனைக் காண முடியாது.

மனித ஜீவனும் இதே தத்துவத்திற்கு, நியதிக்கு ஆட்பட்ட ஜீவனேயாகும்.

மனிதனுக்குப் பொதுத் தொண்டு செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு அவசியம் வேண்டுமே! அப்படி என்ன அவசியமிருக்கிறது?

பிறந்த மனிதன் வாழவேண்டும். முதலாவதாக உயிர் வாழவேண்டும். இது குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட்டு விடுகிறது. உயிர் வாழவேண்டுமென்றால் ஜீவிக்க வேண்டும். ஜீவிக்க வேண்டுமென்றால், உணவு கொள்ளவேண்டும். இந்த விளக்கம் குழந்தைகளுக்கு ஏற்படாதுதான். ஆனால், அதற்கு ஆகவே பசி என்கிற உபாதை—நோய் (பசி நோய்) இயற்கையாகவே ஏற்பட்டு, அழுவது, அலைவது என்கின்ற தன்மை இருந்து வருகின்றது. அறிவு வந்த மனித ஜீவனும் எப்படியாவது உணவு கொள்ள வேண்டும் என்கின்ற ஆசைக்காக, அவசியத்துக்காகவே வாழ வேண்டியவனாகி விடுகிறான்.

பிறகு, உணவு பெற்று திருப்தியடைந்த பிறகு உறக்கத்திற்குப் பாடுபடுகிறான். பிறகு படிப்படியாக உடை, தங்குமிடம், அதற்குப் பிறகு காம உணர்ச்சிக்குப் பரிகாரம். இவ்வய்ந்தோடு மனிதனின் இயற்கைத் தேவை முடிந்துவிடுகிறது.

பிறகு சுற்றுச் சார்பு—'சார்ந்ததன் வண்ணம்' (சவகாசம்) ஊர் நடப்பு முதலியவை களால் படிப்படியாய் ஆசை, இயற்கையான ஆசை ஏற்படுகிறது. இது கைகூடுவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யத் துணிந்துவிடுகிறான். இதுவும் மனித இயற்கையாகிவிடுகிறது.

இந்த இயற்கை மனிதனுக்குப் பிள்ளை, குட்டி, உடைமைகளை உண்டாக்கி விடுகிறது. இவைகளைக் காப்பாற்றுவதும் இயற்கையேயாகிவிடுகிறது. இவற்றிற்கும் மேலாக மனிதனுக்குக் கவுரவம், பெருமை, புகழ் வேண்டியதாக ஆகிவிடுகிறது. பிறகு அதுவும் இயற்கையாகிவிடுகிறது.

இவ்வளவு இயற்கைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய மனிதன் என்ன வேண்டு மானாலும் செய்யலாம்; செய்தாக வேண்டும் என்கின்ற தத்துவம் மனிதனுக்குச் சட்டமாய் விளங்குகின்றது.

இவற்றிலிருந்து, இந்தச் சட்டத்திற்குப் புறம்பான சமுதாய மனிதன் உலகத் திலேயே கிடையாது என்பது எனது தாழ்மையான கருத்து. அப்படி யாராவது இருந்தால் அது இயற்கைக்கு விரோதமான தோற்றம் என்றுதான் சொல்லவேண்டும். ஏன் சொல்ல வேண்டுமென்றால், அப்படி இயற்கைக்கு விரோதமாய் இருக்க என்ன அவசியம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், அந்தப்படி இருக்கச் சாதாரண நிலையில் யாரும் இருப்பதாய்க் காணப்படமாட்டார்கள்.

மேற்கண்ட மனிதனின் இயற்கைத் தன்மைகளான தேவைகள் பூர்த்தியாக மனிதன் எது வேண்டுமானாலும் செய்து பூர்த்தி செய்துகொள்வது மனித இயற்கை என்று சொல்லப்பட்ட எது வேண்டுமானாலும் என்பதில் அடங்கிய பல காரியங்களில் பொதுத் தொண்டு என்பதும் ஒன்றாகும்.

அதாவது, கக்கூசு எடுப்பதும் பொதுத்தொண்டேயாகும். ஆனால், எதற்காக அந்தப் பொதுத்தொண்டு செய்யப்படுகிறது என்றால், மேற்கண்ட இயற்கைத் தேவைகள் பூர்த்தி யாவதற்கேதான் என்பது போலவே மனிதன் பொதுத்தொண்டையும் ஒரு சாதனமாகக் கைக்கொள்ளுகிறான். இந்தப் பொதுத்தொண்டுகளில் தாசிப் பிழைப்பும் ஒரு பொதுத் தொண்டுக் காரியம்தான். வக்கீலும் ஒரு பொதுத்தொண்டுக்காரன்தான். வியாபாரியும் ஒரு பொதுத்தொண்டுக்காரன்தான். அதுபோலவே, அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல், நடிப்பு இயல் முதலிய காரியங்களில் ஈடுபடுபவர்களும் பொதுத்தொண்டுக் காரர்கள்தாம். இவர்கள் எப்படிப்பட்ட பொதுத்தொண்டுக்காரர்கள் என்றால், மேலே காட்டப் பட்ட மனித வாழ்வுக்காகச் செய்யப்படும் இயற்கைக் காரியங்கள் என்பவைகளில், இந்த இயற் கைக் காரியங்களை, தேவைகளைப் பூர்த்தி செய்ய எதுவேண்டுமானாலும், என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்ற சட்டப்படி ஏற்பட்ட பொதுத் தொண்டர்களேயாவார்கள்.

இந்த, மேலே காட்டிய தாசி, வக்கீல், வியாபாரி, அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல் முதலிய துறைகளில் ஜீவனம் வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு ஏற்பட்ட இயற்கையான குணம் என்னவென்றால், இவர்கள் இத்தனை பேர்களுக்கும், இத்தனை பேர்களிடத்திலும் உண்மை, ஒழுக்கம், நாணயம், நேர்மை, நன்றி, மானம், ஈனம், தயவுதாட்சண்யம் முதலிய 'நற்குணங்கள்' என்று சொல்லப்படுகிற எந்தக் குணமுமே இருக்காது; இருக்கமுடியாது; இருந்தால் அது இயற்கைக்கு விரோதமேயாகும்.

இது எப்படிப் பார்த்தால் விளங்கும் என்றால், இதில் ஈடுபட்டவர்கள் யார்? இவர் களுக்கு ஜீவனம் என்ன? இவர்கள் இதற்குமுன் எந்த நிலைமையில் இருந்தவர்கள்? என்ன பரம்பரை? வாழ்க்கையில் முதல் முதல் புகும்போது என்ன தொண்டில் இறங்கி

னார்கள்? பிறகு இதற்கு ஏன் வந்தார்கள். இவர்கள் பொதுத்தொண்டில் புகும்போது என்ன அந்தஸ்து? என்ன தகுதி? எவ்வளவு செல்வம்? அப்போதைய கொள்கை என்ன? எத்தனை மாற்றம் அடைந்தார்கள்? அதனால் என்ன அடைந்தார்கள்? ‘பொதுத் தொண்டின்’ உண்மையான லட்சியம் ஏதாவது உண்டா? அப்படியானால், அந்த லட்சியம் என்ன? அந்த லட்சியம் யாருக்காக? எந்த மக்களுக்காக? அதில் உண்மை நேர்மை உண்டா? இப்படிப்பட்ட தொண்டுகளால் இவர்கள் அடைந்த நட்டம் என்ன? இலாபம் என்ன? இவைகளில் எது பெரிது? இவர்களுக்குப் பெண்டுபிள்ளைகள் இருக்கின்றனவா? அவர்கள் படிப்பு, வாழ்வு ஆகியவைகளுக்கு இவர்களுக்கு உள்ள சொந்த வசதிவாய்ப்பு என்ன? இவர்களது இன்றைய வாழ்வுக்கு எந்த வழியில் தேடிய, அடைந்த பொருளைக் கொண்டு என்ன செய்யப்பட்டது?—என்பது போன்ற பரீட்சைகளை வைத்துப் பார்த்தால் எந்தப் பொதுத்தொண்டனும் மிஞ்சவேமாட்டான்.

அனேகமாய் எல்லாப் பொதுத்தொண்டனும் கன்னக்கோல், கத்தரிக்கோல் பொதுத் தொண்டர்களைவிடக் கீழ்ப்பட்ட தொண்டர்களேயாவார்கள்.

பொதுவாகச் சொல்லப்படவேண்டுமானால், நாட்டில் மனித சமுதாயத்தில் இன்று நிலவி வாழ்ந்து வளர்ந்து பெருகிவரும் எல்லாக் கூடா ஒழுக்கங்களுக்கும், பொய், பித்த லாட்டம், நாணயக் குறைவு, துரோகம், சதி, நன்றிகெட்டதனம் முதலான ஈனக் காரியங் களுக்கும் இந்தவகைப் பொதுத்தொண்டே காரணம் என்பேன்.

பொதுத்தொண்டின் இலட்சணம் இந்த மாதிரியாக அடைந்துவிட்டதாலேயே பொது வாக மனித சமுதாய ஒழுக்கம், நேர்மை, நாணயம் முதலிய தன்மைகள் ஒழிந்து நேர் மாறான தன்மைகள் வளர்ந்துகொண்டே வருகிறது.

உதாரணமாக, கடவுள் தன்மை என்பது பொது அயோக்கியத் தன்மைகள் தஞ்ச மடையப் பாதுகாப்பு ஸ்தலமாகிவிட்டது.

தண்டனை (ஜெயில்) தன்மை—அயோக்கியர்கள், காலிகள் இளைப்பாறி உடலைத் தேற்றிக்கொண்டு திரும்பும் சுகவாச ஸ்தலமாகி, சுகாதார ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

கோர்ட்டு, நீதிஸ்தலத்தன்மை—மனிதனை எப்படி எப்படி நேர்மைக்கேடான காரியம் செய்யலாம்; செய்துவிட்டு எப்படித் தப்பித்துக்கொள்ளலாம் என்பதைக் கற்றுக்கொடுக்கும் கல்லூரியாக ஆகிவிட்டது.

பத்திரிகைகள் தன்மை—காலிப் பயல்களையும், அயோக்கியர்களையும், மக்கள் துரோகிகளையும் மடையர்களையும் பெரிய மனிதர்கள், மகான்கள், தேச பக்தர்கள், மேதாவிகள் ஆக்கும் சலவைச் சாலைகளாக ஆகிவிட்டது.

ஜனநாயகம் என்பது காலிகள், அயோக்கியர்கள் எப்படியாவது பணம், பதவி சம்பாதிக்கும் ஒழுக்கமற்ற செல்வர்கள், பதவியாளர்கள் ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

பொதுத்தொண்டு போனபோக்கானது இன்று நாட்டுக்கு ஒரு சம்பிரதாயமான தலைவனில்லாமல் போய்விட்டது. முன்பு தலைவர், தலைவர்கள் என்றால் அது தானாகவே மக்கள் உள்ளத்தில் புகுந்து யாரையாவது தலைவர் என்று கருதச் செய்யும். அந்தப் பதவியையும் யாரோ சிலர்—வெகு சிலர்தான் விரும்புவார்கள். அவர்களும் நாடொப்பிய தலைவர்களில் ஒருவராக இருப்பார். மக்களும் தலைவராகக் கருதுவார்கள்; மதிப்பார்கள். இப்போது ஒவ்வொருவனும் தனது வாழ்க்கைப் பிழைப்பை மாத்திரம் முன்னிட்டே கவுரவத்தைக்கூடக் கருதாமல் தலைவனாக முயற்சித்து, கூலி ஆட்களைப் பிடித்து தன்னைத் தலைவனாக ஆக்கச் சொல்லுகிறான்; செய்துகொள்ளுகிறான். அதற்கேற்ற கீழ் மக்களும் எவ்வளவு கீழானவனையும் சுயநல, பதவி, பணத்தாசைக்காரனையும் தலைவனாகக் கூப்பாடு போடுகிறார்கள். பத்திரிகைக்காரர்களும் இந்த இழிதன்மைக்கு முழு முயற்சியோடு ஒத்துழைக்கிறார்கள். ஆனதினாலேயே, நாட்டில் உண்மைத் தலைவர்களே இல்லாமல் போய்விட்டார்கள்.

நாட்டில் யோக்கியமான, உண்மையான பொதுத்தொண்டு ஸ்தாபனமே இல்லாமற் போய்விட்டது. எந்த ஸ்தாபனமும் யாரோ குறிப்பிட்ட ஒரு சிலர் பிழைக்கவேண்டும் என்பதல்லாமல் நாட்டுப் பொதுமக்கள் நலனுக்கு என்று ஒன்றுகூட ஏற்படவில்லை; இந் நாட்டில் ஏற்பட்டதில்லை.

இன்றுள்ள பொது ஸ்தாபனங்கள் என்பவைகள் சூதாடுமிடமாகவே 'மேஜைக் காசு' வாங்க ஏற்பாடு செய்யப்பட்ட சூதாடுமிடங்கள் போலவே இருந்துவர வேண்டியவைகளாக அமைக்கப்பட்டுவிட்டன. இவை மாத்திரமல்லாமல், இந்நாட்டு மக்கள் நலத்துக்கு முன்னேற்றத்திற்குமான வாழ்வுக்கு—அறிவு வாழ்வுக்கு ஏற்ற கொள்கைகளோ, லட்சியங் களோ இந்நாட்டில் யாராலும் கையாளப்படுவதில்லை. எவரும் அந்தத் துறையை அணுக பயப்படக்கூடியவர்களாகவே, அதாவது 'அதனிடம் அக்கொள்கைகளிடம் சென்றால், அணுகினால் நமது வாழ்வே போய்விடுமே, பிழைக்கவே முடியாதே' என்று பொதுத் தொண்டு செய்பவர்கள் எல்லாம் பயப்படவேண்டியவர்களாகிவிட்டார்கள்.

ஆகவே, இதுவரை பொதுத்தொண்டு என்பது மக்கள் சுயநல வாழ்வுக்காக இந் நாட்டில் இருந்துவரும் பல தொழில்கள், மார்க்கங்கள் என்பவைபோலவே பிழைப்பு மார்க்கம்தான் என்றும் இதற்கு எந்தப் பொதுத்தொண்டரும் விலக்கு இல்லை என்றும் ஏதோ ஒரு அளவுக்கு என் 83 ஆண்டு அனுபவத்தைக்கொண்டு விளக்கினேன். அதோடு கூடவே, இதற்கு மாறாக பொதுத்தொண்டு இருக்குமானால் அது இயற்கைக்கு மாறுபட்டது என்றும் கூறினேன்.

இந்தக் கருத்து நான் வெகுநாளாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்ட கருத்தே ஒழிய இன்று புதிதாகச் சொல்லப்படுவதல்ல.

மற்றும், உண்மையான பொதுத்தொண்டு செய்ய மக்களில் ஆள் கிடைப்பதும் மிகக் கஷ்டம்; மிகமிகக் கஷ்டம் என்றே சொல்லுவேன். யாராவது இருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர் மனிதனின் இயற்கை அமைப்புக்கு மாறுபட்டவர்களாகத்தான் இருக்க முடியும். அவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்றால்,

முதலாவது, பொதுத்தொண்டனுக்குச் சோற்றுக்கு, குடும்ப வாழ்க்கைக்கு வகைதேட வேண்டிய அவசியமில்லாத வசதி இருக்கவேண்டும்.

வசதி இல்லாவிட்டாலும், பொதுத்தொண்டையே கொண்டு பிழைக்கவேண்டிய அவசியமில்லாத ஒரு மார்க்கமாவது இருக்கவேண்டும். தனக்கு மாத்திரமல்லாமல் தன்னால் போஷணை செய்யவேண்டிய, பாதுகாக்கவேண்டிய நபர்கள் பளுவுகள் இருக்கவேகூடாது.

தன்னால் பாதுகாக்க, பெருக்கவேண்டிய பெரிய தொழிலில் பெரிய சொந்த சொத்தும் இருக்கக்கூடாது. இருந்தால், எதிரிகளுக்குப் பயந்து இலட்சியத்தை விட்டுக்கொடுக்க நேரும். மனைவி, பிள்ளைகுட்டிகள் இருக்கக்கூடாது; இருக்கவே கூடாது.

'காணப்படும் பொருள்களில் உயிர் பிரியமாம். உயிரினும் மக்கள் பிரியமாம். இவற்றைப் பாதுகாக்க எதுவும் செய்யலாம்'—ஆய்ந்த பழமொழி.

ஏனெனில், அவற்றைப் பாதுகாக்க வேண்டுமே, வளர்க்கவேண்டுமே, படிக்க வைக்க வேண்டுமே, உத்தியோகம் தேடிக்கொடுக்க வேண்டுமே என்கிற எண்ணத்தினால் எப்படிப் பட்டவனும் பொதுத்தொண்டுக்கு அயோக்கியனாகியேவிடுவான். பொதுத்தொண்டன் அல்லாத, சுயநலத் தொண்டனான மனிதன் எவனும் பிள்ளைகுட்டிகள் இருந்தால் சுயநல வாழ்விலேயே, அவனுக்கு எவ்வளவு வசதி இருந்தாலும் அயோக்கியனாகிவிடுகிறான். அப்படி இருக்கும்போது, வசதி இல்லாதவன் அவற்றின் (பிள்ளைகுட்டிகள்) வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு அயோக்கியத்தனம் செய்யமுடியாமல் எவனாலும் இருக்கவே முடியாது.

பொதுத் தொண்டுப் பணியில் இருந்து தன் வயிற்றுக்கு–வாழ்வுக்கு மாத்திரம் வகை செய்து கொள்பவனையே கூட இரண்டாந்தரம், விலக்கு அளிக்கப்படவேண்டிய தொண்டன் என்று தான் சொல்லுவேன்.

எந்தப் பொதுத் தொண்டனுக்காவது மனைவி இருக்கிறது; மக்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் குடும்பத்தில் வசதி இருக்கவேண்டும். அல்லது, அவர்களும் உணவு உடைதவிர மற்றெதையும் கருதாதப் பொதுத்தொண்டர்களாக இருக்கவேண்டும். பொதுத் தொண்டு ஊதியத்தால் வாழ்கிறவர்கள், அவர்கள் குடும்பங்கள், மக்கள் சராசரி வாழ்க்கைத் தரத்துக்குமேல் வாழக்கூடாது; வாழவே கூடாது.

வாழவேண்டிவந்தால், வாழ்ந்துகொள். ஆனால் 'நான் பொதுத்தொண்டன்' 'தியாகி' 'கஷ்ட நஷ்டப்பட்டவன்' என்று சொல்லாதே. சொல்லுவதற்கு வெட்கப்படு. உன் மனதிலும் நீ நினைத்துக்கொள்ளாதே. அப்படி நினைப்பாயேயானால், சொல்லு வாயேயானால்—நீ மக்களை ஏமாற்றி வெற்றிபெற்றுவிட்டதாகக் கருதிக்கொண்டிருப்பவன் என்றுதான் சொல்லவேண்டும்.

மற்றும், இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், நீ பொதுத்தொண்டன் ஆகாமல் சுயநலத்தொண்டனாக ஆகி, உனக்கென்றே நீ பாடுபடுபவனாக ஆகி இருந்தால், இன்று உன் நிலை எப்படியாகி இருக்கும்? உன் தரம், அந்தஸ்து என்ன ஆகியிருக்கும் என்பதை உன் தரத்தைக்கொண்டு உண்மையாய் நினைத்துப் பார்த்து, உன் பொதுத்தொண்டு (வேஷம்) ஆனது உன்னைத் தியாகம் செய்யச் செய்ததா, அல்லது உன் தகுதிக்கு மேற்பட்ட செல்வத்தையும் வாழ்க்கை வசதியையும் அந்தஸ்தையும் தேடிக்கொள்ளச் செய்ததா? என்று எண்ணிப் பார்.

இந்த முறையில் எண்ணிப் பார்த்தால், நாட்டில் எவனாவது பொதுத்தொண்டன், தன்னலத்தை வெறுத்தவன், தியாகி என்பதாக எங்காவது இருக்கின்றானா என்பது தெரியும்.

நான் வெகு பொதுத் தொண்டர்களோடு பழகியிருந்த பழக்கத்தையும், வெகு பேருக்குத் தலைவனாக இருந்து அவர்கள் நடத்தையையும் அவர்களால் அடைந்த பலனையும் அவர்களது போக்கையும், அவர்கள் எதிர்ப்பையும், அவர்கள் இன்று எதிர் பார்ப்பதையும் இலட்சியத்தையும் உணர்ந்தே இதைச் சொல்லுகிறேன்.

எனது பொதுத் தொண்டு வாழ்விலே நான் நெருங்கி உண்மையாகப் பழகிய தோழர்கள் இராஜாஜி, கண்ணப்பர், இராமநாதன், கே. ஏ. பி. விஸ்வநாதன், பொன்னம்பலம், அண்ணாதுரை, சவுந்தரபாண்டியன், பி. பாலசுப்பிரமணியம், எஸ். குருசாமி–முதலியவர்களுடைய பொதுத்தொண்டு தன்மையை அனுபவித்தும், உணர்ந்துமே எழுதுகிறேன். மற்றும், இவர்கள் எல்லாம் எனக்கு ஆதரவாக, நண்பர்களாக இருந்த தாலேயும், இவர்களுக்கு நான் 'தலைவனாக' அவர்களாலேயே கருதப்பட்டதினாலேயும் நானும் இவர்களைக் குறிப்பிடுகிறேன்.

இதிலிருந்து பொதுமக்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப் படுகிறேன் என்றால், பொதுத் தொண்டு என்பதாக ஒன்று, ஒரு தொண்டு இல்லை; பொதுவாக இல்லவே இல்லை.

எவன் அந்தப் பெயரால் தொண்டு செய்வதாகக் காணப்பட்டாலும் சுயநலத்துக் காகத் தெரிந்தெடுக்கும் தொண்டுகளில் (பொதுத் தொண்டு என்பது) அது ஒன்று என்றுதான் கொள்ளவேண்டும். சிலருக்குத் துவக்கத்தில் சுயநலம் கருதாமல் பொதுத் தொண்டுக்கு வர எண்ணமேற்பட்டிருக்கலாம். பெண்டு பிள்ளை ஏற்பட்டால் எவனும் சுயநலப் புலிதான்.

என்னைப் பற்றி நீங்கள் 'நீயும் அப்படித்தானே?' என்று கேட்கலாம். ஆம்; நானும் அப்படித்தான். என் தொண்டும் உண்மையில் சுயநலத் தொண்டுதான். என்ன சுயநலம்?

அவரவர் சொந்தப் பிள்ளைகுட்டி, மனைவி வாழ்க்கை சுயநலம் அல்லாமல், எனக்கு ஒரு திருப்தியையும் இன்பத்தையும் கொடுக்கத் தக்கதும், கம்பீரத்தோடு நானே பெருமைப் படத்தக்கதுமான நலத்தை அளிக்கிறது. அவற்றை நானும் அனுபவிக்கிறேன். இதுதான் என் சுயநலம்.

செல்வத்தைப் பற்றியும், மற்றவர்களையெல்லாம் விட எனக்குப் பேராசையுண்டு. மற்ற—மேற்கண்ட தோழர்களைவிடச் செல்வத்தில் நான் பொதுத் தொண்டின் பேரால் அதிகமான பணம், சொத்து சம்பாதித்தவன் ஆவேன். எனது முயற்சியில், தொண்டின் சரிபகுதிப் பாகம் பணம் சேர்ப்பதிலே செலவழிக்கிறேன். சிறு வயதுமுதலே வாழ்க்கையின் இலட்சணம் பணம் என்றே பழக்கப்பட்டவன் நான்.

இப்படிப்பட்ட நான், 'பொதுத் தொண்டனாக ஆனபின்பு உண்மையான பொதுத் தொண்டுக்கு என்றே சற்றேறக்குறைய 15 இலட்ச ரூபாய் மதிப்பிடத்தக்க பொதுச் செல்வம் சேமித்து இருக்கிறேன். எல்லோருக்கும் தெரியும்படியாகவே சம்பாதித்தே சேர்த் திருக்கிறேன். இதில் என்னுடைய சொந்தச் சொத்து, அதாவது எனக்கு உரிமையான என் சொத்துக்களை விற்று பொதுநலனுக்கு உதவியவகையில் பெரும்பாகம் கூடச் சேர்க்கப் பட்டதால் இந்த மதிப்பு ஏற்பட்டதென்றே சொல்லுவேன். (எனதல்லாத) மற்றதெல்லாம் பொதுமக்களிடம் இருந்து மாநாடு, கூட்டத்துக்கு—அழைப்புக்குச் செல்லுதல், கொள்கைப் புத்தகம் விற்றல், கழகத்திற்கு நன்கொடை என்னும் பேரால் பெற்ற, அளிக்கப்பட்ட—வசூல் செய்யப்பட்ட வகையிலும் அவற்றை நானும் பெருக்கியவகையிலும் சொத்துக்களுக்குப் பொதுமதிப்பு ஏறியவகையிலும் சேர்க்கப்பட்ட செல்வம், சொத்துக்களெல்லாம் இந்த சுமார் பதினைந்து இலட்சரூபாய் மதிக்கக்கூடிய சொத்தாகும்.

இந்தச் சொத்திலும் என் இஷ்டப்படி—வேறுயாரும் கேள்வி கேட்கமுடியாதபடி, யாருக்கும் கணக்குக் காட்டவேண்டிய அவசியமில்லாத சொத்தாக, ஒரு நல்லபாகம் பொதுத் தொண்டுக்கு இருக்கிறது என்னலாம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எனக்கு இவ்வளவு செல்வ வசதி இருந்தும் எனது வாழ்வானது மக்களின் சராசரி வாழ்வுதான். எனக்கு உணவுச் செலவு மாதம் ரூ. 50-க்குள் தான் ஆகும். எனது துணிமணி செலவு ஆண்டுக்கு ரூ. 50-க்குள்தான் ஆகும். அதிலும் பெரும்பகுதி ஓசியில் நடக்கும். இதற்குச் செலவு செய்யவேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது. (எதனால்) பிள்ளைகுட்டி கிடையாது. மனைவி உண்டு என்றாலும் அவர்கள் மாதம் ரூ. 200 போல் சம்பளம் கொடுத்து வாங்கக்கூடிய வேலையை இயக்கத்திற்காக இந்த 5 ஆண்டுகளாகச் செய்துவந்ததோடு, அதற்கு முன்பாகப் பதினைந்து ஆண்டாக பல ஆயிரக்கணக்கில் புத்தக விற்பனை மூலம் கழகத்துக்குப் பணவருவாயும் அவர்களால் ஏற்பட்டது என்று சொல்லுவேன். அந்த அம்மையாருக்கும் உணவுச் செலவு மாதம் 50 ரூ. உடை செலவு வருஷம் 150 ரூபாய்க்கு உள்ளாகத்தான் செலவாகும்.

எனது பிரயாணம் சிம்ப்சன் கம்பெனியின் பங்காளித் தோழர் ஆரோக்கியசாமி அவர்கள் சொன்னதுபோல், ஒரு லாரிக்குச் சமமான—சாமான் ஏற்றத்தக்க மோட்டார் வண்டியில்தான்! பிரயாணம் முக்கால் பாகம் இரவில்.

மாதத்தில் 20 நாள்போல சராசரி சுற்றுப் பிரயாணம். சதா கழகத்துக்குக் கட்டட வேலை. கழகச் செல்வத்தைப் பெருக்கும் கணக்கு வேலை. இது அதிசயமான வேலை. எந்தவிதக் கணக்கும் வைக்காமல் சதா கணக்குப் போட்டுப் பார்க்கும் வேலை! எல்லாம் பெரிதும் டைரி குறிப்புத்தான்.

சில பொறாமைக்காரர்கள், ஏமாற்றமடைந்து வெந்து புழுங்கிக்கொண்டிருப்பவர்கள் ஆகிய கூட்டத்தார் தவிர 'எதிரிகள்' என்று கருதப்பட்டவர்கள் முதல் எந்த மனிதரும் நம்மைக் கண்டவுடன் நான் வெட்கப்படத்தக்கபடி என்னைப் 'புகழ்வதும்' 'போற்றுவதும்' 'அன்பு காட்டுவது'மான தன்மையை இடைவிடாமல் அனுபவிக்கிறேன்.

இவை எல்லாம் எனக்குச் சுயநலமில்லாமல் வேறு என்ன பொதுநலம் என்று சொல்ல முடியும்?

எனக்கு ஏதாவது கவலை உண்டு என்றால் அது கழகச் சொத்துக்களையும், மற்றும் பொதுநலத்துக்காகவே அளிக்கப்பட்ட பொருள்கள், சொத்துக்கள் ஆகியவை களைப் பாதுகாத்து, அதன் வருவாய்களைக் கழக லட்சியங்களுக்கும் அனாதியாய்ப் பராமரிப்பு இல்லாத மக்களுக்கும், அவர்கள் நல்வாழ்வுக்கும் வகைதரப் பயன்படும்படியாய்ச் செலவு செய்யச் செய்வது எப்படி என்கிற கவலைதான்.

மற்றொரு கவலை என்னவென்றால், இனியும் ஒரு பத்து ஆண்டுகளுக்காவது காமராசர் ஆட்சி நீடித்து நிலைத்து இருக்குமானால் சுயமரியாதை இயக்கவேலை பூர்த்தி யாகாவிட்டாலும் திராவிடர் கழக இலட்சிய வேலை பெரும் அளவுக்குப் பூர்த்தியாகுமே என்கின்ற கவலைதான்.

மேலால், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கிறேன். அதாவது,

எனது ஒவ்வொரு பிறந்தநாள் விழாவிலும் அடுத்த ஆண்டு முடிவுக்குள் நம் கழகம் செய்யவேண்டிய காரியம் என்ன என்று வேலைத் திட்டம் தெரிவிப்பது வழக்கம்.

சென்றசில பிறந்தநாள் விழாக்களில் 'அடுத்த ஆண்டு' வேலைத் திட்டம் தெரிவித்தேன் என்றாலும் அந்த ஆண்டுகளின் வேலைத் திட்டங்களை காமராசர் ஆட்சி எதிர்ப்புக்களை முறியடிக்கின்ற வேலைகளுக்கே பெரும்பகுதி முயற்சியும் நேரமும் செலவழிக்கப்பட்டுச் சரியாக வேலைத் திட்டங்கள் கவனிக்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குச் சமாதானம் என்னவென்றால், காமராசர் ஆட்சி எதிர்ப்புகளை முறியடித்து, மறுபடியும் அவர் ஆட்சி வரும்படி செய்வதும் வேலைத் திட்ட நிறைவேற்றுவேலை என்று கருதவேண்டியதாயிற்று. இதில் ஓரளவு வெற்றி பெற்றோம் என்றாலும் முழுவெற்றி பெறவில்லை.

ஓர் அளவு வெற்றி என்னவென்றால், எலக்ஷனில் ஜெயித்த ஒருவன் 'நான் ஒரு அளவுக்குத்தான் வெற்றிபெற்றேனேயொழிய முழுவெற்றி பெறவில்லை. முழுவெற்றி பெற்றேன் என்று எப்போது சொல்லலாம் என்றால், எதிரியை டெபாசிட் கிடைக்காமல் செய்திருந்தால்தான் முழுவெற்றி. இது சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய வெற்றிதான்' என்று ஒருவன் சொல்லுவது போன்றே, நானும் முழுவெற்றி கிடைக்கவில்லை என்கின்றேன். அதுபோகட்டும்; வரப்போகிற ஆண்டுக்கு வேலைத் திட்டமாக:—

(1) பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆணவமும் ஆதிக்கமும் ஒழிக்கப்படவேண்டும்; குறைக்கப்படவாவது வேண்டும்.

(2) சினிமா மோகம், வளர்ச்சி ஒழிக்கப்படவேண்டும்.

(3) கோயில்களில் சாதி ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும்.

கழகத்திற்கு 25,000 மெம்பர்களுக்குக் குறையாமல் சேர்க்கப்படவேண்டும். கழகத் திற்குக் குறைந்தது 500-க்குக் குறையாமல் கிளைக் கழகங்கள் இருக்கச் செய்யவேண்டும். கமிட்டிகள், மத்தியக் கமிட்டி, மாவட்டக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு மற்ற கமிட்டிகள் புதுப்பிக்கப்படவேண்டும். கழகப் புத்தகங்கள் ரூ. 25,000-க்குக் குறையாமல் விற்கப்பட வேண்டும். பிரச்சாரங்களுக்கு ஒழுங்குமுறை, கட்டுப்பாடு ஏற்படுத்தவேண்டும்.

கமிட்டிக்கு மேலும் கட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இவைகளை இந்த ஆண்டு வேலைத் திட்டங்களாகக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 84—17-9-1962]

2. சதியை முறியடிப்போம்

சுமார் 10, 15 ஆண்டுகளாக எனது பிறந்தநாள் பாராட்டுக்கூட்டம் (விழா) என்பதில் நான் பாராட்டுதலுக்கு நன்றி செலுத்தும்போது, அடுத்த ஆண்டு வேலைத் திட்டம் என்பதாக ஏதாவது ஒரு திட்டத்தை வெளியிடுவது வழக்கமாக இருந்துவருகிறது.

அப்படி வெளியிடுவதில் நான் பெரிதும் சமுதாய சம்பந்தமான குறைபாடுகளை, மதசம்பந்தமான மூட, காட்டுமிராண்டித்தனமான கருத்து, செய்கை ஆகியவைகளைப் போக்குவதற்கு ஏற்றதான திட்டங்களையே வேலைத் திட்டமாகச் சொல்லி (வெளியிட்டு) வந்திருக்கிறேன். அப்படிச் சொல்லிவருவதில் சொல்லுவதற்கேற்ப ஒரு அளவுக்கு அது நிறைவேறும்வண்ணம் கிளர்ச்சியோ, முயற்சியோ கழகத்தின்மூலம் செய்தும் வந்திருக்கிறேன். ஆனால் அவை எல்லாம் நிறைவேற்றம் அடைந்தது என்று சொல்லுவதற்கு இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு சிறு அளவுக்காவது வெற்றியும் வெற்றிமுகம் ஏற்பட்டு வருவதுடன், மக்களிடையில் அத் திட்டத்தின் அவசியம்பற்றிய உணர்ச்சி வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறதை நான் உண்மையாகவே உணருகிறேன்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அத் திட்டங்கள் எவ்வளவு புரட்சிகரமானதாக இருந்தாலும் அவற்றில் எதையும் வாயளவில்கூட மறுக்கும்படியான எதிர்ப்புக் காரியங்களை இதுவரை நான் எந்தக் கூட்டத்தாராலும் எந்தத் துறையிலாவதும் காணவே இல்லை.

பொதுவாக, பார்ப்பனர்களுடையவும் மதஉணர்ச்சியாளருடையவும் வெறுப்பைப் பெற்று வந்திருக்கிறேன் என்பதை நான் மறுக்கவில்லை. இந்த வெறுப்புத்தன்மை எனது திட்டங்களுக்குப் பாமர மக்களாலும்கூட ஏற்படுவது|என்பது அதிசயமாகாது. ஏனெனில், நம் மக்கள் 100-க்கு 90 பேர் எழுத்து வாசனை அற்றவர்கள். படித்த மக்களில் 100-க்கு 99 பேர் மூடநம்பிக்கையில் மூழ்கிப் பேராசை கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நமது திட்டங்கள் அவர்களுடைய சுயநலத்திற்குக் கேடு ஏற்பட்டதாகவே கருதி, நம்மீது வெறுப்புக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

இந்த வெறுப்புக்களை நான் குழந்தைகள் மருந்து சாப்பிட, தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதுபோன்றது என்று கருதி 'எதிர்ப்பை'—வெறுப்பை இலட்சியம் செய்யாமல் தொண்டாற்றியே வந்திருக்கிறேன்.

அத் தொண்டுகள் அடியோடு வீணாகிவிட்டன என்று சொல்லமுடியாமல் நாடும், கொடுமைக்கும் மடமைக்கும் ஆளான சமுதாயமும், நல்ல அளவுக்கு முன்னேறியே வருகிறதைப் பார்க்கின்றேன்.

இதற்கு எடுத்துக்காட்டு என்னவென்றால், நாடு, சமுதாயம், முன்னேற்றத்தினால் இன்று எந்தச் சமுதாயத்திற்கு 'கேடு' நெருங்கி வருகிறதோ அந்தச் சமுதாயம் தங்களது கடைசி ஆயுதத்தை இன்று பயன்படுத்த முன்வந்து இருப்பதே போதுமானதாகும்.

சாதாரணமாகச் சொல்லுவதானாலும் கடவுள், மதம், சாதி என்கின்றதான மாயப் பேய்கள் இன்று செத்துப் பிணங்களாகிவிட்டன என்றே சொல்லலாம். இவற்றில் ஈடுபட்டவர்கள், இவற்றால் பயனடைந்தவர்கள் இப் பிணங்களுக்குச் சமாதி கட்டும் வேலையில்தான் இன்று ஈடுபட்டிருக்கிறார்களே ஒழிய, கொஞ்சமாவது உயிர் இருக்கிறதென்று கருதி, யாரும் பிழைக்கவைக்க முயற்சிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. என்றாலும் கூட, இந்தச் சுயநல—மவுடீகக் கும்பல்கள் மக்களை, சமாதியைக் காட்டி ஏமாற்றிப் பிழைப்பதற்கில்லாமல், மேலும் சில வேலைசெய்யவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் மறைக்கவில்லை.

ஏனென்றால், மக்களின் மடமை அவ்வளவு முதிர்ந்ததாக இருக்கிறபடியாலும் எதிரிகள் கடைசி முயற்சி செய்கிறபடியாலும் நமக்கு இப்போது வேலை இல்லை என்று சொல்லு

வதற்கு இல்லை. மற்றும் நமக்கு இன்று மற்றொரு புதிய தொல்லை ஏற்பட்டிருக்கிறது. அது என்ன தொல்லை என்றால், இதுவரை நாம் பார்ப்பனர் தொல்லைக்குப் பரிகாரம் தேடும் பணியில் முனைந்து இருந்தோம். இப்போது நாம் பார்ப்பனர் மாத்திரமல்லாமல் முஸ்லிம் களுடையவும், கிறிஸ்தவர்களுடையவும் தொல்லையைச் சமாளிக்கப் பரிகாரம் தேட வேண்டியவர்களாக இருக்கிறோம். இத் தொல்லையைச் சுலபமான தொல்லை என்று கருதிவிட முடியாது. கஷ்டமான தொல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நான் இந்த 85-வது ஆண்டுக்கு வேலைத் திட்டமாக நமது சமுதாயம், நமது பார்ப்பனர் அல்லாத சமுதாயமாகிய '4-ம் சாதி' 'சூத்திரர்' என்று பார்ப்பனரால் ஆக்கப் பட்டு அதற்கு ஏற்ப இழி மக்களாகவும் கல்வி அறிவற்ற காட்டுமிராண்டி மக்களாகவும் இருக்கச் செய்யப்பட்ட நாம், கல்வி, நல்வாழ்வு, ஆட்சி உரிமை முதலாகியவற்றில் நம் சமுதாயம் (எண்ணிக்கைக்கு ஏற்ப) விகிதாசாரம் அடையவேண்டும் என்கின்ற சில இலட்சி யத்தைப் பெறும்படியான பணியை வேலைத் திட்டமாகக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன்.

இதை மிகக் கடினமான வேலைத்திட்டம் என்றுதான் கொள்ளவேண்டும். ஏனெனில், இந்த நாட்டில் பார்ப்பன சமுதாயத்தின் உயிர்—ஜீவநாடியே இதுதான். அதாவது, நம்மை மேற்கண்ட இழிவான அடிமை நிலையில் வைத்து இருப்பதுதான். எப்படி என்றால், ஆட்சியில் நமக்கும் அவர்களுக்கும் சமுதாய எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதாசாரம் ஏற்பட்டு விட்டது என்றால், அந்த நிமிடமே '(பார்ப்பான்) பிராமணன் செத்தான்' என்று ஆகிவிடும். அதுமாத்திரமல்லாமல், சூத்திரன், இழிமகன், மூடக் காட்டுமிராண்டி மகன் என்பவனும் ஒழிந்தான். சரிநிகர் மனித சமுதாயம்தான் நம் நாட்டில் இருக்கிறது என்பதாக ஆகிவிடும். ஆதலால், இந்த நம் இலட்சியம் நிறைவேற பார்ப்பான் தன்னுடைய எல்லாவற்றையுமே செலவழித்துப் பார்ப்பான். ஆனதினாலே, இந்த நமது இலட்சியம் மிகக் கஷ்டமானது என்று கருதினேன்.

உதாரணமாக, நம்மில் கீழ்த்தரமான மக்களையெல்லாம் பார்ப்பான் இன்று தன்னோடு இணைத்துக் கொண்டு, அவர்களையும் நம் சமுதாய நலத்துக்கு எதிரிகளாக ஆக்கி, தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்த பார்ப்பனர், இன்றைய நிலைக்குத் தனக்கு அந்தப் பலம் போதாது என்று கண்டு கொண்டவுடன் புதிய பலத்தை உண்டாக்கிக்கொள்ள முயற்சித்து அதில் வெற்றி பெற்றுவிட்டனர்.

அந்தப் புதிய பலம் என்னவென்றால், நம் நாட்டில் பார்ப்பனர்களைப் போலவே உள்ள மற்றும் சிறுசிறு (மைனாரிட்டி) வகுப்புகளான முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டனர்.

ஆதலால், நாம் இன்று 1. பார்ப்பனர், 2. நம்மில் கீழ்த்தர மக்கள், 3. முஸ்லிம்கள் 4. கிறிஸ்தவர்கள் ஆக இன்று நமக்குச் சமுதாய எதிரிகளாக இந்த நான்கு கூட்டங்கள் (குழுக்கள்) இருக்கின்றன. இந் நால்வரும் ஏற்கெனவே நம் சமுதாயத்தைப்பற்றிக் கவலை இல்லாதவர்கள். மற்றும், இந் நான்கில் மூவர், தம்தம் சமுதாயத் துறையில் நம்மைவிட மேலான நிலைமையில் அரசியல், பொருளாதார இயல், கல்வி இயல், பதவி இயல், மத இயல் முதலியவற்றில் சராசரித் தன்மைக்கு மிகமிக மேலான நிலைமையில் இருப்பவர்கள், வாழ் பவர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் ஆவார்கள். ஒரு கூட்டத்தினர் நம்முடைய இழி நிலை பற்றியும் ஏன்—தங்களுடைய இழிநிலை பற்றியுங்கூடக் கவலை இல்லாமல் 'சோறு—சீலை—காசு' ஆகிய மூன்றையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆவார்கள். ஆதலால், ஒரு சிறு நலத்திற்கும் தங்களுடைய எதையும் தியாகம் பண்ணவும் துணிவு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், நமது இலட்சியம் நிறைவேறுவதற்கு இவர்கள்—இந் நான்கு குழுவினர் களும் பெரும் கேடர்களாக இருக்கும் நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந் நிலை நம் வளர்ச்சியையும் நம் இன்றைய நல்வாழ்வையும் சிதைத்துவிடும் என்றே கருதவேண்டி இருக்கிறது.

இந் நிலை இன்று ஏற்படக் காரணம், இதுவரை இல்லாத அளவுக்கு காமராசர் ஆட்சி காரணமாகத் தமிழ் மக்களாகிய நாம் பெரும் அளவுக்கு முன்னேறி வருகிறோம். இதைச் சிதைக்கவேண்டிய அவசியம் பார்ப்பனருக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் (பார்ப்பனர்கள்) தனித்து நின்று நம்மை எதிர்த்து அழிக்க முடியாது. ஆதலால், துணைதேட முயன்றார்கள். அம் முயற்சியில் ஏனைய முக் குழுவினர் அவர்களுக்குக் கிடைத்துவிட்டார்கள். ஏனெனில், இவர்களுக்கு எவ்விதக் கொள்கையும் கிடையாது. யாரை அண்டியாவது எப்படி நடந்தாவது தங்கள் நலன் ஒன்றே இலட்சியமாகும். நாம் வகுப்புவாரி உரிமை கேட்கும் போது அந்தப்படி நாம் அடைந்துவிட்டால் இவர்கள் நலம் கெடும் என்கின்ற குறை, அச்சம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால், இவர்கள் எளிதில் பார்ப்பனர் வலையில் பட்டுவிட்டனர்.

மற்றும், ஆச்சாரியார் முஸ்லிம்களை மயக்க காஷ்மீரை முஸ்லிம்களுக்கு (பாகிஸ்தானுக்கு) கொடுத்துவிட வேண்டியது நியாயம் என்று சொல்லிவிட்டார். இதற்கு முஸ்லிம்கள் நன்றி காட்டும் முகத்தான் இராஜாஜிக்கு இந்தியப் பிரதமர் பதவி கொடுக்க வேண்டும். அவர்தான் அதற்குத் தகுதி உடையவர் என்று பாகிஸ்தான் தலைவர் அயூப்கான் சொல்லி, இந்நாட்டு முஸ்லிம்களை ஆச்சாரியாரை ஆதரிக்கச் செய்துவிட்டார்.

மற்றும், நமது பகுத்தறிவுக் கிளர்ச்சியும், நேருவின் சோஷ்யலிசக் கொள்கையும் இஸ்லாம், கிறிஸ்தவ சமுதாயத்திற்கு—அவர்கள் மதத்திற்குக் கேடுவரும் என்ற புரளியைப் பார்ப்பனர் கிளப்பிவிட்டு விட்டார்கள். இதனாலேயே முஸ்லிம்–கிறிஸ்தவ சமூகத் தலைவர்களான திரு. இஸ்மாயில் அவர்களும் திரு. ரத்தினசாமி அவர்களும் இவ்விரு சமுதாயமும் இராஜாஜியை ஆதரிக்கவேண்டும் என்று கட்டளை இட்டுவிட்டார்கள்.

ஆகவே, இனிவரும் தேர்தல்களில் இம்மூன்று குழுவினரும் தங்களுக்கு வெற்றி கிடைக்க வகை இல்லை என்று தெரிந்தாலும், நம்மில் இருந்து கொண்டே தங்கள் சுய நலத்துக்கு, நம் இனத்துக்குக் கேடு செய்து வாழ்வது, என்ற முடிவில் ஆச்சாரியாரை அண்டி இருக்கும் 'கண்ணீர்த் துளிகளை'த்தான் ஆதரிக்க வேண்டும்; எப்படியாவது காமராசரைத் தோல்வி அடையச்செய்ய வேண்டும் என்ற சதித் திட்டம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதன்பயன் என்ன ஆகும் என்றால், இனித் தேர்தல்களில் இரண்டு கட்சிதான் போட்டி! அப் போட்டியில் காமராசர் (காங்கிரஸ்) கட்சி, தமிழர்களின் ஓட்டுகளை அதிகமாய் (மெஜாரிட்டியாய்) பெற்றாலும்கூட இந்த பார்ப்பனர், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஆகிய முக் குழுவும் எந்தக் கட்சிக்கு ஓட்டு செய்வார்களோ அந்தக் கட்சிதான் ஜெயிக்க முடியும். திருவண்ணாமலைத் தேர்தல் முடிவு அப்படித்தான் ஏற்பட்டது. நம் தமிழ் மக்களின் ஓட்டு நமக்கு அதிகமாய் கிடைத்திருந்தும் இந்த முக் குழுவினர் ஓட்டுகளாலேயே காமராசர் (தமிழர் கட்சி) தோல்வி அடைய வேண்டியதாயிற்று. அதுபோலத்தான் இனியும் அவர்கள் 3 பேர்கள் நமக்கு எதிரிகளாகி, நம் எதிர்கட்சிக்கு ஓட்டுச் செய்தால் அது நமக்கு பெருங்கேடாகவே முடியும்.

இதற்காகத்தான் இராஜாஜி காங்கிரஸ் மெஜாரிட்டி சமுதாயக்கட்சி ஆனதால் அதனால், மைனாரிட்டி சமுதாயத்திற்குக் கேடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள, மைனாரிட்டி சமுதாயம் ஒன்றாகச் சேர்ந்து கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்று கூறி, கூட்டுச் சேர்த்துக்கொண்டு துணிந்து எதிர்க்கிறார்.

இதற்குப் பரிகாரம் தேடவில்லையானால், நாம் என்னதான் பிரச்சாரம் செய்தாலும், கட்சியைப் பலப்படுத்தினாலும், வெற்றி கிடைப்பது முடியாத காரியமாக ஆனாலும் ஆகி விடலாம். ஆனதால், மைனாரிட்டி முழுவோட்டினால் மெஜாரிட்டி கெடாமல் இருக்க, அவர்களைத் தேர்தலில் ஒதுக்கி விடுவதேதான் நாம் இத்தொல்லையில் இருந்து விலகத்தக்க

மார்க்கமாகும். குறைந்தது, அவ்விரு சமுதாயத்திற்குமாவது தனித் தொகுதி கொடுத்து ஒதுக்கி விட்டுவிட்டால் பெரும் அளவிற்குத் தொல்லை ஒழியும் என்பது எனது கருத்து. அதோடுகூடவே, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்னும் பேரால் தமிழர், பார்ப்பனர், முஸ்லிம், கிறிஸ்தவர் என்கின்ற தலைப்பில் அவரவர் சமுதாய எண்ணிக்கைப்படி அரசாங்கத்திற்குள்ள எல்லாத் துறையிலும் இவ்வாறு பிரித்துவிட்டால், தமிழ் நாட்டை, தமிழ் மக்களைப் பிடித்த எல்லாக் கேடுகளும் ஒழிந்தே போகும்.

ஆகவே, இதைத்தான் எனது 85-வது ஆண்டுத் திட்டமாக நான் கொண்டிருக்கிறேன்.

இவற்றிலும் முதலாவது, நம்நாட்டு ஆட்சியில் நாம் அடையவேண்டிய வகுப்பு உரிமைக்குக் கிளர்ச்சி செய்வதை உடனடித் திட்டமாய்க் கொண்டிருக்கிறேன்.

நம் இயக்கத் தோழர்கள் ஆயத்தமாய் இருக்கவேண்டிக் கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 85—17-9-1963]

3. சமதர்மம் தழைக்க உதவுக

நான் இப் புவியில் 85 ஆண்டுகள் வாழ்ந்து 86-வது ஆண்டில் புகுகிறேன்.

இந்த நாட்டில் மக்கள் வாழும் சராசரி வயது 10 ஆண்டுகளுக்குமுன் 32 வயதாக இருந்து, இன்று 48 வயதாக மாறியுள்ள இக் காலத்தில் ஒரு மனிதன் 85 ஆண்டுகள் வாழ்ந்து, அதுவும் ஓய்வு என்பதை அறியாத தொண்டும், சுகம் என்பதை அறியாத வாழ்வும், கிடைத்ததைத் தின்றுகொண்டு, வாய்த்த இடத்தில் தூங்கிக்கொண்டு திரிந்த நான் 85 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டேன் என்றால் என் ஆயுளைப்பற்றி நான் பாராட்டிக் கொள்ள வேண்டாமா?

என்ன செய்து சாதித்துவிட்டாய்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் நீங்களே (வாசகர்கள்) தான் தேடிப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி, சோம்பல் கழிப்பிணித்தனமின்றி உழைத்தேன். திருட்டு, புரட்டு, மோசடி இன்றி வெள்ளையாய் நடந்துகொண்டேன். என் நடத்தையில் பல தவறுதல்கள், தகாத காரியங்கள் ஏற்பட்டு இருக்கலாம். என்னையே நீதிபதியாகக்கொண்டு எனக்குச் சரி என்று பட்டதையும், தேவை என்று பட்டதையும் செய்தேன். அதுவும் ஒளிவுமறைவு இல்லாமல் செய்துவந்தேன்.

வாழ்வில், செயலில் பல ஏமாற்றம் அடைந்து இருக்கலாம். ஆனாலும், அதையே ஒரு படிப்பினையாகக்கொண்டு முயற்சியில் சளைக்காமல் நடந்துகொண்டுதான்வருகிறேன்.

நான் ஒரு அநாமதேய வாழ்வு வாழவில்லை என்பதும், அநாவசியமான மனிதனாய் இருந்துவரவில்லை என்பதும் எனக்கு ஒரு ஆறுதல் தரத்தக்க விஷயமாக இருந்துவந்தது.

இப்படிப்பட்ட எனது வாழ்நாள்பற்றிய விளக்கம் என்னவென்றால், 1964 செப்டம்பர் 17-ந்தேதி வியாழக்கிழமை சரியான குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதிக்கு எனக்கு 85 வயது முடிகிறதென்றால் அது நான் பிறந்து ஓராயிரத்து இருபது (1020) மாதங்கள் ஆகிறதுடன், நான் பிறந்து இன்றைக்கு (17-9-1964-க்கு) முப்பத்தி மூவாயிரத்து நாற்பத்தேழு நாட்கள் வாழ்ந்துவிட்டேன் என்று ஆகிறது.

மற்றும், நான் 1034 ஓராயிரத்து முப்பத்தி நான்கு அமாவாசையையும் 1034 பவுர்ணமியையும், 1034 பிறையையும் கண்டுவிட்டேன் என்று ஆகிறது.

'ஆயிரம் பிறை கண்டவன் முழு ஆயுள் வாழ்ந்தவனாவன்' என்று சொல்லுவார்கள். அதுபோல் முழு வாழ்நாள் வாழ்ந்துவிட்டேன்.

எனவே கிரமப்படி பார்த்தால், உங்களிடம் நான் பயணம் சொல்லிக்கொள்ள வேண்டியதுதான் எனது நேர்மையான கடன்.

அதற்கேற்ப எனக்குப் புத்திக் கோளாறு ஒன்றும் இல்லை என்று நான் கருதினாலும், ஞாபகக் கோளாறு அதிகமாகிவிட்டது. பேசப்பேச பேச்சுத்தொடர் மறந்துபோகிறது. வெகு கெட்டிக்காரத்தனமாய்ச் சமாளித்துக் கொள்கிறேன். காது 100-க்கு 40 சதவிகிதம் (செவிடு) சப்தம் கேட்பதில்லை. கண்கள் கண்ணாடி போட்டாலும் 10 அல்லது 20 வரி (அதுவும் பைக்கா 12 பாயிண்ட் எழுத்து)க்கு மேல் படிக்க முடிவதில்லை. கண்களில் கண்ணீர் வந்து மறைத்துவிடுகிறது. நடை 10 எட்டு, அதாவது 15 அடி தூரத்துக்குமேல் நடந்தால் நெஞ்சுத் துடிப்பு அதிகமாகிக் களைப்பு வந்துவிடுகிறது. அதுவும் துணைப் பிடிப்பு இல்லாமல் நடக்கமுடிவதில்லை. ஹெர்ணியா என்னும் நோய் (குடல் வாதம்) இருப்பதில் உட்கார்ந்திருக்கும்போது ஒரு இளநீர் அளவு பரிமாணம் குடல் இறங்கி சிறுவலி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நின்றால் ஃபுட்பால் (உதைபந்து) அளவுக்குப் பெருகி பெருவலி கொடுக்கிறது.

இந்தக் காரணங்களால் நானே என்னை 'கண்டெம்டு மேன்'—வேலைக்குப் பயன்பட முடியாத தள்ளப்பட்ட மனிதன்—என்றே கருதி வாழ்ந்து வருகிறேன். இவ்வளவு குறைபாடுகளும் இயலாமையும் இருந்தும் மக்கள் என்னிடம் வைத்து இருக்கும் அன்பும், மரியாதையும் ஜன்னிவந்தவனுக்கு ஏற்படும் பலம், சகிப்புத் தன்மைபோல் என் நிலை அறியாத அளவுக்கு வேலைகளையும், பொறுப்புகளையும் நானாக மேற்போட்டுக்கொண்டு தொந்தரவடைந்து வருகிறேன். இந்த, இப்படிப்பட்ட தொந்தரவுகளால் நான் அவஸ்தைப் படாமல் இருக்கத்தக்க வண்ணம், நோய் தெரியாமல் இருப்பதற்கு டாக்டர்கள் குளோரஃபாரம் (மயக்க மருந்து) கொடுப்பதுபோல், பணம், பண்டம் தாராளமாய்க் கொடுத்து உற்சாகப்படுத்தி விடுகிறார்கள்.

ஆதலாலேயே, உடல் நிலையைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் தொண்டாற்றிவர முடிகிறது என்று சொல்லுவேன். நல்ல அளவுக்கு என் தகுதிக்கு ஏற்பப் பணம் தேடிவிட்டேன். அதுவும் யாரையும் ஒரு காசு அளவுகூட தயவாய்க் கேட்காமல் வேண்டுகோள் விடுவதும், கட்டளை இடுவதும், ரேட் (விகிதம்) ஏற்படுத்துவதும் மக்கள் தாங்களாகவே மேல்விழுந்து கொடுக்க வருவதுமான தன்மையிலேயே இயக்கத்திற்குப் பணம் சேர முடிந்தது. அதைக்கொண்டு இயக்க நடப்புக்கும், பிரச்சாரத்திற்கும், காரியாலயக் கட்டடங்களும், இடமும், வயலும், தோப்பும், காலி மனைகளும், வீடுகளும், மண்டபங்களும், பள்ளிகளும், பள்ளிப் பிள்ளைகளுக்குப் பயன்படும் தங்குமிடங்களும், செலவுக்கு வருவாய் வரத்தக்க வீடுகளும் ஒரு அளவு ஏற்பாடு செய்துமிருக்கிறேன்.

இவைகளையெல்லாம்விட குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று என்னவென்றால், திருச்சியில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இரண்டு ஆண்டுகட்கு முன் முயற்சித்து, சென்ற ஆண்டில் பெண்கள் கல்லூரியாக ஏற்படுத்த அரசாங்கத்தில், யுனிவர்சிட்டியில் அனுமதி பெற்றுச் செயலில் இறங்கும்போது அதற்கு மேலும் கட்டடம், நில ஆர்ச்சிதம் முதலிய காரியங்களும், துவக்கியதில் அதிகச் செலவு மாத்திரமல்லாமல் பல தொந்தரவுகளும் ஏற்படுவதாயிருந்தது பற்றிச் சிந்தித்து, செயல்பட இருக்கும்போது இதை அறிந்த திருச்சித் தோழர்கள் பலர் திருச்சிக்கு இப்போது அவசரமாய் வேண்டியிருப்பது ஆண்கள் கல்லூரி என்று பல காரணங்களைச் சொல்லி முறையிட்டார்கள். எனது 10, 15 வருஷ திருச்சி வாசத்தில் நான் கண்ட அனுபவம் அம் முறையீடுகளை உண்மைப்படுத்தியதால், பெண்கள் கல்லூரி விஷயம் பின்னால் கவனிக்கலாம்; இப்போது அவசரமாக ஆண்கள் கல்லூரி விஷயம் கவனிக்க வேண்டியதாகும் என்பதாக எனக்குத் தோன்றியதால் அரசாங்கக் கல்வி அதிகாரியை அணுகி இதற்கு யோசனை கேட்டதில் அவர்கள் 'அங்கு ஏற்கனவே மூன்று காலேஜ்கள் ஆண்களுக்காக இருக்கின்றன. இரண்டு காலேஜ்கள் பெண்களுக்காக இருக்கின்றன. மேற்கொண்டு இப்போது அவசரமில்லை என்று சர்க்கார் நினைக்கிறது' என்று சொல்லிவிட்டார்கள்.

பிறகு மேலும் அவர்களை வேண்டிக்கொண்டதன்மீது 5 இலட்சம் ரூபாய் பொருளுதவி செய்தால், அரசாங்கம் கவனிக்கும் என்று சொல்லிவிட்டார்கள். நாம் சொந்தத்தில் வைப்பதானால், 50 ஏக்கர் இடமும், 4, 5 இலட்ச ரூபாய் செலவிட வேண்டியதான கட்டடமும், 2, 3 இலட்ச ரூபாய்க்கு மேலாக தளவாடச் சாமான்கள், இவை தவிர காலேஜ் ஏற்பட்ட பிறகு, 2, 3 ஆண்டுகளுக்கு மாதத்துக்கு ரூ. 2000, 3000 சிப்பந்திகள் செலவும் செய்ய வேண்டிவரும் என்று தெரிய வந்ததால், அரசாங்க விருப்பப்படி அவர்கள் கேட்கும் தொகையைத் தருவதாக ஒப்புக்கொண்டு தொகையும் செலுத்தப்பட்டாய் விட்டது. அனேகமாக அடுத்த ஆண்டில் காலேஜ் துவக்கப்படலாம்.

மற்றபடி, நமது இயக்கப் பிரச்சார வேலைகள் எப்போதும்போல் நடந்து வந்தாலும், சில விஷயங்களில், அதாவது நம் மக்கள் எண்ணிக்கைப்படி அரசாங்கப் பள்ளிகளிலும், உத்தியோகங்களிலும், பதவிகளிலும் விகிதாசார உரிமை பெற சில கிளர்ச்சிகள் நடத்தப் படவேண்டியது நமது சென்ற ஆண்டினுடையவும், வரும் ஆண்டினுடையவும் திட்டமாக இருந்தாலும், அரசாங்கத்தால் மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு நாம் ஒரு அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டியது அவசியமாகத் தோன்றுகிறபடியால், மற்ற கிளர்ச்சிகளைச் சிறிது தள்ளிப் போடவேண்டியதாகிவிட்டதால், இப்போது அது விஷயமாய் (வகுப்புவாரி உரிமை விஷயமாய்) பிரச்சார அளவில் இருக்கவேண்டியதாகிவிட்டது.

நமது அரசாங்கத்தின் சமதர்ம (சோஷ்யலிச) திட்டம் எளிதான திட்டம் அல்ல. அரசாங்கத்திற்கு மிகவும் சிரமமும், தொல்லை தரத்தக்கதுமான திட்டமாகும். நம் நாட்டில் பாமரர்கள் பகுத்தறிவற்றவர்களாக இருப்பதாலும், ஆதிக்கத்தில் இருந்துவரும் பார்ப்பனரும், செல்வவான்களும் எந்தக் கேடான காரியமும் செய்யத்தக்க அளவுக்குத் துணிவும், வசதியும் உடையவர்களாக இருப்பதாலும் இவர்கள் ஆதரவால் காலிகளும், முஸ்லிம்களும் பொறுப்பற்ற தன்மையில் அரசாங்கத்திற்கு எதிரிகளாய் இருப்பதாலும், அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு மிகமிகத் தேவைப்படுகிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அரசாங்கத்தின் சோஷ்யலிசத் திட்டம் நல்ல அளவுக்கு நிறைவேறும்படி செய்வோமானால், நமது திட்டங்கள் ஒரு நல்ல அளவுக்கு நிறைவேற வாய்ப்பு இருக்கிறது என்பது என் கருத்தாகும்.

இப்போது அரசாங்கக் கல்வித் திட்டத்தினால் மக்களின் பாமரத்தன்மை ஒழிந்து வரும் என்பதில் ஆட்சேபணை இல்லை. இந்த நிலை சாதி ஒழிப்புக்கு நல்ல ஆதரவான நிலையாகிவிடும்.

பொருளாதார பேதம் ஒழியவேண்டியது அவசியமேயானாலும், முதலில் கவனம் செலுத்தவேண்டியது சாதி ஒழிப்பு வேலையே ஆனதனால் அந்தக் காரியத்திற்கு அரசாங்கத்திற்கு நிபந்தனை அற்ற ஆதரவளிக்க வேண்டியவர்களாகிறோம்.

பொருளாதார பேதம் பெரிதும் உலகமெங்கிலும் இருந்துவரும் பேதம் என்பதோடு அதை அவ்வளவு எளிதில் ஒழித்துவிடுவது என்பது மிக்க சிரமத்தைத் தரத் தக்கதாகும். ஏனெனில், ஆட்சி ஜனநாயகமானாலும், ஆட்சியாளர்கள் சாதி ஆணவக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதோடு, பொருளாதார உணர்ச்சி கொண்டவர்களாகவும் இருந்து வருகிறார்கள். பொதுவாகச் சொல்லுவதானால், நமது நாட்டு ஆட்சியாளர் கட்சியான காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கத்தை விடப் பணக்காரர்கள் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. மந்திரிமார்கள் பெரிதும் செல்வவான்களும், செல்வத்தைச் சேர்க்கவேண்டும் என்ற பேராசை உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அதோடு, செல்வவான்கள் ஆட்சியில் நல்ல அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர்களாகவும், தங்கள் செல்வ விருத்தியை முன்னிட்டே காங்கிரசை ஆதரிப்பவர்களாகவும் இருப்பதால், ஒரேசமயத்தில் இருவர் எதிர்ப்பையும் சமாளிப்பது அரசாங்கத்திற்குப் பெருந் தொல்லையாக இருக்கும்.

ஆதலால், நமது மேற்கண்ட இரு திட்டங்களும் இன்று அரசியல் திட்டங்களாக இருக்கும் நேரத்தில், நாம் மற்ற நமது திட்டங்கள் விஷயமாய்ப் பிரச்சாரத்திலும், மாநாடு கூட்டுவதிலும் லட்சியமாக இருக்கவேண்டியதுடன், கிளர்ச்சிக்காரர்களாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படக்கூடாது என்பது எனது கருத்து.

நமது இயக்கத் தோழர்கள் இன்று எந்தக் கிளர்ச்சிக்கும் தயாராயிருக்கிறார்கள் என்பதும், கிளர்ச்சி துவக்காத காரணத்தாலேயே என்மீது பலருக்குச் சலிப்பு என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், நமக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதும், ஆட்சியின் சோஷ்யலிச திட்டநடப்புக்கு எதிராக ஏற்படும் சமுதாய விரோதிகளின் கிளர்ச்சிகளையும் தொல்லைகளையும் முறியடிப்பதுதான் இன்று முக்கியமான காரியமாக இருக்கவேண்டும். காங்கிரசுக்கு நம்மால் கூடியவரை பலம் ஏற்படும்படி செய்யவேண்டும்.

தமிழர்களாகிய நமக்குப் பெரிதும் அவரவர் சுயநலம்தான் முக்கியமே தவிர இனநலம் அலட்சியமாய்க் கருதக்கூடியதாக இருந்து வருகிறது. ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், தமிழன் என்ற உரிமையால் பதவிக்கு வந்து, ஓட்டுக் கொடுக்கும் தமிழர்களில் 100-க்கு 90 பேர் அரசாங்க எதிரிகளாகவும், எதிரிகளின் கையாட்களாகவும் இருக்கிறார்கள். இன்று அரசாங்கத்துக்குத் தமிழர்களில் படித்தவன் ஆதரவும் இல்லை; பணக்காரன் ஆதரவும் இல்லை; பதவிபெற்று ஓய்வெடுத்தவர்கள் ஆதரவுமில்லை. இதுமாத்திரமல்லாமல், அரசாங்கப் பெரும்பதவி, சிறுபதவியில் இருப்பவர்கள் ஆதரவும் இல்லை. நாம் அப்படிப் பிறவியாளர்களாக ஆகிவிட்டோம்.

ஆனதனால், நம் தலையில் விழுந்திருக்கும் பொறுப்பு மகத்தானது. இன்னும் சொல்லவேண்டுமானால், அரசாங்கம் நம்மை ஒரு நல்ல அளவுக்கு நம்பித்தான் இவ்வளவு தீவிர திட்டத்தில் இறங்கி இருப்பதாக உணருகிறேன். இப்போது நாம் மேற்சொன்னபடி நிபந்தனை அற்ற ஆதரவாளர்களாக இல்லையானால், நாமும் மேற்கண்ட தமிழர் துரோகிகள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆகிவிடுவோம்.

இன்று தமிழர் சமுதாயத்திற்கு மாத்திரமல்லாமல், ஏழைஎளியவர்கள் சமுதாயத்திற்கும் இரட்சகர் என்கின்ற முறையில் காமராசர் இருந்து வருகிறார். அவர் இல்லாவிட்டால், உள்ளது ஒன்றுமே இல்லை. இருக்கவேண்டியது ஒன்றுமே இல்லை என்பது மாத்திரமல்லாமல், எல்லாக் கேடுகளும் நம்மைச் சுற்றிக்கொண்டு இருக்கும்.

எனவே, காமராசரை உற்சாகப்படுத்தும் அளவுக்கு நமது ஆதரிப்பு ஆட்சிக்கும் காங்கிரசுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும்; இன்றியமையாத அவசியமாகும்.

இதுவரை நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதிவிடாதீர்கள். அரசியல் ரீதியில் இன்று காங்கிரசுக்கு, காமராசருக்கு எதிர்ப்பு இல்லாமல் ஆக்கியது, நமது இயக்கம்தான். பார்ப்பான் குள்ளநரி ஆகிவிட்டான். முஸ்லிம் லீக் இன்று செல்லாக் காசு ஆகிவிட்டது. 'கண்ணீர்த் துளி' நாட்டுக்கு நியூசென்சாகி விட்டது. இது யாரால்? இதற்குக் காங்கிரஸ் என்ன பாடுபட்டது? ஆதலால், நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதிவிடக்கூடாது.

ஆகவே, நாம் ஒன்றும் செய்யவில்லை என்றோ, நமக்குத் திட்டமில்லை என்றோ, கருதாமல், சலிப்படையாமல் நமது தோழர்கள் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய ஒழிப்புக் காரியங்களைத் திட்டமாகக் கொண்டு பிரச்சாரம் செய்வது, மாநாடு கூட்டுவது ஆகிய காரியங்களில் ஈடுபட்டுத் தீவிரமாகக் காரியங்கள் செய்யவேண்டிக்கொள்ளுகின்றேன்.

கழக ஸ்தாபனங்கள், மாநாடுகள் கூட்டவேண்டும். காங்கிரஸ்காரர்களை அவர்கள் கலந்துகொள்ள ஆசைப்படும் அளவுக்கு அழைக்கலாம். நாமும் அவர்கள் விரும்பும் அளவுக்குக் கலந்துகொள்ளலாம். நம் தனிமையை எப்போதும் மறந்துவிடாமல் தொண்டாற்றலாம். இதுதான் என் 86-ம் ஆண்டு வேண்டுகோள் செய்தியாகும்.

[பிறந்த நாள் விழா மலர் 86—17-9-1964]

4. எனது தொண்டு

நான் 1925-ஆம் ஆண்டில் காங்கிரசிலிருந்து விலகியபின், அரசியல் என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பார்ப்பனரால் நடத்தப்படும் போராட்டமேயொழிய, பொதுஜன நன்மைக்கேற்ற ஆட்சிமுறை வகுப்பதற்கோ அல்லது வேறு எந்தவிதமான பொதுநல நன்மைக்கேற்ற லட்சியத்தைக் கொண்டதோ அல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்து, அப்படிப்பட்ட பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதையும், எந்தக் காரணம் கொண்டும் நமது நாட்டில் இனியும் பார்ப்பன ஆதிக்கம் ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது என்பதையும் கருதி, பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஊற்றாக இருந்துவரும் கடவுள், மதம், சாதித் தத்துவங்களையும், இந்தத் தத்துவத்திற்கு இடமாகவிருக்கிற மூடநம்பிக்கையையும், மூடநம்பிக்கையை அரசியல், கடவுள், மதம், சாத்திரம், தர்மம் ஆகியவற்றின் பேரால் வளர்க்கும் பார்ப்பன சமுதாயத்தையும் ஒழிப்பது என்ற கொள்கை மீது 'சுயமரியாதை இயக்கம்' என்பதாக ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்து, நானே தோற்றுவித்தவனாகவும், தொண்டாற்றுபவனாகவுமிருந்து பல தோழர்களின் ஆதரவுபெற்று அதை நடத்திவந்தேன். இந்த நிலையில் காங்கிரசானது, அரசியல் ஆதிக்கத்தில் பிரவேசிப்பதில்லை என்றும், சமுதாயத் தொண்டேதான் காங்கிரசின் பிரதான கொள்கையென்றும் சொல்லி, நிர்மாணத் திட்டம் என்னும் பேரால் பொய் நடிப்பு நடித்து மக்களை ஏமாற்றிவந்த (காங்கிரஸ்) தனது வேடத்தை மாற்றிக்கொண்டு, அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றத் துணிந்து, வெளிப்படையாகவே அரசியலில் புகுந்து ஆட்சியைக் கைப்பற்ற முன்வந்து விட்டதையும் உணர்ந்தேன்.

பிறகு எனதுநிலை மேலே குறிப்பிட்டபடி கடவுள், மதம், சாதி, தர்ம, சாத்திர சம்பிரதாய, பார்ப்பன சமுதாய ஒழிப்பு வேலைகளுடன், அரசியலில் பார்ப்பனர் நுழையாத படியும், ஆதிக்கம் பெறாமல் இருக்கும்படியும் தொண்டாற்றவேண்டிய அவசியத்திற்கு ஆளாக நேரிட்டுவிட்டது. அதாவது, இவ்வளவு துறையிலும் பாடுபடவேண்டியதே எனக்குச் சமுதாயத்தொண்டாக ஆகிவிட்டது. இதன் பயனாய் எனது வேலை இரட்டித்து விட்டதுடன், எதிர் நீச்சல்போல் மிகமிகக் கஷ்டமான காரியமுமாகிவிட்டது. எப்படி எனில், நான் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய, சாதித் துறையில் பாடுபட்டால் எதிரிகள் (பார்ப்பனர்) அரசியல் துறையில் முன்னேறிவிடுகிறார்கள். அரசியல் துறையில் பாடுபட்டால் எதிரிகள் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய, சாதித் துறையில் முன்னேறி விடுகிறார்கள். ஆதலால், இரு துறைகளில் மூடநம்பிக்கையுள்ள பாமர மக்கள் இடையில் வேலை செய்வதென்பது எனக்கு மேற் சொன்னபடி மிகமிகக் கஷ்டமாகவும், காட்டு வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடும் வேலைபோலும் திணற வேண்டியதாகிவிட்டது.

இதற்கிடையில் எனக்கேற்பட்ட மற்றொரு மாபெரும் தொல்லையென்னவென்றால், என் தொண்டுக்கு ஆதரவாகச் சேர்த்து எடுத்து அணைத்துப் பக்குவப் படுத்திவந்த தோழர்கள் எல்லாம் 100-க்கு 100 பேரும் பக்குவம் அடைந்தவுடன், விளம்பரம் பெற்றுப் பொதுமக்கள் மதிப்புக்கு ஆளானவுடன் அத்தனைபேரும் எதிரிக்குக் கையாள்களாகவே (எதிரிகளால் சுவாதீனம் செய்யப்பட்டு) எதிரிகளுக்குப் பலவழிகளிலும் பயன்படுபவர்களாகி விட்டதோடு, எனக்கும் எனது தொண்டிற்கும் எதிரிகளாக, முட்டுக்கட்டைகளாகப் பலர் விளங்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். இதற்குக் காரணம் (பிரகலாதன், விபீஷணன் போல்) நமது 'சாதிப் பிறவி'த் தன்மைதான் என்று சொல்ல வேண்டியதைத் தவிர, எனது 40 வருட பொதுத்தொண்டின் அனுபவத்தில் வேறொன்றும் சொல்லமுடியவில்லை.

இந்த நிலையில், நான் 40 ஆண்டுகளாகத் தொண்டாற்றிவந்து இன்றுள்ள நிலையில் எனது தொண்டின் பயனும், நிலையும் இருக்கிறதென்றால் என்னைப்பற்றி அறிஞர்கள்தான் விலைமதிக்க வேண்டும்.

என்னைவிட்டு விலகி எதிரிகளானவர்கள், எதிரிகளின் கையாள்களானவர்கள்—ஒழுக்கத்தில் என்மீது குற்றமிருந்து என் நடத்தையில் கோளாறு இருந்து விலகி இருப்பார்களே

யானால் அதற்காக நான் வெட்கப்படவேண்டியதுதான் நியாயமாகும். ஆனால், விலகிய வர்கள் அத்தனைபேரும் எதிரிகளோடு சேர்ந்தார்கள் என்பது மாத்திரமல்லாமல், எந்தக் கொள்கைக்காக என்னுடன் இருப்பதாக நடித்தார்களோ அதை அடியோடு விட்டுவிட்டு, நேர்எதிரிடையான கொள்கையை மேற்கொண்டும், அதற்கு ஆக்கமளித்தும் எனக்கு முட்டுக் கட்டை போட்டு வருவதுதான் நமது சமுதாயத்திற்கென்றே ஏற்பட்ட கெட்ட வாய்ப்பாகும் என்று மறுபடியும் சொல்லவேண்டி இருக்கிறது. இந்த நிலை ஒரு புறமிருக்க,

இந்தியாவிற்குச் சமீபத்தில் வந்துபோன ஒரு ரஷ்யப் பிரமுகரை ஒரு பார்ப்பனர் 'இந்தியாவிற்கு யார் வந்தாலும் சங்கராச்சாரியாரைப் பார்த்துவிட்டுப் போவதுதான் முக்கிய காரியம்' என்று சொல்லி, சங்கராச்சாரியாரிடம் அழைத்துப் போனாராம்! அந்த ரஷ்யர் சங்கராச்சாரியாரிடம் பல விஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டுக் கடைசியாக, 'உங்கள் நாட்டில் உங்கள் மத சம்பிரதாயத்திற்கும் உங்கள் சம்பிரதாயத்திற்கும் விரோதமாக பெரியார் ஒரு இயக்கம் நடத்துகிறாரே, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டாராம். அதற்குச் சங்கராச்சாரியார் 'ஆமாம். அப்படி ஒரு இயக்கம் நீண்ட நாட்களாக நடந்து வருகிறது என்றாலும் அது இன்றைக்குப் பதினேழு வருடங்களுக்கு முன் வரையில் நாங்கள் மிகக் கவலை கொள்ளவேண்டிய அளவுக்கு நடந்தது. ஆனால், இந்தப் பதினேழு வருடமாக (1948-ல் இருந்து) எங்களுக்கு அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லாதநிலை ஏற்பட்டுவிட்டது. அதன் பாட்டுக்கு அது நடைபெறுகிறது என்றாலும் இன்று அதனால் எங்களுக்கு எந்தவிதத் தொந்தரவும் இல்லை' என்று சொன்னாராம்.

'இப்படி அவர் சொல்லக் காரணம் என்ன?' என்று அந்த ரஷ்யர் என்னிடம் வந்து கேட்டார். அவர் இப்படி என்னைக் கேட்கும்போது ஒரு பார்ப்பனரும் கூட இருந்தார். அதற்கு நான் சொன்ன பதில்: 'அது ஒரு நல்ல அளவுக்கு உண்மைதான். எப்படியென்றால், நம் நாட்டிற்குச் 'சுதந்திரம்' வந்து 17 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அது பார்ப்பனருக்கு வந்த சுதந்திரமேயாகும் என்பதோடு, அதன் பயனாய் நம்மிலிருந்து விளம்பரம் பெற்ற, மக்களிடம் செல்வாக்குப்பெற்ற ஒரு கூட்டம் பார்ப்பனருக்கு (நல்ல நிபந்தனையற்ற) அடிமைகளாகக் கிடைத்துவிட்டது. இந்த இரண்டின் ஆதரவில், பார்ப்பனர்கள் இழந்ததை யெல்லாம் பெற்றுக்கொண்டதோடு மேலேறவும் அவர்களுக்கு நல்லவசதி ஏற்பட்டுவிட்டது.

இதுமாத்திரமல்லாமல், நானும் இப்படிப்பட்ட பார்ப்பன சுதந்திரத்தை எதிர்க்கும் வேலையை விட்டு விட்டு, இராஜாஜியை ஆட்சியை விட்டு வெளியேற்றி விட்டோம் என்ற ஆணவத்தாலும், காமராசரிடத்தில் வைத்த அளவுக்கு மீறிய நம்பிக்கையாலும் 'சுதந்திரத்தை', காங்கிரசை, அரசாங்கத்தை ஆதரிக்கும் பணியில் தீவிரமாக நிபந்தனை யற்றுப் பாடுபட்டு வந்ததாலும், காமராசர் ஆட்சியை விட்டுப்போய் விட்டதாலும், அதற்குப் பிறகு 'அசல் பார்ப்பனீய' ஆட்சியே தங்குதடையின்றி நடந்து வருவதாலும் இதன் பயனாய்ச் சமுதாயத் துறையிலும், மதத் துறையிலும், உத்தியோகத் துறையிலும், கல்வித் துறையிலும் யாதொரு குறைவு மில்லாமல் மேலே போகும்படியான நிலையில் அவர்கள் (பார்ப்பனர்கள்) நிலை இருப்பதாலும் சங்கராச்சாரியார் அவ்விதம் கூறி இருக்கிறார். மற்றும், இன்றைய ஆட்சியின் பயனாய் நம் சமுதாயத்திற்கு எவ்வளவு கேடும் இழிவும் ஏற்பட்டாலும் அதை மனதார வெளியில் சொல்லி அழுது திருப்தி அடையக்கூட வாய்ப்பில்லாத நிலையில், நான் காங்கிரசை ஆதரித்துத் தீரவேண்டியவனாய் இருக்கிறேன். இது பார்ப்பனர்களுக்கு இலாபகரமான விஷயமாகி விட்டது' என்று பதில் சொன்னேன். ரஷ்யப் பிரமுகர் இதுகேட்டுப் புன்சிரிப்புடன் பரிதாபப்பட்டார்.

நிற்க, இன்றைய 'சுதந்திர' ஆட்சி ஒரு மதப் பாதுகாப்பு ஆட்சியாகவே ஆட்சி நடத்துகிறது. இதைப் பயனளிக்கும்படியான அளவுக்குக் கிளர்ச்சி செய்யவோ, கண்டிக்கவோ, தக்கபடி எதிர்ப் பிரச்சாரம் செய்யவோகூட தொண்டாற்ற முடியவில்லை. பத்திரிகைகள் யாவும் கூண்டோடு பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டன. ரேடியோ, சினிமா, ஜோசியம், புராணம், உற்சவம், காலட்சேபம் ஆகியவைகளையே

விளம்பரம் செய்யும் சாதனங்களாக, ஒன்றுகூட விலக்கில்லாமல், எல்லாப் பத்திரிகைகளும் விளங்குகின்றன. இராஷ்டிரபதி, கவர்னர் உட்பட எல்லா மந்திரிகளும் கோவில், பக்தி பிரச்சாரம் செய்துவருகின்றார்கள்! அதிகாரிகள் நியமனம் பெறவும், தங்கள் குற்றங்களை மறைத்துக்கொள்ளவும், பிரமோஷன்கள் பெறவும் மந்திரிகளையேதான் பின்பற்றுகிறார்கள். காங்கிரசிலுள்ள மெம்பர்கள், காங்கிரஸ்காரர்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள் தங்களின் உண்மை நிலையையும், நிறத்தையும் மறைத்துக்கொள்ள மந்திரிகளைப் பின்பற்றுவதுடன் பக்தகோடிகளாக விளங்குகிறார்கள். சமுதாய நலம் காரணமாகவே பார்ப்பனர்கள் கூண்டோடு காங்கிரசை ஒழித்துக்கட்ட, தோல்வியடையச்செய்யப் பாடுபட்டாலும், அப் பார்ப்பன சமுதாய நலத்திற்கேற்ப எல்லாக் காரியங்களையும் நமது ஆட்சி மூலம் நிறைவேற்றிக்கொள்ள மந்திரிகளும், அதிகாரிகளும், காங்கிரஸ்காரர்களும் தெரிந்தோ, தெரியாமலோ அவர்களுக்கு எல்லாவித உதவியான காரியங்களையும் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் எனது தொண்டு இப்படிப்பட்ட காங்கிரசை—மந்திரிகளை—அதிகாரிகளை 'பாதுகாப்பதற்கு' என்பதல்லாமல் வேறு எதற்குப் பயன்படக்கூடுமென்பது எனக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் எனக்குள்ள ஆறுதல் என்னவென்றால், இவ்வளவு எதிர்ப்பிலும், ஏமாற்றத்திலும் எனது தொண்டுக்குச் சாதனமாகவிருக்கும் சுயமரியாதை இயக்கத்திலும், திராவிடர்கழகத்திலும் சுயநலமற்று தன்னலத் தியாகத்துடன் எவ்விதப் பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராமல், ஒழுக்கம், நாணயம் என்பதில் இருந்து ஒருசிறிதும் வழுவாமல், தமிழ்நாட்டில் சென்னை முதல் குமரிவரை ஒவ்வொரு குறிப்பிட்ட இடங்களிலும் ஆர்வமும் முயற்சியும் உள்ள தோழர்கள் நல்ல அளவுக்கு இருந்து எனக்கு ஆதரவளித்து உற்சாகமூட்டுவதுடன், நெறி தவறாமல், படிந்து தொண்டாற்றுவதுதான் எனக்கு உயிரூட்டி, சலிப்படையாமல் உழைக்கச் செய்து வருகிறது. மேலும், நமது இயக்கத்தால், உழைப்பால் மனித சமுதாயத்தின் நடத்தையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு விடவில்லை என்றாலும் பெருவாரியான மக்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பதை உணருகிறேன். மற்றும், நம் எதிரிகளான பார்ப்பனர் 'எங்கள் நிலைமை இப்போது சீரடைந்து விட்டது. இனிப் பயப்படத் தேவை இல்லை' என்று சொன்னாலும் அது வாயளவில் கொள்ளும் தைரியமே அல்லாமல் மன அளவில் அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் நடத்தையில், முயற்சியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இன்று என்றுமில்லாத அளவுக்குக் கோவில் திருப்பணி, கோவில் உற்சவம், கோவில் கும்பாபிஷேகம், புதுக்கோவில் உண்டாக்குதல், புராணப் பிரச்சாரம் செய்தல்; கவர்னர், மந்திரி முதலியவர்களை ஸ்தலயாத்திரை செய்யச் செய்தல்; இவைகளைப் பற்றிய விளம்பரங்களைப் பெரிய அளவில் செய்தல்; பத்திரிகைகளில் எல்லாம் கடவுள் பிரச்சாரம், கடவுள் கதைப் பிரச்சாரம், மதப் பிரச்சாரம், சாஸ்திர தர்மப் பிரச்சாரம், பஜனை, காலட்சேபம் செய்தல் முதலிய காரியங்களில் எப்போதையும்விட அதிகமாக—மிகமிக அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலும், இன்று மக்களின் மூடநம்பிக்கையால், முட்டாள்தனத்தால் சமுதாயத்தில் மிகமிகச் சிறுபான்மையராகிய 'பெரிய சாதியாரும்' பணக்காரர்களும் 'பெரிய படிப்புக்காரர்' என்பவர்களுமே சூழ்ச்சியால் பெரிதும் மந்திரிகளாக இருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு ஓட்டுச் செய்பவர்கள் இவர்களைப்போல் 30 பங்கு அதிகமான சமுதாயத்தில் கீழ்நிலையிலிருக்கும் மக்களாக இருக்கிறார்கள். ஆனதால், மக்களை மூடநம்பிக்கையிலிருந்து ஈடேறாமல் செய்து, மேலும் மேலும் மடையர்களாக ஆக்கி, இன்றுள்ள நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்பதற்காகவே செய்கிறார்கள் என்றால், மேல் நிலையிலுள்ள சிறுபான்மையோருக்குப் பயம் வந்து விட்டது; பயத்தால் துடிக்கிறார்கள் என்றுதானே ஏற்படுகிறது.

நாட்டில் படிக்காத—நல்ல படிப்பு வாசனை அற்ற மக்கள் 100-க்கு 80 பேர் இருக்கிறார்கள். அதுபோலவே உழைப்பாளி, ஏழை மக்கள் 100-க்கு 80 பேர் இருக்கிறார்கள்.

சமுதாயத்தில் கீழ்சாதி மக்கள் எனப்படுவோர் 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் மேல்சாதிக்காரர்களும், பணக்காரர்களும், படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் ஆட்சியிலும், ஆதிக்கத்திலும் இருக்கிறார்கள் என்றால் இந்த நிலையை ஜனநாயக சுதந்திரமென்றால், மேலே குறிப்பிட்டபடி இதற்கு மக்களின் முட்டாள் தனமும் மூடநம்பிக்கையுமல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லமுடியும்? ஆதலால்தான், மக்கள் அறிவு பெற்றுச் சுயமரியாதைக்காரர்களாகி விட்டால் தங்களின் இன்றைய நிலை என்ன ஆவது என்கின்ற பயம் ஆதிக்கக்காரர்களுக்கு ஏற்படும் அளவுக்காவது நமது தொண்டு பயன்பட்டிருக்கிறது என்று சொல்லித்தானாக வேண்டும். என்றாலும், செய்ய வேண்டிய அளவுக்கு நாம் செய்யவேண்டியதைச் செய்யவில்லை. இமயமலை பனிக்கட்டியால் குளிரில் அவஸ்தைப்படுகிறது என்று கருதி சால்வையை மலைக்குப் போர்த்து கிறவனைப்போல், நாம் காங்கிரசைக் 'காப்பாற்றுகிற' வேலையில் ஈடுபட்டு, சமயத் துறையில் பெரிய அளவுக்கு ஏற்பட்டிருக்கவேண்டிய நன்மையை—மாறுதலை இழந்து விட்டோம் என்பதை நாம் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

நாம் காங்கிரசைக் 'காப்பாற்றும்' தொண்டில் இறங்காமலிருந்து, இந்த 10, 12 வருடத்தில் காங்கிரசை எதிர்த்து இரண்டு மூன்று முறை பதினாயிரக் கணக்கில் சிறை சென்றிருந்தால் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ' முறையில் கண்டிப்பாய் நல்ல அளவிற்கு வெற்றி பெற்றிருப்போம். கல்வித் துறையில் மேலும் முன்னேறி இருப்போம். சமுதாயத் துறையில் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும்படியாகவும், முழு ஆலயப் பிரவேசம் முதலிய உரிமை பெறவுமான பல உரிமைகள் பெற்றிருப்போம். நீதித் துறையில் வக்கீல்களின் தொல்லையை நல்ல அளவுக்குக் குறைத்துக் கொண்டிருப்போம். இந்தக் காரியங்கள் ஈடேறாமல் இருப்பதற்குக் காரணம், நமது கவனத்தை வேறு வழியில் திருப்பிக்கொண்டது பெரும் காரணமாகும். இப்போதும் நாம் இனியும் ஒன்றரையாண்டு காலத்திற்கு—18 மாதங்களுக்கு இந்தப் போக்கிலேயே இருக்கவேண்டியவர்களாய் இருப்ப தால் அதற்குள் நமது நலம் வெகுதூரம் பாதிக்கப்பட்டு, எதிரிகள் மிகவும் வளர்ந்து விடுவார் களே என்று அச்சப்படவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். நமது தொண்டுக்காக நமக்கு—நமது இலட்சியத்திற்குச் செய்யாவிட்டாலும், நன்றி காட்டாவிட்டாலும் நமது இலட்சியத்திற்குக் கேடுபயக்கும் பணியையாவது காங்கிரஸ் ஆட்சி செய்யாமல் இருக்கலாம். ஆனால், அப்படிக்கல்லாமல் நம்மால் காங்கிரசுக்கு—ஆட்சிக்கு 'ஒரு பயனுமே ஏற்பட வில்லை; தொல்லைகள்தாம் ஏற்படுகிறது' என்று காங்கிரஸ் கட்சி கருதுகிறபோது, நமது நிவர்த்தி இல்லாத முட்டாள்தனத்தைப் பற்றி வெட்கப்பட வேண்டியதைத் தவிர, வேறு என்ன செய்யமுடியும்?

இன்று காங்கிரசுக்கு எதிராக, எப்படியாவது காங்கிரசை—காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக் கட்டுவது என்கின்ற இலட்சியத்தில் பொதுமக்களுக்கும் ஆட்சிக்கும் எவ்வளவோ கொடுமைகளையும், துரோகங்களையும், நாசங்களையும், நட்டத்தையும் கொடுத்துவரும் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த ஆட்சியினால் மரியாதையும் பெருமையும் பெற்றுவருகிறார்கள். பல வசதிகளையும் நடப்புரிமைகளையும் பெற்றுவருகிறார்கள். எனவே, நமது தொண்டு—எனது தொண்டு எதிரிகள் நகைக்கும்படிதான் பலனளித்தது என்று சொல்லி வெட்கப் படுகிறேன்.

ஆகவே, இனி நமது தொண்டு அடுத்துவரும் தேர்தலில் காங்கிரசுக்கு நல்ல வெற்றி கிடைக்கும்படி செய்யவேண்டியது பெருங் கடமையானாலும் அதோடு அதைவிடப் பெருங் கடமையாகக்கொண்டும் தொண்டாற்ற வேண்டியவனாக இருக்கிறேன்—இருக்கிறோம் என்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 87—17-9-1965]

5. எனது விருப்பம்

எனக்கு இன்று (17-9-1966) பராபவ புரட்டாசி 2-ம் தேதி முதல் 88 ஆம் ஆண்டு பிறக்கிறது. நான் பேராசைக்காரனாக இல்லாமல், இயற்கையை ஓரளவுக்காவது உணர்ந்தவனாக இருப்பவனானால் உங்கள் எல்லோரிடமும் முடிவுப் பயணம் சொல்லிக் கொள்ள வேண்டியவனேயாவேன்.

அது மாத்திரமல்லாமல், நான் சிறிதாவது பகுத்தறிவு உடையவனாக இருந்தால் என் வாழ்வில், எனது இலட்சியத்தில் முழுத் திருப்தியடைந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியவனாவேன்.

என் உடலைப் பற்றிய எவ்வித கவலையும் இன்றி, நேர்ந்தபடி நடந்து, கிடைத்ததை எல்லாம் நேர் கூறு இன்றி உண்டு அனுபவித்து வந்த நான் 87 ஆண்டு முடிந்து 88-ம் வயதில் புகுகின்றேன் என்ற அதிசயத்தை நினைத்துத்தான் இனிமேலும் வாழ ஆசைப் படுவது பேராசை என்று குறிப்பிட்டேன்.

அதுபோலவேதான், ஒரு சார்பும் இல்லாதவனாகத் தனித்து எந்த ஒரு ஆதரவும் அற்றவனாகி, என்னையே எண்ணி நின்று, பாமர மக்களுடையவும், படித்தவர்களுடைய வும், பிறவி ஆதிக்கக்காரர்களாகிய பார்ப்பனருடையவும், சர்வ சக்தியுள்ள பத்திரிகைக்காரர் களுடைவும் போதாக் குறைக்கு அரசாங்கத்தாருடையவும் வெறுப்புக்கும், அதிருப்திக்கும், எதிர்ப்புக்கும், விஷமப் பிரச்சாரத்திற்கும், தண்டனை கண்டனைகளுக்கும் ஆளாக இருந்து, எதிர்ப்பையும் போராட்டங்களையும் சூழ்ச்சிகளையும் சமாளித்து, பொது மக்களால் கனவு என்று கருதப்பட்ட எனது இலட்சியங்களை 'இவை கனவு அல்ல, உண்மை நினைவே, காரிய சாத்தியமே' என்று கூறிவந்து, அவை (எனது இலட்சியங்) களின் நடப்புகளையும் நடப்புக்கு ஏற்ற முயற்சிகளையும் நேரில் கண்டு களிக்கிறேன் என்ற கருத்தில்தான் எனது இலட்சியத்தில் என் தகுதிக்கு ஏற்ற அளவில் முழுத் திருப்தி அடைகிறேன் என்று குறிப்பிட்டேன்.

நான் காங்கிரசிலிருந்து விலகிய 1925 ஆம் ஆண்டிலேயே அன்றைய நிலைமையைக் கருதி 'இனி இந்தியாவின் ஆட்சி ஜனநாயகமாகத்தான் இருக்கவேண்டும்' என்று இந்த நாட்டில் முதல் முதல் கருதியவன் நான்தான். அதற்கு ஆதாரம், 1925-ல் நான் துவக்கிய பத்திரிகைக்கு 'குடி அரசு' என்று பெயர் வைத்து காங்கிரசை, காந்தியை, மதத்தை, கடவுளை, சாதியை, பார்ப்பனரை எதிர்ப்பதையே கொள்கையாகக் கொண்டு நடத்தி வந்தேன்.

'ஜனநாயகம்' என்பது வடமொழி. அதற்கு நேரான தமிழ் மொழிதான் 'குடி அரசு' என்பது.

காங்கிரசின் கொள்கையெல்லாம் 1885 முதல் 1945 வரை–பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் குடியேற்ற நாட்டு அந்தஸ்து. இதற்கு காந்தியார் விளக்கம் சொன்னபோது 'மக்கள் இஷ்டப்படி பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி நடைபெறவேண்டும்' என்று கூறினார்.

காங்கிரசில் ஒரு சிறு சாரார் தங்களைத் தீவிரவாதிகளாக மக்கள் கருதவேண்டும் என்கிற கருத்தில் 'இந்தியாவுக்கு வேண்டியது பூரண சுயராஜ்யம்' என்று சிலர் கூறி வந்தார்கள். இவையெல்லாம்கூட 'குடி அரசு' பத்திரிகைப் பிரச்சாரம் ஆரம்பித்த 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான்.

இந்தப் பிரச்சினை அமுலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுபோல் 1950 வாக்கில் 'இந்திய ஆட்சி ஜனநாயக ஆட்சியாக இருக்க வேண்டும்' என்று பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டது.

குடி அரசு ஆட்சியின் கொள்கை சமதர்மமாக இருக்கவேண்டுமென்று 1927, 1928 ஆம் ஆண்டிலேயே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றி 1930 ஆம் ஆண்டு ஈரோடு மாநாட்டில் சமதர்மத்திற்கு விளக்கத் தீர்மானங்களாக:

ஒரு நபர் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலத்திற்குமேல் இருக்கக்கூடாது என்றும், அதுவும் உழுகிறவனுக்குத்தான் நிலம் இருக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. 1934ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா மண்டபத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் சுயமரியாதை இயக்கத் தீர்மானமாக சமதர்மத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன.

அதோடு மாத்திரமல்லாமல், பொது உடைமைக் கொள்கைகளும் பிரச்சாரம் செய்யப் பட்டு வந்திருக்கிறது.

இவற்றை ஏன் இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், மேலே குறிப்பிட்ட எனது 'கனவு'களை நினைவாக, நேரிடையாகச் செயல்படவிருக்கும் நிலையை மக்களுக்குத் தெரிவிக்கவும், இவைகள் எனக்கு எதிர்காலத்தைப்பற்றித் திருப்தி அளிக்கக்கூடியவை அல்லவா என்பதை விளக்குவதற்குமேயாகும்.

மற்றும், பண்டங்கள் உற்பத்தி செய்பவர்களுக்கும், உபயோகிப்போருக்கும் இடையில் எந்த உருவத் தரகர்களும் இருக்கக்கூடாது என்பதும் ஈரோட்டுத் தீர்மான மாகும். அதுவும் நல்ல அளவுக்கு அமுலில் வர இருக்கிறது.

கல்வி விஷயம் எனது இலட்சியத்திற்கு மேலாகக்கூடப் போகும்போல் இருக்கிறது.

அதாவது, S. S. L. C. அன்றைய பத்தாவது வகுப்பு—இன்றைய 'பதினொன்றாவது வகுப்பு வரைதான் சர்க்கார் அளிக்கும் இலவசக் கல்வியாக இருக்கவேண்டும். மற்ற உயர் தரக் கல்வி I. C. S., I. A. S. போல் தேவை உள்ள ஆண்களுக்கு மாத்திரம் சர்க்கார் கல்வி அளித்துவிட்டு, பொது மக்களை (எல்லாச் செலவும்) தங்கள் தங்கள் செலவிலேயே கற்று வரும்படி செய்யவேண்டும். உயர்தரக் கல்விக்கு (காலேஜ் கல்விக்கு) சர்க்கார் ஒரு காசும் செலவு செய்யக்கூடாது' என்று சுயமரியாதை இயக்க மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறேன். ஆனால், அது இன்று எல்லா மக்களுக்கும் எல்லாச் செலவு களும் சர்க்காரே ஏற்று இலவசக் கல்வியாக ஆக்கப்போவதாகத் தெரிகிறது.

எனவே, நான் எனது இலட்சியத்தில் மனக் குறையடைய வேண்டிய நிலையில்லா தவனாக இருக்கிறேன். இதை 4, 5 மாதங்களுக்கு முன் காமராசர் மகிழ்ச்சியோடு வெளி யிட்டார். அதாவது :—

'பெரியாருக்கு இன்று என்ன குறை? அவர் போட்ட பாதையில்தான் இன்று காங்கிரஸ் போய்க்கொண்டிருக்கிறது; அவர் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை' என்பதாகப் பேசினார்.

இனி, எனக்கேதாவது குறை, கவலை இருக்குமானால், அது மக்கள் இடையில் காணப்படும் கவலையற்ற தன்மையும், எதிரிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகும் தன்மையும் பற்றித்தான். இந்த நிலைமை, காரியத்தைக் கெடுக்கும்படியான அவ்வளவு பலம் அடைய என்றுமே முடியாது என்பதோடு, அதிக காலம் நிலைக்கவும் முடியாது. ஆகையால், அதை ஒரு குறையாகக் கருத வேண்டியதில்லை. ஆனால், சண்டித் தொல்லையாகக் கருதுகிறேன். மனிதன் துன்பத்திற்கு ஆளாகாவிட்டாலும் தொல்லைக்கு ஆளாவது சகஜம்தான்.

எனது அருமைத் தோழர்களுக்கு, தேர்தல் முடியும் வரை காங்கிரசை நிபந்தனை யின்றி ஆதரித்து, காங்கிரஸ் முழு வெற்றியடையப் பாடுபட வேண்டுமென்பதுதான் எனது கட்டளை போன்ற விருப்பமாகும். தேர்தலுக்குப் பிறகு பெரிய புரட்சிப் பணி நமக்கு இருக்கிறது. அதற்குள் தோழர்கள் தங்கள் குடும்பப் பணிகளையும் முடித்துக்கொண்டு போர்முனைக்குச் செல்லும் போர்வீரன் போல் தாய், தந்தை, மனைவி, மக்களிடம் பயணம் சொல்லிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

[பிறந்த நாள் விழா மலர் 88—17-9-1966]

6. எனது விண்ணப்பம்

எனக்கு இன்று முதல் 89-வது வயது தொடங்குகிறது. என் வாழ்வு எவ்வளவோ கவலை, தொல்லை துன்பங்களுக்கு ஆட்பட்டதாய் இருந்தாலும், சராசரி மக்கள் வாழ்க்கைக்குக் குறைந்ததாய் இல்லாமல் மேம்பட்ட வாழ்வாகவே நடந்திருக்கிறது.

நான் சிறுவயது முதற்கொண்டே சுதந்திர எண்ணமுடையவனாகவும், நான் சொல்கிறபடி மக்கள் நடக்கவேண்டுமென்கின்ற உணர்ச்சியுள்ளவனாகவுமிருந்தே வாழ்ந்திருக்கிறேனே ஒழிய, மற்றொருவர் சொல்கிறபடி நடக்கவேண்டுமென்கிற எண்ண மற்றவனாகவே இருந்திருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே இருக்கிறேன்.

எனது சரித்திரத்தில் எனக்குத் தலைவனே இருந்ததில்லை.

எனது பத்தாவது வயதில் பிரைமரி நான்காவது வகுப்பு பாஸ் செய்துவிட்டு வியாபாரத் துறையில் எனது தகப்பனார் மண்டிக் கடையில் கையாளாக ஆகிவிட்டேன்.

என் குழந்தைப் பருவத்தில் என் தாயாருக்கு உள்ள இரண்டு குழந்தைகளில் நான் இரண்டாவது குழந்தையாக இருக்கும்போது என்னை என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்கு வளர்த்துக்கொள்ளும்படி ‘தத்து’ போல் கொடுத்துவிட்டார்கள். அதனால் நான் ஒரு அடங்காப் பிடாரியாகவும், தறுதலை என்று சொல்லும்படியாகவும் சில சமயங்களில் ஒருநாள் இரண்டு நாள்கூட வீட்டுக்கு வராமல் ஊர் சுற்றிக்கொண்டு திரிபவனாகவும் இருந்திருக்கிறேன். அப்போது என் வளர்ப்புத் தாய் நான் என்னைப் பெற்ற தாய் வீட்டிற்குப் போயிருப்பேனோ என்று தேடாமலும் கவலைப்படாமலும் இருந்துவிடுவார்கள்.

இப்படிப்பட்ட என் சிறுவயதில் இதுபோன்ற சில பையன்கள் சேர்க்கை எனக்குண்டு. அந்தச் சேர்க்கைக் கூட்டத்திற்கு நான்தான் மேலாளாக (தலைவனாக) இருப்பேன். தெரு சுற்றிக்கொண்டு இருப்பதில் சாதி பார்ப்பதோ, எச்சில், சுத்தம், அசுத்தம் பார்ப்பதோ கிடையாது. எச்சில் பீடியைப் பொறுக்கிவந்து பீடி புகைப்போம். அப்பொழுது குழந்தை களுக்குச் சாந்தி கழிப்பது என்ற வழக்கம் அதிகம். அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை வரும் அமாவாசை மற்றும் சில ‘விசேஷ’ நாட்களில் சாந்தி கழித்து அந்தச் சாந்திப் பண்டங்களை முச் சந்தியில் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போய்விடுவார்கள். நாங்கள் அவைகளில் உள்ள பண்டங்களைப் பொறுக்கி எடுத்துவந்து பங்கு போட்டுக்கொண்டு சாப்பிடுவோம். பத்து வயதாகி கடைக்குக் கையாளாக ஆனவுடன் இந்த நேசமும் பழக்கமும் மறைந்துவிட்டது. என்றாலும், கடைக்கு வருகிறவர்களுடன் பெரிய வாயாடிபோல் பேசி அரட்டை அடிப்பதில் பழக்கம் அதிகமாகி, யாரும் என்னை விரும்பும்படி ஆகிவிட்டேன். கடை, வியாபாரம் என்றால் அது தரகுமண்டி வியாபாரம். அதாவது, கிராமத்து மக்கள், மிளகாய், மஞ்சள், மற்றும் விளைந்த தானியங்கள் முதலியவைகளைக் கொண்டுவந்து எங்கள் கடையில் போட்டு விற்றுக்கொடுக்கச் சொல்லுவார்கள். இதுபோலவே, சில கிராம வியாபாரிகளும், கிராமங்களிலும், கிராமச் சந்தைகளிலும் வாங்கிய சரக்குகளை எங்கள் கடையில் போட்டு விற்றுக்கொடுக்கச் சொல்லுவார்கள். இப்படியாக ஒருநாளைக்குச் சராசரி இருபது பேர், முப்பது பேர் வருவார்கள். சிலநாளைக்கு அம்பது பேர்கூட வருவார்கள். இவர்களிடம் அரட்டை அடிப்பதுதான் என் ஒழிந்தநேர வேலை. இந்த அரட்டை எங்கள் கடைக்கும், வீட்டிற்கும் காசுபெற வரும் பக்தர்கள், புலவர்கள், பாகவதர்கள், சன்னியாசிகள் இவர்களிடமும் அவர்கள் வேஷத்தையும், அவர்கள் பேசும் விஷயங்களையும் 'பற்றிக் கேலி செய்யும்படியும் வளர்ந்துவிட்டது.

இப்படிப்பட்ட அரட்டையும், வாதமும்தான் 1900-லேயே அதற்கு முன்பே என்னைப் பகுத்தறிவுவாதியாக (நாத்திகனாக) ஆக்கிவிட்டது. அப்படியிருந்தாலும், ஆத்திகமான காரியங்களில் கலந்துகொள்வதில் நான் பின்வாங்குவதில்லை. அதில் ஏற்படும், அதனால் வரும் பெருமைகளை அடைவதில் நான் தவறுவதில்லை.

காரணம், அக் காலத்தில் ஈரோட்டில் எங்கள் கடைதான் பெரிய கடை. எங்கள் வீடு தான் பெரியவீடு. எங்கள் தகப்பனார்தான் ஊருக்குப் பெரிய மனிதர். ஒரு அளவுக்குப் பணக்காரருங்கூட.

இந்த நிலையில் எல்லாக் காரியங்களிலும் கலந்துகொள்வதுபோல் ஆத்திகக் காரியங்களிலும் கலந்து கொள்வேன்.

நான் தேவஸ்தான கமிட்டி செகரட்டரியாக, தலைவனாக 15 ஆண்டு போல் இருந்திருக்கிறேன். அந்தக் கடமைகளிலும் நான் தவறவில்லை. ஆனாலும், மக்கள் மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டுமென்பதிலும் மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்க வேண்டுமென்பதிலும் எனக்கு 1925ஆம் ஆண்டு முதல் உறுதியான எண்ணமும் ஆசையும் உண்டு. இதற்குக் காரணம், ஆத்திகத்தினால் (கடவுள், மதநம்பிக்கை ஆதிக்கத்தால்) தான் இந்த நாட்டில் சாதி (பார்ப்பான் 'பிராமணனாய்' வாழ்வதும்) அரசியல், மத ஆதிக்கத்தில் பார்ப்பான் இருந்துகொண்டு சமுதாய வளர்ச்சியையும், அறிவு (விஞ்ஞான) வளர்ச்சியையும் தடைசெய்துகொண்டு இருக்கிறான் என்பதும் எனது உறுதியான எண்ணம் என்பதோடு, நான் எந்த ஸ்தாபனம் வைத்திருந்தாலும், எந்தக் கட்சியை ஆதரித்தாலும், யாரோடு சேர்ந்தாலும், யாரை விரோதித்தாலும் அவற்றிற்கெல்லாம் இதுவே காரணம்.

இப்போதும் காங்கிரஸ்காரர் பலரை வெறுக்கிறேன் என்றாலும் தி. மு. க.காரர் பலரை நேசிக்கிறேன் என்றாலும் இதுவேதான் காரணம்.

இந்திய சரித்திரத்திலேயே புத்தன், அசோகன் ஆட்சிக்குப் பிறகு நமது நாட்டுக்கு இன்றுதானே பகுத்தறிவாளர் (நாத்திகர்) ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. இதை ஆத்திகர் எதிர்க்கலாம். ஆனால், பகுத்தறிவாளர் (நாத்திகர்) என்பவர்களின் கடமை என்ன?

அரசியல் 'குற்றம் குறை' என்பது யாருடைய ஆட்சியிலும் எந்த அளவுக்காவது நடந்துதான் தீரும்.

அக் காலத்தில் ஜஸ்டிஸ் (திராவிடர் கழக) ஆட்சியைக் காங்கிரஸ்காரர்கள் எப்படியெப்படி எல்லாம் எதிர்த்தார்களோ ('தாலியறுத்தார் இராமசாமி முதலியார்' என்று சொல்லி) அப்படி எல்லாம் இப்போதும் சொல்லுவார்கள்; எதிர்ப்பார்கள்; தப்புப் பிரச்சாரம் செய்வார்கள்; நல்ல காரியம் எதையும் செய்துவிடாமல் தடுப்பார்கள்; கலகம், குழப்பம் செய்வார்கள். நமது மக்களுக்கு அவற்றை உணரும் சக்தியில்லை; இருக்காது. என்றாலும் இதில் சுயமரியாதை இயக்கத்தார்—திராவிடர் கழகத்தார் கடமை என்ன என்பதை நல்ல வண்ணம் சிந்தித்து நடந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவில் சரிபகுதி காங்கிரசிற்கு எதிர்ப்பாகிவிட்டது. என்றாலும், காங்கிரசார் மக்களைத் தங்கள் பக்கம் திருப்ப மக்களிடம் பிரச்சாரம் செய்வதை விட்டுவிட்டு, எதிர்ப்பு ஸ்தாபனங்களை அழிக்கப் பாடுபடுகிறார்கள். இது 'தும்பை விட்டுவிட்டு, வாலைப் பிடிக்கிற கதை'யாகத்தான் முடியும். காங்கிரசார் தங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று காட்டிக்கொள்ளாதவரை நாம் எப்படி இன்று காங்கிரசை ஆதரிக்க முடியும்?

தி. மு. க.காரரும் என்ன செய்தாவது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்கின்ற ஆர்வத்தில், தாங்கள் இருக்கும் படகில் ஓட்டை ஏற்படும்படி செய்துகொள்வதும் ஒரு வழியென்று நினைப்பார்களானால் அது தங்களைக் காப்பாற்றிக் கொள்வதாகாது; மூழ்கடித்துக் கொள்வதுதானாகும். அவர்கள் முயற்சியில் கூடியவரை சுயமரியாதைக்காரரையும் திராவிடர் கழகத்தாரையும் விரோதித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; தங்கள் மக்களுக்கு அடக்கத்தைப் போதிக்கவேண்டும்; சிறு தகராறு, கோளாறுகளைச் சிறிது விட்டுக்கொடுத்தாவது பொறுமை காட்டி சரிப்படுத்திக்கொள்ள

வேண்டும். இன்னும் இக்கூட்டத்திலும் தங்களை ஒருவருக்கொருவர் விரோதிகள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள் ; அது தவறு.

இன்று பார்ப்பனரும் காங்கிரசாரும் ஒன்றாகிவிடவில்லையா ? ஒருவருக்கொருவர் எவ்வளவு சிபாரிசு ! எவ்வளவு ஆதரவு ! அந்தப் புத்தி நமக்கு வரவேண்டாமா ?

தலைவர்களுக்கு மிக்க பொறுப்பு வேண்டும். என்னைப் பொறுத்தவரை நான் அடக்கிக்கொண்டுதான் வருகிறேன். ஒருநாள், இரண்டு நாள் அல்ல. இன்னும் நாலரை வருடம் இருக்கிறது. அடுத்த எலக்ஷன் எப்படி ஆனாலும் எனக்குக் கவலையில்லை. அதுவரை தி. மு. க. ஆட்சி நல்லபடி நடக்கவேண்டும். பல அரிய காரியங்களைச் செய்ய வேண்டும். கட்டுப்பாடு, ஒற்றுமை, எதிர்க் கட்சியாரிடம் பொறுமை, அடக்கம் வேண்டும். நமது தோழர்கள் இனி பகுத்தறிவுப் பிரச்சாரத்தில்தான் கவலை கொள்ளவேண்டும். மக்களிடம் இலட்சக்கணக்கில் அவர்கள் பகுத்தறிவுவாதிகள் என்று கையொப்பம் வாங்க வேண்டும். கையொப்பம் வாங்க அலவன்ஸ் கொடுத்துத் தொண்டர்களை நியமிக்க வேண்டும். தங்களுக்கு வேலை இல்லை என்று யாரும் நினைக்கக்கூடாது. இதுதான் நமது நிர்மாணத் திட்டம்.

எனது காயலா சற்றுக் கடினமானதுதான். எளிதில் குணமாகாது. மூத்திர வழியில் கற்கள் இருக்கின்றன. அவை கரைய மாதக் கணக்கில் காலமாகும். ஒரு சமயம் ஆபரேஷன் (அறுவை சிகிச்சை) தேவை இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் நான் பயப்படவில்லை. எதற்கும் தயாராக இருக்கிறேன். மணியம்மையார் கவனிப்பும் உதவியும் அளவிடற்கரியது. உங்கள் கடமையிலிருந்து தவறாதீர்கள் !

[பிறந்த நாள் விழா மலர் 89—17-9-1967]

7. கழகத் தோழர்களுக்கு

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களும், தி.மு.கவிலும், காங்கிரசில் உள்ளவர்களும் பகுத்தறிவு, தமிழர் இன உணர்ச்சி உள்ளவர்களும், அரசியல் அதிகாரிகளாய், குமஸ்தாக்களாய், பணியாளர்களாய் உள்ளவர்களில் தமிழர் உணர்ச்சியாளர்களாய் இருப்பவர்களும், தங்கள் தங்கள் வீட்டில், தொழில் மனைகளில், வாகனங்களில் உள்ள கடவுள் மத, புராண, இதிகாசக் கதைகள் முதலியவை சம்பந்தமான உருவப் படங்கள் எதுவானாலும், அவைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும். கண்டிப்பாய் அப்புறப்படுத்தி விடவேண்டும் என்று மிக்க மரியாதையாய், வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அரசாங்கப் பணிமனையில் தொங்கும் படங்களை எடுத்து விடுங்கள் என்று சொன்னவுடன் எல்லாப் பார்ப்பனர்களுக்கும் எவ்வளவு ஆத்திரம் வந்தது ? நீங்கள்தான் பார்த்தீர்களே, இராஜாஜி மிரட்டுகிறார். 'மித்திரன்', 'தினமணி', 'இந்து', 'மெயில்', 'எக்ஸ்பிரஸ்' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் மிரட்டுகின்றன ; விஷமப் பிரச்சாரங்கள் செய்கின்றன. இந்த ஒரு பிரச்சினையைக் கொண்டே தி. மு. க. ஆட்சியையே கவிழ்க்கப் பார்க்கின்றனர். ஏன் ?

தங்கள் சாதி உயர்வும், நம் சாதி இழிவும் அந்தப் படங்கள் தொங்குவதில் உயிர் வாழ்கின்றன. அவை (படங்கள்) போய்விட்டால் உயர்வு–தாழ்வு போய்விடுமே என்கின்ற கவலைதானே ? மற்றபடி அப் படங்களில் என்ன இருக்கின்றது ? அவர்கள் சமுதாய உயர்வுக்கு அவர்கள் (பார்ப்பனர்கள்) அவ்வளவு பாடுபடுகின்றார்கள்.

நமக்கு புத்தி-மான ஈன உணர்ச்சி இருக்கவேண்டாமா ? அந்தப் படங்களில் கடவுள் இல்லை என்பதற்காக அவற்றை எடுத்து எறியாவிட்டாலும் நமது ஈனநிலை, இழிவு நிலை பார்ப்பான் உயர்வுநிலை அதில் இருக்கிறது என்பதற்காகவாவது அவற்றை நமது

அரசியல் பணிமனைகளிலிருந்தும், அதைவிட நமது வீடுகளிலிருந்தும், தொழில் ஸ்தாபனங்களிலிருந்தும் எடுத்து எறிய வேண்டாமா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இனியாவது செய்து நீங்கள் இழி சாதி மக்கள் அல்ல என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டாமா ?

உங்கள் தாயார், சகோதரி, மனைவி, மகள்கள் பார்ப்பானுக்கு வைப்பாட்டி, காமக் கிழத்தி ஆனவர்கள் அல்ல, ஆகவேண்டியவர்கள் அல்ல என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டாமா ?

இதற்காக நான் 45 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறேன். அதன் பலன் இது வரகவாவது (இந்தப் படங்களை அப்புறப்படுத்தவாவது) பயன்பட்டது என்று இருக்க வேண்டாமா ?

நம் நல்வாய்ப்பாக தி. மு. க. ஆட்சி ஏற்பட்டது. அதை ஒழியும்படி செய்தீர்கள் ஆனால் பிறகு உங்கள் கதி என்ன ஆவது ? நானும் இனியும் (90-க்கு மேல்) வாழமுடியுமா ? எனக்கு அப்புறம் உங்களுக்கு இதை யார் சொல்லுவார்கள் ? தி.மு.க. ஆட்சிக்கு அப்புறம் யார் இந்த உத்தரவு போடுவார்கள் ? எல்லோரும் மாறான காரியத்தை அல்லவா செய் வார்கள்! நீங்கள் பழைய நிலைக்குத்தான் போகவேண்டி இருக்கும். ஆகவே எனக்கு 90-வது ஆண்டு பிறந்தநாள் பரிசாக இதையாவது செய்யுங்கள்; செய்து காட்டுங்கள் என்று வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவரும் இதை மற்றவருக்குப் படித்துக் காட்டுங்கள்.

[பிறந்த நாள் விழா மலர் 90—17-9-1968]

8. எனது நிலை

எனது 90-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்கின்ற கட்டுரை எழுதும்போது, 91-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலருக்கு 'எனது நிலை' என்பதுபற்றி எழுதவேண்டிய வாய்ப்பு இருக்குமா என்ற சந்தேகத்தில் எழுதினேன். என்றாலும் எப்படியோ 91-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலருக்கும் 'எனது நிலை' என்பதுபற்றி எழுதும்படியான வாய்ப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டது. அதாவது 90-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரையில் 'எனக்கு வயது 90; உடல் நிலை மிகவும் மோசம்; கைகால் நடுக்கம் அதிகம்; சிறுநீர் கழிக்கும்போது சப்தம் போட்டுக்கொண்டுதான் கழிக்கிறேன். அதாவது, அவ்வளவு வலி; தூக்கம் சரியாய் வருவது இல்லை.

நினைத்தபோது உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் வலியேற்பட்டு சில ஏப்பமோ, காற்றுப் பிரிவோ ஏற்பட்ட பிறகு நோய் விலகுகிறது; உண்ட உணவு சரியானபடி ஜீரண மாவதில்லை; முன்போல் உணவும் சரியாய் உட்கொள்ள முடியவில்லை; எந்தக் காரியம் பற்றியும், மனத்திற்கு உற்சாகம் ஏற்படுவதில்லை; களைப்பு அடிக்கடி ஏற்படுகிறது; நெஞ்சில் வலி திடீரென்று ஏற்படுவதும் ஏப்பம் வந்த பிறகு குறைவதுமாக இருக்கிறது; எதைப்பற்றியும் சலிப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விடுகிறது.

சுருக்கமாகச் சொல்லுவதானால், வாழ்வே வெறுப்பாக இருக்கிறது. என்றாலும் தற்கொலை செய்துகொள்ளமாட்டேன். நினைத்தபடி நினைத்த ஊருக்கெல்லாம் என்னை அழைக்காதீர்கள். அந்தப்படி என்னை மக்கள் அழைக்காமல் இருப்பதற்காகவே எனது வழிச்செலவுத் தொகையை ரூ. 100-இல் இருந்து 150 ஆக ஏற்படுத்திவிட்டேன்.

ரூ. 100 எனக்கு வண்டிச்செலவு, ரிப்பேர் செலவு, வைத்தியச் செலவு முதலியவை களுக்கு அனேமாகச் சரியாய்ப் போய்விடும். சில சமயங்களில் போதாமல் போகும். ஒரு தடவையில் 2, 3 பயணம் ஏற்பட்டால் ஒரு அளவு மீதியாகி, பிரச்சாரத்திற்குப் பயன்படும்.

எனக்கு இனிப் பிரச்சாரத்தில் ஆசை இல்லை.

ஒரு வாரப் பத்திரிகை துவக்கி, அதற்கு ஆசிரியனாக இருந்து எழுதிக்கொண்டு இருக்கவேண்டும் என்பதில்தான் ஆசை அதிகமாக இருக்கிறது. மற்றும் வெளியாக்கப்பட வேண்டிய விஷயம் அதிகம் இருக்கிறது.

இதற்காக எளிதில் காணமுடியாத ஒரு தனி இடத்திற்குப் போகலாமா அல்லது ஈரோட்டிற்கே போய்விடலாமா என்றுகூட எண்ணுகிறேன்.

இனி என் ஆயுள் எவ்வளவு இருக்கமுடியும் என்பதில் எனக்குக் கவலை இல்லை.

இருந்தவரை தொண்டு செய்யலாம் என்றுதான் திட்டம் போடுகிறேன். ஆனால், எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதும், ஏற்படுவதும் இயற்கையேயாகும். அதுபோல் என் முடிவும் இருக்கலாம்.

பொதுவாக என் மனம் குழப்பமாக இருக்கிறது. துறவி ஆகிவிடுவேனோ என்னமோ!'

இந்தப்படி எழுதி இருக்கிறேன். அதை ஊன்றிப் படித்தாலே நான் எழுதியதின் தன்மை விளங்கும்.

இப்போது எனக்கு 90 ஆண்டு முடிந்து 91-வது ஆண்டு நடக்கிறது என்றாலும், 90-வது ஆண்டுக்கும் 91-வது ஆண்டுக்கும் இடையில் ஏற்பட்ட எனது உடல்நிலையின் தன்மை 91-வது ஆண்டுபோல் இல்லாமல் 94, 95-வது ஆண்டு என்று கருதும்படி அவ்வளவு கிழத்தன்மை ஏற்பட்டுவிட்டது என்று ஆகிவிட்டது.

இது உடல்நிலை மாத்திரமல்லாமல், பஞ்சேந்திரியங்களோடு புத்தி, மனது, சிந்தனா சக்தி முதலிய தன்மைகளும் மிக்கக் குறைந்து பலவீனப்பட்டு விட்டன.

என்றாலும், இவ்வோராண்டு நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எனக்கு மற்ற கருவி காரணாதிகளின் பலக் குறைவு எப்படி இருந்தாலும் மனம் உற்சாகம் அடையும்படியான பல நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

முதலாவது நிகழ்ச்சி நமது தி. மு. க. ஆட்சியில் 13 மந்திரிகளில் 13 பேரும் தமிழர்கள் என்பதோடு, 18 அய்க்கோர்ட் ஜட்ஜ்களில் 14 பேர்கள் தமிழர்கள் (பார்ப்பன ரல்லாதவர்கள்). டெல்லி ஆதிக்கமில்லாத அதிகாரங்களில் 100-க்கு 50-க்கு மேல் 75 வரை பார்ப்பனரல்லாதவர் இருக்கும்படி ஆகிவிட்டது.

அரசியலில் ஆளும் கட்சியிலும், எதிர்க் கட்சியிலும் தலைவர்கள், பணியாளர்கள் யாவருமே 100-க்கு 100-ம் தமிழர்களேயாவார்கள். இதை அனுசரித்தே மற்ற நிலைகளும் மாற்றமடைந்து வருகின்றன. இவ்வளவுக்கும் காரணம் தி. மு. க. ஆட்சி என்றே சொல்லுவேன்.

காங்கிரஸ் மத்திய ஆட்சி ஆதிக்கத்திலும், பச்சையாகப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லா தார் பிளவும், வடநாடு—தென்னாடு என்கின்ற உணர்ச்சியும் காணப்படும் தன்மை உருவாகிவிட்டது. இவையெல்லாம் நம் தமிழர் சமுதாய விடுதலைக்கும், சுயமரி யாதைக்கும் நல்ல வெற்றிவாய்ப்பு என்றே சொல்லத் தக்கவையாகும்.

மற்றும், 90-வது 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' கட்டுரையில் நான் குறிப்பிட்ட சலிப்புகள் இப்போது எனக்குக் குறைவென்றே சொல்லலாம்.

உதாரணமாக, 90-வது 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரை முடிவில் 'துறவியாய்ப் போய்விடலாமா' என்று எழுதி இருக்கிறேன்.

இன்று எனக்கு அப்படி இல்லை. அந்த எழுத்தைப் பார்த்து உயர் காமராசரும், அறிஞர் அண்ணாவும் எனக்குத் தெரிவித்ததுபோல், அதாவது 'இப்போது உங்களுக்கு

எதற்காகக் கவலை? நீங்கள் நினைத்த காரியம் எது நடவாமல் இருக்கிறது? கவலையை விட்டுவிடுங்கள்' என்று சொன்ன சொற்கள் எனக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றன.

இன்று எனக்குள்ள குறையெல்லாம் தமிழர் சமுதாயத்தில் 'விபீஷணப் பரம்பரை' வளர்ந்து வருவதுதான். இது தமிழரில் சில 'சாதிக்கு' (வகுப்புக்கு) இயற்கை என்றாலும் இது வருந்தத் தக்கதேயாகும்.

ஆகவே, எனது 90-வது வயதைவிட 91-வது வயது திருப்தியையும், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது என்பது கருத்து.

விபீஷணர்கள் திருந்துவார்களாக.

தி. மு. க. ஆட்சி இனியும் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது இருக்கும்படி மக்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். எனக்கு இதற்குமேல் கருத்தும் ஓடவில்லை; எழுதவும் முடியவில்லை.

[பிறந்த நாள் விழா மலர் 91—17-9-1969]

9. பிறந்தநாள் செய்தி

எனக்கு வயது 91. ஆண்டுகள் 91 முடிந்துவிட்டன. 17-9-1970-வது நாள் முதல் 92-வது ஆண்டு துவங்குகிறது.

91-வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்ததுடன், மனச் சலிப்பு அடைய வேண்டிய அவசியமில்லாமல் இருப்பது மாத்திரமல்லாமல் இருப்பதுடன், வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் போல் எனக்குத் தோன்றுகிறது.

மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கிறேன். அதுவும் தீவிரமான மாறுதல்களுக்கு இணங்குபவர்கள்போல் மக்களைக் காண்கிறேன்.

அதாவது, கடவுள், மதம், சாதி முதலிய விஷயத்தில் மக்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாறுதலடையப் பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே காணுகிறேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்யலாம் என்ற நம்பிக்கைக்கும், அவாவுக்கும் காரணமாகும்.

இந்த நிலையில், நான் எனது 92-வது பிறந்தநாள் சார்பாக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், மனம் துணிந்து மேலும் மாறுதலடையுங்கள் என்பதேயாகும்.

நான் இந்த நிலை அடைந்ததற்கும், மக்களை இந்த அளவுக்கு நான் வேண்டுவதற்கும் முக்கியமான காரணம், இந்த இரண்டு மூன்றாண்டுகளாக நமது நாட்டில் நடந்து வந்த ஆட்சியேயாகும்.

நமது நாட்டு ஆட்சியானது பகுத்தறிவு ஆட்சி என்பதோடு, எந்தவித மாறுதலுக்கும், எவ்வளவு தூரம் துணிந்து செயலாற்றுவதற்கும் துணிவுள்ள ஆட்சியேயாகும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பொதுவாகவே மக்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறது. இது இயற்கையின் காரணம் என்றாலும் மக்கள் இன்பவாழ்வு வாழ்கிறார்கள் என்று திருப்தியடையத் தக்கதாகவே இருந்து வருகிறது. எண்ணத்தில் பெருத்த முன்னேற்றத்தையும் அடைந்து வருகிறார்கள்.

இவற்றை ஏன் பெருமையாகக் குறிப்பிடுகிறேனென்றால், பதவி வெறியால் தூண்டப்பட்ட எதிரிகள், எதிர்க் கட்சிகள், 'தங்கள் சமுதாயத்திற்கு ஆபத்து வந்து விட்டது' என்று கருதிப் பயந்து கிடக்கும் நம் பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்கள் இந்த ஆட்சியை அழிக்கச் செய்த, செய்து வருகிற இமாலயப் பிரயத்தனங்கள் தவிடுபொடியாகி வருவதுடன், எவ்விதத் தடையுமின்றி ஆட்சியின் காரியம் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருப்பதுதான்.

இந்த நிலையில் நான் எனது 92-வது ஆண்டு செய்தியாக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்வது என்ன வென்றால், இந்த ஆட்சியை இன்னும் ஒரு பத்தாண்டுக்குப் பாதுகாத்து வரவேண்டுமென்பதே ஆகும்.

தேசம் மிருகப் பிராயத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. யாரும், எப்படிப்பட்டவரும் எந்த இழிவான காரியத்தைச் செய்யவும் பயப்படுவதில்லை. ஒழுக்கம், நேர்மை, நாணயம், அமைதி என்பது பெரும்பாலோரிடம் காணமுடிவதில்லை. பொதுவில் பார்த்தால் நமது நாடுதான் இந்தியாவிலேயே பாதுகாப்பான நாடு என்று கருதத் தக்கதாய் இருந்து வருகிறது.

இதற்குக் காரணம், தி.மு.க. ஆட்சிதான் என்று உறுதியாய்க் கூறுகிறேன். எனவே இதற்கு ஏதாவது மாற்றம் ஏற்படுமானால் அதை வேறு எந்த ஆட்சிவந்து மக்களை இன்றைய நிலைக்குக் கேடில்லாமல் ஆள முடியும் ?

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுமானால் அடுத்துவர இருப்பது பார்ப்பன ஆட்சிதான்—அதாவது, வருணாசிரமத்தை நிலைநிறுத்தும் ஆட்சிதான். இது உறுதி; உறுதியேயாகும். ஏனிப்படிச் சொல்லுகிறேன் என்றால், இந்தியா முழுவதற்குமே இன்று வருணாசிரமப் பாதுகாப்பு ஆட்சி, கட்சி, மக்கள் என்பவர்கள் அல்லாமல் வேறு கட்சியும் இல்லை, மக்களும் இல்லை, கொள்கையும் இல்லை. காமராசர் பலமற்றுப் போய்விட்டார். அவரது எண்ணங்களும் மாற்றமடைந்து வருகிறது; பார்ப்பனரைத் தஞ்சமடைய வேண்டிய நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அவரது கட்சியும் (காங்கிரசும்) உருக் குலைந்துவிட்டது. அவருக்கு உதவியாளரும் யாரும் தகுதியானவரில்லை. இவை மாத்திரமா? நமது பொது எதிரியான பார்ப்பனத் தலைவர்—நம் சமுதாயத்தை அழித்து, ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இராஜாஜி பலம் பெற்று வருகிறார். இதற்குக் காரணம் காங்கிரஸ் பிளவுபட்டதேயாகும்.

இந்த நிலையில் இன்றைய நமது நாட்டு ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் ஏற்படுமானால் காமராசர் ஆட்சி ஒருநாளும் அந்த இடத்திற்கு வராது; மற்றெது வருமென்றால், பார்ப்பனர் ஆட்சி—இராஜாஜி ஆதிக்க ஆட்சிதான் வரும். அதுவோ வேறு எதுவோ வந்தாலும் பழிவாங்கும் ஆட்சியாய்த்தானிருக்கும். அல்லது அசல் காலித்தன, பலாத்காரத் தாண்டவ ஆட்சியாகத்தானிருக்கும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆகவே, எனது 92ஆம் ஆண்டுச் செய்தி என்பதாக எனது 91 ஆண்டு அனுபவ அறிவைக்கொண்டு சொல்லுகிறேன்.

மக்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதிகளாக மாறுங்கள் !

எப்பாடு பட்டாவது இன்றைய நம் தி. மு. க. ஆட்சியை இனியும் ஒரு பத்தாண்டுக்கு நல்ல பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கப் பாடுபடுங்கள் என்பதுதான்.

[பிறந்த நாள் விழா மலர் 92—17-9-1970]

10. தமிழர்களின் தலையாய கடமை

இன்றைய நிலையில் தமிழர்கள் (திராவிடர்கள்) ஒரு அளவு முன்னேற்றப் பாதையில் செல்லுகிறார்கள். அவர்கள் அடைய உரிமையுள்ள இடத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறமுடியாது. சமுதாயத் துறையில் ஒரு அளவுக்குப் பார்ப்பனரைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள். என்றாலும், அந்த அளவு பகுதிக்கும் குறைவான அளவு என்றுதான் சொல்ல வேண்டும். கல்வித் துறையில் பார்ப்பனர்களுக்கு ஏகபோகம் இல்லையென்றுதான் சொல்லலாமே தவிர அவர்கள் தங்கள் விகிதாசார அளவுக்கு 100-க்கு 500 பங்கு முதல்

1000 பங்குவரை அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த விகிதம் ஒழிந்து அவர்கள் தங்களுக்குள்ள உரிமையுடன் இருக்கவேண்டுமானால் டில்லி ஆதிக்கம் ஒழிந்தே ஆகவேண்டும். டில்லி ஆதிக்கம் ஒழியும்வரை திராவிடர்கள் 4-ம் சாதி—இழிசாதி என்கிற இழிவும் நீங்காது என்பது உறுதி. அரசியல் தலைமைத் துறை, அமைச்சர்துறை ஆகியவற்றில் அவர்களுக்கு இடமில்லாமல் ஆகிவிட்டது என்றாலும் அவர்கள் அவற்றில் இல்லாமலே அவர்களுக்கு வேண்டிய காரியங்களும், நாம் வளர்ச்சி அடைய முடியாமல் இருக்கும்படியான காரியங்களும் தாராளமாய் அவர்களால் செய்யமுடிந்துதான் வருகிறது.

இவற்றிற்கெல்லாம் அவர்களுக்கு ஆதாரமாக 'சஞ்சீவி' மருந்தாக இருந்துவரும் சாதனம் பத்திரிகை உலகம் 100-க்கு 100 அவர்களுடையதாகவும், அவர்களுடைய அடிமைகளுடையதாகவும் இருந்துவருவதேதான். இந்தத் துறையில் தமிழர் சிறிதுகூட சிந்தனை செய்ததாகவே காணமுடியவில்லை. அந்த ஒரு காரியத்தில் நாம் முயற்சி எடுத்து நமது மானாபிமானத்தைக் காட்டாதவரையில் வேறு எந்தக் காரியத்தில் நாம் வெற்றிபெற்ற போதிலும் அதன் பயனை நாம் அனுபவிக்கவே முடியாது என்பது மாத்திரமல்லாமல் நம்முடைய நாட்டிலே, அதிலும் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்களாக இருக்கும் நமது நாட்டிலே 100-க்கு 3 பேராய் இருப்பவரும், நமது பிறவி எதிரியும், நமது கேட்டிற்கும், அழிவிற்கும், இழிவிற்குமாகவே உழைத்துவரும் வெகு வெகு சிறு சாதியாரான இனத்தாரிடம் நமதுநாட்டுப் பத்திரிகைகளும் பத்திரிகைகளின் ஆதிக்கமும் இருந்துவருவது என்றால், இது நமது சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவானநிலை என்பதும் யோசிக்கத் தக்கதாகும்—என்பதோடு இது (நம்) போன்ற இழிவான, மானங்கெட்ட சமுதாயம்போன்ற வேறு ஒரு சமுதாயம் நானறிந்தவரை உலகத்தில் வேறு எங்குமே இருப்பதாகத் தெரியவே இல்லை!

அது மாத்திரமா? நமது பத்திரிகை என்பவைகளை நமது மக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கிப் படிக்கிறார்கள் என்றால் நமது எதிரிகளான பார்ப்பனருடையவும், அவர்கள் அடிமைகளுடையவும், அவர்கள் ஆதரவால்தான்—அவர்களுக்கு நல்லபிள்ளையாய் இருந்தால்தான் வாழமுடியும் என்று கருதுபவர்களுடையவுமான பத்திரிகைகளை லட்சக் (1,00,000) கணக்கில் நமது மக்கள் வாங்கிப் படித்து ஈனமக்களாக ஆகிவருகிறார்கள்.

சாதாரணமாகச் சொல்லுவோமானால் தமிழர் நல்வாழ்வுக்காகவே, மான வாழ்வுக்காகவே, வளர்ச்சிக்காகவேயென்று 45 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் சுயமரியாதை (சமூக முன்னேற்ற) இயக்கம் என்பது ஆரம்பிக்கப்பட்டு, மூலை முடுக்குகளெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தும், நம் எதிரிகளை 'பிராமணாள்' 'சாமி' என்றழைப்பது 1000-க்கு பத்துவீதமான மக்களால்கூட நிறுத்தப்படவில்லை என்பதோடு, பத்திரிகை படிப்பவர்களில் 1000-க்கு ஒருவரால்கூட நம் எதிரிகளது பத்திரிகைகளை வாங்கிப் படிப்பது நிறுத்தப்படவில்லையென்றால் நம் மக்கள் தன்மைக்கு எந்தக் குணத்தை உதாரணமாகக் கூறுவது என்பது நமக்குப் புரியவில்லை.

அது மாத்திரமா? நமது கேட்டிற்கும் இழிவிற்கும், வளர்ச்சித் தடைக்கும் என்பதற்காகவே நடத்தப்படும் நம் எதிரிகளுடைய பத்திரிகைகளால் எதிரிகள் ஆண்டு ஒன்றுக்கு ஒன்று, இரண்டு, மூன்று–ஏன், அய்ந்து இலட்ச ரூபாய்கள் வரை இலாப வருவாய் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

ஆகவே, நமது இழி நிலையானது நமது எதிரிகள்—மேல் சாதியார், பிராமணாள், சாமி என்று நம்மாலேயே அழைப்பவர்களாகவும், நமது செல்வத்தையே ஆண்டு ஒன்றுக்கு ஒன்று முதல் அய்ந்து இலட்ச ரூபாய் வரை இலாப வருவாய் உள்ளவர்களாக இருப்பதற்கு நாம் இடம் கொடுத்து வருகிறோம்; நாம் ஆளாக இருந்து வருகிறோம் என்றால் மறுபடியும் நமது நிலை எவ்வளவு இழிவானது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.

எனவே, நான் எனது 92-வது ஆண்டின் வேலைத் திட்டமாக இந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளை நம் மக்கள் பகிஷ்கரிக்கும்படி செய்யும்படியான ஒரு இயக்கத்தைத் துவக்கி நடத்தலாமென்று ஆசைப்படுகிறேன்; ஆத்திரப்படுகிறேன்.

இதற்காக மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்திப் பிரச்சாரம் செய்யச் செய்வது, கூடுமானவரை ஒவ்வொரு கிராமங்களிலும் 'நம் எதிரிகளின் பத்திரிகை பகிஷ்கார சங்கம்' என்பதாக ஸ்தாபனம் ஏற்பாடு செய்வதும், இந்தக் காரியத்திற்காக ஒரு இலட்ச ரூபாய் நிதி திரட்டி, பல தொண்டர்களை முழுநேர வேலைக்காரர்களாக ஏற்படுத்தி, நாடெல்லாம் தொண்டாற்றச் செய்யவும் செய்யவேண்டும் என்று திட்டமிட முடிவு செய்திருக்கிறேன்.

நன்கொடையாளர்கள் பெயர்கள் தெரிவிக்கப்படமாட்டாது. கண்டிப்பாய் ஒவ்வொருவரும் இதற்கு நன்கொடை அளித்தாகவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அதிகாரிகளும், அமைச்சர்களும் உதவவேண்டும். அவர்களுக்கு இதனால் ஏராளமான பலனுண்டு. மற்ற தலைவர்களும், வியாபாரிகளும் அவசியம் உதவவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன். பொது மக்களும் இதற்கு நல்லவண்ணம் ஆதரவளிக்க வேண்டும்.

இந்தப் பணியானது கடவுளை, மதத்தை ஒழிக்கும் பணியைவிட, கோவில்களை இடிக்கும் பணியைவிட முக்கியமானதும், பயன் அளிக்கத் தக்கதுமான பணி என்பது எனது உறுதியான எண்ணமாகும்.

எனவே, மளமளவென்று நன்கொடை வரவேண்டுமென்றும்—என்றும் உறுதியும் தகுதியும் உள்ளவர்கள் முன்வரவேண்டுமென்றும் வேண்டிக்கொள்வதோடு, நன்கொடை அளிப்பவர்களை நண்பர் வீரமணி அவர்களிடம் கொடுத்தருளவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன். விஷயம் மிக முக்கியமானதும், செய்து தரப்படவேண்டியதுமான இன்றியமையாத பணி என்றும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இந்தக் காரியத்தை நான் செய்வதால் எனது வாழ்நாளில் ஒருபயனுள்ள காரியத்தைச் செய்ததாக நான் கருதிக்கொண்டு முடிவடைவேன்.

[பிறந்த நாள் விழா மலர் 92 — 17-9-1970]

11. எனது வேண்டுகோள்

சென்ற ஆண்டுக்கு முன் வரையில் எனது நிலை எனக்கே பெரும் வெறுப்புக் கொடுப்பதாகவே இருந்துவந்தது. உலகத்தை வெறுத்துத் துறவியாய் விடுவேனோ என்று கூட, எனது வாழ்வு நாட்டுக்கு மனித சமுதாயத்திற்குப் பயன்படவில்லையே என்ற கவலையுடன்—மக்களிடம் வெறுப்பு இருப்பதுபோலவே எனக்குக் காணப்பட்டது. எனது வாழ்க்கைச் சலிப்பைப்பற்றி என்னிடம் அன்புகொண்ட உயர்திரு. காமராசர் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், குன்றக்குடி அடிகளாரும் நான் சலிப்படையவேண்டியதில்லை என்றும், என் உழைப்பு வீணாகவில்லை என்றும், நல்ல அளவுக்குச் சமுதாயம் திருந்தி வருகிறதென்றும் கூறி, எனக்கு உற்சாகமளித்தார்கள். என்றாலும், நான் ஒரு நல்ல அளவுக்குச் சலிப்படைந்துதான் இருந்தேன்.

அறிஞர் அண்ணா மறைந்தவுடன் தி. மு. க. ஆட்சி என்ன ஆகுமோ என்று பயந்து, கோபுரம் தாங்கும் பொம்மை போல்—எல்லாப் பொறுப்பும் என் மேலேயே இருப்பதுபோல் நானே நினைத்துக்கொண்டு, எப்படியோ என்று நாம் போய்விடக்கூடாதே; இந்த ஆட்சி நிலைக்கவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டு, துறவற ஆசையை மறந்து, பெரிய குடும்பஸ்தனைப்போல் கவலை கொண்டு வாழ ஆசைப்பட்டுவிட்டேன்; ஆசைப்பட்டாலும் முடிவு சமீபித்துக்கொண்டு வருகிறது. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற

பேராசையோடு சற்றுத் தீவிரமான சொற்களை, கருத்துக்களை துணிவாகப் பேசவும், எழுதவும் துவக்கினேன்.

அப்போதுதான் பொதுமக்கள் நிலையும், நமது கழகத் தோழர்கள் நிலையும் எனக்கு நல்ல வண்ணம் துலங்கியது. அதாவது, தீவிரமான கருத்து வெளியீட்டிற்கு நல்ல வரவேற்பு இருந்ததோடு, மாறுபாடு கருத்துக்கொண்டவர்களாக இருந்த பொதுமக்கள் இடையிலும் எளிதில் மாற்றம் ஏற்பட்டு வருவதையும் அறிய முடிந்தது.

அது மாத்திரமல்லாமல், பல காரணங்களால் விரிந்து கிடந்த தமிழ் மக்கள் தங்களது பிரிவை உணர்ந்து ஒன்றுசேர வேண்டுமே என்ற உணர்ச்சி கொண்டு, ஊடலில் வேறுபட்டவர்கள் உணர்ச்சி வசத்தால் 'யார் முதலில் நெருங்குவது' என்ற 'மானத் தன்மை' பாராமல் ஆளுக்கு ஆள் முந்தி ஒருவரை ஒருவர் அணைத்துக்கொள்ள முயற்சிப்பவர் போல் நம் மக்கள் ஒன்றுசேர ஆர்வம் கொள்வது எனக்கு நன்றாய்த் தெரிந்தது.

இதிலிருந்து நம் மக்களில் ஒன்றுசேர, ஒற்றுமைப்பட ஆசைப்பட்ட மக்கள் அத்தனைபேருக்கும் என்றில்லாவிட்டாலும் பெரும்பாலோருக்கு 'பகுத்தறிவு உணர்ச்சியும் தாராள நோக்கமும் இல்லாததால்தான் நாம் இன உணர்ச்சி அற்றுப் பிரிந்து இருக்க நேர்ந்தது' என்று கருதவும் முடிந்தது. இந்த முடிவை நான் கலந்துகொண்ட அதிகாரிகள் கூட்டம், படித்தவர்கள் கூட்டம், பெரிய செல்வவான்கள் கூட்டம், பலப் பல பாமர மக்கள் கூட்டம் முதலியவைகளில் பல பெண்களிடத்தில் உள்பட அறிந்தேன்.

இந்த நிலை எனக்குப் பெரிய தெம்பையும் ஊக்கத்தையும் கொடுத்ததோடு, இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாம் வாழ்ந்திருக்க வேண்டும். இது 'வெண்ணெய் திரளுகின்ற' பருவமாயிருக்கிறது என்று பேராசை ஏற்பட ஏதுவாயிருக்கிறது.

அய்க்கோர்ட் நீதிபதிகள் பலர் உட்பட, பெரிய அய். ஏ. எஸ். அதிகாரிகள் உட்பட, மற்ற பெரிய அதிகாரிகள் என்பவர்களும், என். ஜி. ஓ.-க்கள் என்பவர்களும் 100-க்கு 75 பேர்களுக்கு மேல் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லத்தக்க நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பெரிய நகரங்களிலும், பொது மக்களும், மாணவர்களும், அதிகாரிகளும், பெரிய பண்டிதர்கள் என்பவர்களும் முன்வந்து 'பகுத்தறிவு சங்கம்' என்றும், 'சிந்தனையாளர் கழகம்' என்றும், மற்றும் பல பெயர்களால் அரசியல் சம்பந்தமற்ற சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு, மாதந்தோறும் கூடுவதும், சிலர் வாரந்தோறும் சொற்பயிற்சி நடத்துவதுமாய் இருப்பதோடு, இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தோடு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குவந்து 'சுயமரியாதை குடும்ப விருந்து' என்னும் பேரால் விருந்து நடத்தி, விருந்துண்டு, பகுத்தறிவுச் சொற்பொழிவு நடத்தி மகிழ்வதுமாக இருக்கிறார்கள். இவை எல்லாம் எனது சலிப்பு, வெறுப்பு உணர்ச்சியைப் பெரும் அளவுக்கு மாற்றிவிட்டதோடு, மேலும் மேலும் உழைக்கவேண்டுமென்கிற உற்சாகத்தை உண்டாக்கிவிட்டது என்று திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.

மேலும், இந்த நிலையில் நான் நமது தமிழர் சமுதாய மக்களிடம் காணுவது என்னவென்றால், அரசியலில் போதிய அளவு இல்லாவிட்டாலும் நல்ல அளவுக்கு நம் மக்கள் அதிகாரிகளாகவும் நல்ல பதவிகளில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம் பிள்ளைகள் தாராளமான அளவுக்குப் படிக்கிறார்கள்; படித்தவர்களாகவும் இருக்கிறார்கள். பெண்களும் ஒரு அளவுக்கு மனித உணர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கமும் துணிந்து பல முற்போக்கான காரியங்களைச் செய்பவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, மேலும் நமக்கு வேண்டியதெல்லாம் மேலும் பகுத்தறிவும் ஒற்றுமையும், இன உணர்ச்சியும் என்பதோடு அதிகாரிகளும், ஆட்சிச் சிப்பந்திகளும் பொதுமக்களும் தங்கள் சுயநலங்களில் சிறிதுவிட்டுக்கொடுத்தாவது ஆட்சிக்கு நிர்வாகிகளாக இருந்து

தமிழர்க்கான பொதுவான நல்வாழ்வுக்காக ஆட்சியை ஆதரிக்கவேண்டியது என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

நாடுமுற்றும் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் தமிழர்களில் ஒற்றுமை ஏற்படுத்துவது என்பதாகப் பகுத்தறிவு சங்கம் ஏற்படுத்தி, மூடக் கொள்கைகளை ஒழிக்கவும் இன உணர்ச்சி ஏற்படவும் பாடுபடவேண்டும்.

இயக்கத்தோழர்கள் இவை ஏற்பட முயற்சி செய்யவேண்டும்.

[பிறந்த நாள் விழா மலர் 92—17-9-1970]

12. எனது சிந்தனை

எனது 93-வது ஆண்டு பிறந்தநாள் மலருக்கு ஒரு செய்தி வேண்டும் என்று நண்பர் திரு. வீரமணி அவர்கள் கேட்டார். சற்றேறக்குறைய 10 ஆண்டுகளாகவே எனது பிறந்த நாள் மலருக்குச் சேதி கொடுத்துக்கொண்டுதான் வருகிறேன். முதலாவதாக எனது பிறந்த நாள் என்பது எனது பிரச்சாரத்திற்கு ஒரு சாதனமாக—ஒரு ஆதாரமாக விளங்குகிறது என்பது ஒரு கல்லுப் போன்ற செய்தியாகும்.

நான் சமுதாய சமத்துவத்திற்குப் பாடுபடுகின்ற ஒரு தொண்டனாவேன். அதாவது, சாதி அமைப்பை அடியோடு ஒழிக்கப் பாடுபடுபவன். சாதி அமைப்பு என்பது ‘ கடவுள், மதம் ’ மற்றும் அவைகள் சம்பந்தமான எதையும் ஒழித்தாக வேண்டும் என்று கருதி அவைகளை ஒழிக்கப் பாடுபடுகிறவன். அதில் எந்த அளவும் மக்களுக்குச் சந்தேகமில்லாமல் நடந்தும் வருகிறேன். மக்களோ பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஆவார்கள். கடவுள் ஒழிப்பு என்பது மக்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கக் கூடியதாகும். இது மாத்திரமல்ல; நம்மைச் சபிக்கவும் கூடியதாகும். ஆகையால், சபிக்கப்பட்டும் வருகின்றேன். சபிக்கும் மக்களோ கடவுளைச் சர்வசக்தி உடையவர் என்று பலமாக நம்புகின்றவர்கள். அவர்கள் சாபம் பலிக்காவிட்டாலும் கடவுள் என்னைச் சும்மா விட்டுக்கொண்டு இருக்கமாட்டார் என்றும் நம்புகிறவர்கள் ஆவார்கள்.

நானோ எனது பிரச்சாரத்தில் கடவுளே இல்லை என்று சொல்லுவதற்காகவே சிறுமைப் படுத்தி, இழிவு படுத்தி—செய்கையாலும் காட்டிக்கொண்டே, நடந்துகொண்டே வருபவன். இந்த நிலையில் எனது 92-வது வயதில் கடவுள் நம்பிக்கை ஒரு மூட நம்பிக்கையில் பட்டதென்பதை நல்லவண்ணம் மக்களுக்கு விளங்கும்படி, ‘ கடவுளைச் செருப்பால் அடிக்கும்படி ’ நான் சொல்லும் அளவுக்கு ஆளாகி இருக்கின்றேன்.

இந்த நிலையில், எனது 92-வது வாழ்நாள் முடிந்து 93-வது வாழ்நாள் தோன்றி விட்டது என்றால், கடவுள் இருந்தால் இப்படி நடக்குமா? விட்டுக்கொண்டு இருப்பானா?— என்று எந்த, எப்படிப்பட்ட கடவுள் நம்பிக்கை பக்தனும் நினைத்து—அவனுக்கு ஒரு சிறு அறிவிருந்தாலும், ‘கடவுளாவது வெங்காயமாவது’ என்று கருதி, ஓரளவுக்காவது தெளிவு பெற முடியும் என்பது எனது கருத்து. அதனாலேயே, எனது 93-வது வருஷப் பிறப்பு என்பது எனது பிரச்சாரத்திற்கு ஆதாரம் என்று கருதுகிறேன்.

சென்ற எனது 92-ம் ஆண்டு மலருக்கு நான் எழுதிய எனது பிறந்தநாள் செய்தியில் ‘ எனது 91-வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்தது. மனச் சலிப்பு அடைய வேண்டிய அவசியம் இல்லாமல் இருப்பது மாத்திரம் அல்லாமல், இதுபோல் வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் என்று தோன்றுகிறது. மற்றும், மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கின்றேன். அதுவும் தீவிரமான மாறுதலுக்கு இணங்குபவர்கள்போல மக்களைக் காண்கின்றேன்.

கடவுள், மதம், சாதி முதலிய விஷயங்களால், மக்கள் எந்த அளவுக்கு வேண்டு மானாலும் மாறுதல் அடையப் பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே காண்கின்றேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்யலாம் என்ற நம்பிக்கைக்கும் அவாவிற்கும் காரணமாகும்.'

இந்தப்படி எழுதிய நான், முந்திய ஒரு ஆண்டில் எனக்கு மனச் சலிப்பு ஏற்பட்டு 'நான் ஏன் இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று' என்று எழுதிச் சலிப்படைந்து இருக்கின்றேன். இந்தச் சலிப்பைக் கண்டு காலஞ்சென்ற மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களும் திரு. காமராசர் அவர்களும் எனக்கு ஆறுதல் எழுதி உற்சாகமூட்டினார்கள்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியவர்களது ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் நான் உண்மையிலேயே நம்பிக்கையும் உற்சாகமும் அடைந்தேன்.

உண்மையில் எனது தொண்டு சாதி ஒழிப்புத் தொண்டுதான் என்றாலும், அது நமது நாட்டைப் பொறுத்தவரையில் கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பனர் ஒழிப்புப் பிரச்சார மாகத்தான் முடியும். இந்த நான்கும் ஒழிந்த இடம்தான் சாதி ஒழிந்த இடமாகும். இவற்றில் எது மீதி இருந்தாலும் சாதி உண்மையிலேயே ஒழிந்ததாக ஆகாது.

ஏன் எனில், சாதி என்பது இந்த நான்கில் இருந்தும் ஆக்கப்பட்டதே ஆகும்.

இப்போதும் சொல்லுவேன்: நாகரிகத்திற்காகச் சிலர் சாதி ஒழியவேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் மேற்கண்ட நான்கையும் ஒழிக்கத் துணிவு கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் அவர்கள் நமக்கு எதிரிகளாகவும் ஆகக்கூடும். மனிதனை மடையனாக, அடிமையாக ஆக்கப்பட்ட பின்புதான் சாதி புகுத்தப்பட்டதாகும். சுதந்திர உணர்ச்சியும், அறிவும் ஏற்படாமல் சாதியை ஒழிக்கமுடியாது. மடமைக்கும் அடிமைத் தன்மைக்கும் ஆக்கம் அளித்துச் சாதியை நிலை நிறுத்துவதுதான், சாதியை ஒழியாமல் பாதுகாப்பதுதான் கடவுள், மதம், சாஸ்திரம் பார்ப்பனர் என்பவைகளாகும்.

உண்மையில் சாதி ஒழியவேண்டும் என்று கருதுபவர்கள், இந்த நான்கு ஒழிப்புக்கும் சம்மதித்தவர்களாகவேதான் இருப்பார்கள். நமது மக்களில் பெரும்பாலோர் இன்று அப்படி ஆகிவிட்டார்கள் என்பதுதான் எனது உற்சாகத்திற்கும் காரணமாகும். எதனால் இப்படிச் சொல்கிறேன் என்றால், சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டையும், அதனை அடுத்து நடந்த நமது தி. மு. க. தேர்தலையும் (பொதுத் தேர்தலையும்) கொண்டுதான் இப்படிச் சொல்லுகின்றேன்.

அதாவது, 'கடவுளைச் செருப்பால் அடித்ததாக' 10 இலட்சக் கணக்கான பத்திரிகைகள், 10 இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள், மாணவர்கள், வக்கீல்கள், அதிகாரிகள், சில பெண்கள், மற்றும் காங்கிரஸ் இயக்கம், சுதந்திரா இயக்கம், ஜனசங்க இயக்கம் முதலிய—சாதித் துவேஷமற்ற தமிழ் உணர்ச்சிக்கு மாறான பல இயக்கங்களும் எதிராகப் பாடுபட்டு—230 இடங்களில் சுமார் 200 இடங்களுக்கு மேல் (தி. மு. க) வெற்றி பெறநேர்ந்தது என்றால், சென்ற ஆண்டு பிறந்தநாள் செய்திக்கு நான் கொண்ட கருத்து—அதன் அளவுக்குமேல் மெய்யாகி வெற்றிபெற்றது என்பது யாருக்கும் விளங்கும்.

இனி, நமது சாதி ஒழிப்புக்கு மக்களில் யாரும் எதிர்ப்பு இல்லை என்பது உறுதியான செய்தியாகிவிட்டது.

இந்த நிலையில், நான் நமது மக்களை அடிபணிந்து வேண்டிக்கொள்வதெல்லாம்—கோயில்களுக்குப் போகாமல் இருக்கவேண்டும்; உற்சவங்களில் கலவாமல், மதப் பண்டிகைகள் கொண்டாடாமல், நெற்றிக் குறி அணியாமலும் இருக்கவேண்டும் என்பதே யாகும்.

மற்றும் நான் நினைக்கின்றேன்; அண்மையில் ஓர் மாநாடு கூட்டி, கோயில்களுக்குப் போகிறவர்களை அடிபணிந்து வேண்டிக்கொள்வது மூலம் போகாமல் இருக்கச் செய்யலாமா என்று, யோசனை கேட்டுக் காரியத்தில் தொடரலாமா என்று சிந்திக்கிறேன்.

இதுதான் எனது 93-வது பிறந்த நாள் விண்ணப்பம்.

[பிறந்த நாள் விழா மலர் 93—17-9-1971]

13. எனது அச்சம்

எனக்கு (நான் பிறந்து) நாளது செப்டம்பர் மாதம் 17ஆம் தேதியோடு 93 ஆண்டு முடிவடைந்து 94-ம் ஆண்டு முதல் நாள் தோன்றிவிட்டது.

93 ஆண்டு என்றால், நான் பிறந்து, மாதங்களில் 1116 மாதங்கள், நாட்களில் 34045 நாட்கள், பிறைகளில் (அமாவாசைகளும்) 1635 ஏற்பட்டு மறைந்துவிட்டன. இனிமேலும் எத்தனை காலத்துக்கு வாழ்ந்தாலும், வாழ்வில் தேய்மானம்தான் காணமுடியுமே ஒழிய வளர்ச்சி காண்பது என்பது (இயற்கையில்) முடியாத காரியமேயாகும்.

என் வாழ்நாளில் நான், மற்றவர் (அனேகர்) கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கள் கருத்து என்பவைகளில், யாரும் நினைக்காததும், நினைத்தாலும் வெளியில் சொல்லப் பயப்படுவதும், துணிந்து சொன்னாலும் செய்கையில் நடவாததும் நடத்திக்காட்ட முடியாதது மான காரியத்தை, எளிதாய் நினைத்து, வெளியில் எடுத்துச் சொல்லி (பிரச்சாரம் செய்து) காரியத்திலும் நடந்து வந்ததோடு, ஓரளவுக்கு மற்றவர்களுக்கும் தெரியும்படி—விளங் கும்படி, ஓரளவுக்கு நடத்திக்காட்டியும் வந்திருக்கிறேன்.

இந்த நிலை உலகெல்லாம் பரவவேண்டும் என்ற எண்ணங்கொண்டு அதற்காக வாழ் கிறேன்—என்ற எண்ணத்தில் இருந்து வருகிறேன். அப்படிப்பட்ட காரியம் (எண்ணம்) என்னவென்றால், தெய்வம் இல்லை, தெய்வ சக்தி என்பதாக எதுவும் இல்லை, மனிதத் தன்மைக்கு மேற்பட்ட தெய்வ சக்தி—தெய்வீகத் தன்மை என்பதாக எதுவுமில்லை; அப்படிப்பட்ட தெய்வீகத்தனம் கொண்டவர்கள் என்பதாக யாருமே இல்லை; அப்படிப்பட்ட காரியம் என்பதாகவும் எதுவுமே இல்லை என்றும் திண்ணமாய்க் கருதி, உறுதியான பணி யாற்றியும் வந்திருக்கிறேன்—வருகிறேன்.

இந்த எனது நிலையில், எனது 93 ஆண்டு வாழ்நாளில் எனக்கு யாதொரு குறைவும் சங்கடமும், மனக் குறைவோ, அதிருப்தியோகூட ஏற்பட்டதேயில்லை. மேற்கண்ட எல்லாக் காரியங்களிலும் மற்றவர்கள் எளிதில் பெறமுடியாத அனேக ஏற்றங்களைச் சாதாரணமாகப் பெற்றிருக்கிறேன் ; மக்களால் நல்ல அளவுக்கு மதிக்கப்பட்டும், பாராட்டப்பட்டும், விரும்பப் பட்டும் போற்றப்பட்டும் வந்திருக்கிறேன்.

இதனால் உலகுக்கு—மக்களுக்கு யாதொரு கெடுதியும் ஏற்பட்டதில்லை என்பதோடு நாட்டுக்கும், மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட மக்கள் யாவருக்குமே நல்ல வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டு வருகின்றன என்றே சொல்லலாம்.

நமது கருத்து வெளியீடும் பிரச்சாரமும் துவக்கப்பட்ட காலத்தில், நமது மக்களின் சராசரி ஆயுள் (வாழ்நாள்) பத்து ஆண்டேயாகும். கல்வியில் நமது மக்கள் 100-க்கு 8 பேர் 10 பேர் என எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆவார்கள். ஏராளமான நோய் நலிவுகள் ; அவற்றுள் பரிகாரம், சவுக்கியம் செய்ய முடியாத நோய்கள் அதிகம். காலரா (வாந்திபேதி) வந்தால் 100-க்கு 90 பேர் சாவார்கள் ; பிளேக் வந்தால் 100-க்கு 100-ம் சாவார்கள் ; இருமல் (க்ஷயம்) வந்தால் 100-க்கு 80 பேர் சாவார்கள் ; அம்மை (வைசூரி) வந்தால் 100-க்கு 50 பேர் களுக்கு மேல் சாவார்கள். தொத்து நோய்களும் பல ; குழந்தைச் சாவுகளும் ஏராளம். கர்ப்ப ஸ்திரீகள் சாவுகளும் ஏராளம் இருந்தன. இதற்கு ஏற்ப ஏழ்மையும் கீழ்த்தரமான வாழ்க்கை நிலையும் இருந்து வந்தன.

அரசியலில் அன்னிய ஆதிக்கம், பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடின. அது போலவே உத்தியோகத் துறையிலும் பார்ப்பன மயமும் முன்னேற்ற வகுப்பார் ஆதிக்கமும் இருந்துவந்தன. முதலாளிகள் ஆதிக்கமும், எஜமான்–அடிமைத் தன்மையும் இயற்கை என்று சொல்லும் தன்மையில் தாண்டவமாடின. செல்வ நிலையோ, ஒரு லட்சம் என்பது தான் உயர்ந்தநிலை. 10 லட்சம் என்பது மிகமிக உயர்ந்த நிலையாய் இருந்தது. மற்றும் எவ்வளவோ கீழ்நிலைக்கு ஆளாகி இருந்தது மாத்திரமல்லாமல் அந் நிலைபற்றி வெட்கப் படாமலும் கவலைப்படாமலும் வாழ்ந்து வந்தோம்.

இப்படிப்பட்ட நிலையில், இந்த நிலைபற்றி யாருமே கவலைப்படாமல்—இவற்றின் விளைவுபற்றி யாருமே கவலைப்படாமல், 'எல்லாம் கடவுள் செயல், நம்மாலாவது ஒன்றுமே இல்லை'—என்று கருதி, நிம்மதியுடன் மக்கள் இருந்த காலத்தில் நான் ஒருவன் மாத்திரமே தீவிரமாய்ச் சிந்தித்து, இந்த நிலைக்குக் காரணம் நமது முட்டாள்தனமும், இதுவரை சிந்திக்காததுமேதான் என்று கருதி, துணிந்து கடவுளையும், மதத்தையும் சாஸ்திரங்களையும் முன்னோர் கூற்றையும் அழித்து, ஒழித்துக்கட்டி, மக்களுக்குப் புது எண்ணங்களை—அறிவை உண்டாக்கவேண்டும் என்று பாடுபட்டு வந்ததே இம் மாற்றங் களுக்கு வழியேற்படக் காரணமாயிற்று.

கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கூற்று ஆகியவைகளை எதிர்க்கவும், அழிக்கவும் துணிவு எனக்கு எப்போது, ஏன் வந்தது, எப்படி வந்தது என்றால், மேற்கண்ட அவை எல்லாம் மனித சமுதாயத்தின் காட்டுமிராண்டிக் காலமான சுமார் 2000, 3000 ஆண்டு களுக்கு முந்தின மிருகப் பிராயத்தில் ஏற்பட்டவைகளே. அக் காலம் அறிவில்லாத காலம் என்பது மாத்திரம் அல்லாமல், தாய்–மகன், தந்தை–மகள், அண்ணன்–தங்கை என்பவை களான முறைபேதங்கள் இல்லாத காலம்; அவை மாத்திரமா? பகுத்தறிவு, சிந்தனை அற்றகாலம்; வளர்ச்சி என்பதாக ஒரு தன்மை இருக்கிறது என்பதே தெரியாத காலம்.

சாதாரணமாக, கந்த புராணம், வாயு புராணம், பாரத புராணம், இராமாயண புராணம் முதலிய கடவுள் சம்பந்தமான, மத சம்பந்தமான, சாஸ்திர புராண இதிகாசங்களையும், சிவ புராணம், விஷ்ணு புராணம், பாகவதம், வெகு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பக்த விஜயம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய ஆதாரங்களையும், இலக்கி யங்களையும் பார்த்தாலே நல்லவண்ணம் உண்மை விளங்கும்.

மற்றும், இந்த மடமைக் கூளங்களை இன்றைய தினத்திலேயே நம்மில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள், அதிகம் புலவர், பண்டிதர், வித்வான், மகாமகோபாத்தியாய, பி. ஏ., எம். ஏ., டாக்டர் பட்டம் பெற்ற பெரிய படிப்பாளி, அறிவாளிகள் என்பவர்களெல் லாம்கூட நம்பி, அதன்படி நடக்கத் துணிந்தவர்களும் இருக்கிறார்கள் என்றால், பக்தி என்றாலே, இந்த காட்டுமிராண்டிக் காலத்தியக் கற்பனையை நம்புவதும், நடிப்பதும், அதற்கேற்ற கோயில், குளம், உற்சவம், பண்டிகைகள் ஆகியவைகளை ஏற்படுத்தி, பரப்பி, கொண்டாடி வந்தனர் என்றால், அறிவிலிகள் எவ்வளவு மோசமாக ஏற்பட்டவர்களாக—காட்டுமிராண்டிகளாக இருந்திருக்கமாட்டார்கள்?

அவ்வளவு ஏன், கிரணங்களை நம்புகிறவர்கள் எத்தனை பேர்? இன்றுகூட சாதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இந்தியாவுக்கு அப்பால் உலகம் இருப்பதாகவே தெரியாதோர் எத்தனை? இன்றைக்கு 150, 200, 300 ஆண்டுகளுக்கு முன் நம் நிலை என்ன என்று பார்ப்போமானால்—நெருப்புக் குச்சி ஏது? இரயில், கார், கப்பல், ஆகாயக் கப்பல் ஏது? நடக்க நல்ல பாதை ஏது? இந்த நிலையில் உள்ள மக்களின் மூட–காட்டு மிராண்டி நம்பிக்கையான—அதன் தோற்றங்களான கடவுள், மதம், சாஸ்திரம், பெரியோர் கருத்து என்பவைகளை ஒழிக்க ஒரு மனிதன் துணிவு கொள்வானானால், அத் துணிவில் அதிசயம் ஏது? எப்படி இருக்கமுடியும்?

பகுத்தறிவுள்ள மனிதனாக இருந்து கொண்டு, கடவுள், மதம், சாஸ்திரம், பெரியோர் கருத்து என்பனவாகியவைகளை நம்புவதும்; அழிக்காமல் ஒழிக்காமல் இருப்பதும், பின் பற்றுவதும்தான் முட்டாள்தனமான—காட்டுமிராண்டித்தனமான துணிவுகொண்ட தன்மை யாகும் என்று சொல்லலாம்.

நிற்க, மேலேகண்ட எனது துணிவான கருத்துக்களால், பிரச்சாரத்தால் இவ்வய்ம்பது ஆண்டுகளுக்கப்பால் நம் நாட்டாருக்கு, மனித சமுதாயத்துக்கு ஏற்பட்ட தீமை என்ன, கேடு என்ன என்று பார்த்தால்; ஒரு சாதாரண மனிதனுக்கும், அவன் கடுகளவு சிந்தனையாளனாக இருந்தால் ஒன்றும் ஏற்படவில்லை என்பதோடு, மேலே காட்டப்பட்ட அனேக நன்மைகள் ஏற்பட்டிருப்பது தெரியாமல் போகாதே!

அது மாத்திரமா? இந்தக் கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் கருத்து என்பவை களால் நாட்டுக்கு—மனித சமுதாயத்துக்கு ஏற்பட்ட கேடுகளும், வளர்ச்சித் தடைகளும் எப்படிப்பட்ட மூடனுக்கும் புரியாமல் போகாது. எனவே, நான் 93 ஆண்டுகள் வாழ்ந்ததை வீண்வாழ்வு என்று கருதவில்லை. என் பணிகளை வீண்பணி என்றும் கருதவில்லை.

இனிமேலும் வாழ்வதைத்தான் கஷ்டமாகக் கருதுகிறேன். என் உடல் நிலைமை மிக மோசமாகிவிட்டது. நினைவு சரியாக இல்லை. மறதி அதிகம். கண், காது சரியாக இல்லை. கால்கள், நடக்கவே முடிவதில்லை. அசதி அதிகம்.

இப்படிப்பட்ட நிலையிலும் சற்று மகிழ்ச்சி, உற்சாகம் கொள்ளுகிறேன் என்றால், இன்று நமக்கு வாய்த்திருக்கும் தி. மு. க. ஆட்சிப் பணிகளால்தான்.

காரணம் என்னவென்றால், இதன் முன்னர் இருந்த ஆட்சியின் யோக்கியதைகளை அவைகளால் நாட்டுக்கு—சமுதாயத்திற்கு ஏற்பட்ட கேடுகளை ஒழித்துக்கட்டாததால் சமுதாய விஷயத்தில், சாதி அமைப்பு விஷயத்தில், கல்வி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள்; என்ன கொள்கை மேற்கொண்டார்கள் என்பவைகளைச் சிந்தித்தால் தெரியவரும்.

ஏதாவது பொல்லாத வாய்ப்பால் இப்போதைய இந்த தி. மு. க. ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் காலம் ஏற்பட்டால், வேறு எந்த ஆட்சி வரும், அதன் பலன் என்ன ஆகும் என்பவைகளைச் சிந்தித்தால் பெரும் பயம் ஏற்படுகிறது. மற்றபடி மகிழ்ச்சியோடு இதை முடிக்கிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 94—17-9-1972]

14. சுதந்திரமும் சமுதாயமும்

நம் தேசம்—நாடு சுதந்திரம்பெற்று இன்றைக்கு இருபத்தைந்து (25) ஆண்டுகள் ஆகின்றன என்றாலும், இந்தக் கால்நூற்றாண்டில் அரசியலில்தான் மாறுதல்பெற்று வருகிறோமேயொழிய, சமுதாய அமைப்பில், கல்வியில், கீழ்நிலையில்—மிகமிகக் கீழ் நிலையில் இருந்துவருகிறோம்.

அரசியலில் நாம்பெற்ற மாறுதல் என்பது கெட்டதிலிருந்து கழிசடைக்கு (From bad to the worse) சென்று கொண்டிருக்கிறோம். ஒரு எடுத்துக்காட்டு வாக்கியம் சொல்ல வேண்டுமானால், ‘அவன் போனால் கலகமாகிவிடும்; நான் போய்ச் செருப்பாலடித்துவிட்டு வந்துவிடுகிறேன்’ என்று, ஒரு சமாதானம் செய்யவருகிறவன் சொன்னானாம். அதுபோல் இருக்கிறது நமது அரசியல் வளர்ச்சி.

நம்நாட்டு அரசியலில் வளர்ந்துவரும் மானங்கெட்ட, அயோக்கிய காலித்தனங்களும், கூலித்தன்மைகளும் யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகளும் வேறு எங்கும், எந்த நாட்டிலும் இல்லை என்கின்ற தன்மையில்தான் இருந்தும், வளர்ந்தும் வருகிறது. நமது

சுதந்திரமானது ஒரு யோக்கியன், ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு ஒரு ஆண் கூட நமது தேசத்தில், நாட்டில் இல்லாமல் செய்துவிட்டது. அது மாத்திரமா?

நம் நாட்டில் காலித்தனம், அயோக்கியத்தனம், கயவாளித்தனம், புரட்டு, பித்தலாட்டம், மோசடி, துரோகம், வஞ்சனை முதலிய குணங்கள், தன்மைகள் இல்லாத மக்களையோ, அரசியல் கட்சிகளையோ, தலைவர்களையோ, அரசியல்வாதிகளையோ காண முடியவே முடியாதபடி செய்துவிட்டது. பெரிய பித்தலாட்டம், துரோகம், வஞ்சனை இவைகளில் தேர்ச்சிபெற்றவர்கள்தான் தலைவர்களாகிறார்கள்; தேசியவாதிகளாகிறார்கள்; தேசபக்தர்களாகிறார்கள்.

இவை வரவர நம் நாட்டுப் பெண்களையும் தழுவிக்கொள்ளும் நிலை வளர்கிறது. அவ்வளவு மாத்திரமா? மாணவர்களையும் இழுத்துக்கொள்ளும் என்பதோடு அதிகாரிகளையும், அரசியல் சிப்பந்திகளையும் சூழ்ந்துகொள்ளும் என்று உறுதிகொள்ள வேண்டிய அளவுக்கு வளர்ந்துவருகிறது.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால், மக்களுக்கு இருக்கவேண்டிய மானம், அவமானமற்ற தன்மை, கண்ணியம், நேர்மை முதலிய சாதாரண குணங்களை நமது சுதந்திரம் எரித்துச் சாம்பலாக்கி வருகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்தச் சுதந்திரம் உள்ளவரை மக்களில் நேர்மையுள்ள யோக்கியன் இருக்கமாட்டான் என்பதோடு, தோன்றவேமாட்டான் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், இந்தச் சுதந்திரம் ஏற்பட்டதே பித்தலாட்டக்காரர்கள், நாணயமற்றவர்கள், மக்களை ஏமாற்றி, வஞ்சித்துப் பழக்கப்பட்டுத் தேறினவர்கள், பொறுப்பற்ற காலிகள் முதலியவர்களது முயற்சியினால், தந்திரத்தினால் என்றால் இதில் யோக்கியம், நேர்மை, உண்மை எப்படி இருக்கமுடியும்?

ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு கல்லுருவத்திற்கும் அயோக்கியத்தனங்களைப் பரப்பும் ஸ்தாபனமான ஒரு கோவிலுக்கும், ஒரு மடத்திற்கும், ஒரு சபையாருக்கும், ஒரு சாமியாருக்கும், சங்கராச்சாரியாருக்கும் ஒரு கோடி ரூபாய் வருமானமிருந்தாலும், சொத்து இருந்தாலும், வரவு-செலவு இருந்தாலும் அனுமதிக்க வேண்டியது; கணக்கு, வரி கேட்கக்கூடாது.

ஆனால், உழைத்துப் பாடுபட்டு, திருடாமல்-ஏமாற்றாமல் தேடிய சொத்துக்களுக்கு அளவு-அதாவது ஒருவனுக்கு இவ்வளவுதான் உரிமை என்பது ஆட்சிக் கொள்கைத் திட்டம் என்றால் இந்த ஆட்சியின் தன்மை எப்படிப்பட்டது? முன்னவன் செல்வம் எப்படி நாசமாகிறது? யாருக்குப் பயன்படுகிறது? பின்னவன் செல்வம் யாருக்குப் பயன்படுகிறது?

கார்த்திகை என்கிறான்; குடம்குடமாய், பீப்பாய் பீப்பாயாக நெய், வெண்ணெய், எண்ணெய் பாழாகிறது. இலட்சதீபம் என்கிறான்; டின் டின்னாக எண்ணெய் பாழாகிறது. அபிஷேகம் என்கிறான்; நெய், எண்ணெய், பால், தயிர் படிபடியாக ஜலதாரைக்குப் போகிறது. மற்றும் இவை போன்றவைகளுக்கெல்லாம் கேள்வி கேட்பாரே கிடையாது.

இந்தப் பார்ப்பனர் வாழும் நாட்டைவிட வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட பழக்கமோ, வழக்கமோ, சர்க்கார் அனுமதியோ கிடையாதே! இங்கு சுதந்திரத்தில் கேள்வி கேட்பாரும் கிடையாது. ஆனால், மனித சமுதாயத்தில் உலகத்திற்கே மாறுதலாக நம்நாடு, தேசம் தவிர வேறு எந்த நாட்டிலும் தேசத்திலுமில்லாத மாதிரி மனிதனில் முதல்வன் (பார்ப்பான்), நாலாதவன் (சூத்திரன்), அய்ந்தாமவன் (பஞ்சமன்) என்கின்ற பிரிவு கடவுளின் மதத்தில் உள்ள ஆதாரங்களின் பெயரால், அதாவது சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் 4ஆம் 5ஆம் சாதி, 100-க்கு மூன்றேபேர் ஒன்னாம் சாதியென்று பிரிக்கப்பட்டு, அதைக் காப்பாற்றுவதே சுதந்திரத்தின் சட்டம் என்றும் ஏற்பாடு செய்து, சுதந்திர ஆட்சியும் சட்டமும் அமுல் செய்து ஆதரித்து வருகிறது. இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா, கொடுங்கோன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.

அது மாத்திரமா? கீழ்மக்கள் என்று சொல்லப்படுகிற, சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் இருக்கும் நாட்டில் மேன் மக்கள் என்று சொல்லப்படுகிற, 100-க்கு 3 பேரையே கொண்ட 'முதலாவது' சமுதாயமாகிய ஒரு பார்ப்பனப் பெண்ணின் ஆட்சியில் சமுதாய அமைப்பைக் காப்பாற்றுகிற சட்டத்தை வைத்து ஆளுகிற ஆட்சியில் குடிகளாயிருப்பது என்பது சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியில் மானங்கெட்டு, ஈனத்தனமாகக் குடிகளாக இருக்கிறோம்; இருக்கவேண்டும் என்பதும் ஈன அடிமைத்தன்மை ஆட்சியா, இல்லையா என்று கேட்கிறேன்.

சுதந்திரம் கிடைத்தவுடனே பார்ப்பான் சட்டம் செய்தான். அந்தச் சட்டப்படியே தேர்தல் வைத்தான். யார் வெற்றி பெற்றாலும் அந்தச் சட்டப்படியே ஆளவேண்டும் என்று அமுல்படுத்தி விட்டான். பரம்பரையாய்ப் பார்ப்பானே ஆட்சித் தலைவராய் வரும்படி ஆட்சி அமைப்பைச் செய்து கொண்டான்.

தேசத்தில் உள்ள மற்ற மக்கள் ஒன்றுசேர முடியாத நிபந்தனைகளைக் கட்டாயச் சட்டமாக ஆக்கிக் கொண்டான். 50 கோடி மக்கள் உள்ள தேசம் ஒன்று சேராதபடி 16 பிரிவுகளாகப் பிரித்து, இது உலகம் உள்ளவரை நிரந்தரமாகப் பிரிந்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமும், பிரிந்துகொள்ள விரும்புகிறவனுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இல்லை என்றும் கிரிமினல் தண்டனை என்றும் ஆக்கிக் கொண்டு, மேல் சாதியானுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டு, பரம்பரை உரிமைபோல் நடத்தப்பட்டுவரும் ஆட்சியில் இருக்கிறோம். இதை அடிமை ஆட்சி என்றோ, அன்னிய ஆட்சி என்றோ சொல்லக்கூடாத நிலையில் இருக்கிறோம்.

மற்றும், இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டு ஆன பின்பும் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள், வெறும் கையெழுத்து மாத்திரம் போடத்தக்க மக்களையும் சேர்த்து எண்ணிப் பார்த்தால் 100-க்கு 39 மக்களே இருக்கிறார்கள். அதாவது, இன்னும் 100-க்கு 61 மக்களுக்கு எழுத்து வாசனையே இல்லை. அதாவது, இந்த 39 பேர் பெரிதும் நகரவாசிகளேதான். அதிலும், பெண்கள் சமுதாயத்தில் 100-க்கு 27 பெண்கள்தான் படிக்கத்தெரிந்தவர்கள். அப்படியானால், இனியும் நமதுநாட்டில் பெண்கள் 100-க்கு 73 பேர் படிக்கத் தெரிய வேண்டியவர்கள் ஆவார்கள். இவர்களும் கிராமங்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்றே சொல்லலாம்.

இந்த இலட்சணத்தில், இந்த நாட்டு மக்களாகிய நாம், நமக்கு வேண்டிய ஒரு நீதிபதியை நியமித்துக்கொள்ள உரிமை இல்லை. பார்ப்பானாகவும், பார்ப்பானுக்கு வேண்டியவனாகவும் மூடநம்பிக்கையில் ஈடுபட்டுப் பார்ப்பானுக்கு அடிமையாய் இருப்பவனாகவும்தான் நியமிக்கப்பட முடியும்.

உதாரணம் வேண்டுமானால், இந்தநாட்டு நீதிபதிகளிடம் பார்ப்பனருக்கு நம்பிக்கை இல்லாமலே போய்விட்டது. தொட்டதற்கெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுக்கே போய் பிராது கொடுக்கிறார்கள். வேறு மாகாணத்துக்கு மாற்றுதல் கேட்கிறார்கள். யார் என்றால் சாதி, மதம் முதலிய மூடநம்பிக்கைச் சனுகையால் வாழ்பவர்கள்.

எனவே, நம் நாட்டின் சுதந்திரத்தின் யோக்கியதை இந்த நிலையில் இருக்கிறது என்பதுடன் நமக்கு உண்மையான சுதந்திரம் வேண்டுமானால், பார்ப்பனர் கருதுவது போலவே, தமிழ்நாடு தனித்த ஏகபோக ஆட்சியாய் இருக்கவேண்டும். அப்படிக்கு இல்லையானால், அதுமுடியாது என்பதானால் அன்னிய தேசத்தான் ஆட்சிதான் வேண்டும் என்று நினைக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இதுதான் நமது இன்றைய சுதந்திரம்.

[பிறந்த நாள் விழா மலர் 94—17-9-1972]

15. நமது இலட்சியம்

எனது 95ஆம் ஆண்டு பிறந்த நாள் துவக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுதவேண்டி இருக்கிறது. அதை முன்னிட்டு இக் கட்டுரை எழுதுகிறேன். அப்படி எழுதப்படும் இக் கட்டுரை என்னால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால், அடுத்த ஆண்டு மலர் எழுதப்படவேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ? இல்லையோ என்கிற பிரச்சினை மாத்திரமல்லாமல், எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ இருக்காதோ என்பதே முக்கிய காரியமாகும்.

ஏனெனில், இன்னும் நாம் இருப்பதுபோலவே அதாவது, இந்திய ஆட்சி என்பதற்குள் பிரஜையாகவும், சமுதாயத்தில் நாலாஞ்சாதி (சூத்திர மகனாகவும்) சட்டப்படி, சாஸ்திரப்படி பார்ப்பானின் தாசிமகன் என்னும் பெயருடன், நமது தாய்மார்கள் பார்ப்பானின் தாசிகளாகவும் இருக்கும் தன்மையாலேயே இருப்போமோ என்கின்ற கருத்தைக்கொண்டே இப்படி எழுதுகிறேன்.

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் பிரஜையாய் இருக்கும்வரை இந்துவாய், அதாவது, கிறிஸ்தவனாகவோ, முஸ்லிமாகவோ நாம் மதம்மாற்றிக்கொள்ளாத வரை, நாம் நமது பண்டார சன்னதிகள் உட்பட பவுத்தனுக்கும்–ஜெயினனுக்கும் சமானமாக இருக்கும்படியாக இருந்தாலும், பகுத்தறிவுவாதியாக இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்துவருபவனாக இருந்தாலும் சூத்திரனாகத்தான்—பார்ப்பானின் தாசிமகனாகத்தான் இருந்தாகவேண்டும்.

இதுதான் இன்றைய இந்திய அரசியல் சட்டமாகும். இந்தச் சட்டத்தைத் திருத்தவோ, மாற்றவோ நம் மக்களுக்கு ஒருநாளும் சக்தியோ, உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அது மாத்திரமல்லாமல், இந்திய ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டை விலக்கிக்கொள்ள முயற்சிசெய்தே ஆகவேண்டிய ஒரு கட்டாயமான—நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பதுபற்றி நமக்கு முடிவு செய்துகொள்ள முடியாமல் இருந்தாலும், இம் முயற்சியில் நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயேதான் இந்தப்படி எழுதுகிறேன்.

நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் பிரச்சினை எப்படி இருந்தாலும், சமுதாயப் பிரச்சினையில் நாம் இன்று இருக்கும் இழிதன்மையில் இருந்து, அதாவது சூத்திரனாக, தாசிமகனாக நம் தாய்மார்கள் தாசிகளாக சட்டப்படி, சாஸ்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் நாம் இருக்கமுடியுமா?

இந்தியாவில் நாம் இருக்கும்வரை இந்துவாகத்தானே இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே முஸ்லிம், கிறிஸ்தவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர், தாசிமக்கள்தான் என்று இருப்பதால் ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களாவார்கள்.

ஆதலால், நாம் உடனடியாக விடுதலை, அதாவது இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகி, சுதந்திரத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாகவேண்டியவர்களாக இருக்கிறோம். இம் முயற்சிக்கு இன்றைய தி. மு. க. ஆட்சி இணங்கும் என்று கருத முடியாது. ஏனெனில், தி. மு. க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்தியக் கூட்டாட்சி ஆதிக்கத்திற்கு உள்பட்ட மாகாண சுயாட்சிதான் அது விரும்புகிறது.

மாகாண சுயாட்சி என்றால், அரசியலில்தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்துகொள்ள முடியுமே தவிர, சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ய முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் சமுதாய (மத) சம்பந்தமான காரியங்களைப்பற்றி பழைய மனுதர்ம நிலைமையை மிகமிகப் பலப்படுத்திக்கொண்டபடி இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கர்ப்பக் கிரகத்திற்குள் சூத்திரன், அதாவது பண்டார சன்னதி உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்ல முடியாதென்று உயர் நீதி (சுப்ரீம்) மன்றத் தீர்ப்பு இருப்பதினாலும், இன்னும் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கென்று போகும் யாருமே தீண்டத் தகாதவர்கள்போல் வாயில்படிக்கு வெளியில்தான் எட்டி நிற்க வேண்டும் என்றால், மற்றபடி எதில் நாம் மாறுதலைக் காண முடியும்?

இன்று அமுலில் இருக்கும் 'இந்து லா' என்னும் சட்டத்திலும், பல உயர் நீதி மன்றங்களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர்களை மிக மிக இழிவாகக் கூறி நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்கு சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால், 'கிறிஸ்தவர்கள்–முஸ்லிம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள் ஆவார்கள்'. இதன்படி நாத்திகன், பகுத்தறிவுவாதி, பரதேசி முதலிய சகலரும் இந்துக்கள் ஆகி சூத்திரர், பார்ப்பானின் தாசி மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கிவிடும் என்றுதான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள்—இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முக்கிய கவனம் இருக்கிறது. அன்றியும், நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே பயப்படுகிறார்கள். காரணம், பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்ல வேண்டுமே என்றும் பயப்படுகிறார்கள். 50 வருஷ காலமாகச் சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு—பல பதவி உத்தியோகம் பெற நேர்ந்ததோடு, அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல் சமுதாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்குப் பலம் பெற்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே, நாம் சட்டத்தைப்பற்றிப் பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும் சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துகொண்டு முன் வரவேண்டியது ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'சுதந்திரத் தமிழ்நாடு—எனது இலட்சியம்' என்ற சொற்களை ஒவ்வொருவரும் இலட்சியச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். பதினாயிரக் கணக்கில் பாட்ஜுக்கு ஆர்டர் கொடுத்துத் தயார்செய்து மக்களுக்கு வினியோகிக்க ஆசைப்படுகிறேன். பொது மக்களுக்கும் இதுவே இலட்சியச் சொல்லாக (கூப்பாடாக) இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பொது மக்களே! இளைஞர்களே! பள்ளி, கல்லூரி மாணவர்களே! மாணவிகளே! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்!

[பிறந்த நாள் விழா மலர் 95—17-9-1973]

பகுதி VI

உலகம்

1. இனிவரும் உலகம்

1. இலங்கை உபந்யாசம்

அன்புள்ள தலைவர் அவர்களே! வீரமும், எழுச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள வாலிபர்களே!

தலைவரின் முன்னுரையிலும் உபசாரப் பத்திரங்களிலும், மற்றும் பேசியவர்களும் அளவுக்கு மீறி என்னைப்பற்றியும், எனது சிறு தொண்டைப்பற்றியும் புகழ்ந்து கூறியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட புகழ்ச்சிகளுக்கு நான் சிறிதும் தகுதியுடையேன் அல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு கூடவே, இதன்மூலம் நீங்கள் எனது கொள்கைகளையும், தொண்டையும் ஆதரிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தோழர்களே! எனது அபிப்பிராயத்திற்கும், முயற்சிக்கும் குறிப்பிடத் தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றது என்பதை நான் அறியாமலோ, அல்லது அறிந்தும் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்த போதிலும், யார் எவ்வளவுக்கு தூஷித்து விஷமப் பிரச்சாரம் செய்த போதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும்படி சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பிய போதிலும், உலகத்தில் எல்லாப் பக்கங்களிலும் வேத புராண சரித்திர காலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், சாதி, மதம், தேசம் என்னும் பேர்களால் பிரிவுபட்டு, உயர்ந்தவன்–தாழ்ந்தவன், ஏழை–பணக்காரன், முதலாளி–தொழிலாளி, அரசன்–பிரஜைகள், குரு–சிஷ்யன் என்பனவாகிய பல தன்மையில் வகுப்பு வித்தியாசங்களுக்காளாகி மேல்கீழ்தரத்தோடு கட்டுப்பாடான சமுதாயக் கொடுமைகளாலும், அரசாங்கச் சட்டங்களாலும், கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது–வருகின்றது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இவ் வகுப்புப் பேதங்களால் மக்கள்படும் துன்பத்தையும், அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும், மேடுகளிலும், தொழிற்சாலைகளிலும் கஷ்டமான வேலைகளைச் செய்தும், வயிறாரக் கஞ்சி இல்லாமலும் எத்தனை பேர் அவதிப்படுகின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவர்களது நிலைமையை உங்கள் மனத்தில் உருவகப்படுத்திப் பாருங்கள். இந்தக் கொடுமைகள் எத்தனை காலமாக இருந்து வருகின்றன? இன்றா, நேற்றா? இது அன்னிய அரச ஆட்சியாலா? குடியாட்சி இல்லாததாலா? தர்ம தேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்! உலக சரித்திரம் கிடைத்தது முதல், உலகத்தில் எந்தப் பாகத்தில் எந்த ஆட்சியால் என்றைய தினம் இந்தக் கொடுமைகள் இல்லாதிருந்தன என்பதைச் சற்று நினைவுக்குக் கொண்டுவந்து பாருங்கள்!

தோழர்களே! இனி இதற்கு அடிப்படையாகவும், அரணாகவும் இருந்துவரும் காரணங்கள் எவை என்பதை நீங்கள் சற்று நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தீர்களானால், இக் கொடுமைகளுக்கு முக்கிய காரணம் முற்கூறிய கடவுள், மதம், சாதியம், தேசியம் என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி—அதன் பயனாகப் பெரும்பான்மையான மனித சமூகத்தை மடமையாக்கி—ஏய்த்து, அடிமைப்படுத்தித் தங்கள் சுய நலமே பிரதானமெனக் கருதிச் சோம்பேறிகளாய் இருந்துகொண்டு சுகம் அனுபவித்து வரும் ஒரு சிறு கூட்ட மக்களின் சூழ்ச்சியே யொழிய வேறில்லை என்பதைத் தெள்ளத் தெளிய உணர்வீர்கள்!

இந்தச் சூழ்ச்சிகளை யாராவது வெளிப்படுத்தக் கிளம்பி விட்டாலோ, உடனே அப்படிப்பட்ட காரியத்தை—நாத்திகம் என்றும், மதத் துரோகம் என்றும், தேசத் துரோகம் என்றும், தேசியத்திற்கு விரோதமென்றும் சிலர் சொல்லி அடக்கிவிடப் பார்க்கிறார்கள். இப்படிச் சொல்லி அடக்குகின்றவர்கள் யார் என்று பார்த்தாலோ அவர்கள் பெரிதும் மேல் நிலையிலிருந்து கொண்டும், சரீரத்தினால் சிறிதும் பாடுபடாமல் சோம்பேறி வாழ்க்கையில் இருந்து கொண்டும் அன்னியன் உழைப்பில் சுகமனுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும், மற்றும் அவர்களால் தங்கள் நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக என்று ஏற்படுத் தப்பட்டிருக்கும் அவர்களது கூலிப் பிரச்சாரகர்களுமேயாவார்கள். அதோடு, ஈன சாதிய ராயும், ஏழைகளாயும், தொழிலாளர்களாயும், கூலிகளாயும் கருதப்பட்டும், கீழ் நிலை யிலிருந்து வெகுகாலமாய்த் தலைமுறை தலைமுறையாக இழிவு படுத்தப்பட்டும் அரைப் பட்டினி கிடந்து உழலும் மக்களிலும் சிலர் அவர்களுடன் சேர்ந்துகொண்டு மேற்கண்டபடி கூப்பாடு போடுவதையும் பார்க்கலாம். இதற்குச் சமாதானம் சொல்லுவதென்பது சிலருக்குச் சற்று கஷ்டமானதாகக் காணப்பட்டாலும், கூர்ந்து கவனித்தால் மேற்கண்ட உயர்நிலையை நிரந்தரமாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்ற கருத்தின்மீது செய்துகொண் டிருக்கும் ஏற்பாடுகளான கடவுள், மதம், தேசியம், தேசம் ஆகியவற்றின் ஸ்தாபனங்களும், அவற்றுக்குள்ள கவசமும், காப்பும் அவை சம்பந்தமான பிரச்சாரங்களுமேதான் காரணம் என்பது தெளிவாய் விளங்காமல் போகாது.

ஆகையால், மேற்கண்ட கஷ்டப்படும் மக்களுக்கு விடுதலையும் சமத்துவமும் வேண்டுமானால் முதலில் அக் கவசங்களையும், காப்புகளையும் உடைத்தெறியவேண்டும். அவற்றின் பிரச்சாரங்களையும் முறியடித்துத் துரத்தவேண்டும். அதில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட்டபோதிலும், கஷ்டப்படும் மக்கள் ஒரு நாளும் விடுதலை அடைய முடியாது. இக் காரியம் செய்வதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. செய்பவர் களுக்கு மகத்தான உறுதியும், தன்னல மறுப்பும் வேண்டும். அனேக துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும், பழிப்புகளுக்கும், நஷ்டங்களுக்கும் ஆளாகத் தயாராயிருக்கவேண்டும். 'ஊரார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்—சொல்லுவார்கள்' என்பதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கக்கூடாது. போலி மானாபிமானங்களையும், கவுரவங்களையும், வசவு களையும் துச்சமாய்க் கருதவேண்டும். பாமர மக்களால், சுயநல சூழ்ச்சிக்காரர்களால் வசவு கேட்கவும், உயிர் விடவுங்கூடத் தயாராயும் இருக்கவேண்டும். இந்த நிலையில் உள்ள வர்களால் அல்லாமல் வேறு யாராலும் இக் காரியங்கள் ஒரு சிறிதும் செய்ய முடியாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

தோழர்களே! கடவுள், மதம், சாதியம், தேசியம், தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக—தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல; சகல துறைகளி லும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளே யாகும். இவ்வாறு புகுத்தப்படவேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால் அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அன்னியர் உழைப் பாலேயே வாழவேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமேயாகும்.

ஆதியில், மனிதர்கள் காடுகளில் தனிமையாய், சுயேச்சையாய்த் திரிந்த—இயற்கை வாழ்விலிருந்து சமூகக் கூட்டு வாழ்க்கைக்கு வரும்போது, அவனவன் தனக்கு வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்துகொண்டும், அவசியமான பரஸ்பர உதவிகளை வாங்கிக்கொண்டும் ஒரே சமூகமாய், சமத்துவமாய் வாழலாம் என்று எண்ணியே நடந்தானே ஒழிய—மற்றபடி மற்றொருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்கு வேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக்கொண்டு ஏய்த்து, அவனை உலக சுகபோகங் களில் பட்டினி போட்டு, தான் மாத்திரம் சோம்பேறியாய் இருந்து வாழ்ந்துகொண்டு எல்லா

சுகபோகங்களையும் தானே அனுபவித்துக்கொண்டு இருப்பதற்கோ, அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவ்வுழைப்பின் பெரும் பயனை மற்றவன் அனுபவிக்க விட்டுவிட்டு, தான் பட்டினி கிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மையுள்ள மனிதர் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனால், நாள் ஏற ஏற மக்களுக்குள் சிலருக்குப் பேராசையும், பொறாமையும், சோம்பேறித்தனமும் வலுக்க வலுக்க—இவற்றிலிருந்து செல்வனும், அரசனும், குருவும் ஏற்பட்டுப் பிறகு அவற்றை நிலைநிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியவைகளைக் கற்பித்து—பிறகு அவைகள் மூலம் கடவுள் செயல், முன் ஜென்மம், பின் ஜென்மம், கர்மம், பாவம், புண்ணியம், மேல் உலகம், கீழ் உலகம், தீர்ப்பு நாள், மோட்சம், நரகம் ஆகியவைகளும் கற்பிக்கப்படவேண்டியதாய்விட்டது.

இந்தக் கற்பனைகளின் பயன்தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும், ஏமாற்றப்படவும், கொடுமைக்குள்ளாகவும்-மற்றவர்களுக்கு அடிமையாகி உழைக்கவும்—உழைத்தும் சரியான கூலி கிடைக்காமல் பட்டினி கிடந்து உழல்வதைப் பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளவுமான காரியங்கள் நடந்துவருவதுடன் அவை எங்கும், என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியாயினும் இந்த நிலை அடியோடு அழிபட வேண்டும்; அதற்காக அதன் காப்புகளான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசியம், சாதியம் என்பவைகளும் அவற்றின் பேறுகளான ஆத்மா, முன் ஜென்மம், கர்மம், தீர்ப்பு, மோட்ச நரகம், பாவ புண்ணியம் ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும், அவற்றின் ஸ்தாபனங்களும் உடைத்தெறியப்பட வேண்டும்.

கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடுபட்டும் பட்டினி இருக்க நேருவதையும், 'யோக்கியமாய்', 'நாணயமாய்' நடந்தும் 'இழிவாய்', 'கீழ் மக்களாய்'க் கருதப்படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுவதுதான் காரணம் என்பதை உணராமல் தங்களுடைய முன்ஜென்ம கர்ம பலன்—தலைவிதி—கடவுள் செயல் என்பதாகக் கருதிக்கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யாமலும் சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு, தங்கள் நிலைமையைப்பற்றிச் சிறிதும் அதிருப்திகூட அடையக் கூடாதென்று கருதி தங்கள் நிலையைப் பற்றித் தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்துகொள்ளுகிறார்கள்; வெளியில் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள். ஏனெனில், கஷ்டப்படுகின்ற மக்களுக்குக் கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படியென்றால்,

'ஓ கஷ்டப்படுகின்ற மனிதனே! கஷ்டப்பட்டும் பட்டினி கிடக்கின்ற, இளைத்த ஏழை மனிதனே! நீ உனது முன் ஜென்ம பாப கர்ம பலத்தினால்—தலை விதியால்—கடவுள் சித்தத்தால், இம் மாதிரித் துன்பத்தை அனுபவிக்கின்றாய். இந்த ஜென்மத்தில் நீ உனக்கேற்பட்ட இந்த நிலைமையைப் பொறுமையுடன் ஏற்றுச் சமாதானமும் சாந்தமும் அடைந்திருப்பாயாகில், அடுத்த ஜென்மத்தில் சுகப்படுவாய்; மேலான பிறவி பெறுவாய்; அல்லது மேல் உலகில் மோட்சம் என்னும் மேன்மையை அடைவாய்—கடவுள் சன்மானம் அருளுவார்' என்கின்ற உபதேசமேயாகும்.

இந்தப் 'பொறுமை உபதேசமும்', 'சாந்த உபதேசமும்', 'சமாதான உபதேசமும்'—மக்களைக் கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும் செய்து, அவர்கள் கஷ்டத்திலிருந்தும் இழிவிலிருந்தும் முன்னேற முடியாமலும், விடுபட முடியாமலும், சுயமரிதை உணர்ச்சி பெறாமலும் இருந்து உயிர் வாழும்படி செய்து வந்திருக்கின்றன.

இவ்வளவு மாத்திரந்தானா? இந்தக் கடவுள் உணர்ச்சியும் மதமும்—செல்வந்தர்களுக்கும், மிராசுதார்களுக்கும், மற்றும் உத்தியோகம், வியாபாரம், லேவாதேவி என்ற பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும் பணம் கொள்ளைகொண்டு மற்றவர்களைப் பட்டினி

போட்டுப் பெரும் பணம் சேர்க்கும் பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ—அது,

'ஓ, பிரபுக்களே! செல்வவான்களே! ஏராளமாக மேலும் மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே! இலட்சுமி புத்திரர்களே! நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய கர்மங்களால்—கடவுள் உங்கள்மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலையை அடைந்திருக்கிறீர்கள்! இவ்வேராளமான பணவருவாய்கள், உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச் சுக போகம் உங்களுக்குக் கிடைத்ததற்குக் காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால், நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும், கடவுளுக்குக் கோயில் கட்டுவதன் மூலமும் கடவுள் பக்தர்களான பாதிரி, குரு, பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதைசெய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி, இந் நிலையை நிலை நிறுத்திக்கொள்வதுடன்—மோட்ச லோகத்திலும் சுலபமாக இடம் சம்பாதித்துக் கொள்ளுங்கள்!' என்பதேயாகும்.

ஆகவே, தோழர்களே! இந்தக் காரணங்களாலேயே மக்களில் உயர்வு-தாழ்வும், எஜமான்-அடிமையும், முதலாளி-தொழிலாளியும், அரசன்-குடிகளும், குரு-சிஷ்யனும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

உலகிற்கு அரசன் அரசாட்சி என்பதாக ஒருவகை இருந்துவருவதின் காரண மெல்லாம்கூட, செல்வவான்களின் செல்வங்களைக் காப்பாற்றவும், சோம்பேறி வாழ்க்கைகளையும், அவர்களது தத்துவங்களையும் பிறர் இகழாமல் இருக்கவுமே ஒழிய—மற்றபடி மக்கள் சமூகம் துன்பப்படாமலோ, மற்றவர்களால் கொடுமைப்படுத்தப்படாமலோ, சகல துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ, இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இதுபோலவேதான், முன் குறிப்பிட்ட கடவுள் மத உணர்ச்சி கற்பிக்கப்படுவதும்—ஏழைகள் தாங்கள்படும் கஷ்டங்களுக்குக் காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேறிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.

உதாரணம் வேண்டுமானால், இன்றைய தினம் கஷ்டப்படுபவராகவும், இழிவு படுத்தப்பட்டவராகவும், பட்டினிகிடந்து துன்பப்படுபவர்களாகவும், ஏழைகளாகவும், காணப்படும் மக்களில் அனேகரை அணுகி, அவர்களது இவ்விதக் கஷ்டநிலைக்குக் காரணம் என்ன என்று கேட்டுப் பாருங்கள்! உடனே, அவர்கள் சற்றும் தயக்கமின்றி, தங்களின் கஷ்ட நிலைக்குக் காரணம் தங்கள் 'தலைவிதி' என்றும், 'முன்ஜன்ம கர்மபலன்' என்றும், 'கடவுள் சித்தம்' என்றும், 'ஆண்டவன் கட்டளை' என்றுந்தான் பதில் சொல்லுவார்களே யொழிய, பிற மனிதர்களால்—அரசாங்கச் சட்டத்தால்—செல்வவான்களின் சூழ்ச்சியால், சோம்பேறிகளின் தந்திரத்தால், தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அவதிப் படுவதாக ஒரு நாளும் சொல்லமாட்டார்கள். அதனால்தான், ஏழைகளின் கஷ்டங்களை விலக்க வேண்டுமென்பவர்கள் முதலில் அதற்கு அஸ்திவாரமான காரணகாரியங்களைக் கண்டுபிடித்து அழித்தெறிய வேண்டும் என்று சொல்லவேண்டி இருக்கின்றது.

கடவுள் என்பது அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்த போதிலும், அது, மனித சமூகத்தில் 100-க்கு 99 மக்களைப் பிடித்துத் தன்வயப்படுத்தி, மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியிருந்த போதிலுங்கூட, 'கடவுள் என்பது இன்னது' என்று குறிப்பாக, குளறுபடி இல்லாமல்—தெளிவுபட உணர்த்தியவர்களோ, உணர்ந்தவர்களோ, இதுவரையில் காணக் கிடைக்கவில்லை. பொதுவாக அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி, அவர்களைப் பயப்படுத்தி வைக்க வேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறொரு (மானச) உலகத்தையும், பாவ புண்ணியத்தின் பயனையும், மோட்ச நரகத்தையும், கற்பித்து அதைப் பரப்பப்

பலவித ஸ்தாபனங்களையும் உண்டாக்கி—அதன் பிரச்சாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத் தீர வேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்திவிட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும், அதன் பிரச்சாரம் நடக்கவும் மக்களைத் தன்வயப்படுத்தவும் ஆன காரியங்கள் நடந்துகொண்டே வருகின்றன. 'கடவுள் என்றால் என்ன?' என்பதை உணருவதற்கில்லாமல்—உணர வேண்டும் என்று நினைப்பதற்கில்லாமலும் இருந்துவருகிறது.

யாராவது, கடவுளைப்பற்றி நெருக்கிப் பிடித்துக் கேட்டால் அது முழுவதும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கொருவித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல் வேறுவிதமாய், குறிப்பான பதில் கிடைப்பது என்பது அரிதாகவே இருக்கிறது.

கடவுள் என்பது சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வ சக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனிப்பொருளென்று சொல்லப்பட்டுவிட்டு—உடனேயே, 'அது கண்ணுக்குத் தெரியாதது' என்றும், 'மனத்திற்குத் தோன்றாதது' என்றும் சொல்லப்படுவதோடல்லாமல்—அதற்கு உருவம் இல்லையென்றும், குணம் இல்லையென்றும், இன்ன தன்மையது என்று விளக்கமுடியாதது என்றும் சொல்லப்பட்டுவிடுகின்றது.

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்மையை—அதாவது, 'சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உடையதும், கண்ணுக்கும் மனத்திற்கும் தென்படாததும், குணமும், உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக் கூடிய தன்மையும் இல்லாதது'மான ஒரு கடவுளை நிலை நிறுத்தவும்—அதைப்பற்றி மக்கள் நம்பிக்கை கொள்ளவும், 'கடவுளால் உண்டாக்கப்பட்ட' மக்களிலேயே பலர் வக்காலத்து பெற்றுக் கடவுளை நிரூபிக்க, ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்க ஈனமான முறையிலும் எவ்வளவோ பாடுபட வேண்டியிருப்பதுமேயாகும்.

மற்றும், அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர்கள்—தங்கள் சொந்த நிலையில், தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வதாகவும்—தங்களால் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்லுவதாகவும் நினைத்தே, பேசியும் நடந்தும் வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல், மற்றவர்களால் செய்யப்படும்—சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்வதாகவும், சொல்லுவதாகவும், எழுதுவதாகவும் கருதுவதுடன், மற்றவர்கள் மீது துவேஷமும் வெறுப்பும், விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி நடவுங்கள் என்றும், தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுங்கள் என்றும் கோருகிறார்களே யல்லாமல், 'இவையெல்லாம் சர்வ வல்லமை உள்ள கடவுள் செயலால்தான் நடக்கின்றன—நடந்துவிடும்' என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

மற்றொரு சாரார் 'கடவுளைப் பார்க்காவிட்டாலும், உணராவிட்டாலும் உலகப் படைப்புக்கும் நடப்புக்கும் ஏதாவதொரு கர்த்தாவோ காரணமோ இருக்க வேண்டாமா? அப்படிப்பட்ட கர்த்தாவோ, காரணமோதான் கடவுள்' என்று சொல்லுகிறார்கள்.

மற்றொரு சாரார், 'உலகத் தோற்றத்திற்கும், நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தி (Force) ஆவது இருக்குமல்லவா? அதுதான் கடவுள்' என்கிறார்கள்.

மற்றொரு சாரார், 'இயற்கையே—அழகே—அன்பே—சத்தியமே கடவுள்' என்றும், இன்னும் பலவாறாகச் சொல்லுகிறார்கள். ஆனால், நமது நாட்டைப் பொறுத்த மக்கள், கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து, சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டுபிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும் சுகபோகங்களையும் கற்பித்து அதற்குக் கோயில், பூசை, உற்சவம், கலியாணம், சாந்தி முகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து, வணக்கத்திற்காக வென்று கோடானகோடி ரூபாய்களைச் செலவுசெய்யச்

செய்து—அதுவும் ஏழை மக்களை வாட்டி வளைவெடுத்து தொல்லைப்படுத்தியும் வருகிறார்கள். இப்படியாகக் கடவுளைப்பற்றி இன்னும் பலவிதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப்படும் காரியத்திலும், பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்த விதமான கடவுளைப் பற்றி அர்த்தமற்ற, குறிப்பற்ற, பரிகாசத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் இடமான அபிப் பிராயங்களும் மற்றும் பாமர மக்களைத் தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கான முறைகள் கொண்ட கருத்துக்களும் விவகாரங்களும் இன்றோ, நேற்றோ அல்லாமல், வெகு காலமாகவே இருந்துவருகின்றன. அன்றியும், இக் கருத்துக்கள் மதக்கொள்கைகள் என்பவற்றின் மூல மாகவும், அரசாங்கச் சட்டங்களின் மூலமாகவும் வெறுத்துப்பேச இடங்கொடுக்கப்படாமலும்— மீறிப் பேசினால் தண்டித்தும் மதவெறியால் என்றும் கொடுமைப் படுத்தியுந்தான் காப் பாற்றப்பட்டும் நிலைநிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றன.

இன்றும்கூட, நமது இயக்கப் பிரச்சாரங்களினால் அவற்றின் கொள்கைகளைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடிய வகை சுலபத்தில் இல்லாமலிருப்பதால் வேறு வழியில்—தந்திரமாய், அதாவது, 'சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் எல்லாம் சரி; அது ஏழை மக்களுக்குத் தான் பாடுபடுகின்றது; ஏழை–பணக்காரன் என்ற வித்தியாசம் கூடாதென்கிறது; ஆனால், அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது; மதத்தை அழிக்கின்றது; மக்களை நாத்திகமாக்குகின்றது; அதுதான் எமக்குப் பிடிக்கவில்லை; ஆதலால் அதை வளரவிடக்கூடாது' என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள். மற்றும் பல இடங்களில் நாம் போகு முன்பே, 'நாத்திகன் வந்துவிட்டான்; மதத் துரோகி வந்துவிட்டான்' என்று விஷமப் பிரச்சாரம் செய்து மக்களை—நமது பிரசங்கத்தை—நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கேட்க அனுமதிக்கக்கூட மறுக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில், காலித்தனமான முறையில் பிரசங்கத்தைக் கலைக்க முயற்சிக்கிறார்கள்.

இதன் காரணம் என்னவென்று பார்க்கப்போனால், கண்டுபிடிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது அவர்களது, 'எங்கும் நிறைந்த', 'எல்லாம் வல்ல', 'அவனன்றி ஓரணுவும் அசையாததான' கடவுள் நம்பிக்கையும், அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும், கடவுள் அம்சம் பெற்றவர்களாலும் கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மத நம்பிக்கையுமேயொழிய வேறில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதன் கருத்து என்னவென்றால், எல்லாம் வல்ல – எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும் ஒரு சாதாரண மனிதனால் அழிக்கப்பட்டுவிடும் என்றும்; கடவுள் அவதாரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள் மூலம் உபதேசிக்கப்பட்ட மத மானது ஒரு சாதாரண மனிதன் முயற்சியால் அழிக்கப்பட்டு விடுமென்றும்; இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய்விடுமென்றும் பயந்தே இம் மாதிரி விஷமப் பிரச்சாரம் செய்வ தாயும், பலாத்காரச் செயல்கள்கூடச் செய்யவேண்டியிருப்பதாயும் தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. இவ்விதமாக, கடவுள் நம்பிக்கையின் பேரால், மத நம்பிக்கையின் பேரால் பலாத்காரச் செயல், எதிர்ப் பிரச்சாரம், விஷமப் பிரச்சாரம் ஆகியவைகள் செயல்படுவது பெரிதும் அறியாமையால் என்றோ, மதத்தையும் கடவுள் தன்மையையும் சரவர உணராத தினால் என்றோ, அல்லது மதவெறி கடவுள்வெறி என்றோ சொல்லிவிட முடியாது. ஏனெனில், கடவுளும் மதமும் உலகில் மக்கள் தோன்றிய காலம் முதலே—அவற்றிற்கு எதிரிடையான கருத்துடையவர்களையும், அவற்றை ஒப்புக்கொள்ளாதவர்களையும் அரசாங்கமும், மத ஸ்தாபனக்காரர்களும் கொன்றும், சித்திரவதை செய்தும், தண்டித்தும், கொடுமை செய்தும் வந்திருப்பதானது கடவுள் மதம் சம்பந்தமான சரித்திரங்களாலும், பிரச்சார முறைகளாலும் நன்றாய் உணரலாம். இக் கொள்கையை—முறையை இன்றும் சில சமயக்காரர்கள் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மத நம்பிக்கைக் காரர்கள் என்பவர்களால் நடத்தப்படுவதையும் கொண்டு உணரலாம். ஆகவே, இதன் கருத்து சுயநலமும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமே ஒழிய வேறில்லை.

மதம் என்பதும்—'சர்வ வல்லமையும்,'. 'சர்வ வியாபகமும்' உள்ளதாகச் சொல்லப் படும் கடவுள் உணர்ச்சியை மக்களிடம் பெருக்கவும், அதை நிலை நிறுத்தவும் ஏற்பட்ட ஸ்தாபனங்களாய் இருந்து வருகின்றனவேயொழிய—மற்றபடி எந்த மதத்தாலாவது, அதைச் சேர்ந்த உலக மக்கள் வாழ்க்கையிலோ பொருளாதாரத்திலோ சுதந்திரமோ, சமத்துவமோ பெற்று, கேவலம் ஜீவனத்திற்காக மற்ற மனிதனுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு இடமளித்திருப்பதாய்க் காணமுடியவில்லை. ஒரு மதக்காரனே தன் மதத்தைச் சேர்ந்த மற்றொருவனை அடிமை கொண்டிருக்கிறான். ஆனால், அவன் மத நம்பிக்கை என்பது, 'மக்கள் யாவரும் கடவுள் பிள்ளைகள்,' 'எல்லோரும் சமமானவர்கள்' என்று போதிப்ப தாகத்தான் சொல்லுகிறான். ஆனால் ஏழை—பணக்காரன், கூலிக்காரன்—எஜமான் என்கின்ற வித்தியாசம் எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி மாத்திரம் உணரும்போது—எல்லாம்வல்ல கடவுள் சக்தியையும், சமத்துவ மதபோதனையையும் மறந்துவிடுகிறான்.

மதம் என்பது ஒரு போதை தரும் (வெறி உண்டாக்கும்) வஸ்து என்று பல அறிஞர்கள் கூறியிருப்பதுபோல், மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும் வெறியும் உண்டாவதுதான் முக்கிய பலனாக இருக்கிறதேயொழிய—அது கஷ்டப்படுகின்ற, ஒரு பாவமுமறியாத பாமர மக்களுக்குக் காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கிறது? செய்கிறது? மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட் டிருக்கிறது? என்ற கேள்விகளுக்கு 'இது மதத் துரோகமான கேள்வி' என்று சொல்லுவ தல்லாமல் வேறு எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு இடம் காணவில்லை.

எல்லா மதங்களும் கடவுள் அருளால், கடவுள் அம்சம் பெற்றவர்களால், அவரால் அனுப்பப்பட்டவர்களால் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் ஒரு மதத்திற்கும், மற்றொரு மதத்திற்கும் நடப்பு, வேஷங்கள், சடங்குகள் ஆகியவைகளுடன் மற்றும் பல முக்கிய விஷயங்களில் பெருத்த மாறுபாடும், துவேஷமும், வெறுப்பும் சிறிதாவது காணப்படு வானேன் என்பதைப் பார்த்தால், மதங்களைத் தோற்றுவித்த கடவுள் ஒன்றா? பத்து மதங்கள் இருந்தால்—அவற்றுள் ஒன்று உண்மைபோக—பாக்கி ஒன்பது மதங்கள் பொய் யாகத்தான் இருக்கவேண்டும்; அல்லது ஒவ்வொரு மதமும் வெவ்வேறு கடவுள் அருளால் ஏற்பட்டதாக இருக்கவேண்டுமே ஒழிய—ஒரே கடவுள் அருளால் ஏற்பட்டதாயிருக்காது. எப்படியிருந்தாலும், சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள ஒரு கடவுள் அருளால் எந்த மதமாவது ஏற்பட்டது என்று சொல்வது பகுத்தறிவுக்கும், விவகாரத்திற்கும் நிற்காத காரியமேயாகும். அன்றியும், ஒரே மதத்தை அனுசரிக்கிற மக்கள் எல்லோரும் ஒரே மாதிரி நடக்கிறார்கள் என்று சொல்வதற்கோ, அல்லது மத சக்தியானது மக்கள் யாவரும் ஒரே மாதிரி நடத்தப்படப் பயன்படுகின்றது என்று சொல்லுவதற்கோ இடமில்லா மல்தான் எல்லா மதங்களும் இருந்து வருகின்றன. ஏனெனில், ஊருக்கு ஒருவிதம், வகுப்புக்கு ஒருவிதம் நடப்பதுடன் வெளிப்படையாகவே—ஒரே ஊரில் ஒரே மதக்கொள் கைக்குப் பலவித வியாக்கியானங்களும் ஏற்பட்டு இருப்பதுடன் நடப்புகளும், எண்ணங் களும் வேறுபட்டிருக்கின்றன.

ஒருசமயம் இப்படி மாறுபட்டு நடப்பவர்கள் எல்லோரும் மூடமக்கள் என்றும், மதத்தைச் சரிவர உணராதவர்கள் என்றும் சுலபமாய்ச் சொல்லிவிடலாம். ஆனாலும் அந்த மதத்தை நம்பி, அதைத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வந்த மக்களின் கதி அதுதானா என்பதும், அம் மதத்திற்கு உள்ள சக்தி அவ்வளவுதானா என்பதுமாவது யோசிக்கவேண்டிய முக்கிய விஷயமல்லவா என்று கேட்கிறேன்.

எது எப்படியிருந்த போதிலும், முன் குறிப்பிட்ட—அதாவது, 'சர்வசக்தி—சர்வ வியாபகம்—சர்வ தயாளத்துவம் கொண்ட கடவுளால்' சிருஷ்டிக்கப்பட்டவர்களாகவும் 'சர்வ சமரசம் கொண்ட மதத்தை'ப் பின்பற்றியவர்களாகவும் உள்ள மக்களுக்குள் ஒருவன் ரிக்ஷா வண்டி இழுத்துக் கஷ்டப்படவும், ஒருவன் அதன்மேல் சுகமாய் உட்கார்ந்து சவாரி

செய்யவும் ; ஒருவன் கிரீடத்தை அணிந்து பல்லக்கில் சவாரி செய்யவும், 16 பேர்கள் முக்கி முக்கி அதனைச் சுமந்து செல்லவும் அக் கடவுளும் மதமும் எப்படி அனுமதித்தன என்ற கேள்விக்கு—'அது நமக்குத் தெரியாது; சர்வசக்தி உள்ள கடவுள் செயல்' என்பதைத் தவிர, இதுவரை எந்தக் கடவுள் நம்பிக்கைக்காரரும், மத நம்பிக்கைக்காரரும் வேறு பதில் சொன்னதாகத் தெரியவில்லை. ஒரு சமயம் இச் செய்கைக்கு முறையே, ஒருவனின்—அதாவது, ரிக்ஷா வண்டியிழுப்பவனின் முட்டாள்தனமும், சவாரி செய்பவனின் அயோக்கியத்தனமும் காரணமாகும் என்று பதில் சொல்லக் கூடுமானாலும், சர்வ சக்தியும் சர்வ வியாபகமும் சர்வ தயாபரத்துவமும் உள்ள கடவுளுக்கும்—சர்வ மனித சமூக சமத்துவ மாகிய மதத்திற்கும் தம்மை ஏற்றித் துதித்துப் பின்பற்றும் மக்களின் இம் மடமையையும், அயோக்கியத்தனத்தையும் நிறுத்த முடியவில்லை என்பதாவது விளங்குகின்றதா, இல்லையா என்பதைப் பொறுமையோடு—பகுத்தறிவுடன் நடுநிலைமையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.

தோழர்களே ! இங்குச் சற்றுக் கவனியுங்கள். மேற்சொன்ன கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும்—மேற்சொன்ன மடமையையும், அக்கிரமத்தையும் ஒழிப்பதற்குச் சிறிதும் பயன்படாமலிருப்பதோடு, அம் மடமையையும், கொடுமையையும் நிலைநிறுத்துவதற்கும், அமுல் நடத்துவதற்கும் பயன்பட்டு வருகின்றனவா, இல்லையா என்பதைப் பரிசுத்த நிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

கடவுள், மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவ வாழ்விற்கும், இவ்வளவு இடையூறுகளுக்கும், தாரதம்மியங்களுக்கும் இடந்தராதிருக்குமானால்—நான் அவைகளைப்பற்றி இவ்வளவு கவலை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மதப் பிரச்சாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்களின் பரிதாபத்திற்காகவாவது நான் சும்மா விட்டுவிடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில், ஒரு மனிதன் அனாவசியமாய்—அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக, பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக்கொண்டிருக்க முடியாது. ஆனால், அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும்போது, உண்மையான உணர்ச்சியுள்ளவன் அதை ஒழிக்கப் போராடாமல் இருக்க முடியாது.

கடைசியாக, 'உலக உற்பத்திக்கும், இயற்கைத் தோற்றங்களுக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு காரணப் பொருள் இருக்கவேண்டாமா?' என்று கேட்பதின் மூலம்—எப்படியாவது, 'ஒரு சக்தி உண்டு' என்பதை ஒப்புக்கொள்ளச் செய்து, அதிலிருந்தே ஒரு கடவுளைக் கற்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதையும் அத்தோடேயே சர்வ சக்தி–சர்வ வியாபகக் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் திருப்தி அடைந்து விடுவதையும் பிறகு அதை அஸ்திவாரமாக வைத்துப் பெரிய ஆகாயக் கோட்டைகள் கட்டுவதையும் பார்த்திருக்கிறேன். உலக உற்பத்திக்கும், அதில் காணப்படும் தோற்றங்களுக்கும் நடப்புகளுக்கும் விஞ்ஞானம் என்னும் 'சயின்சை' தொடர்ந்துகொண்டே போனால், சமாதானம் கிடைக்கலாமானாலும் பிறகு, 'சயின்ஸ்சுக்கு யார் கர்த்தா?' என்கின்ற கேள்வியும் பிறக்கும். அதை இதுவரை எந்த அறிவாளியும் கண்டுபிடிக்கவில்லை என்று பதில் சொன்னால், 'அதுதான் கடவுள்' என்று சொல்லித் திருப்தி அடைவார்கள்.

அப்படியானால், 'அந்தக் கடவுளுக்கு யார் கர்த்தா? அவர் எப்படி உண்டானார்? அவரின் நடவடிக்கைக்கு என்ன காரணம்?' என்பதான கேள்விகளை, முன்னைய விஷயங்களுக்குப் போடப்பட்ட கேள்விகளைப்போலவே போட்டோமானால், அப்படிப் பட்ட கேள்வி கேட்கக் கூடாது என்றும், கடவுளும் சக்தியும் தானாக உண்டானவை யென்றும், அதற்குக் காலவரை இல்லையென்றும் சொல்லுவார்கள். அச் சமாதானத்தால் நாம் திருப்தியடையாவிட்டால் அல்லது, 'இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டால் அல்லது, 'கடவுள் தானாக உண்டாகும்போது இயற்கை தானாக உண்டா

காதா?" என்று கேட்டால்—உடனே, நம்மை, 'நாத்திகன்' என்று சொல்லிவிடுவார்கள். இந்த மாதிரி நிலையில்தான், ஏதோ யூகத்தின்மீது, அதுவும் 'ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டாமா?' என்கின்ற யூகத்தின்மீதே 'இதுவாயிருக்கலாம் அல்லது அதுவா யிருக்கலாம்' என்கின்ற பொறுப்பற்ற நிலையில் கற்பிக்கப்பட்ட ஒரு கடவுள் என்பதைப் பற்றி நாம் சிறிதும் கவலைப்படுவதில்லை.

ஆனால், அப்படிப்பட்டதன்மீது, மனித வாழ்க்கையின் பொறுப்புக்களைச் சுமத்து வதும், அதை வணங்குவது, தொழுவது, பிரார்த்தனை செய்வது என்பதும்; அதை வணங்கினால், பிரார்த்தித்தால், தொழுதால் அதற்காக நேரத்தையும் அறிவையும் பணத்தை யும் செலவு செய்தால் பயன் பெறலாம் என்பதும், பிரதி பலன் உண்டென்பதும், பாவங்கள் மன்னிக்கப்படுமென்பதும், மற்றும் மனிதனால் தன் சுயநலத்திற்காகவும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியத்திற்காகவும் பிறருக்குச் செய்யப்படும் சூழ்ச்சிக்கும் அக்கிரமத்திற்கும் கடவுள் செயலே காரணம் எனச் சொல்லி ஏமாற்றுவதைப் பார்த்தால்—பிறகு எப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியானாலும் அது எங்கிருந்தபோதிலும் அதை அழித்தே தீரவேண்டி யிருக்கிறது.

அன்றியும், திருடப் போகிற ஒரு திருடன், தான் திருடப் புறப்படுமுன் தனக்கு, நல்ல திருட்டு கிடைக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துவிட்டுப் புறப்படுகிறான். நல்ல திருட்டு கிடைத்தவுடன், அதில் ஒரு பாகத்தைக் கடவுளுக்கும், அதன் திருப்பணி களுக்கும் செலவுசெய்து, கடவுள் உணர்ச்சியை அனுபவிக்கிறான். இதுபோலவே, ஒரு கொலைகாரனும் தான் விடுதலை அடையக் கடவுளைத் துதித்து, விடுதலையடைந்தவுடன் கடவுளுக்குப் பூசை, அபிஷேகம் முதலியவை செய்து நன்றி செலுத்துகிறான். இது போலவே, சொத்துக்களை வைத்திருக்கும் உடைமைக்காரனும் தனது சொத்துக்களைத் திருடர்கள் கொள்ளை கொள்ளக்கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்து நன்றி செலுத்து கிறான். இதுபோலவே, கடவுள் நம்பிக்கை உள்ள சகல சோம்பேறிகளும், செல்வவான் களும் கடவுள் பிரார்த்தனையின் மீதே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள்.

ஆகவே, கடவுள் செயலும் கடவுள் கருணையும் எவ்வளவு ஒழுக்கக் குறைவுக்கும், அநீதிக்கும் இடம் தருகின்றன என்று பாருங்கள்! அவை, இதைத் தவிர வேறு எதற்காவது பயன்படுகின்றனவா என்றும் பாருங்கள்!

'மதம் என்றால் என்ன?' என்கிற விவகார காலத்தில் மதவாதிகள், மனித சமூக வாழ்க்கை ஒழுங்காகவும், ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டும் நடைபெறுவதற்காக—அனுபவ ஸ்தர்களால் வகுக்கப்பட்ட திட்டங்களே மதம் என்றும், மதக் கொள்கைகள் என்றும், அவை, காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு திருத்திக்கொள்ளக்கூடியவை என்றும் சொல்லுவதுடன், அதற்கு உதாரணமாக அவ்வப்போது பல சீர்திருத்தவாதிகள் தோன்றிப் புதிய திட்டங்கள் ஏற்படுத்தி சீர்திருத்தி இருக்கிறார்கள் என்றும் ஒரு சிலரால் சொல்லப் பட்டு—இதுதான் மதம் என்பதின் அர்த்தம் என்று சொல்லி—அதனிடம் நமக்குத் தகராறு இருக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியானால், அக் கொள்கைகளின் குணதோஷங்களைப் பொறுத்தும், அதனால் ஏற்படும் பயன்களைக் குறித்தும் யோசிக்கவும் திருத்தவும் ஒவ் வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

அப்படிக்கில்லாமல், மதம் என்பது மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தியையுடைய மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்றும்; அதன் கொள்கைகள் எல்லாம் எங்கும் எக் காலத் திற்கும் ஒரே மாதிரியாய் இருக்கத்தக்கவை என்றும்; அவைகளில் எக் காலத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த எவருக்கும் உரிமை இல்லை என்றும்; அதனால் யாருக்கு-எவ்வளவு கெடுதி இருந்தபோதிலும், பயனில்லாத போதிலும் பின்பற்றித் தானாக வேண்டுமென்றும் சொல்லப்படுமானால்—அப்படிப்பட்ட மதத்தை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாது

என்பதுடன், அவ்வித மூட-அடக்குமுறை உணர்ச்சியைக் கொண்ட மதத்தை என்ன விலை கொடுத்தாவது அழித்தாக வேண்டும். ஏனெனில், அவை மனித சமூக முற்போக்கைத் தடைசெய்வதுடன், மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் சம உரிமைக்கும் இடையூறாய் இருக்கின்றன.

மற்றும், மதத்தின் பேரால் அனேக அற்புதங்களும், இயற்கைக்கும், மனித சக்திக்கும் மீறிய காரியங்களும் பலர் செய்ததாகவும் கதைகள் கட்டி மக்கள் மூடர்களாகவும், மூட நம்பிக்கைக்காரர்களாகவும் ஆக்கப்பட்டு வருகின்றதுடன், ஏராளமான பொருளும் முயற்சியும் நேரமும் மனித சமூக நன்மைக்கும் சமத்துவத்துக்கும் உபயோகப்படாமல் பாழாக்கப்படுகின்றன. அன்றியும், அறிவும் ஆராய்ச்சியும் கட்டுப்படுத்தப்பட்டு அடிமையாக்கப்படுகின்றன. இவ்வளவு கேட்டை எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும், ஏன் சகிக்கவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள்!

தேசியம், தேசியம் என்பதும் முற்கூறியவைகளைப் போன்ற ஒரு போலி உணர்ச்சி தான். ஏனெனில், தேசிய உணர்ச்சி என்பதானது இன்று உலகப் பொதுமக்கள்—அதாவது உலகில் எங்கும் பெரும்பான்மையாய் இருந்துவரும் மக்கள் தொழில் இன்றியும்; தொழில் செய்தாலும் ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும், மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்றுசேர்ந்து தங்களுடைய நிலைமைக்குப் பரிகாரம் தேடுவதைத் தடைப்படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வந்தர்களால்—அதிகாரப் பிரியர்களால்—சோம்பேறி வாழ்க்கைச் சுபாவிகளால் கற்பிக் கப்பட்ட சூழ்ச்சியாகும். தேசியம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும், வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.

தேசம் என்றால் எது? உலகப் பரப்பு அய்ந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றது. ஒவ்வொரு கண்டத்திற்கும் பல தேசங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு தேசத் திற்கும் பல மாகாணங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு மாகாணத்திற்கும் பல ஜில்லாக்களும், மற்றும் பல உட்பிரிவுகளும் இருக்கின்றன. இவை தவிர, ஒவ்வொரு கண்டத்திலும், தேசத்திலும், மாகாணத்திலும் பலமாதிரியான பிறவிகளும், பல சாதிகளும் பல பாஷை களும், பல மதங்களும், பல உட்பிரிவுகளும், பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. இவை அவரவர்களுக்கு—'தெய்வக் கட்டளை' என்றும், 'மதக் கட்டளை' என்றும், 'தேசியக் கொள்கை' என்றும், 'தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் மாற்றமுடியாதவை' என்றும்—இவைகளில் எதையும் காப்பாற்ற உயிர் விட்டாவது முயற்சிக்க வேண்டுமென்றும் கருதிக் கொண்டிருப்பதாகும். இவற்றின் பயனாய், மக்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டிருப்பதை நன்றாய்ப் பார்க்கின்றோம். அன்றியும், உலகத்திலுள்ள தேசம் முழுவதிலும் உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி, ஏழை-பணக்காரன், கீழ்நிலை,-மேல் நிலை கஷ்டப்படுகின்றவன்-கஷ்டப்படுத்துகிறவன் முதலிய கொடுமைகள் இருந்தும் வருகின்றன.

இவற்றுள் என்ன கொள்கைமீது—எப்படிப்பட்ட மக்கள்-எவ்வளவு விஸ்தீரணத்தைப் பிரித்துக்கொண்டு தங்களுக்கென, தனித்த தேசம், தேசியம் என்ற ஒன்றைச் சொல்லிக் கொள்ளுவது என்பது எனக்குப் புரியவில்லை. நமது தேசம் என்று எந்த விஸ்தீரணத் தையும் தன்மையையும் தனிப்படுத்திக்கொண்டு பேசினாலும், அதிலுள்ள தன்மைகள் என்னென்னவோ, அதிலுள்ள மனிதர்களின் நிலை என்னென்னவோ, அவைதான் மற்ற எந்த 'தேசம்' என்பதிலும், 'நாடு' என்பதிலும் இருந்துவருகின்றன. நாம் குறிப்பிடும் தேசத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றவர்களாகவும்—தாழ்மைப்படுத்தப்பட்டவர்களாவும் இருந்துவருகின்றார்களோ அவ்வளவு நிலையில்தான், மற்ற தேசத்தார் என்கின்ற மக்களும் இருந்துவருகிறார்கள். நம்முடைய தேசம் என்பதி லுள்ள—எந்தவிதமான மக்களின் துயரம் நீக்கப் பாடுபடுகின்றோம் என்கின்றோமோ அவ்விதமான துயரம்கொண்ட மக்கள், அன்னிய தேசம் என்பதிலும் இருந்துதான்

வருகின்றார்கள். நம்முடைய தேசியம் என்பதிலேயே எந்தவிதமான மக்கள் சோம்பேறிகளாகவும், சூழ்ச்சிக்காரர்களாகவும், செல்வவான்களாகவும், அரசாங்க ஆதிக்கக்காரர்களாகவும், குருமார்களாகவும் இருந்து—பெரும்பான்மையான பொதுஜனங்களைப் பல சூழ்ச்சிகளால் அடக்கி ஆண்டு அடிமைகளாக்கிப் பட்டினிபோட்டு வதைத்துத் தாங்கள் பெரும்செல்வம் சேர்த்து வாழ்ந்து சுகபோகம் அனுபவித்து வருகின்றார்களோ அதுபோலத் தான், அன்னிய தேசம் என்பதிலும் சிலர் இருந்து அந் நாட்டுப் பெரும்பான்மையான மக்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமையில் என்ன கொள்கையைக் கொண்டு, எந்த இலட்சியத்தைக் கொண்டு உலகப் பரப்பில் ஒரு அளவை மாத்திரம் பிரித்துத் தேசாபிமானம் காட்டுவது என்று கேட்கின்றேன்.

துருக்கி தேசத்திற்கும், இந்திய தேசத்திற்கும் சண்டை வந்தால்—இந்திய இஸ்லாமியர்களுக்குத் தேசாபிமானம் இந்தியாவுக்கா? துருக்கிக்கா? அய்தராபாத்துக்கும், மைசூருக்கும் யுத்தம் தொடங்கினால்—அய்தராபாத் இந்தியர்கள் தேசாபிமானம் மைசூருக்கா? அய்தராபாத்துக்கா? ஆகவே தேசம், தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகளும்—கடவுள், மதம் என்பது போன்றே—ஒரு வகுப்பாருடைய சுயநலத்திற்கேற்ற ஒரு சூழ்ச்சி வார்த்தை என்று சொல்லவேண்டியிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

முடிவாகக்கூறும் பட்சத்தில், தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டைபோட்டுத் தங்கள் தங்கள் முதலைப் பெருக்கிக் கொள்ள, ஏழை மக்களை—பாமர மக்களைப் பலிகொடுப்பதற்காகக் கற்பித்துக்கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, இங்கிலாந்து தேச முதலாளிகள், அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றி பெற்றுத் தங்கள் செல்வத்தை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால்—அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறு தந்திரத்தின்மூலம் இங்கிலாந்து தேசத்து முதலாளிகளின் செல்வத்தைக் கொள்ளைகொள்ள முயற்சிப்பதாய் இருந்தால்—இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் இங்கிலாந்து தேசத்து ஏழை மக்களையும் பாமர மக்களையும் பார்த்து, ‘ஓ இங்கிலாந்து தேசிய வீரர்களே! தேசாபிமானிகளே! தேசத்துக்கு நெருக்கடி வந்துவிட்டது! இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய அழைக்கிறாள்; ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்!’ என்று கூப்பாடு போடுவார்கள்; கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைக் காரர்களுக்கு எலும்பு போட்டும் பிரச்சாரம் செய்விப்பார்கள். இது போலவே, அமெரிக்க முதலாளியும் தன் தேசம் நெருக்கடி நிலையில் இருப்பதாகவும், அமெரிக்கா மாதா அங்குள்ள பாமர மக்களையும், வேலையில்லாமல் வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் பட்டினிகிடக்கும் ஏழை மக்களையும் தங்கள் கடமையைச் செய்ய அழைப்பதாகவும் கூவிக்கொண்டு, கூலி கொடுத்துப் பிரச்சாரம் செய்வார்கள். இரண்டு தேச ஏழை மக்களும், மற்றும் சாப்பாட்டிற்கு அறவே வேறு வழியில்லாத மக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தும், பட்டாளத்தில் சேர்ந்தும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு சண்டைக்குப் போய், ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்றுகொள்வார்கள்; சிறை பிடிப்பதன் மூலம் இருதேசச் சிறைகளையும் நிரப்பி விடுவார்கள். கணக்குப் பார்த்தாலும் இரு கட்சியிலும் பத்து லட்சக் கணக்கான மக்கள் உயிர் விட்டிருப்பார்கள். பிறகு இருவரும் ராஜியாகப் போயோ, அல்லது யாராவது ஒருவர் ஜெயித்தோ இருப்பார்கள்.

ஜெயம்பெற்றவர்களுக்கு முதலோடு முதல் சேரும்; அல்லது தங்கள் முதல் என்றும் குறையாத மாதிரியில் பத்திர மேற்பட்டிருக்கும். ஆனால், சுட்டுக் கொண்டு செத்தவர்களுக்குச் சுடுகாடும் அவர்கள் பெண்சாதிகளுக்குச் சிறு பிச்சையும் அல்லாமல் மற்ற ஏழை மக்களுக்கு என்ன பயன் என்பதை யோசித்துப் பாருங்கள்! அமெரிக்கா குடிஅரசு

நாடாவதற்கும், அன்னிய ஆட்சியைத் துரத்துவதற்கும் அமெரிக்க ஏழை மக்கள்—தொழிலாளி மக்கள் எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள்? எவ்வளவு உயிர்ப் பலி கொடுத்திருப்பார்கள்? என்பதைப் பற்றி அமெரிக்க விடுதலை சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். இன்று அதன் பயனாக உலகில் அமெரிக்காவிலேயே அதிகமான செல்வவான்களும், வியாபாரிகளும், விவசாயப் பெருக்கும் இருந்துவருகின்றன. ஆனால், ஏழைகள் படும் கஷ்டமும் வேலையில்லாத பட்டினியும் தொழிலாளிகள் அனுபவிக்கும் கொடுமையும் அமெரிக்காவில் இன்றைய தினம் இருந்துவருவது வேறு எந்த நாட்டிலும் இருப்பதை விடக் குறைந்ததல்ல.

தோழர்களே! அமெரிக்கத் தேசாபிமானத்தின் தன்மையையும் அதன் பயனையும் சிந்தித்துப் பாருங்கள். அமெரிக்கா அன்னிய ஆட்சியை ஒழித்தாலும், ஒரு அரசனையே விரட்டிவிட்டுக் 'குடிகளின் ஆட்சி' ஏற்படுத்திக்கொண்டாலும் ஏழை மக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்பதை மற்றொரு தரம் யோசித்துப் பாருங்கள்.

இந்த இலங்கையிலிருந்துகொண்டு இந்தியத் தேசாபிமானம் பேசும் தேசிய வீரர்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் ஏறக்குறைய அத்தனை பேருக்கும்–100-க்கு 90 பேர், இந்தியா முதலிய தேசத்திலிருந்து வந்து இலங்கை தேசத்தைச் சுரண்டிக்கொண்டு போக இருக்கிறவர்களும் அவர்களுக்கு உதவியாளர்களாய், அடிமைகளாய் இருப்பவர்களுமாவார்கள்.

லேவாதேவிக்காரர்கள் பெரிதும் மாதம் 100-க்கு 12 வரை வட்டி வாங்கி, ஏழை மக்களையும் இலங்கைவாசிகளையும் 'பாப்பராக்கி'க் கொள்ளை கொண்டுபோக வந்தவர்களும், விவசாயக்காரர் பெரிதும் இலங்கைப் பூமிகளை ஏராளமாய்க் கைப்பற்றி விவசாயம் செய்து கூலிகள் வயிற்றில் அடித்துப் பொருள் சேர்த்துக் கொள்ளைகொண்டுபோக வந்தவர்களும், வியாபாரிகள் கொள்ளை லாபம் அடித்து இலங்கைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், உத்தியோகஸ்தர்கள் இலங்கை ஆட்சியில் வந்து புகுந்து இலங்கையர்களின் அனுபவத்தில் மண்ணைப் போட்டுப் பணம் சுரண்டிக்கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும் ஆணவம் பிடித்த வன்னெஞ்சப் பார்ப்பனர்களுமாகக் கூடிக்கொண்டு இந்தியத் தேசாபிமானக் கூப்பாடு போடுகின்றார்கள்.

வெள்ளைக்காரனான அன்னியன் 100-க்கு வருஷம் 6 வட்டிக்குக் கொடுத்தால் கறுப்பனான அன்னியன் 100-க்கு மாதம் 6 வட்டிக்குக் கொடுக்கிறான். வெள்ளையன் பணக்காரர்களிடம் வட்டி வாங்கினால், கறுப்பன் ஏழைகளிடம், கூலிகளிடம் வட்டி வாங்கிக் கொடுமைப்படுத்துகிறான்.

இந்தப்படி மக்களை வஞ்சித்துக் கொள்ளை அடிப்பவர்களே (வெள்ளையரிலும், கறுப்பர்களிலும்) எங்கும் கடவுளபிமானம், மதாபிமானம், தேசாபிமானம் பேசுகிறார்கள்.

ஆகவே, இவ்விஷயங்களை—அதாவது கடவுள், மதம், தேசம் என்கின்ற விஷயங்களை இனி அறவே மறந்துவிடுங்கள். அவை ஒருநாளும், கஷ்டப்படும் மக்களுக்குப் பயனளிக்காது. உலகில் ஏழை, பணக்காரன் என்று இரண்டு வகுப்புகள் இருக்கவும், ஏழைகளை–தொழிலாளிகளைப் பணக்காரரும், சோம்பேறிகளும் வஞ்சித்து நிரந்தரமாய் வாழவும்தான் அவை பயன்படும்.

தோழர்களே! முடிவாக ஒன்று கூறுகிறேன். சரீரத்தினால் நெற்றி வியர்வை சொட்டக் கஷ்டப்படும் மக்களைப் பாருங்கள். வேலையில்லாமல் திண்டாடும் மக்களையும், அவர்களது பெண்டு பிள்ளைகளின் பட்டினியையும், கொடுமையையும் பாருங்கள். வீடு வாசல் இல்லாமல் மூட்டை முடிச்சுகளைத் தலையில் சுமந்துகொண்டு கஞ்சிக்கு ஊர் ஊராய்த் திரியும் கூலி மக்களைப் பாருங்கள். இவ்வித மக்கள் உலகில் எங்கெங்கு யார் யாரால் கஷ்டப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் பாருங்கள். உயர்ந்தவன்—தாழ்ந்தவன்,

பார்ப்பான்—பறையன், முதலாளி—தொழிலாளி, குரு—சிஷ்யன், மகாத்மா—சாதாரண ஆத்மா, அரசன்—குடிகள், அதிகாரி—பிரஜை என்பவை முதலாகிய பாகுபாடுகளை இடித்துத் தள்ளித் தரைமட்டமாக்குங்கள். அவற்றின்மீது தேசம், மதம், சாதி என்கின்ற பாகுபாடு இல்லாததும், மனித சமூகம் சம உரிமை—சமநிலை என்கின்ற கட்டடத்தைக் கட்டுங்கள். இதைச் செய்ய, நீங்கள் உலகிலுள்ள கஷ்டப்படும் எல்லா மக்களுடனும் சாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசம் இல்லாமல், பிரிவினைக்கு ஆளாகாமல் ஒன்று சேருங்கள். அப்போது நீங்கள் கண்டிப்பாய் வெற்றி அடைவீர்கள்!

தேசபக்தி, தேசியம் என்னும் சூழ்ச்சியானது, பல வருஷங்களாக மக்களை—அன்னியநாட்டு நடப்புகளையும் அன்னியநாட்டு மக்கள் நிலைமையையும் உணரமுடியாமல் செய்துவந்த காரணமே ஒற்றுமை ஏற்படமுடியாமல் இருந்துவருகின்றது.

'அன்னிய ஆட்சி,' 'சுயாட்சி' என்பதெல்லாம் அறவே ஏழை மக்களுக்குப் பயனற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமேயாகும். சுயாட்சி உள்ள நாட்டிலும், சுயராஜ்யம் உள்ள ஊரிலும் இராஜாவே இல்லாத குடிஅரசு தேசத்திலும் பணக்காரன் கொடுமையும், பாதிரியின் சூழ்ச்சியும், ஏழைகளின் கஷ்டமும், பாமர மக்களின் மடமையும் இருந்துதான் வருகின்றன. கடவுள் பக்தியும் மத பக்தியும் தேசாபிமானமும் நிறைந்து ததும்பும் நாடுகளிலும் இக் கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. கடவுளுக்காகவும், மதத்துக்காகவும் கோடானகோடி ரூபாய் செலவழித்துப் பலிகொடுத்து பக்தி செலுத்திவரும் நாட்டிலும் இக் கொடுமைகள் இருந்துதான் வருகின்றன.

ஆனால், கடவுள், மதம், தேசியம் ஆகியவைகள் அழிக்கப்பட்டு, அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினிக் கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை.

அவ்வூராருக்குக் கடவுள்-மத-தேச அபிமானம் இல்லை. மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய்க் காணப்பட்டது. அங்கு பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி, அதிகாரி-குடிஜனங்கள் என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லை.

அங்குள்ள சகல சொத்திற்கும் அங்குள்ள சகல மக்களும் சம சுதந்திரம் உள்ளவர்களாய் இருந்துவருகிறார்கள். எல்லா மக்களுக்கும் சரிஅளவு வேலையும், போதுமான ஆகாரமும் சுக சவுகரியமும் இருந்து சமமாய் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. 'நாளைக்கு என்செய்வது!' என்ற கவலையே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளும், மதமும் இல்லாததால் அந் நாடு பூமிக்குள் அமிழ்ந்துபோகவில்லை.

அந் நாட்டு மக்கள் ஆண் பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும் உயிருக்குத் துணிந்த வீரமும், சமத்துவ உணர்ச்சியும் கடவுளையும் மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காணமுடியாததாயிருக்கிறது. நமது நாட்டிலோ சகல பொறுப்பையும் கடவுள்மீது போட்டுவிட்டுச் சோம்பேறி ஞானம் பேசுபவர்களே மலிந்து இருக்கிறார்கள். நமது தலைவர்கள் என்பவர்களோ—'அதைச் சாதிக்கிறேன், இதைச் செய்கிறேன்' என்று பேசி மக்களை ஏய்த்துப் பயனடைவதும், முடியாவிட்டால் கடவுள்மீது பழியைப் போட்டு நழுவிக் கொள்வதுமானவர்கள். கடவுள் மீது நம்பிக்கை உள்ள நமது மக்கள் வீரமோ—ஒரு சிறு உண்மைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும்—'நான் எதற்கும் தயார்தான். ஆனால், எனக்கு ஏதாவது கஷ்டம் வந்து விட்டால் என் பெண்டு பிள்ளைகளுக்கென்ன கதி என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது' என்ற அளவோடு நிற்கக் கூடியதாகும். கடவுளை நம்பாதவர்களும் கடவுள்மீது எவ்விதப் பொறுப்பும் போடாதவர்களுமாயிருக்கிறவர்களும் கடவுள் உணர்ச்சியை அடியோடு ஒழித்துக் கொண்டவர்களுமான மக்கள் உள்ள நாட்டில்—'நாளைக்கு என்ன கதி' என்கின்ற பேச்சே கிடையாது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாகவேதான் காணப்படுகின்றார்கள்.

அந்த நிலைமைதான் நம் நாட்டுக்கும் மற்றும் உலகமெங்கும் வேண்டும். அதற்காகவே வாலிபர்கள் எல்லோரும் உழைக்க வேண்டும். அதுவே இப்போது நமது முன்னிலையில் இருக்கும் வேலையாகும்.

[ஐரோப்பா, ஆப்பிரிக்கா தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இலங்கைக்கு 17-10-1932-ல் திரும்பிவந்த தோழர் ஈ. வெ. இராமசாமிக்கு இலங்கையில் பல இடங்களில்-அதாவது கொழும்பு, கண்டி, நாவல்பிட்டிய, ஹட்டன், யாழ்ப்பாணம், பருத்தித் துறை ஆகிய இடங்களிலும் இந்தியாவில் தூத்துக்குடி, மதுரை முதலாகிய இடங்களிலும், பல ஸ்தாபனங்களின் பேரால் அளித்த சுமார் 20 வரவேற்பு விழாக்களிலும், பொதுக் கூட்டங்களிலும் செய்துள்ள உபந்நியாசங்களைத் திரட்டி எழுதப்பட்டது.—'குடி அரசு' 20-11-1932]

2. நாகரிகம்

உலகில் மக்கள் அடைந்துவரும் நிலைமையைக் காட்டுமிராண்டித் தன்மையென்றும், அநாகரிக வாழ்வென்றும், அரை நாகரிக நிலைமையென்றும், நாகரிக நிலைமையென்றும் வகுத்து வருகின்றார்கள்.

காட்டுமிராண்டித்தன்மையில் மக்கள் விலங்கினங்களைப்போல் வீடு, வாசல் இன்றி, நாளைக்கு வேண்டுமென்ற பகுத்தறிவின்றி மிருகாதிகளைப்போல் அங்குமிங்கும் இரை தேடி வாழ்ந்துவந்த வாழ்க்கையாகும். இவ் வாழ்க்கையில் இன்றைக்கும் சில மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இலங்கையிலிருக்கும் வேடர்களும், ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வரும் காட்டுமனிதர்களும், 'பிஜி' தீவில் சில காலத்திற்குமுன் வாழ்ந்துவந்த மக்களும் இன்றைக்கும் காட்டுமிராண்டித் தன்மையிலேயே இருந்துவருகின்றனர். இந் நிலைமையிலுள்ள மக்களுக்குக் கல்யாணமென்ற கூட்டுறவு கிடையாது; பெண்களைச் சட்டிபானைகளைப்போல் ஆண்டனுபவித்து வருகின்றார்கள்.

இதற்கு மேற்பட்ட மக்கள் நிலைமையில் மனிதசமூகம், சிறுசிறு கிராமங்களில் வசித்துவரத் தலைப்பட்டது. கிராமத் தலைவர்களென்றும் கிராமச் சங்கங்களென்றும் சமூக வாழ்க்கையை உண்டாக்கிக்கொண்டு தத்தம் கிராமங்களில் சிலகாலம் தங்கியிருந்து, வேறு பிரதேசக் கிராமங்களைக் கைக்கொண்டு, ஏகதேசமாக நிலங்களையும் பயிர்செய்து வந்த காலம் அநாகரிக காலமென்று சொல்லப்படும். ஆண்களையும், பெண்களையும் அடிமைப் படுத்திவந்த காலமிதுவே. அடுத்தடுத்து ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரோடு போர்புரிந்துவந்த காலமிதுவே. இந்த அநாகரிகக் காலத்தில் அம்பு, வில் ஆயுதங்களும், எலும்பு, தோல், சக்கிமுக்கிக் கற்களை ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும் தரித்து வந்திருக்கின்றார்கள். மனிதர் இறந்தால் அவருடைய ஆன்மா உலகில் திரும்ப உலவுமென்ற எண்ணமும் இக் காலத்தில் தோன்றியதாக ஊகிக்கலாம். அந்த வாழ்க்கையில் பொருளை வாங்குவதும் விற்பதும் கிடையாது. இவ்வித வாழ்க்கையில் அரேபியர், நமது நாட்டில் குறவர், மறவர் இன்னும் அனேக ஆப்பிரிக்க மக்களும் வாழ்ந்துவருகின்றனர்.

அரை நாகரிக வாழ்க்கையில் மக்கள் நகரங்களிலும், பட்டணங்களிலும் சில ஆயிரம் பேர்கள் தங்கிவாழ ஆரம்பித்தனர். பயிர்த்தொழில் முக்கியமாக உயிர் வாழ்விற்கு அத்தியாவசியமாக ஏற்பட்டது. தலைவனை அரசன் என்றும் பாதுகாப்பிற்கு வீரர்களென்றும் மந்திரி பிரதானியென்றும் இந்த அரை நாகரிக காலத்தில் ஏற்பட்டன. சொத்துரிமையும் இந்தக் காலத்தில் உண்டாகியது. போக்குவரத்திற்கு வண்டிகளும் இரதங்களும் ஏற்பட்டன. பண்டைக் காலத்துப் பண்டமாற்றுக்குப் பதிலாக, நாணயச் செலாவணி ஏற்பட்டது. பண்டைக் கால அடிமைகளும் இந்த வாழ்க்கையிலிருந்து வந்தனர். பெண்களுக்குச் சுதந்திரம் ஒன்றுமில்லாமலே புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்ற மனப்பான்மையும் இந்த யுகத்தில் ஏற்பட்டது. கல்விக்கும் கேள்விக்கும் சிற்சில ஸ்தாபனங்களும் உண்டாயின. காட்டுமிராண்டித் தன்மையில் வீட்டிற்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் சண்டைபோட்டுக்

கொண்டு வந்ததுபோய் தேசத்திற்காகச் சண்டைபோடும் நிலைமை உதித்தது. சிற்சில பண்டங்களில் வர்த்தகமும் செய்துவந்தார்கள். நாடு நகரங்களில், ஆயிரம் பதினாயிரக் கணக்காக வாழ ஆரம்பித்தனர். மதங்களும், புராணங்களும் உற்பத்தியாயின. குற்றவாளிகள் கொடூரமாக நடத்தப்பட்டு வந்தனர். ஆடு, மாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்கு உபயோகப்படும்படியாகப் பழக்கப்பட்டும் வந்தன. சிற்சில நீதி ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன. அநாகரிக காலத்திலுண்டான தலைவன் இந்த (செமி) அரை நாகரிகத்தில் அரசனாக மாறினான். அவனுக்குத் தெய்வத் தன்மையும் ஏற்பட்டது. மக்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்துவர ஆரம்பித்த காலமிது.

இந்தக் காலம், பாரத–இராமாயண வாழ்க்கை நடந்துவந்ததாகச் சொல்லும் காலமாகும். தற்போது இந்த அரைநாகரிகத்தில் அபிசீனியர்களும், தென் அமெரிக்க வாசிகளும் சில பஸிபிக் தீவிலுள்ள மக்களும் பெரும்பான்மை இந்தியமக்களும் வாழ்ந்துவருகின்றனர். பூர்வ காலத்தில் தமிழர்கள் அடைந்த நாகரிகமும் இந்த அரைநாகரிகமென்றே கருதப்படும். பண்டைக் கால ஈஜிப்ட் தேச நாகரிகமும், அபிசீனியன், கார்டியன், பாபிலோனிய நாகரிகங்களும் இந்த அரை நாகரிகத்தைச் சேர்ந்தவை. மத்திய கால அய்ரோப்பிய நாகரிகமும் இந்த அரை நாகரிகத்திலே மூழ்கிக் கிடந்தது. கிரீஸ், ரோமாபுரி நாகரிகமும் இந்த நாகரிக காலத்தைச் சேர்ந்தவை.

இந்த அரை நாகரிகத்திலிருந்து பெறப்பட்ட நாகரிகமே தற்கால நாகரிகமாகும். இதன் முக்கிய இலக்கணமென்னவெனில், இலட்சக் கணக்கான மக்கள் நாடு, நகரங்களில் வாழ்ந்து வர ஆரம்பித்தனர். ஒருவருக்கொருவர் சண்டைசெய்து கொள்ளாமல், நியாய ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள ஆரம்பித்தனர். அவரவர்களின் அபிப்பிராயங்களை முரட்டுத்தனத்தில் அடக்கி ஆள்வதை விட்டுவிட்டு, விவாத மூலமாகப் பகுத்தறிவைக்கொண்டு மாற்றிக்கொள்ள ஏற்பட்ட காலமிதுவே. பொதுஜன வாக்கு, ஓட்டுரிமை ஏற்பட்ட காலமிதுவே. அரசுகள் செய்வதெல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயத் திட்டத்தை மாற்ற ஏற்பட்ட காலமிதுவே. உலகிலுள்ள பொருள்கள், சரிசமத்துவமாக உலகில் உழைப்பவர்களுக்கும் உரியது என்ற எண்ணம் முளைத்ததும் இந்தக் காலமாகும். கொடூரத் தண்டனைகளால் அடக்குவது மிருகத் தன்மை என்ற மனப்பான்மை ஏற்பட்டதும் இக் காலத்தில்தான். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் உலக மக்கள் யாவருக்கும் உரியது என்ற பேரிரைச்சல் எழுந்ததும் இக் காலமே. பெண்கள், ஆண்களுடன் உலக வாழ்க்கையில் சரிசமத்துவ உரிமையுடையவர்கள் என்ற மனப்பான்மை உண்டான காலமும் இந்த நாகரிக காலமே. ஏகதேசமாக சிற்சிலரே சர்வஞானத்தைப் பெற்றுவந்த காலம்போய், சர்வ மக்களும் பெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவரும் காலம் இந்த நாகரிகக் காலமே! எவ்வித அடிமைத்தனமும் மக்கள் வாழ்க்கையினின்றும் நீக்கப்பட வேண்டுமெனக் கட்டாயப் படுத்தப் படுவதும் இந்தத் தற்கால நாகரிகக் காலத்தில்தான்.

தற்கால நாகரிகம் பண்டைக்காலக் காட்டுமிராண்டி, அநாகரிகக் காலங்களிலிருந்து பெறப்பட்டு வந்தமையால் அந்தந்தக் காலத்துப் வாழ்க்கை—தற்கால நாகரிகத்திலும் அங்குமிங்கும் நிறைந்து கிடக்கின்றது. அந்தந்தக் காலத்துப் பழக்க வழக்கங்களும், நீதி நெறிகளும், நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் மாறி வருகின்றன. கால தேச வர்த்தமானப்படி மேற்கண்ட சட்டதிட்டங்களும் விலக்கு விதிகளும் மாறுகின்றன. ஆனால், அப்படி மாறி வந்தும் கால தேசவர்த்தமானங்களுக்கு உதவாத உபயோகமற்ற பலவித கொள்கைகளும், கோட்பாடுகளும் சிதறுண்டுவந்தபோதிலும், முழுமையும் நாசமடைய வில்லை. அவைகள் நாசமடைய வேண்டின் அவைகள் எவை எவை என்று பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது, அரசுகளின் ஏகாதிபத்தியமும் காட்டு மிராண்டியின் வாழ்க்கையினின்றே தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. ஆதிகாலக் காட்டு மிராண்டியின் தலைவன்

தன்னைச் சேர்ந்த குடும்பத்தவர்களையும், சுற்றியுள்ள மக்களையும் அடக்கி ஆண்டு வந்தான். அதைப்போலவே, இன்றைக்கும் ஏகாதிபத்திய அரசுகளும் எல்லா உலக சுக போகங்களையும் தங்களுடையதென்று கோடானு கோடி மக்களை அடக்கி ஆண்டு கொண்டு வருகின்றனர்.

காட்டுமிராண்டி புலித் தோலையும், கோரப் பற்களையும், எலும்புகளையும், மண்டை ஓடுகளையும், அம்பு விற்களையும் கொண்டு, தன்னை அலங்கரித்துக்கொண்டு கிராம மக்களைப் பயப்படுத்தி வந்ததைப்போல், தற்கால அரசுகளும் சேவகர்களையும், சிப்பந்திகளையும், இராணுவத்தையும் இராணுவத் தலைவர்களையும் கொண்டு பல கோடி மக்களை அடக்கி ஆண்டு வருகின்றனர். மந்திரங்களையும், தந்திரங்களையும் கொண்டு காட்டுமிராண்டித் தலைவன் தனது குடிமக்களைப் பயமுறுத்தி வந்ததைப்போல—இக் காலத்து ஆட்சியாளர்களும், மூட மதங்களையும் புராண இதிகாசங்களையும் கொண்டு, பல கோடி மக்களைப் பயமுறுத்தி வருகின்றனர். பண்டைக் காலத்துக் காட்டுமிராண்டிகள் பெண்களையும் பிள்ளைகளையும் கொடூரமாய் நடத்தி வந்ததைப்போல, இன்றைக்கும் கோடானு கோடிப் பெண்களும் சிறுவர்களும் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். அந்தக் காலத்தில் உழைப்பவனுடைய உழைப்பையும், அதன் பயன்களையும் ஆதிகால அநாகரிகத் தலைவன் தனது சுகபோகத்திற்கு விரயமிட்டு வந்ததைப்போல்—இன்றைக்கும் முதலாளிகளென்றும் நிலச்சுவான்தார்கள் என்றும் பெயர் படைத்த பல்லாயிரம் பேர் பல கோடி பல்லாயிரம் மக்களின் உழைப்பையும் அதனால் பெறும் பயனையும் அபகரித்துக்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் அந்தக் காலத் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் தெரிந்துகொண்டால், தனது ஆதிக்கத்திற்கு அபாயம் வருமென்று அநாகரிகத் தலைவன் எண்ணிவந்ததைப்போல்—இன்றைக்கும் நாகரிகமடைந்தவனென்று சொல்லும் அரசனும் பொதுமக்கள் விஞ்ஞானமடைந்தால் தனது ஆதிக்கத்திற்கே அபாயம் வருமென எண்ணி வருகிறான். ஆதிகால அடிமைத்தனம் தற்காலத்தில் பல்வேறு ரூபமாகச் சமூக வாழ்க்கையில் நிறைந்துள்ளது. முக்கியமாக, மந்திர தந்திரங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் அடிமைத்தனம் அறவே ஒழியவேண்டும். மதங்களும் இதிகாச புராணங்களும் மக்களின் அடிமைத்தனத்தை நீடிக்கச் செய்து வருவது தடைப்படவேண்டும். ஏகாதிபத்திய அரசர்களால், அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் கோடானு கோடி மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டும். பண்டைக்காலத் துர்ப்பழக்க வழக்கங்களால் தாழ்த்தப்பட்ட பல கோடிப் பெண் மக்கள் சரி சமத்துவ சுதந்திரத்தைப் பெறவேண்டும். சொந்தக்காரர்களாலும், நிலச்சுவான்தாரர்களாலும் அடிமைப்படுத்தப்பட்ட கோடானு கோடிக் குடிமக்கள், நிலத்திலும் நீரிலும் சரி சமத்துவம் பெறவேண்டும். உழைப்பவனுக்கே—தனது உழைப்பின் முழுப் பயனும் சேர வேண்டும். இதுதான் தற்கால நாகரிகத்தின் சரி சமத்துவ வாழ்க்கை. உலக மக்களில் எவனுக்காகிலும் இந்தச் சரி சமத்துவ–சமதர்மம் குறைவுபடுமேயானால் அது காட்டுமிராண்டி அநாகரிக வாழ்க்கையேயொழிய நமது நாகரிகமாகாது.

['புரட்சி'–தலையங்கம்—1-4-1934]

3. இனிவரும் உலகம்

இன்றைய உலகமானது பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்கு நாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது; இனிச் சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும்–என்பனவாகிய விஷயங்கள் பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக் கூடுமே தவிர, புராண இதிகாசப் பண்டிதர் என்பவர்களுக்கு–அதுவும் நம் 'கலை, காவிய'ப் பண்டிதர்களுக்குத் தெரிவது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும், ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், பிரத்தியட்ச அனுபவத்திற்குச் சம்பந்தப்

படுத்தமுடியாத கலை, காவியங்களையும் படித்து, உருப்போட்டு, அவைகளிலிருப்பவை களை அப்படியே மனத்தில் பதியவைத்துக் கொண்டிருப்பதோடல்லாமல், அவைகளில் சம்பந்தப்பட்ட கதை கற்பனைகளை உண்மையாக நடந்தவைகள் என்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களாவார்கள்.

பகுத்தறிவுவாதிகள் அந்தப்படிக்கில்லாமல் அனுபவத்தையும், தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும், வஸ்துக்களின் குணங்களையும், அவற்றின் மாறுதல்களையும், இயற்கையின் வழிவழித் தன்மைகளையும் அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டுவரும் புதுமை அதிசயங்களையும், மனிதனுக்கு முன்காலத்தில் இருந்துவந்த அறிவாற்றலையும் சிந்தித்து— இன்று உள்ள அறிவையும், ஆற்றலையும், இனி ஏற்படும் அறிவாற்றலையும், சாதனங் களையும், மற்றும் இவை போன்றவைகளையும் ஆராய்ச்சிக் கண்களோடு நடுநிலையில் இருந்து பார்ப்பவர்களாவார்கள்.

பண்டிதர்கள்—பழங்காலத்தையே சரியென்று கருதிக்கொண்டு அதற்கே, 'புது உலகம்' என்று பெயர் கொடுத்து, அங்கே செல்லவேண்டுமென்ற அவாவுடையவர்கள். பகுத்தறிவுவாதிகள்—வரும் ஒரொரு விநாடியும் புதிய காலமாகக் கருதிப் புதிய உலகத் திற்குப் போவதில் ஆர்வமுள்ளவர்கள். பண்டிதர்கள் என்பவர்கள், எந்த நாட்டிலும் இப்படித்தான் இருப்பார்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. நம் நாட்டுப் பண்டிதர்கள் என்பவர்களில் பெரும்பாலோர்களைக் கருதித்தான் நாம் இப்படிச் சொல்கிறோம். ஏனெனில், நம் நாட்டுப் பண்டிதரென்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படவோ, அது வளர்ச்சி யடையவோ முடியாமல் தடைசெய்யத் தகுதியான மாதிரியிலேயே அவர்களது படிப்பும் பரீட்சையும் இருக்கின்றன. ஆதலால், நம் பண்டிதர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய, அவர்களது அறிவுக் குறைவல்ல. தவறிக் கீழே விழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரில் இருந்தால் எப்படி அதிகக் காயம் ஏற்படுமோ—அதுபோல், புராண இதிகாசக் கலைச் சேற்றில் விழுந்த நமது பண்டிதர்களுக்கு, இயற்கை வாசனை அறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ் படுத்தத்தக்க வண்ணம், மூடநம்பிக்கைச் சமய (மத)ங்கள் என்னும் விஷப் பாம்புகள் அவர் களைக் கரையேறவிடாதபடி சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நம் மதவாதிகள்—சிறப்பாக 'இந்து' மதவாதிகள் என்பவர்கள் பண்டித மதவாதி களைவிட மோசமானவர்கள். பண்டிதர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போகவேண்டுமென்றால், மதவாதிகள் பதினாயிரக்கணக்கான வருஷங்களுக்கும், பல 'யுகங்'களுக்கும் முன்னால் இருந்த உலகங்களுக்குச் செல்லவேண்டு மென்பவர்கள். இவர்கள் இருவருக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமல்லாததும், மனித சக்திக்கு மீறினதுமான காரியங்களிலும் அசாத்தியமான கற்பனைகளிலும்தான் நம்பிக்கை யும் பிரியமும் இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட இவர்களால் கண்டறியப்படும் புது உலகம் காட்டுமிராண்டிகள் வசிக்கும் உலகமாக இருக்கும் என்பதையும், இவர்களை மதிக்கும் மக்கள் பெரும்பாலும் மூடநம்பிக்கையில் மூழ்கிய காட்டுமிராண்டிகளாய் இருப்பார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆதலால்தான், பழையவைகளுக்கே மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பவர்களால் மாறுதலின் சக்தியும், அம் மாற்றத்தின் தன்மையும், அதனால் ஏற்படும் பயனும் உணர்ந்துகொள்ளவோ, எதிர்பார்க்கவோகூட முடியாது என்று சொல்லவேண்டியதாயிற்று.

பழையவைகளை—ஏற்ற அளவுக்கும் நற்பயன் தரவேண்டிய அளவுக்கும், உபயோ கித்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின்வாங்க மாட்டோம். ஆனால், புதியவற்றிலேயே முயற்சியும் ஆராய்வதில் ஆர்வமும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், அவற்றினால்தான் இயற்கையைப் படிப்பது என்பதோடு, புதியவற்றைக் கண்டுபிடிப்பதும் முற்போக்கு அடைவதும் ('இன்வென்ஷன்', 'ப்ராக்ரஸ்') சுலபத்தில் சாத்தியமாகலாம்.

இன்று உலகத்தின் வேறு பல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும், அப் பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம்—அந் நாட்டவர்கள் பழையவற்றோடு திருப்தி அடைந்து, அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி அப் பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங் கொண்டு, நடுநிலைமை அறிவோடு முயற்சித்ததன் பலனாலேயே ஏற்பட்டவைகளாகும். அவை இன்று எல்லா மக்களாலும் ஆதரவோடு அனுபவிக்கப்படுகின்றன.

ஆகவே, இதை உணர்ந்தவர்கள்தாம் இனிச் சில நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் எப்படிப்பட்ட உலகத்தைக் காணலாம், அதற்கு என்ன முயற்சி செய்யலாம் என்பதை ஒருவாறு கற்பனைச் சித்திரமாகவாவது தீட்டமுடியும்.

உலகத்தை ஒருவாறு படித்தறிந்த பல பெரியார்களின் அபிப்பிராயங்களையும், உலகின் பல பாகங்களில் இதுவரை ஏற்பட்டு வந்திருக்கும் காரியங்களையும் ஊன்றிப் பார்ப்போமானால்—இனி வரும் உலகமானது அரசனது ஆட்சி அற்றதாகவே இருக்கும். ஏனெனில், இனிவரும் உலகத்தில் தங்கம், வெள்ளி முதலிய (உலோக) நாணயங்களும் தனிப்பட்டவர்களுக்கென்று உடைமையும், உரிமையும் உள்ளதாக இருக்காது. ஆதலால், அப்படிப்பட்ட உலகத்துக்கு, அரசனோ, இன்றுள்ளது போன்ற ஆட்சியோ எதற்காக வேண்டியிருக்கும்? மக்கள் உயிர் வாழ்க்கைக்கும், ஓய்வுக்கும் அனுபவிப்புக்கும் இன்றுள்ள உழைப்புகள், கஷ்டங்கள் கட்டுக்காவல்கள் இருக்காது. இன்றுள்ள பெருவாரியான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்யும் நேரம் அதிகம்; பயன் அனுபவிக்கும் நேரமும் சுகப்படும் ஓய்வு நேரமும் குறைவு.

உண்ணும் உணவுப் பொருள்களுக்கும் அனுபவிக்கும் போகப்பொருள்களுக்கும் வசதி அதிகம். போதிய உணவில்லாமலும், குறைந்தபட்ச சுகபோக அனுபவமில்லாமலும் பட்டினிகிடக்கும் மக்களும் வறுமையை அனுபவிக்கும் மக்களும் அனேகர்.

சுயேச்சைக்கு வசதியும், சுயநிர்ணயத்துக்கு மார்க்கமும் தாராளமாய் இருக்கின்றன. சுயேச்சையோடு இருப்பவர்களோ, தன்னம்பிக்கையோடு இருப்பவர்களோ மிகக் குறைவு.

பொருள் செய்வகைகளும் அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருளும் ஏராளமாயிருக்கின்றன. குறைந்த அளவு—அதாவது, இன்றியமையாத, தேவையான பொருள்கூட இல்லாமல் கஷ்டப்பட்டும், வேதனையும் படுகிற மக்கள் அனேகர்.

நிலப்பரப்பு ஏராளம்; நிலமில்லாதவர்கள் என்பவர்கள் அனேகர். இப்படிப்பட்ட சர்வ செல்வமும் நிறைந்து உள்ள உலகில் பட்டினி, வறுமை, மனக் குறை, வாழ்வுக்கே போராட்டம் ஏன் உண்டாக வேண்டும்?

இவைகளுக்கும், கடவுளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? இவைகளுக்கும், மதங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

அல்லது, இவைகளைக் கடவுள்களுக்கும் மதங்களுக்கும் சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களில், எந்தக் கடவுளையாவது, எந்த மதத்தையாவது நம்பிப் பின்பற்றி வழிபடுகிற மக்களில் யாருக்காவது மேலேகண்ட குறைபாட்டுணர்ச்சி இல்லை என்று கூறமுடியுமா?

அல்லது, கடவுள், மதம் முதலியவைகளைப் பற்றி இலட்சியப் படாவிட்டாலும், மனிதனுக்கு மேற்கண்ட குறைகளை நீக்கிக்கொள்ள அறிவு இல்லை என்றாவது சொல்ல முடியுமா?

உலக சீவராசிகளுக்குள்ளே மனிதனே அதிக அறிவு பெற்றவன். 'கடவுள்களையும், மதங்களையும், ஞான மார்க்கங்களையும், ஆத்மார்த்த ஆரியத் தத்துவங்களையும்' மனிதன் தான் கண்டுபிடித்திருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் 'தெய்வீக சக்தி பெற்று, தெய்வத்தோடு கலந்தும், தெய்வமாகியும்' இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களாலும்

மேற்கண்ட குறைபாடு, பட்டினி, அவரவர் உணவுக்கே கஷ்டப்படுவது முதலாகிய சாதாரணத் தன்மைகள்கூட நீக்கப்படவில்லை என்றால், இவற்றிற்கு முக்கிய காரணம்—மேலே குறிப்பிட்ட கடவுள், மதம், ஞானமார்க்கம், நீதி, ஒழுக்கம், அரசாட்சி என்பவைகளும் மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட அதிக அறிவை மேற்கண்டவற்றின் கட்டுப்பாடுகளிலிருந்து வேறுபடுத்தித் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்காததும்தாம் காரணங்களாகும் என்பது விளங்கவில்லையா?

இப்போது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட 'ஆத்மார்த்தம்' முதலிய 'சூட்சுமங்களில்' உள்ள கவலையையும் மூடநம்பிக்கையையும் விட்டுத் தம் அறிவையும் அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததின் காரணமாகவே பல அற்புதங்களும் அதிசயங்களும் காண முடிந்தபின், மேல்நாடுகளிலே அதிகம் பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்துவிட்டார்கள்; பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவுகட்டுகிறார்கள். புதிய உலகத்தைப்பற்றியே சிந்திப்பதும் சித்திரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப் பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபட வேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்து சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை. இன்று அவை தெளிவாக்கப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டும் வருகிறகாலம் நடக்கிறது.

இந்தப் போக்கு சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும்படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான்—நான் முன்சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது; அரச ஆட்சி இருக்காது; கடினமான உழைப்பு என்பது இருக்காது; இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத் தன்மை இருக்காது; ஒருவரை ஒருவர் நம்பிக்கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது. பெண்களுக்குக் காவல், கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

காந்தியாரைப் போலவும், மடாதிபதிகளைப் போலவும், அரசர்கள், ஜமீன்தார்கள் முதலிய பெரும்பெரும் செல்வவான்கள், போகபோக்கியம் அனுபவிப்போர்கள் போலவும், பார்ப்பனர்கள் போலவும், உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழவேண்டுமானாலும் அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒருநாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்துக்கு மேல் வேலைசெய்ய வேண்டிய அவசியமே இருக்காது.

ஒரு மனிதன் தனது காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும் அவன், 'எனக்கு வலிக்கிறது' என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும் குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும் படியும் அனுபவிப்பதுபோல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டுவாழ்க்கையும் ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்தப் பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது; மக்கள், மக்களால்—யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலைசெய்ய வேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள் 'உடற் பயிற்சிக்காக வேலைசெய்ய வேண்டுமே' என்கின்ற கவலைகொண்டு உடலுழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

அதிசயப் பொருள்களும், அற்புதக் காட்சிகளும், அவற்றின் அனுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல் அனுபவிப்பார்கள். லேவாதேவிக்காரர்கள், தனிப்பட்ட

வியாபாரிகள், தொழிற்சாலை, இயந்திரசாலை முதலாளிகள், கப்பல்–இரயில்–பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜெண்டுகள், இன்சூரன்ஸ் ஏஜெண்டுகள், தரகர்கள், விளம்பரங்கள், மற்றும் வேறு எவ்விதமான தனிப்பட்ட இலாபடையும் மக்களும் தொழில்களும் எவையுமே இருக்காது. சண்டைக் கப்பல், யுத்தப் படை, யுத்த தளவாடங்கள் வேண்டி இருக்காது என்பதோடு, மக்களைக் கொன்று குவிக்கும் சாதனமோ, அவசியமோ, எதுவுமே இருக்காது.

வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச் சிறிய அளவுக்கு வந்துவிடும். சுகம் பெறுவதிலும் போகபோக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும் முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்திசெய்வதற்காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

உதாரணமாக, மக்கள் முன்பு கொஞ்சமான உடை அணிந்துகொண்டிருந்தார்கள். அக் காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத்திற்குச் சுமார் 150 இழைகள்தான் கோத்து வாங்கி (நெய்ய) முடிந்தது. இன்று மக்கள் முன்னைவிடப் பலமடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும் அவ்வளவும் கிடைக்கும்படியான அளவுக்குமேலே நெசவுத் துறையில் விஞ்ஞானம் அபிவிருத்தி அடைந்து, ஒரு நிமிஷத்திற்கு 45,000 இழைகள் கோத்து வாங்கும்படியான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிகரெட்டுகளைப் பற்றிச் சிந்திப்போமானால் அக் காலத்தில் ஒரு நிமிடத்துக்கு இரண்டு மூன்று சிகரெட்டுகள்தான் சுற்ற முடிந்திருக்கும். ஆனால், இன்று ஒரு நிமிடத்துக்கு 2,500 சிகரெட்டுகள் ஒரு இயந்திரத்தினால் உற்பத்திசெய்யப்படுகின்றன. அதுவும் ஒரு பக்கம் புகையிலையைப் போட்டால் மறுபக்கம் இரயிலில் ஏற்றும்படியான மாதிரியில் சிகரெட்டுப் 'பேக்கு'கள் கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டு விழுகின்றன என்பதோடு, அந்தச் சிகரெட்டுக் 'கம்பெனி'யின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின்மீதும் சரியாய்ப் பதியவில்லையானால், பதியாத சிகரெட்டை இயந்திரம் கீழே தள்ளிவிடுகிறது. இப்படிப்பட்ட நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டுபிடிக்கப் பட்டிருக்கும்போது, இனி வருங்கால இயந்திர உலகம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமா! இம் மாதிரியாகவே வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது, நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதினாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகி விடலாம்.

ஆகவே, ஒரு ஆண்டில் மீதி உள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறி களாய் இருக்கச் செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும் யோசனையும் கண்டுபிடிப்புகளும் தேவையாக இருக்கின்றனவோ, அதுபோலவே—மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும் மகிழ்ச்சிக்கும், போகபோக்கியத்துக்கும்—யோசனைகளும், ஆராய்ச்சிகளும், சாதனங் களும், அவைகளைச் சுலபமாகச் செய்ய வசதிகளும் கண்டுபிடிப்பதும் அவை நாளுக்குநாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்பட வேண்டியிருக்கும்.

அக் கால நிலை நாம் வரையறுக்க முடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமென்று சொல்லுவது மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால், மக்கள் குறிப்பாக அறிவாளிகள்–சிந்தனையாளர்கள்–முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர் களுக்கு இவற்றின்மூலம் சதா வேலை இருந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளதுபோல் கூலிக்கு வேலை செய்வதுபோலவோ, இலாபத்துக்கு வேலைசெய்வது போலவோ இல்லாமல் உற்சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் வேலை செய்வதாக இருக்கும்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்துமுடித்து உலகுக்குப் பயன்படச் செய்துகொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

'இப்படியானால், சோம்பேறிகள் வளர்ந்துவிடமாட்டார்களா?' என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்கமுடியாது. இருப்பார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலையும் குறைந்து போகாது; அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால், அப்படிப்பட்ட அவர்கள் வேலையில் ஈடுபடுவதைவிடச் சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமா யிருக்கும்.

பொதுவாகவே அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மையிலேயே—'தங்களுக்கு வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே; வீணாக நேரம் கழிகிறதே!' என்று கருதி வேலைக்குப் போராடிக்கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச் சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, யாருக்கும் கவலை இருக்காது. எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசை தீர வேலை கொடுக்கமுடியாத காலமாக இருக்குமே ஒழிய, அந்தக் காலம் வேலைக்கு ஆள்தேட வேண்டியதாகவோ, 'அவன் வேலை செய்யவில்லை, இவன் வேலை செய்யவில்லை' என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

'இழிவான' வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா?' என்று கேள்வி பிறக்கலாம். இழிவான வேலையென்று வருங் காலத்தில் இருக்க முடியாது. சரீரத்தால் செய்யப்பட வேண்டிய எல்லாக் காரியங்களும் அனேகமாக இயந்திரங்களாலேயே செய்யும்படியாக ஏற்பட்டுவிடும். கக்கூசு எடுக்கவேண்டியதும், துலக்கவேண்டியதும், வீதி கூட்டவேண்டியதும் கூட இயந்திரத்தினாலேயே செய்து முடிந்துவிடும். மனிதன் பாரம் எடுக்கவேண்டியதோ, இழுக்க வேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது. அக் காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொதுஜன நன்மை, சவுகரியம் ஆகியவைகளைச் செய்யவேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டியினால் 'இழிவான' வேலைக்கும் எப்போதும் கிராக்கி இருந்துகொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும் போட்டி போட்டுக் கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமை யானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும்; மற்றவர்கள் அலட்சியப்படுத்தப் படுவார்கள்.

அக் காலத்தில் 'ஒழுக்கக் குறை' என்பதற்கு இடமே இருக்காது. ஒழுக்கக் குறைவாய் ஒருவன் நடக்க வேண்டுமானால், அதனால் அவனுக்கு ஒழுக்கமாய் நடப்பதன் மூலம் கிடைக்கப்படாத ஏதாவது இலாபமோ, திருப்தியோ, ஆசைப் பூர்த்தியோ ஏற்பட வேண்டும். புதிய உலகில் தனிப்பட்டவர் தேவைக்கும் தனிப்பட்டவர் மனக் குறைக்கும், ஏங்கித் திரியும் ஆசைக்கும் இடமே இருக்காது. தன்னிலும் மேலாகவோ தன்னிடமிருப் பதைவிட அதிகமாகக் கொண்டோ, வேறொருவன் இருக்கிறான்—அனுபவிக்கிறான் என்கின்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான், அதிருப்தியும் மனக்குறையும் ஏற்படும். அதை நிவர்த்தித்துக் கொள்வதற்குத்தான் எந்த மனிதனும் ஒழுக்கக் குறைவாய், நியாய விரோதமாய், கட்டுத் திட்டத்துக்கு மீறி நடக்கவேண்டியவனாகலாம். பொதுவாக, இன்று ஒழுக்கம், நியாயம், கட்டுத்திட்டம் என்பவைகளே—பெரிதும் உயர்வு, தாழ்வுகளையும் தனிப்பட்டவர்கள் உரிமைகளையும் சவுகரியங்களையும் நிலைநிறுத்த ஏற்படுத்தப்பட்டவை களேயாகும். ஆகையால், இவை இரண்டும் இல்லாத இடத்தில் அவை இரண்டுக்கும் இடமிருக்காது. அதுபோலவே திருட்டுக்கும் இடமிருக்காது.

கங்கைக் கரை ஓரத்தில் குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருடவேண்டிய அவசியம் ஏற்படுமா? அல்லது அவர்களது தேவைக்கு மேல் அதிகமாக எடுப்பார்களா? அல்லது,

'நாளைக்கு வேண்டுமே', என்று சேகரித்து வைக்க முயற்சிப்பார்களா? ஆதலால், தேவை உள்ள சாமான்கள் தாராளமாய் வழிந்தோடும்போது, திருட்டுக்கு இடமே இருக்காது; அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது; பொய் பேசவேண்டிய அவசியமும் இருக்காது. அதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய் பேச நேரிடும்! குடியினால் மக்களுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்பட இடமிருக்காது. கொலை செய்யும்படித் தூண்டத் தக்க காரியமும் இல்லாமல் போய்விடும்; சூது ஆடுவது என்பதும், பந்தயப் போட்டியாய் இருக்கலாமே தவிர, பண நஷ்டமாக இருக்காது.

விபச்சாரம் என்பதும் இருக்க நியாயமில்லை. ஏனெனில், பணத்துக்காகவும், பண்டத்துக்காகவும் விபச்சாரம் என்பது அடியோடு மறைந்தே போகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆள முடியாது. ஒருவர் தயவைக் கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது. ஒருவரை ஒருவர்—அதாவது, ஆணும் பெண்ணும் மனப்பூர்வமான சமவிருப்பமின்றிக் காதல் அனுபவிக்கமாட்டார்கள். கல்வி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும், கல்வியும் ஏற்படும். ஆனதால், மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கை என்பதைத் தவிர, புதுமைக்காக, மாறுதலுக்காக, அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது. அன்றியும், உடல் நலம் பற்றிய அறிவும் கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும். 'விருப்பமில்லாத இடத்தில், சம்பந்தமில்லாத இடத்தில் இச்சை வைப்பது தனது சுயமரியாதைக்குக் குறைவு' என்றே ஆண் பெண் இருபாலரும் கருதுவார்கள். பெண் அடிமையோ ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ வற்புறுத்தலோ, உடல் நலத்திற்குக் கேடோ இல்லாமலும், ஒத்த காதல், ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட கலவியால் சமுதாயத்துக்கோ தனிப்பட்ட நபர்களுக்கோ எவ்விதக் கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் விபச்சாரம் என்பதற்கு இடமில்லாது போகும்.

மூளைக் கோளாறான குணங்கள் என்பவைகளை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால், அதற்கு மாத்திரம் பரிகாரம் தேடவேண்டிய அவசியமிருக்கலாம். அதுவும் அப்படிப்பட்டவர்களால் பிறருக்கோ தங்களுக்கோ கேடு ஏற்படுவதாய் இருந்தால் மாத்திரம்தானே? ஆதலால், பஞ்சேந்திரியங்களும் ஒரே துறையில் ஒரே சமயத்தில் இன்பந் தரக்கூடிய இவ் வின்பத்துறையில் இயற்கைக் கேடு, சமுதாயக்கேடு அல்லாமல் வேறு காரியத்திற்குக் கட்டுப்பாடு இருக்காது.

போக்குவரவு—எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்திச்சாதனம்—ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ—ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம்—எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஒரு இடத்தில் இருந்துகொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவுச் சத்துப் பொருள்கள் சுருக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடக்கக் கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய நூறு வருஷம் என்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம்; இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண்–பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாக, பொலிகாளைகள்போல் தெரிந்தெடுத்த மணிபோன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை 'இஞ்செக்‌ஷன்' மூலம் பெண்கள் கருப் பைகளுக்குள் செலுத்தி

நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குள் கொண்டு வந்துவிடக்கூடும். உல்லாச வாழ்வு என்பது தவிர, உலக 'குடித்தன வாழ்வு' என்ற தன்மையே இருக்காது.

போகப் பொருள்களும் வெகுதூரம் மாற்றமடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்றமடைந்துவிடும்.

ஒரு 'டன்'னுள்ள மோட்டார் கார் ஒரு 'அந்தர் வெயிட்'டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்குப் பதில் மின்சாரத்தையே உபயோகப்படுத்தலாம், அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணைசெய்யும் விதமாகவும் விரியும்—பெருகும். விஞ்ஞானம், வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும்படியான அதிசயப் பொருள் களும், கண்டுபிடிப்புகளும், தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல், சகல மக்களுக்கும் சவுகரியம் தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனி வருங்காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள, அரசுடைமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய பலதுறைகளிலும், இப்போது எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்ற னவோ, அம் முறைகளுக்கெல்லாம் அவசியமில்லாமற் போய்விடும் என்பதோடு, அவை சம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துக்கள் அர்த்தமற்றவையாகவும் போய்விடும்.

இனிவரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப்படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால் சிறியோர்களுக்குப் போதிக்கப்பட்டும் காட்டப்பட்டுமே தோற்றமான—எண்ணமும் உருவமுமாகும். ஆனதால். இனிவரும் உலகத்தில் கடவுளைப்பற்றிப் போதிக்கிறவர்களும், காட்டிக் கொடுப்பவர்களும் மறைந்துவிடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர்களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப் போகும். ஏனெனில், கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு அவசியம் இருந்தால்தான் நினைப்பான். சகல காரண காரியங்களுக்கும் மனிதனுக்கு விவரம் தெரிந்துவிடுவதாகவும், சகல தேவைகளும் மனிதனுக்குக் கஷ்டப்படாமல் பூர்த்தியாவ தாகவும் இருந்தால்—ஒரு மனிதனுக்குக் கடவுளை கற்பித்துக் கொள்ளவோ, நினைத்துக் கொள்ளவோ அவசியம் ஏன் ஏற்படும்? மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு 'மோட்சமாய்'க் காணப்படுமானால் விஞ்ஞானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான்? அதற்கு ஏன் ஆசைப்படுவான்? 'தேவை அற்றுப் போன இடமே, கடவுள் செத்துப்போன இடமாகும்' என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

சாதாரணமாக, மனிதனுக்கு இன்று கடவுள் நிச்சயத்திற்கு ஒரே ஒரு காரணம்தானே இருந்து வருகிறது! அக் காரணம் என்ன வென்றால், 'இந்த உலகத் தோற்றத்திற்குக் காரணம் என்ன? காரண பூதமாய் இருப்பது எது? அதுதான் கடவுள்' என்று சொல்லப் படுகிறது. இது விஞ்ஞானிக்குச் சுலபத்தில் அற்றுப்போன விஷயம். நம்முடைய வாழ்வில் நாம் எதைக் கடவுள் செயல் என்று உண்மையாய்க் கருதுகிறோம்? நம் அனுபவத்திற்கு வந்த ஒவ்வொன்றுக்கும் நாம் சமாதானம் தெரிந்து கொள்ளுகிறோம்; தெரியாதவற்றைத் தெரியாது என்று ஒப்புக் கொள்ளுகிறோம்; தெரிந்ததைத் தெரிந்தது என்று சொல்லு கிறோம். இதுவேதான் உலகத் தோற்றத்துக்கும் உலக நடப்புக்கும் கொள்ள வேண்டிய

முறையாகும். ஒரு சமயம் உலக நடப்புக்குக் காரணம் தெரியா விட்டாலும் அதற்காக ஒரு காரியத்திற்கும் தேவையில்லாத கடவுளை எவனும் வணங்கமாட்டான்.

புதிய உலகத்தில் மோட்ச—நரகத்துக்கு இடம் இருக்காது. நன்மை, தீமை செய்ய இடமிருந்தால்தானே மோட்சமும்—நரகமும் வேண்டும்? எவருக்கும் யாருடைய நன்மையும் தேவை இருக்காது. புத்திக் கோளாறு இருந்தால் ஒழிய ஒருவனுக்கு மற்றொருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக் கேட்டுக்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட நிலையில் மோட்ச—நரகத்துக்கு வேலை ஏது? ஆள் ஏது?

எனவே, இப்படிப்பட்ட நிலை புதிய உலகத்தில் தோன்றியே தீரும். தோன்றா விட்டாலும் இனிவரும் சந்ததிகள் இந்த மாறுதல்களைக் காணவேண்டுமென்றும், இவைகளால் உலகில் மக்களை இப்போது வாட்டிவரும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, 'வாழ்க்கை என்றால் பெருஞ் சுமை' என்று சலித்துக் கொண்டும், 'வாழ்க்கை என்றால் போராட்டம்' என்று திகைத்துக் கொண்டும் இருக்கிற நிலைமை போய்—'வாழ்க்கை என்றால், மக்களின் இன்ப உரிமை' என்ற நிலைமை உண்டாக வேண்டுமென்றும், ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்.

'நம்மால் என்ன ஆகும், அவனன்றி ஓரணுவும் அசையாதே!' என்று வாய் வேதாந்தம் பேசமாட்டார்கள். நம் கண்முன் காணப்படும் குறைபாடுகளைப் போக்க நாம் எப்படி உழைக்க வேண்டும் என்பதே அவர்களின் கவலையாகவும் அவர்களின் எண்ணமாகவும் இருக்கும்; என்றோ, யாரோ, எதற்காகவோ, எழுதி வைத்த ஏட்டின் அளவோடு நிற்கமாட்டார்கள்; சுய சிந்தனையோடு கூடியதாகவே அவர்களின் செயல்கள் இருக்கும். மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை, மனித அறிவினாலேயே நீக்கிவிடமுடியும் என்ற ஆசையும் நம்பிக்கையும் கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு, மனித சமுதாயத்தை நாளுக்குநாள் முன்னுக்குக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கும். சுய சிந்தனைக்கு இலாயக்கற்றவர்களே இந்த மாறுதல்களைக் கண்டு மிரள்வதும், 'காலம் வரவரக் கெட்டுப் போச்சு' என்று கதறுவதுமாக இருப்பார்கள். இன்றைய மக்களிலே பலருக்கு, பழைமையிலே இருக்கும் மோகம், அறிவையே பாழ்செய்து விடுகிறது; புதிய உலகத் தோற்ற வேகத்தைத் தடைசெய்து விடுகிறது.

பழைய முறைப்படி உள்ள அமைப்புக்களால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும், பாமரரின் ஞான சூன்யம், சுயநலக்காரரின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலைசெய்வோரே இனிவரும் உலகத்தின் சிற்பிகளாக முடியும். அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்யவேண்டுமென்று, வாலிபர்கள் பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வர வேண்டி இதை முடிக்கிறேன்.

['திராவிட நாடு' வார இதழ், காஞ்சிபுரம்—21, 28-3-1943; நூல் : 'இனிவரும் உலகம்'
இரண்டாம் பதிப்பு 1944]

4. கால வேகம்

பெரியோர்களே! தோழர்களே!

நம் கடவுள், மதம், ஒழுக்கம் இவைகளைப்பற்றிய நூல், ஆகியவைகள்கூட மாற்றக் கூடியவையாகத்தானே இருக்கமுடியும்? மற்ற துறைகளில் அக் கால மக்களுக்கு என்ன அறிவு, அனுபவம் இருந்ததோ அதுதானே இந்தத் துறைகளிலும் இருந்திருக்கும்?

உதாரணமாக, அந்தக் காலத்தில் பொய் பேசுகிற மனிதன் இருப்பது அதிசயிக்கத் தக்கதாக இருந்திருக்கும்; ஆனால், இந்தக் காலத்தில் பொய் பேசாத மனிதன் இருப்பது அதிசயமாக இருக்கிறது. ஏன் என்றால், காலம் மக்களை அப்படித் தள்ளிக்கொண்டு

போகிறது. காலப் போக்குக்கு மனிதன் கட்டுப்பட்டே ஆகவேண்டும்; இல்லாவிட்டால் காட்டுக்குப் போய்விடவேண்டும்; அங்குங்கூட காலம் அவனைத் தொடர்ந்து கொண்டு தான் போகும். பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவதுபோல, காலத்தை நோக்கி மனிதன் போய்த்தான் தீருவான். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

என் பேச்சும் இந்தக் கூட்டமும், உங்கள் இருக்கையும் காலப்போக்கைப் பொறுத் தவையே தவிர என்னையோ, உங்களையோ, பொறுத்தவையல்ல. காலப்போக்கை அறியாத பட்டிக்காட்டார், பாமரத் தனம் கொண்டவர்கள் ஆகியவர்கள்தான்—மாறுதல் என்னாலும் உங்களாலும் ஆனதாகக் கருதுவார்கள். ஆனால், அவர்களும் அறிவு, அனுபவம் பெற்றவுடன் காலப்போக்குத்தான் காரணம் என்பதை உணர்ந்துகொள்ளுவார்கள். ஆனால், அதற்குக் கொஞ்சநாள் பிடிக்கும். உதாரணமாக, அந்தக் கொஞ்சநாள் பிடிக்கும் என்பதுதான் புரட்சிக்காரர்கள் என்பவர்களுக்கும்; வைதீகர்கள், மாறுதல் வேண்டாத வர்கள், பழைமை விரும்பிகள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதுவேதான் வாலிபர்கள் என்பவர்களுக்கும் வயோதிகர்கள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதாவது, வாலிபர்களுக்குப் புதுமை சீக்கிரம் தோன்றும்; சீக்கிரம் பிடிக்கும். காரணம், அவர்கள் உள்ளம் எழுதாத வெறும் சிலேட்டுப் போன்றது. வயதானவர்கள் உள்ளம் பல சங்கதிகள் எழுதப்பெற்றது. புதிய தன்மைகள் பதியப்பட வேண்டுமானால்-முன்னால் பதிந்தவைகள் அழிக்கப்படவேண்டும்; அவைகள் சுலபத்தில் அழிக்கமுடியாத மாதிரி ஆழப் பதிந்துபோயிருக்கும்.

இதைத்தான் வைதீகம் என்றும், பிடிவாதம் என்றும், காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக்கொள்ள முடியாமை என்றும் பெரிதும் சொல்லுகிறோம்.

[இராஜபாளையத்தில், 6-12-1944-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 16-12-1944]

5. நான் நோக்கும் முறை

பேராசிரியர்களே! மாணவர்களே!

நான் மற்றவர்களைவிட விஷயங்களை முதலில் நன்கு உணர்ந்து, அதன் பிறகு எடுத்துச் சொல்லுபவன்; எந்த விஷயத்தையும் நிர்வாணமாகப் பார்த்துத்தான் பின் விளக்குவேன்; இப்படி நிர்வாணமாக உணர்ந்து விளக்குவது நாகரிகக் குறைவு என்று சிலர் எண்ணுவார்கள்!

ஒரு மனிதனை வருணிப்பது என்றால், சொக்காய், நாமம், பட்டை, உருமாலை, தலைப் பாகை இவைகளை வருணித்தால் போதாது. அவனுடைய உடலமைப்பு, உடல் அங்க அவயவங்கள் ஆகியவைகளைப் பற்றியும் உணர்ந்து வருணிக்கவேண்டும். அப்போது தான் வருணனை பூரணத்துவமானது என்று கூறமுடியும்.

நாடகத்தில் வருகின்ற நடிகையைப் பார்த்து அவளுடைய முகத்தில் பூசிய சாயம், அணிந்துள்ள கில்டு-கண்ணாடி நகைகள், சடை இவைகளைப் பார்த்து அழகாக இருக்கிறாள் என்று கூறிவிட முடியுமா? அந்தச் சாயத்தைக் கலைத்து, கில்டு நகை, கூந்தலில் ஒட்ட வைத்துள்ள ஒட்டு மயிர் முதலியவைகளை எடுத்துவிட்டுப் பார்த்தால்தான் அவள் அழகியா இல்லையா என்பது விளங்கும்.

இந்த முறை எல்லா இடங்களிலும், எல்லோருக்கும் பிடிக்கும் என்று நான் கருது வதில்லை என்றாலும், உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்! இந்த வேலையைச் செய்ய வேறு ஆளே இல்லையே!

[மதுரை தியாகராசர் கல்லூரியில், 13-3-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-4-1961]

6. பகுத்தறிவாளர்க்கு

தோழர்களே!

உயிரினங்களில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. மற்றவைகளுக்குக் கிடையாது.

எனவே, பகுத்தறிவாளர் கழகம் என்றால் 'மனிதர்கள் கழகம்' என்பதுதான் பொருள். இத்தனை நாட்களாக மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லையா? இப்போதுமட்டும் தானா இருக்கின்றது? என்று கேட்கலாம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு இருந்தும், அதுபற்றிய சிந்தனா சக்தி இல்லாமல், பயன் படுத்தாமல் இருந்து வந்துள்ளோம்; அந்த நிலையை மாற்றி, மக்களைப் பகுத்தறிவு கொண்டு எதையும் சிந்திக்கத் தூண்டவே நாம் முற்படுகின்றோம். பகுத்தறிவு கொண்டு சகல துறைகளிலும் சிந்தனையைச் செலுத்தி நமது இழிவு, மடமை, உணர்ச்சி இன்மை இவைகளை ஒழிக்கப் பாடுபடுகின்றோம்.

நாம் 1000, 2000 ஆண்டுகளாக அறிவைப் பயன்படுத்தாமல், மான அவமானத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து வந்துவிட்டோம். இனி, பகுத்தறிவைப் பயன்படுத்தி இதிலிருந்து விலகவேண்டும் என்கின்றோம்.

நாம் எதனாலே இழி மக்களாக, மான அவமானமற்ற மக்களாக ஆக்கப்பட்டோமோ அவைகளையெல்லாம் ஒழித்தாகவேண்டும். நம்மைக் கீழான நிலைக்கு, இழி நிலைக்கு ஆளாக்கியது கடவுளும், மதமும், சாஸ்திரமும் முன்னோர்கள் நடப்பும் என்று காண் கின்றோம். இவைகளையெல்லாம் ஒழித்தாகவேண்டும் என்று கூறுகின்றோம்.

இன்றைக்கு அடித் தளத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தானாகட்டும் மான உணர்ச்சி இல்லை என்று கூறமுடியுமா? இருக்கின்றது; அதனைத் தூண்ட எவரும் முற்படவில்லையே; அவனை அடக்கிவைக்க வேண்டுமானால் பலர் தோன்றினார்கள். நாங்கள்தானே, நீ ஏன் இழிமகன், தாழ்த்தப்பட்டவன், பஞ்சமன், பறையன் என்று கேட்டு உணர்வுபெறச் செய்தோம்!

சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்காரனும் தமக்குள்ள சாதி இழிதன்மையினைப் பற்றிச் சிந்திக்காமல், ஒழிக்கப் பரிகாரம் காணாமல் அவனவன் தாங்கள் மற்றவனைவிட உயர்ந்த சாதி, மேலான சாதி என்று கூறிக்கொள்ள முற்படுகின்றானே ஒழிய, சாதி இழிவை ஒழிக்க, சாதி முறையையே ஒழிக்க எண்ணமாட்டேன் என்கின்றார்களே!

ஆதித் திராவிடர்களை எடுத்துக்கொண்டால் பள்ளர்கள் தாங்கள் தேவேந்திர குலம் என்கின்றார்கள்; சக்கிலியர்கள் அருந்ததியார் குலம் என்கின்றார்கள். கம்மாளர் தாங்கள் விஸ்வப் பிராமணர் என்கிறார்கள்; சிலர் தேவாங்கப் பிராமணர் என்கின்றார்கள்; கோமுட்டிகள் தங்களை ஆரிய வைசியர்கள் என்கின்றார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தனவைசியர் என்று கூறிக்கொள்ளுகிறார்கள்; படையாட்சிகள் தங்களை வன்னிய குல சத்திரியர் என்று கூறிப் பூணூலை உருவுகிறார்கள். நாடார்கள் தங்களை சத்திரியர் என்று கூறிக்கொண்டு பூணூலும் போட்டுக்கொண்டு, சில இடங்களில், சந்தியா வந்தனமும் கூடச் செய்கின்றார்கள். இராஜுக்கள் என்ற கூட்டம் தாங்கள்தாம் அசல் சத்திரியர் என்று கூறிப் பூணூல் போட்டுக்கொண்டு திரிகின்றனர்.

இப்படியாக, ஒவ்வொருவனும் தங்கள் தங்கள் சாதிதான் உயர்வு என்று கூறிக் கொள்ளப் போலியான கட்டுக்களை ஏற்படுத்திக்கொண்டு, பெருமை பாராட்டுகின்றார்கள். பொதுவாக எல்லோரையும் பார்ப்பான் இழிமகன், சூத்திரன், பஞ்சமன், பறையன் என்று தானே கூறுகின்றான்; சாத்திரத்தில், ஆதாரங்களில் எழுதிவைத்து இருக்கின்றானே— என்பதுபற்றி எவனுக்காவது எண்ணமே இல்லையே!

மனித சமுதாயம் மடமையானது கடவுளினால்தான். மனித சமுதாயம் இழிதன்மை அடைந்ததும் கடவுளினால்தான். இந்தக் கடவுளும் மதமும் சாஸ்திரங்களும் 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பாக மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் ஏற்பட்டவையாகும்.

மனிதன் இன்றைக்கு இந்தக் கடவுள் மதம், சாஸ்திரங்களைத் தவிர மற்ற சங்கதி எல்லாவற்றிலும் எவ்வளவோ மாற்றிக்கொண்டு இருக்கின்றான். உணவிலே, உடையிலே, நடை உடை பாவனைகளிலே நாகரிகத்திலே எவ்வளவோ மாறுதல்கள் எல்லாம் செய்து கொண்டு இருக்கின்றான். ஆனால், கடவுள், மதம், சாஸ்திரங்களில் மட்டும் மாற்றிக்கொள்ள மறுக்கின்றானே!

பகுத்தறிவைப்பற்றி நாம் சிந்திக்காததன் காரணமாக என்ன என்ன கேடுகள் ஏற்பட்டனவோ, என்னென்ன இன்னல்கள் ஏற்பட்டனவோ அவற்றை நிவர்த்திக்கப் பகுத்தறிவு இயக்கம் தோற்றுவித்து இருக்கின்றோம்.

நாம் குழந்தைகளிடம் பேசுவதில் பகுத்தறிவை உபயோகிப்பது தேவை இல்லை. அது காரணமாக நமக்கோ, மற்றவர்களுக்கோ கேடு ஏற்படாது. ஆனால், மற்ற விஷயங்களில் பகுத்தறிவைப் பயன்படுத்தாவிட்டால் பல கேடுகள் ஏற்பட்டே தீரும். இத்தனை நாள் 'சிந்திக்கக்கூடாது' என்ற தலைப்பில் வந்த காரியங்களை இப்போது மாற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றோம்.

பகுத்தறிவு என்றால் இன்று நாம் முதலில் இப்போது கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கள் நடப்பு இவைகளின் கேடுகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றோம். இதற்கு முன்பு இந்தக் காரியங்களில் யாரும் ஈடுபடவே இல்லை.

பகுத்தறிவிற்கு இந்த நாட்டில் ஏற்பட்ட தடை காரணமாகவே நமது வளர்ச்சியில் தடை ஏற்பட்டுவிட்டது. மற்றைய நாட்டுக்காரர்களுடன் போட்டிபோட முடியாதவர்களாக ஆகிவிட்டோம்.

இனி, நம் வளர்ச்சிக்கும், நமது கேடுகள் ஒழிவதற்கும் மேல் நாட்டார்கள் போல முன்னேறுவதற்கும் இந்தப் பகுத்தறிவை, சிந்தனையைப் பயன்படுத்தவேண்டும்.

நாம் முதலாவதாக சமுதாயத் துறையில் பகுத்தறிவைச் செலுத்தி இப்போது சிந்திக்க வேண்டும். பிறகு விஞ்ஞான வளர்ச்சிக்கும், அதிசய அற்புதங்களைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்திக்கொள்ளலாம்; பயன்படுத்தவும் வேண்டும்.

முதலில் சமுதாய மாற்றம் ஏற்பட்டால்தான், நாம் மனிதர்களாக ஆவோம். நாம் உண்மையான பகுத்தறிவுவாதிகளாக ஆகிவிடுவோமேயானால், நம் மனிதத் தன்மை வளர்ச்சி மட்டுமல்ல சமுதாய வளர்ச்சியும் ஏற்பட்டுவிடும்; மனித சமுதாயத்திலும் ஒழுக்கம் நாணயம் ஏற்படும். மனிதனுடைய கடமை சமுதாயத் தொண்டுதான். ஒருவருக்கு உதவி செய்வது என்பதான உயரிய நிலை ஏற்படும்; மனித சமுதாயமே பரிசுத்தமாகும்.

மேல் நாடுகளில் சமுதாய பேதங்கள், மேல், கீழ் என்ற வேற்றுமைகள் இல்லை. பிறருக்குத் தொண்டு செய்வதைத் தங்கள் கடமையாகவும் கொள்வார்கள்.

சாதாரணமாக, நமக்கு ஒருவன் ஒரு பொருளைக் கொடுத்தால் பேசாமல் வாங்கிக் கொள்ளுகிறோம். ஆனால், மேல்நாட்டுக்காரன் அப்படி அல்ல. ஒருவன் ஒருவனுக்கு ஒன்று கொடுத்தாலோ, சிறு உதவி பண்ணினாலோ, 'நன்றி' என்று சொல்லுவான். இப்போதுதான் நாம் வெள்ளைக்காரனைப் பார்த்துப் பழகி இருக்கின்றோம். சமுதாயத் தொண்டு, 'சோஷியல் சர்வீஸ்' என்பது மேல்நாட்டில்தான் உண்மையாகவே நடக்கின்றது.

மனித சமுதாய வளர்ச்சிக்கும், மரியாதைக்கும் பகுத்தறிவு உதவி செய்யும். பகுத்தறிவுவாதிகளிடம் குறைபாடுகள் பேதங்கள் இருக்கக்கூடாது; மற்றவர்களுக்கு

உதவும் மனப்பான்மை ஏற்படவேண்டும். நாம் இன்று நமது நிலையில் இருந்து மாறப் பகுத்தறிவு ஒன்றைத் தவிர வேறு எதையுமே சொல்லமுடியாது.

எது எது நமது பகுத்தறிவுக்குக் கேடான காரியம், மாறான காரியம் என்று கருது கின்றோமோ அவைகள் எல்லாம் மனிதன் மடையனாக-காட்டுமிராண்டிகளாக இருந்த காலத்தில் 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டதாகும்.

'1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பாக மனிதனுக்கு எந்த அளவு அறிவு இருந் திருக்க முடியும்? அதிசய அற்புதங்களைச் சிந்திக்க அவனுக்கு எப்படி வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும்?' என்று கேட்டால் எவனும் பதில் சொல்லமுடியாது. நமது பாட்டன் கட்டை வண்டியில் போனான்; குச்சுவீட்டில் இருந்தான். ஆகவே, நானும் கட்டைவண்டியில் தான் போவேன்; குச்சு வீட்டில்தான் இருப்பேன்; மோட்டாரோ, இரயிலோ, மச்சுவீடோ மாடிவீடோ வேண்டாம் என்று எவன் சொல்லுகின்றான்? தோழர்களே! மேல்நாடுகளில் 50, 60 ஆண்டுகட்கு முன்பே—நாத்திகர்கள் சங்கம், சிந்தனையாளர்கள் சங்கம், தாராள நோக்காளர்கள் சங்கம், கடவுள் மறுப்பாளர் சங்கம் என்று பல பெயர்களில் பல சங்கங்கள் தோன்றி வேலைசெய்துகொண்டு வருகின்றன.

நான் பாரிசில் ஒரு பகுத்தறிவுப் பத்திரிகையைப் பார்த்தேன். அதில் சிலுவையை ஒரு காலில் மிதித்துக்கொண்டு இரண்டாகப் பிளப்பதாகப் போடப்பட்டு இருந்ததைக் கண்டேன்.

தோழர்களே! இந்தப் பகுத்தறிவு, சிந்தனை வளர்ச்சி எங்கு கொண்டு விடுமோ சொல்லவே முடியாது. 20 ஆண்டுகட்கு முன்பு நான் விளையாட்டுப் போலச் சொல்லி உள்ளேன். அதை 'இனி வரும் உலகம்' என்ற புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். அதிலே பலவற்றைச் சொல்லி இருக்கின்றேன். அவைகளில் பாதிக்குமேல் இன்று நடை முறைக்கு வந்துவிட்டன.

'மனிதன் இப்போது சாப்பிடுவதுபோல நிறையச் சாப்பிடத் தேவையில்லை. துவரை பெரிதோ, மொச்சைக்கொட்டைப் பெரிதோ ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டால் போதும். இரண்டு நாளைக்குப் பசிக்காது' என்று எழுதியிருக்கின்றேன். அது இன்றைக்கு நடைமுறைக்குச் சாத்தியம் என்று கண்டுள்ளார்கள்.

இன்னும் 10, 15 ஆண்டுகள் போனால், மனிதன் சாப்பாடே குறைந்து குளிகை முறைக்கு வந்துவிடும். நான் அப் புத்தகத்தில் மற்றும் ஒன்று கூறியுள்ளேன். அதில் 'குழந்தை உற்பத்திக்கு ஆண்-பெண் சேர்க்கை தேவையில்லை. இருவர் இந்திரியத் தையும் எடுத்து ஒரு குழாயில் போட்டு அதிலேயே குழந்தையை உற்பத்தி பண்ணும்படி யான நிலை வரும்' என்று கூறியுள்ளேன்.

அந்தப் புத்தகத்தின் அட்டையிலேயே ஒருவர் ஒரு சோதனைக் குழாயில் குழந் தையை உற்பத்தி பண்ணுவது போன்ற படமும் வெளியிட்டுள்ளேன்.

இப்பொழுது ஒரு வாரத்திற்கு முன்பு வந்த பத்திரிகைச் செய்தியில் 'டெஸ்ட் டியூப் பேபி' (சோதனைக் குழாயில் குழந்தை) என்பதாக ஆண்-பெண் சேர்க்கை இன்றிக் குழந்தையை உற்பத்தி செய்யமுடியும் என்பதைச் செய்து காட்டிவிட்டார்களே!

இந்த முறை, கொஞ்ச காலமாகக் கால்நடைக்குச் செய்யப்பட்டுதான் வந்தது. பசு, எருமை இவைகளுக்குக் காளை சேர்க்காமல் கருத் தரிக்கச் செய்யப்பட்டு வருகின்றது. மாடும் செயற்கைக் கரு தரித்துக் கன்று போடுவதைப் பார்த்து இருக்கின்றோம்.

அடுத்து, கோழிப் பண்ணைகளில் கோழி அடை காக்காமலே, பெட்டிகளில் முட்டைகளை அடுக்கிச் செயற்கை உஷ்ணத்தின்மூலம் குஞ்சு பொரிக்கச் செய்கின்றார்களே! கால் நடைகளுக்கும், பறவைகளுக்கும் இருந்து வந்தது இன்று மனிதருக்கும் பொருந்தும் என்று செய்து காட்டிவிட்டார்கள்.

எனவே, பகுத்தறிவு—மனிதனை உன்னத அறிவினைப் பெறச் செய்யும் அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடிக்கச் செய்து, மனித சமுதாயத்தின் தொல்லைகளை, குறைபாடுகளைப் போக்க உதவும்.

[மானா மதுரை, சிவகெங்கை, தேவகோட்டையில், 9, 10, 11-11-1971-ல் சொற்பொழிவு— 'விடுதலை' 16-11-1971]

7. உலகம் வளர்ச்சி அடையாததற்குக் காரணம்

உலக மாறுதலை வளர்ச்சிக்குப் பயன்படாமல் செய்வதும்—மனிதனுக்கு உள்ள அறிவின் சக்தியை மனித வளர்ச்சிக்கு, கவலையற்ற வாழ்வுக்கு உதவாமல் செய்வதும் பெரிதும் கடவுள், கடவுள் சக்தி, கடவுள் செயல் என்பவை போன்ற முட்டாள்தனமான கருத்துக்களும், நம்பிக்கையுமேயாகும்.

கடவுள் எண்ணமோ, மனித சக்திக்கு மேம்பட்ட தெய்வீக சக்தி என்கின்ற எண்ணமோ மனிதனுக்கு இல்லாமல் இருந்திருக்குமானால்—இன்று மனிதன் குறைந்தது இந்த 3000–4000 ஆண்டுகளில், அவனது அறிவின் பயனாய், சிந்தனா சக்தியின் பயனாய், 500 ஆண்டுகளாவது உயிர் வாழத் தக்க தன்மையை அடைந்திருப்பான்; இறக்கை இல்லாமலேயே ஆகாயத்தில் பறக்கும் சக்தியை அடைந்திருப்பான் என்பதோடு, கவலையில்லாமலேயே வாழும் தன்மையையும் அடைந்திருப்பான்.

சர்வ சக்தியுள்ள கடவுள் ஒன்று இருக்கிறது; 'எல்லாம் கடவுள் செயல்' எனக் கருதும் மக்களில் யாருக்குத் துக்கமும் ஏமாற்றமும் கவலையுமில்லாமல் இருக்க முடிகிறது?

எனவே, மனித சமுதாய வளர்ச்சிக்கும், மனித ஜீவனுக்குத் துக்கமும் கவலையுமில்லாமல் இருப்பதற்கும், 'சர்வ சக்தியுள்ள கடவுள்' ஒருவர் இருக்கின்றார் என்கின்ற எண்ணம் அடியோடு ஒழிந்தாக வேண்டும்.

'கடவுள் இல்லை; இல்லவே இல்லை' என்கின்ற கருத்தை மக்களிடையே உண்டாக்கி, அவர்களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்குவதைவிட, உலகில் ஜீவகாருண்யத் தன்மை வேறில்லை என்றே சொல்லுவேன்.

மோட்சம் என்ற சொல்லுக்குப் பொருள் என்னவென்றால், 'துக்க நாசம், சுகப் பிராப்தி' என்றுதான் சொல்லப்படுகிறது.

இச் சொல்லுக்கு ஆதார பூர்வமான பொருளும் (அர்த்தமும்) இதுவாகத்தான் இருந்து வருகிறது. இந்த நிலைக்கு அறிவுதான்—அதாவது, ஞானம்தான் காரணம் என்றும் காணப்படுகிறது. இதனாலேயேதான், 'ஞானிக்குத் துக்கமில்லை; கவலையில்லை' என்று சொல்லப்படுவதோடு, 'ஞானிக்குக் கடவுளுமில்லை; கல்லெடுப்புமில்லை' என்று சொல்லப் படுகிறது.

ஞானி என்றால் என்ன பொருள்? அவன் யார்? என்று பார்த்தால், ஞானமுடையவன் 'ஞானி', புத்தியுடையவன் 'புத்தன்', அறிவை உடையவன் 'அறிவன்' என்பதாகும். இவர்களுக்கெல்லாம் கடவுள் இல்லாமல் போனதற்குக் காரணமென்ன?

அறிவையோ, புத்தியையோ, ஞானத்தையோ, கொண்டு சிந்திப்பதாலேயே கடவுள் என்ற சொல்லே தென்படுவதற்கில்லாமல் போய்விடுகிறது. ஞானிக்குக் கடவுள் இல்லை என்பது மாத்திரமல்லாமல், 'துறவிக்குக் கடவுள் இல்லை' என்று சொல்லப்படுகிறதல்லவா? அதன் பொருள் என்ன? துறவி என்றால்—ஆசையற்றவன், பற்று அற்றவன் என்பதுதான் பொருள். துறவிக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை; அவனுக்கு எதைப்பற்றியும் ஆசையில்லை. ஆனதால், அவனுக்குக் கடவுளைப் பற்றிய கவலை இல்லை என்பதோடு, அவனுக்குக் கடவுள் தேவையுமில்லை; இயற்கையோடு இயைந்துகொள்ளுகிறான்.

எனவே, இயற்கையை நல்லவண்ணம் உணர்ந்துகொள்வதும், அதற்கேற்பதான வாழ்வை அமைத்துக்கொள்ளுவதுமான அறிவுதான் முன் குறிப்பிட்ட ஞானமாகும்.

எனவே, பகுத்தறிவு பெற்ற மனித சமுதாயம் 'மனிதத் தன்மை' அடைவதற்குப் பகுத்தறிவுவாதியாக—அதாவது, பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படாத, தெரிந்துகொள்ள முடியாத விஷயங்களை, அவை எவையானாலும் சிந்திக்காமலும் அவற்றைப்பற்றிக் கவலைப்படாமலும் இருப்பதுதான் மனிதத் தன்மையாகும் என்று குறிப்பிட்டு, இதை முடிக்கிறேன்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'-முதற் பதிப்பு: 1971]

8. உலகம் ஒன்றாகவேண்டும்

தலைவரவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

நாம் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்காக-மூடநம்பிக்கையினை ஒழிக்கப் பகுத்தறிவு முறையில் இந்தப் 'பன்றிக் கறி, மாட்டுக் கறி விருந்தினை ஏற்பாடு செய்து இருக்கின்றோம். இது ஒன்றும் அதிசயமானது அல்ல. பன்றி, மாடு சாப்பிடக்கூடாது என்று எந்த ஆதாரத்தில் உள்ளது? பழக்க வழக்கத்தின் காரணமாக, சுற்றுச் சார்பு காரணமாகவே சாப்பிடக்கூடாது என்று உள்ளதே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

உலகிலேயே ஒரு முறைதான் கூடாது என்று இருக்கிறது; எல்லா நாட்டிலும் இருக்கிறது. அதுதான் மகன், தாய்–தங்கை–தமக்கை முதலியவர்களை மணக்கக்கூடாது; தந்தை மகளை மணக்கக்கூடாது என்பது. மற்றபடி ஒரு மாதிரியான முறை எதிலுமே இல்லை—திருமணத்தில்கூட.

மற்றும், இதுவரை உலகில் சாப்பிடக்கூடாதது இன்ன ஜீவன் என்று கண்டுபிடிக்கப் படவே இல்லையே! பாம்பு, காக்கை, மீன், தவளை போன்றவைகளை எல்லாம் மக்கள் சாப்பிடுகின்றார்களே, மலாயாவுக்குப் போனவர்களுக்குத் தெரியும். அங்கு பாம்பு, ஓனான், பல்லி முதற்கொண்டு எல்லா ஜீவன்களையும் நெய்யில் பொரித்துக் கடையில் தொங்கவிட்டு இருப்பார்கள்; மக்களனைவரும் வாங்கிக்கொண்டுபோய்ச் சாப்பிடுகின்றார்கள்; கடையில் மிக்சர், பகோடா முதலிய பலகாரம் வாங்குவதுபோல் வாங்கிக்கொண்டு போகிறார்கள். பாம்பைக்கூடத் தலையை வெட்டிப்போட்டுவிட்டுச் சமைத்துச் சாப்பிடுகின்றார்களே! எனவே, சாப்பிடக்கூடாத பண்டம் என்று ஒன்றுமேயில்லை. பழக்கம் வழக்கம் காரணமாகத்தான்—சாப்பிடுவதும், சாப்பிட மறுப்பதும் ஆகும். இந்த சம்பிரதாயம்கூட எல்லோருக்கும் ஒரு மாதிரி இல்லையே! நாம் மாடு சாப்பிடக்கூடாது; பன்றி சாப்பிடக்கூடாது என்பதற்கு ஒரு நிபந்தனைகூட இல்லையே! எங்கள் சாதி நாயுடு சாதி; சுமார் 60, 70 வருடங்களுக்கு முன்பு எங்கள் சாதியார்கள் எல்லாம் பன்றி சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்; வீட்டுக்கு வீடு பன்றி வளர்ப்பார்கள்; குழந்தை வெளிக்குப் போனால் அதுதான் சாப்பிட்டுச் சுத்தம் செய்யும்.

அன்று, பன்றியைக் கிராமத்தில் அடித்து எல்லாச் சாதிக்காரர்களும் விலைவைத்து பங்கு போட்டுக்கொள்வார்கள். நாயுடு, உடையார், படையாட்சி, கவுண்டர் எல்லோரும் வாங்கிக் கொண்டுபோய்ச் சாப்பிடுவார்கள். அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களைச் சொல்லவேண்டியதே இல்லை; இன்றும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றார்கள்.

மாடு சாப்பிடுவதை மதத்தின் பெயரால் தடுத்து விட்டார்கள். கிறிஸ்தவன் சாப்பிடலாம்; முஸ்லிம் சாப்பிடலாம்; தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் சாப்பிடுகின்றார்கள். இவர்கள் இந்துக்கள் என்பவர்களில் சுமார் 20, 25 சதம் அல்லவா? மற்றவர்கள் சாப்பிட்டால் என்ன கெட்டுப்போகும்? இன்றைக்குச் சீமைக்குப் போய்வந்த முஸ்லிம்களில் பலர் பன்றி சாப்பிடுகின்றார்கள். முஸ்லிம்—வேதம் சொல்லி அறுக்காத மாமிசத்தைச்

சாப்பிடமாட்டான்; ஆனால், இன்று முஸ்லிம்களில் பலர், நம்மவர்களின் இல்லங்களில் கோழி முதலியவைகள் சாப்பிடுகின்றார்களே—இவைகள் வேதம் சொல்லி அறுக்கப் பட்டவைகள் அல்லவே!

தொட்டதற்கெல்லாம் இப்படியிருக்கின்ற அமைப்பு முறைகள் நாளாவட்டத்தில் மதிப் பிழந்து மறைந்துகொண்டே வருகின்றன. நான் முன்பே திருமண முறைபற்றிக் குறிப் பிட்டேன். இந்துக்கள் சிற்றப்பா முறையில் உள்ளவர்களின் பெண்களை மணப்பதில்லை என்று. இதுகூட மலையாளத்தில் கடைப் பிடிக்கப் படுவதில்லை. சில மலையாளிகள் சிற்றப்பா மகளைக் கட்டிக்கொள்கின்றார்கள். உதாரணத்துக்குச் சொல்லுகின்றேன். கிருஷ்ணன் நாயர் என்ற ஒரு பிரபலமானவர் இருந்தார். அவர், தம் மகனுக்குத் தமது தம்பி கோவிந்தன் நாயர் என்பவரின் பெண்ணைத்தான் கட்டிவைத்தார். என்ன என்று கேட்டால், தாய், தந்தையர் வித்தியாசத்தை மட்டும் தான் பார்க்கிறார்கள். 'தாய்—தந்தையர், மண மக்களுக்கு ஒருவராக இருக்கக்கூடாது' என்று மட்டுந்தான் நினைக்கின்றார்கள்.

இப்படியாக, ஒன்றில்கூட ஒரு மாதிரியான பழக்கம் எல்லோருக்கும் இல்லை. பழக்க வழக்க அடிப்படையில்தான் ஒவ்வொன்றும் இருக்கின்றது. அதில் ஒன்றுதான், இப்படி மாட்டுக் கறி, பன்றிக் கறி பற்றியதும். இதில் ஒன்றும் பிரமாதமான சங்கதி இல்லை. மாடு சாப்பிடக்கூடாது என்று நமக்கும், பார்ப்பனருக்கும்தான் தடுக்கப்பட்டு இருக்கின்றதே ஒழிய—தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்கு இல்லையே! நாங்கள் எல்லாம் சிறுவயதில் பன்றிக் கறி சாப்பிட்டவர்கள்தான். எங்கள் தாயாருக்கு மாமிசம் என்றாலே, கண்டாலே வாந்தி வரும். எப்போது இந்த நிலை? பணக்காரியாகி அந்தஸ்து உயர்ந்த பிற்பாடுதான்; அவர்கள் தகப்பனார் குடும்பம் மாமிசம் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள்தான்.

தோழர்களே! நாம் உலகம் ஒன்றாகவேண்டும் என்று நினைக்கின்றோம். நம் இயக்கம் உலக இயக்கம். உலக இயக்கம் என்றதும் மனிதன் மலைப்பான்; இவர்கள் இங்கிருந்துகொண்டுதானே பேசுகின்றார்கள் என்று. முற்காலத்தில் மனிதனுக்கு 25 மைலுக்கு அப்பால் உள்ளதே மலைப்பாக இருக்கும்; அன்றைக்கு உலகத்தினை உணர அவனுக்குச் சாதனங்கள் இல்லை. அது மட்டுமல்ல; தமது நாட்டைப் பற்றிக் கூட உணர வசதி இல்லை. நல்ல ரோடு கிடையாது, போக்குவரத்து, வாகன வசதி கிடையாது. எனவே, அவனுக்கு அண்டை அயல் நாடுகள் தெரியாது.

தமிழ் என்றும், தெலுங்கு என்றும், மலையாளம் என்றும், கன்னடம் என்றும், மராட்டி, குஜராத்தி என்றும் பற்பல மொழிகள் ஏற்பட்டதற்குக் காரணமே—ஒரு பகுதிக்கு ஒரு பகுதி தொடர்பில்லாத காரணத்தினால் ஆங்காங்குள்ளவர்கள் ஆங்காங்கு பேசியது ஒவ்வொரு மொழியாக ஆகிவிட்டது. நமது நாட்டில் மட்டும் இப்படியல்ல. மேல்நாடுகளில் இப்படித்தான். ஸ்பெயின், போர்த்துகீஸ், பிரெஞ்சு என்றும்; ஸ்வீடிஷ், ஜெர்மன், இத்தாலி, கிரீஸ் என்றும் ஏராளமான மொழிகள் இருக்கின்றன என்றால்—முற்காலத்தில் ஒரு பகுதி மக்களுக்கும், மற்றொரு பகுதி மக்களுக்கும் தொடர்பில்லாத காரணத்தினால்தான் ஆகும்.

இன்று அப்படியல்லவே! அமெரிக்காவானது 10,000 மைல்கள் என்றால் 1½ நாளில் அங்கு போய்விடலாமே! நமக்கும் ரஷ்யாவுக்கும் 8 மணி நேரப் பயணம்தானே! போக 8 மணி; அங்கு காரியம் பார்க்க 8 மணி; திரும்பி வர 8 மணி நேரம் என்று வைத்துக் கொண்டால்—24 மணி நேரத்தில் ரஷ்யாவுக்குப் போய் வந்துவிடலாமே! இப்படியாக உலகம் விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பக்கத்தில் வந்துகொண்டு இருக்கின்றது.

இந்த அதிசய காலத்தில் எனது தாய்மொழி; எனது தாய்நாடு; இதற்காக எனது உயிரை விடுவேன் என்று முட்டாள்தனமாகப் பிடிவாதம் பிடித்தால் நாம் எப்போது முன்னேறுவது? உலகம் நாளுக்குநாள் நமக்கு நெருக்கமாக வந்துகொண்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? மனிதன் முன்பு கஞ்சிதான் குடிப்பான். எனது 25-வது வயது வரைக்கும் நான் கஞ்சிதான் குடித்தேன்; என் கடைக்குக் கஞ்சி செம்பிலே வரும்.

எனக்கே இந்தக் கதி என்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? இன்று காபி சாப்பிடாதவர்கள் யார் இருக்கின்றார்கள்? பொருளாதாரக் குறைவு காரணமாக யாரும் காபி குடிக்காமல் இல்லையே!

அதுபோல, எல்லா மக்களுக்கும் எல்லா விதமான சவுகரியமும் ஏற்படத்தான் போகின்றது; ஏற்பட்டே ஆகவேண்டும். நாம் நமது சில்லரை எண்ணங்களை மாற்றிக் கொண்டு, உலகம் எல்லாம் ஒன்றாக வேண்டும் என்பதற்கும் ஏற்ப நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். மக்கள் எல்லாம் ஒன்றாக ஆக, பேதங்களை ஒழிக்கவேண்டும்; பேதம் இனி நிலைக்கவும் முடியாது. பொருளாதார பேதமும், சாதி பேதத் தன்மையும் ஒழிக்கப்பட்டு விடுமானால், மற்றுள்ள பேதங்கள் எல்லாம் நிலைக்கமாட்டா; உலகம் ஒன்று என்ற தன்மைக்குத்தான் கொண்டு வந்துவிடும்.

ரஷ்யாவில் பொருளாதார பேதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதன் காரணமாக அந்த நாடு என்ன கெட்டுப்போய்விட்டது? பதவி காரணமாகக்கூட அங்கு உயர்வு, தாழ்வு பாராட்டுவது இல்லையே! நமது நாட்டில் பேதங்களை வளர்க்க—கோயில், மதம், மத குருக்கள், மற்றும் ஏராளமான சாதனங்கள் இருக்கின்றன. நாம் எண்ணத்தில் மாற்றம் அடைந்திருக்கிறோமே ஒழிய, காரியத்தில் மாற்றம் அடையவே இல்லை. மாட்டுக் கறி, பன்றிக் கறி சாப்பிடக்கூடாது என்ற மூடநம்பிக்கை ஒழியவேண்டும் என்று இப்படி விருந்து ஏற்பாடு செய்கின்றோமே—இதுபோல, மற்ற மூடநம்பிக்கைகள் ஒழியவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தோழர்களே! நம் முயற்சி ஒன்றும் வீண்போகவில்லையே! பல மாறுதல்களை அடையச்செய்துள்ளதே!

இன்றைக்குத் தமிழ் நாட்டில் யார் பெரிய மனிதர்கள் இருக்கின்றார்கள்? விரல் விட்டுக் கூறுங்களேன், பார்ப்போம்! முன்பு எதற்கெடுத்தாலும் பெரியவர்கள், பெரிய வீட்டுக்காரர்கள் என்று பெருமையாகக் கூறுவார்கள்; மதிப்பார்கள். இன்று அது அடியோடு போய்விட்டதே! முன்பு பணக்காரர் என்பதற்காகச் சமுதாயத்தில் உயர்வும் மதிப்பும் இருந்தது. இன்றைக்குக் கோடிக்கணக்கில் பணம் வைத்திருப்பவர் ஆனாலும், யார் அவரை உயர்வாக மதித்து மரியாதை பண்ணுகின்றார்கள்? அவன், ரோட்டில் போனால்—'கொள்ளைக்காரன்—திருட்டுப் பயல், போகின்றான்' என்கிறார்கள்.

அடுத்து, இன்று படித்தவன், மேதை என்று யாரை மதிக்கின்றார்கள்? பி.ஏ., எம்.ஏ., பி. எச்டி., டாக்டர் போன்ற படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். இவர்களை எல்லாம் அறிவாளிகள் என்று யார் ஒத்துக்கொள்கிறார்கள்? இப்படியாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இனி எதை வளர ஒட்டாமல் மூடிவைத்தாலும் அறிவை மூடிவைத்து வளர்ச்சியைத் தடுக்க முடியாது.

50 வருஷத்துக்கு முன்பு வைணவன்—வீர வைணவன் என்று கூறிக்கொண்டு சைவனைக் கண்ணால்கூடப் பார்க்கக் கூசுவார்கள். சைவனும்—வீர சைவன் என்று கூறிக்கொண்டு, வைணவனைப் பார்க்கமாட்டான்; பேசமாட்டான். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்று நமது இயக்கத்தின் காரணமாக ஏற்படும் மாறுதலைக் கண்டு பயந்து ஒன்று சேர்ந்து விட்டார்களே! இன்று போராட்டம் என்பது மாறுதல்காரர்களுக்கும், மாறுதல் வேண்டாதவர்களுக்கும்தான் ஆகும்.

[கோவையில், 4-11-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-11-1972]

தோழர்களே!

இந்தத் திருமண முறையானது காட்டுமிராண்டி காலத்தில், அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டதாகும். அதை இன்றைக்கும் மனிதன் எதற்காகக் கடைப்பிடிக்க வேண்டும்? ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணை அடிமைப்படுத்தவே திருமணம் நடைபெறு

கிறது. கோயிலுக்கு எப்படி மிருகங்களைப் பலி கொடுக்கிறார்களோ அது போலவே, ஆணுக்குப் பெண்ணைப் பலி கொடுக்கிற விழாத்தானே திருமணம்!

இந்த நாட்டில் மக்கள் தொகையில் சரிபாதியான பெண்கள் இனத்தை எதற்காக இப்படிக் கொடுமைப்படுத்த வேண்டும்? இந்தத் திருமண முறை பெரிதும் சுயநலத்துக்காகவே ஒழியப் பொது நலத்துக்கு அல்லவே! புருஷனுடைய வேலை பெண்டாட்டியைப் பாதுகாப்பதும், பெண்டாட்டி புருஷனைப் பாதுகாப்பதும் இருவருக்கும் குட்டிகள் ஏற்பட்டால் அதனை இரண்டு பேருமே சேர்ந்து காப்பாற்றவும்தான் பயன்படுகிறதே ஒழிய சமுதாயத்துக்குப் பயன்படுவதே இல்லையே!

அடுத்த வீடு நெருப்புப் பிடித்தாலும் அதுபற்றிக் கவலைப்படமாட்டான். ஒரு வாளி தண்ணீர் கொடுப்பான். ஆனால், அது தன் வீட்டுக்குத் தீ பரவாது இருக்கட்டும் என்பதற்காகவேயாகும்!

ஆண்களும் பெண்களும் இத்தகைய தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல், படித்து ஆராய்ந்து விஞ்ஞான அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்து மேன்மை அடைய வேண்டாமா?

அதனைவிடுத்து, புருஷன் பெண்டாட்டியாகி, தனிக் குடித்தனம், தனிச் சமையல் என்று ஆக்கிக்கொண்டு பொதுநல உணர்ச்சியற்றவர்களாகவே ஆகின்றார்கள்.

உலகம் வளர்ச்சி அடைய வேண்டுமானால், உலகம் தொல்லை இல்லாமல் சுபிட்சம் அடைய வேண்டுமானால் திருமணம் என்பதை கிரிமினல் குற்றமாக்கிவிட வேண்டும். இன்று இல்லாவிட்டாலும் பிறகு வந்தே தீரும். நான் சொன்னது நடக்காமல் இருக்கவில்லையே!

எனவே, திருமணத் துறையில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். சம எண்ணிக்கை உடையதும், சம உரிமைகளைப் பெறவேண்டியதுமான ஜீவன்களை இப்படிக் கொடுமைப் படுத்துவது மிகவும் அக்கிரமமாகும்.

பெற்றோர்கள் தங்கள் பெண்களை 22 வயது வரைக்கும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பிறகு ஒரு தொழிலும் கிடைக்கச் செய்த பிறகே திருமணத்தைப்பற்றிப் பேச வேண்டும். அதுவும் அந்தப் பெண்ணாகப் பார்த்து ஓர் ஆணைத் தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய பெற்றோர்கள் குறுக்கே நிற்கக்கூடாது.

[சென்னை எழும்பூர் பெரியார் திடலில், 27-8-1973-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-9-1973]

மனித சமுதாயத்தில் நாம் சூத்திரர்—நாலாம் சாதி—இழிமக்கள் என்கின்ற பட்டியலில் இருக்கின்றோம். இவை மாத்திரமா? பார்ப்பனனின் தாசி மகனாகவும், இது இந்து மத சாஸ்திரங்களின்படி மாத்திரமல்லாமல், 'இந்து லா' என்கின்ற சட்டத்தின்படியும் நமக்கு இருந்து வருகிறது.

இது மாத்திரமா? வாழ்நாள் நடப்பிலும் நாம் அயோக்கியர்களாகவே இருக்கிறோம். அக்கிரமங்கள் செய்வதிலும் நாம் பயப்படுவதில்லை. நாம் ஏன் பாவிகளாக இருக்க வேண்டும்?

இவற்றிற்குக் காரணம் நமது மதமும், கடவுள்களுமேயாகும். நம்மை நாம் சிறிது கூட அறிவு மானம், வெட்கம் இல்லாமல் இந்துக்கள் ('இந்து') என்று சொல்லிக் கொள்ளுகிறோம். இந்து என்கின்ற மதத் தலைப்பில்தான் நாம் இருந்து வருகிறோம். இந்து என்றால் பார்ப்பனர் தவிர, மற்ற நாம் யாவரும் சூத்திரர்கள் என்று தானே ஆகிறோம்?

சூத்திரன் என்றால் இந்து, இந்து என்றால் சூத்திரன். இது சாஸ்திரப்படி என்பது மாத்திரமல்லாமல், 'இந்து லா' என்னும் சட்டப்படியும்தானே ஆக்கப்பட்டிருக்கிறது!

சூத்திரன் என்றால், சாஸ்திரப்படியும், 'இந்து லா' சட்டப்படியும் தாசிபுத்திரன் என்றுதானே இருந்து வருகிறது! ஆகவே, நம்மை நாமே இந்து என்று சொல்லிக்கொண்டால் அல்லது நாம் இந்துவாக இருக்கும்வரை நாம் நாலாம் சாதி என்பது மாத்திரமல்லாமல், தாசி புத்திரன் என்பதையும் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் ஆகிறோம். இது மாத்திரமா? நடவடிக்கைகளிலும் நாமாகவே சூத்திரனாகத்தானே நடந்து கொள்ளுகிறோம்! அதாவது நாம் கர்ப்பக் கிரகம் செல்லக்கூடாத, நாம் தொடக்கூடாத, எந்தக் கோவிலுக்குப் போனாலும், எந்தச் சாமியைக் கும்பிட்டாலும், நாலாம் சாதி, தீண்டப்படாத ஈன சாதி, சூத்திரன், தாசிமகன் என்பதை நேரடியாகக் கொண்டு நடத்தையில் நடந்து வருகிறோம் என்பதில் சந்தேகமென்ன? ஆட்சேபணை என்ன? ஆகவே, இந்து மக்கள் என்பவர்கள் இடையில் சாதி ஒழிப்புப் பிரச்சாரம் நாம் எவ்வளவு செய்தாலும் அது எப்படி நமக்குப் பயன் படக்கூடும்?

நம்மை நாம் இந்து என்று சொல்லிக் கொள்ளும் வரையிலும், கோவிலுக்குச் செல்லும் வரையிலும், அங்குள்ள கடவுள் என்பவைகளை வணங்கும் வரையிலும் நாம் சூத்திரனாக–பார்ப்பானின் தாசிமகனாக, நாலாம் அய்ந்தாம் சாதியானாக இருந்துதான் தீருவோம்.

மற்றும், இந்து என்றால், கருப்பு என்பது பொருளாகும் என்பதோடு, இந்து என்றால், திருடன் என்பது (பார்சி மொழியில்) பொருளாகும். இதை உணராத மக்கள் யாரானாலும் அவர்கள் மானமும், அறிவும் அற்றவர்களே ஆவார்கள்.

மற்றும், கடவுள் நம்பிக்கை உள்ள எவருமே யோக்கியராய் இருக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டதற்குக் காரணம், மனிதன் வணங்கும் கடவுள்கள் யாவுமே யாம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், எந்த மதத்தைச் சேர்ந்த கடவுள்களா னாலும் ஜபம் செய்தால், தொழுகை செய்தால், வணங்கினால், ஸ்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்தால் மன்னித்து விடும்படியானவைகளாய் இருப்பதால், அப்படிப்பட்டவை இருக்கும்வரை மனிதன் யோக்கியனாகவோ அயோக்கியனாகவோ இருக்கமுடியாது. கிறிஸ்தவ மத தர்மப்படி, 'மனிதர்கள் எல்லோரும் பாவிகளே ஆவார்கள். ஏசு மூலம் ஜபம், பிரார்த்தனை செய்தால் மன்னிக்கப்பட்டுவிடுவார்கள்' என்பது கட்டளையாகும். இதனால்தான் மற்ற மதங்களை விட, கிறிஸ்தவ மதத்தில் நேர்மையற்றவர்கள் அதிகமான பேர்கள் இருக்க வேண்டியதாகிவிட்டது. இஸ்லாமியர்களும் தொழுகையினால், வேண்டு கோளால் பாவம் மன்னிக்கப்பட்டு விடுகிறது என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். இந்துக்கள் என்பவர்களோ எல்லாவிதமான பாவத்திற்கும், அவை ஒழிய கோயில், குளம், ஸ்தலம் யாத்திரையே போதுமானவையாகும் என்பது உறுதியான கொள்கையாகும்.

இந்த நிலையில் எந்த மனிதன்தான் யோக்கியனாக இருக்க முடியும்? மனிதன் எதற்காக யோக்கியனாக இருக்க வேண்டும்?

ஆகவேதான், மனிதன் என்றால் அயோக்கியன், சுயநலத்துக்காக எதையும் செய்ய வசதி உள்ளவன் என்பதாக ஏற்பட்டுவிட்டது. ஆகவே, மனிதன் இழிமகனாகவும், அயோக்கியனாகவும் நேர்மை அற்றவனாகவும் இருப்பதற்குக் கடவுள், மதம் ஆகிய வைகளே காரணமாகும்.

கடவுள், மதம், வேதம், சாஸ்திரம் ஆகியவைகள் உள்ளவரை, இவற்றின் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளவரை மக்களுக்கு மான உணர்ச்சி வராது என்பதோடு, மனிதர்கள் நேர்மையானவர்களாக, யோக்கியர்களாக இருக்கமுடியாது என்பது உறுதி! உறுதி! உறுதியாகும்!

['விடுதலை'–தலையங்கம்—3-9-1973]

பகுதி VII

தன்னைப் பற்றி

1. தன் விளக்கம்

1. நான் இந்துவல்ல

தோழர்களே!

எனக்கு மோட்சத்திலோ, பாவ மன்னிப்பிலோ, கடவுள் ஆட்சியிலோ சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஆத்மா என்பதோ, ஜீவன் என்பதோ ஒன்று இருப்பதாக நான் நம்புபவனே அல்லன். அது விஷயத்தில் எல்லா மதங்களும் ஒன்றுபோல்தான் இருக்கின்றன. உலகிலுள்ள சகல மதங்களுக்கும், ஒரு சர்வசக்தியுள்ள கடவுளும், மோட்சமும், நரகமும், ஆத்மாவும், ஜீவனும் உண்டு. பிரார்த்திப்பதன் மூலம் எல்லா மதங்களிலும் பாவ மன்னிப்பு உண்டு. அவற்றில் ஒன்று பெரிது; மற்றது சிறிது என்று சொல்வதற்கில்லை.

பாவ மன்னிப்பில் இந்துமதமே அதிக மேலான மதமாகும். எவ்வளவு அயோக்கியனானாலும், கொடுமைக்காரனானாலும் ஒருதடவை 'ராமா!' என்றோ 'சிவா!' என்றோ சொல்லிவிட்டால் சகல பாபங்களும் போய்விடும் என்று சொல்லப்படுகிறது. அதுகூட வேண்டாம், ஒரு சிட்டிகை சாம்பல் நம்மை அறியாது நம்மீது பட்டிருந்தாலும் போதும்! அதைவிடச் சீக்கிரமாகவும், சுலபமாகவும் மற்ற மதத்தில் பாவ மன்னிப்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆதலால், ஆத்மார்த்தம், பாவ மன்னிப்பு என்பதற்காக நமக்கு இப்போது மதவிசாரணை தேவையில்லை.

பொதுவாக, மதங்கள் யாரால் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், அதனால் என்ன பயன் இருந்துவந்தாலும் இனி நாம் அவற்றை ஆதரிக்கமுடியாது. அதை உண்டாக்கினவர்கள் பெரியவர்களாய், விவேகிகளாய், பரோபகாரிகளாய் இருந்திருக்கலாம். அவர்களிடத்திலும் எனக்குச் சண்டையில்லை. அவரவர்கள் அந்தந்தக் கால நிலைமைக்கு ஏற்றபடி அனுகூலித்தவர்களாய் இருந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு அவை ஒரு விதத்திலும் பயன்படா.

உலகப் பிரயாணத்தில் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ற கால அட்டவணையைப் (டைம் டேபிள்) பார்க்கவேண்டும். போன மாதத்து இரயில்வே கால அட்டவணையைக் கொண்டு மணிபார்த்து இரயிலுக்குப் போனால் இரயில் தவறிவிடும். இப்போது மாதத்துக்கு ஒரு 'கைடு' ஏற்படுகிறது.

கிறிஸ்துநாதர்தான் ஆகட்டும், முகமது நபிதான் ஆகட்டும், ஸ்ரீநாராயண குரு ஸ்வாமிதான் ஆகட்டும்—அந்தக் காலத்துக்கு அவரவர்கள் சரியானவர்களா யிருக்கலாம். எப்போதைக்கும் எந்தெந்தக் காலத்துக்கும் அவர்கள்தாம் வழிகாட்டிகள்; அவர்கள் சொன்னதுதான் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்றால் அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. காலம் மாறிவருகிறது; அறிவும் ஞானமும் பெருகிவருகிறது; இனியும் அபாரமாய் மாறிவரும். இந்தச் சமயத்தில் 5000 வருடம், 2500 வருடம், 2000 வருடம், 1500 வருடங்கட்கு முந்திய விஷயங்களைப் பார்த்துக்கொண்டு, அப்போது இருந்தவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டு, அவைகளில் எதுமேல், எதுகீழ், யார் பெரியவர் என்று பார்ப்பது பயனற்ற செயல்.

இந்து மதம் என்பது ஒன்று இல்லையானாலும், அதற்காகச் சொல்லப்படும் கொள்கைகள் மகா புராதனமானவை. அதைவிட புத்தர் உபதேசம் சிறந்ததாக இருக்க நியாயம் உண்டு. அய்யாயிர வருடத்து நிலையைவிட 2500 வருடத்து நிலை மேலானது தானே! அதைவிட கிறிஸ்து மதம்-2000 வருடத்திற்கு முன் ஏற்பட்டது—மேலானதாய் இருக்க நியாயம் உண்டு. புத்தரை அனுசரித்தே சில கற்பனைகளை கிறிஸ்து அப்போ

1686—254

தைக்கு அனுபவ சாத்தியமாய்ச் சொல்லிப் போனார். அதைவிட முகமது மதம்–1500 வருடங்கட்கு முன் ஏற்பட்டது—மேலானதாக இருக்கக் கூடுமல்லவா? முகமது நபி பாலைவன அக்கிரமங்கள் சகிக்கமாட்டாமல் புத்தர் சொன்னதையும் கிறிஸ்து சொன்னதையும் அலசிப் பார்த்து, கால தேசத்துக்கு ஏற்றமாதிரி திருத்தினார். இவர் அவர்கள் இருவரையும்விட மேலானவராய் இருக்கலாம். அந்தக் காலத்தில் அவர்கள் மேதாவிகளாய் இருந்திருக்கலாம். அந்தக் காலப் புத்திக்கும் மேதாவித் தனத்துக்கும் தக்கபடி வாழ்க்கைத் திட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கலாம். அவ்வளவோடு அம் மதங்களுக்கும், அம் மதத் தலைவர்களுக்கும் மதிப்புக்கொடுப்பதுதான் சரி.

ஒரு மதமும் வேண்டாம் என்பதுதான் சரியான பேச்சும் திட்டமும் ஆகும். எனக்கு மதத்திலும், தெய்வ பக்தியிலும், தியானத்திலும் நம்பிக்கையில்லை.

சாதி, மதம், தெய்வம், தியானம் என்கின்ற நான்கு தத்துவங்களும் அழிந்தாக வேண்டும். அவை அழியாமல் மனித சமூகத்துக்குச் சாந்தியும், திருப்தியும், சுகமும் கிடையா. அதே நிலை அடைந்துதான் ஆகவேண்டும். அதுவே எனது கொள்கை.

மதம் மக்களுக்கு அபினி (மது) என்றார் ஒரு பெரியார். ஆனால், நான் மதம் மக்களுக்கு விஷம் என்கிறேன். மதக்காரனுக்குச் சுயமரியாதையும் சுய அறிவும் இல்லை. மனிதன் முற்போக்கையும் ஒற்றுமையையும் தடுப்பது மதம். மனிதனுக்கு மற்ற ஜீவன்களைவிட அதிக புத்தி இருந்தும், மனிதன் அடிமையாய் இருப்பதற்குக் காரணம் மதம்.

ஆகையால், நான் எந்த மதத்திற்கும் விரோதிதான். மதங்கள் இந்த நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். அவைகள் ஒழிய, ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்துடையவன் நான்.

இதை நான் 1926-ல் சொல்லியிருக்கிறேன். 'குடி அரசில்' எழுதியிருக்கிறேன். 1926-ல், 'நான் இந்துவாய் இறக்கப் போவதில்லை' என்று கூட்டத்தில் சபதம் செய்திருக்கிறேன். 1922-ல் நான் இந்துமத சாஸ்திரங்களைக் கொளுத்தவேண்டும் என்று காங்கிரஸ் மேடையிலேயே பேசினேன்.

1927-ல் மனுதர்மம் முதலிய சாஸ்திரங்களைக் கொளுத்தினேன். அவைகளையெல்லாம் இப்போது 10 வருடம் பொறுத்து இந்தியத் தீண்டாத சமூகத் தலைவர்களும், தீண்டாமைக்கு ஆட்பட்ட சமூகமும் சொல்லி, அவற்றைத் தீர்மானம் மூலமாகச் செய்யும் காலம் வந்துவிட்டது.

அதே மாதிரியாக, கடவுள் நம்பிக்கையும் சமீப காலத்தில் ஆட்டம் கொடுக்கப் போகின்றது என்கின்ற விஷயத்தில் எனக்கு நம்பிக்கையிருக்கின்றது. பிறகு பணம், தனி உடைமை விஷயத்திலும் இந்தக் கதியே ஏற்படும்.

ஆதலால், பிற்கால வாழ்வில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், புத்திசாலித்தனமாய், காலதேச சூழ்நிலைகளுக்குத் தகுந்தமாதிரி படிப் படியாய், அனுபவ சாத்தியமாய் நடந்துகொள்ள வேண்டும்.

[கொச்சி, மட்டாஞ்சேரியில் சொற்பொழிவு—'குடி அரசு' 31-5-1936]

2. என் அனுபவம்

சாதாரணமாக, சிந்திக்கத் துவங்கிவிட்டோமானால், எந்தச் சங்கதியையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்கிற பழக்கத்துக்கு வந்துவிட்டோமானால்—அப்புறம் தானாக எல்லாச் சங்கதிகளின் குறைகளையும் போக்கிக்கொள்ள முடியும். என்னைப்பற்றியே எடுத்துக்கொண்டால்—நான் சிறு வயதிலேயே 10, 11 வயதிலேயே வியாபாரத்துக்கு வந்துவிட்டேன். இயற்கையிலேயே, சிறு வயதிலிருந்து நான் கொஞ்சம் துடுக்காயும், எந்தச்

சங்கதியையும்—ஏன், எப்படி என்று கேட்டுக்கொண்டே இருப்பவனுமாய் இருந்ததோடு, வியாபாரத் துறையில் வேறு இருந்ததால் பலரிடம் பழகும் வாய்ப்புக் கிடைத்தது; அதன் மூலம் பல அனுபவங்களும், உண்மைகளும் தெரியவந்தன. சாதாரணமாகச் சொல்லு வார்கள், 'பையன் மந்தமாய் இருந்தால், அவனை வியாபாரத்தில் போட்டால் புத்திசாலி யாகிவிடுவான்; இல்லாவிட்டால் சுங்கக் 'கேட்'டில் போட்டால் திருந்திவிடுவான்' என்று. ஏன் என்றால், இவைகளில் பலதரப்பட்ட மனிதர்களுடன் அவன் பழகவும், அவர்களிடம், அவரவர்களுக்குத் தகுந்த மாதிரியான காரியம் செய்துகொள்ளவும், சமாளித்துக் கொள்ளவும் வேண்டும்.

அப்படியிருக்கிறபோது, அவனுக்குத் தானாக அறிவு வந்துவிடும் என்கிற கருத்தில் சொல்லுவார்கள். இன்னும் தேவடியாள் வீட்டுப் பிள்ளைகள் புத்திசாலிகளாக இருப்ப தற்குக் காரணம் என்னவென்றால், அவர்களும் பல ரகமான மனிதர்களிடம் பழகவும், காரியம் சாதித்துக்கொள்ளவும் வேண்டியிருப்பதனால் இயற்கையாகவே அறிவு வந்து விடுகிறது.

எதற்குச் சொல்லுகிறேன்—'இதைச் சிந்தித்தால் பாவம், இந்தக் காரியத்தை ஆராய்ந்தால் பாவம்' என்று சொல்லிச் சொல்லி நம்மைப் பயமுறுத்திவிட்ட காரணத்தினால் இப்போது எந்தச் சங்கதியையும் நம்மால் ஆராயமுடியாமல் போய்விட்டது. கொஞ்சம் துணிச்சலாக இந்தப் பக்கம் திரும்பிவிட்டோமானால் அப்புறம் வேகமாக வளர்ச்சி காணமுடியும்.

இப்போது நாம் வாழ்கிற இந்தக் காலம் மிகவும் புரட்சிகரமான காலமாகும். கடந்த 50 வருட காலத்துக்குள் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[மாயவரத்தில், 6-6-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-6-1954]

3. எதிர்ப்பும் இன்னலும்

தோழர்களே!

இங்கு எதிரிகள் கல் போட்டார்கள் என்று கூறினார்கள். இப்படிக் கல் போட்டது காலிகளின்–கூலிகளின் செயல் என்றும், எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிட்டுப் போடச் சொன்னது என்றும் மட்டும் எண்ணி விடாதீர்கள். பத்திரிகைக்காரர்கள் ஆட்களைக் கூடவே கூட்டிக் கொண்டு வந்து கல்போடச் செய்துவிட்டு, நாளைக்குப் பத்திரிகையில் 'பெரியார் கூட்டத்தில் இன்ன ஊரில் கல் விழுந்தது; கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது' என்று பத்திரிகையில் பெரிதாக எழுதவே இப்படிச் செய்கின்றார்கள். ஒரு ஊரில் கல் போட்டதாகச் செய்தி வெளியே வந்தால், எல்லா ஊர்களிலும் கல்போட்டுக் கலவரம் செய்ய ஏதுவாக இருக்கும் என்றே செய்கின்றார்கள்.

அடுத்து, கொஞ்ச நாளைக்கு முன்பாக சேலம் கல்லூரியில் பேசுவதற்கு அழைக்கப் பட்டுச் சென்று இருந்தேன். யானையை விட்டு மாலை போடச்செய்து, சிறந்த முறையில் வரவேற்று, ஊர்வலமாக மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். 3500-க்கு மேற்பட்ட மாண வர்கள் மற்றும் நகரப் பொது மக்கள் முதலானவர்களும் குழுமி இருந்தார்கள்.

நான் பேசிக்கொண்டு வரும்போது இரண்டொரு ஜனசங்க மாணவர்கள் 'கடவுளை, மதத்தை, சாதியைப்பற்றிப் பேசக்கூடாது' என்று எங்கோ ஒதுக்கில் இருந்து சத்தம் போட்டு இருக்கின்றார்கள். அதனைக் கண்ட மாணவர்களில் பலர் 'சாதியை, மதத்தை, கடவுளைப் பற்றிப் பேசுங்கள்' என்று சத்தம் போட்டார்கள். இப்படித் திடீர் என்று சத்தம் கேட்டதும் மற்றவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். 'கடவுளை, மதத்தை, சாதியைக் கண்டித்துப் பேசாதே' என்று சத்தம் போட்டவர்கள் நழுவி விட்டார்கள். அவ்வளவுதான்!

ஒருசமயம் கடலூரில் கூட்டத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்கு ரிக்ஷாவில் திரும்பிக் கொண்டிருந்தேன். இன்றுபோல கார்வைத்துக் கொள்ளாத காலம் அது. இருட்டு அதிகம் இருந்த ஓர் இடத்தில் இருந்து ஒருவன் என்மீது செருப்பினை வீசினான்; அது எனது ரிக்ஷாவின் முன் விழுந்தது. அதனை எடுக்கச் சொல்லிக் கொஞ்சம் தூரம் போனேன். பிறகு யோசனை வந்தது— செருப்பு நல்லதாக இருக்கின்றது; ஒற்றையாக இருந்தால் என்ன பிரயோசனம்! 'திருப்பி ரிக்ஷாவை விடு அந்த இடத்திற்கு; இன்னொன்றையும் வீசுவான், அதையும் எடுத்துக் கொள்ளலாம்' என்று ரிக்ஷாக்காரனிடம் கூறினேன். அவனும் ரிக்ஷாவைத் திருப்பிவிட்டான். குறிப்பிட்ட அந்த இடம் போனதும் இன்னொரு செருப்பையும் வீசினான். 'மிக்க நன்றி! இரண்டு செருப்பையும் வீசியமைக்கு' என்று சொல்லிவிட்டு ஜாகைக்குத் திரும்பினேன்.

தோழர்களே! எந்தக் கடலூரில் என்மீது எந்த இடத்தில் செருப்பு வீசப்பட்டதோ, அதே கடலூரில் அந்த இடத்திலேயே இன்று எனது சிலை அங்கு எழுப்பப்பட்டு உள்ளது. அதற்குப் பக்கத்தில் 'இந்த இடத்தில்தான் இந்த வருஷம், மாதம், தேதியில் பெரியார் மீது செருப்பு வீசப்பட்டது' என்று குறித்துள்ளார்கள்.

சிவகங்கையில் ஓர் ஊர்வலம் நடந்தது. அந்த ஊர்வலம் வரும் வழியில் காங்கிரஸ் காரர்கள் என்னை அவமானப் படுத்தச் செருப்புக்களால் தோரணம் கட்டி இருந்தார்கள்; அதுவும் மிகத் தாழ்வாகக் கட்டி இருந்தார்கள். சாரட்டில் ஊர்வலம் வரும் எனது தலையில் அது தட்டவேண்டும் என்று எண்ணியே செய்தார்கள். பிறகு கூட்டத்தினர் ஆத்திரங் கொண்டு தோரணத்தை அறுத் தெறிந்தார்கள்.

இப்படிப் பார்ப்பனர்களும், பார்ப்பனர்களின் கூலிகளும், காலிகளும் கல்லெறிவதோ காலித்தனம் செய்வதோ எனது பொது வாழ்வில் புதிதல்லவே! இங்கு கூட்டத்தில் ஓர் மூலையில் கல்போட்டான். தோழர்களே! நான் கல்லடியே வாங்கி இருக்கிறேனே! அழுகிய முட்டையால் அடிப்பார்கள்; மலத்தைவாரி அடிப்பார்கள்; இதுகள் என்ன செருப்படியே வாங்கி இருக்கிறேனே!

அடுத்து ஒரு சம்பவம். மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டி என்ற பெரிய ஊருக்குக் கூட்டத்திற்குப் போய் இருந்தேன். காங்கிரஸ்காரர்கள் கல்லெறிந்து கலாட்டாசெய்து கூட்டம் நடத்த முடியாத மாதிரியில் காலித்தனம் செய்தார்கள். பாதுகாப்புக்கும் போதிய அளவுக்குப் போலீஸ் இல்லை. இந்த நிலையில் போலீஸ் இன்ஸ்பெக்டர், 'கலவரம் அதிகரிக்கும்போல உள்ளது; கூட்டத்தைக் கலைத்துப் போடுங்கள்' என்று கேட்டார்கள். நான் அதற்கு, 'நானாக ஒன்றும் கலைக்கமாட்டேன். நீங்கள் வேண்டுமானால் உங்களால் சமாளிக்க முடியவில்லை என்று கலைத்துப்போடுங்கள்' என்று கூறிவிட்டுப் பேசத் தொடங்கினேன். கல்வீச்சு குறைந்த பாடில்லை; கல்வீச்சினால் மின்சார விளக்குகள் உடைந்து நொறுங்கின. ஒரு கல் வந்து எனது கையில் பலமாகப்பட்டது. அந்த அடியின் காரணமாக எனது கை இன்று சற்று வளைந்தும் பலகீனம் உள்ளதாகவும் இருக்கின்றது.

நிலைமை மோசமானதைக் கண்ட போலீஸ் அதிகாரி மேடை ஏறி, 'கூட்டம் கலைக்கப்பட்டது' என்று கூறி, என்னைப் பத்திரமாக ஊருக்கு அனுப்பிவைக்க ஓர் மாட்டு வண்டியில் ஏற்றி, அம்பாத்துறை என்ற இரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துப்போனார்கள். எதிரிகள் கல்லெறிவதை அப்பொழுதும் நிறுத்தவில்லை. ஸ்டேஷனுக்குப் போனோம். வண்டி வர நேரமாகும்போல் இருந்தது. எங்கு இங்கும் வந்து கலவரம் செய்யப் போகின்றார்களோ என்று எண்ணி, போலீஸார் ரோட்டில் சென்ற லாரியினை நிறுத்தி அதில் ஏற்றிக் கொண்டு போய் திண்டுக்கல் ஸ்டேஷனில் இரயில் ஏற்றிவிட்டார்கள்.

தோழர்களே! அப்படிப்பட்ட ஊர் இன்று எப்படி மாறி உள்ளது! கல்லெறிந்த கையாலே மாலை போட்டல்லவா வரவேற்றார்கள்! இன்றைக்கு வருடத்திற்கு இரண்டு தடவைக்குக் கம்மி இல்லாமல் அல்லவா அழைத்து எனது பேச்சைக் கேட்கின்றார்கள்!

இத்தகைய அவமானம் அவமதிப்புக்கள் எல்லாம் பொதுவாழ்வில் ஈடுபட்டு இருக்கின்ற எனக்குப் புதிதல்ல. இது காரணமாக எனது பெருமையோ, மதிப்போ இழந்துபோய் விடவில்லையே! வேண்டுமானால் அதிகரிக்கத்தான் செய்தது என்றுதான் கூறவேண்டும்.

பொதுத்தொண்டில் ஈடுபடுகின்றவர்கள், அந்தத் தொண்டில் ஈடுபட்டுச் செயல் புரிவது காரணமாக மான அவமானம் ஏற்பட்டால் அதுபற்றிக் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. தனிமனித வாழ்வுக்குத்தான் மானம் முக்கியமே யொழிய, பொதுவாழ்வில் மானம் பார்த்தால் பொதுத்தொண்டில் விளையக்கூடிய பலன் பிரயோசனம் அற்றதாக ஆகிவிடும்.

எனவே, எனது பொது வாழ்வில் பலவித எதிர்ப்புக்களுக்கும் இன்னல்களுக்கும் இடையேதான் வளர்ந்து வருகின்றேன்.

[நெல்லையில், 1-2-1973-ல் சொற்பொழிவு—' விடுதலை '-24-3-1973]

4. நான் யார்?

எனது குடும்பம் ஒரு வைதீகக் குடும்பமாகும்; குடும்பத்தில் எவ்வளவோ கோயில் கட்டுதல், சத்திரம் கட்டுதல், அன்னதானம் செய்தல் முதலிய பல காரியங்கள் செய்திருப்ப தோடு, இந்தத் தர்மங்களுக்குச் சொத்துக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். என்ற போதிலும், அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த நான் இன்று பல மக்களால் ஒரு புரட்சிக் காரனென்றும், தீவிரக் கிளர்ச்சி செய்கிறவன் என்றும் சொல்லப்படுகிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய கீழ்மை நிலைமைக்குக் காரணமாய் இருக்கும் அடிப்படையில் நான் கை வைப்பதால்தான். அது என்னவெனில், எவ்வளவு காலத்திற்கு நாம் இந்து மதத்தையும், இந்துக் கடவுள்களையும், இந்து சாஸ்திரம், புராணம் வேதம், இதிகாசம் முதலியவைகளையும் நம்பிப் பின்பற்றிக் கொண்டு இருக்கிறோமோ, அதுவரையில்—நாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும், சம உரிமைக்கு அருகதை அற்றவர்களாகவும் இருப்பதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவே முடியாது. அம் மாதிரி, அவைகளில் இருந்து வெளியேறாமல், அவைகளை நம்பிப் பின்பற்றி நடந்து வந்தவர்களில் ஒருவராவது—அவர்கள் வேறுவழிகளில் எவ்வளவு முயற்சித்தவர்களாய் இருந்தாலும், எவ்வளவு பெரியவர்களாகி இருந்தாலும்—அவர்களுக்கு ஏற்பட்ட இழிவிலிருந்து தப்பித்துக் கொண்டவர்கள் எவருமே இலர் என்பதை ஒவ்வொரு சீர்திருத்தவாதி என்பவனும் நன்றாக உணரவேண்டும் என்று சொல்லி வருகிறேன்.

[கான்பூரில், 29, 30, 31-12-1944-ல் சொற்பொழிவு—' குடி அரசு ' 13-1-1945]

ஈ. வே. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற் போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு ' யோக்கியதை ' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறுபற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப் படையாய்க் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத் தொண்டுக்குத் தகுதியுடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.

[கையெழுத்துப் படி : ஆதாரம்]

5. நான் எப்படி ?

தலைவரவர்களே ! தோழர்களே !

நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம் உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து, ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக் கூடியவைகளைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின்பேரிலேதான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழமைவிரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையானால் அது நியாயமும் ஒழுங்குமாகாது.

[திருப்பூரில் சொற்பொழிவு-'புரட்சி' 17-12-1933]

6. நான் சொல்லுவது கட்டளையா ?

சகோதரர்களே ! நான் சொல்வன எல்லாம் எனது சொந்த அபிப்பிராயங்கள்தாம் என்று சொல்வதோடு, நான் ஒரு சாதாரண மனிதன்தான். நான் எவ்விதத் தன்மையும் பொருந்திய ஒரு தீர்க்கதரிசியல்லன். ஆகையால், தனி மனிதன் என்கின்ற முறையில்தான் என்னுடைய அபிப்பிராயங்களையும்—நான் பார்த்தும் ஆராய்ச்சி செய்தும் அனுபவத்தில் அறிந்ததுமானவைகளைத்தான்—அதிலும் எனக்குச் சரி என்று பட்டதைத்தான் உரைக்கின்றேன். 'ஒரு பெரியார் உரைத்துவிட்டார்' என நீங்கள் கருதி அப்படியே அவைகளைக் கேட்டு நம்பிவிடுவீர்களானால், அப்பொழுது—நீங்கள் யாவரும் அடிமைகளே ! 'நான் உரைப்பதை நீங்கள் நம்பாவிட்டால், 'பாவம்' என்றாவது, 'தோஷம்' என்றாவது அல்லது 'நரகத்துக்குத்தான் போவீர்கள்' என்றாவது சொல்லிப் பயமுறுத்தவில்லை. யார் உரைப்பதையும் நாம் கேட்டு, 'வேத வாக்கு' என அப்படியே நம்பிவிட்டதனால்தான் நாம் இன்று அடிமைகளாக இருக்கின்றோம்.

ஆகவே, நான் உரைப்பவைகளை ஆராய்ந்து பாருங்கள் ! உங்களுக்கு அவைகள் உண்மையென்று தோன்றினால் அவைகளை ஒப்புக்கொள்ளுங்கள் ; இல்லாவிட்டால் தள்ளிவிடுங்கள். உண்மையெனப் புலப்படுமாகில், அவைகளை உண்மையென ஒப்புக்கொள்வதில் மட்டும் பிரயோசனம் இல்லை ; அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வந்து அதன்படி நடக்க முயற்சியுங்கள். எனது சொந்த அனுபவங்களை நானறிந்து உங்களுக்கு உரைப்பதுதான் என்னுடைய விடுதலை. அவைகளை ஆராய்ந்து அறிவது, அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை.

['விடுதலை'—கட்டுரை—8-10-1951

7. என் துணிவு

தோழர்களே !

'நான் ஒரு அதிசயமான மனிதன்; மகான் ! அப்படி, இப்படி !' என்றெல்லாம் கூறுபவன் அல்லன் ; ஆனால், துணிவு உடையவன் ; கண்டதை ஆராய்ந்து, அறிந்ததைத் துணிந்து அப்படியே கூறுபவன். மற்றவர்கள்—சுயநலத்துக்காக, சுயநலத்துடன் பாடுபடுகின்றார்கள் ; அந்தச் சுயநல உணர்ச்சியுள்ளவர்கள் மக்கள் வெறுப்புக்கு ஆளாக மாட்டார்கள் ; அப்படிப் பக்குவமாக நடந்து கொள்ளுவார்கள்.

நான் கண்டதை—அறிந்ததை மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சாது கூறுபவன் ; மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சாது கூறினால் வெறுப்புத்தான் கிடைக்கும் ; சுயநலம் கெட்டுப்போகும்.

[சாமிமலையில், 24-1-1960-ல் சொற்பொழிவு-'விடுதலை' 31-1-1960]

8. நான் ஒரு தொண்டன்

தோழர்களே!

நான் ஒரு பிறவித் தொண்டன்; தொண்டிலேயேதான் எனது உற்சாகமும் ஆசையும் இருந்து வருகிறது. தலைமைத் தன்மை எனக்குத் தெரியாது. தலைவனாக இருப்பது என்பது, எனக்கு இஷ்டமில்லாததும் எனக்குத் தொல்லையானதுமான காரியம். ஏதோ சில நெருக்கடியை உத்தேசித்தும், எனது உண்மைத் தோழரும் கூட்டுப் பொறுப்பாளரு மான சிலரின் அபிப்பிராயத்தையும் வேண்டுகோளையும் மறுக்க முடியாமலும் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறேனே யொழிய, இதில் எனக்கு மனச் சாந்தியோ, உற்சாகமோ இல்லை. இருந்தாலும் என் இயற்கைக்கும், சக்திக்கும் தக்கபடி நான் நடந்து வருகிறேன் என்றாலும் அதன் மூலம் எல்லோரையும் திருப்தி செய்ய முடியவில்லை.

[சென்னை கன்னிமரா ஒட்டலில், 6-10-1940-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-10-1940]

9. நான் மாறுவது ஏன்?

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நான் அடிக்கடி கொள்கையில் மாற்றமடைபவன் என்று சொல்லப்படுகிறது. உண்மையாக இருக்கலாம். நீங்கள் அதை ஏன் கவனிக்கிறீர்கள்? ஒரு மனிதன், அவன் பிறந்தது முதல் இன்றுவரை திருடிக்கொண்டே இருக்கின்ற ஒரே நிலைக்காரன் என்று சொல்லப்பட்டால், அவன் மகா யோக்கியனா? எந்த மனிதனும் ஒரே நிலையில் இருக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப்படுகிறீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன இலாபம்? மாறுதல் முற்போக்குள்ளதா, பிற்போக்குள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா, தீமையா? என்பன போன்றவைகளைக் கவனிக்கவேண்டியதுதான் அறிவாளி களின் கடமையாகும்.

மற்றும், பொது நன்மையை உத்தேசித்து—கஷ்டப்படுகிற மக்கள் நன்மையை உத்தேசித்து மாறினானா? அல்லது, சுயநலத்திற்கு—அக்கிரமமான இலாப மடைவதற்கு மாறினானா என்று பார்க்கவேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப் பாளி, கவலையாளி ஆகியவர் மாறவேண்டியது அவசியமாகலாம். அதைப்பற்றிய கவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கின்றவர்களுக்குப் புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால், மாற்றத்தைப்பற்றி ஒன்றும் ஆபத்து வந்துவிடாது.

நான் பலதடவை மாறி இருக்கலாம்; பல குட்டிக் கரணங்கள் போட்டிருக்கலாம்; சுயநலத்திற்காகவும் போட்டிருக்கலாம்; பச்சோந்தியாயும் இருக்கலாம். அதனால் உங்களுக்கென்ன கெடுதி? நாடகக் கொட்டகையில் நாடகம் பார்க்கின்றபோது ஒரு மனிதன் எத்தனை வேடம் மாறிமாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்துப் பார்த்துவிட்டு, நடித்தவனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா, இல்லையா?

கோயில் கட்டிய மக்கள், கோயிலை இடிக்கவேண்டியவர்களாகி விடுவார்கள். அகிம்சை பேசுபவர்கள் பலாத்காரத்தைப் பேசவேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜ விசுவாசிகள் இராஜத் துரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளை யடிக்கச் சொல்வார்கள். இப்படியாக, அபிப்பிராயங்கள் மாறிக்கொண்டு போகலாம். இவற்றையெல்லாம், அபிப்பிராயங்கள் மாறியதாலேயே குற்றம் என்று சொல்லிவிட முடியாது. தங்களை 'நல்ல சூத்திரர்கள்' என்று சொல்லிக்கொண்டு, பார்ப்பனர்கள் கால்களைக் கழுவிய தண்ணீருக்குப் பவுன் கொடுத்துச் சாப்பிட்டவர்கள் இன்று 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி' என்றும், 'பார்ப்பனர்கள் ஜாக்கிரதை' என்றும் ஏன் சொல்லுகிறார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச் சொன்னவர்கள்

அயோக்கியர்கள் ஆக முடியுமா? தவிர, 'சூத்திரன் பணம் வைத்திருந்தால், பிராமணர்கள் பலாத்காரத்தால் அதைப் பறித்துக்கொள்ளலாம்' என்று மனு தர்ம சாஸ்திரத்தில் இருந்தது மாறி இப்பொழுது வெள்ளையர் தர்மத்தில், 'தந்திரங்களினாலும் சூழ்ச்சி யினாலும் மாத்திரந்தான் பறித்துக்கொள்ளலாம்' என்கின்றதான மாறுதல் ஏற்பட்டு விட்டது. நாளை, ஒரு சமயம் சமதர்ம காலத்தில், 'பிராமணர்கள் (சரீரத்தால் பாடு படாதவன்) சொத்து வைத்திருந்தால், மற்றவர்கள் பலாத்காரத்தில் பிடுங்கிக்கொள்ளலாம்' என்று ஏற்பட்டாலும் ஏற்படலாம். இந்தமாதிரி மாறுதல்கள் காலத்திற்கும், பகுத்தறி விற்கும், நாட்டின் முற்போக்கிற்கும் ஏற்றாற்போல நடந்துதான் தீரும். எனவே, நான் மாறுதலடைந்துவிட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படுவதில்லை. நாளை நான் எப்படி மாறப்போகின்றேன் என்பது எனக்கே தெரியாது. ஆகையால், நான் சொல்வதைக் கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

[நாகையில், 3-10-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-10-1931]

சுயமரியாதை இயக்கத்திற்கு அரசியல் பிரதானமல்ல. ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை நலத்துக்கும், திட்டங்களின் வெற்றிக்கும் கேடு செய்யவே காங்கிரஸ் மூலம் பார்ப்பனர்கள் தேசியப் போர்வையைப் போட்டுக்கொண்டு சூழ்ச்சி செய் கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறவரை—அக் காங்கிரசை ஒழிக்கும் அளவுக்குச் சுய மரியாதை இயக்கம் அரசியலைப்பற்றிப் பேசவும், அரசியலைப் பிரதானமாய்க்கொண்ட ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறது. ஆதலால்தான், இன்று நாங்கள் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் கவலையற்றோ தைரியமற்றோ, எதிரிக்கு ஆளாகியோ, அயர்ந்து போயோ, கட்சிக்குத் துரோகம் செய்துகொண்டோ இருக்கிறார்கள் என்றாலும்—நாங்கள் அதை இலட்சியம் செய்யாமல் அக் கட்சிக்கு உழைக்கின்றோம். அக் கட்சி மறுபடியும் வெகு சீக்கிரத்தில் தனது உச்சஸ்தான நிலைக்கு வரப்போகிறது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டே உழைத்துக்கொண்டிருக்கிறோம்.

[சேலம், ராசிபுரம், நாமக்கல் ஆகிய இடங்களில் 7, 8, 9-11-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-11-1937]

10. என் திருமணம்

பெரியோர்களே! தோழர்களே!

எனது சொற்பொழிவை முடிக்கும் முன்பு எனது திருமணம் பற்றிச் சில வார்த்தைகள் கூற நான் ஆசைப்படுகிறேன். என்—இத் திருமணத்தால் இயக்கத்திற்கு ஏதோ பெரிய குறைபாடு ஏற்பட்டுவிட்டதாகச் சிலர் தவறான பிரச்சாரம் செய்துவரு கிறார்கள்; சிலர் இதே காரணத்தால் இயக்கத்தைக் கைப்பற்றித் தங்கள் இஷ்டப்படி திருப்பிப் பயன் பெறலாம் என்று கருதி விஷமம் செய்து வருகிறார்கள். இதுபற்றி நான் ஏதாவது பேசுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஆதலால், அதுபற்றிப் பேசுவதும் சற்று அவசியமாக இருக்கிறது.

நான் எந்தக் காரியத்தையும் இரகசியமாகச் செய்வதில்லை. ஒரு ஆண்டாகச் சொல்லிக்கொண்டு வந்த காரியத்தைத்தான், திருமணம் என்பதாக—என் கருத்துக்குப் பொருந்த, சட்டப்படி—அதாவது பதிவுச் சட்டப்படி வாரிசு உரிமை பதிவு செய்து கொண்டிருக்கிறேன். அதோடு, அப்படிச் செய்துகொள்ள நேர்ந்த அவசியத்தையும், முன் கூட்டியே விளக்கிச் சொல்லியிருக்கிறேன்; பல அறிக்கைகள் மூலம் விளக்கி இருக்கிறேன். மனைவி வேண்டும் என்பதற்காக நான் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். ஏனெனில், மனைவி வேண்டுமென்றிருந்தால் சுமார்

15 வருடங்களுக்கு முன்பு, எனது மனைவி இறந்த தருவாயிலேயே—என் பெற்றோரும், சுற்றத்தாரும் என்னை மறுமணம் புரிந்துகொள்ளும்படி வற்புறுத்தியபோதே திருமணம் செய்துகொண்டிருப்பேன்; அப்போது பிடிவாதமாக மறுத்துவிட்டவன் என்பதோடு, மனைவி இறந்து போனபோது நான் மகிழ்ச்சியும் தெரிவித்து இருக்கிறேன். ஆனால், தற்போது பதிவு செய்து கொண்டதானது எனது தொண்டிற்கு வசதியும், நல்ல நம்பிக்கையான பாதுகாப்பும், வாழ்க்கைக்கு ஆதரவும், மற்றும் பல வசதிகளையும்; எனது வயது முதிர்ந்த தள்ளாத நிலையையும் உத்தேசித்து இந்தப்படிச் செய்துகொள்ளவேண்டி ஏற்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தேன்.

எனக்கு நம் மக்களிடத்துச் சுமார் 60 வருட காலம் அனுபவம் உண்டு. இந்த 60 வருட காலத்தில் மக்களின் யோக்கியதை, நாணயம், ஒழுக்கம் அப்போது இருந்ததை விடக் கொஞ்சம்கூட மேம்பாடடையவில்லை. மக்களுடைய யோக்கியதை மேம்பாட்டையாதது மட்டுமல்ல; கொஞ்சம் கொஞ்சமாக ஒழுக்கம், நாணயம் குறைந்து கொண்டேதான் வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை எனது பொதுநல வாழ்வில்—தொண்டில் நான் எடுத்துக்கொண்ட வேலையைத் தொடர்ந்து நடத்திவர எவ்வளவோ தேடியும் எனக்கு ஒரு உற்ற தோழர்—கூட்டு வேலைக்குத் தகுதியான, நம்பிக்கையான தோழர் இன்று வரை கிடைக்கவே இல்லை. நான் யார் யாரை ஏற்றவர் என்று கருதினேனோ அவர்கள் மீதெல்லாம் சந்தேகம் கொள்ளும்படி ஏற்பட்டது. சந்தேகம் கொள்ளும்படி ஏற்பட்ட சில நாட்களுக்குள்ளாக—அதை அவர்கள் தெரிந்துகொண்டவுடன் அவர்களாலேயே நான் வஞ்சிக்கப்படவும், அவர்களுடைய ஏமாற்றத்திற்கும் நயவஞ்சகத்திற்கும் ஆளாகவும் ஏற்பட்டது. யாரையும் நம்பமுடியவில்லை; உயிருக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை என்பதோடு, நான் சாப்பிடும் சாப்பாட்டில்கூட எங்கு விஷம் கலந்திருக்கக் கூடுமோ என்று சந்தேகப்படக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலையில் இயக்கத்தின் கவலை இவைகளைப் பற்றி அலட்சியமாக இருக்கவும் என் மனம் விருப்பப் படவில்லை; ஒரு வேளை வயதாகிவிட்டதாலோ என்னவோ தெரியவில்லை. இவ்வளவு நாள் வாழ்ந்ததே போதும் என்று இதுவரை திருப்தி அடைந்திருந்தாலும், இயக்க நிலையை உத்தேசித்து இயற்கை சாவு வரும்வரையில் கொஞ்ச காலம் உயிருடனிருந்தால் தேவலைபோல் தோன்றுகிறது. மேலும், நமது தொண்டின் பயனை மக்கள் இப்போதுதான் உணர்ந்து, போற்ற ஆரம்பித்திருக்கிறார்களாதலால், இந்தச் சமயத்தில் நாம் தற்கொலை செய்துகொள்வதுபோல் அலட்சியமாக இருந்து, இயற்கைக்கு முரணான முடிவுக்கு ஆளாகாமல்—வாய்ந்த காலம் இருந்து பணிசெய்தால் நமது இலட்சியம் சீக்கிரம் கைகூட வசதியாயிருக்குமே என்று தோன்றுகிறது. இதோடு இத்தொண்டு, மக்களின் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத தொண்டாதலால், இது நமக்குப் பின் என்ன ஆகுமோ என்ற அச்சத்தால், நமக்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற்றுவர ஏதேனும் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்ற ஆசையும் கலந்துகொண்டு விட்டது.

இதற்காக நான் நம்பின ஆண்கள், எதிர்பார்த்த ஆண்கள் என்னை வஞ்சித்து மோசம் செய்ததைக் கண்டும், நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குப் பெரிதும் முட்டுக்கட்டை போடும் சதிவேலைகளால் தோல்வியுற்றேன். யாரையாவது தத்து எடுத்துக் கொண்டு அந்த வாரிசின் மூலம் எனது தொண்டு தொடர்ந்து நடைபெற்றுவர ஏற்பாடு செய்யலாம் என்றும் நினைத்தேன். அந்தத் தத்துக்கும் ஏற்பாடுசெய்து, நாள் குறிப்பிட்டு, பத்திரமும் வாங்கி நகலும் எழுதிச் சம்பந்தப்பட்டவர்கள் அனுமதியும் பெற்றேன். அந்த 'சாபா' (chappa) காகிதம்—அந்த நகல் இன்னமும் என்னிடம்தான் இருக்கிறது. கடைசியாக இன்றைய எனது எதிரிகளான துரோகிகள் சிலர், அதை நடைபெற ஒட்டாமல் செய்து அச் சிறுவனின் புத்தியைக் கெடுத்து, சதிக் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டு என் கருத்தை நிறைவேற்றவொட்டாமல் செய்து, என்னை ஏமாற்றமடையச் செய்துவிட்டார்கள். ஆகவே, மறு ஏற்பாடு செய்யவேண்டியதாகிவிட்டது.

பிறகு நட்பின் முறையில் யாராவது கிடைப்பார்களா என்று தேடினேன். அதிலும் ஏற்ற ஆள் கிடைக்கவில்லை. சிலர் நம்பக்கூடியவர்கள் ஆனாலும், நான் நம்பிய ஆட்கள் அவ்வளவு பொறுப்புடையவர்களாகவோ, செய்கை உறுதி சம்பந்தமாகப் பகுத்தறிவுடையவர்களாகவோ, பொறுப்புடைய முழு நேரத் தொண்டாற்ற வசதியுடையவர்களாகவோ இருப்பவர்களாகக் கருதமுடியவில்லை. அதனாலேயே நான் இந்த இரண்டு ஆண்டுகளாக 'எனக்கு நம்பிக்கையான ஆள் யாரும், இயக்கத் தொண்டுக்குக் கிடைக்கவில்லையே' என்கின்ற என் கவலையைத் தெரிவித்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

இதெல்லாம் இன்றைய என் எதிரிகளுக்கு—எதிர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு நன்கு தெரியுமென்றாலும், அவற்றைத் தங்கள் விஷம, துரோகப் பிரச்சாரத்திற்குத் திரித்துக் கூறிப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நான் யாரையும் நம்பவில்லையென்று—பொறுப்பும் அறிவுமற்ற மக்களிடம் சொல்லி, என் மீது கெட்ட எண்ணம் ஏற்படச் செய்துவிட்டனர். உங்களில் யாரேனும் ஒருவருக்கு ஒரு பொறுப்புள்ள ஆள் வேண்டுமென்றால், ஒரு நம்பிக்கையுள்ள ஆள் வேண்டுமென்றால் உங்களிடம் பழகிக்கொண்டிருப்பவர்களில் மிக முக்கியமானவர்கள் யாரோ, அவர்களைப் பற்றித்தானே நீங்கள் நினைப்பீர்கள்! அப்படி நினைக்கப்பட்டவர்மீது உங்களுக்குப் பூரண நம்பிக்கை ஏற்படவில்லையானால் நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்றுதானே நீங்களும் குறிப்பிடுவீர்கள்! அப்படி நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டால் உலகத்திலுள்ள யார்மீதுமே நம்பிக்கையில்லை என்றா அர்த்தப்படும்? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! நான் அப்படிக் கூறியதன் உண்மை அர்த்தத்தைக் கண்டு தெளியுங்கள்.

நான் எனக்கு நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்பதைத் திருமணத்தின் போது மட்டுமே சொல்லவில்லை; அதற்கு முன்பே இரண்டாண்டுக்கு மேலாகவே பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். சுற்றியுள்ள ஆட்கள்மீது நம்பிக்கையில்லை என்று வெளிப்படையாக நான் தெரிவித்துவிடவே, சுற்றியிருந்த நபர்களும் வெளிப்படையாகவே தம் கிளர்ச்சியைத் துவங்கினர். கடைசியாக திருவண்ணாமலையில் நான் தோழர் இராசகோபாலாச்சாரியாரைச் சந்தித்ததையொட்டி, கோவை மாநாட்டிலேயே தவறான பிரச்சாரம் செய்ய ஆரம்பித்த விஷமப் பிரச்சாரம்—தஞ்சை மாணவர் மாநாட்டில் வளர்ந்து காட்டியது. தஞ்சையில் அவர்கள் செய்த விஷமப் பிரச்சாரம் எனது பத்திரிகையிலும் நான் இல்லாதபோது தைரியமான வஞ்சக புத்தியுடன் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. நான் அதைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனேன். அந்தச் சமயத்தில் நான் மாவூரில் 'மாணவர் பிரச்சார வகுப்பு' நடத்திக்கொண்டிருந்தேன். அங்கு நான் சர். சர்மா அவர்கள் வீட்டில் தங்கி இருந்து பிரச்சார வகுப்பு நடத்தியதையும், தங்கள் விஷமப் பிரச்சாரத்துக்கு ஒரு சாதனமாக்கிக்கொண்டு, குற்றம் கூறினார்கள். கோவை குறள் மாநாட்டில், திரு. இரத்தினசபாபதி முதலியார் அவர்களைக் கலந்து கொள்ளச் செய்ததைப்பற்றியும், நான் அவர்கள் வீட்டில் தங்கியதைப்பற்றியும் குற்றம் கூறினார்கள். மற்றும், 'என்னைப் பார்ப்பனத் தலைவர்கள் சிலர் காண ஆசைப்படுகிறார்கள். அவர்களுடன் கலந்து பேசப் போகிறேன்' என்று வெளியிட்டதையும்—தங்களுக்கு அனுகூலமான சாதனமாக ஆக்கிக்கொண்டு, நான் பார்ப்பனர்களுடனும், பணக்காரர்களுடனும் கூடிக் குலாவ ஆரம்பித்துவிட்டேன் என்று குற்றம் கூறினார்கள். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டே என்னை ஒழித்துவிடலாம் என்று பெரிய கோட்டை கட்டி, அதன்படிக்கேதான் பிரச்சாரத்தையும் துவங்கினர்.

இதை அறிந்த நான் உடனே சதிவேலை துவங்கிவிட்டதென்றும், சதிவேலை துவக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இன்னின்னார் என்றும், அவர்களுடைய யோக்கியதை இன்னதென்றும் விளக்கி—இனி, மக்கள் ஜாக்கிரதையாக இவர்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென்றும்; இவர்களை நம்ப வேண்டாமென்றும்; இனி இவர்கள் பெயர் நம் பத்திரிகையில் வராது என்றும்—ஒரு குறிப்பு எழுதி நம் பத்திரிகைக்கு அனுப்பினேன். அதை எனது பத்திரிகையில் போடாமல் அந்தச் சேதியை உடனே அந்த நபர்களுக்குத்

தெரிவிக்கப்பட்டதுடன், எதிரிகளுக்கு வேண்டிய உளவுகள், ஆதாரங்கள் எனது பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து தாராளமாகக் கிடைத்தும் வர ஆரம்பித்துக் கிட்டிவிட்டது. அது என் பத்திரிகையில் போடப்படவில்லை என்றும், அது எப்படி எதிரிக்கு உடனே தெரிவிக்கப் பட்டது என்றும், காரியாலயத்தில் பொறுப்புள்ளவர்களைக் கேட்டதில் யோக்கியமற்ற பதிலும், பொய்யான பதிலும் கிடைத்தது. வேறு சில சங்கதிகளும் நடந்தன. அதாவது, ஆசிரியர் பொறுப்பிலிருப்பவர் தான் மட்டுமே அதற்குப் பொறுப்பாளியல்ல என்றும், அதைப் போடவேண்டாமென்று கூறியதாகவும்; மானேஜர்தான், உடனே டெலிபோனில் எதிரிக்குச் சேதி தெரிவித்ததாகவும் சொன்னார். நான் சங்கடத்தோடு மானேஜர் பொறுப்பி லிருந்தவரைக் கேட்க, அவர் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று ஒரேஅடியாய் மறைத்து விட்டார். உடனே, நான் ஸ்தம்பித்துப் போனேன். இப்படி முழுப் பொய் கூறும் ஒருவரை எப்படி இனியும் நம்புவது?

'எதிரிகள்—இவ்வளவுக்கும் வந்துவிட்டார்களே!' என்று பெரிதும் மன வேதனைப் பட்டேன். நான் சிறிதாவது நம்பலாமே என்று கருதிப் பொறுப்பை ஒப்புவித்த நபர்கள், இப்படிச் செய்துவிட்டதால் மனமொடிந்து அவசரமாக வேறு ஏற்பாடு செய்யத் துணிந்து, உடனே பதிவுத் திருமண முறைப்படி வாரிசுஏற்படுத்த முடிவு செய்துகொண்டு, பதிவு ஆபீசுக்குச் சென்று, பதிவுப் பாரம் வாங்கிவந்து, பாரத்தைப் பூர்த்திசெய்து அனுப்பினேன். அது சரியாகப் பூர்த்திசெய்யப்படவில்லை என்று திருப்பி அனுப்பப்பட்டது. அதைப் பூர்த்திசெய்து என்னுடன் கூடவே இருந்த மிக நம்பிக்கை வைத்திருந்த ஒருவர் மூலம்— 'இரகசியக் கடிதம்' என்று கூறி ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பினேன். இரகசியக் கடிதம் என்றால் யாருக்கும் பிரித்துப் பார்க்கவே தோன்றும்; அவரும் அப்படியே பிரித்துப் பார்த்தார்போல் இருக்கிறது. அவர் இன்றைய எதிரிகளில் ஒருவராக இருந்திருந்தவர், ஆனதால், உடனே மற்ற எதிரிகளுக்கும் அச் சங்கதியைத் தெரிவித்துவிட்டார். என் காரியாலயத்தில் என் சொந்தக் காரியஸ்தர்களாக இருந்தும்—எனக்கு நண்பர்கள்போல் இருந்தும் வந்த 100 ரூபாய் சம்பளத்துக்கு மேற்பட்டவர்கள் 5, 6 பேர்கள் உட்பட, பலர் தைரியமாக என் மவுண்ட் ரோடு வீட்டிலேயே கூடிக் கண்டித்து, மற்றும் பல ஆட்களைச் சேர்த்து என்னைக் கண்டபடி வைது, இழித்துக் கூறிக் கண்டனத் தீர்மானமும் நிறை வேற்றினர். தடுத்துப் பேசினவர்களை மிரட்டி அந்தச் சமயத்தில்தான் சம்பந்தமான மற்ற சில ரிக்கார்டுகளையும் கடிதங்களையும் அவர்கள் எடுத்துச் சென்று தங்கள் எதிர்ப்பு வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். பத்திரிகைகளிலும் கண்டித்துப் பல பொய்ச் சங்கதிகளை 'ஜோடித்து' அறிக்கை விட்டனர்; கட்டுப்பாடான எதிர்ப்புப் பிரச்சாரமும் செய்ய முற்பட்டனர்.

என் வீடு தேடி பலாத்காரம் வருமளவுக்கு—நான் கவலையும் பயமும் அடையும் அளவுக்கு எதிர்ப் பிரச்சாரம் உச்சநிலை அடைந்துவிட்டது. ஊருக்கு ஊர் அறிக்கை— ஆட்கள் பறந்தனர். இவைகள் என் கருத்துக்களில் பூரண உறுதியும் நினைத்த காரியத்தை உடனே முடிக்காவிட்டால் உயிர்ச்சேதம் ஏற்படலாமோ என்ற அபாயமும் தோன்றச் செய்தன. என் சொந்தக் காரியத்தில் பிரவேசித்து இவ்வளவு மோசமாக நடந்து கொள்ளுப வர்கள் என்ன செய்யத் துணியமாட்டார்கள்? ஆதலால், முடித்துவிடுவோம் காரியத்தை என்று முடித்துவிட்டேன்; பயமற்று உலவுகிறேன்.

எதிர்ப்புக்கு ஏமாந்த பொது மக்கள் 100-க்கு 75 பேர்—இப்போது அறிவு பெற்று விட்டதைக் காணுகிறேன். சிலர் வெட்கப்படுவதையும், வேதனைப்படுவதையும் காணு கிறேன்; அறிகிறேன். தினமும் பல கடிதங்களில் படிக்கிறேன். நான் வாரிசாகச் செய்து கொண்ட மணியம்மை 31 வயதினரும், படித்தவரும், என்னுடன் கூடவே ஆறு ஆண்டுகள் இயக்கப் பணி புரிபவரும், என் நம்பிக்கைக்கு ஆளாகப் பத்திரிகை உரிமை, நிர்வாக உரிமை ஏற்று நடத்துபவரும், பணம் காசு விஷயத்தில் நம்பிக்கையாகப் பொறுப்பாக நடப்பவரு மான அப்பேர்ப்பட்டவரை, நான் சட்டப்படியான வாரிசாக—வாழ்க்கைத் துணையாக

ஆக்கினால் இதில் யாருக்கு, என்ன குறைவு, கெடுதி, நட்டம், ஒழுக்கக்கேடு என்று யோசித்துப் பாருங்கள்!

இந்தக் காரியத்தால் ஏற்பட்டது இன்ன தவறென்று கூற, குற்றமென்று கூற ஏதேனும் காரணம் காட்டவேண்டுமே, இந்தப் பகுத்தறிவுவாதிகள்! இயக்க நலனை—பொதுத் தொண்டைக் கருதி எனக்கொரு துணை வேண்டுமென்று, என்னுடைய பாதுகாப்புக்காக, என்னுடைய வசதியை உத்தேசித்து, ஒரு ஸ்திரீயை சட்டப்படி எனக்கு உதவியாளராக—உற்ற நண்பராக இருக்க வசதி செய்துகொள்ளுகிறேன். இதில் யாருக்குத் தான் தலையிட உரிமையிருக்க முடியும்? யாருக்குத்தான் தகராறு இருக்கமுடியும்? அப்படி நான் மணந்துகொண்டபெண் 14 வயதுச் சிறுமியா, அல்லது 15 வயதுச் சிறுமியா? ஏது மறியாத பெண்ணை ஏமாற்றிச் செய்த காரியமா? வேறு யாருக்காவது உரிமையா? யாருடைய பாதுகாப்பிலாவது இருந்தவரா? தனது நலத்தை, தனது வாழ்வைத் தெரிந்து கொள்ள முடியாத, தகுதியில்லாத சிறு பெண்ணா? அல்லது, காசு பணம் காட்டி ஏமாற்றப் பட்டதா? என்னை அறியாததா? அல்லவே.

தம் வீட்டாராலேயே ஆறு ஆண்டுக்கு முன் கொண்டுவந்து ஒப்புவிக்கப்பட்ட பெண் ஆயிற்றே! சொந்த வீட்டிலேயே பூப்படைந்து சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, திருமணம் செய்துகொள்ளாமல், திருமணம் செய்துகொள்வதில்லை என்று பிடிவாதம் செய்துகொண்டிருந்த பெண்; தன் இளமையிலேயே தன் தகப்பனாரோடு இயக்க மாநாடுகளுக்கெல்லாம் வந்து, இயக்கம்—கொள்கைகளில் பற்றுதல் ஏற்படுத்திக் கொண்டு தனது வீட்டிலும் இயக்கப் பணி செய்துகொண்டிருந்த பெண்; வேலூருக்கு நானும், மற்றும் இயக்கத் தோழர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்த போதெல்லாம்—இயக்கப் பற்றுதலால் யாவருக்கும் ஏற்ற பணிவிடை செய்து வந்த பெண்; 1938ஆம் ஆண்டு 'இந்தி எதிர்ப்பில்' வேலூர் சிறை சென்றவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்த பெண். தன் தகப்பனார் இறந்த பிறகு இறந்த மூன்றாவது மாதமே (1943-ல்) இருந்து, என்னோடு ஆறு வருட காலமாகப் பழகிச் சுற்றுப் பிரயாணத்தில் கூடவே இருந்து பிரச்சாரம், காரியதரிசி வேலை, ரிப்போர்ட்டர் வேலை செய்து வரும் பெண்; என்னால் பல தடவை வற்புறுத்தப் பட்டும், அவர் பெற்றோரால் வற்புறுத்தப்பட்டும்—திருமணம் வேண்டாம் என்று மறுத்து, தனது இயக்கத் தொண்டே பிரதானம் என்று கருதித் தொண்டாற்றி வந்தபெண்.

அப்படிப்பட்ட ஒரு பெண்ணை—ஆறு வருடம் பழகி எனது முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு பெண்ணை—நான் துணைவியாக, நட்பாக, நம்பிக்கைக்கு ஏற்ற வாரிசாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்றால், ஒரு கூட்டம் ஏன் ஆத்திரப்பட வேண்டும்? அதில் மற்றவர் பிரவேசிக்க உரிமைதான் ஏது? கூட இருந்து ஒத்து ஊத ஒரு பத்துப் பேர்கள் கிடைத்து விட்டார்கள் என்பதற்காகவே, எனக்குத் தொல்லை கொடுக்கவேண்டுமா? தொல்லை கொடுக்க ஏதேனும் நியாயமான காரணம் காட்டவேண்டுமே? திருமண சேதி விளம்பரமாவதற்கு முன் தேதிவரை—என்மீது துதிபாடிக் கொண்டிருந்துவிட்டுத் தமக்கு வசதி கிடைத்தவுடனே, இவர்கள் என்னை ஒழிக்க முற்படுகிறார்கள் என்றால்—இவர்கள் நாணயத்தில், நல்லெண்ணத்தில் எவருக்கும் சந்தேகம் ஏற்படத்தானே செய்யும்? எவ்வளவு கீழ்நிலைக்கு இவர்கள் வந்துவிட்டார்கள்? எவ்வளவு துரோகம் செய்ய இவர்கள் துணிந்து விட்டார்கள் என்பதைத்தானே இச்செயல் காட்டுகின்றது?

இப்படிப்பட்ட சதிகாரக் கூட்டத்தை மூன்றாண்டாகவே உள்ளத்தில் நம்பிக்கை வைக்காமல் இருந்துகொண்டு, எனக்கு நம்பிக்கையான ஆள்கிடைக்கவில்லை—எனக்குப் பின்னாலே சதிகாரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிவந்தது எப்படித் தவறாகும்?

நம் இயக்கத்தின் இன்றைய நிலை என்னவென்று உணர்ந்து பார்த்தாலன்றோ தெரியும்? மேல்சாதி, கீழ்சாதி என்கின்ற பேதாபேதம் ஒரு அளவுக்காவது குறைந்திருக்கிறது. பார்ப்பானும் சூத்திரனும் இன்னும் இருக்கிறார்கள் என்றாலும்—'சூத்திரன்'

என்று நம் காதில் படும்படிப் பேச, இன்று ஒரு மேல்சாதிப் பார்ப்பான் அஞ்சவே செய்கிறான். நாடு அந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பதவிகள் பல கைப்பற்றப்பட்டுவிட்டன. என்றாலும், இதோடு திருப்தியடைந்துவிட முடியுமா? இன்னும் எவ்வளவோ காரியம் நம்மால் சாதிக்கப்படவேண்டி யிருக்கின்றனவே! இன்னும் சூத்திரன் என்பதற்கான ஆதாரங்கள் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும், சட்டத்திலும் இருந்து கொண்டுதானே இருக்கின்றன? இன்னும் உத்தியோகங்களில் நமக்குச் சரியான விகிதாச்சாரம் கிடைக்காமல்தானே இருந்துவருகிறது? சாமி, மதம், புராணம் பற்றிய முட்டாள்தனம் இன்னும் ஒழியவில்லை.

இப்போதுதான் காங்கிரஸ்காரர்கள் நம் தொண்டின் பயனைச் சிறிது உணர ஆரம்பித்திருக்கிறார்கள்; இப்போதுதான் காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பாலோர் உள்ளங்களில் சற்று மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்திலா நம் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்மீது கல்லெடுத்துப் போட முன்வருவது? நம் இயக்கம் நல்ல நிலைக்கு வந்துகொண்டிருக்கும் இந்த நேரத்திலா, நம்மவரே நமக்கு நேர் எதிரிகளாவது? கழகத்தை ஒழிக்கத் துரோகம் செய்வது? நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நமக்கு இதுவரை எதிரிகளாக இருந்துவந்த பார்ப்பனர்களே, 'இன்னும் இந்தப் பார்ப்பனர்—திராவிடர் போராட்டத்தை வளரவிட்டுக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது. இருசாராரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவதே நல்லது' என்று ஆலோசித்துவரும் இந்த நேரத்திலா, இத்தகைய சதி—வேலைகள் நமக்குள்ளாக நடப்பது? நம் மக்களும் அதை அனுமதித்துக் கொண்டிருப்பது?

திருவண்ணாமலைக்குப் பாதாளலிங்கக் கோயிலைத் திறக்க வரும் கவர்னர் ஜெனரல், என்னை அங்குவந்து சந்திக்கும்படி தந்தி கொடுக்கிறார் என்றால், அதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? தனிப்பட்ட காரணம் எவ்வளவு இருந்தாலும், 'தென்னாட்டில் விரைவாகச் செல்வாக்குப் பெற்றுவரும் நம் கழகத்திற்குத் தான் எதிரி அல்லர்' என்று காட்டிக்கொள்ளும் எண்ணமும் இருந்துதானே இருக்கும்! சர். சர்மா அவர்கள் தன் பங்களாவுக்கு வரும்படி என்னை அழைக்கிறார் என்றால் அவருக்கென்ன உள் காரணம் இருக்கமுடியும்? என்னால் அவருக்கு ஆகக்கூடிய காரியம்தான் என்ன இருக்கிறது? நம் இயக்கம்பற்றி அவருக்குள்ள மதிப்புதானே! நான் பார்ப்பனீயம் ஒழியவேண்டும் என்று தினந்தான் பேசிவருகிறேன். என்றாலும், பார்ப்பனர்களின் திருமண அழைப்புகள் இன்னும் வந்துகொண்டுதானே இருக்கின்றன? இதற்கெல்லாம் நம் இயக்கத்தின் வளர்ச்சியும் நேர்மையும்தானே காரணம்? பார்ப்பனர்களின் உள்ளங்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்தானே காரணம்? இவ்வளவு வசதியும் ஏற்பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வளவு வசதி ஏற்படவும் முக்கிய தொண்டனாக இருந்த என்னை ஒழித்துத்தான் ஆகவேண்டுமென்றால், அதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? ஒழிந்தேயாக வேண்டும் என்று கூறப்பட்ட நான், என்ன அப்படிப்பட்ட துரோகம்–இயக்கத்துக்கு, பொது நலனுக்குச் செய்துவிட்டேன்? எனக்குத் தெரியும்படியாகவே துரோகம் செய்தவர்களையெல்லாம் நான் கழகத்தில் சேர்த்துக்கொண்டிருக்க, என்னையேவா இந்தத் துரோகிகள் ஒழிக்கப் பார்ப்பது? இந்தத் துரோகிகளே இன்னும் சொல்கிறார்களே, 'அய்யாவை ஏமாற்றவா எங்களுக்குத் தெரியாது? நினைத்தால் ஒரு நிமிஷத்தில் எங்களால் ஏமாற்ற முடியும்' என்று. இவ்விதமே கூறிப் பெருமையும் அடித்துக் கொள்ளுகிறார்கள். யாருக்கு என்ன கெடுதி செய்துவிட்டேன், நான், இத்தகைய துரோகத்திற்கு ஆளாக்கப்பட? கெடுதி செய்கிறார்கள்—செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும், என்னுடன் இருக்க இவர்களை அனுமதித்துக் கொண்டிருந்தேனே! பலதடவை இவர்களை மன்னித்து இவர்களது சரணாகதியை ஒத்துக்கொண்டிருக்கிறேன். நான் இவர்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமாமே! எதற்கு? இவர்களை மன்னித்ததற்காகவா? அதுகூடப் போதாதாமே, திருமணத்தை ரத்து செய்ய வேண்டுமாமே? இதில் எவ்வளவு பெரிய கொலை பாதகக் கருத்து அடங்கியிருக்கிறது, பாருங்கள். இதில் விளங்கவில்லையா இவர்

களது துரோகத்திற்கு—சதிக்குக் காரணம்? இதை அனுமதித்துக் கொண்டிருக்கலாமா—பொதுமக்களாகிய நீங்கள்? துளியேனும் ஆதரவு இருக்கலாமா—இத் தகைய சதிகாரர்களுக்கு?

தோழர்களே! நான் உண்மையில் எனது பொதுப்பணி தொடர்ந்து நடைபெற்றுவர வேண்டும் என்றுதான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்; இன்னும் சில ஏற்பாடுகளும் செய்ய உத்தேசித்திருக்கிறேன். யார் என்ன நினைத்துக்கொண்டாலும் சரி; யார் என்ன சொல்லிக் கொண்டிருந்தாலும் சரி; நான் கடமையிலிருந்து அணுவளவும் தவறமாட்டேன். என் தொண்டுதான் எனக்குப் பெரிது; மற்றவர்கள் அதைப்பற்றி என்ன கூறுகிறார்கள்—என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்குப் பெரிதல்ல.

எனவே, அது தொடர்ந்து நடைபெற்று வரும் வண்ணம் மற்றவரின் விருப்பு, வெறுப்புப் பாராமல் எனக்குச் சரியென்று படும் எதையும் செய்து கொண்டுதான் வருவேன். எனது 30 ஆண்டு பொது வாழ்வில் ஒருபோதும் எதிர்ப்புக்கு அஞ்சி எனது கொள்கையை மாற்றிக்கொண்டதில்லை; எத்தகைய ஒழுக்கக்கேடான காரியத்தையும் நான் செய்ததில்லை. ஏதேனும் அப்படிச் செய்ததாக என்னுடைய எதிரிகளான பார்ப்பனர்களே கூடக் கூறவில்லை. காங்கிரஸ்காரர்கள்தாம் என்மீது வெறுப்பேற்பட, காங்கிரசிலிருந்து நான் ஏதோ பணம் திருடிக்கொண்டு போய்விட்டதாகக் கூறினார்கள். ஆனால், அவர்களே பிறகு நான் செய்த தொண்டுக்காக என்னைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றித் தாம் செய்த தவறுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டு விட்டார்கள். அதாவது, கோயமுத்தூரில் நடந்த மாகாண காங்கிரஸ் கான்பரன்சில், எனது காங்கிரஸ் தொண்டைப் பாராட்டித் தீர்மானம் போட்டார்கள். அவ்வளவு ஒழுக்க மேம்பாட்டுடன் வாழ்ந்து வந்த எனக்கு இப்போதொன்றும் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்ளவோ, பொதுமக்களை மோசம் செய்துவிட்டுப் பணத்தை மற்றொருவருக்குக் கொடுத்துவிடவோ, கொள்கைகளில் இருந்து நழுவவோ எவ்வித அவசியமும் ஏற்பட்டு விடவில்லை.

யாரேனும் இவ்வேற்பாட்டிற்காக உள்ளத் தூய்மையுடனேயே வருத்தப்படுவ தென்றால் எனக்குப் பின் இந்தப் பெண் தனிவாழ்க்கை நடத்தவேண்டி ஏற்பட்டுவிடுமே என்று வேண்டுமானால் வருத்தப்படலாம்; கொஞ்சம் பரிதாபப்படலாம். ஆனால், அதற்குக் கூட அவசியமில்லை. ஏனென்றால், நான் இறந்த மறுநாளேகூட, இந்த அம்மையார் தனக்கு இஷ்டப்பட்ட வேறு ஒருவனை மணந்துகொண்டு விடலாம். இந்துமத தர்மப்படி செய்யப்பட்ட—ரத்து செய்து கொள்ள முடியாத—ஜென்மதத் தீர்ப்பான திருமணம் அல்ல; பதிவு முறைப்படி செய்துகொள்ளப்பட்ட திருமணம்; எந்த நேரத்திலும் ரத்து செய்து கொண்டு வேறு மணம் செய்து கொள்ளலாம். நான் இன்றும் இந்தப் பெண்ணை அனாதையாக வைத்திருக்கவில்லை; நான் திடீரென்று இறந்துவிட்டாலும் சுகமாக வாழக் கூடிய அளவுக்குச் சிறிது பொருளாதார வசதியும் உண்டு. 'டிரஸ்டு' காரியத்தில் துரோகம் செய்யாது என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அன்றியும், அந்த அம்மையார் சில டிரஸ்டிகளுடன் ஒருவராகத்தான் இருப்பார். என்ன கேடு செய்யமுடியும்? ஆகவே, இந்தப் பெண்ணுக்காகப் பரிதாபப்படவோ, அவநம்பிக்கைப்படவோ இடமோ, அவசியமோ இல்லை!

தோழர்களே! இந்தச் சதிகாரர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இவர்கள் செய்துவரும் தவறான பிரச்சாரத்திற்காகவும் நான் கவலைப்படவில்லை. இத் தவறான பிரச்சாரத்தால் பாமர மக்கள் ஏமாந்து போய்விடுகிறார்களே என்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது; சதிகாரர்களின் நியாயமற்ற அநாகரிகப் பிரச்சாரத்திற்குப் பாமர மக்கள் ஆளாகிவிடுகிறார்களே என்பதுதான் கவலையாக இருக்கிறது. இவர்கள் செய்த பிரச்சாரத்தால், பலருக்குக் கழகம் நிலைத்திருக்குமோ என்ற சந்தேகம்கூட வந்துவிட்டது. பெரிய அதிகாரிகள்கூட வருத்தப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். தங்களுக்குப் பெரிய பாதுகாப்பாக இருந்துவரும் கழகம், தாங்கள் மேல் உத்தியோகத்துக்கு வரவும், தங்களைப்

பார்ப்பனர்கள் மதித்து நடக்கவும் பெரும் காரணமாய் இருந்துவரும் கழகம்—எங்கு இந்தக் கிளர்ச்சியால் செல்வாக்கு இழந்துவிடுமோ என்று ரொம்பவும் கவலைப்பட்டார்களாம். இவர்களின் எதிர்ப் பிரச்சாரம் அவ்வளவு கீழான நிலைக்குப் போய்விட்டது. 'கழகமே, இந்த ஏற்பாட்டால் மாய்ந்துவிடும்' என்று பிரச்சாரம் செய்துவிட்டனர். அதிகாரிகள் கவலைப்படக் காரணம் இருந்தது; நமது கழகம் சர்க்காரால் எவ்வளவு மதிக்கப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் ஒரு குறைபாட்டை எங்காவது ஒரு பொதுக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னால், அது உடனே கவனிக்கப்படுவது அவர்களுக்குத் தெரியும். ஜில்லா கலெக்டர்மீது ஒரு குறைபாடு நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டால், உடனே போர்டு மெம்பர் அதுபற்றி நமக்குத் தெரியாமலே விசாரணை நடத்தி ஆவன செய்வது அவர்களுக்குத் தெரியும். ஏன் நாம் எடுத்துக்காட்டும் குறைபாடுகளை உடனே சர்க்கார் கவனிக்கின்றது? நம்மிடம் சர்க்காருக்கு நம்பிக்கையுண்டு. நாம் உண்மையிருந்தாலொழிய வெளியில் எடுத்துச் சொல்லமாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், பயந்து உடனே இவ்வளவு கவனிக்கிறார்கள். நல்ல நிலைக்கு நம் இயக்கம் வந்துவிட்டது. இனி இதை யாராலும் ஒழிக்க முடியாது. நாம் இன்னும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவே, சூத்திரர்களாகவே இருந்து வருகிறோம். நம் நாடு மேலும் மேலும் வடநாட்டவரால் சுரண்டப்பட்டே வருகிறது. வடநாட்டு ஆதிக்கம் வரவர வளர்ந்து கொண்டேதான் போகிறது.

எனவே, நாம் நம் வேலையைக் கைவிடுவதற்கில்லை. எத்தகைய எதிர்ப்பு வந்த போதிலும் சமாளித்துத் தொடர்ந்து பாடுபட்டு வர வேண்டியதுதான். எவ்வளவு துரோகிகள் தோன்றினாலும் பொதுமக்கள், அறிஞர்கள், நடுநிலைமையாளர்கள் ஆதரவு நமக்குத்தான் இருக்கும். இது என் சொந்த அனுபவம். நாம் சூத்திரத் தன்மையிலிருந்து விடுதலை பெற, வடநாட்டார் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற, திராவிடத் தனி நாடடைய முயற்சி செய்தல் வேண்டும். அதற்குப் போதிய சக்தி, வசதி, வாய்ப்பு மக்கள் ஆதரவு எனக்கு உண்டு.

என்றாலும், இதற்குக் காங்கிரஸ் திராவிடர்கள் உட்பட, பார்ப்பனத் தோழர்கள் உட்பட மற்றும் எல்லோருடைய ஆதரவும் பெறவே நாம் முயற்சிக்க வேண்டும்; அயராது தொண்டாற்ற வேண்டும்.

[திருவாரூர் மாநாட்டில், 2-10-1949-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-10-1949]

11. தன்னைப்பற்றி

வெகு வீராவேசத்துடன் கண்டனநாள் கொண்டாட தேதி குறிப்பிட்ட நான், அரசாங் கத்தில் தடை உத்தரவு கொடுக்கப்பட்டால் அவ்வுத்திரவுக்குக் கீழ்படியுங்கள் என்று கழகத் தோழர்களை நான் வேண்டிக்கொண்டதுபற்றி, என்னைப்பற்றியும், கழகத்தைப் பற்றியும், கழகத் தோழர்களைப்பற்றியும் பொதுமக்கள் பரிகாசம் செய்வார்களே என்று கருதலாம்.

ஆம்; பரிகாசம் செய்வார்கள்; நமக்கும் அது கொஞ்சம் மானக்கேடாகத்தான் தோன்றும். உண்மையாகவே அது மானக்கேடாகவும் இருக்கலாம். அந்த மானக்கேடு நடத்தை நானோ, நீங்களோ நமது தனிப்பட்ட சுயநலத்துக்காக அல்ல; சமுதாயப் பொது நலத்துக்காகவே அடைகிறோம். நாம் நமது சமுதாய நலத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது என்பது எப்படியோ, அப்படித்தான் உயிரிலும் சிறந்தது என்று சொல்லும் படியான மானத்தைத் தியாகம் செய்வது ஆகும்.

உண்மையான சமுதாயத் தொண்டன் என்பவன் சமுதாய நலனுக்குச் செய்யும் காரியங்களில் மானக்கேடு ஏற்பட நேர்ந்தால் அதைத் துணிவுடன் ஏற்க முன்வரவேண்டும். குடிநலத் தொண்டர்கள் 'மானம் பார்க்கில் கெடும்'—என்ன கெடும்? லட்சியம் கெடும்

என்பது நமக்கு முன்னாலும் சொல்லப்பட்ட அறிவுரையாகும். அப்படி மானத்தைக் கருதாதவன்தான் இலட்சியவாதியாவான்; மற்றவன் சுயநலவாதியேயாவான்.

ஆதலால், நான் பயந்துவிட்டதாகக் கருதாதீர்கள்; நீங்களும் உங்களுக்கு அந்தப் பேர் வருமே என்று கருதாதீர்கள்.

இப்போது தோழர்களே! உங்களைப் பல ஆயிரக்கணக்கில் ஜெயிலுக்கு அனுப்ப என்னால் முடியும். அதனால் நான் பெரிய தலைவனாக ஆகிவிட்டால் போதுமா? சங்கராச்சாரிகள் விஷயம் அற்ப விஷயம். அவர்களை நாம் பெரிதாகக் கருதுவதில்லை.

'பார்ப்பனீயம்' என்னும் நாடகத்தில் அவர் ஒரு முக்கிய ராஜபார்ட்காரர்; பார்ப்பனீய நாடகம் முடிந்தால் அவர் சாதாரண மனிதர்தான்!

அவர் உங்களுக்கோ, மற்ற மக்களுக்கோ, உலகத்திற்கோ எதில் சிறந்தவர்? என்ன பயன் அளிப்பவர்? அவர் பேச்சை எவன் மதிக்கிறான்? எவன் ஒப்புக்கொள்ளுகிறான்? அவர் காலில் விழுந்து பிரசாதம் பெற்ற மந்திரிமார்களாவது சங்கராச்சாரி சொல்லுவது போல் தங்களைச் சூத்திரர் என்றும், சூத்திர தர்மத்திற்கு ஏற்றவர்கள் என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்களா? சூத்திரத் தர்மப்படி நடந்து கொள்கிறார்களா? எல்லாம் பிஸினஸ் (Business) வியாபாரமுறை; ஓட்டுக்காகத்தான்! ஆனதால், சங்கராச்சாரியை ஒரு மதிக்கத் தக்க மனிதன்தான் என்று கருதி பெரிய காரியத்தில் இறங்காதீர்கள்!

நான் கண்டனநாள் குறிப்பிட்டது மக்களுக்கு ஓர் உணர்ச்சியை ஊட்டத்தான்; இதை வேறுவழியாலும் செய்யலாம். இதற்காக 1000, 2000, 10,000 பேர் சிறைக்குப்போக வேண்டாம்; போகவேண்டிய காரியம் பல இருக்கின்றன. எலெக்ஷன் சமயத்தில் இவை எதிரிகளுக்குப் பலமாகி விடுமே! தேர்தல் பிரச்சாரத்திற்கு இதைப் பயன்படுத்துங்கள். தேர்தலுக்குப்பின் நமக்கு அதிக வேலை இருக்கிறது! ஆகையால், உங்களுக்கு இந்த யோசனை தவறு என்று தோன்றினாலும் என்னை மன்னித்து அடுத்த காரியத்தை எதிர் பாருங்கள்.

['விடுதலை'—அறிக்கை—20-11-1966]

பெரியோர்களே! நண்பர்களே! தோழர்களே! சில தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் செய்துவந்த தொண்டும் செய்துவருகின்ற தொண்டும் நீங்கள் அறிந்ததேயாகும்.

அத்தொண்டு யாருக்காக என்பதும், அதனால் நான் ஏதாவது நன்மை, சுயநலம் அடைந்தேனா என்பதும் உங்களுக்குத் தெரியும். எனது நலத்தை, செல்வத்தை, செல்வாக்கை—பொதுநலத்தொண்டுக்குக் கொடுத்தேனா அல்லது எனது பொதுத் தொண்டால் எனது நலத்தை, செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டேனா என்பது உங்களுக்குத் தெரியும்!

இராஜாஜி அவர்களும், இரு கவர்னர்களும், இரு கவர்னர் ஜெனரல்களும் வேண்டியும், கேட்டுக்கொண்டும் மந்திரிப் பதவியை வெறுத்தவன் நான். தவிர, எந்தப் பதவியையும் நான் விரும்பியவன் அல்லன்.

இன்னும் இனியும் நண்பர்களால், பெரியோர்களால் புகழுரை பெற்றதைத் தவிர—யாராலும் ஒரு நலனும் பெற்றதில்லை; விரும்பியதுமில்லை.

எனக்குப் பொதுத்தொண்டு வரும்படி என்பது—என் சொந்தக் காசில் பிரயாணம் செய்து 1930-ல் கூட்டமொன்றுக்கு 50 ரூபாய் வாங்கி, 1950-ல் 100 ரூபாய் வாங்கி, 1960-ல் 150 ரூபாய் வாங்கி, 1970-ல் 200 ரூபாய் வாங்கினதுதான். மற்றும், மாநாடுகள் நடத்தியதில் சுமார் 1,00,000 ரூபாய் மீதமிருக்கும். மற்றபடி, எனக்கு இன்றுள்ள அவ்வளவும், மற்றும் இயக்கத்தின் பேரில் உள்ள சொத்துக்கள், செல்வங்கள் அவ்வளவும் என்னால்—என்

தகப்பனாரைக்கொண்டு செய்யப்பட்ட 'டிரஸ்ட் தர்ம சாசனம்' ஆக்கப்பட்ட எங்கள் குடும்பச் சொத்தே அல்லாமல் பிறர் சொத்து, ஒரு காசளவும் இல்லை.

அப்படி இருந்தாலும் நான் அவைகளில் இருந்து பொதுநலத்திற்கு என்று— திருச்சியில் காலேஜுக்கு 5 இலட்சமும், திருச்சி குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு ஒரு இலட்சமும், ஈரோடு பொது ஆஸ்பத்திரிக்கு—குழந்தைகள் வார்டுக்கு ஒரு இலட்சமும், மற்றும் இந்த 50, 60 வருஷகாலமாக 1000 ரூபாய், 2000 ரூபாய், 3000 ரூபாய், 10,000 ரூபாய் என்கிற கணக்கில் பொதுநலத்திற்கு (தர்மத்துக்கு) என்று கொடுத்துவந்தது 2, 3 இலட்ச ரூபாய்க்கும் குறையாது.

இயக்கத்திற்கு நான் வாங்கி இருக்கின்ற சொத்துக்கள் இன்று, 30,00,000 (முப்பது இலட்சம்) ரூபாய்க்கும் குறையாமல் பெறும். எங்கள் டிரஸ்ட் சொத்துக்கள் சுமார் 20,00,000 ரூபாய், 30,00,000 ரூபாய் பெறும். இவ்வளவும் இயக்கத்தின் பெயராலேயே இருக்கின்றன. இருந்தாலும், தலைவன் என்கிற முறையில் 'என்' ஆதிக்கத்தில்தான் இருக்கின்றன. இதனால் இயக்கத்திற்கு இலாபம் என்னவென்றால்—வருமானம் பெருகுகின்றது; சொத்து வளருகின்றது; அவ்வளவுதான்.

எனக்கென்ன பயன் என்றால் கவலை, தொல்லை அதிகமாக இருப்பதுதான். ரொக்கமும் பல இலட்சம் இருக்கின்றது.

சர்க்கார் சட்டத்தால், 'இன்கம்டாக்ஸ்' கொடுமையால் இவற்றில் எவ்வளவு குறைந்தாலும் குறையலாம்.

இனி எனது தொண்டினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்!

மற்றும் எனது தொண்டில் எனக்கு உதவியாய் இருந்தவர்கள் பலர்—அவர்களால் கனவில்கூட நினைத்திருக்க முடியாத பதவியையும், அந்தஸ்தையும் செல்வாக்கையும் அடைந்தார்கள்; அடைந்தும் வருகிறார்கள். இந்த நிலையில்கூட நான் யாரையும் ஒரு காசு அளவுகூடக் கேட்காமலும், எவரிடத்திலும் நானாகக் கை நீட்டாமலும் இயக்கத்துக்காக வருவாய் சம்பாதித்துக் கொண்டுதான் வருகிறேன். எந்த நிலையிலும் எனது நிலை ஒரு சிறிதுகூடத் தாழாமல் ஏதோ சிறிதாவது வளர்ந்துகொண்டேதான் வருகிறது.

நண்பர்களே! இவற்றையெல்லாம் ஏன் சொல்லுகின்றேன்? யாரிடத்திலும்–எவ்வித உதவியையும் கேட்பதற்கல்ல. மற்று எதற்கு? மன்னிப்புக் கேட்பதற்கு—என்ன மன்னிப்பு என்றால், நான் இனிச் சுற்றுப் பிரயாணப் பிரச்சாரத்திலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவுசெய்திருக்கிறேன்.

சென்னையிலோ, திருச்சியிலோ வேறு தொல்லையற்ற இடத்திலோ இருந்துகொண்டு துண்டுப் பிரசுரம், 'வால் போஸ்டர்', சிறு சித்திரப் புத்தகம் முதலியவை பிரசுரித்துக் கொண்டு இருக்கலாம்; அலையவேண்டாம் என்று கருதுகிறேன்.

ஆகஸ்ட் முடிந்தால் 93 வயது முடிந்துவிட்டது; செப்டம்பர் பிறந்தால் 94-வது ஆண்டு பிறக்கின்றது. யார் தயவையும் விரும்பாமல், யார் விஷயத்திலும் தயவு தாட்சண்யம் காட்டாமல் சுதந்திரமாய் இருந்து பார்க்கலாம் என்று கருதுகின்றேன்.

நான் சென்னைக்கு வந்தால் 'உண்மை' மாத இதழையும் சென்னைக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று கருதுகின்றேன்.

சென்னைக்கு வருவதில் வேறு பல சங்கடங்களும் இருக்கின்றன. திருச்சியில் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன; பிரைமரிப் பள்ளி ஒன்று இருக்கின்றது; அநாதைப் பிள்ளைகள் விடுதி ஒன்று இருக்கின்றது; வரும் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஏற்படுத்த அனுமதி பெற்று நடத்தப்படப்போகின்றது. ஈரோட்டில் ஒன்று

ஏற்படுத்த உத்தேசம். இவையெல்லாம் திருமதி மணியம்மையார் முயற்சியில்தான் நடைபெறுகின்றன. 10, 12 ஏக்கர் தோட்டப் பண்ணை ஒன்றும் நடைபெறுகின்றது. பல ஆயிரக்கணக்கில் வாடகை வரும் பல கட்டிடங்களும் திருச்சியில் இருக்கின்றன. ஆகவே, மணியம்மை அவர்கள் திருச்சியில் இருக்கவேண்டி இருக்கிறது.

நான் சென்னைக்கு வந்தால் மணியம்மையார் என்னைத் தனியாய் இருக்கச் சம்மதிக்கமாட்டார்கள்; அவர்கள் சென்னைக்கு வந்துவிட்டால், திருச்சி நடப்புக்கள் பாதிக்கப்பட்டுவிடும்.

இது ஒரு சங்கடமான நிலைமை என்றாலும் ஏதாவது செய்தாகவேண்டியிருக்கிறது.

எனது உடல் நிலை, மன நிலையைப் பொறுத்துத்தான் இந்தச் சிந்தனைகள் ஏற்பட்டன. தமிழ்ப் படிப்புள்ள புலவர் ஒருவர் எனக்கு உதவிக்கு வேண்டியிருக்கிறது. பேச்சில் இருக்கின்றவைகளை எழுத்தில்—புத்தகத்தில் ஏற்படுத்திவிட்டுப் போகவேண்டும் என்று கருதுகின்றேன். ஆகவே, தோழர்களே! என்னைக் கூப்பிடாதீர்கள்! கூப்பிட்டால்—அது மாநாடாக இருக்கவேண்டும், பணம் ரூ. 500 கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை வைக்கின்றேன்.

மன்னியுங்கள்! நாடு பூராவும் நல்ல பேச்சாளர்கள் இருக்கின்றார்கள். நான் எதையும் குறைவில் விட்டுவிட்டுப் போகவில்லை. மக்கள் நல்ல உணர்ச்சி பெற்று இருக்கிறார்கள். ஆனால் காரியத்தில் இறங்கவில்லை. அதற்குத் துண்டுப் பிரசுரம் செய்யலாம் என்று இருக்கின்றேன்.

மற்றொரு முக்கிய விஷயம்; நமக்கு இப்போது சினிமா ஒரு தொல்லையாக ஆகிவிட்டது. அதற்காக ஒரு சினிமா பகிஷ்கார மாநாடு போட்டு, சினிமா பார்க்காதே என்று வேண்டுகோள் பிரச்சாரம் ஆரம்பிக்கவேண்டும்.

'கோவில் பகிஷ்காரம் சாதித்துவிட்டாயா?' என்று கேட்பார்கள். அது எனக்கு அவமானம்தான். ஆனாலும், நான் கலைஞர் அவர்களுக்கு ஆட்பட்டதால் ஏற்பட்ட நிலை என்றாலும், கலைஞர் தடையை நீக்கும்போது ஆரம்பிப்பேன். ஆனால், சினிமா பகிஷ்காரத்திற்கு யாருக்கும் ஆட்படமாட்டேன். அது அண்மையில் துவக்கப்படும். இவை பற்றிய திட்டங்களை அடுத்து வெளியிட இருக்கிறேன். வணக்கம்.

['விடுதலை'-தலையங்கம்—19-7-1972]

பகுதி VIII

இறுதிச் சொற்பொழிவுகள்



30–9–1973-ல் மதுரையில் நடைபெற்ற கறுஞ்சட்டைப் படை மாநாட்டில்
(ஒரு பகுதி)—தந்தை பெரியார் நாட்டுப் பிரிவினை கோரி முழங்கிய காட்சி.



திருச்சி மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் 18-7-1973-ல், தந்தை பெரியார் அவர்களுடன் சிந்தனையாளர் கழகப்·புரவலர் அமைச்சர் அன்பில் பெ. தருமலிங்கம்.

1. சிந்தனையாளர் கழகத்தில்

பெருமைக்குரிய தலைவர் அவர்களே! மாண்புமிகு அய்யா அமைச்சர்பெருமான் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! சட்டசபை அங்கத்தினர்களே!

இன்றைய தினம் என்னுடைய தொண்ணூற்றய்ந்தாவது பிறந்த நாள் விழா என்னும் பேரால் இம் மாபெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அனேக நண்பர்கள் (என்னைப் பற்றிச்) சொன்னார்கள். நான் அவைகளைக் கேட்டுத்தான் ஆகவேண்டும்; வேறுவழி இல்லை. அவர்களுக்கு நான் என்னுடைய மனப் பூர்த்தியான நன்றியறிதலை உள்ளன்போடு—மனதோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்களே! எனக்கு உடல்நலமில்லை; மூன்று நாளாய் விடாமல் வயிற்றுப்போக்கு. இரண்டுநாளாய்ச் சாப்பாடு இல்லை; இன்றைக்குத்தான் ஒரு இட்டிலி சாப்பிட்டேன்; ஆனாலும் கலந்துகொள்கிறேன். இம் மாதிரியான மகிழ்ச்சியைப் பார்க்கிறபோது அடிக்கடி வந்தால் தேவலாம் என்கிறமாதிரி—ஆண்டுவிழா வரணும் என்று தோன்றுகிறது. ஆனால், உடல்நிலையைப் பார்க்கிறபோது இது எனக்குப் பெரிய தொந்தரவு மாதிரித்தான் காணப்படுகிறது. எப்படி இருந்தாலும் சரி.

அடுத்த வருஷத்து விழாவுக்கு நான் இருப்பேனோ, இல்லையோ! இருந்தாலும் விழா இருக்கும்படியான வாய்ப்பு—நடைபெறும்படியான வாய்ப்பு இருக்குமோ இல்லையோ; உண்மையைச் சொல்லுகிறேன். இதிலே ஒன்றும் பெருமைக்காகச் சொல்லவில்லை.

ஏன் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், ஏதோ வாழ்ந்த நாளெல்லாம், ஏதோ ஓர் அளவுக்கு மக்களுக்காகத்தான் தொண்டு செய்தேன் என்று இருந்தாலும் மன திருப்தியோடு காலம் முடிவுபெறுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையிலே இருக்கிறேன். ஏன் என்றால், ஏறக்குறைய அய்ம்பது வருஷகாலம் பொதுத்தொண்டு என்று நான் செய்தாலும், அதன் பயனாக ஏறக்குறைய பெரும்பாலான மக்களுடைய அன்பும், அவர்களுடைய பாராட்டு தலும் பெறும்படியான வாய்ப்புப் பெற்றிருந்தாலும் பெரிய மனக் குறையோடுதான் வாழ வேண்டியவனாக இருக்கிறேன்.

என்னுடைய தொண்டின் காரணமாக ஏற்பட்ட பல காரியங்கள் பாராட்டுதலுக் குரியவை என்றே வைத்துக்கொள்ளலாம். நம் மக்கள் எல்லாம் ஏதோ நல்ல அந்தஸ்திலே இருக்கிறார்கள். பெரும்பாலோருக்கு வெளிப்படையாய் இருந்த இழிவுகள் எல்லாம் நீங்கியும், நீங்கிக்கொண்டும் இருக்கிற ஒரு நல்ல வாய்ப்பிலேதான் இருக்கிறோம். அது யாராலே ஏற்பட்டிருந்தாலும் சரி—நல்ல வாய்ப்பிலே இருக்கிறோம்.

ஆனால், ஒன்று சொல்லுகிறேன். நம்முடைய சமுதாயம் ஏறக்குறைய இந்த நாட்டிலே—பார்ப்பனர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் நீங்கிய மற்ற மக்கள், தாய்மார்கள் எல்லோரும் பார்ப்பனனுடைய வைப்பாட்டி மக்களாக—தாசி மக்களாக—சூத்திரர்களாக இருக்கிறோம். நம் தாய்மார்கள் எல்லாம் பார்ப்பனனுடைய தாசிகளாக இருக்கிறார்கள்.

எதிலே இருக்கிறார்கள்? எவனோ கண்டவன் பேசிக்கொண்டு போகிறான் என்று நான் சொல்லவில்லை; ஏதோ சாஸ்திரத்திலே இருக்கிறது, சம்பிரதாயத்திலே இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. பின்னே எதிலே இருக்கிறது என்றால், சட்டத்திலே இருக்கிறது.

பொறுமையாகக் கேளுங்கள்! நமக்கு இருக்கிற சட்டம் 'இந்து லா' என்பதிலே—இந்துக்கள் என்ற சமுதாயத்திலே—பார்ப்பானைத் தவிர்த்த மற்ற மக்கள் சூத்திரர்கள்;

அவர்களுடைய தாய்மார்கள், மனைவிமார்கள், சகோதரிகள், மக்கள் ஆகிய பெண்கள் எல்லாம் பார்ப்பானுக்குத் தாசிகள் என்று சட்டத்திலே இருக்கிறது; தப்புவதற்கே வழி இல்லை.

நான் இருக்கிறேன்; என்னுடைய நண்பர்கள் இருக்கிறார்கள்; நான் தொண்டாற்றிய காலத்திலே அனேக தோழர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு இந்துமதம் இல்லை; அவர்களுக்கு இந்துமத சம்பந்தமான கடவுள், புராணம், சாஸ்திரம் ஒன்றும் சம்பந்த மில்லை. பின்னே அவர்கள் யார் என்றால்—பகுத்தறிவாளர்கள்; கடவுள்கூடக் கிடையாது. அப்படிப்பட்டவர்களும் சூத்திரர்கள், பார்ப்பானைத் தவிர்த்து என்று சொல்லிவிட்டார்கள் என்பது அந்த சாஸ்திரம்—அந்தச் சட்டம், தப்பவே முடியாது.

தோழர்களே! சாதாரணமாகச் சொல்லுகிறேன். ஒன்றும் வீம்புக்காகவோ, உங்களுக்கு ஒரு எழுச்சி உண்டாக்குகிறதற்காகவோ நான் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். நம்முடைய நாட்டிலே, நம் மக்கள் நூற்றுக்கு 97 பேராய் இருக்கிற நிலையிலே,—இந்த நாட்டு வாழ்வுக்கெல்லாம் காரணஸ்தர்களாக—அடிப்படை மக்களாக இருக்கிற நிலையிலே உள்ள இவ்வளவு பெரிய சமுதாயம்—ஈன சாதி மாத்திரம் அல்ல—மக்களாலே இழிவான கருத்தாகப் பேசிக்கொள்ளப்படுகிறதான விபச்சாரி மக்கள்; தாசி மக்கள். ஏன் இப்படி இருக்கவேண்டும்? நானும் ஏதோ தொண்டாற்றினேன்; இதில் இருந்து மக்களை விலக்குவதற்காக, எல்லாரையும் பகுத்தறிவாளர்களாக ஆகிவிடுங்கள் என்று சொன்னேன். என் பேச்சைக் கேட்டு வெகுபேர் பகுத்தறிவாளராகிவிட்டார்கள்; ஆகியும்—பகுத்தறிவாளர் ஆனாலும், நாத்திகர் ஆனாலும், மதமே இல்லாதவன் ஆனாலும்—'இந்து' என்கிற பட்டியலிலே வந்தால் அவன் சூத்திரன்; பார்ப்பானுக்குத் தாசி மகன். எவன்? ஒரேயடியாகச் சொல்லிப்போட்டான்—முஸ்லிம், கிறிஸ்தவன் தவிர்த்த எல்லாரும் இந்து; இந்துவிலே, பார்ப்பனரல்லாதவன் சூத்திரன்–தாசிமகன். என்றைக்கு? எதுவரைக்கும்? இந்த நாட்டுக்கு என்றைக்குப் பார்ப்பான் வந்தானோ—அவன் என்றைக்கு இந்த நாட்டில் வெற்றிபெற்றானோ அன்றைய முதற்கொண்டு—இந்த இந்துக்களாக இருக்கிறவரைக்கும், இந்துமதப் பாதுகாப்பு இருக்கிறவரைக்கும், அல்லது இந்த ஆட்சி இருக்கிறவரைக்கும்—இன்றையதினம் இருக்கிற ஆட்சி இருக்கிறதே, அரசாங்கம் சம்பந்த மான ஆட்சி, காங்கிரஸ் ஆட்சியாக இருக்கலாம், வேறு எந்த ஆட்சியாக இருக்கலாம்—இந்த ஆட்சி இருக்கிறவரைக்கும் நாம் எல்லாம் சூத்திரர்கள்—தாசிமக்கள்!

இது சம்மதம்தானா? இப்படியே இருக்கவேண்டியதுதானா? மந்திரியாக ஆனால் போய்விடுகிறதா? இல்லை, கோடீஸ்வரன் ஆனால் போய்விடுகிறதா? இல்லை, பண்டார சன்னதி—வெங்காயம் ஆனால் போய்விடுகிறதா? என்ன ஆனால் போகிறது? இந்த ஆட்சி ஒழிகிறவரைக்கும் போகாது. அல்லது, 'இந்து என்கிற மதம் ஒழிக்கப்பட்டது; இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை' என்று சொல்கிறவரைக்கும் போகாது. அப்புறம், என்ன, உங்களுக்கு நான் தொண்டு செய்தேன்—வெங்காயம் செய்தேன்!

நான் பிறக்கிறதற்கு முன்னேயே தேவடியாள் மக்கள் நீங்கள்; நான் பிறக்கிறதற்கு முன்னேயே சூத்திரர்கள் நீங்கள்—நான்காவது சாதி நீங்கள்; இப்போது நாளைக்குச் சாகப் போகிறேன்—சூத்திரனாய் விட்டுவிட்டுத்தானே சாகிறேன்? அப்புறம் என்ன என்னுடைய தொண்டு? சிந்திக்கணும் நீங்கள்! கொஞ்சம் கவலையோடு சிந்திக்கணும்! நானும் போய்விட்டேன் (என்றால்)—அப்புறம் இதைப்பற்றிப் பேசுவதற்கு ஆள் எங்கே? யார் வருவார்? வந்தால் இவ்வளவுக்குக்கூட விட்டுக்கொண்டிருக்க மாட்டானே, அரசாங்கம் —இவ்வளவு பேசவிட மாட்டானே! நானாக இருக்கிறதினாலே கொஞ்சம் சும்மா இருக்கிறான்; இன்னொருவன் பேச ஆரம்பித்தால் ஒழித்துப் போடுகிறான். இப்போதே நம் அரசாங்கத்து மேலே கண் வைத்திருக்கிறான். அது தெரிந்துவிட்டது நம் தலைவருக்கு —முதல்வருக்கு. அவர் என்கிட்டே வந்தார், 'இப்படி இருக்கிறது நிலைமை; வேலையை ஒழித்துப் போடுவான் போலத்தான் இருக்கிறது—எந்தச் சாக்காவது சொல்லி. இல்லை,

நானே விலகிக்கொள்ளட்டுமா? என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டார். நான் சொன்னேன், 'விலக வேண்டாம்—அவனாக விலக்குகிற வரைக்கும். அவனாக விலக்கினால், இன்னும் கொஞ்சம் ஆள் சேருவார்கள் நமக்கு. விலகாதீர்கள், இருங்கள்' என்று சொன்னேன். அது இன்னும் கொஞ்ச நாளிலே நடக்கும்; சீக்கிரத்திலே. இப்போதே சி. அய். டி. ஆங்காங்கே வந்து ரிப்போர்ட் பண்ணுகிறான். இப்போது அய்யா அமைச்சர் அன்பில் இங்கே வந்தது எல்லாம் உடனே இப்போது போயிருக்கும் டில்லிக்கு—'இவர் இங்கே இந்தக் கூட்டத்திலே இருந்தார்; இவரை வைத்துக்கொண்டுதான் இராமசாமி பேசினான்' என்று. எனக்கும் இவருக்கும் இந்தப் பேச்சிலே ஒன்றும் சம்பந்தமில்லை. மற்றப் பேச்செல்லாம் இருக்கலாம். அதே மாதிரியே ஒப்பந்தம் எங்களுக்குள்ளே—'நீங்கள் இதிலே கலந்துகொள்ளக் கூடாது. நானும் உங்களை எதிர்பார்க்கவில்லை' என்று. ஆனாலும், அவன் புள்ளி போட்டுக்கொண்டிருக்கிறான். இந்த மாதிரியான ஒரு நிலை இருக்கிறது.

சரி; அப்படி வந்தாலும் நான் அதற்காக ஒன்றும் கவலைப்படவில்லை. நம்மாலே வரக்கூடாது என்கிற எண்ணம்; வந்துவிட்டது, வேறே அவர்களுக்கு நாதி இல்லை; என் கிட்டேதான் வந்தாகணும். மந்திரி சபையை ஒழித்துவிட்டார்கள் என்றால் அவர்கள் எங்கே போவார்கள்? வந்தாகணும்; அப்புறம் இன்னும் நன்றாக நடக்கவேண்டும். இப்போது அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை; இந்த நிலையிலே இருக்கிறோம்.

நாம் என்ன பண்ணுவது இப்போது? அவரவர்களுக்கு வேலை இருக்கிறது; இல்லை என்று நான் சொல்லவில்லை; ஒவ்வொருவருக்கும் பெண்டாட்டி, பிள்ளை, குடும்பம், வேலை, வர்த்தகம், விவசாயம், உத்தியோகம், பெரிய வேலை எல்லாம் இருக்கின்றன. எல்லாரும் வெறும் காலி ஆட்கள் அல்ல—என்னைப்போல. அவர்கள் எல்லாம் என்ன பண்ணுகிறது? இலேசிலே விட்டுவிட்டு வர முடியுமா? பெண்டு, பிள்ளை, குடும்பம்—அதை வைத்துத் திட்டப்படி ஏற்பாடெல்லாம் இருக்கிறபோது, என்னமாக, நான் சொன்னேன் என்றால்—ஆத்திரப்பட்டு வந்திட முடியுமா? வரவில்லை. ஆள் ஒருவரும் வரவில்லை என்று நான் சும்மா இருக்கமுடியுமா?

உள்ளபடி ஒரு அளவிலே நான் திருப்தியாக இருந்தது—'நாம் அதிலே இல்லை; மற்றவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைத்தேன். பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள், மதமற்றவர்கள், இந்துக்கள் அல்ல என்று சொல்லிக்கொள்பவர்கள் இருக்கலாம். இந்த இழிவிலே சம்பந்தமில்லை' என்று அப்படி நினைத்தேன் நான். ஆனால், சட்டம்—நண்பர் ஆனைமுத்து வந்து படித்துக் காண்பித்தார்—இந்தியாவிலே இருக்கிற கிறிஸ்தவன் தவிர, முஸ்லிம் தவிர மற்றவன் எல்லாம் இந்து; அவன் யாராயிருந்தாலும்—என்று.

என்னை இல்லை என்றாலும், எனக்கு அந்தப் பொறுப்பு போகவில்லை. அப்படி நினைத்தேன்; அப்படி இல்லை என்று நினைத்தேன். ஆனால் இப்போது நாம் தாசி மக்கள். இதை நீக்குவதற்காக நாம் பாடுபடவேண்டாமோ? சும்மா நாம் உத்தியோகத்துக்காகச் சண்டை பிடித்தோம்; உத்தியோகம் வந்துவிட்டது; பார்ப்பான் கிட்டே இருந்த தெல்லாம் இப்போது நம்கிட்டே வந்துகொண்டே இருக்கிறது. பார்ப்பானே சம்பந்தப்படாத மந்திரிசபை இருக்கிறது; வேறு என்னவேண்டும் நமக்கு? அரசியலிலே போராடினதிலே எல்லையைக் கண்டுபிடித்துவிட்டோம்; நாமேதான் இருக்கிறோம் இப்போது. போகிற வரைக்குமோ, இல்லை அதை விட்டுவிட்டு வருகிறவரைக்குமோ, வேறே ஒருவன் நம்மை ஒழிக்கிற வரைக்குமோ நாம்தான் அந்த ஆட்சியிலே. (இவ்வளவு) இருந்தும் சூத்திரனாக—பார்ப்பானின் தாசி மகனாக இருக்கவேணும் என்று இருந்தால், பதவி வந்து—பட்டம் வந்து—பார்ப்பானை ஒழித்துப் பலன் என்ன?

நம்முடைய உணர்ச்சி இருக்கிறது, இப்போது நான் இருக்கிறதினாலே—நான் ஒழிந்தேன் என்றால் இந்த உணர்ச்சி—முக்கால்வாசி போய்விடும். இந்தப் போட்டி

வலுக்கும்; ஆளுக்குஆள் போட்டிபோட்டுப் பதவியைக் கைப்பற்றுகிறதிலேதான் வரும். முன்னே, கொஞ்சம் பணக்காரன் பெரிய மனுஷன் என்கிறவன் எல்லாம் ஒழிந்துபோய் விட்டார்கள்; அவனாகக் கொஞ்சம் ஒழிந்தான்; பொதுஜனங்களாலேயும் கொஞ்சம் ஒழிக்கப் பட்டார்கள். இப்போது இருக்கிறதெல்லாம், சாதாரண மக்களாலே. இவர்களுக்கு எவ்வளவு தூரம் இருக்கப்போகிறது அந்த உணர்ச்சி. அப்புறம், இப்போது எவ்வளவு மறைத் தோமோ அதை எல்லாம் இனிமேல் வருகிறவன் திருப்புவான்.

இப்போது நாம் சமுதாயத்துப் பேரைச் சொல்லி மாற்றி—பார்ப்பானை ஒழித்து நாம் பதவிக்கு வந்துவிட்டோம். நமக்கு அப்புறம் வருகிற வாழ்வு—மாற்றிக்கொள்வான்; பழையபடி பார்ப்பான் ஆதிக்கம் வருவதற்கு என்னென்ன வேணுமோ அதுதான். நம்மிலே இருக்கிறார்கள் அனேகம் பேர்—காட்டிக்கொடுக்கவும், மற்ற காரியம் செய்யவும், என்ன அவமானம் வந்தாலும் லட்சியம் இல்லாமல் பதவிதான் பெரிது என்பதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் மெஜாரிட்டி. ஆனதினாலே மறுபடியும் அவர்கள் கிட்டே போய்ச் சேருவான். அவன்கிட்டே சேர்ந்தால் என்ன? பழையபடி ஆக்குகிறது (என்பது தான்); அப்புறம் நம் கதி என்ன ஆகும்? இப்போது எவ்வளவு கைப்பற்றினோமோ— இப்போது எவ்வளவு பெருமைக்கு, நன்மைக்கு ஆளானோமோ இதையெல்லாம் மாற்று வதற்குத்தான் இடமாகுமே தவிர, இதோடு இன்னும் நன்மை தேடுவதற்கு இடமாகாது. யார் இருக்கிறார்? சொல்லுங்கள்; நாம் தானே இருக்கிறோம்! முன்னேற்றக் கழகம் ஒன்று—3½ பேர்; எல்லாரும் இருக்கிறார்கள்; அவர்கள் வந்துவிடுவார்கள்.

கம்யூனிஸ்ட்—எவன் காலை நக்கியாவது வயிறு வளர்க்கிறதுதான் அவன் வேலை; இன்னாரோடுதான் இருக்கணும் என்கிற எண்ணம் இல்லை; நாம் வலுத்தால் நம்கிட்டே; பார்ப்பான் வலுத்தால் அவன் கிட்டே; இன்னொருவன் வலுத்தால் அவன் கிட்டே; உலகத்திலே கொள்கையே இல்லாத ஒரு கூட்டம் என்றால் நம் கம்யூனிஸ்டுதான்.

அதற்கு அடுத்தாற்போல காங்கிரசு—என்ன பண்ணியாவது பதவிக்கு வரணும் என் கிறவன். அவனோடு போட்டிபோடுகிற இன்னொரு காங்கிரசு; இந்த இரண்டிலேயும் வசதிபோலப் பண்ணிக்கொள்ளப் பார்ப்பனர்கள்! நமக்கு யார் இருக்கிறார்கள்? இப்போது துவக்கின ஒரு கட்சி இருக்கிறது. நம்மை ஒழிக்கிறதுக்குத்தான் அந்தக் கட்சி வேலை செய் கிறது—அண்ணா முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. அவர்களுக்கு என்ன வேலை? அவர்களுக்குச் சொந்தத்திலே ஏதாவது வேலை இருக்கிறதா? அவர்கள் எதிரிகிட்டே பேசிக்கொண்டு, 'காலிகளை ஒழித்துவிட்டு வருகிறேன், எனக்கு ஏதாவது எச்சலகலை போடுகிறாயா?' என்று கேட்கிறார்கள்.

அதாவது, ஒன்றாக, ஒரு கட்டுப்பாடாக ஒரு காரியம் செய்கிறதா என்றால் இல்லை. அது என்னமாக முடியும்? அதனாலே, அது ஒன்றும் பிரயோசனமாக இல்லை; பேசுகிற தற்கே தகுந்ததல்ல. அப்புறம் நம் கதி என்ன? அதைத்தான் கேட்கிறேன். இப்படியே சாகவேண்டியதுதானா? உலகம் உள்ளவரைக்கும் நாம் நாலாவது சாதியாகவே இருக்க வேண்டியதுதானா? உலகம் உள்ளவரைக்கும் நம் பெண்டுகள் எல்லாம் பார்ப்பானுடைய 'வைப்பாட்டிகள் என்றுதான் இருக்கணுமா? இப்போது நமக்குப் பயந்துகொண்டு சூத்திரன்' என்று சொல்லாமல் இருக்கிறான்; நம் பெண்டுகளை 'சூத்திரச்சி', 'அடி' என்று கூப்பிடாமல் இருக்கிறான்—அவனுக்குப் புத்திவந்தல்ல (பயத்தினால்). இந்தப் பயம் போய்விட்டால்?

அருமைத் தோழர்களே! இது நமக்கு ஒரு கடைசி முயற்சி என்று நினைக்கணும்; நினைக்கணும். இப்படியே சாகிறதைவிட ஈனத்தனம் வேறே இல்லை. ஆனதினாலே, ஏதோ ஒரு கிளர்ச்சி செய்கிறேன் இப்போது, நான். உங்களுக்கெல்லாம் தெரியும்—சமுதாய இழிவுநீக்க மாநாடு என்று, சென்னையிலே, அடுத்த மாதம் (கூட்டுகிறேன்); ஒன்றும் ஆட்சியைக் கைப்பற்றுகிறதல்ல; பெரிய இலாபம் அடைகிறதற்கு அல்ல—நமக்கு இருக்கிற

அவமானம் போகணும், இழிவு போகணும். சுதந்தரமோ, சுயராஜ்யமோ, வெங்காயமோ— நம் நாட்டை நாமே ஆள்கிறது என்றால் அந்த மாதிரியான முட்டாள்தனமான கருத்தே அதிலே இல்லை. நம் நாட்டை நாம் ஆள்வது என்கிறது முட்டாள்தனந்தான். இப்போது யார் ஆள்கிறார்கள்? நாம் தான் ஆள்கிறோம். என்ன செய்ய முடிந்தது? (எனக்கு) எவன் ஆண்டாலும் சரி; எவனைக் கூப்பிடுவது என்று இன்னும் யோசனை பண்ணு கிறேன்; எவனுக்கு வாய்ப்பு இருக்கும் என்று யோசனை பண்ணுகிறேன்.

நம்முடைய இயக்கத்தினுடைய லட்சியம் இந்த (டில்லி) ஆட்சியை ஒழிக்கவேண் டியது; எவன் வந்தாலும் சரி. ஏன்? வேறு எவன் வந்தாலும் இந்த இந்துவைக் காப்பாற்ற வேணும்—இந்து மதத்தைக் காப்பாற்றவேணும்—இந்த மக்களை எல்லாம் தேவடியாள் மகன் என்கிற தலைப்பிலே வைத்திருக்கவேணும் என்கிற எண்ணம் எவனுக்கும் இருக்காது—நீக்ரோ வந்தால் கூட இருக்காது.

இந்த ஆட்சி உள்ளவரைக்கும், அதுதான் கடைசி. அவன் பச்சையாக எழுதிக் கிட்டானே :—'இந்த ஆட்சியைப்பற்றி—இதிலிருந்து விலகணும் என்று எவனாவது நினைத்தால்—இது ஒழியணும் என்று எவனாவது நினைத்தால் ஏழு வருடம் தண்டிப் பேன்' என்று போட்டுவிட்டான், (சட்டம்). யாருக்காக? நமக்குப் பயந்துதான்; அண்ணா துரைக்கும், எனக்கும் பயந்து அந்தமாதிரி போட்டான்.

நான், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சத்தம் போட ஆரம்பித்த பிறகுதான் அவன் சட்டம் போட்டான்—இந்திய ஆட்சியிலிருந்து விலகவேணும் என்றால் ஏழு வருஷம் என்று. அண்ணாதுரை அப்போதே சொல்லி இருக்கிறார்—நீங்கள் இந்த மாதிரிச் சட்டம் போடு வீர்கள் என்று. சட்டம் போட்டதற்கு அப்புறம், 'அவர் சொன்னதற்காகத்தான் போட்டு இருக்கிறீர்கள்' என்று அவர் சொல்லிவிட்டார். அதுதான் அவன் செய்வான். இந்த இழிவுக்கு ஏதாவது பரிகாரம் பண்ணுகிறேன் என்கிற வார்த்தை அவன்கிட்டே (இருந்து) வராது. எப்படி வரும்? இழிவுக்கு ஏதாவது பரிகாரம் பண்ணுகிறேன் என்றால்—'இந்து மதம் என்கிறது ஒரு மதம் அல்ல; மக்கள் எல்லாம் இந்துக்கள் அல்ல—மனிதர்கள்' என்று சொல்லவேணும். (இப்படிச்) சொல்லிவிட்டால் அவனுக்கு ஏது இடம்? 'இந்து' என்கிறதி னாலேதானே அவர்கள் வாழ்கிறார்கள். இந்த நாட்டிலே இந்துக்களாய் இருக்கிறதினாலே அவன் வாழ்கிறான். எப்படி வாழ்கிறான்? பிராமணனாக வாழ்கிறான். இந்துவாய் இருக் கிறதினாலே, நம்மைத் தேவடியாள் மகன் என்று சொல்லுகிறான்.

'இந்து' போய்விட்டால் அவன் சாதாரண மனிதன்; நாமும் சாதாரண மனிதன். ஆனதினாலே இந்த ஆட்சி உள்ளவரைக்கும் நாம் தேவடியாள் மகனாகத்தான் இருக் கணும்—சூத்திரனாகத்தான் இருக்கணும். ஆனதினாலேதான் கேட்கவேண்டியதாய் இருக் கிறது—'என்னடா, அப்பா! இதை மாற்றுகிறாயா, இல்லை உன்னை ஒழிக்கிறதா?' என்று. அதுதான் நாளைக்கு நடக்கப்போகிற மாநாட்டிலே பிரச்சினை. நியாயமா, அல்லவா? நீங்களே சொல்லுங்கள். இல்லை ஓட்டுக்காகக் கேட்கிறேனா? நான் ஓட்டுக்கு நிற்கிறவன் அல்ல; எங்கள் கட்சியும் ஓட்டுக்கு நிற்கிற கட்சி அல்ல; எங்களுக்கும் ஓட்டு பெரிதல்ல. நான்தான் எப்போதே சொன்னேனே—'எவன் ஆண்டாலும் சரி; எங்களை மனிதனாக மதிக்கணும்' என்று.

ஆனதினாலே இன்றைய தினம் நாம் பெரிய முயற்சியிலே, இருக்கிறோம்—ஈடுபட்டு ஆகணும்; தமிழனாய் இருக்கிறவன் எல்லாம் உயிருக்கும், மானத்துக்கும் போட்டு இழுக் கணும், உயிர் பெரிதா, மானம் பெரிதா? என்று.

அவனவனுக்கு இருக்கும் வேலை—கண்டபடி (பிள்ளைகளைப்) பெற்றுக்கொண் டான்; என்ன பண்ணியாவது பிழைக்கணும் என்கிறான்; தப்பு என்று சொல்ல முடியாது. நூற்றுக்குத் தொண்ணூறு மக்களுக்கு அதே கருத்தாய் இருக்கிறபோது எவனைப் போய்க் குறிப்பிட்டு தப்பு என்கிறது? அவனவன் மாட்டிக்கிட்டான், வாழ்விலே.

பார்ப்பானா? அவனுக்கு இன உணர்ச்சி உண்டு. ஒருவன் ஒன்று சொன்னான் என்றால் அந்தப்படிக்குக் கேட்பான்—எப்படியாவது நம் பெருமை நமக்கு நிலைத்தால் போதும் என்று. நமக்கு என்ன இருக்கிறது? அவனவன் ஒவ்வொரு சாதியை வைத்துக் கொண்டான்; அவன் சாதியே பெரிய சாதியாக வைத்துக் கதை கட்டிக்கிட்டான்; அவனவன் இன்னொருவனுக்கு மேலே இருக்கணும் என்று போட்டியிட்டுக்கிட்டான். (இந்த) அடிப்படைக் கேட்டைப் போக்குகிறதற்கு ஆள் யார்? எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கிறது? நம் பிள்ளைகள், நம் குழந்தைகள், நம் தாய்மார்கள், இன்னும் பின்னாலே தோன்றக்கூடிய சந்ததிகள் எல்லாரையுமே தேவடியாள் மக்கள் என்றால்—உலகத்திலே எங்கே இப்படி இருக்கிறார்கள்? இங்கே, நம் இந்தியாவை விட்டுவிட்டால்—உலகம் பூராவும் சுற்றினால், இந்த மாதிரி 'இழிமக்கள்' எங்கே இருக்கிறார்கள்?

நீக்ரோக்கள்கூட இழிமக்கள் அல்லவே! நீக்ரோக்களைத் தொடக் கூடாது என்கிறதற்கு ஆள் இல்லை. நீக்ரோ வெள்ளைக்காரனுக்கோ, வேறு ஒருவனுக்கோ பிறந்தவன் என்று சொல்வதற்கு ஆள் இல்லை. என்னமோ கறுப்பாக இருக்கிறது—அவர்கள் பெண்களை அனுபவித்தால், அப் பெண்களுக்குக் கருத்தரித்தால் பிள்ளைகள் கறுப்பாய்ப் பிறக்கின்றன. இதுதான் அவனுக்கு வேதனையே தவிர, நீக்ரோக்களிடத்திலே வேறு ஒன்றுமே இல்லை.

ஆனதினாலே, உலகத்திலே எங்கேயும் இப்படிப்பட்ட ஒரு இழிவுக்கு ஆளான மக்கள் இல்லவே இல்லை. தமிழர்கள் நாம். இந்தியாவிலேயே நமக்குத்தான் கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி இருக்கிறது என்று பெயர். இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கம் வரை பாருங்கள்! மலையாளத்தை எடுத்துக்கிட்டீர்களானால் அங்கே பார்ப்பானுக்குப் பிறந்தவனுக்குத்தான் மரியாதை ஜாஸ்தி; சில பெண்டுகள்—போனால், பார்ப்பான்கிட்டே போகலாம், இல்லை என்றால் சும்மா இருக்கலாம் என்று இருக்கிறார்கள். அப்புறம் அதுக்கு இந்தப் பக்கம் என்ன; ஒன்றுமே இல்லை. மைசூரோ, ஆந்திராவோ—இந்த உணர்ச்சி அவர்களுக்கு இல்லை. நாம் ஏன் சூத்திரன் என்கிற உணர்ச்சி ஆந்திராவிலே எவனுக்கும் இல்லை; மைசூரிலேயும் அப்படித்தான்—ஏதோ சிலபேருக்கு இருக்கும். இந்த இரண்டையும் தாண்டிவிட்டால், பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகனாய் இருப்பது ஒரு பெருமை. பம்பாய் ஆகட்டும், பஞ்சாப் ஆகட்டும்—இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஒருவன்கூட சூத்திரன் என்கிறதற்கு வெட்கப்படுகிறவனே இல்லை. ஆனதினாலேதான் நம் அரசாங்கத்துக்குத் தைரியம்—'இவன் ஒருவன்தானே கத்துகிறான். அடக்கலாம்' என்று. நாம் என்ன பண்ணணும் இப்போது? நம் ஆயுளிலே நாம் இந்த இழிவை ஒழிக்கவேணும் என்று விரும்பினோம் என்றாவது இருக்கவேண்டாமோ?

எனவே, இந்த மாநாடு தீர்மானமான மாநாடுதான்; இரண்டிலே ஒன்று பார்க்கிற மாநாடுதான். அதை முன்னிட்டுத்தான், அதை வைத்துத்தான் சொன்னேன்—அடுத்த வருஷம் நான் இருப்பேனோ, இருக்கமாட்டேனோ என்று. உலகத்திலே இருப்பேனா என்கிறது வேறே; உங்களோடு இருக்கமுடியுமா என்பது வேறே—முடியாது. நாம் அதை மாற்றியே ஆகணும். மாற்றவில்லை என்றால் நம்மை எல்லாம் ஒழித்தே தீருவான்; ஜெயிலிலே வைத்தாகணும்—எல்லோரையும் இல்லாவிட்டாலும், சில பேரையாவது.

என்னுடைய ஆசையெல்லாம் ஜெயிலிலே செத்தால் மோட்சம் அடைவேன்—மோட்சம் என்றால் இன்பம் அடைவது. பின்னே எனக்கு ஒன்றும் இல்லை, வெளியிலே இருக்கிறதினாலே. நாம் செய்யவேண்டிய வேலை எல்லாம் செய்தாகிப்போச்சே! இனி அவன்கிட்டேதானே இருக்கிறது—சட்டத்தை மாற்றணும்; மதத்தை ஒழிக்கணும்—இல்லை அவன் ஒழிக்கப்படணும். முடியாது—சண்டை போடலாம். நாம் கொஞ்சம் வெற்றி பெற்றோமோ, நம்கூட இரண்டொரு நாடுகள் சேரும்—கொஞ்சம் கொஞ்சமாக; இப்போது சேராது. எல்லாம் பயந்துக்கிட்டு இருக்கிறது—என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று.

ஆகவே அருமைத் தோழர்களே! இது நமக்கு ஒரு பரீட்சைக் காலம். இப்படியே நாம் இருப்பது ரொம்ப அவமானம்; ஏதாவது செய்யணும். இரண்டாவது, இப்போது நம்முடைய சமுதாயத்திலே, நம்மிடத்திலே எல்லாம் ஒரு மாறுதல் ஏற்படவேண்டும். சமுதாய இழிவு நீங்கவேணும் என்கிற எண்ணம் நம் ஒவ்வொருவரிடத்திலேயும் இருக்கிறது என்கிற அடையாளம் காட்டிக் கொள்ளவேணும். வேறு ஒன்றும் நமக்கு இல்லை.

மற்றவனுக்கு எல்லாம் லட்சியம் இருக்கிறது—பதவிக்கு வரணும் என்று; அவ்வளவுதான். முன்னேயே சொன்னேன். பழைய காங்கிரசுக்கு என்ன? பழையபடி காமராஜர் எப்படியாவது மந்திரியாகணும்—எவன் காலிலே விழுந்தாவது மந்திரியாகணும்; காட்டிவிட்டாரே! தோற்றார் என்று தெரிந்தவுடனே, வேறு வழி இல்லை என்று சொன்னவுடனே, பார்ப்பான் வீட்டுக்கே போய்விட்டாரே, ராஜாஜிகிட்டே! இப்போது எனக்குப் பயந்துகொண்டு பார்ப்பானுக்கு விளம்பரம் கொடுக்காமல் இருக்கிறார். நான் செத்துப்போய் விட்டேன் என்றால்—நான் மறைந்தேன் என்றால்—என் செல்வாக்குக் குறைந்தது என்றால் காமராஜுக்கே தலைவன் பார்ப்பான்தான்! எவனாவது ஒரு காலிப் பயலைப் போட்டுக் கொண்டு பார்ப்பான் தயவை எதிர்பார்க்கிறார். ஏன் என்றால், அவன்கிட்டே பத்திரிகை இருக்கிறது; ஆட்கள் இருக்கிறார்கள்; விளம்பரம் இருக்கிறது. சரி; அந்த அம்மாள் இந்திரா காந்திக்கு என்ன வேலை? அவருக்கும் பார்ப்பான் ஆதிக்கம் இருக்கிறது; என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்; யாருக்கு என்ன வேண்டுமானாலும் கொடுப்பார்கள். அவர்கள் இரண்டு பேரையும் விட்டால் பேருக்கு கம்யூனிஸ்டுகள்—மக்களிடத்திலே ஒரு செல்வாக்கும் கிடையாது; அவர்கள் தனித்து நின்றால் 5 ஓட்டுகூட வாங்கமுடியாது; அவர்கள் ஒரு கட்சி மாதிரி அவர்களுக்கும் விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அப்புறம் பார்ப்பான் கட்சி—சுதந்தராக் கட்சி. ஜனசங்கக் கட்சி, வெங்காயக் கட்சி. வேறே யார் வருவார்? தமிழரசுக் கட்சி—எவன் ஜெயிக்கிறானோ அவனோடு சேர்ந்து கொள்கிறது; முன்னேற்றக் கழகம் ஜெயித்தால் இவர்களோடே; வேறு ஒன்று என்றால் அவர்களோடே.

அதனாலே இந்த ஒன்றைத் தவிர வேறு இல்லை—இந்த உணர்ச்சியோடு, இந்த உணர்ச்சிக்காரனும் துணிந்து காட்டிக்கொள்ளவேணும். முன்னேற்றக் கழகத்துக்காரரோடு ஏதோ மக்கள் இருந்தாலும் முக்கியமானவர்களெல்லாம் ஜாக்கிரதையாக இருந்துகொண்டு கூடுமானவரைக்கும் மற்றவர்களுக்கு உதவி பண்ணவேணும். சர்க்கார் அதிகாரிகள் இதிலே ஒன்றும் கலந்துகொள்ளவேண்டியதில்லை; இதைப் பற்றியே அவர்கள் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது; ஏனென்றால் மேலே இருந்து ஏதாவது வரும்.

எனவே, தோழர்களே! இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியிலே இருக்கிறோம்; கடைசி முயற்சியாக ஆரம்பித்து இருக்கிறேன்; முடியுதோ இல்லையோ என்கிறதைப்பற்றி லட்சியம் இல்லை; நம் கடமையைச் செய்தோமா இல்லையா என்கிறதுதான். சும்மாவே இருந்தால் என்ன ஆகிறது? நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்—நமக்கு அப்புறம் ஏதோ இந்த ஆட்சி இருக்கிறது; இந்த ஆட்சிக்குப் பலம் வேணுமே! இதையும் எப்படியாவது ஒழித்து விடுவார்கள். அப்புறம் வருகிறவன் எல்லாம் 'காந்தி வாழ்க' என்று ஆரம்பிப்பான். இப்போதே எந்தெந்த மடையன் 'காந்தி வாழ்க', 'காங்கிரசுக்கு ஜே' என்கிறானோ அவன் எல்லாம் 'பார்ப்பானுக்குப் பிறந்தேன்' என்கிறதை ஒத்துக்கொள்கிறவன்தானே; தான் 'ஈனசாதி' என்கிறதை ஏற்றுக்கொள்கிறவன்தானே! பார்ப்பானுக்கு அதுதானே மந்திரம்—'எவனெவன் நமக்குப் பிறந்தவன்' என்கிறதைப் பார்ப்பதற்கு; எவனெவன் 'காந்திக்கு ஜே' என்கிறானோ அவனை எல்லாம் பார்ப்பான் புள்ளி போட்டுக்கொள்வான்; அது வளர்ந்துகொள்ளும். அப்புறம்? ஓட்டு என்றால் எல்லாரும் அதைச் சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். நாம் நினைக்கணும்; வெட்கத்தோடு நினைக்கணும்—நம் நாடு, நம் ஆதிக்கம், எல்லா வசதியும் நம்கிட்டே இருக்கிறது, 100-க்கு 97 பேர்—என்னத்துக்காக அய்யா இப்படிப்பட்ட கதி, என்று.

தோழர்களே! மற்றும் என்னை எல்லாரும் வாழ்த்தினீர்கள்; ரொம்பப் பாராட்டினீர்கள். நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்—இந்த மாநாட்டிலே வேறுவிதத் தடை இல்லாதவர்கள் எல்லாம் கலந்துகொள்ளுங்கள்; பெயரைக் கொடுங்கள்; விளம்பரம் பண்ணிக் கொள்ளுங்கள். ஏன் என்றால், அதெல்லாம் சேர்ந்துதான் வெற்றிக்கு வழி. எத்தனைப்பேர் இருக்கிறார்கள்; எவ்வளவு பேர் விரும்புகிறார்கள் என்றால், எதிரிக்குக் கொஞ்சம் புரியும். இது எளிதிலே ஆகுமா? முடியுமா? என்பீர்கள். இந்த டில்லி ஆட்சி ஒழியும்படியான வாய்ப்பு இருக்கிறது; இந்த ஆட்சிக்கு ஒரு நாட்டிலேயும் செல்வாக்கு இல்லை. உண்மையாகச் சொல்லுகிறேன்—தெலுங்கு நாட்டிலே செல்வாக்கு இல்லை; மலையாள நாட்டிலே செல்வாக்கு இல்லை; தமிழ்நாட்டிலே செல்வாக்கு இல்லை; வங்காளத்திலே செல்வாக்கு இல்லை. டில்லிக்கு அதிகாரம் இருக்கிறது என்று அவனவன் அடங்கிக் கிடக்கிறான்; நேரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அதனாலே சீக்கிரம் கவிழும். எலக்ஷனிலே நாம் வழிகாட்ட வேண்டியவர்கள். ஏனென்றால், அந்த அம்மாள் நடந்துகொள்ளுகிற மாதிரி—ஜனங்களுக்குள்ளே ஒரு உணர்ச்சியை ஊட்டிவிட்டு, பார்ப்பானைப் பாதுகாக்கிறார்; பார்ப்பானுக்கே எல்லாப் பதவியும் கொடுக்கிறார்; லட்சம் லட்சமாக—கோடிகோடியாகத் திருடி மகனுக்குக் கொடுக்கிறார் என்கிற பேரெல்லாம் வந்துவிட்டது—இது பொய்யோ, நிஜமோ! அப்புறம் பார்ப்பானாகப் பார்த்து சுப்ரீம் கோர்ட்டிலே ஜட்ஜாகப் போட்டுக்கொண்டார். பின்னே முதன் மந்திரிகளை நியமிக்கிறபோதெல்லாம் பார்ப்பானாகப் பார்த்தே நியமிக்கிறார். சுத்த அடிமையாய் இருக்கிற நம்மவர்களைத்தான் சேர்த்துக்கொள்கிறார்—சுப்ரமணியத்தைப்போல—மற்ற ஆட்களைப்போல. ஆனதினாலே, உலகத்துக்கு இது எல்லாம் தெரிந்துபோயிற்று. சமயம் வந்தால் கவிழ்க்கிறதற்குத்தான் தயாராய் இருக்கிறார்கள்; ரொம்ப நாளைக்கு வாழ்வார் என்று சொல்வதற்கு இல்லை. அடுத்தாற்போல எலக்ஷன் வந்தால் பகுதியாய்ப் போய்விடும்; அடுத்த எலக்ஷன் வந்தால் ஒழிந்தே போய்விடும்.

நாம் என்ன செய்யவேணும் என்கிறதற்கு நான் சொல்லணும். நமக்கு ரொம்பக் கவலை இருக்கணும்; நம் இளைஞர்கள் எல்லாம் துணியணும்; கல்யாணம் பண்ணினவன், பெண்டு பிள்ளையோடு இருக்கிறவன், மற்ற வசதியும் இருக்கிறவன் ஒரு பக்கம் இருந்தாலும்—இளைஞனாக, வாழ்க்கையிலே மாட்டிக்கொள்ளாமல் தண்டுமுண்டு இல்லாத மாதிரியாக இருக்கிற ஆட்கள் எல்லாரும் இதிலே புகுந்து கொள்ளணும். அப்போது தான் பயப்படுவான்—ஆதரவு இல்லை என்றால் யார் பயப்படுவார்கள்? நான் ஒருவன் கத்தினால் எல்லாரும் பயந்துகொள்வார்களா? நான் சொன்னால் சிலபேர் கேட்கிறார்கள் அல்லவா? செய்யணும். மாநாடு நடந்தால் சும்மாவா இருப்போம்? நடத்தினால் வேலை ஆரம்பிக்கணும்; வட நாட்டானை எல்லாம் இந்த நாட்டைவிட்டு விரட்டணும்; 'உனக்கு என்னடா இங்கே வேலை?' என்று ஆரம்பிக்கணும். அதிலே இருந்து வடநாட்டு அதிகாரமுள்ள ஆபீசு எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் போய்க் கலவரம் பண்ணவேணும்.

வேலை இல்லை என்று சொல்லாதீர்கள்; இருக்கிறது நமக்கு. வேலை செய்யவில்லையா நாம்—சட்ட எரிப்பிலே, இந்தி எதிர்ப்பிலே, வடநாட்டான் மறியல் கிளர்ச்சியிலே எல்லாம், பண்ணினோமே! அந்த மாதிரியான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து இங்கே செய்யணும். இல்லாவிட்டால், அவன் வழிக்கு வரட்டுமே? 'என்னப்பா வேணும், என்னப்பா சங்கதி?' என்று வரட்டுமே! இலேசிலே அவன் இணங்குகிற மாதிரியான கொள்கை இல்லை நம் கையிலே.

இந்து மதத்தை ஒழிக்கணும் என்றால், அரசியல் சட்டத்தை ஒழித்தாகணும். அரசியல் சட்டத்துக்கு மாநாடு கூட்டி, சட்டத்தை, பார்லிமெண்டிலே—'மதத்தைக் காப்பாற்றுகிறது என்கிறது இல்லை, கொள்கை. ஆனால் அவர்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளலாம்; அவனவன் என்ன சொல்லுகிறானோ அதுதான் மதம். பிறந்திட்டது என்கிறதினாலே இந்து மதம் என்று இல்லை' என்று அரசியல் சட்டத்தைத் திருத்தட்டுமே!



'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' கையெழுத்துப் படியினைப் படித்துக் காண்பித்து நோபிள் கு. கோவிந்தராசலு, வே. ஆனைமுத்து, ச. சோமு ஆகியோர், தந்தை பெரியார் அவர்களிடம் 3-9-1973-ல் கையொப்பமும், பதிப்புரிமையும் பெற்றனர்.

'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' கையெழுத்துப்படியில்
நோபிள் கு. கோவிந்தராசலு, கு. ம. சுப்பிரமணியன், பி. இ. ஆகியோர்,
தந்தை பெரியார் அவர்களிடம் கையொப்பம் பெறுகின்றனர்.

சட்டத்திலே எல்லாவற்றையும் கட்டிப் போட்டுவிட்டு, 'அது சொன்னால் தப்பு; இது சொன்னால் தப்பு; அதைச் சொன்னால் ஏழு வருஷம்' என்று சொல்லிவிட்டால்— நிபந்தனையும், நினைக்க முடியாத அளவுக்குப் போட்டு, உலகம் உள்ளவரைக்கும் நீ தேவடியாள் மகன்தான் என்றால், அப்புறம் என்ன இருக்கிறது மனுஷனுக்கு? எப்படி இது ஒரு நாடாகும்? எப்படி மனித சமுதாயமாகும்? எப்படி மக்கள் எல்லாம் மான உணர்ச்சி உள்ளவர்கள் ஆவார்கள்?

எனவே, அவரவர் வீட்டிலே இருக்கிற இளைஞர்களை எல்லாம் விரட்டுங்கள்; கல்யாணம் பண்ணாத பசங்களை எல்லாம் 'போ' என்று அனுப்புங்கள்; பெண்டுகளையும் கூடுமான வரைக்கும் அனுப்பிவிடுங்கள்!

பெரிய கிளர்ச்சி நடந்தால்தான் விஷயங்களைச் சரிப் பண்ணிக்கொள்ள முடியும். வேறொருவன் நினைக்கமாட்டான்—இவ்வளவு கடினமான சங்கதியை! எப்படி நினைப்பான்? நினைத்தானானால் அவன் பிழைக்கிறதற்கு வழி ஏது? இவ்வளவையும் சொன்னேன்; தெளிவாகவே சொல்லுகிறேன்—முன்னேற்றக் கழகத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; இந்த நிகழ்ச்சிக்கும், இந்தக் கிளர்ச்சிக்கும் சம்பந்தம் இல்லை; எப்போது சம்பந்தம் என்றால் அவர்களாக (டெல்லியாக)ப் பார்த்து விரட்டி அடித்துவிட்டால் சம்பந்தம்; அதுவரைக்கும் நாம்தான். இந்தக் கிளர்ச்சி நடக்கிறபோது ஆட்சி மாறியது என்றால் தொந்தரவு இன்னும் ரொம்ப ஆகும்; அவர்கள் நமக்கு உதவி செய்கிறதற்காகப் பதவியிலே இருக்கவேணும்; இல்லாவிட்டால் கண்டவன் வருவான்—கண்ட மாதிரி நடத்துவான். இந்தி ஒழியணும் என்று சொல்கிறபோது, இந்தி இருக்கவேணும் என்று மந்திரிகள் சண்டை போடவில்லையா? அவினாசிலிங்கம் செட்டியார், மற்றும் இப்படிச் சில மந்திரிகள் எல்லாம் இந்தி இருக்கணும் என்று சண்டைபோடவில்லையா? அப்படி எத்தனையோ இருக்கிறது தமிழர் சாதியிலே!

அதனாலே, இப்போது தமிழர் என்கிற அடிப்படையிலே இருக்கிற நிலையைக் காப்பாற்றிக்கொள்ளவேணும்; அவரவர்கள் வந்திடவேணும். அவசியம் இருக்கிறபோது நம் இயக்கத்திலே உள்ளவர்களும் ஒவ்வொருவரும் ஆதரவுகொடுக்கணும்; கூடுமானவரை வெளியே வந்திடவேணும்.

இந்தக் கிளர்ச்சி, நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை—இந்தக் கிளர்ச்சியை ஆரம்பிக்கிற இடந்தான் தமிழ்நாடே தவிர, ஏறக்குறைய இந்தியாவிலே பகுதி நாட்டுக்கு மேலே ஒரு வருஷத்துக்குள்ளே நெருப்புப் பிடித்துக்கொள்ளும்—ஒரு வருஷத்துக்குள்ளே!

அலகாபாத்திலே, கான்பூரிலே, இன்னும் லக்னோவிலே நம் உணர்ச்சி உள்ளவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் ஆதரவு அளிப்பார்கள்; அப்புறம், அப்படியே பெருகும். ஏனென்றால், அங்கே உள்ள ஜனங்களுக்கு 'சூத்திரன் என்றால் அவமானம்' என்று தெரியாது; அது ஒரு பெருமை என்று நினைக்கிறார்கள். என்னிடமே அங்கே ரகளை பண்ணினானே—இராமாயணத்தைப் பார்த்துவிட்டு. அப்புறம் அதே ஊரிலே இராமாயணம் இங்கிலீஷிலே போட்டு இரண்டாயிரம் பிரதிகள் செலவாயிற்று; விஷயம் தெரிந்தால் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அங்கங்கே இந்தப் பார்ப்பனர்கள் கொஞ்சம் பேர்—நம் நாட்டுப் பார்ப்பனர்கள் அங்கே போய் உட்கார்ந்துகொண்டு, அங்கே கூட்டம் சேர்க்கிறார்கள். நம் ஆட்கள் எல்லாம் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதெல்லாம் நிலைத்து இருக்காது. இங்கே ஒரு ஆயிரம், அய்யாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனோமானால் மற்ற நாடெல்லாம் (நெருப்பு) பிடித்துக்கொள்ளும். அய்யாயிரம் பேர் கூடவா போகமாட்டார்கள் ஜெயிலுக்கு—இவ்வளவு பெரிய கிளர்ச்சிக்கு? ஒன்றும் இல்லாத கிளர்ச்சிக்கு எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு போனார்கள் என்றால்—சாதியை மாற்றுகிறது, நம்முடைய பெண்களுடைய நிலைமையை மாற்றுகிறது என்கிற கிளர்ச்சிக்கு அய்யாயிரம் பேர்கூடவா போகமாட்டார்கள்?

ஆனதினாலே, அருமைத் தோழர்களே! நீங்கள் எல்லாம் நன்றாக நினையுங்கள். உங்கள் குடும்பமோ, உங்கள் பிழைப்போ, கலந்துகொள்ள இடம்கொடுக்கவில்லை என்றாலும்—நம்மாலான உதவி என்ன செய்யலாம் என்று சிந்தியுங்கள்; அதைச் செய்யுங்கள். நீங்கள் ஆட்களைச் சேர்க்கலாம்; நிகழ்ச்சி நடந்த உடனே—மாநாடு நடந்த உடனே ஒரு லட்ச ரூபாய் சேர்த்தாகவேணும்; மாண்புமிகு அன்பில் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கணும், கொடுக்கணும். எல்லாம் சேர்த்து ஆரம்பிக்கணும்.

எல்லாம் பெண்களே ஜெயிலுக்குப் போகணும்—ஏனென்றால், இது சமுதாய சம்பந்தமானது. பார்ப்பானாக இருந்தால் அவன் எவ்வளவு செய்கிறான்—எத்தனைப் பார்ப்பனத்திகள், எவ்வளவு கூட்டம்! இது நம்முடைய மானத்தைப் பாதிக்கிற காரியம் ஆனதினாலே நாம் கலந்துகொண்டால் தப்பென்ன? தோற்றுப் போனால்தான் தப்பென்ன? இதற்குத் தோல்வியே இருக்காதே! அதை மாற்றுகிற வரைக்கும்—அந்த நிலைமையை மாற்றுகிற வரைக்கும் பணி இருக்குமே தவிர தோல்வியே இருக்காது. நான் சொல்லு கிறேன், நீங்கள் விளையாட்டாக நினைக்காதீர்கள்—இது மாறினால்தான் நாம் மனுஷன் ஆவோம்; நம்நாட்டு மனிதத் தன்மை நமக்கு வரும். இது முடியவே இல்லையே—என்ன தான் சுதந்தரம் என்று இருந்தாலும்.

நான் சொல்லுகிறேன், இந்தியாவில் 56 கோடி ஜனங்கள்; இதிலே 100-க்கு 3 பேர் பார்ப்பான்; அவனே இந்தியாவை ஆளுகிறது என்றால்—நினைத்துப் பாருங்கள், எவ்வளவு அவமானம்! ஜவகர்லால் நேருவாவது கொஞ்சம் வேஷம் போட்டுக்கொண்டிருந் தார், எல்லாப் பித்தலாட்டமும் பண்ணுவார்; பார்வைக்குச் சமதர்மம் என்பார். எனக்குத் தெரியும்—நான் அப்போதே சொல்லி இருக்கிறேன்.

இந்த இந்திரா காந்தி அம்மாளாலே வேஷம் போடக்கூடத் தெரியவில்லை. பார்ப் பனனையே கொண்டுவந்து வைத்துக்கொண்டார் அந்த அம்மாள். முதலாவது, இன்றைக்கு அந்த அம்மாள் பதவியிலே இருக்கிறது நமக்கெல்லாம் அவமானம் இல்லையா—பெண் என்பதற்காகச் சொல்லவில்லை—ஒரு பார்ப்பனத்தி என்பதால்தான். என்ன, அப்புறம், நாம் என்ன மானத்தோடு வாழ்கிறோம்? இந்திய மக்களுக்கு என்ன தொல்லை இருக்கிறது? இந்தியாவில் 56 கோடி ஜனங்களில் 50 கோடிப்பேர் பார்ப்பான் அல்லாதவர்கள்—ஆனால் பார்ப்பனத்தி ஆளுகிறாள் என்றால்? இதை எல்லாம் நீங்கள் நினைக்கணும்.

எனக்கு இன்று புத்தி சுவாதீனம் இல்லை என்றுகூடச் சொல்லுவேன்; எல்லாம் மறந்துபோயிற்று; என்ன பேசவேணும் என்று இருந்தேனோ ஒன்றும் ஞாபகத்துக்கு வரமாட்டேன் என்கிறது. ஏனென்றால் இரண்டு நாளாய்ப் பட்டினி கிடந்தேன்; நேற்றுத் தான் காலையிலே ஒரு கப் கஞ்சி, இராத்திரி 9 மணிக்கு ஒரு தடவை கஞ்சி, முந்தாநாள் பூராவும் ஒன்றும் இல்லை; தண்ணீர்கூட குடிக்கவே இல்லை. இன்றைக்குக் காலையில் வந்தேன்; ஒரு இட்டிலி கொடுத்தார்கள்; இன்னொரு இட்டிலி கொடு என்றேன், முடியாது என்று சொல்லிவிட்டார்கள்—நாசமாகப் போகட்டும் என்று வந்துவிட்டேன். இருந்தாலும் உங்களைப் பார்க்கிறபோது—மறுபடியும் இன்னும் 8 நாட்களுக்குப் பேசுவதற்கு இல்லையே என்று, மனதிலே இருக்கிறதைச் சொல்லுகிறேன்.

இப்போது நீங்கள் எல்லாம் பொறுப்போடு வெளியே போகணும்; நீங்கள் வந்து அந்த மாநாட்டிலே கொடுக்கிற உற்சாகம்தான், மக்களுக்கெல்லாம் நல்லது ஆகும். சும்மா மாநாடு நடத்திவிட்டுப் போகிறதில்லை. நடந்த உடனே கிளர்ச்சி ஆரம்பிப்போம். நாம் அவர்களுக்கு நோட்டீஸ் விடணும்—'என்ன, இதை மாற்றுகிறதற்கு வழி பண்ணுகிறாயா? இல்லை உன்னை ஒழிக்கிறதா?'—என்று. மாநாட்டுத் தீர்மானம் அதுதான் வரும்; அதிலே டைம் போடுவோம்; அது ஆன உடனே ஆரம்பித்துவிடுவோம்.

அதற்குள்ளே ஆங்காங்கே கமிட்டி கூட்டவேண்டும். மறுபடியும் சொல்லுகிறேன்—வடநாட்டான் எங்கெங்கு இருக்கின்றானோ அங்கெல்லாம் மறியல், 'இங்கே என்ன வேலை

உனக்கு?" என்று. அப்புறம் வடநாட்டுக் கச்சேரி, போஸ்டாபீஸ், அதிகாரி அங்கே எல்லாம் மறியல். அவனுக்குத் தெரியணுமே, அதற்காக.

இங்கே, இருக்கிற இடத்திலே (மறியல்) செய்தால் இவர்களுக்குத் தொந்தரவு; இவர்களாலே ஏதாவது தப்பு இருந்தால் அல்லவா இவர்கள் இடத்திலே செய்யலாம்? இன்னும் உங்களுக்குத் தோன்றுகிறதெல்லாம் சொல்லுங்கள்—என்னென்ன காரியம் செய்யலாம் என்று; அதைச் செய்வது. நான் ஒன்றும் சும்மா இருந்துகொண்டு அதிகாரம் பண்ணுகிறாற்போல இல்லை—முதல் பலி நான்; என்னைக் கொடுத்துவிட்டுத்தான் அப்புறம் உங்களைக் கூப்பிடுவேன். சும்மா நாங்கள் உபதேசம் பண்ணிக்கொண்டு இருக்கிறதில்லை.

அருமைத் தோழர்களே! கொஞ்சம் சீரியஸாக, கொஞ்சம் தீவிரமாகச் சிந்தியுங்கள். தமிழர்களுக்கே இது ஒரு பரீட்சை; தமிழருக்கு மானம் இருக்கிறதா இல்லையா என்கிறதைப் பார்க்கிற ஒரு பரீட்சை என்றெல்லாம் வேண்டிக்கொண்டு என்னுடைய இஷ்டத்தை எடுத்துச் சொன்னேன் நான்.

நான் இப்போதும், கடைசியாகவும் வேண்டிக்கொள்கிறேன்—மந்திரிகளோ, முன்னேற்றக் கழகக்காரரோ இதிலே கலந்துகொள்ளாமல் இருக்கணும்; மற்ற உதவிக்கு இருப்பது, அதுவேறு விஷயம்; காரிய சம்பந்தமாக இதிலே கலந்துகொள்ளாமல் இருக்க வேண்டியது. நல்ல உத்தியோகம், பதவியிலே இருக்கிறவர்கள் கண்டிப்பாகக் கிட்டேயே வரக்கூடாது; ஏதோ அவர்களாலே ஆன உதவியைச் செய்யட்டும்.

ஏன் என்றால், நான் முன்னமேயே சொன்னேன்; கடைசியாகவும் சொல்லுகிறேன்—இது கடைசி முயற்சி, கடைசி முயற்சி, கடைசி முயற்சி! வணக்கம்.

(திருச்சியில், 4-11-1973 ஞாயிறு அன்று, சிந்தனையாளர் கழகச் சார்பில் நடந்த பிறந்தநாள் விழாவில் பெரியார் ஆற்றிய நன்றி உரை. பெரியார் அவர்கள் சிந்தனையாளர் கழகத்தில் இறுதியாக உரையாற்றிய நிகழ்ச்சியாக, இது அமைந்துவிட்டது.)

[ஆதாரம்: Tape Recorder—Akai, Track No. 4, 15/16 Speed, 179 feet]

2. மாநாட்டில்

பேரன்புமிக்க தாய்மார்களே! பெரியோர்களே! தமிழ்நாடு முழுவதிலும் இருந்து இங்கு எழுந்தருளியிருக்கும் பிரதிநிதிகளே! சொற்பொழிவாற்றிய பேரறிஞர்களே!

இப்பொழுது நல்ல சொற்பொழிவுகளைக்கேட்டு ரொம்ப உணர்ச்சியோடு பக்குவமான நிலையிலே இருக்கிறீர்கள். நான் பேசுவதன்மூலம் எங்கே இது கலைந்துபோய் விடுமோ என்று பயப்படுகிறேன். அவ்வளவு நல்ல தெளிவாக யாருக்கும் விளங்கும்படியும், ஒவ்வொருவர் மனமும் உடனே காரியத்தில் இறங்கும்படியான உணர்ச்சி ஏற்படும்படியும் நல்லவண்ணம் அவர்கள் பேசினார்கள். எனக்கும் தெரியாத, இதுவரையிலும் நான் தெரிந்திருக்காத அனேக அருமையான விஷயங்களை எல்லாம் பேசினார்கள்; நாம் செய்வது ரொம்ப அவசியமான காரியம்—ஞாயமான காரியம் என்று கருதும்படி நல்ல வண்ணம் விளக்கினார்கள். இனி நான் சம்பிரதாயத்துக்குத்தான் இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டி இருக்கிறது.

தோழர்களே! நான் இந்த மாநாடு கூட்டி இருப்பதன் நோக்கம் போராட்டத்தை உத்தேசித்து அல்ல; அல்லது இந்த ஆட்சியிலே இருந்து விலகவேண்டும் என்கிற எண்ணத்தை உத்தேசித்து அல்ல. மனித சமுதாயமாகிய நாம், சமுதாயத்திலே ஈனப் பிறவிகளாக—அசிங்கப்படும்படியாக வரும்படியான கருத்திலே, இன்னொரு சாதியானுக்கு,

அதுவும் நம் நாட்டிலே பிழைக்க வந்த ஒரு சிறு கூட்டத்தானுக்குக் கீழ்மக்களாக—அடிமை களாக—அவனுடைய தாசி மக்களாக இருக்கவேண்டும், இருக்கிறோம், இருந்துவருவது தான் ஆட்சியினுடைய தன்மை என்று கருதும்படியாக—இழிவான நிலைமையிலே இருக் கிறோம். அதிலிருந்து மாறவேண்டும் என்று கேட்கிறோம். இது இயற்கை.

எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் இவைகளை எல்லாம் சொல்கிறபோது வெட்கப் படத்தான் செய்வான்; இதிலேயிருந்து கொஞ்சம் மாறினால் தேவலாம் என்றுதான் இருப்பான். நாம் தாசி மக்கள் இல்லை—நிஜமாகத் தாசி மக்களாக இருக்கிறவர்கள்கூட, ஏதோ அமைப்பினாலே—காரியத்தினாலே இருக்கவேண்டி ஏற்பட்டது என்று இருந்தாலும், 'என்னடா, இப்படி ஒரு பழிப்புக்கு ஆளானோமே!' என்று வருத்தப்படுவான். அப்படிப் பட்ட ஒரு நிலையிலே நம் நாட்டை, நம் சமுதாயத்தை, நம் மக்களை, நம் தாய்மார்களை எல்லாரையும் உட்படுத்தி அமுல் நடத்தி ஆட்சி வகிக்கிறார்கள் என்றால்–உண்மையிலேயே சொல்லுகிறேன்—இத்தனை நாள் நாம் பொறுத்துக் கொண்டிருந்ததே நமக்குப் பெரிய அவமானந்தான்.

முதலிலேயே இதற்கெல்லாம் பக்குவம் பண்ணி ஆகி இருக்கணும்; முடியவில்லை. ஆனால் இதைப்பற்றி வருத்தப்பட்டு இருக்கிறோம். செய்கிறமுறை சரியாக வரவில்லை; உணர்ச்சியும் நிலைமையும் வாய்ப்பாக இல்லை; இப்பொழுது ஏதோ ஒரு வாய்ப்பாக வந்தது. அதுவும் இப்போது வந்த வாய்ப்பு, இந்தத் தீண்டாமை ஒழிப்பு என்கிற விஷயத் திலே, தீண்டாமை ஒழிந்ததாகச் சொல்லியும், இன்னமும் நம்மைத் தீண்டப்படாதவன் என்று கருதும்படி கடவுளிலே, கோயிலிலே இந்த மாதிரிச் சில இடங்களிலே வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ற எண்ணம் வந்ததினாலேதான்—இதை மாற்றவேண்டும் என்கிற ஒரு உணர்ச்சி வந்தது.

இப்போது, நண்பர் நமது கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 'இந்தக் கோயில் அர்ச்சகர் வேலை யாரும் செய்யலாம்' என்று தீர்மானம் பண்ணி, அதை இந்த அரசாங்கம் சட்டம் செய்ததானது செல்லாது என்று பண்ணி, நம் இழிநிலைமையைச் சட்டத்தின்மூலம் உறுதிப்படுத்திவிட்டதினாலே, கொஞ்சம் ஆத்திரம் அதிகமாய்ப் போயிற்று. இதை இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் என்ன ஆகிறது? இல்லாவிட்டால் நமக்கு இவ்வளவு ஆத்திரம்கூட வந்திருக்காது; நமக்கு ஆத்திரம் வந்தது, வந்ததினாலே நல்லவிதத்திலே வந்திருக்கிறோம். உணர்ச்சி வந்தது; அதற்குவேண்டிய காரியமெல்லாம் பண்ணினோம்; மாநாடு போட்டோம்.

இது ஒரு திருப்திகரமான மாநாடு; ஒன்றும் குறைசொல்லுகிறதற்கு இல்லை; எவ்வளவுபேரை எதிர்பார்த்தோமோ அதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை; எவ்வளவு ஆதரவு எதிர்பார்த்தோமோ அதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. பொருளாதார விஷயத் திலே நம் இயக்கம் நடக்கிறதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று நினைத்தோமோ அதிலேயும் ஒன்றும் குறைச்சல் இல்லை. ஒருவிதத்திலேயும் நம் மாநாட்டைக் குறை சொல்லுகிறதற்கு இல்லாமல் இருக்கிறது; நம்முடைய ஆசைப்படி நல்ல வண்ணம் நடந்து இருக்கிறது.

இப்போது நல்ல தீர்மானங்களைப் போட்டுவிட்டோம்; அழகுக்காகத் தீர்மானம் போடவில்லை. கண்டிப்பாக இழிவு தீரவேணும்; இது போகாவிட்டால் நம் கதி என்ன ஆகும் என்கிற நிலைமையிலே இந்தத் தீர்மானங்களைச் செய்து இருக்கிறோம். இப்போது இந்தத் தீர்மானங்களிலே எனக்கு ஒரு பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள், 'எப்போது செய்கிறது என்கிறதைப்பற்றித் தலைவர் சொல்லுவார்; அவர் சொற்படி கேட்கவேண்டும்' என்று. என்னென்ன செய்யவேண்டும் என்கிறதைப்பற்றிப் பொறுப்பாகக் கேட்டிருக் கிறது; அதற்குப் பரிகாரம் சொல்லணும்; உண்மைதான். எனக்கும், 'ஒரு பெரிய காரியத்தை ஆரம்பிக்கிறோம்—சும்மா அலட்சியப் புத்தியோடு ஆரம்பித்து அல்ல, மெள்ள

உறுதியான எண்ணத்தோடு கண்டிப்பாகக் காரியம் நடக்கும்படியான தன்மையிலே செய்யவேணும்' என்கிற எண்ணந்தான் இருக்கிறது.

முதலாவதாக, நான் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். இந்தக் கிளர்ச்சியை எப்போது ஆரம்பிக்கலாம் என்றால், இந்த மாநாடு முடிந்த உடனே, மாநாட்டுத் தீர்மானங்களை மந்திரிகள், குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதம மந்திரி இந்திரா அம்மாள் அவர்களுக்கும்; மற்றும் பார்லிமெண்ட் மெம்பர்களுக்கோ, நம் அரசாங்கத்துக்கோ, யார் யாருக்கோ—முக்கியமாக இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி அவர்கள் நம் சேதிகளைப் பற்றி என்ன முடிவு கூறுகிறார்கள் என்பதையும்; அவர்கள் ஆதரவான பதிலை எங்களுக்கு அனுப்பிவைக்கவேணும் என்றும் கேட்கப்போகிறோம். அது வந்தபிறகு நம் மக்களுக்கு, நமக்கு அனுகூலமாக இல்லாவிட்டால் கிளர்ச்சியிலே இறங்குகிறோம் என்று திட்டம்போட்டு இருக்கிறோம். அது பெரிய காரியந்தான்.

கிளர்ச்சி ஆரம்பிக்கிறபோது, அரசாங்கத்துக்கு, அது விரோதமாகத்தான் இருக்கும். அரசாங்கம், எப்படியாவது அடக்கவேண்டும் என்று அவர்களால் கூடுமான அளவுக்கு வேலை எல்லாம் செய்துதான் தீருவார்கள். கிளர்ச்சியும், அதைச் சமாளித்தால்தான் முடியும்; முடியாதுபோயிற்று என்றால் தோல்விதான். ஆனதினாலே, ரொம்பப் பொறுப்பான வேலையாய் இருக்கிறது; செய்யவேண்டும். இப்போது எனக்கு இங்கே உள்ள கூட்டத்தையும், மக்களையும், உங்களுடைய பேச்சையும் இதனுடைய அவசியத்தையும் எல்லாம் கேட்கிறபோது—இதற்கு ஆட்சியினுடைய எதிர்ப்பைவிட, இதற்கு ஆதரவு அதிகமாக இருக்கும்; நினைக்கிறபடி காரியங்கள் முடியும்; முடியாவிட்டாலும் நம்முடைய கடமையைச் செய்தோம் என்கிற நிலைமையாவது குற்றமற, யாரும் பழித்துச் சொல்லுகிறதற்கு இடமில்லாத தன்மையிலே அதற்கு வாய்ப்பு ஏற்படும்; இதுதான்.

தோழர்களே! நான் நினைக்கிறேன்—இவ்வளவு பெரிய காரியத்திற்கு நிபந்தனை போட, நாம் எழுதி அதற்குள்ளாக எங்களுக்குப் பதில் எழுதவேண்டும் என்று கேட்பதற்குக் கொஞ்ச நாள் வாய்தா கொடுத்துத்தான் ஆகணும்; பத்துநாள், 15 நாள் என்றால் பற்றாது; அவர்களும் யோசிக்கணும். அதுமாத்திரம் அல்ல, நாமும் நல்லவண்ணம் பிரசாரம் செய்து மக்களை எல்லாம் பக்குவப்படுத்தணும். அதனாலே அவர்களுக்கு நாம் ஞாயமான வாய்தா கொடுத்தோம் என்றும், நாமும் கிரமமாகச் செய்யவேண்டிய கடமைக்கு ஏற்பாடெல்லாம் செய்தோம் என்றும் ஆகும். ஆகையினாலே, நான் யோசித்தவரையிலும் என்ன தேதி, எப்போது வாய்தா கொடுக்கலாம் என்றால்—வருகிற ஜனவரி மாதம் 26-ம் தேதி—குடியரசு நாளாகிய 26-ம் தேதிவரைக்கும் வாய்தா தரலாம். அடுத்த மாதம் ஒரு 26 நாள் இருக்கிறது; இந்த மாதம் ஒரு 20 நாள் இருக்கிறது; 10 நாட்களாகும் (நாம்) தயார்பண்ணி அனுப்ப. கிட்டத்தட்ட ஒரு மாதம் தாராளமாய் இருக்கிறது; அது கிரமமாகக் கொடுக்கவேண்டிய வாய்தா என்கிறதல்லாமல், நாமும் கொஞ்சம் நல்ல பிரசாரம் எல்லாம் செய்யணும். இன்னும் ஒருமாதம் 10 நாளைக்குள்ளாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும், வட்டத்திலேயும் நம்முடைய இயக்கத் தோழர்கள் ஆங்காங்கே கூட்டம்கூட்டி கமிட்டிபோட்டு மக்களுடைய ஆதரவு பெற்று நல்லவண்ணம் பிரசாரம் செய்து, எல்லா மக்களுக்கும் நல்ல தெளிவான உணர்ச்சியும், முயற்சியும் ஏற்படும்படிச் செய்யவேணும். அதற்கு நாள் வேண்டியதுதான். ஜனவரி மாதம் 26-ம் தேதி என்கிறது ரொம்ப அதிக நாளல்ல; அதற்குள்ளே நம்'மக்களுக்கு உணர்ச்சி ரொம்ப மறந்துபோகாது. அதற்குள்ளே அவரவர்கள் தங்களைத் தயார் படுத்திக்கொள்ளப் பிரயத்தனப்படுவார்கள். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

அத்தோடு, நம்முடைய கடமையைச் செலுத்துகிறதிலே, இதனுடைய அவசியத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை—முதலிலேயே ஆரம்பித்தோம். எல்லாருக்கும் துடித்துக் கொண்டிருக்கிறது, காரணகாரியத்தை எடுத்துச் சொல்லுகிறபோது.

சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், இந்த மாதிரியான ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டது ஒரு மோசடிதான்; இயற்கையாய் ஏற்பட்டதல்ல. எல்லாம் முன்னேற்பாடு செய்துகொண்டு, நிறைய நம்மையெல்லாம் அடக்கி இழிவுபடுத்தி ஆள்வதற்கு வேண்டிய வசதிக்குத் திட்டம் இட்டு ஏற்பாடுசெய்த காரியம். அதனாலே இது சரியான வாய்ப்பாக வந்துவிட்டது என்று யாரும் சொல்லமுடியாது. ஏதோ, நாம் அதற்கு முன்னே இருந்தே நம் குறையையெல்லாம் சொல்லிக்கொண்டுதான் வருகிறோம்—சாதியைப்பற்றி, மதத்தைப்பற்றி இன்னும் மற்ற மற்றக் காரியத்தைப்பற்றி. அதை ஒன்றும் லட்சியப்படுத்தவில்லை. லட்சியப்படுத்த வில்லையென்றால் அவர்கள் செய்த காரியம் எவ்வளவு மோசடி என்கிறதை நல்லவண்ணம் எடுத்துச் சொன்னார்கள்; நம் நண்பர் ஆனைமுத்து அவர்கள் நன்றாகவும் சொன்னார்கள். நானும் ஆரம்பகாலந்தொட்டு, 'இது ஒரு மோசடி, மோசடி' என்று—'ஏமாற்றுதல்தான்' என்று சொல்லிக்கொண்டேதான் வந்திருக்கிறேன். சுதந்தரம் வந்தது—'சுதந்தர நாள்' என்றபோதே, நான் சொன்னேன்—'இது சுதந்தரநாள் அல்ல; துக்கநாள், மோசடி, நம்மை ஏமாற்றித் துரோகம் செய்கிற நாள்' என்று நான் அன்றைக்கே சொன்னவன்தான். அதை, நாளுக்குநாள் அதற்குண்டான காரணங்களை விளக்கியும் அந்த அபிப்பிராயத்தைப் பலப் படுத்திக்கொண்டுந்தான் வந்திருக்கிறேன்.

ஆனால் அவர்கள்—அவர்கள் என்றால் யார்? பார்ப்பனர்கள்! அவர்கள் கையாளாய்ப் போனவர்களே அவர்களுக்கு நம் எல்லாருடைய கருத்தோ—அதைச் சரி என்றோ, அதனாலே என்னென்ன ஏற்படுகிறது என்கிறதையோ கருதினவர்களே இல்லை. ஆகையினால், அவர்கள் தக்க ஏற்பாட்டோடு மோசடியாய்த்தான் செய்தார்கள். அதற்குண் டான காரணம், நல்ல காரணமாகச் சொன்னார்களே! நம்ஆள் ஒருவரைக்கூட கமிட்டி யிலே போடவில்லை; எலக்ஷனிலே வந்தவன் எவனையும்கூட லட்சியம் பண்ணவில்லை; யாரோ சிலபேரை, எப்படியோ வாய்ப்பு வந்தவர்கள் என்று வைத்து, அவர்கள் இஷ்டம் போல் பொறுக்கி எடுத்தவர்களைப்போட்டார்கள். அதை விளக்குவதற்காக—தயார் செய் வதற்காகப்போட்ட கமிட்டியில்கூட 6 பேர் என்றால்—நாலுபேர் பார்ப்பனர், ஒருவர் அம்பேத்கார், இன்னொருவர் சாயபு. இந்த இரண்டுபேருக்கும் கவலை இல்லாத நிலைமை யாய்ப் போயிற்று. முதலிலே அவர்களுக்குத் தேவை வசதியாய் இருந்தபோது பொது வான கவலை அவர்களுக்கும் இருந்தது. ஏற்பாடுபண்ணுகிறதிலே நல்லவாய்ப்பு அவர் களுக்கு இருந்தது—அம்பேத்காருக்கு அவர் நினைக்காத அளவுக்கு வசதிகொடுத்து விட்டார்கள். 'நீ ஏனய்யா சத்தம் போடுகிறாய்? உங்களிலே எத்தனைப் பேர் உண்டோ அத்தனைப்பேருக்கு உத்தியோகம் எடுத்துக்கொள்!' என்றார்கள்—தீர்ந்தது அவருக்கு; வேறே உணர்ச்சி வருவதற்கு அவசியம் இல்லை; கேட்டால், 'நீங்களும் முயற்சி பண்ணுங்களேன், அது மாதிரிதான்' என்று கூறிவிட்டார். நானும் நேரிலேகூடக் கேட்டேன்—'ஏனய்யா, எங்களுக்கு நாதி இல்லையா?' என்று. 'யார் சொன்னார்; நீங்களும் முயற்சி பண்ணுங்களேன். நாங்கள் என்ன பண்ணமுடியும்?' என்கிற மாதிரி அவர் சொன்னார். 'முதலிலே நாம் அப்படி எல்லாம் பேசவில்லையே! நாமெல்லாம் ஒன்றாகத்தானே கலந்தோம்' என்றேன். 'நிலைமை அப்படி ஆகிப்போயிற்று. நான் என்ன பண்ணுகிறது?' என்று அவர் கூறிவிட்டார். சாயபுமாரும் அப்படித்தான்; அவர்களுக்கு நம்மைப்பற்றிக் கவலை இல்லை. அவரவர்கள் காரியத்திற்குத் திருப்தி ஆகிப் போயிற்று. நமக்கு நாதி இல்லாது போய்விட்டது; உண்மையாகவே சொல்லுகிறேன், நமக்கு நாதி இல்லை. ஒரு ஆளாவது நாதியோடு கவலை எடுத்திருந்தால் ஏதோ சில மாறுதல்களாவது வந்திருக்கும்; ஒன்றுகூட இல்லை.

அதனாலே, அவர்கள் இஷ்டம்போல எழுதிவிட்டார்கள். இருந்தாலும் அதற்காக ரொம்ப வருத்தப்பட்டிருக்கிறார் டாக்டர் அம்பேத்கார்; ஆனால், காரியம் ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்றைய முதற்கொண்டே சொல்லிக்கொண்டேதான் வருகிறோம்—அது ஒரு மோசடி, மோசடி; அது ஒரு மனுதர்ம சாஸ்திரம்; அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு

ஏற்ற காரியம் என்றெல்லாம் ரொம்பச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். யார் கவனிக்கிறார்கள்? அரசியல் வந்துவிட்டது என்றாலே, அவனவன் ஓட்டுக்கும்—பதவிக்கும் மந்திரி வேலைக்கும் கவலையோடு இருந்தானே தவிர, சமுதாயத் துறையிலே நமக்கு இந்தக் கேடு இருக்கிறது என்று இன்றைக்கு யாருக்குக் கவலை இருக்கிறது?

இன்றைக்கு நான் சொல்லுவேன்—நம் முன்னேற்றக் கழகத்துக்காரர் சரியாக இருக்கிறார் என்று சொல்லமாட்டேன்; ஏதோ சிலபேருக்கு இருக்கலாம்; மற்றவர்களுக்கு ஏதோ அவர்கள் பதவி, பட்டம் அது, இது அந்தமாதிரி ஆகிப்போயிற்று நிலைமை. இந்த அரசியல் அவ்வளவு கீழ்த்தரமாய்ப் போனதினாலே அதிலே பிரவேசிக்கிறவர்கள் யாரும் வெட்கப்படுவதற்கு இல்லாமல்—அது மூலமாக ஒரு பரிகாரமும் செய்கிறதற்கு இல்லை. இப்போது நாங்கள்தான் ஏதோ கத்திக்கொண்டிருக்கிறோம். நமக்கும் அவ்வப்போது சரி பண்ணிக்கொள்ளத்தான் முடிகிறதே தவிர நிரந்தரமாய் இல்லை.

என்னமோ, முன்னே சொன்னாற் போல இந்தக் காலம் வந்ததினாலே ஆரம்பித்தோம்; கொஞ்சம் வசதியாய் இருக்கிறோம். மந்திரிமார்களிலேயும் சிலபேருக் கெல்லாம் கொஞ்சம் உணர்ச்சி இருக்கிறது; உண்மையைக் கூடச் சொல்லுகிறேன்—சாதாரணமாக சிலபேர், 'பதவியைவிட்டு வந்துவிடுகிறேன்' என்றுகூடச் சொன்னார்கள்; பொய்யல்ல. எல்லாரும் சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை—சில பேர்தான். நண்பர்கள் போகட்டும்—மந்திரிபதவி பார்த்துவந்தது; இனி ஆகப்போகிறது ஒன்றும் இல்லை. உள்ளபடியே நமக்கு வேண்டிய ஆதரவெல்லாம் வந்திருக்கிறது கொஞ்ச நாளாய்.

இப்பொழுது நாம் செய்யவேண்டிய வேலையை ரொம்பத் தெளிவாய் ஏற்பாடு பண்ணிக்கொண்டோம்; தீர்மானம் பண்ணி எல்லா விஷயத்தையும் விளக்கிவிட்டோம். ஜனங்களுக்குள்ளேயும் நல்ல உணர்ச்சி இருக்கிறது. இதுவரைக்கும் நமக்குப் பெயர் கொடுத்திருக்கிறவர்கள் ஒரு இரண்டாயிரம் பேருக்குமேலே இருக்கும்; இன்னும் கேட்டால் தினம் வரும் கற்றை கற்றையாக; அது பற்றாது. நாம் வேறுவிதத்திலே இன்னும் மக்களிடத்திலே உறுதிவாங்கப் போகிறோம்.

காரியத்தை ஆரம்பிக்கப் போகிறோம். போராட்டம் ஒன்றும் தகராறுக்காக அல்ல; வேறே எந்தவிதமான சுயநல லாபத்திற்காகவும் அல்ல; அரசியல் உணர்ச்சியைக் கொண்டல்ல. 'இழிவு ஒழியவேணும்' என்கிற மான உணர்ச்சிக்காகப் போராடுகிறோம். இதற்கு எதிர்ப்பு இருக்காது. ஏதோ சட்டசபையிலே, அங்கே, இங்கே இருக்கிறது என்றால்—அவர்களுக்கு வேறே வேலை என்ன? ஏதாவது பண்ணித் தீரவேணும். அவர்களுக்கே வெட்கமாகத்தான் இருக்கும்—இதெல்லாம் நாம் இப்படிச் செய்கிறோமே என்று. அவர்கள் நிலைமை அப்படி. ஆனால் நமக்குப் போதிய ஆதரவு இருக்கிறது; ஆட்கள் இருக்கிறார்கள்; வசதி எல்லாம் இருக்கின்றது; பொருளாதார வசதி இருக்கிறது; உதவிபண்ணுகிறதற்கு வேண்டிய உணர்ச்சியுள்ள இளைஞர்கள், அறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஒன்றும் குறைச்சல் இல்லை. நல்லமுறையிலே நாம் கண்டிப்பாக வெற்றி பெறுவோம்; வெற்றிபெறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவது, இந்தக் காரியத்திலே, ஒரு காரியம் என்று அல்ல—நம் இழிவு நீங்கு கிறது என்கிறது மாத்திரம் இதிலே இல்லை. நாம் வெற்றிபெற்றோமானால் மற்ற நம் காரியங்களும், பகுத்தறிவு சம்பந்தமான காரியங்களும், சாதியைப் பொறுத்து இல்லா விட்டாலும்—கடவுள், மதம், சாஸ்திரம் என்ற முட்டாள்தனமான சில கருத்துகளும் ரொம்பத் தெளிவாகும். இந்தியாவிலே மாத்திரம் அல்ல; உலகத்திலேயே—நாம் ஒரு பகுத்தறிவு உள்ள சமுதாயம், பகுத்தறிவு உள்ள ஆட்சி என்கிற மாதிரியில் நல்ல வாய்ப்புக் கிடைக்கும். நமக்கு மாத்திரம் தைரியம் வேணும், உணர்ச்சி வேணும், முடிவு பண்ணிக்கணும். நம் பங்கு இதிலே இன்னது; என்ன ஆனாலும் நம் பங்கு இன்னது என்கிற உணர்ச்சி வந்து இதைப் பொறுத்து உற்சாகம் ஏற்படும்படியாக நடந்துகொள்வதன் மூலம்

கிளர்ச்சியைப் பலப்படுத்த வேணும்; பயன்படுத்த வேணும். இப்போது நான் சொல்லு கிறதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 'பார்ப்பானோடு போராடுகிற கடைசிப் போராட்டம் என்று இதை வைத்துக்கொள்ளணும்'; நம் ஆட்களோடு போராடுகிறதில்லை; யாரும் நினைக்கமாட்டான். வெளியூர்க்காரன் மற்ற என்னமாகவாவது நினைப்பானோ என்னவோ—மற்ற மாகாணக்காரன்; கொஞ்சநாள் ஆனால் அவனும் ஒத்துக்கொள்வான். இந்தக் கிளர்ச்சி ஏற்பட்டு ஒரு ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர், மூவாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனார்கள்; இன்னின்ன விதமான தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற நிலைமை வருகிறபோது அனேகமாக இது மற்ற மாகாணத்துக்கும் பரவும்; ஏனென்றால், இது சமுதாயத்தைப் பொறுத்தது—எல்லா மக்களையும் பொறுத்தது. அவ்வளவு துணிவாக அலட்சியமாக இருக்கமாட்டார்கள். நமக்குப் பின்பலம் அதிகம் ஏற்படுமே தவிரக் குறையாது.

முன்னமேயும் சொன்னேன்—பொது அறிவு, இந்தக் கடவுள், மதம் முதலியவை பற்றிய எண்ணம் எல்லாம் கொஞ்சம் மாறும். இதில் எவ்வளவு வெறுக்க வேணுமோ, எவ்வளவு ஒழிக்க வேணுமோ அதிலேயிருந்து ஒதுங்கும்படியான ஒரு நல்ல வாய்ப்பு நமக்கு ஏற்படும்.

அனேகமாக, நான் சொல்லுகிறேன், இது ஒரு கடைசிப் போராட்டம் என்றுதான் நினைக்கிறேன். இதிலே வெற்றிபெறவில்லையானால் அப்புறம் நமக்கு வாய்ப்பே இல்லை; ஆட்களும் கஷ்டமாகத்தான் தெரியும்.

இப்போது அவர்கள் ரொம்பத் திட்டம் போடுவார்கள். எப்படி இதை அழிக்கிறது? எப்படி இதை அடக்குகிறது? என்பதைப்பற்றி எல்லாம் பலமான திட்டம்தான் போடு வார்கள். நாம் எவ்வளவு உறைப்பாக—துணிச்சலாக—கஷ்டத்தை ஏற்றுக்கொள்கிற தியாக உணர்ச்சியோடு இருக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் இதற்கு ஏற்படுகிற மதிப்பு இருக்குமே தவிர, சும்மா வேஷத்தினாலே மதிப்பு ஏற்படும் என்று நினைக்க முடியாது. அந்த மாதிரி உணர்ச்சியோடு நமக்கு இதிலே வாய்ப்பு வந்து, சாதாரணமான முறையிலே அவர்கள் அடக்குமுறை வருகிறது என்றால்—நமக்கு வெற்றியைத் தவிர வேறு வாய்ப்பு இல்லை. வேறு என்ன காரணம் சொல்லி நம்மை அடக்குவார்கள்?

நாளைக்கு நாம் ஆரம்பிக்கிறோம்; ஏதோ ஒன்று சொல்லுவோம்; திட்டம் போட்டு இருக்கிறோம், என்னென்ன திட்டம் என்று. பகிஷ்காரமோ அல்லது தடை வேலையோ அல்லது எரிக்கிற வேலையோ அல்லது ஏதோ ஒன்று செய்தோமானால்—சட்டத்தைச் சொல்லுவார்களே தவிர காரியத்தை என்ன சொல்லுவார்கள்? 'என்ன அக்கிரமம் பண்ணு கிறார்கள்; எதற்காகப் பண்ணுகிறார்கள்?' என்று யாராவது பேச முடியுமா? சட்ட விரோதம், பிடித்துப் போடுவான் என்று தெரிந்துதானே பண்ணுகிறான்; அப்புறம் நாம் ஏன் வேதனைப்படப் போகிறோம்? நமக்கு அனுகூலம் ஆகிற சங்கதிதான் இரண்டு பேரும் சொல்லுவார்கள்.

இரண்டாவது: நாம் கூடுமான வரைக்கும் பெண்களை இதிலே பூதவைக்கணும்; ஆண்கள் ரொம்பப் பேர் வரமுடியும்; இருந்தாலும் 100-க்கு 10 வீதமாவது பெண்கள் வரணும்; ஆயிரம் பேர் போனார்கள் என்றால் அதிலே 100 பெண்கள் இருக்கணும். கிளர்ச்சிக்கு அது ரொம்பத் தூண்டுகோலாய் இருக்கும்.

இயக்கத்துக்கு இறங்குகிறவர்கள், மன்னிக்கவேணும், ரொம்ப ஒழுக்கமாக இருக்க வேணும். சும்மா வேடிக்கையாய் உற்சாகத்திலே பேசிக்கொண்டு ஏதோ தந்திரமாக வரலாம் என்று இல்லை. அந்த மாதிரி இருக்கிறவர்கள் வெளியே இருக்கட்டும்; அதனாலே ஒன்றும் குற்றம் இல்லை. சும்மா வம்புக்கு, மற்றவன் பரிகாசம் பண்ணுவானே என்று—தான் கெடுகிறதும் இல்லாமல் காரியத்தையும் கெடுக்கிறதற்கு ஏதாவது உள்ளே புகுந்து கொண்டு கலகம் பண்ணச் சொல்லும், சிலபேரை! ஏனென்றால், வேறே விதி இல்லை;

தாங்களும் தோற்றுப்போய் விட்டார்கள்; தங்களை மரியாதை பண்ணமாட்டார்கள் என்று எண்ணம் வருகிறபோது ஏதாவது கலாட்டா பண்ணலாமா என்று தோணும். அந்த மாதிரி வரக்கூடாது. அதனாலே அவர்களைப்பற்றி ஒரு குறையும் சொல்லமாட்டோம். கலக்க வேணும் என்று நாம் விரும்புகிறதெல்லாம், மனதார அவர்களுக்காக உணர்ச்சி வந்து செய்யவேணும். 'சகலவிதமான வசதியும் இருக்கிறது, அதனாலே அவர்களுக்கு ஒன்றும் கெடுதி இல்லை' என்கிறவர்களைத்தான் நாம் விரும்புகிறோம். பல பேர் இருப்பார்கள்—முக்கியமானவர்களெல்லாம் இருப்பார்கள்—ரொம்ப நமக்கு வேண்டியவர்களாகவும் இருப்பார்கள்; வாய்ப்பு இல்லாவிட்டால் அதற்காக ஏதாவது குறை சொல்ல ஆரம்பித்தால் அப்புறம் ஏதாவது தந்திரம் பண்ண ஆரம்பிப்பார்கள். அதை எல்லாம் பெரிதுபண்ணிச் சொல்லவேண்டியதில்லை. காரியம் பண்ணுகிறேன், அவர்களாக வந்தவர்களைப் பார்த்துத்தான் நாம் அழைப்போமே தவிர, நாங்களாக ஒருவரை அழைக்கமாட்டோம். 'நீ இதைச் செய் அப்பா; நீ இதைச் செய் அப்பா' என்று எதற்காகச் சொல்லுகிறேன்? அந்தக் கிளர்ச்சிக்கு ஒரு கவுரவம் இருக்கவேணும்; நாணயம் இருக்கவேணும்; பார்க்கிறவன் எல்லாம்கூட அதை மதிக்கணும்; அதிலே ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேணும்—அதற்குத் தகுந்தபடிதான் சொல்லுகிறேன்.

இதை எந்தவிதமாக, எப்படி எப்படி என்கிறதை, அந்தந்த மாவட்டங்களிலே, அந்தந்த வட்டங்களிலே உள்ள நிலைமையைப் பார்த்து, அந்தத் தலைவர்கள் எப்படிக் கருத்துத் தெரிவிக்கிறார்களோ அதை அனுசரித்து ஒரு இடத்திலா, இரண்டு இடங்களிலா, பல இடங்களிலா என்று நாம் தீர்மானமாக ஒரு முடிவு பண்ணமுடியும்.

முக்கியமாக இதிலே இழிவு நீங்குகிறது ஒன்று; மடமை ஒழிகிறது என்கிறது ஒன்று; இது இரண்டையும்விட, விடுதலைக்கு நமக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுமே என்கிறது ஒன்று. ஏன் அப்படிச் சொல்லுகிறோம்—விடுதலைக்கு வாய்ப்பு ஏற்படும், பிரிவினைக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று? அதற்கு நாம் ஆசைப்பட்டால், அவன் இணங்கமாட்டான் இலேசிலே; யாரோடு போராடுகிறோமோ, யாரை மாற்றிக் கொள்ளச் சொல்லுகிறோமோ அவர்கள் இலேசிலே இணங்கமாட்டார்கள். அவர்கள் இணங்கினார்கள் என்றால், செத்துப் போனார்கள் என்றுதானே அர்த்தம்!

'சாதி இல்லை' என்று சொன்னால், பார்ப்பான் எவனையும் கொல்லவேண்டியது இல்லையே; பார்ப்பான் எல்லாம் செத்தான் என்றுதானே அர்த்தமாகிவிடும்? அந்த அளவுக்கு அவர்கள் சுலபமாக ஒத்துக்கொள்ளமாட்டார்கள்; ரகளைதான் பண்ணுவார்கள். அதனாலே நமக்கு அந்தப் 'பிரிவினை' என்கிற உணர்ச்சி வலுக்கும்; வலுத்தால் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு ஏற்படும். நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும் பிரிவினைக்கு விரோதிகள் இருக்கவே மாட்டார்கள்—இருக்கவே மாட்டார்கள்! ஏதோ காரியத்துக்குச் சில பேர், வரமுடியாதவர்கள், வாயை மூடிக்கொண்டாவது இருப்பார்களே தவிர, எதிலே இருந்து வந்துகொண்டு, 'இந்தக் காரியம் செய் அப்பா', 'அந்தக் காரியம் செய், அப்பா' என்று வரமாட்டார்கள். வந்தான்—அவனுக்கு எவ்வளவு மதிப்பு இருக்குமோ அவ்வளவு மதிப்புத்தான்! அப்புறம் அவன் தலையெடுக்க முடியாது, எவ்வளவு கெட்டிக் காரனாக இருந்தாலும். அதனாலே அவன் தன்னுடைய சுயநலத்தை முன்னிட்டே இதற்கு வராமல் ஜாக்கிரதையாய் இருந்துகொண்டிருப்பான்.

நாம் வெற்றிக்கு, நம் லட்சியத்துக்கு வந்துவிட்டோமானால், கூட அவனும் சேர்ந்து கொண்டாலும் சேர்ந்து கொள்வான்.

அடுத்து நம் மக்கள் எடுத்துக் கொள்கிற முயற்சி—எந்த விதமான விரோத உணர்ச்சி அல்ல, குரோத உணர்ச்சி அல்ல, யார் பேரிலேயும் வருத்தம் இல்லை; நம் காரியத்துக் காகத்தான் நாம் செய்கிறோம் என்கிற மாதிரியாகவே இருக்கவேணும்—நடத்தை, காரியம் எல்லாம். அந்தரங்கம், இயற்கைக்குச் சிலபேருக்கு விரோதம் இருக்கும்; அது ஏற்படுமே

தவிர, அதை ஏற்படுத்தவேணும் என்கிறதற்காக நாம் அதை ஆரம்பிக்கவில்லை. எல்லாப் பார்ப்பானுக்கும் விரோதமாகச் செய்யவேண்டும் என்று இல்லை; அவனுக்கு இது விரோத மாக இருக்கும். ஆனதினாலே அவன் கூடுமான அளவுக்குக் கேடுபண்ணத்தான் வருவான். அவ்வளவே தவிர நாம் ஒன்றும் அந்த விரோத உணர்ச்சியோடு காரியம் ஆரம்பிக்கணும் என்று இல்லை. மக்களுக்கு, இந்தக் காரியத்திலே இறங்குகிறபோது அந்தவிதமான உணர்ச்சி இருக்கக்கூடாது.

நமக்கு ஞாயம் இருக்கிறது, இந்த டில்லி அரசாங்கத்தை மாற்ற; நமக்கு ஞாயம் இருக்கிறது, நம் அரசாங்கத்தை அமைக்க; அடியோடு இந்தியா பூராவுக்கும் மாற்றா விட்டாலும், நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும் நாம் தனிச் சுதந்தர ஆட்சி என்று செய்து கொள்ள நமக்கு உரிமை இருக்கிறது. அந்த விஷயத்தை எடுத்து நண்பர் ஆனைமுத்து அவர்கள் நல்லவண்ணம் உங்களிடத்திலே சொன்னார். உலகத்திலே எந்த நாடும், எங்கேயுமே இப்படி இல்லை; அதனாலே இது ஒரு அக்கிரமம்தான் என்கிறது யாருக்கும் படும். அந்தக் காரியத்தைத்தான் செய்கிறோம். ஆனதனால் நாம் பிரிந்துகொள்ளு கிறோம் என்கிறதனாலேயே—பிரிவினை ஏற்படுத்துகிறதினாலேயே நமக்கு ஒன்றும் தவறு அல்ல; நாம் செய்த காரியமும் தவறான காரியம் அல்ல.

இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு வந்ததே—முன்னே நான் சொன்னாற்போலே, ஒரு பித்தலாட்டத்தினாலே வந்ததே தவிர நமக்கெல்லாம் ஆசை இருந்து வரவில்லையே! 'இந்தியா என்கிற ஒரு தேசம் ஆகணும்; அதிலே நாம் ஒரு நாட்டானாக இருக்கணும்—இதற்கு ஒரே தேசம்' அப்படி என்று நாம் ஆரம்பிக்கவில்லையே! ஆரம்பிக்கிறபோதே ஒவ்வொரு நாட்டுக்கும் கடைசியாக எண்ணுகிறபோதுகூட ஒரு இரண்டு மாகாணம், ஒரு மூன்று மாகாணம் என்று இந்தியாவை அய்ந்தாறு மாகாணம் பண்ணி, நம் மாகாணம் தமிழ்நாடு, ஆந்திர நாடு கேரளநாடு, கன்னடநாடு இந்த மாகாணங்களும், இதோடு இன்னும் ஒன்றோ, இரண்டோ சேர்த்து இது ஒரு யூனியனாக இருக்கணும் என்று அப்படி எல்லாம் திட்டம் இருந்தது. அம்பேத்கார் போட்ட திட்டமே இருக்கிறது—இன்னின்னது இன்னின்னது என்று. 'கூட்டு' என்று எப்படியோ இந்தமுறை வந்து சேர்ந்ததேதவிர, (வேறல்ல.)

ஆதலினாலே இது ஒரு மோசடியான காரியந்தான்; உள்ளபடியே ஒரு மோசடியான காரியந்தான்; இப்போது நடக்கிறதும் அப்படித்தான். மற்ற நாட்டோடு நாம் கூடி இருக்கிறதனாலே என்ன ஆகுது? மற்ற நாட்டினாலே நாம் என்ன பலன் அனுபவிக் கிறோம்? நம் நாட்டினாலேயாவது அவனவன் பலன் அனுபவித்துக்கொள்ள உபயோகப் படுத்திக்கொள்கிறானே தவிர, நாம் 100-க்கு 90 பாகம் மற்ற நாட்டோடு நாம் இருக்கிற தினாலே நமக்கு என்ன சவுகரியம் சொல்லுங்கள்! இல்லை—நாளைக்குப் பணம் காசு என்றால் என்ன? எங்கிருந்து வந்தது? நம்கிட்டே வாங்குகிறதைத்தான் நம்மிடத்திலே கொடுக்கிறானே தவிர, எங்காவது சம்பாதித்து நமக்காக ஒன்றும் நஷ்டப்படுகிறாற்போல நமக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லை; இதற்கு ஒரு அவசியமும் இல்லை. ஒன்றாகத்தான் இருக்கணும்; அதனாலே இன்னின்ன இலாபம் அடையலாம் என்று சொல்லுகிறதற்கு ஒரு காரியமுமே இல்லை. சுயநலமில்லாத எவனும்-உணர்ச்சி உள்ள எவனும் நம் காரியம் ஞாயம் என்றுதான் சொல்லுவான். அதனாலே நாம் செய்கிற காரியம் ஞாயமான காரியம்; முன்னமேயே செய்திருக்க வேண்டியது; நமக்குள்ள பல காரணங்களாலே, என்னமோ நாம் அலட்சியமாக இருந்துவிட்டோம். இதை நாம் கண்டிப்பாகச் செய்வோம். மனதிலே வெற்றி பெறுகிறோமா, தோல்வி அடைகிறோமா என்கிற எண்ணமே இருக்கக்கூடாது.

நம் கடமையைச் செய்கிறோமா? அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது அந்த எண்ணம். சும்மா, அனாவசியமாக, தோற்றால் என்ன பண்ணுகிறது? வெற்றியானால் என்ன ஆகிறது? என்றெல்லாம் நினைக்கக்கூடாது. 'அடிமையாய் இருக்கிறோம்; இழி

வுக்கு ஆளாகி இருக்கிறோம்; இது மாறுவதற்கு நாம் ஏதாவது செய்யணும்—செய்யலாம்' என்று நினைக்கணும். முன்னமேயே சொன்னேன்—இழிவு நீங்குகிறது ஒன்று; மடமை நீங்குகிறது ஒன்று, ஆக இரண்டு வரும். அது உலகத்துக்கு ரொம்பப் பயன்படக்கூடிய காரியம். ஆனதினாலே, எல்லா மக்களும் அருள்கூர்ந்து முடிவு பண்ணிக்கொண்டு, தம்மால் ஆன உதவியைச் செய்யணும்; தம்மாலான அளவுக்குப் பங்கு எடுத்துக் கொள்ளணும். எல்லாரும் ஜெயிலுக்குப் போகணும் என்றே இல்லை; நிர்வாகம் பண்ணுகிறதற்கும் நிறைய ஆட்கள் வேணும்; பல இடங்களிலே ஆரம்பித்தோமானால் ரொம்பப் பெரிய நிர்வாகிகள் எல்லாம் வேணும்; அப்புறம் பணம் வேணும்; பணம் இருக்கிறது; பணம் இல்லை என்று நம் இயக்கம் நின்றுபோகாது—இல்லை, கேட்டாலும் வராமல் போகாது; கூடுமான வரைக்கும் நமக்கு வரும்.

இன்றைய தினம்கூடச் சொல்லுவேன், கிட்டத்தட்ட நான் ஆரம்பிக்கிறபோது, ஒரு இருபதாயிரம் ரூபாய் வந்தால் பரவாயில்லை—பத்து மாவட்டத்துக்காரர்கள் 1000 ரூபாய் வீதம் கொடுத்துவிட்டு, வசூலிலே ஒரு பத்தாயிரம் பண்ணிவிட்டால் பரவாயில்லை என்று நான் நினைத்தேன்; யார் கிட்டேயும் சொல்லவில்லையானாலும் திட்டம் அவ்வளவுதான் போட்டேன்; அதிகமாக ஒன்றும் பிரயத்தனப்படவில்லை—நிறையப் பணம் வந்துவிட்டது; ஒரு முப்பது, நாற்பதாயிரம் ரூபாய் போல நம்பிக்கையாய் இருக்கிறது. அரிசி வேணும் என்று கேட்டேன். ஒருவர் 10 மூட்டை கொடுத்தார்; இன்னொருவர் 5 மூட்டை கொடுத்தார்; இன்னொருவர் நான் 3 மூட்டை அனுப்புகிறேன், 5 மூட்டை அனுப்புகிறேன் என்று அய்யா வீரமணியிடம் வாக்குக் கொடுத்து இருக்கிறார்கள். ஏறக்குறைய 30, 40, 50 மூட்டை அரிசி வரும்; மக்களுக்குப் பயன்படுத்தணும். ஏன்? எதற்கு இதைச் சொல்லு கிறேன்? மக்கள் தாராளமான மனப் பான்மையோடு, வேண்டிய உதவி செய்யவேண்டும் என்று இருக்கிறார்களே தவிர, இதை ஒரு தொந்தரவாக நினைக்கிறவர்கள் ஒருவர்கூட இல்லை; ஒருவர்கூட இல்லை.

ஆனதினாலே, அருமைத் தோழர்களே! வீட்டுக்குப் போனதினாலே விஷயம் முடிந்துவிடாது, செய்யணும், நம்மாலான உதவி எல்லாம். இந்த நிர்வாகிகளுக்கு எப்படி உற்சாகம் ஊட்டவேணும்; நீங்கள் ரொம்பப் பாடுபட்டு விஷயங்களைத் தெரிந்து ஆதர வாகக் கொடுக்கவேணும். வேறே நான் ஒன்றும் சொல்லவில்லை. மனதிலே நினைத்துக் கொள்ளுங்கள்—நாம் ஒன்றும் தப்புப் பண்ணவில்லை; செய்யவேண்டிய காரியத்தைச் செய்கிறோம்; முன்னாடியே செய்திருக்கவேண்டியதை இப்போது செய்கிறோம். இதைச் செய்யாததினாலே நாம் இன்ன இழி நிலையிலே இருக்கிறோம்; இது நம் வாழ்வுக்குக்கேடு– என்கிற தலைப்பை வைத்துக்கொண்டு மற்றக் காரியங்களைச் சிந்திக்கவேண்டும் என்பது தான். ஆகவே, நான் அனேகமாக ஒன்றும் சொல்லவில்லை; எல்லாம் அவர்கள் சொன்ன தைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன்.

அருமைத் தோழர்களே! நான் உண்மையாகவே கேட்கிறேன். உங்களுக்குத் தோன்றுகிற யோசனையைச் சொல்லுங்கள்; இங்கே சொல்லவேணும் என்றில்லை. நாளை முதற்கொண்டே வேலை ஆரம்பிக்கிறோம். என்னென்ன காரியம் செய்தால் தேவலை; நாம் எப்படி எப்படி நடக்கணும் என்கிற வேலையை எங்களுக்கே விட்டுவிடாதீர்கள். நீங்களும் கவலை எடுத்துக்கொண்டு எப்படி எப்படி நடக்கணும் என்கிறதைப்பற்றி நல்ல விளக்கம் கொடுங்கள். ஏனென்றால், இது பொதுக் காரியம்; நல்ல எண்ணத்தோடே செய்கிறது; அவசியம் செய்து தீரவேண்டியது. ஆனதால், இது ஒருவருக்குச் சம்பந்தப் பட்டது அல்ல; திருப்பித்திருப்பி—இதைச் செய்யாததினாலே முட்டாள்தனம் என்று சொல்லலாமே தவிர, வேறே ஒரு தத்துவமும் இல்லை. எல்லாருக்கும் பங்கு இருக்கணும்; எல்லாரும் இதற்கு உதவிசெய்யணும்; எல்லாருடைய ஒத்துழைப்பும், யோசனையும் வேணும். ஜனங்கள்—பாமர மக்கள் இருக்கிறார்கள்; எல்லாருமே தயாராய் இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. சிலபேர் இருக்கிறார்கள்—'என்னடா, இப்படி?' என்று நினைக்

கிறவர்கள். அவர்களெல்லாம் திருந்தும்படியாக நாம் ஒற்றுமையாக, நல்ல எண்ணத்தோடு, நம்மை நாமே ஆளாக்கிக்கொண்டு, கஷ்டநஷ்டங்களுக்கு ஆட்பட்டுப் பாடுபடத் தயாராய் இருக்கிறோம் என்று ஆரம்பித்தால், கொஞ்சம் மாறுபட்டவர்களுக்குக்கூடக் கொஞ்சம் புத்தி மாறிவிடும்; காரியம் நமக்கு அனுகூலமாகத்தான் இருக்கும்; நம் நாட்டுக்கே இது ஒரு பெரிய காரியம்; நம் சமுதாயத்திற்கே இது ஒரு பெரிய திருப்பம்;—ஒரு திருப்பந்தான்.

சாதி இல்லை என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டால், எவ்வளவு பெரிய காரியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆனதனாலே ஒன்றும் வேஷமான காரியமாக முடியாது. மற்றும் நாம் செய்யவேண்டிய வேலை ரொம்ப இருக்கிறது. அவைகளை நாளாவட்டத்திலே நாம் கலந்துகொள்கிறோம்; சொல்கிறோம். நமக்கு ஒரு பத்திரிகை இருக்கிறது. இன்னும் ஏதாவது பத்திரிகை அனுகூலமாக இருக்கலாம். பத்திரிகை நடத்துகிறதென்றால் ரொம்பக் கஷ்டம்; பேப்பர் கிடைக்கிறதில்லை; விலை ரொம்ப ஆகிறது; கட்டுகிறதில்லை. ஆனாலும் என்ன நஷ்டம் வந்தாலும் இயக்கம் நடத்துகிறபோது, ரொம்பத் தெளிவாக, பத்திரிகை நடத்துகிறோம். பிரசாரமும், தினமும் ஒவ்வொரு இடத்திலேயும் பண்ணிக்கொண்டு, ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டு வரணும்; இன்றைக்கு அங்கே, நாளைக்கு இன்னொரு இடத்திலே என்று விஷயங்களைப் போட்டுக்கொண்டு வரணும் என்றால் ரொம்பப் பொறுப்பு இருக்கணும். ஆகையினாலே—மன்னிக்கவேணும் நீங்கள்—என் மனதிலே இருக்கிறதைச் சொன்னேன்; எல்லா விஷயத்தையும் எல்லாரும் சொன்னார்கள்; உங்களுடைய ஆதரவெல்லாம் நிறைய இருக்கிறது என்று நான் உண்மையாகவே நினைக்கிறேன். ஆதலினாலே, நமக்கு யோசனை சொல்லவும் உற்சாகம் ஊட்டவும், இன்னும் என்ன தேவையோ அதற்கு உதவி பண்ணவும் நாமெல்லாம் இருக்கவேணும்.

நம்முடைய சமுதாயத்திற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு; தமிழர் சமுதாயத்திற்கு இது ஒரு திருப்புமுனை. ஏனென்றால், எவ்வளவு இழிவாக இருக்கிறோம், பாருங்கள்! 100-க்கு 90 பேராய் இருந்துகொண்டு—நாம் இழிவான மக்கள் என்று நெடுநாளாய் இருந்துகொண்டு வருகிறோம் என்று சொன்னால், எவ்வளவு கீழ்நிலையிலே நாம் இருக்கிறோம் என்று பேர்! இது மாறும்படியான வாய்ப்புவருகிறது—நாம் புதியதொரு சமுதாயத்தை உண்டாக்கினாற் போலத்தான் ஆகும். அதிலே நமக்கு நல்ல பெருமை எல்லாம் இருக்கிறது. மனதிலே வைத்துக்கொள்ளுங்கள்—அனேகமாக நாம் பிரிந்துகொள்வோம்; நாம் பிரிந்துகொள்வோம்! ஏனென்றால், அவன் நம்வசதிக்கு வரமாட்டான். பிரியா விட்டாலும் ரொம்ப உணர்ச்சி நம் மக்களுக்கு உண்டாகும். எல்லாரைப் போல நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.—அப்படி, நம் ஆட்களுக்குள்ளே எதிரிகள் அதிகமாக வரமாட்டார்கள். ஏதோ அரசியலில் இருக்கிறவன் கத்துவானே தவிர, நம் முயற்சியைக் குறைசொல்லி நம் காரியத்தைச் சறுக்கி விடும்படியாக யாரும் இருக்கமாட்டார்கள். இந்தப் பார்ப்பனப் பத்திரிகைக்காரர்களும், அவர்களும் தங்களின் சுயநலத்தை உத்தேசித்தாவது யோக்கியமாய் நடந்துகொள்ள வேண்டியது. இன்னமும் இப்படியே இருக்கவேணும் என்று அவர்கள் நினைத்தார்களானால் அது அவர்கள் தப்புத்தான்; நாளாவட்டத்திலே அப்படியே போய்விடும் என்று கருதவேண்டாம் என்று விஷயங்களை எல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்லி, நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். இப்போது நேரம் இரவு 8 மணி ஆகிறது; முடிக்கிறேன் நான். தயவுசெய்து நீங்கள் எல்லாம் நன்றாக மனதிலே உற்சாகமாக, எங்களுக்கு உற்சாகம் ஏற்படும்படியான மாதிரியிலே, நீங்கள் மற்றும் தினம் அங்கங்கே நடைபெறும் காரியங்களிலிருந்து, இதற்கு ஒரு நல்லநேரம் என்று கருதிச் செய்யணும்; வேறே ஒன்றும் நான் அதிகமாகச் சொல்லவில்லை.

நாம் உண்மைக்குத்தான் போராடுகிறோம்—பொய்க்குப் போராடவில்லை; பொது நலத்துக்குத்தான் போராடுகிறோம்; 4 கோடி மக்களுடைய நன்மைக்காகத்தான் போராடுகிறோமே தவிர, எங்களுக்காக ஆகவேண்டிய காரியம் ஒன்று இல்லை. அதனாலே இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம்—மக்களுக்கெல்லாம் உணர்ச்சி ஏற்படும்படியான நிலையிலே

—சமுதாயத்திற்கே ஒரு நல்ல வாழ்வு மாதிரி ஏற்படுகிறது என்பது ரொம்பக் கஷ்டம். இந்தச் சமயத்தை நாம் நல்லவண்ணம் உபயோகப்படுத்திக்கொள்ளவேணும்.

நான் சொல்ல வருவது, நாம் ஜெயித்தோமா, தோற்றோமா என்கிற எண்ணம் உங்களுக்கு இருக்கக்கூடாது; எனக்குத் தைரியம் இருக்கிறது; ஆனால் அதை மனதிலே வைக்கக்கூடாது. நம் கடமையைச் செய்கிறோமா இல்லையா என்கிறதைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு துணிந்து தொண்டாற்ற வேணும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றபடி நீங்கள் இவ்வளவு நேரம் காதுகொடுத்ததற்கும், இரண்டு நாளாக நீங்கள் உங்களுடைய வேலைவெட்டி எல்லாம் விட்டுவிட்டு வந்து நீங்கள் உற்சாகமூட்டி இந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு கொடுத்ததற்கும், மற்றும் பொதுமக்கள் இதற்கு ஆதரவாய் என்னென்ன உதவி பண்ணவேணுமோ அவைகள் எல்லாம் செய்ததற்கும், தோழர்கள் சிலர் நம் இயக்கத்திற்காக ஒவ்வொரு காரியத்திற்கும் தங்கள் பணியை ஏற்றுக்கொண்டு ரொம்ப உற்சாகமாக அவர்கள் உதவி செய்ததற்கும் நான் அவர்களுக்கெல்லாம் நன்றிசெலுத்து கிறேன் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். அதிகமாகச்சொல்லவில்லை. வணக்கம்.

(சென்னையில், பெரியார் திடலில் 1973 டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற்ற, 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு'களில் 9-ந் தேதி, தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய தலைமை முடிவுரை. இது அவர்தம் வாழ்நாளில் கடைசி மாநாட்டு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.)

[ஆதாரம்: Tape Recorder—Akai, Track No. 3, Speed 15/16, 146 feet]

3. இறுதிச் சொற்பொழிவு

(மரண சாசனம்)

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

இன்றைய தினம் இந்த இடத்திலே, சமுதாய இழிவு ஒழிப்பு சம்பந்தமாக சென்னையில் 10 நாட்களுக்கு முன்னால் நடந்த மாநாட்டுத் தீர்மானத்தை விளக்கவும், மற்றும் நம்முடைய கடமைகளை எடுத்து விளக்கவும் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது. அதன்படி பேரறிஞர்கள் பலர் அத் தீர்மானத்தை விளக்கியும், மற்றும் பல அரிய விஷயங்களையும் நல்லவண்ணம் எடுத்து விளக்கினார்கள்; எல்லா விஷயங்களையும் நல்ல வண்ணம் விளக்கினார்கள். என்னையும் ஒரு முக்கியப் பேச்சாளனாக இதிலே குறிப்பிட்டு இருக்கிறபடியினாலே நானும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தோழர்களே! இந்தத் தியாகராயநகர் என்னும் மாபெரும்—பிரபலமான இந்த நகருக்கு இதற்கு முன்னால் நான் வந்து—நண்பர்கள் சொன்னார்கள், 10 ஆண்டுக்கு மேலாகும் என்று. இருக்கலாம்—எனக்கு ஞாபகம் வரவில்லை, பக்கத்திலே இப்போது நான் வந்ததாக. சென்னையில் அடிக்கடி—அடிக்கடி பேசுகிறேன். என்ன காரணமோ இங்கே வரும்படியான வாய்ப்பு இப்போதுதான்; வந்திருக்கிறேன். வரும்படியான வாய்ப்பு ஏற்பட வில்லை என்றால், அதனாலே சில காரியங்களும் குறைவாய் இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

என்னுடைய கருத்துகள் இவ்வளவு தூரம் எட்டுவதற்கு இல்லாததினாலே, மக்கள் பலருக்குத் தெளிவுபட்டு இருக்காது—என்ன விஷயம்; நம் கழகம் என்ன; காரியம் என்ன என்று. ஆனாலும் பலருக்குத் தெரிந்து இருக்கலாம். என்றாலும், அண்மையிலே நடக்கப் போகிற கிளர்ச்சியை முன்னிட்டு, சென்னையில் பல பாகங்களிலேயும், அது விஷயமாகத் தெளிவுபடுத்த பல கூட்டங்கள் போடவேண்டும் என்று தீர்மானித்ததன்படி பல கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. என்னமோ, இது ஒன்று இரண்டுதான் நடந்தது; இன்னமும்

நடக்கலாம்; ஜனவரி 26-ம் தேதிக்குள்ளே மற்ற பாகங்களிலும் நடக்கலாம்; நடக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

தோழர்களே! நான் பேச்சுதி துவக்குவதற்கு முன்பாக நமது நண்பர் உயர்திரு வீரமணி அவர்கள் நம்முடைய கழக லட்சியச் சொல்லை விளக்கினார்கள்; நானும் விளக்கும்படிக் கேட்டுக்கொண்டேன். அதிலே, நம் கழகத் தோழர்களுக்கு ஒன்றும் கஷ்டம் இருக்காது. புதிதாக வருபவர்களுக்கும், பகுத்தறிவைப்பற்றிக் கவலைப்படாமல் மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கிறவர்களுக்கும் கொஞ்சம் சங்கடம் ஏற்பட்டு இருந்தாலும் இருக்கலாம், 'என்னடா, கடவுளை இப்படி எல்லாம் சொல்லுகிறான்' என்று. கடவுளைச் சொல்லுகிறதோடு இருக்காமல் கடவுளை நம்புகிறவர்களைக்கூட முட்டாள் பயல் என்று சொல்லுகிறானே—இது என்னடா என்று சில பேருக்குக் கோபம் வரலாம்.

கடவுள் சங்கதியை எடுத்தால் ஒருவனுக்கு ஒருவன்—நம்பிக்கைக்காரனும், நம்பிக்கை இல்லாதவனும்—அவனை இவன் முட்டாள் என்றுதான் சொல்லியாகணும்; இவனை அவன் முட்டாள் என்று சொல்லித்தான் ஆகணும். ஆனாலும், நாங்கள் பகுத்தறிவை அடிப்படையாக வைத்துக் கடவுள் சங்கதி பேசுகிறதினாலே கொஞ்சம் மரியாதையாகப் பேசுவோம்; மானத்தோடு பேசுவோம். பகுத்தறிவு இல்லாதவர்கள் கொஞ்சம் கடுமையாய்த்தான் பேசுவார்கள்—நம்மைவிட மோசமாக.

உதாரணமாகச் சொல்லுவேன்; நாலாயிரப் பிரபந்தம் பாடின ஆழ்வார்கள்—தேவாரம், திருவாசகம் எல்லாம் பாடின நாயன்மார்கள்—இந்தப் பயல்கள் சொன்னதைவிட நாங்கள் அதிகமாய்ச் சொல்லுகிறதில்லை. அதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். நாம், இவனைத் தான் திட்டுகிறோமே தவிர—இவனுடைய புத்தியைத்தான் திட்டுகிறோமே தவிர, அந்தப் பயல்கள் சொன்னாற்போல, அவர்கள் பெண்டாட்டி, பிள்ளைகளை நாம் ஒன்றும் குறை சொல்லவில்லை. நீங்கள் நினைக்கணும்! என்னடா, இப்படிச் சொல்லுகிறானே என்று சில பேருக்குக் கோபம் இருக்கும்.

ஆனால், நாலாயிரப் பிரபந்தம் பாடியிருக்கிறவன், 'கடவுள் இல்லை என்கிறவனை எல்லாம் கொல்ல வேணும்; அதுதான் கடவுள் பக்தனுக்கு அடையாளம்' அப்படியென்று பாடி இருக்கிறான். தேவாரம் பாடினவன், 'கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டிக் கிட்டேயெல்லாம் நான் படுக்கணும்; கடவுளே, எனக்கு அந்த வசதி பண்ணிக்கொடு!' என்று கேட்டு இருக்கிறான். யார் என்று கேட்பீர்கள்; பேர்கூடச் சொல்லுவேன்–சம்பந்தர் என்கிற ஒரு பக்தன்—பக்தனாம் அந்த அயோக்கியப் பயல்! அவன் சொல்லி இருக்கிறான், 'கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டிக்கிட்டேயெல்லாம் நான் படுக்கணும்' என்று கடவுளைக் கேட்கிறான்; 'இசைத்து வை' என்று (கேட்கிறான்).

நாலாயிரப் பிரபந்தத்திலே ஓர் ஆழ்வார்—தொண்டரடிப்பொடி என்கிறவன்—'கடவுள் இல்லை என்கிறவனை எல்லாம் வெட்டு, வெட்டு, வெட்டு!' என்கிறான். இது பாட்டிலே நடந்தது. காரியத்திலே எவ்வளவு நடந்திருக்கிறது தெரியுமா?

'கடவுளைப்பற்றி அறிவைக்கொண்டு ஆராய்ந்து பாருங்கள்; சிந்தியுங்கள்' என்று சொன்னான்—அவ்வளவு பச்சையாகக்கூடச் சொல்லவில்லை, புத்தன். 'நம்பி விடாதீர்கள், சிந்தியுங்கள்' என்றான். கடவுள் நம்பிக்கைக்காரப் பயல்கள் அவர்களை என்ன பண்ணினார்கள்? வெட்டினார்கள்! வெட்டி, வெட்டி தலை ஒரு பக்கம், முண்டம் ஒரு பக்கம் குவித்தார்கள். இந்த வெட்டினதும், குவித்ததும் கோயிலிலே எல்லாம் இன்னும் சித்திரமாக இருக்கிறது; கல்லிலே அடித்து வைத்திருக்கிறான்—ஒருவன் காலைப் பிடித்து இருக்கிறான், ஒருவன் தலையைப் பிடிக்கிறான், ஒருவன் வெட்டுகிறான்.

இன்னொரு கூட்டம், சைவக் கூட்டம்—அயோக்கியப் பயல்கள் கூட்டம். அவர்கள், கடவுள் இல்லை என்று சொன்னவனையெல்லாம் கழுவேற்றினார்கள். கழுவு நிறுத்தி—நிர்வாணமாக ஆக்கி—ஆசனத்திலே இட்டு, மூலை (முனை) தலைக்கு மேலே வருகிறாற்

போலக் கழுவேற்றினார்கள். எத்தனைப் பேரை? 8000 பேரை. இன்றைக்கு அது உற்சவமாக நடக்கிறது—தினமும்; (இதற்கு) புராணம் இருக்கிறது; சரித்திரம் இருக்கிறது. ஆனதினாலே, கடவுள் இருக்கிறது என்று சொல்லுகிற அயோக்கியப் பயல்களைப்போல, நாங்கள், அவ்வளவு அசிங்கமாகப் பேசவில்லை. 'முட்டாள்; மடையன்' என்று சொல்லுகிறோம். அதை நாங்கள் ருசுப் பண்ணுவோம். நம் ஜனங்களுக்குப் புரியாததினாலே, 'என்ன, இந்தப் பயல்கள் இப்படிப் பேசுகிறார்கள்!' என்று நினைப்பீர்கள். அது, புரியாதது என்று சொல்லமாட்டேன்—மானமில்லாத தன்மை (என்றே சொல்வேன்).

மற்றும் நண்பர்கள்—முன்னே பேசியவர்கள், மற்ற தோழர்கள், நம் தங்கராஜ் அவர்கள், வீரமணி அவர்கள் ஆகியோர் ஆதாரங்களையெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். நாம் வாயிலே சொல்லிவிட்டுப் போகிறோம்.

இன்றைய தினம், அரசியலிலே இருக்கிற அயோக்கியர்கள், அரசியல் சட்டம் செய்த காலத்திலே, நம்மையெல்லாம் தாசிமக்கள் என்று அதில் எழுதினார்கள். இதற்குமேலே என்னவேணும்—கடவுள் நம்பிக்கைக்காரர்கள் அயோக்கியப் பயல்கள் என்று சொல்லுகிறதற்கு? சட்டம் எழுதி இருக்கிறார்கள்—தமிழ்நாட்டில் உள்ள மக்கள், நண்பர் வீரமணி சொன்னாற்போல, கிறிஸ்தவன், முஸ்லிம், பார்சி தவிர மற்றவன் எல்லாம் இந்து; இந்துவிலே 100-க்கு 2½ பயல்களாய் இருக்கிற பார்ப்பான் தவிர பாக்கி 97 சில்லரைப் பேர் தேவடியாள் மக்கள்—பார்ப்பானுக்கு வைப்பாட்டி மக்கள் (என்று) சட்டத்திலே எழுதி வைத்திருக்கிறான். இதற்கெல்லாம் காரணம் என்ன? திருப்பிச் சொல்லாத காரணம்; அவர்களைக் கண்டிக்காத காரணம். பார்ப்பானைக் கண்டால், 'வாப்பா, தேவடியாள் மகனே! எப்போது வந்தாய்?' என்று கேட்கணும். 'ஏண்டா அப்படிக் கேட்கிறாய்?' என்றால்—'நீ எழுதி வைத்தாயடா, என்னைத் தேவடியாள் மகன் என்று! நான் நிஜமாகவே சொல்லுகிறேன், நீ தேவடியாள் மகன் என்று! (என்று கூறணும்). இதில் என்ன தப்பு?

நம் பெண்டுகளிடத்திலே போய்ச் சொல்லணும்—'அம்மா, விளக்குமாறு எடுத்துக்கொள், இந்த அரசியல் சட்டத்தை எடுத்துக்கொள், தெருவிலே வை; போடு சீவுகட்டையாலே—அதைக் குத்திக் குத்தி' என்று. 'ஏனம்மா, அரசியல் சட்டத்தை விளக்குமாற்றாலே போடுகிறாய்?' என்று கேட்டால்—'அதை எழுதின அயோக்கியப் பயல்கள், என்னைப் பார்ப்பானுக்குத் தேவடியாள் என்று எழுதி இருக்கிறான்; பின்னே என்ன, அதனைக் கொஞ்சட்டுமா?' என்று கேட்கச் சொல்லுகிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்த மாதிரியான—பதிலுக்குப் பதிலான முறையை நாம் எடுக்காததனாலே, நாதி இல்லை நம்மைப்பற்றிப் பேசுகிறதற்கு; கேள்வி இல்லை நம்மைப்பற்றிப் பேசுகிறதற்கு. நாளைக்குக்கூட நம் ஆள் சிரித்துக்கிட்டுப் போவான்—'நேற்று வந்தான்; நாலு அடி அடித்தான்; நன்றாகப் பேசினான்' என்று அவ்வளவோடுதான் நின்று கொள்வான். பார்ப்பான் சொல்லுவான், 'நேற்று வந்தான் பார்த்தாயா, நாய்க்கன், அவன் என்னென்ன சொன்னான்; நான், என்ன பண்ணுவேன்?' என்று கவலைப்படுவான்; பெண்டாட்டிக்கிட்டே சொல்லிக்கிட்டு அழுவான். நமக்கு மான ஈனம் ஒன்றும் இல்லை; நாம் சிரித்துக்கிட்டுப் போய்விடுவோம்.

ஏன் சொல்கிறேன் என்றால், பழக்கத்திலே நம்மை ஈனசாதி என்கிறான்; 'ஏனடா' என்றால், 'நீ கோயிலுக்குள்ளே வர வேண்டாம்; நீ வந்தால் சாமி தீட்டாய்ப் போய்விடும்' என்கிறான். என்ன அர்த்தம்? 'கல்லைத் தொட்டால் தீட்டாகிவிடும்' என்றால், நம்மை எவ்வளவு கீழ்ச்சாதி என்கிறான்! சாஸ்திரத்திலே, தேவடியாள் மகன் என்கிறான்; பார்ப்பானுக்குப் பிறந்தவன் என்கிறான்; சூத்திரனுக்குப் பெண்டாட்டியே கிடையாது என்கிறான்; சூத்திரச்சி பார்ப்பானுடைய வைப்பாட்டி என்று எழுதி இருக்கிறான். (இதை எல்லாம்) யார் கவனிக்கிறார்கள்? இன்னும் அதேமாதிரிப் பல ஆதாரங்கள்.

எத்தனை வருஷமாக இது இருக்கிறது? 2000 வருஷமாக இருக்கிறது—மேலேயே சொல்லலாம்; நாசமாய்ப் போகட்டும். சுயராஜ்யம் என்கிறார்களே, இதிலே சட்டத்திலே

இருக்கிறது—அரசியல் சட்டத்திலே இருக்கிறது, நம்மைத் தேவடியாள் மகன் என்கிறது. அப்புறம், நமக்கு என்னதான் கதி? நாம் எப்போதுதான் மனுஷராகிறது? நாடு நம் நாடு; பார்ப்பான் எல்லாம் பிழைக்க வந்தவன் இங்கே! இந்த இழிவிலே இருக்கிற இவ்வளவு பெரிய சமுதாயம், இந்த 1973-லே, சட்டப்படி தேவடியாள் மகன் என்று இருந்தால்—சாஸ்திரப்படி தேவடியாள் மகன் என்று இருந்தால்—அனுபவத்திலே ஈனசாதி, நாலாஞ் சாதி, தீண்டாத சாதி என்று இருந்தால்—யார்தான் இதற்குப் பரிகாரம் (தேடுவது)? வேறே நாட்டான் நம்மைப்பற்றி என்ன சொல்லுவான்—நம் சங்கதியைச் சொன்னால்?

உலகத்திலே, தமிழர் இருக்கிறதைப்போல எத்தனையோ பங்கு முஸ்லிம் இருக்கிறான்; அவர்களுக்குள்ளே தேவடியாள் மகனே கிடையாது, ஈனசாதியே கிடையாது, எல்லோரும் சகோதரர்கள், ஒருவனுக்கொருவன் தொட்டுக்கொள்ளுவான், ஒருவன் சாப்பிட்டதை இன்னொருவன் சாப்பிடுவான், ஒருவன் இலையிலே இன்னொருவன் சாப்பிடுவான்—எச்சில்கூடப் பார்க்கமாட்டான். அதாவது, என்ன? அவ்வளவு சகோதரத்துவம் அந்த மதத்தின் தன்மை! அதேமாதிரி, பார்ப்பான். கிறிஸ்தவன், கவலைப்படமாட்டான்; சாதி என்று ஒருவனைக் குறை சொல்லமாட்டான். பார்ப்பானும் அதேமாதிரி தங்களுக்குள்ளே மேல், கீழ்ச்சாதி கிடையாது; எல்லாரும் ஒஸ்தி—நாம் எல்லாம் அவனுக்குத் தேவடியாள் மக்கள். இப்படி இருக்கக் காரணம் என்ன?

நண்பர்கள் சொன்னார்களே, அதுபோல, 50 வருஷமாய் உழைத்ததிலே ஏதோ கொஞ்சம் மாறுதல். அதுவும், எதிரிலே நம்மைப் பார்த்து, சூத்திரன் என்று சொல்ல மாட்டான்; வீட்டிலே எல்லாம் பேசுவான்—'இந்தச் சூத்திரப் பயல்கள்' என்றுதான் பேசுவான். இந்த இழிவிலே இருந்து நீங்கணும்.

ஏதோ சட்டம், சமத்துவம், கடவுள் என்று சொன்னால் ஏதோ அதை உதைக்கிறோம்; கடவுளை நாளைக்குச் செருப்பாலே அடிக்கச் சொல்கிறோம், பலதடவை நன்றாக அடித்தாயிற்று, நாளைக்கும் அடிக்கச் சொல்கிறோம், நம் தாய்மார்களையும் விளக்கு மாற்றாலே போடச் சொல்கிறோம். சட்டத்திலே இருக்கிறதை என்ன பண்ணுகிறது? ஏதோ நாங்கள் கொஞ்சம் உணர்ச்சியோடு இருக்கிறோம்; இன்றைக்கு அவன் வாயை மூடிக்கிட்டு இருக்கிறான். நாளைக்குக் காங்கிரஸ்காரன் வந்துவிட்டான் என்றால்? நாளை அன்றைக்குப் பார்ப்பான் வந்துவிட்டான் என்றால்? இல்லை, இந்தக் கம்யூனிஸ்டே வந்து விட்டான் என்றால்—அவன் காசுக்கு என்றால் என்னவேணுமானாலும் பண்ணுவானே—அவனல்லவா சத்தம்போடணும் எனக்குப் பதிலாக? எங்களைத் தவிர, நாதிஇல்லையே இந்த நாட்டிலே! எத்தனை நாளைக்கு, நாம் இப்படியே கட்டிக் காத்துக்கிட்டு இருப்போம்?

எல்லாக் கட்சிக்காரனும் ஒன்றாய்ச் சேர்ந்து இன்றைக்கு இங்கு இருக்கிற ஆட்சியை ஒழிக்கணும் என்கிறான். ஒழித்தால் ஒழித்துவிட்டுப்போ, எனக்கு ஒன்றும் கவலை இல்லை. அப்புறம் என்ன? இன்றைக்குத் திருட்டுத்தனமாக—மறைவாகப் பேசுகிறபேச்சை, நாளைக்கு வெளிப்படையாகப் பேசுகிறான்; பேசுகிறவனைப் பார்ப்பான் மாலைபோட்டு வரவேற்கிறான், அவனுக்கு விளம்பரம் கொடுக்கிறான். எனவே, தோழர்களே! நம்முடைய நிலைமை உலகத்திலேயே பெரிய மானக்கேடான நிலைமை; இரண்டாயிரம் வருஷமாக இருக்கிற முட்டாள்தனத்தைவிட, இந்தச் சட்டத்திலே இருக்கிறதே—'இந்து லா'விலேயும், மற்ற அரசியல் சட்டத்திலேயும்—அது பெரிய முட்டாள்தனம். அதைவிட, இதைச்சொல்லி மாற்றச் செய்யாமல் இந்த ஆட்சியிலேயே நாம் குடிமகனாக இருக்கிறோமே, அது மகாமகா மானங்கெட்டத்தனம். பொறுக்கித் தின்கிறவனுக்கு இந்த ஆட்சி வேணும்—வேண்டாம் என்று சொல்லவில்லை. மானத்தோடு பிழைக்கிறவனுக்கு இந்த ஆட்சியை ஒழித்துத்தானே ஆகணும்! 'என்னடா?' என்றால், 'உன்னாட்டம் நான், என்னாட்டம் நீ; என்னை நீ தேவடியாள் மகன் என்று சொல்கிறாய்; இதை மாற்றுகிறாயா? (அல்லது) மூட்டை கட்டுகிறாயா?' என்று கேட்டுத்தானே ஆகணும். இல்லாவிட்டால், விதி? இன்னும்

எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கிறது? இப்படியே இருப்போம் என்றுதான், என்ன நிச்சயம்? நாம் ஒழிந்தால் நாளைக்கு மாற்றிவிடுகிறான்—மாற்றினானே!

நம்முடைய கலைஞர் கருணாநிதி அவர்கள், 'கல்தான்; யார்வேண்டுமானாலும் பூசைபண்ணலாம்; ஆனால் முறைப்படி செய்யணும்' என்று யாவருக்குமே அனுமதி கொடுத்தார். பார்ப்பான் கோர்ட்—சுப்ரீம் கோர்ட் என்றால் பார்ப்பான் கோர்ட் என்றுபேர், சிரிக்காதீர்கள், அதிலே தமிழனுக்கு இடமே இல்லை; (அப்படிப்) போனாலும் அவனுடைய அடிமைதான் போவான்; அவன் சாஸ்திரத்தைப் பார்த்துத்தான் தீர்ப்புப் பண்ணுவான். சொல்லிப்போட்டானே—'கோயிலுக்குள்ளே போகிறது தப்பு—சாஸ்திரவிரோதம்' என்று! அட முட்டாள்களா! சாஸ்திரம் என்றால் எது? எப்போது எழுதினது? எவன் எழுதினான்? எவனாவது சொல்லட்டும்! 'ஆகமத்தின்படி' என்று எழுதினான், ஒரு அய்க்கோர்ட் ஜட்ஜ்—ஒருவனோ, இரண்டு மூன்று பேரோ அவர்கள், பார்ப்பான் ஆதிக்கம் உள்ளது, பார்ப்பனத்தியாலே நியமிக்கப்பட்டவர்கள். என்றைக்கு எழுதினான், ஆகமம்? ஒரு அக்கிரமம், ஒரு அயோக்கியத்தனம் இதற்குமேலே உலகத்திலே உண்டா? என்றைக்கோ, எவனோ பேர்தெரியாத அனாமதேயம்—எவனாலேயும் சொல்லமுடியாது. ஆகமத்தை எழுதினவன் எவனடா என்றால், அவன் சொல்லுவான், 'வசிஷ்டன் எழுதினான், நாரதன் எழுதினான், யக்ஞவல்கியர் எழுதினான், மனு எழுதினான், வெங்காயம் எழுதினான்' என்று. இந்தப் பயல்களுக்கு வயது என்ன?

கவனிக்கணும் தோழர்களே! நாரதன் 5 கோடி வருஷத்துக்கு முன்னே பிடித்து இருக்கிறான். 5 கோடி வருஷம்—ஒவ்வொரு கற்பத்திலேயும்! ஒரு கற்பம் என்றால் 3 கோடி, 4 கோடி, 5 கோடி வயதாம். அப்படி 10 கற்பம்—அப்போதெல்லாம் இருக்கிறான் நாரதன்! அப்படி என்று ஒருவன் இருந்தானா? இருக்கமுடியுமா? அதை வைத்துத் தீர்ப்புப் பண்ணுகிறானே, கோர்ட்டிலே, அதனுடைய அர்த்தம் என்ன? 'ஆளுகிறவர்கள் எத்தனை அயோக்கியர்கள்; ஆளப்படுகிறவர்கள் எத்தனை மானங்கெட்ட பதர்கள்' (என்பதுதானே)? இதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்? இதை எல்லாம்விட அக்கிரமம், அய்யா வீரமணி இப்போது சொன்னாரே, 'இந்து' என்கிறானே, அது.

யார் இந்து? 'இந்து' என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம்? என்றைக்கு முதற் கொண்டு, 'இந்து' வந்தான்? நம்முடைய தமிழர்க்கு இலக்கியம் என்னென்னமோ இருக்கிறதே; எவ்வளவோ இலக்கியம் இருக்கிறது? பார்ப்பானுடைய இலக்கியங்களே ஏராள மாக இருக்கின்றன—இராமாயணம், பாரதம், விஷ்ணுபுராணம், கந்தபுராணம், அந்த புராணம், இந்த புராணம் என்று. நம் புலவர்களுக்கும் ஏராளமாய் இருக்கிறது—பஞ்சகாவி யம், அய்ந்து இலக்கணம், அது, இது என்று. எதிலேயாவது 'இந்து' என்கிற வார்த்தை இருக்கிறதா? நம் நாட்டிலே எந்தப் புத்தகத்திலேயாவது உண்டா? 'இந்து' என்கிறவன் எப்படி வந்தான் என்கிறதற்கு அவன் சொல்லுகிற கதையே, அசிங்கமாய் இருக்கிறதே —சிந்து நதியின் காரணமாக 'இந்து' ஆகி—'இந்து' என அழைக்கப்படான் என்று.

சிந்து நதிக்கும் நமக்கும் எப்போது சம்பந்தம்? ஆரியன் வந்தபோதுதானே, சிந்துநதி என்கிறது. அதை, இந்த நாட்டுப் பழங்குடி மக்களுக்கு, 'இந்து' என்று பேர் என்றால், சொல்லிவிட்டு மரியாதையாகவாவது போகலையே! 'இந்து என்றால் இரண்டு சாதி; அதிலே ஒருவன் பார்ப்பான், ஒருவன் சூத்திரன்; பார்ப்பான் எல்லாம் மேல்சாதி, சூத்திரன் என்றால் கீழ்ச்சாதி; சூத்திரன் பெண்டாட்டி என்றால் பார்ப்பானுக்கு வைப்பாட்டி. இது சட்டத்திலே—சாஸ்திரத்திலே—பழக்கத்திலே' என்று சொன்னால்—நமக்கு விடிகிறது தான் எப்போது? ஒரு மனுஷனை, 'என்னடா, அடே உன் பெண்டாட்டியை...' அப்படி என்று சொன்னால், கத்தியை எடுத்துக்கொள்கிறானே! தனிப்பட்ட மனுஷனே, 'உன் பெண்டாட்டியை...' என்று சொன்னால், கத்தியை எடுத்துக்கொள்கிறான்—இத்தனை பேரையும் தேவடியாள் மகன் என்கிறான்—ஒரு பயலுக்கும் மானம் இல்லை என்றால்?

மானம் இருந்தால் இந்த நாட்டில் பார்ப்பாரக் குஞ்சு இருக்குமா? இருக்கமுடியுமா? ஒரு பயல் பூணூல் போட்டுக்கிட்டு நம் எதிரிலே வருவானா? 'என்னடா அர்த்தம், இந்தப் பயலுக்குப் பூணூல் இருக்கிறது; ஏ அயோக்கியப் பயலே என்ன அர்த்தம்? நீ பிராமணன், நான் சூத்திரன் என்று அர்த்தம்; அப்படி என்றால் என்ன? உன்னுடைய வைப்பாட்டி மகன் என்று அர்த்தம். போடு உன்னைச் செருப்பாலே'—அப்படி என்று ஆத்திரமல்லவா வரும்—நமக்கு மானம் இருந்தால்? இன்னொருவன், 'பெண்டாட்டியை...' என்றால் என்ன ஆத்திரம் வருமோ அதற்குமேலே அல்லவா ஆத்திரம் வரணும், உன்னைச் சூத்திரன் என்று இன்னொருவன் சொன்னால்?

நாதி இல்லையே; சொல்கிறதற்கு ஆள் இல்லையே; சிந்திக்க ஆள் இல்லையே! ஒரு ஓட்டுக்கு என்னென்ன கொடுக்கிறான்? பெண்டாட்டியைத்தவிர மற்றதை எல்லாம் கொடுக்கிறானே—ஓட்டு வாங்குகிறதற்கு. இதற்குக் கவலையே படமாட்டேன் என்கிறானே! முன்னேற்றக் கழகத்துக்காரன் மற்றவனை எல்லாம்—என்னை எல்லாம் வைவான்—'இவனுக்கு ஏன் இதுவெல்லாம் கேடு; இந்த வேலையை ஏன் பண்ணிக்கிட்டு இருக்கிறான்?' என்று. அவனுக்கு ஓட்டுதான் பெரிது; அவன் பெண்டாட்டி, பிள்ளையைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. இன்னும் கொஞ்சநாள் போனால், வழக்கத்திலேயே வந்துவிடும்—பெண்டாட்டியைக்கூடக் கொடுத்து ஓட்டு வாங்குகிறாற்போல. ஏனென்றால் அந்த உத்தியோகமும், அந்தப் பதவியும் அவ்வளவு உயர்வாய்ப் போய்விட்டன.

நாம் மிகப்பெரிய சமுதாயம், நாம் எவ்வளவு முன்னுக்கு வரவேண்டியவர்கள்? நாதியற்றுப்போய்க் காட்டுமிராண்டியாக அல்லவா இருக்கிறோம்? சொல்லுங்கள்! வெளி நாட்டுக்காரனைப் பார்—வெள்ளைக்காரனைப் பாரய்யா! நீ வேட்டி கட்டிக்கிட்டு இருந்த போது, அவர்கள் ஆண் பிள்ளையும், பெண் பிள்ளையும் அம்மணமாக இருந்தவர்கள்; நீ உன் பெண்டாட்டி, மகள், அக்காள், தங்கை என்று முறை வைத்திருந்தபோது, அவர் களுக்கு அக்காள் தங்கை முறை கிடையாது—அவ்வளவு காட்டுமிராண்டியாய் இருந்த வர்கள். இன்றையதினம், அவர்கள் ஆகாயத்துக்கல்லவா பறக்கிறார்கள்—ஆகாயத்துக்கு மேலேயல்லவா போய்விட்டு வருகிறார்கள்—சந்திரன் இருக்கிற இடத்திலே அல்லவா போய் உட்கார்ந்துவிட்டு வருகிறார்கள்; அது 2 இலட்சத்து 30 ஆயிரம் மைல்; 1 மணிக்கு 5000 மைல் வீதம் அல்லவா பறக்கிறார்கள்; இன்னும் அவர்கள் செய்கிற அதிசய அற்புதங்களைப் பார்த்தீர்கள் என்றால் உங்களுக்குப் புரியாதே!

அமெரிக்காவிற்குப்போய் ஆண் பிள்ளையுடைய இந்திரியம் கொண்டுவருகிறான், இங்கே சைனாவிலே, ஜப்பானிலே போய் பெண் பிள்ளையினுடைய இந்திரியம் கொண்டு வருகிறான்—இரண்டையும் இங்கே கலக்கி, பிள்ளை ஆக்குகிறானே! இப்போது நேற்று, முந்தாநாள் வந்த விஷயத்திலே, அவசரப்பட வேண்டியதில்லை—இரண்டு பேருடைய இந்திரியத்தையும் டப்பியிலே வாங்கி வைத்துக்கொள்ளலாம்; நமக்கு வேண்டியபோது பிள்ளை உண்டாக்கிக் கொள்ளலாம், 10 வருஷத்துக்கு அப்புறம்—இன்றைக்கே பண்ணிக் கொள்ளவேண்டியதில்லை. இப்படியாக அவன் பண்ணுகிற அதிசயம் (ஏராளம்). அமெரிக் காவிலே இருக்கிறான், அது 10 ஆயிரம் மைல்; நாம் இங்கே இருக்கிறோம்; போனை எடுத்து இப்படி, காதிலே வைத்தான் என்றால் 'ஹலோ' என்றால், அப்போதே நமக்கு இங்கே காதில் கேட்கிறதே—அந்த உதடு ஒட்டுகிறதற்குள்ளே காதில் கேட்குதய்யா, 10 ஆயிரம் மைலிலிருந்து! அவர்களிலே அரைவாசிப் பேருக்குத்தான் கடவுள்; அரை வாசிப்பேருக்கு ஒரு கடவுள், அதுவும் சந்தேகம்! ஆனால், நம்பணும் என்கிறவன். (இங்கு) இந்த முட்டாள் பயல்களுக்கு 1000, 2000, 5000 கடவுள்கள்—ஒரு காரியமும் பண்ணமுடிய வில்லை இந்தக் கடவுளாலே. காரியம் பண்ணமுடியவில்லை என்றால் சும்மாவா இருக் கிறோம்? அவைகளுக்கு எவ்வளவு கோயில்? எத்தனைப் பெண்டாட்டி, வைப்பாட்டி; கல்யாணம், கருமாதிச் செலவு? எத்தனைப் பேருக்குச் சோறு? எவ்வளவு உற்சவம்?

'அரசாங்கம் வரி வாங்குகிறது' என்று சொல்கிறானே தவிர, மடப் பயல், இது குட்டிச் சுவராகப் போகிறதே இந்தப் பணம் என்று ஒரு பயல்கூட நினைக்கிறதில்லையே!

கோயிலுக்குப் போகாது எவன் இருக்கிறான்? கோயிலுக்குப் போகணும், என்கிறான்; குளிக்கிறான், முழுகுகிறான், பட்டு கட்டிக்கிறான்; எட்டிக் குதித்துக்கிட்டுப்போகிறான்— 'ஏனடா' என்றால், 'தீட்டாகிறது' என்கிறான். (ஆனால்) கோயில் கிட்டேபோனதும், 'டக்'கென்று வெளியே நின்று கொள்கிறானே, வாசற்படிக்கிட்டே! 'ஏனடா, மடையா அங்கே நிற்கிறாய்?' என்றால், 'நான் சூத்திரன்; உள்ளே போகலாமா?' என்கிறான். எப்போது? 1973-லே! நாம் ஒருநாடு—நாம் ஒரு சமுதாயம்—நமக்கு மானம், அவமானம் என்கிறது ஒன்று இருக்கிறது என்று சொல்லமுடியுமா? அது பெரிதில்லையே—யார் பாடு படுகிறார்கள், நாங்கள் தானே, 3¾ பேர்! மற்றவன் எல்லாம் வேறுவேறு கட்சி.

ஒரு கட்சிக்காரன்கூட கடவுளைப்பற்றிப் பேசவேமாட்டான். ரஷ்யாவிலே கம்யூனிஸ்ட் இருக்கிறான்; அவனுக்கு முதல் வேலை, கடவுளை ஒழித்தான்; கோவிலை இடித்தான்; பாதிரியை எல்லாம் வெட்டினான். இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் என்ன பண்ணுகிறான்? பொறுக்கித்தின்கிறான்; மற்ற நாட்டுக்காரன் எல்லாம் என்ன பண்ணுகிறான்!

(இங்கு) மனுஷனைப்பற்றி எவனுமே பேசுகிறதில்லையே! 'சொன்னால் வரும் படியா?'—அதைத்தானே கேட்கிறான்; அதைத்தானே பண்ணுகிறான், நாங்கள் இவ்வளவு பண்ணினோம்; இவ்வளவு பிரச்சாரம் பண்ணினோம்; இவ்வளவு மாநாடு எல்லாம் நடத்தினோம்—எவன் எங்களை ஆதரித்தான்? பயப்படுகிறானே—ஆதரித்தால் ஓட்டுப் போய் விடுமே, ஆதரித்தால் அரசாங்கம் என்ன பண்ணுமோ என்று.

அருமைத் தோழர்களே! இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் மான உணர்ச்சி வேணும்; நமக்கு இருக்கிற இழிவு நீங்கணும்; அப்புறம் மேலே போகலாம், போகணும். மனிதனுக்கு இருக்கிற உரிமை என்ன தெரியுமா? மனிதனுக்கு இருக்கிற சக்தி—உரிமை ஒவ்வொரு மனிதனும் குறைந்தது 500 வருஷம் இருக்கலாம், 500 வருஷம் இருக்கலாம்; இப்போது இல்லையே, 52 வயதுதான் இருக்கிறோம், சராசரி. எனக்கு இப்போது 95; இன்னும் எவனாவது ஒரு பத்துப் பேர் இருப்பான் 100 வயது ஆனவன், இருக்க முடியவில்லையே! வெள்ளைக்காரன் வந்ததனாலே இந்த அளவாவது இருக்கிறோம். வெள்ளைக்காரன் வருகிறதற்கு முன்னே, அவன் வந்த அன்றைக்குக்கூட நமக்கு 10 வயது, இல்லை—7 வயது இந்த நாட்டுக்குச் சராசரி. அவன் வந்ததற்கப்புறம், அவன் வைத்தியம், ஆஸ்பத்திரி, அவனுடைய முயற்சி, சுகாதாரம் இவையெல்லாம் நமக்கு ஏற்றதற்கு அப்புறம் இப்போது நாம் சராசரி 50 வருஷம் இருக்கிறோம். மேல்நாட்டிலே 97 வயது இருக்கிறான். ரஷ்யாவிலே கிட்டத்தட்ட 100 வயது இருக்கிறான். நாமும் இன்னும் 10, 20 வருஷத்திலே 75 வருஷத்துக்கு வந்துவிடுவோம்; வெள்ளைக்காரன் 120 வருஷத்துக்குப் போய்விடுவான். இப்படியே நாளாக, நாளாக 500 வருஷம் வரைக்கும் இருப்போம். அதற்கு மேலே வேறே என்ன வரணும்? இருக்கிறது ஒன்றும் கஷ்டமல்ல—சாகிறதுதான் கஷ்டம்; அவ்வளவு வசதி எல்லாம் பண்ணியிருக்கிறான் நம் நாட்டுக்கு. அவ்வளவு அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறான். நமக்கு ஒன்றும் இல்லாததற்குக் காரணம், நாம் தேவடியாள் மக்களாய் இருந்ததனாலே.

நாங்கள் வராதிருந்தால் படிப்பு ஏது? சொல்லுங்கள்! சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கிறபோது நாம் 100-க்கு 10 பேர்கூடப் படிக்கவில்லையே! அது வந்ததற்கு அப்புறம் ஆரம்பித்தோம், அறிவைப்பற்றி. சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தபோது அதற்கு என்ன கொள்கை தெரியுமா? ஐந்து கொள்கைகள்; என்ன கொள்கைகள்? 1. கடவுள் ஒழியணும். 2. மதம் ஒழியணும். 3. காந்தி ஒழியணும். 4. காங்கிரசு ஒழியணும். 5. பார்ப்பான் ஒழியணும். அன்றைய முதற்கொண்டு இன்றைய வரைக்கும் இந்த ஐந்து கொள்கைகள்தான் நடக்கின்றன. காந்தியை ஒழித்தான், ஒழிந்துவிட்டான், நாம் ஒழிக்கிறதற்கு முன்னே பார்ப்பானே ஒழித்துப்போட்டான். 'காந்தி' நம் பேச்சைக் கேட்டு நம் பக்கம் திரும்பினார். ஆனால், 'இன்னமும் கடவுள் என்று சொல்கிறாயே, முட்டாள்' என்றோம். உடனே காந்தி, 'கடவுளுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தம் இல்லை; காங்கிரஸ்

காரன் கடவுளை இப்போது சேர்க்க வேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டார். சொன்ன 30 நாளிலே, கொன்று போட்டானய்யா அவரை! 'இவன் ராமசாமி ஆகிவிட்டான்; அவனுக்காவது நாதி இல்லை; இவன்—காந்தி என்றால் இந்தியாவுக்கே பெரியவன்; எல்லாரும் நம்பிவிடுவார்கள்' என்று சட்டென்று கொன்று போட்டான், அவரை.

அடுத்தாற்போல, ஒழியவேண்டியது காங்கிரஸ். காங்கிரஸ் ஒழிந்தது; இனிமேல் அது ஒன்றும் உருப்படியாகாது—உருப்படியாகாது; இப்போதே இரண்டு பேரும் தொங்கு கிறார்களே! இரண்டாகப் பிரிந்து, ஒன்றுக்கொன்று மானங்கெட்டுத் திரிகிறது; இப்போது ஒருவருக்கொருவர் சேர்ந்து பார்க்கலாம் என்று (நினைக்கிறது). சேர்ந்தால்—இனி என்ன மரியாதை இருக்கப்போகிறது? என்ன ஆகப்போகிறது; இனி எவன் காங்கிரசை ஆதரிப் பான், பொறுக்கித் தின்கிறவனைத் தவிர? காங்கிரசுக்கு என்ன கொள்கை இருக்கிற தென்று, ஒருவன் சேருவான்? இன்றைக்கு இருக்கிற நம்முடைய காமராசர் வாயிலே 'சாதியை ஒழிக்கணும்' என்று ஒரு வார்த்தை வருமா? சொல்ல முடியுமா? சொன்னால், அவர் காங்கிரசிலே இருக்கக்கூடாதே! காங்கிரஸ் வேலையே, சாதியைக் காப்பாற்றுகிறது தானே, முதலிலே எடுத்ததும்; பார்ப்பானாலே உண்டாயிற்று—அவன் நன்மைக்கு அதை அவன் பண்ணிக்கொண்டான்; போகிறவன் அதை ஒத்துக்கிட்டுத்தானே ஆகணும்? காமராசர் நம்மோடு சேர்ந்தார்; கொஞ்சம் காரியம் செய்தார். 'சாதி ஒழியணும்' என்று பக்தவத்சலம் வாயிலே வருமா? இல்லை, சி. சுப்ரமணியம் வாயிலே வருமா? சொன்னால், அவர் காங்கிரஸிலே இருக்க முடியாதே! அந்த மாதிரித் திட்டத்தோடு இருக்கிறார்கள்; அது இனிமேல் உருப்படியாகுமா?

முன்னேற்றக் கழகம் ஒழிந்தாலும், 'காங்கிரஸ் ஒழிக; சாதி ஒழிக' என்கிற ஓர் சீர்திருத்த உணர்ச்சி உள்ளவர்கள்தாம் இனி வருவார்கள். ஆனதினாலே இனி (அவை) வளம்பெற முடியாது—காந்தியும் போய்விட்டார்; காங்கிரசும் ஒழிந்து போயிற்று; கடவுளும் தெருவிலே சிரிப்பாய்ச் சிரிக்கிறது. அதுதான் வீரமணி சொன்னாரே, செருப்பாலே அடித்தார்கள் கடவுளை என்று. என்ன ஆயிப்போயிற்று? 'கடவுளை செருப்பாலே அடித்தான்; அதனாலே ஓட்டுப் பண்ணவேண்டாம்' என்று காமராசர் முதற்கொண்டு தப்பட்டை அடித்தார்கள்; (ஆனால்) என்றைக்கும் வராத அளவுக்கு 200 பேருக்கு மேலே வந்துவிட்டார்களே! முன்னேற்றக் கழகத்துக்காரன் 185 பேர்; அவர்களை ஆதரிக்கிறவர்கள் 20 பேர்; காங்கிரஸ், காந்தி, கடவுள், வெங்காயம் எல்லாம் சேர்ந்து 20 பேர்கூட வரவில்லையே? சாமியைத் திட்டுகிறான் என்று சொல்லுகிறீர்களே—புத்தி இல்லாமல் சொல்லுகிறோமே தவிர, சாமியைச் செருப்பாலே அடித்த பிரச்சினை மேலே 200 பேர் வந்துவிட்டார்களே! ஆனதினாலே மக்கள் அறிவு பெற்றுக்கிட்டு வருகிறார்கள்; பயன்படுத்திக்கொள்ள வேணும்; அவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லணும்—தெரியாது வெகுபேருக்கு.

எனவேதான் இப்போது நாம் முன்னேற்றம் அடையணும்; மேலே வருகிறதற் குள்ளே பள்ளத்திலே இருந்து நிலத்து மட்டத்துக்கு வரணும்; அப்புறம் மேலே ஏறணும். இப்போது நாம் பள்ளத்திலே கிடக்கிறோம். என்ன? நாலாவது சாதி, அய்ந்தாவது சாதி, தீண்டப்படாத சாதி, பார்ப்பானுடைய வைப்பாட்டி மக்கள்—இப்படியல்லவா இருக்கிறோம் நாம். இது மாறவேணும், அப்புறம் மேலே போகணும்; மாறாது மேலே போக முடியுமோ? (இதை) யாரும் கவனிக்கவில்லை. கவனிக்காமல் போனால், நாங்கள் ஒன்று போனால் ஒன்று செய்துகிட்டே இருக்கிறோம்; நாளுக்கு நாள் கொஞ்சம் மாறிக்கிட்டேதான் வந்தது; இன்னும் மாறணும். எங்களால்தான் முடியும் என்று இருக்கிறது நிலைமை. வேறு எந்தக் கட்சிக்காரனுக்கும் இதிலே கவலை இல்லை; இவர்களோடு சேர்ந்தால் ஓட்டுப் போய் விடுமே என்று பார்க்கிறான்—மானம் போகிறதைப்பற்றி அவனுக்கு வெட்கமில்லை. ஆகவே நாம் மாநாடு போட்டோம். இந்த மாநாடு போட்டதற்குக்கூடக் காரணம் சொன்னாரே!

'தீண்டாமை இல்லை என்று சட்டத்திலே எழுதிப்போட்டான்; எந்தவிதத்திலேயும் தீண்டாமை இல்லை' என்று சொல்லிவிட்டான். 'ஆனால் மதத்திற்கு மாத்திரம் உண்டு'

என்று அதில் ஓர் அடையாளம் வைத்துவிட்டான்—நிபந்தனை. இல்லாதிருந்தால் நாம் அந்தத் தீர்மானத்தின்மீதே எல்லாக் காரியத்தையும் நடத்தி இருப்போம். அதுதான் சொன்னேனே—'(எல்லாரும்) கோவிலுக்குப் போகலாம்' என்று சட்டமே பண்ணினால்—அந்தச் சட்டம் செல்லாது என்று ஆயிப்போயிற்றே! அதே மாதிரிதானே சாஸ்திரத்திற்கு விரோதமாய் இருக்கிற எந்தக் காரியமும் இனிமேல் செல்லாது (என்று வரும்). இனிமேல் நாம் இழிமகன். எனவேதான் மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டோம்; அவைகளையெல்லாம் பார்த்தோம்; மாற்றி ஆகணும். சட்டத்திலேயும், சாஸ்திரத்திலேயும் இருக்கிறதினாலே முதலிலே அதைக் கேட்கிறோம். சட்டத்திலே இருக்கிறது ஒழிய வேணும் என்றால், சட்டம் ஒழிந்தால் உண்டு. சட்டத்திலே ஒழிக்கவில்லையென்றால் ஆட்சியை ஒழித்தால்தான் உண்டு—அவ்வளவுக்கு நாம் இப்போது பக்குவமாகணும். ஆட்சியை, ஒழியும்படியாக இல்லாமல் பாதுகாத்துக் கொண்டான்; தனியாக இருந்தால் எவனும் ஒன்றும் பண்ணமாட்டான்—கூட்டாக இருந்தால் எல்லாம் ஒன்று சேர்ந்துகொள் வார்கள் என்று 15, 16 நாடுகளாகப் பிரித்தான். அந்தந்த நாட்டை, மற்ற நாட்டோடு, அந்தந்த நாட்டோடு சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டான்; அவனைப்பற்றி இவன் கவனிக்கக்கூடாது; இவனைப்பற்றி அவன் கவனிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டான். 16 மாகாணங்களிலே ஜனங்கள் இருக்கிறார்கள்—ஒருவருக்கு ஒருவர் சம்பந்தம் இல்லையே! அவனும் நானும் தாராளமாகப் பேசிக்கொள்ள முடியாதே! அவன் மொழி வேறே—இந்தப் பக்கம் இருக்கிறவன் வந்தால் மலையாளம் பேசுவான்; இந்தப் பக்கம் இருந்து வந்தால் தெலுங்கு பேசுவான்; இந்தப் பக்கம் இருந்து வந்தால் கன்னடம் பேசுவான். இன்னும் கொஞ்சம் தாண்டினால் மராட்டி; இன்னும் கொஞ்சம் தாண்டினால் குஜராத்தி; இன்னும் கொஞ்சம் தாண்டினால் இந்தி; அப்புறம் வங்காளி. அந்தந்த பாஷை ஒன்று சேராமல் இருக்கிறதற்கு என்னென்ன பண்ணணுமோ அதை எல்லாம் பண்ணிவிட்டான். தனித்தனியாக இருந்தால் ஒன்று சேர்ந்துவிடுவான் என்று 15-ம் 1-ம் 16 என்று சொல்லிவிட்டான்—நாதி இல்லையே! இப்போது நாம் ஏற்பாடு பண்ணினோம்—சூத்திரன் என்கிறதை ஒழிக்கணும் என்று. நாம் மாத்திரமா சூத்திரன்? இந்தியாவிலே உள்ள 56 கோடி மக்களிலே, தமிழ்நாட்டிலே உள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களில் ஏறக்குறைய 3 கோடி மக்கள் சூத்திரர்கள்தானே—முஸ்லிம், கிறிஸ்தவன் தவிர; அவர்கள் இரண்டுபேரும் சேர்ந்தால் இன்று ஒரு 50 இலட்சம்கூட இருக்காதே; கிறிஸ்தவர் ஒரு 8 இலட்சம் இருக்கலாம், முஸ்லிம் ஒரு 20, 22 இலட்சம் இருக்கலாம், இரண்டும் சேர்ந்தால் 30 இலட்சமாகும், மற்றவன் எல்லாம் சூத்திரன். பார்ப்பான் ஒரு 3 இலட்சம்தான் இருப்பான். அவ்வளவு பெரிய நம் சமுதாயம் இந்த மாதிரி இருக்கிறதே என்று சிந்திக்கமுடியவில்லை.

ஆகவே, இதை மாற்றியாகணும். பெரிய விஷயம்தான்; பெரிய முயற்சி பண்ணணும்—பெரிய முயற்சி பண்ணணும், என்ன அவசியம்? அரசியல் சட்டம் அரசாங்கம் நடத்துகிறதற்கு வேணும்; ஓர் அரசாங்கம் நடக்கவேணும் என்றால் ஒரு சட்டம் இருக்கணும், ஒத்துக்கொள்கிறேன்-அரசாங்கம் நடக்கிறதற்கு சூத்திரன் இருக்கவேணுமோ? அரசாங்கம் நடக்கிறதற்குப் பார்ப்பான் இருக்கணுமோ—மனுஷன்தானே இருக்கணும்? அமெரிக்காவிலேயும் அரசாங்கம் நடக்கிறது. அங்கே மனுஷன் தவிர வேறே எவன் இருக்கிறான்? பார்ப்பான் இருக்கிறானா? சூத்திரன் இருக்கிறானா? பறையன் இருக்கிறானா? யார் இருக்கிறான் அங்கே?

ஆனதினாலே, அவன் வைத்திருக்கிற பாதுகாப்பெல்லாம்—ஒன்று சேரக்கூடாது—அவர்களை உள்ளே கட்டிப்போட்டு வைத்திருக்கிற கயிற்றை அறுத்துப்போடக்கூடாது; அடிமையாகவே இருக்கணும், அப்படி அடிமையாய் இருந்தால் 100-க்கு 90 பேரை 3 பேர் ஆளலாம். அதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்துகொண்டான். இப்போது நாங்கள்தான் அதைப்பற்றிக் கவலைப்படுகிறோம்; மாற்றியாகணும் என்கிறோம்.

நேற்று நடந்த மாநாட்டுக்கு வேறே கட்சிக்காரர்களுடைய ஆதரவு ஒன்றும் வரவில்லையே, வரலாம் அல்லவா? அவனவன் சக்தி அனுசாரம், எங்களுக்கு வந்து, உதவி

பண்ணலாம் அல்லவா? ஒருவரும் வரவே இல்லை—எங்கள் ஆட்கள்தான். அவன்—டெல்லிக் காரன் ஸி. அய். டி.யைப்போட்டுவிட்டான்—வேறே கட்சிக்காரன் எவனாவது உள்ளே வருகிறானா பார் என்று. அதைப் பார்த்து ஒருவனுமே வரவில்லை—மந்திரிகளா, அவனா, மற்றக் கட்சிக்காரனா, மற்றவனா—உம், வரவில்லை. இழிவு ஒழிய வேணும் என்றால் இழிவுக்கு ஆளானவன் எல்லாம் வரணுமே, வந்து உதவி செய்யணுமே—(இல்லை) நாங்கள் தான்! ஆனதினாலே, விஷயம் ரொம்ப முக்கியமானது—மாறியே ஆகணும், மாறாவிட்டால் சாகணும்; அந்த உணர்ச்சி உள்ளவன்தான் மிஞ்சுவான். மாறியாகவில்லை என்றாலும் சோறு தின்கணும், என்ன செய்தாவது வயிற்றை ரொப்பணும் அப்படி என்றால்—அவனோடே என்ன ஆகும்? நினையுங்கள் நீங்கள்! நம்மை அப்படிப் பண்ணிவிட்டான்.

நமக்கு, 'மதம்' என்றான்; 'மதம்' என்றால் என்னவென்று தெரியாது. நமக்குக் 'கடவுள்' என்றான்; 'கடவுள்' என்றால் என்ன என்று தெரியாது. நமக்குச் 'சாஸ்திரம்' என்றான்; 'சாஸ்திரம்' என்றால் என்ன என்று தெரியாது. நமக்கு 'மனுதர்மப்படி' என்றான்; 'மனுதர்மம்' என்றால் ரூபாய்க்கு எத்தனைப்படி என்றுதான் தெரியும். ஒன்றுமே தெரியாது—ஆனால் அதற்கெல்லாம் நாம் அடிமை.

நான் கேட்கிறேன், பெரிய மதக்காரனையே கேட்கிறேன்—'இந்து மதம்' என்றால் என்ன அர்த்தம்? எப்போது வந்தது? எவன் அதற்குத் தலைவன்? என்ன அதற்குக் கொள்கை? அதற்கென்று இருக்கிற சாஸ்திரம் என்ன?

கிறிஸ்துமதம் என்றால், அதற்கு கிறிஸ்து தலைவன், 2000 வருஷம் ஆயிற்று ஏற்பட்டு, பைபிள் வேதம். இஸ்லாம் மதம் என்றால், முகமது நபி தலைவர், ஆயிரத்து நானூற்றுச் சில்லரை வருஷமாயிற்று, குரான் இருக்கிறது, சட்டம்—வேதம். உனக்கு என்ன இருக்கிறது? யார் தலைவன்? யார்? எவனோ ஒரு காலிப் பயலைப் பிடித்துக் கொள்கிறாய், அவனை ரிஷி என்கிறாய், அவனை முனி என்கிறாய், அவனை மகாத்மா என்கிறாய், அவனை வெங்காயம் என்கிறாய். உனக்கு யார் இருக்கிறான்? 'யார் உன் மதத் தலைவன்?' என்றால் வசிஷ்டன் என்கிறாய், நாரதன் என்கிறாய், விசுவாமித்திரன் என்கிறாய், இன்னும் எவன் எவனையோ சொல்லுகிறாய். 'அவனுக்கு வயது என்னடா?' என்றால், 3 கோடி வருஷம், 5 கோடி வருஷம் என்கிறாய். 'உன் சாஸ்திரம் எப்படிடா எழுதினது?' என்றால், 'அது மனுஷனாலே எழுதப்படவில்லை—கடவுளாலே எழுதப் பட்டது' என்கிறாய். எது நமக்கு என்று இருக்கிறது?—ஒரு ஆதாரம் சொல்லுங்களேன்.

'கடவுள்' என்று சொன்னான். நாம் சொல்கிறோம், இப்போது, 'கடவுளை உண் டாக்கின பயல் முட்டாள் பயல்' என்கிறோம்; மடப்பயல் என்று சொல்கிறோம். மற்ற வனைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்—துலுக்கனைப்பற்றி, கிறிஸ்தவனைப்பற்றி அப்புறம் பேசலாம்.

உன் கடவுளை உண்டாக்கினவன் யார்? உனக்கு எங்கே கடவுள் இருக்கிறான்? கடவுள் தன்மை என்று ஒன்றைச் சொன்னாயானால்—கடவுளுடைய யோக்கியதை என்று ஒன்றைச் சொல்லிவிட்டாயானால்—அந்தக் கடவுள் தன்மைப்படி, கடவுளுடைய யோக்கிய தைப்படி எந்தக் கடவுள் இருக்கிறான் உனக்கு? கடவுளுக்கு உருவமில்லை என்றான், எல்லாக் கடவுளுக்கும் உருவம். கடவுளுக்கு ஒன்றும் வேண்டாம் என்றாய், உன் கடவுளுக்குப் பெண்டாட்டி, பிள்ளை, வைப்பாட்டி, சோறு, கலியாணம், கருமாதி எல்லாம் வேணும்—மனுஷன்தானே அவன்! மனுஷனுக்குப் பிறக்காத கடவுள் எது அய்யா உன் கிட்டே இருக்கிறது? மனுஷனுக்குக்கூடப் பிறக்கவில்லை என்று சொல்லவில்லை—எருமைக்குப் பிறக்காதவன், கழுதைக்குப் பிறக்காதவன், ஆனைக்குப் பிறக்காதவன், குதிரைக்குப் பிறக்காதவன், கண்டவனுக்குப் பிறக்காதவன் எவன் உன் கடவுள்?

சிவனும் கடவுள் என்றால், கந்தன் எப்படிடா வந்தான் என்றால், 'சிவனும் அவன் பெண்டாட்டியும் லட்சம் வருஷம் 'வேலை' பண்ணினார்கள்; 'சினை' ஆகவில்லை,

பிடுங்கிக்கொண்டார்கள், இந்திரியம் ஒழுகிற்று, அதிலேயிருந்து வந்தான்' என்கிறான். என்ன தைரியமாக, அவன் கடவுளைச் சொல்லுகிறான்—நம்மையெல்லாம் மனிதன் என்றா நினைத்துச் சொல்லுகிறான்? சிவன் என்றால், அப்புறம் அவனுக்குப் பெண்டாட்டி என்னத்துக்கு, கடவுளுக்கு? பெண்டாட்டி, கலவி, படுத்துக்கிட்டான்! படுத்தால், சாதாரணமாக, மனுஷன் ஒரு நாள் பூராவுமா போவான்? ஏதோ ஒரு மணி நேரம் போவான், இரண்டு மணி நேரம் போவான். அதற்கே ரொம்பக் குளிகை சாப்பிடவேணும்! இவன் என்னடா என்றால், 10000 வருஷம்—20 ஆயிரம் வருஷம், தேவ வருஷம் 'வேலை' விட்டான், சினையாக வில்லை அவள். தேவர்கள் எல்லாம் வந்து பிடுங்கி விட்டுவிட்டார்கள், அது கீழே சொட்டி விழுந்தது—அப்படி என்று ஒரு புராணம், இராமாயணம். அப்புறம் இன்னொரு புராணம்: தேவர்கள் எல்லாம் வந்தார்கள், 'சும்மா இப்படியே பண்ணுகிறாயே அய்யா! இன்னும் இதிலே ஒரு பிள்ளை வந்தால் உலகமே கெட்டுப் போகும், வேலையை நிறுத்து' என்று சொன்னார்கள். 'நடுவிலே எப்படியடா வேலையை நிறுத்துவேன்' என்றான், சிவன். 'நாங்கள் எல்லாம் பிழைக்கவேண்டாமா?' என்று தேவர்கள் எல்லாம் அழுதார்கள். 'அப்படியானால், அது போகுமடா வாய்க்காலாட்டம், எவனடா பிடிக்கிறது?' என்றான். 'நாங்கள் பிடித்துக்கொள்கிறோம்' என்றார்கள். பிடுங்கினான்; எல்லாருக்கும் கையிலே ஊற்றினான் சிவன்—விஷ்ணு தேவர்கள் எல்லாம் குடித்தார்கள். இந்தமாதிரிக் கதை எழுதி அல்லவா கடவுளை உண்டாக்குகிறான்! சிரித்தோம் நாம்—இப்படி உண்டாக்கித்தானே, கடவுளை உண்டாக்கினான்; அதிலே உண்டானவன்தானே கந்தன்.

நமக்குக் கடவுள் ஏதுங்க? கடவுள் என்றால் அப்பா இல்லை, அம்மா இல்லை, உருவமில்லை; கண்ணுக்குத் தெரியாது; கைக்குச் சிக்காது—அப்படியெல்லாம் சொல்லிவிட்டான்; சொல்லுகிறான். அப்படி ஒரு கடவுள் கூட இல்லையே! ஒன்றும் வேண்டாம் என்கிறான்—ஆறு வேளை சோறு என்கிறான், கல்யாணம் என்கிறான், வருஷா வருஷம் கல்யாணமடா—என்கிறான். கலியாணமிருந்தும் அதற்கு ஒரு வைப்பாட்டி என்கிறான்—நம்மை ஏதாவது மனுஷன் என்று நினைத்து அவன் சொன்னானோ? 'சொன்னதைக் கேட்டுக்கோடா மடப் பயலே' என்றான்; சும்மா ஊட்டிவிட்டான்.

கடவுள் ரொம்ப அன்பானவர், கருணையே வடிவானவர்—அப்படி என்கிறான். கடவுளைப் போய்ப் பார்த்தால் அந்தக் கடவுள் கையிலே அரிவாள், கொடுவாள், வேலாயுதம், சூலாயுதம், ஈட்டி—கொலைகாரப் பயல்களுக்கு என்ன வேணுமோ அதுவெல்லாம் கடவுள் கையிலே இருக்கிறது! கடவுள் கருணையே உடையவர் என்கிறான். எந்தக் கடவுள் மனுஷனைக் கொல்லாதவர்? (கடவுள்) அசுரனைக் கொன்றார், ராட்சசனைக் கொன்றார், மனிதனைக் கொன்றார், 3 கோடிப் பேரைக் கொன்றார், 5 கோடிப் பேரைக் கொன்றார் என்று கசாப்புக்கடைக்காரன் மாதிரிப் பண்ணிப்போட்டு, அவரைக் கருணை உள்ளவர் என்றால் எப்படி? இப்படி எல்லாம் சொல்லி நம்மைக் கழுதையாக்கிப் போட்டான்; ஒரு உணர்ச்சியும் இல்லாதவனாக்கிப் போட்டான். கடவுள் என்றால் கல்லைக் கும்பிட வேண்டியது, பார்ப்பான் காலிலே விழவேண்டியது, அவனுக்குக் காசு கொடுக்கவேண்டியது.

இப்போது நாங்கள் வந்து, இந்தப் பிரச்சினையிலே, கடவுளைக் கும்பிடாதீர்கள் என்று சொல்லவில்லை; நன்றாக நினைத்துக்கொள்ளுங்கள்—இந்தப் பிரச்சினையிலே, நாங்கள், கடவுளைக் கும்பிடாதீர்கள் என்று சொல்லவில்லை; கடவுள் இருக்கிறது என்று நினைக்காதீர்கள் என்று சொல்லவில்லை. 'கடவுள் என்றால் என்ன என்று சொல்லுங்கள்'—அவ்வளவுதான் நாங்கள் சொல்லுகிறோம். ஒன்றுமே இல்லாமல், எந்த முட்டாளாவது சொன்னான் என்றால், நினைத்ததெல்லாம்—அரசமரம் கடவுள், வேப்பமரம் கடவுள், பல்லி கடவுள், முடக்கான் கடவுள், பாம்பு கடவுள், அப்புறம் நினைத்ததெல்லாம் கடவுள். அது கடவுள் சங்கதியா? அது முட்டாள்தனம். பைத்தியக்காரச் சங்கதியா? இந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கு நம் வேதம், நம் பணம், நம் அறிவு எவ்வளவு நாசமாகிறது. இவ்வளவும் பண்ணியும், 'தேவடியாள் மகன்' என்கிற பட்டமல்லவா நம் தலைமேலே இருக்கிறது?

ஆகவேதான், எந்தச் சங்கதி எப்படி ஆனாலும் இப்போது நாம் ஆரம்பித்துள்ள இழிவு ஒழிப்புக் கிளர்ச்சிக் காரியம் மிகவும் ஞாயமானது என்கிறதற்கு ஒரு உதாரணம் உங்களுக்கு வேண்டுமானால், என்ன இன்றைக்கு எத்தனை நாளாகிறது? 8ந்தேதி மாநாடு. இன்றைக்கு எத்தனை நாளாகிறது? 10 நாளாகிறது; கவனிக்கணும். இரகசியமாக இல்லை—பத்தாயிரம் பேருக்குமேலே வந்தார்கள்; 30 பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள்; எல்லாத் தீர்மானத்தையும் அவரவர் பத்திரிகையிலே போட்டார்கள்; இந்தியா பூராவும் பரவி விட்டது, அடுத்தநாளே பரவி விட்டது. நான் சொல்லுகிறேன், கவனியுங்கள்! இந்த 10 நாளாக ஒருவனாவது இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினானா? எந்தப் பத்திரிகை யிலேயாவது சேதி வந்ததா? ஏன் சொல்லுகிறேன்—நாம் பண்ணினது அவ்வளவு நேர்மை யான காரியம்; எவனாலேயும் ஆட்சேபிக்க முடியவில்லை. எவன் சொல்லுவான்—'நீ தேவடியாள் மகனாகத்தான் இருக்கணும்' என்று? அவ்வளவு நேர்மையான காரியத்தை நாம் செய்திருக்கிறோம், பண்ணிப் போட்டோம். இதிலேயே நாம் வீரனாக மாட்டோம்; நாளைக்கு இதற்குப் பரிகாரம் பண்ணுகிறதற்குக் கிளர்ச்சி பண்ணுகிறோமே—அதிலேதான் நாம் யார் என்று காட்டிக்கொள்ள வேணும்; பண்ணணும். நாளைக்குக் கிளர்ச்சி பண்ணி னால் அவன் பிடிப்பான்; பிடிக்கவில்லையானால் பண்ணிக்கொண்டு இருப்போம்; பிடிக்க ஆரம்பித்தானானால் நாம் 5000, 10000 என்று ஜெயிலுக்குப் போகணும்; நாம் தயாராய் இருக்கிறோம்-காரியம் முடிகிறவரைக்கும் ஜெயிலிலே வேணுமானாலும் இருக்கத் தயாராய் இருக்கிறோம் என்று நாம் காட்டணும். அப்புறம் அவன் பரிகாரத்துக்கு வரணும்; வரவில்லை என்றால் இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு, 'நீ போப்பா வெளியே, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீ 2000 மைல், 1500 மைல் தூரத்திலே இருக்கிறாய்; உன்பேச்சு எனக்குப் புரியாது, என் பேச்சு உனக்குப் புரியாது; உன் பழக்கம் வேறே, உன் வழக்கம் வேறே, உன் நடப்பு வேறே (உம்—அம்மா, அம்மா...உம்...உம்...ஆம்...அம்மா...அம்மா...அம்மா... ஆ...ஆ...ஆ...ஆஹா—நோய்க் கொடுமையால் துடிக்கிறார்; பின், தொடர்ந்து பேசுகிறார்) எனக்குப் புரியாது; மரியாதையாகப் போ, ரகளை வேணாம். என்னத்துக்காக இவ்வளவு தூரத்திலே இருக்கிறவன் எங்களுக்கு இராஜாவாகணும்? நீ இல்லா விட்டால் எங்களுக்கு என்ன நஷ்டம்? எங்களுக்கு என்ன உப்பு இல்லையா, தண்ணீர் இல்லையா, மலை இல்லையா, காடு இல்லையா, சமுத்திரம் இல்லையா? இல்லை—நெல் விளையவில்லையா, கம்பு விளையவில்லையா—என்ன இல்லை எங்களுக்கு? உன்னாலே எனக்கு என்ன ஆகிறது? தேவடியாள் மகன் என்னும் பட்டத்தைத் தவிர, நீ எங்களுக்குப் பண்ணின நன்மை என்ன? மரியாதையாகப் போ! அவ்வளவுதானய்யா நாம் கேட்கிறோம்! இது எப்படி அய்யா தப்பாகும்; இதனாலே நாம் எப்படிக் கெட்டவனாவோம்; இதனாலே நாம் எப்படி அரசுக்கு விரோதமாவோம்? கவனியுங்கள், தாய்மார்களே! தோழர்களே! இப்போது விஷயங்களை எல்லாம் முதலிலேயே சொன்னோம். இது நம் கடமை; 25ந்தேதி ஆரம்பிப்போம்; மளமளவென்று வரணும்; என்ன சொல்கிறோமோ அதைச் செய்யணும். சட்டங்களை எரிக்கிறது முதற்கொண்டு, மறியல் பண்ணுகிறது முதற்கொண்டு இன்னமும் பல காரியங்கள் திட்டம்போட்டுச் செய்கிறோம்.

நாம் கலகத்துக்குப் போகமாட்டோம், எவனையும் கையாலே தொடமாட்டோம், எவனாவது அடித்தாலும் பட்டுக்கொள்வோம்—திருப்பி அடிக்கமாட்டோம். ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்! நான், நீ என்று மீசையை முறுக்கக் கூடாது. அடித்தான் என்றால் பட்டுக்கணும்—போலீஸ்காரன் இருப்பான், அதிகமாக அடிக்காமல் பார்த்துக் கொள்வான். அப்புறம் என்னத்துக்கு நாம் ஒருவனை அடிக்கப்போகணும், நாம் யாரோடு சண்டைப் பிடிக்கிறோம்?

நான் தேவடியாள் மகனாய் இருக்கக்கூடாது, உன் ஆட்சியிலே—உன் சட்டத்திலே. அப்படித்தான் இருக்கணும் என்றால் உன் ஆட்சியை மாற்ற உன் சட்டத்தை நெருப்பு வைத்துக் கொளுத்துகிறேன்—முன்னையே நான் கொளுத்தினவன்தான். ஆனதினாலே, அருமைத் தோழர்களே, பக்குவம் அடையணும் நாம். எதற்காக? இங்கே நான் நாத்திகப்

பிரசாரம் பண்ண வரவில்லை; கடவுள் இல்லை என்று உங்களுக்குச் சொல்கிறதற்காக நான் வரவில்லை—அது வேறே, நாங்கள் பண்ணிக்கிறோம்; அவனவன் நம்பட்டும், ஆராயட்டும், இருக்கட்டும்—முட்டாள்தனமான காரியங்கள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியங்கள், மானத்துக்குக் கேடான காரியங்கள் செய்கிறதற்கு நாம் இடம் கொடுத்துக் கிட்டு, நாம் மனுஷனாக வாழணுமா?

மந்திரி ஆகணும் என்றால் வாழமுடியாது—ஆகிறவன் ஆகிவிட்டுப்போகிறான். சட்டசபை மெம்பர் ஆகணும் என்றால் முடியாது—ஆகிப் பொறுக்கித் தின்கிறவன் தின்று விட்டுப்போகிறான். இது இரண்டும் வேணாம் என்கிறவன் நான்—உறைத்து இருக்கலாமா? இல்லையா? இத்தனைப் பேருக்குமா மானம் இருக்காது? ஆனதினாலே, தயவு செய்து நீங்கள் விஷயங்களைத் தீவிரமாகக் கவனிக்கணும், ரொம்பத் தீவிரமாய்க் கவனிக்கணும், ஜெயித்தே ஆகணும்! நான் சொல்கிறேன் என்று கேலி பண்ணாதீர்கள்—'நீ என்ன, நாளைக்குச் சாகப் போகிறவன்தானே, துணிந்து வந்திருப்பாய்!' என்று. நானே பண்ண வேணும் என்று இல்லை; நீங்கள் பண்ணவேண்டிய காரியத்தைத்தானே நான் செய்கிறேன்? ஆனதினாலே எல்லோரும் துணியணும்; மளமளவென்று வரணும், ஆண் பிள்ளைகள் வர முடியலை என்றால் அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளை அனுப்புங்கள்; அனுப்ப முடிய வில்லை என்றால் வேலைக்கு இரண்டு ஆளைப் பிடித்து அனுப்புங்கள்—'நீ போ எனக்காக' என்று. நாம் எல்லாருமாகப் பாடுபட்டோம் என்று தெரியணும்.

நான் என்ன செய்கிறேன்? 'இந்தச் சாக்கிலேயே நம் நாடு நம்முடையதாக ஆகி விடாதா? அவ்வளவுதான்' நாம் விட்டது தப்பு. அயோக்கியப் பயல்களுக்கு—காங்கிரஸ் காரப் பயல்களுக்கு இடம் கொடுத்தோம், அவன் பார்ப்பான். அதிலே பொறுக்கித் தின்னப் போனவன், நம் ஆள், அதிலே முக்கால்வாசிப் பேர் பார்ப்பானுடைய வைப்பாட்டி மகன் என்று ஒத்துக்கொள்கிறவன்; அவர்களாலே கோளாறாய்ப் போயிற்று—கலகம் பண்ண முடியவில்லை அப்போது.

நானும் என்னாலானவரைக்குந்தான் கலகம் பண்ணினேன், ஒரு நாட்டுக்காரனாகப் போய்விட்டேன் நான். 16 நாடுகளிலே தமிழ்நாடு ஒரு நாடு, அதிலே பத்துக் கட்சிகளிலே திராவிடர் கழகம் ஒரு கட்சி. என்ன ஆகும் எங்களாலே? மற்ற நாட்டுக்காரன் எல்லாம்—புரியவே இல்லை அவனுக்கு—சூத்திரன் என்றால் என்ன தப்பு என்கிறான்? சூத்திரன் இல்லாமல், பின்னே நாம் யார் என்கிறான். பிராமணன் என்றால் 'மகராஜ்' என்கிறான், 'தேவர்' என்கிறான், அதிலே ஊறி இருக்கிறான். இப்போது அவன் எல்லாம் மாறி விட்டான் என்று சொல்லமுடியாது.

நாம் செய்கிற தியாகத்தினாலே, நாம் எடுத்துக் கொள்கிற முயற்சியினாலே—மற்றவன் வருவான் நம்கூட. 5000 பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள், 10 ஆயிரம் பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள் என்றால் 'ஏனடா இருக்கிறார்கள்?' என்று கேட்பான் அல்லவா? 'பார்ப்பானுடைய தேவடியாள் மகன் என்று இருக்கிறதற்கு இஷ்டமில்லை என்று, ஜெயிலில் இருக்கிறார்கள்' என்றால்—'அடே, அப்போது நாமும் என்ன சங்கதி?' என்று (நினைத்துக்) கவனிப்பானல்லவா? அதனாலே கட்டாயம் கவனிப்பான். ஒருவனும் கவனிக்காவிட்டாலும் தெலுங்கனும், கன்னடியனும், மலையாளியும் கவனிப்பான். மலையாளிகளிலே பெரும்பாலும் பார்ப்பானுடைய தேவடியாள் மகன்தான், அதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை, திருட்டுத்தனமல்ல. அவனே பெருமை பேசிக் கொள்வான்—'நான் யார் தெரியுமா? நான் இந்த நாயர் பசங்களுக்கா பிறந்தேன்? நான் அந்தப் பிராமணனுக்குப் பிறந்தேன்!' என்பான்; காசுகொடுத்துப் போவான். இப்போது அவனுக்கும் உணர்ச்சி வந்துவிட்டது, எங்களோடு சேர்ந்து பேசுகிறான், நானும் சேர்ந்து கொள்கிறேன் என்று எழுதி இருக்கிறான். அப்போது, மானம் என்றால், ரொம்ப ஒவ்வொரு வனுக்கும் உணர்ச்சி வந்துதான் தீரணும்; தெலுங்கனும் இருக்கிறான்; நாளைக்குக் கன்னடியனும் வருவான், அப்புறம் அடுத்தவன், அடுத்தவன், அடுத்தவன் வரமுடியும்.

சங்கதி தெரியாது அவர்களுக்கு—எவ்வளவு இழிவு என்பது புரியாது; நம் இயக்கத்தினாலே புரியும். எல்லாரும் இருட்டடிக்கமாட்டான். இத்தனாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனார்கள், அடி தின்றார்கள், இதைப் பண்ணினார்கள் என்று அதை எழுதுகிறபோது—'அடே, நான் என்றால் என்ன' என்று கவனிப்பானல்லவா? எல்லாரும் ஏககாலத்திலே வருவார்கள் என்று சொல்லமுடியாது; கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வருவார்கள்; கவனித்தாகணும்.

'தமிழ்நாடு' தனியாகப் பிரிந்தாலும் 10 வருஷத்துக்குள்ளாக நாம் எல்லாம் 100 வருஷம் இருப்போம்; ஆகாயத்திலே ஒவ்வொருவரும் பறப்போம். எப்படிப் பறப்போம் என்று உங்களுக்குத் தெரியாது; இப்போது 400 பேரை, 500 பேரைத் தூக்கிக்கொண்டு பறக்கிறதல்லவா ஆகாயக் கப்பல்—ஒரு மனுஷனை ஏன் தூக்கிக்கொண்டு பறக்காது? தனித்தனியாக வாங்கி முதுகிலே கட்டிக்கொண்டால்—ஏறுகிறது மேலே, 'விர்' என்று; இறங்கு என்கிற பக்கம் இறங்குகிறது.

இப்போதே—10 வருஷத்துக்குள்ளேயே நமக்கு 10 வருஷம் உயர்ந்து போயிற்றே. அருமைத் தோழர்களே! 1952-லே நம் சராசரி வயசு 25, இன்றைக்கு 52 சராசரி வயது. 1952-க்கும் 1972க்கும் 20 வருஷந்தான்; இந்த 20 வருஷத்திலே 20 வருஷம் உயர்ந்து விட்டது நம் ஆயுள். (கி. பி.) 2000 வயது வருகிறபோது, நாம் 75 வயது இருப்போம்; வெள்ளைக்காரன் 100 வருஷத்துக்கு மேலே இருப்பான்; மனிதன் சாகமாட்டான், சாகிறதற்கு அவசியம் இல்லை; எல்லா நோய்க்கும் மருந்து வந்துவிட்டது, ஏதோ 2, 3 நோய்க்கு இல்லை; அதுவும் பார்த்துக்கொண்டு இருக்கிறான்.

ஆனதினாலே, நல்ல வளர்ச்சியான காலத்திலே இருக்கிறோம் நாம்; உலகம் வளர்ந்து கொண்டே போகிறது. கொஞ்சநேரத்துக்கு முன்னே சொன்னேன் பாருங்கள்—நேற்று, முந்தாநாள் வந்த பத்திரிகையிலே, குழந்தைகளை உண்டாக்குகிறான்; முட்டையை எடுத்து வைத்தால்கூட 10, 20 நாளிலே அது குஞ்சு பொரித்துவிடும்; மனுஷனின் முட்டையை எடுத்துவைக்கிறான்—10 வருஷத்துக்கு அப்புறம் குஞ்சு பொரிக்கணும் என்றால் பொரிக்கிறது அது; இன்றைக்கே பொரித்து ஆகணும் என்று இல்லை; பெண்கள் இந்திரியம் கொஞ்சம், அதை ஒரு டப்பியிலே—ஆண்கள் இந்திரியம், அதை ஒரு டப்பியிலே பாதுகாக்கிறான்; 'பேங்க்' என்று பேர் அதற்கு; அந்த 'பேங்கி'லே வைத்துப் பாதுகாக்கிறான்; என்றைக்குப் பிள்ளைவேணுமோ அன்றைக்கு இரண்டையும் எடுத்து வைத்துக் கொள்கிறான்—'கியா, கியா' என்று கத்துகிறது (பிள்ளை)! இதெல்லாம் பொய் என்று சொல்லமுடியாது; பெரிய பிரசித்தியான பத்திரிகையிலே போட்டோவோடு வருகிறது. அப்புறம் 5000 மைல் பறக்கிறான், 10000 மைல் வீதம் பறக்கிறான்; சந்திர மண்டலத்துக்கெல்லாம் போய்விட்டுவந்தான். இதெல்லாமா பொய்?

ஆனதினாலே, நாம் முதலாவது இப்போது மானத்துக்காகப் போராடுகிறோம், வேறே எதற்காகவும் இல்லை. இழிவு—தேவடியாள் மகன், பார்ப்பானுடைய வைப்பாட்டி மகன், தாசி புத்திரன் என்று சட்டத்திலே இருக்கிறது—இது ஒழிந்து ஆகணும் என்று போராடுகிறோம். இது ஒருவனுடைய மானமே அல்ல, பார்த்தாலும், எல்லோருக்கும் இதிலே உணர்ச்சி வரணும்; வரணும் அவனவன் தேடிக்கொண்டு! என்ன? ஜெயிலுக்குப் போனால் பட்டினியாகவா போடுவான்? இல்லை இந்தக் கிளர்ச்சி நடந்தால் கிளர்ச்சிக்கு வருகிறவர்களைப் பட்டினியாகவா போடுவோம்—ஜெயிலுக்குப் போகிறவரைக்கும் சோறு போடுவோமே; நிறைய அரிசி 10 மூட்டை, 5 மூட்டை இப்படி அனுப்பியிருக்கிறார்கள்; பணம் கொடுத்திருக்கிறார்கள்—40, 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும். லட்சம் பேரை ஜெயிலுக்கு அனுப்பலாம்—அவ்வளவு வசதி இருக்கிறது; இன்னும் கொடுப்பார்கள், யார் மாட்டோம் என்பார்கள். யார் ஜெயிலுக்குப் போகப் பயப்படுகிறானோ, போக முடியவில்லையோ —'வை'! என்றால் சொன்னதை வைத்துவிடுவார்கள்; ஜனங்களுக்கும் பயன்படும். உலகத்துக்கே ஒரு வழிகாட்டியாவோம் நாம். நம் சமுதாயமே புது உலகமாகும்.

தமிழன் இந்தியாவிலேயே முதல் நம்பராக இருப்பான்; இந்தியாவுக்கே வழிகாட்டக் கூடிய சக்தி உடையவனாகி விடுவான். அனேகக் கோளாறுகள் இருக்கின்றன; அதெல்லாம் சுலபமாய் மாறிவிடும். அது –செய்கிறவனுடைய லட்சியத்தைப் பொறுத்து இருக்கிறது; செய்கிறவனுடைய துணிவைப் பொறுத்து இருக்கிறது. தாய்மார்கள் ரொம்ப நமக்கு உதவி பண்ணுவார்கள், 'அம்மா இப்போது இந்தச் சண்டை உங்களுக்காகத்தான், உங்களைத் தான் பார்ப்பானுடைய வைப்பாட்டி என்று சொல்லிவிட்டான்; ஆனதினாலே, நீங்கள் ஏதோ உங்களால் ஆனதை இந்தக் காரியத்திலே செய்யுங்கள்' என்று நாம் சொன்னால்.

எனவே, தோழர்களே! நாம் இப்போது அதிசயமாக ஒன்றும் போராடவில்லை. மதம் என்கிறது இல்லை; யாராலேயும் இப்போது எடுத்துச் சொல்ல முடியவில்லை. கடவுள் என்கிறதும் தப்பு; எவனும் கடவுளுக்கு அர்த்தம் சொல்லுகிறவனும் இல்லை. இன்றைக்கு நாம் கும்பிடுகிற ராமன், கிருஷ்ணன், சிவன், பிரம்மா, மற்றக் கடவுள் அது, இது இந்தக் குப்பைக் கூளமெல்லாம் கடவுளே அல்ல—பார்ப்பானாலே உண்டாக்கப்பட்டவையே. அவைகளை, அவன் முட்டாளாயிருக்கிறபோது உண்டாக்கினதினாலே, அதற்கு மனுஷத் தன்மை கொடுக்கிறதற்கே இல்லை—சும்மா குடிகாரன் எப்படி எழுதுவானோ அப்படித் தான் எழுதினான்.

சாதாரணமாக இப்போது இராமனைப்பற்றி—இராமாயணத்தைப்பற்றி மனுஷனிலே சிந்திக்காதவன் எவனும் இல்லை; வெகுபேர் கடவுள் என்றுதான் நினைக்கிறான். அந்த இராமாயணத்திலே எழுதி இருக்கிறான்—இராமன் யாருக்குப் பிறந்தான் என்றால், அவனுடைய அப்பனுக்குப் பிள்ளை இல்லாமல் போய், அவன் பெண்டாட்டிகளைப் பார்ப் பானுக்கு விட்டுக்கொடுத்து, அந்தப் பார்ப்பானே 'வேலை' பண்ணினான் என்று சொல்ல வில்லை—முதலிலே குதிரை 'வேலை' பண்ணி அவளுக்கு உணர்ச்சி ஊட்டி, அப்புறம் இவன் 'வேலை' பண்ணினான். பாலகாண்டத்திலே பாருங்கள்—யாகம் பண்ணினவுடனே அந்தப் பெண்டுகளைக் குதிரையோடு விட்டான்; உயிரான குதிரையாக இருந்தால் ஏதாவது உதைத்துப்போடும் என்று, சாகடித்து, அதனுடைய ஆண் குறியை எடுத்து இராமனின் அம்மாளுடைய பெண் குறிக்குள்ளே விட்டு ஆட்டி, அவளுக்கு உணர்ச்சியை ஊட்டினான்; அப்புறம் பார்ப்பானை விட்டான், அவன் சினை பண்ணினான், பணம் வாங்கிக்கொண்டு போனான் என்று இருக்கிறது. 'ஞான சூரியன்' என்கிற ஒரு புத்தகம் இருக்கிறது, அதை வாங்கிப் படியுங்கள், தெரியும்.

ஆகவே, கடவுளை மனுஷன் என்று அவன் எழுதவில்லை—தேவடியாள் மகனாக—விபச்சாரி மகனாக உண்டாக்கினான். இதாவது பின்னிப் பின்னிச் சொல்ல வேண்டியதாய் இருக்கிறது—இராமன் பெண்டாட்டியை என்ன பண்ணினான்? இராவணன் 'சினை' பண்ணி, 4 மாத சினையோடு புருஷன் வீட்டுக்கு அனுப்பித்தான், புருஷனும் ஒத்துக் கிட்டான்; அவளும் ஒத்துக்கிட்டாள்—'அங்கே போனேன், அவன் பண்ணிவிட்டான், நான் என்ன பண்ணுகிறது?' என்று சொல்லிவிட்டாள். 'நீ அந்த மாதிரிப் போனவள், போடி காட்டுக்கு!' என்று அனுப்பிவிட்டான். இரகசியமாய் ஒன்றும் இல்லையே—சாமி பெண்டாட்டியைப் பற்றித்தானே அப்படி எழுதி இருக்கிறான்! மற்றக் கடவுள்களைப் பற்றிச் சொல்லணுமா? நிறைய இருக்கிறது.

ஆகவே, நாங்கள் சொல்வது சுயநலத்துக்காகச் சொல்லவில்லை; உங்களை ஏய்க்கிற தற்காகப் பொய்யையும், பித்தலாட்டத்தையும் இட்டுக்கட்டிப் பேசவில்லை; எல்லா ஆதாரங் களையும் கையிலே வைத்துக்கிட்டுத்தான் பேசுகிறோம். உள்ளபடியே, அவர்களுக்கு வாய்ப்பு இல்லை—மடையனாய் இருந்தான் 2000, 3000 வருஷத்துக்கு முன்னே; அன்றைக்கு உண்டாக்கினான் இந்தக் கதைகளை. அன்றைக்கு அவனுக்கு அக்காள், தங்கை என்று இல்லை; அம்மாள், மகள் என்று இல்லை—சரிசமமாகப் புழங்கினான்—அதற்கேற்றாற் போலே கடவுளையும் உண்டாக்கிவிட்டான்.

பிரம்மா உண்டாக்கினான் என்றால் என்ன என்று எழுதி இருக்கிறான்? பிரம்மா அப்பன், அவன் பெண்டாட்டி சரஸ்வதி அவனுடைய மகள், இரண்டுபேரும் சேர்ந்தார்கள், இப்படிக் கற்பனை பண்ணி இருக்கிறான். இதுவெல்லாம் உண்மையாய் இருக்காது. அந்த மானங்கெட்ட காலத்திலே—அறிவில்லாத, காட்டுமிராண்டிக் காலத்திலே உற்பத்தி பண்ணிய சாதனங்கள், நம் முட்டாள்தனத்தினாலேயும் அவன் கெட்டிக்காரத்தனத் தினாலேயும் இதைப் பாதுகாத்துக்கொண்டே வந்துவிட்டான். 'எவனாவது நாளைக்கு வந்தால் என்ன பண்ணுகிறது?' என்று நினைத்து நிறையக் கோயிலைக் கட்டிப் போட்டான், நிறையச் 'சாமி'களை வைத்துவிட்டான்; மறந்திடாமல் இருக்கிறாற்போல நித்தமும் 4 வேளை, 5 வேளை பூசை என்கிறான். வாரத்திற்கு இரண்டுநாள் உற்சவம் என்கிறான், வருஷத்துக்கு ஒரு தடவை, இரண்டு தடவை கல்யாணம் என்கிறான். மனிதனைச் சரியாக அதிலேயே முட்டிக்கிட்டு இருக்கிறாற்போலே ஏற்பாடு பண்ணிச் செலவு பண்ண வைக்கிறான்; (இப்படிப்) பாதுகாக்கிறார்கள். இவ்வளவு பாதுகாப்போடு செய்தால் 'ஒரு கழுதை'யைக்கூட சாமி ஆக்கிவிடலாமே! அவ்வளவு முயற்சி பண்ணுகிறான், அவன். நம் ஜனங்கள் அதற்கு ஏமாந்து போகிறார்கள்—அந்த முயற்சியிலேயே பல உணர்ச்சிகள்—சாமிக்கு என்று போகாவிட்டாலும், வேடிக்கை பார்க்கிறதற்கு என்று போகிறான். கட்டிப்போட்டு இருக்கிற பெண்பிள்ளைகள் எல்லாம் உற்சவம் என்றால்தான் கோவிலுக்குப் பார்க்கப் போகமுடிகிறது. அங்கே போனால்தான் 4 ஆண்பிள்ளைகளோடு உராய முடிகிறது; வீட்டிலே இருந்தால் என்ன வேலை என்று மிரட்டுவான் புருஷன்; அங்கே போய்விட்டால்—'வா' என்பான் புருஷன்—'வரமுடியலையே, நசுக்குகிறானே, நசுக்குகிறானே' என்பாள் அவள்; 'வா, வா, வா முட்டிக்கிட்டு வா' என்பான் அவன். அந்தச் சுகமெல்லாம், பெண்டாட்டியைக் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனால்தான் அவன் அங்கே அடைகிறான்; அது பழக்கமாய்ப்போயிற்று; எல்லாருடைய பெண்டாட்டியும் அந்தக் கதி ஆனதினாலே எவனும் பரிகாசம் பண்ணுகிறதற்கு இல்லை. இப்படிப்பட்ட காரியங்களினாலே, அது உயிரைப் பிடித்துக்கொண்டு இருக்கிறது. நாம் அதற்குத் தகுந்தபடி வேறே ஏற்பாடெல்லாம் பண்ணினால் பெண்டுகள் திரும்பிவிடுவார்கள்.

எனவே, அருமைத் தோழர்களே! நேரமாயிற்று, மணி 10-க்குமேல் ஆகிவிட்டது. ஏதோ எனக்குத் தோன்றினதைச் சொன்னேன். முக்கியமாய்ச் சொன்னதினுடைய கருத்தெல்லாம், நாளைக்கு நடக்கப்போகிற கிளர்ச்சியைப்பற்றி—அதனுடைய தத்துவம் என்ன? அவசியம் என்ன? என்கிறதை விளக்கினோம். நம் கடமை என்ன என்கிறதை நீங்கள் சிந்திக்கவேணும்.

உங்கள் கடமை என்றால், உங்கள் ஒருவரைப் பொறுத்ததல்ல; தமிழர் என்று சொல்லுகிற நாம் இத்தனைக்கோடி மக்களையும் பொறுத்தது. பிறகு நாம் வட்டியும், முதலுமாய் உயரலாம்—ஒன்றும் தேங்கிப்போகாது நம் நாட்டு முன்னேற்றம் என்று உங்களை வணக்கத்தோடெல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த ஏற்பாடு பண்ணி இவ்வளவு நேரம் பொறுமையாய் இருந்ததற்கெல்லாம், என்னைக் காதுகொடுத்துக் கேட்டதற்கு என்னுடைய மனப் பூர்த்தியான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்!

[சென்னை தியாகராயநகரில் சிந்தனையாளர் மன்றச் சார்பில் 19-12-1973-ல் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய பேருரை—பெரியார் அவர்களின் வாழ்நாளில் அவர் ஆற்றிய 'இறுதிச் சொற்பொழிவு'—'மரண சாசனம்' என்பதாக இப் பேருரை அமைந்துவிட்டது. ஆதாரம்: Tape Recorder, Akai, Track No. 3. Speed 15/16, 260 feet.]



மதுரையில் 30-9-1973-ல் நடைபெற்ற கருஞ்சட்டைப் படை மாநாட்டில்
தந்தை பெரியார் அவர்கள் அறிவுரை ஆற்றிய மாட்சி நிறைந்த காட்சி.

தந்தை பெரியார் அவர்களின் உடல் கறுப்புத் துணியாலும், கழகக் கொடியாலும் போர்த்தப்பட்டு, 24-12-1973 மாலை 4 மணி முதல் 25-12-1973 பிற்பகல் 3 மணி வரை சென்னை ராஜாஜி மண்டபத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த காட்சி. அய்யாவின் பொன்னுடலை லட்சக்கணக்கான மக்கள் இறுதியாகக் கண்டு கதறி அழுதனர்.



தந்தை பெரியார் அவர்களின் உடல் சென்னை ராஜாஜி மண்டபத்திலிருந்து, பெரியார் திடல் நோக்கி டிரக்கில் எடுத்துச் செல்லப்படும் காட்சி; மவுண்ட்ரோடு அண்ணாதுரை சிலை ரவுண்டானாவில் இலட்சோபலட்சம் மக்கள் 'அய்யா', 'அய்யா' எனத் தேம்பிக்கொண்டு இறுதி ஊர்வலத்தில் செல்கின்றனர்—25-12-1973 மாலை 4 மணி.



தந்தை பெரியார் அவர்களின் உடல் 24-12-1973 மாலை 5-05 மணிக்கு
சென்னை பெரியார் திடலில் அடக்கம் செய்யப்பட்டு,
சலவைக்கல்லால் மூடப்பெற்றது.

PART IX

RELIGION

1. DUTIES OF A REVOLUTIONARY

Mr. E. V. Ramasami Naicker in the course of his presidential address at the South Indian Social Reformers' Conference, held on the 26th of November (1928) at Madras, said :

It would have been more appropriate if you could have chosen as your president one who is a firm believer in social reform. I am fast loosing my faith in social reform as an agency for the regeneration of our country. The advancement of the country can only be through social revolution born of invincible courage and undaunted boldness. I have arrived at this conclusion after long and patient deliberations. I beg to tell you that I am endeavouring to serve the country by destroying the useless and harmful overgrowth that is threatening its very life. Society in my humble opinion, has degenerated to an extent which it is impossible to remedy by social reform. The much talked of social reform of the present day is one of the crafty weapons of the educated and the wealthy classes who are competing with one another in an attempt to gain popularity and influence over the peoples. Such methods of social reform are not intended to confer any benefit on those for whose welfare they are apparently intended. These methods are adopted to serve the selfish interest of the so-called social reformers themselves. But those whose lot requires to be bettered always believe in the genuineness of these reformers. And the result of it all is that day by day, their condition is growing worse, they are degenerating into a state from which they cannot be reformed and uplifted easily. The chief reason for this is the fact that those set of people whose attitude of mind towards society brought about the degeneration of certain classes which need reformation at present, those class of people to whose selfish activities much of the unsettled condition of our society is due—it is these men who are now working and benefitting by their work in the department of social amelioration.

The most important of the evils that stare us in our face is that which is responsible for the division of the people into superiors and inferiors in society on the basis of birth. These evils have come to exist in our country on account of the fact that they have been established in the name of religion, God and heaven. The anxiety to reform society and purge it of its evils was in the minds of men of long ago. It might be said that Buddha, Ramanuja and Tiruvalluvar were the foremost in their age to attempt something in this direction. But it cannot be said that in these directions there has been the least progress which redounded to the benefit of society from the efforts made from that time onwards till now. It is impossible for our people to effect anything by social reform, because the sentiments of religion and the veneration of God have been so

inextricably connected with these superstitious ideas and beliefs. But this state of things is advantageous to some sets of people, and that is the reason, I think, for the failure of the efforts to improve the condition of the people.

It is not an easy task to enunciate more wise theories or do more strenuous work than was done by Buddha, Kapilar, Tiruvalluvar, Ramanuja and others. That is the reason why the opponents of social reform have strong belief in their obstructive propaganda. The feelings towards religion and the attitude towards God have been built on the foundations of ignorant belief and blind faith. Worshipping God out of blind belief, man has come to accept and live according to many of the purblind conceptions of religion.

To say that ignorant belief and blind faith should be destroyed is national service destined for the benefit of humanity. People have for a very long time been carrying on this propaganda with caution, patience, love, sympathy, good words and persuasive arguments. What has been the result of their attempts ? How long we are going to be experimenting like this? We find that such propaganda is done by people who are anxious to ingratiate themselves into the good looks of the opponents of social reform and gain popularity and prestige as reformers. It is also due to a lack of courage to push onward on the part of such reformers. Some people might quote the opinions of Swami Vivekananda, Gandhiji and others to disprove my contentions. I frankly accept that my opinions are opposed to theirs. Some people say, "Do not destroy the old symbolisms, the ancient pictures and the hoary traditions and culture". Such things which these people want to foster are responsible for the degeneration of our country and demoralisation of our people, and this we must impress on the mind of every reasonable man by our propaganda work. Otherwise, a state of things will come into existence from which it will be well nigh impossible to obtain liberation and salvation.

For instance, Ramanuja with a view to reform society and at the same time preserve the old symbols, caught hold of many of those who were called "Pariahs" and put the "namam" on their foreheads and invested them with the sacred thread so as to bring about equality in society. The old symbols were no doubt preserved, but did the people get equality? Were the followers imbued with the feelings of fraternity?

Let us take the temples of the land. Instead of being a symbolical abode of the supreme being, they have degenerated into dens of all kinds of iniquity and hotbeds of vice. Even in the case of the ancient culture, the art and the paintings, it will be clear that they also stand in the way of social reform. What benefit have the Vedas and the Puranas conferred on mankind? What have the people gained by reading the Bharatham, the Ramayana, Siva Puranam, Vishnu Puranam, Thiruvilayadal Puranam,

et hoc genus omne? Consider whether you do not find in these books doctrines which go against the principles of human conduct and human character, and do you think that some of the worst books and worst set of people could be guilty of graver wrongs and more serious crimes than some of those mentioned in these books? Also seriously consider the fact whether these old books do not stand in the way of social reform. Do not the social reactionaries quote from these texts and these scriptures and cite authorities to support their position? It is said that there are some passages in those books which support the standpoint of the reformers. In my opinion, this is empty talk to deceive gullible people. I feel that so long as the people want to hug to these scriptures, so long will they be unable to achieve success in their efforts to reform society. I have not come here to speak about God, I think the less we speak about Him, the better it will be for us.

So far as religion is concerned, there is no paucity of propaganda and publicity. Every man believes that it is only through his religion that salvation could be reached. Why should there be so much competition between religions? When we deeply consider all this, it would be clear that religion is an absurdity. But if it is conceded that religion is an institution brought into existence so as to define certain rules and draft certain regulations for the better functioning of society, then it may be entitled to some consideration. But then religion should change according to the needs and requirements of the times, but if the word of God or the preachings of the son of God or the doctrines of the messenger of the Almighty are as sacred and sacrosanct as God himself then the paramount duty of social reformers is to abolish and destroy those religions. The principle of social reform is the principle of adoption to the changing conditions of the times. And so the social reformer should not flinch in destroying at once the things which would not change according as the changed conditions of the world require.

The next thing that the social reformers should devote their attention to is that of the relationship between man and woman. In our society women are being treated worse than untouchables. Women are considered to be slaves of men. If such a system has been made by God, the first thing that we should do is to destroy that God. It is a great pity that so many things should be foisted upon the devoted head of poor God. Especially in our country, the position of our womenfolk is the worst that could be thought of. Chastity is considered to be the foremost duty of women. The gods that men worship have been symbolised as having their wives on their heads, tongue or shoulders.

[Speech, '*Revolt*'—Volume 1., No. 5. Dated 5th December 1928, Erode]

But the people have not learnt chivalry from their Gods and do not treat their women with decency. As a result of the slavery of women,

children are bred up as slaves and the whole country is enslaved. If we are to be free, we must free our women who must be allowed the same liberty and the same privileges as our men. Women must depend upon themselves for their emancipation from slavery and should boldly come forward and break their bonds. Turkey, Afghanistan and China are standing examples of women achieving their freedom.

I would next draw your attention to the most inhuman institution of widowhood by which our sisters are subjected to untold hardships. We fail to understand why the ancients created this institution. It could not be because, there was surplus womanhood in our country in those days. For our Gods had not less than two wives each, and our kings married a thousand, a ten thousand, and a sixty thousand wives at a time! Probably our forefathers intended the institution of widowhood in order to make provision for the needs of the Sanyasis and the guests to whom hospitality had to be extended as a religious duty. Whatever be the reason, this institution has done incalculable harm to the womanhood of the country, and deserves to be abolished without a moment's delay. In this connection, I would appeal to the widows themselves to take courage in both their hands and work out their own salvation. They should not be deterred by the shame and obloquy that society may heap upon them, and should come forward to choose husbands and publish their choice before the world. An exhibition of courage in this matter, even by a few widows, would serve as an object lesson for the others, and would pave the way for the coming generations. I would also appeal to those women who are not widows to lend a helping hand to their suffering sisters who are unfortunate enough to be widowed. The wives should help the widows to secure husbands for the latter and lend a hand at the purification of society and the creation of a healthy moral atmosphere for their husbands and their children.

Distinctions of caste were created in our country at a time when the strong man oppressed the weak. The continuance of these distinctions, is evidence of the fact that we have not advanced from the stage of barbarism. No reasons have so far been urged to prove the superiority of one man to another by the right of his birth alone. Morality and intellect are not the outcome of one's birth. The division of caste by birth has been condemned by almost all the reformers and the concomitant evils of caste system have been condemned for many years. All has been in vain. I strongly believe that this monstrosity cannot be wiped off by means of preachings to the masses. The only way to get rid of the scourge is by legislation and communal representation in the services. This may seem paradoxical to you. I shall explain my position. If communal representation is granted, there will be no chance for the privileged classes to ride rough shod over the oppressed. Politicians object to the idea of communal representation in services urging that it would disunite the people. When we express our wish to gather the

conflicting elements of society into a harmonious whole there is the rub. The religionists raise their hue and cry. If we attempt to remove the obstacles of religion from our path by means of legislation, the so called religious teachers and Achariyas raise their vehement protestations. If we heed to the voice of religion and desist from amalgamating the communities but keep them separate there is enough justification for communal representation.

Now to the curse of untouchability. Our country has the monopoly for see-me-not-isms and touch-me-not-isms. A country where there is a class of people who are not entitled to walk in public streets, who are not allowed to worship God in their own temples, who are prevented from using the common wells and tanks—such a country may as well be destroyed by an earthquake, burnt out by a volcano, or submerged by the ocean. If God is All-Merciful, He should have obliterated our country long ago. Is it not shameful on the part of such a country to aspire for Swaraj, Dominion Status or complete Independence? Politicians may say, that untouchability will go if we get Swaraj. To them I say not merely Swaraj but Dharma Raj, Rama Raj, Harischandra Raj and the Raj of the very Gods—these were responsible for originating and organising this blot on humanity. If these governments come to life once again, I fear the position of this class would become unredeemable. I appeal to the reformers both social and political to carry on the mission of removing the sin of untouchability and cleanse our society of the dirt that has accumulated for centuries.

Another important thing that needs mention is education. True education is that which imparts knowledge on human nature. Tiruvalluvar says, "however educated one may be, if one does not adjust himself to the world current, he is worse than an illiterate". The education that is now obtained in schools and colleges is useful to produce slaves, who are helping the foreign domination. It is sheer nonsense that devotion to God, devotion to religion and devotion to king should be taught in schools. If they deserve any devotion at all let them earn it by displaying their intrinsic merit. My ardent wish is that no education be imparted to the communities from which the intelligentia of the land have sprung up. I like to see the existing schools and colleges closed at least for a period of fifteen years and the ladies and the illiterate communities imparted the true education referred to above. This is the first duty of any good Government and all sincere reformers.

[Speech, '*Revolt*'—Volume 1., No. 6. Dated 12th December 1928, Erode]

2. CASTE

Among the many conferences that were held under the auspices of the Indian National Congress at Lahore, the Jat Pat Torak Conference held under the auspices of the Jat Pat Torak Mandal, Lahore (Society for breaking caste) deserves our closer attention. This Conference whose proceedings we shall publish in detail, later on, and whose resolutions appear elsewhere in this issue, is certainly the most important of the conferences held during the Congress session. When we say this is an important one, we mean it is so, not merely, because its creed of the destruction of caste is also the chief creed of our Self-respect movement, but there is a general feature in the Conference itself which should not be passed over by us. It is almost a hackneyed saying that " a man is known by the company he keeps ". It was only two years back that the same " All India " Congress, during its session at Madras saw its own votaries holding a Varnashramite Conference at Madras. The same Congress, with a mere change of place from our " cultured " presidency to northern most Lahore, has changed its " colour " (Varnam) so suddenly, and so wonderfully that it has allowed the holding of a conference (Jat Pat Torak) entirely opposed to the principle of " Varnam " i.e., caste. This event will give some idea to our North Indian comrades, of the social condition in the South, and of the way in which the wind is blowing in South India.

We remember in this connection, Mrs. Sarojini's (Naidu) famous tribute to the " pioneers of liberty " here, that " the South Indian Brahmin is as proud and arrogant as the Englishman ". We are sure, our renowned poetess had in her mind nothing but the " pride and arrogance " of caste and colour. The Jat Pat Torak Conference reveals another truth, namely, that more depends upon the manipulators of events than upon the events themselves. If the Madras Congress, had only shown its disapproval of its votaries holding the Varnashramite Conference, then there would have been no Congress at all. Similarly it is no wonder, if the Lahore Congress had not allowed the Jat Pat Torak Conference, there would have been no Congress at all in Lahore. This is why we observed that the event is important from many aspects.

Before proceeding to the resolutions, we wish to make a few observations to our readers in the South, about the working of the Jat Pat Torak Mandal itself. The Mandal is working wholeheartedly for the destruction of caste, which it believes, and rightly believes to be the only way to national unity and solidarity. This mission it carries mainly through its Urdu monthly " The Kranti ", (of which we had had occasion to write in these columns more than once) which is published with impressive illustrations and instructive articles, and through the publication of frequent pamphlets in English and Urdu. In practical achievements, the Mandal, under the able guidance of its President and the Secretary seeks to carry

out its noble mission by the encouragement of inter-caste marriages and inter-dining. As such, it is needless further to point out to our readers the importance of the Mandal in general, to our country, and in particular, to our movement. With the full assurance of writing more upon the Mandal and its achievements, on a future occasion, we wish to make a few observations upon the resolutions.

The second resolution "calling upon all kinds of Hindu organisations to include in their programme of work the discouragement of present caste system and encouragement of inter-caste marriages," is one that needs the careful attention of all the various Leagues and Associations In this connection we cannot but refer to the shameful action of the "biggest political organisation in India", in not having allowed Mr. R. K. Shanmugham to table a similar resolution in the Subjects Committee of the Congress, held at Madras. That the caste system has been the "generous gift" of the priestly class and that it is still being nurtured by the same community with the help of the numerous puranas, and religious texts, needs no repetition here. So it is evident for the reformer wherein the caste has its origin, and where exactly the axe of reform is to be laid.

The third resolution "calling upon all unmarried young men and women to give up the consideration of caste while entering into matrimonial alliances", is a wholesome advice that should be immediately taken up by the younger generation of India. For, the responsible work of breaking up the barriers of caste has devolved upon the shoulders of the young, for it is they who are going to reap the consequences of the past actions of their forefathers. It is time therefore, that the voice of youths gives a ready response to the call of the motherland, in getting rid of the untold social evils existing in our country.

The next resolution of forming a Committee to "introduce a Bill in the Legislative Assembly for legalising inter-caste marriages" is fundamentally the most important of the resolutions passed in the Conference. For, very recently we heard in some quarters vile attempts made by the interested and affected few for illegalising inter-caste marriages conducted under Self-respect methods. To legalise such marriages which are increasing in numbers, it is essential that a law is immediately enacted in order to save the worry of undergoing the tedious and undesirable task of registration.

The fifth and the sixth resolutions "advising Hindus of all classes to abstain from mentioning their caste at the time of the census operation and urging upon the Government the necessity of framing the Census Law in such a way as not to make it obligatory on any person to give his caste at the time of census operations" are resolutions ventilating more or less our own opinion on the matter. For we have a mind not only to ask the Self-respectors, as far as possible, not to give their castes in the forthcoming Census, but also to declare that they are *not* Hindus but that they

are either Self-respectors, Rationalists or Free-thinkers. We insist upon giving up the name "Hindu" because, it is in the first place a fabulous name, having no sane origin or meaning behind it. Then secondly, the term "Hindu" itself is synonymous with the divisions of caste, and so inseparable are both, that the one vanishes of its own accord, when the other is done away with. Hence we not only applaud such resolutions but also wish the Jat Pat Torak Mandal co-operates with us in bringing about the above aims to practical achievement. While extending our hearty congratulations to the founders of the Mandal and the organisers of the Conference, we promise our warm support also in the noble and generous task that they have pledged themselves to do.

('*Revolt*'—Volume 2., No. 3. Dated 19th January, 1930, Erode)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1356	39	எழுயதெல்லாம்	எழுதியதெல்லாம்
1368	8	இல்லையா	இல்லையா
1370	24	உணர்சிக்கும்	உணர்ச்சிக்கும்
1400	2	கடவுன்	கடவுள்
1409	44	ஏமாற்றதலுக்கும்	ஏமாற்றுதலுக்கும்
1421	1	மக்கள் வாழ்கை	மக்கள் வாழ்க்கை
1434	3	செய்கிறான்	செய்கிறான்
1445	14	தந்தையாள	தந்தையான
1492	15	அற்புதங்கள்	அற்புதங்கள்
1501	6	கடளன்றி	கடவுளன்றி
1526	10	இன்னும்	இவனும்
1537	12	கொளுத்த இராகுகாலம்	கொழுத்த இராகுகாலம்
1525	22	தொட்டலிலிடவும்	தொட்டிலிலிடவும்
1572	36	எவ்ளவு	எவ்வளவு
1580	7	ஒய்வுக்கு	ஓய்வுக்கு
1605	20	குலங்களிருக்கின்றன	குலங்களிருக்கின்றன
1608	17	ஆக வேண்டு	ஆகவேண்டும்
1644	38	மூடியும்	முடியும்
1656	17	வேண்டியனாகிறான்	வேண்டியவனாகிறான்
1695	31	ஆறு அங்குன	ஆறு அங்குல
1723	28	சமாதனப்படுத்தியோ	சமாதானப்படுத்தியோ
1746	5	எஜெண்டும்	ஏஜெண்டும்
1777	17	சூழச்சியை	சூழ்ச்சியை
1790	கட்டுரை	6. வாழ்ந்தால்...வாழ்வோம்	5. வாழ்ந்தால்...வாழ்வோம்
1819	கட்டுரை	3. இந்தி அழிப்புக் கிளர்ச்சி	8. இந்தி அழிப்புக் கிளர்ச்சி
1823	12	முயசித்த	முயற்சித்த
1840	9	உவித் தொகையும்	உதவித் தொகையும்
1860	32	போசுக்கப்	பொசுக்கப்

பெயர்க் குறிப்பு அகராதி

*

பொருட் குறிப்பு அகராதி

பெயர்க் குறிப்பு அகராதி

பொருட் குறிப்பு அகராதி

Volume–I

PART–III

Volume–II

PART–IX

Volume–III

PART–IX